செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language

Vol 1 - Part 1

மொழிஞாயிறு

ஞா. தேவநேயப் பாவாணர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகர முதலித் திட்ட இயக்கக வெளியீடு

1985

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

முதன்மடலம் - முதற்பகுதி

அ

மொழிஞாயிறு

ஞா. தேவநேயப் பாவாணர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககத்திற்காக அச்சிட்டது

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை.

மொழிஞாயிறு

ஞா. தேவநேயப் பாவாணர்



தோற்றம்: 7 - 2 - 1902　　　　மறைவு: 16 - 1 - 1981

கோடி கொடுத்தாலும் கொள்கைவிடாக் கூர்வேழம்
நாடி தளர்ந்துவிழி மூடியபின் மூவாண்டு
ஓடி யுருண்டாலும் ஒண்டமிழர் உள்ளத்தே
தேடாத் திருவாய்த் திகழ்கின்றார் பாவாணர்

அமுதாம் தமிழுக்கு ஆயிரம் அணிபூட்டி
இமையா மல்நோக்கி யின்புற்றுச் சாய்ந்திட்டார்
அமிழ்தாம் தமிழுண்டு சாவாரோ மண்ணுலகில்
தமிழ்த்தாய் மடியில் தவழ்கின்றார் பாவாணர்

உள்ளடக்கம்

		பக்கம்
பேரறிஞர் அண்ணா வாழ்த்துகிறார்	...	iii
வண்ணப்படங்களின் பட்டியல்	...	vi
Foreword	...	xi
முன்னுரை	...	௧
பதிப்புரை	...	௩௫
சொற்பிறப்பியல் அகரமுதலி வரலாறு	...	௪௧
அகரமுதலியைப் பயன்கொளும் பாங்கு	...	௫௮
உலக மொழிக் குடும்பங்கள்	...	௬௨
திரவிட மொழிகள்	...	௬௪
Language Abbreviations	...	௬௯
Grammatical Abbreviations in English	...	௭௩
General Abbreviations	...	௭௪
இலக்கணக் குறுக்கங்கள்	...	௭௬
பொதுக் குறுக்கங்கள்	...	௭௮
குறியீடுகள்	...	௮௰
நூல்களை மேற்கோள் ஆண்ட முறை	...	௮௧
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியில் ஆளப்பட்ட நூல்களும் அவற்றின் குறியீடு, பதிப்பு முதலிய விளத்தங்களும்	...	௮௨
Abbreviation list of Authorities cited in the Tamil Etymological Dictionary	...	௱௰௫
பிழைதிருத்தம்	...	௱௰௨
அகரமுதலி — அ	...	1

வண்ணப்படங்களின் பட்டியல்

படத்தாள் எண் (1)	படத்தின் பெயர் (2)		எதிரும் பக்கம் (3)
1.	அஃகரம் (வெள்ளெருக்கு)	...	8
	அக்கம்காரை (மீன்)		
	அக்கம்பாரை (மீன்)		
2.	அக்கமணி (ஒருமுகம்)	...	16
	,, (இருமுகம்)		
	,, (மூன்று முகம்)		
	,, (நான்கு முகம்)		
	,, (ஐந்து முகம்)		
	,, (ஆறு முகம்)		
	அக்கமாலை		
3.	அக்காக்குருவி	...	40
	அக்காடச்செல்லிகண்டன் (பறக்கும் அணில்)		
	அகத்தி (சிற்றகத்தி)		
	அகத்தி (சீமையகத்தி)		
	அகத்தி (பேரகத்தி)		
4.	அகழான் (காட்டெலி)	...	64
	அகழான் (வயலெலி)		
	அச்சாணி		
	அச்சிருங்கி (ஆடுதின்னாப்பாலை)		
	அச்சுப்பலகை (நெசவுக்கருவி)		
5.	அசரை (மீன்)	...	104
	அசலை (மீன்)		
	அட்டவண்ணைத்திருக்கை (மீன்)		
	அட்டாலகம்		
	அட்டிகை		
	அட்டை		
6.	அடப்பக்கத்தி (மீன்)	...	112
	அடப்பக்கத்திப்பாறை (மீன்)		
	அடப்பான் (பறவை)		
	அடர்சோளம்		
	அடல் (மீன்)		

படத்தாள் எண் (1)	படத்தின் பெயர் (2)		எதிரும் பக்கம் (3)
7.	அடளை (மீன்)	...	152
	அடுக்குச் செம்பரத்தை		
	அடுக்குத்தீபம்		
	அடுக்குப்பற்சுறா (மீன்)		
	அடுக்குப்பற்சுறா (வாய்)		
	அடுக்குமல்லிகை		
8.	அடுக்குவாழை	...	184
	அடுப்புஊதி (மீன்)		
	அண்டிக்கொட்டை (முந்திரிக்கொட்டை)		
	அணில்		
	அணைகயிறு		
9.	அத்தான் (முடக்கொற்றான்)	...	240
	அத்தி (நாட்டத்தி)		
	அத்தீர் (குழித்தாமரை)		
	அதிகமரிச்சம் (வாலுளுவை அரிசி)		
	அப்பன்காளை		
	அப்புக்குட்டி (மீன்)		
10.	அம்மான்பச்சரிசி	...	296
	அம்மினியுளுவை (மீன்)		
	அமிர்தவல்லி (சீந்தில்)		
	அயிங்கவலை (சூடைமீன்)		
	அயிலாலி (செந்நாரை)		
	அயிலைக்கீரை		
11.	அயிலை (மீன்)	...	304
	அரக்கு (வில்லை)		
	அரிசியரக்கு		
	அவலரக்கு		
	கொம்பரக்கு		
	அரக்குப்பூச்சி		
12.	அரசு	...	368
	அரணிச்சுறா (மீன்)		
	அரிசிச்சோளம்		
	அரிஞ்சான் (மீன்)		
	அரிவாட்பெட்டி		

படத்தாள் எண் (1)	படத்தின் பெயர் (2)		எதிரும் பக்கம் (3)
13.	அருநெல்லிப்பழம்	...	400
	அரும்பு		
	அரைக்கீரை		
	அரைத்தவளை		
	அரைபாணா		
14.	அல்லி (மலர்)	...	416
	,, (கிழங்கு)		
	,, (அரும்பு)		
	,, (மொட்டு)		
	,, (முகை)		
	,, (போது)		
15.	அல்லி (அலர்)	...	432
	,, (மலர்)		
	அலசி		
	அலரி (ஆற்றலரி)		
	அலரி (செவ்வலரி)		
	அலரி (வெள்ளலரி)		
16.	அலைதாடி (ஆடு)	...	448
	அலைதாடி (மாடு)		
17.	அவரை (ஆரால்மீனவரை)	...	456
	,, (ஆனைக்காதவரை)		
	,, (இருவித்தவரை)		
	,, (இறகவரை)		
	,, (கணுவவரை		
	,, (கப்பலவரை)		
	,, (கருப்பவரை)		
18.	அவரை (குங்குமவவரை)	...	464
	,, (கோழிக்காலவரை)		
	,, (சங்கவரை)		
	,, (சாட்டவரை)		
	,, (சிவப்பவரை)		
	,, (கருக்கவரை)		
	,, (செம்பளி அவரை)		

,, (பாலவரை)
,, (மணியவரை)
,, (வாளவரை)
,, (விரலவரை)

அவுரி (மீன்) ...
அவுரி (விரால்மீன்)
அவுளிமீன்
அழவணம்

அழுங்கு ...
அள்ளாத்தி (மீன்)
அறக்குளாமீன்
அறுக்கிளாமீன்

அறுகு (அரிசிப்புல்) ...
,, (ஆற்றறுகு)
,, (உப்பறுகு)
,, (கூந்தலறுகு)
,, (கொடியறுகு)
,, (சிற்றறுகு)

அறுகு (பாளையறுகு) ...
,, (புல்லறுகு)
,, (பூனைப்புல்)
,, (பேரறுகு)
,, (மத்தாங்காய்ப்புல்)
,, (யானையறுகு)
,, (வெள்ளறுகு)

அறுபுள்ளிவண்டு ...
அறுவாள் (பன்னறுவாள்)

Foreword

Tamil is one of the oldest living languages of the World. It is the most accomplished member of the over 30 known Dravidian Languages. It is now an accepted fact that the word *Dravida* is a sanskritization of earlier Pali and Prakrit form of Tamil viz., *damilo*, *damila* and *davida*. It has been noted in the latest edition of Encyclopaedia Britannica that "there is actually a very notable and active purifying movement" in Tamil and it is no exaggeration to say that the late lamented Savants *Maraimalai Adigal* and *Devaneya Pavanar* are the twentieth century captains of this essential and edifying campaign.

R. C. Trench in his elegant lectures on the study of words observed 'Language is fossil poetry and fossil history as well. Language is the amber in which a thousand precious and subtle thoughts have been safely embedded and preserved. Far beyond all written records in a language, the language itself stretches back and offers itself for our investigation. Language is never false, never deceives us. In the study of the origin and linguistic changes of a particular word, great care is required. It is a field full of contradictions such that Dr. Johnson himself was "ill-equipped by any previous studies for tracing the past history of words and he erred often and signally."

No matter, in Prof. *Pavanar*, we have indeed been very lucky. An erudite scholar and etymologist of great repute and who was an unflappable discoverer of roots of words, Pavanar has done a signal service to all philologists and especially to etymologists of the world. His monumental work has proved to the world that Tamil has an antiquity lost in the prehistoric past and is of a purity and constancy that makes it understood by the laity, as easily now as it was two thousand years ago. Dr. Caldwell commented, "the speech of the very lowest classes of the Tamil in retired country districts accords to a considerable extent with the classical dialect in dispensing with Sanskrit derivates." How important his work will prove to our own Tamil Speaking World, I shall let posterity decide.

The presentation is methodical and comprehensive, nay, this is indeed a model for others to emulate. I am certain that the dream of Pavanar will come true. Tamil Scholars and Research Workers with us today will, I hope, continue this labour of love. The Government of Tamil Nadu take pride in presenting this great work to the World on the occasion of the 75th Birth Anniversary of our Mentor *Perarignar Anna*.

Minister for Education,
Government of Tamil Nadu,
MADRAS - 600 009.
9 - 10 - 1984

C. Aranganayagam

முன்னுரை
(Introduction)

1. சொற்பிறப்பியல் அகரமுதலி இயல்வரையறை
(Definition of an Etymological Dictionary)

ஒரு மொழியிலுள்ள சொற்களையெல்லாம் திருந்திய வடிவில் தொகுத்து, அவற்றின் முதலெழுத்துகள் நெடுங்கணக்கு அல்லது குறுங்கணக்கு முறையில் அமைய அச் சொற்களை வரிசைப்படுத்தி, ஒவ்வொரு சொற்கும் அடிப்படைப் பொருளையும் வழிநிலைப் பொருள்களையும் ஏரணத்திற்குப் பொருந்த வரலாற்றுமுறையிற் குறித்து, இலக்கிய மிருப்பின் இருவகை வழக்கினின்றும், அஃதின்றேல் உலகவழக்கினின்றும், அப் பொருள்கட்குச் சான்றாக மேற்கோள்கள் எடுத்துக்காட்டி, இறுதியில் அவ்வச் சொல்லின் வேரொடு கூடிய வரலாற்றை வரைந்து இனச்சொற்களையும் காட்டுவது, முழுநிறைவான சொற்பிறப்பியல் அகரமுதலியாம்.

ஆயின், ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலிகளெல்லாம், பெரும்பாலும் அடிப்படைப் பொருளைமட்டும் விளக்கி, பொதுவாக இனச்சொற்களை மூலத்தொடு காட்டுவதுடன் நின்றுவிடுகின்றன.

சொற்பிறப்பியலைமட்டும் விளக்குவதே சொற்பிறப்பியல் அகரமுதலியின் கடமை என்பது மேலையர் கருத்து.

சொல் வரலாற்றை விரிவாக வரையாமைக்கு, தமிழ்போல் மேலைமொழிகள் இடந்தராமையே கரணியம்.

2. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் அடிப்படைக் கொள்கைகள்
(The Fundamental Principles governing the Tamil Etymological Dictionary)

i. தமிழ் தென்னாட்டுப் பழங்குடி மொழி

பண்டை யிலக்கியத்திற் சொல்லப்பட்டுள்ள கால வேறுபாடுகளும், நில வேறுபாடுகளும், விளைபொருள் வகைகளும், தொழிற் பாகுபாடும் தென்னாட்டிற்குரியன வாகவே யிருப்பதும், தமிழ் தென்மொழியென்று பெயர்பெற்றிருப்பதும், இதற்குச் சான்றாம்.

ii. தமிழ் குமரிநாட்டு மொழி

> ''பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
> வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
> தென்றிசை யாண்ட தென்னவன் வாழி''

என்னும் சிலப்பதிகார அடிகள் (11 : 19 - 22) இதற்குச் சான்றாம்.

iii. தமிழ் திரவிடத் தாய்மொழி

திரவிடச் சொற்களெல்லாம் தமிழ்ச்சொற்களின் திரிபாயிருப்பதே, இதற்குப் போதிய சான்றாம்.

iv. தமிழ் ஆரியத்திற்கு முந்திய மொழி.

"Does there not seem to be reason for regarding the Dravidian family of languages, not only as a link of connection between the Indo-European and Scythian groups, but—in some particulars, especially in relation to the pronouns — as the best surviving representative of a period in the history of human speech older than the Indo-European stage, older than the Scythian and older than the separation of the one from the other." [1]

"Nevertheless, I regard the comparison of words, when carefully and cautiously conducted, as an important help to the determination of lingual affinities; and it will be found I think, that the following vocabularies bear independent testimony, in their own degree, to the same result at which we arrived by grammatical comparison — viz., that the Dravidian idioms exhibit traces of an ancient, deep-seated connection with Prae-Sanskrit,—the assumed archaic mother-tongue of the Indo-European family." [2]

v. தமிழ் ஆரியத்திற்கு மூலமொழி

"I need not call attention to the beautiful and philosophical regularity of this quadruple set of remote, proximate, and intermediate demonstratives and interrogatives. In no other language or family of languages in the world shall we find its equal, or even its second. In addition to which, the circumstance that the demonstrative vowels are not only used in these languages with an invariable and exact discrimination of meaning which is not found in the Indo-European tongues (with the solitary and partial exception of the New Persian), but are also associated with a corresponding interrogative vowel of which the Indo—Europen tongues are totally ignorant, tends to confirm the supposition which I have already expressed, that the Dravidian family has retained some Prae-Sanskrit elements of immense antiquity; and in particular, that its demonstratives, instead of being borrowed from Sanskrit, represent those old Japhetic bases from which the demonstratives of Sanskrit itself, as well as of various other members of the Indo-European family, were derived." [3]

"I subjoin here a few illustrations of what I mean by primitive underived Indo-Europeanisms discoverable in the Dravidian languages.

1. The use of *n*, as in Greek, to prevent *hiatus*.
2. The existence of gender in the pronouns of the third person and in verbs, and in particular the existence of a neuter gender.
3. The use of *d* or *t* as the sign of the neuter singular of demonstrative pronouns or pronouns of the third person.
4. The existence of a neuter plural, as in Latin, in short *a*.
5. The formation of the remote demonstrative from a base in *a*, the proximate from the base in *i*.
6. The formation of most preterites, as in Persian, by the addition of *d*.
7. The formation of some preterites, by the reduplication of a portion of the root.
8. The formation of a considerable number of verbal nouns by lengthening the vowel of the verbal root." [4]

[1] Caldwell's Comparative Grammar of the Dravidian Family of Languages, Preface to the Second Edition, p. x.

[2] *Ibid.*, p. 565

[3] *Ibid.*, pp. 421-2.

[4] *Ibid.*, p. 73.

vi. தமிழ் சொல்வளம் மிக்க தற்சார்பு மொழி

"The orientalists who supposed the Dravidian languages to be derived from Sanskrit were not aware of the existence of uncultivated languages of the Dravidian family, in which Sanskrit words are not at all, or but very rarely, employed; and they were also not aware that some of the Dravidian languages which make use of Sanskrit derivatives, are able to dispense with those derivatives altogether, such derivatives being considered rather as luxuries or articles of finery than as necessaries. It is true it would now be difficult for Telugu to dispense with its Sanskrit: more so for Canarese; and most of all for Malayalam :- those languages having borrowed from Sanskrit so largely, and being of all habituated to look up to it for help, that it would be scarcely possible for them now to assert their independence. Tamil, however, the most highly cultivated *ab intra* of all Dravidian idioms, can dispense with its Sanskrit altogether, if need be, and not only stand alone, but flourish without its aid." [1]

"Another evidence consists in the extraordinary copiousness of the Tamil vocabulary, and the number and variety of the grammatical forms of Shen-Tamil. The Shen-Tamil grammar is a crowded museum of obsolete forms, cast-off inflexions, and curious anomalies...... Nothing strikes a Tamil scholar more, on examining the dictionaries of the other Dravidian dialects, than the paucity of their lists of synonyms in comparison with those of Tamil. The Tamil vocabulary contains not only those words which may be regarded as appropriate to the language, inasmuch as they are used by Tamil alone, but also those which may be considered as the property of Telugu, Canarese, etc. Thus, the word used for 'house' in ordinary Tamil is *vīḍu*; but the vocabulary contains also, and occassionally uses, the word appropriate to Telugu, *il* (Tel. *illu*), and the distinctive Canarese word, *manei* (Can. *mane*); besides another synonym, *kuḍi*, which it has in common with Sanskrit and the whole of the Finnish languages." [2]

vii. தமிழ் உலக முதன்மொழி

"It is a different question whether some of the Dravidian forms and roots may not have formed a portion of the linguistic inheritance, which appears to have descended to the earliest Dravidians from the fathers of the human race." [4]

பி.தி. (P.T.) சீநிவாசையங்கார் எழுதிய 'Stone Age in India' என்னும் நூலும், வி. ஆர். (V. R.) இராமச்சந்திர தீட்சிதர் எழுதிய 'Origin and Spread of the Tamils', 'Pre-Historic South India' என்னும் நூல்களும், தமிழ் உலக முதன்மொழி என்பதற்குச் சான்று பகரும்.

தமிழின் ஒலிச்சின்மை யெளிமையும் இயற்கையான சொல்லமைதி சொற்றொடரமைதிகளும், அதன் உலக முதன்மைக்குப் போதிய சான்றாம்.

viii. தமிழ் வேர்ப்பொருள் காட்டும் மொழி

சமற்கிருதத்திற்போல் தமிழில் இடுகுறிச்சொல் என்பதில்லை. திரவிடமொழிச் சொற்கட்கெல்லாம் தமிழ்த்துணைகொண்டே வேர்காணல் இயலும்.

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" (தொல். சொல். பெய. 1),
"மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" (தொல். சொல். உரி. 96).

---

1 *Ibid.*, p. 45.

2 *Ibid.*, p. 82.

3 *Ibid.*, Preface to the Second Edition, p. xi.

"பொருட்குத் திரிபிலை யுணர்த்த வல்லின்" (தொல். சொல். உரி. 94)

"பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்" (தொல். சொல். உரி. 1).

ix. தமிழ் உயர்தனிச் செம்மொழி

தமிழ் வரலாற்றிற் கெட்டாத தொன்மையில் தோன்றிய உலக முதன்மொழி யாயினும், கொடுமையையும் கொச்சையையும் நீக்கி, நெடுகலுஞ் செம்மையை உயிர் நாடியாகப் போற்றி வந்ததினாலேயே, இயற்கையாகவும் செயற்கையாகவும் நேர்ந்த எத்தனையோ பெருங் கேடுகட்கெல்லாந் தப்பி "என்றுமுள தென்றமிழ்" என்று கம்பர் பாடியவண்ணம் இன்றுவரை முந்துநிலை தாங்கி வந்திருக்கின்றது. இதனாலேயே அதன் சொற்கட்கெல்லாம் இன்றும் வேர்காண இயல்கின்றது.

"செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்"

என்று தொல்காப்பியச் சிறப்புப் பாயிரமுங் கூறுதல் காண்க.

ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட ஆங்கிலம், இன்று ஆங்கிலர்க்கும் விளங்குவதில்லை. ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்னுங் குறளும், ஈராயிரத்தறுநூறு ஆண்டுகட்கு முற்பட்ட

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே"

என்னும் தொல்காப்பிய நூற்பாவும், இன்றும் கல்லாருட்பட எல்லார்க்கும் பொருள் விளங்க நிற்கின்றன.

தமிழ் வாழவேண்டுமெனில், இந் நிலைமையே இனியும் தொடர்தல் வேண்டும்.

தமிழியல்பை யுணராத சில போலித் தமிழ்ப்புலவர், ஆராய்ச்சியின் பெயரால், கழி பொருள்போன்ற இழிவழக்கையும் தொகுத்து நூலாக்கிக் காலத்தை வீணாகக் கழிப்பர்.

"வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான"

என்று தொல்காப்பியம் (மர. 93) கூறுவதை நோக்குதல் வேண்டும்.

x. தமிழ் தூய மரபுமொழி

செம்மை போன்றே தூய்மையும் தமிழின் இன்றியமையாப் பண்பாம்.

"எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே" (நன். 388).

சிலர்,

"குரங்கின் ஏற்றினைக் கடுவன் என்றலும்
மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்
செவ்வாய்க் கிள்ளையைத் தத்தை யென்றலும்
வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றலும்
குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்
இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்
எருமையுள் ஆணினைக் கண்டி யென்றலும்
முடிய வந்த அவ்வழக் குண்மையின்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே"

என்னும் தொல்காப்பிய மரபியல் (69) நூற்பாவைப் பிறழவுணர்ந்து,

''பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே'' (நன். 462)

என்று எல்லா அயற்சொற்களையும் அமைப்பர். கடுவன், கோட்டான், தத்தை, பூசை, சேவல், ஏனம், கண்டி என்னும் எழு சொல்லுந் தூய தென்சொல் என்பதை அவர் அறிந்திலர்.

தமிழில் ஏதேனும் ஒரு பொருள்பற்றி ஒரு புதுச்சொல் தோன்றின், அது தமிழ் மரபிற்கு ஒத்ததாகவே இருத்தல் வேண்டும்.

''மரபுநிலை திரியின் பிறிதுபிறி தாகும்'' (தொல். சொல். மர. 92),

''நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்' (தொல். சொல். மர. 90).

xi. தமிழ் ஒப்புயர்வில்லாத் தனிமொழி

உலக முதன்மை, செம்மை, தூய்மை, தாய்மை, பகுத்தறி வடிப்படையிற் பொருள்களைப் பகுத்து மெய்ப்பொருளியல்பில் இலக்கணக் குறியீடுகள் கொண்டமை, செய்யுள் வடிவில் இலக்கியம் அமைந்தமை, பொருளிலக்கண முடைமை, இசை நாடகத்தொடு சேர்ந்து மும்மைப்பட்டமை, உலகில் தலைசிறந்த இன்னிசைக் கருவிகளைத் தோற்றி, நளிகடல் செல்லும் நாவாய் புனைந்து நானிலஞ் சுற்றி வடவை கண்டு, எழுகோட் பெயரால் எழுநாட்கிழமை வகுத்து ஏனைநாடெல்லாம் வழங்க வைத்து, முக்கரணமுங் கடந்த முதல்வனைக் கடவுள் என்னும் பெயராற் குறித்து, நாகரிகத்தினும் பண்பாட்டைச் சிறப்பாகப் போற்றி அறம் பொருளின்பம் வீடென்னும் நாற்பொருட் பேற்றை வாழ்க்கைக் குறிக்கோளாக்கிய மக்கள் மொழியாயிருத்தல் முதலிய சிறப்புகளால், தமிழை ஈடிணையில் லாத் தனிமொழியெனல் உண்மை நவிற்சியேயன்றி உயர்வுநவிற்சியன்று. தமிழ் என்னும் பெயரும் அதன் தனிச்சிறப்புப் பற்றியதே. தமி = தனி, 'ழ்' ஈறு.

''ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் — ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்''

என்னும் பழம்பாட்டையுங் காண்க.

3. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் மூலவாய்கள் (Sources of the Tamil Etymological Dictionary)

i. சொல்லியல்

1. அகராதிகள்

இன்றுள்ள ஏறத்தாழ இருபது தமிழ் அகரமுதலிகளுள், இச் சொற்பிறப்பியல் பேரகரமுதலிக்குப் பெரிதும் பயன்படுவது 'சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி'யே (Lexicon). அது பல்வேறு வகையில் குறைபாடுள்ளதாயினும், மூவர்முதற் பதினைவர்வரை பல்வேறு தொகையினர் பல்வேறு காலப் பகுதிகளில் அமர்ந்து, இருவகை வழக்கினின்றும் இருபத்தாறாண்டாக இடைவிடாது தொகுத்த பல்லாயிரக் கணக்கான சொற்களும், அவற்றின் பெரும்பாற் பொருள்களும், அவற்றிற்குரிய மேற்கோள்களும், அம் மேற்கோள் களின் இடங்களும், ஏற்கெனவே குறிக்கப்பட்டிருப்பது, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலிப் பணியாளராகிய எமக்குக் காலவகையிலும் உழைப்புவகையிலும் மறக் கொணா மாபேருதியமாகும்.

சென்னைப் பல்கலைக்கழக அகராதிக்கு அடுத்தபடியாகப் பயன்படுவது, சாம்பசிவம் பிள்ளை தமிழ்-ஆங்கில அகரமுதலியாகும். மருத்துவத் துறையில் அது நல்கும் அறிவு மதிப்பிடுந் தரத்ததன்று. அடுத்தது மதுரைத் தமிழ்ச்சங்க அகரமுதலி யாகும்.

2. புதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நூல்களும்

இவை பல்துறைப்பட்டன. அவற்றுள், உரைவேந்தர் ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை எழுதிய 'சேரமன்னர் வரலாறு', பேரா. கோ. தங்கவேலனார் எழுதிய 'இந்திய-தமிழ்நில வரலாறுகள்', பேரா. ம. வி. இராசேந்திரனார் எழுதிய 'நம்நாட்டுப் பாம்புகள்', நுண் கலைச் செல்வர் அ. இராகவனார் எழுதிய 'கப்பற்கலை', 'நம்நாட்டு அணிகலன்கள்', தமிழறிஞர் மு. அருணாசலனார் எழுதிய 9 முதல் 16ஆம் நூற்றாண்டுவரையுள்ள 'தமிழிலக்கிய வரலாறுகள்', திரு. பி. எல். சாமி எழுதிய 'சங்க இலக்கியத்தில் செடிகொடி விளக்கம்', 'சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்', 'சங்க இலக்கியத்தில் பறவையின விளக்கம்', 'சங்க இலக்கியத்தில் மணிகள், ஆடையணிகலன்கள்', சிற்பக் கலைமணி வை. கணபதிக் கம்மியர் (ஸ்தபதி) எழுதிய 'சிற்பச் செந்நூல்' என்பன சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன.

3. உலகவழக்குச் சொற்கள்

ii. சொற்பிறப்பியல்

க. ***மொழிநூல்:*** கால்டுவெலார் 'திரவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம்' (ஆங்கிலம்).

உ. ***திரவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலி:*** பரோ எமனோவர் (Burrow and Emeneau) தொகுத்த திரவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலி (ஆங்கிலம்).

ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலிகள்: Chambers's Etymological Dictionary of the English Language, Skeat's Etymological Dictionary of the English Language, Klein's Comprehensive Etymological Dictionary of the English Language, Weekley's Etymological Dictionary of Modern English, The Oxford Dictionary of English Etymology ஆகியவை.

குறிப்பு: யாழ்ப்பாண ஞானப்பிரகாச அடிகளின் 'சொற்பிறப்பு-ஒப்பியல் தமிழ் அகராதி' முதன்மடலத்தில் ஒரு சில பகுதிகளொடு நின்றுவிட்டமையாலும், அதிற் கையாளப்பட்ட நெறிமுறைகள் பெரிதும் வேறுபட்டுள்ளமையாலும், அது **'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி'**க்குப் பயன்படவில்லை.

ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலிகள் அயன்மொழிக் குரியனவாயினும், அதிற் கையாளப்பட்டுள்ள நெறிமுறைகள், **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி**க்குப் பெரிதும் உதவின. இங்ஙனமே, யோசேப்பு ஆங்கசு (Joseph Angus) எழுதின 'Hand-book of the English Tongue', ரிச்சர்டு மாரிசு (Richard Morris) எழுதின 'Historical Outlines of English Accidence' முதலிய ஆங்கில இலக்கண நூல்களும் ஓரளவு பயன்பட்டன. பரோ எமனோவர் சொற்பிறப்பியல் அகரமுதலியும் (1961) திரவிட மொழிகள்பற்றியதேனும், 4572 சொற்களே கொண்டுள்ளமையாலும், வேருந் திரிவுங் காட்டாது பெரும்பாலும் ஒப்பியல் அகரமுதலியாகவே (Comparative Dictionary) இருப்பதனாலும், பல சொற்கட்கு இனச்சொல் (cognates) காட்டற்கன்றி வேறெதற்கும் பயன்படவில்லை.

ஒரு சில கூட்டுச்சொற்களைத் தவறாகவும் அவ்வகரமுதலி பிரித்துள்ளது.

எ-டு: தகப்பன் – தகு + அப்பன்.

தம் + அப்பன் – தமப்பன் → தகப்பன் என்பதே உண்மையான வரலாறு.

வரலாற்றிற் கெட்டாத தொல்பழங்காலத்துத் தோன்றிய உலக முதன்மொழியாகிய குமரிநிலத் தமிழின் சொற்பிறப்பியலை, உழைப்பொடும் பொறுமையொடும் தறுகண்மை யொடும் மெய்யறியவாவொடுங்கூடி நீண்டு ஆழ்ந்து நுணுகிய ஆராய்ச்சியாலன்றிப் பெருந் தமிழ்ப்புலவரும் அறியவொண்ணா நிலையில், வரலாறறியாது சமற்கிருத அடிப் படையில் தமிழாய்ந்த மேலையரிடம் எதிர்பார்ப்பது, இயற்கைக்கு முற்றும் மாறானதே. ஆதலால், பரோ எமனோவர் அகரமுதலிக் குறைபாட்டினால் அவர்க்கு எள்ளளவும் இழுக்கின்று.

பிற கருவிநூல்கள்

(1) குண்டர்ட்டு மலையாள-ஆங்கில அகரமுதலி (A Malayalam and English Dictionary by H. Gundert).

(2) மலையாளப் பழஞ்சொல் (2000).

(3) கிற்றல் கன்னட-ஆங்கில அகரமுதலி [Kittel's Kannada-English Dictionary (in 4 Volumes)—Revised and enlarged edition].

(4) A Telugu Verbal Bases by Bhadriraju Krishnamurti.

(5) A Sanskrit English Dictionary by M. Monier Williams.

(6) Grierson's Linguistic Survey of India.

வரலாறு

I. P. T. சீநிவாச ஐயங்கார்
- (1) Stone Age in India.
- (2) History of the Tamils.

II. V. R. இராமச்சந்திர தீட்சிதர்
- (1) Origin and spread of the Tamils.
- (2) Pre-Historic South India.

4. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் சிறப்பியல்புகள் (The Special features of the Tamil Etymological Dictionary)

1. அகரமுதலிவகை

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, எல்லார்க்கும் பயன்படும் பொதுவகை யான சொற்பொரு ளகரமுதலியும் (General-purpose Dictionary), ஆராய்ச்சியாளர்க்கே பயன் படும் சொற்பிறப்பியல் அகரமுதலியும் (Etymological Dictionary) இணைந்த பேரகரமுதலி (Comprehensive Dictionary) ஆகும்.

2. அமைப்பு

செந்தமிழ்ச் சொல்வளத்தை யறிதற்பொருட்டும், தனித்தமிழாளர்க்குப் பயன்படும் பொருட்டும், தமிழ்ச்சொற்களும் அயற்சொற்களும் முதன்முறையாகப் பிரிக்கப் பட்டுள்ளன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் பன்னிரு மடலங்களுள் முதலொன்பதும் தமிழ்ச்சொற்கட்கும், பத்தாவது மட்டும் தமிழும் திரவிடமுமல்லாத அயற்சொற்கட்கும் பொருள் கூறும்.

கூட்டுச்சொல்லின் நிலைச்சொல் தமிழாயின் தமிழ்ச்சொன் மடலங்களிலும், அயற் சொல்லாயின் அயற்சொன் மடலத்திலும் இடம்பெறும்.

அகத்தியம் என்பதுபோன்ற தமிழுக்கு இன்றியமையாத சொல்லாயின், தமிழ்ச் சொன் மடலத்திலேயே இடம்பெறும். இது விலக்கென அறிக.

எழுத்துப் பெயர்ப்பு

தமிழொலியை ஒட்டியே எழுத்துப்பெயர்ப்பு அமைந்துள்ளது.

எ-டு: சங்கு - šaṅgu, பாம்பு - pāmbu.

3. சொல்

சொற்களெல்லாம் திருந்திய வடிவிலேயே காட்டப்பட்டுள்ளன.

எ-டு : திருந்தா வடிவம்	திருந்திய வடிவம்
அரிவாள்மணைப்பூண்டு	அரிவாள்முனைப்பூண்டு
சாயங்காலம்	சாயுங்காலம்
மணத்தக்காளி	மணித்தக்காளி
வெட்டரிவாள்	வெட்டறுவாள்

இதுவரை பிற அகரமுதலிகளில் இடம் பெறாத பல உலகவழக்குச் சொற்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

எ-டு: அரணை (எகிர்), அரைத்தவளை, அறுவாள், ஒடியல், . கவைமகன், காம்பு-தல், குடட்டி, சூவை, தக்கட்டி, நக்களி-த்தல், நரிகுளிப்பாட்டி, நனையாநரி, பொண்டான், மோள், வெங்கழி.

நா. கதிரைவேற்பிள்ளை அகரமுதலியிலுள்ள ஆகண கைக்கிளை (சாதாரண காந் தாரம்), ஆகணதாரம் (கைசிகி நிஷாதம்) என்னுஞ் சொற்கள் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதியில் இடம்பெறவில்லை.

முதல் எண் மடலங்களிலும் விடுபட்டுப்போன சொற்களெல்லாம் ஒன்பதாம் மடலத்தில் இடம்பெறும்.

4. பொருள்

எத்துறையிலும், பிற்கால வினைகள் பேரறிஞராற் செய்யப்படின், முற்கால வினை களினுஞ் சிறந்தனவாகவே யிருக்கும். இப் பொது வியற்கைப்படி அகரமுதலிகளும், பிற் காலத்தன முற்காலத்தனவற்றினும் பொருள்களை மிகுதியாகவும் சிறப்பாகவும் விளக்கிக் காட்டும். இதனால் முற்காலத்தனவற்றிற்கு ஓர் இழுக்குமில்லை.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி (Lexicon) அதற்கு முந்தைய சொற்களஞ்சி யங்களினும் அகரமுதலிகளினும் மிக விரிவானதென்று காட்டுதற்கு, அதன் பதிப்பாசிரியர், **தாரம், வரி** என்னும் இரு சொற்பொருள்களை, திவாகரம், பிங்கலந்தை, நிகண்டு, சூடா மணி, அகராதி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, கயாதரம், பல்பொருட் சூளாமணி, பொதிகை நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு, நாமதீப நிகண்டு, வேதகிரியார் நிகண்டு, நாநார்த்த தீபிகை என்னுஞ் சொற்களஞ்சியங்களினின்றும், அகராதி மோனைக் ககராதி யெதுகை, சதுரகராதி, பெபிரிசியசு (Fabricius) அகராதி, இராட்டிலர் (Rottler) அகராதி, யாழ்ப்பாண அகராதி, ஒருசொற் பலபொருள் விளக்கம், போப்பு (Pope) செறிவடக்கத் (Compendious) தமிழாங்கில (Tamil-English) அகராதி, வின்சிலோ (Winslow) அகராதி, ஓர் இலக்கியத் (Classical) தமிழாங்கில (Tamil and English) அகராதி, தமிழ்ப் பையடக்க (pocket) அகராதி, தரங்கம்பாடி (Tranquebar) அகராதி, நா. கதிரைவேற்பிள்ளை அகராதி, சங்க அகராதி, இலக்கியச் சொல்லகராதி, தமிழகராதி (Tamil Lexicon) என்னும் அகரமுதலி களினின்றும், காலவரிசைப்படி எடுத்துக்காட்டியுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழக அகராதியிலும் 'வரி' என்னுஞ் சொல்லிற்குரிய பொருள் களுள் வளைவு, வளைகோடு, சுற்று என்பன விடப்பட்டுள்ளன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியிற் பொருள்பற்றி ;யேற்பட்டுள்ள திருத்தங்கள் பின்வருமாறு பலவகைப்படும் :

க. முன் குறிக்கப்படாத பொருள்(கள்) குறிக்கப்படுதல்.

எ-டு : **சுவரொட்டி** 1. எறிந்தாற் சுவரிற் சில நொடி நேரம் ஒட்டிக்கொள்ளும் ஒரு வகைப் புறா.
2. சுவரில் ஒட்டும் விளம்பரத் தாள் (wall-poster).

உ. தவறான பொருள் திருத்தப்படுதல்.

எ-டு :

சொல்	தவற்றுப்பொருள்	திருத்தப்பொருள்
குறவை	வரால்	வரால் வடிவான சிறுமீன்
கேருதல்	கோழி கத்துதல்	கோழி முட்டையிடக் கத்துதல்.
கசகரணம்போடுதல்	யானை காதாட்டுதல்	யானை மல்லாப்பாண்டி யடித்தல்.
அளைமறிபாப்பு	பாட்டின் ஈற்றினின்ற சொல் இடையிலும் முதலிலுஞ் சென்று பொருள் கொள்ளப் படும் முறை.	நாலாமடி முதலடியாகவும், மூன்றாமடி இரண்டாமடியாகவும், இரண்டாமடி மூன்றாமடியாக வும், முதலாமடி நாலாமடியாக வும், இங்ஙனம் பாட்டின் அடிகள் தலைகீழாக மாறிப் பொருள் கொள்ளப்படுதல்.

ங. பொருள்களெல்லாம் இயற்கையொட்டிய ஏரண முறைப்படி குறிக்கப்படுதல்.

பள்ளி என்னுஞ் சொல்லின் முதற்பொருள் 'படுக்கை', இறுதிப்பொருள் 'இடம்'. தொல்காப்பியத்திற் பள்ளியென்னுஞ் சொல் இடப்பொருளில் ஆளப்பட்டுள்ளமை யால் அதுவே முதற்பொருளென்று கொண்டனர் சென்னை யகராதி தொகுத்தோர். இது சொல்லாராய்ச்சி யின்மையால் நேர்ந்த விளைவு.

ச. பொருள்களெல்லாம் தமிழ்ச்சொல்லாலேயே குறிக்கப்படுதல்.

தமிழ்ச்சொல் வழக்கற்றதாயின், வழக்கிலுள்ள நேர் அயற்சொல் அடுத்துப் பிறைக் கோட்டுள் (bracket) குறிக்கப்பட்டிருக்கும்.

ரு. இனப்பொருட் பெயர்களும் வகைப்பொருட் பெயர்களும் ஒருங்கே குறிக்கப்படுதல்.

எல்லாச் சொற்களும் முதலெழுத்தின் நெடுங்கணக்கு வரிசைப்படி அமைக்கப்பட்டிருப் பினும், பிறந்தையின் (genus) இனங்களும் (species), இனத்தின் வகைகளும் (varieties), இவை போன்ற பிறபொருட் பிரிவுகளும் கிளைகளும் வேறுபாடுகளும் பகுப்புகளும், அவ்வவற்றின் பொதுப்பொருள் அல்லது தலைமைப் பொருளின் கீழேயே ஒருங்கே ஏதேனும் ஒரு வரிசையாகக் குறிக்கப்பட்டுப் பொருள் கூறப்பட்டுள்ளன அல்லது விளக்கப்பட்டுள்ளன.

அவரை என்னுஞ் சொல்லின்கீழ், ஆட்டுக்கொம்பவரை, ஆரால்மீனவரை, ஆனைக்கா தவரை முதலிய வகைப்பெயர்களும்; கொத்தவரை, சுடலையவரை, தம்பட்டவரை முதலிய இனப்பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன.

இவ்வமைப்பு, ஒரு பொருளின் வகைகளையெல்லாம் ஒருங்கே எளிதாய்க் கண்டுகொள் வதற்கு ஏற்றதாகும். அல்லாக்கால், ஒன்றன் வகைகளையெல்லாம் அறிதற்கு எல்லா மடலங்களையும் புரட்டவேண்டியிருக்கும். இது எளிதில் ஆவதன்று.

இம் முறை ஏற்கெனவே **வின்சிலோ** தமிழ்-ஆங்கிலம்-தமிழ் அகரமுதலியிற் கையாளப் பட்டது. ஆயினும், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி அதைப் பின்பற்ற வில்லை.

ஒரு பொருளின் வகைகளை யெல்லாம் ஓரிடத்திற் குறித்துப் பொருள் கூறியிருப்பினும், அகரமுதலியின் பயன்பாட்டைப் பெருக்குதற்பொருட்டு, அவ் வகைகள் வண்ணமாலை வரிசைப்படி ஆங்காங்கே தனித்தனியாகவுங் குறிக்கப்பட்டு அவற்றின் பொதுப்பொருட்கு மாட்டெறியப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, **அவரை** என்னும் உருப்படியில் அதன் வகைகளெல்லாம் ஒருங்கே கூறப்பட்டு, அவற்றுள் ஒன்றான **ஆட்டுக்கொம்பவரை** என்பது, வண்ணமாலை வரிசைப் படி அதற்குரிய இடத்திலும் குறிக்கப்பட்டு, **அவரை** பார்க்க என்று மாட்டெறியப் பட்டுள்ளமையும் காண்க.

v. மூலம்

தென்சொல்லெல்லாம் தென்சொல்லென்றே இவ் வகரமுதலியிற் காட்டப் பட்டுள்ளன. இதுவரை வடசொல்லென்று மயங்கியவையெல்லாம், வேருந் திரிவும் வரலாறும் காட்டி விளக்கப்பட்டுள்ளன.

உலகில் முதன்முறையாக வரலாற்றடிப்படையிலும் மொழிநூ லடிப்படையிலும் வெளிவரும் அகரமுதலி இதுவே. தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமாத லால், இனச்சொற்கள் (cognates) திரவிட மொழிகளிலிருந்தும் ஆரிய மொழிகளிலிருந்தும் காட்டப்பட்டுள்ளன.

தென்சொல்லை வடசொல்லென்று காட்டுதற்குக் கட்டப்பட்டுள்ள கட்டுக்கதை களும், அறிவியல்முறையில் மறுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, **உருத்திராக்கம்** என்னும் சொல்லைக் காண்க.

தென்சொல் திரிந்து வடசொல்லாவதற்கும், அதன்பின் அதை வடசொல்லே யென்று வலித்தற்கும், அதை இயற்கைக்கு மாறாகப் பகுத்துப் பொருந்தப் பொய்த்தலாகவும் பொருந்தாப் பொய்த்தலாகவும் வேர்ப்பொருளை வேறுபடுத்திக் கூறற்கும், ஐஞ்சொற்களை இங்குக் காட்டுவோம்.

(1) இடைகழி

இடை + கழி – இடைகழி = வீட்டிடையிற் கழிந்து செல்லும் இடம்.

இடைகழி → இடேழி → இரேழி → ரேழி.

இடைகழி → டேகழி → தேகளி > **வ.** தேகலீ.

தேகலீதீபநியாயம் = இடைகழியில் வைத்த விளக்கு இரு புறமும் ஒளிவீசுவது போல, ஒரு பொருள் இடையில் நின்று ஈரிடத்தும் பயின்றுவரும் நெறி.

(2) உவணம்

'உ' உயரத்தைக் குறிக்குஞ் சுட்டெழுத்து. உகப்பு (உயர்வு), உச்சி, உத்தரம், உம்பர் (மேல், மேலுலகம், தேவர்), உயர், ஊர்தல் (ஏறுதல்), உறி, உன்னு முதலிய சொற்களை நோக்குக.

உம் → உவ் → உவண் = மேலிடம். உவண் → உவணை = தேவருலகம். உவண் → உவணம் = உயர்ச்சி, உயரப் பறக்கும் பருந்து, கலுழன், கருடன், கழுகு. 'உயரவுயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? (கருடனாகுமா?)' என்பது பழமொழி. உவணம் → உவணன் = கருடன் (திவா.).

உவணம் → சுவணம் = கருடன், கழுகு. உ → சு.

ஒ.நோ: உலவு → சுலவு, உருள் → சுருள், உழல் → சுழல், உதை → சுதை (உதைக்குங்கறவை).

சுவணம் > **Skt.** ஸுபர்ண.

வடசொல் வடிவிற்கு வடமொழியாளர் கூறும் பொருட்கரணியம்:- ஸு = நல்ல, அழகிய. பர்ண = இலைபோன்ற சிறகு. ஸுபர்ண = அழகிய சிறகுடைய பறவை, கருடன், கழுகு.

(3) **செவந்தி**

செம் → செவ் + அந்தி – செவ்வந்தி = செவ்வான மாலை, அவ் வேளையில் மலரும் பூ. செவ்வந்தி → செவந்தி.

க. சேவந்தி; **தெ.** சேமந்தி → சாமந்தி → ஜாமந்தி. சேவந்தி > **வ.** ஸேவதீ.

(4) பள்ளி

பள் → பள்ளம். பள் → பள்ளை = குள்ளம். பள்ளையன் = குள்ளன். பள்ளை யாடு = குள்ளமான ஆட்டுவகை. பள்ளையம் = தட்டையான உண்கலம். பள் → பள்ளி = நிற்பதினும் இருப்பதினும் தாழ்மட்டமான படுக்கைநிலை, படுக்கை, படுக்கைவிரிப்பு, படுக்கும் இடம், படுக்கும் அறை, அறை, படுக்கும் வீடு, வீடு, தெய்வ வீடாகிய கோயில், தெய்வத் தன்மையுள்ள துறவியர் மடம், பல வீடுகள் சேர்ந்த ஊர், கோயிலுள்ள ஊர், மடத்தில் அல்லது கோயிலில் நடைபெறும் கல்விச்சாலை.

க. பள்ளி > **வ.** பல்லீ = சிற்றூர், காடுவாழ் குலத்தார் குடியிருப்பு, குடிசை, வீடு.

வடமொழியில் இச் சொல்லிற்கு வேரில்லை. 'பல்லீ' என்பதிற் 'பல்' என்னும் முன்னசையைப் பிரித்து, செல் (to go) என்று பொருள் கூறுவர்.

(5) வடவை

வடவனல் = வடதிசை நெருப்பு. **ஒ.நோ. L.** *aurora borealis* = northern light.

வடம் → வடந்தை = வடதிசையிலுள்ளது, வடகாற்று, வடவனல். வடம் → வடவை = வடவனல்.

ஊழியிறுதியில் உலகையழிப்பது வடவைத்தீ யென்று கருதினதினால், அதை 'உத்தர மடங்கல்' என்றனர் முன்னோர். உத்தரம் = வடக்கு. மடங்கல் = கூற்றுவன்.

வடவை என்பது வடமொழியில் வடவா என்று திரியும். அவ் வடிவுச் சொல்லிற்கு அம் மொழியிற் பெண்குதிரை என்பது பொருள். அதனால் அச் சொல்லிற்குப் பெண் குதிரை வடிவான தீயென்று பொருள்கூறி, அதை வடசொல்லாகக் காட்டுவர். தென்சொல் வடிவினின்று வேறுபடுத்தற்கு முகம், அக்கினி என்னும் சொற்களைச் சேர்த்து, வடவாமுக, வடவாமுகாக்கினி என்றும் வழங்குவர். இனி, வகரத்தைப் பகரமாக்கி படபா (baḍabā), படபாமுக, படபாமுகாக்கினி என்றும் வழங்குவர்.

இத்தகைய மாற்றங்களும் ஏமாற்றங்களும் வெள்ளிடைமலைபோல் விளங்கினும், தமிழின் தொன்மை முன்மை தாய்மை தலைமைகளை அறியாமையால், மேலையரும் இன்றும் உண்மையறியாதவரா யிருக்கின்றனர்.

இவ் வகரமுதலியின் இறுதிமடலம் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் நெறிமுறைகளை யெல்லாம் விளக்கிக் காட்டுவது. அது தமிழின் தோற்ற வளர்ச்சி யாக்க முறைகளைத் தெரிவிப்பதுடன், இக்கால அறிவியற் கம்மியக் குறியீடுகளையெல்லாம் மொழிபெயர்த்தற் கேற்ற புதுச்சொற் புனையவும் துணைசெய்யும். ஆதலால், அது இவ் வகரமுதலிச் சிறப்பிற்கு முடிமணி போன்றதாம்.

5. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் அமைப்பொழுங்கு
(The Arrangement and Order of the Tamil Etymological Dictionary)

முதன் மடலம்

முதற்பகுதி — அ
2ஆம் பகுதி — ஆ
3ஆம் பகுதி — இ, ஈ
4ஆம் பகுதி — உ, ஊ
5ஆம் பகுதி — எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

2ஆம் மடலம்

முதற்பகுதி — க, கா
2ஆம் பகுதி — கி, கீ, கு, கூ
3ஆம் பகுதி — கெ, கே, கை, கொ, கோ, கௌ

3ஆம் மடலம்

முதற்பகுதி — ச, சா
2ஆம் பகுதி — சி, சீ, சு, சூ
3ஆம் பகுதி — செ, சே, சை, சொ, சோ, சௌ, ஞ, ஞா, ஞி, ஞெ, ஞே, ஞை, ஞொ

4ஆம் மடலம்

முதற்பகுதி — த, தா
2ஆம் பகுதி — தி, தீ, து, தூ
3ஆம் பகுதி — தெ, தே, தை, தொ, தோ, தௌ

5ஆம் மடலம்

முதற்பகுதி — ந, நா
2ஆம் பகுதி — நி, நீ
3ஆம் பகுதி — நு, நூ, நெ, நே, நை, நொ, நோ, நௌ

6ஆம் மடலம்

முதற்பகுதி — ப, பா
2ஆம் பகுதி — பி, பீ, பு, பூ
3ஆம் பகுதி — பெ, பே, பை, பொ, போ, பௌ

7ஆம் மடலம்

முதற்பகுதி — ம, மா
2ஆம் பகுதி — மி, மீ, மு, மூ
3ஆம் பகுதி — மெ, மே, மை, மொ, மோ, மௌ

8ஆம் மடலம்

முதற்பகுதி — வ, வா
2ஆம் பகுதி — வி, வீ
3ஆம் பகுதி — வெ, வே, வை, வௌ

9ஆம் மடலம்

பிற்சேர்ப்பு (Supplement)

10ஆம் மடலம்

அயற்சொற்கள் (Non-Dravidian Foreign words)
முதற்பகுதி — இந்திய மொழிகள்
2ஆம் பகுதி — மேலை மொழிகள்

11ஆம் மடலம்

தமிழகரமுதலி வரலாறு (History of Tamil Lexicography)

12ஆம் மடலம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் நெறிமுறைகள்
(Principles of Tamil Etymology)

எழுத்துப்பெயர்ப்பு அட்டவணை
(Transliteration Table)

1. உயிர் (Vowels)

அ — *a*	உ — *u*	ஐ — *ai*
ஆ — *ā*	ஊ — *ū*	ஒ — *o*
இ — *i*	எ — *e*	ஓ — *ō*
ஈ — *ī*	ஏ — *ē*	ஔ — *au*

2. ஆய்தம் (The soft gutteral)

ஃ — *k̲*

3. மெய் (Consonants)

க் — *k*	ண் — *ṇ*	ர் — *r*
,, (*sing. ml. & fl.*) — *g*	த் — *t*	ல் — *l*
ங் — *ṅ*	,, (*sing. ml. & fl.*) — *d*	வ் — *v*
ச் — *š*	ந் — *n*	ழ் — *l̤*
,, (*d.*) — *cc*	ப் — *p*	ள் — *ḷ*
ஞ் — *ñ*	ம் — *m*	ற் — *ṟ*
ட் — *ḍ*	ய் — *y*	ன் — *n̲*
,, (*d.*) — *ṭṭ*		

sing. — singular. ml. — medial. **fl.** — final. d. — double.

சொல்லிடையிலும் கடையிலும் வரும் தனிக் ககரத்தை ஆய்தம்போ லொலிப்பது பிற்கால வழக்காகத் தோன்றுகின்றது.

ற்ற என்னும் இரட்டை றகரம் ṟṟ என்று வரிவடிவில் குறிக்கப்படினும், ஒலிவடிவில் 't' ஒத்தொலிக்கும்.

தமிழ் வல்லினமெய்கள் வடமொழி அல்லது ஆரிய வல்லினமெய்களினும் மெலியவை. ஆதலால், சொல்லிடையிலுங் கடையிலும் வரும் ஒற்றை வடமொழி (ஆரிய) வல்லின மெய்கள், ஒலிமுறைப்படி, தமிழில் இரட்டை வல்லினமெய்களாக எழுதப்படும்.

எ-டு: வ. kāka — த. காக்க
,, pāpa — ,, பாப்ப
E. teak — தேக்கு
,, peking — பீக்கிங்
,, pope — போப்பு
,, paper — பேப்பர்

இவ் வியல்பினாலேயே, தமிழில் மெல்லினமெய் யடுத்த வல்லினமெய் எடுப்பொலியாய் (voiced) ஒலிக்கும்.

எ-டு: தெங்கு — teṅgu   பந்து — pandu
பஞ்சு — paññju   செம்பு — šembu

இவற்றை teṅku, pancu, pantu, cempu என்று ஆங்கிலத்தில் எழுதுவது தவறாம்.

nka, nca, ṇṭa, nta, mpa என்னும் இணைமெய்யொலிகள் தமிழில் இல்லை.

டகரம் இயல்பாகவே தனித்த நிலையிலும் எடுப்பொலியாய் ஒலிக்கும். படம் என்னுஞ் சொல்லை paṭam என்றும், வண்டு என்னும் சொல்லை vaṇṭu என்றும் எழுதுவது தவறாம்.

நகரம் னகரமெய் யடுத்து வரும்போது, candle என்னும் ஆங்கிலச் சொல்லிலுள்ள 'd' ஒத்தொலிக்கும்.

வினைச்சொற்களின் புடைபெயர்ச்சி வாய்பாடு
(Table of Classification of Verbs according to their conjugation)

I. செயப்படுபொருள் குன்றிய வினை (Intransitive verb)

எண்	முதனிலை	இ. கா.	நி. கா.	எ. கா.
1.	அழு	அழுதான்	அழுகின்றான்	அழுவான்
2.	விழு	விழுந்தான்	விழுகின்றான்	விழுவான்
3.	நட	நடந்தான்	நடக்கின்றான்	நடப்பான்
4.	சிரி	சிரித்தான்	சிரிக்கின்றான்	சிரிப்பான்
5.	ஓடு	ஓடினான்	ஓடுகின்றான்	ஓடுவான்
6.	ஆ	ஆயினான் ஆனான் }	ஆகின்றான்	ஆவான்
7.	ஆகு	ஆகினான்	ஆகுகின்றான்	ஆகுவான்
8.	போ	போயினான் போனான் போந்தான் }	போகின்றான்	போவான்
9.	போகு	போகினான்	போகுகின்றான்	போகுவான்
10.	போது	போதினான்	போதுகின்றான்	போதுவான்
11.	கோண்	கோணினான்	கோணுகின்றான்	கோணுவான்
12.	மாண்	மாண்டான்	மாண்கின்றான் மாணுகின்றான் }	மாண்பான் மாணுவான்
13.	செல்	சென்றான்	செல்கின்றான் செல்லுகின்றான் }	செல்வான் செல்லுவான்
14.	நில்	நின்றான்	நிற்கின்றான்	நிற்பான்
15.	துள்	துள்ளினான்	துள்ளுகின்றான்	துள்ளுவான்
16.	மாள்	மாண்டான்	மாள்கின்றான் மாளுகின்றான் }	மாள்வான் மாளுவான்
17.	நோ	நொந்தான்	நோகின்றான்	நோவான்
18.	வா	வந்தான்	வருகின்றான்	வருவான்
19.	சா	செத்தான் (சத்தான்) }	சாகின்றான்	சாவான்
20.	படு	பட்டான்	படுகின்றான்	படுவான்
21.	புகு	புகுந்தான் புக்கான் }	புகுகின்றான்	புகுவான்
22.	நகு	நகைத்தான் நக்கான் }	நகுகின்றான்	நகுவான்

II. செயப்படுபொருள் குன்றாவினை (Transitive verb)

எண்	முதனிலை	இ. கா.	நி. கா.	எ. கா.
1.	செய்	செய்தான்	செய்கின்றான்	செய்வான்
2.	அறி	அறிந்தான்	அறிகின்றான்	அறிவான்
3.	அள	அளந்தான்	அளக்கின்றான்	அளப்பான்
4.	கொடு	கொடுத்தான்	கொடுக்கின்றான்	கொடுப்பான்
5.	வாங்கு	வாங்கினான்	வாங்குகின்றான்	வாங்குவான்
6.	அள்	அள்ளினான்	அள்கின்றான் அள்ளுகின்றான்	அள்வான் அள்ளுவான்
7.	கொல்	கொன்றான்	கொல்கின்றான் கொல்லுகின்றான்	கொல்வான் கொல்லுவான்
8.	சொல்	சொல்லினான் சொன்னான் சொற்றான்	சொல்கின்றான் சொல்லுகின்றான்	சொல்வான் சொல்லுவான்
9.	கல்	கற்றான்	கற்கின்றான்	கற்பான்
10.	ஆள்	ஆண்டான்	ஆள்கின்றான் ஆளுகின்றான்	ஆள்வான் ஆளுவான்
11.	கேள்	கேட்டான்	கேட்கின்றான்	கேட்பான்
12.	எண்	எண்ணினான்	எண்ணுகின்றான்	எண்ணுவான்
13.	உண்	உண்டான்	உண்கின்றான் உண்ணுகின்றான்	உண்பான் உண்ணுவான்
14.	தின்	தின்றான்	தின்கின்றான் தின்னுகின்றான்	தின்பான் தின்னுவான்
15.	தா	தந்தான்	தருகின்றான்	தருவான்
16.	காண்	கண்டான்	காண்கின்றான் காணுகின்றான்	காண்பான் காணுவான்
17.	தொடு	தொட்டான்	தொடுகின்றான்	தொடுவான்
18.	விடு	விடுத்தான் விட்டான்	விடுக்கின்றான் விடுகின்றான்	விடுப்பான் விடுவான்
19.	போடு	போட்டான்	போடுகின்றான்	போடுவான்

III. பொதுவினை

1.	திற	திறந்தது	திறக்கின்றது	திறக்கும் (செ.கு.வி.)
	,,	திறந்தான்	திறக்கின்றான்	திறப்பான் (செ.குன்றாவி.)
2.	வெளு	வெளுத்தது	வெளுக்கின்றது	வெளுக்கும் (செ.கு.வி.)
	,,	வெளுத்தான்	வெளுக்கின்றான்	வெளுப்பான் (செ.குன்றாவி.)

IV. பிறவினை (Causative verb)

1.	செய்-செய்வி	செய்வித்தான்	செய்விக்கின்றான்	செய்விப்பான்
2.	நட-நடத்து	நடத்தினான்	நடத்துகின்றான்	நடத்துவான்

உருப்படி அமைப்பொழுங்கு
(The Order in the Arrangement of an Article)

I. பெயர்ச்சொல் (Noun)

1. தலைப்புச்சொல் — The head word
2. எழுத்துப்பெயர்ப்பு — The transliteration
3. இலக்கணச் சொல்வகை — The word-class
4. வேற்றுமைப்பாட்டுவகை — The Mode of Declension

(1) இயல்பு
எ-டு : மணி — மணியை, மலை — மலையை.

(2) சாரியைப் பேறு
எ-டு : மரம் — மரத்தை, அவை — அவற்றை.

(3) 4 ஆம் வே. சாரியைப் பேறும் ஏனை வே. இயல்பும்.
எ-டு : நாண் — நாணுக்கு, நாணிற்கு.
மான் — மானுக்கு, மானிற்கு.

(4) 4 ஆம் வே. இயல்பும் சாரியைப் பேறும் ஏனை வே. இயல்பும்.
எ-டு : ஊர் — ஊர்க்கு, ஊருக்கு.
அவன் — அவற்கு, அவனுக்கு.

(5) குற்றியலுகர டறமெய் யிரட்டல்
எ-டு : நாடு — நாட்டை, கிணறு — கிணற்றை.

(6) தனிக்குறிலடுத்த மெய்யீ றிரட்டல்
எ-டு : கண் — கண்ணை, சொல் — சொல்லை.

(7) அடி குறுகலும் மெய்யீ றிரட்டலும் 4ஆம் வேற்றுமையில் மெய்யீ றிரட்டாது சாரியைப் பேறும்.
எ-டு : நாம் — நம் — நம்மை — நமக்கு.
தான் — தன் — தன்னை — தனக்கு.

5. இயல்வரையறை [The Definition]
6. பொருளும் விளக்க மேற்கோளும் [The Meaning(s) and Illustrative Quotations]

(1) தனிச்சொல் [Simple word]
(2) கூட்டுச்சொல் [Compound word(s)]
(3) கூட்டுத் திரிசொல் [Parasyntheton(s)]
(4) மரபுவழக்கு [Idiomatic Expression(s)]
அ. தனிச்சொல் [Simple word]
ஆ. இணைமொழி [Words in Pairs]
இ. தொடர்மொழி [Phrase(s)]
ஈ. பழமொழி [Proverb(s)]

7. இனச்சொல் [The Cognates]

(1) திரவிடம் [Dravidian]
(2) ஆரியம் [Aryan]

8. இனமும் வகையும் [Species and Varieties]

9. மூலமும் வரலாறும் [The Origin and Derivation]

10. பிழைதிருத்தம் [Correction of errors found in other Dictionaries]

11. சிறப்புக் குறிப்பு [Special Notes]

II. வினைச்சொல் (Verb)

1. தலைப்புச்சொல் [The head word]

2. எழுத்துப்பெயர்ப்பு [The transliteration]

3. சொல்வகை [The word-class]

4. புடைபெயர்ச்சி [The Mode of Conjugation]

5. இயல்வரையறை [The Definition]

6. பொருளும் விளக்க மேற்கோளும் [The Meaning(s) and Illustrative Quotations]

 (1) தனிச்சொல் [Simple word]

 (2) கூட்டுச்சொல் [Compound word(s)]

 (3) கூட்டுத் திரிசொல் [Parasyntheton(s)]

 (4) மரபுவழக்கு [Idiomatic Expression(s)]

  அ. தனிச்சொல் [Simple word]

   (அ) பெயரெச்சம் [Adjective]

   (ஆ) வினையெச்சம் [Adverb]

   (இ) வினைமுற்று [Finite verb]

   (ஈ) தொழிற்பெயர் [Verbal noun]

   (உ) வினையாலணையும் பெயர் [Participial noun]

   (ஊ) தொழிலாகுபெயர்

  ஆ. இணைமொழி [Words in pairs]

  இ. தொடர்மொழி [Phrase(s)]

  ஈ. பழமொழி [Proverb(s)]

7. இனச்சொல் [The Cognates]

 (1) திரவிடம் [Dravidian]

 (2) ஆரியம் [Aryan]

8. மூலமும் வரலாறும் [The Origin and Derivation]

9. பிழைதிருத்தம் [Correction of errors found in other Dictionaries]

10. சிறப்புக் குறிப்பு [Special Notes]

III. இடைச்சொல் (Indeclinables)

1. *தலைப்புச்சொல்* [The head word]
2. *எழுத்துப்பெயர்ப்பு* [The transliteration]
3. *சொல்வகை* [The word-class]
4. *இயல்வரையறை* [The Definition]
5. *பொருளும் விளக்க மேற்கோளும்* [The Meaning(s) and Illustrative Quotations]
   (1) *தனிச்சொல்* [Simple word]
   (2) *கூட்டுச்சொல்* [Compound Word(s)]
6. *மரபு வழக்கு* [Idiomatic Expression(s)]
   (அ) *தனிச் சொல்* [Simple word]
   (ஆ) *இணைமொழி* [Words in Pairs]
   (இ) *தொடர்மொழி* [Phrase(s)]
   (ஈ) *பழமொழி* [Proverb(s)]
7. *இனச்சொல்* [The Cognates]
   (1) *திரவிடம்* [Dravidian]
   (2) *ஆரியம்* [Aryan]
8. *மூலமும் வரலாறும்* [The Origin and Derivation]
9. *பிழைதிருத்தம்* [Correction of errors found in other Dictionaries]
10. *சிறப்புக் குறிப்பு* [Special Notes]

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி அமைப்புத் திட்டம்

[Plan of the Tamil Etymological Dictionary]

உலகவழக்கு, இலக்கியவழக்கு என்னும் இருவகை வழக்கிலுமுள்ள எல்லாத் தொழிலும், கலையும் அறிவியலும்பற்றிய எல்லாச் சொற்களும், இயன்றவரை இவ் வகரமுதலியிற் சேர்க்கப்பட்டுள்ளன. திருமுகம், திருமந்திரவோலை, ஆவணம், கல்வெட்டு, நாட்குறிப்பு, பற்றுமுறி, எழுதப்பட்டனவும் எழுதப்படாதனவுமான நாட்டுப்புறப் பாடல், கதை, விடுகதை, தனிப்பாடல் ஆகிய யாவும் இலக்கியத்துள் அடங்கும்.

பண்டைப் புலவர், அரசர், அமைச்சர், படைத்தலைவர், முனிவர் முதலிய பெருமக்கள் பெயர்களும், மதுரை திருவரங்கம் முதலிய சிறந்த நகரப் பெயர்களும், குமரி குடமலை முதலிய மலைத்தொடர்ப் பெயர்களும், பறம்பு பழனி முதலிய குன்றப் பெயர்களும், பஃறுளி குமரி முதலிய ஆற்றுப் பெயர்களும், பெயர்பெற்ற பறந்தலைப் பெயர்களும், இலக்கியப் புகழ்பெற்ற பிற இடப்பெயர்களும் இவ் வகரமுதலியில் இடம் பெற்றுள்ளன.

பொதுவாக, அரசர் பெயரெல்லாம் ஒருமையீற்றிலும், புலவர் பெயரெல்லாம் உயர்வுப்பன்மை யீற்றிலும் குறிக்கப்பெற்றுள்ளன.

தனிச்சொல், கூட்டுச்சொல், தொடர்ச்சொல் ஆகிய மூவகைச் சொற்களும், நெடுங்கணக்கு என்னும் வண்ணமாலை (Alphabetical) யொழுங்குப்படி உயிர், ஆய்தம், மெய், உயிர்மெய் என்ற வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன.

மெய்யொடு உயிர் கூடியே உயிர்மெய் தோன்றுதலால், ஒவ்வொரு மெய்யும் அதன் உயிர்மெய்கட்கு முன்னரே வைக்கப்பட்டுள்ளது.

ஆய்தமும் மெய்யும் தமிழிற் சொன்முதல் வாராமையால், அவற்றின் வரிசையிடம் சொல்லிடை கடையே பற்றியது என்பது சொல்லாமலே அறியப்படும்.

இனி, ஆய்தமும் வல்லின மெய்யும் புணர்ச்சியீறாக வன்றி இயல்பீறாக வாரா என்பதையும் அறிதல் வேண்டும்.

தமிழின் சொல்வளத்தை உலகிற்குக் காட்டற்பொருட்டும், தனித்தமிழிற் பேசவும் எழுதவும் விரும்புவார்க்குப் பயன்படற்பொருட்டும், தமிழ்ச்சொற்களும் அயற்சொற்களும் முதன்முறையாக இவ் வகரமுதலியிற் பிரிக்கப்பட்டுள்ளன. தமிழ்ச்சொற்கள் முதல் ஒன்பது மடலமாகவும், அயற்சொற்கள் தனியாகப் பத்தாம் மடலமாகவும் வெளியிடப்படவுள்ளன.

ஏதேனும் ஓர் அயற்சொல் தமிழ்ச்சொற் றொகுதியில் இடம்பெறுமாயின் அதற்கொரு சிறப்புக் கரணியம் (காரணம்) இருக்கவேண்டுமென்பது, சொல்லாமலே சொல்லைப் பார்த்தவுடன் விளங்கும்.

எ-டு: அகத்தியன், சாமிநாதையர், கால்டுவெல், போப்பு, சீவகசிந்தாமணி, மேருமந்தரபுராணம்.

தமிழ்ச்சொற்றொகுதியில் அயற்சொற்கள் வருமிடமெல்லாம், அவை அயற்சொல் லென்பது மொழிப்பெயருடன் குறிக்கப்பட்டுள்ளன.

உருப்படிகளின் (Articles) தலைப்புச் சொற்களெல்லாம், மொழிவாரியாக, உயிர், ஆய்தம், மெய்வரிசைப்பட்ட உயிர்மெய் என்னும் முறையில் தனித்தனி வண்ணமாலை வரிசையில் (Alphabetical order) அமைக்கப்பட்டுள்ளன. ஆகவே, தமிழ்ச்சொற்கள் போன்றே, அயற்சொற்களும் வெவ்வேறு வண்ணமாலை வரிசையில் அமைந்திருக்கும்.

இருபிறப்பிகளான (Hybrids) கூட்டுச்சொற்களெல்லாம், நிலைச்சொல்லின் மொழிப் படி, தமிழ்ச்சொற் றொகுதியிலோ அயற்சொற் றொகுதியிலோ சேர்க்கப்பட்டிருக்கும். வருஞ்சொல்லின் மொழியும் அவ்வவ்விடத்திலேயே குறிக்கப்பட்டிருக்கும்.

தமிழ்ச்சொல்லென்றோ அயற்சொல்லென்றோ திட்டமாகத் தெரியாத ஐயுறவுச் சொற்களெல்லாம், அயற்சொன் மடல இறுதியில் தனிப்பகுதியாகக் குறிக்கப்படும்.

பொருளால் ஆரியமும் சொல்லால் தமிழுமான பொருட்டொகைப் பெயர்கள் தமிழ்ச் சொற் றொகுதியிலும் குறிக்கப்படும். ஆயின், தொகையுறுப்புகள் வடசொற் றொகுதியில் மட்டும் கூறப்படும்.

எ-டு: நான்மறை = ஆரிய மறைநூல் நான்கு.
சதுர்வேதம் = இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்னும் ஆரிய நால்வேதம்.

சில பொருட்டொகைகள் இருமொழியிலும் வழங்கினும், தொகையுறுப்புகள் தமிழில் மட்டும் கூறப்படும்.

எ-டு: ஐம்பொறி – மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புல வுறுப்புகள்.
பஞ்சேந்திரியம் – ஐம்பொறி

உருப்படி அமைப்பொழுங்கு
(Order in the arrangement of an article)

உருப்படிகள், மொத்தத்தில்,

(1)	தலைப்புச்சொல்	— Head word
(2)	எழுத்துப்பெயர்ப்பு	— Transliteration
(3)	இலக்கணச் சொல்வகை	— Word-class
(4)	புடைபெயர்ச்சி	— Conjugation
(5)	இயல்வரையறை	— Definition
(6)	பொருட்பாடு	— Meanings in Tamil and in English
(7)	மேற்கோள்	— Quotation
(8)	மரபுவழக்கு	— Idioms
(8)	இனச்சொல்	— Cognates
(10)	இனமும் வகையும்	— Species and Varieties
(11)	மூலமும் வரலாறும்	— Origin and Derivation
(12)	பிழைதிருத்தம்	— Correction of Errors
(13)	சிறப்புக் குறிப்பு	— Special Remarks

என்னும் பதின்மூன்று உறுப்புகளைக் கொண்டுள்ளன. இவை யெல்லாவற்றையும் எல்லா வுருப்படிகளும் பெறா. பலவற்றில் ஒன்றும் பலவுங் குறைந்திருக்கும்.

புடைபெயர்ச்சி என்பது வினைக்கும், இனமும் வகையும் என்பது பெயருக்குமே, தனிச் சிறப்பாக வுரியனவாகும்.

1. தலைப்புச்சொல்

(i) தமிழ்ச்சொல்

வழாநிலையும் வழுவமைதியுமான பெயர் வினை யிடை யென்னும் இலக்கணவகைச் செந்தமிழ்ச்சொற்களே, இவ் வகரமுதலியில் இடம்பெற்றுள்ளன. இப்ப (இப்போது), சாவல் (சேவல்), பொட்டை (பெட்டை), ரெண்டு (இரண்டு). வேங்கு (வாங்கு) என்பன போன்ற வழூஉச் சொற்களும், கொச்சைவழக்கும் இதில் விலக்கப்பட்டுள்ளன. ஆச்சு, கண்ணாலம் என்பன போன்ற கொச்சைவடிவுகள் செந்தமிழ் உரைநடைக்கு ஏலாவேனும் சில தனிப்பாடல்களிலும், பனுவல்களிலும் வந்துள்ளமைபற்றி, இதில் இடம்பெற்றுள்ளன.

போலி, இலக்கணப்போலி, மரூஉ, குறுக்கம் முதலிய திரிபுவகைகள், நல்லிசைப் புலவராலும் இலக்கண நூலாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டனவாயின், செந்தமிழின் பாற்படும்.

சொற்கள், தனிநிலையும் தொடர்நிலையும்பற்றி, (1) தனிச்சொல், (2) கூட்டுச் சொல், (3) தொடர்ச்சொல் என மூவகைப்படும்.

தனிச்சொல், (1) பகாச்சொல், (2) பகுசொல் என இருவகைப்படும்.

எ-டு: பகாச்சொல் — அ, கிண் (ஒலிக்குறிப்பு), வா, வெள்.

பகுசொல் — அன் (ஆ. பா. ஈறு), அந்த, மகன், கல்வி, கழகம், ஆன்றோர்.

தெலுங்கு கன்னடம் முதலிய திரவிட மொழிகளினின்று வந்து தமிழில் வழங்கும் திசைச்சொற்கள், தமிழ்ச்சொற்கள்போன்றே தனிச்சொற்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

எ-டு: சமாளிசு (க.) — த. சமாளி.

இவ்விரு வழிச்சொற்களின் கொச்சைவடிவங்களெல்லாம் விலக்கப்பட்டுள்ளன.

எ-டு:

திருந்திய வடிவம்	கொச்சை வடிவம்
அவர்கள்	அவங்க, அவக, அவுக, அவிக
சேவல்	சாவல்
பெட்டைச்சி	பொட்டச்சி
வாங்கு	வேங்கு

திருந்திய வடிவுள்ள எல்லாத் தனிச்சொற்களும் மொழியுறுப்பாதலின், இலக்கண நூல்களில் அவையல்கிளவியென விலக்கப்பட்ட அமங்கலச் சொற்களும் இடக்கர்ச் சொற்களும், எல்லா அகரமுதலிகளிலும் இடம்பெறும். ஆயினும், இடக்கரான வசவுச் சொற்களும் தொடர்ச்சொற்களும் இடம்பெறா.

விலக்கப்பட்ட சொற்களுட் சில, அவற்றின் வழுநிலையைக் காட்டுதற்பொருட்டு, எடுத்துச் சொல்லியே விலக்கப்பட்டுள்ளன.

எ-டு: சுழியம் — சுசியம், சுய்யம் என்பன கொச்சை.

தவளை — தவக்களை என்பது கொச்சை.

புதல்வர் — மகன்கள் என்பது கொச்சை; ஆண்மக்கள் என்று சொல்லலாம்.

புதல்வியர் — மகள்கள் என்பது கொச்சை; பெண்மக்கள் என்று சொல்லலாம்.

கூட்டுச்சொல்[1]

இருசொற் புணர்ப்பான கூட்டுச்சொல் பின்வருமாறு எண்வகைப்படும் :

எ-டு :	(1) பெயரும் பெயரும்	— கல்விச்சாலை, போக்குவரத்து
	(2) வினையும் பெயரும்	— அணிகலம், செய்வினை
	(3) அடையும் பெயரும்	— நன்செய், பெருந்திணை
	(4) பெயரும் வினையும்	— கண்ணோடு, குலைவெடி
	(5) வினையும் வினையும்	— எழுந்திரு, கண்டுபிடி
	(6) அடையும் வினையும்	— உட்கொள், முன்னேறு
	(7) இரட்டைக் கிளவி	— அருவரு, சலசல
	(8) இணைச்சொல்	— காய்கறி, சின்னபின்னம்

தொடர்ச்சொல் : முச்சொற்றொடரும் மேற்பட்ட சொற்றொடரும் தொடர்ச்சொல்லாகும்.

எ-டு : செங்கால்நாரை, அடித்துப்பிடுங்கும் சுத்தியல், அடையடுத்த ஆகுபெயர், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.

தலைப்புச்சொல் பெரும்பான்மை தனிச்சொல்லாயும், சிறுபான்மை கூட்டுச்சொல்லாயும், மிகச் சிறுபான்மை தொடர்ச்சொல்லாயு மிருக்கும்.

இனி, ஒருபொருட்சொல், பலபொருட்சொல் எனவும் தலைப்புச்சொல் இருவகைப் படும். பலபொருட்சொல் மீண்டும், ஒருவேர்ப் பலபொருட்சொல், பலவேர்ப் பலபொருட் சொல் என இருவகைப்படும்.

கால் என்னும் சொல், தாங்குவது அல்லது நீண்டது என்னும் அடிப்படைக் கருத்தைக் கொண்டு தூண், அடி, காற்பங்கு, கட்டம், ஓடுநீர்நிலை, காற்று, காலம், தோட்டம், வாணம் (கடைகால்), முகவைக்கலம், கொடிவழி முதலிய பல பொருள்களைக் குறிப்பதனால், ஒருவேர்ப் பலபொருட்சொல்லாகும்.

---

[1]கூட்டுச்சொல் (பாவாணர் தந்திருந்த மற்றொரு பட்டியல்)

கூட்டுச்சொல் (Compound word)

இருசொற் புணர்ப்பான கூட்டுச்சொல் பின்வருமாறு எழுவகையில் நிகழும்.

க. இருபெயரொட்டு — எ-டு : ஆசிரியப்பா, காரிப்புள், பள்ளிக்கூடம்.

உ. அடையடுத்த சொல் — எ-டு : பொற்கொல்லன், வெற்றிலை.

ந. வினைமுதல்வினை — எ-டு : பொழுதடைவு, வாயூறு.

ச. தொகைச்சொல் — எ-டு : அறிமுகம், செந்தாமரை.

ரு. எச்சத்தொடர் — எ-டு : பெயரெச்சத் தொடர் — இறந்தகாலம் (தெரிநிலை), பெரியப்பன் (குறிப்பு).
வினையெச்சத் தொடர் — அட்டிப்பேறு (தெரிநிலை), இன்றியமையாமை (குறிப்பு).

சு. மரபிணைமொழி

எ-டு : எதிர்பொருள் மரபிணைமொழி — ஏற்றிழிவு.
இனப்பொருள் மரபிணைமொழி — காய்கறி, தாய்தந்தை.
மீமிசைப்பொருள் மரபிணைமொழி — சீர்சிறப்பு, பொய்புரட்டு.

எ. அடுக்குத்தொடர்

எ-டு : படிப்படி, மேன்மேல், மினுக்குமினுக்கு.

இடைச்சொற்றொடரும் உரிச்சொற்றொடரும் முற்கூறியவற்றுள் அடங்கும்.

மணி என்னும் சொல், முன் என்னும் வேரிற் பிறந்து சிறியதைக் குறிப்பதும், மள் என்னும் வேரிற் பிறந்து வட்டமானதையும் உருண்டையானதையுங் குறிப்பதும், மண்ணு என்னும் மூலத்திற் பிறந்து ஒளியுள்ளதைக் குறிப்பதும், மல் என்னும் வேரிற் பிறந்து கரியதைக் குறிப்பதும் ஆன பல்வேர்ப் பலபொருட் சொல்லாகும்.

பலபொருளொருசொல் என்னும் பல்பொருள், மூலம் வேறுபட்ட பொருள்தோறும் வேறு சொல்லாகவே குறிக்கப்பட்டுள்ளது. அப் பொருள்களின் கால அல்லது ஏரண முறைப்படி, அவற்றின் சொற்கள் எண்ணிடப்பட்டுள்ளன.

மணி[1] =	சிறியது	எ-டு : மணிக்காடை, மணிக்குடல்.
மணி[2] =	வட்டமானது	எ-டு : மணியோசை, நாழிமணி.
	உருண்டது, குண்டு	எ-டு : மணிவலை, குன்றிமணி.
	உருண்டுதிரண்டது	எ-டு : நென்மணி, மணிச்சம்பா.
மணி[3] =	கரியது	எ-டு : மணிமிடற்றோன்.
	நீலமானது	எ-டு : மணிவண்ணன், மணிமலர்.
மணி[4] =	ஒளிபெறக் கழுவியது	எ-டு : மணிமாலை.
	அழகானது	எ-டு : மணிவாசல்.

வினைச்சொற்களெல்லாம் ஏவலொருமை வடிவிலேயே குறிக்கப்பட்டுள்ளன. தல் (த்தல்) ஈற்றுத் தொழிற்பெயர் வடிவிற் குறிப்பது, இலக்கண அறிவில்லாதவர்க்குச் சற்று மயக்கந்தர இடமாயிருத்தலால், அவை இடைவைப்புக் குறியிட்டுப் பிரி-தல்(-த்தல்) எனப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன.

சில வினைமுதனிலைகளின் இயல்பான மெய்யீற்று வடிவம், முக்காலப் புடைபெயர்ச்சியிலும் வழக்கற்று, உகரமேற்ற வடிவிலேயே வழங்குகின்றது. அதுவுங் குறிக்கப்பட்டுள்ளது.

எ-டு : **வழக்கற்றது**	**வழக்குற்றது**
அள்	அள்ளு
எண்	எண்ணு

தலைப்புச்சொல்லின்கீழ், அதனொடு தொடர்புள்ள கூட்டுச்சொல்லுக்கும், கூட்டுத் திரிசொல்லுக்கும், தொடர்ச்சொல்லுக்கும், திரிசொல்லுக்கும், பொருள் கூறப்பட்டுள்ளன. இங்ஙனமே,

ஓர் உறுப்பின் பெயரின்கீழ், அதன் வினைகளெல்லாம் வண்ணமாலை வரிசையிற் கூறப்பட்டுள்ளன.

தலைப்பச் சொல்லெல்லாம் 12 புள்ளி தடித்த எழுத்திலும், அதன் கீழ்ப்பட்ட சார்புச் சொல்லெல்லாம் 10 புள்ளி தடித்த எழுத்திலும் குறிக்கப்பட்டுள்ளன.

எ-டு:		
	தலைப்புச்சொல்	— **கடை**
	கூட்டுச்சொல்	— **கடைக்கண்**
	கூட்டுத் திரிசொல்	— **கடைக்கணித்தல்**
	தொடர்ச்சொல்	— **கடைக்கண் சாத்துதல்**
	திரிசொல்	— **கடைசி**

தலைப்புச்சொல் — **கண்**
கண்கசங்குதல்
கண்கலங்குதல்
கண்சிவத்தல்
கண்சோர்தல்
கண்திறத்தல்
கண்துடித்தல்
கண்துடைத்தல்

இங்ஙனமே ஏனை வினைகளும்.

எல்லா வினைச்சொல்லினின்றும் பலவீற்று வினைப்பெயர்கள் அமையுமேனும், சிறப்புப்பொருளுள்ளவையே இவ் வகரமுதலியிற் குறித்து விளக்கப்பட்டுள்ளன.

எ-டு : **வினை** **வினைப்பெயர்கள்**
நட நடக்கை, நடத்தை, நடப்பு, நடை.

கொச்சையும் வழுவுமான கூட்டுச்சொற்களும் தொடர்ச்சொற்களும், அத்தகைய தனிச்சொல்போன்றே திருந்திய வடிவிலேயே குறிக்கப்பட்டுள்ளன.

எ-டு :

கொச்சை	**திருத்தம்**
பிடிச்சுராவி	பிடித்தராவி
மணத்தக்காளி	மணித்தக்காளி

வழு நிலை	**வழா நிலை**
அரிவாள்மணைப்பூண்டு	அரிவாள்முனைப்பூண்டு
வெட்டரிவாள்	வெட்டறுவாள்

வழூச்சொற்கள் வழுவா யிருப்பதொடு பொருளையும் மாற்றிவிடுகின்றன. ஆதலால், அவற்றை அறவே அகற்றுதல் வேண்டும்.

எ-டு :

வழாச்சொல்	**வழூச்சொல்**
அருகண்மை (மிக நெருக்கம்)	அருகாமை (நெருங்காமை)
முடக்கொற்றான் (முடங்கொன்றான்)	முடக்கற்றான் (முடக்குஅற்றான்)

பெண்சாதி என்னும் சொல்லும், இதுபோன்ற பிறவும் பிற்கால இலக்கியத்தில் இடம்பெற்றிருப்பினும், இருபிறப்பியும் (hybrid) இழிவழக்கும் (slang) வேண்டாதனவு மாதலால், எடுத்துக்காட்டி விலக்கப்பட்டுள்ளன.

தமிழினின்று வடமொழிக்குச் சென்று வடசொற் போன்றோ இருமொழிப் பொதுச் சொற்போன்றோ வழங்கும் நூற்றுக்கணக்கான சொற்களெல்லாம், தமிழ்ச்சொல்லென்று விரிவாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, அம்பலம், அரங்கம், உருத்திராக்கம், உருவம், உலகம், ஐயன், கடுகு, குடி, குமரன், சங்கு, சமயம், சிவன், சுக்கு, தானம், தெய்வம், நகரம், நாடகம், நாழிகை, படி, பள்ளி, மந்திரம், மாலை, முகம், யாத்திரை, வட்டம் என்னும் சொற்களைப் பார்க்க.

'கள்' என்னும் பன்மையீறு பெயர்ச்சொற்களோடு புணரும் புணர்ச்சி, இதுவரை எவ் விலக்கண நூலிலுஞ் சொல்லப்படவில்லை. தமிழில் அஃறிணைப் பன்மையீறு இன்றியமையாததன்றாதலால், பண்டை யிலக்கியத்தி லெல்லாம் பால்பகா வஃறிணைப் பெயரே பயின்று வந்திருக்கின்றது. ஆகவே, இலக்கிய வாயிலாகவும் 'கள்' என்னும் பன்மையீற்றுப் புணர்ச்சிநெறியை அறிதற்கில்லை.

மெய்யீற்றுப் பெயர்களும் வன்றொடர்க் குற்றியலுகரமல்லாத பிறவுயிரீற்றுப் பெயர்களும், கள்ளீற்றொடு புணரும் புணர்ச்சிபற்றிக் கருத்துவேறுபாடோ இடர்ப்பாடோ ஒன்றுமில்லை. வன்றொடர்க் குற்றியலுகரவீறு ஒன்றுபற்றியே, புலவரிடைக் கருத்துவேறுபாடு இருந்துவருகிறது. அதுவும் அண்மையிற் சற்று வலுத்துள்ளது.

வன்றொடர்க் குற்றியலுகர வீற்றுப் பெயர்கள், **தத்த** (கட்டு), **தனத்த** (கருத்து), **தனாத்த** (குடாப்பு), **தாத்த** (பாட்டு), **தானாத்த** (பாராட்டு) முதலியனவாகப் பல்வேறு வண்ண வாய்பாட்டுச் சொற்களாயிருக்கும். அவற்றுள், **தனத்த** வாய்பாட்டுச் சொற்களான எழுத்து, உறுப்பு என்பன சிறந்த உரையாசிரியராலும் சிறந்த புலவராலும் வலிமிகுத்தே கள்ளீற்றொடு புணர்க்கப்பட்டுள.

எ-டு: ***யாப்பருங்கல விரிவுரையாளர் (விருத்தியுரைகாரர்),***

'இனி விசிர்திரக்கா என்பது..............................அவ் வெழுத்துக்களை ஒழுங்குங் கண்ணறையும் படாமே நிறுவி, ஓரெழுத்துக்கு ஓரடியாகவானும் ஒரு சீராகவானு முற்றுப்பெறப் பாடுவது' (யாப். ஒழி. 2, உரை).

பரிமேலழகர்,

'எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன' (குறள். 1, உரை).

நச்சினார்க்கினியர்,

'இனி எழுத்துக்களது பெயரும் முறையுந் தொகையும் இச் சூத்திரத்தாற் பெற்றாம்' (தொல். எழுத்து. நூன். 1, உரை).

பேராசிரியர்,

'எழுத்துக்க ளியற்றப்பட்டு எழுத்ததிகாரத்தின் வேறுபட்ட தொகையும்' (தொல். பொருள். செய். 2, உரை),

'மாத்திரை முதலியவற்றை உறுப்புக்களான் இத்துணை மாத்திரை கொண்டது செய்யுளென்றானும்' (தொல். பொருள். செய். 35, உரை).

சிவஞானமுனிவர்,

'அகரம் உயிரெழுத்துக்களிலுங் கலந்து நிற்குமாறு அறிக' (நன். எழுத்து. 18, விளக்கம்).

இங்ஙனம் வன்றொடர்க் குற்றியலுகர வீற்றுப் பெயர்ச்சொற்களுள் ஒரு வடிவப் புணர்ச்சியைக் கண்டமட்டில், ஏனை வடிவப் புணர்ச்சிகட்கும் இதுவே நெறியென்று கருதி, வன்றொடர்க் குற்றியலுகரவீற்றுப் பெயர்ச்சொல் எல்லாம் வலிமிக்கே கள்ளீற்றொடு புணருமென்று ஒரு நெறியீடிட்டு, அதனைக் கடைப்பிடித்து வந்தனர் பெரும்பால் தமிழ்ப் பண்டிதர்.

ஆயின், இன்று, ஒருசார் பெரும்புலவரும் பொருள்மயக்கமும் இன்னாவொலியும் கரணியமாகக் காட்டி, வலிமிகு புணர்ச்சியைக் கண்டித்து இயல்புபுணர்ச்சியையே கடைப்பிடித்து வருகின்றனர்.

நீட்டுகள் என்னும் இயல்புபுணர்ச்சியும், நீட்டோலைகள் என்றும் நீட்டித்தரும் கள் என்றும் பொருள்படுமாதலால், பொருள்மயக்கம் என்பது சிறந்த கரணியமாகாது. ஆயின், இன்னாவொலி யென்னும் கரணியம் ஏற்கத் தக்கதே. ஆதலால், பெரும்புலவரான முன்னோரையும் பின்னோரையும் ஒருங்கே தழுவி, இருசாரார்க்கும் பொதுவான உறழ்வுப் புணர்ச்சியை நெறியிடுவது சாலத் தகுந்ததாம்.

'வன்றொடர்க் குற்றுக ரப்பெயர் பன்மைக்
கள்ளொடு புணரின் வன்மையோ டுறழும்'

என்பது உரைநூற்பா. இங்ஙனம் பல உறழ்வுப் புணர்ச்சிகள் தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் குறிக்கப்பட்டிருப்பது, புலவர் அனைவரும் அறிந்ததே.

'கள்' என்னும் பன்மையீறு அஃறிணைக்குச் சிறப்பாகவுரியது. அதற்கு வேறு பொருளின்மையால், அஃறிணைப் பன்மைப்பெயர் எதுவும் இங்குப் பொருள்கூற எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆயின், அவ் வீறு பன்மையும் உயர்வுங் குறித்து உயர்திணையில் அருகி வழங்குவதால், அத்தகையன மட்டும் இங்குக் கொள்ளப்படும்.

எ-டு: மக்கள், அவர்கள், அடிகள், குருக்கள்.

வினைச்சொற்களின் முதனிலையென்னும் மூலமெல்லாம் ஏவலொருமை வடிவிலேயே காட்டப்பட்டுள்ளன.

எ-டு: இரு, எழு, நில், நட.

புடைபெயர்ச்சியில் உருமாறும் வினைகளாயின், அவ் வுருமாற்றம் முதனிலையடுத்துப் பிறைக்கோட்டுள் குறிக்கப்பட்டுள்ளது.

எ-டு: வா (வரு), தா (தரு).

வினைச்சொற்களின் பொருள்களைக் காட்டும் மேற்கோள் எடுத்துக்காட்டுகளெல்லாம், பெரும்பாலும் முக்கால முற்றுவடிவில் அல்லது எச்சவடிவில் இருப்பதினாலும், ஏவல் வடிவில் எல்லாப் பொருள்களுந் தோன்றாமையாலும், வினைச்சொற்களெல்லாம் முதற்கண் முதனிலையும் ஈறும் பிரிக்கப்பட்ட தொழிற்பெயர் வடிவிலேயே காட்டப் பட்டுள்ளன. எல்லாத் தொழிற்பெயர்கட்கும் பொதுவான 'தல்', 'கை' என்னும் ஈரீறு களுள் முன்னதே பெருவழக்காதலால், அதுவே இங்குக் கையாளப்பட்டுள்ளது.

எ-டு: உழு-தல், நட-த்தல்

சில வினைமுதனிலைகளின் மெய்யீறு புடைபெயர்ச்சியில் புணர்ச்சியால் திரிவதால், அத் திரிவுவடிவும் பக்கத்திற் காட்டப்பட்டுள்ளது.

எ-டு: நில்-தல் (நிற்றல்), கேள்-தல் (கேட்டல்)

சில வினைமுதனிலைகள் புடைபெயர்ச்சியில் உகரச்சாரியை பெறுகின்றன. அச் சாரியை வினைமுதலை யடுத்துப் பிறைக்கோட்டுள் காட்டப்பட்டுள்ளது.

எ-டு: சொல்(லு)-தல், கொள்(ளு)-தல்.

சில வினைமுதனிலைகள் உகரச்சாரியை பெற்றும் பெறாதும் புடைபெயர்கின்றன. அவற்றின் இருநிலைமையும் அடுத்தடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

எ-டு: உண்(ணு)-தல், உண்டல்.

செய்யுட்குச் சிறப்பாகவுரிய தொழிற்பெயர் வடிவங்கள் இங்குக் கொள்ளப்பட்டில.

எ-டு: சொற்றல், கோடல்.

வினைகளின் புடைபெயர்ச்சி வாய்பாடுகளெல்லாம், ஒரு தனிப்பட்டியலிற் குறிக்கப் பட்டுள்ளன.

தொழிற்பெயர், ஏவல், முற்று, எச்சம், வினையாலணையும் பெயர் வடிவங்கள் எல்லா வினைகட்கும் உண்டேனும், முற்றல்லாத வடிவங்கள் ஏதேனும் சிறப்புப் பொருள் கொண்டவிடத்தே இங்குக் கூறப்பட்டுள்ளன.

எ-டு: தொழிற்பெயர் — இருக்கை, காட்சி, வழக்கம், கொள்வனை.
ஏவல் — போ (தொலைந்து).
பார் (உன்னை என்ன செய்கிறேன்).
பெயரெச்சம் — வழுத்த.
வினையெச்சம் — வந்து, திரும்ப.
வினையாலணையும் பெயர் — கண்டவன்.

ii. அயற்சொல்

மூவேந்தராட்சி முற்றும் நீங்கியபின், இடைக்காலத்தில் தமிழ்மக்கட்குப் பொதுவாகத் தாய்மொழி யுணர்ச்சியே இல்லாது போய்விட்டதனால், அடுத்தடுத்து வந்த அயன்மொழிச் சொற்களையெல்லாம் தேவையின்றி ஆண்டுவந்திருக்கின்றனர். அதனால் அளவிற்கு மிஞ்சி அயற்சொற் களைகள் புகுந்து, தமிழ்ப்பயிர் தழைத்தோங்கி வளராவாறு தடுத்து வருகின்றன.

அயன்மொழிச் சொற்களுள், சிறப்பாக வடமொழி ஆங்கிலம் ஆகிய இருமொழிச் சொற்களே தமிழுக்குப் பெருங்கேடு விளைத்து வருகின்றன. வடசொற்கள் வலிந்து புகுத்தப்பட்டவை; ஆங்கிலச் சொற்களோ வலியப் புகுத்திக்கொண்டவை. முன்னதற்கு வடமொழி தேவமொழியென்னும் ஏமாற்றும், பின்னதற்கு ஆங்கிலம் அறிவியன்மொழியும், உலகமொழியும், ஒருகால ஆட்சி மொழியுமாகும் என்னும் உண்மையும் துணைநிற்கின்றன.

அயன்மொழிச் சொற்களை வேண்டாது வழங்குவதினால் தமிழ்ச்சொற்கள் வழக்கு வீழ்ந்து நாளடைவில் இறந்துபடுவதுடன், புதுச்சொல் புனையும் ஆற்றலும் அவாவும் தமிழர்க்கு அற்றுப்போகின்றன. அதோடு, வழக்கிறவாத பல அடிப்படைத் தமிழ்ச் சொற்களும் அயற்சொற்களாக மாறிவிடுகின்றன.

பேசுவதே மொழியென்றும், கருத்தைத் தெரிவிக்கக் கருவியாயிருப்பதே மொழியின் பயனென்றும், கடன்சொற்களாலேயே மொழி வளருமென்றும்,

> “பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையி னானே”

என்றும், சிறந்த அறிவும் பரந்த நோக்கும் உள்ளவர்போற் சிலர் நடித்துத் தம் புல்லறிவைப் புலப்படுத்துவர். இக் காலத்தில் நாட்டுப்புறக் கல்லா மக்களும் ‘ஐயா’ என்னும் தமிழ்ச் சொல்லைப் புறக்கணித்து, ‘சார்’ என்னும் ஆங்கிலச் சொல்லையே ஆண்டுவருகின்றனர். அதனால், அச் சொல்லையும் அகரமுதலியிற் சேர்க்கவேண்டுமென்று தமிழ்ப் பகைவரும் கூறத் துணியார். ஆகவே, ஆழ வழக்கூன்றியனவும் தமிழுக்குத் தேவையானவுமான அயன் மொழிச் சொற்களே இங்குச் சேர்க்கப்பெற்றுள்ளன. அவற்றை மெள்ளமெள்ள ஒவ்வொன்றாக உதறிவிட்டு, பழந்தமிழ்ச் சொல்லையோ புதுப்புனைவுச் சொல்லையோ நாளடைவில் ஆளவேண்டும் என்னுங் கருத்தையே, தமிழர் உள்ளத்திற் பதித்தல் வேண்டும்.

அயற்சொற்கள் எம்மொழியின வாயினும், சொல்வகையும் பொருளும் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளன; தமிழ்ச்சொற்போல் விரிவான விளக்கம் பெற்றில.

நாத் திருகிகளும் அலகுடைப்பான்களுமாகிய ஜஹத, ஜஹல்லக்ஷணை, ரக்திஷ்டீவி, சந்நிபாத ஜ்வரம் என்பனபோன்ற சமற்கிருதச் சொற்களும் இஷுராக்கு, இஸ்திக்பார் என்பனபோன்ற அரபிச் சொற்களும், டயல், டெலிபோன் என்பனபோன்ற ஆங்கிலச் சொற்களும் இதில் இடம்பெற்றில.

அத்தம், சங்கம் என்பனபோன்ற சமற்கிருதப் பலபொரு ளொருசொற்கள், தமிழ்ச் சொற்கள்போன்றே பல சொற்களாகப் பிரித்துப் பொருள் கூறப்பட்டுள்ளன.

அர்த்தம், அருத்தம்; தர்மம், தருமம் என இருவேறு வடிவில் வழங்கும் வடசொற்கள், உகரம் இடைச்செருகிய வடிவிலேயே குறிக்கப்படும்.

பத்மம், வக்ரம் என்பன, பதுமம், வக்கிரம் என்னும் முழுத் தற்பவ வடிவிலேயே குறிக்கப்பட்டுள்ளன. இங்ஙனமே இவைபோன்ற பிறவும்.

சக்ரம், ரக்தம் என்பன, சக்கரம், அரத்தம் என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபாகக் காட்டப்பட்டுள்ளன. இங்ஙனமே இவைபோன்றே பிறவும்.

அயற்சொற்கள் எம்மொழிச் சொல்லாயினும், அவற்றின் சிறப்பெழுத்துகளெல்லாம் "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" என்னும் தொல்காப்பிய நெறியின் விரிவாட்சி முறையில், இயன்ற அளவு நெருங்கிய தமிழெழுத்துக ளாலேயே குறிக்கப்பட்டுள்ளன.

ஆய்தவெழுத்தின் துணைகொண்டு அயலெழுத்துகளைக் குறிக்கவியலாதென்பது, 'அஃகேனம்' என்னும் உருப்படியில் விரிவாக விளக்கப்பட்டது.

2. எழுத்துப்பெயர்ப்பு

எல்லாத் தமிழெழுத்துகளும், வேறுபாட்டுக் குறிகளைத் துணைக்கொண்டு ஆங்கில வெழுத்திற் பெயர்க்கப்பட்டுள்ளன. எழுத்துப்பெயர்ப்பு அட்டவணையைப் பார்க்க.

தமிழிலுள்ள க, ச, ட, த, ப வடமொழியிலும் ஆங்கிலத்திலுமுள்ள *k, c, ṭ, t, p* அல்ல. ஒவ்வொரு வகையிலும் ஒரு தமிழ் வல்லெழுத்து இரட்டித்தால்தான், ஒரு வட மொழி யாங்கில வல்லெழுத்திற்கு ஒப்பாகும்.

எ-டு : வடமொழி – *kāka* — தமிழ் – காக்க
ஆங்கிலம் – *making* — தமிழ் – மேக்கிங்

இங்ஙனமே ஏனை வல்லினமும், தமிழ்ச் சகரத்திற்கு நேர் வடமொழி ஶ அல்லது ஆங்கில *š* என்னும் எழுத்தே. இருசகரம் ஒன்றாயிணைந்தால்தான் '*c*' ஒத்தொலிக்கும். தமிழ் றகரம் இரண்டில் ஆங்கில '*t*' ஒத்தொலித்தலை நோக்குக. இதனால், தமிழில் *ng, nj, ṇḍ, nd, mb, ṉṟ* என்ற மெலிவலியிணை யொலிகளேயன்றி, *nk, nc, ṇṭ, nt, mp* என்ற மெலிவலியிணை யொலிகள் இல்லை; தமிழினின்று மிகப் பிந்தித் திரிந்த திரவிட மொழி களில்தாம் இவை உள்ளன.

ஆதலால், க, ச, ட, த, ப என்பன முறையே *ḳ, š, ḍ, t, p* என்றே வரி பெயர்க்கப்பட்டுள.

3. இலக்கணச் சொல்வகை

பெயர்ச்சொற்களெல்லாம் பெ. (n.) என்றும், வினைச்சொற்களெல்லாம் வி. (v.) என்றும், இடைச்சொற்கள் பொதுவாக இடை. (ind.) என்றும் குறிக்கப்பட்டுள்ளன.

உரிச்சொல் என்பது, இலக்கணவகைச் சொல்லன்மையானும், ஏனை முச்சொல்லாகவு மிருத்தலானும், அவ்வச் சொல்லிற்கேற்பப் பெயரென்றோ வினையென்றோ இடை யென்றோ குறிக்கப்பட்டுள்ளது.

சுட்டுப்பெயர்கள் சு. பெ. (demons. pron.) என்றும், வினாப்பெயர்கள் வி. பெ. (inter. pron.) என்றும், தன்மைப் பெயர்கள் த. பெ. (pers. pron.) என்றும், முன்னிலைப் பெயர்கள் மு. பெ. (pers. pron.) என்றும், தொழிற்பெயர்கள் தொ.பெ. (vbl. n.) என்றும், பண்புப்பெயர்கள் பண். பெ. (abst. n.) என்றும், வினையாலணையும் பெயர்கள் வினையா. பெ. (parti. n.) என்றும் குறிக்கப்பட்டுள்ளன.

ஒரு சொல் கூட்டுச்சொல்லாகவோ தொடர்ச்சொல்லாகவோ இருந்து பெயர்ச் சொல்லில் முடியின், பெயர்ச்சொல் (n.) என்றே குறிக்கப்பட்டுள்ளது.

வினைச்சொல் செயப்படுபொருள் குன்றிய வினையாயின் செ. கு. வி. (v.i.) என்றும், செயப்படுபொருள் குன்றா வினையாயின் செ. குன்றாவி. (v.t.) என்றும் பிறவினையாயின் பி. வி. (v. caus.) என்றும், செயப்பாட்டு வினையாயின் செயப்.வி. (pass. vo.) என்றும், எதிர்மறை வினையாயின் எ. ம. வி. (neg.v.) என்றும் குறிக்கப்பட்டுள்ளன.

இடைச்சொல் முன்னொட்டாயின் 'pref.' என்றும் பின்னொட்டாயின் 'suff' என்றும், ஈறாயின் 'end.' என்றும், இடைநிலையாயின் 'part.' என்றும், சொற்சாரியையாயின் 'eu. part.' என்றும், எழுத்துச் சாரியையாயின் 'en. part.' என்றும், உணர்ச்சிக் குறிப்புச் சொல்லாயின் 'int.' என்றும் ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

4. புடைபெயர்ச்சி

செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை, இவ்விரண்டிற்கும் பொதுவான வினை, பிறவினை ஆகிய நால்வகையாகப் பகுத்து எல்லா வினைகட்கும் முக்காலப் புடைபெயர்ச்சி வாய்பாடுகள் முதன்முறையாகவும் முழு நிறைவாகவும் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் புடைபெயர்ச்சி வாய்பாட்டு அட்டவணையில் காண்க.

புடைபெயர்ச்சி வாய்பாடெல்லாம், ஆண்பால் இறந்தகால வினைமுற்று வடிவிலேயே வகுக்கப்பட்டுள்ளன (ஐம்பாலும் படர்க்கைக்கே உரியனவாதலால், படர்க்கை ஆண்பால் என்றோ ஆண்பாற் படர்க்கை யென்றோ குறிக்கத் தேவையில்லை).

புடைபெயர்ச்சியில் முதனிலை வடிவு மாறும் வினைகளும், ஒரு காலத்திலோ இரு காலத்திலோ பல்வகையில் புடைபெயரும் வினைகளும், வாய்பாட்டொழுங்கிற்குட் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வினைச்சொற்கும், இலக்கணச் சொல்வகைக்குப்பின், புடைபெயர்ச்சி வாய்பாட்டெண் குறிக்கப்பட்டுள்ளது.

5. இயல்வரையறை

பொருள்களின் இயல்பும் வினைகளின் நிகழ்முறையும், இயன்றவரை நிறைவாக வண்ணிக்கப்பட்டுள்ளன.

அக்கம்[2], நேபாளத்தில் விளைவதும் வெண்மை கருமை செம்மை பொன்மை குரால் (brown) என்னும் நிறங்களால் ஐவகைப்பட்டதும், ஒன்றுமுதல் பதினாறுவரை முண்முகங்களைக் கொண்டதும், மருத்துவ ஆற்றல் மிகுந்ததாகக் கருதப்படுவதும், குமரிநாட்டுக் காலந்தொட்டுச் சிவநெறித் தமிழரால் அணியப்பட்டு வருவதும், ஆரியர் வந்தபின் உருத்திராக்கம் (ருத்ராக்ஷ) என்று சொல்லப்படுவதுமான காய்மணி.

நடத்தல், மக்களும் பறவைகளும் இரு காலையும் மாறிமாறி முன்புறம் தூக்கி வைத்து இடம்பெயர்தல். இங்ஙனமே விலங்குகளும் நாற்காலால் இடம்பெயர்தல்.

வினைகளின் இயல்வரையறையெல்லாம், 'தல்' லீற்றுத் தொழிற்பெயர் வடிவிலேயே கூறப்பட்டுள்ளன.

6. பொருட்பாடு
(Meanings)

எல்லாச் சொற்கும் எல்லாப் பொருளும் இயன்றவரை கூறப்பட்டுள்ளன. சொற்களின் அல்லது பொருள்களின் வழக்குவகையும் ஆங்காங்கு குறிக்கப்பட்டுள்ளது. உலக வழக்கு, இலக்கிய (செய்யுள்) வழக்கு, பழைய வழக்கு, இடைக்கால வழக்கு, இக்கால வழக்கு, இடவழக்கு, குலவழக்கு, வகுப்பு வழக்கு, அயல்வழக்கு, பெருவழக்கு, அருகிய வழக்கு, இழிவழக்கு, கொச்சை வழக்கு என வழக்குகள் பல்வேறு வகைய.

சொற்பொருள்களின் காலமுறைப்பட்ட ஒழுங்கை இலக்கியத்தினின்று அறிய முடியாதாகையால், ஏரண முறைப்பட்ட ஒழுங்கே இங்குக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. அது பெரும்பாலும் இயற்கையொழுங்கை ஒத்திருக்கும்.

ஒரு சொல் பெயராகவும் வினையாகவும் ஆண்டு நடத்தப்படின், இருவகை யாட்சியும் வெவ்வேறு உருப்படிகளாக விருக்கும். ஒரே சொல் வினையல்லாத வேறு பல்வகை யிலக்கணச் சொல்லாக ஆளப்படின், ஒரே உருப்படியில் சொல்வகைதொறும் பொருள்கள் வெவ்வேறாக எண்ணிட்டுக் கூறப்பட்டிருக்கும்.

ஒரே வினைச்சொல் செயப்படுபொருள் குன்றியவினையாகவும் குன்றாவினையாகவும் இருப்பின், அவற்றின் பொருள்கள் இருவேறு வரிசையாகக் கூறப்பட்டிருக்கும். இருவகை வினைகளிலும் எது முந்தியதென்னும் யாப்புறவில்லை. பெருவழக்கானது முந்திக் கூறப்பட்டிருக்கும்.

பல சொற்கட்கு அல்லது சொல்வடிவுகட்குப் பொருள் ஒன்றாயிருப்பின், இடத்தை மீத்தற்பொருட்டு, முந்திப்பொருள் கூறப்பட்ட அல்லது பெருவழக்கான சொல்லைப் பார்த்துப் பொருளறிந்து கொள்ளுமாறு, இன்ன சொல்லைப் பார்க்க என்று ஒரு வியங்கோள் இடப்பட்டிருக்கும். அச் சொல் எண் கொண்டதாயின், அவ் வெண்ணும் அச் சொல்லுடன் குறிக்கப்பட்டிருக்கும்.

எ-டு : **அக்கிணி — அக்குணி** பார்க்க.

சிலவிடங்களில், சொற்பொருளின் மிகுவிளக்கத்திற்காகவும் இத்தகைய மாட்டெறிவுக் குறிப்பு (cross reference) இருக்கும்.

எ-டு: **அக்காள் — அக்கா** பார்க்க.

ஒரு கூட்டுச்சொற் குறுக்கத்தின் பொருளுக்கும், அதன் நிறைவடிவுச் சொல்லைப் பார்க்கச் சொல்லியிருக்கும்.

எ-டு : **அக்காளி — அக்காளிப்பிரசாதம்** பார்க்க.

ஒரு சொல்லின் ஒரு பகுதி பின்னர் ஓரிடத்தில் விளக்கப்படுமாயின், அவ்விடத்தைப் பார்க்கும்படியும் வியங்கோள் இடப்பட்டிருக்கும்.

எ-டு : **அஃகான்,** 'அ' என்னும் எழுத்து.
கான்[3] பார்க்க.

ஒரு பொருட்டொகையின் ஒரு கூறுமட்டும் தனித்துக் கூறப்படினும், அத் தொகை முழுதுங் கூறப்படும் இடமும் மாட்டெறிவாற் குறிக்கப்படும்.

எ-டு: குன்றக்கூறல் = பொருள் விளங்காவாறு குறைந்த அளவில் கூறுதல்; எழுவகை மதங்களுள் ஒன்று. **எழுமதம்** பார்க்க.

ஒருபொருட் பலசொற்களுள் ஒன்றற்கு ஆங்கிலம், இலத்தீன் போன்ற மேலையாரிய நேர்ச்சொல் குறிக்கப்படல் வேண்டுமாயின், அது அவற்றுட் பெருவழக்கான சொல்லையடுத்தே குறிக்கப்பட்டிருக்கும்.

எ-டு : வடவை — **L.** *aurora borealis.*

இருதிணைக்கும் இருபாற்கும் பொதுவான ஒருமைச் சொற்களின் பொருள், உயர்திணை யிருபாற்குமோ இருதிணை யொருமைப்பால் மூன்றற்குமோ பொருந்துமாறு, ஈறு பிரித்துக் கூறப்பட்டுள்ளது.

எ-டு : பொறியிலி = அறிவில்லாதவ-ன்-ள்.
கண்ணறை = கண்ணில்லாத-வன்-வள்-து.

எல்லாத் தலைப்புச்சொற்கட்கும் அதன்கீழ் வரும் சார்புச்சொற்கட்கும், தமிழ் முன்னும் ஆங்கிலம் பின்னுமாக இருமொழியிலும் பொருள் கூறப்பட்டுள்ளது.

ஒரு சொல்லிற்குக் கூறப்படும் பொருள், தமிழ் மரபிலும் ஆரிய மரபிலும் வேறுபடுமாயின், தமிழமரபே தழுவப்பட்டுள்ளது.

எ-டு : ஆனைந்து — பால், தயிர், மோர், வெண்ணெய், நெய்.

மோரும் வெண்ணெயும் நீக்கி, மூத்திரமும் சாணமும் சேர்ப்பது ஆரிய மரபு.

எல்லாத் தமிழ்ச்சொற்கும் இயன்றவரை தமிழ்ச்சொல் வாயிலாகவே பொருள் கூறப்பட்டுள்ளது.

எ-டு : நாமகள் = கலைமகள், கல்வித்தேவி.

7. மேற்கோள்

மூவகைச் சொற்கட்கும் கூறப்படும் பொருள்களை, ஆட்சி வாயிலாக உறுதிப்படுத்தும் பொருட்டும், மிகத் தெளிவாக விளக்குதற் பொருட்டும், நல்லிசைப் புலவர் செய்யுள்களினின்றும், ஆன்றோரால் ஒப்புக்கொள்ளப்பட்ட அளவை நூல்களினின்றும், மேற்கோள்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

ஒவ்வோ ரிலக்கிய மேற்கோளிலும், அதிகாரமும் இயலும் அல்லது காண்டமும் படலமும் அல்லது இவைபோன்ற பிறவும் சொற்குறுக்கங்களாலும், நூற்பகவுஞ் செய்யுளும் அல்லது பக்கமும் வரியும் எண்ணாலும் குறிக்கப்பட்டுள்ளன.

செய்யுள் மேற்கோளில்லாவிடத்து, கல்வெட்டுக் கூற்றுகளும் உலகவழக்குக் கூற்றுகளும் உரைநடை வடிவிற் காட்டப்பட்டுள்ளன.

இருவகை வழக்கிலும் மேற்கோளில்லா அருஞ்சொற்கட்கு, அகரமுதலிகளும், 'நிகண்டு' என்னும் உரிச்சொற் றொகுதிகளுமே சான்றாகக் குறிக்கப்பட்டுள்ளன.

எ-டு : (சங்.அக.), (திவா.).

மேற்கோள் காட்டப்படும் வகைகளெல்லாம் ஒரு தனி அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ளன.

மேற்கோள் எடுத்தாளப்பட்ட எல்லா நூல்களின் பெயரும், அவற்றின் ஆசிரியர் பெயரும், பிற விளத்தங்களும் ஒரு நீண்ட பட்டியிற் குறிக்கப்பட்டுள்ளன.

8. மரபுவழக்கு

ஒவ்வோரிடத்திலோ நாடு முழுவதுமோ, சில பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும், ஒவ்வொரு சிறப்பான பொருளில் தொன்றுதொட்டு வழங்கிவருகின்றன. அத்தகைய மரபுவழக்கு, தனிச்சொல், இணைச்சொல் (words in pairs), கூட்டுச்சொல், தொடர்ச்சொல் என்னும் நால்வகையாக இருக்கும்.

எ-டு : **பழியாய்** = குறும்புத்தனமாக.

இவன் பிள்ளைகளை யெல்லாம் பழியாய் அறைந்துவிடுகிறான் (நெல்லை).

கண்ணீருங்கம்பலையும் = கண்ணீர் வடித்தலும் உரத்த குரலில் அழுதலும். கண்ணகி நெடுஞ்செழியனிடம் கண்ணீரும் கம்பலையுமாய் வந்து நின்றாள் (நெல்லை).

கொடித்தட்டல் = நல்லபாம்பு கடித்தல் (நெல்லை).

கட்டைதட்டல் = விரியன்பாம்பு கடித்தல் (நெல்லை).

ஆயிரங்காலத்துப்பயிர் = வாழ்நாள் முழுவதும் தொடரும் மணமக்கள் உறவு.

9. இனச்சொல்

தமிழும் தெலுங்கு கன்னடம் முதலிய திரவிட மொழிகளும் ஓரினம் என்பது, இன்று உலகறிந்த வுண்மை. ஆயின், தமிழம் அல்லது தென்மொழி (தமிழும் திரவிடமும்) ஆரியத்தொடு தொடர்புடைய தென்பது, இன்னும் உலக அறிஞரால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. கால்டுவெலார் தமிழத்தைத் தவறாகச் சித்தியமொழிக் குடும்பத்திற்கு இனமாகக் கூறினார். அத் தவற்றை இன்று ஆராய்ச்சியாளர் கண்டுகொண்டனர். ஆயின், தமிழத்திற்கும் ஆரியத்திற்குமுள்ள உறவை உலகு இன்னும் அறியவில்லை. உண்மையில், இந்தோ-ஆரியம் என்னும் மொழித்தொடர், தமிழொடு தொடங்கிச் சமற்கிருதத்தில் முடிவதாகும். இவ் வுண்மை உலகமெங்கும் பரவுங்காலம் அண்மையதென்னும் நம்பிக்கையினால், இங்குத் திரவிடச் சொற்கள் மட்டுமன்றி, ஆரியச் சொற்களும் இனச்சொற்களாகக் காட்டப்படும்.

எ-டு: **திரவிடம்** (தமிழ்) — மக = பிள்ளை, மகன், மகள், இளமை. க. மக.

மக → மகவு = குழந்தை, மகன், குரங்குக்குட்டி. க. மகவு.

மக → மகன் = புதல்வன், ஆண்பிள்ளை. க. மகன்.

மக → மகள் = புதல்வி, பெண். ம. மகள். க. மகள்.

ஆரியம்

E. *Mac.* A Gaelic word signifying son, and prefixed to many surnames, as Mac Donald, MacGrigor, & c. It is synonymous with son in names of Teutonic origin...... It is allied to Goth. *magus*, a son, fem. *magaths* (G. *magd*, a maid). (The Imperial Dictionary, Vol. III, p. 91).

10. இனமும் வகையும்

சில அல்லது பல பொருள்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவை. ஓரினத்திற்குள்ளேயே சில பல வேறுபாடுகள் உண்டு. அவை வகைகள் எனப்படும்.

இனத்திற்கு மேற்பட்ட பேரினமு முண்டு. அதைக் குலம் எனலாம்.

எ-டு: அவரையும் மொச்சையும் ஓரினம். அதனால் அவை, முறையே, வீட்டவரை யென்றும் காட்டவரை யென்றும் சொல்லப்படும்.

இனி, சுடலையவரை, கொத்தவரை (சீனியவரை), தம்பட்டவரை முதலியன அவரையொடு கூடி ஒரு பேரினத்தைச் சேர்ந்தனவாகும்.

11. மூலமும் வரலாறும்

இயன்றவரை எல்லாச் சொற்கட்கும் வேரும் வரலாறும் கூறுவதே, இவ் வகரமுதலியின் தனிச் சிறப்பாகும்.

எ-டு: புடலை (புடலங்காய்)

புல்லுதல் = துளைத்தல். புல் = உட்டுளையுள்ள நிலைத்திணை வகைகள்.

"புறக்கா ழனவே புல்லென மொழிப" (தொல். பொருள். மர. 86). அறுகுபோன்ற சிறுவகையும் மூங்கில்போன்ற பெருவகையும் புல் என்னும் இனத்தைச் சேர்ந்தவையே.

புல்லாங்குழல் = மூங்கிற்குழல்.

புல் → புள் → புழல். புள் → புழை → பூழை = துளை, துளைப்பொருள்.

புழல் → புடல் = உட்டுளையுள்ள காய். ழ → ட, போலித்திரிபு.

ஒ. நோ: குழல் → குடல்.

வாழை, கத்தரி முதலிய பிற கெட்டிக் காய்களுடன் ஒப்புநோக்கின் புடலின் உட்டுளைத் தன்மை விளங்கித் தோன்றும்.

புடல் → புடலை. புடலை + காய் — புடலங்காய். வ. பட்டோலிக்கா.

இச் சொல் வரலாற்றினால், புடலங்காய் என்பது தென்சொல் என்றும் பட்டோலிக்கா என்னும் வடசொல் அதன் திரிபென்றும் தெளிவாகத் தோன்றும். ஆயின், வடமொழியாளர், பட்டோலிக்கா என்னும் வடசொல்லினின்று புடலங்காய் என்னும் தென்சொல் திரிந்துள்ளதாகத் துணிச்சலுடன் கூறுவர்.

இது சொற்பிறப்பியல் அகரமுதலியாதலின், வடசொல்லென ஆரியர் மயக்குவனவும் அதை நம்பித் தமிழர் மயங்குவனவுமான நூற்றுக்கணக்கான சொற்கள், தென்சொற்களே யென ஐயந்திரிபற விளக்கப்பட்டுள்ளன. உண்மையறிந்து கடைப்பிடிக்க.

12. பிழைதிருத்தம்

ஏனைய அகரமுதலிகளிலெல்லாம், சிறப்பாகச் சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் உள்ள சொல்வழு, பொருள்வழு, மூலவழு, சொற்பிரிப்பு வழு, இலக்கணவழு முதலிய எல்லா வழுக்களும், இவ் வகரமுதலியில் இயன்றவரை திருத்தப்பட்டுள்ளன. இவற்றிற்கு எடுத்துக்காட்டாகக் கீழ்க்குறித்த சொற்களைப் பார்க்க :

சொல்வழு — அரிவாள்முனைப்பூண்டு, வெட்டறுவாள்.
பொருள்வழு — கசகரணம் போடுதல், தசகூலி.
மூலவழு — சாயுங்காலம், வடவை.
சொற்பிரிப்பு வழு — உவமை, முகம்.
இலக்கணவழு — அக்கடாவெனல், அளைமறிபாப்பு.

13. சிறப்புக் குறிப்பு

சில சொற்களையும் பொருள்களையும் செய்திகளையும்பற்றிச் சிறப்பாகச் சில கருத்துகள் அல்லது உண்மைகள் குறிக்கப்படும்.

ஆறு, ஐந்திரம் முதலிய சொற்களைப் பார்க்க.

ஞா. தேவநேயப் பாவாணர்

பதிப்புரை

தமிழகம் ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த **மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணரின்** செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் முதன்மடல முதற்பகுதி பேரறிஞர் அண்ணா பவள ஆண்டு நினைவாக வெளியிடப்பெறுகின்றது. முதன் மடல முதற் பகுதியையும் முன்னுரைப் பகுதியையும் எழுதிமுடித்து, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் ஆய்வுரையாற்றிய மகிழ்ச்சித் திளைப்பின் நிறைவில் 16—1—1981-ல் இயற்கையெய்திய முதுபேராசான் அகரமுதலி வெளியீடுவரையாவது வாழ்ந்திருந்து கண்குளிரக் கண்டு களிகூரும் வாய்ப்பைப் பெறாது கழிந்தமை கழிவிரக்கத்திற்குரியது.

நுண்மாண் நுழைபுலமும், பன்மாண் மொழித்திறனும், அஃகியகன்ற ஆய்வு நுட்பமும் கொண்ட பாவாணப் பெருந்தகை தொடங்கிய பணி முற்றுப்பெறு முன்னரே திடுமென மறைந்தமை தமிழுலகிற்குப் பேரிழப்பானதோடு அகரமுதலிப்பணிக்கு அதிர்ச்சியளித்தது. அவர் எழுதிமுடித்த அகரமுதலிப் பகுதியை அச்சேற்றும் வகையில் அணியப்படுத்துவதும் அரும்பாடாய் இருந்தது. பாவாணர் அகரமுதலியை அச்சேற்றும்போது கவனித்துச் செய்யவேண்டிய பணிகளாக அவ்வப்போது கூறியிருந்தவை யனைத்தும் மிகுந்த கவனத் துடன் நிறைவேற்றப்பட்டுள்ளன. வண்ணப்படங்கள், மேற்கோள்நூற் பட்டியல், மொழிகளின் பெயர்ப்பட்டியல் ஆகியவை அவர் மறைவுக்குப்பின் திரட்டப்பட்டவை. ஏனைத் திரவிட மொழிகளின் பலுக்கத்தை ஒலிப்பு மாறாமல் குறித்துக்காட்ட ஆங்கில எழுத்துகளுக்கு ஒலிப்பு வேறுபாட்டுக் குறிகள் (Diacritical marks) சேர்ப்பதுபோல், தமிழ் எழுத்துகளுக்கும் ஒலிப்பு வேறுபாட்டுக் குறிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

பதின்மூன்றாம் மடலத்தில் சேர்ப்பதாக இருந்த முன்னுரை, மேற்கோள்நூற் பட்டியல் ஆகியவற்றை முதன் மடலத்திலேயே சேர்த்து, இனிப் பன்னிரு மடலங்களாக அகரமுதலியை வெளியிட்டாற் போதும் என்று பாவாணர் முடிவெடுத்ததால், முன்னுரையை அவரே எழுதி முடித்திருந்தார். அச்சேற்றுமுன் முன்னுரைப் பகுதியை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்று கூறியிருந்தார். அவர் மறைவுக்குப்பின் அவர் எழுதிய முன்னுரையை உள்ளவாறே பதிப்பித்து, மேலும் சேர்த்து விரிவுபடுத்தவேண்டும் என்று அவர் கூறியிருந்த வற்றில் குறிப்பிடத்தக்கவை சேர்க்கப்பட்டுள்ளன.

அகரமுதலித் திட்டத்தின் தோற்றம்

வளர்ந்துவரும் அறிவியலுக்கு ஈடுகட்டும் முறையிலும் செந்தமிழில் இலக்கண இலக்கிய மரபுகளைப் பேணிக்காக்கும்வகையிலும் சிறந்த அகரமுதலி உருவாக்கப்பட வேண்டும். இது தமிழ்மக்களின் நெடுங்கால அவா. 1936-ல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் அகரமுதலி ஏழு மடலங்களாக (ஆறு மடலங்களும் ஒரு பின்னிணைப்பும்) வெளிவந்தது. அதற்குப்பின், கடந்த அரை நூற்றாண்டுக் காலமாகத் தமிழில் சொல்லாட்சிகளும், இலக்கியங்களும், கலைச்சொற்களும் பெருகி வளர்ந்தபோதிலும், அவையனைத்தையும் அடக்கிய புதிய அகரமுதலி உருவாக்கப்படவில்லை. உலக மொழிகள் சிலவற்றில் சொற்பிறப்பியல் அகரமுதலிகள் வெளிவந்துள்ளன. தமிழிலும் சொற் பிறப்பியல் அகரமுதலி வெளிவருவது மொழிவளர்ச்சிக்கு இன்றியமையாதது. ஆயின், சொற்பிறப்பியல் ஆராய்ச்சியில் பெரும் புலமை சான்றவரே அப் பணியைச் செய்ய இயலும். சொற்பிறப்பு ஆராய்ச்சியில் தலைசிறந்த அறிஞரைத் தலைவராகக்கொண்டு சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தை உருவாக்க அரசு நினைத்தது.

கடந்த ஈராயிரம் யாண்டு இலக்கிய வரலாற்றில் எவரும் தொடவியலாத சொற்பிறப்பு ஆராய்ச்சியில் வாகைசூடியவர் பாவாணர். அரை நூற்றாண்டுக் காலம் அயராது சொல்லாராய்ச்சி செய்து, சொற்பிறப்புக் காண்பதில் ஒப்புயர்வற்ற செந்தமிழ் ஞாயிறாய்ச் சுடரொளி வீசி, தன்னிகரற்றுத் தண்டமிழ்ப் புலமைவாய்ந்த பெருமகனாரின் தனித்தன்மை வாய்ந்த கண்டுபிடிப்புகளுக்கு நூல்வடிவம் தரவும், அவருடைய ஆய்வுகளில் ஈடுபாடு கொண்ட தமிழ்மக்களின் வேணவாவை ஏற்கவும் தமிழக அரசு முன்வந்தது. உயர்தனிச் செம்மொழியாம் தமிழ்மொழியின் தனித்தன்மையும் தமிழர் பண்பாடும் துலக்கம் பெறவும், அவர் கொள்கையைப் பின்பற்றி உருவாகும் சொற்பிறப்பு அகரமுதலியில் பிற கொள்கைகளின் தலையீட்டைத் தவிர்க்கவும் பாவாணர்க்குத் தனித்த துறை ஏற்படுத்தித் தர அரசு விரும்பியது. அதன்படி, 1974ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் நாள் மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணரை இயக்குநராகக் கொண்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் (Directorate of Tamil Etymological Dictionary Project) தமிழக அரசின் கல்வித் துறையின் தனித்த துறையாகத் தோற்றுவிக்கப்பட்டது.

தளர்ந்த முதுமையினாலும், ஐயப்பாடான சொற்களுக்கு ஆழ்ந்தாய்ந்து விளக்கம் காணும் இயல்பினாலும், தம் இறுதிக்காலம்வரை ஏறத்தாழ ஏழாண்டுப் பணிக்காலத்தில் அகர ஓரெழுத்தில் தொடங்கும் 6500 சொற்களுக்கு மட்டும் சொற்பொருள் விளக்கம் எழுதினார்கள். 1470 தட்டச்சுப் பக்கங்கள்கொண்ட இப் பகுதி, முதன் மடலத்தின் முதற்பகுதியாகத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின்வழி அச்சிட்டு வெளியிடப் பெறுகிறது.

பாவாணரின் வாழ்வும் பணியும்

மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் 1902ஆம் ஆண்டு பெப்ருவரி 7ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோயில் என்னும் ஊருக்கு அருகிலுள்ள பெரும்புத்தூரில் பிறந்தார். தந்தையார் பெயர் ஞானமுத்து; தாயார் பெயர் பரிபூரணம்.

இவர் இளமையில் பாளையங்கோட்டைப் பள்ளியில் பயின்றார். பள்ளியில் படிக்கும் நாளிலேயே தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமையாளராக விளங்கினார். பள்ளிப் பருவத்திலேயே பாடல் புனையும் பாங்குடையவராக இருந்ததால் **கவிவாணன்** என்னும் பட்டத்தைத் தமிழாசிரியர் சூட்டினார்.

பாவாணருடைய இயற்பெயர் தேவநேயன். தமிழாசிரியர் அளித்த சிறப்புப் பெயரைத் தம் இயற்பெயரோடு சேர்த்து ஞா. தேவநேயப் பாவாணர் என்று தம் பெயரை அமைத்துக்கொண்டார்; பரந்த நூலறிவோடு நுண்ணறிவும் கொண்டவராக இலங்கினார்; இலக்கிய இலக்கணப் புலமையிலும், எழுத்திலும், பேச்சிலும் வல்லவராய் விளங்கினார். தமிழ்மொழியிலேயே மூன்று நிறுவனங்களில் பட்டங்களைப் பெற்ற பெருமை இவருக்கு உண்டு. தம் பெயருக்கு முன்னால் மதுரைப் பண்டிதன், நெல்லைப் புலவன், சென்னைப் புலவ (வித்துவான்) கலைத்தலைவன் என்று சேர்த்துக்கொள்வது இவருடைய வழக்கம்.

பல்வேறு உயர்நிலைப்பள்ளிகளில் தமிழாசிரியராகவும், சேலம் நகராட்சிக் கல்லூரியில் துறைத்தலைவராகவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திரவிட மொழியியல் வாசகராகவும் பணியாற்றிப் பெயரும் புகழும் பெற்றவர். முப்பதுக்கு மேற்பட்ட செந்தமிழ் நூல்களை ஆக்கித்தந்த இப் பெருமகனாரால் தமிழ் நலமுற்றது, வளம்பெற்றது. தமிழ்த்தாய் அணி பெற்றாள்; மொழிநூல் விழிபெற்றது.

பாவாணர் என்றால் **தண்டமிழ் ஏறு தனித்தமிழ் ஆறு** என்று கூறப்படுவது மட்டுமன்றி, **பாவாணர் வீட்டுப் படிக்கட்டும் பைந்தமிழ் பேசும்** என்னும் புதுமொழி பழமொழியாய் மாறியிருப்பதையும் காண்கிறோம். மறைமலையடிகள் வித்திட்டுச் செடியாக்கிய தனித்தமிழை, வேர்வீழ்த்து விழுதூன்றி நின்று நிலைத்து நிழல்தரும் ஆலமரமாக வளரச் செய்தவர் பாவாணர்.

அரசும்[1], ஆன்ற பெருஞ் சான்றோரும்[2], அருந்தமிழ் மன்றங்களும்[3], பாவாணரைத் தம் உள்ளக்கோயிலில் உருச் சமைத்துக்கொண்ட தமிழன்பர்களும், பைந்தமிழ்ப் பாவலரும்[4] பாவாணர்க்கு வழங்கிய பாராட்டுகளும் பட்டயங்களும் பணமுடிப்புகளும், **கண்ணான** அறிஞரை அவர் வாழுங்காலத்திலேயே மதித்துப் போற்றிய மாட்சிக்குக் கட்டியங்கூறி நலம் செய்கின்றன.

தமிழ்ப்புலமையில் கற்றோரறியா அறிவினராகவும் கற்றோர்க்குத் தாம்வரம்பாகிய தலைமையராகவும் விளங்கிய பாவாணர், எந்நாளும் எளிய வாழ்வும் உயரிய நோக்கமும் கொண்டவராக வாழ்ந்தார். அவருடைய பரந்திடங் கொடுக்கும் விசும்புதோய் உள்ளமும், மொழிநலனை விழிநலம்போற் காக்கும் மனத்திட்பமும் மதிநுட்பமும் சொல்லாராய்ச்சியில் நடுநிலை பிறழா வழிநடை வகுத்தன. மறைமலையடிகளை எத்துணைப் பாராட்டினாரோ அத்துணை பி. தி. சீனிவாச ஐயங்காரையும், வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதரையும் பாராட்டினார். தாம் நடுநின்று கண்ட உண்மைகளை அஞ்சாது எடுத்துரைக்கும் ஆற்றல் அவருக்கே அமைந்த தனியாண்மை யாகும். **உண்மை என்றும் வெல்லும்** என்னும் நம்பிக்கையே தமக்குத் துணிவைத் தந்ததாக அவர் கூறுவார்.

பாவாணருடைய ஆய்வுகளை, **உலகின் முதன்மொழித் தோற்றம், சொற்பிறப்புக் காணும் வழிமுறை, தனித்தமிழ்** என்னும் முப்பெருந் தலைப்புகளில் சுருக்கமாக அடக்கலாம். உலகில் முதன்மொழி தோன்றியதற்கான அடிப்படைகளை மேனாட்டு அறிஞர்கள் பல்வகையில் ஆய்ந்திருப்பினும், அ, இ, உ என்னும் முச்சுட்டுகளே ஞால முதன்மொழி தோன்ற வழிவகுத்தன என்னும் சுட்டடிக் கொள்கையை (Deictic Theory) முதன்முதல் பாவாணர் கண்டறிந்தார்; சுட்டு விளக்கம், முதல் தாய்மொழி, ஒப்பியன் மொழிநூல், வேர்ச்சொற் கட்டுரைகள் ஆகியவற்றில் இதனைத் தெளிவாக விளக்கியிருக்கிறார். உகரச் சுட்டிலிருந்தே பெரும்பான்மைச் சொற்கள் பிறந்திருப்பதை அவருடைய ஆய்வு காட்டு

---

1 (அ) **1960ஆம் ஆண்டு ஆட்சிச்சொற்கள் வடித்துத் தந்தமைக்காகத் தமிழக ஆளுநரால் பாவாணர்க்குச் செப்புப்பட்டயம் வழங்கப்பட்டது.**

(ஆ) **1978ஆம் ஆண்டு தமிழக அரசு திருவள்ளுவர் திருநாளன்று பாவாணர்க்குச் 'செந்தமிழ்ச் செல்வர்' என்னும் பட்டமும் கேடயமும் பொற்பதக்கமும் வழங்கிச் சிறப்பித்தது.**

2 (அ) **1957ஆம் ஆண்டு சேலம் தமிழ்ப் பேரவையினர் தந்தை பெரியார் தலைமையில் 'திரவிட மொழிநூல் ஞாயிறு' என்னும் பட்டம் பொறித்த வெள்ளிப்பட்டயம் வழங்கினர்.**

(ஆ) "But for his (Pavanar's) researches in philology, the purity and antiquity of Tamil might have remained a myth" — The Cultural Heritage of India, Vol. V, p. 621. Edt: by Dr. Sunit Kumar Chatterji, 1978.

(இ) "It is my humble opinion that in the study of Tamil words Mr. Devaneyan stands Pre-eminent and has few rivals."

—Maraimalai Adigal, 1949.

3 (அ) **1970ஆம் ஆண்டு மொழியாராய்ச்சித் தொண்டினைப் பாராட்டி, சை. சி. நூற்பதிப்புக் கழகம் பாவாணர்க்கு வெள்ளிப்பட்டயம் வழங்கியது.**

(ஆ) **1971ஆம் ஆண்டு தவத்திரு குன்றக்குடி அடிகளார் நடத்திய பறம்புமலைப் பாரி விழாவில் பாவாணர்க்குச் 'செந்தமிழ் ஞாயிறு' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.**

4 (அ) **"தொல்காப்பியருக்குப் பின் தமிழ் தன்னை நிலைப்படுத்திக்கொள்வதற்காகச் செய்த ஒட்டு மொத்தமான முயற்சிக்குப் பாவாணர் என்று பெயரிடலாம்."**

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

(ஆ) **"பாவாணர் தமிழின் ஆண்மை வடிவம்"**

—பாவலர் சுரதா.

(இ) **"வடமொழியும் இந்தியும் மற்றும் வடக்கிற்**
படுமொழிகள் என்ற பலவும் — தடவியே
அந்தமிழே ஆதி யெனுந்தேவ நேயர்தாம்
எந்தமிழர் எல்லார்க்கும் வேந்து."

—பாவேந்தர்.

கிறது. ஞால முதன்மொழி[1] தமிழ் என்பதும் அது தோன்றிய இடம் குமரிக்கண்டம் என்பதும் அவர் கொள்கை.

ஞால முதன்மொழி

உலகில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படினும் நூற்றுக்கு 95 மேனியரால் பேசப்படுபவை ஒரு நூற்றுக்கும் குறைவானவையே.

எசுகிமோ மொழியில் தன்னலமற்ற பொதுத்தொண்டு செய்வதற்குத் **தனக்கில்லா** செய்தல் என்று கூறுகிறார்களாம். இது நல்ல தமிழ்ச்சொற்றொடராகத் தெரிகின்றது. அவாய்த் தீவு மக்கள் மழலையைத் தாலாட்டும் துணியை **ஏணை** என்றே வழங்குகின்றனர். மங்கோலிய மொழியின் சொற்கள் திரவிடமொழிகளுடன் தொன்முது தொடர்புடையவை என்று செக்கோசுலோவேகிய நாட்டு மொழியியல் பேராசிரியர் செரசுலோவ் வசெக்கு[2] கூறியிருக்கிறார். இந்தைரோப்பிய மொழிகளின் தொடரமைப்பு, திரவிட மொழிகளைப் போன்று ஒரு காலத்தில் செயப்படுபொருளையடுத்து வரும் வினைமுற்று OVP (Object-Verb-Pattern) அமைப்பில் இருந்ததாகப் பேராசிரியர் இலேமென் குறிப்பிட்டிருக்கிறார்.[3]

ஆப்பிரிக்க மொழிகளில் தமிழ்ச்சொற்கள் பல காணப்படுவதாகச் செனகல் நாட்டுத் தலைவர் செங்கோர் தெரிவித்திருக்கிறார். தமிழிலுள்ள இல், அல் என்னும் எதிர்மறை முன்னொட்டுகள் இந்தைரோப்பிய மொழிகளிலும் உள்ளவாறே வழங்குகின்றன. (எ-டு: il+legal–illegal, ul+happy–unhappy.) தமிழிலும் முன்னொட்டுகளாக அமைந்த 250 சொல்லாட்சிகளைப் பாவாணர் எடுத்துக்காட்டி முன்னொட்டு மொழியியல்பு (prefixed languages) தமிழுக்கும் உண்டு என வகுத்துக் காட்டியிருக்கிறார். ஆப்பிரிக்க மொழிகள் சிலவற்றில் தமிழிலுள்ள நான்கன் உருபு 'கு' முன்னொட்டாக வருகிறது. குஅரி—அவர்களுக்கு எனப் பொருள்படுகிறது. இம் முன்னொட்டே கு - து - டு எனத் திரிபடைந்து ஆங்கிலத்திலும் 'to' என வழங்குகிறது. இன்னோரன்ன சான்றுகள் பாவாணரின் ஞால முதன்மொழிக் கொள்கைக்குச் சான்றாகின்றன.

ஆதலின், உலக மொழிக் குடும்பங்களைப் பத்தாக வகுத்தும் திரவிட மொழிகளை வழங்கும் இடவகையான் மூன்றாகப் பகுத்தும் பேசுவோர் எண்ணிக்கையுட்படச் சுருங்கிய பட்டியல் சேர்க்கப்பட்டுள்ளது.

சொற்பிறப்புக் காணும் திறன்

அணுவைப் பிளக்க முடியாது என்று ஒருகாலத்தில் கருதினர். மேனாட்டறிஞர் ஐன்சுடீன் அணுவைப் பிளக்க முடியும் என்று நிறுவினார். சொற்களெல்லாம் இடுகுறிகளே; அவையனைத்துக்கும் வேர்மூலம் காண வியலாது என்று அண்மைக்காலம்வரை கருதி

---

[1] குமரிக்கண்டத் தமிழ் வடக்கே சென்று திரவிடமாய்த் திரிந்தது. வடகோடித் திரவிடம் நாளடைவில் பிராகிருதமாய் மாறியது. வேத காலத்தில், விந்தியமலைக்கு வடக்கில் பைசாசம், சூரசேனம், மாகதம் என்று மூன்று பிராகிருதங்களும், அதற்குத் தெற்கில் தமிழ், ஆந்திரம் (தெலுங்கு), கன்னடம், மகாராட்டிரம், கூர்ச்சரம் என்னும் ஐந்து திரவிடங்களும் (பஞ்சதிராவிடம்) வழங்கிவந்தன. பிற்காலத்தில், ஐந்து திரவிடங்களுள் மகாராட்டிரம் ஒரு பிராகிருதமாகக் கொள்ளப்பட்டது. மாகதத்தின் பிற்காலத் திரிபு பாலி. பிராகிருதம் என்னுஞ் சொல் தமிழில் பாகதம் எனத் திரியும்.

வேத ஆரியம் வழக்கற்றுப் போனபின், அதனொடு ஐம்பிராகிருதங்களையும் கலந்து சமற்கிருதம் என்னும் இலக்கிய மொழியை அமைத்தனர். பிராகிருதம் முந்திச் செய்யப்பட்டது; சமற்கிருதம் நன்றாய்ச் செய்யப்பட்டது. ஆகவே, சமற்கிருதத்திற்கு முந்தியது பிராகிருதம்; பிராகிருதத்திற்கு முந்தியது திரவிடம்; திரவிடத்திற்கு முந்தியது தமிழ் (செ. அக. சீர். பக். 32).

[2] பேராசிரியர் செரசுலோவ் வசெக்கு 2-3-1978-ல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரை.

[3] "Linguistic Typology"—lecture by Dr. Winfred Lehmann, Director, Linguistic Research Centre, University of Texas, U.S.A.

யிருந்தனர். சொல்லைப் பிளந்து வேர்மூலம் காண முடியும் என்று மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் நிறுவிக் காட்டியிருக்கிறார். தம் புலமைவளத்தின் வெளிப்பாடாக மொழிநூலறிவைத் தமிழுலகிற்கு நல்கிய பெருமை இவரையே சாரும்.

சொற்பிறப்புக் காண மேனாட்டு அறிஞர்கள் கையாண்ட முறைகளினும் வேறாகப் புதிய இருநெறிகளைப் பாவாணர் கண்டறிந்தார். அவை வேருக்கு வேர் காணும் **வேர்மூலச் சொற்பிறப்பு,** பொருட்பாட்டு அடிப்படையிலான **வடிவமீட்டமைப்புச் சொற்பிறப்பு** எனப் பெயரிடப்பட்டுள்ளன.

'அகவிலையேறிவிட்டது' என்னும் தொடரில் 'அதிகவிலை' என்பது 'அகவிலை' எனத் திரிந்ததாக ஏனைப் பேராசிரியர்கள் சொன்மூலம் காட்டியபோது, அஃகவிலை → அகவிலை (அஃகம் = தவசம்) எனத் திரிந்ததாகமீட்டமைத்து மூலம் காட்டினார் பாவாணர். இது வடிவமீட்டமைப்புச் சொற்பிறப்பு. வேந்தன் = வெம்மையாக ஆட்சி செலுத்துபவன் எனப் பிறர் பொருள் கூறியபோது, அது தவறென மறுத்து, வேய்ந்தோன் → வேந்தன் (வேய்ந்தோன் = முடியணிந்தவன்) என உண்மைமூலம் காட்டினார். இது வேர்மூலச் சொற்பிறப்பு. பாவாணர்க்கிருந்த உள்ளுணர்வும் இயற்கையறிவும் இவ்வாறு நுணுகி நுணுகி ஆராயும் வினைத்திட்பத்தை நல்கின. இது அவர்க்குக் கருவில் அமைந்த திரு. அதனாற்றான் தாமே இப் பணியை முன்னின்று முடிக்கப் பெரிதும் விழைந்தார்.

சொல்வளம் மிக்க தொன்மொழியாதலின் வேற்றுச் சொற்களைத் தமிழில் ஆள வேண்டுவதில்லை என்பதில் கொள்கைவிடாக் கூர்வேழமாகப் பாவாணர் இருந்தார். தமிழில் கலந்துள்ள அனைத்துச் சொற்களுக்கும் தமிழ்ச்சொற்களை எளிதில் படைத்துத் தந்திருக்கிறார்.

'குடிமதிப்பு'க் (Census) கணக்கெடுப்பின்போது நம் வீட்டிற்கு வரும் விருந்தினர் நண்பர்கள் ஆகியோரின் பெயர்களைக் குடும்ப உறுப்பினராகச் சேர்த்துக்கொள்வது இல்லை. இதுபோன்றே தமிழில் பல்வேறு கால இடைவெளிகளில் ஊடாடிய வேற்று மொழிச் சொற்களைத் தமிழில் தம் சொற்களாக ஏற்றுக்கொள்ளலாகாது. நண்பர்கள் நண்பர்களாகவே இருப்பர்; குடும்ப உறுப்பினர் ஆகார். அயற்சொற்கள் அயற்சொற்களாகவே இருக்கும்; தன் சொற்களாகா. ஆதலின் தனித்தமிழே தமிழ். தமிழ் தவிர வேறு எம் மொழியிலும் வேற்றுச் சொற்களை விலக்க முடியாது; தமிழ் ஒன்றில்தான் முடியும். இப் பேரகரமுதலியிலும் 'அயற்சொற்களுக்குத் தனிமடலம் ஒதுக்கப்பட்டுள்ளது' என்று பாவாணர் கூறினார். தமிழ்மொழிக்கு இருக்கும் தன்னேரிலாத சொல்வளச் சிறப்பை உலகிற்குக் காட்டுவதே இவரின் தலையாய நோக்கம்.

தம் ஆய்வுமுடிவாக, உலகமொழிக் குடும்பங்களில் இந்தைரோப்பிய மொழிகள் தமிழுக்கு மிக நெருக்கமாக இருப்பதைக் கண்டறிந்தார். தம்சீரிய தமிழ்ப்பணிக்கு உற்றுழி உதவிய தமிழன்பர்களுக்கும் தமிழ் மன்றங்களுக்கும் சிறப்பாக அரசுக்கும் பாவாணர் நெஞ்சுகந்த நன்றியுடையவராக இருந்தார்.

பதிப்புப் பணி

அகரமுதலிகள் எவையாயினும் அவற்றிற்குப் பதிப்புக் குழு ஒன்று தனியாக அமைப்பதுண்டு. பாவாணர்க்குப் பின் பொறுப்பு இயக்குநராகப் பணியேற்ற யான், இதனை நன்கு பதிப்பிக்கத் தக்க உதவியாளரை நாடவேண்டியிருந்தது. இந் நிலையில் அகரமுதலி தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனவழி வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டது, பதிப்புப் பணிக்கு உற்ற உதவியாக அமைந்தது. தமிழில் உயர்ந்த தரமான நூல்களைப் பதிப்பித்துப் பட்டறிவு வாய்ந்தவர்களின் உதவி இதற்குக் கிடைத்தது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் படி - பதிப்பாசிரியர் புலவர் அ. நக்கீரன், புலவர் கா. பெ. ஞானசம்பந்தன், புலவர் நா. மு. மாணிக்கம் ஆகியோர் இப் பணி செம்மையாக நிறைவுறப் பெரிதும்

உதவினர். இந்த அகரமுதலியின் பல்வேறு தலைமையான நோக்கங்களுள், பிற அகரமுதலிகளிலுள்ள பிழைகளைத் திருத்துவதும் ஒன்று என்று பாவாணர் குறிப்பிட்டிருக்கிறார். ஆதலின், மூலநூல்களிலிருந்து மேற்கோள் காட்டும்போது பிற அகரமுதலிகளிலுள்ள எழுத்துப் பிழைகள் இந்த அகரமுதலியிலும் இடம்பெறா வண்ணம் மிகுந்த கவனத்துடன் அவற்றை ஒப்புநோக்கித் திருத்தமாகப் பதிப்பிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுப் பாட நூல்களெல்லாம் சீர்திருத்த எழுத்துகளில் அச்சிடப்படுவதால் வருங்காலத் தலைமுறையினர்க்காக உருவாகும் இந்த அகரமுதலியும் சீர்திருத்த எழுத்துகளிலேயே அச்சிடப்பட வேண்டும் என்பதையும், வன்றொடர்க் குற்றுகரவீற்றுப் பெயர்ச் சொற்களுடன் பன்மைகுறித்த 'கள்' ஈறு சேர்க்கும்போது வல்லெழுத்து மிகாத சொற் புணர்ப்பே பின்பற்றப்பட வேண்டுமென்பதையும் பாவாணர் கனிவுடன் ஏற்றுக் கொண்டார்.

சொற்களுக்குச் செந்தமிழ் வடிவம் காட்டுதலானும், சொற்பிறப்புக் கூறுதலானும், தமிழுலகில் வழங்கும் இந்தச் சொல் இடம்பெறவில்லை என்று சுட்டிக்காட்ட முடியாத வகையில் அனைத்துச் சொற்களையும் முயன்று திரட்டித் தருதலானும், படவிளக்கம் சேர்த்தலானும், அரைக் கலைக்களஞ்சிய அமைப்புக்கொண்டிருத்தலானும், பொதுமக்கள் முதல் ஆராய்ச்சியாளர்வரை பயன்கொள நிற்றலானும் இதற்குச் செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் பொதுப் பயன்பாட்டுப் படவிளக்க இருமொழிப் பேரகரமுதலி (Comprehensive General Purpose Bilingual Illustrated Etymological Dictionary of the Tamil Language) எனப் பெயரிடப் பொருந்துவதாயினும், பரோ எமனோவர் அகரமுதலி **D.E.D.** — தி.சொ.பி. (திரவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலி) எனக் குறிக்கப்படுவதுபோல், சுருக்கமாக, செ.சொ.பி. (செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி) — T.E.D. (Tamil Etymological Dictionary) என்றே இது பொதுவாக வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் எட்டிலக்கம் சொற்களுள்ளன. சென்னை அகரமுதலியில் ஓரிலக்கம் சொற்களே யுள்ளன. ஆங்கிலத்திற் கிணையாகத் தமிழ் வளர்ந்தோங்க வேண்டுமாயின் மேலும் மூன்றிலக்கம் சொற்களைத் தொகுக்க வேண்டும். அறிவியல் - தொழில்நுட்பம் போன்ற துறைகளில் மேலும் நான்கிலக்கம் சொற்களைப் படைக்க வேண்டும். ஆதலின், நாட்டுப்புறச் சொல்லாட்சிகள் ஓரிலக்கம்; கல்வெட்டு ஓலைச்சுவடி ஆகியவற்றில் ஓரிலக்கம்; நாட்டு மருத்துவம், நிலைத்திணைப் பெயர்கள் ஆகியவற்றில் ஓரிலக்கம் ஆக மூன்றிலக்கம் சொற்களைப் புதிதாகத் தொகுக்கும் பணி நிகழவேண்டும்.

தமிழக அரசின் தனி மகவாய்ப் பிறந்து, கல்வித்துறை பாலூட்ட, தமிழ்ப் பல்கலைக்கழகம் சீராட்ட, சான்றோர் அரவணைக்க, தமிழ்வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் மடியில் தவழ்ந்து தளர்நடை பயிலும் இத் துறைப் பணிகள் வளர்ந்து பெருக வள்ளன்மை சுரந்து வண்டமிழ்க்கு வாழ்வளிக்கும் **புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களுக்கு என்றென்றும் நன்றிக் கடப்பாடுடையேம்.

அயலவர்க்குப் பயன்படும்வகையில் ஆங்கில அணிந்துரை வழங்கிய கல்வியமைச்சர் மாண்புமிகு **செ. அரங்கநாயகம்** அவர்களுக்கும், விரைந்தூக்கி உடன்துணைநின்ற **தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறைச் செயலாளருக்கும்**, இப் பேரகரமுதலி வெளிவர ஆவனசெய்த **தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தார்க்கும்**, நன்முறையில் அச்சிட்டுத் தந்த **செயமாலிகா அச்சகத்தார்க்கும்**, பல்லாற்றானும் ஒத்துழைப்பு நல்கிய **துறைப் பணியாளர்க்கும்** எம் நன்றியுரித்து.

சீர்த்தபுகழ்ப் பாவாணர் சேர்த்தளித்த செல்வத்தை
ஆர்த்தசொல் லாராய்ச்சி யாரமுதைக் — கூர்த்தாய்ந்து
வற்றா வளமென்ன வாரி வழங்கிடுவம்
கற்றோர் உவப்பக் கனிந்து.

சென்னை,
தி.பி. உதுயடு மடங்கல் (ஆவணி) யகூ
(1-9-1984)

இரா. மதிவாணன்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு),
செ. சொ. பி. அகரமுதலித் திட்ட இயக்ககம்.

சொற்பிறப்பியல் அகரமுதலி வரலாறு

மொழிவளர்ச்சியை அளந்துகாட்டும் அளவுகோலாக அகரமுதலி அமைகிறது.

ஒரு மொழியில் வெளிவந்துள்ள அகரமுதலிகள், அம் மொழி எந்தெந்தத் துறையில் சொல்வளம் பெற்றிருக்கிறது; இன்னும் எந்தெந்தத் துறையில் சொல்வளம் பெறவில்லை என்பதைக் காட்டிவிடும்.

ஆங்கிலமொழி எட்டு இலக்கம் சொற்களைப் பெற்றிருப்பதால் அம் மொழியில் பல்வேறு துறைதழுவிய பல்வகை அகரமுதலிகள் பெருகியுள்ளன.

சொல்லிற்குப் பொருள்கூறும் முயற்சியே முதன்முதல் அகரமுதலி தோன்றுதற்குக் காரணம்.

கி.மு. 700 அளவில் மெசபொதேமியாவில் சில அக்கேடியச் சொற்களுக்குப் பொருள் சுட்டிய எழுத்துச்சான்று கிடைத்திருப்பதாகவும், அதுவே உலக முதல் அகராதிக்கு வித்து எனவும் கூறுகின்றனர். அதற்குச் சமகாலத்திய தொல்காப்பியத்தில் உரிச்சொற் பகுதி அப் பொருள் சுட்டியதே என்பது போதரும்.

கி.பி. 1225-ல் 'Dictionarius' என்னும் சொல்லை இங்கிலாந்தைச் சேர்ந்த 'சோன்னசு தி கலந்தியா' (Joannes de Galendia) என்பவர் இலத்தீனச் சொல்வரிசையைக் குறிக்கப் பயன் படுத்தினார்.

இலத்தீனச் சொன்மூலத்திலிருந்து தோன்றிய 'Dictionary' என்பது கருவிநூல் என்னும் பொருளில் வழங்கியது. கிரேக்கச் சொன்மூலத்திலிருந்து பிறந்த 'Lexicon' என்பது சொற்புத்தகம் (Word Book) என்னும் பொருளில் வழங்கியது. நாளடைவில் இரண்டு சொற்களும் அகரமுதலியையே குறிக்கத் தொடங்கின.

அகரமுதலி வகைகளுள் சொற்பிறப்பியல் அகரமுதலி, சிறப்பு அகரமுதலி (Specialised Dictionary) வகையைச் சார்ந்தது. சொற்பிறப்பியல் அகரமுதலியை ஆங்கிலத்தில் 'Etymological Dictionary' என்பர். 'Etymos' என்பது 'உண்மை' என்று பொருள்படும் கிரேக்கச் சொல். 'Etymology' என்னுஞ் சொல் 'சொல்லின் உண்மையான வரலாற்றைக் கூறுதல்' என்று பொருள் தருகிறது.

ஒரு சொல்லுக்கு மூலங்காட்டி, அச் சொல் பிறந்து வளர்ந்த வரலாற்றை விளக்குவது சொற்பிறப்பியல் அகரமுதலியின் நோக்கம்.

சொல்லின் வேரும் வரலாறும் (Origin and derivation) காண முடியாதவிடத்து மூலம் மட்டும் காட்டி அமைவர். காலத்தால் முந்திய சொல்வடிவத்தை மூலமாகக் காட்டினால் போதும் என்று ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளர் சி. தி. ஆனியன் கருதுகிறார்.

மற்றொரு ஆங்கில அகரமுதலித் தொகுப்பாளரான வெபுத்தர் (Webster) என்பவர், ஒரு சொல்லின் மிகப் பழைய வடிவத்தின் விரிவான பொருள்வளர்ச்சி வரலாறு சொல்வதே 'சொற்பிறப்பியல்' என்கிறார்.

வேரும் வரலாறும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதே மெய்ம்மையான சொற்பிறப்பியல் அகரமுதலி. தமிழைப் போன்ற ஒட்டுநிலை (agglutinative) மொழியில் வேரும் வரலாறும்

காண இயலும். மேலையாரிய மொழிகள் உட்பிணைப்பு (inflexional) மொழிகளாயிருப்பதால் அவற்றில் வேரும் வரலாறும் காண்பது அரிது. ஆதலால், மேலைநாட்டு வண்ணனை மொழியியலார் சொல்லின் பழைய வடிவம் அல்லது கிட்டியமட்டில் மூலவடிவம் காண்பதே சொற்பிறப்பியல் என்கின்றனர்.

தொல்காப்பியர் ''எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே'' என்கிறார். காலப் போக்கில் திரிபடைந்த சொற்களில் வேரும் வரலாறும் மறைந்திருக்கும்; மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்கு வெளிப்படத் தெரியாது என்பதை ''மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா'' என்றும் தொல்காப்பியர் உரியியலில் குறிப்பிட்டிருக்கிறார். எனவே, உரிச்சொற்களின் மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா எனப் பொருள் கொள்வதே பொருந்தும்.

மேனாட்டார் நோக்கிலும் நம் நோக்கிலும் காணப்படும் வரையறைக்கேற்பச் சொற் பிறப்பியல் அகரமுதலி இருவகைப்படும் :

1. வேரும் வரலாறும் காட்டும் சொற்பிறப்பியல் அகரமுதலி (Etymological Dictionary on Genealogical Basis).
2. மூலச்சொற் காட்டும் இனச்சொல் ஒப்பீட்டுச் சொற்பிறப்பியல் அகரமுதலி (Etymological Dictionary on Comparative and Historical Basis).

இதுவரை உலக மொழிகளில் வெளிவந்துள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிகள் அனைத்தும் இரண்டாம்வகையைச் சார்ந்தவை. மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் திட்டமிட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி முதல்வகையைச் சார்ந்தது. இம் முதல்வகை அகரமுதலியில் இரண்டாம்வகை அகரமுதலியிலுள்ள இனச் சொல் ஒப்பீட்டுக்கூறும், ஏரணநெறிப்பட்ட வரலாற்றடிப்படைச் சொல்லொழுங்கும்கூட இடம்பெறும்.

சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு முதலில் வேண்டப்படுவது சொற்பிறப்பியல் நெறி முறைகள். ஆங்கில மொழிக்கு முதன்முதல் சொற்பிறப்பியல் அகரமுதலியை நேரிய முறையில் தொகுத்தளித்த கீற்று (W. W. Skeat) என்பவர், சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளர் கவனிக்கவேண்டிய நெறிமுறைகளைப் (Canons for Etymology) பின்வருமாறு கூறுகிறார் :

சொற்பிறப்பியல் நெறிமுறைகள்

1. காலத்தால் முந்திய பயன்படுத்தம்நோக்கிச் சொல்லின் தொல்வடிவத்தை முடிவுசெய்யவேண்டும்.
2. வரலாற்றடிப்படையிலும் நிலவியல் அடிப்படையிலும் ஒரு மொழியில் புகுந்துள்ள கடன்சொற்களைக் கண்டறியவேண்டும்.
3. குறைந்த அசைகளையுடைய சொல்லை, அதே சொல்லின் மிக்க அசை களையுடைய வடிவத்திற்கு மூலமாகக் கொள்க. (மரூஉமொழி, திரிபுபோன்ற சொற்சுருக்கங்கள் அல்லாதவிடத்து.)
4. ஒலிப்பியல் நெறியீடுகளைக் (Phonetic Laws) கவனிக்க.
5. ஒரே அளவான அசைகளையுடைய இருசொற்களுள் காலத்தால் முந்திய சொல்லை மூலமாகக் கொள்க.
6. ஆங்கிலத்தில் வல்வினைகளை (strong verbs) மூலமாகக் கொள்க.
7. ஒரு சொல்லின் ஆய்வுக்கு முழுவடிவை எடுத்துக்கொள்க; சொல்லின் ஒரு பகுதியை ஆய்வுக்குக் கொள்ளற்க.

8. சொல்லின் வடிவ ஒற்றுமை அல்லது மேம்போக்கான பொருளொப்புமை கருதி இரு மொழிகளிலுள்ள சொற்களை (ஒலிப்பியல் நெறியீடு வேறுபடும் நிலையில்) ஒப்புமையுடையனவாகக் கொள்ளற்க.

9. இனச்சொற்கள் (Cognates) வடிவில் அல்லது ஒலிப்பில் முழுதும் ஒத்திருக்க வேண்டியதில்லை. ஒலிப்பியல் நெறியீடுகளுக்குப் புறம்பாக இருமொழிகளிலும் இருசொற்கள் ஒத்திருப்பின் (ஒலிப்பிலும் பொருளிலும்) ஒரு மொழி மற்றொரு மொழியிடமிருந்து அச் சொல்லைக் கடன்பெற்றிருக்கிறது என்று நம்பலாம்.

10. ஒரு சொல்லுக்கு இனச்சொற்களைக் கூறமுடியாதவிடத்து அச் சொல்லை விளக்கிக் கூறும் முயற்சி மேற்கொள்ளலாகாது.

மேற்கண்ட பத்தும் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்புக்குரிய பத்துக் கட்டளைகள் எனலாம். கீற்று ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலியை ஒரு மடலமாக வெளியிட்டார். ஆங்கிலச் சொற்பிறப்பியல் நெறிமுறைகளை (Principles of English Etymology) அழகுற ஆய்ந்து வெளியிட்டார்.

சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளர் தம் முயற்சியில் புரைபடுதலும் உண்டு. சொல்லின் மூலங்காண முற்பட்டுச் சொல்லின் உண்மைப்பொருளுணராமல் ஏதோ ஒன்றைச் சொல்லிவிடுவாரும் உளர்; உண்மைப்பொருளுணர்வாரும் உளர். அதனடிப் படையில் சொற்பிறப்பியலை எண்வகையாகப் பிரிப்பர். அவற்றுடன் மேலும் இரு வகைகளை (9, 10) மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் புதிதாகக் கண்டறிந்தார்.

1. உன்னிப்புச் சொற்பிறப்பு (Guessing Etymology)	—	அணில் (அழகு, வரி)
2. அறிவாகுலச் சொற்பிறப்பு (Pedantic Etymology)	—	மண் (மணப்பது)
3. அடிப்படைச் சொற்பிறப்பு (Popular Etymology)	—	நூல் (நூற்கப்படுவது, இழுக்கப் படுவது)
4. குறிக்கோட் சொற்பிறப்பு (Tendentious Etymology)	—	'ஐயன்' என்னும் தமிழ்ச்சொல்லை வேண்டுமென்றே 'ஆர்ய' என்னும்வட சொல்லிலிருந்து வந்ததாகக் கூறுவது.
5. வழூஉப் பகுப்புச் சொற்பிறப்பு (Malanalytical Etymology)	—	சாப்பாடு (சாதற்கேதுவானது)
6. நகையாட்டுச் சொற்பிறப்பு (Playful Etymology)	—	தோசை [தோ (இரண்டு) + சொய்ங்]
7. ஒலிவொப்புமைச் சொற்பிறப்பு (Sound Etymology)	—	பாராளுமன்றம் (Parliament) [ஒலிப் பில் ஒத்திருத்தல்]
8. பொருந்தப் புகல்வுச் சொற்பிறப்பு (Plausible Etymology) (உண்மையானது போலப் பொருத்திக் கூறுதல்)	—	ஒப்பாரி (ஒப்ப ஆரித்தல் அல்லது ஓவெனப் பாரித்தல்)
9. வேர்மூலச் சொற்பிறப்பு (Root tracing Etymology)	—	புல் → புள் → புழல் → புடல் → புடலை → புடலங்காய் (புழல் = துளையுள்ளது).
10. வடிவமீட்டமைப்புச் சொற்பிறப்பு (Reconstructed Etymology)	—	அங்காடி — அம்மு (விற்றல்) + கடை (இடம்). அம்முகடை → அங்கடை → அங்கடி → அங்காடி.

சொற்பிறப்பியல் அகரமுதலியின் தனிக் கூறுகள்

1. சொற்பிறப்பியல் அகரமுதலி ஏனை அகரமுதலிகளைப்போ லன்றிச் சொல்லுக்கு மூலமும் கூறும்.
2. சொற்பிறப்பியல் அகரமுதலியில் இனச்சொற்கள் தவறாது காட்டப்படும்.
3. சொற்பிறப்பியல் நெறியீடுகளைத் தழுவிச் சொல்லின் மூலம் அமைந்திருக்கும்.
4. தெளிவான மூலம் உறுதிப்படாதபோது ஓரளவுக்குச் சரியெனப்பட்ட மூலம் ஒருகா. (ஒருகால்) என்னும் முன்னடையோடு குறிப்பிடப்படும்.
5. தெரியாத மூலமாயின் மூலம் தெரியவில்லை எனச் சுட்டப்படும்.
6. சொல்லின் இலக்கணவகை அல்லது பொருள்விளக்கம் வேறாக அல்லது மாறாகக் கூறப்படவேண்டிவரின் அதுவும் மரபு தழுவியதாக இருக்கும்.
7. ஒருமொழிச் சொற்பிறப்பியல் அகரமுதலியாயின் அவ்வச் சொல்லுக்கு மூலம் அச் சொல்விளக்கத் தொடக்கத்தில் அல்லது இறுதியில் குறிக்கப்படும். இன மொழிகளுள் பன்மொழிச் சொற்பிறப்பியல் அகரமுதலியாயின் ஒவ்வோர் அடிச்சொல்லையும் தலைப்புச் சொல்லாகக்கொண்டு அச் சொல்லுக்கு இனமான இனமொழிச் சொல்லும் பொருளும் குறிக்கப்படும். பரோ எமனோவரின் திரவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலி இதற்குச் சான்றாகும்.
8. சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளர் அம் மொழியின் சொற்பிறப்பியல் நெறிமுறை (Principles of Etymology), ஒலிப்பியல் நெறியீடு (Phonetic Law), காலப்போக்கில் சொல்லின் பொருட்பாட்டு மாற்றம் (Semantic change) ஆகியவற்றைத் தெளிவாக வரையறுக்க வேண்டும்.

உலகமொழிகளில் தோன்றியுள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிகள்

உலகமொழிகள் பலவற்றுள் சொற்பிறப்பியல் அகரமுதலிகள் உருவாக்கப் பட்டுள்ளன. கி.பி. *1662*-ல் கெர்கார்டு சோகன்னசு வொசியசு (Gerhard Johannes Vossius) என்பவர் வெளியிட்ட இலத்தீனச் சொற்பிறப்பியல் அகரமுதலி (Etymologicum Linguae Latinae) உலகில் வெளிவந்த முதல் சொற்பிறப்பியல் அகரமுதலியாகக் கருதப்படுகிறது.

1671-ல் தீபன் கின்னர் (Stephen Skinner) என்பவர் இலத்தீன் மொழியில் ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலியை (Etymologicon Linguae Anglicane) வெளியிட்டார்.

1743-ல் பிரான்சிசு சூனியசு (Francis Junius) என்பவர் ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலி யொன்றை (Etymologicum Anglicanum) வெளியிட்டார். இந் நூலைச் சாமுவேல் சான்சன் தம் புகழ்பெற்ற ஆங்கில அகரமுதலியை உருவாக்கச் சிறந்த கருவிநூலாகக் கொண்டிருந்தார்.

1803-ல் சான் சன்னிசன் (John Jannieson) என்பவர் காத்தியமொழிக்கு (Scottish Language) ஒரு சொற்பிறப்பியல் அகரமுதலி உருவாக்கினார்.

1840-ல் கிரிம் (Grimm) என்பவர் செருமானியமொழிக்கு ஒரு சொற்பிறப்பியல் அகரமுதலி (German Etymological Study) உருவாக்கினார். இவர் அம் மொழிக்கு வடித்துத் தந்த சொற்பிறப்பியல் நெறியீடுகள் 'கிரிம் நெறியீடு' (Grimm's Law) என வழங்கப்படுகிறது.

1879-ல் ஆங்கிலத்தில் இன்றும் சிறந்த சொற்பிறப்பியல் அகரமுதலியாக விளங்கும் 'Scientific Etymological Dictionary of the English Language' என்னும் அகரமுதலியைக் கீற்றுப் (W.W. Skeat) பெருமகனார் வெளியிட்டார். இந்த அகரமுதலி ஒரு மடலமாக வெளிவந்தது.

ஆயின், ஆங்கில மொழியின் சொற்பிறப்பியல் நெறிமுறைகளை (Principles of English Etymology) இரண்டு மடலங்களாக இவர் 1892-ல் வெளியிட்டார். சொல்லின் காலவரையறை சொற்பிறப்புக்குப் பெரிதும் உதவும் என்றார்.[1]

இவை இரண்டுமட்டுமன்றிப் பின்வரும் மூன்று நூல்களையும் அடுத்தடுத்து இவரே தொகுத்தளித்தார் :

1. *1895*-ல் வெளிவந்த 'Primer of English Etymology'.
2. *1897*-ல் வெளிவந்த 'Concise Etymological Dictionary of the English Language'.
3. *1912*-ல் வெளிவந்த 'Science of English Etymology'.

சொற்பிறப்பியல் அகரமுதலித் துறையில் பெரிதுழைத்து அரிய தொகுப்புகளை வழங்கிய பெருமை சீற்று ஒருவரையே சாரும்.

1931-ல் இரால்பு லில்லி தர்னர் (Ralph Lilley Turner) என்பவர் நேப்பாள மொழிக்கு ஒரு சொற்பிறப்பியல் அகரமுதலி (Comparative and Etymological Dictionary of the Nepali Language) தொகுத்தளித்தார்.

1938-ல் யாழ்ப்பாணத்திலிருந்த தவத்திரு ஞானப்பிரகாச அடிகளார் தமிழ்மொழிக்கு **சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியைத்** தாமே முயன்று அரும்பாடாற்றி இயன்றவரை தொகுத்தளித்தார்.

1946-ல் குல்கர்னி என்பவர் மராத்திச் சொற்பிறப்பியல் அகரமுதலி (Marathi Etymological Dictionary) தொகுத்து வெளியிட்டார். இதில் மேலையாரிய மொழிகளி லிருந்தும் இனச்சொல் காட்டியுள்ளார்.

1961-ல் பரோ எமனோவரின் திரவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலி (Dravidian Etymological Dictionary) வெளிவந்தது.

1966-ல் ஆங்கில அகரமுதலி வெளியீட்டில் பெரும்புகழ்பெற்ற எருதந்துறை அகரமுதலிக் (Oxford Dictionary) குழுவினர் சி. தி. ஆனியன் (C. T. Onion) என்னும் அறிஞர் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமர்த்தி, ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலி (Oxford Dictionary of English Etymology) வெளியிட்டனர். ஆங்கிலத்தில் இவர்களைப் போன்றே சேம்பர்சு அகரமுதலிக் குழுவினரும் ஒரு சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியிட்டுள்ளனர். கிளெயின் (Klein), வீக்லி (Weakley) ஆகியோரின் சொற்பிறப்பியல் அகரமுதலிகளும் ஆங்கில மொழிக்கு எழில் சேர்க்கின்றன.

1970-ல் வால்தர் வோன் வார்த்பர்க்கு (Walter Von Wartburg) என்பவர் பிரெஞ்சு மொழிக்கு ஒரு சொற்பிறப்பியல் அகரமுதலியை (Franzosisches Etymologisches) தொகுத் தளித்துள்ளார்.

1978-ல் சக்கரதர ராவ் என்பவர் வால்தேர் நகரிலுள்ள ஆந்திரப் பல்கலைக்கழக வாயிலாகத் தெலுங்குச் சொற்பிறப்பியல் அகரமுதலி பன்மடலங்களுள் முதன்மடலத் தொகுப்பை வெளியிட்டார். இதுவரை எட்டு மடலங்களுள் மூன்று வெளிவந்துள்ளன.

உலகில் இதுகாறும் வெளிவந்துள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிகளுள், செருமானியம், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் வெளிவந்துள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிகள் தரமானவையாகவும் புகழ்பெற்றவையாகவும் உள்ளன.

---

[1] Hence we learn the very necessary lesson that etymology requires scientific treatment and does not consist in giving indolent credence to silly guesses and we atonce establish the value of chronology as a helpful guide to truth.

—W. W. Skeat — Principles of English Etymology, p. 6.

தமிழில் சொற்பிறப்பியல் அகரமுதலிகள் — அதற்கான முயற்சிகள்

தமிழ் உள்ளிட்ட திரவிட மொழிகளுக்கு ஒரு சொற்பிறப்பியல் அகரமுதலி வேண்டும் என்று 1856ஆம் ஆண்டிலேயே கால்டுவெல் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணத்துப் பெருந்தகை தவத்திரு ஞானப்பிரகாசர், 1938-ல் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் முதல் ஆறு சிறுபகுதிகளை ('அ' முதல் 'உருள்' வரை 364 பக்கங்கள்) வெளியிட்டார். ஒவ்வொன்றும் 1000 பக்கம் கொண்ட இரண்டு மடலங்களாக (20 உட்பகுதிகள்) வெளியிடத் திட்டமிட்டிருந்தார். அது 'A Comparative and Etymological Lexicon of the Tamil Language' என்று வழங்கப்பட்டது.

இவர்தம் நுண்மாண் நுழைபுலத்தாலும் பல்லாண்டு செய்த ஆராய்ச்சியின் விளைவாலும் இந்தைரோப்பிய மொழிகளுக்குத் தமிழே மூலம் என்று கண்டறிந்தார். செருமானிய மொழிக்குக் கிரிம் என்பவரும், ஆங்கிலத்துக்குக் கீற்று என்பவரும் சொற்பிறப்பியல் நெறியீடுகளை அமைத்ததுபோல இவரும் திரவிடச் சொற்பிறப்பியல் நெறியீடுகளை (Laws of Dravidian Etymology) அமைத்தார்; ஒலிப்பு நெறிமுறைகளையும் (Phonetic Sound Laws) வகுத்தார்.

மொழியாராய்ச்சிக்கு வழக்கிலுள்ள சொல்லாட்சிகளை விடுத்து இலக்கியச் சொல்லாட்சிகளை மட்டும் கொள்ளலாகாது என்றும், இந்தைரோப்பிய மொழியினர் ஒலிப் பொப்புமை மட்டும் கருதாமல் சொல்லின் வேரும் வரலாறுமாத விரிந்த அடிப்படை உண்மைகளை ஆராய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும் ஞானப்பிரகாச அடிகளார், " 'Father, Mother' என்னும் ஆங்கிலச் சொற்களை அதே ஒலிப்பு ஒப்புமையுடைய இலத்தீன கிரேக்க சமற்கிருதச் சொற்களோடு ஒப்பிடும் சொல்லாராய்ச்சியாளர், மேனாட்டுக் குழந்தைகள் அப்பாவைப் 'பப்பா' என்றும் அம்மாவை 'மம்மி' என்றும் அழைக்கும் சொல்வடிவங்கள் தமிழோடு நெருங்கியிருப்பதை ஏன் காண மறந்துவிட்டனர்" என்று வினவுகிறார்.

மாக்சு முல்லரின் பொன்மொழியை 'Sound Etymology has nothing to do with sounds' — எடுத்துக்காட்டி ஒலிப்பு மற்றும் பொருளொப்புமை மட்டும் கருதாது வேர்ச்சொல் இயைபு எம் மொழியில் அமைந்துள்ளது என்று காணவேண்டும் எனத் தெளிவு கொளுத்துகிறார்.

சமற்கிருதவாணர் 'மாத்ரு' (தாய்) என்பது (மா = அளத்தல், வீட்டை மேற்பார்வை செய்தல்) 'மா' என்னும் வேரிலிருந்து பிறந்ததாகக் கூறுவதும், 'பித்ரு' (தந்தை) பாதுகாப்பவன் என்று பொருள்படுவதாகக் கூறுவதும் பொருத்தமற்றவை என்கிறார். 'அம்மா, அப்பா' என்பவையே அவற்றுக்கு மூலம் என்று காட்டுகிறார். அவருடைய முயற்சி முற்றும் நிறைவுறு முன்பே அவர் இயற்கையெய்தியது தமிழின் தவக்குறைவே எனலாம்.

இங்கிலாந்தில் சமற்கிருதப் பேராசிரியராகவுள்ள பரோவும், அமெரிக்கக் கலிபோர்னியாவில் சமற்கிருதப் பேராசிரியராகவுள்ள எமனோவும் ஐம்பதாண்டுகளாகத் திரவிட மொழிகளை ஆராய்ந்து சொற்றொகுத்து 1982ஆம் ஆண்டில் திரவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் திருந்திய பதிப்பை (Dravidian Etymological Dictionary—Revised) வெளியிட்டனர். இதில் 5569 சொற்களுள்ளன. இது இன்றைய திரவிடமொழி யாய்வாளர்க்குக் கருவிநூலாகப் பயன்பட்டு வருகிறது.

1959-ல் சென்னைப் பல்கலைக்கழகம் திரவிடமொழிச் சொற்களை ஒப்பீட்டு முறையில் தொகுத்துத் திரவிட மொழிகளின் ஒப்பீட்டுச் சொல் அகரவரிசை (The Dravidian Comparative Vocabulary) வெளியிட்டுள்ளது. இஃது சொற்பிறப்பியல் அகரமுதலி யன்றெனினும், இனச்சொல் ஒப்பீட்டுச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் ஒரு கூறாதலின், இதனையும் இவண் குறிப்பிட நேர்ந்தது.

தமிழில், இதுவரை நிகண்டுகளும் அகராதிகளும், வெளிவந்தனவும் வெளிவரா தனவுமாக 300-க்குமேல் இருப்பினும் தரமான சொற்பிறப்பியல் அகரமுதலி தமிழுக்கு இல்லாமலிருப்பது ஒரு பெருங்குறையாக இருந்தது. இக் குறையை நிறைவாக்கும்வகையில் 1974ஆம் ஆண்டு மேத் திங்களில் தமிழக அரசு **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம்** (Tamil Etymological Dictionary Project) ஒன்றை உருவாக்கியது.

சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு இன்றியமையாது வேண்டப்படுவன

அகரமுதலி தொகுக்கும் பணி எளிதன்று. அயராது உழைக்கவேண்டிய அகரமுதலித் தொகுப்பாளரை, 'அப்பாவி உழைப்பாளர்' என்று சான்சன் பெருமகனார்[1] ஒரு முறை குறிப்பிட்டார். அகரமுதலித் தொகுப்பாளர் அப்பாவித்தனமாக உழைப்பவராக இருக்கலாம். ஆயின், தம் அறியாமையை வெளிக்காட்டுபவராக இருத்தலாகாது. ஒருவர் எல்லாவற்றையும்பற்றிய அறிவு நிரம்பியவராக இருத்தலியலாது. அக் குறையைப் போக்கு வதற்காகத்தான் உலகில் எங்கு நோக்கினும், அகரமுதலித் தொகுப்புப் பணி ஒரு குழுவின் கூட்டுப்பணியாக அமைக்கப்படுகிறது.

சொற்பிறப்பியல் அகரமுதலி ஒரு சிறப்புவகை அகரமுதலியாதலின், இதன் தொகுப் பாளர், தலைவர் ஆகியோர் தாய்மொழியில் நிகரற்ற புலமையாளராக இருத்தல் வேண்டும். ஆங்கிலம் உள்ளிட்ட பன்மொழியறிவும், மொழிநூற்புலமையும், நடுநிலையோடு ஆயும் நோக்கும் நிரம்பியவராய் இருத்தல் வேண்டும்.

''சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுப்பவர், எத்துணைப் பெரும்புலவரேனும் மொழியாராய்ச்சித் துறையில் நடுவுநிலைமை, அஞ்சாமை, தன்னலமின்மை, மெய்யறியவா என்னும் நாற்பண்பும் இல்லாதவர் வேர்ச்சொற்களைத் தொகுப்பது, குருடன் கண் மருத்துவமும், செவிடன் இசையாராய்ச்சியும், சப்பாணி தாண்டவப் பயிற்சியும் செய்வ தொத்ததே. 'கல்வி வேறு; ஆராய்ச்சி வேறு' '' என்று மொழிநூல் மூதறிஞர் பாவாணர் கூறுகின்றார்.

எனவே, சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்புக்கு இன்றியமையாத முதல் தேவை, அத் துறையில் ஆர்வமும் புலமையும் நெடுங்கால ஆராய்ச்சிப் பட்டறிவும் கொண்ட அறிஞர் குழுவே.

இரண்டாவது தேவை, அக் குழுச் செயற்படவேண்டிய தெளிவான திட்டம். தெளி வான முன்னோக்கத் திட்டமில்லாததால் எத்துணையோ அகரமுதலித் திட்டங்கள் அரை குறையாக, அல்லது முழுமையாக வெளிவரினும் நிறைவில்லாதனவாக அமைந்து விடுகின்றன.

இலத்தீன் மொழிக்குச் சொற்களஞ்சியம் (Thesaurus) தொகுத்த ஐந்து குழுவினர் 100 ஆண்டுகள் உழைத்து மூன்றில் இருபங்குப் பணியைத்தான் முடித்தனர்.

யாழ்ப்பாணம் தவத்திரு ஞானப்பிரகாசர் தமக்குப்பின் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிப் பணி தொடர ஒரு திட்டமும் செய்யாததால் அவர் மறைவுக்குப்பின் அப் பணி நின்றுவிட்டது.

ஒழுங்கான திட்டத்தின்கீழ் முழுமையாகவும் நிறைவாகவும் வெளிவந்த முதல் அகரமுதலி எருதந்துறை ஆங்கிலப் பேரகரமுதலி (Oxford Dictionary)தான் என்பர். இதில் 400 அறிஞர்கள் 70 ஆண்டுகள் பணியாற்றினர். அவர்கள் தொகுத்த 5 இலக்கம் சொற் களுடன் அகரமுதலி 13 மடலங்களாக வெளிவந்தது. நாட்டுப்புற மக்களிடை வழங்கும் அனைத்துச் சொற்களையும் தொகுக்க ஏடேறாச் சொற்குழு (U.W.C. — Unregistered Words Committee) ஒன்றை அமைத்தனர்.

---

[1] 'Lexicographer is an harmless drudge'—Johnson

பூனாவில் தொகுக்கப்பட்டுவரும் வரலாற்றடிப்படையிலான சமற்கிருதப் பேரகர முதலி 36 ஆண்டுகளாகச் செயற்பட்டுவருகிறது.

திட்டத்தின் தனிக் கூறுகளான பண ஒதுக்கம், தொகுப்பாளர் உழைப்பு, செயற்பாட்டு வகைமை ஆகியவை செம்மையாக அமைந்தால் திட்டம் திட்டமிட்டபடி நிறைவுறும்.

மூன்றாவது தேவை, அகரமுதலித் தொகுப்பாளர்களின் களப்பணித் (field work) திறன். மொழி வழங்கும் எல்லாவிடங்களுக்கும் நேரிற் சென்று சொற்றொகுத்தல் களப்பணி எனப் படும். அவ்விடத்திற்குச் சென்றால்தான் அச் சொல் எப் பொருளில் வழங்குகிறது என்பதை வரையறுக்க முடியும்.

வெபுத்தர் (Webster) ஆங்கில அகரமுதலித் தொகுப்பாளர் ஆங்கிலமொழி பேசப் படும் 46 நாடுகளுக்கும் நேரிற் சென்று சொற்றொகுத்தனர்.

தரமான ஆங்கில அகரமுதலி தொகுப்பதில் ஆங்கிலேயரிடை ஒருகாலத்தில் ஒரு பெரும் போட்டி நிலவியது. அதனை 'அகராதிப் போர்' (War of Dictionaries) என்றழைத்தனர்.

சங்க அகராதியில் 'தசகூலி' என்னுஞ் சொல்லுக்கு, 'பயிரிடுந் தொழிலிற் கொடுக்கும் பத்துவகைக் கூலி' என்று பொருள் உள்ளதை நோக்கிச் சென்னைப் பல்கலைக்கழக அகராதித் தொகுப்பாளரும் அச் சொல்லுக்கு அதே பொருளைக் குறித்தனர்; அச் சொல் எந்த வட்டாரத்தில் வழங்கும் வழக்கு என்று குறிப்பிடவில்லை.

நெல்லையில் வழங்கும் அச் சொல், 'தச்சக்கூலி' என்பதன் இடைக்குறை என்று பாவாணர் தெளிவுபடுத்துகிறார்; 'இந்த ஆண்டு விளைச்சல் தசக்கூலிக்கும் கட்டவில்லை' என்னும் உழவர் வழக்கை எடுத்துக் காட்டுகிறார். நேரிற் சென்று களப்பணி செய்தா லொழியச் சொற்களின் செவ்விய பொருளுணர முடியாது என்பதற்கு இஃதொரு சான்றாகும்.

அகரமுதலித் தொகுப்புக்கு **நான்காவது தேவை**, பன்மொழிப்புலமை நிறைந்த தொகுப்பாளர் குழு. சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்புக்கு இது மிகவும் தேவை.

தெலுங்குச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளர் எச்சரிக்கை என்னுஞ் சொல்லுக்கு 'எழுச்சி + அறிக்கை' என்பதை மூலமாகக் காட்டியிருப்பது வேடிக்கையாக இருக்கிறது.

'எச்சரிக்கை' என்னுஞ் சொல்லின் மூலம் காண — அதன் கன்னட வடிவம் என்ன என்று காண — அவர்கள் மறந்துவிட்டனர். கன்னடத்தில் இச் சொல் 'எழுதருவிகெ = எழுந்த நிலை' என்றுள்ளது. இதன் பொருள் விழித்த நிலை என்பதாகும்.

தமிழில் இதன் மூலம் 'எழுதருகை' என்றிருந்திருத்தல் வேண்டும்.

'எச்சரிக்கை' என்பதன் மூலம் 'எழுதருகை' (விழிப்புநிலை) என்பதே. இனமொழிப் புலமை நிரம்பாவிடின் அல்லது இனமொழிப் புலமையாளரின் துணை கொள்ளாவிடின் உண்மையான சொற்பிறப்புக் காண்டல் அருமை என்பதற்கு மற்றொரு சொல்லையும் சான்றாகக் காட்டலாம்.

'அங்காடி' என்னும் தமிழ்ச்சொல் திரவிட மொழிகள் அனைத்திலும் வழங்குகிறது. தமிழில் முதன்முதல் சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுத்த தவத்திரு ஞானப்பிரகாசர், 'அங்கு' (வளைதல்) என்னும் வேரிலிருந்து இச் சொல் தோன்றியதாகக் கூறினார்.

மலையாள அகரமுதலித் தொகுப்பில் ஈடுபட்ட சூரநாடு குஞ்ஞன்பிள்ளை (அங்கம் = உடம்பு, ஆடுதல் = கூடுதல்) அங்காடி = உடம்புகள் கூடும் இடம் எனப் பொருள் கொண்டார்.

திரவிட மொழிகளில் பல்லாண்டுகள் ஆராய்ச்சி செய்துவந்த பாவாணர் ஒருவரே தம் நுண்மாண் நுழைபுலத்தால் 'அம்மு' (விற்றல்) என்னும் தெலுங்குச் சொல்லே (குமரி நாட்டுத் தமிழ்ச்சொல்) 'அங்காடி' என்பதன் மூலம் எனக் கண்டறிந்தார்.

ஆதலால், சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்புக்குப் பன்மொழிப் புலமை, அடிப்படைத் திறன்களில் ஒன்று என அறியலாம்.

தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு **ஐந்தாவது தேவை**, தக்க கருவிநூல்கள்.

சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு **ஆறாவது தேவை**, சொற்பிறப்பியல் நெறிமுறைகள் (Principles of Etymology).

சொற்பிறப்பியல் அகரமுதலிக் குழு களப்பணி, ஆயத்தப்பணி ஆகிய இருபணிகளும் முடிந்தவுடன் பதிப்புப் பணியை மேற்கொள்ளுமுன், சொற்பிறப்பியல் நெறிமுறைகளை முழுமையாக வகுக்கவேண்டும். ஒவ்வொரு சொல்லுக்கும் வேரும் வரலாறும் கண்டு வரைந்த முறை சரியா என்று சொற்பிறப்பியல் நெறிமுறைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்த பிறகே பதிப்புப் பணியை மேற்கொள்ளவேண்டும்.

ஒலிப்பு நெறியீடுகள் (Phonetic Laws) முதற்பகுதியாகவும், அந் நூலில் சொற்பிறப்பியல் நெறிமுறை இரண்டாம் பகுதியாகவும், பொருட்பாட்டுப் புடைபெயர்ச்சி (Semantic changes) மூன்றாம் பகுதியாகவும் இடம்பெற வேண்டும்.[1]

சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு **ஏழாவது தேவை**, சொற்பலுக்க (Pronunciation) வரையறை. தமிழைக் கற்க விரும்பும் வேற்றுமொழியாளர்க்கு ஒலிப்புச் சிக்கல் தோன்றாதபடி ஒவ்வொரு தமிழ்ச்சொல்லுக்கும் ஒலிப்பு, ஆங்கிலத்தில் சாய்ப்பு எழுத்துகளில் தரப்படுகிறது. எனினும், ஒரே தமிழ்ச்சொல் ஒலிப்பு வேறுபாட்டில் பொருள் வேறுபடும் நிலையில் இரு சொற்களாகக் காட்டப்படவேண்டியுள்ளது.

எ.கா:

1. தொகைச்சொல்லில் 'க'கர ஒலிப்பு வேறுபாடு	செங்கோல் (*šeṅgōl*)	நேர்மையான ஆட்சியின் அடையாளமான கோல்
	செங்கோல் (*šeṅ-kōl*)	சிவப்பு நிறமுள்ள கோல்
2. இனமெல்லெழுத்தடுத்த 'ச'கர ஒலிப்பு வேறுபாடு	மஞ்சள் (*mañjaḷ*)	'ja' ஒலிப்பு
	அரசஞ்சண்முகன் (*Arašañ-caṇmugaṉ*)	'c' ஒலிப்பு

எனவே, தனிச்சொற்களிலும் கூட்டுச்சொற்களிலும் ஒலிப்பு வரையறை தெளிவாக்கப் பட வேண்டும்.

சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு **எட்டாவது தேவை**, மூலம் காண்பதிலும் மூலச் சொல்லின் வடிவமீட்டமைப்பிலும் மரபு பிறழாத நடுவுநிலைமையும் புலமை நுட்பமும்.

---

[1] அகராதி தொகுப்போர் சொல்லை மூவகை நிலைகளில் நோக்குவர். அவை:
1. Phonological aspect (word form) — சொல்வடிவம் (ஒலிப்பு)
2. Grammatical aspect (word) — சொல் (இலக்கணவகை)
3. Lexical aspect (lexeme) — சொல்லின் பொருட்பாட்டுநிலை.

— Mathews, 1974, Morphology, Cambridge.

தமிழும் தமிழினச் சொற்களும் சொல்லீற்றில் வல்லின மெய்யீறு கொள்ளாதவை. இது தமிழ்மரபு. இஃதறியாமல் வடிவமீட்டமைப்பின்போது வேர்ச்சொல்லுக்கோ வடிவ மீட்டமைப்புச் சொல்லுக்கோ வல்லின மெய்யீறு காட்டுதல் மரபுக்கு முரணாகும். அஃது எக்காலும் உண்மையாகாது.

தவத்திரு ஞானப்பிரகாசர் 'அஃகுதல்' என்னுஞ் சொல்லிற்கு 'அஃக்' என மெய்யீற்று மூலங்காட்டுதலும், பரோ எமனோவர் 'தந்தை' என்னும் தமிழ்ச்சொல்லுக்கு இனமான பிற திரவிட இனச்சொற்களை யெல்லாம் ஒப்பிட்டு நோக்கித் தெலுங்கர் 'தந்தை'யைத் 'தன்றி' என்பதால் அனைவர்க்கும் பொதுவான மூலமாகத் 'தண்ட்' அல்லது 'தன்ற்' எனக் காட்டுவதும் தமிழ்ச் சொற்பிறப்பியல் பொறுத்தவரை எவ்வகையிலும் பொருந்தாது. முன் + உ — முந்து, பின் + உ — பிந்து என்றாற்போல் தன் + ஐ — தந்தை ஆகியது. (ஒ.நோ : நும் + ஐ — நுந்தை).

வண்ணனை மொழிநூலார் (Descriptive Linguists) தமிழ்போன்ற தொன் மொழியையும் நேற்றுப் பிறந்த கோண்டு மொழியையும் சமமாக மதித்து, அனைத்து மொழிக்கும் தாயான மொழிக்கு 'முந்துதிரவிடம்' (Proto-Dravidian) எனப் பெயரிட்டு, மூலங்காணும் முயற்சியி லீடுபட்டிருப்பது நன்றன்று.

நீலகிரி மலையிலுள்ள பழங்குடிகளில் ஒரு சாராரான இருளர் 'லைக்கார், றாஅங்கிவா' என்று பேசுவதைக் கேட்கும் வண்ணனை மொழிநூலார், 'லைக்கார்' என்பது 'அழைக் கிறார்' என்பதன் திரிபு என்பதையும், 'றாஅங்கிவா' என்பது 'இறங்கிவா' என்பதன் திரிபு என்பதையும் உணராமல், (லை = கூப்பிடு, றா = வா) 'லை', 'றா' என்பனவற்றையே அச் சொற்களின் முதனிலைகளாகக் கொள்ள முன்வருகின்றனர்.

ஓர் இனமொழியை அதற்குக் காலத்தால் முந்திய தாய்மொழியோடு இணைத்துப் பார்த்துச் சொல் திரிந்த வடிவத்தை உணரும் வரலாற்று அறிவை வண்ணனை மொழிநூல் வழங்குவதில்லை.

வரலாறு மற்றும் ஒப்பீட்டு மொழிநூல் கற்றார் அன்றி வண்ணனை மொழிநூலறிவு மட்டும் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்புக்கு அத்துணை உதவாது என்று பாவாணர் கூறுவார்.

சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளரின் பணி, வேரும் வரலாறும் (Origin and derivation) காண்பதோடு முடிவடைவதில்லை.

ஆயிரம் ஆண்டுக்கு ஒருமுறை ஒவ்வொரு மொழியிலும் ஐந்திலொரு பங்குச் சொற்கள் வழக்கொழிந்துவிடுகின்றன வாதலின், அவ்வாறு வழக்கொழிந்த சொற்களை மீட்டமைத்து, அச் சொற்கள் பிற இனமொழிகளில் எவ்வாறு திரிபுற்று வழங்குகின்றன என்று நாட்டுவதன் வாயிலாக மூலமொழியின் தொன்மையும் தாய்மையும் தலைமையும் நிறுவப்படுவதில்தான் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளரின் திறமை அடங்கியிருக்கிறது.

தெலுங்கில் 'நூன' என்னுஞ் சொல் எண்ணெய் (எள் + நெய்) எனப் பொருள்படு கிறது. 'நூ' என்னுந் தமிழ்ச்சொல்லுக்கு 'எள்' என்று பொருள். நூ + நெய் (எள் + நெய்) என்னுந் தமிழ்ச்சொல்லே தெலுங்கில் 'நூன' எனத் திரிந்துள்ளது. வழக்கொழிந்த 'நூநெய்' என்னுந் தமிழ்ச்சொல் தமிழ் அகரமுதலியில் இடம்பெற்றாலொழியத் திரவிட மொழிகளுக்குத் தமிழே தாய் என்பதை எங்ஙனம் நிறுவ இயலும் ?

தெலுங்கில் 'வல்லகாடு' என்னுஞ் சொல் இடுகாட்டைக் குறிக்கிறது. கன்னடத்தில் இது 'பெள்காடு' என வழங்குகிறது. பழந்தமிழில் இதன் வடிவம் 'வெள்காடு' (ஆள் இயங்காக் காடு, இடுகாடு) என மீட்டமைத்தல் இன்றியமையாததன்றோ ? இங்ஙனம் மறைந்துபோன தமிழ்ச்சொற்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. இவற்றை அகழ்ந்தெடுக்கும் முயற்சியில் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளர் ஈடுபடவேண்டும்.

சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளர்க்குள்ள கடமை பெரிது. உள்ள சொற்களுக்கு மூலங் காணல், புதிய சொற்களைத் தொகுத்தல், கலைச்சொற்களைப் படைத்தல், மறைந்துபோன சொற்களை வடிவமீட்டமைத்தல் ஆகிய நான்கும் பாங்குறச் செயப்படின் அகரமுதலி சிறந்ததாக அமையும்.

ஒரு சொல்லுக்குப் பல வேர்களோ சொற்பிறப்புகளோ காட்டப்படும்போது அவற்றுள் ஒன்றே சரியானதாக இருக்க முடியும். சரியான சொற்பிறப்பை வரையறுப்பதில் தொகுப்பாளரின் தனித்திறமை யடங்கியிருக்கிறது.

மொழிவளர்ச்சிக்கும் ஆய்வுக்கும் எவ்வகையில் துணை ?

போர்வீரனுக்குச் செவ்விய படைக்கலங்கள் வெற்றிக்குத் துணைபுரிவதுபோலப் பல்வேறு துறைகளில் அறிவை வளர்த்துக்கொள்ள விழையும் அம் மொழியினர்க்கும் அம் மொழியில் அவ்வத்துறை தொடர்பான கலைச்சொற்கள் பெரிதும் துணைநிற்கும். தக்க சொல்வளம் தாய்மொழியில் கிட்டாதவிடத்து வேற்றுமொழியையே தம் அறிவு வளர்ச்சிக்குத் துணைகொள்ள நேரும்; தாய்மொழியின்பால் பற்றுக் குறைபடும். நல்ல அகரமுதலி மக்களைச் செவ்விய மொழிப்பாங்குடையவராக மாற்றும்.[1]

தாய்மொழியே கல்வி வாயிலாக அமையும்நிலையில் தாய்மொழியின் வெற்றிக்கும் பற்றுக்கும், தாய்மொழியில் ஊற்றாய்ப் பெருகும் சொல்வளம் மிகவும் இன்றியமையாதது. அத்தகு சொல்வளக் களஞ்சியமாக அகரமுதலிகள் விளங்கும்.

மேலும், புதிய சொற்கள் வேண்டுமிடத்து வேரும் மூலமும் காட்டிப் பல்லாயிரம் புத்தம் புதிய படைப்புச் சொற்களை உருவாக்கச் சொற்பிறப்பியல் அகரமுதலி வழி காட்டும். ஆதலால், மொழிவளர்ச்சிக்கு ஏனை அகரமுதலிகளைவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலியே ஆணிவேராக அமைகிறது.

செருமானிய மொழிக்குக் கிரிம் என்பவர் சொற்பிறப்பியல் அகரமுதலி உருவாக்கித் தந்ததன் விளைவாகச் செருமானிய மொழியின் இலக்கிய வரலாறு எழுத அது மிகவும் பயன் பட்டதாகக் கூறுகின்றனர்.

சொற்பிறப்பியல் அகரமுதலி உருவாக்குவதன் வாயிலாக அம் மொழியின் சொற்பிறப்பியல் நெறிகளை அறியலாம்; ஒரு மொழியின் முன்மை, தொன்மை, தாய்மை, தலைமை ஆகியவற்றையும் அறியலாம். எவ்வெம் மொழியிலிருந்து சொற்கள் எவ்வெம் மொழிக்குச் சென்றுள்ளன என்னும் உண்மைகளையும், எக் காலகட்டத்தில் இம் மாறுதல்கள் தோன்றின, ஏன் தோன்றின என்னும் வரலாற்றுப் பின்னணிகளையும் அறியலாம். இதனாற்றான் சோவியத்துநாட்டு வரலாற்றாசிரியர் கோந்தரதோவ் என்பவர், 'மொழியாய்வாளர்தாம் வரலாற்றாசிரியர்க்கு நிறைந்த செய்திகளைச் சொல்ல முடியும்' என்கிறார்.

அகரமுதலியைச் சொல்லின் பொருளறிய மட்டும் பயன்படுத்துகிறோம். அச் சொல்லின் மூலமென்ன என்று அறிவது மொழியின் பயன்பாட்டுநிலையில் நோக்குவார்க்குத் தேவையற்றது எனச் சிலர் கூறலாம். சொல்லின் மூலமறிந்து பேசுவோர் பொருளாழத்துடன் எழுதவும் இயலும் என்பதை அவர் அறியார் என்க.

சொற்பிறப்பியல் நெறிமுறைகளைப் பின்பற்றிப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் மறைந்துபோன தமிழ்ச்சொற்களையும், பிறமொழிகளில், திரிந்தும் திரியாமலும் வழங்கித் தமிழில் வழக்கற்றுப்போன சொற்களையும் வடிவமீட்டமைத்து முந்துதிரவிடச் சொற்கள் காட்டப்பட்டுள்ளன. இம் முயற்சி, இற்றை உலகின் பல்வேறு தொன்முதுமொழிகளின்

---

[1] 'Dictionary might bring people closer to the perfect language' — Encyclopaedia Brittanica.

எழுத்துச் சான்றுகளோடு ஒப்பிட்டு, அறப் பழங்காலத்தில் அவற்றுக்கும் தமிழுக்கு மிடையிலான கொள்கொடைகளை நிறுவத் துணைசெய்யும்.

எ-டு:	(1) ஆன் = அவ்விடம் ஈன் = இவ்விடம் ஊன் = முன்னிடம், நீ.	பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் மறைந்துபோன தமிழ்ச்சொற்கள்.
	(2) அம்முதல் = விற்றல். கம்மவார் = உழவர். (கமக்காரன் — உழவன், யாழ்ப்பாண வழக்கு).	தமிழில் வழக்கற்றுத் தெலுங்கில் வழங்கிவரும் பழந்தமிழ்ச் சொற்கள்.
	(3) இயா (இஆ) = தந்தை. (இயவுள் = கடவுள், தலைவன், தந்தை. இயவு (இயா) → இயவுள். ஒ.நோ: நிலவு → நிலா.	பஞ்சாபி மொழியில் வழங்கிவரும் தமிழ்ச் சொல்.
	(4) இறைய = தந்தை. புல(ம்) = கண். இளையரு = இளைஞர்	ஆத்திரேலியப் பழங்குடிகளின் மொழியில் வழங்கிவரும் தமிழ்ச்சொற்கள்.

சொல்லின் மூலமறிந்து பொருளுணர்ந்து பேசப்படும் சொற்கள் காலப்போக்கில் திரிபடைவதில்லை.

ஆங்கிலம் உள்ளிட்ட மேலைநாட்டு மொழிகளிலுள்ள சொற்பிறப்பியல் அகரமுதலி களில் சொன்மூலம் காட்டுவார்களேயன்றி அச் சொன்மூலத்திற்கும் மூலச்சொல் காட்டும் வழக்கமில்லை. 'kind, king' என்னும் சொற்களுக்கு 'kin' (family, related by blood) என்பது மூலமாகக் காட்டப்படுகிறது. ஆயின், 'kin' எப்படிப் பிறந்தது, அதன் வேர்ச்சொல் என்ன என்பதை ஆராயும் முயற்சியில் மேனாட்டு வல்லுநர் இன்றுகாறும் இறங்கவில்லை. அம் மொழிகளும் அத்தகு ஆய்வுக்கு இடந்தரா. ஆயின், இத் துறையில் முயன்று முழுமையான வெற்றிபெற்றவர் பாவாணர் ஒருவரே. ஒளிர், ஒளி என்பவற்றுக்கு 'ஒள்' என்பதே வேர்ச் சொல் எனக் கூறும் பாவாணர், உல் (வெப்பம்) → உள் → ஒள் எனத் திரிந்ததாக வேர்ச் சொல்லுக்கும் வேர்ச்சொல் காட்டுகிறார். தமிழிலுள்ள ஆணிவேர்ச்சொற்களே உலகத் தொன்மொழிகளிலும் ஆணிவேர்ச்சொற்களாக இருக்கின்றன என்பது பாவாணரின் கொள்கை.

எ-டு: குல் → குலம் (குடும்பம்). குல் → குன் → **Goth.** kun → **OS.** kunni → **OE.** cynn → **E.** kin (family).

வேர்ச்சொல்லுக்கும் வேர்ச்சொல் கண்டுபிடித்து, எல்லாச் சொற்களுக்கும் அடிவேர்ச் சொற்களைக் (விதைச்சொல் — seed word, முளைச்சொல் — sprout word) கண்டு, ஆணி வேர்ச்சொல், பக்கவேர்ச்சொல், சல்லிவேர்ச்சொல் என வகைப்படுத்திய பாவாணரின் கொள்கைப்படி இந்த அகரமுதலி வெளிவருவது சொற்பிறப்பு ஆராய்ச்சியில் ஒரு வழி காட்டியாக அமையும்.

ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலியில் 'glad, glitter, gleam' என்னும் சொற் களுக்கு 'gl' என்பது வேர்ச்சொல்லாகலாம் என உன்னிப்பாக உய்த்துணர்ந்தாலும், இலக்கணவகையில் அதைத் தனித்த வேராகக் காட்ட அம் மொழியில் சான்றில்லை.

ஆனால், தமிழில் 'ஒளிர், ஒளி' போன்ற வினைகளுக்கு 'ஒள்' என்னும் வேர்மூலம் காட்ட முடிகிறது. அதனாற்றான் உலக மொழிகளுள் தமிழில் செவ்விய முழுமையான சொற்பிறப்பியல் அகரமுதலி வெளிவர வாய்ப்புள்ளது.

ஒரு நாட்டின் வரலாற்றைப்போல் சொல்லின் வரலாறும் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். அதுமட்டுமன்றி இஃதோர் **அறிவியற் கலை**யாகவே வளர்ந்துள்ளது.[1]

கால்டுவெலாரின் திரவிட ஒப்பிலக்கண மொழிநூல் திரவிடமொழிகள் சித்திய மொழிகளுடன் உலகளாவிய தொடர்புகொண்டிருப்பதை வெளிப்படுத்தியது. பேராசிரியர்கள் பரோ எமனோவர் வெளியிட்ட திரவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலி (Dravidian Etymological Dictionary), பின்னிசு அறிஞர்கள் சிந்துவெளிமொழி திரவிட மொழி என்பதைக் கண்டறியத் துணைபுரிந்தது. அதுமட்டுமன்றிச் சப்பானியமொழி தமிழோடு நெருங்கிய தொடர்புள்ளது என்று கண்டறியவும் அது பெரிதும் உதவியதாகச் சப்பானிய மொழிநூலறிஞர் ஓனோ தெரிவித்திருக்கிறார்.

சொற்பிறப்பியல் அகரமுதலி என்பது தெளிவாக வேர்மூலம் காணக்கூடிய அடிப்படைச் சொற்கள் அனைத்தையும் தொகுத்துத் தருவது என்று உலகனைத்திலுமுள்ள மொழிகளில் ஒரு மரபாகக் கொள்ளப்பட்டு வருகிறது. ஆங்கில மொழியில் ஐந்து பேர் தனித் தனி தொகுத்த ஐந்து சொற்பிறப்பியல் அகரமுதலிகள் வெளிவந்துள்ளன. ஆங்கில மொழியில் எட்டு இலக்கம் சொற்கள் இருந்தாலும், வேரும் வரலாறும் விளக்கிக்கூறத் தகுந்த 14,286 சொற்களைமட்டும் கொண்ட ஒரே மடலமாக (S.E.D.E.L.) அது வெளிவந்துள்ளது. தமிழில் மட்டும் அவ்வாறு ஒரே மடலமாக வெளியிட்டால் போதுமா? என்னும் வினாக் குறித்துப் பாவாணரை அணுகியபோது அவர் பின்வருமாறு மறுமொழி அளித்தார் :

1) அடிப்படைச் சொற்களுக்குத்தாம் வேரும் வரலாறும் தேவைப்படுகிறது என்பது உண்மையே. ஆயின், மொழிவளர்ச்சியில் ஒன்றுக்கும் மேற்பட்ட கூட்டுச்சொற்கள் மரூஉச்சொல்லாகி ஒரே சொல்லாகக் குறுகுவதும், நாளடைவில் ஒரே வினையடியிலிருந்து பல்வேறுவகைத் தனிச்சொற்களும் கூட்டுச்சொற்களும் உருவாவதும் இயல்பு. தமிழ் மொழியிலுள்ள ஒரு கூட்டுச்சொல் வேற்றுமொழியில் தனிச்சொல்லாகத் திரிபுற்று வழங்குவதுபோன்ற பல்வேறு கூட்டுச்சொல் நிலைகளைத் தனிச்சொற்களைமட்டும் கொண்ட அகரமுதலியில் விளக்கி உரைக்க முடியாது.

2) கொச்சைச் சொற்களும், கொடுந்தமிழ்ச் சொற்களும் உலகவழக்கில் தனிச் சொல்லாகவும் கூட்டுச்சொல்லாகவும் பெருக வழங்குவதால் அவற்றின் செந்தமிழ் வடிவம் காட்டினாலன்றி, அச் சொற்களின் சொற்பிறப்பையும் எந்த மூலச் சொல்லிலிருந்து அது திரிந்துள்ளது என்ற விளக்கத்தையும் கண்டறிய முடியாது. ஆதலின், அனைத்துச் சொற்களையும் சொற்பிறப்பியல் அகரமுதலியில் சேர்க்கவேண்டியிருக்கிறது.

3) ஆங்கிலம் போன்ற மேனாட்டு மொழிகளில் 100-க்கு 90 பங்கு கடன்சொற்கள் உள்ளன. அத்தகு மொழிகளில் சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுப்பது என்பது எளிதான வேலை. ஏனெனில், இந்த ஆங்கிலச்சொல் கிரேக்கச்சொல்லிலிருந்து வந்தது; மற்றொரு ஆங்கிலச்சொல் இலத்தீன்மொழியிலிருந்து வந்தது என்று எளிதாகச் சொன் மூலம் காட்டிவிடலாம். இப்படிச் சொன்மூலம் காட்டுவதையே சொற்பிறப்பியல் அகர முதலி என்று மேனாட்டார் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். இந்த அகரமுதலியில் சொன்மூலம் காட்டுவதோடு சொற்களின் வேர்மூலமும் காட்டுதலால், வேர்ச்சொல்லுக்கும் வேர்ச்சொல் காணவேண்டியிருக்கிறது. ஆதலால், தமிழுக்குச் சொற்பிறப்பியல் உருவாக்கு கின்ற பணி மிகக் கடுமையானது. இத்துணைக் கடும்பணியை மேற்கொண்டபின் அனைத்துச் சொற்களுக்கும் வேர் காணும் முயற்சியில் ஈடுபட்டால்தான் இவ் வாராய்ச்சிப் பணியின் பயன் தமிழ்ச்சொற் களஞ்சியம் முழுவதும் அடக்கியதாக இருக்கும்.

---

[1] The methods now adopted have so entirely changed the aspect of the subject, that what used to be a matter of guess-work or arbitrary suggestion has been largely reduced to law and order. Etymology depends no longer upon barefaced and irresponsible assertion, but has been raised to the dignity of a science.

— Rev. Walter W. Skeat (Sc. Ety., p. 1.)

4) தமிழ் ஞால முதன்மொழி, திரவிடத்திற்குத் தாய், ஆரியத்திற்கு மூலம் என்னும் பாவாணர் கொள்கைப்படி இவ் வகரமுதலி தொகுக்கப்பட்டுள்ளதால் கூட்டுச்சொற்கள், மரபுவினைகள் ஆகிய அனைத்துக்குமே சொற்பிறப்புக் காணுதல் இன்றியமையாதது. சான்றாக, காற்றுக்குத் தடுப்பாக வைக்கப்படும் தடுக்கு, தமிழில் 'வளிமறை' எனப்படுகிறது. இந்தக் கூட்டுச்சொல் தென்னமெரிக்கநாட்டுப் பழங்குடிகளான இன்காக் களின் மொழியில் வளிமறை என்று உள்ளவாறே வழங்குகிறது. எனவே, எந்தக் கூட்டுச் சொல்லையும் விடாமல் சொற்பிறப்பியல் அகரமுதலியில் சேர்த்து வேர்மூலம் காட்டினால் தான் உலகமொழிகளில் தமிழ்ச்சொற்கள் கலந்திருப்பதை எளிதாகக் கண்டறியமுடியும். கூட்டுச்சொல்லாயினும், தனிச்சொல்லாயினும் அவற்றின் செவ்விய வடிவமும் முந்துதமிழ் வடிவமும் காட்டாவிடின், சொல் தோன்றி வளரும் நெறிமுறைகள் புலப்படாமல் போய் விடும் என்பதாலும், உலகமொழிகளுக்கும் தமிழ்மொழிக்கும் உள்ள தொடர்புகளை நிலை நாட்டவேண்டியிருத்தலாலும், பன்மடலங்களைக்கொண்ட பேரகரமுதலியாகத் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியைத் தொகுப்பது இன்றியமையாதது.

சொற்பிறப்பியலில் பாவாணர் கொள்கை

உலக முதன்மொழியிலிருந்து பல்வேறு மொழிக்குடும்பங்கள் கிளைத்து வளர்ந்த வரலாற்றை அறியவும் இந்த அகரமுதலி பெரிதும் உதவுதலான், நாட்டு ஒருமைப்பாடேயன்றி உலக ஒருமைப்பாட்டுக்கும் வித்தூன்றுவதாக அமையும் சிறப்புடையது. உலக மக்களனை வரும் ஒரு கொடிவழியினர் என்னும் மாக்சு முல்லர் கொள்கையை இது நிலைநாட்டும். இத்தகு நோக்குடனும் நெறிமுறைகளுடனும் உலகில் இதுவரை எந்தச் சொற்பிறப்பியல் அகரமுதலியும் தொகுக்கப்பட்டதில்லை. இவ் வுண்மையைக் கீழ்வரும் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்புத் தொடர்பான மேனாட்டறிஞர் கொள்கைகளுக்கும் பாவாணர் கொள்கைகளுக்கும் இடையிலான நோக்கம் மற்றும் செயற்பாட்டுவகை வேறுபாடுகளால் நன்கு நுனித்தறிய வியலும்.

	பாவாணர் கொள்கை	மேனாட்டார் கொள்கை
1.	சொன்மூலம் மட்டுமன்றி வேருக்கு வேர்மூலம் காண்பது.	சொன்மூலம் மட்டும் காண்பது.
2.	பொருட்பாடும் (semantics) சொல்லின் ஏரண முறைப்பட்ட அடிவரவும் நோக்கி முந்துதமிழ (திரவிட) வடிவங்களை மீட்டமைப்பது.	சொல்லின் ஒலியனியலை (phonology) மட்டும் நோக்கி முந்துதிரவிடத்தை மீட்டமைப்பது.
3.	தொல்வரவு நோக்கி எந்தெந்த மொழியிலிருந்து எந்தெந்த மொழி பிறந்தது என்று கணித்து அதற்கான நெறி முறைகளை வரையறுப்பது.	மொழிகளின் பிறப்பையும் நெறிமுறை களையும் கணித்து வரையறுப்பதில்லை.
4.	தமிழ் திரவிடத்திற்குத் தாய், ஆரியத் திற்கு மூலம், ஞாலத் தொன்மொழி என்பது.	அக் கருத்துகள் இல்லை.
5.	பல மொழிகளிலோ பல குடும்ப மொழி களிலோ ஒன்றுபோலவே காணப்படும் சொல்லைக் குறிப்பிட்ட மூல மொழிக் குரிய சொல் என்று வரையறுப்பது. சான்றாக 'அம்மா, அப்பா' என்னும் மூலச்சொல் உலகின் பல மொழிக் குடும்பங்களிலும் உருத்திரிந்தும் திரியாமலும் வழங்கினும் அவை முந்து தமிழிலிருந்தே தோன்றியவை என வரையறுப்பது.	அங்ஙனம் வரையறுப்பதில்லை.

6. மாந்த இனம் ஓரிடத்திலிருந்தே உலக முழுதும் பரவியதால் ஒரே மூல மொழியி லிருந்து உலகமொழிகள் பலவாகப் பிரிந்தன என்பதற்கான உரிய சான்று களைத் திரட்டுதல்.	6. அக் கருத்து இல்லை. அங்கங்கு நிலவும் மொழிகளை உள்ளவாறே பதிவு செய்வது நோக்கம்.
7. சொற்பிறப்பைச் சொற்றிரிபு பொருள் திரிபுகளின் வாயிலாக ஏரண நெறிதழுவி வரலாற்றுவழி நெடுநோக்குடன் தக்க சான்றுகளுடன் கணித்து வரையறுப்பது. சான்று கிட்டாதவற்றுக்கு மரபுநோக்கி வடிவமீட்டமைப்பது. எ-டு : புத்தகம் என்னும் சொல் முந்து தமிழில் பொத்தகம் என்றே வழங்கி யிருக்கவேண்டும் என்று பாவாணர் உன்னித்துக் கணித்தார். கணித்த பிறகு அச் சொல் தெலுங்கு கன்னடமொழியில் பொத்தகம் என்னும் வடிவில் ஏற் கெனவே இருப்பதைக் கண்டு தம் கொள்கை சரியானது என்று பாவாணர் உரங்கொண்டார்.	7. ஒலியன் வடிவை (சொற்றிரிபு) மட்டும் உன்னித்துக் கணிப்பது. எழுத்துச் சான்றுகள், பேச்சுவழக்குச் சான்றுகள் கிடைத்தாலன்றி மரபும் இலக்கணக் கட்டும் நுனித்துக்காட்டி எடுத்துக் காட்டில்லாவற்றுக்கு மரபுநோக்கி வடிவமீட்டமைப்பதில்லை.
8. ஒரு சொல் எம் மொழிக்குரியது என்பதை வேர்மூலச் சொற்பிறப்பு மூலம் எளிதில் தாமே கண்டறிவது.	8. பிற நூல்களில் கூறப்பட்டிருந்தா லொழியத் தாமே வரையறுக்கத் துணி யாமை.

ஒரு சொல் எம் மொழிக்குரியது ?

இருவேறு குடும்பமொழிகளில் ஒரு சொல் ஒலிப்பிலும் பொருளிலும் ஒத்து வழங்கு மாயின், அது இன்ன குடும்பத்தைச் சார்ந்தது என்று வரையறுத்தற்கான வழிமுறைகள் விரிவானவை எனினும் விரிவஞ்சிச் சில சான்றாகக் கீழே காட்டப்படுகின்றன :

1. அச் சொல்லின் வேர்மூலமும் அதனடியாகப் பிறந்த பல்வகைப் பெயர் வினை வடிவுகளும் வினைத்திரிபுகளும் ஏதேனும் ஒரு மொழியில்தான் விரிவாக வழங்கி யிருக்கமுடியும். அதுவே அச் சொல்லுக்கு மூலமொழி. அச் சொல்லைக் கடன் கொண்ட மொழியில் அச் சொல்லின் அனைத்து வடிவங்களுக்கான ஆட்சியிருக்க வியலாது.

2. ஒரு சொல் எந்த மூலமொழிக்குரியதோ அம் மொழிக் குடும்பமொழிகள் பெரும் பாலானவற்றில் அச் சொல் இனச்சொல்லாக ஆட்சி பெற்றிருக்கும். கடன் கொண்ட மொழியின் இனமொழிக ளனைத்திலும் அதன் இனச்சொற்கள் இரா.

3. ஒரு சொல்லின் சரியான ஒலிப்பு வடிவம் அதன் மூலமொழியில் செம்மையாகவும் அக் குடும்பமொழிகளில் ஓரளவுக்குச் செம்மையாகவும் இருக்கும்; கடன் கொண்ட மொழியில் அதன் ஒலிப்பு வடிவம் உருமாறும் வாய்ப்பு மிகுந்திருக்கும். உருமாறும் ஒலிப்புமுறை, கடன்கொண்ட மொழிக்கே உரிய பலுக்குமுறையைத் தன்வண்ண மாக்கிக்கொள்ளும்.

4. ஒரு மொழியின் நெடுங்கணக்கில் என்றுமில்லாத எழுத்தொலிப்புள்ள சொல் கடன்சொல்லாகக் கருதப்படும்.

5. ஒரு நாட்டில் இல்லாத இயற்கைப் பொருள்களின் பெயர்கள் வேற்றுமொழியில் பெறும் ஒலிப்பு வடிவில் அவை கடன்சொற்கள் என்பதைச் சொல்லால் காட்டத் தவறினும் பொருளால் காட்டிவிடும்.

6. ஒரு சொல் வேர்மூலச் சொற்பிறப்பாலும் வடிவமீட்டமைப்புச் சொற்பிறப்பாலும் மூலங்கண்டறியப்படாததாயின் அது கடன்சொல்லே.

7. ஓரினத்தாரின் வழிவழி வந்த வரலாற்றுப் பண்பாட்டு மரபுகளுக்கொவ்வாத பொருளுடையதாயின் அச் சொல் கடன்சொல்லே.

8. கூட்டுச்சொற்களில் துணைவினையாக வருபவை தாய்மொழிச் சொல்லே யாதலின் செய்தற்பொருளுடைய துணைவினை மிகுதியாகப் பயின்று வரும் பல்வேறு முதற்சொற்கள் அம் மொழிக்கு அயற்சொற்களாக இருக்கும் வாய்ப்புள்ளது. கூட்டுச்சொல்லில் முதற்சொல் பொருள் விளங்கா அயன் மொழிச் சொல்லாய் வரும்போது வினைப்படுத்தற்காகச் 'செய்'யென்னேவல் துணைவினை சேரும். ஆதலின், அத்தகு கூட்டுச்சொல்லின் முதற்சொல் கடன் சொல்லே.

9. எம் மொழியிலும் வினைச்சொற்கள் பெரும்பாலும் கடன் கொள்ளப்படுவ தில்லை. இரு வேற்றுக் குடும்பமொழிகள் பெயர்ச்சொற்கள் ஒத்திருந்து ஏதேனும் ஒரு மொழியில் அதன் தனிச்சொல் வினைவடிவம் காணப்படுமாயின், வினைவடிவம் காணப்படும் மொழிக்கே அச் சொல் உரியது.

10. இருவேறு குடும்பமொழிகளில் வினைச்சொல் ஒத்திருப்பின், அவ் வினைச் சொல்லின் வேர்வழி வளர்ந்த சொல்லாட்சிகள் ஏரணமுறை தழுவிய சொற் பிறப்புக்கு எம் மொழியில் இடந்தருகிறதோ அம் மொழிக்கே அச் சொல் உரியது.

ஒரு மொழி எக் குடும்பத்தைச் சார்ந்தது?

ஒரு மொழி எக் குடும்பத்தைச் சார்ந்தது என்பதைக் கண்டறியப் பின்பற்றப்படும் நெறிமுறைகளுள் சில இவண் சான்றாகக் காட்டப்படுகின்றன.

1. ஒரு மூலத் தாய்மொழியிலிருந்து பல மொழிகள் கிளைத்துப் பிரியும்போது அங்ஙனம் பிரிந்துசெல்லும் மொழியில் காலப்போக்கில் உரு மாறியும் உரு மாறாமலும் உடன்செல்லும் சொற்கள் **உடன்கொண்ட சொல்வளம்** எனப்படும். பிரிந்துசென்று தனி நிலை பெற்ற பின்னர்ப் பிறமொழித் தாக்கத்தால் கொள்கொடை ஊடாட்டம் பெற்ற சொற்கள் **கடன்கொண்ட சொல்வளம்** எனப்படும். நெட்டிடையிட்ட ஆயிரமாண்டு களாகப் பிறமொழித் தாக்கமின்றி உடன்கொண்ட சொல்வளமே 80%-க்கும்மேல் காக்கப் பட்டு வரும் மொழிகள் உலக முதல் தாய்மொழியுடன் ஒப்புநோக்கும் தகுதியுடையன; சொற்பிறப்பு நெறிமுறை காணவும் பெரிதும் துணைபுரிவன.

2. உடன்கொண்ட சொல்வளம் 50%-க்குக் குறைவாகவோ, கடன்கொண்ட சொல் வளம் 50%-க்கு அதிகமாகவோ உள்ள மொழிகள் அவ்வாறு திரிந்த அண்டை மொழிகளுடன் கூடி வேற்றுக் குடும்பமொழி யாகிவிடும். உலக மொழிக்குடும்பங்கள் அனைத்திலும் அவற்றின் அடிப்படைச் சொற்களுள் உடன்கொண்ட சொல்வளம் வேர்ச் சொல் அளவிலாவது நிலைபேறு பெற்றிருப்பது உறுதி. எனவே, வேர்ச்சொல்லை அடிப்படையாகக்கொண்ட சொற்பிறப்பியல் ஆய்வு, உலக முதன்மொழிக்கும் இன்றைய உலகமொழிகளுக்கும் உடன்கொண்ட சொல்வளத்தா லான உறவுமுறைகளை உறுதிப் படுத்தவல்லதாதலின், உடன்கொண்ட சொல்வளத்திற்குரிய அடிப்படைச்சொற்களை அனைத்துலக மொழிகளிலிருந்தும் பிரித்தெடுத்து வகைப்படுத்தியபிறகு கடன்கொண்ட சொற்களை மட்டும் கணித்தால் எந்தெந்த நூற்றாண்டுகளில் எந்தெந்தச் சொல் எவ்வெம் மொழிக்குச் சென்றது என்பதை நுனித்தறிந்து நுட்பமாக வரையறுக்கலாம்.

3. காலந்தோறும் நிகழ்ந்த மக்களின் இடப்பெயர்ச்சிகள் மொழித்திரிபுக்கும் மொழிக்கலப்புக்கும் வழிவகுத்துள்ளன. கலப்பில் உருவாகித் தனிநிலை பெற்ற ஒரு மொழி காலச்சக்கரத்தின் ஓட்டத்தால் பழையமொழி யாகிவிடலாம். அதனால், அம் முதுமொழி புதுமொழிகளுக்குத் தாயாகிவிடாது. கலப்புமொழி காலத்தால் பழையதாயினும் செவிலித்

தாயாகும் வளர்ப்பு மொழியே யன்றி, உடன்கொண்ட மூலச் சொல்வளம் ஈனும் நற்றாய் மொழி யாகாது.

பாவாணரின் வேர்ச்சொல்லாராய்ச்சி, குறிப்பாகத் தமிழைக் குறிக்கொண்டதாயினும் சிறப்பாக உலகமொழிகளிலுள்ள உடன்கொண்ட சொல்வளத்தைப் பிரித்தறியவும் நெறி கண்டது.

4. இற்றைநிலையில் நாளுக்குநாள் திரிபுற்றுச்செல்லும் குக்குல மொழிகள் எம்மொழியினுள்ளும் அடக்கவியலாதபடி மட்டற்றவகைகளில் கட்டற்றுக் கிளைக்கின்றன. பன்மொழி மோதலில் துண்டாடிச் சிதறிய சில்லறை மொழிகளை ஓரினப்படுத்துவது உடைந்த சட்டியை ஒட்டிப்பார்க்கும் முயற்சிபோன்றது எனச் சிலர் கருதினும், சொற் பிறப்பியலில் வடிவமீட்டமைப்பு வரலாற்று மீட்டமைப்புக்கே வழிவகுத்தலின் அம் முயற்சி வீணானதன்று என்பார் பாவாணர். கலப்பினத்தைச் சார்ந்த ஒரு மொழி ஒரு குடும்பத்தைச் சார்ந்திருக்கவேண்டும் என எதிர்பார்க்கவியலாது; பல குடும்பங்களையும் சார்ந்திருக்கலாம்.

5. ஆதலால் ஒரு மொழியில் எத்துணை மொழிகளின் தாக்கம் எந்தெந்த அளவீட்டு விழுக்காட்டில் (%) உள்ளது எனத் தெரிந்து வகைப்படுத்திய பின், அதிக விழுக்காட்டு ஒப்புமைக்குரிய முன்மொழியைச் சார்ந்த மொழியாகவே அதனைக் கணிக்கவேண்டும் எனப் பலரும் கருதுவர். அக் கருதுகோள் இடம்பெயராத மக்களின் மொழிக்கு ஒக்கும். இடம் பெயர்ந்த சிறுபான்மை மக்களின் முன்மொழி அல்லது தாய்மொழி குடியேறிய சூழலில் ஒரு விழுக்காடுகூட எச்சமின்றி மறைந்துவிடக்கூடும். அந் நிலையில் அம் மக்கள் இனத்தால் வேற்றவராகவும் மொழியால் குடியேறிய நிலத்துக்கும் மொழிக்கும் உரியவராகவும் மாறி விடுவர். அவர்கள் அங்குள்ள மக்களொடு நெருங்கி ஊடாடாத வகையில் பிரித்து வைக்கப் படின் அங்குள்ள மொழியில் ஒரு கிளைமொழியை உருவாக்கிவிடுவர். ஆகவே, அடிப்படைப் பெயர்ச்சொல் வினைச்சொல் லாட்சிகள் இனச்சொற்கள் ஒன்றுபடும் மொழிக்குடும்பத் தொடு அவ் வியல்புள்ள மொழி சேரும். ஆயின், அம் மொழியினர் அனைவரும் அக் குடும்பத்தைச் சார்ந்த மரபினர் என்று வரையறுக்க வியலாது.

6. ஒரு மொழியின் கண்டறியத்தக்க தொடக்க காலத்திலேயே அதற்குக் கிளை மொழி வழக்குகள் இல்லையாயின் அது ஒரு கலப்புமொழி அன்று; கலப்பில் பிறந்த புது மொழி என அறியலாம்.

7. கலப்பில் பிறந்த புதுமொழியாளரின் சொற்பலுக்கம் எம்மொழிக்குரியதோ அம் மக்கள் அம் மொழியினத்தராவர். அவர் பேசும் பெரும்பான்மைச் சொற்கள் எம்மொழிக் குரியனவோ அம் மொழிக்குரியவராக அவர்களைக் கருத வியலாது.

8. ஒரு மொழியின் வேற்றுமை உருபுகள், எதிர்மறை இடைநிலைகள், மூவிடப் பெயர்கள், எண்ணுப்பெயர்கள், கால இடைநிலைகள், முன்னொட்டுகள், வியப்பிடைச் சொற்கள், அடிப்படை வினைச்சொற்கள் ஆகியவை எம் மொழியொடு மிகுதொடர்பு உள்ளனவோ அம் மொழிக்கே அவை இனமானவையாகக் கருதப்படும்.

9. உடன்கொண்ட சொல்வளம் இல்லாத மொழி உலகில் ஒன்றுகூட இருத்த லியலாது. பெயர், வினை, இடை ஆகிய முச்சொல் வகைகளும் அவற்றின் வேர்நிலைகளும் உடன்கொண்ட சொல்வளம் ஒரு மொழியில் ஊடாடியிருப்பதைக் காட்டும். ஊடாடிய அடிப்படைச் சொற்களின் காலக் கணிப்பிற்கேற்ப அவ்வம் மொழி அதற்கு முந்தைய மொழியிலிருந்து அல்லது மூலத் தாய்மொழியிலிருந்து பிரிந்த காலத்தைக் கணிக்கலாம்.

10. சொற்கள் மட்டுமன்றி, தொகை தொடரமைப்புகள், பேச்சுவழக்கிலுள்ள விட்டிசை ஒலிப்பழுத்தங்கள் (pause and intonations), தொல்பழங்கால நாகரிகப் பண் பாட்டுப் படிநிலைகளைக் காட்டும் தொடராட்சிகள் ஆகியவை ஒரு மொழி எம்மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என்று காட்டிவிடும்.

சொற்பிறப்பியல் அகரமுதலி மேற்கண்ட ஆய்வுகளுக்கு ஊற்றிடமாகவும், புதிய கண்டுபிடிப்புகளின் நிலைக்களமாகவும், வளரும் அறிவுக்குக் கொள்கலமாகவும் விளங்கும்.

லைப்புச்சொற்களின் சரியான பலுக்கம் ஆங்கிலத்தில் தர
ப் பெயர்ப்பன்று; ஒலிபெயர்ப்பு. தமிழ்ச்சொற்களின் வேரும் வ
பிறப்புப் பகுதி முழுவதும் தமிழிலேயே எழுதப்படுவதால், த
ாழியாளர்க்கும் உதவும்வகையில் கூட்டுச்சொல்லின் செ
ச் சொல்லிலும் காட்டப்படுகிறது.

னைச்சொற்களின் முக்காலப் புடைபெயர்ச்சி ஒலிபெயர்ப்பினுடை
ர்க்குறுக்கத்தின் முன் எண்ணிட்டுக் காட்டப்பட்டுள்ளது. அே
ச்சொல்லின் புடைபெயர்ச்சி வாய்பாட்டுப் பட்டியலில் எ
று காட்டப்பட்டுள்ளது. புதிதாகத் தமிழ் கற்றுக்கொள்பவர்க
யன்படுத்தி எந்தெந்தச் சொல் முக்காலங்களில் எவ்வாறு
ிந்துகொள்ளலாம்.

றுவ. என்னும் பெயர்க்குறுக்கத்தின்கீழ்த் தரப்பட்டுள்ளவை
றுபட்டு வரும் மறுவடிவங்கள் என்பதைக் குறிக்கும்.

றிப்பிட்ட சொல் அகரமுதலியில் இல்லையெனில் அது விடுபட்ட
டலத்தில் குறிக்கப்படும். வேரும் வரலாறும் வரையாமல் விடுப
யர்ச்சொற்களை நிறுவுவதற்கு மேலும் சில சான்றுகளை எதிர்ே
ள்ளன. செடி கொடி முதலிய நிலைத்திணைப் பெயர்கள், சி
கள் ஆகியவற்றுக்கு இவ்வாறு வேர்மூலம் காட்டாமல் பாவாண
அடவியில்திருடி என்னுஞ் சொல் கள்ளிச்செடியைக் குறிக்கு
மருத்துவர்களை அணுகித்தான் தெரிந்துகொள்ள முடிகிறது. 'க
ன்' என்பதன் பெண்பாலாக இருந்தும் இது காட்டில் இருக்கும்
ருடி' எனக் குழூஉக்குறி யானதை உய்த்துணர்ந்து சொல்லவல்லை
பிலேயே இவற்றிற்கு வேரும் வரலாறும் வரைய இயலாது. ப
ற்கண்டு உரையாடி அரிய செய்திகளைத் தொகுக்கவேண்டியிருத்
விட்டுவைப்பது தவறன்று என்று பாவாணர் கூறியிருக்கி
ாட்டப்படாத சொற்களுக்கு அவற்றின் வேர்மூலமும், பிற
பாருள்களும், மேற்கோள்களும், இனச்சொற்களும் 9ஆம்
.

ளின் பலுக்கம்

டுப்பு ஒலிகள் (Voiced stops) : குறில் அல்லது நெடிலைச்
உயிர்மெய்யெழுத்தும் மூன்றாம் உயிர்மெய்யெழுத்தும் எ
ம்.

ா-டு) நாடு *nāḍu*
பടகு *paḍagu*

ரெழுத்துச் சொற்களில் இரண்டாவது எழுத்தாக வரும் க, ட,
துகளும் எடுப்பொலிகளாகும். எல்லாத் தமிழ்ச்சொற்களிலும்
(voiceless) ஒலிக்கும்.

எ-டு) கட, புகை, பாதி, தபு.

ல் இனமெல்லொற்றுகள் வரின் அடுத்துவரும் வல்லெழுத்து
டயின ஒற்றடுத்துவரும் வல்லெழுத்துகளும் எடுப்பொலியாகும்.

எ-டு) பங்கு, நல்கு, அடர்பு.

ட்டுச்சொற்களில் விட்டிசை இருப்பின் அவை தனித்தனி ப
ும். விட்டிசைத்தலைப் பக்கிசைத்தல் என்பார் சேனாவரையர்

எ-டு) சுடுசொல், அடுகளிறு, இடுகடை, மரங்கொல்தச்சர்.

சால்லின் இலக்கணவகைப் புடைபெயர்ச்சி: வினைச்சொற்
பயரும்போது அவ் வினைச்சொல் குறிலடுத்த ணகர ளகர மெ
ற்று இரட்டித்தே புடைபெயரும்.

எ-டு) எண் — எண்ணு, எண்ணினான், எண்ணுகின்றான், எ
எள் — எள்ளு, எள்ளினான், எள்ளுகின்றான், எள்ளுவா

ரட்டித்து உகர ஈறு பெறுதலைக் காட்டுவதற்காகத் தலை
று மெய் இரட்டித்து உகரம் சேர்ந்த (உயிர்மெய்) மிகை ஈறுபெ
டித்துவந்த உகரம் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து, பிறைக்கு
. ஏவல்வினையில் எண், எண்ணு என்னும் இருவகை வடிவ
காட்டும்.

(10) **வேரும் வரலாறும்:** இந்த அகரமுதலியில் தமிழ்ச்சொற்கள் என்று கொள்ளப் பட்டவை தனித்தமிழ்ச் சொற்கள்.

முதற்சொல் தமிழ்ச்சொல்லாகவும் இரண்டாஞ் சொல் வேற்றுமொழிச் சொல் லாகவும் அமைந்த கூட்டுச்சொல்லும் வழக்குநோக்கிச் சேர்க்கப்பட்டுள்ளது என்பது முன்னரே விளக்கப்பட்டது. இவையும் முழுமையான தமிழாக்கம் பெற்றுப் படைப்புச் சொற்களாகச் சேர்க்கப்படுகின்றன. தமிழ்ச்சொற்களுக்கு வேரும் வரலாறும் சிறிய வட்டெழுத்தில் (Tamil script type) தரப்பட்டுள்ளன.

(எ-டு) *[அவிர் → அவுரி. அவிர்தல் = நிறத்தால் விளங்குதல்.]*

வேர்ச்சொல்லின் திரிவு அல்லது வளர்ச்சி அம்புக் குறியிட்டுக் காட்டப்படும். சொல்லின் பொருளுக்குச் சமக்குறியிட்டுக் காட்டப்படும். வேற்றினமொழிச் சொற்களைக் குறிக்க ஆங்கில எழுத்துகள் ஆளப்படும்.

தமிழ்ச்சொற்கள் திரிந்து பிறமொழிக்குச் சென்றதாயின் > இடமுறைத் திரிவுக் கோடும், வேற்றின மொழிகளிலிருந்து சொற்கள் தமிழில் கலந்ததாயின் < வலமுறைத் திரிவுக்கோடும் ஆளப்படும்.

(11) பொருள் எண்: ஒரு தலைப்புச்சொல்லிற்குப் பல பொருள் எண்ணிட்டுக் காட்டப்பட்டிருக்கும். அத் தலைப்புச்சொல் குறிப்பிட்ட பொருளில் எவ்வாறு ஆளப்படு கிறது என்பதைக் காட்ட வேரும் வரலாறும் பகுதியில் அத் தலைப்புச்சொல்லின் பக்கத்தில் பொருள் எண்ணும் தரப்பட்டுள்ளது. சான்றாக, **நகர்** என்னும் சொல்லுக்கு வெண்மை என்பது மூன்றாவது பொருளாக இருப்பின், **நகர்** *3* என்னும் பொருள் எண்ணில் அப் பொருளில் அச் சொல்லாட்சிக்குரிய வேர்ச்சொல் வளர்ச்சி காட்டப்பட்டிருக்கும்.

(12) இனச்சொற்கள்: தலைப்புச்சொற்களுக்கும் சார்புசொற்களுக்கும் இன மொழிகளிலிருந்தும் ஏனை உலகமொழிகளிலிருந்தும் இனச்சொற்களும் இணைச்சொற் களும் காட்டப்படும். திருந்திய திரவிட மொழிகளிலிருந்தும் திருந்தாத் திரவிடமொழிகளி லிருந்தும் பொருத்தமான இனச்சொற்கள் காட்டப்படும். அவற்றின் திருத்தமான ஒலிப்பைச் சரியாகக் காட்டுவதற்காக ஆங்கில எழுத்துகளைப் பயன்படுத்தாமல் தமிழ் எழுத்துகளிலேயே தக்க மாற்றம் செய்து, திரவிட மொழிகளுக்கு ஒலிப்புக் குறியீட்டு எழுத்துகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் எழுத்துகளிலேயே உலகமொழிச் சொற் களில் ஒலிப்புகளை வடித்துக்காட்ட இம் முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ka க	kha க̤	ga க	gha க	ஸ ஜ
ca ச	cha ச̤	ja ச	jha ச	ஷ ழ
ṭa ட	ṭha ட̤	ḍa ட	ḍha ட	ஹ க̤
ta த	tha த̤	da த	dha த	f வ
pa ப	pha ப̤	ba ப	bha ப	z ழ

(எ-டு) தெ. இச்சுட (iccuṭa) = தருதல், ஈதல்.

க. ஹாலு (hālu) = பால்

வடமொழி தவிர்ந்த வடஇந்திய மொழிகள் பல இந்தைரோப்பிய மொழியினத்தைச் சார்ந்தவையாகக் கருதப்படினும் அவற்றிலிருந்து காட்டப்படும் இனச் சொற்கள் ஐயமறத் தமிழ் வேரிலிருந்தே பிறந்தன என்பது தெளிவாக இருக்கும் இடங்களில் வடஇந்திய மொழிச்சொற்க்ள் ஆங்கில எழுத்துகளில் ஒலிபெயர்க்கப்படாமல் தமிழ் எழுத்துகளிலேயே ஒலிபெயர்க்கப்பட்டிருக்கும். தரப்படும் பொருள்விளக்கத்திற் கேற்பத் திரவிடமல்லாத ஏனை உலகமொழிச் சொற்களின் பலுக்கமும் ஏனை மொழிகளின் பெயர்க் குறுக்கங்களும் கூடத் தமிழிலேயே தரப்பட்டுள்ளன.

(13) நிறுத்த எண்: வேரும் வரலாறும் பகுதி பகர அடைப்புக்குறியிட்டுக் காட்டப் படும். சொல்லுக்குப் பொருள் தரும்போது முதலில் தமிழ்ப்பொருளும் இரண்டாவதாக ஆங்கிலப் பொருளும் தரப்படும். தலைப்புச்சொல் வேர்ப்பொருள் அல்லது ஏரணமுறைப்படி இயைந்த பொருள்களைக் குறிக்கும்போது ஒரே தலைப்பாகவும், தொடர்பற்ற வெவ்வேறு பொருள்களைக் குறிக்குங்கால் வெவ்வேறு தனித் தலைப்புச்சொற்களாகவும் காட்டப்படும். அப்பொழுது அச் சொற்களின் கோடியில் மேற்பாதியில் ^{1}, ^{2}, ^{3} என்று நிறுத்த எண்ணிட்டுக் காட்டப்படும். சான்றாக, **அஞ்சல்** என்னும் தலைப்புச்சொல் மூவேறுபட்ட பொருள்களைக் குறிக்குங்கால் **அஞ்சல்^{1}**, **அஞ்சல்^{2}**, **அஞ்சல்^{3}** என்று மூன்று தலைப்புச்சொற்களாகக் காட்டப் படும்.

ஆங்கில ஒலிபெயர்ப்பில் தொழிற்பெயர் ஈற்றின் பலுக்கம் தராமல் ஏவல்வினை வடிவின் பலுக்கமே தரப்படும். சான்றாக, **அடி-த்தல்**; *adi-*. என்று காட்டப்படும். வினைச் சொற்கள் செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை என்று காட்டப்படுவதுடன் அவற்றின் வினை புடைபெயர்ச்சி வகைகள் வரிசை எண்ணிட்டுக் காட்டப்படும். சான்றாக, 4 செ.கு.வி. (v.i), 7 செ.குன்றாவி. (v.t.) என்று காட்டப்படும். சில கூட்டுவினைச் சொற்றொடர்களும், மரபுவினைச் சொற்றொடர்களும் அவற்றின் ஈற்றுச்சொல் குன்றாவினையாக இருந்தாலும் கூட்டுச் செயப்படுபொருளில் செயப்படு பொருள் குன்றியவினையாகக் கருதப்படுவதுண்டு. அத்தகைய இடங்களில் அதனை (4) செ.குன்றாவி. என வரிசை எண்ணுக்குப் பிறைக்கோடிட்டால் அவ் வினைவகைமையின் எதிரான செ.கு.வி. வகைமையில் அதே வரிசை எண்ணுக்குரிய புடைபெயர்ச்சியை ஏற்கும்.

(14) தமிழில் புதுக்கப்படும் படைப்புச்சொற்களுக்கு † இக் குறியிட்டுக் காட்டுவ தோடு படைத்தவர் பெயரும் குறிப்பிடப்படும்.

(எ-டு) † **அகரமுதலி** — படைத். பாவாணர்.

(15) உலகமொழிகளும் அவற்றின் உட்கிளைமொழிகளும் மூவாயிரத்துக்குமே லுள்ளன எனக் கூறப்படினும் தனிநிலை மொழிகளாக அறியப்பட்டவை சற்றொப்ப 600 மொழிகளே. உலக மொழிக்குடும்பங்கள் ஒன்பதாகவும் எக் குடும்பத்திலும் சேராத தனிநிலை மொழிகள் பத்தாம் பிரிவாகவும் வகுக்கப்பட்டுள்ளன. திரவிட மொழிக்குடும்பம் முதலாவதாகவும் அதனொடு நேரே அடுத்தடுத்த உறவுமுறை கருதி ஏனைக் குடும்பமொழி களும் எண்ணுமுறை பெற்றுள்ளன. சற்றொப்ப 600 உலக மொழிகளின் பெயர்கள் குறுக்க விளக்கத்தில் தலைப்புக் கோடியில் நிறுத்த எண்ணுடன் குறிக்கப்பட்டுள்ளன. **ஒலாப்பு^{5}** என்பது ஐந்தாம் மொழிக் குடும்பமாகிய ஆப்பிரிக்க மொழிக்குடும்பத்தைச் சார்ந்த மொழி களில் ஒலாப்பு (Wolof) மொழியும் ஒன்று என்னும் குறிப்பினது. எக் குடும்பத்தைச் சார்ந்தது என்று கண்டறியப்படாத தனிநிலை மொழிகளுள் திரவிடக் குடும்பத்தைச் சார்ந்ததாக அறியப்படுமாயின் அம் மொழியின் தலைப்புக் கோடியில் நிறுத்த எண்ணின்மேல் திரவிட மொழிக்குரிய எண் ஒன்று $(10)^{1}$ எனக் குறிக்கப்படும். இத்தகைய குறியீடு ஏனைக் குடும்ப மொழிகளுக்கும் ஒக்கும்.

(16) வடிவமீட்டமைத்த முந்துதமிழச் (முந்துதிரவிடம் — proto Dravidian) சொற் களுக்கு உடுக் குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

(எ-டு) ***அரசியம்**

உலக மொழிக்குடும்பங்கள்

1. திரவிடக் குடும்பம்

தென்னிந்தியாவில் முழுமையாகவும், வடஇந்தியா, பாகித்தானம், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் ஆங்காங்கும் வழங்கப்படுகிறது.

பேசுவோர் தொகை : சற்றொப்ப 15 கோடி.

2. இந்தைரோப்பிய மொழிக்குடும்பம்

ஐரோப்பா, தென்மேற்கு ஆசியா, ஐரோப்பிய குடியேற்றங்களுக்குள்ளான ஆத்திரேலியா, நியூசிலாந்து, தாசுமேனியா, தென்னாப்பிரிக்கா, இந்தியா, தென்கிழக்கு ஆசியா, பசுபிக்குத் தீவுகள் ஆகிய இடங்களில் வழக்கூன்றியதும் உலக மொத்த மக்கள் தொகையில் சற்றொப்பச் சரிபாதி மக்கள்தொகையினரால் பேசப்படுவதும் ஆகிய பெரு மொழிக் குடும்பம்.

பேசுவோர் தொகை : 187.5 கோடி

3. சப்பானிய-கொரியன் குடும்பம்

சப்பான் நாட்டில் சப்பானிய மொழி வழங்கிவருகிறது. கொரியாவிலும், சீனம், சப்பான், உருசியாவின் சில பகுதிகளிலும் கொரிய மொழி வழங்கிவருகிறது. இம் மொழிகள் திரவிடச் சார்புடையவை என்பதற்கான ஆய்வுப்பணி அரும்பியுள்ளது.

பேசுவோர் தொகை : 1. சப்பானியம் — 10 கோடி.

2. கொரியன் — வடகொரியாவிலும் தென்கொரியாவிலும் 5 கோடி.

4. மலேயப் பாலினேசியன் அல்லது ஆத்திரேலிய ஆசியக் குடும்பம்

மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள், பிலிப்பைன்சு, மடகாசுகர், நியூசிலாந்து, சமோவா, அவாய், தாகித்தி தீவுகள், பசுபிக் தீவுகள் ஆகிய இடங்களில் வழங்கும் மொழிகள் இக் குடும்பத்தைச் சார்ந்தவை.

பேசுவோர் தொகை : 17.5 கோடி.

5. ஆப்பிரிக்க நீக்கிரோக் குடும்பம்

சகாராவின் தெற்கிலும் எதியோப்பியாவின் மேற்கிலும் உள்ள பகுதிகள், ஆப்பிரிக்கா ஆகிய இடங்களில் இக் குடும்பமொழிகள் வழங்கிவருகின்றன.

பேசுவோர் தொகை : 21.1 கோடி.

6. ஊரல் அல்தாயிக் குடும்பம்

பின்லாந்து, கரேலியா, எசுதோனியா, வடக்கு நார்வே, சுவீடன், அங்கேரி, கிழக்கு ஐரோப்பா, உருசியா, துருக்கி, சோவியத்து ஆசியா, மங்கோலியா, சீன துருக்கித்தானம், மஞ்சுகுவோ ஆகிய இடங்களில் இக் குடும்பமொழிகள் வழங்கிவருகின்றன.

பேசுவோர் தொகை : 10 கோடி.

7. அமெரிக்க இந்தியக் குடும்பம்

அமெரிக்கப் பழங்குடியினரின் மொழிகள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவை. அமெரிக்க ஒன்றிய நாடுகளிலும் கனடாவிலும் நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளும், மெக்சிகோ

நடுவண் அமெரிக்காவில் முந்நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளும், தென்அமெரிக்காவில் சற்றொப்ப ஆயிரம் மொழிகளும் பேசப்படுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவை சில ஆயிரம் பேரால் மட்டும் பேசப்படுபவை.

வட அமெரிக்காவில் உள்ள எசுகிமோக்கள், அலங்கோன்குவியன்கள், இரோக்குவாய்கள், உத்தே அச்தெக்குகள், நடுவண் அமெரிக்காவில் உள்ள மாயர்கள், மிச்தெக்குகள், சப்போதெக்குகள், தென்அமெரிக்காவிலுள்ள அரவர்க்குகள், அரவ்கானியன்கள், காரிபுகள், சிப்சாக்கள், குவெச்சுவாக்கள், துப்பிகுவாரானிகள் ஆகியோரின் மொழிகள் குறிப்பிடத்தக்கன.

பேசுவோர் தொகை : 2 கோடி.

8. ஆப்பிரிக்க ஆசியன் அல்லது செமித்திய எமித்திக் குடும்பம்

அரேபியா, ஈராக்கு, பாலத்தீனம், சிரியா ஆகிய நாடுகளிலும், வடக்கு ஆப்பிரிக்காவிலுள்ள எகிப்து, லிபியா, அல்சீரியா, தூனிசியா, மொராக்கோ, எத்தியோப்பியா, எரித்திரியா, சோமாலிலாந்து, சான்சிபார், மடகாசுகர் ஆகிய பகுதிகளிலும் இக் குடும்ப மொழிகள் வழங்கிவருகின்றன.

பேசுவோர் தொகை : 17.5 கோடி.

9. சீனத் திபெத்தியக் குடும்பம்

சீனா, பர்மா, இந்தியா, நேப்பாளம் ஆகிய இடங்களில் இம் மொழி வழங்கிவருகிறது. உலக மொழிகளில் ஒரே இனத்தாரால் பெருவாரியாகப் பேசப்படும் மொழி இஃதொன்றே.

பேசுவோர் தொகை : 90 கோடி.

10. தனிநிலை மொழிகள்

வெள்ளையினத்தார்க்குரியதென்று கருதப்படும் வடக்குச் சப்பானில் பேசப்படும் ஐனு மொழி, வடகிழக்குச் சைபீரியாவில் பேசப்படும் ஐப்பர்போரியன்மொழி, உருசியநாட்டுக் காக்கேசியமொழிகள், தென்கிழக்கு ஆசியாவில் வழங்கும் மாண்குமேர், அன்னாமி, முண்டா மொழிகள், ஆத்திரேலியா மற்றும் நியூகினியாவில் வழங்கும் பழங்குடி மொழிகள், இசுபெயின் நாட்டின் வடகிழக்கிலும் பிரஞ்சு நாட்டின் தென்மேற்கிலும் வழங்கும் பாசுக்கு மொழி ஆகியவை தனிநிலை மொழிகளாகக் கருதப்பட்டன. இவற்றுள் பாசுக்கும் ஆத்திரேலியப் பழங்குடி மொழிகளும் திரவிடச் சார்பினவாக அறியப்பட்டுள்ளன.

திரவிட மொழிகள்

வரிசை எண் (1)	மொழி (2)		பேசப்படும் மாநிலம் (3)	பேசுவோர் எண்ணிக்கை 1961-ல் (4)	பேசுவோர் எண்ணிக்கை 1971-ல் (5)
			தென்திரவிடம் (South Dravidian Group)		
1.	தமிழ்	Tamil	தமிழ்நாடு, கருநாடகம், கேரளம்	30,465,442	37,690,106
2.	மலையாளம்	Malayalam	கேரளம், தமிழ்நாடு, கருநாடகம்	16,994,919	21,938,760
3.	கன்னடம்	Kannada	கருநாடகம், தமிழ்நாடு, மராட்டியம்	17,305,629	21,710,649
4.	தெலுங்கு	Telugu	ஆந்திரம், தமிழ்நாடு, கருநாடகம்	37,642,439	44,756,923
5.	இருளம்	Irula/Irulinga	தமிழ்நாடு	4,124	5,300
6.	எருகலர்	Yerukala / Yerkula	ஆந்திரம்	73,975	67,552
7.	எரவம்	Yerava	கருநாடகம்	14,927	10,867
8.	குடகு	Coorgi / Kudagu	கருநாடகம்	79,172	72,085
9.	குரும்பர்	Kurumba / Kurumbar	கருநாடகம், தமிழ்நாடு, மராட்டியம்	8,798	7,903
10.	குறவர்	Korava	கருநாடகம், ஆந்திரம்	5,792	...
11.	கைக்கடி	Kaikadi	மராட்டியம்	8,456	11,846
12.	கொரகர்	Koraga	கருநாடகம்	192	...
$ 13.	கொரச்சர்	Koracha	கருநாடகம்	3,467	...
14.	கோதம்	Kota	தமிழ்நாடு	862	...
$ 15.	சதப்பு	Jatapu	ஆந்திரம்	19,467	...
16.	துடவம்	Toda	தமிழ்நாடு	765	...
17.	துளுவம்	Tulu	கருநாடகம், கேரளம்	934,849	1,158,419
18.	படகம்	Badaga	தமிழ்நாடு	85,463	104,919
★19.	பெலாரி	Belari	...	...	...
$ 20.	வடாரி	Vadari	மராட்டியம், கருநாடகம், ஆந்திரம்	20,654	35,900

வரிசை எண் (1)	மொழி (2)		பேசப்படும் மாநிலம் (3)	பேசுவோர் எண்ணிக்கை 1961-ல் (4)	1971-ல் (5)
	நடுவண் திரவிடம் (Central Dravidian Group)				
21.	கோண்டி	Gondi	மத்தியப்பிரதேசம் மராட்டியம் ஒரிசா	1,383,321	1,688,284
$ 22.	கந்தம்	Khond / Kondh	ஒரிசா ஆந்திரம்	168,027	196,316
$ 23.	கிசன்	Kisan	ஒரிசா அசாம்	50,378	73,847
24.	கூய்	Kui	ஒரிசா	310,907	351,017
25.	குவி	Kuvi			
26.	கொண்டா	Konda	ஒரிசா மத்தியப்பிரதேசம்	12,298	33,720
27.	கொலாமி -நாய்கி	Kolami Naiki	மராட்டியம், மேற்கு வங்காளம்	46,065	66,868
$ 28.	கோயா	Koya	ஆந்திரம், ஒரிசா	140,776	211,877
$ 29.	துருவா	Dhurwa	மத்தியப்பிரதேசம்	24,641	29,376
$ 30.	தோர்லி	Dorli	மத்தியப்பிரதேசம்	35,455	24,320
$ 31.	மரியா	Maria	மராட்டியம் மத்தியப்பிரதேசம் அசாம்	65,371	78,495
32.	பர்சி	Parji	ஒரிசா	84,607	73,912
$ 33.	பர்சி-கோண்டி	Parsi-Gondi	மத்தியப்பிரதேசம்	14,990	15,463
34.	பெங்கோ	Pengo	ஒரிசா	1,254	...
★ 35.	மண்டா	Manda	...	...	...
	வட திரவிடம் (North Dravidian Group)				
36.	குருக்கம் (ஒராவான்)	Kurukh (Oraon)	பீகார் மேற்கு வங்காளம்	1,132,931	1,235,665
$ 37.	தங்கரி	Dhangri	மத்தியப்பிரதேசம் மேற்கு வங்காளம் உத்திரப்பிரதேசம்	4,377	5,492
$ 38.	நகேசியம்	Nagesia	மேற்கு வங்காளம்	1,484	...
39.	மாலத்தம்	Malto (Rajmahal)	பீகார்	88,645	...
40.	பிராகுவி	Brahui	பாகித்தானம்	48,589 (1901, குடி மதிப்பின்படி)	

$ இக் குறி இடப்பட்டவை இந்தியக் குடிமதிப்பு (Census) அறிக்கையில் திரவிடமொழிகளாகக் குறிக்கப்பட்டவை. ஓரிருவர் முதல் சின்னூற்றுவர் வரைப்பட்ட மிகச் சிறுபான்மையர் பேசும் பல்வேறு திரவிடக் குக்கிளைகளடங்க இந்தியக் குடிமதிப்புக் கணக்கில் தரப்பட்டுள்ள 101 திரவிடக் கிளை மொழிகளும் இவண் கொள்ளப்பட்டில.

★ தி.சொ.பி. (D.E.D.) அகரமுதலியில் திரவிடமொழிகளாகக் குறிக்கப்பட்டவை.

LANGUAGE ABBREVIATIONS

Abaz. — Abazinian[10]
Abk. — Abkhazian[10]
Ach. — Achinese[4]
Acho. — Acholi[5]
Ada. — **Adamawa**[5]
Ady. — Adygei[10]
AF. — Anglo-French[2]
Afar — Afar[8]
Afrik. — **Afrikaans**[2]
Agni — Agni[5]
A.Ind. — Anglo-Indian[2]
Ainu — Ainu[10]
Akkad. — Akkadian[8]
Akkan — Akkan[5]
AL. — Anglo Latin[2]
Alb. — **Albanian**[2]
Aleut — Aleut[10]
Algo. — **Algonkian**[7]
Altai — Altai[6]
Altaic — **Altaic**[6]
Alur — Alur[5]
Am. — American[2]
Ambo — Ambo[5]
Amh. — Amharic[8]
Annam. — Annamese[10]
Apa. — Apache[7]
Ar. — Arabic[8]
Aram. — Aramaic[8]
Arap. — Arapaho[7]
Arm. — **Armenian**[2]
Aru. — Arunta[10] (Aranda)
AS. — Anglo-Saxon[2]
Ass. — **Assamese**[2]
Assy. — Assyrian[8]
Atha. — **Athapascan**[7]
Att. — Attic[2]
Aust. — **Australian**[10]
Avar — Avar[10]
Azar. — Azarbaijani[6]
Aztec. — Aztec-Tanoan Phylum[7]
Bab. — Babylonian[8]
Bah. — Bahanar[10]
Bain. — Baining[10]
Bal. — **Baluchi**[2]
Bala. — Balante[5]
Bali. — Balinese[4]
Balk. — Balkar[6]
Balt. — Baltic[2]
Balt. Slav. — Balto Slavic[2]
Bam. — Bambara[5]
Banda — Banda[5]
Bantu — **Bantu**[5]
Bar. — Bargandi[1]
Bargu — Bargu[5]
Bari — Bari[5]
Bariba — Bariba[5]
Bash. — **Bashkir**[6]
Basq. — Basque[10]
Bassa — Bassa[5]
Batak — Batak[4]
Baule — Baule[5]
Bdg. — Badaga[1]
Be.Russ. — **Belo-Russian**[2]
Beja — Beja[8]
Bel. — Belari[1]
Bem. — Bemba[5]
Beng. — **Bengali**[2]
Berb. — **Berber**[8]
Bhili — Bhili[2]
Bih. — **Bihari**[2]
Bik. — Bikol[4]
Bl. — Blackfoot[7]
Bodo — Bodo[9]
Br. — Brahui[1]
Bret. — Breton[2]
Bubi — Bubi[5]
Bug. — Buginese[4]
Bulg. — **Bulgarian**[2]
Bulu — Bulu[5]
Burm. — **Burmese**[9]
Buru. — Burushaski[10]
Buryat — Buryat[6]
Bush. — Bushman[5]
Cad. — **Caddoan**[7]
Cana. — Canaanitic[8]
Can.F. — Canadian French[2]
Catal. — Catalan[2]
Cau. — **Caucasian**[10]
Celt. — Celtic[2]
Chadic — **Chadic**[8]
Chag. — Chagya[5]
Cham — Cham[4]

Chamo.	— Chamorro[4]
Chechen	— Chechen[10]
Che.	— **Cheremis**[6]
Cher.	— Cherokee[7]
Chey.	— Cheyenne[7]
Chiga	— Chiga[5]
Chin	— Chin[9]
Chin.	— **Chinese**[9]
Chim.	— Chimakuan[7]
Chipp.	— Chippewa[7] (Ojibwa)
Chok.	— Chokwe[5]
Chuang	— Chuang[9]
Chukchi	— Chukchi[10]
Chuv.	— **Chuvash**[6]
Cir.	— Circassian[10]
Copt.	— Coptic[8]
Cor.	— Cornish[2]
Cree	— Cree[7]
Cush.	— **Cushitic**[8]
Cz.	— **Czechoslovakian**[2]
Dag.	— Dagomba[5]
Dages.	— **Dagestan**[10]
Dagur	— Dagur[6]
Dak.	— Dakota[7]
Dan.	— **Danish**[2]
Dar.	— Dargin[10]
Dela.	— Delaware[7]
Dha.	— Dhangri[1]
Dhu.	— Dhurwa[1]
Din.	— Dinka[5]
Dje.	— Djerma[5]
Do.	— Dorli[1]
Du.	— Dutch[2]
Dua.	— Duala[5]
Dyo.	— Dyola[8]
Dyu.	— Dyula[5]
E.	— **English**[2]
Edo	— Edo[5]
Efik	— Efik[5]
Egypt.	— **Egyptian**[8]
Enets	— Enets[6]
Enga	— Enga[10]
Er.	— Erava[1] (Yerava)
Esk.	— **Eskimo**[10]
Est.	— **Estonian**[6]
Ethiop.	— Ethiopian[8]
Ewe	— Ewe[5]
F.	— **French**[2]
Fan.	— Fanti[5]
Fang	— Fang[5]
Faro.	— Faroese[2]
Fij.	— Fijian[4]
Fin.	— **Finnish**[6]
Flat.	— Flathead[7]
Flem.	— **Flemish**[2]
Fon	— Fon[5]
Fox	— Fox[7]
Fris.	— Frisian[2]
Ful.	— Fulani[5]
Fur	— Fur[5]
G.	— **German**[2]
Ga.	— Gadaba[1]
Ga Adan.	— Ga Adangme[5]
Gael.	— Gaelic[2]
Galla	— Galla[8]
Gan.	— Ganda[5]
Garo	— Garo[9]
Gaul.	— Gaulish[2]
Gaul.L.	— Gaulish Latin[2]
Gba.	— Gbaya[5]
Geez	— Geez[8]
Geo.	— **Georgian**[10]
Gil.	— Gilbertese[4]
Gilyak	— Gilyak[10]
Gisu	— Gisu[5]
Gk.	— **Greek**[2]
Go.	— Gondi[1]
Gola	— Gola[5]
Gold	— Gold[6] (Nanai)
Goth.	— Gothic[2]
Grebo	— Grebo[5]
Guj.	— **Gujarathi**[2]
Gur	— **Gur**[5]
Gurage	— Gurage[8]
Gurma	— Gurma[5]
H.	— **Hindi**[2]
Hai.	— Haida[7]
Har.	— Harari[8]
Hat.	— Hatsa[5]
Hau.	— Hausa[8]
Haw.	— Hawaiian[4]
Heb.	— Hebrew[8]
Hehe	— Hehe[5]
Her.	— Herero[5]
HG.	— High German[2]
Hitt.	— Hittite[2]
Ho	— Ho[10]
Hott.	— Hottentot[5]
Hung.	— **Hungarian**[6]
Ibi.	— Ibibio[5]

Ibo — Ibo[5]
Icel. — **Icelandic**[2]
Id. — Idoma[5]
I.E. — **Indo-European**[2]
Igo. — Igorot[4]
Ijo — Ijo[5]
Ilo. — Ilocano[4]
Indon. — **Indonesian**[4]
Ing. — Ingush[10]
Ion. — Ionic[2]
Iran. — Iranian[2]
Ir. (Gael.) — **Irish**[2] **(Gaelic)**
Iroq. — **Iroquoian**[7]
Iru. — Irula[1]
It. — **Italian**[2]
Itel. — Itelmen[10]
Jap. — Japanese[3]
Jarai — Jarai[4]
Jav. — **Javanese**[4]
Jonk. — Jonkha[9]
Ka. — **Kannada**[1]
Kab. — Kabardian[10]
Kabre — Kabre[5]
Kaby. — Kabyle[8]
Kac. — Kachin[9]
Kad. — Kadar[1]
Kai. — Kaikadi[1]
Kal. — Kalmyk[6]
Ka.Ka. — Kara Kalpak[6]
Kam. — Kamba[5]
Kan. — Kanuri[5]
Kara. — Karachai[6]
Karam. — Karamojong[5]
Karel. — Karelian[6]
Karen — Karen[9]
Kas. — **Kashmiri**[2]
Kashu. — Kashubian[2]
Kâte — Kâte[10]
Kaz. — **Kazakh**[6]
Keresan — **Keresan**[7]
Ket — Ket[10]
Kh. — Khond[1], Khand
Khak. — Khakass[6]
Khasi — Khasi[10]
Khoi. — **Khoisan**[5]
Ki. — Kisan[1]
Kiku. — Kikuyu[5]
Kiowa — Kiowa[7]
Kir. — **Kirgiz**[6]
Kis. — Kissi[5]
Kiwai — Kiwai[10]
Ko. — Koya[1]
Kol. — Kolami[1]
Komi — **Komi**[6]
Koṅ. — Konguni[2]
Koṇ. — Konda[1]
Kongo — Kongo[5]
Kor. — Koracha[1]
Kora. — Korava[1]
Korag. — Koraga[1]
Kore. — **Korean**[3]
Korku — Korku[10]
Kory. — Koryak[10]
Kot. — Kota[1]
Kpe. — Kpelle[5]
Kru — Kru[5]
Ku. — Kuvi[1]
Kud. — Kudagu[1] (Kodagu)
Kui — Kui[1]
Kum. — Kumyk[6]
Kur. — Kurukh[1]
Kurd. — **Kurdish**[2]
Kurm. — Kurumba[1]
Kwa — **Kwa**[5]
Kwak. — Kwakiutl[7]
L. — **Latin**[2]
Lag. — Lagoon[5]
Lahu — Lahu[9]
Lak — Lak[10]
Lamut — Lamut[6] (Even)
Lang. — Langobardic[2]
Lango — Lango[5]
Lao — **Lao**[9]
Lap. — Lappish[6]
L.Du. — Low Dutch[2]
Lep. — Lepcha[9]
Lett. — **Lettish**[2] **(Latvian)**
Lez. — Lezgin[10]
LG. — Low German[2]
Lill. — Lillooet[7]
Ling. — Lingala[5]
Lisu — Lisu[9]
Lith. — **Lithuanian**[2]
Liv. — Livonian[6]
L.L. — Late Latin[2]
Lo.Da. — Lobi Dagan[5]
Loma — Loma[5]
Lot. — Lotuko[5]
Lozi — Lozi[5]
Luba — Luba[5]

Lug. — Lugbara[5]
Lunda — Lunda[5]
Luo — Luo[5]
Lus. — Lusatian[2]
Lush. — Lushei[9]
Luxem. — Luxembourgian[2]
Lwena — Lwena[5]
Ma. — **Malayalam**[1]
Maba — Maba[5]
Mac. — **Macedonian**[2]
Mad. — **Madurese**[4]
Madi — Madi[5]
Magyar — Magyar[6]
Mai. — Maidu[7]
Mak. — Makonde[5]
Makua — Makua[5]
Mal. — **Malayan**[4]
Malag. — **Malagasy**[4]
Mald. — Maldivian[2]
Mali. — Malinke[5]
Malt. — Maltese[8]
Malto — Malto[1]
Man. — **Manchu**[6]
Mande — **Mande**[5]
Mang. — Mangbetu[5]
Mani. — Manipuri[9]
Manx — Manx[2]
Mao. — Maori[4]
Mar. — **Marathi**[2]
Mara. — Maranao[4]
Mari. — Maria[1]
Marind — Marind[10]
Marq. — Marquesan[4]
Marsh. — Marshallese[4]
Masai — Masai[5]
Mayan — **Mayan**[7]
Maz. — Mazatec[7]
Mbum — Mbum[5]
Mbu. — Mbundu[5]
ME. — Middle English[2]
Mei. — Meithei[9]
Mela. — **Melanesian**[4]
Mende — Mende[5]
Mess. — Messapian[2]
M.F. — Middle French[2]
M.Gk. — Middle Greek[2]
M.Heb. — Middle Hebrew[8]
M.H.G. — Middle High German[2]
Miao — Miao[9]
Miao-Yao — **Miao-Yao**[9]
Micm. — Micmac[7]
Micro. — **Micronesian**[4]
Min. — Minangkabau[4]
M.Ir. — Middle Irish[2]
M.L. — Medieval Latin[2]
M.L.G. — Middle Low German[2]
Mod.E. — Modern English[2]
Mod.F. — Modern French[2]
Mod.Heb. — Modern Hebrew[8]
Mod.L. — Modern Latin[2]
Mod.Norw. — Modern Norwegian[2]
Mod.Pers. — Modern Persian[2]
Mod.Port. — Modern Portuguese[2]
Mod.Provenc. — Modern Provencal[2]
Mod.W. — Modern Welsh[2]
Mog. — Mogul[6]
Moh. — Mohawk[7]
Mold. — Moldavian[2]
Mon — Mon[10]
Mong. — **Mongolian**[6]
Mongo — Mongo[5]
Mongour — Mongour[6]
Mon.Khm. — **Mon-Khmer**[10]
Mord. — **Mordvin**[6]
Mossi — Mossi[5]
Motu — Motu[4]
Mu. — **Munda**[10]
Muong — Muong[10]
Murmi — Murmi[9]
Murn. — Murngin[10]
Musk. — **Muskogean**[7]
Na.De. — Na Dene Phylum[7]
Nag. — Nagesia[1]
Nah. — Nahuatl[7]
Nai. — Naikiri[1]
Nak. — Nakhi[9]
Nan. — Nandi[5]
Nask. — Naskapi[7]
Nau. — Nauruan[4]
Nav. — Navajo[7]
Nep. — **Nepali**[2]
New. — Newari[9]
Nga. — Nganasan[6]
Nico. — Nicobarese[10]
Nil. — **Nilotic**[5]
Nim. — Nimboran[10]
Niu. — Niuean[4]
Nk. — Naiki[1] (Chanda)
Nkole — Nkole[5]
No. — Nogai[6]

Nootka — Nootka[7]
Norw. — **Norwegian**[2]
Nub. — **Nubian**[5]
Nuer — Nuer[5]
Nung — Nung[9]
Nupe — Nupe[5]
Nyam. — Nyamwezi[5]
Nyan. — Nyanja[5]
Nyoro — Nyoro[5]
O.Bulg. — Old Bulgarian[2]
O.Celt. — Old Celtic[2]
O.Dan. — Old Danish[2]
O.E. — Old English[2]
O.F. — Old French[2]
O.Franc. — Old Franconian[2]
O.Fris. — Old Frisian[2]
O.G. — Old German[2]
O.H.G. — Old High German[2]
O.Ir. — Old Irish[2]
Oka. — Okanagan[7]
O.L. — Old Latin[2]
Ole. — Olenet[6]
O.L.G. — Old Low German[2]
O.Lith. — Old Lithuanian[2]
Oma. — Omaha[7]
O.N. — Old Norse[2]
O.N.F. — Old Northern French[2]
O.Pers. — Old Persian[2]
O.Pruss. — Old Prussian[2]
Ori. — **Oriya**[2]
Oro. — Orokolo[10]
O.S. — Old Saxon[2]
O.Scand. — Old Scandinavian[2]
O.Slav. — Old Slavonic[2]
O.Sp. — Old Spanish[2]
Osset. — **Ossetian**[2]
Ost. — Ostyak[6]
O.Sw. — Old Swedish[2]
Oto-Man. — **Oto-Manguean**[7]
Otomi — Otomi[7]
O.Turk. — Osmarli Turkish[6]
O.W. — Old Welsh[2]
Pa. — Paniyar[1]
Pal. — Palaung[10]
Palau — Palau[4]
Pali — Pali[2]
Pam. — Pampangan[4]
Pang. — Pangasinan[4]
Pap. — **Papuan**[10]
Par. — Parji[1]
Par.G. — Parsi Gondi[1]
Pash. — **Pashto**[2]
Pass. — Passamaquoddy[7]
Pedi — Pedi[5]
Pengo — Pengo[1]
Penu. — **Penutian**[7]
Per. — Permian[6]
Persn. — **Persian**[2]
Pkt. — Prakrit[2]
Pol. — **Polish**[2]
Poly. — **Polynesian**[4]
Pona. — Ponapean[4]
Port. — **Portuguese**[2]
Port.Cr. — Portuguese Creole[10]
Pro. — Provencal[2]
Punj. — **Punjabi**[2]
Puyi — Puyi[9]
Qui. — Quileute[7]
Raj. — **Rajasthani**[2]
Raro. — Rarotongan[4]
Rhade — Rhade[4]
Rha.Ro. — Rhaeto-Romanic[2]
Riff. — Riffian[8]
Rom. — Roman[2]
Romany — Romany[2]
Ruanda — Ruanda[5]
Rum. — **Rumanian**[2]
Rundi — Rundi[5]
Russ. — **Russian**[2]
Saho — Saho[8]
Sal. — Salar[6]
Sali. — **Salishan**[7]
Sam. — **Samoyed**[6]
Samo — Samoan[4]
San. — Santhali[10]
Sand. — Sandawe[5]
Sango — Sango[5]
Sara — Sara[5]
Sard. — Sardinian[2]
Sat. — Satem[2]
Sav. — Savara[10]
Scand. — Scandinavian[2]
Scot.(Gael.) — **Scottish**[2] **(Gaelic)**
Scy. — Scythian[6]
Sed. — Sedang[10]
Sel. — Selkup[6]
Sem. — **Semitic**[8]
Sen. — Seneca[7]
Senu. — Senufo[5]
Ser.Croa. — **Serbo-Croatian**[2]

Serer — Serer[5]
Shan — Shan[9]
Shaw. — Shawia[8]
Shil. — Shilluk[5]
Shluh — Shluh[8]
Sho. — Shona[5]
Shus. — Shuswap[7]
Sibo — Sibo[6]
Sid. — Sidamo[8]
Sind. — **Sindhi**[2]
Sinh. — **Sinhalese**[2]
Sio. — **Siouan**[7]
Skt. — **Sanskrit**[2]
Slav. — Slavonic[2]
Slo. — **Slovak**[2]
Slov. — **Slovanian**[2]
So. — Sotho[5]
Som. — Somali[8]
Son. — Soninke[5]
Song. — Songhai[5]
Sp. — **Spanish**[2]
Suk — Suk[5] (Pokot)
Suku. — Sukuma[5]
Sum. — Sumerian[8]
Sum.Oce. — Sumero-Oceanic[8]
Sund. — **Sundanese**[4]
Susu — Susu[5]
Swa. — Swahili[5]
Swazi — Swazi[5]
Swed. — **Swedish**[2]
Syr. — Syriac[8]
T. — **Tamil**[1]
Taba. — Tabasaran[10]
Tad. — **Tadzhik**[2]
Tag. — **Tagalog**[4]
Tahit. — Tahitian[4]
Tan. — **Tanoan**[7]
Tar. — Tarasco[7]
Tatar — **Tatar**[6]
Te. — **Telugu**[1]
Teda — Teda[5] (Tibbu)
Tem — Tem[5]
Temne — Temne[5]
Teso — Teso[5]
Teut. — Teutonic[2]
Thom. — Thompson[7]
Thon. — Thonga[5] (Tsonga)
Tib. — **Tibetan**[9]
Tig. — Tigre[8]
Tigri. — Tigrinya[8]
Tiv — Tiv[5]
Tli. — Tlingit[7]
To. — Toda[1] (Tuda)
Togo — Togo[5]
Tonga — Tonga[5]
Tongan — Tongan[4]
Tonk. — Tonkawa[7]
Toro — Toro[5]
Tru. — Trukese[4]
Tsim. — Tsimshian[7]
Tswa. — Tswana[5]
Tu. — Tulu[1]
Tuam. — Tuamotu[4]
Tuar. — Tuareg[8]
Tum. — Tumbuka[5]
Tun. — Tunica[7]
Tung — Tung[9]
Tungu. — **Tungusian**[6]
Turk. — **Turkish**[6]
Turka. — Turkana[5]
Turko. — **Turkoman**[6]
Tuvi. — Tuvinian[6]
Twi — Twi[5]
U. — **Urdu**[2]
Ug. — Ugric[6]
Uig. — **Uiger**[6]
Ukr. — **Ukarainian**[2]
Urh. — Urhobo[5]
Uto.Az. — **Uto-Aztecan**[7]
Uv. — Uvea[4]
Uz. — **Uzbek**[6]
Vad. — Vadari[1]
Vai — Vai[5]
Ven. — Venda[5]
Veps — Veps[6]
Viet. — **Vietnamese**[10]
Vis. — **Visayan**[4]
Vog. — Vogul[6]
Vot. — **Votyak**[6]
Vote — Vote[6]
W. — **Welsh**[2]
Wa — **Wa**[10]
Waka. — **Wakashan**[7]
Wol. — Wolof[5]
Xh. — Xhosa[5]
Yab. — Yabim[4]
Yak. — Yakut[6]
Yakima — Yakima[7]
Yao — Yao[9]
Yap. — Yapese[4]

Yaun.	—	Yaunde[5]
Yer.	—	Yerukala[1]
Yi	—	Yi[9] (Lolo)
Yid.	—	**Yiddish**[2]
Yor.	—	Yoruba[5]
Yor.Edo	—	Yoruba Edo[5]
Yu.	—	Yuchi[7]
Yuk.	—	Yukagir[10]
Yum.	—	**Yuman**[7]
Yur.	—	Yurak[6] (Nenets)
Zande	—	Zande[5]
Zap.	—	Zapotec[7]
Zoq.	—	**Zoquean**[7]
Zulu	—	Zulu[5]
Zuni	—	**Zuni**[7]
Zyr.	—	Zyryene[6]

GRAMMATICAL ABBREVIATIONS IN ENGLISH

abl.	ablative
abst.n.	abstract noun
acc.	accusative
act.v.	active verb
act.vo.	active voice
adj.	adjective
adv.	adverb
affirm.	affirmative
ap.	appellative
attrib.	attributive
aug.	augmentative
aux.v.	auxilary verb
c.	case
caus.	causative
com.	common
comp.	compound
compl.	complement
conj.	conjunction
conj.	conjunctive
cons.	consonant
dat.	dative
def.	definite
demons.pron.	demonstrative pronoun
dim.	diminutive
en.	enunciative
epi.	epicene
excl.	exclamation
exp.	explicit
expl.	expletive
fem.	feminine
fin.v.	finite verb
fut.	future
gen.	genitive
ger.	gerund
Gram.	Grammar
hon.	honorific
hon.pl.	honorific plural
imp.	imperative
imper.	impersonal
impf.	imperfect
impl.	implicit
ind.	indeclinables
indef.	indefinite
inf.	infinitive
instr.	instrumental
int.	interjection
inter.	interrogative
irr.	irregular
iter.	iterative
loc.	locative
masc.	masculine
Metath.	Metathesis
met.	metonymy
N.	name
n.	noun
neg.	negative
neg.v.	negative verb
neut.	neutral
nom.	nominative
obj.	object
opt.	optative
p.	past
part.	particle
parti.	participle
pass.vo.	passive voice
pers.	person
pf.	perfect
phr.	phrase
pl.	plural
posit.	positive
poss.	possessive
pref.	prefix
prep.	prepositions
pres.	present
pr.n.	proper noun
pron.	pronoun
Pros.	Prosody
refl.	reflexive
rel.	relative
rem.demons.pron.	remote demonstrative pronoun
Rhet.	Rhetoric
sing.	singular
subj.	subject, subjunctive
suff.	suffix
subord.cl.	subordinate clause
superl.	superlative
t.	tense
term.	termination
v.	verb
vbl.n.	verbal noun
v.i.	verb intransitive
v.t.	verb transitive
voc.	vocative
w.f.	wrong form

GENERAL ABBREVIATIONS

A.D.	—	anno Domini
abbrev.	—	abbreviation
abs.	—	absolutely
acc. to	—	according to
ad. (in Etymol.)	—	adaptation of
Adi.	—	Adi Dravidar usage
Agap.	—	Agapporul
Anat.	—	Anatomy
Andh.	—	Andhra usage
Antiq.	—	Antiquities
app.	—	apparently
Arch.	—	Archaic
Archaeol.	—	Archaeology
Arith.	—	Arithmetic
assoc.	—	association
Astrol.	—	Astrology
Astron.	—	Astronomy
B.C.	—	before Christ
bar.	—	barbarism
bef.	—	before
Biol.	—	Biology
Bot.	—	Botany
Brāh. or Brāhm.	—	Brahmin usage
Build.	—	Building
C.	—	Century
C.N.	—	Chettinadu
ca.u.	—	caste usage
Cey.	—	Ceylon or Sri Lanka
Cf., Cp., cp.	—	Confer, compare
Cg.	—	Chengalpattu district
Chem.	—	Chemistry
Chr.	—	Christian usage
cl.	—	climber
Cm.	—	Coimbatore district
cogn.w.	—	cognate with
coin.	—	coined word
collect.	—	collectively
colloq.	—	colloquial, -ly
Com.u.	—	Common usage
comb.	—	combined, -ing
comm.u.	—	community usage
concr.	—	concretely
corr.	—	corruption
cr.	—	creeper
Dan.	—	Dance
deriv.	—	derivative, -ation
dial. var.	—	dialectal variant
Dict.	—	Dictionary
dist.f.	—	distinct from
Dp.	—	Dharmapuri district
Eccl.	—	Ecclesiastical usage
e.g.	—	for example
ellip.	—	elliptical, -ly
Engin.	—	Engineering
erron.	—	erroneous, -ly
esp.	—	especially
etc.	—	*et cetera*
ety.	—	etymology
euphem.	—	euphemistically
exc.	—	except
expr.	—	expression
f., fr.	—	from
fig.	—	figurative, -ly
Fisher.	—	Fishermen usage
freq.	—	frequently
ft.	—	feet, foot
Ft.	—	Foot-note
genlly.	—	generally
Geol.	—	Geology
Geom.	—	Geometry
i.e.	—	*id est* (that is)
id.	—	*idem* (same)
Insc.	—	Inscriptions
J.	—	Jaffna
J.N.	—	Jaffna Notes
Jaina	—	Jaina Philosophy
Kadar	—	Kadar usage
Kaḷ.	—	Kaḷḷar usage
Kar.	—	Karnataka
Ker.	—	Kerala
Km.	—	Kanyakumari district
lang.	—	language
l. & l.cl.	—	large & large climber
l.sh. & l.tr.	—	large shrub & large tree
lit.	—	literal, -ly
Lit.com.u.	—	Literate common usage
Loc.	—	Local usage
Log.	—	Logic
m.	—	medium
m.cl.	—	medium climber
m.sh.	—	medium shrub
m.tr.	—	medium tree

masc.	—	masculine
Madr.	—	Madras usage
Madu.	—	Madurai district
Math.	—	Mathematics
Mech.	—	Mechanics
Med.	—	Medicine
Med.u.	—	Medical usage
Medl.	—	Medical
Mercant.	—	Mercantile usage
Metaph.	—	Metaphysics
Mil.	—	Military usage
Min.	—	Mineralogy
Mod.	—	Modern usage
mod.	—	modern
Ms.	—	Manuscripts
Mus.	—	Music
Myth.	—	Mythology
N.A.	—	North Arcot district
N.T.	—	New Testament
Nāñ.	—	Nāñjil Nadu
Naut, naut.	—	Nautical usage
Nl.	—	Nilgiri district
Nurs.	—	Nursery usage
obs.	—	obsolete
occas.	—	occasional, -ly
Onom.	—	Onomatopoeic
opp.	—	opposite to
Ornith.	—	Ornithology
orig.	—	original, -ly
O.T.	—	Old Testament
p.	—	page
Paḷ.	—	Paḷḷar usage
Palaeont.	—	in Palaeontology
Palm.	—	Palmistry
Para.	—	Paravar usage
Path.	—	Pathology
perh.	—	perhaps
Phil.	—	Philosophy
Philol.	—	Philology
phonet.	—	phonetically
Phr.	—	phrase
physiol.	—	physiology
poet.	—	poetic
Poṇḍ.	—	Poṇdicherry
pop.	—	popular, -ly
pop.u.	—	popular usage
Pr.	—	Periyar district
prec.	—	preceding
pro. Dr.	—	proto Dravidian
prob.	—	probably
pronunc.	—	pronunciation
prop.	—	properly
prov.	—	provincial usage
Psych.	—	Psychology
Pudu.	—	Pudukottai district
Purap.	—	Purapporul
R.C.	—	Roman Catholic usage
r.u.	—	rare usage
recon.	—	reconstructed word
ref.	—	reference
reg.	—	regular
repr.	—	representative
resp.	—	respectively
Rmd.	—	Ramanathapuram district
S.	—	South
s.	—	small
s.cl.	—	small climber
s.sh.	—	small shrub
s.tr.	—	small tree
S.A.	—	South Arcot district
Šaiva.	—	Šaivism
Šaiva Phil.	—	Šaiva Philosophy
sb.	—	substantive
slang	—	slang usage
Sm.	—	Salem district
spec.	—	specifically
subseq.	—	subsequently
subst.	—	substantively
syn.	—	synonym
techn.	—	technical, -ly
Theol.	—	Theology
Tj.	—	Thanjavur district
Tn.	—	Thirunelveli district
Tp.	—	Thiruchirappalli district
tr.	—	translation of
Tu.	—	Tulu nadu
ult.	—	ultimately
unkn.	—	unknown
usu.	—	usually
Vaiṣṇ.	—	Vaiṣṇava usage
(Vaiṣṇ.)	—	Vaiṣṇava Philosophy
viz.	—	*videlict* (namely)
vul.	—	vulgar usage
yd.	—	yard
Zool.	—	Zoology

இலக்கணக் குறுக்கங்கள்

அஃ.ஒ.பெ.	—	அஃறிணை ஒருமைப் பெயர்
அ.சு.	—	அண்மைச்சுட்டு
அணி.	—	அணியிலக்கணம்
அ.தொ.	—	அடுக்குத்தொடர்
ஆகு.	—	ஆகுபெயர்
ஆ.பா.	—	ஆண்பால்
ஆ.பா. பெ.	—	ஆண்பாற் பெயர்
ஆ.பா.வி.மு.	—	ஆண்பால் வினைமுற்று
இ.கா.	—	இறந்த காலம்
இ.கா.இ.நி.	—	இறந்தகால இடைநிலை
இ.கா.பெ.எ.	—	இறந்தகாலப் பெயரெச்சம்
இ.கா.வி.மு.	—	இறந்தகால வினைமுற்று
இ.கா.வி.எ.	—	இறந்தகால வினையெச்சம்
இ.கி.	—	இரட்டைக் கிளவி
இடை.	—	இடைச்சொல்
இரட்.பெ.பா.	—	இரட்டைப் பெண்பால்
இலக்.	—	இலக்கணம்
ஈ.கெ.எ.ம. பெ.எ.	—	ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
உ.ஆகு.	—	உவமையாகு பெயர்
உ.பன்.	—	உயர்வுப்பன்மை
உ.தி.ப.பா.	—	உயர்திணைப் பலர்பால்
உரி.	—	உரிச்சொல்
எ.கா.	—	எதிர்காலம்
எ.கா.இ.நி.	—	எதிர்கால இடைநிலை
எ.கா.பெ.எ.	—	எதிர்காலப் பெயரெச்சம்
எ.கா.வி.மு.	—	எதிர்கால வினைமுற்று
எது.மரபி.	—	எதுகை மரபிணை மொழி
எ.ம.இ., எ.ம.இ.நி.	—	எதிர்மறை இடைநிலை
எ.ம.ஏ.ஒ.	—	எதிர்மறை ஏவல் ஒருமை
எ.ம.கு.வி.எ.	—	எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம்
எ.ம.கு.வி.மு.	—	எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று
எ.ம.பெ.எ.	—	எதிர்மறைப் பெயரெச்சம்
எ.ம. முன்.	—	எதிர்மறை முன்னொட்டு
எ.ம.வி.இ.நி.	—	எதிர்மறை வினை இடைநிலை
எ.ம.வியங்.	—	எதிர்மறை வியங்கோள்
எ.ம.வினையா. பெ.	—	எதிர்மறை வினையாலணையும் பெயர்
ஏ.து.வி.	—	ஏவல் துணைவினை
ஒ.	—	ஒருமை
ஒன்.பா.	—	ஒன்றன்பால்
ஒன்.பா.பெ.	—	ஒன்றன்பாற் பெயர்
கரு.ஆகு.	—	கருவியாகுபெயர்
கருத்.ஆகு.	—	கருத்தா ஆகுபெயர்
கு.பெ.எ.	—	குறிப்புப் பெயரெச்சம்
கு.வி.எ.	—	குறிப்பு வினையெச்சம்
கு.வி.எ.தொ.	—	குறிப்பு வினையெச்சத் தொடர்
கு.வி.மு.	—	குறிப்பு வினைமுற்று
குறு.பின்.	—	குறுமைப் பின்னொட்டு
கு.பொ.பின்., குறு.பொ.பின்.	—	குறுமைப் பொருள் பின்னொட்டு
கு.பொ.முன்., குறு.பொ.முன்.	—	குறுமைப் பொருள் முன்னொட்டு
சி.பொ.பின்., சிறு.பொ.பின்.	—	சிறுமைப் பொருள் பின்னொட்டு
சி.பொ.மு.; சிறு.பொ.முன்.	—	சிறுமைப் பொருள் முன்னொட்டு
சு.கு.வி.எ.	—	சுட்டுக் குறிப்பு வினையெச்சம்
சு.பெ.	—	சுட்டுப்பெயர்
சு.பெ.எ.	—	சுட்டுப் பெயரெச்சம்
சு.வி.எ.	—	சுட்டு வினையெச்சம்
செ.கு.வி.	—	செயப்படுபொருள் குன்றிய வினை
செ.குன்றாவி.	—	செயப்படுபொருள் குன்றா வினை
செ.பெ.	—	செயற்பெயர் (gerund)
செய்வி.	—	செய்வினை
செயப்.பொ. து.வி.	—	செயப்பாட்டுப் பொருள் துணைவினை
செயப்.வி.	—	செயப்பாட்டு வினை
செயப்.வி.மு.	—	செயப்பாட்டு வினைமுற்று
சே.சு.	—	சேய்மைச் சுட்டு
சே.சு.பெ.	—	சேய்மைச் சுட்டுப்பெயர்
சே.சு.பெ.எ.	—	சேய்மைச் சுட்டுப் பெயரெச்சம்
த.ஒ.	—	தன்மை ஒருமை
த.ஒ.வி.மு.	—	தன்மை ஒருமை வினைமுற்று
த.பன்.	—	தன்மைப் பன்மை
த.வி.	—	தன்வினை
த.வி.தொ.பெ.	—	தன்வினைத் தொழிற்பெயர்
து.வி.	—	துணைவினை
தெரி.வி.	—	தெரிநிலை வினை
தொ.ஆகு.	—	தொழிலாகுபெயர்
தொ.பெ.	—	தொழிற்பெயர்
நி.கா.	—	நிகழ்காலம்
நி.கா.எ.	—	நிகழ்கால எச்சம்

நி.கா.பெ.எ.	—	நிகழ்காலப் பெயரெச்சம்
நி.கா.வி.எ.	—	நிகழ்கால வினையெச்சம்
நி.கா.வி.மு.	—	நிகழ்கால வினைமுற்று
ப.பா.	—	பலர்பால்
பண்.பெ.	—	பண்புப் பெயர்
பல.பா.	—	பலவின்பால்
பல.பா.பெ.	—	பலவின்பாற் பெயர்
பல.பா.வி.மு.	—	பலவின்பால் வினைமுற்று
பன்.	—	பன்மை
பி.வி.	—	பிறவினை
பி.வி.தொ.பெ.	—	பிறவினைத் தொழிற் பெயர்
பெ.	—	பெயர்
பெ.எ.	—	பெயரெச்சம்
பெ.கு.வி.எ.	—	பெயர்க் குறிப்புவினை யெச்சம்
பெ.பா.	—	பெண்பால்
பெ பொ. பின்., பெரு. பொ. பின்.		பெருமைப் பொருள் பின்னொட்டு
பெ.பொ.முன்., பெரு.பொ. முன்.		பெருமைப் பொருள் முன்னொட்டு
பொ.பா.	—	பொதுவின் பால்
பொ.வி.	—	பொதுவினை
முத.இரட். தொ.பெ.	—	முதனிலை இரட்டித்த தொழிற்பெயர்
முத.தி.தொ. பெ.	—	முதனிலை திரிந்த தொழிற் பெயர்
முத.தொ.ஆகு	—	முதனிலைத் தொழிலாகு பெயர்
முத.தொ.பெ.	—	முதனிலைத் தொழிற் பெயர்
வி.	—	வினை
வி.எ.	—	வினையெச்சம்
வி.மு.	—	வினைமுற்று
வி.முத.	—	வினைமுதல்
வியங்.	—	வியங்கோள்
வியப்.	—	வியப்பிடைச்சொல்
விளி.	—	விளிச்சொல்
விளியி.	—	விளியிடைச்சொல்
விளியு.	—	விளியுருபு
விளிவேற்.	—	விளிவேற்றுமை
வினையா.பெ.	—	வினையாலணையும் பெயர்
வே.உ.	—	வேற்றுமை உருபு
வே.தொகை	—	வேற்றுமைத் தொகை

பொதுக் குறுக்கங்கள்

அகப். — அகப்பொருள்
அங். — அங்கேரியம்
அதி. — அதிகாரம்
அரு.வ. — அருகிய வழக்கு
ஆசித். — ஆசித்தியன்
ஆசு.துரு. — ஆசுமன்லி துருக்கி
ஆதிதி. — ஆதிதிராவிடர் வழக்கு
ஆந். — ஆந்திரநாட்டு வழக்கு
இ.பி. — இருபிறப்பி
இ.வ. — இட வழக்கு
இக்.வ. — இக்கால வழக்கு
இடைக்.வ. — இடைக்கால வழக்கு
இந். — இந்தி
இராம. — இராமநாதபுரம் மாவட்டம்
இரு. — இருளம்
இலத். — இலத்தீனம்
இலாப். — இலாப்பிசு
இழிவ. — இழிவழக்கு
இழிசி.வ. — இழிசினர் வழக்கு
இ-ள். (இ-ள்.) — இதன் பொருள்
ஈழநா. — ஈழநாட்டு வழக்கு
உயி. — உயிரியல்
உ.வ. — உலகவழக்கு
உகி. — உகிரியம்
உடல். — உடலியல்
உய். — உய்கர்
உரு. — உருது
உரைமேற். — உரை மேற்கோள்
உரோ.கத். — உரோமன் கத்தோலிக்கர்
எ-டு. — எடுத்துக்காட்டு
எ-று. — என்றவாறு
எர. — எரவம்
ஏர. — ஏரணம் (logic)
ஒ.நோ. — ஒப்புநோக்கு
ஒரி. — ஒரியா
ஒருகா. — ஒருகால்
க. — கன்னடம்
கட. — கடபா
கடவுள் வா. — கடவுள் வாழ்த்து
கடுங்கொ. — கடுங்கொச்சை
கணி. — கணியம்
கப். — கப்பலியல்
கருநா. — கருநாடக வழக்கு
கா. — காடர்
கி.பி. — கிறித்துவுக்குப் பின்
கி.மு. — கிறித்துவுக்கு முன்
கிறித். — கிறித்தவ வழக்கு
கீழ்வா.க. — கீழ்வாய்க்கணக்கு
குச். — குச்சரம்
குட. — குடகு
குமரி — குமரி மாவட்டம்
குரு. — குருக்கம் (ஒராவான்)
குரும். — குரும்பர்
குல வ. — குலவழக்கு
குவி — குவி
குற. — குறவர் (எருகலம்)
கூ. — கூய்
கை. — கைக்கடி
கை. — கையெழுத்துப்படி
கைவ. — கைவரை (இரேகை சாத்திரம்)
கொ.வ. — கொச்சை வழக்கு
கொங். — கொங்கணி
கொண். — கொண்டா
கொண்.க. — கொண்டு களையப்பட்ட சொல்
கொர. — கொரகர்
கொலா. — கொலாமி
கோண். — கோண்டி
கோத. — கோதம்
கோவை — கோவை மாவட்டம்
சப். — சப்பான்
சமண. (சைன.) — சமணம் (சைனம்)
சிங். — சிங்களம்
சிந். — சிந்து
சிவ. — சிவனியம்
சிவக். — சிவக்கொண்முடிபு
செங்கை — செங்கற்பட்டு மாவட்டம்
செட்.நா. — செட்டிநாட்டு வழக்கு
செப். — செப்பேடு
செய். — செய்யுள்
செவிலி — செவிலி வழக்கு
சென்னை — சென்னை வழக்கு
சேரநா. — சேரநாட்டு வழக்கு
சேலம் — சேலம் மாவட்டம்
த. — தமிழ்
த.வா. — தமிழ் வாழ்த்து
தங். — தங்கரி
தஞ்சை — தஞ்சாவூர் மாவட்டம்
தரும. — தருமபுரி மாவட்டம்
தி.பி. — திருவள்ளுவருக்குப் பின்
திசைச். — திசைச்சொல்
திபெ. — திபெத்தம்
திருச்சி — திருச்சிராப்பள்ளி மாவட்டம்
து. — துளுவம்

துங். — துங்கூசியம்
துட. — துடவம்
துரு. — துருக்கி
தெ. — தெலுங்கு
தெ.ஆ. — தென்னார்க்காடு மாவட்டம்
தெற்கு — தென்தமிழ்நாடு
தொன். — தொன்மம் (புராணம்)
தோரா. — தோராயமாக
நகை. — நகையாட்டு
நடம் — நடனம்
நா. — நாய்கிரி
நா. (ச) — நாய்கி (சந்தா)
நா.பா. — நாட்டுப்பாடல்
நாஞ். — நாஞ்சில் நாடு
நிலைத் — நிலைத்திணையியல் (botony)
நீல. — நீலகிரி மாவ்ட்டம்
நெல்லை — நெல்லை மாவட்டம்
பக். — பக்கம்
பட். — பட்டயம்
பட. — படகம்
படித்.உ.வ. — படித்தவர் உலகவழக்கு
படைத். — படைத்தவர்
படைப். — படைப்புச்சொல்
பணி. — பணியர்
பர். — பர்சி
பர்க. — பர்கண்டி
பர. — பரவர் வழக்கு
பழ. — பழமொழி
ப.வ., பழை.வ. — பழையவழக்கு
பள். — பள்ளர்வழக்கு
பா. — பாலி
பா.வே. — பாட வேறுபாடு
பாட். — பாட்டு
பாயி. — பாயிரம்
பிரா. — பிராகுவி
பிராகி. — பிராகிருதம்
பிராம. — பிராமண வழக்கு
பின். — பின்லாந்து
புத்த. — புத்தம்
புதுக். — புதுக்கோட்டை மாவட்டம்
புதுவை — புதுச்சேரி மாநிலம்
புறப். — புறப்பொருள்
பெங். — பெங்கோ
பெரி. — பெரியார் மாவட்டம்
பெரு.வ. — பெருவழக்கு
பேரா. — பேராசிரியர்
பொறி. — பொறியியல்
ம. — மலையாளம்
மங். — மங்கோலியம்
மங்.வ. — மங்கலவழக்கு
மண். — மண்டா
மணிபு. — மணிபுரி
மதுரை — மதுரை மாவட்டம்
மரா. — மராத்தி
மருத். — மருத்துவவியல்
மறுவ. — மறுவடிவம்
மா. — மாலத்தம்
மார். — மார்டுவின்
மாலி., வைணவ., திருமா. — மாலியம், வைணவம், திருமாலியம்
மிகைப். — மிகைப்பாடல்
மீனவ. — மீனவர்வழக்கு
முந்து. — முந்து தமிழம் [முந்து திரவிடம் (Proto-Dravidian)]
மெய்ப். — மெய்ப்பொருள்
மேற். — மேற்கோள்
யாப்பு. — யாப்பிலக்கணம்
யாழ்ப். — யாழ்ப்பாண வழக்கு
வ. — வடமொழி (சமற்கிருதம்)
வ.ஆ. — வடஆர்க்காடு மாவட்டம்
வகு.வ. — வகுப்பு வழக்கு (Caste dialect)
வங். — வங்காளம்
வடக்கு — வட தமிழ்நாடு
வடிவமீ. — வடிவமீட்டமைப்பு (reconstructed)
வ-று. — வருமாறு
வழக். — வழக்கொழிந்த சொல் (obsolete).
வான. — வானநூல்
வி-ம். — விளக்கம்
வெட். — வெட்டெழுத்து (கல்வெட்டு)
வேதி. — வேதியியல்

குறியீடுகள்
(Symbols)

> வலமுறைத் திரிவுக் குறி : *இவ்வாறு திரிந்தது.*
  is to be read as 'produced' or 'becomes' or 'is the original form of', or 'is an earlier form than' (compare its usual algebraical meaning of 'is greater than').

< இடமுறைத் திரிவுக் குறி : *இதிலிருந்து திரிந்தது.*
  is to be read as 'is derived from' or 'is a later form than' (compare its ordinary algebraical meaning of 'is less than').

\+ புணர்க்குறி : additional or plus.

= சமக்குறி : denotes 'equivalent with', 'the same as', 'equal to'.

× எதிர்க்குறி : denotes the opposite of.

† படைப்புச் சொல்லைக் காட்டும் சொற்புதுக்கற்குறி : denotes new coinage.

‡ வழக்கொழிந்த சொல்லைக் காட்டும் மறைவுக்குறி : denotes obsolete form.

* முந்துதமிழ (திரவிட)க் குறி : denotes the proto-Dravidian form.

\- இடைவைப்புக்குறி : hyphen.

— இடைநிறுத்தற்குறி : dash.

... விடுபாட்டுக்குறி : denotes the gap in a passage.

(¯) நெடிற்குறி : *ஆங்கில உயிரெழுத்துகளின் நெடிலோசையைக் காட்டுவது.*
  the mark called macron is placed over a vowel in English transliteration to show that is long.

~ சொற்சேர்ப்பைக் குறிக்கும் நெளிகோடு : swung dash.

→ வளர்குறி : *சொற்றிரிவு வழிமுறையைக் காட்டுவது.*
  indicates an etymological relation or line of development between the words mentioned.

( ) பிறைக்குறி : *குறிப்புகள் மற்றும் குறுக்கங்களை உள்ளடக்கியவை.*
  between these parenthesis stand all remarks upon meanings and abbreviations.

[ ] பகர அடைப்புக்குறி :
  between these brackets stand all remarks with the root.

{} இரட்டையடைப்புக்குறி : double brackets.

? மூலம் தெரியவில்லை எனக்காட்டும் வினாக்குறி : origin unknown.

பிற குறிகள் இடம்நோக்கி எளிதில் உய்த்துணரலாம்.
the meaning of all other symbols may easily be inferred from the context.

நூல்களை மேற்கோள் ஆண்ட முறை

1.	நூல், பெரும்பிரிவு, உட்பிரிவு முதற்குறிப்பு, பாடல் எண் அல்லது நூற்பா எண்	... கந்தபு. உற்பத். திருக்கல். 31. கம்பரா. சுந்தர. பிணிவீட். 22. தொல். பொருள். மெய்ப். 8.
2.	நூல், பெரும்பிரிவு எண், உட்பிரிவு எண், பாடல் எண்	... அருட்பா. 6, பிள்ளைப்பெரு. 5
3.	நூல், உட்பிரிவு எண், பாடல் எண் அல்லது வரி எண்	... திருவாச. 5 : 49. சிலப். 3 : 14.
4.	நூல், திருமுறை எண், பதிக எண், பாடல் எண்	... தேவா. 6.16 : 5.
5.	நூல், உட்பிரிவு, பாடல் எண் அல்லது நூற்பா எண்	... அரிச்சந். விவாக. 23. நேமி. எழுத்து. 11.
6.	நூல், நூற்பா எண், பக்க எண்	... இறை. 28, பக். 169.
7.	நூல், உட்பிரிவின் முதற்குறிப்பு, பக்க எண்	... இராமநா. ஆரணிய. பக். 187.
8.	நூல், பிரிவு, பத்தின் எண், பதிக எண், பாடல் எண்	... திவ். திருவாய். 1 . 2 : 3. ஈடு, 5 . 5 : 4.
9.	நூற்பெயர் முதற்குறிப்பு	... அக.நி. சா.அக.
10.	நூல், வரி எண்	... திருமுருகு. 122.
11.	நூல், பாடல் எண் அல்லது நூற்பா எண்	... குறள், 196. நன். 132.
12.	நூல், கண்ணி எண்	... ஏகாம். உலா, 211.
13.	நூல், பாடல் எண், வரி எண்	... அகநா. 96 : 12.
14.	நூல், பக்க எண்	... சி.செ. பக். 74.
15.	நூல், தொகுதி எண், பக்க எண், பாடல் எண்	... தனிப்பா. தி. 2, 4 : 7.
16.	நூல், தொகுதி எண், பக்க எண்	... கலைமகள், 56 : 189. S.I.I. i, 29.
17.	நூல், பிரிவின் முதற்குறிப்பு, அதிகார எண், பொருளெண்	... விவிலியம், மத். 3 : 4 . 5.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியில் ஆளப்பட்ட நூல்களும் அவற்றின் குறியீடு, பதிப்பு முதலிய விளத்தங்களும்

(Abbreviations of Other Particulars of Works Quoted in the Tamil Etymological Dictionary)

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
அக.நி.	அகராதி நிகண்டு	சிதம்பர ரேவண சித்தர்	மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை, 1921.	9
அகநா.	அகநானூறு	சங்கப் புலவர்கள்	பாகனேரி, காசிவிசுவ நாதன் செட்டியார்.	13
அசுவசா.	அசுவசாத்திரம்	நகுலசகதேவர்	சென்னை, ஜீவகாருணிய விலாச அச்சியந்திர சாலை, 1911.	14
அணியி.	அணியிலக்கணம்	விசாகப்பெருமாளையர்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1976.	14
அபி.சிந்.	அபிதானசிந்தாமணி	சிங்காரவேலு முதலியார், ஆ.	ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ், 1934.	9
அரிச்சந்.	அரிச்சந்திர புராணம்	ஆசுகவிராஜர்	வித்தியாரத்நாகர அச்சுக் கூடம், 1913.	5
அரிசமய.	அரிசமயதீபம்	சடகோபதாசர்	சென்னை, செங்கல்வராய நாயகர் ஆர்பனேஜ் அச்சுக்கூடம், 1903.	5
அரு.நி.	அரும்பெயர் விளக்க நிகண்டு	அருமருந்தைய தேசிகர்	மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை, 1931.	9
அருங்கலச்.	அருங்கலச்செப்பு	சமண முனிவர்	மர்ரே எஸ். ராஜம், 1959.	11
அருட்பா	திருவருட்பா	இராமலிங்க சுவாமிகள்	ஊரன் அடிகள்	2
அருணாசலபு.	அருணாசலபுராணம்	எல்லப்ப நாவலர்	சென்னை, சூளை, பி. வே. நமசிவாய முதலியார், 1926.	5
அவிரோத.	அவிரோதவுந்தியார்	சாந்தலிங்க சுவாமிகள்	தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம், பேரூர், கோவை, 1965.	11
அழகர் அந்தாதி	அஷ்டப்பிரபந்தம் : அழகர் அந்தாதி	பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்	வை. மு. கோபாலகிருஷ்ண மாசாரியார் & கம்பெனி, சென்னை, 1966.	11
அழகர் கலம்.	அழகர் கலம்பகம் (மூலமும் உரையும்)	சாமி கவிகாளருத்திரர்	சென்னை, சுந்தரம் அச்சுக் கூடம், 1928.	11

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
அஷ்டப்.	அஷ்டப்பிரபந்தம்	பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்	வை. மு. கோபாலகிருஷ்ண மாசாரியார் & கம்பெனி, சென்னை, 1966.	11
அஷ்டப்பிரக.	அஷ்டப்பிரகரணம்	கிருஷ்ண சாஸ்திரி	சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், 1925.	14
அஷ்டாதச.	அஷ்டாதச ரகஸ்யம்	பிள்ளைலோகாசாரியார்	ஆனந்த அச்சுக்கூடம், 1911.	5
ஆ.சூ.	ஆத்திசூடி	ஔவையார்	மர்ரே எஸ். ராஜம், 1959.	11
ஆ.நி.	ஆசிரிய நிகண்டு	ஆண்டிப்புலவர்	கையெழுத்துப் படி	9
ஆசாரக்.	ஆசாரக்கோவை	பெருவாயின் முள்ளியார்	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1971.	11
ஆதியூரவதானி.	ஆதியூரவதானி சரித்திரம்	சேஷையங்கார்		9
இங்.வை.	இங்கிலீஷ் வைத்திய சங்கிரகம்	ஜகநாதம் நாயுடு, மஞ்.	The Guardian Press, Madras, 1909.	9
இந்துபாக.	இந்துபாகசாஸ்திரம்	இராமச்சந்திர ராயர்	The Guardian Press, Madras, 1912.	9
இரகு.	இரகுவமிசம்	அரசகேசரி	யாழ்ப்பாணம், வித்தியாநுபாலன யந்திரசாலை, 1887.	5
இராசவைத்.	இராசவைத்திய மகுடம்	தேரையர்	சென்னை, ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு, கலாநிதி அச்சுக்கூடம், 1901.	11
இராட்.	இராட்டிலர் அகராதி			9
இராமநா.	இராம நாடகம்	அருணாசலக் கவிராயர்	சென்னை, பூமகள் விலாச அச்சுக்கூடம், 1911.	7
இலக்.வி.	இலக்கண விளக்கம்	வைத்தியநாத தேசிகர்	தஞ்சாவூர், சரசுவதி மகால் நூல்நிலையம்.	11
இறை.	இறையனாரகப்பொருள் (மூலமும் உரையும்)	கணக்காயனார் மகனார் நக்கீரனார்	பவானந்தர் கழகம், வேப்பேரி, சென்னை.	6
ஈடு	ஈடு, முப்பத்தாறாயிரப்படி (முதற் பத்து)	நம்பிள்ளை	திருவல்லிக்கேணி, நோபிள் அச்சுக்கூடம், 1925.	8
ஈடு	ஈடு, ,, (இரண்டாம் பத்து)	,,	சென்னை, கணேச அச்சுக்கூடம், 1925.	8

T. 5048

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
ஈடு	ஈடு, முப்பத்தாறாயிரப்படி (மூன்றாம் பத்து)	நம்பிள்ளை	திருவல்லிக்கேணி, நோபிள் அச்சுக்கூடம், *1924*.	8
ஈடு	ஈடு, ,, (நான்காம் பத்து)	,,	சென்னை, கணேச அச்சுக் கூடம், *1924*.	8
ஈடு	ஈடு, ,, (ஐந்தாம் பத்து)	,,	திருவல்லிக்கேணி, நோபிள் அச்சுக்கூடம், *1926*.	8
ஈடு	ஈடு, ,, (ஆறாம் பத்து)	,,	,, *1927*.	8
ஈடு	ஈடு, ,, (ஏழாம் பத்து)	,,	,, *1928*.	8
ஈடு	ஈடு, ,, (எட்டாம் பத்து)	,,	,, *1929*.	8
ஈடு	ஈடு, ,, (ஒன்பதாம் பத்து)	,,	,, *1929*.	8
ஈடு	ஈடு, ,, (பத்தாம் பத்து)	,,	,, *1930*.	8
ஈடு, ஆறா.	திருவாய்மொழி வியாக்யானம்: ஆறாயிரப்படி	சே. கிருஷ்ணமாசாரியார்		8
ஈடு, ஒன்ப.	ஈடு, ஒன்பதாயிரப்படி			8
ஈடு, பன்னீ.	ஈடு, பன்னீராயிரப்படி			8
ஈடு, ஜீ (அ) ஈடு, அரும்.	ஈடு, ஜீயரரும்பதம்			8
உண்மைநெறி.	மெய்கண்ட சாத்திரம்: உண்மைநெறி விளக்கம்	உமாபதி சிவாசாரியார்	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, *1974*.	11
உத்தரரா.	உத்தர காண்டம் (ராமாயணம்)	ஒட்டக்கூத்தர்	சென்னை, குயப்பேட்டை, வித்தியா ரத்நாகர அச்சியந்திரசாலை, *1911*.	5
உபதேசகா.	உபதேச காண்டம்	குகனேரியப்ப நாவலர்	சென்னை, கலாரத்நாகர அச்சுக்கூடம்.	5
உபதேசரத்.	உபதேச ரத்தினமாலை	மணவாள மாமுனிகள்	சென்னை, கணேச அச்சுக் கூடம், *1920*.	14

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
உரி.நி.	உரிச்சொல் நிகண்டு	காங்கேயர்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1971.	9
எங்.ஊர்	எங்களூர்	கோவிந்தசாமிராஜு	கார்டியன் பிரஸ், 1925.	14
ஏகாம்.உலா	இரட்டையர் பிரபந்தங்கள்: ஏகாம்பர நாதருலா	இரட்டைப் புலவர்	திருவாவடுதுறை ஆதீனம், 1953.	12
ஏரெழு.	ஏரெழுபது	கம்பர்	வை. மு. கோபாலகிருஷ்ண மாசாரியார் & கம்பெனி, சென்னை.	9
ஏலாதி	ஏலாதி	கணிமேதையார்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1968.	11
ஐங்குறு.	ஐங்குறுநூறு (மூலமும் பழைய உரையும்)	சங்கப் புலவர்கள்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	11
ஐந்திணை ஐம்.	ஐந்திணை ஐம்பது	மாறன் பொறையனார்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	11
ஒழிவி.	ஒழிவிலொடுக்கம்	கண்ணுடைய வள்ளல்	சென்னை, பிரின்ஸ் ஆப் வேல்ஸ் அச்சுக்கூடம், 1906.	5
க.அக.	கதிரைவேற் பிள்ளையின் தமிழ்மொழியகராதி	கதிரைவேற் பிள்ளை	காஞ்சி நாகலிங்க முதலியார் பதிப்பு.	9
கச்சி.வண்டு.	கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடு தூது	கச்சியப்ப முனிவர்	சென்னை, கேஸரி அச்சுக்கூடம், 1931.	12
கடம்ப.பு.	கடம்பவன புராணம்	வீமநாத பண்டிதர்	சென்னை, வித்தியாவர்த்தினி அச்சுக்கூடம்.	5
கணக்.பதி.	கணக்குப் பதிவுநூல்	நடேசையர்	தஞ்சாவூர், லாலி எலக்டிரிக் அச்சுக்கூடம், 1914.	14
கந்தபு.	கந்தபுராணம்	கச்சியப்ப சிவாசாரியார்	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள், 1952.	1
கந்தபு.சுருக்.	கந்தபுராணச் சுருக்கம்	சம்பந்த சரணாலய சுவாமிகள்	சென்னபட்டணம், வித்தியாநுபாலன யந்திரசாலை.	11
கந்தரந்.	கந்தரந்தாதி	அருணகிரிநாதர்	மதராஸ், ரிப்பன் அச்சியந்திரசாலை, 1915.	11

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
கம்பரா.	கம்பராமாயணம்	கம்பர்	கம்பன் கழகம், சென்னை, 1976.	1
கரு.அக.	கருப்பொருளகராதி			9
கருவூ.குருநூல்	கருவூரார் குருநூல்			9
கல்லா.	கல்லாடம்	கல்லாடனார்	மர்ரே எஸ். ராஜம், 1957.	5
கலிங்.	கலிங்கத்துப்பரணி (மூலமும் உரையும்)	செயங்கொண்டார்	ஆ. வி. கன்னைய நாயுடு, சென்னை, 1949.	14
கலித்.	கலித்தொகை (மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்)	சங்கப் புலவர்கள்	பாகனேரி. காசிவிசுவநாதன் செட்டியார், 1949.	13
கலைசைச்.	கலைசைச் சிலேடை வெண்பா	தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர்	தஞ்சாவூர், கல்யாண சுந்தரம் முத்திராசாலை, 1908.	11
கலைமகள்	கலைமகள்		எம். எல். ஜே. பிரஸ், மயிலாப்பூர், சென்னை.	16
கவிகுஞ்.	கவிகுஞ்சர பாரதி பதம்	கவிகுஞ்சர பாரதி		14
கள்ளர் சரித்.	கள்ளர் சரித்திரம்	ந. மு. வேங்கடசாமி நாட்டார்	டாட்ஸன் பிரஸ், தெப்பக்குளம், திருச்சி, 1923.	14
களவழி.	களவழி நாற்பது	பொய்கையார்	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.	11
களவியற்.	களவியற் காரிகை		,,	9
காசிகாண்.	காசிகாண்டம்	அதிவீரராம பாண்டியர்	சென்னை, ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ், 1895.	5
காஞ்சிப்பு.	காஞ்சிப்புராணம் (முதற் காண்டம்)	சிவஞான சுவாமிகள்	மெய்கண்டார் கழகம், காஞ்சிபுரம், 1937.	5
காஞ்சிப்பு.	காஞ்சிப்புராணம் (இரண்டாம் காண்டம்)	கச்சியப்ப முனிவர்	திருவள்ளுவர் செந்தமிழ்ப் பாடசாலை வெளியீடு, 1953.	5
கால்.வி.	கால்நடை வியாதிகள்	சுப்பிரமணிய முதலியார், வி.	சென்னை, நேசனல் அச்சுக்கூடம், 1904.	14
குமரேச.சத.	குமரேச சதகம்	குருபாத தாசர்	மதறாஸ், ரிப்பன் அச்சியந்திரசாலை, 1905.	11
குருகூர்ப்.	குருகூர்ப் பள்ளு	சடகோபப் புலவர்	The Madras Law Journal Press, Madras, 1932.	11

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
குருபரம்.	குருபரம்பரா ப்ரபாவம் (ஆறாயிரப்படி)	பின்பழகிய பெருமாள் ஜீயர்	சென்னை, கணேச அச்சுக்கூடம்.	14
குருபரம்.	குருபரம்பரா ப்ரபாவம் (பன்னீராயிரப்படி)	பூர்வாசாரியார்கள்	கோமளேசுவரன்பேட்டை சச்சிதானந்த அச்சியந்திரசாலை, 1909.	14
குற்றா. தல.	திருக்குற்றாலத் தல புராணம்	திருகூடராசப்பக் கவிராயர்	திருக்குற்றால தேவஸ்தான வெளியீடு.	5
குறள், பரிமே. உரை	திருக்குறள் — பரிமேலழகர் உரை		வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் &கம்பெனி, சென்னை, 1965.	11
குறள், மணக். உரை	திருக்குறள் — மணக்குடவர் உரை		கோ. வடிவேல் செட்டியார், நோபிள் அச்சியந்திரசாலை, 1925.	11
குறிஞ்சிப்.	பத்துப்பாட்டு : குறிஞ்சிப்பாட்டு	கபிலர்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு, 1918.	10
குறுந்.	குறுந்தொகை	சங்கப் புலவர்கள்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு, 1962.	11
கூர்மபு.	கூர்ம புராணம்	அதிவீரராம பாண்டியர்	தஞ்சாவூர் சரசுவதி மகால் நூல்நிலையம்.	5
கூளப்ப. காதல்	கூளப்பநாயக்கன் காதல்	சுப்பிரதீபக் கவிராயர்	ராய. சொக்கலிங்கன், சவுத் இந்தியா பிரஸ், காரைக்குடி, 1949.	12
கைவல்.	கைவல்ய நவநீதம் (மூலமும் உரையும்)	தாண்டவராய சுவாமிகள்	சென்னை, கமர்ஷியல் அண்டு ஆர்ட் பிரிண்டர்ஸ் லிமிடெட், 1941.	5
கொ. வே.	கொன்றைவேந்தன்	ஔவையார்	மர்ரே எஸ். ராஜம், 1959.	11
கொக்கோ.	கொக்கோகம்	அதிவீரராம பாண்டியர்	ஹேவிளம்பி வருடம், 1898.	9
கொங்க. வாத காவியம்	கொங்கணர்வாத காவியம்			9
கோடீச்சுரக்.	சிவக்கொழுந்து தேசிகன் பிரபந்தத் திரட்டு : கோடீச்சுரக்கோவை	கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	11
கோயிலொ.	கோயிலொழுகு		சென்னை, ஆனந்த முத்திராட்சரசாலை, 1909.	14
கோயிற்பு.	கோயிற்புராணம்	உமாபதி சிவாசாரியார்	சென்னபட்டணம், வித்தியாநுலபான யந்திர சாலை.	5

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
ச.ச.ச.கீர்த்.	சர்வ சமய சமரசக் கீர்த்தனை	வேதநாயகம் பிள்ளை	சென்னை, வாணிவிலாச அச்சுக்கூடம், 1892.	9
சங்.அக.	சங்கத்தகராதி	கதிரைவேற்பிள்ளை	மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை.	9
சடகோபரந்.	சடகோபரந்தாதி	கம்பர்	வை.மு. கோபாலகிருஷ்ண மாசாரியார் & கம்பெனி, சென்னை.	11
சது.	சதுரகராதி	வீரமாமுனிவர்	Madras, The Public Instruction Press, 1860.	9
சம்.அக.	சம்பிரதாயவகராதி		ஸ்ரீவைஷ்ணவ கிரந்த முத்ராபக ஸபை, சென்னை.	9
சம்.அக.கை.	சம்பிரதாயவகராதி கையேடு			9
சரசுவதியந்.	சரசுவதியந்தாதி	கம்பர்	வை.மு. கோபாலகிருஷ்ண மாசாரியார் & கம்பெனி, சென்னை.	11
சரவண. பண விடு.	பணவிடுதூது	இராமநாதபுரம் சரவணப் பெருமாள் கவிராயர்	சென்னை, இராயப் பேட்டை, சாது அச்சுக் கூடம், 1934.	12
சா.அக.	சாம்பசிவம் பிள்ளை அகராதி	சாம்பசிவம் பிள்ளை	The Research Institute of Siddha's Science, Madras, 1931.	9
சாஸனத்.	சாஸனத் தமிழ்க்கவி சரிதம்	மு. இராகவையங்கார்	மு. இராகவையங்கார், திருவல்லிக்கேணி, சென்னை, 1936.	11
சாதகசிந்.	சாதக சிந்தாமணி	தில்லை விநாயகன்	சென்னை, சிற்றம்பல விலாசம் பிரஸ், 1901.	11
சி.சி.	மெய்கண்ட சாத்திரம்: சிவஞான சித்தியார்	அருணந்தி சிவாசாரியார்	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1974.	2
சி.சி.சுபக்.	மெய்கண்ட சாத்திரம்: சிவஞான சித்தியார்-சுபக்கம்	,,	,,	3
சி.சி.பர.	மெய்கண்ட சாத்திரம்: சிவஞான சித்தியார்-பரபக்கம்	,,	,,	3
சி.செ.	சிற்பச் செந்நூல்	வை. கணபதி ஸ்தபதி	தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், தமிழ்நாடு, சென்னை-25, 1978.	14

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
சி.போ.	மெய்கண்ட சாத்திரம்: சிவஞான போதம்	மெய்கண்ட தேவ நாயனார்	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, *1974.*	11
சி.போ.சிற்.	சிவஞான போதம் - சிற்றுரை	சிவஞான முனிவர்	ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், *1968.*	2
சி.போ.பா.	மெய்கண்ட சாத்திரம்: சிவஞான போத பாடியம்	மாதவச் சிவஞான யோகிகள்	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, *1936.*	7
சிகிச்சா.	சிகிச்சாசார சங்கிரகம்	ஸ்ரீயூகி முனிவர்	இலக்கணக் களஞ்சிய அச்சுக்கூடம், நவம்பர், *1886.*	14
சித்.அக.	சித்தவைத்திய அகராதி	இராம. குருசாமிக் கோன்	ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸ், மதுரை, *1933.*	9
சிதம்பரப்.	சிதம்பரப் பாட்டியல்			11
சிந்தா.நி.	சிந்தாமணி நிகண்டு	க. வயித்தியலிங்கர்	சென்னை, இலட்சுமி விலாச அச்சுக்கூடம், தாது வருடம், சித்திரை மாதம்.	9 (அ) 14
சிலப்.	சிலப்பதிகாரம் (மூலமும் அரும்பத உரையும் அடியார்க்குநல்லாருரையும்)	இளங்கோவடிகள்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு, 1955.	3
சிவக்.பிரபந்.	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தத் திரட்டு	கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு, 1932.	12
சிவதரு.	சிவதருமோத்தரம்	மறைஞான சம்பந்தர்	சென்னை, மீனாட்சியம்மை கலாநிதி அச்சுக்கூடம், *1888.*	5
சிவப்.கட்.	சிவப்பிரகாசக் கட்டளை		மனோன்மணி விலாசம் பிரஸ், மதுரை, *1903.*	9
சிவப்பிர.	மெய்கண்ட சாத்திரம்: சிவப்பிரகாசம்	உமாபதி சிவாசாரியார்	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1974.	11
சிறுபாண்.	பத்துப்பாட்டு: சிறுபாணாற்றுப்படை	இடைகழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு, 1918.	10
சினேந்.	சினேந்திரமாலை	சைனமா முனிவர்	சென்னை, சூளை, பெரிய நாயகியம்மன் அச்சுக்கூடம், *1938.*	11

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
சீகாழித்.	சீகாழித்தலபுராணம்	அருணாசலக் கவிராயர்	சென்னை, ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடம், விஜய வருடம், மாசி மாதம்.	5
சீவக.	சீவகசிந்தாமணி	திருத்தக்கதேவர்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு, *1969*.	11
சீவரட்.	சீவரட்சாமிர்தம்	சுப்பிரமணிய பண்டிதர்	சென்னை, மனோன்மணி விலாச அச்சுக்கூடம், கலியுகாதி 4995, ஜய வருடம்.	14
சு.வை.ர.	சுதேச வைத்திய ரத்தினம்	சந்திரசேகர், எஸ்.	சென்னை, கார்டியன் அச்சுக்கூடம், *1916*.	14
சுக்கிரநீதி	சுக்கிரநீதி	பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்	Part at Madras: The Indian Printing Works and Part at Triplicane: The Noble Press, 1926.	14
சூடா.	சூடாமணி நிகண்டு	மண்டலபுருடன்	சென்னபட்டணம், வித்தியாநுபாலன யந்திர சாலை.	9 (அ) 13
சூடா.உள்.	சூடாமணி உள்ளமுடையான்	திருக்கோட்டியூர் நம்பி	S. P. V. Press, Madras, 1910.	11
சூத.	சூதசங்கிதை	தேவராஜ பிள்ளை	மதராஸ், ரிப்பன் அச்சியந்திரசாலை, மன்மத வருடம், பங்குனி மாதம்.	2
சூளா.	சூளாமணி	தோலாமொழித்தேவர்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	5
செங்கழு.விநா. பிள்.	செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்	சிவஞான சுவாமிகள்	சென்னை, இந்து தியாலாஜிகல் யந்திரசாலை.	5
செந்.	செந்தமிழ்ப் பத்திரிகை			16
சேக்கிழார்.பு.	சேக்கிழார் நாயனார் புராணம்	உமாபதி சிவாசாரியார்	ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள், *1964*.	11
சேதுபு.	சேதுபுராணம்	நிரம்பவழகிய தேசிகர்	சென்னபட்டணம், வித்தியாநுபாலன யந்திர சாலை.	5
சைவச.	சைவசமய நெறி	மறைஞான சம்பந்த நாயனார்	,,	5
செ.அக.	சென்னைப் பல்கலைக்கழகத்தமிழ் அகராதி		சென்னைப் பல்கலைக் கழகம், *1982*.	9
சொக்க.உலா.	மதுரைச் சொக்கநாதருலா	புராணத் திருமலைநாதர்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு, *1931*.	12

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
சோதிட.அக.	சோதிடப்பேரகராதி	எஸ். கூடலிங்கம் பிள்ளை	மீனலோசனி பிரஸ், 1924.	9
சோதிட.சிந்.	சோதிட கிரக சிந்தாமணி	இராமலிங்கக் குருக்கள்	ஆர். ஜி. பதி கம்பெனி, சென்னை-1, 1964.	14
சோழவமி.	சோழவமிச சரித்திரச் சுருக்கம்	கோபிநாதராவ், து. அ.	மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை, 1925.	14
சௌந்.	சௌந்தரியலகரி	கவிராச பண்டிதர்	உள்ளொளி பதிப்பகம், சென்னை-1, 1967.	11
ஞானஸாரம்	நித்தியாநுசந்தானம் ஞானஸாரம்	சே. கிருஷ்ணமாசாரியார்	வைஷ்ணவ சம்பிரதாய புத்தகசாலை, சென்னை.	11
ஞானவா.	ஞானவாசிட்டம்	வசிட்டர்	ஸ்ரீ வீர சுப்பைய சுவாமிகள் மடம், சென்னை, 1928.	5
ஞானா.	ஞானாமிர்தம்	வாகீச முனிவர்	அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1954.	3
த.நி.போ.	தத்துவ நிசானுபோக சாரம்	தத்துவலிங்க தேவர்		11
தக்கயாகப்.	தக்கயாகப் பரணி	ஒட்டக்கூத்தர்	உ. வே. சாமிநாதையர் நூலகம், அடையாறு, சென்னை, 1960.	11
தஞ்.சரசு.	தஞ்சாவூர் சரசுவதி மகால் புத்தக அட்டவணை	பண்டித L. உலகநாத பிள்ளை	ஸ்ரீ வாணி விலாஸ் பிரஸ்.	16
தஞ்சைவா.	தஞ்சைவாணன் கோவை (மூலமும் உரையும்)	பொய்யாமொழிப் புலவர்	யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, சைவப் பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம், 1936.	11
தண்டலை.	தண்டலையார் சதகம்	படிக்காசுப் புலவர்	பி. இரத்தினநாயகர் சன்ஸ், சென்னை.	11
தண்டிகை.பள்.	தண்டிகைக் கனகராயன் பள்ளு	மாவை சின்னக் குட்டிப் புலவர்	சாது அச்சுக்கூடம், சென்னை, 1932.	11
தண்டி.	தண்டியலங்காரம்	தண்டியாசிரியர்	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.	5
தணிகைப்பு.	தணிகைப் புராணம்	கச்சியப்ப முனிவர்	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1965.	5

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
தத்துவப்.	தத்துவப் பிரகாசம்	தத்துவப் பிரகாச சுவாமிகள்	யாழ்ப்பாணம், சோதிடப் பிரகாச யந்திரசாலை, நந்தன வருடம், மாசி மாதம்.	11
தமிழ்நாவ.	தமிழ்நாவலர் சரிதை		சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1949.	11
தருக்கசங்.	தருக்க சங்கிரகம்	சிவஞான சுவாமிகள்	சென்னபட்டணம், வித்தியாநுபாலன யந்திர சாலை.	14
தனிப்பா.தி. 1	தனிப்பாடற்றிரட்டு (உரையுடன்)முதற் பாகம்	உரை : காஞ்சிபுரம் மகாவித்வான் இராமசாமி நாயுடு	இட்டா பார்த்தசாரதி நாயுடு குமாரன் கோவிந்தராஜுலு நாயுடு, 1932.	15
தனிப்பா.தி. 2	தனிப்பாடற்றிரட்டு (உரையுடன்) இரண்டாம் பாகம்	,,	வித்யாரத்நாகர அச்சுக் கூடம், சென்னை, 1933.	15
தாசில்தார் நா.	தாசில்தார் நாடகம்	காசிவிசுவநாதன் முதலியார்		14
தாயு.	தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு (மூலமும் உரையும்)	தாயுமானசுவாமிகள்	பி. இரத்தின நாயகர் சன்ஸ், சென்னை, 1930.	5
திணைமாலை.	திணைமாலை நூற்றைம்பது	கணிமேதாவியார்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	11
திரிகடு.	திரிகடுகம்	நல்லாதனார்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	11
திருக்களிற்றுப்.	மெய்கண்ட சாத்திரம் : திருக்களிற்றுப் படியார்	உய்யவந்த தேவ நாயனார்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	11
திருக்காளத்.பு.	திருக்காளத்திப் புராணம்	ஆனந்தக்கூத்தர்	சென்னை, வைஜயந்தி அச்சுக்கூடம், 1912.	3 (அ) 5
திருக்கோ.	திருக்கோவையார் (பேராசிரியர் உரையும் பழைய உரையும்)	மாணிக்கவாசக சுவாமிகள்	ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள், 1972.	11
திருச்செந்திினிரோட்ட.	சிவப்பிரகாசர் பிரபந்தத் திரட்டு: திருச்செந்தினிரோட்டக யமக வந்தாதி	சிவப்பிரகாச சுவாமிகள்	பாகனேரி, காசிவிசுவநாதன் செட்டியார், 1941.	11

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
திருநூற்.	திருநூற்றந்தாதி	அவிரோதியாழ்வார்	மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை, 1905.	11
திருநெல்.பு.	திருநெல்வேலித் தல புராணம்	நெல்லையப்பக் கவி ராயர்		5
திருப்பு.	திருப்புகழ்	அருணகிரிநாதர்	திருப்புகழமிர்தம் காரியா லயம், சென்னை-2, பார்க்கர் அச்சகம், சென்னை-1, 1961.	11
திருமந்.	திருமந்திரம்	திருமூலநாயனார்	ஸ்ரீகாசிமடம், திருப்பனந் தாள்.	11
திருமுருகு.	பத்துப்பாட்டு: திரு முருகாற்றுப்படை	நக்கீரர்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	10
திருவரங்.கலம்.	அஷ்டப்பிரபந்தம்: திருவரங்கக் கலம் பகம்	பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்	வை.மு. கோபாலகிருஷ்ண மாசாரியார் & கம்பெனி, சென்னை, 1966.	11
திருவரங்கத் தந்.	அஷ்டப்பிரபந்தம்: திருவரங்கத்தந் தாதி	,,	,,	11
திருவருட்.	மெய்கண்ட சாத்தி ரம்: திருவருட் பயன்	உமாபதி சிவாசாரி யார்	சைவ சிந்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	11
திருவள்ளுவ மா.	திருவள்ளுவமாலை	சங்கப் புலவர்கள்	வை.மு. கோபாலகிருஷ்ண மாசாரியார் & கம்பெனி, சென்னை.	11
திருவாச.	திருவாசகம்	மாணிக்கவாசக சுவாமிகள்	தருமபுர ஆதீனம், ஞான சம்பந்தம் அச்சகம், தருமபுரம், 1966.	3
திருவாத.	திருவாதவூரடிகள் புராணம்	கடவுள் மாமுனிவர்	யாழ்ப்பாணம், வித்தியாநு பாலன யந்திரசாலை.	5
திருவாய்.நூற்.	திருவாய்மொழி நூற் றந்தாதி	மணவாள மாமுனி கள்	சென்னை, கணேச அச்சுக் கூடம், 1920.	11
திருவாலவா.	திருவாலவாயுடை யார் திருவிளை யாடற் புராணம்	பெரும்பற்றப்புலியூர் நம்பி	டாக்டர் உ. வே. சா. பதிப்பு, 1972.	3
திருவானைக்.	திருவானைக்காப் புராணம்	கச்சியப்ப சுவாமிகள்	சென்னை, ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக்கூடம், 1903.	5
திருவிளை.	திருவிளையாடற் புராணம்	பரஞ்சோதி முனிவர்	சென்னை, வித்தியா ரத்நாகர அச்சுக்கூடம், 1928.	5

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
திருவேங்.சத.	திருவேங்கட சதகம்	நாராயண பாரதியார்	பி. இரத்தின நாயகர் சன்ஸ், சென்னை, 1948.	11
திவ். பெரியாழ்.	நாலாயிர திவ்வியப் பிரபந்தம்: பெரியாழ்வார் திருமொழி	பெரியாழ்வார்	திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை, 1973.	8
திருப்பல்.	திருப்பல்லாண்டு	,,	,,	8
திருப்பா.	திருப்பாவை	ஆண்டாள்	,,	8
நாய்ச்.	நாய்ச்சியார் திருமொழி	,,	,,	8
பெருமாள்தி.	பெருமாள் திருமொழி	குலசேகரப்பெருமாள்	,,	8
திருச்சந்த.	திருச்சந்த விருத்தம்	திருமழிசைப்பிரான்	,,	8
திருமாலை	திருமாலை	தொண்டரடிப்பொடி யாழ்வார்	,,	8
திருப்பள்ளி.	திருப்பள்ளியெழுச்சி	,,	,,	8
அமலனாதி.	அமலனாதிப்பிரான்	திருப்பாணாழ்வார்	,,	8
கண்ணிநுண்.	கண்ணிநுண்சிறுத்தாம்பு	மதுரகவியாழ்வார்	,,	8
பெரியதி.	பெரிய திருமொழி	திருமங்கையாழ்வார்	,,	8
திருக்குறுந்.	திருக்குறுந்தாண்டகம்	,,	,,	8
திருநெடுந்.	திருநெடுந்தாண்டகம்	,,	,,	8
திருவாய்.	திருவாய்மொழி	நம்மாழ்வார்	,,	8
திவ். இயற். முதல் திருவந்.	திவ். இயற்பா: முதல் திருவந்தாதி	பொய்கையாழ்வார்	,,	8
இரண்டாந் திருவந்.	இரண்டாந் திருவந்தாதி	பூதத்தாழ்வார்	,,	8
மூன்றாந் திருவந்.	மூன்றாந் திருவந்தாதி	பேயாழ்வார்	,,	8
நான்முகன்	நான்முகன் திருவந்தாதி	திருமழிசையாழ்வார்	,,	8
திருவிருத்.	திருவிருத்தம்	நம்மாழ்வார்	,,	8

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
திவ். இயற். திருவாசி.	திவ். இயற்பா: திருவாசிரியம்	நம்மாழ்வார்	திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை, 1973.	8
பெரிய திருவந்.	பெரிய திருவந்தாதி	,,	,,	8
திருவெழுகூ.	திருவெழுகூற்றிருக்கை	திருமங்கையாழ்வார்	,,	8
சிறிய திரும.	சிறிய திருமடல்	,,	,,	8
பெரிய திரும.	பெரிய திருமடல்	,,	,,	8
இராமானுச.	இராமானுச நூற்றந்தாதி	திருவரங்கத்தமுதனார்	,,	8
திவா.	சேந்தன் திவாகரம்	சேந்தனார்	சென்னை, மனோன்மணி விலாச அச்சுக்கூடம், 1904.	9
தெய்வச். விறலி.	தெய்வச்சிலையார் விறலிவிடுதூது	குமாரசுவாமி அவதானி	பி. என். பிரஸ், 1936.	12
தென்னாலிரா.	தென்னாலி ராமன் கதைகள்			9
தேசிகப்.	தேசிகப் பிரபந்தம்	வேதாந்த தேசிகர்	சென்னை, ஸ்ரீவைஷ்ணவ முத்ராலயம், 1928.	3
தேவா.	தேவாரம்: திருமுறை 1, 2, 3	திருஞானசம்பந்த மூர்த்திகள்	தருமபுர ஆதீனம்.	4
தேவா.	தேவாரம்: திருமுறை 4, 5, 6	திருநாவுக்கரசு சுவாமிகள்	,,	4
தேவா.	தேவாரம்: திருமுறை 7	சுந்தரமூர்த்தி சுவாமிகள்	,,	4
தைலவ.	தைலவருக்கச் சுருக்கம்	தேரையர்	சென்னை, எம்பிரஸ் ஆப் இண்டியா அச்சுக்கூடம், ஹேவிளம்பி வருடம், பங்குனி மாதம்.	5
தொல்.எழுத்து. இளம்.	தொல்காப்பியம்: எழுத்ததிகாரம், இளம்பூரணருரை	இளம்பூரணர்	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.	1
தொல்.எழுத்து. நச்.	தொல்காப்பியம்: எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியருரை	நச்சினார்க்கினியர்	,,	1
தொல்.சொல். இளம்.	தொல்காப்பியம்: சொல்லதிகாரம் இளம்பூரணருரை	இளம்பூரணர்	,,	1

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
தொல்.சொல். சேனா.	தொல்காப்பியம்: சொல்லதிகாரம், சேனாவரையருரை	சேனாவரையர்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	1
தொல்.சொல். தெய்வச்.	தொல்காப்பியம்: சொல்லதிகாரம், தெய்வச்சிலையாருரை	தெய்வச்சிலையார்	,,	1
தொல்.சொல். நச்.	தொல்காப்பியம்: சொல்லதிகாரம், நச்சினார்க்கினியருரை	நச்சினார்க்கினியர்	,,	1
தொல். பொருள். இளம்.	தொல்காப்பியம்: பொருளதிகாரம், இளம்பூரணருரை	இளம்பூரணர்	,,	1
தொல். பொருள்.நச்.	தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியருரை	நச்சினார்க்கினியர்	,,	1
தொல். பொருள். பேரா.	தொல்காப்பியம்: பொருளதிகாரம், பேராசிரியருரை	பேராசிரியர்	,,	1
தொன்.வி.	தொன்னூல் விளக்கம்	வீரமாமுனிவர்	கனம் ஜி. மெக்கன்ஜி காபன் அய்யர், அர்ச். சூசையப்பர் அச்சுக்கூடம், பாபம்ஸ் சாலை, சென்னை, 1891.	3
நம்பியகப்.	அகப்பொருள் விளக்கம்	நாற்கவிராச நம்பி	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1947.	11
நல்.பாரதம்	நல்லாப்பிள்ளை பாரதம்	நல்லாப்பிள்ளை	சென்னை, வித்தியா ரத்நாகர அச்சுக்கூடம், 1911.	1
நல்வழி	நல்வழி	ஔவையார்	மர்ரே எஸ். ராஜம், சென்னை, 1959.	11
நவநீதப்.	நவநீதப் பாட்டியல் (மூலமும் உரையும்)	நவநீதநடனார்	உ. வே. சா. நூல்நிலைய வெளியீடு, 1961.	11
நள.	நளவெண்பா	புகழேந்திப்புலவர்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	5

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
நற்.	நற்றிணை	சங்கப் புலவர்கள்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	11
நன்.	நன்னூல்	பவணந்தி முனிவர்	,,	11
நன்.இராமா.	நன்னூல்: இராமானுசக்கவிராயர் உரை	இராமானுசக் கவிராயர்	இ.மா.கோபாலகிருஷ்ணக் கோனார், மதுரை, 1940.	11
நன்.காண். உரை.	நன்னூல்: சே. கிருஷ்ணமாசாரியார் காண்டிகையுரை	சே. கிருஷ்ணமாசாரியார்	வை.மு. கோபாலகிருஷ்ண மாசாரியார் & கம்பெனி, சென்னை.	11
நன்.சங்கர நமச்.	நன்னூல்: சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை	சங்கரநமச்சிவாயர்	,,	11
நன்.நாவலர்.	நன்னூல்: ஆறுமுக நாவலர் காண்டிகை யுரை	ஆறுமுகநாவலர்	சைவ வித்யாநுபாலன யந்திரசாலை, சென்னை.	11
நன்.மயிலை.	நன்னூல்: மயிலைநாதருரை	மயிலைநாதர்	ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை, 1953.	11
நன்.விருத்தி.	நன்னூல்: சிவஞான முனிவர் விருத்தியுரை	சிவஞானமுனிவர்	திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1957.	11
நன்னெறி	நன்னெறி	சிவப்பிரகாச சுவாமிகள்	மர்ரே எஸ். ராஜம், சென்னை, 1959.	11
நாநார்த்த.	நாநார்த்த தீபிகை	முத்துசாமிப்பிள்ளை	கையெழுத்துப் படி	9
நாமதீப.	நாமதீப நிகண்டு	சிவசுப்பிரமணியக் கவிராயர்	The B. N. Press, Madras, 1930.	9
நாலடி.	நாலடியார்	சமண முனிவர்கள்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	11
நான்மணிக்.	நான்மணிக்கடிகை	விளம்பிநாகனார்	,,	11
நீதிநெறி.	நீதிநெறிவிளக்கம்	குமரகுருபர சுவாமிகள்	மர்ரே எஸ். ராஜம், சென்னை.	11
நீதிவெண்.	நீதிவெண்பா		சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	11
நீர்நிறக்.	நீர்நிறக்குறி சாத்திரம்	தேரையர்	எம்பிரஸ் ஆப் இந்தியா, அச்சுக்கூடம், சென்னை, கலி 4998, ஏவிளம்பி பங்குனி.	14

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
நீலகேசி	நீலகேசி		சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	11
நூற்றெட்டுத். திருப்பு.	நூற்றெட்டுத் திருப் பதித் திருப்புகழ்	குரவை இராமாநுஜ தாசர்	மதராஸ், ரிப்பன் அச் சியந்திரசாலை, 1917.	11
நெடுநல்.	பத்துப்பாட்டு: நெடுநல்வாடை	நக்கீரர்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	10
நெல்விடு.	நெல்விடுதூது		சென்னை, சாது அச்சுக் கூடம், 1933.	12
நேமி.	நேமிநாதம்	குணவீரபண்டிதர்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1973.	5
நைடத.	நைடதம்	அதிவீரராம பாண்டி யர்	பி. இரத்தின நாயகர் சன்ஸ், சென்னை, 1928.	5
பச்.மூ.	பச்சிலை மூலிகை அக ராதி			9
பஞ்ச.திருமுக.	திருமுக விலாசம்	வில்லியப்ப பிள்ளை	ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸ், மதுரை, 1932.	14
பட்டினத்.	பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்தத்திரட்டு	பட்டினத்துப் பிள்ளை	S. R. மாணிக்க முதலியார், 1918.	5
பட்டினப்.	பத்துப்பாட்டு: பட்டினப்பாலை	உருத்திரங்கண்ண னார்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	10
பணவிடு.	பணவிடுதூது (மாதைத் திரு வேங்கடநாதர் பேரில்)		மதராஸ், ரிப்பன் அச் சியந்திரசாலை, 1908.	12
பதார்த்த.	பதார்த்த குண சிந்தாமணி	பதினெண் சித்தர்	பி. இரத்தின நாயகர் சன்ஸ், சென்னை, 1965.	11
பதிற்றுப்.	பதிற்றுப்பத்து	சங்கப் புலவர்கள்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	3
பதினொ.	பதினொராந் திரு முறை	திருவாலவாயுடை யார், காரைக் காலம்மையார், ஐயடிகள் காட வர் கோன் நாய னார், சேரமான் பெருமாள் நாய னார், நக்கீர தேவ நாயனார், கல்லாட தேவ நாயனார்,	ஸ்ரீகாசிமடம், திருப்பனந் தாள்.	5

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
		கபிலதேவ நாயனார், பரணதேவ நாயனார், இளம் பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி.		
பரத.	பரத சாத்திரம்	அரபத்த நாவலர்	சென்னை, தண்டையார் பேட்டை, இலட்சுமி விலாச அச்சுக்கூடம், 1876.	5
பரராசசே.	பரராசசேகரம்	ஐ. பொன்னையபிள்ளை	யாழ்ப்பாணம், சைவப் பிரகாச யந்திரசாலை, 1928.	11
பரி.அக.	பரிபாஷை அகராதி			9
பரிபா.	பரிபாடல் (மூலமும் பரிமேலழகர் உரையும்)	சங்கப் புலவர்கள்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	3
பழமொழி	பழமொழி நானூறு	முன்றுறையரையனார்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1974.	11
பறாளை. பள்ளு	பறாளை விநாயகர் பள்ளு	சம்புலிங்கம், சி. வி.	சென்னை.	11
பன்.பாட்.	பன்னிருபாட்டியல்	பொய்கையார் முதலிய சங்கத்துச் சான்றோர்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1978.	11
பாகவத.	செவ்வைச்சூடுவார் பாகவதம்	செவ்வைச்சூடுவார்	திருமலை — திருப்பதி தேவஸ்தான வெளியீடு, 1949.	5
பாப்பா.	பாப்பாவினம்		மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை, 1932.	11
பாரத.	மகாபாரதம்	வில்லிபுத்தூரார்	மர்ரே எஸ். ராஜம், சென்னை.	5
பாரத வசனம்	பாரத வசனம்	இராமானுஜாசாரியார், எம். வி.	மதராஸ், எஸ். ஏ. எம். பிரஸ், 1923.	14
பாலவா.	பாலவாகடத்திரட்டு	பதினெண் சித்தர்	இட்டா பார்த்தசாரதி நாயுடு சன்ஸ், சென்னை.	11
பிங்.	பிங்கல நிகண்டு	பிங்கல முனிவர்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1968.	9 (அ) 13

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
பிர.விவே.	பிரயோக விவேகம்	குருகூர்ச் சுப்பிரமணிய தீக்ஷிதர்	வித்தியாநுபாலன அச்சியந்திரசாலை, சென்னபட்டணம், 1952.	11
பிரபுலிங்க.	பிரபுலிங்க லீலை	சிவப்பிரகாச சுவாமிகள்	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.	5
பிரபோத.	பிரபோத சந்திரோதயம்	மாதைத் திருவேங்கடநாதர்	பெரியகுளம், ஸ்ரீமீனாம்பிகை அச்சியந்திரசாலை.	3
பிரமோத்.	பிரமோத்தர காண்டம்	வரதுங்கராம பாண்டியர்	சென்னை, ஸ்ரீபத்மநாப விலாச அச்சியந்திரசாலை, 1907.	3
பு.வெ.	புறப்பொருள் வெண்பாமாலை	ஐயனாரிதனார்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	3
புதுக்.கல்.	புதுக்கோட்டைக் கல்வெட்டுகள்		ஸ்ரீபிரஹதாம்பா ஸ்டேட் பிரஸ், புதுக்கோட்டை, 1929.	14
புலியூரந்.	புலியூரந்தாதி	மயில்வாகனப்புலவர்	பருத்தித்துறை, கலாநிதி யந்திரசாலை, 1906.	11
புறநா.	புறநானூறு	சங்கப் புலவர்கள்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	13
பெண்மதி மாலை	பெண்மதிமாலை	எஸ். வேதநாயகம் பிள்ளை	வி. ஜி. ஆரோக்கியசாமி அண்டு பிரதர்ஸ், மாயவரம், 1927.	14
பெத்லகேம் குறவஞ்சி	பெத்லகேம்குறவஞ்சி	வேதநாயக சாஸ்திரி	தஞ்சை, ஈ. வேதபோதகம் பிள்ளை, 1938.	5
பெரியபு.	பெரியபுராணம்	சேக்கிழார்	ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள்.	5
பெரிய மாட்.	பெரிய மாட்டு வாகடம்	பதினெண் சித்தர்	சென்னை, எஸ். ஏ. எம். பிரஸ், 1923.	14
பெருங்.	பெருங்கதை	கொங்குவேளிர்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு, 1953.	1
பெருந்தொ.	பெருந்தொகை	இராகவையங்கார், மு.	தமிழ்ச்சங்க முத்திராசாலை, 1935-36.	11
பெரும்பாண்.	பத்துப்பாட்டு: பெரும்பாணாற்றுப்படை	உருத்திரங்கண்ணனார்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	10
பேரகத்.	பேரகத்தியத் திரட்டு	அகத்தியர்	பவானந்தர் கழகம், வேப்பேரி, சென்னை.	11

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
பொதி.நி.	பொதிகை நிகண்டு	சாமிநாத கவிராயர்	The B. N. Press, Madras, 1934.	9
பொருந.	பத்துப்பாட்டு: பொருநராற்றுப் படை	முடத்தாமக்கண்ணியார்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	10
மகாராஜா துறவு	மகாராஜா துறவு (மூலமும் உரையும்)	குமாரதேவர்	எம். நடனசுந்தரம் பிரதர்ஸ், புதுமண்டபம், மதுரை, 1935.	11
மச்சபு.	மச்சபுராணம்	வடமலையப்ப பிள்ளையன்	சென்னை, மினர்வா அச்சியந்திரசாலை, 1900.	5
மஞ்சிகை நி.	மஞ்சிகை நிகண்டு			9
மணிமே.	மணிமேகலை (மூலமும் அரும்பதவுரையும்)	சாத்தனார்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு, 1965.	3
மதி.களஞ்.	மதிமோசக் களஞ்சியம்	பெ. சூ. பாலராஜ பாஸ்கரர்	ஷண்முகானந்தா புத்தக சாலை, 1925.	16
மதுரைக்.	பத்துப்பாட்டு: மதுரைக்காஞ்சி	மாங்குடி மருதனார்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	10
மதுரைக்கலம்.	குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத் திரட்டு: மதுரைக் கலம்பகம்	குமரகுருபர சுவாமிகள்	,,	11
மதுரைப் பதிற்றுப்.	மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி		சென்னை, கலாரத்நாகரம் பிரஸ், 1891.	11
மருதூரந்.	மருதூரந்தாதி	தலைமலைகண்ட தேவர்	சென்னை, வித்தியாநு பாலன யந்திரசாலை.	11
மலை.	வைத்திய மலையகராதி	பதினெண் சித்தர்	சென்னை, ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக்கூடம், 1908.	9
மலைபடு.	பத்துப்பாட்டு: மலைபடுகடாம்	பெருங்கௌசிகனார்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	10
மறை.அக.	மறைபொருள் வெளிப்பொருள் விளக்க அகராதி			9
மறைசை.	மறைசையந்தாதி	சின்னத்தம்பிப் புலவர்	மதராஸ், ரிப்பன் அச்சி யந்திரசாலை, 1912.	11
மனையடி.	மனையடி சாத்திரம்	மயன்	சென்னை, வாணி விலாசம் அச்சுக்கூடம், 1929.	14

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
மனோன்.	மனோன்மணீயம்	சுந்தரம் பிள்ளை	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	10
மாட்டுவை.சிந்.	மாட்டு வைத்திய சிந்தாமணி			14
மாற.	மாறனலங்காரம்	திருக்குருகைப் பெருமாள் கவிராயர்	மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு, 1929.	11
மான்விடு.	மான்விடுதூது	குழந்தைக் கவிராயர்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	12
மிருதிசந்.	மிருதிசந்திரிகா			11
மீனாட்சிசுந். சரித்.	மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்	சாமிநாதையர், உ. வே.	டாக்டர் உ. வே. சா. பதிப்பு.	16
மீனாட். பிள்ளைத்.	குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத் திரட்டு: மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்	குமரகுருபர சுவாமிகள்	,,	5
முத்துவீ.	முத்துவீரியம்	உறையூர் வித்வான் முத்துவீர உபாத்தியாயர்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	5
முத்தொள்.	முத்தொள்ளாயிரம்		,,	11
முல்லைப்.	பத்துப்பாட்டு: முல்லைப்பாட்டு	நப்பூதனார்	டாக்டர் உ. வே. சா. பதிப்பு, 1918.	10
முல்லையந்.	திருமுல்லைவாயிலந்தாதி	சிவஞான முனிவர்	சென்னை, இந்து தியாலாஜிகல் யந்திரசாலை, நந்தன ஸ்ரீ, சிங்க மதி.	11
மூ.அ.	வைத்திய மூலிகை விரிவகராதி	பதினெண் சித்தர்	சென்னை, வித்தியாரத்நாகர அச்சுக்கூடம், 1902.	9
மூதுரை	மூதுரை என்னும் வாக்குண்டாம்	ஔவையார்	மர்ரே எஸ். ராஜம், சென்னை.	11
மேருமந்.	மேருமந்தர புராணம்	வாமன முனிவர்	சென்னை, சாது அச்சுக்கூடம், 1923.	3
யசோதர.	யசோதர காவியம்	ஜைன முனிவர்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	3

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
யா.கா.	யாப்பருங்கலக் காரிகை	அமிதசாகரர்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	11
யாப்.வி.	யாப்பருங்கலம் விருத்தியுரை	அமிதசாகரர்	பவானந்தர் கழகம், வேப்பேரி, சென்னை.	6
யாழ்.அக.	யாழ்ப்பாணத்து மானிப்பாய் அகராதி	சந்திரசேகரப் புலவர்	அமெரிக்கன் மிஷன் பிரஸ், யாழ்ப்பாணம், 1842.	9
ரகஸ்ய.	ரகஸ்யத்ரய ஸாரம்	ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகன்	ஸ்ரீ மாலோல முத்ராலயம், திருவள்ளூர், 1954.	14
வ.நூ.வ.	வடமொழி நூல் வரலாறு	பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி	அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,	14
வாக்குண்.	வாக்குண்டாம்	ஔவையார்	மர்ரே எஸ். ராஜம், சென்னை.	11
விசாரசா.	ஸ்ரீ விசாரசாகரம்	சிவராயர், ஆ.	சென்னை, ரிப்பன் பிரஸ், 1914.	14
விதான.	விதானமாலை	நாராயணசுவாமிகள்	மதராஸ், ரிப்பன் அச்சியந்திரசாலை, 1900.	5
விநா.அகவல்	விநாயகர் அகவல்	ஔவையார்	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.	11
விநாயகபு.	விநாயக புராணம்	கச்சியப்ப முனிவர்	சென்னை, கணேச அச்சியந்திரசாலை, 1910.	3
விருத்தாசல.	விருத்தாசல புராணம்	ஞானக்கூத்தர்	சென்னை, புரசை, நற்றமிழ் விலாச அச்சியந்திரசாலை, 1908.	5
விவசா.	விவசாய நூல்	எஸ். பி. நரசிம்மலு நாயுடு	Crescent Press, Coimbatore, 1908.	14
விவிலியம்.	விவிலிய நூல்		The Diocesan Press, Madras, 1923.	17
விறலிவிடு.	விறலிவிடுதூது	சுப்பிரதீபக் கவிராயர்	லட்சுமி விலாச புத்தகசாலை, திருவல்லிக்கேணி, சென்னை, 1928.	12
வின்.	வின்சுலோ அகராதி		Asian Educational Service, New Delhi.	9
வீரசோ.	வீரசோழியம்	புத்தமித்திரனார்	பவானந்தர் கழகம், வேப்பேரி, சென்னை, 1942.	5

நூலின் முதற் குறிப்பு	நூல்	ஆக்கியோர்/ தொகுத்தோர்	பதிப்பித்தோர்/ பதிப்பித்த இடமும் காலமும்	மேற்கோள் ஆண்ட முறையைக் காட்டும் எண்
வெங்கைக்கலம்.	சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத் திரட்டு: வெங்கைக் கலம்பகம்	சிவப்பிரகாச சுவாமிகள்	பாகனேரி, காசிவிசுவநாதன் செட்டியார்.	11
வெங்கைக்கோ.	சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத் திரட்டு: வெங்கைக்கோவை	,,	,,	11
வெண்பாப்.	வெண்பாப் பாட்டியல்	குணவீர பண்டிதர்	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1908.	5
வேதா.சூ.	வேதாந்த சூளாமணி	சிவப்பிரகாச சுவாமிகள்	கோ. வடிவேலு செட்டியார் பதிப்பு, சென்னை, 1928.	11
வேதாரணியபு.	வேதாரணிய புராணம்	அகோரமுனிவர்	ஸ்ரீ லலிதா அச்சியந்திரசாலை, சென்னை, 1898.	5
வேதாரணியபு. பரஞ்.	வேதாரணிய புராணம்	பரஞ்சோதி முனிவர்	தாம்ஸன் கம்பெனி, சென்னை.	5
வை.மூ.	வைத்திய மூலிகை அகராதி			9
வைத்.சங்.	வைத்திய சார சங்கிரகம்	முத்துக்கருப்ப பிள்ளை	மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை.	14
வைராக்.சத.	வைராக்கிய சதகம்	சாந்தலிங்க சுவாமிகள்	சென்னபட்டணம், வித்தியாநுபாலன யந்திரசாலை.	11
வைராக்.தீப.	வைராக்கிய தீபம்	,,	,,	11
ஜாலத்.	ஜாலத்திரட்டு	பீதாம்பரையர்	B. V. B. Press, Choolai, Madras.	14
ஸ்ரீவசன.	ஸ்ரீ வசனபூஷணம்	பிள்ளை லோகாசாரியார்	தி. கி. நாராயணசாமி நாயுடு, கடலூர், 1970.	14

AUTHORITIES CITED IN THE ETYMOLOGICAL DICTIONARY

Abbreviation (1)	Name of the Book (2)	Author (3)	Place and date of Publication (4)
(A.)	Quinze Cents Plantes dans L'inde	Achart, A. Dj.	Imprimerie Des Missions Etrangeres, Pondicherry, 1905.
(A.M.)	The English - English - Tamil Dictionary	Mootootamby Pillai, A.	The Navalar Press, Jaffna, 1911, 2nd Edition.
(Anc. Dec.)	Ancient Deccan	K. G. Subrahmanya Aiyar	
(B.)	Some Madras Trees	Butterworth, A.	The Methodist Publishing House, Madras, 1911.
(B.E.T.D.)	English-Telugu Dictionary	Charles Philip Brown	Asian Educational Services, New Delhi, 1980.
(B.T.E.D.)	Bhat's Tulu-English Dictionary	M. Mariappa Bhat	Madras University, 1961.
(C.B.E.D.)	Carey's Bengali - English Dictionary	W. Carey	Asian Educational Services, New Delhi, 1981.
(C.C.G.D.F.L.) or (C.G.D.F.L.)	Caldwell's Comparative Grammar of the Dravidian Family of Languages	Rt. Rev. Robert Caldwell	Originally published in 1913 by Kegan Paul, Trench, Trubner & Co., Ltd., London.
(C.D.)	Chambers Twentieth Century Dictionary	Edited by A. M. MacDonald	Allied Publishers, Private, 1975, Reprint.
(C.E.D.)	Chinese-English Dictionary		1979.
(C.E.M.)	Terms from the College of Engineering Manual		Manuscript.
(C.E.P.)	Civil Engineering Papers		The Higginbothams Ltd., Madras, 1869.
(C.G.)	Classified Glossary	Sivaramaiya, C.	The Progressive Press, 1908.
(C.G.E.D.)	Collins Greek - English Dictionary	Harry T. Hionides	Collins Sons & Co., Ltd., 1977.
(C.H.I.)	The Cultural Heritage of India in 5 Volumes	Ramakrishna Mission	Calcutta, 1975.

Abbreviation (1)	Name of the Book (2)	Author (3)	Place and date of Publication (4)
(C.L.D.)	Cassell's Latin Dictionary	D. P. Simpson	Macmillan Publishing Co., 1968.
(C.O.D.)	Concise Oxford Dictionary of Current English	H. W. Fowler & F. G. Fowler	Oxford University Press, 1972, Reprint.
(C.S.E.D.)	Cassell's Spanish-English Dictionary	Revised by Anthony Gooch & Angel Garcia de Paredes	Macmillan Publishing Co., Revised Edition 1980.
(D.)	The Useful Plants of India	Drury, H.	William H. Allen & Co. London, 1873, 2nd Edition.
(D.E.D.)	A Dravidian Etymological Dictionary	T. Burrow & M. B. Emeneau	Clarendon Press, Oxford, 1961.
(D.S.A.)	Dictionary of Slang & Its Analogues	John S. Farmer & W. E. Henley	University Books, New York, 1966.
(E.C.)	Epigraphica Carnatika	The Mysore Government Publication	Government Press, Madras.
(E.C.L.)	Etymological and Comparative Lexicon of Sinhala and Tamil	Edited by Rev. Fr. H. S. Daaviid	1974.
(E.D.S.H.P.)	Encyclopaedic Dictionary of Sanskrit on Historical Principles	A. M. Ghatage	Deccan College, Poona, 1976-78.
(E.I.)	Epigraphica India	Government of India Publication	Government Press, Madras.
(E.M.D.)	Twentieth Century English-Marathi Dictionary—Vol. I & II	N. B. Ranade	Sharad Gogate, Poona, 1977.
(E.S.D.)	English-Sindhi Dictionary	Parmanand Mewaram	Published by Sahitya Akademi, 1981.
(E.T.)	Castes and Tribes of South India	Edgar Thurston	The Government Press, Madras, 1909.
(E.T.D.)	English-Tamil Dictionary	Madras University, Chief Editor, A. Chidambaranatha Chettiar	University of Madras, 1965.
(F.) or (F.B.)	A Malabar and English Dictionary	Johann Philip Fabricius and John Christian Breithaupt.	Vepery, Madras, 1809.

Abbreviation (1)	Name of the Book (2)	Author (3)	Place and date of Publication (4)
(F.E.D.)	French Etymological Dictionary	Albert Dauzat, Jean Dubois, Henri Mitterand	Librairie Larousse, 1971.
(F.L.) or (F.Mad.)	List of Vernacular names of Fishes of the Madras Presidency	Madras Government Publication	Government Press, Madras.
(F.N.)	List of names of Fishes	Sir Frederick Nicholson	Manuscript.
(G……D.)	Gazetteer……District	Madras Government Publications	Government Press, Madras.
(G.E.E.D.)	Gujarathi-English Etymological Dictionary	M. B. Belsare	Published by J. Jetley for Asian Educational Services, 1981.
(H.C.M.)	Hindu Caste Marks and Ornaments of the Madras	W. Rae Sheriffs	Madras Christian College, Magazine, September, 1913.
(H.J.)	Hobson Jobson—A Glossary of Colloquial Anglo-Indian Words and Phrases and of Kindred Terms.	Yule C. H. and Burnell, A. C.	Edited by William Crooke, B. A., and Published by John Murray, Albemarle Street, London, 1903.
(I.A.M.D.)	Illustrated Ardha-Magadhi Dictionary in 5 Volumes	Shatavadhani The Jaina Muni Shri Ratnachandraji	Published by Kesarichand Bhandari for The S. S. Jaina Conference.
(I.M.P.)	Inscriptions of the Madras Presidency	Madras Government Publication	Government Press, Madras, 1919.
(Insc. Pudu. St.) or (Pudu. Insc.)	Inscriptions of Pudukkottai State	Published by the Pudukkottai State	Sri Brhadamba State Press, Pudukkottai, 1929.
(I.P.)	Five Hundred Indian Plants and Their Use in Medicine and the Arts	Pfleiderer, I.	Basel Mission Book and Tract Depository, Mangalore, 1908 2nd Edition.
(J.N.)	Jaffna Notes		
(K.C.E.D.E.L.)	Klein's Comprehensive Etymological Dictionary of the English Language	Dr. Ernest Klein	Elsevier Scientific Publishing Company, Amsterdam, 1971.
(K.K.E.D.)	Kittel's Kannada-English Dictionary	Revised and enlarged by Prof. M. Mariappa Bhat	University of Madras, 1968.

Abbreviation (1)	Name of the Book (2)	Author (3)	Place and date of Publication (4)
(K.M.E.D.)	Kulkarni's Marathi-English Dictionary	K. P. Kulkarni	Srhi Lekan Wachan Bhandar, Poona, 1964.
(K.N.)	Kannada Nighantu — 4 Volumes	G. Venkatasubbiah	Kannada Sahitya Parishad, 1970.
(K.R.)	A Manual of Elementary Botany for India	K. Rangachari	The Government Press, Madras, 1916.
(L.)	Vernacular list of Trees, Shrubs and Woody Climbers in the Madras Presidency	Lushington, A. W.	The Government Press, Madras, 1915.
(L.W.)	Languages of the World	Kenneth Katzner	Routledge & Kegan Paul Ltd., 1977.
(M......D.)	Manual......District	Madras Government Publications	Government Press, Madras.
(M.E.D.)	Malayalam-English Dictionary	Rev. H. Gundert	Asian Educational Services, New Delhi, 1982.
(M.E.R.)	Madras Epigraphical Reports	Madras Government Publications	Government Press, Madras.
(M.Lex.)	Malayalam Lexicon	Editor, Suranad Kunjan Pillai	Government Press, Trivandrum, 1965.
(M.L.)	List of Medical Terms	Surgeon - General, Madras.	Manuscript.
(M.M.)	Manual of the Administration of the Madras Presidency	Madras Government Publication	Government Press, Madras, 1893.
(M.M.E.D.)	Molesworth's Marathi-English Dictionary	J. M. Molesworth	Sharad Gogate & Avinash Ogale, Poona, 1975.
(M.Navi.)	Manual of Navigation	P. Mortimer Kulasekaram	St. Joseph's Industrial School Press, Colombogam, Jaffna, 1917.
(M.R.)	Mirasi Rights	Ellis	
(M.S.E.D.)	Monier Williams' Sanskrit Etymological Dictionary	Sir Monier Williams	Motilal Banarsidass, Reprint, 1981.
(M.T.E.D.)	Manner's Tulu-English Dictionary	Rev. A. Manner	Asian Educational Services, New Delhi, 1983.

Abbreviation (1)	Name of the Book (2)	Author (3)	Place and date of Publication (4)
(Mus. of Ind.)	Music of India	H. A. Popley	Association Press, Calcutta, 1921.
(N.E.D.)	A Comparative and Etymological Dictionary of the Nepali Language	Ralph Lilley Turner	Allied Publishers Private Ltd., 1980, Reprint.
(Nels.)	Madura Manual	Nelson	Government Press, Madras, 1893.
(N.E.R.D.)	New English-Russian Dictionary	Edited by Professor I. R. Galperin	Moscow Russian Language, 1979.
(O.D.E.E.)	Oxford Dictionary of English Etymology	C. T. Onions	Clarendon Press, 1969 Edition.
(O.E.D.)	Oxford English Dictionary	Edited by James, A.H. Murray, Henry Bradley, W.A. Craigie, C. T. Onions.	Clarendon Press, Oxford, Reprint, 1970.
(Or. Mss. Cat.)	Catalogue of the Government Oriental Manuscripts Library		Government Press, Madras, 1893.
(P.)	A Handbook of the Ordinary Dialect of the Tamil Language	Pope, G. U.	The Clarendon Press, Oxford, 1905, 7th Edition.
(P.E.D.)	Pali-English Dictionary	T. W. Rhys Davids & William Stede.	Oriental Books Reprint Corporation, 1975.
(P.E.S.)	Principles of English Etymology—(2 Volumes)	Rev. Walter W. Skeat	The Clarandon Press, Oxford, 1892.
(Per. E.D.)	Persian-English Dictionary	F. Steingass	Oriental, Reprint, 1981.
(Pd.M.)	Pudukottai Manual	Published by the Pudukkottai Press	Sri Brhadamba State Press, Pudukkottai.
(P.S.E.D.)	The Practical Sanskrit-English Dictionary	Vaman Shivram Apte	Revised and Enlarged Edition, 1978.
(P.T.L.)	Papers Relating to the Tamil Language	Andrew Robert	W.H. Allen & Co., London, 1890.
(R.)	A Dictionary of the Tamil-English Languages	Rottler, Dr.	Vepery, 1834–37.
(R.F.)	List of Revenue Terms in Use in South India	Robert Fischer	Manuscript.

Abbreviation (1)	Name of the Book (2)	Author (3)	Place and date of Publication (4)
(R.T.)	List of Revenue Terms	Sundararaja Aiyangar, S.	Manuscript.
(Rd. M.)	Ramnad Manual	Rajaram Rao, T. (Diwan of Ramnad)	Published by the Ramnad Estate.
(S.E.D.)	Sinhala-English Dictionary	Rev. B. Clough	Asian Educational Services, 1982 Edition.
(S.E.D.E.L.)	Skeat's Etymological Dictionary of the English Language	Rev. Walter W. Skeat	Clarendon Press, Oxford, Revised and Enlarged Edition, 1968.
(S.I.I.)	South Indian Inscriptions	Madras Government Publications	Government Press, Madras.
(Tam.)	The Tamils Eighteen Hundred years ago	Kanakasabhai, V.	The Higginbothams Ltd., Madras, 1904.
(T.A.S.)	Travancore Archaeological Series	Travancore Government Publications	Methodist Publishing House, Madras, 1910-13.
(T.A.S.—H.O.P.)	Travancore Archaelogical Series — Huzur Office Plate	Travancore Government Publications	Methodist Publishing House, Madras, 1910-13.
(T.B.)	The Tamil Bible	Travancore Government Publications	S. P. C. K. Press, Madras, 1909.
(T.B.D.)	The Tamil Bible Dictionary	Clayton, A. C.	C.L.S., Madras, 1909.
(T.B.S.E.D.)	Theodore Benfey's Sanskrit-English Dictionary	Theodore Benfey	Milan Publication Services, New Delhi.
(T.D.)	Telugu Dictionary (Sabda Ratnakaramu)	Compiled by B. Sitaramacharyulu	Published by The Madras School Book and Literature Society, 1981 Edition.
(T.E.D.)	Telugu-English Dictionary	Revised by Venkatarathnam	Asian Educational Services, 1980.
(T.F.D.)	Tamil-French Dictionary—2 Volumes	Mousset et Dupuis	Asian Educational Services, 1981, Revised Edition.
(T.H.D.)	Tibetan-Hindi Dictionary	Rahul Sankrityana	Sahitya Akademi, 1972.
(T.L.)	The Tamil Lexicon	University of Madras	University of Madras, 1982.

Abbreviation (1)	Name of the Book (2)	Author (3)	Place and date of Publication (4)
(T.V.K.)	Telugu Vyutpatti Kosam—Vol. I	Chakradara Rao	Andhra University, 1978.
(Tr.M.)	Travancore Manual	Travancore Government Publications	Methodist Press, Madras.
(Tr.Rev.M.)	Travancore Revenue Manual	Travancore Government Publication	Methodist Press, Madras.
(W.)	A Comprehensive Tamil-English Dictionary	Winslow, M.	The American Mission Press, 1862.
(Watt.)	The Commercial Products of India	Sir George Watt	Hazell Watson and Viney Ltd., London, 1908.
(W.C.L.)	The World's Chief Languages	Mario A. Pei	George Allen & Unwin Ltd., (London) 1949.
(W.G.)	Wilson's Glossary	H. H. Wilson	Oriental Publishers and Book Sellers, 1968 Edition.

பிழைதிருத்தம்
(ERRATA)

பக்கம் (1)	(பத்தி)	வரி (2)	பிழை (3)	திருத்தம் (4)
உ		21	Europen	European
ருகூ		12	voice	voiced
கூω		12	>	<
		13	<	>
2		1, 6	part.	parti.
17		12	believe	to believe
20		1	அவவை	அவ்வை
49 50	(2)	28 26	appartments	apartments
58		29	milit	limit
72		7	writting	writing
78		37	must	musk
84	(2)	16	அரசுமெய்ப்பாடு	அசுரமெய்ப்பாடு
112 217	(2) (2)	29 5	*dectylon*	*dactylon*
115		1	closenes	closeness
180	(2)	45	bulbus	bulbous
190 198	(2) (2)	18 12	metalic	metallic
197 201	(2)	9 6	*Rhicinus* *Recinus*	*Ricinus*
198	(2)	32	elder sisters's	elder sister's
202		42	(*afficinalia*)	(*officinalis*)
243	(2)	18	*Aristalachia*	*Aristolochia*
277		17	*Ipomala*	*Ipomaea*
301		23	*Semcarpus*	*Semicarpus*
310		43	ஓதல், காத்தல்	ஓதல், ஈதல், காத்தல்
354	(2)	37	*Cretaeva*	*Crataeva*
411	(2)	42	*mulibre*	*muliebre*
423	(2)	39	*allakkaḻi*	*alakkaḻi*
425	(2)	26	calculalion	calculation
433	(2)	14	நிலத்திணைவகை	நிலைத்திணைவகை
479	(2)	19	அழி = சாட்டியம்	அழி + சாட்டியம்
		26	அழி + கேடு	அழி = கேடு
513	(2)	9 10	"சூழ்ந்த வினையாக்கை"	"தாழ்ந்த வுணர்வினராய்"
518	(2)	32	*aṟaṟappiḷappi*	*aṟagappiḷappi*
520	(2)	25	firuly	firmly
528		43	அறநாட்பு	அறாநட்பு
553		31	பிரமானத்தைப்	பிரமாணத்தைப்
565	(2)	19	usuage	usage
568		21	a fire,	as fire,
568	(2)	5	*Thermaglia*	*Thermalgia*

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

அ

அ[1] *a*, பெ. (n.) அங்காத்தலாலேயே (வாயைச் சற்று விரிவாகத் திறத்தலாலேயே) ஒலிக்கப் படுவதாயும், வண்ணமாலையில் (குறுங்கணக் கிலும் நெடுங்கணக்கிலும்) முதலெழுத்தாயும் உள்ள உயிர்க்குறில்; the first letter and a short vowel of the Tamil Alphabet. இற்றை மொழியியலார் இதைப் பிறப்பிடம் நோக்கி, நடுவக் குவியாத் தாழ்குறில் (central unrounded low short vowel) எனக் குறிப்பர்.

"அஆ ஆயிரண் டங்காந் தியலும்" (தொல். எழுத்து. பிறப். 3). "அகர முதல எழுத்தெல் லாம்" (குறள், 1).

வண்ணமாலை என்பது அரிவரி. உயி ரெழுத்தும் மெய்யெழுத்துமே கொண்டது குறுங்கணக்கு; அவற்றோடு உயிர்மெய் யெழுத்துங் கொண்டது நெடுங்கணக்கு.

அ[2] *a*, இடை. (part.) **சேய்மைச்சுட்டு**; remote demonstrative.

i. அகச்சுட்டு; demonstrative base forming an integral part of a word denoting or pointing out a remote person, place or thing.

எ-டு: அவன், அங்கு, அது, அந்த.

ii. புறச்சுட்டு; demonstrative prefix.

(க) **கண்டறிசுட்டு**; demonstrative prefix to a noun, expressing remoteness of a person, place or thing actually pointed out by the hand.

எ-டு: அப் பையன், அப் பக்கம், அம் மரம்.

(உ) **பண்டறிசுட்டு**; demonstrative prefix to a noun, referring to its antecedent.

எ-டு: தலைக்கழகக் காலமே தமிழுக்குப் பொற்காலம். அக்காலத்து நிகழ்ந்ததே முதற்கடல்கோள்.

(ங) **உலகறிசுட்டு**; demonstrative prefix expressing world-wide eminence.

எ-டு: "அத் தம்பெருமான்" (சீவக. 221). [அ+தம்+பெருமான்.]

அ[3] *a*, இடை. (part.) **பல்வகை யீறுகள்**; multifarious terminations and suffixes.

i. **பெயரீறுகள்**; noun endings.

(க) **ஒரு பலவின்பாற் பெயரீறு**; a neut. pl. noun suff.

எ-டு: சில, பல.

(உ) **ஆறாம் வேற்றுமைப் பலவின்பால் உருபு**; gen. suff. followed by a neut. pl. noun.

எ-டு: என கைகள்.

ii. **வினையீறுகள்**; verb endings.

(க) **ஒரு பலவின்பால் வினைமுற்றீறு**; a neut. pl. finite verb ending.

எ-டு: தெரிநிலை:
வந்த, வந்தன — (இ.கா.)
வருகின்ற, வருகின்றன — (நி.கா.)
வருவ, வருவன — (எ.கா.)
நல்ல, நல்லன — குறிப்பு.

(உ) **ஒரு வியங்கோள்வினையீறு**; an optative verb ending.

எ-டு: வரப்புயர (வரப்புயர்க). அல்லீற் றுத் தொழிற்பெயரின் ஈறு கேடு. செய்யல்→செய்ய, உயரல்→உயர.

(ஙு) **ஒரு பெயரெச்ச ஈறு**; a rel. part. ending.

எ-டு: வந்த — (இ.கா.)
வருகின்ற—(நி.கா.) } தெரிநிலை.
உள்ள, நல்ல — குறிப்பு.

(சு) **ஓர் எதிர்மறைப் பெயரெச்ச ஈறு**; a neg. rel. part. ending.

எ-டு: வாராத — தெரிநிலை.
இல்லாத — குறிப்பு.

(நு) **ஒரு நிகழ்கால வினையெச்ச ஈறு**; an inf. ending.

எ-டு: செய்ய, வர, படிக்க.

(சூ) **குறிலில் இறும் வண்ணப்பாட்டுச் சீர்களின் வண்ணக்குழிப்பு வாய்பாட்டீறு**; ending of rhythmic formulas of metrical feet ending in short vowel.

எ-டு: தன, தனன, தத்த, தந்த, தய்ய, தன்ன, தனத்த, தனந்த, தான, தாத்த, தாந்த.

(எ) **ஒரு சொல்லாக்க ஈறு**; a formative particle.

எ-டு: நில் - நில, பிள் - பிள.

அ[4] *a*, இடை. (part.) **சாரியை**; enunciative and connective particle.

i. **மெய்யெழுத்துச் சாரியை**; enunciative particle employed in Tamil grammar to designate consonants.

எ-டு: க் - க, ச் - ச.

''வல்லெழுத் தென்ப கசட தபற''
(தொல். எழுத்து. நூன். 19).

ii. **புணர்ச்சிச் சாரியை**; connective particle.

பெயர்ச்சொற்களை இன்னோசைபட இணைக்கும் புணர்ச்சிச் சாரியை; an euphonic augment used in combination of words.

எ-டு: செக்கார் + அ + குடி —
செக்காரக்குடி
தட்டார் + அ + பாட்டம் —
தட்டாரப்பாட்டம்
வண்ணார் + அ + பேட்டை —
வண்ணாரப்பேட்டை.

தானாக வொலியாத மெய்யெழுத்தைச் சார்ந்து தன்னோடியைத்தொலிப்பது மெய்யெழுத்துச் சாரியை.

செக்கார்குடி எனச் சாரியையின்றிப் புணர்வதே இயல்பாயினும், இன்னோசையும் ஒலிப்பெளிமையும்பற்றிச் செக்காரக்குடி யெனப் புணர்ந்ததென்று கொள்க.

தமிழப்பிள்ளை என்னுந் தொடரையும் சிலர் சாரியைப் புணர்ச்சியாகக் கொள்வர். தமிழன் என்னுஞ் சொல்லே ஈறு கெட்டுத் தமிழ என நின்று, வலிமிக்குப் பிள்ளை யென்னுஞ் சொல்லொடு தமிழப்பிள்ளை யெனப் புணர்ந்தது. இதில், நிலைச்சொல் மொழிபற்றிய இனங்குறித்ததே யன்றி மொழிமட்டுங் குறித்ததன்று.

சோழியன் + வெள்ளாளன் — சோழிய வெள்ளாளன், கொங்கன் + வண்ணான் — கொங்கவண்ணான், வடுகன் + செட்டி — வடுகச்செட்டி, ஆரியன் + கூத்து — ஆரியக் கூத்து என்னும் புணர்ச்சொற்களை நோக்குக. இவற்றின் நிலைச்சொற்களைச் சோழியம், கொங்கம், வடுகம், ஆரியம் எனக் கொள்ளினும், அவை நாடோ மொழியோபற்றிய இனப் பெயரினின்று திரிந்தவையே. சோழி, ஆரி என நிலைச்சொற்கள் பிரியாமையையும் நோக்குக.

அ[5] *a*, இடை. (part.) **ஓர் அசைச்சொல்**; an expletive. **பொருளின்றிச் செய்யுளில் இடம் அல்லது இசை நிரப்ப வரும் ஓர் அசைச் சொல்**; an expletive in poetry. ''தன்வழிய காளை'' (சீவக. 494).

அ[6] *a*, இடை. (part.) **ஓர் உணர்ச்சியொலி**; an expression of feeling or sentiment. **ஊசி அல்லது முள் குத்தும்போதாவது, தீச் சுடும் போதாவது, தானாக எழும் திடுநோவுக் குறிப்பொலி**; sudden involuntary expression of smarting pain caused by a sudden and unexpected prick of a needle or thorn or by contact with fire or embers.

அ[7] *a*, இடை. (part.) **பல்வகை முன்னொட்டுகள்**; multifarious prefixes.

i. **அன்மைப்பொருள் முன்னொட்டு**; prefix implying privation.

எ-டு: அகாலம் (காலம் அல்லாதது).

ii. **இன்மைப்பொருள் முன்னொட்டு**; prefix implying negation.

எ-டு: அவலம் = வலம் இல்லாமை, துன்ப நிலை, துயரம். துன்பமாவன:

வறுமை, கவலை, இழப்பு, நோய், இழவு முதலியன.

iii. ***மறுதலைப்பொருள் முன்னொட்டு***; prefix implying contrariety.

எ-டு: அசுரன் (சுரனுக்கு மாறானவன்). அன்மைப்பொருளுணர்த்தும் அல் என்னுஞ் சொல்லே கடைக் குறைந்து 'அ' என நிற்கும். **ஒ.நோ:** நல் → ந. எ-டு: நக்கீரன், நச்செள்ளை, நத்தத்தன், நப்பின்னை, நப்பூதன், நப்பசலை. குல் → குள் → கு. எ-டு: குக்கிராமம் (இருபிறப்பி), குக்கூடல்.

அன்மைப்பொருளினின்று இன்மைப் பொருளும் மறுதலைப்பொருளும் தோன்றும்.

அல் என்னுஞ் சொல் அன் என்றுந் திரியும். **ஒ.நோ:** ஒல் - ஒன், கல் - கன், சில் - சின், துல் - துன், நல் - நன், பொல் - பொன், மல் - மன், வெல் - வென்.

அன் (அந்) என்பது முன்பின்னாக மாறி, வடமொழியில் **ந** என்றும், மேலையாரியத்தில் *na, ne, no* என்றும் இயங்கும்.

இத் திரிபை அறிதற்கேற்ற மொழிநூற் பயிற்சி முற்காலத்தின்மையால், இச் சொல்லைத் தலைகீழாகக் கொண்டு,

''நேர்ந்த மொழிப்பொருளை நீக்க வருநகரம்
சார்ந்த துடலாயின் தன்னுடல்போம் —
சார்ந்ததுதான்
ஆவியேல் தன்னாவி முன்னாகும்''
(நேமி. எழுத்து. 11)

என்று நூற்பா யாத்தார் குணவீர பண்டிதர்.

அ அல்லது **அல்** என்னும் முன்னொட்டின் வரலாற்றையும் பொருள் வளர்ச்சியையும், **அல்**[4], **அல்**[5] என்னுஞ் சொற்களின்கீழ்க் காண்க.

காலம், வலம், சுரன் என்னும் சொற்கள் தூய தென்சொற்களே என்பது, அவ்வச் சொல்லின்கீழ் ஐயந் திரிபற விளக்கப்படும்.

iv. ***அயற்சொல் முன்னொட்டு***; prefix to foreign words. ***ரகரத்தில் தொடங்கும் அயற்சொற்களின்முன் வைத்தெழுதப்படும் இயக்க உயிரெழுத்து***; enunciative prothesis of foreign words beginning with 'r'.

எ-டு: ரத்ந > அரதனம்.
ரம்பா > அரம்பை.

அ[8] *a*, பெ. (n.) ***பல்வேறு பொருட்பெயர்***; name of multifarious things.

i. ***தெய்வப் பெயர்***; name of deities.

1. **சிவன்**; Šiva. ''ஆரும் அறியார் அகாரம் அவனென்று'' (திருமந். 1751). 2. **திருமால்**; Viṣṇu. ''அவ்வென் சொற்பொரு ளாவான்'' (பாகவ. சிசுபா. 20). 3. **நான்முகன்**; Brahma. '' 'அ' என்றது பிரமாவின் பெயருமாம்'' (தக்கயாகப். 65, உரை).

அகரம் எல்லா எழுத்துகட்கும் முதலாயும், எல்லா எழுத்துகளொடும் கலந்தும், மெய்யெழுத்துகளை யெல்லாம் இயக்குவதாயும் இருத்தல் போன்று, இறைவனும் வெளியொழிந்த எல்லாவற்றுக்கும் முதலாயும், எல்லாவற்றொடுங் கலந்தும், எல்லாவற்றையும் இயக்குபவனாயும் இருத்தலால், 'அ' என்பது உவமையாகுபெயராக இறைவனைக் குறித்தது.

சிவனியர் (சைவர்) சிவன் என்னும் பெயராலும், மாலியர் (வைணவர்) திருமால் என்னும் பெயராலும் இறைவனை (கடவுளை) வணங்குவதால், 'அ' என்னும் முதலுயிரெழுத்து, சிவனையும் திருமாலையுங் குறிக்கும் உவமையாகுபெயராக ஆளப்பட்டது. ஆரியப் புணர்ப்பான முத்திருமேனிக் (திரிமூர்த்தி) கொள்கையால், படைப்புத் தலைவனாகக் கூறப்பட்ட நான்முகனுக்கும் அது பெயராகக் கொள்ளப்பட்டது.

ii. ***சில்வகை மருந்துச் சரக்குப் பெயர்***; name of certain spices.

1. சுக்கு; dried ginger (பரி.அக.). 2. **திப்பிலி**; long pepper, *Piper longum.*

அ[9] *a*, பெ. (n.) ***சிலவற்றின் குறி***; symbol of certain things.

i. (கணி.) ***குறிபார்க்கக் கவனிக்கப்படும் ஐம்புட்களுள் (பஞ்ச பட்சிகளுள்) ஒன்றான வல்லூற்றைக் குறிக்கும் எழுத்து***; (Astrol.) letter representing the royal falcon, one of the five birds whose cries and movements are observed for the purpose of making predictions or omens.

ii. (கணக்கு) எட்டு என்னும் எண்ணின் குறியாக மேற்சுழியின்றி எழுதப்படும் அகர வரிவடிவு; (Arith.) symbol for the number 'eight' generally written without the loop at the top.

வல்லூற்றின் குறியும், எட்டென்னும் எண் குறியும், வல்லூற்றின் பெயரொன்றின் முதலெழுத்தாகவும், எண்வகைப்பட்ட பொருளின் அல்லது பொருட்டொகுதியின் பெயர் முதலெழுத்தாகவும் இருக்கலாம்.

''அவ்வாய் வளர்பிறை சூடி'' என்னும் பெரும்பாணாற்றுப்படை யடியில் (412) உள்ள, அழகிய இடம் என்று பொருள்படும் 'அவ்வாய்' என்னும் கூட்டுச் சொல்லை, நச்சினார்க்கினியர் அ + வாய் என்று தவறாகப் பிரித்திருப்பதால், அகரம் அழகையுணர்த்தும் ஓரெழுத்துச் சொல்லென்று பலர் மயங்க இடமாயிற்று.

'அம்' என்னுஞ் சொல்லே 'வாய்' என்னுஞ் சொல்லொடு புணர்ந்து, 'அவ்வாய்' என ஈறு திரிந்ததாகல் வேண்டும்.

தெவ் + முனை – தெம்முனை என்னும் புணர்ச்சியில் வகரம் மகரமாகத் திரிந்தது போன்று, அம் + வாய் – அவ்வாய் என்னும் புணர்ச்சியில் மகரம் வகரமாகத் திரிந்ததென்று கொள்வதே தக்கதாம். ஆதலால், அகரத்திற்கு அம்மைப்பொருள் இங்குக் கூறப்படவில்லை. அம்மை = அழகு.

அங்காந்த அளவிற் பிறப்பதாகிய அகரம், அங்காப்போடு அண்ணம், அண்பல் (மேல்வாய்ப் பல்) முதலிய உறுப்புகளின் தொழிலாற் பிறக்கும் பிற எழுத்துகளோடும் நுண்வகையிற் கலந்திருப்பதை இறைவன் உயிர்தொறும் (அல்லது பொருள்தொறும்) நுண்வகையில் விரவிநிற்பதற்கு உவமமாகக் கொண்டு, ''அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே'' (சி. சி. சுப. 2 : 2) என்று அருணந்தி சிவாசாரியார் கூறியிருப்பினும், அங்காத்தலின்றியும் மகரமெய் ஒலிக்கப்படுதலால், பிறவெழுத்துகளுடன் கலக்கும் அகரக் கலப்புப் பெரும்பான்மைபற்றியதே யன்றி முழுப்பான்மை பற்றியதன்று.

'பொருள' என்று சாரியை பெறாதும், 'பொருளன' என்று சாரியை பெற்றும், இரு வகையாய் வரினும், குறிப்பு வினைமுற்று என்னும் வகையில் இரண்டும் ஒன்றே. இவை பெயராயின், குறிப்பு வினையாலணையும் பெயராம். 'உன்னின' என்பது 'உன்னிய' என்பதன் திரிபாதலால், அதில் 'இன்' என்னும் சாரியை இல்லை.

''என கருத்திடை'' (கந்தபு. உற்பத். மேருப். 56) என்னுந் தொடரிலுள்ள வருஞ்சொல் பால்பகா வஃறிணைப் பெயராகவு மிருத்தல்கூடு மாதலால், நிலைச்சொல் வேற்றுமையுருபை, ஆறாம் வேற்றுமைப் பன்மையுருபு ஒருமையில் வந்ததாகக் கொள்ளத் தேவையில்லை.

'நடந்தது' என்னும் அஃறிணை ஒன்றன்பால் வினைமுற்றின் ஈறு, 'அது' என்பதே. அதன் அகரமுதல் சாரியை அன்று. 'நடந்தான்' (நடந்து+ஆன்) என்பதிற்போல, 'நடந்தது' (நடந்து+அது) என்பதிலும் ஈறு முதற்குறையின்றி வந்தது. 'நன்று' (நல்+து), 'பாற்று' (பால்+து) என்னும் குறிப்பு வினைமுற்றுகளில் 'அது' என்னும் ஈறு முதற்குறைந்து 'து' என நின்றது. 'நல்லது', 'பாலது' என்பன முதற் குறையா ஈறு கொண்டன.

அகரத்திற்குப் பின் வருஞ்சொல் முதன்மெய் மிகும் கூட்டுச்சொற்களி லெல்லாம், அகரம் சுட்டெழுத்தே யன்றி, அன்மையின்மை மறுதலையுணர்த்தும் முன்னொட்டாகாது; அகரம் முன்னொட்டாயின், வருஞ்சொல் முதன்மெய் மிகாது.

எ-டு :

அக்காலம்
அவ்வலம்
அச்சுரன்
அப்பிராமணன்
(சேய்மைச் சுட்டு)

அகாலம் – அன்மை
அவலம் – இன்மை
அசுரன்
அபிராமணன்
(மறுதலை)
(முன்னொட்டு)

அகாலம் என்பது உலகவழக்கு. தொல்காப்பியத்திற்கு முந்தின இலக்கண இலக்கியப் புலவியம் அனைத்தும் அழிக்கப்பட்டுவிட்டமையால், இதற்கு இன்று இலக்கியச் சான்று காட்ட இயலவில்லை. 'அ' என்னும் முன்னொட்டும் 'காலம்' என்னும் பெயர்ச் சொல்லும் தூய தென்சொற்களே.

அமாம்சம் என்பது தமிழ் வழக்கன்று.

அப்பிராமணன், அபிராமணன் என்பன ஆரியப் பூசாரியர் தென்னாடு வந்தபின் தோன்றியவை.

அஅன்ன ஆவன்னா *a-aṉṉa-ā-v-aṉṉā*, பெ. (n.) ***அரிவரி யென்னும் தமிழ் வண்ணமாலை (குறுங்கணக்கும் நெடுங்கணக்கும்)***; Tamil Alphabet.

எழுத்துகளைக் கல்லா மக்கள், சிறப்பாகச் சிறுவர் சிறுமியர், எளிதாக ஒலித்துக் கற்கும் பொருட்டு, பண்டைத் தொடக்கப்பள்ளி யாசிரியர் உயிரும் உயிர்மெய்யுமாகிய இருவகைக் குறிலுக்கும் 'அன்ன'ச் சாரியையும், இருவகை நெடிலுக்கும் 'அன்னா'ச் சாரியையும் ஏற்படுத்தினர்.

'அஆ' என்னும் ஈரெழுத்தும் தமிழ் வண்ணமாலையின் முதலெழுத்துகளாதலின், அவை முதற்குறிப்பாகி, அம் முதற்குறிப்பே 'அஅன்ன ஆவன்னா' என்று வண்ணமாலைப் பெயராயிற்று. இது '*alpha*', '*beta*' என்னும் கிரேக்க இரு முதலெழுத்துகளும் சேர்ந்து '*alphabetum*' என்று இலத்தீனிலும், 'alphabet' என்று ஆங்கிலத்திலும், வண்ணமாலைப் பெயராக வழங்குவது போன்றது.

அ, இ, க, கி என்று ஒரு மாத்திரை யொலிக்குங் குறிலெழுத்துகளை விட்டொலிப்பது, சிறுபிள்ளைகட்குச் சற்று வருத்தமுற மூச்சு வாங்குவதால், 'அஅன்ன' என்பது 'ஆனா' என்றும் 'இஅன்ன' என்பது 'ஈனா' என்றும், மாணாக்க நிலையிலும் பின்னும் ஒலிக்கப்பட்டுவந்தன. இவ் வொலிப்புமுறை குறில்களின் உண்மையான ஒலியளவை உடனே தெரிந்துகொள்ளத் தடையாயிருந்தமையின், இந் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அரசியற் கல்வித்துறை யறிஞர், சாரியையின்றி ஒலிநூன் முறைப்படி அ, ஆ, இ, ஈ,... என்று ஒலித்துப் பயிலும் முறையைப் புகுத்திவிட்டனர். அதனால், இன்று 'அஆ' என்பது வண்ணமாலைப் பெயராக வழங்கி வருகின்றது. இது புணர்ச்சியில் 'அவ்வா' என்றாகும்.

அஅன்ன ஆவன்னாத் தெரியாதவன் *a-aṉṉa-ā-v-aṉṉā-t-teriyādavaṉ*, பெ. (n.) ***படியாதவன், அறிவிலி***; illiterate, ignoramus.

அஆ[1] *a-ā*, பெ. (n.) ***தமிழ் வண்ணமாலை*** (இக்.வ.); Tamil Alphabet (Mod.). உனக்கு **'அ ஆ'** தெரியுமா? (படித்தோர் உ.வ.). இது பழைய 'அஅன்ன ஆவன்னா' என்பதன் சீர்திருத்தம்.

அஆ[2] *a-ā*, இடை. (int.) ***ஓர் இரக்கக் குறிப்பு***; an exclamation of pity.

''வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்''
(நாலடி. 9).

அஇவனம் *a-i-vaṉam*, பெ. (n.) ***ஐவனம்*** பார்க்க; see *aivaṉam*.

''அகர இகரம் ஐகார மாகும்'' (தொல். எழுத்து. மொழி. 21). 'அகரமும் இகரமுங் கூட்டிச் சொல்ல ஐகாரம் போல இசைக்கும்; அது கொள்ளற்க என்றவாறு. போல என்றது தொக்கது. ஐவனம் அஇவனம் என வரும். ஆகுமென்றதனால் இது இலக்கணமன்றாயிற்று' (நச். உரை).

''அம்முன் இகரம் யகரம் என்றிவை
எய்தின் ஐயொத் திசைக்கும் அவ்வோ
டுவ்வும் வவ்வும் ஔவோ ரன்ன''
(நன். 125).

'அகரமுன் இகரமும் யகரமும் வரின், ஐகார ஓசை போல இசைக்கும்...... எ-று. போல இசைக்கு மெனவே, அவை ஆகா; போலியா மெனக் கொள்க. வ-று. அஇவனம், அய்வனம் — ஐவனம் ...... என வரும்' (நன். மயிலை. உரை).

அஉ *a-u*, பெ. (n.) 1. ***நிலம், நீர், தீ, வளி, வெளி, கதிரவன், திங்கள், ஆதன் (ஆன்மா) ஆகிய எண்வடிவான சிவனும், அறவருளாட்டியாகிய கயற்கண்ணியும் மறவருளாட்டியாகிய காளியும் ஆகிய இருவடிவான சிவையும்***; Šiva whose eight forms are earth, water, fire, air, sky, sun, moon and soul and His consort Šivai who manifested herself in two forms, viz., *Kayaṟkaṇṇi* and *Kāḷi*, the former an embodiment of the Divine grace that protects and the latter, of that which chastises. ''அஉ அறியா அறிவிலிடைமகனே'' (யாப். வி. 37, உரை, பக். 142). ''எட்டி னோடிரண் டும்அறி யேனையே'' (திருவாச. 5 : 49). 2. ***ஒரு மெய்ப் பொருளியல் மறைபொருட் குறியீடு***; a mystic philosophical term or symbol.

[அகர வரிவடிவு தமிழில் எட்டு என்னும் எண்ணின் குறியாதலால் எண்பொருள் வடி

வான சிவனையும், உகர வரிவடிவு இரண்டு என்னும் எண்ணின் குறியாதலால் இருவேறு வடிவு கொண்ட சிவையையும் குறித்தன. உமை என்பது வடசொல்லாதலால், அரன் உமை என்னும் பெயர்களின் முதலெழுத்துகள் அஉ என்பது பொருந்தாது.]

அஃகடி *aḵkaḍi,* பெ. (n.) **துன்பம்** (இராட்.); difficulty, trouble (R.).

[அ.:குதல் = சுருங்குதல், வறுமையடைதல். அடி = அடிப்பு, தாக்கு. அ.:கு + அடி – அ.:கடி.]

அஃகம்¹ *aḵkam,* பெ. (n.) **தவசம்**; grain, cereal. ''அஃகமுங் காசுஞ் சிக்கெனத் தேடு'' (கொ.வே. 13).

க., து. அக்கி; **தெ.** அக்குள்ளு.

[அ.:குதல் = சுருங்குதல், சிறுத்தல், நுணுகுதல், கூராதல். சோற்றுவகைக் குதவும் தவசங்களும் கறிவகைக் குதவும் பயறுகளும் ஆகக் கூலங்கள் பெரும்பாலும் இருவகைப்பட்டுள்ளன. அவரை, மொச்சை முதலிய பயறுகள் போன்று, பருத்த தவசம் ஒன்றுமேயில்லை. நெல்லுஞ் சோளமு மாகிய பெருந்தவசங்கள் காராமணி, தட்டை, துவரை முதலிய இடைத்தரப் பயறுகளினும் சிறுத்தும்; கம்பு, வரகு, கேழ்வரகு, காடைக் கண்ணி, குதிரைவாலி, தினை, சாமை ஆகிய சிறு தவசங்கள் உழுந்து, கொள் (காணம்), பச்சை (பாசி), கல், கரம்பை முதலிய சிறு பயறுகளினும் சிறுத்தும் இருத்தலை நோக்கின், தவசம் ஒப்புநோக்கிய சிறுமைபற்றி அ.:கம் எனப்பட்டதாகக் கருத இடமுண்டு.

நெல், புல் (கம்பு), காடைக்கண்ணி, குதிரைவாலி, வரகு, தினை, சாமை ஆகிய பெரும்பால் தவசங்கள், இருபுறமுங் கூராயிருப்பதால் அ.:கம் எனப்பட்டன என்று கொள்ளுதலும் பொருந்தும். அ.:கம் = கூர்மை.]

தானியம் என்னும் வடசொல் தமிழ் நாட்டில் வழக்கூன்றிய பின், அஃகம் என்னும் தென்சொல் வழக்கு வீழ்ந்து இலக்கியச் சொல்லாயிற்று. ஆயினும், 'அஃகவிலை யேறிவிட்டது' என்பது இன்றும் 'அகவிலை யேறிவிட்டது' என்று உலக வழக்கில் வழங்கி வருவது கவனிக்கத்தக்கது.

தவசத்தைக் குறிக்கும் அஃகம் என்னும் தென்சொல்லிற்கும், பெருமதியை அல்லது விலைமதிப்பைக் குறிக்கும் அர்க (argha) என்னும் வடசொல்லிற்கும் எள்ளளவுந் தொடர்பில்லை.

அஃகம்² *aḵkam,* பெ. (n.) **முறைமை**; course of action. ''ஒரு ரிரண்டஃக மாயிற்று'' (சீவக. 2087).

அஃகம்³ *aḵkam,* பெ. (n.) **நீரூற்று** (பிங்.); spring. ''அஃகம் உறவியும் அசும்பும் ஊறல்'' (பிங். 4 : 110).

[அ.:கு → அ.:கம் = சிறுத்து ஊறும் அல்லது ஒழுகும் நீர்நிலை.]

அஃகரம் *aḵkaram,* பெ. (n.) வெள்ளெருக்கு; white madar.

[எல் = ஒளி, வெள்ளை. கரம் = நஞ்சு. எல்கரம் → அல்கரம் → அ.:கரம் = வெண்ணிறமும் நஞ்சாயும் உள்ள செடி.]

இதை அலர்க்க (alarka) என்னும் வடசொல்லோ டிணைப்பது பொருந்தாது.

அஃகல் *aḵkal,* பெ. (n.) 1. **சிறிதாகல்** (திவா.); becoming small, being reduced. 2. **வறுமை** (திவா.); poverty, destitution. அஃகுதல் பார்க்க; see ***aḵkudal.***

அஃகான் *a-ḵ-kāṉ,* பெ. (n.) **அ என்னும் எழுத்து**; the letter 'அ'. ''அஃகா னடைவே மாகும்'' (நன். 212).

['அ' வண்ணமாலை முதலெழுத்தான உயிர்க் குறில். 'கான்' எழுத்துச் சாரியை. .: (ஆய்தம்) இணைப்பெழுத்து.]

'கான்' என்பது ஐகார ஔகார உயிர் நெடில்கட்கே சிறப்பான எழுத்துச் சாரியை. நன்னூலார் அதை மெய்கட்கும் இருவகைக் குறில்கட்கும் ஆண்டுவிட்டார்.

அஃகு¹-தல் *aḵku-,* 5 செ.கு.வி. (v.i.) 1. **உயிரெழுத்து அளவிற் குறுகுதல்**; to be shortened, as a vowel. ''தொடர்மொழி யிறுதி வன்மையூர் உகரம் அஃகும்'' (நன். 94). 2. **சுருங்குதல்**; to shrink, to be reduced. ''கற்பக் கழிமட மஃகும்'' (நான்மணிக். 30). 3. **குவிதல்**; to become closed, compressed, as a flower. ''ஆம்பல்.... மீட்டஃகுதலும்'' (காஞ்சிப்பு. திருக்கண். 104). 4. **கூம்புதல்**; to become coniform, to taper to a point at one end. 5. **கூராதல்**; to become sharp, acute. ''அஃகி யகன்ற அறிவென்னாம்'' (குறள், 175). 6. **மனங்குன்றுதல்**; to be dejected. 7. **கழிந்துபோதல்**; to pass away. ''அல்லாயிர மாயிர மஃகினவால்'' (கம்பரா. யுத்த. அதிகா. 68).

க. அக்குடிசு; து. அக்கரு.

அஃகு cf. *acus*, needle, pin. **L.**, fr. **I.-E.** base *ak-*, 'sharp pointed', whence also *ācer*, 'sharp', see *acrid* and cp. the first element in *aciform*.

E. *acute*, **L.** *acūtus*, 'sharp', lit. 'sharpened', p.p. of *acuere*, 'to sharpen', which is rel. to *acus*, 'needle' (K.C.E.D.E.L.).

[உல் → உல்லாடி = மெல்லிய ஆள் (யாழ். அக.). உல்லி = ஒல்லி (யாழ்.அக.). உல் → ஒல் → ஒல்கு. ஒல்குதல் = சுருங்குதல். ஒல்கு → அல்கு. அல்குதல் = சுருங்குதல். அல்கு → அலகு = கூர்மை. அல்கு → அஃகு.]

லகர ளகர மெய்கள் சிலவிடத்து ஆய்தமாக மாறுகின்றன. ஒ.நோ: ஒல்கு (பின்வாங்கு)→ ஒஃகு. இள் → இள → இளகு. இள் → எள் → எள்கு → எஃகு. வெள் (விரும்பு) → வெள்கு → வெஃகு. வெஃகுதல் = பிறர்பொருளை விரும்புதல்.

அஃகு² a<u>k</u>ku, பெ. (n.) ஊறுநீர் (திவா.); oozing water.

[அஃகம் = ஊறல், நீருற்று (பிங்.). அஃகு→ அஃகம். அஃகுதல் = நீருறுதல். 'அஃகு' ஊறு நீரைக் குறிப்பின் முதனிலைத் தொழிலாகு பெயராம். ஊற்றுச் சுருங்கியும் ஒடுங்கியும் ஒழுகுவதால் அஃகு எனப்பட்டது.]

அஃகு³ a<u>k</u>ku, பெ. (n.) தகுதி (சம்.அக.); fitness. இது அக்கு என்னும் உருதுச் சொல்லாகவும் இருக்கலாம்.

U. hagg = உரிமை; claim, right.

அஃகுல்லி a<u>k</u>kulli, பெ. (n.) **உக்காரி யென்னும் சிற்றுண்டி** (பிங்.); a steamed meal-cake. ஒ.நோ: **Skt.** šaṣkulī.

அஃகுவஃகெனல் a<u>k</u>ku-v-a<u>k</u>kenal, தொ.பெ. (vbl.n.) **ஆடு மேய்க்கும் இடையன், 'அஃ (கு)' என்னும் ஒலியைத் திரும்பத் திரும்ப ஒலித்தல்;** uttering the sound a<u>k</u>(*ku*) now and then as a shepherd, while grazing a flock of sheep or goats, to control their movements. ''அஃகுவஃ கென்று திரியும் இடைமகனே'' (பெருந்தொ. 1423).

ஆடுமேய்க்கும் இடையன், வழிவிலகி அல்லது எல்லை கடந்து செல்லும் ஆடுகளை, அஃகுவஃகென்று அதட்டித் திருப்புவது வழக்கம்.

['அஃ' என்பது, மந்தையைவிட்டுத் தனித்துச் செல்லும் ஆட்டை இடையன் அதட்டும் ஒலி. ஆய்தமும் வல்லின மெய்யும் தமிழிற் சொல்லீ றாகாமையின், உகரம் பெற்று ஈறாகும். அந் நெறிப்படி, 'அஃ' என்பது, உயிரேறும் இனமெய் யாகிய ககரத்துடன் கூடி உகரம் பெற்று, 'அஃகு' என்றாயிற்று. 'அஃ' என்பது தனித்தும் இரட்டி யும் நிகழும். 'அஃகுவஃகு' என்பது பன்மை குறித்த அடுக்குத்தொடர்.]

அஃகுவஃகெனல் 'ஓயாது அலைதற் குறிப்பு; expr. of restless wandering' என்று சென்னை அகரமுதலி (பிற்சேர்ப்பு) பொருள் குறித்திருப்பது பொருத்தமாய்த் தோன்றவில்லை.

அஃகு அஃகு என்னும் அடுக்குத்தொடர் அஃகஃகு என்று புணர்வதே நெறியாயினும், அஃகு என்பது பொருளுணர்த்தாத ஒலிக் குறிப்புச் சொல்லேயாதலின், ஒருவகை விலக் காக உடம்படுமெய் இடையிட்டுப் புணர்ந்த தெனக் கொள்ளல்வேண்டும். ''உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்'' (நன். 164) என நூற்பா யாத்த ஆசிரியரே, அந் நெறிக்கு விலக்காக, ''ஆற னொருமைக் கதுவும் ஆதுவும்'' (நன். 300) என்று புணர்த் துள்ளமை காண்க. இனி, அஃவஃகு என் றிருப்பினும், மெய்யீற் றுடம்படுமெய்யா யமையும்.

அஃகுள் a<u>k</u>kuḷ, பெ. (n.) **அக்குள்** பார்க்க; see *akkuḷ*.

அஃகேனம் a<u>k</u>kēṉam, பெ. (n.) **மெல்லிய ககரமும் சார்பெழுத்து மூன்றனுள் ஒன்று மான ஆய்தவெழுத்து;** the letter 'a<u>k</u>'(ஃ). ''அஃகேன மாய்தம்'' (யா. கா. 4, உரை).

['அ' முற்சாரியை; 'ஃ' ஆய்தவெழுத்து; 'ஏனம்' பிற்சாரியை. 'க்' ஆய்தவெழுத்தை உயிரெழுத்தோடு இணைக்கும் மெய்.]

மெய்யெழுத்துகளெல்லாம் உயிரெழுத் தின் உதவியின்றித் தமித்து ஒலியாதவை யாதலின், உலகவழக்கில் இகரச்சாரியையை முன்னும் (எ-டு: இக்), செய்யுள் அல்லது இலக்கண வழக்கில் அகரச் சாரியையைப் பின்னும் (எ-டு: க் + அ – க), பெற்றே இயங்க அல்லது ஒலிக்க இயலும். ஆய்தம் உயிரேறா மெய்வகையான சார்பெழுத்தா தலின், அது தனித்தொலிக்கும்போது அதற்கு முன்னும் பின்னும் சாரியை வேண்டும்.

இங்ஙனம் இருதலைச் சாரியை பெறும் ஆய்தத்திற்கு, ஏனச்சாரியை தனிச்சிறப்பாக உரியதாகும்.

அஃகேனம் என்பது, கொச்சை வழக்கில் அஃகேனா என்றும் அஃகன்னா என்றும் சிதைந்து வழங்கும்.

அஃகேனம், ககரமெய்யின் நுணுக்கமாத லின் **ஆய்தம்** என்றும், பின்வரும் வல்லின மெய்யை மெலித்தலின் **நலிபு** என்றும், மூன்று புள்ளிகளாற் குறிக்கப்படுதலின் **முப்புள்ளி** யென்றும், உயிரும் மெய்யுமல்லாது தனித்து நிற்றலின் **தனிநிலை** யென்றும் பெயர்பெறும்.

அஃகேனம் ககரத்திற்கு இனமானதென் பது, அதன் ஒலியினாலும், அதை ஏனச் சாரியையோ டிணைக்கும் ககரமெய்யினா லும், நெடுங்கணக்கிலும் குறுங்கணக்கிலும் அது உயிருக்கும் மெய்க்கும் இடையிற் ககரத்தை யடுத்து அதற்குமுன் வைக்கப் படுவதனாலும், பண்டை நெடுங்கணக்கு ஓலைச்சுவடிகளில் க—ஃ என்று குறிக்கப் பட்டு வந்ததனாலும் அறியப்படும்.

தென்னிந்திய அல்லது திரவிட மொழிக் குடும்ப ஒப்பியல் இலக்கண நூலாசிரியரான **கால்டுவெலா**ரும் அதை 'The guttural' என்று குறித்திருப்பது கவனிக்கத்தக்கது. மிடற் றொலி யெழுத்தென்பது ககரமே.

''அஃகேன மாய்தந் தனிநிலை புள்ளி
ஒற்றிப் பால வைந்தும் இதற்கே''

என்று இருக்க வேண்டிய அவிநய நூற்பா வில் அஃகேனத்தை 'அக்கேன' மென்று யாப் பருங்கல (உறுப்பு. 2, பக். 28) விரிவுரை (விருத்தி)யில் தவறாக அச்சிட்டுள்ளதைப் பின்னர், **பிழையும் திருத்தமும்** என்னும் பகுதியின் முதற் பக்கத்தில் (i) பக்கவெண் வரியெண் குறிப்பிட்டு 'அஃகேனம்' எனத் திருத்தம் காட்டியுள்ளனர். இதனைப் பாரா மல் சென்னை அகரமுதலியில் 'அக்கேனம்' என்று குறித்துப் பக்கவெண்ணும் காட்டி யிருப்பது தவறு.

அஃகேனத்தைப் பின்பற்றியதே வட மொழி 'விசர்க்கம்' (visarga). அதன் ஒலி யொப்புமையையும், அதனையும் புள்ளி வடிவிலேயே ஒரு புள்ளி குறைத்து இரு புள்ளி வடிவாக எழுதுதலையும், வடமொழி வண்ண மாலையிலும் அதை உயிருக்கும் மெய்க்கும் இடையிற் ககரத்தை யடுத்து அதற்குமுன் வைத்திருத்தலையும் நோக்குக.

கால்டுவெலார் ஆழ்ந்தகன்ற நடுநிலை யாராய்ச்சியாளரேனும், தமிழரின் முன் னோர் மேலையாசியாவினின்று வந்தவர் என்னுங் கொள்கை கொண்டிருந்ததனா லும், அவர் காலத்தில் தொல்காப்பியமும் பதினெண்மேற்கணக்கும் சிலப்பதிகாரமும் தலைமைத் தமிழ்ப் புலவர்க்குந் தெரியாது மறைந்து கிடந்தமையாலும், அவர்க்கு வழி காட்டத்தக்க தமிழறிஞர் ஒருவரு மின்மை யாலும், தமிழ இனம் சிறிதும் விழிப்பின்றி எல்லா வகையிலும் ஆரிய அடிமைத்தனத்தில் மூழ்கிக் கிடந்தமையாலும், ஆரியத்திற்கு முற்பட்ட பண்டைத் தமிழிலக்கியம் முற்றும் அழியுண்டபின் இந்திய நாகரிக இலக்கியம் முழுதும் சமற்கிருதத்திலுண்மையாலும், வட மொழி வண்ணமாலை தமிழெழுத்துகளுட் பெரும்பாலானவற்றைத் தன்னுட் கொண்டு, மிக விரிவடைந்து, எழுத்துகளின் முறை, பிறப்பு, மாத்திரை முதலியவற்றிலும் உயிர் மெய்யமைப்பிலும் தமிழ் நெடுங்கணக்கை யும், வடமொழி யிலக்கணம் புணர்ச்சி, சொல் லமைப்பு, வேற்றுமை, தொகை முதலிய வற்றில் தமிழிலக்கணத்தையும் ஒத்திருப் பதனாலும், தமிழ் நெடுங்கணக்கும் எண் வேற்றுமை யமைப்பும் வடமொழியைத் தழுவின என்று தவறாக முடிபுகொள்ள நேர்ந்தது.

இலக்கண விலக்கியங்களில் மட்டுமன்றி மொழியமைப்பிலேயே தமிழ் முந்தியதும் மூலமானதுமாதலால், தமிழ் அஃகேனமே வடமொழி விசர்க்கமென்பதில் எட்டுணை யும் இழுக்கில்லையென அறிக.

இனி, இக்காலத்துப் புலவர் சிலர், தமிழின் தொன்மை முன்மை மென்மைத் தன்மை களைச் சற்றும் நோக்காது, புள்ளித் தொகை வேறுபாட்டாலும் இட வேறுபாட்டாலும் எழுத்து வேறுபாடுணர்த்தப்படும் சில அரபி யெழுத்துகளைக் கண்டு மயங்கி, அஃகேனத் தையும் அதுபற்றிய நூற்பாக்களையும் பிறழ வுணர்ந்து, தமிழ் எழுத்துகளால் எல்லா மொழி யொலிகளையுங் குறிக்கவியலு மென் றும், ஏனை மொழிகளின் சிறப்பெழுத்து களை யெல்லாம் குறித்தற்கே அஃகேனம் தோன்றிற்றென்றும் கூறி, ஃப—F என்றும் ஃச—Z என்றும் எழுதிக் காட்டுவர்.



அஃகரம்



அக்கம்பாரை



அக்கம்காரை

தமிழ் உலக முதன்மொழியாதலால் அக் கால மக்கள் வாயில் தோன்றிய முப்பான் எளிய வொலிகளையே தமிழ் வண்ணமாலை கொண்டதென்றும், தமிழ் வரிவடிவுகள் தமிழ் ஒலிகளையே குறிக்க ஏற்பட்டவை யென்றும், பிற்கால மொழிகளின் வல்லொலி களையும் தமிழ் வரிவடிவுகள் குறிக்குமெனின், தமிழ் பிற்கால மொழிகட்கும் பிற்பட்ட தாகக் கருதப்படுமென்றும், எழுத்தென்பது உண்மையில் எழுத்தொலியே யென்றும், எழுதப்படுதலால் அஃது எழுத்தெனப்பட்ட தென்றும், ஆய்தத்தொடு பகரஞ் சேரின் ஆய்தமும் பகரமுமேயன்றி வேற்றொலி யொன்றும் தோன்றாதென்றும், வேண்டிய வாறெல்லாம் ஒலிகளை மாற்றும் மந்திர வாற்றல் ஆய்தத்திற்கில்லை யென்றும்,

''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே''
(தொல். சொல். எச்ச. 5)

என்பதை யொட்டி,

''அயன்மொழிக் கிளவி அயலெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே''

என்றே கொள்ளல் வேண்டுமென்றும்,

''அயன்மொழிக் கிளவி அயலெழுத்
தெல்லாம்
ஆய்தந் துணைக்கொண் டெழுதல்
வேண்டும்''

என்று தொல்காப்பியர் கூறாமையின், அவர் கூற்றிற்கு மாறானதைக் கொள்ளல் கூடா தென்றும், ஒவ்வொரு பெருமொழிக்குஞ் சில சிறப்பெழுத்துகளுண்டென்றும், எம்மொழிக் கும் ஏனைமொழிச் சிறப்பெழுத்துகளை யெல்லாங் குறிக்கும் வரிவடிவில்லையென்றும், ஏனைமொழிச் சிறப்பெழுத்துகளையெல்லாங் கொள்ளின் எம்மொழியும் தன் இயல்பிழந்து வேறொரு மொழியாய் மாறிவிடுமென்றும், உலக முதன் மென்மொழியாகிய தமிழிற் கி.பி. இருபதாம் நூற்றாண்டுத் திரிமொழி களின் வல்லொலி யெழுத்துகளைப் புகுத்து தல் மென்பட்டொடு வன்கம்பளியை இணைத்தல் போல்வதென்றும் அறிந்து, அயன்மொழிச் சிறப்பெழுத்தைக் கலவாது, தமிழை என்றும் தமிழாகவே போற்றிக் காத்தல் வேண்டும்.

அஃதான்று *akdāṉṟu*, கு.வி.எ. (adv.) *அதுவன்றி;* besides. ''அனைத்தனைத் தவ்வயின் அடைத் தோன் அஃதான்று, முன்னோன் காண்க'' (திருவாச. 3 : 28).

[அ:து + அன்று – அ:தன்று → அ:தான்று.]

அதுவுமல்லாது 'besides' என்று பொருள் படும் 'அஃதன்று' என்னுந் தொடர், செய் யுளில் 'அஃதான்று' என நீளும்.

இந் நீட்டம் பொருட்டெளிவும் இன் னிசையும் நோக்கியதாகும். அன்று என்னும் சொல் முற்று, எச்சம் ஆகிய இரண்டிற்கும் பொதுவாம். அஃதன்று என இருப்பின், அன்று என்பது முற்றெனத் தோன்றி முன் வந்த கூற்றை மறுக்கவுஞ் செய்யும். ஆத லால், அதன் எச்சத் தன்மையை யுணர்த்த நீட்டம் வேண்டியதாகும். அதனால் இசை யினிமையும் மிகுகின்றது.

இம் முறையை யொட்டியே, 'அதன்று' என்னும் தொடரும் செய்யுளில் 'அதான்று' என நீளவும் 'அதாஅன்று' என அளபெடுக்க வும் செய்யும்.

அது என்னுஞ் சொல்லே அஃது என்று திரிந்திருப்பதனால், அது + அன்று – அதன்று → அதான்று → அஃதான்று எனினும், அஃது + அன்று – அஃதன்று → அஃதான்று எனினும் இரண்டும் ஒன்றே.

அஃது *akdu*, சு.பெ. (demons. pron.) *அது;* that, it. ''மறத்திற்கும் அஃதே துணை'' (குறள், 76).

[அ (சேய்மைச் சுட்டெழுத்து) → அல் → அது → அத்து → அ:து. ஒ.நோ: பல் → பது → பத்து → ப:து.]

அஃது என்னும் ஆய்தம் இடையிட்ட வடிவு இலக்கிய வழக்கிற்கே யுரியது; அதிலும் பெரும்பாலும் எழுவாயாகவே வழங்கும். அதனையடுத்து வருவது உயிர்முதற் சொல்லா யிருத்தல் வேண்டும்.

எ-டு: அஃதாவது, அஃதில்லை, அஃதொட் டம்.

அல், அத்து[4] பார்க்க; see *al, attu*[4].

அஃதே[1] *akdē*, சு.பெ. (demons. pron.) *அதுவே;* that very thing, the same as that, the self-same thing, only that.

[அ:து+ஏ (தேற்றம், வரையறை, தனிநிலை ஆகிய பொருளுணர்த்தும் இடைச்சொல்.)]

அஃதே[2] *akdē*, சு.பெ. (demons. pron.) *அதுவா?* Is it that?

[அ.:து + ஏ (வினாவிடைச்சொல்.)]

அஃதே[3] *akdē*, இடை. (ind.) ***நீ சொல்வது சரிதான், அது உண்மையே, அப்படியே ஆகட்டும், ஆம்;*** Indeed, it is so, yes.

ம. அதே; க. அல்து; தெ. அல்னு.

[அ.:து + ஏ (உடன்பாட்டுப்பொருள் அல்லது ஒத்துக்கொள்வுப் பொருள்படும் இடைச் சொல்.)]

அஃதே எனினும் அதே எனினும் ஒக்கும். முன்னது இலக்கிய வழக்கு; பின்னது உலக வழக்கு. ஆம் என்று பொருள்படும் அதே என்னும் உடன்பாட்டுப்பொரு ளிடைச் சொல், இற்றைச் சோழ பாண்டி யெல்லை களில் வழங்காவிடினும், பழஞ் சேரநாடாகிய மலையாள நாட்டில் வழங்கிவருகின்றது.

'அஃதே, அவர் (தொல்காப்பியர்) சார் பெழுத்தென மூன்றே கொண்டாராலோ வெனின்; அஃதே, நன்று சொன்னாய்! ஒழிந்தவை எப்பாற்படு மென்றார்க்கு மூன்றாவதோர் பகுதி சொல்லலாவ தின்மை யானும், முதலெழுத்தாந் தன்மை அவற்றிற் கின்மையானும், சார்பிற் றோன்றுதலானும், இப் பத்தும் சார்பாகவே கொள்ளவேண்டு மென்பது. அஃதே அமைக' (நன். 59, மயிலை. உரை).

இதில் வந்துள்ள 'அஃதே' மூன்றனுள், முதலிரண்டும் 'அஃதொக்கும்', 'நீ கூறியது அமையும்' என்றும், இறுதியது 'அப்படியே ஆகுக' என்றும் பொருள்படும் குறிப்பிடைச் சொற்களாகும்.

அஃதே[4] *akdē*, இடை. (ind.) ***அப்படியா?*** Indeed? Really? Is it so? ''அஃதே யடிகளு முளரோ'' (சீவக. 1884).

[அ.:து = அப்படி. 'ஏ' வினாவிடைச் சொல்.]

'அஃதே' என்பது அதுவா என்று பொருள் படின் வினாவேற்ற சுட்டுப் பெயராம்.

அஃதை *akdai*, பெ. (n.) ***சோழனொருவன் மகள் பெயர்;*** name of a daughter of a *Cōḷa* king. ''அங்கலுழ் மாமை யஃதை தந்தை'' (அகநா. *96 : 12*).

அகுதை என்று பாட வேறுபாடுமுண்டு. அச் சொல்லையே புலவர் அஃதை என்று திரித்திருக்கவுங்கூடும். **அகுதை**[1] பார்க்க; see *agudai*[1].

'அஃதை என்பது அஃதி, அகுதி எனவுந் திரிந்து திக்கற்றவன், திக்கற்றவள், திக் கற்றது என உயர்திணை யாணொருமை பெண்ணொருமை அஃறிணை யொருமை யிலும் விரவிநிற்பதோர் பொதுச்சொல்' என்று, இராமானுசக் கவிராயர் ''ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும்'' என்னும் நன்னூல் நூற்பாவிற்கு (421) வரைந்த உரையுள் உரைத்தமைக்கு, ''ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி'' என்னும் தொல்காப்பிய நூற்பா (எச்ச. 65) உரையில், '' 'அஃதை தந்தை...சோழர்' என்புழிச் சோழ ரெல்லாரும் அஃதைக்குத் தந்தையாம் முறை யராய் நிற்றலின், 'தந்தை' என்னும் ஒருமை சோழர் என்னும் பன்மையோடு தனித்தனி சென்று கூடுதலின் வழுவிற்றேனும், ஈற்றுப் பன்மைபற்றி வழுவமைத்தார்'' என்று நச்சி னார்க்கினியர் கூறியது ஏதுவாயிருக்கலாம். எங்ஙனமிருப்பினும், அஃதை அல்லது அகுதை யென்னுஞ் சொல்லிற்குத் திக்கற்ற - வன்-வள்-து என்னும் பொருளில்லை. கவிராயர் அச் சொல்லை அகதி யென்னும் வடசொல் லோடு தொடர்புபடுத்திக்கொண்டதாகத் தெரிகின்றது. அதனால், ***தமிழ்ச்சொல் லகராதி*** கவிராயர் கூற்றையே மேற்கோ ளாகக் காட்டி, அஃதி, அஃதை என்னும் இரு சொல்லும் 'அகதி' என்பதன் மரூஉ என்று வெளிப்படையாகவுங் கூற நேர்ந்துள்ளது.

'அகதி' என்பது கதியற்ற ஒருவனையும் ஒருத்தியையும் ஒன்றையும் குறிக்கும் வட சொல். கடைக்கழகக் காலத் தமிழ்மக்கள் பெயர்கள், பெரும்பாலும் தனித்தமிழ்ச் சொற்களாகவே யிருந்தன. வளவன் என்று குடிப்பெயர் பெற்ற சோழனொருவன் மகள், ஊழ்வலியாற் புகலிலியாக நேர்ந்ததென்று கொள்ளினும், களைகணிலிகட் கெல்லாம் பொதுவான அகதி என்னும் வடசொல் தமிழ வேந்த னொருவன் மகளுக்கு இயற்பெயரா யிருந்த தென்பது உத்திக்கும் இயற்கைக்கும் ஒரு சிறிதும் பொருந்தாது. இனி, ஒலியொப் புமை நோக்கினும், மூவெழுத்துள் ஒன்றே ஒத்துள்ளது. ஆதலால், அவ்விரு சொல்லை யும் இணைப்பது பல்வே றறியாமையின் விளைவேயாம்.

அஃறிணை *akṟiṇai*, பெ. (n.) ***உயிருள்ளன வும் உயிரில்லனவு மாகிய பகுத்தறிவில்லாத் தாழ்வகுப்புப் பொருள் தொகுதி;*** inferior class of beings and irrational things both animate and inanimate.

"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே"
(தொல். சொல். கிளவி. 1).

"மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயி ருள்ளவும் இல்லவும் அஃறிணை"
(நன். 261).

[அல் = உயர்திணை யல்லாது தாழ்ந்த. திணை = வகுப்பு. அல் + திணை – அ:றிணை. நிலைச்சொல் லகர மெய்யீறு வருஞ்சொல் தகரமுதலொடு புணர்ந்து ஆய்தமாகத் திரிந்தது.]

"குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்
ஆகவும் பெறூஉ மல்வழி யானே"

என்பது நன்னூல் நூற்பா (228). இஃது, அல்வழியில் தனிக்குறிலை யடுத்த லகரமெய் தகரத்தொடு புணரின் றகரமாகத் திரிவதும், அஃதல்லாது ஆய்தமாகத் திரிவதும், அவ் விரண்டுமாக உறழ்வதும், ஆக முந்நிலை யடையும் என்று கூறுகின்றது. இது தொன்று தொட்டு வரும் இலக்கிய வழக்கைத் தழுவியதே யன்றிப் புதிய நெறியீடன்று.

எ-டு :
நல் + திணை – நற்றிணை – றகரத் திரிபு
அல் + திணை – அஃறிணை } ஆய்தத் திரிபு
பல் + துளி – பஃறுளி }
சில் + தாழிசை – சிஃறாழிசை }
கல் + தீது = கற்றீது, கஃறீது – உறழ்ச்சி

தமிழிலக்கண முதனூலாசிரியன், பேருலகி லுள்ள எல்லாப் பொருள்களையும் பகுத்தறி வடிப்படையில் உயர்திணை (உயர்வகுப்பு), அஃறிணை (தாழ்வகுப்பு) என இரு பெரு வகுப்பாக வகுத்து, கடவுளும் மாந்தரும் இன்ப வுலகடையும் மாந்தரான தேவரும் துன்பவுலகடையும் மாந்தரான நரகரும் ஆன, பகுத்தறிவுள்ள உயிர்களெல்லாம் உயர் திணையென்றும், அவ் வறிவில்லா உயிருள் ளனவும் இல்லனவுமான பொருள்களெல்லாம் அஃறிணையென்றும் வேறுபடுத்தி, அவ் வேறுபாட்டைப் பேச்சுவழக்கிலும் நிலை நிறுத்திவிட்டான். **உயர்திணை** பார்க்க; see *uyartiṇai*.

அஃறிணைச்சொல் *akṟiṇai-c-col*, பெ. (n.) ***அஃறிணைபற்றிய அல்லது குறித்த சொல்;*** word or term relating to the class of irrational things.

எ-டு : மாடு, மரம், கல், நிலம், வந்தது, உள்ளது.

அக்கக்காய் *akkakkāy*, கு.வி.எ. (adv.) **துண்டு துண்டாக** (உ.வ.); asunder (com.u.). **அக்கு**[6] பார்க்க; see *akku*[6].

து. அக்கக்க

[அகு → அக்கு = துண்டு. 'அக்கக்கு' அடுக்குத் தொடர். 'ஆய்' கு.வி.எ. ஈறு.]

அக்கச்சி *akkacci*, பெ. (n.) 1. ***மூத்த உடன் பிறந்தாள்;*** elder sister. 2. ***அக்கை முறை யினள்;*** elder cousin-sister related either by blood or marriage. 3. ***மதிப்புரவுபற்றி அக்கச்சி என்று விளிக்கப்படும் மூத்த பெண்;*** any senior girl or woman addressed *akkacci*, out of courtesy. அக்கை பார்க்க; see *akkai*. 'அக்கச்சி யுடமை அரிசி, தங்கச்சி யுடமை தவிடா?' (பழ.).

[அக்கை + அச்சி (தாய்) – அக்கைச்சி → அக்கச்சி. அக்கை தாய் போன்றவளாதலால் அச்சியெனப்பட்டாள்.]

அக்கசாலை *akka-šālai*, பெ. (n.) 1. **பொன், வெள்ளி முதலிய கனியவேலை செய்யுமிடம்** (சிலப். 16 : 126, அடியார்க். உரை); metal works. 2. **தங்கசாலை** (வின்.); mint.

[அலங்குதல் = ஒளிசெய்தல் (பிங்.). அலங்கு → அலக்கு → அலக்கம் = ஒளி. ஒ.நோ: இலங்கு → இலக்கு → இலக்கம் = ஒளி. அலக்கம் → அக்கம் = ஒளியுள்ள பொன், பொன் போன்ற பிற கனியம். ஒ.நோ: அரத்தம் = சிவப்பு. அரத்தம் → அத்தம் = சிவப்பு.]

பண்டைத் தமிழகமான குமரி நாட்டில் முதன்முதற் பொன்னே கிடைத்தமையால், பொன்னின் பெயரே பின்னர்க் கனியப் பொதுப்பெய ராயிற்று. எ-டு : வெண் பொன் = வெள்ளி, செம்பொன் = செம்பு, கரும்பொன் = இரும்பு.

"தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று" என்னும் குறளடியில் (931) பொன் என்னும் பெயர் அடையடுக்காதே இரும்பைக் குறித்தல் காண்க.

அக்கசாலை என்னும் கூட்டுச்சொல் வட மொழியில் இல்லை. அக்கம் என்னும் சொல்லிற்கு 'அர்க்க' (arka) என்னும் வட சொல்லை மூலமாகக் காட்டியுள்ளது, **சென்னை அகரமுதலி.**

'அர்க்க' என்னும் வடசொல்லிற்கு ஒளிக் கதிர், ஒளிவீச்சு, கதிரவன், பன்னிரண்டு,

செம்பு, மதச்சடங்கு, புகழ்ச்சி, பாட்டு, பாடகன், அண்ணன், உணவு என்னும் பொருள்களைக் கூறி, அச் சொல் ஒளிர் தலையும் போற்றுதலையும் குறிக்கும் 'அர்ச்' (arc) என்னும் மூலத்தினின்று தோன்றியதாகக் குறித்துள்ளது, **மானியர் வில்லியம்சு சமற்கிருத - ஆங்கில அகரமுதலி.**

'அர்க்க' என்னும் வடசொற்குச் செம்பு என்னும் பொருளிருக்குமாயின் அச் சொல் 'அரக்கம்' என்னும் தென்சொல்லினின்றே திரிந்திருத்தல்வேண்டும்.

அரக்கு = சிவப்பு, செம்மெழுகு, செவ்வைப்புநஞ்சு. அரக்காம்பல் = செவ்வாம்பல் அரக்கு → அரக்கம் = சிவப்பு, அரத்தம், அவலரக்கு.

அரக்கம் > **Skt.** arka = செம்பு.

நெருப்பிற்கு அல்லது அதன் குணமாகிய ஒளிக்கு வெண்மை, செம்மை, பொன்மை என்னும் முந்நிறமிருப்பதால், நெருப்பைக் குறிக்க, **உல்** என்னும் வேர், அல் → அர் என்றும், இல் → இர் என்றும், எல் → எர் என்றும் திரிந்து வெவ்வேறு சொற்களைப் பிறப்பிக்கும்.

இது **உல்** என்னும் உருப்படியில் விளக்கப் படும்.

கனியங்க ளெல்லாவற்றுள்ளும் ஒளிமிக்கது பொன் என்பது கண்கூடு. பொன் என்னும் பெயரும், ''சுடச்சுடரும் பொன்போல்'' என்னும் குறட் சொற்றொடரும் (267) அதனை நினைவுறுத்தும்.

அக்கசாலையர் *akka-šālaiyar,* பெ. (n.) *தட்டார்* (பிங்.); goldsmiths, jewellers.

க. அக்கசால, அக்கசாலிக; **தெ.** அக்கசால, அகசாலி; **து.** அக்கசாலெ; **மரா.** அகஃளீ.

அக்கட[1] *akkaḍa,* இடை. (int.) **ஒரு வியப்புக் குறிப்பு;** an exclamation of wonder. ''அக்கட விராவணற் கமைந்த வாற்றலே'' (கம்பரா. யுத்த. இராவணன் மந்திரப். 32).

ம. அக்கடா (விளி. இ.); **க.** அக்கட, அக்கடக் கட (அ.தொ.). அக்கச – வியப்பு, துயரம், வெறுப்பு, அழுக்காறு முதலியன உணர்த்தும் இடைச்சொல்; **தெ.** அக்கட, அக்கடக்கட (அ.தொ.), அக்கசமு (வியப்பிடைச்சொல்).

[அக்கை = தாய். அக்கை → அக்க (விளி). 'அட' ஒருபொது விளிச்சொல் அல்லது வியப்பு, துயரம் முதலியன உணர்த்தும் இடைச்சொல். அக்க + அட – அக்கட.]

சிறுபிள்ளைகள், பெரியதொன்றைக் கண்டு வியக்கும்போதும், அழகியதொன்றைக் கண்டு மகிழும்போதும், தீயதொன்றை அல்லது காணாததொன்றைக் கண்டு அஞ்சும் போதும், நோய்நிலையில் அல்லது துன்ப நிலையில் வருந்தும்போதும், தாயை அல்லது தந்தையை ஒருமுறையும் பன்முறையும் விளிப்பதும், நோவுறும்போது அவ் விளிப் பெயரைப் பன்முறை சொல்லிப் புலம்புவதும் இயல்பே. முதற்காலத்திற் சிறுபிள்ளை களாற் சொல்லப்பட்ட அவ் விளிப்பெயர்கள் பின்னர் வளர்ச்சிநிலையிலும் வழங்கியத னால் நாளடைவிற் பல்வேறு குறிப்பிடைச் சொற்களாக மொழிவழக்கில் நிலைத்து விட்டன.

ஐயன், அக்கை, அத்தன், அப்பன், அம்மை, அன்னை முதலிய தாய் தந்தை முறைப் பெயர்களின்கீழ், அவ்வப் பெயரினின்று திரிந்துள்ள குறிப்பிடைச் சொற்களைக் காண்க.

அக்கட என்னுஞ் சொல் வேறு உணர்ச்சி களையும் உணர்த்தக்கூடிய குறிப்பிடைச் சொல்லே.

அக்கட[2] *a-k-kaḍa,* கு.வி.எ. (adv.) **அவ்விடம், அங்கு, அப் பக்கம்;** there, thither, that side. ''அக்கட போவெனும்'' (தனிப்பா. தி. 2, பக். 3).

[அ = அந்த. கடை = பக்கம். அக்கடை → தெ. அக்கட.]

அக்கடை பார்க்க; see *a-k-kaḍai.*

இது தமிழ்த்திரிபான கொடுந்தமிழ்ச் சொல்லேயன்றி, தெலுங்கினின்று வந்த திசைச்சொல் லன்று.

அக்கடாவெனல் *akkaḍā-v-enal,* பெ. (n.) **நெடுவழி வந்த அல்லது வருந்தி யுழைத்த இளைப் புக் களைப்புத் தீர, நிழலில் ஓய்ந்திருத்தற் குறிப்பு;** expr. of repose in a shady spot, after a long tedious journey or arduous labour.

தெ. அக்கடா

[அக்கை = தாய். அக்கை → அக்க (விளி). 'அடா' ஒரு விளியிடைச்சொல். அக்க + அடா – அக்கடா.]

நெடுவழிப்போக்கரும் கடுவுழைப்பாளரும் இடையிலும் கடையிலும் இளைப்பாறும் போது, 'அக்கடா' என்று சொல்லி அமர்வது வழக்கம்.

இனி, குடும்பத் தொல்லையால் நெடுநாள் இடர்ப்பட்ட நிலைமையினின்று நீங்கி அமைதியுறுவதும், அக்கடாவென்றிருத்தல் எனப்படும்.

'இதுவரை எத்தனையோ ஆண்டு உங்களாலே படாத பாடெல்லாம் பட்டேன். இனி, உங்களைவிட்டுப் பிரிந்து அக்கடாவென் றிருக்கப்போகிறேன்' என்பது ஓர் உலகவழக்குத் தாய் கூற்று.

அக்கடா என்பது, ஓர் ஓய்வுக்குறிப்பு விளிப்பெயரேயன்றி ஒலிக்குறிப்பன்று.

அக்கட என்னும் வியப்புக்குறிப்புச் சொல்லிற்கு உரைத்த விளக்கத்தை, ஏற்குமளவு இதற்குங் கொள்க.

அக்கடி *akkaḍi,* பெ. (n.) *1. மரக்கலம் கடுங் காற்றால் கயிற்றடியுண்டு அங்குமிங்கும் அலைதல்;* difficulty or trouble experienced in a voyage by a ship which is being tossed about in a storm and battered by its ropes. *2. ஏதம், துன்பம்;* peril, distress (R.). எனக்கு அக்கடியாயிருக்கிறது (உ.வ.).

ம. அக்கடி, அக்கிடி, அக்கிளிப்பு;
க. அக்கடிதக்கடி.

[அக்கம் = கயிறு. அடி = அடிப்பு. அக்க + அடி – அக்கடி.]

அக்கடை[1] *a-k-kaḍai,* பெ. (n.) *அப் பக்கம்;* that side.

[அ + கடை – அக்கடை.]

அக்கடை[2] *a-k-kaḍai,* கு.வி.எ. (adv.) *அங்கே;* there.

தெ. அக்கட

[அ + கடை – அக்கடை.]

அக்கணம் *akkaṇam,* பெ. (n.) *வெண்காரம்;* borax (W.).

அக்கணா *akkaṇā,* பெ. (n.) *தான்றி;* belleric myrobalan, *Terminalia belerica.*

மறுவ. அக்கத்தான், அக்கந்தம், அக்கம், அக்காடுதி, அக்காத்தான், அக்காந்தி.

அக்கத்தான் *akkattāṉ,* பெ. (n.) *அக்கணா* பார்க்க; see *akkaṇā.*

அக்கதேவி *akkadēvi,* பெ. (n.) *சோனைப்புல்* (மலை.); species of grass.

அக்கந்தம் *akkandam,* பெ. (n.) *அக்கணா* பார்க்க; see *akkaṇā.*

அக்கந்து *akkandu,* பெ. (n.) *போரடிக்குங் களத்திற் பொலி தூற்றுகையில், மணிக்குவியலுக்கு அப்பாற்போய் விழுந்துகிடக்கும் பதர்த் திரள்* (யாழ்ப்.); the chaff which separates in the process of threshing and forms a sort of ridge all around the threshing floor (J.).

அக்கப்பறை *akka-p-paṟai,* பெ. (n.) *அலைகை* (சம்.அக.); wandering about.

[ஒருகா. கடுங்காற்றிலகப்பட்ட மரக்கலக் கயிறும் பாயும் அலசடிப்படுவதுபோல், துன்புற்று அங்குமிங்கும் அலைகை. அக்கம் = கயிறு. பற → பறை = பறத்தல், காற்றிற் பறத்தல்.]

அக்கப்பாடு *akka-p-pāḍu,* பெ. (n.) *1. மரக்கலச் சேதம்;* disaster at sea, shipwreck (வின்.). *2. கப்பற் சரக்கிழப்பு;* loss of cargo (W.).

[2. ஒருகா. அக்கம் = கூலச்சரக்கு; பாடு = கெடுகை.]

அக்கப்போர் *akka-p-pōr,* பெ. (n.) *1. கலகம்* (கொ.வ.); affray, scuffle (colloq.). *2. தொந்தரவு, தொல்லை* (கொ.வ.); worry, trouble (colloq.).

ம. அக்கப்போரு

[ஒருகா. அக்கு = துண்டு, சிறியது. அக்கு + போர் – அக்குப்போர் = சிறுபோர், கலகம், தொந்தரவு. அக்குப்போர் → அக்கப்போர். இனி, அக்கு → அக்கம் + போர் – அக்கப்போர் என்றுமாம். அக்கக்காய் (துண்டுதுண்டாக), அக்குணிப் பிள்ளை (சிறுபிள்ளை) என்னும் வழக்குகளை நோக்குக.]

அக்கம்[1] *akkam,* பெ. (n.) *தவசம்;* cereal. அஃகம்[1] பார்க்க; see *akkam*[1]. 'அக்கவிலை யறியாதவன் துக்க மறியான்' (பழ.).

க., து. அக்கி.

[அஃகம் → அக்கம்.]

அக்கம் என்பது அகம் என்றும் தொகும்.

அக்கம்[2] *akkam,* பெ. (n.) *வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, குரால்* (கபிலம் - brown) *என்னும் நிறங்களால் ஐவகைப்பட்டதும், ஒன்று முதல் பதினாறுவரை முண்முனைகளைக் கொண்டதும், ஒருவகைச் சிறப்பான*

மருத்துவ ஆற்றல் கொண்டதாகக் கருதப் படுவதும், குமரிநாட்டுக் காலந்தொட்டுச் சிவ நெறித் தமிழரால் அணியப்பட்டுவருவதும், பனிமலையடிவார நேபாள நாட்டில் இயற்கை யாக விளைவதும், அக்கமணி என்று பெயர் வழங்கியதும், ஆரியர் தென்னாடு வந்தபின் உருத்திராக்கம் (ருத்ராக்ஷ) எனப் பெயர் மாறி யதுமான காய்மணி; Rudrākṣa bead, a Nepalese product, of five different colours, having one to sixteen pointed projections over the surface, considered to possess some rare medical properties, and customarily worn by the Tamilian Šaivites from Lemurian or pre-historic times. ''தலையெலும் பப்புக் கொக்கிற கக்கம்'' (திருப்பு. 475). அக்கு[1] பார்க்க; see *akku*[1].

[*அள் = கூர்மை (திவா.). அள் → அள்கு → அ:கு.* ***ஒ.நோ:*** *வெள் → வெள்கு → வெ:கு = விரும்பு, மிக விரும்பு, பிறர் பொருளை விரும்பு. அ:கு → அக்கு = கூர்மை, முனை, முண் முனை, முண்முனையுள்ள அக்கமணி. ''உருப்பு லக்கை யணிந்தவர்'' (திருவானைக். கோச் செங். 4). அக்கு → அக்கம் = பெரிய அக்க மணி, 'அம்' பெருமைப்பொருட் பின்னொட்டு.* ***ஒ.நோ:*** *விளக்கு → (கலங்கரை) விளக்கம்.*]

கடவுண்மணி, சிவமணி, தெய்வமணி, நாயகமணி, கண்மணி, கண்டம், கண்டி, கண்டிகை, முண்மணி என்பன அக்கமணி யின் மறுபெயர்கள். இவற்றுள் முதல் நான் கொழிந்த ஏனைய வெல்லாம், அக்கு அல்லது அக்கம் என்னும் பெயரைப் போன்று, கூர் முனைகளைக் கொண்டதென்றே பொருள் படுவன. முண்மணி என்பது வெளிப்படை.

கடவுளையே ஒருசார் தமிழர் சிவன் என்னும் பெயரால் வழிபடுவதால், 'கடவுண் மணி' முதலிய நாற்பெயரும் ஒருபொருட் சொற்களே.

கடவுள்மணி, முள்மணி என்பன கட வுண்மணி, முண்மணி என்று புணர்ந்தது போன்றே, கள்மணி என்பதும் கண்மணி யென்று புணரும். குள் → கள் = முள். கள் → கள்ளி = முள்ளுள்ள செடி. **ஒ.நோ:** முள் → முள்ளி, (நீர்)முள்ளி. குள் → குளவி = கொட் டும் முள்ளுள்ளது. குள்ளுதல் = கிள்ளுதல் (நெல்லை). குள் → கிள் → கிள்ளி → கிளி = கூரிய மூக்கினாற் கிள்ளுவது.

கள் → கண்டு = கண்டங்கத்தரி (முட் கத்தரி). கண்டு → கண்டம் = கள்ளி, கண்டங் கத்தரி, எழுத்தாணி. கண்டு → கண்டல் = முள்ளி, நீர்முள்ளி, தாழை. கண்டு → கண் டகம் = முள், நீர்முள்ளி, வாள். கண்டல் → கண்டலம் = முள்ளி. கண்டகம் → கண்டகி = முள்ளுள்ள தாழை, இலந்தை, மூங்கில், முதுகெலும்பு. கண்டு → கண்டி = முனைக ளுள்ள உருத்திராக்கம். கண்டி → கண்டிகை = உருத்திராக்கமாலை.

ஆரியப் பூசாரியர், இருபெருந் தூய தமிழ மதங்களாகிய சிவனியத்தையும் (சைவத்தை யும்) மாலியத்தையும் (வைணவத்தையும்) ஆரியப்படுத்தும் வகையில், தமிழரின் முத் தொழிற் கடவுளை மூவேறு ஒருதொழில் திருமேனிகளாகப் பகுத்து, முத்திருமேனிக் (திரிமூர்த்தி) கொள்கையைப் புதிதாக வகுத்து, படைப்பிற்கு வேதத்திற் சொல்லப் படாத பிரமா (Brahma) என்னும் ஒரு தெய் வத்தைப் படைத்து, காப்பிற்கு விஷ்ணு என்னும் வேதக் கதிரவத் தெய்வத்தை விண்டு என்னும் திருமாலொடும், அழிப்பிற்கு உருத்திரன் (ருத்ர - Rudra) என்னும் வேதக் காற்றுத் தெய்வத்தைச் சிவனொடும் இணைத்து, கண்மணி என்னுங் கூட்டுச் சொல்லைக் கண் + மணி என்று தவறாகப் பிரித்து, அக்கம் என்னும் தென்சொல்லை அக்ஷ என்று திரித்து அதற்குக் கண் என்று வடமொழிவழிப் பொருளூட்டி, சிவமணி என்பதை யொப்ப ருத்ராக்ஷ என்னும் பெயரைப் புணர்த்து, அது உருத்திரன் (ருத்ர) என்னும் சிவன் கண்ணினின்று தோன்றியதால் அப் பெயர் பெற்றதென்று கூறி, அதற்குச் சான்றுபோல் முப்புர எரிப்பு (திரிபுர தகனம்) என்னுங் கதையுங் கட்டி, ஆராய்ச்சியில்லார்க்குத் தெரியா வாறு உண்மையை முற்றும் மறைத்து விட்டனர்.

இற்றைத் தமிழர்க்குப் பொதுவாக மதத் துறையிற் பகுத்தறி வின்மையால், கண் மணி யென்பது சிவன் கண்ணினின்று தோன்றிய மணியே யென்றும், அக்கம் என்பது அக்ஷ என்னும் வடசொற் றிரிபே யென்றும், ஆரியப் புராணப் புரட்டை யெல்லாம் முழுவுண்மை யென்றும், அதை ஆராய்தல் இறைவனுக்கு மாறான அறங் கடை (பாவம்) என்றும் நம்பிக்கொண் டிருக்கின்றனர்.

ஆரியவேதக் காற்றுத் தெய்வமாகிய உருத்திரனுக்கும் சிவனுக்கும் யாதொரு

தொடர்புமில்லை. மங்கலம் என்று பொருள் படும் சிவ என்னும் ஆரிய அடைமொழி இந்திரன், அக்கினி, உருத்திரன் என்னும் ஆரியவேத முச்சிறு தெய்வங்கட்கும் பொதுவாக வழங்கப்பட்டுள்ளது. அதற்குச் சிவந்தவன் என்று பொருள்படும் சிவன் என்னும் செந்தமிழ்ப் பெயர்ச்சொல்லொடு எள்ளளவுந் தொடர்பில்லை. அந்தி வண்ணன், அழல்வண்ணன், செம்மேனியன், மாணிக்கக்கூத்தன் முதலிய சிவன்பெயர்களை நோக்குக.

உருத்திரன் என்னும் ஆரியத் தெய்வ இயல் விளக்கமும், அவனுக்கும் சிவனுக்கு முள்ள மாபெரு வேறுபாடும், முப்புர எரிப்புக் கதையின் முழுப்புரட்டும், உருத்தி ராக்கம் என்னுஞ் சொல்லின்கீழ்க் கூறப் படும்.

சிவநெறி குமரிநாட்டிலேயே தோன்றி வளர்ச்சியடைந்துவிட்ட தூய தமிழ மத மாதலாலும், அக்கமணி மேனாடுகளில் விளையாமையாலும், கிரேக்கத்திற்கு இன மான ஒரு மொழியைப் பேசிக்கொண்டிருந்த மேலையாசிய ஆரிய வகுப்பார் இந்தியா விற்குட் புகு முன்னரே, தமிழர் இந்தியா முழுதும் பரவி வடஇந்தியத் தமிழர் முன்பு திரவிடராயும் பின்பு பிராகிருதராயும் மாறிய தனாலும், அக்கமணியைச் சிவனியர் குமரி நாட்டுக் காலந்தொட்டு அணிந்துவந்தத னாலும், அம் மணிக்கு அப் பெயரே உலக வழக்கில் வழங்கியதனாலும், தமிழ் முறைப் படி முண்மணி என்பதே அப் பெயர்ப் பொருளாம்.

அக்கம்³ *akkam,* பெ. (n.) $\frac{1}{12}$ *காசு மதிப்புள்ள ஒரு பழைய சிறு காசு* (S.I.I. ii,123); an ancient coin, $\frac{1}{12}$th value of the *kāšu.*

[அஃகுதல் = சுருங்குதல், சிறுத்தல். அஃகு → அஃகம் = சிறு காசு. அஃகம் → அக்கம். தவசத்தைக் குறிக்கும் அஃகம் என்னும் சொல்லும் அக்கம் என்று திரிந்திருத்தலை நோக்குக.]

ஒளி, ஒளிக்கதிர், கதிரவன், செம்பு என்று பொருள்படும் அர்க்க (arka) என்னும் வட சொல்லை, இதற்கு மூலமாகக் காட்டுவது பொருந்தாது.

அக்கம்⁴ *akkam,* பெ. (n.) ***அக்கணா*** பார்க்க; see ***akkaṇā.***

அக்கம்⁵ *akkam,* பெ. (n.) *கயிறு* (சூடா.); rope, cord. *அக்கடி* பார்க்க; see *akkaḍi.*

தெ. உத்தமு; க. அத்த; துட. ஒத்ம்; பட. ஒத்த்; து. உத்தி; பர். உட்க், உத்க்.

[ஒருகா. அல்லுதல் = முடைதல், பின்னுதல், பின்னிக்கொள்ளுதல். அள்ளுதல் = செறிதல். அள்ளல் = நெருக்கம். அள் = செறிவு, பற்றிரும்பு. அள் → அள்கு → அட்கு → அக்கு. அக்கம் = செறிக்கும் அல்லது சேர்த்துக்கட்டுங் கயிறு.]

அக்கம்⁶ *akkam,* பெ. (n.) 1. ***பொன்;*** gold. 2. ***பொன், வெள்ளி முதலிய கனியம்;*** metal.

தெ. அக்க; க. அக; பிராகி. அக்கோ.

[அலக்கம் → அக்கம் = ஒளியுள்ள பொன், பொன்போன்ற பிற கனியம்.]

அக்கம்காரை *akkamkārai,* பெ. (n.) ***ஒருவகைக் கடல்மீன்;*** a kind of sea-fish, *Chorinemus moadetta* (queen-fish).

அக்கம்பக்கம் *akkam-pakkam,* பெ. (n.) ***அண்டையயல்;*** this side and that side, in the neighbourhood, all around. 'பகலில் அக்கம்பக்கம் பார்த்துப் பேசு' (பழ.). *பக்கம்* பார்க்க; see *pakkam.*

*[அடு → அடுக்கு → அடுக்கம் = பக்கம், அண்மை. **ஒ.நோ:** **ம.** அடுக்கல் = பக்கம். அடுக்கம் → அக்கம். 'அக்கம்பக்கம்' எதுகை மரபிணைச்சொல். எதுகை நோக்கி அடுக்கம் அக்கம் எனத் தொக்கது எனினுமாம்.]*

அக்கம்பாரை (தோல்பாரை) *akkampārai,* பெ. (n.) ***ஒருவகைக் கடல்மீன்;*** a kind of sea-fish, *Chorinemus spp.*

அக்கமணி *akka-maṇi,* பெ. (n.) ***சிவமணி (உருத்திராக்கம்);*** rudrākṣa bead. "பொறியர வக்க மணித்தொடை பூண்டு" (திருக்காளத். பு. 5 : 27).

[அக்கம் + மணி. உருண்டையா யிருப்பத னாலும் மணிபோல் அணியப்படுவதனாலும் அக்குக்காய் மணியெனப்பட்டது.]

அக்கமாலை *akka-mālai,* பெ. (n.) 1. ***சிவமணி (உருத்திராக்க) மாலை;*** string of rudrākṣa beads. "புகலுறு மக்க மாலை புனைகுவோர்" (பிரபோத. 18 : 3). 2. ***மன்றாட்டு (செப) மாலை;*** rosary. "புத்தக மக்க மாலை...... பொருந்து கையாள்" (திருவாலவா. கடவுள்வா. 20).

[அக்கம் + மாலை.]
மாலை பார்க்க; see ***mālai.***

அக்கரகாரம் *akkara-kāram,* பெ. (n.) ஒரு மருந்துவேர்; pellitory root, *Pyrethri radix.*

''அக்கர காரம் அதன்பேர் உரைத்தக்கால்
உக்கிரகா லத்தோடம் ஓடுங்காண்— முக்கியமாய்க்
கொண்டாற் சலமுறும் கொம்பனையே தாகசுரம்
கண்டாற் பயந்தோடுங் காண்'' (பதார்த்த. 1025).

U. akkarkarhā.

[ஒருகா. அக்கரம் + காரம்.]

அக்கரகாரம்பற்றிச் சாம்பசிவம்பிள்ளை அகரமுதலி கூறுவது:

அக்கரகாரம் வடஆப்பிரிக்கா தேசத்தில் விளையும் ஒருவகைப் பூமரம். அக்கரகார வேர் (ஒரு) மருந்துவேர். இது முக்கியமாய் வடஆப்பிரிக்காக் கண்டத்திலிருந்து பம்பாய் வழியாகக் கொண்டுவரப்படும். எல்லாக் கடைகளிலும் காணலாம். இது துண்டு துண்டாகவும், மேற்புறம் மங்கல் நிறமாகவும், உள்ளே வெண்மையாகவும் இருக்கும். இதை மெல்லுவதனால், வாய்க்கு அழற்சியையும் நாக்கிலும் உதட்டிலும் விருவிருப்பையுங் கொடுக்கும். பல்வலிக்கு மெல்லுவதுண்டு. கருக்கிட்டுக் (கஷாயமிட்டுக்) குடிக்க ஊதை (வாத) நோய் குணப்படும்.

அக்கரம்[1] *akkaram,* பெ. (n.) வெள்ளெருக்கு (மலை.); white madar.

[அக்கு = வெள்ளை. அக்கு → அக்கரம். இனி, எல் = வெள்ளை, கரம் = நஞ்சு; எல்கரம் → அல்கரம் → அஃகரம் → அக்கரம் என்றுமாம்.]

மறுவ. அக்கரம்மா

அக்கரம்[2] *akkaram,* பெ. (n.) மாமரம் (மலை.); mango tree. அக்காரம்[2] பார்க்க; see *akkāram*[2].

[அக்காரம் = சருக்கரை, சருக்கரைபோல் இனிக்கும் மாங்கனி, அக் கனி தரும் மரம். அக்காரம் = மாமரம் (மூ.அ.). அக்காரம் → அக்கரம்.]

சருக்கரைக்குட்டி என்று ஒருவகை மாங்கனி பெயர் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது.

அக்கரம்[3] *akkaram,* பெ. (n.) ஒருவகை மருந்துவேர் (மூ.அ.); pellitory root. அக்கரகாரம் பார்க்க; see *akkara-kāram.*

தெ. அக்கர; **க.** அக்கல; **ம.** அக்கரம் கொல்லி.

அக்கரம்[4] *akkaram,* பெ. (n.) 1. வாய்நோய் வகை; thrush, aphthae, parasitic stomatitis. ''அக்கரங்கள் தீர்க்கும்'' (பதார்த்த. 325). 2. கழிச்சல் (பேதி) வகை; a form of diarrhoea. ''சொல்லவே யக்கரத்தின் தன்மை பாரு'' (சிகிச்சா. பக். 747).

ம. அக்கரம்; **க.** அக்ர; **து.** அக்ர, அத்ரோ; **தெ.** அக்கரமு.

அக்கரம்மா *akkarammā,* பெ. (n.) வெள்ளெருக்கு; white madar, *Calotropis gigantea* (albiflora) (சா.அக.). அக்கரம்[1] பார்க்க; see *akkaram*[1].

அக்கரன் *akkaraṉ,* பெ. (n.) அக்கரன், கொம்பன், படுவன் என்னும் மூவகைக் கக்கற் கழிச்சல்களுள் (வாந்திபேதிகளுள்) ஒன்று. இது கொப்பூழின்கீழ்ச் சார்ந்து, சூட்டுக் கழிச்சல் (உஷ்ணபேதி) போலும், செரியா மாந்தம் போலும் வெண்மையாகவும் சோறு சோறாகவும் கழிச்சல் கண்டு, குடலிரைச்சல், குமட்டல், நெஞ்சுக் குத்தல், நாவறட்சி, தாகம், கிடைபொருந்தாமை, வியர்வை, வலி, உடல் குளிரல் முதலிய குணங்களைக் காட்டும்; one of the three kinds of cholera contemplated in the Tamil Medical Science. It is marked by an acute catarrhal inflammation of the mucous membrane of the stomach and the intestines, enteric pain, thirst, perspiration, parched tongue, restlessness, rumbling noise in the stomach, nausea, chest pain, presence of partially digested food in the faeces, cold skin etc. The other two kinds are *kombaṉ* and *paḍuvaṉ* (சா.அக.).

அக்கரிவாள் *akkarivāḷ,* பெ. (n.) அக்கறுவாள் பார்க்க; see *akkaṟuvāḷ.*

அக்கரை *a-k-karai,* பெ. (n.) 1. ஆற்றின் அல்லது கால்வாயின் எதிர்க்கரையான மறு கரை; the opposite bank of a river or canal. 'இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை' (பழ.). 'அக்கரைப் பாகலுக்கு இக்கரைக் கொழு கொம்பா?' (பழ.). 2. கடலின் அப்பாற்பட்ட மறுகரை; the opposite shore of a sea or ocean. ''அளக்க ரக்கரை காண்பான்'' (கந்தரந். 10).

ம. அக்கர; **க.** அத்தல் கரெ, அத்த கரெ, அத்கட கரெ; **தெ.** அவ்வல கர; **குட.** அப்பர கரெ; **து.** ஆபெ கரெ; **பிரா.** ஓ கர்ரக்.

[அ (சேய்மைச் சுட்டு) = அந்த. அ + கரை — அக்கரை.]

படத்தாள் 2

அக்கமணி



ஒருமுகம்



இருமுகம்

மும்முகம்

நான்முகம்



ஐம்முகம்



அறுமுகம்



அக்கமாலை

அக்கரைச்சீமை *a-k-karai-c-cīmai*, பெ. (n.) **கடலுக்கு அக்கரையிலுள்ள நாடு;** country on the opposite shore.

[அ + கரை + சீமை. **Skt.** sīmā (எல்லை, நாடு) > த. சீமை.]

அக்கரை நாடு என்றே வழங்கலாம்.

அக்கரைப்பச்சை *a-k-karai-p-paccai*, பெ. (n.) **ஆற்றின் ஒரு கரையினின்று பார்க்கும் மாட்டிற்கு அல்லது மாந்தனுக்கு, எதிர்க்கரை பசேர் என்று தோன்றும் பொய்த்தோற்றம்;** illusion that causes a person on one bank believe that the vegetation on the other bank is greener or more fertile. அது உனக்கு அக் கரைப் பச்சையாயிருக்கிறது (உ.வ.).

[அ + கரை. பசு → பச்சு → பச்சை.]

அக்கரைப்படுத்து-தல் *a-k-karai-p-paḍuttu-*, 2 பி. வி. (v. caus.) **ஆளையேனும் சரக்கை யேனும் பரிசலில் அல்லது படகிலேற்றி ஆற்றைக் கடப்பித்தல்;** to ferry over a river passengers or cargo in boat or coracle.

[அ + கரை + படுத்து. படு (த.வி.) → படுத்து (பி.வி.). 'து' பி.வி. ஈறு.]

அக்கரையர் *a-k-karaiyar*, பெ. (n.) **மேலுலக வாணர் (பரலோகவாசிகள்);** heavenly beings, as inhabiting the regions beyond the ocean of worldly life. 'அக்கரையராய்.........நித்ய ஸூரிகளில் ஒருவர் வந்தவதரித்தார்' (உபதேச ரத். அவதா. பக். 1).

[அ + கரை + அர் (பலர்பாலீறு).]

இவ்வுலக வாழ்க்கை ஒரு கடல் கடத்தலைப் போன்றிருத்தலால், இதைக் கடந்து விண் ணுலகை யடைந்தவர் அக்கரையர் எனப் பட்டனர்.

அக்கரையான் *a-k-karaiyāṉ*, பெ. (n.) **கட லுக்கு அக்கரையிலுள்ள நாட்டான்;** one who lives on the farther shore.

[அ + கரை + ஆன் (ஆண்பாலீறு).]

அக்கரைவைப்பகம் *a-k-karai-vaippagam*, பெ. (n.) **ஒரு வைப்பகத்தின் பெயர்** (இக்.வ.); Overseas Bank (Mod.).

[அ + கரை + வைப்பு + அகம். வை → வைப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

அக்கலாட்டி *akkalāṭṭi*, பெ. (n.) **காசுக்கட்டி;** black catechu, *Catechu nigrum* (சா.அக.).

அக்கவடம் *akka-vaḍam*, பெ. (n.) **அக்க மாலை;** string of rudrākṣa beads. **வடம்** பார்க்க; see *vaḍam*.

[அக்கம் + வடம்.]

அக்கவாலதி *akkavāladi*, பெ. (n.) **நெருஞ்சில்** (சா.அக.); cow's thorn, a small prostrate herb, *Tribulus terrestris*.

[ஒருகா. அக்கம் + வாலதி = வால்போல் நீண்ட முனைகளையும் அக்கமணி (உருத் திராக்கம்) போல உருண்ட வடிவினையு முடைய முள்வகை. த. வால் → வாலம் > **Skt.** vāladi.]

அக்கழலை *akkalalai*, பெ. (n.) **அக்கழற்சி** பார்க்க; see *akkalarci*.

[அக்கு = எலும்பு. அழல் → அழலை = அழற்சி. 'ஐ' தொ.பெ. ஈறு.]

அக்கழற்சி *akkalarci*, பெ. (n.) **எலும்புக்கு உண்டாகும் அழற்சி;** inflammation of bone, *Osteitis* (சா.அக.).

[அக்கு = எலும்பு. அழல் → அழற்சி (தொ. பெ.). 'சி' தொ.பெ. ஈறு.]

அக்கழிவு *akkalivu*, பெ. (n.) **எலும்பிற்கு ஏற் படும் அழிவு;** death or decay of bone, *Osteolysis* or *Osteonecrosis* (சா.அக.).

[அக்கு+அழிவு. அழி → அழிவு (தொ.பெ.). 'வு' தொ.பெ. ஈறு.]

அக்களவு *akkaḷavu*, பெ. (n.) 1. **எலும்பின் அளவு;** the size of a bone. 2. **பூநீர்;** a liquid salt said to be obtained from the soil of fuller's earth during the dewy season. (Several versions are told about the method of collecting this. For details see under *pūnīr* (சா.அக.).

[அக்கு + அளவு. அள → அளவு (தொ.பெ., பண்.பெ.). 'வு' தொ.பெ. அல்லது பண்.பெ.ஈறு.]

அக்களிப்பு *akkaḷippu*, பெ. (n.) **மனமகிழ்ச்சி;** exultation. "சக்களத்திகள் அக்களிப்பொடு கெக்கலிப்பட" (ச. ச. ச. கீர்த். 186). **அகக் களிப்பு** பார்க்க; see *aga-k-kaḷippu*.

[அகம் = மனம். களிப்பு = மகிழ்ச்சி. அகம் + களிப்பு – அகக்களிப்பு → அக்களிப்பு (மரூஉ).]

அக்கறக்கி *akkaṟakki*, பெ. (n.) **செந்தினை;** red millet, *Setaria italica* (சா.அக.).

அக்கறந்தான் *akkaṟandāṉ*, பெ. (n.) **கடுக் காய்;** chebulic myrobalan (T.C.M. ii, 2, 429). ஒ.நோ: அக்காத்தான்.

அக்கறுவாள் *akkaṟuvāḷ*, பெ. (n.) **சப்பாத்துக் கள்ளியையும் முட்செடிகளையும் வெட்ட உதவும் அறுவாள் வகை;** bill-hook for lopping thorns and prickly pear.

[*அக்கு = முள், முட்செடி. அறுவாள் (வினைத் தொகை) = வெட்டுக்கத்தி.* **ஒ.நோ:** *அக்கக்காய் = துண்டுதுண்டாக. அகைதல் = ஒடிதல். அகைத்தல் = முறித்தல், அறுத்தல்.*]

அரிதல் = சிறு கத்தியால் அல்லது அரிவாள் மணை யலகால், காய்கறி முதலிய மெல்லிய வற்றைச் சிறுசிறு துண்டுகளாக மென்மை யாய் நறுக்குதல். அறுத்தல் = பெரியவற்றை யும் வன்மையான வற்றையும், இரண் டாகவோ பல பெருந்துண்டுகளாகவோ, சிறு கத்தியாலும் பெருவாளாலும் முன்னும் பின்னும் வன்மையாய் இழுத்தராவியும் கத்தரித்தும் வெட்டியும் துணித்தல். ஆதலால், அரிவாள் வேறு; அறுவாள் வேறு. ஆகவே, அக்கறுவாளை அக்கரிவாள் என்பது தவறாம்.

அக்கறை *akkaṟai*, பெ. (n.) 1. **பற்று, ஊக்கம், கவனம், கருத்து, கவலை;** interest, concern, care. அவனுக்குப் படிப்பில் அக்கறையில்லை (உ.வ.). 2. **தேவை;** need, necessity. தேர்வில் தேறித் தகுதித்தாள் பெற்று வேலைதேடுவது யாருக்கு அக்கறை? உனக்கா எனக்கா? (உ.வ). 'அவரவர் அக்கறைக்கு அவரவர் பாடுபடுவார்' (பழ.).

தெ. அக்கற; **க.** அக்கறெ; **து.** அக்கரெ; **U.** akhass.

[*ஒருகா. அகக்குறை என்பது அக்கறை என்று திரிந்திருக்கலாம். குறை = தேவை அல்லது இன்மையுணர்ச்சி. அகக்குறை = ஒன்றின்மை யால் அதைப் பெறுதற்கேற்ற முயற்சியை அல் லது விருப்பத்தை யுண்டுபண்ணும் மனக்குறை.*]

அக்கறை யென்னுஞ் சொல்லில் உள்ளது வல்லின றகரம். ''உம்ப ரக்கரையா யனுப்ப'' என்னும் பாடலில் (தனிப்பா. தி. 1, பக். 374) இடையின ரகரம் வந்திருப்பது, ஏட்டுப் பிழையாயிருத்தல் வேண்டும்.

அக்கறைப்படு-தல் *akkaṟai-p-paḍu-*, 20 செ. கு.வி. (v.i.) **பற்றுவைத்தல், ஊக்கங் கொள்ளு தல்;** to become interested. நீ அக்கறைப் பட்டால் அஃது உனக்குக் கிடைக்கும்.

[*அக்கறை + படு. படுதல் = கொள்ளுதல்.*]

அக்கன்[1] *akkaṉ*, பெ. (n.) **அக்கை;** elder sister. 'நாம் கொடுத்தனவும் அக்கன் கொடுத் தனவும்' (S.I.I. ii, 2). அக்கை பார்க்க; see akkai.

ம. அக்கன்; க. அக்கன், அக்கனு; தெ. அக்க; கோத. அக்ன்; துட. ஒக்ன்.

[*அக்கை → அக்கன். இது அம்மை → அம்மன் என்னுந் திரிபை ஒத்தமைந்தது.*]

இங்ஙனம் அன்னீறு பெற்ற பெண்பாற் பெயர்கள் ஆண்மறத்தன்மையை உணர்த்தும். எ-டு: மாரியம்மை → மாரியம்மன்.

அக்கன்[2] *akkaṉ*, பெ. (n.) **அக்குமணியை அல் லது மாலையை அணிந்தவன்;** wearer of rudrākṣa beads.

[*அக்கு = சிவமணி. அக்கு → அக்கன். 'அன்' ஆண்பாலீறு.*]

அக்கன்[3] *akkaṉ*, பெ. (n.) **நாய்** (சூடா.); dog.

[*அக்கு = எலும்பு. அக்கு → அக்கன் = எலும்பை விருப்பமாய்க் கடிக்கும் நாய்.*]

இதுபற்றிய பழமொழிகள் வருமாறு:

'எலும்பு கடிக்கிற நாய்க்குப் பருப்புஞ் சோறும் ஏன்?', 'எலும்பு கடிக்கிற நாய் இரும்பைக் கடிக்குமா?', 'கடிக்க வந்த நாய்க்கு எலும்பைப் போட்டாற்போல்'; 'If you beat a dog with a bone it won't howl'.

வெறிநாயையும், எண்காற் காட்டுப்பன்றி யையும், ஒருவகைச் செடியையும், ஓர் அரசனையும் குறிக்கும் 'அலர்க்க' (alarka) என்னும் வடசொல்லிற்கு 'அக்கன்' என்னும் தென்சொல்லோடு தொடர்பில்லை.

அக்கனக்காய் *akkaṉa-k-kāy*, பெ. (n.) **பூவந்திக் கொட்டை;** soapnut, *Sapindus emarginatus* (சா.அக.).

[*அக்கனம் + காய்.*]

அக்கா *akkā*, பெ. (n.) 1. **தாய்;** mother. 2. **மூத்த உடன்பிறந்தாள்;** elder sister. 3. **அரத்தக் கலப்புள்ள உறவினர்க்குள் அக்கைமுறைப்பட்டவள்;** elder cousin-sister. 4. **மணவுறவால் அக்கைமுறைப்பட்டவள்;** an older woman who has acquired the relation-ship of a cousin through marriage. 5. **மதிப் புரவால் அக்கா என்று விளிக்கப்படும் அல்லது சொல்லப்படும் உறவல்லா மூத்த பெண்;** any unrelated elderly woman addressed or spoken of as *akkā* out of courtesy. 6. **திருமகளுக்கு அக்கையாகச் சொல்லப்படும் மூதேவி;** Goddess of misfortune said to be the elder sister of

Tirumagaḷ (Lakṣmi), the Goddess of wealth. 7. *அக்கை என்பதன் விளிவடிவம்*; vocative of *akkai*.

ம., தெ., க. அக்க; **து.** அக்க, அக்கெ; **குட.** அக்கெ; **கோத.** அக்ன்; **துட.** ஒக்ன், ஒக்கொக்; **கோண்.** அக்கா, தக்கா; **கொலா.** அக்காபாயீ.

[அம்ம → அவ்வ → அக்க → அக்கா (விளி). அம்மை → அவ்வை → அக்கை → அக்கா (விளி). **ஓ.நோ:** செம் → செம்மை → செவ்வை, செம் → செவ் → செவ → செவப்பு → செகப்பு, செவ → சிவ → சிவப்பு → சிகப்பு, செவ் → செவ்வல் → செக்கல் (செந்நிறம்) → செக்கர் = சிவப்பு. ம → வ → க, போலித்திரிபு அல்லது ஒலித்திரிபு.]

அக்கா என்னுஞ் சொல்லின் திரிந்த வடிவங்கள், வடதிரவிட மொழிகளிற் பாட்டனையுங் குறிக்கும்.

எ-டு:

மொழி	சொல் வடிவம்	குறிக்கும் இனமுறை
கோண்டி	அக்கோ	தாய்ப்பாட்டன்
கூய்	அக்கெ	பாட்டன், முன்னோன்
குவி	அக்கு	பாட்டன்
பர்சி(பர்ஜி)	அக்க	தாய்ப்பாட்டன்

பெற்றோர் (இருமுதுகுரவர்) என்னும் முறையில் தாயுந் தந்தையும் சமமானவராதலால், தாய்ப் பெயர் முதலில் தந்தையைக் குறித்து, பின்னர்த் தாய்க்குத் தாயாகிய பாட்டியைப் போன்றே தந்தைக்குத் தந்தையாகிய பாட்டனையுங் குறித்ததென்க.

சித்திய (Scythian) இனச்சொற்கள்

1. *அக்கையைக் குறிப்பவை:*
துங். ஒக்கி, அக்கின்; **மங்.** அச்சர்; **திபெ.** அச்செ; **துரு.** எதெ; **மார்.** அக்கை; **உகி.** இத்தென்.

2. *அண்ணனைக் குறிப்பவை:*
மங். அக்க; **துங்.** அக்கி; **உய்.** அச்ச.

3. *பாட்டியைக் குறிப்பது:*
இலாப். அக்கெ.

4. *தங்கையைக் குறிப்பது:*
ஆசு.துரு. அக்க.

5. *கிழவனைக் குறிப்பவை:*
ஆசித். இக்கி; **பின்.** உக்கொ; **அங்.** அத்.

அக்கா (அக்க) என்னுஞ் சொல் முதன் முதல் தாயையே குறித்து, பின்பு தாய் போன்ற மூத்த உடன்பிறந்தாளுக்கு வழங்கி வருகின்றது. இன்றும் தமிழருள் ஒரு சிலர் தம் தாயை அக்கா என்றே விளிப்பதுங் குறிப்பதும் வழக்கம். தாயைக் குறிக்கும் அச்சி என்னும் சொல்லும், இன்று சில வகுப்பாரிடை, சிறப்பாகத் தாழ்த்தப்பட்டோரிடை, அக்கைக்கு வழங்கி வருகின்றது. பெற்றோர்க்குப் பின் மூத்த மகனும் மூத்த மகளுமே குடும்பப் பொறுப்பாளிகளும் நடத்தாளிகளுமாதலால், 'தந்தைக்குப் பின் தமையன், தாய்க்குப் பின் தமக்கை' என்னும் மரபுச் சொலவடையும் உள்ளது. ஐயன் என்னுஞ் சொல் தனித்த நிலையில் தந்தையைக் குறிப்பது போன்றே, அக்கை யென்னுஞ் சொல்லும் தனித்த நிலையில் முதற்காலத்தில் தாயைக் குறித்திருத்தல்வேண்டும்.

ஆண்பாலில் அக்கைக்குச் சமமானவன் அண்ணன்.

சிறுமியை, சிறப்பாகத் தங்கையை, ஆர்வம் பற்றித் தாய் என விளிப்பதும் குறிப்பதும் இன்றும் வழக்கம்.

இளையவரைத் தம்பி தங்கையென்றும், மூத்தவரை அண்ணன் அக்கையென்றும், முதியவரைப் பாட்டன் பாட்டியென்றும் விளிப்பதும் குறிப்பதும் திருந்திய மக்கட் பண்பாதலால், பாட்டன் முறைப்பெயர் கிழவனைக் குறிப்பதும் இயற்கையின்பாற் பட்டதே. மொழி வேற்றுமையால் முறைப் பெயர்களின் பால் வேறுபடுவதும் உலகப் பொதுவியல்பே.

ஆரிய இனச்சொற்கள்

இலத். அக்கா (தாய்); *Acca Larentia*, mother of the lares. **வ.** அக்கா (தாய்); **பிராகி.** அக்கா; **மரா.** அக்கா.

அக்கா என்று பொதுப்பட வருமிடமெல்லாம், மூத்த உடன்பிறந்தாளையே குறிக்கும்.

பிராகிருதமும் மராத்தியும் உண்மையில் ஆரிய மல்லவேனும், ஆரியத்தன்மை யடைந்துள்ளமையால் ஆரியமெனப்பட்டன.

'*akka*. f. (voc. akka, Pan.) a mother (used contemptuously); N. of a woman; (supposed to be a term of foreign origin; cf. L. *Acca*)' என்று, *மானியர் வில்லியம்சு சமற்கிருத - ஆங்கில அகரமுதலி* (பக். 2) குறித்திருப்பது கவனிக்கத்தக்கது.

தாயைக் குறிக்கும் அவவை என்னும் சொல் மூத்த உடன்பிறந்தாளையும் பாட்டியையும் குறிப்பது போன்றே, அக்கை என்னும் சொல்லும் அவ்விரு முறையையுங் குறிக்கின்ற தென்க. எ-டு: தவ்வை (தம் + அவ்வை) = தமக்கை. அவ்வை = பாட்டி.

இக்கி, உக்கொ, அக் என்னும் சித்தியச் சொற்கள் முதியோனைக் குறித்தலால், முதுமையுணர்த்தும் 'அக்' என்னும் மூலத்தி னின்று அக்கா என்னுஞ் சொல் தோன்றி யிருக்கலாமென்று **கால்டுவெலார்** கருதினார். ஆயின், அக்கா என்னும் சொல்லுணர்த்தும் பொருள்கட் கெல்லாம் அடிப்படையானது அம்மை யென்னும் தாய்முறைப் பொருளே யென்பதும், மகர வொலியே வகரவொலி வாயிலாகக் ககர வொலியாக மாறியிருத்தல் கூடுமென்பதும், மேற்காட்டிய சொற்களா லும் ஏதுக்களாலும் விளக்கமாதல் காண்க.

முதற்காலத்தில், அக்க என்னும் அகரவீற்று வடிவே இயல்பான வடிவா யிருந்திருத்தல் வேண்டும். செந்தமிழ் என்னும் பண்பட்ட நிலையில் அகரவீறு ஐகார வீறாக்கப்பட்டு அக்கை என்றானதாகத் தெரிகின்றது. அதன்பின், அக்கை என்பதே எழுவாயும், அக்க, அக்கா என்னும் இரண்டும் விளிவேற் றுமையும் ஆயின.

எ-டு: அக்கை வந்தாள்; அக்க! வா; அக்கா! போ.

பிற்காலத்தில், கொச்சை வழக்கில், நெடிலீற்று விளிவடிவே எழுவாயுமாயிற்று.

எ-டு: அக்கா வந்தாள்.

ஒ.நோ:

எழுவாய் (செந்நிலை)	விளி	எழுவாய் (கொச்சை)
அம்மை	அம்ம, அம்மா	அம்மா
அப்பன்	அப்ப, அப்பா	அப்பா
ஐயன்	ஐய, ஐயா	ஐயா

இங்ஙனம் விளிவடிவே எழுவாயுமானதால், அக்கை தங்கச்சிமார் (தங்கைமார்) என்னும் மரபிணைச்சொல் 'அக்கா தங்கச்சிமார்' என்றே கொடுந்தமிழ் என்னும் கொச்சை யுலகவழக்கில் வழங்கிவருகின்றது. இது செந் தமிழ் என்னும் உயர்ந்தோர் உலக வழக்கி னின்று வேறுபட்ட தென்பதை அறிதல் வேண்டும்.

அக்காக்காய் *a-k-kākkāy*, பெ. (n.) **பெண்டிர் சிறுபிள்ளைகட்குத் தலைவாரிச் சடைபின்னும் போது, அப் பிள்ளைகள் திமிறாது அமைதியா யிருத்தற்பொருட்டு, அவர்களின் கவனத்தை யீர்க்க, அருகிலுள்ள காக்கையை வந்து பின்னச் சொல்வதுபோல் நடிக்கும் நடிப்பில் அதை விளிக்கும் விளிப்பு;** a playful invitation by a child's mother or nurse addressed to an imaginary or real crow to come and braid the child's hair along with her, the purpose being to divert the attention of the child and make it stay quiet without moving its head.

''பின்னை மணாளனைப் பேரில் கிடந்தானை
முன்னை யமரர் முதல்தனி வித்தினை
என்னையும் எங்கள் குடிமுழு தாட்கொண்ட
மன்னன்னை வந்து குழல்வாராய் அக்காக்காய்!
மாதவன் தன்குழல் வாரா யக்காக்காய்!''
(திவ். பெரியாழ். 2.5 : 1).

''பிண்டத் திரளையும் பேய்க்கிட்ட
நீர்ச்சோறும்
உண்டற்கு வேண்டிநீ ஓடித் திரியாதே
அண்டத் தமரர் பெருமான் அழகமர்
வண்டொத் திருண்ட குழல்வாராய்
அக்காக்காய்!
மாயவன் தன்குழல் வாரா யக்காக்காய்!''
(திவ். பெரியாழ். 2.5 : 7).

[அ + காக்காய். காக்கை(எழு.)→ காக்காய் (விளி). ஐ → ஆய், விளித்திரிபு. அகர முன் னொட்டுப் பலுக்கெளிமையும் ஒலிப்பினிமையும் பற்றியது. பலுக்கு (தென்சொல்) = உச்சரிப்பு (வடசொல்).]

பெரியாழ்வார் திருமொழி 2ஆம் பத்து 5ஆம் திருமொழிப்பொருள் தலைப்பு, 'கண்ணன் குழல்வாரக் காக்கையை வாவெனல்' என் றிருத்தலையும், அத் திருமொழியின் முதல் 9 பாவிசையும் ''குழல்வாராய் அக்காக்காய்'' என்று முடிதலையும், இறுதிப் பாவிசையில் ''குழல்வார வாவென்ற ஆய்ச்சி சொல்'' என்று குறித்திருத்தலையும், அடுத்த திரு மொழிப்பொருள் தலைப்பு, 'காக்கையைக் கண்ணனுக்குக் கோல் கொண்டுவர விளம் புதல்' என்றிருத்தலையும் நோக்குக.

காகங்கள், ஏதேனும் இரை கிடைக்கு மென்று, அடிக்கடி வீட்டுக் கூரைகளில் வந்தமர்ந்து, 'கா கா' எனக் கரையும். சிறு பிள்ளைகட்குப் பறவைகள்மீது விருப்ப முண்டாதலால், அவர்கட்குத் தலைவாரும் போது அவர் அசையாது அமைதியாயிருத்தற் பொருட்டு, தாய்மார் அல்லது செவிலியர்

காக்கையைத் தம் பிள்ளைகட்குத் தலைவார அழைப்பதுபோல் விளித்து, அப் பிள்ளைகளின் மனநிலைக் கேற்றவாறு சில செய்திகளைச் சொல்வது வழக்கம்.

பெரியாழ்வார் திருமொழி கண்ணன் புகழ்ப் பாடலாதலால், பெரும்பாலும் கண்ணன் செயல்களும் திருவிளையாடல்களும் தெய்வத் தன்மையுமே திருமொழிச் செய்திகளாயமைந்தன.

அக்காக்குருவி *akkā-k-kuruvi*, பெ. (n.) ***அக்கா என்னும் ஒலி தோன்றக் கத்தித் திரியும் குருவி வகை***; koel, a bird that keeps crying *akkā*, *Eudynamis honorata*.

[*அக்கா + குருவி. 'அக்கா' ஒலிக்குறிப்பு.*]

அக்காகலம் *akkākalam*, பெ. (n.) ***அகில்*** (பரி.அக.), ***அகில்மரம்***; eaglewood (சா.அக.).

அக்காடச்செல்லிகண்டன் *akkāḍa-c-celli-kaṇḍaṉ*, பெ. (n.) 1. ***தாவிச் செல்லும் அணிற்பிள்ளை***; a species of rodents with long bushy tails living in trees and distinguished by their capacity to leap long distances. 2. ***பறக்கும் அணில்***; flying squirrel, *Petaurista philippensis*. அக்காடச்செல்லிகண்டன் மர அணிலில் ஒரு வகை போலும் (சா.அக.).



பறக்கும் அணில்

அக்காடி *akkāḍi*, பெ. (n.) ***அக்கை யென்னும் முறைப்பெயரின் விளிவடிவம்***; voc. of *akkai*.

[*அக்கை→ அக்கா (விளி)+அடி (விளியசை).*]

அக்காடி (அண்மை விளி), அக்காடீ (சேய்மை விளி). இது அருமைபற்றியதாகக் கருதப்படினும், தாழ்ந்தோர் வழக்காம்.

அக்காடிதம் *akkāḍidam*, பெ. (n.) 1. ***ஒரு வகைச் செய்ந்நஞ்சு*** (கௌரி பாடாணம்); a kind of arsenic preparation (?). 2. ***ஒரு வகைப் பறங்கி வைப்புநஞ்சு*** (பாடாணம்); a kind of arsenic processed by the Chinese (?) (சா.அக.).

இருபொருளும் வினாக் குறியிடப்பட்டிருப்பதால் ஐயுறவுப் பொருள் என்பது அறியப்படும்.

அக்காடிப்பயறு *akkāḍi-p-payaṟu*, பெ. (n.) ***மொச்சைக்காய்***; black-seeded dolichos, *Lablab vulgaris* (சா.அக.).

அக்காடீ *akkāḍi*, இடை. (int.) ***இரங்கல், அச்சம், நோவு முதலியவற்றை யுணர்த்தும் குறிப்புச் சொல்***; an exclamation of grief, pain, fear etc.

[*அக்கை → அக்கா (விளி) + அடீ (விளியசை). அடா (ஆ.பா.) – அடீ→ அடி (பெ.பா.).*]

அக்கா என்பது விளிப்பெயராயினும், உணர்ச்சிக் குறிப்பானமையின் இடைச் சொல்லாயிற்று. அக்காடீ ஆத்தாடீ என்பது மரபிணைக் கூட்டுச்சொல். இது இலக்கியத் திற்கும் உயர்ந்தோர்க்கும் ஏலாத ஒருவகை இழிவழக்காம்.

அக்காடீ ஆத்தாடீ என்று அலறிக்கொண்டு ஓடிவந்தாள் (உ.வ.).

அக்காடி என்னும் சொல் குறிப்புச்சொல் லான வகையை அக்கட[2] என்னுஞ் சொல்லின் கீழ்க் காண்க.

ஆழ்ந்த உணர்ச்சி நேரங்களில், பிள்ளைப் பருவங் கடந்த ஆண்மக்கள் தந்தையையும் பெண்மக்கள் தாயையும் விளிப்பதே இயல் பாதலால், ஆத்தாடி என்பது பெண்பாற் கூற்றாம். சிற்றிளம்பருவத்தில் இருபாற் பிள்ளைகளும் தாயொடும் தமக்கையொடும் நெருங்கிப் பழகுவதால், அக்கட என்பது இருபாற் பொதுவானது, மேற்கூறிய நெறி முறைக்கு விலக்கென்க.

அக்காடீ என்பது, அக்காடி என்பதன் நீட்டமான சேய்மை விளி.

அக்காடுதி *akkāḍudi*, பெ. (n.) ***தான்றி*** (மலை.); belleric myrobalan (சா.அக.).

அக்காணி *akkāṇi*, பெ. (n.) ***பூதவுடம்பு***; gross mortal body. "கயிற்றும் அக்காணி கழித்து" (திவ். பெரியாழ். 5.2 : 3).

[*ஒருகா. அச்சாணி → அக்காணி. அச்சு = உடம்பு. ஆணி = அடிமூலம். அக்காணி = பிறவிக்கு அடிக்களமாயிருப்பது.*]

அக்காத்தான் *akkāttāṉ*, பெ. (n.) ***தான்றி*** (மலை.); belleric myrobalan.

அக்காத்தை *akkāttai,* பெ. (n.) *அக்கை, மூத்த உடன்பிறந்தாள்* (இ.வ.); elder sister (Loc.).

[அக்கா + ஆத்தை — அக்காத்தை.]

அக்கா என்னும் தனிச்சொல்லே மூத்த உடன்பிறந்தாளைக் குறிக்கப் போதியதாம். அக்கையின் தாய்த்தன்மையை உணர்த்தற்கு ஆத்தை என்னும் தாய்ப்பெயர் சேர்ந்து அக்காத்தை என்னும் கூட்டுச்சொல் தோன்றிற்று. இது அண்ணனை அண்ணாச்சி யென்பது போன்றது.

தாய்க்குப்பின் தமக்கை என்னும் கருத்துப் பற்றி, ஆத்தை என்னும் சொல் கண்ணியம் அல்லது அருமை குறித்த பின்னொட்டாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

அக்காதேவி *akka-dēvi,* பெ. (n.) *வறுமைத் தெய்வமும் திருமகளின் அக்கையாகச் சொல லப்படுபவளுமான மூதேவி* (சங்.அக.); Goddess of poverty, represented as the elder sister of *Tirumagaḷ* (Lakṣmi), in mythology.

ம. அக்காள்

[அக்கா = திருமகளின் அக்கை. தேவன் (ஆ.பா.) — தேவி (பெ.பா.).]

மூதேவி திருப்பாற்கடலில் திருமகளுக்கு முந்தித் தோன்றினாள் என்பது ஆரியத் தொன்மம் (புராணம்).

அக்காந்தி *akkāndi,* பெ. (n.) *தான்றி* (பரி. அக.); belleric myrobalan.

அக்கந்தம், அக்காந்தி, அக்காத்தான், அங்காத்தான் என்பன, ஒரே பெயரின் பல்வேறு வடிவங்களாகத் தோன்றுகின்றன.

அக்காரக்காரம் *akkāra-k-kāram,* பெ. (n.) *ஒரு மருந்துச் சரக்கு;* a drug.

அக்காரடலை *akkāraḍalai,* பெ. (n.) *சருக்கரை சேர்த்துச் சமைத்த சோறு;* rice boiled with sugar. "ஆம்பா லக்கா ரடலை யண்ப னீரு றமிர்தம்" (சீவக. 928).

ம. அக்காரடல

[சருக்காரம் → சக்காரம் → அக்காரம் = சருக் கரை. அடேதல் = சமைத்தல். அடு → அடல் → அடலை = சோறு. அக்காரம் + அடலை — அக்காரடலை.]

அக்காரடியல் *akkāraḍiyal,* பெ. (n.) *சருக்கரைப் பொங்கல்* (M.E.R. 582 of 1920); rice boiled in milk with ghee and sugar.

[அக்காரம் = சருக்கரை. அடேதல் → அடு சல் → அடிசல் → அடியல் (தொ். ஆகு.). அக்காரம் + அடியல் — அக்காரவடியல் → அக்காரடியல். அகரம் இடையில் தொக்கது.]

அக்காரநீர் *akkāra-nir,* பெ. (n.) *பதநீர்* (நாஞ்.); sweet toddy.

ம. அக்கானி

[அக்காரம் = சருக்கரை. அக்காரநீர் = சருக்கரைபோல் இனிக்கும் அல்லது சருக்கரை போன்ற கருப்புக்கட்டி காய்ச்சப்படும் பதநீர்.]

அக்காரநீர் என்பது, இன்று கொச்சை வழக்கில் அக்கானி என்று வழங்குகின்றது.

பதநீர் என்பது பாண்டிநாட்டு வழக்கு; தெளிவு என்பது சோழநாட்டு வழக்கு; பனஞ்சாறு என்பது சென்னை வழக்கு.

அக்காரம்[1] *akkāram,* பெ. (n.) *1. சருக்கரை;* sugar. "அக்கார மன்னா ரவர்க்கு" (நாலடி. 374). "ஆடையுஞ் சருக்கரையும் அக்கார மாகும்" (பிங். 10 : 5). *2. கரும்பு* (மூ.அ.); sugar-cane.

முந்து. சருக்காரம்

[சருக்காரம் = வட்டம். சருக்கரம் → சருக் கரை = முதற்கண் வட்ட வடிவாக அல்லது உருண்டை வடிவாகக் காய்ச்சப்பட்ட வெல்லக் கட்டி. சருக்கரம் → சருக்காரம் → சர்க்காரம் → சக்காரம் → அக்காரம்.]

சருக்கரை பிற்காலத்திற் பல்வேறு வடிவில் வார்க்கப்பட்டது; பல்வேறு வகையிற் சீர் திருத்தப்பட்டது. அயிர், கண்டு, கற்கண்டு முதலியன திருத்திய வகைகளாம்.

பதநீர் அக்காரநீர் எனப்படுவதாலும், பனைமரம், முழுகிப்போன பழம் பாண்டி நாட்டுக் குறிஞ்சி நிலத்தும் முல்லை நிலத்தும் இயற்கைக் கருப்பொருளா யிருந்ததனாலும், கரும்பு, நாகநாடெனப்படும் கீழைக்கரைத் தீவுகளினின்று சேரவேந்த னொருவனாற் கொண்டுவரப்பட்டமையாலும், இன்றும் பனங்கருப்புக்கட்டி வட்டவடிவமாக அல்லது அரையுருண்டை வடிவமாக வார்க்கப்பட்டு வட்டெனப்படுவதாலும், சருக்கரையென்னும் பெயர் முதற்காலத்திற் கருப்புக்கட்டியையே குறித்திருக்கலாம்.

அக்காரம்[2] *akkāram,* பெ. (n.) *மாமரம்* (மூ.அ.); mango tree.

[அக்காரம் = சருக்கரைபோல் இனிக்கும் மாங்கனி அல்லது மாங்கனி வகைகளுள் ஒன்று, அக் கனிமரம். கனியைக் குறிப்பின் பண்பாகு பெயரும், மரத்தைக் குறிப்பின் சினையாகு பெயரும் இருமடியாகுபெயரும் ஆகும்.]

இன்றும், சருக்கரைக்குட்டி என்று ஒரு வகை மாங்கனி பெயர் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது.

மாவை ஒன்றாகக் கொண்ட முக்கனி யென்னும் தமிழ்நாட்டு வழக்கு, வரலாற்றிற் கெட்டாத் தொன்றுதொட்டது.

அக்காரம்³ *akkāram*, பெ. (n.) **ஆடை;** cloth, clothes. "ஆடையுஞ் சருக்கரையும் அக்கார மாகும்" (பிங். 10 : 5).

தெ. அங்கி; **க.** அங்கரேக்கு.

[*சருக்காரம் = வட்டம். சருக்காரம் → சக்காரம் → அக்காரம் = வட்டம், சுற்று, உடம்பைச் சுற்றியுடுக்கப்படும் ஆடை. சுற்றுதல் = உடுத்தல். "கூறை யரைச்சுற்றி வாழினும்" (நாலடி. 281). "சுற்ற லுடுத்தல்" (பிங். 6 : 184).* **ஒ.நோ:** *வட்டம் = ஆடை. "வாலிழை வட்டமும்" (பெருங். உஞ்சைக். 42:208). பரிவட்டம் = ஆடை. "ஈறில் விதத்துப் பரிவட்ட மூழி னிரைத்தே" (பெரியபு. ஏயர்கோ. 36). வட்டத் தலைப்பாகை, வட்டத் தாறு முதலிய வழக்குகளையும் நோக்குக.*]

அக்காரவடிசில் *akkāra-v-aḍišil*, பெ. (n.) **சருக்கரைப் பொங்கல் வகை;** rice boiled in milk and ghee with sugar. "அக்கார வடிசில் சொன்னேன்" (திவ். நாய்ச். 9 : 6).

[*அக்காரம் = சருக்கரை. அடுதல் → அடுசல் → அடிசில் (தொ.ஆகு.) = அடப்பட்ட சோறு. அடுதல் = சமைத்தல்.*]

அக்காரை *akkārai*, பெ. (n.) **இனிப்புச் சிற்றுண்டி வகை:** a kind of sweet cake. 'அக்காரையாக அடப்பட்டதுமாம்' (சீவக. 928, நச். உரை).

[*அக்காரம் = சருக்கரை, இனிப்பு. அக்காரம் → அக்காரை = இனிப்புச் சிற்றுண்டி.*]

அக்காள் *akkāḷ*, பெ. (n.) 1. **மூத்த உடன் பிறந்தாள்** (உ.வ.); elder sister. 2. **அரத்த வுறவுள்ள அக்கை முறையினள்;** elder cousin-sister. 3. **மணக்கலப்பால் ஏற்பட்ட அக்கை முறையினள்;** a senior girl or woman who has become a cousin-sister through marriage alliance. 'அக்காளைப் பழித்துத் தங்கை அலவை (அபசாரி) ஆனாள்' (பழ.). அக்கா பார்க்க; see **akkā**.

சில முறைப்பெயர்களின் விளிவடிவங்கள், கொச்சை வழக்கில் எழுவாயாக வழங்கி வருகின்றன. அவற்றுட் பெரும்பாலன பாலீறும் பெற்றுள்ளன. இது இருமடி வழுவாம்.

எ-டு:

எழுவாய்	விளி யெழுவாய்	பாலீறு பெற்ற விளியெழுவாய்
அம்மை	அம்மா	அம்மாள்
அக்கை	அக்கா	அக்காள்
ஆத்தை	ஆத்தா	ஆத்தாள்
ஆய்	ஆயா	ஆயாள்
தங்கை	தங்கா(ய்)	தங்காள்
அப்பன்	அப்பா	அப்பார்
ஐயன்	ஐயா	ஐயார்
அண்ணன்	அண்ணா	அண்ணார்

பாலீறு பெற்றும் பெறாதும் வரும் விளியெழுவாய்ப் பெயர்கள் பழமொழிகளிலும் தனிப்பாடல்களிலும் இடம்பெற்றிருப்பினும், வழுவமைதி பெறா வழுவே யாம்.

அக்காளன் *akkāḷan*, பெ. (n.) **ஒருவகைக் காட்டுப்புல்** (மலை.); species of wild grass.

அக்காளி *akkāḷi*, பெ. (n.) **அக்காளிப்பிரசாதம்** பார்க்க; see *akkāḷi-p-pirašādam.*

அக்காளிப்பிரசாதம் *akkāḷi-p-pirašādam*, பெ. (n.) **கோயிலில் தெய்வத்திற்குப் படைக்கப் படும் திருச்சோற்று வகை** (S.I.I. iv, 83); a kind of food offering in temples.

[**ஒருகா.** *அங்காளி → அக்காளி.* **Skt.** prasāda > **த.** *பிரசாதம்.*]

ஸாத என்பது மேலை யாரியமொழி யொன்றிலு மில்லாத வடநாட்டுச் சொல். சோறு என்னும் சொல்லே சோறு → சோது → சாது → ஸாத என்று திரிந்திருக்கலாம். ஏனெனின், ப்ரஸாத என்னும் முன்னொட்டுப் பெற்ற சொல்லன்றி, ஸாத என்னும் தனிச் சொல் வடமொழி வழக்கிலில்லை. தமிழில் மட்டும் 'சாதம்' என்று சோறுகுறித்து வழங்கிவருகின்றது.

மாணிக்கவாசகர், சோறு என்னுஞ் சொல்லைப் "பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்" என்னும் திருவாசக அடியில் (15 : 7) பேரின்பப் பேறு அல்லது அறப்பயன் மிக்க திருவினை என்னும் பொருளில் ஆண்டிருப்பதுபோல், 'சாதம்' என்னுஞ் சொல்லும் திருக்கோயில் அல்லது மதத்தொடர்பாகச் சிறப்புப் பொருளில் ஆளப்பட்டு வந்திருக்கின்றது. **அக்காளிமண்டை** பார்க்க; see ***akkāḷi-maṇḍai.***

அக்காளிமண்டை *akkāḷi-maṇḍai*, பெ. (n.) ***மொந்தையாகப் படைக்கப்படும் திருக்கோயில் திருச்சோறு*** (S.I.I. iv, 77); big balls of food offered to idols in temples.

[ஒருகா. அங்காளி → அக்காளி. மொத்தை → மொந்தை → மண்டை. இனி, மொண்டை (மொந்தை) → மண்டை, மண்டையளவான சோறு என்றுமாம்.]

முதற்காலத்தில் அக்காளிமண்டையென்று வழங்கிய முழுத் தூய தமிழ் வழக்கே, ஆரியப் பூசாரியர் தென்னாடு வந்தபின் அக்காளிப் பிரசாதம் என இருபிறப்பியாக (hybrid) மாற்றப்பட்டிருக்கலாம்.

அக்கானி *akkāṉi*, பெ. (n.) ***அக்காரநீர்*** பார்க்க; see ***akkāra-nīr***.

அக்கி[1] *akki*, பெ. (n.) ***ஒருவகைப் பூச்சி*** (வின்.); an insect.

அக்கி[2] *akki*, பெ. (n.) ***கற்றாழை*** (சித்.அக.); aloe.

[ஒருகா. அங்கனி (கற்றாழை) → அங்கி → அக்கி.]

அக்கி[3] *akki*, பெ. (n.) ***சூட்டினால் (உடலின் மிகு வெப்பத்தால்) சிறுசிறு கொப்புளப் படலமாகத் தோன்றும் தோல்நோய்;*** herpes.

ம. அக்கி, அக்கிக்கரப்பன்; **தெ.** அக்கி; **பிராகி.** அத்தி.

[உல் → உல → உலர், உலை. உல் → உள் → ஒள் → ஒளி → ஒளிர் → ஒளிறு. உள் → அள் → (அழு) → அழல். அழு → அகு → அகை. அகைதல் = எரிதல். "அகையெரி யானாது" (கலித். 139 : 26). அகு → அக்கு → அக்கி = தீ, சூடு, சூட்டுக்கரப்பன்.]

அக்நி என்னும் வடசொல்லை மூலமாகக் கொள்வர் ஒரு சாரார். அதுவுந் தென்சொற் றிரிபே யென்பதை அவர் அறியார்.

உள் → உண் → உண. உணத்தல் = காய்தல். உண → உணங்கு. உணங்குதல் = காய்தல். உண் → உண்ணம் > **Skt.** uṣṇa. உள் → அள் → (அழு) → அழல் → அழன் → அழனம் = தீ (பிங்.), வெம்மை (பிங்.). அழன் → அழனி → (அகனி) > **Skt.** agni; **L.** *ignis*.

ழ → க, போலித்திரிபு. **ஒ.நோ:** மழ(வு) → மக(வு), தொழு(தி) → தொகு(தி), முழை → முகை, குழை → குகை.

தளதள → தழதழ → தகதக. தகதக்வெனல் = மின்னுதல், ஒளிர்தல். தக → தகம் = எரிவு, சூடு. தகம் → தங்கம் = ஒளிரும் மாழை. தக → திக → திகழ் → திங்கள். தக → தகை = வெப்பம், நீர்வேட்கை. தகம் → தாகம் = நீர் வேட்கை. தக > **Skt.** dah.

அக்கிக்காய்ச்சல் *akki-k-kāyccal*, பெ. (n.) 1. ***உடம்பில் அக்கியை எழுப்பும் ஒருவகைக் காய்ச்சல்;*** a fever accompanied by herpes, herpetic fever. 2. ***உடம்பிற் சிறு குருக்களை யெழுப்பும் ஒருவகைக் காய்ச்சல்;*** an eruptive fever, the eruption which characterises such fever, *Exanthema*. 3. ***குழந்தைகளுக்கு அக்கியை யெழுப்பும் தணிமுறைக் காய்ச்சல்;*** remittent fever in children followed by a rash, *Exanthema subitum* (சா.அக.).

[அக்கி + காய்ச்சல். காய் → காய்ச்சல் (தொ.ஆகு.). 'சல்' தொ.பெ. ஈறு.]

அக்கிக்கொடி *akki-k-koḍi*, பெ. (n.) ***ஒருவகைக் கொடி;*** a creeper, twin-leaved mountain ebony (சா.அக.).

அக்கிடம் *akkiḍam*, பெ. (n.) 1. ***வசம்பு;*** sweet flag, *Acorus calamus*. 2. ***கற்றாழை;*** Indian aloe, *Aloe vera* (officinalis) (சா.அக.).

அக்கிப்படுவன் *akki-p-paḍuvaṉ*, பெ. (n.) ***குளிர் காய்ச்சல் கண்டு உடம்பிற் சில பாகங்களிற் சதை வீங்கிச் சிவந்து வலியுண்டாகி, தினவும் எரிச்சலும் கூடிய குருக்களை யெழுப்பி, சில நாளுக்குள் குணமடையும் ஒரு தோல்நோய்;*** a contagious skin disease appearing with eruptions on certain parts of the body, *Idiopathic erysipelas*.

[படுதல் = தோன்றுதல், பருத்தல். படு → படுவன்.]

அக்கிப்படை *akki-p-paḍai*, பெ. (n.) ***உடம்பில் அக்கியைப்போ லெழும்பும் ஒருவகைப் படை;*** a variety of skin eruption characterised by small vesicles in clusters of the nature of herpes, *Herpes farinosus*.

[படுதல் = பரத்தல். படு → படை. 'ஐ' தொ.பெ. ஈறு.]

அக்கிப்பீச்சல் *akki-p-pīccal*, தொ.பெ. (vbl.n.) 1. ***அக்கி யெழும்பல்;*** formation of grouped vesicles on an inflamed skin in any part of the body, *Herpes*. 2. பல்லி ***எச்சம் (மூத்திரம்) உடம்பிற்படுவதால் அக்கியைப்போற் சிறுசிறு***

கொப்புளங்கள் தோன்றுதல்; formation of a group of small ulcers on the surface of the skin, as a result of blistering caused by the urine of lizards (சா.அக.).

[பீச்சு → பீச்சல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அக்கிப்புடை *akki-p-puḍai*, பெ. (n.) அம்மைக் கொப்புளங்கள் போன்ற குருக்கள் உடம்பின் மேல் திரட்சியாகத் தோன்றுவதால் உண்டாகும் சிவந்த வீக்கம்; a swelling on a reddish base caused by the eruption of vesicles and papulae in groups on the surface of the skin, *Herpes zoster* (சா.அக.).

[புடைத்தல் = வீங்குதல். புடை (முத.தொ. ஆகு.)]

அக்கிப்பூடு *akki-p-pūḍu*, பெ. (n.) கொடிமாமரம்; a species of spreading mango tree (சா.அக.).

[பூணுதல் = பொருந்துதல், நெருங்கிச் சேர்தல். பூண் → பூண்டு → பூடு = நிலத்தோடொட்டிப் படர்ந்து கிடக்கும் நிலைத்திணை வகை. நிலத்தின்கீழ்ப் பற்கள் இறுகப் பொருந்தி விளையும் உள்ளி வகை.]

அக்கிமகாரம் *akkimakāram*, பெ. (n.) அக்கரகாரம் பார்க்க; see *akkara-kāram*.

அக்கிமச்சா *akkimaccā*, பெ. (n.) அமுக்கிரா இலை (பரி.அக.); leaf of Indian winter cherry (செ.அக.)—அமுக்கிறா இலை; the leaf of the plant horse-root, *Withania somnifera* (சா.அக.).

அக்கியம்[1] *akkiyam*, பெ. (n.) (கணி.) பகல் 15 முழுத்தங்களுள் (முகூர்த்தங்களுள்) பதினான்காவது (விதான. குணா. 73, உரை); (Astrol.) the 14th of 15 divisions of a day.

அக்கியம்[2] *akkiyam*, பெ. (n.) 1. ஈயமணல்; lead ore. 2. துத்தநாக மணல்; zinc ore (சா.அக.).

அக்கியெழுது-தல் *akki-y-eḻudu-*, 5 செ.கு.வி. (v.i.) அக்கிப் படலத்திற்கு மருந்தாக, அதன் மேற் செங்காவிக் குழம்பினால் மடங்கல் (சிங்கம்) அல்லது நாய் உருவம் வரைதல்; to paint the figure of a lion or dog with red ochre on the herpes sore, as a cure.

ம. அக்கியெழுத்து

மருத்துவர் பலரிருப்பினும், பொற்கொல்லர் அல்லது குயவரைக்கொண்டு அக்கியெழுதுவிப்பதே வழக்கம்.

அக்கிராந்தம் *akkirāndam*, பெ. (n.) 1. சேம்பு (பச்.மூ.); Indian kales (செ.அக.). 2. சோம்பு; aniseed, seeds of the plant, *Pimpinella anisum* (சா.அக.).

அக்கிலாங்கொடி *akkil-āṅ-koḍi*, பெ. (n.) கருப்பு நாகதாளி; black and few-spined prickly pear, *Opuntia nigricans*.

[அக்கு = முள். அக்கில் + ஆம் + கொடி. 'இல்' சிறுமைப்பொருட் பின்னொட்டு. 'ஆம்' புணர்ச்சிச் சாரியை.]

அக்கிலிப்பிக்கிலி *akkili-p-pikkili*, பெ. (n.) 1. குழப்பம்; confusion. 2. மனக்குழப்பம் (இ.வ.); confusion of mind (Loc.).

தெ. அக்கிலி

[பிக்கு = 1. சிக்கு (வின்.) (தெ. பிக்கு). 2. குழப்பம் (வின்.) (தெ. பிக்கு). அக்கல் பிக்கல் என்னும் இணைச்சொல் அக்கிலிப் பிக்கிலி என்று திரிந்திருக்கலாம்.]

அக்கிலு *akkilu*, பெ. (n.) நெருஞ்சில் (மூ.அ.); tribulus plant.

[அஃகுதல் = கூராதல். அஃகு → அக்கு → அக்கில் → அக்கிலு.]

அக்கிள் *akkiḷ*, பெ. (n.) அக்குள் பார்க்க; see *akkuḷ*.

அக்கினி *akkiṉi*, பெ. (n.) நெருஞ்சில் (மலை.); tribulus plant.

[அஃகு = கூர்மை. அஃகு → அக்கு → அக்கில் → அக்கிலி → அக்கினி.]

அக்கு[1] *akku*, பெ. (n.) 1. எருத்துத் திமில் (பிங்.); ox's hump. 2. சிவமணி (உருத்திராக்க மணி); rudrākṣa bead. "அக்கையணிந்தவர்" (திருவானைக். கோச்செங். 4). 3. அகில் (மலை.); eaglewood. 4. உகா (L.); sand-paper tree.

[அஃகுதல் = சுருங்குதல், குவிதல், கூராதல், நுண்ணிதாதல். அஃகு → அக்கு. எருத்துத் திமில் குவிந்தது. சிவமணி, மத்தங்காய் (ஊமத்தங்காய்) போலும் பலாக்காய் போலும் முட்போன்ற முனைகளையுடையது. அக்கு = கூரிய முனை. ஒ.நோ: முள்மணி → முண்மணி = சிவமணி. கள் (முள்) மணி → கண்மணி = சிவமணி. கள் → கள்ளி = முட்செடி. ஒ.நோ: முள் → முள்ளி = முட்செடி.]

ak, to be sharp, to pierce. **Gk.** *ak-ros*, pointed. *ak-onē*, whetstone. *ak-me*, edge.

L. *ac-us*, needle. *ac-uere*, to sharpen. *ac-iēs*, edge. *acumen*, anything sharp. **AS.** *ecg*, edge. **E.** *acute*, sharp, pointed. f. **L.** *acutus*, p.p. of *acuere*. **Fr.** *aigu*, acute.

அக்கு என்பதே முதன்முதல் தோன்றிய இயற்கையான பெயர். அது 'அம்' என்னும் பெருமைப்பொருட் பின்னொட்டுப் பெற்று அக்கம் என்றானது. **ஒ.நோ:** முத்து → முத்தம் (பருமுத்து). அக்கம் = பருஞ் சிவமணி.

ஆரியப் பூசாரியர் அக்கம் என்பதைச் சமற்கிருதத்தில் அக்ஷ என்று திரித்து, அதற்குக் கண் என்று வடமொழிப் பொருள்கொண்டு, ஆரிய உருத்திரனைத் (Rudra) தமிழ்ச் சிவனாக்கி, சிவமணியை உருத்திராக்கம் (ருத்ராக்ஷ) என்றனர். அக்காலத்தில் மொழி நூல் வளர்ச்சி பெறாமையாலும், ஆரிய மொழி தேவமொழியென நம்பப்பட்டமையாலும், தமிழர் அதை எதிர்த்திலர்.

வேத ஆரியர் இந்தியாவிற்குட் புகு முன்னரே, அவர் முன்னோர் மேலையாசியாவில் ஒரு தனி வகுப்பினராகத் தோன்று முன்னரே, வடதிரவிடரான பிராகிருதர் ஐரோப்பா சென்று ஆரியராக மாறு முன்னரே, மாந்தன் பிறந்தகமான குமரிநாட்டுத் தமிழருள் ஒரு சாராரான சிவனியர் குறிஞ்சி நிலமான நேபாளநாட்டு அக்குமணியை யணிந்து அதைச் சிவமணியாக்கினர்.

இன்னும் இதன் விளக்கமும், 'ருத்ராக்ஷ' என்னும் வடசொல்லையே தென்சொல்லின் மூலமாகக் காட்டுவதற்கு ஆரியர் புனைந்த கதையின் புரட்டும், 'உருத்திராக்கம்' என்னுஞ் சொல்லின்கீழ்க் காண்க.

அகில் ஒருவகை முண்மரத்தின் வயிரம். ''கள்ளி வயிற்றி னகில்பிறக்கும்'' (நான்மணிக். 6).

உகா இலை சிறு முட்படலம்போற் சுரசுரப்பானது.

அக்கு[2] *akku*, பெ. (n.) எட்டி (மலை.); strychnine.

அக்கு[3] *akku*, பெ. (n.) **முள்**; thorn, anything sharp or pointed.

[*அள் = கூர்மை. அள் → அள்கு → அ:கு → அக்கு.*]

அக்கு[4] *akku*, பெ. (n.) 1. **வெள்ளை** (திவ். பெரியாழ். 1.7 : 3, வியா.); whiteness. 2. **எலும்பு**; bone. ''அக்கும் புலியி னதளுமுடையார்'' (திவ். பெரியதி. 9.6 : 1). 3. **சங்கு**; chank. 4. **சங்குமணி**; chank bead or ring. ''அக்கின் னகையிவள்'' (திருக்கோ. 376).

[*எல் = ஒளி, வெள்ளை. ஒருகா. எல் → அல் → அல்கு → அ:கு → அக்கு என்று திரிந்திருக்கலாம். அக்கு = வெள்ளை, வெள்ளையான எலும்பு, வெண்சங்கு.*]

எலும்பு வெண்ணிறமானது. அதனாலேயே எலும்பெனப்பட்டது. எலும்புபோற் சங்கு வெண்ணிறமானது. சங்கினாற் செய்யப்பட்ட மணியும் சங்கெனப்பட்டது; கருவியாகுபெயர். இனி, இயற்கையான சங்கு முண்முனைகளை யுடைமையால் அக்கெனப்பட்டது என்றுமாம்.

அக்கு[5] *akku*, பெ. (n.) பலகறை (சங்.அக.); cowry.

[*அக்கு = வெள்ளை, வெள்ளையான பலகறை.*]

பறையலகு → பலகறை (ஒருவகை முறை மாற்று). ஒரு சொல்லின் எழுத்துகள் அல்லது ஒரு கூட்டுச்சொல்லின் சொற்கள் முன்பின்னாக முறை மாறுவது முறைமாற்று. விசிறி → சிவிறி என்பது எழுத்து முறை மாற்று; இல்முன் → முன்றில் என்பது சொன் முறைமாற்று. பறையலகு (பறை அலகு) என்பது பலகறை என்று மாறியபோது, பகரமும் அகரமும் முன்போன்றே நிற்க, 'றை' 'லகு' என்னும் அசைகளே முறைமாறியிருப்பதால், இதை இடையிட்ட அசைமாற்று என்றே கூறல்வேண்டும். ''பறையல கனைய வெண்பல்'' (சீவக. 2773).

ஓரத்திற் கூரிய முனைவரிசையுள்ள சில பறவை யலகுபோலிருப்பதால், 'கவடி' பறை யலகு எனப் பெயர் பெற்றது போலும்! இது உவமையாகுபெயர்.

அக்கு[6] *akku*, பெ. (n.) **துண்டு**; piece. அக்கக் காய் = துண்டுதுண்டாக.

[*அகைத்தல் = அறுத்தல். ''அகைத்தகைத் திவேர்'' (சீவக. 2766). அகு → அகை. ஒ.நோ: பகு → பகை. அகு → அக்கு = துண்டு.*]

அக்கு[7] *akku*, இடை. (part.) **ஒரு சொல்லாக்க ஈறு**; a formative particle.

எ-டு: கதக்கு, சளக்கு, படக்கு, மடக்கு.

கதக்குக் கதக்கென்று வெட்டினான், சளக்குச் சளக்கென்று துப்பினான், படக்குப்

படக்கென்று கண் துடிக்கிறது, மடக்கு மடக்கென்று (செம்புநீர்) முழுவதையும் குடித்துவிட்டான். இவை உலகவழக்கு. கத + அக்கு, சள + அக்கு, பட + அக்கு, மட + அக்கு என்று பிரியும்.

''இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி உளப்படப் பிறவும்,
அன்ன என்ப சாரியை மொழியே''
(தொல். எழுத்து. புண. 17)

என்று சாரியை நூற்பா யாத்த தொல்காப்பியரே,

''எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதிமெய் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகர முற்றத் தோன்றாது''
(தொல். எழுத்து. புண. 26)

என்று அக்குச் சாரியைக்கு வரையறவும் வகுத்தார்.

அதனால் 'குன்றக்கூகை, மன்றப் பெண்ணை, ஈமக்குடம், அரசக்கன்னி, தமிழக் கூத்து' என்று இளம்பூரணரும்;

'குன்றக்கூகை, மன்றப்பெண்ணை, ஈமக் குடம், கம்மக்குடம், தமிழக்கூத்து' என்று நச்சினார்க்கினியரும் எடுத்துக்காட்டினர்.

இனி, ''வல்லெழுத்து வருவழி'' என்று தொல்காப்பியர் குறித்தது குன்றக்கூறலா யிருத்தல் கண்டு,

'' 'முற்ற' என்றதனால், வன்கணமன்றி மற்றக் கணங்கட்கும் கொள்க. தமிழநூல், தமிழயாப்பு, தமிழவரையர் என வரும்'' என்று இளம்பூரணரும்;

'' 'முற்ற' என்பதனால், வன்கணமன்றி ஏனையவற்றிற்கும் இவ் விதி கொள்க. தமிழநூல், தமிழயாழ், தமிழவரையர் என வரும். இன்னும் இதனானே தமக்கேற்ற இயைபு வல்லெழுத்துக் கொடுத்து முடித்துக் கொள்க'' என்று நச்சினார்க்கினியரும் குறை நிறைத்துக் கூறியுள்ளனர். ஆயினும், தொல்காப்பியரும் அவர்வழிச் செல்லும் உரையாசிரியர்களும் குறித்த அக்குச் சாரியையை மட்டும் எவ்வகையிலும் எவ்வெடுத்துக் காட்டிலுங் காண்பதற்கில்லை. ஏனெனின், அக்குச் சாரியை யென்றே ஒரு சாரியை தமிழில் இல்லவேயில்லை யென்பதே உண்மையான நிலை.

குன்றம், கூகை என்னும் இரு சொல்லும் புணருமிடத்து, நிலைச்சொல் ஈறுகெட்டு வருஞ்சொல் முதன்மெய் மிக்குக் குன்றக்கூகை யெனப் புணர்வதே, முறைமையும் இயற்கையுமாகும். இங்ஙனமே, மன்றம் + பெண்ணை, ஈமம் + குடம், கம்மம் + குடம், அரசன் + கன்னி, தமிழன் + கூத்து என்பனவும். அரசன், தமிழன் என்பன இங்கு அரசக் குடும்பத்தை அல்லது கொடிவழியையும் தமிழ இனத்தையும் குறிப்பன என்றறிதல் வேண்டும்.

தமிழநூல், தமிழயாப்பு, தமிழயாழ், தமிழ வரையர் என்பன, வருஞ்சொல் முதலில் வல்லெழுத்தின்மையால் வந்தவெழுத்து மிகாது புணர்ந்தன.

இனி, குன்றக்கூகை, மன்றப்பெண்ணை, ஈமக்குடம், கம்மக்குடம், அரசக்கன்னி, தமிழ யாழ் என்னும் புணர்ச்சொற்களில், குன்று, மன்று, ஈம், கம், அரசு, தமிழ் என்பவற்றையே நிலைச்சொல்லாகக் கொள்ளினும், அவை அகரச் சாரியை ஏற்று, வந்த எழுத்து மிக்கும் மிகாதும் புணர்ந்தன எனக் கொள்வதல்லது, தொல்காப்பியர் கூறியவாறு, அக்குச் சாரியை பெற்று அகரமொழிந்தவை கெட்டுப் புணர்ந்தன எனக் கொள்வது, உத்திக்கும் இயற்கைக்கும் பொருந்தாது.

குன்றக்கூகை என்பதில் அக்குச் சாரியை வந்ததெனக் கொள்ளின், குன்றச்சோலை என்பதில் அச்சுச் சாரியையும், குன்றத்தேக்கு என்பதில் அத்துச் சாரியையும், குன்றப் பாவை என்பதில் அப்புச் சாரியையும் வந்தன வெனக் கொள்ளல் வேண்டும். அங்ஙனங் கொள்ளலாகாமை காண்க.

வடக்கு, கிழக்கு என்பனவோவெனின், அவை மேற்கு (மேல்+கு), தெற்கு (தென்+கு) என்பன போலக் குவ்வுருபு பெற்ற தனிச் சொற்களே யென்பதறிக. வடம் + கு — வடக்கு. கீழ்+கு — கீழ்க்கு → கிழக்கு.

''செறுநரைக் காணிற் சுமக்க இறுவரை
காணிற் கிழக்காந் தலை''

என்னுங் குறளை (488) நோக்குக.

'அக்கு' என்றொரு சாரியை உண்மையாக விருப்பின், பட்டினத்துப்பிள்ளையார், மழையத்துப்போகருது என்று தொடர்ச்சொல்லிலும், நகரத்தான், புறத்தான் என்று தனிச் சொல்லிலும், அத்துச் சாரியை வருதல் போல, அக்குச் சாரியையும் ஏதேனுமொரு சொல்லில் அல்லது சொற்றொடரில் வருதல் வேண்டும். அங்ஙனம் வருதல் எங்கும் இல்லை. ஆகவே,

''மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவும் ஆகும்''
(நன். 219),

''ஈமும்
கம்மும் உருமும் தொழிற்பெயர் மானும்
முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே''
(நன். 223),

''தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே''
(நன். 225)

என்னும் நன்னூல் நூற்பாக்களின்படியே, மேற்காட்டிய குன்றக்கூகை முதலிய புணர்ச் சொற்கள் அக்குச் சாரியை யென்றொரு சாரியை பெறாது, நிலைச்சொல் வீறு கெட்டும், அகரச் சாரியை பெற்றும், வருஞ் சொல் முதன்மெய் மிக்கும் மிகாதும், உயிர் வரின் உடம்படுமெய் பெற்றும் புணர்ந்தன வென்று கொள்க.

இனி,
''அன்ஆன் இன்அல் அற்றிற் றத்தம்
தம்நம் நும்ஏ அஉ ஐகுன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே''

என்னும் (நன். 244) நூற்பாவில் அக்குச் சாரியை கொள்ளப்படாமையையும், மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர்களால் ஆய்வு செய்யப்பட்ட **தமிழ்ச்சொல் லகராதி** இக் கொள்கைக்கு உடன்பட்டிருத்தலையும் நோக்குக.

ஆகவே, அக்குச் சாரியை என்பது ஒரு சிலரின் திரிபுணர்ச்சியே யாதலால், இவ் வகர முதலியிற் கொள்ளப்படவில்லையென அறிக.

அக்குக்கணம் *akku-k-kaṇam,* பெ. (n.) 1. **எலும்பைப்பற்றிய ஒரு கணநோய்.** இது பொதுவாகக் குழந்தைகட்கு ஏற்படும். இதனால் எலும்பிற் குள்ளிருக்கும் மூளைத் தாது தாக்கப்பட்டு அழிவுறும்; a disease, chiefly in infants, affecting the bones in the system and in which the cells of the bone-marrow disappears, *Osteotabes.* 2. **குழந்தை கட்கு உச்சிக்குழி மூடாமல் எலும்புகளைத் தாக்கி, அதனால் அவை மெதுவாகி வளைந்தும் கோணலாகியும் காணுவதோடு, நரம்புநோய், காய்ச்சல், வலிப்பு, சதைவலி முதலிய குணங் களைக் காட்டும் நோய்;** a constitutional disease in children, marked by bending and distortion of the bones, delayed closure of the fontanels, and degeneration of the liver and the spleen. There are often nervous affections, feverishness, convulsions, pain in the muscles etc., a kind of rickets (சா.அக.).

[அக்கு = எலும்பு. கணம் = கணை.]

அக்குக்கழலை *akku-k-kaḻalai,* பெ. (n.) 1. **எலும்பின்மே லுண்டாகும் கழலைக் கட்டி;** a hard tumour developing on a bone, *Osteoma.* 2. **எலும்பின் கழலைக் கட்டி;** tumour of a bone, *Osteoncus* (சா.அக.).

[அக்கு = எலும்பு. கழல் → கழலை = நெகிழ்ந் தசையுங் கட்டி.]

அக்குக்குறுக்கம் *akku-k-kuṟukkam,* பெ. (n.) **எலும்பு சிறிதாகல்;** diminution of a bone, retarded ossification (சா.அக.).

[அக்கு = எலும்பு. குறு → குறுகு → குறுக்கு → குறுக்கம். 'அம்' தொ.பெ. ஈறு.]

அக்குக்குறுக்கி *akku-k-kuṟukki,* பெ. (n.) **எலும்பைச் சிறியதாக்கும் நோய்;** a disease causing diminution in the size of a bone, rickets, atrophy of the bone, *Osteonabrosis.*

[அக்கு = எலும்பு. குறு → குறுகு → குறுக்கு → குறுக்கி. 'இ' வி.முத. ஈறு.]

அக்குச்சரி *akku-c-cari,* பெ. (n.) **சங்குவளையல்;** shell-bracelet. ''கைச்செறி யக்குச்சரி'' (தக்க யாகப். 100).

[அக்கு = வெண்சங்கு. சுரி → சரி = வளை, வளையல்.]

அக்குச்சுருக்கம் *akku-c-curukkam,* பெ. (n.) **அக்குக்குறுக்கம்** பார்க்க; see *akku-k-kuṟukkam.*

அக்குணி *akkuṇi,* பெ. (n.) **சிறிதளவு;** small quantity, trifle. எனக்கு அக்குணி கொடுத் தான் (உ.வ.).

[அக்கு = அறுப்பு, வெட்டு. அக்குண்ணுதல் = அறுக்கப்படுதல். 'உண்' ஒரு செயப்பாட்டுப் பொருள் துணைவினை. அக்குண்ணி → அக்குணி = அறுக்கப்பட்ட சிறு துண்டு. 'இ' செயப். வி.முத. ஈறு.]

அக்குணிப்பிள்ளை *akkuṇi-p-piḷḷai,* பெ. (n.) 1. **சிறுகுழந்தை;** child congenitally small. 2. **நாடிக் குற்றத்தினால் (தோஷத்தினால்) அல்லது காரணந் தெரியாது இளைத்துச் சிற் றளவாகவுள்ள குழந்தை;** child abnormally small due to bad humours of the system or to emaciation with no obvious cause, *Marasmus infantalis* (சா.அக.).

[புள் → பிள் → பிள்ளை.]

அக்குணி பார்க்க; see *akkuṇi*.

அக்குருக்கி *akkurukki*, பெ. (n.) **எலும்புருக்கி என்னும் நோய்**; consumption (W.)— a disease causing necrosis or degeneration of the bone, *Osteonecrosis* (சா.அக.).

[அக்கு + உருக்கி. அக்கு = எலும்பு. உருகு (த.வி.) → உருக்கு (பி.வி.) → உருக்கி. 'இ' வி.முத. ஈறு.]

அக்குல்லி *akkulli*, பெ. (n.) 1. அஃகுல்லி பார்க்க; see *akkulli*. 2. **ஒருவகைச் சிற்றுண்டி** (சங்.அக.); a kind of confectionary. 3. பிட்டு (மூ.அ.); a kind of steamed meal cake. **ஒ.நோ: Skt.** Šaṣkulī

[அ:குல்லி → அக்குல்லி.]

அக்குல்லு *akkullu*, பெ. (n.) **நெல்வகை** (நெல்விடு.); a kind of paddy.

தெ. அக்குல்லு

அக்குவடம் *akku-vaḍam*, பெ. (n.) **சங்கு மணி வடம்**; string of shell beads for the neck or waist. "அக்கு வடமுடுத்து" (திவ். பெரியாழ். 1.7 : 2).

[அக்கு = வெண்சங்கு. வள் → வட்டு → வட்டம் → வடம். உருண்டு திரண்ட கயிறு அல்லது தொடரி (சங்கிலி).]

அக்குவலி *akku-vali*, பெ. (n.) **எலும்புநோவு**; pain in a bone or in the bones, *Ostealgia* or *Ostalgia* (சா.அக.).

அக்குவா *akkuvā*, பெ. (n.) **சிற்றுண்டிவகை**; cake, sweet cake (சா.அக.).

அக்குள் *akkuḷ*, பெ. (n.) **விலாக்குழி, கமுக்கூடு**; armpit.

ம. அக்குளம்; க. கங்குழு, கங்குள், கவுங்குள்; தெ. சங்க, கௌங்குலி; து. கங்களை.

[ஒருகா. அக்கு (அக்கம்) = பக்கம். உள் = உள்ளிடம். ஒ.நோ: பக்கம் = சிறகு.]

அக்கிள் என்பது கொச்சை வடிவு.

அக்குள் கட்டி *akkuḷ-kaṭṭi*, பெ. (n.) **அக்குளில் நிலப்பூசணிக் கிழங்களவு பருமனுங் கெட்டியுமாய் எழும்பும் கட்டி**; inflammatory swelling of a lymphatic gland of the size of white yam under the armpit, *Bubo* (சா.அக.).

அக்குள் படை *akkuḷ-paḍai*, பெ. (n.) **அக்குளில் தோன்றும் படை**; ringworm of the axilla (armpit), *Tinea axillaris* (சா.அக.).

அக்குள்பாய்ச்சு-தல் *akkuḷ-pāyccu-*, 5 செ.கு.வி. (v. i.) 1. **விளையாட்டாகப் பிறர் கமுக்கூட்டுள் கைவிட்டு மெல்லச் சொறிந்து கூச்சமுண்டாக்குதல்**; to tickle a person's armpit for fun. 2. **காமக் குறிப்பொடு ஒரு பெண்ணின் கமுக்கூட்டுள் கைவிடுதல் அல்லது கூச்சமுண்டாக்குதல்**; to touch or tickle a female person's armpit as an amorous gesture.

ம. கிக்கிளி, கிக்கிளியிடல்; க. அக்கள; தெ. கிதகித பெட்டு.

[பாய் (த.வி.) → பாய்ச்சு (பி.வி.). 'சு' பி.வி. ஈறு.]

அக்குள் பார்க்க; see *akkuḷ*.

அக்குள் மயிர் *akkuḷ-mayir*, பெ. (n.) **கமுக்கூட்டு மயிர்**; the hairs in the armpit (axilla), *Glandebalae* (சா.அக.).

[மை = கருப்பு. மை → மயி → மயிர் = கரிய முடி.]

அக்குள் பார்க்க; see *akkuḷ*.

அக்குளு-த்தல் *akkuḷu-*, 4 செ.கு.வி. (v.i.) **அக்குளிற் கூச்சமுண்டாக்குதல்**; to tickle the armpit. "அக்குளுத்துப் புல்லலு மாற்றேன்" (கலித். 94 : 20).

[அக்குள் (பெ.) → அக்குளு (வி.).]

அக்குளு *akkuḷu*, பெ. (n.) **அக்குள் கூச்சம்** (கலித். 94 : 20, உரை); tickling sensation in the armpit.

[அக்குள் → அக்குளு (முத.தொ.பெ.) = அக்குளுப்பு.]

அக்குளுக்காட்டு-தல் *akkuḷu-k-kāṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) **அக்குளிற் கூச்சமுண்டாக்குதல் (கிச்சுக்கிச்சு மூட்டுதல்)** (கலித். 94 : 20, உரை); to tickle the armpit.

[அக்குள் → அக்குளு. காண் (த.வி.) → காட்டு (பி.வி.). காண் + து – காட்டு. காட்டுதல் = காண்பித்தல், தோற்றுதல், உண்டாக்குதல்.]

அக்கேனம் *akkēṉam*, பெ. (n.) **அஃகேனம்** பார்க்க; see *akkēṉam*.

அக்கை *akkai*, பெ. (n.) 1. **அன்னை**; mother. 2. **உடன்பிறந்த மூத்தாள்**; elder sister. 3. **அரத்த வுறவுற்ற அக்கை முறையாள்**; cousin-sister.

4. **திருமணவுறவாலான அக்கை முறையாள்**; a senior girl or woman who has become a cousin-sister through marriage alliance. 5. **மதிப்பினால் அல்லது அன்பினால் அக்கா என்று விளிக்கப்படும் அல்லது சொல்லப்படும் உறவல்லாத மூத்த பெண்**; an unrelated senior girl or woman addressed or spoken of as *akkā* by courtesy or love.

[அம்மை → அவ்வை → அக்கை.]

செந்தமிழ் நடையில் அல்லது இலக்கண முறையில் எழுவாயாக வழங்கக்கூடிய வடிவம், அக்கை என்பதே. அக்கா என்பது கொச்சை; அக்காள் என்பது கொச்சையும் வழுவுங் கலந்தது.

இருளர் பேச்சில் தாயைக் குறிக்கும் அக்வெ என்னுஞ் சொல், அக்கவ்வை (அக்கை + அவ்வை) என்னும் இணைச்சொல்லின் திரிபா யிருக்கலாம். இது, சில வகுப்பார் தந்தையை அப்பச்சி என்று வழங்குவது போன்றது.

அக்கை யென்னும் திரவிடச்சொல் சித்திய மொழிகளிற் பெருவழக்காக வழங்கினும், அது திரவிடச் சொல்லேயன்றிச் சித்தியச் சொல்லாகாது. அக்கை யென்பதன் இனச் சொல் சித்திய மொழிகளில் தங்கையையும் குறித்தலால், அது முதுமையை யுணர்த்தும் 'அக்' என்னும் மூலத்தினின்று தோன்றிய தென்பதும் பொருந்தாது.

மேலும், உலக முதல் உயர்தனிச் செம் மொழியாயிருப்பதும், சொல்வளம் மிக்க தென்று கால்டுவெலாராற் பாராட்டப் பெற்றதுமான தமிழ், அக்கையைக் குறிக்கச் சொல்லின்றிச் சித்தியமொழிக் குடும்பத்தி னின்று கடன்கொண்ட தென்பது, உத்திக்குப் பொருந்துவதன்று.

பொதுவாக, அன்னைமுறைப் பெயர்களே அக்கைக்கும் வழங்கிவருகின்றன. அவ்வை, அக்கை, அத்தி, அச்சி என்னும் நாற்பெயரும் தாய்க்கும் மூத்த உடன்பிறந்தாட்கும் பொதுவாயிருத்தலையும், அவை தாயையே முந்திக் குறித்தலையும் நோக்குக.

வகரம் ககரமாகத் திரிவது பன்மொழிப் பொதுவியல்பு.

எ-டு: சிவப்பு → சிகப்பு. **E.** ward → guard.

செவ்வல் என்பது செக்கல் என்று திரிந்திருத் தலால், அவ்வை என்பதே அக்கையென்று திரிந்திருத்தல் வேண்டும்.

அவ்வை யென்னுஞ் சொன்மூலத்தை, அச் சொல் லுருப்படியிற் காண்க.

"Can. and Tel. *akka*, elder sister; Tam. *akkei*, *akkā*, and ***akkāḷ***; Marāṭhi *akkā*. In Sans. *akkā* signifies a mother; and an improbable Sans. derivation has been attributed to it by native scholars. I believe this word to be one of those which the Sans. has borrowed from the indigenous Dravidian tongues; and this supposition is confirmed by its extensive use in the Scythian group. The Sans. signification of this word, a mother, differs, it is true, from the ordinary Dravidian meaning, an elder sister; but mother is one of its meanings in poetical Tamil, and a comparison of its significations in various languages shows that it was originally used to denote any elderly female relation, and that the meaning of the ultimate base was probably 'old'. The following are Scythian instances of the use of this root with the meaning of elder sister, precisely as in the Dravidian languages: Tungusian *oki* or *akin;* Mongolian *achan*; Tibetan *achche*; a dialect of the Turkish *ege;* Mordvin *aky;* other Ugrian idioms *iggen*. The Lappish *akke* signifies both wife and grandmother. The Mongol *aka*, Tungusian *aki*, and the Uigur *acha,* signify an elder brother; whilst the signification of old man is conveyed by the Ostiak *iki,* the Finnish *ukko,* and the Hungarian *agg.* Even in the Ku. a Dravidian dialect, *akke* means grandfather. The ultimate base of all these words is probably *ak*, old. On the other hand, *akka*, in Osmanli Turkish, means a younger sister; and the same meaning appears in several related idioms. It may, therefore, be considered possible that *akka* meant originally sister; and then elder sister or younger sister, by secondary or restricted usage. The derivation of ***akka***, from a root signifying old, would appear to be the more probable one." (C.G.D.F.L.—pp. 611-12).

அக்கைச்சி *akkaicci*, பெ. (n.) **மூத்த உடன் பிறந்தாள்**; elder sister.

ம. அக்கச்சி

[அக்கை + அச்சி – அக்கையச்சி → அக்கைச்சி. அச்சி = தாய்.]

அக்கை தாய் போன்றவளாதலால், அச்சி என்பது மதிப்பும் அன்பும்பற்றிப் பின்னொட்டாகச் சேர்க்கப்பட்டது.

அக்கை என்பது தாயைக் குறிக்குமாயின், அக்கைச்சி அல்லது அக்கச்சி என்பது அம்மாச்சி என்பது போன்று பாட்டியைக் குறிக்கும்.

அக்கச்சி பார்க்க; see *akkacci*.

அக்கோ *akkō*, இடை. (int.) **வியப்பு, இரக்கம், துயரம் முதலியவற்றை யுணர்த்தும் குறிப்பு**; an exclamation of wonder, pity, grief etc.

[அக்கை → அக்கோ (விளி). அக்கை என்பது முதற்காலத்தில் தாயைக் குறித்ததனால், அதன் விளிவடிவம் வியப்பு, இரக்கம் முதலியவற்றை யுணர்த்தும் குறிப்பிடைச் சொல்லாயிற்று. ஒ.நோ: அம்மை → அம்மோ, அன்னை → அன்னோ.]

அக்கோலம் *akkōlam*, பெ. (n.) *1.* **தேற்றாங் கொட்டை**; clearing nut, so called from its power of purifying muddy water. *2.* **தேற்றா மரம்**; clearing nut tree, *Strychnos pototorium* (சா.அக.).

[ஒருகா. அம் + கோலம் – அங்கோலம் → அக்கோலம்.]

அகக்கடவுள் *aga-k-kaḍavuḷ*, பெ.(n.) *1.* **ஆதனுக்குள்ளிருக்குங் கடவுள்**; God, as immanent in the individual soul (W.). *2.* **வழிபடுதெய்வம்**; tutelary deity, the deity which a man worships as his own God or the God of his family or caste. *3.* **ஆதன் (ஆன்மா)**; soul.

[அகம் + கடவுள். கட → கடவுள். 'உள்' தொ.பெ. ஈறு. முக்கரணங்களையுங் கடந்து நிற்பவர் கடவுள்.]

அகக்கடுப்பு *aga-k-kaḍuppu*, பெ. (n.) *1.* **உள்வலி, வயிற்றுக்கடுப்புப்போல் உடம்பின் உள்ளுறுப்புகளுள் உண்டாகும் வலி**; irritation in the internal organs of the body. *2.* **குடல் வலி**; colic pain due to irritation in the intestines. *3.* **மனக்கடுப்பு, வெகுளி**; anger, indignation (சா.அக.).

[அகம் + கடுப்பு. கடுத்தல் = மிகுதல், கடுமையாதல், நோதல். கடு → கடுப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

அகக்கண் *aga-k-kaṇ*, பெ. (n.) *1.* **உட்கண்**; inner vision. *2.* **அறிவம் (ஞானம்)**; wisdom. *3.* **மனம்**; mind. *4.* **எலும்பின் உட்டுளை**; a cavity in a bone. *5.* **புண்புரை**; an abnormal infiltration of ulceration, *sinus* (சா.அக.).

அகக்கணு *aga-k-kaṇu*, பெ. (n.) *1.* **மரங்களிலுண்டாகும் உட்கணு**; inner tuberosity (W.). *2.* **எலும்பின் உட்புறந் தோன்றும் கணு**; any protuberance on the inner side of a bone, inner or internal tuberosity (சா.அக.).

[அகம் + கணு. கண்ணுதல் = பொருந்துதல். கண் → கணு = பொருத்து, பொருத்தில் தோன்றும் புடைப்பு.]

அகக்கரணம் *aga-k-karaṇam*, பெ. (n.) *1.* **மதி (புத்தி), உள்ளம் (சித்தம்), மனம், நானுணர்வு (அகங்காரம்) என்னும் உட்புலன்கள் அல்லது அறிவுப் புலன்கள் நான்கனுள் ஒன்று**; one of the four internal intellectual faculties viz., intellect, determinative power, mind and ego. *2.* **மனம்**; mind. "சமமகக் கரண தண்டம்" (கைவல். தத். 2).

[அகம் = உள். கரணம் = கருவி.]

கரணம் பார்க்க; see *karaṇam*.

அகக்கருவி *aga-k-karuvi*, பெ. (n.) (இலக்.) **சொற்புணர்ச்சிக்கு முதற்படிக் கருவியாக உதவும் எழுத்திலக்கண நூற்பாத் தொகுதி**; (Gram.) the versified orthographical rules bearing instrumental relationship of the first degree, to those directly dealing with combination of letters, as components of words.

'இக் கூறிய இலக்கணங்கள் கருவியுஞ் செய்கையுமென இருவகைய. அவற்றுட் கருவி, புறப்புறக்கருவியும் புறக்கருவியும் அகப்புறக் கருவியும் அகக்கருவியுமென நால்வகைத்து. நூன்மரபும் பிறப்பியலும் புறப்புறக்கருவி; மொழிமரபு புறக்கருவி; புணரியல் அகப்புறக்கருவி; "எகர ஒகரம் பெயர்க்கீ றாகா" (தொல். எழுத்து. 272) என்றாற் போல்வன அகக்கருவி' (தொல். எழுத்து. நூன். 1, நச். உரை).

[அகம் + கருவி. அகம் = உள், உள்நெருக்கம், பிறவற்றினும் நெருங்கிய தொடர்பு, முதற்தர உறவு. கரு → கருவி (தொ.ஆகு.).]

கருவி பார்க்க; see *karuvi*.

அகக்களிப்பு *aga-k-kaḷippu*, பெ. (n.) **மன மகிழ்ச்சி**; exultation, elation of spirits.

அகக்காட்சி *aga-k-kāṭci*, பெ. (n.) **இயற்கைக் காட்சி கம்மியனின் உள்ளத்தில் தோற்றுவிக்கும்**

வடிவம்; the image produced by nature in the mind of a sculptor. 'சிற்ப வடிவங்கள் இயற்கை உடற்கூறுகளைக் கொண்டிருப்பினும், அவற்றின் புறத்தோற்றத்தை அகக் காட்சியைக் கொண்டே அமைப்பது முதற் படியாகும்' (சி. செ. பக். 118, பத்தி 4).

அகக்காழ் *aga-k-kāḻ*, பெ. (n.) *1.* **மரத்தின் உள் வயிரம்**; core of a tree, as the hardest part. "அகக்கா ழனவே மரமென மொழிப" (தொல். பொருள். மர. 86). *2.* **ஆண்மரம்** (பிங்.); male tree. *3.* வயிரக்கல்; diamond, a substance of impenetrable hardness, adamant (சா.அக.).

[அகம் + காழ். காழ்த்தல் = மிகுதல், அளவு கடத்தல், முற்றுதல், வயிரங்கொள்ளுதல். காழ் (முத.தொ.ஆகு.) = வயிரம்.]

அகக்குறி *aga-k-kuṟi*, பெ. (n.) *1.* உட்குறி. **அதாவது, நோயினால் உடம்பினுட் காணுங்குறி**; internal symptom of a disease. *2.* காமவின்பக் குறி; symptom of sexual pleasure (சா.அக.).

அகக்கூத்து *aga-k-kūttu,* பெ. (n.) **உண்மை (சத்துவம்), ஒண்மை (இராசதம்), இருண்மை (தாமதம்) என்னும் முக்குணத் தொடர்பான நடிப்பு அல்லது கூத்து**; exposition, by gesture and dancing of the three fundamental qualities. "குணத்தின் வழியதகக் கூத்தெனப் படுமே" (குணநூல்), "அகத்தெழு சுவையா னகமெனப் படுமே" (சயந்தம்)—(சிலப். 3 : 12, அடியார்க். உரை).

அகக்கூத்துக்கை *aga-k-kūttu-k-kai,* பெ. (n.) (நடம்) **அகக்கூத்திற்குரிய எழிற்கை, தொழிற்கை, பொருட்கை என்னும் மூவகைக் கைந் நளிநயங்கள்**; (Dan.) three hand-poses, viz., graceful pose, imitative pose and meaningful pose pertaining to expositional dance.

'எழிற்கையுந் தொழிற்கையு மென்றது: எழிற்கை - அழகுபெறக் காட்டுங்கை. தொழிற்கை - தொழில்பெறக் காட்டுங்கை. உம்மையாற் பொருட்கையும் கூறப்பட்டது. பொருட்கை - பொருளுறக் காட்டுங்கை. என்னை ?

"அவைதாம்,
எழிற்கை யழகே தொழிற்கை தொழிலே
பொருட்கை கவியிற் பொருளா கும்மே"

என்றாராகலின். கொண்ட வகையறிந்து : கொண்ட வகையறிதலாவது, பிண்டியும் பிணையலும் புறக்கூத்துக்குரிய கையென்றும், எழிற்கையும் தொழிற்கையும் அகக்கூத்துக் குரிய கையென்றும் அறிதல்' (சிலப். 3:18-19, அடியார்க். உரை).

[அகம் + கூத்து + கை. இம் முச்சொற்களும் தனித்தனி வருமிடத்துக் காண்க.]

அகக்கொதிப்பு *aga-k-kodippu*, பெ. (n.) *1.* **உடம்பினுள் உண்டாகும் கடுப்பு**; irritation of the internal organs of the body. *2.* வெட்டை; venereal heat in the system (சா.அக.).

[அகம் + கொதிப்பு. கொதி → கொதிப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

அகக்கொல்லி *aga-k-kolli*, பெ. (n.) **தில்லைமரம்**; a tree, the milky juice of which is said to be used as a beverage by the *Siddhars* for promoting longevity, tiger's milk-spurge, *Excoecaria agallocha* (சா.அக.).

அகக்கோளாளர் *aga-k-kōḷāḷar*, பெ. (n.) **அகம்படிப் பெண்டுகள்**; maid-servants, as in a temple. "காஞ்சுகி முதியரு மகக்கோ ளாள ரொடு" (பெருங். உஞ்சைக். 47 : 167-8).

[அகம் = உள், உள்ளிடம், மனை, கோயில். கோள் = கொள்ளுதல். ஆள் → ஆளர் = ஆள்கள். 'அர்' ப.பா. ஈறு. அகக்கோளாளர் = கோயிற்பணிக்குக் கொள்ளப்பட்ட பெண்டிர்.]

பண்டைக்காலத்தில், பத்தி மேலீட்டினால் கோயிற் பணிக்கென்று பெற்றோரால் ஒதுக்கப்பட்டவரும், தாமே அப் பணிக்குத் தம்மைத் தத்தஞ் செய்துகொண்டவரும், விலைக்குக் கொள்ளப்பட்டவரும், வழக்கமாகப் பணிசெய்துவருபவருமாக, கோயிற் பணிப்பெண்டிர் நால்வகையர்.

அகங்கரி-த்தல் *agaṅgari-*, 4 செ.கு.வி. (v.i.) **செருக்குதல்**; to be self-conceited. "தம்முனடிவீழ்ந் தகங்கரித்தான்" (பாரத. பதினே. 162).

[அகம் = மனம். கருமை = பெருமை, வலிமை, கொடுமை. கரு → கரி. கரித்தல் = மிகுதல், வலுத்தல், அடுத்தல், உறுத்துதல், காரமாதல்.]

அகம்[1] பார்க்க; see *agam*[1].

உப்புக் கரித்தல் என்னும் உலக வழக்கில் 'கரித்தல்' மிகுதற் பொருளையும், "செங்குட்டுவன் சினஞ்செருக்கி" (சிலப். 29, உரைப்பாட்டுமடை) என்னுஞ் செய்யுள் வழக்கில் 'செருக்குதல்' மிகுத்தற் பொருளையும் உணர்த்துதலால், செருக்குதற் கருத்திற்கு மிகுதற் கருத்தே அடிப்படையென்பது உணரப்படும். கரித்தல் என்னும் வினை வடமொழியி லில்லை.

அகங்கரிப்பு *agangarippu*, பெ. (n.) **செருக்கு**; arrogance, haughtiness. "அகங்கரிப்பு வரி லெவர்க்கு மறங்கெடுக்கும்" (பிரபோத. 7 : 25).

[அகம் = மனம். கரி → கரிப்பு (தொ.பெ.)= மிகவு, கடுப்பு, செருக்கு. 'பு' தொ.பெ. ஈறு.]

அகங்காரம் *agangāram*, பெ. (n.) 1. **சினம்**; anger. 2. **செருக்கு**; conceit, arrogance, haughtiness.

[அகம் = மனம். கரி → காரம் = மிகவு, வலிமை, கடுப்பு, செருக்கு. 'காரம்' முதனிலை திரிந்து ஈறு பெற்ற தொழிற்பெயர். **ஒ.நோ :** கடி → கரி → காரம். அதிகரி → அதிகாரம், இளக்கரி → இளக்காரம்.]

மனஞ் செருக்குதல் அல்லது மனச்செருக்கு என்பதே தமிழ் அகங்காரச் சொற்பொரு ளென்றும், நானுணர்வு அல்லது தற்பற்று என்பதை அடிப்பொருளாகவும் செருக்கு என் பதை வழிப்பொருளாகவும் கொண்டதே சமற்கிருத 'அஹம்கார'ச் சொல்லென்றும் வேறுபாடறிதல் வேண்டும். '*Aham-kāra* = conception of one's individuality, self consciousness, the making of self, thinking of self, egotism, pride, haughtiness; (in Sāṅkhya phil.) third of the eight producers or sources of Creation, viz., the conceit or conception of individuality, individualization' (M.S.E.D.).

தமிழ்க் கூட்டுச்சொல்லின் நிலைச்சொல் (அகம்) மனத்தைக் குறிப்பது; வருஞ்சொல் (காரம்) மிகுதலைக் குறிக்கும் 'கரி' என்னும் வினைமுதனிலை கொண்டது; சமற்கிருதக் கூட்டுச்சொல்லின் நிலைச்சொல் 'நான்' என்று பொருள்படுவது; வருஞ்சொல் (கார) செய்தலைக் குறிக்கும் 'க்ரு' என்னும் வினை முதனிலை கொண்டது. இதனால், தமிழ் அகங்காரச் சொல்லும் சமற்கிருத அஹங் காரச் சொல்லும் பெரும்பாலும் ஒலியொத் திருப்பினும், வெவ்வேறு வகையில் அமைந் தவை யென்பதும், முன்னது பின்னதன் வழிய தன்றென்பதும் அறியப்படும்.

மனச்செருக்கு என்னும் தென்சொல், மனக் களிப்பு, அகங்காரம் என்னும் இருபொருள் படுவதும், இங்குக் கவனிக்கத்தக்கது.

இன்னும் இதன் விரிவை **அகம்**[1] என்னுஞ் சொல்லின்கீழ்க் காண்க.

அகங்கார முதற்கரு *agangāra-mudar-karu*, பெ. (n.) 1. *பிறவிக்கு மூலமாகிய கரு*; the operating or the first cause of transmigration. 2. **தலை**; head, which is supposed to be the seat of egotism (சா.அக.).

அகங்காரி *agangāri*, பெ. (n.) 1. **கடுமனத்தன், சினத்தன்**; person of violent temper. 2. **செருக் கன், செருக்கி**; proud, conceited person. "என்போற் பகர்வா ரிலையென் றெண்ணகங் காரி" (முல்லையந். 62).

த. அகங்காரி > **Skt.** ahaṃ-kārin.

[அகங்காரம் → அகங்காரி. 'இ' உடைமை யுணர்த்தும் வி.முத. ஈறு.]

அகங்காரம் பார்க்க; see *agangāram*.

அகங்காழ் *agan-kāḻ*, பெ. (n.) **உள்வயிரம்**; inside hard core of trees in the class of exogens.

[அகக்காழ் → அகங்காழ்.]

அகக்காழ் பார்க்க; see *aga-k-kāḻ*.

அகங்கை *agangai*, பெ. (n.) 1. **கையின் உட் புறம்**; inner surface of hand. 2. **விரல்க ளில்லாத கையின் உட்புறம்**; palm of hand. 3. **உள்ளங்கை, கையின் உட்புற நடுப்பகுதி**; central part of palm.

ம. அகங்கை; **தெ.** அறசேயி, அரசெய்யி; **க., து., குட., கோத.** அங்கை; **மா.** அத்தெ; **கொலா.** ஆரன்செயி.

[அகம் (உள்) + கை.]

அகச்சந்தானம் *aga-c-candānam*, பெ. (n.) (சிவ.) **சிவக்கொண்முடிபுகளை (சைவ சித்தாந்தக் கொள்கைகளை) வெள்ளிமலைக் கொடிவழி யில் (கைலாய பரம்பரையில்) கற்பித்து வந்த வரும், நந்திதேவர், சனற்குமாரர், சத்திய ஞான தரிசனிகள், பரஞ்சோதி முனிவர் என்று பெயர் பெற்றவர்களுமான நான்கு திருக் குரவர்**; (Śaiva.) The succession of four divine preceptors who handed down the Śaiva Siddhānta canons. Their names are Nandi-dēvar, Śanarkumārar, Śattiyagnāna darišanigaḷ, and Parañjōdi Munivar.

[அகம் = உள், உள்ளானது, நெருங்கியது, தற்கிழமையானது, தன்னைச் சேர்ந்தது, தன் கொள்கையானது, தன் கொள்கையைச் சேர்ந்தது.]

Skt. santāna > **த.** சந்தானம்.

அகச்சமயம் *aga-c-camayam*, பெ. (n.) (சிவ.) **கன்னிலைக்கொள்கைச் சிவனியம் (பாடாண வாத சைவம்), வேற்றுமைக்கொள்கைச் சிவ**

னியம் (பேதவாத சைவம்), சிவசமக்கொள்கைச் சிவனியம் (சிவசமவாத சைவம்), சிவக்கலப்புச் சிவனியம் (சிவசங்கிராந்தவாத சைவம்), இறை வேறுபடாமைக் கொள்கைச் சிவனியம் (ஈசுவர விவகாரவாத சைவம்), சிவனோ டிரண்டன்மைச் சிவனியம் (சிவாத்துவித சைவம்) என்னும் சிவனிய அறுவகை உட்பிரிவுகள்; (Šaiva.) religious sects six in number intimately related to the Šaiva Siddhānta.

''அகச்சமயத் தொளியாய்'' (சிவப்பிர. 7).

[அகம் = தன் கொள்கையைச் சேர்ந்தது. சமை → சமையம் → சமயம்.]

சமயம் பார்க்க; see *šamayam.*

அகச்சாதி *aga-c-cādi,* பெ. (n.) (இசை.) பண்ணியல் வகையுள் ஒன்று; (Mus.) a group of melody-types. 'ஆசானுக்கு அகச்சாதி காந்தாரம்' (சிலப். 13 : 112, அடியார்க். உரை).

[அகம் = தனக்கு இனமானது. **Skt.** jāti > த. சாதி = குலம், இனம், வகுப்பு, பிரிவு.]

அகச்சுட்டு *aga-c-cuttu,* பெ. (n.) சேய்மை, அண்மை, முன்மை ஆகிய மூவிடங்களையும் சுட்டும் சொற்களின் முதலில் சொல்லுறுப்பாக வரும் ஆ, ஈ, ஊ அல்லது அ, இ, உ என்னும் மூவுயிரெழுத்துகள்; demonstrative vowels ā, ī, ū or a, i, u forming initial parts of the remote proximate and frontal demonstrative words. e.g., ஆங்கு, ஈங்கு, ஊங்கு; அவன், இவன், உவன்.

[அகம் + சுட்டு. அகம் = உள்.]

சுட்டு பார்க்க; see *šuttu.*

முன்மை என்பது சேய்மைக்கும் அண்மைக்கும் இடையிலிருப்பதால், அதை இடைமைச் சுட்டென வழங்குவர். ஆயின், இடைமையென்பது திட்டவட்டமாக ஓர் இடத்தைச் சுட்டாமையாலும், ஊகார உகரங்கள் முன்னிடத்தையும் முன்னிலைப் பொருளையுமே சுட்டுவதாலும், அவற்றை முன்மைச் சுட்டென வழங்குவதே பொருத்தமாம்.

அகச்சுவை *aga-c-cuvai,* பெ. (n.) (நடம்) உண்மை (சத்துவம்), ஒண்மை (இராசதம்), இருண்மை (தாமதம்) என்னும் முக்குணத்தாலான அகநெறிக்கு (அகமார்க்கத்திற்கு) உரிய உணர்ச்சி அல்லது மனச்சுவை; (Dan.) emotions caused by the three fundamental qualities of man, viz., *unmai* (sattva), *onmai* (rajas) and *irunmai* (tamas), lit. truthfulness, brilliancy and darkness respectively.

அகச்சுவையாவன : இராசதம், தாமதம், சாத்துவிகமென்பன. ''குணத்தின் வழியதகக் கூத்தெனப் படுமே'' என்றார் குணநூலுடையார்; ''அகத்தெழு சுவையா னகமெனப் படுமே'' என்றார் சயந்தநூலுடையாருமெனக் கொள்க (சிலப். 3 : 12, அடியார்க். உரை).

[அகம் = உள், மனம். சுவை = மனச்சுவை, உணர்ச்சி.]

முக்குணத்தைத் தேவிகம் (divinity), மாந்திகம் (humanity), பேயிகம் (devilishness) என்று குறிப்பின் மிகப் பொருத்தமாயிருக்கும்.

அகச்சூடு *aga-c-cūdu,* பெ. (n.) 1. **உட்சூடு, அதாவது உடம்பி னுள்வெப்பம்**; internal heat, bodily heat. 2. **கணைச்சூடு;** heat arising from a wasting disease in the system (சா.அக.).

[அகம் = உள், உடம்பின் உள். சுடு → சூடு (முத.தி.தொ.பெ.).]

அகச்சூலி *aga-c-cūli,* பெ. (n.) 1. **ஆசுபத்திரா மரம்** (சித்.அக.); the tree known as *āšupattirā maram* (செ.அக.). 2. **சிறிய சூலிமரம்;** toon tree, *Cedrela toona* (சா.அக.).

அகச்செய்கை *aga-c-ceygai,* பெ. (n.) (இலக்.) **சொற்புணர்ச்சியை நேரடியாகக் கூறும் எழுத்திலக்கண நூற்பாத் தொகுதி;** (Gram.) the versified orthographical rules actually dealing with combination of letters, as components of words.

'இக்கூறிய இலக்கணங்கள் கருவியும் செய்கையுமென இருவகைய...... இனிச் செய்கையும் புறப்புறச் செய்கையும் புறச்செய்கையும் அகப்புறச் செய்கையும் அகச்செய்கையுமென நால்வகைத்து. ''எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே'' (எழுத்து. 140) என்றாற் போல்வன புறப்புறச் செய்கை; ''லனவென வரூஉம் புள்ளி முன்னர்'' (எழுத்து. 149) என்றாற் போல்வன புறச்செய்கை; ''உகரமொடு புணரும் புள்ளி யிறுதி'' (எழுத்து. 163) என்றாற் போல்வன அகப்புறச் செய்கை; தொகைமரபு முதலிய ஒத்தினுள் இன்ன ஈறு இன்னவாறு முடியுமெனச் செய்கை கூறுவனவெல்லாம் அகச் செய்கை' (தொல். எழுத்து. நூன். 1, நச். உரை).

[அகம் = உள், நெருக்கவுறவு. செய் → செய்கை (தொ.பெ.). 'கை' தொ.பெ. ஈறு.]

அகச்சோலை *aga-c-cōlai*, பெ. (n.) **இன்பக் கா (உய்யான வனம்)**; pleasure garden. 'கற்பக விருட்சமுள, இவளது அகச்சோலையில்' (தக்கயாகப். 66, உரை).

[அகம் = மனம், மனவின்பம்.]

சோலை பார்க்க; see *šōlai*.

அகசம் *agašam*, பெ. (n.) 1. **எலுமிச்சை** (மறை.அக.); sour lime, *Citrus medica*. 2. **அகத்தி** (சித்.அக.); West Indian pea-tree (செ.அக.) — Agastia's plant, *Coronilla grandiflora* alias *Agati grandiflora* alias *Sesbania grandiflora* (சா.அக.). **ஒ.நோ:** அச்சம்.

[2. அகத்தி → அகசி → அகசம்.]

அகசம்பங்கி *aga-šambangi*, பெ. (n.) **பெரிய சம்பங்கிமரம்**; a very large tree that bears yellow flowers—tulip tree, Indian magdolina, *Michelia champaca* (சா.அக.).

அகசரிப்பு *aga-šarippu*, பெ. (n.) **ஒரு பொருளின் சுற்றெல்லையிலுள்ள பகுதி அப் பொருளின் நடுவத்தை (மையத்தை) நோக்கி நெருங்கும் ஆற்றல் (சக்தி)** (இக்.வ.); centripetal force (Mod.).

[அகம் = உள், நடு, நடுவம். சரிதல் = சாய்தல், இயங்குதல். சரி → சரிப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

அகசி *agaši*, பெ. (n.) 1. **அகசம் 2** பார்க்க; see *agašam 2*. 2. **சீமையகத்தி**; West Indian sesbane, *Cassia alata*. 3. **அலிசி**; linseed plant, *Linum usitatissimum* (சா.அக.).

[அகத்தி → அகசி.]

அகசுகம் *aga-šugam*, பெ. (n.) 1. **மனநலம்**; mental health. 2. **தன்னை அடைந்தவர்க்கு நலந்தரும் ஆற்றல் வாய்ந்த அரசமரம்**; a tree possessing healing powers and giving health to those who go under it—peepul tree, *Ficus religiosa* (சா.அக.).

[அகம் = மனம். **Skt.** šukha > த. சுகம் = இன்பம், நலம்.]

அகஞ்சுரிப்படுத்து - தல் *agañjuri-p-paḍuttu-*, 2 பி.வி. (v.caus.) 1. **மனத்தைத் தேற்றுதல்**; to compose, console, as the mind. 'எனக்கோடு கிற தசையை உங்களுக்குச் சொல்லி அகஞ்சுரிப்படுத்தித் தரிக்கைக்கு' (ஈடு, 8.2 : 2). 2. **குறையச் செய்தல்**; (ஈடு, 4.7 : 9); to cause to diminish, lessen.

[1. அகம் சரிப்படுத்து → அகஞ்சுரிப்படுத்து. அகம் = மனம். சரி = சமம், நேர், செவ்வை, திருத்தம். சரிப்படுத்துதல் = சரியாக்குதல், திருத்துதல், தேற்றுதல். 2. அகம் = **உள்**. சுரிதல் = சுருங்குதல், குறைதல், உள்ளொடுங்குதல். சுரி (முத.தொ.ஆகு.) = சுருக்கம், குறைவு. சுரிப்படுத்துதல் = குறையச் செய்தல். 'படு' துணைவினை. படு (த.வி.) → படுத்து (பி.வி.).]

அகஞ்செவி *agañ-cevi*, பெ. (n.) **உட்செவி**; auricular cavity. 'அகஞ்செவி நிரம்பும்படி ஆரவாரித்தன' (முல்லைப். 89, நச். உரை).

[அகம் + செவி. அகம் = உள். செவி = காது.]

அகட்டு-தல் *agaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **அகல வைத்தல்**; to open wide. "அண்ணாந்து காலை யகட்டி நடந்து" (பஞ்ச. திருமுக. 876).

ம. அகற்றுக, அகத்துக; க. அகலிசு; தெ. அகலிம்பு.

[அகல் (த.வி.) → அகற்று (பி.வி.) → அகட்டு.]

அகட்டுத்தே *agaṭṭu-t-tē*, பெ. (n.) **பெருவயிற்றுத் தெய்வம், பிள்ளையார்**; Gaṇēša, the pot-bellied God.

[அகடு = வயிறு. தே = தெய்வம். பல் பருத்தவனைப் பல்லன் என்பது போல், அகடு பருத்த தெய்வத்தை அகட்டுத்தே என்றனர்.]

தே பார்க்க; see *tē*.

அகடு[1] *agaḍu*, பெ. (n.) 1. **உள், உட்புறம்**; interior. "செழுந்தோட் டகட்டி னடைகிடக்கும்" (கூர்மபு. தக்கன்வே. 57). 2. **வயிறு**; belly. "அகடாரார்" (குறள், 936). 3. **நடு**; middle. "மதியகடுதோய்" (தாயு. சச்சி. 6). 4. **நடுவுநிலைமை**; impartiality. "அகடுற யார் மாட்டும் நில்லாது செல்வம்" (நாலடி. 2).

[அகு → அகள் (அகழ்) → அகண் → அகடு = **உள், உட்புறம், நடு, நடுநிலை, உடம்பின் உள்ளும் நடுவும் உள்ள வயிறு.**]

அகடு[2] *agaḍu*, பெ. (n.) முகடு (சம்.அக.கை.); top, ridge, as of roof.

[முகம் (மூக்கு) → முகடு = மூக்குப் போன்ற வீட்டின் மேற்பகுதி. முகடு → (உகடு) → அகடு. இனி, அகைத்தல் = உயர்த்துதல். அகைப்பு = எழுச்சி. அகை → அகடு = **வீட்டின் உயர்ச்சியான அல்லது எழுச்சியான பகுதி என்றுமாம்**].

அகடு[3] *agaḍu,* பெ. (n.) **பொல்லாங்கு** (வின்.); wickedness.

க., தெ. அகடு.

[அகழ்தல் = தோண்டுதல், துளைத்தல், பிடுங்குதல். துளைத்தல் = வருத்துதல். பிடுங்குதல் = வருத்துதல், தொந்தரவு கொடுத்தல். அகழ் → அகடு.]

அகடுசெய்-தல் *agaḍu-šey-,* 1 செ.குன்றாவி. (v.t.) **துன்புறுத்துதல்** (வின்.); to tease, vex.

அகடூரி *agaḍūri,* பெ. (n.) பாம்பு (சிந்தா.நி.); snake.

[அகடு = வயிறு. ஊர் → ஊரி. 'இ' வி.முத. ஈறு. ஊர்தல் = ஒட்டி நகர்ந்து செல்லுதல். அகடூரி = காலின்றி வயிற்றுப்புறத்தால் நகர்ந்து செல்வது.]

அகண் *agaṇ,* பெ. (n.) **அண்மை** (சம்.அக.); nearness.

[ஒருகா. அகம் + அண் – அகவண் → அகண்.]

அகண்டகம் *aganḍagam,* பெ. (n.) 1. **முள்ளில்லாத செடி அல்லது காய்;** a thornless plant or fruit. 2. **முள்ளந்தண்டில்லாதது;** invertebrate (சா.அக.).

ம., க. அகண்டக; **Skt.** akaṇṭaka.

['அ' எதிர்மறை முன்னொட்டு. குள் → கள் → கண்டு → கண்டம் → கண்டகம் = முள்.]

அகண்டகாவேரி *aganḍa-kāvēri,* பெ. (n.) **ஈரோட்டிற்கும் (ஈரோடைக்கும்) திருச்சிராப்பள்ளிக்கும் இடையில், இரண்டாகப் பிரியாது ஓடும் காவேரியாறு;** the undivided *Kāvēri* river, between Erode and its point of bifurcation close to Thiruchirāppaḷḷi.

['அ' எதிர்மறை முன்னொட்டு. கண்டம் = துண்டம், பிரிவு, பெருநிலப்பகுதி. அகண்டம் = பகுக்கப்படாதது. காவிரி → காவேரி.]

கொள்ளிடம், காவிரி என இரண்டாகப் பிரியாத நிலையிலுள்ள காவிரி அகண்ட காவேரி.

அகண்டதீவம் *aganḍa-tīvam,* பெ. (n.) **நந்தா விளக்கு;** lamp that burns perpetually, used in worship in temples.

[அகண்டம் = பகுக்கப்படாதது. தீய் → தீய்வு → தீவு → தீவம் = விளக்கு.]

காலத்தாற் பகுக்கப்படாது என்றும் எரியும் தீவம் அகண்டதீவம். **Skt.** akhaṇḍa dīpa. இனி, அகன்ற வட்டவடிவமான அகல்விளக்கு எனப் பொருள் கொள்ளின், 'அகண்ட' என்பது 'அகன்ற' என்பதன் திரிபாகும்.

அகண்டபூண்டு *aganḍa-pūṇḍu,* பெ. (n.) 1. **பிரமிப்பூடு;** a plant used in medicines, *Gratiola monieri.* 2. **வல்லாரை;** Indian penny wort, *Hydrocotyle asiatica.* 3. **வென்னர் (சித்தர்) உண்ணும் ஒரு கற்ப மூலிகை;** a drug taken by *Siddhas* for rejuvenescence (சா.அக).

பூண்டு பார்க்க; see *pūṇḍu.*

அகண்டம்[1] *aganḍam,* பெ. (n.) 1. **பகுக்கப்படாதது;** that which is indivisible. "அகண்டமா யமர்ந்த தன்றே" (கோயிற்பு. பதஞ். 65). 2. **நிறைவு;** perfection. "அகண்டவறிவு" (ஞானவா. உபசாந். 34). 3. **முழுதும், எல்லாம்** (சூடா.); the whole. 4. **நந்தா விளக்கு;** perpetually burning lamp.

Skt. akhaṇḍa

[அல் → 'அ' எதிர்மறை முன்னொட்டு. கள் → கண்டு → கண்டம் = துண்டம். ஒ.நோ: துள் → துண்டு → துண்டம். பல கண்டமாகப் பகுக்கப்படாது ஒரே முழுமையாக இருப்பது அகண்டம்.]

அகண்டம்[2] *aganḍam,* பெ. (n.) **அகன்ற வட்ட வடிவமான தகழி (அகல்) விளக்கு;** a round shaped oil burning open lamp.

[அகல் → அகன்றம் → அகண்டம்.]

அகண்டம்[3] *aganḍam,* பெ. (n.) **மூளை;** brain, medullary substance (சா.அக.).

அகண்டமெழுகு *aganḍa-meḻugu,* பெ. (n.) **மூளையினின்று செய்யும் ஒருவகை மெழுகு;** a kind of paste prepared from the human brain (சா.அக.).

மெழுகு பார்க்க; see *meḻugu.*

அகண்டவடிவம் *aganḍa-vaḍivam,* பெ. (n.) **பகுக்கப்படாத வடிவம், கடவுள்;** indivisible form, as of the Absolute. "அகண்ட வடிவப் பரம்பொருளாம்" (ஞானவா. பிரகலா. 9).

அகண்டவரை *aganḍa-varai,* பெ. (n.) (ஓகம்) **ஓக அறு நிலைக்களங்களுள் ஒன்றான புருவிடை (ஆக்ஞை);** (Yoga) a psychic centre situated in the cerebral region—Medulla oblongata, which is the upper enlarged end of the spinal cord reachable only through yoga.

"அறிவான வையாவே கும்ப மேறி
அகண்டவரை அகண்டவரை காணு வாயே"
(இராமதேவர்)—(சா.அக.).

[அகண்டம் = மூளை. வரை = எல்லை யளவு.]

புருவிடை என்பது, இரு புருவத்திற்கும் நடுவே ஈரிதழ்த்தாமரை வடிவில் ஓகியராற் காணப்படும் நரம்புச் சக்கரம்; a cakra in the body, described as a two-petalled lotus situated between the two eyebrows, one of the six dynamic Tattvic centres which are nerve plexuses.

அகண்டவறை *aganda-v-arai*, பெ. (n.) **மூளை யின் கண்ணறை**; cells of the brain (சா.அக.).

[அகண்டம் + அறை.]

அகண்டவாய் *aganda-vāy*, பெ. (n.) **விரிவான வாய்**; wide or large mouth (*சா.அக.*).

[அகல் → அகன்ற (இ.கா.பெ.எ.) → அகண்ட.]

அகண்டவிளக்கு *aganda-viḷakku*, பெ. (n.) **நந்தா விளக்கு**; perpetually burning lamp.

[விளங்கு → விளக்கு (பி.வி., முத.தொ.ஆகு.]

அகண்டதீவம் பார்க்க; see *aganda-tīvam.*

அகண்ட வீணை *aganda-vīṇai*, பெ. (n.) **பொருத் தின்றிக் குடமும் (பத்தரும்) கோடும் (தண்டும்) ஒரே நெடும் பலாக்கட்டையிற் செதுக்கப்பட்ட வீணை**; a lute whose whole body is made from a single block of jack-wood.

['அ' எதிர்மறை முன்னொட்டு. கண்ட = துண்டான, பகுக்கப்பட்ட. அகண்ட = பகுக்கப் படாத, பொருத்தில்லாத. விண்ணெனல் = விண் விண் என நரம்பு தெறித்தல். விண் → வீணை.]

அகண்டன் *agandan*, பெ. (n.) கடவுள்; God, as the undivided One (W.).

Skt. akhaṇḍa

['அ' எதிர்மறை முன்னொட்டு. கண்டு → கண்டம் → கண்டன் = துண்டானவன். அகண்டன் = பல உறுப்புகளாக அல்லது மெய்ப் பொருள்களாகப் பகுக்கப்படாதவன், முழுமுதற் கடவுள்.]

ஆவி வடிவில் எங்கும் நிறைந்து உயிர்க்குள் உயிராகவும் அணுவிற்குள் அணுவாகவும் நுண்ணிதிற் கலந்து, எல்லாம் வல்லனாகவும் எல்லாம் அறிந்தவனாகவும் என்றும் உள்ளவ னாகவும் இருக்கும் தன்னந்தனி முதல் இறை வனை எவ்வகையிலும் பகுக்கப்படாதவ னென்றே கொண்டு, கடவுள் (எல்லாங் கடந் தவன்) என்றனர் முன்னைத் தமிழர்.

அக் கடவுளையே, ஒருசார் தமிழர் சிவன் என்னும் பெயரில் தொன்றுதொட்டு வழி பட்டு வருகின்றனர்.

ஆதலால் சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை எனச் சுத்த மாயையில் தோன் றும் ஐந்து தத்துவங்களாகச் சிவனைப் பகுப் பது, சிவனியத்தைப் புதிதாய்த் தழுவிய ஆரியர், அம் மதத்தை ஆரிய நெறியாகக் காட்டுதற்குப் புகுத்திய கொள்கையே யன்றி, குமரிநாட்டு முன்னைத் தமிழர் கொண்ட தன்று.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு" (குறள், 1),

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு" (குறள், 27)

என்று, தமிழ்மறையும் ஆரியர் கொள்ளும் போலிச் சிவமெய்ப் பொருள்களை விலக்கிக் கூறுதல் காண்க.

ஆகவே, அகண்டன் என்னும் கொள்கையும் சொல்லும் தமிழரனவே யென்று தெளிக.

அகண்டி *agaṇḍi*, பெ. (n.) **இசைக்கருவி வகை** (இராட்.); a musical instrument (R.).

அகண்டிதம் *agaṇḍidam*, பெ. (n.) **துண்டிக்கப் படாதது**; that which is undivided or indivisible.

Skt. akhaṇḍita

['அ' எதிர்மறை முன்னொட்டு. கண்டு = துண்டு. கண்டு → கண்டி. கண்டித்தல் = துண்டித்தல். கண்டி → கண்டிதம் = துண்டிப்பு. 'இதம்' தொ.பெ. ஈறு. அகண்டிதம் = துண்டிக்கப் படாதது.]

'அ' என்னும் எதிர்மறை முன்னொட்டும் 'கண்டு' என்னும் சொல்லும் 'இதம்' என்னும் ஈறும் தமிழே யாதலால், 'அகண்டிதம்' என்னும் சொல்லும் தமிழெனக் கொள்ளப் பட்டது.

அகண்டிதன் *agaṇḍidaṉ*, பெ. (n.) **கடவுள்**; God, as an undivided whole. "அகண்டித னகம்பன்" (மதுரைப் பதிற்றுப். 70).

Skt. akhaṇḍita

[அகண்டிதம் → அகண்டிதன் = துண்டிக்கப் படாதவன், பகுக்கப்படாதவன்.]

அகண்டிதம் பார்க்க; see *agaṇḍidam.*

முந்தின சொற்குக் கூறிய சிறப்புக் குறிப் பையே இதற்குங் கொள்க.

அகண்ணியம் *agaṇṇiyam,* பெ. (n.) **அவ மதிப்பு**; dishonour, disgrace. அங்கே போவது உனக்கு அகண்ணியம் (உ.வ.).

Skt. agaṇya

[*'அ' எதிர்மறை முன்னொட்டு. கண்ணுதல் = கருதுதல், மதித்தல். கண் → கண்ணியம் = மதிப்பு. 'இயம்' தொ.பெ. ஈறு. அகண்ணியம் = மதிப்பின்மை, அவமதிப்பு.*]

அகணி[1] *agaṇi,* பெ. (n.) *1.* **உள், உட்புறம்**; inside, interior. 'கடுக்காயில் அகணி நஞ்சு, சுக்கிற் புறணி நஞ்சு' (பழ.). *2.* **மரப்பட்டையின் உட்பக்கத்து நார்**; fibre in the inner side of the bark of a tree (சா.அக.). *3.* **மருதநிலம்** (சூடா.); agricultural tract of land. *4.* **நெல் வயல்;** paddyfield. ''அகணி யின்கரை புரளு மெங்கணும்'' (அரிசமய. குலசே. 8). *5.* **தென்னை பனைகளின் உள்மட்டை மேல் நார்;** upper rind of the stem of the coconut and palmyra frond.

[*அகம் = உள், உட்புறம், நாட்டின் உட்பட்ட மருதநிலம், மருதநில வயல்.*]

''புறஞ்சிறை மாக்கட் கறங்குறித் தகத்தோர்
புய்த்தெறி கரும்பின் விடுகழை தாமரைப்
பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்தர்
ஆடுகளங் கடுக்கும் அகநாட் டையே''
(புறநா. 28 : 11-14).

அகணி[2] *agaṇi,* பெ. (n) **நம்பிக்கைக்குரிய நட்பினர்**; confidant. ''அகணியாகிய........... சகுனி'' (பெருங். மகத. 26 : 29-30).

[*அகம் = உள்ளம். அகம் → அகன் → அகண் → அகணி = உள்ளம் ஒன்றிய உண்மை நட்பு, நண்பன்.*]

அகணி[3] *agaṇi,* பெ. (n.) **கடுக்காய்** (சித்.அக.); gall-nut, *Terminalia chebula.*

அகணிக்கடுக்காய் *agaṇi-k-kaḍu-k-kāy,* பெ. (n.) *1.* **உட்சதைப்பற்றுள்ள கடுக்காய்**; a gall-nut with thick fleshy portion surrounding the seed inside. *2.* **முற்றிய கடுக்காய்**; a fully developed or ripe gall-nut (சா.அக.).

[*அகம் → அகன் → அகண் → அகணி = உள், உட்சதைப்பற்று.*]

அகணிதம் *agaṇidam,* பெ. (n.) **கணிக்கப்படாதது;** that which is beyond computation.

ம. அகணித; க. அகண்ய; **Skt.** agaṇita.

[*'அ' எதிர்மறை முன்னொட்டு. கணி → கணிதம் = கணிக்கப்பட்டது. அகணிதம் = கணிக்கப்படாதது. 'இதம்' தொ.பெ. ஈறு.*]

கணித்தல் பார்க்க; see *kaṇittal.*

அகணிப்பாய் *agaṇi-p-pāy,* பெ. (n.) **அகணிப் பிளாச்சினாற் பின்னிய மூங்கிற்பாய்;** bamboo mat plaited with thick splits.

[*அகம் → அகன் → அகண் → அகணி. ஒருகா. அகப் பகுதியொடு சேர்ந்த தடித்த மூங்கிற் பிளாச்சு.*]

பாய் பார்க்க; see *pāy.*

அகணியகில் *agaṇi-y-agil,* பெ. (n.) **அகில் மரத்தின் உட்பாகம்;** that portion which is inside the agilwood tree (சா.அக.).

அகணிக்கடுக்காய், **அகில்** பார்க்க; see *agaṇi-k-kaḍu-k-kāy, agil.*

அகத்தடிமை *agatt(u)-aḍimai,* பெ.(n.) **அணுக்கத் தொண்டு**; services of a devoted servant or follower. ''அகத்தடிமை செய்யு மந்தணன்'' (தேவா. 7.9 : 6).

ம. அகத்தோன்; தெ. அடியடு, அடிய.

அகத்தடியாள் *agatt(u)-aḍiyāḷ,* பெ. (n.) **வீட்டு வேலைக்காரி;** maid-servant of a house. ''அகத் தடியாள் மெய்நோவ'' (தனிப்பா. தி. 1, பக். 279).

ம. அடியாட்டி

அகத்தமிழ் *aga-t-tamiḻ,* பெ. (n.) **அகத்திணை பற்றிய தமிழிலக்கியம்;** Tamil literature dealing with love.

அகத்தன் *agattaṉ,* பெ. (n.) **இடத்தினன்;** one who is in a place. ''ஆதவ னெழுகிரி யகத்த ராக்கினான்'' (கந்தபு. யுத்த. சிங். 328).

அகத்தான் *agattān,* பெ. (n.) *1.* **உள்ளிடத் திருப்பவன்** (இறை. 59, உரை); one who is in. *2.* **இல்வாழ்வான்**; householder. ''அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கி'' (நாலடி. 31).

ம. அகத்தான்

அகத்தி *agatti,* பெ. (n.) **மக்கட்குக் கீரையும் மாட்டிற்குத் தழையுணவும் உதவுவதும், பெரும் பாலும் கொடிக்காலிலும் மிளகாய்த் தோட்டத் திலும் பயிரிடப்படுவதுமான சிறு மரவகை;** West Indian pea-tree, s. tr., *Sesbania grandiflora,* whose leaves are edible and also used as cattle food.

''நல்லகத்தி வேரதனை நாடுங்கான் மேக
மெனுஞ்
சொல்லகலுந் தாகமறுந் தோகையே —
மெல்லமெல்ல
மெய்யெரிவு கையெரிவு மேகனத்தி
மையெரிவும் போமென் றறி'' [னுள்ளெரிவு
(பதார்த்த. 475).

அகத்தியினங்கள் - *species of sesban*

சாழையகத்தி, ஒரு பழமரம்; a fruit tree.

சிற்றகத்தி, ஒரு சிறு மருந்துமரம்; a small tree used for medicine.

சீமையகத்தி, ஒரு செடிவகை; large-leafed eglandular senna, *Cassia alata* (L.).

செவ்வகத்தி, ஒரு செம்மலர்ச் சிறுமரம்; a small tree with red flowers.

ம. அகத்தி; **க., து.** அகசெ; **தெ.** அகிசெ; **த.** அகத்தி > **Skt.** agasti.

[அகம் → அகத்தி. அகம் = உள். கொடிக் கால், மிளகாய்த் தோட்டம் முதலிய பிற செடி கொடித் தோட்டங்களினுள்ளே பயிரிடப்படுவ தால், அகத்தியெனப் பெயர்பெற்றது போலும்.]

பேயகத்தி, சீமையகத்தி பார்க்க; see *pēy-agatti*, *šimai-y-agatti*.

''அகத்தி ஆயிரங் காய்த்தாலும் புறத்தி புறத்தியே' என்பது, மருமகளுக்கும் அகத்தி மரத்திற்கும் பொதுவான இரட்டுறற் பழ மொழி. அகத்திமரம் தோட்டத்திற்குள் ளிருந்து கொத்துக்கொத்தாக ஆயிரக்கணக் காய்க் காய்த்தாலும், அதன் காய்கள் ஒன்றிற் கும் பயன்படா. அதனால் மிளகாய்ச்செடியும் வெள்ளிலைக் கொடியும்போற் சிறப்பாகக் கருதப்படா. அதுபோன்று, வேற்றகத்தி லிருந்து வீட்டிற்கு வந்த மருமகள் எத்தனை பிள்ளை பெற்றாலும், மகளைப்போல் அன் பாக மாமியாரால் நடத்தப்படுவதில்லை என்பது, பழமொழிக் கருத்து.

அகத்திக்கறுப்பு *agatti-k-kaṟuppu*, பெ. (n.) **சில சிற்றூர்த் தெய்வங்கட்குச் சாத்தும் ஆடை வகை** (தஞ்சை); a kind of garment put on certain village deities (Tj.).

அகத்திக்கீரை *agatti-k-kīrai*, பெ. (n.) **இலைக் கறிக்கு உதவும் அகத்தித் தழை**; sesban leaves used as edible greens.

அகத்திடு-தல் *agattiḍu-*, 17 செ.குன்றாவி. (v.t.) 1. **கையால் உள்ளணைத்தல்** (திவா.); to fold in the arms; embrace. 2. **செருகுதல்**; to insert (W.). 3. **உள்ளிடுதல்** (கலித். 4, உரை); to enclose, enfold.

அகத்திப்பழுப்பு *agatti-p-paḻuppu*, பெ. (n.) **அகத்திக்கறுப்பு** பார்க்க; see *agatti-k-kaṟuppu*.

அகத்திணை *aga-t-tiṇai*, பெ. (n.) **கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்னும் ஏழு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ள காதலின்ப வொழுக்கம்**; love, as a mental experience of lovers or conjugated couple classified into seven forms according to ecology and stress of passion.

''கைக்கிளை முதலாப் பெருந்திணை
யிறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை யென்ப''
(தொல். பொருள். அகத். 1).

[அகம் + திணை.]

அகத்திணைப்புறம் *aga-t-tiṇai-p-puṟam*, பெ. (n.) **அகத்திணைக்குப் புறம்பான கைக்கிளை, பெருந்திணை என்னும் இருதிணைகள்** (தொல். பொருள். அகத். 54, நச். உரை); the two forms of undesirable love, viz., unreciprocated love, and love by force, as opposed to reciprocal love.

[அகம் + திணை + புறம்.]

அகத்தியம் *agattiyam*, பெ. (n.) **தோரா. கி.மு. 12ஆம் நூற்றாண்டில், அகத்திய முனிவரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் மாபிண்டம் என்னும் முத்தமிழிலக்கணச் சார்பு நூல்**; a poetic work of grammar by sage Agastya, dealing with the three conventional classes of Tamil literature, and based upon earlier Tamil treatises, ascribed to circa 12th century B.C.

அகத்தியர் *agattiyar*, பெ. (n.) **அகத்தியன்** பார்க்க; see *agattiyaṉ*.

அகத்தியர் குழம்பு *agattiyar-kuḻambu*, பெ. (n.) **பெருங்காயம், இந்துப்பு, இதள் (ரசம்), வெண் காரம், மனோசிலை, அரிதாரம், நேர்வாளம், ஓமம், கருஞ்சீரகம் என்னுஞ் சரக்குகளைச் சேர்த்து அகத்தியர் செய்ததாகச் சொல்லப் படும் பெயர்பெற்ற நலக்கழிச்சல் மருந்து**; a famous cathartic medicinal compound, ascribed to Agastya, the ingredients being asafœtida, rock salt, mercury, borax, realgar, yellow orpiment, true croton, bishop's weed and black cumin.

[**Skt.** Agastya > **த.** *அகத்தியன், அகத்தியர்.*]

அகத்தியர் தேவாரத்திரட்டு *agattiyar-tēvāra-t-tiraṭṭu*, பெ. (n.) *அகத்தியர்பெயரால்வழங்கும் 25 தேவாரப் பதிகத் தொகுதி;* a collection of 25 hymns from the *Tēvāram*, erroneously attributed to sage Agastya.

[அகத்தியர் + தேவாரம் + திரட்டு.]

அகத்தியன், அகத்தியனார் *agattiyaṉ, agattiyanār*, பெ. (n.) *1. சில வேத மந்திரங்களின் ஆசிரியரும், தென்னாட்டில் ஒரு பிராமணக் குடியேற்றத்தை நிறுவியவரும், ஒரு முத்தமிழ்ச் சார்புநூலும் சில மருத்துவநூலும் இயற்றிய வரும் தோரா. கி.மு. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவருமான ஓர் ஆரியச் சான்றோர்;* an Aryan sage, author of several Vedic hymns, said to have founded a Brāhmin colony in South India, written some books on medicine, and composed a Tamil grammar. *2. அகத்திய நாண்மீன்;* the star Canopus, of which Agastya is the regent. 'அகத்தியனென்னு மீன் உயர்ந்த தன்னிடத்தைக் கடந்து மிதுனத் தைப் பொருந்த' (பரிபா. 11 : 11, உரை).

[**Skt.** ga = *செல். 'அ' எதிர்மறை முன் னொட்டு.* **Skt.** aga = *அசையாதது, மலை.* **Skt.** as = *எறி. அகஸ்திய* (Agastya) = *மலையை எறிந்தவன் அல்லது அடக்கியவன்.]*

ஆரியர் இந்தியாவிற்குட் புகுந்தபின், சில நூற்றாண்டுகளாக விந்த(விந்திய) மலையைக் கடந்து தெற்கே வர இயலவில்லை. முதன் முதலாக அதைக் கடந்தவர் அகத்தியர். அதனால், அவருக்கு விந்தமலையை வென்ற வர் என்றும், விந்தமலையின் செருக்கை அடக்கியவரென்றும் புகழ்ச்சி எழுந்தது. இக் காலத்தும், எவரெசிற்று (Everest) முடியேறிய வரை அக் குவட்டை வென்றவர் (conqueror of the Everest) என்று கூறுதல் காண்க.

விந்தமலையை அடக்கியதனால் அகத்தியர் அப் பெயர் பெற்றார் என்னும் வடநூலார் கூற்று, பொருத்தமுடையதாய்த் தோன்ற வில்லை. ஏனெனின், விந்தமலையைக் கடக்கு முன்னரும் அவருக்கு அப்பெயர் இருந்ததாகத் தெரிகின்றது.

அகத்தியன் என்னும் பெயரை யொத்த *Augustus, Augustinus, Augustanus, Augustulus* முதலிய இலத்தீன் பெயர்களும், Augusti என்னும் செருமானியப் பெயரும், Augustine என்னும் ஆங்கிலப் பெயரும் மேலைநாடு களில் மக்கள் இயற்பெயர்களாகத் தொன்று தொட்டு வழங்கிவந்திருக்கின்றன. அவற்றிற் கெல்லாம் மூலமாகத் தோன்றும் *augustus* என்னும் இலத்தீன் சொல்லிற்கு, consecrated (திருப்படையல் செய்யப்பட்ட), venerable (வணங்கப்படத்தக்க) என்று பொருள் சொல்லப்படுகின்றது.

இலத்தீனை யடுத்து வழங்கும் கிரேக்கத் திற்கு இனமான ஒரு மொழியைத் தாய்மொழி யாகக் கொண்ட ஓர் இனத்தாரின் வழிவந்த வேத ஆரியக் குரவர் ஒருவர்க்கு அம் மேலைப் பெயர் இடப்பட்டதென்று கொள்வது, இயற்கைக்கு முற்றும் ஒத்ததே. ஆகவே, அகத்தியன் என்னும் ஆரியச் சொல்லிற்கு, வணங்கப்படத்தக்கவன் என்று பொருள் கூறுவதே பொருத்தமாம்.

இலக்கண நூல் முதற்கண் இயற்றமிழ்க்கே தோன்றியிருத்தல்கூடும். அதுவும் எழுத் திலக்கணம், சொல்லிலக்கணம், சொற்றொட ரிலக்கணம், செய்யுளிலக்கணம், பொரு ளிலக்கணம் என்னும் ஐந்நிலைப்பட்டிருத்தல் வேண்டும். அதன்பின் இசையிலக்கணமும் நாடகவிலக்கணமும் முன்பின்னாக நெடுங் காலங் கடந்து தோன்றியிருக்கும். இறுதியில் இயல் இசை நாடகம் என்னும் மூன்றன் இலக் கணமும் ஒரே தொகுதியாகச் சேர்க்கப்பட் டிருக்கும். இத்தகைய முத்தமிழ் இலக்கண நூலொன்றை, தமிழனே, எத்துணைப் பேரறிஞனாயினும், தனிப்பட ஒரேயடியில் தோற்றியிருத்தல் இம்மியும் இயலாது. அங்ஙனமிருப்பவும், ஓர் ஆரியன் வடநாட்டி னின்று வந்தவுடன் முத்தமிழ் இலக்கண முதனூலை இயற்றினான் என்றல், 'நரிமா அரிமாக் குருளை யீன்றது' என்பது போன்ற செய்தியே.

அகத்தியன் என்னும் சொல் ஆரியமாயினும், அகத்தியத்தின் பெருமையும் தமிழியன்மை யும் நோக்கி, இங்குத் தமிழ்ச் சொற்றொகுதி யொடு சேர்க்கப்பட்டது.

அகத்தியான்பள்ளி *agattiyāṉ-paḷḷi*, பெ. (n.) *திருமறைக்காட்டிற்கு அருகிலுள்ள ஒரு திருநகர்* (தேவா. 2.212); a shrine near *Tirumaṟaikkāḍu* (Vēdāraṇiyam).

[அகத்தியன் → அகத்தியான். பள்ளி = தவ நிலையம்.]

அகத்திசராறுகு *agattišar-aṟugu*, பெ. (n.) *சிற்றறுகு* (இராட்.); species of grass, short in stature like Agastya (R.).

அக்காக்குருவி

அக்காடச்செல்லிகண்டன்

அகத்தி

சிற்றகத்தி



சீமையகத்தி



பேரகத்தி

[**Skt.** agastya + īša – *அகஸ்தீச* > **த.** *அகத்தீசன்* → *அகத்தீசர்.* **வ.** *ஈசன் = கடவுள், தேவன், தெய்வத்தன்மையுள்ளவன். அகத்தியர் குள்ளராயிருந்ததனால், அவரைப்போல் உரு விற் சிறிதான சிற்றறுகு அகத்தீசரறுகு எனப் பெயர்பெற்றது.*]

அகத்தீசுரப்புல் *agattīšura-p-pul,* பெ. (n.) ***அகத்தீசரறுகு*** பார்க்க; see *agattīšar-aṟugu.*

[**Skt.** agastya + īsvara + **த.** *புல்* – *அகஸ்தீச்வரப்புல்*→*அகத்தீசுவரப்புல்*→*அகத்தீசுரப்புல்.*]

அகத்தீடு *agattīḍu,* பெ. (n.) 1. ***எண்ணம்;*** thought, idea. ''அகத்தீடு முற்றும் பிரணவ மாகப் பிறங்கி'' (கச்சி. வண்டு. *352*). 2. ***கையால் உள்ளணைக்கை*** (அகநா. *26 : 17*, உரை); embrace.

[*அகத்து + இடு – அகத்தீடு. இடு → ஈடு.*]

அகத்துரைப்போன் *agatt(u)-uraippōṉ,* பெ. (n.) 1. ***மனச்சான்று;*** the inner voice, the voice of conscience (இராட்.). 2. ***கடவுள்;*** God.

[*அகத்து + உரைப்போன். அகம் = மனம்.*]

அகத்துழிஞை *agatt(u)-uḻiñai,* பெ. (n.) (இலக்.) ***முற்றுகையிடப்பட்ட கோட்டையிலுள்ள அகத்தாரை, முற்றுகையிட்ட புறத்தார் வெல்லும் புறத்துறை*** (பு.வெ. *6 : 22*); (Gram.) theme of the victory of the besiegers over the besieged.

[*அகத்து + உழிஞை.*]

உழிஞை பார்க்க; see *uḻiñai.*

அகத்துழிஞையான் *agatt(u)-uḻiñaiyāṉ,* பெ. (n.) (இலக்.) ***முற்றுகையிடப்பட்டோன், புறத்துழிஞையானுக்கு எதிரி*** (மதுரைக். *741-3*, நச். உரை); (Gram.) one within a besieged fort, the besieged, opp. to the besieger.

[*அகத்துழிஞையான் = அகத்தோன்.*]

அகத்துறுப்பு *agatt(u)-uṟuppu,* பெ.(n.) 1. ***அன்பு, அருள், இரக்கம் முதலிய மனப்பண்பு;*** qualities of the heart, as love, grace, mercy. ''அகத்துறுப் பன்பி லவர்க்கு'' (குறள், *79*). 2. ***உடலின் உள்ளுறுப்பு;*** internal organs of the body.

[*அகத்து + உறுப்பு.*]

அகத்தை *agattai,* பெ. (n.) ***தாய்;*** mother.

அகத்தொண்டன் *aga-t-toṇḍaṉ,* பெ. (n.) ***வீட்டு வேலைக்காரன்;*** domestic servant. 'ஒருவர் மனையிற் பணிசெய்யும் அகத்தொண்டர்க் குளதாகிய உரிமை' (சி.போ.பா. *8:1*, பக்.*429*).

[*அகம் + தொண்டன். அகம் = வீடு.*]

அகத்தோன் *agattōṉ,* பெ. (n.) ***அகத்துழிஞையான்*** பார்க்க; see *agatt(u)-uḻiñaiyāṉ.*

அகதேசி *aga-dēši,* பெ. (n.) ***உள்நாட்டு இரப்போன், பரதேசி என்பதற்கு எதிர்;*** native mendicant, dist. f. *paradēši.*

[*அகம் + தேசி.*]

அகதேசி பரதேசி என்னும் மரபிணைமொழி எதுகை நோக்கி 'அரதேசி பரதேசி' என்று தவறாக உலகவழக்கில் வழங்கிவருகிறது.

அகநகர் *aga-nagar,* பெ. (n.) 1. ***கோட்டைக்குள் அடங்கிய நகரப்பகுதி*** (சிலப். *14 : 69*, அடியார்க். உரை); interior of a fortified town. 2. ***உவளகம் (அந்தப்புரம்);*** women's appartments in a palace. ''அகநகர் கைவிட்டு'' (மணிமே. *23 : 57*).

[*அகம் + நகர். அகம் = உள்.*]

அகநகை *aga-nagai,* பெ. (n.) ***இகழ்ச்சிநகை*** (சிலப். *16 : 164*, அடியார்க். உரை); derisive laughter.

[*அகம் + நகை.*]

அகநகை-த்தல் *aga-nagai-,* 4 செ.குன்றாவி. (v.t.) ***இகழ்ச்சியாகச் சிரித்தல்;*** to laugh in derision. ''அகநகைத் துரைத்து'' (சிலப். *16 : 164*).

அகநாடகம் *aga-nāḍagam,* பெ. (n.) ***மனத்திலுள்ள காதலைப் புலப்படுத்தும் நளிநயங்களோடு கூடிய நடம்*** (சிலப். *3 : 14*, அடியார்க். உரை); dance accompanied by gestures expressing love.

[*அகம் + நாடகம்.*]

அகநாடகவுரு *aga-nāḍaga-v-uru,* பெ. (n.) ***அகநாடகத்திற்குரிய பாடல்கள்*** (சிலப். *3 : 14*, அரும். உரை); various kinds of musical compositions used in performing dances expressing love.

[*அகம் + நாடகம் + உரு.*]

அகநாடு *aga-nāḍu,* பெ. (n.) 1. ***உள் நாடு;*** interior of a territory. ''அகநாடு புக்கு'' (மதுரைக். *149*). 2. ***மருதநிலம்;*** agricultural tract.

''புறஞ்சிறை மாக்கட் கறங்குறித் தகத்தோர்
புய்த்தெறி கரும்பின் விடுகழை தாமரைப்
பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்தர்
ஆடுகளங் கடுக்கும் அகநாட் டையே''
(புறநா. ***28 : 11-14***).

[*அகம் + நாடு.*]

அகநாழிகை *aga-nāḻigai*, பெ. (n.) தெய்வப் படிமை யிருக்கும் கருவறை, உண்ணாழிகை; sanctuary of a South Indian (Hindu) temple. 'அகநாழிகைப் பணிசெய்வார்' (T.A.S. i, 6).

ம. அகநாழிக

[அகம் + நாழிகை.]

நாழிகை பார்க்க; see *nāḻigai*.

அகநானூறு *aga-nāṉūṟu*, பெ. (n.) கடைக் கழகக்காலப் புலவர் ஏறத்தாழ நூற்றறு பதின்மர் அகப்பொருள்பற்றிப் பாடியனவும், உருத்திரசன்மரால் தொகுக்கப்பட்டனவுமான நானூறு அகவற்பாத் திரட்டு; An anthology of 400 love-lyrics in *agaval* metre by about 160 poets of the period of the 3rd Tamil Academy, compiled by *Uruttiraśaṉmaṉ*.

[அகம் + நானூறு.]

அகநிலை *aga-nilai*, பெ. (n.) 1. உள்ளிடம்; inside (W.). 2. மனத்துள் ளிருக்குங் கடவுள் (இராட்.); God as residing in one's mind (R.). 3. நகர்; town. "அரைசுமேம் படீஇய வக நிலை" (சிலப். 5 : 161). 4. குல(சாதி)ப் பெரும் பண்வகை நான்கனுள் ஒன்று; one of the four primary melody-types.

[அகம் + நிலை.]

அகநிலைக்குறிஞ்சி *aga-nilai-k-kuṟiñji*, பெ. (n.) குறிஞ்சிப் பண்ணின் ஒருவகை; a primary melody-type, a variety of *kuṟiñji*.

"தென்னுறு பாலை குறிஞ்சியே மருதஞ்
செவ்வழி யென்னுநா னிலத்திற்
பின்னகம் புறமே யருகியல் மற்றைப்
பெருகிய லுறழவெண் ணிரண்டாய்"
(கந்தபு. அசுர. சூரன்அரசிருக். 23).

[அகம் + நிலை + குறிஞ்சி.]

அகநிலைக் கொச்சகம் *aga-nilai-k-koccagam*, பெ. (n.) (யாப்.) கொச்சகக் கலிப்பாவின் வகை (கலித். 119, உரை); (Pros.) variety of *koccagakkali* metre.

[அகநிலை + கொச்சகம்.]

அகநிலைச் செய்யுட்டாழிசை *aga-nilai-c-ceyyuṭ-ṭāḻiśai*, பெ. (n.) கடவுளை வண்ணித்துப் புகழா ததும், அகப்பொருள்பற்றிய ஒத்தாழிசைக் கலிப்பாவிற் குரியதுமான செய்யுளுறுப்பு; *tāḻiśai*, which does not deal with the greatness of God, being a member of an *ottāḻiśaikkali* verse which deals only with an amatory theme.

[அகநிலை + செய்யுள் + தாழிசை.]

'வண்ணித்துப்புகழ்தலின் வண்ணக மெனப் படும். என்னை? தரவினானே தெய்வத்தினை முன்னிலையாகத் தந்து நிறீஇப் பின்னரத் தெய்வத்தினைத் தாழிசையானே வண்ணித் துப் புகழ்தலின், அப் பெயர் பெற்றதாகலின். ஒழிந்த உறுப்பான் வண்ணிப்பினுஞ் சிறந்த உறுப்பு இதுவென்க' (தொல்.பொருள்.செய். 140, பேரா. உரை).

அகநிலைச் செவ்வழி *aga-nilai-c-cevvaḻi*, பெ. (n.) செவ்வழிப் பண்ணின் ஒருவகை; a primary melody-type, a variety of *śevvaḻi*.

[அகநிலை + செவ்வழி.]

செவ்வழி பார்க்க; see *śevvaḻi*.

அகநிலைப் பசாசம் *aga-nilai-p-paśāśam*, பெ. (n.) (நடம்) சுட்டுவிரல் நுனியிற் பெரு விரல் அகப்பட மற்ற மூன்றும் பொலிந்து நிற்கும் கைச் சைகை (சிலப். 3:18, அடியார்க். உரை); (Dan.) hand-gesture in which the thumb and forefinger are joined and the other three fingers extended.

[அகநிலை + பசாசம்.]

அகநிலைப்பாலை *aga-nilai-p-pālai*, பெ. (n.) (இசை) பாலைப் பண்ணின் ஒருவகை (கந்தபு. அசுர. சூரன்அரசிருக். 23); (Mus.) a primary melody-type, a variety of *pālai*.

[அகநிலை + பாலை.]

அகநிலைமருதம் *aga-nilai-marudam*, பெ. (n.) (இசை) மருதப் பண்ணின் ஒருவகை; (Mus.) a primary melody-type, a variety of *marudam*. "அகநிலை மருதமும் புறநிலை மருதமும்" (சிலப். 8 : 39).

அகநிலையொத்தாழிசை *aga-nilai-y-ottāḻiśai*, பெ. (n.) (யாப்.) 1. கலிப்பா வகை (பாப்பா. 91); (Pros.) a kind of *kali* verse. 2. கலிப்பா வுறுப்பு வகை (தொல். பொருள். செய். 138, பேரா. உரை); an element of *kali* verse.

[அகநிலை + ஒத்தாழிசை.]

அகப்பக்கம் *aga-p-pakkam*, பெ. (n.) (ஏர.) 1. மனவியல் அல்லது சமயச் சார்பான உண் மையைப்பற்றிய உய்த்துணர்வு; (Log.) inference formed on mental or religious truths. 2. உட்பக்கம்; inside.

[அகம் + பக்கம்.]

அகப்பகை *aga-p-pagai*, பெ. (n.) உட்பகை; ஒரு குடும்பம், இனம், வகுப்பு, அமைப்பகம்,

நிறுவனம், நாடு முதலியவற்றுள் ஒன்றற்குள்ளேயே தோன்றி, ஒற்றுமையைக் குலைத்துப் பகைவர்க்குக் காட்டிக்கொடுக்கும் பகை, புறப் பகைக்கு எதிர்; enmity within a family group of relatives, community, class, organization, establishment or country, leading to disunity and destruction.

''புறப்பகை கோடியின் மிக்குறினு மஞ்சார்
அகப்பகை யொன்றஞ்சிக் காப்ப''
(நீதிநெறி. 55).

ம. அகப்பக

[அகம் + பகை.]

அகப்பட்டி *aga-p-paṭṭi*, பெ. (n.) *அகக் கட்டுப் பாடு இல்லாதவன்-ள்*; an irresponsible person. ''அகப்பட்டி யாவாரைக் காணின்'' (குறள், *1074*).

[அகம் + பட்டி.]

அகப்படச் சூத்திரி-த்தல் *aga-p-paḍa-c-cūttiri-*, 4 செ.கு.வி. (v.i.) *பொருள் புலப்படாவாறு உள்ளடங்க நூற்பா இயற்றுதல்*; to versify grammatical rules rendering the meaning obscure. 'குறித்த பொருள் விளங்காமையின் அகப்படச் சூத்திரியாராகலானும்' (தொல். சொல். கிளவி. 35, சேனா. உரை).

[Skt. sūtra > *த. சூத்திரம் → சூத்திரி. அகப்பட + சூத்திரி.]*

அகப்படு-தல் *aga-p-paḍu-*, *20* செ.கு.வி. (v.i.) *1.* **உட்படுதல், உள்ளடங்குதல்**; to be included. ''சத்தவிருடிக் கணமகப்பட...... முனித்தலை வரும்'' (உத்தரரா. வரையெடு. 69). *2.* **குறைதல்**; to be diminished, shortened. (தொல். பொருள். செய். *134*, பேரா. உரை). *3.* **சிக்கிக் கொள்ளுதல்**; to be entangled. மான் வலைக்குள் அகப்பட்டுக்கொண்டது (உ.வ.). 'அகப் பட்டுக் கொள்வேன் என்றா கள்வன் களவெடுக்கிறது' (பழ.). *4.* **பிடிபடுதல்**; to be caught. ''கொண்டல் வண்ண னகப்படா னெவர்க்கும்'' (பாரத. கிருட். *174*). வேட்டைக்குப் போனால் முயல் அகப்படுமா? (உ.வ.). *5.* **வசப்படுதல்**; to be brought under one's influence, to become subordinate. ஊரெல்லாம் அவனுக்கு அகப்பட்டிருக்கிறது (உ.வ.). *6.* **கிடைத்தல்**; to be obtained. ''யாழுடை யார்மணங் காணணங் காய்வந் தகப்பட்டதே'' (திருக்கோ. 7). 'அகப் பட்டதைச் சுருட்டடா கம்பளியப்பா' (பழ.).

ம. அகப்பெடுக; க., தெ. அகபடு.

அகப்படுத்து-தல் *aga-p-paḍuttu-*, 2 பி.வி. (v. caus.) *1.* **சிக்கவைத்தல்**; to entrap. ''பரதவர் வலையி னகப்படுத் தரிய'' (பாரத. குரு. *105*). *2.* **பிடித்தல்**; to catch hold of. ''மற்றவன் பெருமுரண் முருக்கிக் கைய கப்படுத் துய்ப்பனால்'' (கந்தபு. மகேந். வச்சிர. *6*).

அகப்படை *aga-p-paḍai*, பெ. (n.) **நம்பகமான அணுக்கத்தொண்டர்**; trustworthy attendants. 'அகப்படை யென்று மிடுக்கரா யிருப்பாரை' (ஈடு, *10 : 1*, பிர.).

[அகம் + படை.]

அகப்பணி *aga-p-paṇi*, பெ. (n.) *1.* **மறைமுகமான தொண்டு**; confidential service. ''அங்கு அகப்பணி செய்வர் விண்ணோர்'' (திவ். திருவாய். *10.2 ; 6*). *2.* **வீட்டுவேலை**; domestic work.

[அகம் + பணி.]

அகப்பத்தியம் *aga-p-pattiyam*, பெ. (n.) *1.* **மருந்து உண்ணுங்காலத்து உட்கொள்ளும் வரம்பிட்ட உணவு, புறப்பத்தியம் அல்லது மறுபத்தியம் என்பதற்கு எதிர்**; diet or regimen observed during the course of taking medicine. *2.* **மருத்துவக் காலத்திற் புணர்ச்சியின்பந் தவிர்கை**; abstention from sexual intercourse, while under medical treatment.

[அகம் + பத்தியம்.]

பத்தியம் பார்க்க; see *pattiyam*.

அகப்பரம் *aga-p-param*, பெ. (n.) **திண்ணை**; pial, a raised platform under the varandah used for sitting.

[ஒருகா. அகம் = வீடு. புறம் = வெளி. அகப்புறம் → அகப்பரம் = வீட்டு வெளித் திண்ணை. இனி, அகம் = உள்; பரம் = மேல், மேலிடம், மேடு, திண்ணை; அகப்பரம் = உள் திண்ணை என்றுமாம்.]

அகப்பரிவாரம் *aga-p-parivāram*, பெ. (n.) *1.* **வீட்டு வேலைக்காரர்** (சீவக. *292*, நச். உரை); domestic servants. *2.* **அரண்மனைப் பணியாளர்**; (M.E.R. 146 of 1925); attendants of a royal household.

ம. அகப்பரிவாரம்

[அகம் + பரிவாரம்.]

பரிவாரம் பார்க்க; see *parivāram*.

அகப்பற்று *aga-p-parru,* பெ. (n.) 1. *தன் உடம் பின்மீதுள்ள பற்றெண்ணம், புறப்பற்று என் பதற்கு எதிர்* (குறள், 345, பரிமே. உரை); attachment to self, self-love, opp. to *purap-parru.* ''போமே யகப்பற்றென் றுந்தீபற'' (அவிரோ. 14). 2. *சிற்றூர்ப் பங்காளிகள் அவ்வப்போது பகிர்ந்து பயன்படுத்தும் ஊர் நிலம்* (R.T.). land divided and given to the share-holders of a village periodically for use but held in common. 3. *தொடக்கந்தொட்டுக் குளப்பாசனமுள்ள நிலம்* (நெல்லை); land which has been irrigated by a tank since the very beginning (Tn.).

ம. அகப்பற்று

[அகம் + பற்று.]

அகப்பா *agappā,* பெ. (n.) 1. *கோட்டை மதில்;* fortified wall, wall of a fort or fortress. ''அகப்பா எறிந்த அருந்திறல்'' (சிலப். 28 : 144). 2. *மதிலுண்மேடை* (பிங்.); mound within inner fortifications. 3. *அகழி* (பிங்.); ditch around a fort.

ம. அகப்ப

[உகப்பு → அகப்பு → அகப்பா.]

அகப்பு[3] பார்க்க; see *agappu*[3].

அகப்பாட்டு *aga-p-pāttu,* பெ. (n.) 1. *அகப் பொருட் செய்யுள், புறப்பாட்டு என்பதற்கு எதிர்;* love-poem, opp. to *purappāttu.* 2. *அக நானூறு* (கலித். 37, நச். உரை); an anthology of love-lyrics.

[அகம் + பாட்டு.]

அகநானூறு பார்க்க; see *aga-nānūru.*

அகப்பாட்டுவண்ணம் *aga-p-pāttu-vannam,* பெ. (n.) (யாப்.) *செய்யுளின் இறுதியடி, முடிப் பெழுத்தோ சொல்லோ இன்றி, இடையடி போல் தோன்றும் அமைப்பு அல்லது ஓசை வகை;* (Pros.) poem or verse so constructed, that the last line looks like any of the previous lines and not appearing to give a finish to the poetic piece.

''அகப்பாட்டு வண்ணம்,
முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே''
(தொல். பொருள். செய். 222).

எ-டு: ''உண்கண் சிவப்ப தெவன்கொ லன்னாய்''
(ஐங்குறு. 21).

[அகம் + பாட்டு + வண்ணம்.]

அகப்பாட்டுறுப்பு[1] *aga-p-pātt(u)-uruppu,* பெ. (n.) *அகப்பொருளின் அல்லது அகத் திணையின் பன்னிரு கூறு;* the twelve members of *agapporul* or *agattinai* :

1. இயல் பகத்திணை —method of defining a thing or showing its nature, quality, etc.
2. வகை யகத்திணை —amplification or detailing at large what has been said briefly.
3. பொது வகத்திணை —the rule for summing up or recapitulating.
4. சிறப் பகத்திணை —the rule for discriminating or explaining the difference between things.
5. உவம வகத்திணை —the rule for illustrating a subject by metaphors, comparisons, etc.
6. புறநிலை யகத்திணை —the rule for exemplifying a subject through examples.
7. எதிர்நிலை யகத்திணை —the rule for elucidating a point through its opposite.
8. காரண (அ) கருவி யகத்திணை —revealing the condition or quality of a thing by its origin.
9. காரிய வகத்திணை —proving a thing by its effects.
10. காரக வகத்திணை —the rule for relating an action, event, etc., to which belong the following :

    (1) செய்பவன் - who. (2) செய்தொழில் - what. (3) கருவிகள் - by what helps. (4) பயன் - why. (5) இடம் அல்லது நிலம் - where. (6) காலம் - when. (7) திறன் - in what manner or how.

11. முன்னவை யகத்திணை —the rule for foretelling events from signs.
12. பின்னவை யகத்திணை —the rule for foretelling the consequences of any action (p.)—(W.).

''அகத்திணை யியல்பே யறைபடும் வகையே
பொதுச்சிறப் புவமை புறநிலை யெதிர் நிலை
கருவி காரியங் காரக முன்னவை
பின்னவை யெனவாம் பிரிவீ ராறே''
(தொன். வி. பொருள். 2 : 2).

''அவற்றுள்,
இயல்புரைத் தொப்ப வியம்புத லியல்பே''
(ஷை 3).

''தொகைவிரித் துரைத்தல் சொற்பொருள்
வகையே'' (ஷை 4).

''பொதுவெனப் பலவை யடக்கு மொன்றே
சிறப்பென வொன்றி னடங்கும் பலவே''
(ஷை 5).

''உவமை யெனப்பிறி தொப்ப
வுரைத்தலே'' (ஷை 6).

''புறநிலை யொப்பிழி வாக்கமென
மூன்றே'' (ஷை 7).

''குறித்தவை காட்ட மறுத்தவை காட்டி
யெதிரில் விளக்க லெதிர்நிலை யென்ப''
(ஷை 8).

''காரண நான்குங் காரிய நான்கும்
விரித்துத் தன்பொருள் விளக்க லுரித்தே''
(ஷை 9).

''காரக மென்ப கருத்தா கருமங்
கருவி கருத்திடங் காலந் திறனேழே''
(ஷை 10).

''முன்னவை பின்னவை முன்பின் னடந்தன
பன்னித் தன்பொருள் பயன்படப்
பகர்தலே'' (ஷை 11).

இந் நூற்பாக்கள், வீரமாமுனிவரின் சொந்தக் கூற்றுகளே யன்றித் தொல்காப் பியத்தையோ வேறு முன்னூலையோ தழுவி யனவல்ல.

இவை கூறும் பாகுபாடு அகப்பாட்டுறுப் பென வின்சிலோ அகரமுதலியிற் கூறப்பட் டிருப்பதால், இவற்றை இங்கு மேற்கோளாகக் காட்டலாயிற்று.

'காரணம்' என்பது 'கரணம்' என்பதன் நீட்டம். 'காரியம்' என்பது 'இயம்' என்னும் திரிப்பீறு பெற்ற அதன் திரிசொல்.

'காரகம்' என்பதைக் 'கருமகம்' என்று தமிழிற் குறிக்கலாம்.

'காரணம்', 'காரியம்' என்னும் சொற்களை முறையே, 'கரணியம்', 'கருமியம்' என்றுங் குறிக்கலாம்.

இதன் விளக்கத்தைக் **கரணம்** என்னும் உருப்படியிற் காண்க.

அகப்பாட்டுறுப்பு² *aga-p-pāṭṭ(u)-uṟuppu*, பெ. (n.) (யாப்.) அகப்பொருட் செய்யுளின் **திணை, கைகோள், கூற்று, கேட்போர், இடம், காலம், பயன், முன்னம், மெய்ப்பாடு, எச்சம், பொருள் வகை, துறை என்னும் பன்னிரண்டு உறுப்புகள்;** (Pros.) elements of a love-poem, 12 in number.

''திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் பயனே முன்னம்
மெய்ப்பா டெச்சம் பொருள்வகை
துறையென்
றப்பா லாறிரண் டகப்பாட் டுறுப்பே''
(நம்பியகப். 211).

[அகம் + பாட்டு + உறுப்பு.]

அகப்பாட்டெல்லை *aga-p-pāṭṭ(u)-ellai*, பெ. (n.) **குறித்த வரம்பைத் தன்னகத் தடக்கிக்கொள் ளும் எல்லை** (தொல். பாயி. இளம். உரை); confining limit or boundary.

[அகப்படு → அகப்பாடு + எல்லை.]

அகப்பாடு *aga-p-pāḍu*, பெ. (n.) 1. **அகப்படுதல்;** being caught or obtained. 2. **உண்ணிகழ்ச்சி;** internal occurrence. 3. **நெருங்கியிருக்கை;** being close. ''அகப்பாட் டண்மையன்'' (பெருங். மகத. 18 : 20). 4. **புதுக் கண்டுபிடிப்பு** (புதுவை); discovery (Poṇḍ.).

[அகப்படு → அகப்பாடு.]

அகப்பு¹ *agappu*, பெ. (n.) **ஆழம்** (வின்.); depth.

[அகழ்தல் = தோண்டுதல். அகழ் → அகழ்ப்பு → அகப்பு = தோண்டப்பட்ட அல்லது தோண்டப் படும் ஆழம்.]

அகழ்ப்பு பார்க்க; see *agaḻppu*.

அகப்பு² *agappu*, பெ. (n.) **மரப்பிளப்பிற் செலுத்தும் மரத்துண்டு, ஆப்பு** (இ.வ.); wedge (Loc.).

[அகைத்தல் = அடித்தல், செலுத்துதல். அகை → அகைப்பு → அகப்பு = அடித்துச் செலுத்தப்படும் ஆப்பு.]

அகப்பு³ *agappu*, பெ. (n.) **எழுச்சி** (சம்.அக.); height.

[உகத்தல் = உயர்தல். உக → உகப்பு = உயர்ச்சி. ''உகப்பே உயர்தல்'' (தொல். சொல். உரி. 8). உகப்பு → அகப்பு. உ → அ சொல்லாக்கத் திரிபு. ஒ.நோ : உகை(த்தல்) → அகை(த்தல்).]

அகப்புலி *aga-p-puli*, பெ. (n.) **பொருள்கள், சொத்து** (கரு.அக.); things, property.

[பொலிதல் = செழித்தல், மிகுதல். அகப் பொலி → அகப்புலி.]

அகப்புறக்கருவி *aga-p-puṟa-k-karuvi,* பெ. (n.) (இலக்.) எழுத்திலக்கணங்களை அறிவதற்கு மிகத் துணையான புணரியல் என்னும் நூற் பகுதி; (Gram.) a sub-division of grammar, viz., *puṇariyal,* very helpful for the understanding of Tamil Orthography.

[அகம் + புறம் + கருவி.]

அகப்புறக் கைக்கிளை *aga-p-puṟa-k-kaikkiḷai,* பெ. (n.) அன்பினைந்திணை என்னும் இரு தலைக் காதற்குப் புறமான ஒருதலைக் காதல்; unreciprocated love, as outside the sphere of reciprocal love.

[அகம் + புறம் + கைக்கிளை.]

மக்கள் விருப்பத்தைக் கவனியாது பெற்றோரால் முடித்து வைக்கப்படும் திருமணங்களுள், மணமகன் மணமகள் என்னும் இருவருள் ஒருவர் மட்டும் காதலித்து, இன்னொருவர் கட்டமைக்காக இணங்கியிருப்பதே, ஒருதலைக் காமம் என்னும் கைக்கிளையாகும்.

''காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை யெய்தி
நன்மையுந் தீமையும் என்றிரு திறத்தால்
தன்னொடும் அவளொடும் தருக்கிய
புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லியின்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே''
(தொல். பொருள். அகத். 50)

என்பது, நூற்பாவிற் குறித்துள்ளவாறு, சொல்லளவான காமக் குறிப்பேயன்றிக் கூட்டத்தொடு கூடிய ஒழுக்கமோ மண வாழ்க்கையோ அன்று.

ஆகவே, கைக்கிளைக் குறிப்பு, கைக்கிளை யொழுக்கம் அல்லது கூட்டம் எனக் கைக் கிளை இருதிறத்தது என அறிக.

இங்ஙனமே, பெருந்திணைக்குறிப்பு, பெருந் திணையொழுக்கம் எனப் பெருந்திணையும் இருதிறத்ததாம். அது பெருந்திணையிற் கூறப்படும்.

அகப்புறச்சமயம் *aga-p-puṟa-c-camayam,* பெ. (n.) (சிவ.) சிவமதத்திற்கு மிக நெருக்க மல்லாத ஆதனம்பியம் (பாசுபதம்), மாநோன் பம் (மாவிரதம்), மண்டையம் (காபாலம்), இடவியம் (வாமம்), நாமுருவம் (வைரவம்), ஒன்றியக்கோட் சிவணியம் (ஐக்கவாத சைவம்) என்னும் அறுவகைக் கிளைநெறிகள்; (Šaiva.) six religious sects not intimately related to orthodox Šaivism.

[அகப்புறம் + சமயம்.]

அகப்புறத்தலைவன் *aga-p-puṟa-t-talaivaṉ,* பெ. (n.) (இலக்.) கைக்கிளை, பெருந்திணை யொழுக்கங்களுக்குரிய தலைவன் (கலித். 108, நச். உரை); (Gram.) lover whose love is unreciprocated or improper if not criminal.

[அகப்புறம் + தலைவன்.]

அகப்புறத்திணை *aga-p-puṟa-t-tiṇai,* பெ. (n.) அகப்பொருட்டிணை ஏழனுள், அகனைந் திணைக்குப் புறம்பான கைக்கிளை, பெருந் திணைகள் (யாப். வி. பக். 528); the two forms of love *kaikkiḷai* and *perundiṇai* out of seven, as outside the sphere of *agaṉaindiṇai.*

[அகப்புறம் + திணை.]

அகப்பொருட்குப் புறம்பான புறப்பொருட் டிணை ஏழிருப்பதால், அகப்பொருட்குள் ளேயே சற்றுப் புறம்பானது அகப்புறம் எனப் பட்டது. இங்ஙனம் புறப்பொருட்குள்ளும் சற்றுப் புறம்பானது புறப்புறம் எனப்படும்.

அகப்புறப்பாட்டு *aga-p-puṟa-p-pāṭṭu,* பெ. (n.) கைக்கிளை, பெருந்திணைகளுக்குரிய செய்யுள்; poem describing love which is unreciprocated or improper if not criminal. ''அகப்புறப் பாட்டு மிகப்பில வவையே'' (நம்பியகப். 250).

[அகப்புறம் + பாட்டு.]

அகப்புறப்பெருந்திணை *aga-p-puṟa-p-perun-diṇai,* பெ. (n.) இருதலைக் காமமென்னும் அகனைந்திணைக்குப் புறமாகிய பொருந்தாக் காமம் (நம்பியகப். 243); improper or criminal love, as outside the sphere of mutual love.

[அகப்புறம் + பெருந்திணை.]

அகப்புறப்பொருள் *aga-p-puṟa-p-poruḷ,* பெ. (n.) அகப்புறத்திணைகட்குரிய ஒருதலைக் காமமும் பொருந்தாக் காமமும்; themes relating to unreciprocated and improper or criminal love.

[அகப்புறம் + பொருள்.]

அகப்புறம் *aga-p-puṟam,* பெ. (n.) 1. ஒன்றோடு தொடர்புகொண்டு அதற்குச் சற்றுப் புறம் பானது; that which is related to, but is not of the essence. 2. அகத்திணைப்புறம் பார்க்க; see *aga-t-tiṇai-p-puṟam.*

[அகம் + புறம்.]

அகப்புறமுழவு *aga-p-puṟa-muḻavu,* பெ. (n.) ***தண்ணுமை, தக்கை, தகுணிச்சம் முதலிய இடைநிலைத் தோற்கருவிகள்*** (சிலப். 3 : 27, அடியார்க். உரை); drums of the medium grade, like *taṇṇumai, takkai* and *taguṇiccam,* etc., used as accompaniment to music and dancing.

'அகமுழவாவன: முன்சொன்ன உத்தமமான மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழா வெனவிவை.

அகப்புற முழவாவன : முன்சொன்ன மத்திம மான தண்ணுமை, தக்கை, தகுணிச்சம் முதலாயின.

புறமுழவாவன : முன்சொன்ன 'அதமக் கருவியான கணப்பறை முதலாயின.

புறப்புற முழவாவன: முற்கூறப்படாத நெய்தற்பறை முதலாயின' என்று அடியார்க்கு நல்லார் (சிலப். 3 : 27, உரை) கூறியிருப்ப தால், அகம் அகப்புறம் புறம் என்று வகுத்த மூவகை முழவுகளும், முறையே, முதல் இடை கடைப்பட்ட மங்கல முழவுகள் என்பதும், புறப்புறம் என்று இழித் தொதுக்கியவை அமங்கலப் பறைகள் என்பதும் உய்த்துணரப்படும்.

அகப்பூ *aga-p-pū,* பெ. (n.) ***நெஞ்சத்தாமரை;*** heart-lotus, used fig. "அகப்பூ மலைந்து" (சீவக. 1662).

ம. அகமலர்

[அகம் + பூ.]

அகப்பூசை *aga-p-pūšai,* பெ. (n.) ***மன வழி பாடு;*** worshipping in mind, meditation.

[அகம் + பூசை.]

அகப்பேய்ச்சித்தர் *aga-p-pēy-c-cittar,* பெ. (n.) ***அடிக்கடி தம் மனத்தை 'அகப்பேய்' என்று விளித்துப் பனுவல் பாடிய ஒரு வென்னர் (சித்தர்);*** name of a *Siddha,* author of a poem in which the mind is addressed as 'mind-devil' in every stanza.

[அகம் + பேய் + சித்தர்.]

அகப்பை *agappai,* பெ. (n.) ***சோறு, குழம்பு, காய்கறி முதலிய சமைத்த உணவுப் பொருள்களை முகந்து பரிமாற உதவும் நீண்ட பிடியுள்ள சிரட்டை அல்லது சிறுகலம்*** (சூடா.); ladle, large spoon with a long handle, usu. of coconut shell. 'அகப்பை அறுசுவை யறியுமா?' (பழ). 'அகப்பை குறைந்தால் கொழுப்பெல்லாம் அடங்கும்' (பழ). 'அகப்பை பிடித்தவன் தன்னவனானால் அடிப்பந்தியில் இருந்தாலென்ன? கடைப்பந்தியில் இருந்தாலென்ன?' (பழ.).

ம. அகப்பான்; க. அகபெ; தெ. அகப; து. ஹாபெ.

[அகழ்தல் = தோண்டுதல், முகத்தல். அகழ் → அகழ்ப்பு → அகழ்ப்பை → அகப்பை. ஒ.நோ : கேழ்ப்பு → கேழ்ப்பை → கேப்பை. சமைத்த உணவு வகைகளைக் கலத்திலிருந்து அகழ்ந்து (தோண்டி அல்லது முகந்து) எடுத்தற்குச் சிரட்டையாலும் மரப்பிடியாலும் செய்யப்பட்ட கருவி அகப்பை.]

அகப்பைக்கணை *agappai-k-kaṇai,* பெ. (n.) ***அகப்பைக் காம்பு;*** handle of ladle.

[அகப்பை + கணை.]

அகப்பைக்கின்னரி *agappai-k-kiṉṉari,* பெ. (n.) ***அகப்பை வடிவில் செய்த விளையாட்டு நரம்பிசைக் கருவி;*** stringed toy musical instrument shaped like a coconut-shell ladle.

[அகப்பை + கின்னரி.]

கின்னரி பார்க்க; see *kiṉṉari.*

அகப்பைக்குறி *agappai-k-kuṟi,* பெ. (n.) 1. ***அகப்பை யளவு*** (ஈடு, 1.4 : 6, அரும்.); measure of quantity, a coconut-shell ladle can hold. 2. ***நெற்குவியலின்மேல் இடும் சாணிப் பாற்குறி;*** marks of cow-dung solution poured from a ladle on heaps of paddy. 'கண்ணாரக் கண்டதற்கு ஏன் அகப்பைக் குறி?' (பழ.). 3. ***அகப்பை விழும் நிலையைக்கொண்டு குறி பார்த்தல்*** (வின்.); prognostication by observing the lying position and direction of a ladle let fall perpendicularly, practised by women.

[அகப்பை + குறி.]

குறி பார்க்க; see *kuṟi.*

அகப்பைக்கூடு *agappai-k-kūḍu,* பெ. (n.) ***அகப்பைசெருகி;*** rack for ladles.

[அகப்பை + கூடு.]

அகப்பைசெருகி *agappai-šerugi,* பெ. (n.) ***அகப்பைகள் செருகி வைக்கும் சட்டம்;*** perforated frame for holding ladles, the handles being inserted into the perforations.

அகப்பைசொருகி *agappai-šorugi,* பெ. (n.) ***அகப்பைசெருகி*** பார்க்க; see *agappai-šerugi.*

அகப்பையடி *agappai-y-aḍi*, பெ. (n.) 1. *அகப்பையினா லடிக்கும் அடி*; a blow dealt with a ladle. 2. *பட்டினி*; starvation. 3. *அகப்பையின் அடிப்பகுதி*; the bottom of a ladle.

[அகப்பை + அடி.]

அகப்பையடிபடு-தல் *agappai-y-aḍi-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. *அகப்பையினா லடிபடு தல்*; to be beaten with a ladle. 2. *பட்டினி போடப்படுதல்*; to be starved.

[அகப்பை + அடி + படு.]

அகப்பையைச் சுருங்கப்பிடி-த்தல் *agappaiyai-c-curuṅga-p-piḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) பிள்ளை கட்குத் தண்டனையாகச் சாப்பாட்டைக் குறைத்தல்; to decrease the quantity of food given, as a punishment, to children.

[அகப்பை + ஐ + சுருங்க + பிடி.]

அகப்பொருட்கைக்கிளை *aga-p-poruṭ-kaikkiḷai*, பெ. (n.) *காமம் நுகர்தற்குரிய கன்னித் தலைமகளின் காதற் குறிப்பை அறியும் வரை, தலைமகன் அவளைச் சாராதுநின்று தன் நெஞ்சொடு கூறல்* (நம்பியகப். 28); theme in which a lover is talking to his own mind, while awaiting indications from his sweet heart of her love in response to his.

[அகம் + பொருள் + கைக்கிளை.]

அகப்பொருட்கோவை *aga-p-poruṭ-kōvai*, பெ. (n.) *களவில் தொடங்கிக் கற்பில் முடியும் அகப்பொருட்டலைவன் தலைவியரின் காதல் வாழ்க்கையை, நானூற்றிற்குக் குறையாத கட்டளைக்கலித்துறையில் கோவைபடக் கூறும் பனுவல் வகை*; division of poem, in not less than 400 *kaṭṭaḷaikkalitturai* verses which treats of the continuous life of lovers, beginning with clandestine union and culminating in married and domestic life. "ஆறிரண் டுறுப்பும் ஊறின்றி விளங்கக் கூறுவ தகப்பொருட் கோவை யாகும்" (இலக். வி. 816).

[அகம் + பொருள் + கோவை.]

அகப்பொருட்டலைவன் *aga-p-poruṭ-ṭalaivan*, பெ. (n.) *அகப்பொருட் செய்யுளில் வரும் காதலன்*; hero of a love-poem.

[அகம் + பொருள் + தலைவன்.]

அகப்பொருட்டலைவி *aga-p-poruṭ-ṭalaivi*, பெ. (n.) *அகப்பொருட் செய்யுளில் வரும் காதலி*; heroine of a love-poem.

[அகம் + பொருள் + தலைவி.]

அகப்பொருட்டுறை *aga-p-poruṭ-ṭuṟai*, பெ. (n.) *அகப்பொருள்பற்றிய பொருட்கூறு*; a theme of love-poetry.

[அகம் + பொருள் + துறை.]

அகப்பொருட்பெருந்திணை *aga-p-poruṭ-perum-diṇai*, பெ. (n.) இருதலைக் காமத் தலைவனுந் தலைவியும் இன்பம் நுகர்ந்துவருங்கால், இடைக்காலத்தில் ஏற்பட்ட சில இன்ப நுகர்ச்சித் தடைகளை எடுத்துக்கூறுவது; narration of obstacles encountered in the love-life of genuine lovers.

"அகன்றுழிக் கலங்கலும் புகன்றமடற் கூற்றும்
குறியிடை யீடுந் தெளிவிடை விலங்கலும்
வெறிகோள் வகையும் விழைந்துடன் போக்கும்
பூப்பிய லுரைத்தலும் பொய்ச்சூ ளுரையும்
தீர்ப்பி லூடலும் போக்கழுங் கியல்பும்
பாசறைப் புலம்பலும் பருவமாறு படுதலும்
வன்புறை யெதிர்ந்து மொழிதலும் அன்புறு
மனைவியுந் தானும் வனமடைந்து நோற்றலும்
பிறவும் அகப்பொருட் பெருந்திணைக் குரிய"
(நம்பியகப். 243).

[அகம் + பொருள் + பெருந்திணை.]

அகப்பொருள் *aga-p-poruḷ*, பெ. (n.) 1. *நாற் பொருள்களுள் ஒன்றான இன்பம்*; pleasure, as one of the four objectives of life. 2. *காம வின்பம்*; sexual pleasure. 'நீ புறப்பொருளை விரும்பி அகப்பொருளைக் கைவிட்டதிலே' (கலித். 15, நச். உரை). 3. *அகத்திணை யென் னும் இன்பவொழுக்கங் கூறும் இலக்கண நூல்*; a grammar of love-theme. எ-டு: இறையனா ரகப் பொருள், நம்பியகப்பொருள். 4. *இன்ப வொழுக்கங் கூறும் நூற்றொகுதி*; love-literature. 5. *அகத்திணையாகிய பொருள்*; love-theme. "புலவோ ராய்ந்த வருந்தமி ழகப் பொருள்" (நம்பியகப். 1). 6. *உட்பொருள்*; inner meaning. "நான்மறை யகப்பொருள் புறப்பொரு ளறிவார்" (கம்பரா. யுத்த. இரணிய. 32). 7. *வீட்டிலுள்ள பொருள்*;

household effects. "அகப்பொரு டமக்கருளு வார்க்கஃது நல்கி - யுகப்புறு பரத்தையர்கள்" (தணிகைப்பு. திருநகரப். 78).

ம. அகப்பொருள்

[அகம் + பொருள்.]

அகப்பொருள் விளக்கம் *aga-p-poruḷ-viḷakkam*, பெ. (n.) **ஓர் அகத்திணை நூல்**; name of a grammar of love-poetry. **நம்பியகப்பொருள் விளக்கம்** *பார்க்க;* see *nambi-y-aga-p-poruḷ-viḷakkam.*

[அகம் + பொருள் + விளக்கம்.]

அகம்[1] *agam*, பெ. (n.) 1. **உள்ளிடம், புறம் என்பதற்கு எதிர்**; inside, opp. to *puṟam*. "அகம்புற நிறைந்த சோதியாய்" (தாயு. சிவன்செ. 4). 2. **உள்ளடங்குகை**; being subordinate. "அகப்பட்டி யாவாரைக் காணின்" (குறள், 1074). 3. **உடம்பினகத்துள்ள மனம்**; mind. "அகமலர்ந் தீவார்" (பதினொ. திருவிடை. மும். 7). 'அகம் அங்கே ஆக்கை இங்கே' (பழ.). 'அகம் ஏறச் சுகம் ஏறும்' (பழ.). 'அகம் மலிந்தால் அஞ்சும் மலியும், அகம் குறைந்தால் அஞ்சும் குறையும்' (பழ.). 4. **நெஞ்சம்**; heart. 5. **ஆதன் (ஆன்மா)**; soul. "அதுவதுதா னென்னு மகம்" (சி.போ.சிற். 3.6). 6. **மார்பு**; chest. "புல்லக மகன்றது" (சிலப். 30 : 16). 7. **அகப்பொருள் என்னும் காதல்**; love-theme. 8. **எழுவகைப்பட்ட அகத்திணை**; love, as a mental experience of lovers, of seven forms. 9. **காதலால் விளையும் காம வின்பம்**; sexual pleasure. 'யாண்டும் உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின், அதனை அகம் என்றார்' (தொல். பொருள். அகத். 1, நச். உரை). 10. **அகப்பொருள்பற்றிய அகநானூறு என்னும் அகவற்றொகை**; an anthology of 400 love-lyrics. "அகம்புறமென் றித்திறத்த வெட்டுத்தொகை" (தனிப்பாட்டு). 11. **வதியும் உள்ளிடங் கொண்ட வீடு** (பிங்.); house. 12. **ஒரு நிலப்பகுதியின் உள்ளிடமான மருதநிலம்**; agricultural tract. "ஆலைக் கரும்பி னகநாடணைந்தான்" (சீவக. 1613). 13. **இடம்** (திவா.); place. 14. **எங்கும் பரந்துள்ள இடமாகிய விசும்பு** (தைலவ. பாயி. 22); sky, space. —, இடை. (ind.) 1. **இடவேற்றுமை யுருபுகளுள் ஒன்று**; a loc. ending. "உள்அகம் புறம் இல் இடப்பொரு ளுருபே" (நன். 302). 2. **ஓர் இடப்பெயரீறு**; a suff. of place names. எ-டு: கானகம், தமிழகம். 3. **ஒரு பொருட்பெயரீறு**; a suff. forming names of objects. எ-டு: கேடகம், பாடகம். 4. **ஒரு தொழிற்பெயரீறு**; a verbal noun suff. எ-டு: நம்பகம், நாடகம். 5. **ஒரு பண்புப்பெயரீறு**; an abstract noun suff. எ-டு: காழகம் (கருமை).

ம. அகம்; க. அகெ.

[அகழ்தல் = தோண்டுதல். அகைதல் = ஒடிதல். அகைத்தல் = அறுத்தல். ஒருகா. அகு → அகம் = உட்டுளை, உள், குடி, வீடு. ஒ.நோ: புரை = துளை, வீடு. E. hold = small mean dingy abode. ஒ.நோ: இகுதல் = தாழ்தல். இகுத்தல் = தாழ்த்தல். இகுப்பம் = தாழ்வு. இகு → இகழ் → இகழ்த்தல் = தாழ்த்தல், தாழ்வாகக் கருதுதல்.]

அகம்[2] *agam*, பெ. (n.) **தவசம், கூலம்**; cereals, grain. "அகமது குறைவி லாதாய்" (நல். பாரத. ஆதி. வியாசருற். 8).

[அ:கம் → அக்கம் → அகம்.]

அகம்[3] *agam*, பெ. (n.) **வெள்வேல்** (மலை.); panicled babul.

[அக்கு = கூர்மை, முள். அக்கு → அகு → அகம்.]

அகம்படி *agambaḍi*, பெ. (n.) 1. **உள்ளிடம்**; inside. "திருவயிற்றி னகம்படியில் வைத்து" (திவ். பெரியதி. 11.6 : 8). 2. **மனம்**; mind. "அகம்படிக் கோயி லானை" (தேவா. 5.91 : 1). ம. அகம்படி. 3. **திருக்கோயிலில் அல்லது அரண்மனையிற் செய்யும் அகத்தொண்டு**; service in a sanctuary or inner appartments of a palace. 'அகம்படிப் பெண்டுகள்' (I.M.P. Tp. 274.). 4. **அடியார்**; devotees (ஈடு, 5.8 : 2).

[அகம்பு = உள். அகம்பு + அடி – அகம்படி, புறம்படி என்பதற்கு எதிர்.]

அகம்படித்தொண்டு *agambaḍi-t-toṇḍu*, பெ. (n.) **அணுக்கத்தொண்டு**; service, as in a sanctuary. "கோயிலுள்ளா லகம்படித் தொண்டு செய்வார்" (பெரியபு. தில்லை. 4).

[அகம்பு + அடி + தொண்டு.]

'அகம்படிமை' என்றும் வழங்கும்.

அகம்படிப்பெண்டுகள் *agambaḍi-p-peṇḍugaḷ*, பெ. (n.) **கோயிலகப் பணிப்பெண்கள், அகக் கோளாளர்** (தக்கயாகப். 95, உரை); maid-servants in a temple.

[அகம்பு + அடி + பெண்டுகள்.]

அகம்படிமுதலிகள் *agambaḍi - mudaligaḷ*, பெ. (n.) **திருக்கோயிற் பணியாளர்** (I.M.P. Cg. 919); male-servants in a temple.

ம. அகம்படி

[அகம்பு + அடி + முதலிகள்.]

அகம்படிமை *agambaḍimai*, பெ. (n.) **அகம்படித் தொண்டு** பார்க்க; see *agambaḍi-t-toṇḍu*. ''அகம்படிமைத் திறலினர்'' (கோயிற்பு. பாயி. 13).

[அகம்பு + அடிமை.]

அகம்படியர் *agambaḍiyar* பெ. (n.) 1. **வீட்டு வேலை செய்வோர்**; domestic servants. 'அவ்வவர்க்குரிய அகம்படியர்' (திவ். திருப்பா. 4 : 72, வியா.). 2. **தஞ்சை, மதுரை மாவட்டங் களில் முன்பு குறுநில மன்னர் அரண்மனை களிற் பணிசெய்து, இன்று உழவுத்தொழில் செய்துவரும் ஒரு குலத்தார்**; name of a caste of agriculturists in Thanjāvūr and Madurai districts, who originally were doing service in the palace of ancient chieftains.

ம. அகம்படிக்காரன்

[அகம்பு + அடியர்.]

அகம்படியார் *agambaḍiyār*, பெ. (n.) **திருக் கோயில்களிலும் அரண்மனைகளிலும் அகத் தொண்டு செய்வார்**; those who do service in a sanctuary or inner appartments of a palace.

[அகம்பு + அடியார்.]

அகம்பாடு *agambāḍu*, பெ. (n.) **உள்ளீடான மெய்ப்பொருள்**; essential truth. ''விச்சையி னகம்பா டுணர்ந்தறிவு முற்றுபய னுற்றவரை யொத்தாள்'' (கம்பரா. பால. கோலங். 39).

[அகம்படு → அகம்பாடு.]

அகம்பு *agambu*, பெ. (n.) **உள்; புறம்பு என்ப தற்கு எதிர்**; inside; opp. to *puṟambu*.

ம. அகமே

[அகம் → அகம்பு.]

அகமகன் *agamagaṉ*, பெ. (n.) **கடைக்கழகக் காலத்திற்குப்பின் தமிழ்நாட்டிற் புகுத்தப் பட்டதும், சிவனின் மூத்த மகனாகச் சொல்லப் படுவதும், காப்புத் தெய்வமாகக் கருதப்படு வதும், பெரும்பாலும் வீடுதொறும் வழிபடப் படுவதுமான ஆனைமுகப் பிள்ளையார்த் தெய்வம்** (சம்.அக.); elephant-headed God Gaṇēśa, the eldest son of Śiva, commonly worshipped in Hindu homes.

அகமகிழ்ச்சி *aga-magiḻcci*, பெ. (n.) **மனக்களிப்பு** (பிரபோத. 27 : 33); joy, inward happiness.

[அகம் + மகிழ்ச்சி.]

அகமடல் *aga-maḍal*, பெ. (n.) **பாளை**; spathe. ''அகமடல் வதிந்த வன்புபுரி பேடை'' (பெருங். மகத. 4 : 47).

[அகம் + மடல்.]

அகமணைத்தட்டு *aga-maṇai-t-taṭṭu*, பெ. (n.) **வண்டியி னுறுப்புவகை**; a part in the frame-work of a cart. ''புறமணைப் பலகையு மகமணைத் தட்டும்'' (பெருங். உஞ்சைக். 58 : 50).

[அகமணை + தட்டு.]

அகமரி-த்தல் *aga-mari-*, 4 செ.கு.வி. (v.i.) **கருப்பையில் இறத்தல்** (சீவரட். 207); to die in the womb.

*[த. மடி > **Skt.** mari (mru). அகம் + மரி — அகமரி.]*

அகமலர்ச்சி *aga-malarcci*, பெ. (n.) **மனமகிழ்ச்சி** (திவா.); joy, happiness, as blossoming of the mind.

[அகம் + மலர்ச்சி.]

அகமலர்ச்சியணி *aga-malarcci-y-aṇi*, பெ. (n.) **ஒரு பொருளின் உயர்வுதாழ்வுகளை இன் னொரு பொருளின் உயர்வுதாழ்வுகளோடு ஒப்பு நோக்குவதனாற் புலப்படுத்தும் பொருளணி வகை** (அணியி. 69); figure of speech in which the excellences and defects of one object are brought out, through a comparison with the same qualities in another object.

அகமலர்ச்சியணி — ஒரலங்காரம்; அஃது, ஒன்றின் குணத்தான் மற்றொன்றின் குண மும், ஒன்றின் குற்றத்தான் மற்றொன்றின் குற்றமும், ஒன்றின் குணத்தான் மற்றொன் றின் குற்றமும், ஒன்றின் குற்றத்தான் மற்றொன்றின் குணமும் வருணிக்கப்படுவது. இதனை வடநூலார் 'உல்லாசாலங்காரம்' என்பர் (குவ. 69) — (சங்.அக.).

[அகமலர்ச்சி + அணி.]

அகமாட்சி *aga-māṭci*, பெ. (n.) **இல்லறத்திற் குரிய நற்குண நற்செய்கைகள்** (உபதேசகா. சூராதி. 77); good qualities and deeds befitting an ideal family life.

[அகம் + மாட்சி. அகம் = வீடு, இல்லறம்.]

அகமிசைக்கிவர் - தல் *aga - mišaikk(u) - ivar-*, 2 செ.கு.வி. (v.i.) **கோட்டை மதிலின்மேல் ஏறி நின்று போர்புரிதல்**; to fight on the ramparts. "அகமிசைக் கிவர்ந்தோன் பக்கமும்" (தொல். பொருள். புறத். 13).

"மதின்மிசைக் கிவர்ந்தோன் பக்கமும்" என்றும், "மதின்மிசைக் கிவர்ந்த மேலோர் பக்கமும்" என்றும், இரு பாட வேறுபாடு முண்டு.

[அகமிசைக்கு + இவர்.]

அகமுகம் *aga-mugam*, பெ. (n.) **உள்முகம்**; the state of being turned inward.

[அகம் + முகம்.]

அகமுகமா(கு)-தல் *aga-mugam-ā-*, 6 செ.கு.வி. (v.i.) **உள்நோக்குதல்**; to be turned or pointed inward. "அகமுகமாந் தொடர்பால்" (ஞானவா. சுரகு. 12).

[அகமுகம் + ஆ(கு).]

அகமுடையாள் *agam-uḍaiyāḷ*, பெ. (n.) **மனைவி, அகமுடையான் என்பதன் பெண்பால்**; wife, fem. of *agamuḍaiyāṉ*.

ம. அகத்தாள்

[அகம் + உடையாள்.]

அகமுடையான் *agam-uḍaiyāṉ*, பெ. (n.) *1.* **கணவன்**; husband, as master of the house. *2.* **வீட்டுக்காரன்**; householder. *3.* **அகம்படியக் குலத்தான்** (I.M.P. Tj. 1033); person of the Agambaḍiyar caste.

ம. அகத்தான்

[அகம் + உடையான்.]

அகமுழவு *aga-muḻavu*, பெ. (n.) **மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழா என்னும் உயர்நிலைத் தோற் கருவிகள்** (சிலப். 3 : 27, அடியார்க். உரை); high quality drums, viz., *mattaḷam*, *šalligai*, *iḍakkai*, *karaḍigai*, *pērigai*, *paḍagam* and *kuḍamuḻā*.

அகமெய்ப்பாடு *aga-mey-p-pāḍu*, பெ. (n.) **காதலால் உடம்பின் புறத்துத் தோன்றும் விளர்ப்பு, பசப்பு, மெலிவு, விதிர்ப்பு முதலிய முப்பத்திரு வகைப்பட்ட உணர்ச்சி வெளிப்பாடு**; physical manifestation of emotions, such as paleness, sallowness, feebleness, trembling, thirty-two in number, due to love-sickness.

மெய்ப்பாடு பார்க்க; see *mey-p-pāḍu*.

"அகமெய்ப் பாடே யறையுங் காலை.... எண்ணாற் றுறையு மென்மனார் புலவர்" (அகத்திய நூற்பா, குமாரசுவாமிப் புலவர், தமிழ்ப் புலவர் சரித்திரம், பக். 5).

[அகம் + மெய்ப்பாடு. மெய்ப்படு → மெய்ப்பாடு (தொ.பெ.). படுதல் = தோன்றுதல்.]

அகமொடுக்கு *agam-oḍukku*, பெ. (n.) **கொள் கொம்பு** (சம்.அக.); pole for a creeper.

[அகம் + ஒடுக்கு.]

அகரசீர்மை *agara-šīrmai*, பெ. (n.) **ஆரியப் பார்ப்பனச் சேரி (அக்கிரகாரம்)** (M.E R. 389 of 1916); Brāhmin quarters.

*[அகரம் + சீர்மை. **Skt.** sīmā > **த.** சீமை → சீர்மை.]*

மூவேந்தரும் பிராமணர் என்னும் ஆரியப் பார்ப்பனர்க்கு மருதநிலத்துக் குடியேற்றங் களைத் தானமாக அளித்துவந்தனர். அவை பொதுவாகச் 'சதுர்வேதி மங்கலம்' எனப் பெயர் பெற்றன.

நாளடைவில், பிராமணர் தமிழர் குடியிருப்பை யொட்டியும் வாழத் தொடங்கினர். ஊர்க்கோடியில் தனிக் கூட்டமாக வாழ்ந்த தனால், அவர் குடியிருப்பு அக்கிராகரம் எனப் பட்டது.

Skt. agra = நுனி; **GK.** *acros*, topmost, outermost; **E.** *acro*, highest, topmost, terminal, tipped with; at the point or extremity of. அக்ர + அகரம் — அக்ராகரம். ஊர்க்கோடியி லிருந்ததனாலும், மருதநிலக் குடியிருப்பாத லாலும், ஆரியப் பார்ப்பனச்சேரி அக்ராகரம் எனப்பட்டதென்பது பொருத்தமே.

ஆயின், அக்ராகரம் (agrā-kara) என்னாது அக்ரஹார (agra-hāra) என்பதே, தொன்று தொட்ட பிராமண வழக்காயிருந்து வருகின்றது.

எனினும், "அகர மாயிரம் அந்தணர்க் கீயிலென்" என்னும் திருமந்திர (1860) வடியிலும், அதுபோன்ற பிறவிடத்தும், அகரம் என்னும் சொல் மருதநிலத்தூரைக் குறிக்கும் தென்சொல்லாகவே கொள்ளப்படும்.

அகரப்பற்று *agara-p-paṟṟu*, பெ. (n.) ***பிராமண ருக்குத் தானஞ் செய்யப்பட்ட நிலம்*** (M.E.R. 556 of 1919); land gifted to Brāhmins.

[அகரம் + பற்று.]

அகரம்[1] *agaram*, பெ. (n.) ***'அ' என்னும் தமிழ் வண்ணமாலை முதலெழுத்து;*** the letter 'a' with which the Tamil alphabet begins. ''அகர முதல் னகர இறுவாய்'' (தொல். எழுத்து. நூன். 1). 'கரம்' குறிற் சாரியை.

அகரம்[2] *agaram*, பெ. (n.) 1. ***மெய்யெழுத்துச் சாரியை;*** particle employed to enunciate consonants. 2. ***மெய்யெழுத்திற்கும் உயிர் மெய்க்கும் பொதுவான சாரியை;*** enunciative particle common to consonants and vowel-consonants (or syllabic consonants).

''மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த''
(தொல். எழுத்து. மொழி. 49).

''இஇடை நிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே''
(தொல். எழுத்து. புள்ளி. 31).

மகரத் தொடர்மொழி என்பதில் 'மகரம்' என்னுஞ் சொல் (ம் + அகரம்) மகர மெய்யைக் குறித்தலையும், ரகரம் நிற்றல் என்பதில் 'ரகரம்' என்னுஞ்சொல் ரகர மெய்க்கும் ரகர உயிர்மெய்கட்கும் பொதுவாக நிற்றலையும் நோக்குக.

அகரம்[3] *agaram*, பெ. (n.) 1. ***மருதநிலத்தூர்;*** town in an agricultural tract. 2. ***ஊர்*** (பிங்.); town.

[அகம் → அகர் → அகரம் = அகநாடென்னும் மருதநிலத்தூர், நகரம்.]

Cf. **L.** *ager*, field; **GK.** *agros*; **Skt.** *ajra;* **OE.** *aecer;* **OHG.** *ackar*; **ON.** *akr*; **Goth.** *akrs;* **E.** *acre*.

அகநாடு பார்க்க; see *aga-nāḍu*.

அகரம்[4] *agaram*, பெ. (n.) ***இதள்*** (பாதரசம்) (வின்.); mercury.

அகரம்[5] *agaram*, பெ. (n.) ***தேர்*** (மலை.); chariot, temple car.

†**அகரமுதலி** *agara-mudali*, பெ. (n.) ***அகரத்தில் தொடங்கி, ஒரு மொழியின் எல்லாச் சொற்களையும், அல்லது பெரும்பாற் சொற்களையும் வண்ணமாலை வரிசைப்படுத்திப் பொருள் கூறும் சொற்பொத்தகம்;*** Dictionary giving all the words of a language or a majority of them with their meanings and arranged alphabetically beginning with 'a'.

[அகரம் + முதலி. படைத். பாவாணர்.]

அகராதி பார்க்க; see *agarādi*.

அகரமேற்று-தல் *agaram-ēṟṟu-*, 2 பி.வி. (v.caus.) ***பிராமணரை மருதநிலத்தூரிற் குடியேற்றுதல்;*** to establish a Brāhmin colony in an agricultural tract. ''அகரமேற்றி நன்றிகொ டேவதான நல்கி'' (திருவாலவா. 48 : 22).

[அகரம் + ஏற்று.]

அகராதி *agarādi*, பெ. (n.) ***ஒரு மொழியிலுள்ள சொற்களையெல்லாம் அல்லது அவற்றின் பெரும்பகுதியை, வண்ணமாலை வரிசைப்படி யமைத்துப் பொருள்கூறும் சொற்பொத்தகம்;*** Dictionary, a book containing the words of a language alphabetically arranged together with their meanings.

[அகர முதற்சொல்லை அல்லது சொற்களை முதலிற்கொண்டுள்ளமையால் சொற்பொத்தகம் அகராதி யெனப்பட்டது. அகரம் + ஆதி – அகராதி.]

தொடக்கத்தில், தமிழிலக்கியத்திலுள்ள அருஞ்சொற்களின் பட்டிகளே, செய்யுள் நடையிற் பொருள்கூறி, **உரிச்சொல்** என்றும் **உரிச்சொற்றொகுதி** என்றும் பெயர்பெற்று வழங்கிவந்தன. பின்னர், அவை 'நிகண்டு' என்னும் வடசொற் பெயரால் வழங்கத் தலைப்பட்டன.

1594-ல் முதன்முதலாக, ***சிதம்பர ரேவண சித்தர்*** என்பவர் தம் நிகண்டை வண்ண மாலை வரிசைப்படுத்தி அதற்கு ***அகராதி நிகண்டு*** எனப் பெயரிட்டார்.

18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ***வீரமா முனிவர்*** (Father Beschi) முதன்முதலாகச் செய்யுள் நடையை விட்டுவிட்டு மேலை நாட்டு முறையைக் கையாண்டு, பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நால் வகைத் தலைப்பிற் சொற்களைத் தொகுத்து, ***சதுரகராதி*** என்று பெயரிட்டார்.

அதன்பின், 1779-ல் ***பெப்பிரசியசு*** (Fabricius), ***பிரேய்த்தாப்து*** (Breithaupt) என்னும் இரு செருமானிய லுத்தரன் விடையூழியர் (Missionaries), ***தமிழும் இங்கிலேசுமா யிருக்கிற அகராதி*** என்னும் பெயரில் ஒரு தமிழாங்கில அகரமுதலி வெளியிட்டனர்.

பின்னர் 'அகராதி' என்னும் பெயர் பெரு வழக்காயிற்று.

பதினெண்கீழ்க்கணக்கில் ஒரு நூல் **ஏலாதி** யெனப் பெயர் பெற்றிருப்பினும் ஆதி என்னும் சொல் தூய தென்சொல்லாகத் தோன்றாமை யால், இன்று அகராதி அகரமுதலி யெனப்படு கின்றது.

அகராதிக்கலை *agarādi-k-kalai*, பெ. (n.) *அகர முதலித் தொகுப்புக்கலை*; lexicography.

[அகராதி + கலை.]

அகராதிநிகண்டு *agarādi-nigaṇḍu*, பெ. (n.) *சிதம்பர ரேவண சித்தர் 1594-ல் வண்ணமாலை வரிசைப்படி தொகுத்த செய்யுள் நடைச் சொற் களஞ்சியம்*; name of a thesaurus in verse, as giving the words in alphabetical order, by Šidambara Rēvaṇa Šittar, A.D. 1594.

அகராதிபடித்தவன் *agarādi-paḍittavaṉ*, பெ.(n.) *1. அதிகங் கற்றவன்*; a very learned person. 'அகராதி படித்தவன் அஞ்சிப் பேசுவானா?' (பழ.). *2. சொன்ன கருத்தை மாற்றுபவன், சொற்பொருள் திரிப்பவன்*; punster, quibbler. அவன் பெரிய அகராதி படித்தவன்; அவனொடு பேசாதே (உ.வ.). 'அகராதி படித்தவனுக்கு எதிராகப் பேசாதே' (பழ.). 'அகராதி படித்துவிட்டால் அடக்கமின்றிப் பேசுவதா?' (பழ.).

அகராதிமுறை *agarādi-muṟai*, பெ. (n.) *வண்ண மாலை வரிசை*; alphabetical order.

அகராதியொழுங்கு *agarādi-y-oḻuṅgu*, பெ. (n.) *அகராதிமுறை* பார்க்க; see *agarādi-muṟai*.

[அகராதி + ஒழுங்கு.]

அகராதிவரிசை *agarādi-varišai*, பெ. (n.) *அகராதிமுறை* பார்க்க; see *agarādi-muṟai*.

அகராது *agarādu*, பெ. (n.) *கொன்றை* (வை.மு.); Indian laburnum.

அகல்[லு]-தல் *agal-*, 13 செ.கு.வி. (v.i.) *1. விரி வடைதல்*; to widen, spread, extend. ''விலங் ககன்ற வியன்மார்ப'' (புறநா. 3:16). *2. ஆக்க முறுதல், பெருகுதல், வளர்ச்சியடைதல்*; to prosper, increase, develop, grow, progress. ''அழுக்கற் றகன்றாரு மில்லை'' (குறள், 170). *3. நீங்குதல்*; to leave, vanish. ''பாயிரு ளகல'' (புறநா. 25 : 1). *4. பிரிதல்*; to separate, part. ''அகன்றபூங் கொடியை'' (பாரத. குரு. 79). *5. கடத்தல்* (திவா.); to pass beyond, cross, leap over. *6. நைந்து கிழிதல்*; to be worn out, to be torn. வேட்டி அகன்றுபோயிற்று (வின்.).

ம. அகலுக; க. அகல்; தெ. அகலு.

அகல் *agal*, பெ. (n.) *1. விரிவு*; wideness. *2. பரப்பு*; extent of space, expanse. *3. அல்குல்* (பிங்.); the part immediately above pudendum muliebre. *4. வாயகன்றகலமான சட்டி*; earthen pot, having a wide mouth. ''காரகற் கூவியர்'' (பெரும்பாண். 377). *5. விளக்குத் தகழி*; hollow earthen vessel for lamp. ''திருவிளக்குத் திரியிட்டங் ககல்பரப்பி'' (பெரியபு. கலிய. 15). *6. ஓர் அளவு*; (தொல். எழுத்து. தொகை. 28, உரை); a measure of capacity. *7. உள்ளூர்* (பொதி.நி.); inland town or village. *8. ஊரின் உட்புறம்* (பொதி.நி.); the interior or inner part of a town or village. *9. நாடு* (பொதி.நி.); country, province. *10. பெருமரம்* (வின்.); tooth-leaved tree of Heaven, *Ailanthus excelsa*. *11. வெள்வேல்* (சங்.அக.); panicled babul.

ம. அகல் (தகழி); க. அகல்; து. அகொலி; கட. அகலெ.

அகல்வட்டம் *agal-vaṭṭam*, பெ. (n.) *கதிரவனை அல்லது திங்களைச் சுற்றிப் போட்டிருக்கும் பெருங்கோட்டை*; large halo around the Sun or Moon. 'அகல்வட்டம் பகல் மழை' (பழ.).

அகல்வு *agalvu*, பெ. (n.) *1. அகலம்*; extent, expanse. ''ஒருநிரல் செல்லு முள்ளகல் வுடைத் தாய்'' (பெருங். உஞ்சைக். 49:59). *2. அடர்த்தி யின்மை*; sparseness. ''பைத்த நிலத்தி னகன்ற பயி ரகல்வி னீங்கப் பதித்து'' (தணிகைப்பு. திருநாட்டுப். 93). *3. நீங்குகை*; removal. ''அமிழ்தம் வவ்வி யகல்வுழி'' (காஞ்சிப்பு. முத்தீ. 10).

அகல்வோர் *agalvōr*, பெ. (n.) *1. விலகியிருப் பவர்*; those who live or remain apart. *2. தீண்டாதார்* (வின்.); outcastes, untouchables.

அகலக்கட்டை *agala-k-kaṭṭai*, பெ. (n.) *அகலக் குறைவுள்ளது, பொதுவாக அகலக் குறை வுள்ள துணி*; that which lacks width, ordinarily applied to cloth.

[அகலம் + கட்டை.]

அகலக்கால்வை-த்தல் *agala-k-kāl-vai-*, 4 செ.கு.வி. (v.i.) *செலவு, வினைமுயற்சி முதலியவற்றில் அளவுகடந்து போதல்*; to go beyond limits, as in enterprise, spending, etc. 'அகலக்கால் வைக்காதே' (பழ.).

[அகலம் + கால் + வை.]

அகலத்தேடு-தல் *agala-t-tēḍu-*, 5 செ.கு.வி. (v.i.) ***நீங்க வகைபார்த்தல்;*** to seek escape. ''அவன்றான் அகலத் தேடிலும்'' (திவ். திருவாய். பன்னீ.). —, 5 செ.குன்றாவி. (v.t.) ***விரிவாகத் தேடிப்பார்த்தல்;*** to search extensively.

அகலநில்-தல் *agala-nil-*, 14 செ.கு.வி. (v.i.) ***ஒதுங்கி நில், விலகி நில்***; to stand aloof, to stand afar. 'அகல இருந்தால் பகையும் உறவாம்' (பழ.). 'அகல இருந்தால் புகல உறவு' (பழ.).

அகலப்பா *agala-p-pā*, பெ. (n.) ***தனிநிலைச் செய்யுளாகவோ தொடர்நிலைச் செய்யுளாகவோ பரந்த பனுவல்;*** voluminous work of poetry, epic poem. ''ஈங்ககலப் பாக்க ளிரண்டாகும்'' (வெண்பாப். செய். 5).

[அகலம் + பா.]

அகலம்[1] *agalam*, பெ. (n.) 1. *பரப்பு;* extent, expanse. ''சென்னி யகல முப்பா னிராயிர மாம்'' (கந்தபு. அசுர. அண்ட. 29). 'அகல உழுகிறதைவிட ஆழ உழுகிறது மேல்' (பழ.). 2. ***குறுக்களவு***; width. ஆடையினகலம் மூன்று முழம் (உ.வ.). 3. ***பெருமை;*** greatness. ''நின் தோற்றமு மகலமு நீரினுள'' (பரிபா. 4 : 30). 4. ***ஞாலம்*** (அக.நி.); Earth. 5. ***வானம்*** (பிங்.); sky, atmosphere. 6. ***உழாது விடப்பட்ட நிலம், தரவை நிலம்***; uncultivated land. 7. ***மார்பு;*** breast, chest. ''மலைப்பரு மகலம்'' (புறநா. 78 : 4). 8. ***அகலப்பா***; voluminous poetic work, extensive poem. ''ஆசு மதுரஞ் சித்திர மகலம்'' (இலக். வி. 763). 9. ***அகலவுரை***; elaborate commentary. 'பொழிப்பு அகலம் நுட்பம் நூலெச்சம் என்னும் உரை' (இறை. 1, உரை). 10. ***விரிவாகச் சொல்கை***; elaboration. ''உரைத்தனை சுருக்கி யாங்கள் நன்றித னகலங் கேட்க'' (கந்தபு. பாயிரப். 81). 11. ***இடம்*** (பொதி.நி.); place. 12. ***வாய்;*** mouth. ''குளத்தனைய தூம்பி னகலங்கள்'' (நான்மணிக். 73).

ம. அகலம்; **க.** அகல.

[அகல் + அம்.]

அகலம்[2] *agalam*, பெ. (n.) 1. ***வேப்பலகு*** (வை.மூ.); leaf of margosa. ***ஒ.நோ:*** அலகு. 2. ***யானைத்திப்பிலி***; elephant pepper. ***ஒ.நோ:*** அலகம்.

[ஒருகா. அலகு → அலகம் → அகலம்.]

அகலர் *agalar*, பெ. (ந.) ***கீழ்மக்கள்***; low-born persons, outcastes (W.).

அகலவாய்ச்சி *agala-vāycci*, பெ. (n.) ***மரத்தை அல்லது பலகையைச் செதுக்கும் தச்சுக்கருவி வகை***; howel, copper's tool for smoothing work, adze.

அகலவுரை *agala-v-urai*, பெ. (n.) ***விரிவான வுரை*** (இறை. 1, உரை); elaborate commentary.

[அகலம் + உரை.]

அகலவுழு-தல் *agala-v-uḻu-*, 1 செ.கு.வி. (v.i.) ***மேலாக உழுதல்***; to plough shallowly.

அகலறை *agal-aṟai*, பெ. (n.) 1. ***பாசறை***; military camp. ''மாக்க ணகலறை யதிர்வன முழங்க'' (பட்டினப். 237). 2. ***மலைப்பக்கம்*** (பட்டினப். 237, நச். உரை); slope of a hill, hillside.

[அகல் + அறை.]

அகலன் *agalaṉ*, பெ. (n.) 1. ***பருத்தவன்***; stout man. 2. ***தீண்டாதவன்*** (சம்.அக.); member of the untouchable class.

[அகல் + அன்.]

அகலி-த்தல் *agali-*, 4 செ.கு.வி. (v.i.) 1. ***விரிவுறுதல்***; to broaden out, extend, widen. 2. ***பெருகுதல்***; to enlarge. ''அகலி யாவினை யல்லல் போயறும்'' (தேவா. 2.161 : 1).

[அகல் → அகலி.]

ம. அகலிக்குக; **க.** அகலிசு; **தெ.** அகலின்சு.

அகலிடம் *agal-iḍam*, பெ. (n.) ***அகன்ற இடமாகிய ஞாலம்***; Earth, as a wide place. ''அகலிட நீரேற்றான்'' (தேவா. 3.324 : 9).

[அகல் + இடம்.]

அகலிய *agali-y-a*, பெ.எ. (adj.) ***அகன்ற, அகலமான***; broad, wide.

அகலியம் *agali-y-am*, பெ. (n.) ***கிளைகளுடன் அகன்று வளரும் மரம்*** (பிங்.); tree, as broadening out with branches.

[அகல் → அகலி → அகலியம்.]

அகலுள் *agal-uḷ*, பெ. (n.) 1. ***அகலம்*** (திவா.); width. 2. பெருமை (திவா.); greatness. 3. ***அகன்ற தெரு*** (சிலப். 1 : 47, அடியார்க். உரை); broad street. 4. ***ஊர்*** (திவா.); town, village. 5. ***நாடு*** (திவா.); country. 6. ***ஞாலம்*** (ஆ.நி.); Earth.

[அகல் + உள்.]

அகவடி *aga-v-aḍi*, பெ. (n.) **உள்ளங்கால்**; sole of foot. "அகவடி யங்கை" (திருவிளை. உக்கிரபா. 41).

[அகம் + அடி.]

அகவயிரம் *aga-vayiram*, பெ. (n.) **அகக்காழ்** (இராட்.); hard core of a tree (R.).

[அகம் + வயிரம்.]

அகவர்[1] *agavar*, பெ. (n.) **நாட்டில் வாழ்வார்** (பொருந. 220); inhabitants of a country.

அகவர்[2] *agavar*, பெ. (n.) **வைகறையிற் பாடி அரசனைத் துயிலெழுப்பும் பாணர்**; bards who rouse the king from sleep with songs in the early morning. "நாளீண்டிய நல்லகவர்" (மதுரைக். 223).

அகவல் *agaval*, பெ. (n.) 1. **மயிற்குரல்** (பிங்.); the call or cry of a peacock. 2. **அழைக்கை** (பிங்.); calling, addressing. 3. பாடல் (குறுந். 298); singing. 4. **நடஞ்செய்தல்** (பிங்.); dancing. 5. **எடுத்தலோசை** (பிங்.); high tone, acute accent. 6. **அகவற்பாவிற்குரிய ஓசை** (யா.கா. 21); rhythm peculiar to *agaval* metre. 7. **ஆசிரியப்பா**; one of the four chief kinds of metre in Tamil prosody. "அகவல் என்ப தாசிரி யம்மே" (தொல். பொருள். செய். 80).

ம. அகவல்

அகவலன் *agavalaṉ*, பெ. (n.) **பாணன்**; bard of the Pāṇar caste who sings on the battle-field. "களம் வாழ்த்து மகவலன்" (பதிற்றுப். 43). 'அகவலன் பண்பாட அதுகேட்டுப் பெண் பாட' (பழ.).

[அகவல் + அன்.]

அகவலியற்சீர் *agaval-iyaṟ-cīr*, பெ. (n.) **பெரும் பாலும் ஆசிரியப்பாவிற்குரிய ஈரிய லசைச் சீர்கள்**; metrical feet of two *iyal* syllables each chiefly found in *āśiriyappā*.

[அகவல் + இயற்சீர்.]

இயலசை மயக்கத்தால் ஏற்பட்ட தேமா (நேர்நேர் – –), புளிமா (நிரைநேர் ⏑⏑ –), கருவிளம் (நிரைநிரை ⏑⏑ ⏑⏑), கூவிளம் (நேர்நிரை – ⏑⏑) ஆகிய நான்கும் இயல்பான ஆசிரிய வியற்சீர்கள்.

"இயலசை மயக்கம் இயற்சீர்" (தொல். பொருள். செய். 13).

இனி, உரியசையுடன் நேர் என்னும் இயலசை மயங்குவதால் ஏற்படும் நேர்புநேர் (சேற்றுக்கால், வேணுக்கோல்), நிரைபுநேர் (களிற்றுத்தாள், முழவுத்தோள்) என்னும் இருசீரும், ஆசிரிய வியற்சீரின்பாற்படும்.

"நேரவண் நிற்பின் இயற்சீர்ப் பால"
(தொல். பொருள். செய். 15, பேரா. உரை).

இங்ஙனமே, இயலசையுடன் உரியசை மயங்குவதால் ஏற்படும் நேர்நேர்பு (போரேறு), நேர்நிரைபு (பூமருது), நிரைநேர்பு (கடியாறு), நிரைநிரைபு (மழகளிறு) என்னும் நாற்சீரும், கூவிளம் (பாதிரி), கருவிளம் (கணவிரி) என்பனபோல ஆசிரிய வியற்சீராகக் கொள்ளப்படும்.

"இயலசை யீற்றுமு னுரியசை வரினே
நிரையசை யியல வாகு மென்ப"
(தொல். பொருள். செய். 16, பேரா. உரை).

அகவலுரிச்சீர் *agaval-uri-c-cir*, பெ. (n.) **உரியசை மயக்கத்தாலும், உரியசையுடன் இயலசை விரவுவதாலும், ஏற்படும் ஈரசை ஆசிரியவுரிச்சீர்கள்**; bisyllabic metrical feet, in which, either both the syllables are *uri* or the succeeding one is *iyal*.

[அகவல் + உரிச்சீர்.]

உரியசை மயக்கமான நேர்புநேர்பு (வீடு பேறு), நிரைபுநேர்பு (வரகுசோறு), நிரைபு நிரைபு (முடவுமருது), நேர்புநிரைபு (பாறு குருகு) என்னும் நான்கும் இயல்பான ஆசிரிய வுரிச்சீர்கள்.

"உரியசை மயக்கம் ஆசிரிய வுரிச்சீர்"
(தொல். பொருள். செய். 13, பேரா. உரை).

உரியசையும் இயலசையுங் கலந்த நேர்பு நிரை (நீடுகொடி, நாணுத்தளை), நிரைபு நிரை (குளிறுபுலி, விரவுக்கொடி) என்னும் இரண்டும் ஆசிரிய வுரிச்சீரின்பாற்படுவன.

"முன்னிரை யுறினும் அன்ன வாகும்"
(தொல். பொருள். செய். 14, பேரா. உரை).

இற்றை யிலக்கண நூல்கட்கெல்லாம் தொல்காப்பியம் மூலமாதலின், அதனொடு முரண்படும் கூற்றுகள் பெரும்பாலுங் கொள்ளத்தக்கன வல்ல.

உரிச்சீர் என்பது, முற்கால முறைப்படி உரியசைச் சீரையோ, பிற்கால முறைப்படி மூவசைச் சீரையோ குறித்தல் வேண்டும்.

பிற்கால இலக்கண நூல்களுட் சிறந்த யாப்பருங்கலத்திலும்,

''ஈரசை கூடிய சீரியற் சீரவை
யீரிரண் டென்ப வியல்புணர்ந் தோரே''

(11) என, ஈரசைச் சீரை இயற்சீரென்றே குறித்துள்ளார் ஆசிரியர். அந் நூலின் உரையாசிரியரே,

'''கூடிய' என்ற மிகையால் இயற்சீரை ஆசிரிய வுரிச்சீர் என்று வழங்குவாரும் உளர்; என்னை ?

''இயற்சீ ரெல்லாம் ஆசிரிய வுரிச்சீர்'' என்றார் காக்கைபாடினியார்'' என்று, வேண்டாது மிகைபடக் கூறியுள்ளார்.

யாப்பருங்கலக் காரிகை 10-ல் ''ஒண்சீ ரகவ லுரிச்சீர்'' என்னும் ஈற்றடித் தொடரும் ''ஒண்சீ ரகவ லியற்சீர்'' என்றே ஒருகால் இருந்திருக்கலாம். அதனால், தளையோ ஓசையோ சிறிதுங் கெடவில்லை.

ஆகவே, இயற்சீர் நான்கையும் அகவலுரிச்சீர் என்று அகரமுதலிகள் கூறுவது பொருந்தாது.

அகவலோசை *agaval-ōšai*, பெ. (n.) **ஆசிரியப் பாவிற்குரிய ஓசை**; rhythm peculiar to *agaval* metre.

''இயற்சீர்த் தாகியும் அயற்சீர் விரவியும்
தன்றளை தழுவியும் பிறதளை தட்டும்
அகவ லோசைய தாசிரி யம்மே''
(மயேச்சுரம்).

ஏந்திசை யகவலும், தூங்கிசை யகவலும், ஒழுகிசை யகவலுமென, அகவலோசை மூன்று வகைப்படும்.

''நேர்நே ரியற்றளை யான்வரு மகவலும்
நிரைநிரை யியற்றளை யான்வரு மகவலும்
ஆயிரு தளையுமொத் தாகிய வகவலும்
ஏந்தல் தூங்கல் ஒழுகல் என்றிவை
யாய்ந்த நிரனிறை யாகு மென்ப''
(இலக். வி. 732, உரை).

[அகவல் + ஓசை.]

அகவற்சீர் *agavar̲-cīr*, பெ. (n.) **ஆசிரியப்பாவிற் குரிய இயற்சீர்கள்**; metrical feet of two syllables each, chiefly found in *āśiriyappā*.

[அகவல் + சீர்.]

அகவற்சுரிதகம் *agavar̲-curidagam*, பெ. (n.) **ஆசிரியப்பா வடிவான கலிப்பாவின் இறுதி யுறுப்பு**; last member of certain kinds of *kali* verse. **ஆசிரியச் சுரிதகம்** பார்க்க; see *āśiriya-c-curidagam*.

[அகவல் + சுரிதகம்.]

அகவற்பா *agavar̲-pā*, பெ. (n.) **அகவலோசை யுடைய ஆசிரியப்பா**; one of four kinds of verse, having *agaval* rhythm.

[அகவல் + பா.]

அகவற்றாழிசை *agavar̲-r̲āl̲išai*, பெ. (n.) **அளவொத்த மூவடி கொண்ட ஆசிரியப்பாவின் வகை**; variety of *agaval* verse containing three lines of equal length.

''மூன்றடி யொத்த முடிவின வாய்விடின்
ஆன்ற வகவற் றாழிசை யாமே''
(யாப். வி. 75).

[அகவல் + தாழிசை.]

அகவற்றுள்ளல் *agavar̲-r̲uḷḷal*, பெ. (n.) **வெண்டளையுங் கலித்தளையுங் கலந்துவரும் துள்ளலோசை**; a rhythm in *kali* metre.

''வெண்டளை தன்றளை யென்றிரண் டியையின்
ஒன்றிய வகவற் றுள்ளலென் றோதுப''
(யா.கா. 21, உரை).

[அகவல் + துள்ளல்.]

அகவற்றுறை *agavar̲-r̲ur̲ai*, பெ. (n.) **நான்கடி கொண்டு ஈற்றயலடி குறைந்தும், ஈற்றயலடி குறைந்து இடைமடக்காயும், இடையிடை குறைந்தும், இடையிடை குறைந்து இடைமடக்காயும் வரும் ஆசிரியப்பாவினம்**; variety of *agaval* verse of four lines, in which the middle lines may differ in length from the first or last line.

''கடையத னயலடி கடைதபு நடையவும்
நடுவடி மடக்காய் நான்கடி யாகி
யிடையிடை குறைநவு மகவற் றுறையே''
(யாப். வி. 76).

[அகவல் + துறை.]

அகவற்றூங்கல் *agavar̲-r̲ūṅgal*, பெ. (n.) **ஒன்றாத வஞ்சித்தளையான் வரும் தூங்கலோசை** (யா. கா. 21, உரை); a rhythm in *vañji* metre.

[அகவல் + தூங்கல்.]

அகவன்மகள் *agavan̲-magaḷ*, பெ. (n.) **பாண்மகள்**; female bard of the Pāṇar caste. ''வெண் கடைச் சிறுகோ லகவன் மகளிர்'' (குறுந். 298).

அகவன்மண்டிலம் *agavan̲-maṇḍilam*, பெ. (n.) **அளவொத்த கழிநெடிலடி நான்குகொண்ட ஆசிரிய மண்டிலம் என்னும் ஆசிரியப்**

பாவினம்; stanza of four lines of equal length, each line containing not less than six feet.

"கழிநெடி லடிநான் கொத்திறின் விருத்தமஃ
தழியா மரபின தகவ லாகும்"
(யாப். வி. 77).

துறை, தாழிசை, மண்டிலம் என்னும் மூன்றும் தூய தமிழ் யாப்புவகைகள். மண்டிலம் என்பது எல்லா வடியும் அளவொத்து வரும் செய்யுள். நிலைமண்டில வாசிரியப்பா, அடிமறிமண்டில வாசிரியப்பா என்பவற்றை நோக்குக.

நாற்பாவிற்குமுரிய மண்டிலம் என்னும் இனம், அளவொத்த அடிகளாலேயே அமைதல் காண்க.

மண்டிலம் என்பது வட்டம். வட்டம் என்னும் சொல் முழுமையை அல்லது நிறைவைக் குறிக்கு மாதலால், எல்லா வடிகளும் நிரம்பி வரும் பாவினம், மண்டிலம் எனப்பட்டது. வடமொழியாளர் வட்டம் என்னும் தென் சொல்லை 'வ்ருத்த' எனத் திரித்தனர். **ஒ.நோ:** **த.** நடம் → நட்டம் > **பிராகி.** நட்ட > **Skt.** nirtta. இங்ஙனமே, வட்டம் என்னும் சொல்லும் திரிக்கப்பட்டது. **த.** வட்டம் > **பிராகி.** வட்ட > **Skt.** virtta.

'மண்டிலம்' என்னும் சொல் வட்டம் என்னும்பொருளதாதலால், மண்டிலயாப்பை 'வ்ருத்த யாப்பு' என்றனர் தமிழ்நாட்டு வடமொழியாளர். வடமொழி (வேதமொழியும் சமற்கிருதமும்) தேவமொழியென நம்பப் பட்டதனாலும், இற்றை மொழியாராய்ச்சி முற்காலத் தின்மையாலும், மண்டிலத்திற்கு 'விருத்தம்' என்னும் வடசொற் பெயரைத் தமிழர் ஏற்றுக்கொண்டு வழங்கிவந்திருக் கின்றனர்.

மூவடியாலும் நாலடியாலும் வரும் வெளி மண்டிலம் தவிர, மற்ற முப்பா மண்டிலங் களும் நாலடியாலேயே அமையும். வடமொழியிற் பொதுவாக விருத்தம் எனப்படும் யாப்புவகை ஈரடியே கொண்டது. இது வேத யாப்பிற்குப் பிற்பட்டதாதலால், தமிழையே பின்பற்றியதாகும்.

மண்டிலம் (மண்டலம்), தாண்டகம் என்னும் சொற்களும், அவை குறிக்கும் யாப்பு வகைகளும், தூய தமிழேயென்பது, அச்சொற் களின்கீழ் ஐயந்திரிபற விளக்கப்படும்.

விருத்தம் என்று சொல்லப்படும் தமிழ் யாப்புவகைகள் அனைத்தையும் இனி மண்டிலம் என்றே வழங்கல் வேண்டும்.

அகவாட்டி *aga-v-āṭṭi*, பெ. (n.) ***மனைவி*** (வின்.); wife.

[அகம் + ஆட்டி — அகவாட்டி. அகம் = வீடு. ஆள் → ஆளன் → ஆட்டி (பெ.பா. ஈறு.)]

அகவாய் *aga-vāy*, பெ. (n.) 1. ***உள்ளிடம்***; interior, inside. 'அகவாயிற் பெருச்சாளி' (திவ். திருமாலை. 7, வியா.). 2. ***மனம்*** (சம். அக.கை.); mind. 3. ***கதவுநிலை***; door-frame. 'திருக்கற்றளிப் பலகைப் படையும் பஞ்சரமும் அகவாயுஞ் செய்தான்' (Pudu. Insc. 635).

[அகம் + வாய்.]

அகவாய்க்கோடு *aga-vāy-k-kōḍu*, பெ. (n.) ***வண்டியின் நெடுஞ்சட்டம்***; long bar of the body of a cart. "அகவாய்க் கோடும் புறவாய்ப் பூணும்" (பெருங். உஞ்சைக். 58 : 48).

[அகம் + வாய் + கோடு.]

அகவாயில் *aga-vāyil*, பெ. (n.) ***மனம்***; mind. "அகவாயி லெண்ணத்தின் ஏற்ற மறிந்து" (குருபரம். 258).

[அகம் + வாயில்.]

அகவிதழ் *aga-v-idaḻ*, பெ. (n.) ***உள்ளிதழ்***; inner petal of a flower. "அம்மல ரகவிதழ்" (கலித். 77 : 7).

[அகம் + இதழ்.]

அகவிரல் *aga-viral*, பெ. (n.) ***விரலின் உட்புறம்***; inner side of a finger. 'வீக்கின நரம்பை அக விரலாலும் புறவிரலாலுங் கரணஞ் செய்து' (சீவக. 657, நச். உரை).

[அகம் + விரல்.]

அகவிருள் *aga-v-iruḷ*, பெ. (n.) ***அறியாமை யாகிய மனவிருள்***; spiritual ignorance, as inner darkness. "அகவிருட் பானு" (திருவேங். சத. தனியன்).

[அகம் + இருள்.]

அகவிலை[1] *aga-v-ilai*, பெ. (n.) ***உள்ளிதழ்***; inner petal of a flower. "அகவிலை யாம்பல்" (தேவா. 4.55 : 8).

[அகம் + இலை.]

அகவிலை[2] *aga-vilai*, பெ. (n.) ***தவசவிலை***; cost of foodgrains. "நெல்லு மகவிலை குறைந்து" (திருநெல். பு. நெல்லு. 4). 'அகவிலை யறியா தவன் துக்கம் அறியான்' (பழ.). 'அகவிலை

ஏறினால் அவளுக்கென்ன, அகமுடையான் இருக்கிறான் தேடிப் போட' (பழ.). 'அகவிலை தெரியாது அவள் பேச்சுப் புரியாது' (பழ.). 'அகவிலையால் திண்டாடும்போது வைர அட்டிகை கேட்டாளாம்' (பழ.).

[அ:கம் → அகம் + விலை.]

அகவு-தல் *agavu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. ***மயில் அகவுதல்***; to call or cry, as a peacock. "பல் பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ" (திரு முருகு. 122). 2. ***பாடுதல்***; to sing. "அகவலன் பெறுக மாவே" (பதிற்றுப். 43 : 28). 3. ***நடஞ் செய்தல்*** (பிங்.); to dance, as a peacock. 4. ***நெடுமையாதல்*** (ஈடு, 6.2 : 9); to become long, lengthen out. —, 5 செ.குன்றாவி. (v.t.) ***அழைத்தல்*** (பிங்.); to call, summon.

Skt. ā-hvē

அகவு *agavu*, பெ. (n.) ***அமுக்கிரா*** (மூ.அ.); species of withania.

அகவுயிர் *aga-v-uyir*, பெ. (n.) ***உடம்பினுள் உள்ள உயிர்***; in-dwelling soul. "என தகவுயிர்க் கமுதே யென்னும்" (திவ். திருவாய். 2.4 : 6).

[அகம் + உயிர்.]

அகவேளை *aga-vēḷai*, பெ. (n.) 1. ***நண்பகல்***; midday. 2. ***நள்ளிரவு***; midnight.

[அகம் + வேளை.]

அகவை *agavai*, பெ. (n.) 1. ***உள்ளிடம்***; inside. "ஆய கானத் தகவையுள்" (உபதேசகா. சிவவி. 143). 2. ***உட்பட்ட பருவம்***; age within a certain milit. "ஈராறாண் டகவையாள்" (சிலப். மங்கல. 24). 3. ***ஆண்டுப்பருவம்***; age. உன் அகவை என்ன? (உ.வ.). —, இடை. (ind.) ***இடவேற்றுமை யுருபு***; a loc. ending. "ஆடித் திங்க ளகவையின்" (சிலப். உரை பெறுகட். 3).

அகழ்-தல் *agaḻ-*, 2 செ.குன்றாவி. (v.t.) 1. ***தோண்டுதல்***; to dig out, excavate. "அகழ் வாரைத் தாங்கும் நிலம்போல" (குறள், 151). 2. ***பிடுங்குதல்***; to pluck out, as an eye. "தனது கண் ணகழ்ந்து" (திருக்காளத். பு. 6 : 36). 3. ***அடியோடு களைதல், மூலத்தோடு நீக்குதல்***; to uproot. "அகழ்தரு பாவத் தினராய்" (சூத. சிவ. 13 : 31).

ம. அகழுக; **க.** அகழ்; **துட.** அட்; **கோத.** அவ்; **கொலா.** அகுல்.

அகழ் *agal*, பெ. (n.) 1. ***அகழி***; moat. "வையையு மொருபுறத் தகழாம்" (திருவிளை. திருநகரப். 17). 2. ***குளம், நீர்த்தேக்கம்***; tank, reservoir. "நீர்நசைஇக் குழித்தவகழ்" (பெரும்பாண். 108).

ம. அகழி; **க.** அகழ்; **து.** அகள்.

அகழ்த்துவங்கொள்-தல் *agaḻttuvaṅ-koḷ-*, 16 செ.கு.வி. (v.i.) ***கடைகாலெடுத்தல் (வாணந் தோண்டுதல்)***; to dig out for laying foundation. "தேவர் தங்கட் கோய்வுறு கோயி லகத்துவங் கொள்க" (விதான. நல்வினை. 12).

[அகழ் → அகழ்த்துவம் + கொள்.]

மேற்கோளில், அகழ்த்துவம் என்பது அகத் துவம் எனத் தவறாகக் குறிக்கப்பட்டுள்ளது. அத் தவற்று வடிவத்தைச் சரியானதாகக் கொண்டு, "கர்ப்பக்கிரகத் தன்மை, வீட்டுத் தன்மை" என மதுரைத் தமிழ்ச்சங்க அகர முதலி பொருள் கூறியுள்ளது.

அகழ்ப்பு *agaḻppu*, பெ. (n.) ***ஆழம்*** (வின்.); depth.

இச் சொல் தவறாக அகப்பு எனச் சென்னை அகரமுதலியிற் குறிக்கப்பட்டுள்ளது.

அகழான் *agaḻāṉ*, பெ. (n.) ***வளை தோண்டும் வயலெலி அல்லது காட்டெலி***; field rat or wild rat.

[அகழ் → அகழான்.]

அகழெலி பார்க்க; see *agaḻ-eli*.

அகழானெடு-த்தல் *agaḻāṉ-eḍu-*, 4 செ.கு.வி. (v.i.) ***வளை தோண்டுதல்*** (வின்.); to make holes in the earth; to burrow, as rats.

[அகழான் + எடு.]

அகழி[1] *agaḻi*, பெ. (n.) 1. ***கோட்டையைச் சூழ்ந்துள்ள நீர்க்கிடங்கு***; ditch surrounding a fortification, moat. "அகழிசூழ் போகி" (சிலப். 13 : 183). 'அகழிவாய் முதலைபோல் வாயைப் பிளக்கிறான்' (பழ.). 'அகழியிலே விழுந்த முதலைக்கு அதுவே வைகுந்தம்' (பழ.). 2. ***கிடங்கு***; pit, depression. "பாருடைத்த குண்டகழி" (புறநா. 14 : 5).

க. அகழு; **தெ.** அகட்த.

[அகழ் → அகழி.]

அகழி[2] *agaḻi*, பெ. (n.) ***வாயகன்ற கலம்***; pot with a wide mouth. "ஓரகழி பெய்ததற்பின்" (தைலவ. தைல. 94.).

[அகல் → அகலி → அகழி.]

அகழிதிருத்து-தல் *agaḻi-tiruttu-*, 5 செ.கு.வி. (v.i.) **பயிரிடுதற்காகச் சிறிய பள்ளங்களைத் தூர்த்துச் சமமாக்குதல்**; to fill up small pits and level the ground for cultivation. 'புன்செய்த் திடல் கல்லி அகழி திருத்தி' (S.I.I. v, 216).

அகழு *agaḻu*, பெ. (n.) **பெருமரம்** (அக.நி.); tooth-leaved tree of Heaven.

அகழெலி *agaḻ-eli*, பெ. (n.) **வளை தோண்டும் எலி** (பிங்.); field rat, *Millardia meltada.*

[அகழ் + எலி.]

அகளங்கம் *agaḷaṅgam*, பெ. (n.) 1. **மாசின்மை**; blemishlessness. ''அகளங்க வுருவுடைய னாகலின்'' (செங்கழு. விநா. பிள். அம். 2). 2. **ஒரு கனிய நஞ்சு** (சீதாங்க பாடாணம்) (மூ.அ.); a mineral poison.

[அ+களங்கம். 'அ' எதிர்மறை முன்னொட்டு.]

களங்கம் பார்க்க; see *kaḷaṅgam.*

அகளங்கன் *agaḷaṅgaṉ*, பெ. (n.) 1. **மாசிலாதவன்**; one free from impurity. ''அகளங்க னனகன்'' (நல். பாரத. ஆரணிய. கௌசிக. 77). 2. **புத்தன்** (திவா.); the Buddha.

[அ + களங்கன்.]

அகளம் *agaḷam*, பெ. (n.) 1. **சாடி** (பிங்.); jar. 2. **மிடா** (திவா.); large earthen pot. 3. **நீர்ச் சால்**; bucket. ''அகளத் தன்ன நிறைசுனை'' (மலைபடு. 104). 4. **யாழின் பத்தர்**; head of the lute, being shaped like a bowl, resonator.

[அகல் + அம் – அகலம் → அகளம்.]

அகளுதி *agaḷudi*, பெ. (n.) **வேம்பு** (பச்.மூ.); margosa tree.

அகற்சி *agaṟci*, பெ. (n.) 1. **அகலம்**; breadth. ''அன்ன மாபெருங் கயிலையி னகற்சியும் நிவப்பும்'' (உபதேசகா. கைலை. 14). 2. பிரிவு; separation. ''அயலோ ராயினு மகற்சி மேற்றே'' (தொல். பொருள். அகத். 38). 3. **துறவறம்**; ascetic life. ''அருளொடு புணர்ந்த வகற்சி யானும்'' (தொல். பொருள். புறத். 21).

ம. அகல்ச (பிரிவு); க. அகலிகெ (பிரிவு); தெ. அகலுட (பிரிவு).

அகற்றம் *agaṟṟam*, பெ. (n.) **பரப்பு**; width, expanse. ''எயில தகற்றமும்'' (பெருங். மகத. 14 : 25).

[அகல் → அகற்று → அகற்றம்.]

அகற்றல் *agaṟṟal*, தொ.பெ. (vbl.n.) **மந்திர வலிமையால் ஒருவரை ஓரிடத்தினின்று நீங்கச் செய்தல்** (திருக்காளத். பு. 33 : 23); causing a person to quit his place through magic.

[அகல் → அகற்று → அகற்றல்.]

அகற்று-தல் *agaṟṟu-*, 2 பி.வி. (v. caus.) 1. **விரிவுபடுத்துதல்**; to widen, broaden, extend. ''களிறுசென்று களனகற்றவும்'' (புறநா. 26 : 3). 2. **பெருகச்செய்தல்**; to increase. ''மடங்கொன் றறிவகற்றுங் கல்வி'' (நீதிநெறி. 3). 3. **நீக்குதல்**; to remove. ''இன்பம் பெருக்கி யிருள கற்றி'' (திருவாச. 47 : 11).

ம. அகற்றுக; க. அகலிசு; தெ. அகலின்சு (விரிவுபடுத்துதல்).

[அகல் (த.வி.) → அகற்று (பி.வி.).]

அகறல் *agaṟal*, பெ. (n.) 1. **அகலம்** (சூடா.); width, extension. 2. **கடத்தல்**; passing beyond. ''அடர்மலர்க் காற்குங் கட்கு மகறலால்'' (இரகு. மாலை. 35). 3. **நீங்கல்**; separation, removal. ''அகறலினாற் பிறருடல் போற் றன்னுடலந் தனினு முறுதிதரு மபிமான மின்மையே யாகி'' (வேதா. சூ. 459).

[அகல் + தல் – அகறல்.]

அகன்[1] *agaṉ*, பெ. (n.) 1. **உள்**; inside. 2. **மனம்**; mind. 3. **காதல்**; love.

[அகம் → அகன் (போலி).]

அகன்[2] *agaṉ*, பெ. (n.) **கணவன்** (மலை.); husband.

அகன்[3] *agaṉ*, பெ.எ. (adj.) **அகன்ற**; broad. ''சிலம்பாற் றகன்றலை'' (சிலப். 11 : 108), ''அகன்பணை'' (திருக்கோ. 11), ''அகன் மணி'' (திவா.).

[அகல் → அகன்.]

அகன்றிசைப்பு *agaṉṟ(u)-isaippu*, பெ. (n.) **செய்யுளில் உரைநடை கலக்கும் யாப்புக் குற்றம்**; defect in poetical composition caused by the introduction of prose in verse.

''கானக நாடன் கருங்கோன் பெருமலைமே
லானை கிடந்தாற்போ லாய பெருங்கற்க
டாமே கிடந்தன கொல்லோ வவையேற்றிப்
பெற்றிப் பிறக்கி வைத்தா ருளர்கொல்லோ''

'இது முன் செய்யுளாய் வந்து இறுதி பரவிக் கட்டுரையாய் வந்தமையால், அகன்றிசைப் பென்னுங் குற்றமாயிற்று' (யாப். வி. 95, உரை, பக். 404).

[அகன்று + இசைப்பு.]

யாப்பு முறையினின்று அகன்று இசைப்பது அகன்றிசைப்பு எனப்பட்டது.

அகன்றில் *agaṉṟil*, பெ. (n.) **ஆண் அன்றில்**; male Greek-partridge. "குறுங்கால் அகன்றில்" (ஐங்குறு. 381, பா.வே.).

[மகன்றில் → அகன்றில்.]

மகன்றில் பார்க்க; see *magaṉṟil*.

அகனம் *agaṉam*, பெ. (n.) **வேங்கைமரம்** (பச்.மூ.); Indian kino tree. ஒ.நோ: அசனம்.

அகனாதி *agaṉādi*, பெ. (n.) 1. **கொடுவேலி** (சித்.அக.); Ceylon leadwort. 2. **இதள்** (வை.மூ.); quick silver. ஒ.நோ: அசுனாதி.

அகனைந்திணை *agaṉ-aindiṇai*, பெ. (n.) **குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைக்குமுரிய இருதலைக் காதல்**; the five forms of reciprocated love related to the five natural regions of the Tamil country.

"மக்கள் நுதலிய அகனைந் திணையும்" (தொல். பொருள். அகத். 54).

[அகம் → அகன் + ஐந்திணை.]

அகாந்தம் *agāndam*, பெ. (n.) **தான்றி** (பச்.மூ.); belleric myrobalan.

[அக்கந்தம் → அகாந்தம்.]

அக்கந்தம் பார்க்க; see *akkandam*.

அகாமம் *agāmam*, பெ. (n.) **காமமின்மை**; absence of desire or lust.

[அ + காமம். 'அ' எதிர்மறை முன்னொட்டு.]

காமம் பார்க்க; see *kāmam*.

அகாமவினை *agāma-viṉai*, பெ. (n.) **அறியாது அல்லது விருப்பவுணர்ச்சியின்றிச் செய்யுஞ் செயல்**; unintentional action. "கிருகபதி யகாம வினையினுக்குப் பரிகாரம் பகர்ந்திடுவர்" (சிவதரு. பரிகார. 2).

[அ + காமம் + வினை.]

அகாரம் *agāram*, இடை. (part.) (இலக்.) **அகரம் என்னும் மெய்யெழுத்துச் சாரியையின் நூற்பா நீட்டம்**; (Gram.) medial lengthening of the enunciative particle *agaram* used to designate consonants.

'கரம்' என்பது 'அ' என்னும் எழுத்தின் சாரியை. அகரம் = அ.

'அ' என்பதும் 'அகரம்' என்பதும் மெய் யெழுத்தின் சாரியை.

க = க், ககரம் = க்,

'கரம்' என்பது குறிற்கே யுரிய சாரியை யாதலின், 'அகாரம்' என்றோ 'ககாரம்' என்றோ உரைநடையிற் குறித்தல் வழுவாம்.

"ரகார ழகாரம் குற்றொற் றாகா" (தொல். எழுத்து. மொழி. 16) என்பது செய்யுள் வடிவான நூற்பாவாதலின், 'அகரம்' என்பது 'அகாரம்' என இன்னோசையும் இசைநிறை வும்பற்றி நீண்டொலித்தது. இதை இயல் பென்று கொள்வது தவறாகும்.

வடமொழியிலக்கணம் தமிழிலக்கணத்திற் குப் பிந்தியதும் அதைத் தழுவியது மாதலின், தமிழ்முறை யறியாது நெடிற்குரிய 'கார'ச் சாரியையையும் குறிற்கேற்றிக்கொண்டது. இதையறியாத பிற்காலத் தமிழிலக்கண நூலாசிரியரும் வடநூல் முறையைப் பின் பற்றுவ ராயினர்.

கரம், காரம், கான் பார்க்க; see *karam, kāram, kāṉ*.

அகாரவுப்பு *agāra-v-uppu*, பெ. (n.) **கல்லுப்பு** (வை.மூ.); rock-salt.

[அ+காரம் + உப்பு – அகாரவுப்பு. 'அ' எதிர்மறை முன்னொட்டு.]

அகாலச்சாவு *agāla-c-cāvu*, பெ. (n.) **இளமை அல்லது மூப்பிற்கு முந்திய சாவு**; premature or early death.

[அ + காலம் + சாவு.]

அகாலப் பிள்ளைப்பேறு *agāla-p-piḷḷai-p-pēṟu*, பெ. (n.) **உரிய காலத்திற்குமுன் பிள்ளை பெறுகை**; premature delivery of child.

[அ + காலம் + பிள்ளை + பேறு.]

அகாலப்பேறுகாலம் *agāla-p-pēṟu-kālam*, பெ. (n.) **அகாலப் பிள்ளைப்பேறு** பார்க்க; see *agāla-p-piḷḷai-p-pēṟu*.

[அ + காலம் + பேறு + காலம்.]

அகாலம் *agālam*, பெ. (n.) 1. **தகாத அல்லது உரிய காலமல்லாத காலம்**; inauspicious or inopportune time. "அகாலத்தி லுன்னுடை யுடலைவிட நினைப்பதென்" (ஞானவா. பிரகலாத. 61). 2. **பஞ்ச காலம்** (வின்.); times of scarcity.

[அ + காலம். 'அ' எதிர்மறை முன்னொட்டு.]

காலம் பார்க்க; see *kālam*.

அகாலவுண்டி *agāla-v-uṇḍi*, பெ. (n.) *காலந் தவறி யுண்ணும் உணவு*; untimely meal.

[*அ + காலம் + உண்டி.*]

அகாலவுணவு *agāla-v-uṇavu*, பெ. (n.) *அகால வுண்டி* பார்க்க; see *agāla-v-uṇḍi*.

[*அ + காலம் + உணவு.*]

அகி[1] *agi*, பெ. (n.) இரும்பு (பிங்.); iron.

அகி[2] *agi*, பெ. (n.) *மாதர் அணியும் ஒலிக்குங் காற்சிலம்பு* (பொதி.நி.); anklets worn by women that produce a tinkling sound while walking.

அகிர் *agir*, பெ. (n.) *தலைப் பொடுகுவகை* (இராட்.); a kind of scurf, dandruff (R.). **ஒ.நோ:** அசறு.

அகில் *agil*, பெ. (n.) 1. *ஒருவகை நறுமண மரம்*; eagle-wood, *Aquilaria agallocha*. 2. *அகில் மரத்தின் அடியிலும் கிளைகளிலுமிருந்தும் பெறப்படும் நறும்பிசின்*; a fragrant resin called *agar* obtained from the trunk and branches of eagle-wood.

அகில்

ம., க., து. அகில்; **தெ.** அகரு; **பர்.** அகலு.

Heb. *aghalim*; **L.** *aquilla*; **Port.** *aguila*; **Sp.** *aguila*; **Gk.** *agallochon*; **E.** eagle-wood, *agila*, *agalloch*; **Skt.** agaru; **Pkt.** agaluya, agara.

[*''கள்ளி வயிற்றி னகில்பிறக்கும்'' என்று நான்மணிக்கடிகை (6) கூறுவதால், அகின்மரம் ஒருவகை முண்மரமா யிருக்கலாம். கள் = முள். கள் → கள்ளி = முட்செடி, முண்மரம்.*

அக்கு = அகில். அஃகு = நுண்மை, கூர்மை. அஃகு → அக்கு → அக்கில் → அகில். ஒ.நோ: முள் = நுண்மை, கூர்மை.]

''யானைவெண் கோடும் அகிலின் குப்பையும்'' (சிலப். 25 : 37) குன்றக்குறவர் சேரன் செங்குட்டுவனுக்குக் காணிக்கையாகப் படைத்ததனாலும், ''குடமலைப் பிறந்த கொழும்பஃ் றாரம்'' (சிலப். 10 : 106) என்பதற்கு, அருஞ்சொல்லுரை யாசிரியர் 'தாரம் - சந்தனம் அகில் முதலாயின' என்று உரை வரைந்திருப்பதனாலும், தமிழகத்திலும்; ''குணதிசை மருங்கிற் காரகி லுறந்து'' (சிலப். *4 : 36*) என்பதற்கு, 'கீழ்த்திசையிடத்து உண்டான அகில் முதலியவற்றாற் புகைக்கும் புகையைத் துறந்து' என்றும், ''வங்க வீட்டத்துத் தொண்டியோ ரிட்ட வகிலும்'' என்பதற்கு, 'குணதிசைக்கண் தொண்டி யென்னும் பதியிலுள்ள அரசரால் வங்கத் திரளோடு திறையிடப்பட்ட அகிலும்' என்றும், அடியார்க்குநல்லார் உரை வரைந் திருப்பதனாலும் கீழைநாடுகளிலும் இயற்கை யாக அகில் விளைந்தமை அறியப்படும்.

அகில்வகை *agil-vagai*, பெ. (n.) *அருமணவன், தக்கோலி, கிடாரவன், காரகில் முதலிய அகில் வகைகள்*; different varieties of eagle-wood, the chief of them being *arumaṇavaṉ*, *takkōli*, *kiḍāravaṉ*, *and kāragil*. 'அருமணவன், தக்கோலி, கிடாரவன், காரகிலென்று சொல்லப்பட்ட பலவகைத்தாய தொகுதியும்' (சிலப். **14 : 108**, அடியார்க். உரை).

'அருமணம்' என்பது கீழைக்கடல் தீவுகளுள் ஒன்று. அங்கிருந்து வந்தது அருமணவன்.

'கிடாரவன்' என்பது கடாரத்தினின்று வந்ததுபோலும்! 'கடாரம்' என்பது காழகம் (Burma) அல்லது சுமதுரை (Sumatra).

''புகைக்கினுங் காரகில் பொல்லாங்கு கமழாது'' என்று நறுந்தொகை (26) பாடுவதால், காரகில் தலைசிறந்ததா யிருந்திருக்கலாம்.

அகில்விறகு *agil-viṟagu*, பெ. (n.) *பண்டைநாட் செல்வமகளிர் கூதிர்காலத்தில் குளிர்காய நெருப்பெரிக்கும் அகிற்கட்டை*; blocks of eagle-wood used in olden days by women of noble families as fuel for kindling fire, to warm themselves during winter.

''முகிறோய் மாடத் தகிறரு விறகின்
மடவரன் மகளிர் தடவுநெருப் பமர்ந்து
நறுஞ்சாந் தகலத்து நம்பியர் தம்மொடு
குறுங்க ணடைக்குங் கூதிர்க் காலையும்''
(சிலப். **14 : 98-101**).

அகிலங்கட்டை *agilaṅ-kaṭṭai*, பெ. (n.) *அகிற் கட்டை* பார்க்க; see *agiṟ-kaṭṭai*.

[*அகில் + அம் + கட்டை.*]

அகிலுறுப்பு *agil-uṟuppu*, பெ. (n.) *ஒரு கலவைப் புகைப்பொருளின் ஆறுறுப்புகளுள் ஒன்றான அகில்*; eagle-wood as one of the six ingredients of a mixed fragrant fumigant.

[*அகில் + உறுப்பு.*]

அயிர், தேன், பிசின், பச்சிலை, சந்தனம், அகில் என்பன அவ் வாறுறுப்புகள். The six ingredients are sugar-candy, honey, resin, patchouli, sandal and eagle-wood. "நேர்கட்டி செந்தே னிரியாசம் பச்சிலை ஆர மகிலு றுப்போ டாறு" (சிலப். 5 : 14, அடியார்க். உரை).

இவற்றுள் அயிரும் அகிலும் முதன்மை யானவை. அவ் விரண்டினாலுமே ஒரு புகைக் கலவை அமைந்திருக்கலாம்.

"குடதிசை மருங்கின் வெள்ளயிர் தன்னொடு
குணதிசை மருங்கிற் காரகி றுறந்து"
(சிலப். 4 : 35-6),

"இருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்ப"
(நெடுநல். 56).

அகிற்கட்டை *agir-kaṭṭai*, பெ. (n.) **அகில்மரக் கட்டை**; block of eagle-wood.

[அகில் + கட்டை.]

மறுவ. அகிலங்கட்டை, அகிற்குறடு.

அகிற்குடம் *agir-kuḍam*, பெ. (n.) **அகில் புகைக்குங் கலம்**; vessel meant for burning agar incense. "அகிற்குடம் பரப்பி" (சீவக. 2391).

[அகில் + குடம்.]

அகிற்குறடு *agir-kuraḍu*, பெ. (n.) 1. **அகிற் கட்டையால் செய்யப்பட்ட பாதக்குறடு**; slipper made of eagle-wood. 2. அகிற்கட்டை பார்க்க; see *agir-kaṭṭai*.

[அகில் + குறடு.]

அகிற்கூட்டு *agir-kūṭṭu*, பெ. (n.) **அகில், கற்பூரம், காசுக்கட்டி, தேன், ஏலம் முதலியன சேர்ந்த நறுமணக் கலவை**; a fragrant mixture of agar, camphor, catechu, honey, cardamom and other spices.

[அகில் + கூட்டு.]

"உந்துசந் தனங்கர்ப் பூர முடனெரி காசு செந்தே
னந்தவே லங்க ளென்ப வகிற்கூட்டு"

(சூடா. 12 : 36) என்பதில், அகில் விட்டுப் போயிருத்தல் வேண்டும்; அல்லது சந்தனத்தை அகிலாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

அகிற்சாந்தம் *agir-cāndam*, பெ. (n.) **காரகிற் கட்டையை நீர் தோய்த்து உரசியமைத்த சந்தனம் போன்ற தேய்வை அல்லது திண் குழம்பு**; eagle-wood made into paste. "காழகிற் சாந்தம்" (சிலப். 13 : 115).

[அகில் + சாந்தம்.]

மறுவ. அகினெய்

அகிற்புகை *agir-pugai*, பெ. (n.) **அகிற் கட்டையை யெரிப்பதால் எழும் நறும்புகை**; fragrant fumes of burning eagle-wood.

[அகில் + புகை.]

அகினெய் *aginey*, பெ. (n.) **அகிற்சாந்தம்** பார்க்க; see *agir-cāndam*.

[அகில் + நெய்.]

அகீர்த்தி *agirtti*, பெ. (n.) **கீர்த்தியின்மை, அவமானம்**; ill-fame, disgrace.

[அ + கீர்த்தி. 'அ' எதிர்மறை முன்னொட்டு.]

கீர்த்தி பார்க்க; see *kirtti*.

அகுட்டம் *aguṭṭam*, பெ. (n.) **மிளகு** (வின்.); black pepper.

அகுடம் *aguḍam*, பெ. (n.) **கடுகுரோகிணி** (மலை.); black hellebore.

அகுணியகில் *aguṇi-y-agil*, பெ. (n.) **செம்பில்** (L.); cup-calyxed white cedar.

அகுதை[1] *agudai*, பெ. (n.) **சோழனொருவன் மகள்**; name of the daughter of a *Cōla* king.

அஃதை பார்க்க; see *akdai*.

அகுதை[2] *agudai*, பெ. (n.) **ஒரு கொடையாளி**; a philanthropist. "மணநாறு மார்பின் மறப்போ ரகுதை" (புறநா. 347 : 5). இவன் பெயர் அஃதை என்றும் எழுதப்படும்.

அகும்பை *agumbai*, பெ. (n.) **கவிழ்தும்பை** (மலை.); species of *Trichodesma*.

அகுல் *agul*, பெ. (n.) **அடுப்பு**; oven.

[ஒருகா. அழல் → அகல் → அகுல்.]

அகுலாதிகம் *agulādigam*, பெ. (n.) **கரிசலாங் கண்ணி** (சித்.அக.); a medicinal plant, usually found in marshy places.

அகுலி *aguli*, பெ. (n.) **நறுவிலி** (மலை.); sebestan species and its varieties. **நறுவிலி** பார்க்க; see *naruvili*.

Note: The correct spelling is நறுவிழி, but colloquially it is நறுவிலி. பின் வருவன நறுவிலியின் வகைகள் (The following are the different species) :

சிறு நறுவிலி — *Cordia myxa.*
பெரு நறுவிலி — a variety bearing large fruits-*Cordia obliqua.*
நாய் நறுவிலி — *Cordia monoica.*
பொன் நறுவிலி — *Cordia sebestena* (speciosa).
நாறு நறுவிலி — *Eugenia jambolana (caryophyllifolia).*
அச்சி நறுவிலி — *Cordia sebestena.*

அகுலோதிகம் *agulōdigam,* பெ. (n.) கருங் கொடுவேலி (சித்.அக.); a black variety of Ceylon leadwort.

அகுவைக்கட்டி *aguvai-k-katti,* பெ. (n.) அரையாப்பு (சங்.அக.); venereal tumour in the groin.

அகுளுதி *aguḷudi,* பெ. (n.) **வேப்பமரம்**; margosa tree, *Azadirachta indica.*

அகுளூதி *aguḷūdi,* பெ. (n.) **அகுளுதி** பார்க்க; see *aguḷudi.*

அகுளை *aguḷai,* பெ. (n.) **கல்லடிச் சேம்பு** (சித்.அக.); an inferior variety of *šēmbu.*

அகுன்றி *aguṉṟi,* பெ. (n.) **இசைக்கருவிவகை** (அக.நி.); a kind of musical instrument.

அகை[1]-தல் *agai-,* 2 செ.கு.வி. (v.i.) *1.* **தளிர்த் தல்**; to sprout. ''கொய்குழை யகைகாஞ்சி'' (கலித். 74 : 5). 2. **செழித்தல்**; to thrive, flourish, grow well, as vegetation. ''கயமகைய வயனிறைக்கும்'' (மதுரைக். 92). *3.* **மலர்தல்**; to blossom, to expand. ''அகைமத்தத் தளி வர்க்கத் தளகக்கொத் தினரே'' (தக்க யாகப். 98).

ம. அக; **க.** அகெ; **தெ., கூ.** ஆகு; **து.** அத்தெ; **குட.** அகெ; **கோண்.** ஆதீ; **கொலா.** எத்; **குரு.** அகரார்ன.

[உல் → உல்லரி = தளிர். உல் → உல → உலவை = பசுந்தழை. உல் → உள் → உழு → உகு → உகை → அகை. ஒ.நோ: நுல் → நுள் → நுழு → நுழை → நுழாய் = இளம்பாக்கு. நுழு → நுகு → நுகும்பு = பனங்குருத்து. முல் → முள் → முழு → முகு → முகை = அரும்பு.]

அகை[2]-தல் *agai-,* 2 செ.கு.வி. (v.i.) *1.* **எரிதல்**; to burn. ''அகையெரி யானாது'' (கலித். 139 : 26). 2. **வருந்துதல்**; to suffer. ''அகையே லமர்தோழி'' (சீவக. 1524).

[அழல் → அழு → அகு → அகை. அழல் = நெருப்பு.]

அகை[3]-தல் *agai-,* 2 செ.கு.வி. (v.i.) *1.* **ஒடிதல்**; to be broken, crumpled. ''அகைந்த வித்துணை மலரெனக் கருளுதியென்றாள்'' (பாரத. புட்ப யாத். 40). 2. **காலந்தாழ்த்தல்**; to delay. ''அகையா தெனதாவி தழைக்குமென'' (சீவக. 1379).

[அக்கு → அகு → அகை. அக்கு = துண்டு. அகை = துண்டாதல், ஒடிதல், காலந்தாழ்த்தல்.]

அகை[4]-தல் *agai-,* 2 செ.கு.வி. (v.i.) **செல்லுதல்**; to go forth, proceed.

[உகை → அகை.]

அகை[1]-த்தல் *agai-,* 2 பொ.வி. (com. v.) *1.* **தளிர்த்தல், கிளைத்தல்**; to sprout. ''குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த'' (புறநா. 159 : 9). 2. **மலர்த்துதல்**; to spread or expand by force. அகைத்தல் - வலிய மலர்த்தலுமாம் (தக்க யாகப். 98).

[உகு → உகை → அகை. அகை = தளிர்த்தல்.]

அகை[2]-த்தல் *agai-,* 4 செ.குன்றாவி. (v.t.) **வருத்துதல், துன்புறுத்துதல்** (சூடா.); to trouble, oppress.

[அழல் → அழு → அகு → அகை. அழல் = மனம் எரிதல், வருந்துதல்.]

அகை[3]-த்தல் *agai-,* 2 செ.கு.வி. (v.i.) **விட்டு விட்டுச் செல்லுதல்** (தொல். பொருள். செய். 229, பேரா. உரை); to quit, desert, leave behind. —, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* **ஒடித் தல், முறித்தல்**; to break. ''உம்பலகைத்த வொண்முறி யாவும்'' (மலைபடு. 429). 2. **அடித்தல்** (பிங்.); to beat. 3. **அறுத்தல்**; to cut into pieces. ''மயிருக்கொன் றாகவாங்கி யகைத்தகைத் திடுவர்'' (சீவக. 2766).

[அக்கு → அகு → அகை. அக்கு = துண்டு. அகைத்தல் = துண்டாக்குதல், ஒடித்தல், முறித் தல், அறுத்தல்.]

அகை[4]-த்தல் *agai-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1.* **செலுத்துதல்** (சூடா.); to drive, cause to go, send forth. 2. **இழுத்தல்** (பொதி.நி.); to draw towards.

[உகைதல் = செல்லுதல். உகைத்தல் = செலுத்துதல். உகை → அகை.]

ag (ak), to drive, urge, conduct.

Gk. *agein,* ago; **L.** *ag-ere,* to drive; **Icel.** *ak-a* (pt. t. *ōk*), to drive; **Skt.** *aj,* to drive— (S.E.D.E.L.).

மேலையாரியச் சொற்களின் மெய், தமிழை யொத்து மிடற்றொலியாய் (guttural) இருப்பதும் சமற்கிருதத்தில் அஃது அண்ணவொலியாய்த் (palatal) திரிந்திருப்பதும் கவனிக்கத் தக்கது. ககரச் சொல்லே மூல அல்லது திருந்திய வடிவம்.

அகை[5]-த்தல் *agai-*, 2 செ.கு.வி. (v.i.) எழுதல் (சூடா.); to rise. —, 4 செ.குன்றாவி. (v.t.) **உயர்த்துதல்** (சூடா.); to raise.

[உக → உகை → அகை. உகத்தல் = உயர்தல்.]

அகைப்பு[1] *agaippu*, பெ. (n.) **வருத்தம், முயற்சி, மனத்திட்பம், அதன் விளைவு**; suffering, effort, result of effort, effect of will. "அண்டந் திருமா லகைப்பு" (திவ். இயற். 4 : 37).

[அழு → அழல் = நெருப்பு, எரிவு. அழலு தல் = எரிதல், பொறாமை கொள்ளுதல். அழு → அழுங்கு. அழுங்குதல் = வருந்துதல், துன்புறு தல். அழுங்கு → அழுக்கு = பொறாமை. அழு → அகு → அகை. அகைதல் = எரிதல்.]

அகைப்பு[2] *agaippu*, பெ. (n.) **இடையிடை விட்டு விட்டுச் செல்லுகை**; movements with breaks for stopping. "அகைப்பு வண்ணம்" (தொல். பொருள். செய். 221).

[உகை → அகை → அகைப்பு.]

அகைப்பு[3] *agaippu*, பெ. (n.) 1. **எழுச்சி**; rising, elevation. 2. **மதிப்பு**; esteem. "அகைப்பில் மனிசரை" (திவ். இயற். 4 : 38).

[உகத்தல் = உயர்தல். உக → உகை. உகைத்தல் = எழுதல், உயரக் குதித்தல், எழும்பு தல். உகை → அகை.]

அகைப்புவண்ணம் *agaippu-vaṇṇam*, பெ. (n.) (யாப்.) **ஒருவழி நெடிலும் ஒருவழிக் குறிலும் பயின்று விட்டு விட்டுச் செல்லும் ஓசைவகை**; (Pros.) rhythm produced by varying groups of syllables, alternating between long and short. "அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும்" (தொல். பொருள். செய். 221).

[அக்கு = துண்டு, கூறு. அக்கு → அகு → அகை. அகைத்தல் = கூறுபடுத்துதல், அறுத்தல், அறுத்தறுத்து அல்லது விட்டு விட்டுச் செல்லு தல். அகை = கூறுபாடு.]

அகைமம் *agaimam*, பெ. (n.) 1. **புல்லுருவி** (பச்.மூ); honey-suckle, mistletoe. 2. **கருந்தாளி மரம்** (சித்.அக.); a tree, *Diospyros ebenum*.

அகையாறு *agai-y-āṟu*, பெ. (n.) **கிளையாறு**; river branch. 'இவ்வூர் அகையாறும் ஆக இறையிலி' (S.I.I. ii, 56).

[அகை + ஆறு.]

அகைவாய்க்கால் *agai-vāykkāl*, பெ. (n.) **கிளை வாய்க்கால்** (S.I.I. iii, 171); subsidiary canal.

[அகை + வாய்க்கால். அகை = கிளை.]

அகோரி *agōri*, பெ. (n.) **மோதிரக்கண்ணிச்செடி**; species of *Hugonia* (L.).

அகோரை *agōrai*, பெ. (n.) **இரண்டரை நாழிகைக் கால அளவு** (வின்.); hour, a measure of time.

அகோவனம் *agōvaṉam*, பெ. (n.) **தரிசு**; waste land. 'இத்தேவர் பழந்தேவதானத்தில்அகோவனமாகக் கிடந்த திடலை' (S.I.I. vii, 309).

அங்கங்கு *aṅgaṅgu*, சு.வி.எ. (demons. adv.) **அந்தந்த இடத்தில்**; here and there, at different places. 'அங்கங்கு குறுணி அளந்துகொட்டிக் கிடக்கிறது' (பழ.).

[அங்கு + அங்கு.]

அங்கங்கே *aṅgaṅgē*, சு.வி.எ. (demons. adv.) அங்கங்கு பார்க்க; see *aṅgaṅgu*. "அங்கங்கே கலைகள் தேறும் அறிவன்போல் இயங்கும்" (திருவிளை. தருமிக்கு. 19).

[அங்கு + அங்கு + ஏ.]

அங்கடத்தன் *aṅgaḍattaṉ*, பெ. (n.) **பாசிப்பயறு**; green gram, *Phaseolus mungo* (சா.அக.).

அங்கடியிங்கடி *aṅgaḍi-y-iṅgaḍi*, சு.வி.எ. (demons. adv.) **அங்குமிங்கும்** (நாஞ்.); here and there (Nāñ.). அங்கிடியிங்கிடி (கொ.வ.).

[அங்கு + இடை + இங்கு + இடை.]

அங்கண்[1] *aṅgaṇ*, சு.வி.எ. (demons. adv.) **அவ்விடம்**; there. "அங்க ணுற்றிலர்" (கந்தபு. சூரன்தண்டஞ். 29).

[அங்கு + அண்.]

அங்கண்[2] *aṅgaṇ*, பெ. (n.) 1. **அழகிய கண்**; beautiful eye. 2. **கண்ணோட்டம்**; kindness, favouritism. "அங்க ணுடைய னவன்" (கலித். 37 : 22).

[அம் + கண் — அங்கண். அம் = அழகிய, பொருந்திய, அன்பான.]



அச்சாணி

வயலெலி



காட்டெலி



அச்சிருங்கி



அச்சுப்பலகை

அங்கண்[3] *angaṇ*, பெ. (n.) ***அழகிய இடம்***; beautiful spot. ''அங்கண் விசும்பி னகனிலா'' (நாலடி. 151).

[அம் + கண் – அங்கண். அம் = அழகிய, கண் = இடம்.]

அங்கண்ணன் *angaṇṇaṉ*, பெ. (n.) 1. ***அழகிய கண்ணுடையவன்***; one with beautiful eyes. 2. ***மிகுந்த ஆர்வமுள்ளவன்***; one who is very affectionate. ''அங்கண்ண னுண்டவென் னாருயிர்க் கோதிது'' (திவ். திருவாய். 9.6 : 6). 3. ***சிவன்***; Śiva.

[அம் + கண் + அன் – அங்கண்ணன்.]

அங்கணம்[1] *aṅgaṇam*, பெ. (n.) 1. ***சாய்கடை (சலதாரை)***; drain, ditch, sewer. ''ஊரங் கண நீர் உரவுநீர் சேர்ந்தக்கால்'' (நாலடி. 175). 2. ***சாய்கடை யொட்டிய உள்முற்றம்***; inner courtyard in a house. 3. ***சேறு*** (பிங்.); mud. 4. ***கட்டடப் பிரிவு*** (இராட்.); division of a building chamber, room (R.). 5. ***இரு தூண்களுக் கிடைப்பட்ட இடம்*** (இராட்.); space between two pillars (R.). க. அங்கண. 6. ***நான்கு தூண்களுக்கிடைப்பட்ட இடம்*** (C.G.); space enclosed by four pillars. 7. ***மனைக்குரிய 72 சதுர அடி நிலப்பரப்பளவு*** (C.G.); superficial measure for house sites, about 12 ft. long by 6 ft. broad. **தெ.** அங்கணமு. 8. ***இடம்*** (திருநூற். 18, உரை); space, place. **ம.** அங்கணம்.

ம. அங்கணம்; **க., து., வ., பிராகி., மரா.** அங்கண; **தெ.** அங்கணமு; **குவி.** அங்கணி; **பா.** அங்கணம்; **குச்.** ஆங்குணம்; **இந்.** அங்கண், ஆங்கண்.

[வங்கு → அங்கு. அங்குதல் = சாய்தல், வளைதல். அங்கு + அணம் – அங்கணம். கழிநீர் செல்லும் சாய்கடை, வாட்டஞ்சாய்வா யிருப்பதால் அங்கணம் எனப்பட்டது.]

அங்கணம்[2] *aṅgaṇam*, பெ. (n.) 1. ***கடுக்காய்*** (வை.மூ.); chebulic myrobalan. 2. ***வெள்ளெருக்கு***; white madar, l. sh., *Calotropis gigantea-albiflora.*

அங்கணம்[3] *aṅgaṇam*, பெ.(n.) ***ஒரு கனியநஞ்சு*** (மிருத பாடாணம்) (மூ.அ.); a mineral poison.

மறுவ. அங்கவன்

அங்கணன் *aṅgaṇaṉ*, பெ. (n.) 1. ***கண்ணழகன்***; one who has beautiful eyes. ''அங்கணனுக் குரியார்'' (கம்பரா. பால. கடிமண. 96). 2. ***அருளாளன், அருட்பார்வையன்***; one who has gracious eyes. ''அழக னங்கணன்'' (கம்பரா. அயோத். சித்திர. 1). 3. ***சிவன்***; Śiva, as gracious-eyed. ''அங்கணனே யருளாய்'' (தேவா. 7.25 : 4).

அங்கணாளன் *aṅgaṇāḷaṉ*, பெ. (n.) 1. ***கண்ணோட்ட முடையவன்***; gracious person, as one who looks with favour. ''அறனறிந் தொழுகு மங்கணாளனை'' (கலித். 144 : 70). 2. ***சிவபெருமான்***; Lord Śiva. ''கைக்கொண்ட அங்கணாளன் றிருவுருவம்'' (காஞ்சிப்பு. சிவபுண். 33).

[அங்கண் + ஆளன் – அங்கணாளன்.]

அங்கணி[1] *aṅgaṇi*, பெ. (n.) ***சிவை (மலைமகள்)*** (சங்.அக.); *Malaimagaḷ* (Pārvati), as gracious-eyed.

அங்கணி[2] *aṅgaṇi*, பெ. (n.) ***கற்றாழை*** (மலை.); aloe.

Skt. aṅganā

அங்கணிதம்பூண்டு *aṅgaṇidam-pūṇḍu*, பெ. (n.) ***பருத்தி***; cotton plant, *Gossypium arboreum* (சா.அக.).

அங்கணேல்-தல் *aṅgaṇ-ēl-*, (9) செ.கு.வி. (v.i.) ***துயிலுணர்தல் (தூக்கத்தினின்று விழித்தல்)***; to awake. ''தேவியை......... அங்க ணேற்றபிற் காணாது'' (பெருங். வத்தவ. 7 : 92).

[அங்கண் + ஏல் – அங்கணேல்.]

அங்கத்தவர் *aṅgattavar*, பெ. (n.) ***அவ்விடத்தி லுள்ளவர்***; the inhabitants of that place as opposed to 'this place'. அங்கத்தவரானால் என்ன, இங்கத்தவரானால் என்ன? (உ.வ.).

[அங்கு + அத்து + அவர்.]

அங்கத்து *aṅgattu*, பெ.எ. (adj.) ***அவ்விடத்து***; of that place.

[அங்கு + அத்து. 'அத்து' இடப்பொருட் சாரியை.]

அங்கதச்செய்யுள் *aṅgada-c-ceyyuḷ*, பெ. (n.) ***வசைப்பாட்டு, அங்கதப்பாட்டு***; satire, lampoon.

''வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்''
(தொல். பொருள். செய். 125).

[அங்கதம் + செய்யுள்.]

அங்கதப்பாட்டு *aṅgada-p-pāṭṭu*, பெ. (n.) **அங்கதச் செய்யுள்** பார்க்க; see *aṅgada-c-ceyyuḷ*. ''அங்கதப் பாட்டவற் றளவோ டொக்கும்'' (தொல். பொருள். செய். 152).

[அங்கதம் + பாட்டு.]

அங்கதம்[1] *aṅgadam*, பெ. (n.) *1.* **வசை, பழிப்பு**; abuse. 'அங்கத மென்பது வசை' (தொல். பொருள். செய். 124, பேரா. உரை). *2.* **அங்கதச் செய்யுள்** பார்க்க; see *aṅgada-c-ceyyuḷ*. *3.* **பொய்** (அக. நி.); falsehood.

''அங்கதந் தானே அரில்தபத் தெரியின்
செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே''
(தொல். பொருள். செய். 120).

''செம்பொரு ளாயின் வசையெனப் படுமே''
(தொல். பொருள். செய். 121).

''மொழிகரந்து சொலினது பழிகரப் பாகும்''
(தொல். பொருள். செய். 122).

அங்கதம்[2] *aṅgadam*, பெ. (n.) **தோட்கடகம், வாகுவளையம்**; bracelet worn on the upper arm.

''புயவரை மிசை .... அங்கதம்''
(திருவிளை. மாணிக். 12).

ம. அங்கதம்; **க., வ.** அங்கத; **தெ.** அங்கதமு.

[அங்குதல் = வளைதல். அங்கு → அங்கதம் = வளையல், கடகம்.]

அங்கதம்[3] *aṅgadam*, பெ. (n.) *1.* **யானையின் உணவு**; food of elephants. ''போந்த பிடியினமு மங்கதங் கிட்டாம லறமெலிந்து'' (பஞ்ச. திருமுக. 158).

அங்கதம்[4] *aṅgadam*, பெ. (n.) *1.* **மார்பு** (அக. நி.); breast. *2.* (**மார்பினால் ஊர்ந்து செல்லும்**) **பாம்பு**; snake. ''அங்கத மொக்குஞ் சில'' (இரகு. யாகப். 71).

அங்கதர் *aṅgadar*, பெ. (n.) **வசைகூறுவோர்**; those who use abusive language, revilers. ''பொலா வங்கதர்க் கெளியே னலேன்'' (தேவா. 3.297:10).

அங்கப்பால் *aṅga-p-pāl*, பெ. (n.) **தாய்ப்பால் (முலைப்பால்)**; mother's milk. ''அங்கப்பா லுண்ணாமல் தேகம் உதித்தீரோ'' (பெண்மதி மாலை, 30).

அங்கபடி *aṅga-paḍi*, பெ. (n.) **ஏறுமிதி, அடிதாங்கி**; stirrup (W.). 'அங்கவடி' என்றும் கூறப்படும்.

க. அங்கவடி; **தெ.** அங்கவணெ; **து.** அங்கோலெ.

அங்கபறைநாதி *aṅga-paṟai-nādi*, பெ. (n.) **இலவங்கப்பட்டை**; cinnamon bark, *Cinnamomum zeylanicum* (சா.அக.).

அங்கபாதி *aṅga-pādi*, பெ. (n.) **முடக்கொற்றான்**; balloon-vine, s. cl., *Cardiospermum halicacabum* (சா.அக.).

அங்கம்[1] *aṅgam*, பெ. (n.) **கொன்றை** (பச்.மூ.); Indian laburnum.

அங்கம்[2] *aṅgam*, பெ. (n.) **வரிவகை** (T.A.S. iii, 266); a petty cess.

அங்கம்[3] *aṅgam*, பெ. (n.) **கட்டில்**; couch, bedstead, cot. ''அணையங்க மீதே'' (திருப்பு. 128).

அங்கம்[4] *aṅgam*, பெ. (n.) **வெட்டுகை** (பொதி. நி.); cutting, chopping.

அங்கம்[5] *aṅgam*, பெ. (n.) *1.* **பாடலிபுத்திரத் திற்குக் கிழக்கில் உள்ள ஒரு பழைய நாடு**; an ancient country which lay east of Pāṭaliputra, modern Patna. ''அங்கநாடிதுவும்'' (கம்பரா. பால. தாடகை. 2). *2.* **அந் நாட்டு மொழி** (திவா.); language of that country.

சிவபெருமானால் எரிக்கப்பட்ட காமனின் உடம்பு (அங்கம்) வீழ்ந்த இடத்தைத் தன்னுட் கொண்டதனால், அங்கநாடெனப்பட்ட தென்பது, பிற்காலக் கட்டுக்கதையாகும்.

அங்கம்[6] *aṅgam*, பெ. (n.) **கோளக நஞ்சு** (பாடாணம்) (மூ.அ.); a mineral poison.

அங்கம்மா *aṅgammā*, பெ. (n.) **அங்காளம்மை, காளியின் ஒரு வடிவம்**; name of a form of *Kāḷi*.

ம. அங்கம்ம; **க., தெ.** அங்கம்மா, அங்களம்ம.

[அம் + காளி + அம்மை – அங்காளியம்மை → அங்காளியம்மா → அங்காளம்மா → அங்கம்மா.]

அங்கமண் *aṅga-maṇ*, பெ. (n.) **அழமண்**; fuller's earth (சா.அக.).

அங்கமணி *aṅga-maṇi*, பெ. (n.) **மணப்பெண் கணவன் வீட்டிற்குத் தன்னுடன் கொண்டு செல்லும் சீர்வரிசை**; dowry in the form of jewels, clothes, furniture, vessels, etc., which a married girl takes with her to her new home. ''இதுக்கு அங்கமணி செய்யலாவதே'' (திவ். திருமாலை, 37, வியா.).

க. அங்கமணி

அங்கமணிக்கூடை *aṅga-maṇi-k-kūḍai*, பெ. (n.) ***மணப்பெண்ணிற்குக் கூடையில் வைத்துக் கொடுக்கும் வரிசை*** (இராட்.); a basket of presents to a bride (R.).

[அங்கமணி + கூடை.]

அங்கமணிப்பணம் *aṅga-maṇi-p-paṇam*, பெ. (n.) ***சீர்வரிசைப் பணம்*** (S.I.I. vi, 152); dowry money.

[அங்கமணி + பணம்.]

அங்கயற்கண்ணி *aṅgayaṟ-kaṇṇi*, பெ. (n.) ***மதுரையிற் கோயில்கொண்டிருக்கும் மீனக் கண்ணி (மீனாட்சி)யம்மை***; *Mīnākṣi*, Goddess of the Madurai temple. "அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த வாலவாய்" (தேவா. *3.378 : 1*).

[அம் + கயல் + கண்ணி.]

அங்கர் *aṅgar*, பெ. (n.) ***அங்கநாட்டார்***; inhabitants of Aṅgadēša. "அங்கர் மாகத ராரியர்" (திருவிளை. திருமண. 74).

அங்கர்கோமான் *aṅgar-kōmāṉ*, பெ. (n.) ***அங்க நாட்டரசனான கன்னன்*** (சூடா.); Karṇa, king of Aṅgadēša.

அங்கரமாதி *aṅgaramādi*, பெ. (n.) ***ஒருவகைச் செய்நஞ்சு (கௌரி பாடாணம்)*** (இராட்.); a processed arsenic (R.).

அங்கரமோதகி *aṅgara-mōdagi*, பெ. (n.) ***கரு நாரத்தை*** (சித்.அக.); a species of *nārattai*.

அங்கரவல்லி *aṅgaravalli*, பெ. (n.) ***பெருங் குறிஞ்சா*** (சித்.அக.); a species of scammony swallow-wort.

அங்கராயர் *aṅgarāyar*, பெ. (n.) ***கள்ளர்குலப் பட்டப்பெயர்களுள் ஒன்று*** (கள்ளர் சரித். பக். *145*); a title of Kaḷḷars.

அங்கலாப்பு *angalāppu*, பெ. (n.) ***அங்கலாய்ப்பு*** பார்க்க; see *angalāyppu*.

அங்கலாய்-த்தல் *aṅgalāy-*, 4 செ.கு.வி. (v.i.) 1. ***துயருறுதல்***; to lament, grieve, sorrow. "அங்கலாய்ப் பாளே" (இராமநா. ஆரணிய. பக். *187*). 2. ***பொறாமை கொள்ளுதல்***; to be envious, jealous. 'ஆடுமறித்தவன் செய் வினையுமா, அங்கலாய்த்தவன் செய் வினை யுமா?' (பழ.). —, 4 செ.குன்றாவி. (v.t.) ***வெஃகுதல் (இச்சித்தல்)***; to covet (W.).

[அகம் + கலாய் — அங்கலாய். அகம் = மனம். கலாய்த்தல் = கலகித்தல், கலங்குதல்.]

அங்கலாய்ப்பு *aṅgalāyppu*, பெ. (n.) 1. ***கலக்கம்***; disquiet, mental worry. 2. ***அருவருப்புக் கொள்கை***; becoming disgusted. 3. ***பேராவல்*** (யாழ்.அக.); yearning. 4. ***பேராசை*** (சங்.அக.); greed.

ம. அங்கலாய்க்க; **க., து.** அங்கலாப்பு; **தெ.** அங்கலார்ச்சு.

[அகம் + கலாய் — அகங்கலாய் → அங்கலாய். அகம் = மனம். கலாய்த்தல் = கலகித்தல், கலங்குதல்.]

அங்கலி *aṅgali*, பெ. (n.) ***கொங்கை*** (சித்.அக.); breast.

அங்கவடி *aṅgavaḍi*, பெ. (n.) 1. ***அங்கபடி*** பார்க்க; see *aṅga-paḍi*. 2. ***பாலூட்டியின் காதிலுள்ள அங்கவடி போன்ற சிற்றெலும்பு***; stirrup-bone.

அங்கவம் *aṅgavam*, பெ. (n.) ***பழவற்றல்***; dried fruit (சா.அக.).

அங்கவன் *aṅgavaṉ*, பெ. (n.) ***ஒரு கனிய நஞ்சு*** (வை.மு.); a mineral poison.

மறுவ. அங்கணன்

அங்கனம்[1] *aṅgaṉam*, வி.எ. (adv.) ***அப்படி, அங்ஙன்***; so, in that manner, thus.

[ஆங்கனம் → அங்கனம்.]

அங்கனம்[2] *aṅgaṉam*, பெ. (n.) ***அங்கணம்***[2] பார்க்க; see *aṅgaṇam*[2].

அங்கனி *aṅgaṉi*, பெ. (n.) ***கற்றாழை*** (மலை.); aloe. ***அங்கணி***[2] பார்க்க; see *aṅgaṇi*[2].

Skt. aṅganā

அங்கா-த்தல் *aṅgā-*, 3 செ.கு.வி. (v.i.) ***வாய் திறத்தல்***; to open the mouth. "அஆ ஆயிரண் டங்காந் தியலும்" (தொல். எழுத்து. பிறப். 3).

து. அங்காவுனி; **குட.** அங்காவ்; **கூ.** அங் கலங்க; **குவி.** அங்கலசலி; **பர்.** அஙால்ப்; **மா.** அங்கலெ; **கொலா.** அங்கசி; **குரு.** அங்கல்; **கோண்.** அங்ஙல்; **மண்.** அங்லா; **மங்.** அங்கை.

[ஆ → அங்கா. 'ஆ' வாய்திறத்தல் ஒலிக் குறிப்பு.]

அங்கா *aṅgā*, பெ. (n.) 1. ***வாய்திறப்பு***; opening the mouth. "அங்கா முயற்சி" (நன். *86*). 2. ***கொட்டாவி***; yawn.

அங்காடி *aṅgāḍi*, பெ. (n.) 1. ***கடை, கடைத் தெரு***; bazaar, bazaar street. "அரசுவிழை திருவி னங்காடி வீதியும்" (சிலப். *14 : 179*).

2. **நாட்சந்தை**; daily market. 'அங்காடி மேயும் பழங்கன்று ஏறாதலும் உண்டு' (பழ.). 'அங் காடி விலையால் எங்கோடிப் போனாளோ!' (பழ.). 'அங்காடி விலையை (கூடையை) அதிர அடிக்காதே' (பழ.). 'அங்காடிக்காரியைச் சங்கீதம் பாடச் சொன்னால் வெங்காயம் கறிவேப்பிலை என்பாள்' (பழ.).

ம. அங்ஙாடி; **க., தெ., கோத.** அங்காடி; **து., இரு.** அங்கடி, அங்காடி; **துட.** ஒதொடி; **கொலா.** அங்கடி; **நா.** அங்காறி; **பர்.** அங் கொட்; **சிங்.** அங்கணிய.

[அம்முதல் (தெ.) = விற்றல். கடை = இடம். கடை → கடி → காடி என்று திரிந்திருக்கலாம். அம் + காடி – அங்காடி.]

பண்டைத் தமிழக மாநகர்களில், சிறப்பாக வேந்தர் தலைநகர்களில், நாள்தொறும் பகலிலும் மாலையிலும் பல பண்டங்களும் விற்கும் அங்காடிச் சந்தைகள் நடைபெற்று வந்திருக்கின்றன. பகற்சந்தை 'நாளங்காடி' யென்றும், மாலைச் சந்தை 'அல்லங்காடி' யென்றும் பெயர் பெற்றிருந்திருக்கின்றன.

''நடுக்கின்றி நிலைஇய நாளங் காடியில்'' (சிலப். 5 : 63).

'அல்லங்காடியு முண்டாதலின், இதனை நாளங்காடி யென்றார்' (அடியார்க். உரை).

''அல்லங் காடி யழிதரு கம்பலை'' (மதுரைக். 544).

'நாளங்காடி அல்லங்காடி யாகிய இரண்டு கூற்றையுடைத் தென்றார்' (மதுரைக். 365, நச். உரை).

'அம்முதல்' என்னும் வினைச்சொல் இற்றைத் தமிழகத்தில் வழங்காவிடினும், குமரிநாட்டில் வழங்கியிருத்தல் வேண்டும்.

அம்முதல் = பொருந்துதல், ஒத்தல், ஒத்த மதிப்புள்ள பொருளுக்கு மாறுதல்.

அங்காடிக்கூலி *aṅgāḍi-k-kūli*, பெ. (n.) **கடை வரி** (I.M.P. Tj. 119); tax collected from stalls put up in the bazaar.

[அங்காடி + கூலி.]

அங்காடிகூறு-தல் *aṅgāḍi-kūṟu-*, 5 செ.கு.வி. (v.i.) **பண்டங்களை விற்குமாறு பெயர் சொல்லிக் கூவுதல்** (இராட்.); to cry out the names of goods for sale in order to attract buyers (R.).

அங்காடிப்பண்டம் *aṅgāḍi-p-paṇḍam*, பெ. (n.) 1. **கடைச்சரக்கு**; article sold in the market. 2. **கடையில் வாங்கக்கூடிய சரக்கு**; article available in the market. 'அங்காடிப் பண்டங் கிடீர் எனக்கரிதாயிற்று' (திவ். திருநெடுந். 16, வியா.). 3. **எளிதாய்ப் பெறக்கூடியது**; that which is easily obtained.

[அங்காடி + பண்டம்.]

அங்காடிப்பாட்டம் *aṅgāḍi-p-pāṭṭam*, பெ. (n.) (கல்.) **ஒரு பழைய கடை வரி**; (Insc.) an ancient tax on stalls put up in the bazaar.

[அங்காடி + பாட்டம்.]

அங்காடிபாரி-த்தல் *aṅgāḍi-pāri-*, 4 செ.கு.வி. (v.i.) **மனவரசாளுதல் (மனோராஜ்யம் பண்ணு தல்), வானக்கோட்டை கட்டுதல்**; to build castles in the air.

அங்காத்தான் *aṅgāttāṉ*, பெ. (n.) **தான்றி** (பச்.மூ.); belleric myrobalan.

அக்காந்தி பார்க்க; see *akkāndi*.

அங்காப்பு *aṅgāppu*, பெ. (n.) 1. **வாய்திறக்கை**; opening the mouth. ''முயற்சியுள் அஆ அங்காப் புடைய'' (நன். 76). 2. **நீர்வேட்கை**; thirst. ''அங்காப் பொழிய வருணனுக்கு'' (அழகர் கலம். 68).

[ஆ → அங்கா → அங்காப்பு.]

அங்காரி *aṅgāri*, பெ. (n.) **வெண்காரம்** (மூ.அ.); borax.

அங்காலே *aṅgālē*, சு.வி.எ. (demons. adv.) **அங்கே** (யாழ்ப்.); there (J.). அங்காலே இங்காலே அலையாதே (இ.வ.).

[அங்கு + ஆல் + ஏ.]

அங்காளகை *aṅgāḷagai*, பெ. (n.) **கரும்பு** (பச்.மூ.); sugar-cane.

[அம் + காளகை. காளம் → காளகம் → காளகை. காளம் = கருமை.]

அங்காளதேவி *aṅgāḷa-dēvi*, பெ. (n.) **அங்கா ளம்மை**; a Goddess. ''அங்காள தேவியெனை யாண்டுகொண்ட சோதி'' (பஞ்ச. திருமுக. 670).

[அங்காளி + தேவி – அங்காளிதேவி → அங்காளதேவி.]

அங்காளம்மை *aṅgāḷammai*, பெ. (n.) **அங்கா ளம்மைத் தெய்வம்**; a Goddess. 'அங்கா

எம்மைத் தெய்வம் அகப்பைக்கூர் வழியாய் வரும்' (பழ.).

[அங்காளி + அம்மை – அங்காளியம்மை → அங்காளம்மை.]

தெ. அங்காளம்ம

பெண்தெய்வப் பெயர்கட்குமுன், அழகை உணர்த்தும், 'அம்' என்னும் முன்னொட்டுச் சேர்ப்பது மரபு.

ஒ.நோ : அம் + கயற்கண்ணி – அங்கயற் கண்ணி.

இம் முறையில், காளி அங்காளியெனப்பட்டாள். காளி தூய தமிழ்த் தெய்வம் என்பதும், காளி என்னும் பெயர் தூய தமிழ்ச்சொல் என்பதும் 'காளி' என்னும் உருப்படியில் விரிவாக விளக்கப்படும்.

அங்காளி *aṅgāli*, பெ. (n.) **பாலைநிலத் தெய்வமாகிய காளி**; Goddess *Kāli*, a female deity.

[அம் + காளி – அங்காளி.]

அங்கிங்கு *aṅgiṅgu*, கு.வி.எ. (adv.) **அங்கே அல்லது இங்கே**; here or there. "அங்கிங் கெனாதபடி" (தாயு. கடவுள். 1).

[அங்கு + இங்கு.]

அங்கிட்டு *aṅgiṭṭu*, கு.வி.எ. (adv.) 1. **அவ்விடம், அவ்விடத்தில்**; there, yonder. 'அங்கிட்டுப் பிறந்து' (ஈடு, 6.8 : 11). 2. **அப்பால்**; away. அங்கிட்டுப்போ (உ.வ.).

ம. அங்ஙோட்டு

[அங்கு + இட்டு.]

அங்கிட்டு இங்கிட்டு (அங்கிட்டிங்கிட்டு) *aṅgiṭṭu-iṅgiṭṭu (aṅgiṭṭiṅgiṭṭu)*, கு.வி.எ. (adv.) **அந்தப் பக்கம் அல்லது இந்தப் பக்கம்**; this side or that side. என் மகன் என்னை அங்கிட்டிங்கிட்டுப் போகவிடமாட்டான் (உ.வ.).

அங்கிடியிங்கிடி *aṅgiḍi-y-iṅgiḍi*, கு.வி.எ. (adv.) அங்கடியிங்கடி பார்க்க; see *aṅgaḍi-y-iṅgaḍi*.

அங்கிடுதத்தி *aṅgiḍu-tatti*, பெ. (n.) **நிலைகெட்டவன்** (யாழ்.அக.); a person of vagrant habits. 2. **அடிக்கடி கட்சி மாறுபவன்**; one who frequently changes his party, turn-coat.

[அங்கு + இடு + தத்தி.]

அங்கிடுதிருப்பி *aṅgiḍu-tiruppi*, பெ. (n.) **குறளை கூறுபவ-ன்-ள்**; tale-bearer. 'அங்கிடுதிருப்பி எங்கடி போனாய், சின்னண்ணன் செத்த இழவுக்குப் போனேன்' (பழ.).

[அங்கு + இடு + திருப்பி.]

அங்கிடுதுடுப்பன் *aṅgiḍu-tuḍuppaṉ*, பெ. (n.) **குறளை கூறுவோன்** (இராட்.); tale-bearer. 2. **அடிக்கடி கட்சி மாறுவோன்** (வின்.); one who frequently changes his party, turn-coat (W.). 3. **நாடோடி** (வின்.); vagrant (W.).

அங்கிடுதொடுப்பி *aṅgiḍu-toḍuppi*, பெ. (n.) **குறளை கூறுவோன்**; slanderer, tale-bearer. 'அங்கிடுதொடுப்பிக்கு அங்கிரண்டு குட்டு, இங்கிரண்டு சொட்டு' (பழ.).

அங்கு *aṅgu*, சு.வி.எ. (demons. adv.) **அவ்விடம், அவ்விடத்தில், அவ்விடத்திற்கு**; there, thither. 'அங்கும் இருப்பான் இங்கும் இருப்பான், ஆக்கின சோற்றுக்குப் பங்கும் இருப்பான்' (பழ.). 'அங்கும் தம்பி இங்கும் தம்பி அகப்பட்டுக் கொண்டான் தும்மட்டிப் பட்டன்' (பழ.).

[ஆங்கு → அங்கு.]

அங்குசம் *aṅguśam*, பெ. (n.) 1. **யானைத் துறட்டி**; elephant goad. "அங்குசம் கடாவ ஒருகை" (திருமுருகு. 110), "பகழி யங் குசமும்" (கந்தபு. உற்பத். விடைபெ. 37). 2. **வாழை** (மலை.); plantain.

ம. அங்குசம்; க. அங்குச; தெ. அங்குசமு, அங்குசம்; Skt. aṅkuśa.

[அங்குதல் = வளைதல். அங்கு → அங்குசம்.]

'அங்குசம்' என்னும் சொல் பண்டை யிலக்கிய வழக்கில் இடம்பெறுவதாலும், தமிழ் வேரினின்று பிறந்திருத்தலாலும், அங்கதம் (வளையல், கொடுவாய்) என்னுஞ் சொல்லைப் பெரிதும் ஒத்திருத்தலாலும், வாழையென் னும் பொருளுடைமையாலும், 'வி'கரம் சேர்ந்து 'கொள்' என்னும் கூலத்தைக் குறித்த லாலும், இங்குத் தென்சொல்லாகக் கொள் ளப்பட்டது.

வாழை குலை தள்ளியபின், சிறப்பாகப் பூ விரியுமுன், அங்குசம் போன்ற தோற்றங் கொள்ளுதலால் அங்குசம் என்னும் உவமை யாகுபெயர் பெற்றதுபோலும் !

அங்குசவி *aṅguśavi*, பெ. (n.) **கொள்** (வின்.); horse gram.

[அங்குசம் → அங்குசவி.]

கொள்ளுக்காய் வளைந்து அங்குசத்தை ஒருபுடை யொத்திருப்பது கவனிக்கத் தக்கது. **காணம், கொள்** என்னும் பெருவழக்கான பெயர்களும், இப் பொருட்காரணம் பற்றி யனவே. அப் பெயர்களைக் காண்க.

அங்குசோலி *aṅgušōli*, பெ. (n.) *அறுகம்புல்* (மூ.அ.); harialli grass, *Cynodon dactylon.*

அங்குத்தி *aṅgutti*, பெ. (n.) *அங்குற்றி* பார்க்க; see *aṅguṟṟi.*

அங்குத்தை *aṅguttai*, பெ. (n.) 1. *அவ்விடம்*; that place. 'அங்குத்தை வார்த்தையை இங்கே சொல்லி' (ஈடு). 2. **தேவீர், பெரும்பாலும் சிவ மடங்களில் வழங்குவதும் 'தாங்கள்' என்னுஞ் சொல்லினும் உயர்வு மிக்கதுமான ஒரு முன்னிலைச்சொல்**; 'your worthiness', 'your holiness' a term of highest respect, used in the second person singular chiefly in Šaiva *mutts.*

அங்குற்றி பார்க்க; see *aṅguṟṟi.*

அங்குமிங்கும் *aṅgum-iṅgum*, வி.எ. (adv.) **அவ்விடத்தும் இவ்விடத்தும்**; here and there. அங்குமிங்கும் திரிகிறான் (உ.வ.).

[அங்கும் + இங்கும்.]

அங்குமிங்கும்பாடி *aṅgum-iṅgum-pāḍi*, பெ. (n.) 1. **ஒரு கட்சியை வெளிப்படையாகவும் மற்றொரு கட்சியை மறைவாகவும் சேர்ந்தவன்** (வின்.); one who is an overt member of one party while being a secret member of another (W.). 2. **மாறுபட்ட இருவேறு கட்சிகளைச் சேர்ந்தவனாக நடிப்பவன் அல்லது ஏமாற்றுபவன்**; double crosser, double-dealer. 3. **நம்பத் தகாதவன்**; unreliable person.

[அங்கும் + இங்கும் + பாடி.]

அங்குரம் *aṅguram*, பெ. (n.) குப்பைமேனி (வின்.); Indian acalypha.

அங்குள் *aṅguḷ*, பெ. (n.) *குறட்டைப்பழம்*, **சவுரிப்பழம்** (வை.மூ.); bitter snake-gourd.

அங்குற்றி *aṅguṟṟi*, பெ. (n.) **திருமடத் தம்பிரான்கள் போலும் உயர்ந்தோரை நோக்கி வழங்கும் முன்னிலை உயர்வுச் சொல்**; a term of highest respect, meaning 'your worthiness' or 'your holiness', used in addressing religious dignitaries like heads of *mutts.*

[அங்கு + உறு + இ – அங்குற்றி. அங்கு + உறு + ஐ – அங்குற்றை.]

மறுவ. அங்குத்தி, அங்கத்தி, அங்குற்றை, அங்குத்தை.

அவ்விடத்திருந்தாய் (வினையாலணையும் பெயர்) என்பது சொற்பொருள்; கண்ணியம் மிக்க அல்லது தெய்வத்தன்மையுள்ள தாங்கள் என்பது கருத்துப் பொருள்.

'இ', 'ஐ' முன்னிலை யொருமை யீறுகள்.

றகர வடிவுச் சொற்கள் திருந்தினவும், தகர வடிவுச் சொற்கள் அவற்றின் திரிபுகளும் ஆகும்.

நீர், நீங்கள், தாங்கள், அங்குற்றி (அங்குற்றை) என்பன, முறையே ஒன்றினொன்று உயர்ந்த முன்னிலைப் பெயர்கள்.

அங்குற்றை *aṅguṟṟai*, பெ. (n.) *அங்குற்றி* பார்க்க; see *aṅguṟṟi.*

அங்கூதியிங்கூதி *aṅgūdi-y-iṅgūdi*, பெ. (n.) **கோட்சொல்லி**; tale-bearer, back-biter. 'அங்கூதி இங்கூதி அடுப்பூதி' (பழ.).

[அங்கு + ஊதி + இங்கு + ஊதி.]

அங்கே *aṅgē*, வி.எ. (adv.) **அவ்விடத்தில்**; there. 'அங்கே கண்டான் இங்கே செய்கிறான்' (பழ.). 'அங்கேண்டி மகளே கஞ்சிக்கு அழுகிறாய், இங்கே வாடி காற்றாய்ப் பறக்கலாம்' (பழ.).

[அங்கு + ஏ.]

அங்கேக்கு *aṅgēkku*, வி.எ. (adv.) **அவ்விடத்திற்கு** (ஆம்); thither (Ām).

அங்கேயிங்கே *aṅgē-y-iṅgē*, வி.எ. (adv.) 1. **அந்தப் பக்கம் அல்லது இந்தப் பக்கம்**; this side or that side. அங்கேயிங்கே பார்க்கக் கூடாது (உ.வ.). 2. **அங்குமிங்கும்**; here and there. அங்கேயிங்கே போகக் கூடாது (உ.வ.).

[அங்கே + இங்கே.]

அங்கை *aṅgai*, பெ. (n.) **உள்ளங்கை**; palm of hand. "அக்கேபோ லங்கை யொழிய விரலமுகி" (நாலடி. 123).

[அகம் + கை – அங்கை (மருஉப் புணர்ச்சி).]

அங்கையில் வட்டா-தல் *aṅgaiyil-vaṭṭā-*, 6 செ.கு.வி. (v.i.) **அடைதற்கு மிக எளிதாக அண்மையிலிருத்தல்**; to be at hand; to be within one's reach. "அங்கையில் வட்டா மிவளெனக் கருதுகின் றாயே" (திவ். பெரிய தி. 10.9 : 3).

அங்கொன்றிங்கொன்றாக *aṅgoṉṟ(u)-iṅgoṉṟāga*, வி.எ. (adv.) *நீண்ட இடையிட்டு*; sparsely, at distant intervals. அங்கொன்றிங்கொன்றாக நட்டிருக்கின்றான் (உ.வ.).

[அங்கு + ஒன்று + இங்கு + ஒன்று + ஆக.]

அங்கோடிங்கோடு *aṅgōḍ(u)-iṅgōḍu*, வி.எ. (adv.) *அங்குமிங்கும்* (ஈடு, 1.4 : 9); here and there.

[அங்கோடு + இங்கோடு.]

அங்ஙன்[1] *aṅṅaṉ*, வி.எ. (adv.) *அங்கனம்*[1] பார்க்க; see *aṅgaṉam*[1].

அங்ஙன்[2] *aṅṅaṉ*, வி.எ. (adv.) *அவ்விடம்*; there. ''நம்மொடு மங்ஙன் குலாவினான்'' (திருக்காளத். பு. 16 : 16).

[அங்ஙனம் → அங்ஙன்.]

அங்ஙனம் *aṅṅaṉam*, வி.எ. (adv.) 1. *அவ்விடம்*; there, in that place. 2. *அவ்வகை, அப்படி*; in that manner.

[அங்கனம் → அங்ஙனம்.]

அங்ஙனே *aṅṅaṉē*, வி.எ. (adv.) 1. *அவ்விடம்*; there, in that place. ''அன்பருக் கங்ஙனே யமிர்தசஞ் சீவிபோல் வந்து'' (தாயு. சுக. 4). 2. *அவ்வகை, அப்படி*; in that manner. ''அங்ஙனே வடமொழியில் வசனங்கள் சிறிது புகல்வேன்'' (தாயு. சித்தர். 10).

[அங்ஙன் + ஏ.]

அங்ஙனேயிங்ஙனே *aṅṅaṉē-y-iṅṅaṉē*, வி.எ. (adv.) *அங்கேயிங்கே*; here and there.

அஙினே *aṅiṉē*, வி.எ. (adv.) *அங்கே*; there. அஙினே போய்ப் பார் (இ.வ.).

அஙினேயிஙினே *aṅiṉē-y-iṅiṉē*, வி.எ. (adv.) *அங்கேயிங்கே*; here and there. அஙினே யிஙினே கிடக்கிறதை யெல்லாம் பொறுக்கு (இ.வ.).

அச்சக்கொடை *acca-k-koḍai*, பெ. (n.) *அச்சத் தாற் கொடுக்குங் கொடை* (சுக்கிர நீதி, 145); gift made out of fear of something or somebody.

[அச்சம் + கொடை.]

அச்சகம்[1] *accagam*, பெ. (n.) 1. *நீர்முள்ளி* (மலை.); species of Hygrophila (Lex.); a thorny plant, nail-dye—*Barleria longifolia* alias *Suellia longifolia* (சா.அக.). 2. *ஈரவுள்ளி*; onion, *Allium leepa*.

அச்சகம்[2] *accagam*, பெ. (n.) *அச்சடிக்கும் இடம்*; printing press.

[அச்சு + அகம்.]

அச்சங்கரணை *accaṅgaraṇai*, பெ. (n.) (மருத்.) *முட்செடி வகை*; (Medl.) a kind of thorny plant. *அச்சாணிக்கொடி* பார்க்க; see *accāṇi-k-koḍi*.

அச்சங்கொடி *accaṅgoḍi*, பெ. (n.) *ஒருவகைக் கொடி*; a kind of creeping plant, climbing Indian linden, *Grewia heterotricha* (சா.அக.).

அச்சச்சுவை *acca-c-cuvai*, பெ. (n.) *அகச்சுவை எட்டனுள் ஒன்றான அச்சம்*; sentiment of fear or terror.

''அணங்கே விலங்கே கள்வர்தம்
இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே''
(தொல். பொருள். மெய்ப். 8).

[அச்சம் + சுவை.]

அச்சடல செயநீர் *accaḍala-šeya-nir*, பெ. (n.) *வேகாதுப்பு செயநீர், மாந்த உடலினின்று சித்தர்கள் மட்டுமே அறிந்த ஒரு கமுக்க முறையில் செய்யப்பட்ட ஓர் அனைத்துக் கரைப்பான் நீர்மம்*; a liquid preparation from the human body made by a secret process known only to Siddhās. It is a universal solvent (சா.அக.).

அச்சடி *accaḍi*, பெ. (n.) *அச்சடிச்சீலை* பார்க்க; see *accaḍi-c-cīlai*. ''நினைத்தால் எடுப்பார்கள் நெருஞ்சிப்பூ அச்சடியை'' (நா.பா.).

[அச்சு + அடி.]

அச்சடி-த்தல் *accaḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. *உருக்கெழுத்தைப் பதித்தல்*; to print, as a book. 2. *முத்திரையைப் பதித்தல்*; to stamp, impress pattern.

ம. *அச்சடி*

[அச்சு + அடி.]

அச்சடிச்சீலை *accaḍi-c-cīlai*, பெ. (n.) *சித்திர வண்ணம் அல்லது ஓவிய வுருவம் பதிக்கப்பட்ட ஆடை*; chintz.

ம. அச்சன் சேல

[அச்சு + அடி + சீலை.]

அச்சடிச்சேலை *accaḍi-c-cēlai*, பெ. (n.) *அச்சடிச்சீலை* பார்க்க; see *accaḍi-c-cīlai*.

[அச்சு + அடி + சேலை.]

அச்சடியன் *accaḍiyaṉ*, பெ. (n.) அச்சடிச்சீலை (செ.அக.). — சாயப்புடைவை வகை (யாழ். அக.); a kind of chintz for saree.

[அச்சு + அடி + அன்.]

அச்சடியோலை *accaḍi-y-ōlai*, பெ. (n.) முத்திரையிடப்பட்ட ஓலை; stamped *ōlai* (palm leaf prepared for writting).

ம. அச்சடியோல

[அச்சு + அடி + ஓலை.]

அச்சடுக்கி *acc(u)-aḍukki*, பெ. (n.) அச்சுக்கோப்பாளன்; compositor.

[அச்சு + அடுக்கு + இ (ஒருமையீறு).]

அச்சடுக்கு-தல் *acc(u)-aḍukku-*, 5 செ.கு.வி. (v.i.) உருக்கெழுத்தைச் சொல்லாகக் கோத்தல்; to compose, set up type to form words.

[அச்சு + அடுக்கு.]

அச்சடை *accaḍai*, பெ. (n.) கீழ்காய்நெல்லி; a small medicinal plant, *Phyllanthus niruri*. ''மிரியல் வழுதுணை மூலமா லூர மச்சடை'' (தைலவ. தைல. 4).

அச்சடையாளம் *acc(u)-aḍaiyāḷam*, பெ. (n.) 1. அடிமை யென்பதைக் காட்டுஞ் சூட்டுக் குறி (கிறித்.வ.); marks branded on the body of a slave. 2. முத்திரை யச்சுருவம்; stamped impression. 3. உறுப்பொப்புமை; resemblance, as in bodily features.

[அச்சு + அடையாளம்.]

அச்சத்தி *accatti*, பெ. (n.) கத்தரி (மூ.அ.); brinjal.

அச்சத்திரி *accattiri*, பெ. (n.) கத்தரி (சித்.அக.); brinjal.

அச்சதறி *acca-taṟi*, பெ. (n.) ஒரு பழைய வரி (S.I.I. i, 91); an ancient tax.

அச்சம்[1] *accam*, பெ. (n.) அகத்தி (திவா.); West-Indian pea-tree, *Sesbania grandiflora*.

அச்சம்[2] *accam*, பெ. (n.) சன்னம்; thinness. இந்தத் தகடு அச்சமாயிருக்கிறது (உ.வ.).

அச்சம்[3] *accam*, பெ. (n.) வெரு (பயம்); fear, dread, terror. 'அச்சம் அற்றவன் அம்பலம் ஏறுவான்' (பழ.), 'அச்சம் ஆண்மை குலைக்கும்' (பழ.).

ம. அச்சம்; க. அஞ்சிகெ.

அச்சம்பேரளம் *accam-pēraḷam*, பெ. (n.) சிகப்பு அடுக்கலரி அல்லது இரட்டைச் சிகப்பலரி; South sea rose, *Nerium odorum* (சா.அக.).

அச்சமம் *accamam*, பெ. (n.) முயிற்றுப்புல் (மலை.); species of grass.

அச்சமரம் *acca-maram*, பெ. (n.) நான்முகப் புல்லுருவி; a plant-parasite, *Saccharum spontaneum* (சா.அக.).

அச்சமாடல் *accam-āḍal*, பெ. (n.) பிறர்க்கு அச்சமுண்டாகப் பேசுதல்; talk meant for frightening others, intimidating talk. ''அழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலும்'' (நன். 31).

[அச்சம் + ஆடல். ஆடல் = பேசுதல்.]

அச்சமாமுகம் *accamāmugam*, பெ. (n.) புல்லுருவி; honeysuckle, mistletoe, *Loranthus elasticus* (சா.அக.).

அச்சமாயிதம் *accamāyidam*, பெ. (n.) செங்கழற்சிக் கொடி; a red species of creeper, *Molucca bean, Caesalpinia bonducella* (சா.அக.).

அச்சயில்கரணை *accayil-karaṇai*, பெ. (n.) ஒரு முட்கொடி; axil-spined jack. அச்சாணிக்கொடி பார்க்க; see *accāṇi-k-kōḍi*.

அச்சரக்காய்ச்சல் *accara-k-kāyccal*, பெ. (n.) அச்சர நோயுடன் வருங் காய்ச்சல் (வின்.); fever accompanying thrush, *Febris aphthosa*.

[அச்சரம் + காய்ச்சல்.]

அச்சரம் *accaram*, பெ. (n.) பெரும்பான்மை பிள்ளைப் பருவத்திலும் சிறுபான்மை இளவட்டப் பருவத்திலும் வாயில் அல்லது நாவில் சிறுசிறு கொப்புளங்களாக எழும் நோய்; thrush, aphthae, *Parasitic stomatitis*.

ம. அக்கரம்; க., து. அக்ர; தெ. அட்சரமு.

[அக்கரம் → அச்சரம்.]

அச்சரிபுச்சரி *accari-puccari*, பெ. (n.) 1. தினவெடுக்கை; itching sensation. 2. தொந்தரவு; annoyance, vexation, worry. அச்சரிபுச்சரியாயிருக்கிறது (உ.வ.).

அச்சல் *accal*, பெ. (n.) ஒரு பாட்டம் மழை; a shower of rain.

[ஒருகா. அஞ்சல் → அச்சல்.]

அச்சலச்சலாய் *accal-accal-āy*, வி.எ. (adv.) பாட்டம் பாட்டமாய்; shower after shower. அச்சலச்சலாய் மழைபெய்கிறது (உ.வ.).

நளி (கார்த்திகை) மாத மழை அச்சலச் சலாய்ப் பெய்யும் (உ.வ.).

[அச்சல்+அச்சல்+ஆய்.]

அச்சலத்தி *accalatti,* பெ. (n.) **சலிப்பு**; tediousness, weariness. ஒரே பாட்டைத் திரும்பத் திரும்ப கேட்கிறது எனக்கு அச்சலத்தியா யிருக்கிறது (உ.வ.).

அச்சலத்தி புச்சலத்தி *accalatti-puccalatti,* பெ. (n.) **சலிப்புணர்ச்சியின் மிகுதியைக் குறிக்கும் அச்சலத்தி என்னுஞ் சொல்லின் எதுகை யிரட்டிப்பு**; a duplication of the second syllable of *accalatti* expressing intensity of the feeling of tediousness or disgust.

ஒ.நோ: அச்சரிபுச்சரி

அச்சவபிநயம் *acca-v-abinayam,* பெ. (n.) **ஒருவரின் அச்சவுணர்ச்சியைக் காட்டும் மெய்ப்பாடுகளைத் தோற்றுவிக்கும் உடம்பு அல்லது உறுப்புச் செய்கையான நளிநயம்**; artistic gesticulation or theatrical action which expresses the sentiment of fear.

''அச்ச வவிநயம் ஆயுங் காலை
யொடுங்கிய வுடம்பு நடுங்கிய நிலையும்
அலங்கிய கண்ணுங் கலங்கிய வுளனுங்
கரந்துவர லுடைமையுங் கையெதிர் மறுத்தலும்
பரந்த நோக்கமு மிசைபண் பினவே''
(சிலப். 3 : 13, அடியார்க். உரை).

[அச்சம் + அபிநயம். **Skt.** abhi-naya > *த. அவிநயம்.]*

அவிநயத்தைத் தமிழில் நளிநயம் என்னலாம்.

அச்சவுபதை *acca-v-upadai,* பெ. (n.) **அரசன் தான் தெரிந்தெடுத்த ஒருவரை அமைச்சராகவோ வேறு உயரதிகாரியாகவோ அமர்த்து முன், அவர்க்கு உயிரச்ச முண்டுபண்ணும் ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்து, அதன் வாயிலாக அவரின் மறத்தையும் உண்மைத் திறத்தையும் தேர்தல்**; King's clandestine test of a candidate's ability and honesty by exposing him to situations which call for display of courage amidst fear of death before appointing him minister or as any other high authority of State.

''அச்சவுபதையாவது, (அரசன்) ஒரு நிமித்தத்தின்மேலிட்டு ஓரமைச்சனால் ஏனையோரை அவனில்லின்கண் அழைப்பித்து, 'இவர் அறைபோவான் எண்ணற்குக் குழீஇயினா ரென்று தான் காவல் செய்து, ஒருவனால் இவ் வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச் செய்து நமக்கினிய அரசனொருவனை வைத்தல் ஈண்டை யாவர்க்கு மியைந்தது ; நின் கருத்தென்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். (இதில்) திரிபிலனாயவழி எதிர்காலத்துந் திரிபிலனெனக் கருத்தளவையால் தெளியப்படுமென்பதாம்'' (குறள், 501, பரிமே. உரை).

அரசன், அறம் பொருள் இன்பம் உயிரச்சம் என்னும் நான்கு தெளிவகைகளால் அமைச்சனையும் ஏனை யுயரதிகாரிகளையும் தேர்ந்தெடுப்பது, அவரை யமர்த்து முன்பேயன்றி அமர்த்தின பின்பன்று.

திருவள்ளுவர், வலியறிதல் காலமறிதல் இடனறிதல் என்பவற்றிற்குப் பின்னும், தெரிந்து வினையாடல் என்பதற்கு முன்னும், தெரிந்துதெளிதல் என்னும் அதிகாரத்தை வைத்திருத்தலாலும்;

''தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்'' (508),

''தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்'' (509),

''தேரான் தெளிவுந் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்'' (510)

என்று அவரே கூறுதலாலும்; எந்தப் பதவிக்கும் ஒருவரை அமர்த்துமுன் னன்றிப் பின் ஆராய்ந்து திறந்தெரிவது இயற்கை யன்மையாலும்; அரசியல் முறை முற்றத் துறைபோய திருவள்ளுவர் மறந்தும் அங்ஙனம் கூறாராதலாலும்;

'ஓரமைச்சனால் ஏனையோரை அவனில்லின் கண் அழைப்பித்து .... சொல்லுவித்தல்' என்று பரிமேலழகரும், 'Test of Minister's or Officer's honesty' என்று ஓர் அகரமுதலியும் உரைத்திருப்பது பொருந்தாது.

இனி, நால்வகைத் தேர்திறம்பற்றிய ''அறம்பொரு ளின்பம்'' என்னும் குறள், வடநூற் பொருண்மையை உட்கொண்டு திருவள்ளுவர் ஓதியதாகப் பரிமேலழகர் குறித்திருப்பதும் தவறென்பது 'நாற்பொருள்' என்னும் உருப்படியில் விளக்கப்பெறும்.

அச்சவுபதை (இ.பி.). த. அச்சம் + **Skt.** upa-dhā = தேர்திறம் அல்லது தெளிவகை.

அச்சழிவு *acc(u)-aḻivu*, பெ. (n.) முத்திரை தேய்ந்த பணம் (பணவிடு. 142); defaced coin, coin worn-out by use.

[அச்சு + அழிவு.]

அச்சறுக்கை *accaṟukkai*, பெ. (n.) அச்சத்தை நீக்குதல்; removal of fear.

[அச்சம் + அறுக்கை.]

அச்சறை *acc(u)-aṟai*, பெ. (n.) அச்செழுத்து களைப் போட்டுவைக்கும் அறைகளையுடைய தட்டம்; case (printing).

[அச்சு + அறை.]

அச்சறைத்தட்டம் *accaṟai-t-taṭṭam*, பெ. (n.) அச்சறை பார்க்க; see *acc(u)-aṟai*.

[அச்சு + அறை + தட்டம்.]

அச்சறைத்தட்டு *accaṟai-t-taṭṭu*, பெ. (n.) அச்சறை பார்க்க; see *acc(u)-aṟai*.

[அச்சு + அறை + தட்டு.]

அச்சறைதாங்கி *accaṟai-tāṅgi*, பெ. (n.) அச்சறைத் தட்டுகளைச் செருகிவைக்கும் நிலைச்சட்டம்; stand (printing). 'அச்சுத் தட்டுத் தாங்கி' என்றும் குறிக்கப்பெறும்.

[அச்சு + அறை + தாங்கி.]

அச்சன்[1] *accaṉ*, பெ. (n.) 1. தந்தை; father. 'குடநாட்டார் தந்தையை அச்சனென்றும்... வழங்குப' (தொல். சொல். எச். 4, நச். உரை). 2. கடவுள்; God. "அச்ச னின்றனைத் தும் விளைத் தாலென" (தணிகைப்பு. பிரமன் சிருட்டி. 23).

ம. அச்சன்; க. அச்ச, அச்சு; து., குட. அச்செ; கோத. அச்; குரு. அச்தோச்; பிராகி. அச்சு.

[த. அத்தன் (தந்தை) → அச்சன். ஒ.நோ: பித்தன் → பிச்சன்.]

'அச்சன்' என்னும் தூய தென்சொற்கு, 'ஆர்ய' என்னும் வடசொல்லொடு எவ்வகைத் தொடர்புமில்லை. துளுவச் சொல்லின் திரிபே பிராகிருதச் சொல்லும்.

கடவுள் எல்லாவுயிர்கட்கும் தந்தை போலுதலால் அச்சன் எனப்பட்டார்.

அச்சன்[2] *accaṉ*, பெ. (n.) அழிஞ்சில்; ancola fruit plant, *Alangium lamarckii*.

அச்சன்முள்(ளு) *accaṉ-muḷ(ḷu)*, பெ. (n.) அச்சாணிக்கொடியில் காணப்படும் முள்(ளு); thorn of the plant *accāṇi-k-koḍi*.

அச்சனம்[1] *accaṉam*, பெ. (n.) நெய்வார் கருவி வகை; a weaver's implement. 'நூல் புடைவை யாய்த் திரிதற்கு அச்சனம் முதலாயின ஸாதனம்' (நீலகேசி, 421, உரை).

அச்சனம்[2] *accaṉam*, பெ. (n.) வெள்ளைப் பூண்டு (பரி.அக.); garlic.

அச்சாணி *acc(u)-āṇi*, பெ. (n.) 1. கடையாணி; linch pin. "தேர்க் கச்சாணி யன்னார்" (குறள், 667). 'அச்சாணி இல்லாத் தேர் முச்சாணும் ஓடாது' (பழ.). 2. நிலவேம்பு (சித்.அக.); French chiretta. 3. கருப்பு வேம்பு (சா.அக.); black neem, *Garuga pinnata*. 4. உத்தாமணி; hedge cotton, *Daemia extensa*.

ம. அச்சாணி (கடையாணி)

[அச்சு + ஆணி.]

அச்சாணிக்கொடி *accāṇi-k-koḍi*, பெ. (n.) ஒரு முட்கொடி, அச்சயில்கரணை; also *accayil karaṇai*, axle-spined jack, *Cudrania javanensis*.

மறுவ. அச்சங்கரணை, அச்சயில்கரணை, அச்சாணிமுள்.

அச்சாணிமுள்(ளு) *accāṇi-muḷ(ḷu)*, பெ. (n.) அச்சாணிக்கொடி பார்க்க; see *accāṇi-k-koḍi*.

அச்சாணிமூலி *accāṇi-mūli*, பெ. (n.) வேலிப் பருத்தி (மலை.); a hedge-twiner.

[அச்சாணி + மூலி.]

அச்சாப்பொங்கா *accā-p-poṅgā*, பெ. (n.) அச்சோப் பெண்காள் பார்க்க; see *accō-p-peṇgāḷ*.

அச்சான் *accāṉ*, பெ. (n.) அச்சிலுண்டாகும் உருவம்; cast taken from a mould.

[அச்சு + ஆன் (ஒன்றன்பாலீறு).]

அச்சான்கொடி *accāṉ-koḍi*, பெ. (n.) அச்சங்கொடி பார்க்க; see *accaṅgoḍi*.

அச்சி[1] *acci*, பெ. (n.) 1. தாய்; mother. 2. அக்கை (பள்.); elder sister. 3. நாயர்குலப் பெண்; a Nāyar woman. —, இடை. (part.) ஒரு பெண்பாலீறு; a fem. suff.

ம., க. அச்சி

[அச்சன் (ஆ.பா.) – அச்சி (பெ.பா.). எ-டு : மருத்துவச்சி, வேட்டுவச்சி.]

அச்சி[2] *acci*, பெ. (n.) அகத்தி (இராசவைத்.). West-Indian pea-tree. 2. பாலையுடைச்சி; tender wild jack, *Pajanelia sheedii*. 3. பூதப்பூ (பூதபுட்பம்); Indian trumpet flower, *Oroxylum indicum* (சா.அக.).

அச்சி[3] *acci*, பெ. (n.) *சுமதுரைத் தீவின் வட மேலை நாடு*; Achen or Acheen, the N.W. division of Sumatra (சா.அக.). 'அச்சியிலே போனாலும் அகப்பை அரைக்காசு' (பழ.).— (தண்டலை. 99). 'அச்சியிலும் பிச்சைக்காரன் உண்டு' (பழ.). 'அச்சி என்றால் உச்சி குளிருமா, அழுவணம் என்றால் கை சிவக்குமா?' (பழ.).

தெ. அச்சி

அச்சிக்கிச்சிலி *acci-k-kiccili*, பெ. (n.) *அச்சி நாட்டுக் கிச்சிலிப் பழம்*; a kind of orange grown in Acheen (N.W. of Sumatra) (சா.அக.).

[அச்சி + கிச்சிலி.]

அச்சிக்குதிரை *acci-k-kudirai*, பெ. (n.) *அச்சி நாட்டு மட்டக்குதிரை* (இராட்.); Achin pony (R.).

[அச்சி + குதிரை.]

அச்சிடு-தல் *acc(u)-iḍu-*, 7 செ.குன்றாவி. (v.t.) *பொத்தகம் முதலியவற்றிற்கு உருக்கெழுத்துப் பதித்தல்*; to print, as a book.

[அச்சு + இடு.]

அச்சித்தினை *acci-t-tiṉai*, பெ. (n.) *அச்சி நாட்டினின்று கொண்டுவந்து விளைக்கப்பட்ட தினைவகை*; variety of Italian millet, *Setaria italica*, as from Achin. 2. *ஒருவகைப் புல்*; a kind of grass.

[அச்சி + தினை.]

அச்சிநடை *acci-naḍai*, பெ. (n.) *அச்சிக் குதிரையின் நடைவேகம்*; amble of the Achin pony.

அச்சிநறுவிலி *acci-naṟuvili*, பெ. (n.) *சிவப்புப் பூப்பூக்கும் ஒருவகை மரம்*. அச்சிநாட்டினின்று கொண்டுவந்து மைசூரில் பயிராக்கப்பட்டது. அதன் பட்டை நாரினால் கயிறு திரிக்கப்படும்; scarlet long-flowered sebasten, *Cordia sebastena*, a tree peculiar to Achin, brought and naturalised in Mysore. Ropes are made from the fibre of its bark.

அச்சிப்பாக்கு *acci-p-pākku*, பெ. (n.) *அச்சிநாட்டினின்று இறக்குமதியான பாக்கு*; arecanut imported from Achin.

[அச்சி + பாக்கு.]

அச்சிமட்டம் *acci-maṭṭam*, பெ. (n.) *அச்சிநாட்டு மட்டக்குதிரை*; Achin pony.

ம. அச்சிமட்டம்

அச்சியர் *acciyar*, பெ. (n.) *சமணத் துறவினியர்*; Jain women ascetics. "அங்கபூ வாதி நூலு ளச்சியர்க் குரிய வோதி" (மேருமந். 619).

அச்சியில்கரணை *acciyil-karaṇai*, பெ. (n.) *அச்சாணிக்கொடி* பார்க்க; see *accāṇi-k-koḍi*.

அச்சிரம் *acciram*, பெ. (n.) *முன்பனிக் காலம்*; early dewy season. "அரிதில் தோன்றும் அச்சிரக் காலையும்" (சிலப். 14 : 105).

[த. அல் = இரவு. Skt. sisira = பனிக்காலம். அல் + சிசிரம் — அற்சிசிரம் → அச்சிரம் = முன்னிரவிற் பனி பெய்யுங் காலம்.]

அல் என்பது, அல்லங்காடி என்பதிற் போன்று இங்கு மாலையை அல்லது முன்னிரவைக் குறித்தது.

அச்சிரம் என்பது தென்சொல்லும் வடசொல்லும் கலந்த இருபிறப்பி (hybrid).]

அச்சிருங்கி *accirungi*, பெ. (n.) *ஆடுதின்னாப் பாலை*: worm-killer, *Aristolochia bracteata*.

அச்சிவெல்லம் *acci-vellam*, பெ. (n.) *அச்சிநாட்டினின்று முற்காலத்தில் இறக்குமதியான ஒரு வகை வெல்லம்*; a kind of jaggery formerly imported from Achin.

அச்சிறுபாக்கம் *acc(u)-iṟu-pākkam*, பெ. (n.) *ஒரு சிவநகர்*; a Šiva shrine. "அச்சிறு பாக்கத் தணைந்தார்" (பெரியபு. திருஞா. 1132).

[அச்சு + இறு + பாக்கம்.]

அச்சினி *acciṉi*, பெ. (n.) *எட்டாம் மாதம்* (சித்.அக); eighth month.

அச்சீடு *acciḍu*, பெ. (n.) *அச்சிடுகை*; printing.

[அச்சு+இடு. இடு→ஈடு.]

அச்சு[1] *accu*, பெ. (n.) 1. *கட்டளைக் கருவி*; mould. அச்சிலே வார்த்த உருவம் (உ.வ.). 2. *கம்பியச்சு*; wire-mould. "கம்பி வாங்கு மச்செனு லாயதால்" (இரகு. திக்கு. 189). 3. *உருக்கெழுத்து*; printing type. 4. *குத்தும் முத்திரை*; stamp. 5. *சரியொப்பு*; exact likeness. "கடைமாந்த ரச்சாய்" (சேதுபு. வேதா. 16.). 6. *அடையாளம்*; sign, mark, print, stamp. "பவளத் திருமார்பிலச்சிட் டவர்க்கு" (ஏகாம். உலா, 211). 7. *அச்சுக்கட்டு*; weaver's reed instrument for pressing down the threads of the woof. 8. *பண்ணை*; comb-like frame in a loom through which the warp threads are passed and by which they are pressed or battened together.

ம., க., தெ. அச்சு; து. அச்சி.

[அட்டுதல் = வார்த்தல், உருக்கி வார்த்தல். அட்டு → அச்சு = வார்ப்புக் கருவி. அச்சிலே வார்த்த உருவங்களெல்லாம் வார்ப்பு அல்லது வார்ப்படம் என்று சொல்லப்படுவதைநோக்குக.]

அச்சு² *accu*, பெ. (n.) *1.* **சக்கரங் கோத்த மரம்**; axle. ''பீலிபெய் சாகாடும் அச்சிறும்'' (குறள், 475). 'அச்சில்லாத் தேர் ஓடவும் அகமுடையான் இல்லாதவள் பிள்ளை பெறவும் கூடுமா?' (பழ.). *2.* **அச்சுருவாணி** (பிங்.); axle-bolt. *3.* **திரிகை யச்சு**; central pin of a mill-stone. *4.* **தாங்கல், நிலைக்களம்**; support, basis. ''செந்நாப் போதார் புனற்கூடற் கச்சு'' (திருவள்ளுவமா. 21). *5.* **வலிமை**; strength. ''வேந்தடர்த்த வச்சு'' (சீவக. 2777). *6.* **மூல வுருவம்**; original form. ''சுரர்களாய்த் துய்ப்ப ரென்னிற் சொன்னவச் சழியும்'' (சி.சி. 2 : 42). *7.* **உடம்பு**; body. ''அச்செடுத்திடு முயிர்கள்'' (கந்தபு. மகேந். சூரன்அமைச். 137.). *8.* **செய் வரம்பு, அச்சுக் கட்டின நிலம்**; ridge in a field.

ம., க., தெ., து. அச்சு; **Skt.** akṣa.

OE. aex, eax; **ME.** ax, axel; **ON.** oxul; **E.** axle.

அச்சு³ *accu*, பெ. (n.) **ஊழி** (வின்.); epoch, yuga (W.).

அச்சுக்கட்டி *accu-k-kaṭṭi*, பெ. (n.) *1.* **ஆடையிற் சாய அச்சுவேலை செய்வோன்** (சிலப். 5 : 17, அரும்.); one who folds and ties cloth in dyeing, where by any desired figure is printed. *2.* **நாட்டு அறுவை மருத்துவன்** (இ.வ.); Indian country surgeon (Loc.). *3.* **நெசவுத் தொழிலுக்குரிய அச்சுக்கட்டு செய்பவன்**; weaver's reed maker.

[அச்சு + கட்டி.]

அச்சுக்கட்டு-தல் *accu-k-kaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.i.) *1.* **ஓவியம் வரையுமுன் ஈனை வரைந்து கொள்ளுதல்**; to draw the out line of a picture. *2.* **நன்செய் புன்செய் வரம்பு கட்டுதல்**; to form a ridge around a field.

[அச்சு + கட்டு.]

அச்சுக்கட்டு *accu-k-kaṭṭu*, பெ. (n.) *1.* **அச்சடித் தற்குச் சேலையை மடிக்கை**; folding of cloth in dyeing whereby the desired figure is printed. *2.* **நெய்வார் கருவிவகை**; weaver's reed. *3.* **வரம்பு கட்டிய செய்** (இரா.பி.); field with ridges, lands divided into beds to admit and retain water for the cultivation of paddy (R.F.).

க., தெ. அச்சுக்கட்டு

[அச்சு + கட்டு.]

அச்சுக்கட்டை *accu-k-kaṭṭai*, பெ. (n.) **அச்சு மரம்** பார்க்க; see *accu-maram*.

[அச்சு + கட்டை.]

அச்சுக்கம்பி *accu-k-kambi*, பெ. (n.) **குண்டுக் குழாயில் (gun) மருந்திடிக்கும் இருப்புக் கருவி**; iron ramrod.

[அச்சு + கம்பி.]

அச்சுக்கம்பு *accu-k-kambu*, பெ. (n.) **குண்டுக் குழாயில் மருந்திடிக்கும் மரத் தடி**; wooden ramrod.

ம. அச்சுக்கோல்

[அச்சு + கம்பு.]

அச்சுக்கரு *accu-k-karu*, பெ. (n.) **வார்ப்படம் வார்க்கும் அச்சு**; matrix.

[அச்சு + கரு.]

அச்சுக்கலை *accu-k-kalai*, பெ. (n.) **அச்சுத் தொழிற் கலை**; art of printing.

[அச்சு + கலை.]

அச்சுக்கலைஞர் *accu-k-kalaiñar*, பெ. (n.) **அச்சுத்தொழிலில் வல்லுநர்**; one skilled in the art of printing.

[அச்சு + கலைஞர்.]

அச்சுக்கூடம் *accu-k-kūḍam*, பெ. (n.) **அச்சடிக்கும் சாலை, அச்சகம்**; printing house.

ம. அச்சுக்கூடம்; க. அச்சுகூட; தெ. அச்சு கூடமு.

[அச்சு + கூடம்.]

அச்சுக்கோ-த்தல் *accu-k-kō-*, 4 செ.குன்றாவி. (v.t.) **உருக்கெழுத்தைச் சொல்லாக அடுக்குதல்**; to set up type to form words, compose.

[அச்சு + கோ.]

அச்சுக்கோப்பாளன் *accu-k-kōppāḷaṉ*, பெ. (n.) **அச்சடுக்கி, கோப்பாளன்**; compositor.

[அச்சு + கோப்பு + ஆளன்.]

அச்சுக்கோப்புப் பொறி *accu-k-kōppu-p-poṟi*, பெ. (n.) **அச்செழுத்துகளைக் கோக்க உதவும் பொறி**; type composing machine.

[அச்சு + கோப்பு + பொறி.]

அச்சுத்தகடு *accu-t-tagaḍu*, பெ. (n.) பாள அச்சுத் தகடு, நெகிழ்வற்ற உருச்சட்டம்; stereo plate.

[அச்சு + தகடு.]

அச்சுத்தட்டுத்தாங்கி *accu-t-taṭṭu-t-tāṅgi*, பெ. (n.) அச்சறைதாங்கி பார்க்க; see *accaṟai-tāṅgi*.

[அச்சு + தட்டு + தாங்கி.]

அச்சுத்தடி *accu-t-taḍi*, பெ. (n.) நெம்புதடி (புதுவை); lever in mechanics (Poṇḍ.).

[அச்சு + தடி.]

அச்சுத்தாலி *accu-t-tāli*, பெ. (n.) காசுமாலை (திவ். திருப்பா. 7, வியா.); necklace of gold coins or other stamped pieces.

[அச்சு + தாலி.]

அச்சுத்திரட்டு-தல் *accu-t-tiraṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) பழுதுற்ற வண்டியச்சினை உருப்படுத்துதல்; to repair a worn-out axle by welding with iron and turning on a lathe.

[அச்சு + திரட்டு.]

அச்சுத்திருத்து-தல் *accu-t-tiruttu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. நன்செய் நேர்த்தி செய்தல்; to arrange plots in a field in suitable order. 2. அச்சுத் தாள்களைத் திருத்துதல்; to correct the printed proofs.

[அச்சு + திருத்து.]

அச்சுத்துணி *accu-t-tuṇi*, பெ. (n.) அச்சிடப் பட்ட துணி; printed textile.

[அச்சு + துணி.]

அச்சுத்துளையீடு *accu-t-tuḷaiyīḍu*, பெ. (n.) அச்சுத்துளையிடுதல்; making holes with a punch.

[அச்சு + துளையீடு.]

அச்சுப்படி *accu-p-paḍi*, பெ. (n.) அச்சிட்டதன் ஒரு படி; printed copy.

[அச்சு + படி.]

அச்சுப்படிமை *accu-p-paḍimai*, பெ. (n.) அச்சிட உதவும் படக்கட்டை; printing block.

[அச்சு + படிமை.]

அச்சுப்படிவம் *accu-p-paḍivam*, பெ. (n.) அச்சிடப்பட்ட படிவம்; printed forms.

[அச்சு + படிவம்.]

அச்சுப்பலகை *accu-p-palagai*, பெ. (n.) நெசவுக் கருவிகளுள் ஒன்று (வின்.); weaver's bar (W.).

[அச்சு + பலகை.]

அச்சுப்பிழை *accu-p-piḻai*, பெ. (n.) அச்சில் நேர்ந்த பிழை; typographical mistake, printer's devil.

[அச்சு + பிழை.]

அச்சுப்பூட்டியிழு-த்தல் *accu-p-pūṭṭi-y-iḻu-*, 4 செ.கு.வி. (v.i.) தறியூடு நூலைச் செலுத்துதல் (வின்.); to pass the thread through the loom (W.).

[அச்சு + பூட்டி + இழு.]

அச்சுப்பூட்டி விளையாடு-தல் *accu-p-pūṭṭi-viḷai-yāḍu-*, 5 செ.கு.வி. (v.i.) பந்து, புளியங் கொட்டை முதலியன கொண்டு விளையாடுதல் (இராட்.); to play with balls, tamarind seeds, etc. (R.).

[அச்சு + பூட்டி + விளையாடு.]

அச்சுப்பொறி *accu-p-poṟi*, பெ. (n.) அச்சிடும் பொறி, அச்சு எந்திரம்; printing machine.

[அச்சு + பொறி.]

அச்சுப்போடு-தல் *accu-p-pōḍu-*, 19 செ.குன்றா வி. (v.t.) அச்சடித்தல்; to print.

[அச்சு + போடு.]

அச்சுமட்டம் *accu-maṭṭam*, பெ. (n.) அச்சி மட்டம் பார்க்க; see *acci-maṭṭam*. "கட்டுப் படாத தந்த அச்சுமட்டம்" (மது. வா. ஞா. கோ. 97).

அச்சுமரம் *accu-maram*, பெ. (n.) வண்டியில் உருள்கோத்த மரம்; axle-tree. 'அச்சுமரத்தின் மேலே......நெடுகக்கிடக்கின்ற பருமரங்களை' (பெரும்பாண். 48, நச்.உரை).

க. அச்சுமர

அச்சுமூசை *accu-mūšai*, பெ. (n.) அச்செழுத்தின் அச்சுரு; type mould.

அச்சு மை *accu-mai*, பெ. (n.) அச்சிட உதவும் மை; printing ink.

அச்சுரு *acc(u)-uru*, பெ. (n.) உரு அச்சு, கட்டளைச் சட்டம்; mould, matrix.

[அச்சு + உரு.]

அச்சுருளி *acc(u)-uruḷi*, பெ. (n.) அச்சுப்பொறி உருளை; cylinder used in printing machine.

[அச்சு + உருளி.]

அச்சுலக்கை *acc(u)-ulakkai*, பெ. (n.) **துலாவைத் தாங்குங் கட்டை**; axle of a well-sweep.

[அச்சு + உலக்கை.]

அச்சுவரி *accu-vari*, பெ. (n.) **பழைய வரிவகை** (I.M.P. Tn. 104); an ancient tax.

ம. அச்சு வரி

[அச்சு + வரி.]

அச்சு வார்ப்படச்சாலை *accu-vārppaḍa-c-cālai*, பெ. (n.) **அச்செழுத்துகளை வார்க்கும் வார்ப் படப் பட்டறை**; type foundry.

[அச்சு + வார்ப்படம் + சாலை.]

அச்சுவார்ப்படம் *accu-vārppaḍam*, பெ. (n.) **மாழையை (உலோகத்தை) உருக்கி அச் செழுத்துகளாக வார்த்தல்**; type founding.

[அச்சு + வார்ப்படம்.]

அச்சுவிழுது *accu-viḻudu*, பெ. (n.) **கைத்தறி நெசவிற் பயன்படும் ஒருவகை நூல், தலை நூல்**; a kind of thread used in handloom weaving.

அச்சுறு-தல் *accuṟu-*, 20 செ.கு.வி. (v.i.) **அச்ச மடைதல்**; to fear, dread. ''அச்சுறு கின்றதென் னாவ தாகுமால்'' (கந்தபு. யுத்த. தரும கோ. 19).

[அச்சம் + உறு – அச்சுறு.]

அச்சுறுக்கை *accuṟukkai*, பெ. (n.) **அச்ச முண்டாக்குகை**; threat, intimidation.

[அச்சம் + உறுக்கை. உறுக்கை = உண் டாக்குதல்.]

இச் சொல் சில அகரமுதலிகளில் 'அச் சறுக்கை' என்று தவறாகக் குறிக்கப் பட்டுள்ளது.

அச்சுறுகொழுந்தொடர் *acc(u)-uṟu-koḻun-toḍar*, பெ. (n.) **மதயானை விசையாதபடி, மரங்களி ரும்பைத் தைத்த தொடரியை அதன் கழுத்தில் மாலைபோல் இட்டு மரத்திற் கட்டும் தடுப்பு**; iron chain put round the neck of a must elephant like a garland and fastened to a tree. ''அச்சுறு கொழுந்தொடர் யாப் பழித்து'' (சீவக. 1836).

[அச்சு + உறு + கொழுந்தொடர்.]

அச்சுறுத்து-தல் *accuṟuttu-*, 2 பி.வி. (v. caus.) **அச்சமுண்டாக்குதல்**; to frighten, threaten, intimidate. ''அஞ்சியச் சுறுத்தலும்'' (தொல். பொருள். கள. 24).

ம. அஞ்சுக; க., தெ. அஞ்சு.

[அங்குதல் = வளைதல். அங்கு → அஞ்சு. அஞ்சுதல் = வளைதல், வணங்குதல், வெருவு தல். ங்க → ஞ்ச.

ஒ.நோ: பொங்குதல் = செழித்தல். பொங்கு→ பொஞ்சு. பொஞ்சுதல் = செழித்தல்.

இங்கே → இஞ்சே (கீழை நெல்லை வட்டாரக் கொச்சை வழக்கு). cf. **E.** *bank*, galley-rower's bench; **OHG.** *bank*; **F.** *banc*; **OS.** *banc*; **OE.** *benc*; **E.** *bench*. nk-nch.]

வணங்கு என்னும் சொல்லின் அடிப்படைப் பொருள் வளை என்பதே. வணங்கத்தக்கவர் தேவராயினும் மக்களாயினும் அஞ்சத்தக்கவ ராகவே யிருப்பர்.

அச்செழுத்தலகு *acceḻutt(u)-alagu*, பெ. (n.) **அச்செழுத்துகளின் புள்ளி அளவு**. 1 புள்ளி 1/72 அல்லது 0.01383 விரலம்; unit of measurement for type bodies.

[அச்செழுத்து + அலகு.]

அச்செழுத்து *acc(u)-eḻuttu*, பெ. (n.) **அச்சடித்த எழுத்து**; printed letter or script.

[அச்சு + எழுத்து.]

அச்சென *accena*, வி.எ. (adv.) **விரைவாக**; quickly, swiftly. ''அச்செனத் தணந்தேகி'' (கந்தபு. மகேந். நகர்புகு. 97).

அச்சேறு-தல் *acc(u)-ēṟu-*, 5 செ.கு.வி. (v.i.) **அச்சடிக்கப்படுதல்**; to be printed.

[அச்சு + ஏறு.]

அச்சை *accai*, பெ. (n.) **அச்சத்தால் வரும் நோய்**; a disease arising from fear (சா.அக.).

அச்சொடுபுரி-தல் *accoḍu-puri-*, 2 செ.குன்றாவி. (v.t.) **மூலவடிவாகச் செய்தல், சரியொப்பாகச் செய்தல்**; to make similar to the original.

அச்சோ *accō*, இடை. (int.) 1. **ஓர் இரக்கச் சொல்**; an exclamation of pity. ''அச்சோ எனப் பல் இமையோரை யீண்டு சிறைவைத்த பாவம்'' (கந்தபு. அவைபுகு. 43). 2. **ஒரு வியப்புமொழி**; an exclamation of wonder. ''அச்சோ ஒருவ ரழகியவா'' (திவ்.பெரியதி. 9.2 : 1).

அச்சோப்பருவம் *accō-p-paruvam*, பெ. (n.) 1. **தாய் குழந்தையை அணைக்க 'அச்சோ அச்சோ' என்று கூறி அழைக்கும் பருவம்**; childhood, as the age when the mother seeks

her child's embrace, saying *accō accō*. "ஆரத் தழுவாய்வந் தச்சோ அச்சோ" (திவ். பெரியாழ். 1.8 : 6).

[அச்சோ + பருவம்.]

அச்சோப்பெண்காள் *accō-p-peṇgāḷ*, பெ. (n.) விளக்கைச் சுற்றிவந்தவாறு கைகொட்டிப் பாடிக்கொண்டு மகளிர் ஆடும் ஆட்டம் (பிராம.); dance of women round a lamp singing and clapping hands (Brāh.).

[அச்சோ + பெண்காள்.]

அசக்கு-தல் *aśakku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. *அசைத்தல்*; to shake. "அகடசக் கரவின் மணியா" (கந்தபு. பாயிரம், 1).

[அசங்கு (த.வி.) → அசக்கு (பி.வி.). *aśakku* causative of *aśaṅgu.*]

அசக்கு – cf. **E.** shake, **ME.** schaken, shaken. fr. **OE.** *scacan*, 'to shake, to move, quickly, flee, depart' rel. to **ON.** and **Swed.** *skaka*, **Dan.** *skage*, 'to shift, turn, reel'. **F.** *secourer*, to shake—(K.C.E.D.E.L.).

அசகங்கை *aśagaṅgai*, பெ. (n.) *தில்லைப்பால்*; the milky juice of the tree called tiger's milk spurge, *Excoecaria agallocha* (சா.அக.).

அசங்கு-தல் *aśaṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) *அசைதல்*; to stir, move, shake. "சங்கர நான்முகர் கைத்தலம் விண்ட சங்கிட" (கம்பரா. யுத்த. இராவணன் வதை. 28).

ம. அசங்குக; க. அசி; தெ. அசியாடு; குருக். அசர்னா.

[அல் → அலு → அலுங்கு → அலங்கு → அசங்கு.]

அசட்டன் *aśaṭṭaṉ*, பெ. (n.) 1. *குற்றமுள்ளவன்*; delinquent, offender, culprit, criminal. 2. *கீழ்மகன்*; low, mean person. "கள்வ ராயுழ லசட்டர்க ளைவரை" (கம்பரா. பால. திருவவ. 76).

அசட்டாட்டம் *aśaṭṭāṭṭam*, பெ. (n.) *புறக்கணிப்பு* (இராட்.); disregard, contempt (R.).

[அசடு + ஆட்டம்.]

அசட்டாளம் *aśaṭṭāḷam*, பெ. (n.) 1. *பாண்டலழுக்கு*; filthiness. 2. *ஒழுங்கின்மை*; disorder, confusion, muddle.

க. அசட்டாள; தெ. அசட்டாளுவு.

அசட்டுச்சிரிப்பு *aśaṭṭu-c-cirippu*, பெ. (n.) *மடத்தனமான சிரிப்பு*; foolish laughter.

[அசடு + சிரிப்பு.]

அசட்டுப்பிசட்டெனல் *aśaṭṭu-p-piśaṭṭ(u)-eṉal*, பெ. (n.) *பேதைத்தனமாய் நடந்துகொள்கை*; behaving foolishly, stupidly.

ம., மரா. அசகட விசகட.

['அசடு' என்னும் சொல்லின் எதுகை யிரட்டிப்பு.]

அசட்டுவிழி *aśaṭṭu-viḻi*, பெ. (n.) 1. *மனக்களங்கத்தை வெளிப்படுத்தும் பார்வை*; tell-tale look. 2. *அறியாமையை வெளிப்படுத்தும் பார்வை*; ignorant look. அசட்டுவிழி விழிக்கிறான் பார் (உ.வ.).

[அசடு + விழி.]

அசடன் *aśaḍaṉ*, பெ. (n.) 1. *மடையன், மூடன்*; fool, stupid, silly man. "அசட னறிவிலி" (திருப்பு. 1241). 2. *கீழ்மகன்*; low mean person. "அசடர் பெரியோ ராவரோ" (குமரேச. சத. 15).

ம. அசடன்; க. அசட.

அசடு *aśaḍu*, பெ. (n.) 1. *புண்ணின் பொருக்கு*; an incrusted substance formed over a sore in healing, scab. 2. *மாழை (உலோகம்) முதலிய வற்றிலிருந்து பெயரும் பொருக்கு*; small splinter of a surface as of a plate of metal, the scum or extraneous matter in metals thrown off in the process of melting. 3. *குற்றம், பழுது*; fault, defect, blemish. "அறிவுளோர் தமக்கும் யாதோ ரசடது வருமே யாகில்" (விவேகசிந். 64). 4. *அறிவு மழுக்கம்*; stupidity. 5. *அறிவு மழுங்கி*; stupid man, fool. அந்த அசடு எங்கே? (உ.வ.). 6. *அறியாமை*; ignorance.

ம., க. அசடு.

[அயறு → அசறு → அசடு. அயறு = புண் வழலை.]

ஒ.நோ: *Scab*, dry rough incrustation formed over sore in healing, cicatrice; mange, itch or similar skin-disease; kind of fungous plant-disease; mean dirty fellow (Arch.); (trade unionism) workman who refuses to join strike or union or takes striker's place, black-leg—(C.O.D.).

அசடுதட்டு-தல் *aśaḍu-taṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *அறியாமை புலப்படுதல்*; ignorance or folly

becoming evident. 2. *பொலிவழிதல்;* to lose beauty, brightness, as a town. அந்த ஊர் அசடுதட்டியிருக்கிறது (உ.வ.).

அசடுவழி-தல் *ašadu-vaḻi-*, 2 செ.கு.வி. (v.i.) *அறியாமை பெருகி வெளிப்படுதல்;* to display gross ignorance. அவனிடத்தில் அசடுவழி கிறது (உ.வ.).

அசடெழும்பல் *ašad(u) - eḻumbal*, தொ.பெ. (vbl.n.) *சிம்பெழும்பல்;* membranous separation of bone or other tissues from the living structure, as in dry necrosis, etc., exfoliation (சா.அக.).

[அசடு + எழும்பல்.]

அசதி[1] *ašadi*, பெ. (n.) 1. *களைப்பு;* tiredness, fatigue, weariness. 2. *தூக்க மயக்கம்;* drowsiness. 3. *சோர்வு;* langour, depression of spirits. 4. *வலுவின்மை;* weakness. 5. *மறதி;* forgetfulness. 6. *ஔவையாரால் அசதிக் கோவை பாடப்பெற்றவன்;* name of a shepherd, said to be the hero of *Avvaiyār's Ašadi-k-kōvai*, as having forgotten his name when he was asked.

ம. அசதி; தெ. அசது.

[அயர் → அயர்தி → அசர்தி → அசதி.]

அசதி[2] *ašadi*, பெ. (n.) சடுதி (வின்.); suddenness (W.).

அசதிக்கோவை *ašadi-k-kōvai*, பெ. (n.) *ஔவை யாரால் அசதி என்பவன்மேற் பாடப்பட்டதும் இறந்துபட்டதுமான ஒரு கோவைப் பனுவல்;* name of a love-poem in praise of *Ašadi*, attributed to *Avvaiyār* and now not extant.

[அசதி + கோவை.]

அசதிநோய் *ašadi-nōy*, பெ. (n.) *நரம்புத் தளர்ச்சியால் ஏற்படும் நோய்;* a disease resulting from nervous exhaustion, neurasthenia (சா.அக.).

அசப்பு[1] *ašappu*, பெ. (n.) *அசதி*[2] பார்க்க; see *ašadi*[2].

அசப்பு[2] *ašappu*, பெ. (n.) *கவனமின்மை;* inattentiveness, absence of mind. "ஒருவ ரசப்பிலே யென்னை யழைத்த போது" (அருட்பா, 6, பிள்ளைப்பெரு. 53).

ம. அயர்ப்பு.

[அயர் → அயர்ப்பு → அசர்ப்பு → அசப்பு.]

அசம் *ašam*, பெ. (n.) 1. *அத்தி* (சா.அக.); fig tree. 2. *சந்தனம்* (மலை.); sandal. 3. *வெங் காயம்* (மூ.அ.); onion. 4. *மூவாட்டை நெல்* (வின்.); three-year-old paddy. 5. *நெற்குவை* (தைலவ. தைல. 47); heap of paddy.

[Skt. அதம் = அத்தி. அதம் → அசம்.]

அசம்பி *ašambi*, பெ. (n.) *அசம்பை* பார்க்க; see *ašambai*.

அசம்பை *ašambai*, பெ. (n.) *வழிப்போக்கர் தோட்பை* (வின்.); traveller's bag hung on the shoulder.

ம. பயிம்ப; க. கசும்பெ; தெ. அசிமி; து. பசும்பெ; பய்ம்பெ.

[அசம் + பை.]

அசர்-தல் *ašar-*, 2 செ.கு.வி. (v.i.) 1. *களைப்பாற் சோர்வடைதல்;* to become weary or worn-out with fatigue. 2. *ஆழ்ந்த தூக்கத்தில் உணர் விழத்தல்;* to lose sensation during deep sleep. அசர்ந்து தூங்கிவிட்டேன் (உ.வ.). 3. *வியப் பால் மயங்குதல்;* to become astonished or amazed. அந்தச் சிறுமியின் நடனத்தைக் கண்டு அவையோ ரெல்லாரும் அசர்ந்து போயினர் (உ.வ.).

ம. அயர்க்க; க. அசுர்; தெ. அசுருசுரு; து. அசுரு.

[அயர் → அசர்.]

அசர் *ašar*, பெ. (n.) *தலைப்பொடுகு* (வை.மூ.); dandruff, scurf.

[அசறு → அசர்.]

அசரக்கம் *ašarakkam*, பெ. (n.) *கசகசா;* poppy seed or white poppy, *Papaver somniferum* (சா.அக.).

அசரப்போடு-தல் *ašara-p-pōḍu-*, 19 செ. குன்றாவி. (v.t.) *காலந்தாழ்த்தி வைத்தல்* (உ.வ.); to shelve, defer consideration of, allow to lie over (com.u.).

தெ. அசரவேயு.

[அசர + போடு. அயர → அசர.]

அசரை *ašarai*, பெ. (n.) *ஒருவகைக் கடல்மீன்;* a kind of sea-fish, *Lepidoc ephalichthyus*.

அசல்[1] *ašal*, பெ. (n.) 1. *அண்டை, பக்கம்;* neighbourhood, vicinity. 2. *அண்டைவீட் டான்-ர்;* next-door neighbour or neighbours.

'அசல் வாழ்ந்தால் ஐந்துநாள் பட்டினி கிடப்பாள்' (பழ.). 'அசல்வீட்டு விளக்கை மூச்சு விட்டு அணைப்பாள்' (பழ.). 3. *வேற்றூரது, வெளிநாட்டது, உறவல்லாதது* (அக.நி.); that which is foreign, strange.

[அயல் → அசல்.]

அசல்[2] *aśal*, பெ. (n.) *அசவல் பார்க்க*; see *aśaval*.

அசல்பிளந்தேறிடு-தல் *aśal-piḷand(u) - ēṟiḍu-*, *17* செ.குன்றாவி. (v.t.) *'வீடுபேற்றின் பின் ஒருவர் தம் நல்வினைகளை நண்பரிடத்தும் தீவினைகளைப் பகைவரிடத்துஞ் சேர்ப்பிக்கை'* (அஷ்டாதச. அர்ச்சி. பிர. *1*); to transfer one's merits to friends and sins to enemies on one's attaining final bliss.

[அசல் + பிளந்து + ஏறு + இடு.]

அசல்விட்டுக்கிட-த்தல் *aśal-viṭṭu-k-kiḍa-*, *3* செ.கு.வி. (v.i.) *சூழ்ந்துள்ள நிலங்கள் அறுவடையான பின்னும், அறுவடையாகாதிருத்தல்* (நாஞ்.); to remain unharvested while the surrounding fields have been harvested (Nāñ.).

[அசல் + விடு + கிட.]

அசல்விடு-தல் *aśal-viḍu-*, *20* செ.கு.வி. (v.i.) *அசல்விட்டுக்கிட-த்தல் பார்க்க*; see *asal-viṭṭu-k-kiḍa-*.

[அசல் + விடு.]

அசலகத்தான் *aśal-agattāṉ*, பெ. (n.) *அடுத்த வீட்டுக்காரன்* (இராட்.); neighbour (R.).

[அசல் + அகத்தான்.]

அசலகம் *aśal-agam*, பெ. (n.) *அடுத்த வீடு* (திவ். பெரியாழ். *2.9 : 6*); neighbouring house, next door.

ம. அசலாத்து

[அயலகம் → அசலகம்.]

அசலர் *aśalar*, பெ. (n.) *அயலார்*; neighbours, strangers. "அசலருஞ் செச்செச் செச்செயென" (திருப்பு. *459*).

அசலார் *aśalār*, பெ. (n.) *பிறர்* (உ.வ.); others. 'அசலார் உடைமைக்குப் பேயாய்ப் பறக்கிறது' (பழ.).

அசலிடு-தல் *aśal-iḍu-*, *20* செ.கு.வி. (v.i.) *எல்லை கடத்தல்*; to pass beyond the limits; to overstep. 'பிராதிகூல்யம் அசலிட்டுத் தன்னளவும் வருமென்று' (திவ். பெருமாள். *3 : 1*, அவ.).

அசலை *aśalai*, பெ. (n.) *மீன்வகை*; a kind of fish. "நெற்றிலியசலை மசறி" (குருகூர்ப். *20*).

[அயிலை → அயலை → அசலை.]

அசவல் *aśaval*, பெ. (n.) *கொசுகு* (சூடா.); gnat, mosquito.

அசறு *aśaṟu*, பெ. (n.) *1. சேறு* (பிங்.); mud, mire. 2. *தலைப்பொடுகு* (உ.வ.); dandruff, scurf. *3. புண்ணின் பொருக்கு*; scab. 'ஆறின புண்ணினும் அசறு நிற்கும்' (பழ.)—(சா.அக.). 4. *புண்ணிலுள்ள அழுக்கு;* impure matter in an ulcer or sore. 5. *ஆடுகளுக்குண்டாகுஞ் சொறிநோய்;* scab in sheep and goats. 6. *செடிப்பூச்சி வகை*; minute insect that sticks on leaves and injures plants. 7. *ஒருவகை வண்டு;* a kind of beetle (சா.அக.). *8. புழு;* worm (சா.அக.).

[அயறு → அசறு.]

அசறுக்கம் *aśaṟukkam*, பெ. (n.) *கருஞ்சிவப்பு நிறம்*; dark-red colour (W.).

அசறுப்புழுநோய் *aśaṟu-p-puḻu-nōy*, பெ. (n.) *உடம்பினுள் சிறு பூச்சிகளினாலேற்படும் நோய்கள்*; diseases arising from the action of microbes in the system (சா.அக.).

[அசறு + புழு + நோய்.]

அசறுபாய்-தல் *aśaṟu-pāy-*, *2* செ.கு.வி. (v.i.) *அசும்பொழுகுதல்* (திவ். பெரியாழ். *5.4 : 8*, வியா.); to trickle.

அசறுபிடி-த்தல் *aśaṟu-piḍi-*, *4* செ.கு.வி. (v.i.) *1. செடியில் அல்லது பழத்தில் பூச்சி பிடித்தல்;* sticking of small insects to fruits or herbs. 2. *புண்ணின்மேல் பக்கு உண்டாதல்*; the formation of scab on a sore while it is healing (சா.அக.).

அசன்றிகா *aśaṉṟigā*, பெ. (n.) *தைவேளை* (மலை.); species of cleome.

அசனப்பூடு *aśaṉa-p-pūḍu*, பெ. (n.) *வெள்ளைப் பூடு* (சித்.அக.); garlic.

[அசனம் + பூடு.]

அசனம் *aśaṉam*, பெ. (n.) *1. பகுதி* (பிங்.); portion. 2. *அளவு (பிங்.)*; measure.

அசனவு *aśaṉavu*, பெ. (n.) *இலையத்தி* (பரி.அக.); a kind of country fig.

அசா *aśā*, பெ. (n.) *1. தளர்ச்சி*; languor, faintness. ''அசாஅத்தா னுற்ற வருத்தம்'' (நாலடி. 201). *2. துன்பம்*; distress. ''அரிவை புலம்பசா விடவே'' (குறுந். 338).

[அயா → அசா.]

அசாகசம் *aśāgaśam*, பெ. (n.) *பொய்* (யாழ்ப்.); lie (J.).

அசாகம் *aśāgam*, பெ. (n.) *அரசு, அரசமரம்* (பரி.அக.); pipal tree.

அசாகரம் *aśāgaram*, பெ. (n.) *கரிசாலை* (சா.அக.); eclipse plant, *Eclipta prostrata.*

அசாகை *aśāgai*, பெ. (n.) *1. களி* (சங்.அக.); a paste of flour. *2. புற்கை, ஒருவகைக் கஞ்சி*; a kind of porridge of rice or other grains. *3. சாகாமை*; the condition or nature of being immortal (சா.அக.).

அசாணிமூலி *aśāṇi-mūli*, பெ. (n.) *அச்சாணி மூலி* பார்க்க; see *accāṇi-mūli.*

அசாவிடு-தல் *aśā-viḍu-*, 20 செ.கு.வி. (v.i.) *இளைப்பாறுதல்*; to rest. ''இரைதேர்ந் துண் டசா விடூஉம் புள்ளினம்'' (கலித். 132 : 3).

[அயாவிடு → அசாவிடு.]

அசாவு-தல் *aśāvu-*, 5 செ.கு.வி. (v.i.) *தளர்தல்*; to be discouraged, to lose heart, to droop, languish, grow slack. ''அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்'' (குறள், 611).

[அயாவுறு → அசாவுறு → அசாவு.]

அசாவுறு-தல் *aśā-v-uṟu-*, 20 செ.கு.வி. (v.i.) *தளர்தல்*; to be discouraged. ''அசாவுறு செருவில்வென் றாடல்கொள் வதற்கு'' (கந்தபு. யுத்த. முதனாட். 383).

[அயா + உறு – அயாவுறு → அசாவுறு.]

அசிர்-த்தல் *aśir-*, 4 செ.குன்றாவி. (v.t.) *ஐயுறுதல்*; to doubt. 'தாய்வழியை நினைத்து அசிர்த்தாரிறே' (ஈடு, 6.7 : 1).

[அயிர் → அசிர்.]

அசீர் *aśīr*, பெ. (n.) *தட்டுமுட்டு* (யாழ்ப்.); domestic utensils (J.).

அசுகி *aśugi*, பெ. (n.) கடுகு (பரி.அக.); mustard.

அசுகுணி *aśuguṇi*, பெ. (n.) *செடிப்பூச்சி வகை* (வின்.); a small insect breeding and feeding on



அசுகுணி

plants. *2. காதில் வரும் கரப்பான்* (வின்.); a kind of eruption, chiefly about the ears.

[அசுவுணி → அசுகுணி.]

அசுவுணி பார்க்க; see *aśuvuṇi.*

அசுணம் *aśuṇam*, பெ. (n.) *இன்னிசை நுண் ணுணர்ச்சி யுள்ளதும், இன்சுவை யூனுடைய தும், பிடிப்பவர் புதர்மறைவில் நின்று முன்பு இனிய யாழிசையால் மயக்கிப் பின்பு திடு மெனக் கடும்பறையை முழக்குவதால் அதனைப் பொறுக்கமாட்டாது இறந்து படுவதும், வேறுவகையிற் பிடித்தற்கரியதும், பண்டைத் தமிழகத்திலேயே (குமரிநாட் டிலேயே) இறந்துபட்டதாகக் கருதப்படுவது மான ஒரு விலங்கினம்*; an extinct animal of ancient Tamil Nadu, reputed to have been a table delicacy and believed to have been so susceptible to harmony that when it was fascinated by melodious notes of music, a sudden loud beat of a drum caused its instantaneous death.

''அசுணங் கொல்பவர் கைபோல் நன்றும்
இன்பமுந் துன்பமு முடைத்தே'' (நற்.304).

''இன்ன ளிக்குரல் கேட்ட வசுணமா
அன்ன ளாய்மகிழ் வெய்துவித் தாளரோ''
(சீவக. 1402).

''இசைகொள் சீறியா ழின்னிசை கேட்ட
அசுண நன்மா வந்நிலைக் கண்ணே
பறையொலி கேட்டுத்தன் படிமறந்
ததுபோல்''
(பெருங். உஞ்சைக். 47 : 241-3).

அசுணம் என்பது ஒரு பறவையினம் என்று கூறும் அறிஞரும் உளர். ஆயின், அசுணமா என்றே யன்றி அசுணப்புள் அல்லது அசுணப் பறவை என்று வழக்கின்மையானும், பண்டை யுரையாசிரிய ரெல்லாரும் விலங்

கென்றே யுரைத்தமையானும், அங்ஙனமே இங்குங் கொள்ளப்பட்டது.

'**அசுணமா**-கேகயப்புள், இசையறி பறவை; a species of bird (which is) charmed by music and is said to die while under the charm' என்பது சாம்பசிவம்பிள்ளை தமிழ்-ஆங்கில அகரமுதலி (பக். 72).

அசுணமா *aśuṇa-mā*, பெ. (n.) **அசுணம்**; an extinct animal. "அசுணமா முடியுமா போலே" (ஸ்ரீவசன. 41). 'அசுணமாச் செவிப்பறை அடுத்தது போலும்' (பழ.).

அசுணம் பார்க்க; see *aśuṇam.*

அசுதி *aśudi*, பெ. (n.) 1. *அண்டி வழியாகப் பெருங்குடற்குள் நீர் அல்லது கிசம்* (gas) *செலுத்துகை* (புதுவை); enema (Poṇḍ.). 2. *அதைச் செலுத்தும் பீச்சாங்குழல்* (புதுவை); clyster pipe (Poṇḍ.).

அசுப்பு *aśuppu*, பெ. (n.) 1. *திடுநிலை;* suddenness, quickness. அசுப்பிலே சாகிறது (இராட்.). 2. *கவனமின்மை* (புதுவை); inattentiveness, absence of mind (Poṇḍ.). 3. *உளவறிகை* (சங்.அக.); spying.

[அயர்ப்பு → அசர்ப்பு → அசப்பு → அசுப்பு.]

அசும்பு - தல் *aśumbu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *ஒழுகுதல்;* to flow. "அசும்பு பொன்வரை" (சீவக. 533). 2. *பரவுதல்;* to spread, be diffused. "அவிரொளி யசும்ப" (காஞ்சிப்பு. பன்னிரு. 164). 3. *வழுக்குதல்;* to be slippery. "சோலைத்தே னொழுகிநின் றசும்புயர் சந்தனத் தொகுதிக் குன்றம்" (சீவக. 3063).

[அள் → அய் → அயிம்பு → அசிம்பு → அசும்பு.]

அசும்பு *aśumbu*, பெ. (n.) 1. *வீசுகை* (பொதி.நி.); scattering, throwing. 2. *ஒளிர்வு, காந்தி* (பொதி.நி.); lustre. 3. *ஊற்று* (பிங்.); spring. 4. *கிணறு* (திவா.); well. 5. *நீர்ப்பொசிவு;* ooze, exudation. "அசும்பிவர் சாரல்" (சீவக. 522). 6. *சேறு* (பிங்.); soft mud. "தாழ்கண் ணசும்பின்" (மணிமே. 8 : 6). 7. *உளைநிலம்* (திவா.); miry place. 8. *வழுக்குநிலம்;* slippery ground. 9. *சிறுதிவலை;* minute drop of water. "மழைதூங் கசும்பினிற் றுன்னி" (திருக்கோ. 149). 10. *பற்று;* adherence, connection. "அசும்பறத் துடைத்தும்" (ஞானா. 41). 11. *வறுமை;* want, poverty. 12. *குற்றம்;* blemish, fault. "அசும்பற வகன்ற ஞானத் துறவனே" (சேதுபு. சங்கர. 92).

[அள் → அய் → அயிம்பு → அசிம்பு → அசும்பு.]

அசும்புசெய்-தல் *aśumbu-šey-*, 1 செ.கு.வி. (v.i.) *ஒளிர்தல்;* to shine, emit light. "ஆய பொதியில் வளைபொன்னா லசும்பு செய்து" (திருவிளை. உலவா. 17).

அசுமாற்றம் *aśu-māṟṟam*, பெ. (n.) 1. *குறிப்பு, சாடை* (யாழ்ப்.); hint, slight indication, gesture. 2. *அயிர்ப்பு* (யாழ்ப்.); doubt, suspicion (J.).

அசுர் *aśur*, பெ. (n.) *ஆரியர்க்குப் பகைவரான ஒரு வகுப்பார்;* an anti-Aryan race of people said to be demons in Purāṇās. "அசுரைச் செற்ற......மாதவன்" (திவ். இயற். திருவிருத். 67).

[அசுரர் → அசுர்.]

அசுரகுரு *aśuraguru*, பெ. (n.) *அசுரர் குரவனான வெள்ளி;* Veḷḷi, the preceptor of the Asurās.

அசுரசந்தி *aśura-šandi*, பெ. (n.) *அந்தி நேரம்;* evening twilight.

அசுரநாள் *aśura-nāḷ*, பெ. (n.) *19ஆம் நாண் மீனான மூலம்* (பிங்.); Mūlam the 19th lunar asterism.

அசுரம் *aśuram*, பெ. (n.) *கொல்லேறு கோடல், திரிபன்றி யெய்தல், கன வில் நாணேற்றல் முதலிய மறவினைகளும் அருவினைகளுஞ் செய்து ஒரு பெண்ணை மணத்தல்;* acquirement of a bride by the successful performance of some valiant deed enjoined by her father, such as seizing of a wild bull, shooting down of a whirling target in the shape of a boar, bending of a heavy bow and fastening its string, etc.

மன்றல் எட்டாவன : பிரமம், பிரசா பத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன.

அவற்றுள்.........அசுரமாவது: கொல்லேறு கோடல், திரிபன்றி யெய்தல், வில்லேற்றுதல் முதலியன செய்து கோடல்.

"முகையவிழ் கோதையை முள்ளெயிற்
றரிவையைத்
தகைநலங் கருதுந் தருக்கினி ருளரெனின்
இவையிவை செய்தாற் கெளியண்மற்
றிவளெனத்

தொகைநிலை யுரைத்த பின்றைப் பகைவலித்
தன்னவை யாற்றிய வளவையில்
தொன்னிலை யசுரந் துணிந்த வாறே''
(தொல். பொருள். கள. 1, நச். உரை).

''கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்'' (கலித். 103)

என்னும் பண்டைத் தமிழாயர் மரபின்படி, கண்ணபிரானார் எழுவிடை தழுவி நப் பின்னையை மணந்தார்.

கதிரவக் குலமாகிய சோழர்குடியின் வட நாட்டுக் கிளையைச் சேர்ந்த இரகுராமனார், கன வில் நாணேற்றிச் சீதையை மணந்தார்.

திங்கட்குலமாகிய பாண்டியர் குடியின் வட நாட்டுக் கிளையைச் சேர்ந்த அருச்சுனன், திரிபன்றி யொத்த சுழல்மீனை யெய்து திரௌபதியை மணந்தான்.

அசுரம் என்பது, தலைமகட்குப் பொன் பூட்டிச் சுற்றத்தார்க்கு வேண்டுவன கொடுத்துக் கொள்ளும் மணவகை என்று, சென்னை அகரமுதலிப் பின்னிணைப்புக் கூறுவது மறச்செயல் ஒன்றையுங் குறியா விடினும், பெருவழக்கான தமிழ் மரபிற்கு ஒத்ததாகவே யிருத்தல் காண்க.

அசுரமணம் *aśura - maṇam*, பெ. (n.) *அசுரம் பார்க்க*; see ***aśuram***.

அசுரமந்திரி *aśura-mandiri*, பெ. (n.) *அசுரரின்* **மந்திரியான வெள்ளி** (திவா.); Veḷḷi, as minister of the Asurās.

அசுரமருத்துவம் (அசுரவைத்தியம்) *aśura-maruttuvam*, பெ. (n.) ***அறுவை மருத்துவம்***; surgery (W.).

''மீன்தேர் கொட்பிற் பனிக்கயம் மூழ்கிச்
சிரல்பெயர்ந் தன்ன நெடுவெள் ளூசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்
அம்புசேர் உடம்பினர்'' (பதிற். 42 : 2-5),

''ஆரார் தலைவணங்கார் ஆரார்தாம் கையெடார்
ஆரார்தாம் சத்திரத்தி லாறாதார் —சீராரும்
தென்புலியூர் மேவுஞ் சிவனருள்சே ரம்பட்டத்
தம்பிடிகான் வாசலிலே தான்''
(தனிப். தி. 1, பக். 138),

''உடலிடைத் தோன்றிற் றொன்றை யறுத்ததன் உதிர மூற்றிச்
சுடலுறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர்''
(கம்ப. யுத்த. கும்ப. 146),

''......கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து''
(நீதிநெறி. 56)

என்பவற்றால், அசுர மருத்துவம் என்னும் அறுவை மருத்துவம் தமிழ் மருத்துவமே யென்பது பெறப்படும்.

அசுரமாயம் *aśura-māyam*, பெ. (n.) *பேய்* **பூதங்களைக் கொண்டு செய்யும் மாயவினை**; a kind of magic, performed with the aid of evil spirits — demoniacal magic.

அரசுமெய்ப்பாடு (அசுர சத்துவம்) *aśura-mey-p-pāḍu*, பெ. (n.) ***மகளிர்க்குரிய பத்து மெய்ப் பாடுகளுள் (சத்துவங்களுள்) ஒன்று*** (கொக். கோ.); a characteristic of women, one of the ten external signs of erotic emotion.

அசுரர் *aśurar*, பெ. (n.) **ஆரியர்க்கும் தேவர்க்கும் பகைவராகவும், பதினெண் கணத்துள் ஒரு கணமாகவும் சொல்லப்படும் ஓர் உயர்திணை வகுப்பார்**; a rational class of beings said to be inimical to the Aryan race and gods, and constituting one of the eighteen classes of celestial hosts.

[சுரர் = தேவர். சுரர் × அசுரர் = தேவ ரல்லாதார், தேவர்க்குப் பகைவர். 'அ' அன்மை மறுதலைப் பொருள் முன்னொட்டு.]

ஆரியப் புராணங்களில் அசுரர் என்று பொதுவாகச் சொல்லப்படுபவரின் வரலாற் றையும் இயல்பையுங் கூர்ந்து நோக்குங்கால், அவர் ஆரியர்க்கு மாறாயிருந்த தமிழ வேந்தரும் மன்னரு மென்றே கருத இடந்தரு கின்றது. அசுரனும், திருமாலின் ஐந்தாம் தோற்றரவான மாணி (பிரமச்சாரி) யுருவால் அழிக்கப்பட்டவனுமான ***மகாபலிச் சக்கர வர்த்தி*** உண்மையில், **மாவலி** என்ற பெயர் கொண்டவனும், செங்கோலனும், மாபெருங் கொடைவள்ளலுமான ஒரு சேரவேந்தனே.

சோ வென்னும் அரணிருந்த சோணித புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அரசனும், கண்ணபிரானான திராவிட மன்னனுடன் போர் புரிந்து தோற்றவனு மான, **வாணாசுரன்** என்பவன் **மாவலி** வேந்த னின் மைந்தனே.

மணிமேகலை காலத்துக் **கிள்ளிவளவன்** என்னும் சோழ வேந்தனின் கோப்பெருந் தேவியாயிருந்த ***சீர்த்தி*** என்னும் கோமகள், ***மாவலி*** வழிவந்தவளே.

எருமையூர் அரையம் (மைசூர் ராஜ்யம்), கருநூல் மாவட்டம், வடார்க்காடு மாவட்டம் ஆகியவற்றின் பகுதிகளைக் கொண்ட வாண கோப்பாடியை, இடைக்காலத்திற் பன்னூற் றாண்டாகச் சீருஞ் சிறப்புமாக ஆண்டுவந்த **வாணகோவரையர்** என்னும் சிற்றரசக் குடியினர் **வாணன்** கொடிவழியினரே.

அசுர மணம், அசுர மருத்துவம், அசுர வினை முதலிய வழக்காறுகள், தமிழ நாகரிகத் திற்கும் வாழ்க்கை நெறிக்குமே பொருந்து வனவாயிருக்கின்றன.

அசுரன் என்னும் சொல்லைப்பற்றிப் பேரா. (P. S.) **சுப்பிரமணிய சாத்திரியார்** தம் ***வடமொழி நூல் வரலாறு*** என்னும் பொத்த கத்தில் வரைந்திருப்பது வருமாறு:

''ஸெண்ட் அவெஸ்தாவில் கடவுள் ***அஹுர மஸ்தா, மஸ்தா, அஹுர*** என்ற சொற்களால் வழங்கப்படுகின்றார். ஆங்குள்ள ***மஸ்தா*** என்ற சொல்லும் வடமொழி ***மஹித*** என்ற சொல்லும் ஒருபொருட் கிளவியாயிருத்தல் கூடும். அவ்வாறே ***அஹுர, அஸுர*** என்ற சொற்களும் ஆகும். ஆங்கு **அஹுர** என்பது விசேஷணச் சொல்லாகவும் **மஸ்தா** என்பது விசேஷியச் சொல்லாகவும் இருக்கலாம். ருக் வேதத்திலும் **அஸுர** என்ற சொல் விசேஷண மாகவே வழங்கப்பட்டுள்ளது. அன்றியும் கடவுளுக்குப் பகையினத்தாராகத் **தேவர்** ஸெண்ட் அவெஸ்தாவிற் கூறப்பட்டனர். ஆதலின் **அஸுரர், தேவர்** இச்சொற்களுடைய பொருளின் வரலாறு நன்கு ஆராய்தற்கு உரியது.''

''***அஸுர:*** என்ற சொல் பலமுள்ளவன் என்ற பொருளோடு அக்கினி, இந்திரன், வருணன், ஸோமன், வஸுக்கள், மித்திரா வருணர், வாயு, ருத்திரன், பர்ஜந்யன், ஸவிதா, மருத்துக்கள் முதலியோர்க்கு அடை மொழியாக வழங்கப்பட்டது. சிலவிடத்து அச் சொல்லே **பலத்தைக் கொடுப்பவன்** என்ற பொருளையுங் கொண்டது. அஸுரரான தேவர்களுக்கும் மேலானவன் என்ற வழக்கு உளது. தேவரல்லாதார்க்கும் அஃது அடை மொழியாய் வழங்கப்பட்டுள்ளது. தேவரல் லாதார் என்பது தேவரைப் போன்றவரும் தேவரிடத்தினின்று வேறுபட்டவருமான **விருத்திரர்** முதலியோரைக் குறிக்கும். சில விடத்து விசேஷியச் சொல்லின்றி விசேஷணச் சொல்லாகிய ***அஸுர:*** என்பது மாத்திரம் ருக்வேதத்திலும், ***அஹுர:*** என்பது மாத்திரம் ஸெண்ட் அவெஸ்தாவிலும் வழங்கப்பட்டன. ருக் வேதத்தின் பிற்பகுதியில் அஸுர: என்ற சொல் விசேஷியமின்றி வழங்கப்படின், அஃது அதேவரையுங் குறிக்குமென்றும் பத்தாம் மண்டிலம் 124ஆம் ஸூக்தத்திலுள்ள அஸுர: என்ற சொற்கு அவ்வாறே பொருள் கொள்ள இடன் இருக்கின்றது என்றும், **மாக்டானல்** கூறுகின்றார். அந்த ஸூக்தத்தில் 'அஸுர ரான பிதரர்க்கு' என்றும், 'அவர் மாயை யின்றி அஸுரர் ஆயினர்' என்றும் பொருட் கொண்ட இரு தொடர்களில் அச் சொல் காணப்படுகின்றது. இரண்டாவது தொடரில் **அவர்** என்பது அக்கினி, ஸோமன், வருணன் இவரைக் குறிக்கின்றமையால், அச் சொற்குப் பலமுள்ளவன் என்றே அங்குப் பொருளாகக் கொள்ளலாம் எனத் தோற்றுகின்றது. ஆகலின் ருக்வேத ஸம்ஹிதை முழுமையிலும் **அஸுர** என்ற சொற்குப் பலமுள்ளவன், பலத்தையளிப்பவன், உயிருள்ளவன், உயிரை யளிப்பவன் முதலிய பொருளில் ஒன்றைக் கொளல் தகும். அச் சொல் அக்கினி முதலிய தேவதைகட்கு அடைமொழியே எனக் கொளலுந் தகும்'' (வ.நூ.வ. பக். 43-46).

அதர்வவேதம்—நான்காம் வேதம்—காலம்

''***அஸுர:*** என்ற சொல் ருக்வேத ஸம் ஹிதையில் **பலமுடையவன், உயிர்கொடுப் போன்** என்ற பொருளில் வழங்கப்பட்டது. தேவர்களுக்குப் பகைவன் என்ற பொருளில் அங்குக் கூறப்படவில்லை. ஈண்டுச் சில விடத்துப் பலமுடையவன், உயிர்கொடுப் போன் என்ற பொருளிலும், சிலவிடத்துத் தேவர்க்குப் பகையினன் என்ற பொருளிலும் அச் சொல் வழங்கப்பட்டுள்ளது. முற்கூறிய பொருளைக் கொண்ட அஸுர: என்ற சொல்லைக் கொண்ட மந்திரங்கள் பழையன எனவும், பிற்கூறிய பொருளைக் கொண்ட அச் சொல்லைக் கொண்ட மந்திரங்கள் பிற்காலத் தன எனவும் கொள்ளல் தகும். பிற்கூறிய பொருளிலேயே அச் சொல் அதர்வ வேதத்தில் வழங்கப்பட்டது என **மாக்டானல்** கூறுவது ஆராய்தற்குரியது. ருக்வேதத்தில் அச் சொல் பலமுடையோன், உயிர்கொடுப்போன் என்ற பொருளிலே பத்து மண்டலத்துள்ளும்

வழங்கப்பட்டதாகக் கொள்ளல் கூடும் என முன்னரே கூறப்பட்டது'' (ஷி பக். 105-6).

அசுரவியம் (அசுரவாத்தியம்) *aśura-v-iyam*, பெ. (n.) ***முரசு முதலிய இசைக்கருவிகள்*** (நாஞ்.); musical instruments like drum, etc. (Nāñ.).

அசுரவினை (அசுரகிருத்தியம்) *aśura - viṉai*, பெ. (n.) ***அசுரர் செய்தற்குரிய அருஞ்செயல்;*** marvellous work, Herculean labour, as of Asurās.

அசுரற்றடிந்தோன் *aśuraṟṟaḍindōṉ*, பெ. (n.) **சூரபதுமன் என்னும் அசுரனைக் கொன்றவனாகச் சொல்லப்படும் முருகன்** (கந்தபுராணம்); Muruga, as the slayer of the Asurā called Sūrapadmā (Skanda purāna).

[அசுரன் + தடிந்தோன். தடிதல் = கொல்லுதல்.]

அசுரன் *aśuraṉ*, பெ. (n.) *1. அசுர வகுப்பினருள் **ஒருவன்***; one of the class of Asurās. 2. ***நவச்சாரம்;*** hydrochlorate of ammonia — Sal ammoniac (சா.அக.). 3. ***இராகு***; Rāhu, the ascending node of the moon. 4. ***கேது***; Kētu, the descending node of the moon. ''தகைபெறு பூத சம்போ தனனென்று மசுர னென்றும்'' (மச்சபு. புவநகோச. 27).

அசுவணி *aśuvaṇi*, பெ. (n.) ***சொறி*** (இ.வ.); eczema (Loc.).

அசுவு *aśuvu*, பெ. (n.) *அசுவுணி* பார்க்க; see *aśuvuṇi*.

அசுவுணி *aśuvuṇi*, பெ. (n.) **செடிப்பூச்சி வகை**; a destructive insect. *அசுகுணி* பார்க்க; see *aśuguṇi*.

அசுழம் *aśuḻam*, பெ. (n.) **நாய்**; dog. ''கருதசுழ மாமிந்த மட்டைதனை யாள'' (திருப்பு. 140).

தெ. அசூர

அசுனாதி *aśuṉādi*, பெ. (n.) **இதள்** (வை.மூ.); mercury.

ஒ.நோ : அகனாதி

அசை-தல் *aśai-*, 2 செ.கு.வி. (v.i.) 1. ***அலுங்குதல்***; to shake slightly. ஓர் இலைகூட அசையவில்லை (உ.வ.). 'அசைந்து தின்கிறது மாடு, அசையாமல் தின்கிறது வீடு' (பழ.). 2. **நுடங்குதல், துவளுதல்**; to be flexible. ''அசையியற் குண்டாண்டோர் ஏஎர்'' (குறள், 1098). 3. ***தள்ளாடுதல்***; to totter, stagger. ''வெங்கழுத் தசைய நின்று சுமந்தி ளைத்தனர்'' (பாரத. முதற்போ. 36). 4. ***இயங்குதல்;*** to move, stir. 'அவனன்றி யோரணுவும் அசையாது' (பழ.). 5. **ஆடுதல், கூத்தாடுதல்** (பிங்.); to dance. 6. ***மெல்லச் செல்லுதல்***; to walk or ride slowly. 7. ***புடைபெயர்தல், செல்லுதல், விட்டுப்போதல்***; to go away, depart. ''அசைந்திடா தொழிகவென'' (ஞானவா. சிகித். 70). 8. ***உலாவுதல்***; to move along, as wind. ''தென்றியா யசைந்து மெல்லச் சினகரம் புகுது மெல்லை'' (கந்தபு. உற்பத். திருவவ. 11). 9. ***கைகாலோய்தல், உடம்பு தளர்தல்***; to become weary, exhausted, weak, infirm as a limb of the body, to become worn-out with fatigue. ''நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி'' (சிறுபாண். 32). 10. ***உளைதல், நோதல்;*** to ache, as an exhausted limb of the body. 11. ***நீர்வேட்கையால் இளைத்தல், விடாய்த்தல்***; to suffer from thirst. ''உண்ணு நீர்வேட் டசைந்தே னெனவுரைப்ப'' (சீவக. 1592). 12. ***கலங்குதல், தடுமாறுதல்***; to be perplexed, disconcerted. ''மடங்கலின் றோற்ற நோக்கி யந்தக னசைந்து நின்றான்'' (கந்தபு. யுத்த. சிங்க. 310). 13. ***நீங்குதல், குறைதல்***; to be removed, to diminish. ''அசையாது நிற்கும் பழி'' (ஆசாரக். 74). 14. ***இளைப்பாறுதல்***; to rest. ''புன்மேய்ந் தசைஇ'' (பு.வெ. 1 : 11), ''கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட் டசைஇ'' (புறநா. 141 : 3). 15. ***இராத் தங்குதல்***; to stay for the night. ''கல்லென் சீறூ ரெல்லியி னசைஇ'' (அகநா. 63). 16. ***தங்கியிருத்தல்***; to lodge, to stay. ''தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள் ஆவி னன்குடி யசைதலு முரியன்'' (திருமுருகு. 175-6). 17. ***திரிதல், பலவிடந் தங்குதல்;*** to wander, sojourn. ''அங்கண் அசைந்திடு தன்மை யுன்னி யருள்செய்'' (கந்தபு. உற்பத். தேவகிரி. 10). 18. ***இருத்தல், கிடத்தல்***; to be or lie in a place. ''குறங்கின் மிசை யசைஇய தொருகை'' (திருமுருகு. 109). 19. ***சோம்புதல்***; to be idle, inactive, indolent. ''இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்'' (குறள், 1040). 20. ***அஞ்சுதல்*** (சங்.அக.); to fear, to be afraid of.

ம. அயவு; க. அசி; தெ. அசியாடு; து. அசலெ; குரு. அசர்னா.

[அல் → அலை → அசை.]

அசை-த்தல் *asai-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. ***அலுங்குதல்***; to shake slightly. ''ஆடி யாடி யசைந்தசைந் திட்டு'' (திவ். பெரியாழ். திரு. 137). 2. ***ஆட்டுதல்;*** to shake violently. ''நந்திபிரான் றிருப்பிரம்பை யசைத்தருள'' (காஞ்சிப்பு. மணிகண். 34). 3. ***இயக்குதல்;*** to move, stir. 4. ***வீசுதல்;*** to fan. ''ஆலவட்ட மசைத்தனர்'' (கந்தபு. உற்பத். திருக்கைலா. 21). 5. ***கட்டுதல்***; to tie, bind, fasten. ''புலித் தோலை யரைக்கசைத்து'' (தேவா. 7.24 : 1). 6. ***வருத்துதல்;*** to afflict, persecute. ''நாய் நாவி னல்லெழி லசைஇ'' (சிறுபாண். 17). 7. ***தட்டுதல்***; to knock at. ''கதவஞ்சேர்ந் தசைத்தகை'' (கலித். 68). 8. ***சார்த்துதல்;*** to join with. ''அசைநிலைக் கிளவி யாகி வருநவும்'' (தொல். சொல். இடை. 2). 9. ***ஓசையெடுத்தல்***; to raise the pitch. 10. ***ஒற்றறுத்தல்***; to set to time-measure. ''அசைவிளங்கும் பாடலொடு'' (பு.வெ. 7 : 18). 11. ***சொல்லுதல்***; to say. ''சேடனாயிர நாவி னாலு மசைக்கினும்'' (குற்றா. தல. திருக் குற்றா. 70).

[அல் → அலை → அசை.]

சங்க அகராதியில், அசைத்தல் என்னும் சொல்லிற்கு இறுமாப்பு என்றொரு பொருள் குறிக்கப்பட்டுள்ளது, அத்துணைப் பொருத்த மாகத் தோன்றவில்லை.

அசை *asai*, பெ. (n.) 1. ***அசைகை அல்லது அசைக்கை***; shaking. 2. ***அசைச்சொல்;*** expletive. *அசைச்சொல்* பார்க்க; see *asai-c-col*. 3. ***நேர், நிரை, நேர்பு, நிரைபு என நால் வகைப்படும் செய்யுளுறுப்பு***; metrical syllable, of which there are four kinds, viz., *nēr*, *nirai*, *nērbu*, and *niraibu*. ''மாத்திரை யெழுத்திய லசைவகை யெனாஅ'' (தொல். பொருள். செய். 1). ''அசைத்திசை கோடலி னசையே'' (இலக். வி. 711). 4. (இசை) ***தாளத்தில் ஒரு மாத்திரைக் காலம்;*** (Mus.) variety of duration of time-measure consisting of one *mättirai*. 'கொட்டு மசையும்......அசை ஒரு மாத்திரை; அதற்கு வடிவு, எ. ......அசையாவது தாக்கி யெழுதல்' (சிலப். 3 : 16, அடியார்க். உரை). 5. ***ஆடுமாடுகள் உட்கொண்ட இரையை மீட்டும் மெல்லுகை;*** cud. ''அருந்தும்பசும்புல் லுணாத்தெவிட்டி யசைவிட் டுறங்குங்கன்று'' (கூர்மபு. கண்ணனவ. 83). 6. ***சுவடித் தூக்கு;*** sling for carrying or preserving *ōla* books. 7. ***குற்றம்*** (சம்.அக.கை.); fault, blemish. 8. ***உடல்*** (மனையடி. 9); body, trunk.

அசைகம்பு *asai-kambu*, பெ. (n.) ***ஒன்பதடி நீள முள்ளதும் வண்ணம் பூசியதும் சலங்கை கட்டியதுமான பரவர் மணக்கோல்;*** nine-foot painted rod with tinkling bells, used in Parava weddings.

அசைகொம்பு *asai-kombu*, பெ. (n.) ***கட்டு கொம்பு***; splint.

அசைச்சீர் *asai-c-cir*, பெ. (n.) (யாப்.) ***பெரும் பாலும் வெண்பாவின் ஈற்றிலும் சிறுபான்மை பிற பாக்களிலும் வரும் ஓரசைச்சீர்***; (Pros.) foot of one metrical syllable occurring usually at the end of a *Venbā* and occasionally in other metres.

[அசை + சீர்.]

அசைச்சீர் வாய்பாடு பார்க்க; see *asai-c-cir-vāypādu*.

அசைச்சீர் வாய்பாடு *asai-c-cir-vāypādu*, பெ. (n.) ***நேரசைக்கு 'நாள்' என்றும், நிரையசைக்கு 'மலர்' என்றும் இருவகை ஓரசைச் சீர்க்குக் கொள்ளப்படும் எடுத்துக்காட்டு வடிவங்கள்***; the two formulas, viz., *nāḷ* and *malar*, representing a metrical monosyllabic foot of one vowel and two vowels respectively. ''அசைச்சீர்க் குதாரண நாண்மலரே'' (யா.கா. 7).

[அசை + சீர் + வாய்பாடு.]

அசைச்சொல் *asai-c-col*, பெ. (n.) ***முன்னிலை யசைச்சொல் என்றும், மூவிடப் பொது அசைச் சொல் என்றும், ஈற்றசை யென்றும், உரை யசை யென்றும், வியங்கோ ளசைச்சொல் என்றும், பிரிவி லசைநிலை யென்றும்; பெரும் பாலும் பெயர்நிலையைச் சார்ந்தும், சிறு பான்மை அவற்றைச் சாராதும், ஒரோவழி யிரட்டியும்; உருத்திரிந்தும், பொருளிறந்தும், பொருள்மறைந்தும், பொருள் குன்றியும், பொருள் நிறைந்தும்; குறிப்பாகவும் வெளிப் படையாகவும்; இருவகை வழக்கிலும் தொன்று தொட்டு வழங்கிவரும் இடைச்சொல் வகை***; expletive particles and various kinds of indeclinable words.

[அசை + சொல்.]

அசைத்தொழில் *asai-t-toḻil*, பெ. (n.) ***தாக்கி யெழுதல்*** (சிலப். 3 : 16, அடியார்க். உரை); raising the hand immediately after striking.

[அசை + தொழில்.]

அசைந்தாடு-தல் *aśaind(u)-āḍu-*, 5 செ.கு.வி. (v.i.) **கூத்தாடுதல்** (இராட்.); to dance (R.).

[அசைந்து + ஆடு.]

அசைந்தாடுசீலை *aśaind(u)-āḍu-śīlai*, பெ. (n.) **தொட்டிற்சீலை** (இராட்.); cradle improvised out of cloth (R.).

[அசைந்து + ஆடு + சீலை.]

அசைநிலை *aśai-nilai*, பெ. (n.) **அசைச்சொல்** பார்க்க; see *aśai-c-col*. ''அசைநிலைக் கிளவி யாகி வருநவும்'' (தொல். சொல். இடை. 2).

அசைநிலையளபெடை *aśai-nilai-y-aḷabeḍai*, பெ. (n.) **அசைகோடற்பொருட்டுக் கொண்ட அளபெடை**; lengthening of sound for the sake of metre. எ-டு: 'செறாஅஅய் வாழிய நெஞ்சு' (பிர. விவே. 5, உரை).

[அசைநிலை + அளபெடை.]

அசைப்பு *aśaippu*, பெ. (n.) 1. **அசைக்கை**; shaking. ''மலர்க்கை யசைப்பின்'' (காஞ்சிப்பு. பரசிரா. 11). 'அசைப்புக்கு ஆயிரம் பொன் வாங்குகிறது' (பழ.). 2. **சொல்** (திவா.); speech. 3. **சொல்லுகை**; speaking. 4. **இறுமாப்பு** (யாழ்ப்.); arrogance (J.).

அசைபறி-தல் *aśai-paṟi-*, 2 செ.கு.வி. (v.i.) **அசைபோடுதல்** (இராட்.); to chew the cud (R.).

[அசை + பறி.]

அசைபோடாமை *aśai-pōḍāmai*, பெ. (n.) **மாடுகளுக்கு வரும் ஒரு நோய்**; a disease in cattle, marked by loss of ability to chew the cud (சா.அக.).

அசைபோடு-தல் *aśai-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **ஆடுமாடுகள் தாம் உட்கொண்ட இரையை இரைப்பையின் முதலறையிலிருந்து வாய்க்குக் கொண்டுவந்து ஓய்வாக மெல்லுதல்**; to bring back the cud from the first chamber of the stomach into mouth and chew at leisure, as ruminating animals.

ம. அயிவிறக்குக, அகவிறக்குக; க. அகி; து. அக்கியுனி; துட. அக்ச்.

அசைமீட்டு-தல் *aśai-miṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) **அசைபோடும் விலங்குகள் தாம் உண்ட இரையை மீட்டும் மென்று இரைப்பையினுட் செலுத்துதல்** (சங்.அக.); to chew the cud and pass it on to the second chamber of the stomach, as ruminating animals.

அசையடி *aśai-y-aḍi*, பெ. (n.) **ஒருவகைக் கலிப்பாவின் உறுப்பான அம்போதரங்கம்;** one of the component parts of a variety of *kalippā* metre. ''நீர்த்திரை போன்ம் மரபொன்று நேரடி முச்சீர் குறள்நடுவே மடுப்பின்......அது அம்போ தரங்க வொத் தாழிசை'' (யா.கா. 30), ''அசையடி முன்ன ரராகம் வந்து'' (யா.கா. 31).

[அசை + அடி.]

அசையந்தாதி *aśai-y-andādi*, பெ. (n.) **செய்யுளில் ஓரடியி னீற்றசை அடுத்த அடிக்கு முதலசையாக வருந்தொடை** (தொல். பொருள். செய். 99, பேரா. உரை); metrical composition in which the same syllable ends one line and begins the succeeding of a stanza. எ-டு:
''குன்றகச் சாரற் குதித்தன கோண்மா
மாவென மதர்த்தன கொடிச்சி வான்கண்''
என்பது அசையந்தாதி. 'அந்தாதி' வடசொல். அதை, தமிழில் ஈறுதொடங்கி அல்லது இறுதிமுதலி என்னலாம்.

[அசை + அந்தாதி.]

அசையாக்கட்டை *aśaiyā-k-kaṭṭai*, பெ. (n.) **ஒருவகைச் செடி**; a kind of plant.

அசையாத்துரையார் *aśaiyā-t-turaiyār*, பெ. (n.) **கள்ளர்குலப் பட்டப்பெயர்களு ளொன்று** (கள்ளர் சரித். பக். 145); a title of Kaḷḷars.

அசையாநிலை *aśaiyā-nilai*, பெ. (n.) **சில நோய்களில் உடம்பும் உள்ளமும் ஒருங்கே அசையாது நிற்கும் நிலை**; a fixed and motionless state of both body and mind in certain diseases (சா.அக.).

அசையாப்பொருள் *aśaiyā-p-poruḷ*, பெ. (n.) **இயங்குதிணை என்பதற்கு எதிரான நிலைத் திணை;** category of immovables, opp. to *aśaiyum poruḷ*.

[அசையாத → அசையா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + பொருள்.]

அசையாமணி *aśaiyā-maṇi*, பெ. (n.) **குடிகளின் பெருந்துன்பவேளைகளிலன்றி வேறு சமையங்களில் அசைக்கப்படாத, அரண்மனைவாயில் ஆராய்ச்சி மணி;** bell attached to the royal palace to apprise the sovereign of any calamity, as being seldom rung.

[அசையாத → அசையா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + மணி.]

அசையாமை *aśaiyāmai*, பெ. (n.) **அசையாத் தன்மை**; immovability. ''விஞ்சு மசைவசை யாமை யிரண்டு மொன்றாய்'' (ஞானவா. சிகித். 160).

அசையாவிணைப்பு *aśaiyā-v-iṇaippu*, பெ. (n.) **அசைவில்லாத பொருத்து**; immovable articulation or joint with no intervening tissue between the bones, as the bones of the pelvis (சா.அக.).

[அசையாத → அசையா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + இணைப்பு.]

அசையிடு-தல் *aśai-y-iḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **அசைபோடுதல்**; to chew the cud (W.).

[அசை + இடு.]

அசையியல் *aśai-y-iyal*, பெ. (n.) **நுடங்கிய இயல் புடைய பெண்**; slender woman. ''அசையியற் குண்டாண்டோ ரேஎர்'' (குறள், 1098).

[அசை + இயல்.]

அசையு *aśaiyu*, பெ. (n.) **அமுக்கிரா** (மலை.); species of withania.

அசையும்பொருள் *aśaiyum - poruḷ*, பெ. (n.) **நிலைத்திணை என்பதற்கு எதிரான இயங்கு திணை**; category of movables, opp. to *aśaiyāpporuḷ*.

அசைவாடு-தல் *aśaiv(u)-āḍu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **அசைதல்**; to shake, move, stir. 2. **மே லுலாவிச் செல்லுதல்;** to hover over, move or stir, as wind on the surface of water (W.).

[அசைவு + ஆடு.]

அசைவிடு-தல் *aśai-viḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. **அசைபோடுதல்**; to chew the cud. ''அசை விட் டுறங்குங் கன்று'' (கூர்மபு. கண்ணனவ. 83). 2. **இளைப்பாறுதல்** (பரிபா. 6 : 2); to rest.

அசைவின்மை *aśaiv(u)-iṉmai*, பெ. (n.) 1. **அசை விலாமை**; cessation of motion. 2. **சோகம்**; temporary partial or complete suspension of the function of respiration and circulation. 3. **பித்தத்தினால் உடம்பு மயக்கங்கொண் டிருப்பதுபோல் அசைவற்றுக் கிடத்தல்**; senseless and motionless condition of the body due to bilious causes (சா.அக.). 4. **முயற்சி**; effort, enterprise. ''ஆகூழாற் றோன்று மசை வின்மை'' (குறள், 371).

[அசைவு + இன்மை.]

அசைவு *aśaivu*, பெ. (n.) 1. **அசைகை, ஆட்டம்**; shaking, moving about, swinging. ''தூண மொத் தசைவற நின்றான்'' (காஞ்சிப்பு. சார்ந்தா. 13). 2. **உண்கை**; eating. ''நஞ்சினை யசைவு செய்தவன்'' (தேவா. 3.111 : 3). 'அசைவிருந்தால் விட்டுப் போகமாட்டான்' (பழ.). 3. **அதிர்ச்சி**; vibration. 4. **புடை பெயர்ச்சி**; movement (சங்.அக.). 5. **இளைப்பு, தளர்வு, சோர்வு**; weariness, faintness, exhaustion. ''நாட்டிடை நெறியசைவு தீரவிருந்து'' (சீவக. 1185). 6. **சோம்பல்**; laziness, sloth. ''ஆகூழாற் றோன்றும் அசைவின்மை'' (குறள், 371). 7. **பாடற்குற்றம்**; a flaw in singing. ''நாசி காகுளி பேசுறு குற்ற மசை வொடு மாற்றி'' (கல்லா. 22). 8. **தப்பு**; slip, failure. ''அசைவில ரெழுந்து''(மதுரைக். 650). 9. **நிலை தவறுகை**; to swerve from principle or path of virtue. ''ஓரசை விலாதவ னறைந்த னன்'' (பாரத.கிருட்.138). 10. **முன்னிலைமை கெட்டு வருந்துதல்**; suffering caused by loss of position. ''இளிவே யிழவே யசைவே'' (தொல். பொருள். மெய்ப். 5). 11. **வருத்தம்**; suffering. ''என்னுழை யசைவின் றையனைத் தம்மின்'' (சீவக. 1814). 12.. **மனக்கலக்கம்**; perturbation, agitation of mind. ''அசைவி லாடவன் றன்னை'' (கந்தபு. அசுர. சூரன் தண்டஞ். 28). 13. **பின்னிடுதல்**; to fall back, retreat. ''அசைவி லூக்கத்து நசைபிறக் கொழிய'' (சிலப். 5 : 95). 14. **தோல்வி**; defeat. ''அசைவில படையருள் புரிதரு மவன்'' (தேவா. 1.20 : 6). 15. **முடிவு**; end (சம்.அக. கை.). 16. **அசையுமிடங்கள், அதாவது மூட்டு கள்**; joints (சா.அக.).

அசைவுசெய்-தல் *aśaivu-śey-*, 1 செ.குன்றாவி. (v.t.) **உண்ணுதல்**; to eat. ''நஞ்சினை யசைவு செய்தவன்'' (தேவா. 3.111 : 3).

ம. அசிக்க; க., தெ. அசன.

[அலகசைத்து உண்பதால், உண்ணுதல் அசைவுசெய்தல் எனப்பட்டது.]

அசைவுதீர்-தல் *aśaivu-tīr-*, 2 செ.கு.வி. (v.i.) **இளைப்பாறுதல்**; to take rest.

அசைவுபோடு-தல் *aśaivu-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **அசையிடுதல்**; to chew the cud.

அசைவெட்டு-தல் *aśai-veṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) **அசைபோடுதல்**; to chew the cud (W.).

ம. அசவெட்டுக, அயவெட்டுக.

அசோகம் *asŏgam*, பெ. (n.) *1. ஒருவகை மரம், பிண்டி*; a sacred tree. "பொழிபெயல் வண்மையான் அசோகந்தண் காவினுள்" (கலித். 57 : 12). "பூமலி அசோகின் புனை நிழல் அமர்ந்த நான்முகற் றொழுதுநன் கியம்புவன் எழுத்தே" (நன். 56). *2. வாழை*; plantain (W.).

அசோண்டி *asŏṇḍi*, பெ. (n.) *அசோணம்* பார்க்க; see *asŏṇam*.

அசோணம் *asŏṇam*, பெ. (n.) *1. வாழை*; plantain (சா.அக.). *2. குறட்டை*; bitter snake-gourd (மலை.).

அசோதம் *asŏdam*, பெ. (n.) *1. அவுரி* (பரி.அக.); indigo (genus) indigofera. *2. வெள்ளிலோத்திரம்*; lodhra.

அசோனம் *asŏṇam*, பெ. (n.) *அசோணம்* பார்க்க; see *asŏṇam*.

[அசோணம் → அசோனம்.]

அஞ்சக்கரம் *añjakkaram*, பெ. (n.) *சிவ வழிபாட்டில் ஓதுவதும், சிவாயநம அல்லது நமசிவா(வ)ய என்னும் ஐந்தெழுத்துக்கொண்டதுமான, திருவைந்தெழுத்தென்னும் சிவ வணக்க மந்திரம்*; the five-lettered mantra, viz., *ši vā ya na ma* or *na ma ši(ci) vā(va) ya*, uttered in the worship of Šiva (சா.அக.). "அஞ்சக் கரத்தின் அரும்பொருள்" (விநா. அகவல்).

[த. அஞ்சு + அக்கரம் – அஞ்சக்கரம் (இ.பி.). **Skt.** akṣara > த. அக்கரம்.]

அஞ்சடுக்குமல்லிகை *añj(u)-aḍukku-malligai*, பெ. (n.) *ஐந்தடுக்கு இதழுள்ள மல்லிகைப் பூவகை*; jasmine flower with five rows of petals (சா.அக.).

[ஐந்து → அஞ்சு + அடுக்கு + மல்லிகை.]

அஞ்சடுக்குமூலி *añj(u)-aḍukku-mūli*, பெ. (n.) *கருவூமத்தம் பூ*; black dhatura flower (சா.அக.).

[ஐந்து → அஞ்சு + அடுக்கு + மூலி.]

அஞ்சணங்கம் *añj(u)-aṇaṅgam*, பெ. (n.) *எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்தமிழிலக்கணம்* (யாழ்ப்.); the five divisions of Tamil grammar, viz., orthography, accidence, science or subject-matter, prosody and rhetoric.

[அணங்குதல் = ஒலித்தல். அணங்கு = எழுத்து. அணங்கு → அணங்கம் = இலக்கணம் (சிந்தா.நி.). இனி, அணங்கு = அழகு (பிங்.).

அணங்கு → அணங்கம் = மொழியின் அழகை அல்லது ஒழுங்கை விளக்கும் இலக்கணம் என்றுமாம்.]

ஒ.நோ. **Gk.** *gramma*, thing written, letter of alphabet; *grammetikē*, art of letters.

Gk. *grammatikē;* **L.** *grammatica*; **OF.** *gramaire*; **ME.** *grammar*; **E.** *grammar*, "Art and science dealing with a language's inflexions or other means of showing relation between words as used in speech or writing, and its phonetic system (usu. divided into phonology, accidence and syntax.)"—(C.O.D.).

அஞ்சணங்கியம் *añj(u)-aṇaṅgiyam*, பெ. (n.) *ஐந்திலக்கணத்திற்கும் எடுத்துக்காட்டான ஐவகையிலக்கியம்*; the theoretical divisions of classics illustrating the five divisions of grammar.

[அஞ்சு + அணங்கியம். ஐந்து → அஞ்சு. அணங்கம் → அணங்கியம் = இலக்கணத்தைத் தழுவிய இலக்கியம்.]

அஞ்சத்தம் *añjattam*, பெ. (n.) *சுக்கு*; dry ginger (சா.அக.).

அஞ்சதி *añjadi*, பெ. (n.) *காற்று*; wind (சா.அக.).

தெ. அஞ்சதி

அஞ்சநாலா *añjanālā*, பெ. (n.) *1. கருங் காக்கணம்*; blue-flowered mussell-shell creeper, *Clitoria ternatea* (சா.அக.). *2. கருங்குவளை, நீலோற்பலம்*; blue water-lily, *Pontederia* (சா.அக.).

அஞ்சப்படு-தல் *añja-p-paḍu-*, செயப். வி. (pass. v.) *மதிக்கப்படுதல்*; to be respected, esteemed. "அலரேந்தி அஞ்சலிசெய் தஞ்சப் படுவான்" (சீவக. 1610).

அஞ்சமிருகல் *añjamirugal*, பெ. (n.) *சிற்றரத்தை*; Chinese galangal, *Alpinia officinarum* (சா.அக.).

அஞ்சராகம் *añjarāgam*, பெ. (n.) *மஞ்சள்*; turmeric (சா.அக.).

அஞ்சல்[1] *añjal*, பெ. (n.) *சாலைக் கடத்தத்தில்* (road transport) *குறிக்கப்பட்ட இடந்தொறும் வண்டிக்காளை அல்லது சுமையாள் மாற்றப்படும் ஏற்பாடு*; relay. "ஓலைபிடித் தஞ்சலிலே யோடி" (பணவிடு. 281). *2. வழிப்போக்கில்*

தங்கும் இடம்; resting place on a journey. 3. மடல், கடித அஞ்சல்; letter-post.

ம., து. அஞ்சல்; க., தெ. அஞ்செ; மரா. அஞ்ஜீ; **Gk.** *aggelos*, a messenger; **LL.** *angelus;* **OE.** engel; **E.** *angel*, a divine messenger.

[ஒருகா. அச்சல் → அஞ்சல்.]

அச்சலச்சலாய் மழை பெய்கிறது = பாட்டம் பாட்டமாய் மழை பெய்கிறது; It rains repeatedly or successively shower after shower.

பாட்டம் — a batch of clouds. நளி (கார்த்திகை) மாதத்திற் பாட்டம் பாட்டமாய் முகிற்கூட்டம் வந்து மழை பொழிவது மரபு. அஞ்சல் ஒருவகையில் பகுதிபகுதியாய் வரும் முகிற் கூட்டத்தை ஒத்திருத்தலால், அப் பெயர் பெற்றதுபோலும்.

அஞ்சல்[2] *añjal*, பெ. (n.) 1. **தோல்வி** (பிங்.); defeat. 2. **சோம்பல்** (திவா.); laziness, sloth.

அஞ்சல்[3] *añjal*, பெ. (n.) **மனோசிலை**; realgar, a mineral poison, *Arsenicum bisulphuretum* (சா.அக.).

அஞ்சல் எடுத்தல் *añjal-eḍuttal*, பெ. (n.) அஞ்சற்பெட்டியில் சேர்ந்த மடல்களை எடுத்தல்; letter-box clearance.

அஞ்சல் ஏவம் *añjal-ēvam*, பெ. (n.) அஞ்சலகப் பணமதிப்புத் தாள்; postal-order.

அஞ்சல்செய்தல் *añjal - šeydal*, பெ. (n.) 1. அஞ்சற்பெட்டியில் மடலைப் போடுதல்; to post a letter. 2. வானொலி, தொலைக்காட்சி நிலையங்களிலிருந்து பெறும் நிகழ்ச்சிகளை மறு ஒலி/ஒளி பரப்புதல்; relaying the broadcast or transmission received from other Radio and T.V. stations.

அஞ்சல்தா-தல் (தருதல்) *añjal-tā-*, 18 செ.கு.வி. (v.i.) அடைக்கலந்தருதல்; to give or assure protection, as saying 'Fear not'. "அடைக் கலங்கொண் டஞ்சல்தந்து" (தேசிகப். 3 : 9).

அஞ்சல்துறை *añjal-tuṟai*, பெ. (n.) அஞ்சல் தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ள துறை; postal department.

அஞ்சல்நாடி *añjal-nāḍi*, பெ. (n.) விட்டு விட்டு அல்லது இடைவிட்டு அடிக்கும் நாடி; intermittent pulse (சா.அக.).

அஞ்சல்நிலையம் *añjal - nilaiyam*, பெ. (n.) 1. அஞ்சற் பணியாற்றும் அலுவலகம்; post-office. 2. வானொலி/தொலைக்காட்சி ஒலி/ஒளி பரப்புகளைப் பெற்று மறு ஒலி/ஒளி பரப்புச்செய்யும் நிலையம்; a relay station for Radio and Television transmissions.

அஞ்சல்பரப்பு-தல் *añjal - parappu-*, 5 செ. குன்றாவி. (v.t.) மறு ஒலி / ஒளி பரப்புதல்; relaying the broadcast or transmission received from other Radio and Television stations.

அஞ்சல்மடல் *añjal-maḍal*, பெ. (n.) அஞ்சல்வழி அனுப்பப்படும் மடல் (கடிதம்); a letter by post.

அஞ்சல்மாடு *añjal-māḍu*, பெ. (n.) அஞ்சல் வண்டிக்குக் கட்டப்படும் காளை; relay of bullocks, as in journey by stage.

அஞ்சல்வண்டி *añjal-vaṇḍi*, பெ. (n.) அஞ்சலிற்குப் பயன்படுத்தப்படும் வண்டி (தபால் வண்டி); stage-coach.

அஞ்சல்வண்டிக்காளை *añjal - vaṇḍi - k - kāḷai*, பெ. (n.) அஞ்சல்மாடு பார்க்க; see *añjal-māḍu*.

அஞ்சல்வழங்கு - தல் *añjal - vaḻangu-*, 5 செ. குன்றாவி. (v.t.) அஞ்சலில் வந்த மடல்களை உரியவர்களுக்குக் கொண்டுபோய்க் கொடுத்தல்; delivery of letters from the post-office.

அஞ்சல்வழிக்கல்வி *añjal-vaḻi-k-kalvi*, பெ. (n.) அஞ்சல்வழிப் பாடங்களை அனுப்பிக் கற்பிக்கும் கல்விமுறை; education system by sending lessons by post, postal tuition.

[அஞ்சல் + வழி + கல்வி.]

அஞ்சல்விடை *añjal-viḍai*, பெ. (n.) மறுமொழி விடுக்க உதவும் இரட்டை அஞ்சலட்டை; reply card.

அஞ்சலகம் *añjal-agam*, பெ. (n.) அஞ்சல் நிலையம்; post-office.

[அஞ்சல் + அகம்.]

அஞ்சலகர் *añjalagar*, பெ. (n.) அஞ்சல் நிலைய அதிகாரி; postmaster.

அஞ்சலட்டை *añjal-aṭṭai*, பெ. (n.) மடலட்டை; post-card.

[அஞ்சல் + அட்டை.]

அஞ்சலம் *añjalam*, பெ. (n.) 1. **சீலையின் ஓரம்**; edge of a cloth (சா.அக.). 2. **வாளுறை**; sheath of a sword (சங்.அக.).

ம. அஞ்சலம்; க. அஞ்சல; தெ. அஞ்சலமு.

அஞ்சலர் *añjalar*, பெ. (n.) **பகைவர்**; enemies. ''அஞ்சலர் தனிப்போ ரேறே'' (நல். பாரத. ஆரணிய. மார்க். 245).

அஞ்சலளி-த்தல் *añjal-aḷi-*, 4 செ.கு.வி. (v.i.) **அஞ்சல்தா-தல்** பார்க்க; see *añjal-tā-*.

[அஞ்சல் + அளி.]

அஞ்சலா *añjalā*, பெ. (n.) 1. **காமமுள்ள**; lustful (சா.அக.). 2. **வலுவுள்ள**; strong (சா.அக.).

அஞ்சலாதிறை *añjalādiṟai*, பெ. (n.) **ஒரு மூலிகை (சீவக மூலி)**; a kind of drug, Indian coccinia, *Cephalandra indica* (சா.அக.).

அஞ்சலி[1] *añjali*, பெ. (n.) 1. **ஆடுதின்னாப் பாலை** (சங்.அக.); a worm-killer, *Aristolochia bracteata*. 2. **காட்டுப் பலா (காட்டுப் பிலவு)**; jungle jack, *Artocarpus hirsuta*. 3. **தாழை**; fragrant screw pine, *Pandanus odoratissimus* (சா.அக.). 4. **மாவிலிங்க மரம்**; lingam tree, *Crataeva religiosa* (சங்.அக.). 5. **வறட்சுண்டி**; floating sensitive-plant, *Mimosa triquetra* (W.). 6. **சங்கங் குப்பி**; smooth volkameria (W.). 7. **வண்டுகொல்லி**; cassia alata (alasa) (சா.அக.).

தெ. அஞ்சலிக

அஞ்சலி[2] *añjali*, பெ. (n.) 1. **வௌவால்வகை**; a kind of bat (R.). 2. **வண்டுவகை**; a kind of beetle (சிந்தா.நி. 64.).

அஞ்சலி[3] *añjali*, பெ. (n.) **நான்கு பலம்**; a measure of weight = 4 palams. ''கழலடி யஞ்சலி யைந்து'' (தைலவ. தைல. 54).

ம. அஞ்சான்; க. அஞ்சலி.

அஞ்சலி[4] *añjali*, பெ. (n.) **ஒருவகை அம்பு**; a kind of arrow. ''அஞ்சலி யஞ்சுகோடி தொடுத்திக லரக்க னெய்தான்'' (கம்பரா. யுத்த. நாகபா. 113).

ம. அஞ்சலிகம்

அஞ்சலி[5] *añjali*, பெ. (n.) **வணக்கம், வணங்குதல்**; worship.

[அங்கு → அஞ்சு → அஞ்சலி. அங்குதல் = வளைதல், வணங்குதல்.]

அஞ்சலிக்கை *añjali-k-kai*, பெ. (n.) (நடம்) **பதாகை என்னும் இணைக்கை வகை**; (Dan.) gesture with both hands joined in *padāgai* pose.

'அஞ்சலி யென்ப தறிவுறக் கிளப்பின்
எஞ்ச லின்றி இருகையும் பதாகையாய்
வந்தகம் பொருந்து மாட்சித் தென்றனர்
அந்தமில் காட்சி யறிந்திசி னோரே'
(சிலப். 3 : 18, அடியார்க். உரை).



அஞ்சலிக்கை

[அஞ்சலி + கை. அஞ்சு → அஞ்சல் → அஞ்சலி.]

அஞ்சலி காரிகை *añjali-kārigai*, பெ. (n.) 1. **ஒரு பூண்டுவகை** (சங்.அக.); a kind of herb or shrub. 2. **தொட்டாற் சுருங்கி**; the sensitive plant, *Mimosa pudica*.

ம., தெ. அஞ்சலிகாரிக; க. அஞ்சலிகாரிகெ.

அஞ்சலிகை *añjaligai*, பெ. (n.) **வௌவால் வகை**; a kind of bat (R.).

அஞ்சலிப்பாலை *añjali-p-pālai*, பெ. (n.) **ஆடு தின்னாப் பாலை** பார்க்க; see *āḍu-tiṉṉā-p-pālai*.

அஞ்சலி முத்திரை *añjali-muttirai*, பெ. (n.) **அஞ்சலி செய்யும் கைக்குறி**; hand-pose in worship. 'அஞ்சலி வணக்கம் ஆருக்கும் நன்மை' (பழ.).

அஞ்சலினவர் *añjaliṉavar*, பெ. (n.) **பாஞ்சராத்திரிகள் என்னும் மாலிய (வைணவ) வகுப்பினர்**; Vaiṣṇavās of the Pāñcarātra sect. ''அஞ்சலினவர் புகழண்ணல்'' (கந்தபு. திருவவ. 62).

[வ. பஞ்சம் = ஐந்து; ராத்ரி = இரவு. பாஞ்சராத்திரம் (பாஞ்சராத்ர) = ஐயிரவிற் சொல்லப் பட்ட மாலியத் தொழுமறை (ஆகமம்). பாஞ்சராத்திரத்தைக் கடைப்பிடிக்கும் மாலியர் பாஞ்சராத்திரிகள் அல்லது பாஞ்சராத்திரிகர் எனப்பட்டனர். இப் பெயரின் தமிழ் மொழி பெயர்ப்பு 'அஞ்சலினவர்'.

அஞ்சு = ஐந்து. அல் = இரவு. அஞ்சு + அல் + இன் + அவர் – அஞ்சலினவர் (பாஞ்சராத்திரிகள்). 'இன்' சாரியை. 'அவர்' ப.பா. ஈறு.]

அஞ்சலுறை *añjal-uṟai*, பெ. (n.) மடலை (கடிதம்) உள்ளே வைத்து ஒட்டி அஞ்சலில் அனுப்ப உதவும் மேலுறை; postal envelope.

[அஞ்சல் + உறை.]

அஞ்சலொட்டகம் *añjal-oṭṭagam*, பெ. (n.) அஞ்சல் சுமந்து செல்லும் ஒட்டகம்; camel carrying mail bags (R.).

[அஞ்சல் + ஒட்டகம்.]

அஞ்சவத்தை *añj(u)-avattai*, பெ. (n.) (மெய்ப்.) ஆதனின் (ஆன்மாவின்) ஐந்நிலை; அவை நனவு (சாக்கிரம்), கனவு (சொப்பனம்), துயில் (சுழுத்தி), உறக்கம் (நாலாவான் - துரியம்), பேருறக்கம் (நாலாவான்கடப்பு - துரியாதீதம்) என்பன; (Phil.) conditions of the soul, five in number, viz., wakefulness, dream, sound sleep, deep sleep and the transcendent state of deep sleep. "ஆன்மாத் தங்கிய வஞ்சவத்தை" (சிவப்பிர. 51).

[த. அஞ்சு. Skt. avasthā > த. அவத்தை = நிலை. அஞ்சவத்தை (இ.பி.).]

அஞ்சற்கட்டு *añjaṟ-kaṭṭu*, பெ. (n.) அஞ்சற்பை பார்க்க; see *añjaṟ-pai*.

[அஞ்சல் + கட்டு.]

அஞ்சற்கடிதம் *añjaṟ-kaḍidam*, பெ. (n.) மடல்; letter by post. அஞ்சல் மடல் பார்க்க; see *añjal-maḍal*.

[அஞ்சல் + கடிதம்.]

அஞ்சற்காரன் *añjaṟ-kāraṉ*, பெ. (n.) அஞ்சற் கடிதம், கட்டு முதலியன கொண்டுவந்து கொடுப் பவன்; a post or courier, post-runner, post-man.

ம. அஞ்சல்காரன்; க. அஞ்செகார; தெ. அஞ்செகாடு.

[அஞ்சல் + காரன்.]

அஞ்சற்குழற்சி *añjaṟ-kuḻaṟci*, பெ. (n.) 32 வகைச் செயற்கை நஞ்சுகளுள் ஒன்று (குங்கும பாடாணம்); one of the 32 kinds of processed arsenic preparations (சா.அக.).

அஞ்சற்குளச்சி *añjaṟ-kuḷacci*, பெ. (n.) அஞ்சற் குழற்சி பார்க்க; see *añjaṟ-kuḻaṟci*.

அஞ்சற்சான்று *añjaṟ-cāṉṟu*, பெ. (n.) அஞ்சல் வழி மடல் அனுப்பியதற்கான சான்று; certificate of posting.

[அஞ்சல் + சான்று.]

அஞ்சற்பணவிடை *añjaṟ-paṇa-viḍai*, பெ. (n.) அஞ்சல்வழிப் பணம் அனுப்புதல்; money-order, sending money by post.

[அஞ்சல் + பணம் + விடை. விடு → விடை.]

அஞ்சற்பணவிடைத்தாள் *añjaṟ-paṇa-viḍai-t-tāḷ*, பெ. (n.) அஞ்சல்வழிப் பணம் அனுப்புதற் குரிய படிவம்; money-order form.

[அஞ்சல் + பணம் + விடை + தாள்.]

அஞ்சற்பற்றுச்சீட்டு *añjaṟ-paṟṟu-c-cīṭṭu*, பெ.(n.) அஞ்சல்வழிப் பணம் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டு; money-order receipt.

[அஞ்சல் + பற்று + சீட்டு.]

அஞ்சற்பிரிப்பு *añjaṟ-pirippu*, பெ. (n.) மடல்கள் சென்று சேரவேண்டிய இடங்களுக்கு ஏற்பப் பிரித்து ஒழுங்குபடுத்தப்படுதல்; sorting of the letters.

[அஞ்சல் + பிரிப்பு.]

அஞ்சற்பெட்டி *añjaṟ-peṭṭi*, பெ. (n.) அஞ்சல் போடும் பெட்டி; post-box.

[அஞ்சல் + பெட்டி.]



அஞ்சற்பெட்டி

அஞ்சற்பை *añjaṟ-pai*, பெ. (n.) மடல்களை இட்டுக் கட்டும் பை; postal bag.

[அஞ்சல் + பை.]

அஞ்சற்றலை *añjaṟṟalai*, பெ. (n.) மடல்களுக்கு ஒட்டப்படும் அஞ்சல் வில்லை; postal stamp.

[அஞ்சல் + தலை.]

அஞ்சறைப்பெட்டி *añj(u)-aṟai-p-peṭṭi*, பெ. (n.) மஞ்சள், மிளகு முதலிய கறிச்சரக்குகள் வைப் பதற்குரிய ஐந்தறையுள்ள மரப்பெட்டி; a spice-box made of wood with five compartments.

[ஐந்து → அஞ்சு + அறை + பெட்டி.]



அஞ்சறைப் பெட்டி

அஞ்சலப்பெட்டி, அஞ்சனப்பெட்டி, அஞ்சாரப்பெட்டி யென்னும் வடிவங்கள் கொச்சையாதலின் கொள்ளத்தக்கனவல்ல.

அஞ்சனம் *añjaṉam*, பெ. (n.) தெய்வப் படிமையை மந்திரங் கூறி நீராட்டுகை; a ceremonial bath given to the idol of the deity. மஞ்சனம் பார்க்க; see *mañjaṉam*.

அஞ்சாங்காய்ச்சலுப்பு *añjāṅ-kāyccal-uppu*, பெ. (n.) தமிழ் (சித்த) மருத்துவ முறைப்படி ஐந்துதரங் காய்ச்சித் துப்புரவு செய்த ஒருவகை வெடியுப்பு; a kind of salt, boiled and purified five times according to the special process laid down in Tamil (Siddhās) medical science.

[ஐந்தாம் → அஞ்சாம் + காய்ச்சல் + உப்பு.]

அஞ்சாங்குலத்தான் *añjāṅ-kulattāṉ*, பெ. (n.) நால் வரணத்திற்கும் அப்பாற்பட்ட ஐந்தாங் குலத்தான் (பஞ்சமன்) எனப்பட்டவன்; one belonging to the 5th caste.

[ஐந்தாம் → அஞ்சாம்+ குலத்தான் – அஞ்சாங் குலத்தான்.]

அஞ்சாச்சிறப்பு *añjā-c-ciṟappu*, பெ. (n.) வாகைத் திணை வேறுபாடுகளுள் ஒன்றான 'சான்றோர் பக்கம்'; theme describing the nobility of great men. 'சான்றோர் பக்க' மாவது, பகைவர்கண்ணுந் தன்பாலார் கண்ணு மொப்புமையாகப் பாசறையுள்ளாச் சால்புடைமை கூறுதல். 'அஞ்சாச் சிறப்பென் பதுமது' (வீரசோ. பொருட். 19, உரை).

[அஞ்சாத → அஞ்சா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + சிறப்பு.]

அஞ்சாணிமூலி *añjāṇi-mūli*, பெ. (n.) அச் சாணிமூலி பார்க்க; see *accāṇi-mūli*.

அஞ்சாப்பட்டயம் *añjā-p-paṭṭayam*, பெ. (n.) 1. பகைவனுக்குத் தப்பிப் புகலடைந்தவனுக்கு அரசன் தரும் அடைக்கலப் பட்டயம் (யாழ்ப்.); writ of authority granting refuge or protection. 2. குற்றத்தாலிழந்த வுரிமைகளை மீளப் பெறுவதற்கு அரசன் அளிக்கும் குடியுரிமைப் பட்டயம் (யாழ்ப்.); royal certificate, formerly inscribed on metal, clearing a person from a charge of guilt and re-establishing his or her rights as a citizen. 3. பிறர் கொடுமை செய்யா வாறு அரசன் அளிக்கும் காப்புறுதிப் பட்டயம் (யாழ்ப்.); writ of authority as security against oppression and ill-treatment by others (J.).

[அஞ்சாத → அஞ்சா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + பட்டயம்.]

அஞ்சாமை *añjāmai*, பெ. (n.) அரசன் வினை செய்ய அச்சமுறாமை; fearlessness, as a kingly character.

''அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு''
(குறள், 382).

அஞ்சாலி *añj(u)-āli*, பெ. (n.) பழைய வரிவகை (T.A.S. v, 218); an ancient petty cess.

[ஒருகா. அஞ்சு + ஆலி. ஐந்து → அஞ்சு. அகல் = ஒரு முகத்தல் அளவு. அகல் → ஆல் → ஆலி = அகலளவு நெல். அஞ்சாலி = ஐந்தகல் நெல்.]

அஞ்சாலிகள் *añjāligaḷ*, பெ. (n.) நில வருமானத்தில் ஐந்திலொரு பங்கை மட்டும் வைத்துக் கொண்டு நான்கு பங்கை அரசனுக்குக் கொடுக்கும்படி வற்புறுத்தப்பட்ட உழுகுடிகள் (இராட்.); cultivators who were entitled to only one-fifth of the produce of their cultivation, the remainder being compulsorily paid to the king (R.).

[ஒருகா. ஐந்திலொன்று சாலி = நில வருமானத்தில் அல்லது விளைச்சலில் ஐந்தி லொரு பங்கை யுடையவன். சாலுதல் = பொருந்துதல், உடைமை கொள்ளுதல். சால் → சாலி = உடைய - வன் - வள் - து.]

அஞ்சாலியிடையர் *añjāli-y-iḍaiyar*, பெ. (n.) மணமான பெண்கள் மங்கல அணியாக ஐந்தாலியணியும் இடையர் வகுப்பார் (வின்.);

herdsmen of a particular sub-caste whose women wear *tāli*, with five jewels.

ம. அஞ்சாலி இடையர்

[ஐ = ஐந்து. ஐ + தாலி + இடையர் – ஐந்தாலியிடையர் → அஞ்சாலியிடையர்.]

அஞ்சாவிரா *añjāvirā*, பெ. (n.) **கருங்குமிழ்**; heart-leaved bell vervein, *Gmelina arborea* (சா.அக.).

அஞ்சானனம் *añjānanam*, பெ. (n.) **அஞ்சா முகம்**; lion, as a fearless animal, fearless face.

அஞ்சானனன் *añj(u)-ānanan*, பெ. (n.) **ஐந்து முகமுள்ள சிவன்**; Śiva, as having five faces.

[ஐந்து → அஞ்சு. **Skt.** ānana > **த.** ஆனனம் = முகம். ஆனனம் → ஆனனன் = முகன். அஞ்சு + ஆனனன் – அஞ்சானனன்.]

அஞ்சி[1] *añji*, பெ. (n.) **கடையெழு வள்ளல்களுள் ஒருவனான அதியமான் (அதிகமான்) அஞ்சி** (புறநா. 91 : 4); *Adiyamān Añji*, a munificent chief of the Sangam age.

ம. அஞ்சி

[ஒருகா. அச்சன் → அச்சி → அஞ்சி.]

அஞ்சி[2] *añji*, பெ. (n.) **அஞ்சல்**; letter by post. அஞ்சியில் பணம் வந்தது (உ.வ.).

க. அஞ்செ; **தெ.** அஞ்சிய; **து.** அஞ்சல்; **மரா.** அஞ்சீ.

அஞ்சி[3] *añji*, பெ. (n.) **அஞ்சுபவன்**; coward. 'அஞ்சி அஞ்சி வாழ்வதைவிட அஞ்சாமற் சாவதே மேல்', 'அஞ்சி ஆண்மை செய்ய வேணும்', 'அஞ்சினவனைக் குஞ்சும் விரட்டும்' (பழ.).

க. அஞ்சுகுளி

அஞ்சிக்கை *añjikkai*, பெ. (n.) **அச்சம்**; fear.

ம. அஞ்சல்; **க.** அஞ்சிகெ; **தெ.** அஞ்சிக, அச்சிகமு; **து.** அஞ்சிகெ; **துட.** ஒசிக்; **கோத.**, **கொலா.** அஞ்சல்க்; **கூ.** அசு; **குவி.** அச்ஹலி; **பிரா.** ஹீசிங்.

அஞ்சிகம் *añjigam*, பெ. (n.) **கண்**; eye.

"பொய்த்தொரு அஞ்சிகத்தி லிட்டு நன்றாய்ப்
பொருந்தியே நீபார்க்கில் திறக்கும் தூசு"
(கருவூ. குருநூல்).

தெ. அஞ்சிகமு

அஞ்சிமூலம் *añji-mūlam*, பெ. (n.) **பழைய வரி வகை** (T.A.S. iii, 216); an ancient tax.

[ஒருகா. அஞ்சுமூலம்.]

அஞ்சிலேபிஞ்சிலே *añjilē-piñjilē*, கு.வி.எ. (adv.) **இளம்பருவத்தில்**; in the young age. அஞ்சிலே பிஞ்சிலே அடித்து வளர்க்க வேண்டும் (உ.வ.). 'அஞ்சிலே பிஞ்சிலே கொஞ்சாமல் அறுபதிற்குமேல் கொஞ்சினானாம்', 'அஞ்சிலே பழுத்து ஆறிலே விழுந்தான்', 'அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?' (பழ.).

[அஞ்சு = ஐந்து அகவை. பிஞ்சு = இளங்காய். இரு சொல்லும் இளமை குறித்து ஒரு பொருளில் வந்த மரபு இணைமொழி (idiomatic pair of words).]

அஞ்சினான் புகலிடம் *añjiṉāṉ-pugal-iḍam*, பெ. (n.) **பகைவருக்கஞ்சினார் அடைக்கலம் புகுமிடம்**; refuge for the terrified, asylum for the timid (T.A.S. iv, 98).

[அஞ்சினான் + புகல் + இடம்.]

அஞ்சினி *añjiṉi*, பெ. (n.) 1. **ஐந்தாம் மாதம்**; fifth month. 2. **ஐந்து மாதச் சூலி** (கருப்பிணி); a woman with five months of pregnancy.

[அஞ்சு + இனி (பெ.பா. ஈறு) – அஞ்சினி. **ஒ.நோ:** பாடி → பாடினி.]

அஞ்சு[1] *añju*, பெ. (n.) 1. **ஐந்து**; five. "அஞ்சு வைகலிவ் வகன்கிரி நண்ணி" (கந்தபு. தக்ஷ. வள்ளி. 225). அஞ்சுவிரலும்பட அடித்தான் (உ.வ.). 'அஞ்சுக்கு இரண்டு பழுதில்லை', 'அஞ்சுபுலன் அடங்கினால் அகிலமும் அடங்கும்', 'அஞ்சாவது பெண் கெஞ்சினாலும் கிடையாது', 'அஞ்சு காசுக்குக் குதிரையும் வேண்டும், அது ஆற்றைக் கடக்கப் பாயவும் வேண்டும்' (பழ.). 2. **கவறாட்டத்தில் வழங்கும் ஒரு குழூஉக்குறி**; a cant used in dice-play. "அஞ்செனப்பர்" (கந்தபு. தக்ஷ. கயமுகனுற். 167).

ம. அஞ்சு; **க.** அய்து; **தெ.**, **கொலா.**, **குருக்.**, **குரும்.** ஐது; **து.** ஐநு; **குட.** அஞ்சி; **கோத.** அஞ்ச்; **துட.** உச்; **கூ.** சிங்கி; **கோண்டு.** ஐயன், ஐகு, சையுங், பையுங்; **பர்.** சேந்து, சேவிர் (ஐவர்); **நா.** ஐது, சேகுர் (ஐவர்).

[ஐந்து → அஞ்சு.]

அஞ்சு[2] *añju*, பெ. (n.) **அச்சம்**; fear, terror. "அஞ்சுவரத் தகுந" (புறநா. 41).

அஞ்சு-தல் *añju-*, 5 செ.கு.வி., 5 செ.குன்றாவி. (v.i. & v.t.) *1.* **வெருவுதல் (பயப்படுதல்)**; to fear, dread. "அஞ்சுவ தஞ்சாமைபேதைமை" (குறள், 428). *2.* **மதித்தல்**; to respect, venerate. *3.* **வணங்குதல்**; to worship.

ம. அஞ்சுக; க., தெ. அஞ்சு; து. அஞ்சுனி; பட. அஞ்சினெ; கொலா., கொண்., கோத. அஞ்ச்; துட. ஒச்; கூ. அச; பிரா. ஹீசிங்; குவி. அச்சலி, அச்சரி, அச்சி.

[அங்கு → அஞ்சு. அங்குதல் → அஞ்சுதல் = வளைதல், வணங்குதல், வெருவுதல். ங்கு → ஞ்சு.]

அஞ்சுகம் *añjugam*, பெ. (n.) கிளி (சிந்தா.நி.); parrot.

[த. அம் (அழகிய) + **Skt.** suka > த. சுகம் = கிளி. அஞ்சுகம் (இ.மி.).]

அஞ்சுகொம்பு *añju-kombu*, பெ. (n.) **ஐம்பொறி**; the five sensory organs.

"கப்பான அஞ்சுகொம்பில் மனந்தான்
சென்று
கலக்கத்தில் விழுகாதே கருத்தூன் றிப்பார்"
(கொங்க. வாத காவியம்) — (சா.அக.).

அஞ்சுங்குளிர்-தல் *añjuṅ-kuḷir-*, 2 செ.கு.வி. (v.i.) **ஐம்பொறியும் இன்பமடைதல்**; to be in ecstasy, as having all the five senses participate in the joy. 'அகங்குளிர்ந்தால் அஞ்சுங்குளிரும்' (பழ.).

[அஞ்சு = ஐம்பொறி (தொகைக்குறிப்பு). குளிர்தல் = இன்பந் தருதல், இன்புறுதல். வெப்பநாட்டில் தட்பம் இன்பம் தருவதால், குளிர்ச்சி இன்பத்தைக் குறித்தது.]

அஞ்சு சுண்ணாம்புக்குகை *añju-šuṇṇāmbu-k-kugai*, பெ.(n.) **ஐந்துவகைச் சுண்ணாம்பினாற் செய்த குகை**; அதாவது, கடல் நுரை, கல்லுப்பு, வெடியுப்பு, சீனக்காரம், சூடன் ஆகிய இவ்வைந்து சரக்குகளைத் தனித்தனியாக ஊதிச் சேர்த்து அரைத்து மூசை செய்து, அதற்குள் வேதைக்குண்டான உலோகங்களை அல்லது உபரசச் சத்துகளை வைத்து உருக்குங் குகை.

"வாதமஞ்சி யிதைக்கண்டால் வாயைப்
பொத்தும்
வாதிக்கு மிதைவிட்டால் சுண்ணாம்
பில்லை
போதவஞ்சு குகைக்குள்ளே சூதம் நீறும்
பொன்னீறும் வெள்ளிமுதல் போக்கு நீறும்
நாதமஞ்சும் உபரசங்க ளெல்லாம் நீறும்
நாதவிந்து முதல்நீறும் நாட்டில் காணே"
(கொங்க. வாத காவியம்).

A crucible made of five kinds of calcium compounds after grinding them into a paste. These compounds are derived by burning each of the following five substances into ash, viz., sea-froth, rock-salt, nitre, alum and camphor. The crucible thus prepared is capable of enduring extreme heat, even under a severe and scorching test, and this is made clear from the above stanza quoted from the Konganava's work on alchemy (சா.அக.).

[ஐந்து + சுண்ணாம்பு + குகை. ஐந்து → அஞ்சு.]

அஞ்சுநீர் *añju-nīr*, பெ. (n.) *1.* **சரக்குகளைக் கட்டப் பயன்படுத்தும் ஐந்துவகை மருந்து நீர்**; five kinds of liquid extracts used in medicine or in alchemy for consolidating drugs or metals that cannot stand the test of fire. *2.* **ஐந்து வகைச் சரக்குகளைக் கொண்டு உருவாக்கும் ஒருவகைச் செயநீர்**; a liquid medicine prepared from a mixture of five drugs (சா.அக.).

செயனீர் (செயல்நீர்) என்பது செயநீர் எனத் தவறாகக் குறிக்கப்பட்டது போலும்.

அஞ்சுநீறு *añju-nīṟu*, பெ. (n.) *1.* **ஐந்துவகைச் சுண்ணம்**; five kinds of calcined calcium compounds. *2.* **ஐம்மாழைச் சுண்ணம் (பஞ்சலோக பற்பம்)**; a calcined product of five metals.

அஞ்சுப்பு *añj(u)-uppu*, பெ. (n.) ஐந்துப்பு பார்க்க; see *aind(u)-uppu*.

[ஐந்துப்பு → அஞ்சுப்பு.]

அஞ்சுபஞ்சலத்தார் *añju-pañjalattār*, பெ. (n.) **தச்சர், கம்மியர் (கற்றச்சர்), கொல்லர், கன்னார், தட்டார் என்னும் ஐவகைக் கொல்லர் அல்லது கம்மாளர்** (I.M.P. Cg. 371); the five artisan classes.

[அஞ்சு கம்மாளர் → பஞ்ச கம்மாளர் → பஞ்ச கம்மாளம் → பஞ்ச கம்மாளத்தார் → பஞ்சாளத்தார் → பஞ்சலத்தார்.]

பஞ்சலத்தார் என்பது, அஞ்சு என்னும் பொருள் மறைந்து ஒரே குலப்பெயர்போல் வழங்கத் தலைப்பட்டபின், அஞ்சு என்னும் சொல்லை மிகைபடக் கூறலாக முற்சேர்க்க வேண்டியதாயிற்று. பஞ்ச என்னும் வட சொல் நிலைமொழியும், சிதைவு நிலையில் அஞ்சு என்னும் பொருள் மறைய ஓரளவு துணைசெய்தது.

பஞ்ச கம்மாளர் என்பது இருபிறப்பி (hybrid). அரைஞாண் (நாண்) என்பது, வருஞ் சொற்பொருள் மறைந்தபின் அரைஞாண் கொடி எனப் பின்மிக்கது போல், பஞ்சலத் தார் என்பது நிலைச்சொற்பொருள் மறைந்த பின் அஞ்சு பஞ்சலத்தார் என முன்மிக்கது.

அஞ்சுபதம் *añju-padam*, பெ. (n.) **சிவ வழிபாட்டு மந்திரமாகிய சிவாயநம என்னும் திரு வைந்தெழுத்து**; the five-lettered mantra *ši vā ya na ma,* uttered in the worship of Šiva. "அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி" (தேவா. 7.83 : 1).

பதினெட்டாம்நாட் பெருக்கு என்பது பதினெட்டாம்பெருக்கு என இடைத் தொக்கது போன்று, அஞ்செழுத்துப் பதம் என்பது அஞ்சுபதம் என இடைத்தொக்கது.

[த. ஐந்து → அஞ்சு + **Skt.** *pada > த. பதம். அஞ்சுபதம் (இ.பி.).]*

அஞ்சுபயம் *añju-payam,* பெ. (n.) ஐந்து பயம் பார்க்க; see *aindu-payam.*

அஞ்சுமணிப்பூ *añju-mani-p-pū*, பெ. (n.) **சாயுங் காலம் 5 மணிக்குப் பூக்கும் அந்திமந்தாரை**; a flower that opens out its petals at 5 p.m.

[ஐந்து → அஞ்சு + மணி + பூ.]

அஞ்சுமுத்திரைத்தகடு *añju-muttirai-t-tagaḍu,* பெ. (n.) **ஐந்து முத்திரைத் தகடு** பார்க்க; see *aindu-muttirai-t-tagaḍu.*

[ஐந்து → அஞ்சு + முத்திரை + தகடு.]

அஞ்சுமுத்துத்தாவடம் *añju-muttu-t-tāvaḍam,* பெ. (n.) **ஐந்து முத்துவடங்கள் சேர்ந்த கழுத் தணி**; a necklace of five strings of pearls. 'அஞ்சு முத்துத் தாவட மொன்றா யிருக்கு மது' (திவ். பெரியதிரு. 1.1 : 5, அரும்.).

[ஐந்து → அஞ்சு + முத்து + தாழ்வடம் → தாவடம். வடம் = திரண்ட கொடி அல்லது கோவை.]

அஞ்சுமேனிதிரமம் *añju-mēni-tiramam,* பெ. (n.) **ஒரு பழங்காசு** (M.E.R. 322 of 1923); an ancient coin.

[ஒருகா. திரம் (திடம், உறுதி) → திரமம்.]

அஞ்சுருக்காணியுப்பு *añjurukkāṇi-y-uppu,* பெ. (n.) முடியண்ட படருப்பு; a kind of salt extracted from the human skull by a special process known only to Siddhās, and used in alchemy (சா.அக.).

[ஒருகா. அஞ்சு + உருக்கு + ஆணி + உப்பு.]

அஞ்சுருவாணி[1] *añj(u)-uruvāṇi,* பெ. (n.) **தேரின் ஐந்து தட்டையும் ஊடுருவிச் செல்லும் நடு அச்சாணி**; centre-bolt binding together the five tiers of a temple car. "தடையற்ற தேரிலஞ் சுருவாணி போலவே தன்னிலசை யாது நிற்கும்" (தாயு. மௌன. 9). 'அஞ்சுரு ஆணியில்லாத் தேர் அசைவதரிது' (பழ.).

[அஞ்சு + உருவு + ஆணி. அஞ்சு = ஐந்து தட்டு (தொகைக்குறிப்பு).]

அஞ்சுருவாணி[2] *añjuruvāṇi,* பெ. (n.) 1. **துருசு**; copper acetate. 2. **பூநீறு**; an efflorescent salt collected in the soil of fuller's earth (சா.அக.).

அஞ்சுருவாணி[3] *añjuruvāṇi,* பெ. (n.) (மெய்ப்.) **மூல நிலைக்களத்தினின்று (மூலாதாரத்தி னின்று) புருவ நடுவிலுள்ள ஈரிதழி (ஆக்ஞை) வரைக்கும் கத்தரி மாறலாகப் பாயும் பான் (தச) நாடி**; (Phil.) the ten vital airs, said to operate in the human body, controlling or regulating the functions of different organs from the sacral region upto the centre of the cerebral region, and supposed to cross mutually at 5 different centres in the human system, intersecting like the two blades in a pair of scissors (சா.அக).

[அஞ்சு + உருவு + ஆணி.]

அஞ்சுருவாணிப்பூட்டு *añjuruvāṇi-p-pūṭṭu,* பெ. (n.) **துருசுச் செம்பு**; copper extracted from copper sulphate or copper acetate (சா.அக.).

[அஞ்சுருவாணி + பூட்டு.]

அஞ்சுருவாணிமூலம் *añjuruvāṇi-mūlam,* பெ. (n.) **எல்லாவகை மருந்தையும் நீறாக்குந் தன்மை யுடைய முப்பு**; an old name for the supposed Universal Solvent, as well as for a medicine for all kinds of diseases (சா.அக.).

அஞ்சுருவாணியுப்பு *añjuruvāṇi-y-uppu,* பெ. (n.) 1. **கல்லுப்பு**; salt precipitated at the bottom of the sea. 2. **பூநீறு**; an efflorescent salt found in the soil of fuller's earth (சா.அக.).

அஞ்சுவண்ணத்தி *añju-vaṇṇatti,* பெ. (n.) **ஐந்துநிறங் கலந்த ஐம்புள் நஞ்சு (பஞ்சபட்சி பாடாணம்)**; a kind of poison emitting five colours.

அஞ்சுவண்ணம் *añju-vaṇṇam,* பெ. (n.) **ஒருசார் வணிகர் குழு** (T.A.S. ii, 69); a trade guild.

அஞ்சுவரணத்தான் (வரணத்தோன்) *añju-vara-ṇattāṉ* (varaṇattōṉ), பெ. (n.) **துத்தநாகம்** (இராட்.); zinc (R.).

[*ஐந்து வரணம் → ஐந்து வரணத்தான் → அஞ்சு வரணத்தான். வரணத்தான் → வரணத் தோன்.*]

அஞ்சுவன்னம் *añju-vaṉṉam*, பெ. (n.) **அஞ்சு வண்ணம்** பார்க்க; see *añju-vaṇṇam*. "அயன் மிகு தானைய ரஞ்சுவன் னத்தவர்" (களவியற். பக். 93).

[*அஞ்சுவண்ணம் → அஞ்சுவன்னம்.*]

அஞ்சுவனத்தார் *añju-vaṉattār*, பெ. (n.) **தறி நெய்யும் முகம்மதியருள் ஒரு பிரிவார்** (இராட்.); a sect of Muhammadan weavers (R.).

அஞ்சுவிரலி *añju-virali*, பெ. (n.) **ஐவிரலி** பார்க்க; see *ai-virali*.

அஞ்சூகம் *añjūgam*, பெ. (n.) **சிவப்பு அறைக் கீரை**; a red variety of garden greens, *Amaranthus gangeticus* (சா.அக.).

அஞ்செடுப்பு *añj(u)-eḍuppu*, பெ. (n.) **பூப்படைந்த பெண் குளித்த நாளில் தன் எதிர்காலப் பிள்ளைப்பேற்றிற் கறிகுறியாக, நிலத்திற் கீறிய ஐஞ்சதுரத்தினின்று பொருள்களைத் தன் மடியில் எடுத்துவைக்குஞ் சடங்கு** (இ.வ.); ceremony performed by a girl, on the day she bathes after attaining puberty, by placing in her lap articles from five squares marked on the ground, thus indicating her future role as mother of children (Loc.).

[*அஞ்சு = ஐந்து பொருள் அல்லது பாவை (தொகைக்குறிப்பு). எடுப்பு = மடியிலெடுத்து வைப்பு.*]

அஞ்செண்ணெய்த்தயிலம் *añj(u)-eṇṇey-t-tayi-lam*, பெ. (n.) **ஐந்தெண்ணெய்த்தயிலம்** பார்க்க; see *aind(u)-eṇṇey-t-tayilam*.

[*அஞ்சு + எண்ணெய் (எள் + நெய்) + தயிலம்.* **Skt.** tila (*எள்*) *→ தைல > த. தயிலம்.*]

அஞ்செருப்புடம் *añj(u)-eru-p-puḍam*, பெ. (n.) **ஐந்து வறட்டியைக் கொண்டு போடும் புடம்**; a fire raised with five dry cow-dung cakes, used for calcination (*சா.அக.*).

[*அஞ்சு + எரு + புடம்.*]

அஞ்செலி *añjeli*, பெ. (n.) 1. **காட்டுப்பலா**; jungle jack, *Artocarpus hirsuta* (சா.அக.). 2. **ஆடுதின்னாப்பாலை** (சித்.அக.); worm-killer. 3. **தாழை** (பச்.மூ.); fragrant screw pine (செ.அக.).

அஞ்செவி *añjevi* (am-ševi), பெ. (n.) **உட்காது**; cavity of the ear. "அஞ்செவி நிறைய வாலின" (முல்லைப். 89).

[*அகம் = உள். அகம் + செவி – அகஞ்செவி → அஞ்செவி.* **ஒ.நோ:** *அகங்கை → அங்கை.*]

அஞ்செழுத்து *añj(u)-eḻuttu*, பெ. (n.) **சி வா ய ந ம அல்லது ந ம சி வா ய என்னும் ஐந் தெழுத்துக் கொண்ட திருவைந்தெழுத்து என்னும் சிவ வழிபாட்டு மந்திரம்**; the five-lettered mantra, viz., *na ma ši vā ya* or *ši vā ya na ma*, uttered in the worship of Šiva. "அஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க" (சி.சி. சுபக். 9 : 8). 'அஞ்செழுத்தும் பாவனையும் அப்பனைப் போல் (அவனைப்போல்) இருக் கிறது' (பழ.).

இவ் வைந்தெழுத்துள், 'சி' சிவத்தையும், 'வ' அருளையும், 'ய' ஆதனையும் (ஆன்மா வையும்), 'ந' மறைப்பாற்றலையும் (திரோ தான சக்தியையும்), 'ம' ஆணவக் குற்றத்தை யும் குறிக்கும் (சிவப்பிர. 97, உரை).

[*அஞ்சு + எழுத்து.*]

அஞ்சைக்களம் *añjai-k-kaḷam*, பெ. (n.) **மேல் கரைக் கொடுங்கோளூரிலுள்ள சிவன்கோயில்**; Šiva temple at *Koḍuṅgōḷūr*, the modern Cranganore, on the West coast. "கடலங் கரை மேன் மகோதை....................அஞ்சைக்களத் தப்பனே" (தேவா. 7.4 : 1).

மறுவ. திருவஞ்சைக்களம்

அஞ்சோளம் *añjōḷam*, பெ. (n.) எருக்கு; giant swallow-wort, sun plant, *Calotropis gigantea* (சா.அக.).

அஞ்ஞலம் *aññalam*, பெ. (n.) **கொசு**; mosquito (சா.அக.). **அஞல்** பார்க்க; see *añal*.

அஞ்ஞலாத்தி *aññalātti*, பெ. (n.) **நோய் கொண்டவள்**; a sickly woman (சா.அக.).

அஞ்ஞாழிக்கால் *aññāḻi-k-kāl*, பெ. (n.) **ஐந்து நாழி கொண்ட மரக்கால் வகை** (S.I.I. iii, 241); a grain measure of five *nāḻis*.

ம. அஞ்ஞாழி

[*ஐ + நாழி + கால் – ஐந்நாழிக்கால் → அஞ்ஞாழிக்கால். கால் = மரக்கால்.*]

அஞ்ஞான்று *aññāṉṟu*, கு.வி.எ. (adv.) 1. **அப் போது**; on that occasion, at that time.

''அஞ்ஞான் றாடலை வெஃகி'' (கந்தபு. தக்ஷ. காளிந்திப். 15). 2. **அந்த நாளில்**; on that day.

ம. அன்னு; க. அந்து; து. ஆனி; தெ. நாடு; கோண். ஆண்டி; கூ. அண்டி.

[அ + ஞான்று.]

அஞ்ஞை[1] *aññai*, பெ. (n.) **அன்னை**; mother. ''அஞ்ஞைநீ யேங்கி யழலென்று'' (சிலப். 9 : 24).

தெ. அன்னு; பிராகி. அன்னி.

[அம்மை → அன்னை → அஞ்ஞை.]

அஞ்ஞை[2] *aññai*, பெ. (n.) **அழகு** (பொதி.நி.); beauty.

[அம் = அழகு. அம் → அம்மை = அழகு. அம்மை → அஞ்ஞை.]

அஞர்[1]**-தல்** *añar-*, 2 செ.கு.வி. (v.i.) 1. **தளர்தல்**; to become weary, to faint. 2. **சோம்புதல்** (திவா.); to be lazy, slothful.

[அயர் → அஞர். அயர்தல் = தளர்தல், வருந்துதல்.]

அஞர்[2] *añar*, பெ. (n.) 1. **நோய்** (திவா.); disease. 2. **துன்பம்**; distress, calamity. ''பேரஞர்க் கண்ணள் பெருங்காடு நோக்கி'' (புறநா. 247 : 6). 3. **வழிநடந்த வருத்தம்**; fatigue. ''ஆர வுண்டு பேரஞர் போக்கி'' (பொருந. 88). 4. **அச்சம்** (திவா.); fear. 5. **வழுக்குநிலம்** (திவா.); slippery ground.

[அயர் → அஞர் = தளர்ச்சி, நோய், துன்பம், அச்சம்.]

அஞராட்டி *añarāṭṭi*, பெ. (n.) **நோயுள்ளவள்**; sickly woman. ''அழிவுடை யுள்ளத் தாரஞ ராட்டி'' (சிலப். 13 : 80).

அஞல் *añal*, பெ. (n.) **கொசுகு** (சிந்தா.நி.); a species of gnat.

[அள் = கூர்மை. அள் → அய் → அயல் → அஞல் = கூரிய உறிஞ்சியாற் குருதியை உறிஞ்சுவது.]

அஞலம்[1] *añalam*, பெ. (n.) 1. **கொசு**; mosquito. 2. **நுளம்பு** (திவா.); a species of gnat.

[அஞல் → அஞலம். 'அம்' பெருமைப்பொருட் பின்னொட்டு.]

அஞல் பார்க்க; see *añal*.

அஞலம்[2] *añalam*, பெ. (n.) **ஐவிரை (பஞ்சவாசம்)** (பொதி.நி.); the five aromatics.

[ஒருகா. ஐ + நலம் – ஐந்நலம் → ஐஞ்ஞலம் → அஞலம். நலம் = நறுமை (வாசனை).

கை (விரல் தொகை) = ஐந்து. வறட்டி முதலிய பொருள்களை விற்கும்போது, ஒவ்வோர் ஐந்தையும் ஒவ்வொரு கை என்று சொல்வது வழக்கம். கை → ஐ → ஐது → ஐந்து → அஞ்சு.]

"In some languages the word used to signify five properly means a hand, or is derived from a word which has that meaning, —the number of fingers on each hand being five. In Lepsius's opinion, the word for ten, which is used in all the Indo-European dialects, had its origin in the Maeso-Gothic *tai-hun*, two hands. Applying this principle to the Dravidian languages, *ei*, five, might be presumed to be derived from *kei*, Tam. a hand, by the process of the softening away of the initial consonant."—(C.C.G.D.L., pp. 338-39).

In many languages the word for 'five' is identical with or similar to the word for 'hand'; 'ten' is frequently 'two hands' or 'pair of hands' or 'the upper part'; 'twenty' is in some languages called 'all digits', 'hands and feet', 'the whole man' or something of the sort. There are also expressions for the numbers from six to nine which are clearly based on finger counting, since they say for 'six' something like 'one on the left hand', for 'nine' perhaps 'one short of two hands'.—The Origin and Derivation of Language, pp. 183-4.

அட்டக்கரி *aṭṭa-k-kari*, பெ. (n.) **மிகக் கருப்பு, மிகக் கருப்பானது**; jet black, that which is jet black.

ம. அட்டக்கரி

[ஒருகா. அண்டம் (அண்டங்காக்கை) போன்ற கருப்பு என்றிருக்கலாம். ஒ.நோ : நண்டுவாய்க் காலி → நட்டுவாய்க்காலி.]

அட்டக்கருப்பு *aṭṭa-k-karuppu*, பெ. (n.) **மிகக் கருப்பு, மிக்க கருப்பு**; jet black.

'கறுப்பு' என்னும் வடிவம் சினத்தைக் குறிக்குஞ் சொல்லாதலால், கருநிறத்தைக் குறிக்குஞ் சொல்லைக் 'கருப்பு' என்றே சொல்லவும் எழுதவும் வேண்டும்.

''கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள'' என்று தொல்காப்பியம் (சொல். உரி. 75) கூறுதல் காண்க.

அட்டக்காய் *atta-k-kāy*, பெ. (n.) ***சாதிக்காய்***; nutmeg, *Myristica fragrans* (*சா.அக.*).

அட்டகசம் *attakašam*, பெ. (n.) **ஆடாதோடை**; Malabar nut tree, justicewort, *Adhatoda vasica* (*சா.அக.*).

அட்டகணி *attakaṇi*, பெ. (n.) ***அட்டகசம்*** *பார்க்க*; see *attakašam*.

அட்டகத்தாதி *attagattādi*, பெ. (n.) ***சிவப்புச் சர்க்கரைவள்ளி***; red sweet potato, panicled batatas, *Ipomaea digitata* alias *Convolvulus batatas* (*சா.அக.*).

அட்டகம் *attagam*, பெ. (n.) ***வசம்பு*** (*மலை.*); sweet flag.

அட்டங்கால் *attaṅgāl*, பெ. (n.) ***அட்டணைக் கால்*** *பார்க்க*; see *attaṇai-k-kāl*.

அட்டணங்கால் *attaṇaṅgāl*, பெ. (n.) ***அட்டணைக்கால்*** *பார்க்க*; see *attaṇai-k-kāl*.

அட்டணை *attaṇai*, கு.வி.எ. (adv.) **குறுக்கே** (வின்.); across.

[அட்டம் + அணை.]

அட்டணைக்கால் *attaṇai-k-kāl*, பெ. (n.) *1.* **உட்கார்கையிற் கால்மேல் காலாகக் குறுக் காக மடக்கிவைக்குங் கால்**; folded legs in sitting cross-legged. *2.* **கால்மேல் குறுக்காக இடுங் கால்**; one leg placed over the other in sitting, cross-legged.

[அட்டம்+அணை+கால். அட்டம்=குறுக்கு. அணை = அணைக்கை, தழுவுகை, சேர்க்கை.]

து. அட்டகாரு

அட்டணைக்கால் போட் டிரு-த்தல் *attaṇai-k-kāl-pōttiru-*, *3* செ.கு.வி. (v.i.), **நாற்காலி போன்ற இருக்கைகளில் கால்மேல் காலிட்டு அமர்ந்திருத் தல்**; to sit cross-legged, especially on a raised seat like a stool, chair or bench.

[அட்டம் = குறுக்கு. அணை = அணைக்கை, தழுவுகை, சேர்க்கை. அட்டம் +அணை – அட் டணை.]

அட்டணைக்கால் போட்டிருத்தல்

அட்டதிசம் *attadišam*, பெ. (n.) எருக்கு (மலை.); madar, *Calotropis gigantea*.

அட்டதிசை *attadišai*, பெ. (n.) ***அட்டதிசம்*** *பார்க்க*; see *attadišam* (*சா.அக.*).

அட்டதீரசம் *attadīrašam*, பெ. (n.) ***இரும்பு அரப்பொடி*** (பரி.அக.); iron filings.

அட்டதேறல் *atta-tēṟal*, பெ. (n.) ***காய்ச்சிய மது***; distilled arrack. "அட்ட தேறலு மடாதமை தேறலும்" (கந்தபு. மகேந். நகர்புகு. 60).

[அடு → அட்ட = காய்ச்சிய. தேறு → தேறல் = தெளிவு, தெளிந்த மது, மது.]

அட்டநேமிநாதர் *attanēminādar*, பெ. (n.) (சமணம்) **பொன்னெயில் வட்டத்திருக்கும் சமணப் பெரியோர்** (தக்கயாகப். 373, உரை); (Jain.) the sages in the *samavacaraṇam*.

அட்டப்பல்லக்கு *atta-p-pallakku*, பெ. (n.) **குறுக்காகக் கொண்டுபோகும்படி யமைக்கப் பட்டதும், மிகப் பெரியோர்க்கே பயன்படுத்தப் படுவதுமான சிவிகை வகை**; palanquin with curved roof having poles fixed at right angles to its body, so that it can be carried from the sides, used only for the most eminent persons.

[அட்டம் + பல்லக்கு.]

அட்டம்[1] *attam*, பெ. (n.) *1.* **அருகு**; nearness. "அடர்க்கு நாய்க ளட்டமாக விட்டு" (பெரியபு. கண்ணப். 76). *2.* **பக்கம்**; side. 'இரண்டட்டத்திலும் மரகதகிரியைக் கடைந்து மடுத்தாற்போல்' (அஷ்டாதச. அர்ச்சி. பிர. 3). *3.* **குறுக்கு**; opposition, cross direction. மாட்டுக்கு அட்டத்திலே போகாதே (உ.வ.). *4.* ***மாறு***, **பகை**; hostility, enmity. "அட்டமாக வழுதிமே லமர்க்கெழுந்த தொக்குமே" (திருவிளை. கடல்சுவற. 9).

[அடு→அட்டம். அடுத்தல்=பக்கஞ்செல்லுதல். அடுத்தற் கருத்தினின்று குறுகுதல், எதிர்த்தல் முதலிய கருத்துகள் தோன்றின.]

அட்டம்[2] *attam*, பெ. (n.) *1.* **மேல்வாய்**; palate. "அட்டத்திற் கட்டி" (திருமந். 799). *2.* **அட் டாலை**; watch-tower on a fort (நாநார்த்த.). *3.* **மேல்வீடு**; apartment on flat roof (சங்.அக.). *4.* **மேல்மாடி**; upper storey. "அட்டமிடுந் துவசமும்" (இராமநா. பாலகா. 17). *5.* **அரச மனை** (சங்.அக.); king's apartment.

ம. அட்டம்; க., து. அட்ட; தெ. அட்டமு; கோத. அட்த்; துட. ஒட்மு; பிராகி. அட்டோ.

[எட்டம் → அட்டம். எட்டம் = உயரம்.]

த. அட்டம் > **Skt.** atta.

அட்டம்[3] *aṭṭam,* பெ. (n.) ***சாதிக்காய்*** (மலை.); nutmeg.

அட்டம்[4] *aṭṭam,* பெ. (n.) ***வட்டம்*** (இராட்.); circle (R.).

[வட்டம் → அட்டம்.]

அட்டம்[5] *aṭṭam,* பெ. (n.) ***சோறு, உணவு***; boiled rice, food.

ம. அட்டம்; க. அட்ட; தெ. அட்டமு.

[அடுதல் = சமைத்தல். அடு → அட்டம்.]

அடு[2]-தல் பார்க்க; see *aḍu*[2]-.

அட்டம்பக்கம் *aṭṭam-pakkam,* பெ. (n.) *அடுத்த பக்கம் (யாழ்ப்.)*; adjoining side (J.).

அட்டம்பாரி-த்தல் *aṭṭam-pāri-,* 4 செ.குவி. (v.i.) *1. பக்கஞ்சார்ந்து செல்லுதல்* (யாழ்ப்.); to walk by the side, walk abreast. *2. பக்க வாட்டில் அகலித்தல், பருத்தல்* (யாழ்ப்.); to grow in bulk as a tree, an animal (J.).

ம. அட்டம்; தெ. அட்டமு; க. அட்ட.

[அடு → அட்டம். அடுத்தல் = பக்கஞ்செல்லுதல், அடுத்தற் கருத்தினின்று குறுகுதல், எதிர்த்தல் முதலிய கருத்துகள் தோன்றின.]

அட்டமிடு-தல் *aṭṭam-iḍu-,* 17 செ.குன்றாவி. (v.t.) ***சுற்றுதல்*** (இராட்.); to turn, to move round (R.).

க. அடன; தெ. அடனமு.

[வட்டம் → அட்டம்.]

அட்டமுகடு *aṭṭa-mugaḍu,* பெ. (n.) ***உச்சி*** (யாழ்ப்.); top (J.).

அட்டர் *aṭṭar,* பெ. (n.) *அட்டம்*[3] பார்க்க; see *aṭṭam*[3].

[அட்டம் → அட்டர்.]

அட்டரக்கு *aṭṭarakku,* பெ. (n.) ***உருக்கிய மெழுகு அல்லது அரக்கு***; melted wax or lac. "அட்டரக் கனைய செவ்வா யணிநலங் கருகி" (சீவக. 468).

[அடுதல் = காய்ச்சுதல், உருக்குதல். அட்ட + அரக்கு – அட்டரக்கு.]

அட்டரித்தான் *aṭṭarittāṉ,* பெ. (n.) ***கோவைக் கொடி***; a creeper, Indian caper, *Bryonia grandis* (சா.அக.).

அட்டலங்காய் புட்டலங்காய் *aṭṭalaṅgāy-puṭṭalaṅgāy,* பெ. (n.) ***தாய் அல்லது செவிலித்தாய், சிறுபிள்ளையின் கால்களை நீட்டிவைத்து, அவற்றைக் கணுக்கால்மேல் வலக்கையால் இடசாரியாகவும் வலசாரியாகவும் தடவிக் கொடுத்துக்கொண்டு, 'அட்டலங்காய் புட்டலங் காய்' என்று தொடங்கும் மரபுச்சொற்றொடர் களைச் சொல்லி, இறுதியில் தானே தன் வினா விற்கு விடை சொல்லும்போது பிள்ளையைச் சுட்டிக்காட்டும் விளையாட்டுக் காலப்போக்கு***; a playful pastime for a child in which the mother or the foster-mother recites some traditional nursery rhymes beginning with the words *aṭṭalaṅgāy puṭṭalaṅgāy* while she keeps stroking the ankles of the child's outstretched legs with her right hand and finally points out towards the child answering the question she has posed in the rhymes.

மரபுச் சொற்றொடர்கள்

'அட்டலங்காய் புட்டலங்காய் அடுக்கடுக் காய் மாதுளங்காய்
பச்சரிசி குத்திப் பரண்மேலே வச்சிருக்கு
மாங்கா யுடைத்து மடிமேலே வச்சிருக்கு
தேங்கா யுடைத்துத் திண்ணையிலே வச்சிருக்கு
எந்தப் பூனை தின்றது? (வினா)
இந்தப் பூனை தின்றது! (விடை)'

அட்டலி *aṭṭali,* பெ. (n.) ***மரவகை***; a kind of tree, *Jatropha glauca* (Nels.).

அட்டவண்ணைத்திருக்கை *aṭṭavaṇṇai-t-tirukkai,* பெ. (n.) ***நெடுக்களவு 3 அடியும் குறுக்களவு 6 அடியுமுள்ள பெருந் திருக்கை மீன்***; sting-ray, reddish brown fish, 6 feet across and 3 feet long, *Pteroplatea micrura.*

[ஒருகா. அட்டம் + வண்ணை + திருக்கை.]

அட்டவணை *aṭṭavaṇai,* பெ. (n.) 1. ***பொருட் பட்டி, பொருட்குறிப்பேடு, பதிவேடு, பேரேடு***; index, ledger, register, catalogue. "அட்ட வணை யிட்டதுபோ லத்தனையுந் தானிருந்து" (பணவிடு. 30). 2. ***பதிவுபெற்ற பதவியாளர் என்பதைக் குறிக்கப் பதவிப் பெயருக்குமுன் சேர்க்கும் முன்னொட்டு***. எ-டு: அட்டவணை அரசிறையாளர் (தாசில்தார்); prefix to an official designation to imply that the person holding the office is duly registered or gazetted as in *aṭṭavaṇai-t-tahsildār* (R.F.).

க. அட்டவணெ; து. அட்டணெ; மரா. அடவண.

இச் சொல் மராட்டியச் சொல்லாயினும், ஐந்திரவிடம் (பஞ்ச திரவிடம்) என்னும் பண்டை முறைப்படி இங்குத் தமிழ்ச் சொல்லாகத் தழுவப்பட்டது.

அட்டவணைக்கணக்கன் *aṭṭavaṇai-k-kaṇakkaṉ*, பெ. (n.) **பேரேடெழுதுங் கணக்கன்** (W.); accountant, ledger-keeper.

[அட்டவணை + கணக்கன்.]

அட்டவணைக்காரன் *aṭṭavaṇai-k-kāraṉ*, பெ. (n.) *அட்டவணைக் கணக்கன்* பார்க்க; see *aṭṭavaṇai-k-kaṇakkaṉ*.

அட்டவணைச்சாலை *aṭṭavaṇai-c-cālai*, பெ. (n.) **கணக்குவேலை பார்க்குமிடம்** (இராட்.); counting house, office of accountants (R.).

[அட்டவணை + சாலை.]

அட்டவணைப்பிள்ளை *aṭṭavaṇai - p - piḷḷai*, பெ. (n.) *அட்டவணைக்கணக்கன்* பார்க்க; see *aṭṭavaṇai-k-kaṇakkaṉ*.

[அட்டவணை + பிள்ளை.]

பண்டை நாளிற் கணக்குவேலை பார்ப் பவர் பெரும்பாலும் வெள்ளாளர் என்னும் வேளாளராக இருந்ததனால், கணக்க வேலைக்காரர் தமக்குரிய குலப்பட்டத்துடன் கணக்கப்பிள்ளை யெனப்பட்டனர்.

அட்டனம் *aṭṭaṉam*, பெ. (n.) *1.* **வட்ட வடிவ மாகிய பரிசை**; round shield. *2.* **சக்கரப் படை** (சிந்தா. நி.); discus.

Skt. aṭṭana

[வட்டம் → வட்டனம் → அட்டனம்.]

அட்டாங்கால் போடு-தல் *aṭṭāṅgāl-pōḍu-*, 20 செ. கு.வி. (v.i.) **மீன்வலை சுருட்டும்போது அல்லது மீன் பிடிக்கும்போது மீன வர்கள் சிறிதே உட்கார முயன்றாற்போல் முன் கால் அகற்றி அசைந்த வாறு நடத்தல்** (மீனவ.); to step out and walk as fishermen do with knees bent almost in a sitting posture while handling their nets (Fisher.).



அட்டாங்கால் போடுதல்

[ஒருகா. அகட்டாங்கால் போடுதல் → அட்டாங் கால் போடுதல்.]

அட்டாரி *aṭṭāri*, பெ. (n.) *அட்டாலி* பார்க்க (கோவை); see *aṭṭāli*.

[அட்டாலி → அட்டாரி.]

அட்டாலகம் *aṭṭālagam*, பெ. (n.) *1.* **கோட்டை மதின்மேலுள்ள காவற்கூடம்**; watch-tower on a fort. 'அட்டாலகமும் மதிற்பொறியு முதலா யின' (குறள், 744, மணக். உரை). *2.* **மேல்வீடு** (சங்.அக.); apartment on flat roof.

ம. அட்டாலகம்; க. அட்டாளக; தெ. அட்டாலகமு.

*[த. அட்டாலகம் > **Skt.** aṭṭālaka.]*

அட்டாலம் *aṭṭālam*, பெ. (n.) *அட்டாலை* பார்க்க; see *aṭṭālai*.

அட்டாலி *aṭṭāli*, பெ. (n.) **மாடிவீடு** (கோவை); house with an upper floor (Cm.).

அட்டாலிகை *aṭṭāligai*, பெ. (n.) *1.* **மேல்வீடு** (சங்.அக.); apartment on an upper storey. *2.* **அரசர் மனை**; royal palace.

க. அட்டாள; தெ. அட்டாலிக.

*[அட்டாலை → அட்டாலம் → அட்டாலி → அட்டாலிகை. 'கை' சிறுமைப்பொருட் பின் னொட்டு (aug. suff.). அட்டாலிகை > **Skt.** aṭṭālikā.]*

அட்டாலை *aṭṭālai*, பெ. (n.) *1.* **மேல்வீடு** (வின்.); apartment on an upper storey. *2.* **கோட்டை மதின்மேற் காவற்கோபுரம்**; watch-tower on a fort. "கீழ்பா லிஞ்சி யணைய வட்டாலை கட்டு" (திருவாலவா. 26 : 10). *3.* **தோட்டம், புன்செய், ஆட்டுப்பட்டி, சிற்றூர் முதலியவற்றின் காவற்பரண்** (யாழ்ப்.); raised covered platform from which one keeps watch on a garden, a field, a sheep-fold, a village, etc. *4.* **அரசர் மனை** (சங்.அக.); royal residence. "கதன வாயிலுங் கட்டுமட் டாலையும்" (கம்பரா. யுத்த. முதற்போர். 32). *5.* **காப்பு** (சம். அக. கை.); protection. *6.* **மரவகை** (இராட்.); a species of tree (R.).

ம. அட்டாலம்; க. அட்டாள; தெ. அட்டடி.

*[அட்டாலை > **Skt.** aṭṭāla. எட்டம் → அட்டம். எட்டம் = உயரம். அட்டம் + ஆலை – அட்டாலை.]*

அட்டாலைச்செட்டி *aṭṭālai-c-ceṭṭi*, பெ. (n.) **பழைய காசு (நாணய) வகை** (சரவண. பண விடு. 59); an ancient coin.

[அட்டாலை + செட்டி. அட்டாலைச் செட்டி யென்னுங் காசு, ஒரு மாடமாளிகையில் வாழ்ந்த பெருவணிகச் செட்டியின் மாழையினாலோ (உலோகத்தினாலோ) பொருளுதவியினாலோ மாராயம் பெற்ற நெடுமொழியினாலோ அச்சு அடிக்கப்பட்டதாக இருக்கலாம்.]

அட்டாலைச்சேவகன் *aṭṭālai-c-cēvagaṉ*, பெ. (n.) கோட்டை மதிற் காவற்கோபுரத்திலிருந்து காவல் புரியும் பொருநன் (போர் மறவன்); soldier keeping guard on the watch-tower of a fort. "சந்திர சேகரனை யட்டாலைச் சேவகனை" (சொக்க. உலா, 276).

Skt. sēvaka > த. சேவகன்.

[அட்டாலை + சேவகன்.]

அட்டாலைமண்டபம் *aṭṭālai-maṇḍabam*, பெ. (n.) மேல்வீடாகக் கட்டப்பட்ட மண்டபம்; big hall forming the upper storey of a mansion. "கீட்டிசை மருங்கோ ரட்டாலை மண்டபஞ் செய்யென வதுகேட் டெழுந்தரசன்" (திருவிளை. யானை. 23).

அட்டாளகம் *aṭṭāḷagam*, பெ. (n.) மேல்மாடி (புதுவை); upper storey (Poṇḍ.).

[அட்டாலகம் → அட்டாளகம்.]

அட்டாளிகை *aṭṭāḷigai*, பெ. (n.) அட்டாளகம் பார்க்க; see *aṭṭāḷagam*.

அட்டாளை *aṭṭāḷai*, பெ. (n.) 1. அட்டாளகம் பார்க்க; see *aṭṭāḷagam*. 2. காவற்பரண் (யாழ்ப்.); covered platform used for watching a garden (J.).

[எட்டம் = உயரம். எட்டம் → அட்டம் = உயரமான கட்டடம். அட்டம் + ஆலை (சாலை) – அட்டாலை → அட்டாலம் → அட்டாலி → அட்டாலிகை.

அட்டாலம் → அட்டாலகம். அட்டாலி → அட்டாரி. அட்டாலம் → அட்டாளம் → அட்டாளகம். அட்டாலை → அட்டாளை. அட்டாலை மரம் காவற்பரணாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

காவற் கோபுரமும் காவற் பரணும் காவற்குப் பயன்பட்டதனால், அட்டாலைச் சொல்லிற்குக் காப்புப்பொருள் தோன்றியிருத்தல் வேண்டும்.]

அட்டாளைப்பெட்டி *aṭṭāḷai-p-peṭṭi*, பெ. (n.) தட்டுகள் உள்ள பேழை (இ.வ.); case with shelves (Loc.).

[அட்டாளை + பெட்டி.]

அட்டி¹ *aṭṭi*, பெ. (n.) 1. செஞ்சந்தனம் (மூ.அ.); red sandalwood, m. tr., *Pterocarpus santalinus*. 2. சந்தனம் (மூ.அ.); sandal. 3. இலுப்பை (மூ.அ.); South Indian mahua (L.), long-leaved bassia, *Bassia longifolia* (சா.அக.). 4. எட்டி (மூ.அ.); strychnine, *Nux vomica*. 5. குன்றி வேர்; Indian liquorice root, *Abrus precatorius* (சா.அக.). 6. பருப்பு; kernel of shelled seeds (சா.அக.).

அட்டி² *aṭṭi*, பெ. (n.) முன்னங்கால்களில் கழற்காயளவு உருண்டை கட்டுங் குதிரை நோய் (அசுவசா. பக். 112); disease of horses which forms as a ball-like growth as big as bonduc-nuts, on the forelegs.

அட்டி³ *aṭṭi*, பெ. (n.) 1. தாழ்ப்பு (தாமதம்); procrastination, delay. "அட்டிசெய நினையாதீர்" (அருட்பா, 6, திருவருட்பேறு, 2). 2. தடை; hindrance, obstacle. கேட்டவுடன் அட்டி சொல்லாமற் பணத்தைக் கொடுத்து விட்டான் (உ.வ.).

ம. அட்டிமறிக்குக; க., தெ. அட்டி; து. அட்டி.

[அட்டம் = குறுக்கு. அட்டம் → அட்டி = தடை, காலத்தாழ்ப்பு.]

அட்டி⁴ *aṭṭi*, பெ. (n.) 1. கப்பலின் பின்பக்கம் (இராட்.); stern of a ship (R.). 2. மரப் பறையின் (பீப்பாவின்) மேல்புறம் அல்லது அடி; head or bottom of a cask.

[ஒருகா. அண்டி (அடி) → அட்டி.]

அட்டிகம் *aṭṭigam*, பெ. (n.) சாதிக்காய் (மலை.); nutmeg, *Myristica fragrans*.

அட்டிகை *aṭṭigai*, பெ. (n.) கழுத்தை யொட்டி யிருக்கும் பொன் அல்லது முத்து அணிவகை; closely fitting necklace of gold wires or of precious stones. 'அட்டிகைக்கு ஆசைவைத்து எருமைச் சங்கிலியைக் கட்டிக்கொண்டாளாம்' (பழ.).

ம., தெ. அட்டிக; க., கூ. அட்டிகெ.

[ஒட்டு → அட்டு → அட்டி → அட்டிகை.]

அட்டிப்பேறு *aṭṭi-p-pēṟu*, பெ. (n.) செப்புப் பட்டயத்துடன் நீர்வார்த்துக் கொடுக்கப்பட்ட மரபுரிமைத் தானம் (வெட்.); gift, hereditary possessions and rights bestowed on a person by a copper-plate charter (Insc.).

ம. அட்டிப்பேர், அட்டிப்பேறு.

[அட்டுதல் = வார்த்தல். பெறு → பேறு = பெறுகை. அட்டிப்பேறு = உறுதிப்பொருட்டு நீர்வார்த்துக் கொடுக்கப்பெற்ற பேறு.]

அட்டிமை *aṭṭimai*, பெ. (n.) 1. ***சீரகம்*** (மூ.அ.); cumin seed. 2. ***கருஞ்சீரகம்*** (சா.அக.); black cumin, *Nigella sativa* (சா.அக.). 3. ***ஓமம்*** (வின்.); bishop's weed (W.), *Sison ammi* (சா.அக.).

அட்டியல் *aṭṭiyal*, பெ. (n.) 1. *அடுக்குக்கலம்* (இ.வ.); a set of vessels of cylindrical shape fitting one within the other (Loc.). 2. *அட்டிகை பார்க்க*; see *aṭṭigai*.

அட்டில் *aṭṭil*, பெ. (n.) 1. ***மடைப்பள்ளி, சமையலறை***; kitchen. ''*புனிற்றுநாய் குரைக்கும் புல்லெ னட்டில்*'' (சிறுபாண். *132*). 2. ***வேள்விக் கூடம்***; place for performing sacrificial ceremonies. ''*அட்டின் மறையோ ராக்கிய வாவுதி*'' (சிலப். *10 : 143*).

[அடு + இல் – அட்டில்.]

அட்டிற்சாலை *aṭṭiṟ-cālai*, பெ. (n.) ***சமையலறை***; kitchen. ''*அட்டிற்சாலையு மருந்துநர் சாலையும்*'' (மணிமே. *20 : 7*).

[அட்டில் + சாலை.]

அட்டிற்பேறு *aṭṭiṟ-pēṟu*, பெ. (n.) ***கோயிற் பணியாளர்க்குத் திருப்படையற்சோறு வழங்குவதற்காக நிறுவிய அறக்கொடை***; an endowment for the distribution of food to the servants of a temple (M.E.R. 448 of 1928-9).

[அட்டில் + பேறு.]

அட்டினம் *aiṭṭṉam*, பெ. (n.) ***சீரகம்*** (பரி.அக.); cumin seed, *Cuminum cyminum*.

அட்டு¹-தல் *aṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) *வடிதல்*; to be discharged, as pus; to flow, as honey. ''*சீயட்டு முயவுநோய்*'' (சீவக. *2798*). —, 5 செ.குன்றாவி. (v.t.) 1. ***வார்த்தல்***; to pour, as water or oil. ''*யாப்பினு ளட்டிய நீர்*'' (குறள், *1093*). 2. ***நீர்வார்த்துத் தானஞ் செய்தல்***; to make gifts by pouring water on the right hand of the donee. 3. ***நீர்வார்த்தாற் போற் கொண்டுவருதல்***; to bring, as a river. ''*அட்டித்தரப் பணியே*'' (தேவா. *7.20 : 1*). 4. ***தான பட்டயம் (சாஸனம்) அளித்தல்***; to endow, as on a temple. '*கோக்கருநந்தடக்கன்.........................அட்டின பூமி*' (T.A.S. i, 6). 5. ***இடுதல்***; to give. ''*அளகத்தி னட்டிய தாதும்*'' (திருக்கோ. *122*). 6. ***செலுத்துதல்*** (S.I.I. ii, 147); to remit money.

க. அட்டு; து. அட்டுனி; கோத. அட்; துட. ஒட்.

அட்டு²-தல் *aṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) ***ஒட்டுதல்***; to join, stick, paste.

க. அண்டிசு; தெ. அண்டு; து. அண்டு; கோத. அண்ட்; கோண். அட்க்; கொண். அட்கி; கொலா., நா. அட்.

[ஒட்டு → அட்டு.]

அட்டு³-தல் *aṭṭu-*, ஏ.து.வி. (imp. aux. v.) ***ஓர் ஈரேவல் (வினை) ஒருமையீறு***; a verbal singular suffix used as imperative auxiliary in the sense of 'let'.

ஏ-டு: அவன் செய்யட்டு, அது வரட்டு.
இதன் பன்மையீறு 'அட்டும்'.

ஏ-டு: அவன் செய்யட்டும், அது வரட்டும்.

ம. அட்டே

[ஒட்டு→அட்டு. ஒல் → ஒள் → ஒண் → ஒட்டு. ஒட்டுதல் = இசைதல், இணங்குதல், (செய்ய) விடுதல்.]

அவன் தூங்கவொட்டார் = அவனைத் தூங்கவிடார், அவன் தூங்க இசையார்.

செய்ய + ஒட்டு – செய்யவொட்டு → செய்யொட்டு → செய்யட்டு.

செய்யட்டு – நீர் அவன் செய்யவொட்டு (ஒருமை). செய்யட்டும் – நீர் (நீம்) அவன் செய்யவொட்டும் (பன்மை).

ஒ.நோ: செய் (ஒருமை), செய்யும் (பன்மை). 'உம்' பன்மையீறு. ஊம் (நூம்) → உம். நூம் → நீம் (நீர்).

'செய்யட்டு' என்பதில் 'செய்' (செய்ய) என்பது படர்க்கை யேவலும் 'அட்டு' (ஒட்டு) என்பது முன்னிலை யேவலும் ஆகும். ஆதலால், இது இணையேவல் அல்லது இருமடியேவல்.

'செய்யட்டு' என்பது போன்றதே 'செய்வி', 'உண்பி' என்பனவும். செய்ய + ஈ – செய்யவீ → செய்வீ → செய்வி. வி → பி. உண்ணவீ → உண்ணவி → உண்வி → உண்பி.

ஒ.நோ: ''செய்யென் வினைவழி விப்பி தனிவரின்
செய்வியென் ஏவல் இணையின் ஈரேவல்'' (நன். *138*).

அசரை

அசலை

அட்டவண்ணைத்திருக்கை


அட்டாலகம்


அட்டிகை

அட்டை

இதில் ஈரேவல் என்றது உண்மையில் மும் மடியேவல். ஈறுநோக்கியே ஈரேவல் எனப் பட்டது.

'செய்யட்டு' என்னும் ஒருமை ஏவல் வழக் கருகிப்போனதினால் 'செய்யட்டும்' என்னும் பன்மை ஏவலே இன்று ஒருமையாகவும் வழங்கிவருகின்றது.

அட்டு[1] *aṭṭu*, பெ. (n.) 1. **வெல்லம்**; cake of unrefined sugar. 2. **பனம்பழத்திலிருந்து செய்யப்பட்ட பனாட்டு என்னும் வெல்லக்கட்டி**; dried palmyra fruit jelly. *பனாட்டு* பார்க்க; see *panāṭṭu*.

க., தெ. அட்டு.

[அடுதல் = காய்ச்சுதல். அடு → அட்டு = காய்ச்சப்பட்டது.]

அட்டு[2] *aṭṭu*, பெ. (n.) *அழுக்கான கூழ்ச்சேறு*; dirty watery mud, slush. 2. *அழுக்கு*; dirt. அவன் அட்டுப் பிடித்தவன் (உ.வ.).

க. ஆட்டு

[அள்ளுதல் = செறிதல். அள் = செறிவு. அள் → அள்ளல் = நெருக்கம், (மண் செறிந்த) சேறு. அள்ளு → அட்டு = அழுக்கும் மண்ணும் செறிந்த சேறு.]

அட்டு[3] *aṭṭu*, இடை. (int.) **பிறர் கூற்றை மறுக்கும் இடைச்சொல்**; an exclamation of contradiction (Loc.). அட்டு, அவன் ஆறு நாளுக்குள் ஆண்டுப் பாடத்தையெல்லாம் படித்து விடுவானாம் (இ.வ.).

அட்டுக்கிறை *aṭṭukk(u)-iṟai*, பெ. (n.) **பழைய வரிவகை** (S.I.I. iii, 311); an ancient tax.

[ஒருகா. அட்டுக்கு + இறை. அட்டு = வெல்லம். இறை = வரி.]

அட்டுணவு *āṭṭuṇavu*, பெ. (n.) **சமைத்த உணவு**; cooked food.

[அட்ட + உணவு.]

அட்டூண் பார்க்க; see *aṭṭūṇ*.

அட்டுப்பு *aṭṭuppu*, பெ. (n.) 1. **காய்ச்சிய வுப்பு** (சா.அக.); salt produced by evaporating sea-water. ''அமிர்தையிங் கட்டுப்பு'' (தைலவ. தைல. 129). 2. **கறியுப்பு**; common salt extracted from soils containing it, either pure, singly or in combination with other salts by the process of filtration. 3. **பூநீர் (பூநீறு), வெடியுப்பு, சீனம், சாரம், இந்துப்பு ஆகிய இவற்றைக் காமன் தண்ணீரில் (கழுதை மூத்திரத்தில்) கணக்காய் எரித்துப் பதங்கண்டு இறக்கி ஆறியபின் கட்டியாய் நிற்கும் ஒரு வகை வைப்புச் சரக்கு** (மச்சமுனி, 800); a salt obtained by boiling pooneer, nitre, alum, sal ammoniac and rock-salt dissolved in ass's urine. 4. **இருபத்தைந்து வகை இலவணங்களி லொன்றாகிய காய்ச்சு இலவணம்**; one of the 25 kinds of salt described in the Indian Medical Science.

[அட்ட + உப்பு.]

ம., க. அட்டுப்பு; **தெ.** அட்டுப்பு, அண்டுப்பு.

அட்டும் *aṭṭum*, ஏ.து.வி. (imp. aux. v.) *அட்டு*[3]*-தல்* பார்க்க; see *aṭṭu*[3]-.

அட்டூண் *aṭṭūṇ*, பெ. (n.) **சமைத்த உணவு**; cooked food. ''அயலறியா வட்டூணோ வில்'' (பழமொழி, 148).

[அட்ட + ஊண்.]

அட்டூழியம் *aṭṭūḻiyam*, பெ. (n.) **கொடுந்தீம்பு**; atrocity. அவன் பண்ணின அட்டூழியத்திற்கு அளவில்லை (உ.வ.).

ம. அட்டூழியம்; **க.** அட்டுளி.

அட்டை[1] *aṭṭai*, பெ. (n.) **நிலத்திலும் நீரிலும் வாழக்கூடியதும், நாங்கூழ்போற் குறுகி நீள்வதும், (தமிழ்நாட்டில்) ஒரு விரலம் (அங்குலம்) முதல் ஒரு சாண் வரை நீண்டு வளர்வதும், ஊனுடம்புகளில் ஒட்டிக்கொண்டு அரத்தத்தை யுறிஞ்சுவதும், புழுப்போன்றதுமான ஓர் ஊருயிரி**; leech. ''ஆக்க முண்டே லட்டைகள் போற் சுவைப்பர்'' (திவ். திருவாய். 9.1 : 2). 'அட்டைக்கும் குட்டைக்குந்தான் உறவு, அதில் விழுந்த எருமைக்கு என்ன உறவு?', 'அட்டை செத்தால் குட்டைக்கு நட்டமா?', 'அட்டையைப் பிடித்து மெத்தையிலே வைத்தது போல' (பழ.).

ம., தெ. அட்ட; **க., குட.** அட்டெ.

[ஒட்டு → அட்டு → அட்டை.]

அட்டை[2] *aṭṭai*, பெ. (n.) 1. **சன்னப் பலகை போன்று தடித்த தாளட்டை**; card board. 2. **பொத்தகக் கட்டட அட்டை**; bound book-cover. 3. **செருப்பின் தோலட்டை**; layer of the sole of a sandal or shoe.

க., து. அட்டெ; **தெ.** அட்ட.

[அள் = செறிவு, திண்மை. அள் → அட்டு → அட்டை = திண்ணமான தாட்பலகை அல்லது தோற்பட்டை.]

அட்டை[3] *aṭṭai*, பெ. (n.) *பொத்தக மேலுறை*; book-cover.

க. அட்டெ; தெ. அட்ட.

[*ஒருகா. சட்டை → அட்டை.*]

பொத்தகப் போர்வையாகிய அட்டை, சன்னப் பலகை போன்ற திண்ணிய அட்டை யல்லாத தடித்த தாளில் அல்லது மெல்லிய தாளிலேயே இடப்படுவதால், அதைக் குறிக் கும் பெயரைச் சட்டை யென்னும் சொல்லின் திரிபாகக் கொள்வதே பொருத்தமாம்.

அட்டை[4] *aṭṭai*, பெ. (n.) *துலாக்கட்டை*; joist.

[*ஒருகா. ஒட்டு → ஒட்டை → அட்டை.*]

அட்டை[5] *aṭṭai*, பெ. (n.) *தலையில்லா முண்டம்*; headless trunk.

தெ. அட்ட (உடம்பு, தலையில்லா முண்டம்.); க., து. அட்டெ.

[*மொட்டை → மட்டை → அட்டை.*]

அட்டைக்கடி *aṭṭai-k-kaḍi*, பெ. (n.) 1. *அட்டை யினாற் கடிக்கப்படுதல்*; leech-bite. 2. *அட்டைக் கடித் தழும்பு*; scar left by leech-bite (சா.அக.).

[*அட்டை + கடி.*]

அட்டைக்கடிப் பண்டுவம் (சிகிச்சை) *aṭṭai-k-kaḍi-p-paṇḍuvam*, பெ. (n.) *அட்டையை உறிஞ்சவிட்டு நோயாளிகளின் கெட்ட அரத் தத்தை வெளியேற்றிக் குணப்படுத்துதல்*; the art of healing by draining blood by leech-bite, leech-craft (சா.அக.).

[*அட்டை + கடி + பண்டுவம்.*]

அட்டைக்குப்பி *aṭṭai-k-kuppi*, பெ. (n.) *பண்டு வத்திற்காக அட்டையை வைத்து வளர்க்கும் புட்டி*; glass tube for keeping leeches meant for curative purposes (சா.அக.).

[*அட்டை + குப்பி.*]

அட்டைக்குழி *aṭṭai-k-kuḻi*, பெ. (n.) 1. *அட்டை யுள்ள கிடங்கு*; pit of leeches. 2. *அட்டைக் கடியால் துன்புறும் நரகம்* (வின்.); a pit in Hell said to be infested with leeches.

[*அட்டை + குழி.*]

அட்டைப்பால் *aṭṭai-p-pāl*, பெ. (n.) *பனங் கள்*; palmyra toddy (சா.அக.).

அட்டைப்பிசின் *aṭṭai-p-piśin*, பெ. (n.) *அட்டையைப்போல் ஒட்டிக்கொள்ளும் பிசின்*; a kind of gum which would stick like a leech.

[*அட்டை + பிசின்.*]

அட்டைப்பிரயோகம் *aṭṭai-p-pirayōgam*, பெ. (n.) *உடம்பில் அரத்தம் கெட்டுப்போயிருப்பினும், கட்டியிருப்பினும், அதை வெளியேற்ற அட்டையைப் பயன்படுத்தல்*; application of leeches to the body of patients having impure or congested blood in their system (சா.அக.).

[*அட்டை + Skt. pra-yoga > த. பிரயோகம் = பயன்படுத்தல்.*]

அட்டைப்பூச்சி *aṭṭai-p-pūcci*, பெ. (n.) *வயிற் றுக்குள் அட்டையைப்போல் ஒட்டிக்கொண்டு வாழ்வதும், நாடாப்போல் நீண்டதுமான பூச்சி வகை*; tape-worm, which breeds by sticking to the inside walls of the stomach, like a leech (சா.அக.).

[*அட்டை + பூச்சி.*]

அட்டையாடல் *aṭṭai-y-āḍal*, பெ. (n.) *போர்க் களத்திற் போர் மறவனுடல் துண்டிக்கப்பட்ட விடத்தும், துண்டிக்கப்பட்ட அட்டை இயங்கித் துடித்தல் போன்று மறச்செயல் காட்டியாடுகை* (தொல். பொருள். புறத். 16, உரை); hero's body continuing to perform heroic deeds even after dismemberment, as the quivering of a leech after being cut in two.

க. அட்டெயாட.

[*மட்டை → அட்டை. ஒ.நோ: மலர் → அலர். அட்டை = தலையற்ற முண்டம். அட்டை யாடல் = போர்க்களத்தில் தலையற்றவிடத்தும் போர்மறவனுடல் சிறிது நேரம் மறச்செயல் காட்டி யாடுகை.*]

அட்டையாடல் என்பது, இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய இருவரின் தொல் காப்பிய வுரையிற் கண்ட தொடர். அதிலுள்ள அட்டை யென்னுஞ் சொல்லிற்கு, அவ்விருவரே ஊருயிரியாகிய அட்டை யென்று பொருள்கொண்டுள்ளனர்.

அட்ட என்னும் தெலுங்கச் சொல் உடம் பைக் குறிப்பதால், அட்டையாடுதல் என்பது தலையில்லா முண்டம் ஆடுவதையே குறிக்கு மென்பர் ஒருசாராராய்ச்சியாளர். அட்டை போலாடுதல் என்னும் உவமைப் பொருளி னும், முண்டமாடுதல் என்னும் உவமை யில்லாப் பொருளே சிறந்திருத்தலால், இளம் பூரணர்க்கு முந்திய உரையாசிரியர் அப் பொருளே கொண்டிருக்கலாமென்று கருத இடமுண்டு. அங்ஙனமாயின், அப் பொருள் வழக்கு இளம்பூரணர் காலத்தில் இறந்து பட்டிருத்தல் வேண்டும்.

மொட்டை = 1. கூரின்மை. 2. தட்டையான தலைக்கவிப்பு (மொட்டைத் தொப்பி). 3. மயிர் மழித்த அல்லது வெட்டின தலை (மொட்டைத்தலை). 4. தலையில்லா முண்டம். 5. கொம்பில்லா மாடு (மொட்டை மாடு). 6. கும்பமில்லாத் தேர் (மொட்டைத் தேர்). 7. முடியமையாக் கோபுரம் (மொட்டைக் கோபுரம்). 8. முகடில்லா மச்சுவீடு (மொட்டை மாடி). 9. கூண்டில்லா வண்டி (மொட்டை வண்டி). 10. ஆடையில்லா வுடம்பு (மொட்டைக் கட்டை). 11. இலை பூ காய் கனி முற்றும் உதிர்ந்த மரம் (மொட்டை மரம்). 12. மரஞ்செடி கொடி யில்லா மலை (மொட்டை மலை).

மொட்டை→மட்டை. **ஒ.நோ:** மொண்டை →மண்டை = மொள்கலம், இரப்போர் கலம், தலையோடு, இளவரசு மகுடம்.

மட்டை = 1. மயிர் மழித்த மொட்டைத் தலை. 'இறைவனில்லாமையால் தனித்துக் கொய்யப்பட்ட மொட்டையாகிய தலை யுடனே' (புறநா. 261 : 17, உரை). 2. உடற் குறை (தலையில்லா முண்டம்). ''யூபங் கவந்தம் மட்டை யுடற்குறை'' (திவா. மக்கட் பெயர்த் தொகுதி).

ஆகவே, 'உடல் துண்டிக்கப்பட்ட விடத்தும் அட்டைபோல வீரனுடல் வீரச் செயல் காட்டி யாடுகை' என்பது பொருந்தாது. தெலுங்கு கன்னடத்தில், அட்டை யென்னுஞ் சொல் தலையில்லா முண்டத்தைக் குறிப்பதும் இதை வலியுறுத்தும்.

அட்டையிலட்சணம் *aṭṭai-y-ilaṭcaṇam*, பெ. (n.) *தன்வந்திரி வாகடம் 110-ல் சொல்லியுள்ள அட்டையைப்பற்றிய நெறிமைகள் (விதிகள்)*; a treatise compiled by Dhanwantri on the art of healing by the use of leeches, a science on leech-craft (சா.அக.).

[*த.* *இலக்கணம்* > **Skt.** lakṣaṇa > *த.* *இலட்சணம்.*]

இலக்கணம் பார்க்க; see *ilakkaṇam*.

அட்டையெண்ணெய் (தயிலம்) *aṭṭai-y-eṇṇey*, பெ. (n.) *அட்டைத் தலைகளினின்று உருவாக்கும் ஒருவகை யெண்ணெய்*; an extract prepared from the heads of leeches and employed to prevent the formation of blood clots (சா.அக.).

[*அட்டை + எண்ணெய்.*]

அட்டையொட்டல் *aṭṭai-y-oṭṭal*, பெ. (n.) *காத்துக்கொள்ளாத வழிப்போக்கர்மேலும், வேட்டைக்காரர்மேலும் அட்டை தானாகவே ஒட்டிக்கொண்டு அரத்தத்தை யுறிஞ்சல்*; sticking of leeches by themselves to the body of unwary travellers and hunters for sucking their blood (சா.அக.).

[*அட்டை + ஒட்டல்.*]

அட்டைவகை *aṭṭai-vagai*, பெ. (n.) *அட்டையின் பல்வேறு வகைகள்*; the different species of leeches.

அட்டைகள் பின்வருமாறு வெவ்வேறு வகையில் இவ்விரு பிரிவாகப் பிரிக்கப் படலாம்:

(1) *இடவகை:* நிலவட்டை, நீரட்டை; உள்நாட்டட்டை, வெளிநாட்டட்டை.

(2) *கோலவகை:* பொறியட்டை, பொறியிலட்டை.

(3) *பயன்பாட்டுவகை:* நல்லட்டை, நச்சட்டை.

நல்லட்டை யென்பன மருத்துவத்திற்குப் பயன்படுவன. அவை ஆயுர்வேத மருத்துவப் படி ஆறாகும்.

அவையாவன: குராலி (கபிலம்), உள்ளியம் (பிங்கலை), சங்குமுகன் (சங்குமுகி), எலியன் (மூஷிகம்), முளரிமுகன் (புண்டரீகமுகி), மரையடைவண்ணன் (சபரிகம்).

நிறவகையில் செவ்வட்டை, பச்சட்டை, காரட்டை, பொன்னட்டை என நான்காகப் பகுக்கலாம்.

அட்டைவிடல் *aṭṭai-viḍal*, பெ.(n.) *உடம்பிலுள்ள கெட்ட அரத்தத்தை நீக்குமாறு, அட்டையை உறிஞ்சவிடல்*; employment of leeches for removing impure blood from a human body (சா.அக.).

அட்டைவிதி *aṭṭai-vidi*, பெ. (n.) *அட்டையின் வேறுபாடுகளையும் அவற்றைக் கொண்டு செய்யும் பண்டுவ (சிகிச்சை) முறைகளையும் பற்றிக் கூறும் நூல்*; a treatise dealing with the various species of leeches, and the method of their application in the treatment of diseases (சா.அக.).

Skt. vidhi > த. விதி = நெறி, நெறிமை.

[*ஒட்டு → அட்டு → அட்டை.*]

அட்டோலக்கம் *aṭṭōlakkam*, பெ. (n.) *அட்டோலகம்* பார்க்க; see *aṭṭōlagam.*

அட்டோலகம் *aṭṭōlagam*, பெ. (n.) *1.* **ஆரவாரக் காட்சி** (யாழ்ப்.); pomp, show, magnificence. *2.* **கெந்தளிப்பு** (யாழ்ப்.); mirth, festivity, rejoicing (J.).

[ஒட்டோலக்கம் → அட்டோலக்கம் → அட்டோலகம்.]

ஒட்டோலக்கம் பார்க்க; see *oṭṭōlakkam.*

அட *aḍa*, இடை. (int.) *1.* **துயரம், இரக்கம், வியப்பு, வெறுப்பு முதலியவற்றை யுணர்த்தும் இடைச்சொல்**; exclamation of regret, pity, surprise or wonder, dislike, etc. **துயரம்:** ''அடகெடுவாய் பலதொழிலு மிருக்கக் கல்வி யதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில் லாமல்'' (தனிப்பா. தி. *1*, பக். *241*). **இரக்கம்:** அட தெய்வமே! ஏன் இந்தத் தாயில்லாப் பிள்ளை இப்படி இரு கண்ணுங் குருடாய்ப் பிறக்க வேண்டும்? (உ.வ.). **வியப்பு:** அட! அமெரிக்கர் திங்களையும் அடைந்து திரும்பி விட்டனர் (உ.வ.). **வெறுப்பு அல்லது சினம்:** அட போ, உனக்கென்ன தெரியும் அவன் செய்தி? (உ.வ.). *2.* **விளியிடைச்சொல்**; vocative particle. அட பயலே! நான் சொன்ன படி செய் (உ.வ.).

ம. அட; **க.** எலா, அலா; **தெ.** அரே, அடே; **து.** எலா; **துட.** எத்.

[ஏ (விளியிடைச்சொல்) → ஏல் → ஏல → ஏள → ஏழ → ஏட → (எட) → அட.]

அடக்கச்சடங்கு *aḍakka-c-caḍaṅgu*, பெ. (n.) **சவத்தை அடக்கஞ் செய்யும் வினை**; burial.

[அடக்கம் + சடங்கு.]

அடக்கச்செலவு *aḍakka-c-celavu*, பெ. (n.) *1.* **அடக்கவினைக்குச் செல்லும் பணச்செலவு**; burial expenses. *2.* **அடக்கச் சடங்கு** (புதுவை); burial (Poṇḍ.).

[அடக்கம் + செலவு.]

அடக்கஞ்செய்-தல் *aḍakkañ-cey-*, *1* செ.குன்றா வி. (v.t.) **சவத்தைப் புதைத்தல்**; to bury the corpse.

[அடக்கம் + செய்.]

அடக்கத்துச்சோரம் *aḍakkattu-c-cōram*, பெ. (n.) **நாரி வெள்ளை (சுக்கிலம்)**; a fluid discharged apart from the menstrual blood in women through vagina (சா.அக.).

[அடக்கம் + அத்து (சாரியை) + சோரம்.]

அடக்கநிலைமை *aḍakka-nilaimai*, பெ. (n.) *1.* **செயப்பாடான நிலைமை**; a quiescent condition, as in a woman in the act of sexual intercourse. *2.* **பெண்ணின் மடமை**; modesty of a woman (சா.அக.).

அடக்கம்[1] *aḍakkam*, பெ. (n.) *1.* **அமைதி**; calmness. 'அடக்கமற்ற பெண் அவிந்து போன கண்', 'அடக்கமே அறிவுக்கு வித்து', 'அடக்கம் ஆயிரம் பொன் தரும்', 'அடக்கம் உடையார் அறிஞர், அடங்காதார் கல்லார்' (பழ.). *2.* **ஆரவாரமின்மை;** unostentatiousness. *3.* **பிறர் செய்தியில் தலையிடாமை**; non-interference. ''அடக்க முடையா ரறிவில ரென்றெண்ணிக் கடக்கக் கருதவும் வேண்டா!'' (மூதுரை, *16*). *4.* **பணிவான ஒழுக்கம்**; humility, submission, subordination. 'அடக்கமென்பது, உயர்ந்தோர்முன் அடங்கி யொழுகும் ஒழுக்கம்; அவை: பணிந்த மொழியுந் தணிந்த நடையுந் தானை மடக் கலும் வாய்புதைத்தலும் முதலாயின' (தொல். பொருள். மெய்ப். *12*, பேரா. உரை). *5.* **தன் னடக்கம்**; self-control. ''இளையா னடக்க மடக்கம்'' (நாலடி. *65*). *6.* **பொறுமை**; patience. *7.* **ஐம்புல வடக்கம்**; subjugation of the five senses. ''ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்'' (குறள், *126*). *8.* **மூச் சடக்கம்**; suppression of breath. *9.* **உயி ரொடுங்கியிருத்தல்**; subdued state of the animating powers, before death. *10.* **மயக்கம்**; loss of consciousness, stupor as from snake-bite. *11.* **சவப்புதைப்பு**; burial. *12.* **சுருக் குகை**; contraction, as a tortoise withdrawing into its shell. *13.* **மறைபொருள், கமுக்கம்**; secret. எல்லாம் அடக்கமாயிருக்கிறது (உ.வ.). *14.* **செறிந்திருக்கை**; compactness. எல்லாப் பொத்தகங்களையும் பெட்டிக்குள் அடக்க மாக வை (உ.வ.). *15.* **உள்ளடங்கிய பொருள்**; contents, as of a box, enclosures, as of a letter. *16.* **செலவொடு சேர்ந்த மொத்த விலை**; cost price including incidental expenses. வண்டி விலை மற்றச் செலவொடு சேர்த்து அடக்கம் எவ்வளவாகிறது? *17.* **மொத்தச் செலவு**; total expenditure. வீடு கட்டினதற்குச் செலவு அடக்கம் எவ்வளவு? *18.* **கருத்து** (சங்.அக.); gist. *19.* **புதைபொருள்** (செ.அக.); treasure trove. *20.* **வாணவகை** (யாழ்ப்.); fireworks of crackers so arranged in layers, to produce a continuous series of bursts. *21.* **பறைவகை**;

a kind of drum. ''நிசாளந் துடுமை சிறுபறை யடக்கம்'' (சிலப். 3 : 27, அடியார்க். உரை).

து. அடக்கம் > **Skt.** ḍhakkā.

[அடங்கு → அடக்கு → அடக்கம்.]

அடக்கம்² *aḍakkam*, பெ. (n.) **குறிப்பிட்ட எல்லையிலிருந்து படிமத்தின் முன்னுறுப்பு களும் பின்னுறுப்புகளும் அடங்கியிருக்கும் அடக்க அளவு**; distance encompassed by the organs above and below a given point on an image (சி.செ. பக். 184, பத்தி 2).

[அடக்கு → அடக்கம்.]

அடக்கம்பண்ணு-தல் *aḍakkam-paṇṇu-*, 5 செ. குன்றாவி. (v.t.) 1. **உள்ளடக்கி வைத்தல்**; to pack, stow away. 2. **சவத்தைப் புதைத்தல்**; to bury, inter, entomb. 3. **மறைத்து வைத்தல்**; to conceal, put out of sight.

அடக்கமா(கு)-தல் *aḍakkam-ā(gu)-*, 6 செ.கு.வி. (v.i.) 1. **பள்ளி(சமாதி) புகல்**; to enter into šamādhi voluntarily to attain union with the Universal soul or the Divine spirit. 2. **ஒடுக்க மாதல்**; to become modest. 3. **சுருங்குதல்**; to shrink (சா.அக.). —, 5 செ.குன்றாவி. (v.t.) **மூச்சொடுக்கல்**; to control the breath.

[அடக்கம் + ஆ(கு).]

அடக்கமானம் *aḍakkamāṉam*, பெ. (n.) **படிமக் கலையிற் கையாளப்படும் அறுவகை அளவு மானங்களுள் ஒன்று**; one of the six kinds of dimensions observed in sculpture. 'படிமத்தின் முன்புறத்தில் ஒரு தூக்குநூலைத் தொங்க விட்டு, அந்த நூலிலிருந்து படிமத்தின் தலை, நெற்றி, மூக்கு, மோவாய், கழுத்து, மார்பு, கொப்பூழ் (நாபி), தொடை ஆகிய உறுப்பு கள், அந் நூலுக்குச் செங்குத்தாக எவ்வெவ் வளவு அடக்கம் கொண்டு இருக்கின்றன என்பதை அறிய உதவும் இவ்வளவை............ அடக்கமானம் என்றும் தாழ்த்துமானம் என்றும்..................சொல்வது நடைமுறை வழக்கு'. (சி.செ. பக். 184, பத்தி 5).

[அடக்கம் + மானம். அடங்கு → அடக்கு → அடக்கம். மா + அனம் (தொ. பெ. ஈறு) — மானம்.].

அடக்கமெழுப்பு-தல் *aḍakkam-eḻuppu-*, 5 செ. குன்றாவி. (v.t.) 1. **மயக்கந் தெளிவித்தல்**; to restore consciousness as from stupor caused by snake bite, fits, etc. 2. **நஞ்சிறக்கல்**; to dispel poisonous effects through medicine or magical chant (சா.அக.).

[அடக்கம் + எழுப்பு.]

அடக்கமெழும்பு-தல் *aḍakkam-eḻumbu-*, 5 செ.கு.வி. (v.i.) **மயக்கந்தெளிதல்**; to regain consciousness as from stupor caused by snake bite or a fit (W.).

[அடக்கம் + எழும்பு.]

அடக்கவிலை *aḍakka-vilai*, பெ. (n.) **ஊதியங் கருதாது சென்ற செலவின் அளவாகக் குறிக்கப் பட்ட விலை**; actual cost price, rock-bottom price, non-profit cost price of manufactured articles, books, etc.

அடக்கவிலைப் பதிப்பு *aḍakka-vilai-p-padippu*, பெ. (n.) **ஊதியங்கருதாது செலவின் அளவாக விலை குறிக்கப்பட்ட பதிப்பு**; cost price edition, cheapest edition of a publication.

[அடக்கம் + விலை + பதிப்பு.]

அடக்காப்புல் *aḍakkā-p-pul*, பெ. (n.) **பீனசப் புல்**; a kind of grass, *Panicum dactylon*.

அடக்கி *aḍakki*, பெ. (n.) 1. **தன் திறமையை அல்லது நிலைமையை வெளிக்குக் காட்டாத ஆள்**; taciturn person, one who conceals his real circumstances or ability. 2. **சிறுநீர் மலங் களை அவ்வப்போது வெளிப்படுத்தாது அடக்கி வைப்பவன்-ள்**; one who postpones answering calls of nature.

அடக்கியல் *aḍakkiyal*, பெ. (n.) **அடக்கியல் வாரம்** பார்க்க (வீரசோ. யாப். 11, உரை); see *aḍakkiyal-vāram*.

அடக்கியல்வாரம் *aḍakkiyal-vāram*, பெ. (n.) (யாப்.) **சிலவகைக் கலிப்பாக்களின் இறுதியில் வரும் 'சுரிதகம்' என்னும் உறுப்பு** (தொல். பொருள். செய். 144, பேரா. உரை); (Pros.) last member of certain kinds of *kalippā*, called *šuridagam*.

'அடக்கியல் வாரமென்பது அடக்கும் இயல் பிற்றாகிய வாரமென்றவாறு. ......அடக்கிய லென்றான், முன்னர்ப் பலவகையாற் புகழப் பட்ட தெய்வத்தினை ஒரு பெயர் கொடுத் தடக்கி நிற்றலின். வாரமென்றான், தெய்வக் கூற்றின் மக்களைப் புகழ்ந்த அடி மிகுமாகலி னென்பது' — பேராசிரியருரை.

''அடக்கிய லின்றி அடிநிமிர்ந் தொழுகியும்'' (செய். 149) என்று தொல்காப்பியரே கூறுத

லால், **அடக்கியல்** என்பதும் சுரிதகத்திற்கு ஒரு பெயரென்பது பெறப்படும். ஆகவே, **அடக்கியல்வாரம்** என்பது இருபெயரொட்டாகும். இருபெயரும் வெவ்வேறு பொருட்கரணியங் குறித்தலாலேயே இருபெயரொட்டாயின. கலிப்பாவில் முற்கூறப்பட்ட பொருள்களையெல்லாம் அடக்கி நிற்பதனால் **அடக்கியல்** என்றும், பாட்டின் முடிபைக் கொண்டு மகுடம்போல உயர்ந்து நிற்றலால் **வாரம்** என்றும், சுரிதகம் பெயர் பெற்ற தென்று கொள்ளலாம். வார்தல் = உயர்தல்.

பேராசிரியர், நீண்டு வருதலென்று பொருட்கரணியங் கொண்டார். வார்தல் = நீளுதல். இவ் வியல்பு வாரங்கொண்ட எல்லாக் கலிப் பாவிற்கும் ஏற்காமை அவர் கூற்றானே விளங்கும்.

அடக்கியொடுக்கி *adakki-y-odukki*, கு.வி.எ. (adv.) 1. ***முற்றுங் கீழ்ப்படுத்தி***; having subjugated completely. 2. ***வேரறக் களைந்து***; having eradicated.

அடக்கிராவி *adakkirāvi*, பெ. (n.) ***நெல்வகை***; variety of paddy (T.A.S. v, 204).

அடக்கு-தல் *adakku-*, 5 செ.குன்றாவி. (v.t.) அடங்கு என்பதன் பி.வி. (caus. of *adaṅgu*). 1. ***அடங்கச் செய்தல்***; to bring under control. *கலகத்தை அடக்கிவிட்டார்கள்* (உ.வ.). 2. ***கீழ்ப்படுத்துதல்***; to constrain, repress, bring to terms, to subjugate, curb, coerce, tame, break, as a horse. 3. ***சுருக்குதல்*** (வின்.); to condense, abbreviate. 4. ***உள்ளடக்குதல்***; to pack, stow away. 5. ***புதைத்தல்***; to bury. 6. ***சிறுநீர், மலங்களை வெளிப்படுத்துவதைக் கடத்திவைத்தல்***; to postpone answering calls of nature.

ம. அடக்குக; **க.** அடக்கு; **தெ.** அடாசு; **கோத.** அற்கு; **கூ.** ஆட்ப; **துட.** ஒர்க்; **குட.** அடக்; **து.** அடேவுனி; **கொலா.** டாங்க்த்; **மா.** அர்கெ; **கொண்.** டாங்; **குரு.** அர்க்னா.

அடக்குப்பண்ணு-தல் *adakku-p-paṇṇu-*, 5 செ.கு.வி. (v.i.) ***தடைசெய்தல்***; to hinder, stop.

[அடக்கு + பண்ணு.]

அடக்குமுறை *adakku-muṟai*, பெ. (n.) ***கண்டித் தடக்குகை*** (இக்.வ.); repression (Mod.). '**அடக்குவா ரற்ற கழுக்காணி**', '**அடக்குவா ரின்றேல் ஆமையும் தாவும்**' (பழ.).

அடக்குமுறைச்சட்டம் *adakku-muṟai-c-caṭṭam*, பெ. (n.) ***கண்டித்தடக்கும் சட்டம்*** (இக்.வ.); repressive legislation (Mod.).

[அடக்குமுறை + சட்டம்.]

அடக்குமுறை யாட்சி *adakku-muṟai-y-āṭci*, பெ. (n.) ***கண்டித்தடக்கும் அரசாட்சி*** (இக்.வ.); repressive government (Mod.).

[அடக்குமுறை + ஆட்சி.]

அடகம் *adagam*, பெ. (n.) 1. ***வசம்பு*** (பரி.அக.); sweet flag. *அட்டகம் பார்க்க*; see *aṭṭagam*. 2. ***நாய்வேளை***; dog-mustard plant, *Cleome viscosa* (சா.அக.).

அடகு[1] *adagu*, பெ. (n.) 1. ***இலைக்கறி***; greens, edible leaves. "மென்பிணி யவிழ்ந்த குறுமுறி யடகு" (மதுரைக். 531). 2. ***பச்சிலை***; odoriferous Indian plant, medicinal green leaves. "ஆயிர மாண்டுபுல் லடகு மேயினான்" (கந்தபு. தக்ஷ. கயமுகனுற். 73). 3. ***மகளிர் விளையாட்டு வகை***; a girls' game. "கூடலனையாளை யாடா வடகினுங் காணேன்" (திணைமாலை. 4).

க. ஆகு; **தெ.** ஆக்கு; **கொண்.** ஆக்; **கோண்.** ஆதீ; **கூ., பெங்., மண்.** ஆகி; **குவி.** ஆக்கு; **குரு.** அட்கா; **மா.** அத்தெ; **பிராகி.** டாக.

[அடை = இலை. அடை → அடகு.]

அடகு[2] *adagu*, பெ. (n.) ***கொதுவை***; pledge, pawn of personal property. "ஆபரணம் வைத் தடகு தேடுபொருள்" (திருப்பு. 606).

ம. அடமானம்; **க.** அடவு; **து.** அடவு, அடாவு; **தெ.** அட்டு.

[அடை → அடைவு = அடைமானம், கொதுவை. அடைவு → அடவு → அடகு.]

அடகுபிடி[1]**-த்தல்** *adagu-pidi-*, 4 செ.குன்றாவி. (v.t.) ***கடனாகப் பணங்கொடுத்து அதற்கீடாக விலைபெறும் பொருள்களை வாங்கி வைத்தல்***; to do pawn-broking.

அடகுபிடி[2]**-த்தல்** *adagu-pidi-*, 4 செ.கு.வி. (v.i.) (நடம்) ***கூத்தில் நளிநயக்கை பிடித்தல்***; (Dan.) to assume poses in dancing.

[அடி → அடிகு → அடகு.]

அடகோலை *adag(u)-ōlai*, பெ. (n.) ***அடைமான ஓலை***; lease deed.

[அடகு + ஓலை.]

அடங்க *aḍaṅga,* கு.வி.எ. (adv.) 1. *உள்ளாக*; to be contained within. ''அவனி முழுது மோரடிக்கு ளடங்க வளந்து கொண்டவனே'' (சூத. முத்தி. 4 : 29). 2. *முழுதும்*; wholly, entirely. 'வயலடங்கக் கரும்பும்' (ஈடு, 8.9:4).

ம. அடங்க, அடங்கனெ.

அடங்கம் *aḍaṅgam,* பெ. (n.) கடுகுரோகிணி (பச்.மூ.); Christmas rose.

அடங்கல் *aḍaṅgal,* பெ. (n.) 1. *கீழ்ப்படிகை*; submitting, obeying. 2. *பகுதியாக அமைகை*; being comprised or included. 3. *உள்ளிடம் பெற முடிகை*; being possible to be stuffed into. 4. *செய்யத் தகுகை*; being fit or worthy to act or perform. ''தாதைய ரிட்ட காரிய மடங் கலின் றாயினு மமையு மாயினும்'' (சேதுபு. அவைய. 2.). 5. *தங்குமிடம்*; abode. ''அடங்கல் வீழிகொண் டிருந்தீர்'' (பெரியபு. ஏயர்கோ. 59). 6. *சாகுபடி நோட்டம் (சோதனை)*; examination of the cultivation of village lands (R.F.). 7. *சாகுபடிக் கணக்கு*; detailed village account showing lands cultivated and the nature of the crops. 8. *அடங்கல் (குத்தகை) வேலை*; contract work.

ம. அடங்கல்; தெ. அடங்கு; பிரா. அட்கல்.

[அடங்கு → அடங்கல்.]

அடங்கலமிசம் *aḍaṅgal-amišam,* பெ. (n.) *ஓராண்டு விளைவு மதிப்பு* (C.G.). estimated annual produce of a piece of land.

*[த. அடங்கல் + **Skt.** amsa > த. அமிசம் = கூறு.]*

அடங்கலன் *aḍaṅgalaṉ,* பெ. (n.) 1. *கீழ்ப் படியாதவன்*; insubordinate man. 2. *பகைவன்*; defiant enemy or foe. ''அடங்கலர் முப்புர மெரித்தார்'' (பெரியபு. இடங்கழி. 4). 3. *புலன்கள் அடங்காதவன்*; one whose senses are not restrained. ''அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினால்'' (சீவக. 2842).

அடங்கலும் *aḍaṅgalum,* கு.வி.எ. (adv.) *எல்லாம், முழுதும்*; quite, entirely. ''திக்க டங்கலும்'' (திருவிளை. திருநகரங் கண்ட. 13).

[அடங்கல் + உம் (முற்றும்மை).]

அடங்கவும் *aḍaṅgavum,* கு.வி.எ. (adv.) *அடங்கலும்* பார்க்க; see *aḍaṅgalum.* ''உடம்ப டங்கவு மூன்கெட'' (பெரியபு. திருநாவுக். 359).

அடங்கன்முறை *aḍaṅgaṉ-muṟai,* பெ. (n.) *அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்னும் மூவர் தேவாரம் முழுதும்*; *Tēvāram,* in the sense that it includes all the hymns of three Saints Appar, Sambandar and Sundarar.

[அடங்கல் + முறை. அடங்கல் = எல்லாம். முறை = சிவநெறித் திருமுறை பன்னிரண்டுள் முதல் ஏழான மூவர் தேவாரம்.]

அடங்காக்கரத்தி *aḍaṅgā-k-karatti,* பெ. (n.) *சதுரக்கள்ளி*; square spurge, *Euphorbia quadruculli* (சா.அக.).

அடங்காத்தணலி *aḍaṅgā-t-taṇali,* பெ. (n.) *கருப்புச் சித்திரமூலம்*; black or blue flowered leadwort, *Plumbago zeylanica* (சா.அக.).

[தழல் → தணல் → தணலி. அடங்காத → அடங்கா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + தணலி.]

அடங்காத சத்தி *aḍaṅgāda-satti,* பெ. (n.) *அடங்காக்கரத்தி* பார்க்க; see *aḍaṅgā-k-karatti.*

அடங்காப்பச்சை *aḍaṅga-p-paccai,* பெ. (n.) *முலைப்பால்*; a woman's breast milk (சா.அக.).

[அடங்காத → அடங்கா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + பச்சை.]

அடங்காப்பற்று *aḍaṅga-p-paṟṟu,* பெ. (n.) *அரசன் கட்டளையை மீறுவோர் வதியும் ஊர்* (யாழ்ப்.); village rebellious against king's order (J.).

[அடங்காத → அடங்கா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + பற்று. பற்று = சிற்றூர்.]

அடங்காப்பிடாரி *aḍaṅgā-p-piḍāri,* பெ. (n.) *எவர்க்கும் அடங்காதவள்*; termagant, shrew. பிடாரி = காளி. காளிபோற் சினமும் முரட்டுத் தன்மையு முடையவளைக் காளி யென்பது உலக வழக்கு. 'அடங்காப் பிடாரியைக் கொண்டவனுங் கெட்டான், அறுகங் காட்டை உழுதவனும் கெட்டான்' (பழ.).

[அடங்காத → அடங்கா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + பிடாரி.]

அடங்காமரம் *aḍaṅgā-maram,* பெ. (n.) *ஒரு வகை மரம்* (இ.வ.); a kind of tree (Loc.).

அடங்காமாரி *aḍaṅgā-māri,* பெ. (n.) *அடங்காப் பிடாரி* பார்க்க; see *aḍaṅgā-p-piḍāri.*

[அடங்காத → அடங்கா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + மாரி.]

மாரி என்பது காளியின் பெயர்களுள் ஒன்று. *மாரி* பார்க்க; see *māri*.

அடங்கார் *aḍaṅgār*, பெ. (n.) *பகைவர்;* enemies. ''அடங்காரை யெரியழலம் புகவூதி'' (திவ். திருவாய். 4.8 : 8).

அடங்காவாரிதி *aḍaṅgā-vāridi*, பெ. (n.) 1. கடலுப்பு (வின்.); sea-salt. 2. *சிறுநீர்;* urine.

அடங்கிடம் *aḍaṅgiḍam*, பெ. (n.) *பேரூழியிறுதியில் அனைத்தும் ஒடுங்கும் பரசிவம்;* Paraśivam, the highest form of Śiva, in whom all would be absorbed on the dissolution of the Grand Universe. ''விந்து நாதஞ் சத்தி நெறியே யடங்கி டும்பர சிவத்தினில்'' (அருணாசலபு. திருமலைச். 5).

[அடங்கு + இடம்.]

அடங்கு-தல் *aḍaṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *கீழ்ப்படிதல்;* to obey, yield, submit. பெற்றோர்க் கடங்கி நடத்தல் வேண்டும் (உ.வ.). 2. *அறத்தின்கண் அமைந்தொழுகுதல்;* to behave righteously. ''கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான்'' (குறள், 150). 3. *புலன் ஒடுங்குதல்;* to be still, to be subdued, as the mind of a sage. ''சிந்தையு மென் போலச் செயலற் றடங்கிவிட்டால்'' (தாயு. பராபர. 325). 4. *உறங்குதல்;* to sleep. ''விழித்துழி விழித்தும் அடங்குழி யடங்கியும்'' (கல்லா. 7). 5. *மக்கள் உறங்கி அமைதி நிலவுதல்;* to become quiet, as a result of all the inhabitants of a place having gone to sleep. ஊர் அடங்கிவிட்டது (உ.வ.). 6. *உடம்பு ஒடுங்குதல்;* to be reduced, as the body, through disease, old age or grief. ஆறு மாதத் திற்குள் ஆள் அடங்கிவிட்டான் (உ.வ.). 7. *நாடி நின்றுவிடுதல்;* to stop beating as the pulse. நாடியடங்கிவிட்டது (உ.வ.). 8. *மூச்சு நின்றுவிடுதல்;* to stop breathing. மூச்சடங்கி விட்டது (உ.வ.). 9. *நொசிப்புநிலையடைதல் (சமாதிபுகல்);* to attain a state of intense contemplation as the final stage of yoga. இராமலிங்க அடிகள் இறுதியில் அடங்கி விட்டார் (உ.வ.). 10. *இறத்தல்* (மங்.வ.); to die (euphem.). எங்கள் அப்பனார் சென்ற ஆண்டே அடங்கிவிட்டார் (உ.வ.). 11. *உள்ளாதல்;* to be comprised, included. ''அளவை, காண்டல் கருத லுரையென் றிம் மூன்றி னடங்கிடுமே'' (சி.சி. சுபக். அளவை. 1). 12. *படிதல்;* to settle, subside, as dust. தூசி யடங்கத் தண்ணீர் தெளி (உ.வ.). 13. *தங்குதல்;* to remain, stay. 14. *கிடத்தல்;* to lie, lie down. ''வெள்ளேற் றெருத்தடங்கு வான்'' (கலித். 104 : 19). 15. *மனத்துள்ளிருத்தல்;* to confine in the mind as a secret. ''அடங்கரு நாணமும் பயமுங் கொண்டனன்'' (சூத. எக்கி. 2.4 : 23). 16. *சினையாதல்;* to be with young, as a cow impregnated. மாடு அடங்கியிருக்கிறது (இ.வ.). 17. *நெருங்குதல்;* to be close together, thick or crowded. ''அலவன் கண்பெற வடங்கச் சுற்றிய'' (கலித். 85 : 6). 18. *செய்யக்கூடியதாதல்;* to become possible for doing. ''இடங்கொளுந் தாதைய ரிட்ட காரிய மடங்கலின் றாயினு மமையு மாயினும்'' (சேதுபு. அவைய. 2). 19. *தீர்தல்;* to be extinguished. ''தழற்பசி யடங்கிடாது'' (சூத. எக்கி. பூ. 20 : 6). 20. *நின்றுபோதல்;* to cease. ''ஊறுநீ ரடங்கலி னுண்கயங் காணாது'' (கலித். 13 : 7). 21. *மறைதல்;* to disappear or set, as a heavenly body. ''ஆதித்த னடங்கு மளவில்'' (கலித். 78 : 15, நச். உரை).

அடச்செம்பை *aḍa-c-cembai*, பெ. (n.) *கருஞ் செம்பை;* common sesban, l. sh., *Sesbania aegyptiaca*.

அடசட்டா *aḍaśaṭṭā*, பெ. (n.) *சாகுபடி மதிப்பு* (R.T.); an estimate of cultivation.

அடசர்ப்புல் *aḍaśar-p-pul*, பெ. (n.) *பீனசப்புல்;* a kind of grass, *Panicum dectylon* (சா.அக.).

க. அடசல

அடசு-தல் *aḍaśu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *செறிதல்;* to be crowded. 2. *சிறிது ஒதுங்குதல்;* to move aside. அடசி நில் (உ.வ.). —, 5 செ.குன்றாவி. (v.t.) *அடையச்செய்தல், செறித்தல்;* to set closely (சா.அக.). ''அழுந்த வாளி யொன்று பத்துநூறு வன்பொ டடசினான்'' (பாரத. பதினா. 30).

க. அடசு

[அடைதல் = செறியக் குவித்தல். அடை → அடைசு → அடசு.]

அடசுவர் *aḍaśuvar*, பெ. (n.) *பால்;* milk (சா.அக.).

அடடா *aḍaḍā*, இடை. (int.) 1. *வியப்புக் குறிப்பு;* an expression of surprise. அடடா! அவன் எவ்வளவு இனிமையாகப் பாடுகின் றான்! (உ.வ.). 2. *இகழ்ச்சிக் குறிப்பு;* an expression of contempt. ''அடடா! வெளியே



அடப்பக்கத்தி



அடப்பக்கத்திப்பாறை



அடப்பான்



அடர்சோளம்



அடல்

புறப்பட்டார்'' (இராமநா. யுத்த. பக். 320). 3. *வருந்தற் குறிப்பு*; an expression of grief. அடடா! மோசம் போனேனே! (உ.வ.).

ம. அம்பம்பெடா, அம்பம்ப; க. அலலா, எலவெலவொ; தெ. அரரெ.

அடந்தகம் *adandagam*, பெ. (n.) *வெள்ளைச் சாரணை*; a kind of plant with white flowers of one-styled trianthema, *Trianthema monogyna* (சா.அக.).

அடந்தை *adandai*, பெ. (n.) *ஒரு தாளம்*; a time measure in music (சங்.அக.).

ம. அடந்த, அடதாளம்; க. அட்டதாள, அடதாள; தெ. அடதாளமு.

அடப்பக்கத்தி *adappa-k-katti*, பெ. (n.) *ஒருவகைக் கடல்மீன்*; a kind of sea-fish, *Notopterus kapirat*.

அடப்பக்கத்திப்பாறை *adappa-k-katti-p-pārai*, பெ. (n.) *ஒருவகைக் கடல்மீன்*; a kind of sea-fish, *Notopterus chitala*.

அடப்பங்கொடி *adappan-kodi*, பெ. (n.) 1. *ஆட்டுக்காலடம்பு அல்லது முயற்றமை (முசற்றமை)*; goat's foot creeper, goat's foot convolvulus or hareleaf, *Ipomaea biloba*. 2. *வெள்ளடம்பு*; white goat's foot, *Ipomaea beladamboo* alias *Convolvulus flagelliformis* (சா.அக.). 'அடப்பங் கொடியும் திரண்டால் மிடுக்கு' (பழ.).


அடப்பங்கொடி

ம. அடம்பு; க., து. அடும்பு.

[அடம்பு + அம் (சாரியை) + கொடி.]

அடப்பதர்தி *adappa-tādi*, பெ. (n.) *சிவப்புக் கூத்தன் குதம்பை*; a kind of plant bearing red flowers, *Inula indica*.

[த. அடப்பம் + Skt. tādi.]

அடப்பம்[1] *adappam*, பெ. (n.) *அடைப்பம் என்பதன் வேறு வடிவம்*; dial. var. of *adaippam*.

அடப்பம்[2] *adappam*, பெ.(n.) *வாதுமை*; almond, *Amygdalus communis*.

அடப்பம்விதை *adappam-vidai*, பெ. (n.) *வாதுமைப் பருப்பு*; almond kernel. ''அடப்பம் விதையாம் வாதுமைப் பருப்பி னாலே'' (பதார்த்த. 785).

அடப்பமரம் *adappa-maram*, பெ. (n.) *வாதுமை மரம்*; almond tree.

ம. அடமரம்

அடப்பன்[1] *adappan*, பெ. (n.) *கடம்பு* (மலை.); common *cadamba*, *Eugenia racemosa* alias *Anthocephalus cadamba* (சா.அக.).

அடப்பன்[2] *adappan*, பெ. (n.) *பரவர்குலப் பட்டப் பெயர்* (யாழ்ப்.); a caste title of Paravās (J.).

அடப்பனார் *adappanār*, பெ. (n.) *அடப்பன் என்னும் பட்டப்பெயரின் உயர்வுப் பன்மை வடிவம்*; honorific form of the caste title *adappan*.

அடப்பான் *adappān*, பெ. (n.) *வைரிப்புள், வல்லூறு* (கலைமகள், 56 : 189); peregrine falcon.

அடப்பி *adappi*, பெ. (n.) *அடப்பன்*[1] பார்க்க see *adappan*[1].

அடப்பிமாதிகம் *adappi-mādigam*, பெ. (n.) *சிவப்புக் காசித்தும்பை*; Benares red toombay (Lucas), balsom flower, *Impatiens genus* (சா.அக.).

அடம் *adam*, பெ. (n.) *கத்தி* (இ.வ.); knife (Loc.).

க. அடகத்தி; தெ. அடகத்து; து. இடகத்தி; மரா. அடகிதா.

அடம்பாரம் *adambāram*, பெ. (n.) 1. *பண்டங்களின் ஏராளம்* (தஞ்சை); plenty, as of articles (Tj.). 2. *முழுதும்*; the entire, whole, altogether (W.).

ம. அடம்பாடெ

அடம்பு *adambu*, பெ. (n.) 1. *ஒரு படர்கொடி*; (L.) hare-leaf, m.cl., *Ipomaea biloba*. 'அடம்பங் கொடியும் திரண்டால் மிடுக்கு' (பழ.). ''தும்பைவெள் ளடம்பு திங்கள்'' (பெரியபு. ஏயர்கோ. 100). 2. *கடலிப்பூ*; sea-flower, *Adambia glabra* (சா.அக.). 3. *கடம்பு*; (L.) common *cadamba*. 4. *கொன்றை* (சம்.அக. கை.); Indian laburnum. 5. *ஒருவகை மரம்*; (L.) a kind of tree.

ம. அடம்பு; க., து. அடும்பு.

அடமருது *adamarudu*, பெ. (n.) *கடலாத்தி* (Nels.); stag's horn trumpet flower.

அடமானம் *adamānam*, பெ. (n.) *அடைமானம் பார்க்க*; see *adai-mānam*.

அடர்-தல் *adar-*, 2 செ.கு.வி. (v.i.) *1.* **நெருங்குதல், செறிதல்**; to be close together, thick, crowded. ''அறுகையு நெருஞ்சியு மடர்ந்து'' (மணிமே. 12 : 60). *2.* **போர் செய்தல்**; to fight, engage in a battle. ''எண்ணுறு படைக ளிவ்வா றெதிர்தழீஇ யடரும் வேலை'' (கந்தபு. உற்பத். தாரக. 39). —, 2 செ.குன்றாவி. (v.t.) *1.* **நெருக்குதல்**; to press round, hem in. ''வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினை'' (திருவாச. 6 : 37). *2.* **புடைத்தல்**; to beat, strike. ''வச்சிரங்கொண் டிந்திரன்வெற் படர்வ தென்ன'' (ஞானவா. சனகரா. 14). *3.* **தட்டியுருவாக்குதல்**; to fashion, mould by beating. ''ஐதடர்ந்த நூற்பெய்து'' (புறநா. 29 : 2).

ம. அடர்; க., தெ. அடரு; கோத. அய்ர்; குட. அடிச்; கொண். அட்.

[அள் → அடு → அடர். அள்ளுதல் = நெருங்குதல். அடுத்தல் = நெருங்குதல். அடர்தல் = நெருங்குதல், புடைத்தல், தட்டியுருவாக்குதல்.]

அடர்¹-த்தல் *adar-*, 4 செ.குன்றாவி. (v.t.) 'அடர்தல்' என்பதன் பி.வி. (caus. of *adardal*). *1.* **அமுக்குதல்**; to press down, crush, squeeze. ''திருவிரலா லடர்த்தான்வல் லரக்கனையும்'' (தேவா. 7. 97 : 8). *2.* **நெருக்குதல்**; to press hard, exert pressure upon. *3.* **வருத்துதல்**; to oppress. ''அடர்புலன் போக்கற் றோர்க்கும்'' (கோயிற்பு. பாயி. 18). *4.* **தாக்குதல், போர் செய்தல்**; to attack, make an onset upon, begin a quarrel. ''ஆளை யாள்கொண் டடர்த்தனர்'' (கந்தபு. யுத்த. முதனாட். 111). *5.* **கொல்லுதல்**; to kill. ''இடங்கரை யாழி வலவ னடர்த்தது போல'' (கல்லா. 59). *6.* **கெடுத்தல்**; to destroy, remove. ''பாவ மடர்த்தமர்வா ரேசிவலோ கத்து'' (சைவச. பொது. 567).

ம. அடர்க்குக; க. அடரிசு; தெ. அடரின்சு.

[அடு → அடர்.]

அடர்²-த்தல் *adar-*, 4 செ.குன்றாவி. (v.t.) **பறித்தல்**; to pluck, as coconuts. தேங்கா யடர்த்தல் (நாஞ்.).

க. அடர்ச்சு; தெ. அடலின்சு.

[ஒருகா. இட → அட → அடர். இடத்தல் = பெயர்த்தல், பறித்தல்.]

அடர்¹ *adar*, பெ. (n.) *1.* **நெருக்கம்**; closeness. *2.* **நெருக்குதல்**; the act of pressing, oppressing, troubling. ''அடர்க்குறு மாக்களொடு'' (மணிமே. 13 : 40). 'அடர விதைத்து ஆழ உழு', 'அடர்த்தியை அப்போதே பார், புழுக்கத்தைப் பின்னாலே பார்' (பழ.).

[அடு → அடர்.]

அடர்² *adar*, பெ. (n.) *1.* **தகடு**; thin flat plate of metal, esp. gold. ''அடர்பொற் சிரகத்தால் வாக்கி'' (கலித். 51 : 7). *2.* **பூவிதழ்**; flower petal. ''இலவம்பூ வடரனுக்கி'' (சீவக. 179). *3.* **ஐயம்**; doubt.

[ஒருகா. அடி → அடர். அடித்தல் = சுத்தியால் அல்லது சம்மட்டியால் அடித்துத் தட்டையாக்குதல்.]

அடர்ச்சி *adarcci*, பெ. (n.) *1.* **நெருக்கம்** (சிந்தா. நி.); closeness. *2.* **கொடிய வுரை யெண்ணஞ் செயல்களாகிய மாந்திகத்தின் (இராசதத்தின்) குணம்**; qualities of passion.

அடர்சோளம் *adar-śōlam*, பெ. (n.) **கால்நடைத் தீனிக்காக அடர்த்தியாகப் பயிரிடும் காக்காய்ச் சோளம்**; black *śōlam* sown closely as a fodder crop [M. Cm. D. (1887), 201].

அடர்த்தி *adartti*, பெ. (n.) **நெருக்கம்**; closeness, thickness. தலைமயிர் அடர்த்தியா யிருக்கிறது (உ.வ.).

அடர்த்திப்பலகை *adartti-p-palagai*, பெ. (n.) **திண்ணமான பலகை** (யாழ்ப்.); thick plank (J.).

[அடர்த்தி + பலகை.]

அடர்ந்தேற்றம் *adarnd(u)-ēṟṟam*, பெ. (n.) **கொடுமை, வல்லந்தம்** (வின்.); oppression, violence.

[அடர்ந்து + ஏற்றம்.]

அடர்ந்தேற்றி *adarnd(u)-ēṟṟi*, பெ. (n.) **அடர்ந்தேற்றம்** பார்க்க; see *adarnd(u)-ēṟṟam*.

[அடர்ந்து + ஏற்றி.]

அடர்ப்பம் *adarppam*, பெ. (n.) **நெருக்கம்** (யாழ்ப்.); closeness (J.).

அடர்ப்பு *adarppu*, பெ. (n.) *1.* **நெருக்குகை**; pressure. ''அவன் சங்கற்ப புருடனைப்போ லசைவற் றிருப்ப வடர்ப்பரிதாய்'' (ஞானவா. ஞானவிண். 16). *2.* **போர்**; struggle, battle. ''அசனியி னயிற்படை யடர்ப்புமோ ரயலாக'' (இரகு. திக்கு. 174).

அடர்பு aḍarbu, பெ. (n.) 1. நெருக்கம்; closenes (சங்.அக.). 2. நெருங்கித் தொடர்கை; close pursuit.

அடர்மை aḍarmai, பெ. (n.) நொய்ம்மை; lightness. ''அரத்த வடர்மையும்'' (பெருங். உஞ்சைக். 53 : 130).

அடர்வைசூரி aḍar-vaišūri, பெ. (n.) ஒன்றோ டொன்று கலக்கும்படி நெருக்கமாக வார்க்கும் அம்மை நோய்; small-pox in which the pustules run together or into each other, confluent small-pox alias *C. variola* (சா.அக.).

[த. அடர் + Skt. masūraka < த. வைசூரி.]

அடரடிபடரடி aḍaraḍi - paḍaraḍi, பெ. (n.) முனைந்து பொருகை, பெருங்குழப்பம் (வின்.); desperate fighting, hard scuffle, great confusion.

அடரார் aḍarār, பெ. (n.) பகைவர் (சிந்தா.நி.); enemies.

அடரொலி aḍar-oli, பெ. (n.) அதட்டுஞ்சொல் (பிங்.); vehement noise to scare away beasts.

[அடர் + ஒலி. அள் → அடு → அடர். அள்ளு தல் = நெருங்குதல். அடர்த்தல் = நெருங்கிப் பொருதல், வருத்துதல், கொல்லுதல்.]

அடல்[1] aḍal, பெ. (n.) 1. சமைத்தல்; cooking. 2. கொல்லுகை; killing, murdering. ''அன்ன வர் தமையட லரிய தாமெனின்'' (கந்தபு. யுத்த. மூவாயி. 70). 3. வருத்துதல்; to afflict, cause pain or suffering. ''அடல்வண்ண வைம்பொறியும்'' (சீவக. 1468). 4. பகை; hatred, enmity. ''மன்னுசிற் றம்பலவர்க் கடலையுற் றாரின்'' (திருக்கோ. 218). 5. போர் (சூடா.); war, conflict. ''அடல்வலி மானவர்'' (கந்தபு. தேவ. தெய்வ. 67). 6. வலிமை; power, strength. ''அடன்மாவின் பேரு ரித்திறந் தரித்தனை'' (கந்தபு. உற்பத். மோன. 12). 7. வெற்றி; victory, success. ''அடலயி னெடுவே லண்ணல்'' (கந்தபு. யுத்த. சூரபன். 256).

ம. அடல், அடர்; க., தெ. அடரு.

[அடு → அடல். அடுதல் = சமைத்தல், கொல்லுதல், வருத்துதல்.]

அடல்[2] aḍal, பெ. (n.) ஒருவகைக் கடல்மீன்; a kind of sea-fish, *Cynoglossus semifasciatus*.

அடலம் aḍalam, பெ. (n.) மாறாமை (சிந்தா. நி.); state of remaining unchanged.

அடலி aḍali, பெ. (n.) அடுக்களை வேலைக் காரி, வெள்ளாட்டி (யாழ்ப்.); a woman cook, maid-servant (J.).

[அடுதல் = சமைத்தல். அடு → அடல் → அடலி = சமையற்காரி.]

அடலை[1] aḍalai, பெ. (n.) 1. காய்ச்சல்; fever (சா.அக.). 2. சுடலை (பொதி.நி.); cremation ground. 3. சோறு; cooked rice. அக்காரடலை (உ.வ.). 4. சாம்பல்; ashes. ''வேளும் புரமும் அடலைபட விழித்து'' (உபதேசகா. நரகா. 39). 5. நீறு (பற்பம்) (இராசவைத். 161); metallic calx. 6. திருநீறு; sacred ashes smeared on the body as a mark of a Šaivaite. ''ஆதி யாலயத் தடலைகொண்டு'' (திருவிளை. சமணரைக். 82). 7. போர் (பிங்.); battle. 8. போர்க்களம்; battle-field. ''அடலையி னுணர்வின் றாகும்'' (கந்தபு. யுத்த. சூரபன். 256). ம. அடர்களம். 9. துன்பம்; trouble, distress. ''அடலைக்கடல் கழிவான்'' (தேவா. 4.110 : 6).

ம. அடர்; க. அடலு; தெ. அடலு, அடலடி.

[அடு → அடல் → அடலை. அடுதல் = சுடுதல், சமைத்தல், பொருதல், கொல்லுதல்.]

அடலை[2] aḍalai, பெ. (n.) அடலம் பார்க்க; see aḍalam.

அடலைபுடலையாய் aḍalai-puḍalai-y-āy, கு.வி.எ. (adv.) (நெல்லை) 1. மிகத் துணிச்ச லாய்; in an impetuous manner. 2. திடுமென; suddenly.

[அடு → அடல் → அடலை → அடலைபுடலை — 'அடலை'யின் எதுகையிரட்டல்.]

அடலைமுடலை aḍalai-muḍalai, பெ. (n.) வீண் சொல் (யாழ்ப்.); vain words (J.).

[அடலை → அடலைமுடலை — 'அடலை'யின் எதுகையிரட்டல்.]

அடவாபிதன் aḍavābidaṉ, பெ. (n.) மஞ்சள்; turmeric, saffron, *Curcuma longa* (சா.அக.).

அடவி aḍavi, பெ. (n.) 1. மரமடர்ந்த காடு; thick forest, jungle. ''விந்தத் தடவியும்'' (சிலப். 6 : 29). 'அடவி சென்றும் விறகுக்குப் பஞ்சமா?' (பழ.). 2. சோலை; grove. 3. மிகுந்த கூட்டம் அல்லது அளவு; large collection. ''வேரிமலர் முண்டகத் தடவிதிக் கெறிய'' (கல்லா. 56). 4. பூஞ்சோலை (நந்தவனம்) (திவா.); pleasure-garden.

ம., க., கொலா., பிராகி., அடவி; தெ. அடவி, அடிவி.

[அடு → அடர் → அடர்வி → அடவி = மரமடர்ந்த காடு.]

த. அடவி > **Skt.** aṭavi. அட் (to wander) என்னும் மூலத்தினின்று திரிந்து, அலைந்து திரியும் இடத்தைக் குறிப்பது அடவி யென்னுஞ் சொல்லென்று வடமொழியாளர் பொருட்கரணியம் கூறுவது பொருந்தாது. இராமனும் பாண்டவரும் பிறரும் காட்டில் அலைந்து திரிந்ததை உட்கொண்டு அவர் அக் கருத்தைக் கொண்டிருக்கலாம். ஆயின், அது ஒரு சிலர்க்கே பொருந்துவதாதலானும், அடவி யென்பது மரமடர்ந்த காட்டையே குறிக்குஞ் சிறப்புச் சொல்லாதலானும், ஆரிய ரொடு தொடர்பற்ற ஆனைமலைக் காடரும் அச் சொல்லைத் தொன்றுதொட்டு வழங்கி வருதலானும், தமிழ் வடமொழிக்கு முந்திய தாதலானும், அடவியென்பது தமிழ்ச் சொல்லே யென்பது தேற்றமாம்.

அடவிக்கச்சோலம் *aḍavi-k-kaccōlam*, பெ. (n.) 1. **கத்தூரி மஞ்சள்**; long and round zedoary, *Curcuma amada.* 2. **ஒருவகை நறுமணப் பண்டம்**; an aromatic drug.

ம. அடவிக்கச்சோலம்

[அடவி + கச்சோலம்.]

அடவிக்கம்பம் *aḍavi-k-kambam*, பெ. (n.) **சாம்பல்**; ashes (சா.அக.).

அடவிக்கல் *aḍavi-k-kal*, பெ. (n.) **காட்டில் அகப்படும் கரும்புள்ளிக் கல், கானகக் கல்;** a stone with black dots, found in the forest (சா.அக.).

[அடவி + கல்.]

அடவிக்காணம் *aḍavi-k-kāṇam*, பெ. (n.) **காட்டுக் கொள்**; jungle horse-gram, *Cassia absus* (சா.அக.).

[அடவி + காணம்.]

அடவிக்கொல் *aḍavi-k-kol*, பெ. (n.) **கோரோசனை** (பரி.அக.); bezoar.

அடவிகம் *aḍavigam*, பெ. (n.) **சாம்பல்**; ashes (சா.அக.). **அடவிக்கம்பம்** பார்க்க; see *aḍavi-k-kambam.*

அடவிச்சொல் *aḍavi-c-col*, பெ. (n.) **கோரோசனை;** bezoar (மூ.அ.). **ஒ.நோ:** அடவிக் கொல்.

அடவிசரர் *aḍavi-šarar*, பெ. (n.) **வேடர்**; hunters. ''அடவி சரர்குல மரகத வனிதையும்'' (திருப்பு. 563).

[த. அடவி + **Skt.** cara > த. சரர்.]

அடவிநீர் *aḍavi-nīr*. பெ. (n.) **காட்டாற்று நீர்**; water of a jungle river (சா.அக.).

அடவிமஞ்சள் *aḍavi-mañjaḷ*, பெ. (n.) **மரமஞ்சள்**; tree turmeric, *Coscinium fenestratum* (சா.அக.).

அடவிமார் *aḍavimār*, பெ. (n.) **நெசவாளருள் ஒரு வகுப்பார்;** a class of weavers (M.E.R. 310 of 1916-B).

[அடை → அடைவு → அடைவி → அடவி + மகார் → மார் (ப. பா. ஈறு).]

அடவிமூர்ச்சி *aḍavi-mūrcci*, பெ. (n.) **சிவப்புக் கிலுகிலுப்பை**; rattle-wort, *Crotolaria laburnifolia* (சா.அக.).

அடவிமேற்புல்லுருவி *aḍavi - mēṟ - pulluruvi*, பெ. (n.) **கள்ளிப்புதரில் முளைக்கும் புல்லுருவி;** a parasite found on *kaḷḷi* tree, *Euphorbia genus.*

[அடவி + மேல் + புல்லுருவி.]

அடவிமை *aḍavi-mai*, பெ. (n.) **கருங்கரிசாலை, கரிசலாங்கண்ணியின் கரிய வகை**; black eclipse plant, *Eclipta prostata* (nigra).

அடவியன்[1] *aḍaviyaṉ*, பெ. (n.) **காடுவாழ்நன்;** forest-dweller.

ம. அடவிகன்; க. அடவிசரரு.

அடவியன்[2] *aḍaviyaṉ*, பெ. (n.) 1. **ஓலையீர்க்கு, வாரடை** (யாழ்ப்.); mid-rib, as of a palm leaf (J.). 2. **துடைப்ப வகை** (யாழ்ப்.); broom made of woody tendons or mid-ribs of palm leaves (J.).

அடவியார் *aḍaviyār*, பெ. (n.) **கைக்கோளரின் குலப் பட்டப்பெயர்களுள் ஒன்று** (இ.வ.); a caste title of the Kaikkōḷa weavers (Loc.).

[அடை → அடைவு → அடைவி → அடவி + ஆர் (உ. பன். ஈறு).]

அடைதல் = 1. அடைக்கலம் புகுதல். ''அடைந்தவர்க் கருளா னாயின்'' (கம்பரா. விபீடண. 111). 2. பேரின்ப வீடுபெறுதல்.

உலக வாழ்வில், ஒருவர் துன்பத்திற்கு அல்லது கொலைக்குத் தப்பி அடைக்கலம் புக அரசன், படைத்தலைவன், வலியவன், பெருஞ் செல்வன், முனிவன் முதலிய பலரிருப்பினும்,

இறைவனை அடைதலே சிறந்த அடைக்கலம் புகுதலாகக் கருதப்படும். இறைவன் பற்று விஞ்சியவர் நீறுபூசி, இலிங்கங்கட்டி முதலிய பட்டங்களைத் தாங்கிக்கொள்வதும் வழக்கம்.

கைக்கோளருள் ஒரு பிரிவார், இலிங்கம் என்னும் சிவக்குறி யணிபவர்; மற்றொரு பிரிவார் ***சீர்பாதம்*** என்னும் குலப்பட்டமுடையார். கோயில்களிலுள்ள தெய்வங்கட்குரிய சப்பரங்களையும் அணிகங்களையும் (வாகனங்களையும்) திருவிழாக் காலங்களில் தாங்கிச் செல்வார் சீபாதந் தாங்கிகள் எனப்படுவர். அப் பெயரின் குறுக்கமே சீபாதம் என்பது.

தேவபத்தி மிகுதியால், ஒவ்வொரு கைக்கோளக் குடும்பமும் ஒரு பெண்ணைக் கோயில் தொண்டிற்கு ஒப்படைத்து வந்ததாகத் தெரிகின்றது. அதுபற்றி, ***எட்கார் தரசத்தன்*** (Edgar Thurston) தம் ***தென்னாட்டுக் குலமரபுகள்*** (Castes and Tribes of Southern India) என்னும் நூலிற் பின்வருமாறு தெரிவித்துள்ளார் :

"In every Kaikōḷan̲ family, at least one girl should be set apart for and dedicated to temple service........"

"Kaikōḷan̲ girls are made *Dāsis* either by regular dedication to a temple, or by the headman tying *tāli* (*nāṭṭu poṭṭu*). The latter method is at the present day adopted because it is considered a sin to dedicate a girl to the god after she has reached puberty, and because the securing of the requisite official certificate for a girl to become a *Dāsi* involves considerable trouble."

"It is said", Mr. Stuart writes, "that, where the head of a house dies, leaving only female issue, one of the girls is made a *Dāsi* in order to allow of her working like a man at the loom, for no woman not dedicated in this manner may do so" (Vol. III, p. 37).

அடவியார் என்பது, பொருள்களை அடவு (mortgage) வாங்குபவர் என்றும் பொருள் படுமேனும், இறைவனை அடைந்தவர் அல்லது அடைக்கலமாகக் கொண்டவர் என்று பொருள் கொள்ளின், கைக்கோளரின் தேவ பத்தியைச் சிறப்பாகக் குறிக்குமாதலின், அதுவே பொருந்துவதாம்.

அடவியில்திருடி *aḍaviyil-tiruḍi*, பெ. (n.) ***சதுரக் கள்ளி;*** square spurge, *Euphorbia quadruculli.*

அடவியீ *aḍavi-y-ī*, பெ. (n.) ***கடிக்கின் பெருந் தூக்கமும் மயக்கமும் உண்டாக்கும் காட்டு ஈ*** (சீவரட். 451); an insect of the forest, the bite of which develops excessive sleep and stupor. 2. ***ஒருவகைக் காட்டுப்புழு;*** a forest worm (சா.அக.).

[அடவி + ஈ.]

அடவு *aḍavu*, பெ. (n.) அடகு (W.G.); pledge, pawn.

ம., க., து. அடவு; தெ. அட்டுமு.

[அடைவு → அடவு.]

அடவுசெய்வார் *aḍavu-šeyvār*, பெ. (n.) அடவிமார் பார்க்க; see *aḍavimār*.

அடவோலை *aḍav(u)-ōlai*, பெ. (n.) ***அடைமான ஓலை;*** lease-deed.

[அடை → அடைவு → அடவு. அடவு+ஓலை.]

அடளை *aḍaḷai*, பெ. (n.) ***கடல்மீன்வகை;*** a kind of marine fish.

அடல்² பார்க்க; see *aḍal*².

அடா¹ *aḍā*, இடை. (int.) 1. ***இழிந்தோன், கீழ்ப்பட்டவன், சிறுவன், சண்டையிடும் பகைவன் ஆகியோரை விளிக்கும் விளி;*** a vocative addressed to an outcaste, or an inferior, or a small boy or a quarrelling enemy. "அவன் செத்த சேதியைநீ யறியாயோ அடா பித்த" (இராமநா. சுந்தர. பக். 267). "நில்லடா சிறிது நில்லடா" (கம்பரா. யுத்த. நாகபா. 73). 2. ***இகழ்ச்சி, வெறுப்பு, வியப்பு, மனவருத்தம் முதலியவற்றின் குறிப்பிடைச்சொல்;*** an exclamation of contempt, hatred, surprise, regret, etc. அடா! இப்பொழுதுதானே பார்த்துவிட்டு வந்தேன். அதற்குள்ளேயா போய்விட்டார்! (உ.வ.).

ம. எடா; க. அடா; தெ. ஏரா.

[ஏலா → ஏளா → ஏழா → ஏடா → எடா → அடா.]

அடா² *aḍā*, பெ.எ. (adj.) அடாத பார்க்க; see *aḍāda*.

[அடாத → அடா (ஈ.கெ.எ.ம.பெ.எ.).]

அடாசனி *aḍāšan̲i*, பெ. (n.) 1. ***நீர்க்கால்களில் இயற்கையாகப் படரும் ஆரைக்கீரை;*** greens growing near water channels. 2. ***புளியாரை*** (மலை.); yellow wood-sorrel, *Oxalis corniculata.*

அடாசு-தல் *aḍāsu-*, 5 செ.கு.வி. (v.i.) **விலகுதல்**; to recede, give place to. —, 5 செ.குன்றாவி. (v.t.) **திணித்தல்**; to stuff.

க. அடசு

[அடை → அடைசு → அடாசு.]

அடாசு *aḍāsu*, பெ. (n.) **மட்கின பொருள்**; spoiled substance, damaged stuff, putrefied matter.

க. அடசல; து. அதெசு; மரா. அடசாண்டா.

[அடு → அடாதது → அடாது → அடாசு = தகாதது.]

அடாஞ்சி *aḍāñji*, பெ. (n.) இலவங்கப்பூ; flower of the clove tree, *Caryophyllum* (சா.அக.).

அடாதஞ்சம் *aḍādañjam*, பெ. (n.) **துதிக்கையுள்ள அரிமாப் (சிங்கம்) போன்ற இறந்துபட்ட விலங்கினம், யாளி**; an extinct animal resembling the lion, but with a proboscis like that of the elephant.

அடாத *aḍāda*, பெ.எ. (adj.) **தகாத, பொருந்தாத**; unfit, improper.

[அடு + ஆ(எ.ம.இ.நி.) + த.]

அடாதது *aḍādadu*, பெ. (n.) **தகாதது**; that which is unfit, improper. "தமக்கடாதது செய்துயிர் வாழ்வது தன்னில்" (பிரபுலிங்க. அக்கமா. துற. 21).

ம. அடாதது

[அடுத்தல் = பொருந்துதல், ஏற்றல், தகுதல். அடுத்தது × அடாதது (எ. ம. வினையா. பெ.).]

அடாது *aḍādu*, பெ. (n.) **அடாதது** பார்க்க; see *aḍādadu*. "அடாதுசெய் சடாசுரன்" (பாரத. சடாசு. 22). 'அடாது செய்பவர் படாது படுவர்' (பழ.).

[அடாதது → அடாது.]

அடாதுடி *aḍāduḍi*, பெ. (n.) தீம்பு; perversity, wickedness.

க., தெ. அட்டாதிட்டி; து. அட்டாதுட்டி.

அடாநிந்தை *aḍā-nindai*, பெ. (n.) 1. **நிலைக்களம் (ஆதாரம்) இல்லாப் பழிச்சொல்**; unfounded reproach. 2. **பொறுக்கமுடியாப் பழிச்சொல்**; unbearable slander.

[த. அடா + Skt. nindā > த. நிந்தை = பழிப்பு. அடாத → அடா.]

அடாநெறி *aḍā-neṟi*, பெ. (n.) **தகாத வழி**; evil ways. "அடாநெறி யறைதல் செல்லா வருமறை" (கம்பரா. பால. எதிர்கொள். 1).

[அடாத → அடா + நெறி.]

அடா² பார்க்க; see *aḍā²*.

அடாப்பழி *aḍā-p-paḻi*, பெ. (n.) **தகாத பழிச்சொல்** (சிலப். 9 : 7, உரை); slander, calumny, unjust accusation.

[அடாத → அடா + பழி.]

அடா² பார்க்க; see *aḍā²*.

அடாபிடாவெனல் *aḍā-piḍā-v-eṉal*, பெ. (n.) **'அடா' என்று விளித்து மதிப்பின்றிப் பேசுதல்**; talking impolitely addressing one *aḍā*. ஏன் என்னை அடாபிடா என்று பேசுகிறாய்? மதிப்பாய்ப் பேசு (உ.வ.).

அடாபிடி *aḍā-piḍi*, பெ. (n.) **வன்செயல்**; violence.

ம. அடாபிடி

[ஒருகா. அடா (தகாத) + அடி – அடாவடி → அடாபிடி.]

அடாபிடித்தனம் *aḍā-piḍi-t-taṉam*, பெ. (n.) **வன்செயல் தன்மை**; the quality of being violent. குண்டர்களைக் கொண்டு நன்கொடைப் பணந் தண்டுவது அடாபிடித் தனம்.

[ஒருகா. அடா (தகாத) + அடி (தாக்கு) – அடாவடி → அடாபிடி.]

அடாபுடாவெனல் *aḍā-puḍā-v-eṉal*, பெ. (n.) **ஓர் ஆடவனை மதிப்புரவின்றிப் பேசுதல்**; speaking impolitely to a male person. அவன் என்னை அடாபுடா என்று பேசுகிறான் (உ.வ.).

[அட → அடா. 'புடா' எதிரொலிச்சொல் (echo-word). என் → எனல் (தொ.பெ.). 'அல்' (தொ.பெ. ஈறு).]

அடா¹ பார்க்க; see *aḍā¹*.

அடார் *aḍār*, பெ. (n.) **புலி முதலிய விலங்குகளை அகப்படுத்தும் பொறி**; trap for tigers and other animals. "பெருங்கல் லடாரும் போன்மென" (புறநா. 19 : 6).

[அடர்த்தல் = அமுக்குதல், நெருக்குதல். அடர் → அடார்.]

அடார்வெளி *aḍār-veḷi*, பெ. (n.) **தரிசுநிலம்** (இராட்.); uncultivated open land.

அடாரளப்பூ *aḍāraḷappū*, பெ. (n.) *முடக்கொற்றான்*; a plant palsy curer, *Cardiaspermum halicacabum*.

அடாவடி *aḍā-v-aḍi* பெ. (n.) *1. கொடும்பேச்சு*; violent talk. *2. கொடுஞ்செயல்*; outrage, violence.

ம. அடாபிடி; **க.**, **தெ.** அடாவுடி; **H.** haḍabaḍi.

[அடா + அடி. அடாத → அடா.]

அடாவடித்தனம் *aḍāvaḍi-t-tanam*, ப.பெ. (abst.n.) *1. போக்கிரித்தனம்*; mischief. *2. கொடுஞ்செயல்*; act of violence, outrage. அவன் செய்வதெல்லாம் அடாவடித்தனம் (உ.வ.).

[அடாவடி + தனம் (ப.பெ. ஈறு).]

அடாவடியடி[1]-த்தல் *aḍā-v-aḍi-y-aḍi-*, 4 செ.கு.வி. (v.i.) *1. வல்லடி வழக்காடுதல்*; to lay unjust claim to the property of others using force. அடாவடியடித்து அவன் பணத்தையெல்லாம் அக்கம்பக்கத்தார் கவர்ந்து கொண்டார்கள் (உ.வ.). *2. வம்புரையாடுதல்*; to harass by mischievous talk, as a rowdy.

ம. அடாபிடி; **க.** அடாவுடி; **தெ.** அடாவடி.

[அடா (தகாத, முறையற்ற) + அடி (தாக்கு) + அடித்தல் (தாக்கியுரைத்தல்). அடுத்தல் = தகுதல். அடாத → அடா (ஈ.கெ.எ.ம.பெ.எ.).]

அடாவடி → டாவடி → ராவடி (கடுங்கொ.).

அடாவடியடி[2]-த்தல் *aḍā-v-aḍi-y-aḍi-*, 4 செ.கு.வி. (v.i.) *கொடுமையாகப் பேசுதல்*; to speak outrageously. ஓயாமல் அவனிடம் போய் அடாவடியடிக்கிறார்கள். நேற்று இரவெல்லாம் எல்லாருஞ் சேர்ந்து அவனை அடாவடியடித்தார்கள் (உ.வ.). —, 4 செ.குன்றாவி. (v.t.) *கொடுமை செய்தல்*; to do violence, to perpetrate outrage. அவன் பங்காளிகள் அடாவடியடித்து அவன் சொத்தையெல்லாம் பறித்துக்கொண்டார்கள் (உ.வ.).

[அடாவடி + அடி (து.வி.).]

அடாவந்தி *aḍā-vandi*, பெ. (n.) *1. முறையன்மை (அநியாயம்)* (வின்.); injustice, impropriety. *2. இட்டேற்றம்* (வின்.); foisted accusation, false report, slander. *3. துன்பம்* (வின்.); grievance.

[அடா (அடாது) + வந்தி (வந்தது). அடாது = தகாது.]

அடாவரி *aḍā-vari*, பெ. (n.) *முறைகேடான வரி* (இராட்.); unjust tax.

[அடா + வரி. அடாத → அடா.]

அடாவழி *aḍā-vaḻi*, பெ. (n.) *1. கடுவழி*; rough path. *2. தீயநெறி*; evil ways.

ம. அடாவழி

[அடா + வழி. அடாத → அடா.]

அடி-த்தல் *aḍi-*, 4 செ.கு.வி. (v.i.) *1. விளையாடுதல்*; to sport, play. குண்டடித்தல், கோலியடித்தல், சிலம்படித்தல், நொண்டியடித்தல் முதலியன. *2. தனியாக அல்லது கூடிக் கூத்தாடுதல்*; to dance singly or in groups. கூத்தடித்தல், கழியலடித்தல், கும்மியடித்தல் முதலியன. 'நான் இவ்வமணக் கூத்தெல்லாமடித்தேன்' (திவ். திருமாலை. 34, வியா.). *3. ஒரு நன்னிகழ்ச்சியின்போது கண்ணன்ன உறவினர் ஒருவரின்மையால் மனம் வருந்துதல்*; to suffer in mind due to the absence of a beloved person on a festive occasion. நேற்று நிகழ்ந்த விருந்திற்கு நீங்களின்மையால் என் மனம் மிகவும் அடித்துக்கொண்டது (உ.வ.). *4. துடித்தல்*; to twitch, move spasmodically. இருநாளாய் எனக்குக் கண் அடித்துக்கொள்கிறது, என்ன நேருமோ, தெரியவில்லை (உ.வ.). *5. சாடை காட்டுதல்*; to hint by gesture. அவன் அவளைப் பார்த்துக் கண்ணடிக்கிறான் (உ.வ.). *6. உடம்பு சுடுதல்*; to suffer from fever. அவனுக்குக் காய்ச்சலடிக்கிறது (உ.வ.). *7. பூசுதல்*; to besmear, daub. வீட்டிற்கு வெள்ளையடிக்கவேண்டும் (உ.வ.). *8. தடவுதல்*; to stroke, brush over. அவனுக்குக் குழையடித்துத் தேட்கொட்டு வலியைப் போக்கினார்கள் (உ.வ.). *9. அலப்புதல்*; to chatter, prattle, swagger, bluff. நாள் முழுவதும் அரட்டையடிக்கிறான். எங்கே போனாலும் வாயடிக்கிறான் (உ.வ.). *10. அசைத்தல்*; to wag. நாக்கடித்தல் = நாவசைத்தல், நாவசைத்துச் சொல்லுதல் அல்லது பேசுதல். இளநாக்கடித்தல் = ஒன்றன்மேல் விருப்பமில்லாததுபோற் காட்டுதல். இழந்த நாக்கடித்தல் = எண்ணிப் பாராது வாய்நேர்தல் (வாக்களித்தல்). *11. துணி காற்றில் அசைந்தாடுதல்*; to flutter, as a flag or cloth hung for drying. காயப்போட்ட வேட்டி காற்றிற் படபடவென்று அடிக்கிறது (உ.வ.). *12. மணி ஒலித்தல்*; to sound or ring, as a bell. கோயில் மணியடிக்கிறது (உ.வ.). *13. காற்று வீசுதல்*;

to blow, as strong wind. புயற்காற்றடிக்கிறது (உ.வ.). ''சண்டமா ருதச்சுழல் வந்துவந் தடிப்ப'' (தாயு. தேசோ. 2). 14. **மூக்கிற்குப் புலனாதல்**; to be perceived by the sense of smell. பூக்கடைக்குப் போனால் நல்ல மணம் (வாசனை) அடிக்கிறது; குப்பைப் பக்கம் போனால் தீய நாற்றம் அடிக்கிறது (உ.வ.). 15. **ஒளிர்தல்**; to shine, as moon; to flash, as lightning. நிலாப் பட்டுப்பட்டென்று அடிக் கிறது. நாலுபக்கமும் மின்னலடிக்கிறது (உ.வ.). 16. **பொறியியங்குதல்**; to work, as a machine. இந்தத் தையற்பொறி நன்றா யடிக்குமா? (உ.வ.). 17. **ஆக்கவாய்ப்பு மிகு தல்**; to have continued good luck. அவனுக்கு ஆக்கவாய்ப்பு (அதிர்ஷ்டம்) அடிக்கிறது (உ.வ.). 18. **பழைய நிலை கொள்ளுதல்**; to resile, as elastic bodies. இந்த வில்லை (spring) முறுக்கினால் எதிர்த்தடிக்கும் (உ.வ.). 19. **தாக்குதல்**; to afflict the body. வெக்கை யடிக்கிறது, வாடையடிக்கிறது, பனியடிக் கிறது. 20. **மழை கனத்துப் பெய்தல்**; to rain heavily. மழை உரத்தடிக்கிறது. 21. **தண்ணீர் வேகமாய்ப் பாய்தல்**; to issue forcibly, as water from a pipe. தண்ணீர் குழாயிலிருந்து 'சர்' என்றடிக்கிறது (உ.வ.). 22. **இயற்றுதல்**; to perform, as an athletic feat. அல்லாப்பரண்டி யடித்தல். 23. **இயங்குதல்**; to move. குதிரை பின்னுக்கடிக்கிறது. 24. **சேறு தெறித்தல்**; to splash, as mud. வண்டி வரும்போது விலகு, இல்லாவிட்டாற் சேறடிக்கும் (உ.வ.). 25. **நீந்தும்போது கைகால்களால் நீரையடித் தல்**; to dabble, to strike water with hands and feet while swimming. நீச்சலடித்தல். 26. **திரும்புதல்**; to turn. குப்புற அடித்து விழுந்தான். 27. **உணர்வு கெடுதல்**; to become unconscious. மயக்கமடித்து விழுந்தான். 28. **ஒருவன் அல்லது ஒருத்தி வீணாகத் தன்னை வருத்திக் கொள்ளுதல்**; to worry oneself unnecessarily, to complain vociferously and repeatedly. ஏன் இப்படி அடித்துக்கொள்ளு கிறாய்? 29. **ஒன்றன்மேலடித்துச் சூளுறுதியை மிகுத்தல்**; to increase the effect of swearing by striking on something important, dear or held sacred. நீ திருடவில்லையென்று உன் பிள்ளை தலையில் அடித்துச் சொல் (உ.வ.). 30. **விலை பேசிச் செய்த முடிவைக் கையிலடித்து உறுதிப் படுத்துதல்**; to confirm a bargain by striking the palm of another. விலைபேசி முடித்த வுடன் மாட்டுக்காரன் வாங்குகிறவன் கையில் அடித்துக் கொடுத்தான். 31. **தேர்வில் தவறு தல்**; to fail in an examination. மதியழகன் ஆட்டை (ஆண்டு)த் தேர்விற் கோட்டடித்து விட்டான். 32. **சுண்டுவில்லடித்தல்**; to catapult. நான் போனபோது மாட்டுக்காரப் பையன் கவட்டையடித்துக்கொண்டிருந் தான். 33. **மார்பில் அறைந்துகொள்ளுதல்**; to beat the breast and bewail the dead, as women do. பெண்கள் மாரடித்து அழுகிறார்கள் (உ.வ.). 34. **துளையடித்தல்**; to punch a hole. சுவரில் கண்டகண்ட இடமெல்லாம் இப்படியா துளையடிப்பது? 35. **பூசுணம் பூத் தல்**; to become mouldy. மூடிவைத்த பல காரத்திற் பூஞ்சான் அடித்துவிட்டது. 36. **படர்தல்**; to spread, as moss. பாசியடித்த குளத்தில் இறங்காதே. 37. **மழித்தல்**; to shave. தம்பிக்கு மொட்டையடி. 38. **தங்கு தல்**; to abide. அது மூதேவி யடித்த முகம்; அதனொடு பேசாதே (இ.வ.). 39. **ஒரு திசை நோக்கி யியங்குதல்**; to proceed in a particular direction. காக்கை வலமடித்தது; கரிக்குருவி இடமடித்தது (உ.வ.). 40. **புலம்புதல்**; to lament. நேற்று நடுச்சாமத்தில் இந்தப் பக்கம் பேயடித்துக்கொண்டு போனதே; அது உன் காதில் பட்டதா? (இ.வ.). 41. **மலங்கழிதல்**; to have loose motion. மூன்று முறை வயிற்றா லடித்தது, களைத்துப் போய்விட்டான் (இ.வ.). 42. **நெஞ்சு பதைத்தல்**; to funk. இருவர் நெஞ்சமும் அடித்துக்கொண்டன. 43. **திரிதல்**; to roam about. ஊரெல்லாம் சுற்றியடித்துவிட்டு வந்திருக்கிறான். 44. **தீம்பு செய்தல்**; to be iniquitous and unruly, to make an insolent display of wealth and luxury. அண்ணனுந் தம்பியும் செல்வச் செருக்கினால் தலைகால் தெரியாமற் பெருங் கொட்டமடிக்கிறார்கள். 45. **ஒரு வினையில் ஒட்டாரம் பண்ணுதல்**; to be obstinate, to persist in anything. எருது மொண்டியடிக் கிறது, எவ்வளவு அடித்தாலும் எழவில்லை, நகரவில்லை. 46. **சாய்தல்**; to capsize, overturn, as a cart. வண்டி பள்ளத்திற் போனபோது ஓசாரமடித்துவிட்டது (உ.வ.). 47. **நடித்தல்**; (fig.) to pretend, feign. அவனுக்கு உண்மையாக நோயில்லை; நோயாளிபோல் நாடகமடிக்கிறான். 48. **புறப்பட்டுப் போதல்**; to proceed to a place. பள்ளிக்கூடம் விட்டவுடன் நேரே ஊருக்கு அடித்துவிட்டான். 49. **காலிற் கட்டி யடித்தல்**; to be tied to the feet and beaten about, an act of humiliation.

இது நடைமுறையிலன்றிப் பேச்சுவழக்காக மட்டுமுள்ளது. ஏதேனுமொரு துறையில் தாழ்ந்த திறமையுள்ளவரை உயர்ந்த திறமையுள்ளவருடன் ஒப்பிடும்போது, இவ் வழக்கு நேரும். அன்று, பெரும்பாலும், காணுதல் என்னும் துணைவினை எதிர்மறை வடிவில் இதனொடு சேர்ந்து வரும்.

எ-டு: இந்தப் பேராசிரியர் மும்மொழியுங் கற்றிருந்தாலும், மறைமலையடிகள் காலிற் கட்டியடிக்கக்கூடக் காணமாட்டார்; This professor, though conversant with three languages, cannot stand in comparison at all to *Maṟaimalai Aḍigaḷ*, lit., This professor ...... is not even fit to be tied to the feet of *Maṟaimalai Aḍigaḷ* and beaten. '......காலில்தான் கட்டியடிக்க வேண்டும்' என்னும் வழக்கு உள்ளது. அது ஒப்பீட்டிலுள்ள ஏற்றத் தாழ்வைச் சற்றுக் குறைக்கும்.

எ-டு: வடமொழியில் வருணாசிரம தரும சாத்திரம் தொகுத்த மனுவைச் சிலர் திருவள்ளுவரோடு ஒப்பிடுவர். முன்னவரைப் பின்னவர் காலில்தான் கட்டியடிக்க வேண்டும்.

—, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **விரித்த கையினாலாவது, கோல் முதலிய கருவியினாலாவது, ஆளை அல்லது அஃறிணைப் பொருளை அறைதல்**; to beat a person, place or thing with open hand or an instrument, smite, hammer. அவனைக் கன்னத்தில் ஐந்து விரலும்பட அடித்தான் (உ.வ.). 2. **தண்டித்தல்**; to punish. "அக்கிரமத்தாற் குற்றமடித்துத் தீர்த்து" (சி. சி. சுபக். 2 : 15). 'அடிக்கும் ஒரு கை, அணைக்கும் ஒரு கை' (பழ.). குட்டையிலடித்தல். 3. **தோற்கருவி யியக்குதல்**; to play on musical instruments made of hollow cylinder or hemisphere with parchment stretched over the opening like drums (S.). அழகநம்பி நன்றாய் மதங்கம் (மிருதங்கம்) அடிப்பான் (உ.வ.). 4. **மணியொலிப்பித்தல்**; to ring a bell. நிலையத்தில் சுமைதூக்கி (porter) மணியடித்தவுடன் வண்டி புறப்பட்டுவிட்டது. 5. **சிறகியக்குதல்**; to flap the wings. கூட்டிலிருந்த குஞ்சு சிறகடித்துப் பறந்துபோய்விட்டது. 6. **கல்லெறிந்து காய் வீழ்த்துதல்**; to throw a stone and cause fruit(s) to fall from a tree. ஒரே கல்லால் ஒரு மாங்குலையை அடித்துவிட்டான் (உ.வ.). 7. **தண்ணீரை வலுவாகத் தெளித்தல்**; to splash water with force. முகத்தில் தண்ணீரை அடி. 8. **மருந்து அல்லது மருந்துநீர் சிவிறியால் தெளித்தல்**; to spray liquid or powdered medicine. புன்செய்களுக்குப் பூச்சிமருந் தடித்தார்கள். 9. **மோதுதல்**; to dash. அலையடிக்கிறது. தொடர்வண்டியிற் போகும்போது பல கணிக்கு வெளியே தலையை நீட்டியதால் தொலைவரிக் கம்பம் அடித்துவிட்டது (உ.வ.). 10. **துவைத்தல்**; to wash by beating wet clothes on a stone. வேட்டியை இரண்டடி அடித்துத் தா. 11. **மாப்பிசைதல்**; knead, as flour. அப்பத்திற்கு மாவடிக்க வேண்டும். 12. **உடைத்தல்**; to break, as clods of earth. நிலத்தை உழுதபின் கட்டியடிக்க வேண்டும் (உ.வ.). 13. **போரில் தாக்குதல்**; to attack in battle. அடித்தான் பகதூர்வெள்ளை கங்கை கொண்டான் கயத்தாறுவரை. 14. **வண்டி குலுங்குதல்**; to jerk, jolt. பேரியங்கியின் (bus) பின்புறமும், இயங்கி நரவண்டியும் (auto-ricksha) ஓடும்போது தூக்கியடிக்கும். 15. **காலங் கடத்தி வருத்துதல்**; to annoy by undue postponing. வாங்கின கடனைக் கொடாமல் இழுத்தடிக்கிறான். 16. **முத்திரை பொறித்தல்**; to stamp, impress, mark on. முத்திரையடித்தல். 17. **பதித்தல்**; to strike into, drive in. சுவரில் ஆணியடித்திருக்கிறது. நிலத்தில் முளையடிக்க வேண்டும் (உ.வ.). 18. **அச்சிடுதல்**; to print. அச்சடிக்கும் இடம். 19. **பொறியில் தைத்தல்**; to sew on a machine. ஒரு சொக்காய் (shirt) அடித்துக் கொடு. 20. **வெட்டுதல்**; to dig. நீர்ப்பாசனத்திற்கு ஒரு கிணறடிக்கவேண்டும். 21. **செய்தல், கட்டுதல், அமைத்தல், பதித்தல்**; to make, build, construct, pitch. (அ) **கல்லிற் கருவி சமைத்தல்**; to make a stone implement by chiselling. அம்மி திரிகையுரல் அடிக்குமிடம். (ஆ). **கல்லில் அல்லது மாழையில் (உலோகத்தில்) உருவம் அமைத்தல்**; to sculpture by chiselling stone or casting metal. வள்ளுவர் கோட்டத்தில் திருவள்ளுவர் படிமை கருங்கல்லில் அடித்துவைத்திருக்கிறது. அவன் அடித்துவைத்த சிலைபோலிருக்கிறான் (உ.வ.). (இ) **வீடு கட்டுதல்**; to build, construct. மரத்தாலடித்த மனை. சோற்றாலடித்த சுவர். (ஈ) **படமாடம் அமைத்தல்**; to pitch a tent. புதிதாய் வந்த வட்டக்காட்சிக்குப் (circus) பெரிய கூடாரம் அடித்திருக்கிறார்கள். 22. **நகையாடிக் கூறுதல்**; to joke, to make fun

of. புது மணவாளப் பிள்ளையை முறைகாரப் பெண்கள் நையாண்டியடிப்பது வழக்கம். 23. **குறை சொல்லுதல்**; to criticise. கட்டத் தெரியாவிட்டாலும் கட்டின வீட்டிற்கு வக்கணையடிக்கத் தெரியும் (உ.வ.). 24. **ஓட்டுதல்**; to drive as cart, plough, bullocks, etc. வண்டியடித்தல், ஏரடித்தல், பிணையலடித்தல் முதலியன. 25. **வண்டியிற் கொண்டுவருதல்**; to cart. நாலுவண்டி மணலடித்தான் (உ.வ.). 26. **வண்டியிற் கொண்டு நிலத்திலிடுதல்**; to cart dry clay, manure, etc. நன்செய்க்குக் கரம்பையும் உரமும் அடிக்க வேண்டும். 27. **உள்ளிடுதல்**; to apply, inject. காரைமுள் தைத்துக் களைந்தெடுத்த இடத்தில் எருக்கம் பால் அடிக்கவேண்டும். 28. **வாரிக்கொண்டு போதல்**; to sweep away, as flood. களத்திலிருந்து நெல்லையெல்லாம் வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது. 29. **கவர்தல்**; to seize, snatch, steal, rob, plunder, take by force. கோழிக்குஞ்சைப் பருந்தடித்துக் கொண்டு போய்விட்டது. அவன் பணப் பையை எவனோ அடித்துக்கொண்டு போய் விட்டான். அவன் சொத்தையெல்லாம் கொள்ளையடித்துவிட்டார்கள். 30. **நீக்குதல்**; to remove, erase, cross out, nullify. அந்த மாணவன் பெயரை அடித்துவிட்டார்கள். பிழையான விடைகளை யெல்லாம் ஆசிரியர் அடித்து வைத்திருக்கிறார். ஒரு சட்டம் இன்னொரு சட்டத்தை அடிக்கும். 31. **மறுத்தல்**; to refute, contradict. அவன் சொல்வதையெல்லாம் அடித்துப் பேசு. 32. **வெல்லுதல்**; to defeat, overcome, win the game. அவனை ஓட்டப் பந்தயத்தில் அடித்து விட்டான். 'அடித்தது ஆட்டம், பிடித்தது பெண்டு' (பழ.). 33. **வென்று பெறுதல்**; to win, as a prize. அவன் பேச்சுப் போட்டியில் ஒரு வெள்ளிக் கிண்ணத்தை அடித்து விட்டான். 34. **கொல்லுதல்**; to kill. 'புலி யடிக்குமுன் கிலியடிக்கும்' (பழ.). அவன் பேயடித்துச் செத்தான். பழைய வீட்டுப் புறக்கடையில் ஒரு பாம்பும் ஒரு தேளும் அடித்தார்கள். மருமகன் வந்திருந்தபோது கோழியடித்து விருந்திட்டார்கள். வேட்டைக் காரன் ஒரு முயலடித்துக்கொண்டு வந்தான். 35. **அழித்தல்**; to ruin, destroy. திரௌபதி வஞ்சினம் கவுரவர் மரபை அடித்துவிட்டது. 36. **அடித்து உதிர்த்தல்**; to beat down fruits from trees. 37. **கதிரினின்று தவசமணிகளை அடித்துப் பிரித்தல்**; to beat and separate grains from spike or head of corn. இன்று களத்தில் நெல்லடித்தோம். 38. **பயிர்செய்தல், தவசம் விளைவித்தல்**; to raise a crop, produce food grain. அதே நிலத்தில் சென்ற ஆண்டு பத்து மூட்டை சாமை யடித்தோம் (தரும.). 39. **கரண்டியால் அடித்துக் கலக்குதல்**; to stir with a spoon. ஒரு முட்டையடித்து அடை சுடு; ஒரு குவளை தேநீர் அடித்துக்கொடு. 40. **பேரளவாயுண்ணுதல்**; to eat voraciously, to drink excessively. கருப்பண்ணன் இன்று காலை இருபது இட்டிலியும் ஐந்து குவளை கொழுந்துநீரும் (தேநீரும்) அடித்துவிட்டான். 41. **கொல்லாமற் சாக வைத்தல்**; to cause death through indirect means. அவனைப் பட்டினிபோட்டுச் சாகடித்தார்கள். 42. **வெடி குண்டு வீசுதல்**; to fire shots, discharge cannon balls. விட்டடித்தான் இரண்டு குண்டு. 43. **தொலைவரி விடுதல்**; to send telegraphic message. மகனை உடனே வரச்சொல்லித் தொலைவரி (தந்தி) யடித்தார்கள். 44. **தூசி துடைத்தல்**; to dust. மேசை நாற்காலியில் தூசியடி. 45. **ஏமாற்றுதல்**; to cheat, defraud, swindle. ஊரையடித்து உலையிற்போட்டு வாழ்கிறான் (உ.வ.). 46. **கஞ்சாப் புகை குடித்தல் அல்லது கஞ்சாக் குழம்பு (லேகியம்) உண்ணுதல்**; to smoke ganja or eat bhang. கஞ்சா (பங்கி) அடிக்கிறான். 47. **காசு உரு வாக்குதல்**; to mint, coin money. காசடிக்கும் இடம் (தங்கசாலை). 48. **விற்றல்**; to sell. என் வண்டியை எப்படியாவது கையடிக்கப் பார்க்கிறேன். 49. **மனப்பாடஞ் செய்தல்**; to memorize, learn by rote. பாடத்தை யெல்லாம் உருவடித்துவிட்டான் (உ.வ.). 50. **கையாளுதல்**; to employ, use, handle, practise. ஆங்கிலமுந் தமிழுங் கலந்தடிக் கிறான் (உ.வ.). எ-டு: உழப்பியடித்தல், கலங்கடித்தல், சிதறடித்தல், போக்கடித்தல். 51. **அரித்தல்**; to gnaw as white ant, to eat as moth. பொத்தகத்தைப் பூச்சி யடித்து விட்டது (இ.வ.). 52. **மழித்தல்**; to shave. அண்ணனுக்கு மீசையடி. 53. **நைத்தல்**; to crush. இந்த வேரை யடித்துப் புண்ணின்மேல் வைத்துக் கட்டு (இ.வ.). 54. **ஒன்றில் மாட்டி வைத்தல்**; to involve, entangle, implicate. என்னைக் குழப்பத்தி லடித்துவிட்டு வந்து விட்டான். 55. **கழித்தல்**; to pass, as urine. சிறுவன் நின்றுகொண்டே அடிக்கிறான் (நகை.). 56. **அழுத்துதல்**; to press down. வண்டியில் முன்பொறை (முன்பாரம்) அடிக்

கிறது, கொஞ்சம் பின்னால் நகருங்கள் (இ.வ.). 57. **கெடுத்தல்**; to spoil. கருமத்தை (காரியத்தை) உழப்பியடித்துவிட்டான். 58. **ஒன்றை எங்கேனும் தெரியாது விட்டு விடுதல்**; to mislay a thing unwittingly and lose it. மாணவன் தன் ஊற்றுத்தூவலைப் போக்கடித்துவிட்டான். 59. **பொறியாற் குத்துதல்**; to punch. 60. **ஒன்றைச் செய்வித்தல்**; to cause anything. கன்னெய் (petrol) விலையேற்றம் பல நாடுகளைக் கலங்கடித்து விட்டது. (கலங்க +·அடித்தல் → கலங்கடித்தல் = கலங்கச் செய்தல்). 61. **துன்புறுத்துதல்**; to afflict, persecute. இட்டிலர் (Hitler) செருமானிய யூதரைச் சிதறடித்தார் (சிதற + அடித்தல் → சிதறடித்தல் = உலகெங்கும் சிதறிப் போமாறு துன்புறுத்துதல்). 62. **தூக்கந் தாக்குதல்**; to be affected by sleepiness. அவனைத் தூக்கம் அடிக்கிறது, போய்த் தூங்கச் சொல். 63. **சாய்த்தல்**; to bend, turn down. காற்று வேலியை அடித்து விட்டது. 64. **விதை நசுக்குதல்**; to castrate. அது காயடித்த காளை (உ.வ.).

ம. அடி, அடிக்குக; க. அடசு; தெ. அடுசு; து. அடிபுனி.

[அடு → அடி.]

அடி[1] *aḍi*, பெ. (n.) **அறை, தாக்கு, தட்டு, வீச்சு**; beat, stroke, blast, blow, as a wind. 'அடி அதிரசம் குத்து கொழுக்கட்டை', 'அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவார்', 'அடிக்கும் ஒரு கை அணைக்கும் ஒரு கை', 'அடிக்கிற புயலைத் தடுக்க முடியுமா?' (பழ.).

ம., க., கை., குற., து., குட. அடி; தெ. அடுபு, ஆடு; கோத. அய்ட்; மா., கொலா. அட்க்; பெங்., குவி. அத்; இரு. அடிகெ; பர்., ஒரி., கட. அட்; துட. ஒட்ய்; கொண். டக்.

[அடு → அடி.]

அடி[2] *aḍi*, பெ. (n.) 1. **கீழ்ப்பாகம், கீழ்ப் பகுதி**; lower part, bottom, base, basement. அடிவயிறு, அடிவாரம், அடித்தளம். 'அடி ஓட்டையாயிருந்தாலும் கொழுக்கட்டை வேகவேண்டியதுதானே' (பழ.). 2. **கீழிடம்**; a place underneath. நிலைப்பேழைக்கு அடியில் அடித்துப் பெருக்கு. மரத்தடியில் உட்கார். தேரடிக்கடை. 'அடிச்சட்டிக்குள்ளே கரணம் போடலாமா', 'அடிவானம் கருத்தால் அப்பொழுதே மழை', 'அடிநாக்கில் நஞ்சும் நுனிநாக்கில் அமிர்தமுமா?' (பழ.). 3. **மண்டி** (அக.நி.); sediment. மண்டியை (அடியி லுள்ளதை)க் கீழே ஊற்று. 4. **அண்மை, ஓரம்**; nearness. கிணற்றடிப் புன்செய். 5. **பாதம்**; foot. "தோயு நிலத்தடி" (திருக்கோ. 3), "இப் பாலை நடந்தபெருங் காலடி மேலடி மான டியே" (தனிப்பா. தி. 2, 4 : 7). 6. **பாதமிதி**; tread. "ஆத்தனூன்று மடிதொறுந்தோன்றிய நீத்தம் யாவும்" (கந்தபு. மகேந். காவலா. 8). 7. **காற்றடம்** (சம்.அக.); footprint. இம் மண்ணில் பதிந்துள்ள அடி எவ்வழிச் செல்லு கிறது? 8. **செருப்படி (ஒரு மூலிகை)**; species of herb. சிறுசெருப்படி, பெருஞ்செருப்படி. 9. **(திருநீறுஞ் சந்தனமும் வைக்கும்) மடல் தாங்கி**; stand for a receptacle. 'புஷ்கர பத்தி மடல் அடியோடு மொன்று' (S.I.I. ii, 15). 10. **மரஅடி**; stump of a tree. மரத்தின் அடிப் பகுதியைக் கதவுக்குப் பயன்படுத்து. 11. **அடி மரம்**; trunk of a tree. நேற்றடித்த காற்றில் அடிமரம் வேரோடு சாய்ந்தது. 12. **பன்னிரு விரலம் (அங்குலம்) கொண்ட நீட்டலளவு**; linear measure of a foot = 12″. வள்ளுவர் கோட்டத் தேரின் உயரம் 106 அடி. 13. **குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐவகைப் படும் செய்யுள் வரி**; metrical line, of which there are five kinds, viz., *kuṟaḷaḍi*, *šindaḍi*, *aḷavaḍi*, *neḍilaḍi* and *kaḻineḍilaḍi*. "நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே" (தொல். பொருள். செய். 31). 14. **தொடக்கம் (ஆதி)**; beginning. "நடுவின் முடி வினிலடியி னன்றானபொருள்" (ஞானவா. சனகரா. 22). 15. **மூலம்**; source. இதனடியாக இது பிறந்தது. 16. **கடவுள்**; Supreme Being. "ஆரே யறிவா ரடியின் பெருமை" (திருமந். 2126). 17. **பழைமை**; antiquity. "அடியிட்ட செந் தமிழின்" (தாயு. மலைவளர். 4). 18. **குல மூலம்**; ancestry. "பனிமதி மரபிற் கடியுநீ" (பாரத. குரு. 25). 19. **வழிமரபு (சந்தானம்)** (யாழ்ப்.); lineage, descent (J.). வாழையடி வாழையென வந்ததிருக் கூட்டம். 20. **மர வேர்**; root of a tree. "அடியற்ற மரமென்ன வடியிலே வீழ்ந்து" (தாயு. தேசோ. 10). 21. **சொல்வேர்**; root of a word. முகம் என்னுஞ் சொல் 'முகு' என்னும் அடியினின்று பிறந்தது. 22. **இசைப்பாட்டின் பல்லவி**; the chorus of a song. 'ஆயிரம் பாட்டிற்கு அடி தெரியும், ஒரு பாட்டிற்கும் உருத்தெரியாது' (பழ.). 23. **செண்டுவெளி** (சூடா.); race course. 24. **இடம்** (பிங்.); place. தேரடியில் பார்த் தேன். 25. **செல்வம்**; riches, wealth. 'அடி

யுடையார்க் கெல்லாம் சாதித்துக் கொள்ள லாமே' (ஈடு, 4.2 : 9). 26. **ஆம்புடை** (**உபாயம்**); plan of action. நல்ல அடி எடுத்தாய் (உ.வ.). 27. **சூதாடுவோர் குழூஉக்குறிகளுள் ஒன்று;** a conventional term in gambling. ''அடியிது பொட்டையீ தென்பர்'' (கந்தபு. தக்ஷ. கயமுகனுற். 168). 28. **உள்மூலநோய்;** internal piles or hemorrhoids situated within the sphincter ani (சா.அக.). அடிமூலம். 29. **கனியம்** (**தாது**); mineral (சா.அக.). செம்பும் நாகமும் அடியாகக்கொண்டது பித்தளை. 30. *கல்லுப்பு;* precipitated salt found at the bottom of the sea (சா.அக.). கடலின் அடியுப்பு. 31. *வழலை;* fuller's earth (சா.அக.). 32. *கட்டட நிலம்;* building site. மனையடி.

ம., க., குட. அடி; தெ. அடி, அடுகு; கோத. அட்ய்; துட. ஒட்ய்; கொண். அட்கி; பர். சடுங்; சிங். அடிய; இந். ஏடி.

[அண்டி → அடி. இனி, அடு → அடி என்றுமாம்.]

அடி[3] *aḍi*, இடை. (int.) **அண்மையிலுள்ள சிறுமிகளையும் தாழ்ந்த நிலைமைப் பெண்களையும், பழக்கம் இழிவு பகைமை முதலியனபற்றி விளிக்கும் விளியிடைச் சொல், 'அடா' என்பதன் பெண்பால்;** a vocative expressing familiarity, contempt or hatred addressed to small girls or inferior women who are nearby, fem. form of *aḍa*. 'அடியென் றழைக்கப் பெண்டாட்டி யில்லை, ஆண்பிள்ளை யெத்தனை பெண்பிள்ளை யெத்தனை என்கிறான்', 'என்னடி யம்மா தெற்கத்தியாள்! எந்நேரம் பார்த்தாலும் தொள்ளைக்காது', 'அடி என்கிற மந்திரியுமில்லை, பிடி என்கிற அரசனுமில்லை' (பழ.).

அடா[1] பார்க்க; see *aḍā*[1].

அடிக்கட்டு-தல் *aḍi-k-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) **புண் புடைத்தல்;** to become inflamed, as a boil.

[அடி + கட்டுதல்.]

அடிக்கட்டை *aḍi-k-kaṭṭai*, பெ. (n.) *பாய்மரத்தின் அடிப்பாகம்* (M. Navi. 81); lower mast.

[அடி + கட்டை.]

அடிக்கடி[1] *aḍikk(u)-aḍi*, பெ. (n.) *அடிக்குச் சரியான அடி;* blow returned.

[அடிக்கு + அடி.]

அடிக்கடி[2] *aḍikkaḍi*, கு.வி.எ. (adv.) 1. **அடிபெயர்க்குந்தோறும்;** at every step. ''அடிக்கடி படித்துகள் பரவை தூர்த்தன'' (பாரத. பதினான். 201). 2. **திரும்பத் திரும்ப, பலமுறை;** frequently, often, repeatedly. ''அண்ணல் சாமந்தன் றுஞ்சா னடிக்கடி யெழுந்து'' (திருவிளை. மெய்க்காட். 20). அவன் அடிக்கடி வந்து போகின்றான் (உ.வ.).

ம. அடிக்கடி; க. அடிகடிகெ; தெ. அடுகடுகுன.

[அடிக்கு + அடி.]

அடிக்கடிசம்போகி *aḍikkaḍi-śambōgi*, பெ. (n.) 1. *சேவல்;* cock. 2. *அடைக்கலங் குருவி;* house sparrow. இவை அடிக்கடி புணர்வதால் இப்பெயர் பெற்றன (சா.அக.).

[Skt. sambhōgam (புணர்ச்சி) > த. சம்போகம் → சம்போகி = புணர்ச்சி செய்வது.]

அடிக்கணை *aḍi-k-kaṇai*, பெ. (n.) *கணைக்கால்;* shin. ''இணைவரால் நிகரடிக் கணையாளை'' (சேதுபு. விதூம. 80).

[அடி + கணை.]

அடிக்கப்பிடிக்க *aḍikka-p-piḍikka*, நி.கா.எ. (inf.) *பந்தை அடிக்கவும் பிடிக்கவும்;* to strike the ball and catch it. கைப்பந்தாட்டத்தில் அடிக்கவும் பிடிக்கவும் நல்ல ஆளில்லை.

[அடிக்க + பிடிக்க.]

அடிக்கயில் *aḍi-k-kayil*, பெ. (n.) **தேங்காயின் அடிப்பாகம், கண்கயில் என்பதற்கு எதிரானது** (யாழ்ப்.); bottom half of a broken coconut shell, as opp. to the top half of the shell containing the three eyelets (J.).

க. அடிகரட

[அடி + கயில்.]

அடிக்கரை *aḍi-k-karai*, பெ. (n.) *கடற்கரையோரம்;* fringe of the seashore. அடிக்கரை பிடித்துப் போனால் முடிக்கரை சேரலாம் (உ.வ.).

[அடி + கரை.]

அடிக்கல் *aḍi-k-kal*, பெ. (n.) **அடிப்படைக் கல், கட்டுமானத்தின் அடையாளமாக முதன் முதலில் இடப்படும் கல்;** foundation stone. முதலமைச்சர் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார் (உ.வ.).

க. அடிகல்

[அடி + கல்.]

அடிக்கலம் *adi-k-kalam,* பெ. (n.) ***சிலம்பு;*** anklet. ''அடிக்கல மரற்ற'' (சீவக. 2041).

[அடி + கலம். அடி = பாதம். கலம் = அணிகலன், சிலம்பு.]

அடிக்கழஞ்சுபெறு-தல் *adi-k-kalañju-peru-,* 19 செ. குன்றாவி. (v.t.) ***பெருமதிப்புப் பெறுதல்;*** to be highly valued. 'உங்கள் போக்கு அடிக் கழஞ்சு பெறாதோ?' (ஈடு, 1.4 : 1).

[அடி + கழஞ்சு + பெறு.]

அடிக்கழிவு *adikkalivu,* பெ. (n.) ***முறைகேடு;*** disorder, derangement, irregularity, confusion. 'நீ செய்கிற அடிக்கழிவால்' (ஈடு, 6.2 : 6).

அடிக்காந்தல் *adi-k-kandal,* பெ. (n.) ***எண்ணெய், குழம்பு முதலிய மருந்து வகை களைக் காய்ச்சும்போது, அவை பாண்டத்தின் அடியிற் பற்றித் தீய்தல்;*** scorching due to over heating of medicines, under preparation, such as medicated oil, electuary, etc. adhering to the bottom of the vessel (சா.அக.).

மறுவ. அடிபற்றிக் காந்தல்

[அடி + காந்தல்.]

அடிக்காயம் *adi-k-kayam,* பெ. (n.) ***அடியால் உண்டான புண்;*** contused wound, as caused by a blow or knock.

[அடி + காயம்.]

அடிக்காரி *adi-k-kari,* பெ. (n.) ***புணர்ச்சியிற் பெருவிருப்பங் கொண்ட பெண்;*** a girl or woman having a strong desire for frequent copulation, a whore.

அடிக்கீழ் *adi-k-kil,* பெ. (n.) ***'உன்பாதத்தின்கீழ் வாழ்வேன்' என்னும் பொருள்கொண்ட ஒரு வணக்கச் சொல்*** (புறநா. 67 : 12, உரை); 'your obedient servant as flourishing beneath your feet', an ancient term of submissive respect in the first person.

[அடி + கீழ்.]

அடிக்கீழ்ப்படுத்து-தல் *adi-k-kil-p-paduttu-,* 2 பி.வி. (v. caus.) ***வென்று தன் அதிகாரத்திற் குட்படுத்துதல்;*** to bring under subjection.

[அடி + கீழ்ப்படுத்து.]

அடிக்குச்சி *adi-k-kucci,* பெ. (n.) ***ஓரடி அளவு கோல்*** (இ.வ.); foot-rule (Loc.).

அடிக்கோல் பார்க்க; see *adi-k-kōl.*

[அடி + குச்சி.]

அடிக்குச்சு *adi-k-kuccu,* பெ. (n.) ***அடிக்குச்சி*** பார்க்க; see *adi-k-kucci.*

அடிக்குடல் *adi-k-kudal,* பெ. (n.) ***சிறுகுடலின் கீழ்ப்பாகம்;*** the lower part of the small intestines (சா.அக.).

[அடி + குடல்.]

அடிக்குடலிசிவு *adi-k-kudal-iśivu,* பெ. (n.) ***சிறு குடலை யிழுத்துப்பிடித்துத் துன்புறுத்தும் ஒரு கொடிய நோய்;*** a dangerous ailment with a severe colic or spasm due to intestinal obstruction, Iliac passion or Ileus (சா.அக.).

[அடி + குடல் + இசிவு.]

அடிக்குடி *adi-k-kudi,* பெ. (n.) ***இறைவனின் அடிமைத் தொண்டன்;*** a humble devotee. ''வைத்திடிங் கென்னை நின்னடிக் குடியா'' (தாயு. ஆசை. 37).

ம. அடிக்குடி

[அடி + குடி.]

அடிக்குடில் *adi-k-kudil,* பெ. (n.) 1. ***இறை யடிமைக் குடும்பம்;*** family devoted to service of the deity. ''அடி யோங்கள டிக்குடில் வீடு பெற் றுய்ந்ததுகாண்'' (திவ். திருப்பல். 10). 2. ***அரண்மனை அல்லது கோயில் வேலைக் காரர் வாழும் அடிச்சேரி;*** servants' quarters. ''அன்னந் துஞ்சு மடிக்குடிலின்'' (சீவக. 2588). 3. ***புறநகர்;*** suburb of a town or city (வின்.). 4. ***வேடரிருக்குமூர்;*** a village inhabited by hunters (சங்.அக.).

[அடி + குடில்.]

அடிக்குழம்பு *adi-k-kulambu,* பெ. (n.) ***அடி மண்டி;*** that which settles at the bottom, sediment.

தெ. அடிகண்டு்லு

[அடி + குழம்பு.]

அடிக்குள் *adikkul,* கு.வி.எ. (adv.) ***மிக விரை வில்;*** in a moment. ஓரடிக்குள் (ஓரடிக்குள்ளே) வந்துவிடு (உ.வ.).

[அடிக்கு + உள்.]

அடிக்கொருக்க *adikk(u)-orukka,* கு.வி.எ. (adv.) ***அடிக்கொருக்கால்*** பார்க்க; see *adikk(u)-oru-k-kal.*

[அடிக்கு + ஒருகால் — அடிக்கொருகால் → அடிக்கொருக்கால் → அடிக்கொருக்க (கொ.வ.).]

அடிக்கொருக்கால் *adikk(u)-oru-k-kal,* கு.வி.எ. (adv.) 1. ***ஒவ்வோர் அடியெடுத்து வைப்பிற்கும்***

ஒருமுறை; once at every step. அடிக்கொருக் கால் திரும்பிப் பார்க்கிறான். 2. ஒவ்வொரு குறுகிய நேரங் கழித்தும்; regularly at short intervals. அடிக்கொருக்கால் தண்ணீர் கேட் கிறான்.

ஒருகால் பார்க்க; see *oru-kal.*

[அடிக்கு + ஒருகால்.]

அடிக்கொள்(ளு)-தல் *aḍi-k-koḷ-,* 16 செ.கு.வி. (v.i.) முளைத்தல், தோன்றுதல்; to sprout, originate. ''வாட்டடங் கண்ணி மார்பில் வந்தடிக் கொண்ட ஞான்றே'' (கூர்மபு. கண்ணனவ. 25.).

[அடி + கொள்.]

அடிக்கோல் *aḍi-k-kōl,* பெ. (n.) ஓரடி அளவு கோல்; foot-rule.

[அடி + கோல்.]

அடிக்கோலு-தல் *aḍi-k-kōlu-,* 7 செ.கு.வி. (v.i.) 1. அடிப்படையிடுதல்; to lay a foundation, make preparations. 2. தொடங்குதல்; to begin. ''அடிக்கோலி ஞாலத்தாள் பின்னு நலம்புரிந்த தென்கொலோ'' (திவ். இயற். 2 : 82).

[அடி + கோலு.]

அடிகண்மார் *aḍigaṇ-mār,* பெ. (n.) சமயக் குரவன்மார், சிறப்பாகச் சமணக் குரவர்; priests, esp. of the Jains. ''அடிகண் மார்க்கு மேவிய தீங்கு தன்னை விளைப்பது'' (பெரியபு. திருஞான. 641).

[அடிகள் + மார்.]

அடிகல் *aḍi-kal,* பெ. (n.) செதுக்கித் திருத்திய கல்; dressed stone.

[அடி + கல்.]

அடிகள் *aḍigaḷ,* பெ. (n.) 1. கடவுள்; God Almighty. 2. திருமால்; Viṣṇu. ''மலர்மகள் விரும்பும்நம் அரும்பெற லடிகள்'' (திவ். திரு வாய். 1.3 : 1). 3. துறவறப் பெரியோர்; sages, ascetics. இளங்கோவடிகள். கவுந்தி யடிகள். ''அடிகள் நீரே அருளுகென் றாற்கு'' (சிலப். பதி. 62). ''அடிகள் நீரே அருளுதி ராயின்'' (சிலப். 10 : 62). 4. பேரறிஞரான இறையடியார் பெயருடன் இணைத்துவழங்கும் மதிப்புச் சொல்; a term of respect added to the names of scholarly devotees. எ-டு : மறை மலையடிகள். 5. அரசன்; king. 6. அரசி; queen. 'வீரசிம்மாசனத்து முக்கோக்கிழா னடிகளோடும் வீற்றிருந்தருளிய' (சோழவமி. பக். 102). 7. குரு; spiritual preceptor.

ம. அடிகள்; க. அடிக.

[அடிகள் என்பது திருவடிகள் என்பதன் குறுக் கம். திருவடி = திருப்பாதம். இறைவனுக்கு உருவ மில்லாவிடினும், அவனுக்குச் செய்யவேண்டிய தாழ்மையான பத்தி வணக்கத்தைக் குறித்தற்கு, மாந்தனுறுப்பில் தாழ்வான பாதத்தின் பெயர், தூய்மை குறித்த திரு என்னும் அடைமொழியுடன் ஆளப்பட்டது. பின்னர், தெய்வத்தன்மையும் வணக்கத்திற்குரிமையுமுடைய பன்னிலை மக்கள், அடைமொழி நீங்கிய 'அடிகள்' என்னும் பெயராற் குறிக்கப்பெற்றனர்.]

அடிகனத்த சட்டி *aḍi-kaṉatta-šaṭṭi,* பெ. (n.) எண்ணெய், குழம்பு முதலியன காய்ச்சுவதற் காக அடிப்பாகத்தைக் கனதியாகச் செய்த மட்கலம்; earthen vessel with a bottom sufficiently thick, so as not to break or give way while preparing medicated oils, electuary, etc. (சா.அக.).

[அடி + கனத்த + சட்டி.]

அடிகனத்த தாழி *aḍi-kaṉatta-tāḻi,* பெ. (n.) அடிகனத்த சட்டி பார்க்க; see *aḍi-kaṉatta-šaṭṭi.*

[அடி + கனத்த + தாழி.]

அடிகாசு *aḍi-kāšu,* பெ. (n.) பழைய வரிவகை (I.M.P. Sm. 91); an ancient tax collected from stalls in markets.

அடிகாயம் *aḍi-kāyam,* பெ. (n.) அடிக்காயம் பார்க்க; see *aḍi-k-kāyam.*

அடிகாற்று *aḍi-kāṟṟu,* பெ. (n.) பெருங்காற்று (யாழ்ப்.); powerful wind, strong gale, tempest, cyclone (J.).

அடிகாரன் *aḍi-kāraṉ,* பெ. (n.) 1. கறியுணவிற் காகக் கால்நடைகளைக் கொல்பவன்; butcher. 2. சிலம்பம் வீசுவோன்; man who fences with long bamboo sticks.

அடிகுளிர்-தல் *aḍi-kuḷir-,* 2 செ.கு.வி. (v.i.) 1. கால் சில்லிடுதல்; to become chill, as the legs or extremities of limbs. 2. அண்டி சில்லிடுதல்; to become chill, as the anus (சா.அக.).

அடிகூலி *aḍi-kūli,* பெ. (n.) கல்லில் அம்மி திரிகை உரல் முதலியன உளியாற் செதுக்கி யமைப்பதற்குக் கொடுக்குங் கூலி; charges for

making grind-stone, hand-mill, stone mortar, etc., by cutting and chiselling.

அடிகொள்(ளு)-தல் *aḍi-koḷ-*, 16 செ.கு.வி. (v.i.) தொடங்குதல்; to begin, commence (சா.அக.).

அடிகோல் சயம் *aḍi-kōl-šayam*, பெ. (n.) இருமல்நோயின் தொடக்கம்; incipient consumption (சா.அக.).

Skt. kṣaya > த. சயம்.

[அடிகோல் + சயம்.]

அடிகோலு-தல் *aḍi-kōlu-*, 7 செ.கு.வி. (v.i.) அடிக்கோலு-தல் பார்க்க; see *aḍi-k-kōlu-*.

அடிச்சட்டம் *aḍi-c-caṭṭam*, பெ. (n.) கதவு, பலகணி முதலியவற்றின் அடியிலிடும் மரம்; bottom piece, as of a door.

[அடி + சட்டம்.]

அடிச்சரக்கு *aḍi-c-carakku*, பெ. (n.) 1. மட்டமான சரக்கு; inferior articles of merchandise. 2. குப்பை; refuse.

[அடி + சரக்கு.]

அடிச்சால் *aḍi-c-cāl*, பெ. (n.) உழவின் முதற் சால்; first furrow in ploughing.

[அடி + சால்.]

அடிச்சான்பிடிச்சான் வியாபாரம் *aḍiccāṉ-piḍiccāṉ-viyābāram*, பெ. (n.) அடித்தான்பிடித்தான் வியாபாரம் பார்க்க; see *aḍittāṉ-piḍittāṉ-viyābāram*.

அடிச்சி *aḍicci*, பெ. (n.) அடியவள்; devoted maiden, maid-servant. "புனைகோதை சூட்டுடன் னடிச்சியை" (சீவக. 481). 'அடிச்சிக்கு ஆசை அரசன்மீது' (பழ.).

[அடி → அடித்தி → அடிச்சி.]

அடித்தி பார்க்க; see *aḍitti*.

அடிச்சிரட்டை *aḍi-c-ciraṭṭai*, பெ. (n.) தேங்காயின் அடிக்கொட்டாங்கச்சி, கண்சிரட்டையின் வேறானது (யாழ்ப்.); thick half or bottom of a coconut shell, used as a vessel, dist. fr. *kaṇširaṭṭai* (J.).

[அடி + சிரட்டை.]

அடிச்சிப்பு *aḍi-c-cippu*, பெ. (n.) வாழைக்குலையின் முதற் சீப்பு; first formed comb in a bunch of plantains.

[அடி + சீப்பு.]

அடிச்சுவடு *aḍi-c-cuvaḍu*, பெ. (n.) பாதத் தடம்; foot print.

[அடி + சுவடு.]

அடிச்சூடு *aḍi-c-cūḍu*, பெ. (n.) பாதத்தி லுறைக்கும் வெப்பம்; heat felt in the soles of the feet when walking.

[அடி + சூடு.]

அடிச்சூத்திரன் *aḍi-c-cūttiraṉ*, பெ. (n.) தாழ்ந்த வகுப்பினன்; a person of inferior caste.

[அடி + சூத்திரன். **Skt.** sūdra > த. சூத்திரன்.]

நாற்குலம் பார்க்க; see *nāṟ-kulam*.

அடிச்சேரி *aḍi-c-cēri*, பெ. (n.) 1. பணியாளர் குடியிருப்பு (ஈடு, 6.7 : 1); servants' quarters, section of a town occupied by the labouring classes. 2. ஊரிற் காணியாளர் குடியிருக்கும் பகுதி (W.G.); part of a village in which the hereditary proprietors reside. 3. நகரை யடுத்த ஊர், புறநகர்; (Cm.) village near a town, suburb.

[அடி + சேரி.]

அடிச்சேரியாள் *aḍi-c-cēriyāḷ*, பெ. (n.) குச்சுக்காரி (நெல்லை); low-class prostitute (Tn.).

[அடி + சேரியாள். குற்றில் → குச்சில் → குச்சு = குடிசை அல்லது சிறு கூரைவீடு. அதிற் குடியிருக்கும் எளிய பொதுமகள், குச்சுக்காரி.]

அடிசாய்-தல் *aḍi-šāy-*, 2 செ.கு.வி. (v.i.) அடிக்கீழ் நிழல் சாய்தல்; sun's declining, as indicated by the lengthening of the shadow under one's foot.

அடிசில் *aḍišil*, பெ. (n.) 1. சோறு; boiled rice. 2. உணவு; food. 'அடிசில் என்பது.........' (தொல். சொல். கிளவி. 46, சேனா. உரை).

க. அடிகெ

[அடுசில் → அடிசில்.]

அடுசில் பார்க்க; see *aḍušil*.

அடிசிற்சாலை *aḍišiṟ-cālai*, பெ. (n.) உணவுக் கொடையில்லம், அன்னசத்திரம்; rest house for providing food. 'அடிசிற் சாலையும் அறப்புறமும்' (சீவக. 76, உரை).

[அடிசில் + சாலை.]

அடிசிற்பள்ளி *aḍiśiṟ-paḷḷi*, பெ. (n.) **மடைப் பள்ளி**; kitchen. ''ஐவே றமைந்த அடிசிற் பள்ளியும்'' (பெருங். இலாவாண. 7 : 133).

க. அடிகெமனெ

[அடிசில் + பள்ளி.]

அடிசிற்புறம் *aḍiśiṟ-puṟam*, பெ. (n.) **உணவிற் காக விடப்படும் இறையிலி நிலம்**; land assigned tax-free for providing food. ''அடிசிற் புறம் ஆக்கினான்'' (சீவக. 2577).

[அடிசில் + புறம்.]

அடிசிற்றளி *aḍiśiṟṟaḷi*, பெ. (n.) **மடைப்பள்ளி**; kitchen. ''அடிசிற் றளியா னெய்வார்ந்து'' (சீவக. 2579).

[அடிசில் + தளி.]

அடிஞானம் *aḍi-ñāṉam*, பெ. (n.) **ஆவியியல் அல்லது இறையியல் அறிவு** (பதிஞானம்); spiritual wisdom. ''அடிஞான மான்மாவிற் றோன்றும்'' (சி.சி. சுபக். 8 : 28).

அடித்தண்டு *aḍi-t-taṇḍu*, பெ. (n.) **வேரையடுத் துள்ள தண்டு**; that portion of the stalk nearest to the root (சா.அக.).

[அடி + தண்டு.]

அடித்தலம் *aḍi-t-talam*, பெ. (n.) 1. **கீழிடம்**; lower part. ''பாசறை கொண்டே யொப்ப வடித்தலம் படுத்து'' (கந்தபு. அசுர. நகர் செய். 3.). 2. **அடிப்படை** (**அஸ்திவாரம்**); foundation of a building (W.). 3. **பாதம்**; foot. ''முத்தமிழ் விரகர் பொன்ன டித்தலம்'' (பெரியபு. திருஞான. 1072). 'அடிச்சுவடு கொண்டு கள்ளனைப் பிடிக்கலாம்' (பழ.). 4. **திருவடிநிலை**; sandals of a great person. ''அடித்தல மிரண்டையு மழுத கண்ணினான் முடித்தல மிவையென முறையிற் சூடினான்'' (கம்பரா. அயோத். திருவடிசூட்டு. 136).

க. அடிதள

[அடி + தலம். **Skt.** sthala > த. தலம்.]

அடித்த வெண்ணெய் *aḍitta-veṇṇey*, பெ. (n.) **துப்புரவு செய்த வெண்ணெய்**; purified butter (சா.அக.).

அடித்தழும்பு *aḍi-t-taḻumbu*, பெ. (n.) **அடியால் ஏற்பட்ட புண்ணின் வடு**; cicatrice, mark left after healing of wound caused by a blow.

[அடி + தழும்பு.]

அடித்தள்ளிப்போ - தல் *aḍi-t-taḷḷi-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) 1. **இருக்கை** (**ஆசன**) **வாய் மூலம் வெளிப்பிதுங்கி நிற்றல்**; protrusion of the rectal walls beyond the anus, prolapse of the rectum. 2. **பெண்கட்குக் கருப்பை வாய் தள்ளல்** (**உறுப்புத் தள்ளல்**); protrusion of the womb beyond the vulva, prolapse of the uterus (சா.அக.).

[அடி + தள்ளிப்போ.]

அடித்தளம் *aḍi-t-taḷam*, பெ. (n.) 1. **கட்டடத் தின் அடிநிலைப் பரப்பு**; ground floor. 2. **கிணற்றின் அடிப்பார்**; foundation of a well. 3. **அடிவரிசை** ; lowest stratum, as of a pile (W.). 4. **அடித்திண்டு** (C.E.M.); basement. 5. **கற்படுத்த நிலம்** (சங்.அக.); ground paved with stones, stone pavement. 6. **படையின் பின்னணி**; rear guard of an army.

[அடி + தளம்.]

அடித்தான்பிடித்தான் வியாபாரம் *aḍittāṉ-piḍittāṉ-viyābāram*, பெ. (n.) **சண்டை சச்சர வான செய்தி** ; an affair or matter involving quarrel and violent action. அது, அடித்தான் பிடித்தான் வியாபாரம், நாம் அதில் தலையிட வேண்டியதில்லை (உ.வ.).

[அடித்தான் + பிடித்தான் + வியாபாரம். **Skt.** vyāpāra > த. வியாபாரம் = தொழில், வேலை, செய்கை, செய்தி.]

அடித்தானம் *aḍi-t-tāṉam*, பெ. (n.) **நிலைக் களம்** (**ஆதாரம்**) ; basis, foundation.

ம., க., து. அடி ; தெ. அடுகு.

[த. அடி + **Skt.** sthāna > த. தானம் = இடம். மண்டுதல் = நெருங்குதல், நெருங்கித் தொடுதல் அல்லது தாக்குதல், தாங்குதல். மண்டுகால் = முட்டுக்கால், தாங்குகால். மண்டு → மண்டி = தாங்கி. மண்டி → அண்டி = தாங்கி, தாங்கி நிற்கும் அடிப்பகுதி, கைகாலில்லா உடம்பின் அடிப்பகுதி (anus), அடி. அண்டி தள்ளுதல் = மலவாயிலைக் கொண்ட அடிப் பகுதி கீழிறங்குதல். அண்டி = அடிபோல் தோன்றும் நுனியிற் கொட்டையுள்ள பழம் பழுக்கும் ஒருவகை மரம். அண்டிக்கொட்டை (அண்டிமாங்கொட்டை) = மரமுந்திரிப் பழத் தின் அடியிலுள்ள கொட்டை. அண்டி → அடி.]

ஒ.நோ : தண்டி → தடி. இனி, நிலத்தை அடுத்திருக்கும் பகுதி அல்லது உறுப்பு அடி யெனப்பட்டது எனினுமாம். அடு → அடி. **ஒ.நோ** : தொடு → தொடி.

அடித்தி *aḍitti*, பெ. (n.) ***அடியாள்***; devoted maiden, maid-servant. "அடித்தி யாரு முன் பட்ட தொழிந்து நுங்கண் முகவியர்" (சீவக. 2045).

[அடி → அடித்தி.]

அடித்திகம் *aḍittigam*, பெ. (n.) ***அமுக்கிரா*** (மலை.); species of withania. — ***அமுக்கிறா***; horse-plant, *Withania somnifera* alias *Physalis flexuosa* (சா.அக.).

அடித்திப்பை *aḍi-t-tippai*, பெ. (n.) (பொறி.) ***நிலைக்களம் (ஆதாரம்)*** (C.E.M.); (Engin.) bed, that on which anything lies.

[அடி + திப்பை.]

திப்பை பார்க்க; see *tippai*.

அடித்துக்கொண்டுபோ-தல் *aḍittu-k-koṇḍu-pō-*, (8) செ.குன்றாவி. (v.t.) *1.* ***வாரிக்கொண்டு செல்லுதல்***; to sweep away, as a flood, carry away with a rush. வெள்ளம் வீடுகளை யெல்லாம் அடித்துக்கொண்டு போய்விட்டது. 2. ***கொள்ளைகொண்டு செல்லுதல்***; to plunder, rob and get away. விசயநகர் அரண்மனையில் எஞ்சியிருந்த செல்வங்களை யெல்லாம் கொள்ளைக் கூட்டம் அடித்துக்கொண்டு போய்விட்டது. *3.* ***துயர மிகுதியால் ஒரு பெண் தன் தலையில் அடித்துக்கொண்டு செல்லுதல்***; to go about beating on the head, as a grief-stricken woman. தன் மகன் இறந்து விட்டானென்று தொலைவரி (தந்தி) வந்ததும், தாய் தன் தலையில் அடித்துக்கொண்டு போனாள். *4.* ***ஊர்காவலர் குற்றவாளிகளை அடித்துச் சிறைக்குக் கொண்டுசெல்லுதல்***; to beat the law-breakers and take them to prison, as policemen.

[அடித்து + கொண்டு + போ.]

அடித்துக்கொல்(லு)-தல் *aḍittu-k-kol(lu)-*, 7 செ. குன்றாவி. (v.t.) ***கையால் அல்லது கருவியா லடித்துக் கொல்லுதல்***; to kill a person or animal by beating with hand(s) or weapons.

[அடித்து + கொல்.]

அடித்துக்கொள்(ளு) - தல் *aḍittu - k - koḷ(ḷu)-*, 16 செ.கு.வி. (v.i.) *1.* ***தன்னை அறைந்து கொள்ளுதல்***; to beat oneself once or repeatedly. தன் கணவனுக்கு வேலைபோய்விட்டதென்று தன் தலையில் அடித்துக்கொண்டாள். *2.* ***பன்முறை தடுத்துரைத்தல்***; to repeatedly protest against. அது செய்யத் தகாதென்று முன்னமே எத்தனையோ முறை அடித்துக் கொண்டேன். *3.* ***அடிக்கடி சண்டையிடுதல்***; to quarrel again and again. இவ் விருவரும் நாள்தோறும் அடித்துக்கொள்கிறார்கள். *4.* ***மனம் வருந்துதல்***; to suffer in mind. திடுமென்று ஆற்றில் வெள்ளம் வந்ததனால், என் மகன் திரும்பி வரும்வரை என் மனம் மிகவும் அடித்துக்கொண்டது (உ.வ.).

[அடித்து + கொள்.]

அடித்துக்கொளுத்து - தல் *aḍittu - k - koḷuttu-*, 5 செ.கு.வி. (v.i.) *1.* ***பொதுமேடையில் தலைசிறந்த சொற்பொழிவாற்றுதல்***; to deliver an excellent speech at a public meeting. அன்று நடந்த பொதுக்கூட்டத்தில் ஆ. இராமசாமி (முதலியார்) அடித்துக்கொளுத்திவிட்டார் (உ.வ.). *2.* ***பேச்சுப் போட்டியில் ஒப்புயர் வற்ற திறமை காட்டுதல்***; to exhibit extraordinary talents in an oratorical contest. நேற்றுப் பள்ளியில் நடந்த பேச்சுப்போட்டியில், உங்கள் மகன் அடித்துக்கொளுத்தி விட்டான் (உ.வ.).

ம. அடிச்சுதகர்க்குக

[அடித்து + கொளுத்து.]

அடித்துச்சொல்(லு)-தல் *aḍittu-c-col(lu)-*, 8 செ. குன்றாவி. (v.t.) ***வலியுறுத்திக் கூறல்***; to say emphatically.

[அடித்து + சொல்.]

அடித்துண்டு *aḍi-t-tuṇḍu*, பெ. (n.) ***பிழைப்பு மூலம், வாழ்க்கைமுதல் (ஜீவனாம்சம்)***; subsistence allowance.

[அடி + துண்டு.]

மறுவ. அடுத்தூண்

அடித்துப்பிடுங்குகிறசுத்தியல் *aḍittu-p-piḍuṅgu-giṟa-šuttiyal*, பெ. (n.) ***ஆணி யடிக்கவும் அதைப் பிடுங்கவும் பயன்படும் சிறு சம்மட்டி, கவைசுத்தியல்***; small hammer used to drive nails in and pull them out.

அடித்துப்புரண்டுவிழு-தல் *aḍittu-p-puraṇḍu-viḻu-*, 2 செ.கு.வி. (v.i.) *1.* ***வழுக்குநிலத்தில் வழுக்கிவிழுதல்***; to slip and fall down violently on slippery ground. *2.* ***திகிலடைந்து கலைந்தோடுங் கூட்டத்தில் தடுக்கி விழுதல்***; to tumble and roll in a stampede. *3.* ***சாவீட்டில் பெண்கள் மார்பிலடித்துப் புரண்டு விழுதல்***;

to beat the breasts and fall down in lamentation at a house where death has occurred.

[அடித்து + புரண்டு + விழு.]

அடித்துப்புரண்டுவிழுந்தழு - தல் *aḍittu - p - puraṇḍu-viḻund(u)-aḻu-*, 1 செ.கு.வி. (v.i.) *இழவு வீட்டில் மார்பிலடித்துக்கொண்டு தரையில் விழுந்து அழுதல்*; to beat the breasts and fall down at a house where death has occurred and bewail, as a woman.

[அடித்து + புரண்டு + விழுந்து + அழு.]

அடித்துப்புரண்டுவிழுந்தெழு - தல் *aḍittu - p - puraṇḍu - viḻund(u) - eḻu-*, 2 செ.கு.வி. (v.i.) *நெரிசலில் கீழே விழுந்து உருண்டு எழுதல்*; to tumble and roll on the ground in stampede and rise.

[அடித்து + புரண்டு + விழுந்து + எழு.]

அடித்துப்புரண்டுவிழுந்தெழுந்தோடு-தல் *aḍittu - p - puraṇḍu - viḻund(u) - eḻund(u) - ōḍu-*, 5 செ.கு.வி. (v.i.) *நெரிசலில் தவறிக் கீழே விழுந்து உருண்டு விலகித் தப்பித்து ஓடுதல்*; to tumble and roll on the ground in stampede, and rise and run away.

[அடித்து + புரண்டு + விழுந்து + எழுந்து + ஓடு.]

அடித்துப்புரண்டோடு-தல் *aḍittu-p-puraṇḍ(u)-ōḍu-*, 5 செ.கு.வி. (v.i.) *வெள்ளம்போல் வாரியடித்துக்கொண்டு போதல்*; to roll and rush forward, as a water-fall or flooded river.

[அடித்து + புரண்டு + ஓடு.]

அடித்துப்புரள்[ளு]-தல் *aḍittu-p-puraḷ-*, 16 செ.கு.வி. (v.i.) *சினந்து அடம்பிடிக்கும் குழந்தை அல்லது தினவுகொண்ட கழுதைபோல் தரையில் புரண்டு உருளுதல்*; to roll on the ground, as a naughty child in anger or as an ass, to allay itching.

[அடித்து + புரள்.]

அடித்துப்பேசு-தல் *aḍittu - p - pēšu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *மறுத்துப் பேசுதல்*; to refute, contradict emphatically.

[அடித்து + பேசு.]

அடித்துமுதலானது *aḍittu - mudal - āṉadu*, பெ. (n.) *கதிரையடித்துக் களத்திற் குவித்த கூலம்*; quantity of grain threshed and heaped on the threshing-floor.

அடித்துவிடு-தல் *aḍittu-viḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) *வலிமையாகச் செய்துமுடித்தல்* (இராட்.); to accomplish by force (R.).

அடித்துவிழு-தல் *aḍittu-viḻu-*, 2 செ.கு.வி. (v.i.) *இழவுவீட்டில் மாரடித்துக்கொண்டு விழுதல்*; to beat the breasts and fall down at the house where death has occurred, as a woman.

அடித்துவிழுந்தழு-தல் *aḍittu - viḻund(u)-aḻu-*, 1 செ.கு.வி. (v.i.) *இழவு வீட்டில் மாரடித்துக் கொண்டு விழுந்தழுதல்*; to beat the breasts and fall down and bewail, as a woman, at the house where death has occurred.

[அடித்து + விழுந்து + அழு.]

அடித்தூறு *aḍi-t-tūṟu*, பெ. (n.) *மரத்தின் அடிக்கட்டை*; stump of a tree.

[அடி + தூறு.]

அடித்தேறு *aḍi-t-tēṟu*, பெ. (n.) *முறைகேடு, நயனன்மை (அநீதி)* (இ.வ.); injustice (Loc.).

[அடி + தேறு.]

அடித்தொடை *aḍi-t-toḍai*, பெ. (n.) 1. *தொடையின் மேற்பாகம்*; upper part of the thigh. 2. *தொடையின் பின்புறம்*; the back part of the thigh. 3. (யாப்.) *செய்யுளின் அடிதொறும் தொடையமையத் தொடுப்பது*; (Pros.) concatenation in which all the lines of a verse rhyme in one way or another.

[அடி + தொடை.]

அடித்தொண்டை *aḍi-t-toṇḍai*, பெ. (n.) *தொண்டையின் கீழ்ப்பகுதி*; the lower part of the throat.

[அடி + தொண்டை.]

அடித்தொண்டையிற் பேசு-தல் *aḍi-t-toṇḍaiyiṟ-pēšu-*, 5 செ.கு.வி., 5 செ.குன்றாவி. (v.i. & v.t.) *குரலை அடித்தொண்டையி லடக்கிப் பேசுதல்*; to speak in guttural voice.

[அடி + தொண்டை + இல் + பேசு.]

அடித்தொழில் *aḍi-t-toḻil*, பெ. (n.) *குற்றேவல்*; menial service. "அப்பிறப் பியானின் னடித் தொழில் கேட்குவன்" (*மணிமே. 22 : 134*).

[அடி + தொழில்.]

அடித்தோழி *aḍi-t-tōḻi*, பெ. (n.) *தலைமைத் தோழி*; chief woman attendant, confidante of

a lady. "அடித்தோழி சொல்" (சிலப். 29:4-ன் தலைப்பு).

[அடி + தோழி.]

அடிதடி *adidadi*, பெ. (n.) **அடித்துச் செய்யும் சண்டை**; quarrel that ends in blows. கடைசியில் அந்த வழக்காரம் (dispute) அடிதடியில் தான் வந்து முடியும். அந்தத் தெருவெல்லாம் அடிதடியாய்க் கிடக்கிறது (உ.வ.).

ம. அடிதட; க. அடிதடி.

அடிதடில் *adidadil*, பெ. (n.) அடிதடி பார்க்க; see *adidadi*.

அடிதண்டம் *adidandam*, பெ. (n.) 1. **தலையெடுக்க வொட்டாத திடீர் அடி**; sudden blow that incapacitates. 2. **அடிதண்டனை**; flogging (W.).

அடிதண்டா *adidanda*, பெ. (n.) 1. **மண்வெட்டி** (C.E.M.); shovel. 2. **கதவிற் குறுக்காக இடும் சட்டத் தாழ்ப்பாள்**; bar laid across a door.

அடிதரிகம் *adidarigam*, பெ. (n.) **அசுவகெந்தி**; a plant having the smell of a horse, *Withania somnifera* alias *Physalis flexuosa* (சா.அக.).

குறிப்பு: திரு. சாம்பசிவம் பிள்ளை, **அடித்திகம்** என்பதற்குப் போன்றே **அடிதரிகம்** என்பதற்கும், ஆங்கிலப் பொருள் கூறியிருக்கின்றார். ஆயின் பின்னதற்குத் தமிழ்ப் பொருள் 'அமுக்கிரா' என்னாது 'அசுவ கெந்தி' என்று வேறுபட்டுள்ளது.

அடிதரிகம் என்பது வேறு அகரமுதலிகளிற் காணப்படாமையாலும், மதுரைத் தமிழ்ச் சங்கத் **தமிழ்ச்சொல் லகராதி** அடித்திகம் என்பதற்கு அசுவகந்தி என்று பொருள் குறித்திருப்பதாலும், அடிதரிகம் என்பது அடித்திகம் என்பதன் (ஏட்டுப் பிழையால் நேர்ந்த) வேற்று வடிவமோ என ஐயுறக் கிடக்கின்றது.

அசுவகந்தி என்பதைக் குதிரைநாறி என்று தமிழிற் குறிக்கலாம்.

அடிதலை *adi-talai*, பெ. (n.) 1. **தொடக்க விறுதி, முதலும் முடிவும்**; beginning and end. "அடிதலை வரவிது" (அருணாசலபு. திருமலைச். 60). 2. **வரலாறு**; history, account. 3. **ஒழுங்கு**; order, regularity (W.). —, பெ., கு.வி.எ. (n. & adv.) **கீழ்மேல்**; upside down.

க. அடிதலெ

அடிதலை தடுமாற்றம் *adi-talai-tadumarram*, பெ. (n.) **முன்பின் முறையின்றிக் குழம்புதல்**; utter confusion or disorder in things or statements, topsyturvydom.

அடிதலை தடுமாறு-தல் *adi-talai-tadumaru-*, 5 செ.கு.வி. (v.i.) **தொடக்கவிறுதி தெரியாவாறு குழம்புதல்**; to be confused, in the statement of serial or chronological order of things or events. "அந்தமில் மறையெல்லா மடிதலை தடுமாறி" (கந்தபு. பாயிரப். 1).

[அடி + தலை + தடுமாறு.]

அடிதவ்வு-தல் *adi-tavvu-*, 5 செ.கு.வி. (v.i.) **அடிதாண்டிப் பழகுதல் அல்லது விளையாடுதல்**; to jump over, as an exercise of children or young animals (W.).

[அடி + தவ்வு. தவ்வு = தாவு, தாண்டு.]

அடிதாளம் *adi-talam*, பெ. (n.) **கைகளால் தட்டும் தாளம்**; beating time with the hand. 'அடிதாளம் போடாவிட்டால் பாட்டு வாராது என்பார்கள்' (மதி. களஞ். ii, 72).

[அடி + தாளம். அடி = கைகளால் தட்டுதல்.]

அடிதாறு *adi-taru*, பெ. (n.) அடிச்சுவடு; footprint, "நிழலு மடிதாறு மானோம்" (திவ். இயற். பெரியதிருவந். 31).

[அடி + தாறு. அடி = பாதம்.]

அடிதிரும்பு-தல் *adi-tirumbu-*, 5 செ.கு.வி. (v.i.) **பொழுது சாய்தல்**; sun's declining, as indicated by the turning eastward of the shadow under foot.

அடிதின்னல் *adi-tinnal*, தொ.பெ. (vbl. n.) அடியுண்ணல் 1 பார்க்க; see *adi-y-unnal* 1.

அடிதொடு-தல் *adi-todu-*, 20 செ.கு.வி. (v.i.) **தெய்வத்தின் பாதந் தொட்டுச் சூளிடுதல்**; to take an oath by touching the feet of God or a deity. "ஒழியப் போகே னுன்னடி தொட்டேன்" (மணிமே. 18:171). —, 19 செ.குன்றாவி. (v.t.) **பெரியோரின் பாதந் தொட்டு வணங்குதல்**; to pay homage to great men by touching their feet. "கோனடி தொட்டேன்" (கலித். 94 : 36).

[அடி + தொடு. அடி = பாதம்.]

அடிதொறும் *adi-torum*, கு.வி.எ. (adv.) **அடிக்கடி**; often, repeatedly. "அடிதொறாயிரங்கள் சிந்தி" (சீவக. 106).

[அடி + தொறும்.]

எடுத்துக்காட்டிய செய்யுள் தொடரில் 'உம்'மை தொக்கது.

அடிதோறும்[1] *aḍi-tōṟum*, கு.வி.எ. (adv.) *ஒவ்வோ ரடிப்பின் போதும்*; at every beat.

[அடி + தோறும். அடி = அடிப்பு. தொறும் → தோறும்.]

அடிதோறும்[2] *aḍi-tōṟum*, கு.வி.எ. (adv.) 1. *அடிக்கடி*; often, repeatedly. 2. *ஒவ்வொன்றன் அடியிலும்*; at the bottom of every-thing. 3. *ஒவ்வொரு பாதத்தின்கண்ணும்*; at every foot. 4. *செய்யுளின் ஒவ்வோ ரடியிலும்*; in every line of a poem or verse.

[அடி + தோறும். தொறும் → தோறும்.]

அடிநகர்-தல் *aḍi-nagar-*, 2 செ.கு.வி. (v.i.) *இடம்விட்டுப் பெயர்தல்*; to move a little, to be dislodged.

அடிநடுமுடி *aḍi-naḍu-muḍi*, பெ. (n.) *காரம், சாரம், உப்பு என்பவற்றை—சிறப்பாகச் சூதம், பூரம், சாரம் என்பவற்றைக் குறிக்கும் குழூஉக் குறியீடு*; a veiled term referring in general to alkali, acid and salt but in particular, to mercury, subchloride of mercury and hydro-chlorate of ammonia (சா.அக.).

அடிநமைச்சல் *aḍi-namaiccal*, பெ. (n.) *மலவாயிலைச் சுற்றிலும் உண்டாகும் தினவு*; intense itching at the anus, *Pruritus ani* (சா.அக.).

அடிநா *aḍi-nā*, பெ. (n.) *நாவின் அடிப்பகுதி*; root or lower part of the tongue (W.).

அடிநாச்சூலை *aḍi-nā-c-cūlai*, பெ. (n.) *ஊதையினால் (வாதத்தினால்) நாவினடியில் ஏற்படும் குத்தல் நோய்*; a piercing pain at the root of the tongue.

[அடி + நா + சூலை.]

அடிநாய் *aḍi-nāy*, பெ. (n.) *பெரியோர் முன் தன்னைத் தாழ்த்திக் கூறுஞ் சொல்*; a term of humility meaning 'slave-dog'. "அடிநாயுரை" (தேவா. 7.59 : 11).

அடிநாயேன் *aḍi-nāyēṉ*, பெ. (n.) *'நாய்போலத் தாழ்ந்த அடிமையாகிய நான்' என்று பொருள்படும் ஒரு வணக்கச்சொல்*; a term of humility referring to oneself as 'Your humble slave-dog'. "உத்தம வடிநாயே னோதுவ துளது" (கம்பரா. அயோத். குகப். 37).

அடிநாள் *aḍi-nāḷ*, பெ. (n.) 1. *முதல்நாள், தொடக்கநாள்*; the first day. 2. *இளமைக் காலம்; தொடக்ககாலம்*; early life, younger days, early period.

அடிநிலம் *aḍi-nilam*, பெ. (n.) *அடிப்பக்கம், அடியிடம்*; bottom of the fort-wall. "அடி நிலத்திலே படிவன விடிமுகி லனைத்தும்" (பாரத. கிருட். 60).

அடிநிலை[1] *aḍi-nilai*, பெ. (n.) 1. *அடிப்படை (அஸ்திவாரம்)*; foundation. "ஆகமத்தா லடி நிலை பாரித்து" (பெரியபு. பூச. 6). 2. *பாதக்குறடு*; sandal.

ம. அடிநில

அடிநிலை[2] *aḍi-nilai*, பெ. (n.) *தூணின் அடிப்பகுதி*; the foot or lower member of a pillar.


அடிநிலை

அடிநிலைச் சாத்து *aḍi-nilai-c-cāttu*, பெ. (n.) *குதிரை யங்கவடி*; stirrup. "அடிநிலைச் சாத்தோ டியாப்புப் பிணியுறீஇ" (பெருங். இலாவாண. 18 : 22).

[அடி + நிலை + சாத்து.]

அடிநிழலார் *aḍi-niḻalār*, பெ. (n.) *குடிகள்* (P.); subjects of a king.

அடிநீறு *aḍi-nīṟu*, பெ. (n.) *பாதத்தூளி*; dust on the feet. "நின்றபிரா னடிநீறு அடியோம் கொண்டு சூடுவதே" (திவ். திருவாய். 5.9 : 2).

அடிப்பட்ட காந்தி *aḍi-p-paṭṭa-kāndi*, பெ. (n.) *தீமுறுகற் செய்ந்நஞ்சு (பாடாணம்)* (மூ.அ.); an arsenic preparation.

மறுவ. அடிபட்ட காந்தி, அடிபட்ட முறுவல், அடியக்காந்தி, அடியட்காந்தி, அடியற்காந்தி (சா.அக.).

அடிப்பட்ட சாந்தி *aḍi-p-paṭṭa-šāndi*, பெ. (n.) *பேரமைதி (மகாசாந்தி)* (சங்.அக.); absolute peace, tranquillity or composure.

அடிப்பட்ட சான்றோர் *aḍi-p-paṭṭa-šāṉṟōr*, பெ. (n.) *பண்டை நல்லிசைப் புலவர்*; recog-nised scholars of yore. 'இலக்கண மன்றெனினும் இலக்கண முடையதுபோல அடிப்பட்ட சான்றோரால் வழங்கப்பட்டு வருவதும்' (நன். 266, மயிலை. உரை).

அடிப்பட்ட முறுவல் *adi-p-patta-muruval*, பெ. (n.) அடிப்பட்ட காந்தி பார்க்க; see *adi-p-patta-kandi*.

அடிப்பட்டடை நெல் *adi-p-pattadai-nel*, பெ. (n.) களத்துப் பட்டடையில் வைக்கோலொடு கலந்துகிடக்கும் நெல் (R.T.); grains of paddy caught in the straw on which paddy is heaped.

[அடி + பட்டடை + நெல்.]

அடிப்பட்ட வழக்கு *adi-p-patta-valakku*, பெ. (n.) தொன்றுதொட்டு வரும் வழக்கு; ancient usage.

அடிப்படர்-தல் *adi-p-padar-*, 2 செ.கு.வி. (v.i.) 1. கீழ்ப்பரவுதல்; to spread underneath, as roots, creepers. 2. சூழ்நிலைகள் இசைந்து வருதல்; to be propitious. "நல்லூழி யடிப் படர" (மதுரைக். 21).

[அடி + படர்.]

அடிப்படி *adi-p-padi*, பெ. (n.) கதவுநிலையின் அடிமரப்படி; bottom piece of the frame of a door.

[அடி + படி.]

அடிப்படு-தல் *adi-p-padu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. கீழ்ப்படையிலிருத்தல் (சங்.அக.); to be in the lower stratum. 2. அடிச்சுவடுபடுதல்; to be worn-out by passing feet, as a path. "சிலநா ளடிப்படிற் கல்வரையு முண்டா நெறி" (நாலடி. 154). 3. கீழ்ப்படிதல்; to obey, do another's will willingly. "ஆணைகொண் டடிப்பட விருந்தன்று" (பு. வெ. 6 : 31). "உரிய வம்புவி பல்லாண் டடிப்பட வாண்டான்" (பாரத. உலூகன். 3). 4. பழகுதல்; to become accustomed to. 'ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல்' (குறள், 140, பரிமே. உரை). 5. பழைமையாக வருதல்; to be long established. 'அடிப்பட்ட சான்றோர்' (நன். 266, மயிலை. உரை).

[அடி + படு.]

அடிப்படுத்து-தல் *adi-p-paduttu-*, 2 பி.வி. (v. caus.) 1. கீழ்ப்படுத்துதல், அடக்கியாளுதல்; to subdue, subject, as a country, a foe. "பிறபுலங்க ளடிப்படுத்து" (பெரியபு. ஐயடி. 2). 2. பாதத்தின்கீழ் அடங்கச் செய்தல்; to hold or contain under a foot. "மாவலி யளிப்ப ஞால முழுவது மாய னெய்திப் பாவடிப் படுத்தி முன்னம் பண்பொடு கவர்ந்த வாறும்" (கூர்மபு. அனுக்கிரமணி. 9). 3. நிலைபெறச் செய்தல்; to establish firmly. 'தன் நெறிமுறைமை அடிப்படுத்து வருதற்குப் பிரிவன்' (கலித். 26, நச். உரை).

ம. அடிப்பெடுக

[அடி + படுத்து.]

அடிப்படை *adi-p-padai*, பெ. (n.) 1. நிலைக்களம் (ஆதாரம்); foundation, base. 2. சுவரின் அடித்தளம்; lowest layer of mud or brick in a wall, basement. 3. சேனையில் தலைமையாகவுள்ள பகுதி; the main division of an army (W.).

ம. அடிப்பட

[அடி + படை.]

அடிப்பணி *adi-p-pani*, பெ. (n.) குற்றேவல்; menial service. "அன்னவற் குரிய னென்ன வடிப்பணி செய்வல்" (சீவக. 552).

[அடி + பணி.]

அடிப்பதறு-தல் *adi-p-padaru-*, 5 செ.கு.வி. (v.i.) 1. கால் நடுங்குதல்; to tremble, as the feet (W.). 2. நிலைதவறுதல் (யாழ்ப்.); to fall in business, lose a situation or property (J.). 3. மனங்கலங்குதல் (யாழ்ப்.); to be perplexed in consequence of failure (J.).

[அடி + பதறு.]

அடிப்பந்தி *adi-p-pandi*, பெ.(n.) 1. முதன்முறையுண்போர் வரிசை; row of people first sitting down to a meal. 'இடுகிறவன் தன்னவனானால் அடிப்பந்தியி லிருந்தா லென்ன, கடைப் பந்தியி லிருந்தா லென்ன?' (பழ.). 2. உண்போரின் முதல் வரிசை; front row of people at a meal.

[அடி + பந்தி.]

அடிப்பரத்து-தல் *adi-p-parattu-*, 5 செ.கு.வி. (v.i.) பூப்புக்குளிப்பு (ருதுஸ்நான)ச் சடங்கில் நிலத்தில் நெற்பரப்பி மணையிட்டு அதன்மேற் பூப்படைந்த பெண்ணை உட்காரவைத்தல்; to seat a girl on paddy spread on the ground, as part of the ceremony performed on her attaining puberty.

[அடி + பரத்து.]

அடிப்பல் *adi-p-pal*, பெ. (n.) கீழ்வரிசைப் பற்களுள் ஒன்று; one of the teeth in the lower jaw.

[அடி + பல்.]

அடிப்பலம் *aḍi-p-palam,* பெ. (n.) *அடிப்படை வலிமை;* strength of groundwork or basis.

[*அடி* + **Skt.** bala. **த.** *வலம்* > **Skt.** bala > **த.** *பலம்.*]

அடிப்பலன் *aḍi-p-palan,* பெ. (n.) *முதற்பயன்;* first fruits or advantage.

[*அடி* + **Skt.** phala. **த.** *பழம்* > **Skt.** phala > **த.** *பலம்* → *பலன்.*]

அடிப்பற்று-தல் *aḍi-p-parru-,* 5 செ.கு.வி. (v.i.) 1. *அடுகலத்தின் அடியிற் சோறு, கறி முதலியன தீய்ந்துபோதல்;* to be scorched or charred, as rice, curry, etc., for want of water or over-heating when cooking. 2. *மிகு தீயினால் சோறு, கறி முதலியன அடுகலத்தினடியில் பற்றிக் கொள்ளுதல்;* to stick to the bottom of the inside of the cooking vessel, as rice, curry, etc. ''கனலடிப் பற்றா வண்ண மிடைவி டாமற் றுழாவி'' (தைலவ. தைல. 94). 3. *இறைவன் திருவடியைப் பற்றுதல்* (ஈடு, 2.6 : 9); to cling to the feet of God.

ம. அடிக்குபற்றுக; க. அடிகத்து.

[*அடி* + *பற்று.*]

அடிப்பற்று *aḍi-p-parru,* பெ. (n.) 1. *சமையலில் தீய்ந்துபோன சோறு, கறி முதலியன;* food, curry, etc., charred in cooking. 2. *பாறையுப்பு* (யாழ்.அக.); rock-salt.

[*அடி* + *பற்று.*]

அடிப்பாடு *aḍi-p-pāḍu,* பெ. (n.) 1. *அடிச்சுவடு;* track, footprint. ''நிலந்தனி லடிப்பா டுணர்ந்து'' (நல். பாரத. சாந்தி. அரசநீ. 155). 2. *அடிப்பட்ட வழி* (யாழ்.அக.); beaten path. 3. *வழக்கு;* usage, custom. 'விகாரமாவன : பதத்துள் அடிப்பாடும் செய்யுட்டொடையும் ஒலியும் காரணமாக வலித்தல் மெலித்தல் முதலாயினவாக வருவன' (நன். 132, மயிலை. உரை). 4. *உறுதியான நிலை;* firmness, stability, fortitude. 'இதிறே உபாயத்தில் அடிப்பாடு' (ஈடு, 6.3 : 3). 5. *வரலாறு;* origin, history. 'உகந்தருளின நிலங்களுடைய அடிப்பாடு சொல்லுகிறது' (திவ். திருநெடுந். 6, வியா.). 6. *திருவடியில் ஈடுபாடு;* attachment to the feet of God. 'இதென்ன அடிப்பாடுதான்' (ஈடு, 4. 1 : 11). 7. *முதனிலை;* stem of noun or verb. 'பகுதி, முதனிலை, வினையடி, அடிப்பாடு, தாது என்பனவெல்லாம் ஒரு பொருள்' (நன். 321, இராமா. உரை).

ம. அடிப்பாடு

[*அடிப்படு* → *அடிப்பாடு. படு* → *பாடு.*]

அடிப்பாய்-தல் *aḍi-p-pāy-,* 2 செ.கு.வி. (v.i.) *தாவிக் குதித்தல்;* to leap over a mark, as a child, play at leap-frog (W.).

[*அடி* + *பாய்.*]

அடிப்பார்-த்தல் *aḍi-p-pār-,* 4 செ.கு.வி. (v.i.) 1. *நிழலளந்து பொழுதறிதல்;* to measure time by one's shadow. 2. *தகுந்த சமயம் நோக்குதல்;* to wait for an opportunity.

[*அடி* + *பார்.*]

அடிப்பாரம் *aḍi-p-pāram,* பெ. (n.) 1. *அடிப்படை (அஸ்திவாரம்)* (கோயிலொ. 130); foundation. 2. *கப்பலடியிலுள்ள சரக்குக் கனம், சாலையமைப்பின் அடிக்கனம்;* ballast. 3. *சிரங்கின் புடைப்பு;* swellings of eczema or itch.

[*அடி*+**Skt.** bhāra. **த.** *பொறு*>**Skt.** phar→ bhr → bhāra > **த.** *பாரம்.*]

அடிப்பிச்சை *aḍi-p-piccai,* பெ. (n.) 1. *இரப்பெடுக்கப் போகும்போது கலத்திலிட்டுக் கொள்ளும் சிறிது அரிசி அல்லது சோறு;* a small quantity of food in a beggar's bowl as a start in proceeding to beg. 2. *சிறு மூலச் சொத்து;* small ancestral property. அவனுக்கு அடிப்பிச்சை ஏதாவது உண்டா ? (உ.வ.).

[*அடி* + **Skt.** bhikṣā. ஒருகா. **த.** *வேள்* → *வேட்கும்*→க. பேகு > **Skt.** bhikṣ→bhikṣā > **த.** *பிச்சை.* ஒ.நோ : க. பேகு; **E.** beg. *வேள்* → *வேண்* → *வேண்டு* → *வேண்டும். வேள்* → *வேட்கும்* = *வேண்டும். வேண்டுதல்* = *விரும்புதல், கெஞ்சுதல், இரத்தல்.*]

அடிப்பிடி-த்தல் *aḍi-p-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. *சோறு, கறி முதலியன சமையற் கலத்தினடியிற் பற்றிப்போதல்;* to stick to the bottom of the cooking vessel and become scorched, as rice, curry, etc. (யாழ்.அக.). 2. *அடிச்சுவட்டைக் கண்டுபிடித்தல்;* to trace a footprint. 3. *குறிப்பறிதல்;* to get the clue. 4. *முதலிலிருந்து தொடங்குதல்;* to begin from the beginning. 5. *தட்டி முடைதல்* (செ.அக.); to weave palmleaf screen. 6. *காலைப்பிடித்து வேண்டுதல்;* to take hold of the feet in supplication. —, 4 செ.குன்றாவி. (v.t.) *பின்றொடர்தல்;* to follow, pursue (W.).

[*அடி* + *பிடி.*]

அடிப்பிரதட்சிணம் *aḍi-p-piradaṭciṇam*, பெ. (n.) *அடியடியாய் மெதுவாய் நடந்து கோயிலை வலம்வருகை*; going around a sacred place slowly, as if measuring the distance in feet, circumambulation.

[*அடி* + Skt. pradakṣiṇa > *த. பிரதட்சிணம்.*]

அடிப்பினை *aḍippiṇai*, பெ. (n.) 1. *வங்க மணல்* (மூ.அ.); sand containing lead, lead ore. 2. *வங்கம்* (மூ.அ.); lead.

அடிப்புக் கண்டுமுதல் *aḍippu-k-kaṇḍumudal*, பெ. (n.) *மொத்த நெல்விளைவு* (R.T.); gross out-put of paddy.

[*அடிப்பு* + *கண்டுமுதல்.*]

அடிப்புக்கூலி *aḍippu-k-kūli*, பெ. (n.) *கதிரடிக்குங் கூலி*; wages for threshing grain.

[*அடிப்பு* + *கூலி.*]

அடிப்புல் *aḍi-p-pul*, பெ. (n.) *நிலத்தினடியில் எறும்புகள் சேர்த்துவைக்கும் தவசம்*; grain stored by ants under the ground.

[*அடி* + *புல். புல் = புல்லரிசி.*]

அடிப்புல்லரிசி *aḍi-p-pul-l-ariši*, பெ. (n.) *புல்லின் தண்டிலிருக்கும் விதைகள்*; seeds in the stalk of green grass (சா.அக.).

[*அடி* + *புல்* + *அரிசி.*]

அடிப்பெருங்கடவுள் *aḍi-p-peruṅ-kaḍavuḷ*, பெ. (n.) *எல்லாவற்றிற்கும் மூலமான முழுமுதலிறைவன்*; the Supreme Being. ''அடிப்பெருங்கடவு ளூழி யீறுதொறும்'' (தக்கயாகப். 656).

[*அடி* + *பெருங்கடவுள்.*]

அடிப்பையாதகம் *aḍippaiyādagam*, பெ. (n.) *காட்டெருமை*; wild buffalo (சா.அக.).

அடிப்போடு-தல் *aḍi-p-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. *தொடங்குதல்*; to lay the foundation, begin (W.). 2. *ஒருவரிடம் உதவி பெறுதற்கு ஏற்ற செய்திகளை முன்னடிப்படையாகச் சொல்லிவைத்தல்*; to say or do things as preparing the ground for getting favours from somebody. இவன் பணத்திற்கு அடிப்போடுகிறான் (உ.வ.).

[*அடி* + *போடு.*]

அடிபட்டவன் *aḍi-paṭṭavaṉ*, பெ. (n.) 1. *காயம்பட்டவன்*; wounded person. 2. *தோற்றவன்*; defeated contestant. 3. *இயற்கை நிலைமைகளைப் பட்டறிந்தவன்*; one who has experienced different situations in life. மழையிலுங் காற்றிலும் அடிபட்டவன் (உ.வ.). 4. *ஒன்றிற் பழகினவன் அல்லது பயிற்சி பெற்றவன்*; trained, experienced person.

அடிபடு-தல் *aḍi-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. *அடிக்கப்படுதல்*; to be beaten, struck. ''பிட்டமுதுக் கடிபடுவோன்'' (திருப்பு. 451). ''விண்ணிலுறை வானவரில் யாரடி படாதவர்'' (பாரத., அருச். தவ. 107). 2. *தாக்குண்ணுதல்*; to hit against, stub, be attacked. ''அவசமாகி யடிபட் டெனைத்தா முறுப்புந் தூளாய்'' (ஞானவா. மனத். 6). 3. *நீக்கப்படுதல்*; to be struck off, removed. அவன் பெயர் அடிபட்டுப்போயிற்று. 4. *தானாக நீங்கிவிடுதல்*; to be automatically cancelled, repealed, nullified. புதுச் சட்டத்தால் பழைய சட்டம் அடிபட்டுவிட்டது. 5. *பலர் வாயில் வழங்குதல்*; to be in every one's mouth, be a household word. அடுத்த ஆளுநராக அவர் வருவாரென்று, அவர் பெயர் எல்லார் வாயிலும் அடிபடுகிறது. 6. *செவிக் கெட்டுதல்*; to reach one's ears, as a rumour. அந்தச் செய்தி நேற்றுத்தான் என் காதில் அடிபட்டது (உ.வ.). 7. *உலகப் பட்டறிவில் அழுந்துதல்*; to be involved, plunged. பல வகைத் துன்பங்களிலும் கட்டங்களிலும் அடிபட்டவன் (உ.வ.). 8. *செலவழித்தல்*; to be spent, expended. எத்தனை கலம் நெல்லானாலும் இந்தக் குடும்பத்தில் அடிபட்டுப் போம் (உ.வ.). 9. *கொல்லப்படுதல்*; to be slaughtered. இந்த நகரில் ஒரு நாளைக்கு இருநூறு ஆடுகள் அடிபடும் (உ.வ.). 10. *நோய் நீங்குதல்*; to be cured, eradicated, as a disease. இந்த மருந்தாற் பல நோய்கள் அடிபடும் (உ.வ.). 11. *தட்பவெப்ப நிலையால் தாக்குண்ணுதல்*; to be weather-beaten. இந்தக் கட்டடம் காற்றிலும் மழையிலும் அடிபட்டு உரங்குன்றிவிட்டது (உ.வ.). 12. *அச்சிடப்படுதல்*; to be printed, to be struck, as composed matter. நாளைக்கு நாலு படிவம் (formes) அடிபடும் (உ.வ.).

அடிபணி-தல் *aḍi-paṇi-*, 2 செ.கு.வி. (v.i.) *தண்டனிடுதல்*; to fall at one's feet, worship. ''அடிபணிந்தேன் விண்ணப்பம்'' (திவ். பெரியாழ். 3.10 : 2).

அடிபதறு-தல் *aḍi-padaṟu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *அடிப்பதறு - தல் 1* பார்க்க; see *aḍi-p-*

padaṟu-, 1. 2. பாதம் உதறுதல் அல்லது துடித்தல்; shaking of the feet, as in shaking palsy (சா.அக.).

அடிபற்றிக்காந்தல் *aḍi-paṟṟi-k-kāndal*, பெ. (n.) அடிக்காந்தல் பார்க்க; see *aḍi-k-kāndal*.

[அடி + பற்றி + காந்தல்.]

அடிபற்று-தல் *aḍi-paṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) அடிப்பற்று-தல் 1, 2 பார்க்க; see *aḍi-p-paṟṟu-*, 1, 2.

அடிபறி-தல் *aḍi-paṟi-*, 2 செ.கு.வி. (v.i.) வேரொடு பெயர்தல்; to be uprooted. 'ஊசிவேர் அடிபறிய' (தக்கயாகப். 144, உரை).

அடிபாடு *aḍi-pāḍu*, பெ. (n.) மாடு, குதிரை முதலிய வீட்டு விலங்குகளின் உழைப்பு (இ.வ.); labour, work, as done by domestic animals (Loc.).

ம. அடிபாடு

அடிபிடி-த்தல் *aḍi-piḍi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. எண்ணெய், மெழுகு முதலிய மருந்து வகைகளைக் காய்ச்சும்போது, அடிக்கடி கிண்டாமையால் அடியிலுள்ள மருந்து தீய்ந்து சட்டியுடன் ஒட்டிக்கொள்ளுதல்; to stick to the bottom of vessel after having been scorched, as medicines such as oil and electuary, when they are not stirred up properly in the course of preparation (சா.அக.). 2. ஒருவனுடைய அடிச்சுவடு பற்றிப்போதல்; to trace one's footstep. 3. துப்பறிதல்; to get a clue, as to a crime. —, 4 செ.குன்றாவி. (v.t.) 1. அணை அல்லது கரை கட்டுதல்; to construct a dam or bank. "அண்டகடாகம் வெடித்து அடிபிடிக்க வேண்டும்" (திவ். அமலனாதி. 3, வியா.). 2. தொடருதல்; to pursue.

க. அடிவிடி

அடிபிடி *aḍi-piḍi*, பெ. (n.) சண்டை; broil, fray, scuffle. இரு கட்சியார்க்கும் எங்குப் பார்த்தாலும் அடிபிடியாய்க் கிடக்கிறது (உ.வ.).

அடிபிடிக்காமற் சாடு-தல் *aḍi-piḍikkāmaṟ-cāḍu-*, 5 செ.கு.வி. (v.i.) பாண்டத்தினடியில் மருந்து பற்றாதபடி, துடுப்புக்கொண்டு கிளறுதல் அல்லது துழாவுதல்; to stir with a wooden spatula, so as not to allow any thick solution of the medicine to adhere to the bottom of the vessel in which it is prepared.

[அடி + பிடிக்காமல் + சாடு.]

அடிபிடிசண்டை *aḍi-piḍi-šaṇḍai*, பெ. (n.) ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு செய்யுஞ் சண்டை; quarrel in which both parties exchange blows. அண்ணன் தம்பியிருவர்க்கும் இன்று காலை அடிபிடி சண்டை (உ.வ.).

அடிபிழை-த்தல் *aḍi-piḻai-*, 4 செ.கு.வி. (v.i.) நெறிதவறி நடத்தல்; to act unlawfully, illegally. "வேந்தன் அடிபிழைத் தாரையொறுக்குந் தண்டத்து" (மணிமே. 19 : 43).

அடிபிறக்கிடு-தல் *aḍi-piṟakkiḍu-*, 20 செ.கு.வி. (v.i.) பின்வாங்குதல்; to fall back, retreat. 'அடிபிறக்கிட் டோனையும்' (தொல். பொருள். புறத். 10, நச். உரை).

அடிபுதையரணம் *aḍi-pudai-y-araṇam*, பெ. (n.) பாதக்கூடு; boot or bootlike sandal. "அடி புதை யரண மெய்தி" (பெரும்பாண். 69).

[அடி + புதை + அரணம்.]

அடிபுனைதோல் *aḍi-puṉai-tōl*, பெ. (n.) செருப்பு; sandal. "அடிபுனை தோலி னரண்சேர்ந்து" (பெருந்தொ. 437).

அடிபெயர்-தல் *aḍi-peyar-*, 2 செ.கு.வி. (v.i.) காலெடுத்து வைத்தல்; to move a step, move from the spot where one stands.

அடிபெயர்-த்தல் *aḍi-peyar-*, 4 செ.கு.வி. (v.i.) அடிபெயர்-தல் பார்க்க; see *aḍi-peyar-*.

அடிபோடியெனல் *aḍi-pōḍi-y-eṉal*, பெ. (n.) ஒரு பெண்ணை மதிப்புரவின்றிப் பேசுதல்; speaking impolitely to a woman. அவன் என்னை அடிபோடி என்று பேசுகிறான் (உ.வ.).

[அட (ஆ.பா.விளி) — அடி (பெ.பா.விளி). போ + அடி — போடி.]

அடிபோடு-தல் *aḍi-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) அடிப்போடு-தல் பார்க்க; see *aḍi-p-pōḍu-*.

அடிம்பு *aḍimbu*, பெ. (n.) சிவதை; Indian jalap, *Convolvulus turpethum* alias *Ipomaea turpethum* (சா.அக.).

அடிம்புருகம் *aḍimburugam*, பெ. (n.) அடிம்பு பார்க்க; see *aḍimbu*.

அடிமட்டம் *aḍi-maṭṭam*, பெ. (n.) *கீழ்மட்டம்*; base level, bottom level.

அடிமடக்கு *aḍi-maḍakku*, பெ. (n.) 1. (அணி.) *செய்யுளடி மீண்டும் அல்லது மீண்டும் மீண்டும் பொருள் வேறுபட்டுவரும் சொல்லணி வகை*; (Rhet.) repetition of a line in a poem or stanza once or several times with a variation in sense. 2. (யாப்.) *செய்யுளடியின் பெரும் பகுதி பொருள் வேறுபடாது மீண்டும் வரும் யாப்பு வகை*; (Pros.) repetition of a large part of a metrical line without change of meaning and not more than once.

அடிமடி *aḍi-maḍi*, பெ. (n.) *ஆடையின் உள் மடிப்பு*; inner fold of the waist-cloth.

அடிமடியில் நெருப்பைக்கட்டு-தல் *aḍi-maḍiyil-neruppai-k-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) *கன்னிப் பெண்ணை மணம்முடித்துத் தரும்வரை மிகவும் விழிப்போடு காக்கும் கடும் பொறுப்பேற்றல்*; to take up the heavy responsibility of protecting as a mother or a matron, the virginity of a matured girl till she is given away in marriage, lit., to keep tied up embers in the inner fold of the waist-cloth.

[*அடி + மடி + இல் + நெருப்பு + ஐ + கட்டு.*]

அடிமடை *aḍi-maḍai*, பெ. (n.) *முதன்மடை*; head of a sluice.

அடிமடையன் *aḍi-maḍaiyaṉ*, பெ. (n.) *முழு முட்டாள்*; utter idiot or fool.

அடிமண் *aḍi-maṇ*, பெ. (n.) 1. *கீழ்மண்*; soil underneath. 2. *செய்வினைக்காக (சூனியத்திற்காக) எடுக்கும் காலிலொட்டிய மண்*; earth that has been touched by a person's foot, taken for witchcraft against him (W.).

அடிமண்டி *aḍi-maṇḍi*, பெ. (n.) *ஒரு கலத்தின் அடியில் தங்கும் மண்டி அல்லது கசடு*; dregs, deposit. 'தாம் தந்த மயர்வறு மதிநல மெல்லாம் அடிமண்டியோடே கலங்கிற்று என்னுங்கோள்' (ஈடு, 1.4 : 3, வியா.).

அடிமணியிடு-தல் *aḍi-maṇi-y-iḍu-*, 20 செ.கு.வி. (v.i.) *தொடக்கஞ் செய்துவைத்தல்*; to make a beginning, as placing gems in the place where a foundation is to be laid. ''இனிமுடிக்கும் வென்றிக் கடிமணி யிட்டாய்'' (கம்பரா. யுத்த. மகுடபங். 47).

[*அடி + மணி + இடு.*]

அடிமனை *aḍi-maṉai*, பெ. (n.) *நிலைக்களம் (ஆதாரம்)*; basis, support. 'எல்லாப் பண்ணிற்கும் இஃது அடிமனையாதலின்' (சிலப். 3 : 63, அடியார்க். உரை).

அடிமயக்கு *aḍi-mayakku*, பெ. (n.) (யாப்.) *பொருள் வேறுபாடின்றி அடிகளை முன்பின்னாக முறைமாற்றுமாறு அமைந்த செய்யுள்*; (Pros.) a verse so constructed that transposing of its lines does not destroy its sense (W.).

அடிமரம் *aḍi-maram*, பெ. (n.) 1. *மரத்தின் அடி*; trunk of a tree. 2. *பாய்மரத்தின் அடிப்பாகம்* (M. Navi. 81); lower mast.

அடிமறி *aḍi-maṟi*, பெ. (n.) *அடிமறிமாற்று* பார்க்க; see ***aḍi-maṟi-māṟṟu***. ''அடிமறியான'' (தொல். சொல். எச். 12).

அடிமறிமண்டிலம் *aḍi-maṟi-maṇḍilam*, பெ. (n.) *அடிகளை எவ்வாறு முறைமாற்றினும் பொருள் மாறாவாறு, அதாவது, எல்லாவடிகளும் அடிதோறும் பொருள்முடியும் அளவடியாகப் பாடப்படும் அகவற்பா வகை*; a kind of *agavaṟpā* verse so constructed that the lines are interchangeable without change of meaning. ''நடுவாதி யந்தத்து அடைதரு பாதத் தகவல் அடிமறி மண்டிலமே'' (யா. கா. 28).

எ-டு :

''சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளி ராரணங் கினரே
வாரலை யெனினே யானஞ் சுவலே
சார னாட நீவர லாறே.''

அடிமறிமண்டிலவாசிரியம் *aḍi-maṟi-maṇḍila-v-āśiriyam*, பெ. (n.) *அடிமறிமண்டிலம்* பார்க்க; see *aḍi-maṟi-maṇḍilam*. ''அகப்படு மடிமுத லிடையீ றாயின் அடிமறி மண்டில வாசிரிய மாதலும்'' (இலக். வி. 734).

[*அடி + மறி + மண்டிலம் + ஆசிரியம்.*]

அடிமறிமாற்று *aḍi-maṟi-māṟṟu*, பெ. (n.) *எண் வகைப் பொருள்கோள்களுள், பொருளுக்கு ஏற்றவாறு அடிகளையெடுத்துக் கூட்டுவதும், எந்த அடியை எங்கு நிறுத்தினும் ஓசையும் பொருளும் வேறுபடாததும் ஆகிய வகை*; mode of construing in which the lines of a verse have to change places to give the intended meaning, or can change places without affecting the rhythm and meaning at the same time, one of eight modes of construing verses.

"ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறு மடியவும்
யாப்பீ றிடைமுத லாக்கினும் பொருளிசை
மாட்சியு மாறா அடியவும் அடிமறி"
(நன். 419).

இந் நூற்பாவின்படி, (1) ஏற்புழிக்கூட்டும் அடிமறிமாற்று, (2) மாறா அடிமறிமாற்று என அடிமறிமாற்றுப் பொருள்கோள் இரு வகைப்படும். அவற்றுட் பின்னது, (அ) பொருளிசைமாட்சி மாறா அடிமறிமாற்று, (ஆ) பொருள்மாட்சி மாறா அடிமறிமாற்று என இருவகைப்படும்.

(1) ஏற்புழிக்கூட்டும் அடிமறிமாற்று

எ-டு :

"நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங்கா லீண்டும்
மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்."

இது,

"கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங்கா லீண்டும்,
விடுக்கும் வினையுலந்தக் கால்
மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம், (இஃதறியார்)
நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்"

என்று, பொருளுக் கேற்றவாறு அடிகள் கொண்டுகூட்டப்படுவதால், ***ஏற்புழிக்கூட்டும் அடிமறிமாற்று.***

(2) மாறா அடிமறிமாற்று

(அ) *பொருளிசைமாட்சி மாறா அடிமறி மாற்று*

எ-டு :

"மாறாக் காதலர் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே."

இஃது, எவ்வடியை எங்கு நிறுத்தினும் ஓசையும் பொருளும் வேறுபடாமையால் ***பொருளிசைமாட்சி மாறா அடிமறிமாற்று.***

(ஆ) *பொருள்மாட்சி மாறா அடிமறிமாற்று*

"அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்."

இஃது, எவ்வடியை எங்கு நிறுத்தினும் பொருள் வேறுபடாவிடினும், ஈற்றடியால் ஓசை வேறுபட்டுவிடுவதால், ***பொருள்மாட்சி மாறா அடிமறிமாற்று.***

இம் மூவகை அடிமறிமாற்றுகளுள், ஏற்புழிக்கூட்டும் அடிமறிமாற்று மறிதல் என்னும் சொல்லிற்குப் பொருந்தாமையால், அதனைத் தனியாக ஒரு பொருள்கோளாக்கி ***அடிமாற்று*** எனப் பெயரிடுவதே தக்கதாம்.

அடிமனை *aḍi-maṉai*, பெ. (n.) *1. சுற்றுச் சுவர்*; walls of a building. *"அடிமனை பவள மாக"* (*சீவக. 837*). *2. வீடுகட்டுதற்குரிய* ***அடிநிலம்***; ground, plot.

அடிமாடு *aḍi-māḍu*, பெ. (n.) ***கறிசமைக்கக் கொல்வதற்குரிய மாடு***; cattle for slaughter.

அடிமாண்டுபோ-தல் *aḍi-māṇḍu-pō-*, 7 செ.கு.வி. (v.i.) ***அடியோடழிதல்***; to perish completely, root and branch.

†**அடிமாற்று** *aḍi-māṟṟu*, பெ. (n.) ***ஏற்புழிக் கூட்டும் அடிமறிமாற்று*** பார்க்க; see *ēṟpuḻi-k-kūṭṭum-aḍi-maṟi-māṟṟu.*

[அடி + மாற்று. **படைத்.** *பாவாணர்.]*

அடிமுகனை *aḍi-mugaṉai*, பெ. (n.) ***தொடக்கம்***; beginning (W.).

அடிமுட்டாள் *aḍi-muṭṭāḷ*, பெ. (n.) ***முழு மூடன்***; utter fool or idiot.

அடிமுடி *aḍi-muḍi*, பெ. (n.) *1.* ***காலுந் தலையும், பாதமுந்தலையும்***; head and foot. *2.* ***ஒழுங்கு*** (*யாழ்.அக.*); order, regularity (W.). *3.* ***தொடக்கமும் முடிவும்***; beginning and end. *"அடிமுடியொன் றில்லாத வகண்ட வாழ்வே"* (தாயு. பன்மாலை, *3*). *4.* ***வரலாறு*** (*சங்.அக.*); history.

அடிமுண்டம் *aḍi-muṇḍam*, பெ. (n.) *1.* ***வெட்டிய மரத்தின் அடிப்பாகம்***; stump of a tree. *2.* ***பயனற்றவன்-ள்***; worthless person (Loc.).

அடிமுதன்மடக்கு *aḍi-mudaṉ-maḍakku*, பெ. (n.) ***செய்யுளடியின் முதற்சீர் மடங்கிப் பொருள் வேறுபட்டு வரும் சொல்லணி***; repetition of the initial foot in a poetic line with a variation in sense.

[அடி + முதல் + மடக்கு.]

அடிமுந்தி *aḍi-mundi*, பெ. (n.) ***சீலையின் உள் முகப்பு***; the end of a woman's cloth, which is worn inside.

[அடி + முன் + தானை — அடிமுன்றானை → அடிமுந்தானை → அடிமுந்தி.]

அடிமுன்றானை பார்க்க; see *aḍi-muṉṟāṉai*.

அடிமுரண்டொடை *aḍi-muraṇḍoḍai*, பெ. (n.) (யாப்.) ***செய்யுளில், ஓரடியின் முதலிலுள்ள சொல் அல்லது அதன் பொருள், அடுத்த அடியின் முதலிலுள்ள சொல்லொடு அல்லது அதன் பொருளொடு மாறுபடத் தொடுக்கும் தொடுப்புவகை***; (Pros.) concatenation in which the first word of a line or its sense is antithetical to the first word of the next line or its sense. ''மறுதலைத்த மொழியான் வரினும் முரண்'' (யா. கா. 16).

[அடி + முரண் + தொடை.]

அடிமுன்றானை *aḍi-muṉṟāṉai*, பெ. (n.) ***சீலையின் உள்முகப்பு***; the end of a woman's cloth, which is worn inside.

[அடி + முன் + தானை.]

அடிமூலம் *aḍi-mūlam*, பெ. (n.) 1. ***அடிவேர், ஆணிவேர்***; main root (சா.அக.). 2. ***உள் மூலம்***; internal hemorrhoids.

[அடி + மூலம்.]

உள்மூலம் பார்க்க; see *uḷ-mūlam*.

அடிமேலடியடி - த்தல் *aḍi-mēl-aḍi-y-aḍi-*, 4 செ.கு.வி. (v.i.) ***ஒரேயிடத்தில் மேலும் மேலும் அடித்தல்***; to beat or strike repeatedly on the same spot. 'அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்' (பழ.).

[அடி + மேல் + அடி + அடி.]

அடிமை *aḍimai*, பெ. (n.) 1. ***தொழும்பு, பிறருக்குக் கட்டாயத் தொண்டு செய்யும் நிலைமை***; slavery, bondage, servitude. ''ஒன்னார்க் கடிமை புகுத்தி விடும்'' (குறள், 608). 2. ***அடிமையாள், தொழும்பன்***; slave, formerly attached to land and transferable with it. ''நீ அடிமை யாதல் சாதிப்பன்'' (பெரியபு. தடுத்தாட். 49). 3. ***தொண்டன், இறையடியான்***; servant, devotee. ''அஞ்ச லஞ்சலென் றடிமைக்கு..................நெஞ்சி லுணர்த்தும்'' (தாயு. பராபர. 124). 'அடிமை படைத்தால் ஆள்வது கடன்' (பழ.).

ம. அடிம; க. அடிமெ; தெ. அடிமெ, அடியண்டு.

அடிமைக்காசு *aḍimai-k-kāšu*, பெ. (n.) ***கோயில் வேலைக்காரரிடமிருந்து பெறும் வரிவகை*** (I.M.P. Sm. 38); a fee collected from temple servants.

ம. அடிமக்காசு

[அடிமை + காசு.]

அடிமைச்சீட்டு *aḍimai-c-ciṭṭu*, பெ. (n.) ***அடிமை யோலை***; slave-bond.

[அடிமை + சீட்டு.]

அடிமைப்படு-தல் *aḍimai-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) ***அடிமையாதல்***; to become a slave, to be enslaved.

[அடிமை + படு.]

அடிமைப்படுத்து-தல் *aḍimai-p-paḍuttu-*, 2 பி.வி. (v. caus.) ***அடிமையாக்குதல்***; to enslave.

[அடிமை + படுத்து.]

அடிமைப்பத்திரம் *aḍimai-p-pattiram*, பெ. (n.) ***அடிமையோலை***; slave-bond.

[அடிமை + **Skt.** patra > **த.** பத்திரம் = ஓலை, ஆவணம்.]

அடிமைப்பள்ளன் *aḍimai-p-paḷḷaṉ*, பெ. (n.) ***பள்ளருள் அடிமைப்பணி செய்பவன்*** (P.T.L.); serf or bond-labourer of the Paḷḷa caste.

[அடிமை + பள்ளன்.]

அடிமைபூண்[ணு]-தல் *aḍimai-pūṇ-*, 12 செ. கு.வி. (v.i.) 1. ***அடிமையாயமைதல்***; to become a bond-slave. 2. ***திருத்தொண்டனாதல்***; to become a devotee. ''நானடிமை பூண்டேன்'' (திவ். பெரியதி. 7.2 : 5).

அடிமையோலை *aḍimai-y-ōlai*, பெ. (n.) ***அடிமையாவணம் (அடிமைப்பத்திரம்)***; bond of a slave.

ம. அடிம ஓல

[அடிமை + ஓலை.]

அடிமோனைத்தொடை *aḍi-mōṉai-t-toḍai*, பெ. (n.) (யாப்.) ***அடிகளின் முதலெழுத்து மோனையாக ஒன்றிவரத் தொடுப்பது***; (Pros.) concatenation, in which, the lines of a verse begin with the same letter or letters related according to the laws of alliteration in Tamil. ''எழுவா யெழுத்தொன்றின் மோனை'' (யா. கா. 16).

[அடி + மோனை + தொடை.]

அடியக்காந்தி *aḍiya-k-kāndi*, பெ. (n.) *அடிப் பட்ட காந்தி* பார்க்க; see *aḍi-p-paṭṭa-kāndi*.

அடியட்காந்தி *aḍiyaṭ-kāndi*, பெ. (n.) *அடிப் பட்ட காந்தி* பார்க்க; see *aḍi-p-paṭṭa-kāndi*.

அடியடியாக *aḍi-y-aḍi-y-āga*, கு.வி.எ. (adv.) *1. ஒவ்வோரடியாக*; line by line. *2. தலை முறை தலைமுறையாக* (யாழ்ப்.); hereditarily, from generation to generation (J.). *3. அடிமே லடியாக*; step by step.

[அடி + அடி + ஆக.]

அடியந்தாதி *aḍi-y-andādi*, பெ. (n.) *ஒரு செய்யுளின் ஓரடி அடுத்தவடியாகவேனும், ஒரு செய்யுளின் ஈற்றடி அடுத்த செய்யுளின் முதலடியாகவேனும் அமையுமாறு தொடுக்கப் படுவது*; mode of versification, in which, a line in verse is repeated as the next line, or a line that ends one stanza begins the following stanza.

''அடியுஞ் சீரு மசையு மெழுத்து
முடிவு முதலாச் செய்யுள் மொழியினஃ
தந்தாதித் தொடையென் றறிதல்
வேண்டும்''
(யாப். வி. 52, மேற். பக். 183).

எ-டு :

''ஆதியங் கடவுளை யருமறை பயந்தனை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய
சேதியஞ் செல்வநின் றிருவடி பரவுதும்''
(யாப். வி. 52, மேற். பக். 186).

இதில் இரண்டாம் அடியே, ஈற்றெழுத்து மட்டும் மாறி மூன்றாம் அடியாய் அமைந் திருத்தல் காண்க.

[அடி + அந்தாதி.]

அடியந்திரம் *aḍi-yandiram*, பெ. (n.) *திருமணம், விருந்து முதலிய சிறப்பு (விசேடம்)*; marriage, feast, etc., anything special.

[ம. அடியந்த்ரம் → த. அடியந்திரம்.]

அடியம் *aḍiyam*, பெ. (n.) *'அடியேன்'* என்பதன் *பன்மை*; pl. of *aḍiyēṉ*. ''அடியமில் லறத்தை யாற்றி'' (கந்தபு. திருநகரப். 112).

அடியர் *aḍiyar*, பெ. (n.) *1. அடிமைகள்*; slaves. ''அடியரு மாயமும் நொடிவனர் வியப்ப'' (பெருங். உஞ்சைக். 34 : 179). *2. அடியார், தொண்டர்*; devotees. ''பணிதற் கடியர் சென்றெதிர் கொள'' (பெரியபு. திரு ஞான. 501).

அடியரேங்கள் *aḍiyarēṅgaḷ*, பெ. (n.) *'அடிய னேன்'* என்பதன் *இரட்டைப் பன்மை*; double pl. of *aḍiyaṉēṉ*. ''சிற்றடிய ரேங்கள்செயல் சீருளதை யன்றோ'' (கந்தபு. தேவ. தெய்வ. 226).

அடியரேம் *aḍiyarēm*, பெ. (n.) *'அடியனேன்'* என்பதன் *பன்மை*; pl. of *aḍiyaṉēṉ*.

அடியவர் *aḍiyavar*, பெ. (n.) *தொண்டர்*; devotees. ''அந்நகரில் வாழ்வாரு மடியவரு மனமகிழ்ந்து'' (பெரியபு. திருஞான. 325).

அடியவன் *aḍiyavaṉ*, பெ. (n.) *1. அடிமை*; slave. *2. பத்தன் (பக்தன்)*; devotee. ''அமரர்நா யகன்றனக் கடியவன்'' (கந்தபு. யுத்த. சிங்கமுகா. 279).

ம. அடியான்; க. அடிய; தெ. அடிய, அடியடு.

அடியளபெடைத்தொடை *aḍi-y-aḷabeḍai-t-toḍai*, பெ. (n.) *செய்யுளடிகளின் முதற்கண் அளபெடை யமையத் தொடுப்பது*; concatenation, in which, the initial feet of the lines of a verse begin with prolonged vowels or vowel-consonants. ''அடிதோறு முதன்மொழிக்கண் அழியா தளபெடுத் தொன்றுவ தாகு மளபெடையே'' (யா. கா. 16)

எ-டு :

''ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.''
''அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்புசெய்து
நங்ங் களங்கறுப்பா நாம்.''

[அடி + அளபெடை + தொடை.]

அடியற்காந்தி *aḍiyaṟ-kāndi*, பெ. (n.) *அடிப் பட்ட காந்தி* பார்க்க; see *aḍi-p-paṭṭa-kāndi*.

அடியறி-தல் *aḍi-y-aṟi-*, 2 செ.கு.வி. (v.i.) *மூல காரணந் தெரிதல்*; to find out the first or primary cause. 'அடியறியும் வியாசமுனிவர்' (ஈடு, 1.1 : 8).

[அடி + அறி.]

அடியறு-த்தல் *aḍi-y-aṟu-*, 4 செ.குன்றாவி. (v.t.) *மூலத்தோடு நீக்குதல்*; to eradicate. 'அஹங்கார மமகாரங்களையும்..........அடி யறுத்து' (ரஹஸ்ய. 320).

ம. அடியறுக்குக

[அடி + அறு.]

அடியறு-தல் *aḍi-y-aṟu-*, 2 செ.கு.வி. (v.i.) *மூலமறுதல், முழுதும் அழிதல்*; to be uprooted,

completely removed. 'அடியற்ற மரம்போல் அலறி விழுகிறது', 'அடி யற்றால் நுனி விழாம லிருக்குமா?' (பழ.).

[அடி + அறு.]

அடியறுக்கி *adi-y-aṟukki*, பெ. (n.) ***குயவன் மட்கல மறுக்குங் கருவி***; flat piece of wood by which the potter marks his work and separates it from the wheel below (W.).

[அடி + அறுக்கி.]

அடியறை *adi-y-aṟai*, பெ. (n.) ***அடியற்றது***; that which has no basis or support.

[அடி + அறை.]

அடியன் *adiyaṉ*, பெ. (n.) 1. ***கீழிருப்பவன்***; he who is underneath. 2. ***அடிமை***; slave. 3. ***தொண்டன்***; devotee.

[அடி + அன்.]

அடியனாதி *adi-y-aṉādi*, பெ. (n.) ***எண்ணிற்கு மெட்டாத் தொன்மை***; time immemorial.

*[அடி + **Skt.** anādi (அன் + ஆதி).]*

அன்² பார்க்க; see *aṉ*².

அடியனேன் *adiyaṉēṉ*, பெ. (n.) ***அடியேன், உன் அடியனாகிய நான்***; a submissive term of respect meaning, 'I, your slave, your humble servant.' "உன்னடிய னேனும்வந் தடி யிணை யடைந்தேன்" (திவ். பெரியதி. 5.8 : 3).

[அடியன் + ஏன் (த. ஒ. ஈறு).]

அடியாகெதுகை *adi-y-āg(u)-edugai*, பெ. (n.) ***அடியெதுகைத்தொடை*** பார்க்க; see *adi-y-edugai-t-todai*.

[அடி + ஆகு + எதுகை.]

அடியாட்டி *adiyāṭṭi*, பெ. (n.) ***அடியாள்***; maid-servant. 'கூனி சொன்னது கேட்க வேண்டா தொழிகிறது, அடியாட்டி யாகை யாலே' (திவ். திருநெடுந். 12, வியா.).

ம. அடியாட்டி, அடியாத்தி.

[அடியான் (ஆ.பா.) – அடியாட்டி (பெ.பா.).]

அடியார் *adiyār*, பெ. (n.) 1. ***அடிமையர்***; slaves. "பின்னும் பகர்வாள் மகனே யிவன் பின் செல்தம்பி யென்னும் படியன் றடியாரினி னேவல் செய்தி" (கம்பரா. அயோத். நகர்நீங்கு. 147). 2. ***தொண்டர்***; devotees. "அடியார்க் கெல்லா மலகிலா வினைதீர்க்க" (தாயு. ஆசை. 7).

அடியார்க்குநல்லார் *adiyār-k-ku-nallār*, பெ. (n.) ***சிலப்பதிகாரத்திற்குச் சிறந்த விரிவுரை வரைந்த 12ஆம் நூற்றாண்டு உரையாசிரியர்***; name of a commentator of *Śilappadigāram*, who lived in the 12th century A.D.

அடியார்க்குநல்லார் என்பது, அடியார்க் கன்பன் (பக்தவத்ஸல) என்பது போன்ற இறைவன் பெயர். இறைவன் பெயரை மக்கட்கு இயற்பெயராக இடுவது தொன்று தொட்ட தமிழர் வழக்கம். நல்லார் என்பது நல்லான் என்பதன் உயர்வுப் பன்மை.

அடியாள்¹ *adi-y-āḷ*, பெ. (n.) ***பகைவரை அடிப்பதற்காக அமர்த்தப்படும் தடியன்***; hooligan hired for beating enemies.

அடியாள்² *adiyāḷ*, பெ. (n.) ***குற்றேவற்பெண்*** (I.M.P. Sm. 38); maid-servant.

ம. அடியாள்; க. அடியாளு.

அடியாளுறுத்தி *adiyāḷuṟutti*, பெ. (n.) ***சிறு குறிஞ்சா***; small Indian ipecacuanha, *Gymnema sylvestre* (சா.அக.).

அடியாறு *adi-y-āṟu*, பெ. (n.) ***தொன்று தொட்ட வரலாறு*** (இ.வ.); historical succession from ancient times (Loc.).

அடியான் *adiyāṉ*, பெ. (n.) 1. ***அடிமை***; slave. 2. ***ஏவலாளன்***; man-servant. 3. ***தொண்டன்***; devotee, servant as of a deity. "குன்றாமல் உலக மளந்த அடியானை அடைந்தடியேன் உய்ந்த வாறே" (திவ். திருவாய். 9.4 : 10).

ம. அடியான்; க. அடிய; தெ. அடியடு.

அடியானபடி *adi-y-āna-padi*, பெ. (n.) ***தலை***; head (சா.அக.).

[அடி + ஆன + படி.]

இப் பொருள், அடியார் இறைவன் திருவடியைச் சூடும் கருத்தில், அடியார் தலை இறைவன் திருப்பாதத்திற்குப் படிபோ லமையுங் குறிப்பைக் கொண்டதா யிருக்க லாம்.

அடியிடு-தல் *adi-y-idu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. ***தொடங்குதல், தொடக்கஞ் செய்தல்***; to make a beginning, commence an undertaking. "படிந்தழுவ தற்குப் பாவா யடியிட்ட வாறு" (சீவக. 1391). 2. ***கூடை, பாய் முதலியன முடைதற்கு அடியமைத்தல்***; to make the bottom of a basket or one end of a mat as the first step in basket making or mat weaving. 3. ***நடக்கக் காலெடுத்துவைத்தல்***; to step

forward. ''பரவை வாயி லம்மட்டு மடியிட்டு'' (தாயு. மலைவளர். 4). 4. **நடத்தல்**; to walk. ''ஆடுந ராட நெஞ்சி னெண்ணினோ ரடியிட் டோர்கள்'' (கூர்மபு. நவகண். 31). 5. ***மிதித்தல்***; to tread on. ''சேடன் முடியுங் கதிர்கொள் சென்னி வரையுந் தூளாட வடியிட்டு'' (திருவிளை. மாயப். 6). 6. ***சீர்கள் தொடர்ந்து செய்யுளடியாக வமைதல்***; to form a line in a verse, as metrical feet. ''அடியிட்ட செந்தமிழி னருமையிட் டாரூரில்'' (தாயு. மலைவளர். 4).

ம. அடியிடுக

[அடி + இடு.]

அடியியைபுத்தொடை *aḍi-y-iyaibu-t-toḍai*, பெ. (n.) (யாப்.) **செய்யுளடிகளின் இறுதி யெழுத்தேனும் அசையேனும் சொல்லேனும் *சீரேனும் ஒன்றிவரத் தொடுப்பது***; (Pros.) concatenation in which the final letters, syllables, words, or feet of the lines of a verse are the same. ''இறுதி யியைபு'' (யா. கா. 16).

எ-டு :

(1) ''வளைவளர் தருதுறையே மணம்விரி
தருபொழிலே
தளையவிழ் நறுமலரே தனியவள்
திரியிடமே
முளைவளர் இளநகையே முழுமதி
புரைமுகமே
இளையவள் இணைமுலையே
எனையிடர் செய்தவையே''
(சிலப். 7, முரிவரி, 3).

(2) ''உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி
னெல்விளை யும்மே;
இரண்டே, தீஞ்சுளைப் பலவின்
பழமூழ்க் கும்மே;
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக்
கிழங்குவீழ்க் கும்மே;
நான்கே, அணிநிற வோரி பாய்தலின்
மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி
யும்மே''
(புறநா. 109).

(3) ''இன்னகைத் துவர்வாய்க் கிளவியு
மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளி யூடலு மணங்கே
அரிமதர் மழைக்கணு மணங்கே
திருநுதற் பொலிந்த திலகமு மணங்கே''
(யா. கா. 16, உரைமேற்.).

[அடி + இயைபு + தொடை.]

அடியிரட்டி-த்தல் *aḍi-y-iraṭṭi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. **இட்ட அடியின்மேல் அடியிடுதல்**; to take steps without advancing, to mark time. ''அடியிரட்டித் திட்டாடு மாட்டு'' (பு. வெ. 2 : 8). 2. ***அம்மானைச்செய்யுளின் இரண்டாமடியிரட்டுதல்***; to be repeated immediately like the doubling of the second line of an *ammāṉai* verse.

எ-டு :

''விரிந்தபுகழ்ப் புள்ளிருக்கு வேளூர்
வயித்தியனார்
பரிந்துவினை தீர்க்கவல்ல பண்டிதர்கா
ணம்மானை;
பரிந்துவினை தீர்க்கவல்ல பண்டிதரே
யாமாயின்
மருந்துவிலை கைக்கூலி வாங்காரோ
வம்மானை?
வாயினிலே மண்போட்டு வாங்குவார்கா
ணம்மானை.''

இத்தகைய செய்யுள்களின் இரண்டாமடி ஈற்றுச் சீர் மாற்றியே மடக்கப்படும்.

[அடி + இரட்டி.]

அடியிலிடுகலசம் *aḍiyil-iḍu-kalaśam*, பெ. (n.) ***எண்ணெய் வடிக்குங் கலம்***; a vessel for filtering medicated oils (சா.அக.).

[**Skt.** kalaśa > **த.** கலசம் = கும்பம்.]

அடியிலிடுகும்பம் அல்லது கலம் எனின் முற்றுந் தமிழாம்.

[அடி + இல் + இடு + கலசம்.]

அடியிலேயுறை-தல் *aḍiyilē-y-uṟai-*, 2 செ.கு.வி. (v.i.) *வழிபடுதல்*; to worship, to be in reverence. 'அடியிலே யுறைதல் வழிபாடென்னும் பொருடந்து நிற்றலின்' (கலித். 140, நச். உரை).

[அடி + இல் + ஏ + உறை.]

அடியிறங்கு-தல் *aḍi-y-iṟaṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. ***சூலிக்குப் பிள்ளைப்பேற்றுக் காலத்தில் வயிறு தளர்தல்***; sinking due to loosening of the muscles of the abdomen in a woman, as a sign of approaching labour (சா.அக.). 2. ***அடித்தள்ளிப்போ-தல்*** 2 பார்க்க; see *aḍi-t-taḷḷi-p-pō-*, 2.

[அடி + இறங்கு.]

அடியீடு *aḍi-y-īḍu*, பெ. (n.) 1. *அடியிட்டு* **மெல்ல நடக்கை**; slow dignified steps, as of a

king or a noble. ''அருந்திறன் மாக்க ளடியீ டேத்த'' (சிலப். 26 : 90). 2. தொடக்கம்; beginning.

[அடி + ஈடே. இடு → ஈடு.]

அடியீரல் *adi-y-īral,* பெ. (n.) மண்ணீரல்; spleen (சா.அக.).

[அடி + ஈரல்.]

அடியுடுப்புமுண்டு *adi-y-uduppu-mundu,* பெ. (n.) இடுப்புவேட்டி (நாஞ்.); cloth worn round the waist (Nāñ.).

[அடி + உடுப்பு + முண்டு.]

அடியுண்(ணு)-தல் *adi-y-un(nu)-,* 12 செ.கு.வி. (v.i.) 1. அடிக்கப்படுதல்; to be beaten. 2. பல விடத்துந் திரிந்து துன்பப்பட்டுப் பழகுதல்; to wander along experiencing all sorts of troubles.

[அடி + உண்.]

அடியுண்ணல் *adi-y-unnal,* தொ. பெ. (vbl. n.) 1. அடிபடுதல்; the act of receiving beatings. 2. வெயிலிலும் மழையிலும் திரிந்து பழகுதல்; tramping here and there in sun and rain and becoming experienced.

[அடி + உண்ணல்.]

அடியுணி *adi-y-uni,* பெ. (n.) அடிபட்டவன்-ள்; one who is beaten (W.).

[அடி + உணி. உண்ணி → உணி.]

அடியுப்பு *adi-y-uppu,* பெ. (n.) கல்லுப்பு; common salt dug out from the bottom of the sea, where it is deposited after the evaporation of the sea-water (சா.அக.).

[அடி + உப்பு.]

அடியுரம் *adi-y-uram,* பெ. (n.) 1. முன்பு இட்ட எரு; manure put in previous seasons. 2. மரத்தைச் சுற்றியிடும் எரு (யாழ்ப்.); manure added to the soil around a tree (J.). 3. அடுத்த ஆண்டிற்காகச் சேமித்து வைக்கப் படும் நடப்பு ஆண்டுத் தவசம் (யாழ்ப்.); crop of a year preserved for subsistence during the following year (J.). 4. முன்னோர் தேட்டு, முதுசொம் (யாழ்ப்.); ancestral property (J.). 5. ஆற்றல் (யாழ்ப்.); physical strength, power of wealth (J.). 6. அடிப்படை (யாழ்.அக.); foundation.

[அடி + உரம்.]

அடியுறை *adi-y-urai,* பெ. (n.) 1. பாத காணிக்கை; offering to God or a great personage, as laid at His or his feet. ''ஈட்டிய பல்பொருள்க ளெம்பிரானுக் கடியுறை யென்று'' (திவ். பெரியாழ். 4.3 : 9). 2. வழி பாட்டுறைகை; living a life of reverence, as for a person worthy of respect. ''அடியுறை காட்டிய செல்வேன்'' (கலித். 140 : 11). 3. 'உன் பாதத்தில் வாழ்வேன்' என்னும் பொருளில் வழங்கும் ஒரு வணக்கச்சொல்; 'your obedient servant who would be honoured to flourish under your feet', an ancient term of submission and respect, in the first person. ''நின் னடிநிழற் பழகிய வடியுறை'' (புறநா. 198 : 26).

ம. அடியுற

[அடி + உறை.]

அடியெடு-த்தல் *adi-y-edu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. அடிவைத்தல்; to step. ''அடியெடுத்துக் கொண்டென்பால் வரலாகுங்கொல்'' (சடகோபரந். 28). 2. அப்பாற் போதல்; to go beyond. ''அடியெடுப்ப தன்றோ வழகு'' (திவ். இயற். பெரிய திருவந். 30).

[அடி + எடு.]

அடியெடுத்துக்கொடு-த்தல் *adi-y-eduttu-k-kodu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மாணவன் ஒரு வனப்பு (காவியம்) இயற்றுவதற்குத் தொடக்கச்சொல்லை அல்லது சொற்றொடரை ஆசிரியன் சொல்லியுதவுதல்; to help a student, as a teacher, to compose a poem, by suggesting an apt beginning word or phrase. 2. ஓர் அடியாரான புலவர் ஒரு திருவனப்பை இயற்று தற்கு, இறைவனே தொடக்கச் சொல்லை உடம்பிலிக் கூற்றாக வுரைத்தருளுதல்; to help a devotee to compose a sacred poem, by uttering the apt beginning word, as God Almighty in His invisible form often does.

''அடைய லார்புரம் நீறெ ழத்திரு
நகைசெய் தன்றொரு மூவரைப்
படியின் மேலடி மைக்கொ ளும்பத
பங்க யங்கள்ப ணிந்துநின்
றடிக ளேயுன தடியர் சீரடி
யேனு ரைத்திட அடியெடுத்
திடர்கெ டத்தரு வாயெ னத்திரு
வருளை எண்ணியி றைஞ்சினார்,''

''அலைபு னற்பகி ரதிந திச்சடை
யாட வாடர வாடநின்
றிலகு மன்றினி லாடு வார்திரு
வருளி னாலச ரீரிவாக்(கு)
'உலகெ லா'மென அடியெ டுத்துரை
செய்த பேரொலி யோசைமிக்
கிலகு சீரடி யார்செ விப்புலத்
தெங்கு மாகிநி றைந்ததால்''
(திருத்தொண் பு. வ. 30, 31).

[அடி + எடுத்து + கொடு.]

அடியெதுகைத்தொடை *aḍi-y-edugai-t-toḍai*, பெ. (n.) (யாப்.) **செய்யுளடிகளின் முதற்கண் முதலெழுத்து மாத்திரை யொத்தும் இரண்டா மெழுத்து ஒலியொத்தும் வரத் தொடுப்பது**; (Pros.) concatenation, in which, the second letters of the lines of a verse rhyme, while the first letters agree in quantity. ''இரண்டாம் வழுவா எழுத்தொன்றின் எதுகை'' (யா. கா. 16).

''துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்'' (நாலடி. 2).

[அடி + எதுகை + தொடை.]

அடியெழுத்து *aḍi-y-eḻuttu*, பெ. (n.) (இலக்.) **உயிரெழுத்துகள் பன்னிரண்டும் மெய்யெழுத்து கள் பதினெட்டும் ஆகிய முப்பது முதலெழுத்து கள்**; (Gram.) the primary letters comprising the twelve vowels and the eighteen consonants. 'பன்னீருயிரும் பதினெண் மெய்யுமாகிய முத லெழுத்து' (பேரகத். 8, உரை).

[அடி + எழுத்து.]

அடியேந்திரம் *aḍi-y-ēndiram*, பெ. (n.) **அடி யந்திரம்** பார்க்க; see *aḍi-yandiram*.

அடியேபிடித்து *aḍi-y-ē-piḍittu*, கு.வி.எ. (adv.) **தொடக்கத்திலிருந்து (ஆதியிலிருந்து)**; from the beginning.

அடியேம் *aḍiyēm*, பெ. (n.) **'உம் அடியாராகிய யாம்' என்னும் பொருளில் வரும் வணக்க மொழி, 'அடியேன்' என்பதன் பன்மை**; a humble term of respect meaning, 'We, your slaves, your humble servants', pl. of *aḍiyēṉ*. ''தொழுமடியேம் வல்வினையின் வேர்தடிந் தாய்'' (கந்தபு. யுத்த. தேவர்கள். 3).

[அடி + ஏம்.]

அடியேன் *aḍiyēṉ*, பெ. (n.) **'உன் அடியா னாகிய நான்' என்னும் பொருளில் வரும் ஒரு வணக்கமொழி**; a modest term of respect meaning, 'I, your slave, your humble servant'. ''நானும் உனக்குப் பழவடியேன்'' (திவ். திருப்பல். 11).

[அடி + ஏன்.]

அடியொட்டி *aḍi-y-oṭṭi*, பெ. (n.) 1. **தண் டனைக்குத் தப்பியோடும் தீவினையார் காலில் தைக்கும்படி நிலத்தில் நட்டுவைக்கும் இருப் பூசி**; iron spikes planted in the ground, in order to pierce the feet of those, who try to run away and escape punishment for their evil deeds. ''ஊளைக்கொண் டோடுகின்றா ருள்ளடி யூசி பாய'' (சீவக. 2768). இதன் உரை : 'கூப்பிட்டு ஓடுகின்றவர்கள் அங்ஙன மோடாமைக்கு நட்டு வைத்த அடியொட்டி உள்ளடியிலே பாய்கையினாலே'. 2. **பூடு வகை (நெருஞ்சிமுள்)**; a kind of thorny shrub.

[அடி + ஒட்டி.]

அடியொத்தகாலம் *aḍi-y-otta-kālam*, பெ. (n.) **நிழல் பாதத்தடியில் நிற்கும் நண்பகல்**; midday, as being the time when one's shadow is at his feet. 'வளைந்த வாயினையுடைய கூகை அடியொத்த காலத்தே கூப்பிடும்படி யாகவும்' (பட்டினப். 268, நச். உரை) — (ஷை அடிக்.) அடியொத்த காலம் = நிழல் அடி யோடு பொருந்திய காலம்; என்றது உச்சிக் காலத்தை.

[அடி + ஒத்த + காலம்.]

அடியொற்று-தல் *aḍi-y-oṟṟu-*, 5 செ.குன்றா வி. (v.t.) 1. **பின்பற்றுதல்**; to follow. 'அதை அடியொற்றி யாயிற்று, இவர் இப்படி அருளிச் செய்தது' (திருவாய். நூற். 1, வியா.). இயேசுவின் மாணவர் பன்னிருவருட் பதினொருவர் அவரை அடியொற்றிச் சென்றனர். மறைமலையடிகளின் சாகுந்தல நாடகம் எல்லா வகையிலும் மூலத்தை அடியொற்றியது. 2. **புறப்படுதல்**; to start, to step out. 'பரமபதத்தி னின்றும் அடி யொற்றினான், திருமலை யளவும் பயண முண்டாயிருந்தது' (திவ். அமலனாதி. 3, வியா.).

ம. அடியிருத்துக; **தெ.** அடுகுபெட்டு.

[அடி + ஒற்று.]

அடியோட்டி *aḍi-y-ōṭṭi*, பெ. (n.) 1. ஆனை நெருஞ்சில் போன்றவடிவுங் கூருமமைந்து, தன் மேல் நடப்பாரின் பாதங்களைக் கிழிக்கவல்ல இருப்பு முள் (வின்.); caltrops, a spiked iron ball kept on the ground meant for piercing the feet of men who tread on it. 2. நெருஞ்சில்; a thorny shrub, *Tribulus terrestris* (சா.அக.).

[அடி + ஒட்டி – அடியொட்டி → அடியோட்டி.]

அடியொட்டி பார்க்க; see *aḍi-y-oṭṭi*.

அடியோடு *aḍi-y-ōḍu*, கு.வி.எ. (adv.) வேருடன், முழுதும்; radically, completely, utterly. "அறஞ்செயா தடியோ டிறந்து" (திருப்பு. 57).

[அடி + ஓடு.]

அடியோர் *aḍiyōr*, பெ.(n.) பிறர்க்குக் குற்றேவல் செய்வோர்; menial servants. "அடியோர் பாங்கினும்" (தொல். பொருள். அகத். 23).

அடியோன் *aḍiyōṉ*, பெ. (n.) 1. குற்றேவலன், வீட்டு வேலைக்காரன்; menial, household servant. 2. அடிமை; slave.

அடிலவோடாகம் *aḍilavōḍāgam*, பெ. (n.) ஒரு செடி. இதன் இலைகளும் வேரும் சாறு பிழிந்து, மந்தார ஈளை (மந்தாரகாசம்), கோழை (கபம்) என்னும் நோய்கட்கு மருந் தென்று, மலையாள நாட்டில் வழங்குகிறார் களாம் (சங்.அக.). — மலையாளத்தில் விளையுமொரு செடி; a plant found in Malabār, *Justicia bivalvis ?* (சா.அக.).

அடிவட்டம் *aḍi-vaṭṭam*, பெ. (n.) 1. பாத அளவு; measure of foot. "அடிவட்டத் தாலளப்ப" (திவ். இயற். 3 : 13). 2. இசைக்குழலின் (நாத சுரத்தின்) அடிப்பூண் (பரத. ஒழிபி. 6); large end of the Indian clarionet.

அடிவண்டல் *aḍi-vaṇḍal*, பெ. (n.) எண்ணெய் முதலியவற்றைக் காய்ச்சும்போது, அடியில் தங்கி நிற்கும் கசடு; the sediment deposited at the bottom of a vessel while boiling, in the preparation of a decoction, medicated oil, etc. (சா.அக.).

அடிவயிற்றிசிவு *aḍi-vayiṟṟ(u)-iśivu*, பெ. (n.) மல மூத்திரங்களை யடக்குவதனாலும், மந்தத்தை யுண்டாக்கும் பல பண்டங்களை யுண்பத னாலும், வளி (வாயு) அடிவயிற்றில் தங்கி, அதனால் நரம்பு சுருங்கி, மல மூத்திரம் வராதபடி மேலே யிழுத்துப் பிடித்து, வலியை யுண்டாக்கும் ஓர் ஊதை (வாத) நோய்; a spasm of the abdomen resulting in obstruction to the free movement of faeces and urine and causing pain (சா.அக.).

[அடி + வயிறு + இசிவு.]

அடிவயிற்றிறுக்கம் *aḍi-vayiṟṟ(u)-iṟukkam*, பெ. (n.) தாழ்வான இருக்கையில் அமர்தல், இறுக்கமான வுடைகளை யணிதல் முதலிய காரணங்களால், அடிவயிறு அடிக்கடி அழுந்தி, அதனால் நேரும் நிலைமை; abdominal compression, a condition brought about by the compression of bowels due to habitual sitting on a low seat and use of tight dress (சா.அக.).

[அடி + வயிறு + இறுக்கம்.]

அடிவயிற்றுக்கட்டு *aḍi-vayiṟṟu-k-kaṭṭu*, பெ. (n.) பிள்ளைபெற்ற பெண்கட்கு, மார்பிலிருந்து அடிவயிறு வரையும், கருப்பை யழுந்தும்படி துணியால் இறுகச் சுற்றிக் கட்டும் கட்டு; abdominal bandage, a tight bandage worn by women immediately after delivery round the abdominal region in order to exert pressure on the womb (சா.அக.).

[அடி + வயிறு + கட்டு.]

அடிவயிற்றுக் கருப்பம் *aḍi-vayiṟṟu-k-karuppam*, பெ. (n.) பெண்களின் கீழ்வயிற்றிற் கருத் தங்கிப் புடைத்துக் காட்டும் ஒருவகைச் சூல்; abdominal pregnancy, lodgment of ovum in a woman, in the abdominal cavity (சா.அக.).

[அடி + வயிறு + கருப்பம்.]

அடிவயிற்றுக்கழலை *aḍi-vayiṟṟu-k-kaḻalai*, பெ. (n.) ஆவிற்கு (பசுவிற்கு) அடிவயிற்றில் காணுமொரு கட்டி; abdominal tumour, a peritonitic disease attacking cows (சா.அக.).

[அடி + வயிறு + கழலை.]

அடிவயிற்றுக் கோளாறு *aḍi-vayiṟṟu-k-kōḷāṟu*, பெ. (n.) அடிவயிற்றி லேற்படும் குழப்பம்; disorder of the abdominal organs (சா.அக.).

[அடி + வயிறு + கோளாறு.]

அடிவயிற்றுட்சவ்வு *aḍi-vayiṟṟ(u)-uṭ-cavvu*, பெ. (n.) கீழ்வயிற்றின் உட்புறச் சவ்வு; peritoneum, a membrane investing the internal surface of the abdomen (சா.அக.).

[அடி + வயிறு + உள் + சவ்வு.]

அடிவயிற்றுப்புரட்டல் *aḍi-vayiṟṟu-p-puraṭṭal*, பெ. (n.) *நீர்க்கொம்பன் (வாந்திபேதி), பித்தக் கோளாறு, நஞ்சு முதலியவற்றால் வயிற்றில் ஏற்படும் புரட்டல்;* the turning of bowels in cholera, bilious disorders, poisonous affections, etc. (சா.அக.).

[அடி + வயிறு + புரட்டல்.]

அடிவயிற்றுப்பொருமல் *aḍi-vayiṟṟu-p-porumal*, பெ. (n.) *1. செரியாமையால் வயிற்றின் கீழ்ப் பாகத்தி லேற்படும் உப்பசம்;* distension of the abdomen due to the presence of gas in the intestines, flatus. *2. அடிவயிற்றுச் சவ்வின் அழற்சியா லேற்படும் வீக்கம்*; distension of the abdomen due to the presence of gas or air in the peritoneal cavity, as in peritonitis, Peritoneal tympanites (சா.அக.).

[அடி + வயிறு + பொருமல்.]

அடிவயிற்றுவலி *aḍi-vayiṟṟu-vali*, பெ. (n.) *1. கீழ்வயிற்றிற் காணும் வலி*; abdominal pain in general. *2. பெருங்குடலிற் காணும் வலி*; colic. *3. பித்தக் கோளாற்றினா லேற்படும் வலி*; bilious colic. *4. குடலிற் காணும் ஒரு கொடிய வலி*; intestinal colic. *5. மாதவிடாய்க் கோளாற்றினாற் பெண்கட்கு அடிவயிற்றிற் காணும் ஒரு கொடிய வலி*; menstrual colic (சா.அக.).

[அடி + வயிறு + வலி.]

அடிவயிறு *aḍi-vayiṟu*, பெ. (n.) *கீழ்வயிறு*; lower part of the abdomen.

அடிவரலாறு *aḍi-varalāṟu*, பெ.(n.) *1. கரணியம் (காரணம்)*; cause, source. *2. பழைய வரலாறு*; old history. *3. கொடிவழி*; lineage, ancestry (W.).

அடிவரவு *aḍi-varavu*, பெ. (n.) *பாடல்களின் முதற்குறிப்பு*; mnemonic of initial syllables or initial words of stanzas in a poem.

அடிவருடி *aḍi-varuḍi*, பெ. (n.) *1. கால் பிடிப் பவ-ன்-ள்-ர்*; massager. *2. தான் எண்ணியது எய்தப் பிறரைப் போற்றுபவர்*; bootlicker.

அடிவருடு-தல் *aḍi-varuḍu-*, 5 செ.கு.வி. (v.i.) *கால்பிடித்தல், உளைச்சல் சோம்பல் முதலியன தீரப் பாதங்களைப் பிடித்துப் பிசைதல்*; to massage the feet to stimulate them to action or relieve pain.

அடிவரை *aḍi-varai*, பெ. (n.) *1. மலையடிவாரம், தாழ்வரை*; foot of a mountain. 'அடிவரை யிலே சிங்கம் பாய்ந்தாற்போல்' (*கலித். 86, உரை*). *2. செய்யுளின் அடிவரம்பு;* limit to the length of a poetic line or to that of a stanza or poem. ''அடிவரை யில்லன ஆறென மொழிப'' (தொல். பொருள். செய். *162*).

அடிவரையறை *aḍi-varai-y-aṟai*, பெ. (n.) *1. செய்யுளின் அடிவரம்பீடு;* regulation regarding the number of lines in different kinds of stanzas or poems. 'அடிவரையறை யின்மையும் அளவிய லென்பதும்' (தொல். பொருள். செய். *164*, பேரா. உரை). *2. பாட் டின் முதற்குறிப்பு வரிசை* (*மீனாட்சிசுந். சரித். 1, பக். 10*); index of initial syllables of the stanzas in a poem.

[அடி + வரை + அறை.]

அடிவளையம் *aḍi-vaḷaiyam*, பெ. (n.) *அண்டி வாயிலுக்குள் அமைந்திருக்கும் மூவகை வளையங்களுள் அடிப்பாகத்திலுள்ளது*; one of the three rings of sphincter muscles at the anus, which is located internally, sphincter ani *internal* (சா.அக.).

அடிவாரச்செயல் *aḍi-vāra-c-ceyal*, பெ. (n.) *மண்டையோட்டின் மூலத்துளைக்கு முன்பாக வுள்ள ஒருவகை யெலும்பு*; a strong quadrilateral plate of occipital bone in front of the foramen magnum, basilar process (சா.அக.).

அடிவாரம் *aḍi-vāram*, பெ. (n.) *மலையினடி*; foot of a hill. ''பிடியு மடிவாரஞ் சேர்கயிலை'' (தேவா. *1.68 : 5*).

ம. அடிவாரம்; க., பட. அடிவார; தெ. அடி வாரமு.

அடிவானம் *aḍi-vāṉam*, பெ. (n.) *1. கீழ்வானம்*; horizon. *2. அடிப்படை (அஸ்திவாரம்)*; foundation, groundwork.

ம. அடிவானம்

[2. அடிவாணம் → அடிவானம்.]

அடிவிடு-தல் *aḍi-viḍu-*, 20 செ.கு.வி. (v.i.) *அடிவிரி-தல் பார்க்க*; see *aḍi-viri-*.

அடிவிரி-தல் *aḍi-viri-*, 2 செ.கு.வி. (v.i.) *1. பாதம் வெடித்தல்*; to become cracked, as the skin of the feet. *2. சமையற் கலத்தில் அடி கீறிப்போதல் அல்லது வெடித்தல்*; to crack at the bottom, as a cooking vessel.

அடிவிள்(ளு)-தல் *aḍi-viḷ(ḷu)-,* 16 செ.கு.வி. (v.i.) *அடிவிரி-தல்* பார்க்க; see *aḍi-viri-.*

அடிவிளக்கு-தல் *aḍi-viḷakku-,* 5 செ.கு.வி. (v.i.) **இறையடியார், ஆசிரியர், துறவியர் முதலிய கண்ணியமுள்ள விருந்தினரின் பாதங்களைக் கழுவிச் சிறப்புச் செய்தல்**; to wash the feet of an honoured guest. ''திருந்தடி விளக்கிச் சிறப்புச் செய்தபின்'' (மணிமே. 24 : 96).

அடிவினை[1] *aḍi-viṉai,* பெ. (n.) **ஆடையொலிக்கை**; washing of clothes. ''அடிவினைக் கம்மியர் வெடிபட வடுக்கிய'' (பெருங். இலாவாண. 4 : 183).

[அடுதல் = கொல்லுதல், வருத்துதல். அடித்தல் = புடைத்தல், வருத்துதல், கொல்லுதல். அடு → அடி.]

ஆடடித்தல், கோழியடித்தல், முயலடித்தல், புலியடித்தல், பேயடித்தல் முதலிய வழக்குகள் கொலைத்தொழிலைக் குறித்தலையும், இந்தியில் 'மார்னா' என்னும் சொல் அடித்தல் என்றும் கொல்லுதல் என்றும் பொருள் படுதலையும் நோக்குக.

அடிவினை[2] *aḍi-viṉai,* பெ. (n.) 1. **கேடான சூழ்வினை**; scheming, undermining, stratagem. அவனுக்கு அடிவினை வைக்கிறான் (உ.வ.). 2. **மாறாட்டம்;** perversity. 3. **கறுவு** (இராட்.); extreme malice (R.).

அடிவீக்கம் *aḍi-vikkam,* பெ. (n.) 1. **உள் வீக்கம்**; internal swelling. 2. **ஆழ்ந்த அல்லது அடிகனத்த வீக்கம்;** a deep-seated swelling, as in carbuncle (சா.அக.).

அடிவீழ்-தல் *aḍi-vīḻ-,* 2 செ.கு.வி. (v.i.) **தண்டனிடுதல், காலில் விழுந்து கும்பிடுதல்**; to fall at another's feet, as in worship or paying homage. ''அடிகண் முன்னர் யானடி வீழ்ந்தேன்'' (சிலப். 13 : 87).

க. அடிபீழ்

அடிவீழ்ச்சி *aḍi-vīḻcci,* பெ. (n.) **வணக்கம்**; prostration, homage. ''தத்தையடி வீழ்ச்சி'' (சீவக. 2587).

அடிவெண்குருத்து *aḍi-veṇ-kuruttu,* பெ. (n.) **தென்னை, பனை, வாழை முதலியவற்றின் அடியிளங் குருத்து**; the tender white shoots of the palm and plantain trees.

அடிவெயிற்காய்-தல் *aḍi-veyiṟ-kāy-,* 2 செ.கு.வி. (v.i.) **அடையுங்கால மஞ்சள் வெயிலிற் காய்தல்**; to expose oneself to the rays of the setting sun (சா.அக.).

[அடி + வெயில் + காய்.]

அடிவை-த்தல் *aḍi-vai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. **காலடி வைத்தல்;** to place one's foot. 2. **குழந்தை அடியெடுத்து வைத்து நடக்கப் பழகுதல்;** to learn to walk, as a child. 3. **தொடங்குதல்;** to begin. 4. **ஒரு வினை முயற்சியை மேற்கொள்ளுதல்;** to enter into an affair. 5. **பிறர் கருமத்தில் தலையிடுதல்;** to meddle in another's affair. —, 4 செ. குன்றாவி. (v.t.) **உள்நோக்கமாக ஒன்றைக் கொள்ளுதல்**; to harbour an unrevealed intent or purpose in one's mind. அவன் எதையோ அடிவைத்துக்கொண்டு பேசுகிறான் (உ.வ.).

அடிவைக்கும் ஆலாத்து *aḍi-vaikkum-ālāttu,* பெ. (n.) **கப்பலில் பணியாளர் நின்று வேலை செய்ய உதவும் பெருங்கயிறு**; cable that serves as a foot rest for workers in a ship.

அடீ *aḍī,* இடை. (int.) **'அடி' என்னும் பெண்பால் விளியின் (மகடூஉ முன்னிலையின்) சேய்மைக் கேற்ற நீட்டல் வடிவம்**; the lengthened form of the feminine address *aḍi* used on account of the remoteness of the addressee. ''நில்லடீஇயெனக் கடுகினன்'' (கம்பரா. ஆரணிய. சூர்ப்பணகைப். 93).

அடு[1]-த்தல் *aḍu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. **அண்மையிலிருத்தல்;** to be adjacent, next, near. ''அடுத்தநாட் டரசியல் புடைய'' (கம்பரா. யுத்த. வீடணன். 79). 2. **தகுந்ததாதல்**; to be fit, becoming, deserving. இப்படிச் செய்திருக்கிறாயே! இஃது உனக்கு அடுக்குமா? (உ.வ.). 3. **நிகழ்தல்;** to happen, occur. ''ஆவி நைந்திற வடுத்ததென்?'' (கம்பரா. அயோத். நகர்நீங்கு. 13). 4. **கூத்தாடுதல்** (பிங்.); to dance. —, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **கிட்டுதல்;** to approach, approximate to, come in contact with. ''மயிலன்னா ளடுத்து வயமா ருதியை'' (பாரத. மணிமா. 3). 2. **புகலடைதல்;** to take refuge. ''கற்பகந் தனையடுத் துய்வாம்'' (சூத. முத். 1). 3. **அடைதல்**; to reach, arrive at. தலைநகர் அடுத்தோம் (உ.வ.). 4. **சார்தல், சேர்தல்;** to join. ''முனிவர் யாரு மடுத்திடு மவைக்கணெய்தி'' (கந்தபு. தக்க. ததீசியுத்தரப். 39). 5. **சேர்த்தல்;** to join together. ''வெண்டுகிலடுத்து'' (சீவக. 617). 6. **அண்டிப் பற்று**

தல்; to join, to seek protection from. அடுத்தவனைக் கெடுக்கலாமா? 7. கொடுத்தல்; to give. ''வளைக்கரத் தார்க்கடுத்தோம்'' (திருக்கோ. 357). 8. அமுக்குதல்; to press down. ''எடுத்தான் புயந்தனை யடுத்தான் மருதரை'' (தேவா. 1.95 : 8). 9. ஒப்புவித்தல் (S.I.I. ii, 250); to assign. ''இடித்து மின்னி யிருண்டு மேக மெழுந்த போதிது பெய்யுமென் றடுத்ததும்'' (சி.சி. பர. உலகா. மறு. 2). 10. கருதுதல்; to infer, think, know.

ம. அடுக்க; க. அட்டு; தெ., து. அண்டு; குட. அடி; கூ. அட்ப; குவி. அடு; மா. அட்தெ, அட்யெ.

'*ad-*, pref. of Latin origin expressing direction toward or addition to.—*ad-* appears in this form before a vowel and before the consonants *d, h, j, m, v*. It is simplified to *a-* before *sc, sp, st*. Before *c, f, g, l, n, p, q, r, s* and *t*. *ad-* is assimilated to *ac-*, resp. *af-, ag-, al-, an-, ap-, ac-, ar-, as-, at-*. —**L.** *ad-*, etc., fr. *ad*, 'to, toward', rel. to **Umbr.** *ar-, ars-*, **Oscan** *ad-, az* (for *ad-s*), 'to, toward', and cogn. with **Goth.** *at*, **OE.** *æt*, at.

அடு → அடுக்கு.

E *add*, v.t. and v.i. **L.** *addere*, 'to put to, lay on, give in addition to, add', fr. *ad-* and *-dere*, fr. *dare*, 'to give'. See *date*, 'point of time', and cp. addendum, additament, addition.

E. *at*, prep.—**OE** *æt*, rel. to **ON., OS., Goth.** *at*, **OFris.** *et, at*, **OHG.** *az*, and cogn. with **L.** *ad*, 'to, toward', **OIr.** *ad-*, **W.** *add-*, **Phryg.** *αδ-, αβ-*, 'to'. Cp. *ad-*. *at-*, assimilated form of *ad-* before *t*.' (K. C. E. D. E. L.)

[அள்ளுதல் = நெருங்குதல். அள் → அண். அண்ணுதல் = நெருங்குதல். அண் → அடு. அடுத்தல் = நெருங்குதல், சேர்தல்.

அடு → அடுக்கு → அடுக்கல், அடுக்கம். இனி, அண் → அண்டு → அடு என்றுமாம்.]

அடு[2]**-தல்** *aḍu-*, 17 செ.குன்றாவி. (v.t.) 1. சுடுதல், வாட்டுதல், வறுத்தல், பொரித்தல்; to roast, fry. 2. காய்ச்சுதல்; to boil. ''அட்டாலும் பால்சுவையிற் குன்றாது'' (மூதுரை, 4). 3. சமைத்தல்; to cook, dress, as food. ''அமுதமடு மடைப்பள்ளி'' (கல்லா. 14). 4. உருக்குதல்; to melt. ''அட்டொளி யரத்த வாய்க் கணிகை'' (சீவக. 98). 5. கொல்லுதல்; to kill. ''அடுநை யாயினும்'' (புறநா. 36 : 1). 6. பொருதல்; to fight, wage war. ''அடுவா ரடலுளோர்'' (சேதுபு. தனுக்கோ. 34). 7. வெல்லுதல்; to conquer, subdue, as the senses, passions. ''ஐம்பொறியு மட்டுயர்ந் தார்'' (சீவக.1468). 8. வருத்துதல்; to trouble, afflict. ''கழிபசி நோயடக் கவலும் பூதரும்'' (கந்தபு. மகேந். சூரன்அமைச். 59). 9. அழித்தல்; to destroy, consume. ''எல்லாப் புவனமும்......அடுபவர்'' (கந்தபு. யுத்த. ஏமகூடப். 18). 10. குற்றுதல்; to pound, as rice. ''வித்தட் டுண்டனை'' (புறநா. 227 : 2). 11. இயக்கமறச் செய்தல்; to stop moving. ''வியாத னீட்டிய கையடு நந்தி'' (கந்தபு. கடவுள் வாழ்த்து, 19).

ம., க., குட. அடு; தெ. வண்டு; து. அடுபினி; கோத. அட்; கோண். அட்டாணி; துட. ஒட்; மா. அடான; மரா. அட்ணெம்; பிராகி. அட்டை.

[உல் → உல. உலத்தல் = காய்தல். உல → உலவை = காய்ந்த மரக்கொம்பு (கலித். 11). உல→உலர். உலர்தல் = காய்தல். உல→உலை = நெருப்புள்ள அடுப்பு. உல்→உள்→ஒள்→ஒளி. உள் → உண் → உண்ணம் = வெப்பம். உண் → உண. உணத்தல் = காய்தல். உண → உணகு → உணங்கு. உணங்குதல் = காய்தல், சுடுதல், வருத்துதல். உணங்கு → அணங்கு. அணங்குதல் = வருத்துதல். உண் → உடு = ஒளியுள்ள நாண்மீன், வெள்ளி. உடு → அடு. அடுதல் = சுடுதல், சமைத்தல், எரித்தல், கொல்லுதல், வருத்துதல்.]

அடுக்கடுக்காய் *aḍukk(u)-aḍukk(u)-āy*, கு.வி.எ. (adv.) கட்டுக்கட்டாய், கோப்புக்கோப்பாய், வரிசை வரிசையாய், தொகுதி தொகுதியாய், படை படையாய்; in piles, in tiers. பெட்டிக்குள் அடுக்கடுக்காய் உடுப்புகளை வைத்திருக்கிறான் (உ.வ.). ''அண்டமவை யடுக்கடுக்கா யந்தரத்தி னிறுத்தும்'' (தாயு. மண்டல. 1).

[அடுக்கு + அடுக்கு + ஆய்.]

அடுக்கடுக்காய் வாட்டு-தல் *aḍukk(u)-aḍukk(u)-āy-vāṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) கொத்துக்கொத்தாய் நெருப்பிலிட்டுச் சுடுதல்; to roast batch by batch.

[அடுக்கு + அடுக்கு + ஆய் + வாட்டு.]

அடுக்கணி *aḍukk(u)-aṇi*, பெ. (n.) (அணி.) ஒரு பொருளின் சிறப்பை அல்லது மிகுதியைக்

காட்ட ஒருபொருட் பல சொற்களை அடுக்கி வைப்பது; (Rhet.) using of more than one synonym to show the greatness of a thing or the intensity of a feeling.

''அடுக்கணி யொருபொருட் கடுக்கிய திரிசொல்
அடுக்கி வைப்ப தடுக்கணி யெனப்படும்.''

(இ-ள்.) சிறப்புக் காட்டவும், அன்பு துயர் களிப்பிவற்றை மிக்கெனத் தோற்றவும், ஒரு பொருளைத் தரும் பல திரிசொல் லடுக்கி வைப்ப தடுக்கணி யெனப்படும். (வ-று.):

''இகழ்ந்தொ ளித்தானோ வென்னை யிகழ்ந்தகன் றானோ
கொடிய நெஞ்சான்'',
''என்னுயிர் காத்துப் புரந்தாண்ட வென்னிறைவன்
தன்னுயிர் பட்டிறந்து சாய்ந்தொழிந்தான் —பின்னுயிராய்
மீண்டென்னைக் காத்தோம்ப மேவிப் புரந்தளிப்ப
யாண்டையும் யார்யா ரெனக்கு''

என்பன விவற்றுட் டுயரின் மிகுதியைக் காட்டப் பல திரிசொல் சிறப்பி லடுக்கி வந்த வாறு காண்க (தொன். வி. 317, நூற்பாவும் உரையும்).

[அடுக்கு + அணி.]

அடுக்கம் *aḍukkam*, பெ. (n.) 1. அடுக்கு; pile, tier. 2. ஒன்றன்மே லொன்றாய் அடுக்கிச் செய்யப்பட்ட வீடு; a tier of houses. ''விஞ்சு மேனில வடுக்கமும்'' (கந்தபு. மகேந். நகர்புகு. 82). 3. பன்மலை வரிசை; a complex mountain range. ''பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக் கோடும்'' (சிலப். 11 : 19). 4. அரைமலை; middle of a mountain slope. ''ஆடுமழை யணங்குசா லடுக்கம் பொழியுநும்'' (புறநா. 151 : 10 - 11). 5. மலைச்சாரல்; mountain slope. ''கறி வள ரடுக்கத்து மலர்ந்த காந்தள்'' (புறநா. 168 : 2). 6. பக்கமலை; lesser mountain adjacent to a greater one. ''மந்தியு மறியா மரன்பயி லடுக்கத்து'' (திருமுருகு. 42). 7. மரஞ்செறிந்த சோலை; thick grove. ''குரங் கமை யுடுத்த மரம்பயி லடுக்கத்து'' (சிலப். 10 : 157). 8. மலைப் பக்கம்; hillside. 9. பாறை; ledge of rock, stratum of stone. ''மால்வரை யடுக்கத்து'' (கலித். 44 : 2). 10. படுக்கை; bed. ''நறுவீ யடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்'' (அகநா. 2 : 7).

ம. அடுக்கம்

[அடு→அடுக்கு + அம் (ஈறு).]

அடுக்கல் *aḍukkal*, பெ.(n.) 1. ஒன்றன்மேலொன் றாக வைத்தல்; to pile up one on top of another. ''திங்கண்மூன் றடுக்கிய திருமுக் குடைக்கீழ்'' (சிலப். 11 : 1). 2. அடுக்கு; series. ''ஆர வடுக்கல்பொன் னாக மிலங்க'' (கந்தபு. மகேந். அவைபுகு. 35). 3. குவியல்; heap, collection. ''மீனத் தடுக்கன் முழுவது நோக்கி'' (கந்தபு. அசுர. தேவரையேவல். 8). 4. படைபடையாய் அமைந்த மலை; mountain as stratified. ''அடுக்கன் மீமிசை யருப்பம் பேணாது'' (மலைபடு. 19).

[அடு → அடுக்கு + அல் (தொ. பெ. ஈறு).]

அடுக்கலரி *aḍukk(u)-alari*, பெ. (n.) இரட்டை யலரி; double-flowered oleander.

[அடு→அடுக்கு+அலரி. அலர்→அலரி.]

அடுக்கலிடு-தல் *aḍukkal-iḍu-*, 17 செ.குன்றாவி. (v.t.) உமியை முற்றும் போக்க, நெல் முதலிய வற்றை இரண்டாம்முறை குற்றுதல்; to pound grains like paddy a second time to remove all husks (W.).

[அடு → அடுக்கு + அல் (தொ. பெ. ஈறு) — அடுக்கல். அடுக்கல் + இடு.]

அடுக்கவரை *aḍukk(u)-avarai*, பெ. (n.) அவரை பார்க்க; see *avarai*.

[அடுக்கு + அவரை.]

அடுக்களை *aḍukkaḷai*, பெ. (n.) 1. அடுப்பு; oven. 2. சமையலறை; kitchen, cook-house. ''வகையமை யடுக்களைபோல்'' (மணிமே. 29 : 61). 'அடுக்களைப் பூனைபோல் இடுக் கிலே ஒளிக்கிறது', 'அடுக்களைப் பெண் ணுக்கு அழகு வேண்டுமா?', 'அடுக்களைக் கிணற்றிலே அமுதம் எழுந்தாற்போல்' (பழ.).

ம. அடுக்கள; க. அடுகள; தெ. அடசால; து. அட்கல.

[அடு + களம் — அடுக்களம் → அடுக்களை. களம் → களை. களம் = இடம்.]

அடுக்களைக் குருக்கள் *aḍukkaḷai-k-kurukkaḷ*, பெ. (n.) நாட்டுக்கோட்டைச் செட்டிப் பெண் டிர்க்குரிய குரு (செட்.நா.); spiritual guru of the women of the Nāṭṭukkōṭṭai Cheṭṭi caste.

அடுக்களை காணுதல் *aḍukkaḷai-kāṇudal*, பெ. (n.) மருமகளின் தாய் அவளை வந்து

காணும்போது செய்யும் சடங்கு (நாஞ்.); a ceremony performed by the girl's mother when she visits her daughter in her house (Nāñ.).

அடுக்களைப்புறம் *aḍukkaḷai-p-puṟam*, பெ. (n.) *கோயில் மடைப்பள்ளிச் செலவிற்காக விடப் படும் மானியம்* (M.E.R. 574 of 1926); endowment for the kitchen expenses of a temple.

ம. அடுக்களப்புறம்

[அடுக்களை + புறம்.]

அடுக்காலாத்தி *aḍukk(u)-ālātti*, பெ. (n.) *அடுக்குத்தீபம்* பார்க்க; see *aḍukku-t-tībam.*

[அடுக்கு + ஆலாத்தி.]

அடுக்காழி *aḍukk(u)-āḻi*, பெ. (n.) *மணிக்கல் பதிக்கப்பட்ட மோதிரம்;* finger ring set with gems. 'இரத்தினக் கற்கள் பதிக்கப்பெற்ற மோதிரம் அடுக்காழி என்று சொல்லப்படும்' (சி. செ. பக். 100, பத்தி 7).

[அடுக்கு + ஆழி.]

அடுக்கானகன்னி *aḍukk(u)-āṉa-kaṉṉi*, பெ. (n.) 1. *அழகும் குணமும் நிறைந்தவள்* (வின்.); perfect woman. 2. *பவளப்புற்றுச் செய்நஞ்சு (பாடாணம்)* (மூ.அ.); an arsenic preparation.

[அடுக்கு+ஆன+கன்னி.]

அடுக்கியல் *aḍukk(u)-iyal*, பெ. (n.) (யாப்.) *வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவின் உறுப்புகளுள் ஒன்றான அராகம்*; (Pros.) a constituent of a variety of *kalippā* (வீரசோ. யாப். 11, உரை).

[அடுக்கு+இயல்.]

அடுக்கிளநீர் *aḍukk(u)-iḷanīr*, பெ. (n.) *ஆயிரங் காய்ச்சித் தேங்காயின் நீர்*; water inside the kernel of a particular variety of coconut palm, which bears fruits abundantly.

[அடுக்கு+இளநீர்.]

அடுக்கிறை *aḍukkiṟai*, பெ. (n.) *வெண்டாமரை*; white lotus, *Nelumbium speciosum* (alba) (சா.அக.).

அடுக்கு-தல் *aḍukku-*, 5 செ. குன்றாவி. (v.t.) 1. *கலங்கள்போல் ஒன்றன்மே லொன்றாக வைத்தல்;* to pile up one on top of another. "திங்கண்மூன் றடுக்கிய திருமுக் குடைக்கீழ்" (சிலப்.11:1). 'அடுக்குகிற அருமை உடைக்கிற நாய்க்குத் தெரியுமா?' (பழ.). 2. *வரிசைப்பட வைத்தல்*; to arrange in a series, row, or order. பொத்தகங்களை யெல்லாம் வரிசை யாக அடுக்கிவை (உ.வ.). 3. *பணத்தை மேன் மேலும் பெருக்குதல்*; to accumulate money or wealth. "அடுக்கிய கோடி பெறினும்" (குறள், 954). 4. *சொற்களை மேன்மேலும் தொடுத்தல்*; to go on speaking or adding words. சொல்லச் சொல்ல கேட்காமல் அடுக்கிக்கொண்டே போகிறாள் (உ.வ.).

ம. அடுக்கு; க. அடுகு; துட. ஒட்த்.

[அடு → அடுக்கு.]

அடுக்கு *aḍukku*, பெ. (n.) 1. *ஒன்றன்மே லொன்றாக அடுக்கியது*; pile, tier. "அண்டகோ டியையெலாங் கருப்பவறை போலவு மடுக்கடுக் காக வமைத்து" (தாயு. தேசோ. 7). 2. *வரிசை*; series, row. கொலுப்பொம்மை யடுக்கு நன்றாயிருக்கிறது (உ.வ.). 3. *அடுக்குக் கலம்*; set of vessels which fit one within another. என் பெண் ணுக்குச் சீர்வரிசையாகப் பித்தளை பதினோ ரடுக்கு வைத்தேன் (உ.வ.). 4. *அடுக்குத் தொடர்*; repetition of words. "தழுவு தொடரடுக் கெனவீ ரேழே" (நன். 152). 5. *கோப்பு*; file. இக்கடிதத்தை அடுக்கிலே வை (உ.வ.). 6. *செழிப்பு*; prosperity. அவள் அடுக்காய் வாழ்கிறாள் (உ.வ.). 7. *நூலடுக்கு*; four threads of yarn, a term used by weavers (W.).

[அடு→அடுக்கு.]

அடுக்குக்குலை-தல் *aḍukku-k-kulai-*, 2 செ.கு.வி. (v.i.) 1. *வரிசை கலைதல்*; to get into disorder, as a row or pile of things (W.). 2. *நிலை கெடுதல்;* to become deranged, as one's business or circumstances. 3. *கற்பிழத்தல்*; to lose one's chastity, as a woman.

[அடுக்கு+குலை.]

அடுக்குச்சட்டி *aḍukku-c-caṭṭi*, பெ. (n.) *அடுக்குக் கலம்;* tier of pots of a particular size and shape; set of such vessels which fit one within another.

[அடுக்கு+சட்டி.]

அடுக்குச்சாத்து-தல் *aḍukku-c-cāttu-*, 5 செ.கு. வி. (v.i.) *தெய்வத் திருமேனிக்குக் கொய்து ஆடை யணிதல்* (கோயிலொ. 38); to adorn an idol with a cloth gathered in folds.

[அடுக்கு+சாத்து.]

அடுக்குச் செம்பரத்தை *adukku-c-cembarattai*, பெ. (n.) அடுக்காக இதழுள்ள இரட்டைச் செம் பரத்தைப் பூ; double shoe-flower (சா.அக.). இது பின்வருமாறு மூவகைப்படும்:

(1) இரட்டைச் சிவப்புச் செம்பரத்தை அல்லது குங்குமச் செம்பரத்தை; double flesh-coloured shoe-flower or scarlet shoe-flower, *Hibiscus rosa-sinensis* (carnea-plena).

(2) இரட்டை மஞ்சட் செம்பரத்தை; double bluff-coloured shoe-flower, *Hibiscus sinensis* (flava-plena).

(3) இரட்டை வெள்ளைச் செம்பரத்தை; double white-coloured shoe-flower, *Hibiscus mutabilis* (alba rubescens).

[அடுக்கு+செம்பு+அரத்தை.]

அடுக்குச் செவ்வரத்தை *adukku-c-cev-v-arattai*, பெ. (n.) அடுக்குச் செம்பரத்தை பார்க்க; see *adukku-c-cembarattai*.

[அடுக்கு + செவ் (செம்) + அரத்தை.]

அடுக்குத்தீபம் *adukku-t-tibam*, பெ. (n.) ஒன்றன்மே லொன்றான வட்ட வரிசைகளாக அமைக்கப்பட்ட கோயில் விளக்குவகை; tier of lamps in circular rows, used in temple worship.



அடுக்குத்தீபம்

[அடுக்கு+தீவம். த. தீ→தீவு→தீவம் > Skt. dīpa > த. தீபம்.]

அடுக்குத்தும்பை *adukku-t-tumbai*, பெ. (n.) காசித்தும்பை (மலை.); a species of double balsam, Banares tumbai, *Leucas linifolia* (சா.அக.).

[அடுக்கு + தும்பை.]

அடுக்குத்தொடர் *adukku-t-todar*, பெ. (n.) உடன்பாடு, உணர்ச்சி, வற்புறை அல்லது தேற்றம், விரைவு, பல்கால் நிகழ்ச்சி, இசை நிறை முதலியனபற்றி, ஒரு சொல் இருமுறை முதல் நான்குமுறை வரை அடுக்கி வருவது; repetition of a word twice to four times in token of having followed what is said or to indicate one's agreement, or emotion, or for emphasis or suggestive of swiftness or repetition of action, or as an expletive used to fill a gap in metre.

''அசைநிலை பொருணிலை இசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும்''
(நன். 396).

எ-டு:

1. **அசைநிலை**
நல்லது நல்லது, மதி மதி, அடியேன் அடியேன்.

2. **பொருணிலை**
வருக வருக, வாழ்க வாழ்க — மகிழ்ச்சி.
அடி அடி, கொல் கொல் — சினம், பகை, வெறுப்பு.
பாம்பு பாம்பு, தீத்தீத்தீ—அச்சம்.
ஐயையோ (ஐயோ ஐயோ), செத்தேன் செத்தேன்—துன்பம்.
அடாடா (அடா அடா), கெட்டேன் கெட்டேன்—மனவருத்தம்.
உண்டு உண்டு, வருவான் வருவான் — வற்புறை.
வந்தேன் வந்தேன், போ போ போ — விரைவு.
திரும்பத்திரும்ப, போய்ப்போய், மேலும் மேலும்—பல்கால் நிகழ்ச்சி.
சரிசரி, ஆகட்டும் ஆகட்டும்—உடன்பாடு.

3. **இசைநிறை**
ஏ ஏ, நல்குமே நல்குமே நல்குமே,
பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ.

குறிப்பு: (1) உலக வழக்கும் செய்யுள் வழக்கும் என, அசைநிலை இரு வகைப்படும். அவற்றுள், முன்னது பொருள் குறியாது பிறர் சொல்வதைக் கேட்டற் குறியளவாக நிற்கும்; பின்னது பொருளற்று நிற்பதாகச் சொல்லப்படும்.

(2) இசைநிறை யெல்லாம் செய்யுள் வழக்கே.

(3) அடுக்குத்தொடர் தனிச்சொல்லாக மட்டுமன்றித் தொடர்ச் சொல்லாகவும் வரும்.

எ-டு:

என்செய்தேன் என் செய்தேன், என்னத்தைச் சொல்ல என்னத்தைச் சொல்ல.

[அடுக்கு + தொடர்.]

அடுக்கு நந்தியாவட்டம் *aḍukku-nandiyāvaṭṭam*, பெ.(n.) 1. அடுக்குக் கண்வலிப் பூ; double-blossomed eye-flower, l. sh., *Tabernaemontana coronaria* (L.) (செ.அக.). 2. இரட்டை நந்தியா வட்டம்; double-blossomed common wax-flower; dog bane, *Tabernaemontana coronaria* (சா.அக.).

[அடுக்கு + Skt. nandyāvarta > த. நந்தியாவட்டம்.]

அடுக்குப்பண்ணு-தல் *aḍukku-p-paṇṇu-*, 5 செ. குன்றாவி. (v.t.) அணியம் (ஆயத்தம்) செய்தல்; to prepare, to make preparation(s).

[அடுக்கு + பண்ணு.]

அடுக்குப்பணியாரம் *aḍukku-p-paṇiyāram*, பெ. (n.) கோதுமை மாவால் ஏழு அடைகளைத் தட்டி நெய்கூட்டி, ஒன்றன்மே லொன்றாக அடுக்கிச் சுட்டெடுக்கும் பலகாரம். இதற்குப் பூரி எனவும் பெயர்; a kind of cake made of seven thin layers of wheat flour and fried in ghee (சா.அக.).

[அடுக்கு + பணியாரம்.]

அடுக்குப்பருத்தி *aḍukku-p-parutti*, பெ. (n.) பெரும்பருத்தி, ஒருவகை யுயர்ந்த பருத்தி (G. Sm. D. I. i, 227); a superior variety of cotton raised in red loam.

[அடுக்கு + பருத்தி.]

அடுக்குப்பற்சுறா *aḍukku-p-paṟ-cuṟā*, பெ. (n.) ஒருவகைச் சாம்பல்நிறச் சுறா; grey shark, *Carcharias ellioti*.

[அடுக்கு + பல் + சுறா.]

அடுக்குப்பாத்திரம் *aḍukku-p-pāttiram*, பெ. (n.) ஒன்றனுள் ஒன்று அடுக்கி அடுக்காகவுள்ள கலங்கள்; a set of vessels or cups placed one inside of another or one upon another.

ம. அடுக்குப் பாத்திரம்; க. அடுக்கு பாத்ரெ.

[அடுக்கு + Skt. pāttra > த. பாத்திரம்.]

அடுக்குப்பார்-த்தல் *aḍukku-p-pār-*, 4 செ.கு.வி. (v.i.) 1. தக்க துணை தேடுதல் (இ.வ.); to look out for suitable help or companion (Loc.). 2. ஒத்திகை பார்த்தல் (யாழ்ப்.); to rehearse, as stage players (J.).

[அடுக்கு + பார்.]

அடுக்குப்பாளம் *aḍukku-p-pāḷam*, பெ. (n.) தெய்வச்சிலைக்குப் பின்புறத்திற் சாத்தும் கொய்த ஆடை; cloth gathered into folds, worn on the back of an idol.

[அடுக்கு + பாளம்.]

அடுக்குப்பாற்சொற்றி *aḍukku-p-pāṟcoṟṟi*, பெ. (n.) பாற்சொற்றி யென்னும் செடிவகை; a variety of the plant, *Ruellia secunda* (W.).

[அடுக்கு + பாற்சொற்றி.]

அடுக்குப்பாறை *aḍukku-p-pāṟai*, பெ. (n.) நிலத்தில் தளவரிசையாகப் பொத்தக ஏடுகள்போல் ஒன்றன்மே லொன்றா யமைந்த பல்வேறு படைக் கற்பாறை; a mound of rock composed of different horizontal strata of rocks, like the leaves of a book (சா.அக.).

[அடுக்கு + பாறை.]

அடுக்குப்பானை *aḍukku-p-pāṉai*, பெ. (n.) 1. பல்பொருள்கள் போட்டு வைப்பதற்கு ஒன்றன்மேலொன்றா யடுக்கிய மட்பானைகள்; big earthen pots piled one over another and used as receptacles. 2. சில குலத்தார் கலியாணச் சடங்கிற்கு அடுக்கிவைக்கும் ஏழு கோலப் பானைகள்; tier of seven painted pots used at marriage ceremony among certain castes.

[அடுக்கு + பானை.]

அடுக்குப்பூண்டு *aḍukku-p-pūṇḍu*, பெ. (n.) கோபுரப் பூண்டு; a kind of plant (சா.அக.).

[அடுக்கு + பூண்டு.]

அடுக்குமல்லிகை *aḍukku-malligai*, பெ. (n.) பல இதழ் வரிசையுள்ள மல்லிகைவகை (மூ.அ.); double-flowered jasmine, m. sh., *Jasminum sambac*.

அடுக்குமாடி *aḍukku-māḍi*, பெ. (n.) பல நிலையுள்ள கட்டடம் அல்லது வீடு; multi-storied building or house. ஏழடுக்குமாடி.

அடுக்குமுள்ளி *aḍukku-muḷḷi*, பெ. (n.) பெருமுள்ளி யென்னும் பூடுவகை (மூ.அ.); thorn-bush, a variety of prickly night shade, Indian hyssop, Solanum (Genus) (சா.அக.)



அடுக்குப்பற்சுறா (வாய்)



அடளை

அடுக்குச்செம்பரத்தை

அடுக்குத்தீபம்



அடுக்குப்பற்சுறா

அடுக்குமல்லிகை

அடுக்குமெத்தை[1] *aḍukku-mettai*, பெ. (n.) தேங்காய் நார், பருத்திப் பஞ்சு, இலவம் பஞ்சு, ஓதிமத் தூவி, நறுமென் மலரிதழ் ஆகியவற்றா லமைந்த மெத்தைகள் முறையே ஒன்றன்மே லொன்றா யமைந்த அஞ்சணைப் படுக்கை; bed with mattresses made of coconut fibre, cotton, silk-cotton, swan's down and soft fragrant flower petals, placed one upon another in the given order.

அடுக்குமெத்தை[2] *aḍukku-mettai*, பெ. (n.) அடுக்குமாடி பார்க்க; see *aḍukku-māḍi*.

அடுக்குவட்டா *aḍukku-vaṭṭā*, பெ. (n.) சாப்பாடு தூக்கிக்கொண்டு போவதற்குப் பல வட்டக் கிண்ணங்கள் ஒன்றன்மே லொன்றாக அமைந்த தூக்குக் கலம் (இக்.வ.); tiffin-carrier or meal-carrier consisting of several cups or round vessels placed one upon the other (Mod.).

அடுக்குவாகை *aḍukku-vāgai*, பெ. (n.) பெரு வாகைமரம்; sirissa tree, *Albizzia labbak* (சா.அக.).

அடுக்குவாழை *aḍukku-vāḻai*, பெ. (n.) பனை வாழை; a kind of plantain tree (சா.அக.).

ம. அடுக்கன் வாழ

அடுக்குவிருசு *aḍukku-virušu*, பெ. (n.) பொரி வாணவகை; (T.C.M. ii, 2, 598); a kind of rocket.

அடுக்குள் *aḍukkuḷ*, பெ. (n.) 1. அறைக்குள் அறை; room within a room. 2. சமையலறை; kitchen (Brāhm.).

க. அடுகள

[அடுக்கு + உள்.]

அடுக்குளமைந்தோன் *aḍukkuḷ-amaindōṉ*, பெ. (n.) ஒருவகைச் செய்ந்நஞ்சு (மிருத பாடாணம்); a kind of arsenic preparation (சா.அக.).

அடுக்கூமத்தை *aḍukk(u)-ūmattai*, பெ. (n.) காட்டுமத்தை; downy datura, m. sh., *Datura metal* (சா.அக.).

[அடுக்கு + ஊமத்தை. த. மத்தை > Skt. matta → unmatta > த. ஊமத்தை.]

அடுகலம் *aḍu-kalam*, பெ. (n.) அடுகலன் பார்க்க; see *aḍu-kalaṉ*.

[அடு + கலம்.]

அடுகலன் *aḍu-kalaṉ*, பெ. (n.) சமையற்கலம்; vessel for cooking. "அடுகலன் பிறவு மெரி பொனா லிழைத்து" (திருவிளை. திருநகரப். 64).

க. அடுகல

[அடு + கலம். கலம் → கலன்.]

அடுகளம் *aḍu-kaḷam*, பெ. (n.) போர்க்களம்; battle-field. "அடுகளத்துள்.........வாளமர் வேண்டி" (திவ். இயற். 1 : 81).

அடுகனலவன் *aḍu-kaṉal-avaṉ*, பெ. (n.) அழிப்புத் தொழில் செய்யும் ஊழித்தீ யுருத்திரன்; Rudra, the God of destruction. "அடுகனல வன் கூர்மாண்ட னாடகன்" (கந்தபு. உற்பத். திருக்கல். 94).

[அடு + கனல் + அவன்.]

அடுகிடை *aḍu-kiḍai*, பெ. (n.) அடுத்துக் கிடத்தல்; lying closely.

[அடு + கிடை. கிடை = கிடத்தல்.]

அடுகிடைபடுகிடை *aḍu-kiḍai-paḍu-kiḍai*, பெ. (n.) 1. விரும்பியது பெறுமளவும் ஒருவர் வீட்டின்முன் படுத்துக்கிடக்கை; lying down at a person's house determined not to leave the place till the thing asked for is obtained (W.). 2. நோய்வாய்ப்பட்டுப் பாயும் படுக்கையு மாய்க் கிடத்தல்; being completely bedridden, as in illness. அவன் ஒரு மாதமாக அடு கிடை படுகிடையாய்க் கிடக்கிறான் (உ.வ.).

அடுகுவளம் *aḍugu-vaḷam*, பெ. (n.) 1. அடுக்கி வைக்கப்பட்ட உண்டிப்பெட்டி (ஈடு, 6.1 : 2); pile of baskets or vessels containing cakes, sweet meats, etc., one on another. 2. உண்டி; food. 'அடுகுவளம் தடைப்படும் போல் காணும்' (ஈடு, 10.4 : 3).

[அடுக்கு → அடுகு + வளம் = உண்டிப் பெருக்கம்.]

அடுகுறல் *aḍuguṟal*, தொ.பெ. (vbl. n.) கொல்லுதல்; killing. "அடுகுற் றிடுகு லமடற் கதைக டொடுகுற் றனர்" (கந்தபு. யுத்த. மூவாயிர. 28).

[அடு → அடுகு + உறல். 'கு' சொல் விரி வீற்றுச் சாரியை.]

அடுகைமனை *aḍugai-maṉai*, பெ. (n.) மடைப் பள்ளி; kitchen, cook-house. "அங்கிமுதற் றென்றிசை யந்தத் தடுகைமனை" (சிவதரு. சிவஞானதா. 70).

க. அடிகெமனெ

[அடு → அடுகை + மனை.]

அடுங்குன்றம் *aḍuṅ-kuṉṟam,* பெ. (n.) **யானை;** elephant (சா.அக.).

[அடுதல் = கொல்லுதல். குன்றம் = சிறுமலை. அடுங்குன்றம் = கொல்லுஞ் சிறுமலை போன்றது.]

அடுசில் *aḍušil,* பெ. (n.) **சோறு;** boiled rice. 'அடுசில்நெய் யாகிய ஆவுதி' (பதிற். 21, உரை).

ம. அட்டம்; க. அடிகெ; தெ. அட்டமு; து. அட்டெ; Skt. aṭṭam.

[அடு → அடுதல் → அடுசல் → அடுசில்.]

அடுசிலைக்காரம் *aḍušilai-k-kāram,* பெ. (n.) **செந்நாயுருவி** (மூ.அ.); red species of Indian burr, *Achyranthus aspera* (சா.அக.).

அடுத்த *aḍutta,* கு.பெ.எ. (adj.) 1. **ஒட்டியுள்ள, நெருங்கியுள்ள;** adjoining, contiguous, neighbouring, next. 'அடுத்த வீட்டுக்காரி பிள்ளை பெற்றாளென்று அம்மிக்குழவி யெடுத்துக் குத்திக்கொண்டாளாம்' (பழ.). 2. **அண்டியுள்ள;** support-seeking.

ம. அடுத்த; மா. அட்கெ; கூ. அட.

அடுத்தடுத்து *aḍutt(u)-aḍuttu,* கு.வி.எ. (adv.) 1. **ஒன்றன்பின் ஒன்றாக;** one after another. "அடுத்தடுத்து வன்காய் பலபல காய்ப் பினும்" (நாலடி. 203). 2. **அடிக்கடி;** often, ever and anon. "அடுத்தடுத்து வேக முடைத் தாம்" (நாலடி. 348). 'அடுத்தடுத்துச் சொன் னால் தொடுத்த காரியம் முடியும்' (பழ.).

ம. அடுத்தடுத்து

[அடுத்து + அடுத்து.]

அடுத்தணித்தாக *aḍutt(u)-aṇitt(u)-āga,* கு.வி.எ. (adv.) **மிக அண்மையில்** (ஈடு, 9.8 : 7); very near, close by.

[அடுத்து + அணித்து + ஆக.]

அடுத்தமுறை *aḍutta-muṟai,* பெ. (n.) 1. **மறு தடவை;** next time. 2. **நெருங்கின உறவு;** nearest relationship.

அடுத்தவரைக் கெடு-த்தல் *aḍuttavarai-k-keḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) **புகலடைந்தவர்க்குத் தீங்கு செய்தல்;** to ruin or kill refugees treacherously. 'அடுத்தவரைக் கெடுக்கலாமா?' (பழ.).

[அடுத்தவரை + கெடு.]

அடுத்தார் *aḍuttār,* பெ. (n.) 1. **உதவி நாடி வந்தவர்;** those who have approached for help. 2. **வந்து சேர்ந்தவர்;** those who have joined, seeking protection.

அடுத்தாரைக்கொல்லி *aḍuttārai-k-kolli,* பெ. (n.) **நெருப்பு;** fire (சா.அக.).

ஒ.நோ: "சேர்ந்தாரைக் கொல்லி" (குறள், 306).

[அடுத்த + அவரை – அடுத்தவரை → அடுத் தாரை + கொல்லி.]

அடுத்தாரை மயக்கி *aḍuttārai-mayakki,* பெ. (n.) **கஞ்சா. இதன் மறுபெயர்கள் கோரக்கர் மூலி, சித்தருண்ணு மூலி, கற்பத்து ஞானி, யோகம் வளர்க்கு மூலி என்பன;** gunjah, *Cannabis sativa.* It is known by different names such as carl hemp, Korakkan's drug, fimble, gallow grass, giddy plant, Indian hemp, wishing plant, victory (siddhi) plant and so on (சா.அக.).

அடுத்தாள் *aḍuttāḷ,* பெ. (n.) **உதவியாள்** (இ.வ.); assistant (Loc.).

[அடுத்த + ஆள்.]

அடுத்தி *aḍutti,* பெ. (n.) **முறைகேடான வட்டி** (W.G.); usury.

க. அட்; தெ. அடிதி; து. அடவு.

[அடு → அடர் → அடர்த்தி → அடத்தி → அடுத்தி.]

அடுத்து *aḍuttu,* கு.வி.எ. (adv.) 1. **நெருங்கி, அண்டி;** having approached. 'அடுத்து வந்த வர்க்கு ஆதரவு சொல்வோன் குரு' (பழ.). 2. **மறு நிகழ்ச்சியாக;** as the next item, next. அடுத்து, பேரா. இராமசாமிக் கவுண்டர் அவர்கள் தொல்காப்பியம்பற்றி ஓர் அரிய ஆய்வுரை நிகழ்த்துவார்கள். 3. **மேன்மேல்;** again and again, further and further. "அதனை யடுத்தூர்வ தஃதொப்ப தில்" (குறள், 621).

அடுத்துக் கழுத்தறு-த்தல் *aḍuttu-k-kaḻutt(u)-aṟu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. **நம்பிக்கைக் கேடுசெய்து கொல்லுதல்;** to kill by treachery. 2. **நண்பன்போற் பலநாட் பழகிக் கேடு செய் தல்;** to do harm insidiously.

[அடுத்து + கழுத்து + அறு.]

அடுத்துக்கெடு-த்தல் *aḍuttu-k-keḍu-*, 4 செ. குன்றாவி. (v.t.) ***நட்புப்போற் சேர்ந்து கேடு செய்தல்***; to ruin a person by associating with him, to kill by treachery. 'அடுத்துக் கெடுப்பான் கபடன், தொடுத்துக் கெடுப்பாள் மடந்தை' (பழ.).

[அடுத்து + கெடு.]

அடுத்துமுயல்-தல் *aḍuttu-muyal-*, 13 செ.கு.வி. (v.i.) ***இடைவிடாது முயலுதல்***; to make continuous effort. "அடுத்து முயன்றாலும்" (மூதுரை, 5). 'அடுத்து முயன்றாலும் ஆகும் நாள்தான் ஆகும்' (பழ.).

அடுத்துவரலுவமை *aḍuttu-varal-uvamai*, பெ. (n.) (அணி.) ***உவமைக்கு உவமை***; (Rhet.) comparison in which the standard of comparison is in its turn compared to another.

எ-டு: பவளம்போன்றது கோவைப்பழம்; கோவைப்பழம் போன்றது சிவந்த உதடு. "துப்புறழ் தொண்டைச் செவ்வாய்" (சீவக. 107) என்பதில், 'தொண்டை வாய்க்கு அடை. துப்பை யொக்கும் தொண்டை போலும் செவ்வாயென இரண்டுவமையும் செவ்வாயை நோக்குதலின், அடுத்துவரலுவமை யன்று' (நச். உரை).

[அடுத்து + வரல் + உவமை.]

அடுத்துவிளக்கு-தல் *aḍuttu-viḷakku-*, 5 செ. குன்றாவி. (v.t.) 1. ***மாழை (உலோக)ப் பற்று வைத்தொட்டுதல்***; to solder. 'அடுத்து விளக்கின மொட்டும் பறளையும்' (S.I.I. ii, 96). 2. ***அடுத்தாற்போல் விளக்கிச் சொல்லுதல்***; to explain subsequently.

அடுத்தூண் *aḍutt(u)-ūṇ*, பெ. (n.) ***பிழைப்பிற்கு விடப்பட்ட நிலம்*** (ஈடு, 4.8 : 8); land given for one's livelihood.

ம. அடுத்தூண்

[அடுத்து + ஊண்.]

அடுத்தேறு *aḍutt(u)-ēṟu*, பெ. (n.) ***மிகை***; excess. 'அடுத்தேறாக வந்த கரத்தைக் கழித்து' (ஈடு, 3.8 : 9).

[அடுத்து + ஏறு.]

அடுநறா *aḍu-naṟā*, பெ. (n.) ***காய்ச்சிய சாறாயம்***; distilled intoxicating drink.

அடுப்பங்கடை *aḍuppaṅ-kaḍai*, பெ. (n.) 1. ***அடுப்பின் பக்கம்***; side of the oven. 2. ***சமையலறை***; kitchen.

[அடுப்பு + அம் (சாரியை) + கடை. கடை = பக்கம்.]

அடுப்பங்கரை *aḍuppaṅ-karai*, பெ. (n.) ***அடுப்பங்கடை பார்க்க***; see *aḍuppaṅ-kaḍai*.

[கடை → கரை.]

'அடுப்பாங்கரை' என்பது நீட்டிய உலக வழக்கு.

அடுப்பம் *aḍuppam*, பெ. (n.) 1. ***கனம்***; heaviness, weight. 'மேக அடுப்பமும் பார் அடுப்பமும் ஒத்தன பேய்க்கணங் கட்கு' (தக்கயாகப். 361, உரை). 2. ***நெருங்கிய உறவு*** (நெல்லை); close intimacy or relationship (Tn.).

ம. அடுப்பம்

[அடு → அடுப்பம். அடு = நெருங்கு.]

அடுப்பு *aḍuppu*, பெ. (n.) 1. ***சமையற் கலத்தை யேற்றி யெரிக்கவுதவும் முக்கற் கூட்டு***; three stones arranged in triangular form to serve as an oven. 'அடுப்புக் கூட்டுப்போல...... மூன்று புள்ளிவைத்து எழுதப்படுதலால்' (நன். 90, சடகோ. உரை). 'அடுப்புக் கட்டிக்கு அழகு வேண்டுமா?' (பழ.). 2. ***விறகிட்டு எரித்தற்கு மண், இரும்பு முதலியவற்றாற் செய்யப்பட்ட கருவி***; oven, fire-place for cooking. "பாலைக் கறந் தடுப்பேற வைத்து" (திவ். பெரியாழ். 2.9 : 5). 'அடுப்பு மூன்றானால் அம்மா பாடு திண்டாட்டம்' (பழ.). 3. ***அடுப்பு நெருப்பு***; fire, in the oven. அடுப்பெரிகிறதா பார்? (உ.வ.). 'அடுப்பு எரிந்தால் பொரி பொரியும்', 'அடுப்புநெருப்பும் போய் வாய்த்தவிடும் போச்சு' (பழ.). 4. ***முக்கல் லடுப்பு வடிவான நாண்மீன் (பரணி)***; the second lunar constellation. 5. ***மனைவி*** (இழிசி.வ.); wife. 6. ***அச்சம்*** (பிங்.); fear.

ம. அடுப்பு; து. அட்டு, அட்கல.

[அடுதல் = சுடுதல், சமைத்தல். அடு → அடுப்பு.]

அடுப்பு ஊதி *aḍuppu-ūdi*, பெ. (n.) ***பொருவா, ஒருவகைக் கடல்மீன்***; a kind of sea-fish, *Thryssa malabarica*.

அடுப்புக்கரி *aḍuppu-k-kari*, பெ. (n.) 1. ***அடுப்பி லெரித்த கரி***; dead coals from an oven. 2. ***மரக்கரி***; charcoal, as taken out from or used in an oven.

ம. அடுப்புக்கரி; க. அடுகரி; து. அட்கலகரி.

[அடுப்பு + கரி.]

அடுப்புக்கும்பி *aḍuppu-k-kumbi*, பெ. (n.) ***அடுப்புச் சாம்பல் அல்லது சுடுசாம்பல்***; hot ashes in the oven.

[அடுப்பு + கும்பி.]

அடுப்புக்கொட்டம் *aḍuppu-k-koṭṭam*, பெ. (n.) ***சமையற் கொட்டகை***; kitchen shed.

[அடுப்பு + கொட்டம்.]

அடுப்புந்துடுப்புமாய் *aḍuppun - tuḍuppum - āy*, கு.வி.எ. (adv.) ***சமையல்வேலை செய்து கொண்டு***; engaged in cooking. அடுப்புந் துடுப்புமா யிருக்கிறேன்; இப்போது வரமுடி யாது (உ.வ.).

[அடுப்பும் + துடுப்பும் + ஆய்.]

அடுப்புப்பற்றவை - த்தல் *aḍuppu-p-paṟṟa-vai-*, 4 செ.கு.வி. (v.i.) ***அடுப்பில் நெருப்பு மூட்டுதல்***; to kindle fire in the oven.

[அடுப்பு + பற்றவை.]

அடுப்புவெட்டு *aḍuppu-veṭṭu*, பெ. (n.) ***மழித்த இடம் அடுப்புத் திறப்புப்போல் அல்லது தலை கீழான பகரம்போல் தோன்றுமாறு, முன்றலை மயிரை வறண்டி வைத்தல்***; shaving the hair just above the forehead, in such a fashion that the shaven part looks like the opening of an oven.

அடுப்பூதி *aḍupp(u)-ūdi*, பெ. (n.) 1. ***சமையற் கா-ரன்-ரி***; cook. 2. ***மூடன்*** (மதி. களஞ். ii, 5); fool.

[அடுப்பு + ஊதி.]

அடுப்பூது-தல் *aḍupp(u)-ūdu-*, 5 செ.கு.வி. (v.i.) ***அடுப்பில் விறகு எரியாதபோது ஊதாங்குழல் வாயிலாகக் காற்றூதி யெரிய வைத்தல்***; to blow and kindle the fire in the oven. 'அடுப் பூதும் பெண்ணிற்குப் படிப்பென்னத்திற்கு?' (பழ.).

[அடுப்பு + ஊது.]

அடுப்பெரி-தல் *aḍupp(u)-eri-*, 2 செ.கு.வி. (v.i.) 1. ***அடுப்பில் நெருப்பு எரிதல்***; to burn, as fire in the oven. 2. ***வீட்டில் சமையல் நடைபெறு தல்***; to do cooking in a house. பணமுடை யால் ஐந்து நாளாய் அடுப்பெரியவில்லை (உ.வ.).

[அடுப்பு + எரி.]

அடுப்பேற்று-தல் *aḍupp(u)-ēṟṟu-*, 5 செ.குன்றா வி. (v.t.) ***உலைவைத்தல், சமைத்தற்கு நீரிட்ட கலத்தை அடுப்பின்மேல் வைத்தல்***; to set a pot of water on the fire for boiling or cooking anything.

[அடுப்பு + ஏற்று.]

அடும்பு *aḍumbu*, பெ. (n.) அடம்பு பார்க்க; see *aḍambu*. ''அடும்பிவ ரணியெக்கர்'' (கலித். 132 : 16).

ம., க., து. அடும்பு.

[அடம்பு → அடும்பு.]

அடுமா *aḍumā*, பெ. (n.) ***கொட்டை*** (பரி.அக.); nut.

[ஒருகா. அண்டுமா (அண்டிமா) → அடுமா.]

அடுவம் *aḍuvam*, பெ. (n.) ***மலைப்புன்கு*** (L.); Wight's Indian nettle.

அடுவல் *aḍuval*, பெ. (n.) ***வரகு நெல் கலப்பு*** (யாழ்ப்.); mixure of paddy and common millet (J.).

[ஒருகா. அடு → அடுவல். அடு = சேர், கல.]

அடே *aḍē*, இடை. (part.) ***'அடா' என்னும் ஆண்பால் (சேய்மை) விளியின் மறுவடிவம்***; an exclamation of calling, another form of the masculine address *aḍā*.

[அட (விளியி.) + ஏ (விளியு.).]

அடேயப்பா *aḍē-y-appā*, இடை. (int.) ***வியப்புக் குறிப்பு***; an exclamation of astonishment.

[அட (விளியி.) → அடே. அப்பன் → அப்பா (விளிப்பெயர்). அடே + அப்பா – அடேயப்பா. முதற்காலத்தில் விளிப்பெயராக மட்டு மிருந்த 'அப்பா' என்னுஞ் சொல், பிற்காலத்தில் வியப் பிடைச் சொல்லுமாயிற்று.]

அப்பா பார்க்க; see *appā*.

அட, அடா, அடே, அடோ என்னும் பல வடிவான விளியிடைச் சொல் தந்தை முறைப் பெயருக்கு முன்னும் வரும், பின்னும் வரும். ஆயின், இட வேறுபாட்டிற்கேற்பப் பொருள் வேறுபடும்.

எ-டு :

அடேயப்பா (அடாயப்பா) – வியப்புக் குறிப்பு.

அப்பாடா (அப்பா + அடா) – ஓய்வு அல்லது இளைப்பாறற் குறிப்பு.

அடை[1] - தல் *aḍai-*, 2 செ.கு.வி. (v.i.) 1. **பறவைகள் கூட்டில் இராத் தங்குதல்**; to go to roost, as birds. 2. **பாம்புகள் வளைக் குட் புகுதல்**; to resort to holes, as snakes. 3. **ஆடுமாடுகள் கூடிக்கிடத்தல்**; to gather together and lie down for rest, as sheep or cattle. 4. **கோழி அடைகாத்தல்**; to sit on eggs, as a hen. 5. **மாந்தர் இறந்தடங்குதல்**; to attain eternal rest, die. அந்தப் பெரியவர் அடைந்துவிட்டார் (உ.வ.). 6. **தூசி சேர்தல்**; to collect, gather as dust. மேசை நாற்காலி களில் நாள்தோறும் தூசி வந்தடைகிறது (உ.வ.). 7. **வண்டல் படிதல்**; to be deposited, as alluvium. 8. **கிணறு தூர்தல்**; to be silted up, choked up, filled up, closed, as a well. 9. **கடன்தீர்தல்**; to be paid-up, as a debt. கடனெல்லாம் அடைந்துபோயிற்று (உ.வ.). 10. **சேர்ந்திறுகுதல்**; to settle, become close, compact, hard, as sand by rain. 11. **பொருந்து தல்**; join, mingle. ''அணுவினோ டெல்லா மாகி யடைந்திடுந் தத்துவங்கள்'' (சி. சி. சுபக். 2 : 78). 12. **அடைகா யடைதல்**; to be preserved, as pickles (W.). —, 2 செ.குன்றாவி. (v.t.) 1. **சேர்தல்**; to reach, arrive at. ''கரைய டைந்தனர்'' (பாரத. வாரணா. 2). 2. **அடைக்கலம் புகுதல்**; to take refuge in. ''அடைந்தவர்க் கருளா னாயின்'' (கம்பரா. யுத்த. வீடண. 108). 3. **பெறுதல்**; to get. இந்தியா 1947ஆம் ஆண்டு ஆங்கிலராட்சியி னின்று விடுதலையடைந்தது (உ.வ.). 4. **சாணை அல்லது சூடு சேர்த்தல்**; to heap up sheaves or ears of corn in pyramidal shape with round, square or rectangular base. உழவர், அறுவடையின் பின், அரிக்கட்டுகளை அல்லது கதிர்களைச் சாணையாக அடைந்து வைப்பர் (உ.வ.).

ம. அடயுக; க., பட. அடெ; தெ. அடகு; துட., கோத. அட்த; து. அடெபுனி.

[அள்ளுதல் = நெருங்குதல், சேர்தல். அள் → அண் → அடு → அடை. இனி, அண் → அண்டு → அடு → அடை என்றுமாம்.]

அடை[2]-த்தல் *aḍai-*, 4 செ.கு.வி. (v.i.) 1. **ஊழால் முன்னமே நெறியிடப்படுதல் (விதிக்கப்படுதல்)**; to be pre-ordained by destiny. 'தனக்கடைத்த நாளறுதலின்' (சீவக. 2831, நச். உரை). 2. **வேலைக்கமர்த்தப்படுதல்**; to be appointed, assigned. ''கழனிக் கடைத்த மகளிர்'' (திவா. 2 : 140). 3. **உறுப்பின் புலன் அல்லது செயல் கெடுதல்**; to be obstructed, as the ear, throat. வெடியோசை கேட்டதும் காது அடைத்துக் கொண்டது. அந்த மருந்து உண்டதிலிருந்து தொண்டை அடைக்கிறது (உ.வ.). 4. **உரியதாதல்**; to be appropriate. 'அக் காலத்துக்கு அடைத்த காற்றுக்கள்' (ஈடு, 10 : 3, பிர.). —, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **கதவு சாத்துதல்**; to shut, close the door. ''பாடுநர்க் கடைத்த கதவின்'' (புறநா. 151 : 10). 2. **வழிதடுத்தல்**; to obstruct, block, as a passage. ''வாழ்நாள் வழியடைக்குங் கல்'' (குறள், 38). 'அடைத்தவன் காட்டைப் பார், மேய்த்தவன் மாட்டைப் பார்' (பழ.). 3. **துளையடைத்தல்**; to fill up, a hole. எலி வளையை அடைத்துவிட்டேன் (உ.வ.). 4. **புகுத்துதல்**; to put in, insert. ''கடுகிற் பெரிய கடலடைக்கும்'' (தாயு. சொல்லரிய. 1). 5. **பூட்டுதல், தாழிடுதல்**; to lock, fasten. ''அன்பிற்கு முண்டோ வடைக்குந் தாழ்'' (குறள், 71). 6. **சிறையில் வைத்தல்**; to imprison. ''செழிய னடைத்த சென்னி பாட'' (கல்லா. 34 : 7). 7. **ஒளித்துவைத்தல்**; to conceal, hide. 8. **ஒப்புவித்தல், ஒப்படைத்தல்**; to entrust. ''கணங்கடமக் கடைத்துப் புறப்பட்டான்'' (திருவாலவா. 28 : 13). 9. **குத்தகைக்கு விடுதல்**; to lease, give in contract, farm out. என் நிலத்தை வாரத்திற்கு அடைத்திருக்கிறேன் (உ.வ.). 10. **கொடுத்தல்**; to bestow. ''உயிர்க்கின்ப மென்று மடைப் பானாம்'' (சி. சி. சுபக். 1 : 54). 11. **பிரித்தல்**; to divide. 'நாலு கூறாக அடைப்பதாகவும்' (S.I.I. i, 64).

ம. அடெக்க; க. அடயிசு; பர். அட்டொ மர்; பட. அட்டெக.

[அடு → அடை.]

அடை[3] *aḍai*, பெ. (n.) 1. **கோழி அடைகாத் தல்**; incubation. 2. **பொருந்துகை**; joining. ''ஆடுகின்றனர் பண்ணடை வின்றியே பாடு கின்றனர்'' (கம்பரா. அயோத். மந்தரை. 2). 3. **சேர்ப்பிக்கை**; delivering, conveying. ''அவன்க ணடைசூழ்ந்தார் நின்னை'' (கலித். 115 : 18). 4. **அடைக்கலம்**; resort, refuge. 5. **அடைக்கலப்பொருள்** (ஈடு, 5.10 : 5); deposit, that which has been accepted for safe keeping. 6. **சன்னமான அப்பவகை**; thin cake, wafer. ''நமக்கு மாவடை பழவனம் பிரியம்'' (அழகர் கலம். 55). 7. **தோசையைப்போல் தட்டிய மருந்து**; a medicinal preparation pressed and

shaped like a round and flat rice-cake (சா.அக.). 8. **இலை**; leaf. ''புழற்கா லாம்ப லகலடை'' (புறநா. 266 : 3). 9. **வெற்றிலை**; betel leaf. ''நூறு காயடை கூடும்'' (சி. சி. பர. உலகா. மறு. 7). 10. **இலைக்கறி** (பிங்.); greens. 11. **முளை**; sprout. ''பூம்புற நல்லடை'' (பெரும்பாண். 278). 12. **சுமை யடை (சும்மாடு)**; load-pad or cushion for the head to bear a load. 13. **தாங்கி**; prop, slight support (W.). 14. **கனம்** (பிங்.); gravity, weight. 15. **கரை**; bank, shore. 'கடலுங் கடலடைந்த விடமுங் கடலெனப்படுதலின், அடைகடலென்பது அடையாகிய கடலென இருபெயர்ப் பண்புத்தொகை' (தொல். சொல். எச்ச. 23, சேனா. உரை). 16. **வழி** (பிங்.); way. 17. **அடைமொழி (விசேடணம்)**; qualifying word or clause, attribute, adjunct. ''ஈரடை முதலோ டாதலும்'' (நன். 403). 18. **பண்புச்சொல்**; word denoting quality. ''அடைசினை முதலென'' (தொல். சொல். கிளவி. 26). 19. **கலிப்பாவின் உறுப்பாகிய அடைநிலைக்கிளவி யென்னும் தனிச்சொல்** (தொல். பொருள். செய். 131); detached foot that is a constituent of *kalippā*. 20. **நிலவரி** (வின்.); land tax, king's share of the produce of the land whether one-sixth or one-tenth or otherwise (W.). 21. **விலை** (பிங்.); price. 22. **கருக்கு (கஷாயம்)**; decoction. 23. **தேனடை**; honey comb.

ம. அட; க. அடெ, அடவு; தெ. அட்டு; து. அட்டெ.

[அடு → அடை.]

அடை[4] *aḍai*, பெ. (n.) **செருப்படை, செருப்படி** (பச்.மூ.); a medicinal herb, *Coldenia procumbens* (சா.அக.).

அடைக்க *aḍaikka*, கு.வி.எ. (adv.) **முழுவதும்**; entirely. வீடடைக்க நோயா யிருக்கிறது (உ.வ.).

ம. அடக்கம்; க., பட. அடெ.

[அடை → அடைக்க.]

அடைக்கண் *aḍai-k-kaṇ*, பெ. (n.) **கண்ணிமைகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளும் நோய்** (வைத். சங்.); a disease that makes eyelids stick to each other, *ankyloblepharon*.

[அடை + கண்.]

அடைக்கப்பட்டார் *aḍaikka-p-paṭṭār*, பெ. (n.) **கள்ளர் குலப் பட்டப்பெயர்களு ளொன்று** (கள்ளர் சரித். பக். 145); a title of Kaḷḷars.

அடைக்கப்புடைக்க *aḍaikka-p-puḍaikka*, கு.வி.எ. (adv.) **பரபரப்பாக, சுருக்காக, விரைவாக**; hurriedly, quickly.

அடைக்கலக்குருவி *aḍaikkala-k-kuruvi*, பெ. (n.) அடைக்கலங்குருவி பார்க்க; see *aḍaikkalaṅ-kuruvi*.

[அடைக்கலம் + குருவி.]

அடைக்கலங்கா-த்தல் *aḍaikkalaṅ-kā-*, 4 செ. கு.வி. (v.i.) **ஒப்படைக்கப்பட்ட பொருளைப் பாதுகாத்தல்**; to protect one who seeks refuge, to take care of a deposit or trust.

[அடைக்கலம் + காத்தல்.]

அடைக்கலங்காத்தான் *aḍaikkalaṅ-kāttāṉ*, பெ. (n.) **அடைக்கலங்குருவி** பார்க்க; see *aḍaikkalaṅ-kuruvi*.

ம. அடக்காவு

[அடைக்கலம் + காத்தான்.]

அடைக்கலங்குருவி *aḍaikkalaṅ-kuruvi*, பெ. (n.) **வீட்டுக் கூரைகளிற் கூடுகட்டி வாழும் குருவி**; house sparrow, *Passer domesticus*. 'அடைக் கலங் குருவிக்கு ஆயிரத்தெட்டுக் கண்டம்' (பழ.).



அடைக்கலங்குருவி ஆண் பெண்

ம. அடுக்கலக்குரிகில்

[வீடுகளில் அடைந்து வாழ்வதால், அடைக் கலங்குருவி யெனப்பட்டது.]

அடைக்கலஞ்செய்-தல் *aḍaikkalañ-cey-*, 1 செ. குன்றாவி. (v.t.) **சவத்தைப் புதைத்தல்** (மதி. களஞ். ii, 145); to bury, intern, entomb.

ம. அடக்கு

[அடைக்கலம் + செய்.]

அடைக்கலத்தளம் *aḍaikkala-t-taḷam*, பெ. (n.) புகலிடம் (இராட்.); asylum, place of refuge (R.).

[அடைக்கலம் + தளம்.]

அடைக்கலத்தான் *aḍaikkalattāṉ*, பெ. (n.) அடைக்கலங்குருவி பார்க்க; see *aḍaikkalaṅ-kuruvi.*

[அடைக்கலம் + அத்து (சாரியை) + ஆன்.]

அடைக்கலப்பொருள் *aḍaikkala-p-poruḷ*, பெ. (n.) **பாதுகாப்பிற்காக ஒப்படைக்கப்பட்ட பொருள்**; deposit, which is entrusted for safe keeping.

[அடைக்கலம் + பொருள்.]

அடைக்கலம் *aḍaikkalam*, பெ. (n.) 1. *புகலிடம்;* asylum, refuge, shelter, person who gives shelter. அவன் எல்லார்க்கும் அடைக்கலம் (உ.வ.). 'அடைக்கலம் என்று வந்தவன் படைக்கலம் எடுக்கிறான்' (பழ.). 2. **பாதுகாப்பிற்காக ஒப்படைக்கப்பட்ட அடைக்கலப் பொருள்**; deposit, which is entrusted for safe keeping.

ம. அடைக்கலம்

அடைக்கலம்புகு-தல் *aḍaikkalam-pugu-*, 2 செ. கு.வி. (v.i.) **புகலடைதல்**; to fly to one for shelter, take refuge.

அடைக்கலமாதா *aḍaikkala-māda*, பெ. (n.) **இயேசுவின் தாய், அடைக்கல மளிக்கும் தேவ அன்னை** (உரோ. கத்.); The Lady of Refuge (R.C.).

[அடைக்கலம் + மாதா.]

அடைக்கலாங்குருவி *aḍaikkalāṅ-kuruvi*, பெ. (n.) அடைக்கலங்குருவி பார்க்க; see *aḍaikkalaṅ-kuruvi.*

[அடைக்கலம் + ஆம் + குருவி.]

அடைக்காய் *aḍai-k-kāy*, பெ. (n.) 1. *பாக்கு;* areca-nut. ''வெள்ளிலை யடைக்காய் விரும்பி'' (தாயு. சச்சி. 11). 2. **தாம்பூலம்;** *pān supāri.* ''விஞ்சிய வடைக்கா யுண்டி வழியிடை வெறுப்ப தாக்கி'' (அருணாசலபு. திருமலைவலம். 26).

ம. அடய்க்க; க., பட., குட. அடகெ, அடிகெ; துட., கோத. அட்கெ; து. அட்ட கட்டெரி.

[அடை+காய். அடை = இலை, வெற்றிலை.]

அடைக்கியாழம் *aḍai-k-kiyāḻam*, பெ. (n.) **அடைக்குடிநீர்** பார்க்க; see *aḍai-k-kuḍi-nir.*

[அடை + Skt. kaṣāya > த. கியாழம்.]

அடைக்குஞ்சவ்வு *aḍaikkuñ-cavvu*, பெ. (n.) மூடுசவ்வு; valve (சா.அக.).

[அடைக்கும் + சவ்வு.]

அடைக்குடிநீர் *aḍai-k-kuḍi-nir*, பெ. (n.) **மரம், செடி, கொடி, புல் என்னும் நால்வகை நிலைத் திணையின் வேர் (கிழங்கு), பட்டை, கட்டை, பிசின், இலை, பூ, கனி, வித்து என்னும் எண் வகை யுறுப்புகளையும் காரசாரச் சரக்கு களையும் சேர்த்து ஒன்றாக இடித்து, ஒரு பானையிலிட்டுப் பலநாட் குதவுமாறு சுண்டக் காய்ச்சி வடித்தெடுத்த கருக்கு** (சங்.அக.); a strong decoction of the roots, barks, woods, gums, leaves, flowers, fruits and seeds of several herbs, shrubs, creepers and trees, mixed up with some spices, boiled down to a certain degree and proportion with a view to preserve it for many days (சா.அக.). ''நான் காகச் செப்புவன்மை வேராதிகளை வெவ்வே றிடித்துச் சீவநீயத் தூறச் செய்தாக்கற் குடிநீ ரொப்பிலடை'' (தைலவ. தைல. பாயிர. 29).

[அடை + குடி + நீர்.]

அடைக்குத்தகை *aḍai-k-kuttagai*, பெ. (n.) **குத்தகைக்காரன் தவசமாகக் கொடுக்கும் அர சிறை**; revenue in the form of grain from land leased out by Government.

ம. அடக்காணம்

[அடை + குத்தகை.]

அடைக்கெத்து *aḍai-k-kettu*, பெ. (n.) **அடைக் கோழி சிறப்பாக இடுங்குரல்**; peculiar clucking of a brooding hen.

[அடை + கெத்து.]

'அடைக்கத்து' எனச் சில அகரமுதலிகள் குறிப்பது தவறாகும்.

அடைக்கோழி *aḍai-k-kōḻi*, பெ. (n.) *அடை காக்குங் கோழி*; sitting hen.

ம. அடகோழி

[அடை + கோழி.]

அடைகசாயம் *aḍai-kaṡayam*, பெ. (n.) அடைக் குடிநீர் பார்க்க; see *aḍai-k-kuḍi-nīr*.

அடைகட்டி *aḍai-kaṭṭi*, பெ. (n.) 1. *கலப்பையி லொட்டும் மண்*; earth that sticks to the plough. 2. *வண்டல் படிந்த மண்கட்டி*; a clod of silt, a lump of fine earth or clay (சா.அக.).

அடைகட்டு-தல் *aḍai-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *நீர்ப்பெருக்கைத் தடுக்க அணைகட்டுதல்*; to construct a dam. 'அண்ட கடாகம் வெடித்து அடைகட்ட வேண்டும்படி' (திவ். அமலனாதி. 2, வியா.). 2. *வண்டி நகராதபடி சக்கரத்திற்குமுன் தடைவைத்தல்*; to place a bar of wood or stone in front of a wheel of carriage to prevent it from moving. 3. *தேர் வண்டிகளின் சக்கரத்தைத் தூக்க அடியில் முட்டுக்கொடுத்தல்*; to insert a piece of wood under a car or cart and thus lift the wheel out of a rut.

ம. அடயல்; க. அட்டுகட்டெ; தெ. அட்டு கட்ட.

அடைகடல் *aḍai-kaḍal*, பெ. (n.) *கடற்கரை*; sea coast. 'அடைகட லென்பது அடையாகிய கடலென இருபெயர்ப் பண்புத்தொகை' (தொல். சொல். எச்ச. 23, சேனா. உரை).

அடைகரை *aḍai-karai*, பெ. (n.) *கரைப்பக்கம்*; shore. "உரவுத்திரை பொருத திணிமண லடைகரை" (குறுந். 175).

அடைகல்[1] *aḍai-kal*, பெ. (n.) 1. *பட்டடை*; anvil. "சுட்ட வல்லிரும் படைகலைச் சுடு கலா ததுபோல்" (கம்பரா. சுந்தர. பாச. 58). 2. *நிலைக்களக் கற்படை*; stone base. "ஆமையாய் மேருத் தாங்கி யடைகலாய்க் கிடந்த போது" (சி. சி. பர. பாஞ்சரா. மறு. 11).

ம. அடகல்லு; க. அடெகல்லு; தெ. டாகல்லு; து. அட்டெ; கோத. அர்கல்.

அடைகல்[2] *aḍai-kal*, பெ. (n.) *மதகடைக்குங் கல்*; stone placed at the mouth of a sluice to stop the flow of water.

அடைகலம் *aḍai-kalam*, பெ. (n.) *சேமக்கலம், கோயில்களில் அடிக்கும் வட்ட மணி*; gong used in temples.

அடைகா-த்தல் *aḍai-kā-*, 4 செ.கு.வி. (v.i.) *கோழி அவயங்காத்தல்*; to incubate, as a hen.

அடைகாய் *aḍai-kāy*, பெ. (n.) 1. *வெற்றிலை பாக்கு*; betel and areca-nut. 2. *ஊறுகாய்*; pickle (சா.அக.). 3. *காயவைத்துப் பதப்படுத் திய காய்*; dried and preserved fruit (சா.அக.).

ம. அடுவந்து; க. அடுகாய்.

அடைகிட-த்தல் *aḍai-kiḍa-*, 4 செ.கு.வி. (v.i.) 1. *கோழி அடைகாத்தல்*; to incubate, as a hen. 2. *தங்கியிருத்தல்*; to abide, stay permanently. "முயலடை கிடக்குந் திங்கள்" (கூர்மபு. மேருவின். 16).

அடைகியாழம் *aḍai-kiyāḻam*, பெ. (n.) *அடைக் கியாழம்* பார்க்க; see *aḍai-k-kiyāḻam*.

அடைகு-தல் *aḍaigu-*, 9 செ.கு.வி. (v.i.) *சேர்தல்*; to reach. —, 5 செ.குன்றாவி. (v.t.) *பெறுதல்*; to obtain. "புரையில் வீட்டின்ப மடைகு வான்" (வைராக். 17.).

[அடை → அடைகு. 'கு' சொல் விரிவீற்றுச் சாரியை.]

அடைகுடி *aḍai-kuḍi*, பெ. (n.) 1. *சார்ந்த குடும்பம்*; dependent family. 'இவன் தானும் இவன் அடைகுடி.........ஆனைச்சாத்தனும்' (S.I.I. ii, 444). 2. *பயிரிடுங்குடி*; cultivating tenant (S.I.I. ii, 250).

ம. அடகுடி; க. அட்டொக்கல்.

அடைகுத்து-தல் *aḍai-kuttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *அடைமானம் வைத்தல்*; to mortgage. 'குடியொடுகுடி பெறும் விலைக்கு அடை குத்துக என்று' (S.I.I. v, 305).

அடைகுளம் *aḍai-kuḷam*, பெ. (n.) *போக்கில்லாத குளம்* (யாழ்ப்.); tank with no outlet (J.).

அடைகுறடு *aḍai-kuṟaḍu*, பெ. (n.) 1. *கம்மியர் பட்டடை* (பிங்.); anvil. 2. *பற்றுக்குறடு*; tongs (W.).

ம. அடகொரடு

அடைகொடு-த்தல் *aḍai-koḍu-*, 4 செ.கு.வி. (v.i.) *நிலவிளைவில் அரசன் பங்கைச் செலுத்துதல்*; to pay the king's share of the produce (W.). 2. *நிறைத்து வைத்தல்*; to fill up. 3. *அடை மொழி முன்வைத்தல்*; to prefix an adjunct or epithet.

அடைகொள்(ளு)-தல் *aḍai-koḷ(ḷu)-*, 10 செ. குன்றாவி. (v.t.) 1. *பாதுகாப்பிற்காக ஒப் படைக்கப்பட்ட பொருளை ஏற்றுக்கொள்ளு தல்;* to accept a deposit for safe keeping. 'அடைகொண்டு பாழ்போக்குவா னொருவ னன்றே' (ஈடு, 5.10 : 5). 2. *நிலத்தை ஒற்றி யாகப் பெறுதல்;* to take a land on mortgage. 'இலட்சுமண நம்பி அடைகொண்ட நிலமும்' (S.I.I. iv, 81).

அடைகொளி *aḍai-koḷi*, பெ. (n.) *அடைமொழி யென்னும் சிறப்பிக்கும் சொல்லைக் கொண் டது (விசேடியம்)* (நன். 401, சடகோ. உரை); that which is qualified.

[அடை + கொள் + இ. 'இ' உடைமை குறித்த ஈறு.]

அடைகோட்டை *aḍai-kōṭṭai*, பெ. (n.) *முற்றுகை யிடப்பட்ட கோட்டை;* a besieged fort.

அடைகோழி *aḍai-kōḻi*, பெ. (n.) *அடைக்கோழி* பார்க்க; see *aḍai-k-kōḻi.*

அடைகோன் *aḍai-kōṉ*, பெ. (n.) *அடைக்குந் திருகு;* stop-cock (சா.அக.).

அடைச்சீட்டு *aḍai-c-cīṭṭu*, பெ. (n.) *வரிப் பற்று முறி* (யாழ்ப்.); receipt for payment of tithe or tax (J.).

[அடை + சீட்டு.]

அடைச்சு-தல் *aḍaiccu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. *அடைவித்தல், சேரச்செய்தல்;* to put, place. "அடைச்சிய கோதை பரிந்து" (கலித். 51:2-3). 2. *செருகுதல்* (சூடா.); to insert, stick in, as flower in the hair. 3. *உடுத்துக்கொள்ளுதல்;* to clothe or wrap oneself in. "நெடுந் தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி" (மதுரைக். 588). 4. *பொத்துதல்;* to shut, to close. "கையாற் செவிமுத லடைச்சிச் சொன்னாள்" (சீவக. 1048).

க. அடசுவிகெ

[அடைத்து → அடைச்சு.]

அடைசல் *aḍaiśal*, பெ. (n.) *பொருள் நெருக்கம்;* crowded condition, density.

[அடைத்தல் → அடைச்சல் → அடைசல்.]

அடைசாரல் *aḍai-śāral*, பெ. (n.) *பருவகாலத்து அடைமழை;* heavy monsoon rains. 'ஆனி முற்சாரல், ஆடி அடைசாரல்' (பழ.).

அடைசீலை *aḍai-śīlai*, பெ. (n.) *பாளச்சீலை;* cloth steeped in a medicinal preparation and put in the mouth for sore throat (W.). — 1. *காரச்சீலை;* a corrosive plaster used in the treatment of abnormal or morbid growth of flesh or sores. 2. *மருந்துச் சீலை;* plaster. 3. *புண்ணின் வாயில் மருந்திட்டு அடைக்கப் பட்ட சீலை;* cloth soaked in medicine and plugged as is done to the mouth of a sinus-sore (சா.அக.).

அடைசு-தல் *aḍaiśu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *அடை தல்* (சங்.அக.); to reach. 2. *கிட்டுதல்;* to get near. 3. *நெருங்குதல்;* to crowd, get close together. "அஞ்சு பூத மடைசிய சவடனை" (திருப்பு. 638). 4. *பொருந்துதல்;* to be joined, placed. 'உள்ளே சீலை யடைசின...... சட்டை' (சீவக. 819, நச். உரை). 5. *ஒதுங்கு தல்;* to deviate, recede, give place, make room. அடைசி நில் (உ.வ.). —, 5 செ.குன்றாவி. (v.t.) 1. *நெருங்கச் சொரிதல் அல்லது எய்தல்;* to shower upon. "அழுந்த வாளியொன்று பத்துநூறு வன்பொ டடைசினான்" (பாரத. பதினான். 30). 2. *நெருக்குதல்;* to press hard, exert pressure upon.

க. அடசு

[அடைத்து → அடைச்சு → அடைசு.]

அடைசுபலகை *aḍaiśu-palagai*, பெ. (n.) 1. *வாயிற் கதவாகச் செருகுபலகை;* boards inserted into grooves to form a door (W.). 2. *கதவுநிலைகளின்மேல் வைக்குஞ் சூரிப் பலகை;* plank placed above the lintel of a door frame (W.).

க. அடவு, அட்டுவலகெ.

அடைசுபொட்டணம் *aḍaiśu-poṭṭaṇam*, பெ. (n.) *அடைசீலை* பார்க்க; see *aḍai-śīlai.*

அடைசுமருந்து *aḍaiśu-marundu*, பெ. (n.) *வாய்ப் புண்ணிற்காகக் கொப்புளிக்கும் மருந்து நீர்;* any liquid preparation used for washing the mouth and the throat, gargle (சா.அக.).

அடைசுவலை *aḍaiśu-valai*, பெ. (n.) *வலை வகை* (இ.வ.); a kind of net (Loc.).

அடைசொல் *aḍai-śol*, பெ. (n.) 1. (இலக்.) *அடைமொழி;* (Gram.) qualifying word. 2. (இலக்.) *ஈறு;* (Gram.) termination, ending of a word. 'கள்ளென்பது புன்மை அடை சொல்' (தக்க. 463, உரை).

அடைத்தகுரல் *aḍaitta-kural*, பெ. (n.) *கம்மிய குரல்*; hoarse, husky voice (W.).

அடைத்தது *aḍaittadu*, பெ. (n.) *இட்ட கட்டளை*; order or command given. "ஈதுனக் கடைத்த தென்ன" (கந்தபு. உற்பத். மேருப். 9).

அடைத்து *aḍaittu*, கு.வி.எ. (adv.) *முழுவதும்*; entirely, wholly. வீடடைத்து நூல்கள்(உ.வ.).

அடைத்துப்பெய்-தல் *aḍaittu-p-pey-*, 1. செ.கு. வி. (v.i.) *வானம் முகில் (மேகம்) மூடி, விடாது பெய்தல்*; to rain incessantly with the whole sky overcast.

[அடைத்து + பெய்.]

அடைத்தேற்று-தல் *aḍaitt(u)-ēṟṟu-*, 5 செ. குன்றாவி. (v.t.) *வருந்திக் கரும முடித்தல்* (ஈடு, 6.8:1); to accomplish with difficulty, as lifting water to an upper channel.

[அடைத்து + ஏற்று.]

அடைதடையம் *aḍai-taḍaiyam*, பெ. (n.) *பொய்யாய் உரிமைப்படுத்திய பொருள்* (இ.வ.); foisted property (Loc.).

[அடை + தடையம்.]

அடைதூண் *aḍai-tūṇ*, பெ. (n.) *கடைதறி*; pillar to which the churning rod is tied. "மத்து மந்தரம் வாசுகி கடைகயி றடைதூண் மெத்து சந்திரன்" (கம்பரா. பால. அகலிகை. மிகைப். 3-19).

[அடை + தூண்.]

அடைந்தார் *aḍaindār*, பெ. (n.) 1. *அடைந்தவர்*; those who have reached or arrived. 2. *அடைக்கலம் புகுந்தவர்*; refugees. 3. *நண்பர்*; friends. 4. *இறந்துபோனவர்*; those who have passed away, the dead.

அடைந்தெழுந்திடுதல் *aḍaindeḻundiḍudal*, பெ. (n.) *கண்ணில் நீர் வடிந்து விழி கடுத்து, இமைகள் வீங்கிக் கண் சிவந்து, எரிச்சலுண்டாகிப் பீளைகட்டுவதும்; பூச்சி யூர்வதுபோலரிப்புண்டாக்கி, மூக்கில் நீர்வடிவதுடன் அடுத்தடுத்து வலியையும் உண்டாக்குவதுமான ஒரு நோய்;* a kind of ophthalmia characterised by itching sensation, water running through the nose and intermittent pain in the eyes (சா.அக.).

அடைந்தோர் *aḍaindōr*, பெ. (n.) 1. *அடைக்கலம் புகுந்தவர்*; those who have taken refuge. "அடைந்தோர் தம்மை யேமுற வினிதி னோம்பி" (கம்பரா. யுத்த. வீடண. 111). 'அடைந்தோரை ஆதரி' (பழ.). 2. *சுற்றத்தார்* (சது.); relatives.

அடைநிலப்பீர்க்கு *aḍai-nila-p-pīrkku*, பெ. (n.) *அதளை*; species of bitter luffa.

அடைநிலை *aḍai-nilai*, பெ. (n.) *கலிப்பாவி னுறுப்பாகிய தனிச்சொல்* (தொல். பொருள். செய். 131); detached foot that is a constituent of *kali* verse.

அடைநேர்-தல் *aḍai-nēr-*, 2 செ.குன்றாவி. (v.t.) *மகட்கொடைக்கு உடம்படுதல்*; to agree to give one's daughter in marriage. 'தலைவர்க்கே நம்மை அடைநேர்ந்தில ராயினும்' (குறிஞ்சிப். 23, நச். உரை).

அடைப்பக்காரன் *aḍaippa-k-kāraṉ*, பெ. (n.) 1. *வெற்றிலைப் பை வைத்துக்கொண்டு அரசர்க்கும் பெருமக்கட்கும் வெற்றிலை மடித்துக் கொடுக்கும் வேலைக்காரன்;* servant who carries the betel pouch, and gives folded betel leaves to kings and nobles for chewing. 2. *முடிதிருத்துபவர்*; barber.

ம. அடப்பக்காரன்; க. அடபுதார; தெ. அடபுதாண்டு.

[அடை + பை + காரன் (உடையானைக் குறிக்கும் ஈறு) — அடைப்பைக்காரன் → அடைப் பக்காரன். அடை = வெற்றிலை.]

அடைப்பைக்காரன் பார்க்க; see *aḍai-p-pai-k-kāraṉ*.

அடைப்படி *aḍai-p-paḍi*, பெ. (n.) *அடைமானம்* (S.I.I. iii, 307); pledge.

[அடை + படி.]

அடைப்பம்[1] *aḍaippam*, பெ. (n.) 1. *வெற்றிலைப் பை*; betel pouch. 2. *மஞ்சிகன் (நாவிதன்) கருவிப் பை*; barber's razor case. 3. *பண்டங்கள் பெய்யும் பை* (சங்.அக.); bag for keeping miscellaneous things in. 4. *அடைப்பக்காரன்* (I. M. P. N.A. 195); servant serving betel.

ம. அடப்பம்; க., து. அடப்ப; தெ. அடப்பமு; பிரா. ஃதப்ப.

[அடைப்பை → அடைப்பம்.]

அடைப்பம்[2] *aḍaippam*, பெ. (n.) அடைக்கும் பொருள்; a stopper or a plug (சா.அக.).

[அடைப்பு + அம்.]

அடைப்பன்[1] *aḍaippaṉ*, பெ. (n.) 1. வரவெக்கை நோய் (G. Tj. D. i, 11); aggravated constipation, a cattle disease. 2. மாடுகளுக்குத் தொண்டையில் வரும் ஒரு வெக்கைநோய்; inflammation of the throat or parts adjacent to it, a common disease among cattle, Anthrax (சா.அக.).

ம. அடப்பாம்குரு

அடைப்பன்[2] *aḍaippaṉ*, பெ. (n.) கடுக்காய்; Indian gall-nut, *Terminalia chebula* (சா.அக.).

அடைப்பன்கட்டு *aḍaippaṉ-kaṭṭu*, பெ. (n.) 1. ஆடுமாடுகளுக் குண்டாகும் ஒருவகை வெக்கை நோய்; a splenic fever in sheep and cattle caused by minute organisms introduced into the blood, Malignant anthrax. 2. ஆடு மாடுகளின் அடப்பன்கட்டு நோயினால் மாந்தருக்கு முண்டாகும் தொண்டையடைப்பு; a malignant pustule caused in men by infection from the animals so affected, contagious anthrax (சா.அக.).

அடைப்பாசாரம் *aḍaippāšāram*, பெ. (n.) காற்றோட்டமின்மை (சேலம்); want of ventilation (Sm.). இந்த வீடு அடைப்பாசாரமா யிருக்கிறது (உ.வ.).

[அடைப்பு + (ஒருகா.) ஆசாரம் (அரசர்வாழ் கூடம்).]

அடைப்பான் *aḍaippāṉ*, பெ. (n.) 1. கால்நடை நோய்வகை (கால். வி.15); anthrax. 2. அடைக்கும் மூடி; plug, stopper, cork.

அடைப்பான்வந்தை *aḍaippāṉ-vandai*, பெ. (n.) அடைப்பான் நோயை உண்டாக்கும் பூச்சி (கால். வி. 25); anthrax parasite.

அடைப்பிரதமன் *aḍai-p-piradamaṉ*, பெ. (n.) கன்னலமுது (பாயசு) வகை; a kind of porridge.

ம. அடப்பிரதமன்

[அடை + ம. பிரதமன்.]

அடைப்பு *aḍaippu*, பெ. (n.) 1. மூடுகை; shutting, closing, stopping. 'அடைப்பைப் பிடுங்கினால் பாம்பு கடிக்கும்' (பழ.). 2. வேலி (பிங்.); fence, enclosure. 3. தடை; obstruction. இது காற்றடைப்பான இடம் (உ.வ.). 4. அடைக்கும் மூடி; plug, stopper, cork. 5. படற்கதவு; door or small gate of braided palm leaves or thorns but not of boards. 6. வாரச் சாகுபடி, குத்தகை; lease. 7. நோய் வகை; a disease. ''சிகைபிடித் தீர்த்தோர் அடைப்புநீர்க் கடுப்புக்கல் லெரிப்பர்'' (கடம்ப. பு. இலீலா. 146). 8. அடைப்பக் காரன்: servant serving betel (M.E.R. 205 of 1919).

ம. அடப்பு; க., து. அட்டு; தெ. அட்டமு; கோத. அட்வ்; துட. அட்ப்; குட. அட; மா. அடரெ; பர். அட்டொம்; பிரா. அர், அரி.

[அடை → அடைப்பு. 'பு' தொ.பெ. ஈறு.]

அடைப்புக்கருக்கு *aḍaippu-k-karukku*, பெ. (n.) கட்டடங்களின் வெற்றிடங்களை நிரப்பும் (அடைக்கும்) ஓவிய வேலைப்பாடு; floral or other ornamental designs sculptured on walls and pillars, architecturally intended to fill up empty spaces in a building. 'கட்டடங்களின் குறிப்பிட்ட ஒருசில வெற்றிடமான பகுதி களை இலை, கொடி, பூக்கள் செறிந்த கருக் கமைப்பால் நிரப்பி, அணிபெறச்செய்தல் ஒரு விதக் கலை வழக்காகும். இதற்கு அடைப்புக் கருக்கு என்று பெயர்' (சி. செ. பக். 116, பத்தி 2).

[அடை → அடைப்பு. 'பு' தொ. பெ. ஈறு. கரு → கருக்கு = பொறித்த ஓவியம்.]

அடைப்புக்குச்சு *aḍaippu-k-kuccu*, பெ. (n.) 1. தக்கை; cork (சா.அக.). 2. குப்பி மூடி; stopper (சா.அக.).

[அடைப்பு + குச்சு.]

அடைப்புக்குழல் *aḍaippu-k-kuḻal*, பெ. (n.) தண்ணீர்க்குழாய்த் திருப்பு மூடி; a turning cock used for stopping or regulating the flow of water, liquids or gases in a pipe, stop-cock (சா.அக.).

[அடைப்பு + குழல்.]

அடைப்புண்(ணு)-தல் *aḍaippuṇ(ṇu)-*, (13) செ. கு.வி. (v.i.) ஒன்றனுள் அடங்குதல்; to be included. 'கழிந்தவற்றிலும் வருமவற்றிலும் அடைப்புண்ணுமிறே வர்த்தமானம்' (ஈடு, 1.1 : 4).

[அடைப்பு + உண்.]

அடைப்புமுதலிகள் *aḍaippu-mudaligaḷ*, பெ. (n.) **அவையின் கருமத் தலைவர்** (M.E.R. 191 of 1925); executive officers of an assembly.

அடைப்பை *aḍai-p-pai*, பெ. (n.) 1. **வெற்றிலைப் பை**; betel pouch. "செம்பொனடைப்பையுட் பாகு செல்ல" (சீவக. 1303). 2. **பாக்கு, வெற்றிலை, அட்டிகம் (சாதிக்காய்), ஏலம் முதலிய நறும்பொருள்கள் வைத்திருக்கும் பை** (பெரியபு. தடுத். 187, உரை); bag containing spices, such as areca-nut, betel, nutmeg, and cardamom.

ம. அடப்பன்; க., து. அடப்; தெ. அடப்மு.

[அடை + பை.]

அடைப்பைக்காரன் *aḍai-p-pai-k-kāran*, பெ. (n.) **வெற்றிலை மடித்துக் கொடுக்கும் வேலைக்காரன்**; servant who serves betel leaves rolled up with the required spices.

ம. அடப்பக்காரன்

[அடை + பை + காரன் (உடையவனைக் குறிக்கும் ஈறு).]

அடைப்பைகட்டு-தல் *aḍai-p-pai-kaṭṭu-*, 5 செ. கு.வி. (v.i.) **வெற்றிலை மடித்துக் கொடுத்தல்**; to prepare and serve rolls of betel leaves with spices for chewing. 'பிரதாபருத்திரனிடத்திற் போய் அவன் அடைப்பை கட்டிவரக் கம்பர் பாடிய வெண்பா' (பெருந்தொ. 1203).

[அடை + பை + கட்டு.]

அடைப்பையான் *aḍai-p-paiyāṉ*, பெ. (n.) **அடைப்பைக்காரன்** பார்க்க; see *aḍaippai-k-kāraṉ*. 'அடைப்பையான் கொள்ளச் சிறுகோல் கொடுத்தான்' (பெருந்தொ. 863).

[அடை + பை + ஆன்.]

அடைபடு-தல் *aḍai-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. **அடைக்கப்படுதல்**; to be shut or enclosed. 'அடைபட்டுக் கிடக்கிறான் செட்டி, அவனை அழைத்துவா, பணம் பாக்கி என்கிறான் பட்டி' (பழ.). 2. **முடிதல்**; to be completed. 3. **கடன் தீர்தல்**; to be paid up, as debt.

[அடை + படு.]

அடைபுடை *aḍai-puḍai*, பெ. (n.) 1. **அக்கம் பக்கம்**; surroundings. 2. **இராப்பகல்**; day and night. "அடைபுடை தழுவி அண்டநின் றதிரும்" (திவ். பெரியதி. 4.10 : 3).

அடைபொருள் *aḍai-poruḷ*, பெ. (n.) **தேட்டுப் பொருள்**; earnings. 'அடைபொருள் கருதுவிராயின்' (இறை. 28, உரை, பக். 169).

அடைமண் *aḍai-maṇ*, பெ. (n.) 1. **கலப்பையிலொட்டும் மண்** (யாழ்.அக.); earth that sticks to the plough. 2. **வண்டல் மண்**; silt, alluvium. 3. **பொருக்கு மண்**; sand and clay mixed with gravel and pebbles (சா.அக.).

அடை + மண். அடு → அடை = ஒட்டுதல்.]

களிமண், மணல் என்னும் பொருள் இச்சொற்குப் பொருந்துவதாய்த் தோன்றவில்லை.

அடைமதிற்படு-தல் *aḍai-madiṟ-paḍu-*, 20 செ. கு.வி. (v.i.) **முற்றுகையிடப்படுதல்**; to be besieged. 'நெடுநாட்பட அடைமதிற்பட்ட காலத்தே விளைத்துக் கோடற்கு' (பதிற். 16 : 2, உரை).

[அடை + மதில் + படு.]

அடைமழை *aḍai-maḻai*, பெ. (n.) **விடாமழை, அடைத்துப் பெய்யும் மழை**; continuous rain from an overcast sky. 'ஐப்பசி அடைமழை, கார்த்திகை கனமழை', 'அடைமழைக்குக் குடை இல்லாதவனுக்கு ஐந்து பெண்டாட்டியாம்', 'அடைமழையில் நாற்று நட்டால் ஆற்றோடு போகும்', 'அடைமழை விட்டும் செடிமழை விடவில்லை' (பழ.).

ம. அடமழ; க. அட்டமழெ.

[அடை + மழை. அடை = அடைத்தல்.]

அடைமாங்காய் *aḍai-māṅgāy*, பெ. (n.) 1. **மாங்காய் ஊறுகாய்**; mango pickle. 2. **உப்பிட்டுக் காயவைத்த மாங்காய்**; dried, salted mango (சா.அக.).

ம. அடமாஙங; க. அட; து. அடங்காயி.

[அடை + மாங்காய்.]

அடைமானம் *aḍai-māṉam*, பெ. (n.) 1. **கொதுவை**; pledge, property mortgaged. 2. **(தொல்லை தீரும்) வழிவகை**; help, remedy, means. 3. **உவமை** (யாழ்.அக.); resemblance, comparison. 4. **ஒப்பானது, ஈடானது, படி (பிரதி)**; equivalent (W.).

ம. அடமானம்; க., பட. அடமான; தெ. அட்டமு, அடமானமு; து. அடவு.

[அடை + மானம் (ஈறு).]

அடைமானவோலை *aḍaimāṉa-v-ōlai,* பெ. (n.) *அடைமான ஆவணம் (பத்திரம்);* mortgage deed, deed of hypothecation.

[அடைமானம் + ஓலை.]

அடைமுதற்பற்று *aḍai-mudaṟ-paṟṟu,* பெ. (n.) *குடிகட்குப் பற்றடைக்கப்பட்ட நிலம்* (M.E.R. 209 of 1925); land leased out to tenants.

[அடை + முதல் + பற்று.]

அடைமொழி *aḍai-moḻi,* பெ. (n.) (இலக்.) *தழுவும் சொல் அல்லது சொற்றொடர் (விசேடணம்);* (Gram.) qualifying word or phrase, attribute, adjunct. "அடைமொழி யினமல் லதுந்தரும்" (நன். 402).

அடைய *aḍaiya,* கு.வி.எ. (adv.) *முழுவதும்;* completely, thoroughly, altogether. "கோயி லடைய விளக்கேற்றி" (பெரியபு. நமிநந்தி. 14).

ம. அடய, அடவெ.

அடையங்கம் *aḍaiyaṅgam,* பெ. (n.) *உழுந்து;* black gram, *Phaseolus mungo.*

அடையடிமை *aḍai-y-aḍimai,* பெ. (n.) *விலைக்குப்பெற்ற அடிமையாள்* (இ.வ.); purchased slave (Loc.).

[அடை + அடிமை.]

அடையடுத்தவாகுபெயர் *aḍai-y-aḍutta-v-āgu-peyar,* பெ. (n.) *ஆகுபெயர்வகை;* metonymical synecdochical expr. invariably including a qualifying word. " 'வெற்றிலை நடு', 'மருக் கொழுந்து நட்டான்', 'திருவாசகம்' என்ப வற்றில், வெறு மரு திரு என்னும் அடை மொழிகளால் அடுக்கப்பட்ட இலை, கொழுந்து, வாசகம் என்பன ஆகுபெய ராதலால், இவை அடையடுத்த ஆகுபெயர்" (நன். 290, சடகோ. உரை).

[அடை + அடுத்த + ஆகுபெயர்.]

அடையல் *aḍaiyal,* பெ. (n.) 1. *அடைகை;* reaching. "சாயலு ளடையலுற் றிருந்தேன்" (தேவா. 7.58 : 7). 2. *அடைந்த பொருள்;* acquired thing or property. 3. *எல்லாம்;* all. 4. *செருப்புவகை;* a kind of sandals. "புரிமென் பீலிப் போழ்புனை யடையல்" (பரிபா. 21 : 7). 5. *நீர் தெளிதலா லுண்டான அடிமண்டி அல்லது வண்டல்;* a substance deposited from a liquid in which it had remained suspended, precipitate (சா.அக.).

[அடை + அல். 'அல்' தொ.பெ. ஈறு.]

அடையலர் *aḍaiyalar,* பெ. (n.) *பகைவர்* (பிங்.); enemies, foes. "அடையலர் தம்மை வென்று" (கந்தபு. யுத்த. அக்கினி. 131). 'அடையலரை அடுத்து வெல்லு' (பழ.).

ம. அடயலர்

[அடை + அல் + அர். 'அல்' எ.ம.இ.நி.]

அடையலவர் *aḍaiyal-avar,* பெ. (n.) *அடையலர் பார்க்க;* see *aḍaiyalar.* "அடையலவ ராவி வெருவ" (திருப்பு. 4).

ம. அடயலர்

அடையலார் *aḍaiyalār,* பெ. (n.) *அடையலர் பார்க்க;* see *aḍaiyalar.*

[அடை + அல் + ஆர். 'அல்' எ.ம.இ.நி.]

அடையவளைஞ்சான் *aḍaiya-vaḷaiñjāṉ,* பெ. (n.) 1. *கோயிலின் வெளிச்சுற்றுமதிற் புறத்தெரு;* street surrounding the outermost walls of a temple. 'அடையவளைஞ்சான் தளவிசை படுப்பித்தார்' (S.I.I. i, 84). 2. *அடையவளைந்தான் பார்க்க;* see *aḍaiya-vaḷaindāṉ.*

[அடையவளைந்தான்→அடையவளைஞ்சான் (கொ.வ.).]

அடையவளைந்தான் *aḍaiya-vaḷaindāṉ,* பெ. (n.) 1. *அடையவளைஞ்சான்;* street surrounding the outermost walls of a temple. 2. *தட்டுச் சுற்று வேட்டி;* cloth tied around the waist and hanging down to the ankles. 3. *ஈட்டின் ஓர் அருஞ்சொல் லுரை;* one of the glosses for the commentary *Īḍu.*

அடையன் *aḍaiyaṉ,* பெ. (n.) *கடுக்காய்;* gall-nut (T.C.M. ii, 2, 429), *Chebulic myrobalan.*

அடையாண்கிளவி *aḍaiyāṇ-kiḷavi,* பெ. (n.) *குழூஉக்குறிபோல் வழங்கும் அடையாளச் சொல்;* word used for recognition, pass-word. "அறியக் கூறிய அடையாண் கிளவியும்" (பெருங். உஞ்சைக். 56 : 184).

[அடையாளம் + கிளவி – அடையாளங் கிளவி → அடையாண்கிளவி. கிளவி = சொல்.]

அடையாதவர் *aḍaiyādavar,* பெ. (n.) *பகைவர்;* enemies, foes. "அடையாதவர் மூவெயில் சீறும் விடையான்" (தேவா. 1.37 : 7).

[அடையாத + அவர் – அடையாதவர் (வினையா. பெ.)]

அடையாதார் *aḍaiyādār*, பெ. (n.) அடையாதவர் பார்க்க; see *aḍaiyādavar*.

அடையார் *aḍaiyār*, பெ. (n.) அடையாதவர் பார்க்க; see *aḍaiyādavar*. "அடையார்தம் புரங்கள்" (தேவா. 1.65 : 1).

அடையாள் *aḍaiyāḷ*, பெ. (n.) வேலையாள் (S.I.I. vii, 72); servant.

[அடை + ஆள்.]

அடையாளக்காரர் *aḍaiyāḷa-k-kārar*, பெ. (n.) அரச விருதுகளையும் எடுபிடிகளையும் பிடித்துச் செல்வோர் (ரஹஸ்ய. 587); persons who carry the insignia of royalty or royal paraphernalia.

[அடையாளம் + காரர்.]

அடையாளப்பூ *aḍaiyāḷa-p-pū*, பெ. (n.) அரசக் குடியின் அடையாளமாக அணியும் பூ; particular flower worn as a symbol, as of a dynasty. 'இப் பாட்டு.........வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகம் என அடையாளப்பூக் கூறின மையின், அகமாகாதாயிற்று' (நெடுநல். நச். முன்னுரை).

[அடையாளம் + பூ.]

அடையாளம் *aḍaiyāḷam*, பெ. (n.) 1. அறிகுறி; mark, symbol, emblem, seal, sign. "அந்தமில் குணங்கள் செய்கை யாதியா வடையா ளங்கண் முந்தையின் வழுவா வண்ணம் முறையினான் மொழிந்தான் முன்னோன்" (திருவிளை. மாமனாக. 32). "தவத்தைச் சிதைத்ததுமோ ரடையாளம்" (திவ். பெரியாழ். 3.10 : 1). 2. நோய்க்குறி; symptoms of diseases. தழும்பு (scar) முதலியனவும் அறிகுறியுள் அடங்கும்.

ம. அடயாளம்; க. அடயாள; தெ. அடியாளமு; துட. ஒட்யோள்ம்.

அடையுண்(ணு)-தல் *aḍai-y-uṇ(ṇu)-*, (13) செ.கு.வி. (v.i.) அடைபடுதல்; to be shut up or enclosed. 'புலிக்குட்டி கூட்டிடத்தே அடையுண் டிருந்து' (பட்டினப். 221, நச். உரை).

[அடை + உண்.]

அடையுணி *aḍai-y-uṇi*, பெ. (n.) ஒருவரைச் சார்ந்து உண்பவ-ன்-ள்; one depending on another for food.

[அடை + உண் + இ. 'இ' உடைமை குறித்த ஈறு.]

அடையெழுது-தல் *aḍai-y-eḻudu-*, 5 செ.குன்றா வி. (v.t.) கணக்கிற் பதிவுசெய்தல்; (S.I.I. iv, 150); to make an entry in an account.

[அடை + எழுது.]

அடையோடறுதல் *aḍaiyōḍaṟudal*, பெ. (n.) ஒரு வகைக் கண்ணோய்; a kind of eye-disease (சா.அக.).

அடையோலை *aḍai-y-ōlai*, பெ. (n.) அடைமான ஆவணம் (பத்திரம்) (I.M.P. S.A. 15); ōla document serving as evidence of pledge.

ம. அடயோல

[அடை + ஓலை.]

அடைவளைந்தார் *aḍai-vaḷaindār*, பெ. (n.) கள்ளர்குலப் பட்டப் பெயர்களுள் ஒன்று (கள்ளர் சரித். பக். 145); a title of Kaḷḷars.

[அடையவளைந்தார் → அடைவளைந்தார். அடைய = முழுதும். வளைதல் = முற்றுகையிடுதல்.]

அடைவாகவுண்ணல் *aḍaiv(u)-āga-v-uṇṇal*, பெ. (n.) தொடர்ச்சியாய் மருந்துண்ணல்; taking medicine continuously (சா.அக.).

[அடைவு + ஆக + உண்ணல்.]

அடைவிக்கச்சோலம் *aḍaivi-k-kaccōlam*, பெ. (n.) அடவிக்கச்சோலம் பார்க்க; see *aḍavi-k-kaccōlam*.

[அடவி → அடைவி + கச்சோலம்.]

அடைவு *aḍaivu*, பெ. (n.) 1. அடைகை; arrival, joining, acquisition. 2. புகலிடம்; refuge. "அடைவிலோ மென்றுநீ யயர் வொழி" (தேவா. 3.282 : 5). 3. பறவைகள் தங்குமிடம்; roosting place for birds. 4. கொதுவை; pledge (W.). 5. வரலாறு; origin, history. "கயிலையி னடைவு சொற் றாம்" (காஞ்சிப்பு. வீரரா. 1). 6. வழி (பிங்.); path, way. 7. வகை; kind, manner. 8. முறை; order, course. "அடைவீன் றளித்த" (கல்லா. 6 : 35). "அங்கதி னொருசில வடைவிற் கூறுகேன்" (கந்தபு. அவையட. 12). 9. நிரனிறையணி (வீரசோ. அலங். 12); a figure of speech indicating the arrangement of two or more groups of words in their respective order. 10. ஒப்புமை; resemblance, similarity. 11. எல்லாம்; all. 12. துணை; help, aid. "நின்னை யடைவாக வுடன்போந்தேன்"

(பெரியபு. திருஞான. 475). 13. **தகுதி**; fitness, propriety (W.). 14. **ஏது**; cause, occasion. ''அடைவு துன்புறு வதற்கிலை'' (பெரியபு. திருஞான. 1066). 15. **ஆம்பல்**; water-lily, *Nymphaea edulis* (சா.அக.)

ம. அடவு; **க.** அடவு.

[அடை → அடைவு.]

அடைவுகேடு *aḍaivu-kēḍu*, பெ. (n.) *முறைத் தவறு, முறைகேடு, ஒழுங்கின்மை*; irregularity, impropriety, disorder, derangement.

அடைவுசரக்கு *aḍaivu-šarakku*, பெ. (n.) *கற்பூரவகை* (சிலப். 14 : 109, அடியார்க். உரை); a kind of camphor.

அடைவுபடு-தல் *aḍaivu-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **ஒழுங்காதல்** (திவ். திருநெடுந். 22, வியா.); to be in order, orderly.

அடைவே *aḍaivē*, கு.வி.எ. (adv.) 1. **ஒழுங்காக**; regularly, in an orderly manner. 2. **நெடுக**; along. 'கரையடைவே போன வாய்க் காலுக்கும்' (S.I.I. ii, 103).

ம., க. அடவு.

[அடைவு + ஏ.]

அடைவை-த்தல் *aḍai-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **அடைகாக்கும்படி கோழியை முட்டைகளின்மேல் வைத்தல்**; to make a hen sit on eggs for incubation. 2. **தேன்கூடுகட்டுதல்**; to build a hive, as bees. தேன் அடைவைத் திருக்கிறது (உ.வ.).

[அடை + வை.]

அண் *aṇ*, பெ. (n.) 1. **மேல், மேற்பக்கம்** (சங்.அக.); upper part. 2. **வேட்டைநாயின் உருவுகயிறு**; leash for dogs, running knot (W.). 3. **தடியில் வெட்டிய வரை** (இராட்.); notch, indentation made in a stick (R.).

ம., க. அண்.

[உ → உண் → ஒண் → அண். அண் = மேல், மேல்வாய். அண்பல் = மேல்வாய்ப் பல்.]

அண்ணம் = மேல்வாய்ப்புறம். அண்ணல் = மேலோன், தலைவன், அரசன், கடவுள். அண்ணன் = மேலோன், மூத்தோன், தமையன். அண்ணாத்தல் = மேனோக்குதல். அணத்தல் = தலையெடுத்தல், தலைதூக்குதல். அணர்தல் = மேனோக்கியெழுதல். அணர் = மேல்வாய்ப்புறம். அணரி = மேல்வாய்ப்புறம். அணவுதல் = மேனோக்கியெழுதல். அணிதல் உடம்பின்மே விடுதல் (to put on).

E. *on*, prep.—**ME.**, fr. **OE.** *on, an*, rel. to **OS.** *an*, **ON.** *á*, **Du.** *aan*, **OHG.** *ana*, **MHG.** *ane*, **G.** *an*, **Goth.** *ana*, 'on, upon', and cogn. with Avestic *ana*, 'on', **Gk.** *ανα*, **OSlav.** *na*, **OPruss.** *no, na*, 'on, upon'.

E. *on*, n., the on or leg side of the field.

Fr. *on*, adj.

அண்டக்கட்டு-தல் *aṇḍa-k-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) **வீங்குதல்**; to swell, as on account of a boil. —, 5 செ.குன்றாவி. (v.t.) **முட்டித் தாங்க வைத்தல்**; to prop up, support, buttress.

[அண்ட + கட்டு. அண்டுதல் = நெருங்குதல், முட்டுதல், முட்டித் தாங்குதல்.]

அண்டக்கொடு-த்தல் *aṇḍa-k-koḍu-*, 4 செ. குன்றாவி. (v.t.) **அண்டக்கட்டு-தல்** பார்க்க; see *aṇḍa-k-kaṭṭu-*.

[அண்ட + கொடு.]

அண்டகம் *aṇḍagam*, பெ. (n.) **குப்பைமேனி** (மலை.); Indian acalypha.

அண்டங்காக்கை *aṇḍaṅ-kākkai*, பெ.(n.) **பெரியதும், முற்றும் மிகக் கரியதுமான காட்டுக் காக்கை** (பிங்.); Indian raven, a big jet black jungle crow, *Corvus mactorhyncus*. 'அண்டங் காக்காய்குழறுகிறாப் போலே' (பழ.).

ம. அண்டன்காக்க

அண்டங்காக்கை

அண்டங்காகம் *aṇḍaṅ-kāgam*, பெ. (n.) **அண்டங்காக்கை** பார்க்க; see *aṇḍaṅ-kākkai*.

அண்டநாடு *aṇḍa-nāḍu*, பெ. (n.) **பாண்டி நாட்டின் ஒரு பகுதி** (I.M.P. ii, 62); a sub-division of the *Pāṇḍya* (country) Kingdom.

அண்டப்பார்-த்தல் *aṇḍa-p-pār-*, 4 செ.குன்றாவி. (v.t.) **பொருந்தச் செய்தல்**; to unite, join.

[அண்டு → அண்ட + பார்.]

அண்டர்[1] *aṇḍar*, பெ. (n.) இடையர்; herdsmen, cowherds, shepherds. "அண்டர் மிண்டிப் புகுந்துநெய் யாடினார்" (திவ். பெரியாழ். 1.1 : 5).

ம. அண்டர்; சிங். எண்டேர.

[அண்டுதல் = நெருங்குதல். அண்டு → அண்டர் = நெருங்கி அல்லது சேர்ந்து குடியிருப்பவர். ஒ.நோ: சேர் → சேரி = வீடுகள் சேர்ந்து அல்லது நெருங்கியுள்ள இடையருர்.]

அண்டர்[2] *aṇḍar*, பெ. (n.) பகைவர்; foes, enemies. "கால்வல் புரவி யண்ட ரோட்டி" (பதிற். 88 : 9).

ம. அண்டர்

[அண்டார் → அண்டர்.]

அண்டர்நிலை *aṇḍar-nilai*, பெ. (n.) பொன்னாங் கண்ணி (தைலவ. பாயி. 57); species of *Alternanthera* (L.). — an edible plant with yellow flowers, *Illecebrum sessile* (சா.அக.).

அண்டலர் *aṇḍalar*, பெ. (n.) பகைவர்; foes, enemies. "அண்டல ரெனினுங் கண்டாலன்பு வைத்து" (யசோதர. 1 : 25).

ம. அண்டலர்

[அண்டு + அலர்.]

அண்டாதவன் *aṇḍādavaṉ*, பெ. (n.) பகைவன்; foe, enemy. "அண்டா தவனாலெம் மகத் திலிரு ளுண்டாகிய தன்மை யுணர்ந்து" (கந்தபு. யுத்த. முதனாட். 351).

அண்டாதோடல் *aṇḍād(u)-ōdal*, தொ. பெ. (vbl. n.) நோய் திரும்பவும் வராமல் உடம்பைவிட் டகலல்; a permanent or radical cure (சா.அக.).

[அண்டாது + ஓடல்.]

அண்டார் *aṇḍār*, பெ. (n.) பகைவர்; foes, enemies. "அண்டார்தமக் கோரரியே" (கந்தபு. யுத்த. சிங்க. 470).

ம. அண்டார்

[அண்டாதவர் → அண்டாதார் → அண்டார்.]

அண்டிக்கொட்டை *aṇḍi-k-koṭṭai*, பெ. (n.) முந்திரிக்கொட்டை (நெல்லை); cashew-nut (Tn.).

ம. அண்டி

[அண்டி + கொட்டை. அண்டி = அடி.]

அண்டிகம் *aṇḍigam*, பெ. (n.) செந்நாய் (பிங்.); a wild dog, *Cyon dukhunensis* (L.). — a red wild dog, *Canis dukhenensis* alias *C. primaerus* (சா.அக.)

அண்டிதள்ளுகை *aṇḍi-taḷḷugai*, தொ. பெ. (vbl. n.) மலவாயின் (ஆசனத்தின்) உட்பகுதி வெளித்தள்ளல் (நெல்லை); *Prolapsus ani* (Tn.).

அண்டிமா *aṇḍimā*, பெ. (n.) மரமுந்திரி; cashew.

அண்டிமாங்கொட்டை *aṇḍi-māṅgoṭṭai*, பெ. (n.) மரமுந்திரிக்கொட்டை; cashew-nut.

ம. அண்டிமாங்ங

அண்டிரன் *aṇḍiraṉ*, பெ. (n.) 1. கடையெழு வள்ளல்களுள் ஒருவனான ஆய் அண்டிரன்; one of the last seven liberal chiefs in South Indian History. "ஆஅ யண்டிர னடுபோ ரண்ணல்" (புறநா. 129 : 5). 2. ஆடவன்; male human being. 3. சமர்த்தன்; clever or capable man. 4. மாந்தன் (சிந்தா. நி. 114); man.

தெ. அண்டீருண்டு

[ஆண் + திறம் – ஆண்டிறம் → ஆண்டிறன் = ஆண்டிறலோன், ஆண்டகை. ஒ.நோ: Gk. anir, andros, male.]

அண்டில் *aṇḍil*, பெ. (n.) மாடு, குதிரை முதலிய வற்றின் கண்ணிற் பற்றுமொரு பூச்சி (யாழ்ப்.); parasite that sticks to the eyes of cattle and horses (J.).

[அண்டு → அண்டில்.]

அண்டுப்புழு பார்க்க; see *aṇḍu-p-puḻu*.

அண்டினவன் *aṇḍiṉavaṉ*, பெ. (n.) தம்பிச் சேர்ந்தவன்; one who had taken refuge. "உற்றார் கன்மத்தா லண்டினவர்" (திருவாய். நூற். 81).

அண்டீரன் *aṇḍīraṉ*, பெ. (n.) (நாநார்த்த.) 1. ஆண்டகை; hero, warrior. 2. மாந்தன்; man.

தெ. அண்டீரண்டு, அண்டீரடு.

[அண்டிரன் → அண்டீரன்.]

அண்டு-தல் *aṇḍu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கிட்டுதல்; to approach. "அண்டினள் சேர் தலும்" (கந்தபு. தக்க. திருமண. 45). 2. ஏற்றல், பொருந்துதல்; to fit, to be appropriate to. "ஆகார மாமுவமைக் கண்டா தென்னும்" (ஞானவா. முமுட்சு. 27). 3. பற்றுக்கோடாகக் கொள்ளுதல்; to have as a support. ஒரு

வனை அண்டிப் பிழைக்க இடமில்லை (உ.வ.). 4. **ஒதுங்குதல்**; to take refuge in, retire for shelter. 'அண்ட நிழலில்லாமற் போனாலும் ஒண்ட அடியுண்டு' (பழ.). 5. **அழுந்துதல்** (சங்.அக.); to get pressed, to be impressed, to press hard.

ம. அண்டுக; **க.** அண்டிசு; **தெ.** அண்டு; **கோத.** அண்ட்.

[அள் → அண் → அண்டு.]

அண்டு *aṇḍu,* பெ. (n.) **மணிமாலை முதலியவற்றின் தனியுரு** (இ.வ.); unit in a string of beads, link in a chain (Loc.). அந்தத் தொடரிக்கு (சங்கிலிக்கு) இன்னும் நாலு அண்டு வேண்டும் (உ.வ.).

தெ. அண்டு

அண்டுகம் *aṇḍugam,* பெ. (n.) **ஒரு பறவை**; a kind of bird (சா.அக.).

அண்டுதள்ளுகை *aṇḍu-taḷḷugai,* பெ. (n.) 1. **மலவாயின் (ஆசனத்தின்) உள்ளுறுப்பு வெளித்தள்ளல்**; protrusion of the rectal walls beyond the anus, prolapsis of the anus or the rectum. 2. **பெண்களின் குறித் துளையின் (யோனித் துவாரத்தின்) சதை நழுவி வெளி வருதல்**; a condition in which the walls of the vagina are thrust out beyond the normal limit (சா.அக.).

க. அண்டு

அண்டிதள்ளுகை பார்க்க; see *aṇḍi-taḷḷugai.*

அண்டுப்புழு *aṇḍu-p-puḻu,* பெ. (n.) **அண்டில்** (யாழ்ப்.); worm that enters the eyes of cattle and horses (J.).

[அண்டு + புழு.]

அண்டுபடு-தல் *aṇḍu-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) **பிடிபடுதல்** (இ.வ.); to be within reach (Loc.).

அண்டை *aṇḍai,* பெ. (n.) 1. **அண்மை**; nearness, vicinity. அண்டையில் ஒரு கடையும் இல்லை (உ.வ.). 2. **அயல்**; neighbourhood. அண்டைவீட்டுக் கடன் ஆகாது (உ.வ.). 'அண்டைவீட்டுக் கடனும் பிட்டத்துச் சிரங்கும் ஆகாது', 'அண்டைவீட்டுச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி' (பழ.). 3. **பக்கம்**; side, direction. அந்த வூர்க்கு நாலண்டையும் வழி (உ.வ.). 4. **ஓட்டை யடைக்கும் ஒட்டு**; thing attached, annexed, as a plug to close a hole, patch. சீலைக்கு அண்டை வைத்துத் தைத்தான் (உ.வ.). 5. **முட்டு**; prop, support. சுவர் சாயாதபடி அண்டை கொடு (உ.வ.). 6. **வரப்பு**; field bund, ridge of a field. "அண்டை கொண்டு கெண்டை மேயும்" (திவ். திருச்சந்த. 49). 7. **நீர்தூவுங் கருவி**; a contraption that squirts water, used on certain festive occasions. "வெண்பொ னண்டை கொண்டு" (திருவிளை. உக்கிரபா. 24). 8. **ஒரு கட்டியின் அல்லது காயத்தின் விளைவாக மற்றோரிடத்தில் தோன்றும் வீக்கம்**; sympathetic pain or swelling. முழங்கால் கட்டியினால் துடையில் அண்டைகட்டியிருக்கிறது (உ.வ.). —, இடை. (part.) **இட வேற்றுமை யுருபு**; a loc. ending. கிணற்றண்டை நில். என்னண்டை பணமில்லை (உ.வ.).

க. அண்டெ; **தெ.** அண்ட.

[அண்டு → அண்டை.]

அண்டைகட்டு-தல் *aṇḍai-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) **ஒருறுப்பில் உண்டான கட்டி அல்லது காயத்தின் விளைவாக மற்றோருறுப்பில், பொதுவாகக் கமுக்கூட்டில் அல்லது கவானில், வலி அல்லது வீக்கம் தோன்றுதல்**; to get pain or swelling in the glands generally in the arm-pit or in the loins as a sympathetic response to swelling or pain in the connected limbs of the body.

அண்டைகொள்(ளு)-தல் *aṇḍai-koḷ(ḷu)-,* 10 செ. குன்றாவி. (v.t.) **பக்கத்துணை கொள்ளுதல்**; to gain the support of, secure the help of. 'கிருஷ்ணனை அண்டை கொண்டு' (திவ். திருநெடுந். 13, வியா.).

அண்டைபோடு-தல் *aṇḍai-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) **ஒட்டுப்போடுதல்** (இ.வ.); to mend, patch (Loc.).

அண்டையயல் *aṇḍai-y-ayal,* பெ. (n.) **அக்கம் பக்கம்**; neighbourhood. அண்டையயல் பார்த்துப் பேசவேண்டும் (உ.வ.).

[அண்டை + அயல்.]

அண்டைவீடு அடுத்தவீடு *aṇḍai-vīḍu-aḍutta-vīḍu,* பெ. (n.) **அக்கம்பக்கத்து வீடுகள்**; neighbouring houses. அண்டைவீடு அடுத்த வீடெல்லாம் சிரிக்கும்படி சண்டை போடுகிறார்கள் (உ.வ.).

அண்டைவெட்டு-தல் *aṇḍai-veṭṭu-*, 5 செ. குன்றாவி. (v.t.) வரப்புவெட்டுதல் (இ.வ.); to cut or trim the ridge or bunds in the field (Loc.).

[அள்ளுதல் = நெருங்குதல், செறிதல். அள் → அண். அண்ணுதல் = நெருங்குதல். அண் → அண்டு. அண்டுதல் = நெருங்குதல். அண்டு → அண்டை = நெருங்கிய பக்கம், ஒட்டு, முட்டு, திரட்சி, வரப்பு.]

அண்ணக்குஞ்சம் *aṇṇa-k-kuñjam*, பெ. (n.) **உண்ணாக்கு**; pendulum of the palate, uvula (சா.அக.).

[அண்ணம் + குஞ்சம்.]

அண்ணச்சோர்வு *aṇṇa-c-cōrvu*, பெ. (n.) மேல் வாயின் நரம்புச் சோர்வு; paralysis of the palate, *palatoplegia* (சா.அக.).

[அண்ணம் + சோர்வு.]

அண்ணணி *aṇ-ṇ-aṇi*, கு.வி.எ. (adv.) நெருங்கிய அண்மையில்; in close proximity. 'அண்ணணிக் கொண்டான்' (தொல். எழுத்து. உயிர்மயங். 44, நச். உரை).

[அண்ணுதல் = நெருங்குதல். அண் → அணி = அண்மையில். அண் + அணி – அண்ணணி = நெருங்கிய அண்மையில், மிக அண்மையில்.]

அண்ணணித்து *aṇ-ṇ-aṇittu*, பெ. (n.) மிக அண்மையானது; that which is close by, very near. ''அண்ணணித் தூராயின்'' (கலித். 108 : 36).

[அண் + அணித்து.]

அண்ணத்தாபிதம் *aṇṇa-t-tābidam*, பெ. (n.) 1. மேல்வாயழற்சி; inflammation of the palate, *Palatitis*. 2. வாயின் மேற்பரட்டிற் காணும் அழற்சி; inflammation of the hard palate, uranisconitis (சா.அக.).

[அண்ணம் + Skt. tābita > த. தாபிதம்.]

அண்ணத்தொங்கணி *aṇṇa-t-toṅgaṇi*, பெ. (n.) **அண்ணக்குஞ்சம்** பார்க்க; see *aṇṇa-k-kuñjam*.

[அண்ணம் + தொங்கணி.]

அண்ணந்தாள் *aṇṇandāḷ*, பெ. (n.) **அண்ணாந்தாள்** பார்க்க; see *aṇṇāndāḷ*.

அண்ணப்பரடு *aṇṇa-p-paraḍu*, பெ. (n.) மேல் வாயின் கரடு; hard or bony palate (சா.அக.).

[அண்ணம் + பரடு.]

அண்ணப்பிளப்பு *aṇṇa-p-piḷappu*, பெ. (n.) மேல் வாயின் அல்லது மேற்பரட்டின் வெடிப்பு; a fissure or a narrow opening in the palate, Uranisochasma, Palatoschisis (சா.அக.).

அண்ணப்பிளவு *aṇṇa-p-piḷavu*, பெ. (n.) மேல் வாயின் பிளவு; a cleft or congenital fissure of the palate, cleft palate (சா.அக.).

[அண்ணம் + பிளவு.]

அண்ணம் *aṇṇam*, பெ. (n.) 1. மேல்வாய்; palate, roof of the mouth. ''அண்ண நண்ணிய பல்'' (தொல். எழுத்து. பிறப். 11). 2. உண்ணாக்கு (திவா.); uvula. 3. அண்ணாக்கு; the soft palate behind the uvula, *palatum molle* (சா.அக.).

ம. அண்ணம்; க. அங்கல, அண்ணாலிகெ; தெ. அங்கிலி; து. அண்ண; நா. அங்குல்; பட. அங்குவ.

[அண் + அம்.]

அண் என்பது மேற்புறத்தைக் குறித்த சொல்லாதலால், அண்ணம் என்பதற்குக் கீழ்வாய்ப்புறம் என்றும் சில அகரமுதலிகள் பொருள் குறிப்பது பொருந்தாது.

அண்ணம் வீழ்ச்சி *aṇṇam-vīḻcci*, பெ. (n.) 1. அண்ணாக்கு விரிந்து தொங்கல்; sagging of the soft palate, Uvuloptosis. 2. உண்ணாக்கு வளர்த்தி; elongation or pendulous condition of the uvula, *staphyloptosis* (சா.அக.).

அண்ணம்வெடிப்பு *aṇṇam-veḍippu*, பெ. (n.) **அண்ணப்பிளப்பு** பார்க்க; see *aṇṇa-p-piḷappu*.

அண்ணமார் *aṇṇamār*, பெ. (n.) 1. ஒரு சிற்றூர்ச் சிறுதெய்வம் (கோவை); a minor village deity (Cm.) — (L.). 2. ஓர் அசுரப் பெண் தேவதை; a female evil spirit, demoness (சா.அக.).

அண்ணமார்கல் *aṇṇam-ār-kal*, பெ. (n.) கட்டடத்தில் தட்டை வளைவின் குத்துக்கல் (சென்னை); upright bricks of a flat arch (Madr.).

[அண்ணம் + ஆர் + கல் – அண்ணமார்கல் = வளைவின் மேற்பகுதியிற் பொருத்திய குத்துக்கல்.]

அண்ணல் *aṇṇal*, பெ. (n.) 1. பெருமை; greatness. ''அண்ணலங் குமரரா மென்று'' (பாரத. திரௌ. 63). 2. உயர்வு, சிறப்பு; exaltation, excellence, loftiness. ''ஓங்கு

மண்ணல் மால்வரை'' (கூர்மபு. திருக்கல். 18). 3. **தலைமை**; superiority. ''அண்ணல் மணி நெடுந்தேர்'' (திருக்கோ. 256). 4. **பெருமையிற் சிறந்தோன்**; greatman, superior. ''அகத் தியனுக் கோத்துரைக்கு மண்ணல்'' (சிவப்பிர. 4). 5. **தலைவன்**; master. ''அடுபோ ரண்ணல் கேட்டிசின் வாழி'' (மதுரைக். 207, 208). 6. **தந்தை** (அரு.நி.); father. 7. **அண்ணன்** (நாநார்த்த.); elder brother. 8. **குரு, குரவன், ஆசிரியன்**; preceptor, spiritual guide. 9. **முல்லைநிலத் தலைவன்** (தொல். பொருள். அகத். 20, நச். உரை); ruler of a land predominantly pastoral. 10. **அரசன்** (சூடா.); king. 11. **சிவன்**; Śiva. ''அண்ண லாரு மதுவுணர்ந்து'' (பெரியபு. திருநாவுக். 296). 12. **கடவுள்**; God. ''அண்ண லருளா னண்ணி'' (சிவப்பிர. 19). 13. **புத்தன்** (பொதி.நி.); the Buddha. 14. **அருகன்** (நாநார்த்த.); Arhat.

ம. அண்ணல்; க. அண்ணெல; தெ. அண்ணு.

அண்ணல்வல்லி *aṇṇal-valli*, பெ. (n.) **கோவை**; Indian caper, *Cephalandra indica* alias *Bryonia grandis* (சா.அக.).

அண்ணலார் *aṇṇalār*, பெ. (n.) **சிவன்**; Śiva. ''ஆடன் மேவிய வண்ண லாரடி'' (பெரியபு. ஏயர்கோ. 98).

ம. அண்ணலார்

[அண்ணல் + ஆர் (உ.ப. ஈறு).]

அண்ணவெலும்பு *aṇṇa-v-elumbu*, பெ. (n.) **மூக்கின் பின்புறத்திலிருக்கும் எலும்பு**; the bony structure behind the nostrils (சா.அக.).

[அண்ணம் + எலும்பு.]

அண்ணவோதை *aṇṇa-v-ōdai*, பெ. (n.) **நாவாற் கொட்டும் ஒலி**; clicking sound produced by pressing the tongue against the roof of the mouth (W.).

[அண்ணம் + ஓதை.]

அண்ணன் *aṇṇaṉ*, பெ. (n.) 1. **தமையன், தம்முன்** (பிங்.); elder brother. ''முன்னவ னண்ணன் மூத்தோன்'' (சூடா.). 2. **மதிக்கத் தக்க மூத்தோன்**; respectable elderly man. 'அண்ணனுக்குத் தம்பி அல்லவென்று போகுமா?', 'அண்ணனுக்குப் பெண் பிறந் தால் அத்தை அயல்நாட்டாள்', 'ஐந்து வயதில் அண்ணன் தம்பி, பத்து வயதில் பங்காளி' (பழ.).

ம. அண்ணன்; க., பட., குட. அண்ண; தெ., குவி. அன்ன; து. அண்ணெ; கோத. அண்ணன்; இரு., குரு., துட. ஒணென்; கொலா. அனுக்; கோண். தன்னால்; கொர. ஆண்; எரு. அண; சப். அண்ணா.

அண்ணனார் *aṇṇaṉār*, பெ. (n.) **அண்ணன் என்பதன் உயர்வுப்பன்மை**; honorific of *aṇṇaṉ*.

[அண்ணன் + ஆர் (உ.ப. ஈறு).]

அண்ணார் என்னுங் கொச்சை வடிவம், அண்ணனார் என்பதன் மரூஉவன்று. அண்ணா என்னும் விளிவடிவே, ரகர மெய்யீறு பெற்று அண்ணார் என்று தவறாக வழங்கிவருகின்றது.

அண்ணா-த்தல் *aṇṇā-*, 3 செ.கு.வி. (v.i.) 1. **மேல்நோக்குதல்**; to look upward. செம்பில் வாய்படாமல் தண்ணீரை அண்ணாக்கக் குடி (உ.வ.). 2. **மேனோக்கிப் பார்த்தல்**; to look up intently. ''அண்ணாந்து கேட்ப ரழகழ கென்பர்'' (தனிப். தி. 2, பக். 293). 3. **தலைநிமிர்தல்**; to hold the head erect. ''நண்ணார் நாண அண்ணாந் தேகி'' (புறநா. 47 : 8). 4. **நிமிர்ந்து நிற்றல்**; to stand erect. ''அண்ணாந் தேந்திய வன முலை'' (நற். 10 : 1). 5. **வாய்திறத்தல்**; to gape, open the mouth. ''அண்ணாத்தல் செய்யா தளறு'' (குறள், 255).

ம. அண்ணா; க. அண்ணெ; து. அண்ணா வுனி, அணாவு.

அண்ணா[1] *aṇṇā*, பெ. (n.) **உண்ணாக்கு**; uvula. ''அண்ணா வுரிஞ்சி மூக்குயர்த்தார்'' (சீவக. 2703).

ம. அண்ணா

[உள் + நா – உண்ணா → அண்ணா.]

அண்ணா[2] *aṇṇā*, பெ. (n.) **திருவண்ணாமலை**; Tiruvaṇṇāmalai, a Śiva shrine. ''உயர்பொழி லண்ணாவி லுறைகின் றாரும்'' (தேவா. 6.16 : 5).

[அருணமலை → அண்ணாமலை → அண்ணா.]

அண்ணா[3] *aṇṇā*, பெ. (n.) 1. **அண்ணன்**; elder brother. 2. **தந்தை** (பிராம.); father (Brāhm.).

[அண்ணன் → அண்ணா (விளி).]

முறைப்பெயர்களின் விளிவடிவை முதல் வேற்றுமையாக (எழுவாயாக) வழங்குவது பிற்காலத்தெழுந்த வழுவழக் காதலால், அதைப் பொத்தகங்களிற் கையாளாததோடு பேச்சிலும் விட்டுவிடல் வேண்டும். இவ் வழக்கு, கன்னட முதலிய திரவிடமொழிகளில் வழுவமைதியாயினும், தமிழில் ஆகாது.

அண்ணாக்க *aṇṇākka*, கு.வி.எ. (adv.) ***மேனோக்கி, பல்லில் அல்லது உதட்டிற் படாமல்***; with head turned upward gulping food or drink without the vessel or food touching the teeth and lips. *தண்ணீரை அண்ணாக்கக் குடி. மருந்தை அண்ணாக்க விழுங்கிவிடு* (உ.வ.).

ம. அண்ணான்னு

அண்ணாக்கழற்சி *aṇṇākk(u)-aḻarci*, பெ. (n.) 1. ***உண்ணாக் கழற்சி***; inflammation of the uvula, uvulitis. 2. ***மேல்வாயின் கீழ்ப்புறத்திற் காணும் அழற்சி***; inflammation of the soft palate, *Palatitis* (சா.அக.).

[அண்ணாக்கு + அழற்சி. உள் + நாக்கு – உண்ணாக்கு → அண்ணாக்கு.]

அண்ணாக்கறுத்தல் *aṇṇākk(u)-aṟuttal*, தொ. பெ. (vbl.n.) 1. ***உண்ணாக்கு வளர்ச்சியைக் கத்தியா லறுத்து நீக்கல்***; the surgical operation of the uvula or a part there of, uvulotomy. 2. ***உண்ணாக்குச் சதை கரையும்படி கார மருந்திடல்***; application of corrosive drug to the uvula to reduce its size (சா.அக.).

[உள் + நாக்கு – உண்ணாக்கு → அண்ணாக்கு + அறுத்தல்.]

அண்ணாக்கு *aṇṇākku*, பெ. (n.) ***உண்ணாக்கு***; uvula. *'அண்ணாக்கும் தொண்டையும் அதிர அடைத்தது'* (பழ.).

ம. அண்ணாக்கு; க. அண்ணாலிகெ; தெ. அங்கிலி.

[உள் + நாக்கு – உண்ணாக்கு → அண்ணாக்கு.]

அண்ணாக்குப் பிரிவு *aṇṇākku-p-pirivu*, பெ. (n.) ***இரண்டாகப் பிரிந்த உண்ணாக்கு***; a split uvula, bifid uvula (சா.அக.).

[உண்ணாக்கு → அண்ணாக்கு + பிரிவு.]

அண்ணாக்கெடுத்தல் *aṇṇākk(u)-eḍuttal*, தொ. பெ. (vbl.n.) ***உண்ணாக்கிற்கு மேற்புறந் தொங்கும் சதையை, வாய்க்குட் கையை விட்டோ உச்சிமயிரைத் தூக்கிப்பிடித்தோ தொங்காதவாறு செய்தல்***; arresting the sagging of the soft palate, either by thrusting the fingers into the mouth, or by holding the head up by the hair on the crown.

[உண்ணாக்கு → அண்ணாக்கு + எடுத்தல்.]

அண்ணாச்சி *aṇṇācci*, பெ. (n.) ***அண்ணனார்*** (தெற்கு); elder brother (South).

ம. அண்ணாச்சி, அண்ணாழ்வி.

[அண்ணாட்சி → அண்ணாச்சி.]

அண்ணாட்சி *aṇṇāṭci*, பெ. (n.) ***அண்ணனார்*** (தெற்கு); elder brother (South).

[அண்ணன் + ஆட்சி – அண்ணாட்சி. ஒ.நோ: அண்ணன் + ஆள்வி – அண்ணாள்வி → அண்ணாவி.]

பொதுவாக, அண்ணன் என்பது படியாதவர் வழக்கும், அண்ணாட்சி என்பது படித்தவர் வழக்கும் ஆகும்.

'தந்தைக்குப் பின் தமையன்' என்னும் முறைப்படி ஆண்மக்கள் பலருள்ள குடும்பத்தில் மூத்தவனே தந்தைக்குப் பின் குடும்ப ஆட்சியை மேற்கொள்வானாதலால், அவன் தம்பி தங்கைமாரால் அண்ணாட்சியென விளிக்கப்பட்டான். முதற் காலத்தில் மூத்த அண்ணனுக்கு வழங்கிய பெயர்வடிவம், பிற்காலத்தில் இளைய அண்ணன்மார்க்கும் வழங்கலாயிற்று. அவருள் வேறுபாடு குறிக்க 'மூத்த', 'இளைய' அல்லது 'பெரிய', 'சின்ன' என்னும் அடைகள் சேர்க்கப்பட்டன.

அண்ணாத்தை *aṇṇāttai*, பெ. (n.) 1. ***அண்ணன், சில சமயங்களில் இழிவு குறித்தது*** (வடக்கு); elder brother, sometimes in contempt (North). 2. ***வெறும் பெரியவர்*** (இ.வ.); idler, worthless fellow (Loc.).

[ஒருகா. அண்ணன் + தே – அண்ணாத்தை அல்லது அண்ணன் + அத்தன் → அண்ணத்தன் → அண்ணத்தை → அண்ணாத்தை.]

அண்ணாத்தை என்பது, சில சமயங்களில் இளையவர்க்கும் தகுதியில்லாதவர்க்கும் இழிவு குறித்த பகடிச்சொல்லாக வழங்கினும், மூத்தவர்க்கும் தகுதியுள்ளவர்க்கும் அண்ணனார், தமையனார், அண்ணாட்சி என்பன போன்று மதிப்புச் சொல்லாகவும் வழங்கிவருகின்றது.

தெய்வத்தையும் தலைவனையுங் குறிக்கும் தே என்னும் சொல்லைப் பின்னொட்டாகப் பெற்று வழங்கும் நாயன்தே என்பது போன்று, அண்ணாத்தே என்னுஞ் சொல்லுந் தோன்றி அண்ணாத்தை யென்று மருவியிருக் கலாம்.

ஒ.நோ : நாயன்தே → நாயந்தே → நாயிந் தே → நயிந்தே → நயிந்தை. அண்ணாத்தே → அண்ணாத்தை.

இனி, அண்ணன் அல்லது அண்ணா என்னுஞ் சொல் தந்தையைக் குறிக்கும் அத்தன் என்னுஞ் சொல்லொடு புணர்ந்து அண்ணாத்தன் → அண்ணாத்தை என்று திரிந்ததாகக் கொள்ளவும் இடமுண்டு.

அத்தை யென்பது பெண்பாற் பெயரா தலின், அண்ணாத்தை யென்னும் புணர்ச் சொல்லின் வருஞ்சொல்லாக இருத்தல் இயலாது.

அண்ணாந்தாள் *aṇṇāndāḷ*, பெ. (n.) ஒரு **வனைக் குனியவைத்து, அவன் கழுத்தைச் சுற்றி ஒரு கயிற்றைத் தொங்கவிட்டு, அதன் ஒரு முனையை ஒருகாற் பெருவிரலிலும் மற் றொரு முனையை மற்றொருகாற் பெருவிரலி லுங் கட்டி, முதுகின்மேல் ஒரு கனத்த கல்லையும் ஏற்றி, நீண்ட நேரம் அதே நிலையில் இருக்கச் செய்யுந் தண்டனை**; placing an individual in a stooping position, fastening a string to each great toe, passing the bight over the back of the neck, and putting a stone on his back, as a punishment (E.T.). —**தலையையுங் காலிற் பெருவிரலையுஞ் சேர்த்துக் கட்டித் தலை நிமிர்ந்திருக்கச் செய்யுந் தண்டனை** (சங்.அக.); fastening the head and toes of an individual, and making him hold his head in an erect position, as a punishment (S.D.).

அண்ணாந்தாள்பூட்டு - தல் *aṇṇāndāḷ - pūṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **அண்ணாந்தாள் தண்டனை யிடுதல்**; to inflict *aṇṇāndāḷ* punishment.

அண்ணாந்துபார்-த்தல் *aṇṇāndu-pār-*, 4 செ. கு.வி. (v.i.) **மேல்நோக்கிப் பார்த்தல்**; to look upward. —, 4 செ.குன்றாவி. (v.t.) **கூர்ந்து பார்த்தல்**; to look into, consider deeply. "அண்ணாந்து பார்க்க வழியு முடம்பே" (திருமந். 2139).

அண்ணாநாடு *aṇṇā-nāḍu*, பெ. (n.) **திருவண்ணா மலை வட்டாரம்**; the region about Tiruvaṇṇāmalai. 'அண்ணாநாட்டு எல்லையில் திருந் திகை யாற்றை யடைத்து' (S.I.I. viii, 44).

அண்ணாமலை *aṇṇā-malai*, பெ. (n.) **சிவன் கோயில்கொண்டுள்ள திருவண்ணாமலை**; Tiruvaṇṇāmalai, a Śiva shrine. "அண்ணா மலையங் கமரர்பிரான்" (பெரியபு. திருஞான. 970). 'அண்ணாமலையாருக்கு அறுபத்து நான்கு பூசை, ஆண்டிகளுக்கு எழுபத்து நான்கு பூசை', 'அண்ணாமலையார் அருளுண் டானால் மன்னார்சாமி வம்பா செய்யும்?' (பழ.).

[அருணமலை → அண்ணாமலை.]

அண்ணாமலை முழம் *aṇṇāmalai-muḻam*, பெ. (n.) **24 விரல்கொண்டதும், முன்பு தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயிற்கும் பின்பு திருவண்ணாமலைத் திருக்கோயிற்கும் கட்டு மானத்திற் பயன்படுத்தியதுமான அளவுகோல்**; a standard measuring rod, so called because it was used in the construction of the temples at Thañjāvūr and Tiruvaṇṇāmalai.

'24 விரல்கொண்ட கிஷ்கு முழத்திற்குத் தஞ்சை முழமென்றும் ஒரு பெயர் வழக்கில் உண்டு. தஞ்சைப் பெருவுடையார் திருக் கோயிலை நிருமாணிப்பதில் இம் முழம் கையாளப் பெற்றமையால் இப் பெயர் பெற்றது. திருவண்ணாமலைத் திருக் கோயிலை அமைப்பதற்குப் பயன்படுத்திய அளவுகோல் இம் முழக்கோலாகையினால் இதற்கு அண்ணாமலை முழமென்று மற் றொரு பெயருமுண்டு' (சி.செ. பக். 3, பத்தி 1).

[அருணமலை → அண்ணாமலை + முள் → முழி (மொழி) → முழம்.]

அண்ணார் *aṇṇār*, பெ. (n.) **பகைவர், வணங் கார்**; enemies, recalcitrants. "அண்ணார் புரமவிய" (உபதேசகா. திரிபுர. 112).

ம. அண்ணார்

[அண் + ஆ (எ.ம.இ.நி.) + ஆர் (ப.பா. ஈறு). 'ஆர்' புணர்ச்சியில் முதல் கெட்டது.]

கொச்சை வழக்கில் உயர்வுப் பன்மையாக அண்ணனைக் குறிக்கும் அண்ணார் (அண்ணா + ஆர்) என்னுஞ்சொல், வழூஉச் சொல்லாதலின் இவ் வகரமுதலியிற் கொள்ளப்படவில்லை.

அண்ணனார் பார்க்க; see *aṇṇaṉār*.

அண்ணாவி *aṇṇāvi*, பெ. (n.) **1. ஆசிரியன்**; teacher. 'தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி என்ன செய்வான்?', 'அண்ணாவி தான் செத்தார், அவர் சொல்லிக் கொடுத்த பாடமுமா செத்தது?', 'அண்ணாவி விழுந்ததும் ஓர் அடவுதான்' (பழ.). **2. கூத்துப் பயிற்றுவோன், நாடக ஆசிரியன்**; dancing master, director of theatrical performances. **3. அதிகாரி**; master, superior, one in authority. நீ அதற்கு அண்ணாவி யல்லை (உ.வ.). 4. புலவன் (யாழ்.அக.); poet.

ம. அண்ணாவி

[அண்ணன் + ஆள்வி – அண்ணாள்வி → அண்ணாவி.]

அண்ணாள்வி *aṇṇāḷvi*, பெ. (n.) **அண்ணனார், அண்ணாட்சி**; elder brother or cousin. 'எங்களண்ணாழ்வி (அண்ணாள்வி) செய்த பணி' (T.A.S. i, 103).

ம. அண்ணாழ்வி

அண்ணாழ்வி என்பது, ஆழ்வார் என்னுஞ் சொல்லைப் பின்பற்றின தவற்று வடிவமாகும்.

[அண்ணன் + ஆள்வி – அண்ணாள்வி. ஆள்வு → ஆள்வி = ஆள்வோன், ஆளி.]

அண்ணாளன் *aṇṇāḷaṉ*, பெ. (n.) 1. **பெண் வழிச் செல்வோன்** (இ.வ.); husband under the authority of his wife, hen-pecked husband (Loc.). 2. **அலி** (இ.வ.); hermaphrodite (Loc.). இச்சொல் ஷண்ட என்னும் வடசொல்லொடு தொடர்புடையதாகத் தெரியவில்லை.

அண்ணி-த்தல் *aṇṇi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. **நெருங்குதல்**; to come near, get close. 2. **பொருந்துதல்**; to join, unite. "அடியார்க் கென்று மாரமுதா யண்ணிக்கு மையாற் றான் காண்" (தேவா. 6.30 : 2). 3. **தித்தித்தல்**; to taste sweet. "சிந்தை செயச்செயக் கருப்புச் சாற்றிலு மண்ணிக்குங் காண்மினே" (தேவா. 5.61 : 5).

[அண் → அண்ணி. அண்ணுதல் = நெருங்குதல், பொருந்துதல், தித்தித்தல்.]

அண்ணி *aṇṇi*, பெ. (n.) **அண்ணன் மனைவி**; elder brother's wife. 'அண்ணன்தான் கூடப் பிறந்தான், அண்ணியுமா கூடப்பிறந்தாள்?' (பழ.).

அண்ணிது *aṇṇidu*, பெ. (n.) 1. **அண்மை**; proximity, nearness. 2. **அண்மையிலுள்ள**; that which is near.

[அண் + இது. இனி, அண்ணியது → அண்ணிது என்றுமாம். அண்ணிது → அண்ணிசு (யாழ்.அக.). ஒ.நோ : பெரிது → பெரிசு.]

அண்ணிமை *aṇṇimai*, பெ. (n.) அண்மை (ஈடு); nearness.

[அண்மை → அணிமை → அண்ணிமை.]

அண்ணியது *aṇṇiyadu*, பெ. (n.) **கிட்டியது**; that which is near. "அண்ணிய தாயு மகன்றும்" (கூர்மபு. பொது. 12).

அண்ணியன் *aṇṇiyaṉ*, பெ. (n.) 1. **அண்மையன்**; he who is near. 2. **நெருங்கிய உறவினன்**; close kinsman. 'தமப்பன் பகையாக அவனிலும் இவன் அண்ணியனென்று வர நின்ற ப்ரஹலாதன்' (ஈடு, 10 : 3, பிர. பக். 70).

[அண் → அண்ணியன்.]

அண்ணு-தல் *aṇṇu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **கிட்டுதல்**; to approach, draw near. "அண்ணிய தாயு மகன்றும்" (கூர்மபு. பொது. 12). 2. **சேர்தல்**; to join, unite with. "உன்னடிக்கீ ழண்ணியமெய் யடியவர்க்கு" (திருவிளை. மெய்க்காட். 8). 3. **ஒத்தல்**; to resemble. "புகலும் வாளரிக் கண்ணியர்" (கம்பரா. பால. வரைக்காட். 28).

து. அண்டுனி

[அள் → அண் → அண்ணு.]

அண்ணுண்டார் *aṇṇuṇḍār*, பெ. (n.) **கள்ளர் குலப் பட்டப்பெயர்களுள் ஒன்று** (கள்ளர் சரித். பக். 145); a caste title of Kaḷḷars.

[ஒருகா. 'அரண்வென்றார்' என்பது அண்ணுண்டார் என்று திரிந்திருக்கலாம்.]

அண்ணூத்திப்பிரியர் *aṇṇūtti-p-piriyar*, பெ. (n.) **கள்ளர்குலப் பட்டப்பெயர்களுள் ஒன்று** (கள்ளர் சரித். பக். 145); a caste title of Kaḷḷars.

ஒருகா. 'ஐந்நூற்றுப் பேரர்' என்பது இதன் மூலமா யிருந்திருக்கலாமென்று, **சென்னை அகரமுதலி** கருதுகின்றது. அதை 'ஐந்நூற்றுப் பிரிவார்' அல்லது 'ஐந்நூற்றுப் பெரியார்' என்று கொள்ளவும் இடமுண்டு.

அண்ணெரிஞ்சான்பூண்டு *aṇṇeriñjāṉ - pūṇḍu*, பெ. (n.) இது கொச்சை வடிவமாதலாற் கொள்ளத்தக்கதன்று.

[அன்றெரிந்தான் பூண்டு → அண்ணெரிஞ்சான் பூண்டு.]

அன்றெரிந்தான் பூண்டு பார்க்க; see *aṉṟerindāṉ-pūṇḍu.*

அண்ணை *aṇṇai*, பெ. (n.) பேய் (பொதி.நி.); devil, ghost, goblin.

[மண்ணை (பேய்) → அண்ணை.]

அண்பல் *aṇ-pal*, பெ. (n.) **மேல்வாய்ப் பல்;** upper tooth or teeth. ''அண்பல் முதனா விளிம்புற வருமே'' (நன். 77).

ம. அணப்பல்லு

[அண்பல் = அண்ணத்தைப் பொருந்திய பல்.]

சீவகசிந்தாமணி 928ஆம் செய்யுளிலுள்ள, ''அண்பன் னீரு றமிர்தம்'' என்னுந் தொடருக்கு, 'அடிப்பல்லில் நீரூறமிர்தம் — புளிங்கறி' என்று நச்சினார்க்கினியர் குறிப்புரை வரைந்திருக்கின்றார். 'அண்பல்' என்பதற்கு 'அடிப்பல்' என்னும் பொருள் எங்ஙனம் பொருந்துமென்பது தெரியவில்லை. புளிங்கறிக்கோ பிறவகை யுண்டிகட்கோ உமிழ்நீர் சுரப்பின், அது எல்லாப் பற்கும் பொதுவாதலால், இங்கு 'அண்பல்' என்பதற்கு, அண்ணி அல்லது நெருங்கிய பற்கள் என்று பொதுப்படக் கூறுவதே பொருத்தமாம்.

அண்பினார் *aṇbiṉār*, பெ. (n.) **அண்டினவர்;** those who have taken refuge. ''அண்பினார் பிரியார்'' (தேவா. 3.379 : 6).

[அண் → அண்மு → அண்பு + இன் + ஆர்.]

அண்பு-தல் *aṇbu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **அண்ணுதல்;** to approach (தேவா. 3.379 : 6). 2. **அண்டுதல்;** to associate with, to take refuge.

[அண் → அண்மு → அண்பு.]

அண்மு-தல் *aṇmu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **கிட்டுதல்;** to approach. ''அணிமாடத் திடையோர் மண்டபத்தை யண்மி'' (கம்பரா. பால. திருவவ. 61).

[அண்மை → அண்மு.]

அண்மை *aṇmai*, பெ. (n.) 1. **காலத்தால் அல்லது இடத்தால் நெருங்கியுள்ள நிலைமை;** nearness of time or place. ''அண்மையாற் சேய்த்தன்றி'' (கலித். 108 : 35). 2. **பொருள் தொடர்புள்ள இருசொற்கள் அல்லது தொடர்ச்சொற்கள் ஒன்றையொன்று அடுத்து நிற்றல், தொடர்ச்சொற்கள் பொருள் தொடர்புகொள்ளு முறை மூன்றனுள் ஒன்று;** immediate proximity of the qualifying (or governing) and the qualified (or governed) words to each other, one of the three modes by which words or phrases express their syntactic relationship. 3. **அடையுந் தன்மை;** nature of approaching or joining. ''விண்ணவர்பா லண்மையிலனாகு மண்ணல்'' (கந்தபு. உற்பத். காமதக. 38).

[அண் → அண்மை.]

அண்மைச்சுட்டு *aṇmai-c-cuṭṭu-*, பெ. (n.) (இலக்.) **காலமும் இடமும் அவற்றில் தோன்றும் அல்லது உள்ள பொருள்களும் ஆகியவற்றின் நெருங்கிய நிலைமையைக் குறித்துக் காட்டும் எழுத்து அல்லது சொல், சேய்மைச்சுட்டிற்கு எதிரானது;** (Gram.) demonstrative letter or word denoting the nearness of a person, place, thing or time; dist. from *šēymai-c-cuṭṭu.* இவன் இங்கு இதைச் செய்தது இன்றுதான் (உ.வ.).

[அண்மை + சுட்டு.]

அண்மைவிளி *aṇmai-viḷi*, பெ. (n.) (இலக்.) **அருகிலுள்ளவர்களைக் கூப்பிடும் பெயர்வடிவம், பெரும்பான்மை இயல்பாயும் சிறுபான்மை திரிந்தும் இருப்பது, சேய்மைவிளிக்கு எதிரானது;** (Gram.) voc. used to address a person nearby, the form of the nominative unaltered in a majority of cases, dist. from *šēymai-viḷi.*

நாய், பூனை முதலிய சில வீட்டு விலங்குகட்குப் பெயரிட்டு விளிப்பினும், அப் பெயர்கள் அவற்றிற்கு ஒருவகை அடையாளச் சொல்லாகவே யிருத்தலால், அவற்றின் விளி மக்கட்பெயர்விளிக் கொப்பாகக் கொள்ளப் படா.

அண்வரு-தல் (அண்வா-தல்) *aṇ-varu-(aṇ-vā-),* 18 செ.கு.வி. (v.i.) 1. **அருகில் வருதல்;** to come near. 2. **அருகிலிருத்தல்;** to be close, near. 'ஆவண வீதியெல் லாம்நிழல் பாயநின் றணவருமே' (இறை. 2, உரை, பக். 53).

அண[1]**-த்தல்** *aṇa-*, 3 செ.கு.வி. (v.i.) **பொருந்துதல்;** to be joined, united. ''முலைமுன் றணந்த சிறுநுதல்'' (கல்லா. 13 : 12).

[அண் → அண. அண்ணுதல் = பொருந்துதல்.]

அண²-த்தல் *aṇa-*, 3 செ.கு.வி. (v.i.) 1. **தலை யெடுத்தல்**; to lift the head. "பாம்பணந் தன்ன" (பொருந. 13). 2. **மேனோக்குதல்**; to look upward. "நெற்கொ ணெடுவெதிர்க் கணந்த யானை" (குறிஞ்சிப். 35).

து. அணவு, அணாவுனி.

[அண் → அண.]

அணங்கம் *aṇaṅgam*, பெ. (n.) **இலக்கணம்** (சிந்தா. நி. 103); grammar.

[அஞ்சணங்கம் = ஐந்திலக்கணம் (யாழ்.அக.). அணங்கு + அம். அணங்கு = ஒலி, எழுத்து.]

ஐந்திலக்கணம் பார்க்க; see *aind(u)-ilakkaṇam*.

அணங்கயர்-தல் *aṇaṅg(u)-ayar-*, 2 செ.கு.வி. (v.i.) **திருவிழாக் கொண்டாடுதல்**; to celebrate a religious festival. "சுறவ முண்மருப் பணங் கயர் வனகழிச் சூழல்" (பெரியபு. திருக்குறிப். 7).

[அணங்கு + அயர்.]

அணங்காட்டு *aṇaṅg(u)-āṭṭu*, பெ. (n.) **வேலன் வெறியாட்டு** (வின்.); dance under possession by *Vēlaṉ* (W.).

[அணங்கு + ஆட்டு.]

அணங்காடு-தல் *aṇaṅg(u)-āḍu-*, 5 செ.கு.வி. (v.i.) **தெய்வமேறி யாடுதல்**; dance of one possessed by the spirit of *Vēlaṉ*. "அணங்காடுத லன்றந்தோ" (திவ். திருவாய். 4.6 : 5).

[அணங்கு + ஆடு.]

அணங்கார் *aṇaṅgār*, பெ. (n.) **பெண்கள்**; women (சங்.அக.).

[அணங்கு + ஆர் (ப.பா. ஈறு).]

அணங்கிய *aṇaṅgiya*, கு.பெ.எ. (adj.) **அழகிய**; beautiful. "சீரணங்கிய தேவர்கள்" (பெரியபு. திருநகரச். 10).

அணங்கியம் *aṇaṅgiyam*, பெ. (n.) **இலக்கியம்**; literature.

அஞ்சணங்கியம் = ஐந்திலக்கியம்.

[அணங்கு + இயம்.]

ஐந்திலக்கியம் பார்க்க; see *aind(u)-ilakkiyam*.

அணங்கியோன் *aṇaṅgiyōṉ*, பெ. (n.) **வருத்தியவன்**; one who persecuted. "பெருந்துறைக் கண்டிவ ளணங்கி யோனே" (ஐங்குறு. 182).

அணங்கினர் *aṇaṅgiṉar*, பெ. (n.) **தெய்வப் பெண்கள்**; celestial damsels. "புடையுற வணங்கினர் போற்றி" (கந்தபு. தேவ. தெய்வ. 10).

அணங்கு¹-தல் *aṇaṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) **ஒலித்தல்**; to sound; make noise. "புகை யணங்க" (பு. வெ. 10 : 8).

[ஒல் → ஒலி. ஒல் → அல் → அலம்பு. அலம்பு தல் = ஒலித்தல். அல் → அலு → அலுங்கு → அனுங்கு. அனுங்குதல் = முணுமுணுத்தல், ஒலித்தல். அலுங்கு → அனுங்கு → அணங்கு.]

அணங்கு²-தல் *aṇaṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **அஞ்சுதல்** (சங்.அக.); to fear, to be afraid. 2. **வருந்துதல்**; to suffer, to be distressed. "ஆடியுட் பாவை போனீ யணங்கிய தணங்க வென்றான்" (சீவக. 957). 3. **இறந்துபடுதல்**; to die, to be slain. "நற்போ ரணங்கிய" (பு.வெ. 7 : 27). 4. **பொருந்துதல்**; to be joined' united. 'உரையணங்குந் தமிழ்வேந்தன், (இறை. 50, உரை, பக். 230). 5. **பின்னி வளர்தல்**; to grow, thick with branches interlaced as bamboos. "முழுநெறி யணங்கிய நுண்கோல் வேரலோடு" (மலைபடு. 223). 6. **விரும்புதல்** (சங்.அக.); to desire. —, 5 செ. குன்றாவி. (v.t.) 1. **அஞ்சுதல்**; to dread. 2. **வருந்துதல்**; to afflict. "புறத்தோ னணங்கிய பக்கமும்" (தொல். பொருள். புறத். 10). 3. **கொல்லுதல்**; to kill, murder, slay. "அணங்குவாள் விடவரா" (கம்பரா. அயோத். மந்தரை. 53).

[உணங்கு → அணங்கு.]

அணங்கு¹ *aṇaṅgu*, பெ. (n.) 1. **ஒலி**; sound. 2. **எழுத்து**; letter.

[ஒல் → அல் → அலு → அலுங்கு → அனுங்கு → அணங்கு.]

அணங்கு² *aṇaṅgu*, பெ. (n.) 1. **வருத்தம்**; suffering, pain. "அணங்குசா லுயர்நிலை தழீஇ" (திருமுருகு. 289). 2. **வருத்துதல்**; affliction. "அரவின் பொறியு மணங்கும் புணர்ந்த" (கலித். 50 : 6). 3. **கொலை**; killing (பிங்.). "அணங்கு பார்த்து நகை முகிழ்த் தாவியோ டுணங்கு பேய்முலை" (கூர்மபு. கண்ணனவ. 51). 4. **அச்சம்**; fear. "நான்முகத் தோன்கண் ணணங்குற வருப வர்க் கடிதிர்" (கூர்மபு. அட்டமூ. 5). 5. **நோய்** (பிங்.); disease. 6. **காமநெறியால்**

உயிர்கொள்ளுந் தெய்வமகள்; demoness who destroys one's life by kindling lust in him. "ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப" (குறள், 918). 7. வருத்திக் கொல்லுந் தெய்வமகள்; demoness who inflicts sufferings and takes away one's life. 8. கொல்லிப்பாவை; the demoness of literary fame who resided at the *Kolli* Hills. 9. தெய்வம்; deity. "அணங்குருத் தன்ன கணங்கொ டானை" (புறநா. 362 : 6). 10. தெய்வமகள்; celestial damsel. "அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ" (குறள், 1081). 11. தெய்வத்தன்மை; divinity. "சீரணங்கு மணிமாடத் திருச்சிற்றம் பலம் போற்றி" (கோயிற்பு. பாயிர. 2.). 12. (கொல்லும் பெண்தெய்வத்தின்) அழகு (பிங்.); beauty. 13. வடிவு; form. "அருந்திற லணங்கினாவியர் பெருமகன்" (சிறுபாண். 86). 14. மையல்நோய்; lust. 15. ஆசை (சூடா.); desire. 16. வெறியாட்டு; dancing under religious excitation, esp. possession by the spirit of *Vēlaṉ*. 17. சிவ ஆற்றல்; Śiva's supreme energy. "பேரணங்கி னுடனாடும் பெரும்பற்றப் புலியூர்" (கோயிற்பு. பாயிர. 2). 18. அழகிய பெண்; beautiful woman. 19. பெண்; woman. "ஆண்டவ் விராக்கத வணங்கு மெய்தும்" (சேதுபு. வேதாள. 58). 20. பேய்மகள்; a female devil. "துணங்கையஞ் செல்விக் கணங்குநொடித் தாங்கு" (பெரும்பாண். 459). 21. பேய்; devil. "அணங்கே விலங்கே" (தொல். பொருள். மெய்ப். 8). 22. சண்டாளன் (பிங்.); a person of low-caste. 23. ஆளியின் குட்டி; young offspring of *yāḷi*, an extinct animal. "ஆளியி னணங்கு மரியின் குருளையும்" (சிலப். 25 : 48).

ம. அணங்ஙு

[உணங்குதல் = காய்தல், வாடுதல், மெலிதல், வருந்துதல், செயலறுதல். உணங்கு → அணங்கு. அணங்குதல் = வருந்துதல், வருத்துதல். வருத்துதலே வருந்துதலல்லாத ஏனைப் பொருள்கட்கும் அடிப்படை.]

"ஆளியி னணங்கு மரியின் குருளையும்" என்று சிலப்பதிகாரத்தில் வேறுபடுத்திக் (25 : 48) கூறப்பட்டிருப்பதால், ஆளி (யாளி) வேறு, அரி (சிங்கம்) வேறு என்பது பெறப்படும்.

'யாளியை ஆளியென்றார், "கடிசொலில்லை" என்பதனான்' என்று நச்சினார்க்கினியர் பொருநராற்றுப்படையுரையிற் (139) கூறியதினின்று, யாளி என்னுஞ் சொல்லே யானை → ஆனை என்பதுபோன்று முதன் மெய் நீங்கி ஆளியென வழங்கிவருவதை அறியலாம்.

அணங்கு என்னும் இளமைப் பெயர் ஆளியினத்திற்கே சிறப்பாக வழங்கப்பட்டிருப்பதால், அதற்கொரு சிறப்பான பொருட்கரணியமும் இருத்தல் வேண்டும்.

"ஆளி நன்மா வணங்குடைக் குருளை" என்னும் பொருநராற்றுப்படை யடியில் (139), குருளை என்பது ஆளிக்குட்டியின் பெயராகவும், அணங்குடை யென்பது அதற்கு அடைமொழியாகவும் வந்துள்ளன. இவ்வடைமொழியின் பொருளை விளக்கும் வகையில்,

"மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை
ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டங் களிறட் டாஅங்(கு)"

என்னும் அடுத்த மூவடி யமைந்துள்ளன. அவற்றுள் முதலடியை நச்சினார்க்கினியர் கரிகாற் பெருவளத்தானைப்பற்றியதாகப் பிரித்துக் காட்டினும் ஏனை யீரடிகளையும் 139ஆம் அடியொடு சேர்த்து, அவற்றிற்கு, 'ஆளியாகிய நல்ல மாவினது வருத்துதலையுடைய குருளை முலையை யுண்டலைக் கைவிடாத இளைய பருவத்தே கடுக, முற்பட இரையைக் கோடற்குக் காரணமான வேட்டையிலே களிற்றைக் கொன்றாற் போல' என்று பொருள் வரைந்திருப்பதால், ஆளியின் குட்டியைக் குறிக்கும் அணங்கு என்னுஞ் சொற்கும் வருத்துதல் என்பதே பொருட்கரணியம் என்பது தேற்றம்.

ஆளி பார்க்க; see *āḷi*.

அணங்குசார்ந்தாள் *aṇaṅgu-šārndāḷ*, பெ. (n.) தேவராட்டி; temple-priestess divinely inspired and possessed with oracular powers. "அழைத்தபணி யென்னென்றா ளணங்கு சார்ந்தாள்" (பெரியபு. கண்ணப். 49).

அணங்குடையாட்டி *aṇaṅg(u)-uḍai-y-āṭṭi*, பெ. (n.) தெய்வமேறி யாடுபவள்; a divinely inspired woman having oracular powers. "அப்பெற்றியில் வாழ்த்தும் அணங்குடை யாட்டி" (பெரியபு. கண்ணப். 67).

[அணங்கு + உடை + ஆட்டி.]

அணங்குத்தாக்கு *aṇaṅgu-t-tākku*, பெ. (n.) ***அணங்குதாக்கு** பார்க்க*; see *aṇaṅgu-tākku.*

அணங்குதாக்கு *aṇaṅgu-tākku*, பெ. (n.) ***காம நெறியா லுயிர்கொள்ளுந் தெய்வமகளால் தாக்கப்படுகை***; possession by a demoness of lust.

[அணங்கு + தாக்கு.]

அணங்குறைவாள் *aṇaṅg(u)-uṟaivāḷ*, பெ. (n.) ***அணங்குடையாட்டி** பார்க்க*; see *aṇaṅg(u)-uḍai-y-āṭṭi.* "அணங்குறை வாளையுங் கொண்டு" (பெரியபு. கண்ணப். 153).

[அணங்கு + உறைவாள்.]

அணங்கெழுந்தாடு-தல் *aṇaṅg(u)-eḻund(u)-āḍu-*, 5 செ.கு.வி. (v.i.) ***அணங்காடு-தல்** பார்க்க*; see *aṇaṅg(u)-āḍu-* (சிலப். 5 : 70).

[அணங்கு + எழுந்து + ஆடு.]

அணத்தான் *aṇattāṉ*, பெ. (n.) **ஓணான்** (கோவை); blood-sucker, *Calotes verisicolor* (Cm.).



அணத்தான் (ஓணான்)

[அணத்தல் = தலையெடுத்தல். அண → அணந்தான் → அணத்தான் = அடிக்கடி தலை யெடுக்கும் ஓணான்.]

அணப்பு *aṇappu*, பெ. (n.) 1. ***முப்பத்தைந்திலிருந்து ஐம்பதுவரைப்பட்ட கசம்*** (yd.) ***கொண்ட நீட்டலளவு*** (G. Tp. D. i, 179); a measure of length = 35 to 50 yds. 2. ***அரைச் செறுவிற்கு*** (acre) ***மேற்பட்ட சதுர அளவு*** (G. Tp. D. i, 179); a square measure exceeding ½ acre.

[அணை → அணைப்பு → அணப்பு.]

ஓர் அணைப்புத் தொலை (தூரம்) = ஒரு படைச்சால் நீளம். ஓர் அணைப்பு = ஓரிணை யேர்கொண்டு ஒரு நாளில் உழக்கூடிய நிலப் பரப்பு. அணைத்தல் = தழுவுதல், சேர்த்தல், கட்டுதல், கையை வளைத்துக் கட்டித் தழுவினாற்போல் சால்வளைத்து உழுதல்.

அணம் *aṇam*, பெ. (n.) 1. ***மேல்வாய்***; the palate or the roof of the mouth. "பல்லணத் தொழிலின்" (நன். 74). 2. ***மேல்வாய்ப்புறம்***; the side of the upper jaw (சா.அக.).

மேல்வாய் என்பது மேல்வாய்ப்புறத் தையுங் குறிக்குமாதலால், அதை ஒரு தனிப் பொருளாகக் குறிக்கத் தேவையில்லை.

[அண்ணம் → அணம்.]

அணர்-தல் *aṇar-*, 2 செ.கு.வி. (v.i.) ***மேனோக்கிச் செல்லுதல்***; to rise, move upward. "அணரி நுனிநா வண்ண மொற்ற" (தொல். எழுத்து. பிறப். 12).

[அண் → அண → அணர்.]

அணர் *aṇar*, பெ. (n.) 1. ***மேல்வாய்ப்புறம்*** (பிங்.); the side of the upper jaw. 2. ***மேற் பரடு***; hard palate (சா.அக.). 3. ***மீசை முளைக்குமிடம்***; that part of the face where the moustache grows.

[அணல் → அணர்.]

அணர்ச்செவி *aṇar-c-cevi*, பெ. (n.) ***எடுத்த அல்லது மேனோக்கிய காது***; prominent or erect ears. "நோன்புறத் தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு" (பெரும்பாண். 79-80.).

[அணர் + செவி.]

அணரி *aṇari*, பெ. (n.) ***மேல்வாய்***; palate, roof of the mouth. 'அணரியிலே கறையையும்' (ஞானா. 44, உரை).

[அணர் → அணரி.]

அணரிடு-தல் *aṇar-iḍu-*, 20 செ.கு.வி. (v.i.) ***கொக்கரித்தல்***; to shout in token of triumph. "சொக்கனுமங் கணரிட்டுத் துடைதட்டிச் சிரித்தருளி" (திருவாலவா. 52 : 8).

[அணர் + இடு. ஒருகா. சேவல் போரில் வென்றபின் தலைதூக்கிக் கொக்கரித்தாற்போல், போர்மறவனும் வெற்றி பெற்றபின் தலை நிமிர்ந்து ஆரவாரித்தல். அணர்தல் = மேனோக்கு தல், மேலெழுதல்.]

அணல் *aṇal*, பெ. (n.) 1. ***மேல்வாய்ப்புறம்*** (பிங்.); the side of the upper jaw. 2. ***உள் மிடறு*** (பிங்.); throat, windpipe. 3. ***கழுத்து***; neck. "கறையணற் குறும்பூழ்" (பெரும் பாண். 205). 4. ***கீழ்வாய்ப்புறம்*** (திவா.); lower part of the mouth, chin. 5. ***தாடி***; beard. "மையணற் காளை" (புறநா. 83 : 1).

6. **அலைதாடி**; dewlap. "மொய்யண லானிரை" (பு. வெ. 1 : 12).

ம., க. அணல்.

[அண் → அணல்.]

அணவல் *aṇaval*, பெ. (n.) **பல்** (சம்.அக.கை.); tooth. —, தொ.பெ. (vbl.n.) 1. **அணுகுதல்**; to go near, approach, come close to. 2. **பொருந்துதல்**; to unite.

ம. அணயுக; க. அணெ, அணி.

[அண் → அண → அணவு → அணவல். அண்ணுதல் = நெருங்குதல். அணவுதல் = பொருந்துதல். நெருங்கியிருத்தலால் அல்லது பொருந்துதலால், பல் அணவல் எனப்பட்டது போலும். இது தொழிலாகுபெயர்.]

அணவன் *aṇavaṉ*, பெ. (n.) **பொருந்தினவன்**; one who has taken abode, resident. "குரங்காடு துறைதனி லணவன்தான்" (தேவா. 5.63 : 4).

[அண → அணவு → அணவன்.]

அணவா¹-தல் (**அணவரு-தல்**) *aṇa-vā-* (*aṇa-varu-*), 18 செ.கு.வி. (v.i.) **அணுகுதல்**; to come near.

[அண் → அண (நி.கா.வி.எ.) + வா.]

அணவா²-தல் (**அணவரு-தல்**) *aṇa-vā-* (*aṇa-varu-*), 18 செ.கு.வி. (v.i.) **மேலுயர்த்தப்படுதல்**; to be raised. "நீர்வழிக் கணவரு நெடுங்கைய வாகி" (பெருங். உஞ்சைக். 54 : 42).

[அண் → அண (நி.கா.வி.எ.) + வா.]

அணவா *aṇavā*, பெ. (n.) **ஒரு பூண்டு**; a plant (unidentified) (சா.அக.).

அணவு¹-தல் *aṇavu-*, 5 செ.கு.வி. (v.i.) **மேல் நோக்கிச் செல்லுதல்**; to go upward, ascend. "அந்தர வகடுதொட் டணவு நீள்புகழ்" (சீவக. 1239).

[அண் → அண → அணவு.]

அணவு²-தல் *aṇavu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **அணுகுதல்** (சூடா.); to go near, approach, come close to. 2. **தொடுதல், புல்லுதல்** (சூடா.); to embrace. "மாடக்கொடி கதிரணவுந் திருவெள்ளி யங்குடி" (திவ். பெரிய திரு. 4.10 : 4). 3. **பொருந்துதல்**; to unite. 4. **ஒட்டுதல்** (பிங்.); to stick to, adhere to. 5. **புணர்தல்**; to have sexual intercourse (சா.அக.).

ம. அணவு; க. அணசு.

[அண் → அண → அணவு.]

அணவு¹ *aṇavu*, தொ.பெ. (vbl.n.) **பொருந்துதல்**; joining, uniting. "இருகரை யணவுறக் கிடக்கும்" (உபதேசகா. மச்ச. 12).

[அண் → அண → அணவு.]

அணவு² *aṇavu*, பெ. (n.) **நடு** (பிங்.); middle.

[உள் = உள்ளிடம், நடு. உள் → உண் → அண் → அண → அணவு.]

அணற்கமந்திரம் *aṇaṟka-mandiram*, பெ. (n.) **தூதுவளை**; three-lobed night shade, *Solanum trilobatum* (சா.அக.).

அணன் *aṇaṉ*, பெ. (n.) 1. **பொருந்தியவன்**; one who possesses, as greatness. "சீரணனை" (திவ். இயற். நான். 67). 2. **இரண்டறக் கலந்தவன்**; one who is inseparably united with the universe.

[அண் + அன்.]

அணா *aṇā*, பெ. (n.) **இன்பப்போக்கு, பற்றாட்டு**; pastime, recreation, hobby, sport. 'அணாவாய்த்துக் காலங்கழிக்க' (ஈடு).

[அண்ணுதல் = பற்றுதல். அணா = மனம் பற்றிய ஆட்டு.]

அணாப்பன் *aṇāppaṉ*, பெ. (n.) **ஏமாற்றுபவன்**; a male cheat, swindler, deceiver.

[அணாப்பு + அன் (ஆ.பா. ஈறு).]

அணாப்பி *aṇāppi*, பெ. (n.) **ஏமாற்றுபவள்**; deceitful woman. "அணாப்பிகள், படிறிகள்" (திருப்பு. 343).

[அணாப்பு + இ (பெ.பா. ஈறு).]

அணாப்பு-தல் *aṇāppu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **ஏமாற்றுதல்**; to deceive, cheat. "அணாப்பித் துலக்கஞ் சீர்த்துத் திரிமானார்" (திருப்பு. 381).

[அணா (அணவு) → அணாப்பு. அணாப்பு = ஒக்க அல்லது பொருந்தச் சொல்லி ஏமாற்றுதல். ஒ.நோ: ஏய்தல் = ஒத்தல். ஏய்த்தல் = ஏமாற்றுதல்.]

அணாப்பு *aṇāppu*, தொ.பெ. (vbl.n.) **ஏமாற்றுகை** (இ.வ.); deceit, fraud (Loc.). **அணாப்பு-தல்** பார்க்க; see *aṇāppu-*.

ம. அணப்பு

அணார் *aṇār*, பெ. (n.) **கழுத்து**; neck. "அணார் சொறிய" (திவ். பெரியாழ். 3.5 : 8).

[அணல் → அணர் → அணார்.]

அணாவு-தல் *aṇāvu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **கிட்டுதல்**; to approach. "அருக்கன் மண்டலத் தணாவு மந்த ணாரூர்" (தேவா. 2.237 : 1).

[அணவு → அணாவு.]

அணி-தல் *aṇi-*, 2 செ.கு.வி. (v.i.) 1. **அழகாதல்**; to be beautiful. "பாஅ யன்ன பாறை யணிந்து" (மதுரைக். 278). 2. **அணிகலமாதல்** (செ.அக.); to be an ornament. "ஐயிரு திசையினு மணிந்து செல்வன" (கந்தபு. தேவ. தெய்வ. 65). 3. **வரிசையாதல்**; to be drawn up in lines. "ஐயிரு திசையினு மணிந்து செல்வன" (கந்தபு. தேவ. தெய்வ. 65)—(சங். அக.). 4. **பரத்தல்**; to spread. "சுணங்கணி யாகம்" (கலித். 4 : 17). —, 2 செ.குன்றாவி. (v.t.) 1. **அலங்கரித்தல்**; to adorn. "இக்கோ நகரணிக" (கம்பரா. அயோத். மந்தரை. 33). 2. **தாங்குதல்**; to bear, as weapons; to wear, as dress. "ஆத லாற்றனை வியப்பதற் கன்றவை யணிதல்" (கந்தபு. தக்க. ததீசியுத். 14). 3. **பூணுதல்**; to wear, as jewels. 4. **பொருந்துதல்**; to join with. "சாறயர்ந் தன்ன காரணி யாணர்த் தூம்பகம்" (பதிற். 81 : 20-21). 5. **படை வகுத்தல்**; to put in array, as an army. "இத்தக வாக வணிந்திரு சேனையும்" (பாரத. பதின்மூன். 8). 6. **சூழ்தல்**; to surround. "துகிலணி யல்குற் றுளங்கி யன் மகளிர்" (சிறுபாண். 262). 7. **வண்ணித்தல்**; to describe in embellished language. "அனையதை யணியமாட் டாது" (பிரபுலிங்க. கைலாச. 8).

ம. அணியுக

[அண் → அணி. அண் = மேல். அணி = மேலிடு.]

அணி[1] *aṇi*, பெ. (n.) 1. **அழகு** (பிங்.); beauty. "அணிமாழ்கி" (கந்தபு. உற்பத். காமதக. 8). 2. **அணிகலம்**; ornament, jewel. 'அணியென் பது கவிப்பன கட்டுவன செறிப்பன பூண்பன வென்னுந் தொடக்கத்தன' (தொல். சொல். கிளவி. 46, சேனா. உரை). 'அணிபூண்ட நாய்போல', 'அணியெல்லாம் ஆடையின் பின்' (பழ.). 3. **ஒப்பனை** (பிங்.); embellishment, decoration. 4. **சொல்லணி பொருளணி யென்னும் இருவகை யிலக்கிய அழகு**; figure of speech. "வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்" (நன். 268). 5. **அணியிலக்கணம்**; rhetoric. 6. **தொழிற்கருவி**; mechanic's tool. 7. **வழிப்போக்கு, போர் முதலியவற்றிற்குரிய பூட்டுப் பொருத்துகள்**; outfit for journey, equipment for battle. 8. **கோலம்**; disguise. "அணியி னரங்கின்மே லாடுநர்போல்" (ஏலாதி, 24). 9. **அடுக்கு**; tier. "அணிநிலை மாடம்" (பெருங். உஞ்சைக். 33 : 105). 10. **திரள்**; pile, heap. "அணியணி யாகிய தாரர்" (பரிபா. 6 : 31). 11. **கூட்டம்**; assembly, gathering. "தேவ ரணிதொழ" (கோயிற்பு. பதஞ்சலி. 9). 12. **பெருமை** (பிங்.); greatness. 13. **வரிசை**; order, row. "சுருப்பணி நிரைத்த" (கல்லா. 15 : 5). 14. **ஒழுங்கு**; regularity. 15. **பூமாலை** (சங்.அக.); flower-garland. 16. **படைவகுப்பு** (பிங்.); array of an army. 17. **படையுறுப்பு** (பிங்.); division of an army. 18. **அழகுதோன்றும் முகம்**; beautiful face, face. "நண்பகன் மதியம்போ னலஞ்சாய்ந்த வணியாட்கு" (கலித். 121 : 18). 19. **இனிமை**; pleasantness. "அணிநிலா" (சிலப். 4 : 3). 20. **நன்மை**; goodness. 21. **கூட்டுச்சரக்கு (சம்பாரம்)** (சங்.அக.); curry-stuff. 22. **அன்பு** (பிங்.); love. 23. **தேரின் அச்சாணி** (சங்.அக.); linch pin. 24. **அண்மை**; nearness. 25. **எல்லை**; limit, boundary (யாழ்.அக.). 26. **நுணா**; a tree, *Morinda umbellata* alias *M. citrifolia* (சா. அக.). 27. **முப்பத்தைந்தைக் குறிக்கும் குழூஉக் குறி** (சோதிட அக.); cant for the number 35. —, இடை. (part.) **ஓர் உவமவுருபு**; an adjectival word of comparison. "நிலவிரி கதி ரணி நிகரறு நெறியினை" (சீவக. 2562).

ம., க., தெ., து., குட. அணி; பிராகி. அணிய.

[அண் → அணி. குழூஉக்குறிப் பொருள் பொருளணியின் தொகைபற்றியதாயிருக்கலாம்.]

அணி[2] *aṇi*, கு.வி.எ. (adv.) **அருகில்**; near.

"இனியணி யென்னுங் காலையும் இடனும்
வினையெஞ்சு கிளவியுஞ் சுட்டும் அன்ன"
(தொல். எழுத்து. உயிர்மயங். 34).

க. அணி

[அண் → அணி.]

அணிக்கிழங்கு *aṇi-k-kiḻaṅgu*, பெ. (n.) **நுணாவின் அடிவேர்க் கிழங்கு**; the bulbus root of the *nuṇā* (சா.அக.).

[ஒருகா. அடிக்கிழங்கு → அணிக்கிழங்கு.]

அணிகம் *aṇigam*, பெ. (n.) 1. *அணிகலம்*; ornament. "அணிகமாப் பணிகள் செய்து" (சீவக 2811). 2. *ஊர்தி*; conveyance, vehicle. "அணிகமூர்ந் தமர ரீண்டி" (சீவக. 3115).

[அணி → அணிகு → அணிகம். அண் = மேல். அணிகம் = மேலூர்ந்து செல்வது.]

அணிகயிறு *aṇi-kayiṟu*, பெ. (n.) **குதிரையின் கடிவாளம்**; reins. "அணிகயிறு தெரிபு வருவார்" (பரிபா. 9 : 52).

அணிகலச்செப்பு *aṇi-kala-c-ceppu*, பெ. (n.) **நகைப் பெட்டி** (பிங்.); jewel-casket.

அணிகலச்செப்பு

[அணிகலம் + செப்பு.]

அணிகலம் *aṇi-kalam*, பெ. (n.) 1. *நகை*; ornament, jewel. 2. *நகைப்பெட்டி* (புதுவை); jewel-casket (Pond.); 3. *கம்மாளர் கருவி* (யாழ்.அக.); smith's instrument.

ம. அணிகலம்

அணிகலன்கள் *aṇi-kalaṉgaḷ*, பெ. (n.) **நகை நட்டு**; ornaments, jewels. "செய்யணி கலன்கள் சிந்தி" (சீவக. 117).

[அணிகலம் → அணிகலன்.]

அணிச்சுரம் *aṇiccuram*, பெ. (n.) *அணிசநாசம் பார்க்க*; see *aṇišanāšam*.

அணிச்சுராவிதம் *aṇiccurāvidam*, பெ. (n.) **சிவப்புக் கீழ்க்காய் நெல்லி**; red small-leaved feather foil, *Phyllanthus polyphyllus* alias *P. niruri* (சா.அக.).

அணிச்சை *aṇiccai*, பெ. (n.) **நாகமல்லி** (பச்.மூ.); ringworm root.

ஒ.நோ: *அனிச்சை.*

அணிசநாசம் *aṇišanāšam*, பெ. (n.) **நாக மல்லிகை**; snake jasmine, *Rhinacanthus communis* (சா.அக.).

அணிஞ்சகம் *aṇiñjagam*, பெ. (n.) **கொடிவேலி**; Ceylon leadwort, *Plumbago zeylanica* (சா. அக.).

அணிஞ்சில்[1] *aṇiñjil*, பெ. (n.) 1. **கொடிவேலி** (மலை.); Ceylon leadwort. 2. **சிற்றாமுட்டி** (மலை.); rose-coloured sticky mallow. 3. **நொச்சி** (மலை.); five-leaved chaste tree. 4. **முள்ளி** (மலை.); species of Solanum.

அணிஞ்சில்[2] *aṇiñjil*, பெ. (n.) **அழிஞ்சில்** (வின்.); sage-leaved tree, Alangium.

[அழிஞ்சில் → அணிஞ்சில்.]

அணிஞ்சேபம் *aṇiñjēbam*, பெ. (n.) **சிவப்புக் கொம்மட்டி**; a red variety of water-melon, *Citrullus vulgaris* (சா.அக.).

அணிந்தம் *aṇindam*, பெ. (n.) **கோபுரவாயிலின் முகப்பிலுள்ள மேடை** (வின்.); pial at the entrance of a temple tower.

[அணி → அணிந்து → அணிந்தம் → அளிந்தம் > **Skt.** alinda.*]*

அணிந்தவைதிருத்தல் *aṇindavai-tiruttal*, பெ. (n.) **காதல் மயக்குற்ற இளம்பெண் தன் நெகிழ்ந்துபோன வளையல் முதலிய அணிகளைச் செறித்தல், இருபத்து நான்கு மெய்ப் பாட்டுச் செயல்களுள் ஒன்று**; one of the 24 emotional acts of a maiden overwhelmed with love, such as tightening the loosened bracelets. "அணிந்தவை திருத்தல்" (தொல். பொருள். மெய்ப். 15).

அணிந்தற்றுப்போ-தல் *aṇindaṟṟu-p-pō-*, 8 செ. கு.வி. (v.i.) **வறுமைப்படுதல்** (இராட்.); to become destitute (R.).

[ஒருகா. அழிந்தற்றுப்போ → அணிந்தற்றுப் போ.]

அணிந்துரை *aṇindurai*, பெ. (n.) **முகவுரை, பாயிரம்**; preface (நன். 1).

[அணிந்து + உரை.]

அணிநிலைமாடம் *aṇi-nilai-māḍam*, பெ. (n.) **அடுக்கான மேனிலைகளுள்ள வீடு அல்லது கட்டடம்**; storeyed house. "அத்தம் பெயரிய வணிநிலை மாடத்து" (பெருங். உஞ்சைக். 33 : 105).

அணிநுணா *aṇinuṇā*, பெ. (n.) **இராமசீத்தா** (யாழ்ப்.); bullock's heart, s. tr., *Anona reticulata.*

ஒ.நோ : **Span.** anona.

அணிநோக்கி *aṇinōkki*, பெ. (n.) **செங்கொன்றை**; red Indian cassia, *Cassia marginata* (சா.அக.).

அணிப்பாடு *aṇi-p-pāḍu*, பெ. (n.) **வணிக மருமம்** (இ.வ.); trade secret (Loc.).

க. அணிபாடு

அணிப்பூ *aṇi-p-pū*, பெ. (n.) *புளி*; tamarind, *Tamarindus indica* (சா.அக.).

அணிபடு-த்தல் *aṇi-paḍu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **சுவடித்தல், அழகுபடுத்துதல்**; to decorate. "அண்டம் வெஃக அணிபடுத் திட்டவை" (கந்தபு. உற்பத். திருக்கல். 31). 2. **ஒழுங் காக்குதல்**; to set in order, arrange, regulate.

அணிபெறு-த்தல் *aṇi-peṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *அழகுபெறச் செய்தல், புனைதல்*; to adorn. "அந்நகருக் கோர்நாம மணிபெறுத்தி யளித்தனனே" (கந்தபு. அசுர. நகர்செய். 22).

அணிமாக்கசங்கு *aṇimā-k-kaśaṅgu*, பெ. (n.) *இந்துப்பு*; rock-salt (சா.அக.).

அணிமுகம் *aṇi-mugam*, பெ. (n.) *அலங்காரமான வாயில்முகப்பு*; decorated portal. "வாயின் மாடத் தாய்நல வணிமுகத்து" (பெருங். மகத. 3 : 31).

அணிமுலை *aṇi-mulai*, பெ. (n.) 1. *பூசணி* (மலை.); pumpkin. 2. **அழிஞ்சில்**; ancola fruit plant, *Alangium lamarckii* (சா.அக.).

அணிமுலைப்பால் *aṇi-mulai-p-pāl*, பெ. (n.) **பூசணிக்காம்பினின்று ஒழுகும் நீர்**; fluid oozing out of the pumpkin peduncle (சா.அக.).

[அணிமுலை + பால்.]

அணிமுலைமாது *aṇi-mulai-mādu*, பெ. (n.) *பூசணிக்காய்*; pumpkin, *Cucurbita maxima*.

அணிமை[1] *aṇimai*, பெ. (n.) *அருகு*; nearness, proximity, either of time or place. "மூதா ரணிமையின்" (காஞ்சிப்பு. நாட். 16).

[அண் → அணி → அணிமை.]

அணிமை[2] *aṇimai*, பெ. (n.) 1. **நுண்மை** (சிந்தா.நி. 105); minuteness. 2. **அணுவைப் போல் நுண்மையாகை, எண்பெரும் பெற்றி களுள் ஒன்று**; supernatural power of becoming as small as an atom, one of *eṇperum-peṟṟigaḷ*.

[அள் = கூர்மை, நுண்மை. அள் → அண் → அணி → அணிமை.]

அணியத்துக்கட்டை *aṇiyattu-k-kaṭṭai*, பெ. (n.) (கப்.) *கப்பலின் முன்பக்கத்து ஓரம்*; (Naut.) cutwater of a ship.

[அண் → அணி → அணியம். அணியம் + அத்து + கட்டை.]

அணியப் பாய்மரப் பருமல் *aṇiya-p-pāy-mara-p-parumal*, பெ. (n.) *அணியப் பாய்மரப் பாய் பார்க்க*; see *aṇiya-p-pāymara-p-pāy*.

[அணியம் + பாய்மரம் + பருமல்.]

அணியப் பாய்மரப் பாய் *aṇiya-p-pāy-mara-p-pāy*, பெ. (n.) **அணியத்திலுள்ள பாய்மரத்திற் கட்டும் பாய்** (புதுவை); sail of the mast on the prow of a vessel (Poṇḍ.).

[அணியம் + பாய் + மரம் + பாய்.]

அணியம் *aṇiyam*, பெ. (n.) 1. *படைவகுப்பு*; array of an army. 2. **உடனே வினைதொடங் கற்கேற்ற நிலை (ஆயத்தம்)** (வின்.); readiness. க. அணி. 3. *கப்பலின் முன்பக்கம்*; forepart of a vessel, stem, prow. அணியத்திலே கிழிந் தாலுங் கிழிந்தது, அமரத்திலே கிழிந்தாலுங் கிழிந்தது (உ.வ.). 4. **துணைக்கருவி**; apparatus (சா.அக.). 5. **ஆட்டின் தலை**; sheep's head (சா.அக.).

ம. அணியம்; து. அண்ய.

[அணி → அணியம் = போருடையணிந்து படைக்கலங்களைத் தாங்கி நிற்றல்போல், அல்லது போர்க்களத்திற் படைவகுப்பு வகுக்கப் பட்டதுபோல், வினை உடனே தொடங்கற்கேற்ற நிலை. ஒருகா. போர்ப்படையின் முன்னணியும் கப்பலின் முன்பக்கமும் போர் தொடங்குவதை யொத்தது போலும், போர்முகத்தில் வெட்டப் படும் ஆட்டுக்கடாவெட்டு.]

அணியல் *aṇiyal*, பெ. (n.) 1. *வரிசை*; line, order. "அளக்கர்வாய் முத்தமுர லணியலா ரணியின் சோதி" (கம்பரா. அயோத். கைகேயி சூ. 79). 2. **மாலை**; garland. "அணிய லணிகுவ னன்றி" (நைடத. அன்னத்தைத்தூ. 99). 3. *அழகுசெய்கை*; adorning, decorating. "கறை மிட றணியலு மணிந்தன்று" (புறநா. 1 : 5).

ம. அணியல்

[அணி → அணியல்.]

அணியன்[1] *aṇiyaṉ*, பெ. (n.) 1. **அழகன்**; handsome man. 2. *அணியுடையவன்*; one who possesses ornaments. 3. **அணிகளை யணிந்தவன்**; one who is wearing ornaments.

[அணி → அணியன்.]

அணியன்[2] *aṇiyaṉ*, பெ. (n.) **நெருங்கினவன்**; one who is very close. "நாய்க்காற் சிறு விரல்போ னன்கணியர்" (நாலடி. 218).

க. அணுக

[அணி → அணியன்.]

அணியாத்தரங்கன் *aṇiyāttaraṅgaṉ*, பெ. (n.) அணில்; squirrel (சா.அக.).

அணியிடுவான்வரி *aṇi-y-iḍuvāṉ-vari*, பெ. (n.) பழைய வரிவகை (S.I.I. iv, 122); an ancient tax.

அணியியல் *aṇi-y-iyal*, பெ. (n.) 1. (இலக்.) அணியிலக்கணம்; (Gram.) rhetoric. 2. ஒரு பண்டை அணியிலக்கண நூல் (சிலப். 2 : 27, உரை); an ancient work on rhetoric.

[அணி + இயல்.]

அணியிலக்கணம் *aṇi-y-ilakkaṇam*, பெ. (n.) சொல்லணி பொருளணி யென்னும் இருவகை யணிகளையும்பற்றிக் கூறும் இலக்கணம்; rhetoric.

[அணி + இலக்கணம்.]

அணியிழை *aṇi-y-iḻai*, பெ. (n.) 1. அழகிய அணிகலம்; beautiful jewel or ornament. 2. அழகிய அணிகளை யணிந்த பெண்; woman, adorned with beautiful jewels. "அணியிழை தன்னோய்க்குத் தானே மருந்து" (குறள், 1102).

[அணி + இழை.]

அணியுஞ்செம்பு *aṇiyuñ-cembu*, பெ. (n.) உயர்ந்த களிம்பற்ற செம்பு; superior copper which is free from verdigris, pure copper (சா.அக.).

[அணியும் + செம்பு.]

அணியெண் *aṇi-y-eṇ*, பெ. (n.) 35 என்னும் எண், தண்டியலங்காரம் என்னும் தமிழ் அணி யிலக்கண நூலிற் சொல்லப்பட்டுள்ள பொரு ளணிகளின் தொகை; the number 35, as that of *poruḷ aṇi* in *Taṇḍiyalaṅgāram*, a Tamil treatise on rhetoric. "அணியெண் முதலிரண் டரைத்தூக்கு" (தைலவ. தைல. 42).

அணியொட்டிக்கால் *aṇi-y-oṭṭi-k-kāl*, பெ. (n.) தலைப்பக்கம் வேலைப்பாடமைந்த தமிழ் நாட்டுக் கோயிற் கற்றூண்; Dravidian temple pillar with ornamented capital. அணி யொட்டிக்கால் மண்டபம் (உ.வ.).

[அணி + ஒட்டி + கால்.]

அணில் *aṇil*, பெ. (n.) மரங்களில் வாழ்வதும், சாம்பல் நிறமும் மயிரடர்ந்த வாலும் முதுகில் மூவெள் வரியும் உள்ளதும், வால் நீங்கலாக 8 விரலம் (அங்குலம்) நீளம் வளர்வதும், வேக மாய் ஓடவும் தாவவும் வல்லதும்; கொறிப்பான் (rodent) வகுப்பைச் சேர்ந்ததுமான உயிரி (பிராணி); squirrel, *Furambulus palmarum*, a kind of arboreal rodent of ashen grey colour, growing to a length of about 8 inches excluding the tail, with three whitish stripes along the whole length of the back and with bushy tail, distinguished by its agility and power of leaping and fast-running. "மூவரி யணிலொடு" (தொல். பொருள். மர. 6). 'அணில் கொப் பிலும் ஆமை கிணற்றிலும்', 'அணில் நெட் டியா தென்னை சாயும்?', 'அணிற்பிள்ளைக்கு நுங்கு அரிதோ? ஆண்டிச்சி பிள்ளைக்குச் சோறு அரிதோ?', 'அணிற்பிள்ளையின் தலை மீது அம்மிக் கல்லை வைத்தது போல' (பழ.).

ம., க., பட., துட. அணில்; து. சணில்.

[அணி → அணில் = முதுகில் மூவரியுள்ளது. அணி = வரி.]

சாம்பசிவம் பிள்ளை தமிழ் - ஆங்கில அகர முதலி அணிலைப்பற்றிச் சிறப்பாகக் கூறுவது வருமாறு :

Squirrel, *Sciurus palmarum*. It is the name given to the various species of rodents living in trees............The several species are :

1. பனையேறியணில்; palm squirrel.
2. வரியணில்; striped squirrel, *Pencillatus*.
3. பறவையணில்; flying squirrel, *Pteromis petaurista*.

Besides the above three, there are also striped squirrels of Travancore, Nilgiris, Malabar, etc.

The other South Indian species are—*Elephinstonei*, *Layardi*, *Macrourus*, *Tristriatus*, *Sublineatus*.

அணில்வரிக் கொடுங்காய் *aṇil-vari-k-koḍuṅgāy*, பெ. (n.) வெள்ளரிக்காய் (புறநா. 246 : 1); cucumber.

[அணில் + வரி + கொடும் + காய்.]

அணில்வரியன் *aṇil-variyaṉ*, பெ. (n.) 1. வெள்ளரிவகை (யாழ்ப்.); mottled water-melon, *Citrullus vulgaris* (J.). 2. வரிப் பலாப் பழம் (யாழ்ப்.); a streaked jackfruit (J.). 3. முதுகில் வரியுள்ள ஆவு (பசு) (யாழ்ப்.); cow with a large stripe on its back (J.). 4. ஒருவகைக் கோடுள்ள பட்டு (யாழ்ப்.); a kind of silk cloth with stripes (J.).

அணில்வாற்றினை *aṉil-vāṟṟiṉai*, பெ. (n.) *அணிலின் வாலைப்போன்ற கதிருள்ள ஒரு வகைத் தினை* (யாழ்ப்.); species of Italian millet, *Panicum italicum* (J.).

[அணில் + வால் + தினை.]

அணிலம் *aṉilam*, பெ. (n.) *அணில்*; squirrel. "தரங்கநீ ரடைக்க லுற்ற சலமிலா வணிலம்" (திவ். திருமாலை, 27).

[அணில் → அணிலம்.]

அணிவகு-த்தல் *aṉi-vagu-*, 4 செ.குன்றாவி. (v.t.) *தானை, குதிரை, யானை, தேர் என்னும் நால்வகைப் படைகளையும், வெற்றிபெறற் கேற்றவாறு பெரும்படைத் தலைவன் தான் கருதியபடி போர்க்களத்தில் வகுத்து நிறுத்துதல்;* to draw up in battle array, as the commander-in-chief or generalissimo, all the four constituents of an army, namely infantry, cavalry, elephantry and chariotry, on the battle-field in strategic formation. "மண்ணகத்தணி யணிகளாக மகீபர்தம்மை வகுத்துளான்" (பாரத. படையெழுச். 38).

அணிவகுப்பு *aṉi-vaguppu*, பெ. (n.) *படைமறவரை வரிசைப்பட நிறுத்துதல்*; strategic formation of an army in battle array.

அணிவகுப்பு எனினும் படைவகுப்பு எனினும் ஒக்கும். அது வடிவு (வியூகம்), உறுப்பு என இருதிறப்படும்.

தண்டம், மண்டலம், சக்கரம், சகடம், பருந்து முதலியனவாக வடிவு பலவகைப் படும். வடிவின்வகை, சேனையின் அளவையும் படையின் வகையையும் போர்க்களத்தின் பரப்பையும் அவ்வப்போது நேரும் போர் நிலைமையையும் படைத்தலைவன் திறமையையும் பொறுத்தது.

ஒட்டு, உண்டை, அணி என்பன வடிவின் பெயர்கள்.

"ஒட்டும் யூகமு முண்டையு மணியு
மற்றிவை படையின் வகுப்பென லாகும்"
(பிங். 6 : 402).

தூசி (தூசு), கூழை, நெற்றி, கை, அணி என்பன உறுப்பின் பெயர்கள். உறுப்புகள் என்பன வடிவுகளின் பிரிவுகள். பருந்து வடிவின் உறுப்புகள் ஏழாகலாம். தார், தூசி, கொடி என்பன ஒருபொருட் சொற்கள். அவை படையின் முன்னணியைக் குறிப்பன. கூழை யென்பது பின்னணி. அதன் பிற்பகுதி கடைக்கூழை யெனப்படும்.

"தூசியுங் கூழையு நெற்றியுங் கையு
மணியு மென்ப தப்படைக் குறுப்பே"
(பிங். 6 : 403).

"தாரே முன்செல் கொடிப்படை யாகும்"
(பிங். 6 : 405).

படையியல்பற்றிக் கூறும் பண்டைத் தமிழ்ப் பொருள்நூல்களெல்லாம் இறந்துபட்டன. அதனாலேயே, பரிமேலழகர் 'படை வகுப்பாவது வியூகம்; அஃது எழுவகை உறுப்பிற்றாய், வகையால் நான்காய், விரியால் முப்பதாம்.............. இவற்றின் பெயர்களும் இலக்கணமும் ஈண்டுரைப்பிற்பெருகும். அவையெல்லாம் வடநூல்களுட் கண்டுகொள்க' என்று உரைத்தார் (குறள், 767, பரிமே. உரை). 'தொன்றுதொட்டு வருதல் சேர சோழ பாண்டிய ரென்றாற்போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்' என்று அவரே (குறள், 955, உரை) கூறியிருப்பதால், இறந்துபட்ட தமிழ்நூல்களே வடநூல்கட்கு முதனூல்களென்பது தானே பெறப்படும்.

அணிவடம் *aṉi-vaḍam*, பெ. (n.) *கழுத்தி லணியும் மணிமாலை*; ornamental string of jewels, necklace.

அணிவியூகம் *aṉi-viyūgam*, பெ. (n.) *படைவகுப்பு*; military array.

[அணி + **Skt.** vyūha > **த.** *வியூகம்.]*

அணிவிரல் *aṉi-viral*, பெ. (n.) *மோதிர விரல்;* ring - finger. "அதிரதர் தம்மை யெண்ணி லணிவிரல் முடக்க வொட்டா" (பாரத. நிரைமீட். 91).



அணிவிரல்

ம. அணிவிரல்

[அணி + விரல். அணி = மோதிரம், கைந்நகை. அண் → அணி.]

அணிவில் *aṉi-vil*, பெ. (n.) *பேரேடு* (கணக். பதி. 36); ledger.

அணிவிளக்கு-தல் *aṉi-viḷakku-*, 5 செ.குன்றாவி. (v.t.) *அலங்கரித்தல்*; to adorn. "தில்லைநகர் மணிவீதி யணிவிளக்கும்......... அனபாயன்" (பெரியபு. புகழ்ச். 8).

அடுக்குவாழை



அடுப்புஊதி

அண்டிக்கொட்டை

அணில்

அணைகயிறு

அணிவு *aṇivu*, பெ. (n.) **அணிகை**; wearing. "புனையிழைகள் அணிவும்" (திவ். திருவாய். *8.9 : 5*).

ம. அணிவு

[அணி → அணிவு.]

அணிவேர் *aṇi-vēr*, பெ. (n.) **வெட்டிவேர்**; cuscuss grass root, *Andropogon aromatices*. "அணிவேர் தகரம் பூரம்" (தைலவ. தைல. *86*).

அணிற்பிள்ளை *aṇiṟ-piḷḷai*, பெ. (n.) *1.* **அணிற் குட்டி**; young of squirrel. *2.* **அணில்**; squirrel.

[அணில் + பிள்ளை.]

சிலர் அணிலைப் பிள்ளையைப்போல் வீட்டில் வளர்ப்பதால், அதன் குட்டிமட்டு மன்று, முழுவளர்ச்சி யடைந்த அணிலும், பிள்ளை யெனப்படும். இருக்கும் பிள்ளை மூன்று, பறக்கும் பிள்ளை மூன்று, ஓடும் பிள்ளை மூன்று என்பது ஒரு சொலவடை. ஓடும் பிள்ளை மூன்றனுள் ஒன்று அணில்.

அணு *aṇu*, பெ. (n.) *1.* **நுண்மை** (பிங்.); minuteness, smallness, subtleness. 'அணு அளவு இலாபத்திலும் அரைப்பங்கு பாழ்', 'அணு மாமேரு ஆகுமா?', 'அணுவும் மலையாச்சு மலையும் அணுவாச்சு' (பழ.). *2.* **பகுக்க முடியாவாறு நுண்மையானது**; minute particle of matter, atom. "அணும யங்குமின் நுழை கதிர் எறிந்தவா ளாக" (பிரபுலிங்க. கோரக். *53*); 'அவனன்றி அணுவு மசையாது' (பழ.). *3.* **ஆதன் (ஆன்மா)**; soul. "அன்னையொப்ப வணுக்கட்கு நல்லவர்" (திருவாலவா. *34 : 19*). *4.* **நுண்ணுடம்பு (சூக்கும சரீரம்)**; subtle body. "உள்மணுவாய்ச் சென்று" (சி.போ. சிற். *2.3 : 1*). 5. **நுண்ணாற்றல் வடிவம் (சூக்கும சத்திருபம்)**; a body or form having minute power. "வித்துச் சாகாதி யணுக்க ளாக வேற்றதேல்" (சி.சி. சுபக். *1 : 14*). *6.* **மந்திரம்** (பொதி. நி.); mantra. *7.* **பொடி** (பிங்.); dust. *8.* **தினை**; Italian millet, *Panicum italicum* (சா.அக.). *9.* **வரகு**; common millet (சா.அக.).

ம., க., து. அணு.

[அள் = கூர்மை. அள் → அள்கு → அஃகு. அஃகுதல் = கூரிதாதல், சுருங்குதல், நுண்ணி தாதல். அள் → அண் → அணு = நுண்மை, நுண்ணியது, மிகச் சிறியது.]

அணுக்கச்சேவகம் *aṇukka-c-cēvagam*, பெ. (n.) **அரசர் முதலியோரிடம் அணுகிச் செய்யும் ஊழியம்**; service to kings and nobles as personal attendant. "அணுக்கச் சேவகத்தி லுள்ளோர்" (பெரியபு. ஏயர்கோ. *332*).

[அணுக்கம் + **Skt.** *sēvaka > த. சேவகம்.]*

அணுக்கம் பார்க்க; see *aṇukkam*.

அணுக்கடிக்கை *aṇukk(u)-aḍikkai*, பெ. (n.) **உண்ணெருக்கமாகுகை** (ஈடு, *7.3 : 4*); becoming intimate, becoming a confidential friend.

[அணுக்கு + அடிக்கை. அடி → அடிக்கை.]

அணுக்கு பார்க்க; see *aṇukku*.

அணுக்கத்தொண்டன் *aṇukka-t-toṇḍaṉ*, பெ. (n.) *1.* **அரசனுக்கு நெருங்கிப் பணிசெய் வோன்**; one who renders service to a king as his personal attendant. *2.* **இறைவனுக்கு நெருங்கிய அடியான்**; an ardent devotee of God.

[அணுக்கம் + தொண்டன்.]

அணுக்கநம்பி *aṇukka-nambi*, பெ. (n.) **சுந்தர மூர்த்தி நாயனார்** (செந். XXV: *342*); Saint Šundarar.

[அணுக்கம் + நம்பி.]

அணுக்கம்[1] *aṇukkam*, பெ. (n.) **அண்மை, நெருக்கம்**; proximity, nearness, closeness. "அணுக்க வன்றொண்டர்" (பெரியபு. வெள்ளா. *3*).

[அள்ளுதல் = நெருங்குதல், செறிதல். அள் → அண். அண்ணுதல் = நெருங்குதல். அண் → அணு → அணுகு. அணுகுதல் = கிட்டுதல், நெருங்குதல். அணுகு → அணுக்கு → அணுக்கம்.]

அணுக்கம்[2] *aṇukkam*, பெ. (n.) *1.* **சந்தனம்**; sandalwood (அக.நி.). ஒ.நோ: அணுகம். *2.* பாம்பு; snake.

அணுக்கவிளக்கு *aṇukka-viḷakku*, பெ. (n.) **கோயில் திருமேனிக்கு (மூர்த்திக்கு)ப் பக்கத் தில் எரியும் திருவிளக்குவகை**; light burning near the chief deity of a temple. 'இரவை ஸந்திக்கு அணுக்க விளக்காக எரியவைத்த விளக்கு ஒன்றுக்கு' (S.I.I. viii, 34).

அணுக்கற்பிதம் *aṇu-k-kaṟpidam*, பெ. (n.) *1.* (உடலியங்.) **அணுவைப்பற்றிய கோட்பாடு**; (Physiol.) Corpuscular theory. *2.* (வேதி.) **அணுவின் கோட்பாடுகளைக் கற்பிக்கும் நூல்**; (Chem.) the doctrine that goes to explain the following theories :

(1) தனிமங்கள் பகுக்க முடியாத அணுக்களால் அமைந்தவை; the elements consist of indivisible atoms.

(2) வெவ்வேறு தனிமங்களின் அணுக்கள் குறிப்பிட்ட விழுக்காட்டிற் கலக்கின்றன; the atoms of different elements unite in fixed proportions.

(3) அவை வேதியற் கூட்டிற்கு உட்படுகின்றன; they enter into chemical combinations (சா.அக.).

[அணுக்கற்பிதம் = அணுக்கோட்பாடு. அணு + கற்பிதம். Skt. kalpita > த. கற்பிதம்.]

அணுக்கன் *aṇukkaṉ*, பெ. (n.) 1. **அண்மையன்;** one who is near. "வீரனை யணுக்கனாய்த் தொழுதான்" (தணிகைப்பு. நந்தி. 40). 2. **தொண்டன்;** devotee, as being near to God. "அவ்வப் புவன பதிகளுக்கு அணுக்கராய் வைகி" (சி.போ. பா. 8 : 1, பக். 429). 3. **உண்ணெருக்கமானவன் (அந்தரங்கமானவன்)** (திவ். பெரியாழ். 5.4 : 11); one who is intimate. 4. குடை; umbrella. "அணுக்கனைக் கவிழ்த்துப் பிடித்தாற்போலே" (ஈடு, 5.6 : 6).

[அணுக்கம் → அணுக்கன்.]

அணுக்கன்திருவாயில் *aṇukkaṉ-tiru-vāyil*, பெ. (n.) **உண்ணாழிகை (கர்ப்பக்கிருக) வாயில்;** entrance to the inner sanctuary.

அணுக்கி *aṇukki*, பெ. (n.) **திருவடியாள்;** a female devotee. "அணுக்கி மாரும் அநேகர் இருக்கவே" (கலிங். 321).

[அணுக்கன் (ஆ.பா.) – அணுக்கி (பெ.பா.).]

அணுக்கிருமி *aṇu-k-kirumi*, பெ. (n.) 1. **அரத்தமோடும் நரம்பிடங்களில் பிறந்து அவற்றில் உலாவும் அறுவகைப் பூச்சிகளுள் ஒன்று;** the minute organisms which appear in organic matter and are found moving in blood-vessels, Bacteria. 2. **சிறிய புழு;** a germ, microbe.

[அணுக்கிருமி = அணுப்புழு. அணு + Skt. krimi > த. கிருமி.]

அரத்தக்கிருமி பார்க்க; see *aratta-k-kirumi*.

அணுக்கு *aṇukku*, பெ. (n.) **அணிமை, நெருங்கிய அண்மை;** nearness. "தன்ன பேரணுக்குப்பெற்ற பெற்றியி னோடு" (திருக்கோ. 373).

[அண் → அணுக்கு.]

அணுக்கொப்புளம் *aṇu-k-koppuḷam*, பெ. (n.) **மிகச் சிறிய கொப்புளம்;** a minute vesicle (சா.அக.).

[அணு + கொப்புளம்.]

அணுக்கோட்பாடு *aṇu-k-kōṭpāḍu*, பெ. (n.) **அணுவின் கற்பனை (அணுக்கொள்கை);** the theory that all matter is composed of atoms and the weight of each atom differs in different substances, the hypothesis that all chemical combinations take place between the ultimate particles of bodies and in proportions expressed by the simple multiple of the number of atoms, Atomic theory (சா.அக.) — Atomic theory that states that elemental bodies consist of indivisible atoms of definite relative weight, and that atoms of different elements unite with each other in fixed proportions, which determine the proportions in which elements and compounds enter into chemical combination — (C.O.D.).

[அணு + கோள் + படு. கோட்படு → கோட்பாடு = கொள்கை.]

அணுக்கற்பிதம் பார்க்க; see *aṇu-k-kaṟpidam*.

அணுகம் *aṇugam*, பெ. (n.) **செஞ்சந்தனம்** (பச். மூ.); red sanders.

அணுகலர் *aṇugalar*, பெ. (n.) **பகைவர்;** enemies, foes.

அணுகார் *aṇugār*, பெ. (n.) **அணுகலர்** பார்க்க; see *aṇugalar*.

அணுகாரணவாதம் *aṇu-kāraṇa-vādam*, **ஐம்பூத நுண்ணணுக்களே உலக முதற்கருவி யென்னுங் கொள்கை** (சி.சி. சுபக். 1 : 11, சிவஞா.); doctrine that the Universe is created from the atoms of the five elements.

[அணு + காரணம் + வாதம். Skt. kāraṇa > த. காரணம். Skt. vāda > த. வாதம். காரணம் = த. கரணியம். வாதம் = த. உறழ். அணுகாரண வாதம் → த. அணுகரணியவுறழ்.]

அணுகு-தல் *aṇugu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **கிட்டுதல், நெருங்குதல்;** to draw near, approach. "தாணிழன் மருங்கி லணுகுபு" (பொருந. 149).

[அள் → அண் → அணு → அணுகு.]

அணுசதாசிவர் *aṇu-šadāšivar,* பெ. (n.) (சிவ.) அருளாண்மை மெய்ப்பொருள் நிலையில் (சாதாக்கிய தத்துவத்தில்) இன்பம் நுகரும் ஆதன்கள் (ஆன்மாக்கள்); (Šaiva.) souls in enjoyment of the Divine Bliss in the *šadākkiya tattuvam.*

[Skt. sadāšiva > த. சதாசிவம் = அருட்சிவம்.]

அணுசதாசிவர் = த. அணுவருட்சிவர்.

அணுசாத்திரம் *aṇu-šāttiram,* பெ. (n.) நுண்ணணுக்களைப்பற்றிய நூல்; the science of atoms, atomology.

[Skt. šāstra > த. சாத்திரம் = நூல்.]

அணுசாத்திரம் = த. அணுநூல்.

அணுசைவம் *aṇu-šaivam,* பெ. (n.) பதினாறு வகைச் சிவனியத்துள் (சைவத்துள்) ஒன்று; அது சிவனை உள்ளும் புறமும் ஐந்தொழில் (பஞ்ச கிருத்தியம்) செய்வனென் றறிந்து அம்மணக்கோலம் (திகம்பர வேடம்) பூண்டு, நன்னெறி யிலக்கணத்தோடு (சன்மார்க்க லக்கணத்தோடு) கூடிக் குருவிலங்கக் கோலம் (குருலிங்க வேடம்) பொருளாய்ச் சிவன் செய்யுந் தொழில்களைப் பட்டறிவிலே (அனுபவத்திலே) பார்த்து, இன்பம் (ஆனந்தம்) பொங்கி அதன்கண் மனம் ஒன்றிவிடுவதே (மனோலய மாவதே) வீடு (மோட்சம்) என்று சொல்வது (த.நி.போ. 259) — (சங்.அக.); Šaiva sect which holds that an initiate into Šaivism should realise Šiva as performing the *pañca-kiruttiyam* in and out of himself, take delight there in and get absorbed in mind one of the 16 *Šaivam.*

[சிவன் → சிவம் > Skt. šaiva > த. சைவம்.]

அணுத்தத்துவம் *aṇu-t-tattuvam,* பெ. (n.) நுண்ணணுவின் உண்மையைப்பற்றிய வொரு நூல்; the science dealing with the philosophy of atoms, the doctrine of the formation of all things from individual particles endowed with gravity and motion, atomic philosophy (சா.அக.).

[அணு + தத்துவம். த. தான் > Skt. tat → tattva = அதாயிருக்குந் தன்மை, உண்மைத் தன்மை, மெய்ப்பொருள். Skt. tattva > த. தத்துவம்.]

அணுத்திரள் *aṇu-t-tiraḷ,* பெ. (n.) தனிமையாகத் தோற்றமளிக்கும் அணுக்கூட்டமாகிய ஒரு பொருள்; a very minute particle of matter consisting of a number of atoms and capable of existing in a separate form—a molecule (சா.அக.).

[அணு + திரள்.]

அணுத்துவம் *aṇuttuvam,* பெ. (n.) 1. நுண்மை; minuteness, atomic nature (செ.அக.); 2. அணுக்கள் அமைந்திருக்குந் தன்மை; chemical valency of an atom—Atomicity (சா.அக.).

[அணு > Skt. aṇutva > த. அணுத்துவம் = அணுத்தன்மை, அணுமை.]

அணுத்தைலம் *aṇu-t-tailam,* பெ. (n.) பல சரக்குகளைச் சேர்த்து மூக்கிற் பிழிவதற்காக உருவாக்கிய ஒருவகை யெண்ணெய்; a medicated oil prepared from several drugs for application in the nostrils (சா.அக.).

[அணு + தைலம். Skt. tila > த. தைலம் = எண்ணெய். அணுத்தைலம் = அணுஎண்ணெய்.]

அணுதரிசினி *aṇu-tarišini,* பெ. (n.) நுண்பொருளைப் பெரிதாகக் காட்டும் கண்ணாடி; microscope.

[Skt. dṛš > த. தரிசி → தரிசினி. அணுதரிசினி = அணுக்காணி, பூதக்கண்ணாடி, பெருக்கங்காட்டி.]

அணுநுட்பம் *aṇu-nutpam,* பெ. (n.) நுண்ணணு (பரமாணு), அணுவிற்கணு; the ultimate unit of an element which is incapable of further sub-division—Atom (சா.அக.).

அணுநூல் *aṇu-nūl,* பெ. (n.) அணுவைப்பற்றிய நூல் (அணுசாத்திரம்); the science of atoms—Atomology.

அணுப்பகுப்பு *aṇu-p-paguppu,* பெ. (n.) அணுவைக் கூறுபடுத்துதல் (இக்.வ.); splitting of atom (Mod.).

[அணு + பகுப்பு.]

அணுப்பிரி-த்தல் *aṇu-p-piri-,* 4 செ.குன்றாவி. (v.t.) நீரை நுண்துளிகளாகப் பிரித்தல்; the mechanical process of breaking liquid into spray, atomization (சா.அக.).

[அணு + பிரி.]

அணுப்பீச்சி *aṇu-p-picci,* பெ. (n.) நுண்டுளி சிதறுங் கருவி; an instrument that throws a jet of spray (சா.அக.).

அணுபட்சம் *aṇu-paṭcam,* பெ. (n.) (சிவக்.) 1. **சிவனது ஏவலின்கீழ்த் தூவிலா வுலகத்தில் (அசுத்த பிரபஞ்சத்தில்) தொழில்புரியும் (அனந்தர், சீகண்ட வுருத்திரர் போன்ற) மிகு சமைவுற்ற (பரிபக்குவ மடைந்த) ஆதன்க ளான (ஆன்மாக்களான) சிவ வேறுபாடுகள் (பேதங்கள்)** (சி.போ. பா. 2 : 4, பக். 276); (Šaiva. phil.) exalted souls which function in the impure universe under the direction of Šiva, such as *Anantās* and *Srikanṭa Rudrās.* 2. **ஆதன்கள் (ஆன்மாக்கள்) தாமே சமைவுற்று (பக்குவப்பட்டு) இறைவனை அடையும் நெறி, சம்புபட்சத்தின் எதிர்;** the spontaneous mode of elevation of the souls to the feet of God, dist. from *šambupaṭcam.* "ஆனநெறி யாஞ்சரியை யாதிசோ பானமுற் றணுபட்ச சம்புபட்ச மாமிரு விகற்பமும்" (தாயு. மௌன. 5).

[பகு → பக்கம் (பகுதி, வகுப்பு, கட்சி.) > **Skt.** pakṣa > **த.** *பட்சம். அணுபட்சம் = ஆதன் பக்கம்.]*

அணுபரசிவன் *aṇu-para-šivaṉ,* பெ. (n.) (சிவ.) **அணுபட்சத்துப் பரசிவன்;** (Šaiva.) Para-Šiva of *aṇupaṭcam.* "அணுபர சிவாந்த அநேகே சுரர்கள்" (சி.சி. சுபக். 3 : 74, ஞானப். உரை).

[புரம் → பரம் → பர = மேலான, உயர்ந்த. சிவ → சிவன். பரசிவன் = உயர்நிலைச் சிவன் (Šiva in His highest form).*]*

அணுபரிணாமவாதம் *aṇu-pariṇāma-vādam,* பெ. (n.) **அணுவிலிருந்து எல்லா உலகங்களும் உண்டாயிருப்பதாகக் கூறும் கொண்முடிபு (சித்தாந்தம்)** (இக்.வ.); atomism (Mod.).

*[***Skt.** pariṇāma = **த.** *மாற்றம்.* **Skt.** vādam = **த.** *உறழ். அணுபரிணாமவாதம் = அணுமாற்ற வுறழ்.]*

அணுபலை *aṇu-palai,* பெ. (n.) **காட்டுப்பயறு;** small wild-gram, *Phaseolus amarus* (சா.அக.).

அணுபேதம் *aṇu-pēdam,* பெ. (n.) **ஆதன்பக்க வேறுபாடு (ஆன்மபட்ச பேதம்);** difference of *aṇupaṭcam.* "சிவபேத மணுபேத மெனப் பிரமாதி" (சி.சி. சுபக். 2 : 74, ஞானப். உரை).

*[***Skt.** bhēda > **த.** *பேதம் = வேறுபாடு.]*

அணுமூர்த்தி *aṇu-mūrtti,* பெ. (n.) **ஆதத் திருமேனி (ஆன்மமூர்த்தி)** (சங்.அக.); an attributive name of Šiva.

அணுமுலுதுவரை *aṇu-mūlu-tuvarai,* பெ. (n.) **போகர் நிகண்டிற் சொல்லப்பட்டுள்ள ஒரு வகைத் துவரை;** a kind of red-gram referred to in the *Bhōgar Nighaṇḍu* (சா.அக.).

அணுமை[1] *aṇumai,* பெ. (n.) **அணுத்தன்மை;** atomicity.

[அணு → அணுமை.]

அணுமை[2] *aṇumai,* பெ. (n.) **அணிமை;** nearness. "வரைந்த அணுமைக் கண்ணே" (ஐங்குறு. 83, உரை).

[அண் → அணு (அண்ணு) → அணுமை. இனி, அண் → அணி → அணிமை → அணுமை என்று மாம்.]

அணுவலி *aṇu-vali,* பெ. (n.) 1. **ஆதன் ஆற்றல் (ஆன்மசக்தி);** the power of the soul. "அடங்கிடு மனாதி முத்தன் வலியணு வலியு மென்னில்" (சிவதரு. சிவஞானயோ. 107). 2. **அணுவின் ஆற்றல்** (இக்.வ.); atomic power (Mod.).

அணுவிடை *aṇu-v-iḍai,* பெ. (n.) **அணுவினிடை (அணுவாந்திரிகம்);** inter-molecule (சா.அக.).

அணுவிரதம் *aṇu-viradam,* பெ. (n.) **ஒரு சமண நோன்பு;** subordinate duties or vows of Jaina laymen.

*[***Skt.** vrata > **த.** *விரதம் = நோன்பு. அணு விரதம் = அணுநோன்பு.]*

அணுவிற்கணு *aṇuviṟk(u)-aṇu,* பெ. (n.) 1. **நுண்ணணு (பரமாணு);** the smallest atom. "அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பா லாய்" (விநா.அகவல்). 2. **ஆதன் (ஆன்மா);** soul.

[அணுவிற்கு + அணு.]

அணுவுருவம் *aṇu-v-uruvam,* பெ. (n.) 1. **அணு வகை;** a kind of atom. "ஒழிந்திடு மணுரு பங்கள்" (சி.சி. சுபக். 1 : 11). 2. **நுண்ணிய வடிவம்;** minuteness.

[அணு + உருவம். உரு → உருவு → உருவம் > **Skt.** rūpa.*]*

அணுவுருவி *aṇu-v-uruvi,* பெ. (n.) 1. **ஆதன் (ஆன்மா);** soul. 2. **கடவுள்;** God.

[அணு + உருவி. உரு → உருவு → உருவி > **Skt.** rūpi.*]*

அணுவெடை *aṇu-v-eḍai,* பெ. (n.) **மிகச் சிறு பொருளின் நிறை;** the weight of an atom of an element, atomic weight (சா.அக.).

[அணு + எடை.]

அணை[1]**-தல்** *aṇai-*, 2 செ.கு.வி. (v.i.) 1. *உண்டாதல், பிறத்தல்*; to be born. தவத்தா லணைந்த புதல்வன் (உ.வ.). 2. *படுத்தல்*; to be laid down. "அணைவ தரவணை மேல்" (திவ். திருவாய். 2.8 : 1). 3. *அவிதல்*; to be extinguished. விளக்கணைந்தது (உ.வ.). —, 2 செ.குன்றாவி. (v.t.) 1. *அடைதல், சார்தல்*; to approach, come near. "பெருந்துறை மருங்கினி லணைந்தார்" (திருவாத. திருப் பெருந். 23). "அணைந்திது நெஞ்சஞ் சாம லறைவதென்" (திருவாலவா. 29 : 14). 2. *பொருந்துதல்*; to touch, come in contact with. "பாரணையா வடிதாங்க" (திருநூற். 91). "அடுகொலைக் கணைந்த முகிலுருப் பெறும்" (கல்லா. 15 : 26-7). 3. *புணர்தல்*; to copulate with. "கிரதுவினை யணைந்து பெற்றாள்" (கூர்மபு. பிருகுவா. 8).

ம. அணயுக; **க.** அணெ; **தெ.** அண்டு; **து.** அணெபுனி.

[அள் → அண் → அண → அணை.]

அணை[2]**-த்தல்** *aṇai-*, பெ. (n.) 4 செ.குன்றாவி. (v.t.) 1. *உண்டாக்குதல்*; to produce. "மம்மரே யணைக்குங் கள்" (சேதுபு. திருநாட். 54). 2. *அடுத்துச்சேர்த்தல்*; to join, put close to, as heaping with earth the base of a tree trunk. மரத்துக்கு மண் அணைத்தான் (உ.வ.). 3. *அமைத்துவைத்தல்;* to cause to happen, to predestine. "அல்லன்மிக வுயிர்க் கிவைதா னணைத்தது" (சிவப்பிர. 25). 4. *அடைகிடத்தல்*; to incubate. "குருகு மன்னமும் வால்வளைக் குப்பையை யண்டமும் பார்ப்பு மாமென வணைக்கும்" (கல்லா. 46 : 23-4). 5. *தழுவுதல்*; to embrace, hold, clasp in the arms. "அன்னை யடுங்கனா வொழித்து வல்லே யணைத்திடப் பெறுஞ் சிறார்" (காஞ்சிப்பு. தக்கே. 59). 6. *கட்டுதல்;* to tie, fasten, as animals. "களிறணைக்குங் கந்தாகும்" (நாலடி. 192). 7. *கூட்டி முடித்தல்*; to tie up in a bunch. "அணைத்த கூந்தல்" (திருமுருகு. 200). 8. *அவித்தல்*; to quench, extinguish. விளக்கை யணைத்தான் (உ.வ.). தீயணைக்கும் பொறி.

க. அணெ

[அள் → அண் → அண → அணை.]

அணை[3] *aṇai*, பெ. (n.) 1. *அணைக்கட்டு*; embankment, bund, dam, ridge for retaining water in a field. 'அணைகடந்த வெள்ளத்தை மறிப்பவர் யார்?', 'அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது', 'அணைகட்ட இறங்கி ஆற்றோடு போய்விட்டான்' (பழ.). 2. *தடை*; hindrance, obstacle. "அணையின்றி யுயர்ந்த வென்றி" (கம்பரா. யுத்த. கும்ப. 159). 3. *நீர்க்கரை*; bank of a river, seashore. "அணையை நூக்கிச் சென்றநீர் வெள்ளம்" (பெரியபு. திருஞான. 723). 4. *செய்கரை* (*சேது*); causeway, bridge. "அலைகடநீறலை யன்றணை வேண்டிய" (கம்பரா. பால. ஆற்றுப். 9). 5. *முட்டு*; support, prop, buttress. மரம் விழாதபடி அணை வை (உ.வ.). 6. **உதவி**; protection, help, accessoriness to a crime (W.). 7. *இருக்கை* (**ஆசனம்**); raised seat, couch. "அரியணை யனுமன் றாங்க" (கம்பரா. யுத்த. திருமுடி. 38). 8. *மெத்தை*; cushion, mattress. "அணைமரு ளின்றுயில்" (கலித். 14 : 1). 9. *படுக்கை, துயிலிடம்* (பிங்.); bed, couch, sleeping place. "நுண்ணிடையாள் வெவ்வுயிர்த்து மெல்லணைமேல் வீழ்ந்த போது" (பெரியபு. தடுத்தாட். 172). 10. *தழுவல்*; embrace. 11. *புணர்ச்சி* (பிங்.); coition, copulation. 12. *ஒரேர் மாட்டிணை*; a yoke of oxen (W.). ஓரணையேர்மாடு, ஈரணை யேர்மாடு (உ.வ.). 13. *தலையணை* (பொதி. நி.); pillow. 14. *மணை* (பொதி.நி.); small low wooden seat. 15. *அணைமரம்*; a wooden frame.

ம. அண; **க., பட.** அணெ; **தெ.** ஆன கட்ட.

[அள் → அண் → அண → அணை.]

அணைக்கட்டி *aṇai-k-kaṭṭi*, பெ. (n.) *உழுசாலிற் பெயருங் கட்டி;* furrow-slice, clod of earth that turns up while ploughing.

[அணை + கட்டி.]

அணைக்கட்டிபோடு - தல் *aṇai-k-kaṭṭi-pōḍu-*, 19 செ.குன்றாவி. (v.t.) *உழுசாலிற் பெயர்ந்த கட்டிகளை யுடைத்து நிரவுதல்* (இ.வ.); to break the clods of earth turned up by the plough and level up the ground (Loc.).

[அணை + கட்டி + போடு.]

அணைக்கட்டு *aṇai-k-kaṭṭu*, பெ. (n.) *நீர்ப் பாசனத்திற்காக ஆறு, கால்வாய்களின் குறுக்கே கட்டும் அணை*; anaicut, dam for regulating the flow of water in an irrigating channel. 2. *செய்கரை*; embankment, dyke.



அணைக்கட்டு

க. அணெகட்டு

[அணை + கட்டு.]

அணைக்கல் *aṇai-k-kal*, பெ. (n.) **அணையி லுள்ள குத்துக்கல்** (R.T.); upright stones in a dam.

[அணை + கல்.]

அணைக்காரன் *aṇai-k-kāraṉ*, பெ. (n.) **அணைக் கட்டின் காவற்காரன்**; watchman of an anaicut.

[அணை+காரன் (பணிசெயல்பற்றிய ஆ.பா. ஈறு).]

அணைகட்டிப்பேசு-தல் *aṇai-kaṭṭi-p-pēšu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **ஒருவன் தன் குற்றத்தை மறைத்துப் பேசுதல்**; to speak in veiled terms to escape blame.

[அணைகட்டி + பேசு.]

அணைகட்டு-தல் *aṇai-kaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **அணைக்கட்டு அமைத்தல்**; to construct a dam. ''குரக்கினத் தாலே குரைகட றன்னை நெருக்கி யணைகட்டி'' (திவ். பெரியாழ். 1.6 : 8).

அணைகட-த்தல் *aṇai-kaḍa-*, 3 செ.கு.வி. (v.i.) 1. **வெள்ளம் எல்லைகடந்து மீளாநிலை யடைதல்**; to overflow an embankment, as flood, beyond control. 'அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது' (பழ.). 2. **ஒரு வினை உரிய காலத்திற் செய்யப்படாமையால் ஒரு வாய்ப்பு என்றும் இழக்கப்படுதல்**; to be lost for ever, as a chance, owing to failure to do a thing in time.

அணைகயிறு *aṇai-kayiṟu*, பெ. (n.) 1. **பால் கறக்கும்போது ஆவின் பின்னங்காலிற் கட்டுங் கயிறு**; cord used for tying together a cow's hind-legs when she is milked. 2. **பால் கறக்கும் போது ஆவின் முன்னங்காலிற் கன்றைக் கட்டுங் கயிறு**; cord with which a calf is tied to the cow's foreleg, when she is milked.

அணைகல் *aṇai-kal*, பெ. (n.) **தீட்டுக்கல்**; whetstone.

அணைகோலு-தல் *aṇai-kōlu-*, 10 செ.கு.வி. (v.i.) **வெள்ளத்தைத் தடுக்க அணை அமைத்தல்**; to form an embankment to confine flood. ''வெள்ளம் வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்'' (நன்னெறி, 30).

அணைசு-தல் *aṇaišu-*, 5 செ.கு.வி. (v.i.) **ஒதுங்குதல், விலகுதல்**; to step aside and give way to a superior, as a mark of respect.

ஒ.நோ: அடைசுதல்

அணைசு *aṇaišu*, பெ. (n.) **இசைக்குழலின் வெண்கலச் சீவாளி அல்லது ஊதி**; metalic mouth-piece of a wind instrument. 'வெண் கலத்தாலே அணைசு பண்ணி இடமுகத்தை யடைத்து' (சிலப். 3 : 26, அடியார்க். உரை).

ம. அணசி

[அணை → அணைசு.]

அணைசொல் *aṇai-šol*, பெ. (n.) **துணைச்சொல்**; word supplied to assist a hesitating speaker, a prompt (W.).

அணைதறி *aṇai-taṟi*, பெ. (n.) **யானை, குதிரை, மாடு முதலியவற்றைக் கட்டும் கம்பம் அல்லது குறுந்தறி**; post or peg for tying elephants, horses, cows, etc.

அணைப்பு[1] *aṇaippu*, பெ. (n.) 1. **தழுவுகை**; embracing. 2. **ஒரு நாளில் இரண்டேரைக் கொண்டு உழக்கூடிய நிலப்பரப்பு** (G. Sm. D. I. i, 288); area that can be ploughed by two pairs of oxen in a day, from half to one acre.

ம. அணச்சல்

[அணை → அணைப்பு.]

அணைப்பு[2] *aṇaippu*, பெ. (n.) **அணாப்பு** பார்க்க; see *aṇāppu*.

அணைப்புத்தூரம் *aṇaippu-t-tūram*, பெ. (n.) **ஓர் உழவுச்சால் தொலைவு** (G. Sm. D. I. i, 287); length of a furrow from one end of the field to the other, approximately taken as 50 yds.

[அணைப்பு + Skt. dūra > த. தூரம்.]

அணைப்புத்தூரம் = த. அணைப்புத் தொலைவு.

அணைமரம் *aṇai-maram*, பெ. (n.) கன்றிழந்த ஆவைக் கறத்தற்கு அணைக்குங் கணைமரம் (இ.வ.); narrow wooden enclosure in which a cow is penned for milking, especially when it has lost its calf and resents milking (Loc.).

அணையம் *aṇaiyam*, பெ. (n.) கருப்பையில் தாய்க்கும் பிளுக்கும் தொடர்பை யுண்டுபண்ணுவதும், நஞ்சுக் கொடியொடு சேர்ந்ததுமான ஓர் உறுப்பு; an organ within the womb of mammals in pregnancy, establishing connection between the pregnant mother and the foetus by means of the umbilical cord, placenta (சா.அக.).

அணையமறி *aṇaiyamaṟi*, பெ. (n.) பிள்ளை பிறந்தவுடன் நஞ்சுக்கொடி விழாமை; retention of placenta, incarcerated placenta (சா.அக.).

அணையமாதி *aṇaiyam-ādi*, பெ. (n.) நஞ்சுக் கொடி முதலியன; placenta and other secundines (சா.அக.).

[அணையம் + ஆதி. Skt. ādi = முதல், முதலியன. அணையமாதி = அணைய முதல், அணைய முதல, அணைய முதலியன.]

அணையாடை *aṇai-y-āḍai*, பெ. (n.) 1. சேய்க்கு அடியிலிடும் துணிப்படுக்கை; strip of cloth used as a bed for an infant. ''அணையாடை மண்பட வுந்தி யுதைந்து கவிழ்ந்து'' (பட்டினத். உடற்கூற்று.). 2. பிறந்த குழவிக்குத் தொப்புளிறுக்குஞ் சீலை (இ.வ.); cloth tied over the navel of an infant (Loc.) — (W.).

ம. அணச்சீல

[அணை + ஆடை.]

அணையார் *aṇai-y-ār*, பெ. (n.) பகைவர்; enemies, foes. ''அணையார்தம் படைக் கடலில்'' (பாரத. பதினே. 260).

[அணை + ஆ (எ.ம.இ.நி.) + ஆர் (ப.பா. ஈறு).]

அணையுறுமுக்கு *aṇai-y-uṟu-mūkku*, பெ. (n.) 1. பேய்க்கொள்; wild bitter gram. 2. காட்டுக் கொள்; wild-gram, *Rynchosia* (Genus) (சா.அக.).

அணைவு *aṇaivu*, பெ. (n.) 1. தழுவுகை (சங்.அக.); embracing. ''முன்னும் பின்னு மருங்கு மணைவெய்த'' (பெரியபு. ஏயர்கோ. 369). 2. தழுவப்பட்டது; that which is embraced.

[அணை → அணைவு.]

அணோக்கம் *aṇōkkam*, பெ. (n.) மேனோக்கம்; looking upward, high aspiration.

[அண் = மேல். நோக்கம் = பார்வை, குறிக்கோள். அண் + நோக்கம் — அண்ணோக்கம் → அணோக்கம்.]

பல அகரமுதலிகளில் இச் சொற்கு 'மரம்' அல்லது 'மரப்பொது' என்று பொருள் குறிக்கப்பட்டுள்ளது.

''மரப்பொதுவெனப் பொருள்படும் 'அநோகஹம்' என்னும் வடமொழியைத் திரித்து அணோக்கம் என எழுதினாரும் உளர்'' என்று **தமிழ்ச்சொல் லகராதி** யென்னும் மதுரைத் தமிழ்ச்சங்க அகரமுதலி குறித்திருப்பது கவனிக்கத்தக்கது.

அத்தக[1] *attaga*, கு.வி.எ. (adv.) அத்தன்மையதாக; in that manner. ''அத்தக நிறீஇ'' (பெருங். இலாவாண. 6 : 150).

['அ' சேய்மைச்சுட்டு. தகுதல் = பொருந்துதல், ஒத்தல். தகு → தகை = பொருத்தம், ஒப்பு, தகுதி, தன்மை. தகு → தக (நி. கா. வி. எ.). அ + தக — அத்தக = அதற்குப் பொருந்த, அத்தன்மையதாக.]

அத்தக[2] *attaga*, கு.வி.எ. (adv.) அழகு பொருந்த; beautifully. ''அத்தக வரிவைய ரளத்தல் காண்மின்'' (பரிபா. 12 : 44).

[அம் = அழகு. தக = பொருந்த. அம் + தக — அந்தக → அத்தக.]

அத்தகம்[1] *attagam*, பெ. (n.) கருஞ்சீரகம் (மலை.); black cumin, *Nigella sativa*.

அத்தகம்[2] *attagam*, பெ. (n.) கணக்கன்; accountant. ''அத்தகங் கூட்டமிடு மங்கணத்தில்'' (நெல்விடு. 318).

[ஒருகா. அத்தகன் → அத்தகம்.]

அத்தகாண்டகம் *attakāṇḍagam*, பெ. (n.) முத்து; pearl (சா.அக.).

அத்தகாதிதம் *attakādidam*, பெ. (n.) ஒரு மருந்துச் செடி (அதிவிடையம்); a medicinal plant (சா.அக.).

அத்தகிதம் *attagidam,* பெ. (n.) *சிவப்பு மூக்கறைச் சாரணை*; a red creeper (சா.அக.).

[அத்தம் = சிவப்பு.]

அத்தகைச்சாரணை *attagai-c-cāraṇai,* பெ. (n.) *சிவப்பு வட்டச் சாரணை*; a red species of round-leaved plant (சா.அக.).

[அத்தம் = சிவப்பு.]

அத்தகோரம் *attagōram,* பெ. (n.) *நெல்லி*; emblic myrobalan (W.).

அத்தங்கார் *attaṅgār,* பெ. (n.) *அத்தை மகள்* (பிராம.); paternal aunt's daughter (Brāhm.).

[ஒருகா. அத்தை மங்கையார். மங்கை = பெண், மகள்.]

அத்தங்கி *attaṅgi,* பெ. (n.) *முழங்கால்;* knee (சா.அக.).

அத்தஞ்சடம் *attañjaḍam,* பெ. (n.) ஒருவகை நஞ்சு (*கௌரி பாடாணம்*); yellow oxide of arsenic (சா.அக.).

அத்தடம் *attaḍam,* பெ. (n.) 1. *ஒரு மருந்துச் சரக்கு* (*அதிவிடையம்*); a bazaar drug called Indian atees (atis), *Aconitum heterophyllum.* 2. *பொன்*; gold.

அத்தத்தாவெனல் *attatta-v-enal,* தொ.பெ. (vbl.n.) *குழந்தை தந்தையை அடுத்தடுத்துக் கூப்பிடுதல்*; child calling its father repeatedly. ''அடுத்தடுத் தத்தத்தா வென்பான்'' (கலித். *81 : 19*).

[அத்தன் = தந்தை. அத்தன் → அத்தா (விளி). அத்தா + அத்தா — அத்தத்தா (பன்முறைபற்றிய அடுக்குத்தொடர்).]

அத்ததாளி *attatāḷi,* பெ. (n.) காட்டுப்பூவரசு (L.); falsefern tree.

அத்தம்[1] *attam,* பெ. (n.) 1. *குக்கில்* (மூ.அ.); Indian bdellium. 2. *ஒரு மருந்துச் செடி* (*அதிவிடையம்*) (மூ.அ.); atis. 3. *கரிசலாங்கண்ணி* (இராசவைத்.); species of eclipta, *Eclipta alba.* 4. *குந்துருக்கம்*; white dammer, *Vateria indica* (சா.அக.). 5. *கருங்குங்கிலியம்*; black dammer, *Canarium strictum.* 6. *வெள்ளை யாமணக்கு*; white castor plant, *Jatropha curcas* (சா.அக.). 7. *ஒருவகை நஞ்சு* (*கெந்தி பாடாணம்*); a kind of arsenic.

அத்தம்[2] *attam,* பெ. (n.) *கண்ணாடி*; mirror. ''அத்தமதின் முன்பின்போல்'' (வேதா. சூ. *108*).

தெ. *அத்தமு*

அத்தம்[3] *attam,* பெ. (n.) 1. *ஆள் வழங்காக் காடு* (திவா.); jungle. 2. *செல்லுதற்கரிய காட்டுப் பாதை*; rough and difficult jungle path. ''ஆளி லத்த மாகிய காடே'' (புறநா. *23 : 22*). 3. *வழி* (பிங்.); way.

[அறு → அற்றம் = அறுதல், ஆளில்லாமை. அற்றம் → அத்தம்.]

'அத்தம்' என்னும் தென்சொல் சிறப்பாக ஆள் வழங்கா அருநெறியையே குறித்தலால், பொதுவான வழியைக் குறிக்கும் 'அத்வன்' (adhvan) என்னும் வடசொல்லினின்று தோன்றியிருத்தல் இயலாது. சிறப்புப் பொருட் சொல்லினின்றே பொதுப்பொருட் சொல் தோன்றியிருத்தல் வேண்டும்.

அத்தம்[4] *attam,* பெ. (n.) 1. *முடிவு*; end, termination. 2. *அழிவு* (நாநார்த்த.); destruction.

[அறுதல் = நீங்குதல், முடிதல். அற்ற பேச்சு = முடிவான பேச்சு. அறு → அற்றம் = அழிவு, முடிவு. அற்றம் → அத்தம்.]

அத்தம்[5] *attam,* பெ. (n.) *செம்மை*; red colour.

[அரத்தம் = செந்நீர் (குருதி), செந்நிறம். அரத்தம் → அத்தம் = சிவப்பு.]

அத்தம்பியார் *attambiyār,* பெ. (n.) *அக்கை கணவன், அத்தான்* (இ.வ.); sister's husband (Loc.).

[ஒருகா. அத்தி + நம்பியார் — அத்தம்பியார். அத்தன் = அப்பன். அத்தி = அன்னை, அக்கை. நம்பி = ஆடவருட் சிறந்தோன், ஆடவன், கணவன்.]

அத்தரசிதம் *attaraśidam,* பெ. (n.) *மயில்துத்தம்* (மூ.அ.); native hydrous silicate of zinc, calamin.

குறிப்பு: இதையொத்த சொல் வடமொழியி லின்மையால், இது இத் தென்சொல் லகரமுதலியிற் சேர்க்கப்பட்டது.

அத்தவத்திரதம் *attavattiradam,* பெ. (n.) *ஒரு வகை மருந்துச் சரக்கு*; a kind of drug. ''துத்த மாஞ்சி யத்தவத் திரதம்'' (பெருங். மகத. *17 : 147*).

அத்தவாளம்[1] *atta-vāḷam*, பெ. (n.) காடு; jungle (W.).

[அத்தம்+வாளம். அத்தம்=காடு. வாளம்= வட்டம், வட்டாரம், நிலப்பகுதி.]

அத்தவாளம்[2] *atta-vāḷam*, பெ. (n.) 1. *முன்றானை* (ஈடு, 9 : 10, பிர.); outer loose end of a saree. 2. *முன்றானைபோல் ஆடவர் தோண்மேலணியும் மேலாடை* (பிங்.); a garment loosely worn by men on their shoulders. 3. *போர்வைச் சீலை* (சங்.அக.); covering upper cloth. "வடகமுல்லாச மத்த வாளம்" (பிங். 6 : 179). "அத்தவாளப் பட்டு மதலும் வடகம்" (பிங். 10 : 987). 'வடகம், அத்த வாளம் உடைவிசேடம்' (சீவக. 462, நச். உரை).

[ஒருகா. அற்றம் → அத்தம் = முடிவு, கடை. வாலம் → வாளம் = நீண்ட துணி. அத்தவாளம் = சேலையின் முன்கடைப் பக்கமான வெளிமுந்தி (முன்றானை). போர்வைச் சீலை உடம்பைப் போர்ப்பதில் முன்றானையையும் மேலாடை யையும் ஓரளவு ஒக்கும்.]

அத்தவாளம்[3] *atta-vāḷam*, பெ. (n.) **உள்ளக் கிளர்ச்சி, கெந்தளிப்பு**; hilarity, elation, mirth. "வடகமுல்லாச மத்த வாளம்" (பிங். 6 : 179).

அத்தவாளம்[4] *atta-vāḷam*, பெ. (n.) **வடகம்**; a mixture of different kinds of drugs, spices, etc., in which onion and mustard form the chief ingredients (சா.அக.).

"அத்தவாளப் பட்டு மதலும் வடகம்" (பிங். 10 : 987).

குறிப்பு: அத்தவாளம் என்னும் சொல் லிற்குச் சில அகரமுதலிகளில் வடகம் என்றொரு பொருள் குறிக்கப்பட்டுள்ளது; சிலவற்றிற் குறிக்கப்படவில்லை.

வடகம் என்னும் சொல், **சீவகசிந்தா மணியில்** ஒருவகை மேலாடை என்னும் பொருளில் ஆளப்பட்டும், **சிலப்பதிகார** வுரையில் (14 : 108) துகில் என்னும் உயர்ந்த துணியின் முப்பத்தாறு வகைகளுள் ஒன்றன் பெயராகக் குறிக்கப்பட்டும் உள்ளது. **பிங்கல நிகண்டும் சூடாமணி நிகண்டும்** இச் சொற்குத் தோல், அத்தவாளம் என்று இருபொருளே குறித்துள்ளன. இவை அத்தவாளம் என்றது உடைவகையையே.

சாம்பசிவம் பிள்ளை தமிழ் - ஆங்கில அகர முதலி யொன்றே, அத்தவாளம் என்னும் சொற்கு, தாளிக்கும் உருண்டையான வடகம் என்னும் பொருளைக் குறித்துள்ளது.

இஃது, அத்தவாளம் என்பதன் பெயர்களுள் ஒன்றான வடகம் என்னும் சொல்லின் மறு பொருளைக் குறிக்குமாயின், ஒருபொருட் சொல்லில் மறுபொருட் கூறல் என்னுங் குற்ற மாகும். இது பிறவிக் குருடனுக்குப் பாலின் இயல்பை யுணர்த்திய கதையை நினை வுறுத்தும்.

அத்தன்[1] *attaṉ*, பெ. (n.) 1. **அப்பன்**; father. "என்னத்தனை வென்றிசை கொண் டிலனோ" (கந்தபு. உற்பத். காமதக. 10). 2. **தமையன்**; elder brother. 3. **மூத்தோன்** (திவா.); elder. 4. **உயர்ந்தோன்**; person of rank or eminence. "அத்தரின் அரும் பொருள்" (திருவிளை. மெய்க்காட். 34). 5. குரு; priest. "அத்தனே யடுவ லாண்மை" (பாரத. பதினைந். 27). 6. **சிவன்**; Śiva. "அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே" (தேவா. 7.1 : 1). 7. **திருமால்**; Viṣṇu. 8. **வைரவன்**; Bhairava. 9. **அருகன்**; Arhat.

ம. அத்தன்

Hit. *at-ta-as*; **L.** *atavus*, great-grandfather's grandfather (*ata* + *avus*, grandfather); **Pkt.** atta.

[ஒல்லுதல் = பொருந்துதல், இயலுதல். ஒல் → ஒள் → ஒண். ஒண்ணுதல் = பொருந்துதல், இயலுதல். ஒல் → ஒற்று; ஒள் → ஒட்டு. ஒற்று → ஒத்து → அத்து; ஒட்டு → அட்டு. அத்துதல் = சார்தல்; to lean on. குடும்பம் தந்தையைச் சார்ந்திருத்தலால், அத்தன் என்னும் பெயர் அத்து என்னுஞ் சொல்லினின்று தோன்றியிருக்கலாம். அத்து → அத்தன். கால்டுவெலார் கருத்தும் இ.:தே.]

தந்தையைக் குறிக்கும் அத்தன் என்னும் தமிழ்ப்பெயர் திரவிட மொழிகளில் வழக் கற்றது. அதன் திரிபான அத்தான் என்னும் (முறை வேறுபட்ட) ஆண்பாற் பெயரும், அத்தி, அத்தை யென்னும் பெண்பாற் பெயர் களும் திரவிட மொழிகளிலும் பிராகிருதத் திலும் சமற்கிருதத்திலும் வழங்கி வருகின்றன.

அத்தன் என்பதன் திரிபான அச்சன், அஜ்ஜ என்னும் தந்தை முறைப்பெயர்களும் பாட்டன் முறைப்பெயர்களும், திரவிட மொழிகளில் வழங்கிவருகின்றன. அவை

அச்சன் என்னும் உருப்படியிற் காட்டப் பட்டன.

இலத்தீன் மொழியில், *avus* என்பது பாட்டனையும், *atavus* என்பது பூட்டனின் பாட்டனையும் குறிக்கும் முறைப்பெயர்க ளாகும். ஆகவே, *ata* என்னும் இலத்தீன் சொல்லைச் சேயானின் தந்தைமுறைப் பெயராகக் கொள்ளலாம்.

பாட்டனின் தந்தை பூட்டன்; பூட்டனின் தந்தை சேயான்.

அத்தன்[2] *attan*, பெ. (n.) *1.* கடுக்காய் (மூ.அ.); chebulic myrobalan, *Terminalia chebula*. *2.* **வெள்ளீயம்** (மூ.அ.); white lead, tin.

அத்தன்பாதம் *attan-pādam*, பெ. (n.) **செருப் படை**; a medicinal plant, *Coldenia procumbens* (சா.அக.).

அத்தன்புள்ளடி *attan-pul-l-adi*, பெ. (n.) **அத்தன்பாதம்** பார்க்க; see *attan-pādam*.

அத்தனாபேதி *attan-ā-pēdi*, பெ. (n.) **கடுக்காய் சேர்ந்த குய்யபேதி (என்னுங் கழிச்சல் மருந்து)**; a purgative containing ink-nut as the chief ingredient (சா.அக.).

[அத்தன் + ஆ (இணைப்பிடைச்சொல்) + பேதி. **Skt.** bhēdin > **த.** *பேதி = பிரிப்பு, கழிச்சல், கழிச்சல் மருந்து.]*

அத்தனை *a-t-tanai*, பெ. (n.) அவ்வளவு; that much. "நீருரைத்த தொன்றை நான்செய்யு மத்தனை" (பெரியபு. இயற். 9). கடுகத்தனை கொடுத்தான். அத்தனையுந் தின்றுவிட்டான் (உ.வ.). —, பெ.எ. (adj.) *1.* **அத்தொகை யான**; so many. அத்தனைபேருந் தேறி விட்டனர். அத்தனை மரங்களும் பட்டுப் போய்விட்டன (உ.வ.). 'அத்தனையும் நேர்ந்தாள் உப்பிட மறந்தாள்' (பழ.). *2.* **அவ்வளவு**; so much. "அத்தனை குணக் கேடர் கண்டதாக் கேட்டதா வவனிமிசை யுண்டோ சொலாய்" (தாயு. ஆனந்தமான பரம். 9).

ம. அத்தன

[அ (சேய்மைச்சுட்டு) + துணை (அளவு) → தனை.]

அத்தாச்சி[1] *attācci*, பெ. (n.) **அண்ணி (அண்ணன் மனைவி)** (இ.வ.); elder brother's wife (Loc.).

க., து., பட. அத்திகெ.

[அத்தன் = பெரிய அண்ணன், அண்ணன். அச்சி = அன்னை, அக்கை. அத்தன் + அச்சி – அத்தாச்சி.]

அண்ணன், சிறப்பாகப் பெரியண்ணன் தந்தையொத்தவனாதலால், அவன் மனைவி தாயொத்தவள் என்பது கருத்து.

அத்தாச்சி[2] *attācci*, பெ. (n.) **நாத்தூணாள் (கணவன்:உடன்பிறந்தாள்)** (இ.வ.); husband's sister (Loc.).

க. அத்திகெ; பட. அத்திகெனன்னி.

[அத்தான் = மூத்த அளியன் (மைத்துனன்), கணவன். அச்சி = அன்னை, அக்கை. அத்தான் + அச்சி – அத்தாச்சி.]

அண்ணியும் மூத்த நாத்தூணாளும் முறை யிலும் மதிப்பிலும் ஒத்தவர் என்பது கருத்து.

இளைய நாத்தூணாளைக் கொழுந்தி யென்பது மரபு. அத்தாச்சியென்னும் பெயர் கொழுந்தியைக் குறிக்குமாயின், அச்சி யென்பது அன்பு அல்லது அருமைபற்றிய தாகும்.

ஒ.நோ : தங்கை + அச்சி – தங்கைச்சி.

அத்தாசம் *attāšam*, பெ. (n.) **உயர்வெளி (அந்தரம்)**; mid-air, aloft or above the head. அவனை அத்தாசமாய்த் தூக்கிக்கொண்டு போனான் (உ.வ.).

[அத்தாயம் → அத்தாசம்.]

அத்தாய் *attāy*, பெ. (n.) (செவிலி.) **ஆடை** (இ.வ.); (Nurs.) cloth (Loc.).

[ஆடை → ஆதை → ஆதாய் → அத்தாய்.]

அத்தாயப்படு-தல் *attāya-p-padu-*, 20 செ.கு.வி. (v.i.) **கட்டப்படுதல், துன்பப்படுதல்** (இ.வ.); to suffer, to be distressed (Loc.). அவன் மிக அத்தாயப்படுகிறான் (உ.வ.).

[அத்தாயம் + படு.]

அத்தாயம் *attāyam*, பெ. (n.) *1.* **கடைசற் சக்கரத்தின் மிதிதடி** (யாழ்ப்.); treadle of a turner's lathe (J.). *2.* **உயர்வெளி (அந்தரம்)**; mid-air aloft or above the head. அவனை அத்தாயமாய்த் தூக்கியெறிந்தான் (உ.வ.). *3.* **இளைப்பு**; fatigue, weariness. *4.* **கட்டம், துன்பம்**; difficulty, distress.

அத்தாரம் *attāram*, பெ. (n.) **மரமஞ்சள்**; tree-turmeric, *Coscinium fenestratum* (சா.அக.).

அத்தாவரி *attāvari*, பெ. (n.) **வெட்பாலை யரிசி** (பரி.அக.); the drug known as *vetpālaiyariši* (செ.அக.) — **வெட்பாலரிசி;** dyer's oleander, seeds of *Wrightia tinctoria* (சா.அக.).

அத்தாள் *attāḷ*, பெ. (n.) **தாய்** (இராட்.); mother (R.).

தெ. அத்த

ஒ.நோ: ஆத்தாள்

[அத்தை → அத்தா → அத்தாள். அத்தன் (ஆ.பா.)—அத்தி (பெ.பா.) = அன்னை. அத்தன் (ஆ.பா.) — அத்தை → ஆத்தை (பெ.பா.) = அன்னை.]

ஐகாரவீற்று அன்னை (அல்லது அக்கை) முறைப்பெயர்களின் ஆகாரவீற்று விளிவடிவங்கள் பல, கொச்சை வழக்கில் ளகர மெய்யீறு ஏற்றும் ஏலாதும் எழுவாய் வடிவுகளாக வழங்கிவருகின்றன.

எ-டு : அம்மை → அம்மா → அம்மாள்.

இம் முறையில், ஆத்தை என்பது ஆத்தாள் என்று திரிந்து வழங்குகின்றது.

அத்தி (அன்னை) என்பது, இலக்கண முறைப்படி, அத்தீ என்று ஈறுநீண்டே விளியேற்கும். ஆதலால், ளகர மெய்யீறு பெறாது.

இன்று தந்தையின் உடன்பிறந்தாளையும் மாமியையுங் குறிக்கும் அத்தை யென்னுஞ் சொல், முதற்காலத்தில் அன்னையையுங் குறித்திருத்தல் வேண்டும். அன்றேல், அத்தாள் என்னும் வடிவு பெற்றிராது.

பிராகி., வ. அத்தா.

ஐகார ஈறு ஆகார ஈறாகத் திரிவது பிராகிருத ஆரிய (சமற்கிருத) இயல்பே.

அத்தாளம் *attāḷam*, பெ. (n.) **இராச் சாப்பாடு** (இ.வ.); supper (Loc.). "அத்தாளப் பட்டினியு மப்படியே" (சரவண. பணவிடு.).

ம. அத்தாழம்

[அல் + தாலம் — அற்றாலம் → அத்தாளம்.]

அல் = இரவு. தாலம் = தட்டு, உண்கலம், உண்டி (இடவாகுபெயர்). **ஒ.நோ: E.** dish = vessel for holding food, food so held, particular kind of food.

அத்தாளி *attāḷi*, பெ. (n.) **காட்டுப் பூவரசு;** falsefern tree. **அத்ததாளி** பார்க்க; see *attatāḷi*.

[அத்ததாளி → அத்தாளி.]

அத்தான்[1] *attāṉ*, பெ. (n.) *1.* **அக்கை கணவன்;** elder sister's husband. *2.* **மனைவி தமையன்;** wife's brother, when elder. *3.* **கணவன் தமையன்;** husband's brother, when elder. *4.* **அம்மான் மகன்;** maternal uncle's son, when elder. 5. **அத்தை மகன்;** paternal aunt's son, when elder.

[அத்தன் → அத்தான் = மதிப்பில் தந்தையை அல்லது தமையனை ஒத்தவனாய், மணஞ் செய்துகொள்ளும் முறையில் உள்ளவன்.

இனி, அத்தை மகன் → அத்தைமான் → அத்தான் என்றுமாம்.]

அத்தான்[2] *attāṉ* பெ. (n.) **முடக்கொற்றான்** (பரி.அக.); balloon-vine.

[முடங்கொன்றான் → முடக்கொற்றான். முடக்கற்றான் என்னும் தவறான வடிவை, முடக்கு + அற்றான் என்று பிரித்ததனால் ஏற்பட்ட 'அற்றான்' என்னுங் குறுக்கம் 'அத்தான்' என்று திரிந்திருக்கலாம்.]

அத்தான் மதனி *attāṉ-madaṉi*, பெ. (n.) **அத்தான் மதினி** பார்க்க; see *attāṉ-madiṉi*.

அத்தான் மதினி *attāṉ-madiṉi*, பெ. (n.) **அத்தை மகன் மனைவி** (பிராம.); wife of the paternal aunt's son (Brāhm.).

அத்தி[1] *atti*, பெ. (n.) *1.* **அன்னை;** mother. 2. **அக்கை;** elder sister.

ம. அத்திக; **க.** அத்திகெ (அக்கை); **தெ.** அத்தி (தாய்); **கூ.** அத (பாட்டி); **பிரா.** அத்தி (தாய்); **பிராகி.** அத்தா (தாய்).

வ. அத்தா = அன்னை, அக்கை; அந்தி(கா), அத்திகா = அக்கை.

வடமொழி ஆவீறு தமிழில் ஐயீறாவது போன்று, தமிழ் ஐயீறு வடமொழியில் ஆவீறாகும்.

அத்தன் (ஆ.பா.) — அத்தி (பெ.பா.).

அத்தி என்னுஞ் சொல், அக்கை யென்னும் பொருளில் தமிழில் வழக்கற்றது. ஆயின், அதன் திரிபான அச்சி என்னும் வடிவம் அப்பொருளில் உலக வழக்கில், சிறப்பாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பாரிடை வழங்கி வருகின்றது.

மூத்த உடன்பிறந்தாள் தாய்க்குச் சமமாதலால், தாய் முறைப்பெயர் அக்கைக்கு வழங்கி வருவது இயல்பே.

ஒ.நோ: அவ்வை = அன்னை, அக்கை. தம் + அவ்வை – தவ்வை = தமக்கை.

'கை' கு.பொ.பின். (dim. suff.)

எ-டு: குடி → குடிகை = சிறுகோயில். கன்னி → கன்னிகை = இளங்கன்னி. அண்ணன் தந்தையை யொத்தவனாயின் அண்ணி தாயையொத்தவளாதலால் கன்னடத்தில் 'அத்திகெ' என்பது அண்ணியைக் குறிக்கின்றது. ஐகார ஈறு கன்னடத்தில் எகர ஈறாவது இயல்பே.

இம் முறையில், அத்திகை என்பது, முதற் கண் அக்கைமாருள் இளையவளைக் குறித் திருக்கலாம்.

அன்னையும் அக்கையும் போலப் பாட்டியும் அன்னையு மிருத்தலால், இடைப்பட்ட அன்னை முறைப்பெயர் அக்கைக்கு வழங்கு வது போன்று பாட்டிக்கும் சிறுபான்மை வழங்கி வருகின்றது.

ஒ.நோ: அவ்வை = அன்னை, பாட்டி.

தமிழ்ச்சொல் திரவிடத்தில் வழங்குவது போன்றே, திரவிடச்சொல் பிராகிருதத் திலும், பிராகிருதச்சொல் சமற்கிருதத்திலும் வழங்கிவருகின்றனவென அறிக.

அத்தி[2] *atti*, இடை. (part.) **ஒரு பெண்பாலீறு**; a fem. suff.

எ-டு: நட்டுவத்தி, வேட்டுவத்தி, குறத்தி, மறத்தி.

அன்னை முறைப்பெயர், பொதுவாக மதிப் பான பெண்ணைக் குறிப்பதுடன், பெண்பா லீறாகவும் வழங்கும்.

எ-டு: அந்த அம்மை யார்?
ஓர் அம்மையார் வந்திருக் கிறார்.
ஓர் அம்மா வந்திருக்கிறது (கொச்சை). } மதிப்பான பெண்.

கண்ணம்மை,
பொன்னம்மை.
கண்ணம்மா,
பொன்னம்மா (கொச்சை). } பெண்பா லீறு.

இந்த முறையிலேயே, அத்தி என்னும் அன்னை முறைப்பெயரும் பெண்பாலீறாகும்; ஏனைப் பொருள்களில் அது வழக்கற்றது.

'அத்தி' என்னும் சொல்லே இகரவீறு பெற்ற ஒரு பெண்பாற் பெயராதலால் முன்னை யிலக்கண நூலார் அதை ஓர் ஈறாகக் கூறிற்றிலர். **வீரசோழியம்** என்னும் பின்னை யிலக்கண நூலில் அஃது ஒரு பெண்பாலீறாகக் கூறப்பட்டுள்ளது. "அச்சியொ டாட்டி யணி யாத் தியத்தி" (வீரசோ. சொல். தத்திதப். 4).

ஆயின், அச் சொல்லின் வரலாற்றை அந் நூலாசிரியர் அறிந்தவரல்லர்.

அத்தி[3] *atti*, பெ. (n.) **நாட்டிலுங் காட்டிலும் 40 அடி உயரம் வரை வளர்வதும், கரந்துபூப்பதும், பலவகைப்பட்டதும், மருத்துவத்திற்கு மிகப் பயன்படுவதும், பெரும்பாலுஞ் சாலைகளின் இருமருங்கும் நிழன்மரமாக வளர்க்கப் படுவதுமான ஒருவகைப் பெருமரம்**; a large cryptogamous species of tree of many varieties, growing up to a height of 40 feet in both wild and cultivated conditions, useful for medicinal purposes, and very often seen on avenues and trunk roads.

அத்தியின் வகைகளாவன (சா.அக.) :

(1) நாட்டத்தி — country fig, *Ficus glomerata* alias *Ficus racemosa*.

(2) செவ்வத்தி — red fig, *Ficus heterophylla*.

(3) சீமையத்தி (அயல்நாட்டத்தி) அல்லது தேனத்தி — foreign fig, *Ficus carica*.

இது மிக அரியது; மணமுள்ளது; நீல மலை, காசுமீரம், காபூல் முதலிய இடங் களிலுள்ள மலைச்சாரல்களிற் பயிரா வது. இதன் கனியை யுண்டால் அரத்தப் பெருக்க முண்டாகி மலக்கட்டு நீங்கும்.

(4) காட்டத்தி — jungle fig, *Ficus hispida*.

(5) பேயத்தி — devil-fig, *Ficus oppositifolia*.

(6) கொடியத்தி — creeper-fig, *Ficus repens*.

(7) கல்லத்தி — stone-fig, *Ficus scandens*.

(8) மலையத்தி — mountain-fig, *Ficus macrocarpa*.

(9) விழலத்தி — a variety of fig.

(10) பேரத்தி — tall fig, *Ficus excelsa*.

(11) சிற்றத்தி — small fig, *Ficus polycarpa*.

இதன் கனி பட்டாணிக் கடலை யள விருக்கும்.

(12) குருகத்தி — glossy long-leaved fig, *Ficus tjakela*.

(13) மலந்தின்னியத்தி — sandpaper fig, *Ficus asperrima*.

(14) நீரத்தி — yellow fig, *Ficus callosa*.

ம., க., தெ., பட., குட. அத்தி; **து.** அர்த்தி; **துட.** ஒத்ய்; **கோத.** அத்ய்; **சிங்.** அத்திக்கா, அட்டிக்கா.]

[அத்துதல் = ஒட்டுதல். அத்து → அத்தி = கிளைகளை யொட்டிக் காய்க்கும் காய்களை யுடைய மரம்.]

ஊழலத்தி என்றொரு வகை யத்தியைச் சங்க **அகரமுதலி** குறிக்கின்றது. ஒருகால் அது விழலத்தியின் மறுபெயரா யிருக்கலாம்.

நாயத்தி யென்னும் ஒருவகையுண்டு. தாழ்ந்த வகையான நிலைத்திணையின் பெயர்கள் பொதுவாக நாயென்னும் அடை மொழி பெறுவதால், நாயத்தியும் தாழ்ந்ததாய் இருத்தல் வேண்டும்.

அத்திப் பழமொழிகள் :

'அத்திக் காயைப் பிட்டுப் பார்த்தால் அங்கு மிங்கும் பொள்ளல்.'

'அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அத்தனையும் புழு.'

'அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அதற்குள்ளும் விதையிருக்கும்.'

'அத்திப் பூவை ஆர் அறிவார்?'

'அத்திப் பூவைக் கண்டவர் உண்டா? ஆந்தைக் குஞ்சைப் பார்த்தவர் உண்டா?'

'அத்தி பூத்தாற்போல் (இருக்கிறது).'

'அத்திபோல் துளிர்த்து (ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி, அரசு போல் ஓங்கி, மூங்கில்போற் சுற்றம் முசி யாமல் வாழ்ந்திருப்பீர்.)'

'அத்தி மரத்தில் தொத்திய கனிபோல்.'

அத்தி[4] *atti*, பெ. (n.) 1. *எருக்கங் கிழங்கு*; madar root or root of *Calotropis gigantea*. 2. **செவ்வாமணக்கு**; red castor oil plant, *Ricinus communis*. 3. *கருவிளை*; a wild creeper, *Clitoria ternatea*. 4. **குன்றிமணி**; rosary-pea, *Abrus precatorius*. 5. **வேங்கை**; kino rosewood, *Pterocarpus santalinus*. 6. *வாலை* (*பாதரசம்*); mercury obtained by distillation from vermillion. 7. *கண் நரம்புகளுள் ஒன்று*; one of the nerves of the eye. 8. *மயக்கம்*; swoon (சா.அக.).

[செவ்வாமணக்கு, குன்றிமணி ஆகிய இரண்டின் பெயரும் அத்தம் (சிவப்பு) என்னும் மூலத்தினின்று தோன்றியிருக்கலாம்.]

அத்தி[5] *atti*, பெ. (n.) 1. *மலை*; mountain. 2. வெருகஞ்செடி; tuberous-rooted herb, *Arum macrohizon* (செ.அக.).

அத்தி[6] *atti*, பெ. (n.) பறவை (பொதி.நி.); bird.

அத்திக்கரணி *atti-k-karaṇi*, பெ. (n.) 1. *சிற்றாமணக்கு*; small-seeded castor plant, *Rhicinus communis*. 2. *பலாசு*; bastard plant, *Butea frondosa* (சா.அக.).

அத்திக்கள் *atti-k-kaḷ*, பெ. (n.) **அத்திப் பதநீர், அத்திப்பால், நாட்டத்தி வேரினின்று எடுக்கப் படும் கள்**; toddy extracted from the country fig.

ம. அத்திக் கள்ளு

மறுவ. அத்திப் பதநீர், அத்திப்பால், அத்தி நீர்.

அத்திக்கன்னி *atti-k-kaṉṉi*, பெ. (n.) **வெருகு**; toddy bird, *Paradoxurus niger*.

It is so called from its attachment to toddy trees, where it hangs its curious pensile nests (சா.அக.).

அத்திக்கனி *atti-k-kaṉi*, பெ. (n.) 1. *அத்திப் பழம்*; fig fruit. 2. *கரிசலாங்கண்ணி*; species of eclipta (செ.அக.) — eclipse plant, *Eclypta alba* (சா.அக.).

[அத்தி + கனி.]

அத்திக்காய்க்கிரந்தி *atti-k-kāy-k-kirandi*, பெ. (n.) **மேகநோயினால் உடம்பு முழுவதும் அத்திக்காய்ப் பருமன் கட்டிகளை யெழுப்பும் ஒரு புண்ணோய்**; a syphilitic affection causing fig-size ulcers or warts all over the body (சா.அக.).

[அத்திக்காய் + **Skt.** granthi > த. கிரந்தி.]

அத்திக்காய்ப் பரு *atti-k-kāy-p-paru*, பெ. (n.) **ஒரு மேகப் புண்ணோய்**; a fig-wart of venereal origin, a kind of verruca in secondary syphilis (சா.அக.).

அத்திக்காளிக்கீரை *atti-k-kāḷi-k-kīrai*, பெ. (n.) **கோழிக்குறும்பான் கீரை**; a kind of amaranthus known as cock's green, *Portulaca oleracea* (சா.அக.).

அத்திக்கொடி *atti-k-koḍi*, பெ. (n.) ***கொடியத்தி***; a fig creeper, *Ficus repens* (சா.அக.).

ம. அத்திக்கிழங்குவள்ளி

[அத்தி + கொடி.]

அத்திக்கோலிகம் *atti-k-kōligam*, பெ. (n.) ***சிறு குறிஞ்சா***; a small Indian ipecacuanha, *Gymnema parviflorum* (சா.அக.).

அத்திகை *attigai*, பெ. (n.) ***தமக்கை***; elder sister.

ம., க. அத்திகெ; **Skt.** attiga.

[அத்தி (அக்கை) + கை (சு.பொ.பின்.) – அத்திகை (இளைய அக்கை, அக்கை).]

அத்திகோலம் *attikōlam*, பெ. (n.) ***அழிஞ்சில்*** (மலை.); sage-leaved alangium.

அத்திசம் *attišam*, பெ. (n.) ***நீர்முள்ளி***; a thorny shrub, *Hygrophila spinosa* (சா.அக.).

அத்தித்தேக்கி *atti-t-tēkki*, பெ. (n.) ***சிறு கொத்தவரை (சீனியவரை)***; a small species of cluster beans, *Cyamopsis peoralioides* (சா.அக.).

[அத்துதல் = ஒட்டுதல். தேக்குதல் = நிறைத்தல், கூட்டுதல், கொத்தாக்குதல். கிளை யொட்டிக் கொத்துக்கொத்தாய்க் காய்த்தலால், கொத்தவரை யெனப்பட்டது.]

அத்திநீர் *atti-nīr*, பெ. (n.) ***அத்திப்பதநீர்*** பார்க்க; see *atti-p-pada-nīr*.

அத்திப்பட்டை *atti-p-paṭṭai*, பெ. (n.) ***அத்தி மரத்தின் உரி (மேல்தோல்)***; bark of the fig tree.

[அத்தி + பட்டை.]

இப் பட்டைச்சாறு, நச்சுக்கடி, புலி அல்லது பூனை யுகிர்ப் பறண்டல், பிளவை, பெரும்பாடு ஆகியவற்றைக் குணமாக்கும்; The juice from this bark is a cure for poisonous bites, scratches caused by tiger's claws or cat's paw, *carbuncles* and *menorrhagia*.

அத்திப்பதநீர் *atti-p-pada-nīr*, பெ. (n.) ***அத்தி மரத்தின் வேரினின்று வடியும் நீர் அல்லது கள்***; a fluid exuding from the root of the fig tree.

இஃது உடம்பிற்குக் குளிர்ச்சியை யுண்டாக்கி, வெட்டைச் சூடு, கண்ணெரிச்சல் முதலியவற்றைப் போக்கும்; This is used for cooling down the human body system, and for removing venereal heat and for curing inflammation of the eyes.

[அத்தி + பதநீர்.]

அத்திப்பழச்சாறு *atti-p-paḻa-c-cāṟu*, பெ. (n.) ***அத்திப்பழத்தின் பிழியல்***; the juice of fig fruit.

இது, மதுமேகம், மூத்திரநோய் முதலியவற்றிற்குக் கொடுக்கும் சுண்ணம் (பற்பம்), செந்தூரம் முதலிய மருந்துகட்கு உடன்குடிப்பாக (அனுபானமாக) உதவும்; This is used by native physicians as a medium in the administration of calcined oxides and red oxides or other metalic preparations, for curing diabetes and urinary disorders (சா.அக.).

[அத்தி + பழம் + சாறு.]

அத்திப்பால் *atti-p-pāl*, பெ. (n.) ***அத்திமரத்தினடியிற் குத்தியெடுக்கப்படும் பால்***; the milky juice of the country fig tree collected from the stem.

நாட்டத்திப்பால் அரத்தக்கழிச்சல், வயிற்றுக்கடுப்பு, வயிற்றுப்போக்கு, நீரிழிவு, மூலம், பெரும்பாடு, அரத்தமூத்திரம் முதலியவற்றைக் குணமாக்கும். அயல்நாட் டத்திப் பாலோ, உடம்பிற் பட்டாற் சிவந்து புண்ணாகும்; The juice of the country fig tree is a good remedy for dysentery, inflammation or irritation of the stomach, diarrhoea, diabetes, piles, menorrhagia, blood in the urine, etc. But, the juice of the foreign fig tree has only a blistering effect (சா.அக.).

[அத்தி + பால்.]

அத்திம்பியார்[1] *attimbiyār*, பெ. (n.) ***அக்கை கணவன்*** (பிராம.); elder sisters's husband (Brāhm.).

மறுவ. அத்தம்பியார், அத்திம்பேர்.

[ஒருகா. அத்தி + நம்பியார் – அத்திநம்பியார் → அத்திம்பியார்.]

அத்தம்பியார் பார்க்க; see *attambiyār*.

அத்திம்பியார்[2] *attimbiyār*, பெ. (n.) ***அத்தை கணவன்*** (பிராம.); paternal aunt's husband (Brāhm.).

[ஒருகா. அத்தை + நம்பியார் – அத்தைநம்பியார் → அத்திம்பியார்.]

அத்திம்பேர்[1] *attimbēr*, பெ. (n.) ***அக்கை கணவன்*** (பிராம.); elder sister's husband (Brāhm.).

[ஒருகா. அத்தி + நம்பியார் — அத்திநம்பி யார் → அத்திம்பேர்.]

அத்திம்பேர்² *attimbēr*, பெ. (n.) **அத்தை கணவன்** (பிராம.); paternal aunt's husband (Brāhm.).

[ஒருகா. அத்தை + நம்பியார் — அத்தைநம்பி யார் → அத்திம்பியார் → அத்திம்பேர்.]

அத்திமானம் *attimānam*, பெ. (n.) **ஆமணக்கு** (சித்.அக.); castor plant.

அத்திமேற்புல்லுருவி *atti-mēṟ-pulluruvi*, பெ. (n.) **அத்திமரத்தில் முளைத்திருக்கும் புல்லுருவிப் பூடு**; a parasitic plant found growing on fig tree, *Banda roxburghii* (சா.அக.).

அத்திரதம் *attiradam*, பெ. (n.) **இஞ்சி**; ginger, *Zinziber officinale*.

அத்திரப்பல் *attira-p-pal*, பெ. (n.) 1. **குழந்தைகட்கு 7ஆம் மாத முதல் 36ஆம் மாதம் வரை முளைக்கும் 20 பற்கள்**; the 20 temporary or milk teeth that grow in children between the 7th and 36th month. 2. **பாற்பல்**; the tooth of the first dentition, milk-tooth. 3. **குதிரைப் பல்**; horse tooth (சா.அக.).

அத்திரப்பிடுக்கன் *attira-p-piḍukkaṉ*, பெ. (n.) 1. **குதிரைப்பிடுக்கன்மரம்**; horse almond tree, *Sterculia foetida*. 2. **பருத்த பிடுக்கையுடையவன்**; one with a big scrotum (சா.அக.).

[அத்திரம் + பிடுக்கன்.]

அத்திரம்¹ *attiram*, பெ. (n.) 1. **குதிரை**; horse. 2. **கழுதை**; ass (அக.நி.).

அத்திரம்² *attiram*, பெ. (n.) 1. **இலந்தை**; (மூ.அ.); jujube, sh. & s. tr., *Zizyphus jujuba*. 2. **இஞ்சி** (பச்.மூ.); green ginger, *Zinziber officinale*. 3. **குங்கிலியம்** (சித்.அக.); Indian bdellium. 4. **கடுக்காய்ப்பூ** (வை.மூ.); Japanese wax-tree. 5. **குக்கில்**; a resin, *Balsmodendron roxburghii* (சா.அக.).

அத்திரா *attirā*, பெ. (n.) **அரசு** (சித்.அக.); pipal.

அத்திரி *attiri*, பெ. (n.) 1. **ஒட்டகம்** (பிங்.); camel. 2. **குதிரை**; horse. "மனப்பே ரத்திரி யுகைத்து" (ஞானா. 33 : 10). 3. **கழுதை** (திவா.); ass. 4. **கோவேறு கழுதை**; mule. "வான வண்கைய னத்திரி யேற" (சிலப். 6 : 119). 5. **உலைத்துருத்தி** (திவா.); forge, bellows.

ம. அத்திரி

அத்திரிகா *attirigā*, பெ. (n.) **சிறுசிமிட்டி**; a kind of plant (சா.அக.).

அத்திரிப்பாய்ச்சல் *attiri-p-pāyccal*, பெ. (n.) **குதிரை தாவியோடும் வேகம்**; gallop of a horse.

[அத்திரி + பாய்ச்சல்.]

அத்திரியர் *attiriyar*, பெ. (n.) **கள்ளர்குலப் பட்டப் பெயர்களுள் ஒன்று** (கள்ளர் சரித். பக். 145); a title of Kaḷḷars.

[அத்திரி = குதிரை. அத்திரி → அத்திரியன் = குதிரை மறவன்.]

சோழர் குதிரைப்படையினரின் வழிவந்த கள்ளர், தம் முன்னோரின் தொழிலடிப் பெயரை இன்று தம் குலப் பட்டப்பெயராகக் கொண்டுள்ளதாக விருக்கலாம்.

அத்திரியன் (ஒருமை) — அத்திரியர் (பன்மையும் உயர்வுப் பன்மையும்).

அத்திரு *attiru*, பெ. (n.) **அரசு, அரசமரம்** (மலை.); pipal tree, *Ficus religiosa*.

அத்திலிகை *attiligai*, பெ. (n.) **நஞ்சுத் தொடர்பான நீரட்டையை (சூகையை)க் கையாள்வதால் (பிரயோகிப்பதால்) வளி (வாயு) வேகமடைந்து உடம்பிலெழும்புங் காய்ப்பருக்கள்**; eruptions of hard stone-like pimples on the body due to activisation of *vāyu* locally where a plaster of poisonous *šūka* (leech) has been applied.

அத்திலை *attilai*, பெ. (n.) **செருப்படை** (மூ.அ.); a low spreading plant, species of coldenia, *Coldenia procumbens*.

அத்திவங்கம் *attivaṅgam*, பெ. (n.) **காரீயம்**; lead, *plumbago* (சா.அக.).

அத்திவீரம் *attiviram*, பெ. (n.) **சவ்வீரம்**; *Hydrargiri perchloridum* (சா.அக.).

அத்தின் *attin*, பெ., 5ஆம் வேற். (n., ab.c.) **அதனின், அதனின்று**; from that. "தானத்தின் வேறாகுந் தான்" (சி. போ. 3 : 7, வெண்பா).

[அது → அத்து + இன். ஒ.நோ : எது → எத்து. 'எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்' (பழ.).]

அத்தீர் *attīr*, பெ. (n.) **குழித்தாமரை** (பரி.அக.); rootless nelumbo (செ.அக.) — **குளிர்தாமரை**; sky lotus, *Distia stralioles* (சா.அக.).

அத்து[1]**-தல்** *attu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **அப்புதல்**; to apply, as medicine to a wound. மருந்தைக் காயத்தின்மே லத்தி வைத்தான் (வின்.). 2. **இரு அல்லது பல துண்டை ஒன்றாகப் பொருத்தியிசைத்தல்**; to join two or more parts making them fit in with one another. அத்தித் தைத்தான் (வின்.). 3. **சார்தல்**; to lean on. என் தோளை அத்திக்கொண்டு வா (வின்.). 4. **எட்டுதல்**; to reach. அந்தச் செய்தி தலைவர் காதிலும் அத்திப்போய் விட்டது (உ.வ.).

ம. அத்துக; க. அதுகு; தெ. அத்து.

[உ → உத்து → அத்து. உத்தல் = பொருந்துதல், ஒத்தல்.]

அத்து[2] *attu*, பெ. (n.) 1. **அரைப்பட்டிகை** (பிங்.); girdle, waist ornament. 2. **தையல்** (பிங்.); sewing.

[உ → உத்து → அத்து.]

அத்து[3] *attu*, பெ. (n.) 1. **சிவப்பு**; redness. "அத்து ணாடையர்" (சீவக. 1848). 2. **செவ்வை** (சங்.அக.); straightness, correctness, sound condition. 3. **துவர்**; astringents. "ஆடு நீரன வத்து மண்களும்" (சீவக. 2418). 4. **காட்டத்தி**; wild-fig, *Ficus glomerata* alias *F. guttata* (சா.அக.). 5. **கடப்பம்பட்டை** (இராசவைத்.); bark of common *kaḍamba*. 6. **அழிஞ்சிற்பட்டை** (இராசவைத்.); bark of sage-leaved alangium.

ம. அத்து; து. அத்தசமர.

[நிறப்பெயர்கள், பொதுவாக அவ்வந் நிறங் களையுடைய பொருள்களின் பெயரினின்று அமைந்துள்ளன. அப் பொருள்கள் கட்டி யாகவோ நீராகவோ ஆவியாகவோ இருக்கலாம்.

நெருப்புச் சிவந்திருப்பதால், நெருப்பு வடி வானதும் தோற்றத்திலும் மறைவிலும் சிவந்து தோன்றுவதுமான கதிரவன் பெயரினின்று, செந்நிறப் பெயர் தோன்றிப் பல்வேறு வடிவாகத் திரிந்துள்ளது.

உல் → உர் → உரு. உருத்தல் = அழலுதல், எரிதல். உர் → க. உரி. உல் → எல் = கதிரவன். எல் → எர் → எரி = நெருப்பு, சிவப்பு. எரிமலர் = முருக்கமலர், செந்தாமரை மலர். எர் → தெ. எறு → எறுப்பு = சிவப்பு. எரங்காடு = செந்நிலம்.

உல் (எல்) → அல் → அல → அலத்தம் = செம் பருத்தி. அலத்தம் → அலத்தகம் = செம்பஞ்சுக் குழம்பு. அலத்தம் → அரத்தம் = சிவப்பு, செந் நீர் (குருதி), அரக்கு. அலத்தகம் → அரத்தகம்.

அல் → அல → அலக்கு → அரக்கு = சிவப்பு, செம்மெழுகு.

எல் → இல் → இல → இலத்தி → இரத்தி = செங்கனி முட்செடி. இலத்தி → இலத்தை → இலந்தை = செங்கனி முட்செடி. இலத்தை → இலதை (மலை.).

அல் → அது → அத்து = சிவப்பு, துவர்ப்பு, துவர்ப்பொருள். பாக்கு, காசுக்கட்டி முதலிய செந்நிறப் பொருள்கள் துவர்த்தலால், அத்து என்னுஞ் சொல் துவர்ப்புப் பொருள் பெற்றது.

ஒ.நோ : மெல் → மெது → மெத்து.]

அத்து[4] *attu*, சு.பெ. (demons. pron.) 1. **அது**; that, it. "அத்தொ டொருமருவு கோள்" (சௌந். 11). 'அத்தோடே நின்றது அலைச் சல்; கொட்டோடே நின்றது குலைச்சல்' (பழ.). 2. **எல்லை**; boundary, limit. 'அத்து மீறிக் கத்தாதே', 'அத்துமீறிப் போனான், பித்துக்கொள்ளி ஆனான்' (பழ.).

[அது → அத்து. ஒ.நோ : மெது → மெத்து.]

அத்து[5] *attu*, இடை. (part.) **உருபு புணர்ச்சியில், மகர மெய்யீற்றுப் பெயர்ச்சொல்லிற்கும் வேற்றுமை யுருபிற்கும் இடையில் சாரியையாக வரும் இணைப்பிடைச்சொல்**; an euphonic increment inserted between a noun ending in 'அம்' and its case-ending in declension, the final syllable 'அம்' of the noun being elided invariably in prose.

"இன்னே வற்றே அத்தே அம்மே
....
அன்ன என்ப சாரியை மொழியே"
(தொல். எழுத்து. புண. 17).

"அத்தின் அகரம் அகரமுனை யில்லை"
(தொல். எழுத்து. புண. 23).

எ-டு : மரம் + ஐ (மரம் + அத்து + ஐ) – மரத்தை, முகம் + இல் (முகம் + அத்து + இல்) – முகத்தில்.

அத்து[6] *attu*, இடை. (part.) **கிழமைப் பொருளிலும் இடப்பொருளிலும் வரும் சாரியை யாகிய உருபு போலி**; an euphonic increment generally used as a genitive or locative case-ending.

எ-டு :
மரத்து வேர் —கிழமை வேற்றுமை.
பட்டினத்துப்பிள்ளை —இடவேற்றுமை.
குன்றத்திருந்தான் —இடவேற்றுமை.

அத்துச்சாரியையேற்ற பெயர், பெயரொடு கூடின் கிழமை அல்லது இடப்பொருளையும் வினையொடு கூடின் இடப்பொருளையும் உணர்த்தும்.

அத்துகம் *attugam*, பெ. (n.) 1. **ஆமணக்கு** (மலை.); castor-plant, *Recinus communis*. 2. **ஆமணக்கமரம்** (சங்.அக.); castor-tree.

அத்துகமணி *attugamaṇi*, பெ. (n.) *அரசு, அரசமரம்* (பச்.மூ.); pipal tree.

அத்துகமானி *attugamāṉi*, பெ. (n.) *அரசு, அரசமரம்* (மலை.); pipal tree, *Ficus religiosa*.

மறுவ. அத்துகமணி, அத்துமணி, அத்துமானி.

அத்துகமேதி *attugamēdi*, பெ. (n.) *சிறுசிலும்பான்*; a kind of plant (சா.அக.).

அத்துகோசகம் *attukōšagam*, பெ. (n.) *சிறு சீரகம், பெருஞ்சீரகத்திற்கு எதிர்*; cumin, *Cuminum cyminum*, opp. to *peruñjīragam*.

அத்துசம் *attušam*, பெ. (n.) *மரமஞ்சள்* (பச்.மூ.); tree-turmeric, *Coscinium fenestratum*.

அத்துணை *a-t-tuṇai*, பெ. (n.) **அவ்வளவு**; that much, so much. அஃது அத்துணை நன்றாயில்லை (உ.வ.).

[அ (சேய்மைச்சுட்டு) + துணை (அளவு) — அத்துணை.]

அத்துதல் *attudal*, பெ. (n.) *அரத்தைப்பூடு*; galangal, *Alpinia galangal* (சா.அக.).

அத்துமணி *attumaṇi*, பெ. (n.) *அத்துகமானி* பார்க்க; see *attugamāṉi*.

அத்துமம் *attumam*, பெ. (n.) *அரத்தை* (மூ.அ.); galangal, *Alpinia galangal*.

அத்துமாகசம் *attumāgašam*, பெ. (n.) *சிறு செந்தொட்டி*; small climbing nettle, *Tragia involucrata* (சா.அக.).

அத்துமானி *attumāṉi*, பெ. (n.) *அத்துகமானி* பார்க்க; see *attugamāṉi*.

அத்துராதி *atturādi*, பெ. (n.) *வால்மிளகு*; *tail* pepper, *Piper cubeba* (சா.அக.).

அத்துலாக்கி *attulākki*, பெ. (n.) *கருஞ்சீரகம்* (மூ.அ.); black cumin, *Nigella sativa*.

மறுவ. அத்துலாக்கினம், அத்துவர்க்கயம், அத்துவர்க்காயம், அத்துவாக்காயம்.

அத்துலாக்கினம் *attulākkiṉam*, பெ. (n.) *அத்துலாக்கி* பார்க்க; see *attulākki* (சா.அக.).

அத்துலி *attuli*, பெ. (n.) *சிறுதெல்லு*; a kind of creeper (சா.அக.).

அத்துவசம் *attuvašam*, பெ. (n.) *ஒரு பூடு*; the plant svarmūli (சா.அக.).

அத்துவசல்லியம் *attuvašalliyam*, பெ. (n.) *நாயுருவி*; Indian burr, *Achyranthes aspera* (சா.அக.).

அத்துவம் *attuvam*, பெ. (n.) *சிவப்பு*; redness (சா.அக.).

[அத்து = சிவப்பு. அத்து → அத்துவம்.]

அத்துவர்க்கயம் *attuvarkkayam*, பெ. (n.) *கருஞ் சீரகம்*; black cumin, *Nigella sativa* (சா.அக.).

அத்துவர்க்காயம் *attuvarkkāyam*, பெ. (n.) *அத்துவர்க்கயம்* பார்க்க; see *attuvarkkayam*.

அத்துவாக்காயம் *attuvākkāyam*, பெ. (n.) *அத்து வர்க்கயம்* பார்க்க; see *attuvarkkayam*.

அத்துவானம்[1] *attu-vāṉam*, பெ. (n.) *செவ் வானம்* (சங்.அக.): red tinted sky.

[அத்து + வானம். அத்து = சிவப்பு.]

அத்துவானம்[2] *attu-vāṉam*, பெ. (n.) 1. *பாழ்ங் காடு* (சங்.அக.); desert. அது அத்துவானக் காடு (உ.வ.). 2. *பாழிடம்*; desolate place. அத்துவானப் பொட்டல் (உ.வ.). 3. *பாழ்*; ruins.

தெ. அத்துவானம்

[அத்தம் = ஆள்வழங்கா அருநெறி, கடுங்காட்டு வழி. வனம் = காடு. அத்தவனம் → அத்துவானம்.]

அத்துளாசுண்ணம் *attuḷā-šuṇṇam*, பெ. (n.) *ஈரற்சுண்ணம்*; a calcined powder prepared out of gall-stone (சா.அக.).

அத்தூரம் *attūram*, பெ. (n.) *மரமஞ்சள்* (மூ.அ.); tree-turmeric, *Coscinium fenestratum*.

அத்தை[1] *attai*, பெ. (n.) 1. **தந்தையுடன் பிறந்தவள்**; father's sister. ''கானிடையத்தைக் குற்ற குற்றமும்'' (கம்பரா. சுந்தர. பாசப். 44). 'அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா எனலாம்', 'அத்தைமகளானாலும் சும்மா வருமா', 'அத்தைமகள் சொத்தை அவள் கேட்கிறாள் மெத்தை' (பழ.).

2. **மனைவியின் தாய்**; wife's mother, mother-in-law. ''மாமியை யத்தையைத் தோயின்'' (கூர்மபு. பிராயச். 1). 3. **கணவன் தாய்**; husband's mother, mother-in-law. ''அரசர்க் கத்தையர்க்கு'' (கம்பரா. அயோத். தைல. 39). 4. **தாய்**; mother. 5. **தமக்கை**; elder sister. 6. **தலைவி** (பிங்.); lady, woman of rank or eminence. 7. **குருபத்தினி** (நாநார்த்த.); guru's wife.

ம. அத்த (தந்தையுடன் பிறந்தாள், கணவன் அல்லது மனைவியின் தாய்); **க.** அத்தி (அத்தை, மாமி); **க.** சோதர் அத்தெ, சோதர் அத்தி (தந்தையுடன் பிறந்தாள், அம்மான் மனைவி); **தெ.** அத்த (மாமி, தந்தையுடன் பிறந்தாள், அம்மான் மனைவி); **து.** அத்தெ (மாமி); **கட.** ஆத்த (மாமி, தந்தையுடன் பிறந்தாள்); **கோண்.** ஆத்தீ (தந்தையுடன் பிறந்தாள்); **குவி.** அத்த; **பிராகி.** அத்தா (மாமி, தந்தையுடன் பிறந்தாளின் கணவன்); **மரா.** அத்தா (மூத்தவள்).

[அத்தன் (ஆ.பா.) – அத்தை (பெ.பா.) = அத்தனுடன் (தந்தையுடன்) பிறந்தவள். அம்மையுடன் பிறந்தவன் அம்மான் எனப்பட்டதுபோல், அத்தனுடன் பிறந்தவள் அத்தை யெனப் பட்டாள்.]

'அத்தி' யென்னும் இகரவீற்றுப் பெண்பாற் சொல், என்றும் தாயை அல்லது தமக்கையையே குறிக்கும். ஆதலால், அத்தி யென்னுஞ் சொல்லை அத்தை யென்னுஞ் சொல்லோடு மயக்க இடமில்லை. ஆயினும், கவனிப்பின்மையாலோ திசை வழக்காகவோ, இவ்வீற்றுச் சொற்களும் ஒன்றோடொன்று மயங்கியும் வந்திருக்கின்றன. அம் மயக்க மெல்லாம் ஏனைத் திரவிட ஆரிய மொழிகளிலன்றித் தமிழிலில்லை. ஆதலால், ஐகார வீற்றுச்சொல் அத்தியை அல்லது தாயைக் குறிக்குமிடத்து, ஆத்தை 'யென்று முதல் நீட்டம் பெறும். அதுவே ஆத்தா என்றும் ஆத்தாள் என்றும் கொச்சை வழக்கில் திரிந்து வழங்குகின்றது.

அத்தை[2] *attai*, பெ. (n.) **கற்றாழை** (இராசவைத்.); common Indian aloe, *Aloe vera* (*afficinalia*).

அத்தை[3] *attai*, சு.பெ., 2ஆம் வே. (demons. pron., acc.c.) **அதை, அதனை**; acc. of that or it. ''அத்தை யறியாதே'' (தாயு. ஆனந்தக். 13). 'அத்தைத்தான் சொல்வானேன் வாயைத் தான் வலிப்பானேன்' (பழ.).

[அது → அத்து + ஐ (2ஆம் வே. உ.) – அத்தை.]

அத்தை[4] *attai*, இடை. (part.) **ஒரு முன்னிலை யசைச்சொல்**; a poctic expletive joined to a verb in the 2nd pers. ''நடுக்கின்றி நிலியரோ வத்தை'' (புறநா. 2 : 20).

[அது → அத்து → அத்தை. அத்தை யென்னும் 2ஆம் வே. உருபேற்ற சுட்டுப்பெயரே, தன் பொருளிழந்து முன்னிலை யசைச்சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கலாம்.]

'செய்யிய ரத்தை' என்னுமிடத்து, 'செய்க அதை' யென்று பொருள்கொள்ள இடமுண்டு; ஆயின், அத்தை யென்பதைச் செய்யுளில் இடத்தை நிரப்ப வரும் பொருளற்ற சொல் லென்று கொண்ட பின், அதைப் பொருள் பொருந்தாத சொல்லொடும் இணைக்கலாம்.

''எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே'' (தொல். சொல். பெய. 1) என்பது, சொல்லமைதியின் அடிப்படை நெறிமுறை யாம்.

அத்தைசார் *attaišār*, பெ. (n.) **அத்தையார் (தந்தையுடன் பிறந்தவள்)**; father's sister. **அத்தை**[1], 1. பார்க்க; see *attai*[1], 1.

[ஆர் → உ.பன். ஈறு. யா → சா, போலி.]

அத்தைதாளி *attai-tāḷi*, பெ. (n.) **காட்டுப் பூவரசு**; falsefern tree, *Filicium decipiens*.

அத்தைநாறி *attai-nāṛi*, பெ. (n.) **காட்டுக் கோங்கு** (L.); prussic acid tree.

அத்தைப்பாட்டி *attai-p-pāṭṭi*, பெ. (n.) **பாட்டனுடன் பிறந்தாள்**; grand-father's sister. 'அத்தைப்பாட்டி போல அளந்து கொட்டுகிறாள் பெரிதாக' (பழ.).

[அத்தை + பாட்டி.]

அத்தைபிள்ளை *attai-piḷḷai*, பெ. (n.) **அத்தான்** (இ.வ.); father's sister's son (Loc.).

அத்தோ *attō*, இடை. (int.) **வியப்பு, இரக்கம் முதலியவற்றை யுணர்த்தும் குறிப்பிடைச் சொல்** (பிங்.); an exclamation of wonder, pity, etc.

[அத்தன் = தந்தை. அத்தன் → அத்தோ. ஒ.நோ : ஐயன் → ஐயோ (இரக்கக் குறிப்பு).

தாய்தந்தை முறைப்பெயர்களின் விளிவடிவங்கள் பல்வேறு குறிப்பிடைச் சொற்களாவது, முன்னரே கூறப்பட்டது.]

அக்கோ பார்க்க; see *akkō*.

அத *ada*, பெ. (n.) அத்தி; country fig, *Ficus glomerata*. 'அதக்குறிது' (தொல். எழுத்து. உயிர். 1, நச். உரை).

மறுவ. அதவம், அதவு, அதா.

அதக்காயநாளம் *adakkāya-nāḷam*, பெ. (n.) ஈரலின் இடப்புற நாளம்; a large hollow vein of the liver, *Vena cava hepatica*.

அதக்கு-தல் *adakku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மெல்ல அமுக்குதல்; to press gently or softly as is done to a boil to bring out the pus or other matter (சா.அக.). 2. கீழ்ப்படுத்துதல், அடக்குதல்; to subdue, subject, control. "மாவலியைக் குறும்பதக்கி" (திவ். பெரியாழ். 4.9:7). 3. கசக்கியிளக்குதல் (வின்.); to grind, rub in the hand, press softly, soften, as fruit. 4. வாயில் அடக்குதல்; to cram in the mouth, as betel, as a monkey, its food. 5. குதப்புதல்; to turn about food in the mouth, munch.

ம. அதக்குக; க. அதுக்கு; தெ. அதுமு.

[அல் → அலு → அலுங்கு → அலுக்கு → அதுக்கு → அதக்கு. அலுங்குதல் = அசைதல். அலுக்குதல் = அசைத்தல். அதுக்குதல் = அசைத்து இளக்குதல், கசக்குதல், அடக்குதல். ல → த, போலி.]

அதகடி *adakaḍi*, பெ. (n.) அதட்டு (யாழ்ப்.); menace, threat, hectoring (J.).

[அதக்கு + அடி – அதக்கடி → அதகடி.]

அதங்கதம் *adaṅgadam*, பெ. (n.) யானைத் தீனி (அக.நி.); food of elephant.

அதங்கம் *adaṅgam*, பெ. (n.) ஈயம் (மூ.அ.); lead, plumbum.

[ஒருகா. அதக்கு → அதக்கம் → அதங்கம் = எளிதாய் இளகுவது.]

அதங்கோட்டாசான் *adaṅgōṭṭāśāṉ*, பெ. (n.) கி.மு. 6ஆம் அல்லது 7ஆம் நூற்றாண்டில், நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்தில் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்ட போது, அவ்வரங்கிற்குப் புலமைத் தலைமை தாங்கி அந் நூற்கு ஒப்பந் தந்த அதங்கோட்டு வாணனான பேராசிரியன்; a great Tamil scholar of *Adaṅgōḍu*, who as president, gave his approval to *Tolkāppiyam* when it was presented before a learned assembly for acceptance, in the immediate presence of King *Nilandaru-thiruviṟ Pāṇḍiyaṉ*, who ruled over the *Pāṇḍya* Kingdom in the 6th or 7th century B.C.

[அதங்கோடு + ஆசான்.]

அதங்கோடு *adaṅgōḍu*, பெ. (n.) சேரநாட்டில் திருவனந்தபுரம் பக்கத்திலுள்ள ஒரு பழைய ஊர்; an old town in the *Cēra* or *Kērala* country near Trivandrum. அது பின்னர் வேணாட்டுத் தலைநகரானபோது திரு என்னும் அடைபெற்றுத் திருவதங்கோடு எனப்பட்டது. அப் பெயர் பின்னர்த் திருவிதாங்கூர் என மருவிற்று. ஆங்கிலர் காலத்தில் அது திருவாங்கூர் (Travancore) எனக் குறுகிற்று. அவ்வூரைத் தலைநகராகக் கொண்ட நாடும் திருவாங்கூர் எனப் பெற்றது.

அதட்டு-தல் *adaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. உறுக்குதல்; to rebuke authoritatively, hector. "எவரு மடங்க........அதட்டு வான் போன்று" (பிரபோத. 11:1). 2. ஒலித்து உரப்புதல்; to frighten with a vehement or sudden noise, as a beast. "உரத்த தொனியோடதட்டி" (நல். பாரத. உத்தரநிரை. 334). 'அதட்டிப் பேசினால் உண்மை அழிந்தா போகும்?' (பழ.).

க. அதடு

[அரட்டு → அதட்டு.]

அதட்டு *adaṭṭu*, பெ. (n.) வெருட்டும் ஓர் உரத்த ஒலி அல்லது சொல்; rebuke, ranting, hectoring. ஓர் அதட்டுப் போட்டான் ஊர் வெடிக்க (உ.வ.).

[அரட்டு → அதட்டு.]

அதப்பு *adappu*, பெ. (n.) செருக்கு (இ.வ.); arrogance (Loc.).

அதம் *adam*, பெ. (n.) அத்தி (சூடா.); country fig, *Ficus glomerata*.

[அத → அதம்.]

அதம்பம் *adambam*, பெ. (n.) ஒரு கனிய நஞ்சு (கற்பரி பாடாணம்) (மூ.அ.); a mineral poison.

அதம்பழம் *adam-paḻam*, பெ. (n.) *அளிந்த பழம்* (அருங்கலச். 123); over-ripe fruit.

அதம்பு-தல் *adambu-*, 5 செ.கு.வி. (v.i.) *அடங்காது பேசுதல்* (இ.வ.); to speak intemperately (Loc.). க. அதப்பு. —, 5 செ.குன்றாவி. (v.t.) *கண்டித்தல்* (வின்.); to rebuke. தெ. அதல்பு.

[ஒருகா. அரம்பு → அதம்பு.]

அதர்[1] *adar*, பெ. (n.) *1. வழி*; way, path, public road. "ஆக்க மதர் வினாய்ச் செல்லும்" (குறள், 594). "ஆனினங் கலித்த வதர்பல கடந்து" (புறநா. 138 : 1). க., தெ. தாரி. 2. *முறைமை*; order. "அதர்படத் துதித்து" (திருவாலவா. 25 : 26).

அதர்[2] *adar*, பெ. (n.) *1. சிறுகல்* (பொதி.நி.); gravel. 2. *நுண்மணல்* (பிங்.); fine sand. க. அதுரு. 3. *புழுதி* (சூடா.); dust. 4. *மருந்துக் கசடு* (சித்.அக.); sediment in medicine.

அதர்[3] *adar*, பெ. (n.) *தலைப்பொடுகு*; dandruff. "குழலான மாலைப் பார்த்தா லதர்மிடைந்து ளூறிடும்" (நூற்றெட்டுத். திருப்பு. 56).

ஒ.நோ : அசறு

அதர்[4] *adar*, பெ. (n.) *ஊமணி, ஆட்டின் கழுத்தில் தொங்கும் தசைக்காம்பு* (சூடா.); a kind of wattle or excrescence under the neck of goats and sheep. "ஆட்டின் கழுத்தில் அதர்கறந்த வாறே" (திருமந். 2937).

[ஒருகா. அதள் → அதல் → அதர். அதள் = தோல்.]

அதர்[5] *adar*, பெ. (n.) *நீளக்கிடங்கு* (யாழ்ப்.); a long excavation for a foundation or long pit, ditch or trench.

அதர்கோள் *adar-kōḷ*, பெ. (n.) *வழிப்பறி* (திவா.); highway robbery.

அதர்ப்படு-தல் *adar-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) *நெறிப்படுதல்*; to conform to rules. "அதர்ப்பட யாத்தலோ டனைமர பினவே" (தொல். பொருள். மர. 99).

[அதர் + படு. அதர் = வழி.]

அதர்பறி-த்தல் *adar-paṟi-*, 4 செ.கு.வி. (v.i.) *நீளக்கிடங்கு வெட்டுதல்*; to dig a long pit for a foundation, ditch or trench.

[அதர் + பறி. அதர் = நீளக்கிடங்கு.]

அதர்வை *adarvai*, பெ. (n.) *1. வழி*; way, path. "அம்புதல் அதர்வை" (பெருங். உஞ்சைக். 53 : 145). தெ. தோவ. 2. *ஒருவகைக் கொடி*; a climber. "அதர்வைக் கொடிபுரை கயிற் றொடு கொளுத்தினர்" (பெருங். உஞ்சைக். 55 : 53-54).

அதரஞ்செய்-தல் *adarañ-cey-*, 1 செ.குன்றாவி. (v.t.) *தடைசெய்தல்*; to obstruct. "புரை யிடத்திற் சென்று அதரஞ் செய்யு மவர்களும்" (T.A.S. iii, 194).

அதரம் *adaram*, பெ. (n.) *மஞ்சள்* (பரி.அக.); turmeric.

அதரவன் *adaravaṉ*, பெ. (n.) *வெண்டோன்றி* (வை.மூ.); Malabar glory-lily.

அதரிகொள்(ளு)-தல் *adari-koḷ(ḷu)-*, 10 செ. குன்றாவி. (v.t.) *களத்திற் கதிரைக் கடாவிட்டு உழக்குதல்*; to thresh grain with cattle on the threshing floor. "அதரி கொள்பவர்" (மதுரைக். 94). 2. *பகையழித்தல்*; to tread upon enemies, as on a threshing floor. "கொண்டனை பெரும குடபுலத் ததரி" (புறநா. 373 : 26).

அதரிடைச்செலவு *adar-iḍai-c-celavu*, பெ. (n.) *மறவர் நிரைமீட்சிக்குப் புறப்படும் புறத்துறை* (பு. வெ. 2 : 3); theme of an episode in which warriors set forth to recover cattle seized by enemies.

[அதர் + இடை + செலவு.]

அதரிதிரி-த்தல் *adari-tiri-*, 4 செ.குன்றாவி. (v.t.) *கதிரைக் கடா விட்டு உழக்குதல்*; to thresh grain with cattle. "அதரி திரித்த வாளுகு கடாவின்" (புறநா. 371 : 17).

[அதரி + திரி.]

அதலமூலி *adala-mūli*, பெ. (n.) *ஆடுதின்னாப் பாலை*; a plant, worm-killer, *Aristolochia bracteata*.

அதலி *adali*, பெ. (n.) *அதிலி* பார்க்க; see *adili*.

[அதிலி → அதலி.]

அதவம் *adavam*, பெ. (n.) *1. அத்தி*; country fig. "வெண்கோட் டதவத் தெழுகுளிறு மிதித்த வொருபழம்" (குறுந். 24). 2. *நெய்த் துடுப்பு*; ladle for ghee used in sacrifice. "அதவமாய் நறுநெ யுண்டு" (கம்பரா. ஆரணிய. விராதன். 44).

[அத → அதவு → அதவம்.]

அதவல்குதவல் *adaval-kudaval*, பெ. (n.) ***தீனி செரியாது கழிந்த சாணி***; loose dung of cattle. ''சாணி அதவல்குதவலாகப் போடும்'' (பெரியமாட். 104).

அதவு *adavu*, பெ. (n.) ***அத்தி***; country fig. ''அதவுதி ரரிசி யன்ன'' (கல்லா. 99 : 18).

[அத → அதவு.]

அதவு-தல் *adavu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. ***எதிர்த்து நெருக்குதல்***; to attack. ''அதவிப் போர் யானை யொசித்து'' (திவ். இயற். 2 : 89). 2. ***கொல்லுதல்***; to kill. ''முதலை மடுவினி லதவிய புயலென'' (திருப்பு. 282).

அதவுநெய் *adavu-ney*, பெ. (n.) ***அத்திப் பிசின்***; the gum of the fig tree (சா.அக.).

அதழ் *adal*, பெ. (n.) ***பூவிதழ்***; petal. ''ஞெகி ழதழ்க் கோடலும்'' (கலித். 101 : 4).

[உது → உதழ் → அதழ்.]

அதள் *adaḷ*, பெ. (n.) 1. ***தோல்***; skin. ''அதளோன் துஞ்சுங் காப்பின்'' (பெரும் பாண். 151). 2. ***மரப்பட்டை***; bark. ''வேங்கை யதள்'' (தைலவ.). 3. ***எருதின் அலைதாடி***; bull's dew-lap (சங்.அக.).

[அத்து → அது → அதள் = உடம்பின்மேல் ஒட்டியிருப்பது.]

அதள்புனையரணம் *adaḷ-puṉai-y-araṇam*, பெ. (n.) ***தோற் கைத்தளம் என்னும் கையுறை***; glove used in warfare. ''அதள்புனை யரண மும்'' (சிலப். 14 : 170).

[அதள் + புனை + அரணம்.]

அதளப்பிச்சி *adaḷa-p-picci*, பெ. (n.) ***செந்நிற மான சீமைப் பிச்சி, வாதுமையைப் போன்றது. பாரசீகத்திலிருந்து கொண்டுவரப்பட்டதால் பாரசீகப் பழம் எனப்படும்***; a well-known fruit of a pale-red colour allied to the almond, supposed to have been brought originally from Persia, and hence the name Persian fruit (சா.அக.).

அதளமேலிச்சாரணை *adaḷamēli-c-cāraṇai*, பெ. (n.) ***சிவப்புச் சத்திச் சாரணை***; a red variety of the plant, *Boerhaavia procumbens* alias *B. repens* (சா.அக.).

அதளி *adaḷi*, பெ. (n.) குழப்பம், ஆரவாரம் (வின்.); noise, tumult.

ம. அதளி

ஒ.நோ: ஆதாளி

அதளை[1] *adaḷai*, பெ. (n.) 1. ***நீர்ப்பீர்க்கு***; a bitter plant, *Cucumis tuberosus*. 2. ***பாகல்***; fig-gourd, *Momordica charantia*. 3. ***நிலப் பீர்க்கு***; gourd plant, *Cucurbita acutangulus*. 4. ***புளியதளை***; a variety of sour gourd of the species of *Cucurbita* (சா.அக.) — (செ. அக.) 1. ***நிலப்பீர்க்கு*** (மூ.அ.); species of bitter luffa. 2. ***புளியுருண்டை*** (வின்.); ball made of the pulp of tamarind fruit.

அதளை[2] *adaḷai*, பெ. (n.) 1. ***பெரும்பாண்டம்***; large pot (W.). 2. ***காவற் குடிசை***; hut for shelter of those who watch over the harvest (W.).

அதளைவற்றல் *adaḷai-vaṟṟal*, பெ. (n.) ***நிலப் பீர்க்கு வற்றல்***; the preserves of *adaḷai* fruit (சா.அக.).

அதற்றி *adaṟṟi*, பெ. (n.) ***மாவிலங்கமரம்***; lingam tree, *Crataeva religiosa* (*Rox burghii*) (சா.அக.).

அதறஞ்சி *adaṟañji*, பெ. (n.) ***காட்டுமுருங்கை***; wild drum-stick tree, *Moringa conconensis* alias *Ormocarpum sennoides* (சா.அக.).

அதறு-தல் *adaṟu-*, 5 செ.கு.வி. (v.i.) ***பதறுதல்*** (திசைச்.); to be shaken by fear (Prov.) (சங்.அக.).

அதனப்பற்று *adaṉa-p-paṟṟu*, பெ. (n.) ***அதிகப் பற்று***; debit in account, overdraft. ***உன்*** கணக்கு அதனப்பற்றா யிருக்கிறது (உ.வ.).

அதனப்பிரசங்கி *adaṉa-p-piraśaṅgi*, பெ. (n.) ***அடங்காப் பேச்சாளி***; impudent speaker.

[அதனம் + **Skt.** *prasaṅga > த. பிரசங்கம் → பிரசங்கி.]*

அதனப்பிரசங்கி = அதனப் பொழிவாளன்.

அதனம் *adaṉam*, பெ. (n.) ***அதிகம், மிகுதி, மிகை***; much, excess.

தெ. அதனமு

[அதித்தல் = மிகுதல். அதி + அனம் — அதனம்.]

அதா[1] *adā*, பெ. (n.) ***அத்தி*** (பரி.அக.); country fig.

[அத → அதா.]

அதா[2] *adā*, இடை. (int.) ***இடத்தைச் சுட்டிக் காட்டும் சேய்மைச்சுட்டு***; demons. int. meaning 'behold there!' *அதா பார் மயில்!*

ஒ.நோ: அதோ, அந்தா[1].

தெ. அதிகோ, அதுகோ.

அதாகம் *adāgam*, பெ. (n.) ***சிவப்புச் சிவதை***; Indian red rhubarb or jalap, *Ipomaca turpethum* (சா.அக.).

அதாங்கி *adāṅgi*, பெ. (n.) **ஒரு காட்டுமரம்** (கா.வ.); a kind of wild tree, Nagetta, l. tr. *Gordonia obtusa*, Kāḍar usage (L.).

அதாவது *adāvadu*, கு.வி.எ.தொ. (adv. phr.) ***அஃது என்னவென்றால்***; that is to say, namely. இடைக்கால மலையாளநாட்டிற் பெரு வழக்காயிருந்தது மருமக்கட்டாயம்; அதாவது, ஒருவனது சொத்தை அவனுக்குப் பின் அவனுடைய உடன்பிறந்தாளின் புதல்வர் அடையும் உரிமைமுறை.

ம. அதாயது

[அது + ஆவது – அதாவது.]

அதான்று *adāṉṟu*, இடை. (conj.) ***அதுவன்றி, அதுவல்லாமல்***; besides, moreover.

அது + அன்று – அதுவன்று, அதன்று. இங்ஙனம் புணர்வதே இயற்கையான முறை. செய்யுளில் ஒரோவிடத்து 'அதான்று' என வருவதுபற்றி,

''அன்றுவரு காலை யாவா குதலும்
....
செய்யுண் மருங்கி னுரித்தென மொழிப''
(தொல். எழுத்து. உயிர். 56)

என்று தொல்காப்பியர் நூற்பா யாத்தார்.

எதுகை நோக்கியோ இசை நிறைப்புப் பற்றியோ, செய்யுளில் எழுத்துகள், நீள்வதும் அளபெடுப்பதும் இயல்பு. அதனால், 'அதன்று' என்பது 'அதான்று' என நீட்டல் திரிபு பெற்றும், 'அதாஅன்று' என அளபெடுத்தும் வரும். 'அதான்று' என்பதே ஒரு செய்யுள் நீட்டம். 'அதாஅன்று' என் பதோ, அதன்மேலும் ஓர் அளபெடை நீட்டம். உரையாசிரியன்மார் இதை நோக்காது, மேற் கூறிய நூற்பாவிற்கு,

அதாஅன்றம்ம, இதாஅன்றம்ம, உதாஅன் றம்ம, 'அதாஅன் றென்ப வெண்பா யாப்பே' என அளபெடுத்த தொடர்களையே எடுத்துக் காட்டியுள்ளனர்.

'அதான்று' என்னும் புணர்ச்சொல்லின் ஆகாரத்தை, தொல்காப்பியர் 'அது' என்னும் நிலைச்சொல்லீற்றுத் திரிபாகக் கொண்டார். அங்ஙனமே உரையாசிரியன்மாரும் கொண்டனர்.

ஆயின், நன்னூலாரோ, அவ்வாகாரத்தை வருஞ்சொன் முதலெழுத்துத் திரிபாகக் கொண்டு,

''அதுமுன் வருமன் றான்றாந் தூக்கின்''
(நன். 180)

என நூற்பாவியற்றினார். ஆயினும், சொற் புணர்ச்சியளவில் இருவரிடையும் ஒரு வேறு பாடு மில்லை.

அதுவன்று, அதன்று என்னும் புணர்ச்சியே உலகவழக்கிற்கும் உரைநடைக்கும் ஒத்த தென்பதும், அதான்று, அதாஅன்று என்பன செய்யுட்கே யுரியன வென்பதும், 'மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின் மொழியா ததனை முட்டின்றி முடித்த லென்பதனால், அதன்று இதன்று உதன்று என உகரங் கெட்டுத் தகரவொற்று நிற்றல் கொள்க' என்று நச்சினார்க்கினியரும்,

'ஆன்றேயாம் என இயல்பை விலக்கா மையின், அதுவன்று அதன்று என வருவனவுங் கொள்க' என்று நன்னூல் விரிவுரைஞர் சங்கரநமச்சிவாயப் புலவரும்,

'ஆன்றேயாமெனத் தேற்றேகாரங் கொடா மையால், அதுவன்று, அதன்று என வருவனவுங் கொள்க' என்று நன்னூல் விரிவுரைஞர் இராமானுசக்கவிராயரும்,

'ஆன்றேயா மென்னாமையால், அதன்று, அதுவன்று என நீளாமலும் வரும்' என்று நன்னூற் காண்டிகையுரைஞர் சடகோப ராமானுசாசாரியாரும் உரைத்ததினின்று தெளியப்படும்.

''உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரினிய்யாம் முற்றுமற் றொரோவழி''

என்னும் நன்னூல் 164ஆம் நூற்பா இங்குக் கவனிக்கத் தக்கது.

அதி[1]**-த்தல்** *adi-*, 4 செ.கு.வி. (v.i.) *1.* ***மிகுதல்***; to increase, to become abundant. *2.* ***மிகையாதல்***; to exceed, to become excessive. *3.* ***சிறத்தல்***; to excel, to become excellent. ''அதிக் கின்ற ஐவருள் நாத மொடுங்க'' (திருமந். 610).

அதி > **Skt.** ati. **Sinh.** ati.

[அதை → அதி. அதைத்தல் = வீங்குதல், பருத்தல், மிகுதல், செருக்குதல்.]

அதி[2] *adi*, இடை. (pref.) ***மிகுதிப்பொருள் தரும் முன்னொட்டு***; pref. implying intensity,

excessiveness, rarely made use of in poetry or prose. "அதிநுட்பம் யாவுள" (குறள், 636). செல்வம் மிகமிகச் செருக்கு அதிகரிக்கும் (உ.வ.).

அதி > **Skt.** adhi.

அதி³ *adi*, பெ. (n.) **வலையர் குலம்**; the Valaiya caste. "கார்தலியோ டதியரையன் கனகமழை பொழிந்து" (திருவாலவா. 22 : 18).

அதிக்கண்டம் *adi-k-kaṇḍam*, பெ. (n.) (யாப்.) செய்யுட்சீர்; (Pros.) metrical foot. 'அதிக் கண்ட மென்றும்..........சீரை..........பகர்வர்' (யாப். வி. 22, மேற். பக். 97).

அதிக்கம் *adikkam*, பெ. (n.) **மேன்மை**; excellence. "அதிக்க மன்னவர் முகம்" (இரகு. கடிமண. 40).

[அதி → அதிக்கம்.]

அதிக்குதி *adi-k-kudi*, பெ. (n.) **வெற்றியினால் அல்லது உயர்நிலையால் ஏற்படும் செருக்கு நடை** (யாழ்ப்.); ostentatious conduct, because of success or superiority, as jumping up and down (J.).

அதிகடப்பால் *adi-kaḍa-p-pāl*, பெ. (n.) 1. **எருக்கம்பால்**; milk of the spurge, *Calotropis gigantea*. 2. **யானைப்பால்**; elephant's milk (சா.அக.).

[அதி + கடம் + பால். அதி = மிகுந்த, கடுமையான. கடம் = 1. காடு, 2. மதம்.]

அதிகடம் *adi-kaḍam*, பெ. (n.) யானை; elephant (சங். அக.).

[அதி = மிகுந்த. கடம் = மதம். அதிகடம் = மதமிக்க யானை, யானை.]

அதிகண்டகம் *adi-kaṇḍagam*, பெ. (n.) **பெருங் காஞ்சொறி**; nettle plant of the big species, *Tragia involucrata* (சா.அக.).

[அதி + கண்டகம். அதி = மிகுந்த. கள் → கண்டு → கண்டம் → கண்டகம் = முள்.]

அதிகண்ணி *adi-kaṇṇi*, பெ. (n.) 1. **முன்துடரி**; a species of *tuḍari* plant, *Rhamnus circumcissus*. 2. **பெருங்கண்ணையுடையவள்**; a woman with big eyes (சா.அக.).

அதிகத்தி *adigatti*, பெ. (n.) **குருக்கத்தி**; a species of fig tree.

அதிகதை *adi-kadai*, பெ. (n.) ¹**வெற்றுரை** (வின்.); meaningless talk, senseless expression.

[அதி = மிகுந்த. கத்துதல் = உரக்கக் கூவுதல், உரக்கச் சொல்லுதல். கத்து → கதை. **ஒ.நோ:** நச்சு → நசை. கதை = பலருக்கு உரக்கச் சொல்லும் பழைய வரலாறு, வரலாற்றுக் கதை, கட்டுக்கதை.]

இதன் விளக்கத்தைக் **கதை** என்னும் உருப் படியில் காண்க.

அதிகதை > **Skt.** ati-kathā.

அதிகநங்கை *adiga-naṅgai*, பெ. (n.) **சிறியா ணங்கை**; snake-root, *Polygala glabra* (சா.அக.).

அதிகநாரி *adiga-nāri*, பெ. (n.) **அதிகநாறி** பார்க்க; see *adiga-nāṟi*.

அதிகநாலம் *adiga-nālam*, பெ. (n.) **கொடிவேலி**; Ceylon leadwort. **அதிகநாறி** பார்க்க; see *adiga-nāṟi*.

அதிகநாலினி *adiga-nāliṉi*, பெ. (n.) **சிவப்புத் தட்டைப் பயறு**; a red variety of gram (சா.அக.).

அதிகநாவி *adiga-nāvi*, பெ. (n.) **வெண்ணாவி**; white aconite, a poisonous root.

அதிகநாறி *adiga-nāṟi*, பெ. (n.) (செ.அக.) **கொடுவேலி** (மலை.); Ceylon leadwort — (சா.அக.) 1. **கொடிவேலி**; Ceylon leadwort, *Plumbago zeylanica*. 2. **மிகுதியாக நாற்ற முடையது**; that which is excessively fetid or that which has a strong smell. 3. **பெருங்காயம்**; asafoetida. 4. **பீநாறி**; a fetid plant or tree, *Sterculia foetida*.

மறுவ. அதிகநாரி, அதிகநாலம், அதிகாரி, அதிபதுங்கி.

அதிகப்படி *adiga-p-paḍi*, பெ. (n.) **அளவிற்குமே லிருக்கை**; being excessive, overmuch.

[அதிகம் + படி (அளவு).]

அதிகப்படு-தல் *adiga-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **மிகுதியாதல்**; to increase, become greater.

[அதிகம் + படு. படுதல் = உண்டாதல்.]

அதிகப்பற்று *adiga-p-paṟṟu*, பெ. (n.) **அளவிற்கு அதிகமாகப் பற்றிக்கொண்ட பொருள்**; debit in account, overdraft.

[அதிகம் + பற்று.]

அதிகப்பிரசங்கம் *adiga-p-pirašaṅgam*, பெ. (n.) **அடங்காப் பேச்சு**; impudent talk.

[அதிகம் + **Skt.** prasaṅga > **த.** பிரசங்கம் = சொற்பொழிவு.]

அதிகப்பிரசங்கி *adiga-p-pirašaṅgi*, பெ. (n.) 1. **வளவளத்த பேச்சாளி**; garrulous person. 2. **அடங்காப் பேச்சாளி**; impudent fellow.

[அதிகம் + **Skt.** prasaṅga > **த.** பிரசங்கம் → பிரசங்கி.]

அதிகப்பேச்சு *adiga-p-pēccu*, பெ. (n.) **கோட்டி (பைத்தியம்), இசிவு (சன்னி), பக்கச்சூலை (அதிர்தாக்கம்), பேய்கோள் முதலிய நோய் களினால் அறிவுகெட்டு, உடம்பிலுள்ள கூழ்ம் பாலும்** (chyle) **அரத்தமும் சுண்டுமாறு அளவிறந்து பேசுதல்**; excessive indulgence in talking resulting in the loss of vital forces of the chyle and blood in the system, as in lunacy, delirium, apoplexy, devilry, etc. (சா.அக.).

[அதிகம் + பேச்சு. பேசு → பேச்சு.]

அதிகம்[1] *adigam*, பெ. (n.) 1. **மிகுதி** (திவா.); much abundance, excess, surplus. 'அதிக ஆசை அதிக நட்டம்', 'அதிகக் கரிசனமானா லும் ஆமுடையானை அப்பா என்றழைக் கிறதா?' (பழ.). 2. **ஒன்றினொன்று மிகுதி**; one being in excess of another. "போகந் துய்ப்ப ரொன்றற்கொன் றதிகமாக" (சூத. முத்தி. 2 : 26). 3. **மேன்மை**; excellence. "அதிகமாயின திருப்பணி" (பெரியபு. ஏயர்கோ. 7). 4. **யாவற்றுள்ளும் உயர்வு**; pre-eminence. "எவ்வகைய வுலகத்துந் தரும தல மதிகம்" (திருவிளை. தலவிசே. 3). 5. **சேனை**; army (சங்.அக.). 6. **தாங்குவதினும் தாங்கப்படுவதைப் பெரிதாகக் காட்டும் ஓர் அணி**; a figure of speech in which, that which is supported is shown to be larger than the support. "உலக முழுதடங்கு மாவிசும்பி லுன் றனலகில் குணமடங்கா வாம்" (விசாகப். அணியி. 41). 7. **ஊதியம்** (வின்.); gain, profit. 8. **பொலிவு** (திவா.); brightness, blooming complexion.

ம. அதிகம்; **க., து., கொங்.** அதிக; **தெ.** அதிகமு; **Pali** atiga.

[அதி + இகம் (ஈறு) – அதிகம்.]

அதிகம்[2] *adigam*, பெ. (n.) **குருக்கத்தி** (மலை.); common delight-of-the-woods (செ.அக.).

அதிகமரிச்சம் *adigamariccam*, பெ. (n.) **வாலுளுவை யரிசி** (சு.வை.ர. 558); seeds of climbing-staff plant.

ஒ.நோ: அதிபறிச்சம்

அதிகமாதம் *adiga-mādam*, பெ. (n.) **மூவாண்டிற் கொருமுறை அதிகப்பட்டு வரும் மாதம்** (விதான. குணா. 81, உரை); intercalated month occurring once in three years.

[அதிகம் + மாதம்.]

அதிகமாலி *adiga-māli*, பெ. (n.) **குருக்கத்தி**; tripterocarp creeper, *Hiptage madablota* (சா.அக.).

அதிகமான்[1] *adigamāṉ*, பெ. (n.) **கி.பி. 2ஆம் நூற்றாண்டில், இற்றைத் தருமபுரியான தகடூரைத் தலைநகராகக் கொண்டு, கொங்கு நாட்டின் ஒரு பகுதியையாண்ட சேரர்குடிச் சிற்றரசன், கடையெழு வள்ளல்களுள் ஒருவன்**; a liberal chief of the *Cēra* family, who reigned over a part of the *Koṅgu* country in the 2nd century A.D. with *Tagaḍūr*, modern Dharmapuri, as his capital. '**அது சேரமான்** செல வழித் தகடூரிடை **அதிகமான்** இருந்ததாம்' (தொல். பொருள். புறத். 7, நச். உரை).

[அதிகம் → அதிகன் = மேம்பட்டவன். மகன் → மான். அதிகன் + மான் (ஆ. பா. ஈறு) – அதிகமான்.]

அதிகமான்[2] *adigamāṉ*, பெ. (n.) **கள்ளர்குலப் பட்டப்பெயர்களுள் ஒன்று** (கள்ளர் சரித். பக். 145); a caste title of Kaḷḷars.

ஒருசார் கள்ளர், **அதிகமான்** வழிவந்த பிற் காலச் சிற்றரசருள் ஒருவனுடைய படை மறவரா யிருந்திருக்கலாம்.

அதிகமானஞ்சி *adigamāṉ-añji*, பெ. (n.) **அதிய மான் நெடுமானஞ்சி** பார்க்க; see *adiyamāṉ-neḍumāṉ-añji*.

அதிகர் *adigar*, பெ. (n.) 1. **பெரியோர்**; great men, wise men, saints. "அதிகருக் கமுத மேந்தல்" (சூடா. 12 : 99). 2. **அதிகமான் குடியினர்**; name of the line of *Adigamāṉ*, a branch of the *Cēras*.

[அதிகம் → அதிகன் → அதிகர் (ப.பா.).]

அதிகரம் *adigaram*, பெ. (n.) **காட்டுமல்லிகை** (வின்.); wild jasmine, *Jasminum angustifolium* (சா.அக.).

அதிகரி-த்தல் *adigari-*, 4 செ.கு.வி. (v.i.) 1. *மிகுதல்,* **அதிகப்படுதல்**; to increase, enlarge. ''அதிகரித்த குந்தனை'' (தைலவ. தைல. 13). 2. *வளர்ச்சியடைதல்*; to grow, develop, make progress. 3. **வினையில் முனைதல்**; to be diligently engaged in. 'ஐவர்க்கும் பரதந்த்ர னாய்க் கொண்டு தூதக்ருத்யத்திலே அதி கரித்து' (திவ். பெரியாழ். 1.8:3, வியா.). 4. **நூற் பெரும்பிரிவாதல்**; to be the subject or topic forming the major section of a literary work. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்றாற் போல்வன. 5. **அதிகாரத்தொடு பொருந்தவருதல்**; to fit in with the theme of a chapter or major section of a literary work. 'அதிகாரமாவது: எடுத்துக் கொண்ட அதிகாரம் இதுவாதலின், இச் சூத்திரத்து அதிகரித்த பொருள் இதுவென அவ்வதிகாரத்தோடு பொருந்த உரைக்க வேண்டுழி உரைத்தல்' (நன். 21, சங்கரநமச். உரை). 6. **உரிமைபூண்டு கொண்டாடல்**; to cherish, as a right. 'மறைமொழிகளை யதிகரிக்கும் பிராமணர்' (சிவதரு. பாயி. 9, உரை). 7. **உரிமைபூண்டு கற்றல்**; to learn a best-suited art or study an appropriate literary work. ''அவைநீ அதிகரித்தற் குரியை'' (அரிசமய. பராங்குச. 78). 8. **அதிகாரஞ் செலுத்துதல்**; to exercise authority; 'அதி காரம்-அதிகரித்தல். அஃது இருவகைப்படும். அவற்றுள் ஒன்று, வேந்தன் இருந்துழி யிருந்து தன்நிலம் முழுவதும் தன்னாணையின் நடப்பச் செய்வது'......(நன். எழுத்து. முன் னுரை, சிவஞான. விருத்.). 9. **தலைமைப் பட்டு நிற்றல்**; to be supreme.

ம. அதிகரிக்குக; க. அதிகரிசு.

[கடுத்தல் = மிகுதல், கடுமையாதல், விரைதல், நோதல், உறைத்தல், சினத்தல், புளித்தல், உவர்த்தல் முதலியன. இப் பொருள்களுள் முதலதே ஏனையவற்றிற்கெல்லாம் அடிப்படை. உப்புக்கடுத்தல் என்பது உப்புச்சுவை மிகுதலே. இங்ஙனமே பிறவும்.

கடு → கடி → கரி.

கடி = மிகுதி, விரைவு, கரிப்பு (உறைப்பு). கரித்தல் = மிகுதல், உறுத்துதல், உறைத்தல். உப்புக்கடுத்தல் = உப்புக்கரித்தல்.

கரி → காரம் = மிகுதி, கடுமை, உறைப்பு, சினம், வலிமை, பயன்படுத்துரிமை, ஆளு மதிகாரம். கரி — அதிகரி (மீமிசைச்சொல்). அதிகரித்தல் = மிகப்பெருகுதல்.

காரம் → காரன் = உரியவன், உடையவன், ஆள்பவன். காரன் (ஆ.பா. ஈறு) — காரி (பெ.பா.ஈறு). காரி = உரியவள், உடையவள்.]

ஆட்டுக்காரன், கடைக்காரன், சொந்தக் காரன், தோட்டக்காரன், நிலத்துக்காரன், பணக்காரன், மாட்டுக்காரன், வண்டிக் காரன், வீட்டுக்காரன், பிள்ளைக்காரி, பூக் காரி, தயிர்க்காரி முதலிய நூற்றுக்கணக்கான காரன் - காரி யீற்றுப் பெயர்கள் உரியவரை அல்லது உடையவரையே குறித்தல் காண்க.

கொள்ளைக்காரன், நாட்டாண்மைக் காரன், வேலைக்காரன் முதலிய பெயர்கட் கும், அவ்வத் தொழிலை யுடையவர் என்பதே முதற்பொருள்; அவற்றைச் செய்பவர் என் பது பொருந்திவரும் வழிப்பொருளே.

குதிரைக்காரன், கோழிக்காரன், முட்டைக் காரன், பிள்ளைக்காரி முதலிய பெயர்கள், செய்பவர் என்னும் பொருட்கு இம்மியும் பொருந்தாமையுங் கண்டு உண்மை தெளிக.

ஆகவே 'காரன்' என்னும் பெயருக்கு அல்லது ஈற்றிற்கு அதிகாரன், உரியவன், உடையவன் என்பனவே பொருளாம். ஆத லால், மிகுதலைக் குறிக்கும் 'கரி' என்னும் தென்சொல்லே அதன் முதனிலையாகும். செய்தலைக் குறிக்கும் 'கரு' என்னும் வழக் கிறந்த தென்சொல்லையோ, 'க்ரு' என்னும் அதன் திரிபான வடசொல்லையோ, முத னிலையாகக் கொள்வது பொருந்தாது. செய்தற் பொருளை அடிப்படையாகக் கொண்ட கருமம், கருவி, கரணம் முதலிய சொற்களும், மிகுதற் பொருளை அடிப்படை யாகக் கொண்ட காரன், அதிகாரன் முதலிய சொற்களும் வெவ்வேறு மூலத்தின என்றறி தல் வேண்டும்.

அதிகல் *adigal*, பெ. (n.) **காட்டுமல்லிகை** (வின்.); wild jasmine.

ஒ.நோ: அதிரல்

அதிகவணி *adiga-v-aṇi*, பெ. (n.) **அதிகம்**[1], 6 பார்க்க; see *adigam*[1], 6.

அதிகவாரம் *adiga-vāram*, பெ. (n.) **பிராமணர் முதலிய சிறப்புரிமையாளர்க்கு விளையுளில் (மாசூலில்) பிரித்துக் கொடுக்கும் அதிகப் பங்கு**; an extra share assigned to Brāhmins or other privileged persons in the distribution of the farm yield (W.G.).

[அதிகம் + வாரம்.]

அதிகவுச்சம் *adiga-v-uccam*, பெ. (n.) ***கோள்களின் மிகுந்த வுச்சநிலை***; highly elevated position of planets.

''அதிகவுச்சந் தனையுரைக்கிற்
கதிரவ னுக்குத்தா
னானமே டந்தனிலே
பாகையொரு பத்தாம்
மதிதனக்கே ரிடபத்திற்
றான்மூன்று பாகை
வருஞ்சேய்க்கு மகரத்தி
லிருபத்தெட் டாகுந்
துதிபுதற்குக் கன்னியினிற்
பதினைந்து பாகை
சொற்குருவுக் கேகடகந்
தனிலைந்து பாகை
புதியபுதற் கேமீனி
லிருபத்தேழ் பாகை
புகழ்ச்சனிக்குக் கோலிலிரு
பதுபாகை யென்பார்''
(*சாதக சிந். 129*).

[*அதிகம் + உச்சம்.*]

அதிகழிச்சல் *adi-kaḻiccal*, பெ. (n.) 1. ***மிகுதியாகக் கழிச்சலாதல்***; excessive purgation, *Hypercatharsis*. 2. ***அதிக அரத்தப்போக்கு***; excessive bleeding. 3. ***வயிற்றோட்டம்***; diarrh(o)ea. 4. ***வயிற்றளைச்சல் (சீதபேதி)***; dysentery (*சா.அக.*).

[*அதி + கழிச்சல்.*]

அதிகற்றாதி *adikaṟṟādi*, பெ. (n.) ***கொடுவேலி*** (மலை.); Ceylon leadwort, *Plumbago zeylanica*.

அதிகன் *adigaṉ*, பெ. (n.) 1. ***கடையெழுவள்ளல்களு ளொருவனான அதிகமான்***; *Adigamāṉ*, a liberal chieftain of the 2nd century A.D. ''அரவக் கடற்றானை யதிகனும்'' (*சிறுபாண். 103*). 2. ***மேம்பட்டவன்***; superior person. ''பகைஞர்க் கெல்லா மதிகனாய்'' (*பிரபோத. 26 : 110*). 3. ***பரம்பொருள்***; Supreme Being. ''அதிகன் வேணியி லார்தரு கங்கையை'' (கந்தபு. உற்பத்தி. திருக்கயி. 20).

அதிகாந்தம் *adi-kāndam*, பெ. (n.) 1. ***ஒரு விலையுயர்ந்த ஒளிக்கல்*** (வின்.); a precious stone 2. ***செவ்வானம்*** (*சிந்தா. நி. 137*); flame-red sky at sunset. 3. ***பேரழகு***; great beauty.

[*காந்துதல் = எரிதல், ஒளிர்தல். காந்து → காந்தம். அதிகாந்தம் = மிகுந்த வொளியுள்ளது.*]

அதிகாந்தி *adi-kāndi*, பெ. (n.) ***குருக்கத்தி***; tripterocarp creeper, *Hiptage madablota* (*சா.அக.*).

அதிகாரக்கணக்கு *adigāra-k-kaṇakku*, பெ. (n.) ***அரசியல் வருமானக் கணக்கு*** (யாழ்ப்.); accounts relating to State revenue (J.).

[*அதிகாரம் + கணக்கு.*]

அதிகாரச்சாலை *adigāra-c-cālai*, பெ. (n.) 1. ***அலுவலகம்***; office (R.). 2. ***வழக்குமன்றம்***; court (R.).

ம. அதிகார மண்டபம்; **தெ.** அதிகரணமு.

[*அதிகாரம் + சாலை.*]

அதிகாரசிவன் *adigāra-šivaṉ*, பெ. (n.) (சிவ.) ***சிவன் செயல்வலிமை மிக்குத் தோன்றும் பெருவுடையார் (மகேசுரன்) நிலை***; (Šaiva.); The Mahēsvara aspect of Šiva in which the Energy of action predominates.

[*அதிகாரம் + சிவன்.*]

அதிகாரஞ்செலுத்து-தல் *adigārañ-celuttu-*, 5 செ.கு.வி. (v.i.) ***ஆட்சி நடாத்துதல், தன் கட்டளையை நிறைவேற்றுவித்தல்***; to exercise authority.

[*அதிகாரம் + செலுத்து.*]

அதிகாரநூற்பா (சூத்திரம்) *adigāra-nūṟpā*, பெ. (n.) ***தான் ஒன்றையும் சிறப்பாக நெறியிடாது (விதித்திடாது) ஓர் இலக்கணச் செய்தியைப் பொதுப்படக் குறித்துப் பல நூற்பாக்கட்குமுன் படிக்கப்பட்டு, அவற்றுக்குப் பொருள் கொள்ளும்போது, அவற்றுடன் சேர்ந்து பொருள் கொள்ளப்படும் நூற்பா***; a *nūṟpā* (*sūtra*) defining the scope of the other *nūṟpās* in a section of a treatise.

எ-டு :

''அவற்றுவழி மருங்கின் சாரியை வருமே''
(தொல். எழுத்து. புண. 16),

''அவைதாம்
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே''
(தொல். எழுத்து. புண. 17),

''அவற்றுள்
இன்னின் இகர மாவின் இறுதி
முன்னர்க் கெடுதல் உரித்து மாகும்''
(தொல். எழுத்து. புண. 18).

[*அதிகாரம் + நூற்பா.*]

அதிகாரப்புறனடை *adigāra-p-puṟaṉ-aḍai*, பெ. (n.) ***ஒரு நூலின் அதிகார விறுதியில், முற்கூறாதவற்றையெல்லாம் கூறியவற்றைக் கொண்டு முடித்துக்கொள்ளுமாறு கூறும் பொது நூற்பா***; general permissive rule at the end of a chapter, sanctioning grammatical forms, not specifically dealt with earlier.

"பிண்டந் தொகைவகை குறியே செய்கை
கொண்டியல் புறனடைக் கூற்றன
சூத்திரம்"
(நன். 20).

(இ-ள்.) 'பிண்டமெனவும் தொகையெனவும் வகையெனவும் குறியெனவும் செய்கையெனவும், இவற்றை அலைவறக்கொண்டு இவற்றின் புறத்து அடையாய் வரும் புறனடையெனவும் கூறுங் கூற்றினை யுடையவாம், மேற்கூறிய சூத்திரங்கள்' (நன். 20, சங்கரநமச். உரை).

எ-டு :

தொல். எழுத்ததிகாரப் புறனடை நூற்பா

"கிளந்த வல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத்
தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தன
ரொழுக்கல்
நன்மதி நாட்டத் தென்மனார் புலவர்"
(தொல். எழுத்து. குற்றிய. 77).

[அதிகாரம் + புறன் + அடை.]

அதிகாரப்பேறு *adigāra-p-pēṟu*, பெ. (n.) *பழைய வரிவகை* (S.I.I. iv, 125); an ancient tax.

[அதிகாரம் + பேறு.]

அதிகாரப்பொன் *adigāra-p-poṉ*, பெ. (n.) ***பொற்காசாக வாங்கப்பட்ட பழைய வரிவகை*** (S.I.I. iv, 195); a kind of ancient tax, in gold.

[அதிகாரம் + பொன்.]

அதிகாரம்[1] *adigāram*, பெ. (n.) 1. ***அதிகரித்தல்***; the act of increasing, enlargement. 'எழுத்ததிகார மென்பதற்கு எழுத்து அதிகரித்தல் எனப் பொருள் கூறுவாரும் உண்டு' (நன். எழுத்து. முன்னுரை, இராமா. விருத்.). 2. ***உடைமை, உடையனாந் தன்மை***; possession, ownership. இவனே இந்த வீட்டின் அதிகார முடையவன் (உ.வ.). 3. ***உரிமை***; right of possession or enjoyment. 'அதிகார மென்ற பொருண்மை.........கிழமையெனவும் கொள்ளப்படும்' (தொல். பொருள். மர. 110, பேரா. உரை). 4. ***ஆட்சி***; rule, dominion, sovereignty. 'அதிகாரத்தைத் தன்மாட்டு வைத்து மன்னவன் வறிதே யிருப்ப' (சி. போ. பா. 6 : 2, பக். 376). 5. ***பதவி வலிமை, அலுவலாற்றல்***; public office, power, authority. அவருக்குப் பணியாளரை அமர்த்தவுந் தள்ளவும் அதிகாரமுண்டு. அழுத பிள்ளையும் வாய் மூடும் அதிகாரம் (உ.வ.). 'அதிகாரம் இல்லாவிட்டால் பரியாரம் வேண்டும்' (பழ.). 6. ***தலைமை***; headship, leadership. 7. ***நூற்பெரும்பிரிவு***; main division of a treatise. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம். 'எழுத்தை நுதலிவரும் பல ஓத்தினது தொகுதி எழுத்ததிகாரம் என்றாராயிற்று' (நன். எழுத்து. முன்னுரை, சிவஞான. விருத்.). 8. ***நூல்*** (பிங்.); a scientific work, a grammatical treatise. 9. ***முறைமை***; order, regulation. 'அதிகார மென்ற பொருண்மை யென்னை யெனின், முறைமையெனவும்........கொள்ளப் படும்' (தொல். பொருள். மர. 110, பேரா. உரை). 10. ***தகுதி***; fitness, worthiness, eligibility. "அனையவ னதிகாரந் தெரிந்து" (வேதா. சூ. 19). 11. ***அமையம் (சந்தர்ப்பம்)***; context. 'பொருளென்பது அதிகாரத்தான் வருவித்து, அளவென்பது பின்னுங் கூட்டி யுரைக்கப்பட்டன' (குறள், 478, பரிமே. உரை). 12. ***கூற்றம், நாட்டுப் பிரிவு (தாலுக்காவின் உட்பகுதி)*** (நாஞ்.); administrative sub-division of a taluk (Nāñ.). 13. ***இடம்***; place. 'அதிகாரமென்ற பொருண்மை........ இடமெனவும்........கொள்ளப்படும்' (தொல். பொருள். மர. 110, பேரா. உரை). 14. (சிவ.) ***மூன்றவத்தைகளுள் ஒன்றான செயல் மிக்குத் தோன்றுங் கடவுள் நிலை*** (சி. போ. பா. 2 : 2, பக். 163); (Śaiva.) aspect of God in which action is seen predominant, one of three *avattai*.

ம. அதிகாரம்; க., து., பட. அதிகார; தெ. அதிகாரமு; கொங். அதிகார்.

[அதி = மிகுந்த, பெருத்த. கரித்தல் = மிகுதல். கரி → காரம் = மிகுதி, கடுமை, வலிமை. அதிகாரம் = மிகுதி, வலிமை, ஆட்சி.]

அதிகாரம்[2] *adigāram*, பெ. (n.) ***பணியாரவகை*** (நாஞ்.); a kind of sweet cake (Nāñ.).

அதிகாரமலம் *adigāra-malam*, பெ. (n.) (சிவ.) ***உலகத்து அதிகாரத்தை விரும்பும் ஆதன்***

(ஆன்ம) நாட்டம் (சி. போ. பா. *2 : 2*, பக். *164*); (Šaiva.) inclination of the soul to enjoy worldly power.

[அதிகாரம் + மலம்.]

அதிகாரமுறை *adigāra-muṟai*, பெ. (n.) **நூற் பிரிவின் முறைவைப்பு**; logical order of subjects in a book.

'அதிகார முறைமை என்பது, முன்னின்ற சூத்திரப் பொருண்மை பின்வருஞ் சூத்திரத் திற்கும் பெறற்பாலன பெறவைத்தல்; அவை :

''இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத் தல்'' (தொல். சொல். கிளவி. *19*) என்றவழி இற்றெனக் கிளத்த லுரிமை பூண்டதன்றே. அதனை, ''செயற்கைப் பொருளை யாக்க மொடு கூறல்'' (தொல். சொல். கிளவி. *20*) என்புழியுங் கொள்ள வைத்தலும்; ''குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்'' (தொல். எழுத்து. மொழி. *1*) என்பதனை, ''குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே'' (தொல். எழுத்து. மொழி. *3*) நிற்றல் வேண்டும் என்று கொள்ளவைத் தலும் போல்வன.

இனி, வழக்கியலும் வழக்கியலாற் செய்யப் பட்ட செய்யுளியலும்பற்றி எழுந்த இலக் கணம் இயற்றமிழெனப்படும். அச் செய்யு ளின்றி அமையாத இசையிலக்கணம் இசைத் தமிழெனப் பெயரெய்தி அவ் வியற்றமிழ்ப் பின்னர் வைக்கப்பட்டதெனப்படும்; இவ் விரண்டன்வழி நிகழ்த்துங் கூத்திலக்கணங் கூறிய நாடகத்தமிழ் அவற்றுப் பின்னர்த்தா மென முறைமை கூறுதலும்; இனி இயற்றமி ழுள்ளும் எழுத்ததிகாரத்தோடு சொல்லதி காரத்திற்கும், சொல்லதிகாரத்தோடு பொருளதிகாரத்திற்கும் இயைபு கூறுதலும்; அதிகாரத்துள் ஒத்துப் பலவாகலின் அவை ஒன்றன்பின் ஒன்று வைத்தற்கு இயைபு கூறுதலும்; அவ்வாறே சூத்திரத்திற்கு இயைபு கூறுதலுமெல்லாம் அதிகாரமுறைமைக்கு இன மென்று சேர்த்தியுணரப்படும்' (தொல். பொருள். மர. *110*, பேரா. உரை).

[அதிகாரம் + முறை.]

அதிகாரமேலெழுத்து *adigāra-mēleḻuttu*, பெ. (n.) **கீழலுவலர் பிறப்பித்த கட்டளையை மாற்றியெழுதும் ஆணை**; revisional order. 'திருச்சிவிந்திரத்து மஹாஸபையோம் அதி கார மேலெழுத்து' (T.A.S. iii, 71).

[அதிகாரம் + மேலெழுத்து.]

அதிகாரவுரை *adigāra-v-urai*, பெ. (n.) **ஒரு நூற் பாவிற்கு அதிகாரத்தோடு அல்லது நூற்பிரி வோடு பொருந்த ஓரிரு சொல்லை வருவித் துரைக்கும் உரை, நூலுரை பதினான்கனுள் ஒன்று**; supplying of an ellipsis to complete the sense of a rule or passage according to the context, one of the 14 requisites of a commentary. 'அதிகாரத்தால் வருவிக்கப்பட்டதென அதிகாரத்தொடு பொருந்தக் காட்டி யெழுது முறை அதிகாரவுரை' (நன். *21*, இராமா. விருத்.).

[அதிகாரம் + உரை.]

அதிகாரவோலை (பத்திரம்) *adigāra-v-ōlai*, பெ. (n.) **ஒருவன் தனக்குத் தலைமாறாக (பதி லாக) வினையாற்றவோ வழக்காடவோ இன்னொருவனுக்கு எழுதிக்கொடுக்கும் ஓலை**; letter of authority, power of attorney by which a person appoints another to act for him in business or legal matters.

[அதிகாரம் + ஓலை.]

அதிகாரன் *adigāraṉ*, பெ. (n.) *1.* அதிகாரி; officer, superintending official, a person of authority. 'வரிகளைச் சுமத்தி அநியாயஞ் செய்த பூர்விக அதிகாரர்கள் சதிகாரர்களே' (பெண்மதிமாலை, பக். *136*). *2.* **அதிகார சிவன்** பார்க்க; see *adigāra-šivaṉ*.

ம. அதிகாரர்

அதிகாரி[1] *adigāri*, பெ. (n.) *1.* **கேள்வித் தலை வர் (விசாரணைக் கர்த்தா)** (வெட்.); executive or superintending officer (Insc.). 'அதிகாரி யுடனே எதிர்பண்ணலாமா?', 'அதிகாரியும் தலையாரியும் ஒன்றானால் விடியுமட்டும் திருடலாம்', 'அதிகாரி வீட்டில் திருடித் தலை யாரி வீட்டில் வைத்ததுபோல', 'அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை குடியானவன் வீட்டு அம்மியை யுடைத்ததாம்' (பழ.). *2.* **அரசியல் அலுவலர்**; government officer or official. *3.* **மேலதிகாரி**; superior, higher authority over one. நீ எனக்கு அதிகாரியா? *4.* **ஓர் அதி காரத்தின் தலைமை யலுவலன்** (நாஞ்.); officer in charge of a *adigāram* (Nāñ.). *5.* (சிவ.) **பெருவுடையார் (மகேசுவரன்)** (சி.சி. *5.1 : 65*, மறைஞா.); (Šaiva.) Mahēsvara concept of Šiva in which Energy of action stands predominant. *6.* **உரிமையுள்ளவன்**; rightful claimant, proprietor, owner, master. *7.* **ஒரு படிப்புத் துறை யில் அல்லது ஒரு நூலறிவில் தேர்ச்சிபெற்ற**

வன்; an authority on a subject or a branch of knowledge. நூலகக் கல்விக்கு அரங்கநாதன் ஓர் அதிகாரி, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்குச் சந்திரசேகரன் ஓர் அதிகாரி, பெரியபுராணத்திற்குக் கோவைச் சுப்பிரமணிய முதலியார் ஓர் அதிகாரியாவர். 8. ஒரு நூலைக் கற்கத் தகுந்தவன்; one qualified to study a literary or scientific work. 'அந்நூல்.............கேட்டற்குரிய அதிகாரிகளாவார் இவரென்ப தூஉம்' (நன். சிறப்புப். சிவஞான. விருத்.).

ம., க., தெ., கொங். அதிகாரி; **து.** அதிகாரத்தே.

[அதிகாரி > **Skt.** adhikārin.*]*

அதிகாரி[2] *adigāri*, பெ. (n.) *1.* **கொடிவேலி;** Ceylon leadwort. **அதிகநாறி** பார்க்க; see *adiga-nāṟi*. *2.* **(அதி+காரி) மிக்க கருமை;** jet black. *3.* **கொடிய நஞ்சு;** a virulent poison. *4.* **வெண்காரம்;** borax (சா.அக.).

கொடிவேலி என்பதன் மறுவடிவம் 'கொடுவேலி'.

[அதிகாரி = மிகக் கரியது என்பது மிகப் பொருத்தம்.]

அதிகாலம் *adi-kālam*, பெ. (n.) *1.* **விடியற் கருக்கல்;** early dawn. ''அதிகால விழிப்பின் குணத்தைக் காண்'' (பதார்த்த. 1309). *2.* **நெடுநேரம்;** long time (சா.அக.).

அதிகாலை *adi-kālai*, பெ. (n.) **அதிகாலம்** *1*, பார்க்க; see *adi-kālam, 1*. 'அதிகாலை எழாதவன் வேலை அழுதாலும் தீராது' (பழ.).

அதிகுகம் *adikugam*, பெ. (n.) *பேராமல்லி;* single-flowered Arabian jasmine, *Jasminum sambuc* (சா.அக.).

அதிகுணம் *adi-kuṇam*, பெ. (n.) *மிகு நற்பண்பு,* **மேலான தன்மை;** good quality, virtuous character, extraordinary greatness.

அதிகுணன் *adi-kuṇaṉ*, பெ. (n.) *1.* **மேலான குணமுள்ளவன்;** one possessing extraordinary attributes. ''களிறது பிளிறிட வுரிசெய்த அதிகுணன்'' (தேவா. 1.22:5). *2.* கடவுள்; God, as transcending all attributes. *3.* அருகன் (திவா.); Arhat.

அதிகும்பை *adikumbai*, பெ. (n.) *கரிசலாங் கண்ணி* (மலை.); species of eclipta (செ.அக.) — **பொற்றலைக் கையாந்தகரை;** Marigold verbisena, *Wedelia calundulacea* (சா.அக.).

அதிகை *adigai*, பெ. (n.) *1.* **அதிகமானது;** that which is much or in excess. 'பலாதிகையானால்' (பௌட். மாயா. 55, உரை) (சங்.அக.). *2.* **(நடுநாடென்னும்) தென்னார்க் காடு மாவட்டத்திலுள்ளதும், சிவபெருமான் முப்புரத்தை யெரித்ததாகச் சொல்லப்படுவது மான ஒரு சிவநகர், எண் மறத்தாவுகளுள் ஒன்று;** Šiva shrine in South Arcot district where Šiva is believed to have reduced to ashes the *Tiripuram*, one of *Aṭṭa Viraṭṭam*.

அதிகோரம் *adigōram*, பெ. (n.) **நெல்லி** (T.C.M. ii, 2:429); *Emblic myrobalan*.

அதிகோலம் *adi-kōlam*, பெ. (n.) *1.* *மிக்கவழகு;* excessive beauty (சா.அக.). *2.* **அழிஞ்சில்** (மூ.அ.); sage-leaved alangium, *Alangium lamarckii*.

அதிகோவம் *adi-kōvam*, பெ. (n.) **அதிகோலம்** பார்க்க; see *adi-kōlam*.

அதிகோவிகம் *adikōvigam*, பெ. (n.) **செந்தோட்டி;** climbing nettle, *Tragia involucrata* (சா.அக.).

அதிங்கம் *adiṅgam*, பெ. (n.) *1.* **அதிமதுரம்;** liquorice plant. ''அதிங்கத்தின் கவளங் கொண்டால்'' (சீவக. 750). *2.* **குன்றி** (L.); crab's-eye.

[அதிங்கு → அதிங்கம்.]

அதிங்கு பார்க்க; see *adiṅgu*.

அதிங்கன் *adiṅgaṉ*, பெ. (n.) **அதிங்கம்** பார்க்க; see *adiṅgam*.

அதிங்கு *adiṅgu*, பெ. (n.) **அதிமதுரம்;** liquorice plant. ''அரக்கு மதிங்கும்'' (பெருங். இலாவாண. 18 : 46).

மறுவ. அதிங்கை, அதிங்கம், அதிங்கன்.

அதிங்கை *adiṅgai*, பெ. (n.) **அதிங்கம்** பார்க்க; see *adiṅgam*.

அதிசுட்கம் *adi-šuṭkam*, பெ. (n.) **வயிற்றுத் தீயின் (சமாக்கினியின்) குறைவால் நாளுக்கு நாள் உடம்பு மெலிந்து, கழுத்து வயிறு தொடை முதலிய உறுப்புகள் உலர்ந்து சூம்பித் தேவாங்கைப்போல் இளைத்த உருவத்தை அடையச் செய்யும் நோய்;** a progressive wasting disease arising from decreased appetite due to digestive disorders. It is marked by reduction of fat, loss of blood and weakening of muscles in the thighs, neck, abdomen, etc.,

and a general emaciation owing to lack of nutrition, Idiopathic muscular atrophy (சா.அக.).

அதிசுரம் *adi-šuram*, பெ. (n.) **கடுங்காய்ச்சல்**; high fever, *Hyperpyrexia* (சா.அக.).

அதிசுழுத்தி *adi-šulutti*, பெ. (n.) **மயக்கத்தோடு கூடிய தூக்கம்**; (in pathology) a sleep accompanied by giddiness or suspension of sensibility, coma.

அதிசூரன் *adi-šūran*, பெ. (n.) **பெருமறவன்**; great hero, one who excels in valour.

அதிதாகம் *adi-tagam*, பெ. (n.) **மிகுந்த நீர் வேட்கை**; intense thirst, *Anadypsia* (சா.அக.).

க. அதிதாக

[அதி + தாகம். **Skt.** dāha > **த.** *தாகம்.]*

அதிதாரம் *adidaram*, பெ. (n.) **இலந்தை** (மலை.); jujube tree, *Ziziphus jujuba.*

மறுவ. அதிநாரம்

அதிதானம் *adi-tānam*, பெ. (n.) **பெருங்கொடை** (சிந்தா. நி. *143*); munificence, liberal giving.

அதிதூதன் *adi-tūdan*, பெ. (n.) (கிறித்.) **தலைமைத் தேவதூதன்**; (Chr.) archangel.

அதிதெய்வம் *adi-teyvam*, பெ. (n.) **இடத்தை யாளுந் தெய்வம், எழுந்தருளியிருக்குந் தெய்வம்**; presiding deity. "புரம்பொடி படுத்த புண்ணியனே யதிதெய்வம்" (சூத. எக்கி. பூ. *6 : 4*).

அதிதேவன் *adi-tēvan*, பெ. (n.) *1.* **குலதெய்வம்**; tutelary deity. *2.* **மேலான கடவுள்**; Supreme God.

ம. அதிதேவன்; **க.** அதிதேவதெ; **தெ.** அதிதேவுடு; **Pali** atideva.

அதிநரம் *adinaram*, பெ. (n.) **சீமை அதிமதுரம்**; sweet root, *Glycirrhiza glabra* (சா.அக.).

அதிநாரம் *adinaram*, பெ. (n.) **இலந்தை**; Indian plum, *Ziziphus jujuba* (சா.அக.).

அதிதாரம் பார்க்க; see *adidaram.*

அதிநீர் *adi-nīr*, பெ. (n.) *1.* **மிக்க நீர்**; water in excess, as in cold. *2.* **அளவிற்கு மிஞ்சின மூத்திரம்**; excessive urination, as in diabetes (சா.அக.).

அதிநீலம் *adinīlam*, பெ. (n.) **இலுப்பை**; honey tree, *Bassia longifolia* alias *B. latifolia* (சா.அக.).

அதிநுட்பம் *adi-nutpam*, பெ. (n.) *1.* **மிகு நுண்மை**; microscopic minuteness. *2.* **விளங்காத அல்லது விடுவிக்க முடியாத நுண்ணிய சிக்கலான செய்தி**; that which is exceedingly minute, complex and difficult to understand or solve.

"மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம் யாவுள முன்னிற் பவை" (குறள், *636*).

அதிநுண்கணிதம் *adi-nun-kaṇidam*, பெ. (n.) **வகையீட்டு நுண்கணிதம்** (புதுவை); Differential Calculus (Pond.).

அதிநோய் *adinōy*, பெ. (n.) **அழிஞ்சில்** (பரி.அக.); sage-leaved alangium.

அதிபசமி *adipašami*, பெ. (n.) **கொன்றை** (மலை.); Indian laburnum, *Cassia fistula.*

தெ. அதிபசிமி

அதிபசி *adi-paši*, பெ. (n.) **கடும்பசி**; abnormal increase in the sensation of hunger, *Hyperorexia* (சா.அக.).

அதிபத்தநாயனார் *adipatta-nayanar*, பெ. (n.) **அறுபத்துமூன்று சிவனடியார்களுள் ஒருவர்**; name of a canonized Saiva saint, one of 63.

அதிபதுங்கி *adi-padungi*, பெ. (n.) **கொடுவேலி** (மூ.அ.); Ceylon leadwort, *Plumbago zeylanica.*

அதிபம் *adibam*, பெ. (n.) **வேம்பு** (சித்.அக.); margosa.

அதிபலம் *adipalam*, பெ. (n.) *1.* **நேர்வாளம்** (பச்.மூ.); true croton-oil plant, *Croton tigilium.* *2.* **மயிர்மாணிக்கம்**; morning mallow, *Sida acuta* (சா.அக.).

அதிபலா *adipala*, பெ. (n.) **சிறுதுத்தி**; evening mallow, *Abutilon crispum* (சா.அக.).

ம. அதிம்பல

அதிபலை *adipalai*, பெ. (n.) **பேராமுட்டி** (தைலவ.); species of Hibiscus (செ.அக.) — fragrant sticky mallow, *Pavonia odorata* (சா.அக.).

அதிபற்கூச்சம் *adi-par-kūccam*, பெ. (n.) **பற்கள் அதிகமாகக் கூசுதல்**; over-sensitiveness of the teeth, *Odonthemodia.*

[அதி + பல் + கூச்சம்.]

அதிபறிச்சம் *adiparriccam*, பெ. (n.) வாலுளுவை (மூ.அ.); climbing staff plant (செ.அக.) — intellect tree, *Celastrus pariculata* (சா.அக.).

அதிபாற்சொரிவு *adi-pār-corivu*, பெ. (n.) 1. *மிகுதியான பால் சுரப்பு*; excessive secretion of milk, *Hyperlactation*. 2. *முலைப்பால் மிகுதியாகச் சுரந்து ஒழுகுதல்*; excessive secretion and flow of milk in a nursing woman, *Galactorrhea*.

[அதி + பால் + சொரிவு.]

அதிபித்தம் *adi-pittam*, பெ. (n.) பித்த மிகுதி; excessive secretion of bile, *Hypercholia*.

அதிபிள்ளை *adi-piḷḷai*, பெ. (n.) மூத்த மனைவி (கோவை); senior wife (Cm.).

[ஒருகா. Skt. ādi + த. பிள்ளை (மனைவி).]

அதிபூதம் *adi-pūdam*, பெ. (n.) 1. *மாயைமலம்*; the spiritual substratum of the material or gross objects (சா.அக.). 2. *மாயை யாற்றல்*; the all penetrating influence of the Supreme Spirit. 3. *முதனிலை (பிரகிருதி) மாயை, அதாவது உலகத்திற்குக் கரணியமான (காரண மான) மாயை*; material Maya (illusion) as the base on which this material world is created. **தூவில் (அசுத்த) மாயை** பார்க்க; see *tūvil-māyay*. 4. **உடம்பிற்கு (சரீரத்துக்கு) வேறாயும், பொறிகட்குப் புலனாயும் (இந்திரியங்களுக்கு விடயமாயும்) இருக்கும் பொருள்** (விசாரசா. 29); matter which is different from the body and perceived by the senses (சங்.அக.). 5. *பரம ஆதன் (பரமாத்துமா)*; the Supreme or Universal Soul (சா.அக.).

ம. அதிபூதம்; க. அதிபூத.

[அதி + பூதம். பூத்தல் = தோன்றுதல். பூ → பூது → பூதம் = ஐம்பொருட் கூறுகளுள் ஒன்றாகத் தோன்றியது.]

இதன் விளக்கத்தைப் **பூதம்** என்னும் உருப் படியிற் காண்க.

அதிமதுக்குரு *adi-madu-k-kuru*, பெ. (n.) **நீரிழிவு நோயில் சருக்கரையினா லேற்படும் சிறுகொப் புளங்கள்**; small papules occurring in diabetes due to irritation of the skin, *Symptomatic prurigo* (சா.அக.).

[அதி + மது + குரு.]

அதிமதுக்குருதி *adi-madu-k-kurudi*, பெ. (n.) **அதிகமாகத் தித்திப்புச் சேர்ந்த அரத்தம்**; excess of sugar in the blood, *Hyperglycemia* (சா.அக.).

[அதி + மது + குருதி.]

அதிமதுரகவி *adi-madura-kavi*, பெ. (n.) **15ஆம் நூற்றாண்டில் காளமேகப் புலவர் காலத்தி லிருந்த திருமலைராயன் அவைக்களத் தலைமைப் புலவர்** (தமிழ்நாவ. 209); name of the poet laureate in the court of *Thirumalai-rāyaṉ*, contemporary of *Kāḷamēgappulavar*, 15th century.

[மத்து → மது → மதுர் → மதுரம். அதி + மதுரம் + **Skt.** *kavi – அதிமதுரகவி.]*

மதுரம் பார்க்க; see *maduram*.

அதிமதுரப்பால் *adi-madura-p-pāl*, பெ. (n.) *அதிமதுரச் செடியின் வேரினின்று வடிக்கும் பால். இக் கடைச்சரக்கு வாயிலடக்கிக் கொள்ளின் நாவறட்சி, வாய்ப்புண், வேக் காளம் முதலியவற்றை நீக்கும்*; a dry extract prepared from the decoction of the roots of honey-creeper by evaporation, used as a cure for persistent thirst or parched tongue, stomatitis or ulcers of the mouth, inflammation of the mouth, etc. (சா.அக.).

[அதிமதுரம் + பால்.]

அதிமதுரம்[1] *adi-maduram*, பெ. (n.) *மிக இனிமையானது*; that which is very sweet. "அதிமதுரக் கனியொன்று" (பெரியபு. காரைக். 25).

ம., க. அதிமதுர; தெ. அதிமதுரமு.

அதிமதுரம்[2] *adi-maduram*, பெ. (n.) 1. *நறு மணப் பூடுவகை*. "பிங்குணம் பிரச பூர வருந்ததிமதுரம்" (மச்சபு. சருவ. 8); liquorice-plant, *Glycyrrhiza glabra* (செ.அக.) — **சீமை அதிமதுரம்**; honey-creeper, *Glycirrhiza triphylla* (சா.அக.). 2. **குன்றி** (மலை.); crab's-eye (செ.அக.). 3. **நாட்டு அதிமதுரம் அல்லது குன்றிவேர்**; Indian liquorice root, *Abrus precatorious* (சா.அக.).

ம. அதிமதுரம்; க. அதிமதுர; தெ. அதி மதுரமு.

அதிமந்தம் *adi-mandam*, பெ. (n.) **மிகுந்த கண்ணோவையும் ஒற்றைத் தலைவலியையும் உண்டாக்கும் ஒரு கண்ணோய்**; a disease invariably attended with an excruciating pain

in the eye, and extending upward to one side of the head (சா.அக.).

[அதி + மந்தம். மொத்து → மொந்து → மொந்தம் → மந்தம்.]

அதிமந்தம் - முழுக்கண்ணோய் மூன்றனுள் ஒன்று. அது ஊதையதிமந்தம் (வாதாதி மந்தம்), பித்தவதிமந்தம், கோழையதிமந்தம் (சிலேட்டுமாதிமந்தம்), அரத்தவதிமந்தம் (ரக்தாதிமந்தம்), மிகையதிமந்தம் (அதாதி மந்தம்) என ஐவகைப்படும் (சீவரட். 258)— (சங்.அக.).

அதிமந்தாரம் *adi-mandāram,* பெ. (n.) **கண் வலித்துக் கடுத்து நீர் வடிந்து, பாவையிற் குத்தலுண்டாகிப் பார்வை நாளுக்குநாள் இருண்டுவரும் தீராக் கண்ணோய்**; a chronic incurable disease of the eye, marked by inflammation and darting pain of the cornea, watery discharge from the eyes, hazy vision and gradual loss of sight (சா.அக.).

[மந்தம் + ஆரம் (ஓர் ஈறு) — மந்தாரம்.]

அதிமயிர்வளர்த்தி *adi-mayir-vaḷartti,* பெ. (n.) 1. **தலைமயிர் அதிகமாக வளர்தல்**; excessive growth of hair on the scalp. 2. **உடம்பில் அதிகமாக மயிர் முளைத்தல்**; excessive growth of hair all over body, *Hypertrichiasis universalis* (சா.அக.).

அதிமல்லி *adimalli,* பெ. (n.) மாவிலங்கம் (மறை.அக.); a species of crataeva.

ஒ.நோ : அதிமலம் 1.

அதிமலம் *adi-malam,* பெ. (n.) 1. **மாவிலிங்கம்** (மூ.அ.); species of crataeva (செ.அக.) — sacred lingam tree, *Crataeva religiosa* (சா.அக.). 2. **அதிக மலந்தள்ளல்;** excessive discharge of faecal matter (சா.அக.).

அதிமாதம் *adi-mādam,* பெ. (n.) **அதிக மாதம்** பார்க்க; see *adiga-mādam.*

அதிமிதி *adi-midi,* பெ. (n.) **வீம்பாட்டம், ஒட்டோலக்க நடை** (யாழ்ப்.); acting very ostentatiously because of prosperity (J.).

அதிமுணி *adimuṇi,* பெ. (n.) **பிறருடைய கிணற்றிலிருந்து நீரிறைத்துப் பயிரிடுவதற் காகக் கிணற்றுக்காரருக்குக் கொடுக்கும் வாரம்**; dues payable by owners of fields to owners of wells for drawing water from the wells for irrigating their fields (R.T.).

[ஒருகா. அதிகம் + உணி.]

அதிமுத்தகம் *adi-muttagam,* பெ. (n.) 1. **அனிச்சை;** ring-worm root, *Rhinacanthus communis.* 2. **மஞ்சள் மந்தாரை;** mountain ebony, *Bauhinia tomentosa* (சா.அக.).

அதிமூத்திரநீக்கி *adi-mūttira-nikki,* பெ. (n.) **சிவப்புப் பொன்னாங்கண்ணி;** a red species of edible plant, river blatty, *Illecebrum sessile* (சா.அக.).

[அதிமூத்திரம் + நீக்கி.]

அதிமூத்திரம் *adi-mūttiram,* பெ. (n.) 1. **மூத்திரம் மிகுதியாகப் பெய்தல்;** excessive secretion of urine, *Hyperdiuresis.* 2. **ஒருவகை நீரிழிவு;** a kind of diabetes, *Diabetes insipidus* (சா.அக.).

[அதி + மூத்திரம்.]

அதிமூத்திரவொழுக்கு *adi-mūttira-v-oḻukku,* பெ. (n.) **மூத்திரம் மிகுதியாக வொழுகுதல்;** an excessive flow of urine, *Urorrhagia, urethrorrhea* (சா.அக.).

[அதி + மூத்திரம் + ஒழுக்கு.]

அதியம் *adiyam,* பெ. (n.) 1. **ஒரு மருந்து** (சங்.அக.); a kind of medicine. 2. **ஒருவகைச் செயற்கை நஞ்சு (அப்பிரகப் பாடாணம்);** a kind of mineral poison prepared from mica (சா.அக.).

அதியமான்[1] *adiyamāṉ,* பெ. (n.) **கடையெழு வள்ளல்களு ளொருவன்;** a liberal chief of the 2nd century A.D. "அணிபூ ணணிந்த யானை யியறேர் அதியமான்" (புறநா. 101 : 4-5).

அதியமான் நெடுமானஞ்சி பார்க்க; see *adiyamāṉ-neḍumāṉ-añji.*

[அதிகன் → அதியன். மகன் → மான். அதியன் + மான் (ஆ.பா. ஈறு) — அதியமான்.]

அதியமான்[2] *adiyamāṉ,* பெ. (n.) **அதிகமான்**[2] பார்க்க; see *adigamāṉ*[2].

அதியமான் நெடுமானஞ்சி *adiyamāṉ-neḍumāṉ-añji,* பெ. (n.) **கடையெழு வள்ளல்களுள் ஒருவனும் ஔவையாரைச் சிறப்பாகப் போற்றின வனுமான ஒரு சிற்றரசன்;** name of an ancient chief noted for his liberality and for his

patronage of the poetess *Avvai*, one of seven *Kaḍai vaḷḷal*. 'அதியமான் நெடுமா னஞ்சியை ஔவையார் பாடியது' (புறநா. 87, கொளு).

[*அதியன் + மான் + நெடு + மான் + அஞ்சி.*]

அதியர் *adiyar*, பெ. (n.) **அதிகமான் குடியினர்**; name of the line of *Adigamāṉ*, a branch of the *Cēras*. "ஆர்கலி நறவி னதியர் கோமான்" (புறநா. 91 : 3).

அதியர்கோமான் *adiyar-kōmāṉ*, பெ. (n.) **அதிகர்குடித் தலைவனான அதியமான் நெடுமா னஞ்சி**; *Adiyamāṉ*, a chief of a branch of the *Cēras*.

"ஆர்கலி நறவி னதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி"
(புறநா. 91 : 3-4).

[*அதியன் → அதியர் + கோமான். கோ + மகன் – கோமகன் → கோமான்.*]

அதியரத்தம் *adi-y-arattam*, பெ. (n.) 1. **மிகச் சிவப்பு**; bright red. 2. **உடம்பிலுள்ள அரத்த மிகை**; excessive blood in the body, *Hyperemia* (சா.அக.).

ம., **க.** அதிரக்த.

[*அதி + அரத்தம்.*]

அதியருவதம் *adi-y-aruvadam*, பெ. (n.) 1. **ஏற் கெனவே யுள்ள கழலைமேற் புறப்படும் மற்றொரு கரையாக் கழலைக் கட்டி**; an incurable tumour cropping upon another existing one, secondary tumour. 2. **ஒரே காலத்தில் அல்லது ஒன்றன் பின் ஒன்றாக எழும்பும் பல கழலைக் கட்டிகள்**; numerous contiguous tumours cropping up simultaneously or one after another, multiple tumour (சா.அக.).

[*அதி + அருவதம்.*]

அதியரையன் *adi-y-araiyaṉ*, பெ. (n.) **மீன் வலைஞர் தலைவன்**; chief of fishermen. "இலங்கதி யரையனம் மன்பன்" (திருவால வா. 22 : 9).

[*அதி + அரையன்.*]

அதியன் *adiyaṉ*, பெ. (n.) 1. **மேம்பட்டவன்**; one who is pre-eminent. "திருவாவடு துறையுள் அதியனே" (தேவா. 7.70 : 4). 2. **அதிகமான்**; *Adigamāṉ*.

ம. அதியன்

[*அதிகன் → அதியன்.*]

அதியாமம் *adiyāmam*, பெ. (n.) **அறுகம்புல்** (மூ.அ.); Cynodon grass (செ.அக.) — (சா. அக.) 1. **அறுகம்புல்**; couch grass, *Agrostis linearis*. 2. **முயற்புல்**; Cynodon grass, *Cynodon dectylon*.

அதியுச்சம் *adi-y-uccam*, பெ. (n.) (கணி.) **கோள் உச்ச வீட்டில் மிக வுச்சமான பாகையி லிருக்கை** (சோதிட. சிந். பக். 145); (Astron.) highly exalted position of a planet in the house of its exaltation.

[*அதி + உச்சம். உத்தி → உச்சி → உச்சம்.*]

அதியுமிழ்-தல் *adi-y-umiḻ-*, 2 செ.குன்றாவி. (v.t.) 1. **அதிகமாக வாய்நீரூறலால் அடிக்கடி துப்புதல்**; constant spitting owing to excessive flow of saliva. 2. **இதள் (ரச) மருந்தைத் தவறாகப் பயன்படுத்தலால் அளவிற்கு மிஞ்சி வாய்நீர் ஒழுகல்**; abnormal flow of saliva due to misuse of mercury drugs, *Mercurialism* alias *Mercury ptyalism* (சா.அக.).

[*அதி + உமிழ்தல்.*]

அதிர்-தல் *adir-*, 2 செ.கு.வி. (v.i.) 1. **குலுங்கு தல்**; to shake, quake, tremble, as by an earthquake, by the fall of a tree, by the rolling of chariots, by the loud report of a gun. நில மதிர்ந்தது (உ.வ.). "பெண்ணொருத்தி பேசிற் பெரும்பூமி தானதிரும்" (நீதிவெண். 31). 'அதிர அடித்தால் உதிர விளையும்', 'அதிர ஆடிக் குடியைக் கெடுத்தாள்' (பழ.). 2. **உடம்பு நடுங்குதல்**; to be startled, as by the sound of a cannon. 3. **உளம் நடுங்குதல்**; to be alarmed, as by reports of robbery, by the prevalence of an epidemic. "அதிர வருவ தோர் நோய்" (குறள், 429). 4. **விசையாகத் துடித்தல்**; to vibrate. 5. **முழங்குதல்**; to resound, as thunder, to reverberate, to sound as a drum, to roar as a lion. "அதிர மாமுழவு" (திருவாலவா. 37 : 23). 6. **எதி ரொலித்தல்**; to echo. "குரல்கேட்ட கோழி குன்றதிரக் கூவ" (பரிபா. 8 : 19).

ம. அதிருக; **க.** அதிரு; **தெ.** அதரு; **து.** அதுருனி.

அதிர்-த்தல் *adir-*, 4 செ.கு.வி. (v.i.) 1. **முழங்கு தல்**; to thunder, roar, as the sea. "மதித்த வேலையவ் வேலையி னுடைந்தென வாய்விட் டதிர்த்த" (கந்தபு. தக்க. ததீசியுத். 325). 2. **கலங்குதல்**; to be confused. "கற்றா

னதிர்ப்பிற் பொருளதிர்க்கும்'' (நான்மணிக். 21). —, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **அசைத்தல்**; to shake. 2. **நடுங்கச் செய்தல்**; to cause alarm by shouting, intimidate. ''பின்னதிர்க்குஞ் செய்வினை'' (நான்மணிக். 69). 3. **அதட்டுதல்**; to rebuke, menace. ''அரிப்பதாக னுரகப் பதாகனை யதிர்த்து'' (பாரத. பதினெட். 186). 4. **சொல்லுதல்**; to say, tell (பிங்.). 5. **அசைத்துத் தள்ளுதல்** (சங்.அக.); to shake and push away. ''அஞ்செழுத்தா லதிர்த்தெழுந்து'' (கோயிற்பு. பாயி. 9).

அதிர் *adir*, பெ. (n.) 1. **நடுக்கம்**; shivering. 2. **அச்சம்**; fear. 3. **கடுவிலை**; exorbitant demand or price.

அதிர்காணி *adir-kāṇi*, பெ. (n.) **காணியாட்சியுரிமை**; proprietary right in village lands. 'தனக்கு அதிர்காணியாக' (S.I.I. iv, 156).

[அதிர் + காணி.]

அதிர்ச்சி *adircci*, பெ. (n.) 1. **அசைவு** (சா.அக.); shaking. 2. **அதிகப்படுதல்** (சங்.அக.); increase. 3. **நடுங்குகை** (திவா.); trembling as by an earthquake, from thunder. 4. **அச்சம்**; fear. 5. **பேரோசை** (திவா.); loud noise or report. 6. **பிளிறல், உரறல்**; roaring. ''காய்சினக் களிற திர்ந்திடு மதிர்ச்சி'' (உபதேசகா. விபூதி. 118). 7. **மின்வலியால் நரம்பிற்கும், கடுந் துயரச் செய்தியால் மனத்திற்கும் ஏற்படும் திடுந்தாக்கு**; electric shock or sudden and violent emotion caused by unbearable tragic news.

க. அதிருவிகெ

[அதிர்த்தி → அதிர்ச்சி.]

அதிர்சன்னி *adir-šanni*, பெ. (n.) 1. **இசிவு நோயால் ஏற்படும் அதிர்ச்சி**; tremors in delirium. 2. **தாங்கமுடியா நோவு, அடி, காயம், புண் முதலியவற்றா லேற்படும் அதிர்ச்சி யிசிவு**; delirium as a result of unbearable pain, severe blow, wound, ulcer, etc., *Traumatic delirium.*

[அதிர் + சன்னி. Skt. sannipāda > த. *சன்னி = இசிவு.]*

அதிர்த்தி *adirtti*, பெ. (n.) **அதிர்ச்சிப் பேரோசை**; loud noise or report. 'அதுதான் இவன் கன்றுமறித் தோடுகிற வதிர்த்தியாலும்' (திவ். பெரியாழ். 3.2 : 3, வியா.).

[அதிர் → அதிர்த்தி.]

அதிர்ப்பு *adirppu*, பெ. (n.) 1. **அதிர்ச்சி, நடுக்கம்**; trembling. ''இப்படி யருஞ்சம ரிழைத்திடு மதிர்ப்பினில்'' (உபதேசகா. சூராதி. 28). 2. **எதிரொலி**; echo. ''எதிர்குதி ராகின் றதிர்ப்பு'' (பரிபா. 8 : 21).

க. அதிர்ப்பு

[அதிர் → அதிர்ப்பு.]

அதிர்விலை *adir-vilai*, பெ. (n.) **மன நடுங்கத்தக்க கடுவிலை**; exorbitant demand, fabulous price.

அதிர்வு *adirvu*, பெ. (n.) 1. **நடுக்கம்**; shaking' trembling. 2. **யாழ்நரம்பின் அதிர்ச்சி**; tremolo in a stringed instrument. ''செம்பகை யார்ப்பே யதிர்வே கூடம்'' (சிலப். 8 : 29).

க. அதிர்கெ; தெ. அதுரு.

[அதிர் → அதிர்வு.]

அதிர்வெடி *adir-veḍi*, பெ. (n.) **அதிர்வேட்டு** பார்க்க; see *adir-vēṭṭu.*

அதிர்வேட்டு *adir-vēṭṭu*, பெ. (n.) 1. **குழாய்வெடியோசை**; explosion of a rocket, usu. in temple festivals. 2. **வெடிகுழாய்** (யாழ்ப்.); rocket (J.).

தெ. அதுருவேடு

அதிரடி *adir-aḍi*, பெ. (n.) 1. **பெருங்கலக்கம்**; violent agitation. ''அச்சந் திகிலு மதிரடியுஞ் சொற்பனமும்'' (பஞ்ச. திருமுக. 720). 2. **மிரட்டு** (நெல்லை); bluff (Tn.). 3. **கடுவிலை**; excess, as of prices. விலை அதிரடியா யிருக்கிறது (உ.வ.). 4. **கடும்பேச்சு**; violent language.

[அதிர் + அடி.]

அதிரடிக்காரன் *adir-aḍi-k-kāraṉ*, பெ. (n.) **கேட்பார்க்கு அதிர்ச்சி அல்லது அச்சம் உண்டாகுமாறு உரத்த குரலிற் கடுமையாகப் பேசுபவன்**; boisterous fellow.

[அதிர் + அடி + காரன்.]

அதிரர் *adirar*, பெ. (n.) **அசுரர்**; Asuras. ''அதிரர் தேவ ரியக்கர்'' (தேவா. 5.32 : 8).

[அசுரர் → அதிரர்.]

அதிரல் *adiral*, பெ. (n.) 1. **நடுங்கல்**; trembling. 2. **காட்டுமல்லிகை**; wild jasmin(e). 'விரிமலர் அதிரலும்' (சிலப். 13 : 156, அரும்.).

3. புனலி (மோசிமல்லிகை); hog-creeper. ''அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்'' (முல்லைப். 51) (செ.அக.) — புனலிப்பூ; bastard rosewood climber, *Dalbergia volubilis* (சா.அக.). 4. அடித்தூறு; spreading base of a tree's trunk, stump (W.).

அதிராகம் *adirāgam,* பெ. (n.) கந்தகம் (மூ.அ.); sulphur.

அதிராம்பை *adirāmbai,* பெ. (n.) பொற்றலைக் கையாந்தகரை (மலை.); a medicinal herb (செ.அக.); eclypta with yellow flowers, *Mary-gold verbesina, Wedelia calendulacea* (சா.அக.).

அதிராயம் *adirāyam,* பெ. (n.) இறும்பூது (அதிசயம்); amazement, wonder (W.).

அதிராவடிகள் *adirā-v-aḍigaḷ,* பெ. (n.) மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவையின் ஆசிரியரான ஒரு சிவனடியார் (பதினொ.); name of a Šaiva saint, author of the *Mūtta Piḷḷaiyār Tirumummaṇikkōvai.*

அதிலி *adili,* பெ. (n.) ஒருவகை வேர்; a kind of root. 'காக்கணம் வேர், அதிலிவேர், பாலை வேர் இம் மூன்றும் அரைத்துப் பாத மேற் பூச்சுச் செய்யவும், நச்சுத் தீண்டாது' (T.C.M. ii, 2, 481) — Corr. of *alari* (செ.அக.).

அதிவிடயம் *adiviḍayam,* பெ. (n.) ஒரு மருந்துச் சரக்கு; a bazaar drug called Indian atees, *Aconitum heterophyllum.*

அதிவிடயம்

அதிவியர்வை *adi-viyarvai,* பெ. (n.) மிகுதியாக வியர்வை காணல்; excessive sweating, *Hyperephidrosis* (சா.அக.).

அதிவீரராமபாண்டியன் *adi-vīra-rāma-pāṇḍiyaṉ,* பெ. (n.) 16ஆம் நூற்றாண்டில் திருநெல்வேலி நாட்டை யாண்டவரும், நைடதம், காசி காண்டம் முதலிய பனுவல்களின் ஆசிரியரும், இறுதிக்காலப் பாண்டியருள் ஒருவருமான சிற்றரசர்; name of a later *Pāṇḍya* king of Thirunelvēli, author of the *Naiḍadam, Kašikāṇḍam* and other works during 16th century.

அதிவெப்பம் *adi-veppam,* பெ. (n.) மிக்க கொதிப்பு; high temperature, excessive heat, *Hyperthermia* (சா.அக.).

அதிவெள்ளை *adi-veḷḷai,* பெ. (n.) ஒரு செயற்கை நஞ்சு (பரங்கிப் பாடாணம்); sublimate of mercury (சா.அக.).

அதிவெள்ளைச்செந்தூரம் *adi-veḷḷai-c-cendū-ram,* பெ. (n.) அதிவெள்ளை பார்க்க; see *adi-veḷḷai.*

[அதி + வெள்ளை + செந்தூரம்.]

அது[1] *adu,* சு.பெ. (demons. pron.) 1. பொது வாக மெய்ம்முதற் சொல்லின்முன் ஆளப்படும் அஃறிணை யொருமைச் சேய்மைச் சுட்டுப் பெயர்; that, a demonstrative pronoun denoting a remote singular young child, animal or inanimate object, generally used before a consonant. 'அததற்கு ஒரு கவலை ஐயாவுக்கு எட்டுக் கவலை', 'அது மூன்றே முக்கால் நாழிகை வாழ்வு' (பழ.). 2. அஃறிணை யுலகைக் குறிக்கும் சுட்டுப்பெயர்; a pronoun denoting the inanimate world. ''அவனவ ளதுவெனு மவைமூ வினைமையில்'' (சி.போ. 1). 3. முற்கூறியதைக் குறிக்கும் சுட்டுப் பெயர்; a pronoun referring to something mentioned or a statement made before. நேற்று ஒரு மாம்பழம் தின்றேன்; அது மிக இனிமையா யிருந்தது. இந்தியா ஆங்கிலத்தை விடமுடியா தென்று, தலைமை மந்திரினியார் இந்திரா காந்தி யம்மையார் தெரிவித்திருக்கின்றார்; அது மிக நல்ல செய்தி (உ.வ.).

ம., க., கோத., துட., பட., குட. அது; தெ. அதி; து. அவு; குரு. ஆத்; கோண்., பர்., கொலா., அத்; பிரா. ஏத்.

[அ → அல் → அது. ஒ.நோ : மெல் → மெது. இனி, ஆது → அது என்றுமாம்.]

அது[2] *adu,* இடை. (part.) 1. அஃறிணை யொருமை வினைமுற்றீறு; a neut. sing. ending of the finite verb. அது வந்தது (உ.வ.). 2. காலங்காட்டும் தொழிற்பெயர் ஈறுகளுள்

ஒன்று; a tense-showing vbl. n. ending. அவன் வந்தது எனக்குத் தெரியாது (உ.வ.). 3. ஆறாம் வேற்றுமை யொருமை யுருபு; a gen. ending followed by a neut. sing. ''ஆற னொருமைக் கதுவும் ஆதுவும் பன்மைக் கவ்வு முருபாம்'' (நன். 300). எனது கை, எனது பொத்தகம் (உ.வ.). 4. முதனிலைப்பொரு ளீறுகளுள் (பகுதிப்பொருள் விகுதிகளுள்) ஒன்று; an expletive noun suff. ''உருவினுயிர் வடிவதுவு முணர்ந்திலர்'' (சி.சி. 8:36). ''மரமது மரத்திலேறி மரமதைத் தோளில் வைத்து'' (தனிப்பா. தி. 2:573).

அது இது எனல் *adu-idu-enal*, தொ.பெ. (vbl.n.) 1. ஏதேனும் ஒன்றுபற்றி முறையிடுதல்; to complain about something or other. என்னிடத்தில் அது இது என்று சொல்லக் கூடாது (உ.வ.). 2. ஏதேனும் ஒன்று கேட்டல்; to ask something or other. என்னிடம் அது இது என்று கேட்கக்கூடாது (உ.வ.).

[என் + அல் (தொ.பெ. ஈறு).]

அதுக்கம் *adukkam*, பெ. (n.) 1. அமுக்கம்; reduced condition, as of a boil. 2. ஒதுக்கம்; stuffing into the mouth. 3. அடிப்பு; beating.

[ஒடுங்கு → ஒதுங்கு → அதுங்கு → அதுக்கு. அதுக்கு + அம் – அதுக்கம்.]

அதுக்கு-தல் *adukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. அமுக்குதல்; to press with the fingers, as a ripe fruit or boil. 2. பிசைதல்; to squeeze, pinch, as the stomach in grief. ''அவ்வயி றதுக்கும்'' (திருவிளை. வன்னியுங். 41). 3. கடித்தல்; to bite, as one's lips. ''நண்ணுந் துயரந்தனை நோக்கி நகையாச் சினவி யித ழுதுக்கி'' (கூர்மபு. தக்கன்வே. 32). 4. நறுக்குதல்; to cut into pieces, mince as vegetables. ''வீரநோய் வெகுளி தோற்றி விழுப்பற வதுக்கி யிட்டுக் காரகற் பொரிப்பர்'' (சீவக. 2771). 5. மெல்லுதல்; to chew. ''வாயினி லதுக்கிப் பார்த்து'' (பெரியபு. கண்ணப்ப. 118). 6. வாயிலடக்குதல்; to stuff into the mouth, as does a monkey. 7. அடித்தல்; to slap with the hand, beat with a stick. ''தாளிற மூர்க்க ரதுக்கலின்'' (சீவக. 936).

ம. அதுக்குக; க. அதகு; தெ. அதுமு; து. அலமுனி.

[ஒடுங்கு → ஒதுங்கு → அதுங்கு (த.வி.) – அதுக்கு (பி.வி.).]

அதுக்கு *adukku*, பெ. (n.) ஏனங்களின் ஒடுக்கு; state of being pressed in as of parts of a vessel, dent, or depression in a metal utensil.

[அதுங்கு → அதுக்கு.]

அதுக்கெடு-த்தல் *adukk(u)-edu-*, 4 செ.கு.வி. (v.i.) ஏனங்களைத் தட்டி நெளிவெடுத்தல்; to remove a dent, smooth out the dented surface of a metal utensil.

[அதுங்கு → அதுக்கு + எடு.]

அதுகுபடி *adugu-padi*, பெ. (n.) 1. தரிசு நிலத்தைக் குறைந்த வரியிற் பயிரிட விடுதல்; giving waste land to a cultivator at a low rate of assessment on condition of his cultivating it (W.G.). 2. பயிரிடத் தகுதியாக ஒரு நிலத்தைத் திருத்தும்பொருட்டுக் குறைந்த தீர்வைக்குக் கொடுக்கப்படும் பாசனநீர்; supplying water to a cultivator at a low rate of assessment on condition of his bringing a piece of unoccupied land into cultivation (R.T.).

தெ. அதுகுபடி

[ஒருகா. அதுக்கு → அதுகு + படி.]

அதுங்கு-தல் *adungu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. அமுங்குதல்; to be forced out or in by pressure, to be stuffed in, compressed. 2. ஒதுங்குதல்; to draw to one side.

[ஒடுங்கு → ஒதுங்கு → அதுங்கு.]

அதும்பு-தல் *adumbu-*, 5 செ.கு.வி. (v.i.) மொய்த்தல்; to swarm. ''முரல்வண் டதும்புங் கொழுந்தேன்'' (திருவாச. 6:36).

[ஒல்லுதல் = பொருந்துதல், கூடுதல். ஒல் → அல் → அது → அதும்பு.]

அதெந்து *adendu*, இடை. (int.) அச்சந் தீருமாறு 'அது என்ன?' என்று அருளொடு வினவற் குறிப்பு; 'What is that?' as a question uttered by one to dispel the fears of his dependant or to encourage him. ''ஆதியே அடியேனாதரித் தழைத்தால் அதெந்துவே யென்றருளாயே'' (திருவாச. 29:1).

ம. அதெந்து

[அது + எந்து. எது → எத்து → எந்து = என்னது? இனி, என்னது (என் + அது) → என்று (என் + து) → எந்து என்றுமாம். ஒ.நோ: த. ஒன்று → க. ஒந்து.]

ஒருவன் துன்புற்று மேலோன் துணை வேண்டி விளிக்கும்போது, அம் மேலோன் அதென்னவென்று வினவுவது இயல்பே. 'எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்' என்னும் பழமொழியினின்று 'எது' என்னுஞ் சொல்லிற்கு 'எத்து' என்னும் வடிவுண்மை அறியப்படும். ஆதலால், 'அதெந்து' என்னுங் கூட்டுச்சொல் திசைச்சொல் என்றும், தெலுங்கச்சொல் என்றும் கொள்வது தவறாம்.

அதே *adē*, சு.பெ. (demons. pron.) 1. '*அது தான்' என்று பொருள்படும் தேற்றேகாரம் பெற்ற படர்க்கை யொன்றன்பாற் சுட்டுப் பெயர்*; a demons. pron. of the third person irr. sing. comb. with the emphatic particle 'ē', and meaning, 'It is the same'. 2. '*அதுதானா?' அல்லது 'அதுவா?' என்று பொருள்படும் வினாவேகாரம் பெற்ற படர்க்கை யொன்றன் பாற் சுட்டுப்பெயர்*; a demons. pron. of the third person irr. sing. comb. with the interrogative particle 'ē' and meaning 'Is it the same?' or 'Is it that?' —, பெ.எ. (adj.) *அதுவேயான, அதையேயொத்த*; the same, the very same. அதே வண்டியில் நாங்களும் ஏறிக்கொண்டோம். அதே நிறத்தில் அவரும் சட்டை யணிந்திருந்தார். —, இடை. (part.) **ஆம்**; yes. **கூறுவோன் :** ஒற்றுமை யின்மையாலேயே மூவேந்தரும் வலிமை குன்றி ஆட்சியிழந்தனர். **கேட்போன் :** அதே.

ம., க., குட. அதே.

ஒ.நோ : அஃதே

[*அது + ஏ (தேற்ற வினா இடைச்சொல்) — அதே.*]

அதை-த்தல் *adai-*, 4 செ.கு.வி. (v.i.) 1. *வீங்குதல்*; to swell, to be puffed up. கன்னம் அதைத்திருக்கிறது. 2. **செருக்குதல்**; to grow arrogant, become proud. இவனுக்கு அதைத்துப்போயிற்று (வின்.). 3. *தாக்கி மீளுதல்*; to rebound, recoil. அதைத்து விழுந்த பந்து. 4. **அலைதல்**; to wander about. "உனை நாடி யதைத்தொழிந் தேன்" (திருமந். 1691).

அதைப்பு *adaippu*, பெ. (n.) 1. **வீக்கம்**; swelling. 2. *நீர்க்கோப்பு*; dropsy, an unnatural collection of fluid in any cavity of the body. 3. செருக்கு; pride. 4. *தாக்கி மீளல்*; rebounding. 5. **விம்மல்**; turgescence (சா.அக.). 6. *எலும்பினெழுச்சி*; protuberance of a bone, tuberosity.

அதோ *adō*, இடை. (int.) **சேய்மை யிடத்தைச் சுட்டிக் கவனிக்கச்செய்தற் குறிப்பு**; behold there! 'இதோ' என்பதற்கு எதிர்; look there! opp. *idō*. "அங்கதோ வுள்கறுத் தழகிற் றேய்ந்தது" (சீவக. 2679).

ம. அதா; க. அதோ.

[*அது → அதா → அதோ.*]

அதோள் *adōḷ*, கு.வி.எ. (adv.) *அங்கே, அவ் விடத்தில்*; there. 'இதனானே அதோட் கொண்டான், இதோட் கொண்டான், உதோட் கொண்டான், எதோட் கொண்டான்........என உருபு வாராது உருபின் பொருள்பட வந்தனவுங் கொள்க' (தொல். எழுத்து. புள்ளி. 103, நச். உரை).

[*அது → அதோ → அதோல் → அதோள்.* ஒ.நோ : இந். *உதர்*; Skt. tatra; E. thither.]

அதோளி *adōḷi*, கு.வி.எ. (adv.) *அதோள் பார்க்க*; see *adōḷ*.

க., பட. அல்லி.

"சுட்டுமுத லாகிய விகர விறுதியும்" (தொல். எழுத்து. தொகை. 17). 'அதோளிக் கொண்டான், இதோளிக் கொண்டான், உதோளிக் கொண்டான், எதோளிக் கொண்டான்...... எனவும் இவை மிக்கன. அதோளி அவ்விட மென்னும் பொருட்டு' (தொல். எழுத்து. தொகை. 17, நச். உரை).

அதோள், அதோளி; இதோள், இதோளி; உதோள், உதோளி; எதோள், எதோளி என்பன இறந்துபட்ட குமரிநாட்டுச் சொற்கள்.

அந்த[1] *anda*, கு.பெ.எ. (adj.) **அங்குள்ள, அன்றுள்ள, முன்சொன்ன என்று பொருள் படும் சேய்மைச்சுட்டுப் பெயரெச்சம்**; that. "காலா லந்தக் கருங்கனி சிதைத்தேன்" (மணிமே. 17 : 34) 'அந்த வெட்கக்கேட்டை ஆரோட சொல்கிறது' (பழ.).

ம. அ; க., து., பட., தெ. ஆ; துட. அமுன்.

[*ஆ → அ → அல் → அது → அத்து → அந்து → அந்த. 'அ' பெயரெச்ச ஈறு. அந்து + அ — அந்த.*]

அந்த[2] *anda*, இடை. (int.) **இரக்கக் குறிப்புச் சொல்**; exclamation of pity. "அந்தொக்க வரற்றவோ" (கம்பரா. யுத்த. இராவணன் சோ. 38).

சிங். அந்தோ; Skt. hanta.

[அத்தன் (தந்தை) → அத்தோ → அந்தோ → அந்த → **Skt.** hanta. இனி, அத்தன் → அத்த → அந்த என்றுமாம். ஒ.நோ: ஐயன் → ஐயோ, ஐயன் → ஐய.]

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி"

என்னும் தொல்காப்பிய நூற்பா (சொல். எச். 4) உரையில் நச்சினார்க்கினியர்,

'பன்னிரு நிலமாவன: பொங்கர் நாடு, ஒளி நாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குட நாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலையமானாடு, அருவாநாடு, அருவாவடதலை எனத் தென்கீழ்பால் முதலாக வடகீழ்பா லீறாக எண்ணுக.

'இனிப் பன்னிரண்டையுஞ் சூழ்ந்த பன்னிரண்டாவன: சிங்களமும், பழந்தீவும், கொல்லமும், கூபமும், கொங்கணமும், துளுவும், குடகமும், கருநடமும், கூடமும், வடுகும், தெலுங்கும், கலிங்கமுமாம்.

'.........சிங்களம் அந்தோ வென்பது........' என்வுரைத்தார்.

தெய்வச்சிலையார்,

'பன்னிருநிலமாவன: வையை ஆற்றின்... ......(பொதுங்கர்) நாடு, ஒளிநாடு, தென் பாண்டிநாடு, கருங்குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதை (சீத)நாடு, பூழிநாடு, மலாடு, அருவாநாடு, அருவா வடதலை என்ப. இவை செந்தமிழ் நாட்டகத்த. செந்தமிழ் (சேர்ந்த) நாடென்றமையால், பிற நாடாகல் வேண்டுமென்பார் உதாரணங் காட்டுமாறு: — "கன்னித் தென் கரைக் கடற்பழந் தீபம் கொல்லங் கூபகஞ் சிங்கள மென்னும் எல்லையின் புறத்தவும், கன்னடம் வடுகம் கலிங்கம் தெலிங்கம் கொங் கணம் துளுவம் குடகம் குன்றகம்" என்பன.'

'......அந்தோ என்பது சிங்களவர் ஐயோ என்பதற்கிட்ட பெயர்......' எனவுரைத்தார்.

நன்னூற் காண்டிகை யுரையாசிரியன்மாராகிய சடகோபராமானுச கிருட்டிணமா சாரியன்மாரோ, 273ஆம் நூற்பாவுரையில்,

"ஐயோ என்பதை 'அந்தோ என்பது, சிங்களநாட்டுச் சொல்' என்று முன்னைய வுரையாசிரியர்கள் எழுதியிருந்தாலும், அது 'ஹந்த' என்னும் வடசொல்லின் சிதைவு என்று தெரிதலால், இங்குக் கொள்ளப்படவில்லை" என்று உரைத்துள்ளனர்.

மேற்கூறிய நால்வரும் 'அந்தோ' என்னுஞ் சொல்மூலத்தை அறியாமையாலேயே அதைச் சிங்களச் சொல்லென்றும், வடசொல் லென்றும் பிறழக் கொண்டனர்.

இரக்கம், நோதல், அச்சம், வியப்பு முதலிய குறிப்புகளை யுணர்த்தும் தமிழ்ச்சொற்கள் பெரும்பாலும் பெற்றோர் முறைப்பெயரி னின்றே தோன்றியுள்ளன என்பது, முன்னரே அக்கை, அச்சன், அத்தன் முதலிய சொற் களின் கீழ் விளக்கப்பட்டது. ஆண்டுக் காண்க.

அந்தோ என்னும் தமிழ்ச்சொல்லே, சிங்களத்தில் இயல்பாகவும், வடமொழியில் திரிந்தும் வழங்குகின்றதென்க.

அந்தகக்கவி வீரராகவ முதலியார் *andaka-k-kavi-vīra-rāgava-mudaliyār*, பெ. (n.) **17ஆம் நூற்றாண்டினவரும், கழுக்குன்றப் புராணமும் பிற பனுவல்களும் இயற்றியவரும், கடும்பா (ஆசுகவி) வல்லுநரும், பிறவிக் குருடருமான ஒரு தமிழப் பாவலர்**; name of a blind poet, author of the *Kaḻukkuṉṟa-p-purāṇam* and other works, 17th century.

[**Skt.** andhaka + kavi + Vīra + Rāghava + த. முதலியார்.]

அந்தகம் *andagam*, பெ. (n.) **ஆமணக்கு** (மலை.); castor-plant.

அந்தகோ *andagō*, இடை. (int.) **இரக்கக் குறிப்புச்சொல்**; an exclamation of pity. "அந்த கோவிது வருவதே யெனக்கு" (வேதாரணியபு. பிரமசா. 22). அந்த² பார்க்க; see *anda²*.

[அத்தன் → அத்த → அந்த → அந்தவோ → அந்தகோ. ஒ.நோ: ஐயன் → ஐய → ஐயவோ → ஐயகோ; அம்மை → அம்ம → அம்மவோ → அம்மகோ. வ → க, போலி.]

அந்தகோரம் *andagōram*, பெ. (n.) **நெல்லி** (மலை.); emblic myrobalan (செ. அக.) — gooseberry tree, *Phyllanthus emblica* (சா. அக.).

மறுவ. அந்தகோலம், அந்தகோளம்.

அந்தகோலம் *andagōlam*, பெ. (n.) **அந்தகோரம்** பார்க்க; see *andagōram*.

அந்தகோளம் *andagōḷam*, பெ. (n.) **அந்தகோரம்** பார்க்க; see *andagōram*.

அந்தச்சம் *andaccam*, பெ. (n.) *அந்தச்சு பார்க்க*; see *andaccu*.

[அந்தச்சு → அந்தச்சம்.]

அந்தச்சு *andaccu*, பெ. (n.) வடிவின் சரியொப்பு; striking resemblance.

[அந்த + அச்சு – அந்தச்சு (அதே வடிவம்).]

அந்தண் *andaṇ*, பெ. (n.) 1. *துறவியர் வகுப்பு*; a class of ascetics. "அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுக லான்" (குறள், 30). 2. *பிராமணர் குலம்*; Brāhmin caste. "அந்தண்மா முதுகுரவரென் றுன்னினன்."

[அந்தணன் → அந்தண்.]

அந்தணன் பார்க்க; see *andaṇaṉ*.

அந்தண்டை *andaṇḍai*, பெ. (n.) கு.வி.எ. (adv.) 1. *அந்தப் பக்கம்*; that side. போ அந்தண்டை. 2. *அப்பால், அக்கரைப்பக்கம்*; beyond, the opposite side. சென்னைக்கு அந்தண்டை திருப்பதி. ஆற்றிற்கு அந்தண்டை எங்கள் புன்செய் இருக்கிறது (உ.வ.).

[அ → அந்த + அண்டை.]

அந்தண்பாடி *andaṇ-pāḍi*, பெ. (n.) 1. *தமிழ்ப் பார்ப்பார் குடியிருப்பு* (பழை.வ.); quarters where the learned Tamilians lived (Arch.). 2. *பிராமணர் குடியிருக்குமிடம்*; quarters where Brāhmins reside. "அந்தண் பாடியு மணுகி யல்லது" (பெருங். மகத. 4 : 33).

[அந்தணர்பாடி → அந்தண்பாடி.]

அந்தணன் பார்க்க; see *andaṇaṉ*.

அந்தண்புலவன் *andaṇ-pulavaṉ*, பெ. (n.) 1. *கற்ற துறவி* (பழை.வ.); a learned ascetic (Arch.). 2. *பிராமணப் புலவன்*; Brāhmin scholar. "மறையறிப வந்தண் புலவர்" (நான்மணிக். 91).

[அந்தணப்புலவன் → அந்தண்புலவன்.]

அந்தணன் பார்க்க; see *andaṇaṉ*.

அந்தண்மை *andaṇmai*, பெ. (n.) 1. *அழகிய குளிர்ந்த அருள்*; comely graciousness. "அந் தண்மை பூண்ட.........அந்தணர்" (திருமந். 234). 2. *துறவுநிலை*; asceticism. 3. *பிராமணத் தன்மை*; Brāhminhood.

[அம் = அழகிய. தண் = குளிர்ந்த. மை = தன்மை, தன்மை யுணர்த்தும் ஈறு. அம் + தண் + மை – அந்தண்மை.]

அந்தணநாகம் *andaṇa-nāgam*, பெ. (n.) *பொன் னிறமான நல்லபாம்பு*; cobra of a golden colour, lit. Brāhmin cobra, so called because of its bright colour.

[அந்தணன் + நாகம் – அந்தணநாகம் = பிராமணன் நிறமுள்ள நல்லபாம்பு.]

அந்தணநாபி *andaṇa-nābi*, பெ. (n.) *நாபிவகை* (மூ.அ.); white variety of aconite — (செ.அக.) 1. *நச்சுத் தன்மையைப் போக்குமொரு முதன்மையான மருந்து*; sacerdotal antidote for a kind of poison. 2. *வெண்ணாபி*; a white variety of aconite root (சா.அக.).

அந்தணமை *andaṇamai*, பெ. (n.) 1. *அழகிய குளிர்ந்த அருட்டன்மை*; comely graciousness. 2. *துறவுநிலை*; asceticism. 3. *பிராமணத் தன்மை*; Brāhminhood. "குளித்துமூன் றனலை யோம்புங் குறிகொளந் தணமை தன்னை யொளித்திட்டேன்" (திவ். திரு மாலை, 25).

[அந்தண்மை → அந்தணமை.]

அந்தண்மை பார்க்க; see *andaṇmai*.

அந்தணர் *andaṇar*, பெ. (n.) 1. *அழகிய குளிர்ந்த அருளையுடைய துறவியர்*; the gracious ascetics. "அந்தண ரென்போ ரற வோர்மற் றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுக லான்" (குறள், 30). 2. *பிரா மணர்*; Brāhmins. "ஆறறி யந்தணர்க் கரு மறை பலபகர்ந்து" (கலித். கடவுள்வா. 1).

[அம் = அழகு. தணம் = குளிர்ச்சி, குளிர்ந்த அருள். தணம் → தணன் = குளிர்ந்த அரு ளுடையவன். தணன் (ஒருமை) – தணர் (பன்மை). அம் + தணம் + அர் (ஈறு).]

'அந்தத்தை அணவுவார் அந்தணர் என்றது, வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பா ரென்றவாறு' என்று நச்சினார்க்கினியர் அந்தணர் என்னுஞ் சொல்லிற்குக் கூறியுள்ள பொருட்காரணம் பொருந்தாது.

அந்தணர்சேரி *andaṇar-šēri*, பெ. (n.) *அந்தண் பாடி பார்க்க*; see *andaṇ-pāḍi*. "அந்தணர் சேரி யகவித ழாக" (பெருங். மகத. 3 : 87).

அந்தணர்வாக்கு *andaṇar-vākku*, பெ. (n.) 1. *வேதம்* (சிந்தா. நி.); the Vēdas. 2. *பிரா மணர் கூற்று*; sayings of Brāhmins.

அந்தணரறுதொழில் *andaṇar-aṟu-toḻil*, பெ. (n.) **ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்** (திவா.); the six occupations of the Brāhmins, viz., learning, teaching, sacrificing, conducting sacrifices, giving and receiving.

[அந்தணர் + ஆறு + தொழில். ஆறு→அறு.]

இது பிற்காலக் கொள்கையும் வழக்குமாகும். ஆரியப் பூசாரியர் தென்னாடு வருமுன், அந்தணர் என்னும் பெயர் தமிழத் துறவியரையே சிறப்பாகவும், தமிழப் பூசாரியரையும் புலவரையுமே பொதுவாகவுங் குறித்ததனால், தமிழமுறைப்படி அந்தணரறுதொழில் ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், தூதுபோதல், சந்துசெய்தல் என்னும் ஆறேயாகும்.

ஔவை, அதியமான் விடத் தொண்டைமானுழைத் தூது சென்றதையும் (புறநா. 95), கோவூர்கிழார், உறையூர் முற்றியிருந்த சோழன் நலங்கிள்ளியையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் பாடிச் சந்துசெய்ததையும் (புறநா. 45) நோக்குக. இதனால்,

"ஆபயன் குன்று மறுதொழிலோர்
நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்"

என்னுங் குறளில் (560) உள்ள 'அறுதொழிலோர்' என்னுஞ் சொல், தமிழ அந்தணர்க்குப் பொருந்துதலையுங் காண்க.

சந்துசெய்தலில், தலைவன் தலைவியர் பிணக்குத் தீர்த்தலும் அடங்கும்.

பேகனால் துறக்கப்பட்ட கண்ணகி காரணமாக, அவனைக் கபிலர் (புறநா. 143), பரணர் (புறநா. 144, 145), அரிசில்கிழார் (புறநா. 146), பெருங்குன்றூர்கிழார் (புறநா. 147) பாடியதையும்;

"கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும்
வழிகொள
நல்லவை யுரைத்தலும் அல்லவை
கடிதலும்
செவிலிக் குரிய வாகு மென்ப"
(பொருள். கற். 12),

"சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய"
(பொருள். கற். 13)

என்னும் தொல்காப்பிய நூற்பாக்களையும் நோக்குக.

அந்தணன் *andaṇaṉ*, பெ. (n.) 1. **அழகிய அருளாளன்**; the gracious one. 2. **முனிவன், துறவி**; sage, recluse, ascetic. "அந்தணரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுக லான்" (குறள், 30). 3. **அறவோன்** (பொதி. நி.); virtuous person. 4. **தூயோன்**; pure person. "தேவர்க்கும் அறிய லாகா அந்தணனை" (திவ். திருநெடுந். 4). 5. **பிராமணன்**; Brāhmin. "நூலே கரகம் முக்கோல் மணையே ஆயுங் காலை யந்தணர்க் குரிய" (தொல். பொருள். மர. 71). 6. **பிராமணவகை நாகம்**; cobra of the Brāhmin variety. "அந்தணனாறு மான்பா லவியினை (சீவக. 1287). 7. **பிரமன்**; Brahma (பிங்.). 8. **சிவன்**; Śiva. "யாழ்கெழு மணிமிடற் றந்தணன்" (அகநா. கடவுள்வா.). 9. **அருகன்**; Arhat (சங்.அக.). 10. **கடவுள்**; God (சங்.அக.). 11. **வியாழன்**; Jupiter. "மற்றவன் மேலுய ரந்தண னுலவும்" (கூர்மபு. மண்டல. 16). 12. **காரி**; Saturn (சங்.அக.). 13. **ஒரு சிறந்த முழுத்தம்** (முகூர்த்தம்); a highly auspicious time. "அரன்பாம் பனுட மகம்புட் புனலாடி யந்தணன் றேர்" (விதான. குணா. 72 : 73). இது பகலிலே எட்டாவதாக நிகழுமென்றும் நூறாயிரங் குற்றத்தைப் போக்குமென்றும் சொல்லப்படும் (சங்.அக.).

ம. அந்தணன்

[அம் + தணம் + அன் (ஈறு) – அந்தணன்.]

அந்தணர் பார்க்க; see *andaṇar*.

அந்தணாட்டி *andaṇāṭṭi*, பெ. (n.) 1. **அழகிய குளிர்ந்த அருளுடையவள்**; gracious woman. 2. **துறவினி (பெண்துறவி)**; a woman ascetic. 3. **பிராமணத்தி**; a Brāhmin woman. "மந்திர நாவி னந்த ணாட்டி" (பெருங். இலாவாண. 17 : 18).

[அம் + தணம் + ஆட்டி (பெ.பா. ஈறு) – அந்தணாட்டி, அந்தணாளன் என்பதன் பெண்பால். ஆள் + தி – ஆட்டி.]

அந்தணாளன் *andaṇāḷaṉ*, பெ. (n.) 1. **அழகிய குளிர்ந்த அருளாளன்**; gracious person, gracious one. "செய்யதீ வண்ண ரந்த ணாளர் கண்டீர்" (தேவா. 5.8 : 6). 2. **முனிவன்**; sage, recluse, hermit. "அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத" (தேவா. 7 . 55 : 1). 3. **பிராமணன்**; Brāhmin. "அந்த ணாளனு மதி

சயித் தரும்பெறன் மகட்கு" (திருவிளை. விருத்தகு. 5).

[அம் + தணம் + ஆளன் (ஈறு) — அந்த ணாளன். ஆள் + அன் — ஆளன்.]

அந்தணி *andaṇi*, பெ. (n.) 1. *அழகிய குளிர்ந்த அருளுள்ளவள்*; gracious woman. 2. *துறவினி*; female ascetic. 3. *பிராமணத்தி*; a Brāhmin woman. "அந்தணி தான்கொண் டெழுந்த தவத்துறை நீங்கி" (பெருங். உஞ்சைக். *36 : 195-6*).

ம. அந்தணி

[அந்தணன் (ஆ.பா.) — அந்தணி (பெ.பா.). அம் + தணம் + இ (பெ.பா. ஈறு) — அந்தணி.]

அந்தணாட்டி பார்க்க; see *andaṇāṭṭi*.

அந்தந்த *andanda*, கு.பெ.எ. (adj.) *பெரும்பான்மை, எந்தெந்த, ஒவ்வொரு, எல்லாம் என்னுஞ் சொற்களுள் ஒன்றோடு உடனுறவுச் சொல்லாகவும்* (correlative) *சிறுபான்மை தனித்தும் நின்று, பல பொருளிடங் காலஞ் செயல்களைத் தனித்தனி குறிக்கும் சேய்மைச் சுட்டுப் பெயரெச்ச வடுக்கு*; reduplication of the remote, demons. adj. *anda*, meaning, 'such and such', 'respective', 'proper', 'fitting' or 'appropriate'. எ-டு: பொத்தகங்களை எந்தெந்த இடத்திலிருந்து எடுத்தீர்களோ அந்தந்த இடத்தில் வைத்துவிடுங்கள். ஒவ்வொருவரும் எந்தெந்த வேலைக்குத் தகுதியென்று கண்டு அந்தந்த வேலையில் அமர்த்த வேண்டும். எல்லாப் பயிர்களையும் அந்தந்தக் காலத்திற் பயிரிட வேண்டும். அந்தந்தக் காலத்திலேயே பாடங்களைப் படித்து வந்திருந்தால் தேர்வுச் சமையத்தில் திண்டாட வேண்டிய தில்லையே!

அந்தம் *andam*, பெ. (n.) *அழகு*; beauty, comeliness. "அந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே" (தொல். பொருள். மர. *3*). அந்தங் கெட்டவள் (உ.வ.).

ம. அந்தம்; க., து. அந்த; தெ. அந்தமு.

[அம் = அழகு. அம் → அந்து → அந்தம். அந்தம் என்பதற்கு முடிவு என்று பேராசிரியர் பொருளுரைத்திருப்பது அத்துணைப் பொருத்தமாய்த் தோன்றவில்லை.]

அந்தரி *andari*, பெ. (n.) *தோற்கருவி வகை*; a kind of drum (சிலப். *3 : 27*, அடியார்க். உரை).

ம. அந்தரி

அந்தரை *andarai*, பெ. (n.) *பரவர் பட்டப் பெயர்*; a title of Paravas (T.A.S. iv, 179).

அந்தலை *andalai*, பெ. (n.) 1. *சந்திப்பு* (யாழ்ப்.); juncture (J.). 2. *முடிவு* (யாழ்ப்.); end, extremity, border (J.). 3. *மேடு* (யாழ்ப்.); projection as of roof (J.).

[அந்துதல் = சந்தித்தல். அந்து → அந்தல் → அந்தலை.]

அந்தளகத்தாளார் *andaḷagatt(u)-āḷār*, பெ. (n.) *கவசந் தாங்கிய போர்மறவர்*; warriors wearing coat of mail. உத்தமசோழத் தெரிந்த வந்தளகத்தாளார் (S.I.I. ii, 97).

[அந்தளகம் + அத்து (சாரியை) + ஆள் + ஆர் (ப.பா. ஈறு).]

அந்தளகம் *andaḷagam*, பெ. (n.) *கவசம்*; coat of mail (S.I.I. ii, 98, குறிப்பு).

ஒ.நோ : தெ. பொறந்தளமு

[அந்தளம் → அந்தளகம்.]

அந்தளம்[1] *andaḷam*, பெ. (n.) *கவசம்* (பிங்.); coat of mail.

[உம் → உந்து → அந்து → அந்தளம்.]

அந்தளம்[2] *andaḷam*, பெ. (n.) *புல்லுருவி*; a parasitic plant (சா.அக.).

அந்தளி *andaḷi*, பெ. (n.) *தேவர் கோயில்*; temple (சங்.அக.).

அந்தன் *andaṉ*, பெ. (n.) *அந்தனம்* பார்க்க; see *andaṉam* (மலை.).

அந்தனம் *andaṉam*, பெ. (n.) *கடுக்காய்*; ink-nut, *Terminalia chebula* (சா.அக.).

அந்தனாதி *andaṉādi*, பெ. (n.) *பழம்புளி*; tamarind, kept in storage for a long time.

அந்தா[1] *andā*, இடை. (int.) *அதோ!, ஒரு சேய்மைச்சுட்டுச் சொல், ஒரு பொருளைச் சுட்டிக் கவனிக்கச்செய்தற் குறிப்பு*; remote demonstrative.

[அது → அத்து → அந்து → அந்தா.]

அந்தா[2] *andā*, இடை. (int.) 1. *ஒரு வியப்புக் குறிப்பு*; an exclamation of wonder. "அந்தாவில ளயிராணி" (கந்தபு. அசுர. அசமுகிப். *17*). 2. *ஒரு மகிழ்ச்சிக் குறிப்பு*;

an exclamation of joy. ''அந்தா வுய்ந்தேன்'' (சுந்தபு. அசுர. அசுரர்தோ. 1).

[அத்தன் (தந்தை) → அத்தா (விளி) → அந்தா. ஒ.நோ: அப்பன் → அப்பா, அடேயப்பா (வியப்புக் குறிப்பு).]

அந்தாக *andāga*, பெ. (n.) '**அப்படியே யாகுக!**' **என்று பொருள்படும் ஓர் இசைவுத் தொடர்புச் சொல்**; an expression, meaning 'Let it be so.' ''அந்தாக வென்றுவந் தையனும்'' (கம்பரா. யுத்த. நிகும்பலை. 101).

[அது → அத்து → அந்து + ஆக. ஆகு + அ (வியங். ஈறு) – ஆக. இனி, அன்னது → அன்று (அன் + து) → அந்து + ஆக என்றுமாம்.]

அந்தாயம் *andāyam*, பெ. (n.) 1. **போலிகை (மாதிரி)** (இ.வ.); model (Loc.). 2. **குத்து மதிப்பு**; rough estimate.

ம. அந்தாயம்

அந்தாரப்பனை *andāra-p-paṉai*, பெ. (n.) **தொட்டிப்பனை**; a species of palmyra (சா.அக.).

அந்தாலே *andālē*, சு.கு.வி.எ. (demons. adv.) அங்கே (யாழ்ப்.); there, over there (J.).

[அது → அத்து → அந்து + ஆல் + ஏ. அந்து = அங்கு. 'ஆல்' இடவுருபு. 'ஏ' பிரிநிலை அல்லது தேற்றப்பொரு ளிழந்த ஈற்றசை. ஒ.நோ: பின் → பின்னால் → பின்னாலே, பிறகு → பிறகால் → பிறகாலே.]

அந்தாளி *andāḷi*, பெ. (n.) (இசை) **குறிஞ்சி யாழ்த் திறமென்னும் குறிஞ்சிப் பண்ணின் முப்பத்திரு பிரிவுகளுள் ஒன்று** (பிங்.); (Mus.) an ancient secondary melody-type, one of the 32 varieties of *kuṟiñji*, a primary melody-type.

ம., க. அந்தாளி.

அந்தாளிக்குறிஞ்சி *andāḷi-k-kuṟiñji*, பெ. (n.) **அந்தாளி** பார்க்க; see *andāḷi*.

[அந்தாளி + குறிஞ்சி.]

அந்தாளிபாடை *andāḷi-pāḍai*, பெ. (n.) (இசை) **பாலையாழ்த் திறமென்னும் பாலைப் பண்ணின் இருபது பிரிவுகளுள் ஒன்று**; (Mus.) an ancient secondary melody-type, one of the 20 varieties of *pālai*, a primary melody-type.

[அந்தாளி + Skt. bhāṣā > த. பாடை.]

அந்தான் *andāṉ*, பெ. (n.) **கப்பல் அல்லது படகி லுண்டாகுஞ் சிறு பொத்தல் வழியே தண்ணீர் புகாதபடி அடைக்குஞ் சிறுபலகை**; a small wooden board nailed over a hole in a ship or boat to close a leak (R.).

[அத்துதல் = இரு துண்டை ஒன்றா யிணைத்தல், ஒட்டுப்போட்டுத் தைத்தல். அத்து → அந்து → அந்தான்.]

அந்தி-த்தல் *andi-*, 4 செ.கு.வி. (v.i.) **பொருந்துதல்** (பொதி.நி.); to fit in. —, 4 செ.குன்றா வி. (v.t.) 1. **கிட்டுதல்**; to approach. ''வேதம் அந்தித்தும் அறியான்'' (திருவிளை. நகர. 106). 2. **சந்தித்தல்**; to unite, join, meet. ''யமபடையென வந்திக்குங் கட்கடையாலே'' (திருப்பு. 55). 3. **முடித்து வைத்தல்**; to tie up in a knot. ''அந்தித் திருக்கும் பொருளில்லை'' (திருவாலவா. 30 : 14). 4. **ஏற்படுத்துதல் (நியமித்தல்)**; to appoint, ordain. ''அந்தித்த நின்புணர்ப்பை'' (கந்தபு. மகேந்திர. சயந்தன்புலம். 58).

க., தெ. அந்து.

[உம் → உந்து → அந்து → அந்தி.]

அந்தி[2] பார்க்க; see *andi*[2].

அந்தி[1] *andi*, பெ. (n.) 1. **ஒரு தெரு இன்னொரு தெருவிற் குறுக்காக வந்து சேர்வதால், அல்லது மூவேறு தெரு ஒன்றுகூடுவதால், ஏற்படும் முச்சந்தி**; junction of two or three streets. ''அந்தியுஞ் சதுக்கமு மாவண வீதியும்'' (சிலப். 14 : 213). 2. **இரவும் பகலுங் கலக்கும் விடியற்காலை**; morning twilight, as joining night with day. ''காலை யந்தியும்'' (புறநா. 34 : 8). 3. **பகலும் இரவுங் கலக்கும் மாலைக் காலம்**; evening twilight, as joining day with night. ''மாலை யந்தியும்'' (புறநா. 34 : 8). 'அந்தி ஈசல் அடைமழைக்கு அறிகுறி', 'அந்தி ஈசல் பூத்தால் அடைமழை அதிகரிக்கும்', 'அந்தி மழை அழுதாலும் விடாது', 'அந்தி மழையும் விடாது ஔவையாரைப் பிடித்த பிணியும் விடாது' (பழ.). 4. **அந்தியுஞ் சந்தியுஞ் செய்யுந் திருமன்றாட்டு**; morning and evening prayers. ''ஓதி யுருவெண்ணு மந்தியால்'' (திவ். இயற். 1 : 33). 5. **மாலை யந்தியிற் பூக்கும் அந்திமந்தாரை**; plant whose flowers blossom at 5 p.m., *Mirabilis jalapa*. 6. **மாலைச் செவ்வானம்**; red glow of sunset. ''அந்தி வண்ணர்தம் மடியவர்க் கமுதுசெய் வித்து'' (பெரியபு. அமர்நீதி. 3). 7. **மாலையொடு தொடங்கும் இரவு**; night. ''அந்தி காவலன்'' (திவ். பெரியதி. 8 . 5 : 1).

8. பொருத்து, முடிவு; joint, end. ''அந்திக் கடலிற் கடிதோட'' (திருப்பு. 76) (சங்.அக.). *9. பகல் முடிவு போன்ற ஊழி முடிவு*; dissolution of the universe at the end of an aeon. ''படரணி யந்திப் பசுங்கட் கடவுள்'' (கலித். 101 : 24). *10. பாலையாழ்த்திறவகை*; an ancient secondary melody-type of the *pālai* class.

ம. அந்தி; க., தெ. அன்த.

[உம் → உந்து → அந்து → அந்தி.]

உம்முதல் = கூடுதல், பொருந்துதல், கலத்தல். உம் = சொல்லும் பொருளும் இரண்டும் பலவுமாய்க் கூடுதலைக் குறிக்கும் இடைச் சொல்.

எ-டு:

''மழவும் குழவும் இளமைப் பொருள'' (தொல். சொல். உரி. 14).

''இன்பமும் பொருளும் அறனும்'' (தொல். பொருள். கள. 1).

உம் → உந்து.

''உம்உந் தாகும் இடனுமா ருண்டே'' (தொல். சொல். இடை. 44).

உந்து → அந்து. ஒ.நோ : உகை → அகை.

அந்துதல் = கலத்தல். அந்து → அந்தி = இரு தெரு அல்லது முத்தெருக் கூடும் முச்சந்தி, பகலும் இரவுங் கலக்கும் காலை அல்லது மாலைவேளை. "காலை யந்தியும் மாலை யந்தியும்" என்று புறநானூறு (34) கூறுவதால், முதற்கண் 'அந்தி' யென்பது இரு வேளைக்கும் பொதுவாய் வழங்கினமை அறியப்படும். பின்னர் மாலையை வேறு படுத்தற்குச் சகரமெய் சேர்க்கப்பட்டுச் 'சந்தி' யென்னுஞ் சொல் தோன்றிற்று. காலையும் மாலையும் என்னும் பொருளில், அந்தியுஞ் சந்தியும் என்று இன்றும் உலகவழக்கு வழங்குதல் காண்க.

அமைத்தல் என்னும் பொதுப்பொருட் சொல், சோறமைத்தலைச் சிறப்பாகக் குறிக்கச் சமைத்தல் என்று சகரமெய் பெற்றிருத்தலை இதனுடன் ஒப்புநோக்குக.

'அந்தி', 'சந்தி' ஆனபோது, 'அந்து', 'சந்து' ஆயிற்று. சந்து = உறுப்புப் பொருத்து, இரு பகைவரை ஒப்புரவாக்கும் இணைப்பு.

முச்சந்தியைக் குறித்த 'அந்தி'யும் 'சந்தி' யாயிற்று. அதனால், அந்தியுஞ் சதுக்கமும் என்பது சந்தியுஞ் சதுக்கமும் என மோனைத் தொடராயிற்று. சந்திக்கிழுத்தல், சந்தி சிரித்தல், சந்தியில் விடுதல் என்னும் வழக்குகளில், 'சந்தி' யென்பது இன்று முச்சந்திக்கும் நாற்சந்திக்கும் பொதுவாகும்.

சந்து → சந்தை. ஒ.நோ : மந்து → மந்தை.

சந்தை = பெரும்பாலும் நாட்டுப்புற நகர்களில், கிழமைக் கொருநாள், பல்வேறிடங்களினின்று பல்வேறு விற்பனையாளர் பல்வேறு பொருள்களைக் கொண்டுவந்து விற்கும் கிழமை யங்காடி.

சந்தித்தல் என்னும் பொருளில் அந்தித்தல் என்னும் சொல் தமிழில் வழங்கியிருத்தலால், சந்தித்தல் அல்லது சந்திப்பு என்னும் சொல் தென்சொல்லே.

சந்தித்தலைக் குறிக்கும் 'ஸம்-தா' (sam-dhā) என்னும் வடசொல் முதனிலை, ஸம் (உடன், கூட, together), தா (இடு, வை, put) என்னும் இருசொற் கொண்ட கூட்டுச்சொல்; சந்து என்பதன் மூலமான 'அந்து' என்னும் தமிழ் முதனிலையோ தனிச்சொல்.

முச்சந்தி, நாற்சந்தி, சந்துசெய்தல், சந்தை என்னும் பொருள்கள் வடசொல் வழக்கிலில்லை.

சென்னை அகரமுதலியில், தெருக்கூடுமிடத்தைக் குறிக்கும் சந்தி யென்னுஞ் சொற்கும் சந்து என்னும் சொற்கும் 'ஸம்-தி' (sam-dhi) என்னும் வடசொல் வடிவும், சந்தை யென்னுஞ் சொற்கு 'ஸம்-தா' (sam-dhā) என்னும் வடசொல் வடிவும், காலை மாலை வேளையைக் குறிக்கும் சந்தி யென்னுஞ் சொற்கு 'ஸம்-த்யா' (sam-dhyā) என்னும் வடசொல் வடிவும் மூலமாகக் காட்டப் பட்டுள்ளன. அவற்றின் பொருந்தாமை, தமிழின் முன்மையையும் தமிழ்ச்சொல்லின் மூலத்தையும் நோக்கின் வெள்ளிடை மலையாம்.

அந்தி[2] *andi*, பெ. (n.) *அக்கை (சங்.அக.)*; elder sister.

ம. அந்தி; தெ. அந்திக.

[அத்தி = தாய், அக்கை. அத்தி → அந்தி.]

அந்தி[3] *andi*, பெ. (n.) ***தில்லைமரம்*** (மலை.); blinding tree, tiger's milk-spurge, *Excoecaria agallocha* (சா.அக.).

அந்தி[4] *andi*, பெ. (n.) (ஓகம்) **அறுநிலைக் களங்களுள் (ஆறாதாரங்களுள்) ஒன்றான உந்திவட்டத்தில் பத்திதழ்த் தாமரை வடிவுடையதாகக் கருதப்படும் இடம்**; (Yoga) a mystic centre in the body, described as a ten-petalled lotus and situated in the navel region.

அந்தி[5] *andi*, இடை. (part.) **ஓர் அசைச்சொல்** (பொதி.நி.); an expletive.

[அந்தில் → அந்தி.]

''அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவியென் றாயிரண் டாகு மியற்கைய என்ப''
(தொல். சொல். இடை. 19).

அந்திக்கடை *andi-k-kadai*, பெ. (n.) **மாலையில் விற்குங்கடை, அல்லங்காடி**; evening bazaar.

ம. அந்திக்கட

[அந்தி + கடை.]

அந்திக்காப்பு *andi-k-kāppu*, பெ. (n.) 1. **குழந்தைகளுக்கு அந்திப்பொழுதிற் செய்யுங் காப்புச்சடங்கு**; mystic rite performed in the evening for a child, to avert evil (திவ். பெரியாழ். 2:8, வியா. பிர.). 2. **கடவுட்கு மாலைக்காலத்துச் செய்யும் வழிபாடு** (மதுரைக். 460, நச். உரை, அடிக் குறிப்பு); evening service performed in a temple.

ம. அந்திக்காப்பு

[அந்தி + காப்பு.]

அந்திக்கோன் *andi-k-kōn*, பெ. (n.) **இரவிற்கு அரசனான திங்கள்**; moon. "அந்திக் கோன்றனக் கேயருள் செய்தவர்'' (தேவா. 5.25:1).

[அந்தி + கோன்.]

அந்திகாசம் *andi-kāšam*, பெ. (n.) **மாலைக் கண்**; night blindness, *Nyctalopia* (சா.அக.).

[அந்தி + காசம். Skt. kāca > த. காசம் = கண்ணோய்.]

அந்திகால் *andi-kāl*, பெ. (n.) **சுரபுன்னை, ஒரு மரம்**; a tree, soorapoon, *Octrocarpus longifolius* (சா.அக.).

அந்திகாவலன் *andi-kāvalan*, பெ. (n.) **இராக் காலத்துக் காவலன் போன்ற திங்கள்**; moon, as the lord of night or night guardian. ''அந்தி காவல னமுதுறு பசுங்கதிர்'' (திவ். பெரியதி. 8.5:1).

அந்திகுணம் *andiguṇam*, பெ. (n.) **பெருங் காயம்**; asafoetida (சா.அக.).

அந்திகூப்பு-தல் *andi-kūppu-*, 5 செ.கு.வி. (v.i.) **மாலைத் தெய்வ வணக்கஞ் செய்தல்**; to offer evening prayers or perform evening worship. ''மந்திரத் தந்தி கூப்பி'' (பெருங். உஞ்சைக். 55:7-8).

ம. அந்தி வழங்குக

அந்திகை[1] *andigai*, பெ. (n.) 1. **அண்மை**; nearness, neighbourhood (சங்.அக.). 2. **இரவு**; night.

ம. அந்திகம்; தெ. அந்திகமு.

அந்திகை[2] *andigai*, பெ. (n.) **அக்கை**; elder sister (சங்.அக.).

ம. அந்தி; தெ. அந்திக.

[அத்தி = அன்னை, அக்கை. அத்தி → அந்தி → அந்திகை = இளைய அக்கை. 'கை' கு.பொ.பின். ஒ.நோ: கன்னி → கன்னிகை.]

அந்திகை[3] *andigai*, பெ. (n.) **அடுப்பு**; oven (சங்.அக.).

ம., தெ. அந்திக; க. அந்திகெ.

அந்திசந்தி *andi-šandi*, பெ. (n.) 1. **காலை அல்லது மாலை**; morning or evening. 2. **காலையும் மாலையும்**; morning and evening. அந்தியுஞ் சந்தியும் = 1. **காலையும் மாலையும்**; both (in the) morning and evening. 2. **எப்போதும்**; always. அவனுக்கு அந்தியுஞ் சந்தியும் இதுதான் வேலை (உ.வ.).

அந்திசந்துவாதம் *andi-šandu-vādam*, பெ. (n.) **இராக்காலத்தில் மூட்டுகளைத் தாக்கும் ஊத (வாத) நோய்**; a disease affecting the joints during the night, evening; arthritis, gout (சா.அக.).

[அந்தி + சந்து + Skt. vāta > த. வாதம்.]

அந்திதோசம் *andi-tōšam*, பெ. (n.) **அந்திப்புள் தோசம்** பார்க்க; see *andi-p-puḷ-tōšam*.

[அந்தி + Skt. dōṣam > த. தோசம்.]

அந்திநட்சத்திரம் *andi-naṭcattiram*, பெ. (n.) **மாலைவெள்ளி, விடிவெள்ளிக்கு எதிர்**; evening star (W.) opp. *viḍiveḷḷi*.

[அந்தி + நட்சத்திரம். Skt. nakṣatra > த. நட்சத்திரம் = வெள்ளி.]

அந்திப்பீளை *andi-p-pīḷai*, பெ. (n.) **சிறுபூளை**; woolly caper, *Achyranthes lanata* (சா.அக.).

[அந்தி + பீளை. பூளை → பீளை.]

அந்திப்புள்தோசம் *andi-p-puḷ-tōšam*, பெ. (n.) **பொழுதடையும் நேரத்தில் பறவைகள் கூடு நோக்கிப் பறந்து போகும்போது குழவிகளைப் புறத்துக் காட்டலால் நேரும் தீட்டு**; disease of babies caused by their being exposed at sunset when birds fly to their nests.

[அந்தி = மாலைத் தொடக்க வேளை. புள் = பறவை. **Skt.** dōṣa > *த. தோசம் = குற்றம், தீட்டு.]*

தோஷ என்னும் வடசொல் தமிழில் தோடம் என்றும் திரியும். அதனால், **பாலவாகடத் திரட்டு** என்னும் மருத்துவ நூலில் (93), 'அந்திப்புட்டோடம்' என்னும் வடிவு ஆளப்பட்டுள்ளது.

அந்திப்பூ *andi-p-pū*, பெ. (n.) **அந்திமல்லிகை** (மலை.); four o'clock flower, *Mirabilis jalapa.*

ம. அந்திமலரி, அந்திமந்தாரம்.

[அந்தி + பூ.]

இது, அந்தி மந்தார வேளையிற் பூப்பதால் அந்திமந்தாரம், அந்திமந்தாரை யென்றும், சாயுங்காலம் 5 மணிக்குப் பூப்பதால் அஞ்சு மணிப் பூ என்றும் பெயர் பெறும்.

அந்திப்பொழுது *andi-p-poḻudu*, பெ. (n.) **கையெழுத்து மறையும் மாலை மசங்கல் நேரம்**; evening twilight, dusk, about the time when written characters start fading and become indistinct (சா.அக.).

ம. அந்திகெட்டந்தி

[அந்தி + பொழுது.]

அந்திபகல் *andi-pagal*, பெ. (n.) 1. **இரவும் பகலும்**; night and day. "அந்திபக லாச் சிவனை யாதரித்து" (பட்டினத்துப். பொது. 2.). 2. (சிவ.) **கீழால் மேலால் நிலைகளைக் (கேவல சகலாவத்தைகளைக்) குறிக்கும் குறிப்புச்சொல்**; (Šaiva.) symbolic term standing for the descending and ascending states of the soul through the five stages from wakefulness to absolute unconsciousness.

அந்திமந்தாரம் *andi-mandāram*, பெ. (n.) **அந்திமந்தாரை** பார்க்க; see *andi-mandārai.*

அந்திமந்தாரை *andi-mandārai*, பெ. (n.) **அஞ்சுமணிப் பூ**; four o'clock flower, *Mirabilis jalapa.*

ம. அந்திமந்தாரம்

மறுவ. அந்திமந்தாரம், அந்திமல்லி, அந்திமல்லிகை, அந்திமலர்ந்தான், அந்திமலரி.

அந்திமந்தி *andi-mandi*, பெ. (n.) **மாலை மங்கற் பொழுது**; evening twilight. அந்திமந்தி நேரத்தில் வெளியே போகாதே (உ.வ.).

அந்திமல்லி *andi-malli*, பெ. (n.) **அந்திமந்தாரை** பார்க்க; see *andi-mandārai.*

ம. அந்திமலரி

அந்திமல்லிகை *andi-malligai*, பெ. (n.) **அந்திமந்தாரை** பார்க்க; see *andi-mandārai.*

அந்திமலர்ந்தான் *andi-malarndāṉ*, பெ. (n.) **அந்திமந்தாரை** பார்க்க; see *andi-mandārai.*

அந்திமலரி *andi-malari*, பெ. (n.) **அந்திமந்தாரை** பார்க்க; see *andi-mandārai.*

அந்திமாலை *andi-mālai*, பெ. (n.) 1. **மாலைப் பொழுது**; evening. "அந்திமாலைச் சிறப்புச் செய் காதையும்" (சிலப். பதி. 66). 2. **மாலைக்கண்**; night-blindness, *Nyctalopia.* 3. **பகுதி அல்லது முழுதும் பார்வை கெடும் கண்ணோய் வகை** (M.L.); partial or total loss of sight, *Amaurosis.*

ம. அந்திக்குருடு

அந்தியுழவு *andi-y-uḻavu*, பெ. (n.) **கோடையில் அந்தி நேரத்தில் உழுகை** (நாஞ்.); tilling the soil in the evening time during summer (Nāñ.).

[அந்தி + உழவு.]

அந்திரர் *andirar*, பெ. (n.) **ஆந்திரர்**; the Āndhras. "அந்திரர் முதலிய வரசர்" (பெருந்தொ. 783).

Skt. āndhra

அண்டிரன், ஆந்திரன் பார்க்க; see *aṇḍiraṉ, āndiraṉ.*

அந்திரன் *andiraṉ*, பெ. (n.) **வேடன்** (சிந்தா.நி. 160); hunter.

Skt. andhra

அந்தில்[1] *andil*, பெ. (n.) 1. **இடம்** (அக.நி.); place. 2. **இரண்டு** (பொதி.நி.); two. —, சு.கு.வி.எ. (demons. adv.) **அவ்விடம்**; there. "அந்தி லரங்கத் தகன்பொழில்" (சிலப்.

11 : 6). —, இடை. (part.) **ஓர் அசைச்சொல்**; an expletive in poetry.

"அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவியென்
றாயிரண் டாகு மியற்கைய என்ப"
(தொல். சொல். இடை. *19*).

[அந்த + இல் — அந்தில். இல் = இடம்.]

அந்தில்[2] *andil*, பெ. (n.) **வெண்கடுகு** (பிங்.); white mustard, *Brassica alba*.

அந்திவண்ணன் *andi-vaṉṉaṉ*, பெ. (n.) **செவ் வானம்போற் சிவந்த சிவன்** (பிங்.); Šiva, His body having the red hue of sunset.

[அந்தி + வண்ணன். வண்ணம் → வண்ணன்.]

அந்து[1] *andu*, சு.கு.வி.எ. (demons. adv.) **அப்படி**; in that way. "அந்துசெய் குவெனென" (கம்பரா. யுத்த. இராவணன்வதைப். *61*).

க. அந்து; தெ. அடு; து. அஞ்ச.

[அ → அன் → அனை → அனைத்து → அந்து = அவ்வளவு, அப்படி.]

அந்து[2] *andu*, பெ. (n.) **நெற்பூச்சி**; a small grey-winged insect found in stored paddy (செ.அக.). "அந்துகடி துண்டுபோய கதிர்நெல்லும்" (பிரபோத. *19 : 6*). 'அந்தூது நெல்லானேன்' (பழ.). — a small insect that causes damage to stored paddy or other grains, *Weevil* (சா.அக.).

க. அந்தி

அந்து[3] *andu*, பெ. (n.) **மொத்தக் கூட்டுத் தொகை** (இ.வ.); total, aggregate (Loc.).

தெ. அந்து

[ஒருகா. அனைத்தும் → அந்தும் → அந்து = அவ்வளவும், முழுதும்.]

அந்துக்கண்ணி *andu-k-kaṉṉi*, பெ. (n.) **புளிச்சைக்கண்ணி**, blear-eyed, ill-looking girl or woman. 'அந்துக்கண்ணிக்கு அழுதாலும் வாரான் அகமுடையான்' (பழ.).

[அந்து + கண்ணி.]

அந்துளியிந்துளியா - தல் *anduḷi-y-induḷi-y-ā-*, 4 செ.கு.வி. (v.i.) (சங்.அக.) *1*. **தலை சுழலு தல்**; to suffer from vertigo. *2*. **பதைபதைத் தல்**; to throb with pain, shiver with fear or grief. —, 4 செ.குன்றாவி. (v.t.) **சூறையாடல்**; to plunder, pillage.

அந்தை *andai*, பெ. (n.) **ஒரு பழைய நிறைவகை** (தொல். எழுத்து. தொகை. *28*, நச். உரை); an ancient standard weight.

[ஒருகா. அண்டை → அந்தை.]

அந்தைமந்தை *andai-mandai*, பெ. (n.) **மந்த குணம்**; sluggishness, dull nature (சா.அக.).

அந்தோ[1] *andō*, இடை. (int.) *1*. **வியப்புருக்கக் குறிப்புச் சொல்**; an exclamation of reverential wonder. "அந்தோவென் னாருயிரே யரசே யருள்" (திவ். பெரியதி. *7 . 2 : 6*). *2*. **இரக்கக் குறிப்புச் சொல்**; an exclamation of pity. "பெற்றிலள் தவமந்தோ பெருநில மகள்" (கம்பரா. அயோத். வனம்புகு. *25*).

[அத்தன் (தந்தை) → அத்தோ (விளி) → அந்தோ.]

இச் சொல் இரக்கம், துயரம், துன்பம், வியப்பு முதலிய பல குறிப்புகளை உணர்த்து மேனும், இரக்கக் குறிப்பே இதற்குச் சிறப் பாக வுரியதாம்.

ஐயோ என்னும் சொல் இரக்கம், துயரம், துன்பம், வியப்பு முதலிய பல குறிப்புகளை யுணர்த்தினும், இரக்கக் குறிப்பையே சிறப் பாக வுணர்த்துதலை இதனுடன் ஒப்பு நோக்குக.

சொல்லாராய்ச்சியும் மொழியாராய்ச்சியு மில்லாத காலத்தில், நச்சினார்க்கினியரும், தெய்வச்சிலையாரும், பிறரும் 'அந்தோ' என்னும் குறிப்புச் சொல்லைச் சிங்களச் சொல் லென்றும் வடசொல்லென்றும் மயங்கினர். அது சிங்களத்திற்கும் வடமொழிக்கும் முந் தின குமரிநாட்டுத் தென்சொல் லென்பதை அவரறியார்.

"நன்றீற் றேயும் அன்றீற் றேயும்
அந்தீற் றோவும் அன்னீற் றோவும்
அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்"

என்னும் தொல்காப்பிய நூற்பா (சொல். இடை. *34*) உரையில், 'அந்தீற் றோவும் அன்னீற் றோவுமாவன: அந்தோ அன்னோ என்பன' என்றும், 'அடுக்கியும் அடுக்காதும் இரங்கற் குறிப்பு வெளிப்படுக்கும்' என்றும், சேனாவரையர் கூறியிருத்தல் காண்க.

தமிழிலுள்ள இரங்கல் துயர துன்ப வியப் புக் குறிப்புச் சொற்களுட் பெரும்பாலன பெற்றோர் முறைப்பெயரின் விளிகள் என்னும் உண்மையை அறியின், அந்தோ

அன்னோ முதலிய குறிப்புச் சொற்களின் மூலம் வெள்ளிடைமலையாய் விளங்கும்.

[அத்தன் → அத்தோ → அந்தோ. அத்தன் → அத்த → அந்த → அந்தவோ → அந்தகோ. அத்தோ → அச்சோ. அன்னை → அன்னோ.]

அந்த² பார்க்க; see *anda*².

அந்தோ² *andō*, இடை. (int.) *கவனிக்கச் செய்யுஞ் சேய்மைச்சுட்டுக் குறிப்பு*; remote demonstrative. அந்தோ பார்; behold there!

[அ → அது → அத்து → அந்து → அந்தோ. ஒ.நோ: அதோ.]

அந்தோர் *andōr*, பெ. (n.) *நெல்லி* (மலை.); emblic myrobalan (செ.அக.) — (சா.அக.) Indian gooseberry tree, *Phyllanthus emblica*.

அநாகரிகம் *anāgarigam*, பெ. (n.) 1. *நாகரிகமின்மை*; boorishness, uncivilizedness. 2. *பண்பாடின்மை*; uncultured state.

[அல் → அ + நாகரிகம்.]

அப்ப *appa*, பெ. (n.) *அப்பன் என்னும் பெயரின் விளிவடிவம்*; voc. of *appan*. —, இடை. (int.) *வியப்புக் குறிப்புச் சொல்*; an exclamation of wonder.

அப்பக்காய்க்கறியமிது *appa-k-kāy-k-kari-y-amidu*, பெ. (n.) *அப்பக்காய்க்கறியமுது* பார்க்க; see *appa-k-kāy-k-kari-y-amudu*. 'அப்பக்காய்க் கறியமிதுக்கு' (S.I.I. ii, 127).

அப்பக்காய்க்கறியமுது *appa-k-kāy-k-kari-y-amudu*, பெ. (n.) *சமைத்த அப்பக்காய்க் கறி*; a kind of curry preparation of *appakkāy*.

'அமிது' கொச்சை வடிவம். அப்பைக்காய் பார்க்க; see *appai-k-kāy*.

[அப்பக்காய் + கறி + அமுது.]

அப்பக்கொடி *appa-k-kodi*, பெ. (n.) *கோவைக் கொடிவகை*; a common creeper, weed, *Ageratum conyzoides* (சா.அக.).

ம. அப்ப

அப்பகம் *appagam*, பெ. (n.) வட்டத்திருப்பி; Indian pareira, *Cissampelos pareira* (சா.அக.).

மறுவ. அப்பட்டர், அப்பட்டா, அப்பம்.

அப்பகாசம் *appakāsam*, பெ. (n.) *சீமைச் சோம்பு*; foreign aniseed or Armenian cumin, *Carum carui* (சா.அக.).

அப்பச்சன் *appaccan*, பெ. (n.) 1. *தந்தையின் தந்தை*; paternal grandfather. 2. *தந்தை* (நாஞ்.); father (Nāñ.).

[அப்பன் + அச்சன் — அப்பச்சன்.]

அப்பிச்சன் என்பது நாஞ்சில்நாட்டுக் கொச்சை வழக்கு.

அப்பச்சி¹ *appacci*, பெ. (n.) 1. *பாட்டன்* (பள்.); grandfather (Palla.). 2. *அப்பன்* (செட்.நா.); father (C.N.). 'அப்பச்சி குதம்பையைச் சூப்பப் பிள்ளை முற்றின தேங்காய்க்கு அழுகிறதுபோல', 'அப்பச்சி கோவணத்தைப் பருந்து கொண்டு ஓடுகிறது, பிள்ளை வீரவாளிப் பட்டுக்கு அழுகிறது' (பழ.). 3. *பள்ளர் மறவரை விளிக்கும் மதிப்புரவுப் பெயர்*; a term of respect used by Pallas in addressing Maravas.

ம. அப்பச்சன்

[அப்பன் + அச்சு — அப்பச்சு → அப்பச்சி = அப்பனைப் பெற்ற பாட்டன். அச்சன் = தந்தை. அச்சன் → அச்சு. ஒ.நோ: அப்பன் → அப்பு.]

அப்பச்சன் என்றிருக்க வேண்டிய பெயர் அப்பச்சி என வழங்கிவருகின்றது. தந்தையை அப்பச்சி யென்னும் செட்டிநாட்டு வழக்கு, பாட்டனைத் தந்தை பெயராலும் பாட்டியைத் தாய் பெயராலும் விளிக்கும் வழக்கின் தலைமாற்றாகும்.

அப்பச்சி² *appacci*, பெ. (n.) *சிற்றுண்டி*; light refreshment.

ம. அப்பாச்சி; க., தெ. அப்பச்சி; பிராகி. அபூப.

[ஒருகா. அப்பம் + சோய் (சோறு) — அப்பச் சோய் என்னும் குழந்தை வழக்காகவோ செவிலி மொழியாகவோ (Nursery usage) இருக்கலாம்.]

அப்பட்டச்சரக்கு *appatta-c-carakku*, பெ. (n.) *உயர்ந்த பண்டம்*; high quality goods.

அப்பட்டம் பார்க்க; see *appattam*.

அப்பட்டச் சரக்கு என்பது கொச்சை வழக்கு.

அப்பட்டம் *appattam*, பெ. (n.) 1. *கலப்பற்றது, தூயது*; that which is unmixed, unadulterated, pure. அப்பட்டம் பால் (அப்பட்டப் பால்), அப்பட்டம் எண்ணெய். 2. *வெளிப்படையானது* (இ.வ.); that which is plain (Loc.).

க., பட. அப்பட்ட; தெ. அப்பட்டமு, அபூடமு; கொங்., மரா. அபூட; பிராகி. அபுட்ட.

[ஒருகா. அப்பு + அற்றம் – அப்பற்றம் → அப்பட்டம் = நீர் கலவாதது.]

அப்பட்டர் *appaṭṭar*, பெ. (n.) **அப்பகம்** பார்க்க; see *appagam.*

அப்பட்டா *appaṭṭā*, பெ. (n.) வட்டத்திருப்பி (மலை.); Indian pareira.

அப்பகம் பார்க்க; see *appagam.*

அப்படா *appaḍā*, இடை. (int.) 1. **வியப்புக் குறிப்புச் சொல்**; an exclamation of wonder. 2. **இளைப்பாறற்குறிப்புச் சொல்**; an exclamation of repose. வழிப்போக்கன் மரத்தடியில் 'அப்படா' என்று உட்கார்ந்தான் (உ.வ.).

[அப்பன் → அப்ப (விளி) + அடா (ஆ.பா. விளி) – அப்படா.]

அப்படி *appaḍi*, கு.வி.எ. (adv.) 1. **அவ்வாறு**; so, in that way. "அப்படி யொருத்தி செல்ல" (கந்தபு. தேவ. தெய்வ. 89). 2. **அவ்வரிசையில்**; in that order. 'அப்படிப் பார்த்தாலும் விகடகவி, இப்படிப் பார்த்தாலும் விகடகவி' (தென்னாலிரா.). 'அப்படிச் சொல் வழக்கை, அவன் கையில் கொடு உழக்கை' (பழ.). 3. **அத்தன்மை**; in that manner.

ம. அப்படி

[அ + படி – அப்படி. படி = வகை, வண்ணம்.]

அப்படிக்கூடி *a-p-paḍi-k-kūḍi*, கு.வி.எ. (adv.) **அவ்வழியாக**; by that way. அப்படிக்கூடி வா, போ (உ.வ.).

[அ + படி + கூடி. கூடு → கூடி (இ.கா. வி.எ.).]

அப்படிப்பட்ட *a-p-paḍi-p-paṭṭa*, கு.பெ.எ. (adj.) **அத்தன்மையான**; of that type, kind or category. அப்படிப்பட்ட வள்ளலை இன்று காணமுடியாது. அப்படிப்பட்ட திருட்டுப் பயலை ஏன் வீட்டில் வைத்துக்கொண்டிருக்கிறாய்? (உ.வ.).

[அ + படி + பட்ட. படு → பட்ட (இ.கா. பெ.எ.). 'படு' துணைவினை.]

அப்படிப்போல் *a-p-paḍi-p-pōl*, கு.வி.எ. (adv.) **அதைப்போல்**; like that, similarly.

"ஆனைகட்டச் சங்கிலி தானெடுத்துக்
கொடுக்கும்
அப்படிப்போல் நமது வாயும்நமைக்
கெடுக்கும்"
(ச. ச. ச. கீர்த்.)

[அ + படி + போல்.]

அப்படியப்படியே *a-p-paḍi-y-a-p-paḍiyē*, கு.வி.எ. (adv.) 1. **ஒன்றையும் எடுக்காமல் உடனே**; without removing anything, leaving things as they are. தொலைவரி வந்தவுடன், வேலைக்காரரை மட்டும் வைத்துவிட்டு எல்லாரும் அப்படியப்படியே எழுந்து புறப்பட்டுவிட்டார்கள் (உ.வ.). 2. **வெவ்வேறு திசையில் அவரவரிடத்திற்கு**; in various directions to their respective places. கூட்டம் முடிந்தவுடன் எல்லாரும் அப்படியப்படியே போய்விட்டார்கள் (உ.வ.).

[அ + படி + அ + படி + ஏ (இடை.). 'அப்படியப்படி' அடுக்குத்தொடர்.]

அப்படியாதற்குகந்த *a-p-paḍi-y-ādaṟk(u)-uganda*, பெ.எ. (adj.) **அப்படிப்பட்ட, அருமையான**; of such an excellence or merit. அப்படியாதற் குகந்த பெருமக்களே போய்விட்டார்கள்; இனி மற்றவர்களைப்பற்றிக் கவனிப்பானேன்? (உ.வ.).

[அ + படி + ஆதற்கு + உகந்த. ஆ → ஆதல் (தொ.பெ.). ஆதற்கு (4ஆம் வே.). உக → உகந்த (இ.கா.பெ.எ.). உகத்தல் = தகுதல், ஏற்றல்.]

இது இன்று 'அப்படியாக்கொத்த', 'அப்படியாக்கொந்த' என்று கொச்சையாய் வழங்குகின்றது.

அப்படியாகப்பட்ட *a-p-paḍi-y-āga-p-paṭṭa*, பெ.எ. (adj.) **அப்படிப்பட்ட சிறந்த**; of such merit and importance. அப்படியாகப்பட்ட மக்களை யெல்லாம் பெற்றுவிட்டு இந்த நிலைமையிலிருக்கிறேன் (உ.வ.).

[அ + படி + ஆக + பட்ட. ஆகு → ஆக (நி.கா.வி.எ.). படு → பட்ட (இ.கா.பெ.எ.). 'படு' துணைவினை.]

அப்படியிப்படி *a-p-paḍi-y-i-p-paḍi*, வி.எ. (adv.) 1. **அப்பக்கம் இப்பக்கம், அத்திசை இத்திசை**; this side or that side. அப்படியிப்படித் திரும்பாதே. 2. **ஏதேனும் மாறாக**; in any way against, anything different from.

உன்னைப்பற்றி அப்படியிப்படி யென்று ஒன்றும் என் காதில் விழக்கூடாது (உ.வ.).

[அ + படி + இ + படி.]

அப்படியும் *a-p-paḍi-y-um*, வி.எ. (adv.) 1. ***அவ் வகையிலும்***; in that way also. அப்படியுஞ் சொல்லிப் பார்த்தேன்; அவன் கேட்கவில்லை (உ.வ.). 2. ***அப்படி யிருந்தாலும்கூட***; even in that event, even if it were so. அப்படியும் அவன் தன் மனைவியைத் தன்னந்தனியாய் விட்டுவிட்டுப் போகலாமா? (உ.வ.).

[அ + படி + உம் (இடை.).]

அப்படியும் இப்படியும் *a-p-paḍi-y-um-i-p-paḍi-y-um*, வி.எ. (adv.) 1. ***அப்பக்கமும் இப்பக்கமும்***; this side and that side. அப்படியும் இப்படியும் திரும்பிக்கொண்டே யிருக்கிறான் (உ.வ.). 2. ***அவ்வகையிலும் இவ்வகையிலும், இருவகை யிலும், சார்பாகவும் மாறாகவும்***; in this way and that way, both ways, for and against. அவன் அப்படியும் பேசுவான் இப்படியும் பேசுவான் (உ.வ.).

[அ + படி + உம் + இ + படி + உம்.]

அப்படியே *a-p-paḍi-y-ē*, கு.வி.எ. (adv.) 1. ***அந் நிலையிலேயே***; in the same state or situation. மரத்திலிருந்தவன் அப்படியே கீழே விழுந்து விட்டான். காமராசர் இளம்பருவத்திலேயே பேராயக்கட்சியிற் சேர்ந்து இறுதிவரை அப்படியே இருந்துவிட்டார் (உ.வ.). 2. ***ஒருவர் சொன்னபடியே***; exactly as one said. ஆசிரியர் சொன்னதை அப்படியே மாணவன் சொல்லிவிட்டான் (உ.வ.). 3. ***ஒருவர் செய்த படியே***; exactly as one did. தியாகராசப் பாடகர் எப்படிப் பாடினாரோ அப்படியே இவனும் பாடுகிறான் (உ.வ.). 4. ***அந்த வழியே***; by that way alone. அப்படியே போ (உ.வ.).

[அ + படி + ஏ (இடை.).]

அப்பத்தாள் *appattāḷ*, பெ. (n.) 1. ***தந்தையின் தாய்*** (நாஞ்.); father's mother (**Nāñ.**). 2. ***தமக்கை; அக்கை*** (யாழ்ப்.); elder sister (J.).

[அப்பன் + ஆத்தாள் – அப்பாத்தாள் → அப் பத்தாள். ஆத்தை → ஆத்தா → ஆத்தாள்.]

முறைப்பெயர்களின் விளிவடிவங்கள் பாலீறு பெற்று வழங்குவது கொச்சைத் தமிழ் வழக்கு.

அப்பநிவேதனம் *appa-nivēdaṉam*, பெ. (n.) ***அப்பமுது***; bread or cake offering. 'அப்ப நிவேதனம்' (S.I.I. iii, 150).

அப்பமுது பார்க்க; see *appamudu*.

[அப்பம் + நிவேதனம். **Skt.** nivēdana **> த.** *நிவேதனம்.]*

அப்பப்ப *appappa*, இடை. (int.) ***வியப்பு, இரக்கம், துயரம் முதலியவற்றின் குறிப்பு***; exclamation of wonder, pity, grief, etc. அப்பப்ப, வறுமை கொடிது! (உ.வ.).

ம. அப்பப்பா; க., தெ., பட. அப்பப்ப; து. அப்ப.

[அப்பன் → அப்ப (விளி). அப்ப + அப்ப – அப்பப்ப.]

அப்பப்பா *appappā*, இடை. (int.) அப்பப்ப பார்க்க; see *appappa*.

[அப்பன் → அப்ப (விளி); அப்ப + அப்பா – அப்பப்பா.]

அப்பம்[1] *appam*, பெ. (n.) 1. ***பண்ணிகார வகை***; round cake of rice flour and sugar, fried in ghee. ''அப்பம்......சுட்டுவைத்தேன்'' (திவ். பெரியாழ். 2.4:5). 'அப்பத்தை எப்படிச் சுட்டாளோ, தித்திப்பை எப்படி நுழைத் தாளோ?', 'அப்பம் என்றால் பிட்டுக்காட்ட வேண்டுமா?', 'அப்பம் சுட்டது சட்டியில் அவல் இடித்தது திட்டையில்' (பழ.). 2. ***அடை*** (பிங்.); thin cake, wafer, bread. 3. ***உணவு*** (கிறித்.); food (Chr.). 'எங்கள் அன்றாட அப்பத்தை இன்று எங்களுக்குத் தாரும்' (பரமண்டல மன்றாட்டு).

ம. அப்பம்; க., து. அப்ப; தெ. அப்பமு; வ. அபூப; பிராகி. அபூய, அபூவ; பிரா. அப்பம்.

[உப்புதல் = பருத்தல், எழும்புதல். உப்பு → உப்பம் → அப்பம்.]

அப்பம்[2] *appam*, பெ. (n.) 1. ***புட்டுத்திருப்பி***; a plant, *Sida acuta* (சா.அக.). 2. ***வட்டத் திருப்பி***; Indian pareira, *Cissampelos pareira* (சா.அக.).

அப்பமுது *appamudu*, பெ. (n.) ***அப்பப் படையல்***; bread or cake offering.

[அப்பம் + அமுது.]

அப்பர்[1] *appar*, பெ. (n.) 1. ***ஆணாடு, வெள்ளாட்டுக் கடா, செம்மறியாட்டுக் கடா***;

he-goat, ram. ''மோத்தையுந் தகரும் உதளும் அப்பரும்.....................யாத்த ஆண்பாற் பெயரென மொழிப'' (தொல். பொருள். மர. 2). 2. **ஆண்குரங்கு;** male monkey. 'அப்பர் குரங்கென் றலுமாம்' (தொல். பொருள். மர. 47, பேரா. உரை).

[ஒருகா. உப்பு → உப்பர் → அப்பர் = பருத்தது.]

விலங்குகளில் பெண்ணினும் ஆண் பருத் திருப்பது பெரும்பான்மை.

அப்பர்[2] *appar,* பெ. (n.) *1. தேவார மூவருள் ஒருவரும் சிவசமய குரவர் நால்வருள் ஒருவரும் ஆன திருநாவுக்கரசு நாயனார்; Tirunāvuk-karašu Nāyanār,* one of the three celebrated authors of the *Tēvāram.*

[அப்பன் → அப்பர் → அப்பனார் (உயர்வுப் பன்மை).]

''தொழுதணைவுற் றாண்டஅர சன்புருகத்
தொண்டர்குழாத் திடையே சென்று
பழுதில்பெருங் காதலுடன் அடிபணியப்
பணிந்தவர்தம் கரங்கள் பற்றி
எழுதரிய மலர்க்கையால் எடுத்திறைஞ்சி
விடையின்மேல் வருவார் தம்மை
அழுதழைத்துக் கொண்டவர்தாம் **அப்பரே**
என**அவரும் அடியேன்** என்றார்''

(பெரியபு. திருநாவுக். *182*). *2.* ***தந்தையார்;*** father. ''விற்பரம ரப்பரருள் வித்தகம ருப்புடைய பெருமாளே'' (திருப்பு. *3*). *3.* **சிவன்;** Šiva. ''அந்நீர் முகந்து கொண்டேறி அப்பர் கோயி லடைந்தகலுள்'' (பெரியபு. நமிநந்தி. *13*).

திருநாவுக்கரசரின் முதுமையுஞ் சிவத் தொண்டும் நோக்கி, திருஞானசம்பந்தர் அவரை 'அப்பர்' என்றார். மூத்த பிள்ளை யாரின் தந்தை சிவனென்பது தொல்கதை (புராணம்). இறைவன் என்னும் முறையில் சிவன் எல்லா வுயிர்கட்கும் தந்தை.

அப்பவருக்கம் *appa-varukkam,* பெ. (n.) ***அப்பம் என்னும் பலகாரவினம்;*** various kinds of cakes or pastry, numbering ten and belonging to the class *appam.*

அபூபம், கஞ்சம், இலையடை, மெல்லடை, நொலையல், பூரிகை, சஃகுல்லி, போனகம், மண்டிகை, பொள்ளல் என்னும் பத்தும் அப்பவினமாம்.

''அபூபங் கஞ்ச மிலையடை மெல்லடை
நொலையல் பூரிகை சஃகுல்லி போனக
மண்டிகை பொள்ள லு மப்ப வருக்கம்''
(பிங். *6 : 17*).

அப்பம் > **Skt.** abūba.

பிங்கல நிகண்டு 10ஆம் நூற்றாண்டின தாதலால், அபூப என்னும் வடசொல் வடிவை ஆண்டுள்ளது.

*[அப்பம் + வருக்கம். **Skt.** varga > த. வருக்கம் = இனம்.]*

அப்பவாணிகம் *appa-vāṇigam,* பெ. (n.) *பண்ணிகார விற்பனை;* sweet-meat selling.

[அப்பம் + வாணிகம்.]

அப்பவாணிகர் *appa-vāṇigar,* பெ. (n.) ***பண்ணிகாரம் விற்போர்;*** sweet-meat sellers (சிலப். 5 : 24, அடியார்க். உரை).

[அப்பம் + வாணிகர்.]

அப்பழுக்கு *appaḻukku,* பெ. (n.) *1.* ***மாசு, அழுக்கு, கறை;*** blot, dirt, speck. அவன் உடுத்திருக்கும் ஆடை அப்பழுக்கில்லாதது (உ.வ.). 2. **குற்றம், மாசுமறு;** fault, guilt, defect. அவன் அப்பழுக் கில்லாதவன் (உ.வ.).

[ஒருகா. அப்பு + அழுக்கு — அப்பழுக்கு. அப்புதல் = படையாய் ஒட்டிக்கொண் டிருத்தல்.]

அப்பளக்காரம் *appaḷa-k-kāram,* பெ. (n.) ***அப்பளத்திற்குப் பயன்படுத்தப்படும் உறைப்பும் உவர்ப்புமுள்ள ஒரு கடைச்சரக்கு;*** a sub-carbonate of soda, used chiefly in manufacturing *appaḷams.*

''குடல்வாதஞ் சூலை கொடிதான வாத
மடல்புரியு மையு மறுக்கும் — நெடுவயிற்றி
னுப்பிசத்தி னோடே யுயர்குன்ம நோயகற்று
மப்பளக் கார மது''
(பதார்த்த. *1134*).

'அப்பளாக்காரம்' என்பது கொச்சை வழக்கு.

[அப்பளம் + காரம்.]

அப்பளக்குழவி *appaḷa-k-kuḻavi,* பெ. (n.) ***அப்பளந் தேய்க்கும் உருளைக்கட்டை;*** rolling pin for smoothing out the dough for flour cakes.

[அப்பளம் + குழவி.]

அப்பளம் *appaḷam,* பெ. (n.) ***உழுத்தமாவினாலும் அரிசிமாவினாலும் செய்யப்படும் மெல்லிய அடை;*** light, thin flour-cake, usually of black gram and rice.

''வார்த்தை யுண்டாக்கு மாபலத்தை யுங்கொடுக்குஞ்
சீதத்தை மேவுகபந் தீர்க்குங்காண் — ஓதுமுழுந்
தப்பளஞ்சோற் றப்பளங்கா லாதிகள் விஞ் சாதுநிலை
யொப்பவளஞ் செய்யு முறை''
(பதார்த்த. 1446).

ம. பப்படம்; க. அப்பள; தெ. அப்பளமு; து. அப்பளோ; பிராகி. அப்பட; பட. பப்பட; **Skt.** parpaṭa.

[அப்பளித்தல் = சமனாகத் தேய்த்தல். அப்பளி → அப்பளம்.]

'சுவரை அப்பளித்துப் பூசுகிறான்' என்னும் வழக்கை நோக்குக. 'அப்பளாம்' என்பது பிராம்மணக் கொச்சை வழக்கு.

அப்பளி-த்தல் *appaḷi-*, 4 செ.குன்றாவி. (v.t.) ***சுவரிற் சாந்து பூசும்போது சமனாக்கித் தேய்த்தல்***; to remove unevenness in the wall when plastering. *சுவரை அப்பளித்துப் பூசுகிறான்* (உ.வ.).

க. அப்பளிசு; தெ. அப்பளிஞ்சு; து. அப்பரீபு.

[அப்பு → அப்பளி. அப்புதல் = சாத்துதல், பூசுதல்.]

அப்பளாசிட்டி *appaḷā-šiṭṭi*, பெ. (n.) ***அப்பளம் வெண்மையாதற்குப் பயன்படுத்தும் சாறுள்ள ஒரு பூண்டு***; a herbaceous plant, the juice of which is used for making *appalams* look white (சா.அக.).

அப்பறாத்தூணி[1] *app(u)-aṟā-t-tūṇi*, பெ. (n.) ***அம்பறாத்தூணி*** பார்க்க; see *amb(u)-aṟā-t-tūṇi*.

[அம்பு + அறா (நீங்காத) + தூணி (கூடு). அம்பறாத்தூணி → அப்பறாத்தூணி.]

அப்புராத்தூணி என்பது கொச்சை வடிவம்.

அப்பறாத்தூணி[2] *appaṟāttūṇi*, பெ. (n.) ***ஒரு வகை நஞ்சு (சரகண்ட பாடாணம்)***; a kind of native arsenic (சா.அக.).

அப்பன் *appaṉ*, பெ. (n.) 1. *தந்தை*; father. ''அப்பன்நீ யம்மைநீ'' (தேவா. 6 . 95 : 1). '**அப்பன் அருமை அப்பன் மாண்டால் தெரியும், உப்பின் அருமை உப்பு இல்லாவிட்டால் தெரியும்', 'அப்பன் செத்தும் தம்பிக்கு அழுகிறதா?', 'அப்பன் மரித்தால் அந்தத் துணி எனக்கு'** (பழ.). 2. ***சிறுவரையும் கீழோரையும் விளிக்கும் அருமைச் சொல்***; a term of endearment used in addressing little children or inferiors. 3. ***பெற்றோர் மகனைக் குறிக்கும் அருமைச் சொல்***; a term of endearment used by parents in addressing their son, especially when young. 4. ***வள்ளல், பெருநன்மை செய்தவன்***; patron, benefactor. 'கீழைச்சாரம் வெங்களப்பன், மேலைச்சாரம் எங்களப்பன்' (பழ.). 5. ***ஆண்பாற் பெயரீற்றுச் சொல்***; a component word suffixed to names of male persons. *கண்ணப்பன், செல்லப்பன்*. 6. ***பெரிய தகப்பன்*** (ஆதி.); father's elder brother (Ādi.—Lex. Sup.). 7. ***திருநாவுக்கரசு நாயனார்*** (உபதேசகா. கடவுள்வா. 7); *Tirunāvukkarašu Nāyaṉār*. 8. ***திறமையிற் பெரியவன்***; one's better, superior in ability. இவன் இசைக்குழல் (நாதசுரம்) இசைப்பதில் இராசரத்தினத்திற்கு அப்பனாய் வருவான் (உ.வ.).

ம. அப்பன்; தெ., க., து., பிராகி., பட. அப்ப; குட. அப்பெ; கோண். ஆபோரோல்; கூ. ஆப; குருக். *அப்பா*; பிரா. *அபா*; கொங். *பாபா*; சிங். *அப்பா*; மணி. *இபா*; வங். *பாபா*.

Aram. *abba*, the father, my father, emphatic state of *ābh*, father.

Chal. *abba*; **Syr.** *abba* or *abbo*, the father or grandfather.

Heb. *ābh*, father; **Ar.** *āb*, father.

N.T. Gk. *abba*, father (Mark. xiv, 36).

Gk. *abba;* **L.** *abba;* **E.** *abba*, a title of honour.

The following list of words for 'father' is given in 'Some Problems in Kannada Linguistics', by its author C. R. Sankaran, M.A.

Sumere - Oceanian	:	*ab.*
Melanesian	:	*o'fa, apa.*
Polynesian	:	*pa*, term of respect denoting father.
Indonesian	:	*pa, apai, apang, aba, pa.*
Mon-Khmer	:	*pa, pā, pāpa, ipa, apa, āpe, apā, pā, apa*, father *āpe*, good father.
Munda	:	*appā, appan.*
Sumerian	:	*ap, abha.*
Akkadian	:	*babu, apu.*
Egyptian	:	*ab, papa.*

ஒருகா. தாயினும் வன்மையான தந்தையைக் குறிக்க, மகரத்திற்கு இனமான வல்லின மெய்ச் சொல்வடிவு கொள்ளப்பட்டிருக்கலாம்.

அப்பன்காளை *appan-kāḷai*, பெ. (n.) தாதர் என்னும் இரப்போர் வகுப்பார் வீடுவீடாய்க் கொண்டுபோய் மூக்கணாங்கயிற்றை யிழுக்கும்போது, கேட்ட கேள்விக்கு உடன்பாட்டு விடை சொல்வதுபோல் தலையசைப்பதும், பலகறையாலும் வண்ணத்துணியாலும் அணி செய்யப்பட்டிருப்பதுமான பெருமாள் மாடு (இ.வ.); sacred bull owned by men of the *Tādar* caste and trained to respond by nodding its head to questions put to it as it is taken round decked with multicoloured clothes and cowrie shells, to houses for the purpose of collecting alms (Loc.).

ம. அப்பக்காள

பெருமாள்மாடு என்பதே பெருவழக்கு. சில விடங்களில் பூம்மாடு என்றும் சொல்லப்படும்.

அப்பா *appā*, பெ. (n.) 1. அப்பன் என்னும் தந்தை முறைப்பெயரின் விளிவடிவம்; voc. of *appan*. 2. இளையவரும் கல்லாதவருமான ஆடவரை விளிக்குஞ் சொல் (நெல்லை); a vocative employed in addressing young or illiterate men (Tn.). அப்பா! இந்தச் சுமையைச் சற்றுத் தூக்கிவிடு (உ.வ.). 'அப்பா என்றால் உச்சி குளிருமா?' (பழ.). —, இடை. (int.) 1. ஓர் இளைப்பாறற் குறிப்புச் சொல்; an exclamation of repose. உழைப்பாளி, 'அப்பா!' என்று சொல்லி நிழலில் உட்கார்ந்தான் (உ.வ.). 2. வியப்பு, துயரம், நோவு முதலியவற்றை யுணர்த்துங் குறிப்புச்சொல்; an exclamation of wonder, grief, pain, etc. "என்னப்பா மற்றிவ் வெழுபது வெள்ளமுமொருவன் தின்னப் போதுமோ" (கம்பரா. யுத்த. மூலபல. 40). இது வியப்புக்குறிப்பு.

க., து., பட. அப்ப.

[அப்பன் (தந்தை) → அப்பா (விளி).]

அப்பாகம் *appāgam*, பெ. (n.) வாலுளுவை (பச்.மூ.); climbing staff plant (செ.அக.) — intellect tree, *Celastrus paniculata* (சா.அக.).

அப்பாசி *appāsi*, பெ. (n.) விசயநகர வேந்தரான கிருட்டிண தேவராயரின் பெயர்பெற்ற மந்திரி; Appāji, the famous minister of the Vijayanagar king Krişnadēvarāyar. "அப்பாசி யூகி...... இவர்களினும் மெய்ப்பான புத்தி விதரணமும்" (தெய்வச். விறலி. 82).

அப்பாட்டன் *appāṭṭan*, பெ. (n.) தந்தையின் பாட்டன் (இ.வ.); great-grandfather (Loc.).

[அப்பன் + பாட்டன் – அப்பாட்டன்.]

அப்பாடா *appāḍā*, இடை. (int.) இளைப்பாறல், வியப்பு, நோவு ஆகிய குறிப்புகளை உணர்த்துஞ் சொல்; an exclamation of relief, wonder, surprise or pain. மூட்டைக்காரன் தலையிலிருந்து மூட்டையை இறக்கி வைத்துவிட்டு 'அப்பாடா' என்று மரத்தடியில் உட்கார்ந்தான் (இளைப்பாறற் குறிப்பு). தென்னாலியிராமனாற் சூடிடப்பட்ட பிராமணர், 'அப்பாடா! அப்பாடா!' என்று கத்திக் கொண்டு ஓடினார்கள் (நோவுக் குறிப்பு).

[அப்பன் → அப்பா (விளி) + அடா (ஆ.பா. விளி) – அப்பாடா.]

இது பெரும்பாலும் ஆடவர் கூற்று.

அப்பாடி *appāḍi*, இடை. (int.) அப்பாடா என்பதன் பெண்பால் வடிவம்; fem. form of *appāḍā*.

[அப்பன் → அப்பா (விளி) + அடி (பெ.பா. விளி) – அப்பாடி.]

இது பெண்டிர் கூற்று. உணர்ச்சி யளவிற்கேற்ப இது 'அப்பாடீ' என்று நீளவுஞ் செய்யும்.

அப்பாத்தாள் *appāttāḷ*, பெ. (n.) தந்தையைப் பெற்ற பாட்டி (இ.வ.); father's mother, paternal grandmother (Loc.).

[அப்பன் (தந்தை) + ஆத்தாள் (தாய்) – அப்பாத்தாள். ஆத்தை (தாய்) → ஆத்தா → ஆத்தாள்.]

அப்பாத்தை *appāttai*, பெ. (n.) அக்கை, தமக்கை (இ.வ.); elder sister (Loc.).

[அப்பன் (தந்தை) + ஆத்தை (தாய், அக்கை) – அப்பாத்தை.]

இதில் 'அப்பன்' என்னும் நிலைச்சொல் பொருத்தமும் பயனும் அற்றது.

அப்பாய் *appāy*, பெ. (n.) தந்தையின் தாய் (இ.வ.); paternal grandmother (Loc.).

ம. அப்பாயி

[அப்பன் + ஆய் (தாய்) – அப்பாய்.]

'அப்பாயி' என்பது கொச்சை வழக்கு.

அப்பாயி *appāyi*, பெ. (n.) **பையன், இளைஞன்** (இ.வ.); boy, lad (Loc.).

[அப்பு > தெ. அப்பாய், அப்பாயி; தெ. அப்பாயி > த. அப்பாயி.]

அப்பாரகம் *appāragam*, பெ. (n.) *புளிமா*; sour mango, *Mangifera indica* (*சா.அக.*).

அப்பால் *a-p-pāl*, பெ. (n.) *அப்பக்கம்*; that side. "அப்பாலிருந்த வனசரித ரைவர்க்கு" (பாரத. நச்சுப். 16). —, கு.வி.எ. (adv.) 1. *அதன்மேல்*; after that, afterwards, further, beyond. "பின்னவன் பெற்ற செல்வ மடியனேன் பெற்ற தன்றோ வென்னினி யுறுதி யப்பால்" (கம்பரா. அயோத். கைகேயி சூழ். 114). 2. *பிறகு*; afterwards, sometime later. அப்பால் கொடுக்கிறேன் (உ.வ.).

ம. அப்பால்

அப்பால் என்னும் இச் சொல் ஆரிய மொழிகளில் பல்வேறு வடிவில் முன்னொட்டாக (pref.) வழங்குகின்றது.

எ-டு :

Skt. *apa*, away from.

Gk. *apo*, from, off, away; *aph* (before an aspirate), away from.

L. *ap*, away. *ab*, from, orig. form *ap*. *aba*, extended form of *ab*.

E. *of*, **OE.** *of*, weaker form of *æf*, originally *af*, corresp. to **OFris.** *af*, *of*, *ofe*. **OS.** *af*, **MLG.** *af* prep. and adv. **MDu.** *ave*, *af*, *of*; **Du.** *af* adv. *off*; **OHG.** *aba*, *ab*; **MHG.** *abe*, *ab*. prep. and adv. **Ger.** *ab* adv. off, away; **ON.** *af*; **Goth.** *af* prep. and adv. **OTeut.** *aba*, un-accented by-form *ab*; corresp. to **Skt.** *apa*, away from, down from; **Gk.** *apo*; **L.** *ab*.

E. *off*, originally the same word as **OF**; *off* being at first a variant spelling, which was gradually appropriated to the emphatic form, i.e. to the adverb and the prepositional senses closely related to it, while *of* was retained in the transferred and weakened senses, in which the prep. is usually stressless and sinks to (əv.). *Off* appears casually from *c* 1400, but *of* and *off* were not completely differentiated till after 1600.

E. *offe*, adv. and prep. An early **ME.** deriv. form from **OF**, on the analogy of **INNE.** *ute* **OUTE, UPPE.** (O.D.) The **L.** pref. *ab* also appears as ***a-***, ***adv-***, ***av-***,***v-***, as in a-vert, adv-ance, av-aunt, v-anguard (S.E.D.E.L. p. 732).

E. *apo-*, *ap-* (before a vowel), *aph-* (before an aspirated vowel), pref. meaning 'from, away from, asunder, separate'. —**Gk.** *apo-*, *ap-*, *aph-*, fr. *apo*, 'from, away from', cogn. with **OI.** *apa*, away from, **L.** *ab* (orig. *ap*), 'away from, from', **Goth.** *af*, **OE.** *of* 'away from, from'.

E. *of-*, assimilated form of *ob*-before *f*.

off, adv., prep. and adj. The stressed form of *of*. Cp. *offal*, *offing*, *offish*, and the second element in *doff*.

off, n. the offside (cricket) (K.C.E. D.E.L.).

[அ + பால்.]

அப்பாலுக்கப்பால் *appālukk(u)-appāl*, பெ. (n.) *மனத்திற்கு எட்டாத தொலைவு*; distance beyond one's imagination. "அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்" (விநா. அகவல்) (சா.அக.).

[அப்பாலுக்கு + அப்பால்.]

அப்பாலுமடிச்சார்ந்தார் *appālum-aḍi-c-cārndār*, பெ. (n.) *தமிழ்நாட்டிற்கு அப்பாற்பட்டவரும் சிவனடியார் அறுபத்து மூவர்க்கு முன்னும் பின்னு மிருந்தவருமான தொகையடியாருள் ஒரு வகுப்பார்*; Those who, hailing from lands outside the Tamil country, have attained the feet of God, and who existed before and after the period of the 63 canonized Šaiva saints, one group of *Togaiyaḍiyār*.

"மூவேந்தர் தமிழ்வழங்கு நாட்டுக் கப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த முறைமை யோரும்
நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும்
நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்

பூவேய்ந்த் நெடுஞ்சடைமே லடம்பு
தும்பை
புதியமதி நதியிதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியா னடிச்சார்ந்
தாரும்
செப்பியஅப் பாலுமடிச் சார்ந்தார்
தாமே''
(பெரியபு. அப்பாலுமடிச். 1).

[அப்பாலும் + அடி + சார்ந்தார்.]

அப்பாவி *appāvi*, பெ. (n.) **பேதை, வெள்ளந்தி, தீங்கில்லாதவன்-ள்**; simpleton, artless and harmless person.

[அல் → அ (எ.ம.முன்.) + **Skt.** pāpi > **த.** *பாவி → அபாவி → அப்பாவி.* **Skt.** pāpa (*தீவினை*) > **த.** *பாவம். பாவி = தீவினைஞன். அபாவி = தீவினைசெய்யாதவன், தீங்கில்லாத வன்.]*

அப்பிரு *appiru*, பெ. (n.) **பேரோசனை** (R.); a kind of mineral, turquoise.

அப்பு[1]-தல் *appu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **பூசுதல்**; to stick or daub with the hand, as sandal paste, to plaster with a trowel, as mortar. ''அரைபடு மகிலுஞ் சாந்து மப்பி'' (திருவிளை. நாட்டு. 13). 2. **சாத்துதல்**; to put on. ''மலர்த்தார்......அப்ப'' (பதினொ. கோயிற்றிருப். 4). 3. **ஒற்றுதல்**; to apply repeatedly, as a fomentation (W.). 4. **தாக்குதல்**; to come to grips, to grapple with, as in wrestling. ''இருவரும் புயங்களி னப்பி மொத்தினர்'' (பாரத. பதினேழா. 147). 5. **அறைதல்** (சங்.அக.); to beat, strike. 6. **கும்முதல்** (சங்.அக.); to pommel. 7. கவ்வுதல்; to snatch at firmly. நாய் அப்பிக்கொண்டு போய்விட்டது (உ.வ.). 8. **வாயில் திணித்தல்**; to thrust in the mouth. ''அவல்தேனு மப்பி யமுதுசெயும்'' (திருப்பு. 1147). 9. **கொட்டுதல்** (சங்.அக.); to throw or cast into a vessel.

ம. அப்புக; **க.** அப்பிகெ; **தெ.** அப்பளிஞ்சு; **து.** அப்பளிபுனி; **பிராகி.** அப்பால; **பட.** அப்பு.

[அம்மு → அப்பு.]

அப்பு[2] *appu*, பெ. (n.) 1. **அப்பன்** (இ.வ.); father (Loc.). 2. **சிறுவரையுங் கீழோரையும் அன்புகாட்டி அழைக்குஞ் சொல்** (இ.வ.); a term of endearment used in addressing children or inferiors (Loc.). **ம., க.** அப்பு; **பட.** அப்பி. அப்பி என்பது கொச்சை வழக்கு. 3. **வீட்டு வேலைக்காரன்**; domestic man-servant. **சிங்.** அப்பு.

[அப்பன் → அப்பு.]

அப்பு[3] *appu*, பெ. (n.) 1. **ஐம்பூதங்களுள் ஒன்றான நீர்** (பிங்.); water, as one of the five elements. 2. கடல்; sea. 3. **பனிக்குடத்து நீர்**; liquid of the amniotic sac, amnic liquor (சா.அக.).

ம., க. அப்பு; **மரா.** அப்; **L.** aqua.

[அப்பு > **Skt.** ap. *அம்முதல் = பொருந்து தல், கலத்தல். அம் = நீர். அம் → அம்பு → அப்பு.]*

அம்பு[1] பார்க்க; see *ambu*[1].

அப்பு[4] *appu*, பெ. (n.) **அம்பு**; arrow. ''வில்லுமிழப்பொடு'' (கந்தபு. யுத்த. இரண்டா. சூரபன். 41).

[அம்பு → அப்பு. இது வலித்தல் என்னும் செய்யுள் திரிபு.]

அப்பு[5] *appu*, பெ. (n.) **துடை**; thigh. ''அம்ம வென்று அப்புத் தட்டி'' (ஈடு. 5.4 : 7).

*[**ஒருகா.** அப்புதல் = ஒட்டுதல். அப்பு = ஒட்டிக்கொண்டிருக்கும் தொடை. **ஒ.நோ:** துடு → தொடு → தொடை = துடை.]*

அப்பு[6] *appu*, பெ. (n.) **பாதிரிமரம்** (மலை.); trumpet tree, *Stereospermum suaveolens*.

அப்பு[7] *appu*, பெ. (n.) **ஈயம்**; lead (சா.அக.).

அப்பு[8] *appu*, பெ. (n.) **ஒரு கனிய நஞ்சு (வெள்ளைப் பாடாணம்)** (வை.மூ.); a mineral poison.

அப்பு[9] *appu*, பெ. (n.) **முட்டாள்** (இ.வ.); dolt, idiot (Loc.).

[அப்புண்டு = முட்டாள் (நெல்லை); **dolt,** idiot (Tn.). *அப்புண்டு → அப்பு.]*

அப்பு[10] *appu*, பெ. (n.) **கடன்**; loan, debt (W.).
*[**தெ.** அப்பு (கடன்) > **த.** அப்பு.]*

அப்பு[11] *appu*, பெ. (n.) 1. **முற்குளம், 20ஆம் நாண்மீன்**; the twentieth asterism. 2. **பகல் பதினைந்து முழுத்தத்துள் (முகூர்த்தத்துள்)**

ஆறாவது (விதான. குணா. 73, உரை); the sixth of 15 divisions of the day.

அப்பு[12] *appu*, பெ. (n.) **முப்பத்தாறு மெய்ப் பொருள்களுள் ஒன்று;** one of the 36 reals.

அது சிறுகோளத்தில் (சிற்றண்டத்தில்) நிலப்பூதத்திற்கும் தீப்பூதத்திற்கும் இடையி லிருக்கும் ஒரு பொதுவகை யல்லாத (அசா தாரண) பூதமாய்ப் பிறைவடிவுள்ளதாய் வெண்ணிறமானதாய்த் தாமரைப்பூ அடை யாள முடையதா யிருக்கு மென்றும், பெருங் கோளத்தில் (பேரண்டத்தில்) பருப்பொருட் பூதநில மெய்ப்பொருட்கு (தூலபூத பிருதுவி தத்துவத்திற்கு) அப்பால் பன் (தச) குண மதிகமாக மறைத்திருக்குமென்றும் சொல்வர் (சி. சி. சுபக். 2 : 66, 67, 68, உரை; வி-ணி. 271) — (சங்.அக.).

அப்புக்கட்டு *appu-k-kaṭṭu*, பெ. (n.) **அம்பு களின் கற்றை** (பதிற்றுப். 16 : 4, உரை); sheaf of arrows.

[அம்பு + கட்டு.]

அப்புக்காய் *appu-k-kāy*, பெ. (n.) **ஒருவகைக் காய்;** a kind of unripe fruit (சா.அக.).

அப்புக்குட்டி *appu-k-kuṭṭi*, பெ. (n.) **ஒருவகைக் கடல்மீன்;** sucker fish, remora (சா.அக.).

[ஒருகா. அப்புக்குள் + ஒட்டி – அப்புக்கு ளொட்டி → அப்புக்குட்டி. அப்பு = நீர்.]

அப்புண்டு *appuṇḍu*, பெ. (n.) **முட்டாள்** (நெல்லை); dolt, idiot (Tn.).

அம்முண்டு பார்க்க; see *ammuṇḍu*.

[அம்முண்டு → அப்புண்டு.]

அப்புத்திரட்டி *appu-t-tiraṭṭi*, பெ. (n.) **கட்டுக் கொடி, நீரை உறைவிக்க வல்லது;** a creeper which is capable of solidifying water, *Smilax pseudo-china* (சா.அக.).

[அம் → அம்பு → அப்பு + திரட்டி – அப்புத் திரட்டி. அம் = நீர். திரள் → திரட்டு → திரட்டி = திரள அல்லது உறையச் செய்வது.]

கட்டு என்னும் பெயரும் இப் பொருளதே.

அப்புதத்துவம் *appu-tattuvam*, பெ. (n.) **முப்பத் தாறு தத்துவங்களுள் ஒன்று;** one of the 36 reals.

[அப்பு + **Skt.** tattva > த. தத்துவம். த. தான் > **Skt.** tat = அது. தத்வ = அதாயிருக் குந் தன்மை, தானாயிருக்கை, தனிப்பொருள், மெய்ப்பொருள்.]

அப்புதம் *appudam*, பெ. (n.) **கோரைவகை** (பச்.மூ.); a sedge.

[ஒருகா. அப்பு → அப்புது → அப்புதம் = நீரில் விளைவது.]

அப்புது *appudu*, இடை. (int.) **பாகர் யானையைத் தட்டிக் கொடுத்து அமைதிப் படுத்தும்போது கூறும் ஒரு குறிப்புச்சொல்;** expr. which a mahout uses while patting and quieting down an elephant.

''அங்கையந் தலத்தினா லப்புதா தையெனக்
கொங்கலர் கண்ணியான் கொம்மைதான்
கொட்டலும்
பொங்கிய வுவகையிற் பொலிந்துமாக்
களிறவன்
றங்கிய பயிர்த்தொழி றடக்கையாற்
செய்ததே''
(சீவக. 1834).

இ-ள் : கண்ணியான், அப்புது அப்புது, ஆது ஆது, ஐ ஐ என்று கூறி, அங்கையாகிய அழகிய தலத்தாற் பொய்க்கத் தட்டின வளவிலே, அக் களிறு உவகையாற் பொலிந்து அவன்கட் டங்கிய பயிராற் றொழில்களைத் தன் கையாலே செய்த தென்க.

பயிராவன : பரிபரி யென்பன முதலியன. தொழில் = தோட்டி முதலியன எடுத்துக் கொடுத்தல் (நச். உரை).

பயிர் = மரபுக் குறிப்புமொழி (பரிபாஷை).

யானை கூட்டங் கூட்டமாகத் தொன்று தொட்டுக் குடமலைத் தொடரில் வாழ்ந்து வருவதனாலும், தமிழவேந்தர் மூவரும் தொடக்கந்தொட்டுக் கொண்டிருந்த நால் வகைப் படையுள் யானைப்படை யொன்றாத லாலும், அரசர் வழிப்போக்கிற்கும் முரசறைந்து விளம்பரஞ் செய்தற்கும் விழாக் கால வூர்வலத்திற்கும் புலவர்க்குப் பரிசளிப் பிற்கும் யானை மிகப் பயன்பட்டதனாலும், யானையைப் பயிற்றுந் தொழில் தமிழர்க்கு நன்றாகத் தெரிந்ததே. அப் பயிற்சிக்குரிய சொற்களும் தனித்தமிழ்ச் சொற்களே. அவற்றின் பொருள் இன்று அறியப்படாமை யால் அவை அயற்சொற்களாகா.

அப்புநீர் *appu-nīr*, பெ. (n.) **கடல்நீர்;** sea-water (சா.அக.).

[அம் → அம்பு → அப்பு.]

அப்புநீறு *appu-nīṟu*, பெ. (n.) கடலுப்பு; sea-salt (சா.அக.).

[அப்பு = நீர், கடல். நீறு = சுண்ணம், பொடி.]

அப்புப்பு *appu-uppu*, பெ. (n.) சோற்றுப்பு; common salt generally extracted from sea-water and used with food (சா.அக.).

[அப்பு + உப்பு. அப்பு = நீர்.]

அப்புப்புச்செயனீர் *appuppu-c-ceyaṉir*, பெ. (n.) பிண்ட வுப்புச் செயனீர்; a liquid obtained from the salt extracted from the foetus (சா.அக.).

அப்புப்போடு-தல் *appu-p-pōḍu-*, 19 செ.குன்றா வி. (v.t.) வாங்கின கடனைத் தீர்க்காது ஏமாற்றுதல் (இ.வ.); to deceive by evading or denying repayment of debt (Loc.). அவன் ஐம்பது உருபா அப்புப் போட்டுக்கொண் டான்.

[தெ. அப்பு = கடன். போடுதல் = வாயிற் போட்டுக்கொள்ளுதல், கவர்ந்துகொள்ளுதல், தனக்குப் பயன்படுத்திக்கொள்ளுதல்.]

அப்புபூதவாதிமதம் *appu-pūda-vādi-madam*, பெ. (n.) அப்பு என்னும் பூதமே பரம்பொருள் என்று கொள்வோன் மதம் (த.நி.போ. 280); the religion of one who holds that the element water is the Supreme Being.

அப்புமேழி *appu-mēḻi*, பெ. (n.) வயல் உழுதற் குரிய மேழிவகை; a kind of plough.

[அப்பு = நீர், நீருள்ள வயல். மேழி = கலப்பையின் கைப்பிடி அல்லது மேற்பகுதி. ஒருகா. மேலி → மேழி.]

அப்புரா *appurā*, பெ. (n.) பாதிரி; trumpet flower tree, *Bignonia chelonoides* (சா.அக.).

அப்புருவம் *āpp(u)-uruvam*, பெ. (n.) 1. உப்பு; salt. 2. நவச்சாரம்; salammoniac, Ammonium hydrochlorate (சா.அக.).

[அப்பு + உருவம்.]

அப்புலிங்கத்தலம் *appu-liṅga-t-talam*, பெ. (n.) இலங்கம் (இலிங்கம்) நீர் வடிவாக வுள்ள திருவானைக்காவல் (திருவானைக். மூர்த்தி. 3); *Tiruvāṉaikkāval*, where the linga in the shrine represents the element, water.

[அப்பு + லிங்கம் + Skt. sthala > த. தலம் (இடம்).]

அப்புலிங்கம் பார்க்க; see *appu-liṅgam*.

அப்புலிங்கம் *appu-liṅgam*, பெ. (n.) ஐம்பூதங் களையும் நிகர்க்கும் ஐந்திலங்கங்களுள் ஒன்றானதும், திருவானைக்காவிலுள்ளதுமான நீரிலங்கம்; Linga in the shrine at *Tiruvāṉaik-kāval*, as representing the element water, one of the *pañja liṅgams* which represent the five elements.

[அம் → அம்பு → அப்பு = நீர். இலக்கு → இலக்கம் = குறி. இலக்கம் → இலங்கம் → இலிங்கம் → லிங்கம் (கொச்சை) > **Skt.** liṅga. ஒ.நோ : அர் → அரங்கு → அரங்கம் → ரங்கம் (கொச்சை) > **Skt.** raṅga. உல் → உர் → அர் → அரத்தம் → ரத்தம் (கொச்சை) > **Skt.** rakta. மாவிலிங்கம் (மரம்) என்பது மாவிலங்கம் என்று வழங்குதலையும் நோக்குக.]

சிவமதம் குமரிநாட்டில் தோன்றிய தூய தமிழ மதம். அம்மையப்பர் வழிபாடு போன்றே இலிங்க வழிபாடும் அங்குத் தோன்றியதாகும். உருத்திரன் என்னும் ஆரியச் சிறுதெய்வத்திற்கும் சிவன் என்னும் தமிழ இறைவனுக்கும், எத்தகைத் தொடர்பு மில்லை. வேத ஆரியர், வட இந்தியச் சிவ நெறியாரை ஆண்குறித் தெய்வ வணக்கத் தார் (சிசிநதேவ) என்று முதற்கண் பழித்து வந்தனர். தமிழரது சிவமதம் மிகமிக வுயர்ந்த தென்று கண்ட பின்னரே, அவர் அதைத் தழுவலாயினர். இலங்கம் (லிங்கம்) என்னும் தென்சொல்லை வடசொல் லென்பது, தமிழரது சிவமதத்தை ஆரிய மதம் என்பது போன்றதே.

அப்புவின் கூறு *appuviṉ-kūṟu*, பெ. (n.) (சிவ.) புறநிலைக்கருவியின் 11 வகைகளுள் ஒன்றா வனவும், நீர் என்னும் பூதத்தின் கூறாவனவு மான சிறுநீர், அரத்தம், விந்து, மண்டை மூளை, எலும்புமூளை என்பன (சிவப். கட்.); (Śaiva.) categories which partake of the nature of the element water, five in number, viz., urine, blood, semen, brain, marrow, one of 11 divisions of *puṟanilaikkaruvi* (சா.அக.).

உடம்பிலிருக்கும் நீர்ப்பாகங்கள், அதாவது சிறுநீர், அரத்தம், சுக்கிலம் (வெள்ளை) முதலியன; the liquid portion of the body, viz., urine, blood, semen, etc. (சா.அக.).

அப்புளண்டம் *appuḷaṇḍam*, பெ. (n.) தகரை (மலை.); fetid cassia (செ.அக.). தகரைச் செடி; ringworm plant, *Cassia tora* (சா.அக.).

அத்தான் (முடக்கொற்றான்)

அத்தீர் (குழித்தாமரை)


அத்தி (நாட்டத்தி)

அதிகமரிச்சம்

அப்பன்காளை


அப்புக்குட்டி

அப்புளாகாசம் *appuḷagāšam*, பெ. (n.) ***வேரில்லாக் கொத்தான்;*** princess hair, moss creeper, *Cassytha filiformis* (சா.அக.).

அப்புறக்கடல் *a-p-puṟa-k-kaḍal*, பெ. (n.) ***பெரும்புறக்கடல்;*** the mythical outermost sea. "அப்புறக்கட லுஞ்சுவை யற்றன" (கம்பரா. யுத்த. சேது. 61).

[அ + புறம் + கடல்.]

அப்புறத்தையோட்டிவைத்தான் *appuṟattai-y-ōṭṭi-vaittāṉ*, பெ. (n.) ***காசுக்கட்டி;*** a brown-red colouring matter obtained from areca-nut, Areca red, Arecin (சா.அக.).

[அப்புறம் + அத்து (சாரியை) + ஐ (2ஆம் வே.உ.) + ஒட்டி + வைத்தான்.]

அப்புறப்படுத்து-தல் *appuṟa-p-paḍuttu-*, 5 செ. குன்றாவி. (v.t.) ***இடத்தைவிட்டு அகற்றுதல், வேறிடத்திற்குக் கொண்டுபோய் வைத்தல்;*** to remove, send away.

[அப்புறம் = அந்தப் பக்கம். படுதல் (த.வி.) = அமர்தல், சேர்தல். படுத்துதல் (பி.வி.) = சேர்த்தல், இடுதல், வைத்தல்.]

அப்புறம் *a-p-puṟam*, பெ. (n.) ***அந்தப் பக்கம்;*** that side. —, கு.வி.எ. (adv.) 1. ***அதன்பின், மேற்பட்டு;*** then, after that, thenceforward, furthermore. 2. ***சற்றுநேரங் கழித்து;*** after sometime, a little later. அப்புறம் வா, தருகிறேன் (உ.வ.). 3. ***மற்றைப் பக்கம்;*** the other side. "அப்புற வுலகி னுள்ளார் அறிந் திட யானே சென்று செப்புவ னென்பான் போல" (கந்தபு. உற்பத். தேவகிரிப். 3). 4. ***வெளிப்பக்கம்;*** the outside. "சுற்ற மப்புற நிற்க" (கம்பரா. அயோத். குகப். 10).

ம. அப்புறம்; **க.** அப்பர; **து.** அபர; **Nep.** apar; **Skt.** apara.

[அ + புறம்.]

அப்பூச்சி *appūcci*, பெ. (n.) ***ஒளிந்துநின்று திடுமென்று தோன்றி மகிழ்விக்கும் விளையாட்டு;*** a game in which one hides and then makes a sudden appearance thus causing a pleasant surprise, bo-peep.

தெ. அப்பச்சி

[ஒருகா. இராவேளையில் விளக்கு வெளிச் சத்தில் விட்டிற்பூச்சிகள் திடுமென்று தோன்றித் திடுமென்று மறைவதை யொத்த சிறுபிள்ளைகள் விளையாட்டா யிருக்கலாம். 'அ' என்பது ஒரு முன்னொட்டாகவோ (pref.) 'அம்' என்னும் சொற்றிரிபாகவோ இருக்கலாம்.]

அப்பூச்சிகாட்டு-தல் *a-p-pūcci-kāṭṭu-*, 5 செ.கு. வி. (v.i.) ***கண்ணிதழை மடித்துச் சிறு பிள்ளைகளை அச்சுறுத்துதல்;*** to frighten children by the ghastly look of eyes with eyelids folded inside out. "அத்தூதன் அப் பூச்சி காட்டுகின்றான்" (திவ். பெரியாழ். 2.1:1).

[பூச்சி = அச்சம், அஞ்சத்தக்க வுருவம். 'அ' முன்னொட்டு.]

அப்பூதி *appūdi*, பெ. (n.) ***அப்பூதியடிகள்;*** name of a canonized Šaiva saint. "ஒருநம்பி அப்பூதி" (தேவா. 7.39:4).

அப்பூதியடிகள் *appūdi-y-aḍigaḷ*, பெ. (n.) ***அப் பூதியடிகள் நாயனார்*** பார்க்க; see ***appūdi-y-aḍigaḷ-nāyaṉār.***

அப்பூதியடிகள் நாயனார் *appūdi-y-aḍigaḷ-nāyaṉār*, பெ. (n.) ***திருநாவுக்கரசு நாயனார் காலத்தவரும், அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவருமான சிவனடியார்*** (பெரியபு.); name of a canonized Šaiva saint, contemporary of *Tirunāvukkarašu Nāyaṉār*, one of the 63 *Nāyaṉārs*.

[அப்பூதி + அடிகள் + நாயனார்.]

அப்பை *appai*, பெ. (n.) 1. ***அப்பைக்கோவை*** பார்க்க; see *appai-k-kōvai* (பாலவா. 347). 2. ***கொன்றை;*** common cassia, *Cassia fistula* (சா.அக.). 3. ***சரக்கொன்றை;*** Indian laburnum. 4. ***கற்கோவை;*** a plant, *Bryonia epigea*. 5. ***ஒரு சிறு கடல்மீன்;*** a marine fish, brownish, attaining more than one foot in length, *Monocanthus monoceros*.

அப்பைக்காய் *appai-k-kāy*, பெ. (n.) ***கொவ்வைக் காய்;*** the unripe fruit of a climbing plant, *Bryonia* (சா.அக.). "அப்பைக்காய் நெய் துவட்ட லாக்கினாள்" (தனிப்பா. தி. 1, பக். 39).

அப்பைக்கிழங்கு *appai-k-kiḻaṅgu*, பெ. (n.) ***அப்பைக்கோவைக்கிழங்கு;*** the root of a climber, *Bryonia rostrata* (சா.அக.).

[அப்பை + கிழங்கு.]

அப்பைக்கொடி *appai-k-koḍi*, பெ. (n.) ***அப்பைக் கோவை*** பார்க்க; see *appai-k-kōvai*.

[அப்பை + கொடி.]

அப்பைக்கொவ்வை *appai-k-kovvai*, பெ. (n.) *அப்பைக்கோவை* பார்க்க; see *appai-k-kōvai.*

அப்பைக்கோவை *appai-k-kōvai*, பெ. (n.) **ஓர் இவர்கொடி** (மலை.); a climber, *Bryonia rostrata.*

[அப்பை + கோவை.]

அப்பைக்கோவைக்கிழங்கு *appai-k-kōvai-k-kiḻaṅgu*, பெ. (n.) *அப்பைக்கிழங்கு* பார்க்க; see *appai-k-kiḻaṅgu.*

[அப்பை + கோவை + கிழங்கு.]

அப்பைச்சுருக்கி *appai-c-curukki*, பெ. (n.) **சிறு கீரை**; a kind of vegetable greens, *Amaranthus campestris* (சா.அக.).

[அப்பை + சுருக்கி.]

அப்பொழுது *a-p-poḻudu*, கு.வி.எ. (adv.) 1. **அந்தக் காலத்தில், அந்த நேரத்தில்**; then, at that time. ''அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா'' (கம்பரா. அயோத். கைகேயிசூழ். 112). 2. **அப்படியானால்**; then, if so, in that case.

ம. அப்பொழுது; க. ஆவொத்து; தெ. அப்ரொத்து, அப்புடு; து. ஆபொலே; பட. ஆக; பர்., கோண். அப்பொடு; கொலா. அபுடு; கை. அபோ; நா. அபுர்.

[அ + பொழுது.]

அப்பொழுதை *a-p-poḻudai*, கு.பெ.எ. (adj.) **அந் நேரத்திற்குரிய**; of that time. ''அப்பொழுதைத் தாமரைப்பூக் கண்பாதம்'' (திவ். திருவாய். 2. 5 : 4). அப்பொழுதை நிலைமை சரியாயில்லை (உ.வ.).

[அ + பொழுதை.]

அப்பொழுதைக்கு *a-p-poḻudaikku*, கு.வி.எ. (adv.) **அந்த நேரத்திற்கு**; for that time.

[அ + பொழுதைக்கு.]

அப்போது *a-p-pōdu*, கு.வி.எ. (adv.) 1. **அன்று, அந்த நேரத்தில்**; then, at that time. 2. **அப்படியானால்**; then, if it be so. அப்போது நாம் திரும்பி வந்துவிடலாம் (உ.வ.).

ம. அப்போது; க., பட. ஆக.

[அ + பொழுது → போது.]

அப்போதைக்கப்போது *a-p-pōdaikk(u)-a-p-pōdu*, கு.வி.எ. (adv.) 1. **அவ்வக் காலத்தில்**; from time to time. 2. **அன்றன்று, உடனுக்குடனே**; then and there, forthwith.

[அ + பொழுதைக்கு + அ + பொழுது – அப்பொழுதைக்கப்பொழுது → அப்போதைக்கப்போது.]

அப்போழ்து *a-p-pōḻdu*, கு.வி.எ. (adv.) **அன்று, அந்த நேரத்தில்**; then, at that time.

ம. அப்போழ்

[அ + பொழுது – அப்பொழுது → அப்போழ்து. பொழுது → போழ்து.]

அபயலை *abayalai*, பெ. (n.) **இலாமிச்சை** (தைலவ. தைல. 34); cuscus grass, *Andropogon muricatus.*

அபலம் *abalam*, பெ. (n.) **திமிங்கிலம்** (வை.மூ.); whale.

அபலி *abali*, பெ. (n.) **வெண்கடுகு** (பச்.மூ.); white mustard, *Brassica alba.*

அபின்னை *abinnai*, பெ. (n.) **திருமாலினின்று பிரிக்கப்படாத திருமகள்**; *Tirumagaḷ*, the Goddess of wealth inseparable from *Tirumāl* (Viṣṇu.). 'ஸ்ரீ எனப்படும் லக்ஷ்மி, விஷ்ணுவிடம் அபின்னையாக (பிரிக்க முடியாதவளாக) இருக்கின்றாள் என்பதைக் காட்டும்' (சி. செ. பக். 133).

[அ (எ.ம.முன்.) + பின்னை. பிள் → பில் → பின் → பின்னை. பிள்ளுதல் = பிளவுபடுதல், வேறுபடுதல், பிரிக்கப்படுதல்.]

அம்[1] *am*, பெ. (n.) **நீர்**; water. ''அந்தாழ் சடையார்'' (வெங்கைக்கோ. 35).

[உம்முதல் = கூடுதல். உம் → அம். அம்முதல் = கலத்தல்.]

ஐம்பூதங்களுள், தன்னொடு தானும் பிறிதொடு தானும் மிகவொன்றிக் கலக்கக் கூடியது நீர் ஒன்றே.

''நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும்''
(குறள், 452),

''செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே''
(குறுந். 40)

என்பன கவனிக்கத்தக்கன.

அம்[2] *am*, பெ. (n.) **அழகு**; beauty, prettiness. ''கிஞ்சுகவா யஞ்சுகமே'' (திருவாச. 19 : 5).

[இயற்கை யழகெல்லாம் நீர்வளத்தாலுண்டாவதால், அம் என்னும் நீர்ப்பெயர் அழகு பொருள் பெற்றிருக்கலாம்.]

அம்[3] *am*, இடை. (part.) I. *பெயரீறு*; n. suff. 1. *ஒரு வினைமுதற்பொருளீறு*; suff. denoting the agent or subject of the action expressed by a verb. *எ-டு: எச்சம் = எஞ்சுவது, எஞ்சி நிற்பது.* 2. *ஒரு கருவிப்பொருளீறு*; suff. denoting the instrument. எ-டு: அரம் = அராவுங் கருவி, அரம்பம் = அரம்பும் (அராவி யறுக்கும்) கருவி. 3. *ஒரு செயப்படுபொருளீறு*; suff. denoting the object of the action expressed by a verb. எ-டு: நீத்தம் = நீந்தப்படும் வெள்ளம், பாடம் = படிக்கப்படும் செய்தி அல்லது பொருள். 4. *ஒரு தொழிற்பெயரீறு*; vbl.n. suff. எ-டு: ஓட்டம், ஆட்டம். 5. *ஒரு பண்புப்பெயரீறு*; an abs. n. suff. எ-டு: நீலம், நிறம். 6. *ஒரு நாட்டுப்பெயரீறு*; suff. of a n. denoting a country. எ-டு: கலிங்கம், நிடதம். 7. *ஒரு மொழிப்பெயரீறு*; suff. of a n. denoting a language. எ-டு: ஆங்கிலம், திரவிடம். 8. *ஓரினத்தாரின் நாகரிக அல்லது பண்பாட்டுப் பெயரீறு*; suff. of a n. denoting the civilization or culture of a nation or race. எ-டு: தமிழம். 9. *ஒரு பெருமைப் பொருட் பின்னொட்டு*; an aug. suff. எ-டு: நிலை → நிலையம், மதி → மதியம் (முழுநிலா), விளக்கு → விளக்கம். 10. *ஒரு சொற்றிரிவீறு*; a derivational suff. எ-டு: மதி → மாதம், வட்டு → வட்டம். II. *வினையீறு*; vbl. ending. *தன்மைப் பன்மை யீறு*; ending denoting the 1st pers. pl. எ-டு: செய்தம், செய்தனம்; பெரியம், பெரியனம். III. *சாரியை*; euphonic augment. எ-டு: புளி + காய் – புளியங்காய், புளி + மரம் – புளியமரம். IV. *அசைநிலை*; expletive. எ-டு: போமின் → போமினம் (சீவக. 1411).

அம்பகம்[1] *ambagam*, பெ. (n.) *எழுச்சி* (சது.); elevation.

[*எம்புதல் = எழுதல். எம்பு → எம்பகம் → அம்பகம்.*]

எழும்பு → எம்பு என்று கொள்ளவும் இடமுண்டு. ஆயின் எஃகு, எக்கு, எங்கு, எஞ்சு, எட்டு, எவ்வு, எழு, ஏண், ஏத்து, ஏந்து, ஏப்பம், ஏர், ஏல், ஏறு என ஏறத்தாழ எல்லா மெய்களையும் பிற்கொண்டு எழுச்சி குறித்த எகர ஏகார முதற்சொற்கள் தொன்று தொட்டு வழங்கிவருவதால், எம்பு என்பது ஒரு தனிச்சொல் என்றே கொள்ளப்படும்.

அம்பகம்[2] *ambagam*, பெ. (n.) *இசைவுமொழி, உத்தரவு*; permission, leave.

தெ. அம்பகமு

[*ஒம்புதல் = இசைதல், மணங்கொள்ளுதல். ஒம்பு → ஒம்பகம் → அம்பகம்.*]

மனத்திற்கு ஒம்பவில்லை என்பது உலக வழக்கு.

அம்பகம்[3] *ambagam*, பெ. (n.) *சேம்பு* (பச்.மூ.); Indian kales, *Colocasia antiquorum* (செ.அக.)— a garden plant, *Caladium esculentum* (சா.அக.).

அம்பகம்[4] *ambagam*, பெ. (n.) *நடிகர் கூலி* (யாழ்ப்.); pay of an actor in a play (J.).

அம்பகம்[5] *ambagam*, பெ. (n.) *செம்பு* (மூ.அ.); copper.

அம்பகன் *ambagaṉ*, பெ. (n.) *ஒரு கனிய நஞ்சு* (*சீர்பந்த பாடாணம்*) (மூ.அ.); a mineral poison.

அம்படம் *ambaḍam*, பெ. (n.) *ஆடுதின்னாப் பாளை* (மலை.); a worm-killer (செ.அக.) — *ஆடுதின்னாப்பாலை*; a worm-killer, *Aristalachia bracteata* (சா.அக.).

சங்க அகராதியில் இச் சொற்குப் புழுக்கொல்லி என்று வேறொரு பொருள் குறிக்கப்பட்டுள்ளது. அது ஆங்கிலப் பெயரின் மொழிபெயர்ப்பாகவோ ஆடுதின்னாப்பாளையின் மறுபெயராகவோ இருப்பினும் இருக்கலாம்.

அம்படலம்[1] *ambaḍalam*, பெ. (n.) *அம்மி*; grinding stone (அக.நி.).

அம்படலம்[2] *ambaḍalam*, பெ. (n.) 1. *இதள்* (*பாதரசம்*); mercury (அக.நி.). 2. *ஈயம்*; lead. 3. *வெள்ளி*; silver. 4. *வெளி*; open space.

அம்படலம்[3] *ambaḍalam*, பெ. (n.) 1. *மரக்கால்*; a grain measure varying in different places, from 4 to 8 *paḍis* (அக.நி.). 2. *ஓடம், மரக்கலம்*; boat, ship (அக.நி.). 3. *தேர்*; car, chariot (சங்.அக.).

அம்படலம்[4] *ambaḍalam*, பெ. (n.) *வாழை*; plantain tree, *Musa paradisiaca* (சா.அக.).

அம்பணத்தி *ambaṇatti*, பெ. (n.) *காளி, துர்க்கை* (பிங்.); *Kāli*, Durga.

[*அம்பணம் = மரக்கால். அம்பணத்தின்மேல் நின்றாடியவள் அம்பணத்தி. அம்பணம் + அத்து (சாரியை) + இ (பெயா. ஈறு).*]

"அம்பண வளவைய ரெங்கணுந் திரிதர" (சிலப். 14 : 209). பதினோராடல்களுள் ஒன்றான மரக்கால், காளியாடியது. 'கடைய மயி ராணிமரக் கால்விந்தை', 'மாயவ ளாடன் மரக்கால்' (சிலப். 3 : 14, அடியார்க். உரை). காளி அவுணரென்னும் அசுரரை வென்று மரக்கால்மேல் நின்றாடிய வெற்றிக் கூத்து மரக்கால் எனப்பட்டது.

"ஆய்பொன் னரிச்சிலம்புஞ் சூடகமு
மேகலையு மார்ப்ப வார்ப்ப
மாயஞ்செய் வாளவுணர் வீழநங்கை மரக்
கான்மேல் வாளமலை யாடும்போலும்"
(சிலப். 12, கூத்துள்படுதல்).

அம்பணம்[1] *ambaṇam*, பெ. (n.) 1. *நீர்* (சது.); water. 2. *நீர்விழுங் குழாய்*; water-pipe. "கிம்புரிப் பகுவா யம்பண நிறைய" (நெடு நல். 96). 3. *வாழை* (பிங்.); plantain tree, *Musa paradisiaca*. 4. *வாழைத் தண்டு* (நாநார்த்த.); stem of the plantain tree. 5. *ஊறுகாய்*; pickles (சா.அக.). 6. *வாய்* (அக.நி.); mouth.

[*அம் = நீர். அம் → அம்பு → அம்பணம் = நீர், நீருள்ள பொருள். அணத்தல் = பொருந்து தல். அண → அணம்.*]

அம்பணம்[2] *ambaṇam*, பெ. (n.) 1. *மரக்கால்*; a grain measure. "அம்பண வளவைய ரெங் கணுந் திரிதர" (சிலப். 14 : 209). பாலி. அம்பண. 2. *மரக்கலம்* (அக.நி.); ship, boat. 3. *துலாக்கோல்* (அக.நி.); beam of scales, balance. 4. *ஆமை* (அக.நி.); tortoise. 5. *ஒரு வகை யாழ்*; a kind of lute. "அம்பண கரதலி" (திருப்பு. 129).

ம. அம்பணம்

[*அம்பு = வட்டம், வளையல். அம்பு + அணம் (ஈறு) – அம்பணம் = வட்டமான பொருள்.*]

பரிசல்போல் வட்டமான படகும் கப்பலும் இருந்திருத்தல் வேண்டும். வங்கம் என்னும் கப்பற் பெயர் வட்டமானது என்னும் பொருளதே.

துலாக்கோலின் தட்டு வட்டமானது. குழிந்த தட்டு ஆமையோட்டு வடிவினது.

ஒற்றை நரம்புச் சுரையாழின் பத்தர் சுரைக்குடுக்கையாற் செய்யப்படுவது. அது வடிவில் ஓரளவு ஆமை யொத்தது. சித்தார் என்னும் நரப்புக்கருவியின் பத்தர் சுரைக் குடுக்கையாற் செய்யப்படுவதே. பண் ணிசைத்தற் கேற்ற பெருஞ்சித்தாரின் பத்தர், அகன்று சப்பையான சுரைக்குடுக்கையாற் செய்யப்படும். அதனால் அத்தகையதற்குக் கச்சுவா என்று பெயர். கச்சபம் (வ. கச்சப)= ஆமை. கச்சப வடிவான பத்தர்கொண்ட சித்தார் கச்சுவா.

பண்டை யாழ்வகைகளுள் ஒன்று ஆமை யாழ். அதுவே அம்பணம் என்று பெயர் பெற்றிருத்தல் வேண்டும். கச்சுவா என்பது அதன் மொழிபெயர்ப்பே.

அம்பணம்[3] *ambaṇam*, பெ. (n.) *பவளம்* (அக.நி.); coral.

[*அம்பகம் = செம்பு* (copper), *சிவப்பான மாழை (உலோகம்). ஒருகா. அம்பு → அம்பணம்.*]

அம்பணவர்[1] *ambaṇavar*, பெ. (n.) **ஆமையாழ்ப் பாணர், பாணர்**; an ancient caste of musicians who played on a kind of lute called *āmaiyāḻ*.

[*அம்பணம் = ஆமை, ஆமையாழ். அம்பணம் → அம்பணவன் → அம்பணவர்.*]

அம்பணவர்[2] *ambaṇavar*, பெ. (n.) **கி.பி. 2ஆம் நூற்றாண்டில், வேதம் ஓதாது இசைத் தொழிலை மேற்கொண்டு வேறுபிரிந்து தனிக் குடியிருப்பில் வதிந்த தமிழ்நாட்டுப் பிராமணக் கூட்டத்தார்**; a sect of Brāhmins of Tamil Nadu, who gave up reciting the Vēdas, took to practising music and so moved into separate residential colonies in second century A.D. "வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப் புரிநூன் மார்பர்" (சிலப். 13 : 38-9).

[*பண் → பண்ணவன் = பாணன். பண்ண வன் → பணவன். அம் (அழகிய) + பணவன் – அம்பணவன் → அம்பணவர்.*]

அம்பணவர்[3] *ambaṇavar*, பெ. (n.) **பாணர், சிறப்பாக யாழ்ப்பாணர்**; an ancient caste of musicians, especially lute players.

"......... ....ஆங்கு
ஆடியல் கொள்கை யந்தரி கோலம்
பாடும் பாணரிற் பாங்குறச் சேர்ந்து"

என்னும் சிலப்பதிகார அடிகட்கு (13 : 103-105), அடியார்க்குநல்லார், 'அவ்விடத்துத் துர்க்கையது வெற்றிபொருந்திய அசுரரோடு பொருத போர்க்கோலத்தைப் பாடும் பாட்டாண்மையை யுடைய அம்பணவரில்

தானுமொருவனாகக் கலந்து' என்று உரை வரைந்திருத்தல் காண்க.

[அம்பணம் = ஆமை, மரக்கால். ஆமை அல்லது மரக்கால் போன்ற குடத்தையுடைய யாழ். அம்பணம் → அம்பணவர் = ஆமை வடிவ யாழைக்கொண்ட பாணர்.]

அம்பதை *ambadai*, பெ. (n.) கள் (திவா.); toddy.

அம்பர்[1] *ambar*, கு.வி.எ. (adv.) அங்கே, அவ் விடம்; yonder, there. "அம்பர்ப் பருந்துபட" (பெரும்பாண். 117).

[ஆ → அ → அம் → அம்பு → அம்பர்.]

அம்பர்[2] *ambar*, பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற ஓர் ஊர்; name of a village of historical importance in Thanjāvūr district. "அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்" (தேவா. 7. 39 : 5).

அம்பர்[3] *ambar*, பெ. (n.) ஒருவகைப் பிசின்; amber, a fossil resin, *succinite* (செ.அக.).

ம. அம்பர்; தெ. அம்பரமு, அம்பரு.

U., Ar. *ambar;* L. *ambra*; OF. *ambre*; ME., E. *amber.*

அம்பர், பொன்னம்பர் அல்லது கற்பூரமண். இது தேவமரம் (தேவதாரு) முதலிய மரங் களின் பிசின்; தானாகவே உறைந்து நிலத் திற்குள் அமைந்தது. இது சுண்ணாம்பு நிலத் தில் விளைந்த மரத்தின் பிசினாகையால், இதற்குத் தமிழில் 'கற்பூ' என்றும், துலுக்கு மொழியில் 'கற்பா' என்றும் பெயர். சப்பான் நாட்டில் இதை 'நம்பு' என்று சொல்வ துண்டு. இக் கற்பூவை மணியாகச் செய்வ தால், இதற்குக் கற்பூரமணி யென்றும் பெயர் வழங்கும். இது தக்கண தேசத்தில் நேர்த்தி யானதாய் அகப்படும். ஆனால், மிக அரிது. சில சமையம் திருவாங்கூர், ஆசாம் முதலிய இடங்களிலுங் கிடைக்கும். இது மிகுதியாய்ச் சீனம், சப்பான் நாடுகளினின்றும் இறக்குமதி யாகிறது. இது மஞ்சளாயும் கெட்டியான தாயும் ஒடியுந் தன்மை வாய்ந்ததாயு மிருக்கும். இதைத் தேய்ப்பதனால் மின் னாற்றல் உண்டாகும். இதை யொத்த ஒரு பிசின் அண்மையில் சிசிலியில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இதில் பலவகைக ளிருப்பினும், கசகசா அம்பர், வெள்ளம்பர், கருப்பம்பர் முதலியவை தாம் முதன்மையானவை; amber, a yellowish fossil resin. It is the gum of several species of coniferous trees chiefly pine (deodar) which grew during the Cretaceous Period of the geologists. It is known as 'stone flower' in Tamil, as the tree that yields this resin usually grows in limestone soils. It is termed 'karbah' in Hindustani and 'nambu' in Japan. As this resin is made into beads, it is also known as Camphor beads — *Succinum* or *electrum.*

Amber of a fine quality is found in the Deccan, but it is very rare. It is occasionally met with in Travancore and Assam. It is generally imported from Japan and China. It is a yellow hard but brittle substance almost transparent with an aromatic odour. When rubbed with silk it produces electricity. A similar resin has been recently found in Sicily.

There are different varieties of amber :

1) Poppy amber which is a little dark in colour.
2) White amber of a lighter shade.
3) Black amber of a black colour.

amber, n. yellow translucent fossil resin, found chiefly on S. shore of Baltic.

(ME. f. OF. *ambre*, or med. L. *ambra*) — (C.O.D.)

அம்பர்[4] *ambar*, பெ. (n.) ஓர்க்கோலை; ambergris a morbid secretion of the liver or intestines of the spermaceti whale (செ.அக.) — திமிங்கிலத் தின் ஈரலில் அல்லது மணிக்குடலில் உண்டா கும் சத்து. இதற்கு மீனம்பர் என்று பெயர்; substance excreted from the liver or the small intestines of the sperm whale, ambergris. (சா.அக.).

"ஓர்க்கோலை சங்க மொளிர்பவளம்
வெண்முத்தம்
நீர்ப்படு முப்பினோ டைந்து"
(சிலப். 10 : 107, அடியார்க். உரை).

இது ஒக்கோலை யெனவும் படும்.

"பவள முத்துச் சங்கொக் கோலை
யுப்புக் கடல்படு திரவிய மைந்தே"
(பிங். 3 : 86).

ambergris, n. wax-like substance found floating in tropical seas, and in intestines of sperm-whale, odoriferous and used in perfumery, formerly in cookery.

(late ME., f. OF. *ambre gris*, grey amber) — (C.O.D.)

[கடலில் மிதப்பதாகச் சொல்லப்படுவதனால், ஒருகா. அம்பு (கடல்) → அம்பர்.]

அம்பர்[5] *ambar*, பெ. (n.) 1. **இரும்புத்துரு, மணற்சத்து முதலிய பொருள்கள் சேர்ந்த இயற்கை மண். இது சாயத்திற்குதவும்**; a natural earth containing chiefly manganese, iron oxide, and silica. It is used as a pigment, umber. 2. **கருப்பு அம்பர்**; fossilized resin of the black poplar (சா.அக.).

அம்பர்கிழானருவந்தை *ambar-kiḻāṉ-aruvandai*, பெ. (n.) **திவாகர நிகண்டு தொகுப்பித்தோன்** (திவா. இறுதிக்கட்டுரை); *Aruvandai*, chief of Ambar, under whose auspices the *Tivāgaram* was compiled.

[அம்பர் = ஒரூர். கிழவன் → கிழான் = தலைவன். அருவன் + தந்தை — அருவந்தை.]

அம்பர்மாகாளம் *ambarmāgāḷam*, பெ. (n.) **ஒரு திருநகர்**; a shrine.

அம்பரத்தவர் *ambarattavar*, பெ. (n.) **தேவர்**; celestials. ''அம்ப ரத்தவ ருடன்று சீறினுமொ ரம்பிலே யழிவர்'' (பாரத. கிருட். 135).

[அம்பரம் = தேவருலகம். அம்பரம் + அத்து (சாரியை) + அவர் (ப.பா. ஈறு).]

அம்பரம்[1] *ambaram*, பெ. (n.) 1. **தேவருலகம்**; celestial world. 2. **உயர்ந்த வானவெளி, காயம் (ஆகாயம்)**; sky, atmosphere, ether. ''அம்பர மனல்கால்'' (திவ். பெரியதி. 1.8 : 8). 3. **திசை**; point of the compass. ''விஞ்ச வம்பர மேவிய போதினும்'' (ஞானவா. தாம வியான. 21).

ம. அம்பரம்; க., து. அம்பர; தெ. அம்பரமு; பட. அம்பார் (மேலே); பாலி. அம்பர; **Skt.** ambara.

[உ → உம்பு → உம்பர் = மேல், மேலுலகம், தேவர், தேவருலகம். உம்பர் → உம்பரம் = தேவருலகம். உம்பரம் → அம்பரம்.]

அம்பரம்[2] *ambaram*, பெ. (n.) **கடல், வாரி**; sea, ocean. ''எரிகணை யேவ வம்பர முற்றது'' (பாரத. பதினான். 93).

[அம் = நீர். அம் → அம்பு = நீர், கடல். அம்பு → அம்பரம்.]

அம்பரம்[3] *ambaram*, பெ. (n.) 1. **அம்பர்** (நாநார்த்த.); ambergris, a fragrant substance. தெ. அம்பரமு. 2. **(அம்பர் நிறமுள்ள) மஞ்சள்**; turmeric. ''அம்பரமும் பொன்னு மணிக்கோடும் பொருந்தி'' (மான்விடு. 70). 3. **(அம்பர் மணம் போன்ற) நறுமணம்**; perfume (சா.அக.).

ம. அம்பரி; க. அம்பர.

*[அம்பரம் (மஞ்சள்) > **Skt.** ambara. அம்பர் → அம்பரம்.]*

அம்பர்[4] பார்க்க; see *ambar*[4].

அம்பரம்[4] *ambaram*, பெ. (n.) 1. **ஆடை**; clothes, apparel, garment. ''அம்பரமே தண்ணீரே சோறே'' (திவ். திருப்பா. 17). 2. **ஆடைக்கு உதவும் பருத்தி** (சங்.அக.); cotton. 3. **சித்திரை நாண்மீன்** (சங்.அக.); the 14th lunar constellation.

ம. அம்பரம்; க., து. அம்பர; தெ. அம்பரமு; **Skt.** ambara.

[அம்பு = வளையல். ஒருகா. ஆடை உடம் பைச் சுற்றிக் கட்டப்படுவதால் அம்பு எனப் பெயர் பெற்றிருக்கலாம். சித்திரை நாண் மீனுக்கு அறுவை என்பது ஒரு பெயர். அறுவை என்பது ஆடையையுங் குறிக்கும். அம்பரம் என்பதும் அப்பொருள் குறித்தலால் சித் திரைக்குப் பெயராயிற்றுப் போலும்.]

அம்பரம்[5] *ambaram*, பெ. (n.) **அம்பலம், மன்றம்** (நாநார்த்த.); hall, public place.

[அம்பலம் → அம்பரம்.]

அம்பலம்[1] பார்க்க; see *ambalam*[1].

அம்பரம்[6] *ambaram*, பெ. (n.) 1. **காக்கைப் பொன் (அப்பிரகம்)**; mica or talc (சா.அக.). 2. **துயிலிடம்**; sleeping place, bedroom (பிங்.). 3. கரிசு, **தீவினை** (நாநார்த்த.); sin.

அம்பரமணி *ambara-maṇi*, பெ. (n.) **கதிரவன்**; the sun, lit., the jewel of the sky.

Skt. ambaramaṇi

[அம்பரம் = வானம். மணி = ஒளிர்கல், மணிபோல் ஒளிவீசுவது.]

அம்பரர் *ambarar*, பெ. (n.) **அசுரர்** (சங்.அக.); the Asuras, a class of super human beings said to have been at war with the gods. ''அம்பர ருயிர்'' (கந்தரந். காப்பு, 2).

[அம்பரம் = கடல். அம்பரம் → அம்பரர் = கடலிடத் தொரு நகரில் வாழ்ந்தவர் (சங்.அக.).]

அம்பரவாணம் *ambaravāṇam*, பெ. (n.) ***எண் காற் புள்*** (பிங்.); fabulous eight-legged bird.

மறுவ. அம்பாவனம்

அம்பரான் *ambaraṉ*, பெ. (n.) ***அம்பரென்னும் திருநகரிலிருக்குஞ் சிவன்***; Śiva, who has taken abode at Ambar. "இன்னல் களைவன இன்னம்ப ரான்றன் இணையடியே" (தேவா. 4.100 : 1).

அம்பரை *ambarai*, பெ. (n.) 1. *நிமிளை* (மூ.அ.) bismuth (செ.அக.)—a hard mineral of a brass-yellow colour used in the production of sulphur and sulphuric acid, iron pyrites (சா.அக.). 2. ***பொன்னிமிளை;*** iron pyrites occurring in dark yellow nodules with a golden lustre. 3. ***வெண்கல நிமிளை.*** இஃது உடம்பிற்கு வலுவை யுண்டாக்கும்; bismuth. It is medicinally a tonic.

அம்பல் *ambal*, பெ. (n.) 1. ***பூ அலர்தற்குச் சிறிது முன்னுள்ள நிலை*** (இறை. 22, உரை); condition of a flower about to blossom. 2. ***சிலர் கூறும் புறங்கூற்று, அலருக்கு எதிர்;*** slander uttered by a few. "அம்பலே சிலரறிந் திட்டது புறங்கூற லாகும்" (சூடா. 10 : 8). 3. ***சிலரறிந்து தம்முட் கூறும் களவுக் காதற் செய்தி;*** private talk between people concerning love intrigues of others, dist. fr. *alar*. "அம்பலு மலருங் களவுவெளிப் படுத்தலின்" (தொல். பொருள். கள. 49). 4. *பழிச்சொல்* (பிங்.); calumny.

[உம் → அம் → அம்பு. அம்புதல் = குவிதல். அம்பு → அம்பல் = குவிந்துள்ள அரும்பு அல்லது முகை, அலராத அரும்புபோற் பரவாத பழிச் சொல் அல்லது மறைவுச் செய்தி.]

அம்பலக்கல் *ambala-k-kal*, பெ. (n.) ***ஊரவையார் இருந்து ஊராட்சிச் செய்திகளைப் பேசும் ஊர்ப் பொதுமேடைக் கல்*** (இ.வ.); broad stone slab set up as a platform in a village, on which the members of the village committee sit and discuss village matters (Loc.).

[அம்பலம் + கல்.]

அம்பலக்கனி *ambala-k-kaṉi*, பெ. (n.) ***செங் கொய்யா;*** red guava, *Psidium guava* (*pomiferum*) (சா.அக.).

அம்பலக்கூத்தன் *ambala-k-kūttaṉ*, பெ. (n.) ***தில்லைப் பொன்னம்பலத்தில் முத்தொழிற் கூத்தாடுஞ் சிவபெருமான்;*** Śiva, as dancing the dance of triple functions of Godhead, in an open space of *Tillai* (Chidambaram). "அனைத்தும் வேடமா மம்பலக் கூத்தனை" (தேவா. 5 . 2 : 1).

[அம்பலம் + கூத்தன்.]

அம்பலக்கோடகம் *ambala-k-kōḍagam*, பெ. (n.) ***கோடகசாலை;*** a kind of plant, *Justicia procumbens*.

அம்பலகாரன் *ambala-kāraṉ*, பெ. (n.) 1. ***ஊரவைத் தலைவன்*** (R.T.); chairman of a village assembly. 2. ***ஊர்த்தலைவன்;*** headman of a village. 3. ***கள்ளர், வலையர் பட்டப் பெயர்;*** a caste title of Kaḷḷars and Valaiyars.

ம. அம்பலக்காரன்

[அம்பலம் + காரன் (உடைமை அல்லது உரிமை குறித்த ஆ.பா. ஈறு).]

அம்பலச்சாவடி *ambala-c-cāvaḍi*, பெ. (n.) ***ஊரவை மண்டபம்;*** public building in a village where village affairs are discussed and settled.

[அம்பலம் + சாவடி.]

அம்பலத்தாடி *ambalatt(u)-āḍi*, பெ. (n.) ***ஐவகை யம்பலத்தில், சிறப்பாகப் பொன்னம்பலத்தில், முத்தொழில் நடஞ்செய்யுஞ் சிவபெருமான்;*** Śiva, as dancing the dance of triple functions of Godhead in an open space at five places, especially at *Tillai* (Chidambaram). "புனையு மம்பலத் தாடிபொற் பாதமும் போற்றி" (சூத. எக்கிய. பூ. 43 : 44).

ம. அம்பலத்தாடி

[அம்பலம் + அத்து (சாரியை) + ஆடி. ஆடி = கூத்தாடுபவன்.]

அம்பலத்தார் *ambalattār*, பெ. (n.) ***ஊரவையார்;*** members of a village assembly. "நிலத்தை வலுக்கொண் டம்பலத்தா ரெடுத்துழுது கொண்டார்க ளென்று" (சரவண. பணவிடு. 185).

[அம்பலம் + அத்து (சாரியை) + ஆர் (ப.பா. ஈறு).]

அம்பலத்தி *ambalatti*, பெ. (n.) 1. ***தான்றிமரம்.*** belleric myrobalan, *Terminalia belerica*. 2. ***தில்லை மரம்;*** blinding tree, spurgewort, *Excoecaria agallocha* (சா.அக.).

அம்பலத்திற் கட்டுச்சோறவிழ்-த்தல் *ambalattir-kaṭṭu-c-cōṟaviḻ-*, 4 செ.குன்றாவி. (v.t.) ***ஒரு***

மறைவுச் செய்தியை ஒரு கூட்டத்திற் சொல்லுதல்; to divulge a secret at a public meeting. 'அம்பலத்தில் பொதி அவிழ்க்க லாகாது' (பழ.).

[அம்பலத்தில் + கட்டுச்சோறு + அவிழ்.]

அம்பலத்திற்கு வா(வரு)-தல் *ambalattiṟku-va-*, 18 செ.கு.வி. (v.i.) மறைவு வெளிப்படுதல்; to become public, as a secret.

அம்பலத்தோதிகம் *ambalattōdigam*, பெ. (n.) செஞ்சதுரக் கள்ளி; a red variety of square milk hedge, square spurge, *Euphorbium antiquorum* (சா.அக.).

அம்பலநாட்டான் *ambala-nāṭṭāṉ*, பெ. (n.) 1. ஊர்த் தலைவன்; headman of a village. 2. அம்பலகாரன், ஊரவைத் தலைவன்; chairman of a village assembly. "கிராம முன்சீ பம்பல நாட்டா ரெவர்க்கும்" (பஞ்ச. திருமுக. 380).

அம்பலம்[1] *ambalam*, பெ. (n.) 1. பலர் கூடும் வெளியிடம்; open space for the use of the public. 'அம்பலக் கழுதை அம்பலத்திற் கிடந்தா லென்ன? அடுத்த திருமாளிகையிற் கிடந்தா லென்ன?' (பழ.). 2. ஊரவை; village assembly for transacting village affairs. 'அகதி சொல் அம்பல மேறாது' (பழ.). 3. கற்றோரவை; assembly of scholars. 'அரைச்சொல் கொண்டு அம்பல மேறலாமா?' (பழ.). 4. கூத்துக் காண்போர் இருக்கை; pit of a theatre. "அம்பலமு மரங்கமுஞ் சாலையும்" (சீவக. 2112). 5. தில்லையம்பலம்; Śiva shrine at *Tillai* (Chidambaram). "பாம்பலங் காரப் பரன்றில்லை யம்பலம்" (திருக்கோ. 11). 6. சித்திரகூடம் (சங்.அக.); Viṣṇu shrine in Chidambaram. 7. சிற்றூர் அலுவல் (கிராம உத்தியோக) வகை; village revenue office. 8. அம்பலகாரன்; headman of a village. 9. கள்ளர், வலையர் பட்டப்பெயர்; a caste title of Kaḷḷars and Valaiyars.

ம. அம்பலம்; க. அம்பல; து., குட. அம்பில; **Skt.** ambara.

[அம்புதல் = குவிதல், கூடுதல். அம்பு → அம்பல் → அம்பலம் = கூடும் அவை, அவைக் களம்.]

அம்பலம்[2] *ambalam*, பெ. (n.) 1. ஆமை; tortoise. 2. புளிமா; sour mango, *Spondias mangifera*.

அம்பலமானியம் *ambala-māṉiyam*, பெ. (n.) ஊர்த்தலைவன் பயனுகரும் (அனுபவிக்கும்) இறையிலி நிலம் (W.G.); land held free of tax by the headman of a village, as a perquisite of his office.

அம்பலமேறு-தல் *ambalam-ēṟu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. வழக்குத் தொடுக்க அறங்கூறவையத்திற்கு அல்லது வழக்குமன்றத்திற்குச் செல்லுதல்; to go to court or village assembly. 2. அவையாரால் ஏற்றுக்கொள்ளப்படுதல்; to be acceptable to the assembly. 'அகதிசொல் அம்பல மேறாது', 'அம்பலத்தி லேறும் பேச்சை அடக்கம்பண்ணப் பார்க்கிறான்' (பழ.).

[அம்பலம் + ஏறு.]

அம்பலவரி *ambala-vari*, பெ. (n.) இராமநாதபுரம் வேளகத்தில் (சமீந்தாரியில்) சிற்றூரலுவலர் தம் சம்பளவுரிமைக்காகச் செலுத்திய வரி; tax paid by village officers in the Ramnad Zamindary to keep up their claim to official emoluments or mirasis.

அம்பலவன் *ambalavaṉ*, பெ. (n.) தில்லைச் சிவபிரான்; Śiva at *Tillai* (Chidambaram). "குவளைக் களத்தம் பலவன்" (திருக்கோ. 33).

[அம்பலம் + அவன் (ஆ.பா. ஈறு).]

அம்பலவாசி *ambala-vāśi*, பெ. (n.) 1. மலையாள நாட்டிற் கோயில்வேலை செய்யும் ஒரு குலம் (அபி.சிந்.); a caste in Malayalam country rendering service in temples. 2. அக்குலத்தான்; a member of that caste.

[அம்பலம் + வாசி. வதிதல் = தங்குதல், வாழ்தல், இருத்தல். வதி → வசி → வாசம் → வாசி. அம்பலவாசி = கோயிலில் தங்கி வேலை செய்பவன்.]

அம்பலவாண கவிராயர் *ambala-vāṇa-kavi-rāyar*, பெ. (n.) அறப்பளீசுர சதகம் என்னும் அறநூலின் ஆசிரியர்; name of the author of *Aṟappaḷīśura śadagam*, an ethical poem of hundred stanzas.

[அம்பலம் + வாணன். வாழ் → வாழ்நன் → வாணன். **Skt.** kavi + அரசன் → அரைசன் → அரையன் → ராயன் → ராயர். கவிராயர் = பாவரசர், பாவியற்றுவதில் அல்லது செய்யுள் செய்வதில் வல்லவர்.]

அம்பலவாண தேசிகர் *ambala-vāṇa-tēśigar*, பெ. (n.) பண்டார சாத்திரம் என்னும் 14

சிவக் கொண்முடிபு (சைவ சித்தாந்த) நூல்களுள் பத்தை இயற்றிய திருவாவடுதுறை மடத்துச் சிவத்துறவியார்; name of a Šaiva ascetic of the *Tiruvāvaḍuturai* mutt, author of ten of the fourteen *Šaiva* philosophical works called *Paṇḍāra šāttiram*.

[அம்பலவாணன் + **Skt.** dēšika > த. *தேசிகன் = குரு.]*

அம்பலவாணன் *ambala-vāṇaṉ*, பெ. (n.) **தில்லையம்பலத்திற் கோயில்கொண்டுள்ள சிவபெருமான்**; Šiva, as the presiding deity at the shrine of *Tillai* (Chidambaram). "ஆயும் புகழ்த்தில்லை யம்பல வாணன்" (பட்டினத். திருத்தில். 9).

[அம்பலம் + வாணன். வாழ் → வாழ்நன் → வாணன்.]

அம்பலவேகி *ambala-vēgi*, பெ. (n.) செஞ்சூரன் *பார்க்க*; see *šeñjūraṉ*.

அம்பலி[1] *ambali*, பெ. (n.) **ஒரு பழைய தோலிசைக் கருவி**; an ancient drum. "அம்பலி கணுவை யூமை" (கம்பரா. யுத்த. பிரமாத் திர. 5).

அம்பலி[2] *ambali*, பெ. (n.) *1.* **களி, சிறப்பாகக் கேழ்வரகுகூழ்**; porridge, esp. of ragi. *2.* **பசை**; a gummy substance (*சா.அக.*). *3.* **முட்டை வெள்ளை** (*ஜாலத். பக். 21*); the white of an egg.

க., தெ. அம்பலி; து. அம்பெலி; கொலா. அம்ப; நா. அம்பால்; பட. அம்பிலி.

அம்பளங்காய் *ambaḷaṅgāy*, பெ. (n.) *1.* **வெடியுப்பைக் கட்டுஞ் சீனதேசத்துக் காய்**; a fruit grown in China, said to consolidate nitre. *2.* **பேரிக்காய்**; Indian apple (*சா.அக.*).

அம்பளாசை *ambaḷāsai*, பெ. (n.) **அகத்தி**; Indian pea-tree, *Sesbania grandiflora* (*சா.அக.*).

அம்பறாத்தூணி *amb(u)-aṟā-t-tūṇi*, பெ. (n.) **அம்புக்கூடு** (பிங்.); quiver, case for arrows.

[அம்பு + அறு + ஆ (எ.ம. இ.நி.) + தூணி (கூடு). அறா = நீங்காத.]

மறுவ. அம்புக்கூடு, அம்புப்புட்டில், அம்புறை தூணி.



அம்பறாத்தூணி

அம்பறு - த்தல் *amb(u)-aṟu-*, 4 செ.கு.வி. (v.i.) **அம்பைத் தூணியினின்று உருவுதல்**; to draw an arrow out of the quiver. 'அம்பறுத் தெய்ய வேண்டும்படி' (ஈடு, *1 . 2 : 7*).

[அம்பு + அறு.]

அம்பனத்திப்பழம் *ambaṉatti-p-paḻam*, பெ. (n.) **பொன்னாங்காய் அல்லது பூவந்திக்கொட்டை**; soap-nut tree, *Sapiandus emarginatus* (*சா.அக.*).

அம்பனம் *ambaṉam*, பெ. (n.) **வாழை**; common plantain tree, *Musa paradisiaca* (*சா.அக.*).

[அம்பு = நீர். அம்பு → அம்பனம் = நீருள்ளது.]

அம்பாணி *ambāṇi*, பெ. (n.) **அம்பு நுனி**; sharp head of an arrow. அம்பாணி தைத்தது போலப் பேசுகிறான் (உ.வ.).

[அம்பு + ஆணி. ஆழ் → ஆணு → ஆணி = ஆழ்ந்து பதியும் ஊசி.]

அண் → (அண்ணி) → ஆணி என்பர் கால்டுவெல். ஒன்றோடு இறுகப் பொருந்துவதினும் ஒன்றில் ஆழமா யிறங்குவதே ஆணியாதலால், 'ஆழ்' என்னும் மூலமே மிகப் பொருத்தமாம். ஆணிவேர், ஆணிக்குருத்து, ஆணிக் கொள்ளுதல் (ஊன்றிக்கொள்ளுதல்) என்னும் வழக்குகளை நோக்குக.

ஆணி > **Skt.** āṇi.

அம்பாயப்படு-தல் *ambāya-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **பிள்ளைப்பேற்று நோவுறுதல்**; to travail at child-birth.

அம்பாயம் *ambāyam*, பெ. (n.) *1.* **பிள்ளைப் பேற்று நோவு**; travail, pangs of child-birth. *2.* வலி, நோவு (வின்.); pain.

அம்பால்[1] *ambāl*, பெ. (n.) **தோட்டம்** (வின்.); garden.

*[***ஒருகா.*** அம் + பால். அம் = அழகிய. பால் = இடம்.]*

அம்பால்[2] *ambāl*, இடை. (ind.) **பிள்ளைகள் கூட்டு விளையாட்டில், ஆடைநெகிழின் அதைத் திருத்துதற்கு விளையாட்டைச் சில நொடிகள் நிறுத்திவைக்குமாறு பயன்படுத்துஞ்சொல்**; a word used in children's games, meaning 'wait a minute!' or 'stop for a few seconds!' in order to tighten the garment when it becomes loose or slips off.

ம. அம்பாலெ; தெ. அம்பால்; பட. அம்பேல்.

[ஒருகா. அப்பால் என்பது அம்பால் என மெலிந்திருக்கலாம்.]

அம்பாலம் *ambālam*, பெ. (n.) மருமாங்காய்; hogplum, *Spondias mangifera* (சா.அக.).

ம. அம்பாழம்

அம்பாலிகை *ambāligai*, பெ. (n.) அறத்தேவி (பிங்.); Goddess of virtue.

அம்பாவனம் *ambāvaṉam*, பெ. (n.) எண்காற் புள் (சரபபட்சி) (வின்.); fabulous eight-legged bird.

[அம்பரவாணம் → அம்பாவனம் (கொச்சைத் திரிபு).]

அம்பரவாணம் பார்க்க; see *ambaravāṇam*.

அம்பி[1] *ambi*, பெ. (n.) 1. மிடா; large water-jar. 2. இறைகூடை; baling-basket. 3. நீர்ப் பொறி; water-lift, wind-mill. 4. தாம்பு, நீரிறைக்குங் கயிறு; rope used for drawing water. 5. தெப்பம்; raft, float. ''துறையம்பி யூர்வான்'' (கலித். 103 : 38). 6. தோணி; small boat. ''பரிமுக வம்பியுங் கரிமுக வம்பி யும்'' (சிலப். 13 : 176). 7. ஓடம்; flat-bottomed ferry-boat. ''ஆயிர மம்பிக்கு நாயகன்'' (கம்பரா. அயோத். குகப். 1).

அரிமுக அம்பி

ஓதிம அம்பி (அன்னமுக அம்பி)

கரிமுக அம்பி



பரிமுக அம்பி

8. மரக்கலம் (திவா.); ship. 9. காராம்பி (பிங்.); suspended water shovel. 10. கள் (திவா.); toddy.

க. அம்பி

[அம் → அம்பு = நீர். அம்பு → அம்பி = நீர் வடிவானது, நீர்த் தொடர்புள்ளது.]

அம்பி[2] *ambi*, பெ. (n.) விசயநகரத் தரசர் தலை நகரான அம்பி (ஹம்பி) யென்ற ஊர்; Hampi, the capital of the Vijayanagar kings. ''அம்பி நகருங் கெடுக்கவந்த குலாமா'' (தமிழ்நா. 224).

அம்பிகா *ambigā*, பெ. (n.) அம்பளங்காய் பார்க்க; see *ambaḷaṅgāy* (சா.அக.).

அம்பிகை *ambigai*, பெ. (n.) வெட்பாலை; a plant, *Wrightia antidysenterica* (சா.அக.).

அம்பிகைக்குழலாள் *ambigai-k-kuḻalāḷ*, பெ. (n.) பெருச்சாளி; bandicoot (சா.அக.).

அம்பிடி *ambiḍi*, பெ. (n.) சருக்கரை (பச்.மூ.); white sugar.

அம்பியம் *ambiyam*, பெ. (n.) கள்; toddy.

[அம்பி = கள். அம்பி → அம்பியம்.]

அம்பிலி *ambili*, பெ. (n.) கேழ்வரகின் கூழ்; porridge, esp. of ragi.

U. ambil

[அம்பலி → அம்பிலி.]

அம்பலி[2] பார்க்க; see *ambali*[2].

அம்பிளி *ambiḷi*, பெ. (n.) அம்பலி என்பதன் கொச்சை; corrupt of *ambali*.

அம்பினடி *ambiṉ-aḍi*, பெ. (n.) திப்பிலி மூலம்; root of long pepper. ''திரிகடுகு வசம்போம மம்பினடி'' (தைலவ. தைல. 39).

அம்பு[1] *ambu*, பெ. (n.) 1. நீர்; water. ''வழிச் செல்வோர்க்கு மோதுகானலி னம்புமுறைமை போல்'' (ஞானவா. வைராக். 61). 2. கடல்; sea. ''அம்பேழும்'' (திருப்பு. 99). 3. முகில் (மேகம்) (அக.நி.); cloud. 4. குடிநீர்; tincture. ''இருசத் தம்பில்வரும் பேசு'' (தைலவ. பாயி. 30). 5. ஊண்செரிபால் (அன்னசாரம்); chyle of digested food. 6. நீர்சூழ்ந்த வுலகம்; world, surrounded by water. ''அம்புகைக் கொண்டால்'' (சீவக. 2332).

[அம் = நீர். அம் → அம்பு = நீர், நீர்நிலை, நீருள்ளது, நீர்த்தொடர்பு கொண்டது.]

அம்பு[2] *ambu,* பெ. (n.) 1. **ஆடுதின்னாப் பாலை**; a worm-killer, *Aristolachia bracteata.* 2. **எலுமிச்சை**; lime, *Citrus medica.* 3. **பாதிரி மரம்**; trumpet flower tree, *Stereospermum chelonoides.* 4. **தண்ணீர்விட்டான்கிழங்கு**; water-root, *Aspharagus racemosus.* 5. **திப்பிலி**; long pepper, *Piper longum.* "அம்பேல மிங் கொலி" (தைலவ. தைல. 119). 6. **யானைத் திப்பிலி**; elephant pepper, climbing arum, *Scindapsus officinalis.* "அட்டவர்க்க மம்பணி வேர்" (தைலவ. தைல. 86). 7. **வெட்டிவேர்** (நாநார்த்த.); cuscus grass.

அம்பு[3] *ambu,* பெ. (n.) 1. **தளிர்**; tender leaf, sprout. 2. **மூங்கில்**; bamboo, *Bambusa arundinacea.* 3. **வாளி** (**பாணம்**); arrow. "எம்மம்பு கடிவிடுதும்" (புறநா. 9 : 5). 4. **ஒருவகைக் கனிய நஞ்சு** (**சரகாண்ட பாடாணம்**); a mineral poison.

ம., க., தெ., து., பட., கோத. அம்பு; துட. ஒப்; பர். அம்.

அம்பு[4] *ambu,* பெ. (n.) **வளையல்**; bracelet. "அம்புகைக் காணாம்" (சீவக. 2332).

அம்பு[5] *ambu,* பெ. (n.) **விண்** (பொதி.நி.); sky, firmament.

[உம்பரம் = மேலுலகம், விண்ணுலகம். உம்பரம் → அம்பரம் → அம்பு.]

அம்புக்கட்டு *ambu-k-kaṭṭu,* பெ. (n.) **அம்புக் கற்றை** (பிங்.); sheaf of arrows.

[அம்பு + கட்டு.]

அம்புக்குதை *ambu-k-kudai,* பெ. (n.) **அம்பின் நுனி** (திவா.); pointed end of an arrow.

[அம்பு + குதை.]

அம்புக்குப்பி *ambu-k-kuppi,* பெ. (n.) **அம்பின் கொண்டை** (பிங்.); arrow-head.

[அம்பு + குப்பி.]

அம்புக்குழைச்சு *ambu-k-kuḻaiccu,* பெ. (n.) **அம்புக்குப்பி** பார்க்க; see *ambu-k-kuppi.*

[அம்பு + குழைச்சு.]

அம்புக்கூடு *ambu-k-kūḍu,* பெ. (n.) **அம்பறாத் தூணி** (திவா.); quiver.

[அம்பு + கூடு.]

அம்புகணை *ambu-kaṇai,* பெ. (n.) 32 **வகைக் கனிய நஞ்சுகளுள் ஒன்று** (**சரகாண்ட பாடாணம்**); one of the 32 kinds of arsenic (சா.அக.).

அம்புச்சிறகு *ambu-c-ciṟagu,* பெ. (n.) **அம்பின் அடிப்பாகம்** (நாமதீப.); feather end of an arrow.

[அம்பு + சிறகு.]

அம்புடம் *ambuḍam,* பெ. (n.) **அம்படம்** பார்க்க; see *ambaḍam.*



அம்புத்தலை *ambu-t-talai,* பெ. (n.) **அம்பின் அடி** (திவா.); butt end of an arrow.

[அம்பு + தலை.]

அம்புநீர் *ambu-nīr,* பெ. (n.) **விந்து** (சித்.அக.); semen.

அம்புநேசம் *ambu-nēšam,* பெ. (n.) **தாமரை** (பரி. அக.); lotus, *Nelumbium speciosum.*

அம்புப்பறை *ambu-p-paṟai,* பெ. (n.) **பறையருள் ஒரு பிரிவு**; name of a class of Paraiahs.

அம்புப்புட்டில் *ambu-p-puṭṭil,* பெ. (n.) **அம் பறாத்தூணி**; quiver.

[அம்பு + புட்டில். புட்டி → புட்டில் = சிறு புட்டி, கூடு. '**இல்**' சிறு.பொ.பின். (dim. suff.)]

அம்புமுது *ambu-mudu,* பெ. (n.) **முத்துவகை** (S.I.I. ii, 431); a kind of pearl.

அம்புமுதுபாடன் *ambu-mudu-pāḍaṉ,* பெ. (n.) **முத்துவகை** (S.I.I. ii, 78); a kind of pearl.

அம்புமுதுவரை *ambu-mudu-varai,* பெ. (n.) **முத்துவகை** (S.I.I. ii, 78); a kind of pearl.

அம்புயம் *ambuyam,* பெ. (n.) 1. **பொதி**; pack, bundle. 2. **அம்புப்புட்டில்**; quiver (அக.நி.).

அம்புலி[1] *ambuli,* பெ. (n.) 1. **நிலா**; moon. "அம்புலி காட்ட லினிது" (கலித். 80 : 19). 2. **நிலவொளி**; moon-light (சா.அக.). 3. **அம்புலிப்பருவம்** (இலக். வி. 806); a certain stage of childhood when moon is shown to the child for its enjoyment. 4. **நிலாத்திருப்பி** (**சந்திரகாந்தி**); a flower which turns towards the moon, moon flower (சா.அக.).

ம. அம்புளி

[ஒருகா. அம் + புல்லி – அம்புல்லி → அம்புலி = நீரின் தன்மை, அதாவது குளிர்ச்சி பொருந்தியது.]

அம்புலி² *ambuli*, பெ. (n.) **சோளக்கூழ்**; maize porridge. 'பட்டிநாய்களுக்கு அம்புலி காய்ச்சு மிடமும்' (எங். ஊர், 40).

அம்பலி² பார்க்க; see *ambali²*.

அம்புலிகா *ambulikā*, பெ. (n.) புளியாரை; a vegetable green, sorrel, *Oxalis corniculata* (சா.அக.).

அம்புலிப்பருவம் *ambuli-p-paruvam*, பெ. (n.) **இது சிறுபிள்ளைச் செய்திகளைப் பாட்டுடைத் தலைவன்மேலேற்றி வரணித்துக் கூறும் பிள்ளைத்தமிழ் என்னும் சிறுவனப்பு (காவிய) வகையில் பத்துப் பருவங்களுள் ஏழாவது; தாய் தன் குழந்தைக்கு நிலாவைக் காட்டி அதனை அக் குழந்தையுடன் விளையாட வருமாறு அழைப்பதைப் பொருளாகக் கொண்டது**; the seventh out of the ten stages of childhood described in *Pillaittamil*, a species of minor poem, during which the mother points out the moon to the child and makes gestures to the moon to come and play with the child.

[அம்புலி + பருவம். அம்புலி = நிலா.]

அம்புலிமணி *ambuli-mani*, பெ. (n.) **நிலவொளியில் ஈரங் கொள்வதாகச் சொல்லப்படும் நிலாக்காந்தக்கல் (சந்திரகாந்தக்கல்)** (இரகு. சீதைவ. 23); moonstone said to emit moisture when placed in the moon-light, *adularia*.

ம. அம்பிளிமணி

அம்புலிமான் *ambuli-mān*, பெ. (n.) அம்புலியம்மான் பார்க்க; see *ambuli-y-ammān*.

அம்புலியம்மான் *ambuli-y-ammān*, பெ. (n.) **நிலா**; moon. 'அம்புலியம்மானைப் பிடித்துத் தரவேணு மென்றழுத ப்ரஜைக்கு' (ஈடு, 4 : 3, பிர.) (Nurs.).

ம. அம்பிளியம்மாவன்

[ஒருகா. நிலாவின் களங்கத்தை ஒரு மான் வடிவினதாகக் கருதி அம்புலிமான் அல்லது அம்புலியம்மான் என்றனர் போலும்.]

அம்புவல்லி *ambu-valli*, பெ. (n.) **ஒரு பூண்டு**; **a plant**, *Momordica charantia* (சா.அக.).

அம்புவி *ambuvi*, பெ. (n.) ஞாலம் (பூமி); earth. "அம்புவி யெயினர் போற்றும் வள்ளியை" (கந்தபு. தக்க. வள்ளி. 1).

[அம் = அழகிய. **Skt.** bhuvi = ஞாலம்.]

அம்புறைதூணி *amb(u)-urai-tūni*, பெ. (n.) **அம்பறாத்தூணி** (சங்.அக.); quiver.

[அம்பு + உறை + தூணி. உறைதல் = தங்குதல், இருத்தல். தூணி = கூடு.]

அம்பேல் *ambēl*, பெ. (n.) அம்பால்² பார்க்க; see *ambāl²*.

அம்பை *ambai*, பெ. (n.) 1. **வெட்டிவேர்** (புதுவை); cuscus grass, *Andropogon aromaticus* (Pond.). 2. **கொக்குமந்தாரை** (நாமதீப.); taper-pointed mountain ebony. 3. **வெள்ளைச் சாரணை**; a plant (நாமதீப.). 4. **மூத்திரக் கிறிச்சனம்**; a urinary disease, difficulty in voiding urine (சா.அக.).

[அம்பு → அம்பை.]

அம்பு² பார்க்க; see *ambu²*.

அம்பொருந்தகரை *amborun-tagarai*, பெ. (n.) **செந்தகரை**; a plant (சா.அக.).

அம்போ *ambō*, பெ. (n.) 1. **நீரிற் பிறப்பன**; the water-born. 2. **தாமரை**; day-lotus. 3. **ஒரு செடி**; a plant, *Calcumus rotang*. 4. **நாரை**; Indian crane (சா.அக.).

அம்போதரங்கம் *ambōdarangam*, பெ. (n.) **அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவின் ஐந்துறுப்புகளுள் ஒன்றும், வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவின் ஆறுறுப்புகளுள் ஒன்றுமாக அமைவதும், ஈரளவடியும் ஓரளவடியும் சிந்தடியும் குறளடியுமாக உயர்ந்தெழுந்து வரவரச் சுருங்கும் கடற்கரை யலை போல் வரவரக் குறைவதுமான செய்யுளுறுப்பு**; one of the five members of *ambōdaranga-vottāliśaikkalippā* and one of the six members of the *vannaga vottāliśaikkalippā*, in which the lines diminish in length gradually like waves on the shore.

அம்போதரங்கம், அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவில் தாழிசைக்குப் பின்னும், வண்ணக வொத்தாழிசைக் கலிப் பாவில் அராகத்திற்குப் பின்னும், இணையளவடி யிரண்டும், தனி யளவடி நான்கும், சிந்தடி எட்டும், குறளடி பதினாறுமாக வந்து,

முறையே பேரெண், அளவெண், இடை யெண், சிற்றெண் எனப் பெயர்பெறும்.

இவ் வெண்ணுறுப்புகள், முறையே இணை யளவடி யொன்றும், தனி யளவடி யிரண்டும், சிந்தடி நான்கும், குறளடி யெட்டுமாகப் பப்பாதி குறைந்தும் வரும். அது சிறப்பில தாகக் கருதப்படும்.

''..
.........மன்னியவீ ரடியிரண்டு மோரடியா
னான்கும்
உளமலிசிந் தடியெட்டுங் குறளடியீ ரெட்டும்
ஒருங்கியல்பே ரெண்சிற்றெண் ணிடை
யெண்ணோ டளவெண்
தளமலியம் போதரங்க மெனும்பெயரா
னிலவும்''

(வீரசோ. யாப். 10, உரை).

[அம் → அம்பு = நீர், கடல். தரங்கு = குத்துப் படைக்கலம். தரங்கு → தரங்கம் = கரையைக் குத்தும் அலை. அம்பு + ஓ (சாரியை) + தரங்கம் = அம்போதரங்கம்.]

அம்போதரங்கவொத்தாழிசை *ambōdaraṅga-v-ottāḻišai*, பெ. (n.) ***அம்போதரங்க வொத் தாழிசைக் கலிப்பா*** பார்க்க; see *ambōdaraṅga-vottāḻišai-k-kali-p-pā*.

[அம்போதரங்கம் + ஒத்தாழிசை.]

அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பா *ambō-daraṅga-v-ottāḻišai-k-kali-p-pā*, பெ. (n.) ஒரு தரவு, மூன்று தாழிசை, **அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஐந்துறுப்பும் பெற்றுவரும் ஒத்தாழிசைக் கலிப்பா** வகை; a variety of *ottāḻišaikkali* verse having *ambōdaraṅgam* as one of its members in the middle.

''தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொற்
சுரிதகமாய்
நிரலொன்றி னேரிசை யொத்தா ழிசைக்
கலி நீர்த்திரைபோன்
மரபொன்று நேரடி முச்சீர் குறணடு
வேமடுப்பின்
அரவொன்று மல்குல தம்போ தரங்க
வொத் தாழிசையே''

(யா. கா. 38).

[அம்போதரங்கம் + ஒ + தாழ் + இசை + கலி + பா. ஒ = ஒத்த. தாழ் = தாழ்ந்த, தாழம் பட்ட. இசை = ஒலி, ஓசை. தாழிசை = தாழம் பட்ட ஓசையுள்ள கலிப்பா வுறுப்பு. கலித்தல் = துள்ளல். கலி = துள்ளலோசையுள்ள பாவகை. பண் → பாண் → பா = இசைப்பாட்டு, செய்யுள் வகை.]

அம்போதரங்கம் பார்க்க; see *ambōdaraṅ-gam*.

அம்போதரங்கவொருபோகு *ambōdaraṅga-v-oru-pōgu*, பெ. (n.) **கொச்சகக் கலிப்பா வகை களுள் ஒன்று;** a variety of *koccagakkali* verse.

இது தரவு, கொச்சகம், அராகம், சிற்றெண், அடக்கியல்வாரம் என்னும் ஐந்துறுப்புப் பெற்று, தலையளவில் 60 அடியும், இடையள வில் 30 அடியும், கடையளவில் 15 அடியும் கொண்டு வரும்.

''அம்போ தரங்க மறுபதிற் றடித்தே
செம்பால் வாரஞ் சிறுமைக் கெல்லை''

(தொல். பொருள். செய். 145).

''எருத்தே கொச்சக மராகஞ் சிற்றெண்
அடக்கியல் வாரமொ டந்நிலைக்
குரித்தே''

(தொல். பொருள். செய். 146).

அம்போதரங்கத்தின் நால்வகை யெண்ணுள் ஒன்றாகிய சிற்றெண்ணே பெற்றதனால், ''கண்ணக னிருவிசும்பிற் கதழ்பெயல்'' என்று தொடங்கும் கலித்தொகை 102ஆம் செய்யுள் அம்போதரங்க வொத்தாழிசைக் கலியாகாது, அம்போதரங்க வொருபோகாயிற்று.

''தரவின் றாகித் தாழிசை பெற்றும்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியும்
எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும்
அடக்கிய லின்றி யடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை
யுடையது
கொச்சக வொருபோ காகு மென்ப''

(தொல். பொருள். செய். 143)

என்னும் நூற்பாப்படி இஃது எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றும் கொச்சக வொரு போகாகும்.

[ஒருபோக்கு = மாறான நடை. ஒருபோக்கு → ஒருபோகு = ஒழுங்கான இயல்பினின்றும் வேறு பட்ட செய்யுள்வகை. கொச்சக வுறுப்புடைய வொருபோகு கொச்சக வொருபோகு. கொய்சகம் → கொசகம் → கொச்சகம். பெண்டிர் கொய்துடுக்கும் சேலை மடிப்புப்போன்று, தாழிசை யொத்த பலவுறுப்புகள் அடுக்கி வருவது கொச்சகம்.]

அம்போதி *ambōdi*, பெ. (n.) ***பாட்டின் உட் பொருள்*** (சங்.அக.); the inner meaning of a stanza.

[அகம் = உள். பொதி = பொதிந்திருப்பது, அடங்கியிருப்பது. அகம் + பொதி – அகம் பொதி → அம்போதி.]

அம்ம *amma*, பெ. (n.) ***அம்மை என்னும் தாய் முறைப் பெயரின் விளி;*** voc. of *ammai* (mother). —, இடை. (int.) *1.* ***கேட்பாயாக எனப் பொருள்படும் ஓர் இடைச்சொல்;*** an exclamation inviting attention. "அம்மகேட் பிக்கும்" (தொல். சொல். இடை. 28). 2. ***ஒரு வியப்புக் குறிப்பு;*** an exclamation of surprise or wonder. "விதியினார்க் கியானம்ம செய் கின்றதோ ரளவுண்டோ" (கந்தபு. அசுர. அசுரர் தோற். *14*). —, இடை. (part.) ***ஓர் உரையசைச் சொல்;*** expletive adding grace to composition. "அதுமற் றம்ம" (நன். *438*, விருத்தி உரை).

ம., க., தெ. அம்ம; **குட.** அம்மெ; **பட.** அமெ.

[அம்மை → அம்ம (விளி).]

அம்மகோ *ammagō*, இடை. (int.) ***ஓர் இரக்கக் குறிப்பு;*** an exclamation of pity. "அம்மகோ வெனும் விழுமழும்" (மதுரைக்கலம். 15).

[அம்மை → அம்ம → அம்மவோ → அம்மகோ.]

அம்மங்கார்[1] *ammaṅgār*, பெ. (n.) ***திருமாலிய (வைணவ)க் குரவன் மனைவி*** (திருமா.); wife of a Vaiṣṇava Ācārya or priest (Vaiṣṇ.).

தெ. அம்மகாரு

*[அம்மையவர் > **தெ.** அம்மவாரு → அம்ம காரு > **த.** அம்மங்கார்.]*

அம்மங்கார்[2] *ammaṅgār*, பெ. (n.) ***அம்மான் மகள்*** (பிராம.); daughter of a maternal uncle (Brāhm.).

[அம்மான் + மங்கையார் (மகள்) – அம்மான் மங்கையார் → அம்மங்கார்.]

அம்மங்காள் *ammaṅgāḷ*, பெ. (n.) ***அம்மங்கார்***[2] பார்க்க; see *ammaṅgār*[2].

*[மங்கை → மங்கா → மங்காள். **ஒ.நோ:** தங்கை → தங்கா → தங்காள். அம்மான் + மங்காள் – அம்மங்காள் (கொ.வ.).]*

அம்மச்சி *ammacci*, பெ. (n.) ***செந்தணக்கு;*** false tragacanth, *Sterculia urens* (சா.அக.).

அம்மட்டம் *ammaṭṭam*, பெ. (n.) *வட்டத்திருப்பி* (சங்.அக.); velvet leaf.

அம்மட்டி *ammaṭṭi*, பெ. (n.) ***கொட்டி*** (பச்.மூ.); an aquatic plant (செ.அக.) — (சா.அக.) ***கொட்டிக்கிழங்கு;*** an edible root of a water-plant, *Aponogeton:*

அம்மடிங்கம் *ammaḍiṅgam*, பெ. (n.) *பட்டாணி;* pea, *Pisum sativum* (சா.அக.).

அம்மண்டார் *ammaṇḍār*, பெ. (n.) ***தாய்மாமன்*** (நாஞ்.); maternal uncle (Nāñ.).

[அம்மான் + ஆண்டார் – அம்மாண்டார் → அம்மண்டார்.]

அம்மணி[1] *ammaṇi*, பெ. (n.) ***பெண்ணைக் குறிக்கும் மதிப்புரவுச் சொல்*** (குருபரம். 285); a term of respect used in referring to or calling a woman.

ம. அம்மிணி; **க., தெ.** அம்மண்ணி.

[அம்மனை → அம்மணி. இனி, அம்மை + மணி என்றுமாம்.]

அம்மணி[2] *ammaṇi*, பெ. (n.) *1.* ***மடி*** (சம்.அக. கை.); lap. 2. ***இடை, இடுப்பு;*** waist of a woman. "நின் னம்மைதன் அம்மணிமேற் கொட்டாய் சப்பாணி" (திவ். பெரியாழ். *1.7:3*).

ம. அம்மணி

*[அம் (அழகிய) + மடி – அம்மடி → அம்மணி. **ஒ.நோ:** பிடி → பிணி.]*

அம்மந்தி *ammandi*, பெ. (n.) ***அம்மான் மனைவி, அத்தை*** (இ.வ.); maternal uncle's wife (Loc.).

[அம்மான் + தேவி – அம்மாந்தேவி → (அம் மாந்தே) → அம்மாந்தி → அம்மந்தி. தேவி = பெண்தெய்வம், பெண், மனைவி.]

அம்மம் *ammam*, பெ. (n.) 1. ***பெண்முலை;*** woman's breast. "கொம்மை யம்ம மசைவுற" (இரகு. நாட்டு. 50). 2. ***முலைப்பால்;*** woman's breast milk. "அம்ம முண்ணத் துயி லெழாயே" (திவ். பெரியாழ். *2.2:1*). "அன்னே யுன்னை யறிந்துகொண் டேனுனக் கஞ்சுவ னம்மந் தரவே" (திவ். பெரியாழ். *3.1:1*). *3.* ***குழந்தை யுணவு;*** babies' food (சா.அக.).

ம. அம்மிஞ்ஞி; க. அம்மி; து. அமணி. ஒ.நோ : L. *mamma*.

[மருமம் = மார்பு, முலை. மருமம் → மம்மம் → அம்மம். ஒ.நோ : கருமம் → கம்மம் → கம்.]

அம்மம்ம *ammamma*, இடை. (int.) **அம்ம என்பதன் மிகு வியப்புக் குறிப்பு**; an exclamation of astonishment or bewilderment. ''அம்மம்ம வெல்ல வெளிதோ'' (தாயு. சச்சி. 4).

ம. அம்மம்ம, அம்பம்பட; க. அம்மம்ம.

[அம்மை (தாய்) → அம்ம (விளி) → அம்ம அம்ம (இரட்டல்) → அம்மவம்ம → அம்மம்ம.]

அம்மவம்ம பார்க்க; see *amma-v-amma*.

அம்மமுண்ணு-தல் *ammam-unnu-*, 12 செ.கு.வி. (v.i.) *முலைப்பால் குடித்தல்*; sucking milk from woman's breast.

[அம்மம் + உண்ணு.]

அம்மல் *ammal*, பெ. (n.) 1. *செரியாமை*; indigestion. 2. *மந்தாரம்*; cloudiness, murkiness. 3. *மூடம்*; stupidity. 4. *விறைப்பு*; stiffness, numbness.

[கம்முதல் = மந்தாரமாதல், மந்தமாதல். கம் → கம்மல் → அம்மல்.]

அம்மலர்மூலி *ammalar-mūli*, பெ. (n.) **செங்குன்றி**; red bead vine, *Abrus precatorius* (சா.அக.).

அம்மவம்ம *amma-v-amma*, இடை. (int.) **மிகு வியப்புக் குறிப்பு**; an exclamation of intense surprise or wonder. ''அம்மவம்ம கடவுண் மகனான நின்னா லறிவுற்றேன்'' (ஞானவா. சிகித்து. 130).

[அம்மை (தாய்) → அம்ம (விளி). அம்ம அம்ம (இரட்டல்(→ அம்மவம்ம.]

அம்மவோ *ammavō*, இடை. (int.) **ஓர் இரக்கக் குறிப்பு**; an exclamation of pity. ''அம்மவோ விதியே யென்னும்'' (கந்தபு. யுத்த. அக்கினி. 194).

தெ. அம்மரோ

[அம்மை (தாய்) → அம்ம (விளி) → அம்மவோ. அம்ம + ஒ (வி.இ.) – அம்மவோ.]

அம்மன் *ammaṉ*, பெ. (n.) 1. *தாய்* (சங்.அக.); mother. 2. *மறப் பெண்தெய்வம்*; manly goddess. 3. *காளி*; *Kāḷi*. அம்மன்கொண்டாடி. 4. **அம்மை நோய்வகை**; smallpox, chicken-pox, measles.

ம., க. அம்மன்; தெ. அம்மவாரு.

அம்மன்கட்டு *ammaṉ-kaṭṭu*, பெ. (n.) **அம்மைக் கட்டு, கூகைக்கட்டு**; mumps, *Idiopathic parotiditis*, an infectious disease of children between the ages of 5 and 15 characterised by swelling of the parotid and other salivary glands of the neck and the cheek, running a definite course and generally terminating in recovery.

மறுவ. பொன்னுக்குவீங்கி, புட்டாலம்மை.

[அம்மன் = காளியம்மை. கட்டு = வீக்கம். அம்மன்கட்டு = காளியம்மையால் நேர்வதாகக் கருதப்பட்ட கன்னங்கழுத்து வீக்கம்.]

அம்மன்காசு *ammaṉ-kāsu*, பெ. (n.) **பழைய புதுக்கோட்டை நாட்டில், காவல் தெய்வமாகிய பெருவுடையாட்டியின் (பிருகதம்பாவின்) உருவம் பொறிக்கப்பட்டு, பெயரளவில் 1/16 அணா மதிப்பும் நடைமுறையில் 1/20 அணா மதிப்பும் பெற்று வழங்கிய சிறு செப்புக் காசு**; copper coin of the old Pudukkōṭṭai State, nominally 1/16 anna, practically 1/20 anna, as bearing the image of the tutelary deity Bṛahadāmbā.

அம்மன்காசு

[சிவனுடைய ஆற்றலும் அருளும் ஆணும் பெண்ணுமாக உருவகிக்கப்பட்டு, பொது மக்கட்கு எளிதாக விளங்குமாறும் தெய்வப் பற்றுண்டாக்குமாறும் உலகத் தந்தைதாயாகக் காட்டப்பட்டபின், சிவன் தேவியாகவும் அனைத்துயிர்க்கும் அன்னையாகவும் கருதப்பட்ட பெண் தெய்வம் அம்மன். ஒருகா. அம்மம் (முலைப் பால்) → அம்ம → அம்மன். இனி, அம்மா (ஆவின் கன்று தாயை விளிக்குங் குரல்) → அம்ம → அம்மன் என்றுமாம்.]

அம்மன்கொடை *ammaṉ-koḍai*, பெ. (n.) 1. **ஒரு சிற்றூர்ப் பெண்தெய்வத்தைக் கொண்டாடும் திருவிழா** (G.Tn. D. i, 111); festival of a village goddess. 2. **காளிக்கு ஆடுமாடுகளைக் காவு கொடுக்கும் சிற்றூர்ப் பெருவிழா**; sacrifice of goats and cattle to *Kāḷi* in a village festival.

ம. அம்மன்கொட

[அம்மை → அம்மன். கொடு → கொடை.]

அம்மன்கொண்டாடி *amman-koṇḍāḍi*, பெ. (n.) **தெய்வமேறியாடும் காளிகோயிற் பூசாரி**; priest of *Kāḷiyamman* temple, who goes about dancing under inspiration.

[அம்மை → அம்மன். கொண்டு + ஆடு — கொண்டாடு. ஆடு + இ (ஒருமை வினை முதலீறு) — ஆடி.]

அம்மனே *ammanē*, இடை. (int.) **ஒரு வியப்புக் குறிப்பு**; an exclamation of wonder or surprise. "உடைந்ததுவு மாய்ச்சிபான் மத்துக்கே யம்மனே" (திவ். இயற். 3 : 28).

[அம்மை (தாய்) → அம்மன் → அம்மனே (விளி).]

அம்மனை[1] *ammanai*, பெ. (n.) 1. **தாய்**; mother. "தன்கைக்கோல் அம்மனைக்கோ லாகிய ஞான்று" (நாலடி. 14). 2. **தலைவி**; lady, mistress. "நோற்றுச் சுவர்க்கம் புகு கின்ற அம்மனாய்" (திவ். திருப்பா. 10).

[அம்மை + அன்னை — அம்மையன்னை → அம்மன்னை → அம்மனை (அருமைபற்றி வந்த மீமிசைச்சொல்). ஒ.நோ : தாய் + அம்மை — தாயம்மை.]

அம்மனை[2] *ammanai*, பெ. (n.) 1. **அம்மானை யென்னும் மகளிர் பந்து விளையாட்டு** (பிங்.); a girls' game with balls. 2. **அம்மானை விளையாடும் பந்து**; balls used in the game. "அம்மனை தங்கையிற் கொண்டு" (சிலப். 29, அம்மானை வரி, 4).

ம. அம்மன; க. அம்மாலெ; தெ. அம்மனலு.

[அம்ம + அனை (அன்னை) — அம்மனை.]

அம்மானை பார்க்க; see *ammāṉai*.

அம்மனை[3] *ammanai*, பெ. (n.) **நெருப்பு**; fire. "நம்மனைக் கம்மனை வழங்கும்" (பாரத. வாரணா. 124).

[அம் = நீர். அனை (அன்னை) = தாய். அம் + அன்னை — அம்மன்னை → அம்மனை.]

நெருப்பினின்று நீர் தோன்றிற்று என்னும் கொள்கைபற்றி, நெருப்பு அம்மனை யெனப் பட்டது. இதற்கு நேர் வடசொல் 'க்ருபீட யோனி'. க்ருபீட = நீர். யோனி = பிறப்பிடம். இங்ஙனம் பொருளும் பொருட் காரணமும் ஒத்திருத்தலால், தென்சொல்லை வட சொல்லின் மொழிபெயர்ப்பென்பர். நெருப்பி னின்று நீர் தோன்றிற்றென்னுங் கொள்கை பண்டைத் தமிழர்க்கு மிருந்ததனால், வட சொல்லே தென்சொல்லின் மொழிபெயர்ப் பாகவு மிருக்கலாம்.

ஒ.நோ:

"கருவளர் வானத் திசையிற் றோன்றி
யுருவறி வாரா வொன்ற னூழியும்
உந்துவளி கிளர்ந்த வூழு மூழியும்
செந்தீச் சுடரிய வூழியும் பனியொடு
தண்பெயல் தலைஇய வூழியும்"
(பரிபா. 2 : 5-9).

அம்மனை[4] *ammanai*, பெ. (n.) **அவ்வீடு**; that house. இம்மனையினும் அம்மனை பெரிது (உ.வ.).

க. ஆமனெ

['அ' சேய்மைச்சுட்டு. மனை = வீடு, மாளிகை. அ + மனை — அம்மனை.]

அம்மனைப்பாட்டு *ammanai-p-pāṭṭu*, பெ. (n.) **அம்மானை விளையாட்டிற் பாடும் பாட்டு**; song sung by girls when playing the game of balls.

அம்மனைமடக்கு *ammanai-maḍakku*, பெ. (n.) **மகளிர் இருவர் வினாவிடையாய் இருபொருள் படக் கூறுவதாகக் கலித்தாழிசையால் இயற்றப்படும் அம்மானைப் பாட்டு**; poetic composition in *kalittāḻiśai* metre, in which, two girls engaged in conversation try to outwit each other through questions and responses couched in ambiguous words.

"அம்மனை கைக்கொண் டாடுநர் தம்மையும்
அம்மனை யாய்மதித் தாங்கொர்கர்த் தாவினை
நிந்தாத் துதிதுதி பெறநிகழ்த் துதலும்
அந்தா தித்திடை யடிமடக் காகவும்
ஈற்றடி யிரட்டுற விசைத்ததைத் தாபித்
தாற்றலி னமைக்குமம் மனைமடக் கொன்றுள"
(மாற. 267).

[அம்மானை → அம்மனை. மடங்கு → மடக்கு = மடக்கி (திரும்ப, திரும்பத் திரும்ப) வரும் அசை, சொல், சீர், தொடர், அடி முதலியன.]

அம்மனையோ *ammanai-y-ō*, இடை. (int.) **ஒரு துயரக் குறிப்பு**; an exclamation of grief. "அம்மனை யோவெனாத் துண்ணெ னெஞ்சின ளாய்த்துடித்து" (சீவக. 760).

[அம்மை (தாய்) + அனை (அன்னை) + ஓ (விளியுருபு) — அம்மனையோ.]

அம்மனோ *ammanō*, இடை. (int.) **ஒரு துயரக் குறிப்பு**; an exclamation of grief. "வழா நெடுந் துன்பத்த ளென்றிரங்கார் அம்மனோ" (திவ். இயற். திருவிருத். 37).

[அன்னை + ஓ (விளியுருபு) – அன்னையோ → அன்னோ. அம்மை + அன்னோ – அம்மன்னோ → அம்மனோ.]

அம்மா[1] *ammā*, பெ. (n.) 1. **தாய்** (விளி. வே.); mother (voc.). 2. **தலைவி, பெருமாட்டி**; matron, lady. 3. **தாய்** (உ.வ.); mother (com.u.). —, இடை. (int.) 1. **ஒரு வியப்புக் குறிப்பு**; an exclamation of wonder. "பொன்னக ரிதனை யொக்கு மென்பது புல்லி தம்மா" (கம்பரா. சுந்தர. கடல்தாவு. 92). 2. **ஓர் இரக்கக் குறிப்பு**; an exclamation of pity. "பிறந்தவர்க......வெறும்பொருள தம்மா விடுத்திடுமி னென்றாள்" (சீவக. 2622). 3. **ஓர் உவப்புக் குறிப்பு**; an exclamation of joy. "அம்மாவென் றுகந்தழைக்கு மார்வச் சொல்" (திவ். பெருமாள்தி. 9 : 6). 4. **ஓர் அசைச்சொல்**; an expletive. "கடவுளர்க் கமைத்த யாக தலமெனக் கவினிற் றம்மா" (பாரத. இராசசூய. 91). 5. **மதிக்கப்படும் பெண்**; respectable woman. ஓர் அம்மா வந்திருக்கிறது (உ.வ.).

ம., க., தெ., எரு., நா., கை., குற., கொர., து. அம்ம; **குட.** அம்மெ; **பட., கோத.** அவ்வே; **இரு.** அவ்வெ; **துட.** அவ்வ; **கோண்.** அவ்வாள்; **குரு.** ஆவ்வெ; **மா.** அய; **கொலா., பிரா., கூ., மரா., பா., பிராகி., சிங்., இந்.** அம்மா; **சிந்.** அமா; **வங்.** மா; **மணிபு.** இமா.

G. *amme*; **OHG.** *amma*; **OS.** *amma*; **E.** *mammā*; **Fin.** *emā*; **Skt.** *ambā*; **Ost.** *ane*; **Hung.** *eme*; **Heb.** *ēm*; **Mord.** *anai*; **Turk.** *anna*; **Mal.** *amā*; **Tib.** *mā, mō*; **Ar.** *amun*; **Russ.** *mat*; **It., Sp.** *madre*; **Swa.** *mama*; **Port.** *māe*; **Rum.** *mamā*; **F.** *mēre*; **Pol.** *matka*; **Yid.** *muter*; **Jap.** *aba, haha*; **Kor., Icel.** *amma*; **Chin.** *mā*.

அம்மா[2] *ammā*, பெ. (n.) **மாவிலங்க மரம்**; lingam tree, *Crataeva religiosa*.

அம்மாச்சன் *ammāccaṉ*, பெ. (n.) **தாய்மாமன்** (நாஞ்.); maternal uncle (Nāñ.). **அம்மண்டார்** பார்க்க; see *ammaṇḍār*.

[அம்மான் + அச்சன் – அம்மாச்சன் (அம்மானாகிய அச்சன்). அம்மான் = தாய் மாமன். அச்சன் = தந்தை, தந்தை போல்வான்.]

அம்மாச்சி *ammācci*, பெ. (n.) 1. **தாயைப் பெற்ற பாட்டி** (தஞ்சை); maternal grand-mother (Tj.). 2. **தாய்**; mother (சங்.அக.).

[அம்மா = தாய். அச்சி = தாய். அம்மா + அச்சி – அம்மாச்சி (தாயின் தாய்).]

பாட்டி யென்பதே இச் சொற்கு உரிய பொருள். தாயை அம்மாச்சி யென்பது ஒருசிலர் வழக்கே.

அம்மாஞ்சி *ammāñji*, பெ. (n.) 1. **அம்மான் மகன்** (பிராம.); son of a maternal uncle (Brāhm.). 2. **மூடன்**; fool cf. mātula-tanaya, a name for *ūmattai* which by its derivation *unmatta* suggests foolishness, eccentricity akin to madness (செ.அக.).

ம. அம்மாஞ்சி

[அம்மான் + சேய் – அம்மான்சேய் → அம் மாஞ்சேய் → அம்மாஞ்சி (கொச்சை).]

அம்மாஞ்சிமதினி *ammāñji-madiṉi*, பெ. (n.) **அம்மான் மகன் மனைவி** (பிராம.); wife of the son of a maternal uncle (Brāhm.).

[அம்மான் + சேய் + மதினி – அம்மாஞ்சி மதினி. **Skt.** maithuni > *த. மதினி.]*

அம்மாட்டி *ammāṭṭi*, பெ. (n.) **கொட்டிக்கிழங்கு** (மலை.); the root of a waterplant, species of aponogeton, *Aponogeton monastachyon* (சா. அக.).

[அம்மட்டி → அம்மாட்டி.]

அம்மட்டி பார்க்க; see *ammaṭṭi*.

அம்மாடி *ammāḍi*, இடை. (int.) 1. **வியப்புக் குறிப்பு**; an exclamation of wonder. அம்மாடி! எவ்வளவு பெரிய ஆமை! 2. **அச்சக் குறிப்பு**; an exclamation of dread. அம்மாடி! எவ்வளவு பெரிய தேள்! 3. **இரக்கக் குறிப்பு**; an exclamation of pity. அம்மாடி! இவ்வழகான பிள்ளைக்கு இருகண்ணு மில்லையே! 4. **நோவுக் குறிப்பு**; an exclamation of pain. அம்மாடி! வயிற்றுவலி தாங்க முடிய வில்லையே! 5. **இளைப்பாறற் குறிப்பு**; an exclamation of relief. கனத்த சுமையை இறக்கிவிட்டு 'அம்மாடி' என்று மரத்தடியில் உட்கார்ந்தான் (உ.வ.).

[அம்மை (தாய்) → அம்மா (விளி) + அடி (பெ.பா. விளி) – அம்மாடி. அட (ஆ.பா.) – அடி (பெ.பா.).]

பொதுவாக ஆடவர் அப்பனையும் பெண்டிர் அம்மையையும் விளித்து, ஒன்றைச் சொல்வது அல்லது ஒரு குறிப்பைத் தெரிவிப்பது இயல்பு. அப்பாடா (ஆ.பா.) — அம்மாடீ → அம்மாடி (பெ.பா.).

அம்மாத்தாள் *ammattal*, பெ. (n.) **தாயைப் பெற்ற பாட்டி** (இ.வ.); mother's mother (Loc.).

[அம்மை → அம்மா + ஆத்தாள் — அம்மாத்தாள். ஆத்தை (தாய்) → ஆத்தா → ஆத்தாள் (கொ.வ.).]

பாட்டன் பாட்டி, தாய் தந்தை, அண்ணன் அக்கை ஆகிய மூத்தோரின் முறைப்பெயர்களின் விளிவடிவம் ப்ாலீறு பெற்று வழங்குவது வழுவாயினும், பெரும்பால் உலக வழக்காயுள்ளது.

அம்மாத்திரம் *ammattiram*, பெ. (n.) **அவ்வளவு**; that much, so much.

ம. அம்மாத்திரம்

[அ (அந்த) + மாத்திரம் (அளவு).]

அம்மாத்தம் என்பது கொச்சை.

அம்மாதிகம் *ammadigam*, பெ. (n.) **செந்திராய்**; a red variety of Indian chickweed, *Mollugo parviflora* (சா.அக.).

அம்மாபத்தினி *ammapattini*, பெ. (n.) **வேம்பு**; margosa, *Azadirachta indica* (சா.அக.).

அம்மாமி *ammami*, பெ. (n.) 1. **அம்மான் மனைவி**; maternal uncle's wife. 2. **கணவன் தாய்**; husband's mother. ''அம்மாமி தன் வீவுங் கேட்டாயோ தோழி'' (சிலப். 29, தேவந்தி யரற்று).

ம. அம்மாவி

[1. அம்மான் + மாமி — அம்மான்மாமி = அம்மான் மனைவியாகிய மாமி. ஒ.நோ: மகன் பிள்ளை பேரன் = மகன் பிள்ளையாகிய பேரன். கணவன் தாயாகிய மாமியினின்றும் வேறுபடுத்த அம்மான் என்னும் அடை வந்தது. அவ்வடை அம்மான் தொடர்பு குறிப்பதனால், அம்மான் மாமி என்பது அத்தையைக் குறிக்கும். அத்தை மணவுறவு முறையில் மாமியை ஒத்திருப்பதால், அவளும் மாமியெனப்பட்டாள். அம்மான்மாமி → அம்மாமி.

2. அம் (அழகிய, நல்ல) + மாமி — அம்மாமி. நல்லம்மான், நற்றாய் என்பவற்றிலுள்ள 'நல்' என்னும் அடைபோல், அம்மாமி என்பதில் 'அம்' என்னும் அடை அருமையும் நெருக்கமுங் குறித்து வந்தது.]

அம்மாய் *ammay*, பெ. (n.) **தாயைப் பெற்ற பாட்டி** (வின்.); maternal grandmother.

ம. அம்மாம்ம

[அம்மை → அம்மா + ஆய் — அம்மாய். ஆய் = அன்னை.]

அம்மாயி என்பது கொச்சை வடிவம்.

அம்மாரம் *ammaram*, பெ. (n.) **அலரிச்செடி** (பச்.மூ.); sweet scented oleander, *Nerium odorum*.

அம்மாலிகை *ammaligai*, பெ. (n.) **புளி**; tamarind, *Tamarindus indica* (சா.அக.).

அம்மாலைத்தேவர் *am-malai-t-tevar*, பெ. (n.) **கள்ளர்குலப் பட்டப் பெயர்களுள் ஒன்று** (கள்ளர் சரித். பக். 145); a caste title of Kaḷḷars.

[அம் + மாலை + தேவர்.]

அம்மாள் *ammal*, பெ. (n.) 1. **தாய்**; mother. 2. **தாய்போல் மதிக்கப்படுபவள்**; any matron respected as a mother. அந்த அம்மாள் நல்ல அம்மாள். 3. **ஒரு திருமாலிய (வைணவ) ஆசிரியர் பெயர்**; name of a Vaiṣṇava Ācārya. 'நடாதூரம்மாள்' (ஈடு, 7.6 : 10).

ம. அம்மாள்

[மருமம் = மார்பு, முலை. மருமம் → மம்மம் → அம்மம் = தாயின் அல்லது பெண்ணின் முலை, முலைப்பால், குழந்தையுணவு. ஒ.நோ: கருமம் → கம்மம் → கம். அம்மம் → அம் → அம்மு = தாய்ப்பால், குழந்தையுணவு, குழந்தைக்கு ஊட்டுஞ்சோறு.

அம் → அம்ம = பாலூட்டுந் தாய். அம்ம → அம்மை = தாய். 'அம்ம' என்பதே முந்துவடிவம்; அதன் இலக்கிய வடிவமே 'அம்மை'. ம., தெ., க. அம்ம.

அம்ம → அம்மா = 1. விளி வடிவம். 2. எழுவாய் வடிவம். அம்மா→அம்மாள் = தாய் (உ.வ.). ஒ.நோ: அக்க → அக்கா → அக்காள். அம்மா, அம்மாள் என்னும் வடிவங்கள் கொச்சையாகக் கொள்ளப்படாவிடினும், வழுவான வடிவங்களாகும். முன்னது வேற்றுமை வழு; பின்னது அதன்மேலும் பெண்பாலீறு சேர்ந்த ஈற்று வழு. அம்ம அல்லது அம்மை என்பதே பெண்பாற்

பெயர். அதன்மேலும் பெண்பாலீறு சேர்ப்பது மிகைபடக்கூறல்.

அம்மை → அம்மன் = காளி போன்ற ஆண் மறம் மிக்க பெண் தெய்வம். அன்னீறு ஆண்மையை யுணர்த்தும்.]

அம்மான் *ammāṉ*, பெ. (n.) 1. **தாயுடன் பிறந்தவன்** (பிங்.); mother's brother, maternal uncle. 2. **பெண்கொடுத்த மாமன்** (இ.வ.); wife's father (Loc.). ''உரியவம்மான் மாதுலன் றான்'' (கூர்மபு. வியாதர் கரும. 10). 3. **அத்தை கணவன்**; husband of father's sister. 4. **தந்தை**; father. ''மலரோ னம்மான்'' (கம்பரா. ஆரணிய. மாரீசன். 50). 5. **அழகிய பெரியோன்**; the beautiful great one. ''திகழத் திகழு மடிமுடியுங் காண்பான் கீழ்மே லயனு மாலும் அகழப் பறந்துங் காணமாட்டா வம்மான்'' (திருவாச. 442). 6. **கடவுள்**; God, as father. ''அன்னவர் செய்யுஞ் சிருட்டியு மம்மா னருளினாற் றன்வயத் தாக்கி'' (சூத. சிவமான். 10:17). ''ஆழி யங்கைக் கருமேனி யம்மான்'' (திவ். திருவாய். 5. 1 : 6).

ம. அம்மாவன்

[அம்மை → அம்மான் = அம்மையொடு பிறந்தவன்.]

அம்மான்கோலம் *ammāṉ-kōlam*, பெ. (n.) **தாய் மாமன் மூன்றாம் நாள் பெண்ணிற்கு ஆணுடை யணிவித்துச் செய்துவைக்கும் திருமணவூர்வலம்** (பிராம.); a ceremony conducted under the auspices of the maternal uncle usually on the third day of marriage, when the bride dressed as a boy is taken in procession (Brāhm.).

அம்மான்சம்பாவனை *ammāṉ-śambāvaṉai*, பெ. (n.) **திருமணத்தில் அம்மான் கொடுப்பதாக விளம்பியிடும் முதற் கொடைப்பணம்** (பிராம.); first money gift made at the wedding by the maternal uncle to the bride or bridegroom (Brāhm.).

[அம்மான் + Skt. sambhāvanā > த. சம்பாவனை = சிறப்பு, நன்கொடை.]

அம்மான்சீர் *ammāṉ-šīr*, பெ. (n.) **பையனுக்குப் பூணூற் சடங்கிலாவது பெண்ணிற்குத் திருமணத்திலாவது தாய்மாமன் வைக்கும் வரிசை**; gifts made by a maternal uncle to his nephew during his investiture with the sacred thread, or to his niece at her wedding.

அம்மான்பச்சரிசி *ammāṉ-paccarišī*, பெ. (n.) 1. **நிலத்தையொட்டிப் படரும் ஒரு செடிவகை**; an annual with procumbent branches, *Euphorbia hirta* (செ.அக.)—raw-rice plant, *Euphorbia indica* alias *E. thymifolia* (சா.அக.).


அம்மான்பச்சரிசி

மறுவ. சித்திரப் பாலாவி, சித்திரவல்லாதி, சிற்றிலைப்பாலாவி, சீதேவியார் செங்கழுநீர்.

சென்னை அகராதியின் (Lexicon)பின்னிணைப்பில் red Indian water-lily; செங்கழுநீர் என்று குறித்திருப்பது ஐயுறவிற் கிடமானது.

அம்மான்பச்சரிசியின் மூவகைகள் :

1. சின்னம்மான்பச்சரிசி ; thyme - leaved spurge, *Euphorbia thymifolia* alias *E. macrophylla.* இதுவே மூன்றிலும் பெருவழக்கானது.
2. பெரியம்மான்பச்சரிசி ; pill - beariho-spurge, a common weed, *Euphorbia pilulifera* alias *E. hirta.*
3. சிவப்பம்மான்பச்சரிசி; a red variety, *Euphorbia rosea.*

அம்மான்பொடி *ammāṉ-poḍi*, பெ. (n.) **'அம்மான் அம்மான்' என்று கத்திக்கொண்டு தன் பின்னால் வருமாறு பிள்ளைக்கடத்தி பிள்ளைகளின்மேல் தூவும் சொக்குப்பொடி** (திவ். நாய்ச். 2 : 4, வியா.); magic powder thrown by a kidnapper on a child causing the child to follow him crying *ammāṉ* `*ammāṉ* (செ.அக.) — a medicinal or magic powder having the quality of inducing sleep—Soporific, Hypnotic.

Note: It was generally used in olden days by Koravas and other criminals to decoy children for purposes of theft, and by magicians to decoy children as well as adults for purposes of their own (சா.அக.).

அம்மானார் *ammāṉār*, பெ. (n.) 1. **மகளிரின் அம்மானைப் பந்தாட்டம்**; a game of balls played by girls. **அம்மானை** பார்க்க; see *ammāṉai*. 2. **அம்மானைப் பனுவல்**; a species of poem, which has the word *ammāṉai* as its

refrain. "சீராமர் அம்மானார் முகிந்தது முற்றும்" (தஞ். சரசு. i, 467).

அம்மானை *ammāṉai*, பெ. (n.) 1. ***மகளிர் மூவர் கூடிப் பல பந்துகளை மேலெறிந்து அம்மானைப் பாட்டுப் பாடிக்கொண்டு அவை நிலத்தில் விழாவாறு மேன்மேலும் ஒவ்வொன்றாக விரைந்து கையால் தட்டி மேலெழுப்பி, விரும்பிய நேரம் விளையாடும் விளையாட்டு***; a game played by girls singing the *ammāṉai* song, at the same time, throwing up and keeping a number of balls in the air (இலக். வி. 807). 2. ***அம்மானையாடும் பந்துகள்***; balls used in the game. 3. ***அம்மானையாடும் போது பாடும் கலித்தாழிசைப் பாட்டு***; a particular type of song sung by the players during the game.

எ-டு :

"கருமிடற்றா ருலகமெலாங்
காணியெனக் கொண்டதனால்
கருதரிய பெருஞ்செல்வர்
காலமெலாம் அம்மானை
கருதரிய பெருஞ்செல்வர்
காலமெலாம் ஆவாரேல்
கருவையிலேன் பலரறியக்
களவாண்டார் அம்மானை
களவாண்ட பின்மறைவாய்க்
கடந்துமுளா ரம்மானை."

4. ***அம்மானைப்பருவம்*** பார்க்க; see *ammāṉai-p-paruvam*. 5. ***பதினெண் கலம்பக வுறுப்புகளுள் ஒன்றான பாட்டு, அம்மானைப் பாட்டுப் போல் இயற்றப்படுவது*** (இலக். வி. 812); a section of *kalambagam*, a species of poem. 6. ***உறுப்பிசை*** (stanza) ***தோறும் ஈற்றில் அம்மானை அல்லது அம்மானாய் என்று முடியும் தொகைப் பா***; a minor species of poetic composition, each verse or stanza of which has *ammāṉai* or *ammāṉāy* as its refrain.

எ-டு :

"செங்க ணெடுமாலுஞ் சென்றிடந்துங்
காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே
போந்தருளி
யெங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு
மாட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன்
பெருந்துறையான்
அங்கண னந்தணனா யறைகூவி
வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண்
அம்மானாய்"
(திருவாச. 175).

7. ***அடிதோறும் அல்லது அரையடிதோறும் அம்மானை யென்று முடியும் தனிப்பாட்டு***; stray piece of poetry ending with the refrain *ammāṉai* at the end of each line or even half a line.

எ-டு :

"திருநெடுமா லவதாரஞ் சிறுபுலியோ
வம்மானை
சிவன்முடியி லேறுவதுஞ் செங்கதிரோ
வம்மானை
ஒருமுனிவ னேரியிலோ வுரைதெளிந்த
தம்மானை
ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ
வம்மானை"
(தனிப்பா. தி. 1, பக். 170).

ம. அம்மான; **க.** அம்மாலெ; **தெ.** அம் மனலு.

[அம்மை + அனை (அன்னை) – அம்மனை → அம்மானை.]

வி-ம் : அம்மானைப் பந்து விளையாட்டு மும்மகளிர் கூடி யாடுவது. ஒவ்வொருவரும் குறைந்தபக்கம் முப்பந்து கொண்டு விளையாடுவர். இதனால் மேலிருந்து விழும் நற்பொருள்களை நிலத்தில் விழுமுன் விரைந்து பிடிக்குந் திறமும், தன்மேல் விழுந்து தாக்கும் தீய பொருள்களை விரைந்து தடுக்குந் திறமும் மிகும்.

ஆடும்போது பாடும் ஒவ்வொரு பாட்டும் ஒரு சிறந்த கூற்றும், அதுபற்றிய வினாவும், அதற்குரிய விடையுமாக அமையும். ஒரு பெண் முதற்கண் ஒரு கூற்றை நிகழ்த்துவாள்; இன்னொரு பெண் அதுபற்றி ஒரு வினா வெழுப்புவாள்; மூன்றாம் பெண் அதற்கு விடையிறுப்பாள். வினாவும் விடையும் பெரும்பாலும் இரட்டுறலா யிருந்து இன்பந் தரும். மேற்காட்டிய முதல் அம்மானைப் பாட்டிலுள்ள இரட்டுறல்கள் வருமாறு :

களவாண்டார் = களவு செய்தவர், களா மரத்தடியிற் படிமை வடிவா யிருப்பவர்.

மறைவாய் = ஒளிந்து, திருமறையில் நூற் பொருளாய்.

கடந்து = ஓடிப்போய், முக்கரணத்திற் கெட்டாது.

இரட்டுற லில்லாவிடத்தும், அம்மானைப் பாட்டு நகைச்சுவையா யிருப்பதுண்டு.

எ-டு :

''விரிந்தபுகழ் புள்ளிருக்கு வேளூர்வ
யித்தியனார்
பரிந்துவினை தீர்க்கவல்ல பண்டிதர்கா
ணம்மானை
பரிந்துவினை தீர்க்கவல்ல பண்டிதரே
யாமாயின்
மருந்துவிலை கைக்கூலி வாங்காரோ
வம்மானை
வாயிலே மண்போட்டு வாங்குவார்கா
ணம்மானை''

(தனிப்பா. தி. 1, பக். 65).

வினைதீர்த்தான் (வைத்தீசுவரன்) கோயிலுக்குத் தெய்வக்காண்பு (சுவாமி தரிசனம்) காணச் செல்பவர், தம் நோய் நீங்கும் பொருட்டு அத் தலத்து மண்ணைச் சிறிது உட்கொள்வது வழக்கம்.

ஒரே சமையத்திற் பந்துகளையும் நிலத்தில் விழாவாறு தட்டிக்கொண்டு, பாட்டையும் தாளமுங் கூற்றுந் தப்பாது இன்னிசையாய்ப் பாடிக்கொண்டு, இடைவிடாது இவ் வாட்டை யாடுவது, ஒரு பல்கவனப் பயிற்சியாகவு மிருக்கும்.

அம்மானைப் பாட்டின் யாப்பும் பொருளும் அணியும் நோக்கின், பண்டைத் தமிழ மகளிரின் கல்வித்திறமும் விளங்கும்.

காண்பார் களிக்கத்தக்க வட்டக்காட்சி (circus) நிகழ்ச்சியொத்த இவ்வரிய இளமகளிர் விளையாட்டு, பெண்டிர் வெளியே தலைகாட்ட முடியாத வேற்றரசு கொடுங்கோற் காலத்தில் அறவே வழக்கொழிந்தது.

அம்மானைப்பருவம் *ammāṉai-p-paruvam*, பெ. (n.) **பெண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பனுவற் பருவங்கள் பத்தனுள் ஒன்று**; a section of *peṇpāṟpiḷḷaittamiḻ*, which describes the stage of childhood, in which the child plays the *ammāṉai* game. There are ten stages of childhood, of which this stage is one.

[அம்மானை + பருவம்.]

அம்மானைவரி *ammāṉai-vari*, பெ. (n.) **ஒருவரைப் புகழ்ந்து பாடும் அம்மானைப் பாட்டு**; song sung in praise of a person by girls or women while playing the *ammāṉai* game.

ம. அம்மானப்பாட்டு

எ-டு :

''வீங்குநீர் வேலி யுலகாண்டு
விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த வுரவோன்யார்
அம்மானை
ஓங்கரணங் காத்த வுரவோன்
உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண்
அம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோ
ரம்மானை''

(சிலப். 29, அம்மானை வரி).

இது, வினாவும் விடையும் அதனாலெடுக்கும் முடிபுமாக அமைந்துள்ளது.

[வள் → வர் → வரி. வரித்தல் = வரணித்தல், புகழ்தல். வரி = ஒன்றை வண்ணித்து அல்லது புகழ்ந்து பாடும் பாட்டு, அம்மானை விளையாட்டிற் பாடும் வரிப்பாட்டு.]

அம்மி *ammi*, பெ. (n.) 1. **கறிச்சரக்கு அரைக்கும் சின்னம்மி**; horizontal flat stone on which spices for curry are crushed or ground with a stone roller. ''உரலி லம்மியி லோங்கு முலக்கையில்'' (காசிகாண். கற்பிலக். 26). 2. **சாந்தரைக்கும் பெரியம்மி**; big horizontal level or concave stone used for grinding fine mortar. 3. *மாமி*; mother-in-law (சங்.அக.).

ம. அம்மி

[அம்முதல் = அமுக்குதல், அமுக்கியரைத்தல். அம் + இ – அம்மி.]

அம்மிக்கல் *ammi-k-kal*, பெ. (n.) 1. **அரைகல், அம்மி**; grinding stone. ''பெருத்த வம்மிக் கன் முதலிய தாங்கிப் பேணிவிற் றுண்பனோ வுணர்வீர்'' (சூத. ஞான. 11 : 27). 2. **அம்மிக் குழவி** (பிங்.); stone roller for grinding.


அம்மிக்கல்

ம. அம்மிக்குட்டி, அம்மிக்குழவி.

[அம்மி + கல்.]

அம்மிக்குழவி *ammi-k-kuḻavi*, பெ. (n.) **அம்மியில் அரைக்கும் நீண்ட கல்லுருளை**; cylindrical stone roller used for grinding curry ingredients.

ம. அம்மிக்குழவி

[அம்மி + குழவி.]

அம்மிப்பாலுண்ணவரை - த்தல், *ammi-p-pāl-uṇṇa-v-arai-,* 4 செ.குன்றாவி. (v.t.) *கலுவத்தில் ஈரமில்லாதபடி குழவியைக்கொண்டரைத்தல்;* to grind without leaving moisture (சா.அக.).

[அம்மி + பால் + உண்ண + அரை.]

அம்மிமிதி-த்தல் *ammi-midi-,* 4 செ.கு.வி. (v.i.) *திருமணக் கரணத்தில் மணமகன் மணமகள் வலக்காலைத் தூக்கிவைக்க உதவ, அவள் அதை அம்மிமேல் வைத்தல்;* to perform the ceremonial procedure in which the bride places her right foot on the grinding-stone, the bridegroom helping her to do so. ''அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான்'' (திவ். நாய்ச். 6 : 8).

ம. அம்மிசவிட்டுக

அம்மியம் *ammiyam,* பெ. (n.) *1. கள்* (பிங்.); toddy. *2. காளம்* (வின்.); trumpet. *3. சிறு சின்னம்* (சங்.அக.); a kind of clarionet.

அம்மிரா *ammirā,* பெ. (n.) *செந்தாழை;* false tragacanth, *Sterculia urens* (சா.அக.).

அம்மினியுளுவை *ammiṉi-y-uḷuvai,* பெ. (n.) *ஒரு வகை மீன்;* a kind of fish, *Narcine timlei.*

அம்மு *ammu,* பெ. (n.) *சோறு;* boiled rice.

[அம்முதல் = உண்ணுதல். அம்மு (மு.தொ. ஆ.பெ.).]

அம்மு-தல் *ammu-,* 5 செ.கு.வி. (v.i.) *1. முகில் படிந்து வானம் மந்தாரமாதல்* (யாழ்ப்.); to spread thickly, as a mass of motionless clouds that overspread the heavens, obscuring the rays of the sun (J.). *2. மாயம் பண்ணுதல்* (வின்.); to dissemble, on hearing a thing spoken of, by seeming to know nothing about it, to act with reserve and duplicity. —, 5 செ. குன்றாவி. (v.t.) *1. அமுக்குதல்;* to press down. ''வல்லிய மாமனெகிழ்த்து'' (மருதூரந். 91). *2. விரைந்து மிகுதியா யுண்ணுதல்;* to eat voraciously. சோற்றை நன்றாய் அமுக்கு கிறான் (உ.வ.). *3. அடைத்தல்;* to plug (சா.அக.). *4. மூடுதல்;* to cover (சா.அக.). *5. ஏமாற்றுதல்;* to deceive.

ம. அம்முக

[அம் → அம்மு. அம்முதல் = அமுங்குதல், அமுக்குதல்.]

அம்முக்கள்ளன் *ammu-k-kaḷḷaṉ,* பெ. (n.) *அடக்கத் திருடன், மாய்மாலக் கயவன்;* thievish person, dissembling rogue (W.).

ம. அம்மக்கள்ளன்

[அம்மு + கள்ளன்.]

அம்முண்டு *ammuṇḍu,* பெ. (n.) *முட்டாள், மதியிலி* (இ.வ.); dolt, idiot (Loc.).

[அம் = அமுக்கம், அடக்கம். உண்டு = உள்ளது. அம் + உண்டு – அம்முண்டு (மதியமுங்கி அல்லது மதிகுன்றி யிருப்ப-வன்-வள்). அம்முண்டு → அப்புண்டு (நெல்லை).]

அம்மூவனார் *ammūvaṉār,* பெ. (n.) *எட்டுத் தொகையுள் ஒன்றான ஐங்குறுநூற்றில் இரண்டாம் நூறான நெய்தலை யியற்றியவர்;* name of the author of the second section of *Aiṅguṟunūṟu,* one of the Eight Anthologies of the *Saṅgam* period.

அம்மெனல் *am-m-eṉal,* பெ. (n.) *1. நீர் ததும்பற் குறிப்பு;* onom. expr. of filling or overflowing, as of water. ''அம்மெனக் கண்ணீ ரரும்பி'' (பதினொ. திருவிடை. மும். 10 : 16). *2. ஓர் ஒலிக்குறிப்பு* (பிங்.); onom. expr. of humming. *3. ஓர் அசை;* a syllable. ''அம் மென்றா லாயிரம்பாட் டாகாதோ?'' (தனிப்பா. தி. 1, பக். 10).

[அம் + எனல்.]

அம்மே *ammē,* பெ. (n.) *குறத்திப்பாட்டில் பாட்டு தொறும் அல்லது அடிதொறும் ஈற்றில் வரும் மகடூஉ முன்னிலை;* a vocative addressing a lady, and occurring at the end of each stanza or line of a song sung by a Kuṟava woman in the traditional pattern, or of one composed in imitation of that.

எ-டு :

''மோரியாவின் மலைதனிலே யாபிரகா மம்மே
முக்கியமா யீசாக்கைப் பலிகொடுத்தா னம்மே''
(பெத்லகேம் குறவஞ்சி, மலைவளம், 3).

அம்மை[1] *ammai,* பெ. (n.) *1. தாய்;* mother. ''அத்தனொடும் அம்மையெனக் கானார்'' (தேவா. 6 . 53 : 9). *2. மலைமகள்* (பிங்.); Pārvati. *3. காளி; Kāḷi.* *4. பாட்டி* (பரவர்); grandmother (Paravas). *5. சமணத் துறவினி (பெண்துறவி)* (சூடா.); female Jaina recluse. *6. அறத்தேவி* (தருமதேவதை) (சூடா.); Goddess of virtue. *7. அம்மைநோய் வகைகள்;* kinds of pox.

Sum. *eme*; **Akkad.** *ama, amu*; **Sum., Oce.** *um, ama*; **Ar.** *um*; **Indon.** *ma, uma, amai, umai, yāma*; **Mon-Khm.** *ama, ma*; **Mu.** umā, *māc, māy, mā-in*; **Skt.** umā, ambā.

அம்மைநோய் வகைகள் :

1. சின்னம்மை; small-pox, *Variola.*
2. பெரியம்மை; small-pox with an eruption of large blebs, *Variola pemphigosa.*
3. விளையாட்டம்மை; a mild form of small-pox, *Varioloid.*
4. தட்டம்மை; pseudo small-pox, almost the same as the preceding.
5. பாலம்மை; a mitigated form of small-pox, milk-pox.
6. தவளையம்மை; another form of small-pox affecting the joints.
7. கல்லம்மை; wart-pox with hard pustules, *Variola verrucosa.*
8. மிளகம்மை; a small-pox with pepper like distinct vesicles, *Discrete variola.*
9. கடுகம்மை; one with an eruption of small vesicles like mustard seeds, *Variola miliaris.*
10. பாசிப்பயற்றம்மை, பயற்றம்மை; simple and unmodified small-pox, *Variola vera.*
11. வெந்தயவம்மை; small-pox with pustules like the dill-seeds.
12. கொள்ளம்மை; another variety with pustules of the size of horse gram.
13. பனையேறி, ஒரு குரு அம்மை; a kind of measles, the eruptions of which appear to ascend from the lower limbs, and thence spread over the body.
14. பனைமுகரி, ஒரு கருப்புக் குரு அம்மை; a severe form of black measles.
15. கரும்பனசை; a small-pox with black vesicles, Black or *Hemorrhagic variola.*
16. பயறி; another variety of measles.
17. இராமக்கம்; a form of small-pox in which the pustules strike in and the contents become absorbed, leaving the walls empty, *Variola siliquosa.*
18. விச்சிலுப்பை அல்லது விச்சிலிர்ப்பான்; chicken-pox, *Varicella.* இது சிச்சிலுப்பான் அல்லது சிச்சிலிர்ப்பான் எனவும் படும்.
19. நீர்க்கொள்வான்; a mild form of chicken-pox, varioloid, *Pustular varicella.*
20. கொப்புளிப்பான்; another variety of chicken-pox.

(சா.அக.)

விலங்கின அம்மைநோய் :

1. மாட்டம்மை; cow-pox, *vaccinia.*
2. ஆட்டம்மை; sheep-pox, *ovinia.*
3. பன்றியம்மை; swine-pox.
4. குதிரையம்மை; horse-pox.
5. ஒட்டக அம்மை; camel-pox. (சா.அக.)

[அம்மம் = முலைப்பால். அம்மம் → அம்ம → அம்மை = முலைப்பாலூட்டுந் தாய். இனி, அம்மு → அம்ம → அம்மை என்றுமாம். அம்மு = சோறு, சோறூட்டுந் தாய், தாயின் தாய், தாய் போன்ற தெய்வம், தாய்போன்ற பெண்.

அம்மை என்னும் நோய்ப்பெயர் அம்மை யென்னும் காளியின் பெயரினின்று ஏற்பட்டது.]

திணைமயக்க மில்லாத ஐந்திணை மக்கட் பாகுபாடு, கடல்கோள்கட்கு முந்திய குமரி நாட்டில் தோன்றிற்று. முதுவேனிற்கால முதிர்வெப்பத்தாற் கொப்புளநோய் பாலை வாணரைத் தாக்கியபோது, அது அவர் தெய்வமாகிய காளியம்மையால் உண்டான தென்று கருதி, அதற்கு அம்மைநோய் என்று பெயரிட்டனர்.

திணைமயக்கம் ஏற்பட்டுப் பாலைவாணர் வெட்சி கரந்தை மறவரும் காட்டுப் படைஞரு மாக மருதநில மன்னராலும் வேந்தராலும் அமர்த்தப்பட்ட பின், காளி ஐந்திணை நிலத் திற்கும் பொதுவான கொற்றவை என்னும் போர் வெற்றித் தெய்வமும், கொப்புளநோய் வாராமல் தடுத்தற்கு வழிபடும் மறத்தெய்வ மும் ஆனாள். அம்மை என்னும் பாலை நிலத்துக் கொப்புள நோய்ப்பெயர், ஏனை நால்நிலங்கட்கும் பரவிற்று.

அம்மை[2] *ammai,* பெ. (n.) 1. **மேலுலகம்**; heaven. "அம்மை பயக்கு மமிர்து" (தேவா. 6.23:8). 2, முற்பிறப்பு; former birth. "அம்மையாற் றவங்க டாங்கி" (சூளா. மந்தி. 118). 3. வருபிறப்பு (பிங்.); future birth. "அம்மையில் வாழ்விடை யற்ற முறாமே" (கந்தபு. தேவ. தெய்வ. 41). 4. **மறுமை**; the next world, state after death.

['உ' முன்மைச் சுட்டு, உயர்வுச் சுட்டு. உ → உம்மை = முன்னிலைமை, உயர்நிலைமை, பின்னிலைமை (வருநிலைமை, எதிர்நிலைமை). காலமுன் இடமுன் என முன்மை இரண்டு. உம்மை → அம்மை.]

அம்மை³ *ammai*, பெ. (n.) 1. **அமைதி**; calmness, quietude, gentleness. "அம்மை யஞ் சொலார்" (சீவக. 3131). 2. **அழகு** (பிங்.); beauty. 3. **சிலவாகிய சொற்களால் சிறந்த பொருளைக் கூறி நாலடியின் மிகாது வரும் செய்யுள்களைக்கொண்ட பனுவல், எண்வகை வனப்புகளுள் ஒன்று**; an epic poem presenting an excellent subject consisting of verses of not more than four lines composed of short sweet words, one of eight *vanappus*.

"வனப்பியல் தானே வகுக்குங் காலைச்
சின்மென் மொழியாற் சீரிது நுவலின்
அம்மை தானே அடிநிமிர் பின்றே"
(தொல். பொருள். செய். 227).

இந் நூற்பாவின் 2ஆம் அடியை உரையாசிரியர் சிலர் "சின்மென் மொழியாற் றாய பனுவலோடு" என்று பாடம் மாற்றி, 'இடையிட்டு வந்த பனுவ லிலக்கணத்தோடும்' என்றும், 'அறம் பொரு ளின்ப மென்னும் மூன்றற்கும் இலக்கணஞ் சொல்லுப வேறிடையிடை அவையின்றியுந் தாய்ச் செல்வ தென்றவாறு; அஃதாவது, பதினெண் கீழ்க்கணக்கென வுணர்க' என்றும்,

"பொருள்கருவி காலம் வினையிடனொ
டைந்து
மிருடீர வெண்ணிச் செயல்"
(குறள், 675)

என்பது, இலக்கணங் கூறிய தாகலிற் பனுவலோ டென்றான்.

"மலர்காணின் மையாத்தி நெஞ்சே
யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று"
(குறள், 1112)

என இஃது இலக்கிய மாகலாற் றாயபனுவ லெனப்பட்டது. இவை தனித்து வரினும் அவ் வனப்பெனப்படும்; தாவுதல் என்பது இடையிடுதல் என்றும், பிறவாறும் உரைப்பர்.

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
....
யாப்பின் வழிய தென்மனார் புலவர்"
(தொல். பொருள். செய். 75)

என்று மேற்கூறிய எழுநிலை யாப்புள் பாட்டொன்றையே பின்னர் எண்வகை வனப்பாக ஆசிரியர் வகுத்துக் கூறுதலானும், பாட்டு நூலன்மையானும், பதினெண் மேற்கணக்கும் பதினெண் கீழ்க்கணக்கும், ஒரு சில புறநானூற்றுச் செய்யுள்கள் தவிர ஏனையவெல்லாம் திருக்குறட்குப் பிற்பட்டவை யாதலானும், எண்வகை வனப்பிலக்கணமும் அகலப் பாவிற்கும் தொடர்நிலைச் செய்யுட்குமே யுரியவை யாதலானும், அவ்வுரைகள் பொருந்தா வென வறிக. மேலும், "சீரிது நுவலின்" என்னும் பாடமே மோனையா யமைதலையும் பொருள் சிறத்தலையும் நோக்குக.

இனி, தொல்காப்பியத்திற்கு இலக்கியமா யிருந்த பண்டைத் தமிழ்நூல்களும் பனுவல்களுமெல்லாம் இறந்துபட்டனவென்றும், அம்மை வனப்பிற்குச் சில தனிப்பாக்களை மட்டும் இற்றை யிலக்கியத்தினின்று எடுத்துக் காட்ட வொண்ணுமென்றும் அறிந்து கொள்க.

[அம் → அம்மை. அம் = அழகு.]

அம்மை⁴ *ammai*, பெ. (n.) **கடுக்காய்**; Indian or country gall-nut, *Chebulic myrobalan*.

அம்மைக்கட்டு *ammai-k-kaṭṭu*, பெ. (n.) **கூகைக் கட்டு**; inflammation of the salivary glands with swelling along the neck, mumps, *Parotitis* (சா.அக.).

அம்மன்கட்டு பார்க்க; see *ammaṉ-kaṭṭu*.

அம்மைக்குரு *ammai-k-kuru*, பெ. (n.) **அம்மைக் கொப்புளம்**; pustule of small-pox.

[அம்மை + குரு.]

அம்மைக்கொண்டை *ammai-k-koṇḍai*, பெ. (n.) **பெண்டிர் கொண்டைவகை**; a mode of coiffure.

[அம்மை + கொண்டை.]

அம்மைக்கொப்புளம் *ammai-k-koppuḷam*, பெ. (n.) **அம்மைநோயில் தோன்றும் சலக் கட்டி**; pustule of small-pox.

[அம்மை + கொப்புளம்.]

அம்மைகுண்டலி *ammai-kuṇḍali*, பெ. (n.) (ஓகம்) **மூல நிலைக்களத்தில் (மூலாதாரத்தில்) அமர்ந்திருப்பதாகக் கருதப்படும் தாயாகிய குண்டலி யாற்றல் (சக்தி)**; (Yoga) the supreme goddess *Kundali* (representing the creative

force) who is supposed to dwell at the base of the spinal column in the region of the sacral plexus. ''காலைப் பிடித்தனலை யம்மை குண் டலியடிக் கலைமதியி னூடு தாக்கி'' (தாயு. தேசோ. 1).

Note: In Tantric science, it is described as a coiled serpent lying dormant in the human body. It is by rousing this Cosmic power that a Yogi is said to obtain whatever he desires and gains all psychic powers (சா.அக.).

அம்மைகுத்து-தல் *ammai-kuttu-*, 5 செ.கு.வி. (v.i.) *1.* **ஆவின் அம்மைக் கொப்புளத்தினின்று எடுத்த பாலை அம்மைநோய் தாக்காவாறு மக்களுடம்பில் ஊசிவாயிலாகச் செலுத்துதல்**; to inoculate with vaccine (virus of cow-pox) to procure immunity from small-pox or at-least mitigate its virility or severity, vaccinate. *2.* **அம்மைகுத்தல்**; vaccination.

அம்மைச்சுரம் *ammai-c-curam*, பெ. (n.) **அம்மைக் கொப்புளத்தோடு கூடி வரும் காய்ச்சல்**; fever accompanied by eruption on the skin, as in small-pox, eruptive fever.

[அம்மை + சுரம். சுள் → சுல் → சுர் → சுரம் = உடம்புசுடும் காய்ச்சல். சுள்ளெனல் = சுடுதல்.]

சுரம் > **Skt.** jvara.

அம்மைத்தழும்பு *ammai-t-taḷumbu*, பெ. (n.) **அம்மைக் கொப்புளம் அடங்கித் தீர்ந்தபின் ஏற்படும் வடு**; small-pox pit.

[அம்மை + தழும்பு.]

அம்மைப்பால் *ammai-p-pal*, பெ. (n.) *1.* **அம்மை குத்துதற்குரிய பால்**; virus of cow-pox as used in vaccination. *2.* **அம்மையின் பால்**; small-pox vaccine (சா.அக.).

அம்மைகுத்தற் பாலின் இருவகை: *1.* ஆவம்மைப் பால்; bovine vaccine got direct from cow. *2.* மாந்தன்வாய்ப் பால்; humanized vaccine, got from human subject (C.O.D.).

[அம்மை + பால்.]

அம்மைபோடு-தல் *ammai-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **அம்மை வார்த்தல்**; to have an attack of small-pox, chicken-pox or any other allied disease. வீட்டில் குழந்தைக்கு அம்மை போட்டிருக்கிறது (உ.வ.).

[அம்மை + போடு. போடுதல் = கொப்புளம் உண்டாதல்.]

அம்மை போட்டுதல் என்பது சொல்வழு. புகவிடு → புகடு → புகட்டு → போட்டு. போட்டுதல் = குழந்தைக்கும் நோயாளிக்கும் பால், மருந்து, நீர் முதலியவற்றைச் சங்கில் அல்லது கறண்டியிலிட்டு வாய்வழி உட்செலுத்துதல்.

அம்மைமுத்து *ammai-muttu*, பெ. (n.) **அம்மை நோய்க் கொப்புளம்**; pustule of small-pox.

[முத்துப்போல் உருண்டையாயும் சற்றுப் பளபளப்பாயும் இருத்தலால், கொப்புளம் முத்தெனப்பட்டது (உ.ஆ.பெ.).]

அம்மையப்பர் *ammai-y-appar*, பெ. (n.) **உயிரினங்க ளெல்லாவற்றிற்கும் தாயுந் தந்தையும் போன்ற இறைவன், சிவன்**; God, as father and mother of all living beings, Śiva. ''அம்மை யப்பரே யுலகுக் கம்மை யப்பரென் றறிக'' (திருக்களிற்றுப். 1).

[அம்மை + அப்பன் – அம்மையப்பன் → அம்மையப்பர். 'அர்' உயர்வுப் பன்மையீறு.]

கடவுள், தாய் கூறும் தந்தை கூறும் ஒருங்கே கொண்டவர் என்பதைப் பொதுமக்கட்கு எளிதாய் விளக்குதற்பொருட்டு, முந்துகால மெய்ப்பொருளியலார் கடவுளின் ஆற்றலைத் தனியாகப் பிரித்து அம்மையென்றும், எஞ்சிய கூற்றை அப்பனென்றும் உருவகித்துக் கூறினர். ஆயின், உருவ வழிபாட்டை நிலைநாட்ட விரும்பிய பிற்காலத்தார், அவ்வணி வகை யிருகூறுகளையும் உண்மையான ஆண் பெண் வடிவுகளாகவே காட்டி உருவங்களையுஞ் செய்துவிட்டனர்.

உண்மையில், கடவுள் உருவமும் பாலியல்புமின்றி, ஒருவகையிலும் பகுக்கப்பட முடியாதவராய், ஆவி வடிவில் எங்கும் நிறைந்து மனமொழி மெய்களைக் கடந்திருப்பவர்.

சிவமதம் முதன்முதல் தமிழ்நாட்டில் தோன்றியமையாலும், இன்றும் பெருவழக்காயுள்ளமையாலும், 'சிவன்' என்னும் பெயர் கடவுளைச் சிறப்பாகக் குறித்தது.

அம்மையப்பன் *ammai-y-appaṉ*, பெ. (n.) **அம்மையப்பர்** பார்க்க; see *ammai-y-appar*.

[அம்மை + அப்பன்.]

அம்மையார்கூந்தல் *ammaiyār-kūndal*, பெ. (n.) **கொடியார்கூந்தலென்னும் பூண்டு** (சங்.அக.); a kind of plant called *koḍiyārkūndal* — **பூண்டு வகை** (மூ.அ.) — Seeta's thread, m. cl., *Cuscuta reflexa* (செ.அக.).

ம. அம்மையார்கூந்தல்

ammaiyō, இடை. (int.) ஒரு
பு; an exclamation of astonish-
யோ வென்றது அம்மையோ
பு' (கலித். 85 : 29, நச். உரை).
.]

ai-vaḍu, பெ. (n.) அம்மைத்
pox pits, pock-mark.

ammai-vaṉappu, பெ. (n.)
க; see ammai³.

ammai-vār-, 4 செ.கு.வி.
போடுதல்; to have small-pox,
c.

சால்லை ammai-vārtta-šollai,
மநோயா லேற்பட்ட தழும்புக்
rk left by the small-pox pustule,
ock-pit (சா.அக.).

கம் ammai-vārtta-mugam,
மைத் தழும்புள்ள முகம்; face
pits, pock-marked face.

ஞ்சி ammai-vārtta-mūñji,
மைவார்த்தமுகம் பார்க்க; see
ugam.

கம். மக்கள் முகத்தை 'முஞ்சி'
ழக்கு (slang).]

டு-தல் ammai-viḷaiyāḍu-, 5
அம்மைநோய் காணுதல்; to
of small-pox, chicken-pox, etc.

ம. அம்மோ

அம்வந்தி amvandi, பெ. (n.) நீ
உரை); diabetes.

[ஒருகா. அம் + வந்தி. அ
வந்தி.]

அமங்கலம்¹ a-maṅgalam, பெ
யல்லாத நிகழ்ச்சி; inauspic
2. சாவு; death. 3. கைம்
"மங்கலங்களும் அமங்கலமா
அனேகத. 8).

ம. அமங்கள; க. அமங்கல;
அமங்கலம் > Skt. amaṅgala

[அல் → அ (எ.ம.முன்.). அ
கலம்.]

அமங்கலம்² amaṅgalam, பெ.
(சங்.அக.); castor-plant, Rici

அமங்கலி a-maṅgali, பெ. (
யிழந்ததனால் தாலியில்லா
பெண் (பிங்.); மங்கலி எ
widow, as without the tāli, op

[அல் → அ (எ.ம.முன்.).
மங்கலம் → மங்கலி = தாலியு
னொடு வாழ்பவள். அ + மங்
'இ' பெ.பா. ஈறு.]

ம. அமங்கலி; க. அமங்க

அமங்கலை a-maṅgalai, பெ. (
பார்க்க; see a-maṅgali. "கை
பூண்ட கலன்கழி மடந்தை
விகளவு நான்கே அமங்கலை

கம்

டக்கம் — அமையடக்கம் → அம
சடக்கம்.]

, பெ. (n.) 1. கூலியில்லாமற்
கட்டாய வேலை; forced unpaid
ணானது; that which is useless.
லைத் தட்டுமுட்டு; trumpery

தெ. அமிசி.

ரி பார்க்க; see *amainda-paṇi.*

añji-paṇi, பெ. (n.) அமைந்த
see *amainda-paṇi.*

ணி

ரி → அமஞ்சிபணி.]

añji-y-āḷ, பெ. (n.) கூலியில்லா
ாய வேலை செய்பவன்; work-
to service without wages, forced
ourer.

ஆள்.]

amañji-vēlai, பெ. (n.) போலி
y work.

am, பெ. (n.) அம்மட்டம்
mmaṭṭam.

aṭṭu-, 5 செ.கு.வி. (v.i.) 1.
); to wobble. 2. நிலைப்படா
அக.); to be unsteady, as a bench

[ஒருகா. அமல்தல் = நெரு
அமள் → அமடு.]

அமண்டலாதி *amaṇḍalādi,*
கடம்பு (சித்.அக.); small Ind
— a red species of *kaḍambu*
acutangula (சா.அக.).

அமணம் *amaṇam,* பெ. (n.)
கொட்டைப்பாக்கு; 20
''பதினாயிரங் கொட்டைப்
னள் பைந்தொடியே'' (தல
11).

ம. அவணம்

அமணம் என்பது இருபதி
எண்ணைக் குறிக்கப் பா
ஆளப்படும் தொகைப்பெயர
என்பது அதிற் பாதியாகும்
பது அம்மணம் என்னு
தொகுத்தலாதலால், அரை
கூட்டுச்சொல் இடுப்பில் ஆ
கும் மொட்டைக்கட்டை நீ
வேறொரு பொருளையுந் த
யும், ஒருவகை யிடக்கரட
பாவாசிரியர் அக் கூட்டு
பொருளை மற்றொரு பொர
சொற்றொடரால் வட்டமொ
(circumlocution or periph
ளார்.

அமனைப்படு-தல் *amaṉ-*
செ.கு.வி. (v.i.) காமவெறி
to burn with lust. 'களிறு.

அமதி[1] *amadi*, பெ. (n.) ***அறிவின்மை***; foolishness, ignorance.

ம., க., தெ. அமதி; **Skt.** amati.

[அல் → அ (எ.ம.முன்.). மதி = அறிவு, அறிவுப் புலன். அ + மதி.]

அமதி[2] *amadi*, பெ. (n.) ***சமையம், காலம்***; time, context.

ம., க. அமதி.

[அமைதல் = பொருந்துதல், நேர்தல். அமை → அமைதி → அமதி. ஒ.நோ: அமை → அமையம் → அமயம்.]

அமந்தம் *amandam*, பெ. (n.) 1. ***மந்தமின்மை, செரிமான நிலை***; the state of being free from indigestion or dullness of appetite (சா.அக.). 2. ***சுறுசுறுப்பு***; diligence, activity. 3. ***விழிப்பு***; watchfulness, vigilance, alertness. 4. ***வினைத் திறம்***; business ability. 5. ***வேகம்***; vehemence, force.

ம. அமந்தம்; க. அமந்த; தெ. அமந்தமு.

[அல் → அ (எ.ம.முன்.). மொத்தம் → மத்தம் → மந்தம். அ + மந்தம் – அமந்தம்.]

அமந்தலம் *amandalam*, பெ. (n.) செங்கத்தரி (மூ.அ.); orbicular-leaved caper shrub (செ.அக.) — false peacock's foot tree, *Niebuhria linearis* (சா.அக.).

அமந்தாசிகம் *amandāšigam*, பெ. (n.) சுருளி (சித்.அக.); iron-wood of Ceylon (செ.அக.)— ***சுருள்பட்டை***; red creeper, *Ventilago madraspatana* (சா.அக.).

அமயம் *amayam*, பெ. (n.) ***சமையம்***; right time, opportunity, context. ''ஆனதோ ரமயந் தன்னி லாடின ரமரர் மாதர்'' (கந்தபு. உற்பத். திருக்கல். 72).

[அமைதல் = பொருந்துதல், நேர்தல். அமை → அமையம் → அமயம். ஒ.நோ : நேர் → நேரம்.]

அமர்-தல் *amar-*, 2 செ.கு.வி. (v.i.) 1. ***இருத்தல்;*** to abide, be seated, remain. ''திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவோம்'' (கந்தபு. கடவுள்வா. 12). 2. ***அமைதியாதல்;*** to become still or tranquil. காற்றமர்ந்தது (உ.வ.). 3. ***இளைப்பாறுதல்;*** to rest, repose. 4. ***படிதல்;*** to settle, be deposited, as a sediment, become close and hard, as sand by rain. 5. ***பொருந்துதல்***; to rest upon, as a javelin on the person. ''தன்னமர ரொள்வாளென் கைதந் தான்'' (பு.வெ. 4 : 5). 6. ***பொலிதல்*** (திவா.); to flourish, to be abundant. 7. ***விளக்கணைதல்***; to be extinguished, as a lamp. 'விளக் கானது......காற்றினால் அமருமா போலே' (குருபரம். 305). 8. ***ஏற்றதாதல்***; to be suitable; குலத்துக் கமர்ந்த தொழில் (உ.வ.). 9. ***திட்டமாதல்;*** to be settled, as an affair, to be engaged, as a house. 10. ***வேலையிற் சேர்தல்***; to join duty, to be established in a work. வேலையில் அமர்ந்தான் (உ.வ.). 11. ***மகிழ்தல்***; to be glad, to rejoice, to be delighted. ''அகனமர்ந் தீதலி னன்றே'' (குறள், 92). 12. ***உள்ளங்கிளர்ந்திருத்தல், இன்முகமாயிருத்தல்***; to be cheerful. ''முகனமர்ந்து இன்சொல னாகப் பெறின்'' (குறள், 92). —, 2 செ. குன்றாவி. (v.t.) 1. ***நெருங்குதல்***; to get close to. ''அமரப்புல்லும்'' (திருக்கோ. 372). 2. ***ஒப்பாதல்*** (விதான. குணா. 38); to resemble. 3. ***விரும்புதல்***; to wish, desire. ''அகனமர்ந் தீதலி னன்றே'' (குறள், 92). 4. ***செய்தல்;*** to do, perform. ''நீயிவ ணமர்ந்தன யாவுந் தூதர் கூற'' (கந்தபு. யுத்த. முதனாட். 60). 5. ***பொந்திகை (திருப்தி) கொண்டமைதல்***; to rest satisfied. 6. ***மேற்கொள்ளுதல்***; to undertake, take upon oneself to do. ''ஆடலமர்ந்தா னமர்வெய்யோன்'' (பு.வெ. 7 : 15). 7. ***விரும்புதல்***; to wish, desire, like, to be pleased with. 8. ***நேசித்தல், அன்புவைத்தல்***; to love. ''ஆத்தி சூடி யமர்ந்த தேவனை'' (ஆ. சூ. கடவுள்வா.). 9. ***காமித்தல், காமத்தோடு காதலித்தல்;*** to have sexual love.

ம., க. அமர்; தெ. அமரு; து. அமரி.

L. *amo*, to love. *amor*, love from inclination.

E. *amorist*, one who professes (esp. sexual) love.

L. *amōrem*; **F.** *amour*, love; **E.** *amour*, love affair.

L. *amīcus*, friend; **E.** *amicable*, friendly.

L. *amīcābilem*; **OF.** *amiable;* **F.** *amiable;* **E.** *amiable*, lovable.

L. *amatorius*; **E.** *amatory*, pertaining to a lover (sexual love).

L. *amātōrem*; **F.** *amateur*; **E.** *amateur*, one who is fond of anything.

[உம்முதல் = பொருந்துதல், கூடுதல். உம் → அம் → அமல் → அமர். அமர்தல் = பொருந்துதல்.]

பொருந்துதல் என்னும் பொதுக் கருத்தினின்று உளம் பொருந்துதற் கருத்துத் தோன்றும். அதினின்று மகிழ்தல், உளங்கிளர்தல், விரும்புதல், அன்புகூர்தல், காமத்தொடு காதலித்தல் என்னும் ஐந்து நுண் கருத்துகள் கிளைக்கும். இவை இடம்நோக்கி ஆட்சியால் உணரப்படும்.

அமர்தல் என்று பொதுவாகச் சொல்லின், அது இவ்வைங் கருத்தையுந் தழுவும். "அமர்தல்மேவல்" (தொல். சொல். உரி. 83) என்பது அது.

அமர்-த்தல் *amar-*, 4 செ.கு.வி. (v.i.) ***பொருதல், மாறுபடுதல்***; to be at strife. "பேதைக் கமர்த்தன கண்" (குறள், 1084).

ம. அமருக; **க.** அமர்; **தெ.** அமரு.

அமர் *amar*, பெ. (n.) ***1. விருப்பம், அன்பு, காதல்***; desire, wish, love. "வாலெயிற் றமர் நகை" (ஐங்குறு. 198). ***2. போர்*** (சூடா.); battle, war. "பூழி புனைந்தவர் பாலகனோ வமர்புரி வானே" (கந்தபு. யுத்த. வரவுகே. 13). ***3. போர்க்களம்***; battle-field. "அஞ்சுவரு தானை யமரென்னு நீள்வயலுள்" (பு. வெ. 8 : 5). ***4. கோட்டைமதில்*** (வின்.); wall around a fort, battlement, rampart. ***5. வெறி***; fury, rage, passion (சா.அக.). ***6. நோய்க்கடுமை***; virulency of a disease. ***7. காய்ச்சலின் மும்முரம்***; the acme of fever (சா.அக.).

L. *amo*, to love from inclination or passion, *amo-amor*, love, Cupid (C.L.D.). **E.** *amour*, n., a love affair; **F.** 'love' fr. **L.** *amorem*, acc. of *amor*, 'love' fr. *amare*, 'to love' (K.C.E.D. E.L.).

[உம் → அம் → அமல் → அமர்.]

அமர்தல் = பொருந்துதல். பொருந்துதல் என்பது கூடுதல், ஒன்றாதல் என இருதிறப்படும். பல பொருள்கள் நெருங்கியிருத்தல் கூடுதல்; பல பொருள்கள் ஒன்றாய் இணைந்துவிடுதல் ஒன்றுதல்.

போர்க்களத்தில் இரு பகைப்படைகள் கலத்தல் கூடுதல்; இருவரின் அல்லது பலரின் உள்ளங்கலத்தல் ஒன்றுதல். இவ்விருதிறக் கருத்தினால், அமர் என்னுஞ் சொல் விருப்பத்தையும் போரையுங் குறித்தது.

ஒ.நோ : பொருதல் = பொருந்துதல், போர் செய்தல். பொரு → போர். அல்லுதல் = பொருந்துதல். அல் + பு – அன்பு (உளம் பொருந்திய நேயம்).

வெறி, மும்முரம் என்பன போர்த்தொழிற் குரிய குணங்கள்.

போரும் அன்பும் முற்றும் முரண்பட்டவையாயினும், மூலச்சொல்லும் மூலக்கருத்தும் ஒன்றாதல்பற்றி, இருபொருட் சொற்களும் ஒரே உருப்படியிற் கூறப்பட்டன என அறிக.

ஒ.நோ : சமம் = ஒப்பு, போர். பொருதல் = ஒத்தல், போர்செய்தல்.

அமர் என்பது சமர் என்பதன் திரிபன்று; சமர் என்பதே அமர் என்பதன் முதன்மிகையான திரிபு. **ஒ.நோ** : அமை → சமை.

சமர் என்னும் உருப்படியில் இது விரிவாக விளக்கப்படும்.

அமர்க்கம் *amarkkam*, பெ. (n.) ***எருக்கு***; a milky shrub, giant swallow-wort, *Calotropis gigantea*.

அமர்க்களம் *amar-k-kaḷam*, பெ. (n.) ***1. போர்க்களம்***; battle-field. "இடைந்தி லாவமர்க் களத்திடை" (இரகு. திக்கு. 172). ***2. குழம்பிய ஆரவாரம்***; confused noise, stir, bustle, as at a battle-field.

ம. அமர்க்களம்; **க.** அமக்கள.

[அம் → அமர் + களம் (வயல், நிலம், இடம்) – அமர்க்களம்.]

அமக்களம் என்பது கொச்சை வடிவம்.

அமர்கொடு-த்தல் *amar-koḍu-*, 4 செ.கு.வி. (v.i.) ***பொருதல்***; to give battle, fight, wage war against. "கலுழனோ டெதிர்மலைந் தமர் கொடுத் தனர்களால்" (உபதேசகா. சூராதி. 22).

அமர்த்த *amartta*, பெ.எ. (adj.) ***1. பொருந்திய***; befitting, suitable. ***2. மாறுபட்ட***; opposed in character, inconsistent. ***3. விரும்பிய***; amorous (சங்.அக.).

[அமர் → அமர்த்த.]

அமர்த்திக்கை *amarttikkai*, பெ. (n.) ***வீண் பெருமை பாராட்டுகை*** (இ.வ.); giving oneself airs, being vainglorious (Loc.).

[அமர்த்து → அமர்த்தி + கை (தொ.பெ. ஈறு) – அமர்த்திக்கை.]

அமர்த்து-தல் *amarttu-*, 2 பி. வி. (v. caus.) ***1. அமைதியாயிருக்கச் செய்தல்***; to make quiet, tranquillize. ***2. அடக்குதல்***; to restrain.

3. **திட்டப்படுத்துதல்**; to engage as, a house, a servant. குடியிருக்க வீடமர்த்திவிட்டான் (உ.வ.). 4. **நிலைநிறுத்துதல்**; to establish, as one in life. 5. **இருத்துதல்**; to seat. 6. **குடியிருக்கச் செய்தல்**; to make one settle down. —, 5 செ.கு.வி. (v.i.) **பெருமிதம்பட நடித்தல்**; to pose, affect greatness. "அமர்த்துத லிவ்வளவு வேணுமடி" (கவிகுஞ். 34).

க. அமரிசு; தெ. அமர்ச்சு; து. அமருனி.

[அமர் + து (பி.வி. ஈறு) — அமர்த்து.]

அமர்ந்ததிருக்கோலப்படிமம் *amarnda-tiru-k-kōla-p-paḍimam*, பெ. (n.) **திருமாலின் இருந்த திருக்கோலவுருவம்**; image of *Tirumāl* (Viṣṇu) in the sitting posture. 'ராஜச உயரத்தை அமர்ந்த திருக்கோலப் படிமங்கட்கும்......... உரியதாகத் தெரிந்தெடுத்தல் வேண்டும்' (சி. செ. பக். 19).

[அமர் → அமர்ந்த (இ.கா.பெ.எ.) + திரு + கோலம் + படிமம். படி → படிமை → படிமம்.]

அமர்ந்ததிருக்கோலம் *amarnda-tiru-k-kōlam*, பெ. (n.) **திருமாலின் இருந்த திருக்கோலம்**; the sitting posture of *Tirumāl* (Viṣṇu).

அமர்ந்ததிருக்கோலப்படிமம் பார்க்க; see *amarnda-tiru-k-kōla-p-paḍimam.*

அமர்ந்ததிருமேனி *amarnda-tiru-mēṉi*, பெ. (n.) **திருமாலின் இருந்த திருக்கோலம்** (சி. செ. பக். 22); the image of *Tirumāl* (Viṣṇu) in the sitting posture.

[அமர் → அமர்ந்த (இ.கா.பெ.எ.) + திரு + மேனி. மேல் → (மேலி) → மேனி.]

அமர்ந்தநிலை *amarnda-nilai*, பெ. (n.) **இருந்த நிலை** (சி. செ. பக். 138); sitting posture.

[அமர் → அமர்ந்த (இ.கா.பெ.எ.) + நிலை. நில் → நிலை. 'ஐ' தொ.பெ. ஈறு.]

அமர்நீதிநாயனார் *amar-nīdi-nāyaṉār*, பெ. (n.) **சிவனடியாரான அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவர்**; name of a canonized Šaiva saint, one of 63 (பெரியபு.).

[அமர் + **Skt.** nīti *+ நாயனார்.]*

அமர்வு *amarvu*, பெ. (n.) **இருப்பிடம்**; abode. "அரிபுருடோத்தமனமர்வு" (திவ். பெரியாழ். 4 . 7 : 8).

[அமர் + வு (தொ.பெ. ஈறு) — அமர்வு.]

அமர *amara*, நி.கா.வி.எ. (inf.) **இருக்க, உட்கார**; to sit, be seated. "குமரவே ளொருபுடையமர" (கந்தபு. உற்பத். சரவண. 25). —, இடை. (part.) **ஓர் உவமவுருபு** (தொல். பொருள். உவம. 11, பேரா. உரை); an adverbial of comparison.

[அமர் + அ (நி.கா.வி.எ. ஈறு) — அமர.]

அமரக்காரன் *amara-k-kāraṉ*, பெ. (n.) 1. **சிற்றரசன்கீழுள்ள படைமறவன்**; military retainer of a chief. 2. **ஆயிரங்காலாள்களுக்குத் தலைவன்**; commander of thousand foot-soldiers.

க. அமர; தெ. அமரகாடு.

[அமர் → அமரம். காரம் → காரன் (ஆ.பா. ஈறு). அமரம் + காரன் — அமரக்காரன்.]

அமரகண்டம் *amara-kaṇḍam*, பெ. (n.) **குதிரை வலிப்பு** (சீவரட்.); a severe type of convulsion or spasm so called from its similarity to the attack in horses.

இது உடம்புவலி, மயக்கம், அசைவின்றிக் கிடத்தல், வியர்த்தல், பல்லை யிளித்தல் முதலிய குணங்களை யுடைய ஒரு வலிப்பு நோய் (சா.அக.).

[மூலம் தெரியவில்லை. கண்டம் = சாவுக் கேதுவான நிலை.]

அமரகம் *amar-agam*, பெ. (n.) **போர்க்களம்**; battle-field. "அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா" (குறள், 814).

[அமர் = போர். அகம் = இடம்.]

அமரகுணர் *amara-kuṇar*, பெ. (n.) **கடுக்காய்ப் பூ** (சங்.அக.); flower of *Chebulic myrobalan.*

அமரசிலை *amara-šilai*, பெ. (n.) 1. **ஒருவகைக் கந்தகம்**; a variety of sulphur (சா.அக.). 2. **ஒருவகை வைப்பு நஞ்சு**; a kind of prepared arsenic (சா.அக.).

அமரசிலைக்கந்தகம் *amara-šilai-k-kandagam*, பெ. (n.) **ஒருவகை வைப்பு நஞ்சு**; a kind of prepared arsenic (சா.அக.).

அமரநாயகம் *amara-nāyagam*, பெ. (n.) 1. **படைத்தலைமை** (M.E.R. 36 of 1928-9); commandership. 2. **படைத் தலைவனுக்கு விடப்பட்ட நிலம்** (I.M.P. Tn. 407); grant of land to the commander of an army.

க. அமர; தெ. அமரநாயகுடு, அமரமு.

அமரம்[1] *amaram*, பெ. (n.) **கண்சூட்டுநோய்** (தைலவ.தைல. 34); disease of the conjunctival membrane of the eye, *conjunctivitis* (செ.அக.) — **ஒருவகைக் கண்ணோய்** (சங்.அக.); a kind of disease of the eye. "விழியருக லொடுநீர்க் கம்மலும் அமரமுங் கண்ணோயு மேக வழற லைநோயு மாமையஞ் சிறகாமரோ" (தைலவ. தைல. 34).

கண்களின் இறப்பைத்தோலில் குருக்களைப் போலெழுப்பி, அப் பாகத்தை உருவழியச் செய்யும் ஒரு கண்ணோய்; a disease of the conjunctiva attended with the formation of small elevations on the conjunctiva of the lids which results in the deformity of the lids, *Granular conjunctivitis* or *Trachoma* (சா.அக.).

அமரம்[2] *amaram*, பெ. (n.) 1. **பண்டைக் காலத்திற் சிற்றரசனால் அமரக்காரருக்கு விடப்பட்ட மானியம்**; land or revenue granted in ancient times by a chief to his retainers for military service. 2. **ஆயிரங் காலாள்களை ஆளுகை**; command of one thousand foot-soldiers.

ம. அமரு; க. அமர; தெ. அமரமு.

[அமர் = போர். அமர் → அமரன் = போர் மறவன். அமரன் → அமரம்.]

அமரம்[3] *amaram*, பெ. (n.) **படகோட்டுந் தண்டு**; oar used to steer a boat.

ம. அமரம்; தெ. அமரமு; து. அமர.

அமரம்[4] *amaram*, பெ. (n.) 1. **நஞ்சுக்கொடி**; umbilical cord. 2. **பலவகைப் பூண்டு செடி களின் பெயர்**; *Tiaridium indicum, Panicum dactylon, Cocculus cordifolia, Sanseviera roxburghiana, etc.* (சா.அக.).

ம., க. அமர.

அமரம்பால் *amaram-pāl*, பெ. (n.) **பனங் கள்**; palmyra toddy (சா.அக.).

அமரம்பிரிதற்கண் *amaram-piridaṟ-kaṇ*, பெ. (n.) **ஒருவகைக் கண்ணோய்**; an eye disease (சா.அக.).

அமரர் *amarar*, பெ. (n.) **பகைவர்** (பிங்.); foes, enemies. **அமரார்** பார்க்க; see *amarār*.

[அமர்தல் = பொருந்துதல். அமரார் = பொருந் தாதவர், பகைவர். ஒ.நோ: ஒன்றார், ஒன்னார், நண்ணார், துன்னார் = பொருந்தாதவர், பகைவர். அமரார் → அமரர்.]

அமரல் *amaral*, பெ. (n.) 1. **நெருக்கம்** (பொதி. நி.); closeness, density. 2. **மிகுதி** (பொதி.நி.); abundance, excess. 3. **பொலிவு** (திவா.); fertility, luxuriance, prosperity. 4. **பீடு, பெருமை, சிறப்பு** (பொதி.நி.); excellence, grandeur.

[அமர்தல் = நெருங்குதல், பொருந்துதல். அமர் → அமரல்.]

அமரன் *amaraṉ*, பெ. (n.) **போர்மறவன்**; warrior. "அமர னாயி னமைவொடு நிற்கென" (பெருங். உஞ்சைக். 37 : 202).

[அமர் = போர். அமர் → அமரன்.]

அமராடு-தல் *amar-āḍu-*, 5 செ.கு.வி. (v.i.) **போர் செய்தல்**; to fight, carry on war. "அந்தண் சேய்களுக் காயம ராடுநின் மைந்தன் றானு மடிந்தனன்" (சேதுபு. இராமதீ. 54).

[அமர் = போர். அமர் + ஆடு (துணை வினை).]

அமராபரணன் *amar-ābaraṇaṉ*, பெ. (n.) **போரையே அணிகலமாகக் கொண்டவன்**; warrior, one who regards warfare as his decoration. "அருங்கலை வினோத னமரா பரணன்" (நன். சிறப்புப்பா.).

[அமர் + வ. ஆபரணன். Skt. ābharaṇa > த. ஆபரணம் = அணிகலம். ஆபரணம் → ஆபரணன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அமரார் *amarār*, பெ. (n.) **பகைவர்**; foes, as not agreeing or associating cordially. "அமராரை வெல்ல வல்லான் வரோதயன் வாணன்" (தஞ்சைவா. 8).

[அமர்தல் = பொருந்துதல். அமர் → அமரார் = பொருந்தாதவர்.]

அமரி[1] *amari*, பெ. (n.) **சிறுநீர்** (பிங்.); urine.

ம. அமரி

[உவரி → உமரி → அமரி.]

அமரி[2] *amari*, பெ. (n.) **போர்த்தெய்வமான காளி** (பிங்.); *Kāḷi*, as war goddess. "பலர் தொழும் அமரி" (சிலப். 12 : 66-7).

ம., க., தெ. அமரி.

[அமர் = போர். அமர் → அமரி.]

பண்டைத் தமிழகத்தில், வெட்சிமறவர் நிரைகவரச் செல்லு முன்பும், படைமறவர் போர்க்களத்திற்குச் செல்லு முன்பும் கொற்றவை யென்னும் வெற்றித்தெய்வ மாகிய காளிக்குக் காவு கொடுப்பது வழக்கம்.

"மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே"
(தொல். பொருள். புறத். 4).

அமரி[3] *amari*, பெ. (n.) **கற்றாழை** (மலை.); aloe.

[ஒருகா. குமரி → அமரி. கற்றாழைக்குக் குமரி என்றொரு பெயருமுண்டு. குமரி யென்பது காளிக்கும் பெயராதலால், அவளின் மறுபெயரான அமரி யென்னுஞ் சொல் கற்றாழையைக் குறிக்க ஆளப்பட்டிருக்கலாம்.]

அமரி[4] *amari*, பெ. (n.) 1. **நஞ்சு**; poison. 2. **பேய்ப் புல்**; a kind of poisonous grass (சா.அக.).

அமரிக்கை *amarikkai*, ப.பெ. (abs. n.) **அமைதி, அடக்கம்** (உ.வ.); quietness, stillness, tranquillity, calmness (com.u.).

ம. அமர்ச்ச; க. அமக; தெ. அமரிக; து. அமருனி.

[அமர்தல் = அமைத்தல், அடங்குதல், அமைதியாயிருத்தல். அமர் → அமர்கை → அமருகை → அமரிக்கை. ஒ.நோ : கோர் → கோரு → கோருகை → கோரிக்கை. எண் → எண்ணு → எண்ணுகை → எண்ணிக்கை.]

அமரிதாவிகம் *amaridāvigam*, பெ. (n.) **கையாந்தகரை** (சித்.அக.); a plant growing in damp places (செ.அக.) — **செங்கரிப்பான் அல்லது சிவப்புக் கரிசலை**; a red variety of a plant, *Euclypta prostrata* (சா.அக.).

அமரிப்புல் *amari-p-pul*, பெ. (n.) **ஒட்டுப்புல்** (சித்.அக.); sticking grass.

[அமர்தல் = பொருந்துதல், ஒட்டுதல். அமர் → அமரி. அமரி + புல்.]

அமரிப்பூகம் *amari-p-pūgam*, பெ. (n.) **செங்கரந்தை** (சித்.அக.); red basil, *Sphoeranthes*.

அமரிய *amariya*, பெ.எ. (adj.) **பொருத**; that which fought. "அமரிய சேனை" (சங்.அக.)

[அமர்த்தல் = மாறுபடுதல், பொருதல். அமர் → அமரி → அமரிய.]

அமரியம் *amariyam*, பெ. (n.) 1. **குருத்து** (மலை.); species of atlantia (செ.அக.) — **குருந்தமரம்**; wild lime tree, *Atlantia missionis* (சா.அக.). 2. **சண்பகம்**; champak. 3. **சண்பகப்பூ**; flower of tulip tree, *Michelia champaca* (சா.அக.).

அமரியுப்பு *amari-y-uppu*, பெ. (n.) **சிறுநீருப்பு**; salt taken from urine.

[அமரி = சிறுநீர். அமரி + உப்பு.]

அமரி[1] பார்க்க; see *amari*[1].

அமரியோன் *amariyōn*, பெ. (n.) **போர்மறவன்**; warrior. "அமரி யோர்களொரு ரைம்பது வெள்ளத்தர்" (கந்தபு. மகேந். காவலா. 15).

[அமர்தல் = பொருதல். அமர் → அமரியவன் → அமரியான் → அமரியோன் (ஆ.பா.) — அமரியோர் (ப.பா.).]

அமரை *amarai*, பெ. (n.) 1. **தூண்**; pillar. 2. **அறுகம்புல்**; durva grass. 3. **சீந்தில்**; gulancha (சா.அக.). 4. **அறுகு**; panic grass, *Cynodon dactylon*. 5. **கருப்பை**; the uterus of a female. 6. **கொப்பூழ்க்கொடி**; the umbilical cord (சா.அக.).

அமரோசை *amarōsai*, பெ. (n.) (இசை) **ஏழிசை யென்னும் முரல் வரிசையில் (சுராவளியில்) மேலிருந்து கீழிறங்கும் ஓசை, பத்துவகை அலுக்குகளுள் (கமகங்களுள்) ஒன்று, ஆரோசை என்பதற்கு எதிர்**; (Mus.) complete descent of the gamut, opp. to *ārōsai*, one of ten *alukku* (kamakam). "அத்தகைமை யாரோசை யமரோசை களினமைத்தார்" (பெரியபு. ஆனாய. 24).

[அம்முதல் = அமுங்குதல். அம் → அமர் → அமர்தல் = அமைதல். அடங்குதல், தாழ்தல். அமர் + ஓசை.]

அமல்[லு]-தல் *amal-*, 13 செ.கு.வி. (v.i.) 1. **நெருங்குதல்**; to be close, thickly grown. "வேயமலகலறை" (கலித். 45:1). 2. **பொருந்துதல்**; to join, unite with. 3. **மிகுதல், அதிகரித்தல்**; to be abundant, to increase. "தருக்கமலமலமென்ன" (திருவானைக். கோச். 3). 4. **பரவுதல்**; to spread, pervade. "எங்கணுந் தானினி தமலும்" (ஞானா. 14). —, 7 செ.குன்றாவி. (v.t.) 1. **அடைதல், சேர்தல்**; to reach, arrive at. "அமலும் வேறிட மளவையின்றியே விமல ரூபமாய் வரவும்" (சேதுபு. சீவதீர்த்த. 70). 2. **அணைதல்**; to embrace. "அமல லகல மகல லபய" (தண்டி. சொல். 6).

ம. அமலிக்குக

[அம்முதல் = பொருந்துதல். அம் → அமல்.]

அமல் *amal*, பெ. (n.) **நிறைவு** (ஞானா. 34); fullness.

ம. அமல்

[அம் → அமல்.]

அமலமஞ்சள் *amala-mañjaḷ*, பெ. (n.) *மரமஞ்சள்* (சித்.அக.); tree turmeric.

அமலனாதிப்பிரான் *amalaṉ-ādi-p-pirāṉ*, பெ. (n.) *'அமல னாதிப் பிரான்' என்று தொடங்கும் திருப்பாணாழ்வார் பதிகம், நாலாயிரத் தெய்வப் பனுவலுள்* (திவ்வியப் பிரபந்தத்துள்) *ஒன்று*; a division of Tivviyaprabandham.

[அல் → அ (எ.ம.முன்.) + மலம் (குற்றம்) → மலன் (குற்றமுற்றவன்) – அமலன் = குற்ற மற்றவன். **வ.** *ஆதி = முதல். பெருமகன் → பெருமான் → பிரான். அமலனாதிப்பிரான் = குற்றமற்றவனும் உலக முதல்வனும் பெருமானு மான இறைவன், திருமால்.]*

அமலை¹ *amalai*, பெ. (n.) 1. *மிகுதி* (திவா.); abundance. 2. *செறிவு*; denseness. ''அடுசினத் தமலையை'' (ஞானா. 43). 3. **சோற்றுத் திரளை**; lump of rice. ''பிச்சைப் பாத்திரப் பெருஞ்சோற் றமலை'' (மணிமே. 17 : 2). 4. **சோற்றுருண்டை**; rice ball. ''வெண் ணெறிந் தியற்றிய மாக்க ணமலை'' (மலை படு. 441). 5. **சோறு** (திவா.); boiled rice. 6. *கட்டி*; boil. 7. *கடுக்காய்* (மலை.); chebulic myrobalan (செ.அக.) — ink - nut, *Terminalia chebula* (சா.அக.). 8. **படைமறவர் திரண்டு பட்ட பகைவேந்தனைச் சூழ்ந்துநின்று ஆடுங் கூத்து**; dance of soldiers who have gathered around a fallen enemy king. ''களிற்றொடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலையும்'' (தொல். பொருள். புறத். 14). 9. **படைமறவர் திரண்டு பட்ட பகை வேந்தனைச் சூழ்ந்துநின்று பாடும் பாட்டு**; songs sung by soldiers who have gathered around a fallen enemy king (தொல். பொருள். புறத். 14, இளம்பூ. உரை). 10. **ஆரவாரம்**; hubbub, confused yelling of war-cry, great din. ''அறைகழல் வீர ரார்க்கு மமலையை'' (நைடத. நாட்டு. 13). 11. **படைமறவர் தம் வேந்தனுடன் கூடியாடுங் கூத்து**; dance of soldiers together with their king. ''ஒள்வா ளமலை'' (பு. வெ. 147, கொளு.).

''காய்ந்தடு துப்பிற் கழன்மறவ ராடினார்
வேந்தொடு வெள்வாள் விதிர்த்து''
(பு. வெ. 7 : 21).

[அம்முதல் = பொருந்துதல், கூடுதல். அம் → அமல் → அமலை. அமலுதல் = நெருங்குதல், பொருந்துதல், மிகுதல்.]

அமலை² *amalai*, பெ. (n.) 1. **கொப்பூழ்க் கொடி**; umbilical cord (சா.அக.). 2. **பூவந்தி**; soapnut tree.

ம., தெ. அமல.

அமலைதாரம் *amalai-tāram*, பெ. (n.) *அரிதாரம்* (சித்.அக.); orpiment.

அமளி *amaḷi*, பெ. (n.) 1. *மிகுதி*; increase, abundance. பனம்பழம் இப்போது நல்ல அமளியா யிருக்கும் (யாழ்ப்.). **ம.** அமலி. 2. **ஆரவாரம்**; tumult, uproar, bustle, stir, press of business. 'வந்தபோ திருந்த அமளி காண்' (தில். திருநெடுந். 21, வியா.). 3. **மக்கட் படுக்கை**; bed, mattress, sleeping couch. ''ஐந்துமூன் றடுத்த செல்வத் தமளிமூன் றியற்றி'' (சீவக. 838). 4. **கட்டில்**; cot, bedstead. ''மணிக்கா லமளி'' (பெருங். உஞ்சைக். 33 : 106). 5. **பள்ளியறை** (சங். அக.); bedroom.

[அமல் → அமலி → அமளி. அமலுதல் = பொருந்துதல், மிகுதல், அமர்தல்.]

அமளிகுமளி *amaḷi-kumaḷi*, பெ. (n.) *பேரார வாரம்*; great uproar.

ம. அமரல்

[அமல் → அமலி → அமளி. கும்முதல் = கூடு தல், திரளுதல். கும் → குமல் → குமலி → குமளி. அமளிகுமளி – பொருளை மிகுத்துக் காட்டும் இணைமொழி (words in pairs).*]*

அமளிபண்ணு-தல் *amaḷi-paṇṇu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **ஆரவாரஞ் செய்தல்**; to make a great noise, raise hue and cry, make a fuss. 2. **சச்சரவு விளைத்தல்**; to create disturbance, cause commotion.

அமளி பார்க்க; see *amaḷi*.

அமளை *amaḷai*, பெ. (n.) 1. *கடுகுரோகணி* (மலை.); black hellebore (செ.அக.) — black hellebore or bear's foot, *Helleborus niger* (சா.அக.). 2. **மரவகை** (L.); diverse trifoliate sumach soap-nut, s. tr., *Allophyllus cobbe*.

அமளைக்கண்ணி *amaḷai-k-kaṇṇi*, பெ. (n.) **கொள் (காணம்)** (பச்.மூ.); horse-gram.

அமளோகிதம் *amaḷōgidam*, பெ. (n.) **செங்கீரை** (சித்.அக.); cock's comb greens.

அமனிதம் *amaṉidam*, பெ. (n.) *புளியாரை* (சித்.அக.); yellow wood-sorrel (செ.அக.) — sorrel, *Oxalis corniculata* (சா.அக.).

அமனைக்கன்னி *amanai-k-kanni*, பெ. (n.) ***காணம்;*** horse-gram, *Dolichos uniflorus* alias *D. biflorus* (சா.அக.).

ஒ.நோ: அமலைக்கண்ணி

அமாத்திரை *amattirai*, பெ. (n.) ***ஓம் என்னும் முளைமந்திரத்திலுள்ள மகரமெய்;*** the consonant 'ம்' (m) in the mystic syllable *ōm*. 'ஓம் என்ற பிரணவ ஒலியில் அ, உ, ம ஆகிய மூன்று எழுத்துகள் அடங்கும். இவற்றுக்கு மாத்திரைகள் என்று பெயர். ஓம் என்பதில் மெய் ஒற்றும் இருக்கின்றதல்லவா? இதனை அமாத்திரை என்பர் அறிஞர்' (சி. செ. பக். 274).

[அ + மாத்திரை. மா → மாத்திரை. 'திரை' ப.பெ. ஈறு.]

ஓம் என்பதில் ஒ என்பதே உயிர்நாடி யெழுத்து. மகரமெய் புறவெழுத்து அல்லது மிகையெழுத்து என்னுங் கருத்தில் அதை அமாத்திரை என்றனர் போலும்!

அமாந்தக்காரன் *amanda-k-karan*, பெ. (n.) 1. ***சவளி வணிகன்*** (புதுவை); cloth merchant (Pond.). 2. ***தெருவிற் பண்டம் விற்கும் மூட்டைக் காரன்;*** street hawker (R.).

அமாந்தம் *amandam*, பெ. (n.) ***பொய்*** (நாஞ்.); fib, lie (Nāñ.).

அமாந்தம்பற்றவை-த்தல் *amandam-parra-vai-*, 4 செ.கு.வி. (v.i.) ***இல்லாததைச் சொல்லுதல்*** (நாஞ்.); to fib (Nāñ.).

அமாமிக்கடம்பு *amami-k-kadambu*, பெ. (n.) ***செங்கடம்பு*** (சித்.அக.); small Indian oak.

அமானி *amani*, பெ. (n.) ***புளியாரை*** (மலை.); yellow wood-sorrel.

ஒ.நோ: அமனிதம்

அமிசடக்கம் *amiśadakkam*, பெ. (n.) ***அமைதி, அடக்கமான ஒழுக்கம்;*** modesty, quiet behaviour.

[அமை + அடக்கம் – அமையடக்கம் → அமைசடக்கம் → அமிசடக்கம்.]

அமிஞ்சி *amiñji*, பெ. (n.) ***அமஞ்சி*** பார்க்க; see *amañji*. 'அமிஞ்சிக்கு உழுதால் சரியாய் விளையுமா? (உ.வ.).

அமிஞை *amiñai*, பெ. (n.) ***தாயைப் பெற்ற பாட்டி*** (பள்.); maternal grandmother (Paḷ.).

[அம்மை + அஞ்ஞை – அம்மைஞ்ஞை → அம்மிஞ்ஞை → அமிஞை. அன்னை → அஞ்ஞை.]

அமிதசாகரர் *amida-śagarar*, பெ. (n.) ***11ஆம் நூற்றாண்டினரும், யாப்பருங்கலம், யாப்பருங் கலக் காரிகை என்னும் யாப்பிலக்கண நூல் களின் ஆசிரியருமாகிய ஒரு சமணத் துறவியார்;*** name of a Jaina sage of the 11th century and author of two grammatical treatises on Tamil prosody, viz. *Yapparungalam* and *Yapparungalakkarigai*.

''அளப்பருங் கடற்பெய ரருந்தவத் தோனே''
(யாப். வி. சி. பா.)

[அ (எ.ம.முன்.) + **Skt.** mita + **Skt.** sāgara.]

அமிர்தக்கடுக்காய் *amirda-k-kadu-k-kay*, பெ. (n.) ***கடுக்காய் வகை;*** species of chebulic myrobalan (செ.அக.).

விம்மித் தசை மிகுந்துள்ள 32 வகைக் கடுக் காய்களிலொன்று; இது காசியில் விளையும்; தொண்டையி லுண்டாகும் கீச்சொலியையுங் கோழையையும் நீக்கும்; one of the 32 kinds of country gall-nuts which contain thick coverings and small kernels, said to grow in Benares and cure the wheezing sound or whistling noise in the throat due to phlegm (சா.அக.).

''அமிர்த மெனுங்கடுக்கா யம்புவியி லுள்ள
திமிர்த சிலேட்டுமத்தைத் தீர்க்கும் —
விமிதச்
சதைப்பற்றுண் டாயிருக்குஞ் சாற்றிலதன் றேசங்
கதிக்கொத்த காசியென்பார் காண்''
(பதார்த்த. 1004).

[அமிர்தம் + கடு + காய்.]

அமிழ்து பார்க்க; see *amildu*.

அமிர்தக்குமரி *amirda-k-kumari*, பெ. (n.) ***சீந்திற்கொடி, கற்றாழை முதலிய மூலிகை களினின்று வடிக்கப்படும் எண்ணெய்;*** a medicated oil prepared from moon-creeper, aloe and other plants (சா.அக.).

[அமிர்தம் + குமரி. அமிழ்து → அமிர்து.]

அமிர்தக்குழல் *amirda-k-kulal*, பெ. (n.) ***உழுந்து மாவும், அரிசிமாவும், வெண்ணெயும், வெல்லப் பாகுஞ் சேர்த்து, நாவிற்கும் மனத்திற்கும் இன்பந்தருமாறு செய்யப்படும் 'மனோகரம்' என்னும் பணிகார வகை;*** confection made of black gram, rice and butter mixed with treacle.

உழுந்துமாவிற்குத் தலைமாறாகக் கடலை மாவைச் சேர்ப்பதுமுண்டு.

[அமிர்தம் + குழல் (தேங்குழல் போன்றது).]

அமிழ்து பார்க்க; see *amiḻdu*.

அமிர்தக்கொடி *amirda-k-koḍi*, பெ. (n.) **சீந்திற் கொடி** (சங்.அக.)—gulancha (செ.அக.)—moon-creeper, bile killer, *Tinosphora cordifolia* alias *Menispermum cordifolium* (சா.அக.).

[அமிர்தம் + கொடி.]

அமிழ்து பார்க்க; see *amiḻdu*.

அமிர்தக்கோலி *amirda-k-kōli*, பெ. (n.) **திருநெல்வேலி மாவட்டத்திலோடும் பொருநை (தாம்பிரவரணி) யாறு**; the river *Tāmbira-varaṇi*, flowing in Thirunelvēli district.

[அமிர்தம் + கோலி.]

அமிழ்து பார்க்க; see *amiḻdu*.

அமிர்தகணத்தார் *amirda-kaṇattār*, பெ. (n.) 1. **ஊரவையாரான கணப்பெருமக்கள்** (I.M.P. Cg. 1027); members of the committee for the management of village affairs. 2. **கோயிற் பண வருமானங்களைக் கணக்கிடுஞ் சவையார்** (M.E.R. 90 of 1913); members in charge of the cash receipts of a temple.

[அமிர்தம் + கணத்தார்.]

அமிழ்து பார்க்க; see *amiḻdu*.

அமிர்தகலை *amirda-kalai*, பெ. (n.) **திங்களின் 16 கூறுகளுள் ஒன்று**; a digit or 1/16 of the moon's disc, a phase of the moon. "அமிர்த கலையி னீரை மாந்தி" (சிலப். 5 : 208, உரை).

ம. அம்ருதகல

[அமிர்தம் + கலை.]

அமிழ்து பார்க்க; see *amiḻdu*.

நிலவொளி குளிர்ந்து இன்பந் தருவத னாலும், திங்களின் பெயராகிய மதி யென்னுஞ் சொற்கு மது (தேன்) என்னுஞ் சொல்லை மூலமாகக் கொண்டதனாலும், திங்கட்கு 'அமிர்தகிரணன்' என்று வட மொழியில் ஒரு பெயரிருப்பதனாலும், மதி யொளியிற் படுப்பதனால் மத்தம் உண்டாகு மென்று பண்டையோர் நம்பியதனாலும், திங்களின் கூறு அமிர்தகலை யெனப்பட்டது.

அமிர்தகவிராயர் *amirda-kavi-rāyar*, பெ. (n.) **17ஆம் நூற்றாண்டி லிருந்தவரும் 'ஒருதுறைக் கோவை' யாசிரியருமான சிறந்த புலவர்**; name of a poet, author of *Oruturaikkōvai*, 17th century.

[அமிழ்தம் → அமிர்தம் + வ. கவி + அரசன் → அரைசன் → அரையன் → அரையர் → ராயர்.]

அமிழ்து பார்க்க; see *amiḻdu*.

அமிர்தகுணம் *amirda-kuṇam*, பெ. (n.) **சிறந்த குணம்**; excellent quality (தெய்வச். விறலி. 147).

அமிழ்து பார்க்க; see *amiḻdu*.

[அமிர்தம் + குணம். இனிமையும் நன்மையும் பற்றிச் சிறந்த குணம் அமிர்தகுணம் எனப் பட்டது.]

அமிர்தங்கலங்கு-தல் *amirdaṅ-kalaṅgu-*, 5 செ. கு.வி. (v.i.) **மூளை கலங்குதல்** (வின்.); brain being disturbed, shocked, as by a blow, concussion of the brain.

[அமிர்தம் → அமிதம் → அமுதம் = சோறு. அமிர்தம் = குழைந்த சோறு போன்ற மூளை.]

அமிழ்து பார்க்க; see *amiḻdu*.

அமிர்தசர்க்கரை *amirda-šarkkarai*, பெ. (n.) 1. **சீந்தில்மா**; flour made from gulancha stalk. 2. **சீந்திற்கொடியினின்று எடுக்கப்படும் வெள்ளுப்பு, மண்ணீரல் வலுவிற்கும் மெலிந்த வுடம்பை வலுப்படுத்தற்கும் பயன்படுத்தப் படுவது**; a white salt extracted from the moon-creeper, used in diseases of the spleen and as a tonic in convalescence.

[அமிர்தம் + சருக்கரை. அமிர்தம் = சீந்திற் கொடி.]

அமிழ்து பார்க்க; see *amiḻdu*.

அமிர்தசாரவெண்பா *amirda-šāra-veṇbā*, பெ. (n.) **தத்துவராயர் இயற்றிய ஒரு பனுவல்**; name of a poem by *Tattuvarāyar*.

[அமிர்தம் + சாரம் + வெள்ளை + பா.]

அமிழ்து பார்க்க; see *amiḻdu*.

அமிர்தசூரணம் *amirda-šūraṇam*, பெ. (n.) **சீந்திற்கொடிச் சுண்ணம், குடற் கோளாற்றிற் கும் காமாலைக்கும் பயன்படுத்தப்படுவது**; a bitter and slightly nauseous powder of the dried tender shoots of the moon-creeper, *Tinosphora cordifolia* alias *Menispermum cordifolium*, prescribed as an alternative in cases of visceral obstructions and jaundice (சா.அக.).

[அமிர்தம் + சூரணம். சுள்ளெனல் = சுடுதல், எரித்துச் சாம்பல் அல்லது நீறாக்குதல். சுள் →

சுண் → சுண்ணம் = நீறு, பொடி. சுள் → சுர் → தூர் → தூரணம்.]

அமிழ்து பார்க்க; see amiḻdu.

அமிர்தசெந்தூரம் *amirda-šendūram*, பெ. (n.) **சூலை, காயம், புரை, புண் முதலிய நோய்கட்குக் கொடுக்கும் செந்நீறு**; a calcined red metallic oxide prescribed for healing acute pain, sores, sinuses or other wounds.

[அமிர்தம் + செந்தூரம். செந்தூள் → செந்தூளம் → செந்தூரம்.]

அமிழ்து பார்க்க; see amiḻdu.

அமிர்ததலைச்சி *amirda-talaicci*, பெ. (n.) **சீந்திற்கொடி**; gulancha (செ.அக.) — moon-creeper (சா.அக.).

[அமிர்தம் + தலைச்சி.]

அமிழ்து பார்க்க; see amiḻdu.

அமிர்தநிலை *amirda-nilai*, பெ. (n.) **அமுதநிலை** பார்க்க; see *amuda-nilai*. ''அறிந்து பதினைந் தமிர்தநிலை யாராய்ந்து'' (விறலி விடு. 546).

[அமிர்தம் + நிலை.]

அமிழ்து பார்க்க; see amiḻdu.

அமிர்தப்பால் *amirda-p-pāl*, பெ. (n.) **தாய்ப்பால்**; mother's breast milk.

[அமிர்தம் + பால்.]

அமிழ்து பார்க்க; see amiḻdu.

அமிர்தபதி *amirda-padi*, பெ. (n.) **ஒரு பழந்தமிழ்ப் பனுவல்** (யாப். வி. 95, பக். 487); an ancient Tamil Poetic work.

[அமிர்தம் + பதி.]

அமிழ்து பார்க்க; see amiḻdu.

அமிர்தபலா *amirda-palā*, பெ. (n.) **கொய்யா மரம்**; guava tree, *Pisidium guyava* (சா.அக.).

[அமிர்தம் + பலா.]

அமிழ்து பார்க்க; see amiḻdu.

அமிர்தபழம் *amirda-paḻam*, பெ. (n.) **ஒரு நீலமலைப்பழம்**; nectar fruit or pear, *Pyrus communis*, borne by a small thorny tree in the Nilgiris (சா.அக.).

[அமிர்தம் + பழம்.]

அமிழ்து பார்க்க; see amiḻdu.

பேரிக்காய் மேனாட்டினின்று கொண்டு வந்து பயிராக்கப்பட்டது.

அமிர்தம் *amirdam*, பெ. (n.) 1. **முலைப்பால்**; woman's breast milk. 2. **ஆவின் பால்**; cow's milk. ''திலநெய் யமிர்தம்'' (தைலவ. தைல. 1). 3. **பாலிருப்பிடம்**; the source of milk. 4. **வெண்ணெய்**; butter. 5. **நெய்**; ghee. 6. **தேன்**; honey. 7. **இனிப்பு**; sweetness. 8. **இனிப்புப் பண்டம்**; sweet cake. 9. **இனிமை**; pleasantness. ''அமிர்தங் கொளவுயிர்க்குங் கருங்கா ழகிலி னறும்புகை'' (சீவக. 349). 10. **நீர்**; water. 11. **உணவு**; food. ''தந்தவ னமிர்த மூட்ட வுண்டு'' (சீவக. 1178). 12. **சோறு**; boiled rice. 13. **இரவாது வரும் உணவு அல்லது பொருள்**; unsolicited alms. ''ஒன்றிரவாமல் வருவதே யமிர்தம்'' (காஞ்சிப்பு. ஒழுக். 36). 14. **நஞ்சு தீர்க்கும் மருந்து**; antidote to poison. 15. **மயக்கந் தெளிவிக்கும் மருந்து**; a reviving cordial. 16. **இதள் (பாதரசம்)**; quick-silver. 17. **விந்து**; semen virile. 18. **பொன்**; gold. 19. **செல்வம்**; prosperity. 20. **சாறாயம்**; liquor, arrack. 21. **சீந்தில்**; moon-creeper, *Menispermum cordifolium*. 22. **சிவப்பாமணக்கு**; red castor seed, *Ricinus communis*. 23. **ஒரு பூண்டு**; a plant, *Phaseolus trilobus*. 24. **ஒரு வேர்**; the root of a plant. 25. **ஒரு வெள்ளை வைப்பு நஞ்சு**; a white arsenic.

ம. அமிர்தம்; க. அம்ருத; தெ. அம்ருதமு.

குறிப்பு: இச் சொல் (அமிர்தம்) காய் கனிகளைக் குறிக்கும்போது செந்தாழை (அனாசி), எலுமிச்சை, நெல்லி, கொய்யா, கடுக்காய், சீந்தில் முதலியவற்றைக் குறிக்கும் (சா.அக.).

அமிழ்து பார்க்க; see amiḻdu.

அமிர்தமூடியவிடம் *amirdam-mūḍiya-v-iḍam*, பெ. (n.) **மாச் சுக்கு**; soft dried ginger (சா.அக.) — (தைலவ. தைல. 1).

அமிர்தமூடுமிடம் *amirdam-mūḍum-iḍam*, பெ. (n.) **அமிர்தமூடியவிடம்** பார்க்க; see *amirdam-mūḍiya-v-iḍam*. ''சீரமிர்த மூடுமிடமஃதை'' (தைலவ. தைல. 1).

குறிப்பு: சங்க அகரமுதலியிலும் அதிலுள்ள மேற்கோளிலும் 'மூடுவிடம்' என்னும் பாடம் உள்ளது.

அமிர்தவடிகம் *amirda-vaḍigam*, பெ. (n.) **அமிர்தத்தைக் கொடுக்குஞ் சீந்திற்கொடி**;

moon-creeper which gives an essence like nectar (சா.அக.).

[அமிர்தம் + வடிகம்.]

அமிழ்து பார்க்க; see *amildu.*

அமிர்தவடை *amirda-vaḍai,* பெ. (n.) **தித்திப்பான உழுந்துவடை;** a sweet cake made of black gram and sugar.

[அமிர்தம் + வடை.]

அமிழ்து பார்க்க; see *amildu.*

அமிர்தவல்லி *amirda-valli,* பெ. (n.) **சீந்திற் கொடி** (சூடா.); gulancha (செ.அக.).

ம. அமிர்தவல்லி; க. அம்ருதபல்லி; தெ. அம்ருதவல்லி.

[அமிர்தம் + வல்லி.]

அமிழ்து பார்க்க; see *amildu.*

அமிர்தவள்ளி *amirda-vaḷḷi,* பெ. (n.) **சர்க்கரை வள்ளிக் கிழங்கு;** sweet potato, *Ipomala batatas.*

[அமிர்தம் + வள்ளி.]

அமிழ்து பார்க்க; see *amildu.*

அமிர்தவிந்து *amirda-vindu,* பெ. (n.) **இதள்** (**பாதரசம்**) (சங்.அக.); quick-silver.

[அமிர்தம் + விந்து.]

அமிழ்து பார்க்க; see *amildu.*

அமிர்தவுப்பு *amirda-v-uppu,* பெ. (n.) *சீந்திலுப்பு;* salt extracted from the moon-creeper, *Tinosphora cordifolia.* அமிர்தசர்க்கரை பார்க்க; see *amirda-šarkkarai.*

[அமிர்தம் + உப்பு.]

அமிழ்து பார்க்க; see *amildu.*

அமிர்து *amirdu,* பெ. (n.) *1.* **முலைப்பால்;** breast milk. "கனதனத்தி லூறுமமிர் தூட்டினளால்" (கந்தபு. தக்க. வள்ளி. 37). 2. **சோறு;** boiled rice. "அத்திரத்தா லந்நீரமிர்திற் புரோக்கிக்க" (சைவச. பொது. 296). *3.* **திணைநிலச் செல்வம்;** products of particular tracts of land. "நாட்டகத் தமிர்து நளிகட லமிர்து நல்வரை யமிர்தமு மல்லாக் காட்டகத் தமிர்துங் காண்வர" (சீவக. 2110).

[அமிழ்து → அமிர்து.]

அமிழ்து பார்க்க; see *amildu.*

அமிரம் *amiram,* பெ. (n.) *மிளகு* (மலை.); black pepper.

தெ. மிரியமு

அமிழ்-தல் *amil-,* 2 செ.கு.வி. (v.i.) **முழுகுதல், ஆழ்தல்;** to sink, to be immersed, to plunge. "இன்பக் கடலூடே யமிழுவேனை" (திருப்பு. 36).

ம. அமிழுக; க. அவுகு; து. கமரு; பட. அமுகு.

[அம்முதல் = அமுங்குதல். அம் → (அமில்) → அமிழ்.]

அமிழ்த்து-தல் *amilttu-,* 2 பி.வி. (v.caus.) *1.* **அமுக்குதல்;** to press down. *2.* **முழுக்குதல், ஆழ்த்துதல்;** to cause to sink, immerse, ingulf, drown. "ஆடன் மைந்த ரடங்க வமிழ்த்தினான்" (சேதுபு. அக்கினி. 31). *3.* **மறைத்தல்;** to cover, as eyelids cover the eyes. "அமிழிமைத் துணைகள்" (கம்பரா. பால. கோலங். 3).

ம. அமிழ்த்துக; க. அமுகு; து. அமபுனி; பட. அமுக்கு; கோத. அம்ங்; நுட. ஒம்க்.

[அமிழ் (த.வி.) – அமிழ்த்து (பி.வி.)]

அமிழ்தக்கொடி *amilda-k-koḍi,* பெ. (n.) **அமிர்தக்கொடி** பார்க்க; see *amirda-k-koḍi.*

அமிழ்தம் *amildam,* பெ. (n.) *1.* **உணவு;** food. "அங்கவர்க் கறுசுவை நால்வகை யமிழ்தம்" (மணிமே. 28 : 116). 2. **உயிர்மருந்து;** elixir. "தானமிழ்த மென்றுணரற் பாற்று" (குறள், 11). *3.* **முலைப்பால்;** woman's breast milk. 4. **ஆவின்பால்;** cow's milk. 5. **தீங்குடிப்பு;** honey-sweet drink.

ம. அமுதம், அமிர்தம்.

[அமிழ்து → அமிழ்தம்.]

அமிழ்து *amildu,* பெ. (n.) *1.* **உணவு;** food. 2. **முலைப்பால்;** woman's breast milk. 3. **ஆவின்பால்;** cow's milk. "இருதூணி யமிழ்துகுத் ததின்" (தைலவ. தைல. 28). 4. **உயிர்மருந்து;** elixir. "அமிழ்தினு மாற்ற வினிதே" (குறள், 64). 5. **உயிர்மருந்துபோற் சிறந்தது;** anything as good as elixir. 6. **இனிப்புப் பண்டம்;** sweet meat. 7. **தேங்கூழ்;** honey-sweet salad or porridge.

ம. அமிர்து; க., து. அம்ருத; தெ. அம்ருதமு; கொங். அம்ருத்.

[மருமம் = மார்பு, முலை. மருமம் → மம்மம் = முலை. ஒ.நோ: கருமம் → கம்மம். மம்மம் > L. *mamma*, milk – secreting organ of female in mammals.

மம்மம் → அம்மம் = முலை, முலைப்பால், குழந்தையுணவு. அம்மம் → அம்மு = முலைப் பால், குழந்தை யுணவு, குழந்தைக்கு மதித்து ஊட்டும் சோறு. அம்முதல் = உண்ணுதல். அம்மு → அம்முது → அமுது = முலைப்பால், ஆவின்பால், உணவு. அமுது → அமுதம் = பால், உணவு. அமுதப்பால் என்பது உலக வழக்கில் தாய்ப்பாலான முலைப்பாலையே குறித்தல் காண்க.

அவிதல் = வேதல், சமைதல். அவி → அவிழ் = வெந்த சோற்றுப்பருக்கை, சோறு. அவி → அவிழ்து → அவிழ்தம் = சோறு.

அவிழ்து → அமிழ்து = சோறு, உணவு. அமிழ்து → அமிழ்தம் = சோறு, உணவு.

அமிழ்து → அமிது → அமுது → அமுதம். ஒ.நோ: தாழ்வடம் → தாவடம். தாழ்வில்லை → தாழ்விலை → தாவிலை. உயிரிசைவு மாற்றம் (harmonic sequence of vowels) என்னும் நெறிப் படி, இறுதியுகரச் சார்பினால் இடையிகரம் உகரமாயிற்று, அமிது → அமுது என. இச் சொல்லைப் பின்பற்றியே அம்மு → அமுது என்னுந் திரிபு தோன்றியிருக்கலாம்.]

இங்ஙனம், பாலைச் சிறப்பாகக் குறிக்குஞ் சொல்லும், சோற்றைச் சிறப்பாகக் குறிக்குஞ் சொல்லும், வெவ்வேறு வகையில் திரிந்து அமுது என்னும் பொதுவடிவடைந்துவிட்ட தனால், ஒன்றோடொன்று மயங்கி, அவ்விரு சொல்லும் பாலுஞ்சோறுமாகிய இரு பொருளையும் உணர்த்தத் தலைப்பட்டு விட்டன. ஆயினும், அமுது என்னுஞ் சொல் பெருவழக்காகச் சோற்றைக் குறிப்பது அமுதுசெய்தல், அமுதுபடைத்தல், அமுது பாறை, அமுதுமண்டபம், அமுதூட்டுதல், திருவமுது என்னும் சொல் வழக்குகளால் அறியப்படும்.

சோறு என்பது, ''ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே'' (நன். 358) என் னும் நூற்பாவிற் கிணங்க, சோற்றுடன் உண்ணும் நால்வகை யுண்டிகளையுங் குறிக் கும். அதனால் அவையும் அமுதெனப்படும்.

எ-டு: பருப்பமுது, கறியமுது, இலையமுது, தயிரமுது, கன்னலமுது.

அமுதுகுத்துதல் என்னும் வழக்கில் 'அமுது' உறை மோரை யுணர்த்திற்று.

சோறு அரிசியின் திரிபாக்கமாதலால், அமுது அல்லது அவிழ் என்னுஞ் சொல் சிறு பான்மை அரிசியையும் குறிக்கும்.

எ-டு: அமுதுபடி = அரிசி. ''அமுதுபடி புறம்பில்லையென்செய்கேன்'' (திருவாலவா. 31 : 12). 'கலவுமி தின்றால் ஒரு அவிழ் (ஓரவிழ்) தட்டாதா?' (பழ.).

ளகரமெய் போன்றே அதற்கினமான ழகர மெய்யும் ரகரமாகத் திரியும். அதனால், அமிழ்து என்பது அமிர்து என்றும், அமிழ்தம் என்பது அமிர்தம் என்றும் வடிவுகொள்ளும். இவ் வடிவே திருப்பாற்கடல் கடைந்த தொன்மக் கதைக்கு வழிவகுத்தது.

தென்சொற்களை வடமொழியில் ஆளும் போது, முதலிலு மிடையிலுமுள்ள உயிர்மெய் களின் உயிரைப்போக்கி ரகரஞ் சேர்த்துக் கொள்வது வடமொழியாளர் வழக்கம். தென்சொல்லில் ஏற்கெனவே ரகரமிருப்பின், அதை அப்படியே வைத்துக்கொள்வர்.

எ-டு: மதங்கம் > ம்ருதங்க, மிதி > ம்ருத், மெது > ம்ருது.

இம் முறைப்படி, 'அமிர்தம்' வடமொழியில் 'அம்ருத' என்றாயிற்று. அதை ஆரியச்சொல் லாக்க வேண்டி ஆரியவழிப் பொருட் காரணங் கூறின், அ + ம்ருத் என்று பகுத்து, சாவின்மை அல்லது சாவைத் தவிர்ப்பது என்றுதான் பொருள் கூறவொண்ணும். ஆதலால் அங்ஙனம் பகுத்து, சுரர் என்னும் தேவர் தம் பகைவராகிய அசுரரைத் துணைக் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்து சுரை (சுரா) யென்னும் அமிர்தமெடுத்துண்டு, சாவு நீங்கினர் என்று கதை கட்டிவிட்டனர். இக் கதையின் பொய்ம்மைச் சான்றுகளாவன :

1. திருப்பாற் கடலென்று ஒரு கடலும் இருந்ததின்மை. வெண்கடல் (white sea) என்றுதான் ஒன்றுளது. அது தமிழிற் பாற் கடல் எனப்படும். பாற்கதிர், பாற்கவடி, பாற்கெண்டை, பாற்சுறா, பால்நண்டு, பால்வண்ணன், பால்வெள்ளி என்பன வெண்ணிறம் பற்றியன. நன்னீர், உவர் நீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் என்னும் எழுவகைக் கடற்கொள் கையை அடிப்படையாகக் கொண்டது திருப்பாற்கடல் கடைந்த கதை.

2. சுரரும் அசுரரும் ஒரு வகுப்பார்க் கொரு வகுப்பார் உயிர்ப் பகைவராதலால்

ஒரு வினைமுயற்சியில் இசைந்து ஈடு பட்டிருக்க முடியாமை. மேலும், நிலை யான தேவர்க்குச் சுரை வேண்டியதில்லை; பிறவிக்குட்பட்ட தேவர்க்கு அது பயன் படாது.

3. மந்தரமலையாகிய மத்து, வாசுகி யென்னும் பாம்புக்கயிறு முதலிய கருவிகள் சிறுவரும் நம்பக்கூடாமை.

4. மத்தமிழாது தாங்கிய திருமால் தடுக்க முடியாத நஞ்சைச் சிவபெருமான் உண்டதனால் அவன் கழுத்துக் கறுத்த தென்ற கூற்று.

5. கதிரவன் திங்கள் மறைவிற்குக் காரணமாகக் கட்டப்பட்டுள்ள நிகழ்ச்சி கள்.

6. கூடியுழைத்த அசுரருக்குத் திருமால் சுரையளிக்கவில்லையென்னும் முறை கேட்டுச் செய்தி. கிரேக்கர் வேத ஆரியரின் முன்னோருக்கு மிக நெருங்கியவராதலால், 'அம்ருத' என்னும் வடசொல் கிரேக்க மொழியில் 'அம்புரோசியா' (ambrōsia) என்று வழங்குவது, அச் சொல் ஆரியச் சொல் என்பதற்குச் சான்றாகாது.

"வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று"

என்னும் குறளில் (11), அமிழ்து என்பது உயிர்மருந்து என்று பொருள்படுவதே யன்றி எக் கதையையுஞ் சுட்டுவதன்று. நீரும் சோறுமாகிய இருவகை யுணவும், பசி நோய் நீங்கி உயிர்வாழ இன்றியமையாதன வாதலால், இருமருந் தெனப்படும். அவற்றுள் நீரே ஏனையதையும் விளைத் தலால், அதனை அமிழ்தம் என்று சிறப்பித் தார் ஆசிரியர். 'உணரற் பாற்று' என்னும் தொடர் பொருள்பொதிந்த தொன்று.

இனி,

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"

என்னுங் குறளிலும் (82), சாவாமருந்து என்பது சாவாமைக்கு ஏதுவான மருந்தென்று பொருள் படுவதேயன்றி, தேவருணவையோ திருப்பாற்கடற் கதையையோ நினைவுறுத்துவதன்று.

எல்லா மக்கட்கும் பிறப்பிலிருந்து இறப்பு வரை பல்வேறு நோய்வருவது இயல்பு. மருந்துண்டு நோய் நீங்கினாற் பிழைப்பு; இன்றேற் சாவு. சிலர், "நெடுநா ளிருந்தபே ரும்நிலை யாகவே யினுங்காய கற்பந் தேடி நெஞ்சுபுண் ணாவ ரெல்லாம்" என்று தாயு மானவர் (பரிபூரணா. 10) பாடியதற் கேற்ப, இயற்கையுஞ் செயற்கையுமான மூவா மருந்துஞ் சாவாமருந்துந் தேடி உலகெங்குந் திரிவர். அத்தகைய மருந்தொன்றையே திருவள்ளுவர் தம் குறளிற் குறித்துள்ளார். "சாவா மருந்தெனினும்" என்பதிலுள்ள உம்மை எதிர்மறையும்மை யென்பதையும் முதன்மையாய்க் கவனித்தல் வேண்டும். ஏனெனின், மண்ணுலகிற் பிறந்தவரெல்லாம் மாய்வது திண்ணம். விருந்திருக்கத் தனித் துண்டலின் தீமையை விளக்கவே "சாவா மருந்தெனினும்" என்றார்.

"அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்"

என்னுங் குறளிலும் (64), அமிழ்து என்பது கருப்பஞ்சாறு, கன்னல் (பாயசம்), பதநீர் (தெளிவு), தேன்கலந்த பால், பழக்கூட்டு முதலிய உலகத்திலுள்ளனவும் உண்டினிமை கண்டனவுமான இன்குடிப்புகளுள் அல்லது தேங்கூழ்களுள் ஒன்றனையே குறிக்கும்.

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்"

என்று திருவள்ளுவர் பின்னருங் கூறுதல் காண்க (1121).

ஏதேனுமொருவகையில் இருபொருள்களின் ஏற்றத்தாழ்வை ஒப்புநோக்கிக் கூறும்போது, கண்டறிந்தவற்றைப்பற்றிக் கூறுவதே பொருளுள்ளதும் எல்லார்க்கும் ஏற்பது மாகும்.

அதுவே, அம்மம் அல்லது அவிழ் என்னும் மூலத்தினின்று திரிந்த அமிர்து என்னும் தனிச்சொல்லைக் கூட்டுச்சொல்லாகக் கொண்டு, அ+மிர்து என்று பகுத்து, சாவைத் தவிர்ப்பது என்று பொருள்கூறி, அதற்கொரு கதையுங் கட்டிச் சான்றாகக் காட்டுவது சற்றும் பொருந்தாது.

உகரவீற்றுப் பொருட்பெயர்ச் சொற்க ளெல்லாம் பெருமைப் பொருள் கருதா விடத்தும் அம்மீறு பெறுவது இயல்பு.

எ-டு: கடுகு → கடுகம், குமுது → குமுதம், குரவு → குரவம், நஞ்சு → நஞ்சம், நரகு → நரகம், புறவு → புறவம், விளவு → விளவம்.

இங்ஙனமே அமிர்து அமிர்தமாயிற்று.

அமிழ்ந்து - தல் *amilndu-*, 5 செ.கு.வி. (v.i.) **ஆழ்தல், முழுகுதல்;** to sink. "சூழ்ந்த

புனற்கய மதனேர் விழுந்த மிழ்ந்தி மீள வெழும்'' (சேதுபு. அகத். 14).

ம. அமிழ்ந்துக; தெ. அமுகு.

[அம் → அமிழ் → அமிழ்ந்து.]

அமுக்கடி *amukk(u)-aḍi*, பெ. (n.) 1. **நெருக்கடி**; density in a throng of people. 2. **மந்தாரம்**; cloudiness. 3. *முட்டாயிருத்தல்* (சங்.அக.); to be in straitened circumstances. 4. *மூடமாயிருத்தல்* (சங்.அக.); stupidity, ignorance. 5. **மூடிக் கொள்ளுதல்** (சங்.அக.); to close, as a hand or flower.

[அமுக்கு + அடி.]

அமுக்கம் *amukkam*, பெ. (n.) **உள்ளே யமுங்கி யிருக்குந் தன்மை**; compression.

[அமுக்கு → அமுக்கம்.]

அமுக்கலான் *amukkalāṉ*, பெ. (n.) **கட்டி, சிலந்தி முதலியவற்றைக் கரையச்செய்யுந் தழையுள்ள செடி**; a plant whose leaves are used as absorbifacient.

[அமுக்கு → அமுக்கல் → அமுக்கலான்.]

அமுக்கன் *amukkaṉ*, பெ. (n.) 1. **மறைவாகக் கருமஞ்செய்வோன்**; one who does things secretly. 2. *கரவுள்ளவன்*; sly, cunning person, dissembler. 3. **தூங்கும்போது ஒரு பேய் மேலுட்கார்ந்து அமுக்குவதுபோல் தோன்றும் உணர்ச்சி**; nightmare.

ம. அமுக்கன்

[அமுக்கு → அமுக்கன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அமுக்கனங்கிழங்கு *amukkaṉaṅ-kiḻaṅgu*, பெ. (n.) **அமுக்கிராக்கிழங்கு** பார்க்க; see *amukkirā-k-kiḻaṅgu.*

அமுக்கி *amukki*, பெ. (n.) **அமுக்கன்** பார்க்க; see *amukkaṉ*.

[அமுக்கு → அமுக்கி. 'இ' ஒருமை யீறு.]

அமுக்கிரா *amukkirā*, பெ. (n.) **ஒரு மருந்துச் செடி**; a medicinal plant, Indian winter cherry, s. sh., *Withania somnifera*.

அமுக்கிரா

மறுவ. அமுக்கிரி, அமுக்குரா, அமுக்குரவு.

ம. அமுக்கிரம்; **க.** அமக்கீர.

அமுக்கிராக்கிழங்கு *amukkirā-k-kiḻaṅgu*, பெ. (n.) **அமுக்கிராச் செடியின் கிழங்கு, கட்டிகளைக் கரைக்கும் மருந்து**; the root of Indian winter cherry used as an absorbifacient.

[அமுக்கிரா + கிழங்கு.]

மறுவ. அமுக்கனங்கிழங்கு, அமுக்கிராங் கிழங்கு.

அமுக்கிராங்கிழங்கு *amukkirāṅ-kiḻaṅgu*, பெ. (n.) *அமுக்கிராக்கிழங்கு* பார்க்க; see *amukkirā-k-kiḻaṅgu.*

[அமுக்கிரா + கிழங்கு.]

அமுக்கிரி *amukkiri*, பெ. (n.) **அமுக்கிரா** பார்க்க; see *amukkirā* (தைலவ. தைல. 42).

அமுக்கு-தல் *amukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **அழுத்துதல், நெருக்குதல், கசக்குதல்**; to crush, press, squeeze, as a fruit or a boil. 2. **அமரச்செய்தல், பிடித்திழுத்தல்**; to press down, pull back. ''வெற்பி னுச்சிதொட் டமுக்கின சிலகரம்'' (உபதேச. கூர்ம. 15). 3. **நீருள் அமிழ்த்துதல்**; to press down into water, immerse. ''ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலுள்'' (மூதுரை, 19). 4. **தோற்கடித்தல், அடக்கியொடுக்குதல்**; to overcome, repress. அவனைச் சண்டையில் அமுக்கி விட்டான் (உ.வ.).

ம. அமுக்குக; க. அமுகு, அவுங்கு; தெ. அவுக்கு, அன்சு; து. அமபுனி; கோத. அம்க்; துட. ஒம்க்; பட. அமக்கு.

[அம் → அமுங்கு → அமுக்கு.]

அமுக்கு *amukku*, பெ. (n.) 1. **அழுத்துகை**; pressure, as in a nightmare. அவன் அமுக்குண்டு கதறிக்கொண்டு கிடந்தான் (உ.வ.). 2. **அழுத்துகிற பொறை (பாரம்)**; the thing that compresses, incumbent weight (W.).

[அம் → அமுங்கு → அமுக்கு (மு.தொ.பெ.).]

அமுக்குணி *amukkuṇi*, பெ. (n.) 1. **அடக்கி**; a reticent person, one who pretends not to know anything about an event or incident. 2. **இருந்த இடத்தைவிட்டு அசையாத-வன்-வள்**; one who sits unmoved.

[அமுக்கு + உண்ணி – அமுக்குண்ணி → அமுக்குணி. 'இ' ஒருமை யீறு. 'உண்' செயப் பாட்டுத் துணைவினை.]

அமுக்குணிப் பிள்ளையார் *amukkuṇi-p-piḷḷaiyār*, பெ. (n.) 1. **பிள்ளையார்போல் இருந்த**

இடத்தைவிட்டு **அசையாத-வன்-வள்** (உ.வ.); one who sits unmoved as the image of Ganēśa (Com.u.). 2. **ஒன்றும்தெரியாத-வன்-வள் போல் நடிப்ப-வன்-வள்**; dissembler, reticent person.

[அமுக்கு + உண்ணி + பிள்ளையார்.]

அமுக்குணி பார்க்க; see *amukkuṇi*.

அமுக்குரவு *amukkuravu*, பெ. (n.) அமுக்கிரா பார்க்க; see *amukkirā*.

அமுக்குரா *amukkurā*, பெ. (n.) அமுக்கிரா பார்க்க; see *amukkirā*.

ம. அமுக்கிரம்; **க.** அமங்குர.

அமுக்கொத்தி *amukkotti*, பெ. (n.) **கத்திவகை, பாசவன் கத்தி**; cleaver, butcher's knife (W.).

[அமுக்கு + கொத்தி. அமுக்கு + கத்தி எனினுமாம்.]

அமுகம் *amugam*, பெ. (n.) 1. **கடுக்காய்**; gall-nut, *Chebulic myrobalan*. 2. **சீந்தில்**; gulancha, *Tinospera cordifolia*. 3. **நெல்லி**; emblic myrobalan, *Phyllanthus emblica*.

அமுங்காக்கொடி *amuṅgā-k-koḍi*, பெ. (n.) **நெட்டி** (சித்.அக.); sola pith.

அமுங்கு-தல் *amuṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **அமர்தல்** (சங்.அக.); to become compressed, to sink to a lower level. கட்டமுங்கிவிட்டது. 2. **அமிழ்தல்**; to sink. 3. **அழுந்துதல்**; to be pressed down, mashed, as ripe fruit. 4. **நெரிபடல்**; to be crushed, as by a weight. வீடுவிழ எல்லாரும் அமுங்கிப்போனார்கள் (உ.வ.).

ம. அமுங்ஙுக, அமங்ஙுக; **க.** அமுக்கு, அமுகு; **தெ.** அதுமு; **கோண்.** அதமன; **கொலா., நா.** அதும்.

அமுசகம் *amuśagam*, பெ. (n.) **செருப்படை** (சித்.அக.); a diffuse prostrate herb found in tank beds and in the harvested fields, *Coldenia procumbens*.

[அம்முதல் = அமுங்குதல். அம் → அமுசு → அமுசகம்.]

அமுசம் *amuśam*, பெ. (n.) **சிறுசெருப்படை** (மலை.); a small variety of *Coldenia procumbens*.

[அம்முதல் = அமுங்குதல். அம் → அமுசு → அமுசம்.]

அமுசு *amuśu*, பெ. (n.) **ஒட்டடை**; soot.

[அம் → அமுசு.]

அமுணங்கம் *amuṇaṅgam*, பெ. (n.) **அடக்கமின்மை** (சிந்தா. நி. 190); want of self-restraint.

[முணங்குதல் = முடங்குதல், உள்ளடங்குதல். முணங்கு → முணங்கம் = உள்ளொடுக்கம், அடக்கம். அ (எ.ம. முன்.) + முணங்கம் – அமுணங்கம்.]

அமுத்தல் *amuttal*, பெ. (n.) **கர்க்கடசிங்கி** (பரி.அக.); Japanese wax-tree.

அமுத்தி *amutti*, பெ. (n.) **விருப்பின்மை** (சிந்தா. நி.); dislike.

அமுத்திரம் *amuttiram*, பெ. (n.) **மஞ்சிட்டி** (பச். மூ.); Indian madder, mañjit.

ஒ.நோ : அமுதசகரம்

அமுதக்கதிர்க் கடவுள் *amuda-k-kadir-k-kaḍavuḷ*, பெ. (n.) **திங்கள்**; moon. "அமுதக் கதிர்க் கடவுள் ரவிகட் கிரட்டி தனி" (தக்கயாகப். 460).

[அமுதம் + கதிர் + கடவுள்.]

அமுதக்குவிகம் *amuda-k-kuvigam*, பெ. (n.) **செங்கற்றாழை**; a species of aloe (சித்.அக.) — dull red-flowered aloe, *Aloe vera* (*rosea*) (செ.அக.).

[அமுதம் + குவிகம். அமுதம் = சிறந்த மருந்து. குவிகம் = மேனோக்கிக் குவிந்தது.]

அமுதக்கொடி *amuda-k-koḍi*, பெ. (n.) **பெரு மருந்துக்கொடி** (பச்.மூ.); Indian birthwort.

[அமுதம் + கொடி.]

அமுதக்கோணிகம் *amuda-k-kōṇigam*, பெ. (n.) **செங்கிளுவை** (சித்.அக.); whistling teal.

[அமுதம் + கோணிகம். அமுதம் = சிறந்தது.]

அமுதகடிகை *amuda-kaḍigai*, பெ. (n.) **சில நாண்மீன் காலங்களில் மங்கல வினைகட் குரியனவாகச் சொல்லப்படும் நாழிகைகள்** (விதான. குணா. 26 : 27); auspicious hour of each day.

[அமுதம் + கடிகை. அமுதம் = அமுதம்போற் சிறந்தது. கடிகை = நாழிகைவட்டில், நாழிகை.]

அமுதகதிரோன் *amuda-kadirōn*, பெ. (n.) **திங்கள்** (பிங்.); moon.

[அமுதம் + கதிரோன். அமுதம் = இனிமை, இன்பம். கதிரோன் = ஒளிக்கதிருடையது.]

அமுதகம் *amudagam,* பெ. (n.) *1.* **கொங்கை;** woman's breast. *2. பாற்கடல்;* sea of milk. *3.* **உண்டிச்சாலை;** hotel, eating house. *4. நீர்;* water.

[அமுது (பால், உணவு) + அகம் (இடம்).]

அமுதகரந்தை *amuda-karandai,* பெ. (n.) **சிவ கரந்தை** (சித்.அக.) — fever basil (செ.அக.) — a plant, *Schoenanthes zeylanica* (சா.அக.).

[அமுதம்+கரந்தை. அமுதம்=சிறந்த மருந்து. கரந்தை = கரிய (நீல)நிறப் பூப் பூக்கும் பூண்டு. கள் → கர் → கரம் → கரந்து → கரந்தை.]

அமுதகிண்ணம் *amuda-kiṇṇam,* பெ. (n.) *1.* **பாற்கிண்ணம்;** milk bowl. *2.* **இளம்பெண் முலை;** maiden's breast (சா.அக.).

[அமுதம் (பாலுள்ளது)+கிண்ணம் (சிறுகலம், கிண்ணம் போன்ற வடிவுகொண்ட வுறுப்பு).]

அமுதகுடம் *amuda-kuḍam,* பெ. (n.) *1.* **பாற் குடம்;** milk-pitcher. *2.* **பெண்முலை;** woman's breast (சா.அக.).

T. 5048

[அமுதம் (பாலுள்ளது) + குடம் (உருண்ட கலம், குடம்போன்ற வுறுப்பு).]

அமுதகுண்டம் *amuda-kuṇḍam,* பெ. (n.) **பாற் குடம்;** milk pot.

*[***Skt.*** amṛita + குண்டம். அமுதம்+குண்டம் (குண்டாயிருக்குங் கலம்).]*

அமுதகுண்டா *amuda-kuṇḍā,* பெ. (n.) **இரப் போர் கலம்;** beggar's bowl.

*[***Skt.*** amṛita + குண்டா. அமுதம் = உணவு, சோறு. குள் → குண்டு → குண்டா.]*

அமுதகுலர் *amuda-kular,* பெ. (n.) *1.* **இடையர்** (வின்.); herdsmen, as dispensers of milk. *2.* **சான்றோர் (வின்.);** the learned, the great.

[அமுதம்=பால், அமுதம்போற் சிறந்த அறிவு. குலம் = கூட்டம், தொழில்வகுப்பு, வகுப்பு. குலம் → குலன் (ஆ.பா.) – குலர் (ப.பா.).]

அமுதகுவிகம் *amuda-kuvigam,* பெ. (n.) **அமுதக் குவிகம்** பார்க்க; see *amuda-k-kuvigam.*

அமுதகுழல் *amuda-kuḻal,* பெ. (n.) **அமுத கோளத்தின் குழாய்;** the duct of a gland (சா.அக.).

அமுதகுழலற்றகோளம் *amuda-kuḻal-aṟṟa-kōḷam,* பெ. (n.) **அமுததாரை யில்லாத கோளங்கள்;** ductless glands (சா.அக.).

[அமுதம் + குழல் + அற்ற + கோளம்.]

அமுதகோணிகம் *amuda-kōṇigam,* பெ. (n.) **செங்கிளுவை;** the whistling teal, *Dendrocygna awsuree* alias *D. arcuata* (சா.அக.).

சில கூட்டுச்சொற்கள், **செ. அகரமுதலியில்** (Lexicon) வலிமிக்கும், **சா. அகரமுதலியில்** வலிமிகாதும் புணர்ந்துள்ளன.

எ-டு :	**செ. அகரமுதலி**	**சா. அகரமுதலி**
	அமுதக்குவிகம்	அமுதகுவிகம்
	அமுதச்சேவிகம்	அமுதசேவிகம்

இங்ஙனமே அமுதக்கோணிகம் என்று செ. அகரமுதலியிலும் (பின்னிணைப்பு), அமுத கோணிகம் என்று சா. அகரமுதலியிலும் உள்ளன. இவ் விரண்டும் ஒன்றே.

எல்லா ஆங்கில அகரமுதலிகளிலும் 'peal' (அல்லது peel) என்பது ஒரு கடல்மீனென்றும், 'teal' என்பது ஒரு வாத்து என்றுமே குறிக்கப் பட்டுள்ளன.

'peal' என்னும் கடல்மீன் பிரித்தானியத் தீவுக் கடல்களில் மட்டும் கிடைப்பது. அதன் பெயர் 'salmon grilse' என்று அயர்லாந்திலும், 'sea-trout' என்று இங்கிலாந்திலும் வழங்கு கின்றது.

வீளை (whistle) யொலிக்கும் அஃறிணை வுயிரினங்களாகச் சில மரங்களும், மீன்களும், பறவைகளும், எலி பாம்பு போன்ற நில வுயிரிகளும் ஆங்கில அகரமுதலிகளிற் குறிக்கப் படுகின்றன. அவை 'whistler' என்று பொதுப் பெயர் பெறுகின்றன.

கூட்டுச்சொற் பெயர் பெறின், whistle-coot, whistle-fish, whistle-insect, whistle-duck, whistle-pig, whistle-wing, whistle-wood என்றும்; whistling dick, whistling duck, whistling eagle அல்லது whistling kite whistling fish, whistling frog, whistling hawk, whistling marmot, whistling moth, whistling plover, whistling snipe, whistling swan, whistling teal, whistling thrush என்றும் குறிக்கப்படுகின்றன.

எருதந்துறைப் பேரகரமுதலியிலும் (The Oxford English Dictionary)

Whistle-fish, a name for different species of rockling or sea-loach,

Whistler 2. C.whistle-fish.,

Whistling fish = whistle-fish

என்றும்,

Peal, a name given to **a.** a grilse or young salmon; (now esp. one under two pounds in weight); **b.** a smaller species of salmon என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

ஆயின் 'whistle-peal' என்றோ, 'whistling peal' என்றோ ஓரகர முதலியிலும் குறிக்கப் படவில்லை. 'whistle-fish' அல்லது 'whistling fish' என்று வருமிடமெல்லாம், rockling அல்லது sea-loach அல்லது three or five-bearded rockling என்றே பொருள் கூறப் பட்டுள்ளது; peal என்றோ, salmon, grilse என்றோ, sea-trout என்றோ கூறப்படவில்லை. ஆகவே, 'peal' என்பது வீளைமீனினத்தைச் (whistle-fish) சேர்ந்ததன் றென்பது தெளி வாகின்றது.

மேலும், 'peal' என்பது பிரித்தானியக் கடல் மீன்களுள் (British fishes) ஒன்றாயிருப்பதால், அதற்குத் தமிழ்நாட்டிற் 'செங்கிளுவை' யென்று பெயர் ஏற்பட்டிருக்கவும் முடியாது. 'teal' என்னும் சிறு குள்ளவாத்து வகை இந்தியாவிலுமுள்ளது.

Teal, a small fresh-water fowl *Querquedula* or *Anascrecca,* or other species of the genus, the smallest of the ducks, widely distributed in Europe, Asia, and America; also locally applied to other genera of the *Anatidae* (O.E.D.).

ஆகவே, **சா. அகரமுதலி**யில் 'அமுத கோணிகம்' என்பதற்கு 'whistling teal' என்று குறித்திருப்பதே சரியென்பதும், **செ. அகர முதலி**யில் (பின்னிணைப்பு) 'whistling peal' என்று குறித்திருப்பது தவறு என்பதும் அறியப்படும். இத் தவறு பெரும்பாலும் அச்சுப்பிழையா யிருக்கலாம்.

இதனால் கிளுவை யென்றொரு மீனிருப் பினும், செங்கிளுவை யென்பது பறவையின மென்பது அறியப்படும்.

செங்கிளுவை யென்னுஞ் சொல்லிற்கு, **செ. அகரமுதலி** மூலத்தொகுதியிலேயே, 1. கிச்சுத் தாரா; 2. ஒருவகை மரம் என்று இரு பொருளே கூறப்பட்டிருத்தல் காண்க.

அமுதகோளம் *amuda-kōḷam,* பெ. (n.) (சித்தர் கொண்முடிபு) **உடம்பின் பலவிடங்களிற் காணப்படுவனவும், உயிர்மருந்து போன்ற வலுவுள்ள நீரைச் சுரப்பனவுமான, சிறிய உருண்டையான ஊன்மொத்தைகள், அமுத சுரப்பிகள்;** (Śiddha philosophy) glands or small globular masses found in many parts of the body and said to secrete some vital fluid like ambrosia essential to the growth of the system, ambrosial glands (சா.அக.).

[அமுதம் + கோளம். அமுதம் = உயிர்மருந்து ஒத்த சுரப்பு நீர். கோளம் = உருண்டை. குள் → கொள் → கோள் → கோளம்.]

அமுதங்கரந்த நஞ்சு *amudaṅ-karanda-nañju,* பெ. (n.) 1. **இஞ்சி**; ginger. 2. **கடுஞ்சொல்லுங் கனிந்த மனமுமுடைய-வன்-வள்**; a person of harsh words but kind disposition (W.).

அமுதச்சேவிதம் *amuda-c-cēvidam,* பெ. (n.) **சிறுகுறிஞ்சா** (சித்.அக.); a medicinal climbing plant (செ.அக.) — **அமுதசேவிதம்**; small Indian ipecacuanha, *Gymnema sylvestris* (சா.அக.).

அமுதச்சோகிதம் *amuda-c-cōgidam,* பெ. (n.) **செங்குமிழ்** (சித்.அக.); small cashmeer tree (செ.அக.) — **அமுதசோகிதம்**; red cashmeer tree, *Gmelina tomentosa* (சா.அக.).

அமுதசகரம் *amuda-šagaram,* பெ. (n.) **மஞ்சிட்டி** (வை.மூ.); Indian madder, mañjit.

ஒ.நோ : அமுத்திரம்

அமுதசருக்கரை *amuda-šarukkarai,* பெ. (n.) **சீந்திற்கிழங்கிலிருந்து செய்த சருக்கரை** (சங்.அக.); a medicinal vegetable salt prepared from the root or stem of the plant gulancha.

மறுவ. சீந்தில்மா

அமுதசாரணி *amuda-šāraṇi,* பெ. (n.) **வெள்வேல்** (வை.மூ.); panicled babul (செ.அக.) — white babool, white bark acacia, *Acacia leucophloea* (சா.அக.).

அமுதசாரம் *amuda-šāram,* பெ. (n.) *1.* **அமுத சாரணி** பார்க்க; see *amuda-šāraṇi.* 2. **தேன்**; honey (சா.அக.). *3.* **கற்கண்டு**; sugar-candy (சா.அக.).

அமுதசுரபி *amuda-šurabi,* பெ. (n.) **மணி மேகலை கையிலிருந்த உலவாக் கலம் (அட்சய பாத்திரம்)**; a vessel supplying inexhaustible food, used by *Maṇimēgalai* for feeding the poor. ''அமுத சுரபியெனும் மாபெரும் பாத்திரம்'' (மணிமே. *11 : 44-5*).

[அமுதம்+சுரபி. சுரத்தல் = ஊறுதல், சொரிதல், கறத்தல். சுர → சுரப்பு → சுரப்பி → சுரபி > **Skt.** surabhi.*]*

அமுதசுரா *amuda-šurā*, பெ. (n.) அமுதசாரணி பார்க்க; see *amuda-šāraṇi*,

அமுதசுறா[1] *amuda-šuṟā*, பெ. (n.) அமுதசுரா பார்க்க; see *amuda-šurā*.

[அமுதம்+சுரா (சாரம்)→சுறா (வெள்வேல்). சுர → சுரா.]

அமுதசுறா[2] *amuda-šuṟā*, பெ. (n.) பாற்சுறா; a white shark (சா.அக.).

[சுள் → சுர் → சுரி. சுரித்தல் = துளைத்தல், குத்துதல், வெட்டுதல். சுரி → சூரி = குத்தி, கத்தி வகை. சுர் → சுறு → சுற → சுறவு → சுறா. அமுதம் (பால், வெள்ளை) + சுறா (வெட்டும் செதிளுடைய மீன்.]

அமுததரம் *amuda-taram*, பெ. (n.) 1. மஞ்சிட்டி (மலை.); muñjit. 2. மஞ்சிட்டி; arnotto (L.) madder of Bengal, *Bixa orellan* (சா.அக.).

அமுததாரை *amuda-tārai*, பெ. (n.) 1. அமிர்தத் துளி; ambrosial drop. ''அமுத தாரைகள் எற்புத் துளைதொறு மேற்றினன்'' (திருவாச. 3 : 174-5). 2. உடம்பினுள் அமுதந் தங்கி நிற்கும் பலவிடங்கட்குப் போகும் வழி; nerve-channel through which ambrosia is supposed to circulate and reach several centres in the human system (சா.அக.). 3. முலைப்பால் வரும் வழி; milk duct, galactophorous duct.

அமுதநிலை *amuda-nilai*, பெ. (n.) 1. உடம்பில் அமுதந் தங்கிநிற்குங் கோளங்கள்; situation of several glands in the body supposed to be capable of producing secretions or vital fluids like ambrosia. ''அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்'' (விநா. அக.) — (சா. அக.). 2. மகளிர் உடம்பில் குறித்த காலங்களில் தொடுவதால் காமவின்பம் விளைப்பதாகக் கருதப் படும் பெருவிரல், புறந்தாள், பரடு, முழங்கால், அல்குல், கொப்பூழ், மார்பு, முலை, கைமூலம், கழுத்து, கன்னம், வாய், கண், நெற்றி, உச்சி என்னும் பதினைந் திடங்கள் (கொக்கோ. 2:1); The 15 parts of a woman's body supposed to yield sensuous delight when touched on particular days, viz., big toe, instep, ankle, knee, the part between the waist and the genital organ, navel, chest, breast, arm-pit, neck, cheek, mouth, eye, forehead and crown.

அமுதநீர் *amuda-nir*, பெ. (n.) 1. விந்து, வெள்ளை (சுக்கிலம்) (சித்.அக.); semen virile. 2. விடாய்நீர் (சூதகநீர்) (சித்.அக.); menstrual fluid or blood. 3. பிண்ட நீர்; liquid contained in the amniotic sac in which the foetus lies (சா.அக.). 4. திரைந்த பாலினின்று பிரிக்கப் பட்ட நீர்; whey.

அமுதப்பார்வை *amuda-p-pārvai*, பெ. (n.) குளிர்ந்த இனிய பார்வை; sweet inspiring look, as a lady's towards her lover (W.).

[அமுதம் + பார்வை.]

அமுதப்பால் *amuda-p-pāl*, பெ. (n.) முலைப்பால்; woman's breast milk (சா.அக.).

[அமுதம் + பால்.]

அமுதப்பீ *amuda-p-pī*, பெ. (n.) தான்றிக்காய் (பச்.மூ.); unripe fruit of belleric myrobalan.

[அமுதம் + பீ.]

அமுதபுரம் *amuda-puram*, பெ. (n.) சிறுகுறிஞ்சா (பச்.மூ.); a medicinal climbing plant.

அமுதச்சேவிதம் பார்க்க; see *amuda-c-cēvidam*.

அமுதம் *amudam*, பெ. (n.) 1. முலைப்பால்; mother's breast milk. 2. ஆவின்பால்; cow's milk (பிங்.). 3. தயிர் (வின்.); curd. 4. மழை (அக.நி.); rain. 5. முகில் (பொதி.நி.); cloud. 6. நீர்; water. ''துலங்கிய வமுதம்'' (கல்லா. 5). 7. சோறு (பிங்.); boiled rice. 8. உப்பு (பிங்.); salt. 9. இனிமை (நாமதீப.); sweetness. ''தேன்பொதிந் தமுத மூறப் பயிரிலா நரம்பிற் கீதம்'' (சீவக. 2048). 10. சுவை (பிங்.); taste, flavour, relish. 11. பெருமை (பொதி.நி.); eminence, greatness. 12. சிறந்த தன்மை; excellence. 13. விரும்பப்படுவது (சங்.அக.); desirable thing. 14. உயிர்மருந்து; nectar of life. 15. சீந்தில் (மலை.); gulancha. 16. 'திரிபலை' யென்னும் முக்காய் (வின்.) — கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் என்பன; the three myrobalan fruits, viz., *Terminalia chebula*, *Phyllanthus emblica* and *Terminalia bellerica* (சா.அக.). 17. முக்கடுகம் என்னும் சுக்கு மிளகு திப்பிலி; the three special spices, viz., dried ginger, pepper and long pepper. 18. அமிர்தக் கடுக்காய்; a class of fleshy gall-nut with small kernels (சா.அக.). 19. 'பூமிசர்க்கரை' என்னும் நிலச்சருக்கரை (நாமதீப.); necklace-berried climbing caper. 20. காட்டுக்கொஞ்சி (பச்.மூ.); opal orange, *Glycosmis pentaphylla* (சா.அக.). 21. விந்து (நாமதீப.); semen. 22. தலைப்பிண்டச் செயனீர்; a liquid essence prepared from the brain of the first-born child

(சா.அக.). 23. உருக்கு; steel (சா.அக.). 24. *அமுதகடிகை;* auspicious hour of each day. "ஆங்கதன் மேனான் கமுத மென்னே" (விதான. குணாகுண. 27). 25. *பேரின்ப வீடு (முத்தி);* final liberation from this world. "அமுதம் பெறுசண்டி" (தேவா. 7.65 : 2).

[அம்மு (பால்) → அம்முது → அமுது → அமுதம். அவிழ் (சோறு) → அவிழ்து → அமிழ்து → அமிழ்தம் → அமிதம் → அமுதம்.]

அமிழ்து பார்க்க; see *amiḻdu.*

அமுதமூளை *amuda-mūḷai,* பெ. (n.) பெருமூளை; cerebrum (சா.அக.).

அமுதமேந்தல் *amudam-ēndal,* தொ.பெ. (vbl.n.) *பெரியோர்க்கு உண்டி படைத்தல்* (சூடா.); serving food to the holy or the great.

[அமுதம் + ஏந்தல்.]

அமுதர் *amudar,* பெ. (n.) *பால் விற்கும் முல்லை நில மாக்கள், இடையர்* (பிங்.); herdsmen, as dispensers of milk.

[அமுதம் (பால்) → அமுதன் (ஆ.பா.) – அமுதர் (ப.பா.).]

அமுதவல்லி *amuda-valli,* பெ. (n.) *சீந்தில்* (திவா.); gulancha (செ.அக.) — moon-creeper, *Tinosphora cordifolia* alias *Menispermum cordifolium* (சா.அக.).

அமுதவி *amudavi,* பெ. (n.) 1. கடுக்காய்; country gall-nut, chebulic myrobalan. 2. *அமுதவல்லி* பார்க்க; see *amuda-valli.* 3. *நெல்லி;* country goose berry, *Phyllanthus emblica* (சா.அக.).

அமுதவிந்து *amuda-vindu,* பெ. (n.) (சிவ.) *வான மண்டலத்திற்கு அடையாளமாகிய வட்டத் துளி;* (Śaiv.) a mystic symbol representing ether, in the form of a globular drop. "அறு புள்ளி அமுதவிந்து" (சி. சி. சுபக். 2 : 68).

அமுதவெழுத்து *amuda-v-eḻuttu,* பெ. (n.) (பாட்.) *பாட்டியல் நூற்படி புகழ்ச்சிப் பனுவல் களிலும் வாழ்த்துப் பாக்களிலும் முதலெழுத்தாக வரக்கூடிய க, ச, த, ந, ப, ம, வ என்னும் ஏழு மெய்யெழுத்துகளும் அ, இ, உ, எ என்னும் நாலுயிரெழுத்துகளுமாகிய பதினொரு மங்கல வெழுத்துகளுள் ஒன்று;* (Poet.) one of the 11 nectar-letters comprising the four short vowels *a, i, u, e* and the seven consonants *k, ś, t, n, p, m, v* which should be the commencing letter of a laudatory or benedictory poem, in order to make it auspicious, according to Poetics.

"கசதந பமவ வேழொடும் அகரம்
இகரம் உகரம் எகரம் நான்கும்
அமுத வெழுத்தென் றறைந்தனர் புலவர்"
(இலக். வி. 779).

[அமுதம் + எழுத்து.]

அமிழ்து பார்க்க; see *amiḻdu.*

அமுதனார் *amudaṉār,* பெ. (n.) *மாலியக் குரவருள் (வைஷ்ணவாசாரியருள்) ஒருவரும் இராமானுசாசாரியரின் காலத்தவரும் இராமானுச நூற்றந்தாதியின் ஆசிரியருமானவர்;* name of the author of the *Rāmāṉuśa-nūṟṟandādi,* contemporary of Rāmānujāchārya.

[அமுதம் → அமுதன் (ஆ.பா.) – அமுதனார்.]

அமுதாரி *amudāri,* பெ. (n.) *பூனைக்காலி* (மலை.); cowhage (செ. அக.) — cat-bean, *Mucana pruriens* (சா.அக.).

அமுது *amudu,* பெ. (n.) 1. *முலைப்பால்;* breast milk. 2. *ஆவின் பால்;* cow's milk. 3. *உறை மோர்;* butter-milk, used for curdling boiled milk. 4. *சோறு;* boiled rice. 5. *உணவு;* food. "வாடா மலரும் நல்லமுதும்" (ஞானவா. பிரகலா. 8). 6. *உப்பு;* salt. "அள்ளலோங்களத் தமுதின் பண்டியும்" (கம்பரா. பால. நாட்டு. 54). 7. *தெய்வத்திற்குப் படைக்கும் கறிவகை, உணவுவகைகளைக் குறிக்கும் பொதுச்சொல்;* affix to the names of articles of food and drink offered to God. எ-டு: கறியமுது, பருப்பமுது, இலையமுது, தயிரமுது. 8. *மழை* (பொதி.நி.); rain. 9. *நீர்;* water. "அமுதுகொப் பளித்திட வாங்கி" (தைலவ. தைல. 34). 10. *உயிர் மருந்து;* elixir. 11. *இனிமை* (பிங்.); sweetness. 12. *இயற்கையாக விளையும் செல்வப் பொருள்;* natural products. "கடல்படு மமுதும்" (நைடத. நாட்டு. 25). 13. *நிலவொளி;* moon light. "திங்க ளின்னமு திறைப்ப" (கூர்மபு. அட்ட. 27). 14. *அமுதகடிகை;* auspicious hour of each day. "பொன்னவன் கடத்துறினு மமுதெனப் போற்றுவரே" (விதான. குணாகுண. 25). 15. *பேரின்ப வீடு, ஆதன் விடுதலை;* eternal bliss, liberation of the soul.

[அம்மு → அம்முது → அமுது. அவிழ் → அவிழ்து → அமிழ்து → அமிது → அமுது.]

அமிழ்து பார்க்க; see *amiḻdu.*

அமுதுகுத்து-தல் *amudu-kuttu-*, 5 செ.கு.வி. (v.i.) *பிரைமோர் ஊற்றுதல்* (மாலியப்பிராம.); to add a little butter-milk to boiled milk to make curd (Vaiṣṇ. Brāhm.).

அமுதுசெய்-தல் *amudu-šey-*, *1* செ.குன்றாவி. (v.t.) *உண்ணுதல் (ஒரு கண்ணிய வினைச் சொல்)*; to eat, dine (a term used to enhance respect). ''நறுவெண்ணெ யாயர் மங்கைய ரிடவிட வமுது செய்து'' (பாரத. நச்சு. *1*).

அமுதுபடி *amudu-padi*, பெ. (n.) *1. உணவு*; food. 'இவள்தான் அமுதுபடி திருத்துவது சாத்துப்படி திருத்துவதாகாநின்றாள்' (திவ். பெரியாழ். *3 . 7 : 8*, வியா.). *2. அரிசி*; rice. ''அமுதுபடி புறம்பில்லை யென்செய் கேன்'' (திருவாலவா. *31 : 12*).

ம. அமுதுபடி

[அமுது = சோறு. படி = நாழி, அளவு, அளவிட்ட சோறு அல்லது உணவு, அளவிட்ட அரிசி.]

அமுதுபடை-த்தல் *amudu-paḍai-*, *4* செ. குன்றாவி. (v.t.) *உணவு பரிமாறுதல்*; to serve food. ''உழையிடை யமுது படையென'' (திருவாலவா. *31 : 11*).

அமுதுபாறை *amudu-pāṟai*, பெ. (n.) *பெருமாள் கோயில்களிற் சோற்றுடன் தயிரை அல்லது புளிச்சாற்றைக் கலக்குங் கற்பலகை*; stone slab on which boiled rice is mixed with curds or prepared tamarind juice, in Viṣṇu temples.

அமுதுபுரம் *amudu-puram*, பெ. (n.) *சிறுகுறிஞ்சா*; a medicinal climbing plant.

அமுதச்சேவிதம் பார்க்க; see *amuda-c-cēvidam*.

அமுதுமண்டபம் *amudu-maṇḍabam*, பெ. (n.) *கோயில் மடைப்பள்ளி* (கல்வெட்.); temple kitchen hall where food is prepared (Insc.).

அமுதுமோர் *amudu-mōr*, பெ. (n.) *உறைமோர்*; butter-milk used for curdling boiled milk.

அமுதுறை *amuduṟai*, பெ. (n.) எலுமிச்சை (சிந்தா. நி. *198*); sour lime, *Citrus medica acida*.

[அமுது + உறை – அமுதுறை (பாலை உறையச் செய்யும் சாறுள்ள கனிமரம்).]

அமுதூட்டு-தல் *amud(u)-ūṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) *1. குழந்தைக்குப் பாலூட்டுதல்*; to feed a child with milk, to suckle. *2. பிள்ளைக்கு ஏழாம் மாதம் சோறூட்டுதல்* (பிங்.); to start feeding a child with boiled rice in the seventh month.

[அமுது + ஊட்டு. உண் (த.வி.) – ஊட்டு (பி.வி.).]

அமுதெழுத்து *amud(u)-eḻuttu*, பெ. (n.) *பாட்டியற்படி ஒரு பனுவலின் அல்லது பாடலின் முதலில் வரவேண்டிய மங்கல வெழுத்து* (பிங்.); a letter deemed auspicious for commencing a poem, acc. to Poetics.

அமுதவெழுத்து பார்க்க; see *amuda-v-eḻuttu*.

[அமுது + எழுத்து.]

அமுதை *amudai*, பெ. (n.) *1. சீந்தில்*; gulancha. *2. கடுமரம்*; chebulic myrobalan. *3. நெல்லி*; emblic myrobalan.

அமுதை > **Skt.** amṛita.

[அமுது → அமுதை.]

அமுந்திரம் *amundiram*, பெ. (n.) *முத்தக்காசு* (பரி.அக.); straight sedge.

அமுந்திரி *amundiri*, பெ. (n.) *அரிசி* (மாலி.); rice (Vaiṣṇ.).

[ஒருகா. அமுது + அரி. அமுது = சோறு. அரி = அரிசி.]

அமுரி *amuri*, பெ. (n.) *1. மூத்திரம், சிறப்பாகச் சிறுகுழந்தை மூத்திரம்*; urine, esp. that of a child. *2. கடல்நீர்*; sea water. *3. கருங்குன்றி*; a black species of Indian liquorice, *Abrus precatorius*. *4. ஒரு செடி*; a plant. எ-டு: அமுரி சுட்டுச் சாம்பலாக்கல். *5. ஓகப் பயிற்சியினால் உடலிலுண்டாகும் அமுதம்*; nectar believed to be generated in the body by yogic exercises (செ.அக.).

ஓகம் > **Skt.** yōga.

[உவர் → உவரி → உமரி → அமரி → அமுரி.]

அமுரிகம் *amurigam*, பெ. (n.) *சிறுநீருள் ளிருக்கும் ஒரு பளிங்கியற் பொருள்*; a crystalline substance that exists in urine, urea (சா.அக.).

[அமுரி → அமுரிகம்.]

அமுரிசிங்கி *amuri-šiṅgi*, பெ. (n.) *ஒரு மருந்தெண்ணெய்*; a kind of medicated oil (சா. அக.).

அமுரித்திரகம் *amuri-t-tiragam*, பெ. (n.) *குண்டிக் காயினுள் ளிருக்கும் சிறுநீர்க் குழாய்கள்*; the urinary tubes of the kidneys, urinoferous tubules (சா.அக.).

[அமுரி + திரகம். ஒருகா. துர → துரகம் → திரகம். துரத்தல் = செலுத்தல்.]

அமுரிதம் *amuridam*, பெ. (n.) ***சிறுநீர் பெய்விக்கும் மருந்து***; medicine exciting discharge of urine, diuretic (சா.அக.).

ஒ.நோ : அமுரியோட்டி

[அமுரி → அமுரிதம்.]

அமுரிநஞ்சு *amuri-nañju*, பெ. (n.) ***சிறுநீர்ப் பொருள்கள் உடம்பின் தாதுவிற் சேர்வதனாலுண்டாகும் நச்சுத்தன்மை***; urosepsis. 2. ***சிறுநீரி லுண்டான நச்சுப்பொருள்***; urotoxin (சா.அக.).

அமுரிமுறி-த்தல் *amuri-muri-*, 4 செ.கு.வி. (v.i.) ***சிறுநீரிலுள்ள களங்கங்களை நீக்குதல்***; to remove the impurities in the urine (சா.அக.).

அமுரியரத்தம் *amuri-y-arattam*, பெ. (n.) ***சிறுநீர்க் கழிவு அரத்தத்திற் கலப்பதனா லேற்படும் நோய்***; morbid condition of blood due to retention of urinary matter normally eliminated by kidneys, uraemia (சா.அக.).

[அமுரி + அரத்தம்.]

அமுரி பார்க்க; see *amuri*.

அமுரியான் *amuriyān*, பெ. (n.) ***நவச்சாரம்***; ammonia hydrochlorate (சா.அக.).

[அமுரி → அமுரியான்.]

அமுரியுப்பு *amuri-y-uppu*, பெ. (n.) ***சிறுநீரினின் றெடுக்கும் உப்பு***; salt extracted from urine, urate. 2. ***சுண்ணத்தினின்று (சுண்ணாம்பினின்று) நீரைப் பிரிக்கும் ஓர் உப்பு***; a salt used for absorbing water from lime (சா.அக.).

[அமுரி + உப்பு.]

அமுரி பார்க்க; see *amuri*.

அமுரியோட்டி *amuri-y-ōṭṭi*, பெ. (n.) ***சிறுநீரை அடிக்கடி வெளிப்படுத்தும் மருந்து***; a medicine that hastens the secretion or excretion of urine, diuretic (சா.அக.).

ஒ.நோ : அமுரிதம்

[அமுரி + ஒட்டி. ஒடு → ஒட்டு → ஒட்டி. ஒட்டுதல் = விரைந்து போக்குதல். 'இ' வினைமுதல் ஈறு.]

குறிப்பு :

'அமுர்தம்' என்னும் வடிவு வழுநிலையாதலால், அச் சொல்லும் அதனை நிலைச் சொல்லாகக் கொண்ட கூட்டுச்சொற்களும் இவ் வகரமுதலியிற் கொள்ளப்பட்டில. அச் சொல் வழக்குள்ள இடமெல்லாம் அமிர்தம் அல்லது அமுதம் என்று மாற்றிக்கொள்க.

அமுறை *amuṟai*, பெ. (n.) ***பூசணி மொக்குள்*** (இராசவைத்.); pumpkin bud (சங்.அக.).

அமை-தல் *amai-*, 2 செ.கு.வி. (v.i.) 1. ***நெருங்குதல்***; to be near, crowd together, be close. ''வழையமை சாரல்'' (மலைபடு. *181*). 2. ***பொருந்துதல்***; to be attached, connected, joined. ''பாங்கமை பதலை'' (கந்தபு. தேவ. திருப்பர. *9*). 3. ***நிறைதல்***; to be full, complete. ''உறுப்பமைந்து'' (குறள், *761*). 4. ***மாட்சிமையுடையதாதல்***; to be excellent, glorious. 5. ***அடங்குதல்***; to be comprised, included. 6. ***அடக்கமாயிருத்தல்***; to become still, quiet, to subside, to be mild, gentle or tractable, to become submissive, modest or humble. ''அமையா வென்றி யரத்தநெடு வேலோய்'' (கல்லா. பாயி. வேலன். *15*). 7. ***ஒடுங்குதல்***; to be reverentially obedient or silent. ''வாய்மொழி யமைந்து நின்றான்'' (ஞானவா. வைராக். *134*). 8. ***தங்குதல்***; to abide. ''மறந்தவ ணமையா ராயினும்'' (அகநா. *37 : 1*). 9. ***பதிதல்***; to be impressed, as on the mind. 10. ***நட்பாய்ப் பொருந்துதல்***; to become friendly or amiable. ''அமைந்தாங் கொழுகான்'' (குறள், *474*). 11. ***வசமாதல்***; to be brought into one's possession. ''அமைந்தாலு மின்பந் தேடும்'' (ஞானவா. வைராக். *79*). 12. ***உடன்படுதல்***; to agree, acquiesce, submit. ''கெழுதகைமை செய்தாங் கமையாக் கடை'' (குறள், *803*). 13. (இலக்.) ***வழுவாயினும் ஏற்புடையதாதல்***; to be regularized, as irregular expressions. ''பொருள் வேறுபட்டு வழீஇ யமையுமாறு'' (தொல். பொருள். பொருளியல், *2*, நச். உரை). 14. ***தகுதியாதல்***; to be suitable, appropriate. 15. ***அணியமாதல் (ஆயத்தமாதல்)***; to prepare. ''அமைதிர் போருக்கு'' (கந்தபு. மகேந். வச்சிர. *14*). 16. ***பொந்திகை (திருப்தி) யடைதல்***; to be satisfied, contented. அமைய வுண்மின் (வின்.). 17. ***போதியதாதல்***; to suffice. ''கற்பனவு மினியமையும்'' (திருவாச. *39 : 3*). 18. ***தீர்மானமாதல்***; to be settled, fixed up. அந்த வீடு எனக்கு அமைந்துவிட்டது. 19. ***ஏற்படுதல்***; to come into existence, to become formed, to be produced or created. எனக்கொருவர் துணை

யாயமைந்தார் (உ.வ.). 20. **நிகழ்தல்**; to happen, occur. 21. **முடிவடைதல்**; to come to an end, to be finished. ''அமைந்த தினிநின் றொழில்'' (கலித். 82 : 35). 22. **கூடியதாதல்**; to be possible, practicable. ''காரியம்........ அமையு மாயினும்'' (சேதுபு. அவை. 2). 23. **இல்லையாதல்**; to be non-existent. ''துணையமை வடிவுஞ் சொல்லின்'' (சீவக. 1721).

ம. அமயுக

[உம்முதல் = பொருந்துதல், கூடுதல். உம் = அம். அம்முதல் = பொருந்துதல். அம் → அமை.]

அமை-த்தல் *amai-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **சேர்த்தல்**; to bring together. ''அனாதி யாதி யமைக்க வேண்டும்'' (சி. சி. பர. லோகா. மறு. 18). 2. **சாத்துதல்**; to offer in worship. ''அரு மறைத் தாபத னமைத்திடு செம்மலர்'' (கல்லா. 15). 3. **நாட்குறித்தல்**; to appoint, fix, as time. ''நாளமைத் தழைக்க'' (கல்லா. 15). 4. **ஏற்படுத்துதல், தோற்றுவித்தல், அமர்த்துதல்**; to appoint, constitute, set up as a committee. அதற்கு ஒரு குழு அமைக்க வேண்டும் (உ.வ.). 5. **அடக்குதல்**; to control, keep in subjection. ''புலனைந்தும் விடயங் களிற் செலாதமைத்து'' (வைராக். சத. 37). 6. **நிறுத்துதல்**; to stop. 'திருவடிகளின் மார்த்தவத்தை நினைத்து இந்தக் கூத்தை அமைக்கைக்காக வணங்க' (திவ். பெரியாழ். 1.9:8, வியா.). 7. **வசமாக்குதல்**; to get into possession, get over to one's interest. 8. **அமைதிபெறச் செய்தல்**; to cause to be still, patient. ''பாரிடக் கணங்களைப் பாணியா லமைத்து'' (கந்தபு. யுத்த. அக்கினி. 67). 9. **அழுத்துதல், பதித்தல்**; to inlay. ''பொற்குட முகட்டுக் கருமணி யமைத்தென'' (கல்லா. 5). 10. **(இலக்.) வழுவமைத்தல்**; (Gram.) to regularize, as irregular expressions. 'வழுப் படக் கூறினும் வரைவுகாரணத்தாற் கூறலின் அமைக்க வென்றவாறாம்' (தொல். பொருள். பொருளியல், 16, நச். உரை). 11. **பொறுத்தல்**; to bear with, tolerate. ''குற்ற மமைத் தருள்'' (சேதுபு. துத்தம. 10). 12. **சமைத்தல்**; to cook, prepare food. ''ஐந்துபல் வகையிற் கறிகளும் வெவ்வே றறுசுவை மாறுமா றமைப்பேன்'' (பாரத. நாடுகர. 14). 13. **நூற்பா (சூத்திரம்) இயற்றி முடித்தல்**; to compose a grammatical aphorism, which though succinct in form is comprehensive in import.

''அவற்றுட்
சூத்திரந் தானே
ஆடி நிழலி னறியத் தோன்றி
நாடுத லின்றிப் பொருணனி விளங்க
யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே''

(தொல். பொருள். செய். 162). 14. **படைத்தல்**; to create. ''அரனய னெனவுல கழித் தமைத் துளனே'' (திவ். திருவாய். 1.1:8). 15. **கட்டுதல்**; to build, construct, as a township. நகரமைப்புத் திட்டம். 16. **அரசியற் சட்டதிட்டம் வகுத்தல்**; to frame a Constitution. அரசியலமைப்பு. 17. **ஊழிடுதல் (விதித்தல்)**; to destine, fore-ordain, as God. கடவுள் அமைத்தபடியே எல்லாம் நடக்கும் (உ.வ.). 18. **ஒழுங்குபடுத்துதல்**; to organize.

ம. அமய்க்குக

[அமைதல் (த.வி.) – அமைத்தல். (பி.வி.).]

அமைதல் பார்க்க; see *amai-*.

அமை[1] *amai*, பெ. (n.) 1. **அமைவு, பொருத்தம்** (பிங்.); fitness. 2. **அழகு** (பிங்.); beauty. 3. **நாணல்**; reed, kaus. 4. **கெட்டிமூங்கில்**; solid bamboo. ''அமையொடு வேய்கலாம் வெற்ப'' (பழ. 357). 5. **மூங்கில்** (பிங்.); bamboo, *Bambusa arundinacea*. 6. **கூந்தற்கமுகு**; cocoa-palm (சா.அக.) — areca palm, *Areca catechu* (செ.அக.).

ம. அம

[அம்முதல் = பொருந்துதல், கூடுதல். அம் → அமை. அமைதல் = பொருந்துதல், சேர்தல், திரளுதல், கெட்டியாதல். அமைத்தல் = பொருத்துதல், புனைதல்.]

அமை[2] *amai*, பெ. (n.) **தினவு** (தைலவ. தைல. 124); itching sensation.

[நமை → அமை. நமை → நமைச்சல் = தினவு.]

அமைச்சன் *amaiccan̲*, பெ. (n.) 1. **மந்திரி** (பிங்.); minister of a state. ''விதுரனே யமைச்சனிக் காவ லற்கென வைத்தான்'' (பாரத. சம்பவ. 21). 2. **மந்திரித் தலைவன்** (பிங்.); prime minister. 3. **மந்திரித் தலைவனுடைய நட்பாளன்** (பிங்.); friend of the prime minister. 4. **வியாழன்** (சூடா.); the planet Jupiter.

ம. அமச்சன்; க. அமாத்ய; தெ. அமாத்யுடு.

'அமைச்சன்' என்பது, இயல்பாக ஒரு மந்திரியைக் குறிக்குமே யன்றி, மந்திரித் தலைவனைக் குறிக்காது. மந்திரித் தலை

வனைக் குறிக்கவேண்டின், முதலமைச்சன் அல்லது தலைமையமைச்சன் என்று குறித்தல் வேண்டும்.

மந்திரித் தலைவனின் நண்பனையும் அமைச்சன் என்பது சற்றும் பொருந்தாது.

பிருகற்பதி (ப்ருகஸ்பதி) என்று பெயர் கொண்டிருந்த ஒரு வடநாட்டு அமைச்சனை அப் பெயருள்ள வியாழக்கோளொடு மயக்கி, அக் கோளையும் அமைச்சன் என்றது தொன்மக் கூற்று. தொன்மம் = புராணம்.

இக்கால இந்திய நிலைக் கேற்றவாறு, நடுவண் அமைச்சர் தலைவனைத் தலைமை மந்திரி (Prime Minister) என்றும், நாட்டு அமைச்சர் தலைவனை முதலமைச்சன் (Chief Minister) என்றும் வேறுபடுத்திக் கூறலாம். மந்திரி (ஆ.பா.) — மந்திரினி (பெ.பா.). அமைச்சன் (ஆ.பா.)—அமைச்சி (பெ.பா.).

'அமைத்தன்' (அமைத்தோன்) என்னும் தென்சொல்லும் 'அமாத்ய' என்னும் வடசொல்லும் வடிவொத்திருப்பதால், இவற்றுட் பின்னதே முன்னதற்கு மூலமோவென ஆராய்ச்சியில்லார்க்கு ஐயுறவெழும்.

மானியர் வில்லியம்சு சமற்கிருத—ஆங்கில அகரமுதலியில், 'அமாத்ய' என்னும் வடசொல்லிற்கு, inmate of the same house, belonging to the same house or family, 'a companion (of a king)', minister என்று பொருள் கூறி, அதற்கு மூலமாகக் காட்டப்பட்டுள்ள 'அமா' என்னும் சொற்கு, at home, in the house, in the house of, with, together என்று பொருள் குறிக்கப்பட்டுள்ளது.

இது பொருளும் பொருட்கரணியமும் (காரணமும்) பற்றி உழையன் என்னுஞ் சொல்லை யொத்தது.

உழை = பக்கம், இடம், ஏழனுருபுகளுள் ஒன்று.

''பின்பா டளைதேம் உழைவழி யுழியுளி
உள்அகம் புறம்இல் இடப்பொரு ளுருபே''
(நன். *302*).

உழையர் = பக்கத்தவர் (ஐங்குறு. 12, உரை), அமைச்சர் (சூடா.).

உழையிருந்தான் = அமைச்சன் (குறள், *638*).

'அமாத்ய' என்னும் வடசொல்லிற்கு அருகிருப்பவன் என்பதே பொருளாயினும், அச் சொல்லும் தென்சொல் தொடர்பினின்று தீர்ந்ததாகாது. அம்முதல் = நெருங்குதல், அடைதல், பொருந்துதல். அம் → அமை. அமைதல் = நெருங்குதல் (மலைபடு. *181*). அமை = நெருக்கம், அண்மை. அமை > **Skt.** amā.

அமைச்சன் பதவியிலும் வினையிலும் அரசனுக்கு அடுத்தவனாதலின், அருகிருத்தல் என்பது மட்டும் அத்துணையும் அவன் சிறப்பை யுணர்த்துவ தாகாது. பக்கத்தி லிருக்கும் வேலைக்காரருக்கும் ஏவலருக்கும் உழையோர் என்னும் பெயருண்டு.

''உலக மன்னவ னுழையோ ராங்குளர்''
(மணிமே. *3 : 46*).

''இளங்கோவென் றுழையவர் கூற''
(சீவக. *2864*).

''உழைய ரோடி யரசுவா வருக வென்ன''
(சூளா. கலியா. *100*).

''உரைசெய் தாரர சற்குழை யாளரே''
(யசோதர. *208*).

அரசனின் ஆள்வினைக்கும் போர்வினைக் கும் ஏற்ற மந்திரம் (சூழ்வுரை) கூறும் மந்திரி, அரசியல் வினை யனைத்தையும் அமைப்பவ னாதலால், அமைச்சன் என்னும் பெயர் அத் தொழில்பற்றியே அமைந்ததாகல் வேண்டும்.

[அமை → அமைத்தோன் → அமைத்தன். **ஒ.நோ :** *வேய்ந்தோன் → வேந்தன்.*

அமைத்தன் → அமைச்சன். த → ச, போலித் திரிபு. **ஒ.நோ :** *அத்தன் → அச்சன், நத்து → நச்சு, காய்த்தல் → காய்ச்சல், மேய்த்தி → மேய்ச்சி.]*

அமைச்சன் — அமைச்சு. **ஒ.நோ :** அரசன் — அரசு. சமற்கிருதந் தோன்றுமுன்பும், வேத ஆரியர் இந்தியாவிற்குட் புகுமுன்னும் மூவேந்த ராட்சி தென்னாட்டில் நிலைத் திருந்தது.

''படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையா னரசரு ளேறு'' (குறள், *381*)

என்னும் திருவள்ளுவர் கூற்று, கி.மு. முதல் நூற்றாண்டினதாயினும், வரலாற்றிற்கு முன்னைச் செய்தி குறித்ததாகும்.

ஆதலால், 'அமாத்ய' என்னும் வடசொல் 'அமைத்தன்' (அமைத்தோன்) என்னும் தென் சொல்லின் திரிபே யென்பது தெரிதரு தேற்றம். அதற்கு அண்மையி லிருப்பவன் என்று பொருள் கூறினும், அதுவும்,

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்'' (குறள், 380)
என்பதற்கேற்ப, அதைத் தென்சொற் றிரிபென்றே காட்டுதல் காண்க.

அமைச்சாகிதம் *amaiccāgidam*, பெ. (n.) **செங்குறுந்தொட்டி**; a red variety of rose-coloured sticky mallow, *Pavonia zeylanica* (சா.அக.).

அமைச்சி[1] *amaicci*, பெ. (n.) **பெண் அமைச்சர்**; a woman minister.

[அமைச்சன் (ஆ.பா.) – அமைச்சி (பெ.பா.).]

அமைச்சி[2] *amaicci*, பெ. (n.) **விரையூதம் (அண்டவாதம்)**; hydrocele (சா.அக.).

[ஒருகா. அமை (கட்டி, கெட்டி) → அமைச்சி.]

அமைச்சியல் *amaicciyal*, பெ. (n.) 1. **மந்திரித் தொழில்**; duties of a minister. ''சிறுவ ராந்தனி முதல்வற்கு மமைச்சியல் செய்வார்'' (கந்தபு. மகேந். அவைபுகு. 114). 2. **மந்திரி யிலக்கணம்**; qualifications of a minister (குறள், பொருட்பால் — அமைச்சியல்).

[அமை → அமைத்தன் → அமைச்சன் → அமைச்சு + இயல். இயல் = இலக்கணம், இயல்பு, தொழில்.]

அமைச்சு[1] *amaiccu*, பெ. (n.) 1. **அமைச்சன்**; minister. ''அருவினையு மாண்ட தமைச்சு'' (குறள், 631). 2. **அமைச்சனது தன்மை, அதாவது அவன் குணங்களுஞ் செயல்களும்**; nature and functions of a minister (குறள், 64ஆம் அதி. முக.).

[அமைத்தன் → அமைச்சன் → அமைச்சு.]

அமைச்சு[2] *amaiccu*, பெ. (n.) பித்தம்; bile (சா.அக.).

அமைத்தன் *amaittaṉ*, பெ. (n.) **மந்திரி, அமைச்சன்**; minister. முதலமைத்தன் மகன் (M.E.R. 1926-7, p. 89).

ம. அமச்சன்

அமைத்தன் > **Skt.** amātya.

[அமைத்தல் = அரசியற் கருமங்களை ஒழுங்குசெய்தல். அமை → அமைத்தோன் → அமைத்தன்.]

அமைதல் *amaidal*, பெ. (n.) **பொழுது** (பொதி. நி.); season, occasion, opportunity.

[அமை → அமைதல்.]

அமைதி *amaidi*, பெ. (n.) 1. **பொருந்துகை**; being attached, joined. 2. **உறைவிடம்** (சங். அக.); residence, dwelling place, habitat. 3. **பொருத்தம், தகுதி**; fitness, propriety. ''அகலிட நெடிதாளு மமைதியை'' (கம்பரா. அயோத். வனம்புகு. 24). 4. **மிகுதி**; abundance, plenitude. 5. **நிறைவு**; fulness, perfectness, completeness. 6. **சிறப்பு, மாட்சிமை**; grandeur, glory, magnificence, splendour. ''அண்ணலங் கடிநக ரமைதி செப்புவாம்'' (சீவக. 78). 7. **பொந்திகை (திருப்தி)**; satisfaction, contentment. ''அமைதியொடு பேசாத பெருமை பெறு குணசந்த்ர ராமென விருந்த பேரும்'' (தாயு. பரிபூரண. 3). 8. **தன்மை**; nature. ''ஆற்றின தமைதியங் கறியக் கூறினான்'' (சீவக. 1176). 9. **செய்கை, தொழில்**; deed, action. ''அவ்விடை செய்திடு மமைதி கூறுவாம்'' (கந்தபு. தேவ. தெய்வ. 185). 10. **சமையம்**; occasion, opportunity. ''அன்னதோ ரமைதி தன்னில்'' (கந்தபு. யுத்த. மூன்றா. 210). 11. **நிகழ்ச்சி** (சங்.அக.); occurrence, incident, event. 12. **அடக்கம்**; modesty. 13. **அமரிக்கை, சாந்தம்**; calmness, quietude, serenity of spirit. ''ஆய்ந்தறி பெரியோர் சிந்தை யமைதியின்'' (இரகு. தேனு. 17). 14. **அமைந்த மனநிலை**; peace of mind. 15. **தாழ்மை, தாழ்ச்சி**; humility, submissiveness. ''தொழுதகை யமைதியி னமர்ந்தோயு நீயே'' (பரிபா. 4 : 71). 16. **கீழ்ப்படிவு** (சங்.அக.); obedience. 17. **நன்னிலை**; good condition.

''செல்வம் விளைவுபல் வளஞ்செங் கோன்மை
கொல்குறும் பின்மை கொடும்பிணி யின்மை
யவ்வயி னாறு நன்னாட் டமைதி''

(திவா. 12). 18. **இலக்கண வழுவமைதி**; sanctioned deviation from grammatical rules, as in 'class', gender, number, person, tense, etc., recognised anomaly. இவ் வழுவிற்கு அமைதி இது.

ம. அமதி; தெ. அமதி.

[அமை → அமைதி.]

அமைதிப்பொடி *amaidi-p-poḍi*, பெ. (n.) **மனவடக்கத்தை யுண்டுபண்ணும் ஒரு மருந்துப் பொடி**; a powder inducing tranquillity or calmness, a sedative (சா.அக.).

[அமைதி + பொடி.]

அமைந்தபணி *amainda-paṇi*, பெ. (n.) 1. **ஒப்புக் கொண்ட வேலை**; work that was accepted. 2. **இலவயமாகச் செய்வதாக ஒப்புக்கொண்ட வேலை**; a job or work that was undertaken

without wages. 3. இலவயமாகச் செய்து முடிக்குமாறுகட்டளையிடப்பட்டஊர்ப்பொதுப் பணி; a village communal work that was ordained to be completed without wages. 'இவ் வமஞ்ஞுது பண்ணாதவன் பெருமானடிகள்க்கு ஐம்பதின்கழைஞ்ஞு பொன் தண்டம்' (திருவல்லம் கல்வெட்டு — T.A.S. ii, 194).

[அமை → அமைந்த + பணி.]

அமைப்பகம் *amaipp(u)-agam*, பெ. (n.) பலர் அல்லது பல வகுப்பார் அல்லது பல நாட்டார் கூடி ஏற்படுத்தும் ஒரு பொதுநல அல்லது கூட்டுறவுப் பணி நிலையம் அல்லது அலுவலகம்; an organization, incorporation or public institution. 'ஒன்றிய நாட்டினங்கள்' ஓர் உலகப் பொது அமைப்பகம்.

[அமை → அமைப்பு + அகம்.]

அமைப்பு *amaippu*, பெ. (n.) 1. கூட்டரவு, புணர்ப்பு, சேர்ப்பு; uniting, joining. "அனாதி யாதி யமைக்க வேண்டு மமைப்பி னோடு மனாதியே" (சி. சி. பர. உலகா. மறு. 18). 2. சொல் அல்லது சொற்றொடர்க் கட்டு; structure or construction of a word or sentence. சொல்லமைப்பு, சொற்றொடரமைப்பு. 3. வீடு அல்லது நகர் கட்டுகை; building a house or township. வீடமைப்புத் துறை, நகரமைப்புத் திட்டம். 4. கட்டுக்கோப்பு; build, constitution, style of construction. கட்டுக்கோப்புச் சரியா யில்லாமையாற் கடுங் காற்றிற்குக் கட்டடம் விழுந்துவிட்டது. 5. கட்டட வடிவுவகை; plan. அவ் வீட்டின் அமைப்பு ஒரு புதுவகையானது. 6. அமர்த்துகை, ஏற்படுத்துகை; appointment, constitution, formation, setting up. வரவேற்புக் குழு வமைப்பு ஒழுங்காய் நடைபெறவில்லை. 7. இயற்கைக்கு மாறான உறுப்பு அல்லது இயல்பு; abnormal feature. கைகால்களில் அவ்வாறு விரலிருப்பது ஓர் அமைப்பு. 8. ஊழ்; destiny, fate. எல்லாருக்கும் அவரவர் அமைப்பின்படியே நடக்கும். 9. இலக்கண வழுவமைப்பு; (Gram.) recognition of anomalies.

அமைப்போன் *amaippōṉ*, பெ. (n.) 1. செய்பவன், வினைமுதல்; actor, agent. "அமைப்போனாத லெனக் கெங்கே" (ஞானவா. திருவா. 20). 2. ஏற்படுத்துவோன்; organizer.

அமைமோனி *amai-mōṉi*, பெ. (n.) செங்கொடிவேலி; rosy-flowered leadwort, *Plumbago rosea* (சா.அக.).

அமைய *amaiya*, வி.எ. (adv.) 1. பொருந்த; fittingly, suitably, appropriately. 2. போதிய வளவு; sufficiently. 3. பொந்திகை பெற (திருப்தி வர); to the degree or extent of satisfaction. "சிறுவனை யமைய நோக்கி" (கூர்மபு. கண்ணனவ. 27).

அமையப்படை *amaiya-p-paḍai*, பெ. (n.) குறுங் காலத்தில் திரட்டப்படும் சேனை (சுக்கிரநீதி, 303); forces raised within a short period.

[அமையம் + படை.]

அமையம்[1] *amaiyam*, பெ. (n.) இலாமிச்சை (மலை.); cuscuss grass (செ.அக.)— விலாமிச்சு; a fragrant grass (சா.அக.).

அமையம்[2] *amaiyam*, பெ. (n.) சமையம் (சந்தர்ப்பம்); occasion, context, opportunity. "ஆனதோ ரமையந் தன்னில்" (கந்தபு. உற்பத். திருக்கல். 72).

[அமைதல் = பொருந்துதல், நேர்தல். அமை → அமையம்.]

அமையவன் *amaiyavaṉ*, பெ. (n.) அருகன் (திவா.); Arhat.

[அமைதல் = அடங்குதல், புலனடங்குதல். அமை + அவன் (ஆ.பா. ஈறு) — அமையவன் = ஐம்புலனு மடங்கிய அருகன்.]

அமையாமை *amaiyāmai*, பெ. (n.) 1. கிடைத்தற் கருமை; difficulty of attainment. "அமையாவின்பவிண் ணாட்டில்" (ஞானவா. சுக்கிர. 9). 2. கீழ்ப்படியாமை; disobedience. 3. பொந்திகை யடையாமை (திருப்திப்படாமை); dissatisfaction. "பெரும்பாழ் செய்து மமையான்" (பட்டினப். 270).

அமைலம் *amailam*, பெ. (n.) மாப்பசை; a vegetable substance universally diffused in plants and generally extracted from wheat flour, rice, etc., starch (சா.அக.).

அமைவடக்கம் *amaiv(u)-aḍakkam*, பெ. (n.) 1. அடங்கிய வொழுக்கம் (வின்.); modesty, respectful behaviour. 2. மனம் ஒருவழிப் பட் டடங்கிநிற்றல் (சங்.அக.); restraint of the senses and concentration of mind. 3. மறைவு (சங்.அக.); disappearance. 4. சாவு; demise.

[அமைவு + அடக்கம். அமை → அமைவு. அடங்கு → அடக்கு → அடக்கம்.]

அமைவர *amai-vara,* வி.எ. (adv.) **மனத்துட் பதிய**; to be clearly understood and grasped. ''ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்'' (நன். 41).

[அமை + வர. அமை → அமைவு = பதிவு.]

அமைவன் *amaivan,* பெ. (n.) 1. **அடக்க முள்ளோன்**; one who has self-control. 2. **முனிவன்**; sage, as a serene person. ''பிருகு வென்னு மமைவன்'' (விநாயகபு. பதி. 2). 3. **அருகன்** (நாநார்த்த.); Arhat. 4. **கடவுள்**; the Supreme Being. ''அமைவன தடி பணிந்து'' (இலக். வி. 159).

அமைவு *amaivu,* பெ. (n.) 1. **சேர்வு, கூட்டு**; joining, uniting. 2. **ஒப்புமை**; similarity. 3. **பொருந்துகை, ஏற்றதாதல்**; fitting, being suitable or acceptable, conformity. 'அமை வின்மை அம்மரபிற் கேலாமை' (குறள், 956, பரிமே. உரை). 4. **நட்புப் பொருத்தம்**; friendly relation. ''அஞ்சு மறியா னமைவிலன்'' (குறள், 863). 5. **இடங்கொண்டிருப்ப-வன்-வள்-து**; resident, presiding deity. ''திருக்கா ளத்தியுள் ளமைவே'' (தேவா. 7 . 26 : 2). 6. **அடக்கம்** (சிந்தா.நி.); modesty, respectable conduct. 7. **புலனடக்கம்** (சங்.அக.); control of the senses. ''அமைவு பிறக்கு மமரர்கள்'' (விருத்தா. திருத்த. 14). 8. **பொறுமை**; patience. ''ஞாலத் தார்கொலோ வமைவின் மிக்கோர்'' (பாரத. நிரை. 132). 9. **மனவமைதி**; peace of mind. ''நிகராகியு மமைவுற்றோ னிமல முத்தனாம்'' (ஞானவா. வேதாள. 3). 10. **ஆறுதல், ஆற்றியிருத்தல்**; consolation, bearing the pangs of separation. ''அவர்க் காணா தமைவில கண்'' (குறள், 1178). 11. **நிறைவு**; fulness, completeness, perfection. ''ஆங்கமை வெய்தியக் கண்ணும்'' (குறள், 740). 12. **பொந்திகை (திருப்தி)**; satisfaction.

[அமை + வு (தொ.பெ. ஈறு). அவு → வு.]

அயக்கம் *ayakkam,* பெ. (n.) **நோயின்மை**; free from disease, healthiness (சா.அக.).

[**ஒருகா.** அயங்கு → அயக்கு → அயக்கம். அயங்குதல் = விளங்குதல்.]

அயக்கு-தல் *ayakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) **அசைத்தல்**; to shake, cause to tremble. ''குன்றுக ளயக்கலின்'' (கம்பரா. யுத்த. சேதுப. 10).

[அலை → அசை → அசக்கு → அயக்கு.]

அயகத்திணை *ayaga-t-tinai,* பெ. (n.) **செந்திணை**; red millet (சா.அக.).

அயகம் *ayagam,* பெ. (n.) 1. **சிறுகுறிஞ்சா**; species of *Gymnema* (செ.அக.) — the small Indian ipecacuanha, *Gymnemia silvestre* alias *G. parviflorum* (சா.அக.). 2. **வசம்பு** (மலை.); sweet-flag, *Acorus calamus* (சா.அக.).

அயங்கு-தல் *ayangu-,* 5 செ.கு.வி. (v.i.) **விளங்குதல்**; to shine, appear bright. ''பல்ல யங்குதலை யேந்தினார்'' (தேவா. 2 . 211 : 4).

[வயங்குதல் = விளங்குதல். வயங்கு → அயங்கு.]

அயதி *ayadi,* பெ. (n.) **திருநாமப்பாலைக்கொடி** (மூ.அ.); oval-leaved China root.

அயம்[1] *ayam,* பெ. (n.) 1. **பள்ளம்**; depression, ditch, valley. ''அயமிழி யருவி'' (கலித். 46:9). 2. **குளம்** (பிங்.); tank, pond. ''அயத்துவளர் பைஞ்சாய்'' (அகநா. 62:1). 3. **சுனை** (அகநா. 38, உரை); spring on a mountain. 4. **நீர்** (பிங்.); water. 5. **மழைநீர்** (பச்.மூ.); rain water. 6. **சேறு** (உரி.நி.); mud, mire.

[பள் → பய் → பயம் → பயம்பு = பள்ளம். பயம் → அயம். இனி, பள்ளம் → பய்யம் → பயம் என்றுமாம்.]

அயம்[2] *ayam,* பெ. (n.) **சிறுபூலா**; a shrub.

அயம்[3] *ayam,* பெ. (n.) **ஐயம் (சந்தேகம்)**; doubt. ''மன்னவன்...அயம தெய்தி'' (திருவாலவா. 33 : 15).

[ஐயம் → அயம்.]

அயமவாதி *ayamavādi,* பெ. (n.) அயவாசி பார்க்க; see *ayavāśi.*

அயமி *ayami,* பெ. (n.) **வெண்கடுகு** (மலை.); white mustard.

அயர்[1]**-தல்** *ayar-,* 2 செ.கு.வி. (v.i.) 1. **விளை யாடுதல்**; to play, sport. ''மடக்குறு மாக் களோ டோரை யயரும்'' (கலித். 82 : 9). 2. **சோர்தல், தளர்தல், இளைத்தல்**; to become weary, to be fatigued, to be exhausted. ''அடி யேனு மயலார் போல வயர்வேனோ'' (திரு வாச. 32 : 9). 3. **உணர்வழிதல்**; to lose consciousness, as in fainting, sleep or drunkenness. ''கள்ளுண் டயர்தல்'' (கூர்மபு. திரிபுர. 28). —, 2 செ.குன்றாவி. (v.t.) 1. **மெய்வருந்திச் செய்தல்**; to labour hard, to do dili-

gently. 2. **செய்தல்** (திவா.); to do, perform. 3. **தேர் செலுத்துதல்**; to drive, as a chariot. ''திண்டேர் ரயர்மதி'' (கலித். 30 : 19). 4. **வழிபடுதல்**; to worship. ''பலிசெய் தயரா நிற்கும்'' (திருக்கோ. 348). 5. **வேலன் வெறியாடுதல்**; to dance under possession by *Muruga*. ''வெறியயர் வியன்களம் பொறப்ப'' (அகநா. 98:19). 6. **விழாக் கொண்டாடுதல்**; to celebrate a festival. 7. **விருந்தோம்பல்**; to entertain guests. 8. **விரும்புதல்**; to desire. ''செலவயர்தும்'' (பு.வெ. ஒழிபு, 1). 9. **மறத்தல்**; to forget. ''ஆயா தறிவயர்ந்து'' (பு.வெ. 10, காஞ்சி. 2).

ம. அயர்க்குக; **க., தெ.** அசுரு.

[ஐ = மென்மை, நுண்மை. ஐ → அய் → அயர். அய் → ஆய். ஆய்தல் = நுணுகுதல், வருந்துதல், அசைதல், இளைத்தல்.]

அயர்²-த்தல் *ayar-*, 4 செ.குன்றாவி. (v.t.) **மறத்தல்**; to forget. ''அங்கவ டன் றிற மயர்ப்பா யென்றே'' (மணிமே. 19 : 9).

அயர்க்கு-தல் *ayarkku-*, 4 செ.குன்றாவி. (v.t.) **மறத்தல்**; to forget. ''தன்னை யயர்க்குதல்'' (உபதேசகா. சிவபுண்ணி. 28).

அயர்ச்சி¹ *ayarcci*, பெ. (n.) 1. **செய்கை**; deed, action, performance. ''சாறயர்ச்சி விளைப்பன'' (சீகாழித். பூந்தரா. 4). 2. **களைப்பு, சோர்வு**; fatigue, weariness. 3. **மறதி**; forgetfulness. ''அயர்ச்சி மனத்திலறுத்து'' (சைவச. பொது. 372). 4. **மனக்கவற்சி**; anxiety. ''அயர்விலர்''(புறநா. 182:6). 5. வருத்தம்; distress. ''மறைந்துபோயினா ரெனச்சிறி தயர்ச்சியு மனத்தினிறைந்ததோர் பெருங் கவற்சியை'' (திருவிளை. இரசவா. 27). 6. வலுக்குறைவு; weakness. 7. **உணர்வழிவு**; unconsciousness. 8. **சோம்பு** (சங்.அக.); slackness, lethargy. 9. **வெறுப்பு** (சங்.அக.); dislike, disgust, aversion.

ம. அயர்ச்ச

[அயர் → அயர்ச்சி.]

அயர்ச்சி² *ayarcci*, பெ. (n.) **அழலை**; heat (சா.அக.).

ம. அயல்

[ஒருகா. அழற்சி → அயர்ச்சி.]

அயர்த்ததுமறந்தது *ayarttadu-marandadu*, பெ. (n.) **மறந்துபோன பொருள் அல்லது செய்தி**; forgotten thing or matter. அயர்த்தது மறந்தது ஏதேனு மிருந்தால் இப்பொழுதே பார்த்துக்கொள்ளுங்கள் (உ.வ.).

[மரபிணை மொழி (idiomatic words-in-pairs).]

அயர்தி *ayardi*, பெ. (n.) 1. **இளைப்பு**; feebleness, languor. 2. **களைப்பு, சோர்வு, தளர்வு**; weariness, fatigue. 3. **உணர்வழிவு**; fainting, loss of consciousness. 4. **மறதி**; forgetfulness. 5. **சோம்பு** (சங்.அக.); slackness.

ம. அயர்தி; **க.** அயலு; **தெ.** அசுரு.

[அயர் + தி (தொ. பெ. ஈறு).]

அயர்திமறதி *ayardi-maradi*, பெ. (n.) **மறப்புத் தன்மை**; forgetfulness. அயர்திமறதியாயிராதே (உ.வ.).

மரபிணைமொழி (idiomatic words - in-pairs). அயர்திமறதி என்பது, எதுகை நோக்கித் தவறாக அரதிமறதியென்று உலக வழக்கில் வழங்கிவருகின்றது.

அயர்ந்ததூக்கம் *ayarnda-tūkkam*, பெ. (n.) **உழைப்பினாலுங் களைப்பினாலும் ஏற்பட்ட மெய்ம்மறந்த தூக்கம்**; deep sleep caused by hard labour and exhaustion.

அயர்ப்பு *ayarppu*, பெ. (n.) **மறப்பு**; forgetfulness. ''அயர்ப்பிலா தானே யோலம்'' (பெரியபு. இயற். 29).

ம. அயர்ப்பு

[அயர் + பு (தொ.பெ. ஈறு).]

அயர்வு *ayarvu*, பெ. (n.) 1. **சோர்வு** (நாநார்த்த.), **தளர்வு**; fatigue, weariness. ''களைந்து களைந்தயர் வுறுவார்'' (சேதுபு. நாட்டு. 62). 2. **சோம்பு**; slackness, lethargy. ''அயர்வில் காலன்'' (ஞானவா. ஞானவிண். 20). 3. **மனக்கவற்சி**; anxiety. ''உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்'' (புறநா. 182 : 6). 4. வருத்தம் (நாமதீப.); suffering. ''அயர் வன்றியில்'' (ஞானவா. புசுண். 84). 5. **அவலம்**; distress. 6. **மயக்கம்** (நாநார்த்த.); dizziness, fainting, swooning. 7. **மத்தம்**; suspension of sensibility. 8. **வெறுப்பு**; disgust, aversion.

ம. அயவு

[அயர் + வு (தொ. பெ. ஈறு, ப. பெ. ஈறு). அவு → வு.]

அயர்வுயிர்-த்தல் *ayarv(u)-uyir-*, 4 செ.கு.வி. (v.i.) 1. **இளைப்பாறுதல்**; to rest. ''திருவயர் வுயிர்க்கு மார்பன்'' (சூளா. துற. 23). 2. **சிந்துதல்**; to be spilled. ''கள்ளயர் வுயிர்க்குஞ் செழுங்கமல மென்பொகுட்டு வள்ளல்'' (கூர்மபு. அட்ட. 8). 3. **சோர்வு நீங்குதல்**; to be relieved of fatigue, to recoup one's energy. ''குருகயர் வுயிர்க்குஞ் சோலை'' (சூளா. துற. 23). 4. *மயக்கந் தீர்தல்*; to recover from stupor. 5. *வருத்தந் தீர்தல்;* to be relieved of suffering.

[அயர்வு + உயிர். உயிர்த்தல் = வெளிப் படுத்துதல், தளர்வு அல்லது மயக்கந் தீர்தல்.]

அயரப்போடு-தல் *ayara-p-pōḍu-*, 19 செ. குன்றாவி. (v.t.) **அசரப்போடு-தல்** பார்க்க; see *ašara-p-pōḍu-*.

[அயர + போடு.]

அயரவிடு-தல் *ayara-viḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) **அயரப்போடு-தல்** பார்க்க; see *ayara-p-pōḍu-*.

அயல்-தல் *ayal-*, 11 செ.கு.வி. (v.i.) **காரம் மிகுதல், உறைத்தல்**; to be acrid, pungent. குழம்பு அயலுகிறது (உ.வ.).

[அழல் → அயல்.]

அயல்[1] *ayal*, பெ. (n.) 1. **அருகிடம்**; neighbourhood, adjacent place. ''தனக்கயலின் வந்த பரிசனத்தை'' (கந்தபு. உற்பத். காமதக. 65). 2. **இடம்** (பிங்.); place. 3. **வெளியிடம், புறம்பு**; outside. ''பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட் கயலுமாய்'' (தாயு. சுக. 3). 4. **வேற்றினமானது, வெளிநாட்டது**; that which is foreign or alien. ''ஆருற வெனக்கிங் காரய லுள்ளார்'' (திருவாச. 22 : 8). 5. **வேறு**; that which is different. ''விரியுருவா யயல்போலாய்'' (ஞானவா. விரதசூ. 3). —, இடை. (part.) **இடப்பொரு ளுருபு**; a locative ending. ''தலைக்குவட் டயன்மதி தவழு மாளிகை'' (கம்பரா. அயோத். நகர்நீங். 193).

ம. அயல்

[அள்ளுதல் = நெருங்குதல், செறிதல். அள் → அய் → அயல்.]

அயல்[2] *ayal*, பெ. (n.) **காரம், உறைப்பு**; pungency. அயல் கொளுத்துகிறது.

[அழல் (நெருப்பு) → அயல். உறைப்புப் பொருள், நாவில் அல்லது உடம்பிற் படும்போது நெருப்பைப்போற் காந்துதலால், அழல் எனப் பட்டது.]

அயலகத்தான் *ayal-agattān*, பெ. (n.) 1. **அடுத்த வீட்டுக்காரன்**; next door neighbour. 2. **பக்கத்திலுள்ளவன்**; neighbour. 3. **வெளியூரான்**; stranger.

ம. அயலூதி, அயல்காரன்.

[அயல் + அகம் (வீடு, இடம்) + அத்து (சாரியை) + ஆன் (ஆ.பா. ஈறு).]

அயலகம் *ayal-agam*, பெ. (n.) 1. **அடுத்த வீடு**; next house. 2. **பக்கம்**; neighbourhood.

[அயல் + அகம்.]

அயலத்தான் *ayalattān*, பெ. (n.) **அயலகத்தான்** பார்க்க; see *ayal-agattān*.

அயலவன் *ayalavan*, பெ. (n.) 1. **பக்கத்தான்**; neighbour. 2. **வேற்றூரான், உறவல்லாதவன்**; stranger. 3. **நொதுமலான்** (சூடா.); a neutral.

ம. அயலான்

[அயல் + அவன் (ஆ.பா. ஈறு).]

அயலன் *ayalan*, பெ. (n.) **அயலவன்** பார்க்க; see *ayalavan*.

அயலார் *ayalār*, பெ. (n.) 1. **பக்கத்தார்**; neighbours. ''அன்புடையன் கொல்லென் றயலா ரெடுத்துரைப்ப'' (கந்தபு. யுத்த. இரணியன்பு. 8). 2. **ஏவலாளர்**; servants. ''தன் பன்னியொடு மயலார் சுற்றந் தமரோடும்'' (திருவிளை. உலவாக்கோ. 18). 3. **உறவல்லாத பிறர், வேற்றிடத்தார்**; strangers.

[அயல் + ஆர் (ப.பா. ஈறு).]

அயலார்காட்சி *ayalār-kāṭci*, பெ. (n.) **கண்டோர் சான்று** (Cōla. II. ii, 258); testimony of eye-witnesses. ''அயலார் தங்கள் காட்சியில்'' (பெரியபு. தடுத்தாட். 56).

அயலாள் *ayalāḷ*, பெ. (n.) **உறவல்லாத வெளியூரா-ன்-ள்**; stranger.

[அயல் + ஆள்.]

அயலான் *ayalān*, பெ. (n.) 1. **பக்கத்தான்**; neighbour. 2. **உறவல்லாத வெளியூரான்**; stranger. 3. **பகைவன்**; enemy. ''அயலா ளூரி லஞ்சிலே யொன்றை வைத்தான்'' (கம்பரா. பால. மிகைப். 10).

ம. அயலான், அயவன்.

[அயல் + ஆன் (ஆ.பா. ஈறு).]

அயலி *ayali*, பெ. (n.) 1. **வெண்கடுகு** (மலை.); white mustard, *Brassica alba*. 2. **சிற்றரத்தை**; lesser galangal, *Alpinia galanga* (minor) (சா. அக.).

அயலிலாட்டி *ayal-il-āṭṭi*, பெ. (n.) **அடுத்த வீட்டுப் பெண்டு**; woman of the next house. "அமுத முண்கநம் மயலி லாட்டி" (நற். 65).

[அயல் + இல் (வீடு) + ஆட்டி (பெண்டு). ஆள் (பெ.பா.) – ஆளன் (ஆ.பா.) – ஆட்டி (பெ.பா.). ஆளன் = ஆடவன். ஆட்டி = பெண்டு. ஆள் + தி(பெ.பா. ஈறு) – ஆட்டி. அத்தி(தாய்) → தி (பெ.பா. ஈறு). ஒ.நோ: மறத்தி, குறத்தி, வண்ணாத்தி.]

அயலுரை *ayal-urai*, பெ. (n.) 1. **அயலா ரொருப்பட்ட வுரை**; resolute talk of neighbours. 2. **இயைபில்லாத பேச்சு**; irrelevant talk.

"கயல்புரை கண்ணியை
அயலுரை யுரைத்தது"
(திருக்கோ. 137, கொளு).

'அயலுரை - தலைமகட்கியாதும் இயை பில்லாத வுரை;
அயலா ரொருப்பட்ட வுரை யென்றுமாம்'
(ஷை உரை).

[அயல் (அயலார்) + உரை (பெண்கோடற் பேச்சு).]

அயலை *ayalai*, பெ. (n.) **அயிலை** பார்க்க; see *ayilai*.

அயலோர் *ayalōr*, பெ. (n.) 1. **பக்கத்தவர்**; neighbours. 2. **மற்றையோர்**; others. "ஆரியர் பேணுவ தாகி யயலோர்க் கெல்லா மரிதான" (ஞானவா. முமுட்சு. 17).

[அயலார் → அயலோர்.]

அயவகண்டம் *ayavakaṇḍam*, பெ. (n.) **முசு முசுக்கை**; bristly bryonia, *Bryonia scabra* (சா.அக.).

அயவந்தி *ayavandi*, பெ. (n.) **ஒரு சிவநகர்**; a Šaiva shrine. "அயவந்தி யமர்ந்தருளு மங்கணர்தம் கோயில் மருங்கணைந்து" (பெரியபு. திருஞான. 461).

அயவம் *ayavam*, பெ. (n.) **ஒருவகைக் குடற்புழு**; one of the seven species of worms in the intestines (சா.அக.).

அயவல்லி *ayavalli*, பெ. (n.) **கோவை**; Indian caper, *Bryonia grandis* (சா.அக.).

அயவாசி *ayavāši*, பெ. (n.) **வசம்பு** (பச்.மூ.); sweet flag.

மறுவ. அயவாரி, அயவாரிதி.

அயவாரி *ayavāri*, பெ. (n.) 1. **அயவாசி** பார்க்க; see *ayavāši*. 2. **செந்நாகதாளி**; crimson-flowered prickly pear, *Opuntia monocantha* (சா.அக.).

அயவாரிதி *ayavāridi*, பெ. (n.) **அயவாசி** பார்க்க; see *ayavāši*.

அயவாருகம் *ayavārugam*, பெ. (n.) **செந் நாயுருவி**; a red species of the plant, *Achyranthes aspera* (சா.அக.).

அயவி *ayavi*, பெ. (n.) **சிற்றரத்தை** (மலை.); lesser galangal, *Alpinia galangal* (minor) (சா.அக.).

மறுவ. அயலி, அயவிகம்.

அயவிகம் *ayavigam*, பெ. (n.) **அயவி** பார்க்க; see *ayavi*.

அயவு *ayavu*, பெ. (n.) **அகலம்** (சிந்தா.நி.); breadth, width.

அயற்படு-தல் *ayaṟ-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **நீங்கிப்போதல்**; to leave, depart, disappear. "இயற்படு மானமு மிகலு நாணமு மயற்பட" (கந்தபு. மகேந். சயந்தன்பு. 5).

[அயல் (பக்கம், அப்பால்) + படுதல் (சேர்தல், செல்லுதல்).]

அயறு *ayaṟu*, பெ. (n.) **புண்வழலை, புண்ணின் பொருக்கு**; scab of a wound, excrescence resulting from a sore. "அயறுசோரு மிருஞ் சென்னிய" (புறநா. 22 : 7).

ம. அயறு

[ஒருகா. அளறு → அயறு. இனி, அசறு → அயறு என்றுமாம்.]

அசறு[3] பார்க்க; see *asaṟu*[3].

அயன்முப்பு *ayaṉ-muppu*, பெ. (n.) **தலைப் பிண்டம்** (குழூஉக்குறி); the first-born foetus (சா.அக.).

அயன்மை *ayaṉmai*, பெ. (n.) **உறவன்மை**; absence of kinship, non-relationship. "எமக் கிவன் யாரென்று அயன்மை கூறுதலாம்" (தொல். பொருள். கற். 6, நச். உரை).

[அயல் + மை (ப.பெ. ஈறு).]

அயா *ayā*, பெ. (n.) 1. **தளர்ச்சி** (திவா.); languor, faintness. 2. **வருத்தம்**; distress.

''மானயா நோக்கியர் மருங்குல்'' (சீவக. 1822).

[அயர் → அயா. அயர்தல் = தளர்தல், வருந்துதல்.]

அயாகம் *ayāgam*, பெ. (n.) **மத்தை (ஊமத்தை)**; datura, *Datura fastuosa*.

மறுவ. அயிகம், அயிகா, அயிரகம்.

அயாஞ்சி *ayāñji*, பெ. (n.) **நிலப்பனை, ஒரு மருந்துச்செடி**; a medicinal herb, *Curculigo orchioides* (சா.அக.).

மறுவ. அயிஞ்சி

அயாந்திரமாகம் *ayāndiramāgam*, பெ. (n.) 1. **கருங்காணம்** (பச்.மூ.); a species of horse-gram (செ.அக.). 2. **கருங்காக்கணம்**; crow creeper, *Clitoria ternatea* (சா.அக.).

ஒ.நோ : அயித்திரம்

அயாரியம் *ayāriyam*, பெ. (n.) **நெட்டிச்செடி**; cork-plant (சா.அக.).

அயாலி *ayāli*, பெ. (n.) **கோரை** (பச்.மூ.); sedge (செ.அக.) — a species of grass, *Cyperus* (சா.அக.).

அயாவு-தல் *ayāvu-*, 5 செ.கு.வி. (v.i.) **வருந்துதல்**; to be distressed. ''மானயா நோக்கியர்'' (சீவக. 1822).

ம. அயவு

[அயர் (தளர்) → அயா (வருத்தம்) → அயாவு.]

அயாவுயிர்-த்தல் *ayā-v-uyir-*, 4 செ.கு.வி. (v.i.) 1. **நெட்டுயிர்த்தல், பெருமூச்செறிதல்**; to take a deep breath, to sigh. ''அழுதன ளேங்கி யயாவுயிர்த் தெழுதலும்'' (மணிமே. 21 : 26). 2. **இளைப்பாறுதல்**; to take rest. 3. **மயக்கந் தெளிதல்**; to recover from swoon. 4. **வருத்தந் தீர்தல்**; to be relieved of distress or pain. 5. **கொப்புளித்தல்**; to bubble up, burst forth. ''நறவயா வுயிர்க்கு மாலை'' (சீவக. 1125). —, 4 செ.குன்றாவி. (v.t.) **இளைப்பாற்றுதல்**; to give rest to, to refresh. ''எம்மைச் சுமந்தயா வுயிர்த்த வாண்மை'' (சீவக. 2947).

[அயர் → அயா (தளர்ச்சி, வருத்தம்)+உயிர். உயிர்த்தல் = மூச்சுவிட்டுத் தீர்தல்.]

அயிகம் *ayigam*, பெ. (n.) 1. **அயாகம்** பார்க்க; see *ayāgam*. 2. **இலவு**; silk-cotton tree (சா.அக.).

அயிகா *ayigā*, பெ. (n.) **அயிகம்** பார்க்க; see *ayigam*.

அயிங்கவலை *ayiṅgavalai*, பெ. (n.) **துடைமீன்**; bluish-green sardine fish, *Clupea fimbriata* (சா.அக.).

அயிஞ்சி *ayiñji*, பெ. (n.) **அயாஞ்சி** பார்க்க; see *ayāñji*.

அயித்திரம் *ayittiram*, பெ. (n.) 1. **கருங்காணம்**; black horse-gram (செ.அக.). 2. **கருங்காக்கணம்**; crow creeper, *Clitoria ternatea* (சா.அக.).

அயிநார் *ayinār*, பெ. (n.) **ஐநார்** பார்க்க; see *ainār*.

அயிப்பை *ayippai*, பெ. (n.) **ஒரு செடி**; a shrub.

அயிர்-த்தல் *ayir-*, 4 செ.கு.வி. (v.i.) **ஐயுறுதல் (சந்தேகித்தல்)**; to suspect. ''அருங்கடி வாயி லயிராது புகுமின்'' (மலைபடு. 491). —, 4 செ.குன்றாவி. (v.t.) **மறைத்தல்**; to hide, conceal. ''உயிரனை யாயயி ராம லுரை யெனக்கே'' (தஞ்சைவா. 303) — (சங்.அக.).

[ஐ (ஐயம்) → அய் → அயிர். ஐயுறுதல் = சொல்லத் தகாதென்று மறைத்தல் (சொக்கப்ப நாவலர் உரை).]

அயிர்[1] *ayir*, பெ. (n.) **ஐயவுணர்வு**; doubt, suspicion. ''அயிரிற் றீர்ந்தபே ரறிஞரும்'' (திருவிளை. திருநகர. 65).

[ஐ (ஐயம்) → அய் → அயிர்.]

அயிர்[2] *ayir*, பெ. (n.) 1. **நுண்மை** (திவா.); fineness, subtlety. 2. **நுண்மணல்**; fine sand. ''அயிர செறியிலைக் காயா அஞ்சனம் மலர'' (முல்லைப். 92-3). **ம.** அயிர். 3. **சருக்கரை**; sugar. ''அயிருந் தேனும்'' (கம்பரா. பால. நாட்டு. 55). 4. **கண்டசருக்கரை** (திவா.); candied sugar. 5. **புகைக்கும் ஒரு வெள்ளை நறுமணப்பொருள்**; name of an imported white fragrant substance for burning. ''குடதிசை மருங்கின் வெள்ளயிர் தன்னொடு'' (சிலப். 4 : 35). 6. **சிறுநீர்** (இராசவைத்.); urine. 7. **வெள்வேலம் பட்டை**; the bark of white acacia, *Acacia leucophloea* (சா.அக.). 8. **யானைக்காஞ்சொறி**; a species of nettle, *Tragia involucrata* (சா.அக.).

[ஐ → அய் → அயிர். ஐ = மென்மை, நுண்மை.]

அம்மான்பச்சரிசி

அம்மினியுளுவை

அமிர்தவல்லி



அயிங்கவலை

அயிலைக்கீரை

அயிலாலி

அயிர்க்கடு *ayir-k-kaḍu*, பெ. (n.) **யானைத் துறட்டி** (சிந்தா. நி. 220); goad for elephants.

[அயில் = கூர்மை. கோடு = வளைவு, கொம்பு. அயில் + கோடு – அயிற்கோடு → அயிர்க்கடு.]

அயிற்கடு பார்க்க; see *ayiṟ-kaḍu*.

அயிர்த்துரைத்தல் *ayirtt(u)-uraittal*, பெ. (n.) (அகப்.) **தலைமகளின் கண்சிவப்பு முதலிய வற்றைத் தோழி கண்டு ஐயங்கொள்வதைக் கூறும் அகப்பொருட்டுறை;** theme describing the maid's doubts on seeing the reddened eyes, etc., of the heroine (களவியற். 50).

[அயிர்த்து + உரைத்தல்.]

அயிர்ப்பு *ayirppu*, பெ. (n.) 1. ஐயுறவு; doubt, suspicion. "அண்ணலங் குமர ராமென் றயிர்ப்புறு மரசர் யாரும்" (பாரத. திரௌ. 63). 2. (இசை) **குறிஞ்சி யாழ்த்திறவகை** (பிங்.); (Mus.) a secondary melody-type of the *Kuṟiñji* class.

[அயிர் → அயிர்ப்பு.]

அயிரகம் *ayiragam*, பெ. (n.) 1. **மத்தங்காய்; அயிகம்** பார்க்க; see *ayigam*. 2. **கருமத்தை (காருமத்தை)**; black variety of datura, *Stramonium fastuosa* (சா.அக.), (சித்.அக.)—purple stramony (செ.அக.).

அயிரம் *ayiram*, பெ. (n.) **கண்டசருக்கரை** (மூ.அ.); candied sugar.

[அயிர் = நுண்மை, நுண்மணல். அயிர் → அயிரம்.]

அயிரி[1] *ayiri*, பெ. (n.) **மீன்முள்ளை எடுக்க உதவுங் கத்தி;** a knife, for picking out the bones of fish (W.).

ம. அயிரி

[அயில் = கூர்மை. அயில் → அயிர் → அயிரி.]

அயிரி[2] *ayiri*, பெ. (n.) **நெட்டிப்புல்;** long grass (செ.அக.)—pith-grass, *Typha angustifolia* (சா.அக.).

அயிரியம் *ayiriyam*, பெ. (n.) **நெட்டி** (மூ.அ.); sola pith, *Aeschynomene aspera*.

அயிரை *ayirai*, பெ. (n). 1. **நுண்மணல்;** fine sand. "அயிரை வார்கரைக் குடகடல்" (சூளா. கல்யா. 53). 2. **ஒரு சிறு ஆற்றுமீன் அல்லது குளத்துமீன்;** a small river-fish or tank-fish. "குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி" (புறநா. 67 : 6) — **நொய்ம்மீன்** small edible freshwater fish, loach, sandy coloured *Cobitio thermalis*. "சிறுவெண் காக்கை......அயிரை யாரும்" (ஐங்குறு. 164) (செ.அக.). ம. அயிர. 3. **சேரநாட்டிலுள்ள ஓர் ஆறு;** name of a river in the *Cēra* country. "உருகெழு மரபி னயிரை மண்ணி" (சிலப். 28: 145). 4. **சேரநாட்டிலுள்ள ஒரு மலை;** name of a hill in the *Cēra* country, 9 miles west of *Paḻani*. "நேருயர் நெடுவரை யயிரைப் பொருந" (பதிற்றுப். 21 : 29).

[ஐ → அய் → அயிர் = நுண்மை. அயிர் → அயிரை = நுண்மணற் சிறுமீன், நுண்மணலாறு.]

அயில்-தல் *ayil-*, 7 செ.குன்றாவி. (v.t.) 1. **உண்ணுதல்;** to eat. "அடிசி லயில்வோர் தம்மை" (திருவிளை. உக். வேல்வளை. 60). 2. பருகுதல், குடித்தல்; to drink. "பாலயி லுற்றிடு பொழுதத் தினில்" (கந்தபு. உற்பத். சரவண. 33).

[ஐ = நுண்மை, மென்மை. ஐ → அய் → அயில். அயிலுதல் = குழந்தை சிறிது சிறிதாக மெல்லுணவுண்ணுதல். அயில் → அயிலி → அயினி = குழந்தை முதன்முதலாக உண்ணுஞ் சோறு. இனி, அள்ளுதல் = நுகர்தல். அளைதல் = நுகர்தல், அள் → அய் → அயில் என்றுமாம்.]

அயில்[1] *ayil*, பெ. (n.) 1. **கூர்மை;** sharpness. "ஆண்மகன் கையி லயில்வாள்" (நாலடி. 386). 2. **வேல்;** javelin, lance. "அயில்புரை நெடுங்கண்" (ஞானா. 33). ம. அயில். 3. **அறுவைசெய்யும் கத்தி;** surgical knife, lancet. "அயிலரி யிரலை விழுப்புண்" (ஞானா. 30). 4. **கலப்பை** (சங்.அக.); plough. தெ. அயர. 5. **இரும்பு;** iron. "அயிலாலே போழ்ப வயில்" (பழ. 8). ம. அயில். 6. **கோரை;** sedge (W.). 7. **முசுமுசுக்கை** (பச். மூ.); rough bristly bryony, *Bryonia scabra* (சா.அக.). 8. **வேலம்பட்டை** (இராசவைத்.); babul bark.

[அள் = கூர்மை. அள் → அய் → அயில் = கூர்மை, கூரிய பொருள்.]

அயில்[2] *ayil*, பெ. (n.) **அழகு;** beauty.

க. அய், அய்ன்; தெ. அயன.

[ஐ = அழகு. ஐ → அய் → அயில்.]

அயில்[3] *ayil*, பெ. (n.) **விரை** (அக.நி.); perfume.

[அகில் = நறுமணக்கட்டை, நறுமணம். அகில் → அயில்.]

அயிலம் *ayilam,* பெ. (n.) **இலுப்பைவேர்ப் பட்டை** (இராசவைத்.); bark of the mahwa root (செ.அக.) — the root bark of the flower dropping tree, *Bassia longifolia* (சா.அக.).

அயிலவன் *ayil-avaṉ,* பெ. (n.) முருகன்; Lord *Muruga,* as bearing a javelin. "தினைகாவன் மயிலை மணந்த வயிலவ" (திருப்பு. 341).

[அயில்+அவன் (ஆ.பா. ஈறு). அயிலவன் = வேற்படையுடையவன்.]

அயிலான் *ayilāṉ,* பெ. (n.) அயிலவன் பார்க்க; see *ayil-avaṉ* (உரி.நி.).

[அயில் + ஆன் (ஆ.பா. ஈறு).]

அயிலாலி *ayilāli,* பெ. (n.) **செந்நாரை**; a red crane, *Tantalus gangeticus* (சா.அக.).

அயிலி *ayili,* பெ. (n.) **சதுரக்கள்ளி** (பிங்.); square spurge. *2.* அயிலக்கீரை; a kind of edible greens.

[அயில் → அயிலி.]

அயிலிடம் *ayiliḍam,* பெ. (n.) சிற்றரத்தை (மலை.); lesser galangal.

அயிலுழவன் *ayil-uḻavaṉ,* பெ. (n.) போர் மறவன், **வீரன்** (உரி.நி.); warrior, as ploughman with javelin.

[அயில் (வேல்) + உழவன் – அயிலுழவன் = வேலால் உழுபவன், பொருநன், மறவன்.]

அயிலேயம் *ayilēyam,* பெ. (n.) முசுமுசுக்கை (நாமதீப.); bristly bryony, *Bryonia scabra.*

[அயில் → அயிலை → அயிலையம் → அயிலேயம்.]

அயிலை *ayilai,* பெ. (n.) *1.* **ஒரு கடல்மீன் வகை**; a kind of sea-fish. "அயிலை துழந்த வம்புளி" (அகநா. 60 : 5).

அயிலைக்கீரை *ayilai-k-kīrai,* பெ. (n.) **ஒரு வகைக் கீரை;** a kind of edible greens.

அயிவாவி *ayivāvi,* பெ. (n.) **செந்தாவி**; red aconite, *Aconitum ferox* (சா.அக.).

அயிற்கடு *ayiṟ-kaḍu,* பெ. (n.) **யானைத்துறட்டி**; goad for elephant.

[அயில் = கூர்மை. கோடு = வளைவு, கொம்பு. அயிற்கோடு → அயிற்கடு.]

அயிற்பட்டை *ayiṟ-paṭṭai,* பெ. (n.) **வேலம் பட்டை**; the bark of acacia tree, *Acacia leucophloea* (சா.அக.).

[அயில் + பட்டை.]

அயிற்பூகம் *ayiṟ-pūgam,* பெ. (n.) **செந்நெல்லி;** red gooseberry, *Phyllanthus emblica.*

அயிற்பெண்டு *ayiṟ-peṇḍu,* பெ. (n.) **வரிக் கூத்துவகை**; a masquerade dance. "திரு விளக்குப் பிச்சி திருக்குன் றயிற்பெண்டு" (சிலப். 3 : 13, அடியார்க். உரை).

[அயில் + பெண்டு – அயிற்பெண்டு = ஒரு பெண் வேலேந்தியாடும் கூத்துபோலும்!]

அயின்றாள் *ayiṉṟāḷ,* பெ. (n.) **அன்னை** (அக.நி.); mother.

[ஒருகா. புளிக்குடித்தவள் என்னும் பொருளுள்ளதா யிருக்கலாம்; அன்றேல், ஈன்றாள் என்பதன் கொச்சைத் திரிபா யிருக்கலாம்.]

அயினாலிகம் *ayiṉāligam,* பெ. (n.) **செம்பசலை;** red pursalane (சா.அக.).

அயினி *ayiṉi,* பெ. (n.) *1.* குழந்தை முதலில் **உண்ணுஞ் சோறு**; the first rice meal of a child. "பால்விட் டயினியு மின்றயின் றனனே" (புறநா. 77 : 8). *2.* **உணவு**; food. "நன்னற்கு மயினி சான்மென" (மலைபடு. 467). **ம.** அயனி. *3.* **பழஞ்சோற்று நீர்** (இராசவைத்.); water in which boiled rice had been kept soaked for sometime.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் சிற்றிளமையைக் குழந்தைப் பருவம் போன்று உயர்வுநவிற்சியாகக் கூறவிரும்பிய இடைக்குன்றூர்கிழார்,

"கிண்கிணி களைந்தகா லொண்கழல் தொட்டுக்
குடுமி களைந்தநுதல் வேம்பி னொண்டளிர்
நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல் வாழ்கவவன் கண்ணி தார்பூண்டு
தாலி களைந்தன்று மிலனே பால்விட்
டயினியு மின்றயின் றனனே......"

என்று (புறநா. 77) பாடியிருத்தலால், குழந்தை பால்குடி மறந்து முதன்முதலாக வுண்ணுஞ் சோறு அயினி யெனப்பட்டதென்று கொள்ள இடமுண்டு.

[ஐ → அய் → அயில். அயில்தல் = குழந்தை ஐதாக வுண்ணுதல். ஐது = நுண்ணிது, சிறிது, மெல்லிது. அயில் → அயிலி → அயினி = மெல் லுணவு, உணவு, சோறு, சோற்றுநீர்.

இனி, அள்ளுதல் = நுகர்தல். அளைதல் = நுகர்தல். அள் → அய் → அயில் → அயிலி → அயினி என்றுமாம்.]

அயினிக்கீரை *ayiṉi-k-kīrai*, பெ. (n.) **மணலிக் கீரை**; a bitter kitchen herb, *Gisekia pharmacioides* (சா.அக.).

[அயிலி + கீரை → அயினிக்கீரை.]

அயினிநீர் *ayiṉi-nīr*, பெ. (n.) **மணமக்கள் முன் அல்லது ஒரு வெற்றியாளன் முன், கண்ணெச்சில் கழிக்குமாறு மங்கலப் பெண்டிர் சுற்றி யெடுக்கும் சோறும் மஞ்சளும் சுண்ணாம்புங் கலந்த ஆலத்தி நீர்;** water mixed with boiled rice, saffron and lime, waved before the bridal couple or a victor in any contest, in order to dispel the supposed effects of the evil eye.

அயினிநீர்சுழற்று-தல் *ayiṉi-nīr-šuḻaṟṟu-*, 5 செ. குன்றாவி. (v.t.) **மேற்கூறியவாறு ஆலத்தி சுற்றியெடுத்தல்**; to perform the ceremony of waving saffron water, as said above. "போதுட னயினிநீர் சுழற்றி" (கம்பரா. பால. மிதிலை. 51).

அர் *ar*, இடை. (part.) 1. பலர்பாலீறு; pl. suff. அரசர் ஆண்டனர். 2. **உயர்வுப்பன்மையீறு;** honorific pl. suff. திருவள்ளுவர். 3. **முதனிலைப் பொருள் ஈறு;** an expletive affixed to some words. பின் - பின்னர். 4. **சில குற்றிய லுகர வீற்றுப் பெயர்களுடன் சேர்க்கப்பெறும் ஈறு;** an expletive added to some nouns ending in short 'u' (உ). சுரும்பர், வண்டர். அர் - உயர்திணை உயர்வுப்பன்மை யீறு, அஃறிணை நகைச்சுவை ஒருமைப்பெயரீறு. எலியர் வந்தார்.

ம. அர், அரு; தெ. அரு; து. எர்; குட. ஆரு; கோண். ஓர்; குரு. அர், ஓர், ஓர்க்; பிரா. உர், அர், ஓர், ர்.

E. -er. suff. used to form nouns denoting an agent as in hatter, ruler, teacher. **ME.** -ere, -er, fr. **OE.** -ere, rel. to **OS.** -eri. **ON.** -ari, **Dan., Du.** -er. **OHG.** -āri, ari, -eri, **MHG.** -ere, **G.** -er, **Goth.** -areis, fr. **OTeut.** which derives fr. **L.** ārius — (K.C.E.D.E.L.).

E. -or suff. denoting an agent or an instrument.— (1) **ME.** -or, -our, fr. **OE.** -eor, -eur (**F.** -eur), fr. **L.** -ōrem, acc. of -or, a suff. added to the pp. stem of verbs (Cp. e.g. actor, author); (2) **ME.** -or, -our, fr. **OF.** -eor, -eur (**F.** -eur), fr. **L.** -ātōrem acc. of -ātor (Cp. e.g. donor, emperor); see -tor, -ator. Cp. the agential suff. -er. According to the general rule, -or is added to words of Latin -er to those of English origin — (K.C.E.D.E.L.).

அர்க்கம் *arkkam*, பெ. (n.) **நீர்க்காக்கை** (பிங்.); little cormorant. **ஆலர்க்கம்** பார்க்க; see *ālarkkam*.

அர்க்கம்

அர்க்கமலை *arkka-malai*, பெ. (n.) **திருவண்ணாமலைக்குக் கிழக்கேயுள்ள மலை;** a hill to the east of *Tiruvaṇṇāmalai*. "அர்க்கமா மலையுள தடுத்த கீழ்த்திசை" (அருணாசலபு. திருநகர. 36).

அருக்கமலை பார்க்க; see *arukka-malai*.

அர்க்குளா *arkkuḷa*, பெ. (n.) **மேற்புறம் நீலமாயும் அடிப்புறம் வெள்ளையாயு முள்ள நால் விரல் (அங்குல) நீளக் கடல்மீன்;** seer-fish, bluish above, silvery below, attaining 4 inches in length, *Cybium commer sonji*.

[அறக்குளா → அர்க்குளா.]

அறக்குளா பார்க்க; see *aṟakkuḷa*.

அர *ara*, பெ. (n.) பாம்பு; snake. "பையர விழுங்கப் பட்ட பசுங்கதிர் மதியம்" (சீவக. 1540).

ம. அரவு

[அர் → அர → அரவு. அரவுதல் = வருத்துதல். அர் → அரா → அர.]

அரக்கக்குரியான் *arakkakkuriyāṉ*, பெ. (n.) **மருள்;** bewilderment of the mind (சா.அக.).

அரக்ககத்தி *arakk(u)-agatti*, பெ. (n.) **சிற்றகத்தி;** a small variety of *agatti* tree, *Cassia cuspidata* alias *C. aegyptiaca* (சா.அக.).

அரக்கம்[1] *arakkam*, பெ. (n.) 1. **அரத்தம்;** blood. 2. **அவலரக்கு;** shellac. "அரக்கத்

தன்ன நுண்மணற் கோடுகொண்டு'' (பதிற்றுப். 30:27). 3. கொம்பரக்கு (சங்.அக.), அரக்குவகை; stick-lac. 4. அரக்கரிசி; seed-lac (சா.அக.). 5. அகில் (பரி.அக.); eaglewood.

ம. அரத்தம்

[உல் → உர் → உரு. உருத்தல் = எரிதல், அழலுதல். உல் → எல் = ஒளி, நெருப்பு, கதிரவன். எல் → எரி. எரி = நெருப்பு, சிவப்பு. உல் → அல் → அலத்தம் → அலத்தகம் = செம்பஞ்சுக் குழம்பு. அல் → அர் → அரகு → அரக்கு = சிவந்தது. அரக்கு → அரக்கம்.]

அரக்கம்[2] *arakkam*, பெ. (n.) 1. **நன்னாரி** (மலை.); Indian sarasaparilla. 2. **திருநாமப் பாலை** (வை.மூ.); oval-leaved China root, *Smilax macrophylla* (செ.அக.) — wild sarasaparilla (சா.அக.).

அரக்கரிசி *arakk(u)-ariši*, பெ. (n.) அரக்குவகை; seed-lac.

[அரக்கு + அரிசி.]

அரக்கு பார்க்க: see *arakku*.

அரக்கல்[1] *arakkal*, பெ. (n.) **அரசிறைத் தவணை** (T.A.S. iii, 62); an instalment of land tax.

ம. அரக்கல்

அரக்கல்[2] *arakkal*, தொ.பெ. (vbl.n.) அரக்குதல் பார்க்க; see *arakku-*.

அரக்கன்[1] *arakkan*, பெ. (n.) 1. **ஆறடிக்குமேல் வளர்ந்து பருத்தவுடம்பும், பெரும்பாலும் கருத்த மேனியும், பெருவலிமையும் கொண்டு, பிறரை வருத்தும் நாகரிகப் பண்பாடற்ற மாந்தன்**; inhumanly wicked person of gigantic stature. 2. **பண்டைக்காலத்தில் இலங்கையிலும் பிற விடங்களிலும் இருந்ததாகத் தவறாகக் கருதப் படும் ஒருவகைப் பூதமாந்தரினத்தான்**; one of an anthropomorphous race of demons erroneously considered to have inhabited Ceylon and other places in pre-historic times. ''அரக்கரோ ரழிவுசெய்து கழிவரேல்'' (கம்பரா. கிட்கிந்தா. வாலிவதை. 87). 3. **பலரைத் துன்புறுத்துங் கொடியவன்**; one who harasses and ruins many.

ம. அரக்கன்; பிராகி. ரக்க.

[அரக்குதல் = வருத்துதல், அழித்தல். அரக்கு → அரக்கன்.]

அரக்கன்[2] *arakkan*, பெ. (n.) **அசுரன் (சுரர் என்னும் தேவர்க்குப் பகைவராகவும், வானத்தில் இயங்கும் பதினெண் கணத்தாருள் ஒரு கணத்தாராகவும் சொல்லப்படும் அசுரர் வகுப்பினன்)**; one of the class of demons called Asurās warring with the gods and forming one of the 18 classes of celestial hosts. ''ஆம்பன்முக வரக்கன்'' (கல்லா. கண. 19).

பதினெண்கணம் என்பது ஆரியத் தொன்மப் பகுப்பு. தொன்மம் (த.) என்பது புராணம் (வ.).

பதினெண்கணத்துள் அரக்கரும் அசுரரும் வெவ்வேறு கணத்தாராகவே கூறப்படுகின்றனர். 'நிசாசரர்' என்னும் பெயர் அவ்விரு கணத்தார்க்கும் பொதுவாயிருப்பது, அவ் வேற்றுமையை விலக்கவில்லை.

''அமரர் சித்தர் அசுரர் தைத்தியர்
கருடர் கின்னரர் நிருதர்கிம் புருடர்
காந்தருவர் இயக்கர் விஞ்சையர் பூதர்
பசாசர் அந்தரர் முனிவர் உரகர்
ஆகாய வாசியர் போகபூ மியர்எனப்
பாகு பட்டன பதினெண் கணமே''
(பிங். 1 : 92).

இதில் அசுரர், பூதர், முனிவர், உரகர் என்பன தமிழ்ச்சொற்கள். கருடர் என்பது கலுழர் என்பதன் திரிபு.

நிருதர் என்பவர் தமிழில் அரக்கர் அல்லது இராக்கதர் என்றே குறிக்கப்படுவர். அசுரரும் அரக்கரும் இருவேறு கணத்தா ரென்றே திவாகரத்திலும் பிங்கலத்திலும் குறிக்கப் பட்டுள்ளனர். பிங்கலம் நிருதரையும் அரக்கரையும் வெவ்வேறாகப் பிரித்துக் கூறியிருப்பினும், அசுரரை அவரொடு மயக்கவில்லை. அதனால், அரக்கன் என்னுஞ் சொல்லை அசுரன் என்னும் பொருளில் ஆள்வது தவறேயாம்.

அரக்கன் என்னுஞ் சொல்லும் பொருளும் தமிழாதலால், அச் சொல் இங்குக் கொள்ளப் பட்டது.

ராக்ஷத என்னும் வடசொல்லின் திரிபான இராக்கதன் என்பதன் சிதைவே அரக்கன் என்பது தவறாகும்.

இராக்கதன் பார்க்க; see *irākkadan*.

அரக்கன்[3] *arakkan*, பெ. (n.) **சூடுபோடுதற்குரிய மாடு** (யாழ்ப்.); cattle for branding (J.).

அரக்காணி *arakkāṇi*, பெ. (n.) **செம்புளிச்சை**; a kind of fragrant wood tree like cedar (சா. அக.).

[*அரக்கம் + ஆணி.*]

அரக்காந்தம் *arakkāndam*, பெ. (n.) *அரக்குக் காந்தம் பார்க்க;* see *arakku-k-kāndam.*

[*அரக்கு + காந்தம் — அரக்குக்காந்தம் → அரக்காந்தம்.*]

அரக்காம்பல் *arakk(u)-āmbal*, பெ. (n.) **செவ்வாம் பல்** (பிங்.); red water-lily, *Nymphae rubra.* "அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ" (முத்தொள். 110).

ம. அரக்காம்பல்

[*அரக்கு (சிவப்பு) + ஆம்பல்.*]

அரக்கி[1] *arakki*, பெ. (n.) 1. **கொடிய பெண்**; wicked and fierce woman. 2. (தொன்.) **அரக்க இனப் பெண்**; (Myth.) anthropomorphous demoness. "மைவண்ணத் தரக்கி" (கம்பரா. பால. அகலி. 24).

[*அரக்கு → அரக்கி. அரக்குதல் = வருத்துதல்.*]

அரக்கி[2] *arakki*, பெ. (n.) 1. **கடுக்காய்**; Indian gall-nut, *Terminalia chebula.* 2. **சேங்கொட்டை**; marking nut, *Semcarpus anacardium.* 3. **கல் லுப்பு**; a kind of salt, dug out from the beds of salt deposited at the bottom of the sea. 4. **மனோசிலை**; red arsenic, *Arsenicum rubrum* (சா.அக.). 5. **ஒரு நஞ்சு (பாடாணம்)**, (வை.மூ.); poison.

[*அரக்குதல் = உராய்தல், தேய்த்தல், சிதைத் தல், தறித்தல், ஒடுக்குதல், குறைத்தல், வருத்து தல், வெட்டுதல். அரக்கு + இ (வி.முத. ஈறு)— அரக்கி.*]

அரக்கிநட-த்தல் *arakki-naḍa-*, 3 செ.கு.வி. (v.i.) 1. **நெளிந்துநடத்தல்** (வின்.); to wriggle as a snake, to waddle. 2. **தொடைகள் ஒன்றோ டொன்று உராய நடத்தல்;** to walk with difficulty, as a man whose thighs rub against each other while walking. அவன் அரக்கி நடக்கிறான் (உ.வ.).

அரக்கு-தல் *arakku-*, 4 செ.கு.வி.(v.i.) **நெளிந்து நடத்தல்**; to waddle. —, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **அழுத்துதல்;** to press down. "விரலாற் றலைய ரக்கினான்" (தேவா. 5 . 20 : 10). 2. **தேய்த்தல்;** to rub with the palm of the hand or the sole of foot. கண்ணரக்கல் (சினேந். 456). "அரக்க னீரைந்து வாயு மலறவே யரக்கினா னடியாலும்" (தேவா. 5 . 27 : 10). 3. **கனத்தவுடம்பை இருப்புவிட்டுப் பெயர்த்தல்** (யாழ்ப்.); to push, drag or otherwise move, as a heavy body (J.). 4. **குழந்தை புட்டத்தை நிலத்தில் தேய்த்துப் பெயர்தல்;** to move by rubbing the buttocks against the ground, as a child. பிள்ளை யரக்கி யரக்கி வந்தது (உ.வ.). 5. **துடைத்தல்;** to wipe, as tears. "பெருமதர் மழைக்கண் வருபனி யரக்கி" (பெருங். உஞ்சைக். 33 : 136). 6. **அரைத்தல்;** to grind. 7. **வருத்துதல்;** to cause trouble to, afflict. "எல்லரக்கு மயினுதிவே லிராவணனும்" (கம்பரா. சுந்தர. ஊர்தேடு. 230). 8. **சிதைத்தல்** (சூடா.); to waste, ruin. 9. **கிளைதறித்தல்;** to clip off, prune. 10. **வெட்டுதல்;** to cut, sever. "தாளுந் தோளு மரக்கி" (விநாயகபு. 42 : 4). 11. **குறைத்தல்;** to cause to diminish. "காரரக்குங் கடல்" (தேவா. 1 . 65 : 8). 12. **வாய்நிறைய உண்ணு தல்;** to eat incessantly in large mouthfuls. ஆடு குழையரக்குகிறது (இ.வ.). 13. **முழுது முண்ணுதல்** (இ.வ.); to eat up. 14. **கரத்தல்;** to hide, conceal. (திவ். திருச்சந். 32, வியா.). 15. **அழித்தல்** (சங்.அக.); to destroy.

ம. அரக்குக; க. அரகு; தெ. அரகு, அருகு.

[*அரங்குதல் = அழுந்துதல், வருந்துதல், அழிதல். அரங்கு (த.வி.) → அரக்கு (பி.வி.).*]

அரக்கு[1] *arakku*, பெ. (n.) 1. **சிவப்பு;** redness. "அரக்குண் பஞ்சிக டிரட்டி" (சீவக. 1564). ம., க. அரக்கு. 2. **செம்மெழுகு;** sealing wax. "தீயூட்டரக்கே யென்ன வுருகி" (கந்தபு.அசுர. மார்க்கண். 95). 3. **சாதிலிங்கம்;** vermilion. "அங்கை யரக்குத் தோய்ந்தன்ன சேயிதழ்" (சிறுபாண். 74). 4. **அரக்கு மஞ்சள்;** saffron root (சா.அக.). 5. **தேன்** (சங்.அக.); honey. 6. **எள்ளுக்காயிற் காணும் ஒருவகை நோய்;** a disease peculiar to sesame pods. 'மகுளி பாயாது = அரக்குப் பாயாமல்' (மலைபடு. 103, நச். உரை). 7. **சாயம், மசி, முத்திரை முதலியவற்றிற்குதவும் பிசின் போன்ற ஒரு சரக்கு;** lac.

ம. அரக்கு; க., து. அரகு; தெ. லாகா; குரு. அரகு.

[*உல் → உல. உலத்தல் = காய்தல். உல → உலர். உல் → உர் → உரு. உருத்தல் = எரிதல், அழலுதல். உல் → அல் → அள் → அழல். அல் → அல → அலத்தம் = செம்பருத்தி. அலத்தம் →*

அலத்தகம் = செம்பஞ்சுக் குழம்பு. அல் → அர் → அரம் = சிவப்பு. அரம் → அரன் = சிவன். அர் → அர → அரகு → அரக்கு = சிவப்பு, சிவந்த பொருள். நெருப்பின் நிறம் சிவப்பாதலால் நெருப்புக் கருத்தினின்று சிவப்புக் கருத்துத் தோன்றிற்று.]

அரக்குண்டாகும் வகை (How lac is formed):

ஒருவகைப் பூச்சியினத்தின் பெண், மரத்தில் துளையிட்டு அதில் முட்டையிட்டு வதியும் போது, அதன் உடம்பினின்று கழியும் பிசின் போன்ற பொருளே அரக்கு. அது சாயங் காய்ச்சவும், மசி கூட்டவும், பல்வேறு மருந்து செய்யவும் பயன்படுத்தப்படுகிறது. The female of the species of insect called *Coccus lacca hemiptera* makes holes in the bark of certain trees in order to lay its eggs in. The incrustation there is called 'lac', and it is in fact formed by the exudation from the bodies of the insects. It is universally employed for dyeing red and also used in preparation of native ink and in various medical treatments (சா.அக.).

அரக்கின் வகைகள் (The different varieties of lac):

1. பச்சையரக்கு - gum lac.
2. சிவப்பரக்கு, செம்பரக்கு - red lac, sold in the bazaar in the form of square cakes.
3. கட்டியரக்கு - lump wax, seed-lac melted into masses.
4. முத்திரையரக்கு அல்லது செய்மெழுகு - sealing wax or gum lac incorporated with resin.
5. அரிசியரக்கு - seed-lac appearing in a granulated form, deprived of its resinous quality.
6. அவலரக்கு - shellac, the most common form in which the lac is known.
7. கொம்பரக்கு - stick-lac, a substance in its natural state, sticking to the twigs of the tree.

Note: The insect *Caccus lacca* (Indian origin) should not be confounded with that of the Mexican, cochineal insect called *Coccus cacti* introduced into India from Mexico by the East India Company about the year 1799 (சா.அக.).

அரக்கு[2] ***arakku***, பெ. (n.) கஞ்சி (நாமதீப.); gruel.

அரக்குக்கச்சி ***arakku-k-kacci***, பெ. (n.) 1. செம்முள்ளங்கி; a red variety of country radish, *Raphanus sativus* alias *R. radicula*. 2. கெம்பு முள்ளங்கி அல்லது சிவப்பு முள்ளங்கி; red country radish, *Daucus carota* (சா.அக.).

அரக்குக்காந்தம் ***arakku-k-kāndam***, பெ. (n.) ஒருவகைக் காந்தக்கல் (வின்.); magnetic iron-stone used medicinally.

[அரக்கு + காந்தம்.]

அரக்குக்குகை ***arakku-k-kugai***, பெ. (n.) 1. மாழையுருக்கும் ஒருவகைக் குகை; a kind of crucible for melting metals. 2. சிவப்புக் குகை; a red crucible (சா.அக.).

[அரக்கு + குகை.]

அரக்குக்குப்பி ***arakku-k-kuppi***, பெ. (n.) சிவப்புப்புட்டி; a red bottle.

[அரக்கு + குப்பி.]

அரக்குச்சந்தனாதி ***arakku-c-candaṉādi***, பெ. (n.) கொம்பரக்குடன் சில கடைச்சரக்குகளை நல்லெண்ணெயிற் சேர்த்துக் காய்ச்சி வடிக்கும் ஒருவகை யெண்ணெய்; a medicinal oil prepared by boiling and filtering, a mixture of gingelly oil with a few other ingredients.

இதை உடம்பில் தேய்ப்பதனால் தீராத காய்ச்சல் தீரும்; Rubbing the body with this oil is said to be an infallible cure in cases of persistent and chronic fevers.

[அரக்கு + சந்தனம் + ஆதி (வடநாட்டுச் சொல்). இதை முழுத் தமிழில் அரக்குச் சந்தன முதலி எனலாம்.]

அரக்குச்சாயம் ***arakku-c-cāyam***, பெ. (n.) 1. சீலைகளுக்கூட்டும் கருஞ்சிவப்புச் சாயம்; lac dye, colouring matter extracted from stick-lac. 2. மெருகெண்ணெய் (M.M.); varnish with lac as its chief ingredient.

[அரக்கு + சாயம்.]

அரக்குச்சாராயம் ***arakku-c-cārāyam***, பெ. (n.) வேலம்பட்டை சேர்த்துக் காய்ச்சிய தென்னங்கள் அல்லது பனங் கள் (இராட்.); arrack, spirituous liquors distilled by boiling the bark of *vēl* with toddy or palm wine.

[அரக்கு+சாராயம். சாறாயம் → சாராயம்.]

அரக்குச்சொக்கட்டான் ***arakku-c-cokkaṭṭāṉ***, பெ. (n.) சேலைவகை; a kind of saree.

அரக்குநாயகி *arakku-nāyagi*, பெ. (n.) **செங்குருந்து;** red canary, *Gluta travancoria* (சா. அக.).

அரக்குநீர் *arakku-nir*, பெ. (n.) 1. **சாதிலிங்கங் கலந்த நீர்;** vermilion water, used for sprinkling on festive occasions. "அரக்குநீர்ச் சிவிறி யேந்தி" (சீவக. 2657). 2. **ஆலத்தி நீர்;** solution of saffron and lime ceremoniously waved in front of a bridal couple to ward off the evil eye. "அரக்குநீர் சுழற்றி" (விநாயகபு. 80 : 277). 3. **அரத்தம்;** blood. "புண்ணிடை யரக்குநீர் பொழிய" (சூத. முத்தி. 7:25), (செ. அக.). 4. **அரத்தநீர்;** the serum of the blood (சா.அக.). 5. **ஒரு நறுமண நீர்;** a perfumed water (சா.அக.).

அரக்குப்புளிப்பு *arakku-p-pulippu*, பெ. (n.) **அரக்கினின்று உண்டாக்கும் ஒருவகைப் புளிப்பு;** a peculiar acid prepared from lac, laccic acid (சா.அக.).

[அரக்கு + புளிப்பு.]

அரக்குப்பூச்சி *arakku-p-pūcci*, பெ. (n.) **அரக்கை உண்டாக்கும் ஒரு பூச்சிவகை;** lac insect.

[அரக்கு + பூச்சி.]

அரக்குப் பேய்ப்பீர்க்கு *arakku-p-pēy-p-pirkku*, பெ. (n.) **மெழுகுப் பேய்ப்பீர்க்கு;** a kind of bitter luffa, *Luffa amara* (சா.அக.).

[அரக்கு + பேய் + பீர்க்கு.]

அரக்குமஞ்சள் *arakku-mañjal*, பெ. (n.) 1. **கருஞ்சிவப்பு மஞ்சள்;** saffron root of a deep yellow colour (செ.அக.) — **மஞ்சள்வேர்க் கொம்பு;** dark-red saffron, *Curcuma longa*. 2. **சிவப்பு மஞ்சள்;** red saffron (சா.அக.).

அரக்குமாளிகை *arakku-māligai*, பெ. (n.) **பாண்டவரை வஞ்சனையாற் கொல்லத் துரியோதனன் அரக்கினாற் செய்வித்த பெருமனை;** wax palace built by Duryōdhana to carry out his scheme for the destruction of the Pāṇḍavās.

"அரக்கு மாளிகைஇப் படியினால்
இயற்றிய தொழில்"
(பாரத. வாரணா. 122).

அரக்குமுத்திரை *arakku-muttirai*, பெ. (n.) **அரக்கில் இடப்பட்ட முத்திரை;** stamp impressed with sealing wax.

அரக்குமெழுகு *arakku-meḻugu*, பெ. (n.) **பச்சையரக்கு;** lac in its raw state. "எரியணை அரக்கு மெழுகும் ஒக்கும்" (திவ். திருவாய். 2.4:3).

அரக்குரோசா *arakku-rōšā*, பெ. (n.) **சிவப்பு உரோசாப்பூ;** dark red rose.

[அரக்கு = சிவப்பு. E. rose > த. உரோசா.]

உரோசா மலரைத் தமிழில் முளரிகை யெனலாம்.

அரக்குவட்டச்சாரணை *arakku-vaṭṭa-c-cāraṇai*, பெ. (n.) **சிவப்புவட்டச்சாரணை;** the red variety of *vaṭṭaccāraṇai* (round-leaved trianthema).

அரக்குவளையல் *arakku-vaḷaiyal*, பெ. (n.) **அரக்கினாற் செய்த கையணி;** wax bracelet covered with thin brass leaf tinsel.

அரக்குவிசிறி *arakku-višiṟi*, பெ. (n.) **சேலை வகை;** a kind of saree.

அரக்குவை-த்தல் *arakku-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) **அரக்குமுத்திரையிடுதல்;** to seal with wax.

அரக்கெண்ணெய் *arakk(u)-eṇṇey*, பெ. (n.) **கொம்பரக்குடன் அமுக்கிறாவேர், ஆவின்பால், பழங்காடி, நல்லெண்ணெய், சில கடைச் சரக்குகள் முதலியவற்றைச் சேர்த்துக் காய்ச்சி வடித்த தலைமுழுக் கெண்ணெய்;** a medicated oil obtained by boiling stick-lac, Indian winter cherry and other ingredients in a mixture of cow's milk, seasoned vinegar and gingelly oil, anointed preparatory to bath, shellac oil (சா.அக.).

[அரக்கு + எண்ணெய்.]

அரகண்டரி *arakaṇḍari*, பெ. (n.) **பாசிப்பயறு;** green gram (சா.அக.).

அரகதி *aragadi*, பெ. (n.) **செவ்வல்லி;** red lily, *Nymphae rubra* (சா.அக.).

அரகம் *aragam*, பெ. (n.) 1. **ஒரு பூண்டு;** a plant, *Blyxa ottandra*. 2. **கம்பிழ்;** a plant, *Gardenia enneandra* (சா.அக.).

அரகர *aragara*, பெ. (n). **வழிபாட்டில் அல்லது வழுத்திற் சிவனை விளிக்கும் விளிப்பெயர்;** address to Šiva in invocation or praise. "அரகர முழக்கஞ் செய்வோர்" (திருவிளை. இந்திரன் முடி. 17).

[அரன் = சிவன். அரன் → அர (விளி). அர + அர – அரவர (விளியடுக்கு) → அரகர. வ → க, போலி.]

அழிப்பவன் என்று பொருள்படும் 'ஹர' என்னும் சமற்கிருதச்சொல் வேறு; செவ் வண்ணன் என்று பொருள்படும் 'அரன்' என்னும் தமிழ்ச்சொல் வேறு.

அரன் பார்க்க; see *araṉ.*

அரங்கக்கூத்தி *araṅga-k-kūtti*, பெ. (n.) **நாடக மேடையில் நடிக்கும் அல்லது நடஞ்செய்யும் பெண்;** female actor or dancer on the stage. "அரங்கக் கூத்திசென் றையங் கொண்டதும்" (மணிமே. *24 : 22*).

[அரங்கம் + கூத்தி.]

அரங்கம் பார்க்க; see *araṅgam.*

அரங்கணி *araṅgaṇi*, பெ. (n.) *அறுவு* (இ.வ.); dried up source of a tank or well (Loc.).

[அரங்குதல் = அழுந்துதல், அழிதல், வற்றுதல். அரங்கல் + நீர் – அ ர ங் க னீ ர் → அரங்கணி (கொச்சைத் திரிபு). ஒ.நோ. தண்ணீர் → தண்ணி (கொச்சை).]

அரங்கநாதன் *araṅga-nādaṉ*, பெ. (n.) **திரு வரங்கத்தில் வழிபடப்படும் திருமால்;** Viṣṇu, as worshipped in *Tiruvaraṅgam* (Śriraṅgam).

*[அரங்கம் + **Skt.** nātha > த. நாதன் = தலைவன், கடவுள்.]*

அரங்கபூசை *araṅga-pūšai*, பெ. (n.) *1.* **போர்த் தொடக்கத்தில் கொற்றவை யென்னும் வெற் றித் தெய்வமாகிய காளிக்குச் செய்யும் வழி பாடு;** worship of *Koṟṟavai* (*Kāḷi*), the goddess of victory, preliminary to a battle.

"மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவைநிலையும் அத்திணைப் புறனே"

(தொல். பொருள். புறத். *4*). *2.* **பந்தய விளை யாட்டின் தொடக்கத்திற் செய்யும் வழிபாடு;** worship at the commencement of an athletic contest. "சினந்தணிந் தரங்கபூசை செய்வன்" (பாரத. வாரணா. *64*). *3.* **நாடகத் தொடக் கத்திற் செய்யும் வழிபாடு;** worship preliminary to a dramatic performance.

[அரங்கம் + பூசை.]

அரங்கம் பார்க்க; see *araṅgam.*

அரங்கம் *araṅgam*, பெ. (n.) *1.* **ஆற்றிடைக் குறை;** island formed by a river or rivers, ait. "ஆற்றுவீ யரங்கத்து" (சிலப். *10:156*). *2.* **திரு வரங்கம்;** Śriraṅgam. "அண்டமுந் தானாய் நின்ற எம்பெருமான் அரங்கமா நகரமர்ந் தானே" (திவ். பெரியதி. *5 . 7 : 1*). *3.* **நாடக மேடை;** stage. ம. அரங்ங. *4.* **நாடகசாலை;** theatre, dancing hall. "ஆடம் பலமு மரங்க முஞ் சாலையும்" (சீவக. *2112*). *5.* **அவைக் களம்;** hall for assembly of learned men. *6.* **அவை** (திவா.); assembly of learned men. *7.* **சூதாடுமிடம்** (பிங்.); gambling house. *8.* **படைக்கலம் பயிலுமிடம்** (சூடா.); school for practice of arms. *9.* **சிலம்பக்கூடம்;** fencing school. *10.* **மற்போர்க்களம்;** wrestling arena. *11.* **போர்க்களம்;** battle-field. *12.* **கமுக்கம்** (இ.வ.); secrecy (Loc.). திருமணம் முடியும் வரை எல்லாச் செய்திகளையும் அரங்கமாய் வைத்துக்கொண்டார்கள் (உ.வ.).

ம. அரங்ங

[அரங்கு = அறை, அறைவகுத்த இடம். அரங்கு → அரங்கம் = ஆற்றுநீரால் அறுக்கப் பட்ட திட்டை, மேடை, விளையாட்டிற்கும் போர்க்கும் வகுக்கப்பட்ட இடம்.]

அரங்கு பார்க்க; see *araṅgu.*

அரங்கமேடை *araṅga-mēdai*, பெ. (n.) **நாடகம் நடிக்கும் அல்லது நடஞ்செய்யும் இடம்;** stage.

[அரங்கம் + மேடை.]

அரங்கவாசல் *araṅga-vāšal*, பெ. (n.) **நகர்முற்ற வெளி** (புதுவை); esplanade (Pond.).

[அரங்கம் + வாசல். வாயில் → வாயல் → வாசல்.]

அரங்கல்களிம்பு *araṅgal-kaḷimbu*, பெ. (n.) **கட்டிகளைக் கரைக்கவும், அவற்றைப் பழுக்க அல்லது அழுந்திப்போகும்படி செய்யவும், வீக்கங்களை மெதுவாக்கவும் தடவும் ஒரு வகைக் களிம்பு;** an ointment or paste used in medical practice for reducing, ripening, suppressing or suppurating an abscess (சா.அக.).

[அரங்கு → அரங்கல்.]

அரங்கு-தல் பார்க்க; see *araṅgu-.*

அரங்கன் *araṅgaṉ*, பெ. (n.) **திருவரங்கப் பெரு மாள்;** Viṣṇu, as worshipped at *Tiruvaraṅgam* (Śriraṅgam). "அண்டர்கோ னணியரங்கன்" (திவ். அமலனாதி. *10*).

ம. அரங்ஙன்; க. ரங்கனு; தெ. ரங்கடு.

[அரங்கம் → அரங்கன்.]

அரக்கு

அயிலை



அரக்கு (வில்லை)



அரிசியரக்கு

அவலரக்கு



கொம்பரக்கு



அரக்குப்பூச்சி

அரங்கி *arangi*, பெ. (n.) 1. *நடனக்காரி;* dancing girl. ''மடவா ராயிரம்பே ருண்டென் றரங்கி யறியாளோ'' (கூளப்ப. காதல், 359). 2. *செய்திகளை மறைத்துவைக்கும் வஞ்சகக் காரி;* taciturn and deceitful woman. 'ஆரை நம்பினாலும் அரங்கியை நம்பக்கூடாது' (பழ.).

[*அரங்கு → அரங்கி = 1. அரங்கில் ஆடுபவள். 2. அறைக்குள்ளிருப்பவள் அல்லது அடக்கி வைப்பவள்.*]

அரங்கு-தல் *arangu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *தேய்தல்;* to wear away by friction. 2. *அழுந்துதல்* (உரி.நி.); to be pressed down. 3. *அம்பு முதலியன தைத்தல்;* to pierce, penetrate, as an arrow. ''வேலம்பு......துணை முலையினுள் ளரங்கி மூழ்க'' (சீவக. 293). 4. *சிதைதல்;* to be injured. 5. *குறைதல்;* to diminish. 6. *வருந்துதல்;* to suffer. ''கடகரிக் கோடரங் கிடவெழுங் குவிதடங் கொங்கையார்'' (கம்பரா. பால. எதிர்கொள். 33). 7. *உருகுதல்* (இ.வ.); to melt, as ghee (Loc.). நெய்யை அரங்கவை. 8. *கெடுதல், அழிதல், நீங்குதல்;* to be destroyed, to be removed. ''பிணியரங்க'' (கம்பரா. பால. குலமுறை. 2).

ம. அரங்நுக

[*அர் → அர → அரவு → அராவு. அர்→அரம். அரவு → அரகு → அரங்கு.*]

அரங்கு *arangu*, பெ. (n.) 1. *அறை;* room. வீடு அரங்கரங்கா யிருக்கிறது (உ.வ.). 2. *உள்ளறை* (நாநார்த்த.); inner room. 3. *பாண்டி (சில்லாக்கு) விளையாட்டிற்கு நிலத்திற் கீறியமைக்கப்படும் பலவறைக் கட்டம்;* chequered lines traced on the ground for playing *pāṇḍi*, a children's game.

''கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்''

(நற். 3). 4. *சூதாட்டத்திற்கு வகுக்கப்பட்ட பலவறைக் கட்டம்;* place or board chequered with squares for gambling. ''அரங்கின்றி வட்டாடி யற்றே'' (குறள், 401). 5. *சூதாடுமிடம்;* gambling house. ''அறிவிலாளர் சூதாடு மரங்கினும்'' (பிரமோத். 22 : 13). 6. *ஆற்றிடைக்குறை* (சங்.அக.); island formed within a river. 7. *நாடகமேடை;* stage. ''அவைபுக ழரங்கின்மே லாடுவாள்'' (கலித். 79). 8. *நடனக் கூடம்;* dancing hall. 9. *போர்க்களம்* (சங்.அக.); battle-field. 10. *மற்போர், குத்துச்சண்டை முதலியன நிகழும் இடம்;* arena. 11. *அவைக்களம்;* hall of learned assembly. 12. *கருவகம், சூல்;* womb, pregnancy. ''அரங்கி லவனென்னை யெய்தாமற் காப்பான்'' (திவ். இயற். நான். 30). 13. *திரைப்பட மனை, திரையரங்கு* (இக்.வ.); cinema theatre (Mod.).

ம. அரங்நு; க. ரங்க; தெ. ரங்கமு.

[*அர் → அறு. அர் → அர → அரவு → அரகு → அரங்கு = அறை, அறைக்கட்டம், அறுத்தமேடை, வரையறுத்த இடம்.*]

வரிப்பந்து (tennis), பூப்பந்து (badminton) முதலிய மேலை விளையாட்டுகட்கு அமைக்குங் கட்டத்தையும் (court) அரங்கு எனலாம்.

அரங்குவீடு *arangu-vīḍu*, பெ. (n.) *பாதுகாப்பான உள்ளறை* (நெல்லை); inner room, regarded as secure (Tn.).

அரங்கேற்றம் *arang(u)-ēṟṟam*, பெ. (n.) *ஒரு புலவரின் புதுநூல் அல்லது பனுவல், ஒரு கணிகையின் நடனத்திறமை முதலியவற்றை அறிஞரவையிற் காட்டி, அவரது ஒப்பம் பெறுகை;* presentation of a new literary work by its author or the first public performance of a dancing girl, before a learned assembly for approval.

ம. அரங்நேற்றம்

[*அரங்கு=மேடை. ஏறு → ஏற்று → ஏற்றம் = ஏறிப் புலமை அல்லது திறமை காட்டுகை.*]

அரங்கேற்று *arang(u)-ēṟṟu*, பெ. (n.) *அரங்கேற்றம் பார்க்க;* see *arang(u)-ēṟṟam.*

[*அரங்கு + ஏற்று – அரங்கேற்று (முத.தொ. பெ.).*]

அரங்கேற்று-தல் *arang(u)-ēṟṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. *ஒரு நல்லிசைப் புலவர் தம் புதுநூலை அல்லது பனுவலைத் தலையாய புலவரவையிற் படித்துக்காட்டி, அவர் நிகழ்த்தும் தடைகட்கெல்லாம் தக்க விடைகள் கூறி, அவர்தம் ஒப்பம் பெறுதல்;* to present, as an author, a new literary work, before an eminent body of learned men and get its approval, after countering all objections raised.

''எண்ணிய சகாத்த மெண்ணூற்
றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர்
தன்னிலே கம்ப நாடன்

பண்ணிய விராம காதை
பங்குனி யத்த நாளிற்
கண்ணிய வரங்கர் முன்னே
கவியரங் கேற்றி னானே''

(கம்பரா. பால. தனியன், மிகைப். 9). 2. ஓர் இளங்கணிகை, பயிற்சி முற்றியபின், தன் ஆடல் பாடலை இசையாசிரியர் முன்னும் நாடகவாசிரியர் முன்னும் ஆடிப்பாடிக் காட்டி, அவர்தம் ஒப்பமும் அரசனிடமிருந்து தலைக் கோற் பட்டமும் ஆயிரத்தெண் கழஞ்சு பொன் மதிப்பும் பெறுதல்; to give the first public performance, as a dancing girl, before competent authorities on the arts of singing and dancing and get their approval for proficiency, thus entitling her to receive the *Talaikkōl* title and eligibility to a prize of 1008 *kaḻañjus* of pure gold from the king (சிலப். அரங்கேற்று காதை).

ம. அரங்ஙேறுக

[அரங்கு=மேடை. ஏறு → ஏற்று. ஏற்றுதல்= மேடையேறிப் புதுநூலைப் படித்து விளக்கி அல்லது ஆடல்பாடலை நிகழ்த்திக் காட்டி, அறிஞரின் ஒப்பம் பெறுதல்.]

அரங்கேற்றுப்படி *araṅg(u)-ēṟṟu-p-paḍi*, பெ.(n.) அரங்கேற்றம் பார்க்க; see *araṅg(u)-ēṟṟam*.

அரங்கேறு-தல் *araṅg(u)-ēṟu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. புதுநூலாசிரியன் அல்லது இளங்கணிகை அறிஞரின் ஒப்பம் பெறுதல்; to get the approval of competent authorities, as an author or a dancing girl. 'அவருட் கவியரங் கேறினார் எழுவர் பாண்டிய ரென்ப' (இறை. 1, உரை). மாதவி கரிகாலன் முன்னிலையில் ஆடல்பாட லரங்கேறினாள். 2. புதுநூல் அல்லது கணிகை திறம் அறிஞரின் ஒப்பம் பெறுதல்; to be approved by the authorities, as a new treatise or a dancing girl's ability.

[அரங்கு (மேடை) + ஏறு.]

அரங்கு பார்க்க; see *araṅgu*.

அரங்கொழிசெய்யுள் *araṅgoḻi-šeyyuḷ*, பெ. (n.) புறநாடக வுருக்களுள் இறுதியானது; the last item in the list of the species of musical compositions relating to themes other than love and intended for theatrical performance. 'புற நாடகங்களுக்குரிய உருவாவன: தேவபாணி முதலாக அரங்கொழிசெய்யு ளீறாக வுள்ள செந்துறை விகற்பங்க ளெல்லா மென்க' (சிலப். 3 : 14, அடியார்க். உரை).

அரசகம் *araš(u)-agam*, பெ. (n.) 1. அரசினர் வீடு; government house. 2. அரசன்வாழ் மனை; royal residence. 3. அரசிருக்கை; seat of government. 4. செம்மணத்தி; a kind of fragrant wood tree (சா.அக.).

[அரசு + அகம்.]

அரசன் பார்க்க; see *arašaṉ*.

அரசகேசரி *araša-kēšari*, பெ. (n.) பிற்காலச் சோழர் ஒருவர்விட்டு ஒருவராகத் தாங்கி வந்த பட்டம், பரகேசரி என்பதற்கு எதிர்; a title borne by the later *Cōlas* alternately, opp. to *parakēšari*. 2. பரராசசேகரவரசன் காலத் தவரும் தமிழ் இரகுவமிச ஆசிரியருமான பெயர் பெற்ற யாழ்ப்பாணப் புலவர்; name of a famous Jaffna poet, author of the Tamil *Iragu-vamišam*, contemporary of the king Pararāša-šēgaraṉ.

[அரசன் → அரச > **Skt.** rāja. **Skt.** kēsarin > **த.** கேசரி (அரிமா). அரசகேசரி = பகை யரசர்க்கு அரிமாப் போன்றவன்.]

அரசங்கள் *arašaṅ-kaḷ*, பெ. (n.) அரசமரத்தி னின் றெடுக்குங் கள்; pipal toddy (செ.அக.) — அரசமரத்தினின்று வடியும் பதநீர்; the liquid product of the tree peepul, used medicinally (சா.அக.).

[அரசு (ஒரு மரம்) + அம் (சாரியை) + கள்.]

அரசசட்டம் *araša-šaṭṭam*, பெ. (n.) ஓர் இறந்து பட்ட கணிதநூல் (யாப். வி. பக். 528); a treatise on mathematics, now not extant.

அரசசின்னம் *araša-šiṉṉam*, பெ. (n.) அரசர்க் குரியனவாகச் சொல்லப்படும் அடையாளப் பொருள்கள் இருபத்தொன்று. அவை: மகுடம், குடை, கொடி, முரசு, பூமாலை, கவரி, அரியணை, யானை, சக்கரம், தோட்டி, சங்கு, மதில், தோரணம், நீர்க்குடம், கடல், சுறவு, ஆமை, இணைக்கயல், தீவம், அரிமா, விடை என்பன; the insignia of State and royal emblems numbering twenty-one, viz., crown, umbrella, flag, drum, garland, yak-tail fan, throne, elephant, wheel, elephant goad, conch, fort-wall, festoon, water-jar, sea, shark, turtle, pair of carp fish, lamp, lion and bull.

''முடிகுடை கவரி தோட்டி
முரசுசக் கரமே நால்வாய்
கொடிமதில் தோர ணம்நீர்க்
குடமலர் மாலை சங்கு

கடலொடு மகர மாமை
கயலிணை யரிமாத் தீபம்
இடபமா சனமு வேழு
மிறைதிருப் பொறிக ளாமே''
(சூடா. 12 : 121).

அரச சின்னமென்று மேற்குறித்த இருபத்தொன்றும் சின்னமல்ல; சில சின்னங்கள்; சில மங்கலப் பொருள்கள்; சில அரசனின் வலிமை பெருமை முதலிய சிறப்புகளைக் குறிப்பன.

முதன்மையான அரச சின்னங்களுள் ஒன்றான செங்கோல் இவற்றுட் சேர்க்கப் படாமை ஒரு குறையேயாம்.

அரசண்மை *araš(u)-aṇmai*, பெ. (n.) **நாட்டுக் கேடு ஆறனுள் ஒன்று**; approach or nearness of an enemy king, one of the six disasters that may befall a land.

''மிக்கபெய லோடுபெய லின்மையெலி விட்டில்கிளி
அக்கண ரசண்மையோ டாறு''
(குறள், 732, பரிமே. உரை).

[அரசு + அண்மை.]

அரசன் பார்க்க; see *arašaṉ*.

அரசநாகம் *araša-nāgam*, பெ. (n.) *பறவைமா* **நாகம்** (நாமதீப.); winged serpent.

அரசநீதி *araša-nīdi*, பெ. (n.) 1. *அரசியல் முறை;* kingly duties. 2. *அரசியல் நூல்;* political science, politics. ''அரசருக் கென்று கொண்டரச நீதியிற் சொன்னார்'' (பாரத. சூது. 71).

[அரசன் → அரச + **Skt.** nīti.*]*

அரசப்பள்ளி *araša-p-paḷḷi*, பெ. (n.) **வன்னியர் குலப் பிரிவுகளுள் ஒன்று;** a division of the Vaṉṉiya caste.

[அரசன் → அரச + பள்ளி.]

அரசப்புரசல் *araša-p-purašal*, பெ. (n.) **மிகக் குறைவு** (இ.வ.); scarceness, scantiness (Loc.).

[அரைதல் = தேய்தல். அரைதல் → அரைசல். புரைசல் = துளை, பொல்லம் பொத்துதல். அரைசல்புரைசல் (மீமிசைச் சொல்லான மரபிணை மொழி) → அரசல்புரசல் → அரசப் புரசல்.]

அரசம்பதநீர் *arašam-pada-nīr*, **அரசங்கள்** பார்க்க; see *arašaṅ-kaḷ*.

அரசம்புல்லுருவி *arašam-pul(l)-uruvi*, பெ. (n.) **அரசமரத்தின்மேல் முளைத்திருக்கும் புல்லுருவிச் செடி;** a parasite on the pipal tree.

[அரசு + அம் (சாரியை) + புல் + உருவி.]

அரசமாடம் *araša-māḍam*, பெ. (n.) **பெரும்பயறு** (நாமதீப.); chowli bean.

அரசமுத்திரைக்காரன் *araša-muttirai-k-kāraṉ*, பெ. (n.) **அரசனது முத்திரையை வைத்திருக்கும் அலுவலன்** (புதுவை); keeper of the privy seal (Poṇḍ.).

[அரசன் → அரச + முத்திரை + காரன்.]

அரசமுல்லை *araša-mullai*, பெ. (n.) **அரசன் பகைவரை வென்று குடிகளைக் காக்குந் திறமையைப் போற்றிக் கூறும் புறத்துறை;** theme extolling a king's power to destroy his foes and protect his subjects.

''செருமுனை யுடற்றுஞ் செஞ்சுடர் நெடுவே
லிருநிலங் காவல னியல்புரைத் தன்று''
(பு.வெ. 8 : 17).

[அரசன் → அரச + முல்லை.]

அரசர் *arašar*, பெ. (n.) 1. *அரசன் என்பதன் உயர்வுப் பன்மை;* hon. pl. of *arašaṉ* (king). 2. *அரசர்கள்;* pl. of *arašaṉ* (king).

அரசர்க்கரசன் *arašarkk(u)-arašaṉ*, பெ. (n.) **மன்னர்மன்னன் (சக்கரவர்த்தி)**; king of kings.

[அரசர்க்கு + அரசன்.]

அரசர்குணம் *arašar-kuṇam*, பெ. (n.) **அரசர்க்கு வேண்டிய தூங்காமை, கல்வி, துணிவுடைமை என்னும் முக்குணங்கள்** (சங்.அக.); the three indispensable qualities of kings, viz., vigilance, learning and power of determination.

''தூங்காமை கல்வி துணிவுடைமை
யிம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு'' (குறள், 383).

அரசர்க்கு இன்றியமையாத சிறப்புக் குணங்கள் ஏழு. அவற்றுள் நான்கை இயல் பென்றும், மூன்றைக் குணமென்றும் பிரித்துக் கூறுவது பொருந்தாது. ஏழு குணங்களையும் ஒரே குறளில் அடக்கிக் கூற இயலாமை பற்றியே, அவற்றை இரு குறள்களில் கூறினார் திருவள்ளுவர்.

அரசரெழுகுணம் பார்க்க; see *arašar-eḻu-kuṇam*.

அரசர்குழு *arašar-kuḻu*, பெ. (n.) ஐம்பெருங்குழு பார்க்க; see *aim-peruṅ-kuḻu*.

அரசர்சின்னம் *arašar-siṉṉam*, பெ. (n.) *அரச சின்னம்* பார்க்க; see *arašа-šiṉṉam*.

அரசர்பக்கம் *arašar-pakkam*, பெ. (n.) அரசரின் **ஓதல், ஈதல், காத்தல், படைக்கலம் பயிறல், பொருதல், தண்டஞ்செய்தல் என்னும் அறுவகைத் தொழில்கள்;** occupations of a king, six in number, viz., learning, liberality, protection of subjects, practice of arms, warfare and chastisement.

[பக்கம் = பகுதி. அரசர்பக்கம் = அரசர் தொழிற்பகுதி அல்லது கடமைக் கூறு.]

அரசர் தொழில் ஆறே யன்றி ஐந்தல்ல. ''ஐவகை மரபி னரசர் பக்கமும்'' என்று தொல்காப்பியத்துள் (புறத். 20) காணப்படுவது வழுவாகும். தொல்காப்பியர் கருத்து இவ்வாறிருக்க முடியாது. இஃது ஏடெழுதுவோரால் ஏற்பட்ட பிழை எனக் கருத இடமுளது. 'அவ்வகை' என்பதனை 'ஐவகை' என்று பாடங் கொண்டுள்ளனர். இப் பாடத்திற்கேற்ப, 'ஓதல் வேட்டல் ஈதல் காத்தல் தண்டஞ்செய்தல் என்னும் ஐவகை யிலக்கணத்தை யுடைய அரசியற் கூறு' என்று, நச்சினார்க்கினியரும் தவறாக உரை கூறியுள்ளார்.

அந்தணர் அரசர் வைசியர் சூத்திரர் என்னும் நால்வகுப்பார்க்கும், ஒரொக்க அவ்வாறு தொழிலே சூடாமணி நிகண்டு கூறுதல் காண்க (12 : 52, 53, 54).

''ஓதல் பொருதல் உலகு புரத்தல்
ஈதல் வேட்டல் படைபயிற லறுதொழில்''

என்று பிங்கலத் தொகுதியும் (நிகண்டும்) அரசர் தொழிலை ஆறாகவே கூறுகின்றது (5:42).

''அறனிழுக்காது'' (384) என்னும் குறளுரையில், பரிமேலழகரும், 'அவ் வறமாவது, ஓதல், வேட்டல், ஈதலென்னும் பொதுத் தொழிலினும், படைக்கலம் பயிறல், பல்லுயிரோம்பல், பகைத்திறந் தெறுதல் என்னுஞ் சிறப்புத் தொழிலினும், வழுவாது நிற்றல்' என்று அரசர் தொழில் ஆறென்றே குறித்துள்ளமை காண்க.

சேர சோழ பாண்டியர்குடி படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வருவதென்று, பரிமேலழகரும் ஒப்புக்கொண்டுள்ளமையால், வேட்டல் என்னும் பிற்கால ஆரியத் தொழில் தமிழரசர்க்குரிய தாகாது. ஆகவே, வேட்டல் என்பதற்குத் தலைமாறாகப் பொருதலையே அரசர் தொழிலாகக் கொள்ளல் வேண்டும். காத்தலும் தண்டஞ்செய்தலும் போரால் நிகழ்தலாலும், படைக்கலம் பயிறல் போருக்கேயாதலாலும், பொருதல் அரசர்க்கு இன்றியமையாத தொழிலாம். பிங்கலமும் பொருதலை அரசர் அறுதொழிலுள் ஒன்றாகக் குறித்திருப்பது கவனிக்கத் தக்கது. ''நுந் தமரேல் வெஞ்சமராம்'' என்னும் தனிப்பாடல் தொடரும் இவ் வுண்மையை வலியுறுத்தும்.

தண்டஞ்செய்தல் என்பது குற்றஞ் செய்த குடிகளைத் தண்டித்தலையுங் குறித்தலால், அதனுள் பொருதல் அடங்காது. மேலும், தண்டஞ்செய்தல் கருதிப் பகைமேற் செல்லும் வல்லரசும், ஒருகால் எதிர்பாராத கரணியங்களால் (காரணங்களால்) தோல்வியடைந்து தானே தண்டனைக்குள்ளாகினும் ஆகலாம்.

''ஓதலே வேட்டல் ஈதல்
உலகோம்பல் படைப யிற்றல்
மேதகு போர்செய் தீட்டல்
வேந்தர்செய் தொழில்கள் ஆறே''

என்று சூடாமணி நிகண்டும் (12:52) போரை அரசரறுதொழிலுள் ஒன்றாகக் குறிக்கின்றது.

இங்ஙனம், பொருதலும் அதற்கின்றியமையாத படைக்கலப் பயிற்சியும் அரசரின் முதன்மையான தொழில்களாம்.

இனி, போர்செய்தீட்டல் என்று, சூடாமணியார் போரைப் பொருளீட்டல் வகையாகக் குறித்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

''உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்''
(குறள், 756)

என்றது பொதுமறையும்.

இனி,

''..................................ஒன்னார்
ஆரெயி லவர்கட் டாகவு நுமதெனப்
பாண்கட னிறுக்கும் வள்ளியோய்''
(புறநா. 203 : 9-11),

''அரிய வெல்லா மெளிதி னிற்கொண்
டுரிய வெல்லா மோம்பாது வீசி''
(மதுரைக். 145-6),

''பெரிய வாயினு மமர்கடந்து பெற்ற
அரிய வென்னா தோம்பாது வீசி''
(பதிற்றுப். 44 : 3-4)

என்பவற்றால், அரசரது ஈதல் தொழிலுக்கும் போர் ஏதுவாகு மென்பது பெறப்படும்.

ஆதலால், நச்சினார்க்கினியர் கூறிய வேட்டலை நீக்கிவிட்டுப் படைக்கலம் பயிறல், பொருதல் என்னும் இரண்டையுஞ் சேர்த்து ஆறாக்கி,

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்பதன்கீழ்

"ஐவகை மரபின் அரசர் பக்கமும்" என்பதை

"அவ்வகை மரபி னரசர் பக்கமும்" என்று மாற்றிப் பாட மோதுவதே தக்கதாம். இங்ஙனம் ஓதின் பொருள் நிரம்புவதொடு, தொல்காப்பியமும் வழுவுதலின்றாம்.

அரசர்பரி *arašar-pari*, பெ. (n.) ***பெண்டிர் மணம்போல மிக்க மணத்ததாய், வாழைப்பூ மடல் போன்ற செவியுடையதாய், நாற்காலும் முன்புறமும் முதுகும் பிடர்த்தலையும் முகமும் வெண்மையாய், 82 விரலம் (அங்குலம்) உயர்ந்ததாயுள்ள அரசர்க்குரிய குதிரை;*** royal horse, supposed to have fragrant smell like women, ears like the petals of a plantain flower, with legs, forepart, back, neck and face all white, and a height of 82 inches.

"மாதர்தம் மணமென மிக்க மணத்தது
வாழை மடலென வளர்ந்த செவியது
நாலு தாளும் எருத்தும் முகனும்
வெந்நு முன்னும் வெண்மை யுடையதாய்
எண்பத் திருவிர லுயர முயர்ந்தது
பண்புடை யரசர்க் காவது பரியே"
(பிங். 6 : 1493).

அரசர்பா *arašar-pā*, பெ. (n.) ***அரசர்க்கே யுரிய தாகப் பாட்டியல்கள் கூறும் அகவல் என்னும் ஆசிரியப்பா;*** *Agaval* metre, the kind of verse prescribed by treatises on Poetics, to be used exclusively in respect of kings. "அரசர் பாவா லாற்றுப் படைமேல்" (இலக். வி. 873). "காவலர் சாதியாகிய அகவற்கு" (பன். பாட். 92).

அரசர்பின்னோர் *arašar-pinnōr*, பெ. (n.) ***தொழில் பற்றிய நால்வகுப்பாருள் அரசர்க்கு அடுத்துச் சொல்லப்படும் வணிகர்;*** Vanigar (Vaisyas) ranking next to kings in the vocational system of castes. "அரசர் பின்னோர்க் கருமறை மருங்கின்" (சிலப். 16 : 44).

அரசர்மன்னன் *arašar-mannan*, பெ. (n.) ***துரியோதனன் (சூடா.);*** Duryodhana, as a king of kings.

அரசராறுகுணம் *arašar-aṟu-kuṇam*, பெ. (n.) ***அரசர் பிறவரசரொடு தொடர்புகொள்ளும் முறைகள் ஆறு; அவை: நட்பு, பகை, செலவு, இருக்கை, கூடினரைப் பிரித்தல், கூட்டல் என்பன*** (பு. வெ. 9 : 37, உரை); six measures of foreign policy of kings, viz., friendship, enmity, expedition, waiting for opportunity, effecting discord among foes, restoring friendship with those who have seceded.

[அரசர் + அறு + குணம். ஆறு → அறு.]

இவற்றை அரசர் அறுகுணம் என்னாது, அரசர் அறுவலக்காரம் அல்லது அறுதிறம் என்று கூறுவது மிகப் பொருத்தம்.

அரசராறுதொழில் *arašar-aṟu-tolil*, பெ. (n.) ***ஓதல், ஈதல், காத்தல், படைக்கலம்பயிறல், பொருதல், தண்டஞ்செய்தல் என்னும் அரசர் அறுசெயல்கள்;*** six occupations of kings, viz., learning, liberality, protection of subjects, practice of arms, warfare and chastisement.

[அரசர் + அறு + தொழில். ஆறு → அறு.]

அரசர்பக்கம் பார்க்க; see *arašar-pakkam*.

அரசரியல்பு *arašar-iyalbu*, பெ. (n.) ***அரசர்க்கு இயல்பாக இருக்கவேண்டிய தன்மைகள்; அவை: அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்பன;*** the indispensable natural kingly qualities, four in number, viz., intrepidity, liberality, sagacity and energy.

"அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு"
(குறள், 382).

[அரசர் + இயல்பு.]

அரசரெழுகுணம் *arašar-eḻu-kuṇam*, பெ. (n.) ***அரசர்க்கு எப்போதும் இருக்கவேண்டிய ஏழு குணங்கள்; அவை: அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், தூங்காமை, கல்வி, துணிவுடைமை என்பன;*** the seven qualities that must be permanently possessed by kings, viz., intrepidity, liberality, sagacity, energy, vigilance, learning and power of determination.

"அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு"
(குறள், 382).

"தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு" (குறள், 383).

ஊன்றிநோக்கின், இவ்வேழு குணங்களும் அரசர்க்கு ஒருபடித்தாய் என்றுமிருக்க வேண்டிய குணங்களென்று திருவள்ளுவர் கொண்டமை புலனாம். எஞ்சா இயல்பு, நீங்காக்குணம் என்னும் இரு பயனிலைகளும், சற்றும் ஏற்றத்தாழ்வின்றிப் பொருளும் வலிமையும் ஒத்திருத்தல் காண்க. ஏழு குணங்களையும் ஒரே குறளில் அடக்க வியலாமைபற்றியே, இருவேறு குறளில் இடையீடின்றித் தொடர்ந்து கூறினார் என அறிக.

[அரசர் + எழு + குணம். ஏழு → எழு.]

அரசரொளி *araśar-oḷi,* பெ. (n.) **குடிகளைப் பேணல், செங்கோலாட்சி, கொடை, அருளுடைமை ஆகிய நாற்குணங்களை யுடைமையால், அரசர் குலத்திற்கு ஒளிபோல் வான்;** that king who is a luminary among rulers by virtue of possessing the four essentials, viz., tender protection of subjects, righteous government, munificence and graciousness.

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"
(குறள், 390).

[அரசர் + ஒளி.]

அரசவனம் *araśa-vanam,* பெ. (n.) **தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவாவடுதுறையென்னுஞ் சிவநகர்;** *Tiruvāvaḍuturai,* a Śiva shrine in Thañjavūr District. 'ஸ்ரீஞானக் கோமுத்தி, நவகோடி சித்தவாசபுரம், அரசவனம் ஆதியாகிய திருப்பெயர்கள் பூண்ட திருவாவடுதுறையை அடைந்து' (கச்சியப்ப முனிவரர் சரித்திரம், தணி. 4).

அரசவாகை *araśa-vāgai,* பெ. (n.) **அரசனின் அறுதொழில் வெற்றியைப் புகழ்ந்துகூறும் புறத்துறை** (பு. வெ. 8 : 3); theme extolling the successful discharge of the sixfold duties of a king.

[அரசன் → அரச + வாகை.]

அறுதொழில்கள்: ஓதல், காத்தல், படைக்கலம் பயிறல், பொருதல், தண்டஞ்செய்தல்; learning, liberality, protection, practice of arms, warfare and chastisement.

புறப்பொருள் வெண்பா மாலை ஒருமருங்கு தொல்காப்பியத்தைப் பின்பற்றுவதோடு, தமிழகத்தில் ஆரியம் வேரூன்றிய பிற்கால நூலாதலால், அது, "ஐந்தொழி னான்மறை முத்தீ யிருபிறப்பு" அரசனியல்பாகக் கூறு வது தமிழ் மரபிற்கு முற்றும் முரணானதாம்.

அரசவாரியன் *araśa-vāriyan,* பெ. (n.) **குதிரை நடத்துவோரிற் சிறந்தவன்** (கலித். 96, உரை); skilled horseman.

அரசவாலன்

அரசவாலன் *araśavālan,* பெ.(n.) **இராமநாதபுர மாவட்ட முட்புதர்களில் காணப்படும், நீண்ட வாலுடைய ஒருவகைக் குருவி;** a long-tailed bird to be found in thickets in Ramanāthapuram District. — *Paradise flycatcher.*

அரசவிலைமுருகு *araśa-v-ilai-murugu,* பெ. (n.) **காதணிவகை** (சரவண. பணவிடு. 121); an ear-ornament.

ம. அரசில

[அரசு (அரசமரம்) → அரச (அகரமேற்றிய கு.பெ.எ.) + இலை + முருகு. அரசிலை வடிவிற் செய்யப்பட்டதனால் அரசிலை முருகென்ப் பெயர் பெற்ற காதணி; இலக்கியத்தில் அரச விலை முருகென்னும் வடிவுகொண்டது. அரசு + இலை – அரசிலை. அரச + இலை – அரச விலை. வகரவுடம்படுமெய் புணர்ச்சியால் தோன்றியது. அரசமரம், அரசங் கள், அரசம் பட்டை முதலிய வழக்குகள் அரசவிலை யென் பதற்கு வழிவகுத்தன. இனி, அரசன் என்பது பூவரசமரப்பெயராதலால், அரசவிலை என்னும் கூட்டுச்சொல்லில் அரச என்னும் நிலைச்சொல் ஈறுகெட்ட குறிப்புப்பெயரெச்சம் என்றலுமாம்.]

அரசவை *araśavai,* பெ. (n.) 1. **அரச அவை;** king's council. 2. **அரச அவைக்களம்;** king's council chamber or audience hall. "அரசவை யிருந்த" (பொருந. 55).

[அரசன் → அரச + அவை. இனி, அரசு + அவை என்றுமாம்.]

அரசளி-த்தல் *araš(u)-aḷi-*, 4 செ.குன்றாவி. (v.t.) ***அரசாளுதல்***; to rule, as a king. "திருவாரு ரரச ளிப்பவர்" (பெரியபு. திருஞான. 506).

[அரசு + அளி.]

அரசன்[1] *araša*n, பெ. (n.) 1. ***ஆள்வோன்***; king. 2. ***வன்னியன்*** (பொதி.நி.); a person of the Vanniya caste. 3. ***வியாழன்*** (பிங்.); Jupiter. 4. ***பூவரசு*** (மருத்.); portia tree, *Thespesia populanea.* 5. ***கோவைக்கொடி*** (மருத்.); a common creeper of the hedges.

ம. அரசன்; க. அரச; து. அரசு; தெ. அரசு, ராசு; கோத. அர்ச்; துட. அர்ச்.

[அரசனுக்கு இன்றியமையாத கருவி வலிமை. அது படைவலிமை, சூழ்ச்சிவலிமை, மனவலிமை என முத்திறப்படும்.

உரம் = வலிமை. உரம் → உரவு = வலிமை. உரவு → உரவன் = வலியோன். உரவன் → உரவோன்.

"பரந்துபட்ட வியன்ஞாலம்
தாளிற் றந்து தம்புகழ் நிறீஇ
யொருதா மாகிய வுரவோ ரும்பல்"
(புறநா. 18 : 2 - 4)

இதிற் பாண்டியன் நெடுஞ்செழியனின் முன்னோரை யெல்லாம் உரவோர் என்றார் குடபுலவியனார்.

உரவன் = வலியோன், அரசன். உரவு → அரவு → அரசு. ஒ.நோ: பரவு → பரசு. விரவு→ விரசு. அரவணைத்தல்= அரசுபோ லணைத்துக் காத்தல். அரவு → அரவன் → ராவன் → ராவ் (மராட்டியர் பட்டப்பெயர்).

ஒ.நோ: அரசு→ அரசன்→ராசன்→ராஜன்→ ராஜ், ராஜு (ஒரு தெலுங்க வகுப்பார் பட்டப் பெயர்).

அரசு → அரசன் → அரைசன் → அரையன்→ ராயன் → ராயர்.]

1. ***விசயநகர அரசர் பட்டப்பெயர்.*** 2. ***ஒரு சார் கள்ளரின் பட்டப்பெயர்.*** த. அரசன் > Gk. *archon*, one of the nine chief magistrates in ancient Athens, ruler, president. L. *rex*, king; *regis*, king.

Skt. ராஜன் (rājan) *raj*, to shine அல்லது *rinj*, to make straight or right என்று சமற்கிருதச் சொல்லிற்கு மூலங் காட்டுவது பொருந்தாது; *reg(o)*, to direct என்று இலத்தீன் சொல்லிற்கு மூலங் காட்டுவது பொருந்தப் புகலுதலே யன்றி உண்மையான தென்று ஏற்கத் தக்கதன்று. 'ரஜ்' (திகழ்) என்பது 'ரங்' (நிறம்) என்பதினின்று திரிக்கப் படுதலால், அதை ராஜன் என்பதற்கு மூலங் காட்டுதல் வலிந்தும் நலிந்தும் கோடலே யாம்.

Royal, royalty, royalist, vice-roy முதலிய ஆங்கிலச் சொற்களும், அவற்றிற்கு மூலமான பிரெஞ்சு இலத்தீன் சொற்களும், ரால், ராய், ராய, ராயலு, ராசு என்னும் பட்டப்பெயர் களும், அரசன் என்னும் தமிழ்ச்சொல்லையே மேற்குறித்த ஆரியச் சொற்கட்கு மூலமாகக் காட்டுதல் காண்க.

அரசன்[2] *araša*n, பெ. (n.) 1. ***துருசு*** (மூ.அ.); blue vitriol (செ.அக.) — ***துரிசு***; copper acetate (சா.அக.). 2. ***கார்முகில் நஞ்சு (பாடாணம்)*** (வின்.); a mineral poison (செ.அக.) — a kind of native arsenic (சா.அக.). 3. ***வாணகெந்தகம்*** (வின்.); a prepared arsenic (செ. அக.) — ***வாணகெந்தி***; stick or roll sulphur (சா.அக.).

அரசன்கன்னி *araša*n*-ka*nn*i*, பெ. (n.) ***கந்தகம்***; sulphur (சா.அக.).

அரசன்தோல் *araša*n*-tōl*, பெ. (n.) ***அரசன் பட்டை*** பார்க்க; see *araša*n*-paṭṭai.*

அரசன்பட்டை *araša*n*-paṭṭai*, பெ. (n.) ***பூவரசம் பட்டை***; the bark of the portia or tulip tree (சா.அக.).

அரசன்விருத்தம் *araša*n*-viruttam*, பெ. (n.) ***பத்துக் கலித்துறையும், முப்பது விருத்தமும் கலித்தாழிசையுமாக, மலை கடல் நாட்டு வரணனையும் நில வரணனையும் வாண் மங்கலமும் தோண்மங்கலமும் பாடி முடிக்கும் பனுவல் வகை. இது முடிபுனைந்த வேந்தற் காம்*** (தொன். வி. 283, உரை); poem celebrating the natural resources, prosperity of the land and prowess of a ruling king, containing 10 *kalitturai* and 30 *viruttam* besides 30 *kalittāḻišai.* விருத்தம் என்பது தனித்தமிழில் மண்டிலம் எனப்படும்.

அரசாங்கம் *arašāṅgam*, பெ. (n.) ***அரசு***; government.

க. அரசாங்க

அரசாட்சி *arašāṭci*, பெ. (n.) ***அரசாளுகை***; reign, rule, government. "என்னேயிவ்

வரசாட்சி யினிதே யம்மா" (கம்பரா. யுத்த. மீட்சி. 221).

ம. அரசு; க. அரசாளிகெ.

[அரசு + ஆட்சி.]

அரசாணி[1] ***arašāṇi***, பெ. (n.) அரசி; queen. அல்லியரசாணிமாலை.

க. அரசாணி, அரசி.

[அரசன் (ஆ.பா.) – அரசி (பெ.பா.) → அரசினி (இரட்டைப் பெ.பா.) → அரசாணி. இராணி (ராஜ்ஞீ) என்னும் வடசொல் திரிபின் வடிவைப் பின்பற்றி அரசாணி என்னும் வடிவு ஏற்பட்டிருக்கலாம். **ஒ.நோ:** பாணன் → பாணி → பாணினி → பாடினி. 'இ' பெ.பா. ஈறு.]

அரசாணி[2] ***arašāṇi***, பெ. (n.) 1. அரசங் கொம்பு; branch of the pipal tree. "அரசாணியை வழிபட்டு" (திவ். பெரியாழ். 3.8:3). 2. **அரசங்கொம்பு நடப்பட்ட மண மேடை அல்லது அறை** (யாழ்.அக.); marriage platform having a branch of pipal planted on it.

[அரசு (மரம்) + ஆணி (நிலைக்களம், தாங்கல்). "மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்" (புறநா. 186:2). ஆதலால், உழுவார்போல் உலகத்திற்கு ஆணியாயிருக்கும் அரசனுக்கு அடையாளமாக நிறுவப்பெறும் அரசமரக் கொம்பு, அரசாணிக் கொம்பு எனப்பட்டது போலும். இனி, அரசனுக்கு அடையாளமாக ஊன்றுங்கோல் என்றுமாம். ஆணுதல் = ஊன்றுதல். 'அரசாணி' மண மேடையைக் குறிப்பின், இடவணாகுபெயர் (தானியாகுபெயர்).]

அரசாணி[3] ***arašāṇi***, பெ. (n.) அம்மி; a flat horizontal stone used for macerating spices for curry (திவ். பெரியாழ். 3.8 : 3, வியா.).

[அரை + சாணை (சாணைக்கல்) – அரை சாணை → அரசாணை → அரசாணி.]

அரசாணிக்காய் ***arašāṇi-k-kāy***, பெ. (n.) **பூசணிக்காய்** (M.M.); pumpkin, *Cucurlita maxima*.

அரசாணிக்கால் ***arašāṇi-k-kāl***, பெ. (n.) **மண வறையில் முருக்குடன் நடப்படும் அரசங் கொம்பு**; pipal branch along with branches of other trees kept planted on a platform and around which the bridegroom and bride are made to go in a marriage ceremony.

[அரசு + ஆணி + கால் (கொம்பு, தூண்). அரசாணி = மணவறை.]

அரசாணிப்பானை ***arašāṇi-p-pāṉai***, பெ. (n.) **பலவண்ணம் பூசினவும், நீரில் அல்லது தவசத்தில் சில சமையங்களில் பொன்துணுக்குகள் கொண்டனவும், மணவறைப் பக்கத்தில் வைக்கப்படுவனவுமான அடுக்குப் பானை**; large painted earthen pots placed one above another near the marriage chamber, and often **அரசாணிப்பானை** containing water or grain with a few pieces of gold thrown in.

க. அய்ரணெ; தெ. ஐரேனி.

[அரசாணி (மணமேடை, மணவறை) + பானை.]

அரசாணிமேடை ***arašāṇi-mēḍai***, பெ. (n.) **அரசங்கொம்பு நடப்பட்ட மணமேடை**; marriage platform, on which is planted a pipal branch.

அரசாணை ***arašāṇai***, பெ. (n.) **அரசு வெளியிட்ட ஆணை**; order issued by the government.

க. அரசாணெ

அரசாமியம் ***arašāmiyam***, பெ. (n.) **செவ்வகத்தி**; a red species of the *agatti* tree, *Coronilla coccinea* (சா.அக.).

அரசாள்[ளு]-தல் ***arašāḷ-***, 10 செ.குன்றாவி. (v.t.) **அரசன் ஆட்சி செய்தல்**; to reign, rule, govern. "மூண்டபகை செற்றுலக முற்று மரசாளும் பாண்டியன்" (திருவாத. பு. மந்திரி. 2).

க. அரசாளு

[அரசு + ஆள்.]

அரசன் பார்க்க; see *arašaṉ*.

அரசாள் ***arašāḷ***, பெ. (n.) **கரும்பு**; sugar-cane, *Saccharum officinarum* (சா.அக.).

அரசானம் ***arašāṉam***, பெ. (n.) 1. **அரசு** (மலை.); pipal. 2. **அரத்தை** (மலை.); galangal. 3. **பேரரத்தை**; greater galangal, *Alpinia galangal* (major) (சா.அக.).

ம. அரசு; **Skt. rāsna.**

அரசி *araši*, பெ. (n.) 1. *அரசன் தேவி*; queen. "மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை" (தேவா. *3 . 378 : 1*). 2. *நாடாள்பவள்*; reigning queen. 3. *கற்பரசி*; queen of chastity. "உன்னைக் காட்டினன் கற்பினுக் கரசியென் றுலகிற் பின்னைக் காட்டுவ தரியதென் றெண்ணி" (கம்பரா. யுத்த. மீட்சி. 122).

க. அரசி

[அரசன் (ஆ.பா.) – அரசி (பெ.பா.). 'இ' பெ. பா. ஈறு.]

***அரசியம்** *arašiyam*, பெ. (n.) 1. *அரசு*, *ஆளுகைக்குட்பட்ட நிலம்*; kingdom, territory of a ruler.

ம. அரசு

[அரசு → அரசியம். அரசியம் > **Skt.** rājya.]

அரசியல் *araš(u)-iyal*, பெ. (n.) 1. *அரசனியல்புங் கடமையும்*; kingly qualities and duties. 2. *ஆட்சி*; government. 3. *ஆட்சியமைப்பு*; the institution of government, requisites of regal administration. 4. *ஆட்சி நூல்*; political treatise. 5. *அரசனியல்பைக் கூறும் திருக்குறள் பகுதி*; a chapter of *Tirukkuṛaḷ* dealing with kingship.

[அரசு + இயல் (தன்மை, முறை).]

அரசிரு-த்தல் *araš(u)-iru-*, 3 செ.குன்றாவி. (v.t.) *அரசாக வீற்றிருத்தல்*; to sit in state, as a king. "கன்னிப்பெண் ணரசிருந்து" (திருவிளை. தடாதகை. 43).

[அரசு + இரு.]

அரசிருக்கை *araš(u)-irukkai*, பெ. (n.) 1. *அரசு வீற்றிருக்கை*; the sitting in state of a king or queen. 2. *அரசவைக்களம் அல்லது ஓலக்க மண்டபம்* (பிங்.); king's council chamber or audience hall. 3. *அரியணை*; throne. 4. *ஆட்சியுரிமை*; the right to govern. "தனையனாங் குலோத்துங் கற்குத் தன்னரசிருக்கை நல்கி" (திருவிளை. பழியஞ். 2).

[அரசு + இருக்கை (தொ.பெ., தொ.ஆகு.).]

அரசிருப்பு *araš(u)-iruppu*, பெ. (n.) 1. *அரசு வீற்றிருக்கை*; the sitting in state of a king or queen. 2. *அரசு வீற்றிருக்குமிடம்*; the seat of a king or government. "அவனகரு மரசிருப்பு மண்டபமும்" (திருவிளை. மாணிக். 77).

க. அரமனெ

[அரசு + இருப்பு.]

40

அரசிலக்கணம் *araš(u)-ilakkaṇam*, பெ. (n.) *அரசர்க்குரிய குணங்கள்*; kingly qualities. "நித்திய கரும மகன்று வாளா விருந்திடுத லரசிலக்கண மன்றென" (மகாராஜா துறவு, 31).

க. அரசஞ்செ

[அரசு + இலக்கணம்.]

அரசிலி *arašili*, பெ. (n.) ஒரு *சிவநகர்* (பெரியபு. திருஞான. *1135*); a Šiva shrine.

அரசிலை *araš(u)-ilai*, பெ. (n.) 1. *அரசமரத்தின் இலை*; pipal leaf. 2. *அரைமூடி*, *அற்றம் மறைக்கும் சிறுமியர் அணிகலம்*; pipal leaf-shaped plate of metal or glass worn by naked little girls to cover their pubes. 3. *எருதின் தலைமேலிடும் ஒருவகை யணி*; ornament, for the head of a bull, in the shape of a pipal leaf. "அரசிலை யொளிபெற மிளிர்வதோர் சினமுதிர் விடை" (தேவா. *3 . 344 : 2*). 4. *விலங்குகளுக் கிடுஞ் சூட்டுக் குறி*; figure of a leaf as branded on beasts (W.).

அரசிலை

[அரசு + இலை.]

அரசிலைக்கரண்டி *araš(u)-ilai-k-karaṇḍi*, பெ. (n.) *அரசிலை வடிவான கொத்தன் கரண்டி*; mason's trowel in the shape of a pipal leaf.



அரசிலைக்கரண்டி

[அரசு + இலை + கரண்டி.]

அரசிலைத்தூக்கம் *araš(u)-ilai-t-tūkkam*, பெ. (n.) *அரைஞாணிற் கோத்துப் பெண் குழந்தையின் அரையிற் கட்டுவதும், அரசிலை போன்று பொன் அல்லது வெள்ளியால் ஆனதுமான தகட்டணி* (இ.வ.); plate of gold or silver in the shape of pipal leaf, strung in the waistband of little girls to cover their pubes (Loc.).

[அரசு + இலை + தூக்கம். தூக்கம் = தொங்கல்.]

அரசிலைத்தொங்கல் *araš(u)-ilai-t-toṅgal*, பெ. (n.) *அரசிலைத்தூக்கம்* பார்க்க; see *araš(u)-ilai-t-tūkkam.*

[அரசு + இலை + தொங்கல்.]

அரசிலையைம்படை (அரசிலைப் பஞ்சாயுதம்) *araš(u)-ilai-y-aimbaḍai*, பெ. (n.) *அரசிலை வடிவாகப் பொன்னாற் செய்யப்பட்டதும், திருமாலின் ஐம்படை பொறிக்கப்பட்டதும், சிறுபிள்ளைகளாலும் பெண்டிராலும் அணியப் படுவதுமான கழுத்தணி* (யாழ்ப்.); a fig leaf-shaped gold ornament worn by children or women, with the *tāli* of a woman showing in relief the five weapons of *Tirumāl* (Viṣṇu) (J.).

[அரசு + இலை+ஐம்+படை. ஐந்து → ஐம்.]

திருமாலியம் (வைணவம்) தமிழர்மத மாதலாலும், ஐம்படைத்தாலி யென்பதே பண்டை வழக்காதலாலும், பஞ்சாயுதம் என்னும் வடசொல் வழக்குப் பிற்காலத்த தாகல் வேண்டும்.

அரசிலைவாளி *araš(u)-ilai-vāḷi*, பெ. (n.) *அரசிலை வடிவான பெண்டிர் காதணி*; a fig leaf-shaped ear ornament of women.

ம. அரசில

[அரசு + இலை + வாளி.]

அரசிறை[1] *araš(u)-iṟai*, பெ. (n.) *அரசனுக்கு இறுக்கப்படும் (செலுத்தப்படும்) நிலவரி*; tax on land. "இறைவற் கிறையொருங்கு நேர்வது நாடு" (குறள், 733).

[அரசு + இறை. இறுத்தல் = கடனாகச் செலுத்துதல். இறு → இறை.]

அரசிறை[2] *araš(u)-iṟai*, பெ. (n.) *அரசர்க்கரசன்*; king of kings. "அரசிறை யரசரொ டெழுத லும்" (சூளா. கல்யாண. 109).

[அரசு + இறை. இறுத்தல் = தங்குதல், எங்குந் தங்குதல். இறு → இறை = எங்குந் தங்கும் இறைவன் (கடவுள்). உலகில் இறைவனை நிகர்க்கும் அல்லது அதிகாரத்தால் தன் நாடு முழுதுந் தங்கும் அரசன்.]

அரசு *arašu*, பெ. (n.) 1. *அரசன்*; king. "நராதிப னாகருக் கரசாய் மகுட மேந்திய குரிசில்" (பாரத. குருகுல. 20). 2. *அரசர்*; kings. "அரசுபட வமருழக்கி" (மதுரைக். 128). 3. *அரசனது தன்மை*; kingliness. "மான முடைய தரசு" (குறள், 384). 4. *அரசாட்சி*; government. "அரசே தஞ்சமென் றருங்கா னடைந்த" (சிலப். 13 : 64). 5. *அரசியம் (ராஜ்யம்)*; kingdom, territory of a ruler. "எனதுயி ரரசு வாழ் வென்ப யாவையும்" (பாரத. குருகுல. 51). 6. *தலைமையானது*; that which is pre-eminent. "மின்னார் தமக்கோ ரரசே" (கந்தபு. தேவ. தெய்வ. 143). 7. *பண்டை வேளாளர் பட்டப்பெயர்*; an ancient title of Vēḷāḷa chieftains. 'வேளெனவும் அரசென வும் உரிமை யெய்தினோரும்' (தொல். பொருள். அகத். 30, நச். உரை). 8. *தேவார மூவருள் ஒருவராகிய திருநாவுக்கரசு நாயனார்*; *Tirunāvukkarašu Nāyanār*, one of the three authors of *Tēvāram*. "அங்கண ராரூர் வணங்கிப் போந்த அரசும் எதிர்வந் தணைய" (பெரியபு. திருஞான. 494). 9. *அரசமரம், மரங்கட்குள் அரசுபோல் ஓங்கியது*; pipal tree. 10. *காவலுரிமை* (P.T.L.); privileges allowed to watchmen. 11. *காணி நிலம்* (பொதி.நி.); domain, land. 12. *சதுரங்க ஆட்டத்தில் அரசன் கட்டுப்பட விருத்தலைக் குறிக்கும் குறிப்புச் சொல்*; an exclamation equivalent to 'check', used in the game of chess.

ம., து. அரசு; க. அரசு, அரச; தெ. அரசு, ராசு; பட. ராசு; Skt. rājan.

[அரசன் → அரசு (ஈறு கெட்டது). ஒ.நோ: வேந்தன் → வேந்து.]

அரசன் பார்க்க; see *arašan.*

'அத்திபோல் துளிர்த்து' என்று தொடங் கும் மரபு திருமண வாழ்த்துத் தொடரில், 'அரசுபோ லோங்கி' என்றிருப்பதனால், அரசமரம் மரங்களுக்குள் அரசாகக் கருதப் பட்டது போலும்!

அரசமர வுறுப்புகள் பலவகையில் மருந் தாகப் பயன்படுவதுடன், அரசங்கொம்பு மணவறையிற் காப்பாக நடப்படுவதும், அரச மரம் கோயில் குளங்களின் அருகில் வைத்து வளர்க்கப்படுவதும், அதனடியிற் பிள்ளை யாரும் பிற வழிபடும் உருவங்களும் வைக்கப் பெறுவதும், புத்தர் அதனடியில் ஓகிருந்த தனாலேயே ஓதி (ஞானம்) அடைந்தார் என்று சொல்லப்படுவதும், அம் மரம் தெய்வத் தன்மையுள்ள தென்னும் மக்கள் கருத்தைப் புலப்படுத்தும். அதற்கு மேலை நிலைத்திணை நூலார் இட்ட '*Ficus religiosa*' என்னும் பெயரும் அதை வலியுறுத்தும்.

அரசமரத்தின் இனவகைகள் :

1. நல்லரசு (புண்ணியவரசு); sacred fig, *Ficus religiosa.*
2. கொடியரசு; short tailed pipal, *Ficus arnottiana.*
3. கல்லரசு; wild pipal, *Urostigma arnottianum.*
4. ஆற்றரசு; river side pipal.
5. மலையரசு; hill pipal, *Ficus vagas.*
6. பூவரசு; flowering pipal, portia tree, *Thespesia populnea.*

இவற்றுள், ஆற்றரசு தவிர ஏனையவெல்லாம் ***சாம்பசிவம்பிள்ளை*** அகரமுதலியிற் சொல்லப்பட்டவை.

பூவரசு என்பது, இலைவடிவொன்று தவிர ஏனை வகைகளில் அரசமர வகைகளை ஒத்ததன்று. வெளிப்படைப்பூ (phanerogam) வுண்மையால், பூவரசென்று, கரந்தபூ (cryptogam) வுள்ள பிற அரசமர வகைகளினின்று பிரித்துக் கூறப்பட்டது.

ஏதேனும் உறுப்பு வடிவொப்புமைபற்றி, பல மரஞ்செடிகொடிகள் அடையடுத்த பொதுப்பெயர் பெற்றுள்ளன. அவையெல்லாம் ஓரினத்தவல்ல. நெல்லிக்கும் கீழ்க்காய்நெல்லிக்கும், வாழைக்கும் கல்வாழைக்கும், வாகைக்கும் நிலவாகைக்கும் யாதொரு தொடர்புமில்லை. இங்ஙனமே அரசிற்கும் பூவரசிற்கும் என அறிக. இவ் விரண்டும் மரமாயிருப்பதே ஒற்றுமை.

அரசுக்காரன் *arašu-k-kāraṉ*, பெ. (n.) ***காவலுரிமைக்காரன்*** (P.T.L.); person holding particular privileges for doing police duty.

[அரசு (காவல்) + காரன் (உரியவன்). 'காரன்' ஆ.பா. ஈறு.]

அரசுக்காவல் *arašu-k-kāval*, பெ. (n.) 1. ***நாட்டுப் பொதுக்காவல்*** (M.M.), ***ஊர்க்காவல் என்பதற்கு எதிர்***; general police duty, as distinguished from village police duty. 2. ***நாட்டுப் பொதுக்காவல் செய்வதற்காக ஏற்பட்ட நில மானியம்*** (R.T.); land granted for services in performing general police duties, dist. fr. *ūrkkāval.*

[அரசு + காவல்.]

அரசுகட்டில் *arašu-kaṭṭil*, பெ. (n.) ***அரசன் வீற்றிருக்கும் அரியணை***; throne. "அரைசு கட்டிலிற் றுஞ்சிய பாண்டியன்" (சிலப். 23 : கட்டுரை, 17).

(அரசுகட்டில் என்பது, அரசின் அல்லது அரசனது கட்டில் என்று 6 ஆம் வேற்றுமைத் தொகையாகக் கொள்ளப்பட்டதனால் இயல்பு புணர்ச்சியாயிற்று. முரசுகட்டில் என்பதும் இங்ஙனமே.)

அரசுசெய்-தல் *arašu-šey-*, 1 செ.குன்றாவி. (v.t.) ***ஆளுதல்***; to govern, reign, rule.

அரசுசொல்(லு)-தல் *arašu-šol(lu)-*, (8) செ.கு.வி. (v.i.) ***சதுரங்க விளையாட்டில் அரசனுக்குப் பகைக்காயை எடுத்துவைத்து, 'அரசு' என்று சொல்லுதல்***; to say 'check' in a chess game.

அரசுதலைபணி-த்தல் *arašu-talai-paṇi-*, 4 செ.கு.வி. (v.i.) ***முடிசூட்டப் பெறுதல்***; to be crowned as king. "அங்கர்கோனா யரசுதலை பணித்து" (ஞானா. 32).

[பணிதல் (த.வி.) → பணித்தல் (பி.வி.). முடிசூடும்போது தலை தாழ்த்தலால், முடிசூட்டுதலைப் பணித்தல் எனப்பட்டது.]

அரசுபேறு *arašu-pēṟu*, பெ. (n.) ***அரசன் குடிகளிடம் பெறும் இறை அல்லது வரி*** (I.M.P. Tj., 464); tax due to a king.

[அரசு + பேறு. பெறு → பேறு (தொ.ஆகு.).]

அரசுவா *araš(u)-uvā*, பெ. (n.) ***நாற்கால், துதிக்கை, குறி, வால் ஆகிய ஏழுறுப்பும் நிலத்தில் தோய்வனவாய்; காலுகிர் (நகம்) பாலும் சங்கும் போல் வெண்ணிறமாய்; நாற்கால், துதிக்கை, வால், இருமருப்பு (தந்தம்) ஆகிய எண்ணுறுப்புங் கொல்லவல்லனவாய், ஏழுமுழ வுயர்ச்சியும் ஒன்பது முழ நீட்சியும் பதின்மூன்று முழச் சுற்றளவு முடையதாய்; சிறுகண்ணுஞ் செம்புள்ளியுமுடையதாய்; முற்பக்க முயர்ந்து பிற்பக்கந் தாழ்ந்த பட்டத்தியானை*** (பிங்.); State elephant, having its four legs, trunk, sexual organ and tail touching the ground with white toe-nails, seven cubits in height, nine cubits long and thirteen cubits in circumference, with the fore part of the body higher than the back part, its four legs, trunk, tail and tusks serving it as weapons. "அரசோடு அரசுவா வீழ்ந்த" (களவழி. 35).

"காலோர் நான்குந் தனிக்கையுங் கோசமும்
வாலுறுப்போ டேழு மாநிலந்தோய்வதும்
பாலுஞ் சங்கும் போலுங் காலுகிர்
காலினுந் தன்றனிக் கையினு மெய்யினும்

வாலினு மருப்பினும் கோறல்வல் லதுவா
யேழ்முழ முயர்ந்தொன் பான்முழ நீண்டு
பதின்முன் றுமுழஞ் சுற்றுடைத் தாகித்
தீயுமிழ் சிறுகணுஞ் செம்புகரு முடைத் தாய்
முன்னபு யர்ந்து பின்னப ணித்தாய
தியானை யரசுவா வாகு மென்ப"
(பிங். 6 : 1492).

[அரசு + உவா (உயரமான விலங்கு, யானை). 'உவத்தல் = உயர்தல். உவ → உவண் = மேலிடம், உயர்ச்சி. ஒ.நோ : உம்பல் = (உயரமான) யானை. ஓங்கல் = (ஓங்கி வளர்ந்த) யானை.]

அரசுறுப்பு *araś(u)-uṟuppu*, பெ. (n.) அரசுக்குரிய படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறு உறுப்புகள்; the six constituents of State, viz., army, people, wealth, ministry, allies and fortress.

"படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையான் அரசருள் ஏறு" (குறள், 381).

[அரசு + உறுப்பு.]

அரட்சி *araṭci*, பெ. (n.) அச்சம் மிக்க நிலை; state of fear, frightful confusion.

ம. அரட்டு; க. அரலு; தெ. அரடொணு.

[அரளுதல் = அச்சம் மிகக் கொள்ளுதல். அரள் → அரட்சி.]

அரட்டடக்கி *araṭṭ(u)-aḍakki*, பெ. (n.) குறும்பரையும் செருக்கரையும் அடக்கியாள்பவன்; one who subdues harassers and haughty persons. "தக்கன்றன் வேள்வியை அரட்டடக்கிதன் னாரூ ரடைமினே" (தேவா. 5.7 : 5).

[அரள் (த.வி.) → அரட்டு (பி.வி.) → அரட்டன் → அரட்டு (ஈறு கெட்டது) + அடக்கி. அடக்கு → அடக்கி. 'இ' வி.முத. ஈறு.]

அரட்டம்¹ *araṭṭam*, பெ. (n.) பாலைநிலம் (சிந்தா. நி. 272); desert tract.

[அரள் (த.வி.) → அரட்டு (பி.வி.) → அரட்டன் = குறும்பன், கொள்ளைக்காரன். அரட்டன் → அரட்டம் = ஆறலைப்போர் வாழும் வறண்ட நிலம்.]

அரட்டம்² *araṭṭam*, பெ. (n.) விடிகை (அக.நி.); dawn.

அரட்டமுக்கி *araṭṭ(u)-amukki*, பெ. (n.) 1. குறும்பரை அடக்குபவன்; one who keeps under control harassing petty chieftains. அரட்டடக்கி பார்க்க; see *araṭṭ(u)-aḍakki*. 2. திருமங்கையாழ்வார்; *Tirumaṅgaiyāḻvār*. "அருள்மாரி அரட்டமுக்கி" (திவ். பெரியதி. 3 . 4 : 10).

[அரள் (த.வி.) → அரட்டு (பி.வி.) → அரட்டன் → அரட்டு (ஈறு கெட்டது) + அமுக்கி. அமுக்குதல் = அடக்குதல். அமுக்கு → அமுக்கி. 'இ' வி.முத. ஈறு.]

அரட்டர் *araṭṭar*, பெ. (n.) 1. கொள்ளையடிக்குங் குறுநிலமன்னர்; harrying petty chieftains. "அரட்டக் கரும்படை மானவேற் குறுமன்னவர் நண்ணினார்" (திருவிளை. உக்கிர. வேல்வளை. 19). 2. குறும்பர், தீயர்; harriers, mischief-makers, wicked persons. "அடைந்தவர்க் குறுக ணாற்று மரட்டரும்" (காஞ்சிப்பு. இருபத். 384).

[அரள் (த.வி.) → அரட்டு (பி.வி.) → அரட்டர் = அச்சுறுத்துவோர், துன்புறுத்துவோர்.]

அரட்டல் *araṭṭal*, தொ.பெ. (vbl.n.) அச்சுறுத்தல்; frightening, intimidation.

[அரட்டு + அல் (தொ.பெ. ஈறு).]

அரட்டல்புரட்டல் *araṭṭal-puraṭṭal*, தொ.பெ. (vbl.n.) 1. இழித்தும் பழித்தும் அச்சுறுத்தி மிரட்டுதல்; threatening speech, acts of intimidation. இந்த அரட்டல் புரட்டலெல்லாம் இங்குச் செல்லாது. 2. நோய் முற்றலால் அல்லது நஞ்சு வேகத்தால் ஏற்படும் தாங்கொணா நோவு அல்லது ஆரவார உடற்கோளாறு; tossing restlessly, as in agonising pain caused by severe disease or venomous bite.

[அரட்டு → அரட்டல் + புரட்டு → புரட்டல். பொருளை மிகுதிப்படுத்த வந்த மரபிணைமொழி.]

அரட்டன் *araṭṭaṉ*, பெ. (n.) 1. அரட்டர் பார்க்க; see *araṭṭar*. 2. மிடுக்கன்; strong, powerful and arrogant man. "அரட்டன்வந் தப்பூச்சி காட்டு கின்றான்" (திவ். பெரியாழ். 2 . 1 : 4).

[அரள் → அரட்டு → அரட்டன்.]

அரட்டி *araṭṭi*, பெ. (n.) அச்சம் (வின்.); fear, terror.

[அரட்டு → அரட்டி.]

அரட்டு-தல் *araṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) அச்சுறுத்தல்; to frighten, terrify.

ம. அரட்டு

[அரள் (த.வி.)→அரட்டு (பி.வி.). அரளுதல் = அஞ்சுதல்.]

அரட்டு *arattu*, பெ. (n.) 1. *அச்சுறுத்தம்*; frightening, intimidation, severe rebuke. 2. *குறும்பு*; mischief. ''மலநோ யரட்டொதுக் கும்'' (காஞ்சிப்பு. சிவபுண். 10). 3. *மிடுக்கு*; prowess. (திவ். பெரியாழ். 2.1:4, வியா.). 4. *அச்சம்* (இ.வ.); fear, tremor (Loc.).

[அரள் → அரட்டு (தொ.பெ.).]

அரட்டுப்புரட்டு *arattu-p-purattu*, பெ. (n.) *அச்சுறுத்தும் பொய்புரட்டு* (சம்.அக.); bluff, frightening and deceiving.

[அரள் → அரட்டு + புரள் → புரட்டு. அரட்டும் புரட்டும் = அச்சுறுத்தும் பொய்யும்.]

அரட்டை *arattai*, பெ. (n.) 1. *வீண்பேச்சு*, வம்பளப்பு (நெல்லை); idle talk, gossip (Tn.). 2. *வீண்பேச்சாளி*; idle talker, gossiper. 'அப்பனில்லாதது அரட்டை, தாயில்லாதது தறுதலை' (பழ.).

[அரட்டு → அரட்டை.]

அரட்டையடி-த்தல் *arattai-y-adi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. *வீண்பேச்சுப் பேசுதல்*; to gossip, talk purposelessly. 2. *வீண்பெருமை பேசுதல்* (உ.வ.); to swagger, bluster (Com.u.).

[அரட்டு → அரட்டை + அடி.]

அரடா *arada*, பெ. (n.) *அணியின் விளிம்புறுப்பு*; the raised rim of a jewel.

தெ. அரடா

அரடு *aradu*, பெ. (n.) *ஒரு மரம்*; Indian trumpet flower, *Colosanthes indica* (சா.அக.).

அரண்[1] *aran*, பெ. (n.) 1. *வலிமை*; strength. 2. *காப்பு*; protection. 3. *தற்காப்பு*; defence. 4. *கோட்டை*; fort, fortress, castle. 5. *கோட்டைமதில்*; fort-wall, rampart. 6. *சுற்று மதில்*; compound wall, as of a temple. 7. *காப்பான இடம்*; fortified place. 8. *மார்புக் காப்பான அல்லது உடற்காப்பான கவசம்*; armour. 9. *பாதக் காப்பான செருப்பு*; sandals, as protection for the feet. 10. *வேல்* (பிங்.); spear. 11. *அழகு* (சங்.அக.); beauty.

ம. அரண்; க. அருணி.

அழகான பெண்ணும் பொருளும் இடமும் போற்றிக் காக்கப்படுவதனால், அழகும் ஒரு வகை அரணாயிற்று. அதனால் 'அரண்' என்னும் சொல் 'அழகு' என்னும் பொருளுங் கொண்டது.

அரண்வகைகள்:

1. மதிலரண்; fort-wall, rampart.
2. நீரரண்; moat.
3. நிலவரண்; natural defence consisting of arid expanse of earth.
4. காட்டரண்; forest, as a source of defence.
5. மலையரண்; mountain, as a natural defence.

''மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண்''

என்னுங் குறளில் (742), நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என்னும் நால்வகை அரண்கள் குறிக்கப்பட்டன.

மதிலரண் வகைகள்:

1. உயர்மதிலரண்; unscalable fort-wall.
2. அகன்மதிலரண்; broad fort-wall with accommodation for fighters on the top.
3. திண்மதிலரண்; impenetrable fort-wall.
4. அருமதிலரண்; inaccessible fort-wall, with war machines fitted on the top.

''உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்''
(குறள், 743).

அருமதில் என்பது பல்வகைக் கடும் பொறிகள் அமைந்தது. அப்பொறிகளாவன:

''..................... வளைவிற் பொறியும்
கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையும்
தூண்டிலுந் தொடக்கு மாண்டலை யடுப்பும்
கவையுங் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமுங் கைபெய ரூசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமும்
கோலுங் குந்தமும் வேலும் பிறவும்''
(சிலப். 15 : 207-216).

''பிறவும்'' என்பன, நூற்றுவரைக் கொல்லி, தள்ளிவெட்டி, களிற்றுப் பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப்பொறி, புலிப்பொறி, குடப் பாம்பு, சகடப்பொறி, தகர்ப்பொறி, அரி நூற்பொறி முதலியன.

நீரரண்வகைகள்:

1. இயற்கை நீரரண்—ஆறும் கடலும்.
2. செயற்கை நீரரண்—அகழி.

[அரு = அணுகுதற்கு அல்லது அடைதற்கு அரிய. அண் = பொருந்திய இடம், இடம். ஒ.நோ: அவண் = அவ்விடம். உவண் = மேலிடம். நடுவண் = நடுவிடம். அரு + அண் — அரண்.]

அரு + எயில் — ஆரெயில். ''உடன்றோர் வருபகை பேணார் ஆரெயில்'' (தொல். பொருள். புறத். 12) = 'புறத்தோன் அகத் தோன்மேல் வந்துழி அவன் பகையினைப் போற்றாது அகத்தோன் இகழ்ந்திருத்தற்கு அமைந்த மதிலரண்' (நச். உரை).

'அருமை = பொறிகளான் அணுகற் கருமை' (குறள், 743, பரிமே. உரை).

அரண்[2] *aran*, பெ. (n.) *அச்சம்* (பொதி.நி.); fear, terror.

[அரள் → அரண். அரளுதல் = அஞ்சி யொடுங்குதல்.]

அரண்மனை *aran-manai*, பெ. (n.) 1. *மதி லரண் சூழ்ந்த மாளிகை*; fortified palace. 2. *அரசன் குடியிருக்கும் மாளிகை*; royal palace. 'அரண்மனைக் கோழிமுட்டை அம்மியை உடைக்கும்' (பழ.).

ம. அரமன; க., து., குட., பட. அரமனெ. அரண்மனை → அரமனை (இழி.வ.).

[அரண் + மனை.]

அரண்மனைக்காகிதம் *aran-manai-k-kāgidam*, பெ. (n.) *அரசியற் கட்டளைத் திருமுகம்* (புதுவை); government despatch or order (Pond.).

க. அரசாணெ

[அரண்மனை + காகிதம்.]

அரண்மனைக்காணி *aran-manai-k-kāni*, பெ. (n.) *படைக்கு வேண்டிய உணவுப்பொருள் களை நேரடியாக விளைவிப்பதற்காக அரசிய லார் வைத்துக்கொள்ளும் பண்ணைகள்*; estate run directly by the government for the supply of grain to troops.

[அரண்மனை + காணி.]

அரண்மனைச்சீட்டு *aran-manai-c-cīttu*, பெ. (n.) *அரண்மனைக்காகிதம்* பார்க்க; see *aran-manai-k-kāgidam*.

[அரண்மனை + சீட்டு.]

அரண்மனைப்பற்று *aran-manai-p-parru*, பெ. (n.) *அரச குடும்பத்திற்குச் சொந்தமான ஊர்*; village in the possession of a royal family.

[அரண்மனை + பற்று.]

பற்று பார்க்க; see *parru*.

அரண்மனையார் *aran-manai-y-ār*, பெ. (n.) 1. *அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்*; members of the royal family or household. 2. *அரண் மனை யலுவலர்*; palace officials.

[அரண்மனை + ஆர் (ப.பா. ஈறு).]

அரண்மனையூழியம் *aran-manai-y-ūliyam*, பெ. (n.) *அமஞ்சி, கூலியில்லா வேலை* (புதுவை); work without remuneration (Pond.).

[அரண்மனை + ஊழியம்.]

அரண்மனைவார்த்தை *aran-manai-vārttai*, பெ. (n.) *அரசியல் நடவடிக்கைகளில் வழங்குஞ் சொல்* (P.T.L.); words used in official records or communications.

[அரண் + மனை + **Skt.** vārtta > *த. வார்த்தை = சொல்.]*

இது அறமனை வார்த்தை யென்று தவறாக வழங்கிவருகின்றது.

அரணம் *aranam*, பெ. (n.) 1. *கோட்டை மதில்*; wall round a fort. ''முழுமுத லரண முற்றலுங் கோடலும்'' (தொல். பொருள். புறத். 10). 2. *கோட்டை*; fort. 3. *காவற்கூடம்*; prison-house. 4. *கொத்தளம்* (அக.நி.); bastion. 5. *காட்டரண்* (பிங்.); forest, as a strong defence. 6. *காடு* (அக.நி.); forest. 7. *தடை*; obstruction. ''அறிவுகா ணாமே அரணமல் லவர்க்கிவை கடந்தகல் வரிதாக'' (கம்பரா. யுத்த. மீட்சி. 106). 8. *காப்பு*; protection. ''அவுணர் வைகுமோ ரரணமான கிரவுஞ்ச கிரி'' (கந்தபு. உற்பத். தாரகன்வதை. 108). ''என்னுயிர்க் கரணம் நின்னோடு'' (யசோதர. 102). 9. *அரணான இடம்*; place of safety. ''துன்னெறி யவுணர் யாருந் துவன்றிய வரண மாகி'' (கந்தபு. அசுர. விந்தம்பிலம். 1). 10. *கவசம்* (பிங்.); coat of mail. ''பாசம் பிணித்த வரணம் பரிவெய்த'' (கந்தபு. அசுர. அமரர். 54). 11. வேலி (சூடா.); hedge, enclosure. ''மாற்பெரு மதிலைச் சூழ வரம்பறு தானை தன்னை யேற்புடை யரண மாக வியற்று வித்து'' (கந்தபு. அசுர. அசுரர்யா. 37). 12. *கழுவாய், மாற்று* (பரிகாரம்); remedy.

''அரணமில் கூற்றின் முரண்டொலை யொருவனும்'' (ஞானா. 56). 13. வேல் (பிங்.); dart, spear. 14. செருப்பு; sandal. ''அடிபுதை யரணம்'' (பெரும்பாண். 69). 15. மஞ்சம் (அக.நி.); bed, couch. 16. அழகு (சங்.அக.); beauty.

ம. அரணம்

[அரண் → அரணம்.]

அரணம்வீசு-தல் *araṇam-vīšu-*, 5 செ.கு.வி. (v.i.) **கவசமணிதல்**; to put on a coat of mail. ''அரைசரு மமர்மலைந் தரணம் வீசினார்'' (சீவக. 777).

அரணவுணர்வு *araṇa-v-uṇarvu*, பெ. (n.) **இறையறிவு (பதிஞானம்)**; knowledge of God.

[அரணம் + உணர்வு.]

அரணாம்பரம் *araṇāmbaram*, பெ. (n.) 1. **மதில்**; fort-wall. 2. **வேலி**; hedge.

[அரண் → அரணம் + அம்பரம். உம்பரம் (வானம்) → அம்பரம் = வானளாவும் உயர்ச்சி.]

அரணி-த்தல் *araṇi-*, 4 செ.கு.வி. (v.i.) **உரத்தல், கடினப்படுதல்**; to grow hard, as a boil. —, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **அரண்செய்தல்** (M.); to fortify, strengthen. 2. **காவல் செய்தல்**; to defend, protect. 3. **அழகுபடுத்துதல்**; to adorn.

[அரண் → அரணி.]

அரணி[1] *araṇi*, பெ. (n.) 1. **கோட்டை மதில்** (அக.நி.); wall of a fort. 2. **வேலி** (பொதி. நி.); hedge. 3. **கவசம்** (அக.நி.); coat of mail. 4. **காடு**; jungle, forest (W.).

[அரண் → அரணி.]

அரணி[2] *araṇi*, பெ. (n.) **கன்னி முத்திரை, அல்குல் சவ்வு**; the fold of mucous membrane at the vaginal entrance, hymen (சா.அக.).

அரணிச்சுறா *araṇi-c-cuṟā*, பெ. (n.) **ஒருவகைக் கடல்மீன்**; a kind of sea-fish, *Scyllium marmoratum.*

[அரணி + சுறா.]

அரணித்த பரு *araṇitta-paru*, பெ. (n.) **கட்டி**; an abcess or boil, a matured wart (சா.அக.).

அரணிய *araṇiya*, பெ. எ. (adj.) **காப்புடைய**; defended. ''அரணிய விலங்கை'' (பாரத. இராசசூ. 67).

[அரண் → அரணிய.]

அரணிருக்கை *araṇ-irukkai*, பெ. (n.) **கோட்டை** (சங்.அக.); fort, fortress.

[அரண் + இருக்கை (தொ.ஆகு.).]

அரணை[1] *araṇai* பெ. (n.) 1. **பல்லியரணை**; a type of red-tailed lizard, *lacertidae*. 2. **பாம்பரணை, பல்லியைப் போன்ற வடிவும் பாம்பைப் போன்ற தோற்றமும் முழுவளர்ச்சியில் 8 அல்லது 9 விரலம் (அங்குலம்) நீளமுமுள்ள அரணை**; smooth streaked lizard, *Lacerta interpanctula* (செ.அக.).



அரணை

உடும்பைப்போல் இரட்டை நாக்குடையதும், பல்லியைப்போன்ற வடிவுள்ளதுமான ஒரு நச்சுயிரி. இது தலைப்பக்கம் உறை போன்ற அமைப்புடன், முதுகிற் சிலாம்புகள் உள்ளதாயும், பக்கங்களிற் சுரசுரப்பானதாயும், வால் நீண்டும் இருக்கும். இது கடித்தால் (அல்லது நக்கினால்) உடம்பு முழுவதும் நடுக்கங் கண்டு, நாக்குத் தடித்து, வாயில் நுரை தள்ளும். 'அரணை கடித்தால் (தீண்டினால்) மரணம்' என்பது பழமொழி. அரணையிற் பலவகையுண்டு. காவேரி, சேலம், கோயம்புத்தூர் — இவ்விடங்களில் இவற்றை மிகுதியாகக் காணலாம்; a house lizard with red tail. It is a reptile having double tongue like the iguana and resembling the lizard in its structure. It is a class of reptiles that have heads covered with shields. It is 5½″ long. Its tongue is slender, free, exertive and terminating in a fork. It has scales on the back and is granular on the sides. Its tail is very long. Its licking is considered poisonous and is marked by tremor and thickening of tongue. There is a Tamil proverb, viz., 'If a streaked lizard bites death ensues'. The reptile is very common on the Coromandel coast, Salem and Coimbatore, especially near the banks of *Cāvēry, Cabrita leschenaultii.*

The other South Indian species are :

1. *Acanthodactylus nilgherrensis.*
2. *Nilgherries.*
3. *Calosaura leschenaultii.*
4. *Lacerta leschenaultii.*

ம. அரண; க., து. அரணெ.

[அரள் → அரளை → அரணை = அச்சத்தை யுண்டுபண்ணுவது. 'அரணை தீண்டினால் மரணம்' (பழ.). இனி, அரணை ஒருமருங்கு பாம்பை யொத்திருப்பதனாலும், கொல்லுந் திறனுடையதாயிருந்தும் மக்கள் தங்கும் அல்லது வழங்கும் இடத்தில் அச்சமின்றித் தாராளமாய் வந்து திரிவதனாலும், அர (பாம்பு) + அணை (சார்பு) என்று கருத இடமிருப்பினும், அது அத்துணைக் கொள்ளத்தக்கதன்று.]

அரணை[2] *aranai*, பெ. (n.) எயிறு (எகிர்) (நெல்லை); the gums (Tn.).

[அரண் → அரணை = பல்லிற்கு அரண்போ லிருப்பது.]

அரணைக்கடி *aranai-k-kadi*, பெ. (n.) அரணை நக்கல்; the licking of a streaked lizard.

[அரணை + கடி.]

அரணைக்கல் *aranai-k-kal*, பெ. (n.) வேலை செய்யப்படாத கல் (இ.வ.); uncut stone (Loc.).

[அரணை + கல்.]

அரணைச்சம்பா *aranai-c-cambā*, பெ. (n.) நெல் வகை (A.); a kind of paddy.

[அரணை + சம்பா.]

அரணைதீண்டல் *aranai-tindal*, தொ.பெ. (vbl.n.) அரணைநக்கல்; the licking of a streaked lizard.

அரணைநக்கல் *aranai-nakkal*, தொ.பெ. (vbl.n.) அரணைதீண்டல் பார்க்க; see *aranai-tindal.*

அரணைமதி *aranai-madi*, பெ. (n.) நினைவுக் குறைவான மதி (புத்தி) (இ.வ.); mind deficient in memory (Loc.).

அரணைவாற்சுருட்டை *aranai-vār-curuttai*, பெ. (n.) அரணைபோல வாலுடைய ஒருவகைச் சுருட்டைப் பாம்பு; a kind of *šuruttai* snake with tail like that of the green lizard, lizard-tail carpet snake (சா.அக.) — சுருட்டைப் பாம்பு வகை (M.M.); variety of *Echis carinata* (செ. அக.).

[அரணை + வால் + சுருட்டை.]

அரணைவாற்றுடிப்பு *aranai-vār-rudippu*, பெ. (n.) துண்டிக்கப்பட்ட அரணைவால் துடித்தல்போல் மாந்தர் நாடி விரைவாகத் துடித்தல்; violent pulsation like the flirt or flutter of the cut-off tail of a streaked lizard (சா.அக.).

[அரணை + வால் + துடிப்பு.]

அரத்தக்கசடு *aratta-k-kašadu*, பெ. (n.) அரத்தக் கேடு; impurities of blood (சா.அக.).

[அரத்தம் + கசடு. கசண்டு → கசடு.]

அரத்தக்கசிவு *aratta-k-kašivu*, பெ. (n.) அரத்தம் கசிதல்; oozing of blood, *Angiorrhea* (சா.அக.).

[அரத்தம் + கசிவு. கசி → கசிவு. 'வு' தொ.பெ. ஈறு.]

அரத்தக்கட்டி *aratta-k-katti*, பெ. (n.) 1. வேனிற் காலத்தில் அரத்தக் கொதிப்பினால் உடம்பிற் பலவிடங்களில் எழும்புங் கட்டி; painful boils appearing on several parts of the body during summer, oriental boil. 2. அரத்தம் தங்கி நிற்கும் கட்டி; an abscess which contains blood, *Haemorrhagic abscess.* 3. அரத்தம் உறைந்து திரண்ட கட்டி; a clot of blood, *Crassamentum* (சா.அக.).

[அரத்தம்+கட்டி. கட்டு → கட்டி. 'இ' வி.முத. ஈறு.]

அரத்தக்கட்டு *aratta-k-kattu*, பெ. (n.) 1. அரத்தத் தேக்கம்; congestion of blood, overfullness of the capillaries and other blood vessels in any part of the body. 2. அரத்தம் உறைதல்; clotting or coagulation of blood.

[அரத்தம் + கட்டு (முத.தொ.பெ.).]

அரத்தக்கடுப்பு *aratta-k-kaduppu*, பெ. (n.) 1. சீலமும் அரத்தமுமாகவாவது அரத்தமாக வாவது கழியும் வயிற்றுளைச்சல்; dysentery characterised by discharge of blood with or without mucus. 2. அரத்தக் கழிச்சலால் மல வாயிலிற் காணும் எரிச்சல்; burning sensation felt in the anus from discharge of blood. 3. அரத்தக் கொதிப்பு; the heated condition of blood in the system (சா.அக.).

[அரத்தம் + கடுப்பு. கடு → கடுப்பு. 'பு' தொ. பெ. ஈறு. கடுத்தல் = எரிதல், வெப்பமாதல்.]

அரத்தக்கண் *aratta-k-kan*, பெ. (n.) கண்களி லுள்ள அரத்தக் குழாய்கள் பருத்து அதனால்

மிகுதியாக அரத்தந் தங்கிச் சிவந்த கண்; blood-shot eyes due to the extravasation of blood within the eye. 2. சினக்கண்; reddened eyes of an irate person.

[அரத்தம் + கண்.]

அரத்தக்கண்ணன் *aratta-k-kaṇṇaṉ*, பெ. (n.) 1. செங்கண்ணன்; a person with blood-shot eyes. 2. புளிச்சக்கண்ணன்; one with blear-eyes (சா.அக.). 3. சினக்கண்ணன்; irate person with reddened eyes.

[அரத்தம் + கண்ணன். கண் → கண்ணன். 'அன்' உடையவன் ஈறு (ஆ.பா.).]

அரத்தக்கணம் *aratta-k-kaṇam*, பெ. (n.) குழந்தைகட்கு நாக்குப் பூத்து, வயிறு கடுத்து, நாடி அயர்ந்து, உடல் வாடி, இருமலுடன் அரத்தங் கழியும் ஒருவகைக் கணநோய்; an obscure disease in children complicated with intestinal disturbances, and characterised by furred tongue, irritation of the bowels, weakness, emaciation, cough, haemorrhages from mucous membranes, etc., a kind of tabes (சா.அக.).

[அரத்தம் + கணம். கணத்தல் = எரிதல், சுடுதல். கண → கணம்.]

அரத்தக்கணமூலம் *aratta-k-kaṇa-mūlam*, பெ. (n.) கணநோயாற் குழந்தைகட்கு மலவாயின் வழியாக அரத்தம் ஒழுகும் ஒருவகை மூலநோய்; bleeding from the anus in children due to improper diet, infantile scurvy (சா.அக.).

[அரத்தம் + கணம் + மூலம்.]

அரத்தக்கத்தரி *aratta-k-kattari*, பெ. (n.) ஒருவகைப் பாம்பு; a kind of snake (சா.அக.).

[அரத்தம் + கத்தரி.]

அரத்தக்கதசுரம் *aratta-k-kada-śuram*, பெ. (n.) 1. அரத்தத்தை முறித்து உடம்பின் வலுவைக் குறைக்கும் ஒருவகைக் காய்ச்சல்; a fever in which the blood undergoes rapid degenerative changes and as a result of which the body becomes weak. 2. அரத்த மூத்திரத்தை யுண்டாக்கும் ஒரு நச்சுக் காய்ச்சல்; a malarial fever causing the passing of blood in urine, Haematuric fever (சா.அக.).

[அரத்தம் + கதம் + சுரம். கதத்தல் = சுடுதல். கத → கதம். சுள் → சுர் → சுரம் = சூடு, காய்ச்சல், சுடும் பாலைநிலம்.]

அரத்தக்கதிப்பு *aratta-k-kadippu*, பெ. (n.) உடம்பில் எப் பாகத்திலேனும் ஏற்படும் அரத்த மிகுதி; excess of blood in any part of the body, *Hyperemia* (சா.அக.).

[அரத்தம் + கதிப்பு. கதித்தல் = மிகுதல். 'பு' தொ.பெ. ஈறு.]

அரத்தக்கந்தகம் *aratta-k-kandagam*, பெ. (n.) நால்வகைக் கந்தகங்களுள் ஒன்றாகிய சிவப்புக் கந்தகம்; red sulphur (சா.அக.).

[அரத்தம் + கந்தகம். காந்து → காந்தகம் → கந்தகம் = விரைந்து எரியும் பொருள். காந்துதல் = எரிதல்.]

சமற்கிருதத்திலுள்ள 'கந்தக' (gandhaka) என்னும் சொற்கு 'மணமுள்ள' என்றே பொருள் கூறப்பட்டுள்ளது. அது பொருந்தாது. ஆதலால், அச் சொல் தென்மொழியி னின்று வடமொழி கடன்கொண்டதாகவே யிருத்தல் வேண்டும்.

அரத்தக்கமலம் *aratta-k-kamalam*, பெ. (n.) செந்தாமரை; red lotus, *Nelumbium speciosum* (சா.அக.).

[அரத்தம்+கமலம். கம் = நீர். கம் → கமல் → கமலம் = நீரில் முளைப்பது.]

அரத்தக்கல் *aratta-k-kal*, பெ. (n.) ஈரற்கல்; blood-stone or oriental jasper, *Heliotrope* (சா.அக.).

[அரத்தம் + கல்.]

அரத்தக்கலசவெரிச்சல் *aratta-k-kalaśa-v-ericcal*, பெ. (n.) மாடுகட்குண்டாகும் மார் பெரிச்சல்; inflammation of the heart in cattle, heart-burning (சா.அக.).

[அரத்தம்+கலசம்+எரிச்சல். எரி→எரிச்சல். 'சல்' தொ.பெ. ஈறு.]

அரத்தக்குலையெரிச்சல் என்பது தூய தமிழ்.

அரத்தக்கலப்பு *aratta-k-kalappu*, பெ. (n.) 1. நெருங்கியவுறவு; consanguinity, blood-relationship. 2. ஒருவரின் அரத்தம் மற்றொருவருடம்பிற் போய்க் கலத்தல்; running of one's blood in another's veins, said of relatives. 3. இருவகை யரத்தம் ஒருமிக்கச் சேர்தல்; an admixture of two kinds of blood. 4. அரத்தத்தி லுண்டான பலவகைக் கூறுகளின் கலப்பு; composition of blood (சா.அக.).

[அரத்தம் + கலப்பு.]

அரத்தக்கலிதம் *aratta-k-kalidam,* பெ. (n.) 1. **ஆண்குறியின் வழியாக அரத்தம் வெளிப்படல்**; discharge of blood through the urinary tract. 2. ***அரத்தம் கலந்த விந்து வெளிப்படல்***; discharge of blood in semen, *Haematospermia* (சா.அக.).

[*அரத்தம்* + **Skt.** skhalitā > *த. கலிதம்* = *கழிகை, வெளிப்பாடு.*]

அரத்தக்கழிவு என்பது தூய தமிழ்.

அரத்தக்கவிச்சு *aratta-k-kaviccu,* பெ. (n.) ***அரத்த நாற்றம்***; stink of blood (W.).

[*அரத்தம் + கவிச்சு.* **ஒருகா.** *கொச்சு (கொச்சை) → கவிச்சு.*]

அரத்தக்கழலை *aratta-k-kaḻalai,* பெ. (n.) 1. ***அரத்தச் சொரிவினாலேற்பட்ட கழலைக் கட்டி***; a tumour containing effused blood, blood tumour, *Haematoma.* 2. ***கண்ணிமைக்கு மேல் சிவப்பாக எழும்பும் ஒருவகைக் கழலைக் கட்டி, மூவகைக் கழலைகளுள் ஒன்று***; one of the three tumours contemplated in Tamil Medical Science, *i.e.*, a sebaceous cyst of an eye-lid, stye, *Blepharo atheroma.* 3. ***அரத்த நரம்புகளா லாக்கப்பட்ட ஒருவகைக் கழலை***; a tumour formed by an artery and filled with blood, *Aneurysm.* 4. ***அரத்தக் குழாய்கள் அமைந்த கழலை***; a tumour made up of new-formed blood vessels, *Haemangioma* (சா.அக.).

[*அரத்தம் + கழலை. கழலுதல் = நெகிழ்தல். கழல் → கழலை = நெகிழும் கட்டி.*]

அரத்தக்கழிச்சல் *aratta-k-kaḻiccal,* பெ. (n.) 1. ***அரத்தமுஞ் சீலமுங் கலந்த வயிற்றோட்டம்***; diarrhoea with discharge of blood and mucous stools, *Dysenteric diarrhoea, Melaena.* 2. ***அரத்தப்போக்கு***; discharge of blood, dysentery, bloody flux. 3. ***மலம் கலந்த அரத்தப் போக்கு***; the passage of blood in faeces, *Haematechezia.* 4. ***அரத்தமும் சீலமும் மலமுங் கலந்த கழிச்சல்***; purgation or discharge through the anus, of blood mixed with faeces and mucus (சா.அக.).

இவ் விறுதிவகை பல்வேறு கரணியங்களால் நிகழும்.

(1) செரிமானக் கோளாறு; disorder of digestive organs, as in dysentery, etc.

(2) கடுமையான கழிச்சல் மருந்து; violent purgative.

(3) நஞ்சுக் கலப்பு; blood-poisoning.

(4) திகில், திடும் அச்சம், திடுக்கிடல் முதலியன; fear, shock, sudden agitation, etc., intestinal haemorrhage.

(5) பேய்மந்திரம், செய்வினை, ஏவல் முதலிய கருங்கலை; black art such as sorcery, witchcraft, etc.

(6) நாட்பட்ட சில நோய்களால் ஏற்படுங் கோளாறு; complications arising from some chronic diseases.

அரத்தக்கள்ளி *aratta-k-kaḷḷi,* பெ. (n.) ***சிவப்புச் சதுரக்கள்ளி***; a red variety of square-spurge, *Euphorbia antiquorum* (சா.அக.).

[*அரத்தம் (சிவப்பு) + கள்ளி. கள் = முள். கள் → கள்ளி.*]

அரத்தக்கற்றாழை *aratta-k-kaṟṟāḻai,* பெ. (n.) ***செங்கற்றாழை***; red aloe, *Aloe vera (officinalis).*

[*அரத்தம் + கற்றாழை. அரத்தம் = சிவப்பு.*]

அரத்தக்கன்னசூலை *aratta-k-kaṉṉa-śūlai,* பெ. (n.) ***ஊதை பித்த கோழையாலும், கல் முதலியவற்றால் அடியுண்பதனாலும், காதினுள் சீழ் அரத்தம் முதலியன சேர்ந்து குத்தலையும் அரத்தவொழுக்கையும் உண்டாக்கும் ஒரு காது நோய்***; a disease of the ear followed by pricking pain and discharge of blood arising from the deranged condition of the humours in the system, and also from traumatic causes, *Otitis haemorrhagica* (சா.அக.).

[*அரத்தம் + கன்னம் + சூலை.*]

*அரத்தம், கன்னம்*², *சூலை* பார்க்க; see *arattam, kaṉṉam*², *śūlai.*

அரத்தக்கனப்பு *aratta-k-kaṉappu,* பெ. (n.) 1. ***அரத்தம் மீறுகை***; a condition marked by excess of blood and fullness of pulse, *plethora.* ***அரத்தக்கொழுப்பு*** பார்க்க; see *aratta-k-koḻuppu.* 2. ***அரத்தக் கொதிப்பினால் எழும் சூடு***; local increase of heat due to larger supply of blood in a part of the body.

[*அரத்தம் + கனப்பு. கனத்தல் = மிகுதல். கன → கனப்பு. 'பு' தொ.பெ. ஈறு.*]

அரத்தக்கனி *aratta-k-kaṉi,* பெ. (n.) ***கோவைப் பழம்***; bright scarlet edible fruit of Indian caper, *Bryonia grandis* (சா.அக.).

[*அரத்தம் (சிவப்பு) + கனி. கன்னுதல் = பழுத்தல். கன் → கன்னி → கனி.*]

அரத்தக்காசம் *aratta-k-kāšam*, பெ. (n.) **செங் கீரை**; a red edible greens, *Amaranthus* (genus) (சா.அக.).

அரத்தக்காஞ்சனம் *aratta-k-kāñjaṉam*, பெ. (n.) **செம்மந்தாரை**; pink and yellow mountain ebony, *Bauhinia variegata* (சா.அக.).

அரத்தக்காஞ்சினை *aratta-k-kāñjiṉai*, பெ. (n.) **ஆற்றலரி**; marking-nut tree, *Semicarpus anacardium* (சா.அக.).

அரத்தக்காம்பிலூசரமாக்கி *aratta-k-kāmbil-ūšaram-ākki*, பெ. (n.) **உகாமரம்**; tooth-brush tree, *Salvadora persica* (சா.அக.).

அரத்தக்காட்டேறி *aratta-k-kāṭṭēṟi*, பெ. (n.) *அரத்தத்தை உறிஞ்சும் ஒருவகைப் பெண்பேய்*; a blood-thirsty female demon (சா.அக.).

[அரத்தம் + காட்டேறி (காடு + ஏறி). ஏறு → ஏறி. 'இ' வி.முத. ஈறு.]

அரத்தக்காணிக்கை *aratta-k-kāṇikkai*, பெ. (n.) *போரில் விழுப்புண்பட்ட அல்லது மடிந்த மறவரின் மைந்தர்க்குக் கொடுக்கும் நிலமானியம்* (M.M.); 'Blood-present', an endowment in the form of a gift of land rent free for the support of the heirs of warriors wounded or killed in battle.

[அரத்தம் + காணிக்கை. காணித்தல் = மேற் பார்த்தல், கவனித்தல், காத்தல். காணி → காணிக்கை (தொ.ஆகு.). 'கை' தொ.பெ. ஈறு.]

அரத்தக்காயம் *aratta-k-kāyam*, பெ. (n.) *அரத்தம் ஒழுகும் புதுப்புண், கத்திபடுவதனால் அல்லது கரடுமுரடான கற்போன்ற கடினப் பொருள் மோதுவதனால் உண்டாவது*; bleeding wound caused by knife, rough stone, etc.

ம. காயம்; க., து. காய; தெ. காயமு; மரா. காய.

[காழ்த்தல் = தழும்புண்டாதல். காழ் = தழும்பு, புண் (ஆகு.). காழ் → காய் → காயம்.]

அரத்தக்காலி *aratta-k-kāli*, பெ. (n.) **செந் நெல்**; red paddy (சா.அக.).

[அரத்தம் + காலி. அரத்தம் = சிவப்பு.]

அரத்தக்கிட்டம் *aratta-k-kiṭṭam*, பெ. (n.) *அரத்தக் கட்டியின்மேல் உண்டாகும் ஏடு (புதுவை)*; buffy coat of coagulated blood (Poṇḍ.).

[அரத்தம் + கிட்டம். கிட்டுதல் = நெருங்குதல், இறுகுதல். கிட்டு → கிட்டம் (தொ.ஆகு.). இறுகிய அல்லது திணிந்த ஏடு. 'அம்' தொ.பெ. ஈறு.]

அரத்தக்கிருமி *aratta-k-kirumi*, பெ. (n.) *அரத்தம் கெடுவதனால் அரத்தமோடும் நரம்பிடங்களிற் பிறந்து பிறகு தனித்தனியே பெருங்கூட்டங் களாகி எங்கும் பரவி மயிர்க்கால்களை யணுகி மயிர்களை உதிரச் செய்தும், உடம்பின் நிறத்தை மாற்றியும் மற்றும் பல்வகை இடையூறுகளைச் செய்யும் நோய்ப்பூச்சிகள். அணுக்கிருமி, வட்டக்கிருமி, வாலில்லாக்கிருமி, மிகநுண்கிருமி, செங்கிருமி, தோற்றாக்கிருமி என இவை அறு வகைப்படும்*; the germs supposed to originate in the veins due to the vitiation of the blood. They increase in large numbers and are carried by the circulation to the hair-follicles where they bring about unhealthy changes, such as, falling of hairs, change of complexion, etc. They are of six kinds, as enumerated above of which, some are minute, but visible, while others are invisible virus. Some are round and some without flagellum and some are red and others are black (சா.அக.).

[அரத்தம் + கிருமி. **Skt.** krimi > த. *கிருமி.]*

அரத்தக்கிலிட்டம் *aratta-k-kiliṭṭam*, பெ. (n.) *ஒரு காரணியமுமின்றிக் கண்களுக்கு மிகுந்த அரத்த நிறத்தையும் வாட்டத்தையும் உண்டு பண்ணும் கண்ணோய் வகை*; congestion or inflammation of the eye without any apparent cause (சா.அக.).

அரத்தக்குட்டம் *aratta-k-kuṭṭam*, பெ. (n.) *புண்களினின்று அரத்தம் வடியும் ஒருவகைக் குட்டநோய்*; a kind of leprosy attended with discharge of blood from the ulcers (சா.அக.).

[அரத்தம்+குட்டம். குள் → குட்டு → குட்டம் = உறுப்புகள் அழுகிக் குட்டம் படுதல் (குட்டை யாதல்).]

அரத்தக்குடல்விருத்தி *aratta-k-kuḍal-virutti*, பெ. (n.) *அரத்தம் குடலில் நிறைந்து அதைப் பருக்கச் செய்தும், சிறுசிறு கொப்புளங்களை யுண்டாக்கியும் குடலில் வலியைத் தோற்று விக்கும் ஒருவகைக் குடல்நோய்*; enlargement

of the intestines marked by pain and ulceration, caused by the accumulation of blood in the bowels (சா.அக.).

[அரத்தம்+குடல்+**Skt.** vriddhi = வளர்ச்சி.]

அரத்தக்குடல் வளர்ச்சி அல்லது பெருக்கம் என்பது தூய தமிழாகும்.

அரத்தக்குந்தம் *aratta-k-kundam*, பெ. (n.) கண்விழியின் சதை சிவந்து பிதுங்கிக் குத்த லெடுக்கும் ஒருவகைக் கண்ணோய்; protrusion of the cornea or sclera resulting from inflammation and marked by lancinating pain, *Staphyloma* (சா.அக.).

[அரத்தம்+குந்தம். குத்து→குந்து→குந்தம் = குத்தும் ஈட்டி, ஈட்டி குத்துவது போன்ற குத்தல் வலி.]

அரத்தக்குமிளம் *aratta-k-kumiḷam*, பெ. (n.) வெள்விழியிற் சிவப்புக் குண்டுமணிபோற் சிவந்த கொப்புளத்தை யுண்டாக்கும் ஒரு வகைக் கண்ணோய்; a disease developing red pustules in the white of the eye; a variety marked by small vesicles or ulcers, each surrounded by a reddened zone, *Phyletenular conjunctivitis* (சா.அக.).

[அரத்தம் + குமிளம். கும்→குமி→குமிள்→ குமிளம் = உருண்ட திரண்ட கொப்புளம்.]

அரத்தக்குமுதம் *aratta-k-kumudam*, பெ. (n.) 1. செவ்வாம்பல்; red Indian water-lily. 2. செஞ் சந்தனம்; red sandal. 3. கருவிழியில் அரத்தம் போற் சிவந்த சதை வளர்ந்து தீச்சுட்ட புண் போல் எரிச்சலும் குத்தலும் உண்டாகி முன் துருத்திக்கொண்டிருக்கும் கண்ணோய்; Staphyloma formed by an iris protruding through the cornea and causing acute pain as a result of inflammation, *Staphyloma corneae* (சா.அக.).

[அரத்தம் (சிவப்பு) + குமுதம். கும்→குமுது→ குமுதம் = குவிவது.]

அரத்தக் குமுதம் என்பது செந்தாமரைக்கு ஒரு பெயராக மலையகராதியிற் குறித்திருப் பது பொருந்தாது.

அரத்தக்குரா *aratta-k-kurā*, பெ. (n.) வேங்கை மரம்; Indian kino tree, *Pterocarpus marsupium* (சா.அக.).

[அரத்தம் + குரா.]

அரத்தக்குலை *aratta-k-kulai*, பெ. (n.) அரத்தம் வெளிப்படும் ஒருவகைக் குலைநோய்; an internal disease, so called from the discharge of blood from the viscera (சா.அக.).

[அரத்தம் + குலை.]

அரத்தக்குவை *aratta-k-kuvai*, பெ. (n.) கடைக் கண்ணில் அரத்த நிறமான நுண்ணிய சதை வளரும் ஒருவகைக் கண்ணோய்; an eye disease marked by a growth of thin red flesh on the inner corner of the eye, *Pterygium*; a patch of thickened conjunctiva extending over a part of the cornea, *Congenital pterygium* (சா.அக.).

[அரத்தம் (சிவப்பு)+குவை. குவி → குவை.]

அரத்தக்குழல் *aratta-k-kuḻal*, பெ. (n.) 1. அரத்தம் ஓடும் குழாய்; blood-vessel. 2. அரத்தம் ஓடும் நாடிகள், நாளங்கள், தந்துகி கள் ஆகிய அரத்தக் குழாய் வகைகளின் பொதுப் பெயர்; a common name for the system of blood-vessels comprising of the arteries, veins and capillaries (சா.அக.).

[அரத்தம் + குழல்.]

தந்துகிகளை மயிரங்கள் எனலாம். ஒ.நோ. **L.** *capillus*, hair. **E.** *capillary*, blood-vessel of minute or hair-like diameter.

அரத்தக்குழல் விரிவு; dilatation of the blood-vessels (சா.அக.).

அரத்தக்குழாய் *aratta-k-kuḻāy*, பெ. (n.) அரத்தக்குழல் பார்க்க; see *aratta-k-kuḻal*.

[அரத்தம் + குழாய்.]

அரத்தக்குறுகடம் *aratta-k-kuṟugaḍam*, பெ. (n.) 1. உடம்பிலுள்ள அரத்தத்திற் காணப்படும் சிறிய சாலங்கள் (சிற்றுருக்கள்); blood corpuscles, *Haemad*. 2. சிவப்புக் குறு கடம்; red corpuscle, *Erythrocyte* (சா.அக.).

[அரத்தம் + குறு + கடம். குடம் → கடம் = குடம்போன்ற உடம்பு, பொருள், உருவம்.]

L. corpus = body, corpusculum (சிற்றுடம்பு). **E.** corpuscle = minute body forming distinct part of the organism, esp. (pl.) those constituting large part of the blood in vertebrates.

குறுகடம் என்பது ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாகத் தோன்றுகின்றது. குறுங்கடம் என்பது சிறுகடம் என்பதை யொத்துக் குறுகடம் என்றானது.

அரத்தக்குறைச்சல் *aratta-k-kuṟaiccal*, பெ. (n.) அரத்தக்குறைவு பார்க்க; see *aratta-k-kuṟaivu*.

[அரத்தம் + குறைச்சல்.]

அரத்தக்குறை(ப்)பாடு *aratta-k-kuṟai(p)pāḍu*, பெ. (n.) உடம்பில் அரத்தம் குறைவாயிருத்தல்; deficiency in the volume of blood in the system, *Oligemia* (சா.அக.).

[அரத்தம் + குறைபாடு. குறைபடு → குறை பாடு (முத.தி.தொ.பெ.). 'படு' து.வி.]

அரத்தக்குறைவு *aratta-k-kuṟaivu*, பெ. (n.) 1. அரத்தக்குறை; deficiency of blood in quality, anaemia. 2. அரத்தக் குறைச்சல்; deficiency of blood in quantity, *Oligocythemia* (சா.அக.).

[அரத்தம் + குறைவு. குறை → குறைவு (தொ.பெ.). 'வு' தொ.பெ. ஈறு.]

அரத்தக்குன்மம் *aratta-k-kuṉmam*, பெ. (n.) பெண்டிரின் மாதவிடாய் தடைப்படும் ஒரு நோய் (தைலவ. தைல. 108); uterine tumour, a disease causing *amenorrhoea*.

[அரத்தம் + Skt. gulma > த. குன்மம்.]

இதை விடாய்க்கட்டு எனலாம்.

அரத்தக்கூட்டு *aratta-k-kūṭṭu*, பெ. (n.) அரத்தக் கலப்பு; mixture of blood (சா.அக.).

[அரத்தம் + கூட்டு.]

அரத்தக்கூறுபாடு *aratta-k-kūṟupāḍu*, பெ. (n.) அரத்தக் கூறுகளைப் பிரித்தல்; analysis of the blood, *Haemanalysis* (சா.அக.).

[அரத்தம் + கூறுபாடு. கூறுபடு → கூறுபாடு (முத.தி.தொ.பெ.). 'படு' து.வி.]

அரத்தக்கேடு *aratta-k-kēḍu*, பெ. (n.) 1. அரத்தக் கெடுதி; the disintegration or degeneration of the blood, *Haematolysis* or *Haemalysis*. 2. அரத்தக் குறைவு; defective state of the blood, Anaemia (சா.அக.).

[அரத்தம் + கேடு. கெடு → கேடு (முத.தி. தொ.பெ.).]

அரத்தக்கொதி *aratta-k-kodi*, பெ. (n.) 1. துயரம், கவலை, மூளையுழைப்பு முதலிய வற்றாலுண்டாகும் அரத்தக் கொதிப்பு; heated condition of the blood, consequent on excessive grief, care, brain-work, etc. 2. காமச்சூடு; heat of blood in youth inflamed with sexual passion, lasciviousness.

[அரத்தம் + கொதி.]

அரத்தக்கொப்புளம் *aratta-k-koppuḷam*, பெ. (n.) அரத்தங்கட்டிய கொப்புளம்; blister containing blood (சா.அக.).

[அரத்தம் + கொப்புளம். கொப்புளி → கொப் புளம் (தொ.பெ.). 'அம்' தொ.பெ. ஈறு.]

அரத்தக்கொய்யா *aratta-k-koyyā*, பெ. (n.) சிவப்புக்கொய்யா; red guava fruit.

[அரத்தம் + கொய்யா. **Sp**. guayaba > **E**. guava > த. கொய்யா.]

அரத்தக்கொழுப்பு *aratta-k-koḻuppu*, பெ. (n.) 1. அரத்தச் செழுமை; fullness of blood. 2. மதம், மதர்ப்பு; high mettle, voluptuousness. 3. செருக்கு; arrogance, haughtiness (W.).

[அரத்தம் + கொழுப்பு. கொழுத்தல் = செழித் தல். கொழு → கொழுப்பு. 'பு' தொ.பெ. ஈறு.]

அரத்தக்கோமாரி *aratta-k-kōmāri*, பெ. (n.) 1. மாட்டிற்குண்டாகும் அரத்தக் கழிச்சல் (மூ.அ.); a disease incident to cattle characterized by a discharge of blood. 2. ஒருவகைப் புல்; a species of red grass (சா.அக.).

[அரத்தம் + கோ + மாரி. கோ = ஆன், ஆனினம், மாடு. ஒருகா. மாரி = அம்மைநோய் வகை. மால் → மார் → மாரி = காளி, அம்மை நோய்.]

மாரி பார்க்க; see *māri*.

அரத்தக்கோவை *aratta-k-kōvai*, பெ. (n.) ஒரு கல்லீரல் நோய்; congestion of the liver, *Hepatitis* (சா.அக.).

அரத்தக்கோழை *aratta-k-kōḻai*, பெ. (n.) அரத்தங்கலந்த கோழை; mucous streaked with blood (சா.அக.).

[அரத்தம் + கோழை.]

அரத்தகம் *arattagam*, பெ. (n.) பெண்டிர் தம் பாதத்திற்கும் இதழுக்கும் ஊட்டும் செம்பஞ்சுக் குழம்பு; red lac used by women for dyeing the feet and sometimes the lips. "அரத்தக மருளச் செய்த சீறடி" (சீவக. 2459).

Skt. alaktaka

[உல் → உல, உலர். உலர்தல் = காய்தல். உல் → எல் → எரி = நெருப்பு, நெருப்பின் நிற மான சிவப்பு. உல் → அல் → அலத்தம் = சிவப்பு, செம்பருத்தி. அலத்தம் → அலத்தகம் = செம் பஞ்சுக் குழம்பு. அலத்தகம் → அரத்தகம். ஒ.நோ: அலத்தம் → அரத்தம். இலத்தி → இரத்தி.

(இலத்தி → இலத்தை → இலந்தை). ல → ர, போலி.]

'அ-லக்தக' என்று வடமொழியார் பிரிப்பது தவறு.

அரத்தங்கக்கல் *arattaṅ-kakkal*, பெ. (n.) 1. **இருமலினால் அரத்தங் கக்கல்;** spitting of blood through cough, *Haemoptysis.* 2. **நுரையீரலிலிருந்து அரத்தம் வெளிப்படல்;** discharge of blood from the lungs, Bronchial haemorrhage (சா.அக.).

[அரத்தம்+கக்கல். கக்கு → கக்கல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அரத்தங்கட்டல் *arattaṅ-kaṭṭal*, தொ.பெ. (vbl.n.) 1. **அரத்தக் குழாயினின்று அரத்தம் வெளிப்பட்டுச் சதையில் தங்குதல்;** a discharge or escape of blood from a vessel into the tissue, extravasation of blood. 2. **சாகுந்தறுவாயில் உடம்பிலுள்ள அரத்தம் கட்டிகளாக உறைதல்;** clot of blood formed in the system in the process of dying, *thrombus* (சா.அக.).

[அரத்தம் + கட்டல். கட்டு → கட்டல் (தொ. பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அரத்தங்கன்றல் *arattaṅ-kaṉṟal*, தொ.பெ. (vbl.n.) 1. **அடி, காயம் முதலியவற்றால் அரத்தம் இறுகுதல்;** a livid, black or yellow spot produced by extravasated blood caused by a contusion. 2. **அடியினால் தோல்நிறம் மாறுதல்;** discolouration of the skin through contusion, bruise.

[அரத்தம் + கன்றல். கன்று → கன்றல் (தொ. பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அரத்தங்குத்திவாங்கல் *arattaṅ-kutti-vāṅgal*, தொ.பெ. (vbl.n.) **அரத்தநாளத்தைத் திறந்து அரத்தம் வெளியெடுத்தல்;** the opening of a vein for blood-letting, venesection, *Phlebotomy* (சா.அக.).

[அரத்தம் + குத்தி + வாங்கல்.]

அரத்த(ச்)சஞ்சம் *aratta-(c)-cañjam (aratta-šañjam)*, பெ. (n.) 1. **மலைமா;** hill mango. 2. **செங்கிளுவை;** red teal. 3. **செவ்வரக்கு;** red sealing wax (சா.அக.).

அரத்தச்சதுரக்கள்ளி *aratta-c-cadura-k-kaḷḷi*, பெ. (n.) **ஒருவகைச் சிவப்புச் சதுரக்கள்ளி;** red square-spurge, *Euphorbia antiquorum* (சா.அக.).

[அரத்தம் + சதுரம் + கள்ளி.]

அரத்தச்சந்தனம் *aratta-c-candaṉam*, பெ. (n.) **செஞ்சந்தனம்;** red sandalwood paste, *Pterocarpus santalinus* (சா.அக.).

[அரத்தம் + சந்தனம்.]

அரத்தச்சந்தியகம் *aratta-c-candiyagam*, பெ. (n.) **செங்கழுநீர்;** Indian red water-lily, *Nymphae odorata* (சா.அக.).

[அரத்தம் + சந்தியகம்.]

அரத்தச்சந்தியம் *aratta-c-candiyam*, பெ. (n.) **குளிரி;** arrow leaf plant, *Saggitaria obtusifolia* (சா.அக.).

அரத்தச்சவாகை *aratta-c-cavāgai*, பெ. (n.) **பெருவேம்பு;** giant neem or mountain neem, *Melia composita* (சா.அக.).

அரத்தச்சாட்சி *aratta-c-cāṭci*, பெ. (n.) 1. **மதத்தின்பொருட்டுக் கொல்லப்படுகை** (கிறித்.வ.); martyrdom (Chr.). 2. **மதத்தின்பொருட்டுக் கொல்லப்படுபவன்** (கிறித்.வ.); martyr (Chr.).

ம., து. ரக்தசாக்ழி.

[அரத்தம்+சாட்சி. Skt. sākshin > த. சாட்சி = சான்று, சான்றாளன்.]

அரத்தச்சாயல் *aratta-c-cāyal*, பெ. (n.) 1. **அரத்தங் கலந்தது;** blood-streaked. 2. **அரத்த நிறம் போன்றது;** resemblance to a blood-red colour (சா.அக.).

[அரத்தம் + சாயல். சாய் → சாயல். 'அல்' தொ.பெ., பண்.பெ. ஈறு.]

அரத்தச்சாய்ப்பு *aratta-c-cāyppu*, தொ.பெ. (vbl.n.) **அரத்தங்கொட்டல்;** bleeding, haemorrhage (சா.அக.).

ம. ரக்தச்சாரி; க. ரக்ததாரெ.

[அரத்தம் + சாய்ப்பு. சாய் → சாய்ப்பு. 'பு' தொ.பெ. ஈறு.]

அரத்த(ச்)சாரம் *aratta-(c)-cāram (aratta-šāram)*, பெ. (n.) **கருங்காலி** (சித்.அக.); ebony.

அரத்தச்சாலி *aratta-c-cāli*, பெ. (n.) **செஞ்சம்பா (அரிசி);** a kind of red rice (சா.அக.).

[அரத்தம் + சாலி.]

சாலி என்பதே செந்நெல்லின் பெயராகும். அரத்தச்சாலி என்பது மிகைபடக் கூறலே.

அரத்தச்சித்திரமூலம் *aratta-c-cittira-mūlam*, பெ. (n.) **பாறைவெடிப்பில் வளர்ந்திருக்கும்**

சிவப்புச் சித்திரமூலம்; a red variety of leadwort, *Plumbago rosea* (சா.அக.).

[அரத்தம் + சித்திரமூலம்.]

அரத்தச்சிலந்தி *aratta-c-cilandi*, பெ.(n.) 1. புண் கட்டிவகை; herpes. 2. உடம்பிற்பட்ட விடத்தில் அரத்தம் வடியும் கொப்புளங்களை யெழுப்பும் சிலந்திப்பூச்சி வகை; a kind of poisonous spider which causes bleeding blisters on coming in contact with the human body. 3. அரத்தம் வடியும் புண்வகை; haemorrhagic ulcer.

[அரத்தம் + சிலந்தி.]

சிலந்தி பார்க்க; see *šilandi*.

அரத்தச்சிவதை *aratta-c-civadai*, பெ.(n.) **சிவப்புச் சிவதை**; Indian jalap, *Ipomaea turpethum* (சா.அக.).

[அரத்தம் + சிவதை.]

அரத்தச்சிவப்பு *aratta-c-civappu*, பெ. (n.) 1. அரத்தம்போன்ற சிவப்பு; blood-red colour, scarlet. 2. அரத்தத்திலுள்ள செந்நிறப் பொருள்; the red colouring matter of the blood, Haemachrome (சா.அக.).

[அரத்தம் + சிவப்பு. சிவ → சிவப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ., பண்.பெ. ஈறு.]

அரத்தச்சுரப்பு *aratta-c-curappu*, பெ. (n.) 1. அரத்த மிகுதி; fullness of blood. 2. அரத்த வூறல்; suffusion of blood from a bruise (சா.அக.). 3. செருக்கு; arrogance, haughtiness.

[அரத்தம் + சுரப்பு. சுரத்தல் = ஊறல், மிகுதல். சுர → சுரப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

அரத்தச்சுரம் *aratta-c-curam*, பெ. (n.) குழந்தை கட்கு விட்டுவிட்டுக் காய்ச்சலடிப்பதனால் அரத்தக்கொதிப்பு ஏற்பட்டு மயக்கத்தை யுண்டுபண்ணும் காய்ச்சல் வகை; an intermittent fever in children attended with swooning as a result of heated condition of the blood.

[அரத்தம் + சுரம். சுள் → சுர் → சுரம்.]

அரத்தச்சுருட்டை *aratta-c-curuttai*, பெ. (n.) கடிப்பதனால் அரத்தங் கக்கவைக்கும் சுருட்டைப் பாம்பு வகை (M.M.); blood carpet-snake, the bite of which causes vomiting of blood, variety of *Echis carinata* (சா.அக.).

[அரத்தம் + சுருட்டை. சுருள் → சுருட்டு → சுருட்டை. கடிப்பினால் அரத்தங் கக்கவைக்கும் குணத்தால் அரத்தச்சுருட்டை யெனப்பட்டது.]

அரத்தச்சுழற்சி *aratta-c-cularci*, பெ. (n.) **அரத்த வோட்டம்**; circulation of blood (சா.அக.).

[அரத்தம் + சுழற்சி. சுழல் → சுழற்சி (தொ.பெ.). 'சி' தொ.பெ. ஈறு.]

அரத்தம் நெஞ்சாங்குலையினின்று நாடிகள் வாயிலாகச் சென்று உடம்பு முழுவதும் பரவி நாளங்கள் வாயிலாக நெஞ்சாங்குலைக்கு மீள்வது ஒரு சுழற்சியாயிற்று.

அரத்தச்சுற்றோட்டம் *aratta-c-currōttam*, பெ. (n.) **அரத்தச்சுழற்சி** பார்க்க; see *aratta-c-cularci*.

[அரத்தம் + சுற்றோட்டம்.]

அரத்தச்சூரிகை *aratta-c-cūrigai*, பெ. (n.) அரத்தவொழுக்கேற்படுத்தும் ஒருவகைக் கடுங் காய்ச்சல்; a kind of acute fever attended with extravasation of blood into the skin and mucous membranes, *Scarlatina haemorrhagica* (சா.அக.).

[அரத்தம் + சூரிகை. சுள் → சுர் → சுரம் → சூரம் → சூரிகை.]

அரத்தச்சூலை *aratta-c-cūlai*, பெ. (n.) சூதகவாயு (மாதவிடாய்த் தடைவளி); swelling of the abdomen, due to obstruction of the menstrual flow (W.) (செ.அக.).

உடம்பின் எப் பாகத்திலாவது உறுப்பிலாவது அரத்தம் அதிகமாய்ச் சேர்வதால் ஏற்படும் குத்தல்நோய்; an acute pain arising in any part or organ of the body due to the accumulation of blood (சா.அக.).

[அரத்தம் + சூலை.]

அரத்தச்சூலைவாயு *aratta-c-cūlai-vāyu*, பெ. (n.) சூதகவாயு (மாதவிடாய்த் தடைவளி); painful menstruation, *Dysmenorrhoea* (சா. அக.).

[அரத்தம் + சூலை + **Skt.** vāyu = வளி.]

அரத்தச்சூறை *aratta-c-cūrai*, பெ. (n.) சாம்பல் நிறமான மீன்வகை; greyish tunny, *Thynnus macropterus*.

[அரத்தம் + சூறை.]

அரத்தச்செம்மை *aratta-c-cemmai*, பெ. (n.) **மாணிக்கம்**; ruby, one of the nine gems.

[அரத்தம் + செம்மை.]

அரத்தச்சேமி *aratta-c-cēmi*, பெ. (n.) **நெருஞ்சில்**; a thorny herb, *Tribulus terrestris* (சா.அக.).

அரத்தச்சொறி *aratta-c-coṟi*, பெ. (n.) 1. *அரத்தங் காணும்வரை தினவெடுக்கும் சொறிவகை;* a skin disease causing intense itching resulting in bleeding. 2. *அரத்தக் கேட்டினாலுண்டாகுஞ் சொறி;* itching due to impurities of blood in the system (சா.அக.).

[அரத்தம் + சொறி.]

அரத்தச்சோகை *aratta-c-cōgai*, பெ. (n.) 1. *ஓரிடத்தில் அரத்தங் கட்டிக்கொண்டு காணும் வீக்கம்;* a swelling caused by extravasation of blood. 2. *அரத்தக் குறைவினா லேற்படும் சோகைநோய்;* anaemia caused by malnutrition and reduction in blood-cells, *Haemophthisis* (சா.அக.).

[ஒருகா. அரத்தம் + சோர்வை → சோவை → சோகை.]

'சோகை' என்னுஞ் சொல்லிற்குச் 'சோஷ' என்னும் வடசொல்லை மூலமாகக் காட்டுவது பொருந்தாது.

சோகை பார்க்க; see *šōgai*.

அரத்தஞ்சாதல் *arattañ-cādal*, தொ.பெ. (vbl.n.) *அரத்தம் வெளுத்துக் காணுதல்;* blood appearing pallid (சா.அக.).

[அரத்தம் + சாதல். சா → சாதல் (தொ.பெ.). 'தல்' தொ.பெ. ஈறு.]

அரத்தஞ்சுண்டுதல் *arattañ-cuṇḍudal*, தொ.பெ. (vbl.n.) 1. *அரத்தம் வற்றுதல்;* gradual loss of blood. 2. *நோயினால் அல்லது மூப்பினால் உடம்பில் அரத்தக் குறைவுண்டாதல்;* drying up or decreasing of blood due to disease or old age (சா.அக.).

[அரத்தம் + சுண்டுதல். சுள் → சுண்டு → சுண்டுதல் (தொ.பெ.). 'தல்' தொ.பெ. ஈறு.]

அரத்ததசரம் *aratta-tašaram*, பெ. (n.) *அரத்த வோட்டத் தொடர்பான கருவிகள்;* blood-vessels subserving circulation (சா.அக.).

[அரத்தம் + தசரம்.]

அரத்ததசரமண்டலம் *aratta-tašara-maṇḍalam*, பெ. (n.) *அரத்தக்குழாய்த் தொகுதி;* vascular system (சா.அக.).

[அரத்தம் + தசரம் + மண்டலம்.]

மண்டலம் பார்க்க; see *maṇḍalam*.

அரத்தத்தடிப்பு *aratta-t-tadippu*, பெ. (n.) *அரத்தநீர்க் குறைவால் அரத்தத்தில் ஏற்படும் திண்மைநிலை;* deficiency of water in the blood, thickened condition of blood (சா.அக.).

[அரத்தம் + தடிப்பு. தடி → தடிப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

அரத்தத்தடை *aratta-t-taḍai*, பெ. (n.) *அரத்த வடைப்பு;* stoppage of blood (சா.அக.).

[அரத்தம் + தடை.]

அரத்தத்தாது *aratta-t-tādu*, பெ. (n.) 1. *உடம்பின் எழுகூறுகளுள் ஒன்றான அரத்தம்;* blood which is one of the seven constituent parts of the body. 2. *அரத்த நாடி;* artery. 3. *செம்பு;* copper. 4. *செவ்வரி தாரம்;* red orpiment (சா.அக.).

[அரத்தம் + தாது.]

தாது பார்க்க; see *tādu*.

அரத்தத்தாதுகதசுரம் *aratta-t-tādu-kada-šuram*, பெ. (n.) *உடம்பு சிவந்து தடிப்புண்டாகி, நெஞ்சிற் கோழைகட்டி, உமிழ்நீரில் அரத்தம் விழும் ஒருவகைக் காய்ச்சல்;* a fever in which the skin turns red with raised patches, the phlegm is collected in the lungs and the saliva is streaked with blood (சா.அக.).

[அரத்தம் + தாது + கதம் + சுரம்.]

தாது, கதம், சுரம் பார்க்க; see *tādu, kadam, šuram*.

அரத்தத்தாரை *aratta-t-tārai*, பெ. (n.) *அரத்தஞ் செல்லும் வழி;* the passage of blood, the course of the circulation of blood (சா.அக.).

[அரத்தம் + தாரை. தார் → தாரை = தாரை போன்ற குழாய்.]

அரத்தத்திமிர் *aratta-t-timir*, பெ. (n.) 1. *அரத்தக் கதிப்பினால் (மிகையினால்) ஏற்பட்ட மதம்;* a restlessness arising from fullness of blood. 2. *அரத்தத்தினாலுண்டான மரப்பு;* numbness due to blood condition (சா.அக.).

[அரத்தம் + திமிர். திம் → திமிர். திமுதல் = திணிதல்.]

அரத்தத்திரட்சி *aratta-t-tiraṭci*, பெ. (n.) 1. *அரத்தம் உறைதல்;* clotting or coagulation of blood. 2. *பெண்குறிப் புழையில் அரத்தம் திரண்டு தங்கல்;* accumulation of blood or menstrual fluid in the uterus, Haematocolpos. 3. *அரத்தம் சேர்தல்;* accumulation or extravasation of blood (சா.அக.).

[அரத்தம் + திரட்சி. திரள் → திரட்சி (தொ.பெ.). 'சி' தொ.பெ. ஈறு.]

அரத்தத்திரள் *aratta-t-tiral*, பெ. (n.) அரத்தத் திரட்சி 3 பார்க்க; see *aratta-t-tiraṭci 3*.

[அரத்தம் + திரள்.]

அரத்தத்துடிப்பு *aratta-t-tuḍippu*, பெ. (n.) 1. **அரத்தவேகம்**; the pressure of blood on the walls of the arteries. 2. **நாடித்துடிப்பு**; pulsation of blood, pulse (சா.அக.).

[அரத்தம் + துடிப்பு. துடி → துடிப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

அரத்தத்தொடர்பு *aratta-t-toḍarbu*, பெ. (n.) **அரத்தச்சேர்பு, அரத்தம்பற்றியது**; relating to blood.

[அரத்தம் + தொடர்பு.]

அரத்தந்ததும்பு-தல் *arattan-tadumbu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **முகஞ் சிவந்துகாட்டுதல்**; to be florid, as the flushed countenance (W.). 2. **சினத்தால் முகஞ்சிவத்தல்**; to be inflamed, as the face through anger (W.). 3. **அரத்தம் நிறைந்த கலத்தில் தளம்புதல்**; to wabble, flap, fluctuate, as blood in a moving or shaking vessel which is full to the brim.

[அரத்தம்+ததும்பு. தள (தளதள) → தளம்பு → ததம்பு → ததும்பு. தளதளத்தல் = நீர் அசைதல்.]

அரத்தநரம்பழற்சி *aratta-naramb(u)-alarci*, பெ. (n.) **அரத்தக்குழாயின் வெம்மை**; inflammation of a blood-vessel (சா.அக.).

[அரத்தம் + நரம்பு + அழற்சி. அழல் → அழற்சி (தொ.பெ.). 'சி' தொ.பெ. ஈறு.]

அரத்தநரம்பு *aratta-narambu*, பெ. (n.) 1. **அரத்தநாடி**; artery. 2. **அரத்தநாளம்**; vein. 3. **அரத்தக்குழாய்**; blood-vessel in common (சா.அக.).

[அரத்தம்+நரம்பு. நார் → (நரம்) → நரம்பு.]

அரத்தநரம்பொடுக்கம் *aratta-naramb(u)-oḍuk-kam*, பெ. (n.) **அரத்தக்குழாய் சிறுத்தல்**; the shrinking of a blood-vessel, *Haemadostenosis* (சா.அக.).

[அரத்தம் + நரம்பு + ஒடுக்கம். ஒடு → ஒடுங்கு → ஒடுக்கு → ஒடுக்கம்.]

அரத்தநாகி *aratta-nāgi*, பெ. (n.) **சாயவேர் (மண்திருஷ்டி)**; madder of Bengal, chaya root, *Oldenlandia umbellata* (சா.அக.).

அரத்தநாடி *aratta-nāḍi*, பெ. (n.) **நெஞ்சாங் குலையினின்று உடம்பின் பலவிடங்கட்கும் அரத்தங் கொண்டுசெல்லும் குழாய்**; any one of the vessels through which blood passes from the heart to the various parts of the body, artery (சா.அக.).

[அரத்தம் + நாடி. நாளம் → நாளி → நாழி → நாடி.]

அரத்தநாடிப்பிளப்பு *aratta-nāḍi-p-piḷappu*, பெ. (n.) **அரத்தநாடி தெறித்துப்போதல் அல்லது அறுந்துபோதல்**; the forcible tearing or rupture of a blood-vessel, *Angiorrhexis* (சா.அக.).

[அரத்தம் + நாடி + பிளப்பு. பிள் → பிள → பிளப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

அரத்தநாடிமூலம் *aratta-nāḍi-mūlam*, பெ. (n.) **அரத்தப் பெருங்குழாய்**; the great artery that springs from the heart, *Aorta* (சா.அக.).

[அரத்தம் + நாடி + மூலம்.]

அரத்தநாடிவிரிவு *aratta-nāḍi-virivu*, பெ. (n.) **அரத்தக்குழாயின் விரிவு**; dilatation of a blood-vessel, *Angiochalasis* (சா.அக.).

[அரத்தம் + நாடி + விரிவு. விரி → விரிவு (தொ.பெ.). 'வு' தொ.பெ. ஈறு.]

அரத்தநார் *aratta-nār*, பெ. (n.) **உடம்பின் அரத்தத்திலுள்ள வெண்கரு வலுவின் (சத்தின்) இனத்தைச் சேர்ந்த ஒரு பொருள்**; a peculiar organic substance of the nature of the white of an egg found in animals and vegetables and readily obtained from fresh blood, protein (சா.அக.).

[அரத்தம் + நார்.]

அரத்தநார்ச்சத்து *aratta-nār-c-cattu*, பெ. (n.) **அரத்தம் புளிப்பதனா லுண்டாகும் நாரைப் போன்ற ஒருவகை வெண்கரு வலு(சத்து)**; a whitish protein from the blood formed by the action of a ferment in blood, fibrin (சா.அக.).

[அரத்தம் + நார் + Skt. sat > த. சத்து = வலு.]

இதை 'அரத்தநார் வலு' எனலாம்.

அரத்தநாளம் *aratta-nāḷam*, பெ. (n.) 1. **கெட்ட அரத்தத்தை நெஞ்சாங்குலைக்குக் கொண்டு செல்லும் குழாய்**; a vessel which conveys impure blood to the heart, vein. 2. **செங்கழுநீர்**; red water-lily, *Nymphaea odorata* (சா.அக.).

[அரத்தம் + நாளம். நுள் → நள் → (நாள்) → நாளம்.]

நாளம் பார்க்க; see *nāḷam*.

அரத்தநிற்பாட்டு *aratta-niṟpāṭṭu*, பெ. (n.) **அரத்தவொழுக்கை நிற்கச்செய்தல்**; the arresting of bleeding, *Haemostasis* (சா.அக.).

[அரத்தம் + நிற்பாட்டு. நில் → நிற்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு. ஆடு (த.வி.) → ஆட்டு (பி.வி.). நிற்பு + ஆட்டு (து.வி.) – நிற்பாட்டு (முத.தொ.பெ.).]

அரத்தநிறம் *aratta-niṟam*, பெ. (n.) **அரத்தச் செந்நிறம்**; blood-red colour.

அரத்தநீர் *aratta-nīr*, பெ. (n.) 1. **அரத்தம் உறையுங்காலத்து மேற்பாகத்தில் தெளிந்துநிற்கும் நீர், ஊனீர்**; the thin transparent watery substance that separates and stands over the solidified part when blood kept in a vessel coagulates, serum, *Liquor sanguinis*. 2. **அரத்தங்கலந்த சிறுநீர்**; urine found to be of blood colour or urine charged with blood (சா.அக.).

[அரத்தம் + நீர்.]

அரத்தநீர்க்குறை *aratta-nīr-k-kuṟai*, பெ. (n.) **ஊனீர்க்குறைவு**; deficiency of water in the blood, *Anydremia* (சா.அக.).

அரத்தநீர்ச்சுருக்கம் *aratta-nīr-c-curukkam*, பெ. (n.) **அரத்தநீர்க்குறை** பார்க்க; see *aratta-nīr-k-kuṟai*.

[அரத்தம் + நீர் + சுருக்கம்.]

அரத்தநோய் *aratta-nōy*, பெ. (n.) 1. **அரத்தத்தினால் உடம்பில் ஏற்படும் நோய்கள்**; diseases arising from or relating to blood. 2. **அரத்தம் பரவிய ஒருவகைக் கண்ணோய்**; an extravasation of blood within the eye, *Haemophthalmia* (சா.அக.).

[அரத்தம் + நோய். நொள் → நோள் → நோய்.]

'அரத்தநோய்' என்பது அரத்தத் தொடர்பான நோய்கட்கெல்லாம் பொதுப்பெயராயிருப்பதனாலும், அரத்தம் பரவிய கண்ணோய்க்கு 'அரத்தக்கண்' என்று சிறப்புப் பெயரிருப்பதனாலும், பின்னதை இரண்டாம் பொருளாக இங்குக் கூறுவது பொருந்தாது.

அரத்தப்பசப்பு *aratta-p-paśappu*, பெ. (n.) **அரத்தச் செழுமை**; fullness of blood.

[அரத்தம் + பசப்பு. பசு → பச → பசப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

அரத்தப்பசுமை *aratta-p-paśumai*, பெ. (n.) **அரத்தப்பசப்பு** பார்க்க; see *aratta-p-paśappu*.

[அரத்தம் + பசுமை. பசு → பசுமை (பண்.பெ.). 'மை' பண்.பெ. ஈறு.]

அரத்தப்பசை *aratta-p-paśai*, பெ. (n.) 1. **அரத்தப்பிசுபிசுப்பு**; viscidity of blood. 2. **அரத்தச்சாரம்**; essence of blood.

[அரத்தம் + பசை.]

பசை பார்க்க; see *paśai*.

அரத்தப்படலம் *aratta-p-paḍalam*, பெ. (n.) **கண்மணியிற் கரித்தல், காந்தல், கன்றுதல், பீளைசாரல், எரிதல், அரத்தங்கட்டல், புருவம்நெற்றி பிடரிகளிற் குத்தல் முதலிய குணங்களைக் காட்டும் கண்ணோய்**; an eye-disease characterised by inflammation and congestion of the pupil, accumulation of muco-purulence, burning sensation and pin-prick pain in the eye-brows, forehead and the nape of the neck, pannus (சா.அக.).

[அரத்தம் + படலம். படு → படல் → படலம்.]

அரத்தப்படாத்தி *aratta-p-paḍātti*, பெ. (n.) 1. **வெள்விழியில் அரத்தம் குழம்பும்படி செந்நிறச் சதையை வளர்க்கும் நோய்**; a disease in the white of the eye marked by a morbid growth of red flesh and congestion of the part affected. 2. **கடைக்கண்ணில் வெப்பத்துடன் அரத்தம் வடியச் செய்யும் நோய்**; congestion of the corner of the eye with discharge of blood (சா.அக.).

[ஒருகா. அரத்தம் + படர்த்தி. படர் → படர்த்தி → படாத்தி.]

அரத்தப்படுவன் *aratta-p-paḍuvaṉ*, பெ. (n.) **ஒருவகைக் கண்ணோய்**; a kind of eye-disease (சா.அக.).

அரத்தச்சிலந்தி பார்க்க; see *aratta-c-cilandi*.

[அரத்தம் + படுவன். ஒருகா. படு (தோன்று) → படுவன். ஒ.நோ: புறப்படு → புறப்பாடு = உடல்மேல் தோன்றும் கொப்புளம், சிலந்தி, பிளவை முதலிய புண்கட்டிவகை.]

அரத்தப்பண்டுவம் *aratta-p-paṇḍuvam*, பெ. (n.) **அரத்தத்தை உடம்பினின்று வெளிப்படுத்தி அல்லது உட்புகட்டி நோய்களைக் குணப்படுத்தும் மருத்துவமுறை (சிகிச்சை)**; treatment of

disease using blood or blood preparations, as in venesection, transfusion of blood, etc.

[அரத்தம் + பண்டுவம். பண்டு → பண்டு வன் → பண்டுவம்.]

அரத்தப்பரு *aratta-p-paru*, பெ. (n.) அரத்தம் நிறைந்த பரு; a wart containing blood.

[அரத்தம் + பரு. புருத்தல் = தோன்றுதல், பிறத்தல். ஒருகா. புரு → பரு.]

அரத்தப்பலி *aratta-p-pali*, பெ. (n.) 1. அரத்தப் படையல், அரத்தக் காவு; libation of blood, blood sacrifice. 2. கொலை; murder (W.).

[அரத்தம் + **Skt.** bali > த. பலி.]

அரத்தக்காவு என்பது தூய தமிழ்.

அரத்தப்பழம் *aratta-p-paḻam*, பெ. (n.) 1. சிவந்த பழம்; a red fruit. 2. கோவைப்பழம்; the fruit of a common creeper of the hedges, *Coccinia indica*. 3. ஆலம்பழம்; the fruit of the banyan tree, *Ficus bengalensis*. கோவையை *Bryonia grandis* என்று சா. அகரமுதலி கூறும்.

[அரத்தம் + பழம்.]

அரத்தப்பழி *aratta-p-paḻi*, பெ. (n.) 1. கொலைக் குற்றம்; crime of bloodshed (W.). 2. கொலைக்குக் கொலை; revenge for murder.

[அரத்தம் + பழி.]

அரத்தப்பனையன் *aratta-p-paṉaiyaṉ*, பெ. (n.) ஒரு கொடிய பாம்பு; a venomous snake (சா.அக.).

[அரத்தம் + பனையன். ஒருகா. பனை → பனையன் = பனைவிரியன்.]

அரத்தப்பாடு *aratta-p-pāḍu*, பெ. (n.) 1. பெரும் பாடு; abnormally profuse menstruation, *Menorrhagia*. 2. பெரும்பாட்டைப்போல் பெண் குறிப் புழைவழியாக ஒழுகும் அரத்தவொழுக்கு; an excessive haemorrhage like menorrhagia in the uterus, *Metrorrhagia* (சா.அக.).

[அரத்தம் + பாடு. படு → பாடு (முத.தி. தொ.பெ.]

அரத்தப்பாதம் *aratta-p-pādam*, பெ. (n.) 1. (முழங்காலிற் சிவந்த) கிளி; parrot, so called from its red coloured knee. 2. முருக்கமரம்; Indian coral tree, *Butea frondosa* alias *Erythrina indica*.

[அரத்தம் + பாதம். பதி → பாதம் = நிலத்திற் பதியும் உறுப்பு.]

அரத்தப்பாதிரி *aratta-p-pādiri*, பெ. (n.) சிறு புள்ளடி, ஒரு செடிவகை (பதார்த்த. 366); a plant, *Hedysarum* (சா.அக.).

அரத்தப்பாய்ச்சல் *aratta-p-pāyccal*, பெ. (n.) 1. உடம்பிற்குள் ஓரிடத்திற்கு அரத்தம் பாய்தல்; the flow or rush of blood to a particular part of the body, afflux. 2. உடம்பிற்குள் பல விடங்கட்கும் அரத்தம் பாய்தல்; circulation of blood in the system. 3. அரத்தப் போக்கு; bleeding in general. 4. எலிகடி நஞ்சினாற் பற்களிலுண்டாகும் அரத்தப் போக்கு; bleeding from the gum of the teeth due to the poisonous bite of a rat (சா.அக.).

[அரத்தம் + பாய்ச்சல். பாய் → பாய்ச்சல் (தொ.பெ.). 'சல்' தொ.பெ. ஈறு.]

அரத்தப்பாலா *aratta-p-pāla*, பெ. (n.) தித்திப்புக் கோவை; a variety of sweet bryony (not identified), said to be used for solidifying mercury (சா.அக.).

[அரத்தம் + பாலா.]

அரத்தப்பாலி *aratta-p-pāli*, பெ. (n.) செந்தாடு பாவை, ஒரு மூலிகை; an unidentified plant supposed to possess powerful qualities (சா.அக.).

மறுவ. செந்தாடுபாவை, சேர்ந்தாடு பாவை.

[அரத்தம் + பாலி.]

அரத்தப்பாளம் *aratta-p-pāḷam*, பெ. (n.) 1. உறைந்த அரத்தத்தின் பரந்த கட்டி; a big mass of coagulated blood. 2. கரியபோளப் பிசின் (மூசாம்பரம்); a resinous inspissated juice of the Aloe species, *Myrrh* (சா.அக.).

அரத்தப்பிண்டகம் *aratta-p-piṇḍagam*, பெ. (n.) ஒரு பூடு; *Ipomaea barbata* (சா.அக.).

[அரத்தம் + பிண்டகம். பிண்டம் → பிண்டகம்.]

அரத்தப்பிண்டம் *aratta-p-piṇḍam*, பெ. (n.) 1. சீனமல்லிகை (மலை.); China jasmine, Rangoon creeper. 2. காட்டுமல்லிகை; wild jasmine, *Jasminum angustifolium* (சா.அக.).

[அரத்தம் + பிண்டம்.]

அரத்தப்பிணிநீர்ப்பை *aratta-p-piṇi-nīr-p-pai*, பெ. (n.) அரத்தம் தங்கிநிற்கும் கழலை போன்ற ஒரு சதைப் பை; a sac-like tumour containing blood, blood-cyst, *Haemato-cyst* (சா.அக.).

[அரத்தம் + பிணி + நீர் + பை.]

tomach, attended with vomiting
is accompanied by vomiting of
.

த்தம் + சூலை.]

aratta-p-pittam, பெ. (n.)
கினாலும் அரத்தக் கேட்டினா
று ஒன்பான் துளை வழியாய்
ரிப்படும் அரத்தவொழுக்கு; a
of blood from vessels through
gs of the body, bleeding or
ா.அக.).

த்தம். பித்து → பித்தம்.]

ratta-p-pittam, பெ. (n.) ஆடா
ar-nut (சித்.அக.).

aratta-p-pittu, பெ. (n.)
a kind of ruby (சா.அக.).

aratta-p-piriyan, பெ. (n.)
ன்; bloodthirsty person.

kt. priya > த. பிரியன். புரி
. புரி → புரியம் > **Skt.** priya.]

கையன்' என்பது தூய தமிழ்.

atta-p-piḷai, பெ. (n.) வெள்
உண்டாகும்போது சரியும்
urulent discharge with blood-
yes, appearing especially when
s membrane is formed on the
(சா.அக.).

aratta-p-pudaiyan, பெ. (n.)

follicles, causing falling off of
skin complexion, etc. They
(சா.அக.).

[அரத்தம் + புழு.]

'கிருமி' என்னும் வடசொல்
என்னும் தென்சொல்
பட்டுள்ளது.

அரத்தப்புளி aratta-p-puḷi, பெ
red tamarind (சா.அக.).

[அரத்தம் + புளி. அரத்தம்

அரத்தப்புளிப்பு aratta-p-puḷip
(vbl.n.) அரத்தங்கெட்டுப் புளி
tion of the blood, *Haemotozy*

[அரத்தம் + புளிப்பு. புளி
பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

அரத்தப்பூசம் aratta-p-pū
கோசாப்பழம் (தர்பூசணி); goa
water-melon, *Citrullus vulgaris*

[அரத்தம் + பூசம். அரத்தம்

அரத்தப்பூஞ்செடி aratta-p-pū
சூரைச்செடி; a plant, jackal
oenoplia (சா.அக.).

[அரத்தம் + பூ + செடி.]

அரத்தப்பூடம் aratta-p-pū
முள்ளிலவு; red-flowered silk-
malabaricum (சா.அக.).

பெரு நாளம் (inferior vena cava) என இரு வகைப்படும். இவற்றுள், முன்னது உடம்பின் மேற்பாதியிலுள்ள அரத்தத்தையும், பின்னது கீழ்ப்பாதியிலுள்ள அரத்தத்தையும் கொண்டு செல்லும்.

[அரத்தம் + பெருநாளம்.]

அரத்தப்பெரும்பாடு *aratta-p-perumbāḍu*, பெ. (n.) இடைவிடாது மிகுதியாக அரத்தம் வெளிப்படும் மாதவிடாய்ப் போக்கு; an abnormally profuse and continuous menstruation (சா.அக.).

[அரத்தம் + பெரும்பாடு.]

அரத்தப்பைத்தியம் *aratta-p-paittiyam*, பெ. (n.) *அரத்தக்கோட்டி;* mania to kill, homicidal mania (சா.அக.).

[அரத்தம் + பித்தம் > **Skt.** paittika > த. பைத்தியம்.]

அரத்தக்கோட்டி என்பது தூய தமிழ்.

அரத்தப்பொருமல் *aratta-p-porumal*, பெ. (n.) நெஞ்சாங்குலையைச் சார்ந்த பெரிய அரத்தக் குழாய்களிடம் உண்டாகும் ஓர் அமைதியான ஒலி; a faint murmur of blood heard in the main blood vessels at the base of the heart, *Heimic murmur* or *Anaemic murmur* (சா.அக.).

[அரத்தம்+பொருமல். பொருமு → பொருமல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அரத்தப்போக்கு *aratta-p-pōkku*, பெ. (n.) 1. அரத்தம் வெளிப்படல், போதல், ஒழுகல்; discharge or flow of blood. 2. அரத்தம் வெளிப்படும் வழி; the opening through which blood is discharged.

[அரத்தம் + போக்கு. போ → போகு → போக்கு (தொ.பெ.).]

அரத்தப்போளம் *aratta-p-pōḷam*, பெ. (n.) ஒரு வகை நறுமணப் பண்டம் (மூ.அ.); gum-myrrh.

அரத்தம்[1] *arattam*, பெ. (n.) 1. *சிவப்பு;* red colour. "அரத்த வேணியர்" (கந்தபு. யுத்த. முதனா. 82). 2. சிவந்த பொருள் (நாநார்த்த.); red substance. 3. *குருதி;* blood. "அரத்தமுண் டொளிரும்வா ளவுணர்" (நைடத. நளன்றூ. 14). 4. பவளம் (திவா.); coral. 5. அரக்கு (திவா.); lac, red sealing-wax. 6. செம்பு (சங்.அக.); copper. 7. செம்பருந்து (சங்.அக.); sacred kite (bird). 8. செந்தாமரை; red lotus. 9. செம்பருத்தி (L.); Brazil cotton. 10. செம்பரத்தை (மலை.); shoe-flower. 11. செங்கழுநீர் (சூடா.); red water-lily. 12. செங்குவளை (சங்.அக.); a kind of water-lily. 13. செங்கடம்பு (பிங்.); small Indian oak, *Barringtonia acutangula* (சா.அக.). 14. குங்குமப்பூ (தைலவ. அரும் பத.); saffron flower, *Crocus sativus* (சா.அக.). 15. ஒருவகைத் துகில் (சிலப். 14 : 108, அடியார்க். உரை); a red garment of ancient times. 16. செம்மெழுகு (சங்.அக.); bee's wax. 17. செம்பொட்டு (நெற்றித் திலகம்)(நாநார்த்த.); tilaka on the forehead. 18. செம்பொன் (அக.நி.); superior gold of a slightly reddish colour. 19. செம்மஞ்சள்; reddish yellow turmeric. 20. செம்பஞ்சுக் குழம்பு; red lac used by women for dyeing the feet.

ம. அரத்தம்; க., து. ரக்த; தெ. ரக்தமு; கொங். ரகத்; பட. ரத்த; **Mar.** rakta., **Sinh.** rata.

[உல் → உல → உலர். உலர்தல் = காய்தல். உல் → எல் → எர் → எரி = நெருப்பு, நெருப்பின் நிறமான சிவப்பு. உல் → அல் → அல → அலத்தம் = சிவப்பு, சிவந்த பொருள். அலத்தம் → அரத்தம். ல → ர, போலி. அரத்தம் > **Skt.** rakta.]

அரத்தகம் பார்க்க; see *arattagam.*

அரத்தம் என்னும் சொல் கீழ்வருமாறு மேலையாரிய மொழிகளிற் பல்வேறு வடிவில் திரிந்து வழங்குகின்றது.

உலகில் நெருப்புண்டாவது, பொதுவாகப் பொருள்கள் ஒன்றோடொன்று உராய்வதனா லென்பது அனைவரும் அறிந்ததே. முதற்கால மக்கள் இதைக் கண்டே, உராய்தல் வினையி னின்று நெருப்பை யுணர்த்துஞ் சொற் களைத் தோற்றுவித்திருக்கின்றனர்.

உரவு → உரசு, உரப்பு (க., தெ. ருப்பு). உரிஞ் → உரிஞ்சு, உரை (உராய்), உறழ் என்பன உராய்தலைக் குறிக்குஞ் சொற்கள். இவற்றின் வேர் உர்; மூலம் உல்.

உரு (உருத்தல் = அழலுதல்), உருப்பு → உருப்பம் (வெப்பம்), உரும்பு (கொதிப்பு), உருமம் (நண்பகல் வெப்பம்), உருமி (புழுங்கு), உரி (க.) என்பன நெருப்பை யுணர்த்துஞ் சொற்கள். இவற்றின் வேர் உர்; மூலம் உல்.

உல, உலர், உலவை (காய்ந்த மரக்கிளை), உலை (அடுப்பு நெருப்பு) என்பன, ரகரமாய்த் திரியாது நெருப்பை யுணர்த்தும் லகரவீற்றுச் சொற்கள். ஆகையால், அலத்தி (மின்மினி)

என்பது நெருப்பின் ஒளியையும்; அலத்தம் → அலத்தகம் (செம்பஞ்சுக் குழம்பு, செம்பருத்தி), அலத்தை (செம்பஞ்சு), அலந்தல் → அலந்தலி (செங்கத்தரி) என்பன நெருப்பின் நிறமாகிய சிவப்பையும் அதைக்கொண்ட பொருள் களையும் உணர்த்துகின்றன. உல் → அல்.

உல் என்னும் மூலம் அல், இல் → எல் என்று திரிந்தது போன்றே, உர் என்னும் வேரும் அர், இர் → எர் என்று திரிந்துள்ளது. எல் (ஒளி) → எல்லோன் = கதிரவன். எர் → எரி (நெருப்பு).

அரக்கு, அரத்தம் என்னும் சொற்கள், முதற் கண் நெருப்பின் நிறமான சிவப்பையுடைய செம்மெழுகையும் குருதியையும் சிறப்பாக வுணர்த்திப் பின்னர்ச் செந்நிறப் பெயர் களாகவும் வழங்கத் தலைப்பட்டுவிட்டன.

எ-டு: அரக்காம்பல் = செவ்வாம்பல், அரத்தப் பூம்பட்டாடை = செந்நிறப் பூம் பட்டாடை.

ஒ.நோ: பவளச்சோளம், பவளவாய்.

இங்கு இத்துணையுங் கூறியது, செந் நிறத்தைப் பெருவழக்காகக் குறிக்கும் மேலை யாரியச் சொற்கட்கெல்லாம் மூலம், 'அரத்தம்' என்னுந் தென்சொல்லே யன்றி, 'ருதிர' அல்லது 'ரக்த' என்னும் வடசொல்லன்று என்பதை யுணர்த்தற்கே.

அரத்த(ம்) — **E.** red; **OE.** réad, réod; **OFris.** râd; **OS. (M.DU.MLG.)** rôd; **Du.**, **LG.** rood; **OHG.**, **MHG.** rōt; **mod.G.** roth, rot; **ON.** rauðr, rjóðr; **Sw.**, **Da.** röd; **Goth.** rauths; **Gmc.** rauthaz; **L.** ruber, rūfus; **OIr.** ruad (h); **Lith.** raũda-s; **Gk.** éruthrós; **OSl.** rŭdrŭ; **Skt.** rudhirá.

ஆங்கிலச் சொல்லின் பலவடிவங்கள் :

red, read, reade, reed, reede, raed, rede, redd, redde, radd, raid, rid, rud, rudd, ruddy.

சமற்கிருதத்திலுள்ள 'ருதிர' என்பது மேலையாரியத்தினின்று வந்த பழஞ்சொல் லும், 'ரக்த' என்பது தமிழினின்று சென்ற புதுச்சொல்லும் ஆகும். *அரத்தம் > ரக்த.*

தகரம் இரட்டிவரும் தமிழ்ச்சொல்லில் முதல் தகரத்தைக் ககரமாக்குவது வடமொழி யியல்பு.

எ-டு: முத்து → முத்தம் > **Skt.** mukta. பத்தி > **Skt.** bhakti.

அரத்தம்[2] *arattam*, பெ. (n.) கடுக்காய் (பரி.அக.); chebulic myrobalan.

அரத்தம்நிறுத்தல் *arattam-niṟuttal*, தொ.பெ. (vbl.n.) 1. ***அரத்தத்தை நிற்பாட்டுதல்;*** arresting or preventing the flow of blood, *Haemostasis* (சா.அக.).

[அரத்தம் + நிறுத்தல் – அரத்தம் நிறுத்தல். நிறு → நிறுத்து → நிறுத்தல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அரத்தம்படல் *arattam-paḍal*, தொ.பெ. (vbl.n.) 1. ***மாதவிடாய் உண்டாதல்;*** the act of menstruating. 2. ***மாதவிடாய் சரியாக ஒழுகாமற் சிறிதாய் வரல்;*** scanty discharge of menstrual blood (சா.அக.).

[அரத்தம் + படல். படுதல் = உண்டாதல், சிறிதாய்த் தோன்றுதல். படு → படல் (தொ. பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அரத்தம்பீரிடல் *arattam-pīr-iḍal*, தொ.பெ. (vbl.n.) ***அரத்தம் வேகமாய்ப் பாய்தல்;*** blood gushing out, spouting of blood, *Arterial haemorrhage* (சா.அக.).

[அரத்தம் + பீர் + இடல். பீல் → பீர். இடு (து.வி.) → இடல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அரத்தம்பெய்-தல் *arattam-pey-*, 1 செ. குன்றாவி. (v.t.) ***அரத்தங் கலந்த சிறுநீர் விடுதல்;*** to discharge urine mixed with blood (சா.அக.).

அரத்தம்மை *arattammai*, பெ. (n.) ***கொப்புளங் களிலிருந்து அரத்தம் வடியும் அம்மைநோய் வகை;*** a form of small-pox in which haemorrhage occurs in the vesicles, *Haemorrhagic variola* (சா.அக.).

[அரத்தம் + அம்மை – அரத்தவம்மை → அரத் தம்மை.]

அரத்தம்வடிதல் *arattam-vaḍidal*, தொ.பெ. (vbl.n.) *அரத்தவொழுக்கு;* bleeding or haemorrhage (சா.அக.).

அரத்தம்வாங்கல் *arattam-vāṅgal*, பெ. (n.) ***அரத்தம் குத்தியெடுத்தல்;*** therapeutic withdrawal of blood (சா.அக.).

[அரத்தம் + வாங்கல். வாங்கு → வாங்கல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு. வாங்குதல் = எடுத்தல், பெறுதல்.]

அரத்தம்வாங்கி *arattam-vāṅgi*, பெ. (n.) ***உடம்பி னின்று அரத்தத்தை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்தும் கருவி;*** a glass vessel like a cup

applied to the skin or any device for drawing blood, cupping glass, *Cucurbitula* alias *Haemospast*.

[அரத்தம் + வாங்கி. வாங்கு → வாங்கி. 'இ' வி.முத. ஈறு.]

அரத்தம்விடல் *arattam-viḍal*, தொ.பெ. (vbl.n.) **பழங்காலத்தில், உடம்பில் அரத்தக்குறைவு ஏற்படுங்கால், எருதின் அரத்தத்தை உடம்பிற் குட் செலுத்தல்;** treatment of human diseases in olden days by transfusion of arterial blood of bullocks by injection or through the mouth, *Haemotherapy* (சா.அக.).

[அரத்தம் + விடல். விடுதல் = உள்ளிடுதல். விடு → விடல் (தொ.பெ.).]

'அரத்தக்குறைவு ஏற்படுங்கால்' என்று ஒரு நோயை விதந்துகூறும் தமிழ்ப் பொருளொடு, 'treatment of diseases' என்று பொதுப்படக் கூறும் ஆங்கிலப் பொருள், ஓரளவு முரண்படு கின்றது.

அரத்தமடக்கி *arattam-aḍakki*, பெ. (n.) **அரத்த வொழுக்கை நிறுத்தும் மருந்து** (M.M.); styptic, medicine to stop or restrain haemorrhage.

[அரத்தம் + அடக்கி. அடங்கு (த.வி.) → அடக்கு (பி.வி.) → அடக்கி. 'இ' வி.முத. ஈறு.]

அரத்தமண்டலம் *aratta-maṇḍalam*, பெ. (n.) 1. **அரத்த வட்டம்**; circulatory system. 2. **உடம் பிற் காணும் செந்நிறப் படைநோய்**; a skin disease marked by red patches on the body (சா.அக.). 3. **செந்தாமரை** (மலை.); red lotus.

[அரத்தம்+மண்டலம். மண்டுதல் = வளைதல். மண்டு → மண்டலம் (வட்டம்). 'அலம்' தொ.பெ., தொ.ஆகு., பண்.பெ. ஈறு.]

அரத்தமண்டலி[1] *aratta-maṇḍali*, பெ. (n.) **உடம்பின்மேற் செம்புள்ளிகளை அல்லது வளையங்களையுடைய நச்சுப் பாம்பு**; a venomous snake with red spots or rings over its body.

[அரத்தம் + மண்டலி. மண்டலம் (வட்டம்) → மண்டலி. 'இ' உடையவன் ஈறு.]

அரத்தமண்டலி[2] *aratta-maṇḍali*, பெ. (n.) 1. **குளத்தில் காணப்படும் துளசிப்பூண்டு**; a variety of basil found in tanks. 2. **கழுதைத் தும்பை**; a species of leucas, donkey toombay Indian borage, *Borago indica* (சா.அக.).

அரத்தமதப்பால் *aratta-mada-p-pāl*, பெ. (n.) **சிவப்புக் கொய்யா**; red guava fruit (சா.அக.).

அரத்தமதம் *aratta-madam*, பெ. (n.) **அரத்தப் பெருக்கினால் உடம்புங் கண்ணும் மதர்த்து உணர்ச்சியற்று மூக்கினால் அரத்தவொழுக்கு முதலிய பல கெட்ட குணங்களைக் காட்டும் நோய்**; a condition marked by vascular turgescence, excess of blood, fullness of pulse, bleeding from the nose, and various other bad signs, *Plethora* (சா.அக.).

[அரத்தம் + மதம்.]

அரத்தமயக்கம் *aratta-mayakkam*, பெ. (n.) 1. **அரத்தவொழுக்கினால் ஏற்படும் மயக்கம்**; giddiness due to excessive bleeding. 2. **உடம் பில் அரத்தப்பெருக்கினால் ஏற்படும் மயக்கம்**; giddiness caused by blood pressure (சா.அக.).

[அரத்தம் + மயக்கம். மயங்கு (த.வி.) → மயக்கு (பி.வி.) → மயக்கம் (தொ.பெ.). 'அம்' தொ.பெ. ஈறு.]

அரத்தமலடு *aratta-malaḍu*, பெ. (n.) **கருப்பை யில் அரத்தஞ் சேர்ந்து பந்துபோ லுருண்டு வளி (வாயு)போலோடும் மாதவிடாய் (சூதக) நோய்**; a condition of sterility in women characterised by suppression of menses and other symptoms of pregnancy.

அரத்தமலப்போக்கு *aratta-mala-p-pōkku*, பெ. (n.) **அரத்தங் கலந்த மலப்போக்கு**; blood in the faeces (சா.அக.).

[அரத்தம் + மலம் + போக்கு.]

அரத்தமலம் *aratta-malam*, பெ. (n.) 1. **வயிற் றுளைச்சல்**; dysentery attended with discharge of blood. 2. **அரத்தங் கலந்து வெளிவரும் மலம்**; blood in the faeces. 3. **அரத்தவழுக்கு**; impurities of blood (சா.அக.).

[அரத்தம் + மலம்.]

மலம் பார்க்க; see *malam*.

அரத்தமறிப்பு *aratta-maṟippu*, பெ. (n.) **அரத்த வொழுக்கைத் தடுத்தல்**; checking the flow of blood, *Haemostatic* (சா.அக.).

[அரத்தம் + மறிப்பு. மறித்தல் = தடுத்தல். மறி → மறிப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ.ஈறு.]

அரத்தமாடன் *aratta-māḍaṉ*, பெ. (n.) **அரத்த வேட்கையுள்ள ஒரு பேய்**; a bloodthirsty evil spirit.

[அரத்தம் + மாடன் (இறந்துபோன ஒரு மறவன் பெயர்).]

அரத்தமாரணம் *aratta-māraṇam*, பெ. (n.) **காவிக்கல்;** reddle, red ochre (*சங்.அக.*).

[அரத்தம் + மாரணம்.]

அரத்தமாரம் *aratta-māram*, பெ. (n.) **அரத்த மாரணம்** பார்க்க; see *aratta-māraṇam* (சா. அக.).

அரத்தமானியம் *aratta-māṉiyam*, பெ. (n.) **படைத்துறை ஊழியத்திற்காகக் கொடுக்கப் பட்ட உம்பள (நில) மானியம்;** blood fief, fief granted as reward for military service.

[அரத்தம் + மானியம். மானித்தல் = மதித்தல், பெருமைப்படுத்தல். மானம் → மானி → மானியம்.]

அரத்தமுறிஞ்சல் *arattam-uṟiñjal*, தொ.பெ. (vbl.n.) **அட்டை முதலியவற்றால் உடம்பி னின்று அரத்தத்தை வெளிப்படுத்தல்;** abstraction of blood from the body in leech-bite, devilry, diseases, etc. (*சா.அக.*).

[அரத்தம் + உறிஞ்சல். உறி → உறிஞ்சு → உறிஞ்சல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அரத்தமுறிக்கும்பாலி *aratta(m)-muṟikkum-pāli*, பெ. (n.) **சிவப்புச் சதுரக்கள்ளி;** a red variety of square-spurge, *Euphorbia antiquorum* (சா. அக.).

[அரத்தம் + முறிக்கும் + பாலி. முறி → முறிக்கும் (பெ.எ.). பால் → பாலி. 'இ' உடையவன் ஈறு.]

அரத்தமூத்திரம் *aratta-mūttiram*, பெ. (n.) **அரத்தங் கலந்துவரும் சிறுநீர்;** presence of blood in the urine, discharge of blood in urine, *Haematuria*.

[அரத்தம்+மூத்திரம். மோத்திரம் → மூத்திரம்.]

மோத்திரம் பார்க்க; see *mōttiram*.

அரத்தமூலம் *aratta-mūlam*, பெ. (n.) **அண்டியி லிருந்து அரத்தம்வடியும் மூலநோய்** (மூ.அ.); bleeding piles, *Haemorrhoids*. "அரத்த மூலநீர்ச் செறுப்புவெங் கயத்தர்" (கடம்ப. பு. இலீலா. 128).

[அரத்தம் + மூலம் (முளை).]

இது (1) அண்டிவாய்க்கு உட்பட்டது (internal), (2) வெளிப்பட்டது (external), (3) உட்பட்டும் வெளிப்பட்டுமிருப்பது (mixed) என மூவகைப்பட்டதாகச் **சா. அகரமுதலி** கூறும்.

அரத்தமெடுத்தல் *arattam-eḍuttal*, தொ.பெ. (vbl.n.) **அரத்தம்வாங்கல்** பார்க்க; see *arattam-vāṅgal*.

[அரத்தம் + எடுத்தல்.]

அரத்தமேகம் *aratta-mēgam*, பெ. (n.) **அரத்த வெட்டை** பார்க்க; see *aratta-veṭṭai*.

[அரத்தம் + Skt. mēha > த. மேகம்.]

அரத்தவடி *aratta-vaḍi*, பெ. (n.) **அம்மைக் கொப்புளம், அம்மைநோய்** (மூ.அ.); small-pox pustule, small-pox.

Skt. vaṭi

[அரத்தம் + வடி. வள் → வட்டு → வட்டி → வடி = உருண்ட கொப்புளம்.]

அரத்தவண்ணகம் *aratta-vaṇṇagam*, பெ. (n.) **பெருங்கம்பிப் பூடு;** a plant (unidentified) (*சா.அக.*).

[அரத்தம் + வண்ணகம். வண்ணம் → வண்ணகம்.]

அரத்தவண்ணம் பார்க்க; see *aratta-vaṇṇam*.

அரத்தவண்ணம் *aratta-vaṇṇam*, பெ. (n.) 1. **அரத்தச் செந்நிறம்;** blood-redcolour. 2. **ஒருவகைச் செவ்வரிசி;** a kind of red rice (*சா.அக.*).

[அரத்தம் + வண்ணம். வள் → வண் → வண்ணம். வள் → வர் → வரி → வரணம்.]

வண்ணம், வரணம் பார்க்க; see *vaṇṇam, varaṇam*.

நெல் (paddy) என்பது உமியும் அரிசியும் சேர்ந்தது. அரிசி என்பதை 'rice' என்றே ஆங்கிலத்திற் குறித்தல் வேண்டும். இதைச் சில அகரமுதலிகள் கவனிப்பதில்லை.

அரத்தவம்மை *aratta-v-ammai*, பெ. (n.) **அரத் தம்மை** பார்க்க; see *arattammai*.

[அரத்தம் + அம்மை.]

அரத்தவரி[1] *aratta-vari*, பெ. (n.) **கயிறுபோன்ற இருவரிகள் அரத்த நிறத்துடன் கடைக்கண் வரை படர்ந்து கருவிழியைத் தாக்கும் ஒரு கண்ணோய்;** a disease affecting the iris of the eye, and characterised by blood-streaked lines extending to the corners of the eyes (*சா.அக.*).

[அரத்தம்+வரி. வள் → வர் → வரி = கோடு.]

அரத்தவரி[2] *aratta-v-ari*, பெ. (n.) **கண்ணில் அரத்தவூறலினால் நமைச்சலெடுக்கும் ஒரு**

வகைக் கண்ணோய்; an eye-disease attended with itching sensation due to extravasation of blood in the eye (சா.அக.).

[அரத்தம் + அரி (அரிப்பு) முத.தொ.பெ.]

அரத்தவல்லி *aratta-valli*, பெ. (n.) **ஒரு சிவப்புக் கொடி;** a red creeper, *Ventilago madraspatana* (சா.அக.).

[அரத்தம் + வல்லி. வல்லுதல் = வளைதல். வல் → வல்லி. 'இ' வி.முத. ஈறு.]

அரத்தவலிப்பு *aratta-valippu*, பெ. (n.) **அரத்த மிகுதியினா லுண்டாகும் இசிவுநோய்** (மூ.அ.); convulsion caused by very high blood pressure.

[அரத்தம் + வலிப்பு. வலித்தல் = இழுத்தல். வலி → வலிப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

அரத்தவழலை *aratta-valalai*, பெ. (n.) **கடிப்பதனால் அரத்தங் கக்கவைக்கும் ஒரு வகை நச்சுப்பாம்பு;** a poisonous snake, the bite of which causes vomiting of viscid blood (சா.அக.) — a snake causing vomiting of blood by its bite prob. russell's viper (செ. அக.).

[அரத்தம் + வழலை (ஒருவகைப் பாம்பு). ஒருகா. வழல் → வழலை.]

அரத்தவள்ளி *aratta-valli*, பெ. (n.) **செவ்வள்ளி** (வின்.); purple yam (செ.அக.) — yam, sweet potato, *Dioscorea purpurea* (சா.அக.).

[அரத்தம் + வள்ளி. வள்ளுதல் = வளைதல். வள் → வள்ளி = கொடி. கிழங்கைக் குறிப்பின், வள்ளுதல் = வளமாதல், உருண்டு திரளுதல். வள்ளி = உருண்டு திரண்ட கிழங்கு என்றாகும்.]

அரத்தவற்கனம் *aratta-varkanam*, பெ. (n.) **செம்பு;** copper (சா.அக.).

[அரத்தம் + வற்கனம். ஒருகா. வல் → வற்கு → வற்கனம்.]

அரத்தவாமைக்கட்டி *aratta-v-āmai-k-katti*, பெ.(n.) **மண்ணீரலிற் காணும் அரத்தத் திரட்சி;** enlargement of the spleen attended with marked increase of blood, congestion of the spleen with blood, *Splenemia* (சா.அக.).

[அரத்தம் + ஆமை + கட்டி. ஆமை = ஆமை வடிவு. கட்டு → கட்டி.]

அரத்தவாரி *aratta-vāri*, பெ. (n.) 1. **மாதவிடாய்ப் பெருக்கு;** abnormal flow of menstrual blood. 2. **மிகுந்த அரத்தப்போக்கு;** profuse bleeding, *Haemorrhage*. 3. **பெரும்பாடு;** *Menorrhagia*.

[அரத்தம் + வாரி. வார்தல் = ஒழுகல், போதல், நீளல். வார் → வாரி.]

"வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள"
(தொல். சொல். உரி. 20).

அரத்தவிந்து *aratta-vindu*, பெ. (n.) **குருவிந்தம் என்னும் மாணிக்கவகை** (சிலப். 14 : 186, அடியார்க். உரை); corundum, alumina in a crystalline state.

[அரத்தம் + விந்து. வித்து → விந்து.]

அரத்தவியர்வை *aratta-viyarvai*, பெ. (n.) **அரத்தமே வியர்வையாகக் காணுதல்;** sweating of blood (சா.அக.).

[அரத்தம் + வியர்வை. விளர் → வியர் → வியர்வை.]

அரத்தவிரியன் *aratta-viriyan*, பெ. (n.) **கடித்தவுடன் அரத்தங் கக்கவைக்கும் விரியன்பாம்பு வகை;** russell's viper, *Vipera russellii.*

[அரத்தம் + விரியன்.]

அரத்தவிருமல் *aratta-v-irumal*, பெ. (n.) 1. **இருமும்போது அரத்தங்கக்கும் இருமல் நோய்;** discharge of blood from the lungs during cough in a consumptive patient. 2. **திடுமென்று ஏற்படும் திகிலினா லுண்டாகும் அரத்தங் கக்கல்;** a cough with spitting of blood due to shock or sudden fear.

[அரத்தம் + இருமல். இருமு → இருமல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அரத்தவிரைச்சல் *aratta-v-iraiccal*, பெ. (n.) **உடம்பில் அரத்தக் குறைவினால் உண்டாகும் ஒலி;** murmur due to anaemic condition of the blood, *Haemic murmur* (சா.அக.).

[அரத்தம் + இரைச்சல். இரை → இரைச்சல் (தொ.பெ.). 'சல்' தொ.பெ. ஈறு.]

அரத்தவீக்கம் *aratta-vikkam*, பெ. (n.) **உடம்பில் ஓரிடத்தில் அரத்தஞ் சேர்வதனால் ஏற்படும் வீக்கம்;** a swelling due to accumulation of blood in the tissues or cavities of the body, *Congestive edema* (சா.அக.).

[அரத்தம் + வீக்கம். வீங்கு → வீக்கு → வீக்கம் (தொ.பெ.). 'அம்' தொ.பெ. ஈறு.]

அரத்தவீளை *aratta-vilai*, பெ. (n.) **அரத்தங் கக்கும் ஈளை (காச)நோய்;** asthma attended with spitting of blood.

[அரத்தம் + ஈளை.]

அரத்தவுப்பசம் *aratta-v-uppašam*, பெ. (n.) அரத்தமிகுதியினால் நாடி அல்லது நாளம் பருத்துக் காணல்; distension of blood-vessels (சா.அக.).

[அரத்தம் + உப்பசம். உப்புதல் = பருத்தல், வீங்குதல். உப்பு → உப்பசம் (தொ.பெ.). 'அசம்' தொ.பெ. ஈறு.]

அரத்தவுதிரி *aratta-v-udiri*, பெ. (n.) மாட்டு நோய்வகை (மாட்டுவை. சிந். 5); a disease in cattle.

[அரத்தம் + உதிரி. ஒருகா. உதிர் → உதிரி. 'இ' வி.முத. ஈறு.]

அரத்தவூறல் *aratta-v-ūral*, பெ. (n.) 1. அரத்தச் சுரப்பு பார்க்க; see *aratta-c-curappu*. 2. அரத்தப் பசப்பு பார்க்க; see *aratta-p-pašappu* (சா.அக.).

[அரத்தம் + ஊறல். ஊறு → ஊறல் (தொ. பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அரத்தவெட்டை *aratta-veṭṭai*, பெ. (n.) 1. அரத்தங் கலந்த மூத்திரம் வெளிப்படும் நோய்வகை; gonorrhoea with discharge of blood (செ.அக.). 2. வெட்டைச் சூட்டினால் விந்து (வெள்ளை) அரத்தத்தொடு கலந்து ஆண் குறி வழியாய் ஒழுகல்; discharge of semen mixed with blood through the penis, due to venereal heat of the system, blood stained condition of the semen, *Hemospermia* (சா.அக.).

[அரத்தம் + வெட்டை. வெள் → வெட்டை = சூடு, காமச்சூடு.]

அரத்தவெள்ளுடைப்பு *aratta-vel-ḷ-uḍaippu*, பெ. (n.) விழுகின்ற அரத்தத்தை விழ வொட்டாமற் செய்யும் மருந்து; a kind of medicinal ghee administered to stop all kinds of haemorrhages.

[அரத்தம் + வெள் + உடைப்பு (தொ.பெ.). உடை → உடைப்பு. 'பு' தொ.பெ. ஈறு.]

அரத்தவெள்ளை *aratta-veḷḷai*, பெ. (n.) 1. நோய் கொண்ட பெண்டிரைப் புணர்வதனாற் சிறு நீர்த் துளையிற் புண்ணாகி, அதினின்று அரத் தமும் வெள்ளைநீரும் சீழும் வடியும் நீர் (மேக) நோய்; (in men) venereal disease marked by itching, inflammation of the urinary passage, and thin whitish discharge mixed with blood. 2. பிள்ளை பெற்ற பெண்டிர்க்குக் காணும் அரத்தங் கலந்த வெள்ளையொழுக்கு; (in women) the discharge from the vagina, lasting for a few days after child birth, Lochial discharge (சா.அக.).

[அரத்தம் + வெள்ளை. வெள் → வெள்ளை.]

அரத்தவெறி *aratta-veṟi*, பெ. (n.) 1. அரத்தங் குடிப்பதனால் உண்டாகும் வெறி; fury arising from drinking blood. 2. கொலைசெய்ய உண்டாகும் கோட்டித்தனம்; an insane tendency to murder, running amuck, *Haemothymia* (சா.அக.).

[அரத்தம் + வெறி.]

அரத்தவேங்கை *aratta-vēṅgai*, பெ. (n.) சிவந்த வேங்கைமரம்; a red species of kino tree, kino rose-wood, *Pterocarpus marsupium (acuminata)* (சா.அக.).

[அரத்தம் + வேங்கை. அரத்தம் = சிவப்பு.]

அரத்தவேட்கை *aratta-vēṭkai*, பெ. (n.) கொலை விருப்பு; bloodthirstiness.

[அரத்தம் + வேட்கை.]

அரத்தவேட்கையன் பார்க்க; see *aratta-vēṭkaiyaṉ*.

அரத்தவேட்கையன் *aratta-vēṭkaiyaṉ*, பெ. (n.) கொலைவிருப்புள்ளவன், கொலைவிரும்பி; bloodthirsty person.

[அரத்தம் + வேட்கை + அன். வேட்டல் = விரும்பல். வேள் → வேட்கை (தொ.பெ.). 'கை' தொ.பெ. ஈறு. 'அன்' ஆ.பா. ஈறு.]

அரத்தவேற்றம் *aratta-v-ēṟṟam*, தொ.பெ. (vbl.n.) அரத்தந் திரளுதல்; congestion or accumulation of blood (சா.அக.).

[அரத்தம் + ஏற்றம். ஏறு → ஏற்று → ஏற்றம் (தொ.பெ.). 'அம்' தொ.பெ. ஈறு.]

அரத்தவொழுக்கு *aratta-v-oḻukku*, பெ. (n.) 1. அரத்தம்வடிதல்; bleeding or haemorrhage. 2. மாதவிடாய்; menstrual flow. 3. பெரும்பாடு; excessive flow of blood from the vagina, *Menorrhagia* (சா.அக.).

[அரத்தம் + ஒழுக்கு. ஒழுகு → ஒழுக்கு (தொ.பெ.).]

அரத்தவோட்டம் *aratta-v-ōṭṭam*, தொ.பெ. (vbl.n.) நெஞ்சாங்குலையினின்று அரத்தம் உடம்பெங்கும் சென்று திரும்புகை; circulation of blood.

[அரத்தம் + ஒட்டம். ஒடு → ஒட்டு → ஒட்டம் (தொ.பெ.).]

அரத்தன் *arattaṉ*, பெ. (n.) **செவ்வாய்** (பிங்.); the planet Mars, as red.

[அரத்தம் → அரத்தன்.]

அரத்தாங்கம் *arattāṅgam*, பெ. (n.) பவளம்; coral.

[அரத்தம் + Skt. aṅga > த. அங்கம் = உடம்பு.]

அரத்தாங்கன் *arattāṅgaṉ*, பெ. (n.) **செவ்வாய்** (சோதிட அக.); அரத்தன் பார்க்க; see *arattaṉ*.

[அரத்தம் (சிவப்பு) + Skt. aṅga > த. அங்கன் = உடம்பினன்.]

அரத்தி *aratti*, பெ. (n.) 1. அரத்தாங்கன் பார்க்க; see *arattāṅgaṉ*. 2. செவ்வல்லி (சிந்தா.நி.); red water-lily, *Nymphaea edulis*.

அரத்திதம் *arattidam*, பெ. (n.) **செவ்வாமணக்கு**; a red variety of castor plant, *Ricinus communis* (சா.அக).

அரத்துறை *aratturai*, பெ. (n.) **ஒரு சிவதகர்**; a Śiva shrine. "அரத்துறை நோக்கியே காதலா லணைவார்" (பெரியபு.திருஞான. 187).

அரத்தை *arattai*, பெ. (n.) 1. **சிற்றரத்தை**; lesser galangal, m. sh., *Alpinia officinarum*.

ம. அரத்த; Skt. rāsnā.

"வாந்திபித் தங்கரப்பான் வாதஞ்
சிரரோகம்
சேர்ந்தகப முத்தோடஞ் சீதமொடு —
நேர்ந்தசுர
மற்றரத்தைக் காட்டி வருமிரும லுந்தீரும்
சிற்றரத்தை நன்மருந்தாற் றேர்"
(பதார்த்த. 1019).

2. சிற்றரத்தை வகை (L.); light galangal, l. sh., *Alpinia nutans*. 3. பேரரத்தை; big galangal, s. sh., *Alpinia galangal*.

"வாத மிசிவு வலிசன்னி பித்தையும்
சீதசுரந் தாவிரணஞ் சொன்னநீர் — ஓதுபல
வாங்கடுப் பூப்படரு மாறு மொளியாரு
மீங்கடரும் பேரரத்தை யால்"
(பதார்த்த. 1018).

4. முடக்கொற்றான் (பச்.மூ.); balloon vine.
5. பசரை (சா.அக.); a plant called palsy curer.

அரத்தைப்பெட்டி *arattai-p-petti*, பெ. (n.) **நெல் வகை** (A.); a kind of paddy.

அரத்தொகுத்தி *arattogutti*, பெ. (n.) **செவ்வல்லி**; red water-lily, *Nymphaea edulis* (சா.அக.).

அரத்தோற்பலம் *arattōṟpalam*, பெ. (n.) 1. **செங்குவளை**; red Indian water-lily. 2. **செங்கழுநீர்**; purple Indian water-lily.

[அரத்தம் + Skt. utpala > த. உற்பலம்.]

அரதேசிபரதேசி *aradēśi-paradēśi*, பெ. (n.) **அகதேசி** பார்க்க; see *agadēśi*.

அரதைப்பெரும்பாழி *aradai-p-perumbāḻi*, பெ. (n.) ஓர் ஊர்; a town. "பாடும் அரதைப் பெரும் பாழியே முதலாக" (பெரியபு. திருஞான. 403).

அரந்தம் *arandam*, பெ. (n.) 1. **செங்கழுநீர்**; red water-lily, *Nymphaea odorata*. 2. **தாமரை**; lotus, *Nelumbiam speciosum*. 3. **கடுக்காய்**; chebulic myrobalan, *Terminalia chebula*. 4. **கற்பரி நஞ்சம்** (பாடாணம்); a kind of arsenic (சா.அக.).

[அரத்தம் → அரந்தம்.]

அரந்தளி *arandaḷi*, பெ. (n.) **மரவுரி யென்னும் மரம்** (L); bark tree (செ.அக.) — **பட்டைமரம், இரைஞ்சி**; bark tree, *Antiaris toxicuria* (சா.அக.).

அரந்தெல்லி *arandelli*, பெ. (n.) அரந்தளி பார்க்க; see *arandaḷi*.

அரந்தை[1] *arandai*, பெ. (n.) 1. **காட்டுத் தீ**; wild fire. " அரந்தை விரிந்தவியு மாறுபோல் " (தொல். பொருள். புறத். 3, நச். மேற்கோள்). 2. சுரவெட்டை (இராசவைத்.); high temperature in fever (சா.அக.). 3. **சொரிகொன்றை**; Indian calosanthes (சா.அக.).

[உல் → அல் → அன் → அனல். அல் → அள் → அழல். அல் → அர் → அரி = நெருப்பு. அர் → அரம் = அரந்தை.]

அரந்தை[2] *arandai*, பெ. (n.) 1. **துன்பம்**; affliction, trouble. "ஒருதனி வேழத் தரந்தையை ....தீர்த்தனை" (திவ்.இயற். திருவெழு கூற். 12-13). 2. **மனக்கவற்சி, துயரம்**; sorrow, distress. "அரந்தைப் பெண்டி ரினைந்தன ரகவ" (மதுரைக். 166), "துன்பத் தரந்தையிற் கன்றுபு கனலும்" (ஞானா. 27). 3. **பக்க இசிவு** (பாரிசசன்னி); paralysis.

[அலத்தல் = துன்புறுதல். அல → அலம் = துன்பம். அலம் → அலந்தை = துன்பம். அலந்தை → அரந்தை.]

அரந்தை[3] *arandai*, பெ. (n.) *நீர்நிலை (அக.நி.)*; tank.

[அல் → அலை. அலைதல் = அசைதல், இயங்குதல். அலை = திரை, நீர்நிலை, கடல். அல் → அல → அலந்தை = நீர்நிலை (பிங்.). அலந்தை → அரந்தை.]

அரந்தை[4] *arandai*, பெ. (n.) *குறிஞ்சி நிலத் திற்குச் சிறப்பாக ஏற்ற குறிஞ்சி யென்னும் தாய்ப் பெரும்பண்*; a primary melody-type of the *kuriñji* class especially suited to poetic treatment of the hilly tract.

அரந்தையன் *arandaiyan*, பெ. (n.) *வறியன் (சம்.அக.)*; destitute person.

[அரந்தை = துன்பம், துன்பத்திற் கேதுவான வறுமை. அரந்தை → அரந்தையன்.]

"இன்மையி னின்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே யின்னா தது" (குறள், *1041*).

அரப்பள்ளி *ara-p-palli*, பெ. (n.) *திருமாலின் படுக்கையாகச் சொல்லப்படும் அரவணை (பாம்புப்படுக்கை)*; *Tirumāl's* (Viṣṇu's) serpent bed, formed of the coils of Ādišēṣa.

[அர = பாம்பு. பள்ளி = படுக்கை.]

அரப்பள்ளியான் *ara-p-palliyān*, பெ. (n.) *அரவணையானாகிய திருமால்*; *Tirumāl* (Viṣṇu) reclining on the serpent, Ādišēṣa. "அரப்பள்ளி யானு மலருறை வானும்" (தேவா. *1.98 : 9*).

அரப்பள்ளி பார்க்க; see *ara-p-palli*.

அரப்பிரியை *ara-p-piriyai*, பெ. (n.) *சிவன்தேவி*; Šiva's consort. "அரப்பிரியை பார்ப்பதியே" (திருவானைக். கோச்செங். *81*).

[அர் → அரம் (சிவப்பு) → அரன் (சிவன்) > **Skt.** Hara. *புரிதல் = விரும்புதல். புரி >* **Skt.** pri → priya → priyā.*]*

அரப்பொடி *ara-p-podi*, பெ. (n.) *இரும்புத் தூள்*; iron filings, *Ferri limatura* (செ.அக.).

அரபத்தநாவலர் *ara-patta-nāvalar*, பெ. (n.) *பரதசாத்திர நூலாசிரியர்*; name of the author of the *Parada šāttiram*.

[அரன் + பத்தன் + நாவலர். அரன் > **Skt.** Hara. *பத்தன் >* **Skt.** bhakta.*]*

அரன், பத்தன் பார்க்க; see *aran, pattan*.

அரபி *arabi*, பெ. (n.) *கடுக்காய் (மலை.)*; chebulic myrobalan.

அரம்[1] *aram*, பெ. (n.) 1. *இரும்பு செம்பு முதலிய மாழைகளையும் (உலோகங்களையும்) மரம் கொம்பு முதலிய வன்பொருள்களையும் அராவும் இரும்புக் கருவி*; file, rasp. "அரம் போலுங் கூர்மைய ரேனும்" (குறள், **997**). 2. *வாளரம், அரம்பம்*; saw. "அரம்போழ்ந் தறுத்த கண்ணே ரிலங்குவளை" (மதுரைக். *316*). 3. *உருக்கு*; steel (சா.அக.). 4. *புண்* (இராசவைத்.); wound.

ம. அரம்; க., து., பட. அர; தெ. ஆகுராயி; கோத. ஆர்ம்; பிரா. அர.

[உர் → அர் → அரவு → அராவு. அர் → அரம்.]



அரவகைகள்

அரம்[2] *aram*, பெ. (n.) 1. *நாகருலகம், கீழுலகம்*; nether world of serpents. "அரமேவி வெம்பின பணி" (இரகு. யாகப். *81*). 2. *கீழறை (சங்.அக.)*; cellar, underground room. 3. *குகை (சங்.அக.)*; cave.

[அர = பாம்பு. அர → அரம் = பாம்புவணக்க நாகர் வாழ்ந்த கீழைநாடுகள்.]

நாகவணக்கம் மேற்கொண்டவரும் நாகவுருவை முடியிலணிந்தவருமான நாகர் என்னும் வகுப்பார் பண்டைக்காலத்திற் கிழக்கு நாடுகளில் வாழ்ந்துவந்தனர். அதனாற் கீழைநாடுகள் நாகர்நாடுகள் அல்லது நாகநாடுகள் என்றும், நாகருலகம் என்றும் பெயர் பெற்றன. தொன்மக் (புராண) காலத்தில், ஆராய்ச்சி யில்லாதார் கீழுலகம் என்பதற்குக் கிழக்குலகம் என்று

பொருள்கொள்ளாது நிலத்திற்குள்ளிருக்கும் உலகம் என்றும், நாகர் என்பதற்குப் பாம்புகள் என்றும் தவறாகப் பொருள் கொண்டுவிட்டனர்.

அரம்[3] *aram*, பெ. (n.) **தோல்** (நாநார்த்த.); leather.

அரம்[4] *aram*, பெ. (n.) **வெட்டிவேர்**; khuskhus root, *Andropogon muricatus* (சா.அக.).

அரம்பணம் *arambaṇam*, பெ. (n.) **வெற்றிலை நறுக்குங் கருவி** (C.G.); betel-leaf plucker's thimble.

[அரம் → அரம்பு → அரம்பணம்.]

அரம்பணம்

அரம்பன் *arambaṉ*, பெ. (n.) **குறும்பன், குறும்பு செய்வோன்**; mischievous fellow. "அரம்பா வுன்னை யறிந்து கொண்டேன்" (திவ். பெரியாழ். 3 . 1 : 6).

ம. அரம்பன்

[அர் → அரம் → அரம்பு → அரம்பன்.]

அரம்பிலம் *arambilam*, பெ. (n.) **கீழுலகம்** (**பாதலம்**) (சிந்தா.நி.); the nether world.

[அரம் + பிலம். அர → அரம் = நாகருலகம், கீழுலகம். **Skt.** bila > **த.** *பிலம் = கீழுலகம். இனி, புல் → பில் (பிள்) → பிலம் = பிளவு, வெடிப்பு, குழி, வளை, குகை, கீழறை, கீழுலகம் என்றுமாம்.]*

அரம்பு *arambu*, பெ. (n.) 1. **குறும்பு**; mischief, wicked deed. "வரம்பிகந் தரம்பு செய்யுங் கலி" (சீவக. 2727). 2. **விரும்பியதைச் செய்து முடிக்கும் வன்மை** (திவ். பெரியாழ். 3 . 1 : 6, வியா.); ability to accomplish one's desires.

[அர் → அரவு. அர் → அரம் → அரம்பு.]

அரம்பை *arambai*, பெ. (n.) **ஓமம்** (மலை.); omum.

அரமகள் *ara-magaḷ*, பெ. (n.) **தெய்வப்பெண்**; celestial damsel. "அங்கினி திருந்த காலை யரமக ளவனை நோக்கி" (கந்தபு. தக்க. வள்ளி. 237).

[அர் → அரம் = அச்சம், துன்பம். அரமகள் = துன்புறுத்தும் தெய்வப்பெண், தெய்வப் பெண்.]

அரமங்கை *ara-maṅgai*, பெ. (n.) **தெய்வப் பெண்**; celestial damsel. "அரமங்கையர் சாமரை பாங்க ரசைத்திட" (காஞ்சிப்பு. பன்னி. 294). **அரமகள்** பார்க்க; see *ara-magaḷ*.

[அரம் + மங்கை.]

அரமாதர் *ara-mādar*, பெ. (n.) **தெய்வப்பெண்கள்**; celestial damsels. "அம்மென் மூர லரமாதர்" (இரகு. திக்கு. 105).

[அரம் + மாதர்.]

அரமாரவம் *aramāravam*, பெ. (n.) **நாயுருவி** (மலை.); species of achyranthus (செ.அக.) — Indian burr, *Achyranthes aspera* (சா.அக.).

அரமான் *ara-māṉ*, பெ. (n.) **தெய்வப்பெண்** (நாமதீப.); celestial damsel. **அரமகள்** பார்க்க; see *ara-magaḷ*.

[அரம் + மான் (மான்போலுஞ் சாயலை யுடைய பெண்). "மட்டுப் படாக்கொங்கை மானார் கலவி மயக்கத்திலே" (தனிப்பா. I. பக். 157).]

அரமானசூலை *aram-āṉa-šūlai*, பெ. (n.) **ஒருவகைச் சூலைநோய்**; a severe piercing pain (சா.அக.).

[அரம் + ஆன + சூலை. அரம் = அச்சம், துன்பம்.]

அரமி *arami*, பெ. (n.) **கடுக்காய்**; gall-nut, chebulic myrobalan, *Terminalia chebula* (சா.அக.).

அரமியம் *aramiyam*, பெ. (n.) **நாயுருவி** (பச்.மூ.); a species of achyranthus.

அரமீன் *ara-mīṉ*, பெ. (n.) **ஒருவகைக் கடல்மீன்**; a kind of sea-fish, file fish (சா.அக.).

[அரம் + மீன். முதுகில் அரம்போன்ற முட்கள் உடையது.]

அரமுறி *ara-muṟi*, பெ. (n.) 1. **இருப்புமுறிச் செடி**; silvery leaved indigo or Arabian indigo, *Indigofera argentia*. 2. **எஃகு**; steel (சா.அக.).

அரயக்கொம்மை *araya-k-kommai*, பெ. (n.) **ஒரு பூவாழை**; true banana, *Musa sapientum* (*champa*) (சா.அக.).

அரயரல் *arayaral*, பெ. (n.) **அரசு**; pipal tree, *Ficus religiosa* (சா.அக.).

அரல்[1] *aral*, பெ. (n.) **கோழை** (**சிலேட்டுமம்**) (பரி.அக.); phlegmatic humour in the body.

அரல்[3] *aral*, பெ. (n.) *முதலாளி* (யாழ்ப்.); principal, master (J.).

அரலை[1] *aralai*, பெ. (n.) ***கோழை*** (சங்.அக.); phlegm.

[அரல் → அரலை.]

அரலை[2] *aralai*, பெ. (n.) 1. ***கனி;*** fruit. 2. ***கழலை;*** wen, tubercle, tumour. "அயிலரி யரலை விழுப்புண்" (ஞானா. 30). 3. ***விதை*** (சூடா.); seed. "அரலை யுக்கன நெடுந்தா ளாசினி" (மலைபடு. 139). 4. ***பொடிக்கல்;*** stone broken for roads. "அரலைக் கற்களாற் சிவபரனை மறைத்திட் டானால்" (திருக் காளத். பு. 5 : 8).

துட. அர்ல

அரலை[3] *aralai*, பெ. (n.) 1. ***மரல்*** (சூடா.); bowstring hemp. 2. ***கற்றாழை;*** aloes.

ம. அரல

அரலை[4] *aralai*, பெ. (n.) 1. ***கொடுமுறுக்கு*** (மலைபடு. 24, உரை); twist, knot in a string or thread. 2. ***குற்றம்;*** fault. "அரலை தீர வுரீஇ" (மலைபடு. 24).

அரலை[5] *aralai*, பெ. (n.) ***கடல்*** (சூடா.); sea.

அரலை[6] *aralai*, பெ. (n.) ***காளி (துர்க்கை)*** (சங். அக.); *Kāḷi.*

அரவக்கடி *arava-k-kaḍi*, பெ. (n.) ***பாம்புக் கடி;*** snake-bite.

[அரவம் + கடி.]

அரவக்கிரி *arava-k-kiri*, பெ. (n.) ***ஆதிசேடன் வடிவாகச் சொல்லப்படும் வேங்கடமலை;*** *Tiruppadi* hills, the serpent Šēṣa said to be in the form of a hill. "அரவக்கிரி சார்ந்தான்" (பாரத. அருச்சுனன்றீர். 12).

[அரவம் + Skt. giri.*]*

அரவக்கொடியோன் *arava-k-koḍiyōṉ*, பெ. (n.) ***பாம்புக்கொடியையுடைய துரியோதனன்;*** Duryodhana having the banner with serpent emblem.

ம. அரவக்கொடி

[அரவம் + கொடியோன்.]

அரவங்கலக்கம் *aravaṅ-kalakkam*, பெ. (n.) ***சாகுங்காலத்து உண்டாகும் மனத்தெளிம்பு*** (இ.வ.); brightening of the mind on the approach of death (Loc.).

[ஒருகா. அறவன் கலகலக்கம் → அரவங்கலக்கம். அறவன் = நல்லொழுக்கன். கலகலத்தல் = உள்ளத்தில் உள்ளதை மறையாது சொல்லுதல், ஊக்கங்கொள்ளுதல்.]

அரவஞ்செய்[1]**-தல்** *aravañ-cey-*, 1 செ.கு.வி. (v.i.) ***ஒலித்தல், ஓசையுண்டாக்குதல், கத்துதல்;*** to sound, make a noise, shout.

[அரவம் (ஒலி, ஓசை) + செய்.]

அரவஞ்செய்[2]**-தல்** *aravañ-cey-*, 1 செ.குன்றாவி. (v.t.) ***மனங்கலக்குதல், வருத்துதல்;*** to confuse the mind, to torment. "கண்ணும் புருவமு மரவஞ் செய்ய" (சீவக. 2806.)

[அரவுதல் = வருத்துதல். அரவு → அரவம் + செய்.]

அரவணிந்தோன் *arav(u)-aṉindōṉ*, பெ. (n.) ***சிவன்*** (சூடா.); Šiva, wearing serpents.

ம. அரவணி (பாம்பணி).

[அரவு + அணிந்தோன்.]

அரவணை-த்தல் *arav(u)-aṉai-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. ***கட்டித்தழுவுதல்*** (ஏகாம். உலா. 436); to embrace, fondle. 2. ***தாங்குதல், உதவிசெய்து அன்பாகப் போற்றிக் காத்தல்;*** to support, cherish, protect dearly.

[அரவு → அரசு. அரவணைத்தல் = அரசன் போலப் போற்றிக் காத்தல்.]

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு" (குறள், 544).

"நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே"
(புறநா. 186).

"வய்யக முழுவதும் வறிஞு னோம்புமோர்
செய்யெனக் காத்தினி தரசுசெய்
கின்றான்"
(கம்பரா. பால. அரசியற். 12).

இவையும், இத்தகைய பிறவும், அரசனின் அரவணைத்தற் சிறப்பைத் தெளிவாகக் காட்டும்.

அரசனை அல்லது அரசைக் குறிக்கும் 'அரவு' என்னும் பண்டைச்சொல் வழக்கற்றுப் போனபின், 'அரவணைத்தல்' என்னுங் கூட்டுச்சொல் வினைக்குப் பாம்பு தழுவுதல் என்னும் போலிப்பொருளே,

ஆராய்ச்சியில்லார்க்குத் தோன்றிற்று. சொல் வகையி லாயினும் அணிவகையி லாயினும் இப் பொருள் பொருந்தாமையை எண்ணிக் காண்க.

அரசன் பார்க்க; see *arašan*.

அரவணை *arav(u)-aṉai*, பெ. (n.) 1. **ஆதிசேடன் சுருளையாலான திருமாலின் பாம்புப்படுக்கை;** *Tirumāl's* (Viṣṇu's) serpent bed, formed of the coils of Ādišēṣa. ''ஆடக மாடத் தரவணைக் கிடந்தோன்'' (சிலப். 30 : 51). 2. **திருமால் கோயில்களில் நடுச்சாமத்திற் படைக்குஞ் சருக்கரைப் பொங்கல்;** a sweet rice meal with sugar and other ingredients offered to *Tirumāl* (Viṣṇu), at night, before bed time.

ம. அரவண

[அர → அரவு (பாம்பு) + அணை.]

அரவணைச்செல்வன் *arav(u) - aṉai - c - celvaṉ*, பெ. (n.) அரவணையான் பார்க்க; see *arav(u)-aṉaiyāṉ*.

[அரவு + அணை + செல்வன்.]

அரவணைப்பு *arav(u)-aṉaippu*, தொ.பெ. (vbl.n.) 1. **தழுஉ (தழுவல்)**; embrace. 2. **அன்பான போற்றிக் காப்பு;** affectionate support or loving protection. ''ஐயன் புரியு மரவணைப்பும்'' (பணவிடு. 27).

து. அராவுனி

[அரவு + அணைப்பு.]

அரவணையான் *arav(u)-aṉaiyāṉ*, பெ. (n.) **பாம்புப்படுக்கையானாகிய திருமால்**; *Tirumāl* (Viṣṇu), reclining on the serpent. ''அரவணை யான்பாதம் எவர்வணங்கி யேத்தாதார்'' (திவ். இயற். 2 : 12).

[அரவு + அணையான். அரவு = பாம்பு.]

அரவந்தீண்டல் *aravan-tīṇḍal*, தொ.பெ. (vbl n.) **பாம்பு கடித்தல்**; snake-bite.

[அரவம் + தீண்டல்.]

அரவப்பகை *arava-p-pagai*, பெ. (n.) **பாம்புப் பகையான கலுழன் (கருடன்)**; Garuda, the enemy of snakes. ''அரவப்பகை யூர்தி யவ னுடைய'' (திவ். பெரியாழ். 3 . 5 : 11).

[அர → அரவு → அரவம் + பகை.]

அரவம்[1] *aravam*, பெ.(n.) 1. **பாம்பு**; snake. ''வெஞ்சின வரவம்'' (மணிமே. 20 : 104). 2. **ஒன்பதாம் நாண்மீன் (ஆயிலியம்)**; the ninth lunar asterism. ''ஆதிரை கேட்டை யரவம்'' (விதான. பஞ்சாங். 16). 3. **இராகு கேதுக்கள்**; ascending and descending nodes, regarded as planets in the form of monstrous dragons. ''வரியரவம் பெண்'' (விதான. பஞ்சாங். 17). 4. **ஆதிசேடனின் தோற்றரவாகக் (அவதாரமாகக்) கருதப்படும் பதஞ்சலி முனிவர்**; Patañjali, a sage, considered to be an incarnation of Ādišēṣa. ''புலியரவங் கண்டு கொண்டாட வாடும் புராதனன்'' (புலியூரந். 71). 5. **வருத்தம், மனக்கலக்கம்**; torment, confusion of mind. ''கண்ணும் புருவமு மரவஞ் செய்ய'' (சீவக. 2806).

ம. அரவம்

[அரவுதல் = வருத்துதல். அர → அரவு → அரவம்.]

அரவம்[2] *aravam*, பெ. (n.) 1. **ஒலி**; mild sound. ''மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி'' (நன். 58). 2. **ஓசை**; loud sound, noise. கோபுர மணியோசை கேட்கிறது (உ.வ.). 3. **பேரொலி, இரைச்சல், ஆரவாரம்**; roaring, bustle, tumult, din, uproar, confused noise. ''படையியங் கரவம்'' (தொல். பொருள். புறத். 3). 4. **வில் நாண்** (பொதி.நி.); bow-string which twangs when plucked. 5. **அரிபெய் சிலம்பு** (பிங்.); jingling anklet.

ம. அரவம்; த. அரவம் > **Skt.** rava.

[அர் = ஓர் ஒலிக்குறிப்பு. அர் → அரி. அரித்தல் = ஒலித்தல். அர் → ஆர். ஆர்த்தல் = ஒலித்தல். ஆர் → ஆரி. ஆரித்தல் = ஒலித்தல். அர் → அர → அரவு → அரவம்.]

அரவம்[3] *aravam*, பெ. (n.) **ஆசை** (அக.நி.); desire.

[ஆர்தல் = அன்புசெய்தல். ஆர் → ஆர்வு → ஆர்வம் → அரவம்.]

அரவம்[4] *aravam*, பெ. (n.) 1. **அதிமதுரம்** (பரி. அக.); liquorice. 2. **குங்குமம்** (வை.மூ.); saffron. 3. **மரமஞ்சள்** (பச்.மூ.); tree turmeric.

அரவமகுடி (அரவக்கிரீடி) *arava-magudi*, பெ. (n.) **கீரிப்பூடு**; Indian snake root or mongoose plant, *Ophiorrhiza mungos* (சா.அக.).

அரவமணி *arava-maṇi*, பெ.(n.) 1. **நாகமணி (நாகரத்தினம்)**; a kind of ruby said to be found on the heads of certain aged cobras. 2. **உருத்திராக்கம்**; rudrākṣa bead, *Eleocarpus tuberculatus* (சா.அக.).

[1. அர → அரவு → அரவம் (பாம்பு) + மணி. 2. அரவன் = பாம்பையணிந்த சிவன். அரவ மணி = சிவமணி.]

அரவமணிக்கல் *arava-maṇi-k-kal*, பெ. (n.) **மணிக்குடல்** (வை.மூ.); small intestine.

அரவமாகம் *aravamāgam*, பெ. (n.) **அவல்**; flattened rice obtained by pounding fried paddy (சா.அக.).

அரவர் *aravar*, பெ. (n.) **தமிழர்** (அக.நி.); the Tamils.

அருவர் பார்க்க; see *aruvar*.

[அருவா (நாடு) → அருவர் → அரவர்.]

அரவர் என்பது திருத்தமான சொல்லன்று.

அரவன் *aravaṉ*, பெ. (n.) **சிவன்** (உரி.நி.); Šiva, wearing serpents.

அரவாட்டிப்பச்சை *aravāṭṭi-p-paccai*, பெ. (n.) **தொழுகண்ணி**; telegraph plant (செ.அக.) — telegraph plant or moving plant, *Desmodium gyrans* alias *Hedysarum gyrans* (சா.அக.).

[ஒருகா. அரவு + ஆட்டி + பச்சை.]

அரவாபரணன் *arav(u)-ābaraṇaṉ*, பெ.(n.) **பாம்பை யணிகலமாக வணிந்த சிவன்**; Šiva, as adorned with serpents. "அரவா பரணன் றந்தரு ளருமா மறை" (பாரத.பதினான். 51).

[அரவு + Skt. ābharaṇa > த. ஆபரணம்.]

அரவாய்க்கடிப்பகை *ara-vāy-k-kaḍi-p-pagai*, பெ. (n.) **அரம் (அரம்பம்) போன்ற விளிம் புடையதும் பேயோட்டுவதுமான வேப்பிலை**; serrated leaf of the margosa (*Azadirachta indica*), as hostile to demoniac influence. "அர வாய்க் கடிப்பகை" (மணிமே. 7 : 73).

[அரம் + வாய் + கடி (பேய்) + பகை.]

அரவாள் *aravāḷ*, பெ. (n.) **ஒரு பழைய காசு (நாணய)வகை** (சரவண. பணவிடு. 58); an ancient coin.

அரவி-த்தல் *aravi-*, 4 செ.குன்றாவி. (v.t.) **ஓசை யுண்டாக்குதல், அரவஞ்செய்தல்**; to make noise. "அமரரோ டசுரர் கூடி யரவித்துக் கடைய" (தேவா. 4.70 : 7).

[அரவம் (பெ.) → அரவி (வி.).]

அரவிந்தம் *aravindam*, பெ. (n.) **அரன்விந்து** பார்க்க; see *araṉ-vindu*.

அரவிந்து *aravindu*, பெ. (n.) **அரன்விந்து** பார்க்க; see *araṉ-vindu*.

அரவினாள் *araviṉāḷ*, பெ. (n.) **ஒன்பதாம் நாண்மீன் (ஆயிலியம்)** (திவா.); the ninth lunar asterism.

அரவம்¹ பார்க்க; see *aravam*¹.

அரவு (பாம்பு) + இன் + நாள்.]

அரவீசம் *aravišam*, பெ. (n.) **இதள் (பாதரசம்)**; mercury.

[அரன் > Skt. hara. Skt. harabīja > த. அரபீசம் → அரவீசம் = அரன்விந்து.]

அரவு¹-தல் *aravu-*, 5 செ.கு.வி. (v.i.) **ஒலித்தல், அரவஞ்செய்தல்**; to sound, hum. "வண்டரவு கொன்றை" (தேவா. 3 . 339 : 3).

[அர் → அர → அரவு.]

அரவு²-தல் *aravu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **வருத்துதல்**; to torment. "வேளரவு கொங்கை யிள மங்கையர்கள்" (தேவா. 3 . 332 : 2).

[அர் → அர → அரவு.]

அரவு³ *aravu*, பெ. (n.) **ஒலி**; sound. "பாய் குழக் கன்றி னார்ப்பரவும்" (திருக்காளத். பு. 2 : 7).

ம. அரவு

[அர் → அர → அரவு.]

அரவு⁴ *aravu*, பெ. (n.) 1. **பாம்பு**; snake. "நச்சா டரவணையான்" (பாரத. பதின்மூ. 108). 2. **பாம்பின் நஞ்சு**; snake poison. "அரவுறு துயர மெய்துப" (ஐங்குறு. 173). 3. **ஒன்பதாம் நாண்மீன் (ஆயிலியம்)**; the ninth lunar asterism. "அளைபுகு மரவினோ டலவன் வாழ்வுற" (கம்பரா. பால. திருவவ. 105). 4. **ஆதிசேடனின் தோற்றரவாகக் கருதப்படும் பதஞ்சலி முனிவர்**; Patañjali, a sage, considered to be an incarnation of Ādišēṣa. "புலியோ டரவுதொழுங் கூத்து டையவர்" (வெங்கைக்கோ. 347). 5. **உடைப் படைக்கும் வைக்கோற் பழுதை**; twisted rope of straw entwined about stakes for closing a breach in a bund. "அரவு ருட்டுவார்" (திரு விளை. மண்சுமந்த. 5).

ம. அரவு

[அர → அரவு. அரவுதல் = வருத்துதல்.]

அரவு⁵ *aravu*, பெ. (n.) **விந்து**; semen (சா.அக.).

அரவு[6] *aravu*, இடை. (part.) **ஒரு தொழிற்பெயரீறு**; a vbl. n. suff.

எ-டு: தேற்றரவு, தோற்றரவு.

அரவுச்சக்கரம் *aravu-c-cakkaram*, பெ. (n.) (அணி.) **சித்திரப்பாவகை**; (Rhet.) a kind of fanciful versification. 'இதனுட் சக்கரமென்ற தனானே........அரவுச் சக்கரமும் முதலாக வுடையன, புணர்ப்பாவை யுள்ளும் போக்கியத்துள்ளும் கிரணியத்துள்ளும் வதுவிச்சையுள்ளும், கண்டுகொள்க' (யாப். வி. ஒழிபி. பக். 497).

[அரவு + சக்கரம்.]

அரவுநாள் *aravu-nāḷ*, பெ. (n.) **அரவினாள்** பார்க்க; see *aravināḷ*.

அரவுயர்த்தவன் *arav(u)-uyarttavaṉ*, பெ. (n.) **துரியோதனன்** (சூடா.); Duryōdhana, having the serpent as emblem on his banner.

[அரவு + உயர்த்தவன் (வினையா.பெ.).]

அரவுயிர்ப்பு *arav(u)-uyirppu*, பெ. (n.) **பாம்பின் மூச்சு**; breath of a serpent.

[அரவு + உயிர்ப்பு. உயிர்த்தல் = மூச்சு விடுதல்.]

அரவுருட்டு-தல் *arav(u)-uruṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) **வைக்கோற் புரியை உடைப்பிற் செலுத்துதல்**; to thrust twisted straw into a breach. ''அரவு ருட்டுவார்'' (திருவிளை. மண்சுமந். 5).

[அரவு + உருட்டு. உருள் (த.வி.) → உருட்டு (பி.வி.).]

அரவை-த்தல் *aravai-*, 4 செ.குன்றாவி. (v.t.) **புடமிடுதல்** (சா.அக.); to calcine, refine metals.

அரவொலி *ara-v-oli*, பெ. (n.) **'அர' என்னும் விளியொலி**; the acclamation *Ara*, addressed to Šiva. ''அரவொலி யாகமங்க ளறிவார்'' (தேவா. 7 . 100 : 8).

[அரன் (சிவன்) → அர (விளி) > Skt. Hara.]

அரவோன் *aravōṉ*, பெ. (n.) **ஆதிசேடன் தோற்றரவாகக் கருதப்படும் பதஞ்சலி முனிவன்**; Patañjali, a sage, considered to be an incarnation of Ādišēṣa. ''சீரர வோனும்'' (கோயிற்பு. நடராச. 70).

[அரவு (பாம்பு) + ஓன் (ஆ.பா. ஈறு).]

அரள்[ளு]-தல் *araḷ-*, 16. செ.கு.வி. (v.i.) **மாபேரச்சங் கொள்ளுதல்**; to be extremely terrified. 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' (பழ.).

ம. அரளுக; க. அரள்; தெ. அரடொணு; பட. அருண்டு.

[அர் → அரள்.]

அரளி *araḷi*, பெ. (n.) 1. **பீநாறி** (மலை.); fetid tree, *Sterculia foetida*. 2. **செம்பருத்தி** (இ.வ.); a variety of cotton flower (Loc.). 3. **அலரி** (உ.வ.); oleander, *Nerium odorum*.

ம., க. அரளி.

அரளித்தொக்கு *araḷi-t-tokku*, பெ. (n.) **பீநாறிப் பட்டை**; the bark of fetid tree.

அரளைசரளை *araḷai-šaraḷai*, பெ. (n.) **பாதையும் சாலையும் அமைக்கப் பயன்படுத்தப்படும் மணற்பாறைச் சல்லிக் கற்கள்**; gravel used for laying paths and roads. அரளைசரளை பரப்பியாகிவிட்டதா? (உ.வ.).

[சரள் = மணற்பாறைச் சல்லி, முரம்பு. சரள் → சரளை. அரலை → அரளை — இணைமொழி யெதுகைச்சொல். அரளைசரளை — மரபிணைமொழி.]

அரற்றல் *araṟṟal*, பெ. (n.) **யாழ்நரம்போசை** (பிங்.); twang of the string of a lute.

[அரற்று → அரற்றல்.]

அரற்று-தல் *araṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **திடுமென்று அஞ்சிக் கதறுதல்**; to shout suddenly with fear. 2. **கதறியழுதல்**; to cry, weep aloud, bewail. ''மடந்தை......கனவி னரற்றின்று'' (பு. வெ. கைக்கிளை. 9). 3. **பலவுஞ் சொல்லித் தன் குறைகூறிப் புலம்புதல்** (தொல். பொருள். மெய்ப். 12, பேரா. உரை); to pour out one's troubles in lamentation. 4. **உரத்து முறையிடுதல்**; to complain vociferously. ''அருமறை யின்னமுங் காணாதரற்ற'' (தாயு. ஆகார. 4). 5. **ஆரவாரித்தல்** (பிங்.); to shout with excitement. 6. **கத்திச் சொல்லுதல்**; to utter loudly. ''அங்க சரீரி யரற்றிய மாற்றம்'' (பாரத. முண்டகச். 80). 7. **ஒலித்தல்**; to sound, tinkle. ''நோன்கழல் கல்லென வரற்றிட'' (கந்தபு. யுத்த. முதனாட். 22). 8. **பிதற்றுதல்** (நாநார்த்த.); to blabber.

ம. அறளுக

[அலறு → அரறு → அரற்று.]

அரற்று *araṟṟu*, பெ. (n.) *1.* **பலசொல்லிப் புலம்பல்**; lamentation, expressing one's woes in many words. 'தேவந்தி யரற்று' (சிலப். 29). *2.* **ஒலி**; sound. ''அரற்றொடு குறைந்து வீழ்ந்தும்'' (கந்தபு. யுத்த. சூரபன். வதை. 488). *3.* **குறிஞ்சி யாழ்த்திறவகை** (திவா.); secondary melody-type of the *kuriñji* class.

ம. அரள்ச்ச; து. அரடுனி.

[அலறு → அரறு → அரற்று.]

அரறு-தல் *araṟu-*, 5 செ.கு.வி. (v.i.) **பேரொலி செய்தல், முழங்குதல்**; to roar. ''அரறுவ போல வார்க்கும்'' (பெருங். உஞ்சைக். 38 : 40).

[உரறுதல் = உரத்து முழங்குதல். உரறு → அரறு.]

அரன் *araṉ*, பெ. (n.) *1.* **சிவன்**; Śiva. *2.* **எப்பொருட்கும் இறைவன்** (சூடா.); Lord of the Universe. *3.* **அரசன்** (நாமதீப.); king. *4.* **உருத்திரன், அழிப்புத்தலைவன் (சங்கார கர்த்தா)** (சிவதரு. ஐவகை. 33); the destroyer. *5.* **உருத்திரர் பதினொருவருள் ஒருவன்** (பிங்.); one of the eleven Rudrās. *6.* **பகலிலும் இரவிலும் முதலில் நிகழும் உருத்திர முழுத்தம் (ரௌத்திர முகூர்த்தம்)** (விதான. குணா. 73); *Rudra muhūrta*. *7.* **அழலோன்** (நாநார்த்த.); Agni, the god of fire. *8.* **மஞ்சள்** (பச்.மூ.); turmeric.

ம. அரன்; க. அரஜின; தெ. அரருண்டு; அரன் > **Skt.** Hara.

[அரம் = சிவப்பு. அரம் → அரன் = செந்நிறமான சிவன்.]

அரன் என்பது, முதற்கண் கருஞ்சிவப்பான அரக்குமஞ்சளைக் குறித்துப் பின்னர்ப் பொது மஞ்சட்கும் பெயராகி யிருத்தல் வேண்டும்.

பழுத்த ஆதன்களின் (பக்குவ ஆன்மாக்களின்) கட்டை (பாசத்தை) யரிக்கையினாலே சிவன் அரனெனப்பட்டான் என்பது பொருந்தினும், உண்மையான தன்று.

அரன்சிறுகு *araṉ-ciṟugu*, பெ. (n.) **மான்செவிக் கள்ளி**; a kind of spurge, the leaves of which resemble the ears of the deer (சா.அக.).

அரன்பாகிகம் *araṉ-pāgigam*, பெ. (n.) **செவ்வாழை**; red or royal banana, *Musa sapientum* (*rubra*) (சா.அக.).

அரன்பூசைமரம் *araṉ-pūšai-maram*, பெ. (n.) **செம்மந்தாரை**; pink and yellow mountain ebony, *Bauhinia variegata* (*purpurascens*) (சா.அக.).

அரன்பெண்டிர் *araṉ-peṇḍir*, பெ. (n.) **கந்தகம்**; sulphur.

அரன்மகன் *araṉ-magaṉ*, பெ. (n.) *1.* **முருகன்**; *Muruga*. ''மத்தமும் மதியமும் வைத்திடு மரன் மகன்'' (திருப்பு. 1.). *2.* **பிள்ளையார்** (சங். அக.); Vināyaka. *3.* **வீரபத்திரன்** (சங்.அக.); Virabhadra.

அரன்முப்பு *araṉ-muppu*, பெ. (n.) **தலைப் பிண்டம்**; the first foetus.

'சித்தர்' என்னும் வென்னர் ஒரு மரும முறையால், ஒரு வியன் பொதுவுப்பைச் செய்வதற்கு அதைப் பயன்படுத்துவதால், அது அப்பெயர் பெற்றது; It is so called as it is used for preparing a universal salt, by a secret process known to *Siddhars* (சா.அக.).

[அரன் + முப்பு (மூவுப்பு).]

அரன்விந்து *araṉ-vindu*, பெ. (n.) *1.* **இதள் (பாதரசம்)** (பச்.மூ.); mercury. *2.* **வெள்ளி** (சங்.அக.); silver.

*[அரன்விந்து > **Skt.** harabindu.]*

அரன்வெற்பு *araṉ-veṟpu*, பெ. (n.) **வெள்ளிமலை (கைலாயம்)**; Mt. Kailas (சங்.அக.).

[சிவமதம் குறிஞ்சிநில முருக வணக்கத்தினின்று தோன்றியதனால், மலைகளுட் சிறந்த வெள்ளிமலை அரன்வெற்பு (சிவன்மலை) எனப் பட்டது.]

அரன்றலையணி *araṉ-ṟalai-y-aṇi*, பெ. (n.) **அறுகு** (பச்.மூ.); harialli grass, *Cynodon dactylon.*

[அரன் + தலை + அணி. சிவன் அறுகம் புல்லைத் தலையிலணிந்திருப்பதாகச் சொல்லப் படுவதால், அது அப் பெயர் பெற்றது.]

அரன்றோழன் *araṉ-ṟoḻaṉ*, பெ. (n.) **சிவனுடைய நண்பனாகச் சொல்லப்படும் குபேரன்** (திவா.); Kubēra, the companion of Śiva.

[அரன் + தோழன்.]

அரனாள் *araṉāḷ*, பெ. (n.) **ஆறாம் நாண்மீனாகிய மூதிரை (ஆதிரை)** (பிங்.); the sixth lunar asterism presided over by *Aran*, Śiva.

[அரன் + நாள் – அரனாள். அரனுக்குரிய நாண்மீன்.]

அரனிடத்தவள் *aran̠-iḍattavaḷ*, பெ. (n.) சிவனது இடப்பாகத்தி லமர்ந்திருக்கும் தேவியாகிய மலைமகள் (பார்வதி) (பிங்.); *Malaimagaḷ* (Pārvati), sitting on the left of Šiva, as His consort.

[அரன் + இடத்து + அவள். இடம் (இடப் பாகம்)→இடத்து (7ஆம் வே.). 'அத்து' சாரியை.]

அரனுகம் *aran̠ugam*, பெ. (n.) வால்மிளகு (பச். மூ.); tail pepper, *piper cubeba*.

அரனெறி *aran̠eṟi*, பெ. (n.) திருவாரூரிலுள்ள ஒரு சிவநிலையம் (பெரியபு. புராணசா. 31); a Šiva shrine at *Tiruvārūr*. "அரனெறி யமர்ந்த செங்க ணேற்றவர் சேவடி வணங்கி" (பெரியபு. திருஞான. 513).

[அரன் + நெறி.]

அரா *arā*, பெ. (n.) 1. பாம்பு; snake, serpent. "நல்லரா வுறையும் புற்றம்" (புறநா. 309:3). 2. ஒன்பதாம் நாண்மீனாகிய அரவினாள் (ஆயிலியம்); the ninth lunar asterism. "முற்றி லரா வழல்பூர மூன்று மகம்விற் பரணி யதோ முகம்" (விதான. பஞ்சாங். 18). 3. நாகமல்லி (இராசவைத்.); ringworm-root, *Rhinacanthus communis*.

[அர் → அர → அரா.]

அராக்கோள் *arā-k-kōḷ*, பெ. (n.) இராகுகேதுக் கள்; ascending and descending nodes of the moon, Rāhu and Kētu. "அராக்கோ ளிரண்டும்" (திவா. 12).

[அரா = பாம்பு. கோள் = கொட்கும் (சுற்றும்) விண்சுடர் அல்லது விண்ணுலகு. கதிரவன் மறைவும் திங்கள் மறைவும், அவற்றைச் செம் பாம்பும் கரும்பாம்பும் கவ்வுதலாகப் பண்டை யாரியர் கருதியதால், அவை கேது இராகு என்னும் பாம்புக்கோள்களாகச் சொல்லப் பட்டன.]

அராகம்[1] *arāgam*, பெ. (n.) (யாப்.) 1. கலிப் பாவின் வகைகளுள் ஒன்றான வண்ணக வொத்தாழிசையின் ஆறு உறுப்புகளுள் ஒன்று; a member of *vaṇṇaga vottāḻišai*, a variety of *kali* metre, characterised by rapid movement caused by quick succession of short vowels. "எருத்தே கொச்சகம் அராகம் சிற்றெண்" (தொல்.பொருள். செய். 152).

எ-டு:

"உருகெழு முருகிய முருமென வதிர்தொறு
மருகெழு சிறகொடு மணவரு மணிமயில்"
(தொல்.பொருள். செய். 152, பேரா.உரை மேற்கோள்.).

2. பாலை யாழ்த்திறவகை (பிங்.); a secondary melody-type of the *pālai* class. 3. தக்கராகம் (பிங்.); a melody-type.

அராகம் > **Skt.** rāga.

[அர் – ஓர் ஒலிக்குறிப்பு. அர் → அர → அரவு → அரவம் = ஒலி, ஓசை. அரவம் → அராவம் → அராகம் = ஒலிச்சிறப்புள்ள செய்யுளுறுப்பு அல்லது பண்.]

வண்ணகம் என்னும் கலிப்பாவுறுப்பு பற்றிக் கருத்து வேறுபாடுண்டு. தொல் காப்பியர், வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாபற்றிய,

"வண்ணகந் தானே
தரவே தாழிசை எண்ணே வ்ாரமென்
றந்நால் வகையிற் றோன்று மென்ப"

என்னும் நூற்பாவில் (செய். 140), அராகத் தைக் குறிக்கவில்லை. அதனால், பேராசிரியர், அந் நூற்பாவிற்கு,

'தரவும் தாழிசையும் எண்ணும் வாரமு மென்னும் உறுப்பு முறையானே வருவது வண்ணகவொத்தாழிசையாம் என்றவாறு.....

'வண்ணித்துப் புகழ்தலின் வண்ணக மெனப்படும்; என்னை? தரவினானே தெய்வத்தினை முன்னிலையாகத் தந்து நிறீஇப் பின்னரத் தெய்வத்தினைத் தாழிசை யானே வண்ணித்துப் புகழ்தலின் அப் பெயர் பெற்றதாகலின். ஒழிந்த உறுப்பான் வண்ணிப்பினுஞ் சிறந்த உறுப்பு இதுவென்க; எனவே அகநிலைச் செய்யுட் டாழிசை வண்ணித்து வாரா வென்பதாம்......

'இனி, வண்ணக மென்பது, அராக மென உரைத்து, அவ்வுறுப்புடையன வண்ணக வொத்தாழிசை யெனச் சொல்லுவாரும் உளர். எல்லா ஆசிரியருஞ் செய்த வழிநூற்கு இது முன்னூ லாதலின், இவரோடு மாறு படுதல் மரபன்றென மறுக்க' எனவுரைத்தார்.

இனி, அமிதசாகரனாரோ, தம் யாப்பருங் கலத்துள்,

"தரவொன்று தாழிசை மூன்றுஞ் சமனாய்த்
தரவிற் சுருங்கித் தனிநிலைத் தாகிச்

சுரிதகஞ் சொன்ன விரண்டினு ளொன்றாய்
நிகழ்வது நேரிசை யொத்தா ழிசைக்கலி'' (82),

''முந்திய தாழிசைக் கீறாய் முறைமுறை
ஒன்றினுக் கொன்று சுருங்கு முறுப்பின
தம்போ தரங்கவொத் தாழிசைக் கலியே'' (83),

''அவற்றொடு முடுகிய லடியுடை யராக
மடுப்பது வண்ணக வொத்தா ழிசைக்கலி'' (84)

என வண்ணகமே அராகமென்று வகுத்தார். பிற்காலத்து உரையாசிரியரெல்லாம் இதனையே பின்பற்றுவதனால், இங்கும் அதனையொட்டியே கூறப்பட்டது.

இதன் விளக்கத்தை **வண்ணகம்** என்னும் உருப்படியிற் காண்க.

அராகம்[2] *arāgam*, பெ. (n.) 1. சிவப்பு (பிங்.); red. 2. பொன் (பிங்.); gold.

[உல் → அல் → அலத்தம் = செம்பருத்தி. அலத்தகம் = செம்பஞ்சுக் குழம்பு. அல் → அர் → அரன் = சிவன். அலத்தம் → அரத்தம் = குருதி, சிவப்பு. அர் → அரக்கு = செம்மெழுகு. அர் → அரகு → (அரகம்) → அராகம் = சிவப்பு. பைம்பொன் என்பதற்கு மாறான செம்பொன் என்னும் வழக்குப்பற்றி, பொன் அராகம் என்று பெயர் பெற்றிருக்கலாம்.]

அராகவொத்தாழிசைக் கலிப்பா *arāga-v-ottāḻišai-k-kali-p-pā*, பெ. (n.) தரவு, தாழிசை, அராகம் (வண்ணகம்), அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் வரிசையில் ஆறுறுப்பும் வரும் வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா (இலக். வி. 738); a variety of *kali* metre, in which all its six members occur in the following order, viz., *taravu, tāḻišai, arāgam, ambōdaraṅgam, taṉiccol* and *šuridagam*.

அராகம்[1] பார்க்க; see *arāgam*[1].

[அராகம் + ஒத்தாழிசை + கலிப்பா.]

அராகி-த்தல் *arāgi-*, 4 செ.கு.வி. (v.i.) செய்யுளோசை இடையறாது கடுகிச்செல்லுதல்; to move rapidly, as a verse. (தொல். பொருள். செய். 152, பேரா. உரை).

[அராகம் → அராகி.].

அராட்டுப்பிராட்டு *arāṭṭu-p-pirāṭṭu*, பெ. (n.) போதியதும் போதாததுமானது; that which may or may not be sufficient (ஈடு, 3. 7 : 3).

அறாட்டுப்பறாட்டு பார்க்க; see *aṟāṭṭu-p-paṟāṭṭu*.

அராத்து-தல் *arāttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. அராவுதல் (சங்.அக.); to file, grate. 2. முட்டுதல் (சங்.அக.); to butt, hit against. 3. உள்குதல் (சிந்தித்தல்) (சங்.அக.); to consider, ponder, meditate. 4. மிண்டுதல் (யாழ்ப்.); to talk arrogantly, resist openly (J.).

[அர் → அரா → அராத்து.]

அராத்தொட்டிலை *arāttoṭṭilai*, பெ. (n.) மணிக்கிச்செடி (பச்.மூ.); the plant *maṉikki*.

அராந்தல் *arāndal*, பெ. (n.) ஒரு காட்டுப் பலா; tender wild jack, *Pajanelia rheedii* (சா.அக.).

அராநட்பு *arā-naṭpu*, பெ. (n.) பிடிகொடாத கொண்டாட்டம் (சங்.அக.); exultation over escape or evasion.

[அரா (பாம்பு) + நட்பு.]

அராப்புக்கோட்டை *arāppu-k-kōṭṭai*, பெ. (n.) படைவீடு (இராட்.); citadel.

[அராப்பு = பாதுகாப்பு, அராப்பு → ராப்பு (சென்னை).]

அராப்பொடி *arā-p-poḍi*, பெ. (n.) இரும்புத் தூள்; iron filings.

[அரா (இரும்பை அராவுகை) + பொடி.]

அராபதம் *arā-padam*, பெ. (n.) வண்டு; beetle. ''தங்க ராபத நெருங்கு தொங்கல்'' (பாரத. மணிமான். 109).

[ஒருகா. அறுபதம் → அராபதம்.]

அராபதம்பாணி *arā-padam-pāṇi*, பெ. (n.) கீரிப்பிள்ளை; mongoose, *Herpestese mungo*, also called Indian ichneumon or Pharoah's cat (சா.அக.).

அராபதம்பாணி

அராம்பை *arāmbai*, பெ. (n.) கழுதைத்தும்பை; donkey's toombay.

அராமுனி *arā-muṉi*, பெ. (n.) ஆதிசேடன் தோற்றரவாகக் கருதப்படும் பதஞ்சலி முனிவன்; Patañjali, a sage, considered as an incar-

nation of Ādišēṣa. ''அராமுனி யீது வேண்டும்'' (திருவிளை. வெள்ளி. திருக்கூ. 25).

[அர → அரா (பாம்பு) + முனி (முனிவன்).]

அராலம் *arālam*, பெ. (n.) குங்கிலியம்; resin of the plant *Shorea robusta* (சா.அக.).

அராலி *arāli*, பெ. (n.) பில்லிப்பிச்சு; fetid holly, *Mappia foetida* (*typica*) (சா.அக.).

அராவடம் *arāv-aḍam*, பெ. (n.) 1. **அராவு தொழில்** (R.). act of filing. 2. **சாணை பிடிக்கை**; grinding. 3. மெருகிடுகை; polishing.

[அராவு + அடம் (தொ.பெ. ஈறு).]

அராவணம் *arā-v-aṇam*, பெ. (n.) புலம்பாமை; not lamenting. ''ஞாலம் அராவண மதா வவதரித் திடுமருட் சீதரா'' (சேதுபு. இராம னருச். 59) (சங்.அக.).

அராவணல் *arā-v-aṇal*, பெ. (n.) பாம்புகட்குள் **தலைமையான ஆதிசேடன்**; Ādišēṣa, as chief of the snakes. ''அராவணன் முடித்தலை'' (சேதுபு. இராமனருச். 59).

[அரா (பாம்பு) + அண்ணல் (தலைவன்) → அணல்.]

அராவணை *arā-v-aṇai*, பெ. (n.) திருமாலின் பாம்புப்படுக்கை, சேடப்பள்ளி; *Tirumāl's* (Viṣṇu's) serpent bed, formed of the coils of Šēṣa. ''அராவணை யிற்றுயில் வோயென'' (கம்பரா. பால. திருவவ. 117). **அரவணை** பார்க்க; see *arav(u)-aṇai*.

[அரா (பாம்பு) + அணை.]

ம. அரவண

அராவாரம் *arāvāram*, பெ. (n.) **கொடிமுந்திரி (திராட்சை)**; grape vine. ''மதுமாங்கனி மாதுலங்கங் கதலி யராவாரங் கொளுஞ்சி'' (தைலவ. தைல. 135).

அராவு-தல் *arāvu-*, 5 செ.கு.வி. (v.i.) மாறுபடு தல் (வின்.); to clash with, disagree with. —. 5 செ.குன்றாவி. (v.t.) 1. அரத்தால் தேய்த் தல்; to file. ''வைய ராவிய மாரன் வாளி யும்'' (கம்பரா. அயோத். கைகேயி. 58). 2. உரசுதல்; to rub, grate. ''பொருப்ப ராவி யிழிபுனல்'' (தேவா. 5 . 30 : 7). 3. அறுத் தல்; to cut. ''மெய்ய ராவிட'' (கம்பரா. அயோத். கைகேயி. 58).

ம. அராவுக

[அர் → அர → அரவு → அராவு.]

அராவைரி *arā-vairi*, பெ. (n.) 1. **கலுழன்** (**கருடன்**); Garuda, the enemy of serpents 2. **மயில்**; peacock. 3. **கீரி**; mongoose (W.).

[அரா (பாம்பு)+வைரி (பகை). வயிர்த்தல் = **கடினமாதல்**, செற்றங்கொள்ளுதல், **பகைத்தல்**. வயிர் → வயிரம் → வைரம் → வைரி.]

அராளகி *arāḷagi*, பெ. (n.) **வால்வெள்ளி** (**தூமகேது**) வகை. (தக்கயாகப். 457, உரை); a comet.

அராளம் *arāḷam*, பெ. (n.) 1. இருவாட்சி (தைலவ. தைல.135,49); Tuscan jasmine. 2. குங்கிலியம் (தைலவ. தைல. 119); sāl resin (செ.அக.) — a hard, dark coloured, brittle resinous substance which exudes from the trees of Dammara genus in the Eastern islands, Resin of *Shorea robusta* (சா.அக.).

ம. அராளம்

அரி-தல் *ari-*, 2 செ.குன்றாவி. (v.t.) 1. **நெல், சாமை, வரகு முதலியவற்றின் தாளை யறுத் தல்**; to cut the stalk of paddy, poor man's millet, common man's millet, etc. ''நெல்லரி தொழுவர்'' (புறநா. 379:3). 2. **உறுப்பறுத் தல்**; to cut off, as an organ. ''நாக்கரியுந் தயமுகனார்'' (கம்பரா. ஆரணிய. சூர்ப்ப. 125). 3. **செங்கலறுத்தல்** (யாழ்ப்.); to cut and remove the excess clay spilling out of the mould in making bricks. 4. **சங்கறுத்தல்**; to cut chank for making ornaments. ''சங்கை யரிந்துண்டு வாழ்வோம்'' (தனிப்பா. 1, பக். 213). 5. **காய் கறிகளைப் பொடியாக நறுக்குதல்**; to cut vegetables into very small pieces. அரிவாள்மணை.

ம. அரியுக; க., து., பட. அரி; துட. அர்ஙி; கொலா., நா. அர்க்.

[அர் → அறு. அர் → அரி.]

அரி[1]-த்தல் *ari-*, செ.கு.வி. (v.i.) 1. **தினவெடுத் தல்**; to have an acute itching sensation. 2. **இடைவிட்டொலித்தல்**; to sound intermittently. ''வாட லுழுஞ்சில் விளைநெற் றந்துணர் ஆடுகளப் பறையி னரிப்பன வொலிப்ப'' (அகநா. 45 : 1-2). 3. **இடைவிடுதல்**; to intermit. ''உண்கண் கலுழ்ந்துவா ரரிப்பனி'' (புறநா. 144 : 4-5). —, 4செ.குன்றாவி. (v.t.) 1. **கறை யான் தின்னுதல்**; to gnaw, as white ants. ''கணைச்சித லரித்த'' (சிறுபாண். 133). 2. **புழு பூச்சி துளைத்தல்**; to burrow, as worms or in-

sects. 3. உருக்கிநோய் தோல் சதை யெலும்பைக் குறைத்தல்; to corrode the skin, flesh or bone, as emaciating diseases. 4. துருப் பிடித்தல்; to be eaten away by rust. 5. வண் டுண்ணுதல்; to feed, browse or eat away, as beetles. ''மாலையை வேய்ந்தரிக்கு மிஞிறு'' (சீவக. 1769). 6. நீர் அறுத்துச் செல்லுதல்; erosion of the bank or shore by waves. ''அரித் தொழுகும் வெள்ளருவி'' (தேவா. 4 . 3 : 3). 7. அரிசியை நீரிற் கழுவிக் கொஞ்சங் கொஞ்ச மாகப் பிரித்தல்; rinse, as rice. 8. கொழித் தெடுத்தல்; to sift, separate the longer from smaller bodies with the hand, with a sieve or riddle. சல்லடையால் அரித்தெடுக்க வேண்டும். 9. தொந்தரவு செய்தல்; to vex by importunity. 10. கடுமையா யொலித்தல்; to sound hard. ''அரிப்பறை மேகலை யாகி யார்த்தவே'' (சீவக. 2688). 11. தீயதை நீக்கு தல்; to remove the bad. ''ஆய்ந்தரிக்குந் நறவம் மலர்மாலை'' (சீவக. 1769). 12. கீரை முதலியவற்றில் கூளம் பார்த்தெடுத்தல்; to remove straw, grass, etc. from greens. 13. கழித்தல்; to subtract. 14. வகுத்தல்; (சூடா. உள். 378, உரை); to divide. 15. தேடுதல்; to search through and through. 16. கெடுத்தல்; to spoil, corrupt. 17. அழித்தல்; to destroy. ''உலகரிப்பான்'' (சீகாழி. ஆபத்து. 4).

ம. அரிக்குக; க., குட. அரி; து. அரிபுனி.

அரி²-த்தல் *ari-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. சிறிது சிறிதாகக் கூட்டிச் சேர்த்தல்; to sweep up, gather little by little. 'சருகரிக்க நேரமன்றிக் குளிர்காய நேரமில்லை' (பழ.). 2. பூதங்களைச் சேர்த்துப் படைத்தல்; to create. ''ஓங்குலகை யரித்து மளித்து மழிப்பவ ராத்த ரென்னு'' (திருநூற். 16).

அரி¹ *ari*, செ.பெ. (ger.) அரிகை (சூடா.); cutting, nipping.

அரி² *ari*, பெ. (n.) 1. நெற்கதிர் (பிங்.); ear of paddy. 2. கைப்பிடிக்கதிர்; a handful of harvested ears of paddy. 3. கதிர்க் குவியல் (R.F.); a heap of harvested ears of paddy or spikes of corn. 4. கதிரறுக்கும் பருவம்; matured state of grain, time for harvest. ''அரிபுகு பொழு தின்'' (பெரும்பாண். 202). 5. நெல் (தைலவ. தைல. 84); paddy. 6. நெற்சூடு; heat from a heap of paddy (சா.அக.).

ம., க., து. அரி; கோத. அய்ர்.

அரி³ *ari*, தொ.பெ. (vbl.n.) 1. அரிக்கை (சூடா.); sifting, separating. 2. இடைவிடுகை; intermittance. ''கலுழ்ந்துவா ரரிப்பனி பூணக நனைப்ப'' (புறநா. 144: 5).

ம. அரிப்பு; க. அரிபு.

அரி⁴ *ari*, பெ. (n.) 1. ஈர்வாள், அரம்பம் (அக.நி.); saw. 2. வேந்தன் வயிரப்படை (இந்திரன் குலிசம்) (பொதி.நி.); Indra's weapon. 3. படைக்கலம்; weapon. 4. அரிபூச்சி அல்லது புழு; a burrowing insect or worm. 5. மடங்கல் (அரிமா) (பிங்.); lion. 6. மடங்க லோரை (சிங்கராசி) (சூடா.); Leo of the Zodiac. 7. மடங்கல் (ஆவணி) மாதம் (இராச வைத்.); the fifth Tamil month, August-September. 8. சக்கரம்; discus. 9. பனங்கருக்கு (இராசவைத். 146); jagged edge of the palmyra leaf-stalk. 10. முருகனாற் கொல்லப்பட்ட அரிமாமுகன் (சிங்கமுகன்) என்னும் அசுரன்; lion-faced Asura killed by *Muruga*. ''திறலரிக் கிளவல்'' (கந்தபு. அசுர. கிரவுஞ்ச. 1). 11. பகை; enmity. 12. பகைவன் (பிங்.); enemy. 13. குற்றம்; guilt, sin. 14. காமம், சினம், இவறல், செருக்கு, மயக்கம், பொறாமை என்னும் ஆறு உட்பகை; the six inherent enemies of man, *i.e.*, the six emotions or strong passions that disturb his mind and corrupt his soul, viz., lust, wrath, avarice, arrogance, delusion and envy. 15. ஆறு என்னும் எண்; the number 'six'. 16. எழும் ஓரைக்கு ஆறாம் இடம்; the sixth place from that of the rising sign of the Zodiac in the astrological diagram. 17. பாம்பு (பிங்.); snake. 18. கூற்றுவன் (பிங்.); god of death. 19. வெற்றி; victory. 20. வலிமை; strength. 21. துளை; hole. 22. உட்டுளை (சூடா.); hollow space. 23. வாய் (பொதி.நி.); mouth. 24. மூங்கில் (பிங்.); bamboo. 25. நீர்; water. 26. காற்று (பிங்.); wind.

ம., க., தெ., து. அரி; **Mar., Pali., Sinh., Nep.** ari.

[அர் → அரி. அரித்தல் = அறுத்தல், துளைத் தல், நீக்குதல், அழித்தல்.]

அரி⁵ *ari*, பெ. (n.) 1. துண்டம்; piece 2. பொடி; powder. 3. நீர்த்திவலை, துளி (திவா.); drop of water. 4. மழைத் தூறல்; drizzling. 5. அரிசி (பிங்.); rice. 6. மூங்கிலரிசி (பச்.மூ.); bamboo seeds. 7. சோறு; boiled rice. 8. அரிசிக் கள்; fermented liquor prepared from rice. 9.

மென்மை; softness. ''திரண்டநே ரரிமுன்கை'' (கலித். 59 : 4). 10. ஐம்மை, தகட்டுவடிவு; thinness and flatness, as of a plate. ''அரியே ஐம்மை'' (தொல். சொல். உரி. 59). 11. அரிநெல்லி; otaheite gooseberry, *Phyllanthus distichus*. ''அரிநெல்லிக் காய்குளிர்ச்சி யாம்'' (பதார்த்த. 702). 12. கீழாநெல்லி (கீழ்க்காய் நெல்லி); small-leaved feather foil, *Phyllanthus polyphyllus*. 13. குன்று, சிறுமலை; hill, hillock. 14. கூர்மை (சூடா.); sharpness, keenness. 15. அம்பு (பொதி.நி.); arrow.

[அரி = அறுக்கப்பட்டது, துண்டு, சிறியது.]

அவரை துவரை முதலிய பயறுகளின் பருப்பைவிட நெல்லரிசி புல்லரிசி (கம்பரிசி) முதலிய கூல (தவச) அரிசிகள் சிறியனவாயும் பிளவின்றியு மிருத்தல் காண்க.

அரி⁶ *ari*, பெ. (n.) 1. அடர்பு, நெருக்கம்; closeness, thick growth, as of hair. 2 சோலை (பிங்.); grove. 3. பூமாலை (சூடா.); garland. 4. தெருச்சந்தி (பிங்.); junction of roads or streets. 5. கட்டில் (திவா.); bedstead, couch. 6. விசி, விசிப்பலகை (திவா.); bench. 7. தூக்கம் (பிங்.); sleep. 8. மக்கள் துயிலிடம் (பிங்.); sleeping place, dormitory. 9. குடியிறை (பிங்.); tax, duty.

[அரித்தல் = சிறிது சிறிதாய்ச் சேர்த்தல், திரட்டுதல், பொருத்துதல், தொகுத்தல். அரி = அடர்த்தி.]

அரி⁷ *ari*, பெ. (n.) 1. அரித்தெழும் ஓசையுடைய பறை; drum that makes a deafening sound. ''அரிக்கூ டின்னியங் கறங்க'' (மதுரைக். 612). 2. மருதநிலப் பறை; drum made use of by the people in the agricultural tract. 3. அரிதாளம் (சூடா.); a variety of time measure in music. 4. தாளக் கருவி, சாலர்; cymbal for keeping time in music. 5. சிலம்பு (பிங்.); woman's anklet. 6. சிலம்பினுட்பரல்; pebbles or pearls or pieces of metal inside a woman's anklets which make a tinkling sound while walking. ''யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே'' (சிலப். 20 : 69). 7. யாழ்நரம்பு; string of lute. 8. அரற்றும் வண்டு; beetle, humming insect. ''மெல்லிலை யரியாம்பலொடு'' (மதுரைக். 252).

[அர் → அர → அரவு → அரவம் = ஒலி. அர் → அரி. அரித்தல் = ஒலித்தல்.]

அரி⁸ *ari*, பெ. (n.) 1. குற்றம் (சூடா.); blot, fault, blemish. 2. கண்; eye. ''அரிமுதி ரமரர்க் கரசன்'' (கல்லா. 10). 3. பன்றி (பிங்.); hog, pig. 4. கருங்காலி; black catechu, *Acacia catechu (sundra)* (சா.அக.). 5. கருங்கிளி; black parrot (சா.அக.). 6. மயில்; peacock. 7. (ஆண்) குயில்; (male) cuckoo. 8. மரவயிரம் (திவா.); solid part of timber, the core or heart of a tree trunk. 9. கடல் (பிங்.); sea. 10. கருஞ்சிவப்பு; dark-red, reddish black.

[அல்லுதல் = பொருந்துதல், கலத்தல், மயங்குதல், இருளுதல், கருத்தல். அல் = இரவு, இருள். அல் → அர் → அரி = கருப்பு, கரும்பொருள்.]

அல் பார்க்க; see *al*.

அரி⁹ *ari*, பெ. (n.) 1. தீ; fire. 2. தீத் தெய்வம்; god of fire. ''அரியுமற் றெனதுகூறு நீலனென் றறைந்திட் டானால்'' (கம்பரா. பால. திருவவ. 26). 3. செம்மை; redness. 4. செம்மறியாடு, செம்மறியாட்டுக் கடா; sheep, ram (சா.அக.). 5. மான்; deer. 6. செங்கதிர், கதிரவன் (பிங்.); sun. 7. கண்ணின் செவ்வரி; red lines in the white of the eye. ''அரிமத ருண் கண்ணார்'' (கலித். 91 : 13). 8. வரி; line, stripe, streak. 9. வரிவண்டு; striped bee or beetle. 10. புகை (திவா.); smoke. 11. காய்ச்சல் (இராசவைத்.156); fever. 12. ஒளி (பிங்.); light. 13. வயிரம் (பொதி.நி.); diamond. 14. மதி (பிங்.); moon. 15. நிறம்; colour. 16. அழகு; beauty. ''அரிமுன்கை'' (கலித். 54 : 3). 17. பொன்; gold. ''அரித்தேர் நல்கியு மமையான்'' (பெரும்பாண். 490). 18. மஞ்சள் நிறம்; yellow colour. 19. வெண்புகை (ஆசிரிய.நி.); white smoke.

[உல் → உல → உலவை = காய்ந்த கிளை. உல → உலர். உலர்தல் = காய்தல். உல் → உர் → உரு. உருத்தல் = அழலுதல். உரு → உருப்பு = வெப்பம். உல் → உள் → ஒள் → ஒளி. உல் → எல் = ஒளி, வெண்மை. எல் → எர் → எரி = நெருப்பு, சிவப்பு. உல் → அல் → அர் → அரி.]

அரி¹⁰ *ari*, பெ. (n.) 1. காற்று (பிங்.); air, wind. 2. ஊதைநோய் (வாதரோகம்) (நீர்நிறக். 17); rheumatism. 3. ஈளை; asthma (சா.அக.). 4. செரியா நோய் (குன்மம்); chronic dyspepsia. 5. விசுங்கப் பறவை; a kind of bird (சா.அக.). 6. உருளை, சக்கரம்; wheel. 7. தேர்; car. 8. கடுக்காய்; a species of country gall-nut, *Ter-*

minalia chebula (சா.அக.). 9. **கொடுவேலி** (மலை.) — **கொடிவேலி**; Ceylon leadwort, *Plumbago zeylanica* (சா.அக.). 10. **கொள் வேர்**; horse-gram root. 11. **தான்றிக்காய்**; devils abode, *Terminalia belerica* (சா.அக.). 12. **கம மாலை யேற்றம்**; water-lift, consisting of a large hemispherical leather or iron bucket, worked with bullocks. 13. **ஒரு பேரெண்**; a high number.

அரிக்கஞ்சட்டி *arikkañ-caṭṭi*, பெ. (n.) **அரிசி களையும் அகன்றவாய்ச் சட்டி**; large-mouthed shallow pot for cleaning rice.

ம. அரிப்ப, அரிக்குட்டட.

[அரிக்குஞ்சட்டி → அரிக்கஞ்சட்டி.]

அரிக்கஞ்சம்பா *arikkañ-cambā*, பெ. (n.) **அரக்கன் நாட்டினின்று கொண்டுவரப்பட்ட நெல் வகை** (நெல்லை); a kind of paddy, originally brought from the Arakkan country (Tn.) (செ. அக.).

[அரக்கன் + சம்பா — அரக்கஞ் சம்பா → அரிக்கஞ்சம்பா.]

அரிக்கட்டு *ari-k-kaṭṭu*, பெ. (n.) **நெற்கதிர்க் கட்டு**; sheaf of paddy, bundle of reaped grain (G.G.).


அரிக்கட்டு

[அரி + கட்டு.]

அரிக்கண்சட்டி *ari-k-kaṇ-caṭṭi*, பெ. (n.) **அரிசியரித்தற்குச் சிறு துளைகள் விட்டுச் செய்யப் பட்ட அகன்றவாய்ச் சட்டி** (சங்.அக.); large-mouthed perforated shallow pot for cleaning rice before cooking.

இச் சொல் 'அரிக்கஞ்சட்டி' என்பதன் தவறான வடிவாக இருக்கலாம்.

அரிக்காமரம் *arikkā-maram*, பெ. (n.) **ஆத்திமரம்**; mountain ebony, *Bauhinia racemosa* (சா.அக.).

அரிக்கி *arikki*, பெ. (n.) **கடுக்காய்**; Indian gall-nut, *Terminalia chebula* (சா.அக.).

அரிக்கியந்தம் *arikkiyandam*, பெ. (n.) **பூனைக் காலி**; cat bean, *Mucana pruriens* (சா.அக.).

அரிக்கிராவி *arikkirāvi*, பெ. (n.) **சுறவத்திற்கும் (தைக்கும்) மீனத்திற்கும் (பங்குனிக்கும்) இடையில் அறுவடையாகும் ஒருவகை மட்ட நெல்**; a coarse paddy that is harvested between January and March (Rmd.M.).

மறுவ. அருகிராவி

அரிக்குரம் *arikkuram*, பெ. (n.) **காட்டுக் கரணைக் கிழங்கு**; a tuberous-rooted plant, *Amorphophallus campamulatus* (சா.அக.).

அரிக்குரல் *ari-k-kural*, பெ. (n.) 1. **அரித்தெழும் ஓசை**; shrill sound. "அரிக்குரற் றடாரி" (புறநா. 249 : 4). 2. **இனியவொலி**; sweet sound. "அரிக்குரற் பேடை" (ஐங்குறு. 85). 3. **நுண்ணிய ஒலி**; minute sound.

அரிக்குழி *ari-k-kuḻi*, பெ. (n.) **முற்காலப் பள்ளிப் பிள்ளைகள் அரி (ஹரி) என்று தொடங்கி வண்ணமாலையை விரலால் எழுதுவதற்காகத் தோண்டிய பள்ளம்** (ஈடு, 5 . 6 : 2. ஜீ.); depression made by school children in the ground for writing with the finger *Ari* (Hari), with which the Tamil alphabet began in the medieval days.

[அரி என்பது திருமாலைக் குறிக்கும் வட சொல். அது மால் என்னும் தென்சொல்லின் மொழிபெயர்ப்பு. நம்மாழ்வார் காலத்தில் மாலியம் (வைணவம்) தமிழகத்தில் முன்னினும் மிக்குப் பரவியிருந்ததனால், தமிழ் வண்ண மாலை அல்லது நெடுங்கணக்கு 'அரிஓம் நம' (ஓம் மால் வணக்கம்) என்று திருமால் வணக்கத் துடன் தொடங்கியதாகத் தெரிகின்றது.]

அரிக்குறடு *ari-k-kuṛaḍu*, பெ. (n.) **அறுக்குங் குறடு**; saw forceps (சா.அக.).

[அரி + குறடு. அரி = அறுப்பு.]

அரிக்கோவை நெல் *arikkōvai-nel*, பெ. (n.) **நெல் வகை**; a kind of paddy (A.).

அரிகண்டம்[1] *ari-kaṇḍam*, பெ. (n.) 1. **ஓர் அடியான் தன்னொறுப்பாகத் தன் கழுத்தில் மாட்டிக்கொள்ளும் இருப்புச்சட்டம் அல்லது கூண்டு** (ஈடு, 4 . 6 : 2); iron grate or frame or cage of cross-bars, worn on the neck by a devotee, as a mode of self-torture. 2. **அறளை, தொந்தரவு, நைப்புத் தொல்லை**; teasing, annoying, vexing. 3. **கவர்க்கால்** (புதுவை); post or stem forked at one end (Poṇḍ.).

[அரி = அறுப்பு, நைப்பு. கள்ளுதல் = பொருந்துதல். கள் → களம் = தலை உடல் என்னும் இரண்டின் பொருத்து, கழுத்து. கள் → களுத்து → கழுத்து. கள் → கண்டு → கண்டம் > Skt. kaṇṭha.]

மறுவ. அரியண்டம்

அரிகண்டம்[2] *ari-kaṇḍam*, பெ .(n.) *அறுக்கப் பட்ட துண்டம்*; a sliced piece or lump.

அரிகண்டம்பாடு - தல் *ari - kaṇḍam - pāḍu-*, 5 செ.கு.வி. (v.i.) ஒரு பாவலன், தான் தோற்றுப் போனால் கழுத்தறுப்புண்டு சாவதற்கு அணிய மாயிருப்பதாகக் காட்டி, தன் கழுத்தில் ஒரு வாளைக் கட்டிக்கொண்டு தன் எதிரி கொடுக்குங் குறிப்பிற்கிணங்க உடனுடன் பாடுதல்; to compose verses extempore on a challenge from his rival, with a sword hung about his neck indicating readiness to die, if not successful.

[அரி + கண்டம் + பாடு. அரிதல் = அறுத்தல். கண்டம் = கழுத்து.]

அரிகயிறு *ari-kayiṟu*, பெ. (n.) (பகைவரின்) தொட்ட கையை அறுக்குமாறு கோட்டை வாயிலிற் குறுக்காகக் கட்டப்படும் கயிற்றுப் பொறி (சீவக. 104, உரை); cord tied across the entrance of a fort and so contrived as to cut off the hand that grasps it.

அரிகரப்பன் *ari-karappaṉ*, பெ. (n.) 1. கிளி வன்னம் என்னும் செடி (பச்.மூ.); the plant *kiḷivannam*. 2. குழந்தைகளுக்குக் குறியுறுப்பிற் புற்றுண்டாகி உருவையழிக்கும் ஊதை (வாத)க் கரப்பான் நோய்; a kind of itching eczema, common in children, arising in the genitals in the form of a sore (சா.அக.).

அரிகரப்பான் *ari-karappāṉ*, பெ. (n.) அரிகரப்பன் 2 பார்க்க; see *ari-karappaṉ* 2. "குட்டரிகரப் பான் வெய்ய மருத்தணி மருட்காய்கள் வதப்பும் போம்" (தைலவ. தைல. 133).

அரிகரி *arikari*, பெ. (n.) அத்திக்கொழுந்து; tender leaves of the fig tree.

அரிகளவம் *arikaḷavam*, பெ. (n.) ஆறு (சங்.அக.); river.

அரிகறையான் *ari-kaṟaiyāṉ*, பெ. (n.) 1. அரிக்கின்ற சிதல்; gnawing white ant. 2. தொந்தரவு செய்பவன்; teaser, vexatious person (W.).

அரிகாரம் *ari-kāram*, பெ. (n.) 1. சீனக்காரம் (வை.மூ.); alum (செ.அக.) — China alkali (சா. அக.). 2. பொரிகாரம்; alum, alumen, a double salt composed of sulphate of potash and sulphate of ammonia (சா.அக.).

அரிகால் *ari-kāl*, பெ. (n.) அரிதாள்; stubble. "அரிகாலின் கீழுகூஉ மந்நெல்லே" (பொருந. தனிப்பா.).

அரிகிணை *ari-kiṇai*, பெ. (n.) அறுவடைக் காலத்தில் மள்ளர் (பள்ளர்) இயக்கும் உறுமி யென்னும் பறை; a peculiar drum called *uṟumi* beaten by the agriculturist class during harvest time. "மள்ள ரரிகிணைக் கிசைய வூதும்" (அருணாசல பு. திருக்கண் பு. 45).

[அரி = அறுப்பு. கிணை = உறுமிப்பறை.]

அரிகிரந்தி *ari-kirandi*, பெ. (n.) விரைந்து பரவிச் சதையை அரித்து அழுகச் செய்யும் புண்ணோய்; an ulcer which spreads rapidly and destructively, eating away the tissues, *Phagedenic ulcer* (சா.அக.).

[அரி + Skt. granthi > த. கிரந்தி. அரித்தல் = கறையான்போற் சிறிதுசிறிதாய்த் தின்னுதல்.]

அரிகீரை *ari-kīrai*, பெ. (n.) அறைக்கீரை; a pot-herb.

அரிகுரல் *ari-kural*, பெ. (n.) கரகரத்த வொலி; hoarse or discordant sound. "அரிகுரற் கோழி" (சீவக. 1755).

[அரி + குரல்.]

அரிகூடம் *ari-kūḍam*, பெ. (n.) கோபுர வாயின் மண்டபம்; passage or hall under the tower at the entrance to a castle or temple.

அரிகூலி *ari-kūli*, பெ. (n.) பழைய வரிவகை (Anc. Dec. 344); an ancient tax.

[அரி + கூலி.]

அரிகேசரி *ari-kēšari*, பெ. (n.) கடைக்கழகக் காலப் பாண்டியர் சிலர் தாங்கிவந்த பட்டப் பெயர்; a title of certain *Pāṇḍyas* of the period of the 3rd Academy.

[அரி = பகைவன். Skt. kēsarin > த. கேசரி = அரிமா. அரிகேசரி = பகைவருக்கு அரிமாப் போன்றவன்.]

அரிகொழி *ari-koḻi*, பெ. (n.) பழைய வரிவகை (S.I.I. ii, 352); an ancient tax.

[அரி = அரிசி. கொழி = கொழித்தல், தெள்ளுதல்.]

அரிச்சந்தனம் *ari-c-candaṉam*, பெ. (n.) செஞ் சந்தனம் (பச்.மூ.); red-sanders (செ.அக.) — red sandal, *Pterocarpus santalinus* (சா.அக.).

அரிச்சந்தனம் > Skt. haricandana.

[அரி + சந்தனம். அர் → அரி = சிவப்பு.]

அரிச்சந்திரபுராணம் *ariccandira-purāṇam*, பெ. (n.) **வீரைஆசுகவிராயர் கி.பி. 1524-ல் அரிச்சந்திரன் கதையைப்பற்றிப் பாடிய பனுவல்;** name of a poem relating to the story of Hariścandra, composed in A.D. 1524 by Virai Āśukavirāyar.

[Skt. Hariścandra > த. அரிச்சந்திரன். வாய்மை யறத்தைக் கடைப்பிடிக்க எல்லா வற்றையும் தன்னையும் ஒப்புக்கொடுத்தவனாகச் சொல்லப்படும் பண்டை வடநாட்டுக் கதிரவக் குடி (சூரியவமிச) அரசன்.]

அரிச்சந்திரம் *ariccandiram*, பெ. (n.) **முகட்டுக்கை தாங்குங் கட்டை** (Madr.); kingpost in a truss.

அரிச்சல் *ariccal*, பெ. (n.) 1. **நாணம்** (இ.வ.); bashfulness (Loc.). 2. **அருமை;** rarity.

அரிச்சலாக *ariccalāga*, கு.வி.எ. (adv.) **அருமையாக;** once in a way, rarely. உங்களை எங்கேயோ அரிச்சலாகப் பார்த்த நினைவிருக்கிறது (உ.வ.).

[அரு → அருகு → அருக்கு → அருக்கம் = அருமை. அருக்கம் → அருக்கல் → அருச்சல் → அரிச்சல். ஒ.நோ: பக்கம் → பக்கல்.]

அரிச்சாவி *ariccāvi*, பெ. (n.) **பெருங்குமிழ்** (பச்.மூ.) — **பெருங்குமிழ்;** coomb teak (செ. அக.) — kandahar tree, *Gmelina arborea* (சா. அக.).

மறுவ. அரிசா, அரிசாகிகம்.

அரிச்சுவடி *ari-c-cuvaḍi*, பெ. (n.) **அரி என்று தொடங்கும் நெடுங்கணக்குப் பொத்தகம் அல்லது ஓலைக்கற்றை;** Tamil alphabet book commencing with the name *Ari* (Viṣṇu).

[இடைக்காலத்தில் நெடுங்கணக்குச் சுவடி திருமால் வணக்கத்தொடு தொடங்கியதால் அரிச்சுவடி யெனப்பட்டது. அரி (திருமால்) + சுவடி (சிறுபொத்தகம், பொத்தகம்).]

அரிக்குழி பார்க்க; see **ari-k-kuḻi**.

அரிச்சோளம் *ari-c-cōḷam*, பெ. (n.) **வெள்ளைச் சோளம்;** white maize (சா.அக.).

ம. அரிச்சோளம்; **து.** அரிசோள.

[அரி + சோளம்.]

அரிச்சோனகம் *ari-c-cōṉagam*, பெ. (n.) **நரி யீந்து;** small date, *Phoenix farinifera* (சா.அக.).

அரிசம் *ariśam*, பெ. (n.) 1. **மிளகு;** black pepper, *Piper nigrum*. 2. **மஞ்சள்;** turmeric, *Curcuma longa*. க. அரிசின. 3. **மூலம்;** piles or haemorrhoids. தெ. அரிசெ; ம. அரிசஃ. 4. **மூல முளை;** vascular tumour in the rectum (சா. அக.).

அரிசம்மாரிகம் *ariśam-mārigam*, பெ. (n.) **நரிக் கொன்றை;** horse cassia, *Cassia marginata* (சா.அக.).

அரிசயம் *ariśayam*, பெ. (n.) 1. **சரக்கொன்றை** (மலை.); Indian laburnum (செ.அக.) — king's tree or Indian laburnum, *Cassia fistula*. 2. **எலுமிச்சை** (மலை.); sour lime (செ.அக.) — lime, *Citrus medica-acida* (சா.அக.).

மறுவ. அரிசலம்

அரிசயமங்கு *ariśaya maṅgu*, பெ. (n.) **கொன்றை;** common cassia, *Cassia fistula*.

அரிசரி *ariśari*, பெ. (n.) **அத்திக்கொழுந்து** (வை.மூ.); tender leaves of the Indian fig.

அரிசலம் *ariśalam*, பெ. (n.) **அரிசயம்** பார்க்க; see *ariśayam*.

அரிசனம் *ariśaṉam*, பெ. (n.) 1. **மஞ்சள்;** turmeric, *Curcuma longa*. "அரிசன மேனி நல்லாள்" (கந்தபு. தேவ. தெய்வ. 87). 2. **மஞ்சள் விரவிய கலவைப் பொடி;** a mixture of turmeric powder and other powders. "ஆசனத் தணிநீ ராட்டி யரிசனஞ் சாத்தி" (பெரியபு. தடுத்தாட். 15, உரை) (சங்.அக.).

க., பட. அரிஷின; **கோத., துட.** அர்சன்.

அரிசனி *ariśaṉi*, பெ. (n.) **குத்தல்வலி;** pricking or piercing pain (சா.அக.).

அரிசா *ariśā*, பெ. (n.) **பெருங்குமிழ்** (மலை.); coomb teak (செ.அக.).

அரிச்சாவி பார்க்க; see *ari-c-cāvi*.

அரிசாகிகம் *ariśāgigam*, பெ. (n.) **அரிச்சாவி** பார்க்க; see *ari-c-cāvi*.

அரிசாரணம் *ariśāraṇam*, பெ. (n.) **மாவிலிங்கம்** (பரி.அக.); lingam tree (செ.அக.) — sacred lingam tree, *Cretaeva religiosa* (சா அக.).

அரிசாரம் *ariśāram*, பெ. (n.) **பழுப்பு;** essence of yellow colour (சா.அக.).

[அரி = மஞ்சள். சாரம் = சாறு, உட்பொருள்.]

அரிசி[1] *ariśi*, பெ. (n). 1. **உமிநீங்கிய நென் மணி;** rice removed of its husk. "நாழி யரிசிக்கே நாம்" (நல்வழி, 19). 2. **உமி**

நீங்கிய தவசமணி; any husked grain. "வர கரிசிச் சோறும்" (தனிப்பா. 1, பக். 112). 3. *நெய்யுள்ள வித்தின் உட்பருப்பு* (நாமதீப.); inner pulp of oil seeds. 4. *மூங்கிலரிசி முதலியன*; small seeds, as of the bamboo, etc.

அரிசி வகைகள் :

1. **அறுவகை மருத்துவ அரிசி** (the six kinds of seeds or rice used in medicines) :
   (1) கார்போகரிசி; hazel leaved psoralea, *Psoralea corylifolia.*
   (2) வாலுளுவையரிசி; spindle tree, *Celastrus paniculata.*
   (3) திப்பிலியரிசி; (berries of) *Charica roxburghii.*
   (4) வெட்பாலையரிசி அல்லது விளாவரிசி; (seeds of) *Wrightia tinctoria.*
   (5) மூங்கிலரிசி; bamboo seed, *Bambusa arundinacea.*
   (6) ஏலரிசி; *Amomum cardomum.*

   அதவரிசி, உருளரிசி, ஏலரிசி, கார்புகா அரிசி, லூவா அரிசி, வெட்பாலை அரிசி (சங். அக.).

2. **ஐவகைப் பத்தியக் கஞ்சி யரிசி** (the five kinds of rice used as diet, when one is under medical treatment):
   (1) புழுங்கலரிசி; boiled rice.
   (2) வாற்கோதுமை யரிசி; barley rice.
   (3) கோதுமை யரிசி; wheat rice.
   (4) சவ்வரிசி; sago.
   (5) கருங்குறுவையரிசி; red coloured husked rice from black paddy.

குறிப்பு : The rice mentioned in No. 5 (கருங்குறுவையரிசி) is considered the best of all kinds mentioned in Tamil medical science. It is even recommended as the best diet for Yogis and *Siddhars* while taking kalpam for longevity or when engaged in yoga practice (சா.அக.).

ம., து. அரி; **தெ.** அரிசெ (அரிசிமாவாற் செய்த இனிப்புத் தின்பண்டம்); **க., பட., குட., கோத.** அக்கி; **துட.** அச்கி; **கோண்.** வரி; **கூ.** உர்சி; **மா.** அத்வ.

E. rys, rysz, ryzs, ryse, rysse, ris, rise, rize, ryce, rice.

ME. rys; **Fris.** rys; **Du.** rijst, rijs, rys. **MLG.** riis, rîs; **MHG.** rîs; **G.** reis; **MSw.** riis; **Sw., Da.** ris; **OF.** ris; **F.** riz; **It.** riso; **L.** *Orizum,* oriza, oryza; **Gk.** oruza, oruzon; **Sp., Port.** arroz; **Arab.** aruz, aruzz, uruz, uruzz —(O.E.D.).

[அரி = சிறியது. எ-டு: அரிநெல்லி. அரி → அரிசி.]

தவசம், பயறு என்னும் இருவகைக் கூலங்களுள், முன்னதன் உள்ளீடு சிறிதாகவும் பின்னதன் உள்ளீடு பெரும்பாலும் பெரிதாகவு மிருத்தலால், அவை முறையே அரிசி, பருப்பு எனப் பெயர்பெற்றன. அரிசி முதன் முதல் தமிழகத்தினின்றே உலகத்தின் பல பாகங்கட்கும் ஏற்றுமதியானதினால், அதன் தமிழ்ப்பெயரே, பல்வேறு மொழிகளிலும் பல்வேறு வடிவுபெற்று வழங்குகின்றது. 'சோறுங்கறியும்' என்னும் தமிழ் இணைமொழி 'rice and curry' என்று ஆங்கிலத்தில் வழங்குதல் காண்க. ஆங்கிலத்திற் சோறு 'rice' என்று வழங்குவது கருவியாகுபெயர்.

அரிசி என்பது பல தவசங்களின் உள்ளீட்டிற்குப் பொதுப்பெயராக விருந்தாலும், பெருவழக்கும் பயன்பாட்டுப் பொதுமையும்பற்றிச் சிறப்பாக நெல்லரிசியையே குறிக்கும்.

எருதந்துறை ஆங்கிலப் பேரகரமுதலி (The Oxford English Dictionary) உருவாக எழுபதாண்டுக் காலஞ் சென்றிருப்பினும், தமிழின் தொன்மையையும் முன்மையையும் அறிந்து 'rice' என்னும் ஆங்கிலச் சொல்லின் மூலம் 'அரிசி' என்னும் தென்சொல்லென்று குறியாது, 'probably of Oriental origin' என்று மட்டும் பொதுப்படக் குறித்திருப்பது கண்டிக்கத்தக்கதே.

அரிசி[2] *ariśi,* பெ. (n.) *கடுக்காய்;* chebulic myrobalan.

அரிசி[3] *ariśi,* பெ. (n.) *மஞ்சள்* (T.C.M. ii, 2: 429); turmeric.

[ஒருகா. அரிசனம் → அரிசி.]

அரிசி[4] *ariśi,* கு.பெ.எ. (adj.) **ஒரு சிறுமைப் பொருள் முன்னொட்டு;** a dim. pref. அரிசிக்களா, அரிசிப்பல்.

அரிசிக்கஞ்சி *ariśi-k-kañji,* பெ. (n.) 1. **நோயாளி கட்காகவும் வலுவற்றவர்க்காகவும் வேக வைத்த நீரோடு கலந்த குழைந்த அரிசிச்**

சோறு; over cooked or recooked rice along with the water in which it has been cooked as diet for sick persons and invalids. 2. **குழந்தைகட்காகக் கூழ்ப்பதமாகக் காய்ச்சின அரிசிச் சோறு**; gruel prepared from rice for infants.

க., பட. அக்கி தஞ்சி; து. அர்கஞ்சி.

[அரிசி + கஞ்சி.]

அரிசிக்கணக்கு *ariši-k-kaṇakku*, பெ. (n.) **ஒன்றனைப்பற்றிக் கேட்டவர்க்கு 'உனக்கும் (உமக்கும்) அதற்கும் தொடர்பில்லை' என்பதைக் குறிக்கும் சொல்;** a term indicating, 'a matter that does not concern you.' அது அரிசிக் கணக்கு (உ.வ.).

அரிசிக்கம்பு *ariši-k-kambu*, பெ. (n.) **மேழத்தில் (சித்திரையில்) விதைத்து அலவனில் (ஆடியில்) அறுவடையாகும் சிறுகம்பு** (G.S.D. ii, 219); a short species of *kambu*, sown in April - May and harvested in July - August.

['அரிசி' கு.பொ.முன். (a dim. pref.).]

அரிசிக்கழுநீர் *ariši-k-kaḻu-nīr*, பெ. (n.) **அரிசி கழுவிக் களைந்த நீர்**; the water with which rice has been washed and cleaned.

[அரிசி + கழு + நீர்.]

அரிசிக்களா *ariši-k-kaḷā*, பெ. (n.) **சிறுகளா**; a low-spreading spiny evergreen shrub, *Carissa spinarum*.

['அரிசி' கு.பொ.முன்.]

அரிசிக்காடி *ariši-k-kāḍi*, பெ. (n.) **புளித்த கஞ்சி**; grain vinegar, sour gruel, from the acetous fermentation of rice (செ.அக.) — 1. **அரிசிக் கஞ்சியைப் புளிக்கவைத்து அதனின்று வடித்த காடி. இதற்குக் காஞ்சிகம் என்று பெயர்;** an acetous fermentation of powdered rice, rice ferment or grain vinegar, acetum of chemists. 2. **புளித்த கஞ்சி**; sour *conjee*. 3. **கருங்குறுவை யரிசியைக்கொண்டு போகர் 7000-ற் சொல்லியபடி உண்டாக்கிய ஆறு மாதக் காடி. இது தமிழ் மருத்துவத்தில் மருந்துகள் அரைத்துப் புடமிடுவதற்கு மிகப் பயன்படும். இதற்குப் 'பழச்சாறு' என்பது குழூஉக்குறி**; acetic acid prepared from the husked black paddy, as per process laid down in Bōgar (7000). The liquid *conjee* to be fermented is kept in earthen jars or pots just covering the mouth with a piece of white cloth, and exposing the same to the hot sun for six months (between February and July) when the acetification is said to be accomplished. This is known by the secret term *paḻaccāṟu* (சா.அக.).

ம. அரிக்காடி

[அரிசி + காடி.]

அரிசிக்காணம் *ariši-k-kāṇam*, பெ. (n.) **பழைய வரிவகை** (I.M.P. Tp. 234); an ancient tax on rice.

[அரிசி + காணம் (வரி).]

அரிசிக்காய் *ariši-k-kāy*, பெ. (n.) **ஒருவகை மாங்காய், பச்சரிசி மாங்காய்;** a variety of mango.

[பச்சரிசி → அரிசி (குறுக்கம்).]

அரிசிக்கோதுமை *ariši-k-kōdumai*, பெ. (n.) **வாற்கோதுமை** (விலசா. 3); a species of wheat.

[அரிசி + கோதுமை.]

அரிசிங்காமூலி *ari-šiṅgā-mūli*, பெ. (n.) **சிறியாணங்கை, பெரியாணங்கை என்பதற்கு எதிர்;** a plant with peculiar virtues of curing snake - bites, *Polygula glabra*, opp. to *periyāṇaṅgai*.

[அரி = அழகு. சிங்கா = குன்றாத. மூலி = மூலிகை. சிங்குதல் = குன்றுதல், அழிதல்.]

அரிசிங்கி *ari-šiṅgi*, பெ. (n.) **அழகைக் குறைக்கும் ஒருவகைப் புண்ணோய்;** a kind of ulcerous disease affecting the handsome or beautiful looks of a person.

[அரி = அழகு. சிங்கி = குன்றி, குறைவது. சிங்குதல் = குன்றுதல், அழிதல்.]

அரிசிச்சாதம் *ariši-c-cādam*, பெ. (n.) **அரிசிச் சோறு**; boiled rice. "நெய்யிலாச் சாதமுந் திருத்தி யில்லை" (குமரேச சத. 63).

தெ. ஸாதமு

*[அரிசி + சாதம். 'சாதம்' என்னுஞ் சொல் பொதுவாக வடசொல்லாகக் கருதப்படுகின்றது. ஆயின், 'ப்ரஸாத' என்னுங் கூட்டுச்சொல்லிலன்றி, வடமொழியிலும் இது தனித்து வழங்குவதில்லை. அதனால் இதற்கு மூலமும் இம்மொழியில் இல்லை. ஒருகால், சோறு → சோது → சாது → சாதம் என்று திரவிடத்தில் திரிந்திருக்கலாம். மாணிக்கவாசகர் 'சோறு' என்னுஞ் சொல்லை வீடு (முத்தி) என்னும் பொருளில் ஆண்டிருத்தலால், 'சாதம்' என்னும் வடிவம் வட

மொழியிற் 'ப்ர' என்னும் முன்னொட்டுப் பெற்றுப் 'ப்ரஸாத' என்றாகிக் கோயிலிற் படைக்கப்படும் திருச்சோற்றிற்கு அல்லது திருப் படையலுக்குப் பெயராகி யிருக்கலாம்.]

அரிசிச்சாராயம் *ariši-c-cārāyam*, பெ. (n.) **புளிக்கவைத்த அரிசியொடு வெல்லங் கலந்து அதனின்றெடுக்கும் மதுவகை**; arrack extracted from rice fermented with jaggery.

[அரிசி + சாராயம். சாறாயம் → சாராயம்.]

அரிசிச்சோளம் *ariši-c-cōḷam*, பெ. (n.) **சிறு சோளம், சோளவகை** (Rmd.M.); variety of *cōḷam, Holcus saccharatus* (சா.அக.).

ம. அரிச்சோளம்; து. அரிஜோள.

[அரிசி + சோளம். 'அரிசி' சி.பொ.முன்.]

அரிசிச்சோறு *ariši-c-cōṟu*, பெ. (n.) **நெல்லரிசிச் சோறு**; boiled rice.

[அரிசி + சோறு.]

அரிசித்தழுப்பு *ariši-t-taḻuppu*, பெ. (n.) **பெண்டிர் காதணிவகை** (நெல்லை); a kind of women's ear ornament (Tn.).

அரிசித்திப்பிலி *ariši-t-tippili*, பெ. (n.) **சிறு திப்பிலி**; a small variety of long pepper, *Piper longum* (சா.அக.).

[அரிசி + திப்பிலி. 'அரிசி' சி.பொ. முன்.]

அரிசித்தினை *ariši-t-tiṉai*, பெ. (n.) **சிறுதினை, தினைவகை** (விவசா. 3); a kind of small millet.

[அரிசி + தினை. 'அரிசி' சி.பொ. முன்.]

அரிசித்துண்டம் *ariši-t-tuṇḍam*, பெ. (n.) **பழைய வரிவகை** (M.E.R. 110 of 1917); an ancient tax.

அரிசிதவசி *ariši-tavaši*, பெ. (n.) **அரிசியும் அதற்கினமான பிறவும்**; rice and allied food-grains. அந்தவூரில் அரிசிதவசி மலிவாய் விற்கும் (உ.வ.).

['அரிசிதவசி' ஒரு மரபிணைமொழி. தவசம் → தவசி, எதுகை நோக்கி ஈறு திரிந்தது.]

அரிசிப்பல் *ariši-p-pal*, பெ. (n.) **சிறுபல்** (நெல்லை); small tooth or teeth (Tn.).

[அரிசி + பல். 'அரிசி' சி.பொ. முன்.]

அரிசிப்பிட்டு *ariši-p-piṭṭu*, பெ. (n.) **அரிசிமாப் பிட்டு**; a kind of pastry prepared by steaming rice flour.

ம. அரிமாவு (அரிசிமாவு); க. அக்கி திட்டு.

[அரிசி + பிட்டு.]

அரிசிப்புல் *ariši-p-pul*, பெ. (n.) 1. **மத்தங்காய்ப் புல்**; a kind of grass, *Cynosurus egypticus* (சா.அக.). "அரிசிப்புல் லார்ந்த மோட்டின" (சீவக. 43). 2. **கம்பரிசி**; a species of husked *kambu* millet (சா.அக.).

க. அக்கி குல்லு

[அரிசி + புல்.]

அரிசியரக்கு *ariši-y-arakku*, பெ. (n.) **பொடி யரக்கு**; lac in granulated form deprived of its resinous matter and part of its colouring.

[அரிசி + அரக்கு. 'அரிசி' சி.பொ.முன்.]

அரிசியற்றுப்போ-தல் *ariši-y-aṟṟu-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) **வாழ்நாள் இறுதியடைதல்** (நாஞ்.); to reach the closing days of one's life (Nāñ.).

[அரிசி + அற்று + போ.]

அரிசியிடு-தல் *ariši-y-iḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **பிணத்தின் வாயில் உறவினர் அரிசியிடுதல்**; to put rice into the mouth of a deceased person, as part of the funeral rites. "அள்ளி யிடுவ தரிசியோ" (பட்டினத். பொது. தாயா. 6).

[அரிசி + இடு.]

அரிசியிலந்தை *ariši-y-ilandai*, பெ. (n.) **நரி யிலந்தை**; a small species of jujube, *Zizyphus horrida*.

[அரிசி + இலந்தை. 'அரிசி' சி.பொ.முன்.]

அரிசிரங்கு *ari-širaṅgu*, பெ. (n.) **சொறிசிரங்கு**; itch, scabies.

[அரித்தல் = நமைச்சலெடுத்தல். அரி (அரிக் கின்ற) + சிரங்கு.]

அரிசில் *arišil*, பெ. (n.) 1. **சோணாட்டிலுள்ள காவிரியின் கிளையான ஓர் ஆறு**; name of an affluent of the *Kāvēri* in Thañjāvūr district. "அம்பர் சூழ்ந்த வரிசில்" (நற். 141 : 11), "அரிசிற் றென்கரை யழகார் திருப்புத்தூர்" (தேவா.7 . 9 : 5). 2. **ஒரு பழைய ஊர்**; name of an ancient village.

அரிசில்கிழார் *arišil-kiḻār*, பெ. (n.) **பதிற்றுப் பத்தில் 8ஆம் பத்தைப் பாடிய ஒரு புலவர்**; name of an ancient poet, author of the eighth ten of the *Padiṟṟuppattu*.

அரிஞ்சான் *ariñjāṉ*, பெ. (n.) **ஒருவகைக் கடல் மீன்**; a kind of sea-fish, *Cirrhina reba.*

அரிணம்[1] *ariṇam*, பெ. (n.) 1. **சிவப்பு**; red colour. 2. **காவிநிறம்**; tawny colour. 3. **மானிறம்** (நாநார்த்த.); fawn colour. 4. **மான்** (சூடா.); deer. "வெங்கோட் டரிணத் தொக்கு" (பாரத. இராசசூ. 105). 5. **மஞ்சள் நிறம்**; yellow colour. 6. **பொன்** (R.); gold. 7. **எலுமிச்சை**; sour lime, *Citrus medica-acida.* 8. **வெண்மை** (R.); whiteness.

ம. அருணம்; க. அருண; தெ. அருணமு.

அரிணம் > **Skt.** hariṇa.

[*அரி = நெருப்பு. செம்மை, மானிறம், மஞ்சள் நிறம் – இம் மூன்றும் நெருப்பிற் குரியன. வெண்மை நெருப்பின் ஒளிக்குரியது. உல் → அல் → அர் → அரணம் → அருணம் → அரிணம் = சிவப்பு.*]

அரிணம்[2] *ariṇam*, பெ. (n.) **சந்தனம்** (பச்.மூ.); sandal wood.

[*அரிணம் என்பது செஞ்சந்தனம்போலும்.*]

அரிணன் *ariṇaṉ*, பெ. (n.) 1. **சிவன்**; Šiva. 2. **கதிரவன்**; sun.

[*அருணம் = சிவப்பு. அருணம் → அருணன் = செந்நிறத்தனான சிவன், எழுகையிலும் விழுகையிலும் சிவந்து தோன்றுங் கதிரவன். அருணன் → அரிணன்.*]

அரிணி *ariṇi*, பெ. (n.) 1. **பொன்னாலாகிய உருவம்** (சங்.அக.); gold image. 2. **அழகி**; beautiful woman. 3. **வஞ்சிக்கொடி**; water rattan, *Calamus rotang* (சா.அக.).

[*அரிணம் = பொன், அழகு. அரிணம் → அரிணி = அழகி.*]

அரிணை *ariṇai*, பெ. (n.) **கள்** (வை.மூ.); toddy.

அரித்துக்கட்டி *arittu-k-kaṭṭi*, பெ. (n.) **கண்டதையெல்லாம் தனக்கென்று ஈட்டுவோன்**; one who scrapes and picks and appropriates whatever comes in his way, a grabbing person. அவன் ஒரு பெரிய அரிச்சுக் கட்டி (உ.வ.).

[*அரித்துக்கட்டி → அரிச்சுக்கட்டி.*]

அரித்தை *arittai*, பெ.(n.) 1. **துயரம்** (சங்.அக.); grief. 2. **துன்பம்**; distress.

[*அரித்தல் → துன்புறுத்துதல், அழித்தல். அரி → அரித்தை.*]

அரிதட்டு *ari-taṭṭu*, பெ. (n.) **சல்லடை** (புதுவை); sieve (Poṇḍ.).



அரிதட்டு

அரிதளம் *ariṭaḷam*, பெ. (n.) 1. **அரிதாரம்** (வின்.); yellow orpiment. 2. **தாளகச் செய்ந்நஞ்சு** (பாடாணம்); a kind of arsenic (சா. அக.).

[*அரிதாரம் → அரிதாலம் → அரிதாளம் → அரிதளம்.*]

அரிதாசம் *aridāšam*, பெ. (n.) **செம்பைமரம்**; a flowering tree, *Coronilla sesban* (சா.அக.).

அரிதாசர் *aridāšar*, பெ. (n.) **இருசமய விளக்கம் என்னும் நூலாசிரியரான 18ஆம் நூற்றாண்டுப்புலவர்**; name of a poet at the beginning of the 18th century, author of the *Iru Šamaya Viḷakkam.*

[**Skt.** Haridāsa > **த.** *அரிதாசர் = திருமாலடியார்.*]

அரிதாட்புள்ளி *aridāṭ-puḷḷi*, பெ. (n.) **கதிரறுத்த தாளைக்கொண்டு கணிக்கும் பொலி மதிப்பு**; estimate of the produce of a field from the appearance of the stubble (R.F.).

[*அரிதல் = தாளறுத்தல். அரி + தாள் + புள்ளி (மதிப்பு, கணக்கு).*]

அரிதாரக்கட்டு *aridāra-k-kaṭṭu*, பெ. (n.) **தாளகக்கட்டு** (வின்.); consolidated orpiment.

[*அரிதாரம் + கட்டு.*]

அரிதாரசெந்தூரி *aridāra-šendūri*, பெ. (n.) **கப்புச்சடைச்சி**; a plant (unidentified) (சா. அக.).

அரிதாரநாகம் *aridāra-nāgam*, பெ. (n.) **தலைச்சன் பிள்ளையின் மண்டையோட்டினின்று உருவாக்கும் ஒருவகை அண்டச் சுண்ணம்**; a kind of calcium compound prepared out of the skull of the first born child (சா.அக.).

அரிதாரநீற்றி *aridāra-niṟṟi*, பெ. (n.) **முட்பலா**; a kind of plant capable of calcining orpiment.

[*அரிதாரம் + நீற்றி. நீறு → நீற்று. நீற்றுதல் = சுண்ணமாக்குதல். நீற்று → நீற்றி. 'இ' வி.முத. ஈறு.*]

அரிதாரப்புகை *aridāra-p-pugai*, பெ.(n.) 1. **அகத்தியர் மருத்துவ நூலிற் சொல்லப் பட்டுள்ள ஒரு மருந்துப் புகை**; a kind of fumigation described in Agastiyar's treatise on medicine. 2. **கைகாலுளைச்சல், கறடு முதலிய வற்றிற்கு அரிதாரத்தைக்கொண்டு போடும் புகை**; the smoke of orpiment used for curing pain in the limbs and other rheumatic complaints (சா.அக.).

[அரிதாரம் + புகை.]

அரிதாரபூதிச்சி *aridāra-pūdicci*, பெ.(n.) **தும்பி**; moss creeper, *Cassytha filiformis*, capable of calcining orpiment.

[அரிதாரம் + பூதிச்சி. பூதி = புழுதி, சாம்பல், திருநீறு. பூதித்தல் = நீற்றுதல். பூதி → பூதிச்சி.]

அரிதாரம் *aridāram*, பெ. (n.) 1. **தாளகச் செய்ந்நஞ்சு (பாடாணம்)**; yellow orpiment, arsenic sulphide. "குன்மமெட்டும் பேருங் காண்..............அரிதா ரத்தால்" (பதார்த்த. 1188). 2. **காசறை (கஸ்தூரி) மானின் கொப் பூழினின்று எடுக்கப்படும் நறுமைப் பொருள்**; musk. "மான் வயிற்றி னொள்ளரி தாரம் பிறக்கும்" (நான்மணிக். 6). 3. **மஞ்சள்** (வை.மூ.); turmeric.

ம. அரிதாரம்; க. அரிதாள; தெ. அரிதளமு.

[அரி = மஞ்சள். தாரம் = சரக்கு.]

மறுவ. அரிமின், அரியணைச்செல்வி.

அரிதாரம் (தாளக பாடாணம்)பற்றிய சிறப்புக் குறிப்புகள் :

1. மனோசிலை யென்னும் அரிதாரம் மலைகளிலே பிறக்கும் (பெரியபு. கண்ணப்ப. 48, உரை) (சங்.அக.மேற்.).
2. இது (அரிதாரம்) சீனம், பர்மா, சுமத்திரா முதலிய விடங்களிலிருந்து இறக்குமதியாகுஞ் சரக்கு. இது எலுமிச்சம்பழ நிறமாகவிருந்து, பிறகு பழுப்பு நிறமாக மாறும். இதன் துண்டுகள் கோணங்களாக அகப்படும். இதற்கு எலிக்கூட்டுப் பாடாண மென்றும், பொன்னிறமென்றும் பல பெயர்களுண்டு.

இது அடியிற் கண்டபடி பலவகைத் தாயினும் கடையில் மூன்று வகையான சரக்குகள்தாம் அகப்படும். ஒன்று பளபளப் புள்ள கம்பிபாய்ந்த சரக்கு; மற்றிரண்டும் மஞ்சள் நிறமான கட்டிகளாக விருக்கும்.

அரிதார வகைகள் :

(1) கட்டரிதாரம் – Arsenicum flavum (*Lump orpiment*).

(2) கரட்டரிதாரம் – orpiment got in large angulo-granular distinct concretions.

(3) கனத்தீ யரிதாரம் – another variety of orpiment.

(4) பொன்னரிதாரம் – yellow orpiment or golden pigment or king's yellow sulphuret of arsenic, *Arsenicum trisulphidum*.

(5) மடலரிதாரம் – orpiment in flakes.

(6) தகட்டரிதாரம் – orpiment found in thin leaves, or plates., concentrated lamellar concretions of orpiment.

(7) வைப்பரிதாரம் – orpiment prepared as per process of *Siddhars*' science.

(8) தாளகம் – Arsenicum tersulphuretum, used as a medicine.

(9) கல்லரிதாரம் – stone orpiment, found in lumps (சா.அக.).

அரிதாரவஞ்சி *aridāra-vañji*, பெ. (n.) **கொத்த மல்லி**; coriander seed, *Coriandrum sativum* (சா.அக.).

அரிதாரவெண்ணெய் *aridāra-v-eṇṇey*, பெ. (n.) **வலி, சொறி, சிரங்கு, கரப்பன் படை, ஆறாப் புண் முதலியவற்றிற்கு, அரிதாரத்துடன் மற்றச் சரக்குகளைச் சேர்த்து நல்லெண்ணெயி லிட்டுக் காய்ச்சி உருவாக்கும் மருந்தெண் ணெய்**; a medicinal oil prepared by boiling a mixture of gingelly oil with yellow orpiment as chief ingredient amongst several other drugs, and used in aches, eczema, karpaung, etc. (சா.அக.).

[அரிதாரம் + எண்ணெய் (எள் + நெய்).]

அரிதாலம் *aridālam*, பெ. (n.) 1. **பொன்னரி தாரம்** (புதுவை); yellow orpiment (Poṇḍ.). 2. **மஞ்சள் நிறமான ஒருவகைப் புறா**; a high class pigeon of a yellow colour, golden pigeon, *Carpophaga sylvatica* alias *C. pusilla* (சா.அக.). 3. **வெண்ணிறமான மலையாள நாட்டுப் புறா**; bronze-backed imperial pigeon of Malabar, *Carpophaga insignis* (சா.அக.).

[அரிதாரம் (மஞ்சள் நிறமானது) → அரி தாலம். அரி = சிவப்பு, மஞ்சள், வெள்ளை.]

அரிதாள் *ari-tāḷ*, பெ. (n.) **நெல், வரகு, தினை, சாமை முதலியவற்றின் கதிரறுத்த தாள்;** stubble left on a harvested field.

அரிதாளகம் *aridāḷagam*, பெ. (n.) **பொன்னரி தாரம்;** yellow orpiment (சா.அக.).

[அரிதாரம் → அரிதாலம் → அரிதாளம் → அரிதாளகம்.]

அரிதாளம்[1] *aridāḷam*, பெ.(n.) **பொன்னரிதாரம்** (வின்.); yellow orpiment (சா.அக.).

[அரிதாரம் → அரிதாலம் → அரிதாளம்.]

அரிதாளம்[2] *ari-tāḷam*, பெ. (n.) **ஒருவகைத் தாளம்;** a variety of time-measure in music.

[அரி + தாளம் (தாளால் அல்லது காலால் தட்டிக் காட்டும் இசைக்கால அளவு.]

அரிதின்பாலை *aridin-pālai*, பெ. (n.) **திருநாமப் பாலை;** oval-leaved China root, *Smilax macrophylla* (சா.அக.).

[ஒருகா. அரிது + இன் + பாலை.]

அரிதின்வயச்சி *aridin-vayacci*, பெ. (n.) 1. **அரிதின்பாலை** பார்க்க; see *aridin-pālai* (மலை.); 2. **காட்டு நன்னாரி;** false sarsaparilla, *Hemidesmus indica* (சா.அக.).

[ஒருகா. அரிது + இன் + வயச்சி.]

அரிது *aridu*, பெ. (n.) 1. **அருமையானது;** that which is rare, precious. மணிகளுள் அரிது கோகினூர் வயிரம். 2. **பெறுதற்கு அல்லது செய்தற்கு மிகக் கடினமானது;** that which is very difficult to obtain or perform. "சிந்தையை யடக்கியே சும்மா யிருக்கின்ற திறமரிது" (தாயு. தேசோ. 8). 3. **எவ்வகையிலும் பெற அல்லது செய்ய இயலாதது;** that which is unattainable or impossible. எத்துணை முயலினும் ஒருவன் இறவாதிருத்தல் அரிது.

ம., தெ. அருது; க. அரிது.

[அரு → அரிது.]

அரிதொடர் *ari-toḍar*, பெ. (n.) **தொட்டார் கையை நறுக்கும் தொடரிப் (சங்கிலிப்) பொறி;** chain across the entrance to a fort, capable, on mere contact, of severing the hands of approaching enemies. "அரிதொடர் பிடித்தகை யறுக்க விட்டு" (திருவிளை. திருநகரப். 27).

[அரி + தொடர்.]

அரிநாரி *ari-nāri*, பெ. (n.) **குண்டுப்பனை;** a species of palmyra, *Borassus flabellifer* (சா.அக.).

அரிநுகர்மூலம் *ari-nugar-mūlam*, பெ. (n.) **கோரைக்கிழங்கு;** coray root, *Cyperus rotundus* (சா.அக.).

[அரி = பன்றி. நுகர்தல் = தின்னுதல். மூலம் = கிழங்கு.]

அரிநூற்பொறி *ari-nūṟ-poṟi*, பெ. (n.) **தொட்டவர் கையை அரியும் நூற்பொறி** (சிலப். 15 : 216, அடியார்க். உரை.); cord across the entrance to a fort so contrived as to cut off the hand that grasps it.

[அரி + நூல் + பொறி.]

அரிநெல்லி *ari-nelli*, பெ. (n.) **சிறுநெல்லி;** otaheite goose-berry, s.tr. *Phyllanthus distichus* (செ.அக.) — country star goose-berry, Brazil cherry, *Phyllanthus distichus* (சா.அக.).

ம. அரிநெல்லி

[அரி + நெல்லி. 'அரி' சி.பொ. முன்.]

அரிப்பர் *arippar*, பெ. (n.) **அரித்துப் பொருள் தேடுவோர்;** those who scrape and dig and appropriate whatever comes in their way. "அரிப்பர் கையகப் படுவன வாயிரத் திரட்டி" (திருவிளை. திருநகரப். 66).

[அரிப்பு → அரிப்பர்.]

அரிப்பரி-த்தல் *aripp(u)-ari-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **சிறிது சிறிதாகச் சேர்த்தல்;** to gather in small quantities. அரிப்பரித்துப் பொருள் சேர்க்கிறான். 2. **வயலில் அல்லது களத்தில் விழுந்த நென்மணிகளைக் கூட்டிக் கொழித்தெடுத்தல்;** to separate grains by sifting. "கைத் தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித் தாங்கு" (நீதிநெறி. 8).

[அரி → அரிப்பு (தொ.பெ.) + அரி.]

அரிப்பறை *ari-p-paṟai*, பெ. (n.) **இரைந்தொலிக்கின்ற கிணை அல்லது உறுமியென்னும் மருத நிலப் பறை;** a peculiar drum, of the people of the agricultural tract, called *kiṇai* or *uṟumi*. "அரிப்பறை வினைஞர்" (ஐங்குறு. 81).

ம. அரிப்பற

[அரித்தல் = இரைந்தொலித்தல். அரி (தொ.பெ.) + பறை. இனி, நெல்லரியும்போது உழவர் கொட்டும் பறை என்றுமாம்.]

அரி = நெற்றாளரிதல். அரி (தொ. பெ.) + பறை. **ஒ.நோ:** "விளைந்த கழனி வன்கை வினைஞ ரரிப்பறை" (மதுரைக். 261-2).

"விளைகழனி யரிப்பறையாற் புள்ளோப் புந்து" (புறநா. 396 : 3-4). உழவர் அறுவடை செய்யும்போது இன்னியம் இயக்குவது பண்டை மரபு. இதை, "வெண்ணெல் லரிஞர் தண்ணுமை" (புறநா. 348 : 1), "வெண்ணெ லரிநர் தண்ணுமை" (நற். 350 : 1), "வெண்ணெ லரிநர் பின்றைத் ததும்புந் தண்ணுமை" (அகநா. 40 : 13), "வெண்ணெல் லரிநர் மடிவாய்த் தண்ணுமை" (அகநா. 204 : 10), "வெண்ணெல் லரிநர் தண்ணுமை" (மலைபடு. 471) என்பவற்றால் அறிக.

அரிப்பன் *arippan*, பெ. (n.) 1. *அரிப்புக்காரன்*, **பொற்றுகளை மணலினின்று அரித்தெடுப்போன்**; one who sifts gold particles from sand. "குருட்ட ரிப்ப னார்க்குங் குபேர னென்று பேரோ" (ஒழிவி. பொது. 5). 2. **சருகு முதலியவற்றை அரிப்பவன்**; one who gathers dry leaves, etc.

ம. அரிப்பன்

[அரி → அரிப்பு → அரிப்பன்.]

அரிப்பாளன் *arippāḷan*, பெ. (n.) *அரிப்போன்*; sifter. 'பிறவி யந்தகனாகிய வரிப்பாளனுக்குங் குபேரனென்று பெயருண்டு கொலோ' (ஒழிவி. பொது. 5, உரை).

[அரிப்பு + ஆளன் (ஆ.பா. ஈறு).]

அரிப்பான் *arippāṉ*, பெ. (n.) *அரிப்பன்* பார்க்க; see *arippaṉ*.

அரிப்பு *arippu*, பெ. (n.) 1. *அரித்தல்*; gathering or collecting in small quantities. 2. *பிரித்தெடுக்கை*; sifting, separating. "அரிப்பரித்தாங் கெய்த்துப் பொருள்செய் திடல்" (நீதிநெறி.9). 3. **தினவு**; itching, *pruritus*. 4. **சினம்** (சூடா.); anger. 5. **குற்றம்** (திவா.); fault. 6. **சிறிது சிறிதாய்க் கடித்தல் அல்லது அறுத்தல்**; gnawing, corrosion.

ம. அரிப்பு; க. அரிபு; து. அரிபுனி.

[அரி + பு (தொ. பெ. ஈறு).]

அரிப்புக்காரன் *arippu-k-kāraṉ*, பெ. (n.) 1. **அரித்துப் பிழைப்பவன்**; sifter, one who lives by sifting. 2. **அரித்துப் பொருள் தேடுவோன்**; money scraper.

ம. அரிப்பன்

[அரி + பு (தொ.பெ. ஈறு) – அரிப்பு. 'காரன்' உடையோனைக் குறிக்கும் ஈறு.]

அரிப்புக்கூடை *arippu-k-kūḍai*, பெ. (n.) 1. **சல்லடை** (வின்.); riddle, sieve. 2. **ஒருவகை மீன்பிடி கருவி**; a kind of fishing implement.

ம. அரிப்புக்கூட; து. அரிப்பு.

[அரிப்பு + கூடை.]

அரிப்புச்சரி *arippu-c-cari*, பெ. (n.) **தொங்கல் வகை, ஓர் அணி** (S.I.I. iv, 77); a pendant.

[அரிப்பு = நுண் குற்றொலிப்பு. சரி = வளையம்.]

அரிப்புப்படை *arippu-p-paḍai*, பெ. (n.) **உடம்பிற் படர்ந்து தமைச்சலை யுண்டாக்கும் ஒரு தோல் நோய்**; a parasitic disease of the skin characterised by itching sensation, a kind of ringworm (சா.அக.).

[அரி + பு (தொ.பெ. ஈறு) – அரிப்பு. படை= படர்வு.]

அரிப்புவலை *arippu-valai*, பெ. (n.) **ஒருவகை மீன்பிடி வலை**; a kind of fishing net.

அரிப்புழுக்கல் *ari-p-puḻukkal*, பெ. (n.) **அரிசிச் சோறு**; boiled rice. "சமையக் கொட்டிய வாலரிப் புழுக்கலும்" (திருவிளை. குண்டோ. 6).

[அரி = அரிசி. புழுங்குதல் = வேதல், அவிதல். புழுங்கு → புழுக்கு → புழுக்கல் (தொ. ஆகு.).]

அரிப்பூ *arippū*, பெ. (n.) **ஒரு பூக்கும் பூண்டு**; a flowering plant, *Lantana indica* (சா. அக.).

ம. அரிப்பூ

அரிப்பூண்டு *ari-p-pūṇḍu*, பெ.(n.) **கடுகுரோகிணி** (சித். அக.); Christmas rose.

அரிப்பெட்டி *ari-p-peṭṭi*, பெ. (n.) **சல்லடை** (வின்.); sieve.

ம. அரிக்கட்ட

அரிபடைவட்டம் *ari-paḍai-vaṭṭam*, பெ. (n.) **கூரிய கற்கள் நிறைந்த நரகம், எழுவகையுள் ஒன்று**; a hell paved with pointed stones, one of seven kinds.

[அரி = அறுக்கின்ற. படை = படைக்கலம் போன்ற கூரங்கல். வட்டம் = இடப்பரப்பு.]

அரிபதம் *ari-padam*, பெ. (n.) **மேழ இயவு (மேடாயனம்)** (புதுவை); vernal equinox (Pond.).

Skt. haripada

[அரி = செம்மறியாடு, மேழம். பதம் = செலவு.]

அரிபாலுகம் *ari-pālugam*, பெ. (n.) 1. தக்கோலம் (பச்.மூ.); cubeb (செ. அக.) — தக்கோலம்; one of the five aromatics, a fragrant drug chewed with betel. 2. நறு (வாசனை) மிளகு; fragrant pepper, *Piper cubeba* (சா. அக.).

அரிபிளவை *ari-piḷavai*, பெ. (n.) 1. நச்சுப் புண் வகை (வின்.); cancer (செ.அக.). 2. சதையை அரித்துக் குடையும் ஒருவகைப் பிளவைப் புண்; a hard deep-seated and painful inflammation of the skin (*sub-cutaneous tissue*) which invades the surrounding tissues and burrows under the skin leaving a deep irregular cavity, a kind of carbuncle. 3. ஒருவகை நச்சுப்புண்; a kind of ulcer, *Phagedenic ulcer* (சா.அக.).

[அரி = அரிக்கும். பிள → பிளவை = சதையைப் பிளக்கும் புண்.]

அரிபுதை *ari-pudai*, பெ. (n.) இரவு (சிந்தா. நி.); night.

அரிபெட்டி *ari-petti*, பெ. (n.) அரிப்பெட்டி பார்க்க; see *ari-p-petti*.

அரிமஞ்சரி *ari-mañjari*, பெ. (n.) குப்பைமேனி (மலை.); Indian acalypha (செ.அக.) — rubbish plant, *Acalypha indica* (சா.அக.).

அரிமண்டகம் *ari-maṇḍagam*, பெ. (n.) பனிப் பயறு; dew gram (சா.அக.).

அரிமண்டை *ari-maṇḍai*, பெ. (n.) கொண்டைக் கடலை; Bengal gram, *Cicer arietinum* (சா.அக.).

அரிமணல் *ari-maṇal*, பெ. (n.) 1. நுண்மணல்; fine sand. 2. அரித்த மணல்; sieved sand.

அரிமணை *ari-maṇai*, பெ. (n.) அரிவாள்மணை; a knife-blade fixed to a block of wood, for slicing vegetables.

ம. அருமாமண

[அரி = அரியும் அலகு. மணை = பலகை, கட்டை.]

அரிமந்திரம் *ari-mandiram*, பெ. (n.) அரிமாக் குகை; lion's den. "அரிமந் திரம்புகுந்தா லானை மருப்பும்" (நீதிவெண்.2).

[அரிதல் = அழித்தல். அரி = பிற விலங்கு களையும் மாந்தரையும் கொன்று தின்றழிக்கும் விலங்கு. மன்னுதல் = பொருந்துதல், கூடுதல், பொருந்தி அல்லது கூடி வதிதல். மன் + திரம் (தொ.பெ. ஈறு) — (மன்றிரம்) → மந்திரம் = பொருந்தி வதியும் இடம்.]

ஒ. நோ: மன்று → மந்து, மன் → மனை.

அரிமர்த்தனன் *ari-marttanan*, பெ. (n.) ஒரு தொன்மப் பாண்டியன் பெயர்; name of a legendary *Pāṇḍya* king. "திறலரி மர்த்தன னென்னுந் தென்பார் வேந்தன்" (திருவிளை. மண். 90).

[அரி + மர்த்தனன். **Skt.** mardana > த. மர்த்தனன். வ. அரிமர்தந = பகைவனை யிடிப் போன் (அழிப்போன்).]

அரிமல் *arimal*, பெ. (n.) மாவிலிங்கம் (பச்.மூ.); lingam tree, *Crataeva religiosa*.

அரிமலம் *arimalam*, பெ. (n.) அரிமல் பார்க்க; see *arimal* (சா.அக.).

அரிமா *ari-mā*, பெ. (n.) 1. மடங்கல் (சிங்கம்); lion. "அரிமா மதுகை யவர்" (நாலடி. 198). 2. ஒட்டுமாமரம்; grafted mango tree (சா.அக.).



அரிமா

[அரி = மடங்கல் (சிங்கம்). மா = விலங்கு. அரிமா = அரியாகிய மா (இருபெயரொட்டு).]

அரிமாநோக்கம் *ari-mā-nōkkam*, பெ. (n.) முன்னும் பின்னுமுள்ள நூற்பாக்களொடு (சூத்திரங்களொடு) பொருள் தொடர்பு கொள்ளும் நூற்பா (சூத்திர) நிலை, நால்வகையுள் ஒன்று; the way a lion looks to one side and then to the other side illustrates how a *nūṟpā* (sūtra) or versified grammatical rule is connected with those that have preceded as well as those that follow, one of four *nūṟpā* (sūtra) *nilai*.

"ஆற்றொழுக் கரிமா நோக்கம் தவளைப்
பாய்த்துப் பருந்தின்வீழ் வன்னசூத்
திரநிலை" (நன். 19).

[அரிமா, செல்லும்போது அடிக்கடி முன்னும் பின்னும் பார்த்துச் செல்லும் என்பது பண்டையோர் கொள்கை. நோக்கு → நோக்கம் = கூரிய பார்வை.]

அரிமா பார்க்க; see *ari-mā*.

அரிமாவால்குரங்கு *arimā - vāl - kurangu*, பெ. (n.) அரிமாவின் (சிங்கத்தின்) வாலைப் போன்ற வாலுடைய குரங்கு; lion-tailed monkey.



அரிமாவால்குரங்கு

அரிமான் *ari-māṉ*, பெ.(n.) அரிமா (சிங்கம்); lion. "அரிமா னிடித்தன்ன" (கலித். 15 : 1).

[அரி = மடங்கல் (சிங்கம்). மா → மான் = விலங்கு. அரிமா → அரிமான் (இருபெயரொட்டு).]

அரிமின் *ari-miṉ*, பெ. (n.) அரிதாரம் (சா.அக.); yellow orpiment.

[அரி = மஞ்சள். மின் = பளபளப்பு, பளபளப்பானது.]

அரிமுக்கை *ari-mu-k-kai*, பெ. (n.) மூன்று கைப் பிடியாக எடுக்கப்படும் பழைய நெல்லாயம்; three handfuls, an ancient tax on paddy crop. 'அரிமுக்கையுட் பட்ட பல நெல்லாயங்களும்' (S.I.I. i, 89).

[அரி = நெல்லரிதாள். மூன்று + கை – முக்கை. கை = கைப்பிடியளவு.]

அரிமுகச்சிவிகை *ari-muga-c-civigai*, பெ. (n.) அரிமாத் தலைபோன்ற முகப்புள்ள பல்லக்கு வகை, சமயத் தருக்கரை வென்ற மதவிய லாசிரியர் ஏறுவது; palanquin with a lion figure-head, intended for a preceptor, who has defeated his opponents in religious disputation, to ride in.

[அரி = மடங்கல் (சிங்கம்). அரி + முகம் + சிவிகை (சிறு பல்லக்குவகை).]

அரிமுகவம்பி *ari-muga-v-ambi*, பெ. (n.) மடங்கல் (சிங்கத்) தலைபோன்ற முகப்பையுடைய ஓட வகை; canoe with a lion figure-head. "பரிமுக வம்பியுங் கரிமுக வம்பியும் அரிமுக வம்பியும்" (சிலப். 13 : 176-7).

[அரி (மடங்கல்) + முகம் + அம்பி.]

அரிமுகன் *ari-mugaṉ*, பெ.(n.) அரிமாமுகவசுரன்; (கந்தபு. யுத்த. சிங்க. 473); a lion-faced legendary hero.

அரிமூத்திரம் *ari-mūttiram*, பெ. (n.) மிகுந்த காரமும் நச்சுத்தன்மையு முள்ளதும் செம்பைப் பழுக்கவைப்பதுமான அரிமாச் சிறுநீர்; lion's urine, said to be highly pungent and corrosive and having the power of reacting chemically on copper (சா.அக.).

[அரி + முத்திரம். மோத்திரம் > முத்திரம்.]

அரிமேரை *ari-mērai*, பெ. (n.) சிற்றூர் ஊழியர்க்கு நெற்களத்திற் கொடுக்கும் அறுவடையுரிமைப் பங்கு; harvest perquisites to which village servants have a claim.

[அரி = நெல்லறுவடை. மேரை > தெ. மேர (எல்லை, மதிப்பு, உரிமைக் களத்துப் பங்கு) > Skt. marya (எல்லை).]

அரிமோதகி *ari-mōdagi*, பெ. (n.) நவுகு; honey thorn, *Canthium umbellatum* (சா.அக.).

அரிய *ariya*, கு.பெ.எ. (adj.) அருமையான; rare, precious, dear, difficult, impossible.

ம. அரிய; க. அரிது; தெ. அருது.

[அரு → அரிய. ஒ.நோ : பெரு → பெரிய.]

அரியகண்டகி *ariya-kaṇḍagi*, பெ. (n.) வளையலுப்பு; crude common salt educed from bangle earth, glass-gall, *Fel vitri* (சா.அக.).

அரியகம்[1] *ariyagam*, பெ. (n.) 1. காற்சரி யென்னுங் காலணி; an ancient, hollow anklet that tinkles while walking. "அரியகங் காலுக் கமைவுற வணிந்து" (சிலப். 6 : 85). 2. கொன்றைமரம்; cassia.

[அரித்தல் = சிலம்புப்பரல் அரித்தொலித்தல், காய்ந்த கொன்றைக்காய் அரித்தொலித்தல். அரி + அகம் – அரியகம்.]

அரியகம்[2] *ariyagam*, பெ. (n.) நோயை யுண்டாக் கும் பேய்; a demon causing illness (சா.அக.).

அரியகொள்கை *ariya-kolgai*, பெ. (n.) தவஞ் செய்வார்க்குரிய எண்வகை அரிய ஒழுக்கம்; the eight-fold discipline of the ascetics who perform penance. "அரிய கொள்கையர்" (சீவக. 1423).

தவத்தோர் எண்வகையொழுக்கம் :

பலமுறை நீரில் மூழ்கல், நிலத்திற் கிடத்தல், தோலுடுத்தல், எரியோம்பல், ஊரடை

யாமை, சடைதாங்குதல், காட்டிலுண்டல், கடவுட் பூசை; frequent immersion in cold water, lying or sleeping on bare ground, being clad in skins, to keep burning an undying fire, refrain from going home, wearing matted locks of hair, eating only the forest produce and worshipping God.

''நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடீஇச்
சோர்சடை தாழச் சுடரோம்பி — யூரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத் துய்க்கும் வழி'' (பு.வெ. 8 : 14).

அரியசம் *ariyašam*, பெ. (n.) **சரக்கொன்றை** (மலை.); Indian laburnum, *Cassia fistula*.

[அரியகம் → அரியசம்.]

அரியசாரணம் *ariya-šāraṇam*, பெ. (n.) **மாவிலிங்கம்**; lingam tree, *Crataeva religiosa*.

அரியசாரணை[1] *ariya-šāraṇai*, பெ. (n.) **மாவிலிங்கு** (மலை.); species of *Crataeva* (செ. அக.).

அரியசாரணை[2] *ariya-šāraṇai*, பெ. (n.) **சாரணைக்கொடி**; a creeper, *Trianthema monogyna* (சா.அக.).

அரியண்டம் *ariyaṇḍam*, பெ. (n.) அரிகண்டம்[2] பார்க்க; see *ari-kaṇḍam*[2].

அரியணை *ari-y-aṇai*, பெ. (n.) **அரியுருவந் தாங்கும் அரசிருக்கை**; throne with carvings of lion. ''அரியணை யனுமன் றாங்க'' (கம்பரா. யுத்த. திருமுடி. 38).

[அரி = மடங்கல் (சிங்க) உருவம். அணை = இருக்கை.]

அரியணைச்செல்வன் *ari-y-aṇai-c-celvaṉ*, பெ. (n.) அருகன் (பிங்.); Arhat, as seated on a throne.

[அரியணை + செல்வன்.]

அரியணைச்செல்வி *ariyaṇai-c-celvi*, பெ. (n.) **அரிதாரம்**; yellow orpiment (சா. அக.).

[அரியணை + செல்வி.]

அரியபச்சை *ariya-paccai*, பெ. (n.) **வங்காளப் பச்சை** (பரி.அக.); verdigris.

அரியம் *ariyam*, பெ. (n.) **இசைக்கருவி** (சிந்தா. நி.); musical instrument.

[அரி = அரித்தொலிக்கும். இயம் = இசைக் கருவி. அரி + இயம் — அரியியம் → அரியம். இனி, அரிய + இயம் என்றுமாம்.]

அரியமான் *ariyamāṉ*, பெ. (n.) **ஒரு பூண்டு**; the Asclepias plant (சா. அக.).

அரியல்[1] *ariyal*, பெ. (n.) 1. அரிதல் (சங்.அக.); cutting into small pieces 2. **நெற்றாளரிதல்**; reaping. 3. **அறுத்தல்**; cutting. 4. **துண்டித்தல்**; amputating (சா.அக.).

ம. அரியுக; க. அரி; தெ. அரவரலு.

[அரி → அரியல்.]

அரியல்[2] *ariyal*, பெ. (n.) 1. **அரித்தல்**; skimming. 2. **அரித்தெடுக்குங் கள்**; toddy, fermented liquor. ''அரியலார்ந் தமர்த்தலின்'' (சீவக. 1249).

[அரி → அரியல்.]

அரியல்[3] *ariyal*, பெ. (n.) **செடி** (நாமதீப.); shrub.

ம. அரியன்

அரியலூர்த்தாட்டு *ariyalūr-t-tāṭṭu*, பெ. (n.) **முதற்கண் அரியலூரிலிருந்து வந்த கச்சு (இரவிக்கை)த் துண்டுவகை** (இ.ல.); a cloth for bodice, as originally from *Ariyalūr* (Loc.).

அரியளாமெனல் *ariyaḷ-ām-eṉal*, பெ. (n.) (அகப்.) **தலைவியின் மனநிலை யறிதல் அருமையெனத் தோழி தலைமகற்குக் கூறும் அகப்பொருட்டுறை** (களவியற். 58); (Agap.) theme in which the maid informs the lover of her mistress, of her inability to ascertain the mind of her mistress.

[அரு → அரியள் (பெ.பா.) + ஆம் (ஆகும்) + எனல் (என் + அல்).]

அரியன்[1] *ariyaṉ*, பெ. (n.) **சிவபிரான்** (நாமதீப.); Šiva.

[அர் → அரம் = சிவப்பு. அரம் → அரன் = சிவன். அர் → அரு → அரியன் = செவ் வண்ணன்.]

அரியன்[2] *ariyaṉ*, பெ. (n.) 1. **அருமையானவன்**; a rare man, a beloved or endeared person. 2. **காண்டற்கு அல்லது முற்றும் அறிதற்கு இயலாதவன்**; one who is invisible or beyond comprehension. ''மறைகடேடரிய னாவோன்'' (பாகவத. சிசுபால. 64). 3. **தலைவன்**; lord, master. 4. **மேலானவன்**,

சிறந்தவன்; noble, aristocrat. 5. பெருவணிகன்; merchant prince, commercial magnate.

அரியாசம் *ariyāśam*, பெ. (n.) ஒரு நறுமணச் சரக்கு (சிலப். 5 : 14, அரும்.); an aromatic, a fragrant substance.

அரியாணம் *ariyāṇam*, பெ. (n.) பெருங்காசி அல்லது பெருஞ்சீரகம்; Indian fennel, *Anethum foeniculam* (சா.அக.).

அரியாயோகம் *ariya-yōgam*, பெ. (n.) 1. அரைப்பட்டிகை; girdle. 2. மருந்து; medicine. 'அரியா யோகமும் — கருவி விலக்காகப் புனைந்த அரைப்பட்டிகையும், அரிதல் செய்யாத யோகம் என்க; வியாதிகளைக் கெடுக்கும் மருந்தென்றுமாம்' (சிலப். 14 : 170, உரை). 3. மருந்துக் கூட்டு; medicinal preparation, a mixture of medicine (சா.அக.).

அரியாலுகம் *ariyālugam*, பெ. (n.) அரிபாலுகம் பார்க்க; see *ari-pālugam*.

அரியான் *ariyāṉ*, பெ. (n.) பொதுவாக அலவன் (ஆடி) மாதத்தில் விதைக்கப்படுவதும், நான்கு அல்லது ஆறு மாதத்தில் விளைவதுமான மட்ட நெல்வகை (இ.வ.); a kind of inferior paddy, usually sown in July when water is likely to stagnate, maturing in four to six months (Loc.) (செ.அக.) — குறுவைநெல்; a kind of paddy ready for reaping, 60 days after sowing (சா.அக.).

அரியின்திப்பிலி *ariyiṉ-tippili*, பெ. (n.) அரிசித் திப்பிலி; long pepper, *Piper longum*.

[அரி + இன் (சாரியை) + திப்பிலி. அரி = அரிசி.]

அரியீயம் *ari-y-iyam*, பெ. (n.) 1. செம்பு (பரி.அக.); copper. 2. நெட்டிமுட்டி என்னுஞ் செடி; the plant *neṭṭimuṭṭi*.

அரியுண்மூலம் *ari-y-uṇ-mūlam*, பெ. (n.) கோரைக்கிழங்கு; coray root, *Cyperus rotundus*.

அரிநுகர்மூலம் பார்க்க; see *ari-nugar-mūlam*.

[அரி = பன்றி. உண் = உண்கின்ற. மூலம் = கிழங்கு.]

அரியுப்பு *ari-y-uppu*, பெ.(n.) கறியுப்பு (வை.மூ.); common salt, Calcium chloride.

[அரி = வெள்ளை. அரியுப்பு = வெள்ளுப்பு. ஒ.நோ : "வெள்ளுப்புப் பகருநர்" (மணிமே. 28 : 31).]

அரியெடுப்பு *ari-y-eḍuppu*, பெ. (n.) சிற்றூர் ஊழியக்காரருக்குக் களத்திற் கொடுக்கும் இருகை யளவுத் தவசம்; double handful of grain, as much grain as can be held by both the hands, given as a perquisite from the threshing floor to village servants at the division of produce (R.F.).

[அரி = நெல், தவசம். எடுப்பு = எடுத்துக் கொள்கை.]

அரியேறி *ari-y-ēṟi*, பெ. (n.) காளி (திவா.); *Kāḷi* (Durga), as riding on a lion.

[அரி = மடங்கல் (சிங்கம்). ஏறி = ஏறிச் செல்பவள், ஊர்தியாகக் கொண்டவள். ஏறு + இ (வி.முத. ஈறு.) — ஏறி.]

அரியேறு *ari-y-ēṟu*, பெ. (n.) 1. ஆண் அரிமா; male lion. "வேழக் குழாமடு மரியேறு" (இரகு. தேனுவந். 37). 2. ஆணரிமாப் போன்றவன்; one who resembles a male lion in valour and strength. 3. ஆணரிமா வடிவம் அல்லது உருவம்; carved or sculptured form of a male lion. "அரியே றேந்து மாசனம்" (பாரத. கிருட். 74).

[அரி = பிற விலங்குகளையும் மாந்தரையும் கொன்றழிக்கும் விலங்கு. "ஏறும் ஏற்றையும் ...... யாத்த ஆண்பாற் பெயரென மொழிப" (தொல்.பொருள்.மர. 2).]

அரியோகிதம் *ari-y-ōgidam*, பெ. (n.) நாகப்படக் கற்றாழை; a thornless aloe resembling the hood of a cobra (சா.அக.).

[அரி = பாம்பு. ஓ → ஓவு → ஓவுதல் = ஒத்தல், பொருந்துதல், கூடுதல். ஓவு → ஓகு → ஓகிதம் = ஒத்தது. அரியோகிதம் = பாம்புப் படத்தை யொத்தது.]

அரிராசி *ari-rāśi*, பெ. (n.) களப்பொலியின் அடியில் மீந்துள்ளதைச் சிற்றூர் ஊழியர்க்குப் பகிர்ந்து கொடுக்கும் உரிமைப் பங்கு; harvest perquisites of village servants distributed out of the grain left at the bottom of the heap.

[அரி (அறுவடை நெற்பொலி) + Skt. rāśi (குவியல், பங்கு).]

அரில்[1] *aril*, பெ. (n.) 1. பின்னல்; braiding, plaiting, matting. "அரில்வலை யுணங்கு முன்றில் களும்" (திருக்காளத்.பு. 2 : 9). 2. பாய், பாயல் (அரு.நி.); mat, bed. 3. குழல் (அரு.நி.); women's tresses, lock of hair. 4. பிணக்கம்; interlacing, as of bamboo stalks growing

together. "மூதரினிவந்த முதுகழை யாரிடை" (பு.வெ. 10 : 2). 5. **மூங்கில்** (மலை.); bamboo, *Bambusa arundinacea*. 6. **சிறு புதர்**; thicket, dense bush. "முளியரில் பொத்திய முழங் கழல்" (கலித். 13 : 20). 7. **சிறுகாடு**; low jungle of short trees. "பின்னி யன்ன பிணங்கரி னுழைதொறும்" (மலைபடு. 379). 8. **மாறு பாடு, திரிபு**; disagreement, confusion, contrariety, perversity. "அரிறப வுணர்ந்தோர்" (தொல். பொருள். புறத். 1). 9. **குற்றம்** (திவா.); fault, defect, blemish.

[அல்லுதல் = பொருந்துதல். அல் → அர் → அரு → அருகு. அருகுதல் = கிட்டுதல், நெருங்கு தல். அரு → அரில் = நெருக்கம், பிணக்கம், அடர்த்தி.]

அரில்[2] *aril*, பெ. (n.) குரல் (பொதி.நி.); voice.

[அரித்தல் = ஒலித்தல். அரி → அரில்.]

அரில்[3] *aril*, பெ. (n.) 1. பரல் (பொதி.நி.); small, sharp pebble, gravel. 2. (**பரல்போன்ற கொட்டையுடைய**) பலா (அரு.நி.); jack-tree.

[அரி = சிறியது. அரி → அரில்.]

அரில்[4] *aril*, பெ. (n.) **சினம்** (நாமதீப.); anger.

[அரி = நெருப்பு, நெருப்புப் போன்ற சினம். அரி → அரில்.]

அரிவரி *ari-vari*, பெ. (n.) அரிச்சுவடி பார்க்க; see *ari-c-cuvaḍi*.

அரிவாகை *ari-vāgai*, பெ. (n.) பன்றிவாகை; bastard rose wood, *Dalbergia paniculata*.

அரிவாட்கட்டுக்கதிர் *arivāṭ-kaṭṭu-k-kadir*, பெ. (n.) **அரிவாள்களைக் கட்டி வைப்பதற் கென்று அறுவடை செய்வோர்க்கு உரிமையாக அளிக்குங் கதிர்க்கட்டு** (இ.வ.); a perquisite consisting of sheaves of corn, given to harvesters for packing the scythes after harvest (Loc.).

[அரிவாள் + கட்டு + கதிர்.]

அரிவாட்கள்ளன் *arivāṭ-kaḷḷan*, பெ. (n.) **அடிக் கடி அரிவாள் பிடித்தலால் உள்ளங்கையில் உண்டாகும் வீக்கம்**; horny swelling on the palm of the hand caused by frequent handling of the sickle.

[அரிவாள் = அரியும் அல்லது அறுக்கும் கத்தி அல்லது அலகு. கள் → கள்ளம் → 'கள்ளன் = மறைவாகத் தோன்றுவது. ஒ.நோ: குதிக் கள்ளன்.]

மறுவ. அரிவிக்கள்ளன்

அரிவாட்சொண்டன் *arivāṭ-conḍan*, பெ. (n.) **கடலில் திரியும் ஒருவகைக் கொக்கு** (யாழ்ப்.); a sea-bird of the heron species, having beak like a sickle (J.).

[அரிவாள் + சொண்டன்.]

அரிவாட்டாய நாயனார் *arivāṭṭāya-nāyaṉār*, பெ. (n.) **சிவனடியார் அறுபத்து மூவருள் ஒருவர்** (பெரியபு.); name of a canonized Šaiva saint, one of 63.

[அரிவாள் + தாயன் + நாயனார்.]

தாயன் என்பது இயற்பெயர். நாயனார் என்பது சிவபத்தியாற் பெற்ற பெயர். 'அரி வாள்' என்பது கீழே சிந்திய செந்நெல்லரிசி யையும் செங்கீரையையும் மாவடுவையும் கடவுள் திருவமுது செய்தருளும் பேறு பெற்றே னில்லையே என்று, அரிவாளினாலே தம் ஊட்டியை அரிந்ததனால் அவர் பெற்ற அடைமொழி.

"நல்லசெங் கீரை தூய மாவடு அரிசி சிந்த
அல்லல்தீர்த் தாள வல்லார் அமுதுசெய்
தருளும் அப்பே(று)
எல்லையில் தீமை யேனிங் கெய்திடப்
பெற்றி லேனென்(று)
ஒல்லையில் அரிவாள் பூட்டி ஊட்டியை
அரிய லுற்றார்"
(பெரியபு. 13 : 16).

அரிவாட்பதக்கு *arivāṭ-padakku*, பெ. (n.) ஒரு **பழைய வரி**; an ancient tax (Pudu.Insc.38).

[அரிவாள் + பதக்கு. அரிவாள் வேலை செய்பவரிடம் வாங்கிய ஆட்டை வரியா யிருக் கலாம். பதக்கு = பத்து நாழி.]

அரிவாட்பெட்டி *arivāṭ-peṭṭi*, பெ. (n.) **பனை யேறிகள் அறுவாளை உள்ளிட்டுத் தம் இடுப் பிற் கட்டிக்கொள்ளும் சிறு பனைநார்க்கூடை**; basket of palm-fibre, fastened to the waist of climbers of palm trees, intended for holding their knives.

ம. அருவாப்பெட்டி

[அறுவாள் + பெட்டி – அறுவாட்பெட்டி → அரிவாட்பெட்டி. அறுவாட்பெட்டி என்பதே சரியான பெயர்.]

அறுவாள் பார்க்க; see *aṟuvāḷ*.

அரிவாண்மணை *ari-vāṇ-maṇai*, பெ. (n.) **காய் கறிகளைப் பெரும்பாலுஞ் சிறுசிறு துண்டு களாக அறுக்க உதவும் கருவி** (பிங்.); a knife-blade fastened to a block of wood for slicing vegetables and meat.



அரிவாண்மணை

ம. அருமாமண

[அரிவாள் + மணை. அரிவாள் = சிறு துண்டுகளாக நறுக்கும் கத்தி. மணை = பலகை.]

அரிவாண்முகம் *arivāṇ-mugam*, பெ. (n.) **காயப் பூடு;** wound plant, *Sida acuta* (சா. அக.).

அரிவாண்மூக்கன்[1] பார்க்க; see *arivāṇ-mūkkaṉ*[1].

[அரிவாள் + முகம். இது படைக்கலத்தினா லுண்டான காயத்தை ஆற்றுந் தன்மையது.]

அரிவாண்முனைப்பூண்டு *ari-vāṇ-muṉai-p-pūṇḍu*, பெ. (n.) **அரிவாள் முனைபோன்ற இலையுள்ள ஒருவகைச் செடி;** sickle-leaf, m. sh., *Sida carpinifolia* (I. P.).

[அரிவாள் + முனை + பூண்டு. காய்கறி யறுக்கும் அரிவாள் முனைபோன்ற வடிவும் ஓரமெல்லாம் அரம்பப்பல்போன்ற முனைகளும் கொண்ட இலையுடைமையால், அரிவாண் முனைப்பூண்டு எனப்பட்டது. இதை அரிவாண் மணைப்பூண்டு என்பது தவறு. மணையென்பது அரிவாள் பதித்த பலகை அல்லது கட்டை. அது அரிவாள் பதித்த தலைப்பக்கம் குவிந்திருப் பினும், பெரும்பாலும் நீண்ட கனசதுரம்; ஆதலால் இலைக்கோ பூண்டிற்கோ உவமை யாகாது.]

அரிவாண்மூக்கன்[1] *arivāṇ-mūkkaṉ*, பெ. (n.) 1. **அரிவாண்முனைப்பூண்டு** (M. M.); sickle-leaf, having serrated leaves (செ.அக.) — **காயப்பூடு;** sickle-leaved plant or wound plant, *Sida acuta* (சா.அக.).

[அரிவாள் + மூக்கன். காய்கறி யறுக்கும் அரிவாளின் முனைபோன்ற இலையுடைய செடி.]

அரிவாண்மூக்கன்[2] *arivāṇ-mūkkaṉ*, பெ. (n.) **அரிவாட்சொண்டன்** (யாழ்ப்.); a sea-bird of the heron species having beak like a sickle (J.).



அரிவாண்மூக்கன்

ம. அருவாள்மூக்கன்

(கதிரறுக்கும் பன்னறுவாள் போன்ற அலகுடைய பறவை. மூக்கு = பறவையலகு.]

அரிவாண்மூக்கு *arivāṇ-mūkku*, பெ. (n.) **அரிவாண்மூக்கன்**[1] பார்க்க; see *arivāṇ-mūkkaṉ*[1].

அரிவாண்மூக்குக்கீரை *arivāṇ-mūkku-k-kīrai*, பெ. (n.) **அரிவாண்முனைப்பூண்டு** (இ.வ.); sickle-leaf (Loc.).

[அரிவாள் + மூக்கு + கீரை. காய்கறி யறுக்கும் அரிவாளின் முனைபோன்ற இலை, அதையுடைய செடி. மூக்கு = முனை. இலையைக் கீரையென்பது மரபு. 'கீரை' என்பது செடியைக் குறிப்பின் சினையாகு பெயர்.]

அரிவாண்மூக்குப்பச்சிலை *arivāṇ-mūkku-p-paccilai*, பெ. (n.) **அரிவாண்மூக்கன்**[1] பார்க்க; see *arivāṇ-mūkkaṉ*[1].

[அரிவாள் + மூக்கு + பச்சிலை.]

அரிவாணம்[1] *arivāṇam*, பெ. (n.) **செப்புத் தட்டு அல்லது தாம்பாளம்;** copper tray, platter. 'அரிவாணம் பன்னிரண்டுக்கு' (S.I.I. vii, 22).

க. அரிவாண; தெ. அரிவாணமு; து. அரி வாணொ.

[ஒருகா. அரி = செம்பு. பாளம் → வாளம் → வாணம் = பலகை, தட்டு.]

அரிவாணம்[2] *ari-vāṇam*, பெ. (n.) **பாக்குஞ் சுண்ணாம்புங் கலந்த கலவை** (இ.வ.); mixture of areca-nut and lime (Loc.).

க. அரிவாண

[ஒருகா. அரி + வண்ணம் – அரிவண்ணம் → அரிவணம் → அரிவாணம். அரி = சிவப்பு.]

அரி[9] பார்க்க; see *ari*[9].

அரிவாலுகம் *arivālugam*, பெ. (n.) 1. **முசு முசுக்கை;** rough bryonia, *Bryonia scabra*. 2. **ஏலா வாலுகம், பேரேலம்;** greater cardamom (சா.அக.).

அரிவாள் *ari-vāḷ*, பெ. (n.) 1. **காய்கறிகளை அரியும்படி மணையிற் பதிக்கப்படும் அலகு;** a knife-blade fastened to a block of wood for slicing vegetables and meat. 2. **நெல், தினை முதலியவற்றின் தாளை யரியுங் கூனிரும்பு அல்லது பன்னறுவாள்;** sickle, garden-knife. 3. **செடி புதர்களைமட்டமாகக் கத்தரிக்குங் கத்தி;** bill-hook, scissors-like implement for pruning hedges. 4. **மரத்தை யறுக்கும் ஈர்**

வாள் அல்லது அரம்பம்; saw. "அறுதி மரத்துக் கீரரிவாள்" (ஞானவா.புசுண். 75).

ம., க. அரிவாள்.

[அரிதல் = சிறிது சிறிதாக அறுத்தல். வள் → வாள் = வளைந்த கத்தி.]

அரிவி *arivi*, பெ. (n.) 1. **கதிர்ப்பிடி** (யாழ்ப்.); reaped corn, handful of reaped grain (J.). 2. **நெல் முதலியவற்றின் தாள்** (சங்.அக.); stubble of paddy plant.

[அரி + வி. அரிதல் = நெல் முதலியவற்றின் தாளறுத்தல். 'வி' செயப்படுபொருள் ஈறு.]

அரிவிக்கள்ளன் *arivi-k-kaḷḷaṉ*, பெ. (n.) **அரி வாட்கள்ளன்** பார்க்க; see *arivāṭ-kaḷḷaṉ*.

[அரிவி + கள்ளன்.]

அரிவிடந்தீண்டி *ari-viḍan-tīṇḍi*, பெ. (n.) **செய் யான், செம்பூரான்**; a venomous centipede (சா.அக.).

[அரி + விடம் + தீண்டி. அரி = தோலை யரிக்கும் (?). Skt. viṣa > த. விடம். தீண்டு தல் = கடித்தல். தீண்டு + இ (வி.முத. ஈறு) – தீண்டி.]

அரிவிமயிர் *arivi-mayir*, பெ. (n.) **போர்மறவர் வேல்நுனியில் அணியும் பறவை மயிர்**; plumes, of certain birds that frequent rivers in Ceylon, with which soldiers adorn the tops of their lances or spears (W.).

[அரிவி + மயிர். ஒருகா. அரிதாட் கதிர் போல் வேல்நுனியில் தோன்றும் தூவி அல்லது இறகுகற்றை.]

அரிவியரிவாள் *arivi-y-arivāḷ*, பெ. (n.) **கதிரறுக் குங் கருக்கரிவாள்**; sickle, reaping hook (W.).

[அரிவி + அரிவாள். அரிவி = தாளறுத்தல், நெற்றாள். அரிவாள் = பன்னறுவாள்.]

அரிவிவெட்டு-தல் *arivi-veṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) **கதிரறுத்தல்** (யாழ்ப்.); to reap corn (J.).

[அரிவி + வெட்டு. அரிவி = கதிரொடு கூடிய தாள்.]

அரிவீகம் *arivīgam*, பெ. (n.) **நெடுநாரை**; fragrant cherry, nutmeg, *Polyalthia fragrans* (சா.அக.).

அரிவை *arivai*, பெ. (n.) 1. **இருபது முதல் இருபத்தைந்து அகவைக்குட்பட்ட பெண்** (பிங்.); woman in the age group of 20 to 25. 2. **அழகிய பெண்** (சங்.அக.); beautiful woman. 3. **பெண்**; maiden or woman. "அம்மா வரிவை முயக்கு" (குறள், 1107).

ம. அருவ, அரிவ.

[அரி = அழகு. அரி → அரிவை = அழகிய பெண் அல்லது அழகு சிறந்து தோன்றும் பெண் பருவம்.]

அரிவைப் பருவ மேலெல்லை 24 அகவை யென்பது **பொய்கையார்** கூற்று.

"அரிவைக் கியாண்டே அறுநான் கென்ப"
— பொய்கையார்.

பிங்கலமும் பிற பாட்டியல்களும் 25 என்றே கூறுகின்றன.

"அரிவை......ஆண்டு......ஐயைந்து"
(பிங். 5 : 216).

"பகருங்கா லைந்தேழ் பதினொன்று
பன்மூன்
றகலாத பத்தொன்பா னையைந்—திகலாத
முப்பத்தொன் றீரிருபான் பேதை
முதலோர்க்குச்
செப்புவராண் டெல்லைத் திறம்"
(வெண்பாப். செய். 26).

"பேதைமுத லெழுவோர்க்குப் பிராயங்கள்
பேசிடுங்கால்
ஆதியி லைந்தேழ் பதினொன்று பன்மூன்று
பத்தொன்பதே
மீதிரு பத்தைந்து........................"
(நவநீதப். 46).

"ஐயைந் தழகரிவை" (சிதம்பரப். 37).

"பதினான் காதிபத் தொன்பான் காறு
மெதிர்தரு மடந்தைமே லாறு மரிவை"
(இலக். வி. 862).

அரிவைப்பு *ari-vaippu*, பெ. (n.) **சமையல்** (நாஞ்.); cooking (Nāñ.).

ம. அரிவெப்பு

[அரி = சோறு. வைப்பு = சமைப்பு.]

அரிள் *ariḷ*, பெ. (n.) **அச்சம்** (சங்.அக.); fear.

க. அரள்

[அரள் → அரிள்.]

அரினி(க்)கோழி *ariṉi-(k)-kōḻi*, பெ. (n.) 1. **தூவு கருத்த கோழி**; black fowl. 2. **தோல் கருத்த கோழி**; fowl with dark skin.

அரணிச்சுறா

அரசு



அரிசிச்சோளம்



அரிஞ்சான்



அரிவாட்பெட்டி

அரு[1] *aru*, கு.பெ.எ. (adj.) 1. *கிடைத்தற்கரிய, விலையுயர்ந்த*; rare, precious. 2. *அருமையான*; dear, beloved. 3. *செய்தற்கியலாத*; impossible.

ம. அரு

[*அல் → அல்கு. அல்குதல் = சுருங்குதல், குறைதல், சிறுத்தல். அல்லுஞ் சில்லுமாய் = சிறிது சிறிதாய். அல் → அர் → அரு → அருகு. அருகுதல் = குறைதல், கிடைத்தற் கரிதாதல், அருமையாதல்.*]

அரு[2] *aru*, பெ. (n.) *அட்டை*; leech. "இருநிலந் தீண்டா வருநிலை" (தொல். பொருள். புறத். 16).

அருக்கம்[1] *arukkam*, பெ. (n.) 1. *சுருக்கம்*; contraction, smallness, brevity, minuteness. "அருக்கமாய்ப் பெருக்க மாகி" (தேவா. 4.32 : 7). 2. *சுக்கு* (T.C.M. ii, 2 : 429); dried ginger.

து., துட. அர்க்; கோத. அர்க்; பட. அருக்கு.

[*அருகுதல் = குறைதல், சுருங்குதல், சிறுத்தல், நுண்ணியதாதல், காய்ந்து சிறுத்தல். அருகு → அருக்கு → அருக்கம் (தொ.பெ.). 'அம்' தொ. பெ. ஈறு.*]

அருக்கம்[2] *arukkam*, பெ. (n.) *செம்பு* (நாநார்த்த.); copper.

[*அர் → அரம் = சிவப்பு. அர் → அரக்கு = சிவப்பு. அரக்கு → அருக்கு → அருக்கம் = செம்மாழை.*]

அருக்கமலை *arukka-malai*, பெ. (n.) *திருவண்ணாமலைக்குக் கிழக்கேயுள்ள மலை*; a hill to the east of *Tiruvaṇṇāmalai*.

அருக்கல்[1] *arukkal*, தொ.பெ. (vbl.n.) 1. *குறைத்தல், சுருக்கல்*; to reduce in quantity. 2. *சுண்டக் காய்ச்சுதல்*; to boil down to a thick liquid (சா.அக.). 3. *அருமைப்படுத்துதல்*; to endear.

ம. அருக்குக; து. அர்க்குனி; பட. அருக்கு.

[*அரு → அருகு → அருக்கு → அருக்கல். 'அல்' தொ.பெ. ஈறு.*]

அருக்கல்[2] *arukkal*, பெ. (n.) *அச்சம்*; fear.

[*அருக்கு → அருக்கல்.*]

அருக்களி-த்தல் *arukkaḷi-*, 4 செ.கு.வி. (v.i,) *அஞ்சுதல்* (வின்.); to be frightened. —, 2 செ.குன்றாவி. (v.t.) *அருவருத்தல்*; to loathe, abominate.

[*அருக்குதல் = அஞ்சுதல். அருக்கு = அச்சம். அருக்கு → அருக்களி.*]

அருக்களிப்பு *arukkaḷippu*, தொ.பெ. (vbl.n.) *அருவருப்பு* (இ.வ.); loathing, abomination, repugnance, dislike (Loc.).

[*அருக்களி → அருக்களிப்பு. 'பு' தொ.பெ. ஈறு.*]

அருக்கன் *arukkaṉ*, பெ. (n.) *சுக்கு*; dried ginger (சா.அக.).

[*அருக்கம் = சுக்கு. அருக்கம் → அருக்கன்.*]

அருக்கன்கொம்பு *arukkaṉ-kombu*, பெ. (n.) *சுக்கு*; dried ginger (சா.அக.).

[*அருக்கன் = சுக்கு. கொம்பு = கொம்புபோற் கிளைத்திருப்பது.*]

மறுவ. அருக்கம், அருக்கன்.

இஞ்சியைக் குறிக்கும் 'சருங்கவேர' என்னும் வடசொற்கு, மான்கொம்பு போன்றது என்று பொருள் கூறுவது இங்குக் கவனிக்கத் தக்கது.

அருக்காணி *arukkāṇi*, பெ. (n.) 1. *அருமை*; rareness, preciousness, endearment. அஞ்சு பேருக்கு அருக்காணித் தங்கை. 2. *அழுத்தம்*; reluctance to accommodate, closeness in a bargain (W.).

ம. அரு

[*அருக்கு = அருமை. 'ஆணி' ஒரு பின்னொட்டு (suff.). ஒ.நோ: உச்சாணி, சிரிப்பாணி, விசுக் காணி.*]

அருக்கு[1]**-தல்** *arukku-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *அஞ்சுதல்*; to be afraid, terrified. "பலவிலங் கிற் கருக்கி" (உபதேசகா. சிவவிரத. 66). 2. *மனமின்மை காட்டுதல், செய்யப் பின்வாங்குதல்*; to show disinclination in a bargain. "அம்புவி தனிற்பொன் னுள்ளோ னுலோ வியா யருக்கி னானேல்" (மச்சபு. சங்கிரா. 11).

[*உரு = அச்சம். உரு → அரு → அருகு → அருக்கு. அருக்குதல் = அஞ்சுதல். அருக்கு = அச்சம்.*]

அருக்கு[2]**-தல்** *arukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. *அருமை பாராட்டுதல்*; to cherish, value, regard as precious. "நம்மை அருக்கினான் போ

னோக்கி'' (கலித். 104 : 69-70). 2. சுருக்குதல், **குறைத்தல்;** to reduce in quantity, make scarce. ''மழையருக்குங் கோள்'' (திரிகடு. 50). 3. **காய்ச்சுதல், காய்ச்சி யளவு குறைத்தல்;** to boil. ''நீரருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி'' (பதார்த்த. 1520). 4. **சுண்டக் காய்ச்சுதல்;** to boil down to a thick liquid. 5. **விலக்குதல்;** to stop, put a stop to. ''அருக்குக யார் மாட்டு முண்டி'' (நான்மணிக். 88). 6. **அழித்தல்;** to destroy. ''அரிமுதலோ ருயிரருக்கி'' (உபதேசகா. சிவத்து. 422).

ம. அருக்குக; க., தெ. அருகு.

[அர் → அரி. அரிதல் = சிறிதா யறுத்தல். அரி = சிறியது. அர் → அரு → அருகு. அருகுதல் = குறைதல், சிறுத்தல், அருமையாதல். அருகு (த.வி.) → அருக்கு (பி.வி.).]

அருக்கு³-தல் *arukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) **அணைத்தல், சாரச்செய்தல்;** to embrace. ''அருக்கு மங்கையர் மலரடி'' (திருப்பு. 12).

[அல்லுதல் = பொருந்துதல். அல் → அர் → அரு → அருகு. அருகுதல் = கிட்டுதல், நெருங்குதல், அணைதல். அருகு (த.வி.) → அருக்கு (பி.வி.).]

அருக்கு¹ *arukku*, பெ. (n.) 1. *அருமை*; scarceness, rarity. ''நிதியி னருக்கு முன்னி'' (திருக்கோ. 275). 2. **பெரிதும் அன்புசெய்யப்படுகை;** the state of being dearly loved.

[அருகுதல் = குறைதல். அருகு → அருக்கு = குறைவு, அருமை.]

அருக்கு² *arukku*, பெ. (n.) *அச்சம்*; fear.

[உரு (அச்சம்) → அரு → அருகு → அருக்கு.]

அருக்குகொல்லை *arukku-kollai*, பெ. (n.) **ஆற்றோரத்து நிலம்;** land adjoining a river-bed. 'ஆற்றுப் பெருக்கிலே அருக்குகொல்லைக ளுடைந்தால் நோக்குகிறவர்கள் கைவிட்டுக் கடக்கநின்று கூப்பிடுமாபோலே' (திவ்.திருமாலை. 19, வியா.).

[அருகு = அண்மை. அருகு → அருக்கு + கொல்லை.]

அருகசனி *arugaśaṇi*, பெ. (n.) **பேரேலம்** (மலை.); greater cardamom, *Amomum subulatum* alias *Elettaria cardamum* (சா.அக.).

அருகஞ்சி *arugañji*, பெ. (n.) **சீந்தில்** (மலை.); gulancha (செ.அக.) — **சீந்திற்கொடி;** moon-creeper, bile killer, *Tinosphora cordifolia* or *Menispermum cordifolium* (சா.அக.).

மறுவ. அருகம்

அருகண்மை *aruganmai*, பெ. (n.) **மிக நெருங்கிய அண்மை;** close proximity. ஊர் தொலைவி லில்லை; அருகண்மையில்தா னிருக்கிறது (உ.வ.).

[அருகு (பெ. அல்லது கு.பெ.எ.) = நெருங்கிய பக்கம், நெருங்கிய பக்கமான (அருகிய). அண்மை = நெருங்கிய பக்கம். அருகண்மை = மிக நெருங்கிய பக்கம் (மீமிசைச்சொல்).]

அருகண்மை → அருகாண்மை (வழுச்சொல்) → அருகாமை (வழுச்சொல்).

அருகணம் *arugaṇam*, பெ. (n.) **பச்சைமிளகாய்** green chilly, *Capsicum frutescens* (சா. அக.).

அருகணி *arugaṇi*, பெ. (n.) **பிரண்டை** (மலை.); square-stalked vine (செ.அக.) — **நான்முகப் பிரண்டை;** square-stalked vine, *Vitis quadrangularis* alias *Cissus quadrangulus* (சா.அக.).

அருகணை *aruganai*, பெ. (n.) **நுழைவாயிலின் பக்கம்;** side of a wicket-gate. ''கோபுரத்தில் சேதமான முகவணை அருகணை'' (கோயிலொ. 138).

[அருகு = பக்கம். அணை = சார்பு.]

அருகணோதை *aruganōdai*, பெ. (n.) **பச்சை வாழை;** green plantain, dwarf banana or Chinese banana, *Musa chinensis* (சா.அக.).

அருகதிகம் *arugadigam*, பெ. (n.) **வண்டல் மண்** (புதுவை); alluvium (Poṇḍ.).

[ஒருகா. அரு + வதிகம். வதி = சேறு.]

அருகபம் *arugabam*, பெ. (n.) **குல (சாதி) முத்து;** solid or genuine pearl (சா.அக.).

அருகம்¹ *arugam*, பெ. (n.) **அண்மை;** nearness, neighbourhood (சங்.அக.).

அருகம்² *arugam*, பெ. (n.) 1. **அகில்;** eaglewood. 2. **சீந்தில்** (பரி அக.); gulancha.

ஒ.நோ: அருகஞ்சி

அருகர்¹ *arugar*, பெ. (n.) 1.**அண்மை;** nearness. ''துறக்கநா டருகர்க் கண்டான்'' (கம்பரா. சுந்தர.கடல்தாவு. 1). 2. **அண்மையிலுள்ளவர், அண்மை நண்பர்;** some one in close proximity.

[அருகு + அர். 'அர்' – 1. குற்றியலுகர வீற்றுச் சொல்லீறு. 2. ப.பா. ஈறு.]

அருகர்[2] *arugar*, பெ. (n.) **நிலையாமை** (பொதி. நி.); instability, impermanence.

[*ஒருகா. அருகுதல் = குறைதல். அருகர் = காலங் குறைந்த நிலை.*]

அருகல்[1] *arugal*, பெ. (n.) **அண்மை**; nearness. ''அவனென் னருக லிலானே'' (திவ். திருவாய். 1.9 : 2.). —, தொ. பெ. (vbl.n.) 1. **கிட்டுதல்**; approach. 2. **அணைதல்**; embrace.

[*அருகு → அருகல்.*]

அருகல்[2] *arugal*, தொ.பெ. (vbl.n.) 1. **குறைதல், சுருங்கல்**; decrease, diminution, dwindling, shrinkage, deficiency. ''அருகலிலாய பெருஞ்சீரமரர்கள்'' (திவ்.திருவாய். 1.9 : 3). 2. **சிந்துதல், ஒழுகுதல்**; spilling, leakage. நீரருகிப் பாய்தல் (சங்.அக.). 3. **அருமை** (யாழ்ப்.); rareness. 4. **கண்ணிடுக்குதல்** (சீவக. 3124, உரை); twitching the eye. 5. **உடம்பை வருத்தியொடுக்குதல்**; mortification of body. ''வினைகண் மாற்றிட வருகலும்'' (கந்தபு.பாயிரப், 26) (சங்.அக.). 6. **சாதல்**; dying, death.

[*அருகு → அருகல்.*]

அருகன் *arugaṉ*, பெ. (n.) **தோழன்** (பிங்.); associate, companion, friend.

[*அருகு = அண்மை, பக்கம். அருகன் = உடனிருப்பவன், கூட்டாளி.*]

அருகாண்மை *arugāṇmai*, பெ. (n.) **அருகண்மை** பார்க்க; see *aruganmai*.

அருகால் *arugāl*, பெ. (n.) **கதவுநிலை** (இ.வ.); door frame (Loc.).

[*அருகுகால் → அருகால்.*]

அருகுகால் பார்க்க; see *arugu-kāl*.

அருகாழி[1] *arugāḻi*, பெ.(n.) **கால்விரல்மோதிரம்** (குருபரம். 117); ring worn on the toe.

ஒ.நோ : அறுகாழி

[*ஒருகா. அறுகாழி → அருகாழி. அறுகு = யாளி. ஆழி = மோதிரம். அறுகாழி = யாளி வடிவு பொறித்த மிஞ்சி.*]

அருகாழி[2] *arugāḻi*, பெ. (n.) **மோதிரவகை** (திவ். பெரியாழ். 1.6 : 3, வியா.); a kind of ring (செ.அக.).

அருகி *arugi*, பெ. (n.) **கள்** (வை.மூ.); toddy.

ஒ.நோ : அருத்தி = கள்.

[*ஆர்தல் = உண்ணுதல், பருகுதல். ஆர் → அரு → அருந்து. அரு → அருகு → அருகி. 'இ' செயப்படுபொருளீறு. அருந்துதல் = உண்ணுதல், பருகுதல்.*]

அருகித்தோன்று-தல் *arugi-t-tōṉṟu-*, 5 செ.கு.வி. (v. i.) 1. **அரிதாகத் தோன்றுதல்**; to appear rarely. 'விண்ணிலங் கருகித்தோன்றுமேதகு வடமீனன்றி'' (பாரத. சூது. 201). 2. **சுருங்கித் தோன்றுதல்**; to appear diminished in size or quantity. 'அம்மலை முடிமே லேறிநின்று மீண்டு பார்க்குமிடத்து, முன்னிருந்த மாநிலமும் பின் வந்த மலையிடமுந் தானின்ற விடத்திற்குக் கீழ்ப்பட் டருகித் தோற்றுமா போலும்' (ஒழிவி. பொது. 43, உரை).

[*அருகி + தோன்று.*]

அருகியரத்தம் *arugiyarattam*, பெ. (n.) **பூனைக்காலி** (மலை.); cowhage (செ.அக.) — cat bean, cowitch plant, *Mucana pruriens* alias *Dolichos pruriens* (சா.அக.).

அருகியல் *arugiyal*, பெ. (n.) (இசை) **தாற்பெரும் பண்வகை**; (Mus.) a class of primary melody-types, one of four *perumpaṇ*.

''தென்னுறு பாலை குறிஞ்சியே மருதஞ்
செவ்வழி யென்னுநா னிலத்திற்
பின்னகம் புறமே யருகியன் மற்றைப்
பெருகிய லுறழ''
(கந்தபு. அசுர. சூரனர. 23.)

[*அருகு → அருகியல்.*]

அருகியவழக்கு *arugiya-vaḻakku*, பெ. (n.) **குறைந்த சொல்லாட்சி**; very rare, nearly obsolete usage.

[*அருகுதல் = குறைதல். அருகு → அருகிய (பெ.எ.). வழங்குதல் = ஆளப்படுதல், பயன்படுத்தப்பெறுதல். வழங்கு → வழக்கு (தொ.பெ.).*]

அருகியற்குறிஞ்சி *arugiyaṟ-kuṟiñji*, பெ. (n.) (இசை) **ஒரு குறிஞ்சிப் பண்வகை**; (Mus.) a variety of *kuṟiñji* melody-type (கந்தபு. அசுர. சூரனர. 23).

[*அருகியல் + குறிஞ்சி.*]

அருகியற்செவ்வழி *arugiyaṟ-cevvaḻi*, பெ. (n.) (இசை). **ஒரு செவ்வழிப் பண்வகை**; (Mus.) a variety of *ševvaḻi* melody-type (கந்தபு. அசுர. சூரனர. 23).

[*அருகியல் + செவ்வழி.*]

அருகியற்பாலை *arugiyaṟ-pālai*, பெ. (n.) (இசை) **ஒரு பாலைப் பண்வகை;** (Mus.) a variety of *pālai* melody-type.

[அருகியல் + பாலை.]

அருகியன்மருதம் *arugiyaṉ-marudam*, பெ. (n.) (இசை) **பண்வகை** (சிலப்.8 : 40); (Mus.) a primary melody-type.

[அருகியல் + மருதம்.]

அருகிராவி *arugirāvi*, பெ. (n.) **நெல்வகை** (Nels.); a kind of paddy.

ஒ.நோ : அரிக்கிராவி

அருகு[1]-தல் *arugu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **குறைதல்;** to diminish, to be reduced, to become scarce. ''ஒன்னார் மதிநிலை யருக'' (இரகு. யாக. 34). 2. **அரிதாதல்;** to happen rarely, to be of uncommon occurence. ''அருகுவித் தொருவரை யகற்றலின்'' (கலித். 142 : 2). 3. **மனமொடுங்குதல், அஞ்சுதல்;** to be afraid, to fear. ''அஞ்செஞ் சாய லருகா நணுகும்'' (சிலப். 30 : 126). 4. **நோவுண்டா தல்** (வின்.); to smart, prick, pain. **ஒ.நோ :** அருவு. 5. **கெடுதல், சாதல்;** to be ruined, to perish, die.

ம. அருகுக; க., பட. அருகு; தெ. உருகு; து. அரு.

[அல் = சிறு துண்டு. அல்குதல் = சுருங்குதல், குறைதல். அல் → அர் → அரு → அருகு.]

அருகு -தல் *arugu-*, செ.கு.வி. (v.i.) **பெருகு தல்;** to increase. ''அருகு நேமிபா தாளம்'' (தக்கயாகப். 104). —, 5 செ. குன்றாவி. (v.t.) 1. **கிட்டுதல்** (சூடா.); to approach. 2. **அறி தல்** (இறை. 11, உரை); to know. தெ. எருகு. 3. **குறிப்பித்தல்** (இறை. 11, உரை); to indicate one's intention.

[அல்லுதல் = பொருந்துதல், பொருத்துதல் (முடைதல், பின்னுதல்), மிகுதல், பெருத்தல். அல் → அர் → அரு → அருகு.]

அருகு[1] *arugu*, பெ. (n.) 1. **அண்மை;** nearness, contiguity, neighbourhood. ''சுயோதன னுக் கருகா சனத்தர்'' (பாரத. திரௌ. 36). 2. **ஓரம்;** border, edge, vicinity. ''மொய்ம் மலரைத் தும்பி யருகுடைக்கும் நன்னாட் டரசு'' (நள. கலிநீங். 21). 3. **பக்கம்;** side. 'அவ்வருகு கடத்தும் ஓடம்' (ஈடு). 4. **இடம்** (பிங்.); place.

ம. அருவு, அரிதெ; க. அருகு; து. அரு; தெ. இருகு; மா. அர்கே.

[அல்லுதல் = பொருந்துதல், நெருங்குதல். அல் → அர் → அரு → அருவு → அருகு.]

அருகு[2] *arugu*, பெ. (n.) (இசை) **நாற்பகுப்புள் ஒன்றான அருகியல் என்னும் பண்வேறுபாடு, பெருகு என்பதற்கு எதிர்;** (Mus.) one of the four modes of primary melody-types, opp. to *perugu*.

''சால்புறு மகம்பு றத்தோ டருகொடு
பெருகுஞ் சாரல்
நூ லுணர்ந் துறழி னூற்று மூன்றதா
நுவலும் பண்ணே''
(கூர்மபு. கண்ணன் மண. 158).

[அல் → அல்கு. அல்குதல் = சுருங்குதல், குறைதல். அல் → அர் → அரு → அருகு. பெருகு என்னும் எதிர்ச்சொல்லை இதனொடு ஒப்பு நோக்குக.]

அருகு[3] *arugu*, பெ. (n.) **பண்டைநாளில் ஒரு பெருமகன்முன் பிடித்துச் செல்லும் மதிப்புரவுச் சின்னமான தீவட்டி** (வின்.); torch (single or double) carried before a great person, in olden days.

[உல் → உர் → உரு → அருகு. உருத்தல் = அழலுதல். அருகு = நெருப்பு.]

அருகுகண்டம் *arugu-kaṇḍam*, பெ. (n.) **பதக்க அணிவகை** (S.I.I. viii, 53); a jewel pendant.

அருகுகால் *arugu-kāl*, பெ. (n.) **கதவுநிலை** (இ.வ.); threshold, door frame (Loc.).

[அருகு = ஓரம். கால் = நிலை.]

அருகுசாதி *arugu-šādi*, பெ. (n.) (இசை) **ஆசான் குலப் பண்வகைகளுள் ஒன்று;** a class of *āšāṉ* melody-type. 'ஆசான் என்னும் பண்ணிய லாகிய நால்வகைச் சாதி... ஆசான் சாதி நால் வகை யாவன: ஆசானுக்கு அகச்சாதி காந்தாரம், புறச்சாதி சிகண்டி, அருகுசாதி தசாக்கரி, பெருகுசாதி சுத்த காந்தாரமெனக் கொள்க' (சிலப். 13 : 112, அடியார்க். உரை).

[அருகியல் → அருகு. **Skt.** jāti > த. சாதி (குலம்).]

அருகுதை-த்தல் *arugu-tai-*, 4 செ.குன்றாவி. (v.t.) **மடித்துத் தைத்தல்;** to hem.

[அருகு → ஓரம். அருகுதைத்தல் = ஓரத்தில் மடித்துத் தைத்தல்.]

அருகுமணிச்சேலை *arugu-maṇi-c-cēlai*, பெ. (n.) புடைவைவகை (பஞ்ச. திருமுக. 1163); a kind of saree.

[அருகு + மணி + சேலை.]

அருகுவை-த்தல் *arugu-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) **குழந்தைகட்கு இழுப்பு வரும்போது சூடு போடுதல்** (இ.வ.); to brand children with the intention of arresting convulsions (Loc.).

[உல் → உர் → உரு. உருத்தல் = அழலுதல். உரு → அரு → அருகு = சூடு. ஒ.நோ : உல் → உர் → (க.) உரி → அரி → நெருப்பு.]

அருகுறல் *arugural*, தொ.பெ. (vbl.n.) **கிட்டுதல், பக்கத்தில் வருதல்;** to approach, get near. "ஆன்றவிச் செல்வமித் தனையுமொய்த் தருகுற" (கம்பரா. பால. எதிர். 29).

[அருகு + உறு – அருகுறு (முதனிலை) → அருகுறல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அருகோலம் *arugōlam*, பெ. (n.) **அந்தி மல்லிகை;** a flower that blossoms at 4 p.m., *Mirabilis jalapa* (சா.அக.).

அருங்கதி *aruṅgadi*, பெ. (n.) **பேரின்ப வீடு;** heaven, which is difficult to attain. "பெருந்தவர் குழுவு மருங்கதி யிருப்பும்" (கல்லா. 25).

[அரு = பெறற்கு அரிய. **Skt.** *gati > த. கதி = செலவு, புகலிடம்.]*

அருங்கல்[1] *aruṅgal*, தொ. பெ. (vbl. n.) **சுருங்குகை** (சம்.அக.); diminution, contraction.

[அருகுதல் = குறைதல், சிறுத்தல், சுருங்குதல். அருகு → அருங்கு → அருங்கல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அருங்கல்[2] *aruṅgal*, பெ. (n.) **சார்வு** (சம்.அக.); dependence.

[அருகுதல் = நெருங்குதல், சார்தல். அரு → அருகு → அருங்கு → அருங்கல்.]

அருங்கலச்செப்பு *aruṅgala-c-ceppu*, பெ. (n.) 1. **அணிகலப் பெட்டி;** jewel casket. "ஆயிரங் கண்ணோ னருங்கலச் செப்பு வாய்திறந் தன்ன" (சிலப். 14 : 68). 2. **குறள்வெண்பாவால் இயற்றப்பட்ட ஒரு சமண அறநூல்;** name of a Jaina ethical treatise in *kuṟaḷ veṇbā*.

[அரு + கலம் + செப்பு.]

அருங்கலச்செவ்விதழ் *aruṅgala-c-cevvidaḻ*, பெ. (n.) **பொற்றாமரை;** red lotus, *Nelumbium speciosum* (சா.அக.).

[அருங்கலம் + செவ்விதழ்.]

அருங்கலப்பாவை *aruṅgala-p-pāvai*, பெ. (n.) **மணிபதித்த பாவை;** "ஆய்கலைப் பாவை யருங்கலப் பாவை" (சிலப். 12 : 71); gem-studded figure.

[அருங்கலம் + பாவை.]

அருங்கலம் *aruṅgalam*, பெ. (n.) 1. **அணிகலம்;** ornament, jewel. "அருங்கல வெறுக்கையொ டளந்துகடை யறியா" (சிலப். 5 : 20). 2. **விலையுயர்ந்த அணிகலம்;** precious ornament. "பெண்ணினிற் கருங்கல மனைய பெய்வளை" (கம்பரா. கிட்கிந்தா. கார்கால. 20). 3. **அழகு செய்யும் பொருள்;** that which adorns, beauty aids. "பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை" (தேவா. 4.11 : 2). 4. (சமணம்) **மும்மணி (இரத்தினத் திரயம்) என்னும் சமணப் பண்புகள் மூன்று; அவை நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் என்பன;** (Jaina) the three gems, *Right faith*, *Right knowledge*, and *Right conduct* which sum up the beliefs and tenets of the Jaina cult. "நாதர் நுவன்ற வருங்கலம்" (திருநூற். 70).

[அரு (அரிய) + கலம். ஒருகா. கல் (ஒளிக் கல், மணி) → கலம். இனி, கலம் = பொன்னிலும் வெள்ளியிலும் செதுக்கிச் செய்யப்பட்ட அணிப்பொருள் என்றுமாம். கல்லுதல் = தோண்டுதல், செதுக்குதல்.]

அருங்கலைநாயகன் *aruṅgalai-nāyagaṉ*, பெ. (n.) **புத்தன்** (திவா.); the Buddha, one well-versed in sacred lore.

[அரு (அரிய) + கலை (கல்வி, நூல்) + நாயகன் (தலைவன்).]

அருங்கலைவினோதன் *aruṅgalai-viṉōdaṉ*, பெ. (n.) **சிறந்த நூற்பயிற்சியை இன்ப விளையாட்டாகக் கொண்டவன், ஆராய்ச்சி செய்து அரிய கலையும் அறிவியலும் வளர்ப்பதில் இன்புறுபவன்;** person devoted to learning as a recreation, one whose time is pleasantly spent in cultivating arts and sciences. "அருங்கலை வினோத னமரா பரணன்" (நன். சிறப்புப்பாயி.).

[அரு + கலை + **Skt.** *vinōda > த. வினோதம் = விளையாட்டு, இன்பப் பொழுதுபோக்கு, மனமகிழ்ச்சி. வினோதம் → வினோதன்.]*

அருங்கவி *aruṅgavi*, பெ. (n.) **பல்வேறு சித்திரங் கட்குள் அமைக்கக்கூடிய அரும்பா, சித்திரப்பா**; a variety of metrical composition fitted into fanciful figures. 2. **அரும்பாப் பாடுவோன், சித்திரப்பாப் புலவன்**; poet who composes *cittirappā*. 'சித்திரகவி யாவான், மாலைமாற்று முதலாய அருங்கவி பாடும் நன்மையை யுடையான்' (யாப்.வி. 96, உரை, பக். 513).

[அரு + **Skt.** kavi = பா, பாவலன்.]

அருங்காவல் *aruṅgāval*, பெ. (n.) **கடுஞ்சிறை** (வின்.); rigorous imprisonment, strict confinement.

[அரு = கடுமையான. காவல் = சிறை.]

அருங்கிடை *aruṅgiḍai*, பெ. (n.) 1. **கடும் பட்டினி**; extreme hunger from long abstinence. 2. **நோயாற் படுத்த படுக்கையா யிருக்கை**; being confined to the bed from protracted illness.

[அரு + கிடை. கிட → கிடை = கிடத்தல், படுத்திருத்தல். 'ஐ' தொ.பெ. ஈறு.]

அருங்கு *aruṅgu*, பெ. (n.) **அருமை**; rareness. "உறலருங் குண்மையின்" (தொல். பொருள். கற். 5).

[அர் → அரு → அருகு → அருங்கு. அருகுதல் = குறைதல், சிறுத்தல், அரிதாதல், அருமையாதல்.]

அருங்கேடன் *aruṅ-kēḍaṉ*, பெ. (n.) 1. **கேடில் லாதவன்**; one free from destruction. "அருங் கேட னென்பு தறிக" (குறள், 210). 2. **மிகக் கெட்டவன்** (சங்.அக.); a very wicked man.

[அரு = அரிய, இல்லாத. அருங்கேடன் (கேடரியன்) = இல்லாத கேடன், கேடில்லாதவன். கேடு → கேடன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அருங்கேடு *aruṅ-kēḍu*, பெ. (n.) **கேடின்மை**; being free from destruction or destructive causes. "அருங்கேட்டா லாற்ற விளைவது நாடு" (குறள், 732).

[அரு (அரிய, இல்லாத) + கேடு. அருங்கேடு = கேடருமை (கேடின்மை). கெடு → கேடு.]

அருங்கொடைத்தானம் *aruṅgoḍai-t-tāṉam*, பெ. (n.) **தலையாய தானம்**; supreme gift.

"அருங்கொடைத் தான மாய்ந்த
வருந்தவந் தெரியின் மண்மேன்
மருங்குடை யவர்கட் கல்லான்
மற்றவர்க் காவ துண்டே" (சீவக. 2924).

[அரு (அரிய, சிறந்த) + கொடை + தானம்.]

அருங்கோடை *aruṅgōḍai*, பெ. (n.) 1. **வேனிற் காலத்தின் வெப்பமிக்க பகுதி**; the hottest part of summer. 2. **தீ நாள் (அக்கினி நட்சத்திரம்)**; dog-days (சா.அக.). 3. **வறட்காலம்** (வின்.); severe drought.

[அரு + கோடை.]

அருச்சந்தம் *aruccandam*, பெ. (n.) **பித்தளை** (புதுவை); brass (Poṇḍ.).

அருச்சனம் *aruccaṉam*, பெ. (n.) **நெல்வகை** (பறாளை. பள்ளு. 23); a kind of paddy.

அருசகம் *arušagam*, பெ. (n.) **சேங்கொட்டை**; marking-nut, the nut of *Semicarpus anacardium* (சா.அக.).

அருசகா *arušagā*, பெ. (n.) **பப்பரப்புளி**; brahmin tamarind, *Adansonia digitata* (சா. அக.).

மறுவ. பார்ப்பாரப்புளி, பொந்தப்புளி.

அருசம் *arušam*, பெ. (n.) 1. **சீந்தில்**; moon creeper, *Menispermum cordifolium*. 2. **மூலம்**; piles or haemorrhoids. 3. **மூக்கில் வளர்ந்த சதை**; a fleshy growth on the mucous surface of the nose, *polypus* (சா.அக.).

அருசாகுமிழ் *arušā-kumiḻ*, பெ. (n.) **பெருங் குமிழ்**; bell vervain, *Gmelina arborea* (சா.அக.).

மறுவ. அருசாவிரா, அருசா.

அருசாரை *arušārai*, பெ. (n.) **நாளா**; a kind of plant (சா.அக.).

அருசாவிரா *arušāvirā*, பெ. (n.) **பெருங்குமிழ்** (பச்.மூ.); coomb-teak.

அருசாகுமிழ் பார்க்க; see *arušā-kumiḻ*.

ஒ.நோ: அரிசா

அருசிவசமவாதி *aru-šiva-šama-vādi*, பெ. (n.) **ஆதனறிவும் (ஆன்மசித்தும்) சிவனறிவும் (சிவ சித்தும்) ஒத்து வேறாய் நிற்குமென்னுங் கொள்கையன்** (சி.சி. 11 : 11, சிவஞா.); one who holds that the Soul and Šiva would stand aloof being intellectually equal.

[அ + உருவம் + சிவன் + சமம். **Skt.** vādin > **த.** வாதி. அல் → அ. உரு → உருவு → உருவம். உருவம் > **Skt.** rūpa.]

அருஞ்சிலைக்கல் *aruñjilai-k-kal*, பெ. (n.) **கெண்டகச்சிலை**; a kind of black stone used in medicine, one of 120 natural bodies acc. to Tamil Medical Science (சா.அக.).

[அரு + சிலை + கல். 'சிலை' தென்சொல்லா வடசொல்லா வென்னும் ஐயுறவிற் கிடமானது.]

மறுவ. அருட்சிலை

அருஞ்சிறை[1] *aruñjiṟai*, பெ. (n.) 1. கடுங்காவல்; rigorous imprisonment. "அற்புத னரக்கர்தம் வருக்க மாசற விற்பணி கொண்டருஞ் சிறையின் மீட்டநாள்" (கம்பரா. சுந்தர. உருக்கா. 20). 2. நரகம் (பிங்.); hell.

[அரு = கடிய, கொடிய. சிறைத்தல் = ஒன்றன் இயக்கத்தைத் தடுத்து ஓரிடத்திருத்துதல். சிறை (முத.தொ.பெ.) = தடுத்துச் செய்யுங் காவல். 'செறி', 'செறு' என்பன தொடர் புடைய சொற்கள்.]

அருஞ்சிறை[2] *aruñjiṟai*, பெ. (n.) அரிய சிறகு; rare type of wing. "அருஞ்சிறை பெற்ற மேருவ தென்ன" (கந்தபு. தேவ. தெய்வ. 48).

[அரு + சிறை. சிறகு → சிறை.]

அருஞ்சுரம் *aruñjuram*, பெ. (n.) 1. கடத்தற் கரிய வெம்பாலை நிலம்; bare, open, torrid plain. 2. கடுங்காய்ச்சல்; a severe type of fever, *Hyperpyrexia* (சா.அக.).

[அரு + சுரம். சுள் → சுர் → சுரம் = சுடும் பாலை, சுடுங்காய்ச்சல்.]

அருஞ்சோதி *aruñjōdi*, பெ. (n.) நெல்வகை (ஏரெழு.உரை); a kind of paddy (செ.அக.) — ஒருவகைச் சிவப்புநெல்; a kind of red paddy (சா.அக.).

[அரு + Skt. jyotis > த. சோதி = ஒளி.]

அருட்கண் *aruṭ-kaṇ*, பெ.(n.) 1. அருள்நோக்கம்; gracious look. 2. ஓதிக்கண் (ஞானக்கண்) (சி.போ. 5.2 : 3); eye of wisdom.

[அருள் + கண்.]

அருட்கரம் *aruṭ-karam*, பெ (n.) சேங்கொட்டை; marking-nut tree, *Semicarpus anacardium* (சா. அக.).

[அருள் + ஒருகா. Skt. kara.]

அருட்குடையோன் *aruṭ-kuḍaiyōṉ*, பெ. (n.) அருளைக் குடையாகக் கொண்ட கடவுள்; God, as benevolent (W.).

[அருள் + குடையோன்.]

அருட்குறி *aruṭ-kuṟi*, பெ. (n.) சிவ இலங்கம் (சிவலிங்கம்); Śiva-linga, the symbol of divine grace. "ஆனுயர்த்தவ னருட்குறி யருச்சனை" (காஞ்சிப்பு. சார்ந்தா. 21).

[அருள் + குறி.]

அருட்கேவலம் *aruṭ-kēvalam*, பெ. (n.) மெய்ப் பொருட் டுப்புரவின் பின் ஏற்படுந் தனிமை (தத்துவசுத்தியின் பின்னர்ப்படுங் கேவலம்) (சி. போ. 6 : 6 சிவஞானமுனி) (சங்.அக.); solitariness of the soul following its spiritual experience in which the soul is no longer influenced by the 36 Reals (tattvas) and realizes itself to be an entity different from them.

[அருள் + Skt. kēvala > த. கேவலம்.]

அருட்கொடியோன் *aruṭ-koḍiyōṉ*, பெ. (n.) அருகன் (சூடா.); Arhat, the Lord whose banner is grace.

[அருள் + கொடியோன். கொடி → கொடி யோன். 'ஓன்' உடைமை குறித்த ஆ.பா. ஈறு.]

அருட்கொடிவேந்தன் *aruṭ-koḍi-vēndaṉ*, பெ.(n.) அருட்கொடியோன் பார்க்க; see *aruṭ-koḍiyōṉ*.

[அருள் + கொடி + வேந்தன் (பேரரசன், பெருந்தலைவன், இறைவன்.]

அருட்கொடையோன் *aruṭ-koḍaiyōṉ*, பெ. (n.) (அருள் செய்யும் அல்லது பல செல்வங்களை அருளிக் கொடுக்கும்) கடவுள் (சங்.அக.); God, the gracious one or the giver of wealth.

[அருள் + கொடையோன். கொடு → கொடை → கொடையோன். 'ஓன்' வி.முத. குறித்த ஆ.பா. ஈறு.]

அருட்சத்தி *aruṭ-catti*, பெ. (n.) பரை, பரை யாற்றல் (பராசத்தி); Śiva's supreme energy. "முன்னருட் சத்தி தன்பான் முகிழ்க்குந்தான் முளையா னன்றே" (சி.சி.சுபக். 1 : 68).

[அருள் + Skt. sakti > த. சத்தி = ஆற்றல்.]

அருட்சி[1] *aruṭci*, பெ. (n.) அரட்சி பார்க்க; see *araṭci*.

[அரட்சி → அருட்சி.]

அருட்சி[2] *aruṭci*, பெ. (n.) அருளுதல் (சங்.அக.); to be gracious.

அருள்[ளு][1]-தல் பார்க்க; see *aruḷ-*[1].

அருட்சித்தி *aruṭ-citti*, பெ. (n.) இதள் (பாதரசம்) (வின்.); quicksilver.

[அருள் + Skt. siddhi > த. சித்தி.]

அருட்சிலை *aruṭ-cilai*, பெ. (n.) ஒருவகைக் கருங்கல்; a black granite stone (சா.அக.).

அருஞ்சிலைக்கல் பார்க்க; see *aruñjilai-k-kal*.

அருட்செல்வம் *aruṭ-celvam,* பெ. (n.) 1. **அருளாகிய செல்வம், பொருட்செல்வம் என்பதற்கு எதிர்;** wealth of grace, opp. to *porutcelvam.* "அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம்" (குறள், 241). 2. **இறைவனருள்;** wealth of divine grace.

[அருள் + செல்வம்.]

அருட்சோதி *aruṭ-cōdi,* பெ. (n.) 1. அருட்பெருஞ் சுடராகிய கடவுள்; God, the embodiment of effulgent grace. 2. **அருட்பெருஞ்சுடர்;** the effulgence of grace. "அருட்சோதித் தெய்வ மென்னை யாண்டு கொண்ட தெய்வம்" (அருட்பா. பரசிவ. 1). 3. **ஒருவகைக் கனியச் செய்ந்நஞ்சு (கௌரி பாடாணம்)** (மூ.அ.); a mineral poison.

[அருள் + **Skt.** jyotis > **த.** சோதி = ஒளி.]

அருட்டரிசனம் *aruṭ-ṭarišaṉam,* பெ. (n.) **தெய்வக் காட்சி (தெய்வதரிசனம்)** (ஒழிவி. விரத்தி. 9, உரை); vision of divine grace (செ.அக.).

அருட்டெரிசனம் — 'சூரியோதயத்திலே இருளு நட்சத்திரமுமின்றிச் சூரியப் பிரகாச மாத்திரங் கண்ட கண்போல, அருள் தோற்றிய காலத்துக் கேவல விருளுங் கருவிக் கூட்டங்களுந் தோன்றாது அருளை மாத்திரம் ஆன்மாக் கண்டுகொண்டிருப்பது' (ஒழிவி. விரத்தி. 9, உரை) (சங்.அக.).

[அருள் + தரிசனம். **Skt.** daršana > **த.** தரிசனம்.]

அருட்டி *aruṭṭi,* பெ. (n.) 1. **அச்சம்** (சங்.அக.); fear, dread. 2. **நடுக்கம்** (வின்.); quaking, trembling, agitation.

ம. அரள்ச்ச; **க.** அரள்.

[அரள் → அருள் → அருட்டு → அருட்டி.]

அருட்டு-தல் *aruṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. **மயக்குதல்;** to confuse, bewilder, frighten. "அருட்டிக்கண் சிமிட்டி" (திருப்பு. 647). 2. **துயிலுணர்த்துதல்;** to wake up. 3. **எழுப்பி விடுதல்;** to rouse to action, wake from inactivity. 4. **ஏவிவிடுதல், தூண்டிவிடுதல்;** to excite, instigate.

ம. அரட்டுக

[அரள் → அருள் → அருட்டு.]

அருட்பா *aruṭ-pā,* பெ. (n.) 1. **தேவாரம் திருவாசகம் போல இறைவன் ஏவியெழுப்பலாற் பாடப்பட்ட செய்யுள் அல்லது பாட்டு;** poems or songs produced under divine inspiration, as *Tēvāram* and *Tiruvāšagam.* 2. **இராமலிங்க அடிகளின் பாடல், திருவருட்பா;** poems and songs composed by *Rāmalinga Aḍigaḷ, Tiruvaruṭpā.*

அருட்புரி *aruṭ-puri,* பெ. (n.) (இசை) **குறிஞ்சி யாழ்த்திற வகைகளுளொன்று** (பிங்.); (Mus.) a secondary melody-type of the *kuriñji* class.

அருண்முனி *aruṇ-muṉi,* பெ. (n.) **அருகன்;** Arhat. "அங்கம் பயந்தோ னருக னருண் முனி" (சிலப். 10:187).

[அருள் + முனி.]

அருண்மொழி *aruṇ-moḻi,* பெ. (n.) **அருளொடு கூடிய சொல் அல்லது பேச்சு;** gracious word or speech, as uttered by God.

[அருள் + மொழி.]

அருண்மொழித்தேவர் *aruṇ-moḻi-t-tēvar,* பெ. (n.) பெரியபுராண ஆசிரியரான **சேக்கிழார்** (சேக்கிழார்பு. 18); *Šēkkiḻār* the author of *Periyapurāṇam.*

[அருள் + மொழி + தேவர்.]

அருணகமலம் *aruṇa-kamalam,* பெ. (n.) **செந்தாமரை;** red lotus, *Nelumbium speciosum* (சா.அக.).

[அருணம் = சிவப்பு. கமலம் = தாமரை.]

அருணம், கமலம் பார்க்க; see *aruṇam, kamalam.*

அருணகிரி *aruṇa-giri,* பெ. (n.) 1. **திருவண்ணாமலை, ஒரு பெயர் பெற்ற சிவநகர்;** *Tiruvaṇṇāmalai,* a famous Šiva shrine. 2. **அருணகிரிநாதர்;** *Aruṇagirinādar.* "வாக்கிற் கருணகிரி" (தனிப்பா.).

[1. அருணம் + **Skt.** giri > **த.** கிரி (மலை). 2. அருணகிரிநாதர் → **அருணகிரி (குறுக்கம்).** ஒருகாலத்தில், திருமாலும் நான்முகனும் அடி முடி யறியாவாறு சிவபெருமான் நெடிய அழற் பிழம்பாய் நின்ற வுருவம் அருணமலையாயிற் றென்பது தொன்மக்கதை. அருணமலை → அண்ணாமலை (மரூஉ).

அருணம் = சிவப்பு, அழல்நிறம்.]

அருணகிரிநாதர் *aruṇagiri-nādar,* பெ. (n.) **15ஆம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில் வாழ்ந்தவரும், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருவகுப்பு, வேல்விருத்தம்,**

உடற்கூற்று வண்ணம் முதலிய பனுவல்களின் ஆசிரியருமாகிய பெரும்பாவலர்; name of a great poet who lived in *Tiruvaṇṇāmalai* in the 15th century, author of the *Tiruppugal* and other works.

அருணகிரிநாதர் என்பது, அருணகிரி என்னும் திருவண்ணாமலையிற் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான் பெயர். அஃது அவருக்கு அவருடைய பெற்றோரின் சிவபத்தியா லிடப்பட்டது.

அருணகுட்டம் *aruṇa-kuṭṭam*, பெ. (n.) உடம்பு முழுதுங் கருஞ்சிவப்புத் தழும்புகள் பரவிக் குத்தலெடுத்துத் தோலில் திமிருண்டாகும் நோய், செங்குட்டம்; a kind of leprosy marked by well-defined reddish brown patches spreading all over the body, pricking pain and insensibility of the skin, macular leprosy (சா.அக.).

தெ. அருணமு

[அருணம் = சிவப்பு. குள் → குட்டம் = குறுமை, கை கால் விரல் மூக்கு முதலிய வுறுப்புகள் அழுகிக் குறுகுந் தொழுநோய்.]

குட்டம் பார்க்க; see *kuṭṭam*.

அருணச்சிவப்பு *aruṇa-c-civappu*, பெ. (n.) எழுங்கதிரவன் போன்ற செந்நிறம்; bright red colour like that of the rising sun (சா.அக.).

[அருணம் = சிவப்பு. சிவ → சிவப்பு. 'பு' பண். பெ. ஈறு.]

அருணந்திசிவாசாரியார் *aruṇandi-śivaśāriyar*, பெ. (n.) பதின்மூன்றாம் நூற்றாண்டினரும், வழிமுறைக் (சந்தான) குரவருள் ஒருவரும், சிவஞான சித்தியார், இருபாவிருபஃது என்னும் நூல்களின் ஆசிரியருமான சிவாசாரியார்; name of a Śaiva preceptor, author of the *Śivañāṉa śittiyār* and the *Irupāvirupakḏu*, of 13th century, one of the four *śandāṉa kuravar*.

[அருள் + நந்தி + சிவ + ஆசாரியார். ஆசிரியர் > **Skt.** ācārya.*]*

அருணம்[1] *aruṇam*, பெ. (n.) *1.* சிவப்பு; red, bright red. ''அருண மேனி'' (பாரத. இராச. 105). 2. கருஞ்சிவப்பு; dark-red. *3.* செம்பு; ruby (சா.அக.). 4. சிந்தூரம் (இராசவைத்.); red lead or red oxide. 5. செம்பு; copper (சா.அக.). 6. செம்பொன்; superior gold. 7. சிவப்பு ஆன் (பசு) அல்லது பெற்றம்; red cow or bull (சா.அக.). 8. செம்மறியாடு (பிங்.); ram or ewe (சா.அக.). 9. மான் (பிங்.); deer. 10. சிவப்பெலி; a rat of a dark-red colour (சா.அக.). 11. அருணன் (செங்கதிரவன்) எழும் விடியற்காலம்; dawn. 12. செவ்வானம் (நாநார்த்த.); evening sky. 13. செங்குட்ட நோய் (நாநார்த்த.); red leprosy. 14. ஒரு பூண்டு; a plant, *Rottloria tinctoria* (சா.அக.).

ம. அருணம்; க., து. அருண; தெ. அருணமு; **Mar., Sinh., Pali** aruṇa.

[உரு → அரு → அருணம் = சிவப்பு.]

உல் → உல → உலவை = காய்ந்த மரக் கொம்பு. உல → உலர். உலர்தல் = காய்தல். உல → உலை = நெருப்புள்ள அடுப்பு, கொல்லனுலை. உல் → இல் → எல் = ஒளி, வெயில், கதிரவன். எல் → எர் → எரி = நெருப்பு, சிவப்பு. எரிமலர் = செந்தாமரை, முருக்கமலர். எரங்காடு = செம்மண் நிலம். தெ. எர்ர = சிவப்பு.

உல் → உர் → உரு. உருத்தல் = அழலுதல். உர் → உரி (க.) = நெருப்பு. உரு → உரும் → உருமி. உருமித்தல் = வெப்பமாதல். உருமம் = வெப்பம். உரும் → உரும்பு = கொதிப்பு. உரும்பு → உருப்பு = வெப்பம். உருப்பம் = வெப்பம். உரும்பு → உரும்பரம் = செம்பு, பெருங்காயம். உரும்பதம் → உதும்பரம் = செம்பு, செவ்வகத்தி, அத்தி.

உல் → அல் → அலத்தம் = செம்பருத்தி. அலத்தகம் = செம்பஞ்சுக் குழம்பு. அலத்தி = மின்மினி. அலந்தல் = செங்கத்தரி. அலத்தகம் → அரத்தகம் = செம்பஞ்சுக் குழம்பு.

இல் → இலந்தை = செம்பழ முட்செடி. இல் → இர் → இரத்தி = இலந்தை.

அல் → அர் → அரம் = சிவப்பு. அரம் → அரன் = சிவன். (ஹர > அரன் = அழிப்பவன் என்பது பிற்கால ஆரியக் கருத்து.) அர் → அரக்கு = சிவப்பு, செம்பிசின் போன்ற சரக்கு, சாதிலிங்கம். அரக்காம்பல் = செவ்வாம்பல். அரக்கு → அரக்கம் = அரத்தம், அவலரக்கு. அர் → அரத்தம் = சிவப்பு, குருதி, அரக்கு, பவளம், செம்பரத்தை, செங்கழுநீர், செம்பருத்தி. அரத்தன் = செவ்வாய். அரத்தம் → அத்தம் → அத்தி. அத்தம் → அதம் → அதவு → அத.

நெருப்புச் செந்நிற மாதலால், நெருப்பைக் குறிக்குஞ் சொல்லினின்று, சிவப்பையுஞ்

செம்பொருள்களையும் குறிக்குஞ் சொற்கள் திரிந்துள்ளன.

உரு → அரு → (அரணம்) → அருணம் = சிவப்பு, சிவப்பின் ஒருவகைப் புகர் (brown). அதனால் அருணம் என்பது மானையுங் குறிக்கும். ஆயின், **மானியர் வில்லியம்சு சமற்கிருத - ஆங்கில அகரமுதலி**, சிவப்பைக் குறிக்குஞ் சொல்லை 'அருண' என்றும், மானைக் குறிக்குஞ் சொல்லை 'ஹரிண' என்றும் வேறுபடுத்தி, முன்னதை 'ரு' என்னும் வேரினின்றும், பின்னதை 'ஹரி' என்னும் வேரினின்றும் திரிக்கின்றது. 'ரு' என்னும் வேருக்கு அது குறித்துள்ள பொருள்கள் (1) 'ரு' என்னும் எழுத்து, (2) சிரிப்பை யுணர்த்தும் ஒலிக்குறிப்பு, (3) வானம், (4) இயங்கு (to go, move) என்னும் நான்கே. இவற்றுள் ஒன்றேனும் சிவப்பு என்னும் பொருளொடு தொடர்புடையதாயில்லை. 'ஹரி' என்னும் வேர் அல்லது அடி, பசுமை மஞ்சள் என்னும் இருபொருளை யுணர்த்தும். புகர்நிறத்திற்கு மஞ்சளைவிடச் சிவப்பே நெருங்கிய தென்பது தெள்ளத்தெளிவானது. இதனால், 'அருண' என்பதன் திரிபே 'ஹரிண' என்பது அறியப்படும்.

சமற்கிருதத்தில் நூற்றுக்கணக்கான அடிப் படைச் சொற்கள் தமிழாயிருத்தலால், இதை மறைத்தற்கு வடமொழியாளர் பலவகைச் சொற்றிரிப்புகளையும் பொருட்டிரிப்புகளை யும் கையாண்டிருக்கின்றனர்.

அத்திமரத்தைக் குறிக்கும் 'உதும்பரம்' என்னுஞ் சொல், வேதத்தில் 'உதும்பர' என்றும் பிற்கால இலக்கியத்தில் 'உடும்பர' என்றும் குறிக்கப்பட்டுள்ளதென்றும், உதும்பர (udumbara) என்னுஞ் சொல்லிற்கு வேர்காட்ட வேண்டியே உதும்பர (udumbhara) என்னும் சொல் புனையப்பட்டுள்ள தென்றும், மானியர் வில்லியம்சு கூறியிருத்தல் காண்க.

'*udumbhara*, m. (fr. *bhṛi* with *ud*), a word coined for the etymological explanation of *udumbàra*, Š.Br. vii, 5, 1, 22.' (p. 186, col. 3).

அருணம்[2] *aruṇam*, பெ. (n.) *1.* **இடைக்கால விலக்கியத்திற் கூறப்படும் ஐம்பத்தாறு நாடு களுள் ஒன்று** (சங்.அக.); one of the 56 ancient countries mentioned in the medieval literature. *2.* **அந்நாட்டு மொழி** (சங்.அக.); the language of that country. *3.* **யானை** (அக.நி.); elephant.

[அருமணம் → அருணம். அருமணம் என்பது ஒரு கீழத்திசைத் தீவே யன்றி நாடன்று. அத் தீவினின்று கொண்டுவரப்பட்ட யானை அரு மணவன் எனப்பட்டது.]

அருமணம், அருமணவன் பார்க்க; see *arumaṇam, arumaṇavaṉ*.

அருணமணி *aruṇa-maṇi*, பெ. (n.) **செந்நிற ஒளிக்கல், மாணிக்கம்**; ruby. "அருண மணி சூழ் பாதலத்தில்" (ஞானவா.பிரகலா. 47).

ம. அருணமணி

[அருணம் + மணி. மண் → மண்ணி → மணி = கழுவித் துலக்கப்பட்டது.]

அருணர் *aruṇar*, பெ. (n.) **சான்மலித் தீவின் அரசர்**; the kings of Šāṉmali, an island-continent. "மன்னவரை மாறெறி வடிவே லருணரென் றுரைப்பர்" (கூர்மபு.பிலக்க.24) (சங்.அக.).

அருணரி *aruṇari*, பெ. (n.) *பாழ்நிலம்;* waste land (சா.அக.).

அருணவூரி *aruṇa-v-ūri*, பெ. (n.) **மழைக் காலத்தில் ஊர்ந்து திரியும் தம்பலப்பூச்சி (இந்திரகோபம்)**; cochineal insect (செ.அக.).

An insect of crimson red colour, appearing in the rainy season, lady fly or scarlet moth, *Mutella occidentalis* (சா.அக.).

[அருணம் (சிவப்பு) + ஊரி. ஊர் → ஊரி. 'இ' வி.முத. ஈறு.]

அருணவெலி *aruṇa-v-eli*, பெ. (n.) **ஒருவகைக் கருஞ்சிவப்பெலி**; a rat of dark-red colour (சா.அக.).

[அருணம் = சிவப்பு. எல் → எலி. முதற் காலத்தில் வெள்ளெலியைக் குறித்தது பின்னர் எலிப் பொதுப்பெயராயிற்று.]

அருணவேலி *aruṇa-vēli*, பெ. (n.) **செங்கொடு வேலி**; Ceylon leadwort, *Plumbago zeylanica* (சா.அக.).

[அருணம் (சிவப்பு) + வேலி.]

அருணன் *aruṇaṉ*, பெ. (n.) *1.* **எழுங்கதிரவன்** (திவா.); the rising sun. "அருணனை யன்ன செவ்வேற்படைச் செந்திலர்க்கு" (திருச்செந்தி னிரோட்ட. காப்பு). *2.* **அறிவன் (புதன்)** (சூடா.); the planet Mercury. *3.* **ஏகம்பச் சாரம்**; a kind of mineral salt used in alchemy (சா.அக.).

ம. அருணன்; க., து. அருண; தெ. அருணுண்டு; **Sinh., Pali** aruṇa.

[அருணம் (சிவப்பு) → அருணன்.]

அருணம் பார்க்க; see *aruṇam*.

அருணா *aruṇā*, பெ. (n.) 1. குரால் (கபிலச்) சிவப்பு; reddish brown colour. 2. அதிவிடையம்; atis, *Aconitum heterophyllum*.

[அருணம் (சிவப்பு) → அருணா. குரால் நிறம் சிவப்புவகை. அதிவிடைய வேர் குரால் நிறமானது.]

அருணாசலக்கவிராயர் *aruṇāśala-k-kavi-rāyar*, பெ. (n.) சீகாழியில் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும், இராம நாடகம், சீகாழித் தல புராணம் முதலிய பனுவல்களின் ஆசிரியருமான ஒரு வேளாண்குலப் புலவர்; name of a Vēḷāḷa poet of Šikāḻi, 1712-79, author of the *Irāma nāḍagam*, the *Šikāḻittalapurāṇam* and other poems.

[அருணாசலம் + **Skt**. kavi + ராயர். அரசர் → அரைசர் → அரையர் → ராயர்.]

அருணாசலம் பார்க்க; see *aruṇāśalam*.

அருணாசலபுராணம் *aruṇāśala-purāṇam*, பெ. (n.) திருவண்ணாமலைப் பெருமையைக் கூறும் சிவனியத் தொன்மம், எல்லப்ப நாவலர் இயற்றியது; name of a poem, which narrates the legends of *Tiruvaṇṇāmalai*, sacred to Šiva by *Ellappa Nāvalar*.

[அருணாசலம் + **Skt**. purāṇā (தொன்மம்).]

அருணாசலம் பார்க்க; see *aruṇāśalam*.

அருணாசலம் *aruṇāśalam*, பெ. (n.) திருவண்ணாமலை; *Tiruvaṇṇāmalai*.

ம. அருணாசலம்

[அருணம் (சிவப்பு) + அசலம்.]

அருணம் பார்க்க; see *aruṇam*.

சலித்தல் = அசைதல். சலி → சலம் = அசைவது. அல் → அ (அன்மை யின்மை மறுதலைப் பொருளுணர்த்தும் முன்னொட்டு). அசலம் (அ + சலம்) = அசையாதது, மலை. சலி > வ. சல் (cal). சலி என்னுஞ் சொல்லும் 'அ' என்னும் முன்னொட்டும் தமிழாயினும், அவ் விரண்டையும் புணர்த்து அசல (acala) என்னுஞ் சொல்லைத் தோற்றுவித்தது வடமொழியிலாகும். ஆதலால், அசலம் என்பது உறுப்பால் தென்சொல்லாயினும் சொல்லால் வடசொல்லே.

சலித்தல் = 1. அசைதல், அசைத்தல். எ-டு: சலியடை → சல்லடை. 2. வருத்துதல், சோர்தல், வெறுத்தல், அருவருத்தல். எ-டு: சலிப்பாயிருக்கிறது, கேட்டுக்கேட்டுச் சலித்துப் போனான், தின்று தின்று சலித்துப் போயிற்று.

சலி-த்தல் பார்க்க; see *šali-*.

திருமாலும் நான்முகனும் தன் அடிமுடியறியாவாறு, சிவபெருமான் ஒரு காலத்தில் அழற்பிழம்பாய் நின்ற வுருவமே திருவண்ணாமலை யென்னுங் கருத்தினால், அழல்நிறமான செம்மலை அருணமலை யெனப்பட்டதென்பர். அருணமலை → அண்ணாமலை → திருவண்ணாமலை. ஆரியர் தென்னாடு வந்தபின். 'மலை' என்னும் வருஞ்சொல்லிற்குத் தலைமாறாக 'அசலம்' என்னும் சொல்லைச் சேர்த்து, அருணமலை என்பதை அருணாசலம் என மாற்றினர். இலக்கிய வழக்கில் அருணாசலம் என்னும் வடசொல் வடிவம் இடம்பெற்றிருப்பினும், உலக வழக்கில் அருணமலை யென்பதன் மரூஉவான அண்ணாமலை யென்னும் தென்சொல் வடிவமே வழக்கூன்றியிருத்தல் காண்க.

திருவண்ணாமலை, கிருதவூழியில் அழன் மலையாகவும், திரேதாவூழியில் மாணிக்க மலையாகவும், துவாபரவூழியிற் பொன்மலை யாகவும், கலியூழியிற் கன்மலையாகவும் உருக்கொண்ட தென்பது தொன்மக் கொள்கை.

''செங்கனன் முதல்யுகந் திரேதை மாமணி
பொங்கிய துவாபரம் பொலிந்த
பொன்னிறந்
தங்கிய கலியுகந் தன்னி லேசிலை
யங்கமா மதன்பெய ரருண பூதரம்''
(அருணாசலபு. திருநகர. 30).

அருச்சுனன் தன் தென்னாட்டுத் திருமுழுக்கு யாத்திரையில், ''கற்றார் தொழுமருணாசல மன்போடு கைதொழுதான்'' என்று பாரதம் (அருச்சுனன்றீர். 15) கூறுவதால், திருவண்ணாமலைச் சிவன்கோயிற் பழமை யுணரப்படும்.

அருணாதி *aruṇādi*, பெ. (n.) வேம்பு; neem tree, *Azadirachta indica* (சா.அக.).

அருணாதியெலி *aruṇādi-y-eli*, பெ. (n.) **அருணம் முதலிய அறுவகை நச்செலிகள்**; the six kinds of poisonous rats.

இவை கடிப்பதனால், குடற்காய்ச்சல் (சன்னிபாதக்) குறிகளுடன் அரத்தம் வடிதல், கட்டிகள் எழும்புதல் முதலியவற்றை யுண்டாக்கும்; Their bites are characterised by symptoms of typhoid, haemorrhage, appearance of boils, abscesses and so on (சா.அக.).

[அருணம் + ஆதி (முதலிய) + எலி.]

அருணினம் *aruṇiṉam*, பெ. (n.) 1. **நன்னாரி**; Indian sarsaparilla, *Hemidesmus indicus*. 2. **திருநாமப்பாலை**; wild sarsaparilla, *Smilax macrophylla* (சா.அக.).

அருணூல் *aruṇūl*, பெ. (n.) **வேத சிவாகமங்கள்**; the Vēdas and the Šaiva Āgamas. "அருணூலின் விதித்த வாறே" (உண்மைநெறி. 2).

[அருள் + நூல்.]

இது பிற்காலத் தமிழர் மேற்கொண்ட ஆரியக் கொள்கை.

அருணெறிசுரக்குஞ்செல்வன் *aruṇeṟi-šurakkuñ-celvaṉ*, பெ. (n.) **புத்தன்** (திவா.); the Buddha.

[அருள் + நெறி + சுரக்கும் + செல்வன்.]

அருணை[1] *aruṇai*, பெ. (n.) 1. **அதிவிடையம்**; (நாநார்த்த.); atis, *Aconitum heterophyllum*. 2. **சிவதை**; Indian jalap. 3. **நன்னாரி**; Indian sarsaparilla, *Hemidesmus indicus*.

அருணை[2] *aruṇai*, பெ. (n.) 1. **பாலை**; desert (சா.அக.). 2. **திருவண்ணாமலை**; *Tiruvaṇṇāmalai*. "அருணையை நினைக்க வெய்தலா முத்தியென் றுரைத்தீர்" (அருணாசலபு. திருநகர. 45).

[1. அருணை = ஒருகா. அருணனால் (கதிரவனால்) எரிக்கப்பட்ட நிலம். 2. அருணமலை → அருணை (இலக்கிய மருஉ).]

அருத்தி[1] *arutti*, பெ. (n.) **கள்** (அக.நி.); toddy.

[ஒருகா. அருந்து → அருத்து → அருத்தி.]

அருத்தி[2] *arutti*, பெ. (n.) **கூத்து** (வின்.); dancing.

அருத்து-தல் *aruttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **உண்பித்தல்**; to feed. "வேதியர்க் கருத்திப் பின்னர்" (நைடத. நாட்டு. 14). 2. **நுகர (அனுபவிக்க)ச் செய்தல்**; to cause to experience.

[அருந்து (த.வி.) → அருத்து (பி.வி.). அருந்துதல் = உண்டல்.]

அருந்தங்கம் *arundaṅgam*, பெ. (n.) **முத்திரை**; seal (சா.அக.).

அருந்தல் *arundal*, பெ. (n.) 1. **அருமை** (சூடா.), **அரிதாய்க் கிடைத்தல்**; scarcity, rarity, dearth. 2. **விலையேற்றம், கடுவிலை**; exorbitant price. மலைப்பழம் அருந்தலா யிருக்கிறது.

[அரு → அருந்து → அருந்தல்.]

அருந்தவர் *arundavar*, பெ. (n.) **முனிவர்**; sages, hermits. "அயரு மருந்தவர் தம்பழி" (கோயிற்பு. பதஞ்சலி. 63).

ம. அருந்தவர்

[அரு = செயற்கரிய. தவர் = தவஞ்செய்தோர். தவம் → தவன் (ஒ.), தவர் (ப.).]

அருந்திறல் *arundiṟal*, பெ. (n.) 1. **அரிய திறமை**; great prowess, rare capacity, remarkable valour, extraordinary might. 2. **அரிய திறமையுடையவன்**; person of great prowess, valiant warrior. "அருந்திறல் பிரிந்த வயோத்தி போல" (சிலப். 13. 65).

[அரு (அரிய) + திறல் (திறமை). திறம் → திறன் → திறல். திறல் = திறலோன் (பண். ஆகு.).]

அருந்து-தல் *arundu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **உண்ணுதல்**; to eat, as a meal. "அருந்தேல் விடலிபதி மனையி லன்னம்" (சைவச.பொது. 245). 2. **தின்னுதல்**; to eat a thing like sweetmeat, to eat, as a bird or animal. "அருந்துதற் கினிய மீன் கொணர" (கம்பரா. யுத்த. வீடணன். 29). 3. **குடித்தல்**; to drink. "தண்ணீ ரருந்தி" (தாயு. எந்நாள். அருளி. 11). 4. **விழுங்குதல்**; to swallow. "அங்கவற்றையும் பற்றி யருந்தினான்" (கந்தபு. யுத்த. இரண்டாநாட்சூர. 65). 5. **நுகர்தல் (அனுபவித்தல்)**; to experience, either good or evil, pleasure or pain, reap the fruits of actions done. 6. **தன்னிடத்துக் கொள்ளுதல்**; to contain, hold. "சாந்தருந்தி மைந்திறை கொண்ட மலர்ந்தேந் தகலத்து" (குறிஞ்சிப். 120).

ம. அருந்துக

[ஆர்தல் = உண்ணுதல். ஆர் → அரு → அருந்து.]

அருந்தும்மட்டி *arundummaṭṭi*, பெ. (n.) **சிறு தும்மட்டி**; a small species of bryony, *Bryonia callosa*.

அருந்தோடு *arundōḍu*, பெ. (n.) **பழைய வரி வகை** (S.I.I. vii, 30.); an ancient tax.

[ஒருகா. அரு + தோடு, அல்லது அருந்து + ஓடு.]

அருநங்கன் *aru-naṅgaṉ*, பெ. (n.) **நல்ல பாம்பு**; cobra (சா.அக.).

அருநரகம் *aru-naragam*, பெ. (n.) 1. **பாழ்நரகம்** (சங்.அக.); the most miserable hell. 2. **கடு நோவு (வேதனை)**; severe pain.

அருநிலம் *aru-nilam*, பெ. (n.) **பாலைவனம்** (தொல். பொருள். புறத். 24, நச். உரை); desert tract.

[அரு + நிலம்.]

அருநிலை *aru-nilai*, பெ. (n.) 1. **ஆழமான நீர் நிலை**; deep water. "வாய்ப்பரு நீரும் அரு நிலையாய்" (திவ். இயற். திருவிருத். 16, வியா.) 2. **கடந்துசெல்லற்கரிய ஆற்றுநிலம்** (சங்.அக.); river-bed that is difficult to pass over. 3. **போர்நிலை** (சங்.அக.) (பாரத.); state of war, stage of battle, belligerency.

[அரு = அரிய, கடிய. நில் → நிலை = நிலைமை. 'ஐ' தொ.பெ. ஈறு.]

அருநிழல் *aru-niḻal*, பெ. (n.) **விளக்கின் சிறு நிழல்** (இ.வ.); shadow cast by a lamp (Loc.) (செ.அக.).

அருநீர் *aru-nīr*, பெ. (n.) 1. **பாசனத்திற்கு உதவும் ஏரிநீர்** (C.G.); water in a public reservoir available for irrigation. 2. **கண்ணீர்**; tears (சா.அக.).

[அருவுதல் = மெல்லெனச் செல்லுதல். அருவு நீர் → அருநீர்.]

அருநீர்த்ததும்பல் *aru-nīr-t-tadumbal*, தொ.பெ. (vbl.n.) **எப்போதும் நீரொழுகும் கண்ணோய்**; an eye disease attended always with tears.

[அருவு + நீர் + ததும்பல். ததும்புதல் = நிறைதல், நிரம்பி வழிதல். ததும்பு → ததும்பல். 'அல்' தொ.பெ. ஈறு.]

அருநீலியம் *aru-nīliyam*, பெ. (n.) **சிறுநீலி**; small-leaved indigo plant (சா.அக.).

[அரு (சி.பொ. முன்.) → அரு = சிறு. நீல் → நீலி → நீலியம். நீலி = நீலச்சாயங் காய்ச்ச வுதவுஞ் செடி.]

அருநெஞ்சு *aru-neñju*, பெ. (n.) **விருப்பின்மை** (இ.வ.); unwillingness, reluctance (Loc.). அரைமனத்தோடு அருநெஞ்சுப் பட்டுக் கொடுத்தான்.

[அரு = அரிய, இல்லாத. நெஞ்சு = விருப்பம்.]

அருநெஞ்சுப்படு-தல் *aru-neñju-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **விருப்பமில்லாதிருத்தல்**; to be unwilling, reluctant.

[அருநெஞ்சு = விருப்பமின்மை. படுதல் = உண்டாதல்.]

அருநெஞ்சு பார்க்க; see *aru-neñju*.

அருநெல்லி *aru-nelli*, பெ. (n.) 1. **சிறுநெல்லி**; otaheite goose-berry, m.tr. *Phyllanthus distichus*. "அருநெல்லிக்காய் குளிர்ச்சியாம்" (பதார்த்த. 671) (செ.அக.) — **வரிநெல்லி, இதற்கு அரிநெல்லி யென்று பெயர்**; a small tree, called country star goose-berry, *Phyllanthus distichus* (சா.அக.). 2. **மரவகை** (L.); species of goose-berry balsam tree, l.tr., *Garuga pinnata* (செ.அக.).

[அரி (சி.பொ. முன்.) + நெல்லி.]

அருநெல்லிப்பழம் *aru-nelli-p-paḻam*, பெ. (n.) **ஒருவகைப் பழம்**; a kind of fruit, *Chillic millic* (சா.அக.).

இது தெளிவற்ற, மயக்கத்திற்கிடமான பெயர்.

அருநெறி *aru-neṟi*, பெ. (n.) 1. **போதற்கரிய வழி**; difficult way, that perplexes one. "அரு நெறிக் கடவுளர்க் கமுத மூட்டுதல்" (பாரத. வேத்திரகீ. 34). 2. **ஒடுங்கிய வழி**; narrow way. "முடுக்கரு மருநெறித் தொடர்பும்" (உப தேசகா. சிவவிரத. 141). 3. **(சிறு) மனை வாயில்** (பிங்.); narrow gateway or entrance. 4. **பாலைவனம்** (பிங்.); desert tract. 5. **நரகம்** (சங்.அக.); hell.

[அரு = அரிய. நேர் → நெறி.]

நெறி பார்க்க; see *neṟi*.

அருநேரளி *aru-nēraḷi*, பெ. (n.) பிடங்குநாரி; a plant (சா.அக.).

அருப்பம்[1] *aruppam*, பெ. (n.) 1. **நெற்கதிர்க் கரு**; germ of a grain of paddy. "அருப்ப மாகில வருங்கதிர்" (இரகு. நாட். 32). 2. **பிள்ளை**; child (சா.அக.). 3. **முதலில் முளைக்கும் மீசை**;

the sprouting downy moustache. 4. மயிர்க் கிளர்ச்சி; goose-flesh, horripilation. 5. பனி (த்துளி); dew (drops). 6. முகநோய்; a disease of the face (சா.அக.). 7. கள்; liquor. 8. மோர்; butter-milk.

[உரு → அரு → அரும்பு. அரும்புதல் = தோன்றுதல். அரும்பு → அருப்பு → அருப்பம். அரும்பு + அரிசி. கள், புளிக்கவைத்த அரிசி யினின்று இறக்கியதாயிருக்கலாம். அரும்பு → அருப்பு → அருப்பம். மோர் கள்போற் புளிப்பது.]

அருப்பம்[2] *aruppam*, பெ. (n.) 1. சிறிது; that which is little, small, unimportant. "அருப்ப மென்று பகையையும்.............இகழ்ந்தால்" (கம்பரா. யுத்த. முதற்போர். 92). 2. மா (பிங்.); flour. 3. மாப்பிட்டு (பரி.அக.); pastry made of flour.

[அல் = சில், துண்டு. அல் → அல்கு. அல்குதல் = சிறுத்தல். அல் → அர் → அரி = அரிசி (சி.பொ. முன்.). அர் → அரு → அருப்பு → அருப்பம் = சிறியது, நுண்ணியது.]

அருப்பம்[3] *aruppam*, பெ. (n.) 1. அருமை; difficulty. "அருப்பமு முடைய" (மலைபடு. 222). 2. (பகைவர் வெல்லுதற்கரிய) அரண்; fort, fortress. "வீங்குசிறை வியலருப்பம்" (புறநா. 17 : 27). 3. மலைக்கோட்டை (பிங்.); mountain fortress. 4. காட்டரண் (பிங்.); jungle fortress. 5. காடு (சங்.அக.); jungle, forest. 6. திண்மை; firmness. "அருப்ப மழிப்ப" (பரிபா. 10 : 57). 7. வழுக்குநிலம் (பிங்.); slippery ground. 8. நோய்; disease. 9. துயரம் (நாநார்த்த.); grief.

ம. அரிப்பம், அருப்பம்.

[அருமை = அரிதாயிருத்தல், கடினம், திண்மை, கடுமை, பொறுத்தற் கருமை. அரு → அருப்பு → அருப்பம்.]

அருப்பம்[4] *aruppam*, பெ. (n.) 1. ஊர் (பிங்.); village, town, city. 2. சோலை (பொதி நி.); grove.

[அல்லுதல் = பொருந்துதல். அல் → அர் → ஆர். ஆர்தல் = பொருந்துதல், சேர்தல், கூடுதல். அர் → அரு → அருப்பு → அருப்பம் = பலர் கூடிவாழும் ஊர், பலமரஞ் சேர்ந்த சோலை.]

அருப்பம்[5] *aruppam*, பெ. (n.) 1. தொடரிச்செடி (மலை.); species of scutia (செ.அக.)—தொடரிப் பூடு; a species of scutia, prickly buck-thorn, *Scutia indica* alias *Rhamnus circumcissus* (சா. அக.). 2. கீரை; greens (சா.அக.).

அருப்பம்பூச்சி *aruppam-pūcci*, பெ.(n.) பச்சைப் பூச்சிவகை (இ.வ.); a green insect (Loc.).

[ஒருகா. அரும்பு + பூச்சி. வலித்தலும் 'அம்' சாரியையும் புணர்ச்சி விளைவு. ஒ.நோ: கரும்பு + கழி – கருப்பங்கழி.]

அருப்பலம் *aruppalam*, பெ. (n.) 1. அனிச்ச மரம் (சூடா.); ringworm tree, *Rhinacanthus communis* (சா.அக.). 2. புல்லரிசி; the seed of a grass (சா.அக.). 3. அனிச்சமலர் (திவா.); a flower supposed to be so delicate as to droop or even perish when smelt (செ.அக.).

அருப்பு[1] *aruppu*, பெ. (n.) 1. கிளைத்தல் (சங். அக.); ramification, multiplication, increase. "அருப்பறா வாக்கம் பலவுந் தரும்" (குறள், 522). 2. தயிர்; curd.

[அரும்புதல் = தோன்றுதல், கிளைத்தல், பெருகுதல். அரும்பு → அருப்பு (தொ.பெ.).]

அருப்பு[2] *aruppu*, பெ. (n.) 1. கொலை; killing, murder. "அருப்புடை யறலி னஞ்சம்" (பாரத.நச்சு. 31). 2. துயர்; grief. "அருப் பறப் பிறந்த கோப மாறினான்" (கம்பரா. யுத்த. வருண. 74).

[அர் → அரி. அரிதல் = அறுத்தல். அரித்தல் = அழித்தல். அர் → அரம் = அராவுங்கருவி. அர் → அரங்கு = அறை. அர் → அறு. அறுத்தல் = நீக்குதல். அர் → அரு → அருப்பு.]

அருப்புச்சரிக்கடுக்கன் *aruppu-c-cari-k-kaḍukkaṉ*, பெ.(n.) அரும்புவடிவான கடுக்கன்; bud-shaped ear-ring (W.).

[அரும்பு + சரி (ஒப்பு) + கடுக்கன் (ஆடவர் காதணி).]

அருப்புத்துருப்பு *aruppu-t-turuppu*, பெ. (n.) 1. அருந்தேட்டம் (சங்.அக.); hard-earned money, rare wealth. 2. அருமை; rareness, preciousness, dearness.

[அரு → அருப்பு = அருமை. துரு → துருப்பு = தேட்டு.]

அருப்புத்தொழில் *aruppu-t-toḻil*, பெ. (n.) அணி கலங்களில் அரும்பு வடிவமைத்து அழகுபடுத்துதல் (கலித். 104, உரை); filigree work in imitation of flower buds.

[அரும்பு + தொழில்.]

அருபாகம் *arubāgam*, பெ. (n.) **கையாந்தகரை**; eclipse plant, *Eclypta prostrata* (சா.அக.).

அருபாரம் *arubāram*, பெ. (n.) *அருபாகம் பார்க்க; see* **arubāgam.**

அரும்பகைத்தொள்ளாயிரம் *arumbagai-t-toḷḷā-yiram*, பெ. (n.) **ஒட்டக்கூத்தரால் இயற்றப் பட்ட 900 செய்யுள் கொண்ட ஒரு பனுவல்** (தமிழ்நா. 117); name of a poem of 900 verses by *Oṭṭakkūttar*. தொள்ளாயிரம் என்பது முதலில் ஒன்பதாயிரத்தையே (9,000) குறித்தது. பின்னர், எக் காரணத்தை யிட்டோ ஒன்பது (9) என்னும் எண்ணின் முந்துபெயரான தொண்டு என்னுஞ் சொல் வழக்கற்றுப் போக, அதனிடத்திற்கு ஒன்பது பத்தைக் குறிக்கும் தொண்பது (90) என்னுஞ் சொல் இறங்கிவிட்டது. அதனால் அதன் மேலிடப் பதின்படி யுயர்வு எண்ணுப்பெயர் களும் முறையே ஒவ்வோர் இடம் கீழிறங்கி விட்டன. ஆகவே, இன்று தொண்ணூறு என்னும் சொல்லிற்குத் தலைமாறாகத் தொள்ளாயிரம் என்னும் சொல் வழங்கு கின்றது. இதைக் கீழ்வரும் பட்டியலால் தெளிந்துகொள்க.

9. தொண்டு

90. தொண்பது

900. தொண்ணூறு

9000 தொள்ளாயிரம்

இன்னும் இதன் விளக்கத்தை **ஒன்பது, தொண்டு** என்னுஞ் சொற்கீழ்க் காண்க.

அரும்பண்டம் *arumbaṇḍam*, பெ. (n.) **கடற் றாரம், மலைத்தாரம் முதலிய கிடைத்தற்கரிய பொருள்** (பிங்.); rare commodity, choice articles obtained from the seas, hills, etc.

[அரும் + பண்டம்.]

அரும்பத்தியம் *arumbattiyam*, பெ. (n.) **கடும் பத்தியம்**; strict regimen or diet (சா.அக.).

[அரும் + பத்தியம்.]

மானியர் வில்லியம்சு சமற்கிருத-ஆங்கில அகரமுதலியில் 'patha, way, path' என்றும் 'pathya, 'belonging to the way, wholesome diet' என்றும் குறிக்கப்பட்டுள்ளன. தமிழில், மருத்துவ நெறிப்பட்ட உணவு என்றோ, நோயாளிக்குப் பதமான உணவு என்றோ குறிக்கலாம்.

அரும்பதம்[1] *arumbadam*, பெ. (n.) 1. **அரிய செவ்வி**; rare opportunity, most appropriate occasion, excellent condition, most favourable mood. 2. **சிறந்த வுணவு**; rich food. "அழிவு நன்கலல வரும்பத மூட்டா" (பெருங். வத்தவ. 3 : 20).

[அரும் + பதம்.]

அரும்பதம்[2] *arumbadam*, பெ. (n.) **பொருள் தெரியாச் சொல்**; rare or difficult word.

[அரு + Skt. pada > த. பதம் (சொல்).]

அரும்பதவுரை *arumbada-v-urai*, பெ. (n.) **அரிய சொல்லுக்கு உரை**; glossary.

[அரு + Skt. padam + உரை.]

அரும்பர் *arumbar*, பெ. (n.) **அரும்பு**; bud. "பரம்புவ தாமரை யரும்பர்" (தணிகைப்பு. நாட்டு. 86).

[அரும்பு → அரும்பர். எ-டு : இடக்கு → இடக்கர், வண்டு → வண்டர்.]

குற்றுகர வீற்றுச் சொற்கள், பொருண் மாற்றம் பற்றியோ சொன்னீட்டம் பற்றியோ சிறுபான்மை 'அர்' என்னும் மேலீறு பெறும்.

அரும்பாடு *arumbāḍu*, பெ. (n.) **கடின வுழைப்பு**; hard work or labour. அரும்பாடு பட்டுப் பெரும்பொரு ளீட்டினான் (உ.வ.).

[அரு + பாடு. படுதல் = வருந்துதல். படு → பாடு = வருந்திய வுழைப்பு.]

அரும்பாலை *arumbālai*, பெ. (n.) **பாலைப்பண் வகை** (பிங்.); a primary melody-type of the *pālai* class. 'அரும் பாலைக்கு நரம்பு இரட் டித்த பெற்றித்து' (சிலப். 3 : 84-5, அரும்.).

அரும்பாவி *arumbāvi*, பெ. (n.) **பெரும்பாவி, கொடும்பாவி**; heinous sinner. "கேகயர் கோன்மகளாய்ப் பெற்ற அரும்பாவி சொற் கேட்ட அருவினையேன்" (திவ். பெருமாள். 9 : 5).

[அரு + Skt. pāpin > த. பாவி. Skt. > pāpa > த. பாவம் (தீவினை) → பாவி (தீவினை ஞன்).]

அரும்பி-த்தல் *arumbi-*, பெ. (n.) 4 செ.கு.வி. (v.i.) **அரும்பு தோன்றுதல், தோன்றுதல்**; to bud, sprout, rise. "அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கு மடி" (தேவா. 6.6 : 4).

[உரு → அரு → அரும்பு → அரும்பி.]

அரும்பி *arumbi*, பெ. (n.) **ஒரு செய்நஞ்சு** (**குங்குமபாடாணம்**)(மூ.அ.); a prepared arsenic.

அரும்பிஞ்சு *arum-piñju*, பெ. (n.) ***பூம்பிஞ்சு, மிக இளங்காய்***; tender fruit recently formed from the flower.

[அரும் + பிஞ்சு.]

அரும்பிணி *arum-piṇi*, பெ. (n.) ***தீராநோய்***; incurable disease. "ஐயா வதற்கு மரும்பிணி யொன் றெய்தியக்கா லுய்யானே" (கந்தபு. அசுர. மார்க்கண். 18).

[அரு + பிணி. பிணித்தல் = கட்டுதல், இறுக்குதல், வருத்துதல், நோவுறுத்துதல்.]

அரும்பு-தல் *arumbu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. ***அரும்பு தோன்றுதல், முகிழ்த்தல்***; to bud, sprout. "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி" (குறள், 1227). 2. ***சற்றே அல்லது சிறிதே தோன்றுதல்***; to sprout slightly or a little. "அரும்பு மிள நகை போற்றி" (திருவிளை. கடவுள். 4), "அமுதூற் றரும்பி" (தாயு. பொருள்வண. 2). 3. ***தோன்றுதல்***; to sprout, spring forth.

ம. அரும்புக; து. அரும்பு.

[உருத்தல் = தோன்றுதல். உரு → அரு → அரும்பு.]

அரும்பு *arumbu*, பெ. (n.) 1. ***மொட்டு*** (பிங்.); bud. 2. ***அணிகலத்தின் அழகிய அரும்புவேலை*** (வின்.); filigree work in imitation of buds. 3. ***முகத்திற் றோன்றும் இளமயிர்***; soft sprouting hair, beard or moustache in its early stage. முகத்தில் அரும்பிறங்குகிறது. 4. ***அரிசி***; rice. "அரும்புக்குங் கொத்துக்கும் வந்தார்" (தனிப்பா. தி. 1. பக். 96).

ம. அரிம்பு, அரும்பு; க. அரும்பு.

[உருத்தல் = தோன்றுதல். உரு → அரு → அரும்பு.]

அரும்புகட்டி *arumbu-katti*, பெ. (n.) ***சிறப்பாகத் திருச்சி இராமநாதபுரம் மாவட்டங்களில் வாழ் பவரும் மாலைகட்டுவதைத் தொழிலாகக் கொண்டவருமான வேளாண்குலப் பிரிவினர்***; name of a subdivision of the Vēḷāḷas, esp. in Thiruchirāppaḷḷi and Rāmanāthapuram districts, arising from their occupation of making garlands.

[அரும்பு + கட்டி. கட்டு → கட்டி. 'இ' வி.முத. ஈறு.]

அரும்புச்சரம் *arumbu-c-caram*, பெ. (n.) ***கண்ட சரம்***; necklace. 'ஒரு சரட்டில் முல்லை அரும்பு களைக் கோவையாக அமைத்துக் கழுத்தில் அணிவது அரும்புச்சரம் எனப்படும். இது கண்டசரம் என்றும் சொல்லப்படும்' (சி.செ. பக். 93).

[அரும்பு + சரம்.]

அரும்புமணி *arumbu-maṇi*, பெ. (n.). ***பொன் னாற் செய்யப்பட்ட அரும்பு வேலைப்பாடுள்ள கழுத்தணி*** (வின்.); necklace of gold beads set with tiny bud-like granules of gold.

ம. அரும்புமணி

அரும்புவளையம் *arumbu-vaḷaiyam*, பெ. (n.) ***தாழ்வட மணிகளின் இடையிற் கோக்கும் பொன் அல்லது வெள்ளி வளையம்***; gold or silver chain rings interspersed with beads in a rosary.

[அரும்பு + வளையம். வள் → வளை → வளையம்.]

அரும்பூட்டு *arumbūṭṭu*, பெ. (n.) 1. ***அரைக் கச்சை, கழுத்தணி, வில்நாண் முதலியன குட்டையாயிருப்பின் வருந்தி யிழுத்துப் பூட்டுவது*** (யாழ்ப்.); anything too short to be securely fastened, as a short girdle, necklace or bow-string. 2. ***பேசி யிணக்கமாக முடிவு செய்யக் கூடாத செய்திக் கூறு***; that which is difficult for a negotiated settlement. 3. ***சிக்கிக் கொள்கை***; entanglement, ensnarement. 4. ***இயற்கைக்கு மாறான அல்லது நிரடான சொற் றொடர்ப் புணர்ப்பு***; difficult or unnatural construction in language. சொற்களை யரும் பூட்டாய்த் தொடுத்துப் பேசினான்.

[அரு + பூட்டு. பூண் (த.வி.) → பூட்டு (பி.வி.) = பொருந்து, புணர்ப்பு (தொ.பெ.).]

அரும்பூது-தல் *arumbūdu-*, பெ. (n.) 5 செ.கு.வி. (v.i.) ***ஊதிப் பொன்மணி செய்திணைத்தல்*** (வின்.); making globules out of melted gold by blowing and joining them with one another.

[அரும்பு + ஊது.]

அரும்பெறல் *arum-peṟal*, பெ. (n.) ***பெறுதற் கரியது***; that which is difficult to obtain. "அரும்பெற லடிகள்" (திவ். திருவாய். 1.3:1).

[அரு + பெறல். பெறு → பெறல். 'அல்' தொ. பெ. ஈறு.]

அரும்பைத்தொள்ளாயிரம் *arumbai-t-tollayiram*, பெ. (n.) *அரும்பகைத்தொள்ளாயிரம்* பார்க்க; see *arumbagai-t-tollayiram.*

அரும்பொருள் *arum-porul*, பெ. (n.) 1. *பெறுதற்கரிய பொருள்;* anything difficult to obtain. 2. *விலையுயர்ந்த பொருள்;* any precious thing. 3. *பெருஞ்செல்வம்;* enormous wealth. 4. *எளிதில் விளங்காத பொருள்;* meaning that is difficult to grasp. 5. பிதிர் (திவா.); riddle.

ம. அரிம்பொருள்

[அரு + பொருள். பொல் → பொர் → பொரு → பொருள் = பொருந்தியது.]

அரும்பொருள்வினைநிலை *arum-porul-vinai-nilai*, பெ. (n.) *செயற்கரிய மறச்செயல் புரிந்து செய்யும் திருமணம், அசுரமணம்* (இறை. 1, உரை); marriage as reward for a heroic deed.

அரும்பொருள் வினைகளாவன: கொல்லேறு தழுவல், திரிபன்றியெய்தல், கன வில் நாணேற்றல், கடுமாக் கோறல் முதலியன.

[அரு + பொருள் + வினை + நிலை. நில் → நிலை. 'ஐ' தொ.பெ. ஈறு.]

அரும்பொருள் பார்க்க; see *arum-porul.*

அருமணம் *arumanam*, பெ. (n.) *ஒரு கீழ்த்திசைத் தீவு;* an eastern island.

அருமணவன் *arumanavan*, பெ. (n.) 1. *அகிலுக்கும் யானைக்கும் பெயர் பெற்ற ஒரு கீழ்த்திசைத் தீவு;* name of an island noted for elephants and aromatics. "அருமணவனானை" (திவ். திருநெடுந். 14, வியா.). 2. *அருமணத் தீவின் யானை;* elephant from the above island. 3. *அருமணத் தீவின் அகில்;* eaglewood from the same island. 'அகில்: அருமணவன் தக்கோலி கிடாரவன் காரகிலென்று சொல்லப்பட்ட பல வகைத்தாய தொகுதியும்' (சிலப். 14 : 108, அடியார்க். உரை).

[அருமணம் → அருமணவன்.]

அருமதாளம் *aruma-talam*, பெ. (n.) (இசை) *தொண்டாளத்துள் (தவதாளத்துள்) ஒன்று* (திவா.); (Mus.) variety of time-measure, one of nine.

[ஒருகா. அருமம் + தாளம்.]

அருமந்த *aru-manda*, கு.பெ.எ. (adj.) *ஆருயிர் மருந்து போன்ற, அருமையான;* very rare, precious as nectar, most endearing. "அருமந்த நன்மை" (தேவா. 6 . 83 : 7).

ம. அருமாந்த

[அரு + மருந்து + அன்ன – அருமருந்தன்ன → அருமந்தன்ன → அருமந்த. அரு = பெறற்கரிய. அன்ன = ஒத்த.]

அருமந்தன்ன *aru-mandanna*, கு.பெ.எ. (adj.) *அருமந்த* பார்க்க; see *aru-manda.* "அருமந் தன்ன வதிர்கழல் சேர்மினோ" (தேவா. 5 . 97 : 21).

அருமருந்தன்ன *aru-marund(u)-anna*, கு.பெ.எ. (adj.) *அருமந்த* பார்க்க; see *aru-manda.*

அருமருந்தான் *aru-marundan*, பெ. (n.) *ஆருயிர் மருந்து போன்றவன்;* one, precious as nectar.

[அரு + மருந்தான் (மருந்து + ஆன்). 'ஆன்' ஆ.பா.ஈறு., உவமைக் கருத்தை யுட்கொண்டது.]

அருமருந்து *aru-marundu*, பெ. (n.) 1. *ஆருயிர் மருந்து, சாவாமருந்து;* ambrosia, elixir of life. 2. *பெறற்கரிய மருந்து;* rare medicine. "அரந்தைவெம் பிறவி யென்னோய்க் கருமருந் தனைய வையா" (கம்பரா. கிட்கிந்தா. வாலி. 128).

அருமவதி *arumavadi*, பெ. (n.) *ஒரு பண்;* a melody-type (செ.அக.) — அருமலதி (சங்.அக.).

அருமறை *aru-marai*, பெ. (n.) 1. *அறிதற்கரிய மறைநூல்;* sacred scripture, as difficult to understand. "அருமறை முதல்வனை யாழி மாயனை" (பாரத. வாரணா. மிகைப். 1). 2. *அறிதற்கரிய மறைபொருள்;* profound secret. "அருமறை செவிலி யறிந்தமை கூறலும்" (நம்பியக. களா. 48).

[அரு + மறை.]

அருமறைக்கொடியோன் *aru-marai-k-kodiyon*, பெ. (n.) துரோணாசாரியன் (சூடா.); Dronācārya.

[அரு + மறை + கொடியோன்.]

அருமாந்த *aru-manda*, கு.பெ.எ. (adj.) *அருமந்த* என்பதன் கொ.வ. *திரிபு;* colloq. corruption of *arumanda.*

ம. அருமாந்த

அருமிதம் *arumidam*, பெ. (n.) *அளவின்மை, அளவிறந்த நிலை;* transcending limits. "சேணுய ரருமித நிலையவர் தமக்கு மாகுமே" (இரகு. இரகுவு. 29).

[அருமை + இதம் (ஈறு). ஒ.நோ: பெருமை + இதம் — பெருமிதம்.]

அருமிதி *aru-midi*, பெ. (n.) மிகுதி, ஏராளம்; excessiveness. 'அருமிதியான பணத்தை வாங்கிக்கொண்டு' (திவ். திருப்பள்ளி. 2, வியா.).

[அரு + மிதி. மதி > Skt. miti. மதித்தல் = அளவிடுதல். மதி = அளவு.]

அருமேனி *aru-mēṉi*, பெ. (n.) கடவுளின் உருவிலா வடிவம்; invisible form of God. "உருவிறந்த வருமேனி" (சி.சி. சுபக். 1 : 55).

அருமை *arumai*, பெ. (n.) 1. சிறுமை; smallness, minuteness. 2. எளிதிற் பெறக்கூடாமை; difficulty of attainment. "அருமையி னெய்தும் யாக்கையும்" (சீவக. 2748). 3. எளிதிற் காணக் கூடாமை (அபூர்வம்); rareness. இன்று நீர்நாயைக் காண்பது அருமை. 4. எளிதிற் செய்யக்கூடாமை; difficulty of performance. "அருமை யுடைத்தென் றசா வாமை வேண்டும்" (குறள், 611). "அருமை நோன்புக ளாற்றுதி யாமன்றே" (கம்பரா. அயோத். நகர்நீங்கு. 20). 5. முயற்சி வருத்தம் (பிரயாசம்); laborious effort. "கான்புறஞ் சேறலி லருமை காண்டலால்" (கம்பரா. அயோத். தைல. 30). 6. பெருமை, மேன்மை, சிறப்பு (திவா.); greatness, pre-eminence, excellence, preciousness. 7. பெரும்பாலு மின்மை; being nearly extinct. வெள்ளை யானையைக் காண்ப தருமை. 8. இன்மை; nothingness, non-existence, impossibility. மாந்தன் எத்துணை முயலினும் சாவாமை அருமை. 9. கிட்டுதற்கருமை; inaccessibility. "உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கின்" (குறள், 743).

ம. அரும, அரிம; க. அருது; தெ. அரு.

[அரு → அருமை. 'மை' பண்.பெ. ஈறு.]

அருமைக்காரன் *arumai-k-kāraṉ*, பெ. (n.) கொங்க வேளாளரின் பூசாரி; priest of the Koṅgu Vēḷāḷas.

[அருமை = அருமையான சடங்கு. 'காரன்' வி.முத. உணர்த்தும் ஆ. பா. ஈறு.]

அருமைக்காரி *arumai-k-kāri*, பெ. (n.) கொங்க வேளாளர் பூசாரியின் மனைவி; wife of the priest of the Koṅgu Vēḷāḷas.

[அருமைக்காரன் (ஆ.பா.) — அருமைக்காரி (பெ.பா.). 'காரி' பெ.பா. ஈறு.]

அருமைசெய்-தல் *arumai-šey-*, 1 செ.கு.வி. (v.i.) அருவினை செய்தல், பேராண்மை காட்டுதல் (சூடா.); to perform heroic deeds. —, 1 செ. குன்றாவி. (v.t.) அருமைப்படுத்துதல்; to cherish greatly, to treat endearingly.

அருமைப்படுத்து-தல் *arumai-p-paḍuttu-*, 5 செ. குன்றாவி. (v.t.) மிகுதியாக அருமை பாராட்டு தல்; to cherish greatly, appreciate highly, treat endearingly.

[அருமை + படுத்து. படுதல் (த.வி.) = உண்டாதல். படுத்துதல் (பி.வி.) = உண்டாக்கு தல்.]

அருமைபெருமை *arumai-perumai*, பெ. (n.) அருமையும் பெருமையும்; preciousness and greatness. அதன் அருமைபெருமை உனக் கென்ன தெரியும்?

[அரு+மை. பெரு+மை. 'மை' பண்.பெ. ஈறு. 'அருமைபெருமை' மரபிணைமொழி.]

அருமைமணம் *arumai-maṇam*, பெ. (n.) பெற் றோர் தம் பிள்ளைகளுள் ஒருவர்க்குத் திருமண மானபின், அருமைக்காரனும் அருமைக்காரியு மாகும் கொங்க வேளாளர் சடங்கு; ceremony among Koṅgu Vēḷāḷas whereby the parents, after the marriage of one of their children are given the appellation, *arumaikkāraṉ* and *arumaikkāri*.

அருமொழி *aru-moḻi*, பெ. (n.) அருமொழித் தேவர் பார்க்க; see *aru-moḻi-t-tēvar* (சாஸனத்.).

அருமொழித்தேவர் *aru-moḻi-t-tēvar*, பெ. (n.) முதலாம் இராசராசச் சோழனது பட்டப்பெயர் (சிவக். பிரபந். பக். 214, கீழ்க்குறிப்பு); a title of Rājarāja I.

[அரு + மொழி + தேவர். அரு = அருமை யான. தேவர் = அரசர்.]

அருமொழிவிநாயகர் *aru-moḻi-vināyagar*, பெ. (n.) தஞ்சைப் பெருவுடையார் கோயிலி லுள்ள தலைமைப் பிள்ளையார் (பிரதான விநாயகர்) (சிவக். பிரபந். தஞ்சைப். காப்பு); the God Gaṇēša in the Šiva shrine in Thañjāvūr.

[அரு + மொழி + Skt. vināyaka (இடையு றகற்றி).]

அருவசிவசமவாதி *aruva-šiva-šama-vādi*, பெ. (n.) ஆதனறிவும் (ஆன்மசித்தும்)

சிவனறிவும் (சிவசித்தும்) ஒத்து வேறாய் நிற்கு மென்னுங் கொள்கையன்; one who holds that the soul and Šiva would stand aloof being intellectually equal............'ஒத்து வேறாய் நிற்குமென்னும் அருவசிவசமவாதிகளை மறுத்தற்குரியவாறு காண்க' (சி.சி. சுபக். 11 . 11, உரை).

[அ + உருவம் + சிவன் + சமம் + Skt. vādin > த. வாதி. அல் → அ. உரு → உருவு → உருவம். உருவம் > Skt. rūpa.]

அருவத்திருமேனி *aruva-t-tiru-mēṉi*, பெ. (n.) **சிவன் நடிக்கும் தொண் வேறுபாடுகளுள் (நவ பேதத்துள்)** அருவ வடிவமாகக் கற்பிக்கப்படும் **சிவம், ஆற்றல் (சத்தி), ஓதை (நாதம்), விந்து எனப்படும் நான்கு மேனிகள்**; the four of the nine manifestations of Šiva, viz., *Šivam*, *Šatti*, *nādam* and *vindu*, said to be invisible forms.

"சிவஞ்சத்தி நாதம் விந்து
சதாசிவந் திகழு மீச
னுவந்தரு ளுருத்தி ரன்றான்
மாலய னொன்றி னொன்றாய்ப்
பவந்தரு மருவ நாலிங்
குருவநா லுபய மொன்றா
நவந்தரு பேத மேக
நாதனே நடிப்ப னென்பர்"
(சி.சி. சுபக். 2 : 74).

[அ + உருவம் + திரு + மேனி.]

அருவசிவசமவாதி பார்க்க; see *aruva-šiva-šama-vādi*.

அருவம்[1] *aruvam*, பெ. (n.) அருமை (யாழ்ப்.); scarcity, rarity (J.).

ம. அருமெ

[அரு → அருவு → அருகு. அருகுதல் = குறைதல், அரிதாதல். அருவு → அருவம்.]

அருவம்[2] *aruvam*, பெ. (n.) உருவமின்மை; formlessness, incorporeity, invisibility. "அருவமு முருவு மாகி" (கந்தபு. உற்பத். திருவவ. 92).

ம., க., து. அருப; தெ. அருபமு; **Mar., Pali** arūpa; **Sinh.** arūpi.

[அல் → அ. உரு → உருவு → உருவம் > **Skt.** rūpa. அ + உருவம் – அவுருவம் → அருவம். ஒ.நோ: அ + வலம் – அவலம்.]

அருவர் *aruvar*, பெ. (n.) **தமிழர்**; the Tamils: "அருவ ரருவ ரெனாவி றைஞ்சினர்" (கலிங். 452).

தெ. அரவவார்லு

[அருவா (நாடு) + அர் (ப.பா. ஈறு).]

அருவாநாடு, அருவா வடதலைநாடு என்பன இடைக்காலக் கொடுந்தமிழ் நாடுகள் பன்னிரண்டனுள் இரண்டு. அவை வட கோடியில் வடுக அல்லது தெலுங்க நாட்டை அடுத்திருந்தன. அருவா என்னும் பொதுப் பெயரால் அவ்விரண்டனையும் ஒரே நாட்டின் இருபகுதிகளாகக் கருதினர் தெலுங்கர். அதனால், அவர் தமிழரை அருவாநாட்டார் என்னுங் கருத்தில் அருவர் அல்லது அரவர் என்றனர்.

அயலாரான வந்தேறிகள் அல்லது அடுத்து வாழும் பிற நாட்டார், ஒரு நாட்டை அதன் எல்லைப்புறப் பகுதியின் பெயராற் குறிப்பது இயல்பே.

ஒ.நோ: கருநாடகம் (தென்னாடு முழுமைக்கும் முகமதியர் இட்ட பெயர்), இந்து (இந்தியா முழுமைக்கும் உரோமகிரேக்கர் இட்டபெயர்). சிந்து → ஹிந்து → இந்து.

அருவரு-த்தல் *aru-v-aru-*, 4 செ.குன்றாவி. (v.t.) **துப்புரவின்மை, தீயொழுக்கம், கடும்பகை முதலியவற்றால் மிக வெறுத்தல்**; to loathe, abhor, feel disgusted with on account of filthiness, evil conduct or rancour.

[அர் → அரி. அரித்தல் = அழித்தல். அரி = பகை. அர் → அரு. அருஅரு → அருவரு (இ.கி.). இனி, அறவெறு → அருவரு என்றுமாம்.]

அருவருப்பு *aruvaruppu*, தொ.பெ. (vbl.n.) **மிக வெறுப்பு** (சூடா.); disgust, loathing, abhorrence.

[அருவரு → அருவருப்பு. 'பு' தொ.பெ. ஈறு.]

அருவருளிமூலி *aruvaruḷi-mūli*, பெ. (n.) **சிற்றாமணக்கு**; small-seeded castor-oil plant, *Ricinus communis* (சா.அக.).

அருவல் *aruval*, பெ. (n.) 1. **இறுகப் பிணிக்கும் வலி**; griping pain. வயிற்றருவல். 2. **கண் கரித்தல்**; irritation of the eyes (சா.அக.). 3. **துன்பம்** (பிங்.); affliction.

ம. அருவல்

[அருவுதல் = நோவுறுத்துதல், துன்புறுத்துதல். அருவு → அருவல்.]

அருவன் *aruvan*, பெ. (n.) **உருவிலி;** one who has no visible body. "அருவனா யிவற்றோடு" (சி.சி. சுபக். 4 : 31).

அருவா-தல் *aru-v-ā-*, 6 செ.கு.வி. (v.i.) **பிறப் பறுதல்;** to be freed from rebirths. "அழுந் தேன் வந்துன் னடியடைந்தே னருவாய்ப் போத வழகிதோ" (சீவக. 3021).

[அரு + ஆ. அல் → அ. உரு → உருவு → உருவம் > Skt. rūpa. அ + உரு — அவுரு → அரு.]

ஒ.நோ: அ + வலம் — அவலம்.

அருவா *aruvā*, பெ. (n.) **இடைக்காலக் கொடுந் தமிழ் நாடு பன்னிரண்டனுள் ஒன்றான அருவா நாடு;** one of the 12 regions where vulgar dialects of Tamil were said to be spoken during the mediaeval period. "பன்றி யருவா வதன் வடக்கு" (நன். 273, விருத்.).

அருவா நாடு பார்க்க; see *aruvā-nāḍu*.

அருவாட்டி *aruvāṭṭi*, பெ. (n.) **அருவாநாட்டுப் பெண்** (தொல். சொல். பெயர். 11, நச். உரை); woman of *aruvānāḍu*.

தெ. அரவத

அருவாணம் *aruvāṇam*, பெ. (n.) 1. **செப்புத் தட்டு, தாம்பாளம்;** copper tray, platter. 2. **கோயில் திருச்சோறு (பிரசாதம்)** (கோயிலொ. 50); food offered to a deity in a temple. இது சுரிவாண மெனவும் படும். தேவநிலையங் களிலிருந்து (தேவாலயங்களிலிருந்து) பெரி யோர்க்குச் செய்யுஞ் சிறப்பிற்கு வழங்கப் படுகிறது (சங்.அக.).

க. அரிவாண; தெ. அரிவாணமு; பிராகி. ஆரிவாண.

அருவாணாடு *aruvāṇāḍu*, பெ. (n.) அருவா நாடு பார்க்க; see *aruvā-nāḍu*. 'அருவாணாட்டார் சிறுகுளத்தைக் கேணி யென்றும்.........வழங்கு வர்' (நன். 272, மயிலை.).

[அருவாள் + நாடு.]

அருவா நாடு *aruvā-nāḍu*, பெ. (n.) **இடைக்காலப் பன்னிரு கொடுந்தமிழ் நாடுகளுள் ஒன்று, தென்னார்க்காடு மாவட்டத்திலொரு பகுதியும் வடார்க்காடு மாவட்டத்திலொரு பகுதியுஞ் சேர்ந்த நிலப்பாகமாகத் தெரிகின்றது;** one of the 12 regions where vulgar dialects of Tamil are said to have been spoken during the mediaeval period, possibly comprising a portion of the South Arcot district and another of the North Arcot district.

'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு (கொடுந்தமிழ்) நிலமாவன..........அருவா நாடு,............என இவை' (தொல். சொல். எச்ச. 4, உரை).

அருவாவடக்கு *aruvā-vaḍakku*, பெ. (n.) அருவா வடதலை பார்க்க; see *aruvā-vaḍa-talai* (சங். அக.).

"தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றியருவா வதன்வடக்கு................."
(நன். 272, மயிலை.).

அருவாவடதலை *aruvā-vaḍa-talai*, பெ. (n.) **இடைக்காலப் பன்னிரு கொடுந்தமிழ் நாடு களுள் ஒன்று, அருவா நாட்டை யடுத்து அதற்கு வடக்கிலிருந்தது, பெரும்பாலும் இற்றைச் செங்கழுநீர்ப்பட்டு (செங்கற்பட்டு) மாவட்டமும் அதனை யடுத்து வடக்கிலுள்ள ஒரு சிறு நிலப் பகுதியும்;** one of the 12 regions where vulgar dialects of Tamil are said to have been spoken during the mediaeval period, possibly the Chengalpaṭṭu district together with an adjoining portion of land in the north. 'செந் தமிழ் சேர்ந்த பன்னிரு (கொடுந்தமிழ்) நில மாவன..............அருவா வடதலை............ என இவை' (தொல். சொல். எச்ச. 4, உரை).

அருவாள் *aruvāḷ*, பெ. (n.) அருவா பார்க்க; see *aruvā*. கொடுந்தமிழ் நிலம் "................. தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண் பூழி பன்றி யருவா வதன் வடக்கு.............. என்னும் இப் பன்னிரு நாடுமாம்" (நன். 272, மயிலை.).

அருவாள்வடதலை *aruvāḷ-vaḍa-talai*, பெ. (n.) அருவாவடதலை பார்க்க; see *aruvā-vaḍa-talai*. 'அருவாள் வடதலையார் புளியை எகின மென்றும்...............வழங்குவர்' (நன். 272, மயிலை.).

அருவாளர் *aruvāḷar*, பெ. (n.) **அகத்தியனாரால் தென்னாட்டிற் குடியேற்றப்பட்டவராகச் சொல்லப்படும் ஒரு வகுப்பார்;** name of a tribe said to have been established by Agastya in South India and to have inhabited *Aruvānāḍu*.

'அவரும் (அகத்தியனாரும்) தென்றிசைக் கட் போதுகின்றவர்..............துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும்

பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையுங் கொடுபோந்து காடுகெடுத்து நாடாக்கி....................' (தொல். எழுத்து. பாயி. நச். உரை).

[அருவாள் + அர். 'அருவாள்' ஒரு நாட்டின் பெயர். 'அர்' ப.பா. ஈறு.]

அருவி[1] *aruvi*, பெ. (n.) 1. *மலையினின்று விழும் நீர்வீழ்ச்சி*; waterfall, cascade. "அருவிக் குன்றமு மைவனச் சாரலும்" (சீவக. 1779). 2. *ஆறு* (பொதி.நி.); river. 3. *கழிமுகம்* (சூடா.); estuary of backwater. 4. *நீரூற்று* (F.); spring at the foot of a hill. 5. *நீர்*; water. "அருவி யாம்பல்" (பதிற். 71 : 2). 6. *ஒழுங்கு, வரிசை*; arrangement, row. "வேலருவிக் கண்ணினார்" (சீவக. 291). 7. *மலை* (பொதி. நி.); hill, mountain.

ம. அருவி; க. அர்வி; து. அருவெ.

[அருவுதல் = அறுத்தொழுகுதல். அருவு → அருவி. 'இ' வி.முத. ஈறு.]

அருவி[2] *aruvi*, பெ. (n.) 1. *அறுத்த ஒரு பிடிக் கதிர்*; sheaf of corn. "அருவிகட்டும் வல்லயக் காரர்" (தெய்வச். விறலிவிடு.). 2. *தினைத் தாள்* (திவா.); stubble of Italian millet. 3. *புன்செய்ப்பயிரின் தாள்* (நாமதீப.); stubble of dry crops.

[அரிதல் = அறுத்தல். அரி → அரிவி → அருவி. 'இ' செயப்படுபொருளீறு.]

அருவி[3] *aruvi*, பெ. (n.) 1. *உருவமில்லாதது*; that which is formless, shapeless. "அருவிக் கால் பாராட்ட" (பரிபா. 6 : 53). 2. *பெயர் கூறப்படாத அகப்பொருள் கிளவித் தலைமகன், உருவி என்பதற்கு எதிர்*; hero, chief male character of a love-poem, dist. fr. *uruvi*.

"உருவி யாகிய வொருபெருங் கிழவனை
யருவி கூறுத லானந் தம்மே"
(யாப். வி. ஒழிபு. பக். 525).

ம. அருபி

[அல் → அ. அ + உருவி – அவுருவி → அருவி. உரு → உருவு → உருவம் > Skt. rūpa. உருவம் → உருவன், உருவி > Skt. rūpin.]

அருவித்தின்(னு)-தல் *aruvi-t-tin(nu)-*, 14 செ. குன்றாவி. (v.t.) *மிகத் துன்புறுத்துதல்*; to cause great pain. "அருவித் தின்றிட வஞ்சிநின் னடைந்தேன்" (திவ். பெரியதி. 7 . 7 : 1).

[அருவுதல் = துன்புறுத்துதல். அருவு → அருவி (இ.கா.வி.எ.). அருவி + தின். தின்னுதல் = தின்றாற்போ லரித்தல். ஒ.நோ: தினவுதின்னுதல்.]

அருவிநீர்ததும்பல் *aruvi-nir-tadumbal*, தொ.பெ. (vbl.n.) *கண்ணினின்று தாரையாக நீர் வழியுங் கண்ணோய்*; an eye disease characterised by secretion and discharge of tears, *lachrymation* (சா.அக.).

[அருவி (இ.கா.வி.எ.) + நீர் + ததும்பல். ததும்புதல் = நிறைதல், நிறைந்து வழிதல். 'அல்' தொ. பெ. ஈறு.]

அருவிலைக்காலம் *aru-vilai-k-kālam*, பெ. (n.) *பஞ்சகாலம்*; days of famine, characterised by exorbitant prices of commodities.

[அரு + விலை + காலம்.]

அருவிவெட்டல் *aruvi-veṭṭal*, தொ.பெ. (vbl.n.) *அருவிவெட்டு* பார்க்க; see *aruvi-veṭṭu*.

அருவிவெட்டு *aruvi-veṭṭu*, தொ.பெ. (vbl.n.) *அறுவடை*; harvesting. "நாற்று நடுகை அருவி வெட்டு" (தண்டிகை. பள். ஆராய். 1).

அருவு *aruvu*, பெ. (n.) *அத்தி*; fig, *Ficus glomerata* (சா.அக.).

[அர் → அரக்கு. அர் → அரு → அருவு = செங் கனிமரம்.]

அருவு[1]**-தல்** *aruvu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. *அறுத்தொழுகுதல்*; to wear away, as a flood the banks of a river. கரையை ஆற்று வெள்ளம் அருவுகிறது (இ.வ.). 2. *துன்புறுத்துதல்*; to afflict, gripe. "அருவிநோய் செய்து" (திவ். பெரியதி. 9 . 7 : 6) —, 5 செ.கு.வி. (v.i.) *வெள்ளம்போல் மெல்லச் செல்லுதல்*; to move or flow down gently.

[அர் → அரி. அரித்தல் = அறுத்தொழுகுதல். அர் → அரு → அருவு.]

அருவு[2]**-தல்** *aruvu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *கிட்டுதல்* (வின்.); to approach.

[அல்லுதல் = பொருந்துதல். அல் → அள். அள்ளுதல் = நெருங்குதல், செறிதல். அள் → அர் → அரு → அருவு. ஒ.நோ: அருவு → அருகு.]

அருவுகால் *aruvu-kāl*, பெ. (n.) *அருகுகால்*; door frame.

[அள் → அரு → அருவு + கால்.]

அருவு[2]-தல் பார்க்க; see *aruvu*[2]-.

அருவுடம்பு *aru-v-uḍambu*, பெ. (n.) ***நுண்ணிய வுடம்பு (சூக்கும சரீரம்), உருவுடம்பு என்பதற்கு எதிர்***; the subtle body, opp. to *uruvuḍambu*.

'உடம்பென்ற பொதுமையான், உருவுடம்பும் அருவுடம்புங் கொள்ளப்படும். அவற்றுள் அருவுடம்பாவது பத்துவகைப் பொறியுணர்வோடும் (இந்திரிய வுணர்வோடும்) ஐவகை வளிகளோடும் (வாயுக்களோடும்) காமவினை விளைவுகளோடுங் கூடிய மனம்' (குறள், 345, பரிமே. உரை).

[அரு + உடம்பு.]

அருவுரு *aru-v-uru*, பெ. (n.) *1.* ***அருவும் உருவும்***; that which has no form and that which has any form. *2.* ***அருவுருவம்*** பார்க்க; see *aru-v-uruvam*. "அருவுருவ மாயெங்கு மமரா நிற்கும்" (சூத. முத்தி. 4 : 16).

[அரு + உரு.]

அரு, உரு பார்க்க; see *aru, uru*.

அருவுருவம் *aru-v-uruvam*, பெ. (n.) ***சிவக்குறியும் ஒளிப்பிழம்பும் போன்று அருவென்றும் உரு வென்றும் சொல்லலாகாதது;*** form which can be said to be of no form, as the Śiva-linga or a flood of light.

"அருவுருவந் தானறித லாயிழையா
யான்மா
அருவுருவ மன்றாகு முண்மை — யருவுரு
வாய்த்
தோன்றியுட னில்லாது தோன்றாது
நில்லாது
தோன்றன் மலர்மணம்போற் றொக்கு"
(சி.போ. சாதன. 7 . 3 : 1).

[அரு + உருவம்.]

அரு, உருவம் பார்க்க; see *aru, uruvam*.

அருவேதனை *aru-vēdaṉai*, பெ.(n.) ***பெருநோவு, பெருந்தொல்லை;*** great torment, severe affliction. உன்னால் நான் அருவேதனைப் படுகிறேன் (உ.வ.).

[அரு + வேதனை. வேதல் = எரிதல், நோதல், வருந்துதல். வே → வேத → வேதனை. 'அனை' தொ.பெ. ஈறு.]

அருள்[1][ளு]-தல் *aruḷ-*, 11 செ.கு.வி. (v.i.) *1.* ***இரக்கங் காட்டுதல்***; to be gracious to, to show favour. "அருளாத நீரருளி" (திவ்.திருவாய். 1. 4 : 6). *2.* ***சிவன் (இறைவன்) பழுத்த ஆதன்கட்கு (பக்குவ ஆன்மாக்கட்கு) வீடளித்தலாகிய ஐந்தாம் தொழிலைச் செய்தல்***; to grant eternal bliss, as Śiva (God), to perfected souls. *3.* ***மகிழ்தல்***; to rejoice. "அரிமயி ரொழுகுநின் னவ்வயி றருளி" (தொல். பொருள். கற். 5, நச். உரை மேற்கோள்). *4.* ***தூக்கம் விழித்தல்***; to keep awake (சா.அக.). —, 6 செ.குன்றாவி. (v.t.) *1.* ***அளித்தல்***; to grant, bestow. ஏற்றவர்க்கு மாற்றா தருள் செய்கை (தஞ்சைவா. 126). *2.* ***படைத்தல்***; to create. "ஆரணத் தானருள் பாரளித்தான்" (தஞ்சைவா. 265). *3.* ***காத்தல்***; to protect, preserve. "பொறுத்தே யருள்வா யென்னா விருதாள் சென்னி புனைந்தேன்" (கம்பரா. அயோத். நகர்நீங்கு. 82). *4.* ***அருளோடு சொல்லுதல்***; to speak graciously. "நீதான் யாவன் அந்தோ வருள்கென்று" (கம்பரா. அயோத். நகர்நீங்கு. 76). *5.* ***இறைவன் அரசன் முதலிய வணக்கத்திற் குரியோர் கட்டளையிடுதல்***; to command, as God, king or other venerable persons. "கொண்டுவரு கென வருளுங் குலவுதிரு வருள்கேளா" (கோயிற்பு. இரணிய. 51). —, (பொது) ***இறைவன் அரசன் முனிவன் முதலிய வணக்கத்திற் குரியோர் செயல் கூறும் வினைச்சொல்லுடன் கூடிவரும் துணைவினை;*** an auxiliary verb added to the verbs denoting the actions of God, kings, sages or other venerable persons. "நாத னெழுந் தருள" (கோயிற்பு. பதஞ். 25). "தெண்டிரை சேர் சடையாருந் திருவுள்ள மகிழ்ந்தருளி" (கோயிற்பு. இரணிய. 51).

[அல்லுதல் = பொருந்துதல், உளமொத்தல். அல் → அன்பு (அல் + பு). அள்ளுதல் = நெருங்குதல், செறிதல், பொருந்துதல். அள் → அளி = அன்பு, அருள். அள் → அர் → அருள். ஒ.நோ: தெள் → தெர் → தெருள்.]

அருள்[2][ளு]-தல் *aruḷ-*, 16 செ.கு.வி. (v.i.) ***அச்சமுறுதல்;*** to be frightened, terrified, bewildered. " அருண்டென்மேல் வினைக் கஞ்சி " (தேவா. 7.66 : 2).

க. அரள், அரலு.

[உரு = அச்சம். உரு → அரு → அரள் → அருள்.]

அருள்[1] *aruḷ*, பெ. (n.) *1.* ***தொடர்பு பற்றாதும் கைம்மாறு கருதாதும் எல்லா வுயிர்கள் மேலும் இயல்பாகச் செல்லும் இரக்க அன்பு;*** grace, mercy, favour, benevolence. "அருளில்லார்க்

கவ்வுலக மில்லை'' (குறள், 247). 2. சிவன் (இறைவன்) 5ஆம் தொழிலாகிய வீடளிப்பு; deliverance of soul effected by Śiva. 3. சிவனாற்றல், பரை (சூடா.); Śiva's energy. 4. கொடை; gift. ''அருளி லார்களி லைந்தரு நிகர்க்கிலா ரில்லை'' (நைடத. நகர. 9). 5. நல்வினை (பிங்.); good deeds. 6. பட்டறிவுள்ள குரவன் நல்லுரை (அனுபவமுடைய தேசிகன் உபதேசம்); spiritual instruction by an experienced religious preceptor. ''அருளினா லாகமத்தே யறியலாம்'' (சி.சி. சுபக். பாயி. 5). 7. அருட்கட்டளை; gracious command. ''கொண்டு வருகென வருளுங் குலவு திருவருள்'' (கோயிற்பு. இரணிய. 51). 8. முகவொளி, முகக்களை; brightness of appearance. முகத்தில் அருளில்லை.

ம., க., பட. அருள்; தெ. அருலு.

அருள்[1][ளு]-தல் பார்க்க; see aruḷ-[1].

அருள்[2] *aruḷ*, பெ. (n.) 1. மரவகை; a tree, probably of the genus, *Meliaceae*, having the same medicinal properties, as are ascribed to the margosa.

''வாத மகலும் வளருகின்ற மந்தமறுஞ்
சீதரத்தஞ் சோபை சுரந்திடுங்காண்-ஓதும்
இருளாருங் கூந்த லெழிலணங்கே முத்த
அருளென்னு நன்மரத்தா லாய்''
(பதார்த்த. 229)

(செ.அக.) — இரும்பகம் (இருள்); ironwood tree of Ceylon, *Mesua ferrea* (சா.அக.). 2. முதிர்ந்த மாதுளைமரம் (மூ.அ.); mature pomegranate tree.

அருள்செய்-தல் *aruḷ-šey-*, 1 செ.குன்றாவி. (v.t.) அருளொடு சொல்லுதல்; to speak graciously. ''உள்ளபடி யருள்செய்ய வேண்டு மென'' (கோயிற்பு. பதஞ். 6).

அருள்சோதி *aruḷ-šōdi*, பெ. (n.) 1. ஒரு செய்ந்நஞ்சு (கௌரிபாடாணம்); a kind of arsenic (சா.அக.). 2. அருட்சோதி பார்க்க; see *aruṭ-cōdi*.

[அருள் + Skt. jyotis > த. சோதி.]

அருள்பாடு *aruḷ-pāḍu*, பெ. (n.) அருட்கட்டளை; gracious commandment (சம்.அக.).

அருளிப்பாடு பார்க்க; see *aruḷi-p-pāḍu*.

[அருள்படு → அருள்பாடு (முத.தி.தொ.பெ.).]

அருள்பாதமூலி *aruḷ-pāda-mūli*, பெ. (n.) நரிப்பாலை; fox milkwort, *Oxystelma wallichii* (சா.அக.).

அருள்புரிபத்திரம் *aruḷ-puri-pattiram*, பெ. (n.) அரசன், ஒருவனின் ஊழியத்தையும் மறத்தையும் பாராட்டி ஊர் முதலியவற்றை அவனுக்கு மானியமாக அளித்ததற்கு எழுதிக்கொடுக்கும் ஆவணம் (மிருதிசந். 31); title deed given in confirmation of a royal grant of land to one, in recognition of his service and valour (சங். அக.).

[அருள் + புரி + பத்திரம். Skt. pattra > த. பத்திரம்.]

அருள்மரம் *aruḷ-maram*, பெ. (n.) முதிர்ந்த மாதுளைமரம்; an old pomegranate tree (சா. அக.).

அருள்மாரி *aruḷ-māri*, பெ. (n.) 1. அருள்மழை; shower of blessings. 2. அருள்பொழிவோன்; one who showers blessings. ''அருள்மாரி யரட்டமுக்கி'' (திவ். பெரியதி. 3. 4 : 10).

அருள்வடிவன் *aruḷ-vaḍivaṉ*, பெ.(n.) சிவபிரான் (நாமதீப. 10); Śiva, as embodiment of grace.

அருள்வரை (ரேகை) *aruḷ-varai*, பெ. (n.) (கைவரை) உள்ளங்கையில் மதிவரையைத் தொட்டுக்கொண்டு திங்கள்மேட்டில் வளைந்திருக்கும் ஒரு வரை; (Palm.) the line of intuition extending from the line of intellect to the elevation below the little finger of the palms (சா.அக.).

[மதிவரை = புத்திரேகை. திங்கள்மேடு = சந்திரமேடு.]

அருள்வாக்கி *aruḷ-vākki*, பெ. (n.) திருவருள் பெற்ற பாவலன் அல்லது நாவலன்; one whose utterances are divinely inspired.

அருளக்கமயம் *aruḷakkamayam*, பெ. (n.) தூதுவளை; three-lobed night-shade, *Solanum trilobatum* (சா.அக.).

அருளகம் *aruḷagam*, பெ. (n.) வெள்ளெருக்கு (மலை.); white madar, *Calotropis gigantea.*

அருளப்பாடு *aruḷa-p-pāḍu*, பெ. (n.) அருட்கட்டளை (ஈடு, 6. 9 : 73); gracious commandment.

அருளிப்பாடு பார்க்க; see *aruḷi-p-pāḍu*.

[அருள (நி.கா.வி.எ.) + படு. அருளப்படு → அருளப்பாடு (முத.தி.தொ.பெ.).]

அருளம் *aruḷam*, பெ.(n.) பொன் (வை.மூ.); gold.

அருளரசி *aruḷ-araši*, பெ. (n.) 1. வெட்பாலை (மலை.); ivory tree. 2. குடசப்பாலை (மூ.அ.); conessi bark (செ.அக.).

அருளரிசி *aruḷ-arišı*, பெ. (n.) 1. வெட்பாலை யரிசி; the seeds of Medicinal Echites, *Holarrhena anti-dysenterica*. 2. குடசப்பாலை; a plant, *Holanhena codaga* (சா.அக.).

அருளல் *aruḷal*, பெ. (n.) பெருங்கொடை (பிங்.); liberality, generosity, munificence.

அருள்[1] பார்க்க; see *aruḷ*[1].

அருளவம் *aruḷavam*, பெ. (n.) 1. அழிஞ்சில் (வின்.); sage-leaved alangium (செ.அக.) — ancola fruit plant, *Alangium lamarckii* alias *A. decapetatum* (சா.அக.). 2. பெருமரம் (மலை.); tooth-leaved tree of heaven (செ. அக.) — fetid tree, *Plumosa alba* (சா.அக.).

மறுவ. அருளுவம்

அருளறம் *aruḷ-aṟam*, பெ. (n.) அருளாகிய அறம்; virtue of grace. ''அருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையின்'' (மணிமே. 5 : 75).

[அருள் + அறம்.]

அருளறம்பூண்டோன் *aruḷ-aṟam-pūṇḍōṉ*, பெ. (n.) புத்தன் (மணிமே.); the Buddha.

[அருள் + அறம் + பூண்டோன். பூண் → பூண்டவன் → பூண்டான் → பூண்டோன் (வினையா. பெ.).]

அருளாசி *aruḷ-āši*, பெ. (n.) வேம்பு; margosa (சா.அக.).

அருளாதி *aruḷādi*, பெ. (n.) 1. குடசப்பாலை; conessi bark, *Holanhena codaga*. 2. தூதுவளை; three-lobed night-shade, *Solanum trilobatum* (சா.அக.).

அருளாதோதியம் *aruḷādōdiyam*, பெ. (n.) புளிப் பிலந்தை; sour jujuba, *Zizyphus jujuba* (சா. அக.).

அருளாந்தை *aruḷāndai*, பெ. (n.) பாளை யுடைச்சி (L.); Indian Colasanthes (செ.அக.)— Indian Colasanthes, *Oroxylum indicum* (சா. அக.).

அருளாப்பு, அருளாபு *aruḷāppu, aruḷābu*, பெ. (n.) சாரணை (மலை.); purslane-leaved *Trianthema* (செ.அக.) — nasar junghi plant, *Trianthema monogyna* (சா.அக.).

அருளாபோகிகம் *aruḷāpōgigam*, பெ. (n.) புளி மாதுளை; sour pomegranate, *Punica granatum* (சா.அக.).

அருளாழி *aruḷ-āḻi*, பெ. (n.) (சமண.) அறச்சக் கரம்; (Jain.) the wheel of Virtue (Dharma). ''வினையெறியு மருளாழியும்'' (மேருமந். 1039.).

[அருள் + ஆழி.]

அருள், ஆழி பார்க்க; see *aruḷ, āḻi*.

அருளாழிவேந்தன் *aruḷ-āḻi-vēndaṉ*, பெ. (n.) 1. கடவுள் (வின்.); God. 2. அருட்சக்கரம் உருட்டும் அருகன்; Arhat, as wielding the disc of grace.

[அருள் + ஆழி + வேந்தன்.]

அருள், ஆழி, வேந்தன் பார்க்க; see *aruḷ, āḻi, vēndaṉ*.

அருளாளப்பெருமாள் *aruḷ-āḷa-p-perumāḷ*, பெ. (n.) காஞ்சிபுரத்துத் திருமால் (S.I.I. iii, 188); *Tirumāl* (Viṣṇu), as worshipped in Kāñjipuram.

[அருள் + ஆளன் + பெருமாள். பெருமால் → பெருமாள்.]

பெருமாள் பார்க்க; see *perumāḷ*.

அருளாளன் *aruḷ-āḷaṉ*, பெ.(n.) அருள் நிறைந்த கடவுள்; God, who is full of grace. ''பித்தா பிறை சூடபெரு மானேயருளாளா'' (தேவா. 7. 1 : 1).

க. அருளாளு

[அருள் + ஆளன். ஆள் → ஆளன் = ஆள் வோன், உடையோன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அருளானவன்னம் *aruḷ-āṉa-vaṉṉam*, பெ. (n.) (புடமிடப்பட்ட) தங்கம்; refined gold (சா. அக.).

[அருள் + ஆன + வன்னம் (தங்கம்). அருளம் = பொன்.]

அருளி *aruḷi*, பெ. (n.) 1. (வேதி.) வீரம்; (Chem.) corrosive sublimate. 2. இருள்மரம்; ironwood of Ceylon, *Mesua ferrea* (சா.அக.).

[இருள் → இருளி → அருளி.]

அருளிச்செய்-தல் *aruḷi-c-cey-*, 1 செ.குன்றாவி. (v.t.) கடவுள் அல்லது வணங்கப்படத்தக்க பெரியோர் அருளொடு சொல்லுதல்; to speak, as God or venerable persons. ''நம் பெரு

மாட்டிக் கங்கு நாயக னருளிச் செய்வான்'' (பெரியபு. காரைக். 57).

[அருளி + செய்.]

அருளிச்செயல் *aruḷi-c-ceyal*, பெ. (n.) 1. **இறைவன் அல்லது அரசன் கட்டளை**; God's or king's gracious command. 'ராஜாவின் அருளிச் செயற்படிக்கு மந்திரமூர்த்தி வெட்டுவித்தது' (S.I.I. ii, 118). 2. **அடியார் பாடல்**; poetical utterances of saints. ''அருளிச் செயல்வாழி'' (உபதேசரத். 3).

ம. அருளிச்செய்யுக

[அருளி + செயல்.]

அருளிப்பாடியன் *aruḷi-p-pāḍiyan*, பெ. (n.) **தேவ அல்லது அரசக் கட்டளையை நிறைவேற்றுவோன்**; executor of divine or royal commands. ''அங்கருளிப் பாடியரோ டரு முனிவர் கடிதணைந்து'' (கோயிற்பு.இரணிய. 52).

[அருளிப்பாடு → **அருளிப்பாடியன்**.]

அருளிப்பாடு பார்க்க; see *aruḷi-p-pāḍu*.

அருளிப்பாடு *aruḷi-p-pāḍu*, பெ. (n.) **இறைவன் அல்லது அரசன் கட்டளை**; God's or king's gracious command. ''ஆயசீ ரிராகவ னருளிப் பாடென வாயில்காப் பாளரு மகிழ்ந்து கூற லும்'' (உத்தரரா. அசுவ. 157) —, இடை. (int.) **'கட்டளைப்படி செய்வோம்' என்னுங் குறிப்பு**; 'As it pleaseth thee!' said in response to a divine or royal command. ''கணநாத ரருளிப்பா டென்றார்கள்'' (கோயிற்பு. இரணிய. 51).

ம. அருளிப்பாடு; **க.** அருளபாடு.

[அருளப்பாடு → அருளிப்பாடு. இனி, 'அருளி = அருளினதினால், பாடு = உண்டாகை' **என்றுமாம்**.]

அருளுத்தசாரம் *aruḷuttaśāram*, பெ. (n.) **ஊர்க் குருவி**; Indian house-sparrow, *Passer indicus* (சா.அக.).

அருளுபதி *aruḷupadi*, பெ. (n.) **அருளுறுதி** பார்க்க; see *aruḷuṟudi*.

அருளுருநிலை *aruḷ-uru-nilai*, பெ. (n.) **சிவபெருமான் குருவுருக் கொள்ளும் நிலை** (திருவருட். 5, தலைப்பு); manifestation of Śiva as a spiritual preceptor.

[அருள் + உரு (உருவம்) + நிலை.]

அருளுவம் *aruḷuvam*, பெ. (n.) **அருளவம்** பார்க்க; see *aruḷavam*.

அருளுறுதி *aruḷuṟudi*, பெ. (n.) **வேம்பு**; margosa, *Melia azadirachta*.

மறுவ. அருளுபதி

அருளொடுநீங்கல் *aruḷoḍu-niṅgal*, தொ.பெ. (vbl.n.) (பொருள்) **உலகத் துயரத்தை நோக்கிப் பற்று நீங்குதலைக் கூறும் புறத்துறை** (பு.வெ. 8 : 34); (Poruḷ) theme expressing one's renunciation of worldly desires on seeing the miseries of the world.

அருளோதியம் *aruḷōdiyam*, பெ. (n.) புளிப்புக் கொடிமுந்திரி; sour grapes, *Vitis vinifera* (சா.அக.).

அருளோன் *aruḷōn*, பெ. (n.) 1. **கடவுள்**; God. 2. **அருளுடையோன்** (சூடா.); gracious person.

அருனாவரிசி *arunāvariśi*, பெ. (n.) **அறுவகை யரிசியுள் ஒன்றான மருந்துச் சரக்கு** (சங்.அக.); a kind of seed used in medicine.

அரை[1]-தல் *arai-*, 2 செ.கு.வி. (v.i.) 1. **தேய்தல்**; to become macerated, worn out. ''நீளிடை யங்கமெங்கு மரைந்திட'' (பெரியபு. திருநாவு. 360). 2. **அரைபடல்** (சங்.அக.); to be ground.

ம. அரயுக; **க., பட.** அரெ; **குட.** அர; **து.** அரெபுனி; **தெ.** ராசு; **கோத.** அர்வ், அர்த்; **கொலா.** ராக்; **கோண்.** அரீதானா; **கூ.** ராத்; **குவி.** ராஜ.

[அர் → அரம், அரவு → அராவு, அரவு → அரகு → அரங்கு. அர் → அறு. அர் → **அரை**. அரைத்தல் = அராவித் தூளாக்குதல் அல்லது பசையாக்குதல்.]

அரை[2]-த்தல் *arai-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **தேய்த்தல்**; to rub against, graze, mash. ''அரைத்த வாரமும்'' (பாரத. நிரை. 29). 2. **கொட்டை நீக்குதல்**; to remove seeds, பஞ்சரைக்கும் **ஆலை**; gin. 3. **நசுக்குதல்** (சங்.அக.); to crush. 4. **அம்மியில் வைத்து அரைத்தல்**; to grind. ''அரைத்த மஞ்சள தாவதை'' (தேவா. 7. 60 : 2). 5. **பொடித்தல், தூளாக்குதல், மாவாக்குதல்**; to pulverise. மாவரைக்கும் ஆலை. 6. **அழித்தல்** (வின்.); to destroy. 7. **நோயிலழுந்தல்** (சங்.அக.); to be afflicted with sickness. 8. **வெட்கப்படுதல்** (நாஞ்.); to be ashamed (Nāñ.).

ம. அரய்க்குக; க. அரெயிசு; தெ. அரகதீயு; துட. யெரை; து. அரெபு; பட. அரெ.

அரை¹-தல் பார்க்க; see *arai*-¹.

அரை¹ *arai*, பெ. (n.) 1. **இடை**; waist, loins. "புனைமணி யரைஞாணொடு போதும்" (பெரியபு. திருஞான. 93). 2. **பாதி**; half.

"வேணப்பா கஸ்தூரி வகைக்குத் தானும்
விளங்கவே யரைக்கழஞ்சு வேண்டு வாயே"

(அகஸ்தியர்பூ. 118). 3. **இ, ௭ என்னும் பின்னவெண்**; the fraction ½. 4. **நடு**; middle. "மழையமைந் துற்ற வரைநா ளமயமும்" (மதுரைக். 649). 5. **வயிறு**; stomach. "கன் றரைப்பட்ட கயந்தலை மடப்பிடி" (மலைபடு. 307). 6. **அல்குல்**; the portion between waist and *Pudendum muliebre*. 7. **தொடையின் மேற்பாகம்**; the upper part of the thigh (பொருந. 104, உரை). 8. **தண்டு**; stem. "முள்ளரைத் தாமரை" (சிறுபாண். 183). 9. **மரத்தின் அடிப்பாகம்**; trunk of a tree. "பொரியரைத் தேமா" (நைடத.நாட்டு. 20). 10. **இடம்**; part, portion. "குளகரை யாத்த குறுங்காற் குரம்பை" (பெரும்பாண். 148).

ம., க., தெ. அர; து., குட., பட. அரெ; கோத., துட. அர்.

[அருகுதல் = சிறுத்தல், குறைதல். அரு → அருகு. அரு → அரை = உடம்பின் சிறுத்த அல்லது ஒடுங்கிய பாகம். ஒ.நோ: இடு → இடுகு → இடுக்கு. இடு → இடை = உடம்பின் இடுகிய பாகம்.]

அரை² *arai*, பெ. (n.) **அரசியல்**; politics. "அரைவிளை கலைநல்லார்" (சீவக. 2430).

[அரசன் → அரைசன் → அரையன் → அரை. ஒ.நோ: இறையன் → இறை, பறையன் → பறை. அரையன் → ராயன் > தெ. ராயடு. cf. E. roy.]

அரை³ *arai*, பெ. (n.) **ஒருவகை மரம்**; a kind of tree.

"பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்"
(தொல். எழுத்து. உயிர். 81).

'அரை' என்பது 'அரசு' என்பதன் சிதைவாய் அல்லது திரிபாயிருக்கலாமென்று சிலர் ஐயுறுவர். அதற்கு இடமிருப்பதாகத் தெரியவில்லை.

அரைக்கச்சு *arai-k-kaccu*, பெ. (n.) 1. **இடைப் பட்டிகை**; waist-band, girdle. 2. **இடையிற் கட்டும் ஒடுக்க உடை**; narrow cloth tied about the waist and tucked in behind.

[அரை + கட்டு → கச்சு.]

அரைக்கச்சை *arai-k-kaccai*, பெ. (n.) **அரைக் கச்சு** பார்க்க; see *arai-k-kaccu*.

[அரை + கட்டு → கச்சு → கச்சை.]

அரைக்கட்டி *arai-k-katti*, பெ. (n.) **அரை யாப்பு**; inguinal bubo.

[அரை + கட்டி.]

அரைக்கடி *arai-k-kaḍi*, பெ. (n.) **இடுப்பி லுண்டாகும் சொறிபுண்**; dhobies' itch, a kind of ringworm, *Tinea circinata*.

[அரை + கடி.]

அரைக்கடுவன் *arai-k-kaḍuvaṉ*, பெ. (n.) **அரைக் கடி** பார்க்க; see *arai-k-kaḍi* (செ.அக.) — **இடுப்பு, தொடைச்சந்து, குறி இவ்விடங்களிற் படர்ந்து நமைச்சலுண்டாக்கும் ஒருவகைப் படை**; a parasitic skin disease like ringworm marked by brownish eczematus patches on the inside of the thighs, lips, groins and the genitals, *Tinea cruris* (சா.அக.).

[அரை + கடுவன்.]

அரைக்கண் *arai-k-kaṇ*, பெ. (n.) 1. **பாதி மூடிய கண்**; half-closed eyes. அரைக்கண்ணாற் பார்க்கிறான் (உ.வ.). 2. **குறைந்த பார்வை**; partial sight. அரைக்கண் பார்வை.

க. அரெகண்; தெ. அரகண்ணு; பட. அரெ கண்ணு.

[அரை + கண்.]

அரைக்கண்ணுறக்கம் *arai-k-kaṇ-ṇ-uṟakkam-*, பெ. (n.) **அரைத் தூக்கம் அல்லது பாதி விழி மூடிய தூக்கம்**; sleep with eyes half-closed or partial sleep.

[அரை + கண் + உறக்கம்.]

அரைக்கண்போடு-தல் *arai-k-kaṇ-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **கால்நடை முதலியன அரைக்கண்ணோடு பார்த்தல்** (பெரியமாட். 129); to see with eyes half-closed, as cattle, etc.

[அரை + கண் + போடு.]

அரைக்காசப்புல் *arai-k-kaša-p-pul*, பெ. (n.) **பூனைப்புல்**; a species of grass (சா.அக.).

[ஒருகா. அரை + காசம் + புல். Skt. kāsa > த. காசம் = ஈளைநோய். பூனை வாய்வைத்த உணவை யுண்டால் ஈளைநோய் வரும் என்பர்.]

அரைக்காசுத்தொண்டன் *arai-k-kāsu-t-tondaṉ*, பெ. (n.) *மிக எளியவன்*; a poor, despicable fellow, pauper. "அரைக்காசுத் தொண்டனிவன்" (விறலிவிடு. 833-4).

[அரை + காசு + தொண்டன்.]

அரைக்காணி *arai-k-kāṇi*, பெ. (n.) (*கீழ் வாய்க்கணக்கு*) ~ என்று வரிவடிவிற் குறிக்கப் படுவதும் நூற்றறுபதிலொரு பங்குமான பின்னவெண்; the fraction 1/160, as half a *kāṇi*.

ம. அரக்காணி; க. அரெகாணி.

[அரை + காணி.]

அரைக்காய்ச்சல் *arai-k-kāyccal*, பெ. (n.) *நன்றாய்க் காயாத புழுங்கல் நெல்லை யிடித்த வதவலரிசி* (இ.வ.); rice husked from boiled paddy, not fully dried (Loc.).

[அரை + காய்ச்சல்.]

அரைக்கால் *arai-k-kāl*, பெ. (n.) (சீ.வா.க.) ஹ, ஜ என்று இருவேறு வரிவடிவிற் குறிக்கப்படுவதும் எட்டிலொரு பங்குமாகிய பின்னவெண்; the fraction 1/8, as half of a quarter.

ம. அரக்கால்; க. அரெகால்.

[அரை + கால். எட்டிலொரு பங்கு நாலிலொரு பங்காகிய காற்பங்கிற் பாதியாதலால், அரைக்கால் எனப்பட்டது.]

அரைக்கால்வாசி *arai-k-kāl-vāsi*, பெ. (n.) *பழைய வரிவகை* (S.I.I. ii,115); an ancient tax.

[அரை + கால் + வாசி. வருமானத்தில் அல்லது ஒரு விளைச்சலில் அரைக்காற்பங்கு கொடுக்கப்பட்ட வரியா யிருந்திருக்கலாம்.]

அரைக்காற்சட்டை *arai-k-kāṟ-cattai*, பெ. (n.) *சல்லடம், முட்டி (முழங்கால் கணு)வரை யணியும் காற்சட்டை*; shorts, drawers.

[அரை + கால் + சட்டை. முட்டிவரை அரைக்காலாதலால், அதுவரை யணியும் சட்டை அரைக்காற் சட்டை யெனப்பட்டது.]

அரைக்கீரை *arai-k-kīrai*, பெ. (n.) *அறைக்கீரை பார்க்க*; see *aṟai-k-kīrai*.

அரைக்குரல் *arai-k-kural*, பெ.(n.) *தெளிவில்லாப் பேச்சு (புதுவை)*; indistinct speech (Poṇḍ.).

[அரை + குரல். அரை = குறை.]

அரைக்குருடு *arai-k-kuruḍu*, பெ. (n.) *குறைந்த பார்வை*; partial blindness, *Amblyopia* (சா. அக.).

க. அரெகுருடு

[அரை + குருடு.]

அரைக்குழல் *arai-k-kuḻal*, பெ. (n.) *அரைஞாணிற் கோத்து அணியும் மந்திரத்தகடு அடைத்த குழல்* (இ.வ.); a pendant, encasing a mystic scroll, worn with the waist-cord (Loc.).

[அரை + குழல். அரை = இடுப்பு.]

அரைக்குளகம் *arai-k-kuḷagam*, பெ. (n.) 1. *ஒரு பட்டணம் படி*; a Madras measure approximately 2½ litres. 2. *அரைமரக்கால்*; half a *marakkāl*, equivalent to 8 or 10 measures varying according to places.

[அரை + குளகம்.]

அரைக்கூறு *arai-k-kūṟu*, பெ. (n.) 1. *பாதிப் பங்கு*; half the portion or share. 2. *மதிப் பாகப் பாதியளவு;* approximately half. 3. *அரைக்கூறு காய்ந்த நீர், கைபொறுக்குஞ் சூடுள்ள நீர்;* half-boiled water, tepid water, lukewarm water.

[அரை + கூறு.]

அரைக்கைச்சட்டை *arai-k-kai-c-cattai*, பெ. (n.) *மொழி (முழங்கைக்கணு) வரை கை வைத்துள்ள மேற்சட்டை*; half-sleeved jacket, shirt or coat.

தெ. அரசட்ட

[அரை + கை + சட்டை. மொழிவரை யுள்ள கை ஏறத்தாழப் பாதியாதலால் அரைக்கை யெனப்பட்டது.]

அரைகடி *arai-kaḍi*, பெ. (n.) *அரைக்கடி பார்க்க*; see *arai-k-kaḍi*.

[அரை = இடுப்பு.]

அரைகல் *arai-kal*, பெ. (n.) *அம்மி*; grinding-stone.

ம. அரகல்லு; க. அரெகல்; படா. அரெ.

[அரை = அரைப்பு.]

அரைகுலையத் தலைகுலைய *arai-kulaiya-t-talai-kulaiya*, வி.எ. (adv.) *இடுப்பாடையும் தலைமுடிப்பும் அவிழும்வண்ணம் மிகப் பரபரப்பாய்*; very hurriedly, even to the extent of letting one's waist-cloth and the tuft of

hair on one's head to become loose. 'அரை குலையத் தலைகுலைய வந்து' (ஈடு, 3.5 : 1).

[அரைகுலைய + தலைகுலைய. அரை, தலை என்பண ஆகுபெயரொத்த ஏற்றுரை வழக்கு (உபசாரவழக்கு — Transferred epithet). 'அரை............குலைய' என்பது ஒரு மரபுத் தொடர்மொழி (Idiomatic phrase).]

அரைகுளம்பு *arai-kuḷambu*, பெ. (n.) கால்நடைகளின் குளம்பிற் காணப்படும் ஒரு குற்றம் (பெரியமாட். 19); a defect in the hoof of cattle.

[ஒருகா. அரை = அரைப்பு.]

அரைகுறை *arai-kuṟai*, பெ. (n.) 1. போதாமை; insufficiency, deficiency. பணம் அரைகுறையாயிருக்கிறது (உ.வ.). 2. வினை முடியாமை, முற்றுப்பெறாமை; incompleteness, imperfection. கட்டட வேலை அரைகுறையாய்ச் செய்திருக்கிறது (உ.வ.).

க., பட. அரெகொரெ.

[அரை = பாதி. 'அரைகுறை' (அரையுங் குறையு மாயிருத்தல்) — ஒரு மரபிணைமொழி.]

அரைங்கரம் *araiṅgaram*, பெ. (n.) நானாழி; a measure of capacity, as half of the symbol for *kuṟuṇi*. "வல்லி சம்படி யுகர மாப மிருங் கர மடவந்த புனல ரைங்கரம்" (தைலவ. தைல. 6).

[குறுணி 8 படி. அதற்குக் குறி 'ங' (ஙகரம்). குறுணியிற் பாதி நானாழி (நாலுபடி). குறுணி குறிமுறையில் ஙகர மெனப்படுமாதலால், அதிற் பாதி அரைஙகர மெனப்பட்டது. அரைஙகரம் → அரைங்கரம் (மருஉ).]

அரைச்சட்டை *arai-c-caṭṭai*, பெ. (n.) உடற்பயிற்சி செய்ய அணியும் சல்லடம்; short drawers worn during athletic exercises.

ம. அரச்சட்ட

[அரைக்காற்சட்டை → அரைச்சட்டை.]

அரைச்சதங்கை *arai-c-cadaṅgai*, பெ. (n.) பிள்ளைகளின் சதங்கை கோத்த அரையணி; string of jingling beads worn by children around the waist.

[அரை = இடுப்பு. சலங்கை → சதங்கை.]

அரைச்சந்துவாதம் *arai-c-candu-vādam*, பெ.(n.) நடக்கும்போது இடுப்பும் தொடைச்சந்தும் நோகும் ஊத (வாத) நோய்; rheumatic affection of the waist and the groins, *Lumbago* (சா.அக.).

[அரை (இடுப்பு) + சந்து (தொடைப் பொருத்து) + Skt. vāta > த. வாதம் (ஊதம்).]

அரைச்சம்பளம் *arai-c-cambaḷam*, பெ. (n.) சம்பளத்திற் பாதியாகப் பெறும் மூப்புச் சம்பளம் (உ.வ.); pension (Com.u.).

[அரை + சம்பளம். அரை = பாதி.]

அரைச்சல்லடம் *arai-c-callaḍam*, பெ. (n.) அரைக்காற்சட்டை (சங்.அக.); shorts, drawers.

க. அரெசல்லண

[அரை + சல்லடம்.]

அரைச்சவரம் *arai-c-cavaram*, பெ. (n.) 1. தலை மழிப்பு; shaving the head. 2. முகமழிப்பு (இ.வ.); shaving the face (Loc.).

[அரை (பாதி) + **Skt.** kshaura > த. சவரம். அரைமழிப்பு (ப.வ.).]

அரைச்சாப்பாடு *arai-c-cāppāḍu*, பெ. (n.) உண்டிச்சாலைகளில் வரையறுக்கப்பட்ட குறைந்த அளவான சாப்பாடு, முழுச்சாப்பாடு என்பதற்கு எதிர்; half-meal or limited meal, served in hotels, opp. to full meal.

[அரை + சாப்பாடு.]

அரைச்சாப்பு *arai-c-cāppu*, பெ.(n.) மதங்கத்தின் (மிருதங்கத்தின்) கரணைப் பக்கத்தில் தட்டும் மெல்லிய தட்டு; a gentle tap on the right head of *madaṅgam*, a skinned instrument of music.

[அரை + சாப்பு. ச (குரல்) → சா → சாப்பு = பாடகன் குரலின் (voice) சமனிலைக் குரலான (the first note of the gamut) அலகிற்கு (key-note) ஒத்ததாக அமைக்கப்படும் ஓசையுள்ள மதங்கத்தின் வலப்புறத் தட்டு. அதிற் குறைந்தது அரைச்சாப்பு.]

அரைச்சாயம் *arai-c-cāyam*, பெ. (n.) இளஞ் சாயம் (வின்.); a slight tinge in dyeing.

அரைச்சீட்டு *arai-c-cīṭṭu*, பெ. (n.) தொடர் வண்டிகளிலும் பேரியங்கிகளிலும் 12 அகவைக்கு உட்பட்ட சிறுவர்க்குக் கொடுக்கும் அரைக்கட்டணச் சீட்டு; half-ticket, concession ticket for children below 12 years of age, issued at half rate, in trains and buses.

[அரை + சீட்டு.]

அரைச்சீர் *arai-c-cīr*, பெ. (n.) சில குலத்தாரால் குறிக்கப்பட்ட சீர்வரிசையில் ஏறத்தாழப் பாதி

யளவு; half šir, presents given to a bride by her parents, representing half of the dowry prescribed by usage.

[அரை + சீர்.]

நாட்டான் குல முழுச்சீர்: 64 வள்ளம் அரிசி, 25 பனைவட்டு, 5 கவளி வெற்றிலை, 1 பட்டணம்படிப் பாக்கு, 1 படி மஞ்சள், 4 படி நெய், கூறை, பொன் தாலிக்கொடி ஆகிய இவை.

கொங்க வெள்ளாளர் குல முழுச்சீர்: 45 உருபாக் காசு, 10 வள்ளம் அரிசி, 25 வெல்ல வுருண்டை, தேங்காய், வெற்றிலைபாக்கு, வாழைப்பழம் முதலியன.

அரைசபாரம் *araiša-pāram*, பெ. (n.) *அரசாட்சிக் கடமை*; the duties and responsibilities of government. "அருந்தவ மரைச பார மிரண்டுமே" (சூளா. மந். 33).

[அரசன் → அரைசன் → அரைச + பாரம்.]

அரைசன் *araišan*, பெ. (n.) *அரசன்*; king. "அரைசரிற் பிறந்து" (கம்பரா. அயோத். மந்தரை. 69).

[அரசன் → அரைசன்.]

அரைசாந்து *arai-šāndu*, பெ. (n.) *அரைத்த சுண்ணாம்பு* (வின்.); ground mortar, stucco.

[அரை + சாந்து. அரை = அரைத்த.]

அரைசி *araiši*, பெ. (n.) 1. *அரசாள்பவள்*; the reigning queen. 2. *கோப்பெருந்தேவி*; chief queen, queen consort. 3. *கோத்தேவிகளுள் ஒருத்தி*; one of the queens.

[அரசன் → அரைசன் (ஆ.பா.) – அரைசி (பெ.பா.).]

அரைசிலை *arai-šilai*, பெ. (n.) அம்மி (பிங்.); grinding-stone. "அரைசிலை குமிழ்ப்பு வடித் தல்" (தைலவ. பாயி. 12).

[அரை (அரைக்கின்ற) + Skt. šilā > த. சிலை = கல்.]

அரைசு *araišu*, பெ. (n.) 1. *அரசன்*; king. 2. *அரசன் தன்மை*; kingliness. 3. *அரசியம்*; kingdom.

[அரசு → அரைசு.]

அரைசுகட்டு *araišu-kattu*, பெ. (n.) *சிற்றூர் உரிமைவகை* (புதுக். கல்.); a village perquisite (Pudu. Insc.).

அரைசெலவு *arai-šelavu*, பெ. (n.) *உசிலைச் சரக்கு (மசாலைப்பண்டம்)* (இ.வ.); curry stuffs (Loc.).

[அரை (குழம்பிற்கும் காய்கறிச் சமையற்கும் அரைக்கின்ற) + செலவு (செலவாகும் அல்லது பயன்படும் பொருள்). செல் → செலவு (தொ. ஆகு.).]

அரைசோறு *arai-šōṟu*, பெ. (n.) 1. *செரியாத சோறு*; undigested rice-food. 2. *பாதி வெந்த சோறு*; half-boiled (cooked) rice (சா.அக.).

அரைசோறுபோற்கழிதல் *arai-šōṟu-pōṟ-kaḻidal*, பெ. (n.) *செரியாத சோற்றோடு கலந்த கழிச்சல்*; diarrhoea with fluid stools containing undigested rice or food, *Lienteric diarrhoea* (சா.அக.).

[அரைச்சோறு (பாதி வெந்த சோறு) → அரைசோறு.]

அரைஞாண் *arai-ñāṇ*, பெ. (n.) 1. *ஆண்மக்கள் அரையிற் கட்டுங் கயிறு*; waist-cord worn by men and boys. 2. *அரையணி* (பிங்.); ornament worn round the waist. 3. *கிணற்றின் செங்கல்வரை*; rows of brick lining a well, bricky revetment of a well.

ம. அரஞ்ஞாண்

[அரை (இடுப்பு) + நாண் (கயிறு, கொடி) → ஞாண்.]

அரைஞாண்கயிறு *arai-ñāṇ-kayiṟu*, பெ. (n.) *அரைஞாண்* பார்க்க; see *arai-ñāṇ*.

[அரை + ஞாண் + கயிறு.]

அரைஞாண் என்னுங் கூட்டுச்சொல்லின் வருஞ்சொல் உலகவழக்கிற் பொருளிழந்த போது, கயிறு என்னுஞ் சொல் கூட்டப் பட்டது. இது மிகைபடக்கூறல் (redundancy). 'அரணாக்கயிறு' என்பது கடுங்கொச்சை (barbarism).

அரைஞாண்கொடி *arai-ñāṇ-kodi*, பெ. (n.) *அரைஞாண்* பார்க்க; see *arai-ñāṇ*.

[அரை + ஞாண் + கொடி.]

'அரைஞாண்கயிறு' ஒத்ததே 'அரைஞாண் கொடி' என்பதும். ஆதலால் இதுவும் மிகை படுசொல்லே (redundant word).

கயிறு என்பது நூலாலும் நாராலும் திரிக்கப்பட்டதையும், கொடி என்பது பொன், வெள்ளி முதலிய மாழையாற் செய்யப்

பட்டதையும் குறிக்கும். இதுவே இவற்றிடை வேற்றுமை.

அரணாக்கொடி என்பது கடுங்கொச்சை (barbarism).

அரைத்தரை-த்தல் *araittarai-*, 4 செ.குன்றாவி. (v.t.) **முன் அரைத்ததையே திரும்பவும் அரைத்தல்**; to grind again (சா.அக.).

[அரைத்து + அரை.]

அரைத்தரைத்துப்புடம்போடு-தல் *araittaraittu-p-puḍam-pōḍu-*, 19 செ. குன்றாவி. (v.t.) **திரும்பத் திரும்ப அரைத்து நீற்றுதல்**; to grind again and again for purposes of calcination (சா.அக.).

[அரைத்து + அரைத்து + புடம் + போடு.]

அரைத்தவளை *arai-t-tavaḷai*, பெ.(n.) **வாலறாத அரைவளர்ச்சித் தவளை, தலைப்பிரட்டை**; tadpole.

[அரை + தவளை. அரை = பாதி.]

அரைத்திரணையரம் *arai-t-tiraṇai-y-aram*, பெ. (n.) **பாதி திரண்ட அரம்** (C.G.); a half-round file.

[அரை (பாதி) + திரணை + அரம். திரள் → திரளை → திரணை.]

அரைத்துச்சேவி-த்தல் *araittu-c-cēvi-*, 4 செ. குன்றாவி. (v.t.) **வீக்கம், புண் முதலியன வற்றிற்கு மருந்தை அரைத்துத் தடவுதல்**; to grind and apply medicine as a protective covering for swelling, burns, wounds, ulcers, etc. (சா.அக.).

[அரைத்து + சேவி.]

அரைத்துட்டு *arai-t-tuṭṭu*, பெ. (n.) **இற்றை ஒரு காசிற்குச் சமமான பழைய இருசல்லி (தம்பிடி)**; an old copper coin equal to one current *paisa*.

[அரை + துட்டு.]

அரைத்தூக்கி *arai-t-tūkki*, பெ. (n.) **தூக்குமர வகை**; pillory (W.) (செ.அக.).

[அரை (பாதி) + தூக்கி. தூக்கு → தூக்கி. 'இ' வி.முத. ஈறு.]

அரைத்தொடர் *arai-t-toḍar*, பெ. (n.) **இடைத் தொடர் (சங்கிலி)**; waist-chain. "நாணு மரைத்தொடரும்" (திவ்.பெரியாழ். 1 . 3 : 4).

[அரை = இடுப்பு. தொடு → தொடர். தொடுத்தல் = கோத்தல்.]

அரைநலம் *arai-nalam*, பெ. (n.) **காளை அரையுங் குறையுமாகக் காயடிக்கப்படுதல்**; not being properly castrated, as a bull.

[அரை = பாதி, குறை. நல் → நலம் = நன்மையான வினை.]

அரைநலவன் *arai-nalavan*, பெ. (n.) **நன்றாக விதையடிக்கப்படாத மாடு** (யாழ்ப்.); bull not properly castrated (J.).

[அரை = பாதி. நலம் (விதையடித்தல்) → நலவன். 'அன்' ஒருமையீறு.]

அரைநா *arainā*, பெ. (n.) **முதலை**; crocodile.

அரைநாண் *arai-nāṇ*, பெ. (n.) **இடுப்பிற் கட்டும் கயிறு அல்லது கொடி**; waist-cord or waist-chain. "பொன்னரை நாணொடு" (திவ். பெரியாழ். 1 . 6 : 2).

[அரை + நாண். அரை = இடுப்பு.]

அரைநாவை *arai-nāvai*, பெ. (n.) 1. **கலப்பைக் கொழுவின் ஒருபால் வளைந்த நுனி**; the part of the ploughshare which is bent on one side. 2. **ஒரு பக்கம் வளைந்த மண்வெட்டி நுனி**; tip of a hoe bent over.

[அரை = பாதி, குறை. நா = அலகு. நா → நாவை. 'ஐ' உடைமை யீறு.]

அரைநாழி *arai-nāḻi*, பெ. (n.) **கைந்நாழி என்னும் நாட்டுப் படியிற் பாதியளவு, உரி**; half a country measure.

[அரை + நாழி. அரை = பாதி.]

அரைநாள் *arai-nāḷ*, பெ. (n.) 1. **பாதிநாள், ஒரு நாளிற் பாதியளவு**; half a day. 2. **நள்ளிரவு**; midnight. "மழையமைந் துற்ற வரைநா ளமயமும்" (மதுரைக். 649).

[அரை + நாள். அரை = பாதி.]

அரைநீர் *arai-nir*, பெ. (n.) **குறித்த காலங்களிற் பாசனமாகப் பாய்ச்சும் நீர்** (C.G.); water for irrigation drawn from a public reservoir during a certain period of the year.

[அரு (அருமையான) → அரை.]

அரைநூல் *arai-nūl*, பெ. (n.) 1. **அரைநாண்** (சங்.அக.); waist-cord. 2. **அரைச்சதங்கை**; string of tinkling beads worn by children around the waist. 3. **பாதி நூல், அறுவைமர அளவிற் பாதி, 12 சதுர அடி**; half of a timber square measure.

[அரை = 1, 2. இடுப்பு; 3. பாதி.]

அரைநூன்மாலை *arai-nūṉ-mālai*, பெ. (n.) *அரைப்பட்டிகை, மேகலை*; women's girdle, broad chain-belt of gold.

[அரை (இடுப்பு) + நூல் (நாண்) + மாலை.]

அரைநெக்கல் *arai-nekkal*, பெ. (n.) *பாதி பழுத்தது, அரைப்பழம்*; half-ripe fruit.

[அரை = பாதி. நெகுதல் = நெகிழ்தல், மெதுவாதல், இளகுதல். நெகு → நெக்கல் (தொ.ஆகு.).]

அரைநெறி *arai-neṟi*, பெ. (n.) *தொடைச்சந்திற் கட்டும் நெறிக்கட்டி*; a sympathetic bubo (swelling) in the groins (சா.அக.).

[அரை = இடுப்பு. நெறித்தல் = முறுக்கா யிருத்தல், விறைத்தல். நெறி = இறுகிய கட்டி.]

அரைநோக்கு *arai-nōkku*, பெ. (n.) (கணி.) *கோள் (கிரக) நோக்குவகை, தன் வீட்டினின்று 5ஆம் அல்லது 9ஆம் வீட்டை நோக்குதல்* (வின்.); (Astrol.) aspect of a planet on the 5th or 9th house from its own.

[அரை = பாதி. நோக்கு (முத. தொ. பெ.) = நோக்கல், பார்வை.]

அரைப்பட்டம் *arai-p-paṭṭam*, பெ. (n.) (கிறித்.) *சீர்திருத்தக் கிறித்தவ சபையில் இளைய குருவாயிருப்பவர் பதவி*; (Chr.) the status of a Junior Pastor in a Protestant Christian Church.

ஒ.நோ : சின்னப் பட்டம் (சிவமட மரபு).

[அரை = பாதி, இளமை. பட்டம் = சிறப்புப் பெயர், பதவி.]

அரைப்பட்டிகை *arai-p-paṭṭigai*, பெ. (n.) *பெண்டிர் இடையணிவகை, ஒட்டியாணம்*; gold or silver girdle or waist-belt worn by women over their dress.

ம. அரப்பட்ட

(அரை = இடுப்பு. பட்டி = பட்டை. பட்டி → பட்டிகை.]

அரைப்பட்டினி *arai-p-paṭṭiṉi*, பெ. (n.) *பாதியளவே உணவுண்டிருத்தல்*; being half-starved.

[அரை = பாதி. பட்டி = துணி, சீலை. ஒருகா. பட்டி → பட்டினி = உணவில்லாத போது வயிற்றில் ஈரத்துணியைப் போர்த்திக் கொண்டிருத்தல்.]

அரைப்பட்டினிகிட-த்தல் *arai-p-paṭṭiṉi-kiḍa-*, 3 செ. கு. வி. (v.i.) 1. *பாதியளவே யுணவுண்டிருத்தல்*; half-starvation. 2. *மருத்துவ முறையாக அரையுணவுண்டல்*; semi-starvation, the so called hunger cure (சா.அக.).

அரைப்பட்டினி பார்க்க; see *arai-p-paṭṭiṉi*.

[கீழ் → கிழ → கிட. கிடத்தல் = படுத்திருத்தல், கீழிருத்தல், இருத்தல்.]

அரைப்படிப்பு *arai-p-paḍippu*, பெ. (n.) *நிரம்பாக் கல்வி*; inadequate learning.

[அரை = பாதி. படி → படிப்பு.]

அரைப்பணம்[1] *arai-p-paṇam*, பெ. (n.) 1. *இடத்திற்கேற்ப வேறுபட்ட ஒரு பணமதிப்பிற் பாதி*; a coin, the value of which is equivalent to half a *paṇam*, varying in value from place to place. 2. *அரைப்பணம், ஒன்றே காலணா* (3¾ *துட்டு*); a coin equal to one anna and three pies (சா.அக.).

பணமதிப்பு வேறுபாடு :

இடம்	மதிப்பு
திருநெல்வேலி	— 10 துட்டு (40 சல்லி, 20 காசு)
தஞ்சை, இராமநாதபுரம்	— 7½ துட்டு (30 சல்லி, 15 காசு)
திருச்சிராப்பள்ளி	— 6 துட்டு (24 சல்லி, 12 காசு)
சென்னை	— 3¾ துட்டு (15 சல்லி, 7½ காசு)
திருவிதாங்கூர்	— 4 சக்கரம் (24 சல்லி, 12 காசு)

(செ.அக.) சல்லி யென்றது 'தம்பிடி' என்னும் பழைய காசு. 'காசு' என்றது இற்றை 'நயா பைசா' என்னும் புதுக்காசு. 4 சல்லி கொண்டது ஒரு துட்டு. ஒரு சல்லி கால் துட்டு; இரு சல்லி அரைத்துட்டு; முச் சல்லி முக்கால் துட்டு.

[அரை = பாதி.]

பணம் பார்க்க; see *paṇam*.

அரைப்பணம்[2] *arai-p-paṇam*, பெ. (n.) *அல்குல்* (பணவிடு. 369); *Pudendum muliebre*.

[ஒருகா. அர (பாம்பு) + பணம் (படம்). பெண்குறிக்குப் பாம்பின் படத்தை உவமை கூறுவது புலவர் மரபு.]

"தாராழிக் கலைசா ரல்கு றடங்கடற்
குவமை தக்கோய்
பாராழி பிடரிற் றங்கும் பாந்தளும்"
(கம்பரா.கிட்கிந்தா. நாடவிட். 37).

அரைப்பள்ளி *arai-p-paḷḷi*, பெ. (n.) 1. *நாட்டுப் புறத் தொடக்கப் பள்ளிகளில் காரி (சனி) தொறும் வைத்துக்கொள்ளும் அரைநாட் பள்ளி*; closing of primary or lower elementary schools after the morning session, on Saturdays in the rural areas. 2. *பள்ளிகளின் அரைநாள் விடுமுறை*; half holiday for schools.

[அரை = பாதி.]

பள்ளி பார்க்க; see *paḷḷi*.

அரைப்பு *araippu*, பெ. (n.) 1. *அரைக்கை*; grinding, pulverising. 2. *அரைக்கப்பட்டது*; that which is ground. 3. *இலுப்பைப் பிண்ணாக்கு*; cakes of crushed matter left behind in the press after the extraction of oil from the oleagenous mahua seeds; these are used by some as soap.

''சோடியிருப் பைத்திப்பி
சொல்லரைப்பா நெய்க்குமுறகந்
தேடியரைப் பாகுந் தெளி''
(தைலவ. பாயி. 50).

4. *அரைத்த சீயக்காய்*; ground soap-nut. 5. **உடம்பில் தேய்த்த எண்ணெயைப் போக்கு வதற்கு அரைத்தெடுத்த பச்சைப்பயறு முதலிய பல்வகைப் பொருள்கள்**; powdered substances such as green gram flour used for removing the oil from the oil smeared body.

'அரைப்பு' என்னுஞ் சொல், அரைப்பு வினையைக் குறிப்பின் தொழிற்பெயர்; அரைக்கப்பட்ட பொருளைக் குறிப்பின் தொழிலாகு பெயர்.

ம. அரப்பு; க. அரெ.

அரைப்புக்கட்டி *araippu-k-katti*, பெ. (n.) **இலுப்பைப் பிண்ணாக்கு**; mahua oil-cake.

[அரைப்பு + கட்டி.]

அரைப்புளி *arai-p-puḷi*, பெ. (n.) *நோயாளியின் பத்தியத்திற்காக உணவில் அரைப்புளியிடல்*; regulating the diet by adding to curries only half of the normal quantity of tamarind.

[அரை + புளி.]

அரைப்பூட்டு *arai-p-pūṭṭu*, பெ. (n.) **தொடை யெலும்பு அரையுடன் பொருந்தும் பொருத்து, தொடைச்சந்து** (புதுவை); groin (Poṇḍ.).

ம. அரப்பூட்டு

[அரை + பூட்டு.]

அரைப்பேச்சு *arai-p-pēccu*, பெ. (n.) *பேசத் தொடங்கும் குழந்தையின் திருந்தாப் பேச்சு*; indistinct words of a child beginning to learn speech, prattle of a child.

[அரை + பேச்சு.]

அரைப்பை *arai-p-pai*, பெ. (n.) 1. *காப்புறுதிக் காக இடுப்பிற் கட்டும் நீண்ட பணப்பை*; long, narrow canvas money-bag kept fastened round the waist for safety. 2. *பெண்குறி*; the genital of a female, *Pudendum muliebre*.

[அரை = இடுப்பு. பின்பொருள் உவமை யாகுபெயர்ப் போலி.]

பை பார்க்க; see *pai*.

அரைப்பையாக்கு-தல் *arai-p-pai-y-ākku-*, 5 செ.குன்றாவி. (v.t.) **வேண்டிய போதெல் லாம் சிறிது சிறிதாக எடுத்து நுகர்தல்** (ஈடு, 1.7:2); to enjoy little by little, whenever wanted.

[அரை + பை + ஆக்கு. அரைப்பையிலுள்ள பணத்தை வேண்டும் போதெல்லாம் எடுத்துச் செலவிடுதல் போன்றது, ஒன்றைச் சிறிது சிறி தாக எடுத்து நுகர்தல்.]

அரைபடு-தல் *arai-paḍu-*, 20 செ. கு. வி. (v.i.) 1. *அரைக்கப்படுதல்*; to be ground. சாந்து நன்றாய் அரைபடவில்லை (உ.வ.). 2. **உரைசப்படுதல்**; to be rubbed, irritated by rubbing. தொடைச்சந்து அரைபட்டுப் போயிற்று (உ.வ.). 3. *பழிக்கப்படுதல்*; to be derided. அவன் பலர்வாயிலும் அரைபடு கின்றான் (உ.வ.).

[அரை = அரைப்பு. 'படு' து.வி.]

அரைபாணா *arai-pāṇā-*, பெ. (n.) *சிலம்பக் கழிவகை* (மதி. களஞ். 1, 66); a kind of fencing rod.

உரு. பாணா.

அரைமண்டலம் *arai-maṇḍalam*, பெ. (n.) **நாட்டு மருத்துவத்திற் கவனிக்கப்படும் 40 நாட் கொண்ட மண்டலம் என்னும் கால அளவிற் பாதி, 20 நாள்.** a period of 20 days, half of a *maṇḍalam*, a period of 40 days observed in indigenous medical treatment.

மண்டலம் பார்க்க; see *maṇḍalam*.

[அரை = பாதி. மண்டலம் = வட்டம்.]

அரைமணி *arai-maṇi*, பெ. (n.) 1. *அரைஞாண் மணி, அரைச்சதங்கை*; string of tinkling


அருநெல்லிப்பழம்

அரும்பு

அரைக்கீரை


அரைத்தவளை

அரைபாணா

beads worn by children around the waist. ம. அரமணி. 2. பன்னிரண்டரை மணி (செ.நா.); half past twelve o'clock (C.N.). 3. முப்பது நிமையம், ஒருமணி நேரத்திற் பாதி; half an hour, thirty minutes time.

[அரை = இடுப்பு, பாதி.]

மணி பார்க்க; see *maṇi*.

அரைமதியிரும்பு *arai-madi-y-irumbu*, பெ. (n.) **பாதிநிலாப் போன்ற ஒருவகை யானைத் துறட்டி**; a crescent-shaped goad for elephant. "அரை மதி யிரும்பொடு" (பெருங். உஞ்சைக். 32 : 96).

தெ. ஆரெகோல

[அரை (பாதி) + மதி (நிலா) + இரும்பு (இரும்பினாற் செய்த அங்குசம்). 'இரும்பு' கருவியாகுபெயர்.]



அரைமதியிரும்பு

அரைமலை *arai-malai*, பெ.(n.) **மலைச்சாரலின் நடுவிடம்**; middle of a mountain slope or hill. 'அரைமலையின்கண் ....மான்பிணை கள் ....துயிலும்..........பொதியின் மலை' (புறநா. 2, உரை).

அரைமனிதன் *arai-maṉidaṉ*, பெ. (n.) **மதிப்புக் குறைந்தவன்**; man of low esteem. 'ஆடை யில்லாதவன் அரைமனிதன்' (பழ.).

[அரை = பாதி, குறை. **Skt.** manuja > த. மனிதன். த. மன் > **Skt.** manu → manuja.]

மன் பார்க்க; see *maṉ*.

அரைமனிதனமுரி *arai-maṉidaṉ-amuri*, பெ. (n.) **இளஞ்சிறுவனின் சிறுநீர்**; urine of a small boy (சா.அக.).

[அரை (பாதி) + மனிதன் + அமுரி. உவர் → உவரி → உமரி → அமரி → அமுரி.]

அரைமனிதன் பார்க்க; see *arai-maṉidaṉ*.

அரைமா *arai-mā*, பெ. (n.) (கீழ்வாய்.) சுழி என்னுங் குறியுள்ளதும் நாற்பதிலொரு பாகத்தைக் குறிப்பதுமான கீழ்வாயிலக்கம் அல்லது பின்னவெண்; the fraction 1/40, as half of *orumā*. "ஒருமாவின் கீழரையின் றோது" (தனிப்பா.தி. 1, பக். 44).

ம. அரம

[மா = அளவு, ஒன்றிற்குக் குறைந்த சிற்றளவு. ஒருமா = 1/20. ஆகவே, அரைமா = 1/40. மாத்தல் = அளத்தல். மா → மாத்திரம் = அளவு, மட்டு. மா → மாத்திரை = எழுத்தொலிக்கும் கால அளவு, நோயாளி யுண்ணும் மருந்தளவு. மாத்தல் என்னும் வினை வழக்கிறந்தது. மாத்திரம் > **Skt.** mātra. மாத்திரை > **Skt.** mātrā.]

அரைமூடி *arai-mūḍi*, பெ. (n.) **சிறு பெண் பிள்ளைகளின் அற்றம் (அம்மணம்) மறைப்பதும், அரசிலை வடிவானதும், வெள்ளி அல்லது பொன்னாலானதுமான அரையணி**; pipal-leaf shaped plate of metal, worn by naked little girls to cover their pubes.



அரைமூடி

[அரை = இடுப்பு. மூடு → மூடி = மறைப்பது. 'இ' வி. முத. ஈறு.]

அரையணி *arai-y-aṇi*, பெ. (n.) **அரையிலணியும் அணிகலம்**; any ornament worn around the waist.

[அரை = இடுப்பு. அணி (முத. தொ. ஆகு.) = அணியப்படுவது.]

அரையணிகை *arai-y-aṇigai*, பெ.(n.) **திருமணத்தில் மணமக்கள் புதிய ஆடை யணிகை**; the bride and bridegroom performing the ceremony of wearing new clothes.

அரையர் *araiyar*, பெ. (n.) **பெருமாள்கோயில்களில் நாலாயிரத் தெய்வப் பனுவல்களைப் பாடுந் தொண்டு செய்வோர்** (கோயிலொ. 36); priests in some Viṣṇu temples whose duty is to chant the *Divviya Prabandhas*.

[அரசன் → அரைசன் (ஒ.) – அரைசர் → அரையர் (ப.).]

அரையர்கோவை *araiyar-kōvai*, பெ. (n.) **தஞ்சைத் தயாபரன் என்ற தலைவன்மேற் பாடப்பட்ட கோவைப் பனுவல்** (களவியற்.90); a *kōvai* on the chief Thayāparaṉ of Thañjai, now not extant.

[அரசன் → அரைசன் → அரையன் (ஒ.) – அரையர் (ப.). கோ → கோவை (தொ. ஆகு.).]

அரையல் *araiyal*, பெ.(n.) 1. **துவையல்** (வின்.); a ground pasty side dish used as seasoning for the main dish. 2. **அரையலன்** பார்க்க (யாழ்ப்.); see *araiyalan* (J.).

[அரைத்தல் = அழுத்தித் தேய்த்துத் தூள் அல்லது பசையாக்கல். அரை + அல் (தொ.பெ. ஈறு.) – அரையல் (தொ. பெ., தொ. ஆகு.).]

அரையலன் *araiyalan*, பெ. (n.) **சோம்பேறி** (யாழ்ப்.); lazy, inactive person, sluggard (J.). அவனொரு அரையலன் (உ.வ.).

[அரை → அரையல் → அரையலன்.]

அரையவிடுகை பார்க்க; see *araiyal-iḍugai*.

அரையலிடுகை *araiyal-iḍugai*, பெ. (n.) 1. **உட்கார்ந்தாவது நின்றாவது ஓரிடத்தைத் தேய்த்துக்கொண்டிருக்கை** (வின்.); rubbing or wearing away a place by sitting or standing. 2. **வேலை செய்யாமல் அதிகமாய் உண்கை**; eating too much without doing any work.

[அரையல் = 1. தேய்த்தல். 2. பல்லால் அரைத்தல், உண்ணுதல் (இழிப்புக் கருத்து). அரை → அரையல். 'அல்' தொ.பெ. ஈறு. இடு → இடுகை. 'கை' தொ.பெ. ஈறு. இடுதல் = செய்தல்.

இருவகை யரையலும் சோம்பேறித்தனத்தைக் குறிப்பா யுணர்த்தும்.]

அரையற்றநாள் *arai-y-aṟṟa-nāḷ*, பெ. (n.) **மான்றலை (மிருகசீரிடம்), அறுவை (சித்திரை), காசம் (அவிட்டம்) என்னும் நாண்மீன்கள்** (சோதிட.அக.); the 5th, 14th and 23rd lunar asterisms.

அரையன்[1] *araiyan*, பெ. (n.) 1. **அரசன்**; king. "அரையனாயமருலக மாள்வதற்கு" (தேவா. 7.34:4). 2. **ஒரு பழைய பட்டம்**; an ancient title. '**அரையன் அரங்கன்பிச்சன்**' (S.I.I. iii, 438).

ம. அரயன்

[அரசன் → அரைசன் → அரையன்.]

அரையன்[2] *araiyan*, பெ. (n.) 1. (**அரையில் ஏதேனு மணிந்தவன்**) **ஏதேனு மணிந்த அரையை யுடையவன்** (சங்.அக.); a man wearing something or other round his waist. "வெம்மான்றோல் வீக்கு மரையன்" (கலைசை. 82). 2. **பாதியை யுடையோன்**; one who has half of a thing.

[அரை = இடுப்பு, பாதி. அரை → அரையன். 'அன்' ஆ. பா. ஈறு.]

அரையன்[3] *araiyan*, பெ. (n.) **தூள்**; powder (சா.அக.).

அரையன்சம்பா *araiyan-šambā*, பெ. (n.) **நெல்வகை** (A.); a kind of paddy.

சம்பா பார்க்க; see *šambā*.

அரையன்விரோதி *araiyan-virōdi*, பெ. (n.) **கோவைக்கொடி**; a creeper, *Bryonia grandis* (சா.அக.).

[அரையன் + Skt. virodhin > த. விரோதி (பகைவன்).]

அரையாப்பு *arai-yāppu*, பெ. (n.) 1. **தொடைச் சந்து** (புதுவை); groin (Poṇḍ). 2. **தொடையிடுக்கி லுண்டாகும் கட்டி**; Inguinal bubo (செ. அக.).

பல மாதரைக் கூடுவதால் வெட்டை (பிரமேக) அல்லது புண் (விரண) மேகத்தொடர்பு ஏற்பட்டு, பின்னர் நரம்புக் கோளாற்றினாலும், நோய்கொண்ட பெண்களைப் புணருவதால் வெள்ளை வெட்டையேற்படுவதாலும் ....ஈன்பொறிகளில் (ஜனனேந்திரியங்களில்) சூடு (தாபிதம்) கண்டு, அங்கிருந்து அரையின் நிணநீர்க் கோளத்திற்குப் பரவிச் செல்வதனால், தொடையிடுக்கில் அல்லது கவட்டியில் நெறிகள் பெருத்துக் கட்டியைப் போற் காணும் ஒருவகைப் புண் (விரண) நோய்; an inflammation and swelling of a lymphatic gland, generally in the groin, usually following chancroid, gonorrhoea, syphilitic infection or some other form of venereal disease, *Inguinal bubo* (சா.அக.).

ம. அரயாப்பு

[அரை = இடுப்பு. யாத்தல் = கட்டுதல். யா → யாப்பு. 'பு' தொ.பெ. ஈறு. 'அரையாப்பு' தொ. ஆகு.]

அரையாப்புக்கட்டி *arai-yāppu-k-kaṭṭi*, பெ. (n.) அரையாப்பு 2 பார்க்க; see *arai-yāppu 2*.

[அரை + யாப்பு + கட்டி.]

அரையாறுபடு-தல் *arai-y-āṟu-paḍu-*, 20 செ.கு. வி. (v.i.) **குறைதல்**; to decrease, lessen, to be reduced. "பிரிவாலே அரையாறு பட்டுச் சிவந்திருக்கும்" (ஈடு, 1.4:2, பக். 176.).

[அரை (பாதி) + ஆறு + படு. படுதல் = உண்டாதல்.]

அரையாறுபடுத்து-தல் *arai-y-āṟu-paḍuttu-*, 2 பி.வி. (v.caus.) **குறையப்பண்ணுதல்;** to reduce. 'அந்த ரஸத்தை அரையாறுபடுத்தி' (ஈடு, 4 : 4, பிர.).

அரையாறுபடு-தல் பார்க்க; see *arai-y-āṟu-paḍu-*.

[அரையாறுபடு (த.வி.) → அரையாறுபடுத்து (பி.வி.). படு → படுத்து. 'து' பி.வி. ஈறு.]

அரையிரவு *arai-y-iravu*, பெ. (n.) 1. **நள்ளிரவு;** midnight. "மடவரலிங் கரையிரவிற் கண் விழித்தாள்" (ஞானவா. சிகித்து. 75). 2. **பாதி யிரவு;** half the night, midnight.

[அரை = பாதி. இருமை = கருமை. இர்→ இரு. இர் → இர → இரவு.]

அரையிருள் *arai-y-iruḷ*, பெ. (n.) **நள்ளிரவு;** midnight. "அரையிரு ணடுநாள்" (குறுந். 190).

[அரை = பாதி. இர் → இருள்.]

அரையிரவு பார்க்க; see *arai-y-iravu.*

அரையுடம்பு *arai-y-uḍambu*, பெ. (n.) 1. **பாதி யுடம்பு;** half of the body. 2. **பாதியளவாக இளைத்தவுடம்பு;** an emaciated or half-reduced body.

[அரை = பாதி. உடல் → உடன் (உடம்) → உடம்பு.]

அரையுப்பு *arai-y-uppu*, பெ. (n.) **நோயாளிக் குரிய பத்திய வுணவில் பாதியளவே உப்புச் சேர்த்தல்;** regimen with half of the required quantity of salt.

ஒ.நோ : அரைப்புளி

அரையுரல் *arai-y-ural*, பெ. (n.) **மருந்தரைக்கும் கலுவம், குழி யம்மி;** small mortar or hollow grinding stone for macerating medicines.



அரையுரல்

[அரைக்கும் உரல்.]

உரல் பார்க்க; see *ural.*

அரையெழுத்து *arai-y-eḻuttu*, பெ. (n.) **நெடுங் கணக்கைப்பற்றிய சிற்றறிவு;** a smattering knowledge of the alphabet. **அரையெழுத்துக் கற்றிருக்கிறான்** (உ.வ.).

[அரை = பாதி. எழுது → எழுத்து (தொ. ஆகு.).]

அரைவகுப்பு *arai-vaguppu*, பெ. (n.) **குழந்தை களின் தொடக்க வகுப்பு;** beginner's class in a school for infants.

[அரைவகுப்பு = முதல் வகுப்பிற் பாதி போன்றது. வகு→வகுப்பு. 'பு' தொ.பெ. ஈறு.]

அரைவட்டம் *arai-vaṭṭam*, பெ.(n.) 1. **வட்டத்திற் பாதி;** semi-circle. 2. **அரைமூடி;** metal plate intended for covering the pubes of little girls.

[அரை = பாதி. வள்ளுதல் = வளைதல். வள் → வட்டு → வட்டம்.]

அரைவடம் *arai-vaḍam*, பெ. (n.) **அரைச் சதங்கை;** string of beads round the waist, worn by little children. "அரைவட்டங்கள் கட்டி" (திருப்பு. 13).

[அரை = இடுப்பு. வள்ளுதல் = வளைதல், உருண்டையாதல், உருண்டு திரளுதல். வள் → வட்டு → வட்டம் → வடம் = உருண்டு திரண்ட நாண் அல்லது கொடி.]

அரைவண்டி *arai-vaṇḍi*, பெ. (n.) **பாதியளவான கூண்டுவண்டி;** small-wheeled cart or half-sized bandy, generally covered.

[அரை = பாதி. வள் → வண்டு → வண்டி = சக்கரம், சகடம்.]

அரைவயிரக்கண் *arai-vayira-k-kaṇ*, பெ. (n.) **கம்மாளர் கருவிகளுள் ஒன்று** (சங்.அக.); a tool used by goldsmiths.

[அரை + வயிரம் + கண்.]

அரைவயிறன் *arai-vayiṟaṉ*, பெ. (n.) **கருக்காய், அரிசி முதிராத நெல்;** husk containing withered or half-ripe paddy grain.

[அரை=பாதி. வயிறு → வயிறன். வயிறு = அகடு. அரைவயிறன் = அரை யுணவுண்ட வயிறுபோலப் பாதி விளைந்த அரிசி அல்லது உள்ளீடுள்ள கூலமணி.]

அரைவயிறு *arai-vayiṟu*, பெ. (n.) **பாதி வயிறு, முழுவயிறு என்பதற்கு எதிர்; அரைவயிற்றுச் சாப்பாடு;** half bellyful, opp. to bellyful.

ம. அரவயறு

[அரை = பாதி. வைத்தல் = இடுதல், உண விடுதல். இல் → இடம். வை + இல் – வையில்→ வயில் → வயின் → வயிறு.]

அரைவயிறுங்குறைவயிறும் *arai-vayiṟuṅ-kuṟai-vayiṟum,* பெ. (n.) *வயிறு நிரம்பாமை;* the state of not being bellyful. அரைவயிறுங் குறைவயிறுமாய்ச் சாப்பிட்டு வந்திருக்கிறான் (உ.வ.).

'அரை.........வயிறும்' மரபிணைக் கூட்டு மொழியான தொடர்மொழி (an idiomatic phrase composed of two compound words.).

அரைவயிறு பார்க்க; see *arai-vayiṟu.*

அரைவளைந்தான் *arai-vaḷaindāṉ,* பெ. (n.) *தாறு பாய்ச்சாது கட்டும் வெற்றுச் சுற்றாடை;* cloth worn round the waist without folding and tucking one end of it behind.

[அரை = இடுப்பு. வளை → வளைந்தவன்→ வளைந்தான் = சுற்றிக்கட்டினது (வினையா. பெ.).]

அரைவளைவாசனம் *arai-vaḷaiv(u)-āsaṉam,* பெ. (n.) (ஓகம்) *அரை வட்டமா யிருக்கும் ஓக (யோக) இருக்கைவகை;* (Yoga) a kind of semi-circular yogic posture.

[அரை + வளைவு. **Skt.** āsana > **த.** *ஆசனம் (இருக்கை).]*

அரைவறுப்பு *arai-vaṟuppu,* பெ. (n.) *பாதி அல்லது இளவறுப்பு;* partial frying.

அரைவாசி *arai-vāsi,* பெ. (n.) 1. *பாதியளவு;* one half, half quantity. இதில் அரைவாசி தேறும் (உ.வ.). 2. *அரைமூச்சு, முழுமூச்சு என்பதற்கு எதிர்;* half-breath, opp. to full breath (சா.அக.).

ம. அரவாசி

அரைவாதம் *arai-vādam,* பெ. (n.) 1. *குழந்தை கட்கு இடுப்பின் கீழாகவும் கால்களிலு முண்டா கும் இளம்பிள்ளையூதம் (வாதம்);* a kind of paralysis of the legs and the lower part of the body occuring in early childhood, *Infantile paraplegia.* 2. *தொடைச் சந்திலுண்டாகும் ஒருவகை ஊதம்;* paralytic pain in the groin, *Bubonalgia.*

[அரை = இடுப்பு. **Skt.** vāta > **த.** *வாதம் = ஊதம்.]*

அரைவாய் *arai-vāy,* பெ. (n.) 1. *வாய் நிறையக் கொள்வதிற் பாதி:* half a mouthful. 2. *பங்கப் பட்ட வாய் (சங்.அக.);* deformed or disfigured mouth.

ம. அரவாய்

அரைவாய்க்கொண்டுதின்னல் *arai-vāy-k-koṇḍu-tiṉṉal,* பெ. (n.) *நோய்ப்பட்ட மாடு முதலியவை மெதுவாக இரையெடுக்கை* (பெரியமாட். 156); eating in half-mouthfuls like sick cattle.

[அரை (பாதி) + வாய் + கொண்டு + தின்னல். கொள் → கொண்டு (இ.கா.வி.எ.). தின் → தின்னல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அரைவாயன் *arai-vāyaṉ,* பெ.(n.) *உரையாட்டில் அல்லது தருக்கத்தில் தெரிந்து பேசத் தெரியாத வன்* (இ.வ.); one who is not able to hold his own in a learned discussion (Loc.).

[அரை = பாதி. வாய் → வாயன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அரைவீற்று *arai-vīṟṟu,* பெ. (n.) *வட்டத்திற் பாதி;* semi-circle.

[அரை = பாதி. வீறு → வீற்று = பகுதி. அரைவீற்றுவளைவு என்பதன் குறுக்கம்.]

அரைவீற்றுவளைவு *arai-vīṟṟu-vaḷaivu,* பெ. (n.) *அரைவளைவுக் (கமான்) கட்டடம்* (C.E.M.); semi-circular arch.

அரைவெட்டு *arai-veṭṭu,* பெ. (n.) 1. *தையலிற் கைகாற் பாதிவெட்டு;* half-cut in tailoring. 2. *பாதியளவு முடிவெட்டு;* half-cut in cropping the hair.

அரைவெறி *arai-veṟi,* பெ. (n.) *கட்குடியா லுண்டாகுஞ் சிறுமயக்கம்;* partial intoxication.

அரைவேக்காடு *arai-vēkkāḍu,* பெ. (n.) *பாதி யளவு வெந்திருக்கை;* half-boiled condition. சோற்றை அரைவேக்காட்டில் வடித்திருக் கின்றனர் (உ.வ.).

[அரை = பாதி. வே → வேக்காடு. 'காடு' தொ.பெ. ஈறு.]

அரைவேட்டி *arai-vēṭṭi,* பெ. (n.) *ஆடவர் இடுப் பிற் கட்டும் ஆடை;* cloth worn by males as an outer garment, covering from waist to ankles.

[அரை = இடுப்பு. வேடு → வேட்டி = சுற்றிக் கட்டுவது.]

வேட்டி பார்க்க; see *vēṭṭi.*

அரைவைரக்கண் *arai-vaira-k-kaṇ,* பெ. (n.) *அரைவயிரக்கண்* பார்க்க; see *arai-vayira-k-kaṇ.*

அரைவைரம் *arai-vairam*, பெ. (n.) *அரிசி முதி ராத நெல்* (இ.வ.); paddy with grains only half-developed for want of rain or water (Loc.).

[அரை = பாதி. வயிர்த்தல் = திண்ணிதாதல், முதிர்தல். வயிர் → வயிரம் → வைரம்.]

அரோ *arō*, இடை. (part.) **ஓர் ஈற்றசைச் சொல்**; an expletive at the end of a line in a verse. "நோதக விருங்குயி லாலுமரோ" (கலித். *33 : 24-5*).

ம., தெ. அரே; க. அல.

[எல்ல → ஏல → ஏழ → ஏட → ஏடா → ஏடோ → எடோ → அடோ → அரோ; அல்லது, ஏட → எட → அட → அடா → அடோ → அரோ.]

ஒ.நோ: அட → அடா > தெ. அரா → ரா. "ஏமிரா வோரி யென்பாள் எந்துண்டி வஸ்தி யென்பாள்" (தனிப்பா. தி. *1*, பக். *96*).

'அடா' என்னும் விளியிடைச் சொல் ஆடூஉ முன்னிலையாகப் பாட்டில் வருவதுண்டு.

"நட்ட கல்லைத் தெய்வமென்று
நாலு புட்பஞ் சாத்தியே
சுற்றிவந்து மொணமொ ணென்று
சொல்லு மந்திர மேதடா"
(சிவவாக்கியர்).

'ஏட' என்னும் சொல்லும் அதன் திரிவு களும், முதற்காலத்தில் தோழனையும் ஒத் தோனையும் விளிக்குஞ் சொற்களாயிருந்து, பின்னர் ஏவலனையும் இழிந்தோனையும் விளிக்குஞ் சொற்களாக இழிந்துவிட்டன.

இனி, 'அரோ' என்பது சிவனைக் குறிக்கும் 'அரன்' என்னுஞ் சொல்லின் விளிவடிவம் எனலுமாம். இது, இளைப்பாறுகின்றவன் 'சிவசிவா' என்று இறைவனை விளித்தல் போல்வது. அரோ + அரா – அரோவரா → அரோகரா என்னும் விளியிரட்டையை நோக்குக.

ஒரு காலத்தில் பொருளுணர்த்துஞ் சொற் களாயிருந்தவையே, பிற்காலத்தில் அவற்றின் பொருள் இழப்புண்டோ மறைந்தோ போன பின், அசைச்சொற்களாயின என்பதை அறிதல் வேண்டும்.

எல்ல, அரன் பார்க்க; see *ella*, *araṉ*.

அல்[1] *al*, பெ. (n.) *1. மயக்கம்;* confusion, delusion.

"தன்னறிவு சாட்சி யல்லாற்
சாயுச்சி யப்பயனைச்
சொன்னபிழை கெட்டேன்
றொலைப்பரோ"

(ஒழிவி. பொதுவி. 6). 2. **அந்திவேளை**; evening. "அல்லங் காடியில் அழிதரு கம்பலை" (மதுரைக். 544). 3. **கருமை**; black. "அல்லார்ந்த மேனியொடு குண்டுகட் பிறை யெயிற் றாபாச வடிவமான அந்தகா" (தாயு. தேசோ. 9). 4. **இருள்** (பிங்.); darkness. 5. **இரா** (பிங்.); night. "அல்லும் பகலு மனவரத முந் துதித்தால்" (சரசுவதியந். காப்பு).

ம. அல்

[பல பொருள்கள் கலக்கும்போது கலக்கம் அல்லது மயக்கம் உண்டாகின்றது. கருமை அல்லது இருட்கருத்து, பொதுவாக மயக்கக் கருத்தினின்று தோன்றுகின்றது. ஒரு பொருளைப்பற்றி அல்லது செய்தியைப்பற்றி ஒன்றுந் தோன்றாத நிலை, கருநிறத்தை அல்லது இருள்நிலையை ஒத்திருக்கின்றது. இருள் நிலையே இரவு.

அல்லுதல் = கலத்தல், முடைதல், பின்னுதல். அல் = கலப்பு, கலக்கம், மயக்கம், இருள், இரவு.]

ஒ.நோ: கல → கலங்கு → கலக்கு → கலக்கம். கள்ளுதல் = கலத்தல். கள் → கர் → கரு → கருமை. முயங்குதல் = தழுவுதல், சேர்தல். முயங்கு → மயங்கு → மயக்கு → மயக்கம். முள் → முள்கு. முள்குதல் = முயங்குதல். முள் → முய் → முய → முயங்கு. முய் → முயல் → மயல் → மால் = கருமை. மால் → மாலை = மயக்கம், பகலும் இரவும் கலக்கும் அந்தி, முன்னிரவு.

அல்[2] *al*, பெ. (n.) *1.* **கதிரவன்** (அக.நி.); sun. *2.* **வெயில்** (அக.நி.); sunshine. *3.* **சுக்கு** (இராசவைத்.); dried ginger. க. அல்ல; தெ. அல்லமு. *4.* **விறகு** (சா.அக.); firewood, fuel. *5.* **சூட்டினா லுண்டாகும் வயிற்றுளைச்சல் அல்லது வயிற்றோட்டம்**; dysentery or diarrhoea (சா.அக.).

[உல் → உல → உலர். உல் → உலை. உல் → எல் = ஒளி, கதிரவன், வெயில். உல் → அல் = கதிரவன், வெயில், வெயிலிற் காய்ந்தது, சூட்டி னாலுண்டாவது.]

அல்[3] *al*, பெ. (n.) **மதில்** (சங்.அக.); wall, wall round a fort.

[உல் → உல → உலவு → உலாவு. உலாவுதல் = சூழ்தல், சுற்றுதல். உல → உலவு → உலகு = உருண்டையானது, சுற்றி வருவது. உல் → உலம் → உருண்டை, சுழற்சி, உழற்சி. உலம் → அலம் = சுழற்சி. உலம்வரல் → உலமரல் → அலமரல். "அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி" (தொல். சொல். உரி. 13). உல் → அல் = சுற்றுமதில், மதில்.]

அல்[4] *al*, கு.வி. (ad.v.) **அன்மைப் பொருளுணர்த்தும் எதிர்மறைக் குறிப்புவினை முதனிலை;** base of the appellative verb or implicit verb that negatives the attributes of a thing.

எ-டு :

	ஒருமை	பன்மை
தன்மை	அல்லேன்	அல்லேம்
முன்னிலை	அல்லை	அல்லீர், அல்லிர்
படர்க்கை	அல்லன்	அல்லர்
	அல்லள்	,,
	அல்லது, அன்று	அல்ல.

[உல் → ஒல் → அல். அல்லுதல் = நெருங்குதல், அடுத்தல், பொருந்துதல், முடைதல், பின்னுதல்.

அல்லது = 1. நெருங்கியது, அடுத்தது (next one). ஒ.நோ : **OE.** *nēahst* (nigh + est); **E.** *next*, lying nearest.

2. இன்னொன்று, **Gk.** *allos*, other; **L.** *alius*, another.

3. முந்தினதல்லாதது; that which is not the preceding or the aforesaid.

"அல்லது கிளப்பின் இயற்கை யாகும்"
(தொல். எழுத்து. புள்ளி. 26).

"எப்பொருளாயினும் அல்ல தில்லெனின்
அப்பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல்"
(தொல். சொல். கிளவி. 35).

எ-டு : உழுந்தல்லதில்லை.

4. முந்தினதில்லாவிட்டால் இன்னொன்று; other than the aforesaid.

5. இல்லாவிட்டால் – ஆதல் – ஆவது; or, either or, alias. இந்த வேலைக்கு இருவர் அல்லது மூவர் போதும். பணம் அல்லது பொருள் வாங்கிக்கொண்டு வா. இன்று அல்லது நாளை மழை பெய்யும். திருக்கோவை யாசிரியர் பெயர் திருவாதவூரர் அல்லது மாணிக்கவாசகர் என்று சொல்.

இங்ஙனம் அண்மைக் கருத்தினின்று முந்நிலைகள் தாண்டி அன்மைக் கருத்தும், அதினின்று இன்மைக் கருத்தும் தோன்றியுள்ளன.

மேற்கூறிய ஐம்பொருள்களுள், முதல் நான்கும் பெயர்ச்சொல்; ஈறொன்று இடைச்சொல். பெயர் குறிப்புவினைமுற்றாகவும் ஆளப்படும்.

'அல்லது' என்னுஞ் சொல், இங்ஙனம் முச்சொல்லாகவும் இருக்கும். ஆயின், குறிப்பு வினைமுற்று 'இன்று', 'அன்று' என்னும் குறுக்க வடிவிலேயே வழங்கும்.

'அன்று' (அல்லது) என்னும் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றின் முதனிலையாகிய 'அல்' பெயரெச்சமாகவும், பல்வேறு ஈறுகளாகவும், இடைநிலையாகவும் ஆளப்படும்.]

அல்[5] *al*, கு.பெ.எ. (adj.) **அல்லாத, மாறான;** which is not, other than, different from. "அல்வழி யெல்லாம் உறழென மொழிப" (தொல். எழுத்து. புள்ளி. 73). "அறனை நினைப்பானை யல்பொரு ளஞ்சும்" (திரிகடு. 72). "அல்வழக் கொன்றுமில்லா வணிகோட்டியர்கோன்" (திவ். திருப்பல். 11).

அல்[4] பார்க்க; see *al*[4].

[அல் → அன். ஒ.நோ : ஆல் → ஆன் (3ஆம் வே.உ.). எ-டு : அதனாலே → அதனானே; ஆதலால் → ஆதலான். இல் → இன் (5ஆம் வே.உ.). எ-டு : அதனில் எளிது → அதனின் எளிது. இல் → இன் (எ.கா.வி.எ. ஈறு). எ-டு : வரில் → வரின்.

அல் → அ. எ-டு : அ + வலம் – அவலம் (வலமின்மை, நோய், துன்பம்). ஒ.நோ : நல் → ந. எ-டு : நக்கீரன், நப்பின்னை, நச்செள்ளை, நத்தத்தன், நப்பாலன்.]

'அன்' என்னும் எதிர்மறை முன்னொட்டு (pref.) வடமொழியில் 'அந்' என்று எழுதப்பட்டுப் பின்னர் மெய்ம்முதற் சொன்முன் முன்பின்னாகத் தலைமாறி (metathesis) 'ந' என்று திரியும். அன் → ன (ன் + அ) → ந. றன்னகரம் வடமொழியி லின்மையால், அது தந்நகரமாக எழுதப்பட்டது.

தமிழின் முன்மையையும் இயனிலையையும், வடமொழியின் பின்மையையும் திரிநிலையையும் அறியாமையாலேயே நேமிநாதம், வீரசோழியம், பிரயோக விவேகம் முதலிய பிற்கால இலக்கண நூலாசிரியன்மார் வடமொழியிலக்கண நூலாசிரியரைப் பின்பற்றி, 'ந'

என்னும் வடமொழி யெதிர்மறை முன்னொட்டே, அம் மொழியிற்போல் தமிழிலும் 'அன்' என்று திரிந்து (மெய் பின்னும் உயிர் முன்னுமாகத் தலைமாறி, பின்னர்) 'அ' என்று ஈறு கெடும் என்று வழுப்படத் தலைகீழாகக் கூறிவிட்டனர்.

"நேர்ந்த மொழிப்பொருளை நீக்க வருநகரஞ்
சார்ந்த துடலாயிற் றன்னுடல்போஞ் —
சார்ந்ததுதான்
ஆவியேற் றன்னாவி முன்னாகும்..........."
(நேமி. எழுத். 11),

"சொன்ன மொழிப்பொரு ணீக்கு
நகாரமச் சொன்முன் மெய்யேல்
அந்நிலை யாக வுடல்கெடு
மாவிமுன் னாகிலது
தன்னிலை மாற்றிடும்......"
(வீரசோ. சந்தி. 11)

' "நேர்ந்த......முன்னாகும்" என்பதனான், அகளங்கன், அநங்கன் எனவும்; அப்பிராமணன், அநச்சுவன் எனவும்; அதன்மம் எனவும், முறையே இன்மை, அன்மை, எதிர்மறை மூன்றினும் நஞ்நு வரும்' (பிர. விவே. சமாசப். 4, உரை).

நேமிநாதம், வீரசோழியம், பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து முதலிய சில பிற்கால நூல்கள் அளவைநூலன்மையின், தமிழுக்கு மாறான அவற்றின் கூற்றுகளெல்லாம் கொள்ளப்படா.

அல் → அன் > வ. அந் → ந என்று தென்சொல் திரிந்து தோற்றுவித்த ஆரியச்சொல், மேலையாரிய மொழிகளிற் பின்வருமாறு பல்வேறு வடிவுகொண்டு, அன்மைப் பொருளும் இன்மைப்பொருளும் உணர்த்தி வந்துள்ளது.

OS. ne, ni; **AS.** ne; **OE.** na, ne, ni, ny; **OHG.** ni (ne); **ON.** ne; **OFris.** ne, ni; **Ost.** ne; **Goth.** ni; **Lith.** ne; **Ir.** ni; **Gael.** ni; **W.** ni; **L.** ne; **Gk.** ne; **Russ.** ne; **ME.** na, no; **Scot.** na, ne; **MHG.** ne; **MDu.** ne; **E.** no.

'No' என்னும் ஆங்கிலச் சொல், சில கூட்டுச் சொற்களில் 'n' என்று ஈறு கெட்டுள்ளது.

எ.டு: n-ever, n-aught, n-one, n-either, n-ay, n-or.

No one - none - non (மறுதலைப்பொருள் முன்னொட்டு). எ-டு: non-appearance, non-Christian.

'அன்' (an) என்னும் கிரேக்க எதிர்மறை முன்னொட்டு, உயிர்முதற் சொல்முன் இயல்பாகவும், மெய்ம்முதற் சொன்முன் ஈறு குன்றியும் நிற்கும்.

எ-டு: Gk. an - anarchy, a - amorphus. இதையொத்த ஆங்கில முன்னொட்டு 'un'. எ-டு: unable, unbearable.

'அல்' என்னும் எதிர்மறை முன்னொட்டின் குறுக்கமான 'அ' அன்மை யின்மை யெதிர்மறை யாகிய முப்பொருளையும் உணர்த்தும்.

அல்[6] *al*, இடை. (part.) 1. ***எதிர்மறையேவல் ஒருமை யீறு***; neg. verb-ending of imp. sing. "இளங்கொடியே யிடரெய்தல்" (திருக்கோ. 15). 2. ***எதிர்மறை வியங்கோ ளீறு***; neg. verb-ending of opt. "பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்" (குறள், 196). 3. ***எதிர்மறைவினை யிடைநிலை;*** neg. verb. infix. வாழலேன்.

க. அல்

அல்[4] பார்க்க; see *al*[4].

அல்[7] *al*, இடை. (part.) 1. ***ஒரு தொழிற்பெயரீறு***; a suff. of vbl. nouns. செயல், பாடல். ம., க. அல். Cp. E. approv*al*, betray*al*, tri*al*, withdraw*al*. 2. ***ஓர் ஆண்பாற் பெயரீறு***; masc. sing. n. suff. இளவல், வள்ளல். 3. ***ஒரு சொல் வேறுபாட் டீறு***; a particle of specialisation. தொடை → தொடையல், மண் → மணல். 4. ***ஓர் ஒன்றன்பாற் பெயரீறு***; neut. sing. n. suff. உள்ளல் (உள்ளான்). 5. ***எதிர்காலத் தன்மை யொருமை வினைமுற்றீறு***; verb-ending of 1st pers. sing. future tense. செய்வல், காண்பல். 6. ***உடன்பாட்டு வியங்கோள்வினை யீறு***; verb-ending of posit. opt. "மக்கட் பதடி யெனல்" (குறள், 196).

[1, 3, 6 – இல் = வீடு, இடம், ஒரு பெயரீறு. இல் → அல்.

2. அன் (ஆ.பா. ஈறு) → அல். இளவன் → இளவல்.

4. அன் (ஒன்றன்பாலீறு) → அல். உள்ளான் → (உள்ளன்) → உள்ளல்.

5. ஏன் → என் → அன் → அல். செய்வேன் → செய்வென் → செய்வன் → செய்வல்.]

அல்கந்தி *algandi*, பெ. (n.) ***மாலை யந்திப் பொழுது***; evening twilight. "தெய்வத்தை......

அல்கந்தி நின்று தொழுதல் பழி" (ஆசாரக். 10).

[அல் → அல்கு = இரவு. அந்துதல் = கலத்தல். அந்து → அந்தி = பகலும் இரவும் கலக்கும் வேளை.]

அல்கல்[1] *algal*, பெ. (n.) 1. **தங்குகை**; abiding, staying. "பல்பூங் கானல் அல்கினம் வருதல்" (அகநா. 20 : 10). 2. **நாள்** (பிங்.); day of 24 hours. "இருங்குயில்.........அல்கலும்....... கூவ" (அகநா. 25 : 6-8). 3. **இரவு**; night. "அல்கற் கனவுக்கொல்" (கலித். 90 : 21).

[அல்குதல் = தங்குதல். அல்கு → அல்கல் = தங்கும் இரவு, தங்கிச் செல்லும் அல்லது கழியும் நாள்.

ஒ.நோ:

"வைகலும் வைகல் வரக்கண்டு ம∴துணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல்
வைகுதல்
வைகலை வைத்துணரா தார்"
(நாலடி, 40).]

அல்கல்[2] *algal*, பெ. (n.) 1. **குறைவு**; deficiency. "அல்கலின் மொழிசில வறைந்து" (நைடத. அன்னத்தைக்கண். 66). 2. **வறுமை** (திவா.); destitution, want, poverty.

[அல்குதல் = குறைதல். அல்கு → அல்கல் = செல்வக்குறைவு, வறுமை.]

அல்கலும் *algalum*, கு.வி.எ. (adv.) **நாடோறும்**; daily. "இருங்குயில்.......அல்கலும்......கூவ" (அகநா. 25 : 6 - 8).

அல்கா *alga*, பெ. (n.) **குதிரைச் சேணத்தில் கழுத்து வளையத்துக்குக் கீழிடும் மெத்தை** (இ.வ.); inside padding of the collar of a horse (Loc.).

[**ஒருகா.** அல்கு → அல்கா = தங்கும் மெத்தை.]

அல்கு[1]**-தல்** *algu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **தங்குதல்** (பிங்.); to stay, abide, lodge. 2. **நிலைத்து நிற்றல்;** to be permanent. —, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **சேர்தல்**; to reach, arrive at. "அவ ரல்கு வர்போய்......பழனங்களே" (திருக்கோ. 249). 2. **உணவைப் பலநாட்குச் சேமித்து வைத்தல்**; to preserve, as food for many days. "சிலைகெழு குறவர்க் கல்குமிசை வாகும்" (புறநா. 236 : 2).

[ஒல்லுதல் = பொருந்துதல். ஒல் → அல் → அல்கு. அல்குதல் = பொருந்தித் தங்குதல்.]

அல்கு[2]**-தல்** *algu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **சுருங்குதல்**; to shrink, diminish, lessen, diminish in quantity gradually. 2. **அழிதல்**; to be destroyed. "அளியி னாற்றொழு வார்வினை யல்குமே" (தேவா. 5 . 23 : 10).

[ஒல் → ஒல்கு. ஒல்குதல் = ஒடுங்குதல், சுருங்குதல், தளர்தல், கெடுதல். ஒல்கு → அல்கு.]

அல்கு *algu*, பெ. (n.) 1. **பிற்பகல்**; afternoon. "அல்கு நிழற்போ லகன்றகன் றோடுமே" (நாலடி. 166). 2. **இரவு**; night. "அல்குண் டடங்கல் வழி" (ஆசாரக். 30). 3. **தங்குகை** (பொதி.நி.); stay, sojourn.

[அல் = மயங்கும் மாலை, கருமை, இரவு. அல் → அல்கு. இனி, அல்கு = கழியும் பகல் வேளை, இல்லில் தங்கும் அல்லது ஒடுங்கி யுறங்கும் வேளை என்றுமாம்.]

அல்குகழி *algu-kali*, பெ. (n.) 1. **உப்பங்கழி**; backwater from the sea. "அல்கு கழியினுஞ் செல்லாதோ கடல்" (நன்னெறி, 16). 2. **சிற்றாறு** (சங்.அக.); stream, rivulet.

[அல்குதல் = நீர் ஓடாது தங்கிநிற்றல். கழி = கடற்கரையைக் கடந்துசெல்லும் நீர்க்கால். இனி, கோல்போல் நீண்டிருக்கும் நீர்க்கால் என்றுமாம்.]

அல்குநர் *algunar*, பெ. (n.) **குடிகள்**; inhabitants, subjects. "அல்குநர் போகிய வூரோ ரன்னர்" (கலித். 23 : 11).

[அல்குதல் = தங்குதல், வதிதல். அல்குகின்றார் → அல்குன்னார் → அல்குனார் → அல்குநர்.]

அல்குப்பை *alguppai*, பெ. (n.) **பொற்றலைக் கையாந்தகரை** (வை.மூ.); Ceylon verbisina.

அல்குபதம் *algu-padam*, பெ. (n.) **கட்டுச்சோறு, ஆற்றுணா;** cooked rice prepared and bundled up, as food for a journey. "வல்வி லிளையர்க் கல்குபத மாற்றாத் தொல்குடி மன்னன் மகளே" (புறநா. 353 : 10 - 11).

[அல்குதல் = பல நாளுக்குதவுமாறு சேமித்து வைக்கப்பட்டுத் தங்குதல் அல்லது இருத்தல். பதம் = பதஞ் செய்யப்பட்ட உணவு.]

அல்குமிசை *algu-miśai*, பெ. (n.) **அல்குபதம்** பார்க்க; see *algu-padam*. "சிலைகெழு குறவர்க் கல்குமிசை வாகும்" (புறநா. 236 : 2).

[மிசைதல் = உண்ணுதல். மிசை → மிசைவு (தொ.பெ., தொ.ஆகு.).]

அல்குல் *algul*, பெ. (n.) 1. **அரை**; waist. ''பூந்துகில்சே ரல்குல் காமரெழில் விழ வுடுத்து'' (திவ். பெருமாள். 9 : 7). 2. **பக்கம்**; side. ''கவைத்தாம்பு தொடுத்த காழுன் றல்குல்'' (பெரும்பாண். 244). 3. **பெண்குறி யின் மேற்பக்கம்**; the lower part of the hypo-gastric region. 4. **பெண்குறி**; genital organ of the female, *Pudendum muliebre*.

ம. அல்கல்; கோத. அல்கல்வ்.

[அல்குதல் = ஒடுங்குதல், சுருங்குதல், சிறுத் தல். அல்கு → அல்குல் = சிறுத்த பெண்டிரிடை, அவ்விடைக்குக் கீழ் அடுத்துள்ள பெண்குறியின் மேற்பக்கம், பெண்குறி, இடுப்புப்போன்ற பக்கம்.]

சங்க அகராதியில், 1. **அல்குல்** - நிதம்பம். (உ-ம்.) ''கலந்தகினாறு மல்குற் கவான்மிசைக் கொண்டி ருந்தாள்'' (சீவக. 1397). 2. பெண்குறி **ஆண்குறியின் மேற்பக்கம்**. (உ-ம்.) ''எம்மல்குற் கும்மல்கு லிணையொக் கும்'' (காஞ்சிப்பு. அந்தகேச. 15) என்று கூறப் பட்டுள்ளது.

'நிதம்பம்' என்னும் வடசொல் புட்டத் தையே குறிக்கும். அப் பொருள் 'அல்குல்' என்னும் தென்சொல்லிற்குப் பொருந்தாது. மேலும், பெண்குறியின் மேற்பக்கத்தையே யன்றி ஆண்குறியின் மேற்பக்கத்தை அல்கு லென்றல் மரபன்று.

அல்குலைப்பற்றிச் **சாம்பசிவம்பிள்ளை அக ராதி**யிற் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது :

அல்குல், பெண்குறியின் மேற்பக்கம். அதா வது அடிவயிற்றின்கீழ், மேகனப் பொருத்து வாயின்மேல் சவ்வுகளினா லாகிய மென்மை யான நிணமேடு, பருவ காலத்தில் இது மயிரால் மூடப்பட்டிருக்கும்; that portion of a woman's body extending from the lower part of the abdomen and covering the symphysis pubis, formed from the common skin which is elevated by fat. Hair starts growing there at the age of puberty. cf. அகல்.

அடியிற் கண்டபடி பெண்களின் வெளிப் பிறப்புறுப்புகள் முழுவதையும் குறிக்குமோர் பொதுப்பெயர்; as mentioned below, it is a common term for all the external organs of generation in a female.

1. அடிவயிற்றின்கீழ், எலும்பின்மேற் படிந்து மென்மையாயுள்ள நிணமேடு; a rounded prominence at the symphysis pubis of a woman, *Mons veneris*.

2. நிதம்பங்கள். அவையாவன: the lip-shaped organs viz.,

(அ) பேரிதழ். அல்குலின் தோல் மடிந்து நீண்டு இருபக்கமும் அமைந்துள்ள உதட்டைப் போன்ற உறுப்பு; the hairy fold of the skin like the lip on either side of the slit of the vulva, *Labium majus*.

(ஆ) சிற்றிதழ். பேரிதழின் உட்பாகத் தில் அமைந்துள்ள சளிச்சவ்வினால் ஆக்கப்பட்ட சிறிய உதடுகள்; the small folds of mucous membrane within No. 2 — *Labium minus* alias *Nympha*.

3. சுமரி. கடிதடத்திற்கு அடியில் நரம்பு உணர்ச்சியுள்ள சிறிய நீண்ட கூர்மை யான உறுப்பு; a small, elongated, erectile organ situated at the anterior angle of the vulva, just below No. 2 — *Clitoris*.

4. புழுக்கை. சுமரிக்குக் கீழ் உள்ள உதடு களின் நடுவிலிருக்கும் பிளப்பு; the space below the *clitoris* and between *Labium minus* or nympha in No. 2 (ஆ)—*Vestibule* of the vulva.

5. வடிசம் அல்லது அல்குற் கவை. அதா வது, பெண்குறியின் பேரிதழ் பிற்பகுதி யில் மடிந்துள்ள சளிச்சவ்வு; the fold of the mucous membrane at the posterior junction of the *Labium majus* in No. 2 (அ) — *Fourchette*.

6. சந்திர நாடி. யோனி வாயிலின் வெளிப் புறத்தில் உதடுகளின் உட்பக்கம் மடிந்து மூடிக்கொண்டிருக்கும் சவ்வு. இதற்குக் கன்னிமுத்திரை என்று பெயர்; the membranous fold which closes tightly the external orifice of the vagina, **Hymen**.

7. பகம். மலவாயிலுக்கும் அல்குற் கவைக் கும் நடுவிலுள்ள பகுதி; the space or the area between the anus and the genital organs, *Perineum*.

8. நீர்த்துளை (நீர்த்துவாரம்). யோனி வாயிலுக்கும் சுமரிக்கும் இடையேயுள்ள மூத்திரத்துளை; urethral orifice.

9. பூப்பக வாயில். நீர்த்துளைக்குக் கீழாக அகண்டாகாரமா யிருக்கும் துளை (துவாரம்); the external vaginal opening just below the urethral orifice, *Os externum.*

வடசொல்	தென்சொல்
மேகனம்	ஆண்குறி
சாதாரணமாய்	பொதுவாக
மிருது	மெது
சனனம்	பிறப்பு
நிதம்பம்	புட்டம், கரைமேடு
சுமரி	குறிநாக்கு
வடிசம்	தூண்டில்
சந்திர(ன்)	திங்கள்
மத்தி	இடை, நடு
யோனி	பெண்குறி
துவாரம்	துளை
அகண்டாகாரம்	பகாவடிவம்

அல்குலழற்சி *algul-alarci*, பெ. (n.) **பெண்குறி வெளியுறுப்புகளின் வேக்காடு**; inflammation of the external organs of generation, *Vulvitis* (சா.அக.).

[அல்குல் + அழற்சி. அழலுதல் = எரிதல், வேதல். அழல் → அழற்சி. 'சி' தொ.பெ. ஈறு.]

அல்குற்கட்டு *algur-kattu*, பெ. (n.) **ஒருவன், தன்னைத் தவிர மற்றோர் ஆடவனை ஒரு பெண் அடைந்தால் அவளுக்குக்** கருவழிவு, **யோனிப்புற்று, யோனிப்புண்,** பெரும்பாடு **முதலிய நோய்களை யுண்டாக்கித் துன்புறச் செய்வதுமல்லாமல் மறுபடியும் அவள் கலவிக்குத் தகுதியில்லாதவளாகச் செய்யும் ஒரு மந்திர வித்தை**; a kind of black art practised on a woman who is made to suffer from diseases peculiar to the genital organs such as, abortion, chancre, condyloma, menorrhagia, etc., thus rendering her unfit for sexual intercourse.

This is done purely out of malice with a view to wreak vengeance, on finding her in love with another.

[அல்குல் + கட்டு (கள் + து). கள்ளுதல் (த.வி.) = கலத்தல், பொருந்துதல். கட்டுதல் (பி.வி.) = கலத்தல், பொருத்துதல், இறுக்குதல். கட்டு (முத.தொ.ஆகு.) = பொருத்து, முட்டு, அவிழ்க்காமை, திறவாமை, வழங்காமை, இயங்காமை, தடை.]

அல்குற்கண்டதாபனம் *algur-kanda-tabanam*, பெ. (n.) **பெண்குறியின் கடிதடத்திற்கு அடியிலுள்ள நீண்ட கூர்மையான உறுப்பாகிய சுமரிக்கு ஏற்படும் அழற்சி**; inflammation of the erectile organ known as clitoris, *Clitoriditis.*

[அல்குல் + கண்டம் + தாபனம். குள் → கள் → கண்டு → கண்டம் = முள், முட்போற் கூர்மையான உறுப்பு. **Skt.** tap > **த.** தபி. தபித்தல் = சுடுதல், அழலுதல். தபி → தாபனம் = அழற்சி. தகுதல் = அழலுதல், எரிதல், விளங்குதல். தகதகவெனல் = திகழ்தல், விளங்குதல். தகு → தவு → தபு > **Skt.** tap.]

அல்குற்கண்டம் *algur-kandam*, பெ. (n.) **பெண்குறியிலுள்ள சிறிய நீண்ட கூர்மையான உறுப்பு, இதற்குச் சுமரி யென்றும் பெயர்**; the small, elongated, erectile body in the vulva, *Clitoris.*

[அல்குல் + கண்டம்.]

அல்குற்கண்டதாபனம் பார்க்க; see *algur-kanda-tabanam.*

அல்குற்கந்தம் *algur-kandam*, பெ. (n.) **அல்குற்புற்று** பார்க்க; see *algur-purru.*

[அல்குல் + கந்தம். **ஒருகா. Skt.** kanda > **த.** கந்தம் = கிழங்கு, கிழங்குபோல் வேரூன்றும் புற்றுநோய்.]

அல்குற்கவை *algur-kavai*, பெ. (n.) வடிசம், **இது பெண்குறியின் பேரிதழின் பிற்பகுதியில் மடிந்துள்ளவோர் சளிச்சவ்வு**; a fold of mucous membrane at the posterior junction of the labia majora, *Fourchette.*

[அல்குல் + கவை. ஒருகா. கவ் (கவ்வு) → கவ → கவை = கவ்வுங் குறடுபோற் கவடுபட்ட அல்லது பிளவுபட்ட உறுப்பு.]

அல்குற்கழலை *algur-kalalai*, பெ. (n.) **பெண்குறியின் உதட்டின் இரு பக்கங்களிலும் உற்பத்தியாகி ஆழமாக வெடித்துப் புண்ணாகி நாற்றத்துடன் நீரொழுகப்பெற்ற ஒருவகைப் பெருங் கழலைக்கட்டி. இஃது அரிதில் உண்டாகும்**; a rare disease in the genital of a female consisting of large tumours on both sides of the lips (labia majora) divided with deep fissures and discharging a large quantity of offensive fluid, *Oozing tumour.*

[அல்குல் + கழலை. கழல் = கழற்சிக்காய். கழல் → கழலை = கழற்சிக்காய் போன்ற கட்டி.]

அல்குற்சிலந்தி *algur-cilandi*, பெ. (n.) **பெண்களின் வெளியுறுப்புகளிற் காணும் விரணத் தோடுகூடிய புண்**; ulceration of the external genital parts in a female, *Cancrum pudendi*.

[அல்குல் + சிலந்தி. ஒருகா. சிலந்திப்பூச்சி போன்ற சிறு கட்டி.]

அல்குற்சிவு *algur-civu*, பெ. (n.) 1. **கிழிந்த அல்குலைத் தைத்தல்**; the sewing up of a lacerated perineum. 2. **அல்குலின் பேரிதழுக்குப் போடும் தையல்;** suturing of the labia majora, *Episiorrhaphy*.

[அல்குல் + சிவு. ஒருகா. E. sewing > த. சீவு → சிவு.]

அல்குற்சுமரி *algur-cumari*, பெ. (n.) அல்குற் கண்டம் பார்க்க; see *algur-kandam*.

[அல்குல் + சுமரி (?).]

அல்குற்சூலை *algur-culai*, பெ. (n.) 1. **பெண் குறியின் சூதகத் தாரையில் ஏற்படும் வலி**; pain in the vagina, *Vaginodynia* or *Colpodynia*. 2. **சூதகத் தாரைக்கு ஏற்பட்ட அழற்சியினாலுண்டாகும் குத்தல்நோய்**; acute pain due to vaginal inflammation.

அல்குல் + சூலை. சூலுதல் = குடைதல். சூல் → சூலை = குடைச்சல் வலி.]

அல்குற்பவுத்திரம் *algur-pavuttiram*, பெ. (n.) **பெண்குறியின் பூப்பகம் அல்லது மூத்திரத் தாரை, பேரிதழ், ஆசனவாய் முதலியவைகளுக்குள் ஏற்படும் பலவகைப் பவுத்திர நோய்கள்**; the several kinds of fistula in a female pertaining to the vagina, the rectum, the bladder, the urethra and the perineum viz.,

1. Genito-urinary fistula.
2. Perino-vaginal fistula.
3. Recto-labial fistula.
4. Recto-vaginal fistula.
5. Vesico-vaginal fistula.

[அல்குல் + Skt. bhagandaram > த. பகந்தரம் → பகந்திரம் → பவுந்திரம் → பவுத்திரம் = அண்டியிலுண்டாகும் புரைப்புண்.]

அல்குற்பிளவு *algur-pilavu*, பெ. (n.) **பெண்குறியின் இருபக்கங்களிலுமுள்ள வுதடுகளின் நடுவேயுள்ள பிளப்பு, இதற்குப் புழுக்கை யென்றும் பெயர்;** the hollow space below the clitoris and between the two lips (labium) in a female, *Vestibule* of the vulva.

[அல்குல் + பிளவு. பிள்ளுதல் + பிளத்தல். பிள் → பிள → பிளவு.]

அல்குற்பிறை *algur-pirai*, பெ. (n.) **பெண்குறியின் தீட்டுத் தாரையின் வாயிலண்டை இருக்கும் சதைப் பாகங்களுக்குக் காணும் மிக்க உணர்ச்சியால் ஏற்படும் பிடிப்பு வலி**; the painful spasm of the vagina due to the extreme sensitiveness of the skin at its entrance or thereabout, *Vaginismus*.

[அல்குல் + பிறை. ஒருகா. பிறக்கும் (தோன்றும்) வலி. பிறத்தல் = தோன்றுதல். பிற → பிறை.]

அல்குற்புகல் *algur-pugal*, பெ. (n.) **யோனிக்குட் புகட்டுதல்;** vulval penetration.

[அல்குல் + புகல். புகு → புகல் = புகுதல், மருந்து புகட்டப்படுதல். புகவிடு → புகடு → புகட்டு (பி.வி.).]

அல்குற்புரை *algur-purai*, பெ. (n.) **யோனித் துவாரத்தி னருகேயுள்ள நான்கு மடிப்புகளாலாகிய சுருங்கிய தசைப் பாகம்**; the four rings or folds surrounding the vagina at its orifice, resembling myrtle leaves, *Caruncula myrtiformis*.

Note: They are supposed to be the relics or remains of the ruptured hymen, but they are not so.

[அல்குல் + புரை. புல்லுதல் = துளைத்தல். புல் = உட்டுளையுள்ளது. புல் → புர் → புரை = துளை, பை, பையின் பிரிவு, மடிப்பு.]

அல்குற்புழுக்கை *algur-pulukkai*, பெ. (n.) **சுமரிக்குக்கீழ் உதடுகளின் நடுவிலிருக்கும் பிளப்பு;** the space below the clitoris and between the labium minor, *Vestibule*.

அல்குற்பிளவு பார்க்க; see **algur-pilavu**.

[அல்குல் + புழுக்கை. புல் → புள் → புழு = துளைக்கும் உளு. புழுத்தல் = துளைத்தல், புழுத் துளைத்தல். ஒ.நோ: உள் → உளு. உளுத்தல் = துளைத்தல், உளுத் துளைத்தல். புழு → புழுக்கை = துளைப்பு, பிளப்பு.]

அல்குற்புற்று *algur-purru*, பெ. (n.) **அல்குலில் உண்டாகும் புற்றுநோய்;** cancer of *Pudendum mulibre* (சா.அக.).

[அல்குல் + புற்று. புல்லுதல் = துளைத்தல், தோண்டுதல். புல் → (புறு) → புற்று = துளை, எறும்புவளை, கறையான் கட்டிய மண்கூடு, புரைவைத்த புண்.]

அல்குற்றபம் *algur̠-r̠abam*, பெ. (n.) பெண் குறியிலுண்டாகும் அழற்சி; inflammation of the vulva, *Vulvitis*.

[அல்குல்+தபம். **Skt.** tap> த. தபு → தபம் = அழற்சி. 'அம்' தொ.பெ. ஈறு.]

அல்குற்கண்டதாபனம் பார்க்க; see *algur̠-kaṇḍa-tābanam*.

அல்குற்றாபம் *algur̠-r̠ābam*, பெ. (n.) 1. பொதுவாகப் பெண்குறியின் வெளியுறுப்புகளுக்குக் காணும் அழற்சி; inflammation of the external part of the organs of generation in the female (vulva), *Vulvitis*. 2. பெண்குறியின் சூதகத் தாரையில் ஏற்படும் அழற்சி; inflammation of the vagina, *Vaginitis*.

[அல்குல் + தாபம். **Skt.** tapa > த. தபி. தபித்தல் = சுடுதல், எரிதல், அழலுதல். தபி → தாபம் = அழற்சி.]

அல்குற்கண்டதாபனம் பார்க்க; see *algur̠-kaṇḍa - tābanam*.

அல்குற்றாரை *algur̠-r̠ārai*, பெ. (n.) அல்குற்றுவாரம் பார்க்க; see *algur̠ - r̠uvāram*.

[அல்குல் + தாரை (குழல், துளை).]

அல்குற்றிரவித்தல் *algur̠-r̠iravittal*, பெ. (n.) பெண்குறியினின்று நீர் முதலியவை பொசியப் பண்ணல். இது பொதுப்பட, சூல்கொண்ட காலத்தில் வெளிப்படும்; a discharge of thin mucuous from the uterus of the pregnant woman due to the excessive secretion of uterine glands, *Hydrorrhea gravidarum*.

[அல்குல் + திரவி. **Skt.** drava = நீர்ப் பொருள் சொட்டுதல், ஒழுகுதல், ஓடுதல். வ. த்ரவ > த. திரவி.]

அல்குற்றினவு *algur̠-r̠inavu* பெ. (n.) பெண்குறியின் வெளியுறுப்புகளிற் காணும் மிக அதிக நமைச்சல்; a disease consisting of an intense itching of the external genitals of the female, *Pruritus vulvae*.

[அல்குல் + தினவு. தின்னுதல் = ஊறலெடுத்தல், சொறிவெடுத்தல், அரிப்பெடுத்தல், நமைச்சல். 'தின்றவிடஞ் சொறிந்தாற்போல' (திவ். திருவாய். 4.8:9, பன்னீ.). தின்→தினவு. 'அவு' தொ.பெ. ஈறு.]

அல்குற்றுவாரம் *algur̠-r̠uvāram*, பெ. (n.) 1. பூப்பகம் அல்லது தீட்டுத் தாரையின் வாயில்; the external vaginal opening. 2. பூப்பகம், அதாவது, பெண்களுக்குக் கருப்பையினின்று மாதவிடாய் ஒழுகப்பெற்ற தாரை. இதுவே கருப்பத்தினின்று குழந்தை வெளிவரும் வழி, புணர்ச்சிக்குக் காரணமான விடம்; the membraneous canal through which the menstrual blood is discharged. This is the passage intended for the expulsion of the child from the womb and for receiving the penis in copulation.

[அல்குல் + **Skt.** dvāra > த. துவாரம் = துளை.]

அல்சா *alša*, பெ. (n.) சுக்கான் (இ.வ.); rudder (Loc.).

அல்சி *alši*, பெ. (n.) ஆழிவிதைச் செடி; linseed plant, *Linum usitatissimum* (சா.அக.).

அல்நார் *alnār*, பெ. (n.) கல்நார் (R.); asbestos (செ.அக.).

கல்நார் : earth - flax or mountain - flax called asbestos, *Amianthus*. It has the peculiar property of resisting fire.

[கல்நார் → அல்நார்.]

கல்நார் பார்க்க; see *kal-nār*.

அல்பொருள் *al-poruḷ*, பெ. (n.) 1. தீவினை, கரிசு (பாவம்); sin. ''அறனை நினைப்பானை யல்பொரு ளஞ்சும்'' (திரிகடு. 72). 2. (அணி.) உவமம் (உபமானம்) (விசாக. அணியி. 3); (Rhet.) standard of comparison.

[அல் = அறமல்லாத. பொருள் = வினை, செய்தி. 2. அல் = பொருள் (உபமேயம்) அல்லாத. பொருள் = உவமமாகச் சொல்லப்படும் அறுவகைப் பொருள்களுள் ஒன்று.]

அல்மதம் *al-madam*, பெ. (n.) கன்மதம் (புதுவை); rock alum (Poṇḍ.).

[கல்மதம் → அல்மதம்.]

கல்மதம் பார்க்க; see *kal-madam*.

அல்ல *alla*, பெ. (n.) 1. பலவின்பாற் படர்க்கை எதிர்மறைக் குறிப்புவினைப் பெயர்; neut. pl. neg. appellative verb used as noun. ''செய் தக்க அல்ல செயக்கெடும்'' (குறள், 466). 2. முன் சொல்லாதொழிந்தன; those not mentioned before. ''உருவ வெட்பய றுழுந்து மல்லவும்'' (சீவக. 1561). 3. முன் சொன்ன தற்கு மாறானவை; those contrary or opposite to the aforesaid. ''அறங்கூறா னல்ல செயினும்'' (குறள், 181). —, கு.வி.மு. (impl,

fin.v.) *பலவின்பாற் படர்க்கை எதிர்மறைக் குறிப்புவினைமுற்று*; neut. pl. neg. appellative verb. ''ஒருவற் கணியல்ல மற்றுப் பிற'' (குறள், 95).

ம., க., தெ., குட., பட. அல்ல; கோத. அல; கோண். தல்லே; பிரா. அல்லவ்.

Fin. ālā; **Heb.** al.

[அல் → அல்ல.]

*அல்*⁴ பார்க்க; see *al*⁴.

அல்லகண்டம் *alla-kaṇḍam*, பெ. (n.) *துன்பம்* (பிங்.); affliction. ''அல்லகண் டங்கொண் டடியேனென் செய்கேனே'' (தேவா. 6. 62:1).

[அல்ல = நல்லதல்லாத, தீய. கண்டு → கண்டம் = பகுதி, வேளை. ஒ.நோ : பொல்லாத வேளை.]

அல்லகம்¹ *allagam*, பெ. (n.) 1. *செங்கழுநீர்*; red Indian water-lily, *Nymphae odorata*. ''அல்லகாத் திரிபார்'' (தணிகை. புராணவர. 59). 2. *செந்தாமரை*; red lotus, *Nelumbium speciosum*.

[எல் → அல் → அலத்தம் = செம்பருத்தி. அலத்தகம் = செம்பஞ்சுக் குழம்பு. அல் → அல்ல கம்.]

அல்லகம்² *allagam*, பெ. (n.) *நீர்ச்சீலை* (கோவணம்); man's loin-cloth.

அல்லகாத்திரி *allagāttiri*, பெ. (n.) *தணிகை மலை*; the hill at *Tiruttaṇigai*. ''வைகறொறு மலர்மூன்று கோலமார் காவி யுதிர்த்தலி னல்ல காத்திரி'' (தணிகை. புராணவர. 59).

[அல்லகம் + **Skt.** adri > **த.** *அத்திரி = மலை. அல்லகம் = செங்கழுநீர்.]*

*அல்லகம்*¹ பார்க்க; see *allagam*¹.

அல்லகுறி *alla-kuṟi*, பெ. (n.) (அகப்.) *களவொழுக்கத்தில் தலைமகனாலன்றிப் பிறிதொன்றினால் நிகழுங் குறி*; (Agap.) a signal pre-arranged to be given at night by the lover during the period of clandestine love but caused casually by something else. ''அல்ல குறிப் படுதலு மவள்வயி னுரித்தே'' (தொல். பொருள். கள. 42).

[அல் → அல்ல + குறி.]

அல்லகுறிப்படு-தல் *alla-kuṟi-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) (அகப்.) *களவொழுக்க இரவுக் குறியிடத்துக் குறியல்லாத குறியால் தலைவி மயங்குதல்*; (Agap.) to be misled, as the heroine, at night by occurrence of signs happening casually (தொல். பொருள். கள. 42, உரை).

[அல்ல + குறி + படு.]

அல்லங்காடி *al-l-aṅgāḍi*, பெ. (n.) *மாலைக் கடைத்தெரு, நாளங்காடி என்பதற்கு எதிர்*; evening bazaar, opp. to *nāḷaṅgāḍi*. ''அல்லங் காடி யழிதரு கம்பலை'' (மதுரைக். 544).

[அல் + அங்காடி. அல் = மாலை. அங்காடி = கடைத்தெரு.]

அங்காடி பார்க்க; see *aṅgāḍi*.

அல்லசங்கம் *alla-śaṅgam*, பெ. (n.) *வெள்ளி*; silver, *Argentum* (சா.அக.).

அல்லணை *allaṇai*, பெ. (n.) *கல்லால் அமைத்த அணைக்கட்டு* (R.T.); dam, built of stones.

[கல்லணை → அல்லணை.]

அல்லத்தட்டு-தல் *alla-t-taṭṭu-*, 5. செ.குன்றாவி. (v.t.) 1. *ஏவினதைச் செய்ய மறுத்தல், அறிவுரையைப் புறக்கணித்தல்* (உ.வ.); to refuse compliance, disobey, reject advice, object to (Com.u.). 2. *நம்பிக்கையைக் கெடுத்தல்*; to frustrate, disappoint (W.).

க. அல்லகளெ

[அல்ல = தகாதது (என்று), தட்டுதல் = தடுத்தல், தடைசெய்தல்.]

அல்லது *alladu*, பெ. (n.) 1. *முன்சொன்ன தல்லாதது*; that which is other than or opposed to, the aforesaid. ''நல்லது செய்த லாற்றீ ராயினும் அல்லது செய்த லோம்புமின்'' (புறநா. 195 : 6). தெ. அல்லதி. 2. *தீவினை*; evil, sin, misdeed. ''அல்லது கெடுப்பவ னருள் கொண்ட முகம்போல'' (கலித். 148 : 4). கோத. அலது. —, இடை. (conj.) 1. *அல்லாவிட்டால்*; or, if not, an alternative conjunction. கல்வி அல்லது செல்வம் இல்லாதவன் சிறப்பாக வாழ முடியாது. ''சேவடி தொழுத லொன்றோ அல்லதிவ் வுடம்பு நீங்க வேற்றுல கடைத லொன்றோ'' (சீவக. 1745). 2. *தவிர*; except. உழுந்தல்ல தில்லை. 3. *தவிர வேறொன்றாக*; except as. ''நீயாக வல்லது மாந்தழை யாக நினைந்திலளே'' (தஞ்சைவா. 129).

ம. அல்லாதெ, அல்லயாகில், அல்லயால்; க. அல்லது, அல்து.

Gk. *allos*, other; **E.** *allo*, *alle*, comb. form.
L. *alius*, otherwise, at another time; **L.** *alias*, (name used) on other occasions.
OE. *elles;* **OHG.** *elles, alles;* **OSw.** *aljes*; **Sw.** *eljest*; **Goth.** aljis; **E.** *else*. otherwise.
OE. *el.* - in compounds; **E.** *ele*, lendish, of another land, foreign.
E. *eil*land, eillond, a foreign land. **OS.** *eli*lendi, foreign; **OHG.** *ali* – , *eli*lanti, foreign, of another country, wretched, Mod. **G.** *ele*na.

[அல் → அல்லது.]

அல்லதூஉம் *alladūum*, இடை. (conj.) *அல்லாமலும்*; besides, moreover, in addition. "அல்லதூஉ மவனுடைத் துணைவ ராயினார்க்கு" (கம்பரா. சுந்தர. பிணிவீட். 22).

ம. அல்லாதெ

[அல் → அல்லது → அல்லதும் → அல்லதூஉம் (இன்னிசை யளபெடை).]

அல்லதேல் *alladēl*, இடை. (conj.) *அல்லாமற் போனால், அல்லாவிட்டால், அல்லாதிருந்தால்;* if not. "அத்த விங்கினிக் காத்தரு ளல்லதே லடுவல்லே" (கந்தபு. உற்பத். மோன. 10).

ம. அல்லாய்க, அல்லாய்கில்; **கோத.** அலாத் மேல்; **கோண்.** ஜல்லே; **பிரா.** அலவா.

[அல்லது + ஏல். என் → எனில் → ஏல் (ஐய முணர்த்தும் வி.எ. ஈறு.]

அல்லதை *alladai*, இடை. (conj.) 1. *அல்லது;* or, or else, if not. "அலிய ரல்லதை யாண் டகை யார்கொலோ வனையோர்" (கந்தபு. அசுர. சூரன்தண். 25.). 2. *அல்லாமல்;* except.

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யும்"
(கலித். 9 : 12–13).

ம. அல்லாத்த; க. அல்லத; குட. அல்லதெ.

[அல் → அல்லது → அல்லதை. 'ஐ' சாரியை யீறு.]

அல்லம்¹ *allam*, கு.வி.மு. (impl.v.) 1. *தன்மைப் பன்மை எதிர்மறைக் குறிப்புவினைமுற்று;* neg. impl. fin. v. of the 1st pers. pl. யாம் தண்டனை யடைதற்குக் குற்றவாளிய ரல்லம். 2. *தன்மை யுயர்வுப்பன்மை எதிர் மறைக் குறிப்புவினைமுற்று;* neg. impl. fin. v. of the 1st pers. hon. pl. "பண்டைய மல்லம்" (சீவக. 1623).

[அல் + அம் (தன்மைப் பன்மை வி.மு. ஈறு.]

*அல்*⁵ பார்க்க; see *al*⁵.

அல்லம்² *allam*, பெ. (n.) *இஞ்சி* (திவா.); ginger.

தெ. அல்லமு; க. அல்ல; மரா. அலேம்.

[ஒருகா. உல் → அல் → அல்லம் = எரிச்ச லுள்ளது.]

மறுவ. அல்லமாகிதம்

அல்லமன் *allaman*, பெ. (n.) *சிவனது தோற்றரவாகக் கருதப்படும் பிரபுலிங்கலீலைக் கதைத் தலைவன்;* name of the hero of the *Pirabuliṅga-līlai*, considered to be a manifestation of Śiva.

சுஞ்ஞானி, நிராங்காரன் என்னும் இருவர்க்கும் பிறந்த புதல்வன்.

"தொல்லையி லுயர்சுஞ் ஞானி
தூய்நிராங் கார னென்போர்
எல்லையி றவங்கள் செய்ய
வெமதுமெய் வடிவத் தானே
அல்லம னாம மமைந்த னாயினம்"
(பிரபுலிங். கைலாச. 54).

க. அல்லமன்; தெ. அல்லமதேவுடு.

அல்லமாகிகம் *allamāgigam*, பெ. (n.) *இஞ்சி;* ginger, *Zingiber officinalis* (சா.அக.).

*அல்லம்*² பார்க்க; see *allam*².

அல்லர் *allar*, பெ. (n.) 1. *அல்லாதவர்;* others, those not mentioned before. "வீரரை யல்லரை வெகுள வீரென" (கந்தபு. யுத்த. சிங்கமுகா. 117). 2. *பலர்பால் எதிர்மறைக் குறிப்புவினைமுற்று;* neg. impl. fin. v. of the 3rd pers. rational pl. "வறிது பெயர்குவ ரல்லர்" (புறநா. 124 : 3).

கோத. அலாவோர்

[அல் → அல்லர். 'அர்' ப.பா.'ஈறு.]

*அல்*⁵ பார்க்க; see *al*⁵.

அல்லரியல் *al-l-ariyal*, பெ. (n.) *கண்ணறை யுள்ள ஆடை;* that which is loosely woven or braided. அல்லரியற் புடைவை (யாழ்ப்.).

[அல் + அரியல்.]

அல்லல் *allal*, பெ. (n.) **துன்பம்**; affliction, distress, evil, misfortune, privation. ''அல்ல லருளாள்வார்க் கில்லை'' (குறள், 245).

ம. அல்லல்; க. அல்ல; தெ. அல்லரி.

[அலத்தல் = துன்புறுதல். அலம் = துன்பம். அலக்கண் = துன்பம், துயரம். அலவுதல் = வருந்துதல். அலைதல் = அசைதல், வருந்துதல். அலைத்தல் = அசைத்தல், வருத்துதல். அல்லுதல் = அசைதல், வருந்துதல், துன்புறுதல். ஒ.நோ: அசைவு = அசைகை, உடம்பு அலட்டுண்கை, தளர்வு, வருத்தம். அல் → அல்லல். 'அல்' தொ.பெ. ஈறு.]

அல்லவை *allavai*, பெ. (n.) 1. **தீவினை**; sin, evil. ''அழுக்காற்றி னல்லவை செய்யார்'' (குறள், 164). 2. **பயனற்றவை** (பிங்.); useless things, futile acts. 3. **மாறானவை**; contrary acts, contradictory actions or sayings. ''தவமறைந் தல்லவை செய்தல்'' (குறள், 274).

ம. அல்ல; கோத. அல.

[அல்ல + அவை.]

அல்[5] பார்க்க; see *al*[5].

அல்லறம் *al-l-aṟam*, பெ. (n.) **தீவினை**; sin, sinful act. ''அல்லறஞ் செய்வோ ரருநர கடைதலும்'' (மணிமே. 16 : 89).

[அல் + அறம். 'அல்' மறுதலைப் பொருளில் வரும் முன்னொட்டு. அல்லறம் = அறத்திற்கு மாறானது.]

அல்லறைசில்லறை *al-l-aṟai-šil-l-aṟai*, பெ. (n.) 1. **மிச்சத் துண்டு துணிக்கைகள்**; odds and ends. 2. **மிச்சத் தொகையான சிறு காசுகள்**; small coins remaining as balance.

ம. அல்லறசில்லற

[ஒல்லி → உல்லி. ஒல்கு → அல்கு. அல்குதல் = சுருங்குதல், சிறுத்தல். அறை = அறுக்கப்பட்டது, துண்டு. அல்லறை = சிறுதுண்டு. சில்லறை = சிறுதுண்டு. 'அல்லறை சில்லறை' எதுகை மரபிணைமொழி. ஒ.நோ: அல்லுச் சில்லுப்படுதல் = சின்னஞ்சிறு துண்டாதல், சிறிது சிறிதாகக் குறைதல் அல்லது கெடுதல். 'சில்லறை' என்பதன் இரட்டிய வழக்கான 'அல்லறைசில்லறை' என்பது அத்துணைப் பொருத்தமுள்ள தன்று.]

அல்லன் *allaṉ*, பெ. (n.) 1. **அல்லாதவன்**; one who is not, other than, different from. ''ஒருவனே யெல்லா மாகி யல்லனா யுடனுமாவன்'' (சி.சி. சுபக். 1 : 27). 2. **தீயவன்**; sinner, evil-doer, wicked man. ''அல்லனோ டொருபந்தி யயின்றிடல்'' (சேதுபு. காசிப. 66). —, கு. வி. மு. (impl. v.) அன்மைப் பொருளில் வரும் ஆண்பாற் குறிப்புவினை முற்று; he is not. ''இறையு மல்லன்'' (சி.சி. சுபக். 8 : 38).

[அல் → அல்லன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அல்[4], *அல்*[5] பார்க்க; see *al*[4], *al*[5].

அல்லன *allaṉa*, பெ. (n.) 1. **முன் சொன்னது அல்லது சொன்னவை அல்லாதவை, ஒழிந்தவை**; those other than the previously mentioned, the rest. ''சொன்ன நன்மலரு மல்லனவும்'' (சீவக. 1652). 2. **தீயன, தீவினைகள்**; misdeeds, sinful acts, evils.

''நல்லா றொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்''
(நீதிநெறி. 61).

[அல் + அன் (சாரியை) + அ (பல.பா. ஈறு). இனி, 'அன' பல.பா. ஈறு என்றுமாம்.]

அல்[4], *அல்*[5] பார்க்க; see *al*[4], *al*[5].

அல்லா[1]**-த்தல்** *allā-*, 3 செ.கு.வி. (v.i.) **துன்புறுதல்**; to suffer, to be in distress. ''ஆக்க மிழந்தேமென் றல்லாவார்'' (குறள், 593). வயவுநோய் நலிதலி னல்லாந்தார்'' (கலித். 29 : 1 - 2).

தெ. அல்லட

[அல் → அலம் = துன்பம். அல் → அல்லா. இனி, அலம்வா → அலமா → அல்லா என்றுமாம்.]

அல்லா[2]**-த்தல்** *allā-*, 3 செ.கு.வி. (v.i.) **மகிழ்தல்**; to rejoice, to be glad. ''அதனெதிர் சொல்லே மாதலி னல்லாந்து கலங்கி'' (குறிஞ்சிப். 143).

[மல்லாந்து = மலர்தல், மகிழ்தல். மல்லா → அல்லா.]

'அல்லாந்து' என்னுஞ் சொல்லிற்கு நச்சினார்க்கினியர் 'மகிழ்ந்து' என்று பொருள் கூறியதனால், அதற்கேற்ப இங்கு மூலங் கூறப்பட்டது. ஆயின், குறிஞ்சிப் பாட்டில் அச் சொல்வரும் அடியையும், அதன் முன்பின் சொற்களின் பொருட்டொடர்பையும் அச் சொன் னிகழ்ச்சிக்குரிய அமையத்தையும் நோக்குமிடத்து, நச்சினார்க்கினியர் ஒரு சொல்லை வலிந்து பிரித்து

நலிந்து பொருள் கூறியதாகவே தோன்றுகின்றது. 'அல்லாந்து கலங்கி' என்னும் வினையெச்சத் தொடர், ஒரே வினைமுதலின் வினையென்று கொள்வதற்கே ஏற்றதாக இணைந்துநிற்றல் காண்க.

அல்லா[1] *allā*, கு.பெ.எ. (adj.) 1. **முன் சொன்னவையல்லாத, ஒழிந்த**; other than the previously mentioned. "சோதிவைகும் பொற்றையதொன்றேயல்லாப் பொருப்பெலாம்" (கந்தபு. யுத்த. சூரபன். 486). 2. **தாய்** (நாடகத்தில் வழங்கப்படும் சொல்) (சங்.அக.); mother.

[அல் + ஆ (பொருளற்ற எதிர்மறை யிடைநிலை) + து (வி.எ. ஈறு) + அ (பெ.எ. ஈறு)— அல்லாத → அல்லா (ஈ.கெ.எ.ம.பெ.எ.).]

அல்[5] *பார்க்க; see al*[5].

ம. அல்ல

அல்லா[2] *allā*, பெ. (n.) **துன்பம், வருத்தம்**; affliction, distress, disaster. "அல்லா நெஞ்சமுறப் பூட்ட" (பரிபா. 6 : 99).

[அல்லா = அல்லாப்பு.]

அல்லாக்கால் *allākkāl*, இடை. (conj.) **அல்லா விட்டால்**; if not, failing which. இன்றே பணங் கட்டிவிடவேண்டும்; அல்லாக்கால் தேர் வெழுத முடியாது.

ம. அல்லாக்கால்; பட. அல்லாதோலெ.

[அல்லாத → அல்லா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + கால் = வேளை.]

அல்லாசி *allāši*, பெ. (n.) **பெருங்கொடி முந்திரிகை**; a big species of grapes, *Vitis vinifera* (சா.அக.).

அல்லாட்டம் *allāṭṭam*, பெ. (n.) **அலைந்து திரிதல், அலைச்சல்**; wandering from place to place.

க., தெ. அல்லாட.

[அல்லாடு → அல்லாட்டு → அல்லாட்டம்.]

அல்லாடு-தல் *allāḍu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **அலைந்துதிரிதல்**; to wander from place to place. 2. **தொந்தரவுபடுதல்**; to suffer, to be troubled.

க., தெ. அல்லாடு; து. அலெயுனி.

[அல் → அலை. ஆடுதல் = திரிதல்.]

அல்லாத *allāda*, பெ. (n.) 1. **மாறானவை**; what are not, are different. "சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்" (நான் மணிக். 28). 2. **தீயவை** (சங்.அக.); evils, evil things. —, கு.பெ.எ. (adj.) 1. **மாறான**; which is not, other than, different from. "அல்லாத பரசமய வலகைத்தேர்" (சேதுபு. கடவு. 13). 2. **தீய** (சங்.அக.); bad, evil. —, கு.வி.மு. (impl.fin.v.) **தீயன** (சங்.அக.); (they) are evil.

ம. அல்லாத்த

[அல் + ஆ (பொருளற்ற எ.ம.இ.நி.) + து (வி.எ. ஈறு) + அ (பெ.எ. ஈறு) – அல்லாத (பெ.எ.).

அல் + ஆ (பொருளற்ற எ.ம.இ.நி.) + து (வி.எ. ஈறு) + அ (பல.பா.வி.மு. ஈறு, பல.பா. பெ. ஈறு) – அல்லாத (கு.வி.மு., குறிப்பு வினையா. பெ.).]

'அல்' என்னும் முதனிலையே எதிர்மறைப் பொருள் கொண்டிருத்தலால் 'ஆ' என்னும் எதிர்மறை யிடைநிலை தேவையில்லை. நல், நல்ல, நல்லன, நல்லவை என்பனபோல, அல், அல்ல, அல்லன, அல்லவை என்றிருப்பதே போதும். ஆயின், கல், கல்லாத → கல்லா, கல்லாதன, கல்லாதவை; சொல், சொல்லாத → சொல்லா, சொல்லாதன, சொல்லாதவை; நில், நில்லாத → நில்லா, நில்லாதன, நில்லாதவை; பொல், பொல்லாத → பொல்லா, பொல்லாதன, பொல்லாதவை என்பன போன்ற தெரிநிலை வினைச்சொல் வடிவுகளை யொத்து, 'அல்', 'இல்' என்னும் இயல்பான எதிர்மறைக் குறிப்புவினைகளும் ஆகார எதிர்மறை யிடைநிலை பெற்று, ஒத்தமைவாக வழங்கி வந்திருக்கின்றன. இலக்கணப்படி ஈரெதிர்மறை ஒருடன்பாடாகல் வேண்டும். அந் நெறிமுறை கடைப்பிடிப்பின், அல்லாத → அல்லா, இல்லாத → இல்லா என்பன போன்ற எதிர்மறை யிடைநிலை பெற்ற வடிவுகள் செல்லா. ஆதலால், வழக்கு நோக்கியே அவற்றை அமைத்தல் வேண்டும்.

அல்லாதது *allādadu*, பெ. (n.) 1. **சொல்லா தொழிந்தது** (சங்.அக.); that which is not mentioned. 2. **தகாதது, தீயது**; that which is improper, that which is evil.

[அல் + ஆ (எ.ம.இ.நி.) + து (வி.எ. ஈறு) + அ (பெ.எ. ஈறு) – அல்லாத. அல்லாத + அது (ஒன்.பா. ஈறு) – அல்லாதது.]

அல்லாத பார்க்க; see *allāda*.

அல்லி


செவ்வல்லி


கிழங்கு

அரும்பு (மொக்குள்)

மொட்டு

முகை


போது

அல்லாதவர் *alladavar*, பெ. (n.) 1. **முன்சொல்லப் படாதவர்** (சங்.அக.); persons not mentioned before. "சமயாதி பர்களுக்கு மல்லாத வர்க்கும்" (பாரத. கிருட். 232). 2. **தகாதவர், தீயவர்;** improper persons, evil-doers.

[அல்லாத + அவர்.]

அல்லாத பார்க்க; see *allada.*

அல்லாதன *alladana*, பெ. (n.) 1. **முன்சொல்லா தொழிந்தவை** (சங்.அக.); those not mentioned, the rest. 2. **தகாதன, தீயன**; improper things, evils. "பற்றினர்போ யல்லாதன புரிவர்" (கந்தபு. அசுர. அயிராணிசோக. 15).

[அல்லாத + அன் (சாரியை) + அ (பல.பா. ஈறு). இனி, அல்லாத + அன என்றுமாம். அன்ன → அன = அவை.]

அல்லாத பார்க்க; see *allada.*

அல்லாதார் *alladar*, பெ. (n.) 1. **முன்சொல்லப் படாத பிறர்** (சங்.அக.); persons other than those mentioned. "பெற்றார் மகப்பெற்றா ரல்லாதார் பிறர்மக்கள் பிறரே கண்டீர்" (சீவக. 1545). 2. **தீயார்;** sinners, evil-doers. "அருட்கண்ணா னோக்காதா ரல்லா தாரே" (தேவா. 6 . 25 : 1).

[அல்லாத + அவர் → ஆர் (ப.பா. ஈறு).]

அல்லாத பார்க்க; see *allada.*

அல்லாது *alladu*, கு.வி.எ. (prep.) **தவிர**; except, besides. "அயில்வே லாண்மை யாலு மவனே யல்லாது வேறு சிலரிலர்" (பாரத. பதினெட். 4).

ம. அல்லாதெ

[அல் + ஆ (எ.ம.இ.நி.) + து (வி.எ. ஈறு).]

அல்லாத பார்க்க; see *allada.*

அல்லாப்பாண்டியடி-த்தல் *alla-p-pandi-y-adi-*, 4 செ.கு.வி. (v.i.) **மல்லாக்க வளைந்து கரணம் போடுதல்** (நெல்லை); to perform a somersault (Tn.).

[மல்லா = மல்லாக்க. மல்லா → அல்லா. பாண்டி = வட்டம், வளைவு, கரணம். அடித்தல் = போடுதல், அடிப்பதுபோற் காலை நிலத்தி லூன்றுதல்.]

அல்லாப்பாண்டி யடித்தலுக்கும் அல்லாப் பண்டிகைக்கும் யாதொரு தொடர்புமில்லை.

அல்லாப்பு *allappu*, பெ. (n.) **வருத்தம்**; distress. 'இவன் நெஞ்சின்கண் அல்லாப்பை இறுகப் பூட்டுதலால்' (பரிபா. 6 : 99, உரை).

தெ. அலபு

[அல்லா → அல்லாப்பு (தொ.பெ.). 'பு' தொ. பெ. ஈறு.]

அல்லாமல் *allamal*, கு.வி.எ. (prep.) 1. **தவிர**; except, besides. "சேதாம்பல் மருவுயிர்க்கு நாண்மலர்க்கு மாமதியு மல்லாம லுரைபெறு நற் றலைவர்பிற ருளர்கொல்லோ" (நைடத. அன்னத்தைத்தூ. 98). 2. **இல்லாமல்**; without. அவனை யல்லாமல் இது நடக்குமா? (உ.வ.).

[அல் + ஆ (எ.ம.இ.நி.) + மை (பண்.பெ. ஈறு). மை → மல்.]

அல்லாத பார்க்க; see *allada.*

'இல்லாமல்' என்னும் பொருளில் இச் சொல்லை வழங்குவது வழுவழக்கே. பண்புப் பெயரீறு எதிர்மறை வினையெச்ச ஈறாக ஆளப்பட்டது.

அல்லாமலும் *allamalum*, இடை. (conj.) **மேலும்**; moreover, besides, in addition to. அவர் கையூட்டு வாங்கியிருப்பது பெருந்தவறு; அல்லாமலும், கள்ளக்கையெழுத் திட்டிருப் பது மன்னிக்கத்தகாத குற்றம். அவ் வுயர்ந்த பதவிக்கு அமர்த்தப்பட்டிருப்பவர் மிக இளைஞர்; அல்லாமலும், அவர் ஓர் அயல் நாட்டார்.

[அல் + ஆ (எ.ம.இ.நி.) + மல் (எ.ம.கு.வி.எ. ஈறு) + உம் (இறந்தது தழுவிய எச்சப்பொரு ளிடைச்சொல்).]

அல்லாமே *allame*, எ.ம.கு.வி.எ. (prep.) **அல்லாமல்**; except. அவனல்லாமே வேறு யார் இதைச் செய்ய முடியும்?

[அல் + ஆ (எ.ம.இ.நி.) + மை → மே (எ.ம. கு.வி.எ. ஈறு).]

அல்லாமை *allamai*, பெ. (n.) **தீயகுணம்**; evil disposition, bad character. "தேகத்தில் வாஞ்சை முதலாய் அல்லாமை யெத்தனை" (தாயு. ஆனந்த. 1).

[அல் + ஆ (எ.ம.இ.நி.) + மை (பண்.பெ. ஈறு). நன்மை யல்லாமை என்பது கருத்து.]

அல்லார் *allar*, பெ. (n.) **அல்லாதார் 2** பார்க்க; see *alladar 2.*

[அல் + ஆர் (ப.பா. ஈறு). அவர் → ஆர்.]

அல்லாரி[1] *allari*, பெ. (n.) **வெள்ளாம்பல்** (மூ.அ.); white water-lily.

[அல் (இரவு) + ஆரி. அலரி → ஆரி. அல் லாரி = இரவில் மலரும் பூ.]

அல்லாரி[2] *allāri*, பெ. (n.) சுவரின் ஆரல் தாங்கு முளை (இ.வ.); stake in a mud wall to support the coping (Loc.).

அல்லாரி[3] *allāri*, பெ. (n.) அடர்த்தியின்மை (இ.வ.); thinness, sparseness, lightness of texture.

ம. அல்லாரி

[ஒருகா. அலசாரி (அலசல்) → அல்லாரி.]

அல்லாருகம் *allārugam*, பெ. (n.) பெருந்தாளி; a large species of convolvulus (சா.அக.).

அல்லால் *allāl*, கு.வி.எ. (prep.) **அல்லாமல்**; except, besides. "அஞ்சாமை யல்லால் துணைவேண்டா" (குறள், 497).

ம. அல்லால்

[அல் + ஆல் (வி.எ. ஈறு).]

அல்லாவிட்டால் *allāviṭṭāl*, இடை. (conj.) **அல் லாக்கால்** பார்க்க; see *allākkāl*.

அல்லாவிடத்து *allā-v-iḍattu*, இடை. (conj.) **அல் லாக்கால்** பார்க்க; see *allākkāl*. —, கு.வி.எ. (adv.) **வேறிடத்தில்**; elsewhere.

அல்லாவிடின் *allāviḍiṉ*, இடை. (conj.) **அல் லாக்கால்** பார்க்க; see *allākkāl*.

அல்லி[1] *alli*, பெ. (n.) 1. **இரா** (சங்.அக.); night. 2. **ஆம்பல்** (மூ.அ.); water-lily, *Nymphaea lotus*. 3. **வெள்ளாம்பல்** (பிங்.); white water-lily. 4. **தாமரை**; lotus. "அல்லி மாதர் புல்க" (திவ். பெரியதி. 1 . 7 : 9). 5. **அல்லி யரிசி**; lily seeds. "குளநெல்லும் விளைந்த வாம்ப லல்லியு முணங்கு முன்றில்" (சீவக. 355). 6. **அகவிதழ்** (பிங்.), **புல்லி என்பதற்கு எதிர்**; inner flower petals, opp. to *pulli*. "அல்லியங் கமலந் தன்னி லரிவையும்" (கந்தபு. உற்பத். திருக்கல். 73). 7. **பூந் தாது**; filaments of a stamen. "அல்லியங் குழலா டன்னை" (அரிச்சந். விவாக. 23).

அல்லிவகைகள் - *Different varieties of alli*

இது அடியிற்கண்டபடி பல வகைப்படும். ஆயினும், பொதுவாக அல்லியெனின் வெள் ளல்லியையே குறிக்கும்.

1. வெள்ளல்லி; white Indian water-lily, *Nymphae lotus* (pubescens).
2. செவ்வல்லி; red Indian water-lily, *Nymphae rubra* alias *Nymphae edulis*.
3. நீலவல்லி; blue Indian water-lily, *Nymphae stellata*.
4. சிற்றல்லி; star water-lily, *Nymphae cyanea*.
5. செங்கழுநீர்; purple Indian water-lily, *Nymphae odorata*.
6. வெள்ளாம்பல் அல்லது நெய்தல்; white Indian water-lily, *Nymphae lotus* alias *Custalia pubescens*.

Note: In Tamil, கொட்டி, ஆம்பல் and நெய்தல் are differently classified which is evident from the following stanza:

"கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்
போலவே
ஒட்டி யுறுவா ருறவு"
(வாக்குண். 17).

But, they are all named in English by a common term viz., Indian water-lily, and classified under the same Botanical group, viz., *Nymphaeaceae* (சா.அக.).

இங்ஙனம் திரு. **சாம்பசிவம் பிள்ளையே** கூறியிருப்பதால், செங்கழுநீரும் நெய்தலும் அல்லியினின்று பிரித்தறியப்படும். செவ்வாம் பலுக்கும் செங்கழுநீர் என்று பெயர் வழங்கி னும், முன்னதை வேறுபடுத்தலே தக்கதாம்.

ம., க., து. அல்லி; தெ. அல்லி (ஆம்பல்).

[அல் = இரா. அல் → அல்லி = இரா. ஒ.நோ: அல் → எல் → எல்லி = இரா. அல் → அல்லி = இரவில் மலரும் பூவகை, அதையுடைய கொடி. தாமரை பகலில் மலரினும் நீர்ப்பூ என்னும் பொதுமைபற்றி அல்லிப்பெயர் பெற்றது.

அல்லி (அகவிதழ்), புல்லி (புறவிதழ்) என்பன, ஒருகா. அகவல்லி, புறவல்லி என்பவற்றின் மரூஉவாயிருந்து, பின்னர்ப் பொதுப்பொருள் பெற்றிருக்கலாம்.

அல்லியரிசியை அல்லியென்றது முதலாகு பெயர். பூந்தாது அகவிதழிடை யிருப்பது.]

அல்லி[2] *alli*, பெ. (n.) இளவேர் (யாழ்ப்.); new root, shoot (J.).

[உல் → உல்லரி = தளிர். உல் → உல → உலவை = பசுந்தழை. உல் → அல் → அல்லி = தளிர், இளவேர்.]

அல்லி[3] *alli*, பெ. (n.) **காயாமரம்** (பிங்.); ironwood tree.

க. அலமர்; து. அலிமர்.

அல்லி[4] *alli*, பெ. (n.) **மாதுளை**; pomegranate. "அல்லியுங் கொய்யாவும் அலுங்கப் பழுத் திருக்க" (நா.பா.).

அல்லி[5] *alli*, பெ. (n.) அலி (பொதி.நி.); hermaphrodite, a person who is neither man nor woman wholly.

[அல் → அலி = ஆணும் பெண்ணும் அல்லாதது. அல் → அல்லி.]

அல்லிக்கிழங்கு *alli-k-kilangu*, பெ. (n.) **அல்லிக் கொடியின் கிழங்கு**; the root of the plant, *Nymphae lotus*. இதன் மா ஏழைகட்கு உணவாகப் பயன்படும்; the flour prepared from this root forms an article of food for the poor (சா.அக.).

அல்லிக்கேணி *alli-k-kēṇi*, பெ. (n.) **திருவல்லிக் கேணி**; *Tiruvallikkēṇi*. "மயிலைமா வல்லிக் கேணியான்" (திவ். இயற். நான்மு. 35).

[அல்லி + கேணி.]

அல்லிக்கொடிமூலச்செயனீர் *alli-k-koḍi-mūla-c-ceyaṉīr*, பெ. (n.) (பொன்னாக்கம்) **சாகா வுப்புச் செயநீர்**; a strong liquid prepared by a special process known only to *Siddhars* and guarded as a secret and used in Alchemy and for rejuvenation (சா.அக.).

[அல்லி + கொடி + மூலம் + செயல் + நீர். மூலம் = கிழங்கு. செயல் + நீர் – செயனீர்.]

அல்லிக்கொடிமூலம் *alli-k-koḍi-mūlam*, பெ.(n.) 1. **அல்லிக்கிழங்கு**; the root of the plant *Nymphae lotus*. 2. **சாகா வுப்பு**; a kind of salt prepared by a secret process for strengthening the body and also for longevity (சா.அக.).

அல்லிக்கோணி *alli-k-kōṇi*, பெ. (n.) **பேய்க் கற்றாழை**; wild aloe, demon aloe, *Agave americana* (சா.அக.).

இதனால் நீரிழிவுபோன்ற சிறுநீர் நோய்கள் நீங்கும்.

அல்லிகம் *alligam*, பெ. (n.) **பேய்க்கொம்மட்டி** (மூ.அ.); colocynth.

அல்லித்தண்டு *alli-t-taṇḍu*, பெ.(n.) **ஆம்பற்றாள்** (சீவக. 2876, உரை); lily stem, stalk of the water-lily.

அல்லித்தாமரை *alli-t-tāmarai*, பெ. (n.) **செங் கழுநீர்**; red water-lily (செ.அக.) — **வெள்ளாம் பல்**; white Indian water-lily, *Nymphaea lotus* (சா.அக.).

ம. அல்லித்தார்

இங்ஙனம் ஈரகரமுதலிகளும் வேறுபடு வதற்குக் கரணியம் (காரணம்), 'தாமரை' என்னுஞ் சொல் இருவண்ண மலர்க்கும் பொதுவாயிருத்தல் போலும்.

அல்லித்தாள்[1] *alli-t-tāḷ*, பெ. (n.) **மலர் நடுவிலுள்ள பெண்ணுறுப்பு, முசலி** (M.M.); pistil.

[அல்லி = அகவிதழ். தாள் = அகவிதழைச் சேர்ந்த தண்டுபோன்ற உறுப்பு.]

அல்லித்தாள்[2] *alli-t-tāḷ*, பெ. (n.) **அல்லித் தண்டு** (சீவக. 2876); lily-stem.

[அல்லி = ஆம்பல். தாள் = தண்டு.]

அல்லித்தேங்காய் *alli-t-tēṅgāy*, பெ. (n.) **கூகைக்காய் அல்லது கோட்டான்காய் என்னும் சொத்தைத் தேங்காய் (தெங்கங்காய்) வகை** (உ.வ.); blighted coconut (Com.u.).

[அல்லி + தேங்காய். ஒல் → அல் → அல்லி. அல் = சுருங்குதல்.

கோட்டான் இளநீர்மேல் உட்கார்ந்தால், அக் காய் சொத்தையாய்ப் போய்விடுமென்பது பொதுமக்கள் நம்பிக்கை. தேரை உட்கார்ந்தது தேரைக்காய் என்பர். இரண்டும் அல்லிக்காய் எனப்படும்.]

அல்லிப்பாவை *alli-p-pāvai*, பெ. (n.) **அல்லியக் கூத்தில் ஆட்டும் படிமை (பிரதிமை)**; puppets used to exhibit *alliyam* dance.

"வல்லோன் றைஇய வரிவனப் புற்ற
அல்லிப் பாவை யாடுவனப் பேய்ப்ப"
(புறநா. 33 : 16-17).

[அல்லியம் + பாவை – அல்லியப்பாவை → அல்லிப்பாவை.]

அல்லியம் பார்க்க; see *alliyam*.

அல்லிப்பிஞ்சு *alli-p-piñju*, பெ. (n.) **பூ விழாத இளம்பிஞ்சு** (வின்.); fruit newly formed from the blossom.

[அல்லி = அகவிதழ். அகவிதழை யொட்டிக் கொண்டிருக்கும் பூம்பிஞ்சு அல்லிப்பிஞ்சு.]

அல்லிமாதர் *alli-mādar*, பெ. (n.) **தாமரை மலர்மே லமர்ந்திருக்கும் திருமகள்**; *Tirumagaḷ*

(Lakṣmi), seated on a lotus. ''அல்லி மாதர் புல்கநின்ற ஆயிரந்தோளன்'' (திவ். பெரியதி. 1 . 7 : 9).

[அல்லி = அல்லிபோன்று நீர்ப்பூவாகிய தாமரை. மாதர் = அழகு, அழகுள்ள திருமகள் (பண்.ஆகு.).]

அல்லிமுகை *alli-mugai*, பெ. (n.) **பூந்தாது**; anther (சா.அக.); part of stamen containing pollen.

அல்லிமூக்கு *alli-mūkku*, பெ. (n.) **அரத்த மொழுகும் மூக்கு** (இ.வ.); bleeding nose (Loc.).

ஒ.நோ : சில்லிமூக்கு

அல்லியக்கிழங்கு *alliya-k-kiḻaṅgu*, பெ. (n.) **கொட்டிக்கிழங்கு**; the root of a water plant, *Aponogeton monostochyon* (சா.அக.).

அல்லியத்தொகுதி *alliya-t-togudi*, பெ. (n.) **தன்னைக் கொல்லுமாறு மாமனாகிய கஞ்சன் ஏவிய யானையின் மருப்பை யொடித்துக் கண்ணன் ஆடிய கூத்து**; Kriṣṇa's dance when he broke the tusk of the elephant that was set on him by Kamsa, his uncle.

'' கஞ்சன் வஞ்சங் கடத்தற் காக
அஞ்சன வண்ணன் ஆடிய வாடலுள்
அல்லியத் தொகுதியும்''

(சிலப். 6 : 46-8).

(இ-ள்.) அஞ்சன வண்ணன் ஆடிய ஆடல் பத்துள், கஞ்சன் வஞ்சத்தின் வந்த யானையின் கோட்டை ஒசித்தற்கு நின்றாடிய அல்லியத் தொகுதி யென்னுங் கூத்து.

தொகுதியென்றார் முகம் மார்பு கை கால் களின் வட்டணை அவிநய முதலியன இருந்தும் தொழில் செய்யாது நிற்றலின்; 'ஆட லின்றி நிற்பவை யெல்லா மாயோ னாடும் வைணவ நிலையே' என்றார். அல்லிய மென்பதனை அலிப்பேடென்பாரு முளர். 'அல்லியம்........ஆறாமெனல்' (அடியார்க். உரை).

'தொகுதி' யென்றற்கு உரையாசிரியர் கூறிய கரணியம் (காரணம்) ஆய்தற் குரியது.

அல்லியம்[1] *alliyam*, பெ. (n.) **கண்ணன் ஆடிய கூத்து**; Kriṣṇa's dance. **அல்லியத்தொகுதி** பார்க்க; see *alliya-t-togudi*.

இது : 1. தேவராடல் பதினொன்றுள் ஒன்று. ''கடையம்...........காண பதினோர் கூத்து''.

2. நின்றாடலாறனுள் ஒன்று. ''அல்லியம்.........நின்றாடலாறு''.

3. கஞ்சனை வென்று கண்ணன் ஆடிய பத்தனுள் ஒன்று. ''கஞ்சன்........ அல்லியத் தொகுதியும்'' (சிலப். 6 : 46-8).

இதற்கு உறுப்பு ஆறு.

'' அல்லிய மாயவ னாடிற் றதற்குறுப்புச்
சொல்லுப வாறா மெனல்''.

['அலிப்பே டென்பாருமுளர்' என்று அடியார்க்குநல்லார் கூறுவதால், அல் → அல்லி (அலி) → அல்லியம் என்று ஒருசார் உரையாசிரியர் திரித்தது தெரிகின்றது.]

பதினோராடலும் பிறவும் குறிப்பிட்ட காலத் தேவர் வினைகளாகத் தொன்ம (புராண) முறைப்படி சொல்லப்படினும் அவை யாவும் அவ்வத் தெய்வ வணக்கத் தாரான தமிழர் தொன்றுதொட்டு ஆடிவந் தவையே என்றறிதல் வேண்டும். கண்ணன் மேலும், காமன்மேலும் ஏற்றிக் கூறப் பட்டவையெல்லாம், அவருக்கு முன்பே திரு மால் வழிபாட்டினர் ஆடி வந்தவையே.

ம. அல்லியம்

அல்லியம்[2] *alliyam*, பெ. (n.) **கொட்டி** (மலை.); species of *Aponogeton*.

[அல் → அல்லி → அல்லியம்.]

அல்லியரிசி *alli-y-ariši*, பெ. (n.) **அல்லிப்பூவின் கொட்டையிலுள்ள சிறுவிதை** (சீவக. 2682, உரை); lily seeds.

[அல்லி + அரிசி.]

அல்லியன் *alliyan̲*, பெ. (n.) **தன் குழுவைவிட்டுப் பிரிந்த யானை** (வின்.); stray elephant separated from the fold.

ம. அல்லியன்

[ஒருகா. அல் (அல்லாத, கூட்டத்தைச் சேராத) → அல்லி → அல்லியன். இனி, ஒருகா. அகல் → அகலி → அகலியன் → அல்லியன்.]

அல்லியாமரம் *alliyā-maram*, பெ. (n.) **படகு வலிக்குந் தண்டு** (வின்.); long steering oar.

அல்லியான் *alliyān̲*, பெ. (n.) **தாமரைமலரில் தோன்றியுள்ள நான்முகன்**; Brahma, the lotus-born. ''அல்லி யானரவைந்தலை நாகணைப் பள்ளியான்'' (தேவா. 5 . 33 : 9).

[அல்லி (தாமரை) → அல்லியான்.]

நான்முகன் திருமாலின் திருவுந்தித் தாமரையில் தோன்றியுள்ளான் என்பது தொன்மக் கதை.

அல்லியுணவு *alli-y-uṇavu*, பெ. (n.) **அல்லியரிசியாலான உணவு**; food prepared from water-lily seeds.

"அல்லி யுணவின் மனைவியோ டினியே
புல்லென் றனையால் வளங்கெழு திருநகர்"
(புறநா. 250 : 6).

[அல் → அல்லி = அல்லியரிசி (கருவியாகு பெயர்). உண் → உணவு. 'அவு' செயப்படு பொருளீறு.]

அல்லியோரங்கை *alliyōraṅgai*, பெ. (n.) **கீரிப் பிள்ளை**; mongoose, *Herpestes mungo* (சா. அக.).

அல்லிரி *alliri*, பெ. (n.) அல்லி[1] பார்க்க; see *alli*[1].

அல்லிருள் *al-l-iruḷ*, பெ. (n.) **இரவிருள், திணிந்த இருள்**; darkness of night, dense darkness. "அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க்கு" (சி. போ. சிற். 11 . 2 : 1).

[அல் = இருள்வேளை. 'அல்லிருள்' மீமிசைச் சொல் (redundancy intensifying the meaning).]

அல்லிவஞ்சி *allivañji*, பெ. (n.) பட்டாணி; pea, *Pisum sativum* (சா.அக.).

அல்லிவாதாளி *allivādāḷi*, பெ. (n.) அமுக்குரா; Indian winter cherry, *Withania somnifera* (சா.அக.).

அல்லு *allu*, தொ.பெ. (vbl.n.) முடைதல்; weaving.

தெ. அல்லு

[அல்லுதல் = முடைதல். 'அல்லு' முத. தொ. பெ.]

அல்லு-தல் *allu-*, 5 செ.கு.வி. (v.i.) **பின்னிக் கொள்ளுதல்** (இ.வ.); to interlace closely (Loc.). மரங்கள் அல்லிக்கொண்டன. —, 5 செ.குன்றாவி. (v.t.) முடைதல் (இ.வ.); weaving. குருவி கூட்டை அல்லுகிறது.

க., தெ. அல்லு; கொலா. அல்; பர். அல்த்; நா. அல்; கூ. அல்ப்; குவி அல்லினய்.

[ஒல்லுதல் = பொருந்துதல். ஒல் → அல் → அல்லு.]

அல்லுகம் *allugam*, பெ. (n.) **பெருங்கொய்யா**, a big variety of guava, *Psidium guyaba* (சா. அக.).

அல்லுச்சில்லுப்படு-தல் *allu-c-cillu-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. **சிறிது சிறிதாகப் பிரிந்து போதல்**; to get subdivided minutely or into small pieces. 2. **சிறிது சிறிதாகக் கெடுதல்**; to be frittered away, as money. பணத்தை யாருக்குங் கடன்கொடாமல் வைப்பகத்திற் போட்டுவிடு; இல்லாவிட்டால் அல்லுச் சில்லுப்பட்டுப் போகும் (உ.வ.).

[அல் → அல்கு. அல்குதல் = சிறுத்தல். சில் = துண்டு. 'அல்' வழக்கிறந்த சொல். அல் → அல்லு. சில் → சில்லு. 'அல்லுச்சில்லு' எதுகை மரபிணைமொழி, மீமிசைச் சொல்போற் பொருளை மிகுத்துக் காட்டுவது.]

அல்லும்பகலும் *allum-pagalum*, பெ. (n.) **இரவும் பகலும்**; day and night. அல்லும் பகலுஞ் சேர்ந்த ஒரு நாள். —, கு.வி.எ. (adv.) **இரவும் பகலும்**; night and day, always. "அல்லும் பகலும் அனவரதமுந் துதித்தால்" (சரசுவதி யந். காப்பு). அல்லும் பகலும் அரும்பாடு பட்டுத் தேடிய சொத்து (உ.வ.).

['அல்லும் பகலும்' எதிர்மறை மரபிணை மொழி. 'உம்' ஈரிடத்திலும் எண்ணுப் பொருளிடைச்சொல். பக → பகல். 'அல்' தொ.பெ. ஈறு.]

அல்[1] பார்க்க; see *al*[1].

அல்லுழி *al-l-uḻi*, கு.வி.எ. (adv.) **முன்சொன்னது அல்லாதவிடத்து**; elsewhere. 'அல்லுழியெல்லாம் பரந்துபட்டு வரவும் பெறும்' (தொல். பொருள். செய். 183, பேரா. உரை).

[அல் = அல்லாத. உள் → உளி → உழி = இடம்.]

அல்லூரம் *allūram*, பெ. (n.) **வில்வமரம்** (மலை.); bael (செ.அக.) — holy garlic pear, *Crataeva religiosa* (சா.அக.).

அல்லை[1] *allai*, பெ. (n.) 1. **வள்ளைக்கொடி**; a creeper, the root of which forms an article of food, *Convolvulus repens* (சா.அக.) — **கொடி வகை**; a climber, a running plant, the root of which forms an article of food (W.). 2. **அல்லி** (பச்.மூ.); water-lily.

[அல்லை 2. அல் → அல்லி.]

அல்லை[2] *allai*, கு.வி.மு. (impl.v.) **நீ அல்லாய்**; you are not. "காதர மார்தரு மனமே கமல மலரய னல்லை" (கோயிற்பு. பாயி. 23).

[அல் → அல்லை (அல் என்னும் இயற்கை யெதிர்மறைக் குறிப்புவினையின் முன்னிலை

யொருமை முற்று). 'ஐ' முன்னிலை யொருமை யீறு.]

அல்லைதொல்லை *allai-tollai,* பெ.(n.) மிகுந்த **துன்பம்** (உ.வ.); great trouble (Com.u.). மழையில் வண்டி கிடையாமல் இருநாளாய் அல்லைதொல்லைப்பட்டு இங்கு வந்துசேர்ந் தேன்.

[அல் → அல்லல் = துன்பம். அல் → அல்லை. தொல் → தொல்லை = துன்பம். 'அல்லை தொல்லை' பொருளை மிகுத்துக் காட்டும் எதுகை மரபிணைமொழி.]

அல்லோர் *allōr,* பெ. (n.) 1. **முன் சொல்லப் பட்டவரல்லாதார்;** those other than the aforesaid. "அன்புளோ ரல்லோ ராய வரசமண் டலங்க ளெல்லாம்" (இரகு. மாலை. 128). 2. **முன் சொல்லப்பட்ட பண்பில்லாதார்;** those without the said quality.

"பல்வகை யுதவி வழிபடு பண்பின்
அல்லோர்க் களிக்கும் அதுமுடத் தெங்கே"
(நன். 35).

[அல் + ஓர் (ப.பா. ஈறு). ஆர் → ஓர். அல் லார் → அல்லோர்.]

அல்லோலகல்லோலம் *allōla-kallōlam,* பெ.(n.) **மிகுந்த ஆரவாரம், பெருங்குழப்பம்;** great noise, hullabaloo, an uproar.

க. அல்லோலகல்லோல; **Skt.** hallōla kallōla.

[அல் + ஓலம் + கல் + ஓலம். அலம்புதல் = ஒலித்தல். அலறுதல் = அஞ்சிக் கதறுதல். ஆலுதல் = ஒலித்தல். 'கல்'லெனல் ஓர் ஓசைக் குறிப்பு. கல் → கலி. 'கலகல' ஒலிக்குறிப்புகள். ஒ → ஒல் = ஒலி. ஓல் → ஓலம் = அடைக் கலம் வேண்டிக் கதறும் ஓசை.

ஒல் → ஒல். 'ஒல்'லெனல் ஒலிக்குறிப்பு. ஒல் → ஒலி. ஒல் → அல். ஒ → அ, போலித் திரிபு அல்லது சொல்லாக்கத் திரிபு.]

அல்லோன்¹ *allōṉ,* பெ. (n.) திங்கள் (பிங்.); Moon, the ruler of the night.

[அல் = இரா. அல் → அல்லோன் = இரவில் ஒளிதரும் நிலா.]

அல்லோன்² *allōṉ,* பெ. (n.) ஒரு மரம்; the oak tree (சா.அக.).

அல்லோன்³ *allōṉ,* பெ. (n.) **அல்லோர் என்பதன் ஒருமை;** sing. of *allōr.*

அல்வழக்கு *al-vaḻakku,* பெ. (n.) 1. **தகாத வழக் காரம் அல்லது வழக்காட்டு;** illegal dispute or suit. 2. **தகாத வொழுக்கம்;** improper conduct, wrong attitude of mind. "அல்வழக் கொன்றுமில் லாஅணி கோட்டியர் கோன்" (திவ். திருப்பல். 11).

[அல் = தகுதி அல்லது முறை அல்லாத. வழங்கு → வழக்கு.]

அல்வழி *al-vaḻi,* பெ. (n.) 1. **நெறியல்லா நெறி, தகாத நெறி, தீய நெறி;** wrong path. 2. **சொற் புணர்ச்சியின் வேற்றுமையல்லாத வழி, வேற்றுமைவழி என்பதற்கு எதிர்;** combination of an undeclined or indeclinable word with another word, opp. to *vēṟṟumai vaḻi.*

[அல் = வேற்றுமை யல்லாத. வழி = சொற் புணர்ச்சி நிலை.]

அல்வழிப்புணர்ச்சி பார்க்க; see *al-vaḻi-p-puṇarcci.*

இருசொல் புணரும் நிலை வேற்றுமைவழி, அல்வழி என இரண்டு. நிலைச்சொல் (முன் சொல்) வேற்றுமை யேற்கத் தக்கதாயின், அது வருஞ்சொல்லொடு (பின்சொல்லொடு) புணர்வது **வேற்றுமைவழி;** ஏற்காதது அல்லது ஏற்கத் தகாதது ஆயின் **அல்வழி.**

நிலைச்சொல் இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை ஏதேனு மொன்றை ஏற்றிருப்பின், அது வருஞ்சொல் லொடு புணர்வது **வேற்றுமைவழி; அல்லாதது அல்வழி.** வேற்றுமையுருபு வெளிப்பட்டும் தொக்கும் இருவகையாயிருக்கும். முன்னது விரி யென்றும் பின்னது **தொகை** யென்றும் சொல்லப்படும்.

புணரும் சொல்லிணை **வினைத்தொகை** முதல் **அடுக்குத்தொடர்** வரை பதினால் வகைப் பட்டிருப்பது **அல்வழி.** அதை அடுத்த உருப் படியிற் காண்க.

அல்வழிப்புணர்ச்சி *al-vaḻi-p-puṇarcci,* பெ. (n.) **வேற்றுமை யேற்காத அல்லது ஏற்கத் தகாத சொல் வேறொரு சொல்லொடு புணர்வது;** combination of an undeclined or indeclinable word with another.

அல்வழிப் புணர்ச்சி கீழ்வருமாறு பதினால் வகைப்படும்:

சொல்லிணை	புணர்ச்சி
1. வினைத்தொகை	கொல்யானை, சுடுசோறு.

2. பண்புத்தொகை	செந்தாமரை, வன்செயல்.
இருபெயரொட்டுப் பண்புத்தொகை	பனைமரம், குமரிமலை.
3. உவமைத்தொகை	முத்துப்பல், பொன்மொழி.
4. உம்மைத்தொகை	தாய்தந்தை, சேர சோழ பாண்டியர்.
5. அன்மொழித்தொகை	கடுவாய் வந்தது, **தேன்மொழி** பேசினாள்.
6. எழுவாய்த்தொடர்	நக்கீரர் பாடினார், மறைமலையடிகள் எழுதினார்.
7. விளித்தொடர்	அண்ணா! வா, அமைச்சரே ! வருக.
8. பெயரெச்சத்தொடர்	பெரியதிருமொழி, சிறந்த நூல்.
9. வினையெச்சத் தொடர்	விரைந்து எழுதி னார், மெல்லப் போனது.
10. தெரிநிலை வினை முற்றுத்தொடர்	பெற்றான் பரிசு, பொழிந்தது மழை.
11. குறிப்பு வினை முற்றுத்தொடர்	பெரிது யானை, நல்லவர் புலவர்.
12. இடைச்சொற் றொடர்	இன்னொன்று, அக்காலம்.
13. உரிச்சொற்றொடர்	கழிநெடில், சாலப்பல.
14. அடுக்குத்தொடர்	பாம்பு பாம்பு, போ போ போ.

''வேற்றுமை ஐம்முதல் ஆறாம் அல்வழி
தொழில்பண் புவமை உம்மை அன்மொழி
எழுவாய் விளிஈ ரெச்சமுற் றிடைஉரி
தழுவு தொடரடுக் கெனஈ ரேழே''

(நன். 152).

[அல் + வழி + புணர்ச்சி.]

அல-த்தல் *ala-*, 3 செ.கு.வி. (v.i.) 1. **அலைதல்** (சங்.அக.); to wander, roam about. ''ஐவர் வந்து முறைமுறை துயரஞ் செய்ய வற்றுநா னலந்து போனேன்'' (தேவா. 4.52:8). 2. **துன்பமுறுதல்**; to suffer, to be in distress. ''அலந்தாரை யல்லனோய் செய்தற்றால்'' (குறள், 1303). 3. **வறுமைப்படுதல்**; to suffer privation, to be in want. ''அலந்தவர்க் குதவுதல்'' (கலித். 133:6). 4. **ஆசைப்படுதல்**; to desire, long for, hanker after. கறிக்கு அலந்துபோய்க் கிடக்கிறான் (உ.வ.).

தெ. அலகுவ

[அல் → அல்லல் = துன்பம். அல் → அலம் → அலமி = துன்பம். அல் → அலை. அலைதல் = அசைதல், வருந்துதல், துன்புறுதல். அல்→அல.]

அலக்கண் *ala-k-kaṇ*, பெ. (n.) **துன்பம்**; affliction, distress, disaster. ''ஆதலா லெங்க ளலக்க ணகற்றிடுவான்'' (கந்தபு. அசுர. தேவர்புல. 24).

[அல் → அலம் = துன்பம். 'கண்' இடமும் காலமும் உணர்த்தும் ஓர் ஈறு. ஒ.நோ : இடுக்கண்.]

அலக்கலக்காய் *alakkalakkāy*, கு.வி.எ. (adv.) **தனித்தனியாய், வெவ்வேறாய்**; separately, part by part. உறுப்புகளையெல்லாம் அலக் கலக்காய்ப் பிரித்துவிட்டாள் (உ.வ.).

[அலக்கு = கிளை. அலக்கலக்காய் = கிளை கிளையாய், பகுதிபகுதியாய். இனி, அலகு (அடிப்படையுறுப்பு) → அலக்கு எனினுமாம். 'அலக்கலக்கு' அடுக்குத்தொடர். 'ஆய்' கு.வி.எ. ஈறு.]

அலக்கழி-தல் *alakkaḻi-*, 2 செ.கு.வி. (v.i.) **மிக வருந்துதல், துன்புறுதல்**; to be vexed, troubled, harassed. ''கலக்கநா னலக்கழிந் தேன்'' (தேவா. 4.70:3).

[அலக்க (நி.கா.வி.எ.) + அழி. – அலத்தல் = துன்புறுதல். அழிதல் = மனம்நோதல்.]

அலக்கழி-த்தல் *alakkaḻi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **அலைத்து வருத்துதல்** (பணவிடு. 177); to vex, harass, harry, perplex, tease, distress, worry by continual putting off. 2. **கெடுத்தல்**; to ruin, destroy. ''தக்கன்பெரு வேள்வியங் கலக்கழித்து'' (தேவா. 5.73:1). 3. **அழகு காட்டுதல்**; to mimic in derision.

[அலக்கழிதல் (த.வி.) → அலக்கழித்தல் (பி.வி.).]

அலக்கழி-தல் பார்க்க; see *allakkaḻi-*.

அலக்கறுவாள் *alakk(u)-aṟuvāḷ*, பெ. (n.) **துறட்டுக்கோலின் நுனியிற் சேர்த்துள்ள அறுக்கும் அலகு (தஞ்சை)**; crotchet-shaped blade attached to a pole (Tj.).

[அலக்கு (துறட்டுக்கோல்) + அறுவாள். அலக்கரிவாள் என்பது வழுவடிவம்.]

அலக்காய் *alakkāy*, கு.வி.எ. (adv.) **தனியாய், வேறாய்;** separately. தலையை அலக்காய் எடுத்துவை (உ.வ.).

[அலக்கு + ஆய் (கு.வி.எ. ஈறு).]

அலக்கு² பார்க்க; see *alakku²*.

அலக்கு-தல் *alakku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **அசைவித்தல்;** to shake, cause to move. "சங்கலக்குந் தடங்கடல்வாய்" (தேவா. 7.51:3). 2. **ஆடைவெளுத்தல்;** to wash, as clothes.

ம. அலக்கு; க. அலகு, அலி; து. லம்பு; பட. அலுக்கு.

[அல → அலக்கு.]

அலக்கு¹ *alakku*, பெ. (n.) 1. **வரிச்சு;** roof laths. "மனையி னீடு மலக்கினை யறுத்து வீழ்த்தார்" (பெரியபு. இளையான். 19). 2. **துறட்டுக்கோல்** (தஞ்சை); a pole with an iron hook to pluck fruits and leaves (Tj.). 3. **கிளை;** branch of a tree. 4. **எலும்பு;** bone. "விலா வலக்குக வலக்குக வடிக்கடி சிரித்தன (கலிங். 229). 5. **கோட்டை;** fort (சங்.அக.).

ம. அலகாடி T. 5048

[உல் → உல. உலத்தல் = வளைதல். உல் → உலம் = வட்டம், உருண்டை. உலம்வரு → உலமரு. உலமருதல் = சுழலுதல். உலக்கை = நீண்டுருண்ட கோல். உல → உலவு. உலவுதல் = சுற்றுதல், திரிதல். உல → உலா. உலவு → உலகு = சுற்றிவரும் கோள். உலகு → அலகு = வளைந்த குறடு, வளைந்த கத்தி (அறுவாள்), குறடுபோன்ற தாடை. உலம் → அலம் = வளைந்த கொடுக்கு, கொடுக்குள்ள தேள். அலம் → அலவன் = குறடுபோன்ற முன்காலுள்ள நண்டு.

அலகு → அலக்கு = வளைந்த அறுவாள், வளைந்த கிளை (ஒ.நோ: கோடு = கிளை, கொம்பு = கிளை), வளைந்த அல்லது கிளை போன்ற விலாவெலும்பு, வளைந்த மதில் (அலகு → அலங்கு → அலங்கம் = கோட்டை), கிளைபோன்ற கோல் அல்லது சட்டம். ஒ.நோ: கொம்பு → கம்பு.

எலும்பைக் குறிக்கும் அலக்கு என்னுஞ் சொல் விலாவெலும்பைச் சிறப்பாகக் குறிக்காததாயின், எல் → அல் → அலவு → அலகு (வெள்ளையானது) → அலக்கு என்று திரிந்திருத்தல் வேண்டும். ஒ.நோ: எல் (ஒளி, வெள்ளை) → எலும்பு.]

அலக்கு² *alakku*, பெ. (n.) **தனிமை;** separateness. அலக்கலக்காய் பார்க்க; see *alakkalakkāy*.

அலக்குக்காரன் *alakkukkāraṉ*, பெ. (n.) **வண்ணான், சலவை செய்பவன்** (நாஞ்.); washerman (Nāñ.).

ம. அலக்குகாரன்; க. அல்லிகாரிக.

[அலக்கு = சலவை. 'காரன்' வி.முத. ஈறு அல்லது உடைமையோன் ஈறு.]

அலக்குத்தடி *alakku-t-taḍi*, பெ. (n.) **வேலியடைக்கும் மரக்கிளை** (இ.வ.); small branches or boughs used in the repair of hedges (Loc.).

[அலகு → அலக்கு. தண்டு → தண்டி → தடி.]

அலக்குப்போர் *alakku-p-pōr*, பெ. (n.) **காவலர் ஈட்டிகளை ஒன்றோடொன்று எதிர்த்து வைக்கை;** stack of arms. அலக்குப் போர் போலே.........கூடுதல் (?)

[அலகு → அலக்கு. பொருதல் = பொருந்துதல், சேர்தல். பொரு → போர் = செறிவு, குவியல், சாணை, படப்பு.]

அலக்கைச்சுரம் *alakkai-c-curam*, பெ. (n.) **கீழ்க்காய்நெல்லி;** a small plant with slender green main branches, *Phyllanthus niruri* (சங்.அக.).

மறுவ. அலகைச்சுரம்

அலக்கொடு-த்தல் *ala-k-koḍu-*, 4 செ.குன்றாவி. (v.t.) **தொந்தரவு செய்தல், தொல்லை கொடுத்தல்** (இ.வ.); to give trouble, cause worry to (Loc.).

அலக்கொடுப்பு *ala-k-koḍuppu*, பெ. (n.) **தொந்தரவு செய்கை, தொல்லை கொடுப்பு;** giving trouble, harassment.

அலகநிரணி *alaganiraṇi*, பெ. (n.) **மரமஞ்சள்;** tree-turmeric, *Coscinium fenestratum* (சா. அக.).

அலகம் *alagam*, பெ. (n.) 1. **யானைத்திப்பிலி** (மலை.); elephant pepper, *Scindapsus officinalis*. 2. **வேப்பலகு;** margosa stalk.

அலகம்பு *alagambu*, பெ. (n.) **அலகைத் தலையாகக்கொண்ட அம்புவகை;** arrow, having a blade for its head. "அஞ்சம்பையு மையன்றன தலகம்பையு மளவா" (கம்பரா. அயோத். கங்கை. 3).

[அலகு + அம்பு. அலகு = கூர்மை, கூர்மையான கத்தியலகு. அம்பல் = கூம்பல், குவிதல். ஒருகா. அம்பு = நுனியிற் குவிந்திருப்பது.]

அலகமான் *alagamāṉ*, பெ. (n.) **திப்பிலி** (பச்.மூ.); long pepper, *Piper longum.*

[அலகம் → அலகமான்.]

அலகலகாக *alagalagāga*, கு.வி.எ. (adv.) **தனித் தனியாக, வெவ்வேறாக**; separately. 'அலகல காக எண்ணிக்கொள்ளலாய்' (ஈடு, 3 . 6 : 5).

H. alagalag

[அலகு = அடிப்படை யுறுப்பு அல்லது அளவு. அல்லுதல் = பொருந்துதல். அல் → அலவு → அலகு = பொருந்திய வுறுப்பு அல்லது பொருந்தி யளக்கும் அளவு. **ஒ.நோ:** *அள்ளுதல் = பொருந்துதல். அள் → அள → அளவு. அளத்தல் = அளவுசெய்தல். அளவுதல் = பொருந்து தல், கலத்தல். அளவு = பொருந்துகை, அளவீடு, குறிப்பிட்ட அளவு, அளவுகருவி.]*

'அலக்' (alag) என்னும் உருதுச் சொல்லிற் கும் 'அலகு' என்னும் தமிழ்ச்சொல்லிற்கும் தொடர்பில்லை. தொடர்பிருப்பின், முன்னது பின்னதன் திரிபாயே யிருத்தல் வேண்டும்.

அலகழுங்கு *alagaḻuṅgu*, பெ. (n.) **திப்பிலி** (சங்.அக.); long pepper, *Piper longum.*

[அலகு + அழுங்கு. அலகு → அலகம் = யானைத்திப்பிலி.]

மறுவ. அலகளுங்கு (சா.அக.).

அலகா *alagā*, பெ. (n.) **தொடைச்சந்து**; groin (சா.அக.).

அலகாபிதம் *alagābidam*, பெ. (n.) **புளிப்பு முந்திரிகை**; sour grapes (சா.அக.).

அலகிடு[1]-தல் *alagiḍu-*, 19 செ.குன்றாவி. (v.t.) 1. **அளவிடுதல், அலகுவைத்துக் கணக்கிடுதல்**; to reckon, compute, measure, estimate. 2. **செய்யுளில் தளையும் ஓசையும் வழுவாவாறு அசைகளைப் பிரித்துக் கணக்கிடுதல்**; to scan, as a verse.

"அசையுஞ் சீரும் அடியு மெல்லாம்
இசைய வருபொரு ளியைபு நோக்கா
தோசையே குறிக்கொண் டொடுங்கவும் விரியவும்
அலகிடல் வகையுளி யாகு மென்ப"
(இலக். வி. 752).

[அலகு = அளவு. அலகு + இடு (து.வி.).

அலகிடு[2]-தல் *alagiḍu-*, 19 செ.குன்றாவி. (v.t.) **துடைப்பத்தாற் பெருக்குதல்**; to sweep with a broom. 'அலகிடுவனென் றுள்ளங் குளிர அலகிட்டான்' (இறை. 1, உரை).

[அலகு = துடைப்பம் : அலகு + இடு (து.வி.).]

அலகிரி *alagiri*, பெ. (n.) **வெட்கங்கெட்டவன்** (திருச்சி); immodest fellow (Tp.).

[ஒருகா. அலகிலி → அலகிரி. **ஒ.நோ** *: போக்கிலி → போக்கிரி. அலகு = அளவு, மதிப்பு. இலி = இல்லாதவன்.]*

அலகிருக்கைவெண்பா *alagirukkai-veṇbā*, பெ. (n.) ***மிறைப்பாவகை***; a kind of verse in *Veṇbā* metre fitted into some fanciful figure. 'விரித்து முடித்த மிறைக்கவிப் பாட்டு' என்று சிறப்பித்தவதனால் .... அலகிருக்கை வெண்பாப் பாடுதலும் (யாப். வி. பக். 510).

அலகின்மாறு *alagiṉ-māṟu*, பெ. (n.) **துடைப்பம்**; broom. "அலகின் மாறு மாறாத கலதி" (திருப்பு. 418).

[அலகுமாறு என்பதே பெயர். திருப்புகழில் வண்ணம்பற்றி ஒன்றன்கூட்டக் கிழமையுருபு இடைத் தோன்றியது.]

அலகு[1] *alagu*, பெ. (n.) 1. *அளவு* (பிங்.); measure, measurement, quantity. 2. **மட்டு**, *வரம்பு*; limit. "அலகி லாவிளை யாட் டுடை யார்" (கம்பரா. சிறப்புப்பாயி. 1). 3. **அளவுகருவி**; standard of measurement. "வாழ் நாட் கலகாய் வயங்கொளி மண்டிலம்" (நாலடி. 22). 4. **எண்** (திவா.); number, calculalion. 5. (யாப்பு.) **செய்யுளின் அசை யுறுப்பாகப் பிரித்தெண்ணப்படுதல்**; (Pros.) being counted as a metrical syllable or its member in scansion. "ஆரு மறிவ ரலகுபெ றாமை" (யா. கா. ஒழி. 1). 6. (இசை) ஒரு **நிலையின் 22 (அல்லது ஒரு சாரார் கொள்கைப்படி 24) நுண்ணிசைகளுள் ஒன்று**; (Mus.) one of the 22 (or 24 according to some) units of a gamut. 'வட்டப்பாலையின் முடிவு தானமாய் வலிந்த நிலைமையினையுடைய தாரம் பெற்ற இரண்டலகில் ஓரலகையும், இப் பாலையின் முதல்தானமாய் மெலிவி னிற்கும் குரல்நரம்பு பெற்ற நாலலகில் இரண்டலகையும், தாரநரம்பில் அந்தரக் கோலிலே கைக்கிளையாக நிறுத்தத் தாரந் தான் கைக்கிளையாயிற்று' (சிலப். 3 : 72 - 8, அடியார்க். உரை). 7. **பலகறை, எண்ணிக்கை யில் எண்குறிகளாகப் பயன்படுத்தப்படுவது**; cowries, small shells, as signs of number in reckoning. "அலகை யன்ன வெள்வேர்ப் பீலி" (மலைபடு. 234). 8. **மகிழம்விதை** (திவா.); berries of *Mimusops elengi.* "மகிழலகு ஒன்றே

போல மாறும்பல யாக்கை" (திவ். இயற். முதற். 49). 9. **இலக்கம் பாக்கு** (அபி. சிந்.); a lakh of areca-nuts.

[ஒல்லுதல் = பொருந்துதல், ஒத்தல். ஒல் → அல். அல்லுதல் = பொருந்துதல், சார்தல், சார்த்துதல், பொருத்தி அல்லது சார்த்தி யளத்தல். அல் → (அல) → (அலவு) → அலகு. ஒ.நோ: அள் → அள → அளவு. அல் → அள்.]

எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என்னும் நால்வகையளவும், முறையே, ஒன்றை இன்னொன்றொடு சேர்த்தும் ஒப்பித்தும் பொருத்தியும் சார்த்தியும் அளத்தலாயிருத்தல் காண்க.

அலகு[2] *alagu*, பெ. (n.) 1. **கூர்மை** (தஞ்சைவா. 234, உரை); sharpness. 2. **கத்தியின் அல்லது படைக்கலத்தின் கூரிய பட்டை**; blade of a knife, weapon or instrument, head of an arrow. 3. **படைக்கலம்** (பிங்.); weapon, arms. 4. **சலாக்கு**; burin, engraver's tool. 5. **பறவை மூக்கு**; bird's beak. "குயிலலகாற் பல்லவங்கள் கோதுமாலோ" (பாரத. வசந்த. 2). 6. **நுளம்பு** (பிங்.); gnat, small variety of mosquito. 7. **(நீண்ட நாளாகக் கருக்குமட்டை வெட்டாது விடப்படும்) ஆண்பனை** (நெல்லை); male palmyra (Tn.).

ம., க. அலகு; தெ. அலுகு (வாள்).

[உல் = தேங்காயுரிக்குங் கருவி, கழு. உல் → உள் → உளி = கூரிய செதுக்குக் கருவி. உல் → அல் → அல்கு → அஃகு. அஃகுதல் = சுருங்குதல், நுண்ணிதாதல், கூராதல். உள் → அள் = கூர்மை. அல்கு → அலகு = கூர்மை, கூரிய பொருள், கூரிய உறுப்புள்ளது.]

அலகு[3] *alagu*, பெ. (n.) 1. **குறடு**; pincers, tongs, forceps. 2. **உயிரிகளின் கொடிறு**; mandibles. அரணை அலகு திறக்கிறதில்லை (வின்.). 3. **தாடை**; jaw. அவன் அலகைப் பேர்த்துவிட்டான். ம. அலகு. 4. **தாடை எலும்பு**; jaw-bone, maxilla (superior and inferior) (சா. அக.). 5. **நெசவாளர் பாவோட்டற்கு வரிசையாகக் கவைபட நிறுத்தும் தடியிணை**; weaver's stay or staff to adjust a warp. 6. **கைம்மரம்**; rafter. "அரும் பொனா லலகு சேர்த்தி" (சீவக. 837).

[அல் → அலவு → அலகு. பற்றுவது, வளைந்து பற்றுவது. பற்றுமாறு கவைபட்டிருப்பது என்பது வேர்ப்பொருளாகும்.]

அலகு[4] *alagu*, பெ. (n.) 1. **நென்மணி** (திவா.); grain of paddy. "அலகுடை நீழ லவர்" (குறள், 1034). 2. **நெற்கதிர்**; ear of paddy. 3. **பிற கதிர்**; ear of other grains. 4. **மின்மினி** (க.அக.); fire-fly, glow-worm. 5. **பொன்னாங்கண்ணி** (இராசவைத்.); species of *Alternanthera*. 6. **துடைப்பம்** (பிங்.), **விளக்குமாறு**; broom. 7. **விளக்குமாற்றுப் புல், அறுகு** (பச்.மூ.); a variety of harialli grass.

க. அலகு

[உல் → உல. உலத்தல் = காய்தல். உல் → உலர். உலர்தல் = காய்தல். உல் → இல் → எல் = ஒளி, விளக்கம். எல் = ஒளி, விளக்கம். உல் → அல் → அலகு → அலங்கு. அலங்குதல் = ஒளிசெய்தல் (பிங்.). ஒ.நோ: இல் → இலகு → இலங்கு → இலக்கு → இலக்கம் = விளக்கம். அலகு = ஒளிவிடுவது, மின்னுவது, விளங்குவது, பொன்போற் பொலிந்து தோன்றுவது, அல்லது தோன்றச்செய்வது, துலக்குவது. அலத்தம் = மின்மினி. அல் → அல → அலத்து → அலத்தம்.]

நெல் முற்ற விளைந்தபின் பொன்போற் பொலிந்து தோன்றும். "சடைச்செந்நெல் பொன்விளைக்குந் தன்னாடு" (நள. சுயம். 55). பொன்விளைந்த களத்தூர் என்னும் வழக்கையும் நோக்குக. நெல் என்ற பெயரும் பொலிவுபற்றியதே. நில் → நில → நிலா, நில் → நெல். 'அலகு' என்னுஞ்சொல் முதற்கண் நெல்லையும், பின்னர் நெற்கதிரையும், அதன்பின் பிற கதிரையும் குறித்தது.

பொன்னாங்கண்ணிக் கீரை மேனியைப் பொன்போல் விளங்கச் செய்வது.

வீட்டிலுள்ள குப்பைகூளங்களைக் கூட்டித் தள்ளியபின் விளங்கித் தோன்றும். அங்ஙனம் விளங்கச் செய்யும் மாறு விளக்குமாறு. அது விளக்குமாற்றுப் புல்லாற் பின்னிக் கட்டப்படுவது. அப் புல் அறுகம்புல் வகைகளுள் ஒன்று.

அலகு[5] *alagu*, பெ. (n.) 1. **பெண்குறி**; the genital of a female, *Mons venerii* (சா.அக.). 2. **அகலம்**; breadth, extension. 3. **குற்றம்**; flaw. "அலகின் மரகத முறிகளும்" (தக்கயாகப். 41).

[அரை, அல்குல், கடிதடம் என்னுஞ் சொற்கள் இடையையும் பெண்குறியையுங் குறித்தலால், 'அலகு' என்னும் சொல்லும் முதற்கண் இடையையும் பின்னர்ப் பெண்குறியையும் குறித்திருக்கலாம். அல்குல் = சுருங்குதல், சிறுத்தல்.

அல்கு → அல்குல் = 1. சிறுத்த இடை. ஒ.நோ: மருங்கு → மருங்குல். அல்குல் → அல்கு → அலகு. 2. இடையை யடுத்த பெண்குறி. அல்குல் → அல்கு → அலகு. அகலம் நீளத்தினுங் குறைந்தது. அல்கு → அலகு. குறைவு என்பது ஒருவகைக் குற்றம். அல்கு → அலகு.]

அலகுகட்டு-தல் *alagu-kaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **மந்திரத்தினால் தீய வுயிரிகளின் (பிராணிகளின்) வாய் திறவாதிருக்கச் செய்தல்;** to charm a snake or beast, so as to prevent it from biting or opening its mouth. 2. **வாள் வெட்டை மந்திரத்தால் வலியற்ற தாக்குதல்** (வின்.); to render the sword powerless by enchantment. 3. **கணக்குத் தீர்த்தல்** (வின்.); to settle accounts.

[அலகு = தாடை. கட்டுதல் = அடைத்தல், திறவாதபடி செய்தல்.]

அலகுகட்டை *alagu-kaṭṭai*, பெ. (n.) **வண்டிச் சக்கர வட்டை;** felly of a wheel.

[அலகு = வளைவு. கட்டை = சட்டம்.]

அலகுகழி-த்தல் *alagu-kaḻi-*, 4 செ.குன்றாவி. (v.t.) **கணக்கிடுவதிற் பலகறை, விதை முதலிய வற்றைக்கொண்டு தொகை குறைத்தல்** (வின்.); to subtract, deduct a number in reckoning, with cowries, seeds, etc.

[அலகு = அளவு குறிக்கும் பலகறை, விதை முதலியன. கொழித்தல் = ஒதுக்குதல், நீக்குதல். கொழி → கழி. ஒ → அ. ஒ.நோ: ஒழி → அழி, பொலிசை → பலிசை, மொண்டை → மண்டை.]

அலகுகிட்டு-தல் *alagu-kiṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) **இசிவு (சன்னி) நோயிற் பல் பூண்டுகொள்ளுதல்;** jaws being rigidly locked, as in tetanus.

[அலகு = தாடை. குல் → குலம் = கூட்டம். குல் → குலை = கொத்து, தாறு. குல் → குலவு. குலவுதல் = கூடுதல். குல் → குள் → குழு → குழுவு. குள் → கூள் → கூண்டு → கூடு. குள் → குட்டு → கிட்டு. கிட்டுதல் = நெருங்குதல், பொருந்துதல், பூணுதல்.]

அலகுகுத்து-தல் *alagu-kuttu-*, 5 செ.கு.வி. (v.i.) **தெய்வத்திற்கு நேர்த்திக்கடனாகவும், தன் தீவினைக்குத் தன்தண்டனையாகவும், நாவொடு இரு கன்னங்களிலும் அல்லது உடம்பின் பலவிடங்களிலும், வெள்ளியூசிகளாலும் கம்பிகளாலும் ஊடுருவக் குத்திக்கொள்ளுதல்;** to have one's tongue and cheeks pierced with silver pins, or to have small skewers inserted in many parts of the body, in fulfilment of a vow or as an act of self mortification for atonement of one's own sins.

[அலகு = தாடை, கன்னம். குத்துதல் = ஊசியை ஒன்றனை ஊடுருவச் செய்தல்.]

அலகுகூடை *alagu-kūḍai*, பெ. (n.) **சிறு போத்துகளால் நெருக்கிப் பின்னப்பட்ட இறை கூடை** (R.); basket, made of thin twigs closely woven together, used for drawing water.

[அலகு = ஒருகா. வளைந்த போத்து, வளார். கூடு → கூடை.]



அலகுகூடை

அலகுகோலி *alagu-kōli*, பெ. (n.) 1. **அறுகு;** a species of sacred grass, *Cynodon dactylon*. 2. **கற்றாழை;** aloe, *Aloe vera (officinalis)*.

[அலகு = அறுகு (பச்.மூ.). சோலி (?) அலகு கோலி (?).]

அலகுசோலி *alagu-šōli*, பெ. (n.) அறுகு (மலை.); cynodon grass (சா.அக.).

அலகுஞ்சம்[1] *alaguñjam*, பெ. (n.) **மின்மினி;** fire-fly, glow-worm.

[இலகு → அலகு = ஒளி, விளக்கம், மின்மினி. ஒருகா. உந்து → உஞ்சு → உஞ்சம் = விடுவது, வீசுவது. உந்துதல் = வெளிப்படுத்துதல், வீசியெறிதல்.]

அலகுஞ்சம்[2] *alaguñjam*, பெ. (n.) **நுளம்பு;** gnat.

[அலகு = நுளம்பு. ஒருகா. உந்து → உஞ்சு → உஞ்சம் = நுண்ணுறிஞ்சியை உட்செலுத்துவது. உந்துதல் = தள்ளுதல், செலுத்துதல்.]

அலகுநிலை *alagu-nilai*, பெ. (n.) **கூட்டல் அல்லது பெருக்கல் என்னுங் கணிதத்தில் வரும் விடைத்தொகை** (வின்.); result of a computation in addition or multiplication (செ.அக.).

கூட்டல், பெருக்கல் முதலியவற்றான் வரும் பெயர் (க.அக.).

[அலகு = அளவு. நில் → நிலை. 'ஐ' தொ. பெ. ஈறு.]

அலகுநிறுத்தல் *alagu-niṟuttal*, தொ.பெ. (vbl.n.) திரௌபதியம்மன் திருவிழாவிற்கு முன், அம்மன் படிமைக்கு எதிரில் ஒரு நிறை குடத்தினருகே ஒரு வாளைத் தலைகீழாக நட்டுச் செய்யும் தொடக்கச் சடங்கு; ceremony preliminary to festival performed in honour of Draupati, in which a sword is planted point downwards near a vessel filled with water and placed before the idol, the sword standing firm being considered auspicious for the festival.

[அலகு = கூர்மை, கூரிய வாள். நில் (த.வி.) → நிறுத்து (பி.வி.). நிறுத்து → நிறுத்தல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

தலைகீழாக நிறுத்தப்பட்ட வாள் விழாதும் சாயாதும் உறுதியாக நேர்நின்றால், அது விழாவிற்கு நற்குறியாகக் கருதப்படும்.

பாண்டவர் வடநாட்டாராயினும் திங்கள் மரபினரான பாண்டியர் வழியினரே யாதலாலும், பாரதப் போரில் முத்தமிழ் வேந்தருங் கலந்துகொண்டதனாலும், திரௌபதி ஐவர் மனைவியெனினும் கற்பரசியாகவே தமிழராற் கருதப்பட்டதனாலும், அவள் இறந்தபின் கண்ணகிபோன்றே கற்புத் தெய்வமாகக் கல்லா மாந்தரால் வணங்கப்பட்டு வருகின்றாள்.

பண்டு கண்ணகி கோயில்களா யிருந்தவையே பின்னர்த் திரௌபதி கோயில்களாக மாறின என்பதும் ஒருசார் ஆராய்ச்சியாளர் கருத்து.

அலகுப்பூட்டு *alagu-p-pūṭṭu*, பெ. (n.) நேர்த்திக் கடனாக, இரு கன்னத்தையுந் துளைத்துப் புறங்காணுமாறு கம்பியைச் செலுத்தி வாயை அடைத்துக்கொள்ளுதல்; locking the mouth by a wire running through the cheeks, in fulfilment of a vow.

[அலகு = தாடை. பூண் (த.வி.) → பூட்டு (பி.வி.) — முத.தொ.ஆகு.]

அலகு³ பார்க்க; see *alagu³*.

அலகுபருப்பு *alagu-paruppu*, பெ. (n.) 1. பட்டாணிப்பயறு; seed of the garden pea. 2. அகலமான துவரம்பருப்பு; broad-sized dholl.

[2. அலகு = அகலம். பரு → பருப்பு.]

அலகுபனை *alagu-paṉai*, பெ. (n.) 1. காய்க்காத ஆண்பனை (நெல்லை); male palmyra which does not bear fruit (Tn.). 2. ஒருவகை நெட்டோலைப் பனை; long-lobed palmyra, *Borassus flebelliformis* (சா.அக.). 3. ஒருவகை மடற்பனை; Nepal fan-palm, *Trachycarpus martiana* (L.). 4. சீனப் பனை; China fan-palm, *Trachycarpus excelsa* (சா.அக.).

[அலகு = கூரிய கருக்குமட்டை. அலகு பனை = ஒருகா. நீண்டநாளாக மடலறுக்காது விடப்படும் ஆண்பனை. ஆண்பனைபோற் காய்க்காத பிற பனைவகைகளும் அலகுபனையெனப் பெயர் பெற்றிருக்கலாம்.]

அலகுபாக்கு *alagu-pākku*, பெ. (n.) மெல்லிய வில்லைகளாகக் கத்தரித்து வேகவைத்துச் சாயமூட்டின பகட்டான செந்நிறப் பாக்கு; areca-nut sliced thin and boiled, having a bright reddish hue.

[அலகுபாக்கு = ஒருகா. அகலப் பாக்கு' இனி, ஒருகா. இலகுபாக்கு என்றுமாம். இலகுதல் = விளங்குதல்.]

அலகுபீசன் *alagu-pīšaṉ*, பெ. (n.) பூனைப்பிடுக்கன்; Indian linden, *Grewia scabrophylla* (சா.அக.).

அலகுபூட்டு-தல் *alagu-pūṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) அலகுப்பூட்டு பார்க்க; see *alagu-p-pūṭṭu*.

அலகுபோடு-தல் *alagu-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) அலகுகுத்து-தல் பார்க்க; see *alagu-kuttu-*.

அலகுமாரகம் *alagu-māragam*, பெ. (n.) பூனைப் புல்; a kind of grass (சா.அக.).

அலகுமாறு *alagu-māṟu*, பெ. (n.) விளக்குமாறு; broom.

அலகுமூலம் *alagu-mūlam*, பெ.(n.) விலாமிச்சை வேர்; khuskhus root, *Andropogon aromaticus*.

அலகுவிரல் *alagu-viral*, பெ. (n.) பனங்கதிர் (நெல்லை); spathe of the male palmyra (Tn.).

[அலகு = ஆண்பனை. விரல் = விரல் போன்ற வுறுப்பு.]

அலகுவிறைப்பு *alagu-viṟaippu*, பெ. (n.) குளிர் மிகுதியினால் தாடை கிட்டுகை; spasmodic rigidity of the under-jaw due to excessive cold, lock-jaw.

அலகு³ பார்க்க; see *alagu³*.

[விறத்தல் = செறிதல், இறுகுதல். விற → விறை. விறைத்தல் = குளிரால் மரத்துப் போதல்.]

அலகை[1] *alagai*, பெ. (n.) 1. பேய்; devil, evil spirit, demon. ''வையத் தலகையா வைக்கப் படும்'' (குறள், 850). ம. அலக. 2. பேய்க் கொம்மட்டி (மலை.); colocynth, *Cucumis colocynthis*. 3. காட்டுக் கற்றாழை (வின்.); century plant, m. sh., *Agave americana* (செ.அக.) — ஆனைக் கற்றாழை; wild aloe or the elephant aloe (சா.அக.). 4. தன் உடம்பின் அரத்தம் உறிஞ்சப்படுவதாக எண்ணிக்கொண்டு அதனால் உடம்புவற்றி அதனால் மனமயக்கங் கொள்ளுமாறு செய்யும் ஒரு பேய்வினை; devilry in which a person is led to an insane belief that some one sucks his blood and thereby gets himself reduced in body and confused in mind (சா.அக.).

[அல் = இருள், கருநிறம். "அல்லார்ந்த மேனி" (தாயு. தேசோ. 9). அல் → அலகை = கருநிறமான பேய். ஒ.நோ: இருள் = இருட்டு, பேய். இந்த வழியே இளம்பெண் தனியாகச் சென்றால் இருளடிக்கும் (உ.வ.). கசப்பான அல்லது உடம்பிற்குத் தீங்கு விளைக்கும் நிலைத்திணை (தாவர) வகைப் பெயர்கள், 'பேய்' என்னும் அடைமொழி கொள்வது இயல்பு. 'அலகை' யென்னுஞ் சொல் அடைமொழியாகாது பெயராகவே வழங்குவது உவமையாகு பெயராகும்.]

அலகை[2] *alagai*, பெ. (n.) அளவு, அளவை; standard. ''அலகை சான்ற வுலக புராணமும்'' (பெருங். உஞ்சைக். 32 : 2).

[அலகு = அளவு. அலகு → அலகை.]

அலகை[3] *alagai*, பெ. (n.) துளசி; sacred basil, *Ocimum sanctum* (சா.அக.).

[அலங்கல் = துளசி. ஒருகா. அலங்கை → அலகை.]

அலகைக்கொடியாள் *alagai-k-koḍiyāḷ*, பெ. (n.) காளி (பிங்.); *Kāḷi*, having the figure of a devil on her banner.

[அலகை = பேய். அலகைக்கொடியாள் = பேயுருவைச் சின்னமாகக் கொண்ட கொடியை யுடையாள். 'ஆள்' பெ.பா. ஈறு.]

அலகைச்சுரம் *alagai-c-curam*, பெ. (n.) கீழ்க்காய் நெல்லி (மூ.அ.); species of phyllanthus (செ.அக.) — feather foil, *Phyllanthus polyphyllus* (சா.அக.).

[ஒருகா. அலக்கைச்சுரம் → அலகைச்சுரம்.]

அலக்கைச்சுரம் பார்க்க; see *alakkai-c-curam.*

அலகைத்தேர் *alagai-t-tēr*, பெ. (n.) கடுங் கோடை நண்பகல் நேரத்திற் சற்றுத் தொலைவில் ஆறு ஓடுவதுபோல் தோன்றும் பொய்த் தோற்றம், கானல்நீர் என்னும் பேய்த்தேர்; optical illusion, esp. illusive appearance of sheet of water in desert, at noon during hot summer, mirage, lit. the devil's car. ''அலகைத் தேரும்'' (கல்லா. வேழமுக.).

[தில் → திர் (திரி) → தேர்.]

அலகை[1], தேர் பார்க்க; see *alagai*[1], *tēr*.

அலகைப்புடல் *alagai-p-puḍal*, பெ. (n.) பேய்ப் புடல்; bitter snake-gourd, *Tricosanthes laciniosa* (சா.அக.).

அலகைமலடு *alagi-malaḍu*, பெ. (n.) 1. பேய் மலடு (சா.அக.); barrenness or sterility due to hysteria. 2. பேய்வினையாற் கருவற்று மலடாதல்; the state of barrenness in a woman suffering from demonomania.

[ஒருகா. மல் + அறு – மலறு → மலடு. மல் = வளம், கருவளம். ஒ.நோ: செவி + அறு – செவியறு → செவிறு → செவிடு. செவி யறை = செவிடு.]

அலகைமுலையுண்டோன் *alagai-mulai-y-uṇḍōṉ*, பெ. (n.) திருமால் (பிங்.); *Tirumal* (Viṣṇu), who as Kriṣṇa sucked to death a demoness who tried to suckle him to death with poisonous milk.

[அலகை = பேய், பூதம். திருமாலின் தோற்றரவான (அவதாரமான) கண்ணபிரான், தன் குழவிப் பருவத்தில் தன்னை நச்சுமுலைப்பாலூட்டிக் கொல்ல வந்த பூதனை யென்னும் அரக்கியை, ஒட்டவுறிஞ்சிக் கொன்றானென்பது பாகவதக் கதை.

அரக்கரையும் ஒருவகைப் பேயினமாகக் கொள்வது தொன்ம (புராண) மரபு. முல் → முலை = முன் தள்ளும் அல்லது தழுவும் உறுப்பு. உண் → உண்டவன் (உண்ட+அவன்) → உண்டான் → உண்டோன்.]

அலங்கங்கணம் *alaṅgaṅgaṇam*, பெ. (n.) வாலுளுவை; spindle tree, *Gymnosporia montana* alias *Celestrus paniculata* (சா.அக.).

அலங்கடை *alaṅgaḍai*, கு.வி.எ. (adv.) *அல்லா விடத்து*; in places other than, except in the case of. ''சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே'' (தொல். எழுத்து. நூன். 1).

[அல் = அல்லாத. 'அம்' இன்னோசைச் சாரியை. கடை = இடம்.]

அலங்கம்[1] *alaṅgam*, பெ. (n.) 1. *கோட்டை மதில்மேலுள்ள அகன்ற நடை*; broad-topped and usu. stone-parapeted walk on top of a defensive wall. 2. *கொத்தளம்*; bastion, defensive erection on the top of a rampart. 3. *மதிலின் ஒருறுப்பு*; part of a rampart. 4. *அரண்*; defence, rampart, bulwark. ''தெண் டிரை யலங்கத்துப் புக்குலவி'' (திருப்பு. 459).

[அல் = மதில். அல் → அலகம் → அலங்கம். இனி, அலகு (அகலம்) → அலங்கு → அலங்கம் என்றுமாம்.]

அலங்கம்[2] *alaṅgam*, பெ. (n.) *திகைப்பூச்சி*; an insect, the contact of which is said to cause perplexity of mind (சா.அக.).

[அலங்குதல் = மனந்தத்தளித்தல். அலங்கு → அலங்கம்.]

அலங்கமலங்க *alaṅga-malaṅga*, கு.வி.எ. (adv.) *மனமயங்க, பொறிகலங்க*; to bewilder. அவனை அலங்கமலங்கத் தள்ளினான் (வின்.).

[அலங்குதல் = மனந்தத்தளித்தல். மலங்குதல் = மனமயங்குதல். 'அலங்க', 'மலங்க' நி.கா.வி.எ. 'அலங்கமலங்க' பொருளை மிகுத்துக் காட்டும் எதுகை மரபிணைமொழி.]

அலங்கல்[1] *alaṅgal*, பெ. (n.) 1. *அசைதல்*; shaking, moving. 2. *அசையுங்கதிர்* (அகநா. 13, உரை); waving ear of corn. 3. *பூமாலை* (பிங்.); wreath, garland. ''நறைவிரி யலங்கன் மார்பிற் றிளைத்தலின்'' (நைடத. அன்னத் தைக்கண். 17). 4. *மயிர்ச்சூட்டு மாலை* (பிங்.); wreath for the hair. 5. *ஒழுங்கு* (குருபரம். ஆறா. 121); arrangement, order, regularity. 6. *தாழை*; screw pine, *Pandanus odoratissimus*. 7. *துளசி* (பச்.மூ.); sacred basil, *Ocimum sanctum*. 8. *தளிர்*; sprout.

[அல் → அலை → அசை. அல் → அலு → அலுங்கு → அனுங்கு. அலுத்தல் = அசைதல், களைத்தல். அலுங்கு → அலங்கு. அலங்குதல் = அசைதல். அலங்கு → அலங்கல் = அசைதல், அசையும் பொருள், இளமென்பொருள், அசையும் மாலை, மாலையொழுங்கு, மாலைப்பூ.]

அலங்கல்[2] *alaṅgal*, பெ. (n.) ஒளி (ஈடு, 10.1:2); light.

[இலகு → இலங்கு → அலங்கு → அலங்கல். இலகுதல் = விளங்குதல். இலங்குதல் = விளங்குதல், திகழ்தல்.]

அலங்கலம் *alaṅgalam*, பெ. (n.) *அசைகை* (சிந்தா. நி. 296); movement.

[அல் → அலு → அலுங்கு → அலங்கு → அலங்கல் → அலங்கலம்.]

அலங்கழித்தொழில் *alaṅgaḻi-t-toḻil*, பெ. (n.) *அலவலைத்தொழில், தீங்கு அல்லது கொடுமை செய்தல்*; acts of wickedness or oppression. ''அறவிய மனத்தினை யாகி யலங்கழித் தொழிலொழிந் தடங்கி'' (நீலகேசி, 74).

[அல்லுதல் = பொருந்துதல், மனம்பொருந்துதல், அன்புசெய்தல். அல் + பு – அன்பு. அல் + அம் – அலம் = அன்பு. அலம் + கழி – அலங்கழி = அன்புநீக்கம். அலங்கழித்தொழில் = அன்பு நீங்கிய செயல், கொடுஞ்செயல்.]

அலங்கன் *alaṅgaṉ*, பெ. (n.) 1. *கோட்டை மதில்*; fort-wall, rampart, bulwark. 2. *கொத்தளம்*; bastion.

க. அலங்க

[அலங்கம் → அலங்கன். ம் → ன், இறுதிப் போலி.]

அலங்கம் பார்க்க; see *alaṅgam*.

அலங்கனாரி *alaṅgaṉāri*, பெ. (n.) *முத்துச்சிப்பி*; pearl-oyster.

[அலங்கல் = ஒளி. நாரி = பெண். அலங்கம் = ஒளி. அலங்கன் = ஒளியுள்ள முத்து. அலங்கன் ஆரி = முத்துப் பொருந்திய சிப்பி என்றுமாம். ஆர்தல் = பொருந்துதல். 'இ' வி.முத. ஈறு.]

'அலங்கனாரு' என்பது சா.அக. பாடம்.

அலங்கிதம் *alaṅgidam*, பெ. (n.) *கருவண்டு*; black beetle (சா.அக.).

அலங்கிதன் *alaṅgidaṉ*, பெ. (n.) *அரிதாரம்* (வை.மூ.); yellow orpiment.

[அலங்குதல் = விளங்குதல். அலங்கு → அலங்கிதம் → அலங்கிதன்.]

அலங்கு[1]**-தல்** *alaṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *அசைதல்*; to shake, move, swing, dangle. ''அலங்குளைப் புரவி'' (புறநா. 2 : 13). 2. *மனந்தத்தளித்தல்* (வின்.); to be agitated in mind, troubled. 3. *இரங்குதல்* (பிங்.); to pity, sympathise.

ம. அலங்ஙு; க., தெ. அலகு; து. அலங்கு.

[அல் → அலு → அலுங்கு → அலங்கு. மனங் கலங்குதலும் இரங்குதலும் மன அசைவாகும்.]

அலங்கு²-தல் *alaṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) **ஒளி செய்தல்** (பிங்.); to shine, glitter, flash. ''மறையருளா லடைந்தலங்கு முத்தியில்'' (சூத. முத். 8 : 84).

[இலகு → இலங்கு → அலங்கு. இலங்குதல் = ஒளிவிடுதல், விளங்குதல்.]

அலங்கை *alaṅgai*, பெ. (n.) **துளசி** (மலை.); sacred basil.

[அலங்கல் = துளசி. அலகை = துளசி. அலங்கு → அலங்கல். அலங்கு → அலங்கை → அலகை.]

அலங்கை

அலங்கோலம் *alaṅ-gōlam*, பெ. (n.) 1. **தோற்றக்கேடு**; disorder, slovenliness, confusion in dress, want of comeliness in appearance, esp. in time of danger or disaster. 2. **வேலை, தொழிற்சாலை, போக்குவரத்து முதலிய வற்றின் சீர்கேடு**; disorder, dislocation or derangement of business, plans, public department, traffic, etc., as a result of accident, insurgence or natural calamity.

ம. அலங்கோலம்; க. அல்லோலகல்லோல; தெ. அல்லகல்லோலமு; பட. அலங்கோல.

[அல் → அலம் = துன்பம். கோல் → கோலம் = தோற்றம். அல் → அல்லல் = துன்பம். கோலுதல் = கொள்ளுதல், மேற்கொள்ளுதல், கோலம்பூணுதல்.]

அலங்கோலை *alaṅgōlai*, பெ. (n.) **அலங்கோலம்** பார்க்க; see *alaṅgōlam* (புதுவை).

[அலங்கோலம் → அலங்கோலை.]

அலசகம் *alaśagam*, பெ. (n.) **சோம்பு** (பரி. அக.); common anise.

அலசடி *alaśaḍi*, பெ. (n.) 1. **அலைச்சல்**; wandering. 2. **தொல்லை**; trouble. அலம் பலு மலசடியும் பட்டேன் (வின்.).

அலைசடி பார்க்க; see *alaiśaḍi*.

க., து. அலசிகெ; தெ. அலசடி.

[அலைசடி → அலசடி.]

அலசந்தி *alaśandi*, பெ. (n.) **பெரும்பயறு** (நாமதீப.); chowlibean.

க. அலசந்தி; தெ. அலச்சந்த.

அலசம் *alaśam*, பெ. (n.) **கால்விரல்களுக்கு இடையே யுண்டாகும் சேற்றுப்புண்** (நாநார்த்த.); ground itch, an ulcer caused by the contact of poisonous mire and appearing between the toes (சா.அக.).

Skt. alasa

அலசல்¹ *alaśal*, பெ. (n.) 1. **அலசு-தல்** பார்க்க; see *alaśu-*. 2. **இழை விலகியிருக்கை**; being thinly woven. 3. **இழை நெருக்கமில்லாத ஆடை** (வின்.); cloth thinly woven. 4. **சிதறுண்ட பொருள்** (வின்.); things scattered or carelessly thrown away. 5. **உருப்படாத வேலை** (வின்.); shoddy work, business which does not succeed.

[அல் → அலை → அலைசு → அலசு.]

அலசி *alaśi*, பெ. (n.) **பாறைகளிலும் கப்பலடியிலும் ஒட்டிக்கொண்டிருக்கும் நத்தைவகை**; mussel, a species of bivalvular shellfish that adheres to the keel of ships.

இஃது உணவாகவும் தூண்டிலிரையாகவும் பயன்படும் (சா.அக.).

[ஒருகா. அலைசு → அலைசி → அலசி = அலையினால் அலசப்படும் கூடுள்ளது.]

அலசிவிதை *alaśi-vidai*, பெ. (n.) 1. **ஆழிவிதை** (சா.அக.); linseed. 2. **அகத்திவிதை**; seed of sesbania (சா.அக.).

அலசு-தல் *alaśu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **அசைதல்**; to shake, be agitated. ''இறுநுசுப் பலச வெறுநிலஞ் சேர்ந்தாங்கு'' (மணிமே. 9 : 7). 2. **உடம்பு அல்லது உளம் வருந்துதல்**; to suffer, to be afflicted. ''திருவுடம் பலச நோற்கின்றான்'' (கம்பரா. ஆரணிய. சூர்ப்ப. 18). ம. அலசுக. 3. **சோர்தல்** (சிலப். 16 : 197, அரும்.); to be exhausted, to become weary. —, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **அசைத்து அல்லது கசக்கிக் கழுவுதல்**; to rinse, as soaked cloth. ஊறவைத்த வேட்டியை அலசு (உ.வ.). 2. **வெட்கும்படி பலபடப் பேசுதல், ஒருவர் கூற்றைத் திறம்பட மறுத்தல்**; to scold, snub,

to refute forcibly. அவனை நன்றாய் அலசி விட்டான் (உ.வ.). 3. **ஆராய்தல்**; to analyse, examine minutely. அக் குற்றச்சாட்டை நன்றாய் அலசிப் பார்த்தபோது, அது கட்டுச் செய்தியென்று தெரிந்தது.

க., தெ., து. அலசு.

[அல் → அலை → அலைசு → அலசு.]

அலசு *alašu*, தொ.பெ. (vbl.n.) 1. **அலசிக் கழுவுகை**; to rinse. இந்தத் துணியை ஓர் அலசு அலசு. 2. **உடம்பு வருந்தல்**; physical suffering. "ஐதின்மேனி யலசுற யான்றவஞ் செய்தது" (கந்தபு. அசுர. மாயைப். 71). 3. **துயரம்** (சம். அக. கை.); sorrow, grief.

க. அலசு; தெ. அலகுவ.

அலசு-தல் பார்க்க; see *alašu-*.

அலட்டி[1] *alatti*, பெ. (n.) 1. **அலப்பி, வீண்பேச்சாளி**; chatterbox. 2. **அரட்டி**; bully, blusterer.

ம. அலப்பன்

[அலறு → அலற்று → அலட்டு → அலட்டி. 'இ' வி.முத. ஈறு.]

அலட்டி[2] *alatti*, பெ. (n.) 1. **நோய்நிலையில் அடிக்கடி புரண்டு தன் உடம்பை வருத்திக் கொள்பவன்**; one who tosses about or restlessly turns this side and that side in bed during illness. 2. **பிறரை அலைக்கழித்து வருத்துபவன்**; one who troubles another by causing him to move about restlessly.

அலட்டு[1]**-தல்** *alattu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **வீண்பேச்சுப் பேசுதல்**; to talk vainly or incessantly. 2. **பிதற்றுதல்**; to talk foolishly or incoherently. —, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **அரட்டுதல்**; to bully, bluster. 2. **தொல்லைப் படுத்துதல்**; to tease, annoy, pester.

ம. அலட்டுக; Skt. lapita.

[அலறு → அலற்று → அலட்டு.]

அலட்டு[2]**-தல்** *alattu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **(நோயாளி) ஓயாது உடம்பை அசைத்துத் தன்னை வருத்திக்கொள்ளுதல்**; to trouble oneself by constantly changing posture, esp. as a sick person in bed. உடம்பை வீணாய் அலட்டிக்கொள்ளாதே. 2. **அலைக்கழித்தல்**; to trouble and cause restlessness in another person.

ம. அலட்டல்; தெ. அலன்சுட.

அலட்டு[1] *alattu*, பெ. (n.) 1. **வீண்பேச்சு**; chatter. 2. **அரட்டு**; boisterous talk. 3. **பிதற்றல்**; raving, incoherent talk, delirium. 4. **தொந்தரவு**; teasing, trouble, annoyance, importunity. "ஒருவன் கூறும் வாக்கியத் தலட்டுக் கீதல்" (மச்சபு. பத்தி. 22).

[அலறு → அலற்று → அலட்டு.]

அலட்டு[2] *alattu*, பெ. (n.) **அலைக்கழிப்பு**; troubling one and causing restlessness in him (சா.அக.).

அலட்டுச்சன்னி *alattu-c-canni*, பெ. (n.) **பிதற்றுங் குணஞ்செய்யும் இசிவுநோய்**; delirium.

[அலட்டு + **Skt.** sanni. **Skt.** sanni-pāta > த. சன்னி.]

அலட்டு[1] பார்க்க; see *alattu*[1].

இதை முழுத்தமிழில் '**அலட்டிசிவு**' என்று சொல்லுதல் வேண்டும்.

அலட்டுச்சனி *alattu-c-cani*, பெ. (n.) 1. **வக்கிரக் காரி**; malignant saturn. 2. **அரட்டித் தொந்தரவு செய்பவன்** (இராட்.); one who is boisterous and troublesome.

[அலட்டு + **Skt.** šani.]

அலட்டு[1] பார்க்க; see *alattu*[1].

இதை முழுத்தமிழில் 'அலட்டுக்காரி' என்று சொல்லுதல் வேண்டும்.

அலத்தகம் *alattagam*, பெ. (n.) 1. **செம்பஞ்சுப் பூண்டு**; red-cotton shrub or West Indian cotton, *Gossypium barbadense* (*acuminatum*) (சா.அக.). 2. **செம்பஞ்சுக் குழம்பு**; red lac used by women for dyeing their feet, lips, etc. "அந்நலார்த மலத்தக மலர்த்தா ணீவி" (நைடத. நாட்டு. 26).

"அம்மல ரடியுங் கையு
மணிகிளர் பவள வாயுஞ்
செம்மலர் நுதலு நாவுந்
திருந்தொளி யுகிரோ டங்கேழ்
விம்மிதப் பட்டு வீழ
வலத்தக மெழுதி விட்டா
ளம்மலர்க் கண்ட முள்ளிட்
டரிவையைத் தெரிவை தானே"
(சீவக. 2446).

3. **செம்பருத்தி** (பச்.மூ.); Bengal cotton, *Gossypium arboreum* (சா.அக.).

அல்லி

அலர்

மலர்

அலசி

ஆற்றலரி

செவ்வலரி

வெள்ளலரி

ம., க. அலக்த; தெ. அலக்தமு.

[அலத்தகம் > **Skt.** alaktaka. உல் → எல் → எர் → எரி = நெருப்பு, சிவப்பு. உல் → அல் → அன் → அனல் = நெருப்பு. அல் → அலத்து → அலத்தி = மின்மினி. அலத்து → அலத்தம் = செம்பருத்தி. அலத்தம் → அலத்தகம் = செம் பஞ்சு.]

'அலத்தகம்' என்னுந் தென்சொல்லே வட மொழியில் 'அலக்தக' என்று திரிக்கப் பட்டுள்ளது.

அலத்தம்[1] பார்க்க; see *alattam*[1].

அலத்தம்[1] *alattam*, பெ. (n.) செம்பருத்தி (மலை.); Bengal cotton, *Gossypium arboreum* (சா.அக.).

[அலத்தம் > **Skt.** alakta.]

அலத்தகம் பார்க்க; see *alattagam*.

வடமொழியில் அ-லக்த, அ-லக்தக என்று முன்னொட்டுஞ் சொல்லுமாகப் பிரிப்பர். அது அவற்றை வடசொல்லாகக் காட்டுதற்குக் கையாளும் வழி. த்த என்னும் உடனிலை மெய்ம்மயக்கம் க்த என்னும் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாக மாறுவது வடமொழி மரபு.

ஒ.நோ: அரத்தம் > **Skt.** rakta, முத்தம் > **Skt.** mukta.

அலத்தம்[2] *alattam*, பெ. (n.) 1. **செம்பருத்திப் பூண்டு** (க.அக.); Bengal cotton, *Gossypium arboreum*. 2. **செம்பஞ்சுக்குழம்பு**; red lac used by ladies for dyeing their feet, lips, etc. (சா.அக.).

ம., க. அலக்த; தெ. அலக்தமு.

[அலத்தம் > **Skt.** alakta.]

அலத்தம்[1] பார்க்க; see *alattam*[1].

அலத்தம்[3] *alattam*, பெ. (n.) **பொழுதுவணங்கி** (**சூரியகாந்தி**) (மஞ்சிக. நி.); sunflower.

அலத்தி[1] *alatti*, பெ. (n.) **மின்மினி** (சது.); fire-fly, glow-worm.

[உல் → உல. உலத்தல் = காய்தல். உல் → உலை = நெருப்படுப்பு. உல் → எல் = ஒளி. உல் → அல் → அன் → அனல். அல் → அல → அலத்து → அலத்தி = ஒளிவிடுவது.]

அலத்தி[2] *alatti*, பெ. (n.) நுளம்பு (க.அக.); gnat.

[உல் → உலம் → உலங்கு. உல் → அல் → அல → அலவு → அலகு = கூர்மை. அல் → அலம் → அலத்தி = கூரிய உறிஞ்சியுள்ளது.]

அலத்திடுசன்னி *alattiḍu-šanni*, பெ. (n.) **அதிகத் துன்பத்தை யுண்டாக்கும் ஒருவகை இசிவு**; a kind of delirium giving rise to much suffering to the patient (சா.அக.).

[அலத்திடு + **Skt.** sanni. அலம் = துன்பம். அலத்திடுதல் (அலத்து + இடுதல்) = துன்பத்தில் வைத்தல். **Skt.** sanni-pāta > த. சன்னி = இசிவு.]

'அலத்திடும் இசிவு' என்பது முழுத்தமிழ்.

அலத்து *alattu*, பெ. (n.) **உமுரி**; a kind of herb with a saline taste, growing on sandy soils, glass-wort, *Salicornia herbaco* (சா.அக.).

அலத்துருஞ்சூலி *alatturuñ-c-cūli*, பெ. (n.) **பெருஞ்சூலி, ஒரு நிலத்திணைவகை**; bridal-conch plant, *Hymenodictyon excelsum* (சா. அக.).

அலத்தை *alattai*, பெ. (n.) **செம்பஞ்சு** (அக.நி.); cotton coloured with lac-dye.

[உல் → எல் → எர் → எரி = நெருப்பு, சிவப்பு. உல் → அல் → அல → அலத்து → அலத்தை = சிவந்தது.]

அலத்தகம் பார்க்க; see *alattagam*.

அலதிகுலதி *aladi-kuladi*, பெ. (n.) **அலங்கோலம்**; disorder, confusion. "விழுந்தன ரலதி குலதியொ டேழ்கலிங்கரே" (கலிங். போர். 47).

ம. அலதி

[அலைதிகுலைதி → அலதிகுலதி. அலை + தி (தொ.பெ. ஈறு) – அலைதி. குலை + தி (தொ. பெ. ஈறு) – குலைதி.]

அலைதிகுலைதி பார்க்க; see *alaidi-kulaidi*.

அலந்தம் *alandam*, பெ. (n.) **கடுக்காய்**; ink-nut, *Terminalia chebula*.

அலந்தல் *alandal*, பெ. (n.) 1. **மயிலடிக் குருந்து**; false peacock's foot tree, *Neburia linearis*. 2. **செங்கத்தரி** (மலை.); orbicular-leaved caper shrub.

[உல் → எல் → எர் → எரி = நெருப்பு, சிவப்பு. உல் → அல் → அலத்து → அலந்து → அலந்தல் = சிவந்தது.]

அலத்தகம் பார்க்க; see *alattagam*.

அலந்தலி *alandali*, பெ. (n.) **செங்கத்தரி** (பச். மூ.); orbicular-leaved caper shrub.

அலந்தல் 2 பார்க்க; see *alandal* 2.

அலந்தலை *alandalai*, பெ. (n.) 1. **மயக்கம்**; giddiness (சா.அக.). "அலந்தலை யுற்ற வரும்புலன்க ளைந்தும்" (கம்பரா. அயோத். கைகேயிசூழ். 17). 2. **கலக்கம்**; confusion. "இவள்பேச்சு மலந்தலையாய்" (திவ். பெரியாழ். 3. 7 : 1). 3. **துன்பம்**; distress, vexation, affliction. "அலந்தலைப் பட்ட சிந்தைய னாகி" (உபதேச. சனகாதி. 23).

ம. அலமாறு; க. அலவு; தெ. அலந்துரு.

[அலம் + தலை. அலம்வரல் → அலமரல் = சுழலுதல், தலைசுற்றுதல், மணஞ்சுழலுதல், மயங்குதல், கலங்குதல், துன்புறுதல். அலம் = சுழற்சி, மயக்கம், கலக்கம், துன்பம். 'தலை' ஓர் ஈறு.]

அலந்தலைமை *alandalaimai*, பெ. (n.) **தொல்லை, தொந்தரவு**; worry, trouble, annoyance. "அலந்தலைமை செய்துழலு மையன்" (திவ். பெரியதி. 4 . 4 : 3).

[அலந்தலை → அலந்தலைமை. 'மை' பண். பெ. ஈறு.]

அலந்தலை பார்க்க; see *alandalai*.

அலந்தார் *alandār*, பெ. (n.) 1. **துன்பமுற்றோர்**; those who suffered, the afflicted, the distressed, those in agony. "அலந்தாரை யல்லனோய் செய்தற்றால்" (குறள், 1303). 2. **வறுமையுற் றோர்**; the poor, the destitute. "அலந்தார்க் கொன்றீந்த புகழும்" (திரிகடு. 41).

[அலத்தல் = துன்புறுதல். அல → அலந்தார் (ப.பா. படர்க்கை இ.கா. வினையா. பெ.]

அலந்தாரி *alandāri*, பெ. (n.) **எழுத்தாணிப் பூண்டு**; style-plant or sarment lettuce, *Launea pinnatifida* (சா.அக.).

அலந்தை[1] *alandai*, பெ. (n.) **துன்பம்** (சது.); trouble, distress, affliction.

தெ. அலன்த; து. அலுபங்க.

[அலம் = துன்பம். அலம் → அலந்து → அலந்தை.]

அலந்தை[2] *alandai*, பெ. (n.) **நீர்நிலை, குளம்**; tank, pond. "இருடீர் மலயமுனி யலந்தை" (சேதுபு. சேதுவந்த. 44).

[ஒருகா. அலை → அலந்தை = அலைவீசும் பெருங்குளம்.]

அலந்தோர் *alandōr*, பெ. (n.) **அலந்தார்** பார்க்க; see *alandār*. "அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்" (திருமுரு. 271).

[அலந்தார் → அலந்தோர்.]

அலப்பம் *alappam*, பெ. (n.) **உடற்பித்து** (அங்கப்பிச்சு); bile in the system (சா.அக.).

அலப்பல் *alappal*, பெ. (n.) 1. **வீண்பேச்சு**; idle talk, gossip. 2. **பிதற்றல்**; talking nonsense. 3. **கலவையோசை** (பிங்.); confused noise of many sounds.

ம. அலப்பு

[அலப்பு → அலப்பல்.]

அலப்பறை *alapparai*, பெ. (n.) 1. **வீண்பேச் சாளி**; blabber, gossip, vain talker. 2. **இரப் போன் (பிச்சைக்காரன்)** (நெல்லை); beggar (Tn.).

ம. அலப்பற

[அலப்பு + அறை. அலப்புதல் = வீண் பேச்சுப் பேசுதல். அலப்பு = வீண்பேச்சு. அறைதல் = உரத்துச் சொல்லுதல், சொல்லுதல், பேசுதல். அறை = உரத்துச் சொல்பவன், பேசு பவன் (ஆகு.).]

அலப்பன் *alappan*, பெ.(n.) **வீண்பேச்சுக்காரன்**; chatterer, gossip, prattler.

ம. அலப்பன்

[அலப்பு → அலப்பன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அலப்பாட்டு-தல் *alappāttu-*, 5 செ.கு.வி. (v.i.) **மனஞ்சுழலுதல், மயங்குதல்**; to become confused. "பேதைக ளுரைப்பன வேசொல்லிப் பெரிதலப் பாட்டினைநீ" (நீலகேசி, 448).

[அலப்பு + ஆட்டு. அலத்தல் = சுழலுதல். அல → அலப்பு. 'ஆடு' து.வி. (த.வி.) → ஆட்டு (பி.வி.). இங்குப் பிறவினை தன்வினையாய் ஆளப்பட்டது.]

அலப்பாரி-த்தல் *alappāri-*, 4 செ.கு.வி. (v.i.) **வீண்பேச்சுப் பேசி ஆரவாரித்தல்** (இ.வ.); to shout empty words (Loc.).

[அலப்பு + ஆரி. ஆரித்தல் = ஆரவாரஞ் செய்தல். ஆர் → ஆரி.]

அலப்பு-தல் *alappu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **வீண் பேச்சுப் பேசுதல்**; to chatter, prattle, gossip, talk in vain. 2. **பிதற்றுதல்**; to talk nonsense, to talk incoherently. "அலப்பிய தக்கன்

பெருவேள்வி'' (தேவா. 5.73 : 1). —, 5 செ. குன்றாவி. (v.t.) **அலைத்தல், வருத்துதல்**; to harass, vex, annoy, afflict. "அமர்க்கண் மகளி ரலப்பிய வந்நோய்'' (கலித். 75 : 7).

ம. அலப்பு

[அலம்பு (த.வி.) → அலப்பு (பி.வி.). அலப்பு தல் = நாவசைத்தல், பேசுதல், அசைத்து வருத்துதல்.]

அலப்பு *alappu*, பெ. (n.) **மனக்கலக்கம்**; confusion of mind. "அலப்பா யாகா சத்தை நோக்கி'' (திவ். திருவாய். 5. 8 : 4).

க. அலபு

[அலத்தல் = சுழலுதல், துன்புறுதல். அல → அலப்பு. 'பு' தொ.பெ. ஈறு.]

அலப்புணி *alappuṇi*, பெ. (n.) **வீண்பேச்சுப் பேசுபவ-ன்-ள்** (இ.வ.); gossip, chatterer (Loc.).

[அலப்பு + உண்ணி. 'உண்' து.வி. ஒ.நோ: நோயுண்ணுதல் = நோய்கொள்ளுதல். உண்ணு தல் = கொள்ளுதல். உண்ணி = கொள்ளி. 'இ' வி.முத. ஈறு.]

அலம்[1] *alam*, பெ. (n.) 1. **சுழற்சி**; whirling, spinning around. 2. **மனச்சுழற்சி**; confusion, perturbation. "சித்த மலமில்லை" (சி.சி. சுபக். 8 : 32). 3. **துன்பம்**; distress, affliction, pain, misery. "அலமகன் முத்தி யுண்டாம்'' (சூத. எக்கிய. பூ. 2 : 8).

தெ. அலமு

[உலம் = சுற்று, சுழற்சி. உலம் → அலம்.]

அலம்[2] *alam*, பெ. (n.) 1. **தேட்கொடுக்கு** (நாநார்த்த.); scorpion's sting. 2. **தேள்** (திவா.); scorpion, as having a sting. 3. **நளி யோரை (விருச்சிகராசி)**; scorpio of the zodiac.

ம. அலம்; க. அல; தெ. அலமு.

*[அலம் → **Skt**. ala. உலம் = வளைவு. உலம் → அலம் = வளைந்த கொடுக்கு, கொடுக் குள்ளது, கொடுக்குள்ள தேள்போன்ற வடிவினது. இதன் வேரும் முந்தியதன் வேரும் ஒன்றே.]*

அலம்[3] *alam*, பெ. (n.) 1. **நறும்பிசின்**; a kind of incense, *Olibanum* (சா.அக.). 2. **பொன்னரி தாரம்**; yellow orpiment or sulphuret of arsenic.

ம. அலம்; க. அல.

[ஒருகா. அல் → அலம். அல்லுதல் = பொருந்துதல், ஒட்டுதல்.]

அலம்[4] *alam*, பெ. (n.) **இஞ்சி**; ginger.

க. அல்ல; தெ. அல்லமு.

[அல்லம் → அலம்.]

அலம்[5] *alam*, பெ. (n.) **சோற்றுப்பு**; table salt (சா.அக.).

[அளம் = உப்பு. அளம் → அலம்.]

அலம்பல்[1] *alambal*, பெ. (n.) 1. **ஆரவாரம்** (பிங்.); loud noise. 2. **பலர்வாய்ப் படல்**; unfortunate publicity. உன் பெயர் அலம்ப லாயிற்று (இ.வ.). 3. **வீண்பேச்சு**; gossip, vain talk. 4. **முயற்சி, மெய்வருத்தம்**; effort, pains. 5. **தொந்தரவு**; vexation, trouble. அலம்பலும் அலசடியும் பட்டேன் (வின்.). 6. **கொள்ளை நோய்** (இ.வ.); epidemic (Loc.). 7. **அலம்பு-**[1] **தல்** பார்க்க; see *alambu*[1]-.

ம. அலம்பல்; தெ. அலமு; து. அலுபங்க.

[அல் → அல → அலம்பு → அலம்பல் = அசைத் தல், அசைத்து ஒலித்தல், வருந்துதல்.]

அலம்பல்[2] *alambal*, பெ. (n.) **அலக்குத்தடி** (யாழ்ப்.); small branches or boughs used in the construction and repair of hedges (J.).

[ஒருகா. அலம் → அலம்பு → அலம்பல் = வளைந்த குச்சி அல்லது கிளை.]

அலம்பல்மரம் *alambal-maram*, பெ. (n.) **வெடங் குறுணி, மலையாளத்தில் விளையும் மணமுள்ள வெண்பூ மரம்**; savathi tree, collar-bone tree, walking stick bignonia, *Stercospermum xylocarpum* (சா.அக.).

அலம்பி *alambi*, பெ. (n.) **உடம்பிலோடும் பது (தச) நாடிகளு ளொன்றாகிய, நாவிலோடும் நாடி**; one of the ten arteries, existing or operating in the tongue, *Lingual artery* (சா.அக.).

அலம்பு[1]**-தல்** *alambu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **ஒலித்தல்**; to sound, tinkle, murmur, as a brook. 2. **ஆரவாரித்தல்**; to make loud noise. "மாட லம்பின மாமணித் தேர்மணி பாட லம்பின பாய்மத யானையே'' (கம்பரா. யுத்த. முதற்போர். 17). 3. **அலைதல்**; to wander, fluctuate. "வண்டலம்புஞ் சோலை'' (திவ். திருவாய். 2.8 : 11). 4. **ததும்புதல்** (வின்.); to move, dance or wabble, as water in a vessel

which is not full. 5. *தவறுதல்* (வின்.); to swerve from a proper line of conduct. —, 5 செ.குன்றாவி. (v.t.) 1. *அலைத்தல்*; to cause to wander on account of panic. "அலம்பா வெருட்டாக் கொன்று திரியு மரக் கரை" (திவ். பெரியாழ். 4. 2 : 1). 2. *கழுவுதல்*; to wash, rinse. 'வடிம்பலம்ப நின்றான்' (புறநா. 9, உரை).

ம. அலம்பு; க. அலும்பு, அலம்பு; தெ. அலமு; து. அலம்புனி.

[அல் (அலை) → அலம்பு. அலம்புதல் = அசைதல், அசைத்தல், அசைந்து ஒலித்தல், அசைந்து வழிதல், கழுவுதல், அசைந்து விலகுதல், அலைதல், அலைத்தல்.]

அலம்பு²-தல் *alambu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *கலத்தல்* (தக்கயாகப். 93, உரை); to mix.

['அலம்புதல் = கலத்தல்; அசைதற்கும் பெயர்; வேலை வடிம்பலம்ப நின்றா னென்னுஞ் சொல்லா லுணர்க' என்று உரையாசிரியர் தேற்றமின்றிக் கூறியிருத்தலை நோக்குக. அலம் பற் சொல்லிற்குக் கலத்தற் பொருளிருப்பின், முடைதல் அல்லது பின்னற் பொருளுள்ள 'அல்' என்னுஞ் சொல்லினின்று திரித்தல் வேண்டும்.]

அலம்புடை *alambuḍai*, பெ. (n.) **உடம்பிலோடும் பதுநாடிகளு ளொன்று** (சிலப். 3 : 26, உரை); a principal tubular vessel of the human body — **'அலம்புடை' மூலநிலைக்களந் (மூலாதாரம்) தொட்டுக் காதளவாய் நிற்பது**; one of the ten tuberous (tubular) vessels of the human body, extending from the anal region upto the level of the ears (சா.அக.).

Skt. alambuṣa

அலம்வா(வரு)-தல் *alam-vā-*, 18 செ.கு.வி. (v.i.) 1. *சுழலுதல்;* to whirl, spin around. 2. *மனஞ்சுழலுதல்;* to be perturbed in mind, agitated. "வெறியோ டலம்வரும் யாய்" (ஐந்திணை ஐம். 20).

[உல் → உலம் = சுழற்சி. உலம் → அலம் + வா.]

வா பார்க்க; see *vā*.

அலமரல் *alamaral*, பெ. (n.) 1. *சுழற்சி* (திவா.); whirling, spinning around. 2. *மனச்சுழற்சி*; confusion, perturbation. 'அலமர லாயம்' (தொல். சொல். உரி. 13, நச். உரை). 3. **துயரம்** (பிங்.); sorrow. 4. *அச்சம்* (திவா.); fear, dread.

தெ. அலமட

[அலம்வரல் → அலமரல்.]

அலமரு-தல் *alamaru-*, 18 செ.கு.வி. (v.i.) 1. *சுழலுதல்*; to whirl, spin around. "விளரி வண் டினங்க ளலமருங் கழனி" (நைடத. அன்னத்தைத்தூ. 10). 2. **மனஞ்சுழலுதல், கலங்குதல்**; to be confused, agitated, confounded, nonplussed, perturbed in mind. 'அலமர லாயம்' (தொல். சொல். உரி. 13, நச். உரை). 3. *அசைதல்;* to shake, tremble. "ஆலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே" (மலைபடு. 119). 4. **அஞ்சுதல்** (திவா.); to be afraid. "ஐமே லுந்தி யலமந்த போதாக வஞ்சே லென் றருள்செய்வான்" (தேவா. 1 . 130 : 1). 5. **வருந்துதல், துன்புறுதல்;** to be vexed, distressed. "கொம்பரில் லாக்கொடி போலல மந்தனன்" (திருவாச. 6 : 20). 6. **இளைத்தல்** (க.அக.); to grow weary, to be fatigued, to get exhausted. "ஓடி யலமந்து" (கோயிற்பு. இரணி. 28).

க. அலெமாடு; தெ. அலமடிஞ்சுட.

[அலம்வருதல் → அலமருதல்.]

அலமல-த்தல் *alam-ala-*, 3 செ.கு.வி. (v.i.) 1. **அங்கலாய்த்தல்**; to lament, grieve, sorrow. 2. **மனங்கலங்குதல்**; to be confounded, nonplussed. 3. *பரபரப்படைதல்*; to be eager, anxious, restless.

[அலம் = சுழற்சி, துன்பம். அலத்தல் = துன்புறுதல். அலம் + அல — அலமல (பொருள் மிகு எதுகை மரபிணைமொழி). இனி, அலம் + மல — அலமல என்றுமாம். மலத்தல் = மயங்குதல்.]

அலமலத்து-தல் *alamalattu-*, 2 பி.வி. (v.caus.) **கலக்கமுறச் செய்தல், மயக்குதல்**; to confuse, confound. "ஆளைப் பகட்டி யலமலத்தி" (பஞ்ச. திருமுக. 1366).

[அலமல (த.வி.) → அலமலத்து (பி.வி.).]

அலமல-த்தல் பார்க்க; see *alamala-*.

அலமலா-த்தல் *alamalā-*, 4 செ.கு.வி. (v.i.) *அலமல-த்தல்* பார்க்க; see *alamala-* (க.அக.).

[அலமல → அலமலா (உ.வ.).]

அலமாப்பு *alamāppu*, பெ. (n.) **துன்பம்;** trouble, distress. "அலமாப்பினிற் பாரிவரு கூத்து" (திருப்பு. 988).

[அலம் + யா → ஆ – அலமா. அலம் = துன்பம். யாத்தல் = கட்டுதல், சேர்தல், பொருந்துதல். அலமா → அலமாப்பு. 'பு' தொ.பெ. ஈறு. 'யா' து.வி. ஒ.நோ: மார் + யாப்பு – மாராப்பு.]

அலமாரி *alamāri*, பெ. (n.) *பேராசையுள்ளவன்* (இ.வ.); covetous, greedy person (Loc.). நீயேன் அலமாரிப் பேயாய்த் திரிகிறாய்?

[ஒருகா. அலைவாரி → அலவாரி → அலமாரி. அலைவாருதல் = அலைத்து (வருத்தி) வாரிக் கொண்டு போதல். வார் → வாரி. 'இ' வி.முத. ஈறு.]

அலமாறு *alamāṟu*, பெ. (n.) *தொந்தரவு, தொல்லை* (இ.வ.); bother, worry, vexation (Loc.).

ம. அலமாறு; தெ. அலமறு.

[ஒருகா. அலம்வா → அலம்வரவு → அலமரவு → அலமாறு. அலம் = துன்பம்.]

அலமான் *alamāṉ*, பெ. (n.) *திப்பிலி* (சங்.அக.); long pepper, *Piper longum*.

[அலகமான் → அலமான்.]

அலகமான் பார்க்க; see *alagamāṉ*.

அலமிளகு *ala-miḷagu*, பெ. (n.) *திப்பிலி*; long pepper, *Piper longum* (சா.அக.).

[ஒருகா. அலைமிளகு = தீவுகளினின்று கடல் கடந்து வரும் மிளகுபோன்ற காரச்சரக்கு. மலைமிளகு × அலைமிளகு.]

அலமுறல் *alam-uṟal*, தொ. பெ. (vbl.n.) *துன்பமடைதல்*; to suffer, to be inflicted, to be in distress, disaster or danger. "தந்தை தாயை யிழந்தல முறுமி னென்னா" (திருவிளை. பன்றி. 7).

[அலம் = துன்பம். உறுதல் = அடைதல். உறு + அல் – உறல். 'அல்' தொ.பெ. ஈறு.]

அலர்-தல் *alar-*, 2 செ.கு.வி. (v.i.) 1. *மலர்தல், பூ விரிதல்;* to blossom, open up, as a flower-bud. "தாமரை யலர்ந்த பூந்தடம்" (நல். பாரத. நகர. 24). 2. *பரத்தல்;* to spread, to expand, to be diffused, as the rays of the Sun, as water. "அலர்தலை மாநிலம்" (நைடத. சிறப்பு. 1). 3. *பருத்தல், பெருத்தல்;* to increase in size, become large. "அலர்முலை யாகத்து" (கலித். 14 : 5). 4. *விளங்குதல், விளங்கித் தோன்றுதல்;* to shine forth, manifest oneself. "ஆழியங் கிழவனா யலரும்" (சூளா. குமார. 43). 5. *சுரத்தல்;* to form, collect, as milk in the breast. "அலர்முலைச் செவிலியம் பெண்டிர்த் தழீஇ" (பெரும்பாண். 250).

ம., க., து. அலர்; தெ. அலரு.

[மலர் → அலர். மலர்தல் = விரிதல், பூ விரிதல், பரத்தல், விளங்குதல்.]

அலர் *alar*, பெ. (n.) 1. *மலர்ந்த பூ* (திவா.); full-blown flower. "அலரின் வண்டுளகத்த லர் பாய்வன" (தணிகை. நாட். 106). 2. *பூமாலை;* flower-garland. "நீயன்று சூட்டலர்" (தஞ்சைவா. 285). 3. (அகப்.) **இரு காதலர் களவொழுக்கத்தைப் பலரறிந்து வெளிப்படையாகக் கூறும் பழிக்கூற்று, சிலரே அறிந்து மறைவாகக் கூறும் 'அம்பல்' என்பதற்கு எதிர்;** (Agap.) the idle and public talk about any two clandestine lovers, dist. fr. *ambal*, the idle and secret talk of a few about the clandestine behaviour of any two lovers. 4. *பழிச்சொல்* (க.அக.); slander, calumny. "அருந்த வந்த புள் ளார்த்தலர் தூற்றுமால்" (நைடத. நகர. 29). 5. *மகிழ்ச்சி* (பிங்.); joy. 6. *நீர்* (பிங்.); water. 7. *மிளகுகொடி;* black pepper vine. 8. *மிளகு* (மலை.); black pepper. 9. *மஞ்சள்;* turmeric.

அலர்-தல் பார்க்க; see *alar-*.

அலர்க்கம்[1] *alarkkam*, பெ. (n.) வெள்ளெருக்கு; white madar, *Calotropis gigantea* (*albiflora*).

ம. அலர்க்கம்; க. அலர்க்க; தெ. அலர்க்கமு.

[எல் = ஒளி, வெள்ளை. ஒ.நோ: எல் → எலும்பு = வெண்தாது. எல் → அல். எருக்கு → எருக்கம் → அருக்கம் → அர்க்கம். அல் + அர்க்கம் – அல்லர்க்கம் → அலர்க்கம்.]

அலர்க்கம்[2] *alarkkam*, பெ. (n.) 1. *ஒருவகைப் புழு;* a kind of germ. 2. *வெறிநாய்;* rabid dog.

ம. அலர்க்கம்; க. அலர்க்க; தெ. அலர்க்கமு.

அலர்க்குறி *alar-k-kuṟi*, பெ. (n.) (அகப்.) **களவொழுக்கத்தில் இரவுக்குறியிடை வந்த தலைவன், தலைவியைக் காணாத நிலையில், தான் வந்ததை அவளறியுமாறு பூவொன்றை அங்கு அடையாளமாக வைத்துச் சென்றது குறிக்கும் அகப்பொருட்டுறை** (தனிப்பா. தி. 2. பக். 167); (Agap.) theme describing the disappointed hero leaving a flower as a sign of his

having waited in vain for the heroine at the appointed place during the night.

[அலர் = பூ. குறி = அடையாளம். அலர்க் குறி = அல்லகுறிப் பட்டவிடத்தில் தலைவன் வைக்கும் பூக்குறி.]

அலர்ச்சி *alarcci*, தொ. பெ. (vbl. n.) **மலர்ச்சி**; process of blooming, blooming.

ம. அலர்ச்ச

[அலர் + சி (தொ.பெ. ஈறு).]

அலர்த்தி *alartti*, தொ. பெ. (vbl.n.) **அலர்ச்சி** பார்க்க; see *alarcci*.

[அலர் + தி (தொ.பெ. ஈறு).]

அலர்த்து-தல் *alarttu-*, 2 பி.வி. (v.caus.) 1. **மலரச்செய்தல்**; to cause to blossom. "பரிதி யலர்த்திடு வதுபோல்" (சி. சி. சுபக். 11 : 8). 2. **விரித்தல்**; to open, expand, unfold. "கரகம லப்போ தலர்த்தித் தாங்கினான்" (திரு விளை. வெள்ளையா. 3).

[அலர் (த.வி.) → அலர்த்து (பி.வி.). 'து' பி.வி. ஈறு.]

அலர்ந்தபூ *alarnda-pū*, பெ. (n.) 1. **மலர்ந்த பூ**; full - blown flower. 2. **கொற்றான்** (மலை.); green thread creeper, *Cassytha filiformis*.

['அலர்ந்த பூ' பெ.எ. தொடர்ச்சொல்.]

அலர்ப்பகம் *alarppagam*, பெ. (n.) **இலாமிச்சை** (பச்.மூ.); cuscus grass.

ஒ.நோ: அலாபதம்

அலர்மகள் *alar-magaḷ*, பெ. (n.) 1. **செந் தாமரை மலர்மேல் வீற்றிருக்குந் திருமகள்**; *Tirumagaḷ* (Lakṣmi), goddess of wealth, seated on a red lotus. "அரைசெய் மேகலை யலர் மக ளவளொடும்" (திவ். பெரியதி. 1 . 2 : 5). 2. **வெண்டாமரை மலர்மேல் வீற்றிருக்கும் கலைமகள்** (க.அக.); *Kalaimagaḷ* (Sarasvati), goddess of learning, seated on a white lotus.

[மலர் → அலர், பொதுச்சொல் சிறப்புப் பற்றித் தாமரையைக் குறித்தது. மக → மகள் = புதல்வி, பெண், பெண்தெய்வம்.]

அலர்மகள் என்பது முதற்கண் திருமகள் பெயராகவே தோன்றி வழங்கிற்று. வண்ண அடைச்சொல் லின்றிப் பொதுச்சொல்லால் வழங்கும்போது, அது கலைமகட்கும் பொருந்துமேனும், வழக்கிற்கு மாறான தாகும். பொதுமக்கள் வழக்கில், 'அலர் மேல்' என்பது இன்றும் திருமகளையே குறிக்கும்.

அலர்முகராகம் *alar-muga-rāgam*, பெ. (n.) **பரத வுறுப்புகளுள் ஒன்று** (சா.அக.); name of a dancing posture (?).

அலர்முலை *alar-mulai*, பெ. (n.) **விம்மிய முலை**; distended breast of a woman, especially through passion (சா.அக.).

[அலர்தல் = பருத்தல். முல் → முலை. முல்லுதல் = முன்வருதல் அல்லது தழுவுதல் (வழக்கற்ற வினை).]

அலர்மேல் *alar-mēl*, பெ. (n.) **அலர்மேல்மங்கை என்பதன் குறுக்கம்**; contraction of *Alarmēl-maṅgai*.

அலர்மேல்மங்கை பார்க்க; see *alar - mēl - maṅgai*.

அலர்மேல்மங்கை *alar-mēl-maṅgai*, பெ. (n.) **செந்தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் திருமகள்**; *Tirumagaḷ* (Lakṣmi), seated on a red lotus. "அலர்மேல் மங்கையுறை மார்பா" (திவ். திருவாய். 6 . 10 : 10).

ம. அலர்மங்க; தெ. அலமேலுமங்க.

[மலர் → அலர். மே → மேல் (இடப்பொரு ளுருபு). மங்கலம் → மங்கலை → மங்கை = 12 முதல் 13 வரைப்பட்ட அகவையளும் மங்கலமான மணப் பருவத்தினளுமான பெண், பெண்டு, பெண்தெய்வம்.]

அலர் என்னும் பொதுச்சொல், சிறப்பு நோக்கித் தாமரைமலரையும் இடம் நோக்கிச் செந்தாமரையையுங் குறித்தது.

அலர்வு *alarvu*, தொ.பெ. (vbl.n.) **அலர்ச்சி** பார்க்க; see *alarcci*.

[அலர் → அலர்வு. 'வு' தொ.பெ. ஈறு.]

அலரவன் *alar-avaṉ*, பெ. (n.) **நான்முகன்** (பிரமன்); *Nāṉmugaṉ* (Brahma), the lotus - born. "அலரவனு மாலவனு மறியாமே யழலுரு வாய்......நின்றதுதா னென்னேடீ" (திருவாச. 12 : 6).

க. அலரிச

[மலர் → அலர். 'அவன்' ஆ.பா. ஈறு.]

அலரி[1] *alari*, பெ. (n.) 1. **பூ** (திவா.); flower. 2. **அழகு** (பிங்.); beauty. 3. **ஒரு பூச்செடி**

(பிங்.); oleander, l.sh., *Nerium odorum*. 4. **நறுமணம்**; fragrance. ''அலரிவாய் கமழக் கூறினான்'' (சீவக. 1618). 5. **ஆற்றுப் பாலை**; willow. 6. **ஒரு மரம்**; a kind of tree. ''பாதிரி யலரி புன்னை'' (சேதுபு. இராமநாத. 55). 7. **தேனீ** (சது.); bee. 8. **நீர்நிலை** (சது.); water tank.

அலரி

ம. அலரி; க. அலர்; தெ. அலரு; து. அரல்.

[*அலர் → அலரி = மலர்ந்த பூ, பூவின் அழகு, பூவினின்று தேனெடுக்கும் ஈ, பூச்செடி, பூமரம், பரந்த நீர்நிலை.*]

அலரி[2] *alari*, பெ. (n.) 1. **தீ, தீத்தெய்வம்**; fire, god of fire. ''சூடுறு மேனிய வலரி தோகையை மாடுறக் கொணர்ந்தனன்'' (கம்பரா. யுத்த. மீட்சிப். 96). 2. **கதிரவன்** (பிங்.); Sun. 3. **கோமாரி**; rinderpest (M. Cm. D. 247.). 4. **கண்வரி** (சூடா.); streaks or lines in the white of the eye. 5. **கோதுமை** (மலை.); wheat.

[*உலர்தல் = காய்தல், எரிதல். உலர் → உலரி → அலரி = நெருப்பு, கதிரவன், சூட்டு நோய், சூடான கூலம்.*]

அலரிச் செடியைப்பற்றியும் அதன் வகைகளைப்பற்றியும் **சா.அக.** கூறுவது வருமாறு :

அலரி ஒரு பூமரம். இது 6 அல்லது 8 அடி உயரமுள்ளது; வெளுத்த சிவப்புப் பூக்கள் பூக்கும். இதைப் பொதுவாகத் தோட்டங்களிலும் ஆற்றங்கரைகளிலும் பார்க்கலாம். இதன் இலையைக் கருக்கிட்டு (கஷாயமிட்டு) வீக்கங்களுக்கு ஒத்தடங் கொடுக்கலாம். இதன் உலர்ந்த இலைகளினின்று ஒருவகைக் களிம்பு செய்து மூட்டுப்பூச்சிக் கடிக்குப் பூசலாம். இதன் பூ பூசைக்குரியது. இதில் அடியிற் கண்டபடி பல வகைகள் உண்டு; a flowering tree, Indian oleander, *Nerium odorum* alias *N. indicum*. It is a large, spreading shrub 6 to 8 ft. high with pale-red fragrant flowers. It is common in gardens and near the banks of rivers, and its flowers are offered to gods. A decoction of the leaves is used for fomenting in cases of swelling. A paste is prepared from the dried leaves and used externally for bugbites. The following are the different varieties:

1. ஆற்றலரி; common Tamarisk, *Polygonum barbatum* alias *Tamarix gallica*.
2. ஈழத்தலரி; pagoda tree or jasmine sponge, *Plumeria acutifolia*.
3. செவ்வலரி; oleander rosebay, *Nerium odorum* (roseum). குங்குமவலரி; same as செவ்வலரி.
4. நீரலரி; water gannair, red shanks, *Polygonum genus*.
5. வெள்ளலரி; Indian oleander, *Nerium odorum* (alba).
6. காட்டலரி; willow-leaved water croton, *Homonoya riparia*.
7. பச்சையலரி, வெளிநாட்டலரி (சீமையலரி) அல்லது மஞ்சளலரி; exile oleander or foreign oleander or yellow oleander, *Theretia nereifolia*.
8. கொத்தலரி; cluster gannair, *Kopsia fruiticosa*.
9. இரட்டை வெள்ளலரி; (double) *Nerium odorum* (*flore pleno-carneo*).
10. இரட்டைச் செவ்வலரி; (double) *Nerium odorum* (*flore pleno-rubro*).

அலரி என்பது உலகவழக்கில் அரலி → அரளி என்று திரிந்துள்ளது.

அலரிக்கண்ணாடி *alari-k-kaṇṇāḍi*, பெ. (n.) **உடும்பின் உகிர் (நகம்)**; the nail of iguana (சா.அக.).

அலரிக்கூடை *alari-k-kūḍai*, பெ. (n.) **சவப் பெட்டி** (புதுவை); coffin (Poṇḍ.).

[*ஒருகா. அலரிப் பிரம்பால் அல்லது வேரால் பின்னிய கூடை.*]

அலரிச்செவி *alari-c-cevi*, பெ. (n.) **ஒருவகைச் செடி** (பச்.மூ.); a kind of plant.

அலரிசபோதம் *alari-šapōdam*, பெ. (n.) **உடும்பு**; double-tongued lizard, iguana, *Lacerta iguana* (சா.அக.).



அலரிசபோதம்

அலரித்தட்டி *alari-t-taṭṭi*, பெ. (n.) **மீன் பிடிக்குங் கூடை வகை** (புதுவை); wicker basket for catching fish (Poṇḍ.).

[அலரிப் பிரம்பாற் பின்னிய தட்டுக்கூடை போலும்! தட்டு → தட்டி.]

அலரிப்பந்தம் *alari-p-pandam*, பெ. (n.) **கட்டு நார்** (புதுவை); withe (Poṇḍ.).

[அலரி + **Skt.** bandha > **த.** *பந்தம் = கட்டு.]*

அலரிவிழுந்தலையழுவாள் *alari-viḻundalai-y-aḻuvāḷ*, பெ. (n.) **குண்டுப்பனை**; a kind of male palmyra, *Borrassus flebellifer* (சா.அக.).

[இதன் மூலந் தெரியவில்லை. ஒருகா. அலறி விழுந்து தலைவிரித்தழுவாள் போன்ற தோற்ற முடையதோ?]

அலரிவேர் *alari-vēr*, பெ. (n.) **அலரிச்செடியின் வேர்**; the root of Indian willow (சா.அக.).

இது கடுநஞ்சு. தற்கொலை புரிபவர் இதை யரைத்து (நல்லெண்ணெயிற் கலந்து) உட்கொள்வது வழக்கம்.

அலவல் *alaval*, பெ. (n.) 1. **பெண்டிரின் கற்பில்லா வொழுக்கம் (வியபிசாரம்)**; adultery. "அவமறைந் தொழுகும் அலவற் பெண்டிர்" (சிலப். 5 : 129). 2. **இழைவிலக்கமாய் நெய்யப்பட்டது** (யாழ்ப்.); that which is loosely woven (J.).

ம. அலவல

[அலை → அலைவு → அலவு → அலவல்.]

அலவலை[1] *alavalai*, பெ. (n.) 1. **மனக்கலக்கம்**; confusion of mind, agitation, distress. "அலவலை யுடையை யென்றீ தோழி" (கலித். 122 : 6). 2. **ஆராயாது செய்வது**; hasty action. "அலவலைச் செய்திக் கஞ்சினேன்" (மணிமே. 17 : 51).

ம. அலவன்

[அலவல் → அலவலை.]

அலவலை[2] *alavalai*, பெ. (n.) **விடாது பேசுவோன்**; babbler. "அல்லவை செய்யும் அலவலை" (திரிகடு. 99).

[அல → அலப்பு. அல → அலவு → அலவல் → அலவலை.]

அலவலைமை[1] *alavalaimai*, பெ. (n.) **ஆராயாது செய்கை**; rash action.

[அலவலை[1] *→ அலவலைமை.]*

அலவலைமை[2] *alavalaimai*, பெ. (n.) **மிகுதியாகப் பேசுகை**; babbling, talking excessively. "சிசுபாலன் றன்னை யலவலைமை தவிர்த்த வழகன்" (திவ். பெரியாழ். 4 . 3 : 5).

[அலவலை[2] *→ அலவலைமை.]*

அலவறை *alavaṟai*, பெ. (n.) **உண்பதிற் பரபரப்பு, அவக்காச்சி** (நாஞ்.); voracity, ravenousness, greediness in eating (Nāñ.).

ம. அலன்ன

[அலத்தல் = கிடையாத வுணவின்மேல் அளவிறந்த ஆசைகொண்டிருத்தல். அல → அலவு. அறை = அடி. அலவறை = ஆசைத்தாக்கு, பரபரப்பு, அவக்காச்சி.]

அலவன்[1] *alavaṉ*, பெ. (n.) 1. **நிலா** (பிங்.); Moon. 2. **பூனை** (பிங்.); cat.

[அல் = இரவு. அல் + அவன் (ஒருமை யீறு) – அல்லவன் → அலவன் = இரவில் ஒளி தரும் நிலா. ஒ.நோ: அல்லோன் = நிலா. அலவன் = சிறப்பாக இரவில் வழங்கும் பூனை.]

அலவன்[2] *alavaṉ*, பெ. (n.) 1. **ஆண் நண்டு** (பிங்.); male crab. 2. **நண்டு**; crab. "ஆடு மலவனை யன்ன மருள்செய" (சீவக. 516). 3. **கடகவோரை** (கர்க்கடக ராசி) (திவா.); cancer of the zodiac.

ம. அலகம்

[அலம் = கொடுக்கு. அலம் → அலவு → அலகு = வளைந்த குறடு. அலவு → அலவன் = குறடு போன்ற முன்னங்கால்களையுடைய நண்டு. 'அன்' ஈறு ஆண்பாலைச் சிறப்பாகக் குறிக்க ஏதுவாயிற்று. ஒ.நோ: கடுவன் = ஆண் குரங்கு. கடகவோரை நண்டு வடிவினது.]

அலவன்[3] *alavaṉ*, பெ. (n.) **இஞ்சி**; ginger (சா.அக.).

[அல்லம் = இஞ்சி. அல்லம் → அலம் = இஞ்சி. அலம் → அலமன் → அலவன். 'அன்' ஈறு.]

அலவாங்கு *alavāṅgu*, பெ. (n.) **கடப்பாரை** (யாழ்ப்.); crow-bar (J.).

ம. அலவாங்கு

[அலவு = அலகு. வாங்கு = இழுப்பு, இழுப்பது. அலவு + வாங்கு – அலவாங்கு = நெம்புதடிபோலப் பயன்படும் (காக்கை யலகு போன்ற முனையுடைய) இருப்புக் கம்பி.]

அலவாட்டு *alavāṭṭu*, பெ. (n.) **வழக்கம்** (வின்.); custom, practice.

தெ. அலவாட்டு

அலவாரி *alavāri*, பெ. (n.) பேராசைக்காரன் - காரி (புதுவை); covetous person (Pond.).

[அலத்தல் = ஏங்குதல், அதிக ஆசைப்படுதல். அல → அலவு. ஆர்தல் = நிறைதல். அலவாரி = ஆசை நிறைந்தவன். 'இ' வி.முத. ஈறு.]

மறுவ. அலமாரி

அலவான் *alavān*, பெ. (n.) பல்லாங்குழி யாட்டத்தில் ஒரு குழியிற் கூடுங் காய்கள்; seeds accumulated in a pit in the *pallānguḻi* game.

[ஒருகா. அள்ளுவான் → அலவான். ஆட்டத்தில் வெல்பவர் குழியிற் சேர்ந்துகிடக்குங் காய்களை யெல்லாம் அள்ளிக்கொள்வது முறை.]

அலவு-தல் *alavu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. வருந்துதல்; to be troubled in mind. "அன்பனைக் காணா தலவுமென் னெஞ்சன்றே" (சிலப். 18 : 17). 2. சிந்துதல்; to spill. "அலவு நுண்டுளி யருவிநீர்" (கம்பரா. அயோத். சித்திர. 25).

க., தெ. அலவு.

[அல்லுதல் = அசைதல், வருந்துதல், செல்லுதல், நீங்குதல், சிந்துதல். அல் → அலம் = துன்பம். அலம் → அலவு.]

அலவு *alavu*, பெ. (n.) மனத்தடுமாற்றம்; confusion, perturbation. "ஆதுல மாக்களு மலவுற்று விளிப்ப" (மணிமே. 4 : 42).

அலவு-தல் பார்க்க; see *alavu-*.

அலவை[1] *alavai*, பெ. (n.) விடாது பிதற்றுபவள்; a woman who chatters ceaselessly. "மாய வலவை சொற்கொண்டு" (திவ். திருவாய். 4 . 6 : 4).

[அலத்தல் = அசைத்தல், வாயசைத்தல். அல → அலப்பு. அலுப்புதல் = வீண்பேச்சுப் பேசுதல், பிதற்றுதல். அல → அலவை.]

அலவை[2] *alavai*, பெ. (n.) கற்பின்மை (வியபிசாரம்); adultery. "அவமறைந் தொழுகும் அலவைப் பெண்டிர்" (சிலப் . 5 : 129, அரும்.).

[வலவை = நாணிலி. வலவை → அலவை.]

அலற்று-தல் *alaṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) இடைவிடாமலும் முறையின்றியும் பேசுதல்; to talk unceasingly and with impropriety. (திவ். திருவாய். 1 . 3 : 10) (செ.அக.).

[ஆயின், "அயர்ப்பிலன் அலற்றுவன் தழுவுவன் வணங்குவன் அமர்ந்தே" (திவ். திருவாய். 1 . 3 : 10) என்னும் அடியிலுள்ள 'அலற்று' என்னும் வினைச்சொலிற்கு, சே. கிருட்டிணமாசாரியார் பதிப்பில் அழுதற்பொருள் குறிக்கப்பட்டுள்ளது. அதுவே பொருத்தமாகவுந் தோன்றுகின்றது.]

அலறல் *alaṟal*, பெ. (n.) திரண்டவோசை (பிங்.); loud cry, great sound.

ம. அலர்ச்ச

அலறு[1]-தல் பார்க்க; see *alaṟu*[1]-.

அலறி[1] *alaṟi*, பெ. (n.) நாகணம் என்னும் ஒரு நறும்பண்டம் (வை.மூ.); *nāganam*, an aromatic substance.

அலறி[2] *alaṟi*, பெ. (n.) உகிர் (நகம்); finger-nail (சா.அக.).

அலறு[1]**-தல்** *alaṟu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. அச்சத்தால் திடுமென்று கதறுதல்; to cry aloud due to sudden fright. 2. உரத்தழுதல்; to weep aloud, cry from sorrow. "பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியும்" (திருவாச. 2 : 134). 3. மிக்கொலித்தல்; to vociferate, roar. "அலறுஞ் சிறுவெண் சங்கும்" (சீவக. 2195). 4. ஆடுமாடு ஆந்தை முதலியன கதறுதல்; to bellow, bleat, hoot.

ம. அலறு

[அல் → அலம் → அலர் → அலறு. அலறுதல் = துன்பத்தாற் கதறுதல். இனி, ஒலிக்குறிப்பு என்றுமாம். ஒல் → ஒலி. ஒல் → அல் → அலறு.]

அலறு[2]**-தல்** *alaṟu-*, 5 செ.கு.வி. (v.i.) விரிதல்; to spread out, branch. "அலறுதலை யோமை" (ஐங்குறு. 321).

ம. அலருக; க. அலர்; தெ. அலரு; து. அலருனி.

[மலர் → அலர் → அலறு.]

அலறுசன்னி *alaṟu-šanni*, பெ. (n.) படுத்திருக்கும்போது அடிக்கடி திடுமென அலறியெழுந்துட்காரச் செய்யும் ஒருவகை இசிவுக்காய்ச்சல் (சா.அக.); raving delirium. "அலறு சன்னியோ டின்னல்வெம் பிணியர்" (கடம்ப. பு. இலீலா. 127).

[அலறு + Skt. sanni. Skt. sanni-pāta > த. சன்னி.]

அலறுபித்தம் *alaṟu-pittam*, பெ. (n.) கூச்சலிடும் ஒரு பித்தநோய்; a bilious disease accompanied by loud cries (சா.அக.).

அலன்றல் *alanṟal*, தொ. பெ. (vbl.n.) **சாதல்** (சா.அக.); dying—**சாவு** (இராட்.); death.

[அழன் = பிணம். ஒருகா. அழன் → அழன்று → அழன்றல் → அலன்றல் = பிணமாதல், சாதல்.]

அலாடம் *alāḍam*, பெ. (n.) **கஞ்சா**; Indian hemp, *Cannabis sativa* (சா.அக.).

அலாதிகழ் *alādigaḻ*, பெ. (n.) **சிவநெறித் திருவைந்தெழுத்து மந்திரத்தின் உறுப்பான வகரம்**; *va*, one of the letters of the *tiruvain-deḻuttu* (pañjākṣara) mantra of Śaiva religion (சா.அக.).

அலாபதம் *alāpadam*, பெ. (n.) **இலாமிச்சை** (மலை.); cuscus grass.

அலாரி *alāri*, பெ. (n.) **அலரி** (மலை.); oleander.

மறுவ. அலாரிதா

அலாரி-த்தல் *alāri-*, 4 செ.கு.வி. (v.i.) **நடனத் தொடக்கப்பாட்டைப் பாடுதல்**; to sing the opening song in a dance programme.

அலாரிதா *alāridā*, பெ. (n.) **அலாரி** பார்க்க; see *alāri* (மலை.).

அலாரிப்பு *alārippu*, பெ. (n.) (நடம்.) **'தாஅம் தித்தாஅம் க்ருதக தைஇ' என்னும் நடனத் தொடக்கப்பாட்டுச் சொற்கட்டு**; (Dan.) opening song in a dance programme.

ம. அலாரிப்பு

அலாருகம் *alārugam*, பெ. (n.) **பெருங்களா**; large corandah, *Carissa carandas* (*typica*) (சா.அக.).

அலி[1] *ali*, பெ. (n.) 1. **ஆணும் பெண்ணுமல்லாது இரண்டிற்கும் பொதுவான மாந்தப் பிறவி**; hermaphrodite, person who is neither man nor woman wholly. "ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியு மல்லன்" (திவ். திருவாய். 2.5:10). பெண்ணிலும் ஆணிலும் சேராத உறுப்பை யுடைய மாந்தப்பிறவி. இது ஆணலி, பெண்ணலி என இருவகைப் படும். ஆணுருவ மிகுந்திருந்தால் ஆணலி யென்றும், பெண்ணுருவ மிகுந்திருந்தால் பெண்ணலியென்றும் சொல்வதுண்டு; an individual in whom will be found the co-existence of the ill-developed organs of both sexes, *i.e.*, ovaries and testicles or at least one of the each glands—*Hermaphrodite*. Hermaphroditism is of two kinds according to the structural formation and development in the reproductive or sexual organs. If the male organ is more developed the individual is called the male or he-hermaphrodite and if the female organ is developed more, the individual is called the female or she-hermaphrodite. 2. **பேடி**; an impotent man (சா.அக.). 3. **விதையில்லாத மாந்தன்**; a man deprived of testes, *eunuch* (சா.அக.).

ம. அலி

[அல் → அலி = ஆணும் பெண்ணும் அல்லாதது.]

அலி[2] *ali*, பெ. (n.) **வயிரமில்லாத மரம்**; a tree, the wood of which is soft in its central core, pithy tree (சா.அக.).

[ஆண்மையில்லாத மாந்தன்போன்று வயிரமில்லாத மரம்.]

அலி[3] *ali*, பெ. (n.) **நறுவிலி** (பிங்.); common sebesten, *Cordia obliqua* (சா.அக.).

அலி[4] *ali*, பெ. (n.) **சோறு** (அக.நி.); boiled rice.

[அரி = அரிசி, சோறு. அரி → அலி.]

அலிக்கிரகம் *ali-k-kiragam*, பெ. (n.) **நொதுமலான (பொதுப்பட்ட) அறிவன், காரி என்னும் கோள்கள்** (சாதகா. 56, உரை); neutral planets as Mercury or Saturn.

[அல் → அலி = இரண்டுமெல்லாது இடைப்பட்டது.]

இனி, அலிக்கோள் என்றே வழங்குதல் வேண்டும்.

அலிக்கை *ali-k-kai*, பெ. (n.) (நடம்.) **அலிச் செயல் காட்டும் நளிநயக்கை (அபிநயக்கை)**; (Dan.) dance with hand gestures that express the feelings of a hermaphrodite.

இன்னும் (ஒருசாரார்) ஒற்றைக்கை இரட்டைக்கை யென்னுமிவற்றை, இவ்வகையோடும் ஆண்கை, பெண்கை, அலிக்கை, பொதுக்கை யென்னும் நான்கினையும் கூட்டி ஆறென்பாருமுளர். என்னை? "............. மொழிநரு முளரே" (சிலப். 3 : 18, அடியார்க். உரை).

"சர்ப்பசிரம் வண்டு தனிமுகுளங் கத்தரிகை
விற்பனஞ்சேர் கோசங்க வித்தமுடன்—
அற்புதமே
ஆகு மலிக்கைக ளாறென் றுரைப்பரே
பாகனைய சொல்லாய் பரிந்து"

(சிலப். 3 : 18, அடியார்க்.உரை-அடிக்குறிப்பு).

அலிகை *aligai*, பெ. (n.) **நாணல்**; kaus, a large and coarse grass, l. sh., *Saccharum spontaneum*.

அலித்தூர்வம் *alittūrvam*, பெ. (n.) ஒரு பூடு; the name of a plant (சா.அக.).

அலிநாள் *ali-nāḷ*, பெ. (n.) *மான்றலை (மிருக சீரிடம்) செக்கு (சதயம்) நாண் மீன்கள்* (சோதிட சிந். 38); the 5th and the 24th lunar asterisms.

[அலிபோன்று பொதுத்தன்மையுடைய நாண் மீன்.]

அலிப்பான் *ali-p-pāṉ*, பெ. (n.) வெடியுப்பு (பச்.மூ.); saltpetre.

அலிப்புண் *ali-p-puṇ*, பெ. (n.) *நாறும் புண்*; a foul smelling sore or wound, gangrene.

அலிப்பேடு *ali-p-pēḍu*, பெ. (n.) **கண்ணன் ஆடிய அல்லியக்கூத்து**; a dance of Kriṣṇa. 'அல்லிய மென்பதனை அலிப்பே டென்பாருமுளர்' (சிலப். 6 : 48, அடியார்க். உரை).

அலிமகம் *alimagam*, பெ. (n.) *பெண்களைத் தாக்கும் ஒருவகைச் சோகைநோய்*; anaemia accompanied by nervous disturbances, chlorosis.

அலிமரம் *ali-maram*, பெ. (n.) *1. வயிரமில்லாத மரம்* (பிங்.); tree with soft, pithy core. 2. *பாலும் நாருமுள்ள மரம்*; a tree with milky juice and fibres (சா.அக.).

து. அலிமர்

[அல் → அலி = வயிரமில்லாதது.]

அலியர் *aliyar*, பெ. (n.) 1. பேடிகள் (சா.அக.); impotent men. **2.** *ஆணிலும் பெண்ணிலும் சேராதவர்*; hermaphrodites.

அலியன் *aliyaṉ*, பெ. (n.) *செங்கடுக்காய்*; a red variety of chebulic myrobalan, *Terminalia chebula* (சா.அக.).

அலியன்குறிஞ்சி *aliyaṉ-kuṟiñji*, பெ. (n.) *செந்தொட்டி*; climbing nettle, *Tragia involucrata* (சா.அக.).

அலியாநிலை *aliyā-nilai*, பெ. (n.) *சலியாத நிலை*; immovable or unalterable state. "அலியா நிலைநிற்கு மைய னையாறன்" (தேவா. 4 . 92 : 20).

[அல் → அலி. அலித்தல் = அசைதல். அல் → சல் → சலி. அல் → அலை → அசை.]

அலியெழுத்து *ali-y-eḻuttu*, பெ. (n.) 1. **ஆய்தம்**; the letter ஃ, as being regarded neither a vowel nor a consonant. "ஆய்தம்பே டாகும்" (வெண்பாப். முதன்மொ. 6). **2. மெய்யெழுத்து** (பிங்.); consonant.

"எண்ணுங் குறிலாண் இயைந்த
நெடிலெல்லாம்
பெண்ணாகும் ஒற்றாய்தம் பேடாகும்"
(வெண்பாப். முதன்மொ. 6).

[அல் → அலி = ஆணும் பெண்ணும் அல்லாத எழுத்து.]

அலு-த்தல் *alu-*, 4 செ.கு.வி. (v.i.) **களைத்தல், சோர்தல்**; to be tired, weary, fatigued by overwork or long journey.

க. அல; தெ. அலயு.

[அல் → அலு.]

அலுக்கு-தல் *alukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **சிறிது அசைத்தல்**; to shake slightly. நான் கையெழுத்துப் போடும்போது என் தூவலை (pen) அலுக்கிவிட்டான் (உ.வ.). 2. **பாடும் போது குரலை இனிமையாக வுருட்டுதல்**; to sing with graceful nuances in melody. தியாகராச பாடகர் நன்றாய் அலுக்கிப் பாடுவார் (உ.வ.). 3. **பிலுக்குப் பண்ணுதல்** (வின்.); to strut, swagger.

அலுக்கிக்குலுக்கி *alukki-k-kulukki*, வி.எ. (adv.) 1. **ஆட்டியசைத்து**; shaking frequently and violently. வண்டி வழிநெடுக எங்களை அலுக்கிக்குலுக்கி அலைக்கழித்துவிட்டது (உ.வ.). 2. **வேண்டுமென்று அசைத்துப் பிலுக்குப்பண்ணி**; making a wanton display by shaking. தன் புது நகையைக் காட்டவேண்டு மென்று காதை அலுக்கிக்குலுக்கி நடந்து வந்தாள்.

ம. அலுக்குக

[அல் → அலு → அலுங்கு (த.வி.) → அலுக்கு (பி.வி.). அலுங்குதல் = அசைதல்.]

அலுக்குத்து *alu-k-kuttu*, பெ. (n.) **முகம்மதியப் பெண்டிர் காதணி**; an ear-ornament of Mohammedan women.

ம. அலுக்குத்து

[அள் = காது. குத்து = குத்திய கம்பிநகை. அள்குத்து → அலுக்குத்து.]

அலுக்குலை-தல் *alukkulai-*, 2 செ.கு.வி. (v.i.) ***சீர்கெடுதல்*** (வின்.); to become disorganised, to get out of order.

ம. அலுக்குலுக்கு

[ஒருகா. அடுக்குக்குலை → அடுக்குலை → அலுக்குலை.]

அலுங்கு *aluṅgu*, பெ. (n.) ***மணிமுடி (கிரீடமகுடம்) யென்னும் மகுடவகையிற் செதிள்போன்ற மலரணி யுறுப்பு***; fin-like ornamental floral design forming part of *maṇimuḍi*, a variety of royal crown. 'நான்கு பூரிமங்களோடு கூடிய தாகவும் திரண்ட பகுதியில் **அலுங்கு** எனப் படும் செதிள்போன்ற மலர் அணிகளை உடையதாகவும்............இருத்தல் வேண்டும்' (சி. செ. பக். 87-88).

[அல் → அலு → அலுங்கு.]

அலுங்கு-தல் *aluṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) ***சிறிது அசைதல்***; to shake slightly or gently. காற்றில்லாமல் ஈ யாடவில்லை; இலையலுங்க வில்லை (உ.வ.).

ம. அலுங்ஙுக; க. அலகு, அலுங்கு; தெ. அலகு; து. அலங்குனி.

[அல் → அலு → அலங்கு. அலுத்தல் = அசைதல், தளர்தல்.]

அலுசிலும்பல் *alušilumbal*, பெ. (n.) ***குழப்பம்*** (யாழ்ப்.); disorder, derangement, confusion (J.).

[ஒருகா. அலைசிலும்பல் (அலைகலங்கல்) என்பது மூலமாயிருக்கலாம்.]

அலுத்துப்புலுத்து *aluttu-p-puluttu*, வி.எ. (adv.) ***மிகவும் களைத்து***; extremely tired. பகல் முழுவதும் வேலைசெய்து அலுத்துப்புலுத்துப் போனான். நாள் முழுவதும் வழிநடந்து அலுத்துப்புலுத்து வந்து சேர்ந்தான்.

அலுப்பு *aluppu*, தொ.பெ. (vbl.n.) ***சோர்வு, அயர்வு, தளர்வு***; weariness, exhaustion.

ம., க., தெ. அலுப்பு.

அலுப்புநித்திரை *aluppu-nittirai*, பெ. (n.) ***அலுப்புறக்கம்*** பார்க்க; see *alupp(u)-uṟakkam* (சா. அக.).

அலுப்புறக்கம் *alupp(u)-uṟakkam*, பெ. (n.) 1. ***உடம்புச் சோர்வினா லேற்பட்ட தூக்கம்***; sleep through fatigue. 2. ***ஆழ்ந்த தூக்கம்***; deep sleep.

அலுவல் *aluval*, பெ. (n.) ***வேலை***; engagement, business, occupation, employment, affair. "சமய மிதுவென் றலுவலிட்டு" (மீனாட். பிள்ளைத். 72).

ம. அலுவல்

[அலுத்தல் = களைத்தல். அலு → அலுவல் = களைக்குமளவு உழைக்கும் வேலை, வேலை, பதவி.]

அலுவலுவெனல் *alu-v-alu-v-eṉal*, தொ. பெ. (vbl.n.) ***அலப்பற்குறிப்பு*** (வின்.); unceasing chatter.

[அல் → அல → அலப்பு. அல் → அலு → அலுவலு (இரட்டைக்கிளவி). எனல் (என் + அல்) = எனச் சொல்லுதல்.]

அலுவீகம் *aluvīgam*, பெ. (n.) ***வில்வம்*** (மலை.); bael (செ.அக.) — sacred lingam tree or holy garlic pear, *Crataeva religiosa* alias *Aegle marmelos* (சா.அக.).

அலூகம் *alūgam*, பெ. (n.) ***அலுவீகம்*** பார்க்க; see *aluvīgam* (பச்.மூ.).

[அலுவீகம் → அலூகம்.]

அலூரமாமுகம் *alūramāmugam*, பெ. (n.) ***புல்*** (பச்.மூ.); grass.

அலை[1]-தல் *alai-*, 2 செ.கு.வி. (v.i.) 1. ***அசைதல்***; to wave, shake, play in the wind, move, as a reflection in water. "அலைந்தன நாகம்" (கந்தபு. யுத்த. முதனாட். 50). 2. ***தள்ளாடுதல்*** (வின்.); to stagger, totter. 3. ***திரிதல்***; to roam, wander, go here and there in search of an object. "புசிப்புக் கலைந்திடல்" (தாயு. சித்தர். 5). 4. ***வருந்துதல்*** (வின்.); to be harassed, to wander in weariness.

ம. அல, அலயுக; க., து., பட. அலெ; தெ. அல; கோத. அல்த்; நுட. அல்க்.

[அல் → அலை.]

அலை[2]-த்தல் *alai-*, 4 செ.கு.வி. (v.i.) ***அலை மோதுதல்***; to dash, as waves. "அலைக்கு மாழி" (கம்பரா. ஆரணிய. சூர்ப்ப. 75). —, 4 செ.குன்றாவி. (v.t.) 1. ***அசைத்தல்***; to shake, move. "காலலைத் தலைய வீழ்ந்து" (திருவிளை. பழியஞ். 8). 2. ***அலையச் செய்தல்***; to cause to wander back and forth, drive hither and thither. 3. ***அடித்தல்***; to beat, slap. "ஊதையஞ் சேர்ப்பனை யலைப்பேன் போலவும்" (கலித். 128 : 19). 4. ***அடித்துப்***

பறித்தல்; to rob on the highway. ''வன்கண்ண ராட்டிவிட் டாறலைக்கு மத்தம்'' (ஐந்திணை ஐம். 34). 5. வருத்துதல்; to harass, vex, annoy, afflict. ''பெருமுலை யலைக்குங் காதின்'' (திருமுரு. 50). 6. நிலைகெடுத்தல்; to disorganize, reduce to poverty. ''ஆனிரை முழுவது மலைத்து'' (கந்தபு. ஆற்று. 16). 7. உருட்டுதல்; to roll down. ''தேறல் கல்லலைத் தொழுகு மன்னே'' (புறநா. 115 : 3-4).

ம. அலய்க்குக

[அலைதல் (த.வி.) → அலைத்தல் (பி.வி).]

அலை[1] *alai*, பெ. (n.) 1. நீர்த்திரை (பிங்.); wave, billow, ripple. 2. நீர்; water. 3. கடல்; sea. ''அலைவளம் பெரிதென்கோ'' (நைடத. நாட்டு. 22). 4. மிகுதி (சூடா.); abundance, fullness.

ம., தெ. அல; க., து. அலெ; G. welle; Arm. alik.

அலை[2]-த்தல் பார்க்க; see *alai*[2]-.

[அல் → அலை.]

அலை[2] *alai*, பெ. (n.) 1. கண்டனம்; hostile criticism. ''அலைபலவே யுரைத்தாளென் றருகிருந்தோர் கருதுதலும்'' (நீலகேசி, 204). 2. வருத்துகை; injury, oppression. ''உறுப் பறை குடிகோள் அலைகொலை'' (தொல். பொருள். மெய்ப். 10). 3. கொலை (பிங்.); murder.

[அல் → அலை.]

அலை[1]-தல் பார்க்க; see *alai*[1]-.

அலை[3] *alai*, பெ.(n.) 1. அலையடித் தொதுக்கிய கருமணல் (சா.அக.); black sand washed ashore by the waves. 2. மது; sweet liquor. 3. ஞாலம் (பூமி); Earth.

இப் பொருள்கட்கு சா.அக. ஆசிரியர் சான்று காட்டவில்லை.

அலை[1]-தல் பார்க்க; see *alai*-[1].

அலைக்கழி[1]**-தல்** *alaikkaḻi-*, 3 செ.கு.வி. (v.i.) அலைந்து வருந்துதல்; to suffer wandering here and there in search of work, be vexed by repeated disappointments. ''ஐம்பூதத் தாலே யலைக்கழிந்த தோடமற'' (தாயு. எந்நாட். தத். 1).

[அலைக்க + அழிதல் (நோதல், வருந்துதல்).]

அலைக்கழி[2]**-த்தல்** *alaikkaḻi-*, 4 செ.குன்றாவி. (v.t.) அலைத்து வருத்துதல்; to put one to continued trouble, to make one tramp up and down for nothing.

[அலைக்கழிதல் (த. வி.) → அலைக்கழித்தல் (பி.வி.).]

அலைக்கழிவு *alaikkaḻivu*, பெ. (n.) அலைந்து வருந்தும் வருத்தம்; continued trouble, labour attended with repeated disappointments.

[அலைக்க + அழிவு.]

அலைகல் *alai-kal*, பெ. (n.) கரையை நீர் கரைக் காதபடி அமைக்குங் கல்; stone-facing, to protect the banks of tanks and water-courses.

[அலைமோதுங்கல் = அலைகல்.]

அலைகாற்று *alai-kāṟṟu*, பெ. (n.) பெருங்காற்று (இராட்.); fierce wind, tempest. அலைக்கும் (வருத்தும்) காற்று அலைகாற்று.

அலைகுலையாக்கு-தல் *alaikulai-y-ākku-*, 5 செ. குன்றாவி. (v.t.) நிலைகுலையச் செய்தல்; to ruin, destroy completely. ''கயிலை தன்னை ......தாக்கினான் தன்னையன்று அலைகுலை யாக்குவித்தான்'' (தேவா. 4 . 59 : 4).

[அலைதல் = தள்ளாடுதல். குலைதல் = அழி தல். 'அலைகுலை' அழிவுப்பொருளை மிகுத்துக் காட்டும் மரபிணைமொழி. ஆகு (த.வி.) → ஆக்கு (பி.வி.).]

அலைகொள்(ளு)-தல் *alaikoḷ(ḷu)-*, 16 செ.கு.வி. (v.i.) கலக்கமுறுதல், துன்புறுதல்; to be agitated, harassed. ''காமன் கணைகொண் டலை கொள்ளவோ'' (திருக்கோ. 90).

[அலை → அலைவு.]

அலைச்சல் *alaiccal*, பெ. (n.) தொ.பெ. (vbl.n.) 1. அலைந்து திரிகை; wandering. 2. தொந் தரவு; weariness, vexation.

ம. அலயுக; க. அலெத; து. அலசல்; பட. அலெச்சல்.

[அலை + சல் (தொ.பெ. ஈறு).]

அலைசடி *alaiśaḍi*, பெ.(n.) 1. சோர்வு; fatigue, lassitude. 2. தொந்தரவு; trouble.

க. அலெத; தெ. அலஜடி.

[அலைசு (கசக்கு) + அடி (தாக்கு).]

அலைசல் *alaiśal*, பெ. (n.) 1. அலைகை (திவா.); wandering. 2. தளர்வு; fatigue. 3.

சோம்பல் (திவா.); laziness. 4. **துன்பம்** (வின்.); affliction.

ம. அலச; க. அலசிகெ; தெ. அலசட்; கொலா. அலய்; து. அலசல்; **Pali, Sinh.** alasa.

[அலை → அலைதல் → அலைசல். ஒ. நோ: வளைதல் → வளைசல். இனி, அலையல் → அலைசல் என்றுமாம்.]

இது அ-லஸ என்னும் வடசொல்லின் திரிபன்று. அலைச்சலால் தளர்ச்சியும் தளர்ச்சியால் சோம்பலும் உண்டாவது இயற்கையே.

அலைசு-தல் *alaišu-*, 5 செ.கு.வி. (v.i.) **சோம்புதல்** (பிங்.); to be lazy. —, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **ஆடையைக் கசக்கிக் கழுவுதல்**; to wash clothes, rinse. 2. **குலுக்குதல்;** to shake. தண்ணீர்விட்டு அலைசிக் குடி. 3. **பேச்சில் வெல்லுதல், நாவெழாதவாறு கலக்கடித்தல்;** to discomfit one in debate, to confound by powerful arguments. அவனைப் பேச்சில் அலைசிவிட்டான்.

க. அலசு; து. அலசுனி.

[அல் → அலை → அலைசு.]

அலைசோலி *alai-šōli*, பெ. (n.) **தொந்தரவு** (யாழ்ப்.); trouble, annoyance, vexation (J.).

[அலை = அலைச்சல். சோலி = வேலை.]

அலைத்துக்குலைத்து *alaittu-k-kulaittu*, வி.எ. (adv.) **கட்டவிழுமாறு ஆட்டியசைத்து**; having made a mess by constant shaking. அந்தப் பொத்தகக் கட்டை அலைத்துக்குலைத்துக் கொண்டுவந்து சேர்த்தான்.

[அலை → அலைத்து (இ.கா.வி.எ.). குலை → குலைத்து (இ.கா.வி.எ.). 'அலைத்துக்குலைத்து' பொருளை மிகுத்துக் காட்டும் எதுகை மரபிணைமொழி.]

அலைதாங்கி *alai-tāṅgi*, பெ. (n.) **அலையைத் தடுக்கும் செய்கரை அல்லது கற்சுவர்** (C.G.); breakwater.

[அல் → அலை. தாங்கு → தாங்கி. 'இ' வி. முத. ஈறு.]

அலைதாடி *alai-tāḍi*, பெ. (n.) **ஆட்டின் அல்லது மாட்டின் கழுத்தில் கீழ்ப்பகுதியில் தொங்கும் தசை மடிப்பு**; dewlap, excrescence found under the necks of cattle.

[அலை = அசைகின்ற. தாடி = தாடிபோல் தொங்கும் தசை. 'அலைதாடி' வினைத்தொகை.]

அலைதாரை *alai-tārai*, பெ. (n.) **நீர்மட்டத்தின் அளவுகாட்டும் கரைப்பக்கக் குறி** (C.G.); watermark, mark left on the side of the bank or wall by constant dashing of water.

[அலை = நீரலை. தார் → தாரை = நீண்ட வரை.]

அலைத்தாரை யென்று வலிமிகுப்பது பொருத்தம்.

அலைதிகுலைதி *alaidi-kulaidi*, பெ. (n.) **குலைந்த நிலை;** disturbed or confused condition, as that of dishevelled hair. 'மயிர்முடி அலைதிகுலைதியாய்ப் பேணாதே போக' (திவ். பெருமாள்தி. 6 : 3, வியா.).

ம. அலதி

[அலை → அலைதி (தொ.பெ.). குலை → குலைதி (தொ.பெ.). 'தி' தொ.பெ. ஈறு. 'அலைதி குலைதி' பொருளை மிகுத்துக்காட்டும் எதுகை மரபிணைமொழி.]

அலைப்பு *alaippu*, தொ.பெ. (vbl.n.) 1. **அசைக்கை;** shaking, moving. 2. **வருத்தம்;** distress, trouble. "அரிய செய்கையி லவனியில் விழுந்தெழுந் தலைப்புறும் மனைவாழ்க்கை" (பெரியபு. வெள்ளானை. 29).

க. அலெபு

[அலை → அலைப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

அலைமகள் *alai-magaḷ*, பெ. (n.) **திருமகள்** (பிரமோத். 7 : 26); *Tirumagaḷ* (Lakṣmi), born in the sea of milk.

[அலை = கடல். மகள் = பெண், திருமகள். திருப்பாற்கடலில் பிறந்தவள் என்பது தொன்மக் கதை.]

அலையல் *alaiyal*, பெ. (n.) 1. **திரிதல்;** wandering, waving. "அங்குமிங்குநின் றலையலாமோ" (தாயு. பரா. 321). 2. **சோர்வு** (பதிற்றுப். 50 : 21, உரை); languishing, drooping, swooning. 3. **சோம்பல்** (நாநார்த்த.); laziness.

க. அலெத

[அல் → அலை → அலையல்.]

அலையிற்றிரண்டதீபம் *alaiyiṟ-ṟiraṇḍa-tībam*, பெ. (n.) **கடல்நுரை**; sea-froth (சா.அக.).

[அலை → அலையில் (இடவேற்றுமை யேற்ற பெயர். 'இல்' 7ஆம் வே.உ. திரள் →

திரண்ட (இ. கா. பெ. எ.). தீய் → தீய்வு → தீவம் > **Skt.** dīpa. கடல்நுரை விளக்குத் தீக் கொழுந்துபோல் வெள்ளையாயிருப்பதால், இப் பெயர் பெற்றது.]

அலையெறி-தல் *alai-y-eṟi-*, **2** செ.கு.வி. (v.i.) நெடுந்தொலைவு பரவுதல்; to spread abroad. 'கிருஷ்ணனுடைய இங்குத்தை நீர்மை பரம பதத்திலுஞ் சென்று அலையெறியும்படி' (திவ். திருப்பா. 1, வியா.).

[அலை + எறி.]

அலையேறு *alai-y-ēṟu*, பெ.(n.) **அலையெறிகை**; dashing of the waves. 'அலையேற்றிலே கொண்டுபோய்' (ஈடு, 7. 2 : 2).

[அலை + ஏறு (எறிகை).]

அலைவன் *alaivaṉ*, பெ. (n.) 1. **பூனை**; cat (சா.அக.). 2. **பூனைக்காஞ்சொறி** (பச்.மூ.); small climbing nettle.

[அல் (இரவு) → அலவன் (இரவில் சிறப்பாக இயங்கும் பூனை) → அலைவன்.]

அலைவாய் *alai-vāy*, பெ. (n.) ***திருநெல்வேலி மாவட்டக் கடற்கரை நகர்களு ளொன்றும், பெயர்பெற்ற முருகன் கோயிலுள்ளதுமான திருச்செந்தூர்***; *Tiruccendūr* in Thirunelvēli district, a seacoast pilgrim centre famous for its *Muruga* shrine. ''அலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே'' (திருமுரு. 125).

[அலை = கடல். வாய் = வாய் அல்லது முகம் போன்ற இடம்.]

அலைவாய்க்கரை *alai-vāy-k-karai*, பெ. (n.) *கடற்கரை*; seashore washed by the waves.

அலைவிரிசல் *alai-viriśal*, பெ. (n.) **சுருளும் அலை** (வின்.); curling or unfurling wave.

[அலை + விரியல் → விரிசல். 'அல்' தொ. பெ. ஈறு.]

அலைவு *alaivu*, பெ.(n.) 1. **அசைகை**; shaking, moving, waving. 2. **மனக்கலக்கம், துன்பம்**; mental agitation.

க. அலவு; து. அலசுனி.

[அல் → அலை → அலைவு.]

அலைவுற்றநாடி *alaivuṟṟa-nāḍi*, பெ. (n.) ***அலையைப்போல் நிலையில்லாமல் அசையும் நாடி***; an unsteady pulse like the waves of the sea (சா.அக.).

[அலைவு + உற்ற + நாடி. அல் → அலை → அலைவு (தொ.பெ.). உறு → உற்ற (இ.கா. பெ.எ.). நாளி → நாழி → நாடி.]

அவ் *av*, சு.பெ. (demons. pron.) **அவை**; they (impers.).

'' அவ்வே
இவ்வென அறிதற்கு மெய்பெறக் கிளப்ப''
(தொல். சொல். விளி. 2).

ம. அவ்; க., து. அவு; பட. அவெ.

*[அ → அம் → அவ். **ஒ.நோ:** செம் → செவ்.]*

'அவ்' வரலாறு

ஐம்பாலீறுகள் தோன்றுமுன், சுட்டுவினாப் பெயர்களும் மூவிடப்பெயர்களும் ஒருமை, பன்மை யீறுகளே பெற்றுவந்தன. 'ஒன்று' என்னும் முதலெண்ணுப் பெயரின் மறுவடிவான 'ஒன்' என்பது ஒருமை யீறாகவும், கூடு தலைக் குறிக்கும் 'உம்' என்னும் வினை முதனிலை பன்மை யீறாகவும் இருந்தன.

ஈரெண்ணீறும், மூவிடப் பெயரொடு புணருங்கால், உயிர்முதல் கெடும்.

எ-டு: ஊ + ஒன் – ஊன், ஊ + உம் – ஊம். இங்ஙனமே சுட்டுவினாப் பெயர்களும் எண்ணீ றேற்றன.

எ-டு: அ + ஒன் – அன், அ + உம் – அம். மகரவீறு பின்னர் வகரவீறாக மாறிற்று.

எ-டு: அம் → அவ், எம் → எவ்.

ஒ.நோ: செம் → செவ், செம்மை → செவ்வை, அம்மை → அவ்வை. அவ் = அவை. எவ் = எவை.

பிற்காலத்தில், அவ், எவ் என்னும் சுட்டு வினாப் பன்மைப் பெயர்கள் சுட்டுவினா அடிகள் (bases) ஆகிவிட்டன. அதனால் அவற்றின்மேல் ஐம்பாலீறும் ஏறின.

எ-டு: அவ் + அன் – அவன்
அவ் + அள் – அவள்
அவ் + அர் – அவர்
அவ் + அது – அவது → அது
அவ் + அ – அவ → அவை.

அகரவீறு பிற்காலத்தில் ஐகாரமாகத் திரிந்தது.

அவ் ஒத்தனவே இவ், உவ், எவ் என்பனவும்.

அவ்வண்ணம் *a-v-vaṇṇam*, கு.வி.எ. (adv.) *அப்படி*; in that way or manner. ''அவ்

வண்ணத் தவர்நிலைமை கண்டும்'' (திவ். திருநெடுந். 21).

[அ (சே.சு.) + வண்ணம் (நிறம், வகை, படி, முறை).]

ம. அவ்வண்ணம்

அவ்வது *av-v-adu*, கு.வி.எ. (adv.) *அவ்வாறு*; in that way. ''அவ்வ துறைவ தறிவு'' (குறள், 426).

படீ. அத்தெ

[அ (சே. சு.) + அது (கு.வி.எ. ஈறு). அது = ஆறு, வகை.]

அவ்வமை *avvamai*, பெ. (n.) இந்துப்பு (சங். அக.); rock salt or sodium chloride used in medicine.

அவ்வயிறு *av-vayiṟu*, பெ. (n.) *அழகிய வயிறு*; beautiful belly. ''அவ்வயிற் றகன்ற வல்குல் தைஇ'' (அகநா. 21 : 3).

[அம் = அழகு. அம் + வயிறு – அவ்வயிறு.]

அவ்வருகு *av-v-arugu*, பெ. (n.) 1. *அவ்வோரம்*; that border, that edge. 2. *அப்பக்கம்*; that side. 3. *அவ்விடம்*; that place. —, கு.வி.எ. (adv.) 1. *அப்பால்*; beyond, above. 'எண்ணுக்கு அவ்வருகே பெருகியிருக்கிற' (ஈடு, 1. 2 : 10, ஜீ.). 2. *உயர்வாக*; higher than, superior to. 'ஒரு குரங்கை நித்யாச்ரிதை யான பிராட்டிக்கும் அவ்வருகாக நினைத் தான்' (ஈடு. 1. 3 : 1).

[அ = அந்த. அருகு = பக்கம். அவ்வருகு = 1. அப்பக்கம் (பெ.). 2. அப்பால், அப்பாலாக (கு.வி.எ.).]

அவ்வழி *av-vaḻi*, பெ. (n.) *அந்தப் பாதை, அந்த வழி*; that path, that way, that route. —, கு.வி.எ. (adv.) 1. *அந்த வகையில், அந்த முறையில்*; in that way, in that manner. 2. *அப்படி வருமிடத்து*; according to that course. ''அவ்வழி ஆவி இடைமை இடமிட றாகும்'' (நன். 75). 3. *அதன்பின்பு*; after that. ''அவ்வழி...............உதித்த தன்றே'' (கூர்மபு. வருணாச். 5).

[அ + வழி.]

அவ்வளவிலவன்மகிழ்கவெனல் *av-v-aḷavil-avaṉ-magiḻga-v-eṉal*, பெ. (n.) *பின்னர் எதிரியை வெல்லக்கூடிய உறழ்திற்கு (வாதத் திற்கு) இடமுண்மை கண்டு, அவன் மகிழ்க வென்று தொடக்கத்தில் அவன் கொள்கையை ஒப்புக்கொள்ளும் முறை (நியாயம்)* (சி. போ. சிற். 3 : 6); maxim followed by one who starts with pleasing his opponent by accepting the stand taken by him in an argument knowing fully well that he can eventually bring the opponent round to accept his own point of view.

[அ (அந்த) + அளவில் + அவன் + மகிழ்க + எனல்.]

அவ்வளவு *av-v-aḷavu*, பெ. (n.) 1. *அந்த அளவு*; that measurement. அவ்வளவு சரியாயில்லை. 2. *அம்மட்டு*; that limit, that much. அவ்வளவு போதாது. அவன் கத்தியை எடுத்தான்; அவ்வளவுதான்; எல்லோரும் எடுத்தார்கள் ஓட்டம். —, கு.வி.எ. (adv.) *போதிய அளவு*; sufficiently, upto the mark. நீ வாங்கி வந்த பழம் அவ்வளவு இனிமையாயில்லை. நேற்று அவர் ஆற்றிய சொற்பொழிவு அவ்வளவு நன்றாயில்லை.

ம. அவ்வளவு

[அ + அளவு.]

அவ்வாய் *av-vāy*, பெ. (n.) *அழகிய இடம்*; beautiful place. ''அவ்வாய் வளர்பிறை சூடி'' (பெரும்பாண். 412).

[அம் (அழகு) + வாய் (இடம்).]

அவ்வாறு[1] *av-v-āṟu*, பெ. (n.) 1. *அந்த ஆறு*; that river. 2. *அந்த வழி*; that way. —, கு.வி.எ. (adv.) *அப்படி*; in that way or manner. ''அவ்வாறு பயில்கின்ற வருள்வாரி'' (பாரத. முண்டக. 126).

ம. அவ்வாறு

[அ (அந்த) + ஆறு (மண்ணை யறுத்தோடும் நீர்க்கால், வழி).]

அவ்வாறு[2] *av-v-āṟu*, பெ. (n.) 1. *ஆறு ஆறு*; six to each. அறுபதைப் பதின்மருக்குப் பகிர்ந் தால் அவ்வாறு வரும். 2. *தனித்தனி ஆறு*; in sixes, six each. ''ஒவ்வொருத்திக் கவ்வா றாய்'' (திருவிளை. பழியஞ். 4).

[ஆறு + ஆறு – அவ்வாறு (தோன்றல் திரி தல் கெடுதல் மூன்றுங் கொண்ட புணர்ச்சி).]

அவ்வி-த்தல் *avvi-*, 4 செ.கு.வி. (v.i.) *பொறுமை நீங்குதல்*; to become intolerant, impatient. ''அவ்வித் தழுக்கா றுடையானை'' (குறள், 167).

அலைதாடி

ஆடு

மாடு

[ஒருகா. அவி → அவ்வி. அவிதல் = புழுங்குதல், வேகுதல். அவ்வித்தல் = பொறாது மனம் புழுங்குதல் அல்லது எரிதல்.]

167ஆம் குறளுரையில், 'மனத்தைக் கோடுவித்து அழுக்காறுடையன் ஆயினானை யென்றுரைப்பாருமுளர்' என்று பரிமேலழகர் இழிவுசிறப்பும்மையால் அப் பொருளின் பிழைபாட்டைக் குறித்திருத்தலால், அவ்வித்தல் என்னுஞ் சொல்லிற்கு, மனத்தைக் கோணச்செய்தல் என்னும் பொருள் கூறுவது பொருந்தாது.

அவ்விடம் *av-v-iḍam*, பெ. (n.) அந்த இடம்; that place. —, கு.வி.எ. (adv.) அங்கு; there, in that place.

ம. அவிடெ; க., படு. ஆயெடெ; தெ. அய்யெட; து. அவுளு.

[அ + இடம்.]

அவ்விதழ் *av-v-idaḻ*, பெ. (n.) அழகிய பூவிதழ்; beautiful petal. "அவ்வித ழவிழ்பதங் கமழ" (நெடுநல். 41).

[அம் (அழகு) + இதழ். அம் → அவ்.]

அவ்விதை *avvidai*, பெ. (n.) நேர்வாளம் (சங். அக.); true croton-oil plant (செ.அக.) — croton seed, *Croton tiglium* (சா.அக.).

அவ்வை *avvai*, பெ. (n.) 1. தாய்; mother. "அவ்வைக்கு மூத்த மாமன்" (சீவக. 1046). 2. பாட்டி; grandmother. 3. கிழவி; old woman. 'அந்திமழையும் விடாது அவ்வை யாரைப் பிடித்த பிணியும் விடாது' (பழ.). 4. தவப்பெண் (சூடா.); woman ascetic. 5. புகழ்பெற்ற பெண்பாற்புலவரின் பெயர்; name of a famous poetess. "அவ்வை பாடலுக்கு" (பாரத. சிறப்புப்பாயி. 8).

க. அவ்வ, அவ்வெ; தெ., பர். அவ்வ; குட., கொண். அவ்வெ; கோத., துட. அவ்; கோண். அவ்வல், அவ்தாரி.

[அம்மை → அவ்வை.]

அவ்வையன் *avvaiyan*, பெ. (n.) கடுக்காய்ப் பிஞ்சு (சங்.அக.); tender berry of chebulic myrobalan, *Terminalia chebula*.

அவ்வோ *avvō*, சு.கு.பெ.எ. (demons. adj.) அந்தந்த; each, taken severally. 'அவ்வோ பதார்த்தங்கள்தோறும்' (ஈடு, 1. 1 : 7).

[அ + அ – அவ்வ → அவ்வோ. அ = அந்த. 'அவ்வ' பன்மை குறித்த சுட்டுக் குறிப்புப் பெயரெச்ச அடுக்குத்தொடர்.]

ஈற்றுத் திரிபு தோன்றற் புணர்ச்சியைத் தடுத்துள்ளது. இது மணிப்பவள நடையால் ஏற்பட்டதாதலின், செந்தமிழ் வழக்கிற் கொள்வாது.

அவ்வோன் *avvōṉ*, சு.பெ. (demons. pron.) அவன்; he, that one. "அவ்வோ னுயிருக் கழிவில்லை" (பாரத. பதினெட். 111).

[அ (சே.சு.) + அன் (ஆ.பா.ஈறு). அவன் → அவ்வன் → அவ்வோன்.]

அவக்கரம் *avakkaram*, பெ. (n.) யானைக் குடல் (நாநார்த்த.); elephant's bowels.

அவக்கவக்கெனல் *avakkavakk(u)-eṉal*, பெ. (n.) 1. விரைவாக உண்ணுங் குறிப்பு; onom. expr. of gorging, voracity. அவன் அவக்கவக்கென்று சாப்பிடுகிறான். காகம் அவக்கவக்கென்று அரிசியைத் தின்கிறது. 2. ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. of a repeated explosive sound. அவக்கவக்கென்று நாய் குரைக்கிறது.

['அவக்கு' ஒலிக்குறிப்பு. 'அவக்கவக்கு' விரைவுத்தொடர்ச்சி குறித்த ஒலிக்குறிப் படுக்குத் தொடர்.]

அவக்களி *ava-k-kaḷi*, பெ. (n.) பயனற்றவன் (இ.வ.); useless or worthless person (Loc.).

[ஒருகா. அவம் (கேடு) + கழி. அவக்கழி → அவக்களி = கேடுகெட்ட கழிசடை.]

அவக்காலம் *ava-k-kālam*, பெ. (n.) 1. துன்பக் காலம்; disastrous period, evil days, time of danger. 2. அழிவுக்காலம்; period or time of destruction. 3. ஆகாதவேளை; inauspicious or unlucky time.

Mar. avakāḷa

[அவம் = கேடு. கால் → காலம்.]

அவக்கீர்த்தி *ava-k-kīrtti*, பெ. (n.) புகழ்க்கேடு; infamy, disgrace. "அவகீர்த்தி யுலகி னிற்ப" (மச்சபு. பத்திமான். 14).

ம. அவகீர்த்தி

[அவம் = கேடு. சீர் → சீர்த்தி → கீர்த்தி.]

மேற்கோளில் இயல்புபுணர்ச்சி வடமொழி வழக்குத் தழுவியது.

அவக்குணம் *ava-k-kuṇam*, பெ. (n.) கெட்ட தன்மை; bad quality, evil nature, bad disposition. "அவகுண விரகனை" (திருப்பு. 638).

ம. அவகுணம்; க., து. அவகுண; தெ. அவ குணமு; **Mar.** avaguṇa; **Nep.** avaguṇ; **Sinh.** awaguṇa.

[அவம் (கேடு) + குணம்.]

மேற்கோளில் இயல்புபுணர்ச்சி வடமொழி வழக்குத் தழுவியது.

அவக்குறி *ava-k-kuṟi*, பெ. (n.) **கேடுகாட்டுங் குறி**; sign of approaching calamity, portent.

[அவம் (கேடு) + குறி.]

அவக்கேடு *ava-k-kēḍu*, பெ. (n.) **பெருந்தீங்கு**; calamity, great disaster.

ம., க., து. அவதட; தெ. அவதடமு; **Mar.** avagaḍa.

[அவம் = கேடு. 'அவக்கேடு' மீமிசைச் சொல்.]

அவக்கொடை *avak-k-koḍai*, பெ. (n.) **தகாத வர்க்குச் செய்யுந் தானம்**; gift made to unworthy persons.

[அவம் (கேடு) + கொடை. கொடு → கொடை.]

கொலைகாரனுக்குப் பரிசும் கொள்ளைக் காரனுக்குப் படைக்கலமுங் கொடுப்பது போன்றது அவக்கொடையென்றும், முல்லைக் கொடிக்குத் தேரும் குருடனுக்கு விளக்கும் கொடுப்பது போன்றது கொடைமடம் என் றும் வேறுபாடு குறிக்கலாம்.

அவக்கொலை *ava-k-kolai*, பெ. (n.) **தீய சாவு**; unnatural death from accident, suicide, murder, etc. (சா.அக.).

[அவம் (கேடு) + கொலை. கொல் → கொலை. 'ஐ' தொ.பெ. ஈறு.]

அவச்சா *ava-c-cā*, பெ. (n.) **அவக்கொலை** பார்க்க; see *ava-k-kolai* (சா.அக.).

அவச்சாடை *ava-c-cāḍai*, பெ. (n.) **கேடுணர்த்துங் குறி** (இ.வ.); evil or inauspicious omen, portent (Loc.).

[அவம் (கேடு) + சாடை. சாடு → சாடை = சாயை. சாடுதல் = சாய்தல்.]

அவச்சாயை *ava-c-cāyai*, பெ. (n.) 1. **நிழலற்ற வுருவம்**; shadowless being, as a deity or celestial being. 2. **சாவுக்குறி**; a sign of death. 3. **நிழலை யளந்து நாழிகை கணிப்பதில் மாதத்திற்குரிய தள்ளுபடி நிழலளவு**; monthly deduction from the length of one's shadow, varying with the time of the year, made in calculating the hour of the day.

ம. அபச்சாய; **Mar.** apaccāya.

*[அவம் (கேடு) + சாயை. சாய் → சாயை = நிழல். சாய்தல் = கோணுதல், சாய்ந்து விழுதல். அவச்சாயை > **Skt.** apacchāyā.]*

அவம், சாயை பார்க்க; see *avam, cāyai*.

அவச்சாவு *ava-c-cāvu*, பெ. (n.) **தீய அல்லது அகாலச் சாவு**; unnatural or premature death.

[அவம் + சாவு.]

அவச்சின்னம் *ava-c-ciṉṉam*, பெ. (n.) 1. (ஏர.) **குறிப்பிட்டு வேறுபடுத்தப்பட்டது**; (Log.) that which is distinguished or differentiated. 2. **தீக்குறி**; evil sign, portent.

[அவம் (கேடு) + சின்னம். சில் → சின் → சின்னம்.]

சின்னம் பார்க்க; see *śiṉṉam*.

அவச்சுழி *ava-c-cuḻi*, பெ. (n.) 1. **தீய சுழி**; a mark of swirling hair or lines on the body, portending evil. 2. **தீயூழ்** (உ.வ.); evil fate (Com.u.).

[அவம் (கேடு) + சுழி. சுல் → சுள் → சுளி → சுழி. சுழித்தல் = வளைத்தல், வட்டமாகத் திரித் தல், வட்டம் வரைதல். சுழி = வட்டம், வட்டக் குறி.]

உடம்பிலுள்ள சுழிகள் நன்மையும் தீமையுங் காட்டுங் குறிகள் என்பது குறிநூற் கொள்கை. மக்கள் நம்பிக்கையும் அது. அதனால் தீச்சுழி தீயூழ்ப் பெயராயிற்று.

அவச்சொல் *ava-c-col*, பெ. (n.) **அமங்கலச் சொல்**; inauspicious word.

[அவம் (கேடு) + சொல்.]

அவசம் *a-vaśam*, பெ. (n.) **தன்வசப்படாமை**; being beside oneself, not having one's own free will, bewilderment. "ஆவிய தில்லா ளென்ன வவசமாய்" (கந்தபு. தக்க. வள்ளியம். 153).

[அல் → அ. வை → வயம் → வசம்.]

அவசி *avaśi*, பெ. (n.) **நச்சறுப்பான்** (தைலவ. தைல. 72); Indian ipecacuanha (செ.அக.) — **கழுதைப்பாலை அல்லது நஞ்சறுப்பான்**; common Indian ipecacuanha, *Tylaphora asthmatica* (சா.அக.).

அவட்டம் *avaṭṭam*, பெ. (n.) 1. **நாய்வேளை** (சங்.அக.); a species of cleome (செ.அக.) — dog-mustard plant, *Cleome viscosa* (சா.அக.). 2. **வால்மிளகு**; tail-pepper, *Piper cubeba* (சா.அக.).

அவத்தம் பார்க்க; see *avattam*.

அவடம்பதி *avaḍambadi*, பெ. (n.) **வசம்பு** (சங். அக.); sweet flag (செ.அக.) — **அவடம்பாதி**; sweet flag, *Acorus calamus* (சா.அக.).

அவண் *avaṇ*, கு.வி.எ. (adv.) 1. **அவ்விடம்**, அங்கு; there. "அரைசெலா மவண மணி யெலா மவண" (கம்பரா. பால. நகரப். 7). 2. **அவ்வகை**; in that manner. "அற்றது மாயையு மற்றறி யவணே" (ஞானா. 22).

க. அவம்; து. அவுளு.

[அ + அண்.]

அவணம் *avaṇam*, பெ. (n.) **இருபதினாயிரம் கொட்டைப்பாக்கு**; a measure = 20,000 arecanuts (W.).

ம. அவணம்

[அமணம் → அவணம்.]

அவணன் *avaṇaṉ*, பெ. (n.) 1. **திண்ணியன்**; stalwart. 2. **சொற்செல்வுள்ளவன்**; man of influence.

[ஒருகா. அவுணன் (அசுரன்) → அவணன்.]

அவணி *avaṇi*, பெ. (n.) **நன்மை**; benefit (R.).

அவணியம் *avaṇiyam*, பெ. (n.) **கடைத்தெரு** (புதுவை); bazaar (Poṇḍ.).

[ஒருகா. ஆவணம் → அவணியம்.]

அவத்தம்[1] *avattam*, பெ. (n.) 1. **கேடு**; evil, calamity. "அவத்தங்கள் விளையும்" (திவ். திருவாய். 10. 3 : 9). 2. **பயனற்றது**; that which is useless, vain. "அல்லல் வாழ்க்கை யுய்ப்பதற் கவத்தமே பிறந்துநீர்" (தேவா. 2. 233 : 6).

[அவம் (கேடு, வீண்) → அவத்தம்.]

அவத்தம்[2] *avattam*, பெ. (n.) **நாய்வேளை** (மூ.அ.); species of cleome.

[அவம் → அவத்தம்.]

மறுவ. அவட்டம்

அவத்தன் *avattaṉ*, பெ. (n.) **பயனற்றவன்**; useless person. "மருட்கொண் டழியு மவத் தன்" (திருப்பு. 333).

ம. அவதாளன்

[அவம் → அவத்தம் → அவத்தன்.]

அவத்தாளம் *ava-t-tāḷam*, பெ. (n.) (இசை) **தாளப் பிசகு**; (Mus.) error in *tāḷam*. 'தாள வியல்பு பொலிவுபெற அவதாளம் நீங்க' (சிலப். 3 : 135-6, அடியார்க். உரை).

ம. அவத்தாளம்

[அவம் → அவத்தம்.]

மேற்கோளில் இயல்புபுணர்ச்சி வடமொழி வழக்குத் தழுவியது.

அவத்துறை *ava-t-tuṟai*, பெ. (n.) **தீய வழி**; evil way. "அவத்துறை போய நெஞ்சத் தக்கனாங் கறைந்திட் டானே" (கூர்மபு. தக். வே. 7).

[அவம் = கேடு, தீமை. துறு → துறை = பிரிவு, நெறி.]

அவத்தூறு, அவதூறு *ava-t-tūṟu, ava-dūṟu*, பெ. (n.) **பழிப்பு**; vilification, slander, ill-report, defamation.

க., தெ. அபதூரு.

[அவம் = கேடு, தீங்கு. துறு → தூறு = தூறல், தூற்றல்.]

பழிச்சொற்களைப் பரப்புவது, முகில் மழைத்துளிகளைச் சிதறுதல் போலிருத்த லால், பழிப்பு **அவதூறெனப்பட்டது**. உலக வழக்கிலுள்ள இயல்புபுணர்ச்சி வடமொழி வழக்குத் தழுவியது.

அவந்தன் *avandaṉ*, பெ. (n.) **பயனற்றவன்**; useless or worthless man. "நின்மக னவந் தனாய் வெறுநிலத் திருக்க லான போது" (கம்பரா. அயோத். மந்தரை. 63).

[அவம் (கேடு, வீண்) → அவத்தம் → அவத்தன் → அவந்தன்.]

அவந்தி *avandi*, பெ. (n.) 1. **கோவை** (பச்.மூ.); Indian caper. 2. **ஒரு நாட்டின் பெயர்**; name of a country.

அவந்திக்கண்ணி *avandi-k-kaṇṇi*, பெ. (n.) **வெருகஞ்செடி** (மலை.); a plant with bulbous roots, *Arum macrorhizon* (சா.அக.).

அவநம்பிக்கை *ava-nambikkai*, பெ. (n.) **நம்பிக்கையின்மை, ஐயுறவு**; disbelief, distrust, suspicion, doubt.

து., கொங். அபநம்பிகெ.

[அவம் (கேடு) + நம்பிக்கை. நம்பு → நம்புகை → நம்பிகை → நம்பிக்கை (தொ.பெ.). 'கை' தொ.பெ. ஈறு.]

அவநெறி *ava-neṟi*, பெ. (n.) **தீயவழி, கரிசு(பாவ) நெறி**; evil way, way of sin. "அவநெறியிற் செல்லாமே தடுத்து" (பெரியபு. தடுத்தாட். 79).

[அவம் (கேடு, தீங்கு) + நெறி. நெள் → நெரு → நெரி → நெறி = நெருங்கிச் செல்லும் வழி.]

அவப்படு-தல் *ava-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **பயனற்றதாதல்**; to become useless. "அருந்தவ மவப்படா தருளி" (உபதேசகா. சூராதி. 129).

[அவம் (கேடு, வீண்) + படு. படுதல் = பொருந்துதல், நேர்தல்.]

அவப்பேர் *ava-p-pēr*, பெ. (n.) கெட்ட பேர், **அவக்கீர்த்தி**, புகழ்க்கேடு; bad name, ill-fame, bad reputation.

[அவம் (கேடு) + பேர். பெயர் → பேர் = புகழ்.]

அவப்பொழுது *ava-p-poḻudu*, பெ. (n.) **வீண் காலப்போக்கு**; mis-spent time. 'அவப் பொழுதிலும் தவப்பொழுது நல்லது' (பழ.). "அவப்பொழு தகல விருப்பதென் விருப்போ" (வைராக். தீப. 18).

[அவம் + பொழுது. அவம் = கேடு, வீண்.]

அவபத்தி *ava-patti*, பெ. (n.) 1. **பத்தியின்மை**; impiety. 2. **மூடப்பத்தி** (வின்.); superstition.

*[அவம் (கேடு)+பத்தி. பகு → பா → பாத்தி → பத்தி = பாற்படுதல், பற்றுக்கொள்ளுதல். பகு > **Skt.** bhaj. **ஒ.நோ**: புகு > **Skt.** bhuj. பத்தி > **Skt.** bhakti. இனி, பற்று → பற்றி → பத்தி எனினுமாம்.]*

பத்தி பார்க்க; see *patti*.

அவப்பத்தி என்பது, வடமொழி வழக்கைப் பின்பற்றி அவபத்தி என இயல்புபுணர்ச்சி கொண்டது.

அவம் *avam*, பெ. (n.) 1. **கேடு**; evil, destruction. "அவஞ் செய்வா ராசையுட் பட்டு" (குறள், 266). 2. **வீண், பயனின்மை**; vanity, uselessness, nothingness. 3. **வானத் (ஆகாயத்) தாமரை**; floating lotus or sky lotus, *Pistia stratiotes* alias *Tala indica*. It is also called 'The rootless nelumbo' since its roots only float on water (சா.அக.).

*[அவி → அவம் (தொ.பெ.). 'அம்' தொ. பெ. ஈறு. அவிதல் = வேதல், அழிதல், கெடுதல், அணைதல், சாதல். அவம் = அழிவு, கேடு. அவம் → அவ (முன்னொட்டு) > **Skt.** apa (upasarga).]*

ஒ.நோ: உவத்தல் = ஒத்தல். உவமை = ஒப்பு. உவமை > **Skt.** upamā. உவ > **Skt.** upa = உடன், கூட, துணையான, உதவியான.

இங்ஙனம் தமிழ் முன்னொட்டுகள் ஆரிய மொழிகளில் உபசர்க்கங்கள் (prefixes) ஆவதை, முன்னொட்டு என்னும் உருப்படியிற் காண்க.

அவமதி-த்தல் *ava-madi-*, 4 செ.குன்றாவி. (v.t.) **இகழ்தல், மதிப்புக்குறைவாக நடத்துதல்**; to insult, to disgrace, to treat with disrespect or contempt. "பரனைக் குருவை யவமதித் தோர்" (தணிகைப்பு. அகத். 336).

[அவம் (கேடு) + மதி. மத்து (மட்டு) = அளவு. மத்து → மத்தி. மத்தித்தல் = அளவிடுதல். மத்தி → மதி. மதித்தல் = அளவிடுதல், தகுதியறிதல், மானஞ்செய்தல், பெருமைப்படுத்துதல்.]

அவமதி *ava-madi*, பெ. (n.) **அவமானம்**; disregard, disgrace, contempt. "இழிஞன் புலைக் கரந் தீண்டி யென்னை யவமதி செய்திட" (காஞ்சிப்பு. பரசிரா. 42).

ம., க., தெ. அவமதி; **து.** அவமான.

*[அவம் + மதி (மதிப்பு, மானம்). அவமதி > **Skt.** ava-mati.]*

அவமதி-த்தல் பார்க்க; see *ava-madi-*.

அவமதிச்சிரிப்பு *ava-madi-c-cirippu*, பெ. (n.) **இகழ்ச்சிநகை** (திவா.); derisive laughter.

[அவம் + மதி + சிரிப்பு. சிரி → சிரிப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

அவமதிப்பு *ava-madippu*, தொ.பெ. (vbl.n.) **இகழ்ச்சி**; disregard, disrespect, derision, contempt.

[அவம் + மதிப்பு. மதி → மதிப்பு (தொ.பெ.) 'பு' தொ. பெ. ஈறு.]

அவமழை *ava-maḻai*, பெ. (n.) 1. **கேடு விளைக்கும் மழை**; destructive or injurious rain (W.). 2. **அகால அல்லது பயனற்ற மழை**; unseasonable or unwanted rain.

அவமாக்கு-தல் *avam-ākku-*, 5 செ.குன்றாவி. (v.t.) **வீணாக்குதல்**; to waste, make useless.

[அவம் + ஆக்கு. ஆகு (த.வி.) → ஆக்கு (பி.வி.).]

அவமானம் *ava-mānam*, பெ. (n.) **மதிப்புக்கேடு, அவமதிப்பு**; disrespect, dishonour, contempt. "ஐயனேயின் றமணர்கள் தாமென்னை யவமானஞ் செய்ய" (பெரியபு. தண்டி. 11).

ம. அவமானம்; க., பட. அவமான; தெ. அவமானமு; து. அப்மான; **Mar.** avamāna; **Pali** avamānam.

அவமானம் > **Skt**. ava-māna.

[அவம் (கேடு) + மானம். மாத்தல் = அளத்தல். மா + அனம் – மானம் (அளவு, அளவீடு, மதிப்பு).]

அவமானி-த்தல் *ava-māni-*, 4 செ.குன்றாவி. (v.t.) **அவமதித்தல், அவமானப்படுத்துதல், மதிப்புக்குறைவாக நடத்துதல்**; to despise, disgrace, treat with contempt. "அவையினி லவமானித்த பாதகன்" (நல்.பாரத.சொர்க்க. தெரி. 31).

ம. அவமானிக்குக; க. அவமானிசு; தெ. அவமானிஞ்சு; து. அப்மானமுள்புனி.

[அவம் + மானி. மானம் (பெ.) → மானி (வி.) ஒ.நோ : தீர்மானம் → தீர்மானி.]

அவமீதம் *avamīdam*, பெ. (n.) **பொற்றலைக் கையாந்தகரை**; marygold verbesina, *Wedelia calendulacea* (சா.அக.).

அவயக்கோழி *avaya-k-kōḻi*, பெ. (n.) **அவையக் கோழி** பார்க்க; see *avaiya-k-kōḻi*.

அவயங்காத்தல் *avayaṅ-k-kāttal*, பெ. (n.) **அவையங்காத்தல்** பார்க்க; see *avaiyaṅ-kāttal*.

அவயம் *avayam*, பெ. (n.) **அவையம்**[1] 4 பார்க்க; see *avaiyam*[1] 4.

அவர் *avar*, சே.சு.பெ. (rem. demons. pron.) 1. **பலர்பாற் சேய்மைச் சுட்டுப்பெயர்**; rem. demons. pron. and pl. of 'he' or 'she'. அதோ! அவர் வருகிறார். 2. **முன் சொல்லப் பட்டவரைக் குறிக்கும் பலர்பாற் சேய்மைச் சுட்டுப்பெயர்**; masc. pl. demons. pron. referring to antecedent noun or nouns. பண்டைக் காலத்தில் தமிழகத்தைச் சேர சோழ பாண்டியர் ஆண்டனர்; அவர் காலத்திற் பெரும்பாலுஞ் செங்கோலாட்சி நிலவியது. 3. **ஒருவரைக் குறிக்கும் உயர்வுப்பன்மைச் சொல்**; that person, honorific term. அவர் ஓர் ஆசிரியர்.

ம., க., துட. அவர்; தெ. வாரு; து. ஆரு; குட. அவு; கோத. அவ்ர்; கோண். அவ், ஆர்; கொலா. அவ்ர், அவுர்; குவி அவரு; கூ. ஒரு; பர். ஓர்; குரு. ஆர்; கை. ஆவுங்; கொர. அவ்த், ஆக; எரு. அவல்லு; இரு. அதுரு; பட. அவக.

[அ (சே.சு.) → அவர். 'அர்' ப.பா. ஈறு. 'வ்' உடம்படுமெய்.]

அவர்கள் *avargaḷ*, சே.சு.பெ. (rem. demons. pron.) 1. **பலர்பாற் சேய்மைச் சுட்டுப்பெயர்**; pl. demons. pron. denoting persons at a distance. அதோ பார்! அவர்கள் யார்? 2. **முன் சொல்லப்பட்டவரைக் குறிக்கும் பலர்பாற் பெயர்**; pl. demons. pron. referring to persons mentioned before. அண்மையில் நிகழ்ந்த இலங்கைக் கலகத்தில் ஆயிரக்கணக்கானவர் கொல்லப்பட்டனர்; அவர்களனைவரும் தமிழரே. 3. **ஒருவரைக் குறிக்கும் உயர்வுப் பன்மைச் சொல்**; that person, honorific term. இந்தியெதிர்ப்பை மறைமலையடிகள் தொடங்கி வைத்தார்கள்; உண்மைத் தமிழர் அனைவரும் அவர்களைப் பின்பற்றினார்கள். 4. **ஒருவர் பெயருக்குப் பின் சேர்க்கப்படும் மதிப்புச் சொல்**; honorific term appended to a name. மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ் இனத்திற்குப் பள்ளி யெழுச்சிப் பாடல் போல் உணர்ச்சி யூட்டியது. 'ஆநந்த நமசிவாய பண்டார மவர்களுக்கு' (S.I.I. i, 85).

[அ → அவர் → அவர்கள். 'கள்' பன்மையீறு; சிறுபான்மை உலகவழக்குப் பலர்பாலீறு. 'அவர்கள்' இரட்டைப் பன்மை.]

அவரை *avarai*, பெ. (n.) **பெரும்பான்மை வெளிறின பசுமை நிறமாகவும் சிறுபான்மை வெண்மை செம்மை நிறமாகவும், பல்வேறு வடிவிலும் இரு விரலம் (inch) முதல் எண் விரலம் வரை பல்வேறு அளவில் இருப்பதும், பொதுவாக வீட்டுப்புறங்களில் விளைக்கப்படுவதும், இவர்கொடியிலேனும் (climber) படர் கொடியிலேனும் (creeper) சிறுபான்மை குத்துச் செடியிலேனும் (shrub) மாரிக்காலத்திற் காய்ப்பதும், உடல்நலத்திற் கேற்றதும் சுவையுள்ள**

தும் எல்லாராலும் விரும்பப்படுவதுமான கறி வகைக் காய்; field bean, cl. *Dolichos lablab.*

"ஆய்மக ளட்ட வம்புளி மிதவை
யவரை கொய்யுந ரார மாந்தும்"
(புறநா. 215 : 4 - 5).

அவரைவகைகள் :

1. ஆட்டுக்கொம்பவரை - *āṭṭu-k-komb(u)-avarai*: ஆட்டுக்கொம்புபோன்ற அவரைவகை; a variety of field bean resembling goat's horn.

2. ஆரால்மீனவரை - *āral - mīn - avarai*: ஆரால்மீன்போன்ற அவரைவகை; a variety of field bean resembling sand-eel.

3. ஆனைக்காதவரை - *āṉai-k-kād(u)-avarai*: ஆனைக்காதுபோன்ற அவரைவகை; a variety of field bean resembling elephant's ear.

4. கணுவவரை - *kaṇu-v-avarai*: கணுக்களிற் காய்க்கும் அவரைவகை; a variety of field bean that bears fruit in its joints.

5. கொழுப்பவரை - *koḻupp(u)-avarai*: குட்டையாகவுங் கொழுமையாகவு முள்ள அவரைவகை; a variety of field bean that is short and fleshy.

6. கோழியவரை (கோழிக்காலவரை) - *kōḻi-y-avarai (kōḻi-k-kāl-avarai)*: கோழிக் கால்போன்ற அவரைவகை; West Indian sea-side bean, m. cl. *Canavalia obtusifolia* (A.) (செ.அக.) — cock-bean (சா.அக.).

7. சப்பரத்தவரை - *šapparathavarai*, shed-bean, *Cyamopsis psorolioides* (சா.அக.).

8. சிவப்பவரை (செவ்வவரை) - *šivapp(u)-avarai (ševvavarai)*, red variety of field bean.

9. தீவாந்தரவவரை - *tīvāndara - v - avarai*: கீழைத் தீவுகளிலிருந்து கொண்டுவரப் பட்ட அவரை; a bean from the eastern islands (W.).

10. நகரவரை - *nagar-avarai*: அவரைவகை; a kind of bean, *Dolichos rugiosus* (W.).

11. பாலவரை (வெள்ளவரை) - *pāl-avarai (veḷ-ḷ-avarai)*: பால்போல் வெள்ளை நிற மான அவரைவகை; white variety of field bean, *Dolichos lablab* (செ.அக.).

2. ஓர் அவரைவகை; a species of Egyptian bean (W.). "அவரைக் கொழுங் கொடி விளர்க்காய் கோட்பத மாக" (புறநா. 120 : 10 - 11).

12. பூனைக்காலவரை - *pūṉai - k - kāl - avarai*: பூனைக்கால் போன்ற அவரை; cat-footed bean.

13. பேரவரை - *pēr (peru) - avarai*: பெரிய அவரைவகை; a large species of Egyptian bean (W.).

14. மணியவரை (சிற்றவரை) - *maṇi-y-avarai*: சிறுத்து உருண்டு நீண்ட அவரை வகை; a small variety of field bean roundish in cross section.

15. முறுக்கவரை - *muṟukk(u)-avarai*: திருகல் முறுகலான அவரைவகை; goa bean, l.sh., *Psophocarpus tetragonolobus* (A.) (செ. அக.) — curling bean (சா.அக.).

அவரை யகவினம் (Species allied to field bean)

1. கப்பலவரை; French bean.

2. காட்டவரை; Wild bean, *Dolichos.*

கொழுப்பவரை போன்றுள்ள மொச்சை (சேலம் வழக்கு); பெரும்பாலும் வீட்டுப்புறத் தில் விளைவிக்கப்படும் அவரையை நோக்கி, மொச்சை காட்டவரை யெனப்பட்டது.

கொழுப்பவரைக்கும் காட்டவரைக்கும் வேறுபாடு

	கொழுப்பவரை	காட்டவரை
அ.	பொதுவாக வீட்டுப்புறத்தி லேயே விளைக் கப்படுவது.	எப்போதும் காட்டுப் புறத்திலேயே விளைக் கப்படுவது.
ஆ.	நெடுங்கொடி யாகப் படர் வது.	குறுங்கொடியுள்ள குத்துச்செடியாக வளர்வது.
இ.	இளங்காய் கறி யாகச் சமைக்கப் படுவது.	முதிர்ந்த விதை மட்டும் பசுமையாக வும் காய்ந்ததாகவும் அவித்தும் கறியாகச் சமைத்தும் உண்ணப் படுவது.
ஈ.	காய்த்தோல் மெல்லியது.	காய்த்தோல் வல்லியது.

உ. எங்கும் அவரை யென்றே வழங்குவது.	சேலம் வட்டாரத்தில் மட்டும் காட்டவரை யென்றும், பிறவிடங் களில் மொச்சையென் றும் வழங்குவது.
ஊ. காய்ந்த விதை பொதுவாகக் கருப்பாகவே யிருப்பது.	காய்ந்த விதை வெள்ளை சிவப்பு கருப்பு என்னும் முந்நிறத்திலு முள்ளது.

காட்டவரை; wild beans. காட்டு மொச்சை; lablab vulgaris (L.) (W.) — காட்டவரை; jungle-bean, *Glycina javanica* (சா. அக.). காட்டவரை, காட்டுமொச்சை; country bean, *Dolichos lablab* (மூ.அ.) (செ.அக.).

3. *சீமையவரை* (*வெளிநாட்டவரை*)-foreign bean. *சீமையவரை*; foreign bean, *Phaseolus trilobus* (சா.அக.) — *சீமை யவரை;* field gram, *Phaseolus vulgaris*. அவரைவகை (A.) (செ.அக.).

அவரைப்புறவினம் (Species different from field bean)

(அ) *சீனியவரை* (*கொத்தவரை*): செடிவகை; cluster - bean, a shrub, *Cyamopsis psorolioides* (செ. அக.) — *சீனியவரை;* China-bean (சா.அக.).

சீனியவரை யென்பது பாண்டிநாட்டு வழக்கு. கொத்தவரை யென்பது சோழ நாட்டு வழக்கு. சீன நாட்டினின்று வந்ததனாற் சீனியவரை யெனப்பட்ட தென்பர். அவரையை நோக்கச் சிறிதா யிருப்பதனாற் சீனியவரை யென்று பெயர் பெற்றிருக்கலாம். சில் → சின் → சின்னி → சீனி. சின்னமிளகாய் சீனிமிளகாய் என்றும், சின்னவெடி சீனி வெடி யென்றும், பெயர்பெற்றிருத்தல் காண்க. கொத்துக்கொத்தாய்க் காய்ப் பதனாற் கொத்தவரை யெனப் பட்டது. இது பித்தத்தை மிகுவிப்பது.

''கொத்தவரைக் காய்பித்தங்
கூடாது பத்தியத்தின்
மெத்தனவு மையம் விளைக்குங்
காண் — பித்தத்தால்
சீத மகற்றிவிடும் தின்மருந்தைப்
பாழாக்கும்
வாதக் குடைச்சறரு மால்''
(பதார்த்த. 720).

(ஆ) *சுடலையவரை:* இயற்கையாக விளைவதும், சீனியவரை போன்றதும், சுடுகாட்டுப் பக்கத்தில் மிகுதியாகக் காணப்படுவதும், உண்ணப்படாதது மான காய்வகை; a species of inedible bean growing wild, generally near burning grounds. சுடலை = சுடுகாடு.

இதுவே தகரை (cassia tora) யெனப் படுவது. இது தோல் நோய்வகை கட்குச் சிறந்த மருத்துவ மூலிகையாகச் சொல்லப்படுகின்றது.

தகரையின் குணம்

''தகரை படர்தா மரையைச் சொறியைத்
தகர வடிக்குமந்தந் தன்னோ — டிகலான
அத்தி சுரத்தையு மதஞ்செய்யு மிம்மூலி
யுத்தமமா மென்றே யுரை''
(பதார்த்த. 249).

தகரைவித்தின் குணம்

''வண்டு கடியுடனே வன்கடுவ னும்பலவாம்
பண்டு நமைபுடையும் பண்டிதர்கள்
— கண்டுரையாப்
பித்த கனலும் பெருத்த தகரவிதைச்
சித்தரைய னில்லா திசை''
(பதார்த்த. 825).

(இ) *வாளவரை:* sword-bean. வாள்போல் தட்டையாக நீண்டிருப்பது வாள வரை. இதற்குச் சாட்டவரை, தம்பட் டவரை, பாடவரை என்றும் பெயருண்டு. வாளவரை; lablab cultratus (L.) (W.) — கொடிவகை; sword-bean, m.cl., *Canavalia ensiformis* (செ.அக.) — sword bean, *vigna catiang* (சா.அக.).

''அதிபித்தம் வாந்தி யரோசகமு
முண்டாம்
குதிவாதம் வாய்ச்சுரப்புங் கூடும் —
துதிசக்ர
வாளவரை யொத்த வனமுலை
யே! பசிய
வாளவரைக் காயான் மதி''
(பதார்த்த. 742).

(ஈ) *பேயவரை:* இதைப்பற்றி அகரமுதலிகள் வெவ்வேறு வகையாகக் கூறுகின்றன. பேயவரை - கோழியவரை; s. a kind of bean used in medicines, *Canavalia gladiata* (W.) — பேயவரை - 1. sword-

bean. கோழி யவரை[1] பார்க்க; see *kōḻi-y-avarai*[1]. 2. பொன்னாவிரை; fetid cassia (செ.அக.) — பேயவரை; horse-bean, *Canavalia ensiformis* (சா. அக.).

ம. அவர, அமர; க. அவரி, அவரெ, ஆவரெ; அமார; பட. அவரெ; கோத. அவ்ர்; துட. எவிர்; து. அவரெ, அபரெ, common country bean, *Lablab vulgaris*. அவடெ, ஆவடெ, அபடெ, a kind of bean — (D.E.D.).

[அம்முதல் = அமுங்குதல், பள்ளமாதல், தாழ்தல், தட்டையாதல். அமல் → அவல் = 1. பள்ளம். 2. தட்டையாக இடித்த அரிசி. அவல் → அவலை → அவரை = தட்டையான அல்லது சப்பையான காய்வகை. கத்தரி, சுரை, பாகல், பீர்க்கு, புடலை, பூசணி, முருங்கை, வாழை, வெண்டை முதலிய பிற காய்கள் எல்லாவற்றோடும் ஒப்பு நோக்க அவரை யொன்றே தட்டையாயிருத்தல் காண்க.]

அவரக்கா (அவரைக்காய்) என்னும் கொச்சைத் தமிழ்ச்சொல், மலையாளத்தில் அவரக்க என்றும் அமரக்க என்றும் திரிந்துள்ளது. அக் கொச்சை வடிவுகள் அவரைக்காய் என்றன்றி அவரையென்று பொருள் படா.

அவரைக்குச் சிக்கடி, முதிரை என்று ஈரிலக்கிய வழக்குப் பெயர்கள் உள்ளன. ''அவரை சிக்கடி'' (பிங். 9 : 308).

சிக்கடி என்பது தெலுங்கிற் சிக்குடு என்று வழங்குகின்றது.

'அவரைப் பிஞ்சின் குணம்' என்னும் தலைப்பின்கீழ்,

''கங்குலுண விற்குங்
கறிக்கு முறைகளுக்கும்
பொங்குதிரி தோடத்தோர்
புண்சுரத்தோர் — தங்களுக்குங்
கண்முதிரைப் பில்லைநோய்க்
காரருக்குங் காமுறையா
வெண்முதிரைப் பிஞ்சாம் விதி''

என்று 'பதார்த்தகுண சிந்தாமணி' (697) கூறுகின்றது. இதன் உரையில் 'வெண் முதிரைப் பிஞ்சு' என்னுந் தொடருக்கு 'வெள்ளை யவரைப்பிஞ்சு' என்று பொருள் உரைக்கப்பட்டுள்ளது.

''முதிரை வாலுான் வல்சி,'' 55ஆம் பதிற்றுப்பத்துப் பாட்டின் 7ஆம் அடியில் வரும் முதிரை யென்னும் சொல்லிற்கு, 'முதிரை யென்றது அவரை துவரை முதலாயினவற்றை' என்று குறிப்புரை வரையப் பட்டிருப்பதால், முதிரை யென்பது பயற்று வகைப் பொதுப்பெயராகவும் வழங்கினமை தெரிகின்றது.

இனி, 335ஆம் புறப்பாட்டில் ''பொறிகிள ரவரை'' யென்றிருப்பதால், புள்ளியுள்ள அவரைவகை யொன்றிருந்ததென்று கொள்ளவும் இடமுண்டு.

பழமொழிகள் :

'அவரை போட்டால் துவரை முளைக்குமா?', 'ஆடிமாதம் அவரை போட்டால் கார்த்திகை மாதம் காய்.'

சிறுகுறிப்புகள் :

மேலை வடார்க்காட்டுப் பாங்கர் கொத்தவரை யென்னும் பெயர் குத்தவரை யென்றும் வழங்குகின்றது.

சில அகரமுதலிகள், கோழியவரையை வாளவரை யென்று குறித்திருப்பது தவறாகும்.

''கொட்டையவ ரைக்காயாற் கோரவ
ரோசகநோய்
கிட்டாதென் பார்மருந்தின் கீர்த்திகெடும்
— துட்டமந்தம்
பையவுண்டாம் பேதியுண்டாம் பாரிப்
பனிலமுண்டாம்
ஐயுமுண்டாம் சூலையுமுண் டாம்''

என்று ப.கு.சி. (741) கூறியிருப்பதால், வித்து முதிர்ந்த அவரைக்காய் அவரைப் பிஞ்சுபோல் அத்துணை நன்றன்று என்று தெரிகின்றது.

அவல் *aval*, பெ. (n.) 1. **பள்ளம்**; shallow depression. ''அவலிழியினு மிசையேறினும்'' (புறநா. 102 : 3). 2. **விளைநிலம்**; cultivated land. ''மெல்லவ லிருந்த வூர்தொறும்'' (மலைபடு. 450). 3. **குளம்**; tank (சது.). 4. **நெல்லை ஊறவைத்து வறுத்திடித்த தின்பண்டம்**; paddy soaked in water and then fried and flattened. ''பாசவ லிடிக்கும் இருங்கா ழுலக்கை'' (அகநா. 141 : 18).

ம., க. அவல்; தெ. அடுகுலு; குட. அவ்ல் அக்கி.

[அம் → அம்மி = அமுக்கியரைக்குங் கல். அம்முதல் = அமுங்குதல், பள்ளமாதல், தாழ்வாதல், தட்டையாதல். அம் → அமல் → அவல் =

அவரை



ஆரால்மீனவரை



ஆனைக்காதவரை



இருவித்தவரை

இறகவரை



கணுவவரை

கப்பலவரை



கருப்பவரை

பள்ளம், பள்ளமான விளைநிலம் அல்லது குளம், தட்டையான அவல். ஒ.நோ : சும → சுமல் → சுவல் = சுமக்குந் தோட்பட்டை.]

பள்ளம் என்பது தாழ்ந்தமட்டமாதலால், குட்டை தட்டையானவற்றையுங் குறிக்கும். எ-டு : பள்ளி = தாழ்ந்தமட்டமான படுக்கை. பள்ளையாடு = குள்ளமான ஆட்டு வகை. பள்ளையன் = குறுகிப் பருத்தவன். குள்ளம் உயரத்திற் குறுகியது. அதுவே தட்டை. அரிசியை நோக்க அவல் தட்டையா யிருத்தல் காண்க.

அவலிடிக்கும் வகை

அன்றறுத்த பச்சைநெல்லை அல்லது ஊற வைத்த உணந்த நெல்லை வறுத்து, மரவுரலில் இட்டு விரைந்திடித்து உமியைப் போக்கினது அவல்; newly reaped fresh paddy or well soaked dried paddy is fried in a shallow earthen pot till one or two grains begin to pop. It is thereafter pounded quickly in a wooden mortar till the grain is flattened, and separated from the husk.

அவைத்தல் = நெல் அரிசி முதலியவற்றைக் குற்றுதல். "ஆய்தினை யரிசி யவையல்" (பொருந. 16), "தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்..............அவைப்பார்" (சிலப். 29, வள்ளைப்.). அவைத்தல் என்னுஞ் சொல்லிற்குத் தெறித்தல் என்னும் பொருளு முண்டு. "இறைவிரலா லவைத்துகந்த வீசா" (தேவா. 6.55:11). ஆயினும், அவலை இடித் தல் என்பதே பெருவகை வழக்கு. "பாசவ லிடிக்கு.........உலக்கை" (அகநா. 141 : 18). குற்றுதலுக்கும் இடித்தலுக்கும் வேறுபா டுண்டு. ஆதலால், அவை → அவையல் → அவல் என்பதினும், அம் → அமல் → அவல் என்பதே பொருத்தமாம். துவையல் என்பது துவல் எனக் குறுகாமையும் நோக்குக.

பழமொழிகள் :

அவல் (பள்ளம்)

'அவல் அவல் என்கிறது நெல், மழைமழை என்கிறது புல்.'

அவல் (நெல்வறையிடியல்)

'அரிசி அள்ளக் குறையும், அவல் முள்ளக் குறையும்.'

'அவல் பெருத்தது ஆர்க்காடு.'

'அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிக்கிறதா?'

'அவலை முக்கித் தின், எள்ளை நக்கித் தின்.'

'ஆனை முகவனுக்கு அவல்கடலை கொண்டாட்டம்.'

'வெறுவாயை மெல்லுகிறவன் அவல் கிடைத்தால் சும்மா விடுவானா?'

அவல்குசம் *aval-kušam*, பெ. (n.) **ஒரு செடி**; a plant, *Vernonia anthelmintica*.

அவல்குழி *aval-kuli*, பெ. (n.) **ஒரு நச்சுப்பூச்சி**; a poisonous insect.

அவலச்சமர்த்து *a-vala-c-camarttu*, பெ. (n.) **போலித் திறமை**; seeming ability, folly parading as cleverness.

[அவலம் (அ + வலம்) = வலியின்மை. சமர் = போர், வலிமை. சமர் → சமர்த்து.]

சமருக்கு (போருக்கு) வலிமை வேண்டுமாதலால், சமர்க் கருத்தில் வலிமைக் கருத்துத் தோன்றிற்று. இது கரும(காரிய)வாகுபெயர்.

அவலச்சுவை *a-vala-c-cuvai*, பெ. (n.) (செய்.) **துன்பவுணர்ச்சி (சோகரசம்)** (சிலப். 3 : 13, அடியார்க். உரை); (Poet.) pathos, pathetic sentiment.

[அவலம் (அ + வலம்) = வலியின்மை, நோய், துன்பம். சுவை இங்கு மனச்சுவை.]

அவலச்சுழி *a-vala-c-culi*, பெ. (n.) **கேட்டுச்சுழி, தீயூழ் (கெட்ட விதி)**; a swirl mark of hairs or lines on the body portending evil or destruction, ill-fate.

[அவலம் (அ + வலம்) = வலியின்மை, நோய், துன்பம், கேடு. சுல் → சுள் → சுளி → சுழி = swirl or eddy mark on the body portending good or evil.*]*

அவலம்[1] *a-valam*, பெ. (n.) 1. **வலியின்மை** (வின்.); weakness, feebleness, faintness. 2. **நோய்** (பிங்.); sickness, disease. 3. **துன்பம்**; suffering, pain, distress. "செய்வினை முற்றாம லாண்டோ ரவலம் படுதலு முண்டு" (கலித். 19 : 12-13). 4. (செய்.) **துன்பச்சுவை, துன்பவுணர்ச்சி (சோகரசம்)**; (Poet.) pathos, pathetic sentiment. 'அழுகை என்பது அவலம்' (தொல். பொருள், மெய்ப். 3, பேரா. உரை). 5. **அழுகை**; weeping, sorrowing. "அவலங் கொண் டழிவலோ" (சிலப். 18 : 41). 6. **வறுமை**; poverty, want. "கெடுகநின் னவலம்" (பெரும்பாண். 38). 7. **கவலை**; care, anxiety. "நெஞ்சத் தவல மிலர்" (குறள், 1072). 8. **மாயை** (மதுரைக். 208, நச். உரை); illusion.

ம. அபல; க. அவலெ, அபலெ; து. அபலெ.

அவலம் > **Skt.** abala.

[அல் → அ (எ.ம.முன்.). வல் → வலம் = வலிமை. அவலம் = வலிமையின்மை, நோய், துன்பம், துயரம், கவலை. வறுமை, துன்பமும் துன்பத்திற்கு ஏதுவும் ஆகும்.]

அவலம்[2] *a-valam*, பெ. (n.) இடப்பக்கம் (நாநார்த்த.); leftside.

[அ (எ.ம.முன்.) + வலம் (வலப்பக்கம்) — அவலம் = வலமல்லாத இடப்பக்கம். வலிமை யுள்ள கைப்பக்கம் வலம்.]

அவலமுதுப்புறம் *aval-amudu-p-puṟam*, பெ. (n.) திருக்கோயிற் படையலுக்காக (நிவேதனத்துக் காக) விடப்பட்ட இறையிலிநிலம் (S.I.I. iv, 147); endowment made to a temple to carry-out regular offering of flattened rice to the deity.

[அவல் + அமுது + புறம். புறம் = இறை நிலத்திற்குப் புறம்பாக்கப்பட்ட தேவதான நிலம்.]

அவல், அமுது பார்க்க; see *aval*, *amudu*.

அவலரக்கு *aval-arakku*, பெ. (n.) அவல்போல் தட்டையாகச் செய்யப்பட்ட அரக்குவகை; seed-lac melted and run into thin layers like flattened rice.

க. அவலரகு

[அவல் + அரக்கு.]

அவல், அரக்கு பார்க்க; see *aval*, *arakku*.

அவலன் *a-valaṉ*, பெ. (n.) 1. உடற்குற்றமுள்ள வன் (சா.அக.); one with physical defects. 2. நோயாளி; sick person, patient (சா.அக.). 3. குற்றமுள்ளவன்; one who is at fault. ''அறவும் பரிய னவலன்'' (சைவச. ஆசா. 8).

[வலம் = வலிமை. அ (எ.ம.முன்.) + வலம்—அவலம் → அவலன் = வலிமையிலான், நோயாளி, உடற்குறையுள்ளவன்.]

அவலாவி *avalāvi*, பெ. (n.) பெரும்பீளை; Javanese wool-plant, *Aerua jaranica* (சா.அக.).

அவலி-த்தல் *avali-*, 4 செ.கு.வி. (v.i.) 1. வருந்துதல்; to suffer, to be distressed in mind. ''அருவரை மார்ப னவலித் திருந்தான்'' (சீவக. 515). 2. அழுதல்; to weep, lament. ''அவலித் தணங்கு நையாவகை தேறற்கு'' (தணிகைப்பு. களவு. 532). 3. பதறுதல்; to be flurried. ''அவலித் திழிதலின்'' (சிலப். 23 : 186).

[அவலம் → அவலி.]

அவலி *avali*, பெ. (n.) பூனைக்காலி (மலை.); cowhage plant, *Mucana pruriens* (சா.அக.).

அவலிடி *aval-iḍi*, பெ. (n.) வரிக்கூத்துவகை; a masquerade dance. 'உந்தி யவலிடி யூராளி யோகினிச்சி' (சிலப். 3 : 13, அடியார்க். உரை).

[அவல் + இடி. ஒருகா. அவலிடிப்பது போன்ற கூத்துப்போலும்.]

அவலுப்பு *aval-uppu*, பெ. (n.) அவுரியினின் றெடுக்கும் ஒருவகை யுப்பு; aniline salts extracted from indigo.

[அவுரியுப்பு → அவரியுப்பு → அவலுப்பு.]

அவலை *avalai*, பெ. (n.) 1. கடுப்பு (பிங்.); acute pain, throbbing, throes. 2. காடு (பிங்.); barren land, wilderness.

[அவலம் → அவலை = வலமின்மை, நோவு, விளையாநிலம்.]

அவவு *avavu*, பெ. (n.) அவா, ஆசை; avidity, craving. ''அவவுக்கை விடுத லதுமனும் பொருளே'' (கலித். 14 : 19).

ஒ.நோ : **L.** *avere*, crave.

[அவ் → அவா → அவவு.]

அவள் *avaḷ*, சு. பெ. (demons. pron.) பெண் பால் ஒருமைப் படர்க்கைச் சுட்டுப் பெயர், அந்தப் பெண், அப் பெண்டு; that female person, she, fem. of *avaṉ*.

ம. அவள்; க. அவளு; தெ. அதி; குட. அவ; து. ஆள்; கோத. அவ்ள்; கூ. ஆளு; பட. அவ; **Mar.** tī.

[அ (சே.சு.) → அவ் → அவள். 'அள்' பெ.பா. ஈறு.]

அவளிகை *avaḷigai*, பெ. (n.) குடல்களின் மேற் பக்கம் நான்கு பட்டைகளுள்ளதாய்க் கவர்ந்து தொங்கும் ஒருவகைச் சவ்வு; a fold of the peritoneum connecting the abdominal viscera (சா.அக.).

அவளிவளெனல் *avaḷ-ivaḷ-eṉal*, தொ.பெ. (vbl.n.) பெண்டிரிடம் அல்லது பெண்டிரைப் பற்றி மதிப்பின்றிப் பேசுதல்; to speak to or about women discourteously. அந்த அம்மை

யாரை இவன் 'அவள் இவள்' என்று பேசு கிறான்.

அவள் பார்க்க; see *aval*.

அவளைதுவளை *avaḷai-tuvaḷai*, பெ. (n.) **கதம்ப வுணவு** (யாழ்ப்.); mixture of rice, curry, ghee, curds etc. (J.) (செ.அக.) — 1. **கதம்ப வுணவு, அதாவது புலவு**; curry and rice. It is a mixture of boiled rice, meat and ghee with spices, a favourite dish among the Mohamedans. 2. **கிச்சடிச்சோறு (சாதம்)**; a rich food prepared on ceremonial occasions by the Hindus from boiled rice mixed with spices and other fragrant powders. It is purely a vegetable preparation (சா.அக.).

அவற்காளான் *avaṟ-kāḷāṉ*, பெ. (n.) **காளான் வகை** (வின்.); a species of fungus (செ.அக.) — **தட்டையாயுள்ள ஒருவகைக் காளான்**; a kind of flat mushroom (சா.அக.).

[அவல்+காளான். காளாம்பி (காளஆம்பி) → காளான் = கரிய ஆம்பி. வெள்ளாம்பிக்கு எதிரான காளாம்பிப் பெயர் பிற்காலத்தில் இரண்டிற்கும் பொதுப்பெயராயிற்று.]

அவல் பார்க்க; see *aval*.

அவற்பதம் *avaṟ-padam*, பெ. (n.) **அவலிடித்தற் கேற்ற தவச மெல்வெந்நிலை**; grain made consistent for making flattened rice.

[அவல் + பதம்.]

அவல், பதம் பார்க்க; see *aval, padam*.

அவன்[1] *avaṉ*, சு.பெ. (demons. pron.) **அந்த ஆண்பிள்ளை அல்லது ஆடவன்**; that male person, he.

ம. அவன்; க. அவனு; தெ. வாடு; குட. அவென்; கோத. அவ்ன்; து. ஆயெ; கை. ஆவு, அவனெ; இரு. அவ; கொர. அவெ; பட. அம; பர். ஒத்; கொலா. அந்து; மா. ஆத்; பிரா. ஓடெ.

['அ' சே.சு. 'அன்' ஆ.பா. ஈறு. 'வ்' உடம்படு மெய்.]

அவன்[2] *avaṉ*, பெ. (n.) **வீண், பயனின்மை**; uselessness. "அவன்செயத் திருவுடம் பலச நோற் கின்றான்" (கம்பரா. ஆரணிய. சூர்ப். 18).

[அவி → அவம் = கேடு, வீண். அவம் → அவன் (கடைப்போலி).]

அவனறிவுதான்காண்டல்வினா *avaṉ-aṟivu-tāṉ-kāṇḍal-viṉā*, பெ. (n.) **பிறன் கருத்தை யறிதற் குக் கேட்குங் கேள்வி**; questioning with the object of ascertaining another's view.

'வினாவாவது அறியலுறவு வெளிப்படுப் பது. அது மூவகைப்படும், அறியான் வினா வும் ஐயவினாவும் அறிபொருள்வினாவு மென'.

'உரையாசிரியர், அறிபொருள் வினாவை அறிவொப்புக் காண்டலும் அவனறிவு தான் காண்டலும் மெய்யவற்குக் காட்டலும் என விரித்து, ஏனைய கூட்டி ஐந்தென்றார்' (தொல். சொல். கிளவி. 13, சேனா. உரை).

'வினா ஐந்து வகைப்படும். அறியான் வினாதல், அறிவொப்புக் காண்டல், ஐய மறுத்தல், அவனறிவு தான்கோடல், மெய் யவற்குக் காட்டல் என' (தொல். சொல். கிளவி. 13, இளம். உரை).

உரையாசிரியர் என்று பொதுவாகச் சொல் லப்படுபவர் இளம்பூரணர். ஏனெனின், இன்றுள்ள தொல்காப்பிய வுரைகளுள் முதலது அவரதுவே.

'அவனறிவு தான்காண்டல்' என்று உரை யாசிரியர் கூறியதாகச் சேனாவரையர் கூறி னார். ஆயின், அச் சொற்றொடர் இளம் பூரணர் உரையில் "அவனறிவு தான்கோடல்" என்றுள்ளது. "அவனறிவு தான்காண்டல்" என்பது அறிவொப்புக் காண்டல் என்றும் பொருள்படும். காண்டலுக்கும் கோடலுக் கும் பெரிதும் பொருள் வேறுபாடுள்ளது. ஆதலால், இச் சொல் வேறுபாடு ஏட்டுப் பிழையால் நேர்ந்ததாகவும் இருக்கலாம். உரையாசிரியர், வேறு இளம்பூரணர் என்று காட்டுவதாகவும் இருக்கலாம்.

உரையாசிரியர் உரை யென்று கூறப் பட்டவை சில இளம்பூரண ருரையினும் வேறு பட்டிருப்பதால், இருவரும் ஒருவரோ வேறோ என்று ஏற்கெனவே பெரும்பேராசிரியர் உ. வே. சாமிநாதையரும் ஐயுற்றுள்ளார்.

நன்னூலாசிரியரான பவணந்தி முனிவர், அறிபொருள் வினாவை மூன்றாக விரிக்காது அறிவினா என்று ஒன்றாகவே குறித்து வினாவை அறுவகையாக வகுத்தார்.

தொல்காப்பியர் வினாவை வகுக்காது "செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்' (தொல். சொல். கிளவி. 13) என்று தொகுத்தே கூறினார்.

அவனிமருந்து *avaṉi-marundu*, பெ. (n.) **அவுரிக் கருக்கு (கஷாயம்)** (பச்.மூ.); decoction of indigo plant.

[அவுரி → அவனி. மரு → மருந்து.]

அவனிவனெனல் *avaṉ-ivaṉ-eṉal*, தொ. பெ. (vbl.n.) **ஆடவரைப்பற்றி மதிப்பின்றிப் பேசுதல்**; to speak to or about men discourteously. அந்த ஐயாவை இவன், 'அவன் இவன்' என்று பேசுகிறான்.

அவன்[1] பார்க்க; see *avaṉ*[1].

அவா *avā*, பெ. (n.) **ஆசை, எனக்கிது வேண்டுமென்னும் எண்ணம்**; desire for a thing, covetousness.

[கவ்(வு) → அவ் → அவா. கவ்வுதல் = வாயாற் பற்றுதல். வவ்வுதல் = கையாற் பற்றுதல். அவ்வுதல் = மனத்தாற் பற்றுதல்.]

அவாபுளப்பி *avāpuḷappi*, பெ. (n.) **ஒருவகைச் செடி (பிராமி)** (சங்.அக.); species of *Herpestis*.

அவாய்நிலை *avāy-nilai*, பெ. (n.) **ஒரு சொல் தன்னொடு பொருந்திப் பொருள் முடிதற்குரிய மற்றொரு சொல்லை வேண்டி நிற்றல்; அதாவது, ஒரு சொற்றொடரில் ஒரு சொல் தொக்குநிற்றல்**; syntactical expectancy consisting in the need of one word for another such as predicate for a subject or subject for a predicate.

[அவாவு → அவாவி (இ. கா. வி. எ.) → அவாய். நில் → நிலை (தொ.பெ.).]

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்னும் சொற்றொடர் உறுப்பு மூன்றனுள் எதுவுந் தொக்குநிற்கலாம்.

''இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று''

என்னுங் குறளில் (100), 'ஒருவர்' என்னும் எழுவாய் தொக்கது.

''கெடுப்பதூஉம் கெட்டார்க்குச்
சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை''

என்னுங் குறளில் (15), 'வல்லது' என்னும் பயனிலை தொக்கது.

''நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று''

என்னுங் குறளில் (222), 'பொருள்' என்னும் செயப்படுபொருள் தொக்கது.

உலகவழக்கில், எழுவாயாக வரும் தன்மை முன்னிலைப் பெயர்கள் தொகுவது பெருவழக்கு.

தொடர்ச்சொற் பொருளுணர்த்தும் மூவகையுள் ஒன்று **அவாய்நிலை.** ஏனையிரண்டு **அண்மைநிலை, தகுதி** என்பன.

அவாரி *avāri*, பெ. (n.) **சிறுநீர்** (சங்.அக.); urine.

[அமரி = சிறுநீர். அமரி → அவரி → அவாரி.]

அவாவறு-த்தல் *avā-v-aṟu-*, 4 செ.கு.வி. (v.i.) **ஆசையொழித்தல்** (குறள், 37ஆம் அதி.); to extirpate desire.

[அவா + அறு.]

அவா பார்க்க; see *avā*.

அவாவன் *avāvaṉ*, பெ. (n.) **ஆசையுடையவன்**; avaricious person. ''சோகவி யவாவன்'' (சைவச. ஆசா. 17).

[அவா + அன் (ஆ.பா. ஈறு). 'வ்' உடம்படுமெய்.]

அவாவு-தல் *avāvu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *1.* **விரும்புதல்**; to desire, wish for. ''உலகவாம் பேரறி வாளன்'' (குறள், 215). *2.* **பற்றுச்செய்தல்**; to long for intensely, crave for, covet. *3.* (இலக்.) **சொற்றொடரில் ஒரு சொல் தன்னொடு பொருந்திப் பொருள் முடித்தற்கு மற்றொரு சொல்லை வேண்டுதல்**; (Gram.) to want a word to complete the sense of a sentence.

[அவ் → அவவு → அவாவு.]

அவா பார்க்க; see ***avā***.

அவி[1]-தல் *avi-*, 2 செ.கு.வி. (v.i.) *1.* **வேதல், சமைதல்**; to be boiled, cooked by boiling or steaming. *2.* **வெப்பத்தாற் புழுங்குதல், வேர்த்தல்**; to swelter, perspire. *3.* **காய்கனி முதலியன சூட்டால் வெந்துபோதல்**; to become softened and decayed, as fruit, vegetable matter, from heat. *4.* **உரக் குப்பைகள் வெந்து ஆவிவிடுதல்**; to ferment, as manure heaps. *5.* **அறுவை மருத்துவத்திற் கெட்டநீர் வெளியேறும்படி புண் செய்யப்படல்**; to be inflamed by cauterisation to get rid of bad accumulation of fluid, in surgery (சா.அக.). *6.* **கண் கெடுதல்**; to be blinded, as the eye, by disease. உனக்கென்ன கண் அவிந்தா போயிற்று? *7.* **அழிதல்**; to perish, cease to exist. அவன்

குடும்பம் அவிந்துபோயிற்று. 8. **சாதல்**; to die. ''அவியினும் வாழினு மென்'' (குறள், 420). 9. **தீ அல்லது விளக்கு அணைந்து போதல்**; to become extinguished, as fire or light. ''காலவியாப் பொன்விளக்கு'' (சீவக. 1045). 10. **ஓய்தல்**; to cease, desist from action. ''கோலவியா வெஞ்சிலையான்'' (சீவக. 1045). 11. **ஒடுங்குதல்**; to become subdued, repressed, to be kept under control. 12. **பணிதல்**; to bow, stoop, be humble, obey. ''ஆன்றவிந் தடங்கிய கொள்கை'' (புறநா. 191:6). 13. **குறைதல்**; to diminish. ''வெஞ் சுடரி னாண்டகை யவிந்தான்'' (சீவக. 289).

ம. அவியுக; க. அவி; **Mar.** avikaṇēm (to over ripen and spoil – a fruit).

[உள் → அள் → அழு → அகு → அகை. அகை தல் = எரிதல். அழு → அழல் = எரிவு, நெருப்பு. அகு → அகி → அவி. அவிதல் = எரிதல், வேதல்.]

அவி²-த்தல் *avi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **வேகவைத்தல்**; to boil in a liquid, cook by boiling or steaming. ''அறுத்தவித் தாரச் சமைத்த பிள்ளைக் குகந்தார்'' (மறைசை. 20). 2. **கெட்ட நீரை வெளியேற்ற வெப்பூட்டல்**; to apply heat to eliminate the accumulation of bad fluids from the system (சா.அக.). 3. **அடக்குதல்**; to subdue, suppress, repress. ''ஐந்தவித்தான்'' (குறள், 25). 4. **அணைத்தல்**; to extinguish, put out. விளக்கை அவித்து விட்டான். 5. **கெடுத்தல், அழித்தல்**; to destroy. ''ஒருமுன் றவித்தோன்'' (சிலப். 10 : 194). 6. **துடைத்தல்**; to wipe off, dust, brush. ''சிலம்பிற் போர்த்த பூந்துக ளவித்து'' (சீவக. 2064). 7. **நீக்குதல்**; to remove, avoid. ''செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையும் அவித் தொழுகல்'' (குறள், 694).

ம. அவிக்குக, அவிச்சல்.

[அகை → அகு → அகி → அவி.]

அவி¹-தல் பார்க்க; see *avi¹-*.

அவி *avi*, பெ. (n.) 1. **கதிரவன்**; Sun. 2. **ஒளிக்கதிர்**; ray. 3. **சோறு** (சூடா.); boiled rice. 4. **உணவு**; food. ''அவியடு நர்க்குச் சுவைபகர்ந் தேவி'' (பதினொ. திருவிடை. 7). 5. **நெய்** (பிங்.); ghee. ''அவிசொரிந் தாயிரம் வேட்டலின்'' (குறள், 259).

ம., க., தெ. அவி; **Skt.** avi.

[அகை → அகு → அகி → அவி.]

அவி¹-தல் பார்க்க; see *avi¹-*.

அவிகண் *avi-kaṇ*, பெ. (n.) 1. **ஒருவகைக் கண்ணோய்**; a kind of ophthalmia. 2. **கெட்டுப் போன கண்**: an eye in which the cornea is destroyed. 3. **குருட்டுக்கண்**; blind eye (சா. அக.).

['அவிகண்' வினைத்தொகை.]

அவி¹-தல் பார்க்க; see *avi¹-*.

அவிகாயம் *avi-kāyam*, பெ. (n.) 1. **எரிச்சல்**; burning sensation. 2. **அழற்சி**; inflammation. 3. **தோல் வெந்த தழும்பு**; scar left by a scald. 4. **நுரையீரல் வெந்து புண்ணாகும் இருமல் நோய்**; consumption attended with inflammation of the lungs, pulmonary tuberculosis (சா.அக.). 5. **இசிவு (சன்னி) வகை** (தஞ். சரசு. iii, 194); a kind of delirium (செ.அக.).

['அவிகாயம்' வினைத்தொகை. காயம் = உடம்பு.]

அவி¹-தல் பார்க்க; see *avi-¹*.

அவிச்சன் *aviccaṉ*, பெ. (n.) தந்தை (நாஞ்.); father (Nāñ.). Cf. **L.** *avus*, grandfather.

[ஒருகா. அவ்வையச்சன் (தாயைப் பெற்ற பாட்டன்) → அவிச்சன் = பாட்டன், தந்தை.]

தந்தை முறைப்பெயர் பாட்டனையும், பாட்டன் முறைப்பெயர் தந்தையையும் குறித்தல் இயல்பே.

எ-டு: அச்சன் (தந்தை). க. அஜ்ஜ = பாட்டன். அப்பச்சன் → அப்பச்சி (பாட்டன்) = தந்தை (செட். நா.).

அவிசல் *aviśal*, பெ. (n.) **அவிந்துபோனது**; that which is decayed.

[அவி → அவியல் → அவிசல் (தொ.ஆகு.) = வெந்துபோனது, கெட்டுப்போனது. 'அல்' தொ.பெ. ஈறு.]

அவிசற்கினம் *aviśaṟkiṉam*, பெ. (n.) **விடாக் காய்ச்சல்**; unintermittent fever, persistent fever (சா.அக.).

[ஒருகா. அவிசற்கு + இனம் – அவிசற்கினம்.]

அவிசல் பார்க்க; see *aviśal*.

அவிசற்பல் *aviśaṟ-pal*, பெ. (n.) **சொத்தைப்பல்** (இ.வ.); decayed tooth (Loc.).

[அவி → அவியல் → அவிசல் + பல்.]

அவியல் பார்க்க; see *aviyal*.

அவிசனாற்றம் *avišaṉāṟṟam*, பெ. (n.) **அழுகிய காய்கனி முதலியவற்றின் தீய மணம்;** odour of decaying matter.

[அவி → அவியல் → அவிசல். 'அல்' தொ.பெ. ஈறு. நாறு → நாற்றம். 'அம்' தொ.பெ. ஈறு.]

உலகவழக்கில் நாற்றம் என்னுஞ் சொல் தீய மணத்தையே குறிக்கும்; இலக்கிய வழக்கில் நல்லது தீயது ஆகிய இரண்டிற்கும் பொதுவாம்.

அவிசுப்பம் *avišuppam*, பெ. (n.) **தொடரி** (வை. மூ.); a species of jujube.

மறுவ. அவுசுப்பம்

அவிட்டம் *aviṭṭam*, பெ. (n.) **கோரைக்கிழங்கு** (பச்.மூ.); root of sedge, *Cyperus rotundus*.

அவிடு *aviḍu*, பெ. (n.) **தகையாட்டுச் சொல்;** word spoken in jest. "சொல்லும் அவிடு சுருதியாம்" (ஞானஸாரம், 40).

அவித்துவையல் *avi-t-tuvaiyal*, பெ. (n.) **பச்சடி** (பிங்.); a vegetable savoury.

[அவி + துவையல்.]

அவிந்துவி *avinduvi*, பெ. (n.) **இருவேரி** (பச்.மூ.); cuscus grass.

அவிநயம் *avinayam*, பெ. (n.) **இறந்துபட்ட ஒரு பழைய தமிழிலக்கண நூல்;** an extinct ancient Tamil grammar.

அவிநயனார் *avinayaṉār*, பெ. (n.) **இறந்து பட்ட அவிநயம் என்னும் பழைய இலக்கண நூலின் ஆசிரியர்;** the author of the *Avinayam*, an extinct ancient Tamil grammar.

[**Skt.** abhi-naya > அபிநயம் → அவிநயம் → அவிநயன் → அவிநயனார். 'ஆர்' உயர்வுப்பன்மை யீறு.]

அவிநீர் *avi-nīr*, பெ. (n.) 1. **வெந்நீர்;** boiled water. 2. **மூலிகைகளைக் குறுக அரிந்து அல்லது வேர்களை இடித்து வேடுகட்டிப் பிட்டவியலாக அவித்துப் பிழிந்துகொண்டு அத்துடன் தேன்கூட்டிக் கொள்ளும் நீர்;** an essence extracted from sliced green herbs or pounded roots boiled sufficiently in steam, and mixed with honey. It is taken internally (சா.அக.).

['அவிநீர்' வினைத்தொகை.]

அவிப்பிணம் *avi-p-piṇam*, பெ. (n.) **உவர் மண்ணை யெடுத்துக் காய்ச்சும் உப்பு** (சங். அக.); salt prepared by distilling the solution of saline earth.

[**ஒருகா.** அவிப்பு + உமணம் – அவிப்புமணம் → அவிப்பிணம் (மருஉ). உமண் = உப்பு மண், உப்பு, உப்பமைப்போர் குலம். உமண் → உமணன் = உப்பமைக்குங் குலத்தான். உமணன் → உமண். **ஒ.நோ:** பாணன் → பாண்.]

அவிப்புடமிடு-தல் *avi-p-puḍam-iḍu-*, 19 செ. குன்றாவி. (v.t.) **மருந்திற்கேற்றவாறு குழி வெட்டி மணல்கொட்டிப் பரப்பி மருந்தை நடுவில் வைத்து, எருவடுக்கிப் புடம்போடுதல்;** the process of calcining medicines by burying them in a pit under a heap of sand over which cowdung cakes are piled up and burnt (சா. அக.).

[அவி + புடம் + இடு.]

அவி, புடம் பார்க்க; see *avi*, *puḍam*.

அவியம் *aviyam*, பெ. (n.) **கடுகு;** mustard (சா. அக.).

[**ஒருகா.** அவி → அவியம் = சூடாக்குவது. அவித்தல் = வேகவைத்தல், சூடாக்குதல்.]

அவியரிசி *avi-y-arisi*, பெ. (n.) 1. **பிட்டரிசி** (சித்.அக.); a kind of rice. 2. **அவித்த பிட்டரிசி; ஒரு சிற்றுண்டி;** a confection prepared out of boiled *piṭṭarisi* (சா.அக.).

['அவியரிசி' வினைத்தொகை.]

அவியல் *aviyal*, பெ. (n.) 1. **சமைக்கை** (பிங்.); cooking, boiling. 2. **சமைக்கப்பட்ட உணவு;** cooked food. "செந்தினையி னவியல்" (கூர்மபு. கண்ணன்மண. 143). 3. **பலவகைக் காய்கள் ஒருசேரச் சமைக்கப்பட்ட கறிவகை;** a kind of mixed vegetable dish. 4. **பிட்டவியலாகச் சமைத்த பண்டம்;** anything prepared or baked in steam (சா.அக.). 5. **வெந்த பண்டம்;** anything boiled or over-boiled by heat. 6. **கடுவெப்பம்;** burning and oppressive heat. 7. **புழுக்கம்;** swelter, sultriness. 8. **வெந்த புண்;** a burn or injury caused by a hot liquid, scald (சா.அக.). 9. **வாய்ப்புண்;** inflammation of the mouth, *stomatitis*.

ம. அவியல்; க. அவிலு.

"தேசு மருவும் பாலகர்க்குச்
சேரு மவியல் பலவகையும்"
(பரராசசேகரம்) (சா.அக.).

[அவி → அவியல் – 1. தொ.பெ. 2. தொ. ஆகு. 'அல்' தொ.பெ. ஈறு.]

அவியல் என்னுங் கறிவகை, பலவகைக் காய்களைச் சேர்த்துச் சமைப்பது. அது மலையாள நாட்டிற்குச் சிறப்பானது. மலையாளியர் தமிழ்நாடு வந்தபின், தமிழ் நாட்டிலும், சிறப்பாக உண்டிச்சாலைகளில் அது கையாளப்படுகின்றது.

அவியல்மணம் *aviyal-maṇam*, பெ. (n.) **காய்கறி முதலானவை அழுகுவதனாலுண்டாகும் தீய மணம்** (வின்.); offensive smell of putrid vegetable matter.

[அவி → அவியல். 'அல்' தொ. பெ. ஈறு. மண → மணம் (தொ.ஆகு.). 'அம்' தொ.பெ. ஈறு.]

அவியற்கறி *aviyaṟ-kaṟi*, பெ. (n.) 1. **வெந்த இறைச்சி** (வின்.); boiled meat. 2. **பலவகைக் காய்களை ஒருசேரச் சமைத்த கறி**; a dish prepared with several kinds of vegetables, mixed hotchpotch.

[அவி → அவியல். கறி = கறித்துத் தின்னும் காய்கறிச் சமையல்.)]

அவியற்சரக்கு *aviyaṟ-carakku*, பெ. (n.) 1. **முடக்குச் சரக்கு**; any drug from which its virulence or poisonous principle is eliminated. 2. **வேகவைத்த சரக்கு**; anything boiled or baked for purposes of purification. 3. **அழிந்த சரக்கு**; any putrefied drug (சா.அக.).

[அவியல் + சரக்கு.]

அவியல், சரக்கு பார்க்க; see *aviyal, carakku*.

அவியற்பல் *aviyaṟ-pal*, பெ. (n.) **சொத்தைப் பல்**; decayed tooth.

[அவியல்+பல். அவி → அவியல்=கெடுதல்.]

அவிர்¹-தல் *avir-*, 2 செ.கு.வி. (v.i.) **விளங்கு தல், ஒளிர்தல்**; to glitter, shine, glisten. "அவிர்மதிக்குப் போல" (குறள், 1117).

[அவிர்தல் = வேதல், எரிதல், ஒளிர்தல்.]

அவிர்²-தல் *avir-*, 2 செ.கு.வி. (v.i.). 1. **கிழி தல்** (பொதி.நி.); to be torn, to be rent asunder. 2. **பீறுதல்**; to be lacerated (சா.அக.).

[அவிழ்தல் = நெகிழ்தல், மலர்தல், விரிதல், பிளத்தல், பீறுண்ணல். அவிழ் → அவிர்.]

அவிர்¹ *avir*, பெ. (n.) **ஒளிர்வு, திகழ்வு (பிர காசம்)**; brightness, glitter, splendour. "அடர் பொன் னவிரேய்க்கும்" (கலித். 22:19).

அவிர்¹-தல் பார்க்க; see *avir-*¹.

அவிர்² *avir*, பெ. (n.) 1. **புல்**; grass. 2. **பீனசப் புல்**; a species of grass of the order of *Graminaceae* (சா.அக.).

அவிரி *aviri*, பெ. (n.) **அவுரி** (மூ.அ.) — **நீலிச் செடி** (திவா.); indigo plant, m.sh., *Indigofera tinctoria*.

ம. அவரி; தெ. அவிரி.

[அவிர் → அவிரி. அவிர்தல் = நிறத்தால் விளங்குதல். 'இ' வி.முத. ஈறு.]

அவிரிரா *avirirā*, பெ. (n.) **பெரும்புள்ளடி**; a plant, *Hedysarum gangeticum*.

அவிவு *avivu*, பெ. (n.) **ஒழிவு**; extinction, annihilation. "கந்தத் தவிவே முத்தி" (பெரியபு. திருஞான. 916).

[அவிதல்=கெடுதல், அழிதல். அவி → அவிவு. 'வு' தொ.பெ. ஈறு.]

அவிழ்¹-தல் *aviḻ-*, 2 செ.கு.வி. (v.i.) 1. **நெகிழ் தல்**; to become loose, untied. 'ஆப்பவிழ்ந் தும்'' (திவ். இயற். திருவிருத். 95). வேட்டி அவிழ்ந்துவிட்டது. 2. **மலர்தல்**; to expand, open. "கருநனைக் காயாக் கணமயி லவிழ வும்" (சிறுபாண். 165). 3. **உதிர்தல்**; to drop off, as leaves; to fall out, as hair. "அவிழ்பன்ன மூணாய்" (ஞானவா. சுரகு. 35). 4. **சொட்டு தல்**; to drip. "மட்டவி ழலங்கல் மறவோனு டன்" (பாரத. மணி. 38). 5. **இளகுதல்**; to melt, soften. "சிந்தை யவிழ்ந்தவிழ்ந்து" (தாயு. பராபர. 75).

[அவி → அவிழ். அவிதல் = அவிந்து விரிதல். ஒ.நோ : குமி → குமிழ்.]

அவிழ்²-த்தல் *aviḻ-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **கட்டு நீக்குதல்**; to loosen, untie, unbind, unpack. பொட்டணத்தை அவிழ்த்தான். 'அம்பலத்திற் கட்டுச்சோறு அவிழ்க்க லாகாது' (பழ.). 2. **மலரச்செய்தல்**; to cause to open. "புல்லிதழ்த் தாமரை புதுமுகை யவிழ்ப்ப" (கல்லா. 53 : 6). 3. **விடுகதைப் பொருளை விடுத்தல்**; to solve, as a riddle.

[அவிழ்தல் (த.வி.) → அவிழ்த்தல் (பி.வி.).]

அவிழ்¹-தல் பார்க்க; see *aviḻ*¹-.

அவிழ் *aviḻ*, பெ. (n.) 1. **பருக்கை**; single grain of boiled rice. "அவிழொன்றற் குக மொன்றா" (திருவிளை. மூர்த்தி. 27). 2. **சோறு**; boiled rice. "வாலவிழ் வல்சி" (மலைபடு. 183). 3. **ஓர் அரிசி**; single grain

of raw rice. 'கலவுமி தின்றால் ஓர் அவிழ் தட்டாதா?' (பழ.).

ம. அவிழு; க. அகுளு.

அவிழ்[1]**-தல்** பார்க்க; see *aviḻ*[1]-.

அவிழ்த்துக்கொடு-த்தல் *aviḻttu-k-koḍu-*, 4 செ. குன்றாவி. (v.t.) ***சொந்தப் பொருளிலிருந்து எடுத்துக் கொடுத்தல்***; to pay from one's own pocket.

[அவிழ்த்தல் = முடிச்சு அவிழ்த்தல், கட்டவிழ்த்தல். பழங்காலத்திற் பணத்தைத் துணியில் முடிந்து வைத்திருந்ததனால், இவ் வழக்குத் தோன்றிற்று.]

அவிழகம் *aviḻ-agam*, பெ. (n.) ***மலர்ந்த பூ***; full-blown flower. "ஒள்ளித ழவிழகம்" (பதிற்றுப். 52 : 19).

[அவிழ் + அகம் (இடம்). 'அகம்' ஓர் ஈறு.]

அவினந்தமாலை *avinanda-mālai*, பெ. (n.) ***இறந்துபட்ட ஒரு கணிதநூல்*** (யாப். வி. பக். 528); an extinct Tamil treatise on mathematics.

அவுக்கவுக்கெனல் *avukkavukk(u)-enal*, பெ. (n.) ***அவக்கவக்கெனல்*** பார்க்க; see *avakkavakk(u)-enal*.

[அவக்கவக்கெனல் → அவுக்கவுக்கெனல்.]

அவுசாக *avušāga*, கு.வி.எ. (adv.) ***ஒழுங்காக, நேர்த்தியாக*** (உ.வ.); neatly, tidily, nicely (Com.u.).

[அழகிது → அழகிசு → அழவிசு → அவிசு + ஆக.]

அவுசு பார்க்க; see *avušu*.

அவுசு *avušu*, பெ. (n.) ***ஒழுங்கு, நேர்த்தி*** (உ.வ.); neatness, tidiness, trimness, niceness (Com.u.).

[ஒருகா. அழகிது → அழகிசு → அழவிசு → அவிசு.]

அவுசுக்காரன் *avušu-k-kāran*, பெ. (n.) ***ஆடையிற் புரியம் (பிரியம்) உடையவன்***; one very fond of dresses (W.).

[அவுசு = அழகிது. 'காரன்' உடைமை குறித்த ஈறு. அழகாக வுடுப்பதில் மிகுந்த விருப்பமுள்ளவன் அவுசுக்காரன் எனப்பட்டான்போலும்.]

One fond of dressing trimly அல்லது one fond of fine clothes என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது பொருத்தமாயிருக்கும்.

அவுசு பார்க்க; see *avušu*.

அவுசுப்பம் *avušuppam*, பெ. (n.) ***அவிசுப்பம்*** பார்க்க; see *avišuppam*.

அவுரம் *avuram*, பெ. (n.) ***ஒருவகைச் செய்நஞ்சு (கௌரிபாடாணம்)***; a kind of prepared arsenic, yellow oxide of arsenic (சா.அக.).

அவுரி[1] *avuri*, பெ. (n.) ***மீன்வகை*** (நெல்லை); a kind of fish (Tn.).

ம. அவலி

அவுரி[2] *avuri*, பெ. (n.) ***அவிரி*** பார்க்க; see *aviri* (திவா.). இதன் மறுபெயர் நீலி.



அவுரி

அவுரிவகைகள் (சா. அக.):

1. வச்சிர நீலி - கருப்புநிறமான நீலி; black aviry.
2. நீலி அவுரி – நாட்டவுரி; common indigo, *Indigofera tinctoria.*
3. இருப்புமுறி அவுரி – வெண்மையும் நீலமும் கலந்த அவுரி; Arabian indigo, *Indigofera argentia.*
4. மேனாட்டவுரி – அமெரிக்கா தேசத்து அவுரி; indigo from Brazil and Mexico, *Baptisia tinctoria.*
5. மணிலா அவுரி – மணிலா நீலம்; Manilla indigo, *Anona reticulata.*
6. பெரிய அவுரி (பேரவுரி); a large variety of the plant.
7. கள்ளவுரி – நீலப்பூ அவுரி; bastard indigo, *Amorpha fruticosa.*
8. சீமை அவுரி – ஆங்கிலநாட்டு அவுரி; British indigo, *Isatis tinctoria.*
9. சீன அவுரி – சீன தேசத்து அவுரி; China indigo, *Isatis indigotica.*
10. காட்டவுரி – மஞ்சட்பூ அவுரி; false indigo, *Baptisia tinctoria.*
11. சீமை நீலி; West Indian indigo, *Indigofera anil.*

வச்சிர (வஜ்ர) நீலி என்பது வடமொழிப் பெயர். அதைத் தமிழில் வயிரநீலி எனலாம்.

சீமை (ஸீமா) என்பது வடசொல். அது எல்லையையும் நாட்டையும் வெளிநாட்டை

அவரை


குங்குமவவரை


கோழிக்காலவரை


சங்கவரை


சாட்டவரை

சிவப்பவரை

சுருக்கவரை

செம்பளியவரை

யும் குறிக்கும். ஆங்கிலராட்சி ஏற்பட்டபின், அது வெளிநாடென்னுங் கருத்தில் சிறப்பாக ஆங்கில நாட்டையே குறித்தது.

[அவிர் → அவிரி → அவுரி.]

அவுரிச்சால் *avuri-c-cāl*, பெ. (n.) வாயகன்ற **பெருங்கலம்** (இ.வ.); big vessel with wide mouth (Loc.).

[அவுரி + சால். அவிழ் → அவிர். அவிர்தல் = கட்டவிழ்தல், விரிதல், மலர்தல். அவிர் → அவிரி = விரிந்தது, அகன்றது. 'இ' வி.முத. ஈறு. சாலுதல் = மிகுதல், நிறைதல், பருத்தல், அகலு தல். சால் = பெருங்கலம், தாழி.]

அவுரிநெய் *avuri-ney*, பெ. (n.) அவுரி வேரி **னின்று இறக்கும் ஒருவகை நெய்**; an oil extracted from the root of the indigo plant (சா.அக.).

அவுரிப்பச்சை *avuri-p-paccai*, பெ. (n.) பச்சைக் கருப்பூரம் (வை.மூ.); refined camphor (செ. அக.) — பச்சைக்கற்பூரம்; crude camphor (சா.அக.).

[அவிர்தல் = விளங்குதல், விளக்கமா யெரி தல். அவிர் → அவிரி → அவுரி. 'இ' வி.முத. ஈறு. பச்சையவுரி → அவுரிப்பச்சை (முறைமாற்று).]

அவுளிமீன் *avuḷi-mīn*, பெ. (n.) **ஒருவகைக் கடல் மீன்**; a kind of sea-fish, *Mugil cocrules*, *Maculatus*.

அவுளியா *avuḷiyā*, பெ. (n.) **வெளவால் மீன்**; pomfrets, marine fish, *Stromatens*.

ம. ஆவோளி

அவுறுதம் *avuṟudam*, பெ. (n.) 1. **பித்த நோய்வகை;** a bilious disease (செ.அக.) — பித்தக்கடுமை (**பித்தாதிக்கம்**); aggravated condition of the bile (சா.அக.). 2. **புணர்ச்சி நோய் (கிரந்தி) வகை**; a venereal disease, siphilitic skin affections (W.). 3. **மேகநோய்**; venereal disease (சா.அக.).

அவெளி *aveḷi*, பெ. (n.) **நிலவிளா** (பரி.அக.); a species of wood-apple (செ.அக.) — **நரி விளா** (சா.அக.).

அவேளை *avēḷai*, பெ. (n.) **வேளையல்லாத வேளை**; improper or inopportune time, unfavourable or unpropitious time.

ம., தெ. அவேல; க. அவேளெ.

[அல் → அ (எ.ம.முன்.). வேலை → வேளை.]

அவை¹-த்தல் *avai-*, 4 செ.குன்றாவி. (v.t.) **அவித்தல்** (பிங்.); to cook, boil.

[அகைதல் = எரிதல், வேதல். அகைத்தல் = எரித்தல், வேவித்தல். அகை → அவை. ஒ.நோ: குகை → குவை.]

அவை²-த்தல் *avai-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **நெல் அரிசி முதலியவற்றைக் குற்றுதல்**; to pound, thump, in a mortar. "அவைப்புமா ணரிசி யமலைவெண் சோறு" (சிறுபாண். 194). 2. **கையாற் குத்துதல்**; to cuff, prod. "ஆவி யயர்ந்துன தங்கை யவைத்தலின்" (சேதுபு. தேவிபுர. 61). 3. **நெரித்தல்**; to squeeze, press down, crush. "இறைவிரலா லவைத்துகந்த வீசா" (தேவா. 6. 55 : 11).

ம. அவய்க்குக; க. அவல்; து. அபெபுனி.

[அகைத்தல் = அடித்தல், ஒடித்தல், அறுத்தல், வருத்துதல். அகை → அவை.]

அவை¹ *avai*, சு. பெ. (demons. pron.) **அப் பொருள்கள்**; those, those things.

ம. அவ, அவ்; க., து. அவு; தெ. அவி; பட. அவெ.

['அ' சே.சு. அ → ஐ (பல. பா. ஈறு). அ → அவ் → அவ → அவை. அவ் = அவை (பல. பா. சே. சு. பெ.).]

அவை² *avai*, பெ. (n.) 1. **மாந்தர் கூட்டம்**; (பிங்.); assembly of men. 2. **அறிஞர் கூட்டம்**; assembly of learned men. 'அவையறிதல்' (குறள், அதி. 72). 3. புலவர் (திவா.); learned men, poets. 4. **அவை மண்டபம்**; assembly hall. "தமனியத் தவைக்கண்" (கந்தபு. மகேந். நகரழி. 6). 5. **நாடகவரங்கு**; theatre. "கூத்தாட்டவை" (குறள், 332).

[அமைதல் = பொருந்துதல், கூடுதல், நிறை தல். அமை = கூட்டம். அமை → அவை.]

அவை → சவை. ஒ.நோ: அமர் → சமர், அமை → சமை. சவை → சபை. ஒ.நோ: உருவு → உருபு, செய்வவர் → செய்பவர். சபை யென்னும் தென்சொல்லே வடமொழி யிற் சபா (sabhā) என்று திரிந்துள்ளது.

'சபா' என்னுஞ் சொல்லிற்கு வடமொழி யிற் கூறும் வேர்ப்பொருள் விளங்குவது (பிரகாசிப்பது), விளக்கத்தோடு கூடியது என்பதே. ஸ = கூட. பா (bha) = விளங்கு, ஒளிர் (பிரகாசி, to shine). பா என்பது பால் (வெண்மை, ஒளி) என்பதன் கடைக்குறை யாகவுமிருக்கலாம்.

காலஞ்சென்ற சுநீதிகுமார் சட்டர்சியார் மேற்கூறிய பொருட் கரணியத்தின் (காரணத்தின்) பொருந்தாமையை நோக்கி, 'சபா' என்னும் வடசொல்லை 'sib' என்னும் ஆங்கிலச் சொல்லினின்று திரித்தார்.

"Sib, adj. (chiefly Sc.), & n. (genetics; usu. pl.).

1. related, akin, (to). 2. n. a brother or sister (disregarding sex). Hence ~ *LING*[1] n., one of two or more children having one or both parents in common (usu. pl.), ~ 'SHIP n., the group of children (disregarding sex) from the same two parents. (OE. *sib(b)*, MDu. *sib(be)*, OHG. *sippi*, Goth. *sibjis*) — C.O.D.

'sib' என்னும் ஆங்கிலச்சொல் உடன் பிறப்பையே குறித்தலாலும், ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாயிருத்தலாலும், சபை அல்லது சபா என்னும் சொல்லொடு ஒரு தொடர்பும் இல்லதென்பது வெளிப்படை.

அவைக்களம் *avai-k-kaḷam*, பெ. (n.) **அவை கூடுமிடம்**; place or hall of assembly. "அரசவைக் களத்துள்" (கந்தபு. யுத்த. பானுகோ. *159*).

[அவை + களம். கள்ளுதல் = கலத்தல், கூடுதல். கள் → களம் = கூட்டம், கூடுமிடம்.]

அவை² பார்க்க; see avai².

அவைநான்கு *avai-nāngu*, பெ. (n.) **நல்லவை, தீயவை, நிறையவை, குறையவை என்னும் நால்வகைக் கற்றோர் கூட்டம்**; assembly of four kinds, viz., good assembly, bad assembly, perfect assembly and defective assembly.

அவைதாம் நான்கு வகைப்படும்; நல்லவையும் தீயவையும் குறையவையும் நிறையவையும் என. என்னை?

"அவையெனப் படுபவை யரிறபத் தெரியி
னல்லவை தீயவை குறையவை நிறையவை
யெனச்
சொல்லுப வென்ப தொல்லை யோரே"

என்பவாகலின் (யாப். வி. பக். *514*).

[அவை + நான்கு. நால் → நால்கு → நான்கு.]

அவை² பார்க்க; see avai².

அவைப்பு¹ *avaippu*, பெ. (n.) 1. **அரிசி முதலியன உரலிற் குற்றுதல்**; pounding, as rice, in a mortar. "அவைப்புமா ணரிசி" (சிறுபாண். *194*). 2. **குற்றின அரிசி அல்லது தவசம்**; pounded rice or grain.

அவை²-த்தல் பார்க்க; see *avai²-*.

அவைப்பு² *a-vaippu*, பெ. (n.) **வைக்கப்படாதது, இயற்கையானது**; that which is not prepared or is not artificial, *i.e.*, that which is natural (சா. அக.).

[அல் → அ (எ.ம. முன்). வை → வைப்பு. 'பு' தொ.பெ. ஈறு.]

அவையக்கோழி *avaiya-k-kōḻi*, பெ. (n.) **அடைகாக்கும் கோழி**; brooding hen.

[அவையம் + கோழி.]

அவையங்காத்தல் *avaiyaṅ-kāttal*, பெ. (n.) **அடைகாத்தல்** (வின்.); to sit on eggs, brood. கோழி அவையங்காக்கிறது.

[அவையம் + காத்தல்.]

அவையடக்கம் *avai-y-aḍakkam*, பெ. (n.) **அறிஞர் அவைக்கு, அதன்முன் நின்றேனும், தாம் இயற்றும் நூன்முகத்திலேனும், ஓர் அறிஞர் வணக்கங் கூறுதல்**; exhibition of modesty by a speaker addressing a public assembly, traditional apologetic modesty expressed by an author while presenting a literary work. 'அதனைச் சங்கத்தார் ஆராய்ந்தமை கூறவே அவையடக்க முணர்த்திய தாயிற்று' (சீவக. 4, உரை).

[அடங்கு → அடக்கு → அடக்கம் = அடக்கவுரை, வணக்கமொழி.]

அவை² பார்க்க; see avai².

அவையடக்கியல் *avai-y-aḍakkiyal*, பெ. (n.) **அவையடக்கம்** பார்க்க; see *avai-y-aḍakkam*.

"அவையடக் கியலே யரிறபத் தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்
றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே"
(தொல். பொருள். செய். *113*).

[அவை + அடக்கு + இயல் (இயல்பு, தன்மை, இலக்கணம்).]

அவையடக்கு *avai-y-aḍakku*, பெ. (n.) **அவையடக்கியல்** பார்க்க; see *avai-y-aḍakkiyal*.

[அவை + அடக்கு.]

அவையத்தார் *avaiyattār*, பெ. (n.) 1. **புலவர் அல்லது அறிஞர் கூட்டத்தார்**; members of a learned assembly. 2. **முறையம் (நியாயம்) உரைக்கும் அவையோர், அறங்கூறவையத்**

தார்; judges. "எட்டுவகை நுதலிய அவையத் தானும்" (தொல். பொருள். புறத். 21). 'எண்வகைக் குணத்தினைக் கருதிய அவையத் தாரது நிலைமையானும்: அவை குடிப் பிறப்புக் கல்வி ஒழுக்கம் வாய்மை தூய்மை நடுவுநிலைமை அழுக்காறின்மை அவா வின்மை எனவிவை யுடையராய் அவைக்கண் முந்தியிருப்போர் வெற்றியைக் கூறுதல்' (நச். உரை).

[அவை → அவையம் → அவையத்தார். 'அம்' பெ.பொ.பின். அல்லது ஈறு (aug. suff.). 'அத்து' சாரியை. 'ஆர்' ப. பா. ஈறு.]

அவையம்[1] *avaiyam*, பெ. (n.) 1. **புலவர் அல்லது அறிஞர் கூட்டம்**; assembly of learned men. 2. **வழக்குத் தீர்க்கும் அறமன்றம், முறையம் (நியாயம்) கூறும் அவை**; court of law. "சிறந்த கொள்கை யறங்கூ றவைய மும்" (மதுரைக். 492). 3. **அவை மண்டபம்**; assembly hall. "வாய்மை யிகழ்ந்துளா னவை யத்தைமுன் னீறுசெய்து" (கந்தபு. மகேந். சதமுக. 21). 4. *அடைகாத்தல்*; brooding. கோழி அவையத்தில் இருக்கிறது.

[அவை → அவையம் 1, 2, 'அம்' பெ. பொ. பின். அவையம் 3, இடவணாகு பெயர் (தானி யாகுபெயர்).]

அவையம்[2] *avaiyam*, பெ. (n.) **அவயம், இலாமிச்சை, வெட்டிவேர்** (வை.மூ.); cuscus grass.

அவையம்[3] *avaiyam*, பெ. (n.) **இரைச்சல்** (நெல்லை); noise. அவையம் போடாதே.

அவையர் *avaiyar*, பெ. (n.) 1. **அவையுறுப் பினர்**; members of an assembly. "அவையரு மனைய ரானார்" (திருவிளை. இசை. 22). 2. **சொற்பொழிவு கேட்குங் கூட்டத்தார்**; assembly of listeners, audience.

[அவை + அர் (ப. பா. ஈறு).]

அவையல்[1] *avaiyal*, பெ. (n.) **திரள்** (அக.நி.); gathering, collection.

[அமைதல் = நெருங்குதல், கூடுதல், திரள்தல். அமை → அவை → அவையல். 'அல்' தொ. பெ. ஈறு.]

அவையல்[2] *avaiyal*, பெ. (n.) 1. **குற்றல்**; pounding of rice. 2. **தீட்டல்**; removal of bran and polishing, as of rice by pounding. 3. **தீட்டின அரிசி**; polished rice. "ஆய்தினை யரிசி யவையல்" (பொருந. 16). 4. **அவல்** (வின்.); flattened rice.

[அகை → அவை → அவையல். 'அல்' தொ. பெ. ஈறு.]

அவை[2]-த்தல் பார்க்க; see *avai*[2]-.

அழக்கு *aḻakku*, பெ. (n.) **ஆழாக்கு** (தைலவ. தைல. 84); ollack, measure of quantity of dry or liquid commodities, 1/8 of a measure.

ம. ஆழக்கு; க. ஆழாக்கு.

[அரையுழக்கு → ஆழாக்கு → அழக்கு.]

அழக்குடம் *aḻa-k-kuḍam*, பெ. (n.) **பிணக்குடம்**; urn, earthen pot used in a funeral ceremony. 'அழக்குட மென்பது பிணக்குடத்தை' (தொல். எழுத்து. புள்ளி. 59, நச். உரை).

[அழன் + குடம். அழன் = பிணம். குடம் = மட்கலம்.]

அழக்கொடி *aḻa-k-koḍi*, பெ. (n.) 1. **பேய்ப் பெண்**; demoness. "அழக்கொடி யட்டான்" (திவ். திருவாய். 2.10:9). 2. **எப்பொழுதும் அழுதுகொண்டே யிருக்கும் பேய்பிடித்த பெண்**; a woman who keeps weeping under the influence of a demoness (சா.அக.).

[அழல் = அழுதல். கொடி = கொடிபோன்ற பெண். அழற்கொடி → அழக்கொடி.]

அழகங்காட்டு-தல் *aḻagaṅ-kāṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) **அழகுகாட்டி நகையாடுதல்** (நெல்லை); to mimic and make fun of (Tn.).

[அழகு + அம் + காட்டு. 'அம்' சாரியை.]

அழகச்சு *aḻag(u)-accu*, பெ. (n.) **பழைய காசு (நாணய) வகை** (T.A.S. iii, 50); an ancient coin.

ம. அழகச்சு

[அழகு + அச்சு (அச்சடித்தது).]

அழகப்பன்காளை *aḻagappaṉ-kāḷai*, பெ. (n.) **பெருமாள்மாடு** (நெல்லை); sacred bull, adorned with cowries and trained, by a class of wandering mendicants, to nod its head in response to questions (Tn.).

[அழகப்பன் = பெருமாள். காளை = காளை மாடு. திருமால் மதத்தாரான இரப்போரே காளையைப் பழக்கி இரப்பிற்குத் துணைக்கொள்வதனால், பெருமாள்மாடு என்னும் பெயர் தோன்றிற்று. அழகப்பன் என்பது திருமாலுக்கு ஒரு பெயர்.]

அழகம் *a<u>l</u>agam*, பெ. (n.) **ஒருவனைப்போல் நடித்து ஏளனம் செய்தல்**; mimicry, ridicule by imitation.

அழகர்[1] *a<u>l</u>agar*, பெ. (n.) **திருமாலிருஞ்சோலைத் திருமால்**; *Tirumāl* (Viṣṇu), the handsome one, worshipped at *A<u>l</u>agarmalai* near Madurai.

[அழகு → அழகன் → அழகர். 'அர்' உயர்வுப் பன்மை யீறு.]

இறைவன் எல்லா நல்லியல்புகளையும் நற்குணங்களையும் உடையவனாதலால், அவனை அழகன் என்பது பொது வழக்கு. திருமால் மதத்தார் தசரதன் மகனான இராமனைத் திருமாலின் தோற்றரவுகளுள் (அவதாரங்களுள்) ஒன்றாகக் கொண்டதனால், அழகன் என்பது சிறப்பாகத் திருமாலுக்கொரு பெயராயிற்று. 'ராம' என்னும் வடசொல்லின் பொருள் அழகன் என்பதே.

அழகர்[2] *a<u>l</u>agar*, பெ. (n.) **வெள்ளெருக்கு** (மலை.); white madar (செ.அக.) — white flowered giant swallow wort, *Calotropis gigantea* (alkiflora).

அழகர்கலம்பகம் *a<u>l</u>agar-kalambagam*, பெ. (n.) **வேம்பத்தூரார் ஒருவர் திருமாலிருஞ்சோலை யழகர்மேற் பாடிய கலம்பகப் பனுவல்**; name of a *Kalambagam* poem on *A<u>l</u>agar* of *Tirumāliruñjōlai* by a native of Vēmbattūr.

அழகர், கலம்பகம் பார்க்க; see *a<u>l</u>agar, kalambagam*.

அழகர்பிள்ளைத்தமிழ் *a<u>l</u>agar-piḷḷai-t-tami<u>l</u>*, பெ. (n.) **வேம்பத்தூரார் ஒருவர் திருமாலிருஞ் சோலை யழகர்மேற் பாடிய பிள்ளைத்தமிழ்ப் பனுவல்**; name of a *Piḷḷaittami<u>l</u>* poem on *A<u>l</u>agar* of *Tirumāliruñjōlai* by a native of Vēmbattūr.

[அழகர் + பிள்ளை + தமிழ்.]

அழகர், பிள்ளைத்தமிழ் பார்க்க; see *a<u>l</u>agar, piḷḷai-t-tami<u>l</u>*.

அழகர்மலை *a<u>l</u>agar-malai*, பெ. (n.) **மதுரை யருகிலுள்ள திருமாலிருஞ்சோலை**; name of a hill temple near Madurai. 'திருமால்குன்றம் - அழகர் திருமலை' (சிலப். 11 : 91, அடியார்க். உரை).

[அழகர் + மலை. மல் (வளம்) → மலை.]

அழகர் பார்க்க; see *a<u>l</u>agar*.

அழகரந்தாதி *a<u>l</u>agar-andādi*, பெ. (n.) **பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் திருமாலிருஞ்சோலை யழகர்மேற் பாடிய அந்தாதிப் பனுவல்**; name of an *andādi* poem on *A<u>l</u>agar* of *Tirumāliruñjōlai* by Piḷḷaipperumāḷ Aiyaṅgār.

[அழகர் + அந்தாதி.]

அழகர்[1], **அந்தாதி** பார்க்க; see *a<u>l</u>agar*[1], *andādi*.

அழகவேதம் *a<u>l</u>aga-vēdam*, பெ. (n.) **ஒரு மூலிகையின் (அதிவிடயம்) வேர்** (மலை.); atis (செ.அக.) — the root of Indian attees, *Aconitum heterophyllum* (சா.அக.).

அழகன் *a<u>l</u>aga<u>n</u>*, பெ. (n.) 1. **அழகுள்ளவன்**; handsome man. 2. **அழகனான இராமன்**; Rama, the handsome one. "அழகித ழகிதென வழகன்" (கம்பரா. யுத்த. மூலபல. 160). 3. **திருமால்**; *Tirumāl* (Viṣṇu). "திகிரியை யுடைய அழகனை" (தக்கயாகப். 239, உரை).

ம. அழகன்

[அழகு → அழகன்.]

அழகாத்திரிவெட்டு *a<u>l</u>agāttiri-veṭṭu*, பெ. (n.) **பழைய காசுவகை** (பணவிடு. 132); an ancient coin.

[அழகாத்திரி + வெட்டு.]

அழகாரம் *a<u>l</u>agāram*, பெ. (n.) 1. **அழகான பேச்சு**; brilliant speech, brilliancy of expression. 2. **வீண்புகழ்ச்சிப் பேச்சு**; empty compliment.

[அழகு + ஆரம் (ஓர் ஈறு). இனி, அழகிய மாலைபோன்ற பேச்சு எனினுமாம். ஆரம் = முத்து, முத்துமாலை.]

அழகானகருப்பி *a<u>l</u>agāna-karuppi*, பெ. (n.) **நீலஞ்சோதி**; the root of the milky shrub, *Euphorbia tirucalli* (சா.அக.).

[அழகு + ஆன + கருப்பி. கரு → கருப்பு → கருப்பி.]

அழகி *a<u>l</u>agi*, பெ. (n.) **அழகுள்ளவள்**; beautiful woman. "அழகிகூத் தாடு கின்றாள்" (சீவக. 1254).

[அழகு → அழகி. 'இ' பெ. பா. ஈறு.]

அழகிதழகிது *a<u>l</u>agid(u)-a<u>l</u>agidu*, பெ. (n.) **மிக நன்று!** 'Very fine! magnificent!' used often ironically. "அழகித ழகிதென வழகன்" (கம்பரா. யுத்த. மூலபல. 160).

[அழகிது + அழகிது – அழகிதழகிது (அ. தொ.).]

இது அடிக்கடி இழிவுக்குறிப்பாக நிகழும்.

அழகியநம்பி *alagiya-nambi*, பெ. (n.) *தமிழ்க் குருபரம்பரை நூலாசிரியர்;* the author of the *Guru parambarai* in Tamil verse.

அழகியமணவாளதாசர் *alagiya-manavaladasar*, பெ. (n.) அட்டப் பிரபந்தம் என்னும் திருமாலிய (வைணவ)ப் பனுவல் திரட்டின் ஆசிரியரான பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் (அஷ்டப். திருவரங். கலம். 101); another name of Pillaipperumal Aiyangar, the author of *Asta prabandham*.

[அழகிய மணவாளன் = திருமால். Skt. dāsa > த. தாசர் = அடியார். 'அர்' உயர்வுப் பன்மை யீறு.]

அழகியமணவாளன் *alagiya-manavalan*, பெ. (n.) *அரங்கநாயகன் என்னும் திருவரங்கத் திருமால்; Tirumal* (Viṣṇu) at *Tiruvarangam* (Srirangam), the handsome bridegroom.

[அழகு → அழகிய (கு. பெ. எ.). மணம் + ஆளன் (ஆ.பா. ஈறு) – மணவாளன்.]

சூடிக் கொடுத்த நாய்ச்சியார் என்னும் ஆண்டாளம்மையார் திருமாலைத் தம் மணவாளனாகக் கருதியது இங்குக் கவனிக்கத் தக்கது.

அழகியவாணன் *alagiya-vanan*, பெ. (n.) *ஒரு வகை மட்ட நெல்;* a variety of paddy yielding coarse rice.

[அழகு → அழகிய (கு. பெ. எ.). வாழ் → வாழ்நன் → வாணன் (மரூஉ).]

அழகியன் *alagiyan*, பெ. (n.) *அழகனான சிவன்;* Śiva, the handsome one. "நித்த மணாளர் நிரம்ப வழகியர்" (திருவாச. 17 : 3).

[அழகு → அழகிய → அழகியவன் (அழகிய + அவன்) → அழகியன்.]

அழகியாள் *alagiyal*, பெ. (n.) *செவ்வகத்தி;* scarlet-flowered pea tree, *Sesbania punicea* alias *Coronilla grandiflora (coccinea)* (சா.அக.).

அழகியான் *alagiyan*, பெ. (n.) *அழகனான திருமால்; Tirumal* (Viṣṇu), the handsome one. "அழகியான் தானே அரியுருவன் தானே" (திவ். இயற். நான்மு. 22).

[அழகு → அழகிய → அழகியவன் → அழகியான்.]

அழகு[1] *alagu*, பெ. (n.) 1. *எழில், கண்ணிற் கினிமை;* beauty, comeliness. "அரிபொங்கிக் காட்டு மழகு" (திவ். இயற். நான்மு. 21). 2. *சிறப்பு* (திருநூற். 9); excellence. 3. *நற்குணம்* (அரு.நி.); good nature. 4. *இன்பம்* (பிங்.); happiness. 5. *இளமை;* youth (சா. அக.). 6. *பாட்டின் எண் வகையான வனப்புகளுள் ஒன்று;* a kind of literary work, one of the eight *vanappus*.

"செய்யுள் மொழியாற் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே அழகெனப் படுமே"
(தொல். பொருள். செய். 236).

ம. அழகு; க. அடகு; தெ. அங்கு.

அழகு[2] *alagu*, பெ. (n.) 1. *கண்டசருக்கரை* (வின்.); rock candy. 2. *சருக்கரை;* sugar (சா.அக.). 3. *வெல்லம்;* jaggery (சா.அக.).

அழகுகாட்டு-தல் *alagu-kattu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *உடம்பின் அல்லது உறுப்பின் சைகைகளால் நகையாடுதல் (பரிகசித்தல்) அல்லது பழித்தல்;* to mimic, make faces at, for sport or ridicule.

[அழகு + காட்டு. காண் (த.வி.) → காட்டு (பி.வி.).]

அழகு[1] பார்க்க; see *alagu*[1].

அழகுகாமாலை *alagu-kamalai*, பெ. (n.) *காமாலை வகை* (சீவரட்.); variety of jaundice (செ.அக.) — *உடம்பு மினுமினுத்து, கைகால் அசதியையும், புருவம் கண் மூத்திரம் முதலிய வற்றில் மஞ்சள் நிறத்தையும், ஆண்குறியில் எரிச்சலையும், செரியாமை (அசீரணம்) உப்பசம் முதலிய குணங்களையும் உண்டாக்கும் ஒருவகைக் காமாலை;* a form of jaundice characterised by glossy skin, languor, yellow eyes, yellow urine, burning sensation in the urinary passage, indigestion and distension of the stomach, etc., so called because of its lending a peculiar beauty to the body (சா. அக.).

அழகுகுளிசம் *alagu-kulisam*, பெ. (n.) *கழுத்தணி வகை;* amulet worn as an ornament on the neck.

[ஒருகா. குளிகம் (குளிகை) → குளிசம்.]

அழகு[1] பார்க்க; see *alagu*[1].

அழகுசர்ப்பம் *alagu-šarppam*, பெ. (n.) ஒருவகை அழகிய பாம்பு; a kind of beautiful snake.

[அழகு + சர்ப்பம். **Skt.** šarpa > த. சர்ப்பம்.]

அழகு¹ பார்க்க; see *alagu*¹.

அழகுசப்பாணி *alagu-šappāni*, பெ. (n.) நடக்க வொட்டாது குழந்தை கால்களை முடக்கும் ஓர் ஊதை (வாயு); a paralytic affectation manifested in the legs of children rendering them unable to walk, *Poliomyelitis* (சா.அக.).

[அழகு + சப்பாணி. சப்பளி → சப்பாளி → சப்பாணி = காலை மடக்கிச் சப்பளித்திருத்தல்.]

அழகுசம்பங்கி *alagu-šambangi*, பெ. (n.) கொடிச் சம்பங்கி; the creeper champak, Indian cowslip creeper, *Pergularia minor* (சா.அக.).

அழகுசிவப்பி *alagu-šivappi*, பெ. (n.) அழகியாள் பார்க்க; see *alagiyal* (சா.அக.).

அழகுசெண்டேறுதல் *alagu-šend(u)-ēru-*, 5 செ.கு.வி. (v.i.) 1. விளையாட்டுக்காகச் சாரி வருதல் (ஈடு, 7 . 3 : 1); to ride for pleasure. 2. அழகைக் காட்டுதல் (ஈடு, 1 . 4 : 6); to exhibit one's beauty.

[அழகு + செண்டு + ஏறு. செண்டு = குதிரையைப் பழக்கிச் செலுத்தும் வட்டப் பாதைவெளி. செண்டேறுதல் = செண்டுவெளியிற்போற் குதிரையேறி வருதல்.]

அழகு¹ பார்க்க; see *alagu*¹.

அழகுதுரைச்சி *alagu-turaicci*, பெ. (n.) ஒரு செயற்கை நஞ்சு (இந்திர பாடாணம்) (மூ.அ.); an arsenic preparation.

[அழகு + துரைச்சி. துரை = தலைவன், வேள், மன்னன். துரை (ஆ.பா.) – துரைச்சி (பெ.பா.). இங்கு அணிவகையில் அ∴றிணைப் பெயராயிற்று.]

அழகுதுரைப்பெண் *alagu-turai-p-pen*, பெ. (n.) அழகுதுரைச்சி பார்க்க; see *alagu-turaicci*.

[துரைச்சி = துரைப்பெண்.]

அழகுதேமல் *alagu-tēmal*, பெ. (n.) பெண்கட்கு அழகை யுண்டாக்கும் தேமல் வகை; spreading yellow spots on the body of women, regarded as adding beauty to them.

அழகுபூச்சூடி *alagu-pū-c-cūdi*, பெ. (n.) நீரரளி; water gannair or knot grass, *Polygonum genus* (சா.அக.).

[அழகு + பூ + சூடி.]

அழகுமுல்லை *alagu-mullai*, பெ. (n.) ஒரு வகை மலையாள முல்லைப்பூ; Malabar jasmine, *Jasminum malabaricum* (சா.அக.).

அழகுவண்ணத்தி *alagu-vannatti*, பெ. (n.) மருதோன்றி; fragrant nail dye, *Lawsonia alba* (சா.அக.).

[அழகு + வண்ணத்தி. வண்ணம் (நிறம்) → வண்ணத்தி = நிறத்தை யுண்டுபண்ணுவது. 'அத்து' சாரியை. 'இ' வி.முத. ஈறு.]

அழகு¹ பார்க்க; see *alagu*¹.

அழகுவண்ணன் *alagu-vannan*, பெ. (n.) இதள் (பாதரசம்); mercury.

[அழகு + வண்ணன். வண்ணம் (நிறம்) → வண்ணன். 'அன்' உடைமை குறித்த ஒருமை யீறு.]

அழகெருது *alag(u)-erudu*, பெ. (n.) பழைய வரி வகை (T.A.S. iii, 32); an ancient tax.

[அழகெருது வைத்திருந்தவனிடம் இவ் வரி வாங்கப்பட்டதாகத் தெரிகின்றது.]

அழகெருதுக் காட்சிக்காசு *alagerudu-k-kātci-k-kāšu*, பெ. (n.) அழகெருது பார்க்க; see *alag(u)-erudu*.

[அழகு + எருது + காட்சி + காசு. அழகெருதை வைத்திருந்தவன், அதைக் காட்சிப் பொருளாகக் காட்டி மக்களிடம் பணம் வாங்கிப் பிழைத்ததனால் அல்லது பொருளீட்டியதனால், அரசு அவனிடம் வரி வாங்கியதுபோலும்!]

அழகோலக்கம் *alag(u)-ōlakkam*, பெ. (n.) அரசன் தன் அழகுதோன்றக் கொலுவிருக்கை (திவ். இயற். திருவிருத். 13, வியா.); glorious presence, as that of a king in his throne hall.

[அழகு + ஓலக்கம். ஓல் → ஓலகம் → ஓலக்கம்.]

அழசிகம் *alašigam*, பெ. (n.) எருக்கு; lightning leaf, *Calotropis gigantea* (சா.அக.).

அழசிதிப்பிலி *alaši-tippili*, பெ. (n.) பெருந் திப்பிலி; elephant pepper, *Piperlongum scindapsus* (சா.அக.).

அழத்தியம் *alattiyam*, பெ. (n.) சோமனாதிப் பெருங்காயம்; asafoetida, formerly exported from Somnād in Gujarat (சா.அக.).

[ஒருகா. அழல் → அழற்று → அழற்றியம் → அழத்தியம்.]

அழத்தியன் பார்க்க; see a*l*attiya*n*.

மறுவ. அழத்தியன்

அழத்தியன் *alattiyan*, பெ. (n.) பெருங்காயம் (மூ.அ.); asafoetida.

[ஒருகா. அழற்று → அழற்றி → அழற்றியம் → அழற்றியன் → அழத்தியன்.]

அழத்தியம் பார்க்க; see *alattiyam*.

அழல்-தல் *alal-*, 13 செ.கு.வி. (v.i.) 1. எரிதல்; to burn, to glow. ''விளக்கழ லுருவின்'' (பொருந. 5). 2. **திகழ்தல்** (பிரகாசித்தல்); to shine. ''மணிவிளக் கழலும் பாயலுள்'' (கம்பரா. பால. கடிமண. 67). 3. **'காந்துதல்'** (புறநா. 25 : 10, உரை); to burn. 4. **உறைப்பாதல்**; to be acrid, pungent. 5. **வெகுள்தல்**; to get into a rage. ''அதிவேகமொ டழலா'' (பாரத. மணிமா. 19).

ம. அழலுக (நோதல், துயருறுதல்); **க.** அழல், அடலு; **தெ.** அடலு (வருந்துதல்); **து.** அரதெ, அர்ல, அர்லுனி.

[உள் → அள் → அழல்.]

உண்ணம் பார்க்க; see *unnam*.

அழல் *alal*, பெ. (n.) 1. **தீ, நெருப்பு**; fire. ''வேளாக மழல்பட'' (கந்தபு. உற்பத். காமத. 90). 2. **தீக்கொழுந்து**; flame. ''தீயழ றுவைப்ப'' (பரிபா. 5 : 3). 3. **சூடு, வெப்பம்**; heat. ''நெருப்பழல் சேர்ந்தக்கால் நெய்போல்வ தூஉம்'' (நாலடி. 124). 4. **காய்ச்சல் (சுர) வெப்பம்**; temperature in fever (சா.அக.). 5. **நரகம்**; hell. ''அழனம்மை நீக்குவிக்கும்'' (தேவா. 6 . 93 : 4). 6. **செவ்வாய்** (பிங்.); Mars. 7. **ஆரல் (கார்த்திகை)**; the 3rd lunar asterism. ''அழலெனு மீனவர்க்கத் தறுவரும்'' (கந்தபு. உற்பத். திருவவ. 126). 8. **கேட்டை** (பிங்.); the 18th lunar asterism. 9. **எரிவு**; burning sensation as of a wound, of medicine in the system. 10. **உறைப்பு**; pungency (தைலவ. தைல. 54). 11. **சினம்**; rage, anger. 12. **நஞ்சு**; poison. ''அழற்க ணாகம்'' (மணிமே. 23 : 69). 13. **எருக்கு** (மூ.அ.); madar, *Calotropis gigantea*. 14. **கள்ளி** (மூ.அ.); spurge. 15. **கொடுவேலி** (மலை.); Ceylon leadwort, *Plumbago zeylanica*.

ம. அழல்; **து.** அர்ல, அர்லுனி.

[உள் → அள் → அழல்.]

அழல்-தல் பார்க்க; see *alal-*.

அழல்சொரிந்தவுப்பி *alal-šorinda-v-uppi*, பெ. (n.) **கல்லுப்பு**; a kind of common salt obtained in the natural state, so called from the heat it had imbibed while remaining buried under the earth (சா.அக.).

அழல்வண்ணன் *alal-vannan*, பெ. (n.) **சிவன்**; Šiva, one having the colour of fire. ''அழல் வண்ண வண்ணர்தாம் நின்ற வாறே'' (தேவா. 6 . 94 : 7).

[அழல் + வண்ணன். வள் = வரி. வரி → வரணம் → வரணன். வள் → வண் → வண்ணம் → வண்ணன் = வரணன்.]

அழல், வண்ணம் பார்க்க; see *alal, vannam*.

அழல்விதை *alal-vidai*, பெ. (n.) **நேர்வாளவித்து** (மலை.); croton seed (செ.அக.) — croton seed or king's seed, *Croton tigilium* (சா. அக.).

Note (சா.அக.) : These seeds which were formerly known in Europe under the name of *Grana molucca*, are of a convex shape on one side and bluntly angular on the other. They are reckoned by Vaidyans amongst their drastic purgatives and are frequently prescribed by them when powerful cathartics are required.

இவ்விதை முன்பு ஐரோப்பாவில் 'கிரானா மொலுக்கா' என்னும் பெயரொடு வழங்கிற்று. இது ஒருபுறம் உள் வளைவாகவும் மறுபுறம் மொட்டைக் கோண வடிவிலும் இருக்கும். இது நாட்டு மருத்துவரால் கடுங் கழிச்சல் மருந்துகளுள் ஒன்றாகக் கொள்ளப் படுகிறது. வலிய கழிச்சல் மருந்து வேண்டும் போதெல்லாம் இதுவே கொடுக்கப்படும்.

அழல்விரியன் *alal-viriyan*, பெ. (n.) **கடித்தால் தாங்கமுடியாத எரிச்சலையும் வலியையும் உண்டுபண்ணும் எரிவிரியன், விரியன்பாம்பு வகைகளுள் ஒன்று**; a kind of venomous viper, the bite of which is followed by unbearable burning sensation and pain.

[அழல் + விரியன். அழல் = எரிச்சல்.]

அழல்விழி-த்தல் *alal-vili-*, 4 செ.கு.வி. (v.i.) **சினத்தொடு பார்த்தல், வெகுளியாற் கண் சிவந்து நோக்குதல், தீப் புறப்பட விழித்தல்**; to flash fire from the eyes in anger. ''அங்கணேவ வழல்விழித்து'' (திருவாலவா. 14 : 5).

[அழல் + விழி. சினம் நெருப்பின் தன்மையது. அதனால், அழலுதல், கனலுதல், வெகுளுதல்

முதலிய வினைச்சொற்கள் பிறந்தன. இனி, ஒரோவொரு சமையத்தில் வெகுளி வேகத்தாற் கண்களினின்று தீப்பொறி பறப்பது முண்டு.]

அழலம்பூ *alal-am-pū*, பெ. (n.) **தீம்பூ, தீம்பூ மரம்**; a kind of flower, the tree that produces that flower. "அழலம்பூ நறவார்ந்து" (சீவக. 939).

[அழல் + அம் (சாரியை) + பூ.]

இச் சொல்லிற்குச் சா. அகரமுதலியில் 'சங்கங்குப்பிச் செடி' என்று இன்னொரு பொருள் குறிக்கப்பட்டுள்ளது. ஆயின், 'small-leaved glory tree, *Cleodendron inerme*' என்னும் அதன் ஆங்கிலப் பொருள் பொருந்த வில்லை. செடியும் மரமும் ஒன்றல்ல.

அழலவன் *alalavan*, பெ. (n.) 1. **நெருப்புத் தேவன்**; god of fire. 2. **கதிரவன்** (பிங்.); Sun. 3. **செவ்வாய்** (பிங்.); Mars.

[அழல் + அவன் (ஆ. பா. ஈறு).]

அழலாடி *alal-āḍi*, பெ. (n.) **சிவன்** (திவா.); Šiva, dancing with fire in his hand.

[அழல் + ஆடி. ஆடு → ஆடி. 'இ' வி. முத. ஈறு. நெருப்பைக் கையிலேந்தி நடஞ்செய்வ தாகச் சொல்லப்படுவதனால், சிவன் அழலாடி யெனப்பட்டான்.]

அழலானி *alal-āni*, பெ. (n.) **வாட்டம்**; fading, withering. "அழலானியை யுடைய தாமரைப் பூவில்" (திவ். அமலனாதி. தனியன், வியா.)

[அழல் + ஆனி. ஒருகா. Skt. hāni > த. ஆனி (தீங்கு).]

அழலி *alali*, பெ. (n.) **நெருப்பு** (பிங்.); fire.

[அழல்தல் = எரிதல். அழல் + இ – அழலி. 'இ' வி.முத. ஈறு.]

அழலிக்கை *alalikkai*, பெ. (n.) **எரிச்சல், வயிற் றெரிச்சல்**; smarting pain, a peculiar burning sensation in the stomach caused by jealousy. என் உடைமையைக் கொடுக்க உனக்கேன் இத்தனை அழலிக்கை? (இராட்.).

[அழல் → அழல்கை → அழலுகை → அழலிக்கை (தொ.பெ.).]

அழலிடமேந்தி *alal-iḍam-ēndi*, பெ. (n.) **நெருப்பை இடக்கையில் ஏந்தி நிற்கும் அல்லது ஆடும் சிவபெருமான்** (கந்தபு. சுருக். 1); Šiva, as holding a ball of fire in his left hand.

[அழல் + இடம் + ஏந்தி. இடம் = இடக்கை. ஏந்து → ஏந்தி. 'இ' வி.முத. ஈறு.]

அழலூட்டு-தல் *alal-ūṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **தீயுண்ணச் செய்தல், தீ வைத்துக் கொளுத்து தல்**; to set on fire, burn. "அரியன முப்புரங் கள்அவை ஆரழ லூட்ட லென்னே" (தேவா. 7. 99 : 8).

[அழல் + ஊட்டு. உண் (த.வி.) → ஊட்டு (பி.வி.). ஊண் + து – ஊட்டு. 'து' பி.வி. ஈறு.]

அழலேந்தி *alal-ēndi*, பெ. (n.) **சிவபிரான்** (திவா.); Šiva, holding fire in the hand.

[அழல் + ஏந்தி. ஏந்து → ஏந்தி. 'இ' வி. முத. ஈறு.]

அழலை *alalai*, பெ. (n.) 1. **உடம்பின் காந்தல்**; internal heat of the body (சா.அக.). 2. **தொண்டைக் கரகரப்பு** (C.G.); irritation of the throat. 3. **களைப்பு** (C.G.); fatigue. 4. **ஒருவகைப் பாம்பு**; a kind of snake.

[அழல் → அழலை. 'ஐ' தொ. பெ. ஈறு.]

அழலைக்கிராணி *alalai-k-kirāni*, பெ. (n.) **உடம்பின் வெப்பத்தா லேற்படுங் கழிச்சல்**; inflammatory or irritant diarrhoea (சா.அக.).

[அழலை + கிராணி. Skt. grahaṇi > த. கிராணி.]

அழலைச்சுரம் *alalai-c-curam*, பெ. (n.) 1. **உடம்பு அதிக வெப்பங் கொள்வதனால் உண் டாகுங் காய்ச்சல்**; fever arising from excessive heat in the body. 2. **கணச்சூட்டினாற் குழந்தைகட்கு உண்டாகுங் காய்ச்சல்**; a fever in children arising from a wasting disease such as *Tabes mesenterica*.

சுரம் > Skt. jvara.

[அழல் → அழலை. சுள் → சுர் → சுரம்.]

அழலைநோய் *alalai-nōy*, பெ. (n.) **குழந்தை கட்குக் கணச்சூட்டினால் உறுப்புகள் வெந்து அதனால் ஏற்படும் ஒருவகைக் கணநோய்**; tuberculosis in children, characterised by inflammation of the internal organs of the body, such as *Tabes*, etc.

அழலோம்பு-தல் *alal-ōmbu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **தீ வளர்த்தல்**; to tender the sacred fire. 2. **தீயிற் படைத்தல்** (அக்கினி காரியஞ் செய்தல்) (சைவச. பொது. 325); to offer oblations in fire.

[அழல் + ஓம்பு. ஒப்புதல் = உயரவெடுத்தல். ஒப்பு → ஓம்பு.]

ஓம்பு-தல் பார்க்க; see *ōmbu-*.

அவரை

நகரவரை



நாட்டவரை



பட்டையவரை



பாலவரை

மணியவரை



வாளவரை



விரலவரை

தீ வளர்த்தல், சிறுதெய்வ வழிபாட்டினரும் தீயைச் சிறந்த தெய்வமாகக் கொண்டவரு மான ஆரியப் பூசாரியர் வழக்கம். தமிழர், சிவன் என்னும் பெயராலும் திருமால் (மாயோன்) என்னும் பெயராலும் முழுமுதற் கடவுளை வணங்குபவராதலின், தீ வளர்த்தல் அவர்க்குரிய தன்று.

அழலோன் *alalōn*, பெ. (n.) 1. **நெருப்புத் தெய்வம்;** god of fire. ''அஞ்சியந்த வழலோனு மப்பொழுதொ ரந்த ணாளன் வடி வாகியே'' (பாரத. இராசசூய. 57). 2. *கதிரவன்;* Sun. ''அங்கம் வெம்பினை பனிக் கதி ரல்லைநீ யழலோய்'' (கந்தபு. ஆற்று. 24). 3. *செவ்வாய்;* Mars (சூடா.). 4. **நெருப்பு;** fire (சா.அக.).

[அழல் → அழலவன் → அழலான் → அழலோன்.]

அழவணங்காட்டு-தல் *ala-vaṇaṅ-kāṭṭu-*, 5 செ. குன்றாவி. (v.t.) *முகத்தைச் சுழித்து ஒருவர் முகவமைப்பைப் பழித்துக் காட்டுதல்;* to mock by mimicking or by making faces at. *அவனை அழவணங் காட்டுகிறான்.*

[அழகு + வண்ணம் (வகை) + காட்டு. காண் (த.வி.) → காட்டு (பி.வி.).]

அழவணம் *ala-vaṇam*, பெ. (n.) *மருதோன்றி* (இ.வ.); henna (செ.அக.) — fragrant nail dye, *Lawsonia alba* alias *Lawsonia spinosa* (சா. அக.).

[அழகுவண்ணம் → அழவணம்.]

அழகுவண்ணத்தி பார்க்க; see *alagu-vaṇṇatti.*

'அழவண' என்பது கொச்சை வடிவம்.

அழற்கங்கை *alar-kaṅgai*, பெ. (n.) 1. *கருக் குழியிலுண்டாகும் பனிக்குடத்து நீர்;* the fluid collected in the womb of the female during her pregnancy, *Liquor amnii.* 2. *அழல்நீர்;* a thin watery acrid humour or discharge, *Ichor* (சா.அக.).

அழற்கண் *alar-kaṇ*, பெ. (n.) *அழற்சி விழி;* an eye-disease accompanied by inflammation of the eyes, inflamed eyes, *Ophthalmia* (சா. அக.).

[அழல் + கண்.]

அழற்கண்ணன் *alar-kaṇṇaṉ*, பெ. (n.) *சிவன்;* Śiva, having the eye of fire on his forehead.

[அழல் + கண்ணன். கண் → கண்ணன் 'அன்' ஆ.பா. ஈறு.]

அழற்கண்வந்தோன் *alar-kaṇ-vandōṉ*, பெ. (n.) *வீரபத்திரன் என்னும் சிவத்தோற்றத் தெய்வம்* (பிங்.); Virabhadra, born of Śiva's eye of fire.

[அழல் + கண் + வந்தோன். **Skt.** Vira-bhadra > *த. வீரபத்திரன்.]*

இது தொன்மக் கதையால் தோன்றியது. சிவபிரானின் நெற்றிக் கண்ணினின்று 'வீரபத்திரன்' என்னும் தேவன் தோன்றித் தக்கன் வேள்வியை அழித்தான் என்பது ஆரியச் சிவத் தொன்மக் கதை.

அழற்கதிர் *alar-kadir*, பெ. (n.) **கதிரவன்;** Sun sending forth fiery rays. ''வேலை யழற்கதிர் படிந்த வியன்கங்குல்'' (பெரியபு. திருஞான. 8).

[அழல் + கதிர்.]

அழல், கதிர் பார்க்க; see *alal, kadir.*

அழற்கரத்தோன் *alar-karattōṉ*, பெ. (n.) **நெருப்பைக் கையிலேந்திய சிவபிரான்** (உரி.நி).; Śiva, holding fire in the hand.

[அழல்+கரத்தோன். கரம்+அத்து (சாரியை) +ஓன் (ஆ.பா. ஈறு) — கரத்தோன். கருத்தல்= செய்தல். கரு → கரம் = செய்யுங் கை.]

'கரம்' என்னுஞ் சொல் 'கர' என்னும் வட சொல்லாகக் கருதப்படுகின்றது. ஆயின், அதன் மூலத்தை நோக்கின் தென்சொல்லாகத் தெரிகின்றது. கருமம், கருவி என்பன தென் சொற்கள். கருமம்→கம்மம்→கம். கம்மவர் = பயிர்த்தொழில் செய்வார். கம்மாளர் = கொற்றொழில் செய்வார்.

''ஈமுங் கம்மும் உரும்என் கிளவியும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன''

என்னும் தொல்காப்பிய (எழுத்து. புள்ளி. 33) நூற்பா, 'கம்' என்னுஞ் சொல்லைத் தென் சொல்லாகவே கொண்டுள்ளது. சமற் கிருதத்தில் பல தென்சொற்கள் வெளிப் படையாகவும் சில தென்சொற்கள் கரந்தும் வழங்குகின்றன. செய்தல் என்னும் பொருள் கொண்ட 'கருத்தல்' என்னுஞ் சொல் தமிழிற் பண்டே வழக்கற்றது; அதனால், கழகச் செய்யுள்களில் இடம்பெறவில்லை. இந் நிலைமையும், வடநூல்களிற் கரச்சொற் பெருவழக்கும், ஆரியர் சொல்வன்மையும், தமிழர் சொலமாட்டாமையும், கருமம் என்னுஞ் சொல்லைக் 'கர்ம' என்னும் வட சொற் றிரிபாகக் கொள்ள இடந்தருகின்றது.

இன்னும் இதன் விளக்கத்தைக் கருமம் என்னும் உருப்படியிற் காண்க.

'கரு' என்னும் தமிழ் வினைமுதனிலை வட மொழியிற் 'க்ரு' என்று திரியும்.

அழற்கருமம் *alar-karumam*, பெ. (n.) **தீ வழிபாடும் தீயிற் படைப்பும் (அக்கினி காரியம்)** (கூர்மபு. வருணாச். 19); religious oblations offered in fire.

[அழல் + கருமம். கரு → கருமம்.]

அழற்கரத்தோன் பார்க்க; see *alar-karattōn*.

அழற்காமாலை *alar-kāmālai*, பெ. (n.) **காமாலை நோய்வகை** (தஞ். சரசு. iii, 122); a kind of jaundice (செ.அக.) — **பித்தத்தா லுடம்பில் எரிச்சலை யுண்டாக்கும் ஒருவகைக் காமாலை**; jaundice accompanied by a burning sensation of the body due to disturbance in bile secretion (சா.அக.).

[அழல் + காமாலை.]

அழற்காய் *alar-kāy*, பெ. (n.) 1. **மிளகாய்**; chilly (சா.அக.). 2. **மிளகு**; black pepper. "தோகை விளங்கழற்காய்" (தைலவ. தைல. 51).

[அழல் = நெருப்பெரிவு போன்ற உறைப்பு. காழ் → காய்.]

காய் பார்க்க; see *kāy*.

அழற்குட்டம் *alar-kuttam*, பெ. (n.) **3ஆம் நாண்மீனாகிய ஆரல் (கார்த்திகை)**; the 3rd lunar asterism. "ஆடிய லழற்குட்டத்து" (புறநா. 229 : 1).

[அழல் = நெருப்பு. குள் → குட்டு → குட்டம் = திரள்.]

அழற்குத்து-தல் *alar-kuttu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **மணம் உறைத்தல்** (இ.வ.); to have a strong smell (Loc.) (செ.அக.). 2. **கொடிய நாற்றம் வீசுதல்**; to emit a strong offensive smell like the smell of putrefaction, to stink (சா.அக.).

[அழல் = நெருப்பு. குத்துதல் = கையால் அல்லது கத்தியால் குத்துதல். அழற்குத்துதல் = நெருப்புத் தாக்குவதுபோன்று கடுநாற்றம் மூக்கைத் தாக்குதல்.]

அழற்சி *alarci*, பெ. (n.) 1. **கொதிப்பு**; internal heat of the body (சா.அக.). 2. **உள்ளழற்சி**; inflammation of any internal organ of the body (சா.அக.). 3. **எரிவு**; burning sensation. 4. **உறைப்பு**; pungency. "புளிப்புக்கைப் பழற்சி யுப்பு" (ஞானவா. விரதசு. 13). 5. **சினம், வெகுளி**; anger, rage. "அவன்றிறத் தழற்சி யின்மை வேண்டுவல்" (சீவக. 393). 6. **அழுக்காறு, பொறாமை** (வின்.); envy, jealousy. 7. **கால்நடைகட்குச் சுரமுண்டாக்கும் ஒரு நோய்**; inflammatory fever in cattle.

ம. அழல்ச்ச

[அழல் + சி (தொ. பெ. ஈறு).]

அழற்சிநஞ்சு *alarci-nañju*, பெ. (n.) **உடம்பின் உள்ளுறுப்பை வெந்துபோகச் செய்யும் நஞ்சு அல்லது நஞ்சுகூடிய மருந்து**; any poison or poisonous compound causing inflammation of the internal organs, irritant poison or acrid poison (சா.அக.).

அழற்சியிலாநஞ்சு *alarci-y-ilā-nañju*, பெ. (n.) **உள்ளுக்குக் கொள்வதனால் அழற்சி யுண்டாக்காத நஞ்சு**; non-irritant poison (சா.அக.).

[அழற்சியிலாத → அழற்சியிலா + நஞ்சு.]

அழற்சிவிழி *alarci-vili*, பெ. (n.) **அழற்சியை யுண்டாக்குங் கண்ணோய்**; an eye disease accompanied by inflammation of eyes, inflamed eyes, *Ophthalmia* (சா.அக.).

அழற்சூடி *alar-cūdi*, பெ. (n.) **கொடிவேலி (கொடுவேலி)**; Ceylon leadwort, *Plumbago zeylanica* (சா.அக.).

[அழல் + சூடி. சூடு → சூடி. 'இ' வி.முத. ஈறு.]

அழற்பால் *alar-pāl*, பெ. (n.) 1. **எருக்கு** (பச்.மூ.); madar (செ.அக.). 2. **உடம்பிற் பட்டவிடத்தில் வேகச்செய்யும் பால்; அதாவது எருக்கம்பால், தில்லைப்பால்**; the milky juice of plants like madar and spurgewort, causing inflammation or blister on coming in contact with the skin.

[அழல் + பால்.]

அழற்பிணி *alar-pini*, பெ. (n.) **அழற்சியை யுண்டாக்கும் நோய்**; any disease causing inflammation of the internal organ or organs of the body, such as Phthisis, Stomatitis, Hepatitis, etc. (சா.அக.).

[அழல் + பிணி.]

அழற்பித்தம் *alar-pittam*, பெ. (n.) *பித்தநோய் வகை;* a kind of bilious disease (W.) (செ. அக.) — *உடம்பிற் பித்தக்கொதிப்பினால் இளமையில் மயிர்நரைத்து உடம்பு வெளுத்துக் கடைக்கண் சிவந்து, அறிவம் (ஞானம்) பேசும் ஒருவகைப் பித்தநோய்;* a disease peculiar to young people characterised by premature greyness of the hair, anaemia, inflammation of the corner of the eyes, etc., due to excessive heat in the body arising from the deranged condition of the bile. Such persons are inclined to philosophical discussions, a kind of mania (சா.அக.).

[அழல் + பித்தம்.]

அழற்புண் *alar-puṇ*, பெ. (n.) *சிவந்து அரத்தம் வடியும் புண்* (இங்.வை.); inflamed bleeding sore or ulcer.

[அழல் + புண்.]

அழற்புற்று *alar-purru*, பெ. (n.) *வெள்ளை விழியில் எரிசதையை உண்டாக்கும் ஒருவகைக் கண்ணோய்* (சீவரட். 266); an eye disease creating an outgrowth in the white of the eye which causes burning sensation.

[அழல் + புற்று.]

இது குணமாக்க முடியாதது (incurable) என்பது சா.அக. கூற்று.

அழற்றடம் *alarradam*, பெ. (n.) *தீக்காய் கலம்;* vessel containing fire. "அழற்றடம் புரையு மருஞ்சுரம்" (திருக்கோ. 202, கொளு).

[அழல் + தடம். தட = பெரிய. தட → தடம் = பெரும்பானை, மிடா.]

அழற்றாரன் *alarraran*, பெ. (n.) *மகாரம்;* the sacred mystic letter *ma*. It is so called because it represents one of the 5 psychic centres situated in the navel region containing gastric fire (சா.அக.).

[அழல் + தாரன். தாரன் என்பது தாரணன் என்னும் வடசொற் றிரிபாயிருக்கலாம். Skt. dhāraṇa > த. தாரணம் → தாரணன் = கொண்டு அல்லது தாங்கிநிற்பது.]

அழற்றி *alarri*, பெ. (n.) 1. *அழற்சி;* inflammation (சா.அக.). 2. *எரிவு;* burning sensation (சா.அக.). 3. *எரியச்செய்வது;* that which causes burning. 4. *கண்ணைச் சுற்றிலும் குறிபோட்டதுபோற் கருப்புண்டாகி, வலியேற்பட்டுக் கடைக்கண்களில் வீக்கங் கண்டு, இளஞ்சிவப்பாகிப் பீளை கட்டி, நெற்றி, கன்னம் ஆகிய இடங்களில் அதிக வலியையுண்டாக்கும் ஒரு கண்ணோய்;* A mucopurulent inflammation of the conjunctiva, marked by a dark ring round the eyes, with pain and swelling in the corners of the eye (சா.அக.).

[அழல் (த.வி.) → அழற்று (பி.வி.) → அழற்றி. 'இ' வி.முத. ஈறு.]

'அழற்றி' என்னுஞ் சொல் 'அழற்று' என்னும் பிறவினையினின்று திரிந்திருப்பதால், அழற்சி, எரிவு என்னும் தன்வினைப் பொருள்கள் அத்துணைப் பொருத்தமானவை யல்ல.

அழற்று-தல் *alarru-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. *வெம்மைசெய்தல்;* to burn, scorch, heat, cauterise; cause smarting as a burn, or a caustic, or a poison; to inflame, irritate. "அழற்றிய பல்கதிர்" (கந்தபு. தேவ. திருப்பரங். 6) (செ.அக.) (சா.அக.). 2. *சுடல்;* to burn, to make sore. 3. *வெம்மையுறல்;* to cauterise or to cause smarting pain by the use of a cane. 4. (கடுங்காய்ச்சலால்) *துன்புறல்* (வாதனைப்படல்) *அல்லது அலற்றுதல்;* to be in anguish as in virulent fever.

சுடல் என்பது வெம்மைசெய்தல் என்பதில் அடங்கும். வெம்மையுறுதல் என்பது பிறவினைப் பொருட்குப் பொருந்தாது. அலற்றுதல் என்பது பொதுவாகப் பிதற்றுதலையும் புலம்பலையுமே குறிக்கும். அலற்றுதல் வேறு; அழற்றுதல் வேறு.

[அழல் (அழலுதல்) (த.வி.) → அழற்று (பி.வி.). அழற்றுதல் = அழலச்செய்தல்.]

அழறு *alaru*, பெ. (n.) *சேறு;* mire. "அழறலர் தாமரை" (திவ். இயற். திருவிருத். 58).

[அள்ளுதல் = நெருங்குதல், செறிதல், குழம்புதல். அள் → அளல் → அளறு = குழைசேறு, சேறு. அளறு → அழறு.]

அழறு என்னும் வடிவம் ஏட்டுப் பிழையாகவு மிருக்கலாம்.

அழன் *alan*, பெ. (n.) 1. *பிணம்;* corpse, carcase. "அழனே னிறுதிகெட வல்லெழுத்து மிகுமே" (தொல். எழுத்து. புள்ளி. 59). 2. பேய் (பிங்.); evil spirit, devil.

[அழி → அழம் → அழன். அழிதல் = கெடுதல், சாதல்.]

அழன்மண் *alaṉ-maṇ*, பெ. (n.) ***மிதித்தால் எரிச்சலை உண்டாக்கும் மண், உவர்மண்***; fuller's earth (சா.அக.).

[அழல் + மண். அழலுதல் = எரிதல்.]

அழன்மண்வெதுப்புங்கோபி *alaṉ-maṇ-veduppuṅ-gōbi*, பெ. (n.) ***குழல் ஆதொண்டைச்செடி***; common caper, *Capparis aphylla* (சா.அக.).

அழன்றுகுழன்று *alaṉṟu-kulaṉṟu*, வி.எ. (adv.) ***நாட்பட்ட பிணம்போல் அழுகிக் குழகுழத்து***; in a putrefied or decomposed state as a corpse. அந்தப் பிணம் அழன்றுகுழன்று வந்து சேர்ந்தது.

[அழலுதல் = வெந்ததுபோலாதல். குழலுதல் = துவளுதல். அழல் + து – அழன்று. குழல் + து – குழன்று. 'து' இ.கா.வி.எ. ஈறு. **'அழன்றுகுழன்று'** எதுகை மரபிணைமொழி.]

அழனம்[1] *alaṉam*, பெ. (n.) ***பிணம்***; corpse.

[அழன் → அழனம். 'அம்' ஓர் ஈறு.]

அழன் பார்க்க; see *alaṉ*.

அழனம்[2] *alaṉam*, பெ. (n.) 1. தீ (பிங்.); fire. 2. **வெம்மை** (பிங்.); heat.

[அழல் → அழன் → அழனம்.]

அழல் பார்க்க; see *alal*.

அழனாகம் *alaṉāgam*, பெ. (n.) ***ஒருவகை நச்சுப் பாம்பு*** (வின்.); a poisonous snake whose lick is said to cause burning sensation (செ.அக.) — ***நாவினால் நக்குவதனால் எரிச்சலை யுண்டாக்கும் ஒருவகை நாகப்பாம்பு***; a poisonous cobra causing a burning sensation by its mere licking (சா.அக.).

[அழல் + நாகம்.]

நாகம் என்பது பாம்பினத்தின் பொதுப் பெயர். நகர்ந்து செல்வது நாகம். நல்ல பாம்பு பாம்பினத்திற் சிறந்தது அல்லது தலைமையானது என்பதுபற்றி, பொதுப் பெயராலும் குறிக்கப்படுவது மரபு. அதனால் நாகப்பாம்பு என்னும் வழக்கெழுந்தது. பாம்பு என்னும் பொதுப்பெயர், முதற்காலத்தில் நல்லபாம்பையே சிறப்பாகக் குறித்துப் பின்னர்ப் பொதுப்பெயராயிற்று. இங்ஙனம் நாகம், பாம்பு என்னும் இருபெயரும் முரண்பட்ட வழக்குமாற்றம் பெற்றுள்ளன. இதன் விளக்கத்தை **நாகம்**, பாம்பு என்னும் உருப்படிகளிற் காண்க.

அழனிறக்கடவுள் *alaṉiṟa-k-kaḍavuḷ*, பெ. (n.) ***அழலின் செந்நிறங்கொண்ட சிவபெருமான்***; Śiva, having the hue of fire. "ஆலவாயி னழனிறக் கடவுள்" (இறை. 1, உரை).

[அழல் + நிறம் + கடவுள் (முக்கரணத்தையுங் கடந்த முழுமுதல் தேவன்).]

ஒருசார் பண்டைத்தமிழர், கடவுளை நெருப்பின் கூற்றைச் சிறப்பாகக் கொண்டதாகக் கருதினதினால், அதன் நிறத்தை அவனுக்கு ஏற்றி அவனைச் சிவன் (சிவந்தவன்) என்றனர்.

அழனீர் *alaṉīr*, பெ. (n.) ***தென்னங் கள்***; coconut toddy (சா.அக.).

[அழல் + நீர்.]

தென்னங் கள் உடம்பிற்குச் சூட்டைத் தருவதால் அழனீர் எனப்பட்டது. வெப்பக் கால அரையாண்டு குளிர்ச்சிதரும் பனங் கள்ளும், குளிர்கால அரையாண்டு வெப்பந் தரும் தென்னங்கள்ளும் வடியும் இயற்கை யமைப்பு கவனிக்கத் தக்கது.

அழாக்கு *alākku*, பெ. (n.) ***அழாக்கு, ஒரு முகத்தலளவு***; ollock, a measure of capacity, 1/8 of a measure. "வீரிய மழாக்குடற் பித்த முழக்கு" (தணிகைப்பு. அகத்திய. 308).

[அரையுழக்கு → ஆழாக்கு → அழாக்கு.]

அழாந்தை *alāndai*, பெ. (n.) ***அழான் என்பவனின் தந்தை***; father of *Alāṉ*. 'அழான் புழான் என நிறுத்தித் தந்தை என வருவித்து, நிலைமொழி னகரமும் வருமொழித் தகரமும் அகரமுங் கெடுத்து, அழாந்தை புழாந்தை என முடிக்க' (தொல். எழுத்து. புள்ளி. 53, நச். உரை).

அழால் *alāl*, தொ.பெ. (vbl. n.) ***அழுகை***; weeping, crying.

[அழு + ஆல் (தொ.பெ. ஈறு). **ஒ.நோ:** எழு → எழால்.]

அழாஅல் *alāal*, தொ.பெ. (vbl. n.) ***அழுகை***; weeping, crying. "அழாஅன் மறந்த புன் றலைச் சிறாஅர்" (புறநா. 46 : 5-6).

[அழல் → அழாஅல். **அழால்** → அழாஅல். இவை அளபெடை.]

அளபெடைச் சொல் செய்யுட்குரிய செயற்கை வடிவமாதலால், அகரமுதலியில் இடம்பெற இயல்புசொற்போல் அத்துணை ஏற்றதன்று.

அழி[1]-தல் *aḻi-,* 2 செ.கு.வி. (v.i.) 1. ***நாசமாதல்;*** to perish, to be ruined or destroyed. 2. ***சிதைதல், கெடுதல்;*** to decay, to be mutilated, to collapse. "ஆரவண்ட லழியும்" (நைடத. கைக்கி. 10). 3. ***செலவாதல்;*** to be spent, used up, sold out, exhausted. என்னிடமிருந்த சரக்கெல்லாம் அழிந்துவிட்டது. 4. ***தவறுதல்;*** to fail, to be frustrated. "நீயுரைத்த தொன்று மழிந்திலது" (கம்பரா. யுத்த. சீதைகளங். 30). 5. ***நிலைகெடுதல்;*** to lose one's standing, to be reduced to lower state, to become bankrupt. அழிந்த குடி. 6. ***தோற்றல்;*** to be defeated. "வாதி லழிந்தெழுந்த" (தேவா. 3 . 297 : 3). 7. ***காதலால் உருகுதல்;*** to melt with love. 8. ***பரிவுகூர்தல்;*** to sympathise with. "புணர்ந்த நெஞ்சமொ டழிந் தெதிர் கூறி விடுப்பினும்" (தொல். பொருள். அகத். 40). 9. ***வருந்துதல்;*** to suffer, to be troubled. "சூனயத் திறத்தாற் சோர்வுகண் டழியினும்" (தொல். பொருள். கற்பு. 9). 10. ***மனந்தளர்தல், மனமுடைதல்;*** to be disheartened. "இதற்குஉள் ளழியேல்" (கம்பரா. அயோத். நகர்நீங்கு. 17). 11. ***கரையுடைந்து நீர்பெருகுதல்;*** to swell, increase, as flood water. "அழியும்புன லஞ்சன மாநதியே" (சீவக. 1193). 12. ***காய்ப்பு ஓய்ந்தபின் தோட்டத்திலுள்ள செடிகள் அல்லது தோப்பிலுள்ள மரங்கள் நீக்கப்படுதல்;*** to be cleared, as a garden or tope after the plants or trees have ceased to bear fruit. எங்கள் மிளகாய்த் தோட்டம் நேற்றே அழிந்துவிட்டது. 13. ***குளம்(ஏரி) வற்றி மீன்பிடிக்கப்படுதல்;*** to have the water in a tank become considerably reduced to allow easy and effective fishing. நாளைக்குப் பனையூர்க்குளம் அழியப் போகிறது. 14. ***எழுத்து அல்லது வரைவு கலைக்கப்படுதல்;*** to be erased, as a writing or a drawing. கடிதம் மழையில் நனைந்து எழுத்தெல்லாம் அழிந்துவிட்டது. 15. ***சொல் அல்லது மொழி வழக்கறுதல்;*** to become obsolete as a word. "ஆரியம்போல் உலக வழக்கழிந்தொழிந்து சிதையாவுன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே" (மனோன். த.வா.).

ம., க. அழி; **தெ.** அடி, அடுவ; **து.** அளி புனி; **கோத.** அள்ச்.

[ஒழி → அழி. ஒ.நோ: ஒட்டு → அட்டு, கொம்பு → கம்பு, மொண்டை → மண்டை.]

அழி[2]-த்தல் *aḻi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ***நாசஞ்செய்தல்;*** to destroy, exterminate. "உலகழித்து நிற்கும் ஒருபெருங் கடவுள்" (கந்தபு. மகேந். நகரழி. 6). 2. ***கெடுத்தல்;*** to ruin, damage. 3. ***பழித்தல்;*** to vilify, abuse, slander. 'அழித்துச் சொன்னவாறு' (தக்கயாகப். 494, உரை). 4. ***கலைத்தல்;*** to efface, obliterate. "கோல மழித்தி யாகிலும்" (திவ். நாய்ச். 2:5). 5. ***நீக்குதல்;*** to leave off, bring to a close. "அசைவர லூசற்சீ ரழித்தொன்று பாடித்தை" (கலித். 131 : 34). 6. ***குலைத்தல்;*** to disarrange. "ஈடுசால் போரழித்து" (சீவக. 59). 7. ***மறப்பித்தல்;*** to cause to forget. "பொய்த லழித்துப் போனா ரொருவர்" (சிலப். 7 : 43). 8. ***உள்ளதை மாற்றுதல்;*** to change the form or mode of. 'உடையினைப் பலகாலு மழித் துடுத்தல்' (தொல். பொருள். மெய்ப். 14, பேரா. உரை). 9. ***செலவழித்தல்;*** to spend. "தேடா தழிக்கிற் பாடாய் முடியும்" (கொ. வே. 44). 10. ***விடுகதை விடுவித்தல், அழிப்பாங்கதை;*** to solve a riddle. இந்த விடுகதையை அழி. 11. ***தடவுதல்;*** to smear. "சுண்ண மழித்திலை தின்று" (உபதேச. சிவபுண்ணிய. 225). 12. ***தோட்டத்திலுள்ள செடிகளை அல்லது தோப்பிலுள்ள மரங்களை நீக்கிவிடுதல்;*** to clear a garden or tope of trees. செட்டியார் மாந்தோப்பை அழித்து வீடு கட்டிக்கொண்டார். 13. ***சூடு (சாணை) பிரித்தல், களத்திற் கடாவிடுதற்கு (பிணையலடித்தற்கு) முன் அரிக்கட்டுக் குவியலை அல்லது கதிர்க் குவியலைப் பிரித்துப் பரப்புதல்;*** to untie the bundles of reaped grain stalks and spread them out on the threshing floor preparatory to treading out the grain. சூடழித்தலைச் 'சூடு சுள்ளாப்பித்தல்' என்பது யாழ்ப்பாண வழக்கு.

க. அழி

அழி[1]-தல் பார்க்க; see *aḻi*[1]-.

[அழிதல் (த.வி.) → அழித்தல் (பி.வி.).]

சுண்ணமழித்தல் என்பது சுண்ணம் மழித்தல் என்றும் பிரிக்கப்படும். மழித்தல் → வழித்தல் = தடவுதல். நிலைமொழி யீற்று மகரமெய் புணர்ச்சியிற் கெடும்.

அழி[1] *aḻi,* பெ. (n.) 1. ***கேடு;*** ruin, destruction. "அழிவந்த செய்யினும்" (குறள், 807). 2. ***வைக்கோல்;*** straw. "உழுத நோன்பக டழி

தின் றாங்கு'' (புறநா. 125 : 7). 3. **வைக்கோலிடும் தொட்டி அல்லது அடைப்பு**; crib for straw. 4. **அளித்தட்டி (கிராதி)**; lattice. ம. அழி. 5. **வருத்தம், மனநோவு**; grief, mental pain. ''அழிதக மாஅந்தளிர் கொண்ட போழ்தினான்'' (கலித். 143 : 27). 6. **இரக்கம்**; pity. ''அழிவரப் பாடி வருநரும்'' (புறநா. 158 : 17 - 18). 7. **மிகுதி**; excessiveness. ''அற்றா ரழிபசி தீர்த்தல்'' (குறள், 226).

க. அழி; து. அளிபுனி.

[ஒழி → அழி. 'அழி' முதனிலைத் தொழிற் பெயரும் தொழிலாகு பெயரும்.]

வைக்கோல் = முதிர்ந்த நெற்பயிரின் சிதைந்தநிலை. மனநோவு = மனநிலையழிவு. இரக்கம் அதன் விளைவு. அழிபசி = வருத்தும் கடும்பசி.

அழி² ***aḻi***, பெ. (n.) **கழிமுகம்** (நாஞ்.); place where the lagoon joins the sea (Nāñ.).

ம. அழி; க. அளவெ; து. அளுவெ.

[கழி → அழி.]

அழி³ ***aḻi***, பெ. (n.) **வண்டு**; beetle, honey beetle. ''அழிமல்கு பூம்புனலும்'' (தேவா. 2 . 190 : 3).

[அளி → அழி.]

அளி பார்க்க; see *aḷi*.

அழி என்னும் வடிவம் ஏட்டுப் பிழையாகவும் இருக்கலாம்.

அழிகட்டு *aḻi-kaṭṭu*, பெ. (n.) 1. **ஒன்றை அழித்தற்காகச் செய்யும் எதிர்ச்செய்கை**; an action in opposition to another action, counter action (சா.அக.). 2. **பொய்ச்சீட்டு**; fabrication to deprive another of his rights, forgery (W.). 3. **வீண் சாக்குப்போக்கு**; lame excuse, pretence (W.). 4. **தடை**; obstacle, impediment, hindrance. 5. **நஞ்சை முறிக்கும் மாற்று**; antidote. 6. **நஞ்சைப் போக்கும் மந்திர மாற்று**; magic power by which the effects of poisons are counteracted. 7. **மாற்று மந்திரம்**; magic counteracting magic.

['அழிகட்டு' வினைத்தொகை. 'கட்டு' முத. தொ. ஆகு.]

அழிகடை *aḻi-kaḍai*, பெ. (n.) **மிகமிகக் கெட்டது**; the worst.

['அழிகடை' வினைத்தொகை. 'கடை' பண். ஆகு.]

அழிகண் *aḻi-kaṇ*, பெ. (n.) 1. **பார்வையைக் கெடுக்கும் ஒருவகைக் கண்ணோய்**; an eye-disease causing blindness. 2. **குருட்டுக்கண்**; blind eye.

க. அழிகண்

அழிகண்டி *aḻi-kaṇḍi*, பெ. (n,) **கஞ்சன், பிசினாறி**; niggard, miser.

அழிகண்பிரித்தல் *aḻi-kaṇ-pirittal*, பெ. (n.) **கண் மிகவும் வலித்து விழியின்மேற் சதைமுடிக் கண்ணைச் சுற்றிப் புண்ணாக்கிப் பீளை கட்டும் ஒருவகைக் கண்ணோய்**; a form of ophthalmia marked by severe inflammation all round the eye and a mucopurulent discharge with swelling and excessive pain (சா.அக.).

அழிகரப்பான் *aḻi-karappāṉ*, பெ. (n.) **படர் தாமரை நோய்** (புதுவை); ringworm (Poṇḍ.).

[அழி = மிகுந்த, கடுமையான.]

கரப்பான் பார்க்க; see *karappāṉ*.

அழிகரு *aḻi-karu*, பெ. (n.) 1. **அழிந்த சினை**; an undeveloped ovum (சா.அக.). 2. **கருவழிவு, செத்துப் பிறந்த பீள்**; aborted foetus (W.).

['அழிகரு' வினைத்தொகை.]

கரு பார்க்க: see *karu*.

அழிகன்று *aḻi-kaṉṟu*, பெ. (n.) 1. **சிதைந்து விழும் விலங்குக் கரு** (புதுவை); aborted foetus, in animals (Poṇḍ.). 2. **செத்துப் பிறக்கும் விலங்குக் குட்டி**; still-born young of animals.

['அழிகன்று' வினைத்தொகை.]

கன்று பார்க்க; see *kaṉṟu*.

அழிகால் *aḻi-kāl*, பெ. (n.) **முதிர்ச்சியால் அழிக்கவேண்டிய வெற்றிலைத் தோட்டம்** (P.T.L.); betel-leaf garden where the vines having become old and unproductive are to be destroyed.

['அழிகால்' வினைத்தொகை. கொடிக்கால் → கால் (குறுக்கம்).]

கொடிக்கால் பார்க்க; see *koḍi-k-kāl*.

அழிகாலி *aḻi-kāli*, பெ. (n.) **வீண்செலவு செய்வோ-ன்-ள்** (இ.வ.); spendthrift, extravagant person (Loc.).

['அழிகாலி' வினைத்தொகை. ஒருகா. U. qawwāli > த. காலி = மனம் போனபடி நடப்பவன்.]

அழிகிரந்தி *aḻi-kirandi*, பெ. (n.) **புணர்ச்சிப் புண்ணோய் வகை**; sloughing venereal ulcer (W.).

[அழி = கடுமையான. **Skt.** granthi > த. கிரந்தி.]

அழிகுட்டம் *aḻi-kuṭṭam*, பெ. (n.) **உடம்பு முழுவதிலும் புண்கள் (இரணங்கள்) ஏற்பட்டுச் சதையழுகித் துன்புறுத்தும் ஒருவகைக் குட்ட நோய்**; a kind of severe leprosy marked by sloughing ulcers and gangrene all over the body (சா.அக.).

['அழிகுட்டம்' வினைத்தொகை. மேனி முழுவதும் வெண்ணிறமாய் மாறுவது தொழுநோய் என்றும், கைகால் அழுகிக் குறுகுவது குட்டம் என்றும் பெயர்பெற்றனபோலும்! குள் → குட்டு → குட்டம் = குறுமை.]

குட்டம் பார்க்க; see *kuṭṭam*.

அழிகுட்டி *aḻi-kuṭṭi*, பெ. (n.) 1. **விலங்குகளின் வயிற்றினின்று சிதைந்துவிழுங் கரு**; aborted foetus in animals (W.). 2. **வயிற்றில் இறந்து வெளியேற்றப்பட்ட பீள்**; the lifeless foetus expelled as a result of abortion (சா.அக.). 3. **வயிற்றில் இறந்து வெளியேற்றப்பட்ட குழந்தை**; still-born child or aborted dead child.

['அழிகுட்டி' வினைத்தொகை.]

குட்டி பார்க்க; see *kuṭṭi*.

அழிகுநன் *aḻigunaṉ*, பெ. (n.) **தோற்றவன்**; defeated person, one who is ruined. ''அழிகுநர் புறக்கொடை'' (பு. வெ. 3 : 20, கொளு).

[அழிகின்றான் → அழிகின்னான் → அழிகுன்னான் → அழிகுன்னன் → அழிகுனன் → அழிகுநன் (வினையா. பெ.).]

கின்று பார்க்க; see *kiṉṟu*.

அழிகுளம் *aḻi-kuḷam*, பெ. (n.) **நீர்வற்றி மீன் பிடிக்கின்ற அல்லது பிடித்த குளம்**; a nearly dried up tank or pond in which fishing operations have been carried out or are being carried out.

அழிகொடிக்கால் *aḻi-koḍi-k-kāl*, பெ. (n.) **முதிர்ச்சியால் அழிக்கப்படுகின்ற அல்லது அழிக்கப்படவேண்டிய வெற்றிலைத் தோட்டம்**; betel-leaf garden where the vines have become unproductive and are being or have to be destroyed.

[அழி + கொடி + கால். 'அழிகொடிக்கால்' வினைத்தொகை.]

கொடிக்கால் பார்க்க; see *koḍi-k-kāl*.

அழிச்சாட்டம் *aḻi-c-cāṭṭam*, பெ. (n.) 1. **அழிம்பு, தீம்பு**; wickedness. ''அழிச்சாட்டங் கூடுமோ?'' (குருபரம். பன். பக். 343). 2. **பொய்வழக்குத் தொடுப்பு**; false litigation.

[அழி = கெடுதி. சார்த்து → சாட்டு → சாட்டம் = பிறர்மேல் (தீங்காகப்) பழிசுமத்துதல்.]

அழிச்சாட்டியக்காரன் *aḻi-c-cāṭṭiya-k-kāraṉ*, பெ. (n.) 1. **அழிச்சாட்டியம் செய்பவன், தீம்பு செய்பவன்**; unjust and wicked person. 2. **பொய்வழக்கை எழுப்புகிறவன்**; one who incites false litigation.

[அழி = சாட்டியம் + காரன். 'காரன்' உடைமை குறித்த ஆ. பா. ஈறு.]

அழிச்சாட்டியம் பார்க்க; see *aḻi-c-cāṭṭiyam*.

அழிச்சாட்டியம் *aḻi-c-cāṭṭiyam*, பெ. (n.) 1. **அழிம்பு, தீம்பு**; wicked nature, persisting in evil conduct. வாங்கின கடனைக் கொடாமல் அழிச்சாட்டியம் பண்ணுகிறான்.

[அழி + கேடு. சாட்டி → சாட்டியம் = பொய்க்குற்றஞ் சாட்டுதல், பிறர்மேற் பழிசுமத்துதல்.]

வஞ்சகம், பொய் என்று பொருள்படும் **Skt.** śāṭhya என்னும் வடசொல்லின்று 'சாட்டியம்' என்னும் தென்சொல் திரிந்துள்ளதாகச் **சென்னை யகரமுதலி** குறிக்கின்றது. வடசொற்கு மூலமில்லை. சாட்டம் என்னும் வடிவும் தமிழிலுள்ளது. 'அழிச்சாட்டியம் பண்ணுதல்' என்பது கல்லா நாட்டுப்புற மக்களிடையும் தாழ்த்தப்பட்டவரிடையும் பெருவழக்காக வழங்குகின்றது. ஆதலால், 'சாட்டியம்' தென்சொல் லென்றே இங்குக் கொள்ளப்பட்டது.

அழிசெய்-தல் *aḻi-šey-*, 1. செ.குன்றாவி. (v.t.) 1. **கெடுத்தல்**; to spoil, ruin, destroy. 2. **கற்பழித்தல்**; to deflower the virginity of a women. ''கன்னியை யழிசெயக் கருதினோன்'' (கம்பரா. அயோத். பள்ளி. 110).

அழிசெலவு *aḻi-šelavu*, பெ. (n.) 1. *தோட்ட வளர்ச்சி, திருத்தம் முதலியவற்றிற்குச் செல்லுஞ் செலவு* (இ.வ.); expense incurred in improving gardens (Loc.). 2. *வீண்செலவு*; prodigality.

['அழிசெலவு' வினைத்தொகை. செல் → செலவு.]

அழிஞ்சகி *aḻiñjagi*, பெ. (n.) *பெருஞ்செருப்படை அல்லது செருப்படை*; a medicinal herb, *Coldenia procumbens* (சா.அக.).

அழிஞ்சியேறி *aḻiñji-y-ēṟi*, பெ. (n.) *ஏறழிஞ்சில்*; a kind of *aḻinjil* tree.

அழிஞ்சில் பார்க்க; see *aḻiñjil*.

அழிஞ்சில் *aḻiñjil*, பெ. (n.) *மரவகை*; sage-leaved alangium, *Alangium lamarckii*.

ம. அழிஞ்ஞில்

"அழிஞ்சிலது மாருதத்தை யையத்தைத்
தாழ்த்தும்
ஒழிஞ்சபித் தத்தை யுயர்த்தும்
—விழுஞ்சீழாங்
குட்டமெனு நோயகற்றுங் கூறுமருந்
தெய்திடில்
திட்ட மெனவறிந்து தேர்"
(பதார்த்த. 219).

அழிஞ்சில்விரை நாட்பட்ட சீலக்கழிச் சலுக்குப் (chronic dysentery) பயன்படுத்தப் படும் கூட்டுச்சரக்குகளுள் ஒன்று (சா.அக.).

அழிஞ்சில்வேர்ச் சாறு புழுக்கொல்லி (worm-killer). அழிஞ்சிலெண்ணெய் மறைப்பு மை செய்தற்கும் வசியத்திற்கும் பயன்படும். It is used for preparing a magic paint used for rendering oneself invisible and also for enticement (சா.அக.).

அழிஞ்சிற்பட்டைக் கருக்கு (கஷாயம்) ஊதை (வாத) நோய், குட்டம் முதலிய வற்றைப் போக்கும் (சா.அக.).

அழிஞ்சு *aḻiñju*, பெ. (n.) *அழிஞ்சில் பார்க்க*; see *aḻiñjil* (தைலவ. தைல. 72).

அழிஞ்சுக்காடு *aḻiñju-k-kāḍu*, பெ. (n.) *அழிஞ்சு நிறைந்த பாலைநிலம்*; desert covered with *aḻiñjil*. 'பெருவிடாய னானவன் அழிஞ்சுக்கா டேறப்போக' (ஈடு, 6 . 2, பிர.).

அழித்தழித்து *aḻitt(u)-aḻittu*, வி.எ. (adv.) *திரும் பத் திரும்ப*; again and again. 'அழித்தழித்து விவாகம் பண்ணுமா போலேயும்' (திவ். திரு நெடுந். 16, வியா.).

[அழி → அழித்து (இ.கா.வி.எ.). 'அழித் தழித்து' பன்மை குறித்த வி.எ. தொடர்.]

மேலும் மேலும் அழிவுசெய்த என்பது இயல்புபொருள்; திரும்பத் திரும்ப என்பது அணியியற் பொருள்.

அழித்தியங்காட்டு-தல் *aḻittiyaṅ-kāṭṭu-*, 5 செ. குன்றாவி. (v.t.) *முகத்தை அருவருப்பாகத் திரித்துக் காட்டி ஒருவரைப் பழித்தல்* (நெல்லை); to make faces at someone (Tn.). என்னைப் பார்க்கும்போதெல்லாம் அழித் தியங் காட்டுகிறான் (உ.வ.).

[ஒருகா. அழித்து + ஒவியம் + காட்டு. அழித் தல் = மாற்றுதல், திரித்தல். ஓவியம் = அழகு. காண் (த.வி.) → காட்டு (பி.வி.).]

அழித்து *aḻittu*, இ.கா.வி.எ. (p. parti.) 1. *திரும்பவும்*; again. "அழித்துப் பிறந்தன னாகி" (புறநா. 383 : 16). 2. *முன்னுக்குப் பின் முரணாக*; contrarily. "வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்" (குறள், 1317).

[அழி → அழித்து (இ.கா.வி.எ.).]

அழிவுசெய்து என்பது இயல்புபொருள்; திரும்பவும் என்பது அணியியற் பொருள்.

அழித்துச்சொல்(லு)-தல் *aḻittu-c-col(lu)-*, 8 செ. குன்றாவி. (v.t.) *இழித்துக் கூறுதல்*; to state contemptuously. 'அழித்துச் சொன்னவாறு' (தக்கயாகப். 494, உரை).

[அழித்து + சொல்.]

அழித்துரை *aḻitturai*, பெ. (n.) *இழித்துரை*; word of contempt. 'அடா வென்பது அழித் துரை' (தக்கயாகப். 508, உரை).

[அழித்து (இ.கா.வி.எ.) + உரை (தொ.ஆகு.).]

அழிதகவு *aḻi-tagavu*, பெ. (n.) *துயரம்*; grief. "அழிதக வுள்ளமொ டரற்றின னாகி" (மணிமே. 12 : 43).

[அழி + தகவு. தகு → தகவு (தொ. பெ.) = தன்மை, குணம்.]

அழிதகன் *aḻi-tagaṉ*, பெ. (n.) *தீய வொழுக்கத் தான்* (கந்தபு. யுத்த. தருமகோ. 78); man of depraved character, wicked person.

[அழி = தீய, கெட்ட. தகு → தகம் (தகுதி, தன்மை) → தகன் = தன்மையன், நெறியன், ஒழுக்கத்தான்.]

T. 5048



அவுரி



அவுரி (விரால்)



அவுளிமீன்



அழவணம்

அழிதலை *aḻi-talai*, பெ. (n.) 1. **தலையோடு**; skull. ''அழிதலை யங்கையிலேந்தி'' (தேவா. 1 . 40 : 7). 2. **தலையோட்டுமாலை** (பிங்.); garland of skulls worn by Šiva.

['அழிதலை' வினைத்தொகை. 'தலை' ஆகு.]

அழிதூ *aḻi-tū*, பெ. (n.) 1. **அலி** (நன். 263, மயிலை.); hermaphrodite human being. 2. **பேடி**; an impotent man (சா.அக.).

[அழி = கெட்ட. தூ = வலிமை, ஆண்மை. அழிதூ (அன்மொழித்தொகை) = ஆண்மை யில்லாதவன்.]

அழிதூஉ *aḻi-tūu*, பெ. (n.) **அழிதூ** பார்க்க; see *aḻi-tū*.

[அழிதூ → அழிதூஉ (அளபெடை).]

அழிந்தவள் *aḻindavaḷ*, பெ. (n.) **கற்பழிந்தவள்**; fallen woman.

[அழி → அழிந்த → அழிந்தவள் (அழிந்த + அவள்).]

அழிந்தொழிந்து *aḻind(u)-oḻindu*, இ.கா.வி.எ. (p.parti.) **மிகக்கெட்டு, அடியோடழிந்து, முற்றும் வழக்கற்று**; having been completely destroyed, ruined, having become completely dead. ''ஆரியம்போல் உலகவழக் கழிந் தொழிந்து சிதையாவுன் சீரிளமைத் திறம் வியந்து'' (மனோன். த. வா.).

[அழிந்து + ஒழிந்து. 'அழிந்தொழிந்து' எதுகை மரபிணைமொழி.]

அழிந்தோரைநிறுத்தல் *aḻindōrai-niṟuttal*, தொ. பெ. (vbl.n.) **கெட்டோரை தன்னிலைப்படுத் தல், வேளாண்மாந்தர் இயல்புகளுள் ஒன்று** (திவா.); rehabilitating ruined men, a characteristic of the Vēḷāḷa.

அழிநோய் *aḻi-nōy*, பெ. (n.) **குட்டம்** (இ.வ.); leprosy (Loc.).

['அழிநோய்' வினைத்தொகை.]

அழிப்படுத்து-தல் *aḻi-p-paḍuttu-*, 2 பி.வி. (v. caus.) **தவசக் கதிரைக் கடாவிட்டுழக்குதல்**; to thresh the grain with cattle. ''ஆளழிப் படுத்த வாளே ருழவ'' (புறநா. 368 : 13).

[அழி = வைக்கோல். படுதல் (த.வி.) = உண் டாதல். படுத்தல் (பி.வி.) = உண்டாக்குதல்.]

அழிப்பன் *aḻippaṉ*, பெ. (n.) 1. **நாசஞ்செய் பவன்**; the destroyer. ''ஆழிவிடுத் தவருடைய கருவழித்த வழிப்பனூர்'' (திவ். பெரியாழ். 4 . 8 : 6). 2. **துன்புறுபவன்**; one who is sorrow-stricken. ''அழிப்பனாய் வாழ மாட்டேன்'' (தேவா. 4 . 52 : 2).

க. அழிப்பான்

[அழி → அழிப்பு → அழிப்பன்.]

அழிப்பாங்கதை *aḻippāṅ-kadai*, பெ. (n.) **விடு கதை** (நெல்லை); riddle, puzzle, conundrum (Tn.). நான் ஓர் அழிப்பாங்கதை போடு கிறேன்; அழிக்கிறாயா?

ம. அழிப்பாங்கத

[அழித்தல் = விடுகதை விடுவித்தல். அழி → அழிப்பான் (அழிக்கப்படுவது) + கதை – அழிப் பான்கதை → அழிப்பாங்கதை.]

அழிப்பாளன் *aḻippāḷaṉ*, பெ. (n.) **தட்டான்** (ஈடு, 5 . 8 : 1); goldsmith.

[அழித்தல் = உருக்குதல். அழிப்பு = பொன் னுருக்குதல். 'ஆளன்' ஆ.பா. ஈறு. அழிப் பாளன் = பொன்னுருக்குந் தட்டான்.]

அழிப்பாளி *aḻippāḷi*, பெ. (n.) **வீண்செலவாளி** (உ.வ.); spendthrift (Com.u.).

[அழி → அழிப்பு (தொ.பெ.). ஆள் → ஆளி (ஆ.பா. ஈறு).]

அழிப்பிண்டம் *aḻi-p-piṇḍam*, பெ. (n.) **கருவழிந்த பிண்டம்**; an aborted foetus, *Ambloma* (சா.அக.).

[அழி = அழிவு. பிண்டி → பிண்டம் = திரட்சி, சதைத்திரள், பீள், கரு.]

அழிப்பு *aḻippu*, பெ. (n.) 1. **கெடுப்பு, நாசஞ் செய்கை**; destruction. ''கருமமழிப் பளிப்பு'' (திவ். இயற். முதற். 5). 2. **குற்றம்** (திவா.); fault.

[அழி → அழிப்பு (தொ.பெ., தொ.ஆகு.).]

அழிபசி *aḻi-paši*, பெ. (n.) 1. **கடும்பசி**; abnormal increase in the sensation of hunger, *Hyperorexia* (சா.அக.). 2. **கொல்லும் பசி**; killing hunger. ''அற்றா ரழிபசி தீர்த்தல்'' (குறள், 226).

['அழிபசி' வினைத்தொகை.]

அழிபடு-தல் *aḻi-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. **சிதைதல், மறைதல்**; to be erased. 2. **செல வாதல்**; to be spent.

[அழிபடுதல் = அழிவுபடுதல் அல்லது அழிக்கப் படுதல். முன்னதில் 'படு' பொதுத் து.வி.; பின்ன தில் 'படு' செயப். து.வி.]

அழிபயல் *aḻi-payal*, பெ. (n.) **கெட்ட நடத்தைப் பையன்** (இ.வ.); good-for-nothing fellow, naughty boy (Loc.).

['அழிபயல்' வினைத்தொகை. பை → பையல் → பயல்.]

அழிபாடு *aḻi-pāḍu*, பெ. (n.) அழிவு; destruction. "அழிபா டில்லாத கடலின்" (தேவா. 2.222 : 8).

க. அழிபாடு

[அழிபடு → அழிபாடு (முத.தி.தொ.பெ.).]

அழிபு *aḻibu*, பெ. (n.) 1. **நாசம்**; destruction. "ஒன்னார்நா டழிபிரங் கின்று" (பு.வெ. 3 : 8, கொளு). 2. **தோல்வி**; defeat. "அழிபட லாற்றா லறிமுறை யேன்று" (பு. வெ. 8 : 19).

ம. அழிவு; க. அழிபு; து. அலிவு.

[அழி → அழிவு → அழிபு. ஒ.நோ: நலி → நலிவு → நலிபு, அள → அளவு → அளபு.]

அழிபுண் *aḻi-puṇ*, பெ. (n.) 1. *அழுகிய புண்* (இங். வை. 302); sloughing ulcer. 2. *ஆறாத புண்*; a chronic ulcer. 3. *நாற்றப் புண்*; a foul smelling ulcer (சா.அக.).

['அழிபுண்' வினைத்தொகை.]

அழிபெயல் *aḻi-peyal*, பெ. (n.) *கடுமழை*; heavy and destructive rain. "அழிபெயல் காலை" (பரிபா. 10 : 1).

['அழிபெயல்' வினைத்தொகை. பெய் → பெயல் (தொ. ஆகு).]

அழிம்பன் *aḻimbaṉ*, பெ. (n.) *தீம்பு செய்பவன்*; a habitual evil-doer.

க. அழிப

[அழி → அழிம்பு → அழிம்பன்.]

அழிம்பு *aḻimbu*, பெ. (n.) 1. *தீம்பு*; evil deed, gross misdeed. 2. *வெளிப்படையான பொய்* (இ.வ.); patent falsehood (Loc.). 3. *அவதூறு, பழிப்புரை*; calumny, scandal. 4. *அன்முறை யான வழக்காட்டு*; unrighteous claim or plea.

[அழி → அழிம்பு.]

அழிமதி *aḻi-madi*, பெ. (n.) 1. **கெடுமதி**; folly leading to ruin. 2. *அழிமானம்* (இ.வ.); waste (Loc.).

ம. அழிமதி; க. அழிமன.

['அழிமதி' வினைத்தொகை. 'மதி' (முத.தொ. ஆகு.). மதித்தல் = அளவிடுதல், கருதியறிதல். மதி = அளவு, அளந்து அல்லது கருதி யாய்ந்து அறியும் அறிவுப்புலன்.]

அழிமருந்து *aḻi-marundu*, பெ. (n.) **கருவைக் கரைக்கும் மருந்து**; an abortive drug, abortifacient (சா.அக.).

அழிமானம் *aḻi-māṉam*, பெ. (n.) *அழிந்தது, பாழானது, அழிந்த அல்லது பாழான அளவு*; that which is wasted or spent in vain, the amount of waste.

['அழிமானம்' வினைத்தொகை (அழிந்த அளவு), தொழிற்பெயர் (அழிவு). மாத்தல் = அளத்தல். மா + அனம் – மானம் (தொ.பெ. ஈறு) = அளவு.]

'மாத்தல்' என்னும் வினைச்சொல் வழக்கற்றது. மா (1/20) என்னும் கீழிலக்கப் பெயர் முத.தொ.ஆகு. மாத்திரம், மாத்திரை யென்னும் சொற்களில் 'மா' என்பது முதனிலை.

அழிமுதல் *aḻi-mudal*, பெ. (n.) *மூலவைப்புக் கேடு* (உ.வ.); waste of capital (Com.u.).

['அழிமுதல்' வினைத்தொகை. 'முதல்' ஆகு.]

அழிமேய்ச்சல் *aḻi-mēyccal*, பெ. (n.) *பயிர் (முழுதும்) அழியுமாறு கால்நடைகளை மேய விடுதல்* (தஞ்சை); ruinous grazing of crops by cattle (Tj.).

['அழிமேய்ச்சல்' வினைத்தொகை. மேய் → மேய்ச்சல். 'சல்' தொ.பெ. ஈறு. தல் → சல்.]

அழியமாறு-தல் *aḻiya-māṟu-*, 5 செ.கு.வி., செ. குன்றாவி. (v.i. & v.t.) 1. **நோயாற் பீடிக்கப் பட்டு அடையாளந் தெரியாதபடி உருவம் மாறுதல்** (சா.அக.); to be reduced and wasted by disease so as to render identification difficult. 2. **அடையாளந்தெரியாதவாறு தன் நிலையை மாற்றி வேறாதல்**; to so change as to obliterate one's identification. 'தன்னை யழிய மாறியும் உதவினவனுடைய' (ஈடு, 4. 2 : 6).

அழியல் *aḻiyal*, தொ.பெ. (vbl. n.) 1. *மனம் வருந்துதல்*; agony. 2. *அழிவு*; destruction, ruin, waste.

[அழி → அழியல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அழியாதபத்தினி *aḻiyāda-pattiṉi*, பெ. (n.) *பாண்டவர் பொதுமனைவியான திரௌபதி*;

Draupadi, the common wife of the Pāṇḍavas. 'ஐவர்க்குந் தேவி, அழியாத பத்தினி' (பழ.).

[அழி → அழியாத (எ.ம.பெ.எ.). பத்தி → பத்தன் (ஆ.பா.) — பத்தினி (பெ.பா.) = கணவன் பத்தியுள்ள கற்புடை மனைவி.]

கணவன் பத்தியுள்ளவள் என்று பொருள் படும் 'பத்தினி' என்னுந் தென்சொல் வேறு; பதியென்னும் வடசொல்லின் பெண்பாலான 'பத்நீ' என்னும் சொல் வேறு. பத்தி, பத்தன், பத்தினி என்னும் உருப்படிகளைப் பார்க்க.

அழியாவியல்பு *aḻiyā-v-iyalbu*, பெ. (n.) (சமண.) **அழியாத தன்மை, அழியாமை, அருகன் எண் குணத்துள் ஒன்று**; (Jain.) indestructibleness, one of the eight attributes of Arugaṉ.

[அழி → அழியாத → அழியா (ஈ. கெ. எ. ம. பெ. எ.). இயல் → இயல்பு = தன்மை. 'பு' பண். பெ. ஈறு.]

அழியாவிளக்கு *aḻiyā-viḷakku*, பெ. (n.) **நந்தா விளக்கு** (ரஹஸ்ய. 1335); perpetual lamp.

[அழி → அழியாத → அழியா (ஈ. கெ. எ. ம. பெ. எ.). விளங்கு (த.வி.) → விளக்கு (பி.வி.). விளக்கு (தொ.ஆகு.) = பொருள்களை விளங்கச் செய்யும் சுடர். விளங்கச்செய்தல் = தோன்றச் செய்தல், காட்டுதல்.]

தெய்வத்தன்மையைக் காட்டுதற்கு அல்லது தெய்வ வுணர்ச்சியை ஊட்டுதற்குத் திருக் கோயில்களில் இரவும் பகலும் அணையா மல் எரியவிடும் விளக்கு நந்தாவிளக்கு. நந்தாமை = அழியாமை.

அழிவது *aḻivadu*, பெ. (n.) **கெடுதி**; harm. 'அவனையாங் கிழமை கொள்ள அழிவ துண்டோ' (இறை. 28, உரை).

க. அளிபு

[அழி → அழியும் (எ. கா. பெ. எ.) + அது — அழியுமது → அழியுவது → அழிவது. 'து' காலங்காட்டும் தொ. பெ. ஈறு.]

அழிவழக்கு *aḻi-vaḻakku*, பெ. (n.) 1. **அன்முறை யான வழக்காட்டு, ஒழுங்கற்ற வழக்காரம்**; unjust law-suit. "வழக்கை யழிவழக்குச் செய்தோன்" (தனிப்பா. தி. 1, பக். 18). 2. **வீண் உறழ் (வாதம்)**; unreasonable argument. 3. **இழிந்தோர் வழக்கு**; vulgar usage. 'ஞழியிற்று என்றாற் போல்வன விலக்கின வும் வருமாலெனின், அவை அழிவழக்கென்று மறுக்க' (தொல். எழுத்து. மொழி. 31, இளம். உரை).

['அழிவழக்கு' வினைத்தொகை. வழங்கு (த.வி.) → வழக்கு (தொ.பெ.). 1. வழக்காறு, 2. வழக்குப்பற்றிய சச்சரவு.]

அழிவழக்கு என்பதினும் இழிவழக்கு என்பதே பொருந்தும்.

அழிவாய் *aḻi-vāy*, பெ. (n.) **கூடல்முக மணல் மேடு** (இ.வ.); sand bank at the mouth of a river or harbour (Loc.).

[கழி → அழி. வாய் = ஆற்றுவாய் போன்ற கூடல்முகம்.]

அழிவாயு *aḻi-vāyu*, பெ. (n.) **நவுக்கார வளி** (*நவச்சார வாயு*); sulphuretted hydrogen or hydrogen sulphide or hydrosulphuric acid (சா.அக.).

[அழி + Skt. vāyu. அழிதல் = அழுகுதல். அழுகின பொருள்களிலிருந்து உண்டாவதால் இது அழிவாயு எனப்பட்டது. இதை நவுக்கார வளி எனலாம். நவுதல் = மக்குதல், கெடுதல். காரம் = கடுமை. வளி = காற்று.]

இது கந்தக மணம் (வாசனை) கலந்ததாய்க் கெட்ட நாற்றத்தை வீசும் ஒரு காற்று. செடி கொடிகள் அழுகுவதனாலும், உயிரிகள் (பிராணிகள்) இறந்து அவற்றின் உடல்கள் அழுகுவதனாலும், சாக்கடைக் கால்வாய் களிலிருந்தும், இக் காற்று உண்டாகும். இது மாந்தருக்குத் தீங்கை விளைவிக்கும். குதிரை மந்திரம் (லாயம்), மாட்டுத் தொழு வம், சுடுகாடு, நீலிச்சாலை, நாருரிக்குஞ் சாலை, தோற்கிடங்கு முதலிய இடங்களில் இவ் வளி (வாயு) பரவியிருக்கும் (சா.அக.).

அழிவி *aḻivi*, பெ. (n.) **கழிமுகம்**; inlet to a back-water, mouth of a river. "அழிவி நின்ற வலர்வேர்க் கண்டல்" (குறுந். 340).

இது திருமாளிகைச் சௌரிப்பெருமா ளரங்கன் பதிப்பிற் கொள்ளப்பட்ட பாடம்.

உ.வே.சா. பதிப்பில் "அழுவ நின்ற அலர் வேய் கண்டல்" என்று பாடம் கொள்ளப் பட்டு, அதற்கேற்ப, 'கடற்கரைப் பரப்பிலே நின்ற மலரைப் பொருந்திய தாழை' என்று பொருளுங் கூறப்பட்டுள்ளது. இதுவே பொருத்தமாகத் தோன்றுகின்றது.

ஆதலால், "அழிவி நின்ற வலர்வேர்க் கண்டல்" என்ற பாடமும், 'கழிமுகத்தில்

நிலைத்த பரவிய வேரையுடைய கண்டல் மரம்' என்னும் அதன் உரையும், கொள்ளத் தக்கன வல்ல.

'அழிவி' என்ற பாடவேறுபாடும் உ.வே. சா. பதிப்பில் 'அழுவி' என்று குறிக்கப் பட்டுள்ளது.

திருமாளிகைச் சௌரிப்பெருமாளரங்கன் பதிப்பின் ஆண்டு 1915. உ.வே.சா. பதிப்பின் ஆண்டு 1937. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலியின் (Lexicon) முதன்மடல முதற்பகுதி (அ-ஆ) வெளிவந்தது 1924. ஆதலால், சென்னை அகரமுதலியில் சௌரிப் பெருமாளரங்கன் பதிப்பே பயன்படுத்தப் பட்டது.

"அதோமுகம் புகாரோ டழிவி கூடல்
கழிமுக மென்றனர் காயலு மாகும்"

என்று பிங்கலம் கூறுவதால், சௌரிப் பெருமாளரங்கனார் 'அழிவி' என்ற பாடத்தைச் சிறந்ததாகக் கொண்டார் போலும்! அடுத்த அடி, "கழிபெயர் மருங்கி னொல்கி யோதம்" என்று வருவதால், கூறியது கூறல் என்னுங் குற்றந் தங்காவாறு, "அழுவ நின்ற வலர்வேய் கண்டல்" என்ற பாடமே சரியானதென்று உ.வே.சா. கொண்டதாகத் தெரிகின்றது.

ம. அழிமுகம்

அழிவு *aḻivu*, பெ. (n.) 1. கேடு (பிங்.); destruction, ruin, loss. 2. *தீமை*; sinful deed, immoral action, deviation from virtue. "அரக்கரோ ரழிவு செய்து கழிவரேல்" (கம்பரா. கிட்கிந்தா. வாலிவ. 79). 3. செலவு; expenditure, expense. 'வேண்டும் அழிவுக்குப் பொலிசையூட்டுக்கு வைத்த' (S.I.I. ii, 69). 4. **தோல்வி**; defeat. "அரும்புறு காலைக் கொங்கைக் கழிவுற்று" (கந்தபு. அசுர. மாயைப். 59). 5. **மனவுறுதியின்மை**; want of firmness of mind. "அழிவிலா னுற்ற விடுக்கண்" (குறள், 625). 6. **துன்பம், வருத்தம்**; distress, pain of separation. "அழிவு தலை வரினும்" (தொல். பொருள். கள. 24). 7. **வறுமை**; poverty. "அழிவினாற் கொண்ட வருந்தவம் விட்டானும்" (திரிகடு. 79). 8. **கழிமுகம்** (பிங்.); mouth of river or backwater.

ம., க. அழிவு; து. அலிவு; பட. அளிவு.

[அழி → அழிவு (தொ.பெ., தொ.ஆகு.). 'வு' தொ.பெ. ஈறு.]

அழிவுகாலம் *aḻivu-kālam*, பெ. (n.) 1. **கெட்ட காலம்**; evil time. 2. **ஊழியிறுதி** (சூடா. 12 : 76); time of universal destruction.

க. அளிகால

அழிவுபாட்டின்மை *aḻivu-paṭṭiṉmai*, பெ. (n.) (ஏர.) **ஒன்று அழிந்ததனால் ஏற்பட்ட அதன் இன்மை**; (Log.) non-existence caused by destruction.

[அழிவு + படு – அழிவுபடு (முதனிலை) → அழிவுபாடு (தொ.பெ.) + இன்மை.]

முன்னின்மை, பின்னின்மை, அழிவுபாட்டின்மை, முற்றுமின்மை என இன்மை நால் வகை.

அழிவுபாடு *aḻivu-pāḍu*, தொ. பெ. (vbl.n.) **அழிக்கப்படுகை, அழிவு**; destruction, being destroyed, ceasing to exist.

க. அளிபாடு

[அழி → அழிவு+படு (து.வி., செயப். து.வி.). அழிபடு → அழிவுபாடு (செயப். தொ.பெ.).]

அழிக்கப்படுகை யென்று பொருள்படின் செயப்பாட்டுத் தொழிற்பெயரும், அழிவுறுகையென்று பொருள்படின் தொழிற் பெயரும் ஆகும் என அறிக.

அழு-தல் *aḻu-*, 1 செ.கு.வி. (v.i.) 1. **கண்ணீர் விட்டுக் கதறி வருந்துதல்**; to weep aloud shedding tears. "அல்லற்பட் டாற்றா தழுத கண்ணீர்" (குறள், 555). 2. **வருந்திக் கண்ணீர் விடுதல்**; to shed tears and weep silently. 3. **புலம்பிக் கதறுதல்**; to cry aloud without shedding tears, to lament. 4. **சிணுங்குதல்**; to whine, whimper. 5. **ஒன்றை அவாவி வருந்துதல்**; to crave. 'குடல் கூழுக்கழக் கொண்டை பூவுக் கழுகிறதா?' (பழ.). 6. **வீணுக்குச் செலவழித்தல்**; to waste, spend in vain. உனக்கு ஆயிரம் உருபா அழுதேனே! —, 1 செ.குன்றாவி. (v.t.) **அழுதுமறத்தல்** (உ.வ.); to cease thinking of or sever connexion from, after weeping over someone or something (lit. and fig.). அவனை அன்றைக்கே அழுதுவிட்டேன்.

ம., க. அழு; தெ. அடலு, ஏடுசு; து. அர்ப்பினி; கொலா., நா. அர்; பர். அள்; பட. அவ்வு.

[அழிதல் = வருந்துதல், மனம் நோதல். அழி → அழு.]

அழுக்ககற்றி *aḻukk(u)-agaṟṟi*, பெ. (n.) **வண்ணான் காரநீர்**; lye, water impregnated with alkaline salts from wood ashes (W.) — 1. **வண்ணான் காரநீர்** (சா.அக.); lye used for washing purposes. 2. **சாம்பற் காரநீர்**; water impregnated with alkaline salt imbibed from the ashes of wood, *lye*.

[அழுக்கு + அகற்றி. ஒருகா. அழுகு → அழுங்கு → அழுக்கு. அழுங்குதல் = கெடுதல். ஒ.நோ: ஒழுகு → ஒழுங்கு → ஒழுக்கு. அகல் (த.வி.) → அகற்று (பி.வி.) → அகற்றி. 'இ' வி. முத. ஈறு.]

அழுக்ககற்றுங்கல் *aḻukk(u)-agaṟṟuṅ-kal*, பெ. (n.) **சுக்கான் கல்**; lime-stone, known for its power of removing dirt from clothes.

[அழுக்கு + அகற்றும் + கல். 'உம்' எ.கா. பெ.எ. ஈறு.]

அழுக்ககற்றி பார்க்க; see *aḻukk(u)-agaṟṟi*.

அழுக்ககற்றும்பூ *aḻukk(u)-agaṟṟum-pū*, பெ.(n.) 1. **பூநீறு**; fuller's earth. 2. **ஒரு களிமண்**; a clay used as a dressing for sores (சா.அக.).

[அழுக்கு + அகற்றும் + பூ.]

அழுக்ககற்றி, அழுக்ககற்றுங்கல் பார்க்க; see *aḻukk(u)-agaṟṟi, aḻukk(u)-agaṟṟuṅ-kal*.

சா.அக.-வில், அழுக்ககற்றும் வண்ணான், அழுக்ககற்றும் வண்ணாத்தி என்னும் இரு சொற்கும் பொதுவாகச் சவர்க்காரம் என்று பொருள் குறித்து, 'a soft, friable clay, which absorbs grease and is much used in fulling cloth, *Dhoby's earth*' என்று ஆங்கிலத்திலும் விளக்கங் கூறியிருப்பது, அகரமுதலியில் இடம்பெறத்தக்க அத்துணைச் சிறப்புடைய தாகத் தோன்றவில்லை.

அழுக்கடி-த்தல் *aḻukk(u)-aḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) **அழுக்குப் போக்குதல்**; to wash. "அழுக் கடிக்கும் வண்ணார் போலாய்" (தாயு. உடல். 65).

[அழுக்கு + அடி.]

அழுக்கடை-தல் *aḻukk(u)-aḍai-*, 2 செ.கு.வி. (v.i.) **அழுக்காதல், துப்புரவுகெடுதல்**; to become unclean, dirty.

[அழுக்கு + அடை. அடு → அடை.]

அழுக்கு பார்க்க; see *aḻukku*.

அழுக்கணவன் *aḻukkaṇavaṉ*, பெ. (n.) 1. **இலை தின்னும் புழு** (வின்.); small insect blight upon leaves. 2. **புழுக்கூடு**; the nest of a worm (சா.அக.).

[ஒருகா. அழி + கணவன். அழி = அழிப்பு. கணம் = கூட்டம். கணம் → கணவன் = கூட்டத்தைச் சேர்ந்தவன். அழிக்கணவன் (அழிக்கும் புழுக்கூட்டத்தைச் சேர்ந்தது) → அழுக்கணவன்.]

அழுக்கம் *aḻukkam*, பெ. (n.) **கவலை**; care, concern, anxiety. "அழுக்கமுற் றெழுந்து" (திருவிளை. விறகு. 48).

[அழுங்குதல் = துயருறுதல், வருந்துதல். அழுங்கு → அழுக்கு → அழுக்கம்.]

அழுக்கறு[1]-தல் *aḻukkaṟu-*, 20 செ.கு.வி. (v.i.) **பொறாமை கொள்ளுதல்**; to be envious. "அழுக்கற் றகன்றாரு மில்லை" (குறள், 170).

[அழுங்குதல் = பிறராக்கம் பொறாது வருந்து தல். அழுங்கு → அழுக்கு = அவ் வருத்தம். அழுக்கு + உறு — அழுக்குறு. அழுக்குறுதல் = அவ் வருத்தமடைதல், பொறாமைப்படுதல். அழுக் குறு → அழுக்கறு. ஒ.நோ: நாசமுற்றுப் போவான் → நாசமற்றுப்போவான் (ஒரு வசைச் சொல்).]

பொறாமை என்பது பிறராக்கங் கண்டு பொறாது எரியும் எரிச்சல். ஆதலால், அது தீக்குணமே யன்றி நற்குணமாகாது. 'அழுக் கறு' என்பதில் 'அறு' என்னும் துணைவினை இயல்பானதாயின் அழுக்கறுதல் அல்லது அழுக்கறுத்தல் என்னுஞ் சொல் ஒரு நல் வினையை அல்லது நல்லியல்பையே குறித்தல் வேண்டும். அங்ஙனங் குறியாமையின், அது வடிவுதிரிந்த சொல் என்பது தெளிவு.

பொறாமை யென்பது ஒருவகை யெரிச்சல் என்பதைப் புழுங்குதல், காழ்ப்பேறுதல் முதலிய சொற்களாலும் அறியலாம்.

அழுக்கறு[2]-த்தல் *aḻukkaṟu-*, 4 செ.கு.வி. (v.i.) **பொறாமை கொள்ளுதல்**; to be envious. "கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம்" (குறள், 166).

'அறு' என்னும் முதனிலை அறுதல், அறுத் தல் என்னும் இருவகைத் தொழிற்பெயர்க்கும் பொதுவாகும். 'அறுதல்' என்னும் தொழிற் பெயர்க்குரியது அற்றான் அறுகின்றான் அறுவான் என்றும், 'அறுத்தல்' என்னும் தொழிற்பெயர்க்குரியது அறுத்தான் அறுக் கின்றான் அறுப்பான் என்றும் புடைபெயர் வது மரபு.

'அழுக்கற்று' (குறள், 170) என்னும் இறந்த கால வினைவடிவிற்கேற்ப 'அறுதல்' என்பது தொழிற்பெயராதல் வேண்டும். 'அழுக்கறுப் பான்' (குறள், 166) என்னும் எதிர்கால வினை வடிவிற்கேற்ப 'அறுத்தல்' என்பது தொழிற் பெயராதல் வேண்டும். ஆதலால், இவ் விரு வகை வடிவிலும் தொழிற்பெயர் கொள்ளப் பட்டது.

'அழுக்கறு' என்பது செய்யுள் வழக்குச் சொல்லாதலால், அவ் வழக்குப்பற்றி இந் நிலைமை ஏற்பட்டது.

அழுக்கன் *aḻukkaṉ*, பெ. (n.) **கஞ்சன், பிசினாறி** (உ.வ.); miser.

[அழுங்கு → அழுக்கு → அழுக்கன் = பிறருக்கு ஒன்றைக் கொடுக்க வருந்துபவன். இனி, அழுக்கு → அழுக்கன் = மனமாசுள்ளவன் என்றுமாம்.]

அழுக்காமை *aḻukkāmai*, பெ. (n.) *அழுங்காமை* பார்க்க; see *aḻuṅgāmai*.

[அழுங்கு + ஆமை - அழுங்காமை → அழுக்காமை.]

அழுக்காறு[1] *aḻukkāṟu*, பெ. (n.) **பொறாமை**; envy. "அழுக்கா றிலாத வியல்பு" (குறள், *161*).

க. அழ்கசு

[அழுங்குதல் = பிறராக்கம் பொறாது வருந்து தல். அழுங்கு → அழுக்கு (தொ.பெ.) → அழுக்குறு → அழுக்கறு → அழுக்காறு (முத. தி. தொ.பெ.). 'உறு' து.வி.]

'அழுக்கறு' என்னும் முதனிலை ஈறு திரிந்து ஒருசொற் றன்மைப்பட்ட கூட்டுச்சொல் லாதலால், புறப்படு → புறப்பாடு என்பது போலத் துணைவினை முதலுயிர் நீண்டு 'அழுக்காறு' எனத் தொழிற்பெயராயிற்று.

அழுக்காறு[2] *aḻukkāṟu*, பெ. (n.) *1.* **மனத் தழுக்கு** (பிங்.); impurity of mind, evil disposition. 2. **தீயநெறி**; evil way, bad conduct.

[அழுங்குதல் = கெடுதல். அழுங்கு → அழுக்கு (தொ.பெ.). ஆறு = வழி, ஒழுக்கநெறி.]

அழுக்கு[1] *aḻukku*, பெ. (n.) *1.* **மாசு**; dirt, filth, stain. உடம்பில் அழுக்குப் பிடித்திருக்கிறது. 2. **உடம்பினின்று வெளிப்படும் சிறுநீர் மலங்கள்**; physical impurities, urine and excrement. "இரண்டியக்க முதலான வழுக்காடையெய்தின்" (தணிகைப்பு. அகத். *392*). *3.* **நோய்க்காலத்தில் உதடு பல் முதலியவற்றிற் படியும் ஊத்தை**; the dark-brown foul matter which collects on the lips and the teeth in low fevers (சா.அக.). *4.* **பிள்ளைப்பேற்றின்பின் வடியும் ஊனீர்**; lochia, discharges after confinement. 5. **வெளுத்தற்குரிய மாசுபடிந்த ஆடை**; soiled clothes. வண்ணான் அழுக்கெடுக்க வந்திருக்கிறான். 6. **மனமாசு**; impurity of mind. "அழுக்கு ளத்தினு முடலி னுமறா தொருநா ளருச்சனை செய்தோர்" (தணிகைப்பு. அகத். *213*). 7. **காம வெகுளி மயக்க மென்னும் ஆதன் மலம்**; impurity of soul. "அமலனுயிர்க் கழுக்கறுக்க" (சிவதரு. பாயி. 7). 8. **பொறாமை**; envy. "உள்ளத் தழுக்க றாமையால்" (திருவிளை. நகரப். *100*).

ம. அழுக்கு; க., தெ. அடுசு; து. அடகு; பட. அளுக்கு.

[அழுங்கு → அழுக்கு (தொ.பெ., தொ.ஆகு.).]

அழுக்கு[2] *aḻukku*, பெ. (n.) **ஆமைவகை**; hawk's bill, *Caretta squamata* (W.).

[அழுங்கு → அழுக்கு.]

அழுக்குத்தங்கல் *aḻukku-t-taṅgal*, தொ.பெ. (vbl.n.) **பிள்ளைப்பேற்றின்பின் கருப்பையினின்று வழக்கமாக வரக்கூடிய அரத்தம் முதலியவை வெளிவராமல் தடைப்படல்**; sudden interruption of the usual lochial discharges after child-birth.

[அழுக்கு + தங்கல். தங்கு → தங்கல் (தொ. பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அழுக்குத்தேமல் *aḻukku-t-tēmal*, பெ. (n.) **உடலில் அழுக்கினால் தோன்றும் புள்ளிகள்** (இ.வ.); spots on the body, formed by dirt (Loc.) (செ.அக.) — **உடம்பிற் சில பாகங்களில் தழும்புகள் ஏற்பட்டு அவற்றின்மேற் கருப்பாக அழுக்கு நிறைந்து, தேய்க்கத் தோலுரியும் ஒருவகைத் தேமல்**; a disease of the skin marked by patches, dark with dirt and the exfoliation of the scarf skin or epidermis in several parts of the body (சா.அக.).

[அழுங்கு → அழுக்கு. திறம்பு → தேம்பு → தேம்பல் → தேமல்.]

தேமல் பார்க்க; see *tēmal*.

அழுக்குத்தேய்-த்தல் *aḻukku-t-tēy-*, 4 செ.கு.வி. (v.i.) அழுக்கைக் **கையினாலாவது கருவியி**

னாலாவது உரசிப் போக்குதல்; to rub off dirt, either with the hand or with an implement.

அழுக்குநீர் *alukku-nīr*, பெ. (n.) 1. துப்புரவற்ற நீர்; dirty water. 2. மாதவிடாய்நீர், சாண்டு; menstrual discharge. 3. பிள்ளை பிறந்தபின் பெண்டிர்க்கு அல்குல் தாரையினின்று ஒழுகும் அரத்தம் அல்லது ஊனீர்; the lochial discharge after child-birth (சா.அக.).

அழுக்குப்படி-தல் *alukku-p-padi-*, 2 செ.கு.வி. (v.i.) தூசி, புழுதி முதலிய மாசு ஒன்றன்மேல் விழுந்து தங்குதல்; to settle, as dust or mould, on anything.

[அழுங்கு → அழுக்கு + படி. படு → படி. படுதல் = விழுதல்.]

அழுக்குப்போடு-தல் *alukku-p-pōdu-*, 20 செ.கு.வி. (v.i.) அழுக்குத் துணிகளைச் சலவை செய்ய வண்ணானிடம் கொடுத்தல்; to put dirty clothes for wash.

அழுக்குமுட்டை *alukku-muttai*, பெ. (n.) பழைய மூடப்பழக்கவழக்கங்களைப் பின்பற்றுபவ-ன்-ள்; one who sticks to time-worn superstitious practices, a term of contempt.

[அழுங்கு → அழுக்கு. முள் → முட்டு → முட்டை. 'அழுக்குமுட்டை' இருமடி ஆகு.]

அழுக்கு என்பது அழுக்குப்போன்ற மூடப் பழக்கவழக்கம். மூட்டை அதன் தொகுதி, இங்கு அதைச் சுமப்பவன்.

அழுக்குருட்டி *alukk(u)-urutti*, பெ. (n.) 1. குளியாமல் உடம்பிலுள்ள அழுக்கை அடிக்கடி தேய்த்து உருட்டிக்கொண்டிருப்பவ-ன்-ள்; one who indulges in the habit of rubbing the skin and scraping off the dirt from his body, instead of bathing. 2. ஒரு வண்டு; a beetle.

[அழுங்கு → அழுக்கு. உருள் → உருட்டு → உருட்டி. 'இ' வி.முத. ஈறு.]

அழுக்குருட்டு-தல் *alukk(u)-uruttu-*, 5 செ.கு.வி. (v.i.) உடம்பிலுள்ள அழுக்கைத் தேய்த்து உருட்டுதல் அல்லது உருளுமாறு தேய்த்தல்; to rub and scrape off the dirt from the body while bathing or even while not bathing.

[அழுங்கு → அழுக்கு. உருள் (த.வி.) → உருட்டு (பி.வி.).]

அழுக்குவிழு-தல் *alukku-vilu-*, 2 செ.கு.வி. (v.i.) 1. பிள்ளை பெற்றவுடன் கருப்பையினின்று மாசு வெளிப்படுதல் (சா.அக.); the discharge from the uterus immediately after child-birth. 2. நஞ்சுவிழுதல்; casting off of the placenta after child-birth.

அழுக்கெடு-த்தல் *alukk(u)-edu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. அழுக்குத் துணிகளைச் சலவை செய்ய வண்ணான் எடுத்துக்கொள்ளுதல்; to take away dirty clothes for wash, as by a washerman. 2. நகையிலுள்ள அழுக்கைப் போக்குதல்; to clean and polish, as jewels.

அழுகண் *alu-kan*, பெ. (n.) 1. கண்ணிலிருந்து எப்போதும் நீர் வடிந்துகொண்டிருக்கும் கண்ணோய்வகை; an affliction of the eye which consists in continual watering of the eye, running eye, moist eye. 2. கண்ணீர்த் தாரையின் சுருக்கத்தினா லேற்படும் கண்ணீரொழுக்கு; abnormal overflow of tears due to the stricture of the lachrimal passage, *Epiphora* (சா.அக.).

['அழுகண்' வினைத்தொகை.]

கண் பார்க்க; see *kan*.

அழுகண்ணி *alu-kanni*, பெ. (n.) 1. பூடுவகை (சங்.அக.); a plant from which water is continuously oozing and dripping (செ.அக.). 2. என்றும் அழுதுகொண்டிருக்கும் குழந்தை அல்லது பெண்; a child or woman always seen weeping (சா.அக.). 3. எக்காலத்துந் தண்ணீர் கசிந்து ஒழுகிக்கொண்டிருக்கும் ஒருவகை மரம்; a tree from which water is continuously oozing and dripping, Indian weeping tree. 4. எப்போதும் புண்ணினின்று நீர் கசிந்து கொண்டிருக்கும் ஒருவகைக் குட்டம்; a leprosy attended with constant or unceasing discharge from sores. 5. மருத்துவ (வைத்திய) முப்பு; a name for the universal salt used as a base in the preparation of all Tamil medicines, especially metals and metallic compounds. 6. எப்போதும் அரத்தம் சீழ் ஒழுகிக்கொண்டிருக்கும் புண்ணோய்; a running sore. 7. தேவாங்கு; sloth.

ம. அழுகண்ணி

['அழுகண்ணி' வினைத்தொகை. கண் → கண்ணி. 'இ' உடையவன் ஈறு.]

அழுகண்ணிச்சித்தன் *alu-kanni-c-cittan*, பெ. (n.) இதளிய மருத்துவ அறிவத்தில் (இரசவாத வைத்திய ஞானத்தில்) வல்லோனாகிய ஒரு சித்தன்; one of the *Siddhars* School, pro-

ficient in Medicine, Alchemy, Philosophy, etc. (சா.அக.).

[அழு+கண்ணி+Skt. Siddha > த. சித்தன்.]

சித்தியைப் (siddhi) பெற்றவன் சித்தன். சித்தி = கைகூடுகை, வினைவெற்றி.

அழுகண்ணிப்பால் *alu-kanni-p-pal*, பெ. (n.) **தூய முலைப்பால்**; unadulterated breast milk (சா.அக.).

[ஒருகா. அழகு + உண்ணி + பால் (?). உண் → உண்ணி.]

அழுகண்ணிமுறை (மார்க்கம்) *alu-kanni-murai (marga)*, பெ. (n.) **இதளிய (இரசவாத) முறைப்படி அழுகண்ணி இலையைக் கொண்டு பொன்னை மாற்றுயர்வாகச் செய்யும் ஒரு பொன்னாக்க முறை**; an alchemical process of refining gold to a higher standard with the aid of the leaves of the weeping tree (சா.அக.).

[அழுகண்ணி + முறை.]

அழுகணி *alu-kani*, பெ. (n.) **அழுகண்ணி** பார்க்க; see *alu-kanni*.

அழுகணித்தூறல் *alu-kani-t-tural*, பெ. (n.) **துலை (ஐப்பசி) மாதத்தில் இடைவிடாது தூறும் தூறல்**; incessant drizzling of rain for weeks together during the month of *tulai* (October - November). 'ஐப்பசி மாதம் அழுகணித் தூறல்' (பழ.).

['அழுகணி' வினைத்தொகை. தூறு → தூறல் (தொ.பெ., தொ.ஆகு.). 'அல்' தொ.பெ. ஈறு.]

'அழுகணி' இங்குக் குறிப்புப் பெயரெச்சம் போல் ஆளப்பட்டது.

அழுகல் *alugal*, பெ. (n.) 1. **பதனழிதல்**; rotting, putrefying, decomposing. 2. **பதனழிந்த பண்டம்**; rotten fruit, putrefied matter. அதிக விலைகொடுத்து அழுகலை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான். 3. **துப்புரவின்மை**; uncleanness. "அழுகற் சின்னீர்" (குறுந். 56). 4. **புண்செதிள் அல்லது பொருக்கு**; a scar or the crust on a wound occasioned by burns or caustic applications (சா.அக.).

[அழு (அழி) → அழுகு → அழுகல் (தொ.பெ., தொ.ஆகு.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அழுகவூதல் *aluga-v-udal*, தொ.பெ. (vbl.n.) **குகை அழியும்படி நெருப்பிலிட்டு ஊதல்**; heating a solid matter in a crucible to refine it (சா.அக.).

[அழுகு → அழுக (நி.கா.வி.எ.). ஊது → ஊதல். 'அல்' தொ.பெ. ஈறு.]

இதை 'அழியவூதல்' என்பது மிகப் பொருத்தமாகும்.

அழுகள்ளன் *alu-kallan*, பெ. (n.) 1. **அழுது தன் குற்றத்தை மறைக்குங் கள்ளன்**; thief who weeps and denies his theft. 'அழுகள்ளன் தொழுகள்ளன் ஆசாரக் கள்ளன்' (பழ.). 2. **அழுது பாசாங்கு செய்வோன்**; weeping hypocrite.

['அழுகள்ளன்' வினைத்தொகை. கள் → கள்ளன். கள்ளுதல் = களவுசெய்தல்.]

அழுகற்சரக்கு *alugar-carakku*, பெ. (n.) 1. **பதனழிந்த பண்டம்**; rotten fruits or vegetables. 2. **பதனழிந்த மருந்துச்சரக்கு**; a rotten or decomposed drug (சா.அக.). 3. **வழியில் அழுகுதற்குரிய பண்டம்**; perishable goods in traffic. 4. **அழுகக்கூடிய சரக்குகளுக்கு இடும் வரி** (S.I.I. ii, 114); tax on perishable goods.

[அழுகல் + சரக்கு. அழுகு → அழுகல். 'அல்' தொ.பெ. ஈறு.]

அழுகற்சிரங்கு *alugar-cirangu*, பெ. (n.) **நீர் கசியுஞ் சிரங்கு**; weeping eczema.

[அழுகல் + சிரங்கு.]

அழுகற்பிணம் *alugar-pinam*, பெ. (n.) **கட்டுவிட்டு நாறும் பன்னாட் பிணம்**; decomposed corpse.

[அழுகல் + பிணம்.]

அழுகற்பீனசம் *alugar-pinašam*, பெ. (n.) **சிராய்ப் பீனசம்**; inflammation of the mucous membrane of the nose with a caseous, gelatinous and fetid discharge, *Rhinitis caseosa* (சா.அக.).

[அழுகல் + Skt. pinasa > த. பீனசம், பீனிசம்.]

பீனசத்தைப் (ozena) பீமூக்கு என்றும், அழுகற் பீனசத்தை அழுகற் பீமூக்கு என்றும் சொல்லலாம்.

அழுகற்புண் *alugar-pun*, பெ. (n.) **அழுகி நாற்றமெடுக்கும் புண்**; gangrene which emits an offensive odour due to mortification of the part affected.

[அழுகல் + புண்.]



அழுங்கு

அள்ளாத்தி

அறக்குளாமீன்



அறுக்கிளாமீன்

அழுகற்றூற்றல் *aḻugaṟ-ṟūṟṟal*, பெ. (n.) *அழுகணித்தூறல் பார்க்க*; see *aḻu-kaṇi-t-tūṟal*.

[*அழுகல் + தூற்றல்.*]

அழுகிச்சேதம் *aḻugi-c-cēdam*, பெ. (n.) *வெள்ளத்தா லுண்டாகும் பயிர்ச் சேதத்திற்குச் செய்யும் வரிநீக்கம்* (நாஞ்.); remission of land tax in cases of loss of crop due to inundation (Nāñ.).

[*அழுகு → அழுகி (இ.கா.வி.எ.). சேதம் = சேதப்படுதல். 'அழுகிச்சேதம்' வரியைக் குறித்த லால் அடையடுத்த ஆகுபெயர்.*]

அழுகு-தல் *aḻugu-*, 5 செ.கு.வி. (v.i.) *பதனழிதல்*; to rot, decompose, putrefy.

ம., க. அழுகு.

[*அழி → அழு → அழுகு.*]

அழுகுகால் *aḻugu-kāl*, பெ. (n.) *நீர்ப்பெருக்கால் அழுகிய நெற்பயிர்* (P.T.L.); paddy crop become rotten from over-irrigation or floods.

அழுகுகிரந்தி *aḻugu-kirandi*, பெ. (n.) *சதை யழுகிய புண்*; a gangrenous sore, *Carious ulcer* (சா.அக.).

[*அழுகு+கிரந்தி – அழுகுகிரந்தி → அழுகிரந்தி (சா.அக.).* **Skt.** granthi > *த. கிரந்தி.*]

அழுகுசப்பாணி *aḻugu-śappāṇi*, பெ. (n.) 1. *அழுகுநாகம் (சர்ப்பம்)*; a poisonous reptile (W.). 2. *அழுகுநாகம் (சர்ப்பம்) நக்குவதால் உடம்பிற் சதையழுகி யுண்டாகும் புண்ணோய்*; sore supposed to have been caused by the lick of the above reptile which causes the flesh to putrefy.

[*'அழுகுசப்பாணி' வினைத்தொகை.*]

சப்பாணி என்னும் சொல், தமிழில், நடக்க வியலாது சப்பையாக (சப்பளித்து) இருக்கும் முடவனையும், சப்பளித்திருக்கும் குழந்தை கைவிரித்துத் தட்டுதலையுமே குறிக்கும். நாகத்தைக் குறிக்குமாயின், அந் நாகம் நிலத்திற் சப்பையாய் கிடத்தல்வேண்டும்; அல்லாக்கால், 'ஸர்ப்பஹானி' என்னும் வட மொழிக் கூட்டுச்சொல் முதற்கண் புண்ணை யும் பின்னர் அதையுண்டாக்கும் நச்சுயிரியை யும் குறித்ததாகல் வேண்டும்.

'ஸர்ப்ப' (sarpa) என்னும் வடசொற்கு ஊர்வது, நகர்வது என்றே பொருளிருத்த லால், அப் பொருளுள்ள நாகம் என்னும் தென்சொல்லையே அதற்குப் பகரமாக ஆள் தல் வேண்டும். நகர்வது நாகம், மலையில் (வ. நகம்) உள்ளது நாகம் என்பது வட மொழியார் குறிக்கோட் சொல்லியல்.

அழுகுசர்ப்பம் *aḻugu-śarppam*, பெ. (n.) *நக்குவத னால் நஞ்சூட்டுவதாகக் கருதப்படும் ஒரு நச்சுயிரி (விஷஜந்து)* (வின்.); a reptile whose lick is supposed to be poisonous.

[*அழுகு +* **Skt.** sarpa > *த. சர்ப்பம்.*]

அழுகுசிறை *aḻugu-śiṟai*, பெ. (n.) *சிறையாளர் (கைதிகள்) புழுங்கிச் சாகுமாறு காற்று வர வில்லா தமைத்த காவலறை*; non-ventilated prison-cell where the prisoner is left to die of suffocation.

அழுகுணி[1] *aḻuguṇi*, பெ. (n.) 1. *என்றும் அழுதுகொண்டே யிருப்பவ-ன்-ள்*; tearful person, one who has a tendency to be always weeping or crying. 2. *இடைவிடாது அல்லது அடிக்கடி அழுங்குழந்தை*; a weeping child-in-arm. 3. *ஒருவகை மரம்*; a willow tree.

க. அளுபுருக

[*அழுகை + உண்ணி – அழுகையுண்ணி → அழுகுண்ணி → அழுகுணி. ஒ.நோ: நோயுணி. இனி, 'அழுகுணி' வினைத்தொகை என்றுமாம். அழு = அழுகின்ற. குணம் → குணி = குணத்தை யுடைய-வன்-வள்-து.*]

அழுகுணி[2] *aḻuguṇi*, பெ. (n.) 1. *சொறிசிரங்கு வகை*; a kind of itch in the form of small eruptions on the skin (செ.அக.). 2. *காதில் வரும் ஒருவகைக் கரப்பான்*; an eruption chiefly about the ear.

அழுகுநாகம் *aḻugu-nāgam*, பெ. (n.) *அழுகு சர்ப்பம் பார்க்க*; see *aḻugu-śarppam*.

அழுகுபுண் *aḻugu-puṇ*, பெ. (n.) 1. *சதையைத் தின்றுகொண்டே போகும் ஒருவகை நாற்றப் புண்*; a stinking ulcer that goes on eating away the flesh, gangrene. 2. *உடம்பினுட் பரவிச் சதையை அரித்துத் துணுக்குகளாக வெளிப்படுத்தும் அரிப்புண் (கிரந்திப்புண்)*; an ulcer which spreads rapidly eating away the tissues and is marked by sloughing particles in the discharge, *Phagedenic ulcer*.

ம. அழுகுபுண்; க. அழுகுண்ணு.

[*'அழுகுபுண்' வினைத்தொகை.*]

அழுகுபுண்குட்டம் *aḻugu-puṇ-kuṭṭam*, பெ. (n.) **குட்டநோய்வகை** (கடம்ப. பு. இலீலா. 145); leprosy with running sores.

அழுகுமூலம் *aḻugu-mūlam*, பெ. (n.) **மூலநோய் வகை** (கடம்ப. பு. இலீலா. 106); a kind of piles.

[ஒருகா. நாட்பட்ட கொடிய மூலம்போலும்.]

அழுகுரற்பறவை *aḻu-kuraṟ-paṟavai*, பெ. (n.) **புலம்புங் குரலுடைய பறவை**; a bird making a weeping noise (சா.அக.).

[அழு+குரல்+பறவை. 'அழுகுரல்' வினைத் தொகை. பற → பறவை (தொ.ஆகு.).]

அழுகை[1] *aḻugai*, தொ.பெ. (vbl.n.) 1. **அழுதல்**; weeping. 2. **அவலச் சுவை**; pathetic emotion. 'இளிவும் இழத்தலும் அசைதலும் வறுமையுமென இந் நான்கு பொருள்பற்றித் தோன்றும் அவலம் என்றவாறு' (தொல். பொருள். மெய்ப். 5, பேரா. உரை).

ம. அழுக; க. அளலிகெ; தெ. ஏட்சு; து. அர்பினி; கோத. அத்; துட. ஒர்; நா. அர்; பர். அர், அழி; கோண். ஆழானா; கட., கொலா. அர்; குரு. ஒல்வு; பட. அவ்வு.

[அழு → அழுகை (தொ.பெ.). 'கை' தொ.பெ. ஈறு.]

அழுகை[2] *aḻugai*, தொ.பெ. (vbl.n.) **அழுகுதல், பதனழிதல்**; putridity, partial or complete rottenness, putrescence.

ம. அழுகுக; க. அழுகு.

[அழுகு → அழுகை (தொ.பெ.). 'ஐ' தொ.பெ. ஈறு.]

அழுகைக்கண்ணீர் *aḻugai-k-kaṇṇīr*, பெ. (n.) **அழுகையால் வடியுங் கண்ணீர்**; tears of sorrow. 'அழுகைக் கண்ணீர்போல உவகைக் கண்ணீர் வீழ்தலும் உண்டு' (தொல். பொருள். மெய்ப். 5, பேரா. உரை).

[அழுகை + கண்ணீர். அழு → அழுகை (தொ.பெ.). கண் + நீர் – கண்ணீர்.]

அழுகைத்தூற்றல் *aḻugai-t-tūṟṟal*, பெ. (n.) **துலை (ஐப்பசி) மாதம் இடைவிடாது தூறும் மழைத்தூறல்**; continuous drizzle during the month of October-November.

[அழுகை + தூற்றல். அழு → அழுகை (தொ. பெ.). தூறு → தூற்றல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அழுகைத்தூறல் *aḻugai-t-tūṟal*, பெ. (n.) **அழுகைத்தூற்றல்** பார்க்க; see *aḻugai-t-tūṟṟal*.

[அழுகை + தூறல். தூறு → தூறல் (தொ. பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அழுகைமாது *aḻugai-mādu*, பெ. (n.) **கவிழ் தும்பை**; stooping toombay, *Nepeta indica* (சா.அக.).

[அழுகைமாது (உ.ஆகு.) = அழும்பெண்டு போல் தோன்றுவது.]

அழுகையுங்கண்ணீருமாய் *aḻugaiyuṅ-kaṇ-ṇīrum-āy*, கு.வி.எ. (adv.) **அழுதுகொண்டு கண்ணீர் சிந்தி**; crying (or weeping) and shedding tears. அழுகையுங் கண்ணீருமாய் வந்து நின்றான் (உ.வ.).

[அழுகை + உம் + கண்ணீர் + உம் + ஆய். அழு → அழுகை (தொ.பெ.). கண் + நீர் – கண்ணீர். 'உம்' ஈரிடத்துங் கூட்டிணைப்புச் சொல் (cumulative conjunction). 'ஆய்' வி.எ. ஈறு. ஆ (ஆகு.) → ஆய் (இ.கா.வி.எ.).]

அழுகைவாடிமூலி *aḻugai-vāḍi-mūli*, பெ. (n.) **அழுகண்ணி** பார்க்க; see *aḻu-kaṇṇi* (சா.அக.).

அழுங்கல் *aḻuṅgal*, பெ. (n.) 1. **அழுதல்**; crying, weeping. 2. **துன்பம்** (திவா.); affliction. 3. **நோய்** (திவா.); disease. 4. **கேடு** (திவா.); ruin. 5. **அச்சம்** (திவா.); fear. 6. **இரக்கம்**; pity, compassion. "அழுங்க லெய்திய வாருயிர்ப் பாங்கற்கு" (திருக்கோ. 29, கொளு). 7. **கண்கலங்குதல்**; congestion of the eyes (சா.அக.). 8. **கைகால் கருப்பேறல்**; darkening of the limbs through disease (சா.அக.). 9. **உருவழிதல்**; to be disfigured (சா.அக.). 10. **சோம்பல்** (திவா.); sloth. 11. **யாழின் நரம்போசை** (பிங்.); sound of lute. 12. **ஆரவாரம்** (திவா.); loud noise, uproar. "அழுங்க லூரே" (நற். 36 : 9). 13. **மலை**; mountain (சா.அக.).

ம. அழுங்குக

[அழு → அழுங்கு. அழுங்குதல் = வருந்துதல். அழுங்கு → அழுங்கல் (தொ.பெ.). 'அல்' தொ. பெ. ஈறு.]

மலை யென்னும் பொருள் இச் சொற்கு எங்ஙனம் வந்ததென்பது தெளிவாய்த் தெரிய வில்லை. 'ஆரவாரமுள்ளது அல்லது செல வழுங்க (செலவு தவிர) ஏதுவாயிருப்பது'

என்பது, வலிந்தும் நலிந்தும் கொள்ளத்தக்க தாகும்.

அழுங்காமை *aluṅgāmai*, பெ. (n.) 1. ஒரு வகைக் கடலாமை (வின்.); hawk's bill, *Caretta squamata*. 2. அழுங்கு (வின்.); pangolin.

ம. அழுங்காம

[அழுங்கு + ஆமை.]

அழுங்குத் தன்மையும் ஆமைத் தன்மையும் சேர்ந்தது என்னும் பொருள் அழுங்கிற்குப் பொருந்தாது.

அழுங்கிப்புழுங்கி *aluṅgi-p-puluṅgi*, வி.எ. (adv.) மிக மனமெரிந்து, மிகப் பொறாமைப்பட்டு; suffering from burning jealousy, being extremely envious. பகைவன் தேர்தலில் வெற்றி பெற்றதனால் அழுங்கிப்புழுங்கி அவனைக் கொல்லத் துணிந்தான்.

[அழுங்கு → அழுங்கி (இ.கா.வி.எ.); புழுங்கு → புழுங்கி (இ.கா.வி.எ.). 'இ' ஈரிடத்தும் இ.கா. வி.எ. ஈறு. 'அழுங்கிப்புழுங்கி' பொருளை மிகுத்துக்காட்டும் மரபிணைமொழி.]

அழுங்கு-தல் *aluṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. வருந்துதல் (பிங்.); to suffer, to be in distress, in anguish. 2. அஞ்சுதல் (உரி.நி.); to fear. 3. துயரப்படுதல் (பிங்.); to grieve, sorrow, regret. 4. அழுதல் (நாநார்த்த. 968); to weep. 5. கெடுதல்; to be spoiled, injured. ''அழுங்க விரக்கமுங் கேடுமாகும்'' (தொல். சொல். உரி. 52). 6. மாசுறுதல்; to be tarnished, to suffer damage of reputation. ''குண னழுங்கக் குற்ற முழைநின்று கூறும்'' (நாலடி. 353). 7. உருவழிதல்; to be disfigured. ''பிணனழுங்கக் களனுழக்கி'' (புறநா. 98 : 5). 8. சோம்புதல் (திவா.); to be idle, lazy. 9. தவிர்தல்; to dispense with. ''அழுங்கின னல்லனோ வயர்ந்ததன் மணனே'' (அகநா. 66 : 26). 10. ஒலித்தல் (சூடா.); to sound.

ம. அழுங்கு; க. அழ்கு.

[அழு → அழுகு → அழுங்கு.]

சேனாவரையர், தொல். சொல். உரி. 54ஆம் நூற்பாவிற்கு, ''பழங்க ணோட்டமு நலிய வழுங்கின னல்லனோ'' (அகநா. 66) எனவும், ''குணனழுங்கக் குற்ற முழைநின்று கூறுஞ் சிறியவர்கட்கு'' (நாலடி. 353) எனவும், 'அழுங்கல், அரவமேயன்றி இரக்கமுங் கேடு மாகிய குறிப்புணர்த்தும் என்றவாறு' என்று உரை கூறினார். ஆயின், 'அழுங்கினன்' என்னும் அகநானூற்றுச் சொல்லிற்கு 'நிறுத்திவிட்டான்' என்று நாட்டார்-கவியரசு உரையும், 'அழுங்க' என்னும் நாலடியார்ச் சொல்லிற்கு 'மாசுற' என்று இராசகோபாலப் பிள்ளையுரையும் பொருள் கூறுகின்றன.

அழுங்கு *aluṅgu*, பெ. (n.) 1. வளைக்குள் வதிந்து இரவிற் கறையான் தின்று வாழும் சிறு விலங்கு (பிங்.); pangolin, Indian scaly ant-eater, *Manis crassicandata* (செ.அக.) — *Manis pentadactyla* alias *M. brachyura* (சா. அக.). 2. அழுங்காமை, கடலாமைவகை; hawk's bill. 3. (இசை) பாலையாழ்த் திற வகை (பிங்.); (Mus.) a secondary melody-type of the *pālai class*. 4. கற்றாழை (பச்.மூ.); aloe.

ம. அள்ளுவன்; தெ. ஆளுக; து. அளங்கு; குட. செள்ளவே.

[நளுங்கு → அளுங்கு → அழுங்கு.]

அழுங்குப்பிடி *aluṅgu-p-piḍi*, பெ. (n.) விடாப் பிடி (வின்.); firm unyielding hold, pertinacity, obstinacy.

அழுங்குவி-த்தல் *aluṅguvi-*, 1 பி.வி. (v.caus.) 1. துன்பமுறுத்துதல்; to distress. ''அன்புருகு நெஞ்ச மழுங்குவிக்கு மாலை'' (சீவக. 2051). 2. தவிர்த்தல், நிகழவொட்டாது தடுத்தல்; to prevent, stop. 'சொல்லுஞ் செயலும் ஒவ் வாமைக் குற்றம் அவர்க்கெய்தும்; அஃ தெய்தாவகை அழுங்குவி யென்பது கருத்து' (குறள், 1154, பரிமே. உரை).

[அழுங்கு (த.வி.) → அழுங்குவி (பி.வி.).]

அழுங்கோடு *aluṅg(u)-ōḍu*, பெ. (n.) அழுங்கின் செதிள்; scales of the pangolin.

[அழுங்கு + ஓடு.]

அழுத்தக்காரன் *alutta-k-kāraṉ*, பெ. (n.) 1. கையிறுக்கமுள்ளவன் (உ.வ.); parsimonious, niggardly person, miser (Com.u.). அவன் ஓர் அழுத்தக்காரன்; ஒருவருக்கும் ஒன்றுங் கொடான். 2. அழுக்கன் (உ.வ.); deep person (Com.u.). அவன் பெரிய அழுத்தக்காரன்; அவனை யாரும் அறிந்துகொள்ள முடியாது.

[அழுந்து → அழுத்து (தொ.பெ.) → அழுத்தம் (தொ.பெ.) + காரன் (உடைமை குறித்த ஆ.பா. ஈறு).]

காரன் பார்க்க; see *kāraṉ*.

அழுத்தந்திருத்தம் *aḻuttan-tiruttam*, பெ. (n.) 1. **சிறிதும் வழுவின்மை**; perfectly correct. அழுத்தந்திருத்தமாய்ப் பேசவும் எழுதவும் வேண்டும். 2. **பொருள் வலியுடைமை**; emphasis and forcefulness. அவன் பேச்சு அழுத்தந் திருத்தமானது.

[அழுந்து → அழுத்து → அழுத்தம் + திருந்து → திருத்து → திருத்தம். 'அழுத்தந்திருத்தம்' பொருள் வலி மிகுக்கும் மரபிணைமொழி.]

அழுத்தம் *aḻuttam*, பெ. (n.) 1. **அமுக்கம், நெருக்கம்**; pressure. அழுத்தம் போதாது. 2. **இறுக்கம், திணுக்கம், இழைநெருக்கம்**; compactness, closeness of texture, as of cloth. துணி அழுத்தமாயில்லை. 3. **பலகைக் கடினம்**; hardness, rigidity, as of wood. 4. **உறுதி**; durability, strength, as of binding. அழுத்தமான கட்டடம். 5. **ஒட்டாரம்** (பிடிவாதம்); obstinacy. 6. **ஈயாமை, கஞ்சத்தனம்**; close-fistedness, parsimony. செல்வத்தில் அழுத்தமுள்ளவன் செத்தாலும் கொடான். 7. **பொருள் வலியுடைமை**; emphasis, forcefulness, decisiveness. அவன் பேச்சு அழுத்தமுள்ளது. 8. **ஆழ்ந்தறியுந் தன்மை**; profoundness of one's mental application. அவனுடையது அழுத்தமான படிப்பு.

ம. அழுத்தம்

[அழுந்து → அழுத்து (தொ.பெ.) → அழுத்தம் (தொ.பெ.).]

அழுத்தமில்லாவுடம்பு *aḻuttam-illā-v-uḍambu*, பெ. (n.) *பழக்கத்தில் அடிப்படாத வுடம்பு*; body not moulded by experience, nor toughened by strict habit (சா.அக.).

[அழுந்து → அழுத்து → அழுத்தம் + இல் → இல்லா + உடம்பு.]

அழுத்து-தல் *aḻuttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **அழுந்தச்செய்தல்**; to press down, press hard, impress. முத்திரை யழுத்து. தலையிற் கையைவைத் தழுத்திவிட்டான். 2. **பதித்தல்**; to encase, inlay. "மைதீர் பசும்பொன் மேன் மாண்ட மணியழுத்தி" (நாலடி. 347). 3. **அமிழ்த்துதல்**; to plunge, immerse, press down. குரல்வளையை நெரித்துக் குளத்தில் அமிழ்த்திவிட்டான். 4. **அம்பெய்தல், அம்பெய்து ஒருடம்பிற் பதியச் செய்தல்**; to shoot or implant an arrow into a body. "பகழி வாங்கிக் கடுவிசை யண்ணல் யானை யணிமுகத் தழுத்தலின்" (குறிஞ்சிப். 170 : 1). 5. **ஒருவர் பிழைப்பைக் கெடுத்துவிடுதல்**; to ruin one. நெருக்கடி காலத்தில் அவனை ஒரே அழுத்தாய் அழுத்திவிட்டார்கள். 6. **உறுதியாக்குதல்**; to make firm or compact, confirm. 7. **வற்புறுத்துதல்**; to insist on, affirm.

ம. அழுத்துக; க., தெ. அத்து (அமிழ்த்து).

[அமிழ் → ஆழ் → (அழு) → அழுந்து (த.வி.) → அழுத்து (பி.வி.).]

அழுத்து *aḻuttu*, பெ. (n.) 1. **அழுத்துகை**; pressure. ஓர் அழுத்து அழுத்தினான். 2. பதிவு; imprint, impression. "நகநுதி யழுத்தைக் காட்டி" (திருப்பு. 452).

[அழுந்து → அழுத்து (தொ.பெ.).]

அழுதகண் சிந்தியமூக்கு *aḻuda-kaṇ-śindiya-mūkku*, பெ. (n.) **என்றும் துயரத்தில் அழுது கொண்டே யிருத்தல்**; to keep on weeping through distress (சா.அக.).

அழுதகண்ணீரும் சிந்திய மூக்குமாய் பார்க்க; see *aḻuda-kaṇ-ṇīrum-śindiya-mūkkum-āy*.

அழுதகண்ணீரும் சிந்தியமூக்குமாய் *aḻuda-kaṇ-ṇīrum-śindiya-mūkkum-āy*, கு.வி.எ. (adv.) **அழுது கண்ணீர் வடித்துக்கொண்டும் மூக்குச் சிந்திக்கொண்டும்**; in a lachrymose state of falling tears and running nose. அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாய் வந்து நின்றான்.

[அழு → அழுத (இ.கா.பெ.எ.). கண் + நீர் + உம் (கூட்டிணைப்புச்சொல்) — கண்ணீரும். சிந்து → சிந்திய (இ.கா.பெ.எ.). மூக்கு + உம் (கூட்டிணைப்புச் சொல்) — மூக்கும். ஆ → ஆய் (இ.கா.வி.எ. இங்குக் கு.வி.எ. ஈறு).]

சிறு பிள்ளைகளும் பெண்டிரும் வருந்தி யழும்போது இந் நிலைமை யடைவது இயல்பு.

அழுதுகும்பிட்டு *aḻudu-kumbiṭṭu*, வி.எ. (adv.) அழுதுதொழுது பார்க்க; see *aḻudu-toḻudu*.

[அழு → அழுது (இ.கா.வி.எ.) + கும்பிட்டு (இ.கா.வி.எ.).]

அழுதுதொலை-த்தல் *aḻudu-tolai-*, 4 செ. குன்றாவி. (v.t.) 1. **அழுது மறந்துவிடுதல்**; to lament over and forget. அவனை முன்னமே அழுதுதொலைத்துவிட்டேன். 2. வருத்தத்

துடன் செலவிடுதல்; to spend grudgingly. அவனுக்கு ஆயிரம் உருபா அழுது தொலைத் தேன்.

அழுதுதொழுது *aḻudu-toḻudu*, வி.எ. (adv.) **அழுதும் கெஞ்சியும்**; by crying and cringing. அழுதுதொழுது எப்படியோ முதலாளியிடம் பணம் வாங்கிவிட்டான்.

[அழு → அழுது (இ.கா.வி.எ.). தொழு → தொழுது (இ.கா.வி.எ.). 'அழுதுதொழுது' பொருள் மிகுக்க வந்த மரபிணைமொழி.]

அழுதுவழி-தல் *aḻudu-vaḻi-*, 2 செ.கு.வி. (v.i.) **பொலிவின்றி யிருத்தல்**; to be dull, dispirited, gloomy.

அழுது கண்ணீர் வழிகின்ற நிலையில் ஒருவரின் அழகு கெட்டிருப்பது இயல்பே.

அழுந்த *aḻunda*, வி.எ. (adv.) **இறுக**; tightly, closely. "அவரை யழுந்தப் பற்றி" (புறநா. 77 : 10-11).

[அழுந்து → அழுந்த (நி.கா.வி.எ.). 'அ' நி.கா.வி.எ. ஈறு.]

அழுந்தல் *aḻundal*, தொ.பெ. (vbl.n.) 1. **பதிதல்**; impression, being inlaid. 2. **நாடி விழுதல்**; depression as in pulsation indicating collapse or death. நாடியழுந்தல் (சா.அக.). 3. **வருந்துதல்**; suffering from disease, pain, etc. (சா.அக.).

[அழுந்து → அழுந்தல் (தொ.பெ.).]

அழுந்து-தல் *aḻundu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **அமுங்குதல்**; to become pressed down, to press tight. நிலம் அழுந்திவிட்டது. 2. **முத்திரை யடிபடுதல்**; to be impressed, imprinted. 3. **மனத்திற் பதிதல்**; to be impressed on the mind. 4. **அமிழ்தல்**; to sink, to be immersed, drowned. "அழுந்தே னரகத்து" (திருக்கோ. 166). 5. **மணி பதிதல்**; to be inlaid, encased. 6. **உறுதியாதல்**; to become firm, close, compact. தளம் அழுந்தியிருக்கிறது. 7. **உறுதி யாகப் பற்றுதல்**; to persist, become deep-rooted. எலும்பிற் சுரம் அழுந்திவிட்டது. 8. **பட்டறிவு பெறுதல்**; to gain experience. உலகநடப்பில் அழுந்தினவன். 9. **வருந்துதல்** (நாநார்த்த.); to suffer.

ம. அழுந்துக

[அமிழ் → ஆழ் → (அழு) → அழுந்து.]

அழுந்து *aḻundu*, பெ. (n.) 1. **நீராழம்** (திவா.); depth of water. 2. **வெற்றிலை நடும் வரப்பு** (வின்.); ridge on which betel vine is planted.

அழுந்து-தல் பார்க்க; see *aḻundu-*.

அழுந்துபடு-தல் *aḻundu-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **தொன்றுதொட்டு வருதல்**; to be long-standing, to have existed for generations. "அழுந்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையும்" (மதுரைக். 342).

[அழுந்து (முத.தொ.பெ.). 'படு' து.வி.]

அழுப்பு *aḻuppu*, பெ. (n.) **சோறு** (சது.); boiled rice.

[அழும்புதல் = செறியக் கலத்தல். ஒருகா. அழும்பு → அழுப்பு = உடம்பொடு இரண்டறக் கலக்கும் அல்லது உடம்பாக மாறும் உணவு, சோறு. "உண்டி முதற்றே யுணவின் பிண்டம்" (புறநா. 18 : 20). ஒ.நோ: அரும்பு = அரிசி.]

அழுப்புகம் *aḻuppugam*, பெ. (n.) **தேவருலகம்** (சிந்தா. நி. 332); celestial world, heaven.

[ஒருகா. அழுப்பு + அகம் – அழுப்பகம் → அழுப்புகம். ஒ.நோ: சோறு = வீடுபேறு, வீட்டின்பம் (முத்தி). "பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்" (திருவாச. 15:7).]

அழுபிள்ளை *aḻu-piḷḷai*, பெ. (n.) **ஓயாமல் அல்லது அடிக்கடி அழுதுகொண்டிருக்கும் கைப் பிள்ளை**; weeping child-in-arm.

['அழுபிள்ளை' வினைத்தொகை.]

அழுபிள்ளைக்காரி *aḻu-piḷḷai-k-kāri*, பெ. (n.) **ஓயாமல் அல்லது அடிக்கடி அழுதுகொண் டிருக்கும் கைப்பிள்ளையின் தாய்**; the mother of a weeping child-in-arm.

[அழு+பிள்ளை+காரி. 'காரி' பெ.பா. ஈறு.]

அழுபிள்ளை பார்க்க; see *aḻu-piḷḷai*.

அழும்பு-தல் *aḻumbu-*, 5 செ.கு.வி. (v.i.) **செறியக் கலத்தல்**; to be intimate, in communion. "அமர வழும்பத் துழாவி யென்னாவி" (திவ். திருவாய். 1 . 7 : 9).

[அள்ளுதல் = நெருங்குதல், செறிதல். அள் (அழு) → அழும்பு.]

அழுமூஞ்சி *aḻu-mūñji*, பெ. (n.) 1. **என்றும் அழுதுகொண்டிருப்ப-வன்-வள்**; a lachrymose person. 2. **பொலிவற்ற முகமுள்ள-வன்-வள்**; a melancholy or dolorous looking person.

க. அளுகுளி

['அழுமூஞ்சி' வினைத்தொகை.]

மூஞ்சி பார்க்க; see *mūñji*.

அழுவணங்காட்டு-தல் *aḻu-vaṇaṅ-kāṭṭu-*, 5 செ. குன்றாவி. (v.t.) **ஒரு பிள்ளை அழும்போது இன்னொரு பிள்ளை அதைப்போல் அழுது பழிப்புக் காட்டுதல்**; to mock a weeping child by mimicking it. இந்தப் பிள்ளை அந்தப் பிள்ளையை அழுவணங் காட்டுகிறது (உ.வ.).

அழுவம்[1] *aḻuvam*, பெ. (n.) *1.* **ஆழம்**; depth. "கடல்மண் டழுவத்து" (மலைபடு. 528). 2. **குழி**; pit. "ஆரிட ரழுவத்து" (மலைபடு. 368). 3. **கடல்** (பிங்.); deep sea. 4. பரப்பு; expanse. "தெண்கட லழுவத்து" (கலித். 121 : 2). 5. பெருமை (திவா.); greatness, excellence. 6. **மிகுதி**; abundance, copiousness. "மறப்படை யழுவ மாரி" (சீவக. 802). 7. முரசு (பொதி. நி.); drum. 8. நடுக்கம் (பொதி. நி.); trembling, quaking, fear.

ம. அழுவம்

[ஆழ் → ஆழ்வு → ஆழ்வம் → அழுவம். கடலும் குழியும் ஆழமுள்ளவை. **கடல்** பரந்தது. **ஒ.நோ**: பரவை = கடல், பரப்பாற் பெருமையும் மிகுதியும் **உடையது**. முரசு பருமையானது, பரந்த கண்ணுடையது, கடல்போல் முழங்குவது, அதிர்வது.]

அழுவம்[2] *aḻuvam*, பெ. (n.) 1. **போர்**; battle. "வாளழுவந் தாங்கி" (பு.வெ. 8 : 23). 2. **மலையரண் (துர்க்கம்)** (திவா.); fortress. 3. **காடு**; jungle, forest. "நனந்தலை யழுவம்" (அகநா. 79 : 9.).

[அள்ளுதல் = நெருங்குதல், செறிதல். அள் → அளவு → **அழுவு** → அழுவம் = நெருங்கிச் செய்யும் போர், போர்க்குச் சிறந்த மலையரண், மலையரணுள்ள அல்லது மரமடர்ந்த காடு.]

அழுவம்[3] *aḻuvam*, பெ. (n.) 1. **நடு**; middle. "அமரழு வத்தார்" (பு.வெ. 10, பொதுவி. 3). 2. **நாடு** (சூடா.); country, district, inhabited tract.

[உள் → அள் = நடு. அள் → (அழு) → அழுவம் = குறிஞ்சிக்கும் நெய்தலுக்கும் இடைப்பட்ட மருதநிலம், சிறந்த வாழ்நிலம், வாழ்நிலம், நாடு.]

அழுவம்[4] *aḻuvam*, பெ. (n.) அப்பவகைகள் (வருக்கம்); different kinds of rice-cakes (சா. அக.).

[ஒருகா. எழு → எழுவம் → அழுவம். அப்பம் சுடப்படும்போது எழும்பும். எழுதல் = எழும்பு தல்.]

அழுவிளிப்பூசல் *aḻu-viḷi-p-pūśal*, பெ. (n.) **அழுகைப் பேரொலி**; loud lamentation. "பிறவோ ரிறந்த வழுவிளிப் பூசலும்" (மணிமே. 6 : 73).

['அழுவிளி' வினைத்தொகை. 'பூசல்' ஒலிக் குறிப்பு.]

அழுவுணி *aḻu-v-uṇi*, பெ. (n.) **அழுகிற குண முள்ள-வன்-வள்**; tearful person, one who is always crying or has the tendency to cry under the slightest pretext.

[அழு (முத. தொ. பெ.) + உண்ணி. உண் → உண்ணி. 'இ' வி. முத. ஈறு. 'உண்' து.வி.]

அழுவை *aḻuvai*, பெ. (n.) **யானை** (அக.நி.); elephant.

[வழுவை (யானை) → அழுவை.]

அழை-த்தல் *aḻai*, 4 செ.கு.வி. (v.i.) **கதறுதல்** (பிங்.); to cry out, utter a loud cry, shout. —, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **கூப்பிடுதல்**; to call, invoke, invite. "ஆதியே யடியே னாதரித் தழைத்தால்" (திருவாச. 29 : 1). 2. **பெயரிட்டுக் கூப்பிடுதல்**; to call by name. "சிரீதரா வென் றழைத்தக்கால்" (திவ். பெரியாழ். 4 . 6: 2). 3. **வரவழைத்தல்**; to summon, direct to appear or to be brought, to send for. "அரசிய லுரிமைக் கெல்லா மாங்கவ ரழைத்து" (கந்தபு. தேவ. விண்குடி. 40).

[அல் → அல → அலம்பு → அலப்பு. அல → அலறு. அல → அலங்கு → (அளங்கு) → அணங்கு. அல் → அலு → (அளு) → அழு → அழுங்கு. அழு → அழை (ஒலிக்குறிப்பு).]

ஒலி பார்க்க; see *oli*.

அழைப்பி-த்தல் *aḻai-p-pi-*, 1 பி.வி. (v. caus.) **தருவித்தல்**; to fetch, to get at, to invite through another, to import, to send for. தம் திருமணத்திற்கு அமைச்சரைத் தம் நண்பரைக் கொண்டு அழைப்பித்தார். 'பத்தடி உத்தர முள்ள மரங்களும் அழைப்பித்து' (கோயிலொ. 146).

[அழை (த.வி.) → அழைப்பி (பி.வி.). 'பி' பி.வி. ஈறு.]

அழைப்பிதழ் *aḻaipp(u)-idaḻ*, பெ. (n.) ஒரு நிகழ்ச்சிக்கு ஒருவரை வருமாறு வேண்டும்

அட்டை அல்லது தாள் (இக்.வ.); invitation card (Mod.).

[அழை → அழைப்பு (தொ.பெ.) + இதழ் (தாள் அல்லது அட்டை).]

அழைப்பு *alaippu*, பெ. (n.) 1. கூப்பிடுகை; call. "அப்போ தொழியு மழைப்பு" (திவ். இயற். நான்மு. 38). 2. வருமாறு வேண்டுகை; invitation. 3. பொருள்புணரா வோசை; meaningless sound. 'பித்து - பித்தாற் பிறந்த அழைப்பு. அழைப்பு - பொருள் புணரா வோசை' (திருக்கோ. 102, பழைய வுரை) (செ.அக.).

[அழை → அழைப்பு (தொ.பெ.).]

102ஆம் திருக்கோவைப் பாட்டில், தலைவன் கையில் வில்லின்றியே தானொரு யானை வேட்டுவனாக நடித்து யானை வினவியதையே தோழி நகையாடி, 'இப் பெரியவர் பித்து மிகுந்து நின்றார்' என்னும் பொருளில் "பித்தழையா நின்றாரிப் பெரியவரே" என்று கூறியதாகவுள்ளது. ஆகவே, தலைவன் வினா முழுவதும் பொருள்புணரா வோசையே யன்றி, அழைப்பு என்னுஞ் சொல் மட்டு மன்று. ஆதலால், 3ஆம் பொருள் கொள்ளத் தக்கதன்று.

அழைப்புச்சுருள் *alaippu-c-curul*, பெ. (n.) திருமணத்திற்கு அழைக்கும்போது, மணமக்களுக்கும் உறவினர்க்கும் தாம்பூலத்துடன் கொடுக்கும் பணமுடிப்பு (நாஞ்.); money presented along with betels by the invitees to the bride or bridegroom or relations, as a formal procedure while being invited by them to the marriage.

[அழை → அழைப்பு (தொ.பெ.) + சுருள் (முத. தொ. ஆகு.) = பணமுடிப்பு.]

அழைப்புத்தூரம் *alaippu-t-tūram*, பெ. (n.) கூப்பீடு கேட்கும் அளவான 1000 முழவிணைத் (கச) தொலைவு (இ.வ.): calling distance, 1000 yards (Loc.).

[அழைப்பு + தூரம். கூப்பிடு தொலைவு, அழைப்புத் தொலைவு என்பன தூய தமிழ்.]

அழைப்புப்பத்திரம் *alaippu-p-pattiram*, பெ. (n.) 1. அழைப்பு மடல்; letter of invitation. 2. கிறித்தவச் சவைக்குக் குருவாகும்படி அழைக்கும் ஓலை (கிறித்.); written formal call to a priest to take charge of the pastorate of a Christian church (Chr.).

[அழை → அழைப்பு (தொ.பெ.). Skt. pattra → த. பத்திரம்.]

'அழைப்போலை' என்பது தூய தமிழ்.

அழைப்புமூலிகை *alaippu-mūligai*, பெ. (n.) மாந்திரிக வசியத்திற்குப் பயன்படுத்தும் துடரி வேர், சிறியாணங்கை, அழிகண்ணி முதலியன; the drug or drugs used as magic charms such as the root of *Rhamnus circumcissus*, *Polygala glabra*, Indian weeping plant, etc. (சா.அக.).

[அழை → அழைப்பு (தொ.பெ.). மூலம் → மூலி → மூலிகை = வேர் அல்லது வேர்ச்செடி.]

அழையுறு-த்தல் *alai-y-uru-*, 4 செ.கு.வி. (v.i.) அகவுதல்; to screech, to utter sound as a peacock. "அழையுறுத்து மாமயில்க ளாலுஞ் சோலை" (தேவா. 6 . 47 : 7)

[அழை + உறு – அழையுறு (த.வி.) → அழையுறுத்து (பி.வி.). 'உறு' து.வி.]

அள்[1] *al*, பெ. (n.) 1. கூர்மை (திவா.); sharpness, keenness of edge. 2. நீர்முள்ளி (இராசவைத்.); a species of thorny shrub, *Hygrophila spinosa*. 3. வாண்முள்ளி; a species of thorny nail dye, *Barleria prionitis* (சா.அக.).

[உள் → உளி. உள் → அள்.]

அள்[2] *al*, பெ. (n.) 1. அள்ளப்படுவது (கல்.); handful, anything that can be contained within the hollow of the hand. 2. பக்கம்; side. 3. விலாவெலும்பு (தஞ்சை); rib (Tj.). 4. அள்ளு மாந்தம்; infantile bronchitis (தைலவ. தைல. 8). 5. செறிவு (திவா.); closeness, thickness. 6. பற்றிரும்பு (பிங்.); clamp, iron band to hold parts together. 7. வண்டிவில்லைத் தாங்குங் கட்டை (இ.வ.); block of wood connecting the spring with the axle (Loc.). 8. பூட்டு (பிங்.); lock, padlock. 9. வன்மை (சூடா.); strength, firmness.

[உல் → அல் → அள். அள்ளுதல் = பொருந்துதல், செறிதல். அள் → அள்ளை = பொருந்திய பக்கம். ஒ.நோ: மருவுதல் = பொருந்துதல். மரு → மருங்கு = பக்கம். அள்ளுதல் = பொருத்திப் பற்றுதல்.]

அள்[3] *al*, பெ. (n.) 1. காது (பிங்.); ear. 2. கன்னம்; cheek (சா.அக.). 3. வாய்; mouth. அள்ளூறுதல்.

[உள் → அள் → அளை = பொந்து, புற்று, வளை, குகை. அள் = அளை போன்ற காது, காதொட்டிய அல்லது குழிவிழுந்த கன்னம்.]

அள்[4] *al*, இடை. (part.) *பெண்பாலீறு*; third pers. sing. fem. ending. *அவள் வந்தனள்.* "ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்" (தொல். சொல். கிளவி. 6). "அள் ஆள் இறு மொழி பெண்பாற் படர்க்கை" (நன். 326).

ம., க., பர். அள்; தெ., குட., பட. ஆலு (பெண்); கோண். ஆர் (பெண்).

[ஆள் = பெண். ஆள் → அள்.]

அள்வழுப்பு *al-valuppu*, பெ. (n.) *காது குறும்பி*; ear-wax or cerumen.

[அள் + வழுப்பு. வழு → வழுப்பு = வழு வழுப்பானது.]

அள்ளத்தி *allatti*, பெ. (n.) *அள்ளாத்தி* பார்க்க; see *allātti.*

அள்ளத்துள்ளப்போ-தல் *alla-t-tulla-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) *கழிச்சல், துன்ப நேர்ச்சி, கொள்ளை, போர் முதலியவற்றால் திடுமென இறந்துபோதல்*; sudden death due to cholera, accident, robbery, war and other unnatural causes (சா.அக.).

['அள்ளத்துள்ள' (துள்ளத்துடிக்க) ஒரு மரபிணைமொழி. போதல் = சாதல்.]

அள்ளநோய் *alla-nōy*, பெ. (n.) *அள்ளுநோய்; குழந்தைகட்கு ஏற்படும் ஓர் உயிர்ப்பு (சுவாச) நோய்*; a disease in children arising from defects in nursing them such as over-feeding, etc., infantile bronchitis, *Broncho pneumonia* (சா.அக.).

[அள் → அள்ளம் + நோய். ஒருகா. அள்ளு நோய் → அள்ளநோய்.]

அள்ளல் *allal*, பெ. (n.) 1. *நெருக்கம்*; crowdedness, closeness. "அள்ளற் பயலை யூர்கின்றது" (திவ். இயற். திருவிருத். 13). 2. *சேறு* (திவா.); mud, mire. 3. *எழுவகை அளறுகளுள் (நரகங்களுள்) ஒன்று* (பிங்.); one of the seven hells.

க. அள்

[அள்ளுதல் = செறிதல். அள் → அள்ளல் = செறிவு. சேறு, நெருப்பு முதலியன செறிந்த இடம்.]

அள்ளாடித்தள்ளாடி *alladi-t-talladi*, வி.எ. (adv.) *தளர்ந்த நடையாய், தட்டுத்தடுமாறி*; moving with faltering steps, as a small child or an aged person, with an unsteady gait swaying to and fro. *பாட்டனார் அள்ளாடித் தள்ளாடி வீடுவந்து சேர்ந்தார்.*

க. அள்ளாடு; தெ. அல்லாடு, அல்லலாடு.

[அள்ளாடு → அள்ளாடி (இ.கா.வி.எ.). தள்ளாடு → தள்ளாடி (இ. கா. வி. எ.). 'அள்ளாடித் தள்ளாடி' பொருள் மிகுக்கும் எதுகை மரபிணைமொழி.]

அள்ளாடு-தல் *allādu-*, 5 செ.கு.வி. (v.i.) *செறிதல்*; to be close. "அள்ளாடிய கவசத்தவிர் மணியற்றன" (கம்பரா. யுத்த. முதற்போ. 177).

[அள் = செறிவு. 'ஆடு' து.வி.]

அள்ளாத்தி *allātti*, பெ. (n.) *கண்பெருத்த மீன் வகை*; big-eyed herring, *Elops saurus* (சா.அக.).

அள்ளாயமானியம் *allāya-māniyam*, பெ. (n.) *அள்ளுரிமை (அள்ளு சுதந்திரம்)* (I.M.P. Sm. 91); right to receive a handful of the grain sold, as perquisite.

[அள் (அள்ளும்) + ஆயம் (வருவாய்) – அள்ளாயம் (வினைத்தொகை). மானம் → மானி → மானியம் = ஊழியருக்கு அரசு அளிக்கும் உரிமை வருமானம் அல்லது உரிமை நிலம். 'அள்ளாய மானியம்' இருபெயரொட்டு.]

அள்ளி *alli*, பெ. (n.) *வெண்ணெய்* (இராச வைத்.); butter.

[அள்ளுதல் = செறிதல். அள் → அள்ளி = செறிந்தது, சேறுபோன்றது. 'இ' வி.முத. ஈறு.]

அள்ளிக்குத்து-தல் *alli-k-kuttu-*, 5 செ.குன்றா வி. (v.t.) 1. *செடி முதலியவற்றின்மேல் நீர் தெளித்தல்* (யாழ்ப்.); to sprinkle water on plants, etc. (J.). 2. *கஞ்சியுணவைச் சிறுகக் கொடுத்தல்* (யாழ்ப்.); to give liquid food in small quantities (J.).

[அள் → அள்ளி (இ.கா.வி.எ.). குத்துதல் = தெளித்தல், தெளித்தாற்போற் சிறிதாகக் கொடுத்தல்.]

அள்ளிக்கொட்டு-தல் *alli-k-kottu-*, 5 செ.கு.வி. (v.i.) *உடம்பு முழுதும் பரவுதல்*; to spread over the whole body, as small-pox. *அம்மை யள்ளிக்கொட்டி யிருக்கிறது.* —, 5 செ. குன்றாவி. (v.t.) 1. *மிகு பொருள் தேடுதல்*; to acquire wealth in unlimited measure. *அவன் வணிகஞ் செய்து பணத்தை அள்ளிக் கொட்டுகிறான்.* 2. *தாராளமாகக் கொடுத்*

அறுகு

உப்பறுகு

ஆற்றறுகு



அரிசிப்புல்

கூந்தலறுகு

கொடியறுகு

சிற்றறுகு

தல்; to give liberally. செண்டத்தூர் ஐயாத் துரை முதலியார் ஏழைகட்குப் பணத்தை அள்ளிக்கொட்டினார்.

[அள் → அள்ளி (இ. கா. வி. எ.). கொட்டு தல் = கொட்டுதல்போல் ஏராளமாகப் போடு தல், தேடுதல், கொடுத்தல்.]

அள்ளிக்கொண்டுபோ-தல் *aḷḷi-k-koṇḍu-pō-*, 8 செ.கு.வி. (v.i.) **நீர்க்கால் வேகமா யோடுதல்**; to run swiftly, as a water-course. —, (8) செ. குன்றாவி. (v.t.) 1. **மிகுதியாக வாரிக் கொண்டு போதல்**; to sweep away, as a tornado. சூறாவளி அள்ளிக்கொண்டு போகிறது. 2. **நோய் கடுமையாகக் கொள்ளை கொள்ளுதல்**; to cause havoc in a severe epidemic form. அந்தவூரில் நச்சுக் கழிச்சல் (பேதி) அள்ளிக்கொண்டு போகிறது.

[அள் → அள்ளி (இ. கா. வி. எ.) + கொள் (தற்பொருட்டுத் து. வி.) → கொண்டு (இ. கா. வி. எ.) + போதல் = செல்லுதல், இயங்குதல், நிகழ்தல்.]

அள்ளிச்செருகு-தல் *aḷḷi-c-cerugu-*, 5 செ. குன்றாவி. (v.t.) **சிற்ப இலக்கணப்படி அரசர், அரசியர் கொண்டைக் கூந்தலை மொத்தமாகக் கையால் வாரியெடுத்து நெகிழ்ச்சியாகச் செருகுதல்**; to gather by the hands the long flowing tresses of hair, of a king or queen, and tie them up in a loose knot. 'தலையி லுள்ள கேசத்தை அள்ளிச்செருகியும்' (சி.செ. பக். 74).

[அள் → அள்ளி (இ. கா. வி. எ.). சொருகு → செருகு.]

அள்ளித்துள்ளு-தல் *aḷḷi-t-tuḷḷ(u)-*, 5 செ.கு.வி. (v.i.) **மிகச் செருக்குதல்**; to be overbearing, to give oneself airs. 'அள்ளித்துள்ளி அரிவாண் மணையில் விழாதே' (பழ.).

[அள் → அள்ளி (இ. கா. வி. எ.). துள் → துள்ளு. துள்ளுதல் = குதித்தல், செருக்குதல்.]

அள்ளிமுடி-த்தல் *aḷḷi-muḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **அரசர் அரசியர் கொண்டைக் கூந்தலை மொத்தமாகக் கையால் வாரி யெடுத்து முடிச்சிடுதல்**; to gather and tie into a knot, as the flowing tressess of hair of a king or queen. 'தலையிலுள்ள கேசத்தை அள்ளிச் செருகியும் முடித்தும்' (சி.செ.பக். 74). 2. **கூந்தலை முடிக்கும் பொதுவகைகளுள் ஒன்று**; a general method of gathering and tying into a knot, as the flowing tressess of hair.

[அள் → அள்ளி (இ.கா.வி.எ.) + முடி.]

அள்ளியிறை-த்தல் *aḷḷi-y-iṟai-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **கையால் முகந்து எறிதல்**; to take something in the hollow of the hands and then scatter it. கோழிகட்குத் தீனியை அள்ளி யிறைத்தான். 2. **அளவிற்கு மிஞ்சிச் செல விடுதல்**; to spend extravagantly, squander.

[அள் → அள்ளி (இ.கா.வி.எ.). இறைத்தல் = வீசித் தெளித்தல்.]

அள்ளிருள் *aḷ-ḷ-iruḷ*, பெ. (n.) **செறிந்த இருட்டு**; thick darkness.

[அள் + இருள் (வினைத்தொகை). இர் → இருள்.]

அள்ளிவிடுதல் *aḷḷi-viḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) **மிகக் கொடுத்தல்**; to give liberally.

[அள் → அள்ளி (இ.கா.வி.எ.). விடுதல் = நீக்குதல், போக்குதல், கொடுத்தல்.]

அள்ளு-தல் *aḷḷu-*, 5 செ.கு.வி. (v.i.) **செறிதல்**; to be dense, thickly interwoven. "அள்ளிலை யணிந்த வைவேல்" (சீவக. 615). —, 5 செ. குன்றாவி. (v.t.) 1. **கையால் முகத்தல்**; to take, collect or gather in the hollow of the hand or hands. "அள்ளிக் கொளலாய்" (நள. சுயம். 98). 2. **வாரிக்கொண்டு போதல்**; to sweep away, carry off in large quantities or numbers. "அள்ளிக் கொள்வற்றே பசப்பு" (குறள், 1187). 3. **எற்றுதல், எறிதல்** (பிங்.); to throw up. 4. **நுகர்தல்**; to enjoy. "அள்ளுற வளிந்த காமம்" (சீவக. 1387).

ம. அள்ளு

"அள்ளுற வளிந்த" என்னும் சிந்தாமணித் தொடருக்கு, 'நுகருந்தன்மை யுறும்படி பழுத்த' என்று நச்சினார்க்கினியர் உரைத் திருப்பது அத்துணைப் பொருத்தமாய்த் தெரியவில்லை. ஒருகால், 'நன்றாகப் பழுத்த அல்லது முற்றக் கனிந்த' என்பது பொருளா யிருக்கலாம்.

அள்ளு[1] *aḷḷu*, பெ. (n.) 1. **விலாவெலும்பு** (தஞ்சை); rib (Tj.). 2. **அளவுகூலியாக அல்லது உரிமையாகக் கையால் அள்ளிக் கொள்ளும் கூலம் அல்லது தவசம் (தானியம்)** (C.G.); handful of grain given to or claimed by a labourer, as wages or perquisite, for

measuring grains. 3. பற்றிரும்பு (பிங்.); clamp, iron band to hold parts together. 4. வண்டிவில்லைத் தாங்குங் கட்டை (இ.வ.); block of wood connecting the spring with the axle (Loc.). 5. காது (பிங்.); ear.

[அள் → அள்ளு (முத. தொ. பெ.).]

அள்ளு[2] *allu*, பெ. (n.) 1. அள்ளு நோய், குழந்தைகட்கு ஏற்படும் ஓர் உயிர்ப்பு (சுவாச) நோய்; a disease in children arising from defects in nursing them such as over-feeding, etc., infantile bronchitis, *Broncho-pneumonia*. 2. வலி; cramp (சா.அக.).

அள்ளுமாந்தம் பார்க்க; see *allu-mandam*.

அள்ளுக்கட்டு-தல் *allu-k-kattu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. பெட்டி முதலியவற்றை இரும்புத் தகட்டால் இறுக்குதல்; to fasten with clamps or plates of iron, bind together with wire (W.). 2. வலுப்படுத்துதல்; to strengthen, confirm, encourage by promises (W.).

[அள் → அள்ளு + கட்டு.]

கட்டு பார்க்க; see *kattu*.

அள்ளுக்காசு *allu-k-kāšu*, பெ. (n.) சில்லறை விற்பனையாளரிடமிருந்து தண்டும் பணம்; market dues collected from retail sellers.

[அள் → அள்ளு (முத. தொ. பெ.).]

காசு பார்க்க; see *kāšu*.

அள்ளுகொண்டை *allu-kondai*, பெ. (n.) பெண்டிர் மயிர்முடிச்சுவகை; coil of women's hair tied up in a special way (W.).

['அள்ளுகொண்டை' வினைத்தொகை. அள் → அள்ளு. கொள் → கொண்டை. கொள்ளுதல் = திரளுதல்.]

கொண்டை பார்க்க; see *kondai*.

அள்ளுகொள்ளை *allu-kollai*, பெ. (n.) பெருங் கொள்ளை; great plunder, pillage, dacoity.

['அள்ளுகொள்ளை' வினைத்தொகை. அள் → அள்ளு. கொள் → கொள்ளை. கொள்ளுதல் = கவர்தல்.]

அள்ளுச்சீடை *allu-c-cidai*, பெ. (n.) சிறு சீடை வகை (இ.வ.); a small kind of *šidai* cake.

[அள்ளு + சீடை. அள் → அள்ளு = அள்ளக் கூடிய அளவு, சிறுமை.]

சீடை பார்க்க; see *šidai*.

அள்ளுமாந்தம் *allu-mandam*, பெ. (n.) குழந்தைகட்கு நாமுள் தீங்கினால் (தோஷத்தினால்) விலாப்பக்கம் இரண்டும் உயர வெழும்பித் துன்பமும் வலியுமுண்டாக்கும் ஒரு நோய். இதைத் தெற்கத்திக் கணை (கணம்) என்பதுமுண்டு; a disease in children attended with fits affecting the intercostal muscles, caused by eruptions on the tongue due to congenital causes (சா.அக.) — குழந்தைகட்கு உண்டாகும் மாந்தவகை; infantile bronchitis, *Broncho-pneumonia*, convulsion (செ.அக.).

[அள் (விலா) → அள்ளு. மந்தம் → மாந்தம்.]

அள்ளுரல் *allural*, பெ. (n.) அரணை அல்லது காட்டுக்கரணை; wild elephant yam, *Dracontium polyphyllum* (சா.அக.).

அள்ளூறு-தல் *allūru-*, 5 செ.கு.வி. (v.i.) வாயூறுதல்; to water in the mouth. "அமுதனென் றள்ளூறித் தித்திக்க" (திருவாச. 7 : 3).

[அள் = வாய், எச்சில். உள் → உறு → ஊறு.]

அள்ளெடு[1]**-த்தல்** *al-l-edu-*, 4 செ.கு.வி. (v.i.) கைப்பிடியளவு வாருதல்; to take handfuls. 'சந்தைக் கடையில் அள்ளெடுக்கிறதற்குப் போனார்களோ என்னமோ' (தாசில்தார் நா. பக். 11).

ம. அள்ளுக

[அள் (முத. தொ. ஆகு.) + எடு.]

அள்ளெடு[2]**-த்தல்** *al-l-edu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. நோயினால் விலா எழும்புதல்; an involuntary rising of the intercostal muscles from a disease. 2. இறக்குங்கால் மூச்சுவிட முடியாமல் விலாப்பக்கத்தைத் தூக்கிவிடுதலான சாவுக் குறி; respiration due to the action of the intercostal and other thoracic muscles; Thoracic respiration alias T. breathing, observed in persons gasping for breath just before death and considered a symptom of death (சா.அக.).

[அள் = விலா. எடுத்தல் = எழும்புதல்.]

நோயினால் விலாவெழும்பும் அள்ளெடுத்தலை, 'அள்ளெடுக்குதல்' என்று சா.அக. குறிக்கின்றது. அள்ளெடுத்தல் என்றாலே போதும்.

அள்ளெடுக்கிறவன் *al-l-edukkiravan*, பெ. (n.) ஒவ்வோர் அளவிலும் ஒவ்வொரு பிடி பெற்றுக்

கொண்டு நெல் அளப்பவன் (W.G.); a labourer who measures paddy and is paid for it by a handful of paddy from each unit measured.

[அள் (முத. தொ. ஆகு.) + எடுக்கிறவன் (வினையா. பெ.). எடு → எடுக்கிற (நி. கா. பெ.எ.) + அவன் (ஆ. பா. ஈறு) — எடுக்கிறவன்.]

அள்ளெடுக்குமாந்தம் *aḷ-ḷ-edukku(m)-mandam*, பெ. (n.) **அள்ளுமாந்தம்** பார்க்க; see *aḷḷu-mandam*.

[அள் (விலா) + எடுக்கும் + மாந்தம். எடு → எடுக்கும்.]

அள்ளெலும்பு *aḷ-ḷ-elumbu*, பெ. (n.) 1. **கன்னப் பொறி யெலும்பு, அதாவது காதண்டை யிருக்கும் எலும்பு**; a bone on the side of the head between the forehead and the ear, *Temporal bone* (சா.அக.). 2. **விலாவெலும்பு**; rib.

[அள் (விலா) + எலும்பு. எல் → எல்பு → எலுபு → எலும்பு.]

அள்ளை[1] *aḷḷai*, பெ. (n.) **விலாப்புறம்**; side of the body.

க., து. அள்ளெ; கோத. அள்.

[அள் → அள்ளை.]

அள்ளை[2] *aḷḷai*, பெ. (n.) **பேய்** (பிங்.); devil, demon.

[**ஒருகா.** அல் (இருள்) → அல்லை → அள்ளை.]

அள்ளைப்புறம் *aḷḷai-p-puṟam*, பெ. (n.) 1. **விலாப்புறம்**; side of the body. 2. **வீட்டின் மருங்குப் பகுதி** (கோவை); the side portion of a house (Cm.).

அள்ளைப்பை *aḷḷai-p-pai*, பெ. (n.) **சட்டையின் பக்கப்பை**; side-pocket.

[அள் → அள்ளை = பக்கம்.]

பை பார்க்க; see *pai*.

அள்ளைமறை *aḷḷai-maṟai*, பெ. (n.) **பக்கங்களில் வெள்ளை நிறங் கலந்த காளை** (இ.வ.); bull with patches of white on its sides (Loc.).

[அள் (பக்கம்) → அள்ளை. மல் → மர் → மரு (மறு) → மரை (மறை).]

மரை (மறை) என்னுஞ் சொல், முதற்கண் கரும்புள்ளியையே குறித்துப் பின்னர்ச் செம்புள்ளி வெண்புள்ளிகளையுங் குறிக்கும் பொதுப்பெயராக மாறியதாகத் தெரிகின்றது.

அள-த்தல் *aḷa-*, 3 செ.கு.வி. (v.i.) 1. **கலத்தல்**; to mingle, blend. 2. **அளவளாவுதல்**; to talk together, to converse. "என்முக மளக்குங் கால்" (கல்லா. 19 : 36). 3. **சிறு பொய்யுரை கூறுதல்**; to tell venial lies. —, 3 செ.குன்றாவி. (v.t.) 1. **அளவிடுதல்**; to measure, fathom. "அடியளந்தான்" (குறள், 610). 2. **எட்டுதல்**; to extend, to reach. "மௌலி யண்ட முகட்டினை யளப்ப" (கூர்மபு. தக்கன்வே. 6). 3. **அளவை (பிரமாணம்) கொண்டறிதல்**; to test by the logical modes of proof. "குறைவிலா அளவி னாலுங் கூறொணா தாகி நின்ற இறைவனார்" (சி.சி. சுபக். அவைய. 4). 4. **வரையறுத்தல்**; to limit, define, determine the bounds of. "அவையளந் தறியினு மளத்தற் கரியை" (புறநா. 20 : 5). 5. **கருதுதல்**; to consider. "ஊறளந் தவர்வயின்" (கலித். 17 : 3). 6. **வீண்பேச்சுப் பேசுதல்**; to gossip. வாய்க்கு வந்தபடி அளக்கிறான், விடியவிடிய வீண்கதை யளக்கிறான். 7. **அளந்து கொடுத்தல், கொடுத்தல்**; to give, render, offer. "கொங்கலர்தார் மன்னருங் கூட்டளப்ப" (பு.வெ. 8 : 29).

ம. அளக்குக; க., பட. அளெ; து., குட. அள; துட. அள்; கோத. அள்வ்; கூ. டாச; குவி லாசலி.

[அள்ளுதல் = பொருந்துதல். அள் → அள. அளத்தல் = **ஒன்று இன்னொன்றொடு** பொருந்த அளத்தல் **அல்லது** அறிதல்.]

அளக்கர்[1] *aḷakkar*, பெ. (n.) 1. **உப்பளம்** (பிங்.); salt-pans. 2. **கடல்**; sea, ocean. "அங்கண்மா ஞாலஞ் சூழு மளக்கர்" (கந்தபு. ஆற்று. 36).

ம. அளக்கர்

[அளம் = உப்பு, உப்பளம், நெய்தல் நிலம், உவர்நீர். அளம் → அளக்கு → அளக்கர்.]

அளக்கர்[2] *aḷakkar*, பெ. (n.) 1. **சேறு** (பிங்.); mud, mire. 2. **ஞாலம்** (பூமி) (பிங்.); Earth. 3. **ஆரல்** (கார்த்திகை) (பிங்.); the 3rd asterism. 4. **நீள்வழி** (பிங்.); long road.

[அள்ளுதல் = செறிதல். அளத்தல் = கலத்தல். **ஒ.நோ:** செறுத்தல் = செறிதல். செறு → சேறு.]

"நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலக மாதலின்"
(தொல். பொருள். மர. 89).

ஆர்தல் = பொருந்துதல். ஆர் → ஆரல்= அறு மீன். அளத்தல் = எட்டுதல்.]

அளக்கரர் *aḷakkarar*, பெ. (n.) **உப்பளவர்**; workers in the salt-pans (சா.அக.).

[அளக்கர் → அளக்கரர்.]

அளக்கர் பார்க்க; see *aḷakkar*.

அளக்காய் *aḷa-k-kāy*, பெ. (n.) **வெள்ளெருக்கு** (சங்.அக.); white madar.

[ஒருகா. அளம் + காய் – அளக்காய் (உப்புப் போல் வெண்ணிறமான எருக்கங்காய்).]

அளக்கூறுபாடு *aḷa-k-kūṟupāḍu*, பெ. (n.) **அளவின் பிரிவு**; quantitative analysis (சா. அக.).

[அளம் (அளவு) + கூறுபாடு (தொ.பெ.). 'படு' து.வி. படு → பாடு (முத.தி.தொ.பெ.).]

அளகத்தி *aḷagatti*, பெ. (n.) **கூந்தலுடையவள்**; woman having a thick tuft of hair. "சீவிக் கோதிமு டித்தள கத்திகள்" (திருப்பு. 451).

[அளகம் + அத்து (சாரியை) + இ (பெ.பா. ஈறு).]

அளகசூடம் *aḷaga-šūḍam*, பெ. (n.) **ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் குழந்தைகட்கும் பொதுவாக உரிய எளிய தலைக்கோலவகை**; a simple mode of dressing the hair on the head, common to men, women and children. 'குழல், கேசத்தால் அமைக்கப்படும் ஒருவகை நெற்றி யலங்காரமே என்றாலும், இது மகுட வகை யாகவே படிமத்துறையிற் கொள்ளப்பட்டிருக்கிறது. இஃது ஆண்களுக்கும் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் உரிய எளிய தலைக்கோலமாகும். இதில் நெற்றி விளிம்பில் வளர்ந்திருக்கும் முடி கருவண்டினைப் போன்று சுருள்சுருளாக அமைக்கப்படும். இச் சுருள் முகத்தின் வலப்புறத்தில் அமையும் போது இடமாகவும், முகத்தின் இடப் புறத்தில் அமையும்போது வலமாகவும் சுழிந்து அமையும். முகத் தாமரையை வண்டுகள் சூழ்ந்த தோற்றத்தைக் கவிஞன் போன்றே சிற்பியும் கலைநயத்தோடு இயற்றுவதை இங்குக் காண்க. இதற்குச் சிரச்சூளம் என்ற பெயருமுண்டு' (சி.செ. பக். 87).

[அலகு = வளைவு. அலகு → அளகு → அளகம் = நெற்றி மயிர்ச்சுருள். அளகம் > Skt. alaka. சூடு → சூடம்.]

அளகபந்தி *aḷaga-pandi*, பெ. (n.) **கூந்தலி னொழுங்கு**; orderly arrangement of a woman's hair. "நல்லா ரளகபந்தி யெனவிருண்ட" (இரகு. திக்கு. 12).

[அளகம் + பந்தி. பத்தி = வரிசை, ஒழுங்கு. பத்தி → பந்தி. பந்தி > **Skt.** paṅkti.]

அளகபாரம் *aḷaga-pāram*, பெ. (n.) **கூந்தற் றொகுதி**; mass of a woman's hair. "அளக பாரம் அலைந்து குலைந்திட" (திருப்பு. 78).

[அளகம் + **Skt.** bhāra > த. பாரம்.]

த. பொறு > **Teut.** *ber*, **L.** *fer*, **Gk.** *pher*, **Skt.** bhara.

அளகபேதம் *aḷagabēdam*, பெ. (n.) **அதிவிடயம்** (சங்.அக.); atis, *Aconitum heterophylum*.

மறுவ. அழகவேதம் (மலை.)

அளகம்[1] *aḷagam*, பெ. (n.) 1. **மயிர்க்குழற்சி** (பிங்.); curl. 2. **நுதலைச் சார்ந்த முன்னுச்சி மயிர்**; curls of hair on the forehead. "அலமரு திருமுகத் தளகத் தப்பிய" (பெருங். உஞ்சைக். 33 : 119). 3. **பெண்மயிர்** (பிங்.); woman's hair. 4. **காட்டகத்தி**; unifoliate caper, *Cadaba indica* (சா.அக.).

ம. அலகம்

[அலம் = வளைவு, வட்டம், சுழற்சி. அலம் வரல் → அலமரல் = சுழற்சி. அலம் → அலவு → அலகு → அலகம் → அளகம்.]

அளகம் → **Skt.** alaka. அகத்திப்பூ கொடு வாள்போல் வளைந்தது.

அளகம்[2] *aḷagam*, பெ. (n.) **பன்றிமுள்** (திவா.); porcupine's quill.

[அள் = கூர்மை. அள் → அள்கு → அளகு → அளகம்.]

அளகம்[3] *aḷagam*, பெ. (n.) 1. **நீர்** (பிங்.); water. 2. **மழைநீர்** (பச்.மூ.); rain-water.

ம. அலகம்; க. அளக; பட. அள்ள; **Skt.** hala.

[அளத்தல் = கலத்தல். அள → அளகு → அளகம்.]

"செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"
(குறுந். 40).

அளகம்⁴ *alagam*, பெ. (n.) *அளக்காய்* (சங். அக.) — வெள்ளெருக்கு; a milky shrub called white madar, *Calotropis gigantea* (albiflora) (சா.அக.).

அளக்காய் பார்க்க; see *ala-k-kāy*.

அளகமம் *alagamam*, பெ. (n.) புல்லுருவி; parasite plant (சா.அக.).

[அளத்தல் = கலத்தல். **ஒருகா.** அளவு → அளகு → அளகம் → அளகமம்.]

அளகவல்லி *alaga-valli*, பெ. (n.) *மயிர்மாட்டி*; hair hook, a chain like ornament worn in the ear and hooked to the hair. "இருபாலு மளக வல்லி யருகிலங்க" (சூளா. சுயம். 195).

[அளகம் = பெண்டிர் கூந்தல். வல் → வல்லி = கொடி.]

அளகளப்பு *alagalappu*, பெ. (n.) *அளவளப்பு* பார்க்க; see *alavalappu*.

அளகன் *alagaṉ*, பெ. (n.) **ஒருவகைச் செயனஞ்சு** (**சோரபாடாணம்**); a kind of arsenic (சா. அக.).

அளகாபுரி *alagāpuri*, பெ. (n.) 1. *குபேரன் நகரம்*; city of Kubēra. "அந்தத் தமரஞ் சென் றுயரள காபுரி" (பாரத. மணிமான். 15.). 2. *தஞ்சாவூர்*; Thañjāvūr (கோடீச்சுரக். 54, கீழ்க்குறிப்பு).

ஒருகா. அழகாபுரி → அளகாபுரி.

புரி பார்க்க; see *puri*.

அளகு¹ *alagu*, பெ. (n.) 1. **கோட்டான், கோழி, மயில் ஆகியவற்றின் பெண்**; hen of owl, fowl and peacock.

"கோழி கூகை ஆயிரண் டல்லவை
சூழுங் காலை அளகென லமையா"
(தொல். பொருள். மர. 56).

"அப்பெயர்க் கிழமை மயிற்கு முரித்தே"
(ஷை 57).

2. **கோழிச் சேவல்**; cock. "அளகைப் பொறித்த கொடி யிளையோன்" (திருவிளை. அருச்சனை. 34).

[**ஒருகா.** அளவு → அளகு.]

திருவிளையாடற் புராணத்திற் சேவற் கொடியை அளகைக்கொடியோன் என்றது, கோழிக்கொடியோன் என்னும் பொதுப் பெயர் வழக்குப்பற்றியதாகலாம்.

அளகு² *alagu*, பெ. (n.) **ஆரல்** (**கார்த்திகை**) (பிங்.); the 3rd asterism.

அளகை *alagai*, பெ. (n.) 1. *அளகாபுரி 1* பார்க்க;see *alagāpuri* 1 (உத்தரரா. வரை. 1). 2. *அளகாபுரி 2* பார்க்க; see *alagāpuri* 2 (கோடீச்சுரக். 54).

அளகையாளி *alagai-y-āli*, பெ. (n.) **குபேரன்** (திவா.); Kubēran, ruler of Alagai.

அளத்தி *alatti*, பெ. (n.) 1. **நெய்தல்நிலப் பெண்**; woman of the marine tract. 2. **உமணர்குலப் பெண்**; woman belonging to the ancient caste of salt-makers.

[அளம் = உப்பு, உப்பளம். அளம் → அளத்தி. 'அத்து' சாரியை. 'இ' பெ.பா. ஈறு.]

அளத்தியம் *alattiyam*, பெ. (n.) 1. **சவர்க் காரம்**; fuller's earth, soap. 2. **நீலச் செய னஞ்சு** (**நீலப்பாடாணம்**); a prepared arsenic (சங்.அக.).

[அளம் = உப்பு, உவர்மண். அளம் → அளத்தியம். 'அத்து' சாரியை. 'இயம்' ஈறு.]

அளத்துநிலம் *alattu-nilam*, பெ. (n.) *அளர்நிலம்* பார்க்க; see *alar-nilam* (R.T.).

அளத்துப்பச்சை *alattu-p-paccai*, பெ. (n.) **மருக் கொழுந்துச் சக்களத்தி** (மூ.அ.); sea-blite, a plant akin to maid's love, found growing in the brackish soil or near the sea-side (சா. அக.).

[அளம் + பச்சை = உவர்நிலத்தி லுண்டாகும் பச்சைச்செடி. 'அத்து' சாரியை.]

அளத்துப்பாசிதம் *alattu-p-pāsidam*, பெ. (n.) பெருமுன்னை; dusky-blite (சா.அக.).

[அளம் + பாசிதம். 'அத்து' சாரியை. பசு → பாசம் → பாசிதம்.]

அளத்துப்புல் *alattu-p-pul*, பெ. (n.) **முயிற்றுப் புல்** (மூ.அ.); a kind of grass (செ.அக.) — maritime grass or ant-grass found growing near ant-hills, *Pommeruella cornucopia* (சா.அக.).

[அளறு + புல் – அளற்றுப்புல் → அளத்துப் புல்.]

அளத்துப்பூசனி *alattu-p-pūsaṉi*, பெ. (n.) **பெரும்பூசணி**; ash-coloured pumpkin, *Cucurbita maxima* (சா.அக.).

[அளம் + அத்து + பூசனி. அளம் = **ஒருகா.** சாம்பல் நிறம்.]

பூசணி பார்க்க; see *pūsaṇi*.

அளத்துப்பூசை *aḷattu-p-pūšai*, பெ. (n.) ***அளத்துப்பச்சை, மருக்கொழுந்துச் சக்களத்தி*** *(மலை.)*; sea-side Indian saltwort.

[ஒருகா. அளத்துப்பச்சை → அளத்துப்பூசை.]

அளத்துப்பூளை *aḷattu-p-pūḷai*, பெ. (n.) ***ஒரு வகைப் பூளைச்செடி***; species of wool-plant, *Aerua brachiatum*.

[அளம் + அத்து + பூளை. 'அத்து' சாரியை.]

அளந்தறி-தல் *aḷand(u)-aṟi-*, 2 செ.குன்றாவி. (v.t.) *1.* ***அளவிட்டு அறிதல்***; to know by measurement. *2.* ***மதித்து அறிதல்***; to know by discernment.

[அள → அளந்து (இ.கா.வி.எ.) + அறி.]

அளப்பம்[1] *aḷappam*, பெ. (n.) *1.* ***அளக்கை***; measuring (W.). *2.* ***சூழ்ச்சி, ஆம்புடை (உபாயம்)***; contrivance, stratagem. அளப்ப மறிந்தவன் (உ.வ.).

[அள → அளப்பு → அளப்பம்.]

அளப்பம்[2] *aḷappam*, பெ. (n.) ***அங்கப்பிச்சு, பித்தநாளம்***; bile-duct (சா.அக.).

அளப்பள-த்தல் *aḷapp(u)-aḷa-*, 3 செ.கு.வி. (v.i.) *1.* ***அலப்புதல்;*** to prate, chatter, gossip, repeat needlessly (W.). *2.* ***வீண்பெருமை பேசுதல்***; to boast, bluff. *3.* ***புரளி சொல்லுதல்***; to speak falsehood, to propagate false rumour. *4.* *அளப்பறி-தல் பார்க்க;* see *aḷapp(u)-aṟi-*. *5.* ***முறுமுறுத்தல்***; to complain, grumble, express dissatisfaction (செ.அக.).

[அள → அளப்பு (தொ.பெ.) + அள.]

அளப்பளத்தல் என்னும் சொல்லிற்கு முறுமுறுத்தல் என்னும் பொருள் பொருத்தமாய்த் தோன்றவில்லை.

அளப்பறி-தல் *aḷapp(u)-aṟi-*, 2 செ.குன்றாவி. (v.t.) *1.* ***ஒருவருடைய மனத்தை ஆராய்ந்தறிதல்***; to fathom, gauge, as the mind of a person. *2.* ***ஒருவருடைய உட்கருத்தை வலக்காரமாய் (தந்திரமாய்) அறிதல்;*** to discover another's designs, find out another's intentions.

[அள → அளப்பு (தொ.பெ.) + அறி.]

அளப்பன் *aḷappaṉ*, பெ. (n.) ***வீணாகப் பேசுவோன்***; prater, chatterer, babbler (W.).

[அள → அளப்பு (தொ.பெ.) → அளப்பன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அளப்பு *aḷappu*, பெ. (n.) *1.* ***அளக்கை***; measuring. "அளப்பருந் தன்மைய ஊழியங் கங்குல்" (திவ். இயற். திருவிருத். 60). *2.* ***ஆராய்ந்தறிகை;*** ascertaining after inquiry. *3.* ***எல்லை;*** bounds, limit. "ஈசனை யளப்பில் கால மிதயமே லுன்னி" (கந்தபு. தக்க. ததீசிப். 32). *4.* ***அறிவுரை, சூழ்வுரை*** (பஞ்ச. திருமுக. 1530); counsel. *5.* ***அலப்புகை;*** chatter.

[அள → அளப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

'அளத்தல்' என்னுஞ் சொல்லே ஏராளமாய் அளத்தல் என்னும் பொருளடிப்படையில் வீண்பேச்சுப் பேசுதல் அல்லது பிதற்றுதல் என்னும் பொருளைப் பெற்றுவிட்டது. அளத்தல் வேறு; அலப்புதல் வேறு. முதனிலையளவிலும் வினைப்பெயரளவிலும் இவ்விரு சொல்லின் வேறுபாடு தெள்ளத் தெளிவாம். 'அளப்பு' என்பது புவ்வீற்றுத் தொழிற்பெயர். 'அலப்பு' என்பது இயல்பு முதனிலை அல்லது முதனிலைத் தொழிற்பெயர்.

'அலப்புதல்' என்னுஞ் சொல்லிற்கு முறுமுறுத்தல் என்னும் பொருள் பொருத்தமின்மை முன்னரே குறிக்கப்பட்டது.

அளப்புக்கு *aḷappukku*, பெ. (n.) ***முடக்கொற்றான்*** (மூ.அ.); balloon-vine (செ.அக.) — palsy curer, ***Cardiospermum halicacabum*** (சா.அக.).

அளபு *aḷabu*, பெ. (n.) *1.* ***அளவு***; measurement. "மேவிய வுயிரளபாய்" (நன். 88, மயிலை.). *2.* (இலக்.) ***அளபெடை***; (Gram.) lengthening of the sound of a letter. "குற்றுயி ரளபி னீறாம்" (நன். 108).

[அள → அளவு → அளபு.]

அளபெடு-த்தல் *aḷab(u)-eḍu-*, 4 செ.கு.வி. (v.i.) (இலக்.) ***செய்யுள் வழக்கிலும் உலக வழக்கிலும் எழுத்து மாத்திரை மிக்கொலித்தல்***; (Gram.) to lengthen the sound of a letter either in poetry or in common usage.

[அள → அளவு → அளபு (எழுத்தின் ஒலியளவு) + எடு. எடுத்தல் = மிகுதல், மிகுத்தல், உயர்த்தல்.]

அளபெடை *aḷab(u)-eḍai*, பெ. (n.) (இலக்.) ***இருவகை வழக்கிலும் மாத்திரை மிக்கொலிக்கும் எழுத்து;*** (Gram.) a letter lengthened in sound either in literary or common usage.

[அள → அளவு → அளபு + எடை. எடு → எடை (தொ.பெ.). 'ஐ' தொ.பெ. ஈறு. 'அளபெடை' தொ.ஆகு.]

அளபெடை வகைகள் : அளபெடை பின்வருமாறு பலதிறம்பற்றிப் பற்பல வகைப்படும்.

1. வழக்கிடம்பற்றி, உலகிய லளபெடை, செய்யுளிய லளபெடை என இருவகையாம்.

எ-டு:

'தயிரோஒஒ தயிர்' — பண்டமாற்று
'பொன்னாஅர் மேனியனேஎஎஎ'
— இசை
'அண்ணோஒஒஒ' — விளி
'ஒருவழியுஞ் சொல்லாமல் உலகை
விட்டுப் போனாரேஎஎஎ' —அழுகை
} உலகிய லளபெடை.

''உறாஅர்க் குறுநோ யுரைப்பாய்''
—செய்யுளிய லளபெடை.

உலகிய லளபெடையை இயற்கை யளபெடை யென்றும், செய்யுளிய லளபெடையைச் செயற்கை யளபெடை யென்றும் சொல்லலாம்.

2. பயன்பாடுபற்றி, இசைநிறை யளபெடை, இன்னிசை யளபெடை, சொல்லிசை யளபெடை, எழுத்துப்பேற் றளபெடை என நால்வகையாம்.

எ-டு:

''உறாஅர்க் குறுநோ யுரைப்பாய்''
— இசைநிறை யளபெடை.

''கெடுப்பதூஉங் கெட்டார்க்குச்
சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை''
''நாவலோஒ வென்றழைக்கு
நாளோதை''
''குன்றத் திறுத்த குரீஇயினம்''
} இன்னிசை யளபெடை.

''உரனசைஇ யுள்ளந் துணையாகச்
சென்றார்
வரனசைஇ யின்னு முளேன்''
— சொல்லிசை யளபெடை.

(நசைதல் = விரும்புதல். நசைஇ = நசைந்து, விரும்பி).

இராஅப் பகல், அராஅப் பற்றிற்று
— எழுத்துப்பேற் றளபெடை.

செய்யுளில் இசை குறைந்தவிடத்து அதை நிறைக்க எழுத்து நீண்டொலிப்பது இசைநிறை யளபெடை; இசை குறையாவிடத்தும் இன்னோசைபற்றி எழுத்து நீண்டொலிப்பது இன்னிசை யளபெடை; வினைமுதனிலை ஈற்றுயி ரளபெடையால் இறந்தகால வினையெச்சமாவது சொல்லிசை யளபெடை; புணர்ச்சியில் தோன்றல் பற்றியது எழுத்துப் பேற் றளபெடை. இது ஏனையவை போல் யாப்புறவுள்ளது (கட்டாயமானது) அன்று.

3. எழுத்து வேறுபாடுபற்றி, உயிரளபெடை, ஒற்றளபெடை என இருவகையாம்.

எ-டு:

''செறாஅஅய் வாழிய நெஞ்சு''
—உயிரளபெடை.

''இலங்கு வெண்பிறைசூ டீச
னடியார்க்குக்
கலங்கு நெஞ்சமிலை காண்''
''எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகுவார்க் கில்லை வீடு''
} ஒற்றளபெடை.

உயிரளபெடை, மீண்டும் மாத்திரை வேறுபாடுபற்றிக் குறிலளபெடை, நெடிலளபெடை என இருவகையாம்.

எ-டு :

''கெடுப்பதூஉங் கெட்டார்க்குச்
சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை''
—குறிலளபெடை.

''செறாஅரெனச் சேறியென் னெஞ்சு''
—நெடிலளபெடை.

4. சொல்லிடம்பற்றி, முதனிலை யளபெடை, இடைநிலை யளபெடை, கடைநிலை யளபெடை என மூவகையாம்.

எ-டு :

''ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ்
செய்வினை
ஆஅதும் என்னு மவர்''
—முதனிலை யளபெடை.

''நற்றாள் தொழாஅ ரெனின்''
—இடைநிலை யளபெடை.

''நல்ல படாஅ பறை''
—கடைநிலை யளபெடை.

5. இனி, அளபெடை யளவுபற்றிக் குற்றளபெடை, நெட்டளபெடை எனவும் இருவகையாம்.

செய்யுளிய லளபெடை யெல்லாம், பொதுவாக மும்மாத்திரையும் சிறப்பாக நான் மாத்திரையும் பெற்றுக் குற்றளபெடையாம். உயிர் பன்னிரு மாத்திரையும் மெய் பதினொரு மாத்திரையும் அளபெடுக்கும் இசையள

பெடையும், மூச்சடக்குமளவு அளபெடுக்கும் விளி யழுகை யளபெடைகளும் ஆகிய உலகிய லளபெடைகள் நெட்டளபெடையாம்.

முத்துவீரியம் அளபெடையை இயற்கை யளபெடை, செயற்கை யளபெடை, இன்னிசை யளபெடை, சொல்லிசை யளபெடை, நெடிலளபெடை, குறிலளபெடை, ஒற்றளபெடை, எழுத்துப்பேற் றளபெடை என எண்வகையாக வகுத்துக் கூறும்.

"இயற்கை செயற்கை யின்னிசை சொல்லிசை
நெடில்குறி லொற்றள பெழுத்துப் பேறள
பெண்வகைப் படூஉம் என்மனார் புலவர்"
(முத்துவீ. எழுத்து. 32).

அளபெடைவண்ணம் *aḷab(u)-eḍai-vaṇṇam*, பெ. (n.) (யாப்.) **அளபெடை பயின்று வரும் செய்யுளோசை வகை**; (Pros.) rhythm produced by using frequently the lengthened letters known as *aḷabeḍai*. "அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்" (தொல். பொருள். செய். **219**).

[*அளபு+எடை+வண்ணம். அள → அளவு → அளபு. எடு → எடை (தொ.பெ.). வள் → வண் → வண்ணம்.*]

வண்ணம் பார்க்க; see *vaṇṇam*.

எ-டு :
"மராஅ மலரொடு விராஅய்ப் பராஅம்"
(அகநா. *99 : 8*).

"கண்ண் டண்ண்ணெனக் கண்டுங்
கேட்டும்"
(மலைபடு. *352*).

அளம்[1] *aḷam*, பெ. (n.) **கூர்மை** (பொதி.நி.); sharpness.

[*அள் = கூர்மை. அள் → அளம்.*]

அளம்[2] *aḷam*, பெ. (n.) **செறிவு** (அக.நி.); closeness, density.

[*அள்ளுதல் = நெருங்குதல், செறிதல். அள் = செறிவு. அள் → அளம்.*]

அளம்[3] *aḷam*, பெ. (n.) *1.* **உப்பு**; salt. *2.* **உப்பளம்**; salt-pan. *3.* **நெய்தல் நிலம்** (வின்.); maritime tract. *4.* **கடல்** (பொதி.நி.); sea. *5.* **களர்நிலம்** (அக.நி.); saline soil.

ம., **து.** அளம்; **தெ.** அளமு.

[*அள் → அளம்.*]

அளம்படு-தல் *aḷam-paḍu-*, *20* செ.கு.வி. (v.i.) **வருந்துதல்**; to suffer. "அளம்பட்டறிவொண்ணாவகை" (தேவா. *1 . 13 : 9*).

[*அலம் = துன்பம். அலம் → அளம். 'படு' து.வி.*]

அளம்பல் *aḷambal*, பெ. (n.) **வெடங்குறுணி** பார்க்க; see *veḍaṅguṟuṇi* (L.) — stag's-horn trumpet flower (செ.அக.) — **மான்கொம்புப் பூச்செடி**; stag's-horn trumpet flower, *Stereospermum xylocarpum*. **அடப்பமரம்** பார்க்க; see *aḍappa-maram* (சா.அக.).

அளம்பல்மரம் *aḷambal-maram*, பெ. (n.) **வெடங்குறுணி, மலையாளத்தில் மிகுதியாக வளரும் ஒரு மரம். இதன் பூ வெள்ளையாயும் இலை அடர்த்தியாயும் பார்வைக்கு அழகாயுமிருக்கும். குளிர்காலத்தில் இலை உதிரும். இதன் பழம் மெதுவாயிருக்கும்; உண்ணவுதவும். இம் மரத்தினின்று ஒருவகை எண்ணெயெடுத்துத் தோல்நோய்க்குப் பயன்படுத்துவார்கள்**; a tree, walking-stick bignonia, *Stereospermum xylocarpum.* It is a native of Malabar, its flowers are white and the leaves deciduous in cold weather and also ornamental; the tender fruit is edible. A thick fluid of the colour and consistence of Stockholm tar is obtained from this tree and it is used by Vaidyans as a remedy for scaly eruptions on the skin (சா.அக.).

குறிப்பு: சா.அக. அளம்பல் என்று ஒரு செடியும் ஒரு மரமும் இருப்பதாக வேறுபடுத்திக்கூறி, '*Stereospermum xylocarpum*' என்னும் இலத்தீன் நிலைத்திணைப் பெயரை இரண்டிற்கும் பொதுவாகக் குறித்திருப்பது மயக்கத்திற்கிடமானது. ஆசிரியர் சிறந்த புலவரும் மருத்துவருமாதலால், அவர் கூறியவாறே இங்குப் பெயர்த்தெழுதப்பட்டது. ஒருகால் அச்சுப் பிழையாகவு மிருக்கலாம்.

அளம்பற்று-தல் *aḷam-paṟṟu-*, *5* செ.கு.வி. (v.i.) **உப்புப் பூத்தல்**; to wear away through the action of salt. 'உளுத்து அளம்பற்றின சுவர்' (திவ். திருக்குறுந். *19*, வியா.).

அளமம் *aḷamam*, பெ. (n.) **பொன்** (சங்.அக.); gold.

அளமரு-தல் *aḷamaru-*, *18* செ.கு.வி. (v.i.) **மனஞ்சுழலுதல், கலங்குதல், மயங்கி வருந்துதல்**; to be bewildered, to be distressed. "அளமரு குயிலினம்" (சீவக. *49*).

அறுகு

பாளையறுகு

புல்லறுகு


பூனைப்புல்


பேரறுகு


மத்தங்காய்ப்புல்

யானையறுகு

வெள்ளறுகு

[உலம்வா → உலமா → அலமா → அலமருதல் → அளமருதல். உலம்வருதல் = சுழலுதல்.]

அளர்[1] *aḷar*, பெ. (n.) 1. உவர்; saltishness, brackishness. 2. **உவர்மண்**; fuller's earth (சா.அக.).

[அளம் → அளர்.]

அளர்[2] *aḷar*, பெ. (n.) 1. **சேறு**; mire. 2. **களிமண்**; soft clay (சா.அக.).

[அள் = செறிவு. அள் → அளர்.]

அளர்க்காடு *aḷar-k-kāḍu*, பெ. (n.) *உவர்மண் வெளி*; extensive stretch of soil of fuller's earth.

[அளம் → அளர். கடு → காடு.]

அளர்நிலம் *aḷar-nilam*, பெ. (n.) *களர்நிலம்*; saline soil (R.T.).

[அளம் → அளர். நில் → நிலம்.]

அளர்ப்பூளை *aḷar-p-pūḷai*, பெ. (n.) *அளத்துப் பச்சை* (புதுவை); sea-blite (Poṇḍ.).

[அளம் → அளர். பூளை = பீளை.]

அளவஞ்சிமூலி *aḷavañji-mūli*, பெ. (n.) **தேட் கொடுக்கி**; scorpion-sting plant, *Heliotropicum indicum* (சா.அக.).

அளவடி *aḷavaḍi*, பெ. (n.) 1. *பத்து முதற் பதினான்கு வரை உயிரும் உயிர்மெய்யுமான எழுத்துகளைக்கொண்ட நாற்சீர்க் கட்டளை யடி*; a poetic line of four metrical feet, containing ten to fourteen letters, both vowels and vowel-consonants, separate-consonants not being counted.

"நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே"
(தொல். பொருள். செய். 32),

"பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒத்த நாலெழுத் தொற்றலங் கடையே"
(ஷ 38),

"குறளடி முதலா அளவடி காறும்
உறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப"
(ஷ 56).

எ-டு:

"நன்மணங் கமழும் பன்னெல் லூர (10)
வமையேர் மென்றோ ளாயரி நெடுங்க (11)
ணிணையீ ரோதி யேந்திள வனமுலை (12)
யிறும்பமன் மலரிடை யெழுந்த மாவி (13)
னறுந்தழை துயல்வருஉஞ் செறிந்தேந்
தல்குல்" (14)
(தொல். பொருள். செய். 40, பேரா. உரை).

2. **நாற்சீரடி**; a line of four metrical feet. "நாலொருசீர் அறிதரு காலை அளவொடு நேரடி" (யா. கா. 12).

[அள → அளவு + அடி − அளவடி.]

நேரடி என்பது அளவடி என்பதன் மறு பெயர். **தொல்காப்பியர்** காலத்திலும் நாற் சீரடியொடு இருசீரடி, முச்சீரடி, ஐஞ்சீரடி, அறுசீரடி, எழுசீரும் மேற்பட்ட சீரும் உள்ள அடி ஆகியவையும் வழங்கினவேனும், நாற் சீரடியே சரியான அல்லது சிறந்த அளவின தாகக்கொள்ளப்பட்டது. அதனால், அதையே சிறப்பாக அடி யென்றனர். அதை, "நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே" என்னும் நூற்பாத் தெளிவாகக் காட்டும். அந் நாற் சீரடியையே, நான்கு முதல் ஆறெழுத்துவரை யுள்ளது **குறளடி** யென்றும், ஏழு முதல் ஒன்ப தெழுத்துள்ளது **சிந்தடி** யென்றும், பத்து முதற் பதினான்கெழுத்துவரை யுள்ளது **அளவடி** யென்றும், பதினைந்து முதற் பதினே ழெழுத்துவரை யுள்ளது **நெடிலடி** யென்றும், பதினெட்டு முதல் இருபதெழுத்துவரை யுள்ளது **கழிநெடிலடி** யென்றும் ஐவகையாக வகுத்து வழங்கினர்.

"நாலெழுத் தாதி யாக வாறெழுத்
தேறிய நிலத்தே **குறளடி** யென்ப"
(தொல். பொருள். செய். 36),

"ஏழெழுத் தென்ப **சிந்தடிக்** களவே
ஈரெழுத் தேற்ற மல்வழி யான"
(ஷ 37),

"பத்தெழுத் தென்ப **நேரடிக்** களவே
ஒத்த நாலெழுத் தொற்றலங் கடையே"
(ஷ 38),

"மூவைந் தெழுத்தே **நெடிலடிக்** களவே
ஈரெழுத்து மிகுதலு மியல்பென மொழிப"
(ஷ 39),

"மூவா றெழுத்தே **கழிநெடிற்** களவே
ஈரெழுத்து மிகுதலு மிவட்பெறு மென்ப"
(ஷ 40).

இவை யெழுத்தெண்ணப்படுவதால் **கட்டளையடி** யெனப் பெயர்பெறும். பிற் காலத்தார்க்கு இஃது அரிதாக விருந்ததனால் இவ்வியாப்புக் கைவிடப்பட்டது. அதன்பின், எழுத்தெண்ணிக்கை பற்றாது சீரெண் ணிக்கை பற்றியே, இருசீரடி **குறளடி** யென் றும், முச்சீரடி **சிந்தடி** யென்றும், நாற்சீரடி முன்போன்றே **அளவடி** யென்றும், ஐஞ்சீரடி **நெடிலடி** யென்றும், அறுசீரும் மேலுங்

கொண்ட அடி கழிநெடிலடி யென்றும் பெயர் பெற்றன.

அளவநிலம் *aḷava-nilam*, பெ. (n.) அளர்நிலம் பார்க்க; see *aḷar-nilam* (R.T.).

[அளம் → அளவம் + நிலம். நில் → நிலம்.]

அளவப்பொட்டல் *aḷava-p-poṭṭal*, பெ. (n.) அளர் நிலம் பார்க்க; see *aḷar-nilam* (R.T.).

[அளம் → அளவம் + பொட்டல். பொட்டு → பொட்டல்.]

அளவம் *aḷavam*, பெ. (n.) அளகம் பார்க்க; see *aḷagam*.

அளவர் *aḷavar*, பெ. (n.) உப்பமைக்குங் குலத்தார்; persons belonging to the caste of salt-manufacturers. "பரதவ ரளவர் வாரிப் படுத்தமீ னுப்பின் குப்பை" (கந்தபு. ஆற்று. 30).

அளவழிச்சந்தம் *aḷavaḻi-c-candam*, பெ. (n.) நான்கு முதல் இருபத்தாறெழுத்துவரை வந்து அளவொவ்வாத அடிகளையுடைய செய்யுள் வகை (யாப். வி. 95, உரை); a stanza of the *maṇḍilam* (viruttam) type whose lines are not equal in length, but no line containing less than 4 and more than 26 letters.

[அளவு + அழி + Skt. chandas > த. சந்தம் (வண்ணம்).]

இஃது அளவியற் சந்தத்திற்கு எதிர்.

அளவழித்தாண்டகம் *aḷavaḻi-t-tāṇḍagam*, பெ. (n.) இருபத்தேழெழுத்து முதலாக வந்து அளவொவ்வாத அடிகளையுடைய செய்யுள் வகை (யாப். வி. 95, உரை); a stanza in which each line contains not less than 27 letters without the lines being equal in length with each other.

[அளவு + அழி + தாண்டகம். தாண்டு → தாண்டகம். 'அகம்' ஈறு. இருபத்தாறெழுத்து என்னும் மண்டில வரம்பைத் தாண்டிச் செல்லும் செய்யுள்வகை.]

தாண்டகம் பார்க்க; see *tāṇḍagam*.

இஃது அளவியற் றாண்டகத்திற்கு எதிர்.

அளவளப்பு *aḷavaḷappu*, பெ. (n.) அளவளாவுகை (வின்.); sociability.

[அளவு + அளவு – அளவளவு → அளவள → அளவளப்பு.]

அளவளாவு-தல் *aḷavaḷāvu-*, 5 செ.கு.வி. (v.i.) கலந்து பேசுதல்; to hold intimate talks, converse freely, live socially. "அளவளாய் நட்டாலும்" (மூதுரை, 4).

[அளவு + அளவு – அளவளவு → அளவளாவு.]

அளவளாவு *aḷavaḷāvu*, பெ. (n.) கலந்து வாழ்கை, மனக்கலப்பு; intimacy. "அளவளா வில்லாதான் வாழ்க்கை" (குறள், 523).

['அளவளாவு' முத.தொ.பெ.]

அளவளாவு-தல் பார்க்க; see *aḷavaḷāvu-*.

அளவறுத்தல் *aḷavaṟu-*, தொ. பெ. (vbl. n.) 1. அளவைகளால் அளந்தறிதல்; to test by the logical methods of proof. "அளவறுப்பதற் கரியவன்" (திருவாச. 5 : 35). 2. வரையறை செய்தல்; to fix limit, define. 3. வரம்பு நீக்குதல்; to unlimit.

க. அளவியறி

[அள் → அள → அளவு + அறு.]

அளவன்[1] *aḷavaṉ*, பெ. (n.) தவசம் அளப்போன்; one who measures the grain.

ம. அளவன்

[அள → அளவு → அளவன்.]

அளவன்[2] *aḷavaṉ*, பெ. (n.) உப்புக் காய்ச்சுவோன், உப்பமைப்போன்; salt-manufacturer (சா.அக.).

[அளம் (உப்பு) → அளமன் → அளவன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அளவன்[3] *aḷavaṉ*, பெ. (n.) ஒரு செயனஞ்சு (சோரபாடாணம்) (மூ.அ.); a kind of prepared arsenic.

அளவாக்கு-தல் *aḷav(u)-ākku-*, 5 செ.குன்றாவி. (v.t.) மட்டமாக்குதல்; to make even, to level, to straighten, to set right. 'நூற்பிடித்த பத்தியை அளவாக்க வேணும்' (திவ். திருக்குறுந். 10, வியா.).

[அளவு + ஆக்கு. ஆகு (த.வி.) → ஆக்கு (பி.வி.).]

அளவி *aḷavi*, பெ. (n.) அளவு; limit. "அளவியை யார்க்கு மறிவரியோன்" (திருக்கோ. 1 : 10).

ம., பட. அளவு; க. அளவி; தெ. அலவி; கொலா. லாவ்.

அளவிடு-தல் *aḷaviḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) ***அளத்தல்;*** to measure, explore. "மண்ணுற்ற வெல்லை யளவிட் டிடுமால்" (கந்தபு. அசுர. அகத். 7).

ம. அளக்குக; க. அளதெவடு; து., குட. அளதெ; பட. அளெ.

[அள → அளவு + இடு (து.வி.).]

அளவிடை *aḷaviḍai*, தொ.பெ. (vbl.n.) ***மதிப்பிடுகை;*** calculation, estimation. சத்துருவை அளவிடை பார் (வின்.).

[அளவு + இடை. இடு → இடை (தொ.பெ.). ஒ.நோ: எடு → எடை.]

அளவியல் *aḷaviyal*, பெ. (n.) (யாப்.) ***பாவின் அடிவரையறை;*** (Pros.) regulation regarding the number of lines in different kinds of stanzas. "நோக்கே பாவே அளவியல் எனாஅ" (தொல். பொருள். செய். 1).

[அள → அளவு + இயல் (ஒழுங்கு).]

அளவியற்சந்தம் *aḷaviyaṟ-candam*, பெ. (n.) ***நான்கு முதல் இருபத்தாறெழுத்துவரை அளவொத்து வரும் அடிகளையுடைய செய்யுள் வகை*** (யாப். வி. 95, உரை); a stanza in which each one of the lines contains the same number of letters between 4 and 26, both limits inclusive.

*[அளவு + இயல் + **Skt.** chandas > த. சந்தம்.]*

இது அளவழிச் சந்தத்திற்கு எதிர்.

அளவியற்றாண்டகம் *aḷaviyaṟ-ṟāṇḍagam*, பெ. (n.) ***இருபத்தேழெழுத்து முதலாக வரும் அளவொத்த அடிகளையுடைய செய்யுள்வகை*** (யாப். வி. 95, உரை); a stanza in which each one of the lines contains not less than 27 letters and all lines contain the same number.

[அளவு + இயல் + தாண்டகம். தாண்டு → தாண்டகம். 'அகம்' ஈறு. இருபத்தாறெழுத்து என்னும் வரம்பைத் தாண்டிச் செல்லும் மண்டில (விருத்த) வகைத் தாண்டகம்.]

தாண்டகம் பார்க்க; see *tāṇḍagam.*

அளவில் *aḷavil*, கு.வி.எ. (adv.) 1. ***மட்டில்;*** as regards. என் அளவில் ஒரு குற்றமுமில்லை. 2. ***எல்லைக்குள்;*** within bounds, to the extent. அந்த அளவில் அவனை வைத்துக்கொள். 3. ***உடனே;*** as soon as, immediately after. அவன் சொன்ன அளவில் எல்லாரும் பணத்தைக் கொடுத்துவிட்டார்கள்.

[அளவு + இல் (7ஆம் வே. உருபு).]

அளவிற-த்தல் *aḷav(u)-iṟa-*, 3 செ.கு.வி. (v.i.) 1. ***எல்லையிலதாதல், அளந்தறிய முடியாததாதல்;*** to be unlimited, to be immeasurable. இறைவனாற்றல் அளவிறந்தது. 2. ***குறித்த அளவு கடத்தல்;*** to exceed appointed limits. "ஆவியும் ஒற்றும் அளவிறந் திசைத்தலும்" (நன். 101).

[அளவு + இற. இறத்தல் = கடத்தல், மிகுதல்.]

அளவினார் *aḷaviṉār*, பெ. (n.) ***தேர்வாளம்*** (சங். அக.); croton.

அளவு *aḷavu*, பெ. (n.) 1. ***எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை யளவுகளுள் ஒன்று;*** one of the four modes of measurements, viz., counting, weighing, measure of capacity and linear measure. 2. ***அளவுமானம்;*** measurement. 3. ***நிலவளவு*** (I.M.P. Tj. 1000); Revenue survey. 4. ***வடிவளவு;*** size. 5. ***தன்மை;*** quality, nature. "ஏரள வில்லா வளவினர்" (திருக்கோ. 308). 6. ***தக்க சமையம்;*** opportunity, favourable occasion. 'நமக்குக் கிஞ்சித்கரிக்க நல்ல வளவு' (ஈடு, 1. 4 : 4). 7. ***மட்டு;*** limit. 8. (இலக்.) ***எழுத்தொலிக்குங் கால வளவு, மாத்திரை;*** (Gram.) unit of time, being one second, observed in sounding of letters. "வரைமித மளவு மட்டுமாத் திரைப்பெயர்" (பேரகத். 116). 9. (இசை) ***தாளத்தில் 3 மாத்திரைக் காலம்*** (சிலப். 3 : 16, உரை); (Mus.) duration of time-measure consisting of three *māttirais* or sounds. 10. ***தருக்க அளவை;*** laws of reasoning, dialectics. "ஆற்றி னளவறிந்து கற்க" (குறள், 725). 11. ***அறிவம் (ஞானம்);*** wisdom (ஈடு, 3 . 7 : 3). —, கு.வி.எ. (adv.) ***மட்டும்;*** until, only so far, so much. "முகங்காணு மளவு" (குறள், 224). —, இடை. (prep.) ***தொடங்கி;*** from. "அன்றளவு ......இன்றுகா றமுத மீந்தது" (உபதேசகா. சிவபுண்ணி. 347).

ம., க. அளவு; தெ. அலவி, லாவு; து. லக்கெ; பட. லெக்க.

[அள்ளுதல் = பொருந்துதல். பொருந்தி அல்லது பொருத்தியளத்தல். அள் → அள → அளவு.]

அளவு-தல் *aḷavu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **விரவுதல்**; to blend, mingle.

"புறத்திணை மருங்கிற் பொருந்தி னல்ல
தகத்திணை மருங்கி னளவுத லிலவே"

(தொல். பொருள். அகத். 58). 2. **கலத்தல், ஒன்றுசேர்தல்**; to mix. "கோற்றேனி னளவுந் தீஞ்சொல்" (கூர்மபு. கண்ணன்மண. 71). —, 5 செ.குன்றாவி. (v.t.) **உசாவுதல்**; to inquire after one's welfare. "அலமர வுள்ளமொ டளவிய விடத்தும்" (தொல். பொருள். கற். 5.).

[அள்ளுதல் = பொருந்துதல், செறிதல், கலத்தல். அள் → அளவு. அளவுதல் = கலத்தல், கலந்துரையாடல்.]

அளவுக்கல் *aḷavu-k-kal*, பெ. (n.) **நீரேற்றங் காட்டும் கற்றூண்** (S.I.I. i, 130); stone pillar for measuring the height of water level, in tanks.

அளவுக்கூறுபாடு *aḷavu-k-kūṟu-pāḍu*, பெ. (n.) **ஒரு கூட்டுப் பொருளின் அல்லது கலவைப் பொருளின் அமைப்புக் கூறுகளைப் பிரித்தறிதல்**; determination of the proportion of various elements forming a compound, quantitative analysis (சா.அக.).

[அளவு + கூறுபாடு. கூறுபடு → கூறுபாடு (முத.தி.தொ.பெ.). 'படு' து.வி.]

அளவுகருவி *aḷavu-karuvi*, பெ. (n.) அளக்க **வுதவும் அளவைக் கருவி**; instrument of measurement.

அளவுகாரன் *aḷavu-kāraṉ*, பெ. (n.) **நெல் முதலியன அளப்பவன்**; one who measures paddy and other grains (R.T.).

[அள → அளவு. 'காரன்' தொழிலுரிமை பற்றிய ஆ.பா. ஈறு.]

அளவுகூடை *aḷavu-kūḍai*, பெ. (n.) **அரிசிதவசி அளக்க வுதவுங் கூடை** (இ.வ.); a basket of certain capacity for measuring rice, etc. (Loc.).

[அள → அளவு. குடை → கூடை = குடைவான பின்னற் கலம்.]

அளவுகோல் *aḷavu-kōl*, பெ. (n.) **அளக்குந் தடி**; measuring rod, foot-rule. "வியனிலத் தளவு கோல்" (பிரபுலிங்க. துதி. 16).

அளவுசாப்பாடு *aḷavu-śāppāḍu*, பெ. (n.) **உண்டிச்சாலைகளில் ஒரு குறிப்பிட்ட அளவாகப் படைக்கும் சாப்பாடு**; meals served in fixed quantity in hotels and eating-houses.

[அள → அளவு. சாப்பிடு → சாப்பீடு → சாப்பாடு.]

இது போர்க்காலத்தில் அரிசித்தட்டினால் ஏற்பட்டது.

அளவுசோறு *aḷavu-śōṟu*, பெ. (n.) **அளவு சாப்பாடு** பார்க்க; see *aḷavu-śāppāḍu*.

அளவுதடி[1] *aḷavu-taḍi*, பெ. (n.) **அளவுகோல்** பார்க்க; see *aḷavu-kōl*.

அளவுதடி[2] *aḷavu-taḍi*, பெ. (n.) **ஆண்குறி**; penis (சா.அக.).

[அளவுதல் = கலத்தல், புணர்தல். தடி = தடித்த அல்லது தடிபோன்ற உறுப்பு.]

அளவுநாழி *aḷavu-nāḻi*, பெ. (n.) **முத்திரைப்படி**; standard measure.

[அள → அளவு. நாளம் → நாளி → நாழி.]

அளவுப்பதிவு *aḷavu-p-padivu*, பெ. (n.) **வயல்களை அளந்து பதிவுசெய்கை** (அளவு பைமாஷ்); survey or measurement of fields (R.T.).

[அள → அளவு. பதி → பதிவு.]

அளவுபடி *aḷavu-paḍi*, பெ. (n.) **அளவுநாழி** பார்க்க; see *aḷavu-nāḻi*.

அளவுபடுத்து-தல் *aḷavu-paḍuttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **வரையறைசெய்தல்**; to limit.

[அள → அளவு. அளவுபடு (த.வி.) → அளவுபடுத்து (பி.வி.). 'படு' து.வி. படு (த.வி.) → படுத்து (பி.வி.).]

அளவுபடை *aḷavu-paḍai*, பெ. (n.) **சிறு சேனை**; small army. 'அளவுபடைக்குப் பெரும்படை தோற்பது' (ஈடு, 2 : 4 : 7).

அளவுவர்க்கம் *aḷavu-varkkam*, பெ.(n.) **அளவைப் படிகட்கு ஏற்பட்ட ஒரு பழைய வரி** (S.I.I. ii, 247); an ancient tax on measures of capacity.

[அளவு + Skt. varga > த. வர்க்கம் → வருக்கம்.]

அளவெடு-த்தல் *aḷav(u)-eḍu-*, 4 செ.குன்றாவி. (v.t.) **ஒன்றன் நீளம் அகலம் முதலியவற்றை அளந்தறிதல்**; to take the dimensions of.

[அள → அளவு + எடு.]

அளவெண் *aḷav(u)-eṇ*, பெ. (n.) (யாப்.) **நாற்சீர் ஓரடியாய் நான்கு வரும் அம்போதரங்க வொத்**

தாழிசைக் கலிப்பா வுறுப்பு வகை; a member of *ambōdaranga vottāḷiśaikkalippā* consisting of four lines of four feet each.

"...............................நீர்த்திரைபோல்
மரபொன்று நேரடி முச்சீர் குறணடு
வேமடுப்பின்
அரவொன்று மல்குல தம்போ
தரங்கவொத் தாழிசையே"
(யா.கா. 10).

எ-டு:
"கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை
ஒலியிய லுவண மோங்கிய கொடியினை
வலிமிகு சகட மாற்றிய வடியினை"
(யா.கா. 10, உரை).

[அள → அளவு. அளவு + எண் – அள வெண். எண் = எண்கொண்ட செய்யு ளுறுப்பு.]

அளவை *aḷavai*, பெ. (n.) 1. அளவு; measurement. 2. எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவைகளுள் ஒன்று; measure of four kinds mentioned in ancient literature, viz., computation, weight, capacity and extent. 3. அளவுக்கருவி; standard of measure. 4. காட்சி, கருத்து, ஒப்பு, உரை என்னும் நால்வகை ஏரண அறிவழிகள்; means of acquiring correct knowledge, which are four, viz., perception, inference, similarity and precept. 5. எல்லை; bound, limit. "ஐந்தி யாண்டெனு மளவைநிற் ககன்றுழி" (கந்தபு. தக்க. உமைகயி. 49). 6. அமையம்; time, occasion, opportunity. "அன்னதோ ரளவை தன்னில்" (கந்தபு. தேவ. விண்குடி. 38). 7. நாள் (சூடா.); day. 8. தன்மை; nature. "அதன்பய மெய்திய வளவை மான" (பொருந. 92). 9. அறிகுறி; sign, indication. "இவை யளவை யாக விடர்க்கடல் கடத்தி" (கம்பரா. யுத்த. சீதை. 29).

[அள் → அள → அளவை.]

அளவைக்கால் *aḷavai-k-kāl*, பெ. (n.) மரக்கால் (திவா.); a grain measure.

[அள → அளவை. கல்லுதல் = தோண்டுதல், குடைதல். கல் → கால்.]

அளவைநூல் *aḷavai-nūl*, பெ. (n.) ஏரணம், தருக்கநூல்; logic. 'அளவைநூல் சொன்னூல் கற்றே கற்கவேண்டுதலின்' (குறள், 725, பரிமே. உரை).

[அள → அளவை. நுவல் → நூல்.]

அளவையாகுபெயர் *aḷavai-y-āgu-peyar*, பெ. (n.) எண்ணல், எடுத்தல் முதலிய நால் வகை அளவைப் பெயர்களுள் ஒன்று, அவ் வளவையுடைய பொருளுக்கு ஆகிவருவது (நன். 290, உரை); Metonymy in which a word and its implied meaning relate to measurement, of which there are four according as the measure is one of computation or weight or capacity or extent.

[அள → அளவை. 'ஆகுபெயர்' வினைத் தொகை. ஆ → ஆகு. பெய் → பெயர் = இடுவது.]

அளவைவடிவம் *aḷavai-vaḍivam*, பெ. (n.) உருவத்தைக் காட்டுவதற்கு வரைந்த படம் (புதுவை); diagram (Poṇḍ.).

[அள → அளவை. படி → படிவு → படிவம் → வடிவம்.]

அளவைவாதம் *aḷavai-vādam*, பெ. (n.) ஏரணச் சான்று காட்டி உண்மையை நிறுவும் தருக்கம் அல்லது உறழ் (பிரமாண வாதம்) (மணிமே. 29 : 42, உரை); debate or argument seeking to establish truth through logical proof.

[அள → அளவை. Skt. vāda > த. வாதம்.]

அளவைத்தருக்கம் அல்லது அளவையுறழ் என்பது தூய தமிழ்.

அளவைவாதி *aḷavai-vādi*, பெ. (n.) அளவைச் சொற்போர் செய்பவன் (மணிமே. 27 : 3); one who expounds logical debate or argument.

[அள → அளவை. Skt. vādin > த. வாதி.]

அளவைத்தருக்கி அல்லது அளவையுறழி என்பது தூய தமிழ்.

அளவொழுகு *aḷavoḻugu*, பெ. (n.) 1. நிலபுலங் களை யளந்து பதிவுசெய்கை; survey or measurement of fields. 2. சிற்றூர் நிலபுலங்களின் அளவுகளைப் பதிவுசெய்யும் பொத்தகம்; register specifying the measurements of the fields of a village (R.T.).

[அள → அளவு + ஒழுகு (ஒழுங்கு).]

அளறு[1] *aḷaṟu*, பெ. (n.) 1. நீர்; water. "குளிர் பொய்கை யளறு நிறைய" (பரிபா. 8 : 93). 2. குழம்பு; liquid of thick consistency. "வன

முலைச் சுண்ணமு மளறும்'' (கல்லா. 27 : 20). 3. **குழைசேறு** (பிங்.); soft mud, slough, mire.

[அள்ளுதல் = பொருந்துதல், கலத்தல், செறிதல். அள் → அளர் → அளறு.]

அளறு[2] *alaṟu*, பெ. (n.) 1. **நரகம்;** hell. "பூரியர்க ளாழு மளறு'' (குறள், 919). 2. **காவிக்கல்;** red ochre. 'அளற்றுப் பொடி' (திவ். திருப்பா. 14, வியா.).

[அழல் → அழறு → அளறு = நெருப்பு, செந்நிறம்.]

அளறு-தல் *alaṟu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **நெரிதல்** (வின்.); to be fractured by a fall or blow, broken, bruised. 2. **பிளத்தல்** (வின்.); to split due to failing. 3. **சிதறி வெடித்தல்;** to be mauled, shattered.

[அள்ளுதல் = செறிதல். அள் → அளறு. அளறுதல் = செறிந்து நெரிதல், பிளத்தல், வெடித்தல்.]

அளறுபடு-தல் *alaṟu-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. **சேறாதல்;** to turn into mire. 2. **நிலை கலங்குதல்;** to be disconcerted, perplexed. "இராவணனை யளறுபட வடர்த்தானிடம்'' (தேவா. 1.10 : 8).

[அளறு + படு (து.வி.). அளறு = குழம்பு, சேறு. அளறுபடுதல் = மனங்குழம்புதல், மனங் கலங்குதல்.]

அளாய்குளாய் *alāy-kuḷāy*, பெ. (n.) **பரபரப்பான செய்கை;** hasty action. 'அளாய் குளாயப் போகுமது' (ஈடு, 9.1 : 9).

[ஒருகா. அளை என்னும் சொல்லினின்று திரிந்த 'அளைகுளை' என்னும் ஒலிக்குறிப்புச் சொல்லா யிருக்கலாம்.]

அளாரியம் *alāriyam*, பெ. (n.) **வெங்காயம்** (சித்.அக.); onion (செ.அக.) — **பெருவெங்காயம்;** a big variety of onion (சா.அக.).

அளாவல் *alāval*, தொ.பெ. (vbl.n.) அளாவு-தல் பார்க்க; see *alāvu-*.

அளாவன் *alāvaṉ*, பெ. (n.) **கலப்பு;** mixture. 'அளாவனான சத்துவத்தை யுடையரா யிருப்பாரும்' (ஈடு, 1.1 : 5).

[அளவு → அளாவு → அளாவன். 'அன்' ஒன். பா. ஈறு.]

அளாவு-தல் *alāvu-*, 5 செ.கு.வி. (v.i.) **கலத்தல்;** to mingle. "பாலோ டளாய நீர்'' (நாலடி, 177). —, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **பொருந்துதல்;** to reach, extend up to, touch. "விசும்பினை யளாவு மன்னவன் கோயிலை'' (கந்தபு. யுத்த. மூவாயி. 1). 2. **கையால் அளைதல், கறண்டியால் துழாவுதல்;** to stir, as with a hand or spoon. 3. **கலந்துறவாடல்;** to have social intercourse, mingle freely with relatives.

[அள → அளவு → அளாவு.]

அளி[1]**-தல்** *aḷi-*, 2 செ.கு.வி. (v.i.) 1. **செறிதல்;** to become crowded, dense. 2. **கலத்தல்;** to mix, mingle. "சிறியார்களோ டளிந்தபோது'' (கம்பரா. சுந்தர. ஊர்தேடு. 154). 3. **குழைதல்;** to be overboiled. சோறளிந்து போயிற்று. 4. **அறக்கனிதல்;** to become overripe, mellow. "அளிந்ததோர் கனியே'' (திருவாச. 37 : 4). 5. **புரியமாயிருத்தல் (பிரியமாயிருத்தல்);** to be attached. "மந்தி யளிந்த கடுவனையே நோக்கி'' (திவ். இயற். மூன்றாம்திருவந். 58).

[அள் → அளி.]

அளி[2]**-த்தல்** *aḷi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **செறித்தல்** (பிங்.); to crowd together. 2. **அறம் நோக்கிக் கொடுத்தல்;** to give in charity. "அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்'' (கலித். 11 : 1). 3. **தகுதிபற்றிக் கொடுத்தல்;** to give as prize or reward, to confer a title or degree. பரிசளிப்பு, பட்டமளிப்பு விழா. 4. **அன்பினாற் கொடுத்தல்;** to give free or as a token of love. அன்பளிப்பு. 5. **ஈனுதல்;** to yield, beget. "காந்தார பதியளித்த மெய்க்கன்னி'' (பாரத. சம்பவ. 22). 6. **அருளிப்படைத்தல்;** to create. "யாவையு மயன்கணின் றளிப்பான்'' (கந்தபு. தக்க. ததீசியுத். 9). 7. **அருளி அல்லது அன்பினாற் காத்தல்** (பிங்.); to protect, take care of, nourish. 8. **அன்பினாற் சொல்லுதல்;** to speak, express with affability. "முகமனளித்தும்'' (கல்லா. 14 : 17). —, 4 செ.கு.வி. (v.i.) 1. **அருள்செய்தல்;** to be gracious, show favour. "அஞ்சினர்க் களித்தலும்'' (சிறுபாண். 210). 2. **விருப்பமுண்டாக்குதல்;** to create desire. "அளித்தயில் கின்றவேந்தன்'' (சீவக. 192). 3. **சோர்வை நீக்குதல்;** to remove weariness. "கொண்டவற் களித்த தோர் குளிர்கொள் பொய்கை'' (சீவக. 1622).

ம. அளிக்குக

[அள் → அள்ளல் = செறிவு, சேறு. அள் → அள்ளி = வெண்ணெய். அள் → அளி. அளி

தல் = செறிதல், குழைதல், கனிதல், அன்பு செய்தல், அருள்தல்.]

அறிவில் அல்லது ஆற்றலில் அல்லது அன்பிற் சிறந்த நன்மக்களால் பிறந்த குடும்பத்திற்கோ, ஒரு நாட்டிற்கோ, பல நாட்டிற்கோ, உலக முழுவதிற்குமோ பெருநன்மை விளைவதனாலும், பெற்றோரிருவருள்ளும் பிள்ளைப்பேற்றிற்கு முதற்கரணியமானவன் தந்தையே யாதலாலும், மகப்பேற்றைத் தந்தை பொதுமக்கட்கோ, கணவன் மனைவிக்கோ அளிக்கும் அன்பளிப்பாக அல்லது நன்கொடையாகக் கருதும் மரபு பற்றி, அளித்தற் சொல் மகப்பேற்றுப் பொருள் கொண்டது. இதன் விளக்கத்தைத் தா என்னும் உருப்படியிற் காண்க.

அளி[1] *aḷi*, பெ. (n.) 1. அன்பு; love. "அளி நயந்து" (இரகு. நாட்டு. 1). 2. **அன்பு கரணியத்தால் தோன்றும் அருள்**; clemency, grace. "கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்" (குறள், 390). 3. **அன்பினா லுண்டாகும் ஆசை**; desire. "அளியா லிவ்வூர் காணு நலத்தால்" (கம்பரா. சுந்தர. ஊர்தேடு. 83). 4. **அருள்போன்ற குளிர்ச்சி**; coolness. "திங்களு ளளியுநீ" (பரிபா. 3 : 67). 5. **அன்பினால் நிகழுங் கொடை** (திவா.); gift, present. 6. **அன்போடு கூடிய வேளாண்மை (உபசாரம்) மதிப்புரவு** (குறள், 390, உரை); civility, politeness. 7. **அருளினால் அல்லது அன்பினால் இரங்கத்தக்க எளிமை**; miserableness, wretchedness. "தாய்த்தாய்க் கொண்டேகு மளித்திவ் வுலகு" (நாலடி. 15).

ம., க. அளி.

[அள் → அளி.]

அளி[2]-த்தல் பார்க்க; see *aḷit*[2]-.

அளி[2] *aḷi*, பெ. (n.) 1. **தேனீ**; honey-bee. 2. **தேன்வண்டு**; honey-beetle. "அளிதேர் விளரி யொலிநின்ற பூம்பொழில்" (திருவாச. 6 : 10). 3. **தேன்** (நாநார்த்த.); honey. 4. **இனிமை**; sweetness (சா.அக.). 5. **மது** (பிங்.); sweet liquor (சா.அக.) — spirituous liquor (செ. அக.). 6. **வண்டுகொல்லி** (பச்.மூ.); ringworm shrub.

ம., க. அளி.

[அள் = கூர்மை, முள், கொடுக்கு. அள் → அளி = கொட்டும் உறுப்புள்ள ஈ அல்லது வண்டு.]

அளி[3] *aḷi*, பெ. (n.) 1. **மரவுரி மரம்** (L.); bark tree (செ.அக.) — **மரவுரி**; tree bark, *Antiaris toxicaria* (சா.அக.). 2. **காய்** (மூ.அ.); unripe fruit.

க. அளி

[ஒருகா. அள் = செறிவு, திண்மை. அள் → அளி = திண்ணியது.]

அளி[4] *aḷi*, பெ. (n.) 1. **கருந்தேனீ** (சா.அக.); black bee. 2. **காகம்**; crow.

ம., க. அளி.

[ஒருகா. கள் (கருப்பு) → அள் → அளி = கரியது.]

அளி[5] *aḷi*, பெ. (n.) 1. **வலைத்தட்டி (கிராதி)**; lattice, fence. அளிப்பாய்ச்சிய வீடு. 2. **மாட்டுத்தொட்டி (மாட்டுக்காடி)**; crib for straw.

ம. அழி

[அழி → அளி.]

அளிகம் *aḷigam*, பெ. (n.) **நெல்லி** (பச்.மூ.); emblic myrobalan.

அளித்து *aḷittu*, பெ. (n.) **இரங்கத்தக்கது**; that which deserves pity. "கலங்கு மளித்தென் கடும்பு" (பு.வெ. 9 : 25).

[அளி (இரக்கம்) → அளித்து. 'து' ஒன்.பா. ஈறு. 'த்' புணர்ச்சித் தோன்றல்.]

அளிது *aḷidu*, பெ. (n.) **அளித்து** பார்க்க; see *aḷittu*. "அளிதோ தானே பாரியது பறம்பே" (புறநா. 109 : 1).

[அளி → அளியது → அளிது. 'து' ஒன்.பா. ஈறு.]

அளிந்தார் *aḷindār*, பெ. (n.) **அன்புடையோர்**; loving persons. "அளிந்தார்க ணாயினும் ஆராயா னாகித் தெளிந்தான் விளிந்து கெடும்" (பழமொழி. 182).

[அளி → அளிந்த (இ.கா.பெ.எ.) + அவர் (ப.பா.ஈறு.) — அளிந்தவர் → அளிந்தார். அளிதல் = அன்புசெய்தல்.]

அளிப்பாய்ச்சு-தல் *aḷi-p-pāyccu-*, 5 செ.கு.வி. (v.i.) **வலைத்தட்டி யிடுதல்**; to construct a lattice.

[அழி → அளி. பாய் (த.வி.) → பாய்ச்சு (பி.வி.). 'சு' பி.வி. ஈறு.]

அளியன் *aḷiyaṉ*, பெ. (n.) 1. **அன்பு மிக்கவன்**; one who has great love, gracious benefactor.

"அளியன் போலப் புலம்பினன்" (கந்தபு. யுத்த. அக்கினி. 198). 2. காக்கப்படத்தக்கவன்; one who deserves protection, needy person. "அளியன் றானே முதுவா யிரவலன்" (திருமுருகு. 284). 3. இரங்கப்படத்தக்கவன்; one who deserves pity. "அளியன் நம்பையல் என்னார் அம்மவோ" (திவ். திருமாலை, 37).

ம. அளியன்; க., து. அளிய; தெ. அல்லுடு; பட. அளிய (மருமகன்).

[அளி (அன்பு, இரக்கம்) → அளியன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அளிலாமயம் *aḷil-āmayam*, பெ. (n.) ஊதை (வாத) நோய் (வை.மூ.); rheumatism.

[அளில் + **Skt.** āmayam (நோய்).]

அளுக்கு-தல் *aḷukku-*, 5 செ.குன்றாவி. (v.i.) குலைதல் (திவா.); to be perturbed, disconcerted.

க. அலுகு; தெ. அலுகு.

[அலுங்கு (த.வி.) → அலுக்கு (பி.வி.) → அளுக்கு. அலுங்குதல் = அசைதல்.]

அளுங்கு[1] *aḷuṅgu*, பெ. (n.) அழுங்கு, ஒரு விலங்கு (மூ.அ.); pangolin.

ம. அளுங்கு; தெ. அளுகு, அளுவ; து. அளங்கு.

[நளுங்கு → அளுங்கு.]

அளுங்கு[2] *aḷuṅgu*, பெ. (n.) ஒருவகைக் கிளிஞ்சில்; a kind of shell (சா.அக.).

அளுங்கோடு *aḷuṅgōḍu*, பெ. (n.) அழுங்கின் கொம்பு; the horn of a pangolin (சா.அக.).

[அளுங்கு + கோடு – அளுங்குக்கோடு → அளுங்கோடு.]

அளேசுவிடையம் *aḷēšu-viḍaiyam*, பெ. (n.) அளேசுவெப்பம் பார்க்க; see *aḷēšu-veppam*.

அளேசுவெப்பம் *aḷēšu-veppam*, பெ. (n.) அதிவிடையம் (மூ.அ.); atis, (செ.அக.) — அதிவிடைய வேர்; the root of Indian atee, *Aconitum heterophyllum* (சா.அக.).

அளேசுவெப்பு *aḷēšu-veppu*, பெ. (n.) அளேசுவெப்பம் பார்க்க; see *aḷēšu-veppam*.

அளை-தல் *aḷai-*, 2 செ.குன்றாவி. (v.t.) 1. தழுவுதல்; to embrace, caress. "என்னணியார் முலையாக மளைந்து" (திருவாச. 49 : 4). 2. சூடுதல்; to wear. 'அனிச்சப்பூவை மயிரில் அளைந்தாள்' (குறள், 1118, மணக். உரை). 3. துழாவுதல்; to stir with the hand or a ladle, to dabble with the hand, as a child. "இன்னடிசில் புக்களையுந் தாமரைக்கை" (நள.கலிதொ. 63). 4. கலத்தல்; to mix up, mingle with. "ஊனளைந்த வுடற்குயி ராமென" (கம்பரா. அயோத். பள்ளி. 16). 5. நுகர்தல் (அனுபவித்தல்); to enjoy, experience. "அளைவது காமம்" (சீவக. 1551). —, 2 செ.கு.வி. (v.i.) 1. கூடியிருத்தல்; to be mixed, mingled. "ஆர்வமொ டளைஇ" (தொல். பொருள். கற். 5). 2. வயிறு வலித்தல் (இ.வ.); to suffer from gripes, as in dysentery (Loc.).

[அள்ளுதல் = பொருந்துதல், செறிதல், வாருதல். அள் → அளை.]

அளை[1] *aḷai*, பெ. (n.) 1. தயிர் (பிங்.); curd, curdled milk. 2. மோர்; butter-milk. "செம்புற் றீயலி னின்னளைப் புளித்து" (புறநா. 119 : 3). 3. வெண்ணெய்; butter (சேதுபு. விதூம. 75).

க., து. அளெ; தெ., பர். சல்ல; கொலா. சல்ல; நா. சள.

[அள் → அளி. அளிதல் = குழைதல். அளி → அளை.]

அளை[2] *aḷai*, பெ. (n.) 1. எலி, நண்டு, பாம்பு முதலியவற்றின் வளை; rat-hole, crab-hole, snake-hole, etc., hole in the ground. 2. புற்று; ant-hill. "அளைப்பிரியா வரவு" (தேவா. 7. 43 : 4). 3. பொந்து (வின்.); hollow in the tree. 4. குகை; cave, cavern in a mountain or rock. "அளைச்செறி யிரும்புலி" (சீவக. 1851).

ம. அள; க. அளெ; கோத. அள்; துட. ஒள்ப்.

[உள் → அள் → அளை = துளை.]

அளை[3] *aḷai*, இடை. (part.) ஓர் இடவேற்றுமை யுருபு; a loc. ending. "கல்லளைச் சுனைநீர்" (நன். 301, மயிலை. மேற்.)

[அள்ளுதல் = பொருந்துதல். அள் → அள்ளை (பக்கம்) → அளை = பொருந்திய இடம், இடம்.]

அளைச்சல் *aḷaiccal*, பெ. (n.) வயிற்றளைச்சல் (இ.வ.); dysentery (Loc.).

[அளை → அளைத்தல் → அளைச்சல். 'சல்' தொ.பெ. ஈறு.]

அளைமறிபாப்பு *aḷai-maṟi-pāppu*, பெ. (n.) தலை முன்னும் வால் பின்னுமாக வளைக்குட்

புகுந்த பாம்பு, அங்ஙனமே, அதாவது வால் முன்னும் தலை பின்னுமாகத் தானிருந்தபடியே பின்னுக்குத் திரும்பாது, வளைக்குள் ஒரு சுற்றுச் சுற்றி, மீண்டும் தலைமுன்னாக மாறிக் கொள்வதுபோல், ஒரு செய்யுள் தலைகீழாக இறுதியடி முதலடியாகவும் முதலடி யிறுதி யடியாகவும் வரிசைமாற்றிப் பொருள் கொள்ளப்படும் முறை, எண்வகைப் பொருள் கோள்களுள் ஒன்று; a mode of poetic construction in which, the lines of a poem or stanza are taken in the reversed order for construing, one of eight modes of construing.

"தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து
தண்டூன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து
நாற்கதியிற் சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த
வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து
நெறிமுன்னி முயலா தாரே"
(நன். 416. மயிலை. உரை மேற்.).

இச் செய்யுளில், 4ஆம் அடி முதலடியாகவும், 3ஆம் அடி 2ஆம் அடியாகவும், 2ஆம் அடி 3ஆம் அடியாகவும், முதலடி 4ஆம் அடியாக வும், தலைகீழாக மாறியமைந்து பொருள் படுதல் காண்க.

"செய்யு ளிறுதி மொழியிடை முதலினும்
எய்திய பொருள்கோள் அளைமறி பாப்பே"
(நன். 417).

[அளை = வளை. மறி = (தலைகீழாய்) மடங்கு கின்ற. பாம்பு → பாப்பு (வலித்தல் திரிபு). 'அளைமறிபாப்பு' பன்மொழித் தொடரான அன் மொழித்தொகை. 'அளைமறி' வே. தொகை. 'மறிபாப்பு' வினைத்தொகை.]

'A mode of construing in which the expression at the end of a verse is conjoined with a word in the middle of a verse or with one in the beginning of another verse, one of eight *poruḷkōḷ;* பாட்டின் ஈற்றினின்ற சொல் இடையிலும் முதலிலுஞ் சென்று பொருள் கொள்ளப்படு முறை' என்று அளைமறி பாப்பு என்னும் பொருள்கோட்கு விளக்கங் கூற, நன்னூல் நூற்பா இடந்தருமேனும் அது பொருந்தாது.

ஒரு பாட்டின் இறுதிச்சொல் இடையிலும் முதலிலுமுள்ள சொல்லொடு சேர்ந்து பொருள்கொள்ளப்படுவது, விளக்கணியின் பாற்படுமே யன்றிப் பொருள்கோளாகாது. தாப்பிசைப் பொருள்கோளும் இடைநின்ற சொல்பற்றியதே யன்றி இறுதிநின்ற சொல் பற்றியதன்று.

சங்கரநமச்சிவாயர், இராமாநுசக் கவிராயர், ஆறுமுக நாவலர், சடகோப ராமாநுசாசாரியார், பவானந்தம் பிள்ளை முதலிய பிற்கால வுரையாசிரியர் அனைவரும், மயிலைநாதர் காட்டிய "சூழ்ந்த வினை யாக்கை" என்னும் பழஞ் செய்யுளையே அளைமறிபாப்பிற்கு எடுத்துக்காட்டி யுள்ளனர். அவ்வெடுத்துக் காட்டின்படி, இவ் வகரமுதலியிற் கூறியுள்ளதே பொருந்துவதை, அறிஞர் ஆய்ந்து காண்க.

அளையெடு-த்தல் *aḷai-y-eḍu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. வளைதோண்டுதல் (வின்.); to burrow. 2. புரைவைத்தல் (வின்.); to grow hollow, as in ulcers.

அளைவு *aḷaivu*, பெ. (n.) 1. கலப்பு; mixture (சா.அக.). 2. சோறு முதலியன குழைகை (அக.நி.); becoming soft, as rice by overboiling.

[அள் → அளை → அளைவு. 'வு' தொ.பெ. ஈறு.]

அற்கத்தி *aṟkatti*, பெ. (n.) திப்பிலி (மலை.); long pepper.

அற்கப்பிளப்பு *aṟkappiḷappu*, பெ. (n.) திரு நாமப்பாலை; oval-leaved China root, *Smilax macrophylla* (சா.அக.).

அற்கம்[1] *aṟkam*, பெ. (n.) அடக்கம்; self-restraint, self-control. "அற்கமொன்று மறிவுறாள்" (திவ். திருவாய். 6 . 5 : 4).

[ஒல்கு → அல்கு → அற்கு → அற்கம். ஒல்கு தல் = தளர்தல். அல்குதல் = சுருங்குதல்.]

அற்கம்[2] *aṟkam*, பெ. (n.) 1. வெண்டுளசி (பச். மூ.); white basil, *Ocimum alba.* 2. தும்பைச் செடி (சா.அக.); bitter leucas, *Leucas aspera.* 3. அலரி; sweet-scented oleander, *Nerium odorum.* 4. குன்றி; Indian or country liquorice, *Abrus precatorius.* 5. நந்தியாவட்டம்; broad-leaved rosebay, Ceylon jasmine, *Tabernaemontana coronaria* alias *Nerium coronarium.* 6. முருக்கு; Indian coral tree, *Erythrina indica.* 7. வன்னிமரம்; suma tree, *Prosopis spicigera.* 8. வேம்பு; margosa, *Azadirachta indica.*

அற்கரா *aṟkarā*, பெ. (n.) பேயிலுப்பை; wild mohwah, *Bassia latifolia* (சா.அக.).

அற்காமை *aṟkāmai*, பெ. (n.) நிலையாமை (அக.நி.); impermanence.

[அல்குதல் = தங்குதல். அல்கு → அற்கு → அற்காமை. 'ஆ' எ.ம.இ.நி. 'மை' பண்.பெ. ஈறு.]

அற்கு-தல் *aṟku-*, 5 செ.கு.வி. (v.i.) நிலை பெறுதல்; to be permanent, to remain, endure. "அற்கா வியல்பிற்றுச் செல்வம்" (குறள், 333).

[அல்கு → அற்கு.]

அற்கெந்தி *aṟkendi*, பெ. (n.) (சிவ.) அரைமதி (அர்த்தசந்திரன்) என்னும் ஓகத் தாவு (யோக ஸ்தானம்); the yogic centre *araimadi*. 'சாந்தியா தீத மற்கெந்தி" (தத்துவப். 189).

[ஒருகா. அரைக்காந்தி → அற்கெந்தி.]

அற்பகதம் *aṟpagadam*, பெ. (n.) வாழை (பச். மூ.); plantain tree, *Musa paradisiaca*.

அற்பரம் *aṟparam*, பெ. (n.) மக்கட் படுக்கை (சது.); bed, mattress.

அற்பருத்தம் *aṟparuttam*, பெ. (n.) வாழை (மலை.); plantain, *Musa paradisiaca*.

அற்புத்தளை *aṟpu-t-taḷai*, பெ. (n.) நேசக்கட்டு; bond of love or friendship. "அற்புத் தளை யறப் பரிந்திட் டானே" (சீவக. 2885).

[அன்பு + தளை (கட்டு). 'ற்' புணர்ச்சித் திரிபு.]

அற்றகாரியம் *aṟṟa-kāriyam*, பெ. (n.) தீர்ந்த செய்தி, முடிந்த கருமம் (சிலப். 17, முன்னிலைப். 2, உரை); settled fact, matter decided upon.

[அறு → அற்ற (இ.கா.பெ.எ.). **Skt.** kārya > த. காரியம். அறுதல் = தீர்தல், முடிதல்.]

அற்றகுளம் *aṟṟa-kuḷam*, பெ. (n.) நீர்வற்றிய குளம்; the tank in which water has dried up. "அற்ற குளத்தின்" (மூதுரை, 17).

ம. அற்றகுழ

[அறு → அற்ற (இ.கா.பெ.எ.). குள் → குளம்.]

அற்றகுற்றம் *aṟṟa-kuṟṟam*, பெ. (n.) 1. குற்றங் குறை; defect or deficiency. 2. கேடிழப்பு; loss or damage.

ம. அற்றகுற்றம்

[அறு → அற்றம் + (குறு) → குற்றம்.]

அற்றசெம்பு *aṟṟa-šembu*, பெ. (n.) களிம்பற்ற செம்பு; copper free from verdigris, refined copper (சா.அக.).

[அறு → அற்ற (இ.கா.பெ.எ.). செம் → செம்பு. அறுதல் = நீங்குதல், இல்லாதிருத்தல்.]

அற்றநோய் *aṟṟa-nōy*, பெ. (n.) தீர்ந்த நோய்; cured disease (சா.அக.).

[அறு → அற்ற (இ.கா.பெ.எ.).]

நோய் பார்க்க; see *nōy*.

அற்றப்படு-தல் *aṟṟa-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. இல்லாதிருத்தல்; to be unavailable. "ஆளற்றப்பட் டிரந்தாள்" (திவ். இயற். திருவிருத். 30). 2. மறதியாயிருத்தல், கவனம் இடையறவுபடுதல்; to be forgetful. 'பொச் சாப்பென்பது அற்றப்படுதல்; அஃதாவது, பாதுகாத்துச் செல்கின்ற பொருட்கண் யாதானும் ஓரிகழ்ச்சியான் இடையறவுபடு தல்' (தொல். பொருள். மெய்ப். 12, பேரா. உரை).

[அறு = அற்றம். 'அம்' தொ.பெ. ஈறு. அற்றம் + படு (து.வி.) – அற்றப்படு.]

அற்றபேச்சு *aṟṟa-pēccu*, பெ. (n.) முடிவான பேச்சு; the last word in a bargain or agreement.

[அறு → அற்ற (இ.கா.பெ.எ.). பேசு → பேச்சு (முத.இரட்.தொ.பெ.).]

அற்றம்[1] *aṟṟam*, பெ. (n.) 1. நீங்குகை, விலகுகை; separation, leaving. 2. இடை விடுகை; discontinuity, break. "அற்றமில் பெரும்படை" (சீவக. 565). 3. ஆடை நீங்கிய நிலை, மொட்டைக்கட்டை; nudity. "அற்றங் காவாச் சுற்றுடைப் பூந்துகில்" (மணிமே. 3 : 139). 4. அவமானம்; shame. "அற்ற மறைக்கும் பெருமை" (குறள், 980). 5. ஆள் நீங்கிய சமையம்; the time of a person's being away. "தந்தையை யற்ற நோக்கியே" (கம்பரா. பால. திருவவ. 40). 6. (தடை நீங்கிய) தகுந்த சமையம் (அவகாசம்) (சூடா.); occasion, opportunity. 7. பொய்; untruth, lie. "அற்ற மின்மையி னவல நீங்கினார்" (சீவக. 1764). 8. (பொய் நீங்கிய) உண்மை (பொதி. நி.); truth. 9. (செல்வம் நீங்கிய) வறுமை; destitution, poverty. "பண்பிலார்க் கற்ற மறிய வுரையற்க" (நாலடி. 78). 10. கேடு; loss, harm. 11. அழிவு; destruction, ruin. "அறிவற்றங் காக்குங் கருவி" (குறள், 421).

12. அச்சம்; fear (சா.அக.). 13. வருத்தம்; suffering. "அற்றமழி வுரைப்பினும்" (தொல். பொருள். கற். 9). 14. சோர்வு; loosening, weakening, relaxing. "கொண்கன் முயக் கற்றம் பார்க்கும் பசப்பு" (குறள், 1186) (செ.அக.); distraction, stupor (சா.அக.). 15. மெலிவு; leanness (சா.அக.). 16. அறுதி (நாநார்த்த.); termination. 17. முடிவு (பொதி.நி.); end, conclusion.

ம. அற்றம்

[அறு → அற்றம். 'அம்' தொ.பெ. ஈறு.]

அற்றம்[2] *aṟṟam*, பெ. (n.) 1. **சற்று, சிறிது** (பொதி.நி.); a little, bit. 2. **துடி** (பொதி. நி.); moment of time. 3. **நாய்** (பொதி.நி.); dog.

[அல் = சிறிது, சிறுதுண்டு. அல்லுச்சில்லுப் படுதல் = சிறிதுசிறிதாகக் கெடுதல். அல் → அல்கு. அல்குதல் = சுருங்குதல். அல் → அற்றம். ஒ.நோ: கொல் → கொற்றம், வெல் → வெற்றம். 'அம்' தொ.பெ. ஈறு.]

நாய் இழிவாகக் கருதப்படுவதனால் அற்றம் எனப்பட்டதுபோலும். இனி, ஆளற்ற நிலையிற் காவல் காப்பது என்று கொள்ளின், அறு என்பது மூலமாகும். அறு → அற்றம்.

இனி, அல்ப (நாய்) என்னும் வடசொற் றிரிபென்று கொள்ளவும் இடமுண்டு.

அற்றவன் *aṟṟavaṉ*, பெ. (n.) பற்றற்றவன்; one who has renounced all ties. "அற்றவர்க் கற்றோன்" (திருவானைக். நைமி. 29).

[அறு → அற்ற (இ.கா.பெ.எ.). அற்ற + அவன் – அற்றவன்.]

அற்றறாவாயு *aṟṟaṟā-vāyu*, பெ. (n.) **வயிற்றில் முழுவதும் நீங்காத வளியால் (வாயுவால்) செரியாமை ஏற்பட்டு, நாளும் புளித்தேப்பமும் வலுக்குறைவு உடம்புக் கொதிப்பு முதலிய குணங்களும் உண்டாகும் செரியாவளி (குன்ம வாயு) நோய்**; dyspepsia arising from indigestion due to the retention of gas in the stomach, and marked, by sour belch, weakness, a feeling of glowing heat in the system, etc., *Flatulent dyspepsia* (சா.அக.).

[அறு → அற்று (இ.கா.வி.எ.) + அறா (ஈ.கெ. எ.ம.பெ.எ.) + **Skt.** vāyu.]

அற்றறுதி *aṟṟaṟudi*, பெ. (n.) தொடர்பு நீங்குகை; separation, severance of connection. எனக்கும் அவனுக்கும் இன்றோடு அற்றறுதியாகி விட்டது.

[அறு → அற்று (இ.கா.வி.எ.) + அறுதி. அறு → அறுதி. 'தி' தொ.பெ. ஈறு.]

அற்றறுதிபற்றறுதி *aṟṟaṟudi-paṟṟaṟudi*, பெ. (n.) **முற்றுந் தொடர்பு நீங்குகை**; complete separation, absolute severance of connection. அப்பன் இறந்தபின் அண்ணன் தம்பிமார்க்குள் அற்றறுதிபற்றறுதி யாகிவிட்டது.

[பற்று + அறுதி – பற்றறுதி. அறு → அறுதி. 'தி' தொ.பெ. ஈறு. 'அற்றறுதி பற்றறுதி' பொருளை மிகுக்க வந்த எதுகை மரபிணைமொழி.]

அற்றறுதி பார்க்க; see *aṟṟaṟudi*.

அற்றார் *aṟṟār*, பெ. (n.) 1. **பொருளில்லாதவர்**; destitute persons. "அற்றா ரழிபசி தீர்த்தல்" (குறள், 226). 2. **உறவினரில்லாதவர்**; those who have no relation; "அற்றாரைத் தேறுத லோம்புக" (குறள், 506). 3. **தம்மை இறைவனுக்கு ஒப்படைத்தவர்**; those who have dedicated themselves to the service of God. "முதல்வன் பாதத் தற்றா ரடியார்" (தேவா. 7.94:10). 4. **இறந்தவர்**; dead persons (சா. அக.).

[அறு → அற்ற (இ.கா.பெ.எ.) + அவர் – அற்றவர் → அற்றார் (வினையா.பெ.).]

அற்று[1] *aṟṟu*, பெ. (n.) **அத்தன்மையது**; one of such quality, impers. sing. "மறந்தனை யெம்மை யற்றால்" (கந்தபு. அசுர. உருத் திரர்கே. 6). —, வி. (v.) **அது அதையொத்தது, போன்றது**; is like that, is of the same kind, became or has become like that, impers. sing. finite verb. "அவ்வளவில் அள்ளிக்கொள் வற்றே பசப்பு" (குறள், 1187). —, இடை. (part.) **ஓர் உவமவுருபு** (தொல். பொருள். உவம. 11, பேரா. உரை); an adverbial word of comparison.

[அன் + து – அற்று. 'து' ஒன்.பா. ஈறு. அன்னது (அன் + அது) என்பது ஈற்றின் அகர முதல் தொக்கு அற்று என்றாயிற்று. ஒ.நோ: என்னது → எற்று (என் + து).]

அற்று[2] *aṟṟu*, இடை. (part.) **ஒரு சாரியை** (நன். 224); an euphonic increment.

எ-டு:

அவை + ஐ (2ஆம் வே.உ.) – அவற்றை
பல + இன் (6ஆம் வே.உ.) – பலவற்றின்

தொல்காப்பியர், அற்றுச் சாரியையை வற்றுச்சாரியை என்று கொண்டு, ஐகார வீற்றுச் சுட்டுச் சொன்முன் வகரங்கெடும் என்பர்.

"இன்னே வற்றே யத்தே யம்மே
....
அன்ன வென்ப சாரியை மொழியே"
(தொல். எழுத்து. புண. 17),

"வஃகான் மெய்கெடச் சுட்டுமுத லைம்முன்
அஃகான் நிற்ற லாகிய பண்பே"
(ஷை 20).

தொல்காப்பியர், சிலவற்றை, பலவற்றை என்னும் புணர்ச்சொற்களில் வரும் வகர வுடம்படுமெய்யை, சாரியையொடு சேர்ந்த வெழுத்தாகக் கொண்டுள்ளார்போலும்! அது பொருந்தாது.

அற்றுப்போ-தல் *aṟṟu-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) 1. **இடைமுறிதல்**; to be severed, to be broken as a string. 2. **முழுவதும் நீங்குதல்;** to cease completely, as a disease. நோய் முழுவதும் அற்றுப்போயிற்று. 3. **ஓர் உயிரினம் இறந்துபடுதல்**; to become extinct, as a species. ஓதிமம் (அன்னம்) தமிழ்நாட்டில் அற்றுப் போயிற்று. 4. **முழுவதும் கைவருதல்;** to have complete possession (Com.u.) (செ.அக.).

[அறு → அற்று (இ.கா.வி.எ.). 'போ' ஒழிதலைக் குறிக்கும் து.வி.]

அற்றுவிடல், *aṟṟu-viḍal*, 20 செ.கு.வி. (v.i.) **அற்றுப்போ-தல்** 1, 2, 3 பார்க்க; see *aṟṟu-p-pō-* 1, 2, 3.

['விடு' நீங்கல் குறிக்கும் து.வி.]

அற்று பார்க்க; see *aṟṟu*.

அற்றூரம் *aṟṟūram*, பெ. (n.) **மரமஞ்சள்**; tree turmeric.

அற்றேல் *aṟṟēl*, இடை. (conj.) அப்படியானால்; if so. 'அற்றேல், கேட்டோர் மாணாக்கரும் கேட்பிப்போர் ஆசிரியரு மாகலான்' (நன். சிறப்புப்பாயி. சிவஞான. விருத்தி. பக். 13).

[அன்னது → அற்று (அன் + து) + ஏல். என் → எனில் (எ.கா.வி.எ.) → ஏல் (எ.கா.வி.எ. ஈறு).]

அற்றை *aṟṟai*, கு.பெ.எ. (adj.) 1. **அந்நாட்குரிய**; of that day. "அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்" (புறநா. 112 : 1). "அற்றைவெஞ் சமரில்" (பாரத. பதினே. 2). 2. **சிறிய, முதன்மையல்லாத;** little, trifling. அற்றைக் காரியம் (யாழ்ப்.).

[அன்று → அற்றை. வலித்தலும் ஐகாரச் சாரியையும் புணர்ச்சி விளைவு.]

அற்றைக்கூலி *aṟṟai-k-kūli*, பெ. (n.) **அன்றன்று பெறும் நாட்கூலி;** daily wages.

[அன்று → அற்றை + கூலி. கூலம் → கூலி.]

அற்றை பார்க்க; see *aṟṟai*.

அற்றைக்கூழ் *aṟṟai-k-kūḻ*, பெ. (n.) **மாவைப் புளிக்க வையாது அன்றே காய்ச்சும் கேழ்வரகு கூழ்**; porridge made out of unleavened ragimeal.

[அன்று → அற்றை + கூழ். குழை → கூழ்.]

அற்றைக்கொத்து *aṟṟai-k-kottu*, பெ. (n.) **நாள்தோறும் தவசமாகக் கொடுக்குங் கூலி;** daily wages, paid in kind.

[அன்று → அற்றை + கொத்து. ஒருகா. குத்து → கொத்து = குத்துக்குத்தாக அள்ளிப் போடும் தவசம்.]

அற்றைத்திங்கள் *aṟṟai-t-tiṅgaḷ*, பெ. (n.) **அப்பொழுதை நிலா;** the Moon at that time. "அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்" (புறநா. 112 : 1).

[அன்று → அற்றை + திங்கள். திகழ் → திங்கள்.]

அற்றைநாள் *aṟṟai-nāḷ*, பெ. (n.) **அந்நாள்;** that day. "யான்காவல் பூண்ட வற்றைநாண் முதலா" (அரிச்சந். விவாக. 29).

[அன்று → அற்றை + நாள். நள் → நாள்.]

அற்றைநிலை *aṟṟai-nilai*, பெ. (n.) **நோயாளிக்கு நாட்படியுள்ள உடம்பின் நிலைமை**; the daily condition of a patient (சா.அக.).

[அன்று → அற்றை. நில் → நிலை.]

அற்றைப்படி *aṟṟai-p-paḍi*, பெ. (n.) **நாள்தோறும் உணவிற்காக அளிக்கப்படும் பண்டம் அல்லது பணம்;** daily allowance, either in kind or cash. 'நற்பரிகள் ஐயாயிரத்துக்கும் அற்றைப்படி யாம்படி கொடுத்து' (பாரத வெண். 161, உரை).

[அன்று → அற்றை. படி (அளவை ஆகு.) = படியாலளக்கப்படும் பொருள், அதன் விலை மதிப்பான பணம்.]

அற்றைப்பரிகாரம் *aṟṟai-p-parigāram*, பெ. (n.) 1. **உடற்கேட்டிற்கு உடனே செய்யும் மருத்துவ**

உதவி; first aid. 2. துன்பந் தீர்க்க உடனே செய்யும் நல்வினை; immediate relief.

[அன்று → அற்றை. Skt. parihāra > த. பரிகாரம்.]

அற்றைப்பரிசம் *aṟṟai-p-pariśam*, பெ. (n.) விலைமாதர் அன்றன்று பெறும் கூலி (சிலப். 5:51, அடியார்க். உரை); daily hire of a harlot.

[அன்று → அற்றை. பரிசு → பரிசம்.]

அற்றைப்பாடு *aṟṟai-p-pāḍu*, பெ. (n.) 1. அன்றன்று செய்யும் உழைப்பு; daily labour. 2. அன்றன்று வேண்டிய உணவுப்பேறு; earning of the daily bread. அற்றைப்பாடு கழிய வேண்டுமே ! (உ.வ.).

[அன்று → அற்றை. படு → பாடு.]

அற்றைப்பிழைப்பு *aṟṟai-p-piḻaippu*, பெ. (n.) அன்றன்று உணவுதேடும் வாழ்க்கை; living from hand to mouth, poor living.

[அன்று → அற்றை. பிழை → பிழைப்பு.]

அற்றைப்பொழுது *aṟṟai-p-poḻudu*, பெ. (n.) அந்த நேரம், அந்த நாள்; that time, that day. அற்றைப் பொழுதிற்கு அப்படிச் செய்ய வேண்டியிருந்தது (உ.வ.).

[அன்று → அற்றை. போழ் → போழ்து → பொழுது.]

அற்றைமருந்து *aṟṟai-marundu*, பெ. (n.) நோயாளிக்கு நாள்தோறும் கொடுக்கும் மருந்து; the daily medicine prescribed for a patient.

[அன்று → அற்றை. மரு → மருந்து.]

அற *aṟa*, கு.வி.எ. (adv.) 1. முழுதும்; wholly, entirely, quite. "வகையறச் சூழாது" (குறள், 466). 2. மிகவும்; intensely, excessively. "அறவே துயர்செய்து" (கந்தபு. அசுர. காசிபன்பு. 15). 3. தெளிவாக; clearly. "அற மறக் கண்ட நெறிமா ணவையத்து" (புறநா. 224 : 4). 4. செவ்வையாக; thoroughly, properly. திண்ணையை அறக்கூட்டு (உ.வ.).

ம. அற

[அறு → அற (நி.கா.வி.எ.) = நீங்க, குறை நீங்க, குறையில்லாவாறு.]

அறக்கட்டல் *aṟa-k-kaṭṭal*, தொ.பெ. (vbl.n.) பிள்ளைபெற்றவுடன் பெற்றவளின் வயிற்றை இறுக்கமாகக் கட்டல்; binding very tight, as the abdominal belt worn by a woman after delivery (சா.அக.).

[அறு → அற (நி.கா.வி.எ.). கட்டு → கட்டல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அறக்கடவுள் *aṟa-k-kaḍavuḷ*, பெ. (n.) 1. அறத் தெய்வம் (தருமதேவதை) (குறள், 204, உரை); the god of virtue, personified. 2. கூற்றுவன்; the god of death, Yama. "தொல்லறக் கடவு ளருளுட னளித்த" (பாரத. நாடுகர. 3). 3. கூற்றுவனின் தோற்றரவாகக் (அவதாரமாகக்) கருதப்பட்ட விதுரன்; Vidura, an uncle of the Pāṇḍavas, as the incarnation of Yama. "நல்லறக் கடவுளுக்கு முரையா" (பாரத. வாரணா. 53).

[அறம் + கடவுள். கட → கடவுள்.]

அறம் பார்க்க; see *aṟam*.

அறக்கடை *aṟa-k-kaḍai*, பெ. (n.) தீவினை, கரிசு (பாவம்); sin. "அறக்கடை தணப்ப" (காஞ்சிப்பு. பதிக. 4).

[அறம் + கடை. கட → கடை.]

அறன்கடை பார்க்க; see *aṟaṉ-kaḍai*.

அறக்கண்டி-த்தல் *aṟa-k-kaṇḍi-*, 4 செ. குன்றாவி. (v.t.) நோயை முழுதும் நீக்குதல்; to effect a radical cure, as in a disease (சா. அக.).

[அற = முழுதும். கண்டி → கண்டித்தல் (தொ.பெ.). 'தல்' தொ.பெ. ஈறு.]

அறக்கப்பறக்க *aṟakka-p-paṟakka*, கு.வி.எ. (adv.) 1. மிக விரைவாக; in great haste. அறக்கப்பறக்க வருகிறாள். 2. ஊக்கமாக; diligently.

[பற → பறக்க (நி.கா.வி.எ.) = விரைவாக. 'அறக்கப்பறக்க' எதுகை மரபிணைமொழி.

அறுக்கப்பொறுக்க பார்க்க; see *aṟukka-p-poṟukka*.

அறக்கப்பாலை *aṟakkappālai*, பெ. (n.) திருநாமப்பாலை (சித்.அக.); oval-leaved China root.

அறக்கம் *aṟakkam*, பெ. (n.) 1. அறக்கப்பாலை பார்க்க; see *aṟakkappālai*. 2. சுக்கு; dried ginger (சா.அக.).

அறக்கமா *aṟakkamā*, பெ. (n) புளிமா; sour mango, *Spondias mangifera* (சா.அக.).

அறக்கருணை *aṟa-k-karuṇai*, பெ. (n.) **அரவணைக்கும் அறவருள், மறவருள் என்பதற்கு எதிர்;** embracing or protecting divine grace, opp. to *maṟavaruḷ*.

[*அறம்* + **Skt.** karuṇā > **த.** *கருணை.*]

க்ரு, க்ரூ என்னும் வேர்ச்சொற்களினின்று கருண (கருணா) என்னும் வடசொல் திரிந்துள்ளதாக, மானியர் வில்லியம்சு தம் சமற்கிருத ஆங்கில அகரமுதலியிற் குறிக்கின்றார். 'க்ரு' என்னும் முதனிலைக்குச் 'செய்' என்பதே அடிப்படைப் பொருள். 'க்ரூ' என்னும் முதனிலைக்கு எறி, சிதறு, குவி, ஊற்று, நிரப்பு, மூடு என்னும் பொருள்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றேனும் அருட் கருத்தொடு தொடர்புள்ளதா யில்லை.

'கரைதல்' என்னும் தென்சொல்லிற்கு உருகுதல், இளகுதல், இரங்குதல், அருள்தல் என்னும் பொருள்கள் உள்ளன. இரங்குதல் என்னும் பொருளில் மனங்கரைதல் என்னும் வழக்கும், தமிழகத்தில், சிறப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ளது. ஆதலால், 'கரை' என்னும் தென்மொழி முதனிலையினின்றே கருண (கருணா) என்னும் வடசொல் தோன்றியிருத்தல் வேண்டும். இங்ஙனம் நூற்றுக் கணக்கான வடசொற்கள் தென்மொழி முதனிலைகளினின்று தோன்றியுள்ளன.

எ-டு : புரிதல் = விரும்புதல். புரி > **Skt.** prī, priya, prīti.

அறக்கழிவு *aṟa-k-kaḻivu*, பெ. (n.) **உலக வழக்கத்திற்குப் பொருத்தமில்லாமை;** inconsistency with the normal customs and practices of the world. "அறக்கழி வுடையன பொருட் பயம்படவரின்" (தொல். பொருள். பொருளியல், 24).

[*அறம்* + *கழிவு. கழி* → *கழிவு.*]

அறக்களவழி *aṟa-k-kaḷa-vaḻi*, பெ. (n.) (புறப்.) **வேளாண்டொழிலைக் கூறும் புறத்துறை** (மாற. 120, உரை); (Purap.) theme of agriculture.

[*அறம்* + *களம்* + *வழி. கள்* → *களம்.*]

அறக்களவேள்வி *aṟa-k-kaḷa-vēḷvi*, பெ. (n.) **ஆரிய வேத வேள்வி, மறக்கள வேள்வி என்பதற்கு எதிர்;** sacrifice according to Vēdic rites opp. to *maṟakkaḷa vēḷvi*. "அறக்கள வேள்வி செய்யா தியாங்கணும்" (சிலப். 28 : 131).

[**அறம்** + *களம்* + *வேள்வி. கள்* → *களம். வேள்* → *வேள்வி.*]

அறக்கற்பு *aṟa-k-kaṟpu*, பெ. (n.) **அமைதிநிலையுள்ள கற்பு** (சிலப். பதி. 42, அடியார்க். உரை), **மறக்கற்பு என்பதற்கு எதிர்;** chastity unobtrusive, opp. to *maṟakkaṟpu*.

[*அறம்* + *கற்பு. கல்* → *கற்பு.*]

கற்பு பார்க்க; see *kaṟpu*.

அறக்காடு *aṟa-k-kāḍu*, பெ. (n.) **சுடுகாடு** (வின்.); cremation ground.

[*அறம்* + *காடு.*]

ஆண்டி முதல் அரசன் வரை அனைவர்க்கும் ஒரே நிலைமை வகுப்பதால், சுடலை அறக்காடெனப்பட்டது. கூற்றுவனுக்கு அறக்கடவுள் என்னும் பெயருண்மை நோக்குக.

அறக்குளாமீன் *aṟakkuḷā-mīṉ*, பெ. (n.) **மேற்புறம் நீலமாயும் அடிப்புறம் வெள்ளையாயுமுள்ள நால்விரல (அங்குல) நீளக் கடல்மீன்** (வின்.); seer fish, bluish above, silvery below, attaining 4 inches in length, *Cybium commersonii*.

அறக்கூர்மை *aṟa-k-kūrmai*, பெ. (n.) **மிகக் கூர்மை;** excessive sharpness. 'அறக்கூர்மை முழுமொட்டை' (பழ.).

[*அற* = *மிக. கூர்* → *கூர்மை* (பண்.பெ.). **'மை'** *பண்.பெ. ஈறு.*]

அற பார்க்க; see *aṟa*.

அறக்கொள்(ளு)-தல் *aṟa-k-koḷ(ḷu)-*, 10 செ. குன்றாவி. (v.t.) **முழுதும் பெறுதல்;** to receive in full. 'விலைத் திரவியமும் இறைத் திரவியமும் அறக்கொண்டு' (S.I.I. iii, 16).

[*அற* = *மிக.*]

அற பார்க்க; see *aṟa*.

அறகப்பிளப்பி *aṟaṟappiḷappi*, பெ. (n.) **அறக்கப்பாலை** பார்க்க; see *aṟakkappālai*.

அறங்கடை *aṟaṅgaḍai*, பெ. (n.) **தீவினை, கரிசு (பாவம்);** sin. "அறங்கடை நில்லாது" (மணிமே. 11 : 113).

[**அறன்கடை** → **அறங்கடை.**]

அறன்கடை பார்க்க; see *aṟaṉ-kaḍai*,

அறங்காவல் *aṟaṅ-kāval*, பெ. (n.) **கோயில், சத்திரம் முதலியன காக்குந்தொழில்** (S.I.I. iv, 492); trusteeship of temples, choultries, etc.

[*அறம்* + *காவல். கா* → *காவல்* (தொ.பெ.). *'அல்'* தொ.பெ. ஈறு.]

அறங்கூறவையம் *aṟaṅ-kūṟ(u)-avaiyam*, பெ.(n.) **வழக்காடு மன்றம், அறமன்றம், முறையவை** (**நியாய சபை**); court of law where justice is administered. ''அறங்கூ றவையத் துரை நூல் கோடி'' (சிலப். 5 : 135).

[அறம் + கூறு + அவையம். அவை → அவையம். 'அம்' பெ.பொ. பின்.]

அறங்கை *aṟaṅgai*, பெ. (n.) **அகங்கை**; palm of the hand. அறங்கையும் புறங்கையும் நக்கு கிறது (வின்.).

தெ. அறசேயி, அறசெய்யி.

['அகங்கை' என்பது 'புறங்கை' என்பதன் சேர்க்கையால் ஒத்தமைவு (analogy) முறையில் 'அறங்கை' எனத் திரிந்தது.]

'அகங்கை' என்பது எதுகைநோக்கி 'அறங்கை' எனத் திரிந்தது கொச்சை வழக்கு; ஆதலால், கொள்ளத் தக்கதன்று. 'அறங்கை' என்பது கொள்ளப்படின், 'எகனைமுகனை' (எதுகைமோனை) என்னும் கொச்சை வழக்கிலுள்ள 'எகனை' என்பதும் கொள்ளப் படல் வேண்டும். அது கொள்ளப்படாமை அறிஞர் அறிவர். 'ஆகவே' 'அறங்கை' என்பதும் கொள்ளப்படா தென்பதை அறிதல் வேண்டும்.

சில அகரமுதலிகளில் இச் சொல் இடம் பெற்றுள்ளதால், இங்குங் கொண்டு களையப் பட்டது.

அறச்சந்தகாரன் *aṟaccandakāraṉ*, பெ. (n.) **சாரைப்பாம்பு**; male of the rat-snake species. 'male cobra' என்று சா. அகரமுதலியிற் குறிக்கப்பட்டுள்ளது பொருந்துமா என்பது தெரியவில்லை.

அறச்சபை *aṟa-c-cabai*, பெ.(n.) **அறங்கூறவை**; body of persons, elected or appointed, to administer justice.

அறச்சாலாபோகம் *aṟa-c-cālā-pōgam*, பெ. (n.) **அறச்சாலைகட்கு விடப்பட்ட மானியம்** (S.I.I. iii, 389); endowment of land for maintenance of choultries, alms-houses, etc.

[அறம் + சாலா + போகம். சாலை > **Skt.** *sālā.* **Skt.** bhōga > *தெ. போகம் = நுகர்ச்சி. புகுதல் = உண்ணுதல். புகு → புகா = உணவு. புகு >* **Skt.** bhuj → bhōga.*]*

புகு பார்க்க; see *pugu.*

அறச்சாலை *aṟa-c-cālai*, பெ. (n.) **அறம் வழங்குமிடம் (தருமசாலை), ஊட்டுப்புரை**; alms-house, feeding house. ''பிறரறச் சாலை கள் காப்போரும்'' (தணிகைப்பு. அகத். 340).

[அறம் + சாலை. சால் → சாலை.]

அறச்செட்டு *aṟa-c-ceṭṭu*, பெ. (n.) **கடுஞ்செட்டு**; excessive frugality, parsimony. 'அறச்செட்டு முழுநட்டம்' (பழ.).

[அற (வி.எ.) = மிக, அளவிற்கு மிஞ்சி. செட்டி → செட்டு = செட்டியின் தன்மை, சிக்கனம்.]

செட்டி பார்க்க; see *šeṭṭi.*

அறச்செல்வி *aṟa-c-celvi*, பெ. (n.) **சிவை, மலைமகள்** (**பார்வதி**) (சிந்தா. நி. 351); Pārvathi, consort of Šiva.

[அறம் + செல்வி. செல்வம் → செல்வி. 'இ' பெ.பா. ஈறு.]

காஞ்சிபுரத்தில் 32 அறங்கள் செய்ததாகத் தொன்மம் (புராணம்) கூறுவதால், சிவை அறச்செல்வி யெனப்பட்டாள்.

அறச்சோலை *aṟa-c-cōlai*, பெ. (n.) **கோயிலி னுட்சோலை**; grove within a temple. ''அறச் சோலை தானும் பிரானும் பயின்றாடு மச்சோலையே'' (தக்கயாகப். 65).

[அறம் + சோலை.]

''புறச்சோலை பூதங்க ளும்பேயும் யாவும்
புகுஞ்சோலையே
அறஞ்சோலை தானும் பிரானும்
பயின்றாடு மச்சோலையே''

என்னுந் தாழிசையில் புறம் அறம் என்பன எதிர்ச்சொற்களா யமைந்திருப்பதாலும், தக்கயாகப்பரணி யுரையாசிரியர் 'அறச் சோலையாவது, பரமேசுவரியிருக்குங் கோயிற் சோலையான உட்சோலை' என்று சிறப்புரை வரைந்திருப்பதாலும், இதில் அறம் என்பது அறங்கை புறங்கை என்பதிற்போல எதுகை நோக்கித் திரிந்த அகம் என்னுஞ் சொல்லோ வென ஐயுறக்கிடக்கின்றது. அத் திரிபு உண்மையாயின், திரிக்கும்வழித் திரித்தலான செய்யுள் திரிபாகக் கொள்ளப்படும்.

அறசம் *aṟašam*, பெ. (n.) **கத்தரி** (சங்.அக.); brinjal.

அறசோகணக்கு *aṟašōkaṇakku*, பெ. (n.) 1. **காட்டுக்கரணை** (பரி.அக.); purple - stalked dragon root. 2. **கரணைக் கிழங்கு** (சங்.அக.);

elephant yam — white yam, *Dracontium polyphyllum* (சா.அக.).

அறணை *aṟaṇai*, பெ. (n.) 1. **காட்டுக்கரணை** (மூ.அ.); purple - stalked dragon plant (செ. அக.). 2. **அள்ளூரல்**; wild elephant yam, *Dracontium polyphyllum* (சா.அக.).

அறணையம் *aṟaṇaiyam*, பெ. (n.) **அறணை** 2 பார்க்க; see *aṟaṇai* 2.

அறத்தவிசு *aṟa-t-tavišu*, பெ. (n.) **அறங்கூறதிகாரியின் பீடம், தீர்ப்பாளன் இருக்கை**; judge's seat in court. "அறத்தவி சிருப்போ ரேவலாடவ ரோடும் போந்து" (திருவிளை. மாமனாக. 17).

[*அறம் + தவிசு. ஒருகா. தவ்வு → தவிசு = தடுக்கு, சிற்றிருக்கை. தவ்வுதல் = சிறுத்தல், குறைதல். இனி,* **Pers.** divāsī > **த.** *தவிசு என்றுமாம்.*]

அறத்தளி[1] *aṟa-t-taḷi*, பெ. (n.) **ஒரு பழ நகர்**; an ancient town.

[*அறம் + தளி (கோயில்).*]

அறத்தளி[2] *aṟa-t-taḷi*, பெ. (n.) **உவளகம் (அந்தப்புரம்)** (சிந்தா. நி. 349); zenana, harem.

[*அகம் → அறம் + தளி (கோயில்).*]

பண்டைக் காலத்தில் அரசனின் அரண்மனையும் திருக்கோயில் போலத் தெய்வத் தன்மை யுள்ளதாகக் கருதப்பட்டது. அரசியர் அரண்மனையின் உட்புறத்தில் வதிந்ததனால், அவரிருக்கை அகத்தளி யெனப் பட்டது.

[*அகத்தளி → அறத்தளி.*]

அறங்கை பார்க்க; see *aṟaṅgai*.

அறத்தின்செல்வி *aṟattiṉ-šelvi*, பெ. (n.) **அறத்தெய்வம் (தருமதேவதை)** (பிங்.); goddess of virtue.

[*அறம் + அத்து (சாரியை) + இன் (6ஆம் வே.உ.) + செல்வி. செல்வம் → செல்வி. 'இ' பெ.பா. ஈறு.*]

அறத்தின்சேய் *aṟattiṉ-šēy*, பெ. (n.) **கூற்றுவன் என்னும் அறக்கடவுளின் மகனாகக் கருதப் படுபவனும் பாண்டவருள் மூத்தவனுமான தருமன் என்னும் யுதிட்டிரன்** (சூடா.); Yudhiṣṭhira, the son of Yamadharma and the eldest of the Pāṇḍu princes.

[*அறம் → அத்து (சாரியை) + இன் (6ஆம் வே.உ.) + சேய் (மகன்).*]

அறத்தின்மூர்த்தி *aṟattiṉ-mūrtti*, பெ. (n.) 1. **அறத்தேவன்** (வின்.); the god of justice. 2. **சிவை, மலைமகள் (பார்வதி)** (வின்.); the consort of Šiva. 3. **திருமால்**; Viṣṇu. "அறத் தின் மூர்த்திவந் தவதரித்தான்" (கம்பரா. அயோத். மந்திரப். 36).

[*அறம் + அத்து (சாரியை) + இன் (6ஆம் வே.உ.) +* **Skt.** mūrti > **த.** *மூர்த்தி (வடிவன், திருமேனி).*]

அறத்துணைவி *aṟa-t-tuṇaivi*, பெ. (n.) **கற்புடை மனைவி**; chaste wife, virtuous helpmate, wife.

[*அறம் + துணைவி. துணை → துணைவன் (ஆ.பா.) — துணைவி (பெ.பா.). 'இ' பெ.பா. ஈறு.*]

அறத்துப்பால் *aṟattu-p-pāl*, பெ. (n.) **திருக்குறளின் முப்பால்களுள் முதலாவதும் அறத்தைப்பற்றிக் கூறுவதுமான பகுதி**; the first section of *Tirukkuṟaḷ* which treats of virtue, one of *muppāl*.

அறத்துவச்சளம் *aṟattu-vaccaḷam*, பெ. (n.) (சமணம்) **சமண சமயத்தைச் சார்ந்தவரை அதன் கண் நிறுத்தி அவரிடம் மிகுந்த அன்பு செலுத்துகை**; (Jain.) showing tender love towards the followers of Jainism and settling them firuly in their religion (மேருமந். 13 : 43).

[*அறம் +* **Skt.** vatsalatva > **த.** *வச்சளம். 'அத்து' சாரியை.* **Skt.** vatsalam = *பேரன்பு. வத்ஸலத்வ = பேரன்புத் தன்மை, பேரன்பு செய்கை.* **Skt.** vatsalatva > **த.** *வச்சலத்துவம் → வச்சளம்.*]

அறத்துறத்தல் *aṟa-t-tuṟattal*, தொ.பெ. (vbl.n.) **உலகப் பற்றை முழுதும் விட்டுவிடுதல்**; to renounce the world completely (சா.அக.).

[*அற (வி.எ.) = முற்றும். துற = துறத்தல் (தொ.பெ.). 'தல்' தொ.பெ. ஈறு.*]

அறத்துறுப்பு *aṟatt(u)-uṟuppu*, பெ. (n.) **ஐயப் படாமை, விருப்பின்மை, வெறுப்பின்மை, மயக்கமின்மை, பழியை நீக்கல், அழிந்தோரை நிறுத்தல், அறம் விளக்கல், பேரன்புடைமை என்னும் எண்வகை அறத்தன்மைகள்** (சூடா.); constituent parts of virtue, of which the principal ones being eight, viz., having no doubt, having no desire, having no aversion, clarity of mental vision, expiation, re-establishing the ruined, exposition of virtue and possession of great love.

[அறம் + உறுப்பு. 'அத்து' சாரியை, கிழமைப் பொருள்பட நின்றது.]

அறத்துறை *aṟa-t-tuṟai*, பெ. (n.) **அறநெறி** (**தருமமார்க்கம்**); path of virtue. "அறத்துறை யறிந்தநீ" (பாகவ. 1 . 8 : 40).

[அறம் + துறை. துறு → துறை.]

துறை பார்க்க; see *tuṟai*.

அறத்துறையம்பி *aṟa-t-tuṟai-y-ambi*, பெ. (n.) **பேராறுகளிலும் வெள்ளக்காலத்திலும் ஏழைகளை இலவசமாகக் கடத்தும் படகு**; ferry-boat conveying poor people free of charge over river, canal or strait. "உறுவருஞ் சிறுவரு மூழ்மா றுய்க்கு மறத்துறை யம்பி" (புறநா. 381 : 23-24).

[அறம் + துறை + அம்பி.]

அம்பி பார்க்க; see *ambi*.

அறத்தைக்காப்போன் *aṟattai-k-kāppōṉ*, பெ. (n.) (**அறத்தைக் காக்கும்**) **ஐயனார்** (பிங்.); *Aiyaṉār*, protector of virtue.

[அறம் + அத்து (சாரியை) + ஐ (2ஆம் வே. உ.) + காப்போன் (வினையா. பெ.). கா → காப்பவன் → காப்பான் → காப்போன். ஆன் (ஆ.பா. ஈறு) → ஓன்.]

அறத்தொடுநிலை *aṟattoḍu-nilai*, தொ.பெ. (vbl.n.) **அறத்தொடுநிற்றல்** பார்க்க; see *aṟattoḍu-niṟṟal*.

"ஆற்றா றஞ்சினும் அவன்வரைவு மறுப்பினும்
வேற்றுவரைவு நேரினும் காப்புக்கை மிகினும்
ஆற்றுறத் தோன்றும் அறத்தொடு நிலையே"
(நம்பியகப். 47).

[அறம் + அத்து (சாரியை) + ஒடு (3ஆம் வே. உ.) + நிலை (தொ.பெ.). நில் → நிலை.]

அறத்தொடுநிற்றல் *aṟattoḍu-niṟṟal*, தொ.பெ. (vbl.n.) (அகப்.) **தோழி தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலிக்கும் பெற்றோர்க்கும் படிமுறையாய் அறிவித்தல்**; (Agap.) maid's tactful and gradual revealing of the secret love affair of her young mistress to the foster-mother and parents of her mistress.

[அறம் + அத்து (சாரியை) + ஒடு (3ஆம் வே. உ.) + நிற்றல் (தொ.பெ.). 'தல்' தொ.பெ. ஈறு.]

தலைவியின் களவொழுக்கம் தோழிக்குந் தெரியாததாயின், தலைவியே முதற்கண் தோழிக்கு அறத்தொடு நிற்கும்.

"தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும்
பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்கும்
செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்கும்
நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு
நிற்கு மென்ப நெறியுணர்ந் தோரே"
(நம்பியகப். 48).

அறதேயன் *aṟa-tēyaṉ*, பெ. (n.) **மானிய அறப்பணிகளை நடத்துவோன்** (S.I.I. iv, 31); one who manages charitable endowments.

[அறம் + தேயன். **Skt.** dēya = செல்வம், பொருள். **Skt.** dēya > த. தேயம் → தேயன். இனி, தேயம் என்பது பக்கம் எனினுமாம். எ-டு. "நெறியி னாற்றிய அறிவன் றேயமும்" (தொல். பொருள். புறத். 20), "பின்சார் அயல்புடை தேவகை யெனாஅ" (தொல். சொல். வேற். 21). "கிழவோள் தேஎத்து" (இறை. 8).]

அறநிலை *aṟa-nilai*, பெ. (n.) 1. **அறப்பணிச் செல்வங்களைப் பாதுகாத்தற்குரிய நிலையம்** (இக்.வ.); institution or trust for the management of charities (Mod.). 2. **பிரமம் என்னும் ஆரிய மணவகை**; a form of Āryan marriage. 'பிரமம் என்பது, நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங் காத்தாற்குப் பன்னீராட்டைப் பிராயத்தாளை அணிகல னணிந்து கொடுப்பது. கொடாவிடின், ஓரிருதுக் காட்சி ஒருவனைச் சாராது கழிந்தவிடத்து ஒரு பார்ப்பனக் கொலையோடு ஒக்குமென்பது; அதனை அறநிலை யென்பது' (இறை. 1, உரை).

[அறம் + நிலை (தொ.பெ.). 'ஐ' தொ.பெ. ஈறு.]

அறநிலைப்பொருள் *aṟa-nilai-p-poruḷ*, பெ. (n.) **நெறிப்படி அரசன் பெறும் இறைப்பொருள்** (திவா.); just and rightful dues to a sovereign.

[அறம் + நிலை + பொருள்.]

அறநிலை பார்க்க; see *aṟa-nilai*.

அறநிலையறம் *aṟa-nilai-y-aṟam*, பெ. (n.) **நால்வகை வரணத்தாரும் தத்தம் நெறியிற் பிழையாவாறு அரசன் பாதுகாக்கை** (பிங்.); protection and maintenance by the king of the observance of caste rules by the four castes.

அறநிலையின்பம் *aṟa-nilai-y-iṉbam*, பெ. (n.) **ஒத்த கன்னியை மணந்து இல்லறத்தில் நின்று நுகரும் இன்பம்** (பிங்.); domestic happiness enjoyed by marrying a suitable woman.

[அறம் + நிலை + இன்பம். இன்பு → இன்பம்.]

அறநீர் *aṟa-nīr*, பெ. (n.) *அறனீர் பார்க்க*; see *aṟaṉīr*.

அறநூல் *aṟa-nūl*, பெ. (n.) *அறவொழுக்கநூல்* **(தரும சாத்திரம்)** (குறள், *388*, உரை); Code of Laws, treatise on civil and religious duties.

அறநெறி *aṟa-neṟi*, பெ. (n.) *1. அறவொழுக்க* **நெறி, நன்னெறி** (**தரும மார்க்கம்**); path of virtue. "அறிமி னறநெறி" (நாலடி. 172). *2.* **ஊசலாங்கொடி**; a creeper (சா.அக.).

அறநெறிச் சந்தேகசாத்திரி *aṟa-neṟi-c-candēga-śāttiri*, பெ. (n.) (கிறித்.) **மறைநூலாய்வு (சாத்திர பரிசீலனை) செய்வோன்**; (Chr.) casuist.

[அறம் + நெறி + **Skt.** sandēha + **Skt.** šāstrin. **Skt.** sandēha > **த.** *சந்தேகம்.* **Skt.** šāstrin > **த.** *சாத்திரி.]*

அறநெறிச்சாரம் *aṟa-neṟi-c-cāram*, பெ. (n.) **முனைப்பாடியார் இயற்றிய ஓர் அறநூல்**; name of a poem on the path of virtue by *Muṉaippāḍiyār*.

[அறம் + நெறி + சாரம்.]

அறப்பரிகாரம் *aṟa-p-parigāram*, பெ. (n.) *அறப் பரிசாரம் பார்க்க*; see *aṟa-p-parišāram* (சிலப். *2 : 85*, அரும்.).

அறப்பரிசாரம் *aṟa-p-parišāram*, பெ. (n.) **அடியார், துறவியர் முதலியவர்க்குச் செய்யும் பணிவிடை**; services rendered to devotees, ascetics, etc. "மறப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்" (சிலப். *2 : 85*).

[அறம் + பரிசாரம். **Skt.** paricāra > **த.** *பரி சாரம்.]*

அறப்பளீசுரசதகம் *aṟappaḷīšura-šadagam*, பெ. (n.) **அம்பலவாணக் கவிராயர் அறவொழுக்கம்பற்றிப் பாடிய நூறு பாட்டுக் கொண்ட ஒரு பனுவல் வகை**; a poem of 100 stanzas on virtue by Ambalavāṇakkavirāyar.

[அறப்பளி+ஈசுரன்+சதகம். **Skt.** īšvara> **த.** *ஈசுவரன்→ஈசுரன்.* **Skt.** šata *(நூறு)→* šataka > **த.** *சதகம்.]*

அறப்பளியில் எழுந்தருளியுள்ள இறைவனை (சிவனை)ப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட சதகம் அறப்பளீசுர சதகம் எனப் பட்டது. சதகம் என்பது தொண்ணூற்றாறு வகைப் பனுவல் (பிரபந்த) வகைகளுள் ஒன்றாகச் சொல்லப்படும்.

அறப்பாடல் *aṟa-p-pāḍal*, பெ. (n.) *1. அறம் பற்றிய பாட்டு*; song or poem on virtue. *2.* **பாடப்பட்டவர்க்குக் கேடு விளைக்கும் எழுத்து அல்லது சொல் அமைந்த பாட்டு** (வின்.); verse containing words or letters which bring about ruin or death to a person on whom the verse is made.

[அறம் + பாடல். பாடு → பாடல் (தொ. ஆகு.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அறப்பாடுபடு-தல் *aṟa-p-pāḍu-paḍu-*, 20 செ.கு. வி. (v.i.) *மிக* **உடல்வருந்தி யுழைத்தல்**; to work hard, labour.

[அற (வி.எ.) = மிக. படு → பாடு (தொ. பெ.). 'படு' து.வி.]

அறப்பார்-த்தல் *aṟa-p-pār-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* **தீர ஆராய்தல்**; to examine thoroughly. *2.* **ஒருவரை அழிக்க வழிதேடுதல்** (யாழ்ப்.); to take measures to ruin a person. *3.* **சூனியம் வைத்தல்**; to ruin a person by the evil influence of spirits, as by sorcery (சா.அக.).

[அற (நி.கா.வி.எ.) = நீங்க, கெட, அழிய, சாக. பார்த்தல் = வழிபார்த்தல்.]

அறப்புறங்காவல் *aṟa-p-puṟaṅ-kāval*, தொ.பெ. (vbl.n.) **அறத்திற்காக விடப்பட்ட மானியங் களைப் பாதுகாத்தல்**; protection of endowments of land to religious and social charities. "அறப்புறங் காவ னாடு காவலென" (நம்பியகப். 72).

[அறம் + புறம் + காவல். கா → காவல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அறப்புறம் *aṟa-p-puṟam*, பெ. (n.) *1.* கரிசு, **தீவினை (பாவம்)**; sin. "அறப்புறத் தினார் புரம் பொடித்த" (திருவிளை. தண்ணீர்ப். 9). *2.* **அறத்திற்கு விடப்பட்ட இறையிலி நிலம்**; lands endowed for charitable purposes and exempted from assessment; charitable endowments. "அறப்புறமு மாயிரம்" (சீவக. 76). *3.* **அறச்சாலை (தருமசாலை), ஊட்டுப்புரை**; alms-house, feeding house. "மடமறப் புற

நீர்ச் சாலை'' (திருவிளை. திருநாட். 33). 4. **ஆரியமறை (வேதம்) ஓதும் பள்ளி** (திவா.); place where the Vēdas are taught, school for Vēdic learning.

[அறம் + புறம். அகம் (உள்) × புறம் (வெளி, அயல்) = 1. அறத்திற்கு அயலான (மாறான) தீவினை (பாவம்). 2. இறை நிலத்திற்கு அயலான (மாறான) இறையிலி நிலம் அல்லது இடம். புறம் = வெளி, வெளிப்பக்கம், பக்கம், இடம்.]

[அறம் + போர்.]

அறப்போர் *aṟa-p-pōr*, பெ. (n.) 1. **அறநெறியைக் கடைப்பிடித்துச் செய்யும் போர்**; battle in which moral principles are strictly observed. 2. **மதத்தின்பொருட்டு அல்லது ஒருவரின் அல்லது ஒரு நாட்டாரின் விடுதலைக்காகச் செய்யும் போர்**; battle fought for a religious cause or for the liberation of a worthy person or an oppressed country.

அறம்[1] *aṟam*, பெ. (n.) 1. **நல்வினை**; good deed. 2. **ஐயம் (பிச்சை)**; alms. 3. **ஏழைகட்கு இலவசமாகக் கொடுப்பது**; free gift to the poor. 4. **நோயாளிகட்கு இலவசமாக மருந்தீகை**; free distribution of medicine to the sick (சா.அக.). 5. **நலமானது**; that which is salutary. ''அறத்துறை மாக்க டிறத்திற் சாற்றி'' (சிலப். 14 : 28). 6. **இன்பம் (சுகம்)**; happiness (சம்.அக. கை.). 7. **தகுதியானது**; that which is fitting or worthy. 8. **கற்பு**; chastity. ''அறத்தொடு நிற்குங் காலத் தன்றி அறத்தியல் மரபிலள் தோழி என்ப'' (தொல். பொருள். பொருளியல், 12). 9. **நோன்பு**; fasting. ''நலம்புரி நங்கை வைத்து நல்லறங் காக்க வென்றாள்'' (சீவக. 386). 10. **அறப்பயன் (புண்ணியம்)**; moral or religious merit. ''அறம்பாவ மென்னு மருங்கயிற் றாற்கட்டி'' (திருவாச. 1 : 52). 11. **சமயம்**; religious faith. ''அறனு மொன்றே யரசன்யான் வணிக னீயே'' (சீவக. 544). 12. **ஓதி (ஞானம்)**; wisdom. ''அறத்தின் விருப்புச் சிறப்பொடு நுந்த'' (ஞானா. பாயி. 5). 13. **அறச்சாலை**; feeding house. 'அறத்துக்குப் புறத்தன்' (T.A.S. i, 9). 14. **அறத்தெய்வம்**; goddess of virtue. ''காயுமே யன்பி லதனை யறம்'' (குறள், 77). 15. **நடுநிலையறம் பேணும் கூற்றுவன்**; god of death, as the impartial one. ''அறத்தின் மைந்தனுக்கு'' (பாரத. வாரணா. 111).

ம. அறம்; க. அற.

[அல்லுதல் = பொருந்துதல், உளம்பொருந்துதல், விரும்புதல், நட்புச்செய்தல், அன்புகூர்தல், அறஞ்செய்தல். அல் + பு – அல்பு. **ஒ.நோ**: வல் + பு – வன்பு. அல் → அலம் → அதம் → ஆதம் = அன்பு. ல → த, போலித்திரிபு. **ஒ.நோ**: சலங்கை → சதங்கை, லாலாட்டு → தாலாட்டு. அதம் → அறம். ஒ.நோ: மதம் → மறம்.]

அறம்[2] *aṟam*, பெ. (n.) 1. **கேடு, அழிவு**; ruin, destruction. 2. **கேடுண்டாக்குஞ் செய்யுட் சொல் அல்லது எழுத்து**; letters or words in a verse which cause harm or ruin. அறம் விழப் பாடினான்.

ம. அறம்; க., தெ. அற.

[அறுதல் = நீங்குதல், அழிதல். அறுத்தல் = நீக்குதல், அழித்தல். அறு → அறம். **ஒ.நோ**: கறு → கறம். 'அம்' தொ.பெ. ஈறு, பண்.பெ. ஈறு.]

அறம்பாடு-தல் *aṟam-pāḍu-*, 5 செ.குன்றாவி. (v.i.) 1. **அறநூல் கூறுதல்**; to state or declare, as a poetic treatise on virtue. ''அறம்பா டிற்றே யாயிழை கணவ'' (புறநா. 34 : 7). 2. **தீச்சொற் பட்டுத் தீங்குண்டாகப் பாடுதல்**; to compose verse which contains letters or words that cause harm or ruin. அந்தப் புலவரைப் பகைத்துக்கொள்ளக் கூடாது; அறம்பாடி விடுவார் (உ.வ.).

அறம்[2] பார்க்க; see *aṟam*[2].

அறம்புறம் *aṟam-puṟam*, பெ. (n.) 1. **தடுமாற்றம்**; confusion of mind (சா.அக.). 2. **மதிப்புரவின்மை (மரியாதையின்மை)** (யாழ்ப்.); disrespect, want of courtesy (J.).

'அகம்புறம்' என்னும் மரபிணைமொழியை அறம்புறம் என வழங்குவது கொச்சை வழக்கென அறிக.

அறம்புறமாகப்பேசு-தல் *aṟam-puṟam-āga-p-pēśu-*, 5 செ.குன்றாவி., செ.கு.வி. (v.t. & v.i.) **மதிப்புரவின்றித் தாழ்வாகப் பேசுதல்** (யாழ்ப்.); to speak disrespectfully (J.). அவரை அறம்புறமாகப் பேசுகிறான். அறம்புறமாகப் பேசாதே (உ.வ.).

[அறம் + புறம் + ஆக (கு.வி.எ. ஈறு) + பேசு.]

அறமறை *aṟamaṟai*, பெ. (n.) **வாழை**; plantain tree, *Musa paradisiaca* (சா.அக.).

அறமன்றம் *aṟa-maṉṟam*, பெ. (n.) **வழக்கு மன்றம்** (இக்.வ.); Law-court (Mod.).

அறமிளகரணை *aṟa-miḷag(u)-araṇai*, பெ. (n.) **ஒருவகை மிளகரணை;** prickly scopolia, *Scopolia bilocularis* (சா.அக.).

[அறம் + மிளகு + அரணை.]

அறல்[1] *aṟal*, பெ. (n.) 1. **அறுதல், அறுகை;** becoming detached by cutting. 2. **அரித்தோடுகை;** laving. "மட்டற லல்யாற்று" (புறநா. 177 : 10). 3. **அறுத்துச் செல்லும் நீர்;** flowing water that causes breaches to the bank. "எக்கர்போழ்ந் தறல்வார" (கலித். 29 : 6). 4. **நீர்;** water. "மாவலி மாவலி முழுதுமாற்ற மாற்றங்கொண் டறல் கொண்டு" (மாற. மேற். 723). 5. **நீர்த்திரை** (திவா.); wave, ripple. 6. **நீர்க்கடுப்பு;** slow and painful discharge of the urine drop by drop, *Stranguary* (சா. அக.). 7. **கொற்றான்** (பச்.மூ.); *koṟṟāṉ*, a parasitic leafless plant.

ம. அறல்

[அறுதல் = அறுபடுதல், நீங்குதல், சிறிது சிறிதாகப் பிரிதல். அறுத்தல் = அரித்தல், ஊடறுத்தல். அறு → அறல் (தொ.பெ., தொ.ஆகு.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அறல்[2] *aṟal*, பெ. (n.) 1. **கருமணல்;** black sand. "தண்ணறல் வண்ணந் திரிந்துவேறாகி (மணிமே. 20 : 41). 2. **இரும்புமணல்;** sand mixed with iron dust (சா.அக.). 3. **கருமணல்போற் கருத்த கூந்தல்;** long, flowing tresses of women. 4. **பெண்டிரின் மயிர் நெறிப்பு** (பெரும்பாண். 162, உரை); curl of woman's hair. 5. **நுண்மணல்** (பொதி.நி.); fine sand. 6. (**மயிர்போல் அடர்ந்த**) **சிறு தூறு** (திவா.); small thicket.

ம. அறல்

[அல் = இருள், கருமை. அல் → அர் → (அரல்) → அறல் = கரியது.]

அறல் (கருமணல்) கூந்தலுக்குக் குறிக்கப்பட்ட உவமங்களுள் ஒன்று.

அறல்[3] *aṟal*, பெ. (n.) 1. **கலியாணம், இன்பவாழ்வு;** happiness, prosperity. "அறலிமையோருற" (மாற. மேற். 723). 2. **விழா** (பொதி.நி.); festival.

அறவச்சுன்னம் *aṟava-c-cuṉṉam*, பெ. (n.) **புடமிடப்பட்ட சுன்னம்;** a metallic calx (சா.அக.).

அறவழக்கம் *aṟa-vaḻakkam*, பெ. (n.) **அறநுவற்சி** (தருமோபதேசம்); moral or religious instruction. "அருளிருந்த திருமொழியா லறவழக்கங் கேட்டிலமால்" (வீரசோ. யாப். 15, உரை).

[அறம் + வழக்கம். வழங்கு → வழக்கு → வழக்கம் (தொ.பெ.). 'அம்' தொ.பெ. ஈறு. வழங்குதல் = சொல்லுதல்.]

அறவன் *aṟavaṉ*, பெ. (n.) 1. **அறவியல்பன்** (**தருமவான்**); one who is virtuous. "அறவனீயல்லையோ" (திருவிளை. தண்ணீர்ப். 36). 2. **சமண அறங்கூறுவோன்;** one who teaches the doctrines of Jain religion. "அருகனறவனறிவோற் கல்லது" (சிலப். 10 : 202). 3. **இறைவன், திருமால்;** god, *Tirumāl*. "அறவனை யாழிப்படை யந்தணனை" (திவ். திருவாய். 1 . 7 : 1). 4. **முனிவன்** (சூடா.); sage, ascetic. 5. **அந்தணன்;** sage. "அறவரடிதொடினும்" (பரிபா. 8 : 68).

ம. அறவன்

[அறம் → அறவன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அறவாடி *aṟavāḍi*, பெ. (n.) **அனைத்தியல் இறக்கம்** (**சர்வத் திராவகம்**); universal solvent which is useful for all metallic preparations in medicine (சா.அக.).

அறவாணன் *aṟa-vāṇaṉ*, பெ. (n.) **அறவடிவான கடவுள்;** God, the abode of virtue. "அறவாணர்க் கன்பென்னு மமுதமைத் தர்ச்சனை செய்வார்" (பெரியபு. வாயி. 8).

[அறம் + வாணன். வாழ் → வாழ்கின்றான் → வாழுந்நான் → வாழுநன் → வாழ்நன் → வாணன் (மருஉ).]

அறவாய்ப்போ-தல் *aṟav(u)-āy-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) **முற்றும் செலவாய்ப் போதல்;** to be exhausted, completely spent.

[அறவு + ஆய் + போ. அறுதல் = நீங்குதல், தீர்தல். அறு → அறவு (தொ.பெ.). 'வு' (அவு) தொ.பெ. ஈறு. 'ஆய்' வி.எ. ஈறு.]

அறவாழி[1] *aṟa-v-āḻi*, பெ. (n.) **அறச்சக்கரம்** (**தருமசக்கரம்**); wheel of virtue. "அருளோடெழுமற வாழி யப்பா" (திருநூற். 5).

[அறம்+ஆழி. ஆல் → ஆலி → ஆழி (சுழலுஞ் சக்கரம்).]

அறவாழி[2] *aṟa-v-āḻi*, பெ. (n.) **அறக்கடல், அறவாரி;** sea or ocean of virtue. "அறவாழி யந்தணன்" (குறள், 8).

[அறம் + ஆழி. ஆழ் → ஆழி = ஆழ்ந்த கடல். 'இ' வி.முத. ஈறு.]

அறவாழிக்கை *ara-v-āḻi-k-kai*, பெ. (n.) (நடம்) ***நடத்திற்குரிய ஒருவகை இணைக்கை யமைதி;*** (Dan.) gesture involving the use of both the hands in one of 4 different dance attitudes, viz., 'அஞ்சலிக்கை (அஞ்சலி ஹஸ்தம்), ஊழ்கக் கை (தியான ஹஸ்தம்), பூக்குடலைக் கை (புஷ்பபுட ஹஸ்தம்), அறவாழிக்கை (தர்மசக்கர ஹஸ்தம்). வலக்கரத்தை மார் போடு அமைத்து வெளிமுகமாக வியாக்யான முத்திரை பிடித்து இடக்கையை வலக்கை யருகே கொணர்ந்து உள்முகமாகத் திருப்பி, சுட்டுவிரலும் பெருவிரலும் ஒன்றை ஒன்று தொட்டமையவும், பிறவிரல்கள் பின் அடங்கி நிற்கவும், ஞானமுத்திரையாகப் பிடித்த கையமைதியும் தர்மசக்கர பிரவர்த்தன முத்திரை எனப்படும். இது தர்ம சக்கரத்தை இயக்கிவிடும் முத்திரை என்று பொருள்படும். இதற்கு அறவாழிக்கை என்ற அழகிய பெயரு முளது' (சி.செ. பக். 43-44.)

[அறம் + ஆழி + கை. ஆல் → ஆலி → ஆழி. ஆலுதல் = வட்டமாக வரல், சுற்றுதல், சுழலு தல்.]

அறவாளன் *ara-v-āḷaṉ*, பெ. (n.) *அறவியல்பன்* (*தருமவான்*); virtuous man.

[அறம் + ஆளன் (ஆ.பா. ஈறு). அறவாட்டி (பெ.பா.).]

அறவி *aravi*, பெ. (n.) 1. *அறம்*; virtue. "ஒங்குயர் சமந்தத் துச்சி மீமிசை யறவியங் கிழவோன்" (மணிமே. 11 : 22-3). 2. **அற வினைக்கு உதவுவது;** that which is set apart for charitable purposes. "அறவி நாவா யாங்குளது" (மணிமே. 11 : 25). 3. **துறவினி;** female ascetic. "ஆசில் கொள்கை யறவிபா லணைந்து" (சிலப். 13 : 103). 4. **ஊர்ப் பொதுமடம்;** public choultry or rest-house. "உலக வறவியி னொருபுடை யிருத்தலும்" (மணிமே. 7 : 93).

[அறம் → அறவி. 'வி' (இ) ஓர் ஈறு.]

அறவிடு-தல் *ara-viḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) 1. ***முற்றும் நீக்குதல்;*** to give up completely, renounce altogether. "உளதுமிலது மற விட்டு" (ஞானவா. மானுவே. 17). 2. ***விற்றல்;*** to sell off. 'ஆபத்துக் காலத்திலே அறவிட்டு ஜீவிப்பாரும்' (ஈடு, 3 . 6 : 9).

அறவிநாவாய் *aravi-nāvāy*, பெ. (n.) 1. ***அறத் துறை யம்பி;*** ferry-boat that conveys the poor across a river or canal free of charge. 2. ***ஆதன்களைப் (ஆன்மாக்களைப்) பிறவிப் பெருங்கடலிற் கடத்திவிடும் கப்பலாகிய இறை வன்;*** God, as the ship that transports souls fit for salvation across the sea of births.

"ஓங்குயர் சமந்தத் துச்சி மீமிசை
யறவியங் கிழவோ னடியிணை யாகிய
பிறவி யென்னும் பெருங்கடல் விடூஉம்
அறவி நாவாய்"

(மணிமே. 11 : 22-25).

அறவிய *araviya*, கு.பெ.எ. (adj.) ***அறத்தொடு கூடிய, அறவியலுள்ள;*** virtuous, disposed to virtue. "அறவிய மனத்த ரன்றி" (சூளா. தூது. 91).

[அறம் + இய (கு.பெ.எ. ஈறு).]

அறவியங்கிழவோன் *aravi-y-aṅ-kiḻavōṉ*, பெ. (n.) ***அறத்திற்கு உரிமை பூண்டவன் அல்லது அறத்தின் தலைவனான புத்தன்;*** the Buddha, as wedded to or lord of virtue. "ஓங்குயர் சமந்தத் துச்சி மீமிசை யறவியங் கிழவோன்" (மணிமே. 11 : 22-3).

[அறவி + அம் (சாரியை) + கிழவோன். கிழமை → கிழவன் → கிழவோன். அன் → ஓன் (ஆ.பா. ஈறு).]

அறவியான் *araviyāṉ*, பெ. (n.) ***அறத்தில் நிற் பவன்;*** virtuous man. "அறவியாற் காறு மூன்று மமைந்தநா லமிர்த மேந்த" (சீவக. 1125).

[அறம் → அறவி + ஆன் (ஆ.பா. ஈறு).]

அறவிலை *ara-vilai*, பெ. (n.) *முழு விற்பனை;* absolute, unconditional sale. "அறவிலை செய்தனன்" (திவ். திருவாய். 8 . 1 : 10).

[அறு → அற + விலை.]

அறவிலைவாணிகன் *ara-vilai-vāṇigaṉ*, பெ. (n.) ***பொருள் கொடுத்து அறத்தை விலைக்கு வாங்கு வோன்;*** one who practises virtue, not for virtue's sake, but for the reward it brings here and hereafter, one who buys virtue. "இம்மைச் செய்தது மறுமைக் காமெனு மற விலை வாணிகன்" (புறநா. 134 : 1-2).

[அறம் + விலை + வாணிகன். வில் → விலை (தொ.பெ.). 'ஐ' தொ.பெ.ஈறு. வாணி கம் → வாணிகன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அறவினை *aṟa-viṉai*, பெ. (n.) அறச்செயல்; virtuous deed. "அறவினை யாதெனின் கொல்லாமை" (குறள், 321).

[அறம் + வினை.]

அறவு *aṟavu*, பெ. (n.) நீங்குகை, ஒழிகை, தீர்கை; severance, cessation, exhaustion, extinction. "நீரற வறியாக் கரகத்து" (புறநா. 1 : 12).

[அறு → அறவு (தொ.பெ.). 'வு' (அவு) தொ.பெ. ஈறு.]

அறவுபதை *aṟa-v-ubadai*, பெ. (n.) அமைச்சர், படைத்தலைவர் முதலிய தலைமை அரசிய லலுவலரை அரசன் தேர்ந்தெடுக்கக் கையாளும் நால்வகை மரும ஆய்வுகளுள் ஒன்று, அறத் தேர்திறம்; loyalty test, one of the four secret selection tests for appointment to top-ranking government posts such as ministers and army-chiefs, conducted by ancient sovereigns for ascertaining their honesty by placing the aspirants in trying situations, constantly exposing them to concocted tales of their sovereign's unrighteousness.

"அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்"
(குறள், 501).

[அறம் + Skt. upa-dhā > த. உபதை. Skt. upa = அண்டை, பக்கம், பால், உடன், கீழ், துணை என்று பொருள்படும் குறிப்புப் பெய ரெச்ச வினையெச்ச முன்னொட்டு (pref.). Skt. dhā = இடு (வினை, து.வி.).]

அறத்தேர்திறமாவது, கோயிற் பூசாரியும், ஈகையாளரும், பொதுநலத் தொண்டரும், துறவியரும், இறையடியாரும் போன்றாரை விடுத்து, நம் அரசன் ஏழை செல்வன் என்னும் வேறுபாடின்றி எல்லாக் குடிகட்கும் கடுவரி யிட்டு மழை பெய்யாப் பஞ்சகாலத்தும் ஈகை யிரக்கமில்லாக் காலகண்டரைக் கொண்டு துன்புறுத்தி வரி தண்டுவதால், இக்கொடுங் கோலனை நீக்கிவிட்டுச் செங்கோலனான வேறொருவனை அரசனாக்குவோம் என்று சொல்வித்து, அதிகாரியாகத் தேரப்படும் ஒருவரின் கருத்தைச் சூளுறவுடன் தெரிந்து கொள்ளுதல்.

பொருட்டேர்திறம், இன்பத்தேர்திறம், உயிரச்சத்தேர்திறம் என்னும் ஏனை மூன்றை, அவ்வச் சொற்களின்கீழ்க் காண்க.

அறவுரை *aṟa-v-urai*, பெ. (n.) அறவியல் அல்லது சமயவியல் அறிவுரை (தருமோப தேசம்); religious or moral instruction (அருங்கலச். 124).

அறவுளி[1] *aṟa-v-uḷi*, பெ. (n.) ஒரு நோயாளியை நலம்பெறச் செய்யும் மந்திரம் (வின்.); charms employed to cure a sick person (செ.அக.) — நோயாளிக்கு மந்திரித்தல்; psychic or magnetic cure effected in a sick person (சா.அக.).

[அறு → அறவு (தொ.பெ.) = நீக்கம், நோய் நீக்கம். 'அவு' தொ.பெ. ஈறு. உள்ளுதல் = கருதுதல். உள் → உள்ளி = கருதுவது. 'இ' வி.முத. ஈறு.]

அறவுளி[2] *aṟa-v-uḷi*, பெ. (n.) முடிவு; cessation.

[அறு → அறவு = நீக்கம், முடிவு. 'உளி' ஒரு முதனிலைப் பொருளீறு (பகுதிப்பொருள் விகுதி). ஒ.நோ: பழுது + உளி — பழுதுளி. "சிறுகட் பன்றி பழுதுளி போக்கி" (மலைபடு. 153). இனி, உளி = உள்ளது. அறவுளி = முடிவாகவுள்ளது எனினுமாம்.]

அறவூதல் *aṟa-v-ūdal*, தொ.பெ. (vbl.n.) 1. முழுமையுஞ் சாம்ப லாகும்படி ஊதுதல் (சா. அக.); to heat by blowing fire and reduce a substance to ashes. 2. புடமிடல்; to sublimate or calcinate, as is done to chemicals.

[அறு → அற (நி.கா.வி.எ.) = முழுதும். ஊது → ஊதல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு.]

அறவூது-தல் *aṟa-v-ūdu-*, 5 செ.குன்றாவி. (v.t.) புடமிடுதல் (வின்.); to refine, as gold, sublimate, as chemicals.

[அறு → அற + ஊதுதல் (தொ.பெ.). 'தல்' தொ.பெ. ஈறு.]

அறவூதல் பார்க்க; see *aṟa-v-ūdal*.

அறவை-த்தல் *aṟa-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) புடமிடுதல்; to refine. "அறவைத் தோங்கும் பொன்னிறத்தர்" (கூர்மபு. நவகண். 5).

[அறு → அற (நி.கா.வி.எ.) = ஒட்டற, குற்றம் நீங்க. அற + வை. 'வைத்தல்' (தொ. பெ.). 'தல்' தொ.பெ. ஈறு.]

அறவை[1] *aṟavai*, பெ. (n.) அறநெறி, அற வொழுக்கம்; righteousness. "அறவை நெஞ் சத் தாயர்" (புறநா. 390 : 1).

[அறம் → அறவை. 'வை' பண்.பெ. ஈறு.]

அறவை[2] *aṟavai*, பெ. (n.) 1. ***உதவியற்ற நிலை***; helplessness, destitution. "அறவையேன் மனமே கோயிலாக் கொண்டு" (திருவாச. *37 : 6*). 2. ***தீமை***; evil, violence. "அறவைத்தொழில்புரிந்து" (தேவா. *4 . 110 : 7*).

[அறு → அறவை = உதவியற்ற அல்லது நன்மையற்ற நிலை. 'அவை' தொ.பெ. ஈறு.]

அறவைச்சிறை *aṟavai-c-ciṟai*, பெ. (n.) ***கடுஞ்சிறை***; rigorous imprisonment, distressing captivity. 'ஸம்ஸாரமாகிற அறவைச் சிறை' (ஈடு, *1 . 3 : 11*).

[அறவை = தீங்கு, கடுமை. சிறைத்தல் = தடுத்தல். 'சிறை' முத.தொ. ஆகு.]

அறவைச்சோறு *aṟavai-c-cōṟu*, பெ. (n.) ***களைகணிலிகட்கும் ஏழை யெளியவர்க்கும் இடும் உணவு*** (பிங்.); food for the helpless and the destitute.

[அறம் → அறவை. 'வை' பண்.பெ. ஈறு. சொல் (நெல்) → சொறு → சோறு.]

அறவைத்தூரியம் *aṟavai-t-tūriyam*, பெ. (n.) ***களைகணிலிகட்கும் ஏழையெளியவர்க்கும் அளிக்கும் உடை*** (பிங்.); clothes for the helpless and the destitute.

[அறம் → அறவை. தூரியம் = ஒருவகையாடை (சிலப். 14 : 108, அடியார்க். உரை).]

அறவைச்சோறு பார்க்க; see *aṟavai-c-cōṟu*.

அறவைப்பிணஞ்சுடு-தல் *aṟavai-p-piṇañ-cuḍu-*, 17 செ.குன்றாவி. (v.t.) ***கவனிப்பாரற்ற பிணத்தை யெடுத்துச் சுடுதல்*** (பிங்.); cremating an unclaimed corpse.

[அறம் → அறவை + பிணம் + சுடு.]

அறவைப்பு *aṟa-vaippu*, தொ.பெ. (vbl.n.) ***அறவைத்-தல்*** பார்க்க; see *aṟa-vai-*.

அறவோர் *aṟavōr*, பெ. (n.) ***அறவாளர்***; virtuous persons. "அறவோ ரவைக்களம்" (சிலப். *30 : 193*).

அறவோர்பள்ளி *aṟavōr-paḷḷi*, பெ. (n.) ***சமண, புத்தக் கோயில்*** (சிலப். *5 : 179*, உரை); Jain or Buddhist temple.

[அறம் → அறவோர். ஆர் → ஓர் (ப.பா. ஈறு). பள் → பள்ளி = படுக்கை, படுக்குமிடம், வீடு, கோயில். 'இ' இடப்பொருளீறு.]

அறவோலை *aṟa-v-ōlai*, பெ. (n.) ***கையடையாவணம்*** (வெட்.); trust deed (Insc.).

இனாம் சாசனம் என்பது சென்னை யகர முதலியிற் குறிக்கப்பட்டுள்ள பொருள்.

[அறம் + ஓலை (கருவி ஆகு.).]

அறவோன் *aṟavōṉ*, பெ. (n.) 1. ***அறவாளன்*** (தருமிஷ்டன்); virtuous man. 2. ***புத்தன்***; the Buddha. "அறவோ னாசனம்" (மணிமே. *12 : 11*).

[அறம் → அறவோன். ஆன் → ஓன் (ஆ.பா. ஈறு.]

அறளிகா *aṟaḷiga*, பெ. (n.) ***ஏறத்தாழப் பதினோராகவையுள்ள குதிரையினுடைய பற்களின் பொன்னிறம்*** (அசுவசா. 6); golden colour of the teeth of horses when they are about eleven years old.

அறளை *aṟaḷai*, பெ. (n.) 1. ***ஒரு நோய்*** (வின்.); a kind of disease. 2. ***நச்சுத் தொந்தரவு*** (யாழ்ப்.); teasing, fretfulness, murmuring, as of old people, repining, babbling, as of the old or sick (J.).

[அரள் → (அரளை) → அறளை = அரட்டு.]

அறளையம் *aṟaḷaiyam*, பெ. (n.) ***அறணையம்*** பார்க்க; see *aṟaṇaiyam*.

அறன் *aṟaṉ*, பெ. (n.) 1. ***நல்வினை***; good deed. 2. ***எளியார்க்கீதல்***; giving to the poor. 3. ***மனத்தூய்மை***; purity of mind. "மனத்துக்கண் மாசில னாத லனைத்தறன்" (குறள், *34*). 4. ***சமயம்***; religion, religious faith. "அன்றியு மறனு மொன்றே" (சீவக. *544*). 5. ***வேள்வி முதல்வன்***; one who performs a sacrifice, as performing a sacred duty. "ஞாயிறுந் திங்களு மறனு மைவரும்" (பரிபா. *3 : 5*).

[அறம் → அறன். ம் → ன், இறுதிப்போலி.]

அறம் பார்க்க; see *aṟam*.

அறன்கடை *aṟaṉ-kaḍai*, பெ. (n.) ***கரிசு, தீவினை*** (பாவம்); sin. "அறன்கடை நின்றாரு ளெல்லாம்" (குறள், *142*).

அறனில்பால் *aṟaṉ-il-pāl*, பெ. (n.) ***தீவினை, அறமில்லாத பழவினை***; evil destiny. "போக்கிய புணர்த்த வறனில் பாலே" (ஐங்குறு. *376*).

[அறம் → அறன் + இல் (இல்லாத) + பால். பகு → பகல் → பால் = பகுதி, ஊழ்.]

அறனிலாளன் *aṟaṉ-il-āḷaṉ*, பெ. (n.) *அறச்செய லில்லாதவன்*; one who does not practise virtue. "அறனி லாளற் கண்ட பொழுதில்" (ஐங்குறு. 118).

[அறம் → அறன் + இல் (இல்லாத) + ஆளன் (ஆ.பா. ஈறு).]

அறனீர் *aṟaṉīr*, பெ. (n.) அருநீர் (R.T.); water allowed for irrigation, in large or small quantities depending on the storage level in the reservoir.

[அறல் + நீர். அறு → அறல்.]

அறனையம் *aṟaṉaiyam*, பெ. (n.) *காட்டுக் கரணை* (சங்.அக.); purple-stalked dragon plant.

அறணை பார்க்க; see *aṟaṇai*.

அறனோம்படை *aṟaṉ-ōmbaḍai*, பெ. (n.) *1. அறத்தைப் பாதுகாக்கை* (சிலப். 5 : 179, அரும்.); fostering virtue. *2. அறத்தைப் பாது காக்குமிடம்*; institution where virtue is fostered. *3. அறத்தை நுவலும் (போதிக்கும்) இடம்*; place of moral and religious instruction. "அறவோர் பள்ளியு மறனோம் படையும்" (சிலப். 5 : 179).

[அறம் → அறன் + ஓம்பு + அடை. ஓம்புதல் = பாதுகாத்தல். அடு → அடை.]

அறாக்கட்டை *aṟā-k-kaṭṭai*, பெ. (n.) *1. மூடன்*; fool. *2. கஞ்சன், பிசினாறி* (சென்னை); miser (Madr.).

[அறு → அறாத → அறா (ஈ.கெ.எ.ம.பெ.எ.). கட்டை = மரக்கட்டை, கட்டை போன்ற உடம்பு, உடம்புள்ள ஆள் (ஆகு.).]

இங்குக் கட்டை யென்றது இழிவுகுறிப்பு. அறுக்க முடியாத கட்டைபோற் பயன்படா தவன் என்பது கருத்துப்போலும்.

அறாட்டுப்பறாட்டு *aṟāṭṭu-p-paṟāṭṭu*, பெ. (n.) *போதியதும் போதாதுமானது*; that which may or may not be sufficient (ஈடு, 3 . 7 : 3).

[ஒருகா. அறை → அறாட்டு. அறை = நீங்கு தல், குறைபடுதல். அறாட்டு = குறைபடும் தன்மை. 'அறாட்டுப்பறாட்டு' எதுகை மரபிணை மொழி.]

அறை[3] பார்க்க; see *aṟai*[3].

அறாநட்பு *aṟā-naṭpu*, பெ. (n.) *நிலைத்த நட்பு*; lasting friendship.

[அறுதல் = நீங்குதல். அறு → அறாத → அறா (ஈ.கெ.எ.ம.பெ.எ.). நள் → நட்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

அறாம்பை *aṟāmbai*, பெ. (n.) *தும்பை* (சங். அக.); white dead-nettle (செ.அக.) – bitter leucas, *Leucas aspera* alias *Phlomis aspera* (சா.அக.).

அறாமதி *aṟā-madi*, பெ. (n.) *நாரை*; crane (சா.அக.).

அறாமை *aṟāmai*, பெ. (n.) *கவிழ் தும்பை* (மலை.); species of *Tricodesma* (செ.அக.) – stooping leucas plant, *Phlomis biflora* (சா.அக.).



அறாமதி

அறாயிரம் *aṟāyiram*, பெ. (n.) *ஆறாயிரம்*; the number 6000.

[ஆறு → அறு + ஆயிரம் – அறாயிரம்.]

"மூன்று மாறு நெடுமுதல் குறுகும்"
(தொல். எழுத்து. குற்றியலுகர. 35)

என்னும் நூற்பாவின்படி ஆறு என்னும் நிலைச்சொல் அறு எனக் குறுகி நின்று புணரும்.

"ஆயிரக் கிளவி வருஉங் காலை
முதலீ ரெண்ணி னுகரங் கெடுமே"
(ஷ 59),

"ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்
ஈறுமெய் யொழியக் கெடுதல் வேண்டும்"
(ஷ 64),

என்னும் நூற்பாக்களின்படி, ஆறு + ஆயிரம் - அறாயிரம் எனப் புணர்ந்தது.

"ஆறன் மருங்கில்" என்னும் நூற்பாவின் விளக்கவுரையில், "முன்னர் 'நெடுமுதல் குறுகும்' (தொல். எழுத்து. குற்றியலுகர. 35) என்ற வழி அறுவென நின்ற முற்றுகரத்திற்கே ஈண்டுக் கேடு கூறினா ரென்பது பெற்றாம். என்னை? குற்றியலுகரமாயின் ஏறி முடித லின். இது குற்றுகரந் திரிந்து முற்றுகரமாய் நிற்றலின் ஈண்டு முடிபு கூறினார். முற்றிய லுகரம் ஈறுமெய் யொழியக் கெடுமெனவே, குற்றுகரங் கெடாது ஏறி முடியுமென்பது

அருத்தாபத்தியிற் பெறுதும். ஆறாயிரம் எனவரும்'' என **நச்சினார்க்கினியர்** உரைத் ததைக் கவனிக்க. அருத்தாபத்தியைத் தமிழில் எதிர்மறையெச்சம் எனலாம்.

அறாவட்டி *aṟā-vaṭṭi*, பெ. (n.) **அதிக** வட்டி, கடுவட்டி; exorbitant interest. ''அன்னியரை யெல்லாம் அறாவட்டி வாங்கி'' (நெல்விடு. *368*).

[அறுதல் = அறத்தொடு முடிதல் அல்லது கூடு தல். அறு → அறாத → அறா (ஈ.கெ.எ.ம.பெ. எ.) + வட்டி.]

வட்டி பார்க்க; see *vaṭṭi*.

அறாவழக்கு *aṟā-vaḻakku*, பெ. (n.) *முடிவிற்கு வராத வழக்கு* **அல்லது சச்சரவு**; endless dispute. 'கொட்டை முந்தினதோ பனை முந்தினதோ என்கிற அறாவழக்கிலே' (சிவப் பிர. *34*, உரை).

[அறுதல் = தீர்தல். அறு → அறாத → அறா (ஈ.கெ.எ.ம.பெ.எ.). வழங்கு → வழக்கு.]

அறாவிலை *aṟā-vilai*, பெ. (n.) **அளவிற்கு** *மிஞ்சிய* **விலை** (வின்.); exorbitant price. ''நடந்து கொள்ளுநர்க் கறாவிலை பகர்ந்து'' (திருவிளை. விறகு. *17*).

[அறு → அறாத → அறா (ஈ.கெ.எ.ம.பெ.எ.). வில் → விலை (ஆகு.) = விற்ற பணம்.]

அறாவட்டி பார்க்க; see *aṟa-vaṭṭi*.

அறாவு-தல் *aṟāvu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **அடித்தல்**; to strike, beat, whip. ''மத்திகை யினா லறாவி'' (சீவக. *703*).

[அறு → அறை. அறைதல் = அடித்தல். அறு → (அற) → (அறவு) → அறாவு.]

அறி-தல் *aṟi-*, 2 செ.குன்றாவி. (v.t.) *1.* ***ஐம் புலனால் உணர்தல்***; to perceive by the senses. *2.* ***மதியினா லுணர்தல்***; to know, understand, comprehend, recognise. ''ஆவ தறிவார்ப் பெறின்'' (நாலடி. *73*). *3.* ***மனத்தினா லுணர் தல்***; to conceive, to know by imagination or deliberation. *4.* ***புதிதாய்க் கண்டுபிடித்தல்*** (புதுவை); to discover (Poṇḍ.). *5.* **தேறுதல், திட்டஞ்செய்தல்**; to ascertain, determine, decide. ''அழிபட லாற்றா லறிமுறை யேன்று'' (பு. வெ. *8:19*). *6.* ***நினைத்தல்*** (பிங்.); to think. *7.* ***மதித்தல்***; to esteem, prize. ''யாமறிவ தில்லை யறிவறிந்த மக்கட்பே றல்ல பிற'' (குறள், *61*). *8.* ***நுகர் தல்***, பட்டறிதல் (**அனுபவித்தல்**); to experience. ''கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புல னும்'' (குறள், *1101*). *9.* ***பயிலுதல்***, to know by practice, to be accustomed to. ''களவறிந் தார் நெஞ்சிற் கரவு'' (குறள், *288*).

ம. அறியுக; **க., குட., து.** அறி; **தெ.** எறுகு; **பட.** அறதனெ; **கோத.** அர்ச்; **துட.** அர்ச், அர்யி; **குரு.** அறிதனெ; **பிரா.** ஃறிபிங்.

[ஒருகா. அள் → (அறு) → அறி. அள்ளுதல் = பொருந்துதல். பொருந்தியறிதல். **ஒ.நோ:** *பள் (பள்ளம்) → (பறு) → பறி.]*

அறி *aṟi*, பெ. (n.) **அறிவு**; knowledge. ''அறி கொன் றறியா னெனினும்'' (குறள், *638*).

க. அறி

['அறி' முத.தொ. ஆகு.]

அறிக்கை *aṟikkai*, பெ. (n.) *1.* **அறிவிப்பு**; notice, report. ''தானற வுயர்ந்த துன்பந் தனை நினக்கறிக்கைசெய்ய'' (வேதாரணியபு. பரஞ்சோ. மணவாளச். *33*). *2.* (கிறித்.) **குற்றத்தை ஒப்புக்கொள்கை**; (Chr.) confession. 'எருசலேம் நகரத்தாரும் யூதேயா தேசத்தார் அனைவரும்.........தங்கள் பாவங் களை அறிக்கையிட்டு............திருக்குளிப்புப் பெற்றார்கள்' (விவிலியம், மத். *3:4-5*). *3.* **பயிற்றுகை** (பொதி.நி.); training, teaching.

ம. அறியிப்பு; **க., பட., து.** அறிகெ; **தெ.** எறுக; **கோத.** அர்க்யம்.

[அறி (த.வி.) → அறிவி (பி.வி.) → அறி விக்கை (தொ.பெ.) → அறிக்கை. இனி, அறிகை (த.வி., தொ.பெ.) → அறிக்கை (பி.வி., தொ.பெ.) என்றுமாம். **ஒ.நோ :** *செறி → செறிகை (த.வி., தொ.பெ.) → செறிக்கை (பி.வி., தொ.பெ.). 'அறித்தல்' என்னும் பிற வினை இன்று வழக்கற்றது.]*

அறிக்கைப்பத்திரம் *aṟikkai-p-pattiram*, பெ. (n.) *1.* **எழுத்துமூலமான விளம்பரம்** (வின்.); advertisement, notification, written notice, proclamation. *2.* **வரலாறு குறிக்கும் இதழிகை**; report. கழகத்தின் மூன்றாம் ஆண்டு அறிக்கைப்பத்திரம்.

[அறி → அறிக்கை. **Skt.** pattra > **த.** *பத்திரம் = இலை, ஓலை, திருமுகம், பட்டயம், ஆவணம்.]*

அறிக்கை பார்க்க; see *aṟikkai*.

இதழ், ஏடு, ஓலை, திருமுகம், பட்டயம், ஆவணம் என்பன தமிழ். ஓலை என்பது அதில் எழுதப்பட்டதைக் குறிப்பின் ஆகு பெயர்.

அறிக்கைபண்ணு-தல் *arikkai-pannu-*, 5 செ. குன்றாவி. (v.t.) *1.* **விளம்பரப்படுத்துதல்**; to advertise, notify, inform. *2.* (கிறித்.) **குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல்**; (Chr.) to confess.

[அறிக்கை + பண். பண் → பண்ணு.]

அறிக்கை பார்க்க; see *arikkai*.

அறிக்கையிடு-தல் *arikkai-y-idu-*, 18 செ. குன்றாவி. (v.t.) **அறிக்கைபண்ணு** பார்க்க; see *arikkai-pannu*.

க. அறியிஸு; தெ. எறுகபடு.

[அறிக்கை + இடு.]

அறிக்கை பார்க்க; see *arikkai*.

அறிக்கையோலை *arikkai-y-ōlai*, பெ. (n.) **செய்திக்கடிதம்** (குருபரம். 277); letter, as written on palm leaf.

அறிக்கை பார்க்க; see *arikkai*.

[ஓலை = பனையேடு, அதில் எழுதப்பட்ட செய்தி (ஆகு.).]

அறிக்கைவாசி-த்தல் *arikkai-vāši-*, 4 செ.கு.வி. (v.i.) (கிறித்.) **கோயிலில் ஓலை கூறுதல், திருமண அறிக்கை விளம்புதல்**; (Chr.) to publish banns of marriage.

அறிக்கை பார்க்க; see *arikkai*.

[வாய் → வாயி → வாசி. வாயித்தல் = வாயாற் படித்தல் அல்லது குழலிசைத்தல்.]

அறிகண்ணி *ari-kanni*, பெ. (n.) **எருக்கங் கிழங்கு** (சங்.அக.); root of madar.

அறிகரி *ari-kari*, பெ. (n.) **கண்கூடாகக் கண்ட சான்றாளன்**; eye-witness, one who has personal knowledge. "அங்கியங் கடவுள் அறிகரி யாக" (தொல். பொருள். கற். 1, உரை).

['அறிகரி' வினைத்தொகை.]

அறிகருவி *ari-karuvi*, பெ. (n.) **ஐம்புலப் பொறி, அறிவுப்பொறி** (ஞானேந்திரியம்); organs of sense. "அறிகருவி யணையா" (சிவப்பிர. 33).

['அறிகருவி' வினைத்தொகை. கரு → கருவி = செயல் அல்லது தொழில்துணைப் பொருள். கருத்தல் = செய்தல். இவ் வினை இற்றைத் தமிழில் வழக்கற்றது.]

அறிகுறி *ari-kuri*, பெ. (n.) **அடையாளம்**; mark, token, symbol. "திங்கண்மாட் டறிகுறி யொன்று செய்து" (காஞ்சிப்பு. நகரப். 85).

['அறிகுறி' வினைத்தொகை.]

அறிசலம் *ari-šalam*, பெ. (n.) **நெஞ்சறிந்த குற்றம்**; conscious guilt. "அனையவவ் விரதத்தோ டறிசலம்" (நீலகேசி, 242).

['அறிசலம்' வினைத்தொகை. **Skt.** chala > *த. சலம்.]*

அறிசா *ariša*, பெ. (n.) **ஒருவகை மீன்** (சங்.அக.); a kind of fish (செ.அக.) — **பெருவரைமீன்**; a big variety of fish (சா.அக.).

அறிஞன் *arinan*, பெ. (n.) *1.* **அறிவுடையோன்**; man of knowledge, savant, wise man. "அன்ன காலையில் வீரவா குப்பெய ரறிஞன்" (கந்தபு. மகேந். வச்சிர. 61). *2.* **புலவன்** (பிங்.); poet, learned man. *3.* **முனிவன்** (சூடா.); sage. *4.* **மதிமகன் (புதன்)**; the planet Mercury.

[அறி → அறிகின்றான் → அறிகுந்நான் → அறியுந்நான் → அறியுநன் → அறிநன் → அறிஞன்.]

அறிதுயில் *ari-tuyil*, பெ. (n.) *1.* **அறிவு அல்லது உணர்ச்சி குன்றாது தூங்குந் தூக்கம்**; a semi-conscious sleep. *2.* **ஓகத்தூக்கம், தூங்காமல் தூங்கல் (யோகநித்திரை)**; a state of sleep in which the person is conscious of the outer world, the sleep of devotion or abstraction - an attribute supposed to belong to the sages. *3.* **திருமாலின் ஓகத்தூக்கம்**; the conscious sleep of *Tirumāl* (Viṣṇu). "ஆடக மாடத் தறிதுயி லமர்ந்தோன்" (சிலப். 26 : 62). *4.* **விழிப்பொடு தூங்கும் ஒரு நோய்**; wakeful lethargy, *Agryphnocoma* (சா.அக.).

['அறிதுயில்' வினைத்தொகை. துய் → துயில்.]

துயில் பார்க்க; see *tuyil*.

அறிதுயிலமர்ந்தோன் *ari-tuyil-amarndōn*, பெ. (n.) **அனைத்தையும் அறியும் அறிவொடு தூங்கும் திருமால்**; *Tirumāl* (Viṣṇu), who during his sleep is conscious of the universe. "ஆடக மாடத் தறிதுயி லமர்ந்தோன்" (சிலப். 26:62).

[அறி + துயில் + அமர்ந்தோன். 'அறிதுயில்' வினைத்தொகை. அமர் → அமர்ந்தான் → அமர்ந்தோன் (வினையா.பெ.). ஆன் → ஓன் (ஆ.பா. ஈறு).]

அறிந்துதெரிந்து *arindu-terindu*, வி.எ. (adv.) **தெளிவாக அறிந்துகொண்டு**; knowing fully well, deliberately. அறிந்துதெரிந்து அக் குற்றஞ் செய்தான்.

[அறி → அறிந்து (இ.கா.வி.எ.). தெரி → தெரிந்து (இ.கா.வி.எ.). 'அறிந்துதெரிந்து' எதுகை மரபிணைமொழி.]

அறிநன் *ari̱naṉ*, பெ. (n.) **அறிந்தவன், அறிபவன்;** one who knows. "கோடியர் தலைவ கொண்ட தறிந" (பொருந. 57).

[அறி → அறிகின்றான் → அறிகுந்நான் → அறிகுநன் → அறிநன்.]

அறிப்பலம் *ari̱ppalam*, பெ. (n.) **திப்பிலி** (மலை.); long pepper, *Piper longum.*

அறிப்பு *ari̱ppu*, பெ. (n.) **உணர்கை;** comprehension. "அறிப்புறு மமுதாயவன்" (தேவா. 5 . 48 : 4).

[அறி + பு (தொ.பெ. ஈறு).]

அறிபொருள்வினா *ari̱-poruḷ-viṉa*, பெ. (n.) **அறியப்பட்ட பொருளை ஒரு பயன்நோக்கிக் கேட்குங் கேள்வி;** question put to a person or a student to find out from the answer whether he knows the meaning or has not understood it. 'அறிபொருள் வினா அறியப்பட்ட பொருளையே ஒரு பயனோக்கி அவ் வாய் பாட்டினொன்றான் வினாவுவது. பயன் வேறறிதலும் அறிவுறுத்தலு முதலாயின' (தொல். சொல். கிளவி. 13, சேனா. உரை).

இது அறிவினா எனவும் படும். ஆயின், அது பொருளறியும் வினா என்று பொருள் பட்டு அறியான் வினாவையுங் குறித்தலால், அறிபொருள் வினா என்பதே பொருத்தமாம்.

ஆசிரியன் மாணவனை நோக்கி, 'இந் நூற் பாவிற்குப் பொருள் யாது?' என வினவுவது அறிபொருள் வினாவாம்.

அறிமடம் *ari̱-maḍam*, பெ. (n.) 1. **அறிந்தும் அறியாததுபோன் றிருக்கை** (சூடா.); assumed ignorance. 2. **அறிந்தபடி நடக்க இயலாமை;** inability to translate into practice what one has learnt. 3. **நினைவின்மை;** forgetfulness, inability to recall to memory. 4. **விளையாடும் பருவத்து நிகழும் அறியாமை** (தொல். பொருள். மெய்ப். 16, பேரா. உரை); innocence of childhood.

['அறிமடம்' வினைத்தொகை.]

இறுதிப் பொருட்குச் சான்று, 'மடந்தபவுரைத்தல் - விளையாடும் பருவத்து நிகழ்ந்த அறிமட நீங்கக் காமப் பொருட்கண்ணே சிறிது அறிவு தோன்றுதல்' என்னும் (தொல். பொருள். மெய்ப். 16) பேராசிரியர் உரையே. அது அத்துணைப் பொருத்தமாகத் தோன்றவில்லை. விளையாடும் பருவத்து நிகழ்வது அறியாமடமேயன்றி அறிமடமன்று. ஒருகால், ஏட்டுப் பிழையாகவு மிருக்கலாம்.

அறிமுகம் *ari̱-mugam*, பெ. (n.) 1. **தெரிந்த முகம்;** familiar face. "அறிமு கம்பிற காண்கிலே னடுத்தலூ ரறியேன்" (சேதுபு. விதூம. 99). 2. **பழக்கம்** (உ.வ.); acquaintance (Com.u.).

['அறிமுகம்' வினைத்தொகை.]

அறியக்கொடு-த்தல் *ari̱ya-k-koḍu-*, 4 செ. குன்றாவி. (v.t.) 1. **தெரிவித்தல்;** to communicate information, to instruct. 2. **குற்றமேற்றுதல்** (வின்.); to indict, impeach, inform against.

[அறி → அறிய (நி.கா.வி.எ.) + கொடு.]

அறியகம் *ari̱yagam*, பெ. (n.) **நோயை யுண்டாக்கும் ஒரு பேய்;** a demon causing diseases (சா. அக.).

அறியபலம் *ari̱yapalam*, பெ. (n.) **அறிப்பலம்** பார்க்க; see *ari̱ppalam* (சா.அக.).

அறியல் *ari̱yal*, பெ. (n.) **மூங்கில்** (சங்.அக.); bamboo, *Bambusa arundinacea.*

அறியலுறவு *ari̱yal-uṟavu*, பெ. (n.) 1. **அறிவுறுதல்;** acquisition of knowledge. 2. **அறிதற்கண் விருப்பம்** (தொல். சொல். கிளவி. 13, சேனா. உரை); desire for knowledge.

[அறி → அறியல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு. உறு → உறவு (தொ.பெ.). 'வு' (அவு) தொ.பெ. ஈறு.]

அறியாக்கரி *ari̱yā-k-kari*, பெ. (n.) **பொய்ச் சான்று;** false evidence. "அறியாக்கரி பொய்த்து" (சிலப். 15 : 78).

[அறி → அறியாத (எ.ம.பெ.எ.) → அறியா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + கரி.]

அறியாப்பிள்ளை *ari̱yā-p-piḷḷai*, பெ. (n.) 1. **உலகியலறியாத சிறுவன்;** a boy ignorant of worldly affairs. 2. **சிறுமி;** a small girl ignorant of worldly affairs.

[அறி → அறியாத → அறியா + பிள்ளை.]

அறியாக்கரி பார்க்க; see *ari̱yā-k-kari.*

அறியாப்பெண் *ari̱yā-p-peṉ*, பெ. (n.) **பூப்படையாத பெண்பிள்ளை;** a small or immature girl.

'அஞ்சும் மூன்றும் உண்டானால் அறியாப் பெண்ணுங் கறியாக்கும்' (பழ.).

[அறி → அறியாத. அறியா + பெண்.]

அறியாக்கரி பார்க்க; see *ariyā-k-kari*.

அறியாமை *ariyāmai*, பெ. (n.) மடமை; ignorance. "அறிதோ றறியாமை கண்டற் றால்" (குறள், 1110).

ம. அறியாம; க. அறியமெ.

[அறி + ஆ (எ.ம.இ.) + மை (பண்.பெ. ஈறு).]

அறியாவினா *ariyā-vinā*, பெ. (n.) தெரியாத தொன்றைத் தெரிந்துகொள்ளற்குக் கேட்குங் கேள்வி; question for eliciting information or knowledge, or for removal of doubt, as one put by the pupil to the teacher. 'இந் நூற்பா விற்குப் பொருள் யாது?' என்பது, மாணவன் ஆசிரியரிடம் கேட்கும் அறியாவினா (நன். 385, உரை).

[அறியாத → அறியா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + வினா.]

அறியான்வினா *ariyān-vinā*, பெ. (n.) அறியா வினா பார்க்க; see *ariyā-vinā*. 'அறியான் வினா உயிர் எத்தன்மைத்து என்பது' (தொல். சொல். கிளவி. 13, சேனா. உரை).

[அறி + ஆ (எ.ம.இ.) + ஆன் → ன் (ஆ.பா. ஈறு.]

அறியுநன் *ariyunan*, பெ. (n.) உணர்கிறவன்; one who knows or understands. "அறியுந ராவி போழும் அநங்கனைங் கணையும் எய் தாள்" (சீவக. 1572).

[அறிகின்றான் → அறியுந்நான் → அறியுநன் (வினையா. பெ.).]

அறிவர் *arivar*, பெ.(n.) சிறந்த அறிவுடையோர்; the wise ones, sages. "கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்" (தொல். பொருள். கற். 52).

[அறி → அறிவு (தொ.பெ.) → அறிவர். 'அர்' ப.பா. ஈறு.]

அறிவரன் *arivaran*, பெ. (n.) அறிவிற் சிறந்த வன்; one who excels in wisdom. "அரணுல கிற் காய வறிவரனீ யன்றே" (சீவக. 1246).

[அறி + வரன். புரம் → பரம் → வரம் → வரன்.]

வரன் பார்க்க; see *varan*.

அறிவழி-தல் *ariv(u)-ali-*, 2 செ.கு.வி. (v.i.) மதி மயங்குதல்; to lose one's reason, to be bereft of sense, be infatuated (செ.அக.) — மதிமயங் கல், ஒரு சாவுக்குறி; losing sense and consciousness, a symptom of approaching death (சா.அக.).

அறிவழி *ariv(u)-ali*, பெ. (n.) 1. மதிகெடல்; loss of the senses (சா.அக.). 2. மது (யாழ்.அக.); intoxicating liquor which destroys reason and the senses. 3. பேய் (யாழ்.அக.); devil (செ. அக.) — a devil causing insensibility (சா. அக.).

க. அறிமருள்

அறி → அறிவு (தொ.பெ.) + அழி (தொ.பெ., தொ.ஆகு.).]

அறிவறிவாக *ariv(u)-ariv(u)-āga*, கு.வி.எ. (adv.) விளக்கமாய்த் (விவரமாய்த்) தெரிந்துகொள் ளும்படி; so as to ascertain the minutest details. 'மரியாதைகளும் அறிவறிவாக விசாரித்து' (கோயிலொ. 42).

[அறி → அறிவு (தொ.ஆகு.) + அறிவு (தொ. பெ.) + ஆக. ஆகு → ஆக (நி.கா.பெ.எ., கு.வி.எ. ஈறு).]

அறிவறை *ariv(u)-arai*, பெ. (n.) 1. ஆதனறிவம் (ஆன்மபோதம்) இன்மை; lack of spiritual knowledge. 2. ஆதனறிவம் (ஆன்மபோதம்) இல்லாதவன்; one, destitute of spiritual knowledge. 3. பொய்க்காட்சி; illusion (சா.அக.). 4. அறிவு அல்லது உணர்வு அழிகை; loss of sense (சா.அக.).

[அறி → அறிவு (தொ.பெ.) + அறை. அறு → அறை (தொ.பெ.). 'ஐ' தொ.பெ. ஈறு.]

அறிவறைபோ-தல் *ariv(u)-arai-pō-*, 8 செ.கு.வி. (v.i.) அறிவு கீழற்றுப் போதல், அறிவு கெட்டழிதல்; to have one's knowledge or sense undermined. "அறிவறை போகிய பொறியறு நெஞ்சத் திறைமுறை பிழைத் தோன்" (சிலப். 20 : 25-6).

[அறி → அறிவு + அறைபோ. அறு → அறை (தொ.பெ.). 'போ' து.வி.]

அறிவன் *arivan*, பெ. (n.) 1. நல்லறிவுடைய வன்; man of knowledge, wise man, sage. "அறிவர் தேர்குறி னையன் செய்தன முறைய தாகுமால்" (கந்தபு. அசுர. மார்க்கண். 259). 2. அருகன் (திவா.); Arhat. 3. புத்தன் (பிங்.); the Buddha. 4. மதிமகன் (புதன்) (திவா.);

Mercury. 5. செவ்வாய் (பிங்.); the planet Mars. 6. முரசு (உத்திரட்டாதி) (நாநார்த்த.); the 26th lunar asterism. 7. கணியன்; astrologer. ''நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை'' (கலித். 39 : 46). 8. கம்மாளன் (திவா.); artisan.

[அறி → அறிவு (தொ.பெ.) + அறிவன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அறிவனார் *arivaṉār*, பெ. (n.) பஞ்சமரபு என்னும் இசைநூ லாசிரியர் (சிலப். 6 : 35, அடியார்க். உரை); name of the author of *Pañjamarabu*, an ancient treatise on Tamil Music.

[அறி → அறிவு → அறிவன் → அறிவனார். 'அன்' ஆ.பா. ஈறு. 'ஆர்' உ.ப. ஈறு.]

அறிவனாள் *arivaṉāḷ*, பெ. (n.) முரசுநாள் (உத்திரட்டாதி) (திவா.); the 26th lunar asterism.

[அறிவன் + நாள்.]

'அறிவன்' என்பது மதிமகன் (புதன்) என் னும் நாலாங்கோளுக்குப் பெயராய் அமைந் திருக்கும்போது, அதைச் செவ்வாய்க் கோளை யும் முரசுநாளையுங் குறிக்கப் பயன்படுத்து வது அத்துணைப் பொருத்தமான தன்று.

அறிவாகரன் *ariv(u)-āgaraṉ*, பெ. (n.) அறிவிற்கு இருப்பிடமாகவுள்ளவன்; a man who is the repository of knowledge, a man of profound knowledge.

ம. அறிவாக்கன்மார்

[அறி → அறிவு (தொ.ஆகு.) + Skt. ākara.]

அறிவாணி *arivāṇi*, பெ. (n.) காமமிக்க பெண்டிர் வகுப்பு நான்கனுள் இரண்டாவதைச் சேர்ந்த வள் (சித்தினி); the second of the four classes of lascivious women, as characterised by lust (சா.அக.).

அறிவாளி *ariv(u)-āli*, பெ. (n.) அறிவுமிக்கவன், கூர்மதியன்; a man of profound knowledge, an intelligent person.

ம. அறிவாளன்

[அறி → அறிவு (தொ.ஆகு.) + ஆளி (ஆ.பா. ஈறு.]

அறிவாற்றல் *ariv(u)-āṟṟal*, பெ. (n.) அறிவாகிய அல்லது அறிவின் வலமை; the power of knowledge.

[அறி → அறிவு (தொ. ஆகு.) + ஆற்றல். ஆற்று → ஆற்றல். ஆற்றுதல் = செய்யமாட்டு தல்.]

அறிவானந்தர் *arivāṉandar*, பெ. (n.) அகத்தியர் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு வென்னர் (சித்தர்), பல்வகை மருத்துவ நூல்களை இயற்றியவர்; one of the *Siddhas* of the Agattiyar School, author of several treatises on Alchemy and Medicine (சா.அக.).

அறிவி-த்தல் *arivi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. தெரிவித்தல்; to inform, make known, relate, communicate. 2. வெளியிடுதல்; to publish, announce.

ம. அறியிக்குக

[அறி (த.வி.) → அறிவி (பி.வி.).]

அறிவிக்கை *arivikkai*, தொ. பெ. (vbl. n.) அறிவிப்பு பார்க்க; see *arivippu*.

[அறி (த.வி.) → அறிவி (பி.வி.) → அறி விக்கை (தொ.பெ.). 'கை' தொ.பெ. ஈறு.]

அறிவிப்பு *arivippu*, பெ. (n.) 1. தெரிவிப்பு; information. 2. விளம்பரம்; notice, publication.

ம. அறியிப்பு; க., பட. அரிகெ.

[அறி (த.வி.) → அறிவி (பி.வி.) → அறிவிப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு.]

அறிவியல் *ariv(u)-iyal*, பெ. (n.) அறிவாராய்ச்சி யால் கூர்ந்து நோக்கியும் ஆய்வு செய்தும் மெய்ம்மை கண்டு ஒழுங்குபடுத்தப்பட்ட பொது நெறியீட்டறிவு; science, knowledge ascertained by observation and experiment critically tested, systemised and brought under general principles.

[அறிவு + இயல்.]

அறிவிலாப்பித்தம் (பிரமை) *ariv(u)-ilā-p-pittam*, பெ. (n.) பித்தநோய் நாற்பதனுள் ஒன்று; one of the 40 kinds of bilious disorders in the system causing insensibility (சா.அக.).

[அறி → அறிவு + இல் + ஆ + பித்தம். 'ஆ' (ஈ.கெ.எ.ம.பெ.எ. ஈறு). பித்து → பித்தம்.]

அறிவிலி *ariv(u)-ili*, பெ. (n.) அறிவில்லாத-வன்-வள்; ignorant person, fool, idiot. ''அறிவிலி யடங்குதி யென்றாள்'' (கம்பரா. அயோத். மந்தரை. 75).

க. அரிவிலி

[அறி → அறிவு + இல் + இ (ஒ. ஈறு).]

அறிவினா *ari-viṉa*, பெ. (n.) *அறிந்து கேட்குங் கேள்வி*; question for the purpose of testing, as one put by the teacher to the pupil. 'இந் நூற்பாவிற்குப் பொருள் யாது?' என்று ஆசிரியன் மாணவனை வினவுவது அறிவினா (நன். 385, உரை).

['அறிவினா' வினைத்தொகை.]

அறிவினொளி *ariviṉoḷi*, பெ. (n.) *சூடக்கல்லின் (கற்பூர சிலாசத்தின்) சாரம்*; the active principle of the crystallised gypsum (சா.அக.).

அறிவீனம் *ariv(u)-iṉam*, பெ. (n.) *அறிவின்மை, மடமை*; ignorance.

க. அரிவிலிதன

[அறி → அறிவு (தொ.ஆகு.) + ஈனம். **Skt.** hina > *த. ஈனம்.]*

அறிவு *arivu*, பெ. (n.) 1. *பொறியுணர்வு*; perception by the senses. 2. *உலகியலறிவு*; worldly knowledge. "அறிவுடையா ரெல்லா முடையார்" (குறள், 430). 3. *பரவியல் ஓதி (ஞானம்)*; divine knowledge, spiritual wisdom. 4. *மதி*; intelligence, wit. "எதிரதாக் காக்கு மறிவினார்" (குறள், 429). 5. *அறிய வேண்டியவை*; things which must be known. "அறிவறிந்த மக்கட் பேறு" (குறள், 61). 6. **கல்வி** (திவா.); learning, education, erudition. "கல்வி கரையில" (நாலடி. 135). 7. *அறியும் ஆதன் (ஆன்மா)*; soul. "அறிவுரு வதனோ டநித்த மன்மையின்" (ஞானா. 44 : 5). 8. *அறிவு வடிவான இறைவன்*; God, as the embodiment of knowledge. "சித்தமிசை குடி கொண்ட அறிவான தெய்வமே" (தாயு. தேசோ.).

ம., க. அறிவு; து. அறுகு, அறுவு; தெ. எறுக, எறுகுவ; கோத. அர்வ்; கொலா. எர்க; குட. அரிமை.

[அறி → அறிவு (தொ.பெ., தொ.ஆகு.). 'வு' (அவு) தொ.பெ. ஈறு.]

அறிவுகேடன் *arivu-kēdaṉ*, பெ. (n.) *அறிவற்றவன், மதிகெட்டவன்* (ஈடு); unwise man, fool.

ம. அறிவுகேடன்; க. அறிகுறி, அரிவுகேடி.

[அறி → அறிவு (தொ.ஆகு.) + கேடன். கெடு → கேடு (முத.தி.தொ.பெ.) → கேடன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அறிவுகொளுத்து-தல் *arivu-koḷuttu-*, 5 செ.கு.வி. (v.i.) *அறிவூட்டுதல், மதிபுகட்டுதல்*; to impart instruction, teach, advise.

க. அறிகிசு

[அறி → அறிவு + கொளுத்து. கொள் (த.வி.) → கொளுத்து (பி.வி.).]

அறிவுகோணு-தல் *arivu-kōṇu-*, 5 செ.கு.வி. (v.i.) *தவறான வழியில் அறிவைச் செலுத்துதல்*; to be perverted, crooked, as misuse of intellect.

அறிவுநூல் *arivu-nūl*, பெ. (n.) *மறைநூல், மெய்யறிவுநூல், சமயநூல், மெய்ப்பொருள்நூல், உலகநூல் என்பதற்கு எதிர்*; sacred writings, books of true knowledge, religious or theological treatises, philosophical works imparting spiritual wisdom, dist. f. secular writings.

அறிவுபிற-த்தல் *arivu-pira-*, 3 செ.கு.வி. (v.i.) 1. *அறிவுண்டாதல்*; to dawn as knowledge in the mind, to become enlightened. 2. *மயக்கந் தெளிதல்* (வின்.); to be restored to consciousness.

அறிவுபுகட்டு-தல் *arivu-pugaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) *அறிவூட்டுதல்*; to give instruction, impart knowledge, advise.

[அறி → அறிவு. புக + ஒட்டு – புகட்டு.]

அறிவுமடம்படு-தல் *arivu-madam-padu-*, 20 செ.கு.வி. (v.i.) *அறிந்தும் அறியாததுபோன்றிருத்தல்*; to assume ignorance. "அறிவுமடம் படுதலு மறிவுநன் குடைமையும்" (சிறுபாண். 216.).

[அறிவு + மடம் + 'படு' து.வி.]

அறிவுமயக்கம் *arivu-mayakkam*, பெ. (n.) *மனக்குழப்பம்*; the puzzled state of mind, perplexity.

[அறி → அறிவு. மயங்கு → மயக்கு (தொ.பெ.) → மயக்கம் (தொ.பெ.). 'அம்' தொ.பெ. மேலீறு.]

அறிவுமயங்கு-தல் *arivu-mayaṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *உணர்ச்சி கெடுதல்*; to faint, lose consciousness by swooning, by fits, by sleep, by approach of death. 2. *மனந்தடுமாறுதல், திகைத்தல்*; to be stunned or bewildered.

க. அறிவுமறெ

அறிவுறால் *arivuṟal*, தொ.பெ. (vbl.n.) *அறிவுறுத்துகை*; informing, making known.

"நாமறி வுறாலிற் பழியு முண்டோ" (குறிஞ்சிப். 22).

[அறி → அறிவு + உறால். உறு → உறால் (தொ.பெ.). 'ஆல்' தொ.பெ. ஈறு.]

அறிவுறு-தல் *arivuru-*, (20) செ.குன்றாவி. (v.t.) *அறிதல்*; to know. —, 20 செ.கு.வி. (v.i.) 1. **துயிலெழுதல்**; to wake from sleep. "கிடந் துறங்குஞ் சீரிய சிங்க மறிவுற்று" (திவ். திருப்பா. 23). 2. *உணர்ச்சி மீளப்பெறுதல்*; to regain consciousness.

[அறி → அறிவு + உறு.]

அறிவுறுத்து-தல் *ariv(u)-uruttu-*, 5 செ.கு.வி. (v.i.) *அறிவுபுகட்டுதல்*; to give instruction. —, 5 செ.குன்றாவி. (v.t.) **தெரிவித்தல்**; to inform, make known.

[அறி → அறிவு + உறுத்து. உறு (த.வி.) → உறுத்து (பி.வி.). 'து' பி.வி. ஈறு.]

அறிவை *arivai*, பெ. (n.) ஓதி (ஞானம்); wisdom. "அறிவை யென்னு மமுத வாறு" (திவ். பெரியாழ். 5 . 4 : 2).

[அறி → அறிவை. 'வை' பண்.பெ. ஈறு.]

அறிவொப்புக்காண்டல்வினா *ariv(u)-oppu-k-kandal-vina*, பெ. (n.) **தானறிந்ததைப் பிறனறிவோடு ஒப்புநோக்கக் கேட்குங் கேள்வி** (நேமி. சொல். 6, உரை. மேற்.); question purporting to compare notes with another.

[அறி → அறிவு + ஒப்பு + காண்டல் + வினா. ஒ → ஒப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு. காண் → காண்டல் (தொ.பெ.). 'தல்' தொ.பெ. ஈறு. ண் + த — ண்ட (புணர்ச்சி).]

அறு[1]-தல் *aru-*, 20 செ.கு.வி. (v.i.) 1. *கயிறு முதலியன* **இறுதல்**; to be severed, to break, as a rope. "சாப நாணறு குமில வோதை" (இரகு. யாகப். 87). 2. **உண்டது செரித்தல்**; to be digested. "அற்றது போற்றி யுணின்" (குறள், 942). 3. *கருமங் குதிர்தல்*; to be decided, settled. "அற்ற காரியம்" (சிலப். 17, முன்னிலைப் 2, உரை). 4. **நீங்குதல்**, பிரிதல், நோய் முதலியன **இல்லாமற் போதல்**; to separate, to be cured as a disease. 5. *பாழ்படுதல்*; to go to ruin. "வீடறக் கவர்ந்த வினைமொழிந் தன்று" (பு.வெ. 3.15, கொளு). 6. *முடிதல்*; to cease, come to an end, perish, become extinct. 7. **தாலி நீங்குதல்**; to be removed, as the marriage insignia of a woman. அவளுக்குத் தாலியறுந்தது.

ம., க. அறு; தெ. அறுகு, அறு; கோத. அர்த்; குட. அர; துட. அர்த்; து. அர்ப்புனி.

[அர் → அரி. அர் → அரம். அர் → அறு. ஒ.நோ: உல் → உர் → உறு. அரிதல் = சிறிதாய்த் துணித்தல், அறுத்தல் = பெரிதாய்த் துணித்தல், அறுதல் = துணிபடுதல். ரகரத்தை நோக்க றகரம் வல்லொலியாதலின், அது வல்வினை குறிக்குஞ் சொல்லுறுப்பாயிற்று.]

அறு[2]-த்தல் *aru-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. *பன்னறுவாளாற் கதிரறுத்தல்*; to reap corn with a sickle. 2. **அறுவாளால் அல்லது கத்தியாற் கயிறறுத்தல்**; to cut a rope with a knife or sickle. 3. *காய்கறி யறுத்தல்*; to cut in two or into pieces, as a fruit or vegetable. 4. **செங்கலறுத்தல்**; to mould, as bricks. 5. **ஊடறுத்தல்**; to sever, cleave, cut in two. "விசும்பறுத் திழிந்து" (சீவக. 3055). 6. **பங்கிட்டுக் கொடுத்தல்**; to distribute. "அற்றார்க் கறாது வதிந்தோரும்" (பிரமோத். 16 : 37). 7. **வளை தோண்டுதல்** (உ.வ.); to burrow, form subterraneous passages (Com.u.). 8. **வருத்துதல்**; to tease, worry. என்னை எப்போதும் அறுக்கிறான். 9. **வெல்லுதல்**; to outdo, excel. "ஆடுசிறை யறுத்த நரம்புசே ரின்குரல்" (பதிற்றுப். 43 : 21). 10. **செரித்தல்**; to digest. "ஆரவுண் டறுக்க லாற்றாது" (சீவக. 2839). 11. **நீக்குதல்**; to remove, as obstacles, obviate, as objections, break, as enchantments. தடையறுத்துக் கொடுப்பேன். 12. **இல்லாமற் செய்தல்**; to root out, exterminate. "துயரங்களண்டா வண்ண மறுப்பான்" (தேவா. 2.197 : 1). "அவர் வேரறுப்பென் வெருவன் மின்" (கம்பரா. ஆரணிய. அகத்தியப். 22). 13. **தாலி நீக்குதல்**; to remove the marriage insignia, as a widow. அவள் நேற்றுத் தாலியறுத்தாள். 14. **தீர்மானித்தல், முடிவுசெய்தல்**; to determine, resolve, decide, settle. "மறைக ளெல்லா முடிய வரையறுத் துணர்ந்து புகலினும்" (வெங்கைக்கலம். 89). 15. **இடைவிடுதல்**; to move in jerky rhythm. "அகைப்பு வண்ண மறுத்தறுத் தொழுகும்" (தொல். பொருள். செய். 229). —, 4 செ.கு.வி. (v.i.) **தாலியறுத்துக் கைம்பெண்ணாதல்**; to become a widow, by cutting away the marriage insignia known as *tali*.

ம. அறுக்குக; கொலா., நா. அர்க்; துட. அர்ட்; குவி, பர். எர்க்; குரு. அற; பிரா. கரெ.

[அறுதல் (த.வி.) → அறுத்தல் (பி.வி.).]

அறு[1]*-தல்* பார்க்க; see *aṟu*[1]*-*.

அறுக்கணக்கு *aṟu-k-kaṇakku*, பெ.(n.) **அறைக் கணக்கு** பார்க்க; see *aṟai-k-kaṇakku*.

அறுக்கப்பொறுக்க *aṟukka-p-poṟukka*, கு.வி.எ. (adv.) **உழவுமுதல் அறுவடைவரை ஊக்கமாக;** to work diligently till the completion of harvest. 'அறுக்கப்பொறுக்கப் பாடுபட்டும் படுக்கப் பாயில்லை' (பழ.).

[அறு → அறுக்க (நி.கா.வி.எ.). பொறுக்கு→ பொறுக்க (நி.கா.வி.எ.). 'அறுக்கப்பொறுக்க' எதுகை மரபிணைமொழி.]

உழவு, கட்டியடிப்பு, பரம்படிப்பு, எரு விடல், தொளிகலக்கல், விதைப்பு, நடவு, நீர் பாய்ச்சல், களைபறித்தல், காவல் செய்தல் ஆகிய வினைகளையெல்லாம் ஊக்கமாகச் செய்து கடினமா யுழைத்த பின்பே, நன்றாக நெற்பயிர் விளையும். விளைச்சலின்பின் அறு வடையாகும்போது, அறுத்துக் கட்டிய அரிக் கட்டுகளைக் களத்திற்கு எடுத்துச் செல்வர். அறுக்கும்போதும் கட்டும்போதும் எடுத்துச் செல்லும்போதும் நென்மணிகள் சிந்தும். அவற்றை ஏழைப் பெண்கள் பொறுக்குவர் அல்லது கூட்டிச் சேர்ப்பர்.

இங்ஙனம் அறுக்கவும் பொறுக்கவும் உழவர் மிகப் பாடுபடவேண்டியிருப்பதால், கடின மாக வுழைத்தல் 'அறுக்கப்பொறுக்கப் பாடு படுதல்' எனப்பட்டது. 'அறுக்கப்பொறுக்க' என்பது கொச்சை வழக்கில் 'அறக்கப்பறக்க' என்று வழங்குகின்றது.

அறுக்கரிவாள் *aṟukkarivāḷ*, பெ. (n.) அறுவாள், கருக்கறுவாள் பார்க்க; see *aṟuvāḷ, karukkaṟu-vāḷ*.

அறுக்கன் *aṟukkaṉ*, பெ. (n.) *1.* கோ (சம்.அக. கை.); chief. 2. அணுக்க நண்பன்; intimate friend.

[1. அறுகு = அரிமா. ஒருகா. அறுகு → அறுகன் → அறுக்கன் = அரிமாப் போன்ற தலைவன். 'சிங்கன்' என்பதும், அதன் கடைக் குறையான 'சிங்' என்பதும், சில குலத் தலைவரின் பட்டப்பெயராயிருப்பது ஒப்பு நோக்கத் தக்கது. 2. அருகு = அண்மை, நெருக்கம். ஒருகா. அருகு → அருகன் → அருக்கன் = நெருங்கிய நண்பன்.

இனி, இஃது அணுக்கன் என்பதன் கொச்சைத் திரிபாகவு மிருக்கலாம்.]

அறுக்கிளாமீன் *aṟukkiḷa-mīṉ*, பெ. (n.) ஒரு கடல்மீன்; sea-fish (சா.அக.).

அறுகங்கட்டை *aṟugaṅ-kaṭṭai*, பெ.(n.) அறுகம் புல்லின் அடிவேர்; the main root of harialli grass, *Agrostis linearis*.

[அறுகு + அம் (சாரியை) + கட்டை.]

கட்டை பார்க்க; see *kaṭṭai*.

அறுகங்கிழங்கு *aṟugaṅ-kiḻaṅgu*, பெ. (n.) அறுகம்புல்லின் அடிக்கிழங்கு; the bulbous root of harialli grass.

[அறுகு + அம் (சாரியை) + கிழங்கு.]

கிழங்கு பார்க்க; see *kiḻaṅgu*.

அறுகடி *aṟug(u)-aḍi*, பெ. (n.) அறுகு பற்றிய நிலம்; grass land covered with cynodon grass.

[அறுகு + அடி.]

அறுகம்புல் *aṟugam-pul*, பெ. (n.) படர்புல் வகை; harialli grass, *Cynodon dactylon* — பூசைக்குகந்த புல்; a species of sacred grass, harialli grass, *Agrostis linearis* (சா.அக.).

[அறுகு + அம் (சாரியை) + புல்.]

அறுகம்வேர் *aṟugam-vēr*, பெ. (n.) அறுகம் புல்லின் வேர்; the root of the sacred grass, *Agrostis linearis* alias *Cynodon dactylon* (சா.அக.).

[அறுகு + அம் (சாரியை) + வேர்.]

அறுகம்வேர்நெய் *aṟugam-vēr-ney*, பெ. (n.) அறுகம் வேரினின்று உருவாக்கும் நெய்; a ghee prepared for medicine from the root of cynodon grass (சா.அக.).

[அறுகு + அம் (சாரியை) + நெய்.]

அறுகம்வேரெண்ணெய் (தைலம்) *aṟugam-vēr-eṇṇey*, பெ. (n.) அறுகம் வேருடன் பல கடைச் சரக்குகளைச் சேர்த்து வடிக்கும் எண்ணெய், மூளைச் சூட்டைத் தணிப்பது; a medicated oil prepared from the root of the cynodon grass mixed with other bazaar drugs and used for cooling the over-heated brain (சா.அக.).

[அறுகு + அம் (சாரியை) + வேர் + எண்ணெய்.]

எண்ணெய் பார்க்க; see *eṇṇey*.

அறுகரிசி *aṟug(u)-arisi*, பெ. (n.) அறுகம்புல் லோடு கூடிய மங்கல வரிசி, வாழ்த்திற்கும் வழிபாட்டிற்கும் பயன்படுத்தப்படுவது; mixture

of cynodon grass and rice, used in benediction or worship. "சென்னி திருத்தமுறு மறுகரிசி யிட்டு" (திருவானைக். கோச்செங். 93).

[அறுகு + அரிசி. அரி + அரிசி.]

அறுகால்[1] *aṟu-kāl*, பெ. (n.) 1. **அறுகாலுள்ள வண்டு;** beetle which is six-legged. "அறுகா னிறைமலர்" (திருக்கோ. 126). 2. **தேனீ;** a bee (சா.அக.).

ம. ஆறுகால்; க. ஆறுதள.

[ஆறு → அறு + கால்.]

அறுகால்[2] *aṟu-kāl*, பெ. (n.) (**காலில்லாப்**) பாம்பு; serpent, as one without feet. "அறுகாற் பீடத் துயர்மால்" (திருவிளை. பாயி. 30).

[அறுகால் (வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை) = காலற்றது. அறுதல் = நீங்குதல், இல்லாதிருத்தல்.]

அறுகால்வண்டு *aṟu-kāl-vaṇḍu*, பெ. (n.) கருவண்டு; a black beetle (சா.அக.).

அறுகாலன் *aṟu-kālaṉ*, பெ. (n.) (**காலில்லாப்**) பாம்பு (மருதூரந். 6); serpent, as one without feet.

அறுகால்[2] பார்க்க; see *aṟu-kāl*[2].

['அறுகால்' வினைத்தொகை. 'அன்' ஒ. ஈறு.]

அறுகாலி *aṟu-kāli*, பெ. (n.) 1. அறுகாலுள்ள வண்டு அல்லது தேனீ; six-legged beetle or bee. 2. **அறுகாலுள்ள இருக்கை** (இக்.வ.); a bench having six legs (Mod.).

[ஆறு → அறு + கால் + இ (ஒ. ஈறு).]

அறுகாழி *aṟu-kāḻi*, பெ. (n.) **ஆறு முத்து அல்லது மணி பதித்த மோதிரம்;** finger-ring inlaid with six pearls or gems. 'கையு மறுகாழியுமான வடிவை' (ஈடு. 8.10:6).

[ஆறு → அறு + காழ் + இ (உடைமை குறித்த ஒ. ஈறு). காழ் = முத்து, மணி.]

அறுகாற்பீடம் *aṟu-kāṟ-pīḍam*, பெ. (n.) **ஆறு கால்கள் அமைந்த இருக்கை;** six-legged stool used in Śiva temples. "அறுகாற் பீடத் திருந்து" (திருவிளை. பாயி. 30).

[ஆறு → அறு + கால் + பீடம். பீடு = பெருமை, உயர்வு, மேடு. பீடு → பீடம் = மேடான இருக்கை.]

அறுகிடு-தல் *aṟug(u)-iḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **திருமணத்தில் அறுகிட்டு வாழ்த்துதல்;** to bless the bride and the bride-groom by throwing on their heads rice with cynodon grass. "மங்கைக் கறுகிட வந்துநின் றார்மணப் பந்தலிலே" (தமிழ்நாவ. 54).

[அறுகு + இடு.]

அறுகிலிப்பூடு *aṟugili-p-pūḍu*, பெ. (n.) **பூடுவகை** (வெட்.); a kind of shrub (Insc.).

அறுகீரை *aṟu-kīrai*, பெ. (n.) **அரைக்கீரை;** a pot herb, a kind of edible greens. "அறு கீரையைத் தின்றறி" (பதார்த்த. 625).

['அறுகீரை' வினைத்தொகை. பாத்தியில் வளர்த்து இடையிட்டிடையிட்டு அறுக்கப் படுவது அறுகீரை.]

அறுகு[1] *aṟugu*, பெ. (n.) **இந்தியாவெங்கும் இயற்கையாக வளர்வதும், ஆழ வேரூன்றி நீளப் படர்வதும், அழியாதிருப்பதும், பயிர் பச்சைகளைக் கெடுப்பதும், வாழ்த்திற்கும் வழிபாட்டிற்கும் பயன்படுத்தப்படுவதும், பல்வேறு மருந்தாக வுதவுவதும், பல்வகைப் பட்டதுமான புல்வகை;** harialli grass, found in many varieties almost every where throughout India, growing or existing all the year round, used in worship and benediction, and serving as medicine for several diseases in several forms, *Cynodon dactylon*. "அறுகாற் பிடுயர் முடியார்" (திருவிளை. பாயி. 30) (சா.அக.). The different kinds of this plant are:

1. சிற்றறுகு - *Agrostis linearis*.
2. புல்லறுகு - ***aṟugu*** (proper).
3. பேரறுகு - *Panicum ischoemoides*.
4. உப்பறுகு - *Agrostis trenula*.
5. கூந்தலறுகு - *Agrostis*.
6. வெள்ளறுகு - *Exacum hyssopifolium*.
7. ஆற்றறுகு - River variety.
8. யானையறுகு - elephant grass.
9. கொடியறுகு - creeper grass.
10. பாளையறுகு - a kind of grass.

The other common species are: gracilis and virgatus.

[அறு → அறுகு. நோய்களை அறுப்பதனால் அறுகம்புல் என்று பெயர் என்பர் மருத்துவர் சாம்பசிவம் பிள்ளை. பயிர்பச்சைகளை அழிப் பதனால் அறுகம்புல்லெனப்பட்டது என்று கொள்ளவும் இடமுண்டு.]

விளக்குமாற்றுப் புல் என்பதும் அறுகின் வகையே.

அறுகு[2] *arugu*, பெ. (n.) 1. **அரிமா**; lion. 2. **யானையாளி** (திவா.); an extinct animal. 3. **யானை;** elephant (சா.அக.). 4. **புலி** (அக.நி.); tiger — **ஆண்புலி**; male tiger (சா.அக.).

[ஒருகா. அறு → அறுகு = விலங்குகளை யழிக்கும் அரிமா, துதிக்கையொடு கூடிய அரிமா வடிவினதாகச் சொல்லப்படும் யாளி, விலங்குகளை யழிப்பதில் அரிமாவை யடுத்த புலி.]

யாளி துதிக்கை யளவில் யானையை யொத்திருந்ததனால், யாளியென்னுஞ் சொல் லிற்கு யானைப் பொருளுங் கொள்ளப் பட்டதுபோலும்!

அறுகு[3] *arugu*, பெ. (n.) **ஆளிவிதையை அரைத்துப் பிழிந்த சாறு**; the juice of the linseed (சா.அக.).

அறுகு[4] *arugu*, பெ. (n.) 1. **வெளித்திண்ணை** (W.G.); a platform or terrace forming a verandah or porch, pial. 2. **தெருப்பந்தல்** (கோவை); *pandal* in the street, in front of a house (Cm.).

[அருகு → அறுகு.]

அறுகுணன் *aru-kunan*, பெ. (n.) **அறுகுணங் களை யுடைய இறைவன்** (வின்.); God, as having six attributes.

உடைமை (ஐசுவரியம்), ஆண்மை (வீரியம்), புகழ், திரு, அறிவம் (ஞானம்), பற்றின்மை (வைராக்கியம்) என்பன அறுகுணங்கள் (பாரத வசனம், அநுசா. பக். 935).

[ஆறு → அறு (கு.பெ.எ.) + குணன். குணம் → குணன். 'ன்' (அன்) ஆ.பா. ஈறு.]

அறுகுதராசு *arugu-tarāsu*, பெ. (n.) **பொன், வெள்ளி, மணி முதலிய விலையுயர்ந்த பொருள் களையும் மருந்தையும் நிறுக்க வுதவும் சிறு நிறைகோல்**; delicate balance for weighing precious metals and medical ingredients.

[அறுகு + U. tarāzu > த. தராசு. அரு → அருகு → அறுகு.]

அறுகுமூலி *arugu-mūli*, பெ. (n.) **ஒரு மருந்து மூலிகையான வெள்ளறுகு**; white doob grass, *Enicostema littorule* alias *Adenema hyssopifolium* (சா.அக.).

அறுகுவெட்டுத்தரிசுகூலி *arugu-vettu-t-tarišu-kūli*, பெ. (n.) **குறுங்காட்டிலுள்ள மரஞ்செடி கொடிகளை வெட்டிச் செம்மைசெய்து உழவிற் குக் கொண்டுவந்தவர்க்கு, அதுபற்றி அந் நிலத்தி லேற்பட்ட நுகர்ச்சி (அனுபோக) யுரிமை**; right to enjoy land reclaimed from jungle growth and brought under cultivation.

தரிசு பார்க்க; see *tarišu.*

அறுகுறை *aru-kurai*, பெ. (n.) **அட்டை, தலை யில்லா வுடம்பு, முண்டம்**; headless body. "ஆடின வறுகுறை யலகைக ளுடனின்று" (பாரத. நிவாத. 141).

['அறுகுறை' வினைத்தொகை. அறுதல் = நீங்குதல், தலைநீங்குதல்.]

அறுகெடு-த்தல் *arug(u)-edu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. **அரிசி கலந்த அறுகம்புல்லைத் தலையில் தூவி வாழ்த்துதல்**; to invoke blessings on a person by scattering on his head, rice with cynodon grass. "மறையோ ரெதிர்கொண் டறுகெடுப்ப" (சேக்கிழார். பு. 88). 2. **வழி படுதல், பூசை செய்தல்**; to worship. "அரச ரப்பொழு தடிமிசை யறுகெடுத்திட" (கலிங். 264).

[அறுகு + எடு. எடுத்தல் = எடுத்துத் தூவு தல்.]

அறுகெழுந்தபடுதரை *arug(u)-elunda-padu-tarai*, பெ. (n.) **அறுகு படர்ந்து உழவிற்குப் பயன்படாத தரிசு நிலம்** (S.I.I. v, 376); waste land overgrown with cynodon grass and unfit for cultivation.

அறுகை[1] *arugai*, பெ. (n.) **அறுகம்புல்**; cynodon grass. "அறுகையு நெருஞ்சியு மடர்ந்து" (மணிமே. 12 : 60).

ம. அறுக

[அறுகு → அறுகை.]

அறுகை[2] *aru-kai*, பெ. (n.) **அறுப்புண்ட கை**; amputated hand (சா.அக.).

['அறுகை' வினைத்தொகை.]

அறுகைவாணிகன் *arugai-vanigan*, பெ. (n.) **அறுவை வாணிகன் பார்க்க**; see *aruvai-vanigan* (S.I.I. vii, 318).

அறுகோணஅமைதி *aru-kōna-amaidi*, பெ. (n.) **சிவபெருமானின் நடத்திருமேனி யுருவம் அறு கோணக் கட்டத்திற்குள் அமைந்துள்ள நிலை;**

the state of the figure of Śiva in his dance-pose being contained within an hexagonal outline. 'நடராஜ மூர்த்தத்தின் முடி, அக்கினி, புலி வால் அல்லது உத்தரியம், ஊன்றிய திருவடி, தூக்கிய திருவடி, துடி ஆகிய ஆறும் 60 பாகைக் கொன்றாக அமைந்து, திருவாசி யாகிய பிரபஞ்சத்தைத் தொட்டுக்கொண்டு பிரபஞ்சத்தை இயக்கும் ஆரக்கால் போல இருக்கின்றன.

அறுகோண அமைதியில் அமைந்த இத் திருவுருவம், ஆறாதாரத் தத்துவத்தையும் உணர்த்திக்கொண்டிருக்கிறது' (சி.செ. பக். 71).

[ஆறு → அறு + கோணம் + அமைதி. கோண் → கோணம். 'அம்' பண்.பெ. ஈறு. அமை → அமைதி. 'தி' தொ.பெ. ஈறு.]

அறுகோணபதி *aṟu-kōṇa-padi,* பெ. (n.) **ஆறு நிலைக்களங்களுள் (ஆறாதாரங்களுள்) ஒன்றானதும், பதினாறிதழ்த் தாமரை வடிவினதாகக் கருதப்படுவதுமான அடி நாத்தாவின் அதிகாரி;** the power in the psychic centre of the cervical region (சா.அக.).

[ஆறு → அறு + கோணம் + பதி. கோண் → கோணம். 'அம்' பண்.பெ. ஈறு. **Skt.** pati = தலைவன்.]

அறுகோணம் *aṟu-kōṇam,* பெ. (n.) 1. **ஆறு மூலை கொண்ட சக்கரம் அல்லது வடிவம்** (சி. சி. சுபக். 2 : 67); hexagon. 2. **அடி நாத்தாவு** (விசுத்தி வீடு); one of the psychic centres situated in the cervical region (சா.அக.).

அறுகோணபதி பார்க்க; see *aṟu-kōṇa-padi.*

அறுசமயம் *aṟu-šamayam,* பெ. (n.) **சிவனியம் (சைவம்), மாலியம் (வைணவம்), காளியம் (சாத்தம்), கதிரவம் (சௌரம்), ஆனைமுகவம் (காணபத்தியம்), குமரம் (கௌமாரம்) என்னும் அறுவகை இந்துசமயக் கொள்கைகள்;** the six post-Vēdic Hindu religious systems.

[ஆறு → அறு + சமயம். சமை → சமையம் → சமயம்.]

சமயம் பார்க்க; see *šamayam.*

அறுசரக்கு *aṟu-šarakku,* பெ. (n.) **கல்லுப்பு, சாரம், வெடியுப்பு, படிகாரம், துருசு, வெண்காரம் என்னும் அறுவகைச் சரக்குகள்;** a group of six ingredients consisting of common salt, sal-ammoniac, nitre, alum, blue vitriol and borax (சா.அக.).

அறுசரம் *aṟu-šaram,* பெ. (n.) **அறுநரம்புள்ள யாழ்** (திவா.); lute, as a six-stringed instrument.

[ஆறு → அறு + சரம். சரி → சரம்.]

அறுசிறுபொழுது *aṟu-šiṟu-poḻudu,* பெ. (n.) **அறுபொழுது** பார்க்க; see *aṟu-poḻudu.*

அறுசுவை *aṟu-šuvai,* பெ. (n.) **இனிப்பு, புளிப்பு, கைப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்னும் அறுவகை நாவுணர்ச்சி;** the six flavours. "அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட" (நாலடி. 1).

க. அறுபோன

அறுசுவைக்காதி *aṟu-šuvai-k-kādi,* பெ. (n.) **அறுசுவையுப்பு** பார்க்க; see *aṟu-šuvai-y-uppu.*

அறுசுவைகழற்றல் *aṟu-šuvai-kaḻaṟṟal,* தொ. பெ. (vbl. n.) **தவத்தோர் கற்பமுண்டு உடம்பை வலுப்படுத்துமுன் அறுசுவை யுண்டி யாசையை அறவே யொழித்தல்;** renunciation of the pleasures of eating delicious dishes of all tastes, generally resorted to by yogis and *Siddhars* preparatory to taking medicines for rejuvenation (சா.அக.).

[ஆறு → அறு + சுவை + கழற்றல். கழல் (த.வி.) → கழற்று (பி.வி.) → கழற்றல் (தொ. பெ.) = நீக்குதல். 'அல்' தொ.பெ. ஈறு.]

அறுசுவையுண்டி *aṟu-šuvai-y-uṇḍi,* பெ. (n.) **ஆறு சுவையுங் கொண்ட உண்டிவகைகள்;** foodstuff prepared with all the six flavours. "அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட" (நாலடி. 1).

[ஆறு → அறு + சுவை + உண்டி. உண் → உண்டி (தொ.ஆகு.). 'தி' தொ.பெ. ஈறு. ண் + தி – ண்டி (புணர்ச்சி).]

அறுசுவையுப்பு *aṟu-šuvai-y-uppu,* பெ. (n.) **கல்லுப்பு;** common salt forming basis for all kinds of tastes (சா.அக.).

அறுசூலை *aṟu-šūlai,* பெ. (n.) **பித்தசூலை, ஊத (வாத) சூலை, கோழைச் (சிலேட்டும) சூலை, ஊதபித்தசூலை, கோழைப்பித்தசூலை, ஐயகணசூலை என்னும் அறுவகைச் சூலை நோய்கள்** (இராட்.); six kinds of arthritis or gout, viz., *pittašūlai, ūdašūlai, kōḻaiccūlai, ūdapittašūlai, kōḻaippittašūlai, aiyakaṇašūlai* (R.).

அறுசோகம் *aṟušōgam,* பெ.(n.) **கெந்தி;** sulphur (சா.அக.).

அறுத்தவள் *aṟuttavaḷ*, பெ. (n.) **கைம்பெண்;** widow, as one who has removed her marriage insignia known as *tāli*.

[அறு → அறுத்த (இ.கா.பெ.எ.) + அவள்.]

அறுத்திசைப்பு *aṟutt(u)-isaippu*, பெ. (n.) (யாப்.) **வேற்றிசை கலந்துவரும் யாப்புவழு, மூவகை ஓசைக்குற்றத்துள் ஒன்று** (யாப். வி. 95, உரை); (Pros.) fault which consists in introducing in a verse of one metre, the rythm of other metres.

[அறு → அறுத்து (இ.கா.வி.எ.) + இசைப்பு. இசை → இசைப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு. இசைத்தல் = ஒலித்தல்.]

அறுத்திடல் *aṟuttiḍal*, தொ.பெ. (vbl.n.) **அவா வறுக்கை** (சூடா.); extirpation of desire.

[அறு → அறுத்து (இ.கா.வி.எ.) + இடல். இடு → இடல் (தொ.பெ.). 'அல்' தொ.பெ. ஈறு. 'இடு' து.வி.]

அறுத்துக்கட்டு-தல் *aṟuttu-k-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) **கணவனையிழந்தோ தீர்வை செய்யப் பட்டோ தாலி நீங்கிய பின், மறுதாலி கட்டி மணத்தல்;** to remarry, in the case of castes that allow remarriage of widows and divorced women, as removing the marriage insignia known as *tāli* tied by a former husband and having a new one tied by another.

[அறு → அறுத்து (இ.கா.வி.எ.) + கட்டுதல். கட்டு → கட்டுதல் (தொ.பெ.). 'தல்' தொ.பெ. ஈறு. கட்டுதல் = தாலி கட்டுதல்.]

அறுத்துப்பேசு-தல் *aṟuttu-p-pēsu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **தீர்மானமாகச் சொல்லுதல்;** to speak definitely, decisively, conclusively.

[அறு → அறுத்து (இ.கா.வி.எ.) + பேசு.]

அறுத்துமுறி *aṟuttu-muṟi*, பெ.(n.) **மணவிலக்குச் செய்தல்** (இ.வ.); divorce (Loc.).

[அறு → அறுத்து + முறி. முறி (முத.தொ.பெ.) = முறித்தல்.]

அறுத்துரை-த்தல் *aṟutt(u)-urai-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **வரையறுத்துச் சொல்லுதல்;** to speak positively, definitely. 2. **பிரித்துச் சொல்லுதல்;** to interpret by breaking up a sentence and making a subordinate clause a principal one. 'திருந்துங் கடனெறியைச் செல்லுமென்றும், களவாகிய இவ்வாற்றைச் சிதைக்குமென்றும், முற்றாக அறுத்துரைப் பாருமுளர்' (திருக்கோ. 272, உரை).

[அறு → அறுத்து (இ.கா.வி.எ.) + உரை.]

அறுத்துவிட்டவள் *aṟuttu-viṭṭavaḷ*, பெ. (n.) **கைம்பெண்;** widow, who is deprived of her *tāli*, 'marriage insignia'. தையல்நாயகி நாக நம்பியின் அறுத்துவிட்டவள் (உ.வ.).

[அறு → அறுத்து (இ.கா.வி.எ.) + விட்டவள். விடு → விட்ட (இ.கா.பெ.எ.) + அவள். 'விடு' து.வி.]

அறுத்தோடி *aṟutt(u)-ōḍi*, பெ. (n.) **ஏரிக் கரையை அல்லது ஆற்றங்கரையை அறுத் தோடும் நீரோட்டம்;** gully, as water eroding or breaching a bund.

[அறு → அறுத்து (இ. கா. வி. எ.) + ஓடி. ஓடு → ஓடி. 'இ' வி.முத. ஈறு.]

அறுதல் *aṟudal*, பெ. (n.) **காசுக் (நாணயக்) குற்றவகை** (சரவண. பணவிடு. 66); a defect in coins.

[அறு → அறுதல் (தொ.ஆகு.). 'தல்' தொ. பெ. ஈறு.]

அறுதலி *aṟudali*, பெ. (n.) **கைம்பெண்;** widow, as one whose *tāli*, 'marriage insignia', has been removed. 'அறுதலி பெற்ற மகனுக்கு அங்க மெல்லாங் குறும்பு' (சேட்டை) (பழ.).

[அறுதாலி (வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை) → அறுதலி.]

அறுதாலி *aṟu-tāli*, பெ. (n.) **கைம்பெண்;** widow. 'அறுதாலி யாரை யழைத்துத் தன் வீட்டி லிருத்தி' (ஆதியூரவதானி).

அறுதலி பார்க்க; see *aṟudali*.

அறுதி *aṟudi*, பெ. (n.) 1. **இல்லாமை;** non-existence. 2. **வரையறை;** limit. "காடு மன்னுநின் புதல்வருக் கறுதிசெய் காலமோ" (பாரத. உலூகன். 16). 3. (வரையறுத்த) **உரிமை;** (restricted) possession, ownership, right. "செம்மகள் கரியோற் கறுதி யாக" (கல்லா. 18 : 10). 4. முடிவு; end, close, termination. "அறுதி யாகவின் றருஞ்சமர் முடித்தும்" (பாரத. பதினெட். 46). 5. **அறுதிக் குத்தகை;** unconditioned lease. 6. **அறுதிவிலை (அறுதிக் கிரயம்);** finality, as in a sale. "அறுதியீ தென்று கொண்டு" (திருவாலவா. 46 : 32). 7. **நாசம்;** destruction.

“ அறுதி யிலானே ” (சி.சி. சுபக். 1 : 35, சிவாக்.). —, இடை. (part.) வரை; until. “அன்றுமுத லின்றறுதியா” (திவ். திருவாய். 4 . 1 : 6).

[அறு → அறுதி. ‘தி’ பண்.பெ. ஈறு.]

அறுதிக்கரை *arudi-k-karai*, பெ. (n.) **நிலங் களை ஊர்ப்பொதுவில் வைக்காமல் தனித்தனி யாய் உரிமையுள்ளவர்கட்குப் பிரித்துக் கொடுக் கப்படும் நிலவுரிமை முறை, பசுங்கரை என்ப தற்கு எதிர்**; system of land tenure in which all lands once held by a village community jointly, were distributed amongst the members permanently, each member receiving a definite share which became his absolute property thereafter, and for the rent of which he alone is responsible, dist. f. *pašungarai* (C.G.).

அறுதிக்களநடை *arudi-k-kala-nadai*, பெ. (n.) **ஆட்டை (வருஷாந்தர) நெற்கணக்கு** (இ.வ.); annual account for the income from paddy (Loc.).

[அறு → அறுதி + களம் + நடை. நட → நடை = நடப்பு, கணக்கு.]

அறுதிக்கிரயம் *arudi-k-kirayam*, பெ. (n.) **முடிவான விற்பனை**; absolute or final sale.

[அறு → அறுதி + கிரயம். Skt. kraya > த. கிரயம் = விலைத்தொகை.]

இதை ‘அறுதிவிலை’ அல்லது ‘அறுதிவிற்பு’ என்று சொல்லலாம்.

அறுதிச்சாதனம் *arudi-c-cādanam*, பெ. (n.) **விற்பனை யாவணம் (கிரய பத்திரம்)**; deed of transfer.

[அறு → அறுதி + சாதனம். Skt. šāsana > த. சாதனம் = பட்டயம்.]

அறுதிச்சீட்டு *arudi-c-cīttu*, பெ. (n.) **அறுதிமுறி, அறுதியாவணம்**; deed of transfer (W.).

[அறு → அறுதி + சீட்டு. சிட்டு (சிறியது) → சீட்டு = நறுக்கு, ஓலை, முறி, ஆவணம்.]

அறுதிப்பங்கு *arudi-p-pangu*, பெ. (n.) 1. **ஊர்ப் பொதுவி லில்லாத தனியுரிமை நிலம்**; portion of village lands enjoyed by a villager or land-holder as his absolute property. 2. **கடன் தீர்ப்பதிற் கடைசியாகக் கொடுக்கப்படுந் தொகை** (வின்.); the last and final payment made towards the discharge of a debt.

அறுதிப்பட்டு *arudi-p-pattu*, பெ. (n.) **அறுதிப் பரிவட்டம்** பார்க்க; see *arudi-p-pari-vattam.*

அறுதிப்பரியட்டம் *arudi-p-pariyattam*, பெ. (n.) **அறுதிப்பரிவட்டம்** பார்க்க; see *arudi-p-pari-vattam.*

[பரிவட்டம் → பரியட்டம்.]

அறுதிப்பரிவட்டம் *arudi-p-pari-vattam*, பெ. (n.) **மாலிய (வைணவ) வழக்கப்படி, கோயில் மதிப்புரவாகத் (மரியாதையாகத்) தெய்வச் சிலையின் அருகிலிருந்தெடுத்துப் பெருந்தகை மக்களின் தலையில் திருக்கொடை போலக் கட்டப்படும் பட்டுத்துணி**; silk cloth taken from the sanctuary of an idol and tied on to the heads of distinguished personages, as a divine gift, according to Vaiṣṇava usage.

[அறு → அறுதி + பரி + வட்டம். அறுதி = உரிமை, மதிப்புரிமை. பரிதல் = சுற்றுதல், சுற்றிக்கட்டுதல், வட்டமாதல். வட்டம் = துணி.]

பரிதல் (சுற்றுதல்) என்னும் வினைச்சொல் இன்று வழக்கற்றது.

அறுதிப்பாடு *arudi-p-pādu*, பெ. (n.) **முடிவுபேறு** (வின்.); accomplishment, completion.

[அறு → அறுதி + பாடு. படு → பாடு (தொ. பெ.). ‘படு’ து.வி.]

அறுதிமுறி *arudi-muri*, பெ. (n.) **தீர்ந்த கணக்குச்சீட்டு**; receipt for full payment of dues or debts. ‘ஆண்டுதோறும் அறுதிமுறி பெறவும்’ (S.I.I. iii, 140).

[அறு → அறுதி + முறி (முத.தொ.ஆகு.).]

அறுதியிடு-தல் *arudi-y-idu-*, 18 செ.குன்றாவி. (v.t.) 1. **முடிவிற்குக் கொண்டுவருதல்**; to bring to completion or to a close. 2. **தீர் மானித்தல்**; to determine. “அமர்வமென் றறுதியிட்டு” (திருவாலவா. 27 : 41). 3. **காலங்குறித்தல்**; to specify a time, appoint a day.

அறுதியுறுதி *arudi-y-urudi*, பெ. (n.) 1. **அறுதிச் சீட்டு** (வின்.); deed of relinquishment by transfer. 2. **முடிவான உறுதிப்பாடு**; final assurance.

[அறு → அறுதி. உறு → உறுதி. ‘தி’ பண். பெ. ஈறு.]

அறுதுவர்ப்பு *aru-tuvarppu*, பெ. (n.) (சமண.) **ஆசியம் (சிரிப்பு), இரதி (விருப்பு), அரதி (விருப்பின்மை), சோகம் (அசைவு, வருத்தம்),**

பயம் (அச்சம்), சுகுச்சை (அருவருப்பு) என்னும் **அறுவகைக் குண வேறுபாடுகள்**; (Jain.) the six kinds of disposition of mind, viz., *hāsya, rati, a-rati, šōka, bhaya, jugupsa*. "அறுவகைத் துவர்ப்பும் பேசி" (சீவக. 3076).

அறுதொழிலோர் *aṟu-toḻilōr*, பெ. (n.) **உழவு, வணிகம், நெசவு, கொல் அல்லது கம், ஆட்சி, கல்வி என்னும் அறுவகைத் தொழில் செய்யும் மக்கள்**; people engaged in the six occupations, viz., agriculture, trade, weaving, artisan's work, government business and learning. "அறுதொழிலோர் நூன்மறப்பர்" (குறள், 560).

[*ஆறு → அறு + தொழிலோர். தொழில் → தொழிலோர். ஆர் → ஓர் (ப.பா. ஈறு).*]

ஆய்ந்து நோக்கின், எல்லாத் தொழில்களும் மேற்குறித்த ஆறனுள் அடங்கும். கட்டட வினைஞரும் குயவரும் கம்மியருள் அடங்குவர். கூலிவேலை அறுதொழிற்கும் பொது.

"உழவு தொழிலே வரைவு வாணிகம்
விச்சை சிற்பம் என்றித் திறத்தறு
தொழில்கற்ப நடையது கரும பூமி"

என்று திவாகரங் கூறுவதும், இதனொடு ஒருவாறு பொருந்தும்.

தமிழமுறைப்படி கல்வி ஒரு வகுப்பார்க்கு மட்டும் உரியதன்று.

"மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார்
கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு"

என்று திருக்குறளும் (409),

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே"

என்று புறப்பாட்டும் (183) கூறுகின்றன.

"தோணி யியக்குவான் றொல்லை
வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்
—காணாய்
அவன்றுணையா ஆறுபோ யற்றே
நூல்கற்ற
மகன்றுணையா நல்ல கொளல்"

என்று நாலடியாரும் (136),

"எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடிக் கற்றோரை மேல்வரு கென்பர்"

என்று நறுந்தொகையும் (38) கூறுகின்றன.

அரிசில்கிழார், அறுவைவாணிகன் இள வேட்டனார், இளங்கோவடிகள், கணியன் பூங்குன்றன், குறமகள் இளவெயினியார், கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார், சேரமான் கணைக்காலிரும்பொறை, சோழன் நலங் கிள்ளி, தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார், திருத்தக்கதேவர், தொண்டைமான் இளந் திரையன், பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், பேய்மகள் இளவெயினி யார், மருத்துவன் தாமோதரனார், வண்ணக் கன் சாத்தனார், வெண்ணிக்குயத்தியார் முதலிய புலவர் புலத்தியர் பெயரும் கல்வியின் குலப்பொதுமையைக் காட்டும்.

மொழியிலக்கணமும், இசை நாடகம் கணக்கு கணியம் மருத்துவம் அரசியல் முதலிய பல்வேறு அறிவியல்களும் நூல் எனப்படும். அரசியல்நூல் பொருள்நூல் எனப்படும்.

அறநூல், பொருள்நூல், இன்பநூல், வீட்டு நூல் என்பன தனித்தனியாகவும் இயலும். முதல் மூன்றும், எல்லா நான்கும் கூட்டாகவும் இயலும். முதல் மூன்றன் கூட்டு **முப்பால்** எனப்படும். அதற்கு இலக்கியம் **திருக்குறள்**. எல்லா நான்கும் சேர்ந்தது **நாற்பால்** எனப் படும். அதற்கு இலக்கியம் இறந்துபட்டது. **திருமந்திரம்** போன்றது வீட்டுநூல். வட மொழி **அர்த்தசாத்திரம்** போல் தமிழிற் பொருள்நூலு மிருந்தமை,

"ஒற்றும் உரைசான்ற நூலும்
இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்" (581),

"மதிநுட்பம் நூலோ டுடையார்க்கு
அதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை" (636),

"நூலாருள் நூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு" (683),

"உயர்வகலந் திண்மை அருமையிந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்" (743)

என்னுங் குறள்களால் அறியப்படும்.

தனித்தனி யியங்கும் இயல் இசை நாடகம் மூன்றும் முத்தமிழெனக் கலந்தவாறே, அறம் பொருள் இன்பம் மூன்றும் முப்பாலெனவும், அவற்றொடு வீடும் சேர்ந்து நாற்பாலெனவும் கலக்குமென வறிக.

பெருநாரை, பெருங்குருகு, சிற்றிசை, பேரிசை, இசை நுணுக்கம் முதலியன தனி இசைநூல்கள். முறுவல், சயந்தம், குண

நூல், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல் முதலியன தனி நாடகநூல்கள். அகத்தியம் முத்தமிழ் நூல்.

''விண்ணிவ் வுலகம் விளைக்கும்
விளைவெல்லாங்
கண்ணி யுரைப்பான் கணி'' (பு.வெ. 174)

என்பதனாற் கணிய நூலும்,

''மிகினுங் குறையினும் நோய்செய்யும்
நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று''
(குறள், 941)

என்பதனால் மருத்துவநூலும் இருந்தமை அறியப்படும்.

''எப்பால்நூ லோர்க்குந் துணிவு'' (குறள், 533) என்றது எல்லா நூல்களையும் பொதுப் படக் குறித்தது.

''ஏரணம் உருவம் யோகம்
இசைகணக் கிரதம் சாலம்
தாரணம் மறமே சந்தம்
தம்பநீர் நிலமு லோகம்
மாரணம் பொருளென் றின்ன
மான நூல் யாவும் வாரி
வாரணங் கொண்ட தந்தோ
வழிவழிப் பெயரும் மாள''

என்னும் பழந் தனிப்பாட்டு, இறந்துபட்ட பல்வேறு நூல்களைக் குறிக்கின்றது. இது பிற்காலத்ததாதலால், பல நூற்பெயர்கள் வடசொல்லாற் குறிக்கப்பட்டுள்ளன.

எல்லா நூல்களையும், உலகநூல் அறிவுநூல் என இரு வகையாக வகுத்துள்ளனர் அறிஞர். இம்மைக்கு மட்டும் பயன்படுவது உலகநூல்; மறுமைக்கும் பயன்படுவது அறிவுநூல்.

''அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லா(து)
உலகநூல் ஓதுவ தெல்லாம் — கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு
தடுமாற்றம்
போஒந் துணையறிவார் இல்''
(நாலடி. 140).

வீட்டுநூல்களான அறிவுநூல்கள், வீடு பேறு கருதிய துறவியர்க்கே சிறப்பாக வுரிய வாயின. அஃறிணைமாட்டும் அருளுடைமை யால், துறவியர் 'அந்தணர்' (அழகிய குளிர்ந்த அருளுடையோர்) எனப்பட்டனர்.

''அந்தண ரென்போர் அறவோர்மற்
றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்''
(குறள், 30)

என்று துறவியரையே அந்தணரென்றும், துறவு எல்லா வகுப்பார்க்கும் பொதுவென் றும்,

''அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றின்
புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்''
(குறள், 46)

என்று, இல்லறத்தாலும் வீடுபேறு உண்டென் றும், ஆரியக் கொள்கையை மறுத்துக் கூறிய திருவள்ளுவர், 'அறுதொழிலோர் நூன்மறப் பர்' என்று பிராமணரையே விதந்து கூறி யிருக்க முடியாது.

மேலும், ஈதல் பிராமணர்க் கின்மையால் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஏற்றல் என்னும் ஐந்தொழிலே அவர்க்குரியன வாம்.

இனி,

''ஓதல் பொருதல் உலகு புரத்தல்
ஈதல் வேட்டல் படைபயிறல் அறுதொழில்''

என்று பிங்கலம் அரசர்க்கும் அறுதொழில் கூறுவதனால், அதனாலும், 'அறுதொழி லோர்' என்னும் பெயர் பிராமணர்க்குப் பொருந்தாத தாகும்.

'அந்தணர் நூல்' என்று திருவள்ளுவர் செங்கோன்மை யதிகாரத்திற் குறித்தது, துறவியர்க்குரிய (மறைநூலென்றும், மந்திர நூலென்றும், அறிவுநூலென்றும், மெய்ந்நூ லென்றும் சொல்லப்படும்) வீட்டு நூலே யாகும். ஆயின், கொடுங்கோன்மை யதிகாரத் தில் 'அறுதொழிலோர் நூன்மறப்பர்' என்றது அறுவகைத் தொழில்செய்யும் இல்லறக் குடிவாணர் தத்தம் தொழிற்குரிய உலக நூல்களை மறந்துவிடுதலையே குறித்த தாகும். 'அறுதொழிலோரும்' என்பதிலுள்ள முற்றும்மை செய்யுள் திரிபால் தொக்கது.

நூலை மறந்துவிடுதலாவது, தொழில் செய்யாதிருத்தல். மழையின்றி மாந்தர் வாழ முடியாததாலால் தொழில்கள் நடைபெறுவ தில்லை. வானம் பெயலொல்லாமையும் ஆபயன் குன்றுதலும் முன்னர்க் கரணிய மாகக் (காரணமாகக்) காட்டியுள்ளமையால், அவற்றின் விளைவாகத் தொழில்கள் நின்று போதலைக் கூறினார்.

ஆகவே, ''பாட்டுரை நூலே'' என்னும் தொல்காப்பிய நூற்பாவிற் (செய். 79) பொதுப்படக் குறிக்கப்பட்ட நூல் என்பது, 'அறுதொழிலோர் நூல்' என்றும் 'அந்தணர்

நூல்' என்றும் இருதிறப்படுமென்பதும், அவற்றுள் முன்னவை இம்மைக்கும் பின்னவை மறுமைக்கும் உரியன என்பதும் அறியப்படும். இலக்கண நூல் இருவகை நூற்கும் பொது வாம்.

இன்னும் இதன் விளக்கத்தை நூல் என்னும் உருப்படியிற் காண்க.

அறுந்தருணம் *aṟun-taruṇam*, பெ. (n.) **நெருக்கடி வேளை, அவசரச் சமையம்;** emergency, exigency (W.).

[அறு → அறும் (எ.கா.பெ.எ.). 'உம்' எ.கா. பெ.எ. ஈறு. **Skt.** taruṇa > *த. தருணம் = சமையம், வேளை.]*

அறுந்தறுவாய் *aṟun-taṟuvāy*, பெ. (n.) **அறுந் தருணம்** பார்க்க; see *aṟun-taruṇam.*

[தறுவாய் = இறுதிநேரம், வேளை, சமையம்.]

தறுவாய் பார்க்க; see *taṟuvāy.*

அறுந்தொகை *aṟun-togai*, பெ. (n.) (கணக்கு) **மிச்சமின்றிப் பிரிக்கப்படும் எண்;** (Arith.) number divisible without remainder.

[அறு → அறும் (எ.கா.பெ.எ.) + தொகை. தொகு → தொகை. 'ஐ' பெ. ஈறு.]

அறுநீர்[1] *aṟu-nīr*, பெ. (n.) **விரைந்து வற்றிப் போகும் நிலைமையிலுள்ள ஏரி குள நீர்;** water of a tank or reservoir nearly dried up.

க. அறுநீர்

[அறுநீர் = சிற்றளவு நீர். 'அறு நீர்' வினைத்தொகை.]

அறுநீர்[2] *aṟu-nīr*, பெ. (n.) **அறுவகைச்செயனீர்** பார்க்க; see *aṟu-vagai-c-ceyaṉīr.*

அறுநூறு *aṟu-nūṟu*, பெ. (n.) **ஆறுநூறு;** six hundred.

ம., க., பட. அறுநூறு.

[ஆறு → அறு + நூறு. நுறு → நூறு.]

நூறு பார்க்க; see *nūṟu.*

அறுப்படிகணக்கு *aṟuppaḍi-kaṇakku*, பெ. (n.) **ஊதிய இழப்புகளைக் (லாப நட்டங்களைக்) காட்டுங் கணக்கு** (இ.வ.); balance sheet, statement showing profit and loss (Loc.).

[ஒருகா. அறைப்படி கணக்கு. ஒ.நோ: அறுக் கணக்கு = அறைக்கணக்கு.]

அறுப்பம்புல் *aṟuppam-pul*, பெ. (n.) **புல்வகை;** a kind of grass. "நீடறுப்பம் புல்லாய்ப் படு பாதி போக" (சரவண. பணவிடு. 144).

[ஒருகா. அறுப்பு + அம் (சாரியை) + புல். இனி, அறுப்பன் + புல் என்றுமாம்.]

அறுப்பன்பூச்சி *aṟuppaṉ-pūcci*, பெ. (n.) **தவசப் (தானியப்) பூச்சிவகை** (இ.வ.); insect that eats off the ears of corn (Loc.).

[அறு → அறுப்பு → அறுப்பன் + பூச்சி. 'அன்' ஒ. ஈறு.]

அறுப்பின்பண்டிகை *aṟuppiṉ-paṇḍigai*, பெ. (n.) (கிறித்.) **அறுவடைக்காலத்தின்பின் புது விளை யுட் பொருள்களைக் காணிக்கையாகச் செலுத் தும் கிறித்தவ விழா நாள்;** (Chr.) harvest festival.

[அறு → அறுப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு. 'இன்' 6ஆம் வேற்றுமைச் சாரியை யுருபு. பண்டு → பண்டிகை.]

பண்டிகை பார்க்க; see *paṇḍigai.*

அறுப்பு *aṟuppu*, பெ. (n.) 1. **அறுப்பு;** cutting. 2. **அறுவடை, கதிரறுக்கை;** harvest, reaping the crop. 3. **அறுத்த துண்டு** (வின்.); piece section sawn. 4. **மரத்தின் அறுத்த பக்கம்** (வின்.); the sawn side of timber. 5. **புண்ணை யறுத்த இடம்** (வின்.); opening of a wound. 6. **தாலியறுக்கை** (வின்.); becoming a widow, as by cutting the marriage insignia called *tali.* 7. **கண்டனம்;** censure, refutation, as of an argument.

ம. அறுப்பு

[அறு → அறுப்பு (தொ.பெ., தொ.ஆகு.). 'பு' தொ.பெ. ஈறு.]

அறுப்புக்காலம் *aṟuppu-k-kālam*, பெ. (n.) **கதிரறுக்கும் பருவம்;** harvest season.

[அறு → அறுப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு. கால் → காலம். 'அம்' பெ.பொ. பின்.]

அறுப்புக்கூலி *aṟuppu-k-kūli*, பெ. (n.) 1. **கதிரறுக்குங் கூலி** (C.G.); wages for reaping. 2. **மரம் முதலியன அறுக்குங் கூலி;** wages for sawing. 3. **கைம்பெண்ணிற்குக் கொடுக்கும் பிழைப்புப் பொருள் (ஜீவனாம்சம்);** sum paid to an heirless Tamilian widow towards her maintenance. 4. **அறுத்துக் கட்டுங் குலங்களில் கைம்பெண்ணிற்குக் கொடுத்து விலக்கும் பிழைப்புப் பொருள்;** sum paid to

widows in certain castes which allow remarriage, on receipt of which she is cut off from her husband's family.

[அறுப்பு + கூலி.]

அறுப்புக்கோடி *aṟuppu-k-kōḍi*, பெ. (n.) **தாலி யறுத்தவட்குச் சுற்றத்தார் கொடுக்கும் புது வெள்ளைச்சேலை;** new white sari given to a widow by her relatives, at the funeral of her husband.

அறுப்பு, கோடி பார்க்க; see *aṟuppu, kōḍi*.

அறுப்புச்சீட்டு *aṟuppu-c-cīṭṭu*, பெ. (n.) **வேளாக நிலத்திற் கதிரறுக்கக் கொடுக்கும் உத்தரவு முறி** (C.G.); order or permit to cut a standing crop, esp. in a zamin.

[அறுப்பு+சீட்டு. அறு → அறுப்பு. 'பு' தொ. பெ. ஈறு. சிட்டு → சீட்டு.]

அறுப்புச்சுகம் *aṟuppu-c-cugam*, பெ. (n.) **கைம் பெண்ணிற்குக் கொடுக்கும் பிழைப்புப் பொருள்** (இ.வ.); maintenance for an heirless Tamilian widow (Loc.).

[அறு → அறுப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு. **Skt.** sukha > த. *சுகம் =* **இன்பம்,** *நுகர்ச்சி.]*

அறுப்புச்சொம்மு *aṟuppu-c-commu*, பெ. (n.) **பிள்ளையில்லாத கைம்பெண்ணிற்குப் புகுந் தகத்தார் பிழைப்புக்காக மொத்தமாய்க்கொடுக் குந் தொகை** (நாஞ்.); lumpsum given to a childless widow, for her maintenance, by her husband's relations (Nāñ.).

[அறு → அறுப்பு (தொ.பெ.). 'பு' தொ.பெ. ஈறு. சும் → சொம் → சொம்மு = சொத்து, செல்வம், பொருள்.]

அறுப்புப்பணம் *aṟuppu-p-paṇam*, பெ. (n.) அறுப்புக்கூலி பார்க்க; see *aṟuppu-k-kūli*.

அறுபகை *aṟu-pagai*, பெ. (n.) **காமம், வெகுளி, ஈயாமை, மயக்கம், செருக்கு, பொறாமை என் னும் அறுவகை உட்பகையான குற்றங்கள்;** the six internal enemies of man, *i.e.*, the six emotions, viz., desire, anger, miserliness, confusion of mind, arrogance and envy, which disturb his mind and corrupt his soul. "ஐம் புலன்களை யடக்கிநின் றறுபகை துறந்து" (காஞ்சிப்பு. திருமேற். 6).

[ஆறு → அறு. பகு → பகை, 'ஐ' பண்பெ. ஈறு.]

அறுபடு-தல் *aṟu-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **அறுக்கப்படுதல்;** to be cut asunder.

[அறுபடு (செயப்.வி.). 'படு' து.வி.]

அறுபத்துநாலுகலை *aṟubattu-nālu-kalai*, பெ. (n.) **'காமசூத்திரம்' என்னும் பழைய சமற் கிருத நூலிற் சொல்லப்பட்டுள்ள அறுபத்து நான்கு கலைகளும் அறிவியல்களும்;** the sixty-four arts and sciences, mentioned in the *Kāma-sūtra*, an ancient Skt. work.

ரு. 5048

அறுபத்து நாலு கலைகளாவன: 1. எழுத் திலக்கணம் (அக்கரவிலக்கணம்); 2. எழுத் தாற்றல் (லிகிதம்); 3. கணிதம்; 4. மறை நூல் (வேதம்); 5. தொன்மம் (புராணம்); 6. இலக்கணம் (வியாகரணம்); 7. நயனூல் (நீதி சாத்திரம்); 8. கணியம் (சோதிட சாத் திரம்); 9. அறநூல் (தரும சாத்திரம்); 10. ஓகநூல் (யோக சாத்திரம்); 11. மந்திர நூல் (மந்திர சாத்திரம்); 12. நிமித்திக நூல் (சகுன சாத்திரம்); 13. கம்மிய நூல் (சிற்ப சாத்திரம்); 14. மருத்துவ நூல் (வைத்திய சாத்திரம்); 15. உறுப்பமைவு நூல் (உருவ சாத்திரம்); 16. மறவனப்பு (இதிகாசம்); 17. வனப்பு. 18. அணிநூல் (அலங்காரம்); 19. மதுரமொழிவு (மதுரபாடணம்); 20. நாடகம்; 21. நடம்; 22. ஒலிநுட்ப அறிவு (சத்தப் பிரமம்); 23. யாழ் (வீணை); 24. குழல்; 25. மதங்கம் (மிருதங்கம்); 26. தாளம்; 27. விற்பயிற்சி (அத்திரவித்தை); 28. பொன் நோட்டம் (கனக பரீட்சை); 29. தேர்ப் பயிற்சி (ரத பரீட்சை); 30. யானையேற்றம் (கச பரீட்சை); 31. குதிரையேற்றம் (அசுவ பரீட்சை); 32. மணிநோட்டம் (ரத்தின பரீட்சை); 33. நிலத்து நூல்/மண்ணியல் (பூமி பரீட்சை); 34. போர்ப்பயிற்சி (சங்கிராம விலக்கணம்); 35. மல்லம் (மல்ல யுத்தம்); 36. கவர்ச்சி (ஆகருடணம்); 37. ஓட்டுகை (உச்சாடணம்); 38. நட்புப் பிரிப்பு (வித்து வேடணம்); 39. காமநூல் (மதன சாத்திரம்); 40. மயக்குநூல் (மோகனம்); 41. வசியம் (வசீகரணம்); 42. இதளியம் (ரசவாதம்); 43. இன்னிசைப் பயிற்சி (காந்தருவ வாதம்); 44. பிறவுயிர் மொழியறிகை (பைபீல வாதம்); 45. மகிழுறுத்தம் (கவுத்துக வாதம்); 46. நாடிப்பயிற்சி (தாது வாதம்); 47. கலுழம் (காருடம்); 48. இழப்பறிகை (நட்டம்); 49. மறைத்ததையறிதல் (முஷ்டி); 50. வான் புகவு (ஆகாயப் பிரவேசம்); 51. வான்செலவு (ஆகாய கமனம்); 52. கூடுவிட்டுக் கூடுபாய்

தல் (பரகாயப் பிரவேசம்); 53. தன்னுருக் கரத்தல் (அதிருசியம்); 54. மாயச்செய்கை (இந்திரசாலம்); 55. பெருமாயச்செய்கை (மகேந்திரசாலம்); 56. அழற்கட்டு (அக்கினித் தம்பனம்); 57. நீர்க்கட்டு (சலத்தம்பனம்); 58. வளிக்கட்டு (வாயுத்தம்பனம்); 59. கண் கட்டு (திருட்டித்தம்பனம்); 60. நாவுக்கட்டு (வாக்குத்தம்பனம்); 61. விந்துக்கட்டு (சுக்கிலத்தம்பனம்); 62. புதையற்கட்டு (கனனத்தம்பனம்); 63. வாட்கட்டு (கட்கத் தம்பனம்); 64. சூனியம் (அவத்தைப் பிர யோகம்).

வேறொரு பட்டியல்

1. பாட்டு (கீதம்); 2. இன்னியம் (வாத் தியம்); 3. நடம் (நிருத்தம்); 4. ஓவியம்; 5. இலைப்பொட்டுக் (பத்திர திலகம்) கத்த ரிக்கை; 6. பல்வகை யரிசி பூக்களாற் கோலம் வைத்தல்; 7. பூவமளி யமைக்கை; 8. ஆடை யுடை பற்களுக்கு வண்ணமமைக்கை; 9. பள்ளியறையிலும் குடிப்பறையிலும் மணி பதிக்கை; 10. படுக்கையமைக்கை; 11. நீரலை அல்லது நீர்க்கிண்ண இசை (ஜலதரங்கம்); 12. நீர்வாரி யடிக்கை; 13. உள்வரி (வேடங் கொள்கை); 14. மாலைதொடுக்கை; 15. மாலை முதலியன அணிகை; 16. ஆடை யணிகளாற் சுவடிக்கை; 17. சங்கு முதலிய வற்றாற் காதணியமைக்கை; 18. விரை கூட்டுகை; 19. அணிகலம் புனைகை; 20. மாயச்செய்கை (இந்திரசாலம்); 21. குசுமா ரரின் காமநூல் நெறி (கௌசுமாரம்); 22. கைவிரைவு (ஹஸ்தலாவகம்); 23. மடை நூலறிவு (பாகசாத்திர வுணர்ச்சி); 24. தையல்வேலை; 25. நூல்கொண்டு காட்டும் வேடிக்கை; 26. வீணை யுடுக்கைப் பயிற்சி (வீணை டமருகப் பயிற்சி); 27. விடுகதை (பிரேளிகை); 28. ஈற்றெழுத்துப் பாப் பாடுகை; 29. நெருட்டுச் சொற்றொட ரமைக்கை; 30. சுவைதோன்றப் பண்ணுடன் வாசிக்கை; 31. நாடகம் உரைநடை (வசனம்) யிவற்றினுணர்ச்சி; 32. குறித்தபடி பாடுகை (ஸமஸ்யாபூரணம்); 33. பிரம்பு முதலிய வற்றாற் கட்டில் பின்னுதல்; 34. கதிரில் நூல் சுற்றுகை; 35. மரவேலை; 36. மனை நூல் (வாஸ்து வித்தை); 37. காசு, மணி நோட்டம் (நாணய ரத்னங்களின் பரிசோ தனை); 38. நாடிப்பயிற்சி (தாதுவாதம்); 39. மணிக்கு நிறமமைக்கையும் மணியின் பிறப்பிட மறிகையும்; 40. தோட்டவேலை; 41. தகர்ப்போர் சேவற்போர் முதலிய விலங்கு பறவைப்போர்; 42. கிளி நாகணங்கட்குப் பேச்சுப் பயிற்றுவகை; 43. உடம்பு பிடிக்கை யும் எண்ணெய் தேய்க்கையும்; 44. குழூஉக் குறி (சங்கேதாக்ஷரங்களமைத்துப் பேசுகை); 45. மருமமொழி (ரகசிய பாஷை); 46. நாட்டுமொழி யறிவு (தேசபாஷை யுணர்ச்சி); 47. பூத்தேர் (புஷ்பரதம்) அமைக்கை; 48. முற்குறி (நிமித்தம்) யறிகை; 49. பொறி யமைக்கை; 50. ஒருகாலிற் கொள்கை (ஏகசந்தக்கிராகித்வம்); 51. இருகாலிற் கொள்கை (துவிசந்தக்கிராகித்வம்); 52. பிதிர்ப்பா (கவி) விடுக்கை; 53. வனப்பு (காவியம்) இயற்றுகை; 54. உரிச்சொல்லறிவு (நிகண்டுணர்ச்சி); 55. யாப்பறிவு; 56. அணி யறிவு (அலங்காரவுணர்ச்சி); 57. மாயக்கலை (சாலவித்தை); 58. ஆடையணியுந் திறமை (உடுத்தலிற் சாமர்த்தியம்); 59. சூதாட்டம்; 60. சொக்கட்டான்; 61. பாவை (பொம்மை), பந்து முதலியன வைத்தாடுகை; 62. யானை யேற்றம், குதிரையேற்றம் பயிற்சி; 63. படைக்கலப் பயிற்சி; 64. உடற் (தேகப்) பயிற்சி (சது.).

'நாலு வேதம், ஆறு சாத்திரம், பதினெண் புராணம், அறுபத்துநாலு கலைஞானம்' என்பது ஆரிய இலக்கியப் பாகுபாடாதலால், 'அறுபத்துநாலு கலை' என்பது தமிழ் மர பன்று. 'அறுபத்துநாலு கலை' என்னும் பொருட்டொகைப் பெயர் தமிழாதலாலும், அறுபத்துநாலாக வகுக்கப்பட்ட கலைகள் அனையவும் தமிழர்க்கும் உரியனவாத லாலும், தமிழ்க்கலைகள் ஆரியக் கலைகட்குக் காலத்தால் முந்தியன வாதலாலும், அறுபத்து நாலு கலைப்பட்டி இங்குத் தரப்பட்டது.

முதற்பட்டி ஆரிய நூன்மரபை முற்றுந் தழுவியது. வடசொற்களெல்லாம் மொழி பெயர்க்கப்பட்டு, தென்சொற்கள் முன்னும் வடசொற்கள் பிறைக்கோட்டுட்பின்னும் குறிக்கப்பட்டுள்ளன. இருமொழிக்கும் பொதுச் சொற்கள் அல்லது ஏற்கெனவே தமிழாயிருக்குஞ் சொற்கள், பிறைக்கோட்டுச் சொல்லின்றித் தமித்து விடப்பட்டுள்ளன.

இரண்டாம் பட்டி பிற்காலத்ததாதலால், சிறிது வேறுபட்டும் பெரும்பாலும் தமிழ்ச் சொற்களைக் கொண்டும் உள்ளது.

அறுபத்துநாலுகலை என்னும் தொகுப்பு, வடமொழிக் **காமசூத்திரம்** (Kāma Sūtra)

என்னும் இன்பநூலின் ஆசிரியரான வாற்சாயன (Vātsāyana) ருடையதாதலால், அந் நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பாளரான பர். சந்தோச குமார முக்கர்சி (Dr. Santosh Kumar Mukherji) பாகுபடுத்திக் கூறிய அறுபானாற்கலை யாங்கிலப் பட்டியலை இங்குத் தருகின்றேன்.

The Sixty-four Arts

Toilet

1. Make-up, toilet and use of beautifying agents.
2. Painting the body, and colouring the nails, hair, etc.
3. Decoration of the forehead.
4. Art of hair dressing.

Dressing

5. Art of dressing.
6. Proper matching of decorations and jewellery.

Music and Dancing

7. Singing.
8. Playing on musical instruments.
9. Playing on musical glasses filled with water.
10. Acting.
11. Dancing.

General Education

12. Good manners and etiquette.
13. Knowledge of different languages and dialects.
14. Knowledge of vocabularies.
15. Knowledge of Rhetoric or Figures of Speech.
16. Reading.
17. Reciting poems.
18. Criticism of poems.
19. Criticism of dramas and analysis of stories.
20. Filling up the missing line of a poem.
21. Composing poems to order.
22. Reply in verse (when one person recites a poem, another gives the reply in verse).
23. The art of speaking by changing the forms of words.
24. Art of knowing the character of a man from his features.
25. Art of attracting others (bewitching).

Domestic Science

26. Art of cooking.
27. Preparation of different beverages, sweet and acid drinks, chutneys, etc.
28. Sewing and needle work.
29. Making of different beds for different purposes and for different seasons.

Physical culture

30. Physical culture.
31. Skill in youthful sports.
32. Swimming and water-sports.

Games

33. Games of dice, chess, etc.
34. Games of chance.
35. Puzzles and their solution.
36. Arithmetical games.

Art of Entertaining

37. Magic: art of creating illusions.
38. Trick of hand.
39. Mimicry or imitation (of voice or sounds).
40. Art of disguise.

Fine Arts

41. Painting in colours.
42. Stringing flowers into garlands and other ornaments for decorating the body, such as crowns, clapnets, etc.
43. Floral decorations of carriages.
44. Making of artificial flowers.
45. Preparation of ear-rings of shell, ivory, etc.
46. Making birds, flowers, etc., of thread or yarn.
47. Clay-modelling: making figures and images.
48. The art of changing the appearance of things such as making cotton to appear as silk.

Pet Animals

49. Training parrots and other birds to talk.
50. Training rams and cocks and other. Birds for mock fight.

Professional Training

51. Gardening and agriculture.
52. Preparation of perfumery.
53. Making furniture from canes and reeds.
54. Wood-engraving.
55. Carpentry.
56. Knowledge of machinery.
57. Construction of building (Architecture),
58. Floor decoration with coloured stones.
59. Knowledge of metals.
60. Knowledge of gems and jewels.
61. Colouring precious stones.
62. Art of war.
63. Knowledge of code words.
64. Signals for conveying messages.

ஏறத்தாழ எல்லாப் பழந்தொழில்களும் குறிக்கப்பட்டுள்ள இப் பட்டியலில், நெசவுத் தொழில் விடுபட்டுப் போனது வியப்பிற் கிடமானதே. பல கலைகளின் உட்பிரிவுகள் தனிக் கலைகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. பல கலைகள் ஆடவர்க்கே யன்றிப் பெண்டிர்க் குரியனவல்ல. எல்லாக் கலைகளையும் ஒரு வரே பயில்வது இயல்வதன்று.

[ஆறு + பத்து + நாலு – அறுபத்துநாலு. பது → பத்து. நால் → நாலு. கல் → கலை (தொ.ஆகு.). 'ஐ' தொ.பெ. ஈறு.]

அறுபத்துநாலுநஞ்சு(பாடாணம்) *aṟubattu-nālu-nañju*, பெ. (n.) **தமிழ் மருத்துவத்திற் சொல்லப்பட்டுள்ள 32 இயற்கை நஞ்சுகள் (பிறவிப் பாடாணம்), 32 செயற்கை நஞ்சுகள் (வைப்புப் பாடாணம்) ஆக மொத்தம் 64 நஞ்சு வகைகள்;** the sixty-four kinds of poisons dealt with in the Tamil Medical Science, viz., 32 kinds of natural or mineral poisons and 32 kinds of artificial or prepared poisons or arsenics (சா.அக.).

[ஆறு + பத்து + நான்கு – அறுபத்து நான்கு. பது → பத்து. நால் → நான்கு.]

அறுபத்துமூவர் *aṟubattu-mūvar*, பெ. (n.) **பெரியபுராணத்திற் கூறப்பட்டுள்ள தனியடியா ரான அறுபத்துமூச் சிவனடியார்;** the sixty-three canonized Śaiva saints mentioned in the *Periyapurāṇam*.

அறுபத்து மூவர் பெயர்கள்: அதிபத்த நாயனார், அப்பூதியடிகள், அமர்நீதி நாய னார், அரிவாட்டாய நாயனார், ஆனாய நாயனார், இசைஞானியார், இடங்கழி நாயனார், இயற்பகைநாயனார், இளையான் குடி மாற நாயனார், உருத்திர பசுபதி நாயனார், எறிபத்த நாயனார், ஏயர்கோன் கலிக்காம நாயனார், ஏனாதிநாத நாயனார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், கண நாத நாயனார், கணம்புல்ல நாயனார், கண் ணப்ப நாயனார், கலிக்காம நாயனார், கலிய நாயனார், கழறிற்றறிவார், கழற்சிங்க நாய னார், காரி நாயனார், காரைக்காலம்மையார், குங்கிலியக்கலய நாயனார், குலச்சிறை நாய னார், கூற்றுவ நாயனார், கோச்செங்கட் சோழ நாயனார், கோட்புலி நாயனார், சடைய நாயனார், சண்டேசுர நாயனார், சத்தி நாயனார், சாக்கிய நாயனார், சிறப் புலி நாயனார், சிறுத்தொண்ட நாயனார் சுந்தரமூர்த்தி நாயனார், செருத்துணை நாயனார், சோமாசிமாற நாயனார், தண்டி யடிகள், திருக்குறிப்புத் தொண்ட நாயனார், திருஞானசம்பந்த நாயனார், திருநாவுக்கரசு நாயனார், திருநாளைப்போவார் நாயனார், திருநீலகண்ட நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருநீலநக்க நாயனார், திருமூல நாயனார், நமிநந்தியடிகள், நரசிங்க முனையரையர், நின்றசீர் நெடுமாறர், நேசநாயனார், புகழ்ச்சோழ நாயனார், புகழ்த்துணை நாயனார், பூசலார் நாயனார், பெருமிழலைக் குறும்பர், மங்கையர்க் கரசியார், மானக்கஞ்சாற நாயனார், முருக நாயனார், முனையடுவார் நாயனார், மூர்க்க நாயனார், மூர்த்தி நாயனார், மெய்ப் பொருள் நாயனார், வாயிலார் நாயனார், விறன்மிண்ட நாயனார்.

[அறு + பத்து + மூன்று – அறுபத்துமூன்று. பது → பத்து. மூன்று → மூ (கு.பெ.எ.). மூ + அர் – மூவர் 'அர்' (ப.பா. ஈறு). 'வ்' புணர்ச்சித் தோன்றல்.]

அறுபத்தை *aṟupattai*, பெ. (n.) **கையாந்தகரை** (பச்.மூ.); a species of eclipta (செ.அக.) — Mary gold verbesena, *Wedelia calendulacea* (சா.அக.).

[ஆறு → அறு + பத்தை. பதம் → பதை → பத்தை.]

அறுபதம் *aṟupadam*, பெ. (n.) 1. **அறுகால் வண்டு;** beetle, as six-footed. "மதுநுக றறு

பத முரல்" (தேவா. 1. 20 : 5). 2. **கையாந்தகரை** (பிங்.); a species of eclipta.

[ஆறு → அறு. பதி → பதம். 'அம்' பெ. ஈறு.]

அறுபதாங்கலியாணம் *arubadāṅ-kali-yāṉam*, பெ. (n.) **கணவன், அறுபதகவை நிறைந்தவுடன் மனைவி உயிரோடிருப்பின், மறுமண விழாப்போற் செய்துகொள்ளுங் கொண்டாட்டம்**; celebration observed on completing one's sixtieth birthday, if the wife should be living.

[ஆறு + பத்து – அறுபது. ஆகும் → ஆம் (வரிசையுணர்த்தும் இடைச்சொல்). கலி = மகிழ்ச்சி, பெருக்கம். யாணம் = நன்மை, மங்கலம், புது வருவாய், செழிப்பு. கலியாணம் → கலியாணர்.]

கலியாணம் என்ற கூட்டுத் தென்சொல்லே வடமொழியிற் 'கல்யாண' என்று திரிந்து நன்மையை அல்லது மங்கலத்தை யுணர்த்தும். இதன் விளக்கத்தைக் **கலியாணம்** என்னுஞ் சொல்லின்கீழ்க் காண்க.

'கலியாணம்' என்ற சொல்லே, அதனாற் குறிக்கப்படுங் கொண்டாட்டம் மணமக்கட்கு அல்லது கணவன் மனைவியர்க்கு உரியதென்பதை யுணர்த்தும்.

ஆரியர் தனிப்பட்ட ஆடவர்க்கு மட்டு மன்றிப் போலித்துறவியர்க்கும் இவ் விழவை நிகழ்த்துவர். அதை மணச்சொல்லை நீக்கி, அறுபான் அல்லது அறுபானாண்டு நிறைவு என்று பொருள்படும் ஷஷ்டி பூர்த்தி அல்லது ஷஷ்டியப்த பூர்த்தி என்னுஞ் சொல்லாற் குறிப்பர்.

உலகவாழ்க்கை யென்பது இல்லற வாழ்க்கையே. அறுபானாண்டுக் காலத்தை நிரவலான வாழ்நாளெல்லையாகக் கொண்டு, அவ்வெல்லை கடந்த வாழ்வை ஒய்வுபெற்றவரின் ஊழிய நீட்டிப்புப்போற் கருதி, மகிழ்ச்சியோடும் இறைபால் நன்றியறிவோடும் கொண்டாடுவதே அறுபதாங் கலியாணம். உலகப்பற்றைத் துறந்து வீடுபேற்று முயற்சியில் ஈடுபட்ட துறவிக்கு ஏது அறுபதாங் கலியாணம்? அது கூடா வொழுக்கத்தின் பாற்படுவதே.

அறுபதுநாழிகை நாள், அறுபதுநாட் பெரும்பொழுது, அறுபதாங் குறுவை, அறுபதாங் கோழி, அறுபதாண்டுச் சக்கரம், அறுபதாண்டுப் பயன், அறுபதாண்டுப் பஞ்சம் முதலிய கால வரம்புகளும் கணிப்புகளும் நிகழ்ச்சிகளும் அறுபது என்னும் எண்ணைக் கொண்டிருப்பதை நோக்கி 'அறுபதாங் கலியாணம்' தமிழ் முன்னோரால் வகுக்கப்பட்டதுபோலும்.

அறுபதாங்குறுவை *aṟubadāṅ-kuṟuvai*, பெ. (n.) **ஏறத்தாழ அறுபதுநாளில் விளையும் நெல்வகை**; a kind of paddy which matures in about 60 days.

[ஆறு + பத்து – அறுபது. ஆகும் → ஆம் (வரிசையுணர்த்தும் இடைச்சொல்). குறு → குறுவை = குறுகிய காலத்தில் விளைவது.]

இது ஒரு மருத்துவ வுணவாகக் கருதப்படுகின்றது.

அறுபதாங்கேழ்வரகு *aṟubadāṅ - kēḻ -varagu*, பெ. (n.) **ஏறத்தாழ அறுபது நாளில் விளையுங் கேழ்வரகுவகை** (இராட்.); a kind of ragi which matures in about 60 days (R.).

அறுபதாங்குறுவை, கேழ்வரகு பார்க்க; see *aṟubadāṅ-kuṟuvai, kēḻ-varagu.*

[கிள் → கேள் → கேழ் + வரகு.]

அறுபதாங்கொட்டை *aṟubadāṅ-koṭṭai*, பெ. (n.) **பேராமணக்கு** (இராட்.); a specices of castor seed (R.).

கொட்டை பார்க்க; see *koṭṭai.*

[ஆறு + பத்து – அறுபது. ஆகும் → ஆம் (வரிசை யுணர்த்தும் இடைச்சொல்).]

அறுபதாங்கோடை *aṟubadāṅ-kōḍai*, பெ. (n.) **அறுபதாங்குறுவை** பார்க்க; see *aṟubadāṅ-kuṟuvai.*

[அறுபதாம் + கோடை. ஆறு + பத்து – அறுபது. ஆம் (வரிசையுணர்த்தும் இடைச்சொல்).]

அறுபதாங்கோழி *aṟubadāṅ-kōḻi*, பெ. (n.) **அறுபது நாட்கொருமுறை முட்டையிடுங் கோழி** (இ.வ.) (வின்.); hen which lays eggs every two months.

[அறுபதாம் + கோழி.]

அறுபதாண்டுப்பயன் *aṟubad(u)-āṇḍu-p-payaṉ*, பெ. (n.) **அறுபதுவருச பலன்** பார்க்க; see *aṟubadu-varuṣa-palaṉ.*

[அறுபது + ஆண்டு + பயன்.]

அறுபது *aṟubadu*, பெ. (n.) **ஆறு பத்தாகிய எண்**; sixty.

ம. அறுபது; க., படு. அரவத்து; தெ. அறு பதி; து. அசிப; துட. அர்தொத்து.

[ஆறு + பத்து = அறுபது.]

அறுபதுவருசபலன் *arubadu-varuṡa-palan*, பெ. (n.) **அறுபதாண்டுச் சக்கரத்தில் ஒவ்வோராண் டிற்கும் பயன் கூறும் ஒரு நூல், இடைக்காடர் என்னும் புலவர் இயற்றியதாகச் சொல்லப்படு வது**; name of a work which gives the characteristic features of each year of the Jupiter cycle of 60 years, attributed to the poet *Idaikkāḍar*.

[ஆறு + பத்து – அறுபது. **Skt.** varṣa > **த.** வருசம் (வருஷம்). வருச (கு.பெ.எ.). **Skt.** phala > **த.** பலம் → பலன் = பயன். **த.** பழம் > **Skt.** phala. பழம் → பழன் → பயன்.]

இது பண்டை நூலாயின், அறுபதாண்டுப் பயன் என்று முழுத்தமிழ்ப் பெயரே பெற் றிருக்கும்.

அறுபான் *aṟubāṉ*, பெ. (n.) **அறுபது**; sixty.

பான் பார்க்க; see *pāṉ*.

[ஆறு + பான் (பத்து) – அறுபான். பல் → பன் → பான்.]

அறுபானான்கு *aṟubāṉāṅgu*, பெ. (n.) **அறுபத்து நான்கு**; sixty-four.

பான் பார்க்க; see *pāṉ*.

[ஆறு + பான் + நான்கு – அறுபானான்கு. நால் → நால்கு → நான்கு.]

அறுபுள்ளிவண்டு *aṟu-puḷḷi-vaṇḍu*, பெ. (n.) **ஆறு புள்ளிகளையுடைய ஒருவகை வண்டு, கடித்தால் சிலநாட் கழித்து உடம்பு முழுவதும் வட்டம் வட்டமாகத் தடிப்புகளை யுண்டாக்குவது**; a six-spotted poisonous beetle, the bite of which develops after some time circular patches of swelling in different parts of the body (சா. அக.).

அறுபொருள்[1] *aṟu-poruḷ*, பெ. (n.) **பகுப்பற்று ஒன்றாய் எங்கும் நிறைந்திருக்கும் பரம் பொருள்**; the Supreme being, the Absolute, as the one indivisible and omnipresent thing. "அறுபொரு ளிவனென்றெ யமரர்கணந் தொழுதேத்த" (சிலப். 17 : முன்னிலைப். 2).

['அறுபொருள்' வினைத்தொகை.]

அறுபொருள்[2] *aṟu-poruḷ*, பெ. (n.) (இலக்.) 1. **பெயர்ச்சொல்லாற் குறிக்கப்படும் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பொருள்கள்**; (Gram.) the six categories of things denoted by the noun viz., material thing, place, time, organ or part, quality and action.

"கிளைஎண் குழூஉ முதல் பல்பொருள்
திணைதேம்
ஊர்வான் அகம்புறம் முதல நிலன்யாண்
டிருது மதிநாள் ஆதிக் காலம்
தோள்குழல் மார்புகண் காது
முதலுறுப்(பு)
அளவறி வொப்பு வடிவு நிறங்கதி
சாதி குடிசிறப் பாதிப் பலகுணம்
ஓதல் ஈதல் ஆதிப் பல்வினை"
(நன். 276).

2. (இலக்.) **வினைச்சொல் லுணர்த்தும் வினை முதல், கருவி, இடம், வினை, காலம், செய் பொருள் என்னும் அறுவகைப் பொருள்கள்**; (Gram.) the six items of information inferable from the verb, viz., agent, instrument, place of action, action, time and object.

"செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொருள் ஆறுந் தருவது வினையே"
(நன். 320).

[ஆறு + பொருள் – அறுபொருள்.]

அறுபொழுது *aṟu-poḻudu*, பெ. (n.) **கதிரவன் தோற்றம் முதல் பப்பத்து நாழிகை கொண்ட நாட் பிரிவுகளாகிய காலை, நண்பகல், எற் பாடு (சாயுங்காலம்), மாலை, யாமம், வைகறை என்னும் அறுவகைச் சிறுபொழுது கள்**; six divisions of the day, viz., *kālai*, *naṉpagal*, *eṟpāḍu*, *mālai*, *yāmam* and *vaigaṟai* (R.), calculated from sunrise to sunrise, the duration of each being 10 *nāligais* or 4 hours.

[ஆறு + பொழுது – அறுபொழுது.]

சிறுபொழுது பெரும்பொழுது எனப் பொழுது இருபாற்பட்டு, ஒவ்வொரு பாலும் அறுவகை கொண்டிருப்பதால், இருபாற்கும் பொதுவான அறுபொழுது என்னும் பொருட் டொகைப் பெயர்க்கு, இராட்டிலர் அகர முதலியில் அறுவகைச் சிறுபொழுதையே பொருளாகக் கூறியிருப்பது பொருத்த முடைய தன்றாம்.

அறும்பன் *aṟumbaṉ*, பெ. (n.) **தீயன்**; villain, wicked fellow (W.).

[அறு → அறும்பு → அறும்பன். ஒ.நோ: குறு → குறும்பு → குறும்பன்.]

அறும்பு[1] *arumbu*, பெ. (n.) தீய குணம் (வின்.); wickedness, villainy.

[அறுத்தல் = அழித்தல். அறு → அறும்பு.]

அறும்பு[2] *arumbu*, பெ. (n.) பஞ்சம்; scarcity, dearth, famine. தண்ணீரறும்புக் காலம் (C.G.).

ம. அறும்பு; க. அற.

(அறுதல் = நீங்குதல், நீர்வற்றுதல். அறு → அறும்பு.)

[அறுதல் = நீங்குதல், நீர்வற்றுதல். அறு → அறும்பு.]

அறுமணை *aru-manai*, பெ. (n.) 1. அழகற்றவள்; ugly woman (வின்.). 2. சீர்கேடி; slattern (W.). 3. ஊத்தைநாறிப் பூண்டு; a plant with a fetid smell (சா.அக.).

[ஒருகா. அறு = அழகற்ற. மண்ணை = மழுக்கம், மடமை, மடையன், மடைச்சி, பேய். மண்ணை → மணை = மழுங்கல், மழுங்கற் கத்தி. மணை → மணையன் = 1. மதிக்கூர்மை யற்றவன். 2. மழுங்கற் படைக்கலம்.]

வின்சிலோ அகரமுதலியில், இச்சொல்லிற்கு 'அரிவாண்மணை; blade fastened to a plank' என்றும் ஒருபொருள் தரப்பட்டுள்ளது. அரிவாண்மணை என்பது அருவாமணை → அறுவாமணை → அறுமணை என்று கொச்சை வழக்கில் திரிந்திருப்பதால், அக் கொச்சை வடிவம் இங்குக் கொள்ளப்படவில்லை. 'அறுமணை' என்பது அறுக்கும் மணை என்று பொருள்பட்டுச் செஞ்சொல்லு மாகலாம். ஆயின், அரிவாள்மணை யென்பதே மூலமாதலால், அறுமணை யென்பது கொச்சை யென்றே தெளிக.

அறுமான் *arumān*, பெ. (n.) புழுவகை; a kind of worm. 'அத்திக்காயில் அறுமான் போலே' (ஈடு, அவதா.).

அறுமீன் *aru-mīn*, பெ. (n.) ஆரல் (கார்த்திகை) (பிங்.); Pleiades, as containing six stars.

[ஆறு + மீன் – அறுமீன். மின் → மீன்.]

அறுமீன்காதலன் *aru-min-kādalan*, பெ. (n.) முருகன் (திவா.); *Muruga*, being one brought up by the goddesses of Pleiades, acc. to Skānda Purāṇa.

[ஆறு + மீன் – அறுமீன். கா → காதல் → காதலன் = ஆரல் (கார்த்திகை) மாதர் அறுவராற் காதலுடன் வளர்க்கப்பட்ட மகன்.]

அறுமீன் பார்க்க; see *aru-min*.

அறுமுகவாகனம் *aru-muga-vāganam*, பெ. (n.) 1. மயில்; peacock. 2. மயிலிறகு; peacock's feather (சா.அக.).

[ஆறு + முகம் – அறுமுகம் (அன்மொழித் தொகை). Skt. vāhana > த. வாகனம் = ஊர்தி.]

அறுமுகன் *aru-mugan*, பெ. (n.) முருகன் (திவா.); *Murugan*, as having six faces.

ம. அறுமுகன்; க. அறுமொக.

அறுமுகன்விசிறி *aru-mugan-viširi*, பெ. (n.) மயிற்கொண்டைச்செடி (மயூரச்சிகை); peacock's crest plant (unidentified) (சா.அக.).

[ஆறுமுகம் → அறுமுகம் → அறுமுகன் = முருகன். விசிறு → விசிறி = விசிறிபோன்ற மயிற்கொண்டை.]

அறுமுறி *aru-muri*, பெ. (n.) உடன்படிக்கை யோலை (பத்திரம்) (புதுக். கல். 940); deed of agreement (Pdk. Insc. 940).

ம. அறுமுறி

['அறுமுறி' வினைத்தொகை. அறுதல் = முடிவுசெய்தல், தீர்தல், உடன்படுதல். முறி (முத.தொ.ஆகு.) = ஓலைத்துண்டில் எழுதப் பட்டது.]

அறுமுறைவாழ்த்து *aru-murai-vālttu*, பெ. (n.) முனிவர், பார்ப்பார், ஆனிரை, மழை, முடியுடை மூவேந்தர், உலகு என்னும் ஆறையும் பற்றிய வாழ்த்து (தொல். பொருள். புறத். 26, நச். உரை); six-fold invocation, viz,, to sages, scholars, herds of cows, rain, crowned kings, great men. ''அமரர்கண் முடியும் அறுவகை யானும்'' (தொல்.பொருள். புறத். 26).

ஆரியர் தென்னாடு வருமுன், பார்ப்பார் என்பது இல்லறத்தாரான தமிழ்ப் புலவரையும், அந்தணர், ஐயர், முனிவர் என்பன முற்றத் துறந்த தமிழ அறிவரையுமே குறித்தன. பிற்காலத்தில் இவ் வீரறவாணர் பெயரும் அறவேறுபாடின்றிப் பிராமணர்க்கே பயன்படுத்தப்பட்டன.

முடியுடை மூவேந்தர் என்றது சேர சோழ பாண்டியரை; உலகு என்றது உயர்ந்தோரை.

[ஆறு + முறை – அறுமுறை. வாழ் (த. வி.) → வாழ்த்து (பி.வி., முத.தொ.ஆகு.).]

அறுமை[1] *arumai*, பெ. (n.) நிலையின்மை, நிலையாமை; instability, transience.

"அறுமையில் வுலகுதன்னை யாமெனக் கருதி" (தேவா. 4 . 33 : 3).

[அறு → அறுமை = அழியுந்தன்மை, நிலையின்மை. 'மை' பண்.பெ. ஈறு.]

அறுமை[2] *arumai*, பெ. (n.) 1. **ஆறாயிருக்குந் தன்மை**; the state of being six. 2. **ஆறு**; six.

ம. அறு; க. அறுமெ.

[ஆறு → அறு + மை (பண்.பெ. ஈறு).]

அறுவகைச்சக்கரவர்த்திகள் *aru - vagai - c - cakkara-varttigal*, பெ. (n.) *அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புரூரவன், சகரன், கார்த்த வீரியன் என்னும் அறு பேரரசர்* (திவா.); the six emperors, viz., Ariccandiran, Nalan, Mušukundan, Prūravan, Sagaran, Kārttaviriyan.

[ஆறு+வகை – அறுவகை. **Skt.** cakravarti > த. சக்கரவர்த்தி = பேரரசன்.]

அறுவகைச்சரக்கு *aru-vagai-c-carakku*, பெ. (n.) *நந்தியுப்பு, அரப்பொடி, அப்புப்பொடி, தாளகம், காசுக்கட்டி, நாகக்குரு (நாகரசம்) என்னும் அறுவகை மருந்துப் பொருள்கள்*; a group of drugs, viz., nandi salt, iron filings, appu powder, orpiment, catechu and zinco - mercury (சா.அக.).

[ஆறு + வகை – அறுவகை.]

சரக்கு பார்க்க; see *šarakku*.

அறுவகைச்செயனீர் *aru-vagai-c-ceyanir*, பெ. (n.) 1. *வெடியுப்பு உருகும்போது, துருசு, சீனம், வெண்காரம், பூநீர், சாரம் (நவாச்சாரம்), கழுதை மண்டையோடு முதலியவற்றைப் பொடித்துப்போட்டுக் கிண்டி, பனியில் வைத்து இறக்கும் ஒருவகைச் செயனீர்* (உரோம. 500); a solvent medium used in alchemy, obtained first by melting nitre in a pot and adding to it powders of six drugs, viz., blue vitriol, borax, pooneer (Saline efflorescence), sal ammoniac and asses' skull, and then exposing the whole mixture to the night dew. 2. *அமுரி அல்லது மூத்திரம்*; urine (புலத்தியர் கற்பம், 300).

அறுவகைத்தானை *aru-vagai-t-tanai*, பெ. (n.) *வேற்றானை, வாட்டானை, விற்றானை, தேர்த்தானை, பரித்தானை, களிற்றுத்தானை என்னும் அறுவகைப் படைகள்* (திவா.); the six constituents of an army, viz., force of spearmen, company of swordsmen, battalion of archers, chariot division, cavalry and elephantry.

[ஆறு + வகை – அறுவகை. தானை = சேலை, துணி, கொடி, கொடிப்படை, படை. ஒ.நோ: தூசு = பஞ்சு, ஆடை, முன்னணிப் படை. தூசு → தூசி = கொடிப்படை.]

அறுவகைப்படை *aru-vagai-p-padai*, பெ. (n.) 1. *மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை என்னும் அறுவகைப் படைகள்* (குறள், 762, பரிமே. உரை); the six kinds of military forces falling under three dichotomic divisions, viz., hereditary force *Vs.* mercenary force; regiment recruited from agricultural tract *Vs.* regiment recruited from jungle tract; allied force *Vs.* hostile force.

[ஆறு + வகை – அறுவகை. படு → படை.]

படை பார்க்க; see *padai*.

அறுவகைப்பேதி *aru-vagai-p-pēdi*, பெ. (n.) *தமிழ் மருத்துவப்படி, அறுவகைக் கரைக்குங் கற்கள் (அல்லது மாழைமண்கள்)*; acc. to Tamil *Siddhars'* Science, the six kinds of mineral solvents (or ores) (சா.அக.).

அறுவகைப் பேதிகள்:

1. அன்னபேதி (சோறு கரைப்பான்); copper sulphate, the solvent of rice food.
2. மாமிச்பேதி (ஊன் கரைப்பான்); a mineral solvent of flesh or meat.
3. சொர்ணபேதி (பொன் கரைப்பான்); that which dissolves gold.
4. அஸ்திபேதி (என்பு கரைப்பான்); a mineral which is capable of dissolving bones.
5. ——
6. சகஸ்ரபேதி (ஆயிரங் கரைப்பான்); solvent of a similar nature that could dissolve many substances (சா.அக.).

ஐந்தாவது பேதி (கரைப்பான்) *சா. அகர முதலியிற் சொல்லப்படவில்லை.*

[ஆறு + வகை – அறுவகை. **Skt.** bhēdin > த. பேதி.]

சா.அக. 'solvent' என்று குறித்திருப்பதால், 'கரைப்பான்' என்று மொழிபெயர்க்கப்பட்டது. 'பேதி' என்னும் வடசொற்கு 'மாற்றி அல்லது வேறுபகுப்பான்' என்பதே பொருள்.

அறுவாள்

பன்னறுவாள்

அறுபுள்ளிவண்டு



பாளையறுவாள்

வெட்டறுவாள்

அறுவகைமானங்கள் *aṟu-vagai-māṉaṅgaḷ*, பெ. (n.) **படிமக் கலையிற் கையாளப்படும் நீளம், அகலம், கனம் அல்லது உயரம், சுற்று, இடை (வெளி), அடக்கம் என்னும் அறுவகை அளவுகள்**; the six kinds of dimensions observed in sculpture.

'நீள அகல அளவுகளோடு கன அளவும் இன்றியமையாததாகும். இதைக் **கனமானம்** என்பர்.

அத்துடன் படிமத்தைச் சிறப்பாக அமைத்திட, மேலும் மூன்று அளவுகள் தேவைப்படுகின்றன. உறுப்புகளின் சுற்றளவு, ஓர் உறுப்பிற்கும் மற்றோர் உறுப்பிற்கும் உள்ள இடைவெளி அளவு, குறிப்பிட்ட எல்லையிலிருந்து படிமத்தின் முன்னுறுப்புகளும் பின்னுறுப்புகளும் அடங்கியிருக்கும் அடக்க அளவு ஆகிய இம் மூன்றும் படிமக் கலைஞர்களுக்குப் பயனளிக்கும் அளவுகளாகும்.

மேற்குறிப்பிட்ட ஆறுவகை மானங்களும் ....பின்வருமாறு வழங்கிவ்ருகின்றன.

'நீளத்தை **மானம்** என்றும், அகலத்தைப் **பிரமாணம்** என்றும், உயரத்தை **உன்மானம்** என்றும், சுற்றளவைப் **பரிமாணம்** என்றும், இடைஅளவை **உபமானம்** என்றும், அடக்க அளவை **லம்ப மானம்** என்றும் கூற வேண்டும்' (சி. செ. பக். 184).

[ஆறு → அறு (கு.பெ.எ.) + வகை + மானம். வகு → வகை. 'ஐ' பண்.பெ. ஈறு. மா → மானம் (அளவு). மாத்தல் = அளத்தல். 'அனம்' பண்.பெ. ஈறு.]

பிரமானத்தைப் புறமானம் என்றும், சுற்றளவைப் பரிமானம் என்றும், உபமானத்தை உவமானம் என்றும் வழங்கின் தூய தமிழாம். பரிதல் = வட்டமாதல், சுற்றுதல். எ-டு: பரிதி, பரிசல். 'உன்மானம்' தென்சொல்லுமாகும். உன்னுதல் = உயர்தல், எழுதல். அடக்க அளவை 'அடக்கமானம்' என்றே சொல்லலாம். மானம் என்னும் தென்சொல் வடமொழியில் ரகரத்தின் பின்வரும்போது, நகரம் ணகரமாகத் திரியும்.

அறுவகைமூத்திரம் *aṟu-vagai-mūttiram*, பெ. (n.) **மாந்தன், ஆடு, மாடு, கழுதை முதலிய அறுவகை யுயிரிகளின் மூத்திரம்**; the urine of human beings and 5 animals such as sheep, cow, ass, etc. (சா.அக.).

[ஆறு + வகை – அறுவகை. மோள் + திரம் – மோட்டிரம் → மோத்திரம் → மூத்திரம் (தொ.ஆகு.). 'திரம்' தொ.பெ. ஈறு.]

அறுவகையரிசி *aṟu-vagai-y-arisi*, பெ. (n.) **அருணாவரிசி, உலூவாவரிசி, ஏலவரிசி, கார்போகரிசி, விளவரிசி, வெட்பாலையரிசி என்னும் அறுவகையரிசிகள்** (சங்.அக.); the six kinds of husked grain, viz., *aruṇāvarisi, ulūvāvarisi, ēlavarisi, karbōgarisi, viḷavarisi* and *veṭpālaiyarisi*.

[ஆறு + வகை – அறுவகை. அரி → அரிசி = பருப்பினுஞ் சிறியதாயிருப்பது.]

அறுவகையுயிர் *aṟu-vagai-y-uyir*, பெ. (n.) (புத்த.) **மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்கு, பேய் என்னும் அறுவகையுயிர்கள்**; (Buddh.) the six kinds of living beings, viz., *makkaḷ, tēvar, piramar, naragar, vilaṅgu* and *pēy*.

"அலகில் பல்லுயி ரறுவகைத் தாகும்
மக்களுந் தேவரும் பிரமரு நரகரும்
தொக்க விலங்கும் பேயு மென்றே"
(மணிமே. 30 : 56-58).

[ஆறு + வகை – அறுவகை. உய் → உயிர் = உடம்பை உய்ப்பது (செலுத்துவது).]

அறுவடை *aṟuvaḍai*, பெ. (n.) **கதிரறுப்பு** (உ.வ.); harvest (Com.u.).

[அறு → அறுவு + அடை (ஈறு). ஒ.நோ: சொல் → சொலவு → சொலவடை.]

அறுவடைமேரை *aṟuvaḍai-mērai*, பெ. (n.) **அறுவடைக்குப்பின் சிற்றூரூழியர் களத்திற் பெறும் உரிமைச் சம்பளம்**; emoluments of village servants and artisans paid at harvest time in kind or at a commuted price.

அறுவரி *aṟu-vari*, பெ. (n.) **தவணையிற் செலுத்தும் வரி** (வின்.); tax to be paid in fixed instalments.

['அறுவரி' வினைத்தொகை. அறுத்தல் = பிரித்தல், வரையறுத்தல்.]

அறுவா-தல் *aṟuvā-*, 6 செ.கு.வி. (v.i.). 1. **செலவழிந்து போதல்** (நெல்லை); to be spent, exhausted (Tn.). 2. **முடிதல்** (இராட்.); to be finished, completed. 3. **தண்டப்படுதல், தொகுக்கப்படுதல்** (இராட்.); to be collected, gathered.

[அறு → அறுவு (தொ.பெ.) + ஆ. 'வு' தொ.பெ. ஈறு.]

அறுவாக்கு-தல் *aṟuvākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1. செலவழித்துவிடுதல்* (நெல்லை); to spend, use up, exhaust (Tn.). *2. முடித்தல்* (இராட்.); to complete, conclude, finish.

[அறுவாகு (த.வி.) → அறுவாக்கு (பி.வி.).]

அறுவா-தல் பார்க்க; see *aṟuvā-*.

அறுவாய்[1] *aṟu-vāy,* பெ. (n.) *1. வெட்டுவாய்;* opening in a cut wound. *2. மரம் அறுபட்ட இடம்;* opening in timber under the saw. *3. குறைவிடம், வெற்றிடை;* vacant gap, as of the Moon in its waxing phases. "அறுவாய் நிறைந்த வவிர்மதிக்கு" (குறள், 1117).

['அறுவாய்' வினைத்தொகை.]

அறுவாய்[2] *aṟu-vāy,* பெ. (n.) *ஆரல் (கார்த்திகை) என்னும் மூன்றாம் நாண்மீன்;* the 3rd lunar asterism, as consisting of six stars. "அறுவாய் நிறைந்த மதிப்புறத் தோவென" (கல்லா. 95 : 9).

[ஆறு + வாய் – அறுவாய். வாய் = இடம், உறுப்பு.]

'அறுவாய்' பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகச் சொல்லப் படும்.

அறுவாய்ப்போ-தல் *aṟuvāy-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) *முற்றுஞ் செலவாய்விடுதல்* (நெல்லை); to be completely spent (Tn.). அரிசி அறு வாய்ப் போய்விட்டது.

[அறு → அறுவு (தொ.பெ.) + ஆய் (இ.கா. வி.எ.) + போ (து.வி.). 'வு' தொ.பெ. ஈறு.]

அறுவா-தல் பார்க்க; see *aṟuvā-*.

ஆய்ப்போதல் என்பது ஆதல் என்னும் வினையின் வலியுறு (intensive) வடிவாகும். போதல் என்பது முடிவை அல்லது இறப்பை (கழிவை) யுணர்த்தும் துணைவினை.

அறுவாள் *aṟu-vāḷ,* பெ. (n.) *வலிதாகவும் பெரி தாகவும் அறுக்கும் வாள்;* big cutting knife, scimitar.

ம. அரவாள்

அறுவாள் வகைகள் :

1. அக்கறுவாள் - billhook for lopping thorns and prickly pear.
2. கொத்தறுவாள் - butcher's knife for chopping and mincing meat.
3. பன்னறுவாள் - serrated sickle for reaping corn or harvesting paddy.
4. பாளையறுவாள் - toddy-tapper's knife for paring spathe.
5. வீச்சறுவாள் - big and long scimitar for cutting or chopping off the throat of a man or animal in one stroke.
6. வெட்டறுவாள் - big scimitar for axing or chopping any thing big.

['அறுவாள்' வினைத்தொகை.]

அரிவாள் என்பது சிறிதாகக் காய்கறியரியும் மணைவாள் என்றும் அறுவாள் என்பது வலி தாகவும் பெரிதாகவும் அறுக்கும் அல்லது வெட்டும் பெருவாள் என்றும் வேறுபா டறிதல் வேண்டும்.

அறுவிடு-தல் *aṟu-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) *நிலுவையை முற்றுந் தண்டிவிடுதல்;* to recover completely, as arrears. நிலுவை யறுவிட.

[அறு → அறுவு (தொ.பெ.) இடு + (து.வி.).]

அறுவிதி *aṟu-vidi,* பெ. (n.) *தீர்ப்பு* (இராட்.); final decision, judgement. வழக்கு அறுவிதி யாயிற்று.

['அறுவிதி' வினைத்தொகை. அறு + **Skt.** *vidhi.]*

அறுவிரல் *aṟu-viral,* பெ. (n.) *கை அல்லது பாதத்தில் அமையும் ஆறு விரல்கள்;* the occurrence of six fingers in a hand or six toes in a foot (சா.அக.).

க. அறுவெரல்

அறுவு *aṟuvu,* பெ. (n.) *1. நீர்வற்றிய கால்* (இ.வ.); dry channel in a tank or well (Loc.). *2. கடைசிப் பகுதி* (இராட்.); end of an object, final phase of an affair. *3. முழுது, முழுமை;* whole, sum total. "பொன்னெலா மறுவுகொண்டு வாங்குமின்" (திருவிளை. நரி பரி. 6).

[அறு → அறுவு. 'வு' தொ.பெ. ஈறு.]

அறுவை[1] *aṟuvai,* பெ. (n.) *1. ஆடை;* cloth, garment. "விரிநூ லறுவையர்" (பதிற்றுப். 34 : 3). *2. அறுப்பு மருத்துவம்;* surgery (சா. அக.). *3. அறுத்தபின் அறுவாய்க்கு இடும் மருந்து;* a medicine applied to the wound after operation (சா.அக.). *4. சித்திரை யென்னும் 14ஆம் நாண்மீன்* (பிங்.); the 14th lunar asterism.

ம. அறுவ; க. அறுவெ.

[அறு → அறுவை. 'வை' தொ.பெ. ஈறு.]

அறுவை[2] *aṟuvai*, பெ. (n.) **தோளிலிடும் உறி**; net or hoop suspended from the shoulder. "சுவன்மே லறுவையும்" (சிலப். 10 : 98).

[ஒருகா. உறு → உறுவை → அறுவை. ஒ.நோ : உறு → உறி.]

அறுவைநூல் *aṟuvai-nūl*, பெ. (n.) **அறுவை மருத்துவம்பற்றிய பொத்தகம்**; a book on surgery.

[அறு → அறுவை + நூல். நுவல் → நூல்.]

அறுவையர் *aṟuvaiyar*, பெ. (n.) **துணிநெய்வோர், துணிவிற்போர்**; weavers, cloth dealers. "வண்ண வறுவையர் வளந்திகழ் மறுகும்" (மணிமே. 28 : 53).

ம. அறுவயர்

[அறு → அறுவை + அர் (ப.பா. ஈறு).]

அறுவைவாணிகன் *aṟuvai-vāṇigaṉ*, பெ. (n.) 1. **துணி விற்பவன்**; cloth merchant. 2. **மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்** (அகநா. 124); *Iḷavēṭṭaṉār*, a cloth merchant of Madurai.

[அறுவை + வாணிகன். வாணிகம் → வாணிகன். 'ன்' (அன்) ஆ.பா. ஈறு.]

அறை-தல் *aṟai-*, 2 செ.குன்றாவி. (v.t.) 1. **அடித்தல்**; to beat, strike, slap. "அறைந்த கற் றூணிடை வந்தாய்" (பாரத. கிருட். 41). 2. **பறைகொட்டுதல்**; to beat, as a drum. "அறைபறை யன்னர் கயவர்" (குறள், 1076). 3. **கடாவுதல்**; to hammer, as a nail. "நினைப் புடை யிதயத் தாணி யறைந்ததும்" (இரகு. இந்துமதி. 85). 4. **மண்ணெறிந்து கட்டுதல்**; to construct, as a mud wall by slapping the mud on. மண்சுவர் நாலுபடை யறைந்தேன். 5. **துண்டித்தல்**; to cut in pieces, hack. (தொல். பொருள். செய். 155, பேரா. உரை). 6. **சொல்லுதல்**; to state, relate, utter, declare, narrate. "ஆசைபற்றி யறைய லுற்றேன்" (கம்பரா. சிறப்புப்பாயி. 4). —, 2 செ.கு.வி. (v.i.) 1. **ஒலித்தல்**; to sound. "அறை கழல் வீரர்" (நைடத. நாட்டு. 13). 2. **அலை காற்று முதலியன மோதுதல்**; to beat upon, as wind, as waves, dash, as a mountain torrent. "முரசறையு மாக்கடல் காரென வார்த்தன" (சீவக. 2168).

ம. அற; க. அரெ; தெ. அறசு; குரு. அச்னா.

[அர் → அறு → அறை.]

அறை[1] *aṟai*, பெ. (n.) 1. **அடி**; beat, blow, slap (சேதுபு. வேதாள. 43). 2. **மோதுகை** (சூடா.); dashing, as of waves against the shore. 3. **அலை** (சூடா.); wave. 4. **ஓசை**; sound. 5. **சொல்**; word, as spoken. "மொழிகிளவி விளம்பறை" (நன். 458). 6. **விடை**; reply. "சொல்லுவார் தமக்கறையோ சொல்லொ ணாதே" (சி. சி. சுபக். 8 : 14). —, இடை. (int.) 1. **துன்பமின்மையைக் குறிக்கும் இடைச்சொல்**; an exclamation expressive of the feeling of security. "அறையெனத் திரியு மாய்பொற் பூமியில்" (சீவக. 2180). 2. **ஓர் உவமவுருபு**; a particle of comparison. "சுரும் பறை மணித்தோ டுமிய வீசி" (மணிமே. 20 : 107).

ம. அற; க. அரெ; தெ. அறுமு; கொலா. ரத்; கூ. ரஜ்ப.

துன்பமின்மை அல்லது பாதுகாப்புக் குறிப்பை, நச்சினார்க்கினியர் 'பத்திராலா பனம்' என்னும் வடசொல்லாற் குறித்துள் ளார். அது பத்ர (bhadra) + ஆலாபந (ālāpana) என்று பிரியும்.

உவமவுருபுகள், ஒப்புப்பொருவு உறழ் பொருவு என்னும் இருவகைப் பொருவிலும் வரும். 'அறை' என்பது சொல்லுதற் பொருளை அடிப்படையாகக் கொள்ளின் ஒப்புப்பொருவும், அடித்தற்பொருளை அங்ஙனங் கொள்ளின் உறழ்பொருவும் ஆகும்.

அறை[2] *aṟai*, பெ. (n.) 1. **அறுகை, நீங்குகை, நின்றுவிடுகை, மறைகை** (சிலப். 14 : 30, அரும்.); ceasing, separating, disappearing. 2. **மலையுச்சி**; the top of a mountain (சா. அக.).

க. அறெ

[அறுதல் = நீங்குதல். அறு → அறை. 'ஐ' தொ.பெ. ஈறு. அறை = நீங்குகை, நீங்கு மிடம், முடிவு, உச்சி.]

அறை[3] *aṟai*, பெ. (n.) 1. **அறுக்கப்படுகை, வெட்டுண்கை**; cutting, chopping. "அறையுற் றாலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே" (மலைபடு. 118). 2. **(அறுக்கப்பட்ட) துண்டம்**; piece. "அறைக்கரும்பு" (பொருந. 193). 3. **சல்லி** (சூடா.); pendant, tassel. 4. **திரைச் சீலை** (சூடா.); curtain. 5. **அம்மி**; grinding

stone. "மறுகு படவறை.........யரைக்குநர்" (பரிபா. 10 : 83). 6. **உள்வீடு** (சூடா.), **அரங்கு** room, apartment, chamber, cell. 7. **வீடு**; house. "ஐவர் மாள வரக்கறை யெரித்தல் கேளா" (கூர்மபு. கண்ணன்மண. 111). 8. **பிள்ளைப்பேற்று வீடு**; lying-in room. அவள் எத்தனையோ அறை காத்தவள். 9. **பாசறை**; place of encampment. "இடாஅ வேணி யியலறைக் குருசில்" (பதிற்றுப். 24 : 14). 10. **மலைக்குகை** (சூடா.); cave. 11. **சுரங்கம்**; a subterranean passage, excavation for blasting a structure. "பொய்யறைவாய்ப் புகப் பெய்த மல்லர்" (திவ். பெரியதி. 2 . 5 : 5). 12. **பெட்டியின் உட்பகுதி**; a compartment, as of a box. 13. **மேசையிழுவை**; drawer, as of a table. 14. **நிலைப்பேழை யுட்பிரிவு**; a compartment, as of a cabinet, pigeon hole. 15. **கண்ணறை** (சா.அக.); cell. 16. **தேன் கூட்டறை**; the cell in a bee-hive (சா.அக.). 17. **பாத்தி**; garden bed. "குறையறை வாரா நிவப்பின்" (மலைபடு. 118). 18. **கவறாடும் சதுரங்கக் கட்டம்**; square on a chessboard. 19. **வகுத்த இடம்**; assigned portion of an area. "கோலறை யடைப்ப தின்றி" (திருவாத. பு. மண்சுமந். 23). 20. **பாறை**; rock, ledge. "அகலறை.........காலி னுதிர்ந்தன" (மலைபடு. 133). 21. **வஞ்சனை**; stratagem, wile, trick. "மறையிற்றன் யாழ்கேட்ட மானை யருளா தறைகொன்று" (கலித். 143 : 10-11).

ம., க., அற; தெ. அற, ராய்; கோத. அர்; து. அதெ; பட. அரெ.

[அறு → அறை.]

அறைக்கட்டளை *aṟai-k-kaṭṭaḷai*, பெ. (n.) 1. **கோயிலில் நிற்றப் (நித்தியப்) படித்தரப் பண்டங்கள் வைக்கும் இடம்**; temple stores (R.T.). "செய்யுமறைக் கட்டளையார் வந்தால்" (விறலிவிடு. 280-1). 2. **சிலகாலம் பயனுகர்ந்து (அனுபவித்துப்) பின்பு கோயிலுக்கு விடும்படி அளிக்கப்பட்ட இறையிலி நிலம்** (G. Md. D. I. 200); lands granted rent-free to individuals in order that they might transfer them later to the temples, as an act of religious merit.

[அறை + கட்டளை.]

அறைக்கட்டளைமானியம் *aṟai-k-kaṭṭaḷai-māniyam*, பெ. (n.) **கோயிலுக்கு விடப்பட்ட இறையிலி நிலம்**; land granted to a temple rent-free for the performance of certain religious services.

[அறை + கட்டளை + மானியம்.]

அறைக்கட்டு *aṟai-k-kaṭṭu*, பெ. (n.) 1. **வீட்டின் உட்பகுதி**; room, apartment. 2. **திருவிழாப் பந்தல்**; temporary shed for the idol, constructed during festival occasions (W.).

[அறை + கட்டு.]

அறைக்கணக்கு *aṟai-k-kaṇakku*, பெ. (n.) **சரக்கறைக் (உக்கிராணக்) கணக்கு**; store account.

அறுக்கணக்கு என்பது கொச்சைத் திரிபான இடவழக்கு.

[அறை + கணக்கு. அறை = சரக்கறை.]

அறைக்கழித்தல் *aṟai-k-kaḻittal*, பெ. (n.) **பிள்ளைப்பேற் றறையினின்று தாய் வெளிவருதற்குரிய சடங்கு** (இ.வ.); ceremony performed when a woman comes out of the lying-in chamber after delivery (Loc.).

[அறை + கழித்தல்.]

அறைக்கீரை *aṟai-k-kīrai*, பெ. (n.) **பாத்திகட்டி நீர்பாய்ச்சி வளர்க்கப்படுவதும், எல்லாராலும் பெருவழக்காக உண்ணப்படுவதும், உடல் நலத்திற் கேற்றதும், மருந்துக்கீரையாக எண்ணப்படுவதுமான இலைக்கறி வகை**; a wholesome pot-herb, an edible greens very commonly eaten and considered to be a medicinal food, *Amaranthus tristis*. "அறைக்கீரை நல்வித்தும்" (திருமந். 160). பொதுவாக உணவிற்குப் பயன்படுத்தும் ஒருவகைப் பத்தியக்கீரை. இது ஊதை (வாதம்), கோழை (கபம்), குளிர்ச்சி (சீதம்) முதலியவற்றைப் போக்கும்; a vegetable green used generally in food and also in diet, round-headed amaranth; garden spinach, *Amaranthus tristis* alias *Amaranthus gangeticus*.

It is useful in rheumatic complaints and phlegmatic diseases, and it also removes chillness from the system.

ம. அறச்சீர, அறக்கீர.

[அறை = பாத்தி. பாத்திகளில் வளர்க்கப்படுவதால் அறைக்கீரை யெனப்பட்டது.]

அடிக்கடி அல்லது தழைக்கத்தழைக்க அறுவாளால் அறுக்கப்படுங்கீரை அறைக்கீரை யென்று கொள்ளவும் இடமுண்டு. ஆயினும்,

பாத்திக்கீரை யென்பதே மிகப் பொருத்த மாம். 'அறைக்கீரை சிறுபாத்தி, அழகுண்டு மணமில்லை' என்னும் விடுகதை நோக்கத் தக்கது. வேறு சில கீரைகளும் பாத்திகளில் வளர்க்கப்படினும், அறைக்கீரைபோல் அத் துணை ஒழுங்காக வளர்க்கப்படாமை அனை வரும் அறிந்ததே.

அறைக்கீரைக்காய் *aṟai-k-kīṟai-k-kāy*, பெ. (n.) **வெள்ளரிக்காய்** (சேலம்); tender cucumber (Sm.) (செ.அக.) — cucumber, *Cucumis sativus* (சா.அக.).

[அறை + கீரை + காய்.]

அறைக்கீரையெண்ணெய்(தைலம்) *aṟai-k-kīṟai-y-eṇṇey*, பெ. (n.) **அறைக்கீரை விதையினின்று இறக்கப்படும் மருந்தெண்ணெய்**; a medicinal oil extracted from the seeds of *Amaranthus tristis*.

[அறை + கீரை + எண்ணெய்.]

அறைக்கீரைவிதை *aṟai-k-kīṟai-vidai*, பெ. (n.) **கூந்தலை வளர்க்கும் எண்ணெய் இறக்கப்படும் அறைக்கீரை வித்து**; seeds of *Amaranthus tristis* from which a hair-oil is extracted. ''அறைக்கீரை நல்வித்தும்'' (திருமந். 160).

[அறை + கீரை + விதை.]

அறைக்குழந்தை *aṟai-k-kuḻandai*, பெ. (n.) **பிள்ளைப்பேற் றறையினின்று வெளிவராத குழந்தை**; new born infant, as the baby still inside the lying-in room.

[அறை + குழந்தை.]

அறைகாரன் *aṟai-kāraṉ*, பெ. (n.) **கோயில் சரக் கறைக்காரன்** (உக்கிராணக்காரன்); temple store-keeper.

[அறை + காரன். காரம் → காரன்.]

காரன் பார்க்க; see *kāraṉ*.

அறைகுறை *aṟai-kuṟai*, பெ. (n.) 1. **தேவை**; want, necessity. 2. **துன்பம்**; trouble, distress.

க. அரெகொரெ

[அறு → அறை. குறு → குறை. 'ஐ' தொ.பெ. ஈறு. 'அறைகுறை' எதுகை மரபிணைமொழி.]

முற்றுப்பெறாமை யென்னும் பொருளில் வழங்கும் அல்லது எழுதப்படும் அறைகுறை என்னுஞ்சொல், அரைகுறை என்பதன் வழக்குத் திரிபான வழூஉச் சொல்லாகும்.

அறைகுறைபார்-த்தல் *aṟai-kuṟai-pār-*, 4 செ. குன்றாவி. (v.t.) **பழுதுபார்த்தல், செப்பனிடு தல்** (இ.வ.); to carry out repairs (Loc.).

அறைகுறை பார்க்க; see *aṟai-kuṟai*.

[அறு → அறை. குறு → குறை. 'ஐ' தொ.பெ. ஈறு. 'அறைகுறை' எதுகை மரபிணைமொழி.]

அறைகூவு-தல் *aṟai-kūvu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **போருக்கழைத்தல்**; to challenge, summon to a combat. ''அருமுனையா னறைகூ வினபின்'' (பு. வெ. 4 : 7, கொளு). 2. **வலியக் கூவியழைத்தல்**; to make a compelling call. ''அந்தணனா யறைகூவி வீடருளும்'' (திருவாச. 8 : 1).

[அறு → அறை. 'ஐ' தொ.பெ. ஈறு. கூ → கூவு.]

அறைகூறு-தல் *aṟai-kūṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) அறைகூவுதல்; to challenge. 'பூர்வ க்ஷணத்திலே வாலி கையாலே நெருக்குண்டு போனவர் இப்போது இப்படித் தெளிந்து வந்து அறைகூறுகிற இது' (ஈடு, 1 . 4 : 9).

அறைசெய்-தல் *aṟai-šey-*, 1 செ.குன்றாவி. (v.t.) **அறுத்துத் துண்டமாக்கல்**; to cut into thin slices, to slice (சா.அக.).

அறைத்தி *aṟaitti*, பெ. (n.) **கடுக்காய்**; chebulic myrobalan (சா.அக.).

அறைநன் *aṟainaṉ*, பெ. (n.) **அறுப்பவன்**; one who reaps, reaper. ''அறைநர் கரும்பிற் கொண்ட தேனும்'' (புறநா. 42 : 14 - 15).

[அறைகின்றான் (வினையா. பெ.) → அறை குன்னான் → அறைகுனான் → அறைகுனன் → அறைகுநன் → அறைநன்.]

அறைநீலி *aṟai-nīli*, பெ. (n.) **கொத்தமல்லி**; coriander, *Coriandrum sativum* (சா.அக.).

அறைப்பிள்ளை *aṟai-p-piḷḷai*, பெ. (n.) **அறைக் குழந்தை** (இ.வ.); baby, only a few days old and not yet brought out of the lying-in chamber.

[அறை + பிள்ளை.]

அறைப்புரை *aṟai-p-purai*, பெ. (n.) **அறைவீடு**; (நாஞ்.); room (Nāñ.).

[அறை + புரை.]

அறைபவனாதி *aṟaibavaṉādi*, பெ. (n.) **வெண் காரவுள்ளி**; garlic, *Allium sativum* (சா.அக.).

அறைபோ-தல் *aṟai-pō-*, 8 செ.கு.வி. (v.i.) 1. **கீழறுக்கப்படுதல்**; to be corrupted or seduced, as an army by the enemy. "அழிவின் றறை போகா தாகி" (குறள், 764). 2. **மதி கெட்டழிதல்**; to be bewildered, to become non-plussed, be ruined. "அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து" (சிலப். 20 : 25).

[அறை (தொ.பெ.) + போ (து.வி.).]

அறைபோக்கு *aṟai-pōkku*, பெ. (n.) 1. **மதி கெட்டழிகை;** being bewildered, non-plussed, being ruined. "கள்ளுண்டல் காம மென்ப கருத்தறை போக்குச் செய்வது" (திருவிளை. மாபாதக. 26). 2. **தப்புகை, ஒதுங்குகை;** escape. "அறைபோக் கொழியக் குலமுழுதும் வளைஇ" (ஞானா. 46 : 14).

[அறைபோ → அறைபோக்கு (தொ.பெ.). 'போ' து.வி. 'கு' தொ.பெ. ஈறு. இனி, போ → போகு → போக்கு என்றுமாம்.]

அறைமுறையிடு-தல் *aṟai-muṟai-y-iḍu-*, 20 செ. கு.வி. (v.i.) **குறை தெரிவித்தல்**; to ventilate one's grievances, state one's wants (W.).

[அறை + முறையிடு. அறை = குறை. 'இடு' து.வி.]

அறையிடு-தல் *aṟai-y-iḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) **அறைகூவுதல்**; to challenge. "மாரிகை யேறி யறையிடுங் காலத்தும்" (திவ். இயற். திருவிருத். 19).

[அறை (முத.தொ.பெ.) + இடு (து.வி.).]

அறையினாம் *aṟai-y-iṉām*, பெ. (n.) **கோயில் அறைகாரனுக்கு விட்ட மானியம்** (இராட்.); rent-free land, granted for the services of the store-keeper in a temple.

[அறை + U. இனாம் = நன்கொடை.]

அறையோ *aṟaiyō*, இடை. (int.) 1. **முறையிடும் சொல்**; an exclamation expressive of complaint, of disappointment. "அறையோவி தறிவரிதே" (திவ். இயற். திருவிருத். 10). 2. **வெற்றி மகிழ்ச்சிகளைப்பற்றிய குறிப்புச் சொல்;** an exclamation expressive of victory or joy. "அறையோ வறிவார்க்கு" (திருவாச. 47 : 5), "ஐயோ கண்ணபிரான் அறையோ வினிப்போனாலே" (திவ். திருவாய். 5 . 1 : 1). 3. **ஒரு வஞ்சினமொழி**; an exclamation or oath used in wager. "அறையோ வரிவைவரி நெடுங்க ணொாக்கிலையால் வாழி நீலம்" (சீவக. 2514).

[அறை (தொ.பெ.) + ஓ (இடை.).]

அறை யென்னும் சொல், வென்றவன் தோற்றவனை அறைந்ததையாவது, பெரும் பேற்றாற் பெருமகிழ்ச்சியுற்றவனின் பேற்று வாய்ப்பையாவது உணர்த்தும். அடித்து விட்டான், தோற்கடித்துவிட்டான் என்பன ஒருவனை யொருவன் வென்ற செயலையும், அவனுக்கு நல்ல அடி அடித்தது என்பது ஓர் அரிய பேற்றையும், உணர்த்துதல் காண்க. 'ஓ' என்பது பலரறிய ஒலிடுவதைக் குறிப்பது.

அறையோலை *aṟai-y-ōlai*, பெ. (n.) **வரையறை செய்யும் பட்டயம் (சாஸனம்)** (S.I.I. iii, 161); document with certain specifications.

[அறு → அறை = வரையறை. 'ஓலை' ஆகு.]

அறைவகு-த்தல் *aṟai-vagu-*, 4 செ.கு.வி. (v.i.) **புரையோடுதல்** (பரராசசே. 230); to become fistulous, as an ulcer.

[அறு → அறை. பகு → வகு.]

அறைவாசல் *aṟai-vāšal*, பெ. (n.) **கோயில் சரக்கறை** (இ.வ.); temple store-room (Loc.).

அறைவாசல்மூடி *aṟai-vāšal-mūḍi*, பெ. (n.) **தீக்கோட் காலத்தில் உள்வீட்டு வாசலை அடைத்துவைக்க உதவும் சதுரக் குதிர்** (நெல்லை); a rectangular shutter made of clay and hay, used for closing the door of an inner room during the time of arson or conflagration (Tn.).

[அறை + வாசல் + மூடி. வாய் → வாயல் → வாசல். மூடு → மூடி. 'இ' வி.முத. ஈறு.]

அறைவாடிக்கிளி *aṟaivāḍi-k-kiḷi*, பெ. (n.) **பொன்னாங்காய்**; soap-nut, *Sapindus emarginatus* (சா.அக.).

அறைவாய் *aṟai-vāy*, பெ. (n.) **கணவாய்**; mountain pass. "உலக விடைகழி யறைவாய்" (புறநா. 175 : 8).

[அறை = பாறை, மலை. வாய் = வழி. இனி, மலையிடை அறுக்கப்பட்ட வாய் அறைவாய் எனினுமாம்.]

அறைவீட்டுக்காரி *aṟai-viṭṭu-k-kāri*, பெ. (n.) **பிள்ளைபெற்று வெளியேறாத பெண்**; a woman in confinement (சா.அக.).

[அறை + வீடு + காரி. காரன் (ஆ.பா. ஈறு) – காரி (பெ.பா. ஈறு).]

அறைவீட்டுக்குழந்தை *aṟai-viṭṭu-k-kuḻandai,* பெ. (n.) 1. *அறைக்குழந்தை* பார்க்க; see *aṟai-k-kuḻandai.* 2. *பத்துப் பதினைந்துநாட் பட்ட குழவி;* a child about 10 to 15 days old (சா.அக.).

[அறை + வீடு + குழந்தை.]

அறைவீட்டுநோய் *aṟai-viṭṭu-nōy,* பெ. (n.) *பிள்ளைபெற்ற அறையினின்று தாய் வெளியேறு முன்பே தோன்றும் நோய்கள், அவை யாவன: இசிவு (சன்னி), காய்ச்சல் (சுரம்), நாட்பட்ட வலி (கிராணி) முதலியன;* diseases cropping up during the period or state of confinement, such as, puerperal sepsis, fever, chronic eclampsia, etc. (சா.அக.).

[அறை + வீடு + நோய்.]

அறைவீடு *aṟai-viḍu,* பெ. (n.) 1. *அறை;* room, chamber (W.). 2. *உள்ளறை* (இ.வ.); inner room (Loc.). 3. *பிள்ளைப்பேற்றறை;* lying-in room, the house for delivery (சா.அக.). 4. *மடைப்பள்ளி;* kitchen of a temple (J.N.).

அறோதகம் (வாழை), அறோதயம் (சிறுகீரை) என்று சா.அக. குறித்திருப்பது தென்சொல்லாகத் தெரியவில்லை.

அன்[1] *aṉ,* சு.கு.பெ.எ. (demons. adj.) *அன்னன், அன்னள், அன்னர், அன்னது, அன்ன என்னும் சேய்மைச்சுட்டு அல்லது ஒப்புமை குறித்த சொற்களின் முதனிலை;* base or stem of the words *aṉṉaṉ, aṉṉaḷ, aṉṉar, aṉṉadu,* and *aṉṉa,* signifying remoteness or similarity.

ம., க. அன்.

[அ (சே.சு.) → அன்.]

அன் என்னும் சேய்மைச்சுட்டடி, ஒப்புமை குறிக்கும்போது தன் சுட்டுத்தன்மையை இழந்துநிற்கும்.

அன்[2] *aṉ,* இடை. (part.) 1. *பெயரீறு;* noun suff. (அ) ஆண்பாற் பெயரீறு; masc. sing. suff. எ-டு. அவன், மருதன், மலையன், செய்பவன். (ஆ) அஃறிணை யொருமைப் பெயரீறு; neut. sing. suff. எ-டு: மொழியன் (பெரும்பேன்), அணில்வரியன் (வெள்ளரிக் காய்). 2. *வினைமுற்றீறு;* verb-ending. (அ) ஆண்பாற் படர்க்கை வினைமுற்றீறு; suff. of the rational class in the 3rd pers. sing. masc. எ-டு: அவன் வருவன். (ஆ) தன்மை யொருமை வினைமுற்றீறு; suff. of the 1st pers. sing. எ-டு: யான் வருவன். 3. ஒரு சாரியை; an euphonic augment. எ-டு: ஒன்றன் கூட்டம்.

ம., க. அன்; தெ. ண்டு; குட. ஆனு.

[அ (சே.சு.) → அன் (ஆண்பாற் படர்க்கை யொருமையீறு). ஒ → ஒல் → ஒன் (ஒன்று) → அன் (அ.ஒ.பெ.ஈறு). ஏன் → (த.ஒ.பெ.) → என் → அன் (த.ஒ. வி.மு. ஈறு). வருவேன் → வருவென் → வருவன். ஒருகா. இன் (கிழமைப் பொருளில் வரும் சாரியை) → அன்.]

'அன்' என்னும் ஆண்பாலீறு அவன் என்னும் சுட்டுப்பெயர்க் குறுக்கமன்று. அச் சுட்டுப்பெயர் அன்னீறு பெற்றதே.

அன் (ஆ.பா. ஈறு)

Cf. *an-* Christi*an,* Ary*an,* Europe*an,* Gregori*an,* ruffi*an,* unitari*an,* vegetari*an; en-* E. ward*en.*

வினையாலணையும் பெயர் ஈற்றளவிற் பொதுவகைப் பெயரினின்று வேறுபட்ட தன்று. ஆதலால், அதைப் பிரித்துக் கூற வேண்டியதில்லை.

அஃறிணை யொருமை யுணர்த்தும் 'அன்', 'ஆன்' ஈறுகள் ஆண்பா லீறுகளொடு தொடர் புடையன வல்ல. அவை ஒன்று என்னும் எண்ணுப் பெயரின் மறுவடிவான 'ஒன்' என்பதன் திரிபே. ஒன் → அன் → ஆன். உள் → உள்ளான் = உள்ளல்.

அன் (அஃறிணை யொருமை யீறு)

எ-டு: பச்சைநாடன், அலவன், விரியன், புறாப்பிடியன், குண்ணடியன்.

Cf. E. *an* - amphibi*an*

E. *on* - accordi*on*

தன்மையொருமை வினைமுற்றீறான 'அன்' என்பதும் ஆண்பாலீற்றொடு தொடர் புடையதன்று.

மரத்தின் வேர் என்பதுபோலுள்ள ஒன்றின்கூட்டம் என்னும் தொடர்ச்சொல், ஒன்றன்கூட்டம் என்று திரிந்திருக்கலாம்.

அன்பகம் *aṉbagam,* பெ. (n.) *சமுத்திரப்பாலை* (சங்.அக.); elephant creeper — *சமுத்திர சோகிப்பூண்டு,* canvolvulus, *Cissampelos pareira* (சா.அக). சமுத்திரப் பாலையைக் கடற்பாலை யெனலாம்.

அன்பகர் *anbagar*, பெ. (n.) அன்பகம் பார்க்க; see *anbagam*.

[அன்பகம் → அன்பகர்.]

அன்பர்[1] *anbar*, பெ. (n.) அன்பகம் பார்க்க; see *anbagam*.

[அன்பகம் → அன்பகர் → அன்பர்.]

அன்பர்[2] *anbar*, பெ. (n.) நண்பர்; friends.

அன்பரிசப்பூ *anbariśa-p-pū*, பெ. (n.) மலர்ந்த கிளிஞ்சில் சுண்ணாம்பு; quick lime (சா.அக.).

அன்பரிசம் *anbariśam*, பெ. (n.) கிளிஞ்சில்; bivalve shell (சா.அக.).

அன்பன் *anban*, பெ. (n.) 1. நண்பன், தோழன்; friend, companion. 2. கணவன்; husband. "அன்பனைக் காணா தலவுமென் னெஞ் சன்றே" (சிலப். 18 : 17). 3. பத்தன்; pious man, devotee. "குருகூர் நகர்நம்பிக் கன்ப னாய்" (திவ். கண்ணிநுண். 11).

ம. அன்பன்; Pers. ahbāb; F. ami.

[அன்பு → அன்பன்.]

அன்பனாதி *anbanādi*, பெ. (n.) கணவன்மே லுண்டாகும் காம மேலீட்டினாலும், என்றுங் கலவியிலேயே எண்ணங்கொண்டிருப்பதனா லும், பெண்டிர்க்குண்டாகும் சுரநோய்; hysteric fever mainly in young women, due to excessive passion towards their lovers, or to a morbid desire for sexual intercourse, or to lack of control over emotions.

அன்பிலி *anb(u)-ili*, பெ. (n.) அன்பில்லாதவன்; one who is devoid of love or affection. "அன்பிலி பெற்ற மகன்" (கலித். 86 : 34).

[அன்பு + இலி. இல் → இலி. 'இலி' வி. முத. ஈறு.]

அன்பு *anbu*, பெ. (n.) 1. தொடர்புடையார் மாட்டு உண்டாகும் பற்று; love, attachment. 'அன்பொத்த அவர்' (பரிபா. 6 : 21, உரை). 2. நேசம்; affection, friendship. 3. அருள், இரக்கம் (பிங்.); grace, compassion. 4. பத்தி; devotion, piety. "நரரோ டொத்துத் திரிப வர்க் கன்புசெய்வார்" (திருநூற். 80). 5. எல்லார் மாட்டும் இயல்பாக வுள்ள பற்று; natural love towards all. "அன்புடையார் என்பு முரியர் பிறர்க்கு" (குறள், 72).

ம., க. அன்பு; தெ. அனுகு; து. அங்கு.

[ஒல் → அல். அல்லுதல் = பொருந்துதல். அல் + பு – அன்பு. 'பு' பண்.பெ., தொ.பெ. ஈறு. ஒ.நோ : தெல் + பு – தென்பு, நல் + பு – நன்பு, வல் + பு – வன்பு. அன்பு, உள்ளம் ஒன்றிப் பொருந்துவதன் விளைவாதலால் அப் பெயர் பெற்றது. ஒ.நோ: ஆர்தல் = பொருந்து தல். ஆர் → ஆர்வு → ஆர்வம் = அன்பு; ஆவலொடுகூடிய பற்றுள்ளம்.]

அன்புகூர்-தல் *anbu-kūr-*, 2 செ:கு.வி. (v.i.) மிக நேசித்தல்; to abound in affection for, love intensively. "பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ" (பாரத. மிகைப். காப்பு. 1).

[அன்பு + கூர். கூர்தல் = மிகுதல். "கூர்ப்புங் கழிவும் உள்ளது சிறக்கும்" (தொல். சொல். உரி. 16). "சால வுறுதவ நனிகூர் கழிமிகல்" (நன். 456).]

அன்புடைக்காமம் *anbudai-k-kāmam*, பெ. (n.) (பொருள்) ஐந்திணையுந் தழுவும் இருதலைக் காதல்; (Poruḷ) equal and reciprocal love comprising all the five aspects specially suitable to the five tracts of land. "ஐந்திணை யுடைய தன்புடைக் காமம்" (நம்பியகப். 4).

[அன்பு + உடை. + காமம். உடைய (கு.பெ. எ.) → உடை.]

காமம் பார்க்க; see *kāmam*.

அன்புவிசம் (விஷம்) *anbu-viśam*, பெ. (n.) விடா யுப்பு (நாதவுப்பு); a kind of salt prepared from female menstrual fluid, a solvent medium (சா. அக.).

[அன்பு + Skt. viṣa > த. விசம்.]

அன்புவேணிகை *anbu-vēṇigai*, பெ. (n.) செம் பாவட்டை; a red variety of the plant *pāvaṭṭai*, *Pavetta indica* (சா.அக.).

அன்மதம் *anmadam*, பெ. (n.) கன்மதம் (புதுவை); rock alum (Poṇḍ.).

[கல் + மதம் – கன்மதம் → அன்மதம்.]

அன்மயம்[1] *anmayam*, பெ. (n.) மாறு, மறுப்பு; opposition, contradiction. "உரைத்த நல்லுரைக் கன்மய மில்லை" (கம்பரா. யுத்த. மருத்து. 92) (செ.அக.).

வை. மு. கோபாலகிருட்டிணமாசாரியா ருரையில், 'அன்வயம்' என்ற பாடம் கொள் ளப்பட்டு, பொருத்தம் என்று பொருளுரைக் கப்பட்டுள்ளது. அன்மையம், அன்மயம்

என்பன பாடவேறுபாடுகளாகக் காட்டப் பட்டுள்ளன.

அன்மயம்[2] *anmayam*, பெ. (n.) ஐயம் (**சந்தேகம்**), ஐயுறவு (சிந்தா.நி.); doubt.

இதுவும் முன்னதும் ஒரு சொல்லாகவே யிருப்பினும் இருக்கலாம்.

அன்மை *anmai*, பெ. (n.) 1. *அல்லாமை*, **ஒன்று இன்னொன்றா யிராமை, இன்மையினின்று வேறுபட்டது**; reciprocal negation or difference, negation of identity, dist. f. *inmai*.

"தன்மை சுட்டலும் உரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான"
(தொல். சொல். கிளவி. 25).

2. **தீமை**; evil. "அன்மை கடியுந் தவவலி யால்" (சேதுபு. முத்தீர். 8).

[அல் → அன்மை. 'மை' பண்.பெ. ஈறு.]

அன்மொழி *an-moli*, பெ. (n.) 1. **அன்மொழித் தொகை** பார்க்க; see *an-moli-t-togai*. "ஐந் தொகை மொழிமேற் பிறதொகல் அன் மொழி" (நன். 369). 2. **புறமொழி**; back-biting, slander.

[அல் + மொழி – அன்மொழி.]

அன்மொழித்தொகை *an-moli-t-togai*, பெ. (n.) (இலக்.) **வேற்றுமைத்தொகை** முதலிய ஐந் **தொகைகளுள் ஒன்றன்மேல் வேறொரு சொல் தொக்கு அடையடுத்த ஆகுபெயர்போல்** வரும் **இருசொற்றொடர்**. எ-டு: "கணிமொழிந்த நாளிற் கடிமணமுஞ் செய்தார் அணிமொழிக் கும் அண்ண லவற்கும்" (நள. 172). அணி மொழி = அழகிய சொல்லையுடைய பெண், தமயந்தி; (Gram.) an elliptical compound in which any one of the five *togai-nilai* that precede this in the enumeration, is used figuratively so as to signify something else of which this compound becomes a descriptive attribute, as *animoli*, 'beautiful words' which signifies a woman speaking beautiful words.

அன்றமை *anramai*, பெ. (n.) (**மூசும்**) **காற்று** (அக.நி.); air.

இது '*anima*' (breath) என்னும் இலத்தீன் சொல்லையும் '*atmos*' (vapour) என்னும் கிரேக்கச் சொல்லையும் பெருமருங்கு ஒத்திருக் கின்றது. ஆங்கிலராட்சி தமிழ்நாட்டில் தோன்றியபின் இச் சொல் தமிழிற் புகுந்திருந் தால், ஆங்கில வழியாக இலத்தீன் அல்லது கிரேக்கச் சொல்லை யொத்த இச் சொல் தோன்றிற் றெனலாம். ஆயின், கி.பி. 1600-ல் பிரித்தானியக் கிழக்கிந்தியக் குழும்பு (East India Company) தோன்றியதற்கு முன்பே, 1594-ல் **சிதம்பர இரேவணசித்தர்** தொகுத்த **அகராதிநிகண்டில்** இச் சொல் அமைந்திருப்பதால் அவ்வழி காட்ட இயலாது.

'அன்' (to breathe) என்னும் முதனிலை இந்திய - ஆரியத்திலிருப்பினும், அதினின்று திரிந்த 'ஆத்மா' (soul) என்னுஞ் சொல், மேலையாரியச் சொல்லளவு 'அன்றமை' என்னுஞ் சொல்லை ஒத்தில்லை.

தமிழில் மூச்சுவளியைக் குறிக்க, 'air' என் னும் ஆங்கிலச் சொல்லிற்கு நேரான சொல் வேறொன்றுமின்மையால், 'அன்றமை' யென்னுஞ் சொல் தென்சொல்லாயின் மிக அருமை வாய்ந்ததாகும்.

சிதம்பர இரேவண சித்தர் இச் சொல்லை எங்கணின்று கொண்டார் அல்லது எங்ஙனம் புனைந்தார் என்பது தெரியவில்லை.

அன்றன்றாடு *anr(u)-anr(u)-ādu*, கு.வி.எ. (adv.) **ஒவ்வொரு நாளும், அந்தந்த நாளில்**; every day. அன்றன்றாடு பாடு கழிகிறதே பெரிதாயிருக் கின்றது, அதில் எங்ஙனம் மீத்துவைக்க முடி யும்? (உ.வ.).

[அன்று + அன்று + ஆடு (முத. தொ. பெ.). ஆடுதல் = நுகர்தல், காலங்கழித்தல்.]

அன்றன்று[1] *anranru*, கு.வி.எ. (adv.) 1. **நாள் தோறும், அன்றாடம்**; daily, from day to day. 2. **அந்தந்த வேளையில்**; then and there. சில்லறைக் கடன்களையெல்லாம் அன்றன்று கொடுத்துத் தீர்த்திருக்கவேண்டும் (உ.வ.).

ம. அன்றன்று, அன்னன்னு; க., பட. அந்தந்து.

[அன்று + அன்று. 'அன்றன்று' பன்மை பற்றி வந்த அடுக்குத்தொடர்.]

அன்று[2] பார்க்க; see *anru*[2].

அன்றன்று[2] *anr(u)-anru*, செ.கு.வி. (v.i.) **அடுக்கி வந்த ஒன்றன்பாற் படர்க்கை எதிர்மறைக் குறிப்புவினைமுற்று**; duplication of neut. sing. neg. appellative verb.

[அன்று + அன்று – அன்றன்று. எதிர்மறை பற்றி வந்த அடுக்குத்தொடர்.]

அன்றாடகம் *aṉṟāḍagam*, கு.வி.எ. (adv.) **அன்றன்று, நாள்தோறும்**; daily, from day to day. 'அன்றாடக மூன்றுதினம் அந்திசந்தி கொள்வீரேல்' (சா.அக. மேற்.).

ம. அன்னேடம்

[அன்று + ஆடு + அகம்.]

அன்றன்றாடு பார்க்க; see *aṉṟ(u)-aṉṟ(u)-āḍu*.

அன்றாடம் *aṉṟāḍam*, கு.வி.எ. (adv.) **அன்றாடகம்** பார்க்க; see *aṉṟāḍagam*.

[அன்றாடகம் → அன்றாடம்.]

அன்றாடு *aṉṟāḍu*, கு.வி.எ. (adv.) **அன்றன்று**[1] பார்க்க; see *aṉṟaṉṟu*[1]. 'கைமேலே இலக்கைப் பெறாதார்க்கு அன்றாடு படிவிட வேணு மிறே' (ஈடு, 4.8 : 7), எப்படியாவது அன்றாடு பாடு கழியவேண்டும்.

[அன்று + ஆடு.]

அன்றன்றாடு பார்க்க; see *aṉṟ(u)-aṉṟ(u)-āḍu*.

அன்றாடுகாசு *aṉṟāḍu-kāśu*, பெ. (n.) **வழங்கு கிற அல்லது செல்லுகிற காசு (நாணயம்)**; coin in current use.

[அன்று + ஆடு + காசு. ஆடுதல் = வழங்கு தல்.]

அன்றாள்கோ *aṉṟāḷ-kō*, பெ. (n.) **அப்பொழுது ஆளும் அரசன்**; the then reigning king. 'முட்டில் அன்றாள் கோவுக்கு நிசதி குன்றிப் பொன் மன்ற ஒட்டிக்கொடுத்தேன்' (S.I.I. i, 115).

அன்றி *aṉṟi*, இடை. (conj.) *1.* **அல்லாமல்**; without, except by. 'அவனன்றி அணுவும் அசை யாது' (பழ.). *2.* **அல்லாவிடத்து**; unless, except when. அவர் வந்தாலன்றி இங்கு ஒன்றும் நடவாது. மருந்து கொடுத்தாலன்றி அவன் பிழைக்கமாட்டான். *3.* **அல்லாமலும்** (ஈடு, அவதா.); besides. அன்றியும், நான் சொல்வதை அவன் கேட்பதில்லை.

ம. அன்றி, அன்னி.

[அல் → அன்று (அல் + து) → அன்றி (கு.வி. எ.).]

"அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே"

என்னும் நன்னூல் (173) நூற்பாவிற்கு,

'இவ் விருமொழி யீற்று இகரமும் செய்யு ளுள் உகரமாயும் வரப்பெறும்; அவ்வழி இயல் பாய் நிற்கும் மேல்வரும் வல்லினம் எ-று. 'வரின்' எனவே, உகரமாதல் ஒருதலையன் றெனவும் உகரமாகாதவழி மிகுமெனவும் கொள்க.

வ-று. "வாளன்று பிடியா வன்க ணாடவர்" "நாளன்று போகிப் புள்ளிடை தட்ப", "உப் பின்று புற்கை யுண்கமா கொற்கை யோனே" என வரும் என்று **மயிலைநாதரும்**,

'அன்றி இன்றி யென்னும் வினையெச்சக் குறிப்புச் சொற்களினது ஈற்றிகரஞ் செய் யுட்கண் உகரமாய் வருமாயின், **க ச த ப**க்கள் பொதுவிதியான் மிகாது இயல்பாம் எ-று.

'இவ்வாறு உடம்பொடு புணர்த்திக் கூறின மையின், இதற்கிதுவே விதியென்பதூஉம், உகரமாய் வரின் எனவே உகரமாதல் உடன் பாடென்பதூஉம், அஃது ஒருதலையன் றென்பதூஉம் பெற்றாம்.

எ-டு :

"நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குந ரல்லர் நெறிகொளப்
பாடான் றிரங்கு மருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே"

(புறநா. 124)

எனவும், "உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே" எனவும் வரும். 'பிறவும் அன்ன' என்று விருத்தியுரைகாரரும் உரைத் தார். பிற வுரையாசிரியன்மாரும் இவற் றையே தழுவினர்.

நூற்பாவும் உரைகளும், 'அன்றி', 'இன்றி' என்னும் வடிவங்களையே இயல்பாகவும், 'அன்று', 'இன்று' என்னும் வடிவங்களை அவற்றின் திரிபாகவும் கொண்டதாகத் தெரி கின்றது. அன்றி, இன்றி என்னும் இகர வீற்றுக் குறிப்புவினை யெச்சங்கள், அல்லாது இல்லாது என்று பொருள்படும் அல்லது இல்லது என்னுஞ் சொற்களின் குறுக்கமான அன்று (அல் + து), இன்று (இல் + து) என்ப வற்றின் திரிபே யென்பதை, இவ் வினையெச் சங்களின் ஈறு துவ்வேயன்றித் தியன்று என்பதனாலும், 'அவனல்லாது அணுவும் அசையாது' என்னும் பழமொழி, 'அவனன்றி அணுவும் அசையாது' என்று வழங்குவத னாலும், அவனல்லது அல்லது அவனல்லாது என்பது அவனல்லதி அல்லது அவனல்லாதி என்று திரியாமையானும் உணர்ந்துகொள்க.

அன்றிக்கே *aṉṟikkē*, இடை. (conj.) **அன்றி** பார்க்க; see *aṉṟi* (ஈடு, அவதா.).

[அன்று → அன்றி → அன்றிக்கே.]

அன்றியனைத்தும் *anṟi-y-anaittum*, பெ. (n.) **அவ்வனைத்தும், அவையெல்லாம்**; all those. "அன்றியனைத்தும் கடப்பாடிலவே" (தொல். சொல். எச்ச. 53).

[அன்று → அன்றி. அ → அன் → அனை → அனைத்து → அனைத்தும். 'உம்' முற்றும்மை.]

'அன்றி யனைத்தும்' என்னுந் தொல்காப்பியத் தொடருக்கு, 'அவ்வனைத்தும்' என்று சேனாவரையர் பொருள் உரைத்துள்ளார். சொல்லப்பட்டவை யல்லாமலும் அவைபோன்ற பிறவெல்லாம் என்று பொருள் கொள்ளவும் இடமுண்டு.

அன்றியில் *anṟiyil*, கு.வி.எ. (adv.) 1. **அன்றி, அல்லாது**; except. 'விவேகிக்கு ஓர் உபாதி யன்றியில்' (சி. சி. சுபக். 4 : 8, சிவாக்.). 2. **அல்லாமல்**; except with, without. உத்தர வன்றியில் உள்ளே வரக்கூடாது (உ.வ.).

[அன்று → அன்றி → அன்றியில்.]

அன்றியும் *anṟiyum*, இடை. (conj.) **அல்லாமலும்** (சிலப். 5 : 110, அரும்.); besides, moreover. அன்றியும், நான் பல சமையம் அவனுக்குப் பணங்கொடுத்து உதவியிருக்கிறேன்.

[அன்று → அன்றி → அன்றியும். 'உம்' இறந்தது தழீஇய எச்சவும்மை.]

அன்றியுரை-த்தல் *anṟi-y-urai-*, 4 செ.குன்றாவி. (v.t.) **மாறுபட்டுச் சொல்லுதல்**; to speak in opposition or contradiction. "ஆரையு மன்றி யுரைப்பேன்" (தேவா. 7.73 : 10).

[அன்றுதல் = சினத்தல், பகைத்தல், மாறுபடுதல். அன்று → அன்றி (இ.கா.வி.எ.) + உரை.]

அன்றில் *anṟil*, பெ. (n.) 1. **ஆணும் பெட்டையும் இணைபிரியாததும், அவற்றுள் ஒன்றிறப்பின் மற்றொன்றும் உடனிறப்பதும், ஒருவரை யொருவர் இன்றியமையாக் கணவனும் மனைவியுமான காதலர்க்கு உவமையாக இலக்கியத்திற் கூறப்படுவதுமான கிரௌஞ்சப் பறவை**; *anṟil*, a species of bird, the male and female of which are inseparable both in life and death, and veryfamiliar in Indian poetry as a standard or model of constancy and inseparable love. 2. 19ஆம் **நாண்மீனாகிய மூலம்** (பிங்.); the 19th lunar asterism.

ம. அன்றில்

[அல் → அன்றி (கு.வி.எ.) + இல். அன்றில் = இணையன்றி அல்லது ஒன்றன்றி மற்றொன்று இல்லாதிருப்பது.]

சம்பிரதாய அகராதிக் கையெழுத்துப்படியில் (சம்.அக.) அன்றில் என்னுஞ் சொல்லிற்கு மயில் என்று ஒரு பொருள் குறித்திருப்பது பொருந்தாது.

அன்றிற்றீவு *anṟiṟṟīvu*, பெ. (n.) **வரலாற்று முன்னை எழுதீவுகளுள் ஒன்று (கிரௌஞ்சத் தீவு)**; an annular continent or large island of pre-historic times. "அன்றிற் றீவினி னுறைப வரிவர்" (கம்பரா. யுத்த. படைக்காட். 13).

[அன்றில் + தீவு. தீர்வு → தீவு.]

தீவு பார்க்க; see *tīvu*.

அன்றினார் *anṟiṉār*, பெ.(n.) **பகைவர்**; enemies. "அன்றினார் வெந்து வீழவும்" (தேவா. 4.89 : 10).

[அன்றுதல் = சினத்தல், பகைத்தல். அன்று → அன்றினார் (வினையா.பெ.).]

அன்று-தல் *anṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **சினத்தல்**; to get angry with. "அவ் வானத்தை யன்றிச் சென்று" (திவ். இயற். திருவிருத். 18). 2. **பகைத்தல்**; to hate. "அன்றிய வாணன்" (திவ். பெரியதி. 4.3 : 8).

[அல் → அன் → அனல். அன் → அன்று. அன்றுதல் = எரிதல், சினத்தல், பகைத்தல்.]

அன்று[1] *anṟu*, பெ. (n.) **அப்பொழுது, அந்நாள்**; that time, that day. அன்று விடியல். அன்று திங்கட்கிழமை. —, கு.வி.எ. (adv.) **அப்போது, அந்நாளில்**; at that time, on that day. "அன்றவற் காங்கே பிணப்பறையாய்" (நாலடி. 23).

ம. அன்னு; க., பட. அந்து; தெ. நாடு; து. ஆனி; கோண். அநீ; குருக். அந்தி; துட. அந்.

[அ → அல் → அன்று (சே.சு. சொல்).]

அன்று[2] *anṟu* பெ. (n.) **மாறுபாடு**; difference, incongruity. "ஒன்றிடை யாயிரம் அன்றற வகுத்த" (அருட்பா, 6, அருட்பெருஞ்சோதி யக. 621).

[அல் → அன்று (அல் + து) = அல்லது, மாறு, மாறானது.]

அன்று[3] *anṟu*, இடை. (part.) **ஓர் அசைச்சொல்**: an expletive. 'சேவடி சேர்து மன்றே' (சீவக. 1, உரை).

அன்று[4] *anṟu*, கு.வி.மு. (adv.) **ஒன்றன்பாற் படர்க்கை எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று**;

neut. sing. neg. appellative verb. நான் கேட்டது அதுவன்று (உ.வ.).

அன்றுதளிர்த்தான் *anṟu-taḷirttāṉ*, பெ. (n.) **கிள்ளினவுடனே தளிர்க்குஞ்செடி**; a plant which begins to grow immediately after it is nipped (சா.அக.).

[அன்று (அப்போதே, உடனே) + தளிர்த்தான் (வினையா.பெ.). 'ஆன்' ஒ. ஈறு.]

இதை அன்றுதளிர்த்தான் செடி யென்று சொல்ல வேண்டியதில்லை.

அன்றுமறுநாள் *anṟu-maṟu-nāḷ*, கு.வி.எ. (adv.) **அன்றைக்கு மறுநாள்**; the day after (that day). அன்று மறுநாள் வந்துசேர்ந்தான்.

அன்றுமுதல் *anṟu-mudal*, கு.வி.எ. (adv.) **அவ் வேளையிலிருந்து, அந் நாளிலிருந்து;** thence forth, from that day onward. "அன்றுமுதல் ...மறந்தறியேன்" (திவ். பெரியாழ். 4.10:9).

அன்றெரிந்தான் *anṟerindāṉ*, பெ. (n.) 1. **சிறு புள்ளடி** (மலை.); species of *Desmodium* (செ. அக.) — a plant, trifoliate tick, *Desmodium laxiflorum*. It is so called because it is capable of being used as firewood immediately after it is cut (சா.அக.). 2. **சிவனார்வேம்பு**; Šivan's neem, *Indigofera aspalathoides* (சா.அக.).

[அன்று (கிள்ளின அன்றே) + எரிந்தான் (வினையா.பெ.).]

அன்றெரிந்தான்பூண்டு என்று சொல்ல வேண்டியதில்லை.

அன்றே[1] *anṟē*, கு.வி.எ. (adv.) **அப்பொழுதே, அந்நாளே;** at that very time, on the same day. அன்றே புறப்பட்டுப் போய்விட்டான்.

[அ → அன் → அன்று (காலம்பற்றிய சே. சு. சொல்) + ஏ (வன்புறை அல்லது பிரிநிலை குறித்த இடைச்சொல்).]

அன்றே[2] *anṟē*, கு. வி. (impl. v.) **அல்லதே;** certainly not that. ஆங்கிலம் இன்று அயன் மொழி யன்றே.

[அல் → அன்று (எ.ம.கு.வி.மு.) + ஏ (தேற்றங் குறித்த இடைச்சொல்).]

அன்றே[3] *anṟē*, இடை. (ind.) **அல்லவா?, ஒரு தேற்ற உடன்பாட்டுக் குறிப்புச் சொல்;** Isn't it so?, a neg. interrogative equivalent to an emphatic affirmative. 'அவனன்றே இது செய் வான் என அடுக்காது நின்றவழி, அன்றீற் றேவுக்குத் தெளிவு முதலாகிய பிறபொருளும் படும்' (தொல். சொல். இடை. 34, சேனா.).

[அல் → அன்று (எ.ம.கு.வி.மு.) + ஏ (ஒலி வேறுபாட்டால் தேற்ற முணர்த்தும் வினா விடைச்சொல்.]

எதிர்மறை வினைமுற்று ஆ, ஏ, ஓ என்னும் வினாவிடைச்சொல் பெற்று உடன்பாட்டுப் பொருளை வலியுறுத்துவது, இருவகை வழக் கிற்கும் பொது. ஏகார வினாச் செய்யுள் வழக்கிலும், ஆகார ஓகார வினாக்கள் இரு வகை வழக்கிலும் வரும்.

எ-டு:
தெரிநிலைவினை—கடல் தாண்டினவன் கால்வாய் தாண்டமாட்டானா?
குறிப்புவினை — கடவுளுக்குக் கண் இல்லையா?

ஏகார வினா உலகவழக்கற்றுவிட்டதனால், அன்றோ என்று பொருள்படும் அன்றே என் னும் சொல்லின் வினாத்தன்மை விளங்கித் தோன்றவில்லை.

அன்றேஅன்றே *anṟē-anṟē*, இடை. (ind.) **உடன் படாமை யுணர்த்தும் அடுக்குச்சொல்;** an idiomatic expression of dissent. 'ஒருவன் ஒன்றுரைத்த வழி, அதற்கு மேவாதான் நன்றே நன்றே, அன்றே அன்றே என அடுக்க லும் வரும்; அவை மேவாமைக்குறிப்பு விளக் கும்' (தொல். சொல். இடை. 34, சேனா.).

[அன்று (எ.ம.கு.வி.மு.) + ஏ (வினாவிடைச் சொல்).]

"நன்றீற் றேயும் அன்றீற் றேயும்
....
அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்"
(தொல். சொல். இடை. 34).

'அன்றே' என்பது தனித்து வரும்போது உடன்பாட்டுப்பொருளும், அடுக்கி வரும் போது எதிர்மறைப்பொருளும் உணர்த்தும் என அறிக. இது ஒலி வேறுபாட்டால் நிகழ் வது.

அன்றே என்பதன் ஈறு தேற்றேகாரமாயின், தனித்துவரினும் அடுக்கிவரினும் தேற்றமே உணர்த்தும்.

அன்றை *anṟai*, பெ. (n.) **அந்நாள்;** that day. "அன்றை யமரினில் ஒன்றுபட" (பாரத. ஆறாம். 24). —, கு.பெ.எ. (adj.) **அந்நாட் குரிய;** of that day, அன்றைச் செலவு.

[அ → அன் → அன்று + ஐ (ஈறு அல்லது சாரியை).]

அன்றைக்கன்று *anṟaikk(u)-anṟu*, கு.வி.எ. (adv.) *அன்றன்று*; daily, from day to day. "அன்றைக்கன் றிருமடங்கா" (திருவிளை. மெய்க்கா. 12).

[அன்று (காலம்பற்றிய சே.சு.பெ.) + ஐ (சாரியை) + கு (4ஆம் வே.உ.) + அன்று (காலம்பற்றிய சே.சு.பெ.).]

அன்றைக்கு *anṟaikku*, கு.வி.எ. (adv.) *அந் நாளில்*; on that day.

[அன்று (காலம்பற்றிய சே.சு.பெ.) + ஐ (சாரியை) + கு (4ஆம் வே.உ.). 4ஆம் வே.உ. 7ஆம் வே. பொருளில் வந்தது வேற்றுமை மயக்கம்.]

அன்றைத்தினம் *anṟai-t-tinam*, பெ. (n.) *அந் நாள்*; that day.

[அன்று (காலம்பற்றிய சே. சு.பெ.) + ஐ (சாரியை) + **Skt.** *dina > த. தினம். 'அன்றைத் தினம்' கு.பெ.எ. தொடர்.]*

அன்றைநாள் *anṟai-nāḷ*, பெ. (n.) *அந்நாள்*; that day.

[அன்று + ஐ (சாரியை) + நாள்.]

அன்றைத்தினம் பார்க்க; see *anṟai-t-tinam*.

அன்றைத்தினம் என்னும் வழக்கு, வீணாகவும் தமிழுக்குக் கேடாகவும் தினம் என்னும் வடசொல்லைக் கொண்டது.

அன்றோ *anṟō*, இடை. (ind.) *அல்லவா?, அல்லவோ?, ஓர் உண்மையை வலியுறுத்தும் எதிர்மறை வினாச்சொல்*; Is it not so?, a neg. interrogative, equivalent to an emphatic affirmative.

[அல் → அன்று (அல் + து) + ஓ (வினா விடைச்சொல்). அல் + அது – அல்லது → (அல்து) → அன்று (எ.ம.கு.வி.மு.).]

அல்லவோ (அல்ல + ஓ) என்பது இழிந்தோர் உலக வழக்கு; அன்றோ (அன்று + ஓ) என்பது உயர்ந்தோர் உலகவழக்கு. இரண்டும் செய்யுளிலும் அல்லது இலக்கியத்திலும் வரும். ஆயின், அல்லவோ என்பது அஃறிணைப் பன்மை யுணர்த்தும்.

அன்ன[1] *aṉṉa*, கு.வி.எ. (impl.f.v.) *அத் தன்மையா யிருக்கின்றன*; are of the same kind, are similar. "அப்பா லொன்பதும் அவற்றோ ரன்ன" (தொல்.சொல்.பெய. 14). —, பெ. (n.) *அத்தன்மையானவை*; such or similar things. "அன்ன பிறவும்" (தொல். சொல். பெய. 16). —, கு.பெ.எ. (adj.) *அத் தன்மையான*; such or similar. "அன்ன மரபின் மொழிவயி னான" (தொல். எழுத்து. தொகை. 1). —, இடை. (part.) *ஓர் உவம வுருபு*; a sign of comparison. "மலரன்ன கண்ணாள்" (குறள், 1119), 'அருமருந் தன்ன பிள்ளை'.

"அன்ன ஆங்க மான இறப்ப
என்ன உறழத் தகைய நோக்கொடு
கண்ணிய எட்டும் வினைப்பா லுவமம்"
(தொல். பொருள். உவம. 12).

[அ (சே.சு.) → அன் → அன்ன = அத்தகைய, ஒத்த, போன்ற. 'அ' பெ.எ. ஈறு.]

அன்ன[2] *aṉṉa*, இடை. (part.) *பண்டைக்காலத்து உலகவழக்குக் குறித்த சாரியை*; an enunciative particle added to short vowels and short vowel-consonants in ancient colloquial usage.

எ-டு: அஅன்ன, இஅன்ன, கஅன்ன, கிஅன்ன.

அன்னபம் *aṉṉabam*, பெ. (n.) *ஆலமரம்* (மூ. அக.); banyan tree.

அன்னயம் பார்க்க; see *aṉṉayam*.

அன்னம் *aṉṉam*, பெ. (n.) 1. *தங்கம்* (வை.மூ.); gold. 2. *மலம்* (நாநார்த்த.); faeces.

அன்னயம் *aṉṉayam*, பெ. (n.) *ஆலமரம்* (பச். மூ.); banyan tree.

மறுவ. அன்னபம்

அன்னல் *aṉṉal*, பெ. (n.) 1. *அனல்* (சம்.அக.), வெயில்; sunshine. 2. *புகை* (ஈடு, 8 . 5 : 4); smoke.

[அல் → அன் → அன்னல் → அனல்.]

அன்னலுந்துன்னலும் *aṉṉalun-tuṉṉalum*, பெ. (n.) *தூறலுந்தும்பலும், இடைவிடாத அடை மழைத்தூறல்*; unintermittent drizzle or gentle rain.

அன்னவன் *aṉṉavaṉ*, பெ. (n.) 1. *அத்தன்மையன்*; such a man. "அன்ன வன்புகழ் கேட்டலும்" (நைடத. அன்னத்தைத்தூ. 3). 2. *ஒத்தவன்*; he who resembles. "அருங்கலக்கொடி யன்னவ னேகினான்" (சீவக 1372).

ம. அன்னவன்

[அ (சே.சு.) → அன் → அன்ன → அன்னவன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அன்னன் a<u>nn</u>a<u>n</u>, பெ. (n.) *அப்படிப்பட்டவன்;* such a man.

அன்னா¹ a<u>nn</u>ā, சு.கு.வி.எ. (demons.adv.) *அந்தா, அதோ* (நெல்லை); there! (Tn.).

[அ (சே.சு.) → அன் → அன்னா.]

அன்னா² a<u>nn</u>ā, இடை. (part.) *பண்டைக் காலத்து உலகவழக்கு நெடிற்சாரியை;* an enunciative particle added to long vowels and long vowel-consonants in ancient colloquial usage.

எ-டு: ஆவன்னா, ஈயன்னா, காவன்னா, கீயன்னா.

அன்னாய் a<u>nn</u>āy, இடை. (part.) *ஓர் அசை நிலை;* an expletive in poetry. "அன்னாய் பின்னவத் தைப்படும்" (சி.சி. பர. சௌந். மறு. 8).

[அன்னை → அன்னாய் (விளி). 'ஆய்' விளி யுருபு.]

அன்னார் a<u>nn</u>ār, பெ. (n.) *கல்நார்;* asbestos (செ.அக.) — Indian asbestos, earth-flux or mountain flux (சா.அக.).

[கல்நார் → கன்னார் → அன்னார்.]

அன்னான் a<u>nn</u>ā<u>n</u>, பெ. (n.) 1. *அத்தன்மையன்;* such a man. 2. *அவன்;* he.

அன்னிலா a<u>nn</u>ilā, பெ. (n.) *சீத்தா, அணிநுணா;* custard apple, *Anona squamosa* (சா.அக.).

அன்னீயம் a<u>nn</u>īyam, பெ. (n.) *கரும்பு;* sugar-cane, *Saccharum officinarum* (சா.அக.).

அன்னுகம் a<u>nn</u>ugam, பெ. (n.) 1. *பேய்ப் பசலை, மயக்கத்தை யுண்டுபண்ணும் ஒரு வகைக் கொடி;* a bitter variety of creeping plant (*Portulaca*), *Portulaca meridiana*, with a stupefying effect when consumed. 2. *பேய்ப் பருத்தி;* golden silk-cotton, *Cochlospermum gossypium*.

அன்னுராவி a<u>nn</u>urāvi, பெ. (n.) *அப்பாவி* (இ.வ.); simpleton (Loc.).

[ஒருகா. அன் (எ.ம.முன்.) + அராவி அல்லது அன் (எ.ம.முன்.) + உராவி. அராவு தல் = தேய்த்தல், அரித்தல், வருத்துதல். உராவுதல் = வலிபெறுதல்.]

அன்னுழி a<u>nn</u>u<u>l</u>i, கு.வி.எ. (adv.) *அப்பொழுது;* at that time, then. "அன்னுழி யுமையவ ளகத்து ளோர்செய லுன்னினள்" (கந்தபு. உற்பத். பார்ப்பதி. 1).

[அ (சே.சு.) → அன் = அந்த. உழி = இடம். அன்னுழி = அவ்விடம், அவ்விடத்து, அப் போது.]

அன்னுழி என்னுஞ் சொல்லை, அவ்விடம் என்னும் பொருளிற் பெயர்ச்சொல்லாகவும் ஆளலாம்.

உழி பார்க்க; see u<u>l</u>i.

அன்னுழை a<u>nn</u>u<u>l</u>ai, கு.வி.எ. (adv.) *அவ்விடம்; அவ்விடத்திற்கு;* there, to that place. "மன்னு மன்னுழை போய பின்னர்" (திருவாலவா. 18 : 10).

[அ (சே.சு.) → அன் (அந்த) + உழை (இடம்). உழி → உழை.]

அன்னை¹ a<u>nn</u>ai, பெ. (n.) 1. *தாய்;* mother. "அன்னை என்செய்யில் என்?" (திவ். திரு வாய். 5 . 3 : 6). 2. *தமக்கை* (சூடா.); elder sister. 3. *மலைமகள் (பார்வதி); Malaimaga<u>l</u>* (Pārvati) (பிங்.). 4. *தோழி* (பொதி. நி.); female companion or friend.

Turk. anne; **Hung.** anya.

[அம்மை → அன்னை. அம் → அன். ம் → ன், போலி. ஒ.நோ: அகம் → அகன், இடம் → இடன், உரம் → உரன், கலம் → கலன், சமம் → சமன், திறம் → திறன், நலம் → நலன், புலம் → புலன், முகம் → முகன், வரம் → வரன்.]

காதலும் அருமையும்பற்றி எப் பருவப் பெண்ணையும் இருபாலாரும் தாய் எனச் சொல்வதும் விளிப்பதும் தொன்றுதொட்ட மரபு. தோழி தலைவியைத் தலைமைபற்றி யும் தாய் அல்லது அன்னை எனச் சொல்வ தும் விளிப்பதும், இருவகை வழக்கிற்கும் உரியதாகும்.

"அன்னை என்னை என்றலும் உளவே
தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினும்
தோன்றா மரபின என்மனார் புலவர்"
(தொல். பொருள். பொருளியல், 52).

அன்னை என்பது, தலைவியும் தோழியும் ஒருவரையொருவர் குறிப்பது அல்லது விளிப் பது. என்னை என்பது, என் + ஐ என்று பிரிந்து தலைவியுந் தோழியும் தலைவனைக் குறிக்கும் (அல்லது விளிக்கும்) பெயராகவும், 'என் அன்னை' என்பதன் குறுக்கமாகித்

தலைவியும் தோழியும் ஒருவரையொருவர் குறிக்கும் (அல்லது விளிக்கும்) பெயராகவும் இருப்பது.

ஐ = தலைவன். "என்னைமுன் நில்லன் மின்" (குறள், 771). அன்னை என்னை என் பன, அண்மைவிளியில் இயல்பாகவும் அன்னாய், என்னாய் என்று உருபேற்றும் வரும். என்னை யென்பது ஆண்பாலுணர்த் தின், இயல்பல்லாதபோது என்னைய, என்னையா என்று விளியேற்கும்.

அன்னை[2] *annai*, பெ. (n.) **கொன்றைமரம்**; common cassia, *Cassia fistula* (சா.அக.).

அன்னோ *annō*, இடை. (int.) 1. *ஐயோ! அந்தோ! ஓர் இரக்கக் குறிப்பு*; alas! an exclamation expressive of pity, distress. "பல் கால்முயங்கினள் மன்னே அன்னோ" (அகநா. 49 : 9). 2. *அகோ!, ஆகா*; ha! hah! an exclamation expressive of wonder.

தெ. அன்னா

" அந்தீற் றோவும் அன்னீற் றோவும்
அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்"
(தொல். சொல். இடை. 34).

அன்னீற்றோ = அன்னோ.

[அன்னை → அன்னோ (விளி). 'ஓ' விளி யுருபு.]

தாய்தந்தை முறைப்பெயர்கள் விளியுரு பேற்று, இரக்கம், துயரம், வருத்தம், வியப்பு, மகிழ்ச்சி முதலிய உணர்ச்சிகளை யுணர்த்தும் என்பது, முன்னரே குறிக்கப்பட்டது.

அக்கோ, அகோ, அச்சோ, அத்தோ, அந்தோ பார்க்க; see *akkō, agō, accō, attō, andō*.

அன்னோபிதம் *annōbidam*, பெ. (n.) *மஞ்சட் குன்றிமணி*; yellow bead-vine, *Abrus precatorius* (சா.அக.).

அன்னோன்றி *annōnṟi*, பெ. (n.) வலியற்றவன்; person of a weak or feeble constitution.

[அல் (எ.ம.முன்.) + நோன்றி. நோற்றல்→ நோன்றல் = பொறுத்தல், வலிமையோடிருத்தல். நோன்பு = பொறை, வலிமை. நோல் → நோன்றி → நோன்றான், நோன்றாள் (வினையா.பெ.). ஒ.நோ: ஆள் → ஆண்டி = அடியாரை ஆட்கொள்ளும் துறவி. 'இ' ஒ. ஈறு, நொண்டி யென்பதிற்போன்று.]

அனகம் *anagam*, பெ. (n.) புல்லுருவி (மலை.); species of *Loranthus*, a parasitic plant.

[ஒருகா. அல் → அன் (அல்லாத) + அகம் (இடம்). தனக்குரியதல்லாத இடத்தில் வளர்வது.]

அனந்தர்[1] *anandar*, பெ. (n.) 1. **தூக்கம்**; sleep. "மோக வனந்தர் முயல்வோர்க்கு" (ஞானா. 62 : 23). 2. **மயக்கம்**; drowsiness, stupor, loss of consciousness, inebriety. "அனந்தர் நோக்குடைக்................கடைசி மங்கையர்" (சீவக. 1249). 3. **தூக்கத்தின்பின் விழிப்பு**; waking. "கட்டுயி லனந்தர்போல்" (சீவக. 1097). 4. **மனத்தடுமாற்றம்**; confusion of mind. 'மனங்கொள்ளா அனந்தருள்ள முடை யாளாய்' (தொல்.பொருள். கள. 11, உரை). 5. பித்து; bile (சா.அக.).

[அனந்தல் → அனந்தர்.]

அனந்தர்[2] *anandar*, பெ. (n.) பருத்தி (மலை.); cotton-plant.

அனந்தரம் *anandaram*, பெ. (n.) **வேலிப்பருத்தி** (பச்.மூ.); species of doemia.

அனந்தல் *anandal*, பெ. (n.) 1. **தூக்கம்**; sleep, slumber. "அனந்த லாடேல்" (ஆ.சூ. 31). 2. மயக்கம்; drowsiness, stupor. "பழஞ் செருக்குற்றநும் மனந்த றீர" (மலைபடு. 173). 3. **மந்தவொலி**; low tone, soft mournful sound, as of a drum. "எடுத்தெறி யனந்தற் பறை" (புறநா. 62 : 5) (சா.அக.). 4. **சிறு தூக்கம்**; a soft or gentle sleep, especially in the morning. 5. **மதம்**; an extravagant sexual passion too strong to be controlled, infatuation.

அனம்பு *anambu*, பெ. (n.) 1. வானம்பாடி; Indian skylark. 2. **நீரில்லாதது**; that which is deprived of water.



அனம்பு

[அல் → அன் (எ.ம. முன்.) + அம்பு (நீர்).]

அனயகம் *anayagam*, பெ. (n.) 1. **இருள்வாசி** (இருவாட்சி) (வை.மூ.); tuscan jasmine. 2. **மல்லிகை**; jasmine.

அனர்வன் *anarvan*, பெ. (n.) **அனரவன்** பார்க்க; see *anaravan*.

அனரவன் *anaravan*, பெ. (n.) 1. **வெண்காந்தள்**; white species of Malabar glory-lily (W.). 2. **செங்காந்தள்**; Malabar glory-lily (L.). 3. ஐம்

புள் நஞ்சு (பஞ்சபட்சி பாடாணம்); a prepared arsenic (R.).

[ஒருகா. அனல் → அனலவன் → அனரவன்.]

அனல் *anal*, பெ. (n.) 1. **தீ** (பிங்.); fire. 2. **வெப்பம்**; heat, as of fever, warmth, glow. 3. **இடி**; thunderbolt. "பைம்புனலோ டனலக மடக்கி" (இரகு. ஆற்று. 4). 4. **வன்னியிலை**; the leaf of the *vanni* tree, suma tree, *Prosopis spicigera* (சா.அக.). 5. **உயிர்த் துன்பங்களுள் ஒன்று**; one of the several troubles attributed to life (சா.அக.). 6. **பித்தம்**; bile (சா.அக.). 7. **கொடுவேலி** (தைலவ. தைல. 129); Ceylon leadwort.

ம. அனல்; க. அனல; தெ. அடரு (துன்பம்); து. அர்லு; துட. அச்; படு. அனலு.

Skt., Sinh., Mar. anala; **Pers.** ādar.

[உல் → உல → உலை. உல் → அல் → அன் → அனல்.]

அனல்[லு]-தல் *anal-*, 13 செ.கு.வி. (v.i.) **அழலுதல்**; to burn, glow, blaze, to be hot, to cause heat, as the Sun, a fire, as fever. "ஊரலோவா தனன்று" (சூளா. சீய. 164).

ம. அனலுக; க. அனலு; து. அர்லுனி.

[உல் → உல → உலை. உல் → அல் → அன் → அனல்.]

அனல்காலி *anal-kāli*, பெ. (n.) 1. **சூரியகாந்தக் கல்**; sunstone (மூ.அ.). 2. **நஞ்சுள்ள சிவந்த கால்களையுடைய சிலந்திப் பூச்சி (அக்கினி பாதச் சிலந்தி), உடம்பிற் பட்டவிடங்களிற் கொப்புளிக்கச் செய்வது**; a spider with poisonous substance in its legs which causes blisters on coming into contact with human body (சா.அக.).

[கால் → காலி. 'இ' உடைமை குறித்த வி. முத. ஈறு.]

அனல் பார்க்க; see *anal*.

அனல்பாலி *anal-pāli*, பெ. (n.) **தில்லைமரம்**; blinding tree, *Excoecaria agallocha*.

[அனல் = நெருப்பு, வெப்பம். பால் → பாலி. 'இ' உடைமை குறித்த வி.முத. ஈறு. சூட்டுக் கொப்புளங்களை யுண்டாக்கும் பாலையுடையது அனல்பாலி.]

அனல்வாதம்[1] *anal-vādam*, பெ. (n.) 1. **உடம்பின் வெப்பத்தினா லுண்டாகும் ஊதை (வாத) நோய்**; a nervous affection arising from too much heat in the system. 2. **மிகுந்த எரிச்சலை யுண்டாக்கும் ஊதை (வாத) நோய்**; a nervous condition marked by a sensation of intense burning pain, *Thermaglia* (சா.அக.).

[**Skt.** vāta > த. வாதம் = காற்று, வலி (வாத) நோய்.]

அனல் பார்க்க; see *anal*.

அனல்வாதம்[2] *anal-vādam*, பெ. (n.) **திருஞான சம்பந்தர் மதுரையிற் சமணரை வென்ற அனற் போர்** (பெரியபு. திருஞான. 779-791); the fire test in Madurai, in which *Tiruñāṉasambandar* won, defeating the Jains, his religious opponents.

[**Skt.** vāda > த. வாதம் = சொற்போர்.]

அனல் பார்க்க; see *anal*.

அனல்வாதை *anal-vādai*, பெ. (n.) 1. **தண்டனையாக அல்லது பகைவரால் உயிருடன் எரிக்கப் படுதல்**; being burnt alive, as a punishment or by enemies. 2. **வெப்பநோய் அல்லது துன்பம்**; disease or suffering due to heat. 3. **எரிபசி**; severe hunger.

[**Skt.** bādhā > த. வாதை = துன்பம், நோய்.]

அனல் பார்க்க; see *anal*.

அனல்விதை *anal-vidai*, பெ. (n.) **நேர்வாளம்**; kings' seed, Chinese castor, *Croton tiglium* alias *C. jamalgota* or *Tiglium officinalis* (சா.அக.).

[வித்து → விதை.]

அனல் பார்க்க; see *anal*.

சா.அகரமுதலியில் அனல்விந்தை என்றுள்ளது. ஒருகால் அச்சுப்பிழையா யிருக்கலாம்.

நெருப்புப்போல் எரிக்குங் கடுங்கழிச்சல் மருந்தாதலால், நேர்வாளம் அனல்விதை யெனப்பட்டது.

அனல்விரை *anal-virai*, பெ. (n.) **அனல்விதை** பார்க்க (பச்.மூ.); see *anal-vidai*.

[விதை → விரை.]

அனல் பார்க்க; see *anal*.

அனல்விசு-தல் *anal-visu-*, 5 செ.கு.வி. (v.i.) **வெக்கையடித்தல்**; heat being radiated, as by a flame.

அன்றில்

அன்றில்

அன்றில்

அன்றில்

அனலுண்ணி (தீக்கோழி)

அனை (கடல்மீன்)

அனை (ஆற்றுமீன்)

அன்றில்:- நன்றி — இந்திய விலங்கியல் துறை, சென்னை.

அனல்வென்றி *anal-venri*, பெ. (n.) தங்கம் (மூ. அ.); gold, as being indestructible by fire.

[அனல்+வென்றி. வெல் → வென்றி (தொ. பெ.) 'தி' தொ.பெ. ஈறு. 'றி' புணர்ச்சித் திரிபு. 'அனல்வென்றி' தொ.ஆகு.]

அனல் பார்க்க; see *anal*.

அனல்வேகியிலை *anal-vēgi-y-ilai*, பெ. (n.) எருக்கிலை; madar leaf (சா.அக.).

[அனல் + வேகி + இலை. வேகு → வேகி. 'இ' வி.முத. ஈறு.]

அனல், இலை பார்க்க; see *anal*, *ilai*.

அனலசம் *analaśam*, பெ. (n.) பேய்க்கொம்மட்டி (பச்.மூ.); colocynth (செ.அக.) — bitter apple, *Cucumis colocynthus* (சா.அக.).

[ஒருகா. அனல் + அசம்.]

அனலடுப்பு *anal-aḍuppu*, பெ. (n.) கூண்டடுப்பு (இந்துபாக. 68); covered brick-oven for baking bread and biscuits.

[அனல் + அடுப்பு. அடு → அடுப்பு.]

அனல் பார்க்க; see *anal*.

அனலதீபனம் *anala-tībanam*, பெ. (n.) பசியை யுண்டாக்குவது; that which excites hunger, *Stomachic* (சா.அக.).

[அனல் → அனலம். **Skt.** dīpana > த. தீபனம்.]

அனலநட்சத்திரம் *anala-naṭcattiram*, பெ. (n.) (கணி.) செவ்வாய் நின்ற நாண்மீனுக்கு ஏழு, பதினான்கு, பதினாறு, இருபத்தைந்தாம் நாண்மீன்கள் (விதான. குணாகுண. 40, உரை); (Astrol.) the 7th, 14th, 16th and 25th nakṣatras, counted from the nakṣatra occupied by Mars.

[அனல் → அனலம் + **Skt.** nakṣatra > த. நட்சத்திரம் = நாண்மீன், வெள்ளி.]

அனலபித்தம் *anala-pittam*, பெ. (n.) சூட்டினால் உடம்பு முழுதுந் தடிப்புண்டாகித் தூக்கம் வராமை, தலைவலி, வயிற்றுச்சூலை, நாவில் திமிர், படலமெழும்பல், விக்கல், இளைத்தல், களைப்பு, தாகம், கால்நோய் முதலியவற்றை யுண்டாக்கும் ஒருவகைப் பித்தநோய்; a disease caused by the deranged *pittam*, and attended with the following symptoms: thick patches all over the body, sleeplessness, headache, piercing pain in the stomach, loss of sensation in the tongue, eruptions, hiccough, emaciation, fatigue, thirst, pain in the legs, etc. (சா.அக.).

[அனல் → அனலம். பித்து → பித்தம்.]

அனலம் *analam*, பெ. (n.) 1. **நெருப்பு**; fire. "அனங்கா னலம்" (தஞ்சைவா. 39). 2. வெப்பம்; heat. 3. **செரிக்குந்திறன்**; digestive power. 4. **செரிநீர்**; gastric juice. 5. **பித்தம்**; bile. 6. **சேரான்கொட்டை**; dhoby nut, *Semicarpus anacardium*. 7. **கொடுவேலி** (தைலவ. தைல. 135); Ceylon leadwort — **சித்திர மூலம்**; Ceylon leadwort, *Plumbago zeylanica* (சா.அக.). 8. **அனல நாண்மீன் (நட்சத்திரம்)** (விதான. குணாகுண. 40); the 7th, 14th, 16th and 25th lunar asterisms counted from the lunar asterism occupied by Mars.

ம. அனலம்

[அனல் → அனலம். 'அம்' (பெ.பொ.பின்.).]

அனலமுரி *anal-amuri*, பெ. (n.) **அமுரியுப்பு**; uric salt (சா.அக.).

[அனல் + அமுரி. உவரி → உமரி → அமரி → அமுரி.]

அனலன் *analan*, பெ. (n.) **நெருப்புத் தேவன்**; god of fire.

ம. அனலன்

[அனல் → அனலன். 'அன்' ஆ.பா. ஈறு.]

அனலாடி *anal-āḍi*, பெ. (n.) **சிவன்**; Śiva who is holding fire in the hand while dancing. "போருலவு மழுவான் அனலாடி" (தேவா. 1. 29 : 6);

[அனல் + ஆடி. ஆடு → ஆடி. 'இ' வி.முத. ஈறு.]

அனலாற்றி *anal-āṟṟi*, பெ. (n.) 1. **உடம்பிலுள்ள வெப்பத்தைத் தணிக்கும் பொருள்** (சா.அக.); anything that can subside the heat in the system. 2. **காய்ச்சலைத் தணிக்கும் மருந்து**; a remedy that allays fever, *Febrifuge*. 3. **தண்ணீர்**; water (சா.அக.).

[அனல் + ஆற்றி. ஆறு (த.வி.) → ஆற்று (பி.வி.) → ஆற்றி. 'இ' வி.முத. ஈறு.]

அனலி *anali*, பெ. (n.) 1. **நெருப்பு**; fire. "அனலி யுண்ண விடுவனோ" (கந்தபு. யுத்த. அக்கினி. 197). 2. **கதிரவன்** (பிங்.); the Sun.

க. அனலு; **Skt.** anala.

[அனல் → அனலி. 'இ' உடைமை குறித்த வி.முத. ஈறு.]

அனலிமுகம் *anali-mugam*, பெ. (n.) கதிரவப் புடம் (சூரியபுடம்) (மூ.அ.); exposure of certain substances to the Sun in the preparation of medicines.

[அனல் → அனலி = கதிரவன். 'இ' வி.முத. ஈறு. முகம் = முகம்நோக்க வைத்தல்.]

அனலுக்குளசையாச்சூதகத்தி *analuk-kuḷ-aśaiya-c-cūdagatti*, பெ. (n.) சுணங்கன் மரம், 21 மா (மகா) மூலிகைகளுள் ஒன்று; an unknown or unidentified tree supposed to be fire-proof, providing one of the 21 invaluable drugs used by *Siddhars* for purposes of rejuvenation.

[அனல் → அனலுக்கு (4ஆம் வே.) + உள் (7ஆம் வே.உ.) + அசையா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + சூதகத்தி. அசை → அசையாத → அசையா. சூதகத்தி – சூது + அகத்தி அல்லது சூத + அகத்தி.]

அனலுண்ணி *anal-uṇṇi*, பெ. (n.) தீக்கோழி; ostrich.

[அனல் + உண்ணி. உண் → உண்ணி. 'இ' வி.முத. ஈறு.]

அனலேறு *anal-ēṟu*, பெ. (n.) இடி (சூடா.); thunderbolt.

[அனல் + ஏறு (ஏறுவது, மேல்விழுவது). 'ஏறு' முத.தொ.ஆகு.]

அனலோடுவேந்தன் *anal-ōḍu-vēndan*, பெ. (n.) கார்முகில்நஞ்சு (பாடாணம்); a mineral poison (W.).

[அனல் + ஓடு + வேந்தன். 'ஓடுவேந்தன்' வினைத்தொகை. வேந்தன் = வேந்தன் போன்றது.]

அனற்கண் *anaṟ-kaṇ*, பெ. (n.) 1. சிவந்த கண் (சா.அக.); red or blood-shot eye. 2. சினக் கண்; fiery eye indicating anger. 3. அழற்சி யினாற் சிவந்த கண்; inflamed eye.

க. அனலகண்

[அனல் + கண்.]

அனற்கண்டர் *anaṟ-kaṇḍar*, பெ. (n.) துரிசு; blue vitriol, copper acetate (சா.அக.).

[அனல் + கண்டர்.]

அனற்கண்பார்வை *anaṟ-kaṇ-pārvai*, பெ. (n.) 1. நடை மிகையால் ஏற்படுங் கண்ணழற்சி (சா.அக.); inflammation of the eye due to heat in the system caused by excessive working. 2. சினப்பார்வை; fiery look (சா.அக.).

[அனல் + கண் + பார்வை. பார் → பார்வை. 'வை' தொ.பெ. ஈறு.]

அனற்கல் *anaṟ-kal*, பெ. (n.) தீயுரசிக்கல் (சக்கி முக்கிக்கல்) (தைலவ. தைல. 127); flint.

[அனல் + கல்.]

அனற்குவை *anaṟ-kuvai*, பெ. (n.) நெருப்பிடு கலம் (பிங்.); fire pan.

[அனல் + குவை. குவி → குவை. 'ஐ' தொ. பெ. ஈறு.]

அனற்சுக்கிரன் *anaṟ-cukkiran*, பெ. (n.) 1. கண்ணில் வெள்ளை விழும் நோய்வகை; a disease causing white speck in the eye. 2. கரு விழியில் நெருப்பைப்போற் காந்தலையுண்டாக் கும் கண்ணோய்வகை; inflammation of the cornea of the eye attended with burning sensation, *Keratitis* (சா.அக.).

[அனல் + Skt. śukra > த. சுக்கிரன் = வெள்ளி (Venus).]

அனற்சுண்ணம் *anaṟ-cuṇṇam*, பெ. (n.) பிரண் டைத்தூள், சதுரக்கள்ளிப்பட்டை, உப்பு முதலிய சரக்குகளைச் சேர்த்துப் பொடிசெய்து, மேனோக்கும் வளி (வாயு), காமாலை முதலிய நோய்களுக்குக் கொடுக்குஞ் சுண்ணம் (சூரணம்); a powder made of adamant creeper, bark of square spurge, common salt, etc., and prescribed for dyspeptic complaints or gastric troubles, jaundice, etc.

[அனல் + சுண்ணம்.]

சுண்ணம் பார்க்க; see *śuṇṇam.*

அனற்சுரம் *anaṟ-curam*, பெ. (n.) உடம்பில் நெருப்பைப்போற் சூட்டை யுண்டாக்குங் காய்ச்சல்நோய்; burning fever, *Hyperpyrexia.*

[அனல் + சுரம்.]

அனற்பொறி *anaṟ-poṟi*, பெ. (n.) தீப்பொறி (திவா.); spark of fire.

[அனல் + பொறி.]

அனற்றாகம் *anaṟ-ṟāgam*, பெ. (n.) அனலினால் ஏற்படுந் தாகம்; thirst arising from intense heat of the surroundings or of the body.

[அனல் + தாகம்.]

தாகம் பார்க்க; see *tāgam*.

அனற்றிராவகம் *aṉaṟ-ṟirāvagam*, பெ. (n.) **அனவிறக்கியம் (அக்கினித் திராவகம்)**; nitrous acid (சா.அக.).

[அனல் + **Skt.** drāvaka > த. திராவகம்.]

அனற்று-தல் *aṉaṟṟu-*, **5** செ.குன்றாவி. (v.t.) 1. **சுடுதல், சூடுண்டாக்குதல்**; to heat, make hot. வெயில் உடம்பை அனற்றுகிறது. 2. **எரித்தல்**; to burn, consume with fire. "அனற்றினா னல்ல னென்றிக் காலத்தும் வெறுத்தார்" (காஞ்சிப்பு. கழுவாய். 179). 3. **கடுஞ்சூட்டினால் உடம்பு காய்தல்**; to affect with excessive heat, as in fever, used impersonally. காய்ச்சல் உடம்பை அனற்றுகிறது. 4. **வயிறுளைதல்**; to affect with colic pains used impersonally. எனக்கு வயிற்றை றை அனற்றுகிறது. 5. **சினத்தல்**; to be angry with. "குமரனை யனற்று மாற்றலர்" (சூளா. அரசியற். 89). 6. **வீணாக வுதவுதல்**; to give in vain, as to a worthless person or for a useless purpose. ஐம்பது உருபா உனக்கு (அதற்கு) அனற்றினேன். —, 5 செ.கு.வி. (v.i.) *முணங்குதல்*; to moan, groan with pain (W.).

[அனல் (த.வி.) → அனற்று (பி.வி.).]

அனி *aṉi*, பெ. (n.) 1. **நெற்பொரி** (இராச வைத்.); parched rice, pop-rice. 2. **பத்தாயப் பெட்டி** (இ.வ.); large box (Loc.).

அனிகம் *aṉigam*, பெ. (n.) சிவிகை (சூடா.); palanquin.

[அணிகம் → அனிகம்.]

அனிச்சநாகம் *aṉicca-nāgam*, பெ. (n.) மல்லிகை; jasmine, *Jasminum sambac* (சா.அக.).

அனிச்சம்[1] *aṉiccam*, பெ. (n.) **மோந்தாலும் வாடும் பூவகை**; flower supposed to be so delicate as to droop or even perish when smelt "மோப்பக் குழையு மனிச்சம்" (குறள், 90).

ம. அனிச்சம்

அனிச்சம்[2] *aṉiccam*, பெ. (n.) வரகு; red millet (சா.அக.).

அனிச்சி *aṉicci*, பெ. (n.) **நாகமல்லி** (பச்.மூ.); ringworm root.

அனிச்சை *aṉiccai*, பெ. (n.) **அனிச்சி** பார்க்க; see *aṉicci* (மலை.).

அனிஞ்சில் *aṉiñjil*, பெ. (n.) **வில்வம்** (சங்.அக.); bael (செ.அக.) – Indian bael, Holy fruit tree, *Aegle marmelos* (சா.அக.).

அனித்தம் *aṉittam*, பெ. (n.) **சந்தனம்** (அக.நி.); sandalwood tree.

அனுக்கம்[2] பார்க்க; see *aṉukkam*[2].

அனிலம் *aṉilam*, பெ. (n.) 1. **பிறக்கை** (பொதி. நி.); existence, birth. 2. **அச்சம்** (அக.நி.); fear.

அனு *aṉu*, பெ. (n.) **மிகச் சிறிது**; a very little thing, tiny thing.

அனுக்கம்[1] *aṉukkam*, பெ. (n.) 1. **அசைவு**; shaking. 2. **இசை யலுக்கு**; embellishment in singing or music. 3. **வருத்தம்**; suffering, distress, pain, grief. "மனமனுக்கம் விட" (கம்பரா. அயோத். கைகேயிசூழ். 56). 4. **அச்சம்**; fear (W.). 5. **வலுக்குறைவு**; weakness, as from disease, lethargy, indolence. அனுக்கமாகப் பேசினார் (W.). 6. **முணக்கம்**; mumbling, moaning, groaning. **அனுக்கமாக** வாசிக்கிறான் (வின்.). 7. **குழந்தைநோய்**; infantile sickness (ஈடு, 5.10:3, ஜீ.). 8. **பாம்பு**; snake (சா.அக.).

[அலுங்கு → அனுங்கு → அனுக்கு → அனுக்கம் (தொ.பெ.). அனுங்குதல் = அசைதல். அனுக்குதல் = அசைத்தல். **'அம்'** தொ.பெ. ஈறு.]

அனுக்கம்[2] *aṉukkam*, பெ. (n.) **சந்தனம்** (பச்.மூ.); sandalwood tree.

அனுக்கு-தல் *aṉukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **அசைத்தல்**; to shake. 2. **கொக்கான் முதலிய விளையாட்டில் தொடக்கூடாததைத் தொடுதல்** (யாழ்ப்.); to touch or strike undesignedly, as in the *kokkāṉ* play (J.). 3. **வருத்துதல்**; to distress, cause to suffer, oppress. "மென்மருங் கனுக்குங் குன்ற வெம்முலை" (உபதேசகா. சிவவிரத. 381). 4. **கெடுத்தல்**; to ruin. "அல்லனுக்கு பன்மணிச் சிலம்பிடை" (தணிகைப்பு. நகரப். 5).

[அனுங்கு (த.வி.) → அனுக்கு (பி.வி.).]

அனுக்குசிரம் *aṉukku-širam*, பெ. (n.) (நடம்) **தலை நளிநய (சிர அபிநய) வகை** (பரத. பாவ. 78); (Dan.) violent quivering of the head imitating a fit.

[அனுக்குதல் = அசைத்தல், நடுக்குதல். 'அனுக்குசிரம்' வினைத்தொகை.]

சிரம் பார்க்க; see *śiram.*

அனுகம் *anugam*, பெ. (n.) *செஞ்சந்தனம்* (மூ.அ.); red sandal.

[அனுக்கம் → அனுகம்.]

அனுங்கு-தல் *anuṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *அசைதல்*; to shake. ஓர் இலைகூட அனுங்க வில்லை. 2. *கொக்கான் முதலிய விளையாட்டில் தொடக்கூடாதது தொடப்படுதல்* (யாழ்ப்.); to be touched unawares as in the *kokkaṉ* play, causing a forfeit (J.). 3. *முணுமுணுத்தல்* (யாழ்ப்.); to mumble, mutter, moan (J.). 4. *வருந்துதல்*; to suffer pain, to be in distress. "பஞ்சனுங் கடியினார்" (சூளா. நகர. 25). "அனுங்க வென்னைப் பிரிவுசெய்து ஆயர் பாடி கவர்ந்துண்ணும்" (திவ். நாய்ச். 638). 5. *வாடுதல்* (பிங்.); to fade, wither, droop. 6. *கெடுதல்*: to perish. "வாட்படை யனுங்க வேடர்" (சீவக. 436). 7. *இழுகுதல், பின் வாங்குதல்* (யாழ்ப்.); to be reluctant, unwilling, to back away (J.).

[அல் → அலை → அசை. அல் → அலு → அலுங்கு → அனுங்கு.]

அனுப்படி *anu-p-paḍi*, பெ. (n.) 1. *கருமச் செய்திகள், கருமச் சூழ்நிலைகள்*; affairs in general, circumstances. 2. *கையிருப்பு*; balance in account. 3. *முந்தின ஆண்டு வருமானம்*; revenue of the previous year.

[அல்லுதல் = பொருந்துதல். அல் → அன் → அனு. படி = நிலைமை.]

அனுப்படிநிலுவை *anu-p-paḍi-niluvai*, பெ. (n.) *கையிருப்பு*; balance in account.

[அனு + படி + நிலுவை. நில் → நிலு → நிலுவை. 'வை' தொ.பெ. ஈறு.]

அனுப்படியிறக்கு-தல் *anu-p-paḍi-y-iṟakku-*, *பழைய நிலுவையைப் புதுக்கணக்கிற்குக் கொண்டுவருதல்*; to carry forward the balance to a new account.

[அனு + படி + இறக்கு. இறங்கு (த.வி.) → இறக்கு (பி.வி.).]

அனுப்பன் *anuppaṉ*, பெ. (n.) *கோவை மதுரை முகவை நெல்லை மாவட்டங்களிற் காணப் படும் கன்னடக் கவுண்டருள் ஒரு பிரிவார்*; a division of Kanarese Goundas, found in Coimbatore, Madurai, Ramanathapuram and Thirunelvēli districts.

அனுப்பு-தல் *aṉuppu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. *போகச்செய்தல்; விடுத்தல்*; to send, despatch. 'எனைச் சோழ நாட்டுக் கனுப்ப வேணும்' (தமிழ்நாவ. 254), மறைமலையடிகள் எழுதிய பொத்தகங்களின் ஒரு முழுத்தொகுதி ஒவ்வொரு பெருநூல் நிலையத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. 2. *வழிவிடுதல்*; to accompany a person for a short distance out of respect or love.

ம., தெ. அனுப்பு.

அனுப்பு[1] *aṉ(u)-uppu*, பெ. (n.) *பழைய வரிவகை*. (M.E.R. 427 of 1928-9); an ancient tax.

அனுப்பு[2] *aṉuppu*, பெ. (n.) *உதவியாக உப்புடன் சேர்ந்தது*; that which has combined with salt to confer suitable consistency (சா.அக.).

[அனு + உப்பு – அனுப்பு. அல் → அன் → அனு = உடன்கலந்தது.]

அனுமதி-த்தல் *aṉu-madi-*, 4 செ.கு.வி., செ. குன்றாவி. (v.i. & v.t.) *உடன்படுதல், இசைவு தரல்*; to permit, to consent to.

ம. அனுமதிக்குக; க. அனுமோதிசு.

[அல் → அன் → அனு = உடன். மத்து (மட்டு) → மத்தி → மதி. மதித்தல் = அளவிடுதல், கருதுதல், உயர்வாகக் கருதல், ஒப்புக் கொள்ளுதல், இசைதல்.]

'அனுமதித்தல்' என்னுஞ் சொல் தமிழில் தோன்றாது வடமொழி வழியாய் வரினும், 'அனு' என்னும் முன்னொட்டும் 'மதி' என்னும் வினைச்சொல்லும் தனித்தனி தமிழாயிருத்தலின், அவற்றின் கூட்டுச்சொல்லும் தமிழாதற்கு ஏற்கும் என்றறிக. த. அனு > **Skt.** anu. + **Skt.** mati. இதனால் 'அவமதி' என்னுஞ் சொல்லும் தமிழாய் அமைதல் உணர்க.

அனுமதி *aṉu-madi*, பெ. (n.) *இசைவு, ஒப்புக் கொள்வு*; permission, assent, approval. "அனுமதி பெற்று" (சேதுபு. சேதுயா. 15).

ம., து. அனுமதி; க. அனுமோத; **Mar.** anumata; **Nep.** anumati.

[அல் → அன் → அனு = உடன். மத்து (மட்டு) → மத்தி → மதி. மதித்தல் = அளவிடு

தல், கருதுதல், உயர்வாகக் கருதுதல், ஒப்புக் கொள்ளுதல், இசைதல்.]

அனுமதிச்சீட்டு *anu-madi-c-cīṭṭu*, பெ. (n.) அம் பகம், இசைவுமுறி; permit.

[அனு + மதி + சீட்டு. சிட்டு → சீட்டு = முறி, ஓலை.]

அனுமாசக்காய் *anumāśa-k-kāy*, பெ. (n.) பொன்னாங்கண்ணி (மலை.); species of *Alternathera.*

அனுமாசகண்ணி பார்க்க; see *anumāśa-kanni.*

அனுமாசகண்ணி *anumāśa-kanni*, பெ. (n.) பொன்னாங்கண்ணி (சித்.அக.); a plant growing in damp places.

அனுமாசாக்கா *anumāśākka*, பெ. (n.) பொன் னாங்கண்ணி; an edible plant, *Illecebrum sessile* (சா.அக.).

அனுமாசக்காய் என்று மலையகராதியும், அனுமாசாக்கா என்று சாம்பசிவம் பிள்ளை அகராதியும் கூறுவது ஒன்றாய்த்தா னிருத் தல் வேண்டும். ஆயின், அவற்றுள் எது சரி யான வடிவம் என்பது தெரியவில்லை.

அனுமானம் *anumānam*, பெ. (n.) (ஏர.) 1. கருதலளவை, உய்த்துணர்வு; one of the six means of acquiring true knowledge.

"கருத்தள வாவது
குறிக்கொ ளனுமா னத்தனு மேயத்
தகைமை யுணருந் தன்மைய தாகும்"
(மணிமே. **27** : 25-27).

2. ஐயுறவு; doubt. "இனியிங் கிதற்கு மனு மானமோ" (தாயு. அகிலா. 1). 3. அயிர்ப்பு; suspicion. அனுமானப்பட்ட புள்ளி.

ம. அனுமானம்; க., து. அனுமான; தெ. அநுமானமு; **Sinh.**, **Mar.**, **Nep.** anumāna.

[அல் → அன் → அனு (உடன், கூட, பொருந்த). மாத்தல் (வழக்கிறந்த வினை) = அளத்தல். மா + அனம் – மானம் (அளவு, அளவீடு). அனுமானம் = புகையால் அதனொடு சேர்ந்த நெருப்பை அறிதல்போல், ஒன்றால் அதனொடு சேர்ந்த இன்னொன்றை அறிதல்.]

அனுமதித்தல் என்னுஞ் சொல்லிற்குக் கூறிய சிறப்புக் குறிப்பை, அனுமானம் என்னுஞ் சொல்லிற்குங் கொள்க. இதனால், 'அவமானம்' என்னுஞ் சொல்லும் தமிழாய் அமைதல் உணர்க.

அனு > **Skt.** anu. மானம் > **Skt.** māna.

அனுமானவுறுப்பு *anu-māna-v-uruppu*, பெ. (n.) (ஏர.) இந்திய ஏரணக்கூட்டின் ஐங்கூறுகள்; மேற்கோள் (பிரதிஞ்ஞை), ஏது, எடுத்துக் காட்டு (உதாரணம்), இணைப்பு (உபநயம்), முடிபு (நிகமனம்) என்பன (தருக்கசங். 49); members of an Indian syllogism, which are five in number, viz., proposition, cause or reason, example, relation, conclusion.

[அனுமானம் + உறுப்பு. உறு → உறுப்பு.]

அனுமானம் பார்க்க; see *anumānam.*

அனுமானி-த்தல் *anu-māni-*, 4 செ. குன்றாவி. (v.t.) 1. அனுமான அளவையாலறிதல்; to determine by inference. 2. உன்னித்தல்; to guess. 3. அயிர்த்தல்; to suspect.

[அனுமானம் → அனுமானி. ஒ.நோ: தீர் மானம் → தீர்மானி.]

'அனுமானி' என்னும் வினைச்சொல் வட மொழியி லின்மையை நோக்குக.

அனுமூலம் *anu-mūlam*, பெ. (n.) பேய்த்துளசி; wild basil, *Ocimum adscendens* alias *O. cristatum* (சா.அக.).

அனுமை *anumai*, பெ. (n.) கண்ணின் புறவருகு; the front of the temples close to the back of the eye.

அனுமோனை *anu-mōnai*, பெ. (n.) இனவெழுத் தால் வரும் மோனைத்தொடை (தொல். பொருள். செய். 94, பேரா. உரை); vowel and consonantal assonance in metrical alliteration.

[அல் → அன் → அனு = பொருந்தியது, ஒத்தது, இனம், கிளை. முகம் → முகன் → முகனை → மோனை.]

அனுவட்டம் *anu-vaṭṭam*, பெ. (n.) ஒருவகை உருண்டை முத்து (S.I.I. ii, 143); variety of round pearls.

[அல் → அன் → அனு. வள் → வட்டு → வட்டம்.]

வட்டம் பார்க்க; see *vaṭṭam.*

அனுவல்லிப்பூடு *anu-valli-p-pūḍu*, பெ. (n.) **கஞ்சா**; Indian hemp, *Cannabis sativa* alias *C. indica* (சா.அக.).

[அனு + வல்லி + பூடு.]

அனு பார்க்க; see *anu*.

அனுவல்லிப்பூடு
(கஞ்சங்குல்லை — கஞ்சா)

அனுவுரு *anu-v-uru*, பெ. (n.) **ஒத்த வடிவம்**; similar form, appropriate form. ''அனுவுருக் கொண்டுரு மாறி'' (பாரத. திரௌ. 49).

[அல் → அன் → அனு = பொருந்தின, ஒத்த. உருத்தல் = தோன்றுதல். உரு = தோற்றம், வடிவம்.]

அனுவெதுகை *anu-v-edugai*, பெ. (n.) **இனவெழுத்தால் வரும் எதுகைத்தொடை** (தொல். பொருள். செய். 94, பேரா. உரை); vowel and consonantal assonance in metrical rhyme.

[அல் → அன் → அனு. எதிர்தல் = கூடுதல், பொருந்துதல். எதிர் → எதிர்கை → எதுகை.]

அனுவெழுத்து *anu-v-eluttu*, பெ. (n.) 1. **மோனையெழுத்து**; alliterative letter. 2. **இனவெழுத்து, கிளையெழுத்து**; related letter.

[அல் → அன் → அனு. எழுது → எழுத்து (தொ.ஆகு.).]

அனை[1] *anai*, சு.பெ.எ. (demons.adj.) 1. அந்த; that. ''அனைநால் வகையும்'' (தொல். பொருள். பொருளியல், 51). 2. **அத்தகைய**; such.

[அ (சே.சு.) → அன் → அனை.]

அனை[2] *anai*, பெ. (n.) 1. **ஒருவகை ஆற்றுமீன்; அனைக்கெளுத்தி**; a kind of fresh-water fish. ''அனையுகளு நன்னீர்'' (பாரத. சூது. 13). 2. **கடல் அனைக்கெளுத்தி**; a sea-fish, a slender long eel.

அனைக்கருங்கிழங்கு *anai-k-karuṅ-kilaṅgu*, பெ. (n.) பூபரிக்கிழங்கு; the root of a plant (unidentified) (சா.அக.).

அனைத்து *anaittu*, கு.பெ.எ. (adj.) **எல்லா**; all. ''அனைத்துலகும் இன்பமுற'' (மனோன். த.வா.). —, கு.வி.எ. (adv.) **அவ்வளவு**; so much, thus far. ''மனத்துக்கண் மாசில னாத லனைத்தறன்'' (குறள், 34). —, பெ. (n.) **அத்தன்மையது**; that which is of such a nature. ''அனைத்தாகப் புக்கீமோ'' (கலித். 78 : 24).

க. அனித்து

[அ (சே.சு.) → அன் → அனை → அனைத்து. 'ஐ' சாரியை. 'து' (அது) ஒன்.பா. ஈறு.]

அனைத்தும் *anaittum*, பெ. (n.) **எல்லாம்**; all, the whole. ''இகழ்விலிவ் வனைத்து மென்கோ'' (திவ். திருவாய். 3 . 4 : 1).

ம. அனைத்தும், அனத்தும்; க. அனித்து.

[அனைத்து + உம் (முற்றும்மை, முற்றுப் பொருள் தரும் இடைச்சொல்).]

அனைய *anaiya*, கு.பெ.எ. (adj.) 1. **அத்தன்மையான**; such. ''அனைய மாதவன்'' (கம்பரா. அயோத். பள்ளி. 139). 2. **ஒத்த**; the same, similar. ''என்னனைய முனிவரரும்'' (கம்பரா. பால. கையடை. 8).

[அ (சே.சு.) → அன் → அனை → அனைய. 'ஐ' சாரியை. 'அ' பெ.எ. ஈறு.]

அனையன் *anaiyan*, சு.பெ. (demons. pron.) 1. **அத்தன்மையன்**; such a man. ''அனைய ரப்புன லேறினர்'' (கம்பரா. அயோத். வனம் புகு. 38). 2. **ஒத்தவன்**; similar man.

[அ (சே.சு.) → அன் → அனை → அனையன். 'ஐ' சாரியை. 'அன்' ஆ.பா. ஈறு.]

அனைவரும் *anaivarum*, சு.பெ. (demons. pron.) எல்லாரும்; all persons. ''அனைவருந் தொழுதுடன்வர'' (கந்தபு. தேவ. தெய்வ. 261).

க. அனிபுரு; தெ. அந்தரு.

[அ (சே.சு.) → அன் → அனை → அனைவர் → அனைவரும். 'ஐ' சாரியை. 'அர்' ப.பா. ஈறு. 'உம்' முற்றும்மை.]

அனோபகம் *anōbagam*, பெ. (n.) பேய்த்தேற்றா; a kind of bitter, water-filter nut tree (சா.அக.)

★ ★ ★

T. 5048

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

முதன்மடலம் — இரண்டாம் பாகம்

(ஆ, இ, ஈ)

முனைவர். **இரா. மதிவாணன்**
முதன்மைப் பதிப்பாசிரியர் – இயக்குநர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககத்திற்காக அச்சடிப்பு

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை – 113.

செ. சொ. பி. அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 2

முதற்பதிப்பு : தி. பி. 2022

© தமிழ் நாட்டரசு

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE.

விலை: உருபா 150.00

குறியீட்டெண் : Colon No.P 31–J, 3;4" K M4

Published by :
Directorate of Tamil Etymological Dictionary Project.

Copies available at

International Institute of Tamil Studies
Tharamani, Madras – 113.

Typesetting by:
AR Laser & Logic Services Mylapore, Madras – 600 004.
Savithri Laser Printing Madras - 600 028.

Printed at : SRI YESES PRINT HOUSE, MADRAS - 600 005.

Dr. C. Aranganayagam
Minister for Education
Govt. of Tamilnadu.

Fort, St. George,
Madras -- 600 009.

FOREWORD

Compilation of dictionaries, of which there are several kinds, is considered a cardinal requisite for activities connected with the promotion of language growth. Especially imperative is the need for an etymological dictionary in Tamil, which seeks to determine and elucidate the root of every word in the language to facilitate higher research by linguistic specialists as well as act as a guide to general scholars who are interested in ensuring that the language keeps pace with progressing knowlege of the modern times. The first volume part I of the Comprehensive Etymological Dictionary of Tamil Language was compiled by the late lamented linguistic luminary G. Devaneya Pavanar and published on Thiruvalluvar Day in 1985, during the platinum jubilee year of Perarignar Anna.

I take immense pleasure in penning a foreword again, this time to the subsequent parts which together with the earlier one complete the portion relating to vowels in Tamil. Perarignar Anna, in his greetings dated 9.8.1967, eulogizing Pavanar for his yeoman services, has stated, "Pavanar, by his ceaseless service to Tamil language has elevated the stature of all of us. His erudition is replete with definition and dauntlessness. Anyone devoted to Tamil could not but cherish with earnest fondness the savant, who after considerable research, gave us to understand the ingenuity and immaculacy of Tamil language. I bow my head to pay homage to Pavanar. Long live Pavanar! hail to Tamil!".

The Government of Tamilnadu is rendering singular service to the cause of Tamil Development by closely treading the footsteps of such nobles as Maraimalai Adigalar, Magaral Karthikeyanar, Thavathiru Gnanaprakasar, Pavanar, Pavendar

Bharathidasan etc., Who had illuminated the path, in 20th century, even like the morning star.

The establishment of the Tamil University by our Former Chief Minister Makkal Thilagam Puratchi Thalaivar happens to be a towering accomplishment among several such endeavours in the sphere. It is a matter of pride and pleasure that the succeeding parts of the dictionary should appropriately be published during the Chief Ministership of Puratchi Thalaivi **Dr. J. JAYALALITHA.**

It is my ardent hope and fervent wish that all the volumes to complete the project will be published erelong and adorn as a jewel the sacred person of Tamil Mother. I take this opportunity to heartily congratulate Dr. Avvai Natarajan, Secretary to the Government, Tamil Development-Culture Department for his untiring efforts as also Dr. R. Madhivanan, chief Editor and Director of the project who is editing the ensuing volumes of the dictionary.

I am sure that the publication will be accorded a warm enthusiastic reception by the Tamil world and put to profitable use.

Dr. C. Aranganayagam.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

பதிப்புரை

தொன்மை சான்ற அன்னைத்தமிழில் சொற்பிறப்பியல் அகரமுதலி முழுமையாக வெளியிடும் நோக்கில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் தலைமையில் 8.5.1974 அன்று, அப் போதைய தமிழக முதலமைச்சர் கலைஞர் **மு. கருணாநிதி** அவர்களால் உருவாக்கம் பெற்றது.

தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படையான பணிகளில் அகரமுதலி உருவாக்குவதும் தலைசிறந்த தமிழ்ப்பணியாகும். ஆங்கில மொழிகளில் நூற்றுக்கணக்கான அகரமுதலிகள் வெளியிடப் பட்டிருப்பதால் ஆங்கில மொழியின் வளர்ச்சி உலக அரங்கில் உயர்ந்தோங்கியுள்ளது என்று உலக அறிஞர்கள் ஒப்புக் கொள்கின்றனர். சொல்லின் பொருளை மிகத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கும், தமிழில் புதிய படைப்புச்சொற்களை உருவாக்குவதற்கும் மொழியாராய்ச்சியாளர்களுக்கும், மொழியைக் கற்கும் பிறமொழியாளர்களுக்கும் உதவும் வகையில் சொற்பிறப்பு அகரமுதலிகள் (Etymological Dictionaries) உலகில் பல மொழிகளிலும் வெளியிடப் பட்டுள்ளன. ஆங்கிலத்தில் மட்டும் 5 சொற்பிறப்பியல் அகரமுதலிகள் (Klein, Skeat, C.T. Onions, Chambers, Weakley ஆகியோரால் தனித் தனியே தொகுக்கப்பட்டவை) வெளிவந்துள்ளன. இந்திய மொழிகளில் சமற்கிருதம், மராத்தி, குசராத்தி, நேப்பாளி, தெலுங்கு ஆகிய மொழிகளில் சொற்பிறப்பு அகரமுதலிகள் வெளிவந்துள்ளன. தமிழில் முழுமையான சொற்பிறப்பு அகரமுதலி வெளிவராத குறையை இந்த அகரமுதலித்திட்டம் நிறைவாக்குகிறது. எந்த வேரிலிருந்து எந்தச் சொல் பிறந்தது என்பதையும், பிறமொழியிலிருந்து கடன்பெற்ற சொல்லாக இருந்தால் எம் மொழிச்சொல் எவ்வாறு திரிந்தது என்பதையும், அச்சொல் அம்மொழியின் இனமொழிகளில் எவ்வாறு வழங்குகிறது என்பதையும், அச்சொல்லின் மறுவடிவங்கள் எவை என்பதையும், சொல் வடிவிலும் பொருள் வடிவிலும் எவ்வகைத் திரிபுகளையும்

மாற்றங்களையும் அச்சொல் அடைந்துள்ளது என்பதையும் விரிவாக ஆராய்வது சொற்பிறப்பு அகரமுதலியின் நோக்கம். பொதுவகையான அகரமுதலி தொகுப் பதைவிட, சிறப்புவகையான சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுப்பதற்கு அரிய ஆய்வுத் திறனும் கடிய உழைப்பும் பெரிதும் வேண்டும் அரும்பணியாதலால் தொகுப்புக்காலம் எதிர்பார்ப்பதை விட நீட்டிப்புக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகிறது. உலகப்புகழ்பெற்ற பன்மடல எருதந்துறை ஆங்கில அகரமுதலி (Oxford Dictionary) நானூற்றுவர் உழைப்பில் 75 ஆண்டுக்காலத்தில் நிறைவுற்றுள்ளது. திரவிடச் சொற்பிறப்பியல் ஒற்றைமடல (ஆங்கிலப்பதிப்பு) அகரமுதலியை (5600 சொல் விளக்கங்கள்) பேராசிரியர் பரோவும் எமனோவும் 33 ஆண்டுகளில் நிறைவுறுத்திவெளியிட்டனர். ஒருசொல்லின் சொல்வளர்ச்சி பொருள்வளர்ச்சிகளை ஆராய்வதற்கு அம்மொழியின் வட்டார வழக்குச் சொல்லாட்சிகளையும், இலக்கியச் சொல்லாட்சிகளையும் இலக்கணக் கட்டமைப்புகளையும் ஒப்புநோக்கியபின், தமிழின் இன மொழிகளான திரவிட மொழிகள் நாற்பதிலும் இனச்சொல் வகைமை களை அறிய வேண்டியுள்ளது. உலக மொழிகளில் சொற்பிறப்பு அகரமுதலி ஒரே மடலமாகத்தான் வெளியிடப்பட்டுள்ளது. ஆயின், தமிழில் 10 மடலங்களும், துணை மடலங்கள் இரண்டும் ஆக பன்னிரு மடலங்களாக வெளியிடும் தொலைநோக்குத் திட்டமாகவே இந்தச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டமும் அமையவேண்டியுள்ளது.

அகர எழுத்தில் தொடங்கும் 6500 சொற்களைக் கொண்ட முதன் மடலத்தின் முதற்பாகம் 1985 ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாளில் வெளியிடப்பெற்றது. 1981 ஆம் ஆண்டில் மொழிஞாயிறு அவர்களின் மறைவுக்குப்பின் அவர் எழுதி முடித்த "ஆசைமொழி" என்னும் சொல்வரையுள்ள பகுதிகள் இந்த முதன்மடல இரண்டாம் பாகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அவர் விட்ட இடத்திலிருந்து தொடங்கி உயிரெழுத்துகள் முடிய தொகுக்கப்பட்டவை முதன்மடலத்தில் இரண்டாம் மூன்றாம் பாகங்களாக வெளியிடப்படுகின்றன. ஆ, இ, ஈ ஆகிய எழுத்துகளில் தொடங்கும் சொற்கள் இரண்டாம் பாகத்திலும் உகர முதல் ஔகாரம் முடிய உள்ள எழுத்துகளில் தொடங்கும் சொற்கள் மூன்றாம் பாகத்திலும் இடம்பெற்றுள்ளன. ககரம் முதல் வகரம் வரைப்பட்ட அனைத்துச் சொல்லடைவுகளும் முடிவுபெற்றுள்ளன. இவை இனி சொல் விளக்கங்கள் எழுதப்பெற்று அடுத்து வரும் மடலங்களாக வெளியிடப்பெறும்.

பாவாணர் நூல்களிலிருந்தும் நூற்றுக்கு மேற்பட்ட அவருடைய ஆய்வுக் கட்டுரைகளிலிருந்தும் தொகுக்கப்பட்ட வேர்ச்சொற் குறிப்புகள் உரிய இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. பாவாணர் வேர்மூலம் காட்டாத சொற்களுக்கு அவர் நெறிமுறைகளைப் பின்பற்றி நான் வேர்மூலம் காட்டியிருக்கிறேன்.

உலகில் எம்மொழியிலும் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், அயற்சொல் என்னும் நால்வகைப் பாகுபாடுகளைக் காணலாம். இவற்றுள் தமிழிலுள்ள கொச்சை

வழக்குகளுக்கும் மருவித் திரிந்தவற்றுக்கும் வடதமிழ் எனப்படும் பாலிபிராகிருத மொழிகளிலும்ஏனைத்திராவிடமொழிகளிலும்திசைச்சொல்லாகமாறியவற்றுக்கும் மூல வடிவங்களை மீட்டமைத்துச் செந்தமிழ்ச் சொல் வடிவம் காட்டுதலாலும், மறைந்து போன செந்தமிழ்ச் சொல் வடிவம் காட்டுதலாலும், மறைந்து போன செந்தமிழ்ச் சொற்களையும் வேர்மூலங்களையும் ஏரண அடிப்படையில் பொருத்திக் காட்டுதலாலும், தமிழில் காலந்தோறும் வந்து கலந்த பிற மொழிச் சொற்களுக் கேற்ற செந்தமிழ்ப் படைப்புச் சொற்களைச் சேர்த்திருந்தலானும் தமிழ்ச் சொல்லா சமற்கிருதச் சொல்லா என்னும் ஐயம் தெளிவித்துத் தமிழ்ச் சொற்களை வேறுபடுத்தி வேர் மூலம் விரித்துக் காட்டி இது தென் தமிழ்ச் சொல் அல்லது வடதமிழ்ச் சொல் என ஐயம் நீக்குதலானும் பொதுவாகத் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி எனப்பெயரிடாமல் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி எனப்பெயரிடப் பட்டுள்ளது.

பாவாணரின் சொற்பிறப்பு ஆராய்ச்சி, ஞால முதன்மொழிக் கொள்கை என்னும் கதிர்வீச்சின் அடிமுடியைத்தேடும் பணிக்கு அடிப்படையிட்டிருக்கிறது. இந்த நோக்கு பாவாணர் உள்ளத்தில் மட்டும் அரும்பவில்லை. உலகில் பல்வேறு அறிஞர் களிடையிலும் முகிழ்த்துள்ளது. மாந்தருள் மாணிக்கமாக விளங்கிய இந்தியத் தலைமையமைச்சர் நேரு பெருமகனார் தம்மகளார்க்கு எழுதிய மடலில் "அப்பா, அம்மா" போன்ற அடிப்படை உறவுச்சொற்கள் உலகமொழிகள் அனைத்திலும் ஒருசீராக உள்ளனவென்றும் உலகமொழிகள் ஓரே மூல மொழியிலிருந்து தோன்றினவா என்பது ஆராயப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

பாவாணரைப் போன்றே, சொல்லை ஆராயும்போது, பொருளை இயைத்தே ஆராய வேண்டும் என்று அமெரிக்க மொழி நூல் வல்லுநர் சோம்சுகி கருதியிருக்கிறார் என்பது பின்வரும் அவருடைய கூற்றால் வெளிப்படுகிறது.

"Language involves the making of inferences from behaviour to psychological function ..... meaning is the relationship of psychological system. [Chomsky 1965, An Introduction to the psychology of Language (P.16)]

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த செருமானியப் பேரறிஞர் இலேபினிசு

"All Languages are merely variations of the same roots, though now often mixed and confused so that these roots cannot be recognised except by careful comparison of a large number of languages and dialects" (Leibniz 1962) என்று கூறியிருக்கிறார்.

கபோர் சென்து கதொல்நை என்னும் அங்கேரி நாட்டு மொழி நூலறிஞர் துரானிய குடும்ப மொழிகளுக்குத் தமிழ்மொழியே தாயாகும் என்பதை "Tamil is the Sanskrit of Turanian Languages" எனச்சுட்டிக் காட்டியிருக்கிறார்.

உலக முதன் மொழியில் வேர்ச் சொற்களே முதலிடம் பெற்றன என்பதை பேரறிஞர் மாக்சுமுல்லர் கோடிட்டுக் காட்டியிருக்கிறார் *. எம்மொழியிலும் பெயர்ச் சொற்கள் அனைத்தும் வினைச்சொற்களிலிருந்து தோன்றினவே. உலகத் தொன் மொழிகளில் மிகப் பழமையானவை கிரேக்கம், எபிரேயம், இலத்தீனம், சமற்கிருதம், தமிழ், சீனம் என்பவை. இவற்றில் இலத்தீனம், எபிரேயம், சமற்கிருதம் என்னும் மூன்றும் பேச்சு வழக்கிலில்லாதவையெனினும் இந்த ஆறு மொழிகளிலும் அடிப்படை வினைச் சொற்களில் வேர்கள் ஒன்றாக இருக்கின்றன. சான்றாகச் செய்தல் எனப் பொருள்படும் கரு–த்தல் என்னும் தமிழ்ச் சொல் சமற்கிருதத்தில் 'க்ரு' என்றும் வடபுலமொழிகளில் 'கர்' என்றும் கிரேக்க இலத்தீன் எபிரேய மூலங்களில் cr–(create) என்றும் சீனமொழியில் 'கய்' என்றும் நின்று நிலவுகிறது. இத்தகு அடிப்படை வினைகள் நூற்றுக்கணக்கில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. உயிரிபயிரிகளின் (flora and fauna) பெயர்களும் (உலகத்தொன்மொழிகளில் ஒரு சீராக ஊடாடியிருப்பதும்) கண்டறியப்பட்டுள்ளன.

பாவாணரின் ஞால முதன்மொழிக் கொள்கைக்கு அண்மைக்காலத்தில் உலக மொழியியல் அறிஞர்களிடையே ஆக்கம் தருவோர் எண்ணிக்கை மிக விரைவாகப் பெருகி வருகிறது.**

"மொழியின் உருவாக்கம் மாந்த இன வரலாற்றில் நினைத்துப் பார்க்க இயலாத மாற்றங்களை ஏற்படுத்தும் புரட்சித்தன்மை வாய்ந்ததாகும். அத்தகைய உருவாக்கம் ஒரே ஒருமுறைதான் நிகழ்ந்திருக்க இயலும்" என்று 1969–இலேயே ஆரிஓய்ச்சர் கூறியுள்ளார்.[1]

---

* "The Primary roots are the most important in the early history of language". (Maxmuller 1881, Lectures on the Science of Language.)

** It is nice to know that a common language perhaps 20,000 years ago had a root word for the earth which turned much later, into a technical term for the complex polymers that make up the connective tissues of soil. Modern linguists have moved into new area of enquiry as specialised as particle physics. [Levis Thomas 1982, Debating the unknowable – Span – May 1992.]

1. "The invention of language was so far reaching, so revolutionary, that it must have occurred just once" – Hary Hoijer (quoted p.58 of LANGUAGE TO DAY by Archibald A. Hill; Basic Books; New York, 1969.)

ஞால முதன்மொழி தோன்றி ஒன்று பலவாகியதை ஆய்வு செய்து மாரிசு சுவாதேசு 1972இல் ஆய்வு நூல் ஒன்றை வெளியிட்டார்.[2]

ஞால முதன்மொழி ஆய்வுப்பணியில் நம்காலத்தில் கூர்ந்து முனைந்துள்ள அறிஞர்கள் செவரோசுகின், கிரீன்பெர்கு ஆகியோரின் ஆய்வுநிலைகளை விளக்கும் விரிவான கட்டுரைகளை "ATLANTIC MONTHLY" (April, 1991), "SCIENTIFIC AMERICAN" (November, '92) ஆகிய இதழ்களில் காணலாம்.[3]

இவ்வகரமுதலியின் ஆய்வுகள் அவ்வறிஞர்களிடையே பரவின், மொழியியலிலும், குறிப்பாக, ஞாலமுதன்மொழி ஆய்விலும் வியத்தகு புதுமைகள் நிகழும் என்பதில் ஐயப்பாடின்று.

திராவிட மொழிகளுக்கு முதன் முதல் சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுத்த அறிஞர் இருவருள் ஒருவரான இங்கிலாந்து நாட்டு வடமொழிப் பேராசிரியரும் திராவிடவியல் வல்லுநருமாகிய பெருந்தகை பரோ அவர்கள் இவ்வகரமுதலியின் முதல் மடலம் முதற்பாகத்தைக் கண்ணுற்றபின் "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் அனைத்து மடலங்களும் முழுமையாக வெளிவருமாயின் குறிப்பாகத் தமிழாய்வுப் புலங்களுக்கும் பொதுவாகத் திராவிட மொழிகளின் ஆய்வுப்புலங்களுக்கும் மெய்யாகவே குறிப்பிடத்தக்க கொடையாக விளங்கும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.[4]

பாவாணரின் சொற்பிறப்பு ஆராய்ச்சி முழுமையாக வெளிவருமாயின், உலக அறிஞர்களின் கூர்த்தநோக்கினை ஈர்த்து மேன்மேலும் வளர்ந்துவரும் ஆய்வுலகத்தின் கையில் விளங்கும் பல்லாயிரம் கருவி நூல்களுள் குறிப்பிடத்தக்க ஒன்றாக இருக்கும் வகையில் இலங்கும் என்பதால் நாளும் நாளும் பாடாற்றுவதே எங்கள் கடமையென்று கனிவொடும் பணிவொடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலக்கணம் மொழிக்கு வேலி:

தாய்மொழி பல்வேறு கிளை மொழிகளாகச் சிதைந்து போய்விடாமல் மொழியின் இலக்கணம் காப்பாற்றுகிறது. சொல்லின் சரியான ஒலிப்பையும் நுட்பமான பொருளாழத்தையும் அகரமுதலிகள் வரையறுக்கின்றன. அதனால் தான்

---

2. Morris Swadesh – "THE ORIGIN AND DIVERSIFICATION OF LANGUAGE" (Routledge and Kegan Paul, London 1972)

3. "THE ATLANTIC MONTHLY (April, 1991); "Quest for the Mother tongue" by Robert Wright.

   "SCIENTIFIC AMERICAN" (November, 1992) "Linguistic Origins of Native Americans" by Joseph N. Greenberg and Merritt Ruhlen.

4. It is prepared on a very extensive scale, and it will when complete be a remarkable contribution to Tamil studies and indeed Dravidian studies in general – T. Burrow.

இவற்றை மொழியின் பாதுகாப்பு அரண்கள் என்று அறிஞர் குறிப்பிடுகின்றனர். தரமான அகரமுதலி தரமான மொழி வளர்ச்சிக்கு அளவுகோலாகும். சொல்லின் நுண்பொருளை ஆய்வது ஒரு கருத்தைச் செறிவுறப் பேசும் அறிவு நுட்பத்திற்கு அடிப்படையாகிறது.

ஒரு மொழியில் அறிவியல் பெருகும் போது எச்செய்தியையும் நுட்பமாகவும் திட்பமாகவும் வரையறுத்துப் பேசவேண்டியிருக்கிறது. அதற்கேற்ற சொற்களை மொழி வழங்கியாக வேண்டும். அகரமுதலித் தொகுப்பாளர்கள் அத்தகைய வெல்லும் சொற்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டவேண்டும். சான்றாக, பழிகூறுதல் என்னும் பொருளில் பழித்தல், இடுவந்திகூறுதல், இட்டூறு மொழிதல் என்னும் சொற்கள் ஆளப்படினும் ஒவ்வொன்றும் வெவ்வேறு பொருளாழம் கொண்டவை.

பழித்தல்	–	ஒருவரிடம் காணப்படும் குற்றங்களை எடுத்துக்காட்டி இகழ்தல்.
இடுவந்திகூறுதல்	–	குற்றமில்லாதவன் மேல் பொய்யாகக் குற்றம் சாட்டி இகழ்தல்
இட்டூறுகூறுதல்	–	ஒருவன் செய்யவேண்டிய நற்பணிகளை உரிய காலத்தில் செய்யாததற்காகப் பழித்துரைத்தல். இச்சொல் இக்காலத்தில் நிட்டூரம் என்றும் நிஷ்ட்டூரம் என்றும் வழங்குகிறது.

வடசொல் தென்சொல் வரையறை:

எம்மொழியிலும் காலப்போக்கில் பிறமொழிச் சொற்கள் புகுந்து தாய்மொழிச் சொற்கள் போலவே தோற்றமளிப்பதுண்டு. அதனால் தாய்மொழிச் சொல்லையும் பிறமொழிச் சொல்லென்றே ஐயுறும் வாய்ப்புகளும் ஏற்பட்டுவிடும். தமிழும் சமற்கிருதமும் 2000 ஆண்டுகளுக்கு மேலாக ஒன்றோடொன்று ஊடாடியதால் வட சொல் எது தென்சொல் எது என்னும் வரையறைச் சிக்கல்கள் தோன்றுமிடங்களில் சொற்பிறப்பியல் அகரமுதலி விளக்கம் தருகிறது. ஆர்ப்பாட்டம் என்னும் சொல்லைப் பலரும் வடசொல் என்றே கருதுகின்றனர். ஆர்ப்பாட்டம் (ஆர்ப்பு + ஆட்டம்) எனச் சரியான தமிழ் வேர்மூலம் காட்டப்பட்டுள்ளது.

கந்தாயம் : (கந்து + ஆயம்) தவணைமுறையில் வாங்கப்படும் வரி.
கந்து = சிறியது
ஆயம் = வரி [குறிப்பாக ஆநிரைகள் (மாடுகள்) மீது வாங்கப் பட்ட வரி].

வேர்மூலச் சிக்கல்கள் :

பாவாணர் பயிற்றிய சொற்பிறப்பு நெறிகளால் அணுகியும் பிடிபடாத சொன் மூலங்களும் பழந்தமிழ்ச் சொற்களில் காணப்படுகின்றன. பேயனார், பேய்மகள்

இளவெயினி, ஆதிமந்தி போன்ற தமிழ்ப் பெயர்களின் வேர்மூலங்கள் சரியாகப் புலப்படாத போது உலகமொழிகள் அனைத்திலும் தமிழ்ச்சொற்கள் திரிந்துள்ள நெறிமுறைகளை நுணுகி நோக்கிச் சரியான வேர்மூலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. முன் – முந்து என்று திரிவது போல மன்னனைக் குறிக்கும் 'மன்', என்னுஞ்சொல் 'மந்து' எனத்திரிந்து வழங்குவது யாழ்ப்பாண வழக்கு. மந்து = அரசன், மந்தி = அரசி. ஆதிமந்தி = மூத்த இளவரசி. இருகுறில் இணைந்து தனிநெடிலாகும் என்னும் சொற்பிறப்பு நெறிப்படி (ஒ.நோ. பகுதி – பாதி. மிகுதி – மீதி) பெரு – பே எனத்திரியும். அதன்படி பெரியனார் என்னும் பெயர் பேயனார் என்று திரியும். பெருமகள் – பேமகள் – பேய்மகள் (பேய்மகள் இளவெயினி), பெருமகன் பேமகன் – பேகன். திராவிட மொழிகளில் ஒன்றான துதவர் மொழியில் பெரிய தெய்வம் 'பேதெவ்' என்றும், பெருந்தேன் 'பேஸ்தேன்' (பிரசம்) என்றும் திரிதலைக்காணலாம். தெலுங்கிலும் பெருங்குன்றம் – பேனுகெண்டா – பெனுகொண்டா என்று திரிதலையும் காணலாம். எனவே சொற்பிறப்பு நெறிமுறைகளால் மிக அரிய சொல்லாட்சிகளின் வேர் மூலத்தையும் எளிதில் காணமுடிகிறது.

அரிய சொல் விளக்கங்கள் :

சில சொற்களுக்குச் செறிவான சொல்விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. ஆதன், ஆதி, ஆதிபகவன், ஆந்தை, ஆவுடையாள், ஆனைச்சாத்தன் இடாகினி போன்ற சொல் விளக்கங்களைக் காணலாம். பிற அகரமுதலிகளில் உள்ள குறைபாடுகள் சுட்டிக் காட்டித் திருத்தப்பட்டுள்ளன. இலக்கண உரையாசிரியர்கள் செய்த தவறுகளும் திருத்தப்பட்டுள்ளன. சிலப்பதிகார மூலத்தில் "ஆரிக்கும் பாடல்" என்பதற்கு 'ஆரிரக்கும் பாடல்' என்பதே சரியான பாட வேறுபாடு என்பதும், 'அக்கு' என்னும் சாரியையும் 'ஆநின்று' என்னும் நிகழ்கால இடைநிலையும் இலக்கண ஆசிரியர்களால் பிறழக்கொள்ளப்பட்டன என்பன போன்ற ஆராய்ச்சிக் கருத்துகளும் தக்க சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளன.

வண்ணனை மொழியியல் (Descriptive Linguistics) மக்கள் பேச்சு வழக்கையே சரியான மொழி அமைப்பாக ஏற்றுக்கொள்கிறது. ஆயின், ஒன்றனையும் ஒருவனையும் உயர்வுக்காகப் பன்மைப்படுத்தும் பேச்சு வழக்குகளைத் தொல்காப்பியர் "வழக்கி னாகிய உயர்சொற் கிளவி இலக்கண மருங்கின் சொல்லா றல்ல" என்று மறுத்திருக்கிறார். வழக்கும் செய்யுளுமாகிய இரண்டிலும் சான்றோர் ஒப்பிய வழக்காறுகளைச் செவ்விய சொல்லாட்சிகளாக மரபிலக்கணம் (Tradional Grammar) வகுத்துக்காட்டுகிறது. காலத்தால் முந்தைய சொல்லாட்சி காலத்தால் பிந்தைய சொல்லாட்சிக்குச் சொன்மூலமாகிறது. The earliest recorded word may be regarded as root என்பது மேனாட்டார் சொற்பிறப்புக் கொள்கை. இந்த மூன்று கொள்கைகளையும் முழுமையாக ஏற்றுக்கொள்ளாமல் மக்களின் பேச்சு வழக்கிலுள்ள கொச்சைச்

சொல்லாயினும், இலக்கியங்களில் இடம் பெற்ற செஞ்சொல்லாயினும், கடன் பெற்ற அயற்சொல்லாயினும், காலத்தால் முந்தைய சொல்லாயினும் அதன் உண்மையான வேர்மூலம் கண்டறிந்து சொல் வடிவிலும் பொருள் வடிவிலும் அதன் திரிபுற்ற பாங்குகளைப் புலனாய்ந்து கூறுவதே சரியான சொற்பிறப்பு முறை என்று பாவாணர் அகரமுதலித் திட்டம் செயற்பாட்டு நெறிமுறைகளை வகுத்துக் கொண்டிருக்கிறது.

அகரமுதலியின் நோக்கமும் பயன்பாடும் :

அகரமுதலியின் பயன்பாட்டை மேனாட்டார் களஞ்சியப்பயன்பாடு (Store - house function of a dictionary), முறைமன்றப் பயன்பாடு (Court-function of a dictionary) என்று இருவகையாகக் கூறுவர். ஒருமொழியில் இன்னசொல் இந்த அகரமுதலியில் இடம் பெறவில்லையென்று குறைகூறாதவண்ணம் கல்லாத மலைவாழ் மக்களின் சொல்லாட்சிகள் முதலாகப் பல்கலைக் கழகப் படைப்புச் சொல்வரை அனைத்தையும் திரட்டித் தருவது முதல்வகையான அகரமுதலியின் களஞ்சியப் பயன்பாடு கருதியது. சொல்லின் சரியான பொருளை வரையறுப்பதும் சொல்லிலுள்ள சொற்குற்றம் பொருட்குற்றங்களை நீக்கிச் சொல்லின் சரியான வடிவம் இது, சரியான பொருள் இது, சரியான பலுக்கம் இது என்று வரையறுத்துத் தீர்ப்பு அளிப்பதும் இரண்டாம் வகையான அகரமுதலியின் முறை மன்றப்பயன்பாடு. சொற்பிறப்பியல் அகரமுதலி இவ்விருநோக்கங்களையும் உள்ளடக்கியது. 'இட்லி' என்னும் சொல்லின் சொற்குற்றம் கண்டறியப்பட்டு அதன் பழைய வரிவடிவம் 'இட்டளி' என்று காட்டப்பட்டுள்ளது. ஆறறிவுடைய மாந்தனை உயர்திணை என்று கூறிய தொல்காப்பியர், ஏனைய உயிர்களை இழிதிணை என்று கூறி இழிவுபடுத்துவது தமிழ் மரபுக்கு தகாதது என்பதை மரபு வழி ஆய்ந்து, உயர்திணை அல்லாத உயிர்களை அஃறிணை (உயர்வு அல்லாத திணை) என்று குறிப்பிட்டார். பிறர் மனத்தைப் புண்படுத்தாத அஃறிணை என்னும் சொல்லாட்சியின் உயர்வை அறியாது ஏனைய உயிர்களை இழிதிணை என்று நன்னூல் இலக்கணம் கூறுவது தமிழ் மரபுக்கு ஒவ்வாதது என்று தெளிவு படுத்தப்பட்டுள்ளது. இடப் பெயர்களின் பழந்தமிழ்ப் பெயர்கள் சுட்டிக் காட்டப் பட்டுள்ளன. சான்றாக நாமக்கல் என்னும் ஊரின் பழைய பெயர் "ஆரைக்கல் பாறை" என்று தலைப்புச் சொல்லாகவே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படையான புதிய படைப்புச் சொற்கள் ஆங்காங்கு சேர்க்கப் பட்டுள்ளன. எடு: Substitute – ஆளீடு, மாற்றீடு. மறைந்து போன தமிழ்ச்சொற்கள் பலவும் இடம்பெற்றுள்ளன. எடு: இலைக்கிள்ளல் (மறைந்து போன பழங்கால விளையாட்டு). தமிழில் புகுந்துள்ள பிறசொற்களுக்கான தமிழாக்கங்கள் முறையாகத் தரப்பட்டுள்ளன. எடு : சமாதானம் – இடையீடு. சமையத்துறையில் புகுந்த வடசொற் களுக்கான தமிழ்ச்சொற்கள் முறையாகத் தரப்பட்டுள்ளன. எ–டு: ஆறாதாரம் (ஒக நிலைகள்).

வடசொல்	தமிழ்ச்சொல்
மூலாதாரம்	பாலகம்
சுவாதிட்டானம்	அகட்டகம்
மணிபூரகம்	மூச்சகம்
அனாகதம்	நெஞ்சகம்
விசுத்தி	சுழியகம்
ஆக்கினை	உச்சகம்.

மறைந்து போன தமிழ்ச் சொற்கள் மட்டுமன்றி மறைந்து போன தமிழ் நூல்கள், மறைந்து போன இசைக்கருவிகள் (இலைக்குழல், இழுகுபறை, இன்மணியாரம்) பண்பாட்டுக்கூறுகள், செடிகொடிகள் ஆகியவற்றின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. சிந்துவெளி முத்திரைகளில் காணப்படும் அரிய சொல்லாட்சிகளுக்கான வேர் மூலங்களும் சொற்பிறப்பியல் அகரமுதலியில் இடம்பெற்றுள்ளன. சிந்துவெளி முத்திரைகளில் காணப்படும் ஒற்றைக்கொம்பன் (Unicorn) எருதின் பெயர் 'உச்சிக் கொம்பன்' என்றும், காண்டாமிருகத்தின் பெயர் 'கல்யானை' என்றும் முத்திரைகள் செய்யப் பயன்பட்ட மாவுக்கல்லின் (Soft stone) பெயர் 'எழுதுகல்' என்றும் தரப் பட்டுள்ளன. ஏற்கெனவே பண்டைத் தமிழர் பாதுகாத்து வைத்திருக்கும் பழந்தமிழ் ஆட்சிகளும் தவறாமல் இடம்பெற்றுள்ளன. சொல்லாட்சிகளின் வேர்மூலங்கள் மட்டுமன்றிச் செடிகொடிகளின் பெயர்களும் விலங்கு பறவைகளின் பெயர்களும், அடிப்படைச் சொற்களாக இருத்தலால், அவைகளும் எடுத்தாளப்பட்டுள்ளன. தமிழ் மருத்துவர்களால் சிறப்பாக ஆளப்படும் மருத்துவச் சொற்களும் கல்வெட்டுச் சொற்களும் எடுத்தாளப்பட்டுள்ளன.

பாவாணரின் மரபார்ந்த இலக்கண நோக்கு தமிழ்மொழியின்மூல வேர்களை 52 ஆக வரையறுத்துக் காட்டியது. இவற்றொடு பாவாணர் பார்வைக்குத் தப்பிய 'இல்' – துளைத்தற்கருத்து வேர்ச்சொல் விளக்கம் என்னால் புதிதாகச் சேர்க்கப்பட்டு அடிப்படை மூல வேர்களின் எண்ணிக்கை 53 ஆயிற்று. அந்த அடிப்படையே பன்மடலப் பேரகரமுதலி உருவாக வழிவகுத்தது. பாவாணர் பால் பெற்ற பயிற்சியும் என் முயற்சியும் தமிழ்ப் பெருமக்களின் முன் இப்படையலாக மலர்கிறது. பாவாண ருக்குப் பின் அவர் பணியை நிறைவாக முற்றுவிக்க முனைப்புற்ற நிலையில் தமிழக அரசுக்கும் குறிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர். **ஜெ. ஜெயலலிதா** அவர்களும் தமிழகக் கல்வியமைச்சர் மாண்புமிகு **செ. அரங்கநாயகம்** அவர்களும் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் செயலாளர் முனைவர் ஔவை நடராசனாரும் ஊக்கிப்புரந்து வரும் ஒப்புரவுக்கும் நன்றிக் கடப்பாடுடையேன்.

முதன்மடல முதற்பகுதி 1985 ஆம் ஆண்டு வெளியிட்ட போது அகரமுதலித் திட்டத்தின் உருவாக்க முயற்சிக்கு முன்னின்ற பெருமக்களும் உருவாக்கிய செம்மலோரும் அகரமுதலிப் பணியாளரும் பல்லாற்றானும் ஊக்கியும் உதவியும்

துணைநின்ற சான்றோரும் முன்னுரையில் குறிப்பிடப்படவில்லையென்னும் குறை சுட்டிக்காட்டப்பட்டது. மொழி ஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் அவர்களே, பதினோராம் மடலத்தில் தமிழகரமுதலி வரலாறு விரிவாகக் கூறப்படவிருப்பதால் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் திட்டத்தின் உருவாக்கம், பணிக்குழு, செயற்பாடு, வெளியீடு ஆகியவற்றில் துணைநின்ற அனைவர் வரலாறும் விரிவாக எழுதப்பட விருப்பதால் அகரமுதலி முன்னுரைகளில் சுட்டப்பட வேண்டா என்று தொடக்கத் திலேயே முடிவெடுத்ததால் அந்நிலையே இங்கும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த முதன்மடல இரண்டாம் பாகம் வெளிவர ஆவன செய்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துக்கும் அச்சகத்தாருக்கும் எம் நன்றி உரியது.

இரா. மதிவாணன்
முதன்மைப் பதிப்பாசிரியர் – இயக்குநர்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம், சென்னை – 28.

சென்னை – 28.
8.5.1992

வண்ணப்படங்களின் பட்டியல்

படத்தாள் எண் (1)	படத்தின் பெயர் (2)	எதிரும் பக்கம் (3)
	ஆட்டின் வகைகள்:	**56**
1.	காட்டாடு	
	குறும்பாடு	
	கொடியாடு	
	செம்மறியாடு	
2.	மலையாடு	
	வெள்ளாடு	
	+	
	ஆப்புளாண்டம்	
	ஆவல்லி	
3.	**ஆந்தை வகை:**	***104***
	கொம்பு **ஆந்தை**	
	கோட்டான்	
	ஊமன்	
	குடிஞை	
4.	குரால்	
	கூகை	
	மூங்கன்	
5	**ஆமை வகைகள்:**	***112***
	நிலத்தாமை	
	கடலாமை	
	நன்னீர் ஆமை	
	நீராமை	
	விண்மீன் ஆமை	

வண்ணப்படங்களின் பட்டியல்

படத்தாள் எண் (1)	படத்தின் பெயர் (2)	எதிரும் பக்கம் (3)
6.	ஆரைக்கீரை வகைகள்:	152
	நீராரை	
	புளியாரை	
	வல்லாரை	
	ஆனை நெருஞ்சி	
7.	இசைக் கருவிகள்:	240
	தோற்கருவி	
	நரம்புக்கருவி	
	கஞ்சக்கருவி	
	துளைக்கருவி	
8.	ஈக்கள் வகைகள்:	416
	வீட்டு ஈ	
	இறைச்சி ஈ	
	கண் ஈ	
	கள் ஈ	
9.	பழ ஈ	
	ஆட்டு ஈ	
	மாட்டு ஈ	

ஆ

ஆ[1] ā, 1. அகரத்தின் நெடில், தமிழ்நெடுங் கணக்கின் இரண்டாம் உயிரெழுத்து ; second letter of the Tamil alphabet, long vowel, lengthened form of 'a'. 2. அவ்வொலியைக் குறிக்கும் வரிவடிவு; written character representing that sound.

இற்றை மொழியியலார் இதைப் பிறப்பிடம் நோக்கி நடுவக்குவியாத் தாழ்நெடில் (central, unrounded low long vowel) என்பர்.

"அஆ ஆயிரண் டங்காந் தியலும்" (தொல். எழுத்து. பிறப்.3)

இந்நெட்டுயிரின் அடையாளமாகிய கால் 'ா' வரிவடிவு குறில் உயிர்மெய்களுடன் இணைக்கப்படுகிறது.

ஆ[2] ā, கு.பெ.எ. (adj.) சேய்மைச் சுட்டு ; demons. letter or pronominal adj. pointing to what is remote, that, those.

"ஆயிடை வருதல் இகார ரகாரம்" (தொல். எழுத்து, 463)

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடை" (தொல். பாயி.)

ம., க., தெ., து., பட., கச. ஆ

குறிப்பு :- 'ஆ' என்னும் நெடிலே இயற்கைச் சேய்மைச்சுட்டு. அதன் குறுக்கமே 'அ'.

நெடில் வடிவம் இன்று தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய திரவிட மொழிகளில் வழங்கி வரினும், தமிழுலக வழக்கில் வழக்கற்றுப் போயிற்று.

"உடன்பிறந்தார் சுற்றத்தார்" என்னும் மூதுரைப் பாட்டில், "அம்மருந்து" என்பது "ஆமருந்து" என்றிருத்தல் வேண்டும்.

மலையாளம் பழஞ்சேர நாட்டு மொழியாதலால், அதில் வழங்கும் நெடிற்சுட்டு வழக்கைச் சேரநாட்டுத் தமிழ் என்றுங் கொள்ளலாம்.

கண்டறிசுட்டு, பண்டறிசுட்டு, உலகறிசுட்டு, உய்த்துணர் சுட்டு என்னும் நால்வகைச் சேய்மைச் சுட்டுகளுள், முதல் இரண்டாகவே நெடுஞ்சுட்டு இன்று வழங்கும்.

அகரச்சுட்டு பார்க்க; see **agara-c-cuttu,**

ஆ[3] ā, இடை. (part.) விளியீறு ; vocative ending. அண்ணா, ஐயா.

'அன்' ஈற்றுப்பெயர் ஈறுகெட்டு அயல் நீண்டும் நீளாதும் அண்மை விளியாம். எ-டு : ஐய, ஐயா, அண்ண, அண்ணா.

ம., து. ஆ

ஈற்றயல் நீள்வதே இக்காலப் பெருவழக்கு. சேய்மை விளியாயின், அளபெடுத்தல் இன்றியமையாதது.

எ-டு : அண்ணாஅ, ஐயாஅஅ.

அகர ஈறு கெடாது நீண்டு விளியாவது தெலுங்கியல்பு.

எ-டு : பிட்ட (bidda) – பிட்டா (biddā)

பிட்டலு என்னும் பன்மைப் பெயர், பிட்டலாரா என்று விளியேற்கும்.

இங்ஙனம் தெலுங்கில் ஆகாரம் வருமிடத்துத் தமிழில் ஏகாரம் வரும், அல்லது ஈற்றயல் நீளும். எ-டு: மகள் – மகளே; மக்கள் – மக்காள், மக்களே; பிள்ளை – பிள்ளாய், பிள்ளையே; பிள்ளைகள் – பிள்ளைகாள், பிள்ளைகளே.

ஆ[4] ā, பெ. (n.) ஏழிசையுள் முதலான குரலின் பழைய குறி; old symbol representing the first note of the gamut.

"ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ எனும்
இவ்வேழெழுத்தும் ஏழிசைக் குரிய". (திவா.)

ஆ[5] ā, இடை. (int.) பல்வகைக் குறிப்பு : 1. இரக்கக் குறிப்பு ; Ah! exclamation expressing pity, regret. "ஆவம்மா வம்மா வென்னம்மா வகன்றனையே" (சீவக. 1804). 2. துயரக்குறிப்பு; exclamation expressing grief. ஆ! ஆற்றேன் (உ.வ.) 3. வியப்புக் குறிப்பு ; Ah! exclamation expressing wonder, admiration. "ஆகற்றவா கடவானிச் சுனைப்புனமே" (திருக்கோ.60). 4. இகழ்ச்சிக் குறிப்பு; exclamation expressive of contempt. ஆ! மிக நன்றாயிருக்கிறது. (உ.வ.) 5. நோவுக் குறிப்பு; exclamation expressing unbearable pain. ஆ! வலிக்கிறது. (உ.வ.) 6. புழுக்கக் குறிப்பு; interjection expressing sultriness. ஆ! வெந்தேன். (உ.வ.) 7. நினைவுக் குறிப்பு; exclamation expressing recollection. ஆ! மறந்தேன் (உ.வ) ஆ! அந்த நாள் ஒரு பொன் நாள்! (உ.வ.); ஆ அந்நாள் இனி வருமோ? (உ.வ.)

ம., க., தெ., து., பட., கச. ஆ

E. ha, hah.

ஆ[6] ā, இடை. (part.) ஈற்று வினாவிடைச் சொல்; inter. term. அவன் வந்தானா? (உ.வ.).

தெ., க., து., பட. ஆ

ஆ[7] ā, இடை. (part.) பல்வேறு எதிர்மறையிடை நிலை : 1. எதிர்மறை வினைப்பெயரிடை நிலை;

sign of neg. vbl. n. செய்யாமை. 2. எதிர்மறைப் பெயரெச்ச இடைநிலை; a sign of neg. rel. part. செய்யாத வேலை. 3. எதிர்மறை வினையெச்ச இடைநிலை; sign of neg. vbl. part. செய்யாது போனான், செய்யாமைப் போனான், செய்யாமே போனான், செய்யாமற் போனான்.

ம., க., தெ. ஆ

[அரு → அருமை → ஆமை. அரு = அரிது (ம. அருது), அரியது, முடியாது, கூடாது, தகாது. இக் குறிப்பு வினைமுற்று, முற்றெச்சமாகி வினை யெச்சமாகவும் அகரவீறு சேர்ந்து பெயரெச்சமாகவும் வழங்கும். கூடாமைக் கருத்தில் வினை செய்யாமைக் கருத்துத் தோன்றும்.

'ஆ' என்னும் எதிர்மறையிடைநிலை வந்த வகை

உடன்பாட்டுவடிவில் ஆற்றலை (potency) அல்லது இயல்பை (possibility) யுணர்த்தும் துணைவினைகள், எதிர்மறைவடிவிற் பெரும்பாலும் விலக்கை (prohibition) அல்லது மறுப்பை (refusal) உணர்த்துகின்றன.

எ—டு:

	உடன்பாட்டுவினை	எதிர்மறைவினை
	நீ இதைச் செய்யக்கூடும்.	நீ இதைச் செய்யக்கூடாது.
	யாரும் அங்குப் போகப்படும்.	யாரும் அங்குப் போகப்படாது.
	நான் வரமுடியும்.	நான் வரமுடியாது.
	அவன் எழுத மாட்டுவான்.	அவன் எழுத மாட்டான்.

அருமை என்னும் பண்புப்பெயர், முறையே சிற்றளவு, மதிப்புயர்வு, விரும்பற்பாடுமிகை, கிடையாமை, இயலாமை ஆகிய பொருள்களை யுணர்த்தும். அதன் அடிப்பிறந்த அரிது என்னும் குறிப்பு வினைமுற்று, உடன்பாட்டு வடிவிலிருப்பினும், இயலாமையை யுணர்த்தும்போது எதிர்மறைப் பொருள் கொண்டு, எதிர்மறை வினை போலாவதால், மேற்குறித்த 'கூடாது', 'படாது' என்னும் துணைவினைகள் போன்றே விலக்கு வினையாகி விடுகின்றன.

எ—டு :

	நீ மழையத்துப் போகரிது.	நீ மழையிற் போகக்கூடாது.
	நீ வெயிலத்துப் போகரிது.	நீ வெயிலிற் போகக்கூடாது.

'அரிது' என்பது கொச்சை வழக்கில் 'அருது' என்று திரியும். ஆதலால், 'போகரிது' என்னும் பண்டைச் சேரநாட்டு வழக்கு, இன்று மலையாளத்தில் 'போகருது' என்று வழங்குகின்றது.

"பனியென வரூஉம் கால வேற்றுமைக்(கு)
அத்தும் இன்னும் சாரியை யாகும்"
(தொல். எழுத்து. 241)

"வளியென வரூஉம் பூதக் கிளவியும்
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப".
(தொல். எழுத்து. 242)

"மழையென் கிளவி வளியியல் நிலையும்"
(தொல். எழுத்து. 287)

"வெயிலென் கிளவி மழையியல் நிலையும்"
(தொல். எழுத்து. 377)

இவை சேரநாட்டுத் தமிழுக்கு மட்டுமன்றி, முந்நாட்டுத் தமிழுக்கும் பொதுவாகச் சொல்லப் பட்டவை. ஆதலால், பனியத்துக் கொண்டான், வளியத்துக் கொண்டான், மழையத்துக் கொண்டான், வெயிலத்துக் கொண்டான் என்று நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டிய அத்துச் சாரியை வழக்கு, இன்று இறந்துபட்டதென்றே கொள்க.

அருமை என்னும் சொல் மையீறு பெற்ற பண்புப் பெயராதலால், அரு என்னும் முதனிலையே இயல்பான சொல்லாகும். அரிது என்பது அதனின்று திரிந்த (படர்க்கை) ஒன்றன்பாற் பெயர் அல்லது குறிப்பு வினைமுற்றே. அதன் மூவிட ஐம்பால் வடிவங்களும் வருமாறு :-

தன்மை –	ஒருமை	: அரியேன்
	பன்மை	: அரியேம், அரியோம்
முன்னிலை –	ஒருமை	: அரியை, அரியாய்
	பன்மை	: அரியீம், அரியீர்
படர்க்கை –	ஆண்பால்	: அரியன், அரியான்
	பெண்பால்	: அரியள், அரியாள்
	பலர்பால்	: அரியர், அரியார்
	ஒன்றன்பால்	: அரியது, அரிது
	பலவின்பால்	: அரியன, அரியவை, அரிய.

ஒ.நோ: பண்புப் பெயர் : பெருமை

முதனிலை : பெரு

தன்மை –	ஒருமை	: பெரியேன்
	பன்மை	: பெரியேம், பெரியோம்
முன்னிலை –	ஒருமை	: பெரியை, பெரியாய்
	பன்மை	: பெரியீம், பெரியீர்
படர்க்கை –	ஆண்பால்	: பெரியன், பெரியான்
	பெண்பால்	: பெரியள், பெரியாள்
	பலர்பால்	: பெரியர், பெரியார்
	ஒன்றன்பால்	: பெரியது, பெரிது
	பலவின்பால்	: பெரியன, பெரியவை, பெரிய

நன்னூலார், மையீறு பெற்ற பண்புப்பெயரைப் பகாச்சொல்லாகவும் இயற்சொல்லாகவும் கொண்டு,

'ஈறுபோதல்' என்பதை ஒரு பண்புப்பெயர்த் திரிபாகக் கூறியது தவறாகும்.

ஒ.நோ : 'white' என்ற முதனிலையும் 'ness என்ற ஈறும் சேர்ந்தே 'whiteness' என்னும் ஆங்கிலப் பண்புப் பெயர் தோன்றும். "whiteness" என்ற இயல்பான சொல்லே, 'ness' என்னும் ஈறு நீங்கி 'white' என்றானது என்று, ஆங்கிலர் எவரும் கொள்ளார், சொல்லார். இங்ஙனமே அருமை பெருமை என்னும் பண்புப் பெயர்களும் என அறிக.

அரு என்னும் முதனிலையினின்று திரிந்த மூவிட ஐம்பாற் குறிப்பு வினைமுற்றுகள், தெரிநிலை வினைகளோடு கூடித் துணைவினைகளாகும்போது பின்வருமாறு அமையும்.

தன்மை – ஒருமை	:	செய்யரியேன்
பன்மை	:	செய்யரியேம், செய்யரியோம்
முன்னிலை – ஒருமை	:	செய்யரியை, செய்யரியாய்
பன்மை	:	செய்யரியீம், செய்யரியீர்
படர்க்கை– ஆண்பால்	:	செய்யரியன், செய்யரியான்
பெண்பால்	:	செய்யரியள், செய்யரியாள்
பலர்பால்	:	செய்யரியர், செய்யரியார்
ஒன்றன்பால்	:	செய்யரியது, செய்யரிது
பலவின்பால்	:	செய்யரியன, செய்யரியவை, செய்யரிய.

இவ்வெதிர்மறை வினைகளினின்றே இற்றை வடிவுகள் பின்வருமாறு திரிந்துள்ளனவாகத் தெரிகின்றது.

செய்யரியேன் – செய்யேன், செய்யரியேம் – செய்யேம், செய்யரியோம் – செய்யோம், செய்யரியாய் – செய்யாய், செய்யரியீர் – செய்யீர், செய்யரியான் – செய்யான், செய்யரியாள் – செய்யாள், செய்யரியார் – செய்யார், செய்யரிது – செய்யாது, செய்யரிய – செய்யா. இவற்றுள் ஈற்றிரண்டும் திரிதல்; ஏனைய தொகுத்தல். ஆயினும் படர்க்கை வினைகட்கெல்லாம் 'ஆ' பொதுவாயிருத்தலால், அதனையே எதிர் மறையிடை நிலையாகவும் எதிர்மறைப் பலவின்பால் வினை முற்றீறாகவுங் கொண்டனர் போலும்.

கால்டுவெலார், எதிர்மறை வினைச்சொற்களிற் காலங்காட்டும் இடைநிலையின்மையால், அது வினை நிகழாமையைக் குறித்து, எதிர்மறை வினைச் சொல் வடிவிற்குத் தோதாயிற்றென்று கருதினார். அது ஒரு வகையிற் பொருத்தமாகத் தோன்றினும், செய்திலன், செய்ததில்லை என இன்மை குறித்துத் துணை– வினைகளொடு கூடிக் காலங்காட்டும் எதிர்மறை வினைச் சொற்களும் உண்மையாலும், செய்யவில்லை என்னும் வாய்பாட்டு வினைமுற்றும் செய்யாத என்னும் பெயரெச்சமும், செய்யாது என்னும் வினையெச்சமுமே முக்காலத்திற்கும் பொதுவாயிருத் தலாலும், செய்யான், செய்யாள் முதலிய ஐம்பால் வினைமுற்றும் பொதுவாக எதிர்காலத்திற்கே யுரியனவாதலாலும், அவர் கூற்று உண்மையான தென்று கொள்ளற் கிடமில்லை யென்க.

சிறிது, பெரிது முதலிய ஒன்றன்பாற் குறிப்பு வினைமுற்றுகள் ஈரெண் மூவிட ஐம்பாற்கும் பொது வான முற்றெச்சங்களாய்ப் பயன்படுத்தப்படுவது போன்று, செய்யாது என்னும் எதிர்மறை வினை யெச்சமும் ஈரெண் மூவிட ஐம்பால் பொதுவாகப் பயன்படுத்தப்படும்.

எ–டு : செய்யாது வந்தேன், வந்தேம், வந்தாய், வந்தீர், வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன.

'செய்து' என்னும் உடன்பாட்டு வினையெச்சம் அகரவீறு பெற்றுச் செய்த என்னும் பெயரெச்சமானாற் போன்று, செய்யாது என்னும் எதிர்மறை வினையெச்சமும் அகரவீறு பெற்றுச் செய்யாத என்ற பெயரெச்சமாகும்; பின்னர் ஈறு கெடின், 'செய்யா' என்று நிற்கும்.

நீ செய்யரிது என்னும் எழுவாய்த் தொடர் செய்யரிது நீ என்று வினைமுற்றுத் தொடராய் மாறுவது போன்றதே செய்யாதீ (செய்யாதே) என்னும் எதிர்மறை யேவலும்.

முன்னிலைப் பெயர்கள், ஏவல் அல்லது முன்னிலை வினைமுற்றீறாகும்போது பின்வருமாறு திரியும்.

ஒருமை : ஊன் → நூன் → நீன் → நீ → ஈ → இ.
ஈ → ஏ → ஐ.

பன்மை: ஊம் → நூம் → நீம் → ஈம்.
நீ + இர் = நீயிர் (நீவிர்) → நீர் → ஈர்.
ஊம் → உம்.

எ–டு : செய்யாது + ஈ = செய்யாதீ → செய்யாதி.
செய்யாதீ → செய்யாதே → செய்யாதை.
செய்யாது + ஈம் = செய்யாதீம்.
செய்யாது + ஈர் = செய்யாதீர் → செய்யாதிர்

பன்மையேவலிலும் உயர்வுப்பன்மை யேவலிலும் பல ஈறுகள் கலந்தும் வரும்.

எ–டு : ஏ + உம். செய்யாதேயும் (ஒத்தோரையேவும் உயர்வுப் பன்மை.)

ஏ + உம் + கள். செய்யாதேயுங்கள்	பன்மையும், உயர்ந்தோரை
ஈர் + கள். செய்யாதீர்கள்.	ஏவும் உயர்வுப் பன்மையும்.

அருமையென்னும் பண்புப்பெயரும் அரிது என்னும் குறிப்பு வினைமுற்றும் இன்மையும் இயலாமையும் உணர்த்துவதனாலும், மாட்டேன், மாட்டாய், மாட்டான் என்னும் எதிர்மறை வினைகள் போன்றே, செய்யேன், செய்யாய், செய்யான் என்னும் எதிர்மறை வினைகளும் இயலாமையையும் விருப்பின்மையையும் உணர்த்துவதனாலும், பகு-பா என இருகுறில் ஒரு நெடிலாக மருவியதுபோல் அரு - ஆ எனத் திரிவதும் இயல்பேயாதலாலும், "எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" யென்று (தொல்.சொல்.பெய.1) கூறுவதாலும், 'அரு' என்னுஞ் சொல்லினின்றே 'ஆ' என்னும் எதிர்மறையிடைநிலை தோன்றியுள்ளதாகத் தெரிகின்றது.

ஆ[8] ā, இடை. (part.) ஒருவகைப் புணர்ச்சிச் சாரியை; combinational particle occurring in certain reduplication of words. போட்டா போட்டி, வேனா வேனல் (கடும் வேனில்) (உ.வ.).

ஆ[9] ā, இடை. (part.) பல்வேறு ஈறுகள்: 1. பலவின் பால் எதிர்மறை வினைமுற்றீறு; imper. 3rd per. pl.neg.verb-ending. "அரவுஞ் சூரும் இரைதேர் முதலையும் உருமுஞ் சார்ந்தவர்க் குறுகண் செய்யா" (சிலப். 13:7-8). 2. ஒரிறந்தகால வினையெச்ச (செய்யா என்னும் வாய்பாடு) ஈறு; past parti. ending. "புயன் முகந்து பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு" (நன்னெறி, 4). 3. ஒரு வினையாகு பெயரீறு; parti. noun ending. உணா, கனா, நிலா. 4. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்ச ஈறு; ending of mutilated neg. rel. parti. உண்ணாநோன்பு. 5. ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்ச ஈறு; ending of mutilated neg. vbl. parti. சொல்லாப்போனான். 6. பெயர்ச்சொல்லின் திரிபீறு; derivative noun ending. புறா, பலா.

ம., க., தெ. ஆ.

உண்ணாத, சொல்லாத என்ற எச்சங்கள் ஈறுகெட்டு உண்ணா, சொல்லா என்று குறுகியிருப்பதால், அக்குறுக்கங்கள் 'ஈறு கெட்ட' என்னும் அடைபெற்றன. ஈறுகெடா நிலையிலுள்ள ஈற்றை இயற்கையீறு என்றும், ஈறுகெட்ட நிலையிலுள்ள ஈற்றைச் செயற்கையீறு என்றும் கொள்க.

ஆ[10] ā, இடை. (conj.) ஆவது ..... ஆவது என்னும் தெரிப்புப் பொருளிற் பெயர் தொறுஞ் சேர்ந்து வரும் இடைச்சொல்; either ..... or .. "தேவரா ...... அசுரரா வந்து கேட்டிலர்." (திருவிளை. இந்திரன்பழி. 26)

இப் பொருளில் வரும் 'ஆ' வினாவெழுத்தாயிருக்கலாம். 'தேவரோ அசுரரோ' என்பதும் இப் பொருள்படுதல் காண்க.

ஆ[11] ā, பெ. (n.) பல்வேறு பொருட்பெயர்: 1. பெற்றம் (மாடு), எருமை, மரை (மான்வகை) ஆகிய வற்றின் பெண்; female of the ox, the buffalo and the sambar (Indian elk). "பெற்றமும் எருமையும் மரையும் ஆவே." (தொல். பொருள். மரபு. 61). 2. விலங்கின் பெண் பொது; generic name for the females of beasts. (சா. அக.) 3. காளை; bull. "ஆவார் கொடியாய்" (திருவிளை. நரிபரி. 19). 4. ஆதன் (ஆன்மா); soul. "ஆதிருக்கச் சிவம்" (கம்பரந். 39). 5. விடை (வைகாசி); second month of the Tamil calender year (May - June)

ம., க. ஆ; **தெ.** ஆவு; **கோத.** ஆவ்; **குரு.** ஆ.; **மா.** ஒயு

[மா → மான் → ஆன், மா → ஆ. மான் → மாடு. குறிஞ்சிநில மாந்தன், பாலுணவின் பொருட்டு முதன்முதலாக வீட்டிற் கட்டி வைத்துப் பழக்கிய விலங்கு மாடே. மா என்று கத்துவது மா. மா, மான் என்பன விலங்கின் பொதுப் பெயரானபின், கறவையையுங் காளையையுங் குறிக்க மாடு என்னும் சொல் தோன்றிற்று. மாட்டின் பெண்பாலைக் குறிக்க ஆன், ஆ என்னும் சொற்கள் தோன்றின. பெற்றமும் எருமையும் மரையும் நெருங்கின விலங்கினங்களாதலால், முதற்கண் அம்மூன்றன் பெண்பாற்கும் வரையறுக்கப்பட்டிருந்த ஆ என்னும் பெயர், பிற்காலத்தில் விலங்கின் பெண்பாற் பொதுப் பெயராயிற்று.

"ஆவார் கொடியாய்" என்றும், "ஆன்முகத்த னடற்கண நாயகன்" (கந்தபு.பானுகோ. 95) என்றும், ஆ, ஆன் என்பவை ஆண்பாற் பெயராகவும் ஆளப்பட்டதை, மரபுவழுவமைதி யென்றே கொள்ளல் வேண்டும்.

ஆ என்பது மாட்டின் ஆண்பாற் பெயராகவும் ஆளப்பட்டபின், விடை (இடப) ஓரைக்குரிய மாதமும் ஆ வெனப்பட்டது.

உயிர்கள் எல்லாம் பாசத்தினாற் கட்டப்படுவது பற்றிப் பசுவென்னும் வடநூல் வழக்கு நோக்கி, ஆதனும் (ஆன்மாவும்) ஆ வெனப்பட்டது. இனி ஆவினைத் தாயாகக் கருதும் பெற்றி நோக்கி அவ்வை → ஆவு → ஆ → ஆன் எனத் திரிந்திருக்கலாம். தெலுங்கில் 'ஆவு' என்பதே நிலைத்திருத்தல் நோக்கத்தக்கது.]

ஆ[12] ā, பெ. (n.) நசை (இச்சை); desire, eagerness (சா.அக.).

[அவா → ஆ. ஒ.நோ: அவாவு → ஆவு (உ.வ.) ஆவி சேர்த்துக் கட்டுதல் (நெ.வ.) என்னும் வழக்கு நோக்குக.]

ஆ[13] ā, பெ. (n.) ஆச்சா; ebony, Diospyros ebenaster (சா. அக.); hard, heavy durable wood most highly prized when black, from various tropical trees of the genus Diospyros, as D.Ebenum of Southern India and Ceylon used for cabinet work, ornamental objects etc. (Random Dictionary.)

[இது ஆச்சா என்பதன் குறுக்கம். இது ஆவொடு தொடர்புடையதாயிருக்கலாம்.]

ஆ[14] ā, பெ. (n.) வகை; way, manner. "சிவமான வாபாடி" (திருவாச. 11:4).

[ஆறு (வழி, வகை) → ஆ (கடைக்குறை)]

ஆ[15] ā, பெ. (n.) ஆகுகை; becoming. "இலயித்தவா றுளதா வேண்டும்." (சி.போ. 1:2).

[ஆ (ஆகை) – முதனிலைத் தொழிற்பெயர்.]

ஆ[16] ā, பெ. (n.) சோறு; food, rice. ஆ வாங்கிக் கொள் (குழந்தை மொழி.)

ஆ[17] ā, பெ. (n.) மாமரம்; mango. tree.

Hind. ām.

[மா → ஆ.]

ஆ[1]**–தல்** ā-, 6 செ.கு.வி. (v.i.) 1. உண்டாதல்; to come into existence. அந்த அம்மையார் ஆகியிருக்கிறார். (நெல்லை.). 2. நிகழ்தல்; to happen, occur. 3. இணக்கமாதல்; to be agreeable, congenial, on friendly terms. தென்கலையார்க்கும் வடகலையார்க்கும் ஆகாது. 4. ஒப்பாதல்; to be like, equal, to resemble. "எனக்காவா ராரொருவர்" (திவ். இயற். 1:89). 5. அமைதல்; to be. இதற்கிது பொருளாகும். 6. உறவு முறையாதல்; to be related to, as a blood or marital relation. இந்தத் திருமணத்தால் அவர் உனக்கு என்ன ஆவார்? 7. சமைதல்; to be cooked, as food- சோறு ஆகிறது. 8. வளர்தல்; to grow, as a child or crop. அவன் இப்போது ஆளாகிவிட்டான்; கரிசற் காட்டிற் கம்பு நன்றாய்ப் பயிராகும். 9. ஆக்கம் பெருகுதல்; to prosper, flourish. ஆகிற குடி அரைக் காசால் ஆகும். (பழ.) 10. ஒன்று இன்னொன்றாக மாறுதல்; to become changed into another. 'நீர் ஆவியாகும், ஆவி நீராகும், முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காகுமா?' (பழ.) அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம் (பழ.). 11. ஒன்றிற்கு இன்னொன்றை மாற்றுதல்; to be exchanged. உழவர் தாம் விளைத்த நெல்லில் தம் உணவிற்கு வேண்டிய அளவு எடுத்துக் கொண்டபின் மிச்சமெல்லாம் காசாகும். 12. மதிப்புயர்தல்; to become more valuable. சென்ற இரண்டாம் உலகப் போரில் இரும்பெல்லாம் பொன்னாயிற்று. (உ.வ.). 13. செலவாதல்; to be spent. ஒரு வீடு கட்ட எவ்வளவாகும்? நான் இங்கு வந்து மும்மாதம் ஆகிறது (உ.வ.). 14. பயன் படுதல்; to be useful. பலாக்கட்டை வீணைக்காகும். அவன் ஒன்றிற்கும் ஆகான். (உ.வ.). 15. முடிதல்; to be done, finished, completed, exhausted. கருமம் ஆகிறவரை கழுதையையுங் காலைப் பிடிக்க வேண்டும் (பழ.).

ம., க., தெ., பட. ஆ; **குவி.** ஆயலி; **கூ.** ஆவ.

[ஆகு → ஆ. 'ஆகு' பார்க்க.]

ஆ[2]**–த்தல்** ā-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கட்டுதல்; to bind. "ஆத்திருந்தாளை" (சீவக.1882). 2. அமைத்தல்; to cause, to bring about. "அடுஞ்சமர மாத்து" (பாரத வெண்.)

[யா → ஆ. ஒ.நோ: யாக்கை → ஆக்கை.]

ஆஅ ā a, இடை. (int.) வியப்பு, இரக்கம், துயரம் ஆகியவற்றின் குறிப்பு; exclamation expressive of surprise, pity and grief.

[ஆ → ஆஅ]

ஆஅய் āay, பெ. (n.) **ஆய்**[7] பார்க்க; see **āy**[7]. "கழல் தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்" (புறநா. 128.)

[ஆய் – ஆஅய்]

ஆஅல் āal, பெ. (n.) ஆரல் (கார்த்திகை விண்மீன்) (மலைபடு. 100); third star in the list of 27 stars.

[ஆரல் → ஆஅல்]

ஆஆ āa, இடை. (part.) **ஆவா** பார்க்க; see āvā

[ஆ + ஆ (ஒலிக்குறிப்பு) an onomatopoeic expression.]

ஆஎனல் āeṉal, இடை. (part.) **ஆவெனல்** பார்க்க; see āveṉal.

[ஆ + எனல்]

ஆக்கக் கிளவி ākka-k-kiḷavi, பெ. (n.) (இலக்.) ஒரு பொருளின் தன்மை அல்லது நிலைமை வேறுபட்டதை அல்லது படுவதைக் காரணங் காட்டியும் காட்டாதும் கூறும் ஆதல் வினைச்சொல்; (Gram.) word indicating change from one state or quality to another. பயிர் நல்லவாயின, பனிபெய்ததால் நிலம் குளிர்ந்ததாயிற்று.

"ஆக்கக் கிளவி காரண முதற்றே" (தொல். சொல். 21.)

"ஆக்கக் கிளவி காரண மின்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே". (தொல். சொல். 22)

[ஆனது அல்லது ஆவது ஆக்கம். கிளவி = சொல். கிளத்தல் = சொல்லுதல்.]

ஆக்கங் கூறு-தல் ākkaṅ – kūṟu–, 5 செ. கு. வி. (v.i.) வாழ்த்துக்கூறுதல்; to bless, invoke, a blessing. "மன்னவற் காக்கங் கூறி" (திருவிளை. மாயப். 26).

[ஆக்கம் + கூறு. ஆ → ஆகு → ஆக்கு → ஆக்கம்]

ஆக்கங் கெடு-தல் ākkaṅ – keḍu–, 17 செ. குன்றாவி. (v.t.) நற்பேறு இழத்தல்; to become impoverished, to lose prosperity. அவன் ஆக்கங் கெட்டவன் (நெல்லை, முகவை).

[ஆக்கம் + கெடு]

ஆக்கஞ்செப்பல் ākkañ-ceppal, பெ. (n.) (அகப்.) களவொழுக்கத்தில், இயற்கைப் புணர்ச்சி முதல் களவு வெளிப்படும் வரை தலைவன் தலைவி இருவர்க்கும் நிகழும் ஒன்பது நிலைகளுள் ஒன்று; one among the nine states or conditions of mind (Avattai) that mark the emotional behaviour of the Hero and the Heroine during pre-marital love; expressing to others poignancy of one's love.

"வேட்கை யொருதலை யுள்ளுதல் மெலிதல்
ஆக்கஞ் செப்பல் நாணுவரை யிறத்தல்
நோக்குவ வெல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்கா டென்றச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப"

என்னும் தொல்காப்பிய நூற்பா (தொல். பொருள். கள. 9) அவ்வொன்பது நிலைகளையுங் கூறும்.

நம்பியகப் பொருள்,

"காட்சி முதலாச் சாக்கா டறாக்
காட்டிய பத்துங் கைவரும் எனினே
மெய்யுறு புணர்ச்சி யெய்துதற் குரித்தே" (36.)

என்று, காட்சியுஞ் சேர்த்து அந்நிலைகளைப் பத்தாகக் கூறும்.

'ஆக்கஞ் செப்பல்' என்னும் நிலையை, இளம்பூரணர், நச்சினார்க்கினியர், நாற்கவிராய நம்பி ஆகிய மூவரும் வெவ்வேறு வகையிற் கூறியுள்ளனர்.

'உறங்காமையும் உறுவ ஓதலும் முதலாயின கூறுதல்', என்பது **இளம்பூரணம்.**

'யாதானும் ஓர் இடையூறு கேட்டவழி அதனை ஆக்கமாக நெஞ்சிற்குக் கூறிக் கோடல்', என்பது **நச்சினார்க்கினியம்.**

'தன்னெஞ்சின்கண் வருத்த மிகுகின்ற படியைப் பிறர்க்குரைத்தல்', என்பது **நாற்கவிராய நம்பியம்.**

(இவற்றுள் நச்சினார்க்கினியம் பொருத்தமானது என்றாலும் ...)

[ஆக்கம் + செப்பல். ஆ → ஆகு → ஆக்கு → ஆக்கம் (தொ.பெ.) செப்பு → செப்பல். (தொ.பெ.).]

ஆக்கண் ākkaṇ, பெ. (n.) **அங்கண்**பார்க்க; see **angaṇ**

ஆக்கணாங் கெளிறு ākkaṇāṅ–keḷiṟu, பெ. (n.) ஒரு வகைக் கெளிற்று மீன்; brown estuary fish. **plotosus canins.**

[ஒருகா. ஆக்கணை + ஆம் (சாரி.) + கெளிறு.]

ஆக்கதம் ākkadam, பெ. (n.) முதலை; crocodile, alligator (சா. அக.).

[ஆக்கு → ஆக்கணம் (வலிமை) → ஆக்கதம்.]

ஆக்கநிலை ākkanilai, பெ. (n.) சூழலாலும் பழக்கத்தாலும் நிலைப்படும் நிலை; state or condition brought into being by environment and custom.

[ஆக்கம் + நிலை]

ஆக்கப்பாடு ākka-p-pāḍu, uQ. (n.) நல்லாக்கம், திருப்பேறு; great advantage, divine grace. "அண்ணலவற் கருள்புரிந்த வாக்கப்பா டருள் செய்தார்" (பெரியபு. திருஞான. 77).

[ஆக்கப்படு → ஆக்கப்பாடு (முத.தி.தொ. பெ.). இனி, ஆக்கம் + பாடு என்றுமாம். பாடு = பெருமை.].

ஆக்கப்புரை ākkappurai, uQ. (n.) **ஆக்குப்புரை** பார்க்க; see ākkuppurai.

[ஆக்கம் + புரை]

ஆக்கப் பெயர் ākka-p-peyar, பெ. (n.) தொன்று தொட்டு மரபாக வழங்கிவரும் முறைமைக்கு மாறாக, ஒரு பொருட்கு ஒரு பெயரைப் புதிதாக ஆக்கிக் கொள்வது ஆக்கப்பெயர். அது இடுகுறியாக்கப் பெயர், காரணவாக்கப் பெயர் என இருவகைப்படும்.

(1) இடுகுறி போன்று மக்கட்கு இடப்பட்டு வரும் இயற் பெயர் அல்லாது, பொருட் பொருத்தமில்லாத ஒரு புதுச் சொல்லைப் பெயராக இடுவது இடுகுறியாக்கப் பெயர்; name or designation coined newly and arbitrarily by an author.. எ–டு: முட்டை (முருகன்). (2) பல பொருள்கட்குப் பொது வான ஒரு காரணப்பெயரை, அவற்றுள் ஒன்றிற்கு அல்லது சிலவற்றிற்கு மட்டும் வரையறுப்பது காரணவாக்கப் பெயர்; term which, though connoting many is restricted in application to only one or a few of them. எ–டு: நன்னூல் (பவணந்தி), தாமரைக் கண்ணன் (திருமால்), கரி (அடுப்புக் கரி, யானை).

"இடுகுறி காரண மரபோ டாக்கம்

....

ஏற்பவும் பொதுவு மாவன பெயரே" (நன். 275).

[ஆக்கம் + பெயர். ஆகு → ஆக்கு → ஆக்கம். பெய் → பெயர். ஆகு → ஆ.]

எல்லாச் சொற்களும் காரணக் குறியினவே என்பதே தமிழ் நூலார் கொள்கை. "எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" என்பது தொல்காப்பியம். (தொல். சொல். பெய. 1)

பிறந்தபோது திண்ணமாயிருந்ததனால் திண்ணன் அல்லது திண்ணப்பன் என்றும், வெள்ளையாயிருந்ததனால் வெள்ளையன் என்றும், பிறவியல்பு பற்றி யிடப்படும் பெயர்கள் மட்டுமன்றிப் பிறபெயர்களும், பாட்டன் பெயர் என்றோ, முன்னோன் பெயர் என்றோ, தெய்வத்தை நினைப்பித்துப் பத்திச் சுவையூட்டும் தெய்வப்பெயர் என்றோ, நன்றியறிவு காட்டும் வகையில் குடும்பத்திற்கு நன்மை செய்தவர் பெயர் என்றோ, ஒரு குறிப்பிட்ட பேரறிஞன் அல்லது பெருமகன் போற் பிற்காலத்தில் விளங்க வேண்டுமென்றோ, இன்னோசைப் பெயர் என்றோ, ஏதேனும் ஒரு காரணம்பற்றியே இடப்படுவதால், மக்கட் சிறப்புப் பெயர்களும் காரணப் பெயர்களேயாம்.

நாட்டுப்புற மக்கள் சிலரின் வேடிக்கையான இயற் பெயர்களை நோக்கும் போது, முட்டையென்னும் பெயரும் ஒரு காரணப் பெயராயிருக்கலாமென்று கருத இடமுண்டா கின்றது.

வேத மொழியும் சமற்கிருதமுமான வடமொழி திரிபிற்றிரி பான பின்னை மொழியாதலின், அதன் சொற்கள் பலவற்றிற்கு வேர்ப்பொருளறிய வியலாமைபற்றி, வடமொழியிலக்கண நூலார் இடுகுறிப்பெயர், காரணப் பெயர் எனப் பெயர்களை இருவகை யாகக் கூறிவிட்டனர். பண்டை நாளிற் சொல்லாராய்ச்சியும் மொழியாராய்ச்சியுமின்மையால், பவணந்தி முனிவரும் அவரைப் பின்பற்றிக் கூறிவிட்டார். மரபானதும் புதிதாக இடப்படுவதும் ஆகப் பெயர்கள் இருதிறப்படுவதால், அப்பாகுபாட்டையும் சேர்த்து, இடுகுறி மரபுப்பெயர், இடுகுறியாக்கப்பெயர், காரண மரபுப்பெயர், காரணவாக்கப் பெயர் என நால்வகையாக வகுத்தார் நன்னூலார்.

இன்னும் இதன் விளக்கத்தை இடுகுறிப் பெயர் என்னுஞ் சொல்லின் கீழ்க் காண்க.

ஆக்கப் பெருக்கம் ākka-p-perukkam, பெ. (n.) வருமான மிகுதி; increase in income. மேலு முண்டான ஆக்கப் பெருக்கம். (S.I.I. v, 330).

[ஆகு → ஆக்கு → ஆக்கம். பெரு → பெருகு → பெருக்கு → பெருக்கம்]

ஆக்கப்பொறு-த்தல் ākka-p-poru-, 4. செ. குன்றாவி. (v.t.) 1. உணவு சமைக்கும்வரை காத்திருத்தல்; to wait till food is cooked. ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்கக் கூடாதா? (உ.வ.). 2. வினைமுடியக் காத்திருத்தல்; waiting until the work is over.

[ஆக்கு + அ + பொறு]

ஆக்கம் ākkam, பெ. (n.) 1. ஆக்கமுணர்த்துஞ்சொல், ஆக்கக் கிளவி (தொல். சொல். கிளவி. 22); word indicating change from one state or quality to another. 2. படைப்பு; creation. "ஆக்க மவ்வவர் கன்ம மெலாங் கழித்திடல்" (சி.சி.1:37). 'ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுப்பானா', 'ஆக்க மாட்டாத பெண்ணுக்கு அடுப்புச்சட்டி பத்தாம்', 'ஆக்கமாட்டாத அழுகல் நாரிக்குத் தேடமாட்டாத திருட்டுக் கணவன் வாய்த்தானாம்' (பழ.) 3. அமைத்துக் கொள்ளுகை; arrangement, preparation,asincleansingrice; 'வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான், இவ்வோத்துக் கிளவியாக்க மாயிற்று' (தொல். சொல். கிளவி. 1 சேனா. உரை.) 4. வளர்ச்சி, பெருக்கம்; increase, development, "தம்மாலா மாக்க மிலரென்று" (நாலடி. 301). 5. ஊதியம் (இலாபம்); gain, profit. "ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை" (குறள், 463). 6. ஈட்டம், தொகுப்பு; accumulation. "அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்" (குறள், 755). 7. செல்வம்; wealth, fortune, prosperity. "மனநல மன்னுயிர்க் காக்கம்" (குறள், 457). 8. பெருவாழ்வு; life of prosperity, flourishing state..; "அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கையெல்லாம்" (சிவஞானசித். 1:69). 9. பொன்; gold. (பிங்.) 10. கைகூடுகை;achievement,accomplishing. 'விரும்பிய பொருளின் ஆக்கத்து அழகுணர்த்தற்குச் செறியும் இருண்ட மாலையிடத்து நற்சொற் கேட்டது' (பு.வெ. 1: 4, உரை). 11. மங்களவியல் (உ.வ.); auspiciousness. 12. வாழ்த்து; benediction. "மன்னவற் காக்கங் கூறி" (திருவிளை. மாயப். 26). 13. கொடிப்படை. (திவா.); van of an army carrying the banner.

ம. ஆக்கம்; **க.** ஆகெ, ஆக்கு.

[ஆகு → ஆக்கு → ஆக்கம் (தொழிற்பெயரும் தொழிலாகுபெயரும்)]

ஆக்கமகள் ākka-magaḷ, பெ.(n) திருமகள்; **goddess of wealth.** "ஆக்கமகள் கொண்டாட" (கடம்பர் உலா, 192:3).

ஆக்கர் ākkar, பெ. (n.) படைக்கப்பட்ட தேவர்; **installed deities.** 'இவ்வருகிலாக்கரான இந்திராதிகள்' (ஈடு, 5:2:3).

[ஆகு → ஆக்கு → ஆக்கர். 'அர்' ப.பா. ஈறு.]

ஆக்கல் ākkal, தொ.பெ. (vbl. n.) 1. படைத்தல்; **creating.** ஆக்கல், காத்தல், அழித்தல் என இறைவன் தொழில் மூன்று. 2.சமைத்தல்; **cooking.** 'ஆக்க வேண்டா அரைக்க வேண்டா பெண்ணே, என் அருகிலிருந்தால் போதுமடி கண்ணே', 'ஆக்கிக் குழைப்பேன் அல்லது அரிசியாய் இறக்குவேன்' (பழ.).

[ஆகு → ஆக்கு → ஆக்கல். 'அல்' தொ.பெ. ஈறு.]

ஆக்கவினைக்குறிப்பு : ākkavinai-k-kurippu, பெ. (n.) ஆக்கத்தால் வரும் வினைக் குறிப்புச்சொல்; **verb denoting change from one state or quality to another.** "ஆக்கவினைக் குறிப்பு ஆக்கமின் றியலா" (நன்.347).

சாத்தன் நல்லன்; நல்லன் என்பது வினைக்குறிப்பு. 'சாத்தன் நல்லன் ஆயினான்'; ஆயினான் என்பது ஆக்கச் சொல்.

[ஆக்கம்+வினை+குறிப்பு]

ஆக்கவும்மை ākka-v-ummai, பெ. (n.) ஆக்கப் பொருளில் வரும் 'உம்' என்னும் இடைச்சொல்; **particle 'um' indicating change from one state or quality to another.**

[ஆக்கம்+உம்மை]

இவ்விடைச்சொல் இப்பொருளில் எங்கேனும் வந்ததாகத் தெரியவில்லை.

"எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்
றப்பால் எட்டே உம்மைச் சொல்லே"

என்று தொல்காப்பியர் நூற்பா (தொல். சொல். இடை. 7) யாத்து விட்டதனால், பவணந்தியாரும் அவரைப் பின்பற்றி,

"எதிர்மறை சிறப்பையம் எச்சமுற் றளவை
தெரிநிலை ஆக்கமோ டும்மை யெட்டே"
என்று (நன்.இடை.6) இயற்றிவிட்டார்.

இளம்பூரணர், தம் உரையில், தொல்காப்பிய நூற்பா ஆக்கவும்மைக்கு எங்ஙனமும் எடுத்துக்காட்டுத் தரல் வேண்டுமென்பதையே கருதி, 'நெடியனும் வலியனும் என்பது ஆயினான் என்னும் ஆக்கத்துக்கண் வந்தது ஆக்கவும்மை' என்று வரைந்தார். அவருக்குப் பின்வந்த சேனாவரையர் ஆக்கவும்மைக்கு எடுத்துக்காட்டின்மை கண்டு,

'ஆக்கவும்மை வந்தவழிக் கண்டுகொள்க. உரையாசிரியர் நெடியனும் வலியனுமாயினான் என்புழி உம்மை ஆக்கங் குறித்து நிற்றலின் ஆக்கவும்மையென்றார். "செப்பே வழீஇ யினும் வரைநிலை யின்றே" (தொல். சொல்.14) என்னுமும்மை, வழுவை இலக்கணமாக்கிக் கோடல் குறித்து நின்றமையின், ஆக்கவும்மை யென்பாரு முளர்' என்று திறம்படவுரைத்தார்.

நச்சினார்க்கினியர்,

'நெடியனும் வலியனுமாயினான் என்பது ஆக்கம். "செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே" என்பது இலக்கணமாக்கிக் கோடல் குறித்தமையின் ஆக்கமுமாம்' என்றும்,

கல்லாடனார்,

'இனி ஆக்கம் நெடியனும் வலியனுமாயினான் என்பது. இஃது எண்ணன்றோவெனின், ஒரு பொருடன்னையே சொல்லுதலின் அன்றாயிற்றுப் போலும்' என்றும் உரைத்தனர்.

தெய்வச்சிலையாரோவெனின்,

ஆக்கம் உம்மையடுத்த சொற்பொருண்மேல் ஆகும் நிலைமையைக் குறித்து வரும். வாழும் வாழ்வு, உண்ணுமுண் எனத் தொழிலினது ஆக்கங்குறித்து நின்றவாறு கண்டு கொள்க. இது பெயரெச்ச வினைச் சொல்லன்றோ எனின் ஆம். அதன்கண்ணும் இடைச்சொல் என்க. அதனானே யன்றே "உம்முந் தாகு மிடனுமா ருண்டே" என்னும் இலக்கணத்தால்; "நெல்லரியு மிருந்தொழுவர்" என்னும் பாட்டினுள், "செஞ் ஞாயிற்று வெயின்முனையிற் றெண்கடற் றிரைமிசைப் பாயும்" எனற்பாலது "பாயுந்து" என வந்தது. இவ்விலக்கணம் வினையியலுள் ஓதாமையால் பெயரெச்ச **உம்** இடைச்சொல் என்று கொள்ளப்படும். பாயும் புனல் என்பது பாய்புனல் எனத் தொக்குழி, வேற்றுமைப் பொருள்உருபு, பெயர் நிற்பத் தொக்கவாறு போல, வினைநிற்ப உருபு தொகுதலானும், செய்யும் என்பது வினையும் உருபுமாகிய இரு நிலைமைத்து என்று கொள்க. செய்யும் என்னும் முற்றுச் சொல்லின்கண் **உம்** எவ்வாறு வந்ததெனின், அது மற்றொரு பொருளைக்குறித்து நில்லாமையின் ஈண்டு இடமின்றென்க. முற்றிநிற்றலின் முற்றும்மை யெனினும் இழுக்காது. ஆக்கவும்மை என்பதற்கு நெடியனும் வலியனும் ஆயினான் என உதாரணங் காட்டுப வாலெனின், அஃது எண்ணும்மை என்க. "தனிவரின் எச்சவும்மையாம்" என வேறொரு வகையாக வுரைத்தார்.

இனி, நன்னூலுரையாசிரியருள்,

நெடியனு மாயினான் எ-து 'ஆக்கம்' என்றார் மயிலைநாதர். 'நெடியனும் ஆயினான், பாலும் ஆயிற்று என்புழி அவனே வலியனும் ஆயினான், அதுவே மருந்தும் ஆயிற்று

எனப் பொருள்படின் ஆக்கவும்மை' என்றார் விருத்தியென்னும் விரிவுரையாளர் .

'நெடியனும் வலியனு மாயினானவன், பாலும் மருந்து மதுவாயிற்று என்பன ஆக்கம்.

'இதனை நெடியனுமாயினான், பாலுமாயிற்று எனக்கூறி, அவனே வலியனுமாயினான், அதுவே மருந்துமாயிற்று எனப் பொருள்படின், ஆக்கவும்மை யென்பாருமுளர்' என்றார் இராமானுசக் கவிராயர்.

'பாலுமாயிற்று, இங்கே அதுவே மருந்துமாயிற்று என்னும் பொருளைத் தருதலால் ஆக்கம்' என்றார் ஆறுமுக நாவலர்.

'ஆகவே, பாலும் ஆயிற்று என்றால், இதில் அதுவே மருந்தும் ஆயிற்று என்னும் பொருளைத் தருமிடத்து ஆக்கம்' என்றார் சடகோப ராமானுசாச்சாரியாரும்.

இரு நூற்கும் உரை வரைந்த இவரெல்லாருள்ளும், உண்மையொட்டியுரைத்தவர் சேனாவரையர் ஒருவரே.

'கோவிற்பட்டி நகருமாயிற்று, இதில் கோவிற்பட்டி இப்பொழுது நகரமாயிற்று என்று ஆக்கப் பொருள் தருதலால் ஆக்கம்.' (இயற்றமிழ் இலக்கணம் . பக். 75) என்று பாவாணர் எடுத்துக் காட்டியுள்ளமை கொள்ளத்தக்கது.

ஆக்களவு ā-k-kaḷavu, பெ. (n.) ஆவைக் களவு செய்தல்; stealing of cows.

[ஆ+களவு]

ஆக்கறுவாள் ākkaṟuvāḷ, பெ. (n.) 1. கொடிக்காலில்



வெற்றிலைக் காம்பை நறுக்க உதவும் கத்தி; bill-hook for cutting the stem of the betel leaf. 2. தழைகளை வெட்ட உதவும் கையறுவாள்; bill - hook for hacking garden - knife, pruning hook (சா. அக.)

[ஆக்கு+அறுவாள் த . அடகு > தெ. ஆக்கு..]

மணையிற்பதிக்கப்பட்டுக்காய்கறியரியும்வாள்போன்றதே அரிவாள் என்றும், அது பதிக்கப்பட்ட மணையே அரிவாள்மணையென்றும் பெயர் பெறும். ஏனை யறுக்கும் அல்லது வெட்டும் வாள்களெல்லாம் அறுவாள் என்றே பெயர்பெறும். இப்பெயர் வேறுபாடு அரிதலுக்கும் அறுத்தலுக்கும் இடைப்பட்ட வினைவேறுபாட்டைப் பொறுத்தது. 'அறுவாள்' என்னும் சொல்லைப் பார்க்க.

அகரமுதலிகளில் அறுவாளை அரிவாள் என்று குறித்திருப்பது தவறாகும்.

ம. ஆக்கத்தி; **தெ.** கத்தி ஆகுராய்

ஆக்கன் ākkaṉ, பெ. (n.) செயற்கையானது (சம். அக.); that which is artificial.

[ஆகு → ஆக்கு → ஆக்கன். 'அன்' ஒருமையீறு.]

ஆக்காட்டு—தல் ā-k-kāṭṭu-, 5 செ.கு.வி. (v.i.) குழந்தை தன் தாய்க்கு ஆவென்று தன் வாயை விரிவாகத் திறந்து காட்டுதல் (கு.வ.); to open the mouth wide as in pronouncing the back vowel 'a', as a child in response to its mother's command. (Nurs.)

[ஆ+காட்டு. காண் (த.வி.) → காட்டு (பி.வி).]

ஆக்காம்பாறை ākkām– pāṟai, பெ. (n.) பாறைமீன் வகைகளுள் ஒன்று. (செங்கை. மீன.); a kind of fish.

[ஆக்கம் – ஆக்காம் + பாறை]

ஆக்கிக்கொள்—தல் ākki-k-koḷ-, 7 செ.குன்றாவி. (v.t.) முடித்துக்கொள்ளுதல்; to see a work (usu. auxiliary or incidental to the main work) done or accomplished "வினையால் வினையாக்கிக் கோடல்" (குறள். 678).

[ஆக்கி+கொள்.]

ஆக்கிப்போடல் ā-k-ki-p-pōḍal, பெ. (n.) மகப்பேற்றுக்காக மகளை அழைக்கும்போது தாய்வீட்டார் அளிக்கும் விருந்து; feast offered to a pregnant woman by her parents inviting her to their house for delivery.

[ஆக்கி+போடல்]

ஆக்கியரிவாள் ākki-y-arivāḷ, பெ. (n.) கொடிக்காலில் வெற்றிலைக் காம்பை நறுக்க உதவும் சிறப்பு வகையான கத்தி (இ.வ.); special kind of knife for cutting the stem of the betel leaf (Loc.) .

ம. ஆக்கத்தி

[ஒருகா.'ஆக்கறுவாள்'என்பதன்மறுவடிவாயிருக்கலாம். அங்ஙனமாயின், 'ஆக்கியறுவாள்' என்றேயிருத்தல் வேண்டும். இலையைக் குறிக்கும் ஆக்கு என்னும் தெலுங்குச்சொல் ஆக்கியென்று திரிந்திருக்கலாம்.'ஆக்கறுவாள்' என்னுஞ்சொல்லின்கீழ்ச்சிறப்புக் குறிப்பைப் பார்க்க.]

ஆக்கியோன் ākkiyōṉ, பெ. (n.) 1. படைத்தோன், கடவுள்; God, as the maker, creator. 2. நூல்

செய்தவன், நூலாசிரியன்; author of a book. "ஆக்கியோன் பெயரே .... பாயிரத் தியல்பே" (நன். பொதுப்பாயி. 48).

[ஆகு → ஆக்கு → ஆக்கியான் → ஆக்கியோன் (வினையா. பெ.)]

ஆக்கு[1]–தல் ākku-, 5 செ. குன்றாவி. (v.t.) 1. செய்தல்; to make, effect. "எரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும்" (நாலடி. 124). 2. படைத்தல், தோற்றுவித்தல்; to cause to be, create. "அனைத்துலகு மாக்குவாய் காப்பா யழிப்பாய்" (திருவாச. 1:42). 3. அமைத்துக் கொள்ளுதல்; to arrange, make preparations. "நொய்யும் நுறுங்குங் களைந்து அரிசியமைத் தாரை அரிசியாக்கினா ரென்ப" (தொல். சொல். 1. சேனா. உரை). 4. சமைத்தல்; to cook. "அஞ்சும் மூன்றும் உண்டானால் அறியாப் பெண்ணுங் கறியாக்கும்". "ஆக்கி அரைத்துப் போட்டவள் கெட்டவள், வழிகூட்டி அனுப்பினவள் நல்லவள்". "ஆக்குகிறவள் சலித்தால் அடுப்புப் பாழ், குத்து கிறவள் சலித்தால் குந்தாணி பாழ்" (பழ.). "ஆக்கப் பொறுத்த நமக்கு" (இராமநா. அயோத். 13). 5. நிலைமையுயர்த்துதல்; to elevate, bring prosperity to. "ஒன்னார்த்தெறலு முவந்தாரை யாக்கலும்" (குறள், 264). 6. வளர்த்தல்; to rear, to bring up. பிள்ளையை ஆளாக்க வேண்டும். (உ.வ.) 7. பெருக்கிச் சொல்லுதல்; to exaggerate. ஒன்றை ஒன்பதாக்குவான், துரும்பைத் தூணாக்கலாமா? (உ.வ.). 8. பெருக்குதல்; to increase, multiply. தந்தை தந்த பத்தாயிரத்தைப் பத்திலக்கமாக்கினான். (உ.வ.). 9. மாற்றுதல்; to change, convert. "முல்லை யை மருதமாக்கி" (கம்பரா. ஆற். 17). 10. பெறுதல்; to receive. 11. உண்டாக்குதல்; to bring into being. "முயற்சி திருவினையாக்கும்". (குறள் 616.)

ம. ஆக்குக; **க.** ஆகிசு; **தெ.** காவின்சு.

[ஆகு (த.வி.) → ஆக்கு (பி.வி.)]

ஆக்கு[2] ākku பெ. (n.) நூறுபிடி நெல் நாற்று; one hundred sheaves of paddy - seedlings (சேரநா.)

[ஆள் + கு – ஆள்க்கு → ஆக்கு (ஒராள் ஒரு நாளில் நடும் அளவு).]

ஆக்கு[3] ākku, பெ. (n.) படைப்பு; creation. "ஆக்கு மழிவு மையனீ யென்பனான்" (தேவா. 914:7).

[ஆகு → ஆக்கு (முத. தொ. பெ.).]

ஆக்கு[4] ākku பெ. (n.) கிளிஞ்சில் வகையுள் ஒன்று. (நெ. மீ.); a kind of mussel or shell.

ஆக்குத்தாய் ākkuttāy, கு.வி.எ. (adv.) அன்முறை யாய் (அநீதியாய்); unjustly. ஆக்குத்தாய்ப்பிடித்துக் கொண்டார்கள். (வில்லி.).

[ஒருகா. ஆக்குத்து + 'ஆய்' கு.வி. எ. ஈறு.]

இருளர் என்னும் வில்லியர் கொடுந்தமிழ மரபின ரேயாதலின், 'ஆக்குத்து' என்னும் பெயர்ச்சொல் ஒரு தென் சொல்லின் திரிபாயேயிருத்தல் வேண்டும்.

ஆக்குப்புரை ākku-p-purai, பெ. (n.) மங்கல அமங்கலக் கொண்டாட்ட நாள்களில், அற்றைப் பொழுதிற்கு அமைத்துக் கொள்ளும் சமையற் கூடம் அல்லது மறைப்புப் பந்தலறை; covered place for cooking temporarily put up for special occasions both auspicious and inauspicious. 2. சமையற்கூடம், அட்டிலறை; kitchen.

[ஆகு → ஆக்கு + புரை. புரை = துளை, அறை.]

ஆக்கும் ākkum, இடை. (part.) 1. போலும்; presumably, probably, it is likely that. பெண் பார்க்க வந் தானாக்கும் (உ.வ.). 2. ஒருவனது திறமையை அல்லது முதன்மையை, அறிந்தவன் அறியாத வனுக்கு வியப்புற எடுத்துக் கூறுவதைக் குறிப்பிக்கும் இடைச்சொல்; particle emphasising the unknown might or importance of a person, relating in a tone of awe and wonder. அவனை யாரென்று நினைத்தாய்? தலைமை மந்திரியாரை ஆட்டி வைக்கும் அணுக்கச் செயலாளராக்கும். அவன் யார் தெரியுமா? ஆச்சாபுரக் காட்டில் ஐம்பத்திரு வேங்கையைக் கொன்றவனாக்கும். (உ. வ.).

[ஆகு → ஆகும் → ஆக்கும்.]

ஆக்குருவி ākkuruvi பெ. (n.) **ஆய்க்குருவி** பார்க்க; see **āy–k–kuruvi**

ஆக்கெளுத்தி ā-k-keḷutti, பெ. (n.) 1. **ஆக்கணாங் கெளிறு பார்க்க.;** see **ākkaṉāṉ Keḷiṟu** 2. கடற் கெளிற்று மீன்வகை; a marine fish, **plotosus arab..**



[1. ஆக்கணாங் கெளுத்தி → ஆக்கெளுத்தி. 2. ஆ + கெளுத்தி. கெள் → கெளிறு → கெளிற்றி – கெளுத்தி. கெளிறு பார்க்க; see kelir̤u]

ஆக்கை [1] ākkai, பெ. (n.) 1. கூரை வேய்விற்கு உதவும் நார், கற்றாழை நார், நார்த்துணிக்கை; strips of fibre, used in thatching. "நரம்பாக்கை யார்த்து" (தேவா. 631:3). 2. உடம்பு; body. "ஆக்கை யுள்ளுறை யாவி" (சீவக. 1362).

ம. ஆக்க

[யாத்தல் = கட்டுதல். யா → யாக்கை → ஆக்கை = 1. கட்டும் நார். 2. எழுவகைத் தாதுக்களாற் கட்டப்பட்ட உடம்பு. 'யாக்கை' பார்க்க.]

ஆக்கொத்துமம் ā-k-kottumam, பெ. (n.) சரக் கொன்றை (மலை.); Indian laburnum.

[ஒருகா. ஆரக்கொத்துமம். ஆரம் = மாலைபோல் தொங்கும் பூச்சரம். ஆரம் + கொத்து + மரம் = ஆரக் கொத்துமரம் → ஆரக்கொத்துமம் → ஆக்கொத்துமம். வ. ஆரக்வத (aragvadha). வடசொற்கு மூலமின்மை கவனிக்கத் தக்கது.]

ஆக்கொல்லி ākkolli, பெ. (n.) தில்லைமரம் (மலை.); blinding tree.

ம. ஆக்கொல்லி

[ஒருகா. ஆ + கொல்லி. கொல் → கொல்லி. 'இ' வினைமுதலீறு]

ஆக்கோது ā-k-kōdu, பெ. (n.) கொன்றைமரம்; cassia tree (சா.அக.).

ஆக āga, வியங். மு. (opt.v.) வியங்கோள்வினை; v. in the optative mood. தமிழ் வாழ்வதாக, அவன் இங்கு வருவானாக. --- நி.கா.வி.எ. (inf.) 'ஆகு' என்னும் வினையின் நிகழ்கால எச்சம்; to become. இன்னும் சோறாகவில்லை, கம்பு பயிராக ஆறுமாதஞ் செல்லும் (உ. வ.) – வி.எ. (adv.) 1. அவ்வாறாக; in that fashion or manner. "ஆக ராகவனை யவ்வழிக் கண்டான்" (கம்பரா. இராவணன்றா. 19). 2. மொத்தமாய்; on the whole, amounting to. ஆகத்தொகை ஆயிரத்தைந்நூறு. (உ.வ.). 3. முழுதும்; wholly, completely. ஆகமோசம். (இ.வ.). இ. இடை. (conj.) 'அல்லது .... அல்லது' என்னும் வாய்பாட்டில் தெரிப்புப் பொருள் பற்றிவரும் இடைச்சொல்; either ..... or. 'தெய்வத் தானாக மக்களானாகத் தனக்கு வந்த துன்பங் களை' (குறள், 442, பரிமே. உரை). ---

இடை. (part.) 1. பொருட்டுப் பொருளில் 4ஆம் வேற்றுமையுருபுடன் வருந்துணைச்சொல்; for the sake of, for the purpose of. 2. பிறன்மொழிக் கூற்றை அல்லது அறிக்கைக் கூற்றைக் குறிக்கும் இடைச்சொல்; part. indicating indirect or reported speech. அவன் நாளை இங்கு வருவதாகச் சொன்னான். 3. அமையம் உணர்த்தும் இடைச்சொல்; part. indicating the context or circumstance in which an act takes place. "காரெதிர் கானம் பாடினேமாக" (புற நா. 144) – அசை நிலை (part.) ஓர் அசைச்சொல்; an expletive. 'அநாதி காலம் வாஸனை பண்ணிப் போந்தவற்றை இப்போதாக விடப்போமோ' (ஈடு, 1:2 : 2 உரை).

ம. ஆக

[1. ஆகு → ஆக (ஆகு + அ). 'அ' வியங்கோள்வினை ஈறு . 2. ஆகு → ஆக (ஆகு + அ). 'அ' முக்கால வினையெச்ச ஈறு. 'ஆக' என்னும் வினையெச்சமே பல்வேறு இடைச்சொல்லாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இப்போதாக என்பது இப்போது மட்டும் என்று பொருள் படின் அசைச் சொல்லாகாது.]

ஆகக்கடைசி āga-k-kḍaiši, பெ. (n.) இறுதியில், at-last; at length.

[ஆக + கடைசி]

ஆகக்கூடி āga-k-kūḍi, இ.இடை. (adv. conj.) 1. மொத்தத்தில்; on the whole, in the total, so that; ஆகக்கூடி, ஆயிரம் உருபாவிற்கு அடுத்துவிடும். 2. ஆகவே; that being the case, therefore. ஆகக்கூடி, நீ அங்குப் போயும் பயனில்லை.

[ஆகு → ஆக. 'அ' முக்.வி.எ. ஈறு. கூடு → கூடி. 'இ' இ.கா.வி.எ.ஈறு. 'ஆகக்கூடி' என்பது கூட்டுச்சொல்.]

ஆகக்கொள்ள āga-k-koḷḷa, இ. இடை (adv.conj.) ஆகையால்; because. நாளை அவன் வரு வானாகக் கொள்ள (W.).

[ஆகு → ஆக. 'அ' முக்.வி.எ.ஈறு. கொள் → கொள்ள. 'அ' முக். வி.எ. ஈறு. 'ஆகக்கொள்ள' என்பது கூட்டுச்சொல்.]

ஆகச்செய்தே āga-c-ceydē, இ.இடை. (adv.conj.) ஆகவே (ஈடு); that being the case.

[ஆகு → ஆக. 'அ' முக்.வி.எ. ஈறு. செய் → செய்து (இ.கா.வி.எ.) + ஏ (தேற்றப் பொருளிடைச் சொல்). ஏகார இடைச் சொல் இங்குத் தன் பொருளை இழந்துள்ளது.]

ஆகச்சே[1] āgaccē, இ.இடை. (adv.conj.) 'ஆகச் செய்தே' என்பதன் குறுக்கு வழக்குச் சொல்; corrupted form of 'āgaccydē'

[ஆகச்செய்தே – ஆகச்சே (கொ. வ.)]

ஆகச்சே[2] āgaccē, வி.எ. (adv.) 'ஆகையிலே' என்பதன் கொச்சை வடிவம்; while becoming, being prepared, being cooked. சோறு ஆகச்சே ஊர் அடங்கிவிட்டது. இக்கொச்சை வடிவம் கொள்ளத்தக்கதன்று.

[ஆகையிலே → ஆகச்சிலே → ஆகச்சே. வரச்சே, போகச்சே என இவ்வடிவம் பிற வினைகளுடன் சேர்ந்து வழங்குதல் உண்டு.]

ஆகட்டு āgaṭṭu, ஏ.வி. (imp.v.) 1. ஆகவிடு; (though) let it become, let it happen, let it be done. எப்படியிருந்தாலும் வேலை ஆகட்டு. 2. சரி அப்படி யாகுக; all right, let it be, so be it.

ம. ஆகட்டெ

[ஒட்டுதல் = இசைதல். ஒட்டு → அட்டு (துணைவினை). (ஆக + ஒட்டு) ஆகவொட்டு → ஆகட்டு (ஏவலொருமை)]

ஆகட்டும் āgaṭṭum, ஏ.வி. (imp.v.) *1.* ஆகவிடும்; (you) let it become, let it happen, let it be done. 2. சரி, அப்படி யாகுக; all right, let it be, so be it. (ஆகட்டும் போகட்டும் அவரைக்காய் காய்க் கட்டும், தம்பி பிறக்கட்டும் தம்பட்டங்காய் காய்க் கட்டும், அவனுக்குக் கலியாணம் ஆகட்டும், உன்னைக் கூப்பிடுகிறேனா பார்', 'ஆகட்டும் என்பவன்தான் அவதிப்பட வேண்டும்' (பழ.).

[ஆக+ஒட்டும்→ ஆகவொட்டும் → ஆகட்டும். 'ஆகட்டு' என்பது நீ என்னும் முன்னிலையொருமை யெழுவாயின்பயனிலை;'ஆகட்டும்' என்பது நீம் அல்லது நீர் என்னும் முன்னிலைப் பன்மை யெழுவாயின் பயனிலை. 'உம்' ஏவற்பன்மையீறு.]

ஆகட்டு என்னும் ஏவலின் ஒருமை யெண்ணும், ஆகட்டும் என்னும் ஏவலின் பன்மை யெண்ணும், இற்றை வழக்கில் மறைந்து போயின. அதனால், ஒருமையேவல் பெரும்பாலும் வழக்கற்ற தொடு, பன்மையேவலே ஒருமை யேவலாகவும் வழங்கி வருகின்றது.

அட்டு (ஒட்டு) என்னும் துணைவினையை 'let it be' என்னும் ஆங்கிலத் தொடரியத்திலுள்ள 'let' என்னும் ஏவல்வினையுடன் ஒப்பு நோக்குக.

ஆகடியக்காரன் āgaḍiya-k-kāraṉ பெ.(n.) எள்ளி நகையாடுபவன்; jester

[ஆகடியம் + காரன்.]

ஆகடியம் āgaḍiyam, பெ. (n.) 1. நகையாட்டு (பரிகாசம்); mockery, ridicule, banter. ஆகடியம் பண்ணாதே. (உ.வ.) 2. பொல்லாங்கு; mischief, cruelty. "அஞ்சு பூதமுண்டாகடியக் காரரிவர்" (திருப்பு. 156).

க. ஆகட; **தெ.** ஆகடமு

*[அகடு = பொல்லாங்கு ; wickedness. **தெ., க.** அகடு. அகடு → அகடியம் → ஆகடியம்.]*

ஆகத்தையுருக்கி āgattai-y-urukki, பெ. (n.) 1. எலும்பை யுருக்கி, எலும்பை நீராக மாற்ற வல்லதாகக் கருதப்படும் மருந்து; medicine supposed to change the bone into a liquid. (சா.அக.). 2. உடலை யுருக்கும் எலும்புருக்கி நோய்; disease, such as consumption, which emaciates the body.

[ஆகம் = உடம்பு. 'ஆகத்தை' 2 ஆம் வேற்றுமை. 'அத்து' சாரியை; 'ஐ' 2 ஆம் வே. உ. உருக்கு → உருக்கி. 'இ' வினைமுதலீறு.]

ஆகதர் āgadar, பெ. (n.) அருக சமயத்தோர்; Jains. "ஆகதர்க் கெளியே னலேன்" (தேவா. 258.2).

[அருகர் → அருகதர் → ஆகதர்]

ஆகப்பாடு āga-p-pāḍu, பெ. (n.) மொத்தம்; amount, sum total. உருபா (ரூபாய்) ஆகப்பாடென்ன? (நெல்லை.).

[ஆகு → ஆக (முக்.வி.எ.). படு (துணைவினை) → பாடு (தொ.பெ.). படுதல் = தோன்றுதல், உண்டாதல், கூடுதல், மிகுதல், பெரிதாதல்.]

ஆகம்[1] āgam, பெ. (n.) 1. உடல்; body. "ஆகம் வள்ளுகிராற் பிளந்தான்" (திவ். திருவாய். 9:3:7). 2. மார்பு; breast. "முலையாகம் பிரியாமை" (கலித்.2). 3. மனம்; mind, heart. "ஆகத்தெழு கனல் கண்வழியுக" (கம்பரா. கரன்வ. 97). 4. உள்மனம்; inner self. 5. ஒளி, ஒளிக்கற்றை; lustre, brilliance, splendour. (சேரநா.).

ம. ஆகம்

[ஆகு → ஆகம் (ஆகுபெ.).]

ஆகம்[2] āgam, பெ. (n.) 1. சுரை; bottle gourd (சா.அக.). 2. குப்பைமேனி; plant commonly growing on rubbish and used as an antidote to poisonous bites, **Acalyapha indica.**

ம. ஆகம்

[சாகம் – ஆகம்]

ஆகம்[3] āgam பெ. (n.) செவ்வை; **correctness, fitness.** அவன் ஆகமாய்ச் செய்வான் (நெ. வ.).

[ஆக்கம் என்பதன் இடைக்குறை.]

ஆகரி[1] āgari, பெ. (n.) 1. திப்பிலி (சங். அக.); **long pepper, piper longum.** 2. சிறு கட்டுக்கொடி (சித். அக.); **a kind of medicinal creeper, Smilax pseudo-china.** 3. கனிமப்பொருள்; minera!, metallic ore (சா.அக.).

[ஆகரி = திப்பிலி. ஒ.நோ : ஆகசி.]

ஆகரி[2] āgari, பெ. (n.) சிறப்பாக நள்ளிரவிற் பாடற் குரிய அவலப் பண்; **special sorrowful melody-type, suitable for singing at midnight.** 'மருதத்திற்குப் புறம் ஆகரி' (சிலப். 14:166, உரை). "யாமத் துரிமை யாகரி பாடலே" (தொன். விள. 173).

ஆகரிநஞ்சு āgari-nañju, பெ. (n.) கனிம நஞ்சு; mineral poison (சா.அக.).

ஆகலாகல் āgal-āgal, இடை. (part.) ஓசை வேறு பாட்டால் குறிப்பாக உடன்படாமைப் பொருளிலும், ஐயுறவுப் பொருளிலும் தனித்து வழங்காது இரட்டித்தே வரும் பிரிவிலசை நிலைகளுள் ஒன்று; **expression invariably consisting of the pair of words either repudiating or doubting a statement.**

"ஆக ஆகல் என்ப தென்னும்

ஆவயின் மூன்றும் பிரிவி லசைநிலை" (தொல். சொல். இடை. 32.).

'ஒருவன் யானின்னேன் என்றானும், நீயின்னை யென்றானும், அவனின்னன் என்றானும் கூறியவழிக் கேட்டான் ஆக ஆக, ஆகல் ஆகல் என்னும்; இவை உடன்படாமைக் கண்ணும் ஆதரமில்வழியும் வரும்' (தொல். சொல். 280, சேனா. உரை).

[ஆகு → ஆகல் (தொ. பெ.). 'அல்' தொ.பெ. ஈறு. அசை நிலையாகும் போது 'ஆகல்' இடைச் சொல் லாம்.]

'ஆகலாகல்' அடுக்குத்தொடர்.

ஆகல் ஆகல் என்பது வழக்காற்று வகையில் ஆம் ஆம், சரிசரி என்னும் உடன்பாட்டுச் சொல்லிணைகளை ஒக்கும்; ஆயின், ஒசை வேறுபாட்டால், உடன்படாமையையும் வெறுப் பையும் குறிப்பாக வுணர்த்தும்.

ஆகல் ஆகல் விரைந்தொலிப்பின் உடன்பாடாம். விட்டிசைத்து அழுத்தம் தந்து ஒலிப்பின் எதிர்மறையாம்.

ஆகலியம் āgaliyam, பெ. (n.) கோயில்களில் அமையும் மண்டப அமைப்புகளுள் ஒருவகை (மயமதம்); **a kind of pavilion in a temple.**

[ஒருகா. அகலியம் – ஆகலியம்]

ஆகவம் āgavam, பெ. (n.) போர்; **battle, war.** "ஆகவந் தன்னின் முந்த மனுகுலத் தரசன் பட்டான்" (பாரத. பதின்மூன். 97).

[அகவுதல் = போருக்கழைத்தல். அகவு → ஆகவம் = அறைகூவிச் செய்யும் போர், போர். அகவு – ஆகவம் > வ. ஆஹவ.)]

ஆகவாக āga-v-āga, இடை. (part.) ஆகலாகல் பார்க்க; see āgalāgal.

'ஆகலாகல்' என்பதற்குக் கூறிய விளக்கக் குறிப்புகளை இதற்குங் கொள்க.

[ஆகு → ஆக (முக்.வி.எ.). 'ஆ' முக்.வி.எ.ஈறு. அசை நிலையாய் வரும்போது இவ்வினையெச்சம் இடைச் சொல்லாகும். 'ஆகவாக' அடுக்குத்தொடர்.]

குறிப்பு :- இயல்பான ஒசையில் உடன்பாடு குறிக்குஞ் சொற்களெல்லாம், ஒசை வேறுபட்டே உடன்படாமை யுணர்த்தும்.

ஆகவும் āgavum, வியங்.வி. (v.in the opt. m.) ஆகுக; may it be. 'இத்தன்மம் முட்டில் .... மன்றப் பெறுவதாகவும்'. (S.I.I. iii, 95)

[ஆகு → ஆக (முக்.வி.எ.) → ஆகவும். 'உம்' ஒருவகை வியங்.வி. ஈறு.]

'உம்' என்பது, மடல் போக்குவரத்தில், சிறப்பாக வணிகரிடை, ஒரு வியங்கோள் வினையீறாக வழங்குவது பெரும்பான்மை. எ–டு: நாளைக் காலை 10 மணிக்கு இங்கு வரவும். இக்கடிதம் கண்டவுடன் பட்டியலிற் கண்டபடி பத்தாயிரம் உருபா இதைக் கொண்டு வரும் ஆள்வயங் கொடுத்தனுப்பவும். இத்தகைய ஆட்சி முற்றும் உலகவழக்கே யன்றி, இலக்கணத்தொடு பொருந்துவதன்று. ஆதலால், இதை விட்டுவிட்டு வருக, அனுப்புக என்னும் 'செய்க' வாய்பாட்டு வியங்கோள் வினைகளை ஆள்வதே தக்கதாம்.

ஆகவே āgavē, இ.இடை. (conj.) ஆதலால்; **wherefore,** therefore, consequently. ஆகவே, நீங்களிருவீரும் நட்பமைதியாய்ப் (சமாதானமாய்ப்) போவதே நல்லது; ஆகவே, இதை உடனே நீக்காவிட்டாற் பெருந்துன்பமாக வந்துமுடியும். 2. முழுவதும், அனைத்தும்; **entirely, completly altogether, wholly.**

ம. ஆகவே

[ஆகு → ஆக (முக்.வி.எ.) → ஆகவே. 'ஏ' தேற்றப் பொருளிடைச் சொல்; இங்குத் தன்பொருளை இழந்துள்ளது.]

ஆகளமாய் āgaḷamāy, கு.வி.எ. (adv.) இடைவிடாது; without interruption. "அல்லும் எல்லும் அகலாது ஆகளமாயமர்ந்து நின்று" (பெரிய புராணசா. 20).

[ஒருகா. களம் = இடம். அகளம் = இடமின்மை, இடையீடின்மை. அகளம் → ஆகளம்.]

ஆகளவாய் āgaḷavāy, கு.வி.எ. (adv.) இருக்கும் அளவுக்கு (இராட்.); as much as is (R.).

[ஆகு + அளவு + ஆய் (கு.வி.எ. ஈறு.)]

ஆகன்மாறு āgaṉ-māṟu, இ.இடை. (adv.conj.) ஆகையால்; since, because, considering that. "பிறர்க்கென வாழ்திநீ யாகன் மாறே" (பதிற்றுப். 38:16).

"அன்னன் ஆகன் மாறே யிந்நிலம்
இலம்படு காலை யாயினும்
புலம்பல்போ யின்று பூத்தவென் கடும்பே" (புறநா. 380).

[ஆகு → ஆகல் (தொ.பெ.). 'மாறு' ஏது அல்லது காரணப் பொருளில் வரும் இடைச்சொல்.]

"அனையை யாகன் மாறே
தாயில் தூவாக் குழவி போல
ஓவாது கூஉநின் னுடற்றியோர் நாடே" (புறநா. 4)

என்பதன் உரையில், 'மாறென்பது ஏதுப்பொருள் படுவதோர் இடைச்சொல்' என்று பழையவுரையாளர் கூறியிருத்தல் காண்க.

ஆகா[1] āgā, இடை. (int.) 1. வியப்புக் குறிப்பு; exclamation expressive of wonder. ஆகா! என்ன அழகு இந்த மயில் நடம்! 2. கழிவிரக்கக் குறிப்பு; expressive of remorse or repentance for a wrong committed. ஆகா! என்ன மடத்தனம் செய்துவிட்டேன்! 3. உடன்பாட்டுக் குறிப்பு; expressive of assent. ஆகா! அப்படியே செய்வேன்.

[ஆ + ஆ = ஆவா → ஆகா.]

ஆகா[2] āgā, எ.ம.பெ.எ. (neg. rel. parti.) 1. ஆகுக என்பதன் எதிர்மறை வடிவம்; negative form of 'āguga' 2. நட்பல்லாத, பகையான; unfriendly, inimical. 3. மருத்துவ வுணவிற்கு மாறான; unsuitable for diet. ஆகாவுணவு. 4. உதவாத, பயனற்ற; unhelping, useless. 5. நில்லா; unstably 'பரியினுமாகாவாம் பாலல்ல' (குறள். 376.) 6. முடியாத; impossible, "உள்ளழிக் கலாகா அரண்" (குறள், 421.)

ம. ஆகா

[ஆகு → ஆகாது → ஆகாத → ஆகா (ஈறுகெட்ட எ.ம.பெ.எ.)]

ஆகாக்கடுக்காய் āgā-k-kaḍu-k-kāy, பெ. (n.) மருந்திற் சேர்க்க உதவாத கடுக்காய்கள். அவையாவன; இரட்டைக் காயுடையது, உடைந்தது, நீரில் வெந்தது, சுக்கான்கல் நிலத்திற் கிடந்தது, சேற்றில் விழுந்தது, நெருப்பிற் சுட்டது, முரடாயிருப்பது முதலியன; gall-nut considered unfit for use in medicines, i.e., rejected gall-nuts. They are double seeded galls, broken ones, boiled galls, those found on the limestone soil or fallen in the mire, the scorched and the hard ones, and so on. (சா. அக.).

[ஆகு → ஆகாத → ஆகா + கடு + காய். கடு = கடுக்காய்]

ஆகாக்கலம் āgā-k-kalam. பெ. (n.) குடிநீர்,எண்ணெய் முதலிய மருந்தினங்களைக் காய்ச்சுதற்கோ அவற்றை வைத்துப் புழங்குவதற்கோ பயன்படாத தொண்மாழையால் (நவ லோகத்தால்) செய்த கலம்; metallic vessels unfit to be used in the preparation of medicines such as lotions, ointments etc. or for keeping them in.

ஆகாக்களங்கு āgā-k-kaḷaṅgu, பெ. (n.) (மிருதாறு சிங்கி) 32 செய்நஞ்சுகளுள் (பாஷாணங்களுள்) ஒன்று; poison prepared from lead; Litharge-Plumbi oxidum, one of the 32 kinds of prepared arsenics. (சா.அக.).

[ஆகாத → ஆகா + களங்கு.]

ஆகாத āgāda, எ.ம.பெ. எ. (neg.rel. parti.) 1. கெட்ட; naughty, bad. கெட்ட பிள்ளை. "ஆகாத நாளையில் பிள்ளை பிறந்தால் அண்டை வீட்டுக்காரனை என்ன செய்யும்" (பழ.) 2. ஒன்றுக்கும் உதவாத; useless. "ஆகாத காரியத்துக்குப் போகாதே" (பழ.) 3. முடியாத, இயலாத; impossible, impracticable, unattainable. 4. ஏற்புடையதாகாத; unfit, unsuitable. 5. வலுவில்லாத; weak, delicate.

ம. ஆகாத.

[ஆகு → ஆகரிது → ஆகாது → ஆகாத (எதிர்மறைப் பெயரெச்சம். 'ஆ' பெ. எ. ஈறு)]

ஆகாத கடுக்காய் āgāda kaḍukkāy, பெ. (n.) **ஆகாக் கடுக்காய்** பார்க்க; āgā-k-kaḍukkāy.

ஆகாதது āgādadu, பெ. (n.) 1. முடியாதது; that which is impossible. 2. ஏற்புடைத்தாகாதது; that which is prohibited, unfit or improper.

ஆகாதவன் āgādavan, பெ. (n.) 1. பகைவன்; one who is not friendly, enemy. "ஆகாதவன் குடியை அடுத்துக் கெடுக்க வேண்டும்' (பழ.). 2. பயனற்றவன்; useless person. அவன் காற் காசுக்கும் ஆகாதவன் (உ.வ.). 3. தீயோன் (கிறித்.); wicked man (Chr.)

பட. ஆகாதம.

[ஆகு - ஆகாத + அவன்.]

ஆகாதே āgādē, எ.ம.வி. (neg.v.) 1. (அது) கூடாதே; it should not be indeed; it should not be done indeed. 2. (அது) கேடானதே; it is harmful or dangerous. indeed 3. (அது) பயனற்றதே; it is useless indeed 4. (அது) நிகழாதே; it would not happen indeed எ.ம.வி.எ. (neg. v. parti.) 1. நிகழாமலே; without happening indeed. அது ஆகாதே போய்விட்டது. 2. உதவாமலே; without being fruitful or helpful. அது ஆகாதே போய்விட்டது.

- இடை. (int.) அன்றோ? அல்லவா?; is it not so, shall it not be. "அவன் கழல்கண்டு களிப்பன வாகாதே" (திருவாச. 49:1).

[ஆகு → ஆகரிது → ஆகாது + ஏ (தேற்றேகாரம்).]

ஆகாப்பழம் āgā-p-palam, பெ. (n.) வேப்பம் பழம்; margosa fruit, as unfit for human consumption.

[ஆகு + அரு - ஆகரு → ஆகா. பழு → பழம்.]

ஆகாப்பெற்றம் (ஆகாப்பசு) āgā-p-perram, பெ. (n.) குடிப்பதற்குத் தகாத பாலையுடைய ஆ; cow yielding milk unfit for consumption.

ஆகாப் பெற்றத்தின் ஐவகைகள் :

1. அரணைநோய்ப் பெற்றம்; cow suffering from disease.
2. தாராநோய்ப் பெற்றம்; cow suffering from 'Tārā' disease.
3. வெண்புள்ளிப் பெற்றம்; white spotted or white patched cow.
4. மலந்தின்னிப் பெற்றம்; filth-eating cow.
5. இடுகாட் டெலும்புண்ணிப் பெற்றம்; cow taken to bones found in the grave yard (சா.அக.).

ஆகாப்போன் ā-gāppōn, பெ. (n.) ஆயன், ஆநிரை களைக் காப்பவன்; cowherd.

"ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை" (சிலப். அடைக். 120.)

[ஆ + காப்போன்.]

ஆகாரம் āgāram, பெ. (n.) ஆ என்னும் நெடில்; first long vowel of the Tamil alphabet.

[ஆ + காரம்.]

ஆகாறு āgāru, பெ. (n.) வரும்வழி, வருவாய்; means of income. "ஆகா றளவிட்டி தாயினும்" (குறள். 478.).

ஆகிடந்து āgidandu, இடை. (part.) (இலக்.) நிகழ்கால இடைநிலைகளுள் ஒன்று; (Gram.) sign of the present tense. உண்ணாகிடந்தான் = உண்கின்றான்.

'இனி, உரையிற் கோடலால் உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான் என ஆகிடந்து, ஆவிருந்து என்பனவும் ....நிகழ்காலங் காட்டுமெனவுங்கொள்க' (நன். 143, இராமா. உரை).

[செய்யாக் (செய்து) கிடந்தான் என்னும் வினையெச்சத் தொடர்ச்சொல்லையே பிற்காலத்தார் ஒரு சொல்லாகக் கொண்டு, 'ஆ' என்னும் நிலைச் சொல்லீற்றையும் 'கிடந்து' என்னும் வருஞ்சொல் முதலையும் ஒன்றாயிணைத்து ஒரு நிகழ்கால விடைநிலையாகக் கூறிவிட்டனர் போலும்! 'ஆநின்று', 'ஆவிருந்து', பார்க்க; see **āvirundu.**]

ஆகிய āgiya, இ.கா.பெ.எ. (p.rel.parti.) உண்டான, செய்யப்பட்ட; made of. எ-டு: மண்ணால் ஆகிய குடம். - இடை. (part.) இருபெயரொட்டுப் பண்புத்தொகை யுருபு; particle connecting two nouns in apposition. எ-டு : பாண்டியனாகிய வேந்தன், காவிரியாகிய ஆறு. 2. வியங்கோள் வினைமுற்று; optative fin. verb.

[ஆகு (வி.மு.) 'இ' (இ.கா.வி.எ.உருபு) 'அ' (பெ.எ.உருபு). அ³ பார்க்க. see a³.]

ஆகிரி āgiri பெ. (n.) ஆகரி பார்க்க; see **āgari.**

[ஆவரி - ஆகரி → ஆகிரி → வ. ஆஹிரி. (பரத. இராக. 75) ஆகரி என்பதே திருந்திய அல்லது மூல வடிவமாயின், அது தமிழிசை நூலின் முன்மையையும். ஆரிய இசைநூலின் பின்மையையும் காட்டும். ஆவரி = கதறுதல், புலம்புதல், பெரிதும் வருந்துதல். ஆகரி = நள்ளிரவுப் பண்.]

ஆகிரிநாட்டை āgiri-naṭṭai, பெ. (n.) பண்வகை (பரத. ராக. 102); a melody-type.

[ஆகிரி + நாட்டை.]

ஆகிவா (வரு)-தல் āgivā(varu)-, 18 செ.கு.வி. (v.i.) நன்றாகக் கூடி வருதல். (நெல்லை.); have auspicious progress (Tn.); to come to fruition in the desired way.

ஆகு பார்க்க. see āgu

ஆகு-தல் āgu-, 7. செ.கு .வி. (v.i.) 1. உண்டாதல்; **to become, come to have.** உடம்பெல்லாம் புண்ணாகி விட்டது. 2. அமைதல்; to be. கம்பலை என்னுஞ் சொல்லிற்கு அழுகையரவம் என்பது பொருளாகும். 3. நிகழ்தல்; to happen, occur. உங்கள் மகனுக்குத் திருமணம் எப்போது ஆகும்? 'இன்றைக்கு ஆகிறதுநாளைக்கு ஆகட்டும்' (உ.வ.). 4. வளர்தல்; to grow. நெல் பயிராகிவிட்டது, பையன் ஆளாகி விட்டான். 5. ஆக்கமுறுதல்; to prosper, flourish.. 'ஆகிறதும் பெண்ணாலே அழிகிறதும் பெண்ணாலே.' 6. ஒன்று இன்னொன்றாதல்; transformation of one thing into another. இவ்விருபதாம் நுற்றாண்டிற் காடெல்லாம் நாடாகிவிட்டது. 7. மாறுதல் ; to become, get changed. கரும்பு காசாக வேண்டும். 8. சமைதல்; to be cooked. சோறு ஆகிறது. 9. ஒப்பாதல்; to be equal. 'உயரவுயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா'? 'கடிவாளமும் சேணமும் இட்டாலும் கழுதை குதிரையாகுமா?' (பழ.). 10. இழிதல்; to diminish in value, depreciate. 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா'? (பழ.). 11. உயர்தல்; to appreciate, rise in value. இரண்டாம் உலகப் போரில் இரும்பெல்லாம் பொன்னாகி விட்டது. (உ.வ.). 12. இணக்கமாதல்; to be intimate, close. அன்பில்லாவிடத்து அண்ணனுக்கும் தம்பிக்கும் ஆகுமா? 13. உதவுதல்; to be of use. அவன் ஒன்றுக்கும் ஆகாதவன். (உ. வ.). 14. அடுத்தல், தகுதல்; to befit someone, something. அமைச்சனா யிருந்து கொண்டு இப்படிச் செய்வது உனக்கு ஆகுமா? (உ.வ.) 15. முதிர்தல்; to ripen. காய் பழமாகி விட்டது. (உ.வ.). 16. செய்ய முடிதல்; to be possible. 'உலக முழுதுங் கட்டியாண்டாலும் ஊழிற்குத் தப்ப எவராலாகும்?' (உ.வ.). 17. வினை முடிதல்; (work) to be done or accomplished. இன்று காலை வழிபாடு ஆகிவிட்டது. 18. செய்ய விலக்குண்டிருத்தல்; to be excepted. 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழித்தலாகுமா'? 'தண்ணீரைப் பழித்தாலுந் தமிழைப் பழித்த லாகாது'. (பழ.). 19. செலவாதல்; to be expended, to cost. ஒரு வீடு கட்ட எவ்வளவு ஆகும்?

ம., க. ஆகு; **தெ.** ஆகு, ஆவு; **குட.** ஆக், ஆவு **து.** ஆகு; ஆபி **கோத.** ஆக்; **துட.** ஒங்; **கூ.** ஆவ; **குவி.** ஆய்யலி, ஆனை; **நா.** அண்டு; **கொலா.** அன்; **பிரா.** ஆன், அன்னிங்.

ஒ.நோ: L. augere, to increase. இதில் **auge** என்பதே வினைமுதனிலை; 're' என்பது நிகழ்கால வினையெச்ச (Infinitive) ஈறு..

E. augment v.t. and i, make or become greater, increase.

ME. f. F. augmenter f. LL. augmentare, increase f. **L. augmentum.**

E. augmentation n. enlargement, growth, increase.

E. augmentative n. having the property of increasing;

[Gram. of affix or derived word) increasing in force the idea of the original word (f. F. augmentalif or med. L. augmentativus.]

ஆ, ஆகு என்னும் இரு முதனிலை வடிவுகளுள் எது முந்தியது என்பது பற்றி, இலக்கண ஆசிரியர்க்கு ஆராய்ச்சி பிறந்து இதுவரை ஒரு முடிவிற்கும் வராதிருக்கின்றது. ஆ, ஆகு என்பன போன்றனவே போ, போகு என்பனவும்.

"நச்சினார்க்கினியர் நன்னூலார் முதலாயினார் இயற்கை முதனிலை ஆ, போ என்றே இருக்குமென்றார். திருவள்ளுவர், பரிமேலழகர் முதலாயினார் இயற்கை முதனிலை ஆகு, போகு என்றே யிருக்கு மென்றார்." என்பது சுவாமிநாத தேசிகரின் இலக்கணக் கொத்து உரைக் குறிப்பு (86, உரை).

போ என்பதன் ஈறுமிகையே போகு என்பது. புகு → போ → போகு → போது. இங்ஙனமே ஆ என்பதன் ஈறுமிகையாகவே ஆகு என்பதும் இருத்தல் வேண்டும். இது அவற்றின் புடைபெயர்ச்சியால் வலியுறுத்தப்படும்.

ஆ, ஆகு என்னும் வினைமுதனிலைகளின் புடைபெயர்ச்சி

முதனிலை	முக்கால வினையெச்சம்	முக்காலப் பெயரெச்சம்	முக்கால வினைமுற்று
1. ஆ	(ஆயி) - ஆய்	ஆயிய - ஆயின ஆய - ஆன	ஆயியான் - ஆயினான்
	(ஆவ) - ஆக	ஆகின்ற - ஆகிற	ஆயான் - ஆனான்
	ஆயின்	(ஆவும்) - ஆம்	ஆகின்றான் - ஆகிறான், ஆவான்

2. ஆகு	ஆகி	ஆகிய	ஆகியான்–ஆகினான்
	ஆக	ஆகுகின்ற–ஆகுகிற	ஆகுகின்றான்–ஆகுகிறான்
	ஆகின்	ஆகும்–ஆம்	ஆகுவான்

குறிப்பு:–

1. 'ஆவ' என்பதே 'ஆ' என்னும் முதனிலையினின்று திரிந்த இயற்கையான நி.கா.வி.எ. வடிவம். அதுபின் வ–க போலியால் 'ஆக' என்று திரிந்தது. ஒ.நோ: சா →சாவ →சாக. "சாவ என்னும் செயவென் எச்சத்து" (தொல். எழுத்து. உயிர். 210).
2. 'சாக' என்னும் நி.கா.வி.எ. போலி வடிவினின்றே 'சாகு' என்னும் ஏவலொருமை தோன்றியிருத்தல் போல், 'ஆக' என்னும் நி.கா.வி.எ. போலி வடிவினின்றே 'ஆகு' என்னும் ஏவலொருமையும் தோன்றியிருக்கலாம்.
3. 'ஆகு' என்னும் முதனிலையினின்று திரிந்த வினைமுற்று வடிவங்கள், சற்றுச் செயற்கையாகவும் செய்யுட்கே ஏற்றும் இருத்தலால், 'ஆ' என்னும் முதனிலையே இயற்கையானதா யிருத்தல் வேண்டும்.

[அகைதல் = தளிர்த்தல், செழித்தல். ஆதல் என்னும் சொல்லிற்கு உண்டாதல், வளர்ச்சியடைதல் என்பனவே அடிப்படைப் பொருள்கள் அகு → அகை. ஒ.நோ: முகு→முகை. அகு என்னும் குறிவிணைச் சொல் 'அ' என மருவுவது இயல்பே. ஒ.நோ; பகு–பா. ஆதலால், அகு → ஆ →ஆகு எனத் திரிந்திருத்தல் வேண்டும்.

அகு → அகை என்னும் திரிவை, நுகு →நுகும்பு, புகு→(புகில்)→பொகில்→போகில், முகு→முகம், முகிழ் என்னு ந் திரிவுகளும் வலியுறு த்தும்.]

ஆகுபெயர் āgu–peyar, பெ. (n.) (இலக்.) ஒரு பொருளின் பெயர் அதனொடு தொடர்புள்ள மற்றொன்றிற்கும் தொன்றுதொட்டு அல்லது நீண்ட காலமாகப் பெயராகி வருவது; (gram.rhet.) metonymy and synecdoche. A name or word, which by long usage is secondarily applied to denote something connected with the thing originally denoted by it.

ஆகுபெயர் பல வகைப்படும். அவையாவன:–

எண்	பெயர்	எடுத்துக்காட்டு
1.	பொருளாகுபெயர் அல்லது முதலாகு பெயர்	தாமரை முகம்
2.	இடவாகு பெயர்	ஊர் அடங்கிற்று, தமிழ்நாடு வென்றது.
3.	காலவாகு பெயர்	கோடை விளைந்தது.
4.	சினையாகு பெயர்	தலைக்கு ஒரு பணம் கிடைத்தது.
5.	பண்பாகு பெயர் அல்லது குணவாகு பெயர்	நீலம் சூட்டினாள்.
6.	தொழிலாகு பெயர்	சுண்டல் தின்றான்.
7.	அளவையாகு பெயர் :	
	எண்ணலளவையாகு பெயர்	**நாலும் இரண்டும்** சொல்லுக் குறுதி..
	எடுத்தலளவையாகு பெயர்	ஒரு எடை நிறு.
	முகத்தலளவையாகு பெயர்	உண்பது நாழி.
	நீட்டலளவையாகு பெயர்	உடுப்பது நான்கு **முழம்**
8.	சொல்லாகு பெயர்	அடியார்க்கு நல்லா ருரை சிறந்தது.
9.	இடவனாகு பெயர்	கழல் பணிந்தான்
10.	கருவியாகு பெயர்	இதன் விலை மூன்று **வெள்ளி.**
11.	கருமவாகு பெயர்	வெண்கல **வட்டில்**
12.	வினைமுதலாகு பெயர்	**திருவள்ளுவரைத்** திரும்பத் திரும்பக் கற்க வேண்டும்.
13.	உவமையாகு பெயர்	மூத்தது **மோழை,** இளையது **காளை.**
14.	பண்பியாகு பெயர்	சாம்பல் **வாழை,** கயற்கொடி.

முதலாகு பெயர் என்பது சினையாகு பெயர்க்கும், இடவாகு பெயர் என்பது இடவனாகு பெயர்க்கும், பண்பாகு பெயர் என்பது பண்பியாகு பெயர்க்கும், கருவியாகு பெயர் என்பது கருமவாகு பெயர்க்கும் நேர் எதிராகும்.

இடவனாகு பெயரைத் தானியாகு பெயர் என்றும், கருமவாகு பெயரைக் காரியவாகு பெயர் என்றும், வினைமுதலாகு பெயரைக் கருத்தா வாகுபெயர் என்றும் வடசொல்லாற் குறிப்பர்.

பண்பியாகு பெயர் என்பது, ஒரு பண்பையுடைய பொருளின் பெயர் அப்பண்பிற்கு ஆகிவருவது.

சில ஆகுபெயர்கள், என்றும் அடையும் அடைகொளியுமாக இரு சொல்லாகவேயிருக்கும். அவை அடையடுத்த ஆகுபெயர்

எனப்படும். எ-டு: வெற்றிலை நட்டான், மருக்கொழுந்து சூடினாள். இவற்றைத் தொல்காப்பியர் இருபெயரொட் டாகுபெயர் என்பர்.

சில ஆகுபெயர்கள், ஒரு முறை மட்டுமன்றிப் பன்முறையும் தொடர்ந்து வெவ்வேறு பொருளுக்காகியிருக்கும். அவை, ஆகிவந்த முறைத் தொகையின்படி, இருமடியாகு பெயர், மும்மடியாகு பெயர், நான்மடியாகு பெயர் எனப் பெயர் பெறும்.

எ-டு: புதிதாய் வந்தவர்க்கு விரும்பியளிக்கப்படும் சிறப்புணவாகிய விருந்தின் பெயர், முதற்கண் விருந்தினர்க்கும் பின்னர்ப் புதுமைக்கும் ஆகி வந்தது இருமடியாகு பெயர் . கார் என்னும் கருமைப்பெயர், முகிலுக்கும் மழைக்கும் மழைக்காலப் பயிருக்கும் ஆகிவரின் மும்மடி யாகுபெயர். தோகை என்பது, தொங்கும் பெரும்பயிர்த் தாளுக்கும், மயிற்றோகைக்கும் மயிலுக்கும் பெண்ணுக்கும் ஆகிவரின் நான்மடியாகு பெயர்.

தொல்காப்பியர், ஆகுபெயர்வகைகளைப் பற்றி வேற்றுமை மயங்கியலில்,

"முதலிற் கூறும் சினையறி கிளவியும்
சினையிற் கூறும் முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
வினைமுத லுரைக்குங் கிளவியொடு தொகைஇ
அனைமர பினவே ஆகுபெயர்க் கிளவி"
(தொல்.சொல். 110)

"அவைதாம்,
தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியான் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண் பினவே நுவலுங் காலை"
(தொல். சொல். 111)

"வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்".
(தொல். சொல். 112)

"அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி
உளவென மொழிப உணர்ந்திசி னோரே"
(தொல். சொல். 113)

"கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே."
(தொல். சொல். 114)

என்று கூறினார். அவற்றுள், தற்கிழமையாக வருவதைத் தம்மொடு சிவணல் என்றும், பிறிதின் கிழமையாக வருவதைப் பிறிது பொருள் சுட்டல் என்றும், பிரித்துக் கூறினார். அவற்றைச் சிவஞானமுனிவர், முறையே, விடாத வாகுபெயர், விட்ட வாகுபெயர் என்றார். தெங்கு தின்றான், குழிப்பாடி நேரிது என்பன அவற்றிற்கு எடுத்துக்காட்டாம். குழிப்பாடி என்பது அப்பெயர் கொண்டவூரில் நெய்யப்பட்ட ஆடை. விட்டவாகு பெயர் விடாதவாகு பெயர் என்னும் பாகுபாட்டைத் தழுவியே, பிற்கால மேலை யணிநூலார் metonymy, synecdoche என்று அணிப்பெயர் இட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

தொல்காப்பியர் கூறியவற்றையே,

"பொருள்முத லாறோ டளவைசொல் தானி
கருவி காரியங் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன வாகு பெயரே." (290)

என்று நன்னூலார் தொகுத்துஞ் சுருக்கியும் கூறினார்.

[ஆ → ஆகு + பெயர் = ஆகுபெயர் (வினைத் தொகை.).]

ஆகும்கலம் āgum-kalam, பெ. (n.) 1. குடிநீர், மருந் தெண்ணெய், நெய் முதலியவற்றைக் காய்ச்சுவதற் காகப் பயன்படுத்தும் மட்பாண்டம்; earthen vessel used for preparing lotions, medicated oils, ghee etc. 2. காந்தக்கிண்ணி; bowl made of magnet. (சா.அக.).

[ஆகு → ஆகும் (முக். பெ. எ.).]

ஆகுருவி ākuruvi, பெ. (n.) **ஆய்குருவி** பார்க்க; see āikuruvi.

ஆகுலி āguli, பெ. (n.) 1. சிற்றரத்தை (தைலவ தைல. 119); bazaar drug called smaller or lesser galangal. 2. ஆவிரைப் பொது; senna shrub in general. (சா.அக.).

ம. ஆகுலி

ஆகுளி āguli, பெ. (n.) ஒருவகைச் சிறுபறை; a kind of small drum. "நுண்ணீ ராகுளி யிரட்ட" (மதுரைக். 606).

ம. ஆகுளி

ஆகுளி என்பது ஒருகால் குடுகுடுப்பையா யிருக்கலாம்.

ஆகூழ் āgūḻ, பெ. (n) ஆக்கத்திற்குக் காரணமான நல்வினைப் பயன் அல்லது தெய்வ ஏற்பாடு; destiny or providence that causes prosperity. "ஆகூழாற் றோன்று மசைவின்மை" (குறள், 371).

[ஆகு+ஊழ்=ஆகூழ் (வி.தொ.).]

ஆகைச்சுட்டி āgai-c-cutti, இ. இடை. (conj.) ஆகையால் (ஈடு, 7:10:8); therefore.

ஆகு→ஆகை (தொ.பெ.). 'ஐ' தொ.பெ.ஈறு. இனி, ஆ + கை – ஆகை என்றுமாம். 'கை' தொ.பெ.ஈறு. சுட்டு → சுட்டி (இ.கா.வி.எ.). 'இ' இ.கா.வி.எ.ஈறு.

ஆகைச்சுட்டி என்னுந் தொடர்ச் சொல் ஆகையால் என்று பொருள் கொண்டு ஒருசொற்றன்மைப்பட்டு இடைச் சொல்லாயிற்று.

ஆகையால் āgaiyāl, இ. இடை. (conj.) ஆதலால்; therefore. இங்கே புகை யெழுகிறது; ஆகையால்

நெருப்பிருத்தல் வேண்டும். "ஆகையா லகிலமெல்லா மவனென்கை தெரிந்த தன்றே" (கந்தபு. மேரு. 26).

ம. ஆகயால்; **க.** ஆதுதரிந்த; **பட.** அதெந்த

[ஆகை + ஆல். 'ஆல்' ஏதுப்பொருள்படும் 3ஆம் வேற்றுமையுருபு 'ஆகை' என்பதற்கு, முந்தின சொல்லின்கீழ் உரைத்த குறிப்பை இங்கும் கொள்க.]

ஆகையினால் āgaiyiṉāl, இ.இடை. (conj.) **ஆகையால்** பார்க்க; see āgaiyāl

ம. ஆகயினால்

ஆகோசனம் ākōšaṉam, பெ. (n.) கோவுரசனம்; bezoar. "ஆகின்ற கற்பூர மாகோசனம்" (திருமந். 1368).

கோ = ஆ (பசு). உரசு + அனம் = உரசனம். உரசு + அனை = உரசனை. மாத்திரையும் மருந்துக்கட்டியும் உரசி நோயாளிக்குக் கொடுக்கப்படுவதனால் ஆவயிற்றி லிருந்து எடுக்கப்படும் மஞ்சள் மருந்துக்கட்டி கோவுரசனம் அல்லது கோவுரசனை எனப்பட்டது.

கோவுரசனம் → கோரோசனம். கோவுரசனை → கோரோசனை. கோரோசனம் → கோராசனம். இதில் கோ என்னும் சொற்பொருள் மறைந்துவிட்டதனால், மீண்டும் ஆ என்னும் அதே பொருட்சொல் முன்சேர்த்து ஆகோசனம் என்று சொல்லப் பட்டது. அரைஞாண் என்பதில் ஞாண் என்னும் சொற்பொருள் மறைந்தபின், கயிறு என்னும் அதன் மறுபெயர் சேர்த்து அரைஞாண் கயிறு என்று வழங்குவதை நோக்குக.

'கோ' தென்சொல்லே என்பதைக் கோ என்னும் சொல்லின் கீழ்க் காண்க.

ருச் (ruc) என்னும் வேரினின்று திரிந்து விளங்குவது (பிரகாசிப்பது) என்று பொருள்படும் ரோசன (rocana) என்னும் வடசொல்லை உரசனம் (உரசனை) என்னும் தென்சொல்லிற்கு மூலமாகக் காட்டுவது பொருந்தாது.

ஆகோள் ā-kōl, பெ. (n.) (இலக். புறப்.) போரைக் கருதிய வேந்தன் ஏவிய வெட்சிமறவர் பகையரசனின் நாட்டிலுள்ள ஆநிரைகளைக் களவிற் கவர்தல்; (gram. puṟap.) theme of seizing the foe's cattle (herds of cows), as a prelude to or declaration of war.

"அகத்திணை மருங்கின் அரில்தப வுணர்ந்தோர்
புறத்திணை யிலக்கணம் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே"
(தொல். பொருள். 59)

"வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந் தோம்பல் மேவற் றாகும்."
(தொல்.பொருள். 60)

"வென்றார்த்து விறன் மறவர்
கன்றோடும் ஆதழீஇ யன்று"
(புறப்.வெட்சி 8)

[அகம் என்னும் காதலல்லாத புறப்பொருளாகிய அரசியற் போர்வினைபற்றிய ஏழு திணைகளுள் முதலதான ஆநிரை கவர்தலும் மீட்டலுமாகிய இருபகுதிப்பட்ட வெட்சியின் முற்பகுதியைச் சேர்ந்த 14 துறைகளுள் ஏழாவது ஆகோள் என்பது. ஆ = பசு. கோள் = கொள்கை, கவர்கை. 'ஆ' தென்சொல்; 'பசு' வடசொல். கொள் → கோள் (மு.தி.தொ. பெ.). இங்குக் கூறிய போர்ச் செய்தி பண்டைத் தமிழ்வேந்தர் வழக்கு.]

ஆங்க āṅga, இடை. (part.) 1. அவ்வாறு, அதுபோல என்று பொருள்பட்டு வினைச்சொல்லோடு கூடி வரும் உவமவுருபு; sign of comparison generally used with verbs. "கயநா டியானையின் முகன மர்ந்தாங்கு" (தொல். பொருள். உவம. 11. உரை). 2. அவ்வாறு என்னும் பொருளை யிழந்து பெரும் பாலும் அசைநிலையாய் நிற்கும் உரையசைச் சொல்; sign of comparison which has lost much of its signification and is almost an expletive. 'ஆங்கக் குயிலுமயிலுங் காட்டி' (தொல். சொல். 272, உரை.).

"அன்ன ஆங்க மான இறப்ப
என்ன உறழத் தகைய நோக்கொடு
கண்ணிய வெட்டும் வினைப்பா லுவமம்"
(தொல். பொருள். 283)

"ஆங்க வுரையசை" (தொல். சொல். இடை. 29.)

[ஆ (சேய்மைச் சுட்டு) → ஆங்கு + அ (ஈறு.) ஆங்க (உவமவுருபு).]

ஆங்கண் āṅgaṇ, கு.வி.எ. (adv.) அவ்விடத்து; in that place. "கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்" (புறநா. 15).

[ஆ (சே.சு) → ஆங்கு + அண் = ஆங்கண். 'அண்' ஓர் இடப்பொருளீறு. ஒ.நோ: அவண், இவண், உவண், எவண்.]

இனி நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பிய வுரையில்,

"வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்
கொல்வழி யொற்றிடை மிகுதல் வேண்டும்"
என்னும் புணரியல் நூற்பாவின் (12) கீழ்,

'தங்கண், நங்கண், நுங்கண், எங்கண் என மெல்லொற்று மிக்கது. இவற்றிற்கு நிலைமொழி மகரக்கேடு உருபியலிற் கூறுப. ஆங்கண் ஈங்கண் ஊங்கண் என்பன சுட்டெழுத்து நீண்டு நின்றன. இவற்றிற்கு ஒற்றுக்கேடு கூறுதற்கு ஒற்றின்று.' என்றும்,

"நும்மெ னிறுதி யியற்கை யாகும்" (தொல். எழுத்து. 188) என்னும் உருபியல் நூற்பாவின்கீழ், நும்மை, நும்மொடு, நுமக்கு, நும்மின், நுமது, நுங்கண் என வரும் என்றும் "நுங்க

ணென்பதற்கு, மேலைச்சூத்திரத்து 'மெய்' என்றதனான் மகரவொற்றுக் கெடுத்து, 'வல்லெழுத்து முதலிய' என்பதனான் மெல்லொற்றுக் கொடுக்க என்றும்,

"தாம்நா மென்னு மகர விறுதியும்
யாமெ னிறுதியு மதனோ ரன்ன
ஆஎ ஆகும் யாமெ னிறுதி
ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்
ஏனை யிரண்டு நெடுமுதல் குறுகும்" (தொல். எழுத்து. 189).

என்னும் உருபியல் நூற்பாவின்கீழ்,

மெய்யென்றதனாற் பிறவயின் மெய்யுங் கெடுக்க. தங்கண் நங்கண் எங்கண் என ஏழனுருபின்கண் மகரங் கெடுத்து, 'வல்லெழுத்து முதலிய' (எழுத்.114) என்பதனான், மெல்லெழுத்துக் கொடுக்க என்றும், உரைத்தார். அவர் கருத்துப்படி,

தம் + கண் → த + கண் → தங்கண், ஆ + கண் = ஆங்கண் என்று புணர்ந்திருக்க வேண்டும். அங்ஙனம் புணர்தல் இயற்கைக்கு மாறாயிருத்தலை நோக்குக.

ஆங்கு + அனம் = ஆங்கனம் → அங்கனம் → அங்ஙனம் → அங்ஙன் என்னும் தொடர் புணர்ச்சித் திரிபையும் நோக்குக.

இனி, இயற்கையாக நீண்டிருந்த சுட்டே பின்னர்க் குறுகிற் றென்பது இக்கால மொழியாராய்ச்சியாளர்க்கே புலனாம்.

ஆங்கனம் āṅgaṉam, கு.வி.எ. (adv.) அவ்வாறு, அவ்வகை, அதுபோல்; in that manner, like that , thus, so. "ஆங்கனம் ஆகிய ஆதிரை கையால்" (மணிமே. 16:128).

[ஆ (சே.சு.) → ஆங்கு → ஆங்கனம். 'அனம்' ஓர் ஈறு.]

ஆங்கு →ஆங்கனம் →அங்கனம் →அங்ஙனம் →அங்ஙன், ஈங்கு →ஈங்கனம் →இங்கனம் →இங்ஙனம் →இங்ஙன், யாங்கு →யாங்கனம் →யாங்ஙனம் → யாங்ஙன், எங்கு →எங்கனம் →எங்ஙனம் →எங்ஙன் என்று திரிந்திருப்பதால், திரிபு வடிவங்களினின்று ஙனம் அல்லது ஙன் என்னும் இறுதிப் பகுதிகளைச்செயற்கையாகப்பிரித்து, இயற்கை வடிவான தனிச் சொற்களாகக் காட்டுவது பொருந்தாது. அவ்வாறு, அவ்வகை, அப்படி என்னும் கூட்டுச் சொற்களை அந்த ஆறு, அந்தவகை, அந்தப்படி என்று சொற்பிரித்துச் சுட்டு விரித்துப் பொருள் கூறுவதுபோல், அங்ஙனம்என்பதை அந்தஙனம்என்றுபிரித்தும் சுட்டு விரித்தும் பொருள் கூற இயலாமை காண்க. ஆகவே,

"சுட்டியா எகர வினாவழி அவ்வை
ஒட்டி ஙவ்வும் முதலா கும்மே"

என்னும் நன்னூல் நூற்பாவை (எழுத். 106) இலக்கண மாகக் கொண்டு, ஆங்கனம் என்பதை ஆ + கனம் என்றோ, அங்ஙனம் என்பதை அ + ஙனம் என்றோ, அங்ஙன் என்பதை அ + ஙன் என்றோ பிரிப்பது தவறென அறிக.

ஆங்காங்கு āṅgāṅgu, கு.வி.எ. (adv.) அவ்வவ்விடத்தில்; there and there severally. என் வழிப்போக்கில் நண்பரை யெல்லாம் ஆங்காங்குக் கண்டு அளவளாவினேன். (உ.வ.).

[ஆ (சே.சு.)→ ஆங்கு. ஆங்கு + ஆங்கு = ஆங்காங்கு (அடுக்குத் தொடர்).]

ஆங்காரம் āṅgāram, பெ. (n.) அகங்காரம் பார்க்க; see agaṅgāram

ஆங்காலம் āṅgālam, பெ. (n.) வறுமையும் நோயும் நீங்கி எடுத்த வினையெல்லாம் கைகூடிச் செல்வம் பெருகும் நற்காலம்; போங்காலம் என்பதற்கு எதிர்; time when fortune favours and all things prove successful, time of prosperty, opp. to pōṅgālam.

"ஆங்காலம் ஆகும், போங்காலம் போகும்" (பழ.).
"ஆங்கால மாகு மவர்க்கு" (நல்வழி, 4).

[ஆ (முதனிலை) → ஆவும் (ஆகும்) → ஆம் (மரூஉ)+ காலம். 'உம்' எ.கா.வி.ஈறு. காலம் பார்க்க; see kālam.]

ஆங்கு[1] āṅgu, சு.வி.எ. (demons.adv.) 1. அவ்விடம்; there. "ஆங்குறு குமரப் புத்தேள்" (கந்தபு. அயனைச் சிறைநீ. 42). 2. அப்போது, அக்காலத்தில்; then, at that time or during that period. "ஆங்கெழுசமங் கடந்த எழுவுறழ் திணிதோள் எழுவர்" (சிறுபாண். 111-2). 3. அப்படி; so, in that manner. "ஆங்கினி தொழுகுமதி பெரும" (புறநா. 24)... இடை. (part.) 1. ஓர் உவமவுருபு; sign of comparison. "கொண்மூ மாகவிசும்பின் நடுவுநின் றாங்கு" (புறநா.35). 2. ஓர் ஏழாம் வேற்றுமை யுருபு; a loc. ending. "நின்னாங்கு வருவது போலும்" (மணிமே. 11:47). 3. ஓர் அசைநிலை; expletive in poetry. 'ஆங்கென்பது அசைநிலை' "ஊடலின் உண்டாங்கோர் துன்பம்" (குறள், 1307, பரிமே. உரை).

ம. ஆங்கு; க., பட. அல்லி.

[ஆங்கண் → ஆங்கு.]

ஆங்கு[2] **-தல்** āṅgu-, 7 செ.கு.வி. (v.i.) போதியதாதல்; to suffice, to be sufficient. குழந்தைக்குப் பால் ஆங்கவில்லை. (சென்னை வ.).

ம. ஆங்ஙித்தூங்ஙுக

[ஒருகா. ஆன் →ஆன்கு →ஆங்கு. ஆனுதல் = போதியதாதல்.]

ஆங்ஙனம் āṅṅaṉam, சு.வி.எ. (adv.) அவ்வாறு, அதுபோல்; in that manner, in the same way.

ம. அங்ஙனெ; **க.** அகங்கெ; **மா.** அந்தெகெ. **பிரா.** ஏங்கி; **தெ.** அட்டெ; **து.** அஞ்சனெ; **கோண்.** ஆகணெ; **பட.** அத்தெ; **துட.** அகிச; **குட.** அன்னனெ.

*[ஆங்கு → ஆங்கனம் → ஆங்ஙனம். **ஆங்கனம்** பார்க்க;* see āṅgaṉam.]

"ஆங்கனம் விரிப்பின் அளவிறந் தனவே
பாங்குற வுணர்ந்தோர் பன்னுங் காலை".
(தொல்.செய்.50).

என்னும் நூற்பாவின் எதுகையை நோக்குக. 'ஆங்கனம் விரிப்பின்' என்பதே சரியான பாடம்.

ஆச்சல் āccal, தொ.பெ. (vbl.n.) பாய்தல்; sudden violent rush, spring, gust, impulse.

ம. ஆச்சுக

[ஆய்தல்-குத்துதல், குத்துதற்போல் பாய்தல் ஒருகா. ஆய் → ஆய்ச்சல் → ஆச்சல். ஆய்ச்சல் பாய்ச்சல் என்பது ஒருமரபிணைச் சொல்.]

ஆச்சனை āccaṉai, தொ.பெ (vbl.n.) தொகை முழுவதுஞ் செலவழிக்கை (தஞ்சை.); spending the whole amount. (Tj.)

[ஆயிற்று → ஆச்சு. எனல் → எனை. 'ஆச்சு' → 'எனல்', பார்க்க; see āccu, eṉal.]

"ஆச்சென்றா லைந்நூறு மாகாதா" என்று அதிமதுரப் பாவரையர் பாட்டில் வந்திருப்பினும், ஆச்சு என்பது கொச்சைச் சொல்லே.

ஆச்சா āccā, பெ. (n.) 1. சாலமரம்; sal, l.tr., shorea

robusta. 'ஆமணக்கு விதைத்தால் ஆச்சா முளைக்குமா?' (பழ.), 'ஆமணக்கு நட்டு ஆச்சா ஆக்கலாமா?' (சீவக. 2613, நச். உரை). (செ.அக). 2. ஒருமரம்; ebony tree, Ceylon ebony, diospyros ebenaster. 3. காட்டுடுகு மரம். இதன் இலையின் இருபக்கமும் மெதுவாயும், இலைகள் மாறி மாறியும் பூக்கள் சிறியவையாயும்-உள்ளே மஞ்சள் நிற முடனும், பட்டை ஆழம் பாய்ந்த வரிகள் கூடியும் இருக்கும். அடிமரத்திற் குத்த, ஒருவகை எண்ணெய்ப் பசை வெளிவரும். இது சாம்பிராணியைப் போலிருந்தாலும் அதற்கு ஈடாகாது. இதற்கு மடையன் சாம்பிராணி என்று பெயர்; forest tree, known as false frankincense–Hardwickia binata. The leaves alternate, very smooth on both sides and flowers small and yellowish within. From notches made in the heart of the trunk, an Oleo–resin called false frankincense is obtained. It is balsamic in its properties resembling copaiba balsam, for which it is an efficient substitute.

NOTE:– The other species are– Bauhinia racemosa and Diospyros melanoxylon. (சா. அக.).

மறுவ. சாலமரம்; **க.** ஆசு, ஆச, ஆர்செ

[ஆ → ஆச்சா.]

இம்மரம் ஒலகம் (நாதசுரம்) செய்யப்பயன்படும். சரிகமபதநி என்னும் ஏழு சுரங்களின் பழந்தமிழ் வடிவம் ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ ஆதலின் முதற்சுரத்தின் பெயர் இம்மரத்திற்கு அமைந் திருக்கலாம்.

ஆச்சாசிணி āccāsiṉi, பெ. (n.) **ஆச்சா** பார்க்க. see āccā (சா.அக.).

ஆச்சாட்டுப்பயிர் āccāṭṭu-p-payir, பெ. (n.) சிற்றீரமுள்ள நிலத்தில் விளைவிக்கும் பயிர் (வின்.); crop grown on land that is but slightly humid.

[ஒருகா. அரைத்தீச்சற்காடு + பயிர் → அரைத்தீச்சற் காட்டுப் பயிர் → ஆச்சாட்டுப் பயிர். தீச்சல்=காய்தல், கருகுதல். 'ஆச்சாடு' மரூஉ.]

ஆச்சாட்டு விதைப்பு āccāṭṭu-vidaippu, பெ. (n.) சிற்றீரமுள்ள நிலத்து விதைப்பு (வின்.); sowing on land whose humidity is poor. **ஆச்சாட்டுப் பயிர்** பார்க்க; see āccāṭṭu-p-payir

[விதை → விதைப்பு (தொ.பெ.) 'பு', ஈறு.]

ஆச்சாடு āccāḍu, பெ. (n.) சிற்றீரம்; moisture.

ஆச்சாள் āccāḷ பெ. (n.) தாய்; mother. "எங்களுடை யாச்சாளுக் கூறுகா யாகாமல்" (தனிப்பா :42:83).

[ஆத்தை → ஆத்தா → ஆத்தாள் → ஆச்சாள்.]

விளிவடிவு எழுவா யானதும் பெண்பாலீறு கொண்டதும் தகரம்சகரமாகத்திரிந்ததும் ஆக, மும்மடி வழுவுள்ளது இச்சொல்.

ஆச்சி āčci, பெ. (n.) 1. தாய்; mother. (ஈடு, 4:3:பிர.). 2. பாட்டி (இ.வ.); grandmother (Loc.). 3. மூத்த

அக்கை (இ.வ); eldest sister (Loc.). 4. கண்ணிய முள்ள பெண்டிரைக் குறிக்குஞ் சொல்; term of respect used in addressing respectable women. 'ஆச்சி ஆச்சி மெத்தப் படித்துப் பேசாதே' (பழ.).

ம.ஆச்சி; **கொலா.** ஆசி; Sinh. āchchi (grandmother)

[அத்தன் (தந்தை) →அச்சன் →அச்சி (தாய்) →ஆச்சி. இனி, ஐ = அப்பன். ஐ →ஆய் = அம்மை. ஆய் →ஆய்ச்சி →ஆச்சி என்றும் ஆம்.]

ஆச்சிபூச்சி ācci–pūcci, பெ. (n.) சிறுவர் விளை யாட்டு வகை (வின்.); play among children.

'ஆச்சிபூச்சி' என்று ஒலித்தவாறு சிறுவர் விளையாடும் சடுகுடு விளையாட்டு.

மறுவ. சடுகுடு, கபடி, பலிஞ்சடுகுடு .

[ஆச்சி + பூச்சி.]

ஆச்சியாடு ācci–yādu, பெ. (n.) ஏழையிடையன் பிற ஆயர் மந்தைகளினின்று இரந்து பெறும் ஆடு; sheep acquired by a poor shepherd by begging from other shepherds owning flocks.

[ஒருகா. ஆயர் ஈத்த அல்லது அளித்த ஆடு.]

யாசகஆடு என்று மூலங்காட்டுவது பொருத்த மாய்த் தோன்றவில்லை.

ஆச்சிலை ā–c–cilai, பெ. (n.) கோமேதகம் என்னும் ஒளிக்கல் (சங். அக.); cinnamon stone.

ம. ஆயி; **க.** ஆயித்து, ஆய்த்து; **தெ.** ஆயிந்தி

[ஆ + சிலை. 'ஆ' பார்க்க.சிலை = கல்]

ஆச்சு āccu, 5 செ.கு.வி.முற்று (v.i. fin.) முடிந்தது; finished, done.

ம.ஆயி; **க.** ஆயித்து, ஆய்த்து; **தெ.** ஆயிந்து; **பட.** ஆத்து.

[ஆ →ஆயியது →ஆயினது →ஆயிற்று →ஆச்சு.]

தாயுமான அடிகளின் சுகவாரிப் பதிகம் 9ஆம் மண்டிலத்தில் (விருத்தத்தில்) வரும் "போதிப்பதாச்சு" என்னுந் தொடருக்குப்'போதிப்பதாயிற்று'என்றேஉரையாசிரியர்பொருள் கூறுவதால், அத்தொடரிலுள்ள 'ஆச்சு' என்னுஞ் சொல் உரையசை யென்று கொள்ள இடமில்லை.

'ஆச்சு' என்பது கொச்சைச் சொல்லேனும், முனிவர் பாடல்களிலும் புலவர் தனிப்பாடல்களிலும் வருவதால், வழுவமைதியாகவேகொள்ளப்படும். ஆயின் அதைப்பிறர் ஆளல் ஆகாது.

ஆச்சுவரி āccuvari, பெ. (n.) அரசு, அரசமரம் (மூ.அ.); pipal tree, Ficus religiosa.

ஆசடை āśadai, பெ. (n.) நீளவாட்டத்தில் அமைக்கும் வீட்டின் முகட்டு உத்தரம் (இ.வ.); beam placed lengthwise in a roof.

[ஆசு + அடை.]

ஆசல் āśal, பெ. (n.) மதிப்பு (இ.வ.); value (Loc.) (செ.அக.)

ம.ஆகுதி.

ஆசலை āśalai, பெ. (n.) ஆடாதோடை (இராசவைத்.); Malabar–nut. (செ.அக.) – small shrub, winter–cherry – Adhatoda vasica alias A. pubescens.

க. ஆசலு

ஆசவக்கடமை āśavak-k-adamai, பெ. (n.) கள்ளின்மீது விதிக்கப்பட்ட வரிவகை; tax collected on toddy.

[ஆசவம் + கடமை.]

ஆசவம் āśavam பெ. (n.) 1. கள்; toddy (பிங்.) 2. விரைவு; quickness.

ஆசற்றார் āśarrār பெ. (n.) குற்றமற்றார்; one who is free from fault.

[ஆசு + அற்றார்.]

ஆசற āśara, கு.வி.எ. (adv.) 1. குற்றமில்லாது; faultlessly. 2. குறையில்லாது, நிறைவாக, முழுதும்; entirely, fully. "சொல்லப்புகுந்தபொருளை ஆசறக்கூறாது" (தொல். பொருள். 664, உரை).

[ஆசு = குற்றம், குறை. அறு →அற (நி.கா.வி.எ.) நீங்க.]

ஆசறு-தல் āśaru–, 20 செ.கு.வி. (v.i.) 1. குற்றம் நீங்குதல்; to be free from blame, or blemish. "ஆசறு நல்லநல்ல அவை நல்ல" (தேவா. 221.1). 2. முடிதல்; to end, terminate, to be finished. "ஊழிசென் றாசறுங் காலத் தந்நிலையதாக" (கம்பரா. சரபங்.30).

[ஆசு = குற்றம், குறை. அறுதல் = நீங்குதல்.]

ஆசறுதி āśarudi, பெ. (n.) கடைசி; end, extremity, termination. 'கொற்ற மங்கலத்துக்கு எலலை யாசறுதியி னட்ட திருவாழிக்கல்' (S.i.i.i, 87).

[ஆசறுதல் = முடிதல். ஆசறு →ஆசறுதி (தொ.பெ.) 'தி' தொ. பெ. ஈ.]

ஆசறுதிப் பல் āśarudi–p–pal, பெ. (n.) கடைவாய்ப்பல்; wisdom tooth, the last in growing..

ஆசறுதி, பல் பார்க்க; see āsarudi, pal.

ஆசனி[1] āšani, பெ. (n.) பலா வகை; a kind of jack tree.

[ஆசினி பார்க்க; see āšini]

ஆசனி[2] āšani, பெ. (n.) பெருங்காயம்; asafoetida (சங். அக.).

ஆசாட்டம்[1] āšāttam, பெ. (n.) தெளிவற்ற தோற்றம்; indistinct appearance (W.).

[ஆசு + ஆட்டம். ஆடு → ஆட்டம் (தொ.பெ.) 'அம்' தொ.பெ.ஈறு.]

ஆசாட்டம்[2] āšāttam, பெ. (n.) அழுகை; crying (சா.அக.)

[ஆசாடு → ஆசாட்டம் (தொ.பெ.) 'அம்' தொ. பெ.ஈறு.]

ஆசாடு-தல் āšādu, 5 செ.கு.வி. (v.i) அழுதல்; to weep.

[அசைதல் = வருந்துதல், அழுதல். அசை + ஆடு = ஆசாடு.]

ஆசாநங்கை āšā-nangai, பெ. (n.) ஆதளை (காட்டா மணக்கு); adul oil-plant, Jatropha glandulifera (சா.அக.).

[ஆதளை → ஆதாள் → ஆசாள் + நங்கை.]

ஆசாரக் கோவை āšāra-k-kōvai, பெ. (n.) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று; 100 பாடல்களைக் கொண்டது; பெருவாயின் முள்ளியார் எழுதியது; classic work treating of religious, social and moral conduct in 100 stanzas by Peruvāyin-mulliyār, one of padinen-kīl-k-kanakku.

ஆசாரி āšāri, பெ. (n.) பொற்றொழில், தச்சுத் தொழில் முதலியன செய்யும் கம்மாள இனத்தார்; title of respect applied to head masons and carpenters, an architect.

[ஆசிரியன் → ஆசாரி]

ஆசான் āšān, பெ. (n.) 1. ஆசிரியன்; teacher. "ஆசானுரைத்த தமைவரக் கொளினும்" (நன். பொதுப்பா. 44). 2. குரு, குரவன், சமயவாசிரியன்; religious preceptor, spiritual guide. 3. பூசாரி; priest. "அறக்களத் தந்தண ராசான் பெருங்கணி" (சிலப். 28:222). 4. மூத்தோன் (திவா.); senior, elderly man. 5. முருகன் (பிங்); Lord Murugan. 6. வியாழன் (பிங்.); Jupiter, considered to be the preceptor of gods. 7. அருகன் (சூடா.); Arhat. 8. (இசை) பாலை யாழ்த்திற வகை (பிங்.); (Mus.) ancient secondary melody-type of the Pālai class 9. (இசை) காந்தாரம், சிகண்டி, தசாக்கரி, சுத்த காந்தாரம் என்னும் நால்வகைப் பண்ணியல்; four kinds of secondary melody types, viz., kāndāram, šikandi, tasakkari, sutta kandaram. 'ஆசான்சாதி நால்வகையாவன; ஆசானுக்கு அகச்சாதி காந்தாரம், புறச்சாதி சிகண்டி, அருகுசாதி தசாக்கரி, பெருகுசாதி சுத்த காந்தாரமெனக் கொள்க'.(சிலப். 13:112, அடியார். உரை).

ம. ஆசான்.

[ஆசிரியன் → ஆசான்.]

ஆசான்றிறம் āšānriram, பெ. (n.) 1. (இசை) குரற்குரிய திறம்; (Mus.) a kind of musical note or variation of the first note of the Indian gamut. "குரற்கு ரியதிற மாசான் றிறமே". (பிங். 6:322). 2. பாலையாழ்த்திறம்; group of secondary melody type of the Pālai class.

[ஆசான் + திறம்]

ஆசானங்கை āšānangai, பெ. (n.) காட்டாமணக்கு (சித். அக.); common physic nut.

ஆசி-த்தல் āši-, 11 செ.குன்றாவி. (v.t.) விரும்புதல்; to desire, wish earnestly, long for. "ஆசித்தார் மனதிற் புகுமுத்தம்" (திருப்பு.. 403).

[ஆசு = பற்று, விருப்பம். ஆசு → ஆசி → ஆசை.]

வடமொழியில் ஆசா என்னும் பெயரேயன்றி, ஆசி என்னும் வினையில்லை. இரு மொழியிலும் சகரம் ஒலியொத்திருப்பது கவனிக்கத்தக்கது.

வடமொழியாளர் ஆசா என்னும் பெயர்ச்சொலிற்குக் காட்டும் மூலம் ஆசம்ஸ் என்பதே. இதில் 'ஆ' முன்னொட்டு; சம்ஸ் to hope for, expect, to wish, to attain, desire, to suspect, fear, RV.

இங்ஙனம் ஒரே சொல்லை இரண்டாகப் பகுத்துப் பொருந்தாப் புகலலாகப் பொருள் கூறுவது, ஆசை என்னுஞ் சொல் தென்சொல் என்பதை வலியுறுத்தும்.

ஆசிக்கல் āši-k-kal, பெ. (n.) 1. காந்தக்கல்; loadstone. 2. காகச்சிலை. (வின்.) இது உபரசச் சரக்குகளில் ஒன்று; black variety of loadstone; this is one of the 112 kinds of natural substances described in Tamil medicine (சா.அக.).

உபரசச் சரக்கு = துணைக் கனிமம் (secondarry mineral)

[ஆசு = பற்று, கவர்ச்சி. ஆசு → ஆசி. ஆசிக்கல் = கவர்ச்சிக்கல்.]

ஆசிடு-தல் āšidu-, 12 செ.கு.வி. (v.i.) 1. பொன் நகைகளிற் பற்றாசு வைத்தல் ; to cement particles

of gold. 2. நேரிசை வெண்பா முதற்குறளின் இறுதிச் சீர்க்கும் தனிச்சொற்கும் இடையே விட்டிசைப்பின், ஓரசையேனும் ஈரசையேனும் சேர்த்துக் கொள்ளல் (காரிகை. செய். 2, உரை) ; to affix, for preventing hiatus one or two metrical syllables to the third foot of the second line in nērišai veṇbā. 3. செய்யுள் எதுகையில் ய், ர், ல், ழ் மெய்கள் நான்கி லொன்றை ஆசாக இடுதல் ; to insert ய், ர், ல் or ழ் in the rhyming foot in one or two lines of a stanza. "யரலழ வாசும்" (இலக். வி. 748).

[ஆசு = பற்று, இடையொட்டு. ஆசு + இடு (து.வி.) = ஆசிடு.]

ஆசிடை āsiḍai, பெ. (n.) 1. கூட்டம் ; crowd, assemblage. 2. ஆடை; cloth.

[ஆசிடுதல் = இடையிடுதல், ஒட்டுதல், சேர்த்தல், கூட்டுதல். ஆசிடு → ஆசிடை = கூட்டம், இழைசேர்த்து நெய்யும் ஆடை.]

ஆசிடை நேரிசை வெண்பா āsiḍai-nēr-išai-veṇ-bā, பெ. (n.) (யாப்.) **ஆசிடை வெண்பா** பார்க்க; see āsiḍai veṇbā

ஆசிடையெதுகை āsiḍai-y-edugai, பெ. (n.) **ஆசெதுகை** பார்க்க; see āsedugai

ஆசிடை வெண்பா āsiḍai-veṇ-bā, பெ. (n.) (யாப்.) முதற்குறளின் இறுதிச் சீர்க்கும் தனிச்சொற்கும் இடையில் விட்டிசை நீக்கக் காட்டப்படும் ஓரசை அல்லது ஈரசையொடு கூடிய நேரிசை வெண்பா ; (pros.) a veṇbā of 4 lines in general, an āsu (a syllable or two) is affixed to the penultimate foot of the second line.

[ஆசு + இடை + வெள் + பா.]

"ஆர்த்த வறிவினரா யாண்டிளைஞ ராயினும்
காத்தோம்பித் தம்மை யடக்குப – மூத்தொறூஉம்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார்."

இது ஓராசிடையிட்ட நேரிசை வெண்பா.

"தாமரையின் றாதாடித் தண்டுவலைச் சேறளைந்து
தாமரையி னாற்றமே தானாறும் – தாமரைபோற்
கண்ணான் முகத்தான் கரதலத்தான் சேவடியென்
கண்ணார்வஞ் செய்த கருத்து."

இது ஈராசிடையிட்ட நேரிசை வெண்பா.

ஆசிரியச் சீர் āsiriya-c-cīr, பெ. (n.) (யாப்.) அகவற்பாவிற்குரிய ஈரசைச்சீர்; (pros.) metrical foot with two syllables generally used in āsiriyappā.

[ஆசிரியம் + சீர்]

ஆசிரியம் என்பது அகவல் என்பதன் மறுபெயர். "அகவ லென்ப தாசிரி யம்மே" (தொல். செய். 80)

ஆசிரிய வியற்சீர், ஆசிரிய வுரிச்சீர் என்பன பார்க்க.

ஆசிரியச் சுரிதகம் āsiriya-c-curidagam, பெ. (n.) (யாப்.) சில கலிப்பா வகைகளின் இறுதியில் வரும் அகவல் வடிவான உறுப்பு; agaval form of verse which is the last member of some Kalivenbās.

[ஆசிரியம், சுரிதகம் பார்க்க; see āsiriyam, suridagam.]

ஆசிரியத்தளை āsiriya-t-taḷai, பெ. (n.) (யாப்.) அகவற்பாவில், நிலைச்சீரின் இறுதியசையும் வருஞ்சீரின் முதலசையும் நேர்முன் நேரும் நிரைமுன் நிரையுமாக ஒத்துவரும் செய்யுளுறுப் பாகிய பிணைப்பு; (Pros.) metrical connection in agaval verse between two successive disyllabic feet, in which the last syllable of the preceding foot agrees with the first syllable of the succeeding one.

ஆசிரியம், தளை பார்க்க, see āsiriyam, taḷai.

நேர்முன் நேர்வருவது நேரொன்றாசிரியத்தளை யென்றும், நிரைமுன் நிரை வருவது நிரை யொன்றாசிரியத்தளை யென்றும் பெயர் பெறும். தேமா, புளிமா, கூவிளம், கருவிளம் என்னும் சீர்வாய்பாடுபற்றி, நேர்முன்நேர் என்பதை மாமுன் நேர் என்றும், நிரைமுன் நிரை என்பதை விளமுன் நிரையென்றும் கூறுவது உரையாசிரியர் மரபு.

"உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
இலவ மேறிய கலவ மஞ்ஞை"

என்னும் ஐங்குறுநூற்றுத் தனிப்பாட லடிகளுள், இருவகை ஆசிரியத்தளையும் வந்துள்ளமை காண்க.

"சீரியை மருங்கி னோரசை யொப்பின்
ஆசிரியத் தளையென் றறியல் வேண்டும்." (தொல். பொருள். செய். 55)

"அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி" என்னும் பெரும்பாணாற் றுப்படை யடியுள் (1), இருதளையும் வந்துள்ளன.

ஆசிரியத் தாழிசை āsiriya-t-tāḻ-išai, பெ. (n.) (யாப்.) அகவற்பாவிற்குத் தாழிசை என்னும் இனமாய், அளவொத்த மூவடிகொண்ட முப்பாவிசைக் (stanza) கோவை ஒரே பொருள்பற்றி வருவது; (Pros.) a set of three uniform stanzas of three lines each on the same subject, one of the three auxiliaries to the agaval verse. "தருக்கியல் தாழிசை மூன்றடி யொப்பன.... சீரகவல்" (காரிகை. 14).

1

"கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ"

2

"பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ"

3

"கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லிநம் ஆனுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ" (சிலப். 17:19–21)

[**ஆசிரியம், தாழிசை** பார்க்க; see āširiyam, tālišai]

ஆசிரியத்தாழிசை ஒரோவிடத்து ஒரே தாழிசையாய் அருகியும் வரும். அது அத்துணைச் சிறப்பினதன்று..

ஆசிரியத்துறை āširiya-t-turai, பெ. (n.) (யாப்.) அகவற்பாவிற்குத் துறை யென்னும் இனமாய், ஈற்றயலடி சீர் குறைந்தும், ஈற்றயலடி சீர் குறைதலுடன் இடைமடக்கியும், இடையிடை அடி சுருங்கியும், இடையிடை அடிசுருங்குதலுடன் இடை மடக்கியும், நால்வகையாக வரும் நாலடிச் செய்யுள்; (pros.) quatrain having lines of different lengths with or without repetition in the middle, one of the three auxiliaries of the agaval verse. "நான்கடியாய் எருத்தடி நைந்துமிடை மடக்காயு மிடையிடையே சுருக்கடி யாயுந் துறையாம் குறைவில்தொல் சீரகவல்" (காரிகை. 14)

[**அகவற்றுறை** பார்க்க; see āgavarrurai.]

நான்கடியாய் இடையிடை சுருங்குதலுடன் இடைமடக்காய் வந்தஆசிரியத்துறைக்கு,

(எ-டு) "இரங்கு குயின்முழவா இன்னிசையாழ் தேனா
அரங்கு மணிபொழிலா ஆடும்போலும் இளவேனில்
அரங்கு மணிபொழிலா ஆடுமாயின்
மரங்கொல் மணந்தகன்றார் நெஞ்சமென் செய்ததிள
வேனில்"

ஆசிரிய நிகண்டு āširiya-nigaṇḍu, பெ. (n.) 17ஆம் நூற்றாண்டில் தொண்டைநாட்டு ஊற்றங்காலி லிருந்த ஆண்டிப் புலவரால் ஆசிரிய மண்டில யாப்பில் தொகுக்கப்பட்ட உரிச்சொற்றொகுதி; thesaurus composed in āširiya maṇḍilam (viruttam) by Āṇḍip Pulavar of Urrangāl in Toṇḍai Nādu in the 17th century.

[ஆசிரியம் + நிகண்டு < Skt.. nikantu.]

ஆசிரியப்பா āširiya-p-pā, பெ. (n.) (யாப்.) நால்வகைப் பாக்களுள் ஒன்றான அகவற்பா; (pros.) one of the four chief kinds of verse-types.

[ஆசிரியம் + பா. ஆசிரியமாகிய பா (இருபெய ரொட்டு).]

ஆசிரியப்பாவினம் āširiya-p-pā-v-inam, பெ. (n.) (யாப்.) ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய மண்டிலம் (விருத்தம்) என்னும் ஆசிரியப்பாவின் மூவினங்கள் அல்லது அவற்றுள் ஒன்று; (Pros.) the three auxiliaries of the agaval verse, viz. aširiyat tališai, āširiyat turai, and āširiya maṇḍilam (viruttam) or one of them.

ஆசிரியம், பா, இனம் பார்க்க see āširiyam, pā, iṇam

ஆசிரியம் āširiyam, பெ. (n.) 1. ஆசிரியத் தொழில்; teaching profession. 2. அகவற்பா; agaval verse-type. "அகவல் என்ப தாசிரி யம்மே." (தொல். பொருள். செய். 80)

*[ஆசிரியன் - ஆசிரியம். முதற்காலத்தில் ஆசிரியன் இயற்றிய அல்லது கற்பித்த இலக்கண நூல்களெல்லாம் (நூற்பா) அகவல் யாப்பில் இயற்றப்பட்டிருந்ததனால், அகவல் ஆசிரியம் எனப் பெயர் பெற்றது. ஆசிரியன் (கையாளும்) பா என்பது அதன் பொருள். **ஆசிரியன்** பார்க்க.* see āsiriyan.]

'ஆசிரியர் அறிவித்தல் போலப் பொருள்களை அறிவித்து நிற்றலால் ஆசிரியப்பா எனப்பட்டது' என்பது யாழ்ப்பாணச் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் யாப்பருங்கலக் காரிகைப் புத்துரை.

மூவடிச் சிறுமையும் ஆயிரவடிப் பெருமையும் கொண்ட பொதுவகை அகவலினின்று வேறுபட்டு, ஓரடியும் அரையடியும் கொண்டு ஆசிரியப்பா அமைவதால், அது நூற்பா வகவல் என்று வேறுபடுத்திக் கூறப்பட்டது..

"நூற்பா வகவல் நுணங்க நாடின்
சூத்திரங் குறித்த யாப்பிற் றாகி
அடிவரை யின்றி விழுமிதி னடக்கும்" (திவா.).

ஆசிரிய மண்டிலம் āširiya-maṇḍilam, பெ. (n.) (யாப்.) அளவொத்த பல்வேறு கழிநெடிலடி நான்கு கொண்ட ஆசிரிப்பா வினம்; (Pros.) quatrain with lines of equal length each containing not less than six feet. **ஆசிரியம், மண்டிலம்** பார்க்க; see āširiyam, maṇḍilam.

மண்டிலம் = வட்டம், முழுமை, நிறைவு, ஒரியன்மை. மண்டலித்தல் = பாவின் அல்லது பாவினத்தின் பலவடியும் அளவொத்து வருதல். நிலைமண்டில வாசிரியப்பா, அடிமறி

மண்டில வாசிரியப்பா என்னும் பாப் பெயர்களை நோக்குக. மண்டலி → மண்டலம் → மண்டிலம்.

தாழிசை, துறை, மண்டிலம் என்னும் மூன்றும் தமிழுக்கே சிறப்பாக வுரிய பாவினங்களே. அவற்றின் பெயரும் தூய தென்சொல்லே. பிற்காலத்தில், தமிழ்ப் பகைவரான வடமொழி யாளர், விருத்தம் என்னும் ஒத்த பொருள் வடசொல்லைப் புகுத்தித் தென்சொல்லை வழக்கு வீழ்த்தினர். அவ் வடசொல்லும் தென்சொல் திரிபே.

வள் → வட்டு → வட்டம் > **வ.** வ்ருத்த. ஒ.நோ: நடி → நடம் → நட்டம்.

அகவன்மண்டிலம் பார்க்க; see āgavanmaṇḍilam.

ஆசிரிய மாலை 'āsiriya-mālai, பெ. (n.) ஓர் இசைத் தமிழ் நூல் (சிலப். 8:25, அரும்.); treatise on music.

[ஆசிரியம் + மாலை]

ஆசிரிய வசனம் āsiriya-vasaṉam, பெ. (n.) ஒரு நூலாசிரியன் அல்லது உரையாசிரியன், தன் கொள்கைக்கு அல்லது கூற்றிற்கு வலிமையாக, முன்னோர் அல்லது பிறர் நூலினின்று எடுத்துக் கூறும் மேற்கோள்; authoritative text quoted by an author from other's work or works. "பாடங் கருத்தே ....ஆசிரிய வசனமென் றீரே ழுரையே". (நன். 21).

[ஆசிரியன் + வசனம் Skt. vacana] **ஆசிரியவுரை** பார்க்க; see āsiriyavurai

ஆசிரிய வியற்சீர் āsiriya-v-iyaṟcīr, பெ. (n.) அகவற் பாவிற்குரிய ஈரசைச்சீர் நான்கு; the four disyllabic metrical feet generally used in agaval verse.

"இயலசை மயக்கம் இயற்சீர்" (தொல். பொருள். செய். 12).

[ஆசிரியம் + இயல் + சீர்.]

ஆசிரிய வியற்சீர் நான்கு:

அசையமைப்பு	***சீர் வாய்பாடு***
நேர்நேர்	தேமா
நிரைநேர்	புளிமா
நேர்நிரை	கூவிளம்
நிரைநிரை	கருவிளம்

இவற்றை ஆசிரிய வுரிச்சீர் என்று கூறுவது தவறாகும்.

ஆசிரிய விருத்தம் āsiriya-viruttam, பெ. (n.) **ஆசிரிய மண்டிலம்** பார்க்க, see āsiriya mandilam.

ஆசிரிய வுரிச்சீர் āsiriya-v-uri-c-cīr, பெ. (n.) (யாப்.) பண்டைநாளிற் பெரும்பாலும் அகவற்பாவில் ஆளப்பட்ட உரியசை மயக்க ஈரசைச் சீர் நான்கு; (Pros.) four disyllabic feet formed by permutation of two 'uri' syllables and used generally in agaval verse in ancient times.

[ஆசிரியம் + உரி + சீர்]

ஆசிரிய வுரிச்சீர் நான்காவன:-

அசையமைப்பு		***சீர் வாய்பாடு***
நேர்பு நேர்பு	-	போகு காடு
நிரைபு நேர்பு	-	வழங்கு காடு
நேர்பு நிரைபு	-	போகு கடறு
நிரைபு நிரைபு	-	வழங்கு கடறு.

"இயலசை மயக்கம் இயற்சீ ரேனை
யுரியசை மயக்கம் ஆசிரிய வுரிச்சீர்". (தொல். பொருள். செய். 13)

தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு முன்பும், செய்யுளசைகள் நேர், நிரை, நேர்பு, நிரைபு என நால்வகைப்பட்டிருந்தன. அவற்றுள் முன்னவை யிரண்டும் இயலசை யென்றும், பின்னவை யிரண்டும் உரியசை யென்றும் பெயர் பெற்றிருந்தன. இக் காலத்தார் உரியசைப் பாகுபாட்டை நீக்கி, நேர்பசையை நேர்நேர் (தேமா) என்றும் நிரைபசையை நிரைநேர் (புளிமா) என்றும் பகுத்து ஈரசைச் சீராக்கிவிட்டனர். அதனால், உரிச்சீர் என்பது, இக் காலத்தில் வெண்பாவிற்குரிய காய்ச்சீரும் வஞ்சிப்பாவிற்குரிய கனிச்சீருமாகிய மூவசைச் சீர்க்கே உரியதாயிற்று. ஆகவே, ஆசிரியப்பாவிற்குச் சிறப்பாக (பெரும்பான்மையாக) வுரிய இயலசை மயக்க இயற்சீரை ஆசிரிய வுரிச்சீர் என்பது, இக் காலத்திற்கு எட்டுணையும் ஏலாதாம். எனவே,

"ஈரசை கூடிய சீரியற் சீர.:.
தீரிரண் டாமவை யகவற் கிசைதலும்
மூவசை கூடிய சீருரிச் சீரது
நாலிரண் டாகி நடைபெறும் அவற்றுள்
நேரிறு நான்கும் வெள்ளை யல்லன
பாவினுள் வஞ்சியின் பாற்பட் டிடுதலும்
நாலசை யானும் ஓரசை யானும்
சீர்பெற நடப்பது பொதுச்சீர் ஆங்க(து)
எண்ணிரண் டிரண்டா யியறலு நெறியே". (716)

என்று நூற்பா யாத்த பின்னும்,

'இரண்டு அசையான் வருஞ்சீர் இயற்சீரெனப் படும். அது நேர்நேராயும் நிரைநேராயும் நிரைநிரையாயும் நேர்நிரையாயும் தம்மிற்கூடி நான்காம். அங்ஙனம் ஆகிய நான்கு சீரும் ஆசிரியவுரிச்சீராதலும்' என்றும்.

'ஈரசைச்சீர் எல்லாச் செய்யுளுள்ளும் பயின்று இனிது நடத்தலின் இயற்சீரென்றும், மூவசைச்சீர் எல்லாச் செய்யுளுள்ளும் வருமெனினும் வெண்பாவிற்கும் வஞ்சிப்பா விற்கும் உரிமை பூண்டு நிற்றலின் உரிச்சீரென்றும், ஏனைய பொதுவாய் நிற்றலின் பொதுச்சீரென்றும் ஆயின' என்றும்,

'வழக்கின்கண் ஆசிரியவுரிச்சீர்க்கு உதாரணம்: தேமா புளிமா கருவிளம் கூவிளம் என்றும், ... செய்யுட்கண் ஆசிரியவுரிச்சீர்க்கு உதாரணம்:

"குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையர மகளிர் புரையுஞ் சாயலள்
ஐய எரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே"

என்றும், **இலக்கண விளக்கவுரையில்** உரைத்திருப்பது, மாறு கொளக்கூறல், மயங்கவைத்தல் என்னும் இருவகைக் குற்றத்திற் கிடமாதல் கண்டுகொள்க.

ஆசிரிய வுரை āśiriya -v-urai, பெ. (n.) பதினான்கு வகை வுரைகளுள் ஒன்று; one among the fourteen divisions of a commentaries. (ஆசிரிய வுரையை ஆசிரிய வசனம் என்பார் நன்னூலார்.)

ஆசிரியன் āśiriyaṉ, பெ. (n.) 1. நூலாசிரியன்; author of literary work. 2. நுவலாசிரியன்; teacher. 3. உரையாசிரியன்; commentator, annotator. 4. தொகுப்பாசிரியன்; compiler. கலித்தொகையின் தொகுப்பாசிரியர் நல்லந்துவனார். 5. பதிப்பாசிரியன்; editor. 6. குரு, குரவன்; spiritual teacher, priest.

ஆசிரியர் சொன்னதை அப்படியே நம்ப வேண்டுமா?
ஆசிரியர் பேச்சு அரசனையும் வெல்லும் (பழ.).

[ஆசு = குற்றம். இரிதல் = ஓடுதல், நீங்குதல், விலகுதல். ஆசு இரிதல் = குற்றம் நீங்குதல். ஆசு + இரியன் (ஆசிரியன்) = குற்றம் நீங்கியவன் அல்லது நீக்குபவன். ஆசிரியன் மாணவரினின்று நீக்கும் குற்றம் மொழிக் குற்றம் ஒழுக்கக் குற்றம் என இரு திறப்படும்.]

வடமொழியாளர் ஆசிரியன் என்னும் தென்சொல்லை ஆசார்ய (acārya) என்னும் வடசொல்லினின்று திரிப்பர். அது சொல்லமைதி, காலமலைவு என்னும் இரண்டாற் கடியப்படும்.

ā (ஆ) a prefix to verbs, especially of motion, and their derivatives.

ā-car, (v.i., v.t.) come near to, approach, to lead hither (as a path); to address, apply; to proceed, manage, behave one's self; use, apply; examine (a witness); to have intercourse with; to act, undertake, do, exercise, practise, perform; to throw into the fire.

ā-cāra, n. conduct, manner of action, behaviour, good behaviour, good conduct; custom, practice, usage, traditional or immemorial usage (as the foundation of law); established rule of conduct, ordinance, institute, precept; rule or line; agreeing with what is taught by the teacher.

Ācarya, n. knowing or teaching the **ācāra** or rules, spiritual guide or teacher (especially one who invests the student with the sacred thread, and instructs him in the Vedas in the law of sacrifice and religious mysteries; a N. of Drona (the teacher of the Pāndavās)

இங்ஙனம், 'ஆ' என்னும் பொருளற்ற முன்னொட்டையும், செல்லுதல் அல்லது நடத்தல் என்னும் வினையைக் குறிக்கும் 'சர்' என்னும் முதனிலையையும் அடிப்படையாகக் கொண்டது ஆசார்ய (ācarya) என்னும் சமற்கிருதச் சொல்.

'சர்' என்னும் இயக்க வினைச்சொல் சரி என்னும் தென்சொல்லின் திரிபே. சர்எனல் = நீண்டுவிரைந்தொழுகுதல். சர் → சர → சரசரவெனல் = விரைந்து செல்லுதற் குறிப்பு. சர → சரி → சரிதல் = விரைந்து செல்லுதல்; செல்லுதல், நடத்தல். நடக்கை அல்லது நடத்தை என்னும் சொல் ஒழுக்கத்தைக் குறிப்பது போன்றே, சர (cara) அல்லது சார (cāra) என்னும் வடசொல்லும் ஒழுக்கத்தைக் குறிக்கின்றது.

ஆசார்ய (ācarya) என்னுஞ்சொல் பிராமணரையே சிறப்பாகக் குறித்தலும், ஆசிரியன் என்னும் சொல் குலச் சார்பின்றிக் கற்பிக்கும் அறிஞர்க்கெல்லாம் பொதுவா யிருத்தலும், ஊன்றிக் கவனிக்கத் தக்கதாகும்.

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே" (புறநா. 183)

என்று ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும்,

"தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார் – காணாய்
அவன்றுணையா வாறுபோ யற்றேநூல் கற்ற
மகன்றுணையா நல்ல கொளல்". (நாலடி. 136)

என்று ஒருபழம்புலவரும்,

" எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்".

என்று அதிவீரராம பாண்டியனும் கூறியிருத்தல் காண்க.

ஆரியர் இந்தியாவிற்குட் புகுந்த காலம் கி.மு. 2000–1500. வேத காலம் கி.மு. 1550–1000. பாரதகாலம் தோரா. கி.மு. 1000. அதுவே துரோணாசாரியார் காலமும்.

தொல்காப்பியர் காலம் கி.மு. 7ஆம் அல்லது 6ஆம் நூற்றாண்டு. அவர் தம் இலக்கண நூலில் முன்னூலாசிரியரைப் பல்வேறு திறம்பற்றிய பெயராற் குறிப்பதுடன், ஆசிரியன் என்னும் சொல்லையும் ஆள்கிறார்.

"அளவும் நிறையும் எண்ணும் வருவழி
நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்
கடிநிலை யின்றே ஆசிரி யர்க்கே"
(தொல் . எழுத்து. புள்ளி. 94).

தொல்காப்பியம்,

"செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத்த"

சார்பிற் சார்பு நூலாதலின், அதன் முன்னூல்களெல்லாம் இடைக்கழக நூல்களாகவேயிருந்திருத்தல் வேண்டும். இடைக் கழகக் காலம் தோரா. கி.மு. 4000–2500.

"ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் **றென்ப** பாவகை விரியே"
(தொல். பொருள். செய். 104)

என்னும் நூற்பாவில் அகவலை ஆசிரியம் என்றும் முன்னுளாரை "என்ப" என்றுபலர்பாற் சொல்லாலும் குறித்திருத்தலால், ஆரியர் இந்திய வருகைக்கு முன்பே ஆசிரியன் என்னுஞ்சொல் குமரி நாட்டில் வழங்கி வந்தமையும் முன்னூலின் பன்மையும் புலனாகும். ஆதலால், ஆசிரியன் என்னும் தென்சொல்லிற்கும் ஆசார்ய (ācarya) என்னும் வடசொல்லிற்கும் எள்ளளவும் தொடர்பில்லையென அறிக.

இனி, தலைக்கழகக் காலத்திலும், அகவற்பாவும், அதற்கு ஆசிரியம் என்னும் பெயரும், அதனால் ஆசிரியன் என்னுஞ் சொல்லும், வழங்கியே யிருத்தல் வேண்டும்.

ஆசிரியரெல்லாம் புலவரேனும், புலவரெல்லாம் ஏதேனும் ஆசிரியத் தொழில் செய்தாலன்றி ஆசிரியராகார். ஆதலால், "என்மனார் புலவர்" என்னும் தொடரும் அது போன்ற பிறவும் தொல்காப்பியத்திற் பயின்று வரினும், ஆசிரியன் என்னும் சொல்லிற்குப் புலவர் என்னும் பொருள் இங்குக் கூறப்படவில்லை.

நுவலாசிரியரைப் போதகாசிரியரென்று வடசொற் கலந்த இருபிறப்பியாற் குறிப்பர் இக்காலத்தார். அது தவறாம்.

ஆசினி āsini, பெ. (n.) 1. ஈரப்பலா; bread-fruit tree, **Artocarpus incisa.** "ஆசினி கவினிய பலவினார் வுற்று" (புறநா. 158.22). 2. மரவயிரம் (சூடா.); hard and solid heart of a tree. 3. மரவுரி (சூடா.); sack tree, **Antiaris toxicaria** alias A. saccidora whose inner bark is used by hill tribes and hermits for clothing (சா.அக.). 4. காயம் (ஆகாயம்) (பிங்.); sky. 5. சிறப்பு (அக.நி.); uniqueness, speciality, excellence.

ம. ஆஞ்ஞிலி

[ஒருகா. ஆசிலி (ஆசு + இலி) → ஆசினி = குற்றமற்றது, சிறப்பானது.]

ஆசீயம் āsīyam, பெ. (n.) கருஞ்சீரகம் (மூ.அ.); black cumin (செ.அக.); black cumin or country fennel, Nigella sativa.

ஆசு āsu, பெ. (n.) 1. ஒட்டு, பற்று; adherence, joint, grasp. 2. பற்றாசு; soldering powder. 3. நேரிசை வெண்பாவின் இரண்டாம் அடி மூன்றாஞ் சீரின் இறுதியிற் சேர்க்கப்படும் ஓரசை அல்லது ஈரசை (யா. கா. செய். 3); one or two metrical syllables affixed to the third foot of the second line of **Nderisai Venbā**. 4. செய்யுளின் எதுகையிடையில் வரும் ய், ர், ல், ழ் என்னும் ஒற்றுகள் (யா. கா. ஒழி.6); consonants y, r, l, ḻ intervening between the first and second syllables of a rhyming foot in one or two lines of a stanza. 5. பற்றுக்கோடு; support, prop. "ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ" (புறநா. 235). 6. வாட்பிடி; hilt of sword. "குற்றுடை வாள் ஆசுங் கண்டமும்" (S.I.I. ii, 185). 7. கவசம் (திவா.) armour, coat of mail. 8. கைக்கவசம் (அக.நி.); steel gloves. 9. நூலிழைக்குங் கருவிகளுள் ஒன்று (வின்.); small tube through which yarn is conducted from the spindle of a spinning wheel to a machine. 10. அச்சு (இ.வ.); mould (Loc.). 11. இலக்கு (வின்.); mark, butt. 12. அற்பம் (திவா.); trifle, anything small or mean. 13. நுட்பம்; minuteness, fineness, acuteness. "தேசிக மென்றிவை யாசி னுணர்ந்து" (சிலப். 3:47). 14. குற்றம்; fault. "அரியகற் றாசற்றார் கண்ணும்" (குறள். 503). 15. ஐயம்; doubt "அமலனை யாசற வுணர்ந்த வமலர்" (ஞானா. 66:17). 16. ஆணவமலம் (சிவப்பிர. உண்மை. 42); matter which is eternally encasing the soul and lasting till its final liberation, one of the three impurities of the soul. 17. துன்பம்; trouble, distress, affliction. "ஆசுக வயந்தீர் பெய்த வறிமதி" (ஞானா. 24:4). 18. ஒருவகைச் செயற்கை நஞ்சு (சீதாங்க பாடாணம்); a kind of native arsenic (சா.அக.). 19. அல்லிமொக்கு; lilly bud (சா.அக.). 20. முகம்; face (சா.அக.). 21. இடைக் கார்நெல்வகை (நாநார்த்த.); a kind of paddy.

ஆசு (நெல்வகை) — Skt. āsu.

ம. அசு; **க.** அசி, அச; **தெ.** அசி; **குரு.** ஆசா; **பிரா.** உழுகுன்.

[அண்ணுதல் = பொருந்துதல், ஒட்டுதல், பற்றுதல். அண் → அடு → அசு → ஆசு. ட—ச, போலி. ஒ. நோ : ஒடி — ஒசி].

L. vide — vise.

பற்று வைக்கும் பொடி நுண்ணிதாயிருப்பதால், பற்றுக் கருத்தினின்று நுட்பக் கருத்தும் அற்பக் கருத்தும் தோன்றின. ஒ.நோ: ஒட்டு = அற்பம். (சூடா.).

மரவேலையில் ஒட்டடையைப் பற்று (மக்கு) வைத்து அடைத்திருப்பது ஒரு குற்றமாக இருத்தலால், பற்றுக் கருத்தினின்று குற்றக் கருத்துத் தோன்றிற்று. குற்றத்தால் துன்பம் நேரும். நஞ்சு துன்பந் தருவது.

மொக்கு இயல்பாகக் கூரிதாயிருப்பது. மொக்குப் போன்றது முகம். இனி மொக்கு இலை போன்ற முகவேலைப் பாடுகளில் மரத்தில் அல்லது கல்லில் ஒட்ட உள்நுழைத்துச் சேர்க்கப்படுதலின் பற்றும் பொருளில் வழங்கியதுமாம்.

ஆசுக்காயம் āsu-k-kāyam, பெ. (n.) பேய் வெங்காயம்; wild onion, **Urninea indica** or **Scilla indica** (சா. அக.).

[ஆசு = குற்றம். காய் → காயம் = காரமுள்ளது.]

ஆசுணம் āšuṇam, பெ. (n.) 1. அரசு (மூ.அ.); pipal, **Ficus religiosa.** 2. அசோகு (மூ. அ.); asoka tree, Saraca indica (சா. அக.).

[ஒருகா. பாசுணம் — ஆசுணம். பாசுதல் — விரியத் தழைத்தல்.]

ஆசுமணை āšu-maṇai, பெ. (n.) நெசவுக் கருவிகளுள் ஒன்று; board used in making thread into skeins.

[ஆசு=நூலிழைக்கும் கருவி. மணை=பலகை.]

ஆசுரம் āšuram, பெ.(n.) இஞ்சி (மூ.அ.); ginger.

*[ஒருகா. அசுரம் → ஆசுரம். **அசுரம்** பார்க்க.* see **ašuram.**]

ஆசுவை-த்தல் āšu-vai-.4 செகுன்றாவி. (v.t) கட்டடம் கட்டத் தொடங்கும் பொழுது பெருங்கொத்தன் தலைக்கல் வைத்தல்.; to lay first brick by the senior mason for building.

ஆசூரம் āšūram, பெ. (n.) வெள்வெண்காயம் (மூ.அ.) garlic.

[ஒருகா. ஆசுரம் → ஆசூரம் = மிகக் காரமானது.]

அசுரம் அல்லது ஆஸுரி என்னும் சொற்களை மூலமாகக் காட்டுவது பொருந்தாது.

ஆசெதுகை āšedugai, பெ. (n.) ய், ர், ல், ழ் ஆகிய மெய்யெழுத்துகளுள் ஒன்று செய்யுளின் அடியெதுகையிடையே ஆசாக வருவது; poetic licence permitting interpolation of one of the consonants y, r, l and ḻ between the first and second syllables of the rhyming foot in one or two lines of a stanza.

இனி, ஆசாகெதுகை ய, ர, ல,ழ என்னும் ஒற்று நான்கும் ஆசாய் வரும் எனக் கொள்க.
என்னை:–

''யரலழ வென்னு மீரிரண் டொற்றும்
வரன்முறை பிறழாது வந்திடை யுயிர்ப்பின∴
தாசிடை யெதுகையென் றறைதல் வேண்டும்.''

காக்கை பாடினியார்

கலித்துறை

''காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற் றிசை போயதுண்டே''

(சீவக. 31)

இது யகர ஒற்றிடைவந்த ஆசெதுகை (யா.கா. ஒழி. 6. உரை.)

இது போன்றே ஏனையவும்.

*[ஆசு + எதுகை. ஆசு=பொற்கொல்லன் நகையிடை வைக்கும் பற்றொட்டுப்போல், செய்யுளின் அடியெது கையிடை அமையும் இடையினமெய் .**எதுகை** பார்க்க.* see **edugai**].

ஆசெறூண் āšeṟūṇ, பெ. (n) ஆதீண்டுகுற்றி; rubbing post for cows. ''ஆய்த்தியர் நலக்காசெறூண னான்'' (சீவக. 419).

[ஆ+செல்+தூண். = ஆசெறூண். செல்லுதல் = சென்றுராய்தல்.]

ஆசை āšai, பெ. (n.) 1. வேண்டும் பொருண்மேற் செல்லும் விருப்பம்; wish directed towards securing a desired object 'ஆசையுட்பட்டு' (குறள், 266, உரை). 2. விருப்பம்; desire. 3. பொருளாசை; avarice, cupidity. 4. காம வேட்கை; carnality; 5. அன்பு; affection; ''அரும் பெறற் குமரர்மே லாசை'' (கூர்மபு. இந்திரத். 42). 6. நம்பாசை, பேற்றின்மேல் நம்பிக்கை; hope, expectation. 7. பொன்; gold (சூடா.). 8. பொன்னூமத்தை (பச்.மூ.); a kind of datura.

ம. தெ. ஆச; **க.,து., பட.** ஆசெ; **கொலா.** ஆசெ, ஆசா; Mar., Pali., Nep., Sinh. āsā; **பர்.** ஆச்; **துட.** ஆசி; Pers. ārzu.

[ஆசு=பற்று. ஆசு – ஆசை=மனப்பற்று, விருப்பம், வேட்கை, விரும்பப்படும் பொருள். ஆசை > Skt. āšā]

ஆசைக்கிழத்தி āšai-k-kiḻatti, பெ. (n.) வைப்பாட்டி; concubine. ''நிருபனுக்கங் காசைக் கிழத்தியாம்'' (திருக்காளத். பு. 30:42)

[ஆசு → ஆசை. கிழவன் (ஆ. பா.)– கிழத்தி (பெ.பா.) ஒ.நோ: காமக்கிழத்தி.]

ஆசைக்குரியான் āšaikkuriyāṉ, பெ. (n.) மருகு என்னும் நறுமண இலைப்பூண்டு; aromatic leaf plant, Origanum marjoranum. (சா.அக.).

[ஆசைக்கு + உரியான்.]

ஆசைகாட்டி மோசஞ் செய்தல் āšai -kāṭṭi- mōsañcey, 1. செ. குன்றாவி. (v.t.) விருப்பமானதைச் சொல்லி வயப்படுத்திக் கெடுத்தல்; allure and destroy, to make false promise and ruin, to attract and play treachery. 'ஆசை காட்டி மோசஞ் செய்கிறதா?' (பழ.)

[ஆசை + காட்டி + மோசம் + செய்.]

ஆசைகாட்டுதல் āšai–kāṭṭu–, 5 செ.கு.வி. (v.i.) 1. தன் வயப்படுத்துதற்குக் கவர்ச்சியானதைச் சொல்லுதல் அல்லது செய்தல்; present a bait or attraction, to excite desire, to allure in order to subjugate or

captivate. 2. (காம.) காமவேட்கை யுண்டாக்குதல்; to excite a craving, said of a woman (சா. அக).

[ஆசை + காட்டு.]

ஆசைநாயகன் āśai-nāyagan, பெ. (n.) கள்ளக்கணவன் (சோரபுருஷன்) (உ.வ); paramour. (colloq..)

[ஆசு → ஆசை. நாயகன் பார்க்க. see nāyagan]

ஆசைநாயகி āśai-nāyagi, பெ.(n.) 1. காதல் மனைவி; lady-love. 2. காமக்கிழத்தி, கூத்தி; concubine.

[ஆசு → ஆசை. நாயகன் (ஆ.பா.)– நாயகி(பெ.பா.]

ஆசைப்படு-தல் āśai-p-padu-, 20 செ.கு.வி. (v.i.) ஆசை கொள்ளுதல்; to set one's heart upon- 18. செ.குன்றாவி. (v.t.) விரும்புதல்; to desire.

க. ஆசெவடு, ஆசெபடு; **து.** ஆசெபுனி; **பட.**ஆசெபடு.

[ஆசு → ஆசை. படுதல்= உண்டாதல், கொள்ளுதல்.]

ஆசைப்பாடு āśai-p-pādu, பெ. (n.) விருப்பம், வேட்கை; longing or desire. "ஆசைப்பாட்டி லரனைப் புகழுதல்" (உபதேச. சிவபுண். 22).

[ஆசு → ஆசை. படு (வி.மு.த.) → பாடு (தொ.பெ.)]

ஆசைப்பேச்சு āśai-p-peccu, பெ. (n.) 1. முகமன்; flattery. 2. வயப்படுத்தும் பேச்சு; persuasive speech. 3. காமவேட்கைப் பேச்சு; libidinous talk.

க. ஆசெமாது, ஆசெவாது

[ஆசு → ஆசை. பேசு (வி.மு.த.) → பேச்சு (தொ.பெ.)]

ஆசைபிடி-த்தல் āśai-pidi-, 4. செ.கு.வி. (v.i) விருப்பம் மிகுதல், வேட்கை யுண்டாதல் (உ.வ.); to be possessed by desire, to be swayed by passion (colloq.).

[ஆசு – ஆசை + பிடி]

ஆசைபூட்டு-தல் āśai-puttu-, 5 செ.குன்றாவி. (v.t.) ஆசையிற் சிக்கச் செய்தல்; to engross the affection of, captivate (W.).

க. ஆசெவடிசு

[ஆசு → ஆசை. பூண் (த.வி.) → பூட்டு (பி.வி.)]

ஆசைமருந்து āśai-marundu, பெ. (n.) பெண்ணைத் தன்வயப்படுத்தும் மருந்துக்கூட்டு (வசியமருந்து); love potion, philter (W.).

[ஆசு → ஆசை. மருந்து பார்க்க; see marundu]

ஆசைமொழி āśai-moli, பெ. (n.) நம்பிக்கையுண்டாகச் சொல்லும் சொல்; persuasive or tempting speech, words of hope or encouragement.

[ஆசு (பற்று) → ஆசை. ஆசை + மொழி.]

ஆசையறு-தல் āśai-y-aru-, 18 செ.குன்றாவி. (v.t.) விருப்பம் முற்றாக நீங்குதல்; to extinguish desire or passion.

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடா யினும் ஆசை அறுமின்கள்" (திருமந். 2570)

[ஆசை + அறு . அறுதல் (த.வி.)]

ஆசையறு-த்தல் āśai-y-aru-, 4 செ.குன்றாவி. (v.t.) விருப்பம் நீக்குதல்; to cause to extinguish desire or passion.

[ஆசை + அறு . அறுத்தல் (பி.வி.)]

ஆசைவை-த்தல் āśai-vai-, 4 செ.கு.வி (v.i.) ஒன்றன் மேல் அல்லது ஒருவரிடம் விருப்பம் கொள்ளுதல்: to desire, to long for, place affection on an object.

க.ஆசெ கொள்ளு; ; **பட.** ஆசெபி

[ஆசை + வை]

ஆஞ்சரிணம் āñjarinam, பெ. (n.) காட்டுத் துளசி; wild basil, wild marjoram, Olimum ascendens alias O.cristatum (சா.அக.).

ஆஞ்சாலி āñjāli, பெ. (n.) **ஆஞ்சான்**[2] பார்க்க; see āñjān[2]

[ஆஞ்சால் – ஆஞ்சாலி.]

ஆஞ்சான்[1] āñjān, பெ. (n.) 1. கப்பற்கயிறு; halyard or rope for hoisting a sail. 2. பொருள்களை உயரத்தூக்க உதவும் கயிறு; rope for lifting weights with a pulley or otherwise, hawser. 3. சிறிய தனிக்கொம்பு; the lone, slender stem of a tree.

[ஒருகா. அணைந்தான் → அணஞ்சான் ஆஞ்சான்.]

ஆஞ்சான்[2] āñjān, பெ. (n.) தண்டனைக்குரிய கோதண்டம் (நாஞ்.); rope or swing formerly in use in village schools for punishing pupils (Nāñ.).

[ஆஞ்சல் → ஆஞ்சால் → ஆஞ்சான்]

ஆஞ்சான்[3] āñjān, பெ. (n.) இளமரத்தண்டு; the stalk of a young tree or plant (சா.அக.).

ஆஞ்சான் கயிறு āñjānkayiru, பெ. (n.) கப்பற் பாய்களை அல்லது கொடிகளை ஏற்றவும்

இறக்கவும் உதவுங் கயிறு (M. Navi. 86.); rope for lifting and lowering sails in ships.

ஆஞ்சான்பற்றி āñjāṉparri, பெ. (ந.) தோணியில் ஆஞ்சான் கயிறு கட்டப்படும் மரம்; a beam across the stern of a boat to which the halyard is tied.

ஆஞ்சி[1] āñji, பெ. (n.) 1. அச்சம்; fear. "பேர்த்த மனைவியாஞ்சியானும்" (தொல். பொருள். 79) 2. அலைவு (பிங்.); motion, vibration. 3. சோம்பல் (சூடா.); idleness, laziness. 4. கூத்து; dancing. (செ.அக.). 5. அதிர்ச்சி (சா.அக.); shock. 6. விளையாடல்; playing. (க. தமி.அக.).

ம., க. அஞ்சு; **தெ.** அஞ்சிக; **து., பட.** அஞ்சிகெ; **கோத.** அன்ஞ்; **துட.** ஒச்; **கூ.** அச; **குவி.** அச்சாலி.

[அல் → அஞ்சு → ஆஞ்சு → ஆஞ்சி.]

ஆஞ்சி[2] āñji, பெ. (n.) ஏலக்காய்ச் செடி (சூடா.); cardamom plant. cf. aindri.

[அடஞ்சி – ஆஞ்சி, அடையாகக் காய்ப்பது.]

ஆஞ்சிக்காஞ்சி āñji-k-kāñji, பெ. (n.) 1. போர்க் களத்தில் இறந்த கணவனது வேல் வடுவைக் கண்டு மனைவி அஞ்சிய புறத்துறை (தொல். பொருள். 79; (purap.) theme expressing a lady's horror on seeing the wounds of her husband killed in battle. 2. போர்க்களத்திலிறந்த கணவனுடன் தீயில் மூழ்கும் மனைவியின் பெருமை கூறும் புறத்துறை (பு.வெ. 4, 22); theme describing the greatness of the warrior's wife who ends her earthly existence either by ascending the funeral pyre with her deceased lord or by killing herself with the same deadly arrow that has caused her lord his mortal wound.

[அஞ்சு → ஆஞ்சு → ஆஞ்சி. ஆஞ்சி + காஞ்சி – ஆஞ்சிக்காஞ்சி. கணவனுக்குற்ற தீங்கு கண்டஞ்சி அத்துயரில் பங்கேற்கும் புறத்துறை.

காஞ்சி = நிலையாமை. இனி ஆஞ்சி = கட்டுண்ணல் எனக்கொண்டு நிலையாமை எண்ணத்தால் கட்டுண்ணல் என்றுமாம்]

ஆஞ்சித்தாழை āñji-t-tālai, பெ. (n.) மஞ்சள்நிறமுள்ள தாழைவகை (சித். அக.); a kind of yellow aloes.

ஆஞ்சிரணம் āñjiraṇam பெ. (n.) காட்டுத்துளசி (சித்.அக.); wild basil. **ஆஞ்சரிணம்** பார்க்க; āñjariṇam

ஆஞ்சில் āñjil, பெ. (n.) 1. ஒருவகைப் பூடு; species of Azima. 2. சங்கஞ்செடி; a shrub – Monotia barleriodies alias M.tetracantha.

ஆஞ்சிறிகம் āñjirigam, பெ. (n.); சங்கஞ்செடி (சித்.அக.); mistletoe–berry thorn. **ஆஞ்சில்** பார்க்க; see āñjil.

ஆஞ்சுதல் āñju–,5 செ.குன்றாவி. (v.t.),. இழுத்தல்; to pull, tighter. 2. இழுத்துக்கட்டுதல்; to tighten and tie with a rope.

ஆஞ்செல்கை āñjelgai, பெ. (n.) 1. தெப்பம்; raft. (செ.அக.) 2. கப்பல்; ship.(க.தமி.அக.)

ஆஞ்செலகை āñjelagai, பெ. (n.) **ஆஞ்செல்கை** பார்க்க; see āñjelgai.

ஆஞ்ஞான் āññāṉ, பெ. (n.) **ஆஞ்சான்,** பார்க்க see āñjāṉ, .

ஆஞ்ஞை āññai, பெ. (n.) 1 . கட்டளை; order; command, direction. 2. (ஒகம்) ஆறாதாரங்களுள் ஒன்று; cakra in the body, described as two petalled lotus situated between the two eyebrows, one of ārātaram.

ம. ஆச்ஞ; **க.** ஆச்ஞா; **தெ.** ஆச்ஞ; **து.** ஆச்ஞெ. Nep., Skt. agnā.

[ஆணை → ஆஞை → ஆஞ்ஞை.]

ஆஞன் āñaṉ பெ.(n.) தந்தை; father.

ஆஞா āñā, பெ. (n.) தந்தை (இ.வ.); father (Loc.). Mar., Nep. ājā (grand father)

[ஐயா → அயா → அஞா → ஆஞா]

ஆஞான் āñāṉ, பெ. (n.) தந்தை (இ.வ.); father (Loc.).

மறுவ. ஆஞன்.

[ஐயன் → அயன் → அஞன் → அஞான் → ஆஞான்.]

ஆஞி āñi, பெ. (n.) தந்தை (இ.வ.); father (Loc.).

[ஐயன் → அயன் → அஞன் → ஆஞான் → ஆஞி. ஆஞா – விளி. ஆஞி – விளி. இகரவீறு விளிச்சொல் கொச்சைத்திரிபு.]

ஆட்கடியன் āṭkaḍiyaṉ, பெ. (n.) 1. பாம்புவகை (குற்றா. தல. கண்டகசே. 32); a kind of snake (Tn.) 2. முதலை (இ.வ.); crocodile (Loc.).

[ஆள் + கடியன். கடியன் = கடிக்கக் கூடியது, விழுங்கக்கூடியது.]

ஆட்காசு atkasu, பெ. (n.) ஆள் வடிவம் பொறித்த பழங்காலக் காசு; ancient coin, on which is stamped the figure of a man.

ம. ஆளக்காசு,

[ஆள் + காசு]

ஆட்காட்டி atkatti, பெ. (n.) 1. சுட்டுவிரல்; fore finger as it points index finger. 2. ஆட்காட்டிப் பறவை; a bird known as atkatti-k-kuruvi. 3. வழிப்போக்கருக்கு வழிகாட்டும் அடையாளப் பலகை; sign post. 4. ஆளை அடையாளம் காட்டுபவன்: one who identifies the correct person. "ஆட்காட்டி தெரியாமல் திருடப் போகிறவன் கெட்டிக்காரனோ, அவன் அறியாமல் அவன் காலடி பிடித்துப் போகிறவன் கெட்டிக் காரனோ?" (பழ.)

[ஆள் + காட்டி]

ஆட்காட்டிக்குருவி atkatti-k-kuruvi, பெ. (n.) ஆள்காட்டிப் பறவை; red wattled lapwing Sandpiper, pewt. **Sacrigrammus indicus** alias Lobivanellas goerosis alias **Charadrius atrogularis.** It is so called from its screeching on the approach of a man at night. "ஆட்காட்டிப் பட்சி கடல் மேகம் போயொளிக்கும்" (பதார்த்த. 892).

மறுவ. ஆக்காட்டிக்குருவி, ஆட்காட்டிப்பட்சி. ஆள்காட்டுகின்றவள். **ம.** ஆள்காட்டி.

[ஆள் + காட்டி – ஆட்காட்டி. இராக்காலத்தில் மாந்தர் வருகையைக் கூச்சலிட்டுக் காட்டிக் கொடுக்கும் இயல்புடைமையின் இப்பறவை ஆள்காட்டிக்குருவி எனப் பெயர் பெற்றது.]



ஆட்காட்டிப்பட்சி atkatti-p-patci, பெ (n.) ஆட் காட்டிக் குருவி; bird. **ஆட்காட்டிக்குருவி** பார்க்க; see atkatti-k-kuruvi.

[ஆள் + காட்டி + பட்சி. Skt. paksi. *த. பட்சி.]*

ஆட்கால் atkal, பெ. (n.) சதுரங்கக் கட்டத்துள் காலாட்காயால் வெட்டக்கூடிய அறை; square where a piece is liable to be captured by a pawn. (chess).

[ஆள் + கால். ஆள் = காலாட்காய். கால் = உற்றவிடம்.]

ஆட்கூலி atkuli, பெ. (n.) ஒரு வேலையாளுக்குரிய கூலி; hire of a workman, wages of a labourer.

[ஆள் + கூலி.]

ஆட்கொண்டான் atkondan, பெ. (n.) வில்லிபுத்தூ ராழ்வாரைப் புரந்து பாரதம் பாடுவித்த திருவக்க பாகையில் வாழ்ந்த சிற்றரசன் (பாரத. பதினாறாம். 90); a chief who ruled in Vakka-pagai and under whose patronage Villiputhur-alvar composed the Tamil Bharatam, 14th c. வரபதி யாட்கொண்டான் பார்க்க; see **Varapadi** Atkondan.

[ஆள் + கொண்டான்]

ஆட்கொல்லி[1] atkolli, பெ. (n.) 1. கொலைஞன்; murderer, man-slayer. 2. பணம், பொன், செல்வம்; money, gold, wealth as slaying men. "ஆட்கொல்லி யென்பரிதை யாய்ந்திலையே" (அருட்பா, நெஞ்சறி. 412). 3. கொலைகாரி; woman who murders.

ம. ஆள்கொல்லி.

[ஆள் + கொல்லி.]

ஆட்கொல்லி[2] atkolli, பெ. (n.) தில்லைமரம் (சித். அக.); blinding tree (செ. அக.).

ஆட்கொல்லி விதை atkolli-vidai, பெ. (n.) தில்லை மரத்தின் விதை; seed of the tiger's milk spurge tree. (சா. அக.).

[ஆள் + கொல்லி + விதை]

ஆட்கொள்(ளு)-தல் atkol(lu)- 7 செ. குன்றாவி. (v.t.) 1. ஆளாக ஏற்றுக் கொள்ளுதல்; take into one's fold, admit into one's good graces, as God does a faithful devotee. "என்னையுமாட்கொண்டருளி" (திருவாச. 10.4). 2. உருக்கொள்ளுதல்; to get the form of a man (கதி.தமி. அக.).

[ஆள் + கொள்ளுதல் – ஆட்கொள்ளுதல். ஆள் = வேலைக்காரன், அடிமை.]

ஆட்சி atci, பெ. (n.) 1. ஆளுகை; rule, reign, "விண்ணு நின்னாட்சி யாக்கி" (கம்பரா. சூர்ப்ப.55). 2. உரிமை (பிங்.); ownership, proprietorship, lordship. 3. ஆன்றோர் வழக்கு ; use, usage,

esp. classical usage. இந்தச்சொல் ஆட்சியில் இல்லை (உ.வ.). 4. நுகர்வு, அனுபவம்; possession, enjoyment. "ஆட்சியி லாவணத்தில்" (பெரியபு . தடுத்தாட். 56). 5. மக்கள் அணையலாகாதெனக் கட்டளையிடப் பட்ட இடம் (திருக்கோ. 282.உரை); sphere of one's authority wherein an outsider may not intrude. 6. (வான.) கோள்நிலைகளுளொன்று; (astrol). ruling house of a planet, one of five kiraga-nilai. 7. அதிகாரம்; dominion, power. 8. தலைமுறையாக வந்த உரிமை; inheritance, heritage. 9. கிழமை, நாள் (நாமதீப.); day of the week. 10. அரசு; government. ஆட்சிமாறிவிட்டது. (உ.வ.)

க. ஆளுவிகெ; ஆள்கெ, ஆடளித; **து.** ஆடளிதெ Sinh. aṇḍuwa.

[ஆள் + சி - ஆட்சி.]

ஆட்சிக்கொடை āṭci-k-koḍai, பெ. (n.) நாட்டாட்சி நல்குதல். உண்டி, பொன், ஊர்தி, விலங்கு, சின்னம், பெயர், நிலம், மகன், ஆட்சி என்னும் ஒன்பான் கொடைகளுள் ஒன்று; gift of reign of a country, one among the nine gifts namely food, gold, mode of conveyance, animal, insignia, name, land, son and the reign of the country.

ஆட்சித்தானம் āṭci-t-tāṉam, பெ. (n.) (வான.) கோள்களுக்குரிய சொந்த இடம் (சாதகா.19 உரை); (astrol.) position of a planet in its own house. **ஆட்சிவீடு** பார்க்க; see āṭci vīḍu.

ஆட்சிப்படு-தல் āṭci-p-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. நெடுநாளாய் ஒருவரின் ஆளுகையிலிருந்து உரிமையாதல்; to become one's own by long possession. 2. தற்கிழமையாதல் (கதி. அக.); to be one's possession.

[ஆட்சி + படு]

ஆட்சிமொழி āṭcimoḻi பெ. (n.) அரசு பயன்படுத்தும் மொழி; official language.

ஆட்சியர் āṭciyar பெ. (n.) ஆளும் அதிகாரி; government official.

ஆட்சிராசி āṭcirāśi, பெ. (n.) (வான.) கோளுக்கு (கிரகம்) உரிமையான வீடு (வின்); (astrol.) ruling house of a planet.

[ஆட்சி + ராசி. Skt. rāśi, > *த. ராசி.]*

ஆட்சிவீடு āṭcivīḍu, பெ. (n.) (வான.) கோள்களுக்கு உரிமையான் தங்குமிடம் (வின்); (astrol). position of a planet in its own house.

ஆட்சுமை āṭcumai, பெ. (n.) ஒராள் தூக்கும் சுமை; man's load, coolie load.

[ஆள் + சுமை ஆட்சுமை. சுமப்பது சுமை.]

ஆட்செய்-தல் āṭcey-, 1. செ. கு.வி. (v.t) 1. தொண்டு செய்தல்; to serve, to pay homage to. "ஆட்செய் தாழிப்பிரானைச் சேர்ந்தவன்" (திவ். திருவாய். 4,10,11). 2. ஆளைப்போன்ற வடிவம் சமைத்தல்; to make an image of man.

ஆட்டக்கச்சேரி āṭṭa-k-kaccēri, பெ. (n.) 1. சதிர்; nautch. 2. ஆட்டம் நடைபெறும் இடம்; place of performance.

[ஆட்டம் + கச்சேரி = ஆட்டக்கச்சேரி] கச்சேரி பார்க்க; see **kaccēri.**

ஆட்டக்கதை āṭṭa-k-kadai, பெ. (n.) 1. மலையாளத்தில் 'கதகளி' என்னும் பெயரில் நடைபெற்றுவரும் ஒரு பழைய ஆட்டவகை; a peculiar kind of classical dance-drama in Malayālam, known as Kathakaḷi. 2. தெருக்கூத்து அல்லது நாடகக்கதை; story of a drama or street drama.

ம. ஆட்டக்கத (கதகளி).

ஆட்டக்கல்லிக்காய் āṭṭa-k-kalli-k-kāy, பெ. (n.) ஈரி தழ்ச்சிப்பி (சேர. நா.); a kind of large oyster (Kera).

[ஆட்டம் + கல்லி + காய்]

ஆட்டக்கவடன் āṭṭa-k-kavaḍan, பெ. (n.) திறமையாக நடித்து ஏமாற்றுபவன்; one who cheats acting very cleverly. அவன் ஆட்டக்கவடன், அவனை நம்பாதே (உ.வ.).

க. ஆட்டகபட.

[ஆட்டம் + கவடன் = ஆட்டக்கவடன். கவடு = கவைத்த அல்லது பிரிவுற்ற, இருவேறு இயல்பு. கவடன் = உள்ளொன்று வைத்துப் புறத்தொன்றுபேசு பவன். கவடன் – **Skt. kapaṭa.** *]*

ஆட்டக்களம் āṭṭa-k-kaḷam, பெ. (n.) 1. நாட்டியம் அல்லது நாடகம் நடைபெறும் இடம்; stage for dance or drama. 2. விளையாடுமிடம்; play-ground. 3. மலையாளத்தில் நடைபெறும் ஒணத்தள்ளு என்னும் விளையாட்டு. fencing-matches or sham

combats held in connection with 'ōnam' festival in former days

ம. ஆட்டக்களம்.; **தெ.** ஆடபாக

ஆட்டக்கன்னி āṭṭa-k-kaṉṉi, பெ. (n.) ஆண்டுதோறும் கன்றீனும் ஆ (பசு) (சேர.நா); a cow delivering a calf every year (Kera.).

ம. ஆட்டக் கன்னி

[ஆண்டு – ஆட்டை + கன்னி – ஆட்டைக்கன்னி. கன்னி = கன் றீனுவது. கன்னுவது கன்னி; 'இ' எழுவாய் குறித்தசுறு]

ஆட்டக்காய் āṭṭa-k-kāy, பெ. (n.) 1. சதுரக்கட்டம், தாயக்கட்டம் போன்ற விளையாட்டுகளில் பயன் படுத்தப்படும் காய்; piece used in games like chess. 2. ஆட்டக்காயைப் போல் பிறர் ஏவியபடி செயற் படும் கையாள்; one who is a fool in the hands of a manipulator, pawn.

க. ஆட்டகாயி.

[ஆட்டம் + காய்]

ஆட்டக்காரன் āṭṭ-k-kāraṉ, பெ.. (n.) 1. விளை யாட்டுக்காரன் ; player. 2. வேடிக்கை செய்பவன்; funny fellow. 3. தெருக் கூத்தில் நடிப்பவன்; actor in the street play.

ம. ஆட்டக்காரன் **க.**ஆட்டக, ஆட்டகார, ஆட்டங்குளி; **தெ.** ஆடகாடு; **து.** ஆடதாயெ; **கொலா**. ஆட்டகார்

[ஆட்டம் + காரன் = ஆட்டக்காரன்]

ஆட்டக்காரி āṭṭa-k-kāri, பெ. (n.) 1. ஆட்டம் ஆடு பவள்; woman player. 2. நடிப்பவள்; actress.

க. ஆட்டகாரி; **தெ.** ஆட்டகார்த்தி.

[ஆட்டம் + காரி]

ஆட்டக்கூட்டம் āṭṭa-k-kūṭṭam, பெ. (n.) 1. நாட்டிய மாடுவோர் குழு ; band of dancers, dance party. 2. நாடகக் குழு; team of dramatists. 3. விளை யாட்டுக் குழு; team of players.

க. ஆட்டகூட்ட.

[ஆட்டம் + கூட்டம்.]

ஆட்டக்கை āṭṭa-k-kai, பெ. (n.) மலையாளத்துக் கதகளியாட்டத்தில் இடம் பெறும் ஒரு கை முத்திரை; a hand-pose in Kathakali play (in Kerala.)

ம. ஆட்டக்கை

[ஆட்டம் + கை.]

ஆட்டக்கொட்டில் āṭṭa-k-koṭṭil, பெ. (n.) 1. நாடக அரங்கம்; theatre 2. மலையாளத்தில் கதகளி யாட்டம் நடைபெறும் அரங்கம்; hall for the performance of Kathakali or dance.

[ஆட்டம் + கொட்டில்.]

ஆட்டகம் āṭṭagam, பெ. (n.) 1. நீராடுமிடம் (திரு மஞ்சனசாலை); bathroom. "ஆட்டகத்திலானைந் துகந்தார் போலும்" (தேவா.720,4)

தெ. ஆடடிக்கிய.

[ஆடு + அகம் – ஆட்டகம். ஆடுதல் = நீராடுதல். அகம் = மனை, வீடு, வீட்டின் பகுதி.]

ஆட்டங்கட்டு[1]–தல் āṭṭaṅkaṭṭu-5 செ.கு.வி. (v.i.) 1. நடித்து ஏமாற்றுதல்; to cheat by clever means. 2. நாடகத்தில் வேடம் புனைதல்; to enact a part in a drama. அவன் சிவனாக ஆட்டங்கட்டுகிறான். (உ.வ.).

க. ஆட்ட கட்டு

[ஆட்டம் + கட்டு.]

ஆட்டங்காட்டு[2]–தல் āṭṭaṅkāṭṭu-, 5 செ.கு.வி. (v.i.) 1. அலையச்செய்தல்; to make one wander here and there. என்னை ஏன் இப்படி ஆட்டங்காட்டு கிறாய்? (உ.வ.) 2. மிகவும் வருந்தச்செய்தல்; to annoy some one. அவனை அளவுக்கு மீறி ஆட்டங்காட்டி விட்டான் (உ.வ.) 3. ஏய்த்தல், ஏமாற்றுதல்; to cheat. எனக்குப் பணம் தராமல் ஆட்டங்காட்டாதே (உ.வ.) 4. காலம் நீட்டித்தல்; to delay. இன்று நாளையென்று ஆட்டங்காட்டு கிறான் (உ.வ.).

[ஆட்டம் = அசைவு, வருத்தம், ஒத்திருத் தலைக் காட்டுதல் (ஏய்த்தல்). ஆட்டம் + காட்டுதல்; காட்டுதல் = விளையச்செய் தல், உண்டாக்கல். ஆட்டம்[1], ஆட்டம்[2] பார்க்க; see āṭṭam[1], āṭṭam[2])

ஆட்டங் காணு–தல் āṭṭaṅkāṇu-, 12 செ.கு.வி. (v.i) 1. அசைவுறுதல்; to be shaky. பல் ஆட்டங் கண்டு விட்டது. (உ.வ.) 2. தீங்கு நேர்தல், ஊறு நேர்தல்; to become harmful, decay. பதவி ஆட்டங் கண்டு விடும் (உ.வ) 3. விளையாட்டு அல்லது நாடகம் காணுதல்; to see a match or drama. 3ஆம் ஆட்டங் கண்டேன். (உ.வ.)

[ஆட்டம் + காணுதல் = ஆட்டங்காணுதல். ஆட்டம் = அசைவு, நிலைகேடு. அசைந்து ஒடியாடும் விளையாட்டு, ஒசிந்தாடும் ஆடல் தழுவிய நாடகம்..]

ஆட்டங்காய்[1] āttankāy, பெ. (n.) உருண்டைவடிவும் கசப்புமுள்ள காட்டு வெள்ளரிக்காய்; fruit of curcumas colocynth.

ம. ஆட்டங்காய்.

ஆண்டங்காய் பார்க்க; see āndankāy.

[ஆட்டம் + காய்]

ஆட்டங்கால் āttangāl, பெ. (n.) வெள்ளைப்பூண்டு; garlic–Allium sativum.

ஆட்டங்குளி āttanguli, பெ. (n.) **ஆட்டங்கொளி** பார்க்க; see āttangoli.

[ஆட்டம் + குளி]

ஆட்டங்கொள்–தல் āttankiol, 7 செ. குன்றாவி. (v.t) 1. அசைவுறல்; move, shake. 2. நிலைத் தன்மை யிழத்தல்; to lose stability.

க. ஆட்டங்கொள்.

[ஆட்டம் + கொள்]

ஆட்டங்கொளி āttangoli, பெ. (n) எப்பொழுதும் விளையாடிக் கொண்டிருக்கும் இயல்புள்ளவன்; boy or man of playful nature.

க. ஆட்டங்குளி, ஆட்டகுளி.

[ஆட்டம் + கொளி]

ஆட்டங்கொளித்தனம் āttangoli–t–tanam, பெ. (n.) எப்பொழுதும் விளையாட்டிலேயே பொழுது போக்கும் இயல்பு ; playful nature.

க. ஆட்டகுளிதன

[ஆட்டம் + கொளி + தனம்]

ஆட்டத்துவெளி āttattuveli, பெ. (n.) குதிரைகளை ஓடவிடுகின்ற பரந்த வெளி, வையாளி விடுகிற வெளி (ஈடு. 7,3,5); race course, a plain where horses are galloped.

[ஆட்டம் + அத்து + வெளி. ஆட்டம் = ஆடவிடுதல், ஓடவிடுதல். அத்து – சாரியை. வெளி = திறந்த இடம்.]

ஆட்டதாளம் āttatālam, பெ. (n.) தெருக்கூத்தில் அல்லது நாட்டியம் நாடகம் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் தாளம்; a species of rhythm

க. ஆட்டதாள; **தெ.** ஆட்வெலதி

[ஆட்டம் + தாளம்]

ஆட்டப்பாட்டு ātta–p–pāttu, பெ. (n.) ஆட்டத்திற்குரிய பாட்டு; poem composed for a dance or drama.

ம. ஆட்டப்பாட்டு.

[ஆட்டம் + பாட்டு = ஆட்டப்பாட்டு.]

ஆட்டப்பெட்டி ātta–p–petti, பெ. (n.) தெருக்கூத்து நடத்துவோர் தம் பொருள்களை வைத்துக் கொள்ளும் பெட்டி ; big box for keeping the dress and other accessories of street drama (terukkūthu) actors.

ம. ஆட்டப்பெட்டி

[ஆட்டம் + பெட்டி]

ஆட்டபாட்டம் āttapāttam, பெ. (n.) 1. ஆடல் பாடல் (தமிழறி. 57). dancing and singing. 2. ஆர்ப்பாட்டம்; foppishness. அவன் ஆட்டபாட்டமெல்லாம் அடங்கி விட்டது. (உ.வ.). 3. பொழுது போக்கு; pastime.

க. ஆட்டபாட

[ஆட்டம் + பாட்டு + அம்]

ஆட்டம்[1] āttam, பெ. (n.) 1. அசைவு; motion, vibration, rocking, swinging, rolling, pitching, as of a ship. 2. விளையாட்டு; play, sport, game. "தவப்பகடி யாட்டங் காண்" (ஒழிவி. யோக.4.). 3. விளையாட்டில் தொடங்குமுறை; one's turn in a game. 4. கூத்தாட்டு; dance. அங்கே ஆட்டமும் பாட்டமு மாயிருக்கிறது (உ.வ.). 5. அதிகாரம்; influence, power. ஊர் முழுவதும் அந்த அதிகாரியின் ஆட்டமாயிருக்கிறது (உ.வ.). 6. அங்குமிங்கும் திரிதல்; moving about, going here and there. "அஞ்சன மேனியை யாட்டங் காணேன்" (திவ். திருவாய்.10,3,3). 7. பேய் கொண்டாற்போல் குதித்தல் ; behaving like the one possessed. அங்கே போகவேண்டுமென்று என்ன ஆட்டம் ஆடினாள் (உ.வ.). 8. நடுக்கம்; shaking. முதியவருக்குத் தலையாட்டங் கண்டுவிட்டது. (உ.வ.) . 9. நடிப்பு; action. அந்த ஆட்டமெல்லாம் இங்கே செல்லாது (உ.வ.). 10. நாடகம்; drama.. ஆட்டம் பார்க்கப் போனார்கள். (உ.வ.). 11. தெருக்கூத்து ; street drama. அந்த ஊரில் இன்று இரவு ஆட்டம் நடக்கிறது. (உ.வ.) 12. நாட்டியம்; dance. அந்தப் பெண்ணின் ஆட்டம் நன்றாக இருந்தது. "ஆட்டமும் பாட்டும் அரை நாழிகை, அவளைச் சிங்காரிக்க ஆறு நாழிகை" (பழ).

13. விளையாட்டு போல் ஏமாற்றல்; cheating as if in a play of hide and seek. ஐந்து நாளாய்ப் பணம் தருகிறேன் என்று ஆட்டங்காட்டுகிறான். 14. போட்டி விளையாட்டு ; game. இரண்டு ஆட்டம் எடுத்து விட்டான் (உ.வ.). 15. அசைத்தல் ; causing to move. அவன் விரலாட்ட முடியாது, அவன் வாலாட்ட முடியாது (உ.வ.). 16. ஏமாற்றுதல், ஏய்த்தல்; fraud. "ஆர்க்குத் தெரியுமவளாட்ட மெலாம்" (தெய்வச். விறலிவிடு. 423). 17. முயற்சி; energy, vigour(w.). (கதி.தமி.அக.). 18. அலைவு (கதி.தமி.அக.); shaking, waving, trouble, distress. 19. கவறாட்டம், சூதாட்டம்; gambling. 20. ஆற்றல், வலிமை; power. அவன் ஆட்டம் அடங்கி விட்டது. (உ.வ.). 21. அதிர்ச்சி; vibration, shock (சா.அக.). 22. தலையாட்டம் ; vacillation of the head through old age; rolling of the head through restlessness or other diseases. 23. திரைப்படக்காட்சி; film show

ம. ஆட்டம் ; **க.** ஆட்ட, ஆடு ; **தெ.** ஆட ; **பட., கச.** ஆட; **கூ.** ஆட ; **கொலா.** ஆட் ; **நா.** ஆர் ; **குட.** ஆட் ; **துட.** ஒட் ; **கோத.** ஆழ்.

[ஆடு → ஆட்டம். ஆடுதல் → அசைதல். ஆடு + அம் = ஆட்டம். அம் = சொல்லாக்க ஈறு.]

ஆட்டம்² āṭṭam, இடை. (ind.) 1. தன்மை; likeness (கதி.அக.). 2. போன்றிருத்தல், போல (ஓர் உவம உருபு); shape, in imitation (w.). முகம் குரங்காட்டம் இருக்கிறது (உ.வ.).

[அண் → அட்டு = நெருங்கியிருத்தல், ஒத்திருத்தல், ஒத்திருக்கும் தன்மை. அட்டு → ஆட்டு → ஆட்டம் = போன்றிருத்தல்.]

ஆட்டம்³ āṭṭam, இடை (part.) ஒரு சொல்லாக்க ஈறு; formative suff. of vbl .n. as in போராட்டம், மல்லாட்டம், மாறாட்டம், etc.

தெ. ஆட, அட, அடமு.

[ஆடு + அம் = ஆட்டம். ஆடுதல் = செய்தல். ஆட்டம் = செயற்பாங்கு, செயல்தன்மை. போர் + ஆட்டம் போராட்டம், மல் + ஆட்டம் – மல்லாட்டம் என முதனிலைப் பொருள் குறித்த தொழிற் பெயரீறாகவும் பண்புப் பெயரீறாகவும் 'ஆட்டம்' வழங்கிவருகிறது.]

ஆட்டம் போடு-தல் āṭṭam-pōḍu-, 16 செ. கு.வி. (v.i.) 1. கொட்டமடித்தல்; to display pleasure by way of shouting and behaving indecently. என்னமாய் ஆட்டம் போடுகிறார்கள். (உ.வ.) 2. கொடுஞ் செயல் புரிதல்; to display arrogance. 'ஆட்டம் போட்டு அடங்கி விட்டான். (உ.வ.). 3. தெருக்கூத்து நடத்துதல்; to conduct a street drama 'பழையனூரில் நாளைக்கு ஆட்டம் போடுகிறார்கள்' (உ.வ.). 4. சிறுவர்கள் விளையாடி ஆரவாரம் செய்தல்; children making a noise while playing. அப்பா! இந்தப் பிள்ளைகள் என்னமாய் ஆட்டம் போடுகிறார்கள் (உ.வ.)

ஆட்டம்¹ பார்க்க. see **āṭṭam¹**

[ஆட்டம் + போடு]

ஆட்டமடங்கு-தல் āṭṭam aḍaṅgu-, 21. செ.கு.வி (v.i.) திமிர் அடங்குதல், செருக்கடங்குதல்; to get pride and arrogance become subdued. "ஆட்டமும் கூத்தும் அடங்கிற்று அத்தோடே" (பழ.).

ஆட்டமடித்தல்¹ āṭṭamaḍi-, 4. செ.கு. வி. (v.i.) 1. கொட்டமடித்தல், ஆரவாரம் செய்தல்; to shout, make a noise, to show pomposity. 2. விளையாட்டில் வெல்லுதல்; to win a game.

ஆட்டமடித்தல்² āṭṭamaḍittal, பெ. (n.) கிட்டிப்புள் விளையாட்டு (வின்.); out-door game played by boys, in which the 'puḷ.' or a stout little stick is hit off to a great distance by the kiṭṭi or longer stick.

[ஆட்டம் + அடித்தல் – ஆட்டமடித்தல். அடித்து விளையாடும் ஆட்டம். அடித்தலாட்டம் = ஆட்டமடித்தல் என முன்பின்னாக மாறியமைந்த சொற் புணர்ப்பு.]

ஆட்டமாட்டு-தல் āṭṭamaṭṭu-, 5. செ.கு.வி. (v.i.) 1. ஆடு மாறு செய்தல்; to make one dance. 2. சொன்னபடி செய்வித்தல்;. to make one act as directed..

க. ஆட்டமாடிசு.

ஆட்டமாடு¹-தல் āṭṭam āḍu-, 5. செ.கு.வி. (v.i.) 1. விளையாட்டாகப் பேசுதல் ; to make fun. 2. விளையாடுதல் ; to play. 3. ஏமாற்றுதல்; to cheat.

[ஆட்டம் = விளையாட்டு, விளையாட்டான செயல்கள். ஆட்டம் + ஆடுதல் – ஆட்டமாடுதல்.]

ஆட்டமாடு²-தல் āṭṭam āḍu_, 5. செ.குன்றாவி . (v.t.) 1. ஒரு விளையாட்டை ஆடுதல்; to play a particular game. 2. ஒரு நாடகம் ஆடுதல்; to enact a drama.

க. ஆட்டவாடு ; **பட.** ஆட்ட ஆடு

ஆட்டமாய் āṭṭamāy, இடை (part.) போல; as, like. குதிரையாட்டமாய் ஓடினான் (உ.வ.).

*[ஆட்டம் + ஆய். ஆட்டம் = போல ; ஆய் கு.வி. எ. ஈறு. ஆட்டம்² பார்க்க ; see **āṭṭam²**.]*

ஆட்டமுரி āṭṭamuri, பெ. (n.) வெள்ளாட்டு மூத்திரம்; goat's urine.

[ஆட்டு + அமுரி.]

ஆட்டமெடு-த்தல் āṭṭameḍu-, 4. செ. கு. வி. (v.i.) 1. நடுங்குதல்; to shiver. குளிரால் உடம்பெல்லாம் ஆட்டமெடுத்துவிட்டது. (உ. வ.). 2. விளையாட்டில் வெல்லுதல்; to win a game. இரண்டாட்டமும் அவர்களே எடுத்துவிட்டார்கள் (உ.வ.). 3. வழி தேடுதல், வழிவகை மேற்கொளல்; to take a step, adopt a measure. (செ.அக.).

[ஆட்டம் + எடு = ஆட்டமெடு.]

ஆட்டல் āṭṭal, பெ. (n.) 1. அசைத்தல்; moving. 2. அரைத்தல்; grinding. மாவாட்டல் முடிந்து விட்டது (உ.வ.). 3. கூத்தாட்டுதல்; making one dance. 4. நீராட்டுதல்; making one bath.

[ஆடு(த.வி.)→ஆட்டு(பி.வி.).ஆட்டு+அல்=ஆட்டல். அல் (தொ.பெ.ஈறு).]

ஆட்டு-தல் பார்க்க ; see āṭṭu_,

ஆட்டலாங்கொடி āṭṭalān-goḍi, பெ..(.n.) சோமலதைக் கொடி; soma plant (unidentified) (சா.அக.).

மறுவ. ஆட்டாங்கொடி

ஆட்டலை-த்தல் āṭṭalai–, 18 செ. குன்றாவி. (v.t.) பகைவரைப் பின் தொடர்ந்து சென்று பற்றி அலைத்தல், துன்புறுத்தல்; to pursue the enemy, catch and torment him.

க. ஆட்டலெ

*[அட்டு + அலைத்தல் – அட்டலைத்தல் → ஆட்டலைத்தல். **அட்டலைத்தல்** பார்க்க;* see attalait-tal.*]*

ஆட்டவிளக்கு āṭṭa-viḷakku, பெ.(n.) தெருக்கூத்தில் அல்லது இராக்கால விளையாட்டுகளில் முன்னால் வைக்கப்படும் விளக்கு ; big bronze or earthern lamp placed at the edge of the stage in street plays or nocturnal games.

ம. ஆட்ட விளக்கு

[ஆட்டம் + விளக்கு]

ஆட்டவை-த்தல் āṭṭavai–, 4 செ.கு.வி.(v.i.) பின்னாலிருந்து தூண்டிவிட்டுச் செயற்படுத்துதல்;to make one act according to the will of another who forces from behind. 2. படாதபாடு படுத்துவித்தல்; to make one undergo untoward sufferings. அவனை ஆட்டவைக் கிறேனா இல்லையா பார் (உ.வ).

ஆடு (த.வி.) → ஆட்டு (பி.வி.) ஆட்ட. (வி.எ.).

ஆட்டனத்தி āṭṭan atti, பெ. (n.) சேர இளவரசன்; Chera prince.

ஆட்டாங்கள்ளி āṭṭāṅkaḷḷi, பெ. (n.) திருகுகள்ளிச்செடி (மலை.); twisted square spurge.– Eupherbia tootibs alias E. tiruculli. (சா. அக.).

[ஆடு = அசைவு, வளைவு. ஆட்டாங்கள்ளி = வளைந்து திருகிய கள்ளி.]

ஆட்டாங்கொடி āṭṭāṅkoḍi, பெ. (n.) சோமலதைக் கொடி; soma plant. ஆட்டலாங்கொடி பார்க்க; see āṭṭalāṅkoḍi.

ஆட்டாங்கொறுக்கு āṭṭāṅkoṟukku, பெ. (n.) மலைத் துவரை (சித்.அக.); hilldhal–cytisuscajan (சா.அக.).

ஆட்டாங்கோரை āṭṭāṅkōrai, பெ. (n.) சிறுகோரைப்புல் a small variety of kōrai grass, a sedge - Cyperus (genus.) (சா.அக.).

ஆட்டாண்டு āṭṭāṇḍu, பெ (n.) ஒவ்வோராண்டு; every year. 'ஆட்டாண்டு தோறும் அளக்கக் கடவ நெல்லு' (S.I.I. ii,70).

*[ஆண்டு + ஆண்டு = ஆண்டாண்டு → ஆட்டாண்டு (வலித்தல்திரிபு). **ஆண்டாண்டு** பார்க்க;* see āṇḍāṇḍu.*]*

ஆட்டாம்பிழுக்கை āṭṭām–piḻukkai, பெ. (n.) ஆட்டின் சாணம்; sheep's ordure or dung.

*[ஆடு + ஆம் = ஆட்டாம் + பிழுக்கை. **ஆட்டாம் புழுக்கை** பார்க்க;* see āṭṭām–puḻukkai.*]*

ஆட்டாம் புழுக்கை āṭṭām– puḻukkai, பெ. (n.) ஆட்டின் சாணம்; sheep's ordure or dung.

[ஆடு + ஆம் = ஆட்டாம் (ஆட்டினுடைய). புழுக்கை (துண்டுபட்ட சாணம்). புள் = பிளத்தல், துண்டுபடல். புள் → புளு → புழு. புழு + கை – புழுக்கை. 'கை' சி. பொ. மு.]

ஆட்டாயன் āṭṭāyan பெ. (n.) ஆடு மேய்ப்பவன்; shepherd.

ஆட்டாலை āṭṭālai, பெ. (n.) 1. எண்ணெய் ஆட்டும் ஆலை, செக்கு, oil press. 2. ஆடுகளுக்காகப் போடப்படும் கொட்டகை; sheep – fold. (குமரி.).

ம. ஆட்டால.

ஆட்டாள்[1] āṭṭāḷ, பெ. (n.) ஆடுமேய்ப்பவன்; ஆட்டிடையன்; man employed to attend to the sheep in the pasture, shepherd. ஆட்டாளுக்கு ஒரு மோட்டாள், அந்த மோட்டாளுக்கு ஒரு சீட்டாள் (உ.வ.).

ம. ஆட்டாள்

[ஆடு + ஆள் - ஆட்டாள் . ஆட்டைக் காத்து மேய்த்து வரும் ஆள்.]

ஆட்டாள்[2] āṭṭāḷ, பெ. (n.) ஆற்றலுள்ளவன், திறமையுள்ளவன்; an able man, expert.

ம. ஆட்டாளு.; க. ஆடாளு.

ஆட்டாளி[1] āṭṭāḷi, பெ. (n.) ஆட்டத்தில் வல்லவன்; one who is good at a play.

க. ஆட்டாளி.

ஆட்டாளி[2] aṭṭāḷi, பெ. (n.) ஆள்பவன், ஒரு பணியைச் செவ்வனே மேற்பார்ப்பவன், (நிருவாகி); person having ability to accomplish or to shoulder a responsibility. உங்கள் காரியங்களுக் கெல்லாம் நான் ஆட்டாளியா? (உ.வ.)

க. ஆடளிதகார; தெ. ஆடவண்ணு; து. ஆடளி தெதூபிநாயெ.

[ஆடு (த.வி.) → ஆட்டு (பி.வி.). ஆட்டுதல் = செய்வித்தல், மேற்பார்த்தல். ஆட்டு + ஆள் + இ = ஆட்டாளி. ஒ. நோ. பாடு → பாட்டு + ஆள் + இ = பாட்டாளி. 'இ' தன்மை குறித்த உடைமை அல்லது உடையவன் ஈறு.]

ஆட்டி[1] āṭṭi, பெ. (n.) 1. பெண் (திவா.); woman, lady. மணவாட்டி (உ.வ.) 2. மனைவி; wife. "ஆட்டியு மகவுந் தானு மதற்குடம் பட்டு" (சேதுபு. வேதா. 39). பெண்டாட்டி (உ.வ.). 3. தலைவி (பிங்.); lady, woman of rank. திருவாட்டி (உ.வ.).

க. ஆடங்க; தெ. ஆலு(மனைவி), ஆட்டடி, ஆட்டி(பெண்) து. ஆடெ.

ஆட்டி[2] āṭṭi, வினையா. பெ. (n.) 1. ஆட்டுபவன்; ஆடச்செய்பவன்; one who makes the cobra or the monkey dance, used only in compounds as பாம்பாட்டி, குரங்காட்டி (உ.வ.).

ம. ஆட்டி,

ஆட்டி[3] āṭṭi, இடை. (part.) பெண்பாலீறு; fem.suff.of nouns. முதாட்டி, அடியாட்டி (உ.வ.). கம்பாட்டி (வீரசோ. தத்தித 5).

ஆட்டி[4] āṭṭi, வி.எ. (adv.) அரைத்து; ground, past tense of ஆட்டு

[ஆட்டு +இ +ஆட்டி. 'இ' இறந்தகாலங் காட்டும் வி.எ. ஈறு.]

ஆட்டிடைச்சி āṭṭiḍaicci, பெ. (n.) ஆய்ச்சி; shephered woman

ஆட்டிடையன் āṭṭiḍayaṉ, பெ. (n.) ஆடுமேய்க்கும் இடையன்; shepherd.

[ஆடு + இடையன் = ஆட்டிடையன்.]

ம. ஆட்டிடயன்

ஆட்டியவஞ்சம் āṭṭiyavañjam, பெ. (n.) புளி; tamarind-Tamarindus indica. (சா.அக.).

[ஒருகா. ஆண்டு → ஆட்டை → ஆட்டிய + வஞ்சம். வெஞ்சனம் → வஞ்சனம் (உண்பொருள்). ஆண்டுக் கொருமுறை கிடைக்கும் உண்பொருள்.]

ஆட்டியவாதம் āṭṭiyavādam, பெ. (n.) ஒருவகை ஊதை (வாத) நோய் (கதி.அக.); a kind of disease.

[ஆட்டியவூதை பார்க்க; see āṭṭiyavūdai.]

ஆட்டியவூதை āṭṭiyavūdai, பெ. (n.) உடலுழைப்பில்லா மலே உயர்ந்த உணவு வகைகளை உண்டுறங்கு வதனால் ஏற்படுவதும், உடம்பில் திமிர், கனம், வலி, இளைப்பு, வீக்கம், மலச்சிக்கல், கால் வலி முதலிய கணங்களையுண்டாக்குவது மாகிய ஓர் ஊதை (வாத) நோய் (சா. அக.); rheumatism generally due to the deranged (Vayu and kapham) gas and phlem arising from consuming rich food and lack of sufficient exercise.

[ஆட்டு → ஆட்டிய (வருத்துகிற) + ஊதை.]

ஆட்டிறைச்சி āṭṭiraicci, பெ. (n.) ஆட்டின் புலால்; mutton.

ம. ஆட்டிறைச்சி

[ஆட்டு + இறைச்சி = ஆட்டிறைச்சி.]

ஆட்டினி āṭṭiṉi, பெ. (n.) காட்டுப் பூவரசு (சித். அக.); false fern tree.

[அத்து → அட்டு → அட்டினி → ஆட்டினி]

ஆட்டீற்று āṭṭīṟṟu-, பெ. (n.) ஆண்டுதோறும் ஈனுகை (இ.வ.); calving every year (Loc.).

[ஆண்டு → ஆட்டு. ஈன் → ஈற்று.]

ஆட்டு[1]**-தல்** āṭṭu-, 5 செ.குன்றாவி (v.t.) 1. அசைத்தல்; to move, shake, wave, rock as a cradle,

to swing. 2. துரத்துதல்; to drive away, score off. "ஆட்டி விட்டா றலைக்கும்" (ஐந். ஐம். 34). 3. அலைத்தல்; to harass, afflict, vex. "ஒருவனாட்டும் புல்வாய் போல" (புறநா. 193). 4. வெல்லுதல்; to conquer. "இகலமராட்டி" (சிலப்.5,225). 5. ஆடச்செய்தல்; to cause to dance, as a girl, a cobra or a monkey. "நச்சர வாட்டிய நம்பன் போற்றி" (திருவாச. 3,106). 6. நீராடுதல், குளித்தல்; to bathe. "ஆன்பாறழைத்த வன்பா லாட்ட" (சேதுபு. கடவு.12). 7. அரைத்தல்; to grind in a mill, as sesamum or sugar cane. "கரும்பாட்டிக் கட்டி சிறு காலைக் கொண்டார்" (நாலடி. 35).

ம. ஆட்டு; **க., பட.** ஆடு, **தெ.** ஆடு. **து.** ஆடுனி;

[ஆடு (த.வி.) → ஆட்டு (பி.வி.)]

ஆட்டு [2] āṭṭu, பெ. (n.) 1. விளையாட்டு; sport, play. "அன்னவகை யாட்டயர்ந்து"(பரிபா. 10.97) 2. கூத்து; dancing; "உரையும் பாட்டு மாட்டும் விரைஇ (மதுரைக். 616) (செ.அக.). 3. அலைப்பு; movement, shaking. 4. ஆடுந்தன்மை; posture of a (dancing) movement. 5. ஆட்டுந்தன்மை; way by which a posture is effected. 6. வல்லமை; power, strength. (கதி. அக.).

க. ஆட்டுதன; **தெ.** ஆட; **கொ.** ஆடா.

[ஆடு (த.வி.) →ஆட்டு (பி.வி.). பிறவினைகளே தொழிற் பெயராகும். ஒ.நோ. கூடு →கூட்டு]

ஆட்டு āṭṭu, இடை. (Part.) பெயரீறு; formative suffix- உண்டாட்டு.

ஆட்டுக்கசப்பு āṭṭu-k-kaśappu, பெ. (n.) ஆட்டின் பித்தம்; bile in the bile-duct of a sheep. (சா. அக.).

[ஆடு+ கசப்பு – ஆட்டுக்கசப்பு. கசப்பு = கசப்புள்ள பித்தநீர்.]

ஆட்டுக்கசாலை āṭṭu-k-kaśālai, பெ.. (n.) ஆட்டுக் கிடை (இ.வ.); sheep-fold.

[ஆடு கசாலை → ஆட்டுக்கசாலை.

கசாலை=தங்குமிடம். கச்சல் = சிறுமை, ஆலை=இடம். கச்சாலை →கசாலை = சிறிய இடம்.

இதே சொல், கச்சாலை →கச்சாரி →கச்சேரி = எனவும் திரிந்தது.

கசாலை பார்க்க; see **kaśālai.**]

ஆட்டுக்கடா āṭṭu - k-kaḍā, பெ. (n.) ஆணாடு; ram, he-goat.

ம. ஆட்டுகொற்றன். **க.** ஆடு; **தெ.** ஏட

[ஆடு + கடா – ஆட்டுக்கடா.

கடா பார்க்க; see **kaḍā.**]

ஆட்டுக்கத்திக்கோலா āṭṭu-k-katti-k-ōlā, பெ. (n.) மீன் வகையிலொன்று; belone strongulara.

[ஆடு –ஆட்டு+கத்தி+கோலா.]

ஆட்டுக்கல் [1] āṭṭu-k-kal, பெ. (n.) 1. அரைக்கும் கல்லுரல்; stone-mortar. "உரலுலக்கை யேந்திரஞ் சுளகாட்டுக்கல்" (பிரபோத. 11,34).

ம. ஆட்டுகல்லு.

[ஆடு→ஆட்டு. ஆட்டு + கல் – ஆட்டுக்கல்.]

ஆட்டுக்கல் [2] āṭṭu-k-kal, பெ. (n.) ஆட்டு ரோசலனை; the bezoar of the sheep. (சா. அக.).

ம. ஆட்டிங்கல்லு.

[ஆடு + கல் – ஆட்டுக்கல் = ஆட்டின் வயிற்றில் கல் போன்று திரண்டிருக்கும் நஞ்சுமுறிப்பான்.]

ஆட்டுக்கல் [3] āṭṭu-k-kal, பெ. (n.) நஞ்சு வகைகளுள் ஒன்று (அமுதபாடாண வகை); a kind of poison. (சா. அக.).

[ஆட்டுக்கல் = கூட்டியரைத்த செய் நஞ்சு.]

ஆட்டுக்காதுக்கள்ளி āṭṭu-k-kādu-k-kaḷḷi, பெ. (n.) **ஆட்டுச்செவிக்கள்ளி** பார்க்க; see **āṭṭu-c-cevi-k-kaḷḷi**

ஆட்டுக்கால் āṭṭu-k-kāl பெ. (n.) 1. அடப்பங்கொடி, ஆட்டுக்காலடம்பு ; a kind of creeper. 2. ஆட்டின் கால்; sheep's leg. 3. பூமருதம் (மலை.); flowering murdah – **Terminalia paniculata** (சா.அக.).

ஆட்டுக்காலடம்பு āṭṭu-k-kāl-aḍambu, பெ. (n.) அடப்பங்கொடி; goats – foot, convolvulus – Ipomaea biloba. A plant creeping but never twining.(சா. அக.)

மறுவ. முசற்றழை.

ஆட்டுக்காற்கல் āṭṭu-k-kāṟkal, பெ. (n.) கொக்கைக் கல்; coral stone (W.)

[ஆடு + கால் – ஆட்டுக்கால். ஆட்டுக்கால் + கல் – ஆட்டுக்காற்கல் = ஆட்டுக்கால் வடிவிலமைந்த பவழக் கல்.]

ஆட்டுக்கிடாய் āṭṭu-k-kiḍāy, பெ. (n.) **ஆட்டுக்கடா** பார்க்க; see āṭṭu-k- kaḍā.

ம. ஆட்டுகொற்றன், ஆட்டுமுட்டன்; **க.** ஆடு; **தெ.** ஏட

[ஆடு + கிடாய் = ஆட்டுக்கிடாய்.]

கிடாய் பார்க்க; see kiday.

ஆட்டுக்கிடை āṭṭu-k-kiḍai, பெ. (n.) ஆடுகளைக் கிடத்துமிடம். ஆட்டுப்பட்டி; sheep fold, sheep-pen. "ஆட்டுக்கிடையிலே ஓநாய் புகுந்ததுபோல" (பழ.).

ம. ஆட்டின்கிட; க. ஆடுமனெ

[ஆடு+கிடை.]

ஆட்டுக்கிடை படுக்கை āṭṭu-k-kiḍai-paḍukkai, பெ. (n.) ஈளை (சயநோய்) நோயைக் குணப்படுத்துவதற்காக ஆட்டுக்கிடை நடுவில் படுத்துறங்குதல்; consumptive patient is said to be cured by taking his bed in the midst of the sheep-fold. (சா. அக.)

[ஆடு+கிடை+படுக்கை.]

ஆட்டுக்கிறை āṭṭu-k-kiṟai, பெ. (n.) ஆட்டு வரி; tax collected on sheep. (S.I.I. vi, 155).

க. ஆடுதேறெ; ம. ஆட்டுப்பாட்டம்

[ஆடு + கு + இறை - ஆட்டுக்கு இறை → ஆட்டுக்கிறை. இறை = அரசனுக்கு இறுக்கப்படும் (செலுத்தப்படும்) வரி.]

ஆட்டுக்குட்டி āṭṭu-k-kuṭṭi, பெ. (n.) ஆட்டின் குட்டி; lamb, the young of the sheep.

ம. ஆட்டின் குட்டி.

[ஆடு+குட்டி - ஆட்டுக்குட்டி.]

ஆட்டுக்குளம்பெண்ணெய் āṭṭu-k-kuḷamb eṇṇey, பெ. (n.) ஆட்டின் காற்குளம்பினின்றும் எடுக்கும் எண்ணெய்; oil prepared from the sheep hoof. (சா.அக.).

[ஆடு + குளம்பு + எண்ணெய் = ஆட்டுக்குளம்பெண்ணெய்.]

ஆட்டுக்கொம்பவரை āṭṭu-k-komb-avarai, பெ. (n.) ஆட்டுக் கொம்பைப் போன்ற ஒருவகை அவரைக் காய்; a species of country bean resembling the horn of the sheep. (சா.அக.).

ம. ஆட்டுக்கொம்பன் அவரய்க்க

[ஆடு+கொம்பு= ஆட்டுக்கொம்பு+ அவரை.]

ஆட்டுக்கொம்பு āṭṭu-k-kombu, பெ. (n.) ஆட்டின் தலையிலுள்ள கொம்பு. இது தமிழ் மருத்துவத்தில் புடமிடுவதற்குப் பயன்படும்; sheep's horn, used in Tamil medicine for purposes of calcination. (சா. அக).

[ஆடு + கொம்பு - ஆட்டுக்கொம்பு.]

ஆட்டுக்கொம்புப்பாலை āṭṭu-k-kombu-p-pālai, பெ (n.) ஆட்டுக்கொம்பைப்போல் நுனியில் கூர்மையுள்ள இலைகளைக் கொண்ட ஒருவகைப் பாலை; wedge-leaved ape flower - mimusops hexandra. (சா.அக.).

[ஆடு +கொம்பு - ஆட்டுக்கொம்பு + பாலை.]

ஆட்டுக்கொம்பு வாழை āṭṭu-k-kombu-vāḻai, பெ. (n). ஆட்டுக் கொம்பைப் போலிருக்கும் வாழை. இது நீலகிரி மாவட்டத்திலும் பிறவிடங்களிலும் பயிராகிறது; a species of banana (plantain) resembling sheep's horn, sheep's horn banana - Musa sapientum (Spaciosum). This is found grown in Nilgiri district and some other places. (சா.அக.).

[ஆடு+கொம்பு -ஆட்டுக்கொம்பு + வாழை.]

ஆட்டுக்கொம்பொதி āṭṭu-k-kombodi, uQ. (n.) ஆட்டுக் கொம்பு போன்ற காயையுடைய் ஒதிய மரம்; long- leaved trumpet-tree with a pod like the ram's horn. (சா.அக.).

மறுவ. ஆற்றுக் கொம்பொதிய மரம், பெரும்பூம் பாதிரிமரம்.

[ஆடு + கொம்பு - ஆட்டுக் கொம்பு + ஒதி. ஒதி = ஒதியமரம்.]

இம்மரத்தைக் குறிக்கும் ஆத்துக்கொம்பொதிய மரம், ஆற்றுக் கொம்பொதிய மரம் ஆகியன தவறான வடிவங்கள்.

ஆட்டுக்கொழுப்பு āṭṭu-k-koḻuppu, பெ. (n.) களிம்பு செய்வதற்காகப் பயன்படுத்தும் ஆட்டின் நிணம். நாட்டு மருத்துவர்கள் இக் கொழுப்புடன் சங்கம் பழம், சாதிக்காய், வால்மிளகு முதலியவற்றைச் சேர்த்து அரத்தங்கக்கல், ஈளை (சயம்) முதலிய நோய் களுக்கு மருந்தாகத் தருவர்; fat of the sheep used **in preparing ointments - Adeps ovis suet.** native physicians employ mutton-suet in the preparation of ointments and also administer it internally with the fruit Azima tetracantha, nutmeg and cubeb in hemoptysis and in certain stages of **pthysis** pulmonis (சா. அக.).

[ஆடு + கொழுப்பு = ஆட்டுக்கொழுப்பு.]

ஆட்டுக்கோட்டுப்பாலை āṭṭu-k-kōṭṭu-p-pālai, பெ.. (n.) **ஆட்டுக்கொம்புபாலை** பார்க்க; see āṭṭu-k-kombupālai.

[ஆடு + கோடு – ஆட்டுக்கோடு + பாலை = ஆட்டுக் கோட்டுப்பாலை. கோடு = கொம்பு.]

ஆட்டுக்கோன் āṭṭu-k-kōṉ, பெ. (n.) சிவன்; Šivā, the Hindu God (கதி.அக.).

[ஆட்டு = கூத்து. கோன் = தலைவன். ஆட்டுக்கோன் = ஆடல்வல்லான், தில்லைக்கூத்தன், சிவன்.]

ஆட்டுச்சக்கரணி āṭṭu-c-cakkaraṇi, பெ. (n.) மலையரளி என்னும் நாய்த்தேக்கு மரம்; woolly - leaved fire brand teak (சா.அக.).

[ஆடு + சக்கரணி = ஆட்டுச்சக்கரணி.]

ஆட்டுச்செவிக்கள்ளி āṭṭu-c-cevi-k-kaḷḷi, பெ. (n.) ஆட்டின் காதைப் போன்ற இலைகளுள்ள ஒருவகைக் கள்ளி; species of spurge-wort, the leaves of which resemble the horn of a sheep - **Euphorbia** (genus) (சா.அக.).

[ஆடு + செவி – ஆட்டுச்செவி = ஆட்டின்காது. ஆட்டுச்செவி + கள்ளி = ஆட்டுச்செவிக்கள்ளி.]

ஆட்டுச்செவிப்பதம் āṭṭu-c-cevi-p-padam, பெ. (n.) 1. வழுக்கைப்பதம்; soft immature growth of anything compared to a goat's ear. 2. இளநீர்வழுக்கைப் பதம்; immature state like the soft kernel of a tender coconut.

[ஆடு + செவி – ஆட்டுச்செவி. ஆட்டின்காது. ஆட்டுச்செவி + பதம் = ஆட்டுச்செவிப்பதம்.]

ஆட்டுத்துகள் āṭṭu-t-tugaḷ, பெ. (n.) இரும்புத்தூள், அரப்பொடி; iron filings (S.D).

[ஆட்டு = ஆட்டுதல், துளைத்தல், அராவுதல். ஆட்டு + துகள் – ஆட்டுத்துகள் = ஆட்டுதலால், துளைத்தலால் அல்லது அராவுதலால் உதிரும் இரும்புப் பொடி.]

ஆட்டுத்துழாய் āṭṭu-t-tuḻāy, பெ. (n.) மலைத்துளசி (சித். அக.); mountain basil - Ocimum gratissimum.

ஆட்டுத்தேவர் āṭṭu-t-tēvar, பெ. (n.) ஆட்டு விக்கும் சிறுதெய்வம்; demi-god which causes suffering. "ஆட்டுத்தேவர் தம் விதியொழுகி" (தேவா.)

[ஆடு + தேவர்.]

ஆட்டுத்தொட்டி āṭṭu-t-toṭṭi, பெ. (n.) ஆட்டுக்கிடை; sheep fold, sheep-pen.

க. ஆடுமனெ

[ஆடு + தொட்டி – ஆட்டுத்தொட்டி. தெ. தொட்டி. (தொழுவம்).]

ஆட்டுதப்பி āṭṭudappi, பெ. (n.) ஆடு அசையிடும் இரை; cud of the sheep.

[ஆடு + உதப்பி – ஆட்டுதப்பி. உதப்புதல் = அசையிடுதல். உதப்பி = உதப்பும் இரை. (வினையா. பெ.).]

ஆட்டுப்பட்டி āṭṭu-p-paṭṭi, பெ. (n.) 1. ஆட்டுக்கிடை; sheep-fold. 2. ஆட்டுப்பட்டியுள்ள ஊர்; village where sheep fold is situated.

[ஆடு + பட்டி – ஆட்டுப்பட்டி. பள் → படு → பட்டி படுக்குமிடம், தங்குமிடம்.]

ஆட்டுப் பிழுக்கை āṭṭu-p-piḻukkai, பெ. (n.) ஆட்டின் கழிவுப் பொருள்; excreta or dung of the sheep. "பிழுக்கை வாரியும் பால் கொள்வர்" (சுந். தேவா.).

[ஆடு + பிழுக்கை.]

ஆட்டுப்பூட்டு āṭṭu-p-pūṭṭu, பெ. (n.) சிறுமியர் விளையாட்டு; girls' game. (த.நா. வி.).

[ஆடு + பூட்டு.]

ஆட்டுமந்தை āṭṭu-mandai, பெ. (n.) 1. ஆட்டின் கூட்டம்; flock of sheep or goats. 2. ஆடுகள் ஒன்று கூடுமிடம்; place where sheep or goats are gathered. 3. கண் மூடிப் பின்பற்றும் கூட்டத்தினர்; group of blind followers.

[ஆடு + மந்தை – ஆட்டுமந்தை. மன்று → மந்து → மந்தை = ஒன்று கூடுமிடம்.]

ஆட்டுமயிர் āṭṭu-mayir, பெ. (n.) கம்பளி நெய்ய உதவும் ஆட்டின் மயிர்; wool, fleece or hair of sheep and goats.

[ஆடு + மயிர்.]

ஆட்டுமயிர்ச்சரக்கு āṭṭu-mayir-c-carakku, பெ. (n.) கம்பளித்துணி (புதுவை); woollen cloth. (Pond.).

[ஆடு + மயிர் – ஆட்டுமயிர் + சரக்கு = ஆட்டுமயிர்ச் சரக்கு. சரக்கு = பொருள்.]

ஆட்டுமறிக்கூலி āṭṭu-maṟi-k-kūli, பெ. (n.) நிலத்தில் கிடைவைக்கத் தருங்கூலி; hire paid by a farmer to the owner of a flock of sheep or goats for their detention in his field for manure.

[ஆடு + மறி + கூலி – ஆட்டுமறிக்கூலி. மறித்தல் = ஆடுகள் வேறிடஞ்செல்லாமல் ஓரிடத்தில் தடுத்துத் தங்க வைத்தல்.]

ஆட்டுரல் āṭṭural, பெ. (n.) ஆட்டுக்கல்; stone mortar for grinding.

ம. ஆட்டுக்கல்லு.

[ஆட்டு + உரல் – ஆட்டுரல் (வி.தொ.).]

ஆட்டுலா āṭṭulā, பெ. (n.) ஆட்டுக்காலடம்பு (கொடி வகை) (சித். அக.); goat's foot creeper.

[ஆடு + உலா – ஆட்டுலா.]

ஆட்டுவரி āṭṭu–vari, பெ. (n.) ஆட்டிற்காக வாங்கப் படும் வரி; tax levied on sheep or goats.

ம. ஆட்டுப்பாட்டம்; **க.** ஆடுதேரெ.

[ஆடு + வரி = ஆட்டுவரி.]

ஆட்டுவால் திருக்கை āṭṭu–vāl–tirukkai, பெ. (n.) **ஆட்டு வாலன் திருக்கை** பார்க்க; see āṭṭu–vālan–tirukkai.

[ஆட்டுவால் + திருக்கை.]

ஆட்டுவாலன் திருக்கை āṭṭu–vālan–tirukkai, பெ. (n.) ஒருவகைத் திருக்கை; மீன் வகைகளுள் ஒன்று. இதன் வால் நீளமாயிருக்கும். சிறிய மீன் சிவப்பாகவும், பெரிய மீன் ஈய வண்ணமாகவும், வால் பகுதி கறுப்பாகவும், பொதுவாக அதிக வளர்ச்சியுள்ளதாகவுமிருக்கும். இது தன் வாலின் முள்ளினால் தாக்கும். இதனால் ஏற்படும் புண் கடுந் தீங்கு விளைவிக்கும். (சா.அக.); shark having the length of the tail 3 to 4 times that of the body; the upper surface of the young one is reddish - brown; the adult is lead coloured but black in the tail; grows to a large size. Wounds inflicted by the spike of its tail are dangerous (S.D.).

[ஆடு + வாலன் + திருக்கை. ஆடு = ஆடுதல், அசைதல், அடிக்கடி அசைத்துக் கொண்டிருத்தல். தன் வாலை அடிக்கடி ஆட்டிக் கொண்டிருக்கும் இயல்பு பற்றி இத்திருக்கை மீன் 'ஆடுவாலன் திருக்கை' எனப் பெயர் பெற்றிருக்கலாம்.]

ஆட்டுவிப்போன் āṭṭuvippōn, பெ. (n.) 1. நட்டுவன் (நாமதீப.); dance master. 2. பாடாய்படுத்துபவன்; tormenter.

[ஆடு (த.வி.) → ஆட்டு (பி.வி.) → ஆட்டுவி (இருமடி. பி.வி.).]

ஆட்டூர்தி āṭṭūrdi, பெ.(n.) தீக்கடவுள்; god of fire.

[ஆடு + ஊர்தி.]

ஆட்டூரம் āṭṭūram, பெ. (n.) மலைவேம்பு; large neem tree-Melia azadirachta (S.D.).

*[**ஆட்டூர வேம்பு** பார்க்க; see āṭṭūra–vēmbu.]*

ஆட்டூர வேம்பு āṭṭūra–vēmbu, பெ. (n.) மலை வேம்பு (சித். அக.); mountain neem.

[ஆட்டூரம் + வேம்பு.]

ஆட்டை[1] āṭṭai, பெ. (n.) விளையாட்டில் தொடங்கும் முறை (நெல்லை); turn in a game (Tn).

[ஆடு + ஐ – ஆட்டை. ஆடு = ஆட்டம், விளையாட்டு.]

ஆட்டை[2] āṭṭai, பெ. (n.) ஆண்டு; year.

ம. ஆட்ட

[ஆண்டு → ஆண்டை → ஆட்டை]

ஆட்டைக்கருமம் āṭṭai–k–karumam, பெ. (n.) முதலாண்டு முடிவில் செய்யப்படும் நீத்தார்கடன்; first annual ceremony, performed on the same day of the moon on which the person died (W.).

[ஆண்டு → ஆண்டை → ஆட்டை + கருமம்.]

ஆட்டைக்காணிக்கை āṭṭai–k–kāṇikkai, பெ. (n.) ஆண்டுக்கொருமுறை செலுத்தப்படும் ஒரு பழைய வரி; an ancient village cess collected every year (I.M.P. Tp. 234).

ம. ஆண்டக்காழ்ச்ச

[ஆண்டு → ஆண்டை → ஆட்டை + காணிக்கை.]

ஆட்டைக்கோள் āṭṭai–k–kōḷ, பெ. (n.) ஆண்டு தோறுஞ் செலுத்த வேண்டிய தொகை; yearly payment. "ஆட்டைக்கோளாகக் கொடுப்பான்" (T.A.S. ii, 44).

[ஆண்டு → ஆட்டை = ஆண்டுக்கொருமுறை. கொள் → கோள் = பெறுவது.]

ஆட்டைச் சம்மாதம் āṭṭai–c–cammādam, பெ. (n.) வரிவகை; village cess (I.M.P. Cg. 524).

[ஆண்டு → ஆட்டை + சம்மாதம்.]

ஆட்டைச்சிராத்தம் āṭṭai–c–cirāttam, பெ. (n.) **ஆட்டைக்கருமம்** பார்க்க; see āṭṭai–k–karumam.

[ஆண்டு → ஆட்டை + Skt. சிரார்த்தம்.]

ஆட்டைத்திதி āṭṭai–t–tidi, பெ. (n.) **ஆட்டைக் கருமம்** பார்க்க; see āṭṭai–k–karumam.

ஆட்டைத்திருநாள் āṭṭai–t–tirunāḷ, பெ. (n.) அரசனின் பிறந்தநாள், பிறந்தநாள் பெருமங்கலம்; birth anniversary of a king.

ம. ஆட்டத்திருநாள்

[ஆண்டு → ஆட்டை + திருநாள் – ஆட்டைத் திருநாள்.]

ஆட்டைத்திவசம் āttai-t-tivašam, பெ. (n.) **ஆட்டைக் கருமம்**பார்க்க; see āttai-k-karumam.

ஆட்டைப்படி atti-p-padi, பெ. (n.) ஓராண்டுக்கு ஒதுக்கியளிக்கப்பட்ட பொருள்; allotment for the year.

ம. ஆட்டப்படி

[ஆண்டு → ஆட்டை + படி - ஆட்டைப்படி. படி = அளவு, அளந்து தரப்பட்ட பொருள்.]

ஆட்டைப்பாழ் āttai-p-pāl, பெ. (n.) ஆண்டு முழுதும் கரம்பாகக் கிடந்த நிலம்; cultivable land left waste throughout the year (S.I.I. iv, 155).

க. ஆடவல

[ஆண்டு → ஆட்டை + பாழ் = ஆட்டைப்பாழ்.]

ஆட்டைப்பூடு āttai-p-pūdu, பெ. (n.) ஆண்டுக்கொரு முறை விளையும் பூண்டு; annual plant (S.D.).

[ஆண்டு → ஆட்டை.பூண்டு → பூடு. ஆட்டை + பூடு = ஆட்டைப்பூடு.]

ஆட்டை வட்டம் āttai–vattam, கு.வி.எ. (adv.) ஆண்டு தோறும்; every year, annually. "ஆட்டைவட்டம் அரைக்காற்காசு பொலிசை" (S.I.I.ii, 125).

[ஆண்டு → ஆட்டை. வட்டம் = முழுமை, நிறைவு ஆட்டை வட்டம் = ஆண்டு நிறைவு, ஆண்டு முடிவு, ஒவ்வோர் ஆண்டு முடிவு]

ஆட்டை வட்டன் āttai-vattan, பெ. (n.) **ஆட்டை வட்டம்** பார்க்க; see āttaivattam (S.I.I.ii,403).

ஆட்டை வாரியம் āttai-vāriyam, பெ. (n.) ஊராண்மைக்கும் அறமுறைக்கும் பொறுப்பேற்ற பழங்கால ஊரவைப்பிரிவு; ancient village administration and judicial division.

[ஆண்டு → ஆட்டை + வாரியம்]

ஆட்டை வாரியர் ātti-vāriyar, பெ. (n.) சிற்றூர் ஆளுகையை ஆண்டு தோறும் மேற்பார்வை செய்யும் அவையினர்; annual committee for supervising the management of village affairs (S.I.I. iii, 271).

[ஆண்டு → ஆட்டை. ஆட்டை + வாரியர்.]

ஆட்டோசை āttošai, பெ. (n.) ஆட்டின் குரலைப் போன்ற தார விசையி னோசை (நாமதீப.); seventh note of the gamut, as resembling the bleating of sheep.

[ஆடு + ஓசை - ஆட்டோசை = ஆட்டின் ஓசை.]

ஆட்படு[1]-தல் ātpadu-, 20 செ. கு. வி. (v.i.) 1. அடிமையாதல்; to become a devoted servant, commonly to a deity. "ஆனாலவனுக்கிங் காட்படுவாராரேடி" (திருவாச. 12:12). 2. தலைப்படுதல்; to become involved voluntarily. நானே ஆட்பட்டேன் (உ.வ.).3. உயர்நிலையடைதல்; to raise from obscurity, become a man of some property and consequence. அவன் என்னால் ஆட்பட்டான் (யாழ்ப்.). 4. உடல் நலமடைதல்; to recuperate after sickness (J.).

[ஆள் + படுதல் - ஆட்படுதல். 1. ஆள் = பிறர்க்குப் பணியாற்றும் ஆள். 2. ஆள் = தன் ஆளுந்தன்மை அல்லது செயல் திறனைத் தன்னலத்திற்கன்றிப் பிற நலத் திற்களிக்கும் ஆள். 3. ஆள் = பிறரால் மதிக்கப்படும் ஆள். 4. ஆள் = உடலளவில் ஆள். ஆட்படல் = ஆளாதல், முழு உடல் நலம் பெறல். ஆள் = ஆளும் தன்மை]

ஆட்படு[2]-த்தல் ātpadu-, 18. செ. குன்றாவி. (v.t.) அடிமை கொள்ளுதல், அடிமையாக்குதல்; to accept as a devoted slave. "உன்னடியார்க் காட்படுத்தாய்" (திவ். திருப்பள்ளி. 10.).

க ஆள்தன கொள்

[ஆள் + படுத்தல் = ஆட்படுத்தல்.]

ஆட்பலி ātpali, பெ. (n.) மாந்தரைக் கொன்று படைக்கும் படையல், படையல் கொடுத்தல் (நரபலி); human sacrifice. "தலைக்காட்பலி திரிவர்" (திவ். இயற். நான் முகன். 52).

[ஆள் + பலி - ஆட்பலி.]

ஆட்பழக்கம் ātpalakkam, பெ. (n.) 1. பல்லோர் நட்பு; friendship with many. 2. மக்கள் நடமாட்டம்; being frequented by men. ஆட்பழக்கமில்லாத வழி (உ.வ.).

[ஆள் + பழக்கம் - ஆட்பழக்கம்.]

ஆட்பார்-த்தல் ātpār–, 4 செ.கு.வி. (v.i.) 1. ஆள் தேடுதல்; to be on the look out for victims as Yama. "ஆட்பார்த்துழலுமருளில்கூற்று" (நாலடி. 20.). 2. பணி செய்தற்கு ஆட்பார்த்தல்; to recruit person for work. 3. வேற்றாள் வாராமல் நோக்குதல்; to watch against detection as an accomplice.

[ஆள் + பார் = ஆட்பார்.]

ஆட்பாலவன் ātpālavan,பெ. (n.) 1. ஆட்கொள்ளப் பட்டவன்; devotee. "ஆட்பாலவர்க்கருளும் வண்ண

மும்" (தேவா. 1178,4). 2. ஆட்பட்டவன்; one who is accepted as a devotee.

க. ஆள்தன

[ஆள் + பால் + அவன் = ஆட்பாலவன்.]

ஆட்பிடியன் āṭpiḍiyaṉ, பெ. (n.) 1. முதலை; crocodile, alligator. 2. ஆளைப்பிடிப்பவள், ஒழுக்கமற்றவள் (இராட்.); vamp.

ம. ஆள்ப்பிடியன்.

[ஆள் + பிடியன் = ஆட்பிடியன்.]

ஆட்பிரமாணம் āṭpiramāṇam, பெ. (n.) **ஆள்மட்டம்** பார்க்க; see āḷmaṭṭam.

Skt. pramāna → த. பிரமாணம்.

[ஆள் + பிரமாணம் – ஆட்பிரமாணம்.]

ஆடக இறைவன் āḍaga-iṟaivaṉ பெ. (n.) பொன்னம் பலத்து ஆடும் இறைவன்; Lord Śiva dancing in Chidambaram.

[ஆடகம் + இறைவன்.]

ஆடகக் கருப்பன் āḍaga-k-karuppaṉ, பெ. (n.) நான் முகன்; Brahma. "ஆடகக் கருப்பனை நிகர்வது" (சேதுபு. கந்த. 6.).

[ஆடகம் + கருப்பன்.]

ஆடகக்கோயில் āḍaga-k-kōyil, பெ. (n.) பொன்னா லான கோயில், பொன் வேய்ந்த கோயில்; temple with golden roof.

[ஆடகம் + கோயில்.]

ஆடகச்சயிலம் āḍaga-c-cayilam, பெ. (n.) **ஆடகமலை** பார்க்க; see āḍaga-malai

ஆடகம் = ஆடகப்பொன். Skt. saila > த. சயிலம் (மலை.)

[ஆடகம் + சயிலம் = ஆடகச்சயிலம்.]

மேருமலை பொன்னாலானது என்னும் தொன்ம (புராண) நம்பிக்கையின் அடிப்படையில் ஆடகச்சயிலம் எனப்பட்டது. மேருமலையைச் சார்ந்த காகமும் பொன்னாகும் என்பது பண்டு தொட்டு வழங்கி வரும் சொலவடை.

ஆடகம்[1] āḍagam பெ. (n.) 1. மாழை (உலோக)க் கட்டி (பிங்.); ore. 2. பொன்; gold. "ஆடக மாட நெருங்குங்கடல்" (தேவா. 538,1). 3. நால்வகைப் பொன்களுள் ஒன்றாகக் கருதப்படும் கிளிச்சிறை; கிளிச்சிறகு போன்ற வெளிர் பசுமை கலந்ததும் 500 மாற்றுள்ளதுமான உயர்ந்த வகைப் பொன் (சிலப். 14,211); one of the four kinds of superior concentrated gold with a greenish tint resembling the colour of the wings of parrot. It is said to be of a very high purity and standard of gold with 500 (mātru) (10 mātru = 24 carats) (S.D.). 4. செம்பு; copper. 5.துவரை; pigeon pea or red gram. 6. சிறுகாஞ் சொறி; hemp-leaved tragia (S.D.) 7. சிறு நாகப்பூ (தைலவ. தைல. 23); iron wood of Ceylon. 8. குதம்பைச் செடி; a plant. (சங். அக.).

ம. ஆடகம்.

[ஆடகம் = பொலிவு மிக்கது, அழகம் → ஆழகம் → ஆடகம்.]

ஆடகம்[2] āḍagam, பெ. (n.) கூத்தாடுமிடம்; theatre for performing dance.

[ஆடு + அகம் = ஆடகம்.]

ஆடகம்[3] āḍagam, பெ. (n.) 1. எட்டுச்சேர் அல்லது 64 பலம் எடை; weight equivalant to 8 seers or 64 palams. 2. நான்கு படி கொண்ட அளவு; big measure equivalent to 4 measures (ordinary) (S.D.). 3. நான்கு நாழி (நாமதீப.); measure of 4 nāḻis. 4. ஐந்து பிரத்தம் கொண்ட நிறை; a weight of five pirattam.

ம. ஆடகம்; க. ஆடக; தெ. ஆடகமு. Skt. āḍhaka.

[ஆடகம் = பொன், பொன்னை நிறுக்கும் எடை, அளவு]

ஆடகமருத்தம் āḍaga-maruttam, பெ. (n.) பொன்; gold.

[ஆடகம் = பொன். ஒருகா. ஆடகம் + அருத்தம் = ஆடகமருத்தம். Skt. arta → த. அருத்தம்.]

ஆடகமலை āḍaga-malai, பெ. (n.) மேருமலை (கல்லா. 72:1); mount mēru as golden.

[ஆடகம் = ஆடகப் பொன். ஆடகம் + மலை.]

ஆடகமாடம் āḍaga-māḍam, பெ. (n.) 1. பொன் மாளிகை; mansion of gold. 2. திருமால் கோட்டம்; shrine of Thirumāl. "ஆடக மாடத்தறிதுயி லமர்ந் தோன்" (சிலப். 26.62). 3. சேரநாட்டிலுள்ள இரவிபுரம்; Ravipuram in Kerala. 4. திருவனந்தபுரம்; Thiruvananthapuram

ம. ஆடகமாடம்.

[ஆடகம்+மாடம் – ஆடகமாடம். ஆடகம்=பொன், ஆடகமாடம் = பொன்மாளிகை, பொன் வேய்ந்த கோயில், அக்கோயிலுள்ள ஊர்.]

ஆடகன் āḍagaṉ, பெ. (n.) இரணியகசிபு (பாரத. வேத்திர. 15); Hiranya Kaśipu, a king.

[ஆடகம் = பொன். ஆடகன் = பொன் நிற மானவன்.]

ஆடகாமாமூலம் āḍagamā-mūlam, பெ. (n.) சிறிய முள்ளங்கி; wild country radish.

[ஆடகம்+மாமூலம். ஆடகம்=ஆழ்கியது, சிறியது.]

ஆடகி āḍagi, பெ. (n.) 1. துவரைச் செடி; red-gram plant. 2. காக்கைப் பொன் (நாநார்த்த.); mica.

ம., க. ஆடகி; Mar. ātaki (a shrub)

[ஒருகா. ஆடகம் → ஆடகி. ஆடகம் = பொன். ஆடகி = பொன் போன்ற நிறமுள்ள துவரை, துவரை காய்க்கும் செடி.]

ஆடகூடம் āḍakūḍam, பெ. (n.) செம்பு மலை; a mythological mountain containing copper ore.

[ஆடகம் = பொன், பொன் போன்ற நிறமுள்ள செம்பு. ஆடகம் + கூடம் = ஆட கூடம். கூடம் = மலை.]

ஆடகேசன் āḍagēsaṉ, பெ. (n.) **ஆடகேசுரர்** பார்க்க; see āḍagēśurar,

ஆடகேசுவரம் āḍagēśuvaram, பெ. (n.) 1. ஆயிரத் தெட்டு சிவத்தலங்களுள் ஒன்று; one of the 1008 Siva shrines. 2. ஆடகேசனின் உலகம் (அருணா. பு. திருமலை. 46); the nether world, as the dominion of Hātakēśa.

[ஆடக + ஈசுவரம் - ஆடகேசுவரம். ஈசுவரம் = ஈசன் கோயில்.]

ஆடகை āḍagai, பெ. (n.) **ஆடகி**[1] பார்க்க; see āḍagi[1]

ஆடங்கம் āḍaṅgam, பெ. (n.) 1. காலக்கழிவு (தாமதம்); delay. "இன்னுமென்ன ஆடங்கமா" (சர்வசமய.44). 2. துன்பம்; distress. "ஆடங்கஞ் சற்று மணுகாமல்" (பஞ்ச. திருமுக. 777).

[ஆடு + அங்கம் - ஆடங்கம். த. ஆடங்கம்> Skt. āḍaṅka.]

ஆடசை āḍaśai, பெ. (n.) துவரை; pigeon pea, redgram.

ம. ஆடகம்.

[ஒருகா. ஆடகை → ஆடசை.]

ஆடகி பார்க்க; see āḍagi.

ஆடம்[1] āḍam, பெ. (n.) ஆமணக்கு (மலை.); castor-plant. **ஆடமணக்கு** பார்க்க; see āḍamaṇakku.

[ஆடமணக்கு - ஆடம்.]

ஆடம்[2] āḍam, பெ. (n.) 1. ஒரு முகத்தலளவு (இ.வ.); liquid measure, esp. for oil, about 24 measures (Loc.) (செ.அக.) 2. இருபது (ஆமணக்குக்) கொத்துக் கொண்ட ஓரளவு (கதி. அக.); a measure which contains 20 bunches of castor seeds.

[ஆடம்[1] → ஆடம்[2]]

ஆடம்பரம்[1] āḍambaram, பெ. (n.) 1. பல்லிய முழக்கம்; din of musical instruments. 2. யானையின் பிளிற்றொலி; elephant's trumpeting. 3. பகட்டார வாரம்; pomp, show, ostentation. "ஆடம்பரங் கொண்டடிசி லுண்பான்" (திருமந். 1655). 4. ஒட்டோலக்கம்; pomp, parade (W.). 5. போர்ப்பறை; battle drum. 6. வேடிக்கை; fun.

ம. ஆடம்பர, ஆடம்பரி; **க.** ஆடம்பர; **தெ.** ஆடம்பரமு. Mar. āḍambara.

[ஆடு + அம்பரம் - ஆடம்பரம். அம்பலம் - அம்பரம்]

ஆடம்பரம்[2] āḍambaram, பெ. (n.) மருளேறிய நிலை; state of being possessed by a spirit.

[ஆடு + அம்பரம் → ஆடம்பரம்.]

ஆடம்பரம்[3] āḍambaram, பெ. (n.) 1. கண்மடல்; eyelid. 2. சீற்றம் (கோபம்); anger.

[ஆடு + அம்பரம் → ஆடம்பரம்]

ஆடம்பரம்[4] āḍambaram, பெ. (n.) 1. மகிழ்ச்சி; enjoyment. 2. பெருமை; pride. 3. இறுமாப்பு; arrogance. 4. இன்பம்; bliss.

ம., க., து. ஆடம்பர.

[ஆடு + அம்பரம். அம்பரம் = விழாமுழக்கம், மகிழ்ச்சி]

ஆடமணக்கு āḍamaṇakku, பெ. (n.) ஆமணக்கு (சித். அக.); castor plant.

[அவிழ் - அவிடம் - ஆடம் + மணக்கு - ஆடமணக்கு. அவிழ் = வித்து, கொட்டை. மணி - மணக்கு]

ஆடமரம் āḍamaram, பெ. (n.) நாட்டு வாதுமை மரம்; country almond tree. (சேரநா.)

ம. ஆடமரம்.

[அவிழ் - அவிழம் - ஆவிடம் - ஆடம் + மரம். அவிழ் = கொட்டை]

ஆடரங்கம் āḍaraṅgam, பெ. (n.) **ஆட்டக்கச்சேரி** பார்க்க; see āṭṭa-k-kaccēri.

[ஆடு + அரங்கம்.]

ஆடரங்கு āḍarangu, பெ. (n.) 1. நாடகம், நடனம், கூத்து முதலிய நிகழ்ச்சிகள் நடத்துதற்கேற்ற மன்றம்; auditorium. "அறையும் ஆடரங்கும்" (கம்பரா.) 2. பலர் கண்டு மகிழும் ஏந்துள்ள விளையாட்டிடம்; stadium.

[ஆடு + அரங்கு.]

ஆடரவக்கொடியோன் āḍarava-k-koḍiyōṉ, பெ. (n.) ஆடும் பாம்புக் கொடியுடைய மன்னன், துரியோதனன்; king Duryodhana.

ம. ஆடரவக்கொடி

[ஆடு + அரவம் + கொடியோன்.]

ஆடரி āḍari, பெ. (n.) முருகக் கடவுள் (கதி. அக.); Lord Muruga.

[ஆடு (வெற்றி) + அரி (செல்வன்).]

ஆடருப்பான்கொட்டை āḍaruppāṉkoṭṭai, பெ. (n.) ஏறழிஞ்சில்; sage leaved alangium (S.D).

ஆடல்[1] āḍal, பெ. (n.) 1. அசைதல்; moving, shaking, quivering. "ஆடற் பூங்கொடி ஊடி உரைத்தது" (திருக்கோ.393,கொளு.) 2. சொல்லுதல்; speaking, saying. "யார்க்கும் நன்னய மாடல் செயும்" (கந்தபு. உற்பத். தகரேறு. 24). 3. நீராடல் (பிங்.); bathing. 4. செய்தல் (பிங்.); doing, performing. 5. விளையாட்டு; game, sport. "கந்துக மம்மனை யாடலும்" (பாரத. சம்பவ. 27). 6. கூத்து; dance. "பாடலா ராடலார்" (தேவா. 225.2). 7. நட்புரை (கதி. அக.); friendly talk. 8. இழித்துரைத்தல், பழித்துரைத்தல்; talking ill of. "அச்சம் ஆடலும்" (நன்.31). 9. ஏய்த்தல், ஏமாற்றுதல்; cheating, defrauding

ம. ஆடல்; **க., பட.** ஆட; **தெ., து.** ஆட; **கொ.** ஆடு, ஆடா.

[ஆடு → ஆடல். ஆடுதல் = அசைதல்.]

ஆடல்[2] āḍal, பெ. (n.) 1. ஆளுகை; rule, reign. "பூமியை யாடற் கொத்த பண்பினன்" (சீவக. 1339). 2. புணர்தல் (சூடா.); coition.

க. ஆட்ளித; **து.** ஆடளிதெ.

[ஆளல் → ஆடல்.]

ஆடல்[3] āḍal, பெ. (n.) 1. கொல்லுதல் (கதி. அக.); killing. 2. துன்பம்; distress, trouble. "அத்தனை ஆடல் கொடுக்கைக்கு" (ஈடு. 9.9. பிர.). 3. போர் (திவா.) war, battle. 4. வெற்றி (பிங்.); victory. 5. வீரம் (கதி. அக.); chivalry, heroism.

ம. ஆடல்; **க.** ஆடுளிகதன.

[அடு → அடல் → ஆடல். அடுதல் = கொல்லுதல், துன்பப்படுத்துதல் தாக்குதல். ஆடல் = அடும் திறன், வீரம், வெற்றி.]

ஆடல் கொடு-த்தல் āḍal-koḍu-, 4. செ.கு.வி (v.i.) 1. இடங்கொடுத்தல்; to yield, to be lenient. "இவ்வாற்றாமைக் கெல்லாம் ஆடல் கொடுத்த ஆழ்வார்" (ஈடு. 8,5,11). 2. துன்பம் நுகர்தல் (ஈடு.9,9,பிர.); to experience hardship

ம. ஆடல்ப்பெடுக

[ஆடல் + கொடு.]

ஆடல் பாடல் āḍal-pāḍal, பெ. (n.) 1. ஆட்டமும் பாட்டும்; game and song. 2. நாட்டியமும் பாட்டும்; dance and song.

க., து., பட. ஆட பாட; **கூ.** ஆட பாடலு.

[ஆடல்பாடல் = ஆடுதல் பாடுதல்.]

ஆடல் வேற்றுமை āḍal-veṟṟumai, பெ. (n.) நின்றாடல் வீழ்ந்தாடல் என்று இருவகைப்பட்ட கூத்து வேற்றுமை; dancing as in standing position and in lying position.

[ஆடல் + வேற்றுமை.]

ஆடலாடல் āḍalāḍal, பெ. (n.) விளையாடல்; playing. "ஆடலாடல் உறுதியேல்" (பெரியாழ். 1.5.2.).

[ஆடல் + ஆடல்.]

ஆடலார் āḍalār, பெ. (n.) நாட்டியமகளிர்; female dancers.

[ஆடல் + ஆர்.]

ஆடலிடம் āḍaliḍam, பெ. (n.) 1. அரங்கம் (திவா.); stage, theatre. 2. விளையாட்டுக் களம்; play ground.

[ஆடல் + இடம் - ஆடலிடம்.]

ஆடலை āḍalai, பெ. (n.) 1. பூவாத மரம்; tree which does not yield flowers. 2. அரசமரம்; pipal or peepul tree. 3. பூவிளா; a plant. 4. அத்தி; fig tree (S.D.).

[ஆண்டு = வித்தின் முளை, பூ. ஆண்டு - ஆடு + அல் + ஐ.]

ஆடவமுதுமை āḍavamudumai, பெ. (n.) 48லிருந்து 60 அகவை வரையுள்ள ஆடவர் பருவம்; stage of male between 48 to 60 years of age.

[ஆடவன் + முதுமை.]

ஆடவர் ādvar, பெ. (n.) 1. ஆண்மக்கள்; males in general. "ஈட்டம் இவறி இசை வேண்டா ஆடவர்" (குறள். 1003.) 2. இளையோர்; youngsters, youth. 3. இடைப் பருவத்து ஆண்மக்கள். (32 அகவை முதல் 48 வரை); males from 32 to 48 years of age. (or) middle aged male (S.D.).

[ஆள் → ஆளவன் → ஆடவன் = ஆளுந் திறமையுள்ளவன். 'ஆர்' ப.பா. ஈறு.]

ஆடவர்பருவம் āḍavar-paruvam, பெ. (n.) குழந்தை, காளை, குமரன், ஆடவன், மூத்தோன், முதாளன் என ஆண்களின் வளர்ச்சியில் கூறப்படும் பருவ நிலைகள் (வின்.); six stages in the growth of a male.

[ஆள் → ஆடவர் + பருவம்.]

ஆடவர்வகுப்பு āḍavar-vaguppu, பெ. (n.) இன்பசாரம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளவாறு சசன், இடபன், அச்சுவன் என மூன்று பிரிவாகக் கூறப்படும் ஆடவர்வகுப்பு (கல்லா. 7. மயிலேறும்.); adult human males who, according to the **Inbasaram**, a treatise on erotics, are divided into three classes. (செ. அக.) 2. கொக்கோக முறைப்படி சொல்லப் பட்ட நான்கு வகை ஆடவர் பகுப்பு; human male adult divided according to lust etc., into four classes as laid down in the erotic science of Kokkōga Muni. (S.D.).

[ஆடவர் + வகுப்பு.]

ஆடவல்லான் āḍavallāṉ, பெ. (n.) 1. கூத்தப் பெருமான்; Nataraja (S.I.I. ii. 125). 2. முதலாம் இராசராசன் காலந்தொட்டு மரக்கால், நிறைகல், தூலாக் கோல்களுக்கு வழங்கி வந்த பழைய பெயர்; standard weight, balance and measure in vogue during the days of the Chola king Rajaraja I, kept for safe custody with the Thanjavur temple authorities (S.I.I. ii. 400, 403, 408).

[ஆடவல்லான் = கூத்தாடும் சிவன், சிவன் பெயரிலமைந்த அளவுக்கருவிகள்.]

இராசராச சோழன் தஞ்சாவூரில் குன்ற மன்னதோர் கோயில் எடுப்பித்துத் தன் சிவப்பத்திமையை வெளிப்படுத்திப் புகழ் பெற்றதாலும், சிவன் பெயர் எங்கும் பரவவேண்டும் என்னும் வேட்கையின் விளைவாகவும் அளவுக் கருவிகளுக்கும் ஆடவல்லான் என்று சிவனின் பெயரிடப்பட்டது.

ஆடவல பெருமான் āḍavala-perumāṉ, பெ. (n.) சிவபெருமான்; Śiva as an expert dancer. "ஆரூர் ஆடவல பெருமானைப் பணிவார்" (பெரிய புராணசா. 58).

[ஆடல் + வல்ல + பெருமான் – ஆடவலபெருமான். வல்ல → வல (தொகுத்தல் திரிபு). பெருமான் = சிவன்]

ஆடவள் āḍaval, பெ. (n.) பெண். ஆடவன் என்பதன் பெண்பால் (பிங்.); woman, female.

க. ஆடங்கி.; **தெ.** ஆடதி.

[ஆளவள் → ஆடவள் = இல்லறப்பணிகளை ஆளுந் திறத்தவள்.]

ஆடவன் āḍavaṉ, பெ. (n.) 1. ஆண்மகன்; man. "ஆடவர் பெண்மையையவாவுந் தோளினாய்" (கம்பரா. தாடகை. 94.). 2. இளைஞன்; youth. (திருக்கோ. 219). 3. ஆண்களுக்குரிய ஆறுபருங்களுள் 32 முதல் 48 அகவை வரையிலான நான்காம் பருவத்தினன்; man between 32 and 48 years of age.

[ஆள் → ஆளவன் → ஆடவன் = தான் மேற்கொண்ட செயலைத் திறம்பட ஆளும் வன்மை வாய்ந்தவன்.]

ஆடவை[1] āḍavai, பெ. (n.) 1. பருவப் பெண்; young woman. 2. இரட்டை ஓரை (மிதுனராசி); Gemini, a sign of the Zodiac. 3. ஆனிமாதத்தின் தமிழ்ப்பெயர்; Tamil name of the month of Āṉi.

தெ. ஆடதி.

*[ஆள் = ஆளப்படும் பெண். **தெ.** ஆளு (மனைவி) ஆளவை – ஆடவை.]*

ஆடவை[2] āḍavai, பெ. (n.) ஆடல் அவை, நடன அரங்கம்; dancing hall, stage.

க. ஆடும்பொல (திடல்).

[ஆடு + அவை – ஆடவை.]

ஆடவைக்கருந்தலை āḍavai-k-karundalai, பெ. (n.) கோடைட அறுவடைக்கால இறுதியைக் காட்டும் ஆனி என்னும் ஆடவை மாத இறுதி; close of the month of Āṉi, which marks the end of the harvest season.

[ஆடவை + கருந்தலை.]

ஆடவைத்தூக்கம் āḍavai-t-tū-k-kam, பெ. (n.) ஆடவை (ஆனி) மாதத்தில் கடலில் காணப்படும் அமைதி. (யாழ்ப்); calm prevailing on the sea in the month of Āṉi.

[ஆடவை + தூக்கம். தூக்கம் = செயற்பாடற்ற அமைதியானதோற்றம்.]

ஆடற்கூத்தியர் āḍaṟkūttiyar, பெ. (n.) அகக் கூத்தாடுங் கணிகையர்; dancing girls who exhibit the erotic emotions of the human mind by means of

gestures while dancing. "காவற் கணிகைய ராடற் கூத்தியர்" (சிலப். 5.50).

[ஆடல் + கூத்தியர் = ஆடற்கூத்தியர். கூத்தியர் = நடனமாடும் மகளிர்.]

ஆடற்கூறுபாடு āḍarkūṟupāḍu uQ. (n.) கூத்தின் பாகுபாடு. இது தாண்டவம், நாட்டியம், நட்டுவம் (நிருத்தம்) என மூவகைப்படும் (கதி. அக.); sub-divisions in dancing.

[ஆடல் + கூறுபாடு - ஆடற்கூறுபாடு. கூறு படுத்தல் = வகைப் படுத்துதல். கூறுபடு - கூறுபாடு (தொ. பெ.)]

ஆடற்பேதம் āḍarpēdam, பெ. (n.) கூத்தினது வேற்றுமை (கதி. அக.); varieties in dancing.

*[ஆடல்+பேதம். **ஆடல்வேற்றுமை** பார்க்க; see āḍalvēṟṟumai.]*

ஆடற்றரு āḍarraru, பெ. (n.) நகைச்சுவைக் கூத்துப் பாட்டுவகை; dancing song, used in comedies.

[ஆடல் + தரு - ஆடற்றரு. த. தரவு = தரு > Skt. taru.]

தரு பார்க்க; see taru.

ஆடனூல் āḍanūl, பெ. (n). நாட்டிய நூல்; natya sāstra, treatise on the principles of dancing. "ஆடனூல் வரம்புகண் டவராகி" (திருவிளை. கான்மாறி. 7.).

[ஆடல் + நூல் - ஆடனூல் = ஆடலைப்பற்றிக் கூறும் நூல்.]

ஆடா āḍā, பெ. (n.) 1. நெருப்புக்கு ஒடாத, நெருப்பால் பெரிதும் தாக்குறாத; not volatile or that which does not fume or otherwise disappear on application of heat or fire (S.D.). 2. கால்களிற் கட்டியைப் போலுண் டாகும் குதிரை நோய் (அசுவ. 102); disease affecting horses, in the formation of tumours in the legs.

[ஒருகா. அடு → அடா → ஆடா. அடுதல் = சுடுதல், வேதல். குதிரையின் காலில் உண்டாகுங் கட்டி. பிறகட்டிகளைப் போல் பழுத்து உடையாததாயும் இருக்கலாம்.]

ஆடாச்சரக்கு āḍā-c-carakku, பெ. (n.) சூடேற்று வதால் ஆவியாகிவிடாத மருந்துச் சரக்கு; drugs which do not pass off or disappear, as gas when heated (S.D.).

[ஆடா பார்க்க see āḍā]

ஆடாசம் āḍāšam, பெ. (n.) ஒருவகை நஞ்சு (கெந்தி); a kind of arsenic (S.D.).

ஆடாதிருக்கை āḍātirukkai, பெ. (n.) ஒருவகைத் திருக்கைமீன்; a kind of shark. **ஆடுவாலன் திருக்கை** பார்க்க; see āḍuvālan-tirukkai.

ஆடாதோடை āḍātōḍai, பெ. (n.) ஆடுதொடு மூலி என்னும் மருந்துச்செடி; medicinal shrub. **ஆடுதொடு மூலி** பார்க்க; see āḍutoḍumūli

ம. ஆடலோட; **க.** ஆடுசோகெ, ஆடசோகெ; **தெ.** அட்டசரமு; **து.** ஆடலோடு, யேட்முட்டந்திதப்பூ; **Skt.** āṭaruṣa; **Pkt.** aṭṭalusa; **H.** aḍusā; **Mar.** aḍulasa; **Guj.** araḍuso; **Sinl.** āḍātōḍa.

[ஆடு + தொடு → ஆடுதொடை → ஆடு தோடை → ஆடாதோடை. தொடு → தொடை (தொடுவது, தொடப்படுவது, தின்பது). ஒ.நோ: கொடு → கொடை (கொடுப்பது, கொடுக்கப்படுவது, கொடுக்கப்படும் பொருள்). ஆடுதொடை → ஆடாதோடை (பேச்சு வழக்கிலுள்ள திரிபு). ஆடாதோடை = ஆடு விரும்பித் தின்னும் தழைகளுள்ள செடி. இதற்கு ஆடுதொடுமூலி என்ற பெயருண்மை காண்க.]

இதற்கு மருத்துவத்தாய் (வைத்திய மாதா) என்று வடமொழியாளர்கள் பெயரிட்டு வழங்குகின்றனர். ஆடுகள் விரும்பித்தின்னும் இச்செடி 8 முதல் 10 அடிவரை வளரும். இது குறுகலாயும், முனையிற் கூம்பியும், அடித்தண்டிற் கிளைகள் கிளைத்துமிருக்கும். இதன் பூக்கள் மஞ்சளும் நீலமும் கலந்த நிறத்தொடு வெண்புள்ளிகள் படர்ந்துமிருக்கும். இப்பூண்டின் ஒவ்வொரு பகுதியும் மருத்துவத்திற்குதவும். இது சிறிது கசப்பானது;நறுமணமுள்ளது. இதன் காய்கள், இழுப்பும், வலியும் அகற்றும் குணமுள்ளவை. இலைகள், பூக்கள், வேர், பட்டை ஆகியவற்றைப் பொடித்தும் கருக்கிட்டும் பயன்படுத்தப்படும். இலைகள் ஈளை, வலி, இழுப்பு போக்கும்,இருமல், காய்ச்சல், சளி, மார்ச்சளி, ஈளை முதலிய நுரையீரல் நோய்களைக் குணப்படுத்தும்.

இதன் இலையுடன் தூதுவளையையும் கண்டங் கத்தரியையும் சேர்த்துக்கருக்கிட்டுக் (கஷாயம்) கொடுத்தால் வயிற்றிலுள்ள பூச்சிகள் நீங்கும்.

இதனால் அனைத்து நோய் நுண்ணுயிரிகளும் சாகும். மற்றக் கடைச் சரக்குகளுடன் சேர்த்து இளகியமாக்கிக் (லேகியம்) கிளறி உண்ண, ஈளை, மூக்கில் குருதிவடிதல், பல்லில் குருதி வடிதல் ஆகியவை நிற்கும். ஈளை ஊதைக் காய்ச்சல் (கபவாதசுரம்), வயிற்றுப் போக்கு (அதிசாரபேதி), தண்கழிச்சல் (சீதபேதி) முதலியவற்றிலும் குருதி விழுவதைக் குணப்படுத்த இவ்விலைச்சாறு மிகவும் உதவும்.

இதன் இலைச்சாற்றுடன் தேனும் இஞ்சிச்சாறும் சேர்த்து மார்ச்சளி, இருமல், ஈளை ஆகியவற்றுக்கு மருந்தாகக் கொடுக்கப்படும். இதன் வேர் மூலத்தை கெண்டையேறுதல் முதலிய நரம்பு வலிகளுக்கும், மார்ச்சளிக்கும், குழந்தைகள் அள்ளுமாந் தத்திற்கும் கருக்கிட்டுக் கொடுக்கலாம்.

இதன் பூ கண்ணோய்க்கு மேலே வைத்துக் கட்டவுதவும், இதன் வேர்ஈளையை (கபம்) அறுக்கும். இதனுடன் மற்றக் கடைச் சரக்குகளைச் சேர்த்து நெய்மமாக (தைலம்) வடித்து, மார்பு நோய்களுக்கும், இருமலால் ஏற்படும் நெஞ்சுவலிக்கும் பூச்சு மருந்தாகப் பயன்படுத்தலாம்.

யூனானி மற்றும் ஆயுர்வேத மருத்துவர்களும் இதன் பொடி இளகியம், நெய் ஆகியவற்றை மருந்தாகப்பயன்படுத்துவர்.

Malabar wintercherry or Malabar nut shrub–Adhatoda vesica alias A. pubescens. In Sanskrit, it is termed 'Vaidya Matha' which means **physicians** mother i.e. physicians private remedy. It is a medicinal shrub 8 to 10 ft. in height with leaves narrow, and lanceolate; the stem is many branched, flowers with petals, whitish spotted, sulphur coloured at the throat and dark–purpled at the limb. It is so called from its being eaten only by goats. It is commonly found in gardens, hedges, fields, plains and other waste lands in Malabar and other places in S.India, Nepal, Bengal etc.All the parts of this plant are bitterish, slightly aromatic and especially the fruit is supposed to be antispasmodic.

The leaves, flowers, root and bark are all used medicinally, mostly in the form of powder, infusion of the root, and decoction of or extract, from the leaves.

The leaf is an expectorant, antispasmodic and antiperiodic. It is used in cough, asthma, ague, eatarrh, chronic bronchitis, phthysis and other pulmonary affections.

It is given in conjunction with the leaves of Solanum trilobatum (தூதுவளை) and Solanum jacquini (கண்டங்கத்திரி) by our native physicians internally in decoction as an anthelmintic for killing intestinal worms. It also kills other bacterial germs in water. An infusion of this plant is similarly found useful by Dr. Watt as an antiseptic to destroy germs in drinking water. By mixing the leaves with other bazaar drugs, an electuary is prepared and given for consumption, epistaxis, bleeding from the teeth etc.

The juice of the leaves is much valued in cases of pneumonia, diarrhoea and dysentery, especially in hemoptysis and in the bleeding in dysentery. The fresh juice of the leaves mixed with honey or ginger juice is an excellent cough mixture useful in bronchitis, asthma and consumption. The dried leaves are made in to cigarettes and smoked with much benefit in asthma.

A decoction of the whole plant is much used in cramps and intercostal convulsions in children.

The fresh flowers are bound over the eyes in opthalmia. The root is an expectorant and is used as a substitute for senega. The oil prepared from this plant along with other drugs forms an external application in affection of the chest and especially in phthysis.

Unani doctors use this as powder and as an electuary and Ayurvedic doctors prepare also Ghrita and Tailams out of this for curing diseases (S.D.).

ஆடி[1] āḍi, பெ. (n.) 1. கண்ணாடி; mirror. "பொன்னினாடியிற் பொருந்துபு நிற்போா்" (மணிமே. 19:90). 2. உவர்மண்ணோடு மணல் சேர்த்துருக்கிச் செய்யும் பளிங்கு; transparent quartz made of sand mixed with fuller's earth-crystal glass (S.D.). "விதிமா ணாடியின் வட்டங் குயின்று" (மணிமே. 8:47). "அடுத்தது காட்டும் பளிங்கு போல்)" (குறள். 206).

ம., க. ஆடி; Sinh. āḍassa.

[ஆடு + இ –ஆடி. தன்னையடுத்தோர் அல்லது பொருளின் உருவநிழலாடுதலால் கண்ணாடியும் பளிங்கும் ஆடி என்று பெயர் பெற்றன.]

ஆடி[2] āḍi, பெ. (n.) 1. காற்று (கதி. அக.); wind. 2. நாரை; crane.

[ஆடு + இ – ஆடி. ஒருகா. காற்று மோதி ஆடச் செய்யும் இயல்பால் ஆடி எனப் பெயர் பெற்றிருக் கலாம்.]

ஆடி[3] āḍi, பெ. (n.) நண்டு; crab. **ஏடி** பார்க்க; see **ēḍi.**

[நண்டு → நெண்டு →ஞெடு →ஞெடி → ஏடி → ஆடி. 'ஞெண்டு' தெலுங்கில் 'என்ட்றா' என்றும், துளுவில் 'ஏடி' என்றும், தமிழ் கன்னட மலையாள மொழிகளில் ஆடி என்றும், சமற்கிருதத்தில் 'ஆஷாட' என்றும் ,உருபு திரிந்தது.]

ஆடி[4] āḍi, பெ. (n.) 1. நான்காம் மாதமாகிய கடகம்; the fourth Tamil month, (July + August.). 2. இருபத் தோராம் நாண்மீன் (நட்சத்திரம்), கடைக்குளம் (உத்திராடம்) (திவா.); 21st star in asterism. 3.

பகலில் 12 நாழிகைக்குமேல் இரண்டு நாழிகை கொண்ட முழுத்தம் (முகூர்த்தம்) (விதான. குணா.73); auspicious time of 48 minutes, from 4h-48m. to 5h-36m. after sunrise.

ம., க. ஆடி; து. ஆடி

[Skt. āṣaḍa < த. கடகம் (ஆடி).]

கடகம் பார்க்க; see **kaḍagam.**

ஆடி[5] āḍi, பெ. (n.) படியாணி; a kind of nail. (செ.அக)

ஆடி[6] āḍi, பெ. (n.) ஒரரக்கனின் பெயர்; name of a demon.

ஆடி[7] āḍi, பெ. (n.) கூத்தாடுபவன்; dancer. "மணிப்பை யரவினாடி" (பாரத. அருச்சுனன்றவ. 113).

ம.,க. ஆடி

ஆடிக்கரு āḍi-k-karu, பெ. (n.) கடக (ஆடி) மாதத்து நீருண்ட மேகம்; dark clouds of the month of Āḍi, indicating plentiful rain in the ensuing monsoon. 'ஆடிக் கருவழிந்தால் மழை குறைந்து போம்'. (வின்).

[ஆடி + கரு.]

ஆடிக்கழைத்தல் āḍikkalaittal, பெ. (n.) 1. கடக (ஆடி) மாதம் பிறந்ததும் மாப்பிள்ளையைப் பெண் வீட்டுக்கு அழைத்தல்; inviting newly wed man to a feast at the bride's house on the 1st of Āḍi . 2. புதிதாக மணஞ்செய்து கொடுத்த பெண்ணை கடக (ஆடி) மாதம் முழுவதும் தாய் வீட்டில் தங்கியிருப்பதற் காக அழைத்தல்; taking away or separating the bride from her husband, and putting her under the care of parents during the month of Āḍi of their first year of marriage. This separation is indispensable to prevent conception in that month and delivery in the coming April which is believed to bring ruin upon the family (W.).

[ஆடிக்கு + அழைத்தல்.]

ஆடிக்காருவா āḍi-k-kāruvā, பெ.. (n.) **1. கடகக் காருவா** பார்க்க; see kaḍaka-k-kāruvā. 2. கடக (ஆடி) மாதத்துக் காருவா (அமாவாசை) நாள்; ஒரு நன்னாள்; new moon of Āḍi, auspicious day.

[ஆடி + காருவா]

ஆடிக்கால் āḍi-k-kāl பெ. (n.) வெற்றிலைக்கொடி படர்வதற்கு முன்னேற்பாடாகக் கடக (ஆடி) மாதம் வயலில் நடும் அகத்தி (இ.வ.); West Indian pea-tree, planted in the month of Āḍi, in fields to serve as a support for betel creepers.

[ஆடி + கால்.]

ஆடிக்காற்று āḍi-k-kāṟṟu, பெ. (n.) கடக (ஆடி) மாதத்தில் கடுமையாக வீசும் தென்மேற்குப் பருவக் காற்று; high monsoon winds blowing from southwest, such as those characteristic of Āḍi. "ஆடிக்காற்றில் அம்மியே பறக்கும் போது இலவம் பஞ்சு எம்மாத்திரம்?" (பழ.).

[ஆடி + காற்று]

ஆடிக்குறி āḍi-k-kuṟi, பெ. (n.) கடக (ஆடி) மாதத்து வளர்பிறையின் ஐந்தாம் பிறை (பஞ்சமி), ஞாயிறு வரின் மழை குறைவு, திங்கள் வரின் பெரு வெள்ளம், செவ்வாய்வரின் சண்டை (போர்), அறிவன் (புதன்) வரின் பெருங்காற்று, வியாழன் வரின் நல்ல விளையுள், வெள்ளி வரின் பெரு மழை, காரி (சனி) வரின் விளை வில்லை யென்று மக்களிடை நிலவும் நம்பிக்கை (அபி. சிந்.); fifth day of the moon during the month of Āḍi (July - August) which according to the belief of common people, will bring low rain if it falls on Sunday, flood on Monday, war on Tuesday heavy wind on Wednesday, good harvest on Thursday, heavy rain on Friday and no harvest on Saturday.

[ஆடி + குறி. குறி = அடையாளம்.]

ஆடிக் குறுவை āḍi-k-kuṟuvai, பெ. (n.) நெல்வகை; a kind of short term paddy. (Pudu. Ins. 191).

[ஆடி + குறுவை. குறுகியகாலத்தில் அறுவடை செய்யும் நெல்லுக்குக் குறுவை எனப்பெயர். அந் நெல் கடக மாதமாகிய ஆடிமாதத்தில் அறுவடை செய்தலால் ஆடிக்குறுவை எனப்பெயர் பெற்றது.]

ஆடிக்கோடை āḍi-k-kōḍai, பெ. (n.) கடக (ஆடி) மாதத்தில் அறுவடையாகும். நெல். (இ.வ.); extra rice-crop, harvested during the month of Āḍi.

[ஆடி + கோடை.]

ஆடிச்சி āḍicci, பெ. (n.) கழைக்கூத்தாடிப் பெண் (புதுவை); woman who is an acrobat.

[ஆடிச்சி = ஆடுபவள். சி - பெ. பா. ஈறு.]

ஆடிடம் āḍiḍam, பெ. (n.) 1. விளையாடுமிடம்; play-ground. "மன்னி யாடிடஞ் சேர்வர்கொல்" (திருக்கோ. 37.). 2. கூத்தாடுமிடம்; dancing stage.

[ஆடு + இடம்]

ஆடித்திகைந்தான் āḍi-t-igaindāṉ, பெ. (n.) சிற்றா முட்டி; plant.

ஆடித்திங்கள் āḍi–t–tiṅgaḷ, பெ. (n.) கடகத் திங்கள்; Tamil month Kaḍagam. (Āḍi) "ஆடித் திங்கள் பேரிருள் பக்கத்து" (சிலப். 23. 133.).

[ஆடி + திங்கள்.]

ஆடிப்பட்டம் āḍi–p–paṭṭam, பெ. (n.) கடக (ஆடி) மாதத்துப் பயிரிடும் பருவம்; cultivation season in the month of Āḍi. "ஆடிப்பட்டம் தேடி விதை." (பழ).

க. ஆடிகத்தெ.

[ஆடி + பட்டம்.]

ஆடிப்பண்டிகை āḍi–p–paṇḍigai, பெ. (n.) கடக (ஆடி) மாதப்பிறப்புக் கொண்டாட்டம்; first day of Āḍi, a day of feasting, mutual visits, when the sun is supposed to enter on its southern course (W.).

[ஆடி + பண்டிகை.]

ஆடிப்பால் āḍi–p–pāl, பெ. (n.) கடக (ஆடி) மாதப் பிறப்பன்று செய்யும் விருந்தில் இடம் பெறும் தேங்காய்ப்பாலுணவு (இ.வ.); dish made of the milk of the coconut kernal and it is also the piece-de-resistance on the occasion of the first, day of Āḍi.

[ஆடி + பால்.]

ஆடிப்பாவை āḍi–p–pāvai, பெ. (n.) ஆடியில் (கண்ணாடியில்) தோன்றும் உரு; image in a mirror. "ஆடிப்பாவை போல" (குறுந். 8.).

[ஆடி + பாவை.]

ஆடிப்பூச்சு āḍi–p–pūccu, பெ. (n.) கானல்; mirage.

[ஆடி + பூச்சு. பூச்சு = தோற்றம்.]

ஆடிப்பூரம் āḍi–p–pūram, பெ. (n.) கடக (ஆடி) மாதத்துக் கணை (பூர) நாண்மீனன்று நடைபெறும் அம்மன் திருவிழா; festival celebrated in honour of the goddess in temples on the Pūram day in Āḍi.

[ஆடி + பூரம்]

ஆடிப்பெருக்கு āḍi–p–perukku, பெ. (n.) கடக (ஆடி) மாதம் பதினெட்டாம் நாளன்று காவிரியில் வெள்ளம் பெருகுவதைக் கொண்டாடும் விழா; festival held on the 18th day of Āḍi when the river Kāviri is supposed to be in spate.

[ஆடி + பெருக்கு. பெருக்கு = வெள்ளப்பெருக்கு.]

ஆடிப்போ–தல் āḍi–p–pō–, 8 செ.கு.வி. (v.i.) கட்டுக் குலைந்து போதல், ஆட்டங்காணுதல்; to become shaky.

[ஆடி + போ – ஆடிப்போ (கூட்டுவினை).]

ஆடியகூத்தன் āḍiya–kūttaṉ, பெ. (n.) தில்லை மரம் (சித்.அக.); blinding tree.

ஆடியமாவாசை āḍi–y–amāvāšai, பெ. (n.) கடகக் காருவா பார்க்க; see kaḍaka–k–kāruvā.

[ஆடி + அமாவாசை.]

ஆடியமாவாசையைத் தமிழில் கடகக்காருவா என்பர்.

ஆடியல் āḍiyal, பெ. (n.) அசையுந் தன்மை ; shaking "ஆடியல் பெருநாவாய்" (மதுரைக்.83).

[ஆடு + இயல்.]

ஆடியற்பெயர் āḍiyaṟ–peyar, பெ. (n.) இளந்துணை மகார் தம் விளையாட்டு வகையான் தாமே அப்போதைக்குப் பட்டிபுத்திரர், கங்கை மாத்திரர் என்றாற் போலப் படைத்திட்டுக் கொண்ட பெயர்; assumed name as pseudonym chosen by players to suit the particular game. "கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரே" (தொல்.சொல்.165).

[ஆடு + இயல் + பெயர்.]

ஆடியறவெட்டை āḍi–y–aṟavettai, பெ. (n.) கடக (ஆடி) மாதத்திலுண்டாகும் பொருள் முடை (இ.வ.); time of high prices or scarcity, usu. associated with the month of Āḍi (Loc.).

[ஆடி + அற + வெட்டை. அற = முற்றிலும்; வெட்டு → வெட்டை = இல்லாமற்போதல், பொருள் தட்டுப்பாடு. உழவர்களிடம் பொருள்முடையும் பணமுடையும் ஏற்படுங்காலம் என்னும் கருத்தில் ஆடியறவெட்டை என்னும் தொடராட்சி தோன்றியிருக்கலாம்.]

ஆடியோடுஞ்சரக்கு āḍiyōḍuñ–carakku, பெ. (n.) முதலில் நெருப்பிற் கருகிப் பின் நில்லாமல் மறைந்து பதங்கிக்கும் சரக்கு; mineral which first melts in a crucible and is then sublimated gradually as mercury, sulphur, etc., do.

[ஆடி + ஓடும் + சரக்கு .

ஆடிவழி āḍi–vaḻi, பெ. (n.) புதிய மணமக்களை முதலாண்டின் கடக (ஆடி) மாதத்தில் பெண்வீட்டார் அழைத்து வந்து செய்யும் சீர் (தெ. ஆ.); presents made by the bride's parents to the couple at the feast given to them during Āḍi.

[ஆடி + (அழை) வழி).]

ஆடிவாலான் āḍi–vālaṉ, பெ. (n.) நெல்வகை; a kind of paddy (P.T.L.).

ஆடிவில்லை āḍi-villai, பெ. (n.) உருப் பெருக்கிக்காட்டுங் கண்ணாடி; lens.

[ஆடி + வில்லை.]

ஆடிவெள்ளி āḍi-veḷḷi, பெ. (n.) கடக (ஆடி) மாதம் மூன்றாம் வெள்ளியன்று வாழ்வரசியர் (சுமங்கலிகள்) நோற்கும் நோன்பு; religious ceremony observed by married women on the 3rd Friday of the month of Āḍi, with a view to praying the Amman goddess to bestow longevity and for the welfare of their husbands and families.

[ஆடி + வெள்ளி.]

ஆடு[1]-தல் āḍu-, 5. செ.கு.வி.(v.i.) 1. அசைதல்; to move, to wave, to swing, to shake, to vibrate. ஆடு கழை. 2. கூத்தாடுதல் (பிங்.); to dance, to gesticulate, to play. "அம்பலத்தாடுவான்" (பெரியபு. கடவுள் வா). 3. விளையாடுதல்; to play. "அகன்மலையாடி" (மணிமே.10;55). 4. நீராடுதல்; to bathe, to play in water. "பூக்கமழ் பொய்கை யாடச் சென்றோன்" (மணிமே. 17:32). 5. பொருதல்; to fight.. "மற்றவனோ டாடி...........மாய்ந்ததனை" (கந்தபு. யுத்த. சிங்கமு.460). 6. அலைதல், திரிதல்; to go, to proceed, to wander about, to pass to and fro. "ஆடித் திரிந்து நான் கற்றதும் கேட்டதும்" (தாயு. சச்சிதா.5). 7.முயலுதல்; to practise, to persevere, to make continued exertion. "இளையானே ஆடுமகன்" (பழமொ. 150). 8. பிறத்தல்; to be born. "மாசை மாக்கடன் மன்னவ னாடலின்" (சீவக.911). 9. உலாவுதல்; to wander. "இளமழை யாடும்" (கலித்.41). 10 சுற்றிவருதல்; to rotate. பம்பரம் ஆடுகிறது. 11. சண்டையில் திரிதல்; to move as if in a fight. "வருந்தி ஆடினாள் பாடினாள்" (தனிப்பா. தி.1.பக்.103). 12. அளவுக்கு மீறி அதிகாரஞ் செய்தல்; to exercise powers transgressing the limits. ஒரேயடியாய் ஆடாதே (உ. வ.). 13. மனந்தளர்தல், மனங்குழம்புதல்; to vacillate, to be confused. ஆடிய உள்ளம். 14. வலி தளர்தல்; to become weak. புல் ஆடிப் போயிற்று (உ.வ.). 15. ஒலித்தல்; to throb. வண்டாடும் பூம்பொழில். 16. துடித்தல்; to quiver. "வாட் கண்ணிடனாட" (பு.வெ. 12). 17. குலுங்குதல்; to shudder, to tremble. கையில் வளையாடுகிறது. 18. தடுமாறுதல் (புதுவை); to be disconcerted (Pond.). 19. பொறி (எந்திரம்) முதலிய வற்றில் அரைத்தல்; to be crushed in a mill. "ஆடுகைக்குப் பக்குவமான கரும்புபோல இனிதாயிருக்கிற மொழியையும்" (திவ்.பெரியாழ். 2.9.5,வியா.பக். 464). 20. விழுதல்; to fall. "இவளிடையை யாசைப் பட்டாயிற்று கோட்டிடை யாடிற்று" (திவ். பெரியதி. 1.2.3, அரும். பக். 65). 21.புணர்தல் (நாமதீப.); to cohabit. 22. செருக்குதல்; to be proud or conceited.-5,செ. குன்றாவி. (v.t.). 23. சொல்லுதல்; to tell. "அவர் சொல்லியவாறே யாடினார்" (திருவிளை. விறகு.61). 24. செய்தல்; to do, perform, to fight, "அமராடுதல்" (பிரபோத. 27,21). 25. நுகர்தல்; to enjoy. (சிலப்.பதிக.15). 26. பூசுதல்; to rub, to smear as with sandal paste. சந்தனம் ஆடிய மேனி. 27. அளைதல், துழாவுதல்; to mix, to stir. வண்டு தேனாடியது. ம.வி. (idio-u) 28. அசைந்தாடுதல், மென்மெல அசைதல்; to sway. தென்றலில் பூங்கொடி அசைந்தாடுகிறது. 29. ஆலையாடுதல், ஆலையிலிட்டு அரைத்தல்; to crush in a machine. இன்றுதான் கரும்பு ஆலையாடி முடிந்தது. 30. இணலாடுதல்-புணர்தல்; to copulate, as snake do. பாம்பு இணலாடுகிறது. 31. ஈயாடுதல்- ஈமொய்த்தல்; to swarm about. இனிப்புள்ள இடத்தில் ஈயாடும். 32. ஈயாடாமை-பொலிவின்மை; to show no emotion. அவன் முகத்தில் ஈயாடவில்லை. 33. உண்டாடுதல் - விருந்துண்டு மகிழ்தல்; to revel. உண்டாடும் செல்வரா நாம்? 34. உரையாடுதல் - கலந்து பேசுதல்; to converse. அவரொடு நாங்கள் உரையாடினோம். 35. உறவாடுதல் நட்புக் கொள்ளுதல்; to become friendly. பகையாளி குடியை உறவாடிக் கெடு. 36. ஊடாடுதல்- இடைப்புகுதல்; to intervene. ஐயம் ஊடாடாத நட்பு. 37. எண்ணெயாடுதல் - செக்கிலிட்டு அரைத்தல்; to press oil seeds. ஒரு மூட்டை எள்ளை எண்ணெயாடினர். 38. எடுத்தாடுதல் - சொல்லிக் காட்டுதல்; to mention and dwell on - as one's own good actions. பெரிய உதவி செய்துவிட்டவள்போல் அவள் என்னை எடுத்தாடி விட்டாள் (உ.வ.). 39. எதிராடுதல் - எதிர்த்துப் பேசுதல்; to oppose. என்னோடு எதிராட உனக்கென்ன துணிச்சல்? 40. ஒப்புக்கு ஆடுதல் - பற்றுள்ளவன் போல் நடித்தல்; to behave as if interested. அவன் ஒப்புக்கு ஆடுகிறான் , நம்பாதே. 41. ஒளிந்தாடுதல் - நம்பிக்கையூட்டி ஏமாற்று தல்; to deceive by giving hope. இந்த ஒளிந்தாட்டமெல்லாம் என்னிடம் செல்லாது. 42. (அ). ஓடியாடுதல் - விரைந்து செயற்படல் ; to act vigorously. அவரால் முன்னைப் போல ஓடியாட

முடியாது. (ஆ). ஓடியாடுதல் – அலைந்து வேலை செய்தல் ; to run hither and thither, work hard. இளமைக் காலத்தில் ஓடியாடிச் சம்பாதித்தார். 43. (அ). ஓரியாடுதல் – தன்னை எவரும் தொடமுடியாதபடி நீருள் மூழ்கியும் நீந்தியும் நெடுநேரம் விளை யாடுதல்; to play in water by diving and swimming so as to make it impossible for others to catch him. ஓரியாடுதலில் அவன் வல்லவன். (ஆ). ஓரியாடுதல் – துணைக்கு எவருமின்றித் தானே வருந்திப் பணியாற்றுதல் ; to work all alone without help. அவளொருத்தியே ஓரியாடுகிறாள்; யாராவது துணைக்குப் போகக் கூடாதா? 44. கடலாடுதல் – விழாவின் போது கடலில் நீராடுதல்; to bathe or swim in the sea. இந்திர விழாவின் போது மக்கள் கடலாடுவர். 45. கண்டவ னோடாடுதல் – கண்டவர்களோடு பழகுதல்; to move with worthless people. கண்டவனோடாடிச் செல்வமெல்லாம் தொலைத்துவிட்டான். 46. கண்ணாமூச்சியாடுதல் – ஒளித்து வைத்துப் பேசுதல்; play hide and seek. என் புத்தகம் எங்கே சொல், என்னோடு கண்ணாமூச்சியாட வேண்டாம். 47. (அ) கயிறாடுதல் – கயிற்றின் மேல் நடக்கும் கழைக்கூத்தாடுதல்; to perform on stretched rope. 'ஆரியர் கயிறாடு பறையின்" (குறுந்.7.). (ஆ)' கயிறாடுதல் – கயிற்றின் இரு முனைகளையும் இரு கைகளில் பிடித்தவாறு மேல் கீழாக வீசிச் சுழற்றிச் சிறுமியர் குதித்தாடும் விளையாட்டு; to play with skipping ropes. அவள் நன்றாகக் கயிறாடுகிறாள். 48. களித்தாடுதல் – பெருமகிழ்ச்சியடைதல்; to rejoice. பிறந்த நாளன்று மாமா பரிசுப் பொருள்களோடு வரக்கண்டு குழந்தைகள் களித்தாடினர். 49. கழையாடுதல் – கழைக் கூத்தாடுதல்; to dance on a pole. அவன் கழையாடலில் வல்லவன். 50. காலாடுதல் – செல்வமுடையராதல்; to become rich. "காலாடு – போழ்தில் கழிகிளைஞர் வானத்து மேலாடு மீனின் பலராவர்" (நாலடி.113) 51. (அ). காற்றாடுதல் – காற்று வீசுதல்; to blow. இன்று கொஞ்சமும் காற்றாடவில்லை. (ஆ) காற்றாடுதல் – உலர்தல்; to dry in the wind. ஈரத்துணியைக் காற்றாடப் போடு. 52. குடித்தாடுதல்; மது வருந்திச் செல்வம் அழித்தல்; to squander wealth through drinking. அவன் சொத்தெல்லாம் குடித்தாடி விட்டான். 53. குறையாடுதல் – விலை குறைக்கு மாறு கெஞ்சிக் கேட்டல்; to ask repeatedly to lower the price. நாளெல்லாம் குறையாடினாலும் விலை குறையாது. 54. கூத்தாடுதல் – மகிழ்ச்சி யிற்றிளைத்தல்; to revel in happiness. முதல் வகுப்பில் தேறியதற்காக ஒரேயடியாகக் கூத்தாடுகிறான். 55. கெஞ்சிக் கூத்தாடுதல் – விடாமல் குறையிரந்து கேட்டல்; to beg, to request repeatedly. நீ என்ன தான் கெஞ்சிக் கூத்தாடினாலும் அவன் தரப் போவதில்லை. 56. கையாடுதல் – பணம் மோசடி செய்தல்; to swindle money. அவன் ஒரு பெருந்தொகையைக் கையாடி விட்டான். 57. (அ) கொண்டாடுதல் – புகழ்தல்; to praise. கொடுப்பவனை எல்லாரும் கொண் டாடுகின்றனர். (ஆ). கொண்டாடுதல் – விழாச் செய்தல்; to celebrate a festival. நாங்கள் பிறந்த நாள் கொண்டாடினோம். 58. கோலாடுதல் – அடித்தல்; to beat with a stick. கோலாடினால் குரங்காடும். 59. சதையாடுதல் – அன்பு (பாச) உணர்வு வெளிப்படுதல்; to express feeling of affection, attachment. தன்னை மதிக்காத மகனென்றாலும் அவன் நோய்வாய்ப்பட்டதறிந்து தந்தை கதறுகிறார்; தானாடாவிட்டாலும் தன் சதையாடுகிறது. 60 (அ). சாமியாடுதல், மருளேறியாடுதல்; to speak and act as if possessed by a spirit. அவன் நேற்றுச் சாமியாடினான். (ஆ). சாமியாடுதல் – அலைக்கப் படுதல்; to undergo suffering frequently. எனக்கு ஒன்றுந் தெரியாதென்று ஏய்க்கப் பார்க்கிறான்; அவனைச் சாமியாட வைக்கிறேனா இல்லையா பார். 61. சீறாடுதல் – பிணங்கிக் கொள்ளுதல்; to get angry and quarrel. அவள் சீறாடிக் கொண்டு தாய்வீட்டுக்குப் போய்விட்டாள். 62. சும்மா ஆடுதல், காரணமின்றிப் பேசுதல் அல்லது செயற்படுதல்; to speak or act without reason. கண்டவன் பேச்செல்லாம் கேட்டு இப்படிச் சும்மா ஆடாதே. 63. சூறையாடுதல் – கொள்ளை யடித்தல்; to rob, to plunder. திருடர் புகுந்து அவன் கடையைச் சூறையாடி விட்டனர். 64. சொல்லாடுதல் – பேச்சுக் கொடுத்தல்; to converse. அவனோடு சொல் லாடிப்பார். 65. சோற்றுக்கு ஆடுதல் – சோற்றுக்காகச் சொன்ன படி செய்தல்; to do anything just to eke out a living. அவன் சோற்றுக்கு ஆடுகிறவன். 66. சோற்றுக்குத் திண்டாடுதல் – வறுமையில் வாடுதல்; to starve and suffer from poverty. அவன் சோற்றுக்குத் திண்டாடுகிறான். 67. தலை கால் தெரியாமல் ஆடுதல் – செருக்குடன் நடத்தல்; to

behave with pride. திடீரென்று பணக் காரனாகி விட்டதால் அவன் தலை கால் தெரியாமல் ஆடுகிறான். 68. தலைமேல் வைத்துக் கொண்டாடுதல்– அளவுக்கு மீறிப் போற்றுதல்; to praise **excessively.** . தொடக்கத்தில் 'அவரே என் தலைவர்' என்று தலைமேல் வைத்துக் கொண்டாடினான். 69. தலை மேல் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுதல் – கட்டுக்கடங்காத பற்றால் அடிமையாதல்; **to shower love in excess and become a slave to it.** திருமணமான புதிதில் அவளைத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு ஆடினான். 70. தலையாடுதல் –தலைநடுங்குதல்; shake of head **because of old age.** அந்த மூதாட்டிக்குத் தலையாடுகிறது. 71. தலைவிரித்தாடுதல் –மிக்குப் பரவி மேலோங்கி நிற்றல்; to dominate by wide **spreading.** எங்கும் வறுமை தலைவிரித்தாடுகிறது. 72. திக்குமுக் காடுதல் – திணறுதல்; to be **choked strangled.** என்ன செய்வதென்றறியாமல் திக்கு முக்காடினான். 73. திண்டாடுதல் – எய்தப்பெறாது வருந்துதல்; to lament over not acquiring. செலவுக்குக் காசு இல்லாமல் திண்டாடினான்.74. திருமுழுக்காடுதல் – தெய்வத் திருமேனியை முழுக்காட்டுதல்; to ceremoniously **immerse an idol in water.** இறைவன் திருமுழுக்காடுங் காட்சி அடியார்க்கு இன்பந்தரும். 75. நகையாடுதல் – எள்ளி நகைத்தல்; to laugh derisively. அவன் கோலத்தைக் கண்டு அனைவரும் நகையாடினர். 76. (அ). நடமாடுதல் – அங்குமிங்கும் நடத்தல்; to walk about. அவர் நோய்வாய்ப்பட்டதிலிருந்து சரியாக நடமாடுவதில்லை. (ஆ). நடம் ஆடுதல் – நடனம் ஆடுதல்; **to dance.** இறைவன் நடம் ஆடும் கோயில் தில்லையம்பலம். 77. (அ). நாடகமாடுதல் – நடித்தல்; to act **as in a play.** நன்றாக நாடகமாடுகிறாள் இவள். (ஆ). நாடகமாடுதல் – நடித்து ஏமாற்றுதல்; to cheat **by acting cleverly.** இப்படி நாடகமாடியே என் செல்வமெல்லாம் கரைத்து விட்டார்கள். 78. நாவாடுதல் – பேச்சுக்குப் பேச்சு எதிர்த்துப் பேசுதல்; **to retaliate.** இப்படி நாவாடினால் எந்த மாமியார் தான் பொறுத்துக் கொள்வாள்? 79. நிழலாடுதல் – குறிப்பாகத் தோன்றுதல்; to appear **like a shadow.** வெற்றி பெறுவேன் என்பதற்கான அறிகுறிகள் நிழலாடுகின்றன. 80. நின்றாடுதல் – நிலை பெயராமல் சுழலுதல்; to rotate firmly **fixed to a spot.** பம்பரம் நின்றாடுகிறது. 81. (அ). நீராடுதல் – நீர் நிலையிலிறங்கிக் குளித்தல்; to bathe in stagnant or running water. அவர் ஆற்றில் நீராடினார். (ஆ). நீராடுதல் – வாலாமை நீங்கக் குளித்தல்; to bathe after menstruation or child birth. மகவீன்ற அவள் இன்று நீராடினாள். (இ). நீராடுதல் – முழுக்க வியர்த்தல்; to perspire, to sweat. வெயிலில் இரைக்க இரைக்க ஓடி வந்ததால் அவர் உடம்பு நீராடிப் போயிற்று. 82. நீறாடுதல் – இடித்துப் பொடிபடச் செய்தல்; to pulverise. "இருநிலக் கரம்பைப் படுநீ றாடி" (பெரும்பாண்.93). 83 (அ). நெளிந்தாடுதல் – ஒசிந்தாடுதல்; to dance twisting the waist. பாம்பைப் போல் அழகாக நெளிந்தாடுகிறாள். 84 (அ). பகடையாடுதல் – சூதாடுதல்; to gamble. தருமன் பகடையாடி நாடிழந்தான். (ஆ) பகடையாடுதல் – எளிதில் பணம் திரட்டுதல்; to earn by easy means. இதென்ன பகடையாடிக் கிடைத்த சொத்தா? 85. (அ) படமாடுதல் – உருவப்படம் அல்லது உருவச்சிலை இருத்தல்; presence of idol or photo. "படமாடுங்கோயில் பரமற் கொன்றீயில்" (திருமந்.). (ஆ). படம் ஆடுதல் – திரையிடப் படுதல்; to screen a film. அந்தக்கொட்டகையில் என்ன படம் ஆடுகிறது? 86. படமெடுத்தாடுதல் – சீறிப் பேசுதல்; to speak with fury. அவன் ஏன் இப்படிப் படமெடுத்தாடுகிறான்? 87. பணம் ஆடுதல் – செல்வம் மிக்கிருத்தல்; to have plenty of money. அவனிடம் பணம் ஆடுகிறது. 88. பணம் கட்டி ஆடுதல் – பணத்தைப் பந்தயமாக வைத்து ஆடுதல்; to lay money as bet. சீட்டாடுவோர் பணம் கட்டி ஆடுவது தவறு. 89. பணம் விளையாடுதல் – பணம் செலவழித்து நினைத்ததை முடித்தல்; to achieve things desired by bribing. அவன் வென்றதன் காரணம் பணம் விளையாடியதுதான். 90. பந்தாடுதல் – செம்மையாக உதைத்தல்; to give a severe kick. அந்தத் திருடன் கிடைத்திருந்தால் எல்லோரும் அவனைப் பந்தாடிவிட்டிருப்பார்கள். 91. பம்பரமாடுதல் – ஓய்வின்றி அலைந்து வேலை செய்தல்; to work hard without taking rest.. ஒரே நேரத்தில் அத்தனை வேலை கொடுத்தால் என்ன செய்வது? என்னால் பம்பரமாட முடியாது. 92. பாய்ந்தாடுதல் – அஞ்சத்தக்க விரைவுடன் விளையாடுதல்; to play with such speed as to frighten the opponents.; சடுகுடு விளையாட்டில் அவன் பாய்ந்தாடினால் எதிரணி தோற்பது உறுதி. 93. புகுந்து விளையாடுதல் – திறங்காட்டி ஆடுதல்; to play

with remarkable skill. அந்த வேலையை அவனிடம் கொடுங்கள்; புகுந்து விளையாடிவிடுவான். 94. பூத்தாடுதல்–அழகால் பொலிதல்; to shine with beauty. தாமரை பூத்தாடுகிறது. 95. பேயாடுதல் – தனக்குத் தானே வருந்துமாறு செய்தல்; to make one feel sorry for his own faults. எனக்கொன்றும் தெரியாதென்று நினைத்திருக்கிறான். நான் அனைத்தையும் வெளிப்படுத்தினால் அவன் பேயாடுகிறானா இல்லையா என்று பார். 96. பொடியாடுதல் – புழுதி படிதல்; to be covered with dust. "பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ" (சிலப்.19,40).97. (அ). போராடுதல் – தொடர்ந்து சண்டையிடுதல், இடைவிடாமல் முயலுதல்; to struggle continuously to work hard restlessly to achieve the objective. எத்தனை காலம்தான் போராடுவது? போராடாமல் நலம் விளையுமா? (ஆ). போராடுதல் – மல்லுக்கு நிற்றல். தொடர்ந்து வம்புச் சண்டைக்கு நிற்றல்; to argue unnecessarily. உன்னோடு போராட என்னால் முடியாது. 98. மஞ்சாடுதல் – வெண் மேகம் தவழ்தல்; white cloud seen above the hills or mountain. மலைமேல் மஞ்சாடுகிறது. 99. மல்லாடுதல் –விடாப்பிடிச் சண்டையிடுதல்; to quarrel wantonly. அவளோடு மல்லாட யாரால் முடியும்? 100. மாலாடுதல் – கயிற்றைப் பிடித்துத் தொங்கிய வாறு ஊசலாடுதல்; to swing by gripping the rope with one hand. வேடன் மலைத் தேனழிக்க மாலாடு கிறான். (ஆ). மாலாடுதல்–வட்டக் காட்சியில் விளையாட்டு வீரர் கயிற்றூசல் கம்புகளை மாறிப் பற்றிப் பாய்ந்தாடுதல்; to perform on aerial trapeze. கோமாளிகூட வட்டக் காட்சியில் வேடிக்கையாக மாலாடிக் கீழே விழுகிறான். 101. மன்றாடுதல் – கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுதல்; to make a humble request. தன்னை மன்னிக்குமாறு மன்றாடினான். 102. மாறாடுதல்– மாறான கருத்தைக் கூறுதல்; to speak opposing a doctrine. இந்தக் கொள்கைக்கு அவன் சார்பாக இருப்பான் என்று நினைத்தோம். ஆனால் அவனே மாறாடுகிறான். 103. மூச்சாடுதல் –உயிரிருத்தல்; to breathe gently to show presence of life. அவன் இறக்கவில்லை, இன்னும் மூச்சாடுகிறது. 104. வழக்காடுதல் – வழக்குத் தொடுத்தல்; to file a case. உன்மீது வழக்காடப் போகிறேன். 105. வளையாடுதல் – மங்கலமாதல்; to become auspicious. வளையாடுங்கையால் உண வுண்ண வேண்டும். 106. வளைந்தாடுதல்– இசைந்து செல்லுதல், ஒத்துப் போதல்; to consent, acquise. உன் விருப்பத்துக்கு என்னால் வளைந்தாட முடியாது. 107. வாயாடுதல்–தொடர்ந்து பேசித் தீர்த்தல்; to go on speaking to one's own satisfaction. என்னதானிருந்தாலும் இப்படி வாயாடக் கூடாது. 108. வாலாடுதல் – பலாருப்பவும் வேண்டு மென்றே தான் முந்திச் செய்தல்; to carry out a work not wanted by. தலையாடுமுன்னே வாலாடுகிறது பார்த்தாயா? 109. வீம்புக்கு ஆடுதல் – தன் இயலாமையை வெளிக்காட்டிக் கொள்ளாமல் செயற்படுதல்; to do a work concealing one's inability. அந்தப் பயல் வீம்புக்கு ஆடுகிறான்; அந்த வேலை அவனால் முடியாது. 110. வேடங்கட்டியாடுதல் – திறமையாகப் பொய்த்து நடித்தல்; to act with talent. நீ என்னதான் வேடங்கட்டியாடினாலும் இங்கு ஒன்றும் நடக்காது. 111. வேண்டுமென்றே ஆடுதல் — வம்புக்கிழுத்தல்; to indulge in a quarrel wantonly. நான் சும்மாயிருந்தாலும் அவன் வேண்டுமென்றே ஆடுகிறான். 112. விலையாடுதல் – விலை பேசுதல் (நெல்லை.); to bargain. 113. களையாடுதல் — பிஞ்சு பிடித்தல்; forming of young fruit. பலாமரம் களையாடியிருக்கிறது (நெல்லை.). 114. நாடாடு தல்–பலவிடங்களில் திரிதல்; to wander. அவன் ஒரு நாடாடி (உ.வ.). 115. உடனாடுதல் – இணை பிரியாது தோழமை கொள்ளுதல்; to become close friend. அவன் இவனுக்கு உடனாடி (உ.வ.).

ம., க., தெ., பட. ஆடு; கோத., து. ஆடுவி; குட., கொலா. ஆட்; துட. ஒடு; நா. ஆர்.

[ஆல் → ஆள் → ஆளு → ஆடு (ஒ.நோ: நீள் → நீளு → நீடு) ஆல் = சுற்றுதல், சுழலுதல். ஆல் → ஆள் = செயற்படல், செய்தல், அசைதல். ஆள் → ஆளு → ஆடு = செய், அசை, நடுங்கு, வினையாற்று, விளையாடு.]

அள் = முதனிலைத் தொழிற்பெயர். ஆள் → ஆளு = மேற்பார் – ஆட்சி செய். ஆளு → ஆடு= செயற்படுத்து, வினைக்கொள் எனப் பிறவினையாயும், செய், இயங்கு எனத் தன் வினையாயும் வழங்கும். 'ஆளு' தன் வினையாயும் 'ஆடு' பிறவினையாயும் பண்டு வழங்கினும், 'ஆடு' பிறவினைப் பொருளிழந்து தன்வினைப் பொருளில் வழக்கூன்றியதாகல் வேண்டும். 'கொள்' தன்வினைப் பொருளிலும் 'கொடு' பிறவினைப் பொருளிலும் தத்தம் பொருளிழவாமல் இன்றும் வழங்குதலை ஒப்பு நோக்குக.

ஆடு[2] ādu, பெ. (n.) 1. கால்நடைகளுள் சிறியதும், அசைபோடுவதும், பிளவுபட்ட குளம்புடையதும் சிறிய கொம்புடையதும், வளர்ப்பு விலங்குகளுள் ஒன்றானதும், பாலூட்டி இனத்தைச் சார்ந்தது

மாகிய நாற்கால் விலங்கு; வெள்ளாடு, செம் மறியாடு முதலியன ஆட்டின் வகை; genus of which the sheep and goat are species. 2. மேழவோரை (மேடராசி); aries, a sign of the zodiac "திண்ணிலை மருப்பி னாடுதலை யாக" (நெடுநல். 106).

ம. ஆடு; **க.** ஆடு, ஆண்டு; **தெ.** ஆடு, யேட; **து.** எடு; **குட.** ஆடி; **கை., இரு., எரு.** ஆடு;**பட., கோத., குரும்.** ஆடு; **கோண்.** யேடி; **துட.** ஒடு; **கூ.** ஒட; **குரு.** எடா; **மா.** 'எட; **பிரா.** கேட்.

As. gaat; **Dutch.** geit; **G.** geiss; **L.** headus (kid). **கோதம்,** in the oblique cases the "ஆட்–" but in the nominative "ஆழ்" = goat. "யாழ்/எழ்". **துதம்** has "ஒட்" – for "யாட்" or – "ஆட்" just as தமிழ் has often "ஒம்" for "ஆம்"

கன்னடம் : ஆடு. **குடகு :** ஆடி. **துளு :** எடு. **தெலுங்கு :** "எடிக"; "எட" = ram. **கோண்டு** (Gondu.); "எடீ" = she goat. Kui, like Tutam, has "ஓட்" = goat. Brahui has "heet", "கேட்".

Sanskrit obtains several loan words from this Dravidian source: "எட –, எடக–, எடீ" = a kind of sheep. B.E.Drav. E.D.No. 4229. But what is phenomenal and astounding is to find that Latin too has taken this as a loan-word not for the goat, but for its progeny, the young kid, according to Cassel. But A.Walde thinks that Cicero employs the word **"haedus"** for the full - grown goat (Cicero, acc. to Walde, page 632); and **"aedus"** occurs according to an early Latin inscription. The rustic pronunciation has **"ecdus"**, very near எட just mentioned. The Sabine dialect has "feedus", according to Varro, I. 1.5 & 97. Compare Ernout El. dial. Latin. 154-155. It is clear that Tam. "y" -, Brahui "h", Latin "h"-, Sabine "f"- and Sinh. h-are all in the nature of prothetic glides, inorganic initial sounds that developed later on and that ஆடு was the fundamental form of this root. We can cite, from Walde, several other Latin words from this ancient Dravidian source:-

(1) **haediinus,** as an adjective = from a buck, Cicero. **haediinus** as a noun = mutton.

(2) **haediolus** = a small buck or ram, Varro; Cicero.

(3) **haedilie** = a sheep stall, Varro; Cicero.

(4 **haeduius** = a small buck, Javenal; a small kid, Cassell's Dict.

(5) **haedulea f.** = a little kid, Horatius or Horace Cassell's Dict.

(6) **haedillus** m. a small buck, Plautus.

(7) **haedilla f.** a small she-goat, Itala.

(8) aedua (feminine) = a she - goat, according to the inscription cited by Heraeus in Spr. d. Petr 10:5. Rh. M. 72:47.1.

(9) **Haedillia**. according to Horace, just as "porcillia"

It is possible that where Latin employs "h" like Brahui and Sinhala, Germanic tongues employed "g". Walde postulates an I.E. (=Indo-European) "gh" prothetic glide, namely *ghaidos = goat, compare Gothic "gaits"; Old High German "geiz"; Old Norse "geit", Anglo – Saxon "gaat", whence English "goat" for a small goat, Latin has "haediinus" Gothic "gaitein"; O.H.G. "geizzin"; As "gaeten".

[ஆள் – வினைசெய், செயற்படு, மேற்பார். ஆள் – ஆளு – ஆடு. விரைந்து செயற்படுத்து, விரைந்து செயற்படு. (ஒ.நோ நீள்–நீளு –நீடு).

ஆடு – விளையாடு.

ஆடு – ஆட்டுக்குட்டி.

ஆடு வெட்டுதலை நாட்டுப்புறங்களில் குட்டி வெட்டுதல் என்பர். இளமறி 'ஆடு' என அழைக்கப்பட்டது. இப்பொருட்டே இலத்தீன மொழியில் ஆட்டுக்குட்டி haedus எனப்படுதலை ஒப்புநோக்குக. ஆடுகள் தலையசைத்து மேயும் இயல்பை 'ஆடுதலைத்துரு' என நற்றிணை குறிப்பிடுகிறது.

ஆட்டினைக் குறிக்கும் மறி, குறி, துரு, ஆடு என்பன அனைத்தும் இளமையும் இளமையாடலும் சுட்டிய காரணப் பெயராயமைந்துள்ளன. முறி – இளந்தளிர். முறி → மறி. குறு = சிறுமை. குறி = சிறியது, இளையது.

ஆடு – துள்ளியும் மறித்துக் குதித்தும் ஆடும் விலங்கு. விலங்கின் குட்டிகளில் ஆட்டுக்குட்டிபோல் துள்ளிக் குதித்தும் மறித்துக் குதித்தும் விளையாடும் விலங்கு பிறிதின்மையின் ஆடுகளுக்கு மட்டும் ஆடு என்று பெயர் வழங்கலாயிற்று.] (நேர்த்திக் கடனுக்காகப் பலியிடப்படுவது அல்லது கொல்லப்படுவது என்னும் பொருளில் ஆட்டுக்கு இப் பெயரமைந்தது என்பது பொருத்தமன்று. மாடு, எருமை, கோழி போன்ற பிற உயிரிகளும் இங்ஙனம் அடப்படுதல் வெளிப்படை).

ஆடு – முதனிலைத் தொழிற் பெயர். ஆகுபெயராய் ஆட்டைக் குறித்தது. ஆட்டினங்களுக்குப் பொதுப் பெயரா யமைந்தது.

ஆடு – ஆட்டின் வடிவிலமைந்த மேழ(Mesha) ஓரை.

ஆட்டின் வகைகள்:

1. வெள்ளாடு – The ordinary goat – **capra hircus.**
2. செம்மறியாடு – an ordinary sheep browner in colour than the goat. It coressponds to **ovis arics.**

ஆட்டின் வகைகள்:

காட்டாடு

குறும்பாடு

கொடியாடு

செம்மறியாடு

மலையாடு

வெள்ளாடு

ஆப்புளாண்டம்

ஆவல்லி

3. குறும்பாடு (குறியாடு) – a short woolly sheep with crumpled horns.
4. பள்ளையாடு – an under sized goat.
5. மலையாடு (வருடை) – mountain goat – **Tetraceros quadricornis.**
6. கொடி யாடு – a species of long – legged goats
7. காட்டாடு – forest goat – **cervulus muntjac.**
8. ஏழகம் (மேழகம்) – செம்மறிக்கடா, துருவாடு. a ram of the common sheep.

ஆடு உணவுப் பொருளுக்காகவும், கம்பளிக்காவும் வளர்க்கப்படுவது. இதன் புலால், பால் ஆகியவை மருந்துக்குப் பயன்படும். வெள்ளாட்டின் பால் மருத்துவப் பயனுடையது.

A sheep or a goat species –vis, a family of caprinae. It is classified into different kinds and amongst them the goat is considered the best on account of its usefulness in medicines. It's meat, milk, urine, and faeces are all very useful as they have curative powers.

".......வெள்ளாடு தன்வளி தீரா
தயல்வளி தீர்த்து விடல்" என்னும் அடிகளை ஒப்பிடுக;

ஆடு [3] ādu, பெ. (n.) 1. கொல்லுதல்; killing, "ஆடுகொள் வென்றி" (புறநா.67). 2. வெற்றி; victory, success. "ஆடுகொள் நேமியான்" (கலித்.105,70).

ம. ஆடுக (அடித்தல்).

[அடு – ஆடு = கொல்லுதல், போர்க்களத்தில் கொல்லுதலால் பெற்ற வெற்றி]

ஆடு [4] ādu, பெ. (n.) 1. வடித்திறக்குதல்; distillation. "அறாஅநிலைச்சாடி யாடுறு தேறல்" (பு.வெ.1,2). 2. சமத்தல்; cooking. "ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்"(புறநா.164).

[அள் → அடு → ஆடு. அடுதல் = சமைத்தல், கொல்லுதல். (கருவியால், நீரால், நெருப்பால் கொல்லுதல் அல்லது தன்மை மாற்றம் செய்தல்)].

ஆடு [5] āḍu, பெ.(n.) கூத்து, நடனம்; dance.

ம. ஆடுக; **க.** ஆடு.

[ஆடு – ஆடுதல்]

ஆடு [6] āḍu பெ. (n.)கூர்மை (செ. அக.): sharpness.

[அள் = செறிவு, கூர்மை. அள் → அடு → ஆடு.]

ஆடுகண்வலை āḍukaṉvalai, பெ. (n.) நீரோட்டத்தின் போக்கிற்கேற்ப கடலிலிறக்கப்படும் மீன்பிடி வலை; சுருங்கி விரிந்து மீனைத் தன்னகப்படுத்தும்; a kind of fishing net which when put into sea by bulging and contracting proceses according to water currents catches fish.

[ஆடு +கண்+வலை.]

ஆடுகளம் āḍukaḷam, பெ. (n.) வெறியாடுமிடம்; stage for dancing of a priest possessed by divine power (skanda) "ஆடுகளம் சிலம்பப்பாடி" (திரு. ஆற். 245).

[ஆடு +களம்.]

ஆடுகால் āḍukāl, பெ. (n.) துலா நிற்கும் மரம்; stand of a picottah (loc.).

க. ஆடுந்தொலே.

[ஆடு + கால்.]

ஆடுகொடி āḍukoḍi, பெ. (n.) படர்நிலை எய்திய வளர் கொடி; tendril.

[ஆடு + கொடி]

ஆடுகொப்பு āḍukoppu, பெ. (n) மகளிர் காதணிவகை (நெல்லை); a kind of gold ear-ring, worn by women (Tn.)

ஆடுகொம்பு āḍukombu, பெ . (n.) கட்டுக்கொம்பு (செ. அக.); movable horn fixed in the skin.

[ஆடு + கொம்பு. ஆடுதல் = அசைதல்.]

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் āḍukōṭ–pāṭṭu–c–cēralāḏaṉ, பெ. (n.) ஒரு சேர அரசன்; Cera king

[ஆடு[4] = வெற்றி. "ஆடாடென்ப ஒரு சாரரே" (புறம்.) கோட்படல் = கைக் கொள்ளப்படுதல். மேற்கொள்ளும் செயற்பாடுகள் அனைத்திலும் வெற்றிபெறும் இயல்பினன். ஆதலின் ஆடு கோட் பாட்டுச் சேரலாதன் எனப்பட்டான்].

ஆடுசதை āḍušadai, பெ. (n) ஆடுதசை பார்க்க; see āḍutasai,

[ஆடு+ தசை. தடி → தசை → சதை.]

ஆடுண்ணாவாலம் āḍuṇṇā vālam, பெ. (n.) **ஆடு தீண்டாப்பாளை** பார்க்க; see āḍutīṇḍā–p–pāḷai.

ஆடுண்ணாவேளை āḍuṇṇa vēlai, பெ. (n) **ஆடு தீண்டாப்பாளை** பார்க்க; see **āḍutīṇḍā–p–pāḷai.**

ஆடுதசை āḍutašai, பெ. (n.) கெண்டைக்கால் தசை; calf of the leg, as contractile.

[ஆடு + தசை. தடி→ தசை.]

ஆடுதின்னாப்பாளை ādutinnā-p-pāḷai, பெ. (n.). **ஆடுதீண்டாப்பாளை** பார்க்க see ādutīṇḍā-p-pāḷai.

ஆடுதின்னாளை ādutinnāḷai, பெ. (n.)**ஆடுதீண்டாப் பாளை** பார்க்க; see ādutīṇḍā-p-pāḷai. "வேளை முத்திரு சுக்குடன் ஆடு தின்னாளை வேலிப் பருத்தி மிளகு" (தேரை. 1000)

ஆடுதீண்டாப்பாலை ādutīṇḍā-p-pāḷai. பெ. (n.) **ஆடுதீண்டாப்பாளை** பார்க்க; see ādutīṇḍā-p-pāḷai.

ஆடுதீண்டாப்பாளை ādutīṇḍā-p-pāḷai. பெ. (n.) ஒரு மருந்துச் செடி, பொதுவாக வேலிகளில் முளைத்திருக்கும், ஆண்டு தோறும் பூக்கும், குண்டிக்காய் வடிவ முள்ளது. இலைமாறி மாறி யிருக்கும். ஓரங்கள் வளைந்திருக்கும். பூக்கள் தனித்தும், மங்கலான நீலநிறமுள்ளனவாகவு மிருக்கும். இச்செடி ஆண்டு முழுதும் காய்க்கு மியல்புடையது. இது கசப்பானது, நஞ்சைப் போக்கவல்லது, சோழநாடு, திருவாங்கூர், தென்னாட்டுச் செம்மண் நிலங்கள், யமுனை யாற்றங்கரை ஆகியவிடங்களில் இதனைக் காணலாம்.


ஆடு தீண்டாப் பாளை

இதன் இலைச் சாற்றைத் தண்ணீரில் கலந்து பாம்புக்கடிக்கும், வயிற்றுவலிக்கும், விளக்கெண்ணெயிற் கலந்து சிரங்குகளுக்கும், கொடுப்பதுண்டு. இதன் வேரின் தூள் குளிர்காய்ச்சலைப் போக்கும். இதன் இலையையரைத்துக் குழந்தைகளின் வயிற்றிற் பற்றுப் போட மலங்கழியும். இதன் இலைக்கருக்கு (கஷாயம்) பூச்சி புழுக்களைக் கொல்லும். மாதவிலக்குச் சிக்கலைப் போக்கும். மகவீனுதலை விரைவுறுத்தும்.

இதன் இலை மிகவும் கசப்பானதால் ஆடு தொடாது. அதனால் இதற்கு 'ஆடுதீண்டாப்பாளை' என்று பெயர் வந்தது. இலையையரைத்து அழிபுண்ணுக்குப் போடப் பூச்சிகள் கொல்லப்படும்; a medicinal plant; worm killer; ulcer plant, black-blood plant.

The plant is commonly found growing in hedges; roots perennial; leaves alternate and kidney-shaped; curled at the margin; flowers solitary; dark and purple; bearing fruit nearly all the year. This is found grown in abundance on the Coromandal, in Travancore, in the Deccan and on the banks of the Jumna. The plant is bitter and is used as antidotes to poisons.

It is very common on red soils. The juice of the leaves mixed with water is given for snake-bites as an antidote and also for colic mixed with castor - oil, it is prescribed for colic in horses and is also applied to itches. The powdered root is useful in ague. A paste of the leaves is applied as a poultice for children's costiveness.

The plant is an insecticide, anthelmintic, emmenogogue, febrifuge and parturifacient. It is so called from its leaves being so bitter that even goats do not touch them. The leaves are applied to foul and neglected ulcers to kill the worms in them. It is well known by its Hindustani name 'Kiramar' and from its anthelmintic properties (S.D.).

மறுவ. ஆடுதின்னாப்பாலை, ஆடுதின்னாலை, ஆடுதொடாமூலி.

ம. ஆடுதின்னாப்பால; **க.** ஆடுமுட்டத கிட; **து.** ஆடலோட், ஆடரோ செ; **Skt**. ādarūsa.

[ஆடு+தீண்டா+பாளை. தீண்டா (ஈ.கெ.எ.பெ.எ.). ஆடுதின்னாத அளவுக்கு கசக்கும் இயல்புபற்றி ஆடுதீண்டாப்பாளை என்று பெயர் பெற்றது. ஆடுதொடா மூலியென்றும் இதற்கு வேறு பெயர் வழங்குதல் காண்க.]

ஆடுதுடை ādutudai, பெ. (n.) **ஆடுதொடை**பார்க்க; see ādutodai.

ஆடுதுறை āduturai பெ. (n.) 1. நீராடுதுறை; bathing ghat. "ஆடுதுறையில் அடுபுலியும்" (மூவருலா.) 2. தஞ்சை மாவட்டத்திலுள்ள ஓரூர்; இவ்வூர் பழங் காலத்தில் குரங்காடுதுறை எனப் பெயர் பெற்றிருந்தது; town in Thanjavur District.

[ஆடு + துறை.]

ஆடுதுறை மாசாத்தனார் āduturaimāsāttanār, பெ. (n.) சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய புலவர்; poet who wrote poems in praise of the Chola king Kuḷamuṟṟattu-t-tuñjiya kiḷḷi vaḷavan of Sangam age.

[ஆடுதுறை + மாசாத்தன் + ஆர். ஆடுதுறை = அவர் வாழ்ந்த ஊர்ப்பெயர். மாசாத்தன் இயற்பெயர். 'ஆர்' உயர்வுப் பன்மை ஈறு.]

ஆடுதொடாமூலி āḍutoḍāmūli, பெ. (n.) **ஆடுதீண்டாப் பாளை** பார்க்க; see āḍutīṇḍā–p–pāḷai

[ஆடு + தொடா + மூலி. ஆடு தின்னாத அளவுக்குக் கசப்புடைய மூலிகைச் செடி.]

ஆடுதொடை āḍutoḍai, பெ. (n.) 1. அசைகின்ற தொடைத்தசைப் பகுதி (செ.அக.); fleshy flabby part of the thigh, as contractile, lower portion of the thigh. தொடையின் முன் பகுதி.

மறுவ. தொங்குதொடை, தொங்குதசை.

[ஆடு + தொடை.]

ஆடுநர் āḍunar, பெ. (n.) கூத்தர்; actor, dancer. "ஆடுநர்க்கு ஈத்த பேரன்பினனே" (புறநா.221:2).

[ஆடு + நர்]

ஆடுநீர் āḍunīr, பெ. (n.) குளித்தற்குரிய நீர்; water for bathing.

ம. ஆடுநீர்.

[ஆடு + நீர்]

ஆடுபசி āḍu paśi, பெ. (n.) வருத்தும் பசி; afflictive hunger. "ஆடுபசி உழந்த நின் இரும்பேரொக்கல்" (பொருந். 61).

[ஆடு + பசி.]

ஆடுபந்தர் āḍupandar, பெ. (n.) நடைப்பந்தல் (கதி. அக.); pandal erected through out the entire route of a procession.

[ஆடு + பந்தர்]

ஆடுபந்து āḍupandu, பெ. (n.) ஆடுவதற்கான பந்து; ball for playing.

[ஆடு + பந்து]

ஆடுபறை āḍuparai, பெ. (n.) அசைகின்ற பறை; swinging drum.

[ஆடு +பறை.]

ஆடுபுலி āḍupuli, பெ. (n.) ஆடுபுலியாட்டம்; கட்டத்தில் ஆடு புலிகளாகக் காய்களை வைத்து ஆடும் விளையாட்டு; game played with pieces representing sheep and tiger.

[ஆடு + புலி.]

ஆடுபெயர்ச்சி āḍupeyarcci, பெ. (n). ஆட்டுக்கிடையில் ஆடுகளைப் பெயர்த்து வேறிடத்துச் சேர்த்தல்; replacing sheep from its fold to an other place.

மறுவ. பேர்வையடித்தல்.

ஆடும்பாத்திரம் āḍumpāttiram, பெ. (n.) நாட்டியப் பெண் (நாஞ்.); dancing woman (Nan.).

ஆடுமகள் āḍumagaḷ, பெ. (n.) விறலி, உள்ளக் குறிப்புப் புறத்து வெளிப்பட ஆடுபவள்; female dancer who exhibits the various emotions and sentiments in her dance.

[ஆடு + மகள்]

ஆடுமகன் āḍumagaṉ, பெ. (n.) கூத்தன்; male dancer. (பழ.186.4)

[ஆடு + மகன்]

ஆடுமருந்து āḍumarundu, பெ. (n.) தான்றி மரம்; **tree terminalia bellerica**

ம. ஆடுமருந்து

ஆடுமலி உவகை āḍu–mali–uvagai, ப. (n.) வெற்றி யுவகை; joy on account of victory. "ஆடுமலி யுவகையொடு வருவல் "(புறநா.165).

[ஆடு + மலி + உவகை.]

ஆடுமாடு āḍumāḍu, பெ. (n.) ஆடுமாடு முதலிய கால்நடைகள்; flock sand herds, sheep and cattle.

ம. ஆடுமாடு.

[ஆடு + மாடு. ஆடுமாடு = தொகுதிப் பொருளில் வந்த உம்மைத் தொகை.]

ஆடுமாலை[1] āḍu–mālai, பெ. (n.) களித்துக் குலவும் குமரிப்பெண் (யாழ்ப்); gay, lively and jovial girl. (J.).

[ஆடு + மாலை. வாலை → மாலை. வாலை = இளங்குமரிப்பெண். ஆடு = ஆடல், இயல்பு, களிப்பூட்டும் ஆட்டவியல்பு.]

ஆடுமாலை[2] āḍumālai, பெ. (n.) ஓரிடத்து நிலைத் திராதவன் (கதி. அக.); wanderer, vagabond.

[ஆடு + மாலை. மாலை = தன்மை, இயல்பு. ஆடு – ஆடுதல், திரிதல்.]

ஆடுமுப்பு āḍu–muppu, பெ. (n.) கட்டுப்பு (சா.அக.); concentrated salt.

[ஆடும் + உப்பு. அடு → ஆடு (காய்ச்சுதல்). காய்ச்சிக் கட்டியாக்கிய உப்பு.]

ஆடுவழி āḍu–vaḻi, பெ. (n.) விளையாடுமிடம்; play ground. "ஆடுவழி ஆடுவழி யகலேன் மன்னே" (அகநா.49.).

[ஆடு + (உழி) வழி.]

ஆடுவாலன் திருக்கை āḍu–vālaṉ–tirukkai. பெ. (n.) **ஆட்டுவாலன் திருக்கை** பார்க்க; see āttu–vālaṉ–tirukkai.

[ஆடு + வாலன் + திருக்கை .]

ஆடுவாள் கண்டள் āḍu–vāḷ–kaṇḍaḷ, பெ. (n.) **ஆடி திகைந்தான்** பார்க்க; see **āḍi–tigaindāṉ.**

ஆடுறுகுழிசி āḍuṟu–kuḻiśi, பெ. (n.) சமைக்கப் பயன்படும் பானை; cooking pot. "ஆடுறுகுழிசி பாடின்று தூக்கி" (புறநா. 371.).

[ஆடு + உறு + குழிசி.]

ஆடூஉ āḍūu, பெ. (n.) ஆண்மகன்; man, human male. (தொல். சொல். 2.).

க., **பட**., ஆளு ; **ம**. ஆள்.

[ஆள்(ஆள்) → ஆளு → ஆடு → ஆடூஉ.]

தொல்பழங்காலத்தில் சொல்லினிமைக்காக மெய்யீற்றுச் சொற்களொடு உகரம் சேர்ப்பது பேச்சு வழக்கில் இயல்பாயிருந்தது. இடவழக்காயினும் பெருக வழங்கிய இடவழக்காதலின் இதனை ஒப்பமுடிந்த உலக வழக்காகத் தொல்காப்பியரும் ஏற்றார். உயிரீற்றில் முடியும் வினை முற்றுகளும் வினையெச்சங்களும் ஒப்புமையாக்கம் கருதிப் பெயரீற்றிலும், ஆட்சி பெறலாயின. வினையெச்ச வாய்பாடுகளில் 'செய்யூ' என்னும் வாய்பாடு தொல்காப்பியத்தில் குறிக்கப்பெறுகிறது. இதனையொத்து அவள் கண்டு என்னும் வினை முற்றைக் 'கண்டூஉ' எனவும், ஆள்(ஆண்) என்னும் பெயர்ச்சொல்லை ஆளு → ஆடு → ஆடூஉ எனவும் அளபெடையாய் நீட்டியொலிப்பதும் இனிமை கருதிய இடவழக்காகும்.கிரேக்கமொழியில் மொழியி டையிலும் இத்தகு உயிர் நீட்டங்கள் உளவென்பர். தமிழில் உயிரளபெடையாட்சி மிக்கிருந்ததற்கு ஆடூஉ மகடூஉ போன்ற சொல்லாட்சிகள் தக்க சான்றாகின்றன. வினைமுற்று, உயிரீற்று அளபெடையாகத் தொன்முது காலத்திலிருந்திருக்கலாம் என்பதற்குச் சான்றாக கல்லாத தெலுங்கு மக்களின் பேச்சு வழக்கில் உகர ஈற்று ஏவல் வினைகள் அளபெடையாக ஒரொருகால் நீண்டொலிப்பது இன்றும் கேட்கமுடிகிறது.

ஆடூஉக்குணம் āḍūu–k–kuṇam, பெ. (n.) ஆண்களுக்குரியவனாகக் கூறப்படும் அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி யென்னும் நான்கு குணங்கள் (பிங்.); masculine qualities, four in number, viz. knowledge, integrity, careful consideration and firm determination.

[ஆடூஉ = ஆண்மகன். குணம் = பண்பு, இயல்பு. மகளிர்க்குரிய நல்லியல்புகளாக, அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என நான்கியல்பு கூறப்பட்டது. நாற்பண்பும் நிறையாவிடத்து நற்குடிமக்களாகார் என்பது கருத்து. இக்காலத்து ஆடூஉக்குணம் மகளிர்க்கும் பொருந்துமாகாலான் விதந்து கூறற் பாலதன்று.]

ஆடூஉத்திணைப்பெயர் āḍū–u–ttiṇai–p–peyar, பெ. (n.) திணை நிலைப் பெயர்களுள் ஆண்மக்கள் பெயர்.; names of human male. "ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப் பெயர்" (தொல். பொருள். 21.).

[ஆடூஉ + திணை + பெயர்.]

ஆடூஉமுன்னிலை āḍūu–muṉṉilai, பெ. (n.) (இலக்.) ஆண் பாலரை முன்னிலைப் படுத்திக் கூறும் கூற்று; (Gram.) vocative, addressing males.

ஆடூ பார்க்க ; see āḍūu.

ஆடூஉவறிசொல் āḍūu–v–ariśol, பெ. (n.) ஆண்பாற் கிளவி, ஆண்பால் என்று அறிதற்குக் காரணமான ஈற்றையுடைய சொல்; word ending, with the masc.term. "னஃகா னொற்றே யாடூஉ வறிசொல்" (தொல் சொல்.5).

[ஆடூஉ + அறி + சொல். ஆடூஉ = ஆண்மகன், ஆண்பால்.]

ஆடூர்ந்தோன் āḍūrndōṉ, பெ (n.) 1. முருகன்; Lord Muruga, a Tamil God. 2. அழற்கடவுள் ; the god of fire.

[ஆடு + ஊர்ந்தோன். முருகனுக்கும் அழற்கடவுளுக்கும் ஆடு ஊர்தியாகக் கூறப்படும் தொன்மக் (புராண) கதையினடிப்படையில் இப்பெயர் அவ்விருவர்க்கும் அமைவதாயிற்று.]

ஆடெழும்பு நேரம் āḍeḻumbu–nēram, பெ. (n.) காலைப் பத்துநாழிகை (இ.வ.) ; about 10 A.M. as the time for leading flocks out to pasture (Loc.).

[ஆடு + எழும்பு + நேரம். மேய்ச்சலுக்காக முற்பகலில் ஆடுகளைப் பட்டியிலிருந்து எழுப்பி ஓட்டிச் செல்லும் நேரம்.]

ஆடை[1] āḍai, பெ. (n.) 1. உடை (நற் : 33.6); clothing, garment. 2. பால் காய்ச்சும் போது மேற்படரும் ஏடு; cream or film on the surface of any liquid, such as milk etc. thick concentration on the surface of liquids. "ஆடைதனை யொதுக்கிடும்" (அழகர் கலம்.87). 3. கண்படலம்; a spot or thin film on the eye. 4. பனங்கிழங்கின் உட்தோல்; inner skin of edible palmyra root. 5. பன்னாடை; fibrous clothlike web about the bottom of the leaf stalk of a palmyra or coconut tree. 6. பூவின் புற விதழ் ;petal

ம. ஆட.; **பட**. ஆடெ .

க. அரிவெ; Sinh. āna [cloths –line]

[ஆடு + ஐ – ஆடை. காற்றுக்கு ஆடும் இயல்புபற்றி ஆடையெனப் பெயர் பெற்றது. ஒ. நோ : ஒடு → ஒடை.

ஆடைபோல் மேற்படிந்திருக்கும் பாலேடு, மெல்லிய தோல், ஆகியவை உவமை கருதி ஆடையெனப் பெற்றன. 'ஐ' உடைமை குறித்த பெயரீறு.]

ஆடை[2] āḍai, பெ. (n.) நாவிற் படருமா; fur on the tongue persons suffering from fever, the coating seen on the tongue during various diseases. (சா. அக.).

[ஆடை = ஆடைபோல் வெண்மையாக நாவின் மேற் படிந்துள்ள கழிவுமாப்பொருள்; வெண்மை. உவமை கருதிப் பெற்ற பெயர்.]

ஆடை[3] āḍai, பெ. (n.) நெய்ம்மீன் (சித்திரை நாண் மீன்) (சூடா.); 14th lunar asterism.

[ஆடை[2] → ஆடை[3]. வெண்மை நிறம் நாண் மீனுக்காயிற்று.]

ஆடை[4] āḍai, பெ. (n.) மழைக்காலம்; rainy season. "ஆடையும் கோடையும் விளையும்" (பழ.)

[அடை → ஆடை. ஒ.நோ. அடை = அடைமழை.]

ஆடை[5] āḍai, பெ. (n.) ஆட்டம், கூத்து; dance. "ஆடையிலே எனைமணந்த மணவாளா" (அருட்பா).

[ஆட்டம் → ஆடை.]

ஆடைக்காதி āḍai-k-kādi, பெ. (n.) 1. கோங்கிலவு (சித்.அக.); false tragacanth. (செ.அக.). 2 மலைப் பருத்தி; a kind of silk-cotton tree, a species of gossypium - **Cochlospermum gossypium.** It is so called from its usefulness for clothing. (சா.அக.).

[ஒருகா. ஆடை + காய்த்தி. காய்த்தி → காதி. காய்த்தி = ஆடைக் குதவும் பருத்திக்காய்களை யுடையது]

ஆடைக்குறி āḍai-k-kuṟi, பெ. (n.) சலவைத் தொழிலாளர் இடுந் துணிக்குறி; mark on a cloth in laundry.

[ஆடை + குறி. குறி = அடையாளம்]

ஆடைச்சட்டி āḍai-c-caṭṭi பெ. (n.) புளிகரைத்திட உதவுஞ் சிறிய சட்டி. (தஞ்சை மீனவ.) small pot for mixing tamarind.

[ஆடை + சட்டி.]

ஆடைத்தயிர் āḍai-t-tayir, பெ. (n.) மேலேடு எடுக்காத தயிர்; curd with cream.

[ஆடை + தயிர். ஆடைபோல் மேற்படிந்திருக்கும் இயல்பு பற்றிப் பாலாடையும் தயிராடையும் ஆடை எனப் பெயர் பெற்றன.]

ஆடைநூல் āḍai-nūl, பெ. (n.) மறைந்து போன தமிழ்நூல்; an extinct Tamil treatise on textile.

[ஆடை + நூல்.]

ஆடைபடர்தல் āḍai-paḍardal, பெ. (n.) ஏடுண்டாதல்; forming of a coat or film , as in milk or in fermented liquor. (சா. அக.).

[ஆடை + படர்தல். ஆடை = ஆடைபோன்று மெல்லிய ஏடு.]

ஆடைமண் āḍaimaṇ, பெ. (n.) உவர்மண்; fuller's earth.

[ஆடை + மண். ஆடைகளை வெளுப்பதற்காகச் சலவைத் தொழிலாளர் பயன்படுத்தும் உவர்மண்.]

ஆடைமேல் āḍaimēl, பெ. (n.) கழுத்து (இ.வ.); neck(Loc).

[ஆடைமேல் = ஆடைக்குமேலிருக்கும் கழுத்துப் பகுதி.]

ஆடையணிகலன் āḍai-y-aṇigalaṉ, பெ. (n.) உயர்ந்த அழகிய ஆடை அணிவகைகள்; clothes and jewels.

[ஆடை + அணிகலன்.]

ஆடையவலன் āḍai-y-avalaṉ, பெ. (n.) பேராமுட்டி, ஒரு நறுமணச் செடி; fragrant sticky mallow. (சா.அக.)

[ஆடை + அவலன் = ஆடையவலன். ஒருகா. ஆடைக்கு நறுமணமூட்டப் பயன்பட்ட நறுமணப் பொருள் தரும் செடி என்னும் காரணம் பற்றிய தாகலாம்.]

ஆடையாபரணம் āḍai-y-ābraṇam, பெ. (n.) **ஆடையணி கலன்** பார்க்க; see āḍai-y-aṇigalaṉ.

[ஆடை + ஆபரணம்.]

ஆடையும் கோடையும் āḍaiyum-kōḍaiyum, பெ. (n.) காரும் கோடையும்; rainy and summer seasons. "ஆடையும் கோடையும் விளையும்" (உ.வ.).

[ஆடை = மழைக்காலம். ஆடையும் + கோடையும்.]

சென்னைப் பல்கலைக் கழக அகரமுதலியில் இதனைக் கோடை எனக் குறித்திருப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. இசகு பிசகு என்னும் சொல்லும் இவ்வாறே redupl. of பிசகு எனக் குறிக்கப் பட்டுள்ளது. இத்தகு இணைமொழிகள் முன் மொழியின் எதுகை நோக்கிய இணை அல்லது மோனை நோக்கிய இணையாக அமைவல்லது பின்மொழியின் இணையாக அமைவதில்லை. 'சாடிக்கும் மூடிக்கும்', 'கன்று கயந்தலை', 'அரிசிதவசி', 'பாத்திரம் கீத்திரம்' என்பவற்றை ஒப்பு நோக்குக.

முன்மொழி பொருட்சிறப்புடையதாக அமைந்திருக்க, பின்மொழி பொருளுள்ளதாகவோ எதுகை மோனைக்காகச் செயற்கையாக இணைந்த வறுமொழியாகவோ சேர்ந்திருக்கும்.

இதன்படி 'ஆடைக்குங்கோடைக்கும்' என்னும்தொடரில் 'ஆடை' அடை மழைபெய்யும் காலத்தைக் குறித்த சொல்லாக வேண்டும்.

ஆடையெடுத்த தயிர் āḍai-y-eḍutta-tayir, பெ. (n.) ஏடு நீக்கிய தயிர். இதனால் வயிற்றுப்போக்கும் மேகமும் குணமாகும்; curdled milk free from cream.

[ஆடை + எடுத்த + தயிர்.]

ஆடையெடுத்த பால் āḍai-y-eḍutta-pāl, பெ. (n.) குழந்தைகள், நோயாளிகள், வலி குன்றியோர் முதலியவர்களுக்கு எளிதில் செரிக்கும் வண்ணம் கொடுக்கப்படும் ஏடு நீக்கிய பால்; creamless milk given to children, patients, invalids etc. for promoting easy digestion – Skimmed milk (சா. அக.).

[ஆடை + எடுத்த + பால்.]

ஆடையொட்டி[1] āḍai-y-oṭṭi, பெ. (n.) 1. ஒட்டுப் புல், பசுமையும் மாநிறமும் கலந்த தெளிநிறமுள்ள பூக்களையுடைய பூண்டு. இது அகன்று படரும்; plant found generally on the plains, sand-binder; round-leaved pupalia. It is an extensively spreading procumbent plant of a light brownish, green colour; branches several feet long. It is so called from its bristles clinging with tenacity to the clothes of passengers. 2. பேய்ப்புல்; an amaranth. 3. ஒரு பூண்டு. இதன் பூ சிறிதாயும் மஞ்சளாயுமிருக்கும்; plant called paroquet burr; West Indian burweed. It produces small yellow flowers. (சா.அக).

ஆடையொட்டி – ஒட்டுப்புல்

ம. ஆடயொட்டி

[ஆடை + ஒட்டி. ஆடையில் ஒட்டிக்கொள்ளும் இயல்பினது.]

ஆடையொட்டி[2] āḍai-y-oṭṭi, பெ. (n.) சீலைப்பேன்; lice in clothes.



ஆடையொட்டி – சீலைப்பேன்

மறுவ. வெள்ளைப்பேன்.

[ஆடை + ஒட்டி. ஆடையில் ஒட்டிக்கொண்டு ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவும் பேன்.]

ஆடையொட்டி நீர் āḍai-y-oṭṭi-nīr, பெ. (n.) விள்ளு (விந்து); semen, from its sticking to the clothes on discharge. (சா.அக.).

[ஆடை + ஒட்டி + நீர். ஆடையிற்பட்டு நனைந்து ஒட்டிக் கொள்ளும் இயல்பினது.]

ஆடைவணிகன் āḍai-vaṇigaṉ பெ. (n.) ஆடை விற்பனை செய்பவன்; dealer in clothe

ம. ஆடைவாணியன் (ஆடைவிற்பவன்).

ஆடை வீசுதல் āḍai-vīsudal, பெ.. (n.) மகிழ்ச்சியின் அறிகுறியாக ஆடையை மேலே வீசல்; to wave a garment or a cloth as a sign of joy. "ஆர்த்தா ரணியாடை வீசினர்" (அரிச்.பு. சூழ்வி.82).

[ஆடை + வீசுதல். வீசுதல் = அசைத்தல். ஒ.நோ: கவரிவீசுதல்.]

ஆண்[1] āṇ, பெ.. (n.) 1. ஆண்பாற்பொது; male. 2. வீரியம்; manliness, courage. "மான மதாணி யாணிற் றாங்கல்" (ஞானா.17,7). 3. தலைமை; superiority, excellence. (மாறன. 261, உதா. செய். 726, உரை). 4. போராளி; warrior. "ஆணணி புகுதலும்" (சிறுபாண். 211).

ம., க. ஆண்; குட. ஆணி; து. ஆணு; கூ. ஆனு.

[ஆள் → ஆண். ஆளுந்திறம் வாய்ந்தவன், வினைத்திட்பம் கொண்டவன், ஆற்றல் மிக்கவன்.]

ஆண்[2] āṉ, பெ. (n.) 1. ஆண் மரம்; tree having a hard core. "ஆண்மரக்கிளவி" (தொல்.எழுத்து.304). 2. இதளியம்; mercury.

[ஆண் = திண்மை. வயிரம்பாய்ந்து திண்மையுற்ற மரமும் நீர்ம வடிவிலுள்ள திண்ணிய மாழை (உலோகம்)யும் 'ஆண்' பெயர் பெற்றன.]

ஆண்[3] āṉ, பெ. (n.) 1. வன்மை; strenghth, 2 ஒளி; light. 3. வெண்மை; whitness.

[ஆண்[1] → ஆண்[3].]

ஆண்[4] āṉ, பெ. (n.) வலப்பக்கம்; right side.

[வில்லில் நாணேற்றும் வலப்பக்கம் ஆண்மைக் குரியதாயிற்று.]

ஆண்[5] āṉ, பெ. (n.) அழகு; beauty.

[யாண் → ஆண்.]

ஆண் கட்டு āṉ-kaṭṭu, பெ. (n.) விந்து கட்டுதல்; suspension of semen from being discharged. (சா.அக.).

[ஆண் + கட்டு. கட்டு = கட்டுதல், கட்டுப் படுத்துதல். ஆண் = ஆணின் விந்து (முதலா.பெ.).]

ஆண்கடல் āṉ-kaḍal, பெ. (n.) அலைமிகுதியா யெழுங் கடல் அல்லது கடற் பரப்பு; sea or an area on it where the wave is high. (முகவை. மீனவ.).

[ஆண் + கடல்.]

ஆண்கடன் āṉ-kaḍaṉ, பெ. (n.) ஆண்மக்கள் கடமை; man's duty, responsibility. "ஆற்றாதார்க் கீவதா மாண்கடன்" (நாலடி. 98).

[ஆண் + கடன். கடன் = கடமை.]

ஆண்கடி āṇkaḍi, பெ. (n.) தேங்காயின் கீழ்ப்பகுதி ஓடு; lower half of the coconut-shell. (துளுநா.)

ம. ஆண்முரி (மேற்பகுதி ஒடு பெண்முரி)

[ஆண் + கடி. கடை → கடி = கீழ்ப்பகுதி.]

ஆண்கல் āṉ-kal, பெ. (n.) சிற்பங்கள் முதலியன அமைப்பதற்கு ஏதுவான முதன்மையான கருங்கல் (கம். வழ.); superior variety of granite, used to carve statue etc.,

[ஆண் + கல்.]

ஆண்குமஞ்சன் āṉ-kumañjaṉ, பெ. (n.) குங்கிலியம்; resinous gum used as an incense. It is opposed to சாம்பிராணி which is termed the female frankincense. (சா.அக.).

[ஆண் + குமஞ்சன். ஒருகா. குமஞ்சன் = நறுமணப் பொருள். நறுமணப் பொருள்களுள் சாம்பிராணி பெண்மை சார்ந்ததாகக் கூறப்படுதலின் குங்கிலியம் ஆண்மை சார்ந்ததாகலின் ஆண்குமஞ்சன் எனப் பெயர் பெற்றிருக்கலாம். குமஞ்சன் பார்க்க; see kumañjaṉ]

ஆண்குமஞ்சான் āṉ-kumañjāṉ, பெ. (n.) **ஆண்குமஞ்சன்** பார்க்க; see āṉ-kumañjaṉ.

ஆண்குறட்டை āṉ-kuṟaṭṭai, பெ. (n.) ஒருவகைக் குறட்டை, பேய்ப்புடலை; a bitter male snake-groud. (சா. அக.).

[ஆண் + குறட்டை (ஒருகா. குறட்டை = வளைந்த காய்) குறட்டை பார்க்க; see kuṟaṭṭai.]

ஆண்கூடல் āṉ-kūḍal பெ. (n.) சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று; a knd of minor literature.

[ஆண் + கூடல்.]

ஆண்கூத்து āṉ-kūttu, பெ. (n.) நாடகத்தில் ஆணாக நடிப்பவன்; ஆண் நடிப்பு; male character in drama (W.).

[ஆண் + கூத்து. கூத்து = நடிப்பு.]

இக்காலத்து இவர் ஆண்பாத்திரம் ஏற்று நடித்தார் என்பதைப் பண்டையோர் ஆண்கூத்து ஏற்று நடித்தார் என வழங்கினர். பாத்திரம் என்னும் வடசொல் வழக்கூன்றிய பின் இத்தூய தென்சொல் வழக்கிழந்தது.

ஆண்கை āṉ-kai, பெ. (n.) அவிநயக்கை வகை (சிலப். பக். 92, கீழ்க்குறிப்பு); handpose in dancing.

[ஆண்[3] + கை.]

ஆண்கொடுவேலி āṉ-koḍuvēli, பெ. (n.) வெண் கொடுவேலி; white-flowered lead wort.

மறுவ : ஆண்கொடிவேலி.

[ஆண்[3] = வெண்மை. ஆண் + கொடுவேலி]

ஆண் கோள் āṉ-kōḷ, பெ. (n.) (கணி.) கணியத்தில் ஆண்கோளாகக் கருதப்படுவதும் செவ்வாய், வியாழன், ஞாயிறு என்னும் முக்கோள்களுள் ஒன்றானதுமாகிய கோள் (கிரகம்); in the Hindu system of astrology any one of the three planets, Mars, Jupiter, or the Sun. (W.).

[ஆண்[1] + கோள்.]

ஆண்சந்ததி āṉ-šandadi, பெ. (n.) **ஆண் பிறங்கடை** பார்க்க; see āṉ-piṟaṅkaḍai

[ஆண் + சந்ததி. Skt. Santana > த. சந்ததி.]

ஆண்சரக்கு āṇšarakku, பெ. (n.) 1. காரச்சரக்கு; substances containing alkali, Alkaloids. 2 கல்லுப்பு,

வெடியுப்பு. ஆகிய உப்புச்சரக்கு; alkaline bases, such as soda, rock salt, nitre, lime etc. It is opposed to பெண் சரக்குீ அல்லது புளிச்சரக்கு, acid substances. (சா. அக.).

[ஆண் [1] + சரக்கு. காரச் சரக்குகள் ஆண்சரக்கு என்றும் புளிப்புச் சரக்குகள் பெண்சரக்கு என்றும் மருத்துவ நூலார் ஆளும் மரபு பற்றி இப்பெயர் ஏற்பட்டது.]

ஆண் சாவி āṉšāvi, பெ. (n.) உட்டுளையில்லாத திறவுகோல்; key with a solid barrel. **ஆண்திறவுகோல்** பார்க்க; see āṉ-tiṟavu-kōl.

ஆண்சிரட்டை āṉ-širaṭṭai, பெ. (n.) தேங்காயின் அடிப் பாதியோடு; lower half of the coconut shell.

ம. ஆண்முரி; து. ஆண்கடி.

[ஆண் + சிரட்டை.]

ஆண் செருப்படை āṉ-seruppaḍai, பெ. (n.) சிறு செருப் படை; medicinal plant with small leaves.

[ஆண் + செருப்படை]

ஆண்சோடணை āṉ-šōḍaṇai, பெ. (n.) **ஆண் ஒப்பனை** பார்க்க; see āṉ-oppaṉai

[சுவடி → சோடி → சோடணை. சுவடி = ஜோடி என்றும் ஜோடனை என்றும் வடமொழியில் திரிந்துள்ள திரிபுகள் 'சுவடி' என்னும் தமிழ் வேர்ச் சொல்லிலிருந்து பல்கிப் பன்மடித் திரி புற்றவை. சுவடி, சோடி பார்க்க; see suvaḍi, sōḍi.]

ஆண்டகம் āṇḍagam, பெ. (n.) மணமல்லிகைச் செடி (மனோரஞ்சிதம்); flower, Heart's joy, Cupid's plant. (சா.அக.).

[ஆண்டு → ஆண்டகம். ஆண்டு = முளை, அரும்பு.]

ஆண்டகை āṉ-ḍagai, பெ. (n.) ஆண்தன்மை (சீவக. 289); manliness. 2. பெருமையிற்சிறந்தோன் (பிங்.); man of great eminence. 3. அரசரிற் சிறந்தோன் (கதி.அக.); gem among kings. 4. வீரன் (கதி.அக.); hero, warrior.

[ஆண் + தகை. தகை = தன்மை.]

ஆண்டகைமை āṇḍagaimai, பெ. (n.) 1. ஆண்தன்மை; manliness. 2. வீரம்; heroism, inherent bravery, chivalry.

[ஆண் + தகைமை. தகைமை = தன்மை.]

ஆண்டகையன் āṇḍagaiyaṉ பெ. (n.) **ஆண்டகை** பார்க்க; see āṇḍagai. "ஆண்டு நிற்கும் ஆண்டகையனே" (புறநா. 292).

ஆண்டபண்டம் āṇḍapaṇḍam, பெ. (n.) வீட்டுத் தட்டுமுட்டுப் பொருள்கள்; house hold articles ஆண்டபண்டம் அறுபதும் (உ.வ.).

[ஆண் = தலைமை, முதன்மை. ஆண் + பண்டம்.]

ஆண்டல் āṇḍal, பெ. (n.) மூங்கில் முளை; bamboo shoot. (சேரநா.).

ம. ஆண்டல்

மறுவ: ஆண்டு

[அண்டு → அண்டல் → ஆண்டல்.]

ஆண்டலை[1] āṇḍalai, பெ. (n.) 1. சேவல், பெடை; gallinaceous fowl, cock or hen. "ஆண்டலை யுயர்த்தவன்" (கந்தபு.தெய்வ.7). 2. ஆண்மகன் தலைபோன்ற தலையுடைய ஒரு பறவை; fabulous bird of prey having its head resembling that of a man. 3. கோட்டான்; large hooting-owl. "ஊண்டலை துற்றிய வாண்டலைக் குரலும்" (மணிமே. 6,77).

[ஆண் + தலை + ஆண்டலை. தலையிற் கொண் டையும் தாடி போன்ற கீழ்ச்செவுள் அல்லது கிழிற குடைமை பற்றிச் சேவலுக்கும் ஆண்டலைப் புள்ளுக்கும் இது பொதுப் பெயராயிற்று. சேவலைக்குறித்த சொல் பெடைக்கும் பெயரானது பொருட்புடை பெயர்ச்சி.]

ஆண்டலை[2] āṇḍalai, பெ. (n.) படைத்தலைவன் (கதி.அக.); commandar, chief of the army.

[ஆண் + தலை - ஆண்டலை. ஆண்டலை = தலைமையான ஆடவன், ஆடவர்க்குத் தலைவன்.]

ஆண்டலை[3] āṇḍalai, பெ. (n.) 1. பூவாது காய்க்கும் மரம் (மு.அ.); non-flowering trees like the fig tree. 2. அரசமரம்; peepul tree (ச.அக.).

[ஒருகா. ஆண் + தலை = ஆண்டலை. ஆண்டலை = பூவாதமரம், மரங்களுள் தலைமையானதாகக் கருதப் படும் அரசமரம்.]

ஈனாப்பனை ஆண்பனை என்று குறிப்பிடப்படுமாறு பூவா மரவகையும் மரங்களுக்குரிய பொதுத் தன்மையின் விலகிக் காணப்படுதலால் ஆண்டலையென்றும், ஆண்மை தலைமைப் பொருளும் தருதலான் தலைமையான மரம் எனப் பொருள் பயந்து உயர்வகை மரங்களுள் ஒன்றாகக் கருதப்படும் அரசமரத்தைக் குறிக்க 'ஆண்டலை' யென்றும் வழங்கி யிருக்கலாம்.

ஆண்டலைக்கொடி āṇḍalai-k-koḍi, பெ. (n.) 1. முருகக் கடவுளின் சேவற்கொடி (சூடா. 1,23); flag of the Lord Muruga, as having the figure of a cock. 2. பேய் முதலிய பலியை நுகரவொட்டாமல்

ஆண்மகன் தலையும் பறவையின் உடலுமாக எழுதப்பட்ட கொடி (திருமுருகு . 227, உரை); flag displaying the figure of the andalai bird in order to scare away evil spirits from the offerings on the altar.

[ஆண் + தலை + கொடி = ஆண்டலைக்கொடி.]

ஆண்டலைக்கொடியோன் āṇḍalai-k-koḍiyōṉ, பெ. (n.) சேவற்கொடி யுயர்த்திய முருகக் கடவுள்; Tamil God, Muruga, whose flag displays the figure of a cock.

[ஆண்டலை+கொடியோன். ஆண்டலை = சேவல். ஆண்டலை [1] பார்க்க; see āṇḍalai.]

ஆண்டலையடுப்பு āṇḍalai-aḍuppu, பெ. (n.) ஆண்டலைப்புள் வடிவாகச் செய்து பறக்கவிடும் மதிற்பொறி (சிலப். 15, 211); a kind of instrument shaped like the āndalai bird and fixed upon the ramparts of a fortified city, which would dart forth at the approaching hostile army, missiles calculated to peck at and bite their brains.

[ஆண்டலை + அடுப்பு. ஆண்டலை = ஆண்டலைப் பறவை.]

ஆண்டவரசு āṇḍa-v-araśu, பெ. (n.) திருநாவுக்கரசர் (பெரியபு. திருநாவுக். 201); St. Tirunāvukkarasar

[ஆண்ட + அரசு = ஆண்டவரசு. சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட பெருமை கருதித் திருநாவுக்கரசரை 'ஆண்டவரசு' என அழைத்தல் மரபாயிற்று.]

ஆண்டவன் āṇḍavaṉ, பெ. (n.) 1. கடவுள்; God as ruler of heaven and earth, Lord 2. உடையவன்; master. 3. ஆளுகை செய்பவன். (கதி. அக.); ruler. 4. அரசன் (கதி.அக.); king.

ம. ஆண்டவன்; **படை.** ஆண்டம.

[ஆண்ட + அவன் = ஆண்டவன். ஆண்ட = உரிமையாக்கிக் கொண்ட, ஆட்சிபுரிந்த. ஆளுதல் = உரிமையாக்கி அல்லது உடைமையாக்கிக் கொண்டு பயன்படச் செய்தல் .]

இறைவனால் ஆட்கொள்ளப்பட்டோர் அவன் ஆணை வழி நின்று தனக்கும் உலகிற்கும் பயன்படும் வழியில் கடைத்தேறும் வாய்ப்புப் பெறுதலின், அத்தகு வாய்ப்பினை உயிர்களுக்கு நல்கும் இறைவன் ஆண்டவன் எனப்பட்டான். இறைவனுக்கும் அரசனுக்கும் ஒத்த மதிப்புத் தரப்பட்டமையின் இறைவனுக்கு ஆளாய்த் தொழும்பு பூணுதலை அடியார் விரும்புமாறு போல அரசனுக்கு ஆளாய்த் தொழும்பு பூணும் குடிகளும் அரசனை இறைவனாகவே கருதி 'ஆண்டவன்' என்றனர்.

ஆண்டழி-த்தல் āṇḍali-, 4. செ. குன்றாவி. (v.t.) அசையும் அல்லது அசையாச் சொத்தைக் குறிப்பிட்ட குடும்பத்தார் முழுவதுமாய்த் துய்த்தல் (செங்கை. மீனவ. வழ.); enjoyment to full measure of movable or immovable property by a family.

[ஆண்டு + அழி.]

ஆண்டளப்பான் āṇḍalappāṉ, பெ.(n.) ஆண்டிற்கொரு முறை கதிரவனைச் சுற்றிவரும் வியாழன் என்னும் கோள் (திவா.); planet Jupiter which takes one year to pass through one sign of the Zodiac.

[ஆண்டு + அளப்பான் - ஆண்டளப்பான். ஞாயிற்றுக் குடும்பத்திலுள்ள கோள்களுள் ஒன்றான வியாழன் தன் வட்டப் பாதையில் கதிரவனை ஒரு முறை சுற்றி வருவதற்கு ஓராண்டு ஆதல் குறித்து 'ஆண்டளப்பான்' என்னும் பெயர் ஏற்பட்டது. ஆண்டளப்பான் = ஓராண்டில் தன் பாதையை அளந்து (கடந்து சென்று) முடிப்பான்.]

ஆண்டாண்டு āṇḍāṇḍu, பெ. (n.) ஆங்காங்கு; here and there. "ஆண்டாண்டுறைதலும் அறிந்தவாறே" (திருமுருகு. 249).

[ஆண்டு + ஆண்டு.]

ஆண்டார் āṇḍār, பெ. (n.) உடையார் (அக.நி.); owner, master, lord. 2. தேவர் (அக.நி.); gods. 3. அடியார் ; devotees. "திருநாள் சேவிக்க வந்த ஆண்டார்களுக்கும்" (S.I.I. ii. 84).

ம. ஆண்டார். **க., தெ.** ஆண்டாரி.

[ஆண்டார் → ஆண்டவர். ஆண்ட + அவர் = ஆண்டவர் → ஆண்டார் = ஆண்டவர், ஆட்கொண்டவர், தலைவர், தேவர், ஆட்கொள்ளப்பட்ட அடியார்.]

ஆட்கொண்டவரைக் குறித்த ஆண்டார் எனுஞ்சொல் ஆட்கொள்ளப்பட்ட அடியாரையும் குறித்தது. செயப்படு பொருளை வினைமுதலாகக் கூறும் மரபு வழுவமைதி பற்றியதாகும்.

செயப்படு பொருளைச் செய்ததுபோலத் தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுளுரித்தே (தொல்.சொல் வினை. 49.)

இந்நூல் யான் செய்தது என்புழி செய்தது என்னும் முதல்வினை செய்யப்பட்டது எனச் செயப்பாட்டு வினைப் பொருள்படுதல் போலவும், புலி கொன்ற யானை என்புழி கொன்ற என்னும் பெயரெச்சம் கொல்லப்பட்ட எனச் செயப்படுபொருள் குறித்த பெயரெச்சப் பொருள் படுதல் போலவும் ஆண்டார் எனுஞ்சொல் ஆளப்பட்ட அடியாரைக் குறித்தது.

ஆண்டாள் āṇḍāḷ, பெ. (n.) சூடிக்கொடுத்தநாச்சியார். பெரியாழ்வாரின் திருமகளாரும், நாச்சியார் திருமொழி, திருப்பாவை ஆகிய பனுவல் களை இயற்றியவருமாகிய மாலிய (வைணவ) அடியார்: Vaisnava saint, daughter of Periyālvār, and author of the Tiruppāvai and the Nacciyār – tirumoli.

[ஆண்டாள் = ஆட்கொள்ளப்பட்டவள்.]

ஆண்டாள் மல்லிகை āṇḍāḷ malligai, பெ. (n.) மல்லிகை வகை (இ.வ.); a species of Jasmine (loc.). (செ.அக.) .... large double - flowered Arabian Jasmine (S.D).

[ஆண் + தாள் + மல்லிகை = ஆண்டாள்மல்லிகை.]

ஆண்டான் āṇḍāṉ, பெ. (n.) 1. ஆண்டவன் (கம்பரா. கடறாவு. 62); god. 2. தலைவன்; master, lord.

[ஆண்டவன் → ஆண்டான்.]

ம. ஆண்டான்.

ஆண்டான்வெட்டு āṇḍāṉ veṭṭu, பெ. (n.) பழைய நாண்ய வகை (பணவிடு. 142); ancient coin.

[ஆண்டான் + வெட்டு. உருவம் அல்லது எழுத்துப் பொறிக்கப்பட்ட நாணயம் வெட்டு எனப்பட்டது.]

ஆண்டி[1] āṇḍi, பெ. (n.) 1. பண்டாரம்; a class of Tamilian Šaivaite. 2. துறவுக்கோலம் பூண்ட சிவனிய (சைவ) அடியார்; Tamil Saiva mendicant. 3. இரப்போன்; begger. 4. தவஞ்செய்யும் துறவி; one who meditates after renunciation, ascetic, recluse.

ம., க. ஆண்டி.

[ஆண்டி = இறைவனால் ஆண்டருளப்பட்ட அடியவன். ஆண்டு + இ = ஆண்டி. 'இ' வினைமுதலீறு.]

ஆண்டி[2] āṇḍi, பெ. (n.) வரிக்கூத்துவகை (சிலப்.3,13, உரை); masquerade, dance.

ம ஆண்டி யாட்டம்.

[ஆண்டி = ஆண்டிக்கோலம்.]

ஆண்டி[3] āṇḍi பெ. (n.) முருகனுக்குரிய பெயர்களுள் ஒன்று; a name of Muruga, Tamil God.

[ஆண்டி = ஆண்டிக்கோலத்தில் இருப்பவன்]

ஆண்டிச்சி[1] āṇḍicci, பெ. (n.) துறவுக்கோலம் பூண்ட சிவனிய (சைவ)ப் பெண் அடியார். ஆண்டி என்பதன் பெண்பால்; Tamil Šaiva woman mendicant, fem. of āṇḍi.

[ஆண்டி + அத்தி = ஆண்டித்தி → ஆண்டிச்சி.]

ஆண்டிசமாதி āṇḍi šamādi, பெ. (n.) துறவியாயிருந்து இறந்தவரின் பள்ளிப்படை (சமாதி) யிற் பூசை செய்வதற்கென்று முற்றூட்டாக விடப்பட்ட நிலம்; inam granted for worship at the tomb of an āṇḍi (R.,J.).

[ஆண்டி + சமாதி.]

ஆண்டிப்பள்ளிப்படை பார்க்க; see āṇḍi-p-paḷḷi-p-paḍai

ஆண்டிப்பள்ளிப்படை āṇḍi-p-paḷḷi-p-paḍai, பெ. (n.) பள்ளிப்படைப் பூசகர்க்கு விடப்பட்ட முற்றூட்டு நிலம்; land granted to the priest for performing poojas at the tomb of an ascetic.

[ஆண்டி + பள்ளி + படை.]

ஆண்டிப்புலவர் āṇḍi-p-pulavar, பெ. (n.) 17ஆம் நூற்றாண்டினரும் செஞ்சியையடுத்த ஊற்றங் கால் ஊரினரும் ஆசிரிய நிகண்டு இயற்றியவரும் நன்னூலின் ஒரு பகுதிக்கு உரை வரைந்த வருமாகிய தமிழ்ப் புலவர்; Tamil poet who lived in a village ūrrangal near Cenji in the 17th century and wrote the Āciriya Nigaṇḍu and commentary on a portion of the Tamil grammar Nannūl.

[ஆண்டி + புலவர்.]

ஆண்டி முருகனுக்குரிய பெயர்களுள் ஒன்றாதலாலும், இப்புலவருக்குப் பாவாடைப் புலவர் என்று வேறொரு பெயரிருத்தலாலும், இவருடைய கோலத்தால் இவருக்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

ஆண்டிமதிக்குலம் āṇḍi-madi-k-kulam, பெ. (n.) வெள்ளிப்பாடாணம் (வெண்செந்தூரம்); an arsenic compound containing silver. (சா.அக.).

[ஆண்டி + மதி + குலம். மதி = நிலவு. குலம் = இனம், வகை. வெள்ளி சேர்த்துச் செய்யப்பட்டதால் வெண்மைப் பொருள் விளங்க இப்பாடாணம் ஆண்டி மதிக்குலம் எனப் பெயர் பெற்றிருக்கலாம்.]

ஆண்டிறன் āṇḍiṟaṉ, பெ. (n.) ஆண்டிறலோன் ஆண்டகை; respectable male.

[ஆண் + திறம் – ஆண்டிறம் – ஆண்டிறன்.]

ஒ.நோ. GK. anr, andros, male. **ஆண்டிரன்** பார்க்க; see aṇḍiran

ஆண்டு[1] āṇḍu, பெ. (n.) பன்னிரண்டு மாதம் அல்லது 365 நாள் கொண்ட ஆண்டு என்னும் கால அளவு; year. "ஆண்டு" (சிலப்.1,24). 2. அகவை (வயது); age. ஓராண்டுக்குட்டி (உ.வ.). 3. கொல்லமாண்டு (நெல்லை); year of the Kollam era in Kerala.

ம. ஆண்டு; க., தெ., ஏடு; து. ஒட்.; கோத. அட்.; குட. அண்டி; கொலா. எட்; நா. யெட்; கோண். யேண்டு; பர். இயெட்;

க.. ராண்டு (சென்றவாண்டு); Cf. E yon, yound, younder. A.S. geond, Ger jener, that root ya

[ஆண்டு = மூங்கில்முளை. ஆண்டிற்கொருமுறை மடங்கல் (ஆவணி) திங்களில் சரியாக 365 நாள் இடைவெளிக்கொருமுறை முளைக்கும் மூங்கில் முளைக்கு 'ஆண்டு' என்னும் பெயர் உண்மையால் அதுவே ஆண்டைக் குறித்த கால அளவைப் பெயராயிற்று..]

வடமொழியில் 'வர்ஷ' என்றால் மழையென்று பொருள். ஒரு மழைக்காலத்திற்கும் மற்றொரு மழைக் காலத்திற்கும் உள்ள இடைக்காலம் ஏறத்தாழ ஓராண்டாதலின் 'வர்ஷம்' ஓராண்டுக்குரிய பெயராயிற்று. சம்வத்சர என்பது மாடு கன்றீனும் காலம் எனப்பொருள்பட்டு ஓராண்டைக் குறிக்கிறது. தமிழர் நாகரிகம் குறிஞ்சி நிலத்திலிருந்தே தொடங்கிவிட்டது என்பதற்கு மூங்கில் முளையைக் குறித்த 'ஆண்டு' காலப் பெயராக ஆளப்பட்டு வருவது சான்றாக அமைந்துள்ளது.

ஆண்டு² பார்க்க ; see āndu²

ஆண்டு² āṇḍu, பெ. (n.) மூங்கில் முளை (சேரநா.); young sprout of bamboo (Ker.).

ம. ஆண்டு, ஆண்டன்.

[அண்டு → ஆண்டு. ஆண்டு = அண்டையிற் கிளைத்து முளைக்கும் மூங்கில் முளை.]

மூங்கில் முளைக்கு மலையாள மொழியில் ஆண்டு, ஆண்டை, ஆண்டல், ஆண்டன் என்னும் பெயர்கள் உள்ளன. மூங்கிற்றூரில் அண்டையில் கிளைக்கும் மூங்கில் முளைகள், அண்டு, அண்டை, என்றே தொடக்கத்தில் பெயர்பெற்று நாளடைவில் அண்டு → ஆண்டு → ஆண்டை. அண்டு → ஆண்டு → ஆண்டல் → ஆண்டன் எனத் திரிபுற்றிருக்கலாம். மூங்கிலுக்குப் பக்கமுளை 'அண்டை' எனப் பெயர் பெற்றிருப்பது சாலப் பொருந்துவதே. இது பன்னிரு மாதங்களுக்கு ஒருமுறை முளைக்கும் இயல்புடைத்தாதலின் இதனடிப்படையாக ஆண்டு என்னும் காலப்பெயர் தோன்றவும் வழிவகுத்தது.

அண்டு அண்மைப் பொருளிலும் சேர்ப்புப் பொருளிலும் மேலையாரிய மொழிகளிலும் வழக்கூன்றியுள்ளது.

and: n, (emph.) a end along with, in addition to. OE. and ond, corr, to Ofris. and (a), ande, end (a) en, OS. ande endi (Du. en), OHG. anti, enti, inti, unti (G. und), and Skt. atha (:*-ntha) there upon, if it survived, would, owing to lack of stress, coincide with and, (see AN²) connexion with OE. and -(as in and swaru ANSWER), ON. and-, Goth. anda, anda-, and Skt. anti over against, Gr. anti against, L. ante before, and OE. ende END, etc. is no longer gen. accepted. (O.D.E.E.)

ஆண்டு³ āṇḍu, பெ. (n.) அவ்விடம்; that place, there. "ஆண்டு ம..தொப்பதில்" (குறள், 363).

[ஆ → அண்டு → ஆண்டு. ஆ = சேய்மைச் சுட்டு. அண்டு = அண்டை, இடம், பக்கம். ஒ.நோ. அந்தண்டை போ, இந்தண்டை வா.]

ஆண்டு⁴ āṇḍu, பெ. (n.) பழைமையான, காலத்தால் முற்பட்ட; ancient.

[ஆ = நெடுஞ்சுட்டு, காலமுன்மை. ஆ → ஆண்டு. தமிழெழுத்துத் தோற்றம் என்னும் கட்டுரையில் பாவாணர் 'முன்மொழி' (1971 சனவரி) இதழில் ஆண்டு என்னும் சொல்லிக்குப் பழமை என்னும் பொருளும் உண்டு எனக் காட்டியுள்ளார்.]

ஆண்டுகள்ளடவு āṇḍu-kaḷ-ḷ-aḍavu, பெ. (n.) ஆண்டு வருமானம்; annual income (T.A.S.iii.216).

[ஆண்டுகள் + அடைவு = ஆண்டுகள்ளடவு அடைவு → அடவு (இடைத்திரிபு) ; அடைவு = சேர்வு, கருவூலத்தில் சேர்க்கப்படுவது, அரசுக்கு நிலவரியாக வரும் ஆண்டு வருவாய்.]

ஆண்டுத்தொகை āṇḍu-t-togai பெ. (n.) ஆண்டிறுதியில் பெறத்தக்கதொகை; sum total receivable in the year end.

[ஆண்டு + தொகை.]

ஆண்டு நிறைவு āṇḍu-niṟaivu, பெ. (n.) 1. குழந்தைகளின் முதலாண்டு நிறைவு நாள்; first birth anniversary, as a day of special celebration. (விதான. மைந்தர்.12). 2. நிறுவனம், பணி ஆகியவற்றின் ஓராண்டு நிறைவு; successful completion of one year of an institution or special work undertaken.

[ஆண்டு + நிறைவு - ஆண்டு நிறைவு = ஓராண்டுக்காலம் முடிவடைதல்.]

ஆண்டு நூறுபட்டை āṇḍu-nūṟu-paṭṭai, பெ. (n.) நூறாண்டுகள் எய்தி முதிர்ந்த வேம்பு, பூவரசு, ஒதிகை முதலிய மரங்களின் பட்டை; bark of the trees like Margosa, portia, wodina etc., which are 100 years old.

[ஆண்டு + நூறு + பட்டை. நூறாண்டு வளர்ந்து முதிர்ந்த மரத்தின் பட்டை.]

ஆண்டுப்பிறப்பு āṇḍu-p-piṟappu, பெ. (n.) புத்தாண்டு; new year.

[ஆண்டு + பிறப்பு]

ஆண்டு மாறி āṇḍu-māṟi, பெ. (n.) திருந்தாத வனாயும் காலத்தாலும் இடத்தாலும் ஒத்துப் போகும் இயல்பறியாமலும் ஒரு சீராக வாழ்க்கை நடத்த அறியாமலும் இருப்பவனைத் திட்டு

வதற்குப் பயன்படுத்தும் வசைமொழி; term of abuse, implying that the person is past the period and place of progressing, incorrigible person. அவனொரு ஆண்டுமாறி (உ.வ.)

[ஆள் → ஆண்டு + மாறி.]

ஆண்டுமானம் āṇḍu-māṉam, பெ. (n.) ஆண்டுக் கணக்கின் பொருட்டு வழங்கும் கால அளவு; era.

[ஆண்டு + மானம்.]

ஆண்டுமூஞ்சி āṇḍu-mūñji, பெ. (n.) ஒரு வசைமொழி; term of abuse.

[ஒருகா. ஆண்டு + முடிஞ்சி → ஆண்டுமூஞ்சி.]

வாழ்ந்து முடிந்தவன், என்று திட்டுவதன் நோக்கம், நன்கு வாழுங்காலத்து, உள்ளவற்றை அழியாமல் திறமையாகக் காக்குந் திறமின் மையைச் சுட்டிக் காட்டிப் பழித்தலாம். ஒ.நோ: கலியாணம் முடிந்துவிட்டது என்பதைக் கலியாணம் மூஞ்சி விட்டது என்பது கொச்சை வழக்கு.

ஆண்டுமூய்-தல் āṇḍu-mūy-, 2 செ.கு.வி (v.i.) மரபு குன்றல், வளர்ச்சியறுதல்; to stop developing, to decline. அந்தக் குடும்பம் ஆண்டு மூய்ந்து போயிற்று (உ.வ.).

[ஒருகா. ஆண்டு + மாய் → ஆண்டுமாய் → ஆண்டு மோய் → ஆண்டுமூய். மாய்தல் = அழிதல்.]

ஆண்டுயர்த்தம் āṇḍuyarttam, பெ. (n.) சம்பளம் பெறும் பணியாளருக்கு ஆண்டுக் கொருமுறை வழங்கப் படும் ஊதிய உயர்வு; increment.

[ஆண்டு + உயர்த்தம்.]

ஆண்டு வரி āṇḍu-vari பெ. (n.) ஓராண்டு வரி; annual tax.

ம. ஆண்டுவரி

[ஆண்டு + வரி.]

ஆண்டுவா-தல் (ஆண்டுவருதல்) āṇḍu-vā-, 18 செ.கு.வி. (v.i.) பயன்பாட்டிற்குப் போதியதாதல்; to be sufficient for use . நித்தம் ஒருபடி தயிர் வாங்கியும் ஆண்டுவரவில்லை (உ.வ.).

[ஆண்டு + வா - ஆண்டுவா = ஆளுதற்கு அல்லது பயன்படுத்துதற்கு இயைந்து வருதல், போதியதாதல்.]

ஆண்டெழுத்துத்தேவை āṇḍeluttu-t-tēvai, பெ. (n.) பழைய வரிவகை; an ancient tax (Pudu. Insc. 399).

[ஆண்டு + எழுத்து + தேவை = ஆண்டெழுத்துத் தேவை. ஒருகா. ஆண்டுதோறும் எழுத்துப் பணிக்காகப் பெறும் வரியாகலாம்.]

ஆண்டை[1] āṇḍai, பெ. (n.) முதலாளி, தலைவன், பண்ணையார்; master, lord, landlord, used by people with reference to their feudal chief or a superior. 'ஆண்டை கூலியைக் குறைத்தால், சாம்பான் வேலையைக் குறைப்பான்' (பழ.).

ம. ஆண்டு; **தெ.** ஆண்டி.

[ஆள் → ஆண் → ஆண்ட + ஐ = ஆண்டை = தன்னை ஆளுகின்ற அல்லது ஆளாகக் கொண்ட தலைவன். ஐ = பெயர்ச் சொல்லீறு.]

ஆண்டை[2] āṇḍai, பெ. (n.) அங்கு, அவ்விடம்; that place, there (நாலடி. 91).

[ஆ = ஆண்டு → ஆண்டை. ஆ = அந்த (சேய்மைச்சுட்டு).]

ஆண்டை[3] āṇḍai, பெ. (n.) மூங்கில் முளை; young sprout of bamboo.

ம. ஆண்டை, ஆண்டல், ஆண்டன்; **து.** அண்டெ (மூங்கில் வளை); **பட.** அண்டெ (ஊதுகுழல்).

[அண்டு → அண்டை → ஆண்டை. அண்டு = பக்கம். மூங்கில் தூரின் அடிப்பக்கத்தில் கிளைத்தெழும் முளை அண்டையென்றழைக்கப்பட்டு முதனிலை நீண்டு 'ஆண்டை' யாயிற்று.]

ஆண்டை[4] āṇḍai, பெ. (n.) 1. தேட்கொடுக்குச்செடி, Indian turnsole - Heliotropium indicum. 2. ஆதொண் டைக்கொடி; thorny creeping plant - capparis horrida, 3. அழிஞ்சில்; sage-leaved alangium - Alangium lamarckii. 4. ஆண்மரம்; tree having hard core.

[ஒருகா. 'ஆண்டை' = வன்மை, திண்மை, முண்மை யுடைமையால் மரம் மற்றும் செடி கொடியினத் திற்குள் ஒரு சாரானவற்றுக்கு இப்பெயர் ஏற்பட்டி ருக்கலாம். ஆதொண்டை → ஆண்டை (மரூஉ).]

ஆண்டைச்சிகை āṇḍai-c-cigai, பெ. (n.) ஆண்டு நிலுவைக் கணக்கு; account of arrears or balance for the year.

[ஆண்டு + ஐ + சிகை. = ஆண்டைச்சிகை.]

'சிறங்கை → சிகை (கொ.வ.). கடந்த ஆண்டின் வரிக்குத் தவசம் அளக்கும்போது, அப்போதே தரப்படாத நிலுவைக்காக, வட்டம் (வட்டி) பிடிக்கும் நோக்கில், ஒரு சிறங்கை அள்ளிப் போடுதல் மரபு. இச்சொல் பொதுவாக ஆண்டு நிலுவைக் கணக்கைக் குறிப்பதாயிற்று.

ஆண்டொழில் āṇḍolil, பெ. (n.) பெருஞ்செயல், அருஞ்செயல், வீரச்செயல்; mighty deeds or heroic deeds.

[ஆண் + தொழில் - ஆண்டொழில் = ஆண்மை விளங்கச் செய்யப்படும் செயற்கரிய செயல்.]

ஆண்டொழில் மைந்தன் āṇḍolil–maindan, பெ. (n.) வில்லவன் – வல்வில் ஓரி; expert in archery. சொல்லுக்குக் கீரன்; வில்லுக்கு ஓரி. (பழ.).

[ஆண் + தொழில் + மைந்தன் = ஆண்டொழில் மைந்தன். ஆண்தொழில் = ஆண்மை. மைந்து → மைந்தன். மைந்து = வலிமை. மைந்தன் = வலிமை மிக்கவன்.]

ஆண்டோன்[1] āṇḍōṉ, பெ. (n.) 1. உடையோன், முதலாளி (அக.நி.); proprietor. 2. தலைவன்; master. 3. தேவன் (அக.நி.); lord.

[ஆள் → ஆண் → ஆண்டான் → ஆண்டோன். 'ட்' எழுத்துப் பேறு. ஆண்டோன் = ஆள்பவன், தலைவன்.]

ஆண்டோன்[2] āṇḍōṉ, பெ. (n.) மாந்தன் (நாமதீப.); man.

[ஒரு கா. ஆள் → ஆண். ஆண் + ட் + (ஆன்) → ஓன் → ஆண்டோன். ஆண் → ஓன் ஆண்பாலீற்றுத் திரிபு. ஆள் = ஆளும் பணிக்குரிய மாந்தன், மாந்தர் கூட்டம்.]

வேலைக்கு ஆள் வேண்டும் என்னும் உலக வழக்கில் ஆள் – மாந்தன் எனப் பொருள்படுதல் காண்க. ஆள் வேரினடியாக அண்டிரன் என்னும் தமிழ்க் குறுநில மன்னன் மரபும் ஆந்திர மரபும் பெயர் பெற்றுள்ளன. மேலையாரிய மொழிகளிலும் இவ் வேரினடியாகச் சொற்கள் கிளைத்துள்ளன.

GK. anthropos–man, he who has the face of a man, andro, before a vowel andr - combining form meaning man. cf. Andrew, Andrias, andron, dandy, 'a fop', and the second element in Alexander, Leander, Philander, cf. also the first element in anthropo - (E.C.E.D.E.L.).

மேலையாரிய மொழிகளில் பெயரின் முன்னொட்டாகவும் பின்னொட்டாகவும் வரும் andr என்னும்சொல் 'மாந்தன்' என்று பொருள்படுகிறது.

ஆண்தண்டு[1] āṉ–taṇḍu, பெ. (n.) வலக்காதின் தண்டு (வின்.); small gristly protuberance of the right ear, opp. to பெண்தண்டு. (சா. அக.).

[ஆண் + தண்டு. தண்டு = சிறிது தடித்திருப்பது. ஆண் =வலப்பக்கம்.]

சிவபெருமானின் இடப்பக்கம் உமையிருத்தலால் இடப்பக் கத்திற்குப் 'பெண்' அடைமொழியாகவும் வலப்பக்கத்திற்கு 'ஆண்' அடைமொழியாகவும் மருத்துவரால் பொதுவாக ஆளப்படும் குறியீடுகளாக அமைந்தன.

ஆண்நாள் āṇnāḷ, பெ. (n.) தாழி (பரணி); ஆரல் (கார்த்திகை); உருள் (உரோகினி); கழை (புனர் பூசம்); கொடிறு (பூசம்); கைம்மீன் (அத்தம்); பனை (அனுடம்); முக்கோல் (திருவோணம்) முற்கொழுங்கால் (பூரட்டாதி); பிற்கொழுங்கால் (உத்திரட்டாதி) முதலிய விண்மீன்கள்; male stars are parani, kārtigai, urōgiṉi, puṉarpūsam, pnsam, attam, aṉudam, tiruvōṇam, pūrattādi, uttirattādi.

[ஆண் + நாள்.]

ஆண்பனை āṉ–paṉai, பெ. (n.) காய்க்காத பனை; male palmyra bearing no fruit. "குரும்பை ஆண் பனை" (சம். தேவா. திருவோத்தூர்.)

[ஆண் + பனை. ஈனாப்பனை ஆண்பனை எனப் பட்டது.]

ஆண்பாடு āṉ–pāḍu, பெ. (n.) 1. ஆணின் குணம்; (சா.அக.); male characteristics. 2. ஆண்களின் முயற்சி; efforts of the male members of the family used along with the expression, பெண்பாடு. ஆண்பாடு பெண்பாடு பட்டு அச்செயல் முடிந்தது (உ.வ.).

[ஆண் + பாடு. ஆண் = ஆண்மக்கள், பாடு = செயல், உழைப்பு, படு → பாடு (மு.தி.தொ.பெ.).]

ஆண்பாத்தி āṇpātti, பெ. (n.) உப்புப் பாத்தி வகை; crystalizer in salt pans, dist. from பெண்பாத்தி.

[ஆண் + பாத்தி.]

ஆண்பால் āṇpāl, பெ. (n.) 1. ஆண்வகை, ஆணினம், (தொல். பொரு. 603); male sex. 2. (இலக்.) ஐம்பால்களுள் ஒன்று; (gram.) singular member of personal nouns and verbs in masculine gender. (நன். 325) 3. ஆண்தன்மை; masculine quality. (சா.அக.)

[ஆண் + பால். பால் = வகை, பாகுபாடு, தன்மை.]

ஆண்பாலெழுத்து āṉpāl–eluttu, பெ. (n.) 1. அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து குற்றெழுத்துகள் (இலக்.வி.773, உரை); five short Tamil vowels. (செ.அக.). 2. பன்னிரண்டு உயிரெழுத்துகளும் அவையின்றி உயிர்மெய்க்குற்றெழுத்துகளும் (கதி.அக.); twelve vowels and other short consonants of the Tamil language.

[ஆண் + பால் + எழுத்து]

ஆண்பாற்கிளவி āṇpāṟ–kiḷavi, பெ. (n.) தலைமகன் கூற்று; utterance of a hero.

[ஆண் + பால் + கிளவி]

ஆண்பாற்பிள்ளைக்கவி āṇpāṟpiḷḷai–k–kavi, பெ. (n.) **ஆண்பாற் பிள்ளைத் தமிழ்** பார்க்க; see āṉpāṟpiḷḷai–t–tamil

[ஆண்பால் + பிள்ளை + கலி..கலி = பாட்டு]

ஆண்பாற்பிள்ளைத்தமிழ் āṇpāṟpiḷḷai-t-tamiḻ, பெ (n.) தலைமகனைக் குழந்தையாகக் கருதி ஆண் குழந்தைப் பருவத்தைக் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை (வாரானை), அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் எனப் பத்துப் பருவங்களாகப் பிரித்து ஒரு பருவத்துக்குப் பத்துப் பாடல்களாக மொத்தம் நூறு பாடல்களில் வண்ணித்துப் பாடும் பனுவல்; poem celebrating the ten different stages of development in the infancy and childhood of a hero, viz., kāppu, seṅgīrai, tāl, sappāṇi, muttam, vāraṇai, ambuli, siṟupaṟai, siṟṟil, siṟutēr, opp. to Peṇpāṟ piḷḷai-t-tamiḻ.

[ஆண்பால் + பிள்ளை + தமிழ். பிள்ளைப் பருவத்தைப் பாடுவதால் பிள்ளைத்தமிழ் எனப்பட்டது பிள்ளைத்தமிழ், சிற்றிலக்கியங்களுள் ஒன்று.]

ஆண்பாற் பிள்ளைப்பாட்டு āṇpāṟpiḷḷai-p-pāṭṭu, பெ. (n.) ஆண்பாற்பிள்ளைத் தமிழ் பார்க்க; see āṇpāṟ piḷḷai-t-tamiḻ. "ஆண்பாற் பிள்ளைப்பாட்டே" (இலக். வி. 806).

[ஆண்பால் + பிள்ளை + பாட்டு.]

ஆண்பிள்ளை āṇpiḷḷai, பெ. (n.) ஆண் குழந்தை; male child. 2. ஆடவன்; man. நீ ஆண் பிள்ளையானால் இங்கே வா (உ.வ.); 3. வல்லவன்; man of capacity or ability. இதைச் செய்து முடிக்கக்கூடிய ஆண் பிள்ளையா அவன்? (உ.வ.). 4. வீரன்; warrior. 'ஆண் பிள்ளைகளான பீஷ்மத் துரோணாதிகளிறே' (ஈடு, 7,4,5). 5. கணவன்; husband.

ம. ஆண்பிள்ளை; து. ஆண்பாலெ

[ஆண் + பிள்ளை. பிள்ளை = குழந்தை. ஆடவனையும் ஆண்மையையும் குறித்த போது ஆண் பிள்ளையென்பதிற் பிள்ளை பொருளிழந்த ஈறாகி வல்லவன், வீரன், கணவன் ஆகிய பொருள் தந்தது.]

ஆண்பிள்ளை அரிமா āṇpiḷḷai-arimā, பெ. (n.) தறுகண் மறவன்; எதற்கும் அஞ்சாத வீரன்; man of supreme valour and prowess as a brave lion.

[ஆண்பிள்ளை + அரிமா.]

ஆண்பிள்ளைச் சிங்கம் āṇpiḷḷai-c-ciṅgam, பெ. (n.) வீரன்; hero, a term of praise. "ஆனையைப் பிடித் திடுவான் ஆண்பிள்ளைச் சிங்கம்" (திரைப்பாட்டு).

[ஆண்பிள்ளை + சிங்கம். Skt. simha. > சிங்கம் = அரிமா. ஆண்பிள்ளையாகிய அரிமா என உருவக வெளிப்பமைந்த சொல்லாட்சி. ஆண்பிள்ளை அரிமா பார்க்க; see āṇpiḷḷai-arimā.]

ஆண்பிறங்கடை āṇpiṟaṅkaḍai, பெ. (n.) 1. ஆண் தலை முறை; male descendant, male lineage. 2. ஆண் குழந்தை; male issue, male child.

[ஆண் + பிறங்கடை. பிறங்கு → பிறங்கடை. பிறங்குதல் = தோன்றுதல்.]

ஆண்புள்குற்றம் āṇpuḷkuṟṟam, பெ. (n.) மாலை மங்கிய வேளையில் குழந்தைகளை வெளியிற் கொண்டு போவதாலுண்டாகும் ஓர் நோய்; a morbid diathesis in children supposedly caused by taking them out after dusk; when some inauspicious bird flys overhead.

[ஆண்புள் + குற்றம்.]

ஆண்பூதியம் āṇpūdiyam, பெ. (n.) ஆண்பிள்ளையிடம் ஏற்பட்ட ஒருவகை மெய்க்கூறு; male element of a sexual cell, a masculo-nucleus-Arsenoblast (சா. அக).

[ஆண் + பூதியம்.]

ஆண் பெண் āṇpeṇ, பெ. (n.) கணவன் மனைவி, இணை துணையர் (கூடா.); husband and wife, married couple.

[ஆண் + பெண்.]

ஆண்பெண் அலி கோள்கள் āṇpeṇ-ali-kōḷgaḷ, பெ. (n.) கோள்களுள் செவ்வாய், வியாழன், ஞாயிறு என்பன ஆண் கோள்கள். அறிவனும் (புதன்) காரி (சனி)யும் அலிகோள்கள். வெள்ளி, திங்கள், கருங்கோள், (இராகு) செங்கோள், (கேது) என்பன பெண் கோள்கள். (அபி. சிந்.); male planets are Mars, Jupiter and Sun; hermaphrodite planets are Mercury and Saturn; female planets are Venus, Moon, Moon's ascending node and moon's descending node. (சா. அக).

[ஆண் + பெண் + அலி + கோள்கள்.]

ஆண்பெண்ணலி நாள்கள் āṇpeṇṇali-nāḷgaḷ, பெ. (n.) தாழி (பரணி), ஆரல் (கார்த்திகை), உருள் (உரோகிணி), கழை (புனர்பூசம்), கொடிறு (பூசம்), கைம்மீன் (அத்தம்), பனை (அனுடம்), முக்கோல் (திருவோணம்), முற்கொழுங்கால் (பூரட்டாதி), பிற்கொழுங்கால் (உத்திரட்டாதி) என்பன ஆண் நாள் மீன்கள். மாழ்கு (மிருகசீரிடம்), குன்று (சதயம்), குருகு (மூலம்) இவை அலி நாள் மீன்கள். இரலை (அசுவினி), யாழ் (திருவாதிரை), கவ்வை (ஆயிலியம்), கொடுநுகம் (மகம்), கணை (பூரம்),

மானேறு (உத்திரம்), நெய்ம்மீன் (சித்திரை), விளக்கு (சுவாதி), சுளகு (விசாகம்), தழல் (கேட்டை), முற்குளம் (பூராடம்), கடைக்குளம் (உத்திராடம்), பறவை (அவிட்டம்), தொழுபஃறி (இரேவதி) என்பன பெண் நாள் மீன்கள். (அபி.சிந்.); male stars are parani, kārttigai, urōgiṇi, punarpūsam, pūsam, attam, anudam, tiruvōnam, pūrattādi, and uttirattādi; hermaphrodite stars are mirugasīridam, sadayam and mūlam; female stars are asupadi, tiruvādirai, āyilyam, magam, pūram, uttiram, sittirai, swādi, visāgam, kēttai, pūrādam, uttirādam, avittam and irēvadi.

[ஆண் + பெண் + அலி + நாள்கள்.]

ஆண் வைத்தியம் āṇ-paittiyam, பெ. (n.) ஆண்மகனின் மேல் பெண் கொண்ட ஒரு வேட்கை; insane sexual desire in a female over a male. It is opp. to peṇpaittiyam, the one in the male. (சா.அக.)

[ஆண் + வைத்தியம். பித்தம் → பித்தியம் → வைத்தியம். பித்தும் = மயக்கம், வெறி.]

ஆண்மக்கட் பருவம் āṇmakkaṭ-paruvam, பெ. (n.) இளையோனாகுங் காலம் (பன்னிருபா.226); stage in the life of a male, when he comes of age.

[ஆண்மக்கள் + பருவம். ஆண்மகனாக வளர்ச்சி பெய்தும் பருவம். மீசையும் தாடியும் வளரும் பருவம்.]

ஆண்மகன் āṇmagaṉ, பெ. (n.) 1. ஆண் குழந்தை; male child. 2. மாந்தன்; man. 3. சிறந்தோன்; efficient man. 4. கணவன்; husband. 5. மகன்; son. 6. துணிவுமிக்கவன்; man of courage. "ஆண்மகன் கையிலயில்வாள்" (நாலடி.386)

[ஆன் → ஆண் + மகன்.]

ஆண்மஞ்சள் āṇmañjaḷ, பெ. (n.) கறிமஞ்சள்; turmeric used in curry.

[ஆள் – ஆண் + மஞ்சள் (ஆளும் மஞ்சள்).]

ஆண்மதப்பூ āṇmadappū, பெ. (n.) மதனப்பூ; indian cowslip creeper–pergularia winor. (சா.அக.).

மறுவ: ஆண்மதன காமப்பூ

[ஒருகா. ஆண் + மதனம் + பூ. ஆண்மதனப்பூ → ஆண்மதப்பூ. மதனம் → மதம் (இடைக்குறை).]

ஆண்மரம் āṇmaram, பெ. (n.) 1. வயிரம் பாய்ந்த மரம்; a class of trees in which the core is hard and suitable for timber. "உற்றவாண்மரம் உள் வயிரமுடை மரமாம்" (சா.அக.). 2. நஞ்சை முறிக்கும் ஆண்மையுடைய அழிஞ்சில் மரம்; tree in which every part is an antidote for poison, sage – leaved alangium. 3. சேராங்கொட்டை மரம்; marking nut tree – It is so called because it is an antidote against poison. 4. காயா மரம்; tree not bearing fruit, 5. கருங்காலி மரம்; sundra tree (சா.அக.).

ஆ. ஆண்மர.

[ஆண் + மரம். ஆண் = ஆண்மை, வன்மை, மரங்களின் நடுவில் வயிரம் பாய்ந்து இன்னிதாதல், எதிர்க்கும் வலிமையுடையதாதல். காய் காய்க்காத மரங்களை, ஆண்பாற்படுத்துக் கூறும் மரபுபற்றிக் காயாமரம் ஆண்மரம் எனப்பட்டது. நஞ்சு முறிக்கும் ஆற்றல் கொண்ட மரங்களின் வன்மையைக் குறிக்குஞ் சொல்லாக 'ஆண்' அடைமொழி ஆளப்பட்டுள்ளது.]

ஆண்மலடு āṇmalaḍu, பெ. (n.) ஆண்மகனுக்கு ஏற்படும் மலட்டுத்தன்மை. want of fertility or fecundity in a man's semen.

[ஆண் + மலடு. மலடு பார்க்க; see **maladu.]**

ஆண்மாதுளை āṇ-mādulai, பெ. (n.) பூமாதுளை; double-flowered pomegranate.

[ஆண் + மாதுளை. மாதுளை பார்க்க; see **mādulai.]**

ஆண்மாறி āṇ-māri, பெ. (n.) 1. அடங்காக் குண முள்ளவள்; masculine woman, termagant. 2. அடக்க மில்லாதவள்; woman outrageous in conduct, immodest woman. 3. ஆண் குணமுடையவள்; manlike woman, Virago, Amazon.

[ஆண் + மாறி. மாறி = மாறியவள்.]

ஆண்மூங்கில் āṇ-mūṅgil, பெ. (n.) 1. கெட்டியான மூங்கில்; solid bamboo. 2. கல்மூங்கில்; a species of solid bamboo. It is opposed to peṇmuṅgil, the common hollow bamboo.

[ஆண் + மூங்கில். ஆண் = வன்மை, வயிரம், இன்மை.]

ஆண்மெய்க்கூறு āṇmey-k-kūṟu, பெ.(n.) 1. ஆண் பிள்ளைகளுக் குண்டான இயற்கை, வலிமை, அறிவு முதலியன; essential nature, strenght or virility, power, intellect, etc. of man. 2. ஆண் மகனிடம் அமையத்தக்க மெய்க்கூறு; male element of a sexual cell, a masculo – nuelous – Arsenoblast. (சா.அக.).

[ஆண் + மெய் + கூறு.]

ஆண்மெய்க்கூறுநூல் āṇmey–k–kūṟu–nūl, பெ. (n.) மாந்தன் உடற்கூறு பற்றியும், நோய் பற்றியும் ஆண்குறியின் மெய்ம்மைகளைப் பற்றியும் கூறும் நூல்; scientific study of masculine constitution and of the diseases of the male sex, especially the study of diseases of the male organ = Andrology. (சா. அக.).

[ஆண் + மெய் + கூறு + நூல்.]

ஆண்மெய்ம்மை āṇmeymmai, பெ. (n.) மாந்தன் உடற் கூற்றியல்; scientific study of masculine constitution.

[ஆண் + மெய்ம்மை.]

ஆண்மை āṇmai, பெ. (n.) 1. ஆளுந் தன்மை (தொல்.சொல்.51); controlling power. 2. ஆண் தன்மை (சிலப்.6,56); masculinity, virility. 3. வெற்றி (பிங்.); conquest, victory, success. 4. வலிமை (பிங்.); strength, power. 5. செருக்கு; pride, conceit. நானென்ற வாண்மை 6. உடைமை; possession used as a suffix. "புல்லறிவாண்மை" (குறள், 331). 7. வாய்மை (பிங்.); truth. 8. ஆண்பாலுணர்ச்சி வன்மை; having sexual power, a peculiar characteristic in males.

ம. ஆண்ம, ஆணத்தம்; **க.** ஆண்ம.

[ஆள் → ஆண் → ஆண்மை (வே.சொ.க.7). ஆள் + மெய் – ஆண்மை = ஆளுந்தன்மை. மெய் = தன்மை, இயல்பு. மெய் → மை. மெய் பார்க்க; see mey.]

ஆண்மைக்குறைவு āṇmai–k–kuṟaivu, பெ. (n.) வலிமைக் குறைவு; loss of manly power, want of virility, impotency.

[ஆண்மை + குறைவு.]

ஆண்மைச் சினைப்பெயர் āṇmai–c–ciṉai–p–peyar, பெ. (n.) ஆண்பாலையே விளக்கி நிற்கும் சினைப்பெயர்; masculine nouns denoting parts or members of the body or names derived from such nouns. 'முடவன்' (நன்.283, உரை).

[ஆண்மை + சினை + பெயர். சினை = உறுப்பு.]

ஆண்மைச்சினை முதற்பெயர் āṇmai–c–ciṉai–mudaṟ peyar, பெ. (n.) ஆண்பாலையே விளக்கி நிற்கும் சினை முதற்பெயர்; the noun, ciṉaimudaṟ peyar, which denotes masculine gender in particular. 'முடக்கொற்றன்' (நன். 283 உரை).

[ஆண்மை+சினை+முதல்+பெயர். சினைமுதற் பெயர் பார்க்க; see ciṉai mudaṟ peyar.]

ஆண்மைதரு கிழங்கு āṇmai–taru–kiḻaṅgu, பெ. (n.) 1. நிலப்பனங்கிழங்கு ; ground palm or hog palm. 2. நிலச் சருக்கரைக்கிழங்கு ; root of a plant. 3. அமுக்கிராகிழங்கு ; the root of a plant. 4. பொற் சீந்திற் கிழங்கு ; root of a plant. (சா.அக.).

மறுவ. நிலச் சருக்கரைக் கிழங்கு, பூமிச் சருக்கரைக் கிழங்கு.

[ஆண்மை + தரு + கிழங்கு.]

ஆண்மைப்பொதுப்பெயர் āṇmai–p–podu–p–peyar, பெ. (n.) உயர்திணை யாண்பாலையும் அஃறிணை யாண் பாலையும் ஏற்கும் பொதுப்பெயர்; masculine nouns, common to the rational and irrational classes. 'சாத்தன் இவன், சாத்தன் இவ்வெருது' (நன்.284, உரை).

[ஆண்மை + பொது + பெயர்.]

ஆண்மை முதற் பெயர் āṇmai–mudaṟ–peyaṟ, பெ. (n.) ஆண்பாலையே விளக்கி நிற்கும் முதற்பெயர்; masculine noun denoting the stock or body. 'சாத்தன்' (நன்.283, உரை).

[ஆண்மை + முதல் + பெயர்.

முதற்பெயர் பார்க்க; see mudaṟ–peyar.]

ஆண்மை முறைப்பெயர் āṇmai–muṟai–p–peyar, பெ. (n.) ஆண்பாலை உணர்த்தும் முறைப்பெயர்; masculine noun denoting relationship. தந்தை (நன். 283, உரை.).

[ஆண்மை + முறை + பெயர்.]

ஆண்மையன் āṇmaiyaṉ, பெ. (n.) சிவன்; Lord Śiva. (திருவா. 6.8.8.).

ஆண்மையிலி āṇmaiyili பெ. (n.) பெண்தன்மை (நாமதீப.); feminity, womanishness.

[ஆண்மை + இலி. இலி = இல்லாத தன்மை.]

ஆண்ராசி āṇrāśi, பெ. (n.) **ஆணோரை** பார்க்க; see āṇōrai.

ஆண் வசம்பு āṉ–vaśambu, பெ. (n.) ஒருவகை வசம்பு; a variety of sweet flag–Acorus Calamus. (சா.அக.).

ஆண்வழி āṉ–vaḻi, பெ. (n.) 1. ஆண் தலைமுறை; male descendant, family descent in the male line, 2. ஆண்குழந்தை; male child. 3. ஆண் தலை முறையி (சந்ததி)லிருந்து உண்டான மரபு; male line, family descent in the male line.

ம. ஆண்வழி

[ஆண் + வழி.]

ஆண்வெறுப்பு āṇ-veṟuppu, பெ. (n.) பெண்களுக்கு ஆண்களைக் கண்டால் உண்டாகும் வெறுப்பு; morbid dislike of or insane aversion to the male sex in women, Apandria.

[ஆண் + வெறுப்பு]

ஆணகம்[1] āṇagam, பெ. (n.) **ஆளகம்** பார்க்க; see āḷagam.

ஆணகம்[2] āṇagam, பெ. (n.) 1. கோளகநஞ்சு; mineral poison.

[ஆணம்[2] → ஆணகம்.]

ஆணங்கம் āṇaṅgam, பெ. (n.) ஆண்குறி; genital of a male as opposed to pennaṅgam, genital of a female.

[ஆண் + அங்கம். அங்கம் = உறுப்பு Skt. aṅga.]

ஆணங்காய் āṇaṅgāy, பெ. (n.) ஆண்பனையின் பாளை, ஆண்பனையின் காய்; branched spadix of the flowers of the male palmyra tree (சா.அக.).

[ஆண் + அம் + காய். அம் = சாரியை.]

ஆணணி āṇaṇi, பெ. (n.) மறவர் படைவகுப்பு; military parade. "ஆணணி புகுதலும் அழிபடை தாங்கலும்" (சிறுபாண். 211.).

[ஆண் + அணி.]

ஆணத்தி[1] āṇatti, பெ. (n.) ஆணை, கட்டளை; order, command (S.I.I.iii.93).

ம. ஆண; **க.** ஆணதி; **தெ.**ஆணதி; **பிராகி., பாலி.** ஆணத்தி. Skt. ājnapti.

[ஆணை + அத்தி = ஆணத்தி = ஆணை. அத்து = சாரியை. 'இ' உடைமை குறித்த ஈறு. த. ஆணத்தி > பிராகி. ஆணத்தி. **ஆணை** *பார்க்க;* see āṇai..]

ஆணத்தி[2] āṇatti, பெ. (n.) கற்பூரம்; camphor.

ஆணம்[1] āṇam, பெ. (n.) 1. அன்பு; love, friendship, affection. "ஆணமில் பொருளெமக்கு" (கலித். 1.). 2. பற்றுக்கோடு; support. "தேவரை யாணமென் றடைந்து" (திவ். திருச்சந். 69). 3. கொள்கலம், ஏனம்; vessel.

ம. ஆணம்; **க.** ஆண.

[ஒருகா. அணையம் → அணயம் → அணம் → ஆணம். அணையம் = தழுவுதல், அணைத்தல், நட்புக்கொள்ளல், பற்றுக் கோடாயிருத்தல், நிலைக் களமாதல், பொருள்களைக் கொள்ளும் கொள்கல மாதல்.]

ஆணம்[2] āṇam, பெ. (n.) 1. சாறு; soup. 2. குழம்பு (பிங்.); broth or thick consistent fluid curry, ஆட்டாணம், கோழியாணம் (உ.வ.). 3. குழம்புத் தான்; vegetable relish in soup.

ம. ஆணம்; **க.** ஆண (வெல்லப்பாகு).

[ஒருகா. அள் → அளம் → ஆளம் → ஆணம். அள் → அளம் = சேறு, சாறு, குழம்பு]

ஆணம்[3] āṇam, பெ. (n.) 1. சிறுமை; smallness, meanness. "ஆணமில் சிந்தை வீரன்" (கந்தபு. வீரவாகு. கந்.39). **க.** ஆணம், அணம். 2. செருக்கு, ஆணவம் (கதி.அக.); pride, arrogance, egotism.

[ஒருகா. அணம் → ஆணம். அணம் = சிறுமை. ஆணவம் → ஆணம் (இடைக்குறை).]

ஆணம்[4] āṇam, பெ. (n.) 1. காட்டுவேப்பிலை; wild neem 2. காட்டுக்கொழுஞ்சி; opal orange (சா.அக.).

[ஒருகா. அண் → அணம் → ஆணம். அண் = உயர்வு நாட்டு வேம்பு, நாட்டுக்கொழுஞ்சியினும் உயரமாக வளரும் இயல்பு பற்றிக் காட்டு வேம்பும் காட்டுக் கொழுஞ்சியும் இப்பெயர் பெற்றிருக்கலாம்.]

ஆணம்[5] āṇam, பெ. (n.) வெடிப்பு, பிளப்பு; crack, cleft, breach.

ம. ஆணம்; **க.** ஆணெ.

[ஒருகா. ஆழ் + அம் → ஆழம் → ஆணம். பெரும்பாலும் நிலத்திற்றோன்றும் வெடிப்பே ஆணம் எனப்படும்.]

ஆணர்[1] āṇar, பெ. (n.) பாணர் (அக.நி); pāṇars.

[ஒருகா. பாணர் → ஆணர்.]

ஆணர்[2] āṇar, பெ. (n.) 1. நன்மை (கதி.அக.); goodness 2. வளமை (கதி.அக.); fertility, prosperity.

[யாணர் → ஆணர்.]

ஆணர்[3] āṇar, பெ. (n.) ஆண்மையுடையவர்; one who possesses manly characteristics.

[ஆண் + ஆணர்.]

ஆணல்லாதவர் āṇallādavar, பெ. (n.) இறைவழி பாட்டில் இல்லாதவர்; non-devotee. "ஆணலாத வரைக் கண்டால் அம்ம நான் அஞ்சுமாறே" (திரு வாச.35.40).

[ஆண் + அல்லாதவர்.]

ஆணலி āṇali, பெ. (n.) ஆண்தோற்றம் மிக்க அலி (தொல். பொருள். 605. உரை); hermaphrodite human being in whom masculine features predominate,

i.e. a male with only the genital organs, eunuch similar to those of the female.

[ஆண் + அலி.]

ஆணலை āṇalai, பெ. (n.) கடலில் உயரமாக எழும்பும் அலை; high wave in the sea.

[ஆண் + அலை . ஆண் = வலிமை.]

ஆணவப்பிணிப்பு āṇava-p-piṇippu, பெ. (n.) ஆணவக் கட்டு; matter which is eternally encasing the soul and lasting till its final liberation.

[ஆணவம் + பிணிப்பு = ஆணவப் பிணிப்பு. பிணிப்பு = கட்டு.]

ஆணவம்[1] āṇavam, பெ. (n.) 1. செருக்கு (தாயு. சின்.3); pride, arrogance, egotism. 2. ஆணவமலம், மும்மலத்தொன்று; one of the three malās (defilements).

ம. ஆணவம்; **க.** ஆணவ; **Skt.**āṇava

[ஆண் + அ + (வ்) + அம் = ஆணவம். அள் → அண் → ஆண் . அள் = செறிவு, திண்மை, வலிமை. ஆண் + அ - ஆண = திண்மையுள்ள, செருக்குள்ள ஆண்தன்மை கொண்ட. அ - கிழமைப் பொருளில் வந்த ஆறன் உருபு. வ் - உடம்படுமெய். அம் -பண்புப்பெயரீறு.]

ஆணவம்[2] āṇavam, பெ. (n.) **ஆணகம்[2]** பார்க்க. see āṇagam[2]

[ஆணகம் → ஆணவம்.]

ஆணவமலம் āṇavamalam, பெ. (n.) (சிவனியம்) மும்மலங்களுள் ஒன்று (சி.சி. 2, 80, மறைஞா); (Śaiva) matter which is eternally encasing the soul and lasting till its final liberation, one of mum-malam. (three defilements).

ம. ஆணவமலம்; **க.** ஆணவமல.

[ஆணவம் + மலம்.]

ஆணவமறைப்பு āṇava-maṟaippu, பெ. (n.) ஆணவ மலத்தால் ஆதனுக்கு (ஆன்மா) ஏற்படும் அறியாமை; ignorance in which souls are enveloped because of āṇavam. which is an obstacle to the spiritual progress.

[ஆணவம் + மறைப்பு.]

ஆணவலரிசி āṇavalariši, பெ. (n.) வெல்லப்பாகிலிட்ட அவல் (கருநா.); flattened rice soaked in molasses.

க. ஆணவலக்கி.

[ஆணம் + அவல் + அரிசி, ஆணம் = சாறு, பாகு.]

ஆணழகன் āṇalagan, பெ. (n.) அழகு வாய்ந்தவன் (கோவலன்கதை, 19); handsome man, good looking man.

[ஆண் + அழகன்.]

ஆணன் āṇaṉ, பெ. (n.) ஆண்மையுடையவன்; one having the qualities that become a man, as courage, fortitude etc. "அரவாட்டிய வாணனே" (சிவதரு. சுவர்க்கநரக.222).

[ஆண் + அன். அன் = ஆண்பாலீறு.]

ஆணா āṇā, பெ. (n.) 1. காட்டுவேப்பிலை மரம்; downy axil-flowered shrubby wanpee - Clausena Wildenovii (pubescens) 2. காட்டுக் கொழுஞ்சி; opal orange (சா. அக.).

[ஆணா = ஆண்மரம். ஆண் + ஆ = ஆணா . பெண்தன்மை பிணவு, பிணா என்றாற் போன்று ஆண்தன்மை ஆணா எனப்பட்டது.]

ஆணாடு-தல் āṇāḍu-, 5.செ.கு.வி. (v.i.) விருப்பப்படி நடத்தல்; to do as one pleases. "அசோதை யாணாட விட்டிட்டிருக்கும்" (திவ்.நாச்சி.3,9).

[ஆண் + ஆடுதல். ஆணைப்போன்றே தன் விருப்பப்படி தலைமையேற்றுச் செயற்படுதல்.]

ஆணாறு āṇāṟu, பெ. (n.) மேற்கு நோக்கியோடும் ஆறு; westward flowing rivers as opp. to Pennāru. "ஆணாறு பெண்ணாறுகள் ஒன்றின்றிக்கே" (ஈடு. 4,4, பிர).

[ஆண் + ஆறு.]

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை ஆணாறுகள் என்றும் கிழக்கு நோக்கிப்பாயும் ஆறுகளைப் பெண்ணாறுகள் என்றும் அழைப்பது ஒரு மரபு வழக்கு.

ஆணி[1] āṇi, பெ. (n.) 1. இரும்பாணி; nail, small spike. "அடிப்பேன் கவியிரும்பாணி கொண்டே" (தனிப்பா.1, 170, 22). 2. அச்சாணி; linch-pin. "உழுவார் உலகத்தார்க் காணி" (குறள், 1032). 3. எழுத்தாணி; stylus for writing. "பித்திகைக் கொழுமுகை யாணி கைக் கொண்டு" (சிலப். 8,55). 4. மரவாணி; peg, plug, wooden spike. "உரலாணி" (தொல். எழுத்து. 99. உரை). 5. உரையாணி; pin of gold for testing the standard of other gold. "ஆணிப்பொன்" (திவ். பெரியாழ். 131.). 6. தைக்கும் ஊசி; sewing needle.

ம., க., தெ., து., பட., குட. ஆணி; **கோத.**ஆண்ய்; **துட.**ஒண்ய்; **Pali., Škt**. āṇi

[ஆழ் → ஆழி → ஆணி. ஆழ்வது ஆணி.]

ஆணி[2] āṇi, பெ. (n.) 1. புண்ணாணி; core of an ulcer. 2. காயாணி; hard excrescence on the skin. 3. பாதத்தில் முள் தைத்து ஒடிவதாலும் அல்லது பருக்கைக் கற்களின் மேல்நடப்பதாலும் அரத்தைப் போலுண் டாகும் முடிச்சு; horny induration and thickening of the skin caused in the foot by walking on sharp stones, or by running a thorn which is left unremoved. 4. கருவிழியிலுண்டாகும் ஒருவகை நோய்; disease affecting the cornea of the eye. (சா.அக.).

க., தெ. ஆணி.

[அள் → ஆள் → ஆண் + இ = ஆணி. அள் = செறிவு, திரட்சி. ஆணி = செறிந்து திரள்வது, கட்டியாவது. இ = உடைமை குறித்த ஈறு.]

ஆணி[3] āṇi, பெ. (n.) 1. அடிப்படை; support, basis, foundation. 2. முதன்மை; original as in āṇivēr. "ஆணியா யுலகுக் கெல்லாம்" (கம்பரா.கடறாவு. 27). "உழுவார் உலகத்தார்க்கு ஆணி" (குறள்.). 3. ஆசை (திவ். பெரியாழ். 5, 2, 3); wish, desire. 4. மேன்மை, உயர்வு; greatness, superiority. 5. எல்லை (நாநார்த்த.); limit, boundary. 6. பேரழகு; exquisite beauty.

ம. ஆணி, ஆணிக்கல்லு.; **க., தெ.** ஆணி.

[ஆழ் → ஆண் + இ = ஆணி. ஆணி = ஆழ்ந்துள்ள ஆணி. தேர், வண்டி முதலியவற்றின் உறுப்புகளை இறுக்கிப் பிடிக்க முதன்மையானதாகவும் அடிப் படையாகவும் இருத்தலால் மேன்மைப்பொருளும் ஆசை, அழகுப்பொருள்களும் நிழல் பொருள் களாயின.]

ஆணி[4] āṇi, பெ. (n.) 1. வாள் அலகு; pointed edge of a sword. 2. ஆணிமுத்து; pearl superior. 3. படுக்கை; bed.

க. ஆணி.

[ஆணி = முதன்மை. ஆணி கூர்மையுடைமையின் கூரிய வாளலகும், கூர்மை திட்டலான் ஒளியுடைமை பற்றி ஆணிமுத்தும், அழகுடைமையின் படுக்கையும் நிழல் பொருள்களாய் அவ்வவற்றைச் சுட்டின.]

ஆணி[5] āṇi, பெ. (n.) 1. நடுகழி, அடிக்கும் முளை; wooden peg. 2. வலைகளின் முனைகளில் கட்டும் சிறு மூங்கிற்கழி; small bamboo stick tied at the end of a net.

ம., க., தெ., து., குட. ஆணி.

[அள் → அண் + இ - அணி. → ஆணி. அள் - பொருத்தல், சேர்த்தல். ஆணி - பொருத்தி அல்லது சேர்த்தி அமைப்பது.]

ஆணி[6] āṇi, இடை. (part.) ஒரு பெயரீறு; suffix in words, indicating intensive force. உச்சாணி, சிரிப்பாணி சின்னாணி (உ.வ.).

[அணம் → ஆணம் → ஆணி. அணம் = சாரியை, பெயரீறு. ஆணி = பெயரீறு. அணவுதல் = தொடுதல், நெருங்குதல். உச்சாணி = உச்சியை அல்லது முகட்டின் கொடுநுனியை மிக நெருங்கிய கூர்முனை. உச்சாணிக் கிளை = கிளையின் கடைகோடி முனை.]

ஆணி[7] āṇi பெ. (n.) நாட்பட முதிர்தல்; மிகுதல், காழ்கொள்ளுதல்; to become hard, strong, and mature.

ஆணிக்கணு āṇi-k-kaṇu பெ. (n.). மரத்தில் அமைகின்ற கணுக்கள் வகையுள் ஒன்று, உயிருள்ள கணு எனப்படும்; a kind of node.

ஆணிக்கல் āṇi-k-kal, பெ. (n.) 1. பொன்னுரைக்குங்கல்; touch-stone for ascertaining the fineness of gold. 2. பொன் நிறுக்குங்கல்; standard weight for gold. "கச்சிப்பேட்டு ஆணிக்கல்லால் நிறை இருபதின் கழஞ்சுபொன்" (S.S.I.i, 117).

[ஆணி + கல் = ஆணிக்கல். = முதன்மையான கல்.]

ஆணிக்கால் āṇi-k-kāl, பெ. (n.) பருக்கைக் கற்களின் மேல் நடத்தலால் அல்லது காலில் முள் தைத்து ஒடிதலால் பாதத்தில் ஆங்காங்குத் திரட்சி கண்டு வலிமிகும் கால்; foot having a hard horny excrescence caused by the pricking of thorns or by walking on pointed pebbles. (சா.அக.).

ம., க. ஆணிக்கால்.

[ஆணி + கால் → ஆணிக்கால் = ஆணிபோல் வலிதாய்த் திரட்சி கண்டு வலியெடுக்கும் கால்.]

ஆணிக்குருத்து āṇi-k-kuruttu, பெ. (n.) பனை, தெங்கு முதலியவற்றின் நடு அல்லது மூலக்குருத்து; heart or prime part of a palmyra shoot, central thick shoot of a palm.

[ஆணி + 'குருத்து → ஆணிக்குருத்து = முதன்மையான குருத்து.]

ஆணிக்கை āṇi-k-kai, பெ. (n.) உறுதி, உறுதிப்பாடு; certainty, firmness, "பங்கமில்லாமலே ஆணிக்கை யாக" (கனம் கிருட்டிணையர் கீர்த்.32).

[ஆணி = மேன்மை, அடிப்படை. ஆணி + கை - ஆணிக்கை = உறுதி, உறுதிப்பாடு.]

ஆணிக்கொம்பு āṇi–k–kombu, பெ. (n.). மரவாப்பு (செங்கை.வழ); wooden wedge.

[ஆணி + கொம்பு.]

ஆணிக்கொள்ளு-தல் āṇi-k-koḷḷu-, 13 செ.கு.வி. (v.i) 1. இருப்பிடத்தை நிலைப்படுத்திக் கொள்ளுதல்; to make one's positon firm, consolidation. இங்கே ஆணிக்கொண்டு பிறகு மற்ற காரியங்களை நீ பார்க்க வேண்டும். (உ.வ.) 2. இறக்கும்போது கண் நிலைக்குத்திட்டு நிற்றல், ஒரு சாவுக் குறிப்பு; eyes remaining fixed just before death. This is considered one of the indications of approaching death.

[ஆணி + கொள்ளுதல் = ஆணிக்கொள்ளுதல். ஆணிபோல் அசையாமல் செங்குத்தாகக் கண்பார்வை நிற்றல்.]

ஆணிக்கோவை āṇi-k-kōvai, பெ. (n.) 1. உரையாணிகள் கோத்த மாலை; (literally) a bunch of touch-nails, to be used on touch-stone for testing the fineness of other gold by comparison. 2. கவுபால சித்தர் செய்த நூல். இதில் பொன் ஒருமாற்று முதற்கொண்டு பத்து மாற்று வரையில், 27 தரமாகப் பிரித்து பொன்னின் மாற்றுகளை வரிசையாக அடியிற் காட்டியுள்ளபடி கண்டுபிடிப்பதற்கு உதவும் வகையில் விளக்கம் தரப்பட்டுள்ளது.; treatise compiled by siddhas to test the purity or fineness of gold in general. According to this book, the standard of fineness of gold known in Tamil as **māṟṟu**, from 1 to 10, is further subdivided into fractions, for purposes of accuracy and correctness and arranged in order, according to the quality and degree of fineness into 27 grades as illustrated below.

Each grade is represented by a slender bar or rod of gold of the standard of fineness of that grade known as the touch-needle. Thus, there are 27 needles prescribed for 27 grades and they are used in conjunction with the touch-stone for purposes of testing the fineness of gold. These needles were impressed with marks for the sake of brevity, as mentioned below, opposite to each grade to indicate the various degrees of fineness.

பிரிவு எண். Grade No.	மாற்று ஆணி Degrees of Touch-needle	அடையாளம் Mark.
1.	1	.
2.	$1\frac{1}{2}$	.I
3.	2	. .
4.	$2\frac{1}{2}$	. . I
5.	3	. . .
6.	$3\frac{1}{2}$	. . . I
7.	4	\\
8.	$4\frac{1}{2}$	 I
9.	5	. . . . .
10.	$5\frac{1}{2}$	 I
11.	6	IIII
12.	$6\frac{1}{4}$	^ I
13.	$6\frac{1}{2}$	^ I
14.	$6\frac{3}{4}$	^
15.	7	^I
16.	$7\frac{1}{4}$	III
17.	$7\frac{1}{2}$	II
18.	$7\frac{3}{4}$	I
19.	8	\\
20.	$8\frac{1}{4}$	\
21.	$8\frac{1}{2}$	^
22.	$8\frac{3}{4}$	IIIII
23.	9	IIII
24.	$9\frac{1}{4}$	III
25.	$9\frac{1}{2}$	II
26.	$9\frac{3}{4}$	I
27.	10	——

மேற்கண்ட மாற்று வகைகளின் கலப்புவகை.

1 மாற்று முதல் 6 மாற்று வரையில் – தூய செம்பு + வெள்ளி. 6 மாற்று முதல் $9\frac{3}{4}$ மாற்று வரையில் – பொன் + செம்பு + வெள்ளி.

10 மாற்று	–	தூய பொன்
$10\frac{1}{2}$ மாற்று	–	உயர்ந்த பொன்.

பொதுவாகப் பொன்னின் மாற்று அறியும் மூன்று வகைகள்: 1. உள்வெட்டு. 2. மேல்வெட்டு. 3. உரசல்.

The following are the details of alloys of the several grades mentioned above:

1 to 6 **māṟṟu** represent alloys of copper and silver.

6 to $9\frac{3}{4}$ **māṟṟu** represent alloys of gold, copper and silver.

10 **māṟṟu** represent only pure gold.

$10\frac{1}{2}$ **māṟṟu**, no test prescribed for this rare gold.

The gold under test is generally examined in three ways viz. 1. deep cut. 2. superficial cut. 3. rubbing on touch–stone. The term **'māṟṟu'** corresponds to the English term 'Carat' which is employed to denote the fineness of gold. (சா.அக.).

[ஆணி + கோவை = ஆணிக்கோவை = உரையாணிகள் கோத்த மாலை. கோவை = கோத்திருப்பது. கோர்வை → கோவை.]

ஆணிச்சவ்வு āṇi–c–cavvu, பெ. (n.) 1. வெள் விழியை யொட்டியுள்ள கருப்புச் சவ்வு; black membrane adjoining the white of the eye. 2. விழிப் படலம்; cornea of the eye.

*[ஆணி + சவ்வு. ஆணி = முதன்மை, அடிப்படை. **சவ்வு** பார்க்க*; see savvu.]

ஆணிச்சிதல் āṇi–c–cidal, பெ. (n.) 1. முகப்பருவின் முளை; root of the pimple. 2. சீழ்பிடித்த குழிப்புண்; core of the suppurating ulcer.

[ஆணி + சிதல். ஆணி = அடிப்படை. சிதல் = சிதைப்புதல்.]

ஆணிச்செய்வகை āṇi–c–ceyvagai, பெ. (n.) பொன் மாற்று அறிய உதவும் உரையாணி செய்யும் வகை; method of making the touch–nails to test the fineness of gold.

[ஆணி + செய்வகை.]

ஆணிச்செருக்கம் āṇi–c–cerukkam, பெ. (n.) ஒருவகை உப்பு நஞ்சு; poisonous compound of salt. (சா. அக.).

[ஆணி + செருக்கம்.]

ஆணிடி āṇiḍi பெ. (n.) உருமேறு; thunderbolt. (கந்தபு. நகரழி. 77. உரை).

[ஆண் + இடி.]

ஆணித் தங்கம்; āṇi–t–taṅgam, பெ. (n.) **ஆணிப் பொன்** பார்க்க; see āṇi–p–poṉ.

ஆணித்தரம் āṇi–t–taram, பெ. (n.) 1. முதற்றரம்; finest quality, standard. 2. உறுதி (வின்.); firmness. 'அவர் ஆணித்தரமாகக் கூறினார்'. 3. நல்லமுத்து, கெட்டி முத்து; solid pearl of a superior quality. (சா.அக.).

[ஆணி + தரம். ஆணி = முதன்மை, உறுதி, வலிமை. தரம் = வகை.]

ஆணிதை–த்தல் āṇitai–, 4. செ.கு.வி. (v.i.) 1. பொருந்த ஆணியடித்தல்; to nail, fasten with nails, as reapers. 2. காலில் ஆணி குத்திப்பாய்தல்; piercing of nail in the foot.

[ஆணி + தைத்தல். தள் → தய் → தை → தைத்தல் = தள்ளுதல், தூக்குதல், உட்செல்லுதல்.]

ஆணிநஞ்சு āṇi–nañju, பெ. (n.) கோளகப் பாடாணம்; a kind of arsenic.

[ஆணி + நஞ்சு. ஆணி = முதன்மை.]

ஆணிநோய் āṇi–nōy, பெ. (n.) பருக்கைக்கற்களின் மேல் நடப்பதாலும் பாதத்தில் முள் தைத்து ஒடிவதாலும், தசை தடித்துக் கட்டியாகி வலிமை மிகுவிக்கும் ஒரு நோய்; painful disease in the foot caused by the hard thorny excrescence arising from walking on pointed pebbles or by running a thorn in one's foot – corn.

[ஆணி + நோய்.]

ஆணிப்படலம் āṇi–p–paḍalam, பெ. (n.) ஒருவகைக் கண்ணோய்; eye–disease, a disease of the cornea attended with the growth of horny tissue. (சா.அக.).

[ஆணி + படலம். ஆணி = முட்போன்ற தசை வளர்ச்சி. படலம் = படர்வது.]

ஆணிப்பரங்கி āṇi-p-paraṅgi, பெ. (n.) மாணிக்கம்; one of the nine gems.

[ஆணி = முதன்மை. பரங்கி = பரல் போன்றது.]

ஆணிப்பரிகாரம் āṇi–p–parigāram, பெ. (n.) 1. சதையின் மேல் எழும்பிய காய்ப்பு நீங்குவதற்குச் செய்யும் மருத்துவம்; treatment for curing the corn. 2. கருவிழியில் ஆணி பாய்ந்ததைக் குணப் படுத்துவதற்குச் செய்யும் கண் மருத்துவம்; operation performed on the cornea to remove the growth of a thorny tissue. (சா.அக.)

[ஆணி + பரிகாரம். பரிதல் = ஒடுதல்., நீங்குதல். காரம் = செய்வினை. பரிகாரம் = நீங்கச்செய்யும் வினை. ஆணிப்பரிகாரம் = ஆணி நீங்கச் செய்யும் மருத்துவம்.]

ஆணிப்பாரை āṇi–p–pārai, பெ. (n.) பதிக்கப்பட்ட ஆணி முதலியவற்றைப் பிடுங்குவதற்குக் கடப்பாரையைப் போன்று இரும்பாலான சிறிய கருவி; a kind of iron clamp which is used to pluck nails etc. (தஞ்சை வழ).

[ஆணி + பாரை.]

ஆணிப்பிடிச்சி āṇi–p–piḍicci, பெ. (n.) சீனக்காரம்; alum, which is a whitish transparent astringent salt.

[ஆணி + பிடிச்சி.]

ஒருகா. பிடிப்புள்ளதாக அல்லது ஒட்டும் இயல்புள்ள தாக விருப்பதனால் அதன் முதன்மைப் பண்பு பற்றி இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

ஆணிப்பிடுங்கி āṇi-p-piḍuṅgi, பெ. (n.) ஒருபக்கம் அடிப்பதற்கு ஏதுவாகத் தட்டையாகவும், மறுபக்கம் ஆணி முதலியன பிடுங்க ஏதுவாகப் பிளவு பட்டும் இருக்கும் சுத்தியல் வகை; small hammer used to pull out nails by its one side while the otherside is used for driving nails.

[ஆணி + பிடுங்கி.]

ஆணிப்புண் āṇi-p–puṇ, பெ. (n.) உள்ளே ஆணிபாய்ந்த சிலந்திப்புண்; ulcer with a core or decayed tissue inside due to the impure, vitiated, debilitated condition of the blood, especially in diabetic carbuncle. (சா. அக.).

[ஆணி + புண். ஆணி = ஆணிபோன்ற காப்பு.]

ஆணிப்பூ āṇi-p-pū, பெ. (n.) 1. கண் காசம்; cataract of the eye. 2. கண்ணில் விழும் பால் நிறமான வெள்ளை மாசு; milk-white opacity in the cornea of the eye - **Leucoma.**

[ஆணி + பூ = ஆணிப்பூ. பூப்போன்ற வெண்மாசு படியும் கண்நோய். ஆணி = வலிதாகப் பற்றி நிலை கொண்ட நோய்.]

ஆணிப்பூடு āṇi-p-pūḍu, பெ. (n.) **ஆணிப்பூ** பார்க்க; **see āṇi-p-pū.**

ஆணிப்பொன் āṇi-p-poṉ, பெ. (n.) மாற்றுயர்ந்த பொன்; refined superior gold. "ஆணிப்பொன்னாற் செய்த ..... தொட்டில்" (திவ். பெரியாழ். 1,3,1).

ம. ஆணிப்பொன்னு; **க.** ஆணிப்பொன்

[ஆணி + பொன் – ஆணிப்பொன் = உயர்ந்த பொன். ஆணி = மேன்மை, உயர்வு.]

ஆணிபாய்-தல் āṇi-pāy-, 12 செ.கு.வி. (v.i.) 1. முள்தைப் பதனால் ஏற்படும் ஆணி என்னும் காய்ப்பு; formation of a conic mass extending down into the skin and producing pain and irritation. 2. **ஆணிதை-த்தல்** பார்க்க; see āṇitai-.

[ஆணி + பாய்.]

ஆணிமலர் āṇi–malar, பெ. (n.) ஆணியின் தலை (இ.வ.); head of a nail.

[ஆணி + மலர். மலர் = மலர்போல் விரிந்த தலைப்பகுதி.]

ஆணிமலர்த்திருப்பி āṇimalar–tiruppi, பெ. (n.) 1. திருப் புளி; screw-driver. 2. பிடித்தராவி; screw-wrench.

[ஆணிமலர் + திருப்பி. ஆணிமலர் = ஆணியின் தலைப்பகுதி. திருப்பி = திருப்ப உதவுவது.]

ஆணிமுத்து āṇi–muttu, பெ. (n.) குற்றமற்ற உயர்ந்த கட்டாணி முத்து, வயிரமுத்து; solid, superior pearl of the finest quality.

க. ஆணிமுத்து.

[ஆணி + முத்து. ஆணி = வன்மை, வயிரம்.]

ஆணிமுளை āṇimuḷai பெ. (n.) கட்டி, புண் முதலியவற்றின் நடுவிலுள்ள முளை; the core of an abscess or of any sore.

[ஆணி + முளை. ஆணி = கட்டியான.]

ஆணி மூலம் āṇi–mūlam, பெ. (n.) எருவாயின் (ஆசனம்) உட்புறம் ஆணியைப்போல் கட்டியாக விருக்கும் ஒரு வகை மூலநோய்; hard vesicular tumour appearing inside the rectum - Internal piles.

[ஆணி + மூலம். ஆணி = கட்டியான.]

ஆணியச்சு āṇi-y-accu, பெ. (n.) ஆணிகளை உருவாக்கும் அச்சு; nail plate, lathe (C.E.M.).

[ஆணி + அச்சு.]

ஆணியம் āṇiyam, பெ. (n.) **ஆநியம்** பார்க்க; see **āniyam**

ஆணியிடு-தல் āṇi-yi-ḍu-, 20 செ.கு.வி. (v.i.) கண் நிலைக்குத்துதல்; eyes becoming fixed in the central portion as a sign of approaching death.

[ஆணி + இடு. ஆணியிடல் = செங்குத்தாகச் செருகல்.]

ஆணியிருமல் āṇi-y-irumal, பெ. (n.) நாட்பட்ட இருமல் நோய்; hard cough with a metallic sound.

[ஆணி + இருமல். ஆணி = நன்கு வேரூன்றிய, நோய் முதிர்ந்த.]

ஆணிரோகம் āṇi–rōgam, பெ. (n.) **ஆணிநோய்** பார்க்க; see āṇi–nōy.

[ஆணி + ரோகம். Skt. rōga.]

ஆணிவேர் [1] āṇivēr, பெ. (n.) 1. மரம் பூண்டு ஆகியவை முளைக்கும்போதே நீண்டு நிலத்தினுள் நேரே ஊடுருவிச் செல்லும் முகாமையான மூலவேர் அல்லது நடுவேர்; central root of a tree or a plant which begins to penetrate right down into the earth from its growth, tap-root. 2. உச்சிவேர்; main or the central root. (சா. அக.).

[ஆணி + வேர். ஆணி = ஆழ்ந்து பாய்ந்த, தலைமையான.]

ஆணி வேர்[2] āṇi-vēr, பெ. (n.) 1. சொல்லின் மூலம்; root of a word, etymology. 2. அடிப்படை; basic, foundation. குடும்பத்திற்கவனே ஆணிவேர் (உ.வ.).

[ஆணி + வேர்.]

ஆணு[1] āṇu, பெ. (n.) இதள் (இரசம்); quick silver, mercury.

[ஆணம் → ஆணு. ஆணம் = நீர்மம்.]

ஆணு[2] āṇu, பெ. (n.) 1. அன்பு, நேயம்; attachment, affection. "ஆணுப் பைங்கிளி யாண்டுப் பறந்ததே" (சீவக. 1002). 2. இனிமை (சூடா.); sweetness, agreeableness. 3. நன்மை (சூடா.); benefit.

*[ஆண்ம் → ஆணு. **ஆணம்**[1] பார்க்க;* see āṇam[1].]

ஆணெழுத்து āṇeḻuttu, பெ. (n.) உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் ஆகிய எழுத்துகள்; short vowels and short vowel consonants.

[ஆண் + எழுத்து. முதன்மையான எழுத்து. ***ஆண்பாலெழுத்து*** *பார்க்க;* see āṇpāleḻuttu.]

ஆணை[1] āṇai, பெ. (n.) 1. அதிகாரம்; power, authority. "அரும்பதி செல்வநல்கி யாணையும் வைப்பன்" (சி.சி. 2,31). 2. கட்டளை; mandate, order, edict. "அமரர்கோ னாணையில் அருந்துவோர் பெறாது" (மணிமே. 14,76). 3. ஏவல் (கதி. அக.); command. 4. ஆன்றோர் மரபு; rules, usages established by the learned of old. "தொல்லாணை நல்லாசிரியர்" (மதுரைக். 761). 5. மெய் (பிங்.); truth. 6. முறைமன்றத்தில் ஏற்கும் உறுதிமொழி (திவா.); oath, as in a court of justice. 7. உறுதியேற்குங்கால் விருப்பத்திற்குரிய ஒருவர் அல்லது ஒன்றன்மேல் அடித்துக்கூறுதல்; profane swearing, the word being affixed to the person or thing sworn by as. அப்பனாணை, கண்ணனாணை (உ.வ.). "அவள் கண்ணிலும் காண்டிவ வில்லினும் ஆணை" (பாஞ்.). 8. நெடுமொழி (சீவக.641); vow. 9. உறுதி மொழிகூறித் தடுக்கை (பிங்.); checking by oath, obstructing by imprecation. 10. இலச்சினை (பிங்.); sign or insignia of authority. 11. முத்திரை; stamp, seal (W.). 12. அடையாளம்; symbol, emblem. 13. வெற்றி (சூடா.); conquest, victory.

ம. ஆண; **க.** ஆணெ; **தெ.** ஆன; **து.** ஆணெ; **பிராகி.** ஆணா; **வ.** ஆக்ஞா; **பா.** ஆணா; **குச்.** ஆண்; **சிந்., மரா.** ஆனா; **இந்.** ஆண்; **சிங்.** ஆண.

[ஆள் → ஆண் → ஆணை. ஆணை = பிறரை அடக்கியாளும் அதிகாரம். அதிகாரத்தால் பிறப்பித்த கட்டளை, உறுதியான கட்டளை, உறுதி, உண்மை, உண்மையாகவும் உறுதியாகவும் செய்யப்படும் செயல், வெற்றி, அதிகாரம், உறுதி முதலியவற்றைத் தெரிவிக்கும் அடையாளம், இலச்சினை. ஒ.நோ: கள் → கண் → கணை. பள் → பண் → பணை. மள் → மண் → மணை.]

வடமொழியில் கட்டளைப் பொருளில் வரும் 'ஆக்ஞா' தமிழ்ச் சொல்லான 'ஆணை' என்பதனோடு எவ்வகைத் தொடர்பும் இல்லாதது. வடமொழியாளர் 'ஆக்ஞா' என்னும் சொல்லை ஆ + க்ஞா எனப் பிரிப்பர். 'ஆ' பொருளில்லாத முன்னொட்டு. 'க்ஞா' — அறிதல் என்று மட்டும் பொருள் தரும் வேர்ச்சொல். இதுவும் தமிழ் 'காண்' வேரின் திரிபே என்பார் பாவாணர்.

திராவிட மொழிகளில் மட்டுமன்று; வடஇந்திய மொழிகளனைத்திலும் தமிழ்ச் சொல்லான 'ஆணை' இடம்பெற்றிருப்பதும், மலையாள இலக்கண நூலான இலீலாதிலகத்தில் 15—ஆம் நூற்பா விளக்கவுரையில் 'ஆணை' சமற்கிருத 'ஆக்ஞா' என்னும் சொல்லிலிருந்து பிறந்தது அன்று என்றும், வடநாட்டுப் பிராகிருதச் சொல்லான 'ஆணா' என்பதே மூலச்சொல் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிராகிருதச்சொற்கள் பெரும்பான்மை தமிழிலிருந்து பெற்ற கடன் சொற்களாதலின், தமிழ் 'ஆணை' பிராகிருதத்தில் 'ஆணா' என்றும், பிராகிருதவழி வடமொழிக்குச் சென்று 'ஆக்ஞா' என்றும் திரிந்திருத்தலே உண்மையாதல் காண்க.

வடமொழி தவிர்ந்த இந்தைரோப்பிய மொழிகளில் இச்சொல்லாட்சி புகாமை ஒன்றே இது மேலையாரியச் சொல்லன்று என்பதையும், வடபுல மொழிகளனைத்திலும் தமிழிலிருந்து பெற்ற கடன் சொல்லே வழங்குகிறது என்பதையும் தெரியக்காட்டும்.

இது, 'ஆள்' (செய்) என இடும் கட்டளை, உறுதியாகச் செய்தே ஆகவேண்டிய கட்டளைகளைக் குறித்துப்பின் ஆணை வடிவுற்றது. 'கள்' திரட்சிப் பொருள் குறித்த சொல், முனை வடித்துத் திரட்டிக் (கண்திரட்டல்) கூராக்கப்பட்ட அம்பைக் குறிக்குங்கால் அதற்கேற்ற ஈறேற்கும் நெறியை யொட்டி 'ஐ' உடைமையீறு பெற்று நிலைமொழி ளகரமெய் ணகர மெய்யாகி ஆள் + ஐ = ஆணை சொல்வடிவுற்றது.

இந்தைரோப்பிய மொழிகளில் ஆணையைக் குறிக்கும் order என்னும் சொல், ஒட்டு, சேர் எனப் பொருள்படும் 'ar' என்னும் ஏவலிலிருந்து தோன்றிப் பின், வரிசை, ஒழுங்கு எனப் பொருளால் வளர்ந்து, ஒழுங்குபடுத்தும் ஆணைப் பொருள் தந்து ar—order என வளர்ந்திருத்தலைக் காணின் ஆள் → ஆணை சொல் வளர்ச்சியையும் விளங்கிக் கொள்ளலாம்.

ஆணை[2] āṇai, பெ. (n.) (சிவனி.) சிவபெருமானின் அருளாற்றல்; sakti (or) power of Śiva. "ஆணை யினீக்கமின்றி நிற்குமன்றே" (சி.போ.2.).

[ஆள் → ஆண் → ஆணை = ஆளுந்திறம், ஆளுந் திறத்திற்குதவும் அறிவாற்றல், நுண்மாண் நுழைபுல வன்மை.]

ஆணைச்சக்கரம் āṇai-c-cakkaram, பெ. (n.) 1. அரசாட்சி; reign, royal power. 2. செங்கோல்; sceptre

[ஆணை+சக்கரம்.சக்கரம்=உருள்வது, நடப்பது, இயங்குவது.]

ஆணைசெல்(லு)-தல் āṇai-cel-, 13 செ.கு.வி. (v.i.) அரசோச்சுதல், அதிகாரம் செயற்படல்; power or authority or command being implemented or put to practice.

[ஆணை + செல்.]

ஆணை செலுத்து-தல் āṇai-celuttu-, 2. பி.வி. (casu.v.) அதிகாரம் செயற்படச் செய்தல், அரசு செலுத்துதல்; sway the sceptre, command, exercise the functions of government or authority.

[ஆணை + செலுத்து.]

ஆணைப்பெயர் āṇai-p-peyar, பெ. (n.) வலியோர் அஞ்சப்பேணியுலகம் பேசும் பெயர் (பன்னிருபா. 149); name given to a hero, calculated to instil respect in the minds of the valiant.

[ஆணை + பெயர். ஆணை = கட்டளை. எவரும் கட்டளையை அஞ்சியேற்றற்குரிய பதவிப்பெயர் அல்லது இயற்பெயர்.]

ஆணைபிறப்பி-த்தல் āṇai-piṟappi-, பி.வி. (caus.v.) ஆணை முதலியன வெளியிடுதல்; proclaim authority, give orders.

[ஆணை+பிறப்பி.]

ஆணையம் āṇaiyam, பெ (n.) சில செயல்களை நிறைவேற்றவும் மேற்பார்வையிடவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள குழு; body of persons having authority to perform or supervise certain duties, commission.

[ஆணை → ஆணையம்.]

ஆணையர் āṇaiyar, பெ. (n.) குழுவால் அமர்த்தப் பெற்றவர்; அரசு ஆணையங்களால் அதிகாரம் அளிக்கப்பட்டவர்; one appointed by commission; member of a commission, esp. of government boards etc., commissioner.

[ஆணை → ஆணையர்.]

ஆணையோலை āṇai-y-ōlai, பெ. (n.) கட்டளைத் திருமுகம்; royal, edict proclamation, summons "இன்று ஓராணையோலை ... வாராநின்றது" (திருக்கோ. 327. உரை.).

[ஆணை + ஓலை. ஆணை = கட்டளை. ஓலை = திருமுகம், மடல்.]

ஆணைவிடு-தல் āṇai-viḍu-, 20. செ.கு.வி. (v.i.) சூளுறவை நீக்குதல்; to release from the spell of an oath.

[ஆணை + விடு.]

ஆணைவெளியிடு-தல் āṇai-veḷiyiḍu-, 18.செ. குன்றாவி. (v.t.) ஆணை பிறப்பித்தல்; proclaim an order.

[ஆணை + வெளியிடு.]

ஆணொப்பனை āṇoppaṉai, பெ. (n.) ஆண் கூத்துக்குச் செய்யும் ஒப்பனை; make up for male actor.

[ஆண் + ஒப்பனை.]

ஆணொழிமிகுசொல் āṇoḻi-migu-šol, பெ. (n.) (இலக்.) இருதிணையிலும் பெயர் அல்லது தொழிலினாற் பெண்பாலாகப் பால் பிரியுஞ் சொல் (தொல். சொல்.50, இளம்); (Gram.) word that indicates feminine gender by the nature of its function in a sentence. கோப்பெருந்தேவி கருவுயிர்த்த கட்டிலின் கீழ் மக்கள் நால்வர் இருந்தனர் - மக்கள் என்னும் சொல் பெண்களை மட்டும் குறித்தது.

[ஆண் + ஒழி +மிகு + சொல்.]

ஆணோறை மயக்கம் āṇōṟai-mayakkam, பெ. (n.)



ஆணோறை மயக்கம் - கற்பூரவல்லி

நறுமணமுள்ள மூலிகை, கற்பூரவல்லி; thick leaved lavendar. (சா.அக.).

[ஆண் + (உறை) ஒறை + மயக்கம். ஆண் = தலைமை, மிகுதி. உறை = கார்ப்பு, மணம். மயக்கம் = செறிவு]

ஆத்தம் āttam, பெ. (n.) 1. விழைவு, நட்பு; friendship, intimacy. "ஆத்தமானார்" (திருவா.4,46). 2. ஆசிரியருக்குச் செய்யும் உதவித் தொண்டு; rendering service to teacher. 3. அன்பு; devotion, affection

"ஆத்தமுறு தொண்டரை யழைத்திவை விளம்பும்" (இரட்சணிய. பக்.47).

ம. ஆத்த.

[அல் + து — அத்து = நெருக்கம் , அன்பு , நட்பு, விழைவு அத்து + அம் → அத்தம் → ஆத்தம் . த. ஆத்தம் > Skt. āpta.]

ஆத்தமொழி āttamoḻi, பெ. (n.) 1. நட்பாளர் மொழி; word or advice of a friend. 2. திருமுறை (வேதம்)ப் பனுவல்கள் முதலியன; scriptures, as containing counsel and exhortations, sayings.

*[ஆத்தம் + மொழி . ஆத்தம் = அன்பு, பற்று. **ஆத்தம்** பார்க்க;* see āttam.]

ஆத்தன் āttaṉ, பெ. (n.) 1. நண்பன் (திவ். திருவாய். 10,1,6); friend, companion, associate. 2. முதல்வன், பெரியோன்; great or eminent person. 3. கடவுள்; divine being. 4. அருகன் (சூடா.); Arhat. 5. நம்பிக்கைக்குரியவன்; trusworthy person, one whose words are reliable and authoritative. 6. தந்தை; father.

[அல் + து – அத்து = நெருக்கம், அன்பு, விழைவு, நட்பு மதிக்கத்தக்க பெருங்குணம், பெருமை. அத்து + அன் → அத்தன் → ஆத்தன். அல் + து = அத்து. ஒ. நோ: மெல் + து = மெத்து, மெத்தை.]

ஆத்தா[1] āttā, பெ. (n.) **ஆத்தாள்** பார்க்க; see āttāḷ.

ம. ஆத்த.

[ஆத்தாள் → ஆத்தா (கொ.வ.).]

ஆத்தா [2] āttā, பெ. (n.) 1. அணி நுணாமரம் (கதி.அக.); a kind of tree. 2. சீத்தாமரம்; custard apple tree. 3. இராமசீத்தா; bullock's heart. 4. சீத்தாப்பழம்;sweet top of the West Indies; nector fruit, sugar apple. (தஞ்.வ) (சா. அக.).

ம. ஆத்த.

[ஆத்தம் → ஆத்தா (நெருங்கக் காய்ப்பது).]

ஆத்தாடி āttāḍi, இடை. (inter.) 1. ஒரு வியப்பிடைச் சொல்; expressive of wonder. 2. இளைப்பாறற் குறிப்பு; term expressive of restfulness after toilsome work.

[ஆத்தாள் + அடி = ஆத்தாடி. ஆத்தாள் = தாய். அடி = விளி.]

வியப்பு, அச்சம், நோய், வருத்தம் ஆகிய உணர்வுகளை வெளிப்படுத்துங்கால் பிள்ளைகள் தமக்கு அண்மையளாயும் அன்பினளாயும் விளங்கும் தாயை அல்லது தந்தையை விளிப்பது இயல்பாகலான் அம்மாடி, அம்மாடா, ஆத்தாடி, அப்பாடா, அப்பாடி என்பன உணர்வு வெளிப்பாட்டு இடைச் சொற்களாயின.

ஆத்தார மூத்தான் āttāra-mūttāṉ, பெ. (n.) பூனைக்காலி; cow–hage, cat bean (செ.அக.).

*[ஆற்று + ஓரம் + பூத்தான் = ஆற்றோரம் பூத்தான் → ஆத்தோரம் பூத்தான் → ஆத்தார மூத்தான். **ஆற்றுப் பூத்தான்** பார்க்க;* see āṟṟu—p—pūttāṉ.*]*

ஆத்தாள் [1] āttāḷ, பெ. (n.) 1. தாய்; mother. "அப்பன் இரந்துண்ணி யாத்தாள் மலை நீலி" (தனிப்பா. 35,66). 2. தாய் போல் காக்கும் பெண் தெய்வங்கள்; mother of the world, an epithet for Parvathy and other goddesses. மாரியாத்தாள், காளியாத்தாள் (உ.வ.).

[அல் + து → அத்து – நெருக்கம், அன்பு, பற்று, பரிவு அத்து + ஆள் = அத்தாள் → ஆத்தாள்.]

ஆத்தாள்[2] āttāḷ, பெ. (n.) 1. மனைவி (இ.வ.); wife. 2. இல்லத்தலைவி; house - wife.

ம. ஆத்தோள் (நம்பூதிரியின் மனைவி).

[அகம் + அத்து + ஆள் – அகத்தாள் → ஆத்தாள். அகம் = வீடு.]

ஆத்தாள் [3] āttāḷ, பெ. (n.) ஒரு பெண்பாற் பெயரீறு ; a suff. to proper names denoting fem. gender. கண்ணாத்தாள், மங்காத்தாள் (உ.வ.).

*[ஆத்தாள் = தாய். **ஆத்தாள்** [1] பார்க்க;* see āttāḷ.*]*

ஆத்தாள் மூத்தாள் āttāḷ–mūttāḷ, பெ. (n.) **ஆத்தார மூத்தான்** பார்க்க; see āttāra–mūttāṉ.

ஆத்தான் āttāṉ, பெ. (n.) **ஆத்தன்** பார்க்க; see āttaṉ.

ஆத்தானம் āttāṉam, பெ. (n.) 1. அரசவை, அரசிருக்கை, நெடுங்கூடம், பேரவை; hall of audience, royal presence, royal assembly. 2. கோபுரவாயில் (பிங்.); gate of a tower, as the place of audience.

[அகம் + அத்து + அணி + மண்டபம் = அகத்தணி மண்டபம் → அத்தாணி மண்டபம் → அத்தாணி.> pkt. āttāṇi > Skt. āstāna. *அகத்தணி மண்டபம் பார்க்க.* see agattaṇi–maṇḍabam.]

அத்தாணி மண்டபம் பிராகிருதத்தில் அத்தாணி எனவும் வடமொழியில் ஆஸ்தானம் எனவும் மருவிய பின்னர் வட சொல்லே தமிழில் ஆத்தானம் எனத் திரிந்துள்ளது.

வடமொழியில் உள்ள ās tāna என்னும் சொல்லுக்கு இடம் (stana) என்பதே வேராகக் காட்டப்படுகிறது. 'ஆ' என்பது பொருளில்லாத முன்னொட்டு. வெறும் இடம் என்று

பொருள்படும் சொல் அரண்மனைப் பேரவைக்கூடத்தைக் குறித்திருக்கவியலாது. அகம்படியர், அகம்பெண்டுகள், அகக்கோளாளர் எனத் தமிழில் மரபு வழி வழங்கி வரும் கூட்டுச்சொற்களின் அமைப்பே அகத்தணி (அத்தாணி) என்ற பழஞ்சொல் வழக்கிலிருந்ததைக் காட்டும்.

பிராகிருதச் சொல் வடிவங்கள் தமிழ் மூலச் சொல்லை மிக ஒத்திருப்பதும் வடமொழியில் தமிழ்ச்சொல் வடிவங்கள் மிகவும் திரிபடைந்து வேறுபட்டுக் காணப்படுவதும், பிராகிருத வாயிலாகவே வடமொழியில் புகுந்த தமிழ்ச் சொல்வடிவங்களை மீட்டமைக்க வேண்டும் என்னும் நெறிமுறையை வலியுறுத்து கின்றன.

ஆத்தி [1] ātti, இடை. (int.) அச்சம் அல்லது வியப்புக் குறிப்பு இடைச்சொல்; exclamation expressive of fright or surprise. அடி ஆத்தி அங்கே போகாதே (உ.வ.).

[ஆத்தாள் → ஆத்தா → ஆத்தி. ஆத்தாள் = தாய்.]

ஆத்தி [2] ātti, இடை. (part.) பெண்பாற் பெயரீறு; fem.suff. தட்டாத்தி, வண்ணாத்தி (வீரசோ. தத்தித. 5).

[அத்தி → ஆத்தி.]

ஆத்தி [3] ātti, பெ. (n.) 1. அடைகை; obtaining. 2. தொடர்பு;



connection. 3. ஊதியம்; gain.

[ஆர்த்தி → ஆத்தி. ஆர்தல் = பொருந்துதல், அடைதல், தொடர்புறல், தன்னைச்சாரும் முதலீட்டுக்கு மேலான பிருபொருள் (ஊதியம்). இது ஆம்தி என்னும் வட சொல்லினின்று திரிந்ததன்று.]

ஆத்தி [4] ātti, பெ. (n.) 1. மரவகை; common mountain ebony. 2. சோழரின் அடையாள மலர்; royal floral insignia of the Cholas. 3. திருவாத்தி; holy mountain ebony. "சம்பங்கிழாத்தி" (சைவச.பொது.29).

ம., க., தெ. அத்தி; குட. அத்தி; து. அர்தி.

ஆத்தியின் வகைகள்:

1. திருவாத்தி அல்லது சிறுவாத்தி – holy mountain ebony.
2. நிலத்திருவாத்தி – purple mountain ebony.
3. பெருவாத்தி – large mountain ebony.
4. வட்டாத்தி – holy mountain ebony.
5. காட்டாத்தி – wild bauhinia.
6. செவ்வாத்தி – crimson climbing mountain ebony.
7. கடலாத்தி – bipinnate, fragrant trumpet tree.
8. சிற்றாத்தி – minute – flowered climbing mountain ebony.
9. பூவாத்தி – flowering murdah.
10. வெள்ளைப்பூவாத்தி – white variegated mountain ebony.
11. மலையாத்தி – Malabar mountain ebony.
12. புளியாத்தி – sour mountain ebony — same as No.11.

Besides Nos 7 and 9 mentioned above, there are also plants, such as நல்ல பூவாத்தி, பசலாத்தி, விளாத்தி etc., though ending in the same term, but belonging to different botanical groups.

[ஆர் → ஆர்த்தி → ஆத்தி. ஆர்தல் = செறிதல், நெருங்கல், நிறைதல். செறிந்த கிளையுடைமை அல்லது நெருங்கிப் பூத்தலுடைமை பற்றி இப்பெயர் பெற்றிருக்கலாம்.]

அரிக்காமரம், அரிநார், ஆர்ச்சி எனப் பலவாறு அழைக்கப்படும் ஆத்தி மரம், பொதுவாக எங்கும் வளரும் சிறிய மரம்; அடர்ந்து கிளைகள் கவிழ்ந்திருக்கும்; மூன்று நரம்புள்ள இதன் இலைகள் சிறிது வட்டமாயிருக்கும். காய்கள் நீண்டு 6 முதல் 12 விதைகளைக் கொண்டிருக்கும். வெண்மை கலந்த இதன் பூக்கள் சிறியவை. பட்டை சிறிது தடித்திருக்கும்; சிறிது கசப்புச் சுவையுடையது. இதன் பிசின் மருந்திற்குதவும். விதை, முந்திரிப் பருப்பைப் போல் சுவையாயிருக்கும்; இலை சுருட்டுப் பிடிக்க உதவும்; பட்டையும் இலையும் வெட்டுப்புண்ணை ஆற்றப் பயன்படும் மருந்து; common mountain ebony. It is known by several names such as, Autty, shining tree. Vana Raja, wild sesban etc.

A small tree; one of the commonest species found grown every where; unarmed and bushy; branches drooping; leaves little roundish and three nerved; legumes long containing from 6 to 12 seeds; growth in gardens and also in forests. Flowers, small, white and scattered; bark is thick and of a reddish brown colour; gum is used medicinally; ripe sees taste like cashew nuts and

are eaten by the people; leaves sometimes used for making cigars.

ஆத்திகேடு ātti-kēḍu, பெ. (n.) சத்துக்கேடு (கதி.அக.); loss of energy.

[ஒருகா. அத்து → ஆத்து → ஆத்தி. அத்து = நெருக்கம், வலிமை, ஆற்றல். கேடு = கெடுதல். கெடு → கேடு.]

ஆத்தி சீரடம் ātti-šīraḍam, பெ. (n.) பூநீறு; an efflorescent salt collected on the soil of fuller's earth (சா.அக.).

[ஒருகா. அளத்து + சிறு + அளம் = ஆத்து சீரளம் → ஆத்திசீரடம். அளம் = உவர்மண், உப்பு.]

ஆத்திசூடி ātti-šūḍi, பெ. (n.) 1. ஆத்திமாலை சூடிய கடவுள், சிவன்; Šiva, since wearing the garland of ātti flowers. 2. ஒளவையார் இயற்றியதும் 'ஆத்திசூடி' என்று தெய்வவாழ்த்துடன் தொடங்குவதும், அகரவரிசையில் அமைந்ததுமாகிய அறநெறி புகட்டும் சிறுநூல்; little book of aphorisms written by Avvaiyār, commencing with words beginning with letters in their order in the Tamil alphabet, so called from the opening word ஆத்திசூடி, the invocation of Šiva with which the work begins.

[ஆத்தி + சூடி → ஆத்திசூடி = ஆத்தி மாலை சூடிய கடவுள், ஆத்திசூடியாகிய சிவனை வழுத்திப்பாடும் முதலடியையுடைய நூல். ஆத்திசூடி – அன்மொழித் தொகை.]

ஆத்திசூடி வெண்பா āttišūḍi-veṇbā, பெ. (n.) ஆத்திசூடி நூலிலுள்ள அறநெறியை ஈற்றடி தோறும் கொண்டு வெண்பா யாப்பில் இராமபாரதி என்பவரால் பாடப்பட்ட நூல்; poem in the veṇbā meter written by Irāmabhārati, in which each stanza ends with an aphorism of the Ātti-šūḍi.

[ஆத்திசூடி + வெண்பா.]

ஆத்திட்டி āttiṭṭi, பெ. (n.) நீர்முள்ளி; a species of Hygrophila (சா.அக.).

[அளத்து + இட்டி. அளத்திட்டி → ஆத்திட்டி. இல் → இள் → இட்டி (முள், கூர்மை.]

ஆத்திமைக்காலி āttimai-k-kāli, பெ. (n.) வெண்கருங் காலி; egg-fruited ebony (சா.அக.).

[ஆத்தி + மை + காலி = ஆத்திமைக்காலி. மைக்காலி = கருங்காலி. மை = கருமை.]

ஆத்தியன் āttiyan̲, பெ. (n.) சிவன் (கதி.அக.); Lord Šiva.

[ஆத்தியன் = ஆத்திமாலை சூடிய சிவன்.]

ஆத்திரக்காரன் āttira-k-kāran̲, பெ. (n.) விரைவு காட்டுபவன் (அவசரக்காரன்); over-anxious person, one who is impatient. "ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு" (பழ.).

[ஆத்திரம் + காரன் = ஆத்திரக்காரன்.]

ஆத்திரம் பார்க்க; see **āttiram.**

ஆத்திரம் [1] āttiram பெ. (n.) இஞ்சி; undried ginger **Skt.** ārdraka.

[அத்திரதம் → ஆத்திரதம் → ஆத்திரம். அத்திரம் = இஞ்சி. இரதம் = சாறு. அத்து = சேர்தல். அத்திரம் = சாறுள்ளது, இஞ்சி.]

ஆத்திரதம் பார்க்க; see **āttiradam.**

ஆத்திரம் [2] āttiram, பெ. (n.) 1. பரபரப்பு; impatience, eagerness, haste. "ஆத்திரம் வந்தவர் போலலையாமல்" (தாயு.பாயப். 59). 2. சீற்றம் (கோபம்); quick of temper. உனக்கு ஏனிப்படி ஆத்திரம் வருகிறது (உ.வ.). "ஆத்திரப் பட்டவனுக்கு அப்போது இன்பம்" (பழ.).

ம. ஆத்திரம்; **க., பட.** ஆத்தர; **தெ.** ஆத்ரமு; **Skt.** ātura **து.** ஆதுர; **கொ**;ஆதுர்; Nep. aturi. Mar.ātura

[அலைத்திரம் → அலத்திரம்–ஆத்திரம். அலைதல் = பரபரப்புற்றுச் செயற்படுதல், விரைவு காட்டுதல், எரிச்சலுறுதல், சீற்றங் கொள்ளுதல். அலைத்திரம் பார்க்க; see alai-t-tiram.]

வடமொழியில் ஆத்திரம் என்னும் சொல்லை ஆ – துர எனப் பிரித்து வேர்மூலம் காட்டுவர். 'ஆ' பொருளில்லாத முன்னொட்டு. துர – வருத்தம், நோய். திரவிடமொழிகளில் இச்சொல் துன்பம், நோய் என்னும் பொருள்களில் ஆளப்படாமல் விரைவு, பரபரப்பு, சீற்றம் என்னும் பொருள்களில் ஆளப்படுதலாலும், தமிழ் வேர்ப்பொருளே இச் சொற் பொருளை மொண்டு நிற்றலாலும் தமிழிலிருந்து இச் சொல் வடமொழியில் கடன் கொள்ளப் பட்டிருக்கிறது என அறியலாம்.

ஆத்திரமூலம் āttira-mūlam, பெ. (n.) அரத்தத்தினாலும் பித்தத்தினாலும் பிறந்து, எப்பொழுதும் அரத்தக் கசிவை யுண்டாக்கிவரும் ஒருவகை மூலநோய்; a kind of bleeding piles due to the deranged blood and bile in the system.

[அரத்த + மூலம் = அரத்தமூலம் → ஆத்திரமூலம் (கொ.வ).]

ஆத்திரையன் பேராசிரியன் āttiraiyan̲-pērāširiyan̲, பெ. (n.) தொல்காப்பியப் பொதுப்பாயிரஞ் செய்த

ஆசிரியர் (தொல்.பொருள்.653, உரை); author of the preface to the Tolkāppiyam.

[ஆ+திறை-ஆத்திறை(ஆனிரைகளுக்கான வரி). ஆத்திறை → ஆத்திரை (திரிபு). ஆத்திரையன் + பேராசிரியன். இவர் வரித்தண்டலராய் இருந்த வராக லாம்.]

ஆத்திறைப்பாட்டம் āttirai-p-pāttam, பெ. (n.) கால் நடை வரி; tax on cattle – (I.M.P.cg. 135).

[ஆ + திறை + பாட்டம் – ஆத்திறைப்பாட்டம். ஆ = ஆனிரை, கால்நடைகள். திறை = வரி. படு → பாடு → பாட்டம். பாட்டம் = வரி கட்டவேண்டிய காலம். திறைப் பாட்டம் = குறிப்பிட்ட காலத்திற்குரிய வரி. பாட்டத் திறை என்பது திறைப்பாட்டம் என இலக்கணப் போலியாயிற்று.]

ஆத்தின்னி āttinni, பெ. (n.) ஆவினைத் தின்பவன்; beef–eater. "புலையாத் தின்னி போந்ததுவே" (திருக்கோ. 386).

[ஆ + தின்னி – ஆத்தின்னி. தின்னி = தின்பவன்.]

ஆத்தினி āttini, பெ. (n.) வெருகன் கிழங்கு; plant Arum Macrorhison (சா.அக.).

*[ஆத்திக்கனி → ஆத்தினி. **ஆத்திக்கனி** பார்க்க; see **ātti–k–kani**.]*

ஆத்துக்காரர் āttu–k–kārar, பெ. (n.) 1. வீட்டுக் குரியவர்; owner of the house. 2. கணவன் (பிராம.); husband (Brahm.).

[அகம் + அத்து + காரர் = அகத்துக்காரர் → ஆத்துக்காரர். அகம் = வீடு. அகத்துக்காரர் = வீட்டுக்குச் சொந்தக்காரர், வீட்டின் தலைவர்.]

ஆத்துக்காரி āttu–k–kāri, பெ. (n.) 1. வீட்டுக் குரியவள் (பிராம.); woman who owns the house (Brahm.). 2. மனைவி (பிராம.); wife (Brahm.).

[அகம் + அத்து + காரி = அகத்துக்காரி → ஆத்துக்காரி. அகம் = வீடு. அகத்துக்காரி = வீட்டுக்குச் சொந்தக்காரி, வீட்டின் தலைவி, இல்லாள்.]

ஆத்துக் கொம் பொதியமரம் āttu–k–komb–odiya–maram, பெ. (n.) **ஆட்டுக்கொம்பொதி** பார்க்க; see āttu–k–kombodi

ஆத்துச்சங்கிலை āttu–c–cangilai, பெ. (n.) **ஆற்றுச் சங்கிலை** பார்க்க; see **arru—c—cangilai.**

ஆத்துப்பாசி āttu–p–pāsi, பெ. (n.) **ஆற்றுப்பாசி** பார்க்க; see **ārru—p—pāsi.**

ஆத்துமுள்ளங்கி āttu mullangi பெ. (n.) **ஆற்றுமுள்ளங்கி** see **ārru–mullangi.**

ஆத்துமுள்ளி āttu–mulli, ,பெ. (n.) **ஆற்றுமுள்ளி** பார்க்க; see **ārru–mulli.**

ஆத்துவாஞ்சி āttu–vānji, பெ. (n.) **ஆற்றுவஞ்சி** பார்க்க; see **ārru–vanji.**

ஆத்தூர் சம்பா āttūrsamba, பெ. (n.) ஒரு நெல் வகை; a kind of paddy (A.).

[ஆற்றூர்=ஆத்தூர் + சம்பா=ஆத்தூர் சம்பா = ஆத்தூரில் விளையும் சம்பா நெல்வகை. சம்பு = நெல். சம்பு → சம்பா.]

ஆத்தை[1] āttai, பெ. (n.) ஆத்தாள், தாய்; mother. 'ஆத்தை படுகிற பாட்டுக்குள்ளே மகன் மோருக்கு அழுகிறான்' (பழ.).

ம. ஆத்தோள்.

[ஆத்தாள் → ஆத்தை (விளி).]

ஆத்தை[2] āttai, இடை. (int.) வியப்பு, அச்சம், இரக்கம் ஆகிய உணர்வுகளை வெளிப்படுத்தும் இடைச் சொல்; exclamation expressive of surprise, fright or pity.

[ஆத்தாள் → ஆத்தை. ஆத்தாள் = தாய்.]

ஆதகு ādagu, பெ. (n.) கூந்தற்பனை; Indian sago-palm. It is so called from its numerous long and thin spadices. (சா. அக.).

[ஆதம் + கூந்தல் – ஆதகூந்தல். ஆதகூ → ஆதகு. ஆதம் = கூந்தற்பனை.]

ஆதகேரகம் ādakeragam, பெ. (n.) மாட்டுக்குளம்படி என்னும் கொடி; creeper, the leaves of which resemble the impressions of the hoof of cattle. (சா.அக.).

[ஆ + த + கேரகம். ஆ = மாடு. கேரகம் = குளம்படி. ஆ → ஆத = ஆவினுடைய (திரவிடத்திரிபு). குளகம் →கிடகம் →கேடகம் →கேரகம் (திரவிடத் திரிபு).]

ஆதண் ādan, பெ. (n.) 1. நோய்; disease. 2. வருத்தம்; affliction, suffering. (சா.அக.).

[ஆதன்[5] → ஆதண் (கொ.வ.).]

ஆதம்[1] ādam, பெ. (n.) உயிர்; life (சா.அக.).

[ஆதன் → ஆதம்.]

ஆதம்[2] ādam, பெ. (n.) 1.கூந்தற்பனை; a kind of palm tree, 2.சந்தனமரம்; sandal wood tree. (சா.அக.).

[அதவு (நெருங்கு) → அதவம் → ஆதம் (கூந்தற் பனை) மணமிகுதியால் சந்தனத்தைக் குறித்தது.]

ஆதம்[3] ādam, பெ. (n.) அன்பு; regard, solicitude "ஆதமெய்திநின் றஞ்சலித் தேத்தியே" (கந்தபு. திருக்கல்யா.11).

[ஆர்த்தம் → ஆர்தம் →ஆதம்.]

ஆதம் [4] ādam, பெ. (n.) காப்பு, பேணுதல் (ஆதரவு); prop,stay, protection. "ஆதமிலி நாயேனை யல்லலறுத் தாட்கொண்டு" (திருவாச.31,5).

[ஒருகா. ஆர் + தரம் = ஆர்தரம் → ஆதரம் → ஆதம். தரல் → தரன் → தரம் .]

ஆதர் ādar, பெ. (n.) 1. குருடர்; the blind. 2. அறிவில்லாதவர்; the ignorant. 3. ஊமணி; fleshy protuberance hanging down the neck of goat.

[அதள் = தோல், மேற்றொலி. அதள் →அதல் → அதர் → ஆதர் = உள்ளீடில்லாமல் மேற்றோல் மூடிய பொய்த்தோற்றம்.]

ஆதரணை ādaraṇai, பெ. (n.) 1. காத்தல், புரத்தல், உதவுதல்; support, shelter, help. "கை தூக்கி ஆதரணை செய்யும்" (கந்தபு. சீர். 31, 18).

[ஆர் + தரணை = ஆர்தரணை → ஆதரணை.]

ஆதரம் ādaram , பெ. (n.) அன்பு , ஆசை (திவ். திருமாலை, 16); regard, love, affection, kindness, respect. "தேங்கிய காதர ஆதரம் செப்பி" (தஞ்.வா.கோ.) 2. ஆசை (சூடா.); desire. 3. மதித்துப் பேணுதல்; honour, hospitality. "ஆதரங்கள் பெருக்கினார்" (கோயிற்பு. இரணிய.95).

Skt. ādara.

[ஆர் + தரம் = ஆர்தரம் → ஆதரம். ஆர்தல் = மனம் நிறைதல், அன்பு. தரம் = நிலைமை.]

வடமொழியிலுள்ள ஆதர என்னுஞ் சொல்லை ஆ +தர எனப் பிரித்து வேர் காட்டுவர். 'ஆ' பொருளில்லாத முன்னொட்டு தர →த்ரு = உடைத்தல், பிளத்தல். வடமொழி வேர்மூலம் அன்பு,ஆசை போன்ற பண்புப் பெயர்களுக்குப் பொருந்தாமையும் தமிழ்ச்சொல்லே வடமொழியில் கடன் கொள்ளப்பட்டிருத்தலையும் சொல்லினமைப்பு விளக்கிக் காட்டுகிறது.

ஆதரவு ādaravu, பெ. (n.) 1. அன்பு (கந்தபு. மார்க்கண். 21) ; love, affection, kindness. 'ஆதரவற்ற சொல்லும் ஆணிகடவாத மரமும் பலன் செய்யா (பழ.). 2. உதவி; support, patronage. 3. தேற்றுதல்; comfort, consolation.

ம., **தெ**. ஆதரவு ; **க**. ஆதர.

[ஆர் + தரவு → ஆர்தரவு → ஆதரவு. ஆர் = நிறைவு, அன்பு]

ஆதரவுச்சீட்டு ādaravu-c-cīṭṭu, பெ. (n.) பற்றுச்சீட்டு; voucher.

[ஆதரவு + சீட்டு.]

ஆதரி-த்தல் ādari –, 11. செ. குன்றாவி. (v.t.) 1. பாதுகாத்தல்; to support, protect, patronize (W.). 2. அன்புடன் பேணுதல், பரிந்தோம்புதல்; to treat with regard or kindness, to extend hospitality, to show honour to. 3. ஆசைபொழிதல்; to favour. "அடியேனாதரித் தழைத்தால்" (திருவாச. 29,4).

ம. ஆதரிக்குக; **க**. ஆதரிசு; **தெ**. ஆதரின்சு. ஆதலி–த்தல் பார்க்க; see ādali.

[ஆதலித்தல் →ஆதரித்தல். ஆதலித்தல் = ஆகச் செய்தல், நன்மைபெறச் செய்தல், காத்தல். ஒ. நோ. மூதலித்தல் → மூதரித்தல். ஊதலித்தல் → ஊதரித்தல் ஊதாரித்தனமாகச் செலவு செய்தல். ஊதல் = பறக்கச் செய்தல்.]

ஆகல் → ஆதல். ஆகலித்தல் → ஆதலித்தல். ஒருவனை ஆகச்செய்தல் (ஆகலித்தல்) என்பது வளரச்செய்தல், வளரத்தக்க சூழலமைத்துக் கொடுத்தல், பாதுகாத்தல் எனப் பொருள்படும்.

ஆதல் [1] ādal, பெ. (n.) 1. ஆகுதல்; becoming; happening. "நயனுடையான் நல்கூர்ந்தான் ஆதல்" (குறள். 219). 2. நூல் (அக.நி.); book, treatise. 3. மேம்பாடு; prosperity. "அருளற்றார் மற்று ஆதல் அரிது" (குறள்.248). 4. நன்மை; goodness. "ஆதல் நின்னகத் தடக்கி" (புறநா. 91.).

[ஆகுதல் → ஆதல். ஆதல் = செய்யப்பட்ட நூல்.]

ஆதல் [2] ādal, பெ. (n.) ஆசை (அக.நி.); desire.

[ஆர்தல் →ஆதல்.]

ஆதல் [3] ādal, பெ. (n.) 1. காட்சி, தோற்றம்; vision (R.), sight.

[ஆல் + தல் → ஆதல் = பார்த்தல். க. ஆல் = பார். த. ஆல் = பொருந்துதல், உள்ளத்தைப் பார்வையாற் பொருத்தும் காட்சி.]

ஆதல் [4] ādal, பெ. (n.) நுணுக்கம்; minuteness (R.).

[ஆய்தல் → ஆதல் = நுணுக்கம். ஆய்தல் = நுணுக்கம்.]

ஆதல் [5] ādal, பெ. (n.) கூத்து (அக.நி.); dance.

[ஆடல் → ஆதல், ட → த திரிபு. ஒ.நோ: கடவு → கதவு]

ஆதல் [6] ādal, பெ (n.) தெரிதல்; selecting.

[ஆய்தல் → ஆதல். ஆய்தல் = தெரிந்தெடுத்தல், ஆராய்தல்.]

ஆதல் [7] ādal, இடை. (conj.) ஆவது எனப்பொருள் படும் இடைச்சொல்; conjunction which means 'or'. "பொருந்துமோர் துலாத்தினாத லரைத்துலாம் பொன்னினாதல் ... தகடு செய்தே" (கூர்மபு. தான. 65.).

[ஆகுதல் = ஆதல். ஆதல் என்னுந் தொழிற் பெயர் கூட்டுச் சொற்களின் பின்னீறாய போது இடைச் சொல்லாயிற்று.]

ஆதலால் ādalāl, வி.எ. (adv.) அப்படியிருத்தலால் (திவ்.பெரியதி. 5,8,8.); therefore, because of that. "ஆதலால் இராமனுக்கு அரசை நல்கி" (கம்ப. அயோத்.மந்.33.).

ம. ஆதலால்.

[ஆகுதல் → ஆதல் + ஆல் → ஆதலால் = ஆதலின் பொருட்டு, ஆகின்ற செயலால் அல்லது காரணத்தால்.]

ஆதலி—த்தல் ādali, 11 . செ.குன்றாவி. (v.t.) 1. ஆகச்செய்தல்; உதவுதல்; to favour, to help for betterment. 2. துன்பத்தில் உதவுதல்; to support, in distress 3. காப்பாற்றல்; to protect.

[ஆதலித்தல் → (பிறவினை). ஒ.நோ. ஆதலை (யாழ்ப்.) = உதவி. ஆதல் + ஈ = ஆதலீ → ஆதலி (ஆகச் செய்) 'ஈ' – அருள்செய் எனப்பொருள்படும். துணைவினை.]

ஆதலி ādali, பெ. (n.) அத்தி (சா.அக.); fig tree.

[அதவு → ஆதவு → ஆதனி → ஆதலி.]

ஆதலினால் ādalināl, வி.எ. (adv.) **ஆதலால்** பார்க்க; see ādalāl.

[ஆதல் + இன் + ஆல் = ஆதலினால். இன் – சாரியை.]

ஆதலை ādalai, பெ. (n.) உதவி (கதி.அக.); help, assistance.

[ஆதல் + ஐ – ஆதலை = உதவி. ஆதல் = உதவுதல். ஐ – செயப்படுபொருள் பெயராக்க ஈறு.]

ஆதவாழ்பூடு ādavālpūḍu, பெ. (n.) வாலைப்பூ நீர்; solvent liquid obtained by distillation from fuller's earth (சா.அக.).

[ஒருகா. ஆதவாழ்பூடு என்னும் பெயர் கரைப் பானாகிய ஒரு நீர்மத்திற்குக் (திரவம்) குழூஉக்குறியாக இடப்பட்டிருக்கலாம்.]

ஆதளம்பால் ādaḷampāl, பெ. (n.) காட்டாமணக்குப் பால்; milky juice of physic nut plant (சா.அக.).

[ஆதளை + அம் + பால்.]

ஆதளை[1] ādaḷai, பெ. (n.) 1 ஆமணக்கு; castor plant 2. எலியாமணக்கு; adul oilplant. 3.ஏரிக்கரைக் காட்டாமணக்கு; adul oil plant. 4.காட்டாமணக்கு; common physic nut. 5. சீமையாமணக்கு; bronze leaved physic nut.

ம. ஆதளை, ஆதலு; **க.** ஆடலு; **தெ.** ஆடாலு.

[அத்... → அதளை → ஆதளை]

ஆதளை[2] ādaḷai, பெ. (n.) மாதுளை; pomegranate tree (சா.அக.).

[மாதுளை → மாதளை → ஆதளை.]

ஆதன்[1] ādaṉ, பெ. (n.) 1. உயிர் (சா. அக.); life. 2. உள்ளகம், ஆதன், ஆன்மா (திவா); soul.

[ஆதன் = தலைவன். உடம்பினுள் தலைமை யேற்ற உயிரும் ஆதனும் ஆதன் எனப்பட்டன.]

ஆதன்[2] ādaṉ பெ. (n.) 1. அறிவில்லாதவன்; ignorant, person. "முன்பொருள் செய்யாதாராதரே" (சிறுபஞ். 20). 2. குருடன். (திவா.); blindman.

[அதல் = ஆட்டின் கழுத்திலுள்ள பயனற்ற ஊமணி. உதள் → அதள் → அதல். அதல் → அதன் → ஆதன் = பயனற்றவன், செயலற்ற கண்ணுள்ளவன்.]

ஆதன்[3] ādaṉ, பெ. (n.) அருகன் (சூடா.); Arhat.

[ஆதன் = தலைவன். தமிழ்நாட்டு அருக சமயத்தவர் தம் தேவனை ஆதன் என்றனர்.]

ஆதன்[4] ādaṉ பெ. (n.) 1. ஆசிரியன் (கதி.அக.); teacher, pedagogue, preacher. 2. மேலோன் noble person. 3. தலைவன், முதலாளி; chief, master.

ம. ஆதன்; **குட.** ஆதன் (முதலாளி)

[அத்தன் → ஆத்தன் → ஆதன். அத்தன் = தந்தை, பெரியோன். ஆதன் = தலைவன். தலைமைமிக்க ஆசிரியன், சான்றோன்.]

ஒரு சொல், ஆசிரியன், தலைவன் எனப் பொருள்படும் சிறப்புப் பெயராகவோ, தந்தை, அண்ணன் எனப் பொருள்படும் முறைப் பெயராகவோ வழக்கூன்றியபின் அது இயற்பெய ராகாது. ஆதலின் ஆதன் என்னும் சிறப்புப் பெயரின் தோற்ற வளர்ச்சியும், ஆதன் என்னும் இயற்பெயரின் தோற்ற வளர்ச்சியும் வெவ்வேறானவை.

ஆதன்[5] ādaṉ, பெ. (n.) 1. மனம்; mind . 2. கவலை, வருத்தம்; sorrow. 3. பெருந்துன்பம் (அக.நி); agony.

தெ. ஆத (மனம், வருத்தம்); **க.** ஆதி (நினைவு, நினைவோட்டம்) **ம.** ஆதி (கவலை); **வ.** ஆதி (வருத்தம், கலக்கம், நோய்); **பிராகி.** ஆகி; **இந்.** யாத்; **உருது.** யாத்; **மரா.** யாத் **பாலி.** ஆடிநவ; **Sinh.** adnawa.

[ஆ → ஆது → ஆதன் ஊ → ஒ → ஆ = முன் செலல், முன்னுறல், நினைத்தல், வருந்தல், நினைக்கும் உள்ளம். ஒ.நோ. முன் → மன் → மனம் . முன்னுதல்= நினைத்தல்.]

ஆதன் என்னும் சொல் முன் செலற் கருத்துடைய ஆகாரச் சுட்டடிப் பிறந்தலான் உள்ளத்தின் கண்ணோடும் எண்ணமும் கவலையும் குறிக்கும் போது உள்ளம், உள்ளத்தின் கண்ணுள்ளதாகக் கருதப்படும் ஆதன் (ஆத்மா), உயிர் ஆகியவற்றையும், எண்ணம், கவலை, வருத்தம் ஆகிய வற்றையும் குறிக்கும்.

ஆதன் என்னுஞ் சொல்லே இந்தி, உருது போன்ற மொழிகளில் 'யாத்' (மனம், நினைவு, வருத்தம்) எனத் திரிந்து வழங்கி வருகிறது.

ஆதன் [6] ādan, பெ. (n.) பழங்கால மக்களின் இயற் பெயர் வகை (தொல். எழுத்.348); proper name in general use in ancient times.

[ஆதன் = முன்னவன், மேலானவன், உயர்ந்தவன், சிறப்பு மிக்கவன்; பெற்றோர் குழந்தைகட்கிடும் இயற்பெயர்.]

ஆதனழிசி, ஆதனுங்கன், ஆதன் ஓரி எனச் சிற்றரசர் பெயர்களிலும் சேரலாதன், செல்வக்கடுங்கோ வாழியாதன் எனச் சேரவேந்தர் பெயர்களிலும் ஆதன் என்பது முன்னடையாகவோ பின்னடையாகவோ ஆளப்பெற்று தொன்றுதொட்டு வழங்கிவருதலானும், ஆதன், பூதன் என்பன இயற்பெயர்களென உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டுதலாலும், இது அறப்பழங்காலத் தமிழ் இயற்பெயர்களுள் ஒன்று எனத் தெரிகிறது. மேலையாரிய மொழிகளிலும் இதனையொத்த ஆதன் என்னும் இயற்பெயருள்ளமை அறியலாம்.

ஆதன் என்னும் இயற்பெயருக்கு ஆ → ஆகு என்பதே முதனிலையாக அமைந்துள்ளது.

ஆகு. L. augere – to increase. இதில் auge என்பதே வினைமுதனிலை. 're' என்பது நிகழ்கால வினையெச்ச (infinitive) ஈறு.

E. augment v.t. and i. make or become greater; increase.

M.E. f. F. **augmenter.** L. L **augmentare,** increase. E. augmentation (n) enlargement, growth, increase.

E. augmentative, n. Having the property of increasing. Gram. of affix or derived word, increasing in force the idea of the original word f.F. augmentatif or L. augmentativus.

ஆ, ஆகு என்னும் இரு முதனிலை வடிவங்களுள் எது முந்தியது என்பது பற்றி, இற்றை நாள்வரை இலக்கண ஆசிரியர்கள் ஒரு முடிவிற்கு வந்திலர். ஆ, ஆகு என்பன போன்றவற்றையே போ, போகு என்றனர்.

"நச்சினார்க்கினியர் நன்னூலார் முதலாயினார் இயற்கை முதனிலை ஆ, போ என்றே இருக்குமென்றார். திருவள்ளுவர், பரிமேலழகர் முதலாயினோர் முதனிலை ஆகு, போகு என்றேயிருக்குமென்றார்" என்பது சுவாமிநாத தேசிகரின் இலக்கணக் கொத்துரைக் குறிப்பு (86, உரை).

போ என்பதன் ஈறு மிகையே போகு என்பது, (புகு → போ → போகு → போது) இங்ஙனமே ஆ என்பதன் ஈறு மிகையாகிய ஆகு என்பதும் இருத்தல் வேண்டும் என்றார் பாவாணர்.

அகைதல் = தளிர்த்தல், செழித்தல். அகு → அகை.

முகு → முகை. அகு → ஆ என மருவுவது இயல்பே.

ஒ.நோ: பகு → பா, மிகு → மீ, அகு → ஆ → ஆகு.

ஆதன், பூதன் இயற்பெயர்களிரண்டும் தோன்றுதல், வளர்தல், செழித்தல் என்னும் பொருளுடைய வேர்ச் சொற்களினின்றே வளர்ந்திருக்கின்றன. பூ = பூத்தல், தோன்றுதல், வளர்தல், செழித்தல், மலர்தல்.

ஆ → ஆது → ஆதல் = தோன்றுதல், வளர்தல், செழித்தல், பூ → பூதன். ஆ → ஆதன், மக்களுட் சிறந்தோனைத் தோன்றலென்றழைப்பதைப் போன்றே ஆதன், பூதன் என்பனவும் சிறப்புக் கருதிய இயற்பெயர்களாயின.

தோன்றுதல், வளர்தல் கருத்து வேர்ச்சொற்கள் முன்வரற் கருத்துடைய உ → உல் என்னும் சுட்டடி மூல வேரிலிருந்து திரிபுற்று வளர்ந்திருப்பதைப் பாவாணர் சுட்டிக் காட்டுகிறார். உ (உல்) → ஊ ⇐ முன்வரற் கருத்துவேர். ஊ → ஒ → ஆ – முன்வரற் கருத்துத் திரிபு வேர். இதனாற்றான் ஆகார நெடிலுக்கும் அதன் குறுக்கமான அகரத்திற்கும் முன்மை, முதன்மைப் பொருள்களுண்டாயின. 'ஆ' உயிர் நெடிலுக்கு முன்மை, முதன்மைப் பொருள் தமிழில் பண்டே இருந்தமைக்குச் சான்றான சொல்லாட்சிகள் திரவிட மொழிகளில் காக்கப்பட்டுள்ளன.

தெலுங்கில் ஆதிகொனு = முற்படு, எதிர்கொள் எனப் பொருள் படுகிறது.

வடபகுதி, தென்பகுதி என்பவற்றை வடதலை, தென்தலை எனக் கூறுகிறோம். இதைப் போன்றே முன்பக்கம், முன்பகுதி என்பவற்றை "ஆதலை" என்னுஞ் செந்தமிழ்ச் சொல் சுட்டுகிறது. குமரிக்கண்ட காலத்தில் இச்சொல் பெருவழக்குப் பெற்றதாகல் வேண்டும். இஃது இன்றும் மறையாமல் குடியேற்றப் பாதுகாப்புச் சொல்லாகச் (colonial preservation) கன்னட மொழியில் வழங்கிவருகிறது. கன்னடப் புலவன் பம்பன் இயற்றிய பம்ப இராமாயணத்தில் "ராஜசிஹ்ன பாலித்வஜ சங்குலமும் படகமும் ஆதலெயொள் பரெ வஜ்ரபாகு பயணம் பந்தம்" (பம்பரா. 2–12), என்று கூறப்பட்டுள்ளது. வச்சிரவாகு பயணம் சென்றபோது போர்ச் சின்னங்கள் ஆதலையில் (முன்பக்கம், முன்னால்) சென்றன என்று இப்பாடல் குறிப்பிடுகிறது. வடமொழி, பாலி, பிராகிருதம் ஆகிய வடபுலமொழிகளில் 'ஆ' முன்னொட்டு முன்செலற் கருத்திலேயே ஆளப்பட்டுள்ளது.

Skt., pkt., pali. ā – to, towards.

ā— kula mixed up. ā – **rava** make noise.

ā—lingana embrace.

ஆ – முன்மையும் முதன்மையும் சுட்டிய சொல் லாதலின், ஆ → ஆது → ஆதன் (முன்னவன், தலைவன்) தலைமைப் பொருள் தரும் செந்தமிழ்ச் சொல் என்று தெளிவாகிறது. இதனை அறியாதார் இதனை 'அர்ஹத' என்னும் வடசொல்லின் சிதைவாக்கிக் கூறுவர்.

ஆதன் என்னும் இயற்பெயரும், அப்பெயரடியாகத் தோன்றிய ஆதனூர், ஆதமங்கலம் என்னும் இடப்பெயர் களும் தமிழ்நாட்டில் மிகுதியாக இன்றும் காணப்படுதல் போன்றே ஏனைத் திரவிட மொழிகளிலும் காணப்படுகின்றன.

இயற்பெயர்: **ம.** ஆதன்; **க.** ஆத, ஆதப்ப, ஆதய்ய;

து. ஆதப்ப; **தெ.** ஆதிகான், ஆதிகாடு.

இடப்பெயர்: ம. ஆதனூர்; **க.** ஆதனூரு, ஆதிபுர,

ஆதவனி (ஆதனவினி). (ஆதனவினி → ஆதன் அவினியின் பெயராலமைந்த ஊர்);

தெ. ஆதோனி.

ஆதன் ஆண்பால் இயற்பெயராய் வழங்கி வந்தது போன்றே, ஆதி பெண்பால் இயற்பெயராய் வழங்கி வந்துள்ளது. சோழன் கரிகாற் பெருவளத்தானின் மகள் ஆதிமந்தி. ஆதி = மூத்தவள், முன்னவள்.

காலத்தால் முன்மை, சேய்மை சுட்டிய 'ஆ' நெடுஞ் சுட்டடியிலிருந்து ஆதன் இயற்பெயர் தோன்றியதென்பர் சிலர். ஆதன் போன்று ஈதன் என அண்மைச் சுட்டடியாகப் பெயர்ச்சொல் தோன்றாமை அறிக. முன்னுறல், வளர்தல் செழித்தல் கருத்துடைய 'ஆ' (அகு – ஆ) வேரிலிருந்து 'ஆதன்' பிறந்ததாகக் கொள்வதே ஏற்புடைத்து.

எனவே, இது பண்புகொள் பெயர்.

பாலறிவந்த உயர்திணைப் பெயர்களைக் குறிப்பிடுங்கால்,
"நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெயர், உடைப்பெயர் பண்புகொள் பெயரே
பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே
கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரே
இன்றிவ ரென்னும் எண்ணியற் பெயரொடு
அன்றி யனைத்தும் அவற்றியல் பினவே"

(தொல்.சொல்.165)

பண்புகொள் பெயரெனவும் முறை நிலைப் பெயரெனவும் தொல்காப்பியர் சுட்டுவன, ஆதன் என்னும் இயற்பெயருக்கும் ஆதன் → ஆத (விளி) என்னும் முறைப்பெயருக்கும் பொருந்திவருதலைக் காணலாம்.

இயற்பெயர் – ஆதன் (முன்னவன், முதன்மையான வன்)
– பண்புகொள் பெயர்.

முறைப்பெயர் – ஆதன் (அத்தன் → ஆத்தன் → ஆதன்)
தந்தை போல்வான், தலைவன். – **முறை**
– **நிலைப்** பெயர்.

இம் முறைப்பெயர் நாளடைவில் சிறப்புப்பெயராக ஆளப்பட்டு வருகிறது.

ஆதன் 7 ādaṉ, பெ. (n.) மாந்தன்; man.

H. ādmi, **U.** ādmi; āsāmid; **Heb.** Ādam; **Cir.** Ādam; **Jap.** hito.

[ஒருகா. ஆள் → ஆளன் → ஆடன் → ஆதன்.]

இந்தி உருது மொழிகளில் ஆத்மி, ஆசாமி எனவும், எபிரேயம், சிர்கேசியன் மொழிகளில் ஆதம் எனவும், சப்பானியத்தில் இதோ எனவும் மாந்தனைக் குறிக்கும் சொற்கள், ஆதன் என்னும் தமிழ்ச் சொல்லையொத்து வழங்கிவருதல் கவனித்தற்பாற்று. மன், மந்து எனும் சொற்கள், மாந்தனுக்கும் வேந்தனுக்கும் பொதுவாய் பண்டுதொட்டே வழங்கிவருதல் போன்று இச் சொல்லாட்சியும் மாந்தனையும் தலைவனையும் குறிக்கும்.

மாந்தனைக் குறித்த பழந்தமிழ்ச் சொல்லான ஆதன் கன்னடத்தில் ஆத (āta–), ஆதனு ātanu (அவன்) என ஆண்பாற் சுட்டுச் சொல்லாகவும் தமிழில் தான், தன் எனத் தற்சுட்டாகவும் குறைந்து உருமாறி விட்டது.

ஆதன் 8 ādaṉ, பெ. (n.) 1. உடம்பு; body. 2. தான்; self.

ம. தை (இளங்கன்று, தென்னங்கன்று போன்ற மரநாற்று).

க., தெ. ஆத்ம (உடம்பு, தான்) ***சீன.*** தாய் (கரு, வளரும் பரு, ஈனுதல்).

Skt. தனு (உடம்பு) **pali., pkt.** தனு (உடம்பு).

Skt. ātman (self); **Sinh.** ātmaya; **pali.** attan (self, body); **pkt.** atta (self, soul, body).

*[ஆ → ஆது → ஆதன். ஆ =முன்னுறல், வளர்தல். ஆதன் வளர்ந்த உடம்பு. ஆதன் → ஆது → ஆதை → ஆதய் → தாய் → தய் → தை. ஒ.நோ: **ம.** தை. ஆதன் → தான்.* Skt. *தனு (உடம்பு). ஆதன் உடம்பைக் குறிக்குங்கால் தற்சுட்டாகி தான்* (self) *எனவும் பொருள்தரும். ஆதன்* Skt. > *ஆத்மன் **த.** ஆத்மா, ஆன்மா.]*

ஆத்மன் (ஆத்மா) என்னும் சமற்கிருதச் சொல்லின் மூலம் தெளிவாகத் தெரியவில்லை யென்று மானியர் வில்லியம்சு திட்டமாகத் தெரிவிக்கிறார்.

Skt. ātman (fr. rt. an. to breathe or **at,** to go; or according to some, fr. rt. **ah** and connected with **aham,** I; or according to them, a contraction of **avatman** fr. rt. av. vā; but the existence of the old Vedic form **tman** makes all these etymologies doubtful); the breath, soul, the principle of life and sensation, the individual soul, the self, the abstract individual. (ātmanam sa hanti – she strikes herself) the person or whole body, mind, intellect, effort, pains, sun, fire, wind, air.

Goth. ahma, **OG.** atum, **Them,.** atuma, **As.** aedhm (knowledge), adhma (knowing (Gr...atma is used at the end of some compounds of atman.

(S.E.Dict. Monier Williams).

தமிழ், ஆரியம் வருமுன் சிந்து வெளி வரை பேசப்பட்ட செம்மொழியாதலால், வட இந்திய மொழிகளின் மூலத்தாய் மொழியாகிய பிராகிருதத்தில் ஆதன் என்னும் சொல் ஆத்த, ஆத என்று மிகத் தெளிவாகவும், பாலி மொழியில் அத்தன் என்றும் சமற்கிருதத்தில் ஆத்மன், ஆத்மா என்றும் வழங்கிவருகிறது. கீழை மேலையாரிய மொழிகளான கோதிக்கம், பழஞ்செருமானியம், கிரேக்கம், இலத்தீனம் போன்றவற்றிலும், கீழை மொழிகளான சப்பான் சீன மொழிகளிலும் இதன்

வேர்மூலம் பரவியுள்ளதால் இதனைத் தொன்முது தமிழின் முன்முது அடிப்படையாகக் கொள்ளலாம். சமற்கிருதத்தில் உயிரைச் சுட்டிய பின் உயிர்த்தல் (மூச்சுவிடல்) பொருளும், மனத்தைக் குறித்தபின், அறிவுடைமை, கவலை, துன்பம், துன்பந்தரும் வெயில், சூரியன், தீ, காற்று போன்ற வழிநிலைப் பொருள்களும் தோன்றியிருத்தல் வேண்டும். இவை வெறும் பொருட்புடைபாடேயன்றி மூல வேர்ப்பொருளின எனக் கொள்ளவியலா.

பிராகிருத பாலி மொழிகளில் ஆதன் என்னும் வலி யிரட்டித்து ஆத்த, (āta), **அத்தன்**, என வழங்குவதும், சமற்கிருதத்தில் ஆத்மன் என வழங்குவதும் இச்சொல்லின் முதனிலை ஆகார (ஆ → ஆகு → ஆது) நெடிலே என்பதை உறுதிப்படுத்தப் போதிய சான்றாகும். பகுத்தல் — பாத்தல் (பிரித்தல்) ஆயவாறு, அகுத்தல் — ஆத்தல் (அகு = தோன்றல், வளர்தல்) ஆயிற்றென்க.

கன்னட இலக்கியங்களில் ஆத்த சங்கர (உண்டாகிய போர்), ஆத்தோதய (உண்டாகியபிறப்பு), ஆத்தபல (உண்டாகிய வலிமை) என்னுஞ் சொல்லாட்சிகள் (ஆத்த) ஆகிய, தோன்றிய, வளர்ந்த என்னும் பொருள்களில் ஆளப் பெற்றிருப்பதைக் காணலாம். நெடுமுதல் ஒரெழுத்தொருமொழியான வினைகள் ஆ → ஆத்து (ஆகு) எனத் தகரவல்லொற்றிரட்டித்தல் குடகு மொழியிலும் உள்ளது. வா = வந்தான் என்னும் தமிழ் இறந்தகால வினைமுற்று குடகு மொழியில் பா (bā) → பாத்து (bāttu) என வழங்கி வருகிறது. இவற்றைக் கூர்ந்து நோக்குங்கால் வட இந்திய மொழிகளில் ஆத்மன், ஆன்மா, ஆத்மி, யாத், தனு எனப் பல்வகை வடிவ மாறுதல்களையும், பொருள் வேறுபாடுகளையும், ஆதன் என்னும் மூலச்சொல் பெற்றுள்ளதை அறியலாம்.

ஆதன் அவினி ādaṉ-aviṉi, பெ. (n.) கடைக் கழகக் காலப் பெருமகன்; ஐங்குறுநூறு 1–10ல் பாடப் பட்டவன்; sangam noble.

[ஆதன் + அவினி. அவல் = தாழ்நிலம். அவல் → அவனி → அவினி = தாழ் நிலப்பகுதியின் தலைவன். ஒ.நோ. குட்டன்.]

ஆதன்அழிசி ādaṉaḻiši, பெ. (n.) கடைக்கழகக் காலப் புரவலன்; புறம் 71 –ல் பாடப்பட்டவன்; sangam noble.

[ஆதன் + அழிசி. அழி = கழிமுகம். அழிசி = காயல் அல்லது ஆறுகடலொடு கலக்கும் கழிமுகப் பகுதியின் தலைவன்.]

ஆதன்மை ādaṉmai, பெ. (n.) பேதமை; folly. "ஈவதஃதாதன்மை" (நீலகேசி.214).

[ஆது → ஆதன் → ஆதன்மை]

ஆதன்மையால் ādaṉmaiyāl, வி.எ. (adv.) ஆகையால்; therefore. "ஆதன்மையா லதுவே நம துய்விடம்" (திவ்.பெரியதி.2,4,9).

[ஆ + தன்மையால் – ஆத்தன்மையால் → ஆதன்மையால். அ → ஆ, சுட்டு நெடு முதலாயிற்று.]

ஆதனம் ādaṉam, பெ. (n.) நீளுதல்; (in anatomy) diastole. (சா.அக.).

[ஒருகா. அதர் = வழி, நீண்ட பாதை, அதர் → அதரம் → அதனம் → ஆதனம்.]

ஆதனுங்கன் ādaṉuṅgaṉ, பெ.(n.) கடைக் கழகக்கால அரசர்களில் ஒருவன்; புறம் 175,389–ல் பாடப் பட்டவன்; sangam noble.

[ஆதன் + உங்கன் உ → உல் → உங்கு → உங்கன் = உயர்ந்தவன், சிறந்தவன்.]

ஆதனெழினி ādaṉeḻiṉi, பெ. (n.) கடைக்கழகக் காலத்தில் வாழ்ந்தோன்; அகம் 216–ல் பாடப் பட்டோன்; sangam noble.

[ஆதன் + எழினி. எழில் → எழினி.]

ஆதனோரி ādaṉōri, பெ. (n.) கடைக் கழகச் சிற்றர சர்களுள் ஒருவன்; sangam noble.

[ஆதன் + ஓரி. ஊ → ஓ → (உயர்வு, தலைமை) → ஓரி]

ஆதாபாதை ādābādai, பெ. (n.) விரைவுக்கோலம், மிகுந்த விரைவு கருதி அரைகுறையாகச் செய்யும் பணி; occasion of urgency, hasty work. இப்படி ஆதாபாதையாய் வேலை செய்யக்கூடாது (உ.வ.).

[அதைபதை → ஆதாபாதை. அதைபதை → விரைவு கருதிய எதுகை மரபிணைச் சொல். அதை பதை பார்க்க; see adai padai.]

ஆதாபாதையாக ādābādai–y–āga, வி.எ. (adv.) விரைவுக்கோலத்தில்; in a state of urgency, hurriedly. எல்லாம் ஆதாபாதையாகச் செய்து முடித்து விட்டான். (உ.வ.).

[அதைபதையாக → ஆதாபாதையாக. அதை பதை பார்க்க; see adaipadai.]

ஆதாயஞ்செலவு ādāyañ–celavu, பெ. (n.) வரவுசெலவு; income and expenditure.

*[ஆதாயம் + செலவு **ஆதாயம்**[1] பார்க்க; see* **ādāyam.**]

ஆதாயப்பங்கு ādāya–p–pāṅgu, பெ. (n.) ஊதிய (இலாப)ப் பங்கு (புதுவை); dividend (Pond.). share in profit or income.

[ஆதாயம் + பங்கு.]

ஆதாயம்[1] ādāyam, பெ. (n.) 1. ஊதியம், கிட்டுபடி (இலாபம்); profit, gain., income "வணிகருக் காதாய மீது நினைவு" (குமரே. சத. 9). 2. நன்மை (கதி. அக.); benefit. "ஆதாயம் பெருகினால் ஆணவம் பெருகும்". 3. வரவு; income. "ஆதாயமில்லாமல் செட்டி ஆற்றோடே போவானா?" (பழ.).

க., து., பட. ஆதாய; **ம.** ஆதாயம்.

[ஒருகா. ஆகு + ஆயம் → (ஆது + ஆயம்) → ஆதாயம். ஆயம் = கூடுதல், தொகை. ஆதாயம் (ஆகு +

ஆயம்) தமக்காகிய கூடுதல் தொகை, ஊதியம் (இலாபம்) ஆகு →ஆது. ஒ. நோ: போகு →போது.]

ஆதாயம் [2]ādāyam, பெ. (n.) (கணி.) எழுவோரைக்குப் (இலக்கினத்திற்கு) பதினோராமிடம் (சங்.அக.); (Astr) eleventh house from the ascendant. (சா.அக.).

ஆதாயவரி ādāyavari, பெ. (n.) வருமானவரி; income tax.

க. ஆதாயகர; ம. ஆதாயனிகுதி.

[ஆதாயம் + வரி.]

ஆதாரக்கம்பி ādāra-k-kambi, பெ. (n.) சுவரின்மேற் போடும் சரப்பலகை (சென்னை); wall plate (Madr.).

[ஆதாரம் + கம்பி.]

கம்பி = நீண்ட வடிவிலுள்ளது. கொம்பு →கம்பு →கம்பி. கம்பி = இரும்பாலான கம்பி மட்டுமின்றி மரத்தாலான நீண்ட கம்பும் கம்பி என இட வழக்காக வட தமிழகத்தில் சிற்சில விடங்களில் வழங்கும். கழைகளை அல்லது குறுமரத்தடிகளை இணைத்துக் கிணற்றின் நடுவில் அல்லது மேல் நின்று பூச்சு வேலை செய்வோர் அமைத்துக் கொள்ளும் இருக்கை ஆதாரக் கம்பி எனப் பட்டது. நாளடைவில் சிறு மரப்பலகைகளைக் கட்டி இணைத்த இணைப்பும் ஆதாரக்கம்பி எனப்பெயர் பெறுவ தாயிற்று.

ஆதாரக்கல் ādāra-k-kal, பெ. (n.) கற்படிமத்தைத் தாங்கும் அடிக்கல்; pedestal of stone on which a stone idol is fixed (W.).

[ஆதாரம் + கல்.]

ஆதாரக்கோவை ādāra-k-kōvai, பெ. (n.) கொல்லன் கோவைக் கொடி; இதன் அடிப்பகுதி வழ வழப் பாயிருக்கும்; கணுக்களில் வளையுந் தன்மை யுண்டு; இலைகள் சற்றே சதைப் பற்றுள்ளவை களாயும், காம்புகள் நீளமானவைகளாயும், மூன்று பகுப்பினவாயும், இருபக்கமும் சொரசொரப்பும் அரும்புகள் வாய்ந்தவை களாயுமிருக்கும். பூக்கள் மஞ்சளாயும், விதைகள் கொஞ்சமாயும், வெண்மை யாயும் தட்டையாயுமிருக்கும்; climbing shrub with yellow flowers, so called from its root living in air; snake caper

It is a climbing shrub; leaves somewhat fleshy and three-lobed, long petioles with short bristly hairs; slightly toothed; flowers yellow; few seeded; seeds white and compressed.

மறுவ. ஆகாயக்கருடன், கொல்லன்கோவை.

ஒருகா. ஆதாரம் + இல் + கோவை - ஆதாரமில்கோவை ஆதாரக்கோவை = வேரின் தூர்கள் மேலே தெரியும் படி உள்ள கொடி. இதற்கு ஆகாயக்கருடன் எனப் பெயரிருப்பதும் இது பற்றியே.

ஆதாரசத்தி ādāraśatti, பெ. (n.) சிவனின் தேவி, சிவசத்தி (சதாசிவ.31); Śiva - Śakti.

[ஆதாரம் + சத்தி →ஆதாரசத்தி. Skt. Śakti > *த. சத்தி.]*

ஆதாரசிலை ādār-śilai, பெ. (n.) **ஆதாரக்கல்** பார்க்க; see ādāra-k-kal.

[ஆதாரம் + சிலை. Skt. śila > *த. சிலை = கல்.]*

ஆதாரணை ādāraṇai, பெ. (n.) தெய்வ வழிபாட்டின் போது உண்டாகும் தெய்வமருள் (தெய்வ ஆவேசம்) (நெல்லை); possession by deity during worship.

[ஆர் + தரல் - ஆர்தரணை →ஆதாரணை.]

ஆதாரதண்டம் ādāra-taṇḍam, பெ. (n.) முதுகெலும்பு; back bone, vertebral column.

[ஆதாரம் + தண்டம். தண்டு = தண்டம் → தண்டு போன்றிருக்கும் முதுகெலும்பு.]

ஆதாரநரம்பு ādāra-narambu, பெ. (n.) முதுகெலும்பி லுள்ள நரம்பு; spinal cord. 2. மூலாதாரத்தின் நரம்புகள்; nerves of the scaral region (சா.அக.).

[ஆதாரம் + நரம்பு.]

ஆதாரநாடி ādāra-nāḍi, பெ. (n.) 1. முதன்மையான நாடி; great arterial trunk which rises from the left ventricle of the heart Aorta. 2. மூலாதார நாடி; sacral artery distributed over the structures around sacrum and Cocoyx.

[ஆதாரம் + நாடி.]

ஆதாரநிலை ādāra-nilai, பெ. (n.) பற்றுக்கோடு (பிங்.); support, prop.

[ஆதாரம் + நிலை.]

ஆதாரபீடம் ādāra-pīḍam, பெ. (n.) ஆதாரக்கல் (வெட்.); pedestal of stone (lnx.).

[ஆதாரம் + பீடம். **Skt.** pīta. > *த. பீடம்.]*

ஆதாரவிருக்கை பார்க்க;

ஆதார பேதம் ādāra pēdam, பெ. (n.) **ஆதார வேற்றுமை** பார்க்க; see **ādāra vēṟṟumai.**

[ஆதாரம் + பேதம். **Skt.** bēda > *த. பேதம். பேதம் = வேற்றுமை.]*

ஆதாரம் [1] ādāram, பெ. (n.) 1. பற்றுக்கோடு (சேதுபு. கந்த. 86); support, stay, prop. 2. மூலம்; source. 3. அடிப்படை, அடிப்படைக் காரணம்; ground, basis. நீர் சொல்லும் பொருளுக்கு ஆதாரம் என்ன? (உ.வ.). 4. அடிப்படைச் சான்று, மூல ஆவணம், பற்றுச்சீட்டு; document, voucher, title deed by which a right to property is established and maintained.

க., து. ஆதார; தெ. ஆதாரமு.

Skt. ādhara; **Nep.** ādhār; **Sinh.** ādhāraya; **Mar., Pali.** ādhāra.

[ஆ + தாரம். ஆ = முதன்மை, அடிப்படை. தாரம் = அரும்பண்டம், பொருள்.]

ஆதாரம் 2 ādāram, பெ. (n.) 1. உதவி ; support. 2.மழை; rain (W.) 3. ஏரி (நாநார்த்த.); tank. 4. பகுதி, பிரிவு; section, chapter. 5. உயிருக்கு ஆதாரமாகிய உடல் ; body forming as it were a support to life. 6. பாத்தி; pan. 7. வாய்க்கால்; canal.

ம. ஆதாரம்.; **கொ. ஆதார். Skt.** ādhāra; **Sinh.** ādhāra

[ஆகு + தரம் = ஆதாரம். தரு → தரம் = வருவழி, மூலம். ஆகு = இயல்கின்ற, முடிகின்ற.]

ஒன்றற்குச் செயற்பாட்டு மூலமாயிருப்பதும், மழை போன்று தானே மூலமாயிருப்பதும், ஆதாரம் எனப்பட்டது. அடிப்படைத் தலைப்புகள் ஒரு நூலினுட்பிரிவாக இருத்தலும், உலகவாழ்வுக்குப் பேணிக் காக்கப்படும் உடம்பு மூலமா யிருப்பதும், இப்பெயர் பெறக் காரணங்களாயின.

ஆகு + பயன் = ஆபயன் என முதனிலையீறுகெட்டுப் புணர்ந்தாற்போல் ஆகு + தரம் வினைமுதனிலையீறு கெட்டுப் புணர்ந்து வருமொழி முதனீண்டது. ஒ.நோ: ஆகு + வகை = ஆவகை.

ஆதாரம் 3 ādāram, பெ. (n.) 1. நிலை; situation. 2. ஆறாதாரம்; (In Indian psychology) six psychic centres in the human body, considered the six pillars of life. 3. ஆதாரம்; basis or base. 4. மூலாதாரம்; psychic centre situated between the anus and the genitals.

து. ஆதார; **கொ.** ஆதி ; Mar. ādhār.

[ஆ + தாரம் = ஆதரம் → ஆதாரம். தரம் = வகை, நிலை. ஆ = முதன்மை, அடிப்படை. ஆதாரம் = அடிப்படையான நிலை.]

ஆதாரலக்கணை ādāra lakkaṉai, பெ. (n.) இடவாகு பெயர் (சி.சி. பாயி. குருவகை. ஞானப்.); metonymy, whereby the name of the support is figuratively used for the thing supported.

[ஆதாரம் + இலக்கணை - ஆதாரவிலக்கணை → ஆதாரலக்கணை. (கொ.வ.)]

ஆதாளி ādāli, பெ. (n.) 1. பேரொலி; noise, bustle, roar. "வானோர் பேரியாதாளி யுற நடிக்கும் சிற்பொது" (குற்றா. தல. திருக்குற்றா. 24.). 2. கலக்கம், குழப்பம்; agitation, perturbation, stir (W.) 3. இடம்பப் பேச்சு; boasting, bragging, bravado. "ஆதாளி வாயனை" (திருப்பு. 557). 4. தாமிரத்தை நீறாக்கும் ஒரு மூலிகை; unknown herb said to possess the virtue of calcinating copper. (சா. அக.).

ம. ஆதாளி

[அதளி → ஆதளி → ஆதாளி.]

ஆதாளிக்காரன் ādāli-k-kāraṉ, பெ. (n.) இடம்பப் பேச்சுக்காரன்; braggart, boaster, vaunter.

[ஆதாளி + காரன்]

ஆதாளித்தல் ādālittal, தொ.பெ. (Vbl.n.) 1. பேரொலி செய்தல்; making noise. 2. குழப்பம் விளைத்தல்; agitating perturbing. 3. வீம்பு பேசுதல்; boasting. 4. களைப்படைதல், becoming red.

ம. ஆதாளிக்குக

[அதளித்தல் → ஆதளித்தல் → ஆதாளித்தல். ஆதளி= குழப்பம்.]

ஆதாளிமன்னன் ādāli-maṉṉaṉ, பெ. (n.) கரடி; bear.

[அதளி → ஆதளி → ஆதாளி = குழப்பம். கூச்சலும் குழப்பமும் உண்டாக்கும் இயல்பு பற்றிக் கரடிக்கு ஆதாளி மன்னன் எனப் பெயரிடப்பட்டிருக்கலாம்.]

ஆதாளை ādālai, பெ. (n.) ஆமணக்கு; castor-plant. **ஆதளை** பார்க்க; see ādalai,

[ஆதளை → ஆதாளை.]

ஆதானும் ādāṉum, சு. பெ. (pron.) எதுவாயினும், யாதாயினும்; whatever, whichever. "ஆதானும் செய்ய" (திவ். இயற். பெரியதிருவ. 25.).

[யாதானும் → ஆதானும்.]

ஆதி 1 ādi, பெ. (n.) 1. தொடக்கம்; beginning, commencement. (திருவாச. 7,1). 2. தொடக்க முள்ளது; that which has a beginning. "வினை ஆதியோ அனாதியோ" (சி.போ. 2,2,3 சிற்.). 3. காரணம்; source, cause. (குறள். 543). 4. பழைமை (பிங்.); antiquity. 5. முதன்மை, தலைமை; first supreme head. எப்பொருட்கும் இறை (பிங்.); independant sovereign, supreme ruler; emperor. 7. கடவுள் (பிங்.); the supreme being, the first, applied esp. to God. 8. கதிரவன்; sun. "ஆதி வெயின் மணிப்பீடம் போன்றான்." (பாரத. கிருட். 164).

ம. ஆதி.

[அகு → அகுதி → ஆதி. அகு → அகை = முன்வரல், முதலாதல்.]

பாவாணர், அகராதிக்கு அகரமுதலி எனப் பெயரிட்டார். ஆதி வடதமிழ்ச் சொல்லாதலின் தூய தென்சொல்லான முதலி என்பதை எடுத்தாண்டார். தொல்காப்பியத்தில் முதல் எனப் பொருள்படும் 26 இடங்களில், 25 இடங்களில் முதல் என்னும் சொல்லையும், ஒரே இடத்தில் ஆதி என்னும் சொல்லையும், தொல்காப்பியர் ஆண்டிருக்கிறார். பழந்தமிழ்ச் சான்றோர் அனைவரும் முதலிய, முதல என்னும் பொருளில் ஆதி என்னுஞ் சொல்லைப் பெரிதும் ஆளவில்லை. தமிழிலக்கியங்களில் பெருமளவுக்கு ஆட்சி பெறாததால் அதனைத் தூய தென் சொல்லாகப் பாவாணர் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆதி என்னுஞ்சொல் தலைமை, முதன்மை என்று பொருள்படும் வடநாட்டுச் சொல். அதன் வேர் முன்வருதல் கருதிய அகு → ஆ என்னும் வினைமுதலே. இந்தியில் ஆகே என்பது முன்னால் என்று பொருள்படும். மராட்டிய மொழியில் ஆகுதலி என்பது தலைவாழையிலையைக் குறிக்கும். பழங்கன்னடத்தில் ஆதலை என்பது முன்வரிசை என்று பொருள்படும். தெலுங்கில் ஆதிகொனு = முற்படு எனப் பொருள்படும். ஆ என்னும் (சேய்மை) சுட்டுச் சொல்லுக்கும் முன்வரல், மேம்படல், ஆகுதல் எனப் பொருள்படும் அகு → ஆ என்னும் வினைச் சொல்லுக்கும், எவ்வகைத் தொடர்பு மில்லை.

ஆ சேய்மைச் சுட்டெனின் ஆ → ஆதுஎனத்திரியுமேயன்றி ஆதி எனத் திரியாது. தெலுங்கில் அது → அதி எனத் திரியினும் தமிழ் மரபுக்கு ஏற்றதன்று. முன்மை சுட்டிய முன்னொட்டாகவும் ‘ஆ’ தமிழில் ஆளப்படவில்லை. ஆ என்னும் முன்மை சுட்டிய சுட்டுச் சொல்லடியாக ஆதி தோன்றி, முந்தைய எனப் பொருள்பட்டதெனின், அண்மை சுட்டிய ஈ என்னும் சுட்டுச் சொல்லடியாக ஈதி என்னும் சொல் தோன்றி பிந்திய எனப் பொருள்பட்டிருத்தல் வேண்டுமன்றோ?

இது போன்றே, தந்தையைக் குறிக்கும் அத்தன் என்னும் சொல் ஆதன் எனத் திரிந்து தலைவனையும் குறிக்கும். சேர மன்னர்களின் பெயர்களில் ஆதனழிசி, ஆதன் ஒரி எனவும் சேரலாதன், வாழியாதன் எனவும் இயற்பெயர்களாகவும், சிறப்புப் பெயர்களாகவும் இச்சொல் வழங்கி வந்திருக்கிறது. குடகு மொழியில் ஆத என்னுஞ்சொல் தலைவன் எனப் பொருள்படுகிறது. தலைவன் எனப் பொருள்படும் ஆதன் என்னுஞ்சொல் ஆதி எனத் திரிந்து தலைவி எனப் பொருள்படும். கரிகாற்சோழனின் மகள் பெயரிலுள்ள (ஆதிமந்தி) முதற்பெயர் ஆதி = தலைவி எனப் பொருள்படும். மந்தி = இளவரசி, ஆதிமந்தி = தலைமையான இளவரசி அல்லது மூத்த இளவரசி. ஆதி என்னும் பெண்பாற்சொல் பெயரெச்சமாகவோ இயற்பெயரல்லாத கூட்டுச் சொல்லின் முன்பின் உறுப்பு களாகவோ வழங்கியதற்கான சான்றில்லை. ஆதி பகவன் என்னும் சொற்றொடரில், ஆதி ‘தலைவி’ எனப் பொருள் படுவதாயின், அச்சொற்றொடர் அம்மையப்பனாகிய சிவபெருமானையே குறிக்கும். ஆதலின், தலைமை சுட்டிய ஆதி என்னும் பெண்பாற்சொல் பொதுச்சொல்லாயிற்று என்பதை ஏற்கவியலாது. வருதி, போதி என்றாற் போல், ஆதி என்பது ஏவல்வினையாகப் பொருள்படுமேயன்றி வேறு வகையாகத் தமிழில் பொருள்படுமாறில்லை.

இனி, மிகுதி → மீதி, பகுதி → பாதி எனத் திரிந்தது போன்று, அகுதி — ஆதி எனத் திரிந்ததாகக் கொள்ள இட முண்டு. அகுதி என்னும் சொல் முன்வந்தது முதன்மையானது எனப் பொருள்படும். அகு → அகுதி = முன்னாலிருப்பது, மேலே இருப்பது, முதலாவது. அகுது, அகுதை என இயற்பெயர் கொண்டவர்களும் பழந்தமிழகத்தில் வாழ்ந்திருக் கின்றனர். இந்த அகுதி பெண்பாற் சுட்டியதன்று, முதன்மை மட்டும் சுட்டியது. அகு என்னும் வினைச்சொல் அகலெ (அடுத்து முதலாக வருவது) என இந்தியில் திரிந்து, இனியடுத்த முதன்மையது எனப் பொருள்படுதலை ஒப்பிட்டு நோக்குக. எனவே, அகுதி → ஆதி எனத் திரிந்து, முதன்மை சுட்டிய சொல்லாக வடநாட்டு மொழிகளில் வழங்கி, பிறகு வடமொழியிலும் பெருக ஆட்சி பெற்றிருக்கிறது என அறியலாம். மிகு என்னும் வினையும் மிகுதி என்னும் பெயரும் தமிழில் பண்டுதொட்டு ஆட்சி பெற்றிருப்பதுபோல், அகு என்னும் வினையும், அகுதி என்னும் பெயரும் தமிழ்ச்சொற்களாயினும் தமிழில் பெருகிய ஆட்சி பெறவில்லை. ஆதலின் அதன் திரிபான ஆதி என்னும் சொல்லைத் தமிழில் தோன்றி வளர்ந்த தனித்தமிழ்ச் சொல்லாகக் கொள்ளவியலாது. மிகுதி என்பதை நோக்க மீதி என்பது திரிபு வடிவமே; செந்தமிழ் வடிவமன்று. ஆதி என்பது வடநாட்டில் தோன்றி வளர்ந்து பெற்ற வடிவத்தைத் தமிழ்நாட்டிலேயே தோன்றி வளர்ந்து பெற்றிருப்பினும் அதனைத் திரிபு வடிவம் என்பதல்லது செந்தமிழ் வடிவம் எனக் கொள்ளலாகாது.

இனி, சூராதி சூரன், தேவாதி தேவன் என்னும் தொடர்களில் ஆதி என்னும் சொல், (அதி = மிகுதி) சூரன் + அதி + சூரன் = சூராதி சூரன் எனத் திரிந்த திரிபாதலின் அது வினாவன்று. ஆதி என்பது தமிழ்ச் சொல்லேயென வற்புறுத்திய தமிழன்பர்கள் பலரும் முன்மை சுட்டிய ‘ஆ’ என்னும் இடைச் சொல்லையே சான்று காட்டினர். வினையடியாகத் தோன்றிய பெயர்ச்சொல் வடிவத்தை அவர்கள் வரையறுக்க வில்லை. அவர்கள் கூற்றின் வண்ணம், போகு → போது எனத் திரிவது போல் ஆகு → ஆது எனத் திரிந்ததாயின், ஆது என்னும் வினையின் முக்காலப் புடைபெயர்ச்சி தமிழில் யாண்டும் காணப்படவில்லை. ஆயின், ஆதி என்னுஞ்சொல் மிகப் பழைய காலத்தையும், மிக முந்தைய நிலையையும் குறித்த பெயர்ச்சொல்லாகப் பெருக ஆளப்பட்டுள்ளது. இப் பெயர்ச் சொல் வடிவமே முந்தைய எனப் பொருள்படும் பெயரெச்சப் பொருளையும், இச் சொல்லுக்குத் தந்தது. ஆதலின் பெயர்ச்சொல் பொருளே இதன் முழுமையான பொருள். ஆதி, செந்தமிழ்ச் சொல்லாயின் தலைமையையும் முதன்மையையும் ஆகிய பொருள்களைச் சுட்ட வேண்டு மேயன்றி, காலத்தால் முற்பட்ட பழமையைச் சுட்டுவது காலத்தின் கோலத்தால் ஏற்பட்ட வழிநிலைப் பொருளேயன்றி முதற்பொருள் ஆகாது. பழையது என்னும் சொல் பழமையைக் குறிக்குமேயன்றி தலைமையையும், முதன்மையையும் குறிக்காது. தொன்மை என்னும்சொல்லும் இவ்வாறே. முதன்மை என்று பொருள்படும் சொல் மட்டும் காலத்தால் முற்பட்ட நிலைமையையும் அகவையால் மூத்த தலைமையையும் குறிக்கும். முன்னவன் என்னும் சொல்லை ஒப்பு நோக்குக. எனவே, ஆதி என்பது முதன்மை சுட்டிய பிறகே பழமையைச் சுட்டியிருக்கிறது என்பது போதரும்.

தமிழில் முதன்மை சுட்டிய பொருளே ஆட்சியில் பெருகி வழங்கியிருக்கிறது. பழமை சுட்டிய பொருள் வடநாட்டு மொழிகளில் இச்சொல்லுக்கு ஏற்றப்பட்டிருக்கிறது. ஆதலின், முன்மை சுட்டிய பிறகு முதன்மையையும் தலைமையையும் சுட்டிய ஆதி என்னும் தனிச்சொல் வடநாட்டிற்குச் சென்று வடநாட்டில் பழமைப் பொருளில் திரிந்ததால் அதனை (பிராகிருத

முதலிய வடதமிழ்) வடநாட்டுச் சொல்லென்று பாவாணர் வரையறுத்தார்.

தமிழிலுள்ள பெயரெச்சங்கள் அனைத்தும் அகர வீறு கொண்டவை. முதல, எளிய, வலிய, நல்ல என்பவற்றை ஒப்பு நோக்குக. 'ஆதி' தமிழிலக்கணக் கட்டுக்கோப்புக்குள் தோன்றி வளர்ந்த சொல்லாயின், ஆதிய என்றாற்போல் அகரவீற்றுப் பெயரச்சமாயிருத்தல் வேண்டும். இகரவீற்றுப் பெயரெச்சம் தமிழில் யாண்டும் ஆளப்படவில்லை. இகரவீற்றுப் பெயர்கள் பெயரச்சம் போல் முன்னுறுப்பாகிக் கூட்டுச் சொல்லாகுமிடத்து கோடி + கரை = கோடிக்கரை. மீதி + பணம் = மீதிப்பணம் என்றாற்போல் வல்லெழுத்து மிகுதல் வேண்டும். ஆதி பகவன் என்னும் கூட்டுச் சொல்லில் வல்லெழுத்து மிகுதல் வேண்டும். ஆதிபகவன் என்னும் கூட்டுச் சொல்லில் வல்லெழுத்து மிகாமை அறிக. இஃதொன்றே அதனை வடபுலச்சொல்லெனக் காட்டவல்லது.

வடமொழியில் **ādi** - beginning, commencement, first எனப் பொருள்படுகிறது.. இந்திராதி தேவர் என்றவிடத்து இந்திரன் முதலாகிய தேவர் எனப் பொருள்படும். தமிழிலும் ஆகிய என்னும் சொல் முதலிய என்னும் பொருளில் ஆளப்படுகிறது. வளர்தல், மேம்படல், ஆகுதல் எனப் பொருள்படும் அகு →ஆகு வினை வடிவே ஆதி என்னும் வடசொல்லின் மூலம் என்பதும் பெயர் வடிவம் வடபுல மொழி வழித்தென்பதும் இதனாலும் போதரும்.

வடமொழி தவிர்ந்த மேலையாரிய மொழிகளில் ஆதி என்னும் சொல்லாட்சி காணப்படவில்லை. வடதமிழ்ச் சொல் மூலமே வடமொழியில் ஆதி என வடிவு கொண்டுள்ளது. இது முன்னால் அல்லது முதலிலிருப்பதைக் குறித்த அஃறிணை யொருமைச் சொல்லாக வழக் கூன்றியதால், காரி = கருத்த காளையைக் குறித்ததுபோல், ஆதி = மேலிருக்கும் பொருள்; முன்னால் அல்லது முதலிலிருக்கும் பொருளை அல்லது உயிரியைச் சுட்டியதாதல் வேண்டும்.

காரி, குறிப்பிட்ட கரிய காளையை அல்லது கரிய வேறு பொருளைச் சுட்டும்போது மட்டும் அவ்வடிவு கொள்ளும், காரிப்புள், காரிக்கிழார் என்பவற்றை ஒப்புநோக்குக. கன்னங் கரேலென்றிருக்கும் தன்மையை முழுமையாக விளக்க, காரி பெயர்வடிவுபெற்றது. இனி, பல்வகை நிறவேறு பாடுகளிலிருந்து கரிய நிறத்துப் பொருளைப் பிரித்துக் கூறவேண்டிய விடத்துக் கருஞ்சீரகம், கருமணி, கரியவிழி எனப் பண்பீறும், குறிப்புப் பெயரெச்ச வீறும் கொள்ளும். அங்ஙனம் பொதுப்பொருளில் ஆதி என்னும் சொல் கரிய என்றாற் போல், தமிழில் ஆதிய எனக் குறிப்புப் பெயரெச்சமாகாததால் அது வடபுலச் சொல்லே எனத் தெளிக.

ஆதி என்னுஞ்சொல் முதல், முதலிய, முதலில் என்னும் பொருளில் கல்லாத மக்களின் பேச்சு வழக்கில் இன்றுகாறும் இடம்பெறவில்லை. மண்ணுக்குரிய சொல்லாயின் மக்களிடை யன்றோ வழங்கியிருக்க வேண்டும்.

சொல், வடிவத்தால் முற்றும் தமிழாயும் பொருளாட்சியில் தமிழகத்தில் தோன்றிய பொருளல்லாமல், ஏனைய திரவிட நாடுகளிலோ அல்லது வேற்று மொழிச்சூழல்களிலோ வளர்ந்து பொருள் கொண்ட சொல்லைத் தமிழ்ச் சொல்லாக ஏற்றுக் கொள்வதில்லை. சொல்லும் பொருளும் ஒத்திருந்து தமிழில் வழங்குமாறு பிற திரவிட மொழிகளில் வளர்ந்திருந்தால் அவற்றையும் தமிழ்ச் சொல் என்று ஏற்றுக்கொள்கிறோம். இல், மனை, வீடு ஆகியவை தமிழிலும் திரவிட மொழிகளிலும் ஒத்து வழங்குகின்றன. இல் என்பதைத் தெலுங்குச்சொல் என்றும், மனை என்பதைக் கன்னடச்சொல் என்றும் நாம் சொல்வ தில்லை. ஆயின், உறை என்பது தங்கியிருக்கின்ற வீட்டைக் குறித்த சொல்லாயினும் தமிழில் வீடு என்னும் பொருளில் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் பரவலாக இடம் பெறவில்லை. உறை என்பது இல், மனை போன்ற சொற்களைப் போன்றே மனைவியையும் குறிக்கலாம். பிராகுவி மொழியில் உறை என்பது வீட்டையும், பாசுகு மொழியில் உறை என்பது மனைவியையும் குறிக்கும் சொல்லென ஒப்பமுடிந் தாலும், , தமிழ் உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் உறை என்னும் சொல் மனைவி என்னும் பொருளில் பாசுகு மொழிக்குச் சென்ற தமிழ்ச்சொல் என்று சொல்வதல்லது செந்தமிழ் நாட்டுச் சொல்லென்று எவரும் கூறார்.

ஆதி என்பது வேரளவில் தமிழுக்குத் தன் சொல் லாயினும், தென்சொல்லன்று என்பதைப் பாவாணர் உறுதிப் படுத்தினார்.

ஆதி [2] ādi, பெ. (n.) ஆதிதாளம் (இசை); particular variety of time measure (Mus).

[ஆ → ஆது → ஆதி (முன்னையது, முந்தியது) முதலாவதாக எண்ணிடப்பட்ட தாளவகை.]

ஆதி [3] ādi, பெ. (n.) குதிரையின் நேரோட்டம்;running of a horse in a straight course. "அடிபடு மண்டிலத் தாதி போகிய" (மதுரைக். 390).

[ஆ → ஆது → ஆதி. ஆதுதல் = முன்வரல். முற்படல், விரைதல், ஆது என்றே முதனிலைத் தொழிற் பெயராக நிற்றற்பாலது. ஈற்றுகரம் இகரமாகத் திரிந்தது. ஒ. நோ. ஆதர்பாதையாக ஓடுகிறான் (கொங்.வ.).]

ஆதி [4] ādi, பெ. (n.) மனவருத்தம், கவலை, mental. pain, agony. ஆதிவியாதி (ஞானவா. தேவ. பூ. 49.).

[அதை → ஆதை → ஆதி. அதைத்தல் = பதைத்தல், வருந்துதல், வேதல். ஒ. நோ. ஆதை → ஆதங்கம். (வருத்தம்).]

ஆதி [5] ādi, பெ. எ. (adj.) 1. முதலிய (முதலியன); and others beginning from. "இருக்காதி மறை மொழிந்தோன்" (பாரத. சிறப்பு. 23.).

[ஆகு → ஆகிய → ஆதிய → ஆதி.]

ஆதி [6] ādi, பெ. (n.) வெள்ளிமீன்; Venus. 2. நாரை, crane. (நாநார்த்த).

[ஆதி [4] = வெண்மை.]

ஆதிக்கம் ādikkam, பெ. (n.) தலைமை ; power, superiority. "ஆதிக்க நல்கினவராரிந்த மாயைக்கு" (தாயு. மௌன. 3.). 2. உரிமை; right to possession. (W.).

[ஆதி → ஆதிக்கம் > Skt. ādhikya.]

ஆதிக்கல் ādi-k-kal, பெ. (n.) இரும்பு ; ancient stone i.e. iron. (சா.அக.).

[ஒருகா. ஆழ்தி + கல் – ஆழ்திக்கல் → ஆதிக்கல். ஆழ்திக்கல் = ஆழத்திலுள்ள கல், இரும்பு . இனி பழங்காலக் கல் என்றுமாம். ஒ. நோ. ஆதிக்கொடி = நஞ்சுக்கொடி , முன்பே இருந்த கொடி , முன்னுள்ள கொடி.]

ஆதிக்குரு ādi-k-kuru, பெ. (n.) பூவழலை (மூ .அ.); fuller's earth.

[ஆதி + குரு.]

ஆதிக்கொடி ādi-k-kodi, பெ. (n.) நஞ்சுக்கொடி, தாயையும் குழந்தையையும் தொடர்புறுத்தும் கொப்பூழ்க்கொடி ; the after birth which is developed during pregnancy. It connects the mother and the foetus by means of the umbilical cord. (சா. அக.).

[ஆதி + கொடி.]

ஆதிகம் ādigam, பெ. (n.) சிறுகுறிஞ்சா; creeper Indian Ipecacuanha. (சா. அக.).

ஆதிகாரணம் ādi-kāranam, பெ. (n.) முதற்காரணம்; primary cause. (நன் . 58.உரை .).

ம. ஆதிகாரணம் ; **க.** ஆதிகாரண

[ஆதி + காரணம்.]

ஆதிகாலம் ādi-kālam, பெ. (n.) பண்டைக்காலம்; remote past. "எனை யாதி காலர் தனிலளித்த" (கந்தபு . அயனச்சிறைபுரி.7.).

ஆதித்தன்[1] ādittan, பெ. (n.) 1. கதிரவன்; sun. 2. சோழ மன்னர்களின் இயற்பெயர்களுள் ஒன்று; proper name of the Chola kings. 3.சோழர்களின் குடிப்பெயர்; a clan name of the Chola dynasty. **ஞாயிற்றன்** பார்க்க ; see ñāyirran.

[ஞாயிறு (கதிரவன்) → ஞாயிற்றன் → ஆயிற்றன் → ஆயித்தன் → ஆதித்தன் . ஞாயிற்றுச்சோழன், புகழ் ஞாயிற்றுச் சோழன் மகன், போன்ற சொல்லாட்சிகள் சோழர்க்கு ஞாயிற்றன் என்பது இயற்பெயராகவும் குடிப்பெயராகவும் விளங்கியதைத் தெற்றெனக் காட்டும். ஞாயிற்றன் என்னும் சொல்லை ஒலிக்க முடியாத வடபுலத்தார் ஞாயிற்றன் → ஆயித்தன் → ஆதித்தன் எனத்திரித்துக் கொண்டனர். இன்றும் ஞாயிற்றுக்கிழமை என்னும் சொல் கன்னடத்தில் 'ஆயித்து வார' என்றும் தெலுங்கில் 'ஆதித்த வாரமு' என்றும் திரிந்துள்ளதைக் காணலாம்.]

ஆதித்தன்[2] ādittan, பெ. (n.) உவர்மண்; fuller's earth.

[ஆதி = வெண்மை.]

ஆதித்தர் ādittar, பெ. (n.) **ஞாயிற்றர்** பார்க்க; see ñāyirrar

ஆதிதாளம் ādi-tālam, பெ. (n.). தாளவகை (பாரத. தாள.3.); variety of time measure consisting of eight aksara kalas, a sub-variety of tiripudai tālam also one of the upa tālam.

ம. ஆதிதாளம்.

[ஆதி + தாளம்.]

ஆதி திராவிடன் ādi-diravidan, பெ. (n.) பழந்தமிழன் பார்க்க; see palantamilan.

ஆதிபகவன் ādi-bagavan, பெ. (n) முதற்பொருள், முழுமுதற் கடவுள்; God, the first cause. "ஆதிபகவன் முதற்றே உலகு" (குறள். 1.).

[ஆதி + பகவன், ஆதி = மூலம், முதல்; பகவன் = கடவுள்.]

அனைத்துச் சமயக் கோட்பாடுகளையும் அறிந்திருந்த வள்ளுவப் பெருந்தகை, தமிழ்க்கடவுளாகிய சிவனையும் முருகனையும் குறிப்பிடாமல், ஆதிபகவனைக் குறிப்பிட்டதன் நோக்கம் பொதுமை நெஞ்சம் வேட்ட புதுமை எனலாம். பிராகிருத மொழியில் பகலவனை பக்கர் (Bhakkar) என வழங்குவர். தொடக்கத்தில் கதிரவனைக் குறித்த பகவன் என்னும் பெயர், நாளடைவில் கடவுளைக் குறிக்கும் பொதுச் சொல்லாயிற்று. (பகலவன் →பகவன்). கடவுளைக் குறிக்கும் தமிழ்ச் சொற்கள் பலவிருப்பினும் ஆதிபகவன் என்னும் பிராகிருத சொல்வடிவத்தைத் திருவள்ளுவர் உவந்ததன் நோக்கம், புறச்சமயங்களின் பெருக்கால், இச் சொல்லாட்சி பெருக வழக்கூன்றியது என்பது மட்டுமன்றி, தனித்த தெய்வப் பெயர் எதுவும் காட்டாமல் உலகமக்கள் அனைவர்க்கும் பொதுவாகப் புலனாகும் 'மூலமுதற் கடவுள்' என்னும் பொருளை இச்சொல்லாட்சி உள்ளடக்கியிருப்பதே எனலாம்.

ஆதிமந்தி ādimandi, பெ. (n.) கரிகாற்சோழனின் மகள், ஆட்டனத்தியின் மனைவி; daughter of the Chola King Karikāla, and wife of the Chola Prince Āttanatti.

[மந்து = அரசன். மந்தி = அரசி. ஆதி + மந்தி. ஆதி[1] பார்க்க; see ādi[1]. ஆதிமந்தி = மூத்த இளவரசி. ஒ.நோ: மன் → மந்து, முன் → முந்து.]

ஆதிமுதல் ādi-mudal, வி.எ. (adv.) தொடக்க முதலாக; from the beginning. ஆதிமுதல் எல்லாவற்றையும் சொன்னான் (உ.வ.).

[ஆதி + முதல்.]

ஆதிமூலம் ādi-mūlam, பெ. (n.) 1. முதற்காரணம்; primitive cause. 2. கடவுள்; supreme being God, that which is the primeval cause.

க. ஆதிமூல

[ஆதி + மூலம்.]

ஆதியங்கடவுள் ādiyaṅ-kaḍavuḷ, பெ. (n.). 1. முதற் கடவுள்; God who has existed from the first. 2. அருகன்; arhat.

[ஆதி + அம் + கடவுள்.]

ஆதியந்தணன் ādi-y-andaṇaṉ, பெ. (n.) நான்முகன்; god of Creation.

[ஆதி + அந்தணன்.]

ஆதியாழ் ādi-yāḻ, பெ. (n.) ஆயிரம் நரம்புள்ள யாழ் (பிங்.); original lute with 1000 strings.

[ஆதி + யாழ்.]

ஆதியுலா ādi-y-ulā, பெ. (n.) சேரமான் பெருமாள் இயற்றிய முதல் உலா நூல், திருக்கயிலாய ஞான உலா (திருவாரூ. அவை.); poem by Cēramāṉ - Perumal reputed to be the first ulā in Tamil language.

[ஆதி + உலா.]

ஆதியெழுத்து ādi-y-eḻuttu, பெ. (n.) முதலெழுத்துகள்; primary letters. (பேரகத். 8. உரை).

[ஆதி + எழுத்து. ஆதி = முதல்.]

ஆதிரம் ādiram, பெ. (n.) நெய் (பிங்.); clarified buttter, ghee.

[ஒருகா. ஆ + திரம். ஆ = ஆன் (பசு). திரம் = திரண்ட வெண்ணெய், நெய்.]

ஆதிரன் ādiraṉ, பெ. (n.) பெரியோன் (அக.நி); great person.

[ஒருகா. ஆதன் → ஆதரன் → ஆதிரன்.]

ஆதிரை[1] ādirai, பெ. (n.) திருவாதிரை; sixth naksatra.

[ஆதிரை > Skt. ārdra.]

ஆதிரை[2] ādirai, பெ. (n.) சாதுவன் மனைவி; wife of Śaduvaṉ. "ஆதிரை நல்லாள் ஆங்கது கேட்டு" (மணிமே. 16.22.).

[ஆதிரன் (ஆ.பா.) → ஆதிரை (பெ.பா.).]

ஆதிரைப்பிள்ளையார் நோன்பு ādirai-p-piḷḷaiyār-nōṉbu, பெ. (n.) பழைய வரிவகை; ancient tax (Pudu. insc. 399).

[ஆதிரை + பிள்ளையார் + நோன்பு.]

ஆதிரை முதல்வன் ādirai-mudalvaṉ, பெ. (n.) சிவன் (பரிபா. 8,6); Śiva, presiding deity of the sixth nakṣatra.

[ஆதிரை + முதல்வன்.]

ஆதிரையான் ādiraiyāṉ, பெ. (n.) சிவன், ஆதிரை முதல்வன்; Śiva, the God supreme. "ஆதிரையான் ஆதிரையான் என்றென்ற யருமால்" (முத்தொள். காப்பு.).

[ஆதிரை + ஆன்.]

ஆதிவாசி ādi-vāsi, பெ. (n.) பழங்குடியினர், முதன் முதல் தோன்றி வாழ்ந்தவர்; aborigines, original inhabitants of a country.

ம., க. ஆதிவாசி.

[ஆதி + வாசி.]

ஆதிவாயிலார் ādivāyilār, பெ. (n.) பரதசேனா பதீயம் என்னும் நாடகத் தமிழ் நூலாசிரியர் (சிலப். உரைப்பாயி .); author of the Barata-Sēṉāpadīyam, a treatise on drama.

[ஆதிவாயில் + ஆர். ஊரின் பெயரால் பெயர்பெற்ற புலவர்.]

ஆது-தல், ādu-, 12 செ.குன்றாவி (v.t) ஆதல்;to come into existence, happen, occur, become, flourish. "ஆஅதுமென்னுமவர்" (குறள்.653) (நாலடி. 181-3, 359-1).

[உல் → உ= முன்வரல், தோன்றுதல், வளர்தல், பெரிதாகல். உல் → உ → ஊ → ஒ → ஆ. ஆ = முன்வரல், தோன்றுதல், வளர்தல், பெரிதாகல், செழித்தல். ஆ → ஆது. ஒ.நோ. போ → போது.]

ஊது, போது, காது, மோது என்றாற்போல் 'ஆது' ஏவலொருமை வினை முற்றாம். ககரம் தகரமாகத் திரிந்து ஆகு → ஆது ஆயிற்றெனின், அது சாலாது. ககரம் வகரத்தின் திரிபாவதன்றித் தகரத்தின் திரிபாகாது. உண்கு, காண்கு என 'கு' ஏவலொருமையீறானது போன்றே போது, மோது, அருந்து, திருந்து என 'து' ஏவலொருமையீறாயிற்று.

ஆது[1] ādu, பெ. (n.) தெப்பம் (வின்.); raft.

[ஆ = முன்செலற்கருத்துக் குறிப்புச் சொல். ஊ → ஒ → ஆ. ஆது = துடுப்புகளால் உந்தப்பட்டு மெல்லச் செல்லும் தெப்பம்.]

ஆது[2] ādu, இடை. (int.) பாகர் யானையைத் தட்டிக் கொடுக்கும்பொழுது கூறும் ஒரு குறிப்புச் சொல் (சீவக.1834); expression which a mahout uses while patting and quietening an elephant.

[ஆ → முன்செலற்கருத்துக் குறிப்புச் சொல். ஊ → ஒ → ஆ → ஆது.]

ஆது[3] ādu, இடை. (part.) ஆறாம் வேற்றுமைஉருபு; gen. ending followed by an impers. sing. எனாது. தனாது (நன்.330, உரை).

[அது (ஆறனுருபு) → ஆது. முதனீட்டம் செய்யுட்டிரிபு.]

ஆதுலம் ādulam, பெ. (n.) கள் (சித்.அக.); toddy. ஆதுவம் பார்க்க; see āduvam.

ஆதுவம் āduvam, பெ. (n.) 1. கள்;toddy. 2. பனங்கள்; palmyra toddy.

[ஒருகா. ஆ = முன்வரற்கருத்துக் குறிப்புச் சொல். ஆ → ஆது = முன்வரல், சுரத்தல், கள்ளூறுதல். ஆதுவம் = பாளையிலிருந்து சுரந்த கள்.]

ஆதொண்டை [1] ādoṇḍai, பெ. (n.) காற்றொட்டிக் கொடி எனப்படும் முட்செடி; thorny creeper.

ஆதொண்டை – காற்றொட்டிக் கொடி

மறுவ. ஆதண்டன், ஆதொண்டன், காற்றொட்டி.

[அல் + தொண்டை → ஆதொண்டை = தொட முடியாதது (கட்டுவதற்கும் பயன்படாதது) தொள் → தொண்டு (தொடு) → தொண்டை.]

ஆதொண்டைக்கோவேந்தன் ādoṇḍai-k-kōvēndaṉ, பெ. (n.) தொண்டை மண்டலத்தை யாண்ட முதலரசன்; name of a ruler of Kanchi reputed to be the first of the Toṇḍaimāṉ line.

[ஆதொண்டை + கோவேந்தன்.]

சோழன் கரிகாலனுக்கு நாகக்கன்னி வயிற்றுப் பிறந்த மகன் (பறவைகள் தீண்டாமலிருக்க) ஆதொண்டைக் கொடியால் சுற்றப்பட்டு, கடல்வழி கரை சேர அனுப்பப்பட்டான் எனவும், அவனே தொண்டை மண்டலத்தின் முதன்மன்னனாய் முடிசூடி ஆதொண்டைக் கோவேந்தன் ஆயினன் எனவும் கூறுவர்.

ஆதொண்டைச்சக்கரவர்த்தி ādoṇḍai-c-cakkaravartti, பெ. (n.) **ஆதொண்டைக்கோவேந்தன்** பார்க்க; see ādoṇḍai-k-kōvēndaṉ.

ஆந்தம் āndam, பெ. (n.) பழமரங்களைத் திருடர் திருடாமல் இருக்கப் பயன்படுத்தும் ஆணி; spike to perserve fruit-trees from thieves. 2. பெரிய இரும்பாணி; large iron nail (சேரநா.).

[அந்து → அந்தம் → ஆந்தம்.]

ஆந்தரங்கம் āndaraṅgam, பெ. (n.) 1. மந்தணம் (இரகசியம்); secret. "வேதவாய்மை யாந்தரங்கம் வெளிசெய்வான்" (சேதுபு. கடவு.2). 2. நெருங்கிய நட்பு; intimate friendship. "ஆந்தரங்கமாஞ் சுற்ற நீ" (கந்தபு. கந்தவி. 55).

[அகம் + தரம் – அகந்தரம் → ஆந்தரம். ஆந்தரம் → ஆந்தரங்கம்.]

ஆந்தரம் பார்க்க; see āndaram

ஆந்தரம் āndaram, பெ. (n.) 1. உள்ளேயிருப்பது; that which is internal. 'இவன் ஆந்தரமான அந்தகாரத்தைப் போக்கிக் கொண்டாயிற்று இருப்பது (ஈடு, முதல், ஸ்ரீ யக்பதி, பக். 72). 2. மந்தணம் (இரகசியம்); secret. "ஆந்தரஞ்சொல்லி அரிய மகன்றனக்கு" (ஆதியூரவதானி, 25).

H. andar. **Skt.** antara. **ம.** ஆத்த

[அகம் + தரம் = அகந்தரம் → ஆந்தரம். அகம் =மனம்; தரம் → தரவு, தருதல். மனத்தகத்தே தந்த செய்தி (இரகசியம்)].

வடமொழியில் உள்ளே, இடையில் என்று பொருள்படும் அண்தர (antara) என்னும் சொல்லுக்கு வேர்மூலம் கூறப்படவில்லை. எல்லை, முடிவு எனப் பொருள்படும் அண்த (anta) என்னும் சொல்லிலிருந்து ஆன்தர (antara) பிறந்திருக்க முடியாது. அண் + தரம் – அந்தரம் (வானம்) என்னும் தமிழ்ச் சொல் வடமொழியில் புகுந்தது போல், அகம் + தரம் – ஆந்தரம் (உள்ளேயிருப்பது, உட்பகுதி) என்னும் தமிழ்ச் சொல்லும் வடமொழியிலும் வட நாட்டு மொழிகளிலும் பெரிதும் வழங்குவதாயிற்று.

ஆந்தராளிகன் āndarāḷigaṉ, பெ. (n.) நடுவர் (ஈடு. 10,9,4); mediator, umpire.

[ஆந்தரம் + ஆளி + கன் = ஆந்தராளிகன். ஆள் → ஆளு → ஆளுவன் → ஆளுகன் → ஆளிகன். ஆந்தராளிகன் = மந்தணமான செய்தியை வெளியில் எவருக்கும் தெரியாமல் ஒளித்து வைத்திருப்பவன்.]

ஆந்திரம் [1] āndiram, பெ. (n.) 1. குடல்; bowels, entrails. 2. சாவு; death. 3. உட்புறத்தைப் பற்றியது; that which refers to the inside as opposed to outside. (சா.அக.).

[அகம் + தரம் – அகந்தரம் → ஆந்தரம் → ஆந்திரம் = உள்ளேயிருப்பது, வயிற்றுள்ளிருக்கும் குடல்.]

ஆந்திரம் [2] āndiram, பெ. (n.) 1. தெலுங்கு நாடு; Telugu country. 2. தெலுங்கு மொழி; Telugu language.

Skt. āndhra

[அண்டிரன் → ஆந்திரன் → ஆந்திரம்.]

ஆந்திரன் āndiraṉ, பெ. (n.) தெலுங்கன். (சி.சி.2,61 சிவாக்); Telugu people, Andhra, native of Andhra.

[அண்டிரன் → அந்திரன் → ஆந்திரன்.]

ஆண்டகைமை வாய்ந்த ஒருசார் சேரர்குடி முன்னோர் அண்டிரன் என்பானின் குடிவழியினர். ஆண் + திறல் = ஆண்டிறல் → ஆண்டிரன் எனவும் மருவியிருக்கலாம். சேரக்கிளை மொழிகளுக்கும் ஆந்திரரின் தெலுங்கு மொழிக்குமுள்ள அடிப்படைச் சொல்லொப்புமைகளும், மாந்தவியலடிப் படையான பழக்க வழக்க பண்பாட்டுத் தொடர்புகளும் இயற்பெயர் தொடர்புகளும், ஆந்திரர் சேரக்கிளை மரபினரே என்பதை வலியுறுத்தும். பொறையன்

என்னும் சேரருக்குரிய பெயர், ஆந்திரநாட்டு அரசர் பெயராகவும், வசந்த பொறி (பொறையன் தேவி) அரசியர் பெயராகவும், இருத்தலை ஆந்திரநாட்டுக் கல்வெட்டுகள் வலியுறுத்துகின்றன. ஆந்திரர் என்பது குடிவழி பெற்ற பெயர். உயர் வகுப்பு ஆரியனுக்கும் தாழ்வகுப்புத் திரவிடப் பெண்ணுக்கும் பிறந்த கலப்பினத்தார் ஆந்திரர் எனப் பெயர் பெற்றதாக வடநூலார் கூறும் கூற்று மெய்யன்று. ஆந்திரக் குடிமக்கள் அனைவரும் வடிவாலும், பண்பாடு, பழக்க வழக்கங்களாலும், மொழியாலும் திரவிடராய் பண்டு தொட்டு நிலைத்திருத்தல், அவர் தூய தமிழ்க் குடி வழியினர் என்பதை நாட்டுதற்குப் போதிய சான்றாம்.

ஆந்து āndu, பெ. (n.) பிணையம்; bail. (கருநா.)

[ஆல் → ஆன் → ஆந்து. ஆனுதல் = சேர்த்தல், பிணைத்தல்.]

ஆந்துகல் āndu-kal, பெ. (n.) 1. தலைச்சுமையை இறக்கி வைக்க நட்டிருக்கும் கல்; platform erected on the road side to rest burdens. 2. திரிகைக்கல் (இயந்திரம்); handmill (கருநா.).

[அந்து → ஆந்து. (நன்கு பொருந்துதல், உறுதல்) ஆந்து + கல்.]

ஆந்தை[1] āndai, பெ. (n.) 1. ஓர் இயற்பெயர் (தொல். எழுத். 345 உரை); ancient name. "ஆந்தை யடியுறை எனினே" (புறநா.67-12). "**மன்னெயி லாந்தையும்**" (புறநா.71-1). 2. எயிலியூர்க்குத் தலைவன்; ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனுக்கு நண்பன்; chief of Eyiliyūr, and friend of Pūda-P-Pāndiya,

[ஆதன் + அந்தை - ஆதந்தை → ஆந்தை. அத்தன் → அத்தை → அந்தை.]

ஆதன் என்னும் இயற்பெயர் முன்னர் தந்தை முறைப்பெயர் வரின், நிலைமொழியீற்றெழுத் திரண்டும் வருமொழி முதலுங்கெட, ஆதன் + தந்தை (ஆத் + அந்தை) ஆந்தை எனப் புணரும் எனத் தொல்காப்பியர் நெறியிட்டிருக்கிறார்.

இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்
முதற்கண் மெய்கெட அகரம் நிலையும்
மெய்யொழித் தன்கெடும் அவ்வியற் பெயரே
.....(தொல்.எழுத். 348)

ஆதனும் பூதனும் கூறிய இயல்பொடு
பெயரொற்றகரந் துவரக் கெடுமே
..... (தொல்.எழுத். 349)

தொல்காப்பியர் காலத்தில், ஆதன் பூதன் என இயற்பெயர் கொண்டோர் பலராக விருந்தமையின், பல்கால் மக்கள் நாவில் இடம்பெறும் கூட்டுச் சொற்கள் குறுகி, மரூஉச் சொல்லாகும் உலகியல் பற்றி, ஆந்தை பூந்தை என்னும் மரூஉச்சொற்கள் தோன்றியிருக்கலாம்.

தந்தை முறைப்பெயர், ஆதனுக்குப் பின்னடைமொழியாய் தந்தைபோல்வானாகிய ஆதன் என வழங்கியதா அல்லது ஆதனின் தந்தையையே குறித்ததா என்று வினாவெழுகின்றது. ஆதன் தந்தைக்கு ஏற்கனவே குமரன் என ஒரியற் பெயரிருக்குங்கால், ஆதன் தந்தை குமரன் என இயற்பெயர் சேர்ந்தே வருதல் முறை. அது ஆந்தைக்குமரன் என வழங்கியிருத்தல் வேண்டும். அல்லாக்கால் இன்னாரின் மகன் எனத் தந்தையால் மகன் அறியப்படும் முறையே உலகியல்பாயிருக்க, இன்னாரின் தந்தையென மகனால் தந்தையறியப்படும் ஒரு வழக்கம் தமிழரிடையிருந்தது எனக் கொள்ள நேரும். பண்டைத் தமிழிலக்கியப்பரப்பில், மகனொடு சார்த்தித் தந்தையை யறியும் சொல்லாட்சிகளைக் காணக் கூடவில்லை. "சேரலன் மருக, சோழன் மருக" எனப் பிறங் கடையரை முன்னோரொடு சார்த்தி யுரைப்பதும், "மாசாத்துவன் மகனை யாகி . . . நின்பாற் கொலைக்களப்பட்ட கோவலன்" எனத் தந்தையொடு மகனைச் சார்த்தியுரைப்பதும் அடிப்படை வழக்கு.

"இயற்பெயர் முன்னர் தந்தை முறைவரின்" எனத் தொல்காப்பியர் முறைப்பெயரைச் சுட்டினும், 'தந்தை' முறைப்பெயர் என்பதைச் சுட்டியதல்லது, ஆதனுக்குத் தந்தை முறையினன் எனக் கொள்ள இடந்தரவில்லை.

எந்தை வருக என்றவிடத்து, எந்தை அவன் தந்தையையே சுட்டியதன்று; என் தந்தை போன்றீர் எனுங் கருத்தே தருவது. அவ்வாறே ஆந்தை என்னும் மரூஉச் சொல்லும், ஆதனாகிய மதிக்கத் தகுந்த பெரியோன் என்றே பொருள்படும். சாத்தந்தை, கொற்றந்தை என்பனவும் இத் திறத்தினவேயாம். கண்ணையன், முருகையன் என ஐயன் ஈற்றனவும், கண்ணப்பன், முருகப்பன் என அப்பன் ஈற்றனவும், கண்ணம்மை, நல்லம்மை என அம்மை ஈற்றனவும், நல்லண்ணன், பெரியண்ணன் என அண்ணன் ஈற்றனவுமாய இயற்பெயர்களில், ஈற்று முறைப்பெயர்கள் முறைப்பெயர்ப் பொருளைச் சுட்டாது மதிப்புரவு குறித்த ஈறாகவே வழங்கி வருதலை நோக்குக.

அன்பை வெளிப்படுத்தவும் விளியினிமையும் கருதி இயற் பெயர்களுக்கு முறைப்பெயர்கள் பின்னடைகளாகச் சேர்க்கப் படுகின்றன. முருகன் என்னும் இளைஞனை அன்பொழுக அழைக்கும் முதியவர் 'முருகு தம்பி இங்கே வா' எனத் தம்பி முறைப்பெயரை இயற்பெயரொடு சார்த்தி விளித்தலை யாவரும் அறிவர்.

பண்டைத் தமிழகத்திலும் இத்தகு நிலையிருந்திருத் தலியல்பே. ஆதலின் ஆதனையே மதிப்புரவு கருதி ஆதன்றந்தை → ஆதந்தை → ஆந்தையென அழைத்தனர் எனக் கொள்வதே ஏற்புடைத்து. இலக்கியங்களிலும் ஆந்தை இயற்பெயராக ஆளப்படுவதல்லது ஆதனின் தந்தையைச் சுட்டிய பெயராக ஆளப்படவில்லை யென்பது இக் கருத்துக்கு அரணாகும்.

கொற்றன் + தந்தை → கொற்றனந்தை → கொற்றந்தை எனத் திரிவதுந்தமிழ் மரபாதலின், கல்வெட்டில் 'கொற்றனந்தை' என்னும் சொல்லாட்சி வழங்குதலை நோக்கின், கொற்றன் + அந்தை என்பதே கூட்டுச் சொல்லென்றும், ஆந்தை, பூந்தை என்பவற்றை ஆதன் + அந்தை, பூதன் + அந்தை என்றே

புணர்த்த வேண்டும் என்றும் கொள்ளலாம். இது அத்தன் → அத்தை → அந்தை எனத்திரிந்த திரிபாகும். அஞ்சியத்தன் → அஞ்சியத்தை (அஞ்சியத்தைமகள் நாகையார்). திருச்சி மாவட்டத்தில் பழங்குடிமக்கள் மதிப்புரவுச் சொல்லாக விளிக்கும் போதும் பேசும்போதும் அந்தையை ஆள்கின்றார். "என்னந்தெ, வா அந்தெ" (இ.வ.).

ஆந்தையை அறிவுடைய பறவையாக (bird of wisdom) மேலைநாட்டினர் கருதினர். பழந்தமிழகத்திலும் (ஆந்தையின் கூவல், வருவது காட்டுங் குறியெனப் பெரிதும் நம்பி) ஆந்தையை அறிவுடைப் பறவையென்றும், கூகையை (ஊமன், உம், உம் எனச் சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்கும் பறவை) முட்டாள் பறவை யென்றும் கருதினர். ஆந்தை குடிப் பெயராகவும், சில வகுப்பாரிடை நிலவுகிறது. கடைக்கழகப் புலவர்களுள் ஓதலாந்தையார், சிறைக்குடியாந்தையார், கொட்டியூர் நல்லாந்தையார், பிசிராந்தையார், மன்னெயி லாந்தையார் என்னும் பெயர்களில் ஈற்றிலுள்ள 'ஆந்தை' அறிவுடைய பறவை (ஆந்தை)யின் பெயரே என்று திரு. பி.எல்.சாமி கருதுகின்றார். ஆந்தையை 'முதுபுள்' (அகநா.260)– அறிவுடைய பறவை என்று கடைக்கழகக் காலத்தில் நம்பியது உண்மையெனினும், அது குடிப்பெயராகவல்லது இயற்பெயராகவழங்கவில்லை. கடைக் கழகக் காலத்தில் 'ஆண்டலை' என்னும் சொல் ஆந்தையைக் குறிக்கவழங்கியதாகவும், ஐந்திணை எழுபதில்தான் முதன்முதல் 'ஆந்தை' பறவைப்பெயராக (ஆண்டலை → ஆந்தை என மருவி) வழங்கியது என்றும் கூறும் அவர், கடைக்கழகப் புலவர் பெயர்களில் வரும் ஆந்தையைப் பறவைப் பெயராகக் கருதவில்லை.

சேலம், கோவை மாவட்டங்களில் வாழும் வேளாளருள் ஆந்தை க்குடியைச் சார்ந்தவர்கள் இன்றும் உள்ளனர். ஆயின், அவர்களுள் ஒருவர்கூடத் தம் குடிப்பெயரை இயற்பெயராகக் கொள்வதில்லை.

ஆந்தை[2] āndai, பெ. (n.) 1. பாழடைந்த சுவரிடுக்கு, மரப்பொந்து முதலிய மறைவிடங்களில் பக லெல்லாம் ஒளிந்திருந்து, இராக் காலத்தில் வெளிப்பட்டுக் கூச்சலிடுமோர் பறவை. இதன் கண்ணுக்கு மந்திர ஆற்றலுண்டு எனவும், இதன் பித்தம் மருத்துவத்திற்குப் பயன்படும் எனவும் நம்பப்படுகிறது; prognastic bird; spotted owlet –**Athene brama** alias **Noctula Indica.** It is regarded with much aversion, found generally in the crevices of the walls of dilapitated ancient buildings, in the hollow stems of trees and other forlorn places during day time. It hunts by night with a loud screech. Its eye has psychic properties and as such, is used in magic and its bile has medicinal virtues. Its call is a double note. The forest species is **Athene radiata** and the Malabar species is **Athens malabarca.** "மன்ற முதுமரத்து ஆந்தை குரலியம்ப" (ஐந்.எழு.). 2.பறவை வகை; முகம் உருண்டு தட்டையாகவும், கண்கள் திரண்டும், தலைபருத்தும், இறகுகள் தடித்தும், நகங்கள் வளைந்து கூராகவும் உள்ள இரவில் இரைதேடி, பகலில் மரப்பொந்து பாழிடங்களில் வதியும் இருட்புள் வகைகளுள் ஒன்று; owl, any member of the nocturnal predacious birds with large broad heads, flat faces, large eyes surrounded by disks of feathers, short hooked beaks, silent flight, and howling or hooting cry. (கந்தபு.திருநகரப்.95). 'ஆந்தை சிறிது, கீச்சுப் பெரிது', 'ஆந்தை பஞ்சையாயிருந்தாலும் சகுனத்தில் பஞ்சையில்லை' (பழ.).

இனச்சொற்கள்:

ஆந்தை:: ம. ஆந்த; **க.** ஆந்தெ, ஆடேலு, ஆந்தெக; **தெ.**ஆந்தெக, ஆடெலு. **Skt.**āti.

ஊமன் : தெ. மூங்கா; ம.கூமன்; மூங்பா, மூகன்; **பர்.** உமகுளி; **கோண்.** உமகுஞ்சி; **மரா.குமட்; கோத**, கும்ன்.

கூகை: க. கூகெ, கூபெ; **து.** கூகெ. கூங்கு கும்மெ; **குட.** குமி; **தெ.**கூபெ.; **பட.** கும்ம; **துத.** கிக்சு; **மா.**கபொ; **கொலா.**குப; **மரா.**குபட்; **Skt.** ghuka, **M.P.** (dial). கூகூ

குடிஞை : தெ. குட்ல, கூப; **கோண்.**குஞ்சி; **மரா.** ghudge

பகண்டை : தெ. பகடி கண்டெ; **வங்.**பென்ச்ச.

நத்து : ம. நத்து; **துளு, நத்திங்கெ. Skt.** naktaka.

பிங்கலை : மரா. பிங்கலா.

குரால் : தெ.கொரடு; **கோண்.** குர்வலா; **பெங்.**குர்வ; **மண்.** குர்வ; **இந்.** குரையா.

ஊளி : **Skt.** Ullu, Uluka; **Pkt.** ulua; ali. uluko; **Mar.** Ulluk; **H., U.** ullu; **Nep.** ullu; **E.**owl; **M.E.**oule, owle; **OE.** Ule; **Dt.**uil;

OHG. uwila; **MHG.** iuwel, iule; **G.**eule; **O.G.** uwile; **On.** ugla; **Dan.** ugle; **Swed.** uggla; **Icel.** ugla; **Gr.** ololuzein; **Fr.** hulotte L.ulula, (L.ululare–to screech, cry out.).

முந்து. ஆண்டலை.

[ஆண் + தலை = ஆண்டலை. ஓர் ஆணின் தலையைப் போன்று தட்டையான முகத்தோற்றம் தருதலால் ஆண்டலையென்றும் பெயரமைந்தது. ஆண்டலை → ஆந்தலை →ஆந்தை (மரூஉச் சொல்). ஒ.நோ: நின்றுவா → நிண்டுவா → நிந்துவா (கொச்சை). மண்டை → மொண்டை → மொந்தை. ஆண்டலை பார்க்க; see āṇḍalai.]

ஆந்தையினத்தில் ஒன்றாகிய குரால் மக்கள் குடியிருப்புகளிலும் தங்குவதாலும், அடிக்கடிப் பார்வையிற் படுவதாலும், உலகமொழிகளில் தப்பாது இடம் பெற்றிருக்கலாம். அடிக்கடிப் பயன்படுத்தும் சொல் குறிற்கீழ் ஒற்றாகக் குறுகும் மரூஉ முடிபிற்கேற்ப ஊளி → உல் → உல்லு என மேலையாரிய மொழிகளில் திரிந்திருக்கலாம்.

கூகை, குரால், குடிஞை, ஊமன், ஆண்டலை என்னும் ஐந்தும் ஆந்தையினப் பறவைகள். பகண்டை, நத்து, பிங்கலை என்பனவும் இவ்வினத்தைச் சேர்ந்தவையே. ஆந்தையென்ற பெயர், ஐந்திணையெழுபது என்ற நூலில் தான் முதலில் ஆளப்பட்டுள்ளது. எனவே இதனை ஆண்டலையின் மரூஉச் சொல்லாகக் கொள்ளல் ஏற்புடைத்து. அறிஞர் பி.எல். சாமி இதே கருத்தினர்.

உலகில் ஆந்தையினத்தில் 130 வகைகள் உள்ளன. அவற்றுள் வடிவில் சிறியவை மரப்பொந்துகளிலும் மிகப் பெரியவை தரையிலும் தங்குகின்றன. இவை எலிகளை அழிப்பதால் மக்களுக்கு நண்பனாகக் கருதப்படுகின்றன.

ஆந்தை கூவினால் நன்மையுமுண்டு, தீமையுமுண்டு எனக் கருதுவர். **ஆந்தைக்காதல்** பார்க்க; see āndai-k-kādal.

கன்னடத்திலும் தெலுங்கிலும் உள்ள ஆந்தெக, ஆடெலு, என்னும் வடிவங்கள் ஆண்டலை → ஆந்தெக → ஆந்தை சொற்றிரிபின் இடைநிலைப் படிக்கல்லாக அமைந்திருப்பதும் இக் கருத்துக்கு அரணாகும்.

ஆந்தை ஆண்டலையின் திரிபாயினும் இவ்வினப் பறவைகளுக்குப் பொதுப் பெயராக ஆளப்பட்டு வருகிறது.

கி.மு. 3000–க்கும் முற்பட்டதாகக் கருதப்படும் பண்டை எகுபது மொழியின் உருவெழுத்துகளில், 'ம்' என்னும் மெய்யெழுத்து ஆந்தையின் வடிவத்தில் எழுதப்பட்டுள்ளது. பண்டை எகுபது மொழியில் உயிரெழுத்துகளின்மையால், 'ம்' என்னும் மெய்யெழுத்தை உயிரொலிகூட்டி 'உம்' என ஒலிப்பர். ஊமன் என்னும் தமிழ்ப்பெயரே கி.மு. 3000–க்கும் முற்பட்ட காலத்தில் எகுபதில் வழங்கியதாகக் கருத இது இடந்தருகிறது. அசாம் மாநில வடகிழக்குப் பகுதிகளில் வாழும் அங்காமி நாகருள் கணவன் பெயரை மனைவியோ, மனைவியின் பெயரைக் கணவனோ சொல்லும் பழக்கமில்லை. 'உம், உம்' என சொன்னதையே திருப்பிச் சொல்லும் ஊமைக்கோட்டானைப் போல், தமக்குரியர் பெயரைப் பலர்க்கும் சொல்வது இழிவு எனக் கூறுகின்றனர். தமிழ்நாட்டிலும் இவ்வழக்கம் இருப்பதைக் காணலாம்.

சமற்கிருதம் உள்ளிட்ட மேலையாரிய மொழிகளில் ஊளி → உல்லு எனத் திரிந்திருக்கவும், சமற்கிருதத்திலுள்ள உலூக,உல்லு (ஆந்தெ) எனுஞ் சொற்கள் val என்னும் வேரடியாகத் தோன்றியதாகக் கூறுவது பொருந்த மற்றது. அவர்கள் காட்டும் Skt. uluka > val. val = to move round in a cricle, to move to and fro, to go, to increase என்னும் இப்பொருள்களில் எதுவும் அதன் பெயர் பொருத்தத்திற்குப் பொருந்தாமையைக் காணலாம்.

உலக முழுவதும் மக்கள் பரவுவதற்கு முன்பே, மூலத்தாய் மொழியின் சொற்களஞ்சியத்தைக் கொண்டுபோய் இன்றளவும் உலகில் தொன்முது நாகரிக மொழியினர் காத்து வருகின்றனர் என்பதற்கும், ஊமன், ஊளி என்பவை கி.மு. 5000 ஆண்டுகளுக்குமுற்பட்ட சொல்லாட்சிகளாகலாம்என்பதற்கும், 'ஆந்தை' என்னும் சொல் கி.பி. முதல் நூற்றாண்டளவில் 'ஆண்டலை'யிலிருந்து மருவித் தோன்றிய சொல் என்பதற்கும் மேற்கண்ட சொல்லாட்சிகள் துணையாகின்றன.

இன்றும் நடுவண் பைதிரக் (மத்தியப் பிரதேச) கிளை மொழிகளில், கூகை 'கூகூ' என்றே வழங்கிவருவதாலும், குரால் (கபில நிறமுடைய ஆந்தை) என்னும் சொல், இந்தி பேசப்படும் பகுதிகளில் 'குரையா' என்று இன்றும் வழங்கிவருவதாலும், இத்தகு அடிப்படைச் சொல்லொப்புமைகளையே பற்றுக் கோடாகக் கொண்டு வடபுலம் முழுவதும் தமிழே பேசப்பட்டது என்று திட்டமாக வரையறுக்க இயலும்.

ஆந்தை[3] āndai, பெ. (n.) 1. புறாமுட்டிப் பூடு; serrate, irregular rhomboid leaved parrofueet Burr – **Triumfetta hourboidea.** 2. பேராமுட்டி; fragrant sticky mal-low–parvonla odorata. (சா.அக.).

[ஆந்தை 1,2, (மூ. தெரிந்தில.).]

ஆந்தைக்கண் āndai–k–kaṇ, பெ. (n.) 1. ஆந்தைக் கண் போன்ற பெரிய கண்; big eyes like those of an owl. 2. ஆந்தைப் பார்வை போன்ற வெறும் பார்வை; blank stare like that of an owl.

[ஆந்தை + கண்.]

ஆந்தைக்கண்ணன் āndai–k–kaṇṇaṉ, பெ. (n.) ஆந்தைக் கண்ணைப் போன்ற கண்களை யுடையவன்; owl–eye man. 'ஆந்தை விழிக்கிறது போல விழிக்கிறான்' (பழ.).

[ஆந்தை + கண்ணன்.]

ஆந்தைக்காதல் āndai–k–kādal, பெ. (n.) 1. ஆந்தை நூல்; science dealing about the screeching of the owl from which prediction is drawn. 2. ஆந்தை கூவும் இரட்டையொலி; screeching of owls with a double note in it.

[ஆந்தை + காதல்.]

பொருத்தமறியும் ஐம்புட்களான வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் என்பவற்றுள் ஆந்தையும் ஒன்று. ஐம்புட்களையும் முறையே அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தெழுத்துகள் குறிக்கும். ஆந்தை தன் துணைப் பறவையைக் கூப்பிடும் காதல் ஒலி, ஆந்தைக்காதல் (desire–affection for its mate which it calls) என வின்சுலோ குறிப்பிடுகிறார். 'ஆந்தைக் காதலைப் பொய்க்காது' (பழ.). ஆந்தை கூவுதலைக் கணக்கிட்டு நன்மை தீமைகளைக் கூறுவது பழங்கால வழக்கம்.

"ஒருரை உரைக்குமாகில் உற்றதோர் சாவு சொல்லும்
ஈருரை யுரைக்குமாகி லெண்ணிய கரும நன்றாம்
மூவுரை யுரைக்குமாகில் மோகமாய் மங்கைசேர்வாள்
நாலுரை யுரைக்குமாகில் நாழியிற் கலகஞ் சொல்லும்
ஐயுரை யுரைக்குமாகி லங்கொரு பயணஞ்சொல்லும்
ஆறுரை யுரைக்குமாகி லடுத்தவர் வரவு சொல்லும்
ஏழுரை யியம்புமாகி லிறந்த பண்டங்கள் போதும்
எட்டுரையுரைக்குமாகில் திட்டெனச் சாவு சொல்லும்

ஒன்பதும் பத்துமாகி லுத்தம மிகவு நன்றே".
(அபி. சிந்.).

ஆந்தோளம் āndōlam, பெ. (n.) அலுக்கு (கமகம்) பத்தனுள் ஒன்று (பிரபு. இராக, 24); a kind of tune.

ஆந்தோளி āndōḷi, பெ. (n.) பல்லக்கு; a kind of palanquin. "ஆந்தோளியில் மாதுமை ஏக." (திருவானைக். திருவிழா. 21.).

[ஆந்து + தோள் + இ.]

ஆந்தோளிகம் āndōḷigam, பெ. (n.) **ஆந்தோளி** பார்க்க; see āndōḷi.

ஆநாகு ānāgu, பெ. (n.) ஆவின் கன்று; calf of a cow.

[ஆன் + நாகு – ஆநாகு.]

ஆநாயம் ānāyam, பெ. (n.) 1. வலை; net. 2. வளிக்கண்ணறை; air-cells.

[ஆ + (நாளம் →) நாயம்.]

ஆநாயன் ānāyan, பெ. (n.) இடையன்; cowherd. பெண் – ஆநாயத்தி.

ம. ஆநாயன்.

[ஆ + நாயன்.]

ஆநாவு ānāvu, பெ. (n.) **ஆநாகு** பார்க்க; see ānāgu.

ம. ஆ நாவு.

[ஆன் + நாகு – ஆநாகு → ஆநாவு]

ஆநியம்[1] āniyam, பெ. (n.) 1. நாள்; day. "பயங்கெழு வெள்ளி ஆநியம் நிற்ப," (பதிற்.). 2. நாட்படி; daily allowance. படியிரட்டி ஆநியம் பெறுவதாகவும் (T.A.S.i.6.).

*[ஆகு → ஆ + நாள் ஆநாள் → ஆநாளம் → ஆநயம் → ஆநியம். ஆநாள் → ஆகுநாள் = நல்லநாள், நல்லநேரம், தக்க பொழுது. கல்வெட்டில் **ஆநியம்** என்னும் சொல் **ஆணியம்** எனத் தவறாகப் பொறிக்கப்பட்டுள்ளது.]*

ஆநிரை ānirai, பெ. (n.) மாட்டுமந்தை; herd of cows.

[ஆ + நிரை, நிலை → நிரை.]

ஆநிரைகாத்தோன் ānirai-kāttōn, பெ. (n.) மாட்டு மந்தைகளைக் காத்த கண்ணன்; Lord Kannan (Krisna) the protecter of cows.

[ஆ + நிரை + காத்தோன். காத்தவன் → காத்தோன்.]

ஆநிலை ānilai, பெ. (n.) மாட்டுக் கொட்டில்; cow-house, a byre.

[ஆ + நிலை. நில் → நிலை. நிலை – நிற்குமிடம், தங்குமிடம்.]

ஆநின்று āninṟu, இடை. (part.) நிகழ்கால இடைநிலை; present tense affirmative particle. "செய்யாநின்றான்" (நன்.143). **ஆவிருந்து** பார்க்க; see āvirundu.

ஆநீர் ānīr, பெ. (n.) ஆவின் சிறுநீர்; cow's urine. "ஆநீர் கண்கழுஉக் காணப்பட்டான்" (இரகு, யாக.98).

[ஆ + நீர்.]

ஆப்படி–த்தல் āppaḍi–, 4. செ.கு.வி. (v.i.) மரம் முதலியவற்றைப் பிளக்க ஆப்பினை அடித்தல்; to drive wedge to split wood etc.

[ஆப்பு + அடி.]

ஆப்பம் āppam, பெ. (n.) புளித்த மாவினாற் செய்த சிற்றுண்டிவகை; thin cake of riceflour. 'ஆப்பம் சுடுகிற அம்மாளுக்கு அறுவர் வேண்டுமாம் உதவி செய்ய (பழ.).

ம. ஆபம்; **க** ஆப்ப; **து.** ஆப்பெ.

[அப்பம் → ஆப்பம் (கொ.வ.).]

ஆப்பி āppi, பெ. (n.) மாட்டுச்சாணம்; cow dung. "மெழுகு மாப்பிகண் கலுழ்நீ ரானே" (புறநா.249).

து. ஆம்பி; **கச., துட.** ஆப்பி.

[ஆ + பீ – ஆப்பீ → ஆப்பி.]

ஆப்பிடு–தல் āppiḍu–, 20 செ.கு.வி. (v.i.) அகப்படுதல்; to be entangled, to be caught. "மண்ணைச் சுமந்தே யாப்பிட்டுக் கொண்டடிபட்ட" (தனிப்பா. ii.1,2).

[அகப்படுதல் → ஆப்படுதல் → ஆப்பிடுதல் (கொ.வ.).]

ஆகப்படுதல் பார்க்க; see āga-p-padu-,

ஆப்பிநீர் āppinīr, பெ. (n.) 1. ஆவின் (பசு) சிறுநீரும் சாணமும்; cow-dung and cow's urine. 2. சாணிப்பால்; cow-dung-water, solution of cow-dung.

[ஆப்பி + நீர்.]

ஆப்பு[1] āppu, பெ. (n.) 1. மரப்பிளப்பிற் செலுத்தும் மரத்துண்டு, முளை; wedge used in splitting wood, peg. "ஆப்பதில் லாததே ரிவையெலா மொன்றாகும்" (அறப். சத. 57). "ஆப்பைப் பிடுங்கின குரங்கு போல" (பழ). 2. தாழ்ப்பாள் (சேரநா.); bolt.

ம. ஆப்பு, **க., தெ.** ஆபு; (நிறுத்துதல்) **கோத.** ஆம்; **து.** ஆங்கெ. **கூ.** அங்க (தடுத்தல்) **கச.** ஆப்த். **குவி.** ஆங்கலி (தடு) **பட.** ஆப்ப. **முந்து** அகைப்பு.

[அகைப்பு → அகப்பு → ஆப்பு. அகைத்தல் = முடுக்குதல், செலுத்துதல்.]

ஆப்பு[2] āppu, பெ. (n.) 1. கட்டு, பிணைப்பு; bandage, tie. "அருவினைகளாப்பு ... அவிழ்ந்தொழியும்"

(திவ். இயற். 1, 75). 2. உடம்பு; body. (திவ். இயற். 4, 93).

[யாப்பு → ஆப்பு]

ஆப்பு [3] āppu, பெ. (n.) 1. நொய் (இ.வ.); broken rice, grit (Loc.). 2. உணவு (செவிலி); food (Nurs.). (செ.அக.).

[ஒருகா. அப்பம் → அப்பு → ஆப்பு. அப்பு = நீர். நீரோடு கலந்து அரைத்த மாவு, நொய், சமைத்த அப்பம், உணவு]

ஆப்பு [4] āppu, பெ. (n.) எட்டிமரம் (மூ.அ.); strychnine tree.

[ஒருகா. எலும்பு மூட்டுப் போன்று பொருத்துகள் மிகுந்த மரம்.

ஆப்பு [5] *பார்க்க; see* **āppu** [5]*.]*

ஆப்பு[5] āppu, பெ. (n.) 1. பொருத்து, எலும்புமூட்டு, இடுப்பு (இ.வ.); joint of bone, hip. (Loc.) **ஆப்பெலும்பு** பார்க்க; see āppu–elumbu. 2. வெண்மை; whiteness.

[ஆப்பைப் போன்று பொருந்தும் இயல்பால் எலும்பு மூட்டுகளையும், நிறவொப்புமையால் வெண்மையும் குறித்ததாகலாம்.]

ஆப்பு [6] āppu, பெ. (n.) நீர், அலை; water, wave.

[அம் → அப்பு → ஆப்பு. ஆப்பு = நீர், அலை. நுரை முகந்து வரும் கடலோர அலை, வெள்ளாப்பு என வழங்குதலைக் காண்க. வெள்ளாப்பு வருகிறது (மீ.வ.).]

ஆப்பு [7] āppu, பெ. (n.) இடை. (part.) ஒருசொல்லாக்க ஈறு; formative suffix. பொல்லாப்பு, வெயில் சுள்ளாப்பாக அடிக்கிறது (உ.வ.).

[அப்பு → ஆப்பு.]

ஆப்புத்தள்ளி āppu–t–talli, பெ. (n.) அச்சுக்கூடக் கருவிகளுள் ஒன்று (புதுவை); shooting stick (Pond.).

[ஆப்பு + தள்ளி.]

ஆப்புராகி āppu–rāgi, பெ. (n.) வெண்குன்றிமணி; Indian liquorice plant (சா.அக.).

மறுவ. ஆமகோகிலம்.

[ஆப்பு + ராகி. ஆப்பு = வெண்மை.]

ராகி = சிவந்தது

ராகி பார்க்க; see **rāgi.**

ஆப்புளாகி āppu!–āgi, பெ. (n.) வெண்கீரைத் தண்டு; garden green. (சா.அக.).

[ஒருகா. அப்புள் + ஆகி – அப்புளாகி → ஆப்புளாகி. அப்பு = நீர். அப்புளாகி = நீர்வளத்தால் வளர்வது.]

ஆப்பெலும்பு āppelumbu, பெ. (n.) 1. ஆப்புப் போன்ற எலும்பு; very irregular cuneiform or wedge shaped bone at the base of the skull. 2. மணிக்கட்டில் எட்டு எலும்புகளிலொன்று; one of the wrist bones – or cuneiform carpal bone – Carpus. 3. பாதத்திலிருக்கும் ஆப்புப் போன்ற மூன்று எலும்புகள்; the three cuneiform bones in the feet – Tarsus.

[ஆப்பு + எலும்பு.]

ஆப்பெழுத்து āppeluttu, பெ. (n.) மொசபதேமிய ஆப்பு வடிவ எழுத்து முறை; wedge shaped writing system of the Mesopotamian people.

[ஆப்பு + எழுத்து.]

ஆப்பென்பு āppenbu, பெ. (n.) **ஆப்பெலும்பு** பார்க்க; see āppelumbu.

[ஆப்பு + என்பு. எலும்பு → என்பு.]

ஆப்பை āppai, பெ. (n.) அகப்பை (இ.வ.); ladle (Loc.). 'கைக்குறி யாப்பை வாங்குவது' (ஈடு. 1, 4, 6). **அகப்பை** பார்க்க; see agappai.

ம. ஆப்ப; **க.** ஆப்பெ.

[அகப்பை → ஆப்பை.]

ஆப்பைக்குறி āppai–k–kuri, பெ. (n.) **அகப்பைக்குறி** பார்க்க; see agappai–k–kuri.

[அகப்பை → ஆப்பை + குறி.]

ஆபம் āpam, பெ. (n.) நீர்; water.

க. ஆப.

[அப்பு → ஆப்பு → ஆப்பம் → ஆபம்.]

ஆம்[1] ām, 7. செ.கு.வி. (v.i.) **ஆகும்** பார்க்க; see āgum, ஆகும் என்பதன் இடைக்குறை; contraction of 'ஆகும்' – கு.வி.எ. (adv.) இசைவு காட்டும் சொல்; yes, so, a part. expressing assent, recollection. 'ஆம்' அதுதான் எங்கள் வழக்கம் (உ.வ.) 'ஆம் என்ற குற்றம் அடிவயிறு கனத்தது'. (பழ.).

Heb. amen. verily, so be it, used by Christians usu. at the close of prayer or hymn.

Hind. ha, hai.

[ஆகும் → ஆம்.]

ஆம் [2] ām, இடை (part.) 1. கேள்விப்பட்டதைக் குறிக்குஞ் சொல்; part. used to denote a quotation. It is said, they say, on dit. ஓர் அரக்கன் இருந்தானாம் (உ.வ.). 2. இகழ்ச்சிக்குறிப்பு; part. expressing contempt or sarcasm. "ஈத்தவை கொள்வானாம்" (கலித். 84, 18). 3. அனுமதி குறிக்குஞ் சொல்; expressing permission. அவன் போகலாம் (உ.வ.). **ம., க.** ஆம். 4. தகுதி குறிக்குஞ் சொல்; part.

expressing fitness. அவரைப் பெரியவராக வணங்கலாம் (உ.வ.). 5. ஊகத்தைக் குறிக்குஞ் சொல்; part. expressing contingency. இன்றைக்கு மழை பெய்யலாம் (உ.வ.). 6. 'ஆவது' எனப் பொருள்படும் எண்ணுப்பெயர் சொல்லீறு; ordinal affix. இரண்டாம் தெரு (உ.வ.). 7. 'ஆகிய' எனப் பொருள்படும் சொல்லீறு; appositional part. used as a noun ending in compound words. சிவனாம் பழம்பொருள் (உ.வ.). 8. சாரியை; connecting increment between the parts of the compound word. 'மண்ணாங்கட்டி' (நன். 244, உரை). 9. அசை நிலை; expletive. "பணியுமா மென்றும் பெருமை" (குறள், 978). 10. தன்மைப் பன்மை வினை முற்றீறு; 1st pers. pl. verb ending. "வந்தாம்" (செய். வ.). (Lit.u.) 11. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினை முற்றீறு; 1st pers. pl. the person or persons spoken to. "யாமும் நீயும் செல்வாம்" (செய்.வ.). (Lit.u.). 12. ஓர் உவமவுருபு; part. of comparison. "அல்லாங் குழலாள்" (செய்.வ.) (Lit.u.). 13. பயனிலையாய் வரும் வினை முற்று வினையாலணையும் பெயராகி எழுவா யாக நிற்க, அதனை முடிக்குஞ் சொல்லாய், 'யான் பிறர் சொல்லக் கேட்டேன்' எனப் பொருள் விளக்கும் ஒரு சொல். 'பார்த்தாயாம், கேட்டேனாம்'. (உ.வ.); ending of subjective predication.

[ஆகும் → ஆம்.]

ஆம் [3] ām, பெ. (n.) 1. நீர்; water. "ஆமிழி யணிமலை அலர்வேங்கைத் தகைபோல" (கலித்.48). 2. ஈரம்; dampness, moisture, humidity. (கதி.அக.) (அக.நி.). 3. வெந்நீர்; hot water (இராச.வைத்).

[அம் → ஆம். அம் = நீர். அம்முதல் = கலத்தல், மண்ணொடும் பிறவற்றொடும் கலந்து கரைப் பானாகவும் கலப்பதாகவும் அமையும் நீர்.]

ஆம் [4] ām, பெ. (n.) அழகு; beauty. "ஆம்பாற்குடவர் மகவோ" (சீவக. 492).

[அம் → ஆம். அம்= நீர், நீர்மை. நீர்மையால் தோன்றும் பொலிவு, அழகு.]

ஆம் [5] ām, பெ. (n.) வீடு (பிராம.) ; house (Brahm.) **அகம்** பார்க்க; see agam.

[அகம் → ஆம் (கொ.வ.).]

ஆம் [6] ām, பெ. (n.) மாமரம் (பொதி.நி.); mango tree. Skt. ama.

[ஒருகா. ஆவிமா → ஆமா → ஆம். ஆவிமா = மஞ்சள் மாங்காய் மரம், மஞ்சள்மா.]

ஆம் [7] ām, பெ. (n.) கடுகு; mustard (சா.அக.).

[ஒருகா. அவியாம் → ஆயாம் → ஆம். ஆம் = ஈரமற்றது, காய்ந்தது. அவிய்த்து = ஆவித்தது, வெப்பமுற்றது.]

ஆம் [8] ām, பெ. (n.) 1. சிறுகீரை; a kind of greens. 2. வெள்ளரி; cucumber (இராச.வைத்).

[அம் → ஆம். அம் = நீர். நீர் கொண்ட காயும் கீரையும் பொதுவகையான் இப் பெயர் பெற்றிருக் கலாம். சித்த மருத்துவர் பொதுக்குறிப்புப் பெயர்களை ஆள்வது வழக்கம்.]

ஆம் [9] ām, பெ. (n.) ஒரு மந்திரவெழுத்து; mystic letter (சா.அக.). "ஆமெனவே அகண்டவெளி யிருளாய்த் தோன்றி அணுவணுவாய் அப்பாலுக் கப்பாலாகி" (திருவள்ளு. நாதாந்தசாரம், 1000).

[ஒருகா. ஓம் → ஆம்.]

ஆம் [10] ām, பெ. (n.) தக்கது; fitness, being compatible "ஏறாமன்றி லேற்றவு மாமன் றென்னாதான்" (பாரத. நான்கா. 41).

[ஆகும் → ஆம்.]

ஆம்ஆம் āmām, இடை. (part.) ஆமாம் என்று எழுதப்படுவதும் இசைவு குறிப்பதும் ஆகிய, 'ஆம்' என்னும் இடைச்சொல்லின் அடுக்கு; part. of assent, yes;. It is often doubled and written as 'ஆமாம்'. **ஆமாம்** பார்க்க; see āmām.

[ஆகும்→ஆம். ஆம்ஆம் அடுக்குத்தொடர், ஆம்ஆம் ஆமாம். உலகவழக்கில் 'ஆமா' என்று மக்கள் பேசுவது 'ஆமாம்' என்பதன் கடைக்குறை.]

ஆம்படி [1] āmbaḍi, பெ. எ. (adj.) ஆகும் வகையில், ஆகும் முறையில்; in the manner which is agreeable to, or sufficient for (w.).

ம. ஆம்படி.

[ஆகும்படி → ஆம்படி. படி = முறை, வகை.]

ஆம்படி [2] āmbaḍi, பெ. (n.) மெய்க்காப்பு; escort (சேரநா.)

ம. ஆம்பம்

[அகம்படி → ஆம்படி.]

ஆம்படையாள் āmbaḍai–yāḷ, பெ. (n.) மனைவி, அகமுடையாள் (பிராம.); wife (Brahm.) **அகமுடையாள்** பார்க்க; see agamuḍaiyāḷ.

[அகம் + உடையாள் – அகமுடையாள் → அகம்புடையாள் → ஆம்புடையாள் → ஆம்படையாள் (கொ.வ.). அகம் = வீடு,வீட்டுக்காரன், வீட்டுக்காரி என்னும் வழக்குகளை ஒப்பு நோக்குக.]

ஆம்படையான் āmbaḍai–y–āṉ, பெ. (n.) கணவன், அகமுடையான் (கொ.வ.); husband.

[அகம் + உடையான் – அகமுடையான் → அகம் புடையான் → ஆம்புடையான் → ஆம்படையான்.]

ஆம்பர் āmbar, பெ. (n.) 1. அம்பர் மரத்தினின்று எடுக்கும் மஞ்சட் குங்கிலியம்; yellow resin from a tree, amber. 2. ஆம்பல்; water lily (சா.அக.).

*[1. அம்பர் → ஆம்பர். **அம்பர்** பார்க்க; see **amber**.]*

ஆம்பல் [1] āmbal, பெ. (n.) 1. அல்லி, குமுதம்; water-lily, "ஆம்பலம் போதுளவோ" (திருக்கோ.11). 2. நிலவு (அக.நி.); moon. 3. துன்பம் (சூடா.); distress, worry, affliction, adversity.

ம., து. ஆம்பல் (அல்லி); **க.** ஆபல் (அல்லி).

[அம்பல் → ஆம்பல். அம்புதல் = கூம்புதல், குவிதல். பகலிற் கூம்பி இரவில் அலர்வதால், பகற்காலத் தோற்றத்தையொட்டி ஆம்பல் எனப்பட்டது. ஆம்பல் மலர்வதற்குக் காரணமான நிலாவும் ஆம்பல் எனப் பட்டது. நிலா காதலர்க்குப் பிரிவுக்காலத் துன்பம் மிகுவித்தலின், துன்பம் என்னும் பொருள் தந்தது.]

ஆம்பல் [2] āmbal, பெ. (n.) 1. மூங்கில் (பிங்.); bamboo. "சுருதிச்சயக் கோடையாம்பன் முத்தே" (மறைசை.92). 2. யானை; elephant. "ஆம்பன் முகவரக்கன்" (கல்லா. கணபதிகாப்பு.). "புதைகொண்மா மதத்த வாம்பலாநநப் புனிதப் பொற்றேன்" (இரகு. காப்பு.). 3. இசைக்குழல்; musical pipe. "ஆம்பலந் தீங்குழல் தெள்விளி பயிற்ற" (குறிஞ்சிப். 222). 4. ஊதுகொம்பு (திவா.); blow-horn. "வீணை குழலாம்பல்" (கந்தபு. இரண்டா. 34.).5. ஒரு பண்; melody-type, tune played on a pipe. "ஆம்பற் குழலாற் பயிரெம் படப்பைக் காஞ்சிக் கீழ்ச் செய்தேங் குறி" (கலித்.108.63) (த.சொ.அக.).

[அம்பு → அம்பல் → ஆம்பல். அம்பு= நீர். அம்புதல் = தளிர்த்தல், செழித்தல், வளர்தல். அம்பல் – ஆம்பல், செழித்து வளர்ந்த மூங்கில், மூங்கிலை விரும்பித் தின்னும் யானை, மூங்கிலிலிருந்து செய்யப்பட்ட புல்லாங்குழல், இசைக்கருவி, ஊதுகொம்பு.]

ஆம்பல் [3] āmbal, பெ. (n.) 1. அடைவு (திவா.)ஒழுங்கு; arrangement, order. 2. பலகோடி கொண்ட ஒரு பேரெண் (தொல். எழுத். 393); very high number. "அடையடுப் பறியா வருவி யாம்பல்" (பதிற்று. 63:19).

ம. ஆம்பல்

[அம் → அம்மு → அம்பு → ஆம்பு → ஆம்பல். அம் = செறிவு, அடைவு, மிகுதி, பேரெண்.]

ஆம்பல் [4] āmbal, பெ. (n.) 1. கள் (பிங்.); toddy. 2. புளியாரை; yellow wood – sorrel. 3. நெல்லி; Indian goose–berry. (சா.அக.) (செ.அக.).

[அம்→அம்பு →அம்பல் →ஆம்பல். அம் = நீர். நீர்வடிவாய கள், நீர் செறிந்த புளியாரை, நெல்லி.]

ஆம்பல் [5] āmbal பெ. (n.) பேரொலி (பொதி.நி.); great noise.

[ஒருகா. அம்பல் → ஆம்பல். அம்பல் = ஓசை.]

ஆம்பல்அகமடிவை āmbal-aga-maḍivai பெ. (n.) குவளையும் ஆம்பலும் பைந்தழையும் விரவித் தொடுக்கப்படும் தழையுடையில், ஆம்பற்பூவை இடையிட்டு ஏனையவற்றைச் சூழத்தொடுத்த தழையுடை; leaf - garment made of the leaves of different species of lily with the lily flower set within. "அலர்ந்த ஆம்பல் அகமடி வையர்" (பதிற். 27-3).

[ஆம்பல் + அகம் + மடிவை.]

ஆம்பல்சக்களத்தி āmbalšakkaḷatti, பெ. (n.) ஆம்பலைப் போன்ற ஒருவகைப் பூடு; plant resembling–**Nymphae lotus** (சா.அக.).

[ஆம்பல் + சக்களத்தி. சக்களத்தி = போட்டியாக வளரும் பயிர் அல்லது செடி.]

சக்களத்தி பார்க்க; see **šakkaḷatti.**

ஆம்பல் வள்ளி āmbal-vaḷḷi பெ. (n.) ஆம்பற்றண்டால் செய்த வளையல்; bangles made of the stalk of lily plant. "ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்" (புறநா. 63 - 12).

[ஆம்பல் + வள்ளி.]

ஆம்பலங்குழல் āmbal-aṅkuḻal, பெ. (n.) 1. ஆம்பல் என்னும் பண்ணையுடைய இனிய புல்லாங்குழல்; flute playing ambal melody. 2. வெண்கலத்தால் ஆம்பற்பூவடிவாக அணைசு பண்ணி நுனியில் வைக்கப்பட்ட புல்லாங்குழல்; flute made in the shape of ambal flower. "பெருங்களத்து இயவர் இம்மென் றூதும் ஆம்பலங் குழல்" (நற். 113 - 11).

[ஆம்பல் + அம் + குழல்.]

ஆம்பலரி āmbalari, பெ. (n.) முதலை; crocodile. 2. கதிரவன், (த.சொ.அக.); sun.

[ஆம்பல் + அரி. ஆம்பல் = அல்லி, குமுதம், யானை. அரி = பகைவன். நீரில் வாழும் உயிரினங்களில் அரியும் வன்மை மிக்க உயிரினமாதலால் முதலையையும், நிலவைக்கண்டு மலர்ந்து கதிரவனைக் கண்டு கூம்பும் இயல்பால், கதிரவனுக்குப் பகையான அல்லியையும் ஆம்பலரி சுட்டுவதாயிற்று.]

ஆம்பலா āmbalā பெ. (n.) 1. புளியாரை (மு.அ.); yellow wood-sorrel. 2. தாமரை; lotus (சா. அக.).

[ஒருகா. அம் → அம்பு. அம்புள் + ஆ = அம்புளா → ஆம்புளா → ஆம்பலா. ஆம்புளா = நீருள் உண்டாகியது, தாமரை.]

ஆம்பலாம் āmbalām, பெ. (n.) புளியமரம்; tamarind tree, (சா.அக.).

[ஒருகா. அம் + புளி - அம்புளி. அம்புளி + ஆம் - ஆம்புளாம் → ஆம்பலாம். அம் = அழகிய, இனிய, சுவை சேர்ந்த.]

ஆம்பலி āmbali, பெ.(n.) வெண் பச்சைக்கடலை; greenish white Bengal gram. (சா.அக.).

[ஒருகா. அம் = நீர்; தெளிந்த நிறம், வெண்மை. அம் → ஆம். ஆம் + பலி. பலி = உண்பொருள்.]

ஆம்பற்கிழங்கு āmbar-kilaṅgu, பெ. (n.) அல்லிக் கிழங்கு; root of the plant,

[ஆம்பல் + கிழங்கு. ஆம்பல் = அல்லி.]

ஆம்பற்குழல் āmbar-kulay, பெ. (n.) **ஆம்பலங்குழல்** பார்க்க; see āmbalaṅkulal.

ம. ஆம்பலக்குழல்

[ஆம்பல் + குழல். ஆம்பல் = மூங்கில், ஆம்பல்பண், இசைக்குழல்.]

ஆம்பற்குழாய் āmbar-kulāy, பெ. (n.) மூங்கிற்குழாய்; bamboo pipe. (சா. அக.).

[ஆம்பல் + குழாய். ஆம்பல் = மூங்கில்.]

ஆம்பற்குற்றி āmbar- kurri, பெ. (n.) பூட்டினுள் திறவு கோல் பற்றிச் சுழலுதற்கேற்ற நடு ஆணி (சேரநா.); peg on which the key revolves inside a lock (ker.).

ம. ஆம்பக்குற்றி

[ஆம்பல் + குற்றி.]

ஆம்பாரை āmbārai, பெ. (n.) **ஆம்பலா** பார்க்க; see āmbalā

[ஒருகா. ஆம்பலா → ஆம்பரா → ஆம்பாரா → ஆம்பாரை.]

ஆம்பால் āmbāl,பெ.(n.) ஆகும்தன்மை,முடியுங்காலம் (த.சொ. அக.); best possible manner, state of possibility, ripening period of time. "நோற்றிடு பகுதியா லாம்பா லொன்றில்லை" (கந்தபு. தவங்கா. 11).

ம. ஆம்படி

[ஆகும் → ஆம் + பால். பால் = தன்மை, இயல்பு, இடம்.]

ஆம்பாறு-தல் āmbāru-, 5.செ.கு.வி. (v.i.) செழிப்புக் குறைதல் (இ.வ.) (செ.அக.); to be deficient in growth and freshness. (Loc.).

[ஒருகா.அம்= நீர்.அம்→ ஆம்+பாறுதல்.பாறுதல் விரிதல், உடைதல், கெடுதல், குன்றுதல். ஆம்பாறுதல் = நீர் குறைதலால் செழிப்புக் குன்றுதல்.]

ஆம்பான் āmbān, பெ. (n.) கணவன் (இ.வ.); husband. (Loc.). (செ.அக.).

[அகமுடையான் → ஆமுடையான் → ஆம்பான். (கொ. வ.).]

ஆம்பி[1] āmbi, பெ. (n.) 1. காளான்; mushroom, fungus. "ஆடுநனிமறந்த கோடுய ரடுப்பி னாம்பி பூப்ப" (புறநா. 164). 2. குடைக்காளான், நாய்க்குடை; common mushroom resembling an umbrella. 3. நீரிறைக்கும் இறைகூடை, பன்றிப்பத்தர்; irrigation bucket. "ஆம்பியுங் கிழாரும் வீங்கிசை யேற்றமும்" (சிலப். 10:110). "ஏற்றத்தோடு வழங்கும கலாம்பியினிசை" (மதுரைக். 91).

U. ambi (காளான்). **க.** ஆளம்பி, ஆளம்பெ., ஆணவெ **து.** லாம்பு, நாம்பு; **பிரா.** alamba.

[அம்பு = வளைவு, வட்டம். அம்பு → அம்பி → ஆம்பி, நீரிறைக்கவுதவும் இறைகூடை. ஆம் + ப் + இ - ஆம்பி. பகரமெய் சொல்லாக்கச் சாரியை. இகரவிறுதி உடைமை குறித்த ஒருமையீறு.]

ஆம்பி[2] āmbi, பெ. (n.) ஒலி (சூடா.); sound.

[ஒருகா. ஆம்பி = நீரிறைக்கும் இறைகூடை, நீரிறைக்கும் போது எழும் ஓசை.]

ஆம்பியம் āmbiyam, பெ. (n.) இதளியம் (பாதரசம்) (மூ. அ.); quicksilver.

[ஒருகா. அம் → ஆம் → ஆம்பியம் → நீர்த்தன்மை கொண்ட மாழை (உலோகம்) என்னும் பொருள் கொண்டதாகலாம்.]

ஆம்பிரம்[1] āmbiram, பெ. (n.) 1. தேமா (திவா.); mango. 2. புளிமா (திவா.); Indian hog-plum. (செ. அக.). 3. புளிப்பு; sourness.

[அம்புளி → அம்பிளி → அம்பிளம் → அம்பிரம். அம்புளி = இனிப்பும் புளிப்பும் சேர்ந்த புளியம்பழம். புளிப்புச் சுவையுடைய மாங்காய், மாமரம். அம்புளி → அம்புளம் → Skt. āmra.]

ஆம்பிரம்[2] āmbiram, பெ. (n.) காளான்; mushroom. (சா.அக.).

[ஆம்பி → ஆம்பிரம்.]

ஆம்பில்வடை āmbil-vaḍai, பெ. (n.) **ஆமை வடை** பார்க்க; see āmai-vaḍai.

ஆம்பிலம் āmbilam, பெ. (n.) 1. புளிப்பு (பிங்.); sourness, acidity. 2. புளியமரம் (திவா.); tamarind tree. 3. கள் (மூ.அ.); toddy. 4. சூரைச்செடி; shrub - **Zizyphus napeca alias z. glabrata,** (சா.அக.). 5. உப்பிலி (மஞ்சிக. நி.); species of stinking swallow wort. (செ.அக.).

[அம்புளி → அம்புளம் → ஆம்பிலம்.]

ஆந்தை வகை:

கொம்பு ஆந்தை

கோட்டான்

ஊமன்

குடிஞை

குரால்

ழூங்கன்

சூடகை

ஆம்பிலாவாரை āmbilāvārai, பெ. (n.) புளியாரை; yellow wood - sorrel. (சா. அக.). **ஆம்பலா** பார்க்க; see āmbalā.

ஆம்பிலி āmbili, பெ. (n.) புளி; tamarind.

[அம்புளி → அம்பிளி → ஆம்பிளி → ஆம்பிலி. அம்புளி → Skt. āmla.]

அம்புளி பார்க்க; see āmbuli

அம்புளி முதலில் புளியம் பழத்தையும், புளிப்புச் சுவையுடைய கூழையும் (அம்பலி, அம்பிலி) புளிமாங்காயையும், மாமரத்தையும், புளிச்சுவையுடைய பிற செடிகொடிகளையும் குறித்து வழங்க லாயிற்று.

ஆம்பு¹-தல் āmbu, 5. செ.குன்றாவி. (v.i.) புல், இலை, தழை முதலியன ஈரமிகுதியால் புழுங்கிப் போதல்; (மது.வ.); decaying of shoots, leaves, grass etc; due to excessive dampness.

[உம் → ஊம் → ஆம் → ஆம்பு.]

ஆம்பு² āmbu, பெ. (n.) காஞ்சொறி (மலை.); climbing nettle, **tragia involucrata.** (சா. அக.).

*[ஒருகா. அம்பு → ஆம்பு → ஆம்புலி. அம்பு = கொடி. **ஆம்புலி** பார்க்க; see āmbuli.]*

ஆம்புடை ām-pudai, பெ. (n.) வழிவகை (உபாயம்) (செ.அக.); means, expedient. "ஆம்புடை தெரிந்து வேந்தற் கறிவெனு மமைச்சன் சொன்னான்" (சீவக. 232).

[ஆகும் → ஆம் + புடை. புடை = பக்கம், வழி.]

ஆம்புத்தி āmbutti, பெ. (n.) திறமை (சாமர்த்தியம்); cleverness (W.).

[ஆம் + புத்தி. புந்தி → புத்தி → Skt. buddi. புந்தி = அறிவு.]

ஆம்புயம் āmbuyam, பெ. (n.) இதளியம் (பாதரசம்); mercury,.

[அம்புயம் → ஆம்புயம்.]

ஆம்பியம் பார்க்க; see āmbiyam.

ஆம்புலம்¹ āmbulam, பெ. (n.) சூரைச்செடி; oblique-leaved jujube.

[ஆம்பிலம் → ஆம்புலம்.]

ஆம்பிலம் பார்க்க; see āmbilam.

ஆம்புலி āmbuli, பெ. (n.) **ஆம்பு²** பார்க்க; see **āmbu²**.

[ஆம்முலி → ஆம்புலி.]

ஆம்பூர் āmbūr, பெ. (n.) வெட்டெழுத்துச் சான்றுகளில் ஆண்மையூர் என்று கூறப்பட்டுள்ள ஊர்; place name mentioned 'Āṇmaiyūr' in epigraphy.

[ஆண்மை + ஊர் - ஆண்மையூர் → ஆம்பூர்.]

ஆமக்கட்டி āma-k-katti, பெ. (n.) சுரக்கட்டி (த.சொ.அக.); swelling caused by fever.

[ஒருகா. ஆமை + கட்டி - ஆமக்கட்டி. புடைத்தெழும் கட்டி ஆமை முதுகு போன்றிருத்தலின், புடைப்புகளைக் குறிக்க ஆமை யென்னும் முன்னடை சேர்க்கப்பட்டது போலும். ஆமைக்கட்டி = புடைத்தெழும் கட்டி அல்லது வீக்கம்.]

ஆமைக்கட்டி பார்க்க; see āmai-k-katti.

ஆமக்கணம் āma-k-kaṉam, பெ. (n.) **ஆமைக்கணம்** பார்க்க; see āmai-k-kaṉam.

[ஆமைக்கணம் → ஆமக்கணம்.]

ஆமக்கழிச்சல் āma-k-kaliccal, பெ. (n.) **ஆமைக்கழிச்சல்** பார்க்க; see āmai-k-kaliccal.

[ஆமைக்கழிச்சல் → ஆமக்கழிச்சல்.]

ஆமக்கள் āmakkal, பெ. (n.) கணவன் (இ.வ., இழி.வ.); husband (Loc. vul.).

[ஆண்மகன் → ஆண்மக்கள் → ஆமக்கள் (இழி.வ.)]

ஆண்மகன் பார்க்க; see āṇmagaṉ.

ஆமக்கன் āmakkaṉ, பெ. (n.) கணவன் (இ.வ., இழி.வ.); husband (Loc.vul.).

[ஆண்மகன் → ஆண்மக்கன் → ஆமக்கன் (இழி.வ.).]

ஆண்மகன் பார்க்க; see āṇmagaṉ.

ஆமக்குருதிப்போக்கு āma-k-kurudi-p-pō-k-ku, பெ. (n.) ஆமமும் (சீதம்) குருதியும் கலந்த வயிற்றுப் போக்கு; flux in which the stool consists chiefly of blood and mucus accompained with the griping of the bowels – dysentery. (சா.அக.).

[ஆமம் + குருதி + போக்கு.]

ஆமகோளம் āma-kōlam, பெ. (n.) **ஆமரகோளம்** பார்க்க; see āmarakōlam.

ஆமகோளா āmakōlā, பெ. (n.) **ஆமரகோளம்** பார்க்க; see āmarakōlam.

[ஆமரகோளம் → ஆமகோளம் → ஆமகோளா.]

ஆமச்சாறு āma–c–cāṟu, பெ. (n.) செரியாத உணவுச்சாறு. பதப்படாத அன்னச்சாறு; imperfect chyle, unassimilated chyle.

[ஆமம் + சாறு.]

ஆமடிக நவ்வல் āmadiga-navval, பெ. (n.) வெண்ணாவல்; white species of Jamboo tree said to be very rare (சா.அக.).

[ஆமம் + திகழ் + நவ்வல் (நாவல் மரம்).]

ஆமண்டகம் āmaṇdagam, பெ. (n.) **ஆமணக்கு** பார்க்க; see āmanakku.

ஆமண்டம் āmaṇḍam, பெ. (n.) 1. **ஆமணக்கு** பார்க்க; see āmaṇakkū. 2. ஒப்பனைசெய்தல் (த.சொ.அக.); decoration, beautification.

[ஆம் → ஆமண்டம். அம் – ஆம் = அழகு.]

ஆமணக்கநெய் āmaṇakka – ney, பெ. (n.) ஆமணக்கு வித்தினின்றும் காய்ச்சி அல்லது காய்ச்சாமல் எடுக்கும் நெய். இது சுவையற்றது; வயிற்றுக் கழிச்சலுக்குக் கொடுக்கப்படும்; குடலைத் துப்புர வாக்குவதும் விள்ளுவைத்தூய்மைப் படுத்துவதும் கருப்பையில் கோளாறுகளைச் சீராக்கவல்லது மாகும்; oil extracted either by way of boiling or by cold drawn process from the castor seeds. It is tasteless, irritating and appetising. It acts as a cleansing agent of the internal channel of the body and is wholesome to the skin. It purifies the semen and removes the vaginal and uterine disorders. (சா.அக.).

[ஆமணக்கு + நெய் = ஆமணக்குநெய் → ஆமணக்கநெய்.]

ஆமணக்க முத்து āmaṇakka – muttu, பெ. (n.) ஆமணக்குவித்து; castor seed (சா.அக.). "ஆமணக்கு முத்து ஆணிமுத்தாமா?" (பழ.).

[ஆமணக்கு + முத்து = ஆமணக்குமுத்து → ஆமணக்கமுத்து.]

ஆமணக்கிலை āmaṇa-k-kilai, பெ. (n.) ஆமணக்குச் செடியின் இலை, இதனை நெருப்பில் வாட்டிக் கட்டப் பெண்களுக்குப் பால் சுரக்கும்; green leaves of the castor – oil plant. An application of the heated leaves aids in the secretion of milk in women (சா.அக.).

[ஆமணக்கு + இலை = ஆமணக்கிலை.]

ஆமணக்கு āmaṇakku, பெ. (n.) 8 அடி முதல் 10 அடி

உயரம் வளர்வதும், கந்தருவன் கைபோன்றதும், ஏழு பிரிவுபட்டதுமான இலைகளைக் கொண்டதும், சிற்றாமணக்கு – பேராமணக்கு என இரு பெரும் பிரிவுகளைக் கொண்டதும் ஆகிய ஓர் எண்ணெய் வித்துச் செடி; castor seed plant. It is 8 to 10 ft. high; the leaves are deeply divided into seven sections at the margin and they are said to resemble a Ghandharva's hand. The seeds are oval, shining and black, dotted with spots. The plant is cultivated in all parts and is divided into two varieties namely – the small and the large, as distinguished from the size of the seeds. The different kinds, though end in the same termination in Tamil, apparently belong to different botonical groups and they are as follows: –

இனவகை:

1. சிற்றாமணக்கு – castor oil plant, (small).
2. பேராமணக்கு – castor oil plant (large).
3. சீமையாமணக்கு – palm tree, called also Rosalind tree; wild castor plant.
4. காட்டாமணக்கு – forest castor oil plant,
5. புல்லாமணக்கு – pullamanak, almost resembling சிற்றாமணக்கு.
6. வெள்ளையாமணக்கு – white castor oil plant.
7. உரலாமணக்கு – another kind.
8. கடலாமணக்கு – (sea + castor oil plant) sea–castor, same as காட்டாமணக்கு.
9. சூரிய காந்தாமணக்கு – another variety.
10. கல்லாமணக்கு – same as புல்லாமணக்கு.
11. கொடியாமணக்கு – creeping aumanak
12. பறங்கியாமணக்கு – foreign aumanak, same as papew. It is so called from its leaf.
13. எலியாமணக்கு – (rat + aumanak). adul oil plant,
14. ஏரிக்கரைக் காட்டாமணக்கு – (tank bund + **Jatropha curcas**) adul oil plant same as எலியாமணக்கு .
15. செவ்வாமணக்கு – red castor plant.
16. மலையாமணக்கு – mountain castor plant.

Note : The regular aumanakku plant is known by several names, such as castor oil plant, lamp oil plant, pearl seed plant, palma christi (of the early Christians); palm tree (of Rosalind in Shakespeare), Johanah's gourd Ghandharva's hand, Kroton of the Greeks; Kiki of the Greeks and so on.

'ஆமணக்கு நட்டு ஆச்சா வாக்கலாகாது' (சீவக. 2613, உரை.)

மறுவ: அறுபதாங்கொட்டை, முத்துக்கொட்டை, கொட்டை முத்து, ஆதளம், ஆ மண்டம், ஆமண்டகம்..

ம. ஆவணக்கு; **க.** அவிழ், அவுடல, ஆமண்ட; **தெ.** ஆமுதமு, ஆமிதமு, ஆமண்ட; **குட.** ஆணகெமர; **து.** அலும்புட; **கோத.** அமண்ட்; **துட.** ஒமல்க்; **பட.** அவுண்டெ. **கொலா.** ஆமெத; **பிரா.** ஆமண்டம்; **பாலி.** எரண்ட, எலண்

Skt. āmanda, **Yeranda**–Vrikshala, **Hind.** Arand, erand, rēnd; **Duk.** Yarandi Kajchār. **Arab.** Shajratul–Khirvaa. **Pers.** Drakhte–bedanjir.

[அவிழ்→ அவிழம்→ அவிணம்→ ஆவிணம்→ ஆவணம் → ஆமணம்→ ஆமணக்கு. அவிழ் = முளையவிழும் வித்து, எண்ணெய் வித்தாகமட்டும் பயன்படும் முதற்காரணம் கருதி 'அவிழ்' அடியாக இச்சொல் தோன்றியது.]

ஆமணக்குக்கொட்டை āmaṇakku-k-koṭṭai, பெ. (n.) கொட்டைமுத்து, ஆமணக்கு வித்து; castor seed.

[ஆமணக்கு + கொட்டை.]

ஆமணக்கு வித்து பார்க்க; see āmanakku–vittu.

ஆமணக்குநெய் āma–ṇakku-ney, பெ. (n.) 1. ஆமணக்கு வித்தினின்றும் வடிக்கும் எண்ணெய்; இது சிற்றாமணக் கெண்ணெய் பேராமணக் கெண்ணெய் என இருவகைப்படும். இது விளக்கெரிக்கப் பயன்படுவதால் விளக்கெண்ணெய் என்றும் வழங்கும். சிற்றாமணக் கெண்ணெய் குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் வயிற்றுக் கழிச்சலுக்காகக் கொடுக்கப்படும். பச்சையெண்ணெய்யை ஊற்றின எண்ணெய் என்பர்.

ஆமணக்கு எண்ணெய் சிறிது கசப்பும் வெகுட்டலுமுடையதாயிருந்தாலும், நீர்ச்சுருக்கு, மருந்துவேகம், மலச்சிக்கல் (முகவாதம்) (பக்கவாதம்), குன்மம், பாண்டு, (கீல்வாயு) உதிரச்சிக்கல் முதலியற்றைக் குணப்படுத்தும். குழந்தை வளர்ப்புக்கு மிகவும் இன்றியமையாதது. குருதிப்புண் (ரணம்) எரிபுண்களுக்கும் பயன்படுத்தினால் சீழ்பிடிக்காது; oil extracted from castor oil seeds and can be prepared in two ways i.e. cold drawn or boiled. The small–seed oil is more useful in medicine and the large – seed oil is generally useful to provide lamp–oil. It is a well known laxative used for children as well as for adults. It has a very disagreeable nauseous taste and odour.

It is used with advantage in cases of odysuria, viruslency of medicines, constipation, facial paralysis, hemiplagia, dyspepsia, dropsy, rheumatism, amenorrhea etc. It is considered a good nursing agent even like a mother in guarding the health of a child. It is a safe purgative to be taken by pregnant women and, by those after delivery. It is applied externally to wounds and blisters to prevent suppuration as a substitute for tincture of iodine (சா. அக.) 2. சிற்றாமணக்கு வித்தினின்றும் வடிக்கும் நெய் (தா. சொ. அக.); oil extracted from small seed of the castor plant. "ஆமணக்கு நெய்யா னல முண்டாம்" (பதார்த்த. 153).

ம. ஆவணக்கெண்ணெய். **குட.** அணகெண்ணெ

மறுவ. ஆமணக்கு நெய், விளக்கெண்ணெய், முத்துக்கொட்டை எண்ணெய், கையெண்ணெய்.

[ஆமணக்கு + நெய்.]

ஆமணத்தி āmaṇatti, பெ. (n.) மாட்டின் உடலிலிருந்து எடுக்கும் நறுமணப் பொருள் (கோரோசனை) (மூ.அ.); concretion found in the intestines of the cow, yellow orpiment extracted from the bile of cattle. (சா.அக.).

மறுவ. ஆமேற் புல்லூரி, கோரோசனை

[ஆ + மணத்தி. மணம் = நறுமணம். ஆ = ஆன் (பசு).]

ஆமணத்திரம் āmaṇattiram, பெ. (n.) **ஆமணத்தி** பார்க்க; see āmaṇatti.

[ஆமணத்தி → ஆமணத்திரம்.]

ஆமதி āmadi, பெ. (n.) நண்டு (நாமதீப.); crab.

[ஒருகா. அம் = நீர். அம் → அது → அம்மது → ஆம்மது. ஆமது → ஆமதி = நீரில் வாழ்வது.]

ஆமந்திரிகை āmandirigai, பெ. (n.) இடைக்கையென்னும் இசைக்கருவி; kind of drum. "முழவொடு, கூடிநின்றிசைத்த தாமந்திரிகை" (சிலப். அரங். 1. 143).

ம. ஆமந்தரிக

மறுவ இடக்கை, ஆவஞ்சி

[ஆமுகம் = தொடக்கம். ஆமுகம் + தருகை – ஆமந்திரிகை. எல்லா இசைக்கருவிகளுக்கும் ஒரு முகமாக இசைக்கத் தொடக்கம் தந்து அடக்கியாளுமியல்பு பற்றி இப்பெயர் பெற்றது.]

கருவிகள் பல ஒருங்கியைந்து ஆங்கிலத்தில் orchestra என்றும் தமிழில் ஆமந்திரிகை என்றும் வழங்கும்.

"குழல்வழி நின்ற தியாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந்திரிகை"

(சிலப். அரங்கேற் 3.139–143)

அரும்பதவுரையாசிரியர் ஆமந்திரிகையாவது இடக்கை எனக் குறிப்பிட்டிருத்தலால் ஆமந்திரிகை இக்கருவியின் சிறப்புப்பெயராகும். **ஆவஞ்சி, ஆமுகம்** பார்க்க; see **āvañji, āmugam.**

ஆமம் [1] āmam, பெ. (n.) 1. பச்சையானது; that which is raw. 2. பழுக்காதது, காயாக இருப்பது; that which is immatured or unripened. 3. பாகஞ் செய்யப்

படாதது, வேகாதது; that which is uncooked or raw. 4. குடலிலுள்ள குளிர்ச்சி வழும்பு (சீதம்); mucus of the intestines. 5. குடல்வழும்பு (சீதம்) பற்றிய நோய், வயிற்றுக்கடுப்பு; disease connected with the mucous in the intestines – dysentery. 6. வழும்புக் (சீதம்) கட்டு அல்லது வழும்பு; unassimilated chyle. "விள்ளாத வாமம் விழுவிக்கும்" (பாலவா. 744). 7. மல வறட்சி; dry state of faecal matter in the intestines – costiveness.

ஆமம் → **Skt.** āma.

[அம் = நீர். அம் → ஆம் → ஆமம் = நீருள்ளது, ஈரமுள்ளது, பச்சையானது, வேகாதது, ஈரம் புலராத வழும்பு (சீதம்).]

ஆமம்[2] āmam, பெ. (n.) 1. செரியாமை (அசீரணம்); indigestion, 'ஆமத்திற் சோறு பாதகம், (ஈடு 1,4,8). 2. நோய்; illness, disease.

[அம்முதல் = அரைபடல், செரித்தல். அம்மாமை → ஆமை → ஆமம். அம்மாமை = செரியாமை.]

ஆமை[2] பார்க்க; see **āmai.**[2]

ஆமம்[3] āmam, பெ. (n.) 1. தண்ணீர்விட்டான்கிழங்கு; water root – **Asparagus raccmosus.** 2. காளான் (பச்.மு.); mushroom, fungus. 3. கடலை; Bengal gram. 4. துவரை; dhol. 5. பதர் களைந்தெடுத்த தவசம் (த.சொ.அக.); cereals or foodgrains cleansed of im-purities.

[அம் = நீர். அம் → ஆம் → ஆமம் = நீருள்ளது, பச்சையானது, பச்சையான காய்கறி, கிழங்கு, பருப்பு வகைகள், தவசம் ஆகியவற்றுக்குப் பொதுப்பெயர்.]

ஆமம்[4] āmam, பெ. (n.) புளிப்பு; sourness. **ஆம்பிலம்** பார்க்க; see āmbilam.

[அம்புளி → ஆம்பிலி → ஆம்பிலம் → ஆம்பம் → ஆமம்.]

ஆமம்[5] āmam, பெ. (n.) வெண்மை; whiteness.

[அம் = நீர். அம் → ஆம். ஆமம் = நீரைப்போல் தெளிந்தது, வெளிறியது, வெண்மையானது.]

ஆமம்[6] āmam,பெ. (n.) 1. திரட்சி, கட்டி, அமலை; collection,crowd,blend. 2. முழுமை; entirety, wholeness. completeness. 2. கைவிலங்கு (சேர.நா.); fetters.

ம. ஆமம் (கைவிலங்கு).

[அம்முதல் = சேர்தல், திரளுதல், செறிதல். அம் → ஆம் → ஆமம். ஆமம் = ஒன்றோடொன்று செறியச் செய்த விலங்கு.]

ஆமம்[7] āmam, பெ. (n.) 1.கொடிது, தீது; that which is bad. 2.முடைநாற்றம்; odour of raw flesh, stench.

[ஆமம் = பச்சையானது, வேகாதது, ஆகாதது, புலால், முடைநாற்றம் வீசுவது.]

ஆமம்[8] āmam, பெ. (n.) மட்பாண்டம் சுடும் சூளை (ஆந்.வ.); kiln of the potters.

தெ. ஆமமு, ஆமு, ஆவமு.

[ஆவி → ஆவியம் → ஆவமம் → ஆமம்.]

ஆவி பார்க்க; see āvi.

ஆமயம்[1] āmayam, பெ. (n.) மாட்டுச்சாணம்; cow dung. "அத்தலை நிலத்தை நீரா லாமயம் பூசி" (கந்தபு. வில்வல. வதை.12).

*[ஆ + **Skt.** maya > த. ஆமயம். ஆ = ஆன் (பசு).* ***ஆச்சாணம்*** *பார்க்க; see ā–c–cāṇam]*

ஆமயம்[2] āmayam, பெ. (n.) நோய்; disease. "ஆமயந்தீர்த் தடியேனை யாளாக் கொண்டார்" (தேவா.1231,1).

[அம்மாமை → ஆமை → ஆமயம்.]

ஆமை[2] பார்க்க; see āmai[2].

ஆமயன் āmayaṉ, பெ. (n.) நோயாளி; patient, sickly person. (சா.அக.).

ம. ஆமயாவி

[ஆமயம் → ஆமயன். ஆமயம் = நோய்.]

ஆமயம்[2] பார்க்க; see āmayam[2]

ஆமரம் āmaram, பெ. (n.) 1.எட்டி மரம்; tree – **nux – vomica** (சா.அக.). 2. நெல்லிமரம்; Indian goose berry.

[ஒருகா. ஆமம் + மரம் – ஆமமரம் – ஆமரம் = கோடையிலும் ஈரத்தை உள்ளடக்கி வைத்திருக்கும் மரம். அம் → ஆம் = நீர், ஈரம். நெல்லியும் இத்திறத்ததே.]

ஆமருப்பு āmaruppu, பெ. (n.) 1. கால்நடைகளின் கொம்பு; cattle's horn. 2. மாட்டுக்கொம்பு; cow's horn.

[ஆ + மருப்பு. ஆ = மாடு. மருப்பு = கொம்பு. மா = விலங்கு. மா → ஆ = கால்நடை.]

ஆமல் āmal, பெ. (n.) 1. மூங்கில் (மலை.); spiny bamboo. 2. நச்சுமூங்கில் (மலை.); poison lily (சா.அக.).

[ஆம்பல் → ஆமல்.]

ஆம்பல்[2] பார்க்க; see āmbal[2].

ஆமலகம் āmalagam, பெ. (n.) 1. நெல்லிக்கனி; country goose berry. "கையிலாமலகக் கனியொக்கு மே" (தேவா. 465,2). "மாமுனிக் குணவாய்நின்ற மதுரவா மலகந் தன்னை" (பாரத. பழம்பொ. 3). 2. நெல்லிமரம்; country gooseberry tree. 3. பளிங்கு; crystal.

ம. ஆமலகம்; **க.** ஆமலக; **Skt.** āmalaka, āmalakan, āmalaki.

ஆம் + ஆலகம் – ஆமாலகம் → ஆமலகம்.

[அம் → ஆம் → ஆமம் → ஆமலகம். அம் = நீர். ஆமலகம் = நீர் செறிந்த நெல்லிக்கனி, நாவறட்சியைப் போக்கும் நீருள்ள கனி. ஆமலகம் = நீர்போல் தெளிந்த வடிவும் ஒளி ஊடுருவும் தன்மையும் கொண்ட பளிங்கு.]

வடமொழியில் ஆமலகம் என்னும் சொல்லுக்கு வேர்மூலம் தெளிவில்லை. தமிழில் தெளிவாக வேர்மூலம் உள்ளதோடு மட்டுமன்றி, இவ் வேரினின்று பிறந்த நூற்றுக்கணக்கான கூட்டுச் சொற்களையும் தனிச் சொற்களையும் தமிழிலும் ஏனைத் திரவிட மொழிகளிலும் நாட்டுமருத்துவத்திற்குதவும் மூலிகைப் பெயர்களிலும் காணமுடிவதால், ஆமலகம் தமிழ்ச் சொல் என்பது தெரிதரு தேற்றம்.

ஆமலம் āmalam, பெ. (n.) தூய்மை; tidiness. "இறையாமலங் கையான்" (த.சொ.அக.).

[ஆம் → ஆமல → ஆமலம் = நீராற் பெறும் தூய்மை.]

ஆமலிகை āmaligai பெ. (n.) புளிப்பு; sourness.

[ஆமலம் → ஆமலி → ஆமலிகை.]

ஆமலையரிசி āmalai-y-arisi, பெ.(n.) ஆமளையரிசி (சா.அக.) a kind of grain.

[ஒருகா. ஆமல் → ஆமலை + அரிசி. ஆமல் = மூங்கில். ஆமலையரிசி = மூங்கிலரிசி.]

ஆமலையரிசிக்கு ஆமளையரிசி என்று திருத்தம் காட்டிய சாம்ப சிவம்பிள்ளையவர்கள் ஆமளையரிசி என்னும் சொல் லுக்குத் தன் அகரமுதலியில் விளக்கம் தரவில்லை. ஆதலின் ஆமளையரிசி முன்னதன் பாட வேறுபாடாயிருக்கலாம். ஆமலையரிசி மூங்கிலரிசி வகைகளுள் ஏதேனும் ஒன்றைச் சுட்டியதாகவும் இருக்கலாம்.

ஆமவடை āma-vaḍai, பெ.(n.) 1. கடலைப்பருப்புடன் உசிலை(மசாலை) சேர்த்து உரலிலிட்டு ஆட்டி எண்ணெய் அல்லது நெய்யிற்சுட்டுக் குழம்பிற் கொதிக்க வைத்துப் பக்குவப்படுத்திய வடை; cake prepared out of Bengal gram mixed with other spices and fried in oil or ghee partially and then mixed in the sauce and boiled. (சா.அக.) 2. தயிர்வடை; cake prepared out of Bengal gram mixed with other spices and fried in oil and then soaked in butter milk or curd.

ம. ஆமவட, **க.** ஆமவடெ, ஆம்பொடெ; **தெ.** ஆமவட, ஆவட; **து.** ஆமவடெ, ஆம்பொடெ

[ஆமம் + வடை → ஆமவடை = புளிப்புச் சுவை கலந்த வடை. அம்புளி → அம்பிலி → ஆம்பிலம் → ஆமிலம் → ஆமலம் → ஆமம் = புளிப்பு.]

ஆமம்[4] பார்க்க; see āmam[4]

ஆமவர்க்கம் āma-varkkam, பெ. (n.) காய்கறிகளின் மீது வாங்கப்பட்ட வரிவகை; tax on unripe fruits (Insc.).

[ஆமம் + Skt. Varga → த. வர்க்கம். ஆமம் = பச்சையான காய்கறிகள். Skt. varga = வகை.]

ஆமளம் āmaḷam, பெ. (n.) சிவபோற்றி (தோத்திர) வகை; hymn in praise to Śiva. "ஆமளஞ் சொலி யன்பு செய்யினல்லால்" (தேவா. 233,4).

[ஓம் → ஆம் → ஆமளம் = சிவனை வழிபடுங்கால் கூறப்படும் மந்திரம், வழிபாட்டுச் செய்யுள். ஆம் + அளம். ஆமளம் → Skt. Yāmala. அளம் = பெயரீறு. ஒ.நோ. அப்பளம்.]

வடமொழியாளர் இருக்கு வேத காலத்திற்கு முந்தைய காலத்தில், சிவ வழி பாடறியாத வராதலின், குமரிக் கண்ட நாகரிகந் தொட்டு சிவ வழிபாடு தமிழர் மரபுரிமையாயிருத் தலின், ஆமளம் என்னும் போற்றி வழிபாடு தமிழருடையதே என்பதில் ஐயமில்லை. வடமொழியில் 'யா' என்னும் முதனிலை செல்லல், போதல் என்னும் பொருளினது. அதுவும் 'இய' என்னும் தமிழ்வேரின் திரிபு.

ஆமளவு āmaḷavu, பெ. (n.) கூடியவரை, இயன்ற அளவு; to the extent possible.

ம. ஆமளவு, ஆமள.

[ஆகும் + அளவு = ஆகுமளவு → ஆமளவு]

ஆமா[1] āmā, பெ. (n.) 1. காட்டுமாடு அல்லது எருது, இது நாவாற்றடவின் சாவு நேரும் எனக் கருதப் படுவது; wild ox or cow whose lick is supposed to cause death. (சா.அக.). "கானத்திலுள்ள கலை மானினங் காட்சி யாமா" (பாரத. சம்பவ. 47). 2. காட்டெருமை; wild buffalo, bison.

*[ஆ + மான் - ஆமான் → ஆமா = ஆவினைப் போன்றிருக்கும் காட்டுவிலங்கு. ஆ = மாடு. மா = விலங்கு. **ஆமான்** பார்க்க. see āmāṉ.]*

ஆமா[2] āmā, பால் கொடுக்கும் செவிலித்தாய்; nurse engaged to suckle an infant, wet nurse.

[ஆய் + அம்மா - ஆயம்மா → ஆமா.]

ஆமா[3] āmā, பெ. (n.) 1.நெல்லிக்காய்; fruit of Indian goose berry. 2. கடுக்காய்ப்பூ; chebulic myrobalan galls. (சா. அக.).

[1.ஆமலகம் → ஆமா. 2. ஆமரகோளம் → ஆமகோளா → ஆமா.]

ஆமா[4] āmā, செ.கு.வி. (v.i.) **ஆமாம்** பார்க்க; see āmām.

பிராகி. ஆமா

[ஆம் + ஆம் = ஆமாம் → ஆமா (கொ.வ.).]

ஆமாகோளம் āmākoḷam, பெ. (n.) **ஆமரகோளம்** பார்க்க; see āmarakoḷam.

ஆமாகோளா āmākoḷa, பெ. (n.) **ஆமரகோளம்** பார்க்க; see āmāra-koḷam.

ஆமாங்கு āmāṅgu, பெ. (n.) 1. ஆகவேண்டிய முறை; that which has to happen or become. 2. தீங்கு (விபரீதம்); calamity, evil. (த.சொ.அக.).

[1. ஆகும் + ஆங்கு - ஆகுமாங்கு → ஆமாங்கு. 2. அழி + பாங்கு - அழிபாங்கு → அழிமாங்கு → ஆமாங்கு.]

ஆமாத்தியன் āmāttiyaṉ, பெ. (n.) 1. அமைச்சன் (திவா.); minister. 2. அறிவுரை கூறுபவன்; coun-

sellor, advisor. 3. தானைத்தலைவன்; chief of the army. 4. மருத்துவன்; doctor, physician.

[அமைத்தன் → ஆமைத்தன் → ஆமாத்தியன்.]

அமைத்தன் = ஒன்றைச் செவ்வனே செய்வதில் திறம்படப் பணியாற்றுபவன். அமைத்தல் = ஒழுங்குறச்செய்தல். அமைத் தன் → **Skt.** āmātya. அமைத்தன் → அமைச்சன்.

வடமொழியாளர் உடனிருப்பவன் என்னும் வேர்மூலம் காட்டல் பொருந்தாது. உடனிருப்போர் அனைவரும் அமைச்சர் போன்ற பெருந்திறனாளர் அல்லர் என்பது வெளிப்படை.

அமைச்சன் பார்க்க; see āmaiccan̠.

ஆமாப்போடு-தல் āmā-p-pōḍu-, 20 செ.கு.வி. (v.i.) எதற்கும் ஒத்துக் கூறுதல் (இ.வ.); say ditto (Loc.).

[ஆம் + ஆம் – ஆமாம் + போடு – ஆமாப்போடு.]

ஆமாம் āmām, இடை. (int.) ஓர் இசைவுக்குறிச்சொல்; quite so, yes, indeed.

[ஆம் + ஆம் – ஆமாம்.]

ஆமாயம் āmāyam, பெ. (n.) **ஆமயம்** பார்க்க; see āmayam.

[ஆமயம் → ஆமாயம்.]

ஆமாலை சோமாலை āmālai–sōmālai, பெ,. (n.) மிக்க அயர்ச்சி; excessive fatigue (Loc.). கடுங்காய்ச்சலால் குழந்தைக்கு ஆமாலை சோமாலையாகி விட்டது (இ.வ.).

[ஒருகா. ஆமம் → ஆமாலே. ஆமம் = நோய், நோயால் விளையும் துன்பம். ஆமாலை சோமாலை என்பது எதுகை மரபிணைச்சொல்.]

ஆமாறு āmāṟu, பெ. (n.) வழிவகை, ஆகும் வழி; plan, device, scheme. "ஆமாறறியும் பிரானே" (திவ். பெரியாழ். 2,7,8).

[ஆகும் → ஆம் + ஆறு → ஆமாறு. ஆறு = வழி, முறை.]

ஆமான் āmān̠, பெ. (n.) காட்டுமாடு; wild cow or ox.

"அந்தழைக் காடெலாந் திளைப்ப வாமானினம்" (சீவக. 1902).

"ஆமானினந்திரியுந்தடஞ்சாரல்" (தணிகை. களவு. 333).

ஆமா பார்க்க; see āmā.

[ஆ + மான்.]

ஆமான் - காட்டு மாடு

ஆமான் புகல்வி āmān̠–pugalvi, பெ. (n.) ஆமான் ஏறு (குறிஞ்சி.253); male of **bos gaveus.** (செ.அக.).

"புழற் கோட்டாமான் புகல்வியும் களிறும்" (குறிஞ்சிப். 253).

[ஆமான் + புகல்வி.]

ஆமானவன் āmān̠avan̠, பெ. (n.) சிறந்தவன்; மேலோன் (வின்.); worthy or competent person (W.).

[ஒருகா. ஆகு → ஆ + மானவன். மானவன் = மாந்தன்.]

ஆமிசம் āmiśam, பெ. (n.) 1. உணவு; food. "எனக் காமிடமாய் வருவாய்கொல்" (கம்பரா. கடறாவு. 67.). 2. ஊன், புலால்; meat, flesh. "ஆகலின் யானினியிதனுக்காமிடம்" (கம்பரா.கவந்தன்,24). 3. கைக்கூலி; bribes. 4. நுகர்தற்குரிய பொருள்; object of enjoyment. 5. நுகர்ச்சி; enjoyment. 6. விருப்பம்; desire.

Skt. āmisa.

[ஒருகா. அம்முதல் = அரைத்தல், தின்னுதல், மெல்லுதல், தின்னுதல், நுகர்தல், நுகர்தற்குரிய பொருள், நுகர்ச்சி. விருப்பம். அம்மு → அம்முதம் → ஆமுதம் → ஆமிதம் → ஆமிசம்.]

ஆமிநாயம் āmināyam, பெ. (n.) 1. ஆகமம் (சை.பி. 30); agamas, scriptures believed to be revealed by God and peculiar to Śaivism. 2. பரம்பரையான வழக்கம்; hereditary customs. 3. மரபுவழி வரும் நல்லுரை (உபதேசம்); spiritual instruction given down the age traditionally. 4. மறை, வேதம்; the Sacred Book. (த.சொ.அக.).

[அம்மு → ஆமு → ஆமி. அம்முதல் = உண்ணல், உட்கொளல், செவிக்கொளல். ஆமி = செவிக்கொளத் தக்க அறவுரை, அறநூல். நயன் → நயம் → நாயம் = நன்னெறி, நீதி. ஆமி + நாயம்.]

ஆமிரகலை āmira-kalai, பெ. (n.) கடல்நுரை; seafroth. (சா.அக.).

[ஒருகா. ஆமிரம் + கலை. ஆமிரம் = வெண்மை. வெண்கலையுடைய நிலாப்போல் நிறங்கொண்டமை பற்றி கடல் நுரை இப் பெயர் பெற்றிருக்கலாம்.]

ஆமிரம் 3 பார்க்க; see āmiram3.

ஆமிரகா āmirakā, பெ. (n.) வெண்முள்ளி; prickly nail–dye, as opposd to செம்முள்ளி, red nail –dye.

[ஒருகா. ஆமிரம் + கா. ஆமிரம் = வெண்மை. கா = சோலை, செடிகளின் தொகுதி.]

ஆமிரம் 3 பார்க்க; see āmiram3.

ஆமிரதம் āmiradam, பெ. (n.) நாரத்தை; bitter orange.

[அம் → ஆம் + இரதம். அம் = நீர். இரதம் → இரசம் = சாறு. ஆமிரதம் = நீர்ச்சாறு கொண்ட பழம்.]

ஆமிரம்[1] āmiram, பெ. (n.) மாமரம்; mango tree, "ஆடல்வேலெறிதலோடுமாமிரவடிவாய்" (கந்தபு. சூரபன்.488.). 2. புளியமரம்; tamarind tree, 3. புளிப்பு; sourness (சா.அக.).

ஆமிரம்[2] āmiram, பெ. (n.) வெண்மை; whiteness.

[அம் → ஆம் → ஆமிலம் → ஆமிரம். அம் = நீர். ஆமிலம் = நீர் வடிவானது, நீர்போல்தெளிந்திருப்பது, வெளுத்திருப்பது, வெண்மை.]

ஆமிரம்[3] āmiram, பெ. (n.) 1. பலம், ஓர் எடையளவு; measure of weight. " வெவ்வேறிரண்டரை யாமிரஞ் சேர்த்து" (தைலவ. தைல.3); (த.சொ.அக.).

ஒரு பலம் = 320 குன்றிமணி.

[ஒருகா. ஆமிலம் → ஆமிரம் = புளிப்பு, புளியமரம், புளியங்கொட்டை, புளியங்கொட்டைகளை எடையளவாகக் கொண்ட ஒரு நிறுத்தலளவு]

ஆமிலம் āmilam, பெ. (n.) 1. புளிப்பு (பிங்.); acidity, sourness. 2. புளியமரம் (சூடா.); tamarind tree. 3. புளி (தைலவ. தைல. 38); tamarind fruit.

[அம்புளி → ஆம்புளி → ஆமிலி → ஆமிலம்.]

ஆமுகம் āmugam, பெ. (n.) தொடக்கம்; beginning (த.சொ.அக.).

[ஆகு + முகம் – ஆகுமுகம் → ஆமுகம்.]

ஆமுகர் āmugar, பெ. (n.) நந்திதேவர்; the god Nandideva.

[ஆ(காளை)+முகர். முகம் → முகர் = முகத்தையுடையவர்.]

ஆமுடையாள் āmuḍai-y-āḷ, பெ. (n.) **அகமுடையாள்** பார்க்க; see āgamuḍai-y-āḷ.

[அகமுடையாள் → ஆமுடையாள் (கொ.வ.).]

ஆமுடையான் āmuḍai-y-āṉ, பெ. (n.) **அகமுடையான்** பார்க்க; see āgamuḍai-y-āṉ. "ஆமுடையானைக் கொன்ற அறநீலி. (பழ.)".

[அகமுடையான் → ஆமுடையான்.]

ஆமுத்து āmuttu, பெ. (n.) ஆவின் பல்லிற் பிறப்பதாகக் கூறப்படும் முத்து; pearl like substance said to be derived from the teeth of a cow.

[ஆ + முத்து.]

ஆமூர் āmūr, பெ. (n.) நல்லியக்கோடனின் ஊர் (கதி. அக.); town in which the chieftain Nalliyakkōḍaṉ lived. 2. அப்பர் பிறந்த ஊர்; Appar's birth place.

[ஒருகா. ஆ + ஊர் → ஆவூர் → ஆமூர். இது முக்காவல் நாட்டிலுள்ளதென்றும், சோணாட்டிலுள்ளதென்றும் கூறுவர்.]

ஆமூர்க்கவுதமன் சாதேவனார் āmūr-k-kavudamaṉ-sādēvaṉār, பெ. (n.) ஆமூர் வானவனைச் சிறப்பித்துப் பாடிய கடைக்கழகப் புலவர் (அக நா. 159); Tamil poet who praised the chieftain Āmūr Vāṉavaṉ in the Sangam age.

[ஆமூரில் வாழ்ந்த இவர், வடமொழிப் பெயர் பூண்டிருத்தலால் அந்தணராயிருக்கலாம். Skt. Gaudama + Sahādēva. *]*

ஆமூர்மல்லன் āmūr-mallaṉ, பெ. (n.) கடைக்கழகக் காலத்திருந்த ஒரு பெருமகன்; Sangam noble.

"இன்கடுங் கள்ளி னாமூ ராங்கண் மைந்துடை மல்லன் மதவலி முருக்கி" (புறம். 80 – 1, 2.)

ஆமூர்முதலி āmūr-mudali, பெ. (n.) **களப்பாளன்** பார்க்க; see Kaḷappāḷaṉ.

ஆமேற்புல்லூரி āmēṟ-pullūri, பெ. (n.) 1. **ஆமணத்தி** பார்க்க; see āmaṇatti. 2. கடுக்காய்ப்பூ; flower of gall, which is an excrescence found on the leaf.

[ஆ + மேல் + புல்லூரி. ஆ = மாடு. ஆவின் வயிற்றிற்றோன்றும் கோரோசனையும், ஆவயிற்றிற் கசிந் துருவாகும் கோரோசனை போல் கசிந்துருவாகும் கடுக்காய்ப்பூவும், புல்லிக் (பொருந்தி) கசியும் இயல்பு பற்றி ஆமேற்புல்லூரி எனப்பட்டன.]

ஆமை[1] āmai, பெ. (n.) நீரிலும் தரையிலும் வாழ்வதும், மேலும் கீழும் ஒடுகளுள்ளதும், நான்கு கால்களையும் தலையையும் ஒட்டுக்குள் இழுத்துக் கொள்ள வல்லதும், முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதும் ஆகிய ஊர்ந்து செல்லும் உயிரி; tortoise, any land or freshwater chelonian, reptile encased in two scaly or leathery shields forming a shell from which the head and legs protrude, turtle, any member of chelonia or testidinata. "ஆமை உலகம் கிணறு தான் (பழ.)".

ஆமையின் வகைகள் :

நிலத்தாமை (கரையாமை), நீராமை, கரட்டாமை, காட்டாமை, தத்தைச்சுண்டன் ஆமை (ம.), வெள்ளாமை, பச்சையாமை, கடலாமை. கருப்பாமை (பறையாமை).

ம. ஆம; **க**., குட. ஆமெ; **தெ**. தாமேலு, தாம்பேலு, தாபேலு; **து**. ஏமெ; **கோத**. ஏம்; **கோண்**. கெமுல்; **கூ**. சேம்பி; **துட**. ஆமி.

[அம் → ஆம் + ஐ – ஆமை. அம் (ஆம்) = நீர். ஆமை = நீரில் வாழ்வது.]

ஆமை[2] āmai, பெ. (n.) 1. செரியாமையால் ஏற்படும் நோய்; disease arising from indigestion. 2. நோய்; disease. (சா. அக.).

[அம்மாமை → ஆமாமை → ஆமை. அம்மாமை = செரியாமை. ஆமை → Skt. āma *]*

அம்மாமை *பார்க்க;* see ammāmai.

ஆமை [3] āmai, பெ. (n.) அரச இலச்சினைகளுள் ஒன்று (த. சொ. அக.); one of the symbols of a king.

பல்வேறு விலங்குகளும் பறவைகளும் அரச இலச்சினைகளாக இருந்தாற்போல் ஆமையும், ஓரரசனுக்கு கொடியின்கண் அல்லது திருச்சின்னத்தில் இலச்சினையாக இருந்திருக்கலாம்.

ஆமை [4] āmai, பெ. (n.) ஒருவகை மணம் (த. சொ. அக.). a kind of fragrance.

[ஒருகா. நோய் காரணமாக எழும் ஒருவகை மணத்தைக் குறித்ததாகலாம். ஆமை = நோய் ஆமை [2] பார்க்க; see āmai[2].*]*

ஆமை [5] āmai, பெ. (n.) பச்சையானது, பழுக்காதது, வேகாதது; that which is raw, unripened, uncooked, unboiled.

[அம் → ஆம் → ஆமை.]

ஆமைக்கட்டி āmai-k-kaṭṭi, பெ. (n.) காய்ச்சலுக்கு ஏற்ற மருத்துவம் செய்யாததாலும், அடிக்கடி காய்ச்சலேற்படுவதாலும், மண்ணீரல் சுரந்து கட்டியைப் போலத் தோற்றுவிக்கும் ஒருவகை வீக்கம்; இதனைக் 'காய்ச்சற்கட்டி' என்றும் கூறுவர். இது, நாட்பட, வலிதோன்றாமல் பருத்துக் கனத்து இடப்பக்கம் மந்தமான வலியையுண்டக்கும். இது குழந்தைகளுக்குச் சில நேரங்களில் வயிற்றின் பாதியளவு பருத்து, சூணவயிறு ஏற்படக் காரணமாகும்; the enlargement of the spleen which is the result of repeated attacks of acute congestion – chronic congestion ; It is also known as 'Ague cake '. It comes on so gradually and painlessly, that if it is long left unattended to, until at length the enlarged organ excites fullness, weight and dull pain in the leftside.

Some times it is so protuberant that it fills up half the cavity of the abdomen developing in children a condition known as pot-belly (சா. அக.).

[ஆமை + கட்டி. ஆமை [2] பார்க்க see amai[2].*]*

ஆமைக்கல் āmai-k-kal, பெ. (n.) தரையிற் பதிக்கும் அறுகோணமுடைய கல்; hexagonal tile or stone for flooring.

[ஆமை + கல்.]

ஆமைச்சுரம் āmai-c-curam, பெ. (n.) சிறுபிள்ளைகளுக்கு ஆமைக்கட்டியினால் வரும் ஒருவகைக் காய்ச்சல்; fever common in children due to the enlargement of the spleen – recurrent fever; relapsing fever.

[ஆமை + சுரம்.]

ஆமைச்சூலை āmai-c-cūlai, பெ. (n.) செரியாமையால் தொப்பூழைத் துளைத்து நடுநரம்பு புண்போல் வலித்துப் புளித்த ஏப்பம், நாவறட்சி, உடம்பு வெளுப்பு முதலிய குணங்களோடு கூடிய ஒருவகைச் சூலைநோய்; a disease arising from intestinal indigestion. It is marked by gripping pain in the naval region, sour belch, dryness of the tongue, bodily pain and bloodlessness – Sabbural colic.

[ஆமை + சூலை.]

ஆமைச்சொறி āmai-c-coṟi, பெ. (n.) ஆமை உருவுடைய வெண்ணிறமான தோருயிரி; tortoise shaped white coloured animal living in the water.

[ஆமை + சொறி.]

ஆமைத்தாலி āmai-t-tāli, பெ. (n.) ஆமை வடிவில் செய்யப்பட்ட தாலி; gold tali, in turtle-shape. "ஆமைத்தாலி பூண்ட" (பெரியாழ், 1, 7, 2).

ம. ஆமத்தாலி

[ஆமை + தாலி.]

ஆமைதவழி āmai-tavaḻi, பெ. (n.) ஆமை நடமாட்டத்தால் ஆகாதென்று விலக்கிய நிலம்; land given up in consequence of a tortoise having crawled over it. "உடும்போடி ஆமைதவழி புற்றும்" (S.I.I.iii, 35).

[ஆமை + தவழி. தவழி = தவழ்ந்து சென்றதால் குற்றம்பட்ட நிலம். தவழ் + இ - தவழி. இகரம் உடைமை குறித்த ஈறு.]

ஆமைநங்கூரம் āmai-naṅgūram, பெ. (n.) ஆழமில்லாக் கடற்பரப்பில் கப்பலை நிறுத்துவதற்குரிய நங்கூரம்; a kind of anchor which is used in less deep sea.

[ஆமை + நங்கூரம்.]

ஆமைநண்டு āmainaṇḍu, பெ. (n.) ஆமையைப்

ஆமை நண்டு

போன்றதும், சிவந்த முட்களும் மஞ்சள் நிறமும் கொண்டதும், அலைமோதும் கடற்கரையோரத்தில் வாழ்வதுமாகிய ஒருவகைக் கடல் நண்டு; a sea-crab

ஆமை வகைகள்:



நிலத்தாமை



கடலாமை

நன்னீர் ஆமை



நீராமை

விண்மீன் ஆமை

resembling a turtle found on the sea-shore frequented by waves. It is yellow in colour with red spikes. (சா.அக.).

ம. ஆமநண்டு.

[ஆமை + நண்டு.]

ஆமைநெய் āmai–ney, பெ. (n.) ஆமைக் கொழுப் பினின்றும் காய்ச்சியெடுக்கும் நெய்; oil extracted from the fat of turtles - turtle fat. "ஊனாமைநெய் மூலமோட்டும்" (பதார்த்த. 151).

[ஆமை + நெய்.]

ஆமைப்பலகை āmai-p-palagai, பெ, (n.) ஆமை வடிவிற் செய்யப்பட்ட மணை; low wooden seat, shaped like a tortoise.

ம. ஆமப்பலக

[ஆமை + பலகை.]

ஆமைப்பூட்டு āmai-p-pūṭṭu, பெ. (n.) ஆமை வடிவில் செய்யப்பட்ட பூட்டு; padlock, in the shape of a turtle (W.). (தஞ்சை. வழ.).

ம. ஆமத்தாழு, ஆமப்பூட்டு

[ஆமை + பூட்டு.]

ஆமைமடி āmai–maḍi, பெ. (n.) 1. பால்சுரப்புக் குறைந்த பெரியமடி; big udder yielding less milk. 2. பால் நிரம்பச் சுரக்கும் சிறுமடி (வி.); compact udder yielding much milk (W.).

[ஆமை + மடி. ஆமையென்னும் அடைமொழி பால் சுரப்பின் மிகுதி காட்டும் பருமைப்பொது.]

ஆமைமுதுகோடு āmai–mudugōḍu, பெ. (n.) **ஆமையோடு** பார்க்க; see āmai-y-ōḍu.

[ஆமை + முதுகு + ஓடு.]

ஆமையடி āmai-y-aḍi, பெ. (n.) ஆமையின் பாதத்தைப் போல் தோன்றும் ஒருவகைப் புண்; ulcer resembling the foot of a turtle. (சா.அக.).

[ஆமை + அடி. அடி = பாதம். ஆமையடி = ஆமையின் அடிபோன்ற புண்.]

ஆமையடிச்சிலந்திவாளை āmai-y-aḍi-c-cilandi–vāḷai, பெ. (n.) ஒருவகைச் சிலந்தி நோய்; syphilitic resembling the impression left by a turtle foot.

[ஆமை + அடி + சிலந்தி + வாளை.]

ஆமையாழ் āmai-yāḻ, பெ. (n.) செவ்வழி யாழ்த்திறம்; a kind of lute. (W.).

[ஆமை + யாழ்.]

ஆமையோட்டுப்பொடி āmai-y-ōṭṭu-p-poḍi, பெ. (n.) ஆமையோட்டினின்றும் செய்த நுண்பொடி; white calcined powder prepared out of turtle - shell.

[ஆமை + ஓடு + பொடி.]

ஆமையோடு āmai-y-ōḍu, பெ. (n.) ஆமையின் முதுகோடு; shell of a tortoise called caret.

[ஆமை + ஓடு.]

ஆமைவேளா āmai–vēḷa, பெ. (n.) ஆமையைப் போன்ற உருவமுடைய வேளாமீன் (தஞ்சை.மீ.வ.). tortoise shaped sea fish.

[ஆமை + வேளா.]

ஆய்[1]**–தல்** āy-,2 செ.கு.வி. (v.i.) 1. நுணுகுதல்; to deminish, to be reduced. "ஒய்தலாய்தல் ... உள்ளதன் நுணுக்கம்" (தொல்.சொல்.330). 2. அழகமைதல்; to be or become beautiful. "ஆய்ந்த மோட்டின வான்" (சீவக. 2395).

க. ஆய்

[ஐ → அய் → ஆய். ஐ = அழகு, நுண்மை.]

ஆய்[2]**–தல்** āy-,2. செ.கு.வி. (v.i) 1. முன்னாற்சாய்தல், முன்செலல்; to lean forward, to go forward. 2. வருந்துதல்; to suffer pain. "மடவாய் ஆய சிறிதவள் செல்லாள்" (திணைமாலை. 17). 3. அசைதல்; to shake. "ஆய்மறியே" (திருக்கோ. 125 உரை). 4. படர்தல், பரவுதல், உருகுதல், கலத்தல்; to spread, melt, mix. 5. வருதல்; to come, arrive,

ம., க., தெ. ஆய்; து. ஆயுனி; பாலி. ஆய் (ஊதியம், இலாபம்)

[ஊ → ஒ → ஆ (முன்செலற்கருத்து) ஆ → ஆய்.]

ஆய்[3] **–தல்** āy-, 2 செ.குன்றாவி. (v.i.) 1. ஆராய்தல்; தேடுதல்; to search, examine, investigate. "ஆய்ந் தாய்ந்து கொள்ளாதான்" (குறள். 792). 2. சிந்தித்தல் (பிங்.); to consider. 3. தெரிந்தெடுத்தல்; to select, seek out. கீரையை ஆய்ந்தாள். (உ.வ.). 4. கொண்டாடுதல்; to celebrate, to extol. "ஆயும் ஆடுதிறலாற்கு" (பு.வெ.16). 5. பிரித்தெடுத்தல், திரட்டுதல், சேர்த்தல்; to separate, sift, collect. 6. கொய்தல்; to pluck, gather. 7. காம்புகளைதல்; to nip off. 8. குத்துதல்; to stab. "அரக்கன்றனைச் சூலத்திலாய்ந்தது" (தேவா.).

க. ஆய், ஆயி; து. ஆயு, ஆயுனி; குட. ஆய்; பிரா. ஆச்; கோண். ஆச்ன; கூ. அஸ்க்; குவி. ஆசலி; குருக். ஆதா; மா. ஆதே; Pers. ac.

[ஆ → ஆய். ஆ = முன்னூக்கல், அசைத்தல், பிரித்தல், ஆராய்தல்.]

ஆய் [4] āy, பெ. (n.) 1. அழகு; beauty. "ஆய்பொறி யுழுவை" (கலித். 46.4). 2. மென்மை; softness, tenderness. "ஆய்கரும்பின் கொடிக் கூரை" (புறநா. 22.15). 3. நுண்மை; fineness, minutness. "ஆய் தொடி யரிவையர்" (புறநா. 117.10) 4. சிறுமை;

smallness; "ஆய்நுதன் மடந்தை" (புறநா. 249:10). 5. துன்பம் (அக.நி.); suffering, pain.

ம., க., தெ. ஆய்.

[ஐ → அய் → ஆய். ஐ = நுண்மை, அழகு, மென்மை, சிறுமை. 5. அசை (வருத்தம்) → அயை → அயா → ஆய் (வருத்தம்).]

ஆய்[5] āy, பெ. (n.) 1. தாய்; mother. "அம்முலை நல்கிய வாயென உவந்தனன்" (ஞானா.35,10). 2. பெண்கள் பெயருடன் இணைத்துச் சொல்லும் மதிப்புரவுச்சொல்; honorary feminine suffix. 3. பாட்டியின் தாய்; mother of grandma.

ம., க. ஆய்; **தெ.** ஆய (பெண்பாற்பெயரீறு); **துட.** தோய்; **கோத.** ஆய (பெண், மனைவி); **குட.** தாயி (பாட்டி); **து.** தாயி; ஆயல், ஆயி; **நா.** அய்ம (பெண்); **கூ.** அஇய், ஐஆ. ஐஆலீ. **குரு.** ஆயோ; **மா.** அய்ய; **பிரா.** அய், அயி; **கோண்.** யாய்; **கொண்.** ஆய்; **குவி.** ஈய; **குவி.** ஆஈ (தாய், மகள், உடன்பிறந்தவள்); **கொலா.** ஆய; **ஒல்.** அய்; **கொங்.** ஆய்; **இந்.** ஆயா; **வங்., ஒரி., குச்., மரா.** ஆயீ, ஆய; **சிந்.** ஆய்; **உரு. பார. அர.** தாய். **E.** ayah; **port.** aia. **ஆத்.** ஒயி (பெண்.)

[ஐயன் (ஆ.பா.) → ஐயை (பெ.பா). ஐயை → அய்யை → ஆய். பெண்பால் உயர்வுப் பெயரான ஐயை → ஆய் எனத் திரிந்தபின் தாய், தமக்கை, பெண், மகள், பாட்டி ஆகிய பெண்பாற் பெயர்களாயின.]

ஆய்[6] āy, பெ. (n) 1. இடைக்குலம்; cowherd caste. "மாறுபட மலைந்தாய்ப்படை நெக்கது" (சீவக. 426). 2. கூட்டமாக வாழும் ஆடுகள்; sheep.

ம., க., தெ. ஆய்

[ஆ = முன்செலல், சேர்தல், கூடுதல். ஆ → ஆய் = கூட்டம் கூடிவாழ்வோர். ஒ.நோ: ஆய் → ஆயம் (கூட்டம்).]

ஆய்[7] āy, பெ. (n.) 1. முன்மை; front. 2. முதன்மை; first, foremost.

க. ஆ; **தெ.** ஆய்.

[ஊ → ஆ → ஆய். தெ. ஆயில்லு = முதன்மையானவீடு, நடுவீடு. க. ஆதலை = முதற்பக்கம், முன்பக்கம். இச் சொல்லாட்சிகள் பழங்காலத்தில் 'ஆ' என்னுஞ் சொல் 'ஆய்' என வழங்கி வந்ததற்குச் சான்றாம்.]

ஆய்[8] āy பெ. (n.) ஒரு வள்ளல் (நற்.167); name of a philanthropic chief. "ஆர்வ நன்மொழி யாயும்" (சிறுபாண். 99). 2. குடிப்பெயர் (புறநா. 127); name of a clan or family.

[ஆ = முதனிலை, முதன்மை. ஆ → ஆய் – முதன்மையானவன், உயர்ந்தவன், சிறப்புடையவன். ஆய்க்குடி = சிறப்புடையகுடி. ஆய்[7] *பார்க்க. see āy.]*

ஆய்[9] āy, இடை. (ind.) 1. ஓர் வினையெச்ச ஈறு; adv. suff. நன்றாய்ப் பேசினார் (உ.வ.). 2 முன்னிலை ஒருமை வினைமுற்று ஈறு; pronominal term. suffixed to verb second pers. sing. வந்தாய். 3. ஏவலொருமை வினைமுற்று ஈறு; Imperative term. suffixed to verb second pers. sing. "ஏகாய் இவ்வயின் நிற்றலும் ஏதம்" (கம்பரா.). 4. அருவருப்பைக் குறிக்கும் குறிப்புச் சொல்; interjection denoting dislike. ஆய்! போ. (உ.வ.). 5. வியப்பிடைச் சொல்; interjection denoting surprise, wonder.

ம., க., தெ. ஆய்.

[1. ஆகி → ஆய். 2. 3. ஐ → ஆய். 4,5 ஆய் → ஆய். ஆய் – ஒலிக்குறிப்புச் சொல்.]

ஆய்[10] āy, பெ. (n.) 1. பெரிது; big. ஆய்ந்த வலை. (முக. மீனவ. வழ.). 2. வலிமை, ஆற்றல்; strength, power. 3. முயற்சி; effort. ஆயமில்லாத ஆண் பிள்ளை (இ.வ. தருமு.).

ம. ஆய (வலிமை); **க.** ஆயதிகெடு (வலிமை குன்று) **குச்.** ஆய் (துணிவு, வலிமை)

[ஆ → ஆய். ஆ = முன்செலற்கருத்து வேர்ச்சொல். முன் செலற்கருத்தினின்று ஊக்கக்கருத்தும், ஊக்கக் கருத்தினின்று வலிமைக் கருத்தும் தோன்றும். ஒ.நோ : ஊங்கு → ஊக்கு → ஊக்கம். ஊ = முன் செலற் கருத்து வேர்.]

'ஆய்' வலிமை குறித்த வேர்ச்சொல்லாதலின் உடலில் வலுவுள்ள வரை வாழும் வாழ்நாட்காலம் ஆயுள் எனப்பட்டது. ஆய் + உள். ஆய் (வலிமை) உள்ளனவும் (வாழ்நாள்) என்று இச்சொற் கூட்டு தெளிவாகப் பொருள்படுதல் காண்க.

ஆய்[11] āy, பெ. (n.) 1. அளவு, முறை; measure, order. 2. ஒழுங்கு; கட்டளை; orderliness, command.

க. ஆய்.

[ஆள் → அய் → ஆய். ஆள் = நெருங்குதல், பொருந்துதல், அளவாதல், முறையாதல், ஒழுங்கு படுத்தும் ஆணை.]

ஆய்[12] āy, பெ. (n.) 1. உள், மருமம் (இரகசியம்); in, inside, secret. 2. கருத்து, எண்ணம்; idea, thought.

ம., க., தெ. ஆய்.

[ஒருகா. அகு → அகழ் → அகள் → அகய் → ஆய். அகழ் = உள், உட்பகுதி, உட்கருத்து.]

ஆய்[13] āy, பெ. (n.) 1. ஏந்து (வசதி); comfort. 2. பொருத்தம்; relevance. 3. இலக்கு, குறிக்கோள்; aim, goal.

க., தெ. ஆய்.

[ஆ = முன்செலற் கருத்துவேர். ஆ → ஆய் = முன்னுள்ளது, (குறிக்கோள்) முன்னேற்பாடானது. ஏந்து (வசதி) பொருத்தம்.]

ஆய்[14] āy, பெ. (n.) 1. வெண்மை; whiteness. 2. வெண்மையாய் இருப்பது; that which is white.

[ஆ = மாடு. ஆய் = மாட்டின் நிறம், வெண்மை, வெண்மையாயிருக்கும் பொருள் அல்லது உயிரி.]

ஒ. நோ. பா = விரிதல். பாய் = விரிக்கக்கூடியதாய் இருப்பது, இ = உடைமை குறித்த ஈறு, இ → ய் எனத் திரிந்து பெயரீறு ஆயிற்று.

யகரமெய்யீற்றுப் பெயர்ச்சொற்கள் பண்டைக்காலத்தில் இகரவீற்றனவாக இருந்தன என்பதற்கு நாய் - நாஇ என ஆளப்பட்டுள்ளமையே தக்க சான்றாகும்.

ஆய்[15] āy, பெ. (n.) 1. அழுக்கு; dirt. 2. பவ்வீ (இடக்கரடக்கு); excreta. ஆய்பிள்ளை, ஆய் குழந்தை. (குழந்தைமொழி).

[மாய் → ஆய். மாய் = மாசு, அழுக்கு.]

ஆய்அண்டிரன் āy-aṇḍiraṉ, பெ. (n.) 1. கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; one of the last seven philanthropic chiefs of sangam age. "ஆஅயண்டிர னடுபோ ரண்ணல்" (புறநா. 129.5).

*[ஆய் + அண்டிரன். **ஆய்**[7] பார்க்க see āy[7]; ஆண் + திறம் → ஆண்டிறம் → ஆண்டிறன் + அண்டிரன் - அண்டிரன் = ஆண்டிறலோன், ஆண்டகை. ஒ.நோ. தெ. அண்டி (ஐயா) ஏமண்டி = என்னவய்யா. அட்லு செப்பகண்டி = அவ்வாறு சொல்லாதீர்கள். த. ஆண்டை → தெ. அண்டி.]*

ஆய்எயினன் āy-eyiṉaṉ, பெ. (n.) கடைக்கழகக்காலப் புரவலன் (அக நா. 148.); a sangam noble.

[ஆய்[7] + எயினன்.]

ஆய்க்குடி āy-k-kuḍi, பெ. (n.) இடைச்சேரி, ஆயர்களின் குடியிருப்பு, ஆயர்பாடி; hamlet of the cowherd caste.

[ஆய் + குடி. ஆய் = ஆயர்.]

ஆய்க்குருவி āy-k-kuruvi, பெ. (n.) மெதுவாய்ப் பறக்கும் குறுங்குருவி (நெல்லை.); tiny bird flying slowly.

[ஆய் + குருவி.]

ஆய்க்குழல் āy-k-kuḻal, பெ. (n.) **ஆயக்குழல்** பார்க்க; see āya-k-kuḻal.

[ஆயர் + குழல் - ஆயக்குழல் → ஆய்க்குழல்.]

ஆய்குடி āy-kuḍi, பெ. (n.) பொதியமலைச்சாரலிலுள்ள ஆய்வள்ளலின் ஊர்; native town of the philanthropic Tamil chieftain Āy, on the slope of the hill Podiyamalai

ஆய்ச்சல்[1] āyccal, பெ. (n.) விரைவு, விரைவுணர்ச்சி, வேகம் (செ.அக.); impulse, heat. "வந்த ஆய்ச் சலிலே" (யாழ்ப்.).

[ஒருகா. பாய்ச்சல் → ஆய்ச்சல்.]

ஆய்ச்சல்[2] āyccal, பெ. (n.) பாட்டம், முறை; turn, bout. ஆய்ச்சல் ஆய்ச்சலாய் மழை பெய்கிறது (வின்.).

[ஒருகா. அச்சல் → ஆய்ச்சல்.]

ஆய்ச்சல்[3] āyccal, பெ. (n.) பறிப்பு, அசைவு (கதி.அக.); plucking, shaking.

*[ஆய் → ஆய்ச்சல்.] **ஆய்**[3] பார்க்க; see āy[3].*

ஆய்ச்சாலிகம் āyccāligam, பெ. (n.) வெண்மிளகாய்; white chilly — (சா.அக.).

[ஆ = மாடு, ஆய் = மாட்டின் நிறம், வெண்மை. ஆய் + சாலிகம்.]

ஆய்ச்சி[1] āycci, பெ. (n.) 1. தாய்; mother. (ஈடு. 6. 1:4). 2. பாட்டி; grandmother . 3. மகளிரை மதிப்புரவாக அழைக்கும் விளி (இ.வ.); hon. expr. for woman (Loc.).

ம. ஆச்சி.

[ஆய் → ஆய்ச்சி.]

ஆய்ச்சி[2] āycci, பெ. (n.) இடைக்குல மடந்தை; woman of cowherd caste.

ம. ஆச்சி, ஆச்சியார்.

[ஆய் → ஆய்த்தி → ஆய்ச்சி.]

ஆய்த்தி பார்க்க; see āytti.

ஆய்ச்சூரி āy-c-cūri, பெ. (n.) வெண்கடுகு; white mustard. (சா.அக.).

[ஆய். சூரி. ஆய் = வெண்மை.]

ஆய்ச்சூரிகம் āyccūrigam, பெ. (n.) **ஆய்ச்சூரி** பார்க்க; see āyccūri.

[ஆய்ச்சூரி → ஆய்ச்சூரிகம்.]

ஆய்ச்சேவகம் āy-c-cēvagam, பெ. (n.) வெள்ளெருக்கு; white flowered giant swallow - wort. (சா.அக.).

[ஆய் + சேவகம். ஆய் = வெண்மை.]

ஆய்ஞன் āyñaṉ, பெ. (n.) ஆராய்பவன்; investigator. (தொல். எழுத். 29 உரை).

[ஆய்நன் → ஆய்ஞன்.]

ஆய்த்தி āytti, பெ. (n.) ஆயன் என்பதன் பெண்பால், இடைக்குலப் பெண்; woman of cowherd caste, fem. of āyaṉ.

[ஆய் → ஆய்த்தி.]

ஆய்த்தியர் āyttiyar, பெ. (n.) இடைச்சியர்; women of cowherd caste. "மாமருண் டன்ன மழைக்கண்சிற் றாய்த்தியர்" (கலித். 108.46).

[ஆ → ஆய் → ஆய்த்தி + அர்.]

ஆய்தக்குறுக்கம் āyda-k-kuṟukkam, பெ. (n.) (இலக்.) தனக்குரிய மாத்திரை யளவில் குறைந்தொலிக்கும் ஆய்தவெழுத்து; (gram) letter ∴ 'K' shortened in delivery when it is substituted for ல் 'l' or ள் "ḷ" before த் 't' in combination, as in கல் + தீது – கஃறீது, முள் + தீது – முஃடீது and one of ten sārbeḻuthu, q.v. மாத்திரை குறுகிய ஆய்தம் (நன், 97, உரை.).

[ஆய்தம் + குறுக்கம்.]

ஆய்தசாலை āydaśālai, பெ. (n.) படைக்கலக் கொட்டில்; armoury, arsenal. "ஆயுதசாலையி லவுணர் கோன் மகன்" (கந்தபு. முதனா. 20).

ம. ஆயுதசால, க. ஆயுதசாலெ

[ஆய்தம் + சாலை.]

ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் āyda-t-toḍar-k-kuṟṟiya-lugaram, பெ. (n.) ஆய்தம் மொழிக்கு ஈற்றயலாக நிற்க, ஈற்றில் வரும் வல்லெழுத்துகள் ஆறனுள் ஒன்றன் மேலூர்ந்து தன் மாத்திரையிற் குறைந் தொலிக்கும் உகரம்; shortened 'u' which stands as a vowel with the final six hard consonants being preceded by the letter, 'aḵ' known as āydam.

எஃகு, கஃசு.

[ஆய்தம் + தொடர் + குற்றியலுகரம்.]

ஆய்தத்தொடர்க் குற்றுகரம் āyda-t-todar-k-kuṟṟugaram, பெ. (n.) **ஆய்தத்தொடர்க்குற்றியலுகரம்** பார்க்க; see āyda-t-todar-k-kuṟṟiyalugaram.

[ஆய்தம் + தொடர் + குற்றுகரம். குறு + உகரம் – குற்றுகரம்.]

ஆய்தநஞ்சு āudananju, பெ. (n.) ஆய்தம் பட்டதனால் உடம்பில் ஏற்பட்ட நஞ்சு; poison set in the system by operation (சா.அக.).

[ஆய்தம் + நஞ்சு.]

ஆய்தநோட்டம் āydanōṭṭam, பெ. (n.) ஆய்தத்தைப் பயன்படுத்திப் புண்புரையை நோட்டமிடுதல் (பரி சோதித்தல்); examination of a wound cavity by a probe. (சா.அக.).

[ஆய்தம் + நோட்டம்.]

ஆய்தப் பயன்படுத்தம் āyda-p-payanpaḍu-t-tam, பெ. (n.) கத்தி முதலிய கருவிகளை அறுவை மருத்துவம் செய்யும் போது உடம்பின் பகுதியில் செலுத்துதல்; use of surgical instruments in treatment. (சா. அக).

[ஆய்தம் + பயன்படுத்தல்.]

ஆய்தப்பயிற்சி āyda-p-payiṟci, பெ. (n.) படைத்துறைப் பயிற்சி; military exercise. 2. சிலம்பம் முதலியவற்றிற் பயிற்சி; practice in the art of fencing etc. 3. படைக்கலம் பயில்கை; military exercise, training in the use of arms. (சா.அக.)

ம. ஆயுதசிக்ச.

[ஆய்தம் + பயிற்சி.]

ஆய்தப்புள்ளி āyda-p-puḷḷi, பெ. (n.) ∴ என்னும் ஆய்தவெழுத்து; letter ∴ 'aḵ'. "குறியதன் முன்னர் ஆய்தப்புள்ளி" (நன். 90).

[ஆய்தம் + புள்ளி. புள்ளி = மெய்யெழுத்து. முப் புள்ளிகளாலாய எழுத்து.]

ஆய்தபண்டுவம் āydapaṇḍuvam, பெ. (n.) கத்தி முதலிய கருவிகளினால் அறுத்துக் குணப்படுத்துதல்; surgical operation to which the human body is subjected, for curing disease; surgical treatment. (சா.அக).

[ஆய்தம் + பண்டுவம்.]

ஆய்தபாணி āydapāṇi, பெ. (n.) கையில் ஆய்தம் ஏந்திய வன்; man who has weapon in his hand. (சா.அக.).

[ஆய்தம் + பாணி.]

ஆய்தபிள்ளைப்பேறு āyda-piḷḷai-p-peṟu, பெ. (n.) பிள்ளைப் பேற்றின்போது ஆய்தத்தை உட்செலுத் திக் குழந்தையை வெளிப்படுத்துதல்; child birth facilitated by the use of instruments such as forceps etc. (சா.அக).

[ஆய்தம் + பிள்ளை + பேறு.]

ஆய்தபூசை āydapūśai, பெ. (n.) படைக்கலப் பூசை. கன்னி (புரட்டாசி)த் திங்கள் வளர்பிறை முதனாள் முதற்கொண்டு அலைமகள் கலைமகள் மலைமகள் ஆகிய முத்தேவியரையும் மும்மூன்று நாளாக ஒன்பது நாள்வரை படைக்கலங்களும் பொத்த கங்களும் படைத்துச் செய்யும் பூசை. இக்காலத்துத் தொன்மி (நவமி) நாளில் மட்டும் செய்யப் படுகிறது; worship of weapons, tools, books etc. on the ninth day of navarathri.

[ஆய்தம் + பூசை.]

ஆய்தம்[1] āydam, பெ. (n.) சார்பெழுத்துகளுள் ஒன்றானதும், நுணுகி ஒலிப்பதும் மெய்யெழுத்து எனக் கொள்ளப்படினும், மெய்க்கும் உயிர்க்கும் இடைப்பட்ட தன்மை யுடைமையால் தனிநிலை யென்று பெயர்பெற்றதுமான ∴ என்னும் ஆய்த வெழுத்து; the letter ∴ so called from the indistinctness of its sound, or form the peculiarity and minuteness of its form. It is chiefly a consonant but sometimes occurs as a vowel, yet it cannot be confounded with another letter (W).

[ஆய் → ஆய்தம். ஆய்தல் = நுணுகுதல். மொழி முதலாகாமையின் உயிரெழுத்தாகக் கொள்ளப்படாத தும், உயிரேற இடந்தந்து உயிர் மெய்யெழுத்தாகக்

கொள்ளப்படாததுமாகிய ஆய்த வெழுத்து ஒசையினிமை கருதி நுணுகி (அஃகி) ஒலித்தலின் ஆய்தம் எனப்பட்டது.]

ஆய்தம்[2] āydam, பெ. (n.) 1. மயிரையும் இருபிளப்பாகச் செய்யத் தகுந்தவாறு மிகு கூர்மையுடையதாகவும், பிடி சரிவர அமைந்ததாகவும் உள்ள அறுவை மருத்துவக் கருவி, நுண்ணிய சிறு கத்தி; sharp surgical instrument, knife well-shaped, well-ground and fitted with a convenient handle. It should be so sharp as to be capable of cutting or splitting a hair. 2. படைக்கலம்; weapon, arms. "ஆயுத மனேகவித மானவை யெனப்பலவு மழகுற வியற்றியும்" (பாரதவாரணா.57). 3. துணைக்கருவி; tool, implement, instrument.

ம. ஆயுதம்; **க.** ஆயுத; **தெ.** ஆயுதமு. Skt. āyudha.

[ஆ → ஆய் –ஆய்தம்.]

ஆய்தல் = நுணுகுதல், சிறுத்தல், கூர்மையாதல். ஆய்தம் = நுணுகக் கூராக்கப்பட்ட கத்தி அல்லது படைக்கலம். வடமொழியிலுள்ள ஆயுதம் என்னும் சொல் (a-yudh) போருக்கு உதவும் படைக்கலம் என்னும் பொருளில் ஆளப்படுகிறது. எனினும் அது கூர்மையின் வழிப் பிறந்த தமிழ் 'ஆய்தம்' பெற்ற திரிவடிவே (ஆய்தம் → ஆயுதம்) ஆகும். போரிடத் துணைபுரியும் குதிரை, யானை முதலிய உயிரிகளும் தேர், மெய்ம்மறை (கவசம்) போன்ற அஃறிணைப் பொருள்களும் ஆயுதம் (a-yudh) என வழங்கப் பெறாமையின், போருக்குத் துணைக் கருவி எனப் பொருள்படும் வடமொழி ஆயுதம் வடமொழிக்கு மூலச் சொல்லன்று என்பதும் தெளிவாகிறது. அதுவுமின்றி அத்திரம் (கைவிடுபடை), சத்திரம் (கைவிடாப்படை) என்னும் இரு வகைக்கும் ஆயுதம் பொதுப் பெயராக இருத்தலும் காண்க.

ஆய்தமிழுக்குமலை āydamilukkumalai, பெ. (n.) இரும்பு மலை; mountain containing the iron ore. (சா.அக).

[ஆய்தம் + இழுக்கும் + மலை.]

ஆய்தல் āydal, தொ. பெ. (vbl.n.) 1. ஆராய்தல்; examination. "பல்லோராய்ந்த நூல் வெள்ளங் கடந்தனன்" (பாரத. குருகுல. 87). 2. காய் முதலியவைகளைப் பிரித்தெடுத்தல்; plucking, collecting. 3. தெரிந் தெடுத்தல்; selection. "அணங்கு கொ லாய் மயில் கொல்லோ" (குறள். 1081). 4. சிறிதாதல்; reduction. "ஒய்த லாய்தல்" (தொல்.சொல். 330). 5. வருந்துதல்; suffering (திணைமாலை. 17). 6. அசைதல்; movement. "ஆய்மறியே" (திருக்கோ. 125 உரை). 7. சோதனை செய்தல்; check, search. 8. கொண்டாடுதல்; celebration. "ஆயுமடுதிற லார்க்கு" (பு.வெ. 4, 16). 9. கொய்தல்; cutting. 10. காம்பு களைதல்; removing stem. 11. குத்துதல்; piercing "அரக்கன்றனைச் சூலத்திலாய்ந்தது" (தேவா.).

ம. ஆயுக; **க.** ஆய்கெ; **து.** ஆயுளி.

[ஆய் + தல்.]

ஆய்தூவி āy-tūvi, பெ. (n.) சூட்டுமயிர்; crest, plume. "ஆய்தூவியனமென" (கலித்.56-14). 2. அழகிய சிறகு; handsome feather.

[ஆய் + மயிர்.]

ஆய்ந்த கீரை āynda-kirai, பெ. (n.) காம்புகளைந்த கீரை; leaves from which the stems or the pedicles are nipped off.

[ஆய் → ஆய்ந்த + கீரை.]

ஆய்ந்த வலை āyndavalai பெ. (n.) மீன்பிடிக்கும் பெருங்கண் வலை; a kind of fishing net with loose holes. (முகவை. மீனவ.)

[ஆய் = பெரியது. ஆய் → ஆய்ந்த + வலை.]

ஆய்ந்துயர் காந்தி āynduyar kāndi, பெ. (n.) கற்காவி; (Stone – ochre) red ochre which contains much oxide of iron. (சா.அக.).

[ஆய்ந்து + உயர் + காந்தி.]

ஆய்ந்துயர்காவி āynduyar-kāvi, பெ. (n.) **ஆய்ந்துயர் காந்தி** பார்க்க; see āynduyar-kāndi.

ஆய்ந்தோர் āyndōr, பெ. (n.) 1. அறிஞர் (திவா.); wise men, those who have studied deeply. 2. புலவர் (த.சொ.அக.); poets, scholars.

[ஆய் – ஆய்ந்தோர்.]

ஆய்நலம் āy-nalam, பெ. (n.) 1. அழகிய நலம் (ஐங்குறு.); loveliness. 2. மெலிந்த அழகு (ஐங்குறு.); grace, elegance.

[ஆய் + நலம்.]

ஆய்நுதல் āy-nudal, பெ. (n.) அழகுறைந்த நெற்றி (ஐங்குறு.); lovely forehead.

[ஆய் + நுதல்.]

ஆய்ப்பாடி āy-p-pādi, பெ. (n.) ஆயர்பாடி, இடையரூர்; hamlet inhabited by cowherds. "சீர்மல்கும் ஆய்ப் பாடிச் செல்வச் சிறுமீர்காள்" (திருப்பா. 1).

ம. ஆயம்பாடி. ஆய்ப்பாடி

[ஆய + பாடி.]

ஆய்ப்பு āyppu, பெ. (n.) 1. அசைப்பு (கதி. அக.); movement. 2. வீச்சு (கதி.அக.); blowing, throwing. 3. அடி சுருங்குதல்; being reduced in circumstances, power, energies. "தேய்ப்புண்டவனும் சில சில் கணை யாலாய்ப் புண்டவனும்" (கம்பரா. அதிகா. 10). 4. வருத்தம்; sorrow.

[ஆய் ஆய்ப்பு]

ஆய்பு āybu, வி.எ. (adv.) (இலக்) செய்பென்னும் வாய்பாட்டான் வந்த வாய் பென்னும் இறந்தகால வினையெச்சம் (கதி. அக.); adv. having searched.

[ஆய் → ஆய்பு.]

ஆய்மகள் āy-magaḷ பெ. (n.) இடைக்குலப்பெண்; cowherdess.

[ஆய் + மகள்.]

ஆய்மகன் āy-magaṉ, பெ. (n.) இடையன்; cowherd.

[ஆய் + மகன்]

ஆய்மதி āymadi, பெ. (n.) 1. நுண்ணறிவு (கதி. அக.); intelligence. 2. ஒளியற்ற நிலவு (த.சொ. அக.); dull moon "ஆய்மதி மொய்கொள் பூமி முளைப்பது போலவே" (சிந்தா. 345).

[ஆய் + மதி]

ஆய்மயில் āymayil, பெ. (n.) 1. அழகிய மயில்; beautiful peacock. "அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ". (குறள். 1081). 2. விசை குறைந்த மயில் (த.சொ. அக.). "அஃகிய மதுகை தன்னா லாய்மயி லூரு மாங்கண்" (சிந்தா. நாமக. 270).

[ஆய் + மயில்.]

ஆய்மலர் āy-malar, பெ. (n.) 1. தாமரை மலர்; lotus flower. 2. தெரிந்தெடுத்த மலர்; chosen or choicest flower (கதி. அக.). 3. காம்பு களைந்த மலர்; flower from which the pedicle is nipped off. (சா.அக.).

[ஆய் + மலர்.]

ஆய்மை āymai, பெ. (n.) 1. ஆராயுந்தன்மை; spirit of investigation. "ஆய்மையின் மந்திரத்தறிஞானம்" (கம்பரா. சடாயுகா. 5). 2. நுண்ணிய பொருள்; subtle meaning. (திருவாலவா. நகர. 11).

ஆய்வா[1] (வரு)-தல் āyvā-, 18 செ.கு.வி. (v.i.) 1. கூடி வருதல், மேம்பட்டு வருதல் (இ.வ.); to bring good luck (Loc.) ஆய்வந்த வீடு (தருமபுரி).

[ஆகி + வா - ஆகிவா → ஆய்வா (கொ. வ.)
ஆகிவா-தல் *பார்க்க;* see āgivā-,. *]*

ஆய்வா[2] (வரு)-தல் āyvā-, 15. செ. குன்றாவி. (v.t.) ஆராய்தல்; to investigate, scrutinise, do research in. "தண்டமிழாய்வந்திலார்" (பரிபா. 9. 25).

[ஆய் + வா.]

ஆய்விடு-தல் āy-vidu-, 18. செ.குன்றாவி. (v.t.) ஆராய்தல்; to investigate, scrutinise. "தாங்கித்தேடி யாய்விட்டுப் பிரமனழ" (திருவிளை. விருத்த. 29).

[ஆய் + விடு.]

ஆய்வு āyvu, பெ. (n.) 1. ஆராய்கை; critical study, investigation, research, "ஆய்வரும் பெருவலி யரக்கர் நாமமே" (கம்பரா. ஆரணி. அகத்தி. 5). 2. அகலம் (திவா.); width, breadth. 3. நுணுக்கம்; minuteness, diminution, reduction. 4. வருத்தம்; distress, suffering. 5. அழகு; beauty.

[ஆய் → ஆய்வு]

ஆய்வுளி āyvuḷi, பெ. (n.) மின்கடத்தியில் மின்னோட்ட முள்ளதா வென்பதையறியவுதவும் சிறு கருவி; tester.

[ஆய் + ஒளி.]

ஆய்வை āyvai, பெ. (n.) துயிலிடம் (பிங்.); sleeping place.

[ஆய் → ஆய்வை .]

ஆயக்கட்டு āya-k-kaṭṭu, பெ. (n.) 1. குளப்புரவு (C.G.); entire extent of land irrigated by a tank. 2. சிற்றூரின் மொத்த நில அளவுக்கணக்கு (C.G.); measurement of land determining the boundaries of a village, old settlement register. 3. பொய்மொழி (வின்.); deceitful fabrication, false statement (W.).

[ஒருகா. ஆகிய கட்டு → ஆயக்கட்டு, கட்டு = பரப்பு. ஆகிய = மொத்தமான. ஆயக்கட்டு = மொத்தப் பரப்பளவு 3. ஆயக்கட்டு = முழுமையான கட்டுக்கதை, பொய்.]

ஆயக்கட்டு மானியம் āya-k-kaṭṭu māṉiyam, பெ. (n.) அரசினர் வழங்கிய உரிமைப் பட்டயத்தின் வண்ணம் பணமாகப் பெறும் மேரை; money allowance claimed under Government sanads (R.T.).

[ஆயக்கட்டு + மானியம்.]

ஆயக்கம் āyakkam, பெ. (n.) மொத்த வெண் (இவ); total number (Loc.).

[ஆய் → ஆயக்கம்.]

ஆயக்கர் āyakkar, பெ. (n.) சிற்றூர்ப் பொதுப் பணியாளருள் மேரை பெறும் தகுதியுடையவர்கள்; class of village servants who for their services to the village community, are entitled to a portion of the crop (R.T.).

[ஆயம் → ஆயக்கர். ஆயம்=விளைச்சல், வருவாய்.]

ஆயக்கல் āyakkal, பெ. (n.) காரக்கல், ஆய்க்கல்; a kind of caustic mineral stone (W).

[ஆய் + கல் - ஆய்க்கல் → ஆயக்கல்]

ஆயக்காரன் āyakkāraṉ, பெ. (n.) வரிவாங்குபவன்; tax-collector. 2. (கிறித்.) விடுதியின் உரிமையாளர்; publican (செ. அக.).

[ஆயம் + காரன்]

ஆயக்காரி āyakkāri, பெ. (n.) விலைமகள், பொது மகள்; whore. "கொள்ளுமாயக் காரிகள்" (திருப்பு. 571).

[ஆயம் = வருவாய். ஆயம் → ஆயக்காரி]

ஆயக்கால் āyakkāl, பெ. (n.) 1. பல்லாக்கு, ஊர்வலத் திருமேனிக்குரிய சப்பரம் போன்றவற்றைச் சுமந்து செல்வோர் சிறிது நேரம் முட்டுக் கொடுத்து நிறுத்த உதவும், அணிகம் (வாகனம்) தாங்கும் கவைத்த முட்டுக்கால், குத்துக்கால்; forked stick on which a palanquin or the vehicle of an idol may rest when carried in procession through the streets. 2. முட்டுக் கொடுக்க உதவும் கட்டை, முட்டுக்கால்; prop to a wall or roof.

[ஆய் = வலிமை. ஆய் → ஆய + கால் ஆயக்கால்.]

ஆயக்குழல் āya-k-kuḻal, பெ. (n.) புல்லாங்குழல் (புதுவை); flute of the cowherds (Pond.).

ம. ஆயக்குழல்

[ஆயர் + குழல் – ஆயர்குழல் → ஆயக்குழல்.]

ஆயக்கோல் āya-k-kōl, பெ. (n.) **ஆயக்கால்** பார்க்க; see **āya-k-kāl.**

[ஆயக்கால் → ஆயக்கோல்.]

ஆயச்சாவடி āya-c-cāvaḍi, பெ. (n.) சுங்கத்துறை (வின்.); customs office (W.).

[ஆயம் + சாவடி. ஆயம் = வரி.]

ஆயசம் āyaśam, பெ. (n.) 1. இரும்பு; iron, ferrus. 2. இரும்புக்கருவி; iron weapon. 3. இரும்புச்சட்டை; iron clothing. (த.சொ. அக.).

ம. ஆயச

[ஒருகா. ஆயம் → ஆயசம்.]

ஆயத்தப்படு-தல் āyatta-p-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) அணியமாதல், (தயாராதல்) (கதி. அக.); to get ready.

[ஆயத்தம் + படு.]

ஆயத்தம்[1] āyattam, பெ. (n.) 1. கூர்மை; sharpness. 2. சீற்றம்; anger. 3. தள்ளுகை; rejection.

[ஆய்[7] → ஆயத்தம்.]

த. ஆயத்தம் > Skt. ayasta.

ஆயத்தம்[2] āyattam, பெ. (n.) 1. முன்னேற்பாடு; preparedness. 2. அணியம் (தயார்); readiness. "மோக்குமுன் வாலுகமெழற் காயத்த மென்னின்" (தைலவ.பாயிர.43). 3. போருக்கு அணியமாயிருத்தல்; warlike preparation, equipment. (கம்பரா.கும்பக. 77). 4. முயற்சி (த.சொ.அக.); effort, preseverance.

தெ. ஆயத்தமு; **து.**, ம.ஆயத்த.

[ஆய் 7 → ஆயத்தம்.]

ஆயத்தம்[3] āyattam, பெ. (n.) (இசை.) இசைக் கிளையில் ஒன்று (பெரியபு. ஆனாய. 26.உரை); (Mus.) musical mode.

[ஒருகா. ஆயம் = நுண்மை, மென்மை. ஆயம் → ஆயத்தம் = நுண்ணிய இசை வகை.]

ஆயத்தலம்[1] āyattalam, பெ. (n.) ஆயத்துறை; customs department. 2. சுங்கச்சாவடி (வின்.); customs office (W.).

[ஆயம் + தலம். ஆயம் – வருவாய், வரி, வரி தண்டும் துறை. Skt. sthala. > த. தலம்.]

ஆயத்தலம்[2] āyattalam, பெ. (n.) உடம்பில் மருமப் பகுதி; vital part of body.

தெ. ஆயமு

[ஆயம் + தலம். ஆயம் = மென்மை. Skt. sthala > த. தலம்.]

ஆயத்தன் āyattaṉ, பெ. (n.) 1. அடிப்பட்டவன்; experienced person. 2. கூர்மையுள்ளவன்; intelligent man. 3. தள்ளப்பட்டவன் (சப்த. கற்ப); one who is neglected or rejected.

[ஆயத்தம் → ஆயத்தன்.]

ஆயத்தார் āyattār, பெ. (n.) தோழியர் கூட்டம்; female companions, female attendants of a lady. "ஓங்கிய வாயத்தாரு மேறினா ருடனத் திண்டேர்" (திருவிளை. திருமணப்.8).

[ஆயம் → ஆயத்தார்.]

ஆயத்தி āyatti, பெ. (n.) 1. நாள்; day. 2. எல்லை; boundary. 3. அன்பு; affection. 4. வலி; strenght. 5. தன் வயப்படுத்தும் திறன்; power of fascinating. (செ. அக.). 6. நன்னடை; good conduct. 7. நீளம்; length. (த.சொ.அக.).

க. ஆயதி

[ஆயம் → ஆயத்தி.]

ஆயத்துய்த்தல் āyatt(u)–uyttal, தொ. பெ. (vbl.n.) தலை வியைப் பாங்கி முதலிய மகளிர் கூட்டத்தில் விடுதல்; leaving the heroine to the company of lady attendants.

[ஆயம் + அத்து + உய்த்தல். ஆயம் = தோழியர்கூட்டம். 'அத்து' சாரியை. உய்த்தல் = செலுத்துதல், செல்ல விடுதல்.]

ஆயத்துறை āya-t-turai, பெ. (n.) தீர்வைத்துறை (சுங்கச்சாவடி); custom house, place where tolls are collected. "ஆயத்துறையிற் பிறந்தந்தணர் பால் குடித்து" (தனிப்பா. ii.16,34).

[ஆயம் + துறை.]

ஆயதம் āyadam, பெ. (n.) 1. அகலங் குறைந்து நீளம் கூடியிருக்கும் வடிவம்; oblong rectangle. 2. நீளம் (சூ.நி.); length. 3. அளவிற் பெருமை; big in magnitude.

[ஆ → ஆய்[7] → ஆயத்தம் → ஆயதம்.]

ஆயதி āyadi, பெ. (n.) 1. பொருந்துகை; connection, fitting. 2. வருங்காலம்; future. 3. நீளம்; length. 4. பெருமை,மேம்பாடு;dignity.(செ. அக.).5. அடைதல்; reaching. 6. சந்திப்பு; junction, meeting. 7. மனவடக்கம்; politeness. (தா.சொ. அக.). 8. மனைவி; wife.

[ஆயத்தி → ஆயதி.]

ஆயத்துக்குள்ளே மாயம் āyattu–k–kullē–māyam, பெ. (n.) சிறுவாணிகத்தில் கிடைத்த சிறு ஊதியம் (கதி. அக.); small gain in a small trade.

[ஆயம் + அத்து + கு + உள்ளே + மாயம்.]

ஆயம் = வருவாய்.

ஆயந்தி āyandi, பெ. (n.) தமையன் மனைவி (இ.வ.); elder brother's wife (Loc.).

[ஒருகா. ஐயன் + தேவி → ஐயந்தேவி → ஆயந்தேவி → ஆயந்தி.]

ஆயந்தீர்–த்தல் āyan–tīr–, 4 செ.கு.வி. (v.t.) வரி செலுத்துதல்; to pay toll or duty (R.).

[ஆயம் + தீர்.]

ஆயப்பாலை[1] āya–p–pālai, பெ. (n.) (இசை). நால் வகைப் பாலையுள் ஒன்று; one of the four modes of the ancient Tamil music. அது 'ஆயஞ் சதுரந் திரிகோணம் வட்டமெனப் – பாய நான்கும் பாலையாகும் என்பதனாற் பெறப்படும்' (சிலப். 17, ஆய்ச்சியர். எடுத்துக்காட்டு – உரை, பக். 4052).

[ஆயம் + பாலை (ஆயம் = செவ்வகம்).]

ஆயப்பாலை[2] āya–p–pālai, பெ. (n.) கொடிப்பாலை; green wax–flower. (சா.அக.).

[ஆயம் + பாலை.]

ஆயப்பொருத்தம் āya–p–poruttam, பெ. (n.) மனைப் பொருத்தங்களுள் ஒரமைப்பு; one of the points of suitability in designing a house according to traditional practice.

[ஆயம் + பொருத்தம்.]

மனையின் நீள அகலங்களைப் பெருக்கி வந்த குழியை எட்டால் வகுக்க மீதி எண் ஆயமாகும். எட்டால் வகுக்க மீதி இல்லை எனில் மிகுதி எட்டு என்று கொண்டு பலன்காண வேண்டும். கருட ஆயம், புறா ஆயம், சிங்க ஆயம், சுவான ஆயம், சுப ஆயம், காக்கை ஆயம், யானை ஆயம், கழுதை ஆயம் என எட்டாகும். இவற்றில் 1,3,5 நன்றாம். (மனைநூல்.) ஆயம் பார்க்க. see āyam.

ஆயம்[1] āyam, பெ. (n.) 1. நீளம் ; length. (அக.நி.). 2. மக்கள் தொகுதி, கூட்டம்; crowd of people. "ஆயமெல்லாமது சொல்லிப் போக" (நீலகேசி, 2); "வெற்பராயமோடி" (பெரியபு. கண்ண.77). 3. தோழி, தோழியர் கூட்டம்; female attendants of a lady. "சூழுடை யாயத்தை நீக்கும் விதி" (திருக்கோ.7). 4. மாட்டுமந்தை; herd of cows. (சிலப்.17.உரைப்பாட்டுமடை.5).

ம. ஆய; **க.** ஆய்; **து.** ஆயு; **குட.** ஆய்; **பர்.** ஆர்ச்; **கோண்.** ஆகாணா; **கூ.** ஆச்சு; **குவி.** ஆத; **மா.** ஆதெ; **குருக்.** ஆத; **மா.** ஆதெ.

[ஆ → ஆயம். ஆ = முன்செலற் கருத்துவேர், முன்செலல், கூடுதல், திரளுதல் பொருளில், இச்சொல் புடைபெயரும்.]

ஆயம்[2] āyam, பெ. (n.) 1. 34 விரல் (அங்குலம்) ஆழமுள்ள குழி (சர்வா. சிற். பக். 21); pit 34" deep, standard of measurement. 2. மந்தணம் (இரகசியம்); secret. "உன்னாலல்லது அவ்வாயம் வெளிப் பட்டிருக்குமோ" (குருபரம். 126). 3. உடம்பின் மருமமான பகுதி; most delicate part of the body. பறவையை ஆயம் பார்த்து அடித்தான் (உ.வ.).

ம. ஆயம்; **க. து** ஆய; **தெ.** ஆயமு.

[ஒருகா. ஆழம் → ஆயம்.]

ஆயம் 3 āyam, பெ. (n.) 1. பொன்; gold. (திவ். பெருமாள்,6,4,வியா.);2.தேட்டம்,தேடியசெல்வம்; money earned. (த.சொ.அக.).

க. ஆய.

[ஆயம் = கூடுதல், திரளுதல், திரட்டிய செல்வம், பொன்.]

ஆயம் 4 āyam, பெ. (n.) 1. வருவாய்; income, revenue. "பொருளாயம் போஒய்ப் புறமே படும்" (குறள். 933). 2. ஊதியம் (த.சொ.அக.) (இலாபம்); gain, profit. 3. வரவு; income, receipt.

ம. ஆயம்; **க.** ஆய; **தெ.** ஆயமு. Skt. āya; **மரா.** ஆய.

[ஆய் → ஆயம். ஆய்தல் = சேர்த்தல், திரட்டல், வரிவாங்குதல், தண்டுதல். ஆயம் = தண்டிய பணம்.]

ஆயம் 5 āyam, பெ. (n.) வருத்தம்; distress, suffering, affliction. "ஆயமின்றிப்போ யண்டமாள் வதற்கு" (தேவா. 648,7).

[ஆய் → ஆயம். ஆய்தல் = நுணுகுதல், சிறுத்தல், குறைபடல், துன்புறல்.]

ஆயம் 6 āyam, பெ. (n.) 1. குடியிறை (பிங்.). சுங்கம்; tax, toll. "இந்நேரமென்றிலை யுடற் சுமைய தாகவு மெடுத்தாலிறக்க வென்றே யெங்கெங்கு மொரு தீர்வை யாய முண்டாயினும்" (தாயு. சுகவாரி.5). 2. கடத்தக்கூலி; transport charge. 3. தாய ஆட்டக்காய்; தாய எண் அல்லது பணையம்; chessman, dice, wager. 'உருளாயம் ஓவாது கூறிற் பொருளாயம் போஒய்ப் புறமே படும்" (குறள்.933) ஆயத்திற்கஞ்சி ஆற்றில் நீந்தினது போல் (பழ.).

[தாயம் – ஆயம். வ. ஆய. (இ.வ.).]

ஆயம் 7 āyam, பெ. (n.) தாய்; mother.

ம. ஆயம்; **மரா.** ஆய.

[ஒருகா. ஐயை → ஆய் → ஆயம். ஐயன் (ஆ.பா.) →-ஐயை (பெ.பா.) ஐயன் = தந்தை. (கொங். வ.).]

ஆயம் 8 āyam. பெ. (n.) 1. சூதுகருவி; dice. 2. சூதாட்டம், கவறு; gambling. "அடையாவா மாயங் கொளின்" (குறள். 939). 3. கவற்றிற்றாயம்; cast of dice in a game. (கலித். 136, 5).

ம. ஆயம்.

[ஆயம் = கூட்டம், தொகுதி, கூடியிருந்து ஆடும் ஆட்டம்.]

ஆயம் 9 āyam, பெ. (n.) அகலத்தினும் மிகவும் அதிகமான நீளம்; oblong.

க. ஆய.

[ஆ → முன்செலற்கருத்து வேர், ஆ → ஆயம் (நீளுதல்).]

ஆயம் 10 āyam, பெ. (n.)1. மல்லரி (பம்பை மேளம்) (கதி.அக.); a kind of drum. 2. மேகம்; cloud.

[ஆய்தல் = நுணுகுதல், நுணுகி ஒலித்தல். ஆயம் = இன்னியம், மேகம்.]

ஆயம் 11 āyam, பெ. (n.) 1.வழக்கமாக ஆண்டுதோறும் மாதந்தோறும் நாடோறும் அரசனுக்குரியவாக வரும்பொன், ஆநிரை, நெல், குதிரை முதலிய வரவு (சுக்கிரநீ.); routine income of a king, in the form of cattle, gold, horses, paddy etc. (அபி.சிந்.). 2. சிற்றூர் பணியாளர்க்குத் தரப்படும் தவசம்; food grains given to the village servants after harvest.

ம. ஆயம்; **க., து.** ஆய; **தெ.** ஆயமு;

[ஆய் + அம்.]

ஆயம் 12 āyam, பெ. (n.) வழக்கம் (கதி.அக.); custom, habit. 2. முறை; order. 3. ஒழுங்கு; regularity. 4. விளத்தம் (விவரம்); details, particulars.

க. ஆய; **தெ.** ஆயமு.

[ஐ = அழகு, ஐ → ஆய் → ஆயம் = அழகு, ஒழுங்கு, முறை, வழக்கம்.]

ஆயம் 13 āyam, பெ. (n.) உதயத்துக்குப் பதினோரா மிடமாகிய ஓரை, ஊதியம் பெருகுதற்கடை யாளமாகிய இடம்; 11th asterism of the Zodiac.

ம. ஆயம்

[ஆய் + அம்.]

உதயந் தனமுடனே பிறப் பொண்டோ ழமைமகவு
சிதையும் பகை பெண்டிர் தேய்வுறுஞ்சாவு செழும்
புண்ணிய
மிதமொன் றியகன்ம மாயம் வியமெனு மாறிரண்டும்
விதமொன்றிய வோரைப் பேரெனச் சான்றோர் விதித்தனரே

(விதான.மரபி. 4).

ஆயம் 14 āyam, பெ. (n.) வில்லின் நாண்; bow–string.

[ஆயம் = நீட்சி, நீளமான நாண்.]

ஆயம் 15 āyam, பெ. (n.) 1. பயன்; benefit. 2. பேறு; boon. "முனியாயமாய தமிழ்" (மருதூரந். 79). 3. அமர்த்தம்; appointment.

க. ஆய

[ஆகு → ஆகம் → ஆவம் → ஆயம்.]

ஆயம் 16 āyam, பெ. (n.) 1. கடமை (இ.வ.); duty, obligation (Loc.). அவனாயத்தை அவன் கழித்து விட்டான் (உ.வ.). 2. முயற்சி; preservance. 3. வலிமை, திறமை, ஆற்றல்; power, talent, strength.

க. ஆய

[ஆ → ஆய் = வலிமை, வலிமையொடு செய்யும் தொழில் திறன்.]

ஆயம் 17 āyam, பெ. (n.) வெண்மை; white.

[ஆ – ஆயம்.]

ஆயம் 18 āyam, பெ. (n.) வகுக்கப்பட்ட எண்ணின் மீதி; remainder after dividing a number.

[அழியம் = ஆயம். அழியம் = எஞ்சியது.]

ஆயமலர் āyamalar, பெ. (n.) தாமரை; lotus. (சா.அக.).

[ஆய் = வெண்மை. ஆயமலர் = வெண்டாமரை.]

ஆயமானம் āyamāṉam, பெ. (n.) 1. உயிர்நிலை; vital part. 2. மந்தணம் (இரகசியம்); secret.

[ஆயம் → ஆயமானம்.]

ஆயமேரை āyamērai, பெ. (n.) சிற்றூர்ப் பணி யாளர்க்குத் தரும் தவசம்; portion of the crop assigned to the village servants, at harvest time (R.T).

[ஆயம் + மேரை.]

ஆயர் āyar, பெ. (n.) இடையர்; people of cow herd caste. "ஆயர் வேட்டுவ ராடூஉ த்திணைப்பெயர்" (தொல். பொருள். அகத். 23).

ம. ஆயர்.

[ஆயம் → ஆயர்.]

ஆயர்குலம் āyar–kulam, பெ. (n.) இடையர்குலம்; cowherd caste.

ஆயர்பாடி āyar–pāḍi, பெ. (n.) இடையரூர்; village of the cowherds. "ஆநிரை புரக்கு மாயர்பாடியி லொளித்து வைகும்" (கூர்மபு. கண்ணனவ. 17).

ம. ஆயன்பாடி.

[ஆயர் + பாடி.]

ஆயர்பிரான் āyar–piraṉ, பெ. (n.) கண்ணன்; Lord Krisna.

[ஆயர் + (பெருமான்) பிரான்.]

ஆயல் 1 āyal, பெ. (n.) 1. ஆராய்தல்; reaserch, examination, scrutiny. "ஆயோதனத்துக்குருநீர்மைகளாயற்றார்" (பாரத. வெளிப்பா. 30). 2. நுண்மை; minuteness. 3. தெரிதல்; knowing, learning. 4. தெளிதல்; clea-ring, comprehension. 5. ஊழ்கத்திலிருத்தல் (தியானித்தல்); being in meditation.

[ஆய் → ஆயல்.]

ஆயல் 2 āyal, பெ. (n.) 1. பறித்தல்; plucking, cutting, collecting. 2. களைந்துவிடுதல்; removal, taking away, 3. தெரிந்தெடுத்தல்; selection.

[ஆய் → ஆயல்.]

ஆயலோட்டல் āya–lōṭṭal, தொ.பெ. (vbl.n.) பயிர் விளைந்த நிலத்தில் மகளிர் பறவைகளை வெருட்டுதல்; scaring away birds from the crops, by women shouting.

[ஒருகா. 'ஆயோ' என ஒலியெழுப்பிப் பறவை களை விரட்டுதலால் வந்த வினையாகலாம். ஆயோ + ஓட்டல் – ஆயலோட்டல்.]

ஆயவன் 1 āyavaṉ, பெ. (n.) 1. அவன்; he, that man. "நெற்றி நாட்டத்தாலாயவன் சுடருதவியோர்" மதலையாயமாவானேயினான்' (கந்தபு. துணைவர். 2.). 2. அத்தகையவன்; such a one; 'ஆயவனோர் பகல்' (கம்பரா. திருவவ. 1).

ம. ஆயவன்; **தெ.** ஆயன.

[ஆ (சேய்மைச்சுட்டு) + அவன் – ஆயவன்.]

ஆயவன் 2 āyavaṉ, பெ. (n.) வலுவுள்ளவன்; strong man.

ம. ஆயவன்

[ஆய + அவன் – ஆயவன்.]

ஆயவியயம் āya–viyayam, பெ. (n.) **ஆயச்செலவு** பார்க்க; see āya–c–celavu.

[ஆயம் + Skt. viyayam.]

ஆயன் āyaṉ, பெ. (n.) இடையன்; cow keeper of the cowherd caste, herdsman. 2. கண்ணன்; name of Krishna, as a herdsman – ninth incarnation of Visnu.

[ஆ → ஆயன். 'அன்' ஆண்பாலீறு. ஆ = மாடு (பசு).]

ஆயா 1 āya, பெ. (n.) காஞ்சிமரம். இலைகளடர்ந்து பெரிதாக வளரும் இம்மரத்தின் இலைகளை வதக்கிக் கட்டிக்கு வைத்துக் கட்டுவர். இதன் வித்தினின்று எண்ணெய் எடுக்கப்படும்; Holop-telea integigrifolia alias Elums integrifolia. It is a large tree with dense dark green foliage. Crushed leaves are applied to boils and an oil is extracted from the seeds.

[ஆய் → ஆயா.]

ஆயா 2. āya பெ. (n.) பாட்டி; grand mother. 2. செவிலி (கொ. வ.); nurse, lady's chamber maid (Colloq.).

ம. ஆய; **க.** ஆயி (அம்மா); **கொலா.** அய், ஆய்; **பிரா.** ஆய் (அம்மா) Port. aia.

Hind. āya (waiting woman maid) **Beng.** ayi, ayi; **sind,** āyi, **Mar.** āgi

[ஆயாள் → ஆயா. ஆயா என்பது விளிவடிவம் இது இன்று உலகவழக்கில் வழுவமைதி பெற்று எழுவாயாக வழங்கிவருகிறது என்பதும் ஏலாது. ஆயாள் என்னும் எழுவாய் கொச்சைவழக்கில் ஈறு குறைந்து நிற்றலின் 'ஆயா' எழுவாயேயாம்.]

ஆயாள் பார்க்க; see āyāl.

ஆயாசம்[1] āyāšam, பெ. (n.) 1. களைப்பு; fatigue, weariness. எனக்கு ஆயாசமாயிருக்கிறது (உ.வ.). 2. மனவருத்தம் (கொ.வ.); mental worry. நான் சொன்னது உனக்கு ஆயாசமாயிருக்கிறதா? 3. துயரம்; distress. அந்தச் செயல் ஆயாசம் மிக அதிகம் (உ.வ.) 4. இளைப்பு; emaciation.

Skt. a–yasa. **ம.** ஆயாசம்.

[அயா → ஆயா → ஆயாசம். அயா = களைப்பு, வருத்தம், துன்பம். ***அயாயம்*** *பார்க்க;* see ayāyam.]

ஆயாசம்[2] āyāšam, பெ. (n.) முயற்சி (த.சொ.அக.); effort, exertion, earnestness.

[அயா → ஆயா → ஆயாசம். ***அயாயம்*** *பார்க்க.* see ayāyam *வருத்தத்தைக் குறிக்கும் 'அயா' விளின்று வருத்திச் செய்யும் உழைப்பாகிய முயற்சியும் 'ஆயாசம்' எனப் பட்டது.]*

ஆயாதி āyādi, பெ. (n.) மரவேலை அல்லது கட்டட வேலையில் அளவமைத்துத் திட்டமிடுதல்; planning the work in carpentry or building construction.

[ஆயம் + ஆதி.]

ஆயாநெல் āyānel, பெ. (n.) தூற்றாத நெல்; unsifted paddy. (W.).

[ஆயாத + நெல்.]

ஆயாள் āyāḷ, பெ. (n.) 1. தாய்; mother. 2. பாட்டி; grand mother. 3. முதியவள், மூதாட்டி; old woman. 4. செவிலித்தாய்; foster mother, nurse.

Sind. āyal

[ஆய் → ஆயாள். ஐயை → ஆய் → ஆயாள். ஐயன் = தந்தை (கொங். வ.) ஐயை = தாய்.]

ஆயான் āyāṉ, பெ. (n.) 1. ஆகியிருப்பவன்; one who has become. 2. தமையன் (தஞ்.); elder brother (Tj.). 3. மூத்தவன்; elderly person. 4. தந்தை (இ.வ.); father (Loc.). 5. கார் காத்த வேளாள வகுப்பினன் (நெல்லை); member of the Kār Kātta Veḷḷāla Community (Tn.).

[1. ஆகியவன் → ஆகியான் → ஆயான். 2, 3, 4. ஆ → ஆய் → ஆயான். ஆ = முன்செலற் கருத்துவேர். முன்னவன், பெரியோன், மூத்தவன்.]

ஆயி[1] āyi, பெ. (n.) 1. தாய்; mother. 2. ஒரு மறத் தெய்வம் (சத்தி, காளி.); goddess. "கவுரி குண்டலி யாயி பண்ணவி தனருளினாலே" (தாயி. சித்தர் கண.4). 3. மாரியம்மன் தெய்வம்; Goddess Mariyamman. 'ஆயிமகமாயி' (உ.வ.). 4. மகளிரைக் குறிக்கும் மதிப்புரவுச் சொல்லீறு; a term of respect, affixed to a woman's name. சின்னாயி, பொன்னாயி (உ.வ.).

ம. க. ஆயி.

[ஆய் → ஆயி. 'இ' பெ. பா. ஈறு.]

ஆயி[2] āyi, பெ. (n.) **ஆயா**[1] பார்க்க; see āya[1]

ஆயிட்டு āyiṭṭu, இடை, (conj.) ஆகையால்; therefore. "அத்துவித மென்ற சொல்லே அந்நிய நாத்தியை யுணர்த்து மாயிட்டு" (சி.போ. 2, 1 வார்த்திக.). 'ஆயிட்டு இவளை வேண்டா என்றன்றோ கொடுபுக்கதென்கிறாள்' (ஈடு. 6, 5, 3).

[ஆயிடலால் → ஆயிட்டு. ***ஆயிடலால்*** *பார்க்க;* see āyidalāl.]

ஆயிடல் āyiḍal, பெ. (n.) 1. தோன்றுதல், ஆகுதல் (த.சொ.அக.); becoming, happening, growth.

[ஆய் + இடு + அல்.]

ஆயிடலால் āyidalāl, இடை. (conj.) ஆகையால்; therefore. "இனி மழைபெய்து குளம் நிறைந்த தென் புழிப் போல ஆயிடலாலென்பது ஆயிட்டெனத் திரிந்த தென்றலு மொன்று' (த.சொ.அக.).

[ஆய் + இடு + அல் + ஆல்.]

ஆயிடை āyiḍai, பெ. (n.) அவ்விடம்; that place. "இனியாயிடை வந்திடும் அரசர் செய்கையும்" (கந்தபு. தெய்வ. 1©2) (சூ.வ.357). – கு.வி.எ. (adv..) 1. அக்காலத்து; at that time. (சீவக.219). 2. அவ்வளவில்; during that time. "ஆயிடை ஆரஞர் உற்றனகண்" (குறள் – 1179).

ம. ஆயிட; **படீ.** ஆயொடெ.

[ஆ + இடை. ஆ – சேய்மைச்சுட்டு. இடை → இடம், காலம்.]

ஆயிரக்கதிரன் āyira–k–kadiraṉ, பெ. (n.) கதிரவன், சூரியன்; sun.

[ஆயிரம் + கதிரவன்.]

ஆயிரக்காலி āyira–k–kāli, பெ. (n.) 1. மரவட்டை (வின்.); millepede, **Myriopoda** (W.). 2. துடைப்பம்; brcom. 3. செவ்வட்டை; a red variety of Myriapod. (சா.அக).



ம. ஆயிரக்காலன்

[ஆயிரம் + காலி.]

ஆயிரக்கான்மண்டபம் āyira–k–kān–mandabam, பெ. (n.) ஆயிரந் தூண்களுள்ள கோயில்மண்டபம்; hall of 1000 pillars, a distnctive feature in large South Indian temples.

ம. ஆயிரக்கால் மண்டபம்.

[ஆயிரம் + கால் + மண்டபம்.]

ஆயிரக்கிரணன் āyira-k-kiraṉaṉ, பெ. (n.) **ஆயிரக்கதிரன்** பார்க்க; see āyira-k-kadiraṉ.

[ஆயிரம் + **Skt.** Krana.*]*

ஆயிரக்குண்டலி āyira-k-kuṇḍali, பெ. (n.) செவ்வட்டை; woodlouse. (சா.அக.).

[ஆயிரம் + குண்டலி.]

ஆயிரங்கச்சி āyiraṅ–kacci, பெ. (n.) அடுக்கிளநீர்; a variety of cocount. (சா.அக.).

[ஆயிரம் + (காய்ச்சி) கச்சி .]

ஆயிரங்கண்ணன் āriraṅ–kaṇṇaṉ, பெ. (n.) தொன்மக் (புராண) கதையின் வண்ணம் ஆயிரம் கண்ணு டையவனாகக் கருதப்பட்ட இந்திரன்; Indra, represented as having 1000 eyes.

ம. ஆயிரக்கண்ணன்.

[ஆயிரம் + கண்ணன்.]

ஆயிரங்கண்ணி āyiraṉ–kaṇṇi, பெ. (n.) பலாப்பழம்; jack fruit. (சா.அக.).

[ஆயிரம் + கண்ணி. கள் → கண் → கண்ணி. கள் = முள்திரட்சி.]

ஆயிரங்கண்ணுப்பானை āyiraṅ–kaṇṇu-p-pāṉai, பெ. (n.) திருமணத்தின் போது அரசாணிக்காலருகில் வைக்கப்படும் வண்ணப்பானை (நெல்லை); painted.pot, used by certain castes, in marriages (Tn.).

[ஆயிரம் + கண்(ணு) = பானை.]

ஆயிரங்கண்ணோன் āyiraṅ–kaṇṇōṉ, பெ. (n.) **ஆயிரங் கண்ணன்** பார்க்க; see āyiraṅ–kannaṉ.

[ஆயிரம் + கண்ணோன். கண்ணான் → கண் ணோன்.]

ஆயிரங்கதிரவன் āriraṅ–kadiravaṉ, பெ. (n.) பகலவன், சூரியன்; sun.

[ஆயிரம் + கதிரவன்.]

ஆயிரங்கதிரோன் āyiraṅ–kadirōṉ, பெ. (n.) கதிரவன்; sun. "மதியொடு திகழ் மீனாயிரங் கதிரோன்வரக் கரந்தவா றதுபோல்" (கந்தபு. மூன்றா. 109).

[ஆயிரம் + கதிரோன். கதிரவன் → கதிரோன்.]

ஆயிரங்கதிரவன் பார்க்க; see **ayiaṅkadiravaṉ.**

ஆயிரங்காய்ச்சி[1] āyiraṅ–kāycci, uQ. (n.) 1. மிகுதியாகக் காய்க்கும் தென்னை, பலா, மா போன்ற மரவகை (செ.அக.); very productive tree esp. coconut, jack or mango. 2. மிக அதிகமாகக் காய்க்கின்ற ஒரு குறிப்பிட்ட தென்னை வகை; a cocount tree. "வயிற்றுவலியுந் தொலையும் ஆயிரங்காய்ச் சிக்கறி" (பதார்த்த. 70).

[ஆயிரம் + காய்ச்சி. காய்ச்சி = காய்க்கின்ற மரம்.]

ஆயிரங்காய்ச்சி[2] āyyiraṅ-kāycci, uQ.. (n.) துடைப்பம் (செ. அக.). broom.

[ஒருகா. ஆயிரங்காற்சடை → ஆயிரங்காய்ச்சி.]

ஆயிரங்கால் தூண்டில் āyiraṅgāl–tūṇḍil, uQ. (n.) பல முள் பிணைத்த தூண்டில் அல்லது தூண்டிற்கயிறு; fishing tackle which has many hooks. (நெல்லை. மீன.).

[ஆயிரம் + கால் + தூண்டில் .]

ஆயிரங்கால் தூண்டில் வள்ளம் āyiraṅgāl–tuṇḍil–vaḷḷam uQ. (n.) ஆயிரங்கால் தூண்டில் மரக்கலம்; boat fastened with many hooked fishing tackle.

[ஆயிரம் + கால் + தூண்டில் + வள்ளம்.]

ஆயிரங்காற்சடை āyiraṅgāṟ–caḍai, பெ. (n.) துடைப்பம்; (இ.வ.) broom (Loc.).

ஆயிரங்கிரணன் āyiraṅ–kiraṉaṉ, பெ. (n.) **ஆயிரங் கதிரவன்** பார்க்க; see āyiraṇkadiraṉ

[ஆயிரம் + **Skt.** Krana.]

ஆயிரஞ்சோதி āyiraṅ–jōdi, பெ. (n.) கதிரவன்; சூரியன்; sun.

[ஆயிரம் + **Skt.** joti.]

ஆயிரத்தளி āyira–t–tali, பெ. (n.) கங்கை கொண்ட சோழபுரம், திருச்சி மாவட்டத்திலுள்ள பழைய ஊர். Gangai koṇda choḻa puram. ancient town in the Tiruchi District "ஆயிரந்தளி கூடின விடம் ஆயிரத்தளி" (வீரசோ. தொகைப். 3).

[ஆயிரம் + தளி(தளி = சிவலிங்கம்).]

ஆயிரத்தாண்டு சிட்டம் yirattāṇḍu–ciṭṭam, பெ. (n-) ஆயிரமாண்டுகளான இரும்புச்சிட்டம்; thousand years old hydrated oxide of iron.

[ஆயிரம் + அத்து + ஆண்டு + சிட்டம்.]

ஆயிரநாமன் āyira–nāmaṉ, பெ. (n.) **ஆயிரப்பெயரன்** பார்க்க; see āyira–p–peyaraṉ "ஆயிர நாமத் தண்ண லனையவன்வன்மை காணா" (கந்தபு. நகரழி.11).

[ஆயிரம் + Skt. nama + அன் (ஆ.பா.ஈறு.]

ஆயிரப்பணாமுடி āyira-p-panā-mudi, பெ. (n.) துத்த நாகமலை; mountain containing zinc ore.

[ஒருகா. ஆயிரம் + பணா (பணம்) +முடி. பணம் → படம், படமெடுக்கும் பாம்பு, நாகம் என்னும் பாம்புப் பெயரிலுள்ள மாழை (உலோகம்).]

ஆயிரப் பெயரன் āyira-p-peyaran, பெ. (n.) சிவன்; திருமால்; Śiva, Vishnu.

[ஆயிரம் + பெயரன்.]

ஆயிரம் āyiram, பெ. (n.) 1. பத்து நூறுகளைக் கொண்ட து (1000) என்னும் எண்; the number 1000. "ஆயிரம் வருவழி உகரங் கெடுமே" (தொல். எழுத். 391). 2. இவ்வளவு என்று கணக்கிடப்படாத எண்ணிக் கை; numerous. 3. பல; many.

ம. ஆயிரம்; **க., பட.** சாவிர; **தெ.** வெய்யி, வேயி. **து.** சார. சாவிர; **கோத.** சாவ்ரம்; **துட.** சொபொ்; **குட.** ஆய்ரெ, ஆயிர.

Skt. Sahasra, Sahasram; H.pers. hazar.

[அயிர் → அயிரம் → ஆயிரம். அயிர் = நுண்மணல்.]

வடமொழியில் ஆயிரத்தைக் குறிக்கும் Sahasra என்னுஞ் சொல்லுக்கு 'Sahas' –(strength, power, victory, light)– என்பவை மூலமாகலாம் என்று மானியர் வில்லியம்சு கூறுகிறார். சொல்லின் பொருளுக்கும் காட்டும் மூலத்திற்கும் எவ்விதத் தொடர்பும் காணப்படவில்லை. தமிழில் 'ஆயிரம்' என்னும்எண்ணுப்பெயருக்கு, எண்ணிக்கைமிகுதியையுணர்த்த நுண்மணலைக் குறிக்கும் "அயிர்" என்னுஞ் சொல் மூலமாக அமைந்திருப்பது மிகவும் பொருத்தமாகவுள்ளது. பத்தின் பத்தாகிய நூறு (100) என்னும் எண்ணுப்பெயர் பொடியாதல், தூளாதல்என்று பொருள்தரும் "நூறு" (நூறுதல் = தூளாக்குதல், அரைத்துப் பொடியாக்குதல்) என்னும் வினைமுதலிலிருந்து பொருட்பாடு பெற்றிருத்தலை ஒப்பு நோக்குக. இன்றும் தெலுங்கில் நூறுதல் அரைத்தல் எனப் பொருள்படுகிறது. வெள்ளமும் ஊழிப் பெருக்கும் பேரெண்களுக்குப் பெயரா யிருத்தலைக் காணலாம்.

ஆயிரம்பரிக்கோற் சேவக சோழன் āyiram pari-k-korc – śervaga cholan, பெ. (n.) சுந்தரேச பாத சேகர பாண்டியனுடன் போரிட்டு மடுவிலிறந்த சோழன்; a Cola king who died in a deep lake after having fought with the Pāndiya King, Sundareśa-padaśegara Pāndiyan. (அபி. சிந்.).

[ஆயிரம் + பரி + கோல் + சேவகர் + சோழன். பரிக்கோற்சேவகர் பார்க்க; **see parik-korsevakar.]**

ஆயிரம்பெயரோன் āyiram-peyarōn, பெ. (n.) திருமால் (பிங்.); Visnu, as having 1000 names.

[ஆயிரம் + பெயர் + (ஆன்) ஓன்.]

ஆயிரமுகத்தோன் āyiramugattōn, பெ. (n.) வீரபத்திரன் (பிங்.); Virabhadra, represented as having 1000 faces.

[ஆயிரம் + முகம் + அத்து + (ஆன்) ஓன்]

ஆயிரவருடமண்டூரம் āyira-varuda-mandūram, பெ. (n.) ஆயிரம் ஆண்டுகளான இரும்புச்சிட்டம்; thousand years old hydrated oxide of iron (சா.அக.).

[ஆயிரம் + வருடம் + மண்டூரம். **Skt.** Varsa. **த.** *வருடம்.]*

ஆயிரத்தாண்டு சிட்டம் பார்க்க; See **ayirathāndu-cit-tam.**

ஆயிரவாகு āyiravāgu, பெ (n.) முருகனின் படைத் தலைவர்களுள் ஒருவன்; one of the commanders in the army of God Muruga. (அணி. சிந்.).

[ஆயிரம் + வாகு.]

ஆயிரவாண்டு வேம்பு āyiravāndu-vēmbu, பெ. (n.) 1000 ஆண்டுகள் சென்ற வேப்பமரம்; margosa tree of 1000 years old. (சா.அக.)

[ஆயிரம் + ஆண்டு + வேம்பு.]

இதன் பட்டை இனிக்கும் என்று கூறப்படுகிறது..

ஆயிரவாரத்தாழியன் āyiravāra-t-(u)āliyan, பெ. (n.) உயர்வும் சிறப்பும் உணர்த்தும் ஆயிரம் ஆரக் கதிர்களைக் கொண்ட சக்கரம் போன்ற பாதவரை (ரேகை) களை யுடைய புத்தபெருமான்; Buddha, in the sole of whose foot there was a disc with 1000 lines, a sign of extraordinary greatness in a man. "ஆயிர வாரத் தாழியன்" (மணிமே. 5,104).

[ஆயிரம் + ஆரம் + அத்து (சாரியை) + ஆழி + அன்.] **Skt.** Sahasrāra chakra rēka.

ஆயிரவேலி āyiravēli, பெ. (n.) 1. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் அதியமான் என் னும் சிற்றரசனைப் பொருது வென்ற இடம்; battle field where Talaiyālankānattu-c-ceru-venra Nedunceliyan defeated the chieftain Adiyamān. ஆயிரவேலி அயிரூர் 2. பாரதப் போரில் 14-ஆம் நாள் அருச்சுனனால் இறந்தவன்; name of a warrior killed by Arjuna on the 14th day of Bhāratha war. (அபி.சிந்.).

[ஆயிரம் +வேலி.]

ஆயில்[1] āyil, பெ.. (n.) **கவ்வை நாண் மீன் பார்க்க; see Kavvai-nān-mīn.** "நிறைகொள் கவ்வைபணி யாயில்" (உள். உடை.16) (த.சொ.அக.).

[ஆய்[4] → ஆயில்.]

ஆயில்[2] āyil, பெ. (n.) 1. மதகளி வேம்பு; Chittagong ood, 1.tr., Chickrassia tabularis. "கருங்காலி யாயில் மருதும்" (சைவச. பொது.27). 2. செவ்வகில்; red cedar or Indian mahogany. 3. காஞ்சி; jungle cork-tree (சா.அக). 4. அசோகு (நாமதீப.); Asōka tree. 5. ஆயிற்பட்டை; bark of the ayii tree. (தைல.104).

ம ஆயல், ஆயில்

[ஒருகா. ஆ → ஆய் → ஆயில். ஆ = முன்னூக்கல், நீட்சி, உயரம். ஆயில் = உயரமான மரவகை.]

ஆயில் [3] āyil பெ (n.) இரும்பு ; iron.

ம. அயிர்; க அதிரு; து. அதீர்

[ஆய் [10] → ஆயில்.]

ஆயிலி āyili, பெ. (n.) தாயிலி; motherless.

[ஆய் + இலி : ஆய் → தாய். இல்லி → இலி = இல்லாதவன், இல்லாதவள்.]

ஆயிலியம் [1] āyiliyam, பெ.. (n.) நாகமரம்; common black plum.

[ஆயில் → ஆயிலியம்.]

ஆயிலியம் [2] āyiliyam, பெ. (n.) இருபத்தேழு நாண்மீன்களுள் ஒன்பதாம் நாண்மீன்; ninth nakṣatra கவ்வை ; "மாசிலாயிலி யத்திற் காமமுண்டாம்" (கூர்மபு.19-வது சிராத்தமு. 5).

ம. ஆயில்யம்; பிரா. ஆசிலிய; skt. āstesa

[ஆயில் + இயம்.]

ஆயிலியமரம் āyiliyamaram, பெ. (n.) நாகமரம் ; common black plum, jambolin (சா.அக.).

ஆயிலியன் āyiliyan, பெ. (n.) கவ்வை (ஆயிலிய) நாண்மீனன்று பிறந்தவன்; one who was born on āyiliyam nakshatra.

[ஆயிலியம் → ஆயிலியன்.]

பிறந்த நாண்மீனும் ஒரையும் கருத்திற்கொண்டு குழந்தைக்குப் பெயரிடுதல் பழந்தமிழர் வழக்கம். ஆவூர் மூலங்கிழார், ஆதிரையான், நல்வெள்ளியார், வெள்ளிவீதியார் என்னும் பெயர்களை நோக்குக.

ஆயிழை [1] āyilai, பெ. (n.) 1. தெரிந்தெடுத்த அணிகலன்; selected or the choicest ornament. 2. ஆராய்ந்த அணிகலன்களையுடைய பெண்; woman, lady, damsel, literally one adorned with choice ornaments. "அம்பல மடைந்தன ளாயிழை" (மணிமே. பதி. 67).

ம. ஆயிழ

[ஆய் + இழை.]

ஆயிழை [2] āyilai, பெ. (n.) 1. அரிவாள் நுனி; sharp edge of a sickle. 2. கன்னி ஒரை (ராசி); virgo of the zodiac. "அலவன்றடி விடை யாயிழை விற்றுலை " (விதாந. பஞ்சா. 14).

[ஆய் + இழை. ஆய் = நுண்மை, கூர்மை, இழை = இழைத்துக் கூராக்கப்பட்ட அரிவாள் நுனி. அரிவாளைப்போன்று வளைந்த அல்லது ஒளிசிந்தும் கூர்மை தொடர்பாக இச்சொல் கன்னி ஒரையைக் குறித்திருக்கலாம்.]

ஆயிளை āyiḷai, பெ. (n.) கொடுவாள் தலை (கதி. அக.).; sharp edge or tip of cutting knife.

[ஒருகா. ஆயிழை → ஆயிளை. அரிவாள் அல்லது கொடுவாளின் உச்சி அலகு நுனியைக் குறித்த சொல் அதன் கூரிய தலைப் பகுதியைக் குறித்திருக்கலாம்.]

ஆயிளைப்புற்று āyiḷai-p-puṟṟu, பெ. (n.) அகன்ற கண்ணையுடையதாய் வடவடக்கை போன்று கறையான் மொய்த்திருக்கும் ஒருவகைப் புற்று; a kind of ant-hill which has big holes (மனைநூல்).

[ஆய் + இளை + புற்று.]

ஆயின் [1] āyiṉ, இடை. (conj.) 1. ஆனால்; but, if "விளக்கு மிருள்படுவ தாயின்" (பழமொ. கல்வி. 3). 2. ஆதலால்; therefore (பதிற்றுப்.).

ம. ஆயில்; பட. ஆலெ

[ஆகு + இன் → ஆகின் → ஆயின்.]

ஆயின் [2] āyiṉ, வி. எ. (adv.) ஆராய்ந்தால்; if examined, looked into, made research. (கதி. அக.).

[ஆய் + இன்.]

ஆயின்மேனி āyiṉmēṉi, பெ. (n.) 1. மரகதக்கல்லில் ஒருவகை (வின்.); a kind of emerald. 2. பச்சைநீலக்கல்; a sort of green sapphire, altogether different from occidental emerald. (சா. அக.).

[ஐ = அழகு, ஒளி. ஐ → ஐன் → அயின் → ஆயின் + மேனி. அழகானது என்பதை ஐனானது, அயினானது என்பது இன்றும் கொங்கு நாட்டுப் பேச்சு வழக்கு.]

ஆயினி āyiṉi, பெ. (n.) 1. ஈரப்பலா; bread fruit tree.

ஆயினி - ஈரப்பலா

2. காட்டுப்பலா; jungle jack.

ம. ஆயினி.

[ஆய் = (ஈரம்) → ஆய் + ஆயினி.]

ஆயினிமேற் புல்லுருவி āyiṉimēṟ-pulluruvi, பெ. (n.) ஈரப்பலாவின் மேல் முளைத்திருக்கும் புல்லுருவி; parasite plant found grown on bread-fruit tree. (சா. அக.).

[ஆயினி + மேல் + புல் + உருவி.]

ஆயினிமேனி āyiṉi-mēṉi, பெ. (n.) **ஆயின்மேனி** பார்க்க; see āyiṉ-mēṉi.

[ஆயின் → ஆயினி + மேனி.]

ஆயு āyu, பெ. (n.) 1. வாழ்நாள், ஆயுள்; lifetime, natural span of life. "ஆயுவழியு மதிக மிலிங்கமெனின்" (சைவச. பொது. 109). 2. சமண நூலின்படி, வினைப்பயனுக்கேற்ப (கர்மானுசாரத்தின்படி) வரையறுக்கப்பட்ட, எண்வகைக் குற்றங்களுள் ஒன்று; (Jain.) duration of period considered as a flow, as determined by karma (சா.அக.). 3. ஆயுமான் என்னும் நித்திய ஓகம் (யோகம்); yoga known as ayuman. (குமாரசுவா. திநாதி 4). 4. சந்திர மரபில் புரூரவா என்னும் அரசன் மகனாகிய ஓரரசன்; king, son of Pururava of the moon dynasty. "ஆயுவென் றொரு செம்மலை யம்மக னளித்தான்"' (பாரத. குரு.13).

க. ஆயு

[ஆய் → ஆயுள் → ஆயு (கடைக்குறை). ஆய் = வலிமை, ஆற்றல், உயிர், வாழ்நாள்.]

வடமொழியில் 'ay' (to go) என்னும் வேரினின்றும் வாழ்நாளைக் குறிக்கும் ā'yus' என்னும் சொல் தோன்றிய தாகக் கூறப்பட்டுள்ளது. மேலையாரிய மொழிகளில் இச்சொல் மிகுதியாகப் பயிலப்படாமையானும், இந்திய மொழிகள் பல வற்றுள்ளும் பயிலப்படுதலானும், வடநாட்டின்கண் வாழ்ந்த வடதமிழர் வழக்கில் பெருகி வளர்ந்த சொல்லாகத் தெரிதலானும், 'ஆய்' என்னும் தமிழ் வேரினின்றே திரிந்த வடபுலத்தமிழ்ச் சொல்லாகவே கொள்ளத்தகும்.

ஆயுட்கோள் āyutkōl, பெ. (n.) பிறப்பாளனின் (சாதகனின்) வாணாளை வரையறுப்பவனாகக் கருதப்படும் காரி (சனி)க் கடவுள் (நாம்தீப.); saturn said to determine the length of a man's life.

[ஆயுள் + கோள். கோள் = கோளம் (கிரகம்).]

ஆயுட்பொருத்தம் āyut-poruttam, பெ. (n.) மணப்பொருத் தங்களுள் ஒன்று. அது, பெண்ணின் நாண்மீன் முதல் ஆணின் நண்மீன் வரை எண்ணின தொகையையும், ஆணின் நாண்மீன் முதல் பெண்ணின் நாண்மீன் வரை எண்ணின தொகையையும், தனித்த 7 ஏழிற் பெருக்கி இருபத்தேழுக் கீந்த எச்சம். பெண்ணின் நாளிலீ தொகை குறையின் ஆயுட்பொருத்தம் பொருந்தும் எனக் கொள்வர். astrological match – making with reference to life's duration of the bride and the bridegroom as assessed from their horoscopes.

[ஆயுள் + பொருத்தம்.]

ஆயுதசாலை āyuda-šālai, பெ. (n.) **ஆய்தசாலை** பார்க்க. see āyda-sālai.

[ஆயுதம் + சாலை.]

ஆயுதசிகிச்சை āyuda-šigiccai, பெ. (n.) **ஆய்த பண்டுவம்** பார்க்க; see ayda-panduvam.

ஆயுத நஞ்சு āyuda-nañju, பெ. (n.) **ஆய்தநஞ்சு** பார்க்க see āyda-ñanju.

[ஆயுதம் + நஞ்சு.]

ஆயுத நோட்டம் āyuda-nōṭṭam, பெ. (n.) (சா. அக.) **ஆய்த நோட்டம்** பார்க்க, see āyda-noṭṭam.

[ஆய்தம் → ஆ ,தம் + நோட்டம்.]

ஆயுதப் பயன்படுத்தம் āyuda-p-payaṉ-paḍuttam, (சா.அக.) **ஆய்தப்பயன்படுத்தம்** பார்க்க; see āyda-p-payaṉ-paḍu-t-tam.

[ஆயுதம் + பயன் + படுத்தம்.]

ஆயுத பயிற்சி āyuda-payiṟci, பெ. (n.) **ஆய்தப் பயிற்சி** பார்க்க; see āyda-p-payiṟci.

ம ஆயுதசிக்ழ

ஆயுத பரிட்சை āyuda-pariṭcal, பெ. (n.) **ஆய்த நோட்டம்** பார்க்க; See āyda noṭṭam.

ஆயுத பாணி āyuda-pāṇi, பெ. (n.) **ஆய்தபாணி பார்க்க**, see āyda-pāṇi

ஆயுத பூசை āyuda-pūšai, பெ. (n.) **ஆய்தபூசை பார்க்க**; see āydapūšai

ஆயுதம்[1] āyudam, பெ. (n.) **ஆய்தம்**[2] பார்க்க; see āydam[2]

ஆயுதம்[2] āyudam, பெ. (n.) வேலமரம்; tree of the acacia genus – Acacia arabica. (சா.அக.).

[ஆய் = வலிமை. ஆய் → ஆயுதம்.]

ஆயுதம்[3] āyudam, பெ. (n.) கூத்துப் பயிலிடம் (த.சொ.அக.); learning centre for dance and drama.

[ஆய்தம் → ஆயுதம். ஆய்தல் = நுணுகுதற் பொருளோடு அழகுப் பொருளும் தருதலின் கூத்துக்கு ஆயிற்று.]

ஆயுள்[1] āyuḷ, பெ. (n.) வாழ்நாள்; life time, duration of life, term of life.

ம. ஆயுர்தாயம்; **க.** ஆயு, ஆயுரவதி; **தெ.** ஆயுவு,; **து** ஆயுர்தாம்

[ஆய் + உள். ஆய் = வலிமை. உள் = ஒரு இடப்பெயரீறு. ஆயுள் = வலிமையோடு வாழும் கால எல்லை. ஒ.நோ. பையுள்.]

வடமொழியாளர் āyu, āyus, என்னும் வாணாளைக் குறிக்கும் சொல் ay – (to go) என்னும் சொல்லி லிருந்து பிறந்ததாகக் கூறுவர். மேலையாரிய மொழிகளில் இச்சொற்குத் தம்வேர்வழி இனச்சொற்களின்மையானும், ந்திய மொழிகளில் மட்டும் காணப்படுதலானும் பை → பையுள் என்றாற்போன்று, ஆய் → ஆயுள் என்னும் தமிழ்ச் சொல்லினின்றே வடமொழி āyus திரிந்ததாகல் வேண்டும்.

ஆயுள்[2] āyuḷ, வி. எ. (adv.) அப்பொழுது; then, at that time. "சொன்ன வாயுளே" (சீவக.415).

ஆயுள்[3] āyuḷ, பெ. (n.) நோய் தீர்ப்போன்; one who cures diseases. (கதி.அக.).

[ஆயுள்வேதன் → ஆயுள் (ஈற்றுச்சொற்குறை).]

ஆயுள்[4] āyuḷ, பெ. (n.) ஆ (பசு) வாகிய உயிரிருந்து வாழும் உடம்பு; referring to the body, the abode of the soul.(சா.அக.).

[ஆ (பசுவாகிய உயிர்) + உள். உள் = உள்ளிருந்து வாழ்வதற்கு இடமாகியது. உடம்பு.]

ஆயுள் ஒழுங்கு (ஆயுள்கிரமம்) āyuḷ–oḻuṅgu, பெ. (n.) ஊதை (வாத) பித்த சில்மத்தைக் கருதி வாழ் நாளைப் பிரித்த முறைமை; order in which the age is classified according to the three humours (Doshas) in the system.

[ஆயுள் + ஒழுங்கு **Skt.** *krama – த. கிரமம்.]*

ஊதை பித்த சில்மம் மூன்றும், உடம்பில் வாணாள் முழுதும் நிற்கும் முறைமையை மருத்துவ நூலார் பின்கண்டவாறு வகைப்படுத்துவர்.

தானவனும் அமைத்தபடி வயதுநூறு
சகலருக்கும் இளமையிலே சிலேத்துமமாகும்
ஆனநடு வயது பித்தம் அப்பால் வாதம்
ஆறஞ்சி மூவாண்டு மாதம் நான்கு
ஈனமற மூவருமே மூன்று பங்காய்
இப்படியே நடந்துகொள்வர் முறையோன் முன்னாள்
ஏனமுற அமைத்த வண்ணம் ஆண்டு மாதம்
இயைவான நாள்கள் தப்பி மறிப்பதாமே

(வைத்திய.சதகம்.).

ஆயுள் கிண்ணி āyuḷ–kiṉṉi, பெ. (n.) 16 பலம் நிறையுள்ள செம்புக் கிண்ணியில் ஆவின் (பசுவின்) நெய்விட்டு அதனுள் தோன்றும் மாந்தனுடைய நிழலைக் கொண்டு ஆயுளைக் கணக்கிட்டு வரையறுக்கும் ஒரு ஏனம்; basin specially made of 16 palams of copper and used for determining the age of a particular person by examining his reflection in the cow's ghee contained in that vessal. (சா.அக.).

[ஆயுள் + கிண்ணி.]

ஆயுள்நூல் āyuḷ–nūl, பெ. (n.) 1. உயிரிருந்து வாழும் உடம்பு என்னும் பொருள் கொண்டு அவ்வுடம்பைக் காப்பாற்றி உயிரை நிலைபெறச் செய்யும் மருந்துகளைக் கூறுகின்ற நூல்; that branch of science dealing with medicines as are useful for the preservation of life. 2. வாழ்நாளைப்பற்றிக் கூறும் நூல்; treatise on age, the duration of life and death of human beings. (சா.அக.). ஆயுள்மறை பார்க்க; see ayul–maṟai.

[ஆயுள் + நூல்.]

ஆயுள் பெருக்கம் āyuḷ–perukkam, பெ. (n.) வாணாள் நீடித்தல்; ஆயுள் நீட்டிப்பு; prolongation of life, longevity.

[ஆயுள் + பெருக்கம்.]

ஆயுள் மறை āyuḷ–maṟai, பெ. (n.) மருத்துவநூல் ; book on medicine. "ஆயுமறை வானவர் மகாரும்" (பாரத வெளிப்பாட்டுச். 3) (சா.அக.).

[ஆயுள் + மறை.]

ஆயுள் வேதம் āyuḷ–vēdam, பெ. (n.) 1. வடநாட்டில் வளர்ந்ததும், ஆயுர்வேதம் எனப் பெயர் பெற்றதுமான இந்திய மருத்துவமுறை; Indian medicine system developed in North India and known as Āyurvēda. "வைத்தவாயுள் வேதந் தனுர்வேதம்" (நல்.பாரத. அரசநீதி. 216). 2. நான்முகன் வழியாகப் பலர்க்கும் கற்பிக்கப் பட்டதாகத் தொன்ம (புராண)க் கதை வழங்கும் வடமொழி இந்திய மருத்துவ நூல்; inspired Sanskrit medical work. The authorship of the Āyurvēda is ascribed to Brahma who is said to have imparted this knowledge to Daksha, one of the progenitors of mankind. It consists of several parts, such as, physiology, pathology, Materia Medica, Pharmacy etc. From the writings of Charaka and Susruta and their commentators, it is learnt that the Āyurvēda originally consisted of 100 sections, each a 1000 stanzas making up a lakh's (1,00,000) of verses arranged into 8 books viz –

1. **சல்லியம்** – art of extracting extraneous substances forced into the human frame.
2. **சாலாக்கியம்** – art of curing external organic affections, such as, diseases of the ears, eyes, etc.
3. **காயா மருத்துவம் (சிகிச்சை)** – art of application of healing to body in general.
4. **பூதமருத்துவம் (வைத்தியம்)** – art of restoration of faculties from a deranged state, due to demonaical possession.
5. **கௌமார பிரித்தியம்** – care of infants and treatment of puerperal disorders in mothers and nurses.
6. **அகதம்** – art of administering antidotes to poisons.
7. **இதளியம் (இரசாயனம்)** – chemistry or alchemy.
8. **மாந்த இனப் பெருக்கம் (வாஜீகரணம்)** – increase of the human race.

All the recent medical works on Ayurveda are based on the works of Charaka and Susruta. Susruta re–arranged

d local diseases (சா.அக.). "ஆயுள் வேத ௱டையாரும் இவை கால்களாக நடக்கும் என்பது ்றிப்பாதம்என்றும்" (குறள்.950.பரிமே.உரை.).

ம. ஆயுர்வேதம்; க. ஆயுர்வேத; தெ. ஆயுர்வேதமு. Skt. /urvēda.

[ஆயுள் + வேதம். வேதம் =நூல்.] ***ஆயுள் நூல்*** *பார்க்க;* see **āyuḷ–nūl.**

இந்திய நாடு முழுதும் பரவிய பண்டைக்கால மூலிகைப் பச்சிலை மருத்துவம் ஒன்றே யெனினும் வடபுலத்தில் இம்மருத்துவ முறை ஆயுள்வேதம் அல்லது ஆயுர்வேதம் என்று பெயர் பெறுவதாயிற்று. வேதம் என்னும் சொல் இங்கு நூல் என்றே பொருள் தரும். இஃதறியாதார் இதனை ஆரிய நான்மறையோடு சார்த்தி, இருக்கு அதருவண மறைகளில் இம்முறை முதன்முதல் கூறப்பட்டது என்று ஒரு சாராரும், அஃதன்று, ஆயுள்வேதமே ஐந்தாம் வேதமாகக் கொள்ளத்தக்கது என்றும், பலபடப் பன்னியும் பின்னியும் உன்னித்துரைப் பாராயினர், இது குறித்து வடமொழி அகரமுதலி பின்வருமாறு கூறுகிறது.:

"the more modern Atharvavēda – (Samhitā), on the other hand, is, like the Rig vēda, a real collection of original hymns mixed up with incantations, borrowing little from the Rig, having no direct relation to mere ritual or sacrifices. But supposed by mere recitation to produce long life, to cure disease (generally in connection with the use of some plant or drug gifted with magical properties) to obtain success in love or gambling, to effect the ruin of enemies etc. (M.S.E.D.).

ஆயுள்வேதம் ஆரிய நான்மறைகளொடு சிறிதும் தொடர் பற்றது. கந்தருவ வேதம் தனுர்வேதம் ஆயுர்வேதம் ஆகியவை துணைநூல்கள் (உபவேதம்) என்றே பல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. மருத்துவக் கலைக்குத் தெய்வத்தன்மை சேர்ப்பதற்காக வடமொழி வேதங்களொடு சாத்தியுரைக்க வேண்டுவதில்லை.

ஆயுள் என்ற சொல்லே மருத்துவனைக் குறித்து வழங்கி வந்துள்ளது. ஆயுள்வேதம் என்பது மருத்துவனின் கையேடு அல்லது அடிப்படை நூல் என்னும் பொருளில் உருப்பெற்று நாளடைவில் மருத்துவநூல் என வழக்குப் பெற்றுள்ளது. வாழ்நாளை மிகுவிக்கின்ற நூல் என்பது அச்சொற்குச் சுமத்தப்பட்ட பொருள். ஆயுள்நூல் = உள்ளபடி உடலின் உட்பகுதிகளை ஆயும் நூல். ஆயுள்வேதம் வாழ்நாளை மிகுவிக்கும் மருந்துகளைப் பற்றிக் கூறுவதாயின், அது தமிழர்களின் காயகற்பமூலிகை மருத்துவமாகிய சித்த மருத்துவ மன்றி வடநாட்டு மருத்துவமாகாது. ஆயுள்வேத மருத்துவத்தில் அனைத்து நோய்களுக்கும் மருந்து ஆயப்படுதலின் வாழ்நாளை நீட்டித்தற்கேயுரிய தனி மருத்துவ முறையன்று. வாழ்நாளை நீட்டிப்பதாயின் நூறாண்டுகளுக்கு மேலும் வாழ்தற்கேற்ற முறைகளை மட்டும் கூறி ஆற்றுப்படுத்தும் நூலாதல் வேண்டும். அல்லாக்கால் அதற்கு அப்பெயர் பொருந்தாது.

ஆயுள்வேத மருத்துவத்தின் முன்னோராகக் கூறப்படும் சாரகரும் சுசுருகரு ம் கி.பி.முதலிரு நூற்றாண்டினர். அவர்கள் காலத்தில் இம் மருத்துவம் வடமொழியில் எழுதப்பட்டதேயொழிய அவர்களால் கண்டுபிடிக்கப் பட்டதன்று.

இந்தியா முழுவதும் பரவிய தமிழ்ச் சித்தமருத்துவமே வடபுலத்தில் ஆயுள்வேதம் என்று பெயர்பெற்றது. ஆயுள் வேதத்தின் தாயாகிய தமிழ் மருத்துவம் பல்லாயிர ஆண்டு களுக்கு முன்பு இம்மண்ணில் தோன்றி வளர்ந்த பெருமையுடையது. ஆயுள்வேத மருத்துவ முறையிலுள்ள சொல்லாட்சிகளும் மூலிகைப் பெயர்களும் தமிழ் வேர்ச் சொற்களிலிருந்து தோன்றி யனவாயிருப்பது இக்கருத்துக்கு அரண்செய்வதாகும்.

ஆயுள்வேதர் āyuḷ–vēdar, பெ. (n.) மருத்துவ நூலோர்; those who are skilled in āyurvēda system of medicine. "ஆயுள் வேதரும் காலக்கணி தரும்" (சிலப்.544).

ம. ஆயுர் வேதிகன்; க ஆயுர்வேதி.

[ஆயுள் + வேதர்.]

ஆயெறும்பு āy–erumbu, பெ. (n.) ஒருவகை எறும்பு (நெல்லை.); a kind of ant (Tn.).

[ஆய் + எறும்பு]

ஆயோ āyō, இடை (int.) குறிஞ்சி நில மகளிர், பறவை களை விரட்டும்போது எழுப்பும் ஒசை (திவ். இயற். திருவிருத். 10); exclamatory expression intended to frighten away birds from nibbling of the ripe corn and used by the women folk of the hilly tracks who usually guard millet fields.

[ஆ + ஒ – ஆவோ → ஆயோ. ஆகார ஒகாரங்கள் ஒலிக் குறிப்பு]

ஆர்[1]–தல் ār–, 2. செ.கு.வி. (v.i.) 1. நிறைதல்; to become full. "ஆரப்பருக" (திவ்.திருவாய். 10,10,5). 2. பரவுதல்; to spread over. "போதாரி வண்டெலாம்" (திணைமாலை. 95, உரை). 3. மனநிறைவாதல்; to be satisfied. "ஆராவமுதாம்" (திவ். திருவாய். 2, 5, 5). 4. பொருந்துதல்; to combine with, belong to. "சீரார் செழும்பந்து" (திவ்.இயற்.சிறியதி. 11, கண்ணி). 5. தங்குதல் (திவா.); to abide by, stay. – 2. செ.குன்றாவி (v.t) 6. உண்ணுதல்; to eat, to drink. "அமலைக் கொழுஞ்சோ றார்ந்த பாணர்க்கு" (புறநா. 34, 14). 7. நுகர்தல்; to experience. "ஆர் வுற்றார் நெஞ்சமழிய" (கலித். 42, 13). 8. ஒத்தல்; to resemble. "மணியார் கண்டத் தெம்பெருமான்" (பெரியபு. திருநா. 314). 9. அணிதல் (பிங்.); to wear, put on. 10. பெறுதல்; to get, obtain. "ஆர்கினற தின்றோ ரலரே" (கந்தபு. தேவரையே.11).

ம. ஆர்; **க.** ஆர், ஆரு; **தெ.** ஆரு; **து.** ஆருனி ; **கூ.** சார்.

[ஆல் → ஆர். ஆலுதல் = நிறைதல், ஆர்தல் = நிறைதல். நிறைதல் பொருளிலிருந்து தங்கற் பொருளும், வயிறு நிறைதலாகிய உண்ணுதற் பொருளும், நுகர்தற்பொருளும் தோன்றும்.]

ஆர்[2]–தல் ār–, 2. செ.கு.வி. (v.i.) 1. ஒலித்தல்; to shout, roar, bellow. "அலைகடற்றிரையி னார்த்தார்த் தோங்கி" (திருவாச.3,151).2.போர்புரிதல் (திவா.); to fight, make war. –, 4. செ.குன்றாவி (v.t.) 3. தட்டுதல்; to pat oneself. "மார்பார்த்தல்" (இன்னா.19). 4. உடைத்தல்; to break into two. 5. அலர்தூற்றல்; to slander, vilify. "முனியவந் தார்ப்பது போலும்" (கலித்.33,14).6.நெருக்குதல், கட்டுதல்; to bind, tie, gird. "பாம்பொன்றார்த்து" (தேவா.16,11). 7. பூணுதல் (திவா.); to put on, wear.

ம. ஆர்க்குக; **க.** ஆர், ஆர்ச்சு; **தெ.** ஆர்ச்சு; **து.** ஆர்குனி, ஆர்ப்புனி; **கோத.** ஆர்; **குட.** ஆர்; **கூ.** ஆர்; **பிரா.** ஆர்.

[ஆல் → ஆர். ஆலுதல் = ஒலித்தல், ஆர்த்தல் = ஒலித்தல்; ஓசைமிகப் பொருதல், தட்டுதல். ஊர் முழுதும் பேச்சொலி மிக அலர் தூற்றல். ஆலுதல் = சேர்த்தல், பொருத்தல், இணைத்தல். ஆல் → ஆர். ஆர்த்தல் = கட்டுதல், பூணுதல். அல் → ஆல் → ஆர். பொருந்துதல், மோதுதல், தாக்குதல், போர்புரிதல்.]

ஆர் [3] ār, இடை. (part) 1. பலர்பாற்படர்க்கை ஈறு; epicene pluralising pronominal suff. to verbs as in— வந்தார். 2. மதிப்புரவு குறித்த பன்மை ஈறு; 3rd pers. honorific pl. suff., as in— தகப்பனார். 3. எதிர்மறை யிடைநிலையின்றி வினைமுதலொடு நேரே யிணைந்து எதிர்மறைப் பொருளுணர்த்தும் பலர் பாலீறு; suff. to verbs. "கல்லார்நெஞ்சில் நில்லான் ஈசன்" (உ.வ.). 4. அஃறிணையொருமை உயர்வுப்பன்மையீறு; honorific suff of non–human singularnouns. "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" (திருமந்.) நரியார் வந்தார்.

ம. ஆர், அர், ஒர்; **க.** ஆரு , அரு, ஆரெ, ரி, ரு; **தெ.** ஆரு, அரு; **து.** எர். **கோண்.** ஒர்; **பிராகு.** ஏரெ, உரெ.

E. er. suff. used to form nouns denoting an agent, as in, hatter, ruler, teacher, –ME. ere, er. fr. OE.–ere, rel. to OS. eri, ON. ari, Dan., Du. –er, OHG. –ari, ari, –eri, MHG. –ere, G. –er. Goth. –areis, fr. OTeut. –ārjo–z, which derives fr. L. –arius (K.C.E.D.E.L.). E. or suff. denoting an agent or an instrument –– (1) ME. –or, –our, fr. OE. –eor, (F–eur) fr. L. –ōrem, acc. of –or, a suff. added to the pp. stem of verbs (cp.e.g. actor, author); (2) ME. –or, -our, fr. -eor, eur (F.eur) fr. L. -atorem, acc. of -ator (cp.e.g. donor, see –tor, -ator. Cp. the agential suff. -er. According to the general rule, -or is added to words of Latin -er to those of English origin – (K.C.E.D.E.L.).

[ஆர்தல் = பொருந்தல், சேர்தல், நிறைதல். நிறைவுப்பொருள். பெருமைப் பொருளில் ஆளப்பட்டு உயர்வுப்பன்மை பொருள் தரும். எ–டு: கண்ணனார்.]

ஆர்[4], ār, இடை. (int.) அசைநிலையாக வரும் ஓர் இடைச்சொல்; expletive particle. "பெயரினாகிய தொகையுமாருளவே" "எல்லாவுயிரொடுஞ் செல் லுமார் முதலே"

[ஒருகா. அரோ→ ஆரோ →ஆர்] அரோ பார்க்க; see arō.]

ஆர் [5] ār, பெ. (n.) 1. நிறைவு (பிங்.); fullness, completeness. "கொழுதிய லார்செய் குழன்மடவீர்" (வாணன்.7). 2.நிலம்; earth. "திருவாரணங்கு' மணமகன்" (மறைசை.1.). 3. கூர்மை; sharpness, pointedness. "ஆரெயிறழுந்தினர்" (சிலப்.5,124). 4. அழகு (ஆ.நி); beauty. 5. மலரின் பொருத்து வாய்; calyx. "பூ....ஆர் கழல்பு " (குறுந்.329).

ம. ஆர், ஆர; **க.** ஆர்; **து.** அருனி; **கூ.** சார்.

[ஆர்தல் = பொருந்தல், நிறைதல், தங்குதல், நிறைதல், பொருளிலிருந்து அழகுப்பொருளும், தங்குதல் பொருளிலிருந்து 'நிலம்' பொருளும், பொருந்துதற் பொருளிலிருந்து கூர்மைப்பொருளும் தோன்றும். ஒ.நோ: கூர் = பொருந்தல், கூர்மை.]

ஆர்[6] ār, இடை. (interrog.pron.) யார்; who. "நானாரென் னுள்ளமார்" (திருவாச. 10,2).

ம. ஆர்; **க.** ஆர், ஆரு; **தெ**. எவரு, ஏரு; **துட.** ஆர்; **குட.** ஆரி; **து.** ஏரு; **கொலா.** ஏர்; **பிரா.** ஏர். பட. தார

[யாவர் → யார் → ஆர்.]

ஆர் [7] ār, பெ. (n.) 1. ஆத்திமரம்; common mountain ebony. "ஆரும் வெதிரும்" (தொல்.எழுத். 363). 2. திருவாத்தி மரம்; holy mountain ebony. "தேங்கடி யாரர வார் சடையர்" (கம்பரந்.8).

ம. ஆர்; **க.** ஆரெ; **து.** ஆரெ.

[ஆர்த்தி → ஆத்தி. ஆர் = சேர்தல், பொருந்தல், நெருங்கல். ஒருகா. நெருங்கக் காய்க்கும் இயல்பு பற்றி இப்பெயர் பெறற்றிருக்கலாம்.]

ஆர் [8] ār, பெ. (n.) 1. ஆரக்கால்; spoke of a wheel. "ஆர்கெழு குறடுசூட் டாழிபோன்று" (சீவக.828). 2. அச்சுமரம்; axle. "வீணா தண்டெடன் னாரின்" (ஞானா. 7,15). 3.தேரினகத்திற் செறிகதிர் (பிங்.); அச்சுருவாணி; central bolt of a car. "ஆரழிந்தன உருவழிந்தன அச்சழிந்தன" (பாரத.முதற்.45). 4.

உருளையில் அச்சடையும் துளை; axle fixing hole in the wheel.

[ஆர் = சேர், பொருத்து. சேர்த்துப் பொருத்தும் பொருளில் ஆரக்கால், அச்சுமரம், தேரினகத்திற் செறிகதிர் ஆகியவை சொல் வடிவம் பெற்றன.]

ஆர்[9] ār, பெ. (n.) 1. செவ்வாய் (விதான. பதி. 13, உரை); planet Mars. 2. சுடரொளி (சோதி); brightness, flame. 3. வெல்லப்பாகு, சீனிப்பாகு (த.சொ.அக.); boiled jaggery or sugar.

[உர் → உல் → அல் → அர் = எரி நிறம். ஒருகா. சிவப்புப் பொருளில் செவ்வாய்க் கோளையும், சுடரொளியையும், சிவந்த வெல்லப்பாகினையும் சுட்டியிருக்கலாம்.]

ஆர்[10] ār, பெ. (n.) சரக்கொன்றை (மூ.அ.); Indian laburnum. **Skt.** āragvadha.

[ஒருகா. உல்→ அல்→ அர் → ஆர் = எரிதற்கருத்தில் தோன்றும் செந்நிறப் பொருளில் சரக்கொன்றையைக் குறித்திருக்கலாம்.]

ஆர்[11] ār, பெ.எ. (adj.) அருமையான, அரிய; rare. பெ. (n.) அருமை; rareness, fineness. "அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே" (சிலப். மனையற.75).

[ஆர் = நிறைதல், மிகுதல், மேலாதல், மேன்மை, கிட்டுதற்கருமை.]

ஆர்[12] ār, பெ. (n.) 1. அண்மை (அக.நி.); nearness, proximity.

ம. ஆர்.

[ஆர் = பொருந்தல், நெருங்கல், அண்மை.]

ஆர்[13] ār பெ. (n.) 1. சந்தனம்; sandal wood. 2. முத்து; pearl. 3. பச்சைக்கல்; emerald. 4. உலகம்; world.

[ஆர்[11] → ஆர்[13].]

ஆர்க்கங்கோடன் ārkkaṅ-kōḍaṉ, பெ. (n.) **கொல்லங் கோணக் கொடி (மு.அ.)** climbing shrub.

ஆர்க்கண்ணியன் ār-k-kaṇṇiyaṉ, பெ. (n.) சோழன், Chola king.

[ஆர் + கண்ணி + அன். ஆர் = ஆத்தி. கண்ணி = மாலை.]

ஆர்க்கப்பொடி செய்—தல் ārkka-p-poḍišey, 1. செ. கு.வி. (v.i.) ஒன்றோடொன்று கலக்கும்படி அரைத்தல்; to powder a medicine so that the ingredients are well mixed. (சா.அக.).

ஆர்க்கம்[1] ārkkam, பெ. (n.) ஊதியம் (இலாபம்) (யாழ்ப்.); profit (J.), benefit.

[ஆர் → ஆர்க்கம். ஆர்தல் = நுகர்தல், பயன் பெறுதல், பயனாக விளைந்த ஊதியம்.]

ஆர்க்கம்[2] ārkkam, பெ. (n.) 1. அரத்தம்; blood. 2. நீர்க் கடம்பு; water cadamba. (சா.அக.).

[அரத்தம் → அரகம் → ஆர்க்கம்.]

ஆர்க்கம்[3] ārkkam, பெ. (n.) 1. அகில்; eagle wood. 2. சந்தனம்; sandal (சா.அக.).

ஆர்க்கம்[4] ārkkam, பெ. (n.) பித்தளை; brass. (சா.அக.).

[ஆரகுடம் → ஆர்க்குடம் → ஆர்க்கம்.]

ஆர்க்கரம் ārkkaram, பெ. (n.) கப்பட்டி மரம்; tree with a milky juice (unidentified), (சா.அக.).

ஆர்க்காடு ārkkāḍu, பெ. (n.) 1. ஆர்மரங்களடங்கிய காடு; forest of Indian leburnum trees. 2. தமிழகத்தில் சில மாவட்டங்களில் பயிலும் ஊர்ப்பெயர்; name of town or village located in some of the districts of Tamilnadu.

[ஆர் + காடு = ஆர்க்காடு. ஆர் = ஆத்திமரம். ஆத்தி மரங்கள் நிறைந்த ஊர் ஆர்க்காடு எனப்பட்டது.]

ஆர்க்காடுகிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார் ārk –kāḍu –kiḻār –maganār –veḷḷai –k– kaṇṇattaṉār, பெ. (n.) கடைக்கழகப்புலவர் (அகம்.64); Sangam poet.

ஆர்க்கி ārkki, பெ. (n.) **ஆர்கதி** பார்க்க; see ārkadi.

ஆர்க்கிநார் ārkkinār, பெ. (n.) ஆர்க்கிமரப்பட்டை யிலிருந்து உரிக்கப்படும் நார். fibre from bark of the arkki tree. கூரைவேயும்போது கட்டுப்போடப் பயன்படும் ஆர்க்கி நார். (செங்.வழ).

[ஆர் → ஆர்க்கி.]

ஆர்க்கியம் ārkkiyam, பெ. (n.) காட்டுத்தேன்; honey obtained from the forest.

[ஆர் → ஆர்க்கியம்.]

ஆர்க்கு[1] ārkku, பெ. (n.) 1. ஒருவகை மீன்; a kind of fish. 2. ஒருவகைக் கிளிஞ்சல்; a species of shellfish of the cockle kind. (சா.அக.).

[ஆர் → ஆர்க்கு.]

ஆர்க்கு[2] ārkku, பெ. (n.) இலைக்காம்பு; stem of a leaf. (சாஅக.).

[ஒருகா. ஈர்க்கு → ஆர்க்கு.]

ஆர்க்கு[3] ārkku, பெ. (n.) 1. எருக்கு; sun–plant, (சா.அக.). "மேன்மதிலார்க்கிலைத்த மாலகிமத்த முதிர்சம்ப மாதுலங்கத் திரதமும்" (தைலவ.தைல.6). 2. எருக்கின் பட்டை; bark of sun–plant.

[ஒருகா. எருக்கு → ஏர்க்கு → ஆர்க்கு.]

ஆர்க்கை ārkkai, பெ. (n.) 1. கட்டு; bandage. 2. வாரணம்; shred of a palm–leaf. 3. துரும்பு; straw, splinter, sliver.

[ஆர் → ஆர்க்கை, ஆர்த்தல் = கட்டுதல், பிணைத்தல்.]

ஆர்கதம் ārgadam, பெ. (n.) **ஆருகதம்** பார்க்க; see āru-gadam.

ஆர்கதன் ārgadan, பெ. (n.) **ஆருகதன்** பார்க்க; see āru-gadan.

ஆர்கதி ārgadi, பெ. (n.) திப்பிலி; long pepper.

[ஆரகந்தி – ஆர்கதி.]

ஆரகந்தி பார்க்க; see āragandi.

ஆர்கலி[1] ārgali, பெ. (n.) 1. பெருமுழக்கம், பேரோசை; loud noise, roaring, bustle. "ஆர்கலியுலகத்து மக்கட்கெல்லாம்" (முதுமொழி.). 2. கடல்; sea. "ஆர்கலியுலகின்" (வேதாரணியபு. மேன்.32). 3. மழைவெள்ளம்; flood. "பொய்யா வானம் புதுப் பெயல் பொழிந்தென வார்கலி முனைஇய கொடுங்கோற் கோவலர்" (நெடுநல். 3).

[ஆர் + கலி. ஆர் = நிறைவு, மிகுதி. கலி = கலித்தல், ஒலித்தல், முழக்கமிடுதல்.]

ஆர்கலி[2] ārgali, பெ. (n.) திப்பிலி; long pepper.

[ஆரகந்தி → ஆர்கதி → ஆர்கலி.]

ஆரகந்தி பார்க்க; see āra-gandi.

ஆர்கலிவாரணம் ārgali-vāraṇam, பெ. (n.) ஐராவத யானை; elephant known as Iravadam, the vehicle of Indran.

[ஆர்கலி = கடல். வாரணம் = யானை. தொன்மக் கதையின்படி ஐராவத யானை கடலிற் தோன்றிய தாகக் கருதப்பட்டது.]

ஆர்கோதம் ārgōdam, பெ. (n.) சரக்கொன்றை; Indian laburnum. **Skt. āragvadha.**

ஆர்ச்சவம் ārccavam, பெ. (n.) 1. உண்மை; truth. 2. நேர்மை; honesty. 3. பகைவனையும், நண்பனையும் சமமாக எண்ணும் மனப்பாங்கு; mental balance, treating friend and foe alike. "செயிரில் சேய் மித்திர களத்திராதி யிடத்துந் தெவ்விடத்து மயர்விற் றன் னான்மாவிடத்துமமையச் சம பாவனை வைத்தல் வயிரமறு மார்ச்சவ மென்றே வகுப்பர்" (சூத.ஞான. 13:9).

[ஆர் → ஆர்த்தம் → ஆர்த்தவம் → ஆர்ச்சவம். ஆர்தல் = பொருந்தல், சரியாயிருத்தல். ஆர்த்தம் = பொருத்தம், உண்மை, நேர்மை. பொருந்த நோக்கும் மனப்பாங்கு.]

ஆர்ச்சனம்[1] ārccanam, பெ. (n.) 1. வருமானம்; (சம்பாதித்தல்) acquision, earning, savings. "சிவார்ச் சன மார்ச்சனமாகில்" (கோயிற்பு. வியாக். 4). 2. பாதுகாத்தல்; protection. 3. விருந்தோம்பல்; hospitality. **Skt. ārjana.**

[ஆர் → ஆர்த்து → ஆர்த்தனம் → ஆர்ச்சனம். ஆர் = பொருந்து, சேர். ஆர்ச்சனம் = சேரும் வருமானம், சேர இருந்து காக்கும் பாதுகாவல், அன்பால் நெருங்கும் விருந்தோம்பல்.]

ஆர்ச்சனம்[2] ārccanam, பெ. (n.) அருச்சித்தல், வழி பாடு, போற்றுதல், வணங்கி அருமைபாடுதல்; adoration, worship. "வருவது மார்ச்சனமே மருவியற மார்ச்சனமே" (விருத்தாசலபு. பாயி. 11).

Skt. arcana.

[ஆர் → ஆர்த்து → ஆர்த்தனம் → ஆர்ச்சனம் = அன்பால் நெருங்கி வழிபடும் போற்றிப் பாடல்.]

ஆர்ச்சி-த்தல் ārcci-, 4.செ. குன்றாவி (v.t.) ஈட்டுதல் (சம்பாதித்தல்); to earn, acquire. "பன்னருந் தனமார்ச்சித்து" (நல். பாரத. தரும சாத்திர. 13).

[ஆர் → ஆர்த்து → ஆர்த்தித்தல் → ஆர்ச்சித்தல்.]

ஆர்ச்சிதம் ārccidam, பெ. (n.) 1. திரட்டுதல், ஈட்டுதல், கையகப் படுத்தல், வருமானம், தேட்டம் (சம்பாத் தியம்) ; acquisition, earnings. 2. பாதுகாத்தல்; protection. 3. விருந்தோம்பல்; paying host.

Skt. ārjita

[ஆர்த்தல் = பொருத்தல், சேர்த்தல், திரட்டல், ஊட்டுதல் (உண்பித்தல்). ஆர்த்திதம் → ஆர்ச்சிதம்.]

ஆர்சா ārsā, பெ. (n.) **ஆர்த்தம்**[2] பார்க்க; see ārttam[2]

ஆர்த்தம்[1] ārttam, பெ. (n.) நிறைவு, நிறைதல்; becoming full, completion.

ஆர்த்தம்[2] ārttam, பெ. (n.) கட்டுதல்; binding, tying.

[ஆர் → ஆர்த்தம். இச்சொல் ஆர்த்தம் → ஆர்த்தா → ஆர்சா எனத்திரிந்து முகவை மாவட்டத்தில் கட்டடச்சாரத்தில் மரக்கொம்புகளைச் சேர்த்துக் கட்டும் கயிற்று முடிச்சு வகையைக் குறிக்கிறது.]

ஆர்த்தம்[3] ārttam, பெ. (n.) 1. கலக்கம்; unhappiness. 2. துன்பம்; distress, affliction. "ஆர்த்தமென்றெனை யாளுகந் தானை" (தேவா.157.4.).

Skt. ārta

[ஆர் → ஆர்த்தம், ஆர்த்தல் = கட்டுதல், பிணித்தல், நோயுறச் செயதல், ஒ.நோ. பிணி → பிணித்தல்.]

ஆர்த்தர்[1] ārttar, பெ. (n.)1. எளியவர்; poor people. 2. நோயுற்றார்; afflicted. "தில்லைப் பல்பூம்பொழிற் செப்பும் வஞ்சினமு மார்த்த ரங்கஞ் செய்யுமால்" (திருக்கோவை.187). 3. பெரியோர்; greatmen.

*[ஆர் → ஆர்த்தம் → ஆர்த்தர். **ஆர்த்தம்**[3] பார்க்க; see ārttam[3].]*

ஆர்த்தர்[2] ārttar, பெ. (n.) பெரியோர்; greatmen, wisemen. 2. முனிவர்; sages.

*[ஆர் → ஆர்த்தல் → ஆர்த்தர். ஆர்த்தல் = நிறைத்தல், நிறை பண்புடைய சான்றோர் . **ஆர்த்தம்**[1] பார்க்க. see ārttam[1].]*

ஆர்த்தல் ārttal, தொ.பெ. (vbl.n.) 1. அணிதல்; wearing, decorating. 2. ஊட்டல்; making one to eat. 3. ஒளித்தல்; hiding. 4. ஒளி வீசி மின்னுதல்; lightning. 5. பொருதல்; fighting. 6. பொருத்தல்; fixing. (கதி.அக.).

[ஆர் → ஆர்த்தல். ஆர்தல் = பொருந்தல், பொருத்துதல், ஒளித்தல், மோதுதல், மேகம் மோதி அதிர்ந்து விளக்கும் மின்னல், தாக்குதல், பொருதல்.]

ஆர்த்தார்கோன் arttār kon, பெ. (n.) ஆத்திமாலை யணிந்த சோழன் (திவா.); Cola king, who wore the characteristic ātti garland.

[ஆர் + தார் + கோன். ஆர் =ஆத்திப்பூ. தார் = மாலை. கோன் = அரசன்.]

ஆர்த்தி[1] ārtti, பெ. (n.) மனத்துன்பம், வேதனை; affliction, anguish, mental agony. "தீவினை யார்த்தி நீங்குதி" (கந்தபு.. கந்தவி.100). 2. அழிவு; destruction. 3. துன்பம்; suffering. "ஆர்த்தி யாவுநீ யகல" (கந்தபு. இந்திராணிமறு.18). 4. ஐந்து சத்திகளுள் ஒன்று; (phil.) one among five satti. "ஈசானி பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி என்னும் பஞ்ச சத்தி புறவுருவுடைத்தாய்" (சி.சி.1: 56. ஞானப்). 5. நட்டுவக்காலி ; big species of black scorpion–lobster mouthed legged, scorpion (சா.அக.).

[ஆர் → ஆர்த்தி. ஆர்த்தல் = நெருங்கல், தாக்கல், துன்பம் விளைத்தல், அழித்தல், அழிவுத் தெய்வம்.]

ஆர்த்தி[2] ārtti, பெ. (n.) 1. பட்டறிவு (அனுபவம்); experience. 2. ஆர்வம்; eagerness, enthusiasm. 3. விருப்பம்; desire. 4. வில்லின் நுனி, விற்குதை; end of a bow.

[ஆர் → ஆர்த்தி → ஆர்தல் = நுகர்தல், விரும்புதல், பொருந்துதல் பொருந்தும் வில்லின் நுனி.]

ஆர்த்திகை ārttigai பெ. (n.) துன்பம், pain, suffering. "ஆர்த்திகையுறாதவுள்ளத் தரிமுதல மரர் யாரும்" (கந்தபு.திருவவ. 114).

[ஆர்த்தி +கை.]

ஆர்த்து–தல் ārttu–, 5. செ.குன்றாவி (v.t.); 1. கொடுத்தல்; to give. "பெற்றவை பிறர்பிறர்க் கார்த்தி" (பொருந.174). 2.நிறைத்தல்; to fill up, to make full. 3. நிறைவேற்றுதல்; to fulfil, to execute, complete, finish, bring to an end.– பி.வி. (v.caus.). 1. ஊட்டுதல்; to feed. "கறவை கன்றார்த்தி" (மணிமே.12,9). 2. நிறைவித்தல்; to fill, complete. "வருநிதி பிறர்க் கார்த்து மாசாத்து வானென்பான்" (சிலப். 1, 33). 3. நுகர்வித்தல்; to cause, to experience. "நசையுநர்க் கார்த்து மிசைபேராள" (திருமுரு.270).

[ஆர் → ஆர்த்து.]

ஆர்த்துபம் ārttubam, பெ. (n.) 1. அரத்தைச்செடி; galangal. 2. பேரரத்தை; greater galangal.

[ஒருகா. அரத்தை → அரத்துவம் → ஆர்த்துபம்.]

ஆர்ப்பதம் ārppaam, பெ. (n.) 1. ஈரம்; wetness . 2. தழைவு; fertility. பச்சையாயிருத்தல், பசுமை; that which is green and fresh.

[ஆர் + பதம்.]

ஆர்ப்பரவம் ārpp(u)aravam, பெ. (n.) 1.ஆரவாரம், பேரோசை, இரைச்சல்; roar, shouting. "வார்கலை களார்ப்பரவஞ் செய்ய" (திருவாச.7,1). 2. போர் (அக.நி.); war. 3. அஞ்சத்தக்க ஓசை; frightening sound. "ஆர்ப்பரவத் தெங்கிருந்தாரும் வெருவ" (சேதுபு.தேவிபுர.24).

[ஆர்ப்பு+ அரவம்.]

ஆர்ப்பரித்தல் ārppari–, 4. செ.கு.வி. (v.i.) 1. ஆரவாரித்தல்; to shout, roar, resound. "மறைகளார்ப் பரிப்பும்" (மச்சபு. திரிபுரநிருமாணவ.14). 2. தொடங்குதல்; to begin. (கதி.அக.).

[ஆர்ப்பு + அரி.]

ஆர்ப்பரிப்பு ārpparippu, பெ. (n.) ஆரவாரிப்பு; roar, loudness, shout. "போற்று நான்முகமு மறைக ளார்ப்பரிப்பும்" (மச்சபு. திரிபுர நிருமாண.14).

[ஆர்ப்பு+ அரிப்பு]

ஆர்ப்பாட்டம் ārpp(u)–āṭṭam, பெ. (n.) 1. ஆடம்பரம், வெற்றாரவாரம், இடம்பம்; great show, boisterous behaviour, useless display, foppishness 2. ஆரவாரம், கூச்சல், இரைச்சல்; uproar, loud cry.

தெ. ஆர்பாடமு. **Skt.** ārabhata.

[ஆர்ப்பு+ ஆட்டம்.]

ஆர்ப்பாட்டம் என்னும் செந்தமிழ்ச் சொல்வடிவம் 'ஆர்ப்பாடம்' எனச் சென்னை அகரமுதலியிற் குறிக்கப் பட்டிருப்பது தவறு . இது தமிழிலும் திரவிட மொழிகளிலும் இன்றும் உலக வழக்குச் சொல்.

ஆர்ப்பு[1] ārppu, பெ. (n.) 1. பேரொலி; loud – tumultuous noise. " ஆர்ப்புக் கொண்டு கைவிசைத்தெறி மணிக்கல் வந்தணைய" (கந்தபு.நாட்டு.45). 2. போர் (பிங்.); battle. 3. சிரிப்பு (பிங்.); laughter. 4. மகிழ்ச்சி; joy, exultation. "புந்தி யார்ப்புறக் கண்டனன்... திருக்கோயில்" (குற்றா. தல. மந்தமா, 110).

தெ. ஆர்பு.

[ஆர் → ஆர்ப்பு. ஆர்த்தல் = மிக்கொலித்தல்.]

ஆர்ப்பு[2] ārppu, பெ. (n.) (இசை.) மாத்திரை கடந்த ஒத்தொலி (சுருதி), ஓங்கவிசைத்தல்; excessive pitch of a lute string. "இன்னிசை வழியதன்றி

யிசைத்தல் செம் பகையதாகும்,சொன்ன மாத்தி ரையி னோங்க விசைத்திடுஞ் சுருதி யார்ப்பே" (பஞ்சபாரதீயம், சிலப். வேனிற். 29).

[ஆர் → ஆர்ப்பு. ஆர்த்தல் = பிக்கொலித்தல்.]

ஓங்கவிசைத்தலாகிய 'ஆர்ப்பு' யாழின் நால்வகைக் குற்றங்களுள் ஒன்றாகும். இது மரக்குற்றத்தால் உண்டாவது என்று திருவிளையாடற்புராண உரைகாரர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆர்ப்பு [3] ārppu, பெ. (n.) 1. கட்டு, பிணைப்பு; band, fastening, ligature. "ஆர்ப்பரிய காயந்தன்னை" (சி.சி.4,94).

[ஆர் → ஆர்ப்பு. ஆர்த்தல்=சேர்த்தல், கட்டுதல்.]

ஆர்ப்பு [4] ārppu, பெ. (n.) 1. நுண்ணியது; minute thing. 2. முள்ளின் கூர்மையான பகுதி; sharp point of a thorn. 3. தைத்த முள்ளின் ஒடிந்த கூர் (யாழ்ப்.); piece of thorn broken off in one's flesh (J.).

[ஆர் → ஆர்ப்பு.]

ஆர்ப்பு [5] ārppu, பெ. (n.) மேற்பூச்சு,குற்றம்(திவ்.அக); defect.

ஆர்பதம் [1] ārpadam, பெ. (n.) உணவு; food. "நெல்லின் அம்பண வளவை விரிந்துறை போகிய வார்பத நல்குமென்ப " (பதிற்றுப்.66,9).

[ஆர் +பதம். ஆர்தல் = உண்ணுதல். பதம் = உணவு.]

ஆர் பதம் [2] ārpadam, பெ. (n.) நிழல் (அக.நி.); shade

[ஆர் + பதம்.]

ஆர் பதம் [3] ārpadam, பெ. (n.) வண்டு (பிங்.); small beetle.

[ஒருகா. அறுபதம் → ஆர்பதம்.]

ஆர் பதன் ārpadaṉ பெ. (n.) உணவு; food. "தேரிற் றந்தவர்க் கார்பதனல்கும் " (பதிற்றுப்.55).

[ஆர்பதம் → ஆர்பதன் (ஈற்றுப் போலி).]

ஆர் மதி [1] ārmadi, பெ. (n.) கடக ஓரை (ராசி); cancer in the Zodiac, house of the moon.

[ஆர் + மதி. ஆர்தல் =பொருந்தியிருத்தல், தங்குதல். மதி = நிலவு.]

ஆர்மை ārmai, பெ. (n.) 1. கூர்மை; sharpness. 2. மதில்; fort.

[ஆர் → ஆர்மை. ஆர்தல் = சேர்தல், சேரக் கூடுதல், கூர்மை, சேரக்கூடும் (வளைந்து ஒன்று கூடும்) மதில்.]

ஆர்வக்கோழிக்காரகம் ārva-k-kōḻi-k-kāragam, பெ. (n.) **ஆர்வக்கோளிக்காரகம்** பார்க்க; see ārva-kōḻi-k-kāragam.

ஆர்வக்கோளிக்காரகம் ārva-k-kōḻi-k-kāragam, பெ. (n.) கேளாது விருப்பாய்க் கொடுக்கப்பட்ட பொருளை விரும்பி ஏற்றற் பொருளில் நான்காம் வேற்று மையில் வரும் பெயர் (வீரசோ.உபகாரக.3); (dative case) accepting willingly some thing given unasked.

[ஆர்வம் + கோளி + காரகம். கொள் → கோள். இது கோளிக்காரகம் மூன்றனுள் ஒன்று. இச்சொல் திராவிட மொழிகளில் கோசுகர எனத் திரிந்தது.]

ஆர்வம் [1] ārvam, பெ. (n.) 1. அன்பு; love, affection. "ஆர்வ நெஞ்சமொடு" (தொல். பொ. 40). 2. விருப்பம்; desire. 3. ஆசை; liking. "வண்டார்வஞ் செய்து மதுவுண்டு" (நைடத. அன்ன. தூ. 65). 4. புணர்ச்சியைக் குறித்துண்டாகும் ஆசை; sexual desire. 5. பெறக்கருதிய பொருண்மேற் றோன்றின பற்றுள்ளம் (மதுரைக்.489); hankering. 6. பத்திமை (பக்தி); devotion. "அடியார்தமார்வத்தாற் கூறிய" (திவ். இயற். 1,35). 7. கடைப்படு கொடை ஏழனுள் ஒன்று; one of the seven kinds of donation. "ஆர்வமாவது அன்பு முதலியவற்றானளித்தல்" (த.சொ.அக.).

[ஆர் → ஆர்வம்.]

ஆர்வம் [2] ārvam, பெ. (n.) ஒலி (த.சொ.அக.); sound. "ஆர்வத் தோடி வயல்புகும்" (கந்தபு. ஆற்று. 35).

[ஆர் → ஆர்வம். ஆர்தல் = ஒலித்தல்.]

ஆர்வம் [3] ārvam, பெ. (n.) சீலை (த.சொ.அக.); saree.

[ஆர் → ஆர்வம். ஆர்த்தல் = கட்டுதல், உடுத்தல்.]

ஆர்வம் [4] ārvam, பெ. (n.) நிரயம் (நரகம்) ஏழனுள் ஒன்று (பிங்.); hell, one of the seven.

[ஆர் → ஆர்வம். ஆர்தல் = கட்டுதல், கட்டுப் பாட்டுக்குள்ளாக்கல்.]

ஆர்வமொழி ārva-moḻi, பெ. (n.) **ஆர்வமொழியணி** பார்க்க; see **ārva-moḻi-y-aṇi.**

ஆர்வமொழியணி ārvamoḻi-y-aṇi, பெ. (n.) (அணி.) உள்ளத்து நிகழும் ஆசையை மிகுதியாக வெளிப் படுத்தும் சொற்களாற் சொல்லும் ஒரு செய்யுள் அணிவகை; (Rhet.) impassioned language chosen to express one's intense love, figure of speech "ஆர்வமொழி மிகுப்ப தார்வ மொழியே" (தண்டி. 67).

[ஆர்வம் + மொழி + அணி. மொழிதல் = சொல்லுதல்.]

ஆர்வலர் ārvalar, பெ. (n.) அன்பர், ஈடுபாட்டாளர், lovers, fans, devotees.

[ஆர்வு → ஆர்வல் + அர்.]

ஆர்வலன் ārvalaṉ, பெ. (n.) 1. அன்புடையவன்; kind affectiionate person, lover. "ஆர்வலர் புன்கணீர்

பூசல் தரும்" (குறள். 71). 2. கணவன் (பிங்.); husband. 3. பரிசிலன்; one who seeks a present from a prince or patron. "இனிய செய்திநின் னார்வலர் முகத்தே" (புநா.12). 4. நண்பன்; friend.

[ஆர் → ஆர்வம் → ஆர்வலன். ஆர்வல் பார்க்க; see ārval.]

ஆர்வலித்தல் ārvali–, 4. செ.கு.வி. (v.i.) 1. அன்பு கூர்தல்; to love, to be extremely kind, affectionate. "சிந்தை யாரவார்வலித்து" (தேவா. 997, 5). 2. மிகவிரும்புதல்; regard with strong affection, to desire passionately.

[ஆர் →ஆர்வல் + இ = ஆர்வலி.]

ஆர்வு[1] ārvu, பெ. (n.) 1. நிறைவு; fullness, abundance. 2. உண்ணுகை, பருகுதல்; eating and drinking. 3. ஊட்டுகை; feeding. 4. ஆசை; desire. "ஆசினி கவினிய பலவி னார்வுற்று" (புறநா. 158,22), "ஆர்வுற்றார் நெஞ்சமழிய விடுவானோ" (கலி.42).

[ஆர் → ஆர்வு.]

ஆர்வு[2] ārvu, பெ. (n.) ஆராய்தல்; investigation, research, critical study.

[ஆர் → ஆர்வு]

ஆர்வை ārvai, பெ. (n.) கோரைப்பாய்; mat made of rushes (W.).

[ஒருகா. ஆர் → ஆர்வை = ஆர அல்லது நெருங்கப் பின்னிய கோரைப்பாய்.]

ஆர āra, வி.எ. (adv.) 1. நுகர; to enjoy, benefit. "நாடார நன்கிழிதரும்" (மதுரைக். 82). 2. மிக, நிறைய; fully, abundantly. "ஆரப்பருக" (திவ். திருவாய். 10, 10, 5). "வாயார வுண்ட பேர் வாழ்த்துவதும் நொந்தபேர் வைவதுவும்" (தாயு. சச்சி. 8). –, இடை. (part.) ஓர் உவமச்சொல்; term of comparison (தொல். பொருள். 286, உரை).

[ஆர் → ஆர. ஆர்தல் = நிறைதல், நிறைவின் அடிப்படையாகத் தோன்றும் அனைத்து வகை ஒற்றுமை, ஒற்றுமைபற்றி வந்த உவமைச்சொல்.]

ஆரஅமர āra-amara, வி.எ. (adv.) பொறுமையாக (கொங்.வ) having patience

[ஆர் → ஆர + அமர]

ஆரக்கம் ārakkam, பெ. (n.) 1. அகிற்கட்டை; eagle wood. 2. செஞ்சந்தனம்; red sanders–wood. 3. பித்தளை; brass.

[ஆர் → ஆரக்கம் (சிவந்தது).]

ஆரக்கம்பி āra-k-kambi, பெ. (n.) மிதிவண்டிச் சக்கரத்திலுள்ள கம்பி; cycle spokes.

[ஆரம் + கம்பி.]

ஆரக்கழுத்தி āra–k–kaḻutti, பெ. (n.) கழுத்தில்தீய கோடுள்ள (ரேகை) பெண்; woman who has inauspicious lines on her neck. "ஆரக் கழுத்தி அரண்மனைக் காகாது" (பழ.).

[ஆரம் + கழுத்தி. ஆரம் = ஆரம் போன்றுள்ள கோடுகள்.]

ஆரக்கால் āra–k–kāl, பெ. (n.) சக்கரத்தின் ஆரம்; spoke of a wheel.

ம. ஆரக்கால்

[ஆரம் + கால்.]

ஆரக்குவதம் ārakku-vadam, பெ. (n.) சரக்கொன்றை (பிங்.); Indian laburnum.

Skt. āragvada.

[ஒருகா. அரக்கு + வதம். அரக்குவதம் → ஆரக்குவதம். அரக்கு = சிவப்பு.]

மறுவ. ஆரகுவதம், ஆரகோதம், ஆரகோரம்.

ஆரகட்டம் āra-kaṭṭam, பெ. (n.) ஆழமான கிணறு; deep well.

[ஒருகா. ஆழகட்டம் → ஆரகட்டம். கட்டம் = கட்டுமானம் அமைந்த கிணறு.]

ஆரகம்[1] āragam, பெ. (n.) 1. அரத்தம், குருதி ; blood. 2. சந்தனம்; sandal wood.

[ஒருகா. அரக்கம் → ஆரகம் (சிவப்பு நிறமுள்ளது).]

ஆரகம்[2] āragam, பெ. (n.) 1. பிரிக்கும் எண்; dividing number. 2. கீழ்வாயெண்ணில் (பின்னத்தில்) கீழே எழுதப்படும் எண்; denominator of a fraction, divisor (pond.). **Skt.** hāraka.

[ஆர் → ஆரகம். ஆர் = மோது, தாக்கு, உடைத்துவிடு, பிரி, பகு, பகுக்கும் எண்.]

ஆரகன் āragaṉ, பெ. (n.) 1. அழிப்பவன்; destroyer. "ஆரகனதிகனென்னாது" (சிவதரு. சிவஞான யோ.31). 2. கள்ளன்; thief. 3. கொள்ளைக்காரன்; robber. 4. சூதாடுபவன்; gambler. 5. அணாப்பு வோன்; deceitful person, cheat.

ம ஆராச்சார்.

Skt. hāraka.

[ஒருகா. அரக்கன் → ஆரகன்.]

ஆரகுடம் āra-kuḍam, பெ. (n.) பித்தளை (செ.அக.); brass (S.I.I.V, 213).

[ஆர்[10] → ஆர + குடம். ஆர்[10] = சிவப்பு.]

ஆரகூடம் āra–kūḍam, பெ. (n.) **ஆரகுடம்** பார்க்க; see āra–kuḍam.

[ஆரகுடம் → ஆரகூடம் (பிங்.).]

ஆரங்கம் பாக்கு āraṅgam-pākku, பெ. (n.) துண்டு துண்டாக வெட்டி வேகவைத்த பாக்கு; areca-nut sliced and boiled, impoves with seasoning (சா.அக.).

[ஒருகா. ஆர் + அங்கம் + பாக்கு. ஆர் = மோது, தாக்கு, உடை, பிள.]

ஆரஞ்சாகி ārañ-cāgi, பெ. (n.) வெண்பசலை; white species of portulaca or Indian spinach.

[ஆரம் + சாகி. Skt. sāka சாகம். சாகி = இலை, தழை. ஆரம் + முத்து, முத்துப் போன்ற வெண்மை.]

ஆரஞ்சார்த்து சோழன் ārañ-cārttu-cōlaṉ, பெ. (n.) திருவானைக்காவிலுள்ள சிவஇலிங்கத்திற்கு முத்தாரம் சார்த்திய சோழன் (அபி.சிந்.); Cola king who placed a garland of pearls on the Sivalinga at Thiruvāṉaikkā shrine. "ஆரம் கொண்ட எம் மானைக்காவுடை ஆதியே" (சுந். தேவா.).

[ஆரம் + (சார்த்து) சாத்து + சோழன்.]

ஆரணங்கு āraṇaṅgu, பெ. (n.) அரிய தெய்வப் பெண்; celestial woman, heavenly damsel. "ஆரணங்குடனே காழி யடைந்ததே" (கந்தபு. வீரவாகுசய. 20). 2. அரிய தெய்வம்; deity of high order. "ஆரணங் குயர்ந்தோ ரல்லோர் புள்விலங்கு" (அகப்பொ. அகத். 19). 3. ஆறுதற்கரிய வருத்தம்; unmitigable sorrow. "நல்லவர்க் காரணங்காகிய மார்பில்" (புறநா.14).

[ஆர் + அணங்கு. ஆர் = அரிய. அணங்கு = தெய்வப்பெண், தெய்வம், வருத்தம்.]

ஆரணத்தான் āraṇattāṉ, பெ. (n.) நான்முகன்; Brahma, the source of the vedas. "ஆரணத்தான் அருள்பார்" (தஞ்சைவா.265).

[அரண் → அரணம் → ஆரணம் + ஆத்து + ஆன் = ஆரணத்தான்.]

ஆரணம் āraṇam, பெ. (n.) 1. ஒரு நூலின் முதற் செய்யுளைத் தொடங்குதற் கேற்ற முப்பத்திரண்டு மங்கலச் சொற்களுள் ஒன்று; one of the 32 auspicious words used as a beginning in a poetical work. 3. மறை நூல் (வேதம்); vēda, by synecdoche. "ஆரணத் துறையுளாய்" (கம்பரா.தாடகை.2). 2. வேதத்தின் ஒரு பகுதி ; scared mystic part of the vēdas, portion of the Vēda. "ஆரணங்காண் என்பர் அந்தணர்" (திருக்கோ–தனியன்). 4. பழந்தமிழ் மருத்துவ நூல். (சா.அக.); ancient medical work of Indian medicine.

ம. ஆரணம்.

[அரண் → அரணம் → ஆரணம்.]

பாதுகாப்பு என்று பொருள்படும் அரணம் என்னுஞ் சொல்லே, போற்றிக் காக்கத் தக்கதும் தம்மைக் காக்க வல்லதுமான மறை (வேத) நூல்களுக்கும், அதன் பகுதி களுக்கும், பெயராயமைந்தது. பாதுகாப்பும் மங்கலமுமாகக் கருதப்பட்ட, சீர், எழுத்து, பொன், பூ, திரு, மணி, யானை, தேர், பரி, கடல், மலை, புகழ், மதி, நீர், ஆரணம், சொல், புயல், நிலம், கங்கை, உலகம், பரிதி, அமிழ்தம் என்னும் 32 மங்கலச் சொற்களுள் ஒன்றாக 'அரணம்' இடம் பெற்றிருப்பது ஒப்பு நோக்கத்தக்கது.

ஆரணமுனிவர் āraṇa-muṉivar, பெ. (n.) ஒரு முனிவரின் பெயர் (அபி.சிந்.); name of a sage.

[ஆரணம் + முனிவர்.]

ஆரணவாணர் āraṇa-vāṇar, பெ. (n.) 1. அந்தணர் முனிவர்; saints. "ஆரணவாணர்க் கென்றுங் கேளான மௌற்கல்லியன்" (பாரத. திரௌ. 73). 2. பார்ப்பார்; Brāhmins.

[ஆரணம் + வாணர். வாழ்நர் → வாணர்.]

ஆரணவுருவார் āraṇa-v-uruvār, பெ. (n.) 1. சிவன்; Šiva. "ஆரண வுருவார் தில்லையம்பல மெய்தப் பெற்றோர்" (கோயிற்பு. இரணிய.74). 2. திருமால்; Visnu.

[ஆரணம் + உருவார். உருவார் = வடிவினர்.]

ஆரணன்[1] āraṇaṉ, பெ. (n.) 1. மருத்துவ நூலில் வல்லவன்; one who is well versed in Indian medicine. 2. மறை (வேத) நூல்களில் வல்லவன்; one who is well versed in sacred books.

[ஆரணம் + அன்.]

ஆரணன்[2] āraṇaṉ, பெ. (n.) 1. சிவன்; Šiva. "ஆண்டவ னாரணன் கம்பனென் றேத்த" (கம்பரந்.30). 2. திருமால்; Visṇu. "ஆரணனே யரனே" (பாரத. கிருட்டிண. 209). 3. நான்முகன்; Brahma. "ஆரணன் றனது மைந்தர்க் கரும்பெறன் ஞான போதம்" (கந்தபு. மேரு.18). 4. பார்ப்பான்; Brāhmin.

ம. ஆரணன்

[ஆரணம் → ஆரணன்.]

ஆரணி[1] āraṇi, பெ. (n.) 1. வடஆர்க்காடு மாவட்டத் திலுள்ள ஓர் ஊர்; name of a town in North Ārcot district. name of a village. 2. ஓர் ஆறு; name of a river.

[ஆறு + அணி. ஆறணி → ஆரணி.]

ஆரணி[2] āraṇi, பெ. (n.) 1. மாந்தருடம்பில் ஆறாதாரங் களுள் நான்காவதாகிய நெஞ்சத் தாமரையில் உள்ள அநாகதத்துக்குரிய பன்னிரண் டிதழ்களுள் ஓரிதழில்நிற்கும்அதிதேவதை (சி.சி.அ:21.மறை); celestial goddess seated in one of the 12 petals of the lotus of heart. (த.சொ.அக.). 2. காளி; goddess Kāḷi 3. உமையவள், பார்வதி; goddess Pārvadi. "ஆரணி சடைக்கடவுளாரணி யெனப்புகழ்" (தாயு. மலை வளர். 5).

ம. ஆரணி.

[ஆரணம் → ஆரணி. ஆரணம் = பாதுகாப்பு, பாதுகாப்பளிக்கும் தெய்வம்.]

ஆரணி[3] āraṇi, பெ. (n.) சுழல் காற்று (த.சொ.அக.); whirl wind.

[ஆர்தல் = சுற்றுதல், சுழலுதல். ஆர் → ஆரணி.]

ஆரணிய அறுநாள் āraṇiya-aruṇāḷ, பெ. (n.) மகப் பேற்றுக்காகப் பெண்டிர் கடக (ஆடி)த் திங்கள் வளர்பிறை ஆறாம் நாளில் உமையவளை வேண்டி நோற்கும் நோன்பு; fast observed by women for the sake of offspring, on the sixth day following new moon in the month of Āḍi.

[ஆரணி → ஆரணிய (கு.பெ.எ.) ஆரணி = உமையவள்.]

ஆரணிய ஓரை āraṇiya-ōrai, பெ. (n.) மடங்கல் ஓரை (சிம்மராசி); leo of the zodiac.

ஆரணியம்[1] āraṇiyam, பெ. (n.) 1. காடு; jungle, forest. "ஐந்துபெரும் பார்த்திவரோ டாரணியம் புகுந்த பிரான்" (பாரத. பதினெட். 243). 2. காட்டிலுள்ள கோட்டை (துருக்கம்); fortress in a forest.

[அரண் → அரணம் → அரணியம் → ஆரணியம், அரணியம் → Skt. āraṇya. அரண் = காவற்காடு. அரணம் = காடு, பாதுகாவலான காட்டுப்பகுதி.]

வடமொழியாளர், "ரு (r) = செல், ரு → அரண = தொலைவான, அயலான; அரண → அரண்ய = தொலைவான அல்லது அயலான இடம், காடு, அடவி, பாலை" எனப் பொருள் கூறி மூலங் காட்டுவர். செல்லுமிடமும் தொலைவான இடமும் காடாகவே இருத்தல் இயலாமையின் அவர் காட்டும் வேர்மூலம் பொருந்தாது.

காவற்காட்டுக்கு 'அரண்' என்றே பண்டைத் தமிழில் வழக்கு நிலை பெற்றிருத்தலானும், அரண் (பாதுகாப்பு) நாடி காடு புகுந்தார்க்கு அதுவே அரணமாதலினாலும், "காவல் வேல் காவற் காடிவை யரணே" என்றும், "காடும் எயிலும் கவசமும் அரணம்" என்றும் பிங்கல நிகண்டு கூறுதலானும், 'அரண்' என்பதே ஆரணியத்திற்கு மூலம் என்பது வெளிப்படை.

ஆரணியம்[2] āraṇiyam, பெ. (n.) மடங்கல், அரிமா; lion

[அரண் → அரணம் → அரணியம் → ஆரணியம் = காடு, காட்டரசனாகிய அரிமா.]

ஆரணியராசி āraṇiya-rāśi, பெ. (n.) **ஆரணிய ஓரை**பார்க்க; see āraṇiya-ōrai.

ஆரத்தம் ārattam, பெ. (n.) ஆத்தி; fig tree. (சா. அக.).

[ஆர் → ஆர்த்தம் → ஆரத்தம்.]

ஆரத்தி āratti, பெ. (n.) 1. மணமக்கள், மாண்புமிகு பெரியோர், அரசர், சமயத்தலைவர் ஆகியோர் உலா வருங்கால் அல்லது மங்கல நிகழ்ச்சிகளின்போது கண்ணேறு (திருஷ்டி) கழிப்பதற்காக மஞ்சளும், சுண்ணாம்பும் கலந்து சிவந்த ஆலநீர் கரைத்தும், சில நேரங்களில் சோற்றுருண்டை வைக்கப் பட்டதுமான தட்டில் விளக்கேற்றி வலமுறையாக வோ இடமுறையாகவோ சுழற்றி நெற்றியில் பொட்டிடும் சடங்கு; waving of light, or water mixed with lime and turmeric or saffron coloured rice-balls, before important personages such as newly wed couple, a ruler, or a spiritual head, in processions or on other auspicious occasions. 2. தெய்வத் திருமேனியின் முன் காட்டும் பதினாறு வகை வழிபாட்டுச் செயல்முறைகளுள் ஒன்றான திருவிளக்கு அல்லது கற்பூரவிளக்கு (தீபாராதனை) வழிபாடு; one of sixteen acts of worship, consisting in the waving of a light or camphor in circular motion before an idol. 3. ஆரத்திப்பாட்டு; song sung during āratti ceremony.

ம. ஆரத்தி; **இந்.** ஆரதீ; **க.** ஆரதி; **து.** ஆரதி.

ஆலத்தி பார்க்க; see ālatti

[ஆல் → ஆலத்தி → ஆரத்தி. ஆலுதல் = சுற்றுதல், சுழற்றுதல்.]

ஆரத்திக்கருப்பூரம் āratti-k-karuppūram, பெ. (n.) பொது வகைக் கருப்பூரம்; ordinary camphor.

[ஆலத்தி → ஆரத்தி + கருப்பூரம்.]

ஆரத்தியம் ārattiyam, பெ. (n.) ஒழிவு (த.சொ.அக.); interval, rest, leisure.

[ஒருகா. அறுத்தியம் → ஆரத்தியம். அறுத்தி = இடைவெளி, ஒழிவு.]

ஆரதக்கறி ārada-k-kari, பெ. (n.) 1. மரக்கறி (யாழ்ப்.); vegetable curry (J.). 2. மீனில்லாத காய்கறி யுணவு; curries of vegetables only without fish, and c. (W.).

[அருகன் → அருகம் → அருகதம் → ஆருகதம் → ஆரதம் + கறி.]

ஆரதம் āradam, பெ (n.) 1. புலால் தவிர்ந்த தூய உணவு (யாழ்ப்.); pure vegetarian meal without meat (J.). 2. மரக்கறி உணவுக் கோட்பாடு, தூய சிவனியம் (சுத்த சைவம்); vegetarianism, habit of taking food purely cooked, according to Hindu notions, without flesh, eggs, etc. **Skt.** ārhata.

[அருகன் → அருகதம் → ஆருகதம் → ஆரதம். ஆரதம் = சமணசமய நெறிப்படி புலால் உண்ணாத இயல்பு.]

ஆரதி āradi, பெ. (n.) **ஆரத்தி** பார்க்க; see āratti.

[ஆலத்தி → ஆரத்தி → ஆரதி.]

ஆரதிகர்ப்பூரம் āradi-karppūram, பெ. (n.) **ஆரத்திக் கருப்பூரம்** பார்க்க; see āratti-k-karuppūram.

[ஆரத்திக்கருப்பூரம் → ஆரதிகர்ப்பூரம்.]

ஆரந்தாங்கு பாண்டியன் ārantāṅgu-pāṇḍiyaṉ, பெ. (n.) உக்கிரகுமார பாண்டியன்; Ukkira Kumāraṉ, a Pāṇḍya King.

[ஆரம் = முத்துமாலை. ஆரம் + தாங்கு + பாண்டியன்.]

ஆரநாலகம் āra-nālagam, பெ. (n.) **ஆரநாளகம்** பார்க்க; see **āra-nalagam.**

ஆரநாளகம் āra-naḷagam. பெ. (n.) இனிப்புள்ள பழம், அரிசி, சருக்கரை முதலியவற்றினின்று எடுக்கப் பட்டு, எதனின்றெடுக்கப்பட்டதோ அப்பெயரிட்டே அழைக்கப்படுவதுமான பருகம், காடி; vinegar, It is an impure acetic acid made by the acetous fermentation of sweet fruits, rice, sugar, etc. and is specifically named after the substance from which it is derived.

எ-டு: அரிசிக்காடி, திராட்சைக் காடி (சா. அக.).

ம. ஆரநாளம்; **க.** ஆரநாளாம்பு (அரிசிக்கஞ்சி)

[ஆர + நாளி → நாளகம். நாளி= கள், புளிப்பேறிய நீர்மம். ஆர = நிறைய, அதிகமாக.]

வடமொழியாளர் āranāla என்பதற்கு மணமற்றது என்று பொருள் கூறுவது பொருத்தமில்லை. நாளி என்பது தமிழில் கள்ளைக் குறித்த சொல். நிறைவாக மூங்கிற் குழாயிலிட்டு அரிசிக் கள்ளைப் புளிக்கச் செய்யும் பண்டைத் தமிழர் மரபும், வடமொழியில் 'ஆரநால' என்னுஞ்சொல் சிறப்பாக அரிசி யினின்றும் எடுத்த கள்ளையே குறித்தலானும் ஆரநாளி – ஆரநாளம் – ஆரநாளகம் என்பவை முற்றுந் தமிழ்ச் சொற்களே என்பது தேற்றம்.

ஆரநாளி āra-nāḷi, பெ. (n.) 1. கள்; toddy. 2. புளித்த காடி; vinegar.

[ஆர + நாளி. ஆர = மிக. நாளி = கள், புளித்த காடி, நீர்.]

ஆரபடி āra-paḍi, பெ. (n.) 1. பொருள் பொருளாக வீரன் தலைவனாக வரும் நாடக வகை; a kind of drama depicting acquisition of wealth and adoring the achievements of great heroes. (சிலப். 3,13, உரை). 2. துணிவு; courage.

Skt. ārabhati.

[ஒருகா. ஆர்ப்பாட்டம் → ஆர்ப்பாட்டி → ஆரபடி.]

ஆரம்[1] āram, பெ. (n.) 1. சந்தனமரம்; sandal-wood tree. "வன்னிகொன்றை வழைசண்பகமாரம்" (பெரியபு. தடுத்தாட். 94). 2. நறுமணப்பொருள்களுள் ஒன்று; sandal-wood, one of six tupa-varkkam. 3. சந்தனக் குழம்பு; sandal paste. "அரைத்த வாரமும்" (பாரத. நிரைமீட்சி. 29). 4. கடம்பு (மூ.அ.); common cadamba. 5. கோடக சாலைச்செடி (மூ.அ.); a very small plant. 6. தோட்டம் (பிங்.); garden. 7. காட்டாத்தி (திவா.); common mountain ebony. "ஆரங் கண்ணிச் சோழன்" (சிலப். பதிக.12).

[ஆர்தல் = பொருந்துதல், நிறைதல், பரவுதல், மணம் வீசுதல். ஆர் → ஆரம் = மணம் வீசும் பொருள், சந்தனம்; சோழர் மார்பில் பொருத்தும் அணியாக ஆத்தி சூடுதலின் ஆத்தியும் ஆரம் ஆயிற்று . ஆர்தல் = சார்தல், அணிதல்.]

ஆரம்[2] āram, பெ. (n.) 1. மணிவடம் (பிங்.); necklace of pearls or gems. 2. பூமாலை (சூடா.); garland of flowers. 3 மாதரணிவடம்; necklace. 4. பதக்கம் (திவா.); pendant. a breast-plate, as an ornament. 5. அணிகலன் (பிங்.); ornament. "அம்பையாரஞ் செறியாகர்" (மரு. தி. 16.). 6. புறா, கிளி போன்றவற்றின் கழுத்திலுள்ள வரி; natural ring round the neck of doves, lines on the necks of parrots and other birds. "ஆரமோககிளி" (திருப்பு. 748). 7. ஆடு மாடுகளின் கழுத்தில் தொங்கும் தசை; membrane hanging from the neck of cattle and goats. 8. மாலை; garland. "செம்பொனாரமதாயிற்றம்மா" (கந்தபு. 93). 9. படப்பொறி; spots on the neck of the cobra, de-capella.

ம. ஆரம்

[ஆல் → ஆலம் (சுற்று வட்டம்) → ஆரம்.]

ஆரம்[3] āram, பெ. (n.) 1. ஒரு செய்நஞ்சு (அஞ்சன பாஷாணம்) (மூ.அ.); a kind of native arsenic. 2. களிம்பு, காளிதம்; oxide of iron, verdigis. 3. கீச்சுக் கிட்டம், இரும்புக் கிட்டம்; scoria of iron, iron-dross (W.).

[ஆர் → ஆர்த்தல் = பொருத்தல், சேர்த்தல், திரட்டல், ஆர்- ஆரம்.]

ஆரம்[4] āram, பெ. (n.) பித்தளை; brass.

[ஆர் = சேர்த்தல் → கலத்தல், ஆரம் = கலப்பு மாழை.]

ஆரம்[5] āram, பெ. (n.) 1. ஒரு அம்பு (பாணம்); a kind of arrow. 2. கோணம்; angle. 3. நுனி; tip, sharp edge. 4. வகுக்கும் எண்; denominator of a fraction. 5. பிரிக்கும் எண்; divisor in arithmetic. 6. போர்; battle.

[ஆர் → ஆரம்.]

ஆரம்[6] āram, பெ. (n.) 1. முத்து; pearl. "ஆரமணிந்து விம்மும் பாரக்கு சங்கள்" (பாரத. சுக்பவ. 55). 2. கண்ணீர்; tear drop. "விழிகளாரஞ்சொரிய" (பாரத. கீசகன்வ.17). 3. முத்தினாற் செய்த கச்சு; stays for women's breasts, made of pearls. "ஆரந்தாங்கிய வலர்முலையாகத்து" (நெடுநல். 136). 4. முத்து மாலை; garland of pearls. "கழூஉ விளங்காரங் கவைஇய மார்பே" (புறநா. 19).

[ஆல் = ஆலக்கட்டி, நீர்த்திரள், நீர்த்துளி, ஆல் → ஆர் → ஆரம் = நீர்த்துளி போன்ற முத்து, கண்ணீர், முத்துமாலை.]

ஆரம்[7] āram, பெ. (n.). வெண்மை; whiteness.

[ஆரம்=முத்து,முத்தினைப்போன்றவெண்மை.]

ஆரம்[8] āram, பெ. (n.) 1. செவ்வாய்க்கோள்; mars. 2. காரிக்கோள்; saturn.

[ஆர் = சேர்தல், சேர்த்தல். ஆர் → ஆரம் = குறிப்பிட்ட நிலையில் சேரும் கோள்.]

ஆரம்பம் [1] ārambam, பெ. (n.) 1. முயற்சி; effort, exertion. 2. தொடக்கம்; commencement, beginning. 3. முகவுரை; preface. 4. விரைவு; speed. 5. செருக்கு; pride, arrogance "ஆரம்பக்குண்டர்" (தேவா.372,8). 6. பதட்டம்; haste.

[ஆர்தல் = நிறைதல், மேலுறல், எழும்புதல், மிகுதல், விரைதல். ஆர் → ஆரம்பம்.]

ஆரம்பம் [2] ārambam, பெ. (n.) உழவுத்தொழில் (தரும.); agricultural performances (Loc.).

பட. ஆரம்பு

[ஏர் → ஏரம்பம் → ஆரம்பம்.]

ஆரம்பம் [3] ārambam, பெ. (n.) 1. பேரொலி; loud roar, shout. 2. கொலை; murder.

[ஆர்தல் = ஒலித்தல். தாக்குதல். ஆர் → ஆரம்பம்.]

ஆரம்பவாதம் āramba-vādam, பெ. (n.) முதற் காரணம் இல்லாமலே காரியம் தோன்றும் என்னும் கொள்கை (சி.போ.பா.); doctrine of creation which postulates that the world is made out of nothingness (effect without cause).

[ஆரம்பம் + வாதம். வாள் = பேசு. வாள் → வாளம் → வாதம்.]

ஆரம்பி [1]**–த்தல்** ārambi–, 4. செ.குன்றாவி. (v.t.) தொடங்குதல்; to begin, enter upon, undertake. "புறத்தொழி லிலாரம்பித்து" (ஞானவா.புண்ணி. 33).

ம. ஆரம்பிக்குக; க. ஆரம்பிசு.

[ஆர் → ஆரம்பு (வடதமிழ்ச்சொல்) → ஆரம்பி → ஆரம்பித்தல். ஆர் = பொருத்து, தொடங்கு.]

ஆரம்விழுந்தகிளி āram-vilunda-kiḷi. பெ. (n.) கழுத்தில் வரையுள்ள கிளி; parrot with a natural ring around its neck.

[ஆரம் = வளைவு.]

ஆரமரோட்டல் āramar-ōṭṭal, பெ. (n.) வெட்சித் திணையில் ஒரு துறை; classification in **Vetci-t-tiṇai.** (தொல். பொருள். 60).

[ஆர் + அமர் + ஓட்டல்.]

ஆரமரோட்டலாவது, குறுநில மன்னருங் காட்டகத்து வாழும் மறவரும் போர்த்தொழில் வேந்தரைப் பொருது புறங் காண்டல்.

ஆரமாயிகம் āra-māyigam, பெ. (n.) வெண் புளிச்சை; a species of puliccai, acid-leaved marool. (சா.அக.).

[ஆரம் = வெண்மை. ஆரம் + ஆயிகம்.]

ஆரரி ārari, பெ. (n.) கதவு; door.

[ஆர் + அரி.]

ஆரல் [1] āral, பெ. (n.) ஆரால்மீன்; brownish or greenish. sand-eel, "நுண்ணாரல் பருவரால்" (புறநா. 18.).



ஆரல் மீன்

ம. ஆரல்; து. ஆரொள்மீன்.

[ஆர் → ஆரல்.]

ஆரல் [2] āral, பெ. (n.) 1. நெருப்பு; fire, 2. கார்த்திகை நாண்மீன்; third naksatra. "அரவுக் கண்ணணியுற ழாரன்மீன் றகையொப்ப" (கலித். 64,4.). 3. செவ்வாய் (திவா.); planet Mars. "ஆதித்தனோ டம்புலியாரல்" (அரிச். இந்திர. 27.). 4. அழற் பித்தம்; gastrobilious fever. 5. பித்தம்; bile.

[ஆர் → ஆரல். உல் → அல் → அர். ஆர். (உரிதல் கருத்துவேர்.) ஆர் [9] *பார்க்க; see* **ār** [9]*.]*

ஆரல் [3] āral, பெ. (n.) 1. மதில்; wall. "ஆர லோங்கிய வயோத்திமா நகரி" (அரிச். 9. விவாக. 283). 2. சுவரின் மேல் அமைக்கப்படும் மறைப்பு; coping of a wall. ஒட்டாரல் (உ.வ.).

[ஆல் → ஆர்(வளைதல்) → ஆரல் = சுற்றுமதில்.]

ஆரல் [4] āral, பெ. (n.) 1. ஆரைக்கீரை; plant containing edible leaves. 2. காக்கணங் கொடி; hair creeper, 3. ஒரு பூண்டு; plant.

[ஆர் → ஆரல். ஆர் = உறுதல், நிறைதல், செழித்தல், தழைத்தல்.]

ஆரல் [5] āral, பெ. (n.) களிம்பு; verdigris.

ஆரல் [6] āral, பெ. (n.) நல்ல தண்ணீர்; fresh water. (சா.அக.).

[அறல் → ஆறல் → ஆரல்.]

ஆரல் [7] āral, பெ. (n.) பூசல்; conflict.

[ஆர் – ஆரல்.]

ஆரலம் āralam, பெ. (n.) பகை; enmity.

[ஆரலர் = பகைவர். ஆரலம் = பகை, பகைமை.]

ஆரவடம் āra-vaḍam, பெ. (n.) முத்துவடம்; string of pearls. (தண்டி. 47, உரை).

[ஆரம் + வடம்.]

ஆரவம் āravam, பெ. (n.) ஒலி; sound. "ஆரவ மிகுந்த பல்புள் ளகழி சூழ் புரிசை" (பாரத. திரௌ.17).

ம. ஆரவம்; க. ஆரவ

[அரவம் → ஆரவம்.]

ஆரவரியம் āravariyam, பெ. (n.) அரசமரம்; peepul tree.

ஆரவலர் āravalar, பெ. (n.) காட்டாத்திப்பூ (தைலவ. தைல. 98); flower of a tree.

ஆரவாரம்[1] āravāram, பெ. (n.) 1. பேரொலி; loud noise, shouting, roaring, bustle. "ஆரவாரஞ் செய் தணுகி னானரோ" (கந்தபு. காவிரிநீ.). 2. ஆடம்பரம்; show, pomposity (W).

ம. ஆரவாரம்; க. ஆரவார; தெ. ஆரிவேரமு; து. அரபாயி

[ஆர்தல் = ஒலித்தல். ஆர் → ஆரம். ஆரம் + ஆரம் = ஆரவாரம். வகரம் உடம்படு மெய்.]

ஆரவாரம்[2] āravāram, பெ. (n.) துயரம் (பிங்); grief, distress.

ம. ஆரழல் (மிகுதுயரம்)

[ஆர் = கட்டுதல், பிணித்தல், நோயால் தாக்குதல். ஆர் + ஆரம் – ஆரஆரம் → ஆரவாரம்.]

ஆரவாரி-த்தல் āravāri-, 4. செ.கு.வி. (v.i.) மிக் கொலித்தல்; to roar, shout. (திவ். பெரியாழ். 1, 7,1).

ஆரவாரிப்பு āravārippu, பெ. (n.) ஆர்ப்பு; loud noise, bustle.

[ஆர்த்தல் = ஒலித்தல். ஆர + ஆரிப்பு]

ஆரற்சுவர் ārarcuvar, பெ. (n.) மேலே மறைப்புடைய சுவர்; wall with coping.

[ஆரல் + சுவர்.]

ஆரன்மீன் āranmīn, பெ. (n.) **ஆரால்மீன்** பார்க்க; see **āral-mīn.**

ஆரா ārā, பெ. (n.) பாம்பைப்போன்ற தோற்றமுடைய மீன்; fish resembling snake.

[ஆராங்கு → ஆரா.]

ஆராங்கு ārāngu, பெ. (n.) 1. நெல்போல் உள்ள ஒருவகைக் களை; a kind of weed. 2. அயிலைபோல் உள்ள ஒருவகை மீன்; a kind of marine fish.

ம. ஆராங்கு.

[ஆர் → ஆங்கு. ஆங்கு = போல. ஆர் = பொருத்தம்.]

ஆராட்சி[1] ārāṭci, பெ. (n.) பழைய வரிவகை; an ancient tax. (S.I.I.V. 96.).

[ஒருகா. ஆராய்ச்சி → ஆராட்சி. (கொ. வ.).]

ஆராட்சி[2] ārāṭci, பெ. (n.) ஆள் நடமாடுமிடம் (தஞ்சை); place where people frequent.

[ஆள் + ஆட்சி – ஆளாட்சி → ஆராட்சி. (கொ.வ.).]

ஆராட்டுதல் ārāṭṭudal, தொ.பெ (vbl.n.) தாலாட்டு தல்; dandling a child.

[ஆலாட்டுதல் → ஆராட்டுதல். ஆலாட்டுதல் பார்க்க; see **ālāṭṭudal.]**

ஆராத்தொட்டி ārā-t-toṭṭi, பெ. (n.) மினிக்கி மரம்; tree.

ஆராப்பத்தியம் ārā-p-pattiyam, பெ.. (n.) 1. கடும் பத்தியம்; very rigid diet. 2. அற்பம்; very trifling thing (W.).

[அரும்பத்தியம் → ஆராப்பத்தியம்.]

ஆராமை ārāmai, பெ. (n.) 1. நிரம்பாமை; incomplete, unfilled. "ஆராவியற்கை அவா நீப்பின்" (குறள் 370). 2. பேரன்பு; great affection, love. "என்ற மிழினுக் கின்னல் பகராதுலக மாராமை மேலிட்டி ருத்தலால்" (தாயு. சித்தர்க. 8).

[ஆர் + ஆ (எ.ம.இ.நி.) + மை (ப.பெ.ஈறு) ஆர்தல் = நிறைதல். ஆராமை = நிறையாமை, நிறையாது மேன் மேல் மீதூரும் அன்பு.]

ஆராமைசோராமை ārāmai-śōrāmai, பெ. (n.) தள்ளாமை (இ.வ.); exhaustion, weariness.

[ஆராமை + சோராமை. எதுகை மரபிணைச் சொல்.]

ஆராய்-தல் ārāy-, 1. செ.குன்றாவி. (v.t.) 1. ஆய்ந்து பார்த்தல், நோட்டமிடுதல் (சோதித்தல்); to investigate, scrutinize, examine, explore. 2. கலந்தாய்தல், உசாவுதல் (ஆலோசித்தல்); to consider, deliberate upon. 3. தேடுதல்; to seek, search for. 4. ஒத்தொலி (சுருதி) சேர்த்தல்; to set the pitch of a musical instrument. "நரம்பின் ... ஓசை செவியுற வாராய்த லாராய்தல்" (கூர்மபு. கண்ணன்மண. 148).

ம. ஆராச்ச; க. ஆரய்; து. ஆரய்சு; தெ. ஆரயு, ராசு

[ஆர + ஆய்.]

ஆராய்ச்சி[1] ārāycci, பெ. (n.) 1. ஆய்வு, திறனாய்வு; research, critical study. 2. நோட்டம், கூர்ந்தாய்வு (சோதனை); overseeing, investigation, examination. scrutiny.

ம. ஆராய்ச்சி; க ஆரய்கெ; து. ஆரிகெ, ஆரைகெ; தெ. ஆரயிக.

[ஆராய் → ஆராய்ச்சி.]

ஆராய்ச்சி[2] ārāycci, பெ. (n.) தலையாரி (யாழ்ப்.); sheriff, bailiff, one who has the command over the inferior officers in a court or office, a superintendent (J.).

[ஆராய் → ஆராய்ச்சி. தனக்கிட்ட பணியை ஆய்ந்து செவ்வனே செய்பவன்.]

ஆராய்ச்சிமணி ārāycci-maṇi, பெ. (n.) முறை வேண்டுவோர் அசைக்கும்படி அரண்மனை வாயிலிற் கட்டப்படும் மணி; bell which is used at the palace gate of a king so that any subject may seek justice.; "ஆரு மனதில் விசாரத்தா லாராய்ச்சி மணியைத் தொடாமலே" (இராமநா. பாலகா.4).

ஆராய்ச்சியார் ārāycciyār, பெ. (n.) 1. கணக்குத் தணிக்கையாளர் (பரிசோதகர்); auditors (M.E.R. 1926–7 p.85). 2. கொலைத் தண்டனையை நிறைவேற்றுபவர் (நாஞ்.); executioners (Nañj.). 3. சொத்து வழக்கு முறை மன்றத்து அதிகாரி (யாழ்ப்.); Nazir of a civil court (J.).

[ஆராய் → ஆராய்ச்சி + ஆர். (உ.ப.ஈறு.).]

ஆராய்தல் ārāydal, பெ. (n.) 1. ஒத்தொலி (சுருதி) கூட்டுதல்; tuning a musical instrument. (சிலப். 7, 1. அரும்). 2. பண்ணல் முதலிய கலைத்தொழில் எட்டனுள் ஒன்று; one of the eight ways deciding of the tune. (கூர்மபு. அட்டமூ. 1, உரை).

ம. ஆராயுக; க. ஆரய்.

[ஆர + ஆய்தல் (பொருந்திவர ஆய்தல்).]

யாழ் நரம்பினுள் நின்றொலிக்கும் ஓசையை யாராய்தல், ஆளத்தி நாளத்தி (ஆரோகண அவரோகண) வகையால் இசையைத் தெரிதல் என ஆராய்தல் இரு வகைத்து என்பர்.

ஆராய்வு ārāyvu, பெ. (n.) 1. நுண்ணறிவு; intelligence. 2. உசாவுதல் (விசாரணை); enquiry, spirit of enquiry.

[ஆர + ஆய்வு.]

ஆரார் ārār, பெ. (n.) பகைவர்; enemies. "ஆரார் திரிபுரங்கள் நீறாநோக்கு மனலாடி" (தேவா. 296,1).

[ஆர் + ஆ (எ.ம.இ.நி.) + ஆர். ஆர்தல் = நெருங்குதல். ஆரார் – பலர்பாலீற்றின் முன்னுயிர் கெட்டுப் புணர்ந்தது.]

ஆரால் ārāl, பெ. (n.) 1. ஆரால்மீன் (செ.அக.); brownish or greenish sand–eel. 2. சேற்றாரால் மீன்; rich brown thorny–backed– eel.

ஆரால் மீன் மங்கல் (கபில) நிறம் அல்லது பச்சை நிறமுள்ள தாயும் வயிற்றுப் பகுதி மஞ்சளாயுமிருக்கும். சற்றொப்ப 15 விரல (அங்குல) நீளமுள்ள இம்மீன் மண்ணிற் புதையும், பாம்பு மீன் என்றும் அழைக்கப்படும். தண்ணீரில் மேற்கிளம்பாமல் அடிப் பகுதியில் காணப்படும். காற்றுப்பை தலையினின்று வால் வரை யிலுமிருக்கும்; a brown or green sand–eel, It is yellowish along its abdomen. It is also called life giving fish, snake fish or lampery. It conceals itself in mud. It is found through out the deltas of large rivers. It is sometimes 15 inches length. It seeks the bottom if placed in water. It has the air–vessel, from the head to the tail. The different species are:–

1. சேற்றாரால் – rich brown thorny – backed eel.
2. சிற்றாரால் – sand–eel, pencalus. This is a common species and much smaller.
3. பேயாரால் – snake–eel, Marmoratus.
4. கல்லாரால் – stone lamprey,. It is so called from its adhering to stones and rocks.
5. கிழங்காரால் – stout–eel, It is a variety common at Madras. (சா.அக.).

[ஆழல் → ஆரல் → ஆரால் = நீரின் ஆழத்தில் வாழும் மீன்.]

ஆராலிகன் āraligan, பெ. (n.) பாகஞ்செய்வோன், சமையற்காரன்; cook.

[ஆர → ஆளுவோன் → ஆராளுவன் → ஆராளுகன் → ஆராளிகன் → ஆராலிகன்.]

சமையற்காரனைக் குனிந்து நின்று தொழில் செய்வோன் என்று வடமொழியாளர் கருதுவர். 'ஆராலிக' என்னும் வட சொல்லை இதற்கு மூலமாகக் காட்டுவது பொருந்தாது.

ஆராவம் ārāvam, பெ. (n.) அரவம், பேரொலி; shouting, loud noise. "ஆராவ முடனிட்ட கவசம்" (பாரத. ஐந்தாம்.11).

ம. ஆர்வம், ஆரவம்.

[அரவம் → ஆரவம் → ஆராவம்.]

ஆராவமுது ārā-v-amudu, பெ. (n.) உண்ணுந்தோறும் இன்னும் உண்ண வேண்டும் என்னும் வேட்கை மிகுவிக்கும் அமுது; divine meal which kindles unquenchable desire to eat more of it. "ஆராவமுதே அளவிலாப் பெம்மானே" (திருவாச.1,67).

[ஆரா + அமுது.]

ஆராவுணர்வு ārā-v-uṇarvu, பெ. (n.) சிற்றறிவு; shallow knowledge. "ஆராவுணர்வா லறிவுற்றயரா" (கோயிற்பு.வியாக்.27).

[ஆரா + உணர்வு ஆரா = நிறையாத.]

ஆரி[1] āri, பெ. (n.) 1. அழகு ; beauty. (சா.அக.). 2. மேன்மை; excellence, eminence. "ஆரியாக வஞ்சஞ்சாந்தந் தளித்தபின்" (சீவக.129). 3. அருமை; rarity, difficulty. "ஆரிப்படுகர்" (மலைபடு.61).

[அரு → ஆர் → ஆரி]

ஆரி[2] āri, பெ. (n.) ஆர் எனப்படும் ஆத்தி மாலையை அணிந்த சோழன் (சூடா.); Cola king, as having the bauhinia for the royal flower.

[ஆர் → ஆரி. ஆர். ஆத்திமாலை. இ – ஒருமை குறித்த ஈறு.]

ஆரி[3] āri, பெ. (n.) கதவு (சூடா.); door.

[ஒருகா. ஆரரி → ஆரி. ஆர்த்தல் = சார்த்துதல். அரி = அரிகால். 'அரிகாலொடு பொருந்தச் சார்த்தும் கதவு]

ஆரி[4] āri, பெ. (n.) 1. கொற்றவை; Kāli, goddess. 2. உமையவள் ; Pārvathi, the consort of Śiva.

[ஆர் + இ. (பெ.பா.ஈறு). ஆரி = நிறைந்த, வீரம், ஆற்றல், பண்பு கொண்டவள்.]

ஆரி[5] āri, பெ. (n.) தோல்வி (த.சொ.அக.); defeat.

[ஆள் + இரி. ஆளிரி → ஆரி = படைஞர் இரிந்து (அஞ்சி) ஓடுதலால் ஏற்பட்ட தோல்வி.]

ஆரி[6] āri, பெ. (n.) வழுக்குநிலம்; slippery ground.

[அரு → ஆர் → ஆரி (நடத்தற்கரிய நிலம்).]

ஆரி-த்தல் āri-,[4] செ.கு.வி. (v.i.) 1. ஒலித்தல்; to sound. கொக்கரித்து ஆரவாரித்துப் போருக் கெழுந்தனர் (உ.வ.).

[அரி → ஆரி. அரித்தல் = ஒலித்தல். ஆரிரத்தல் பார்க்க; see ārirattal.]

சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலியில், சிலப்பதிகார மேற்கோள் வரியில் 'ஆரிக்கும்' என்னும் சொல்லுக்கு, ஒலிக்கும் எனப் பொருள் காட்டியிருப்பது தவறு. அவ்வரி ஆரிரக்கும் என்றிருப்பதே சரியானது.

ஆரிட்டம் āriṭṭam, பெ. (n.) காக்கை; crow. (சா. அக).

[ஒருகா, ஆவி → ஆரி → ஆரிடு → ஆரிட்டம். ஆரிடுதல் = ஒலித்தல், கரைதல், இரைச்சலிடுதல்.]

ஆரிடம்[1] āriḍam, பெ. (n.) 1. முனிவர்கள் பாடிய நூல்கள்; knowledge and wisdom communicated by sages in books, books compiled by sages. "ஆரிடமாகிய கரணம்" (தொல். பொ. 146 உரை.). "ஆரிடத்துத் தானறிந்த மாத்திரையின்" (ஆசாரக். 1). 2. கல்வி; learning. 3. மறைநூல் (வேதம்), (த.சொ.அக.); Vēda. 3. பூசை (த.சொ.அக); worship. 4. ஆகமம்; moral, code, religious and judicial knowledge (W.).

[ஆரிதர் → ஆரிடர் → ஆரிடம்.]

ஆரிடம்[2] āriḍam, பெ. (n.) வழுக்கு நிலம் (சூடா.); slippery ground.

[அரு → ஆர் + இடம் = ஆரிடம் = அரிய நிலம், நடத்தற்கரிய வழி.]

ஆரிடம் ஆரி எனவும் வழங்கும். ஆரி[6] பார்க்க; see āri[6].

ஆரிடம்[3] āriḍam, பெ. (n.) 1. ஆவையும் ஆனேற்றையும் ஒப்பனை செய்து அவற்றிடை மணமக்களை நிறுத்தி நீர்வார்த்துக் கொடுக்கும் திருமணம், ஆரியர் வகுத்த எண்வகை மணமுறைகளுள் ஒன்று (தொல். பொ. 92, உரை); one of the eight forms of marriage as enunciated by the Āryans; marriage in which the bride and the bridegroom are placed between a cow and a bull well decorated and the union sanctifield by pouring water.

[ஆரு → ஆர் → ஆரிடம் = ஆரிய நூல், மறைநூல், மறை நூலில் சொல்லப்பட்ட திருமணமுறை.]

வடமொழியில் ஆ + ரிஷி = முனிவர் தொடர்புடையது என மூலங் காட்டி, முனிவர் வழி வகுத்தாளப் பட்ட மணமுறை என இதற்குப்பொருள் கூறப்படுகிறது. ஆர்வுஎன்னும் வடசொல் தமிழில் ஆரிடம் எனத்திரிந்ததாகவும் கூறுகின்றனர். 'ரிஷி' என்னும் சொல் 'ஆர்ச்', ரிச்' (புகழ்தல, பரவுதல், பாராட்டல்) என்னும் மூலங்களிலிருந்து தோன்றியதென மற்றொரு சாராரும் கூறுகின்றனர். தமிழில் 'அருக்குதல்' என்னுஞ் சொல் புகழ்தல், பாராட்டல் எனும் பொருள் தந்து நிற்றலானும் தவவலிமையான் செயற்கரிய செய்ய வல்லவரும், அரிய பண்பாட்டுச் செல்வம் நிறைந்த அருளாளராகவும், புகழ்ந்து போற்றத்தக்க அந்தணாளராகவும், விளங்கிய தமிழ் முனிவரே அருமையர் → ஆரியர் → ஆரிதர் → ஆரிடர் எனப் பல வகையானும், இத்தேய முழுவதினும் அழைக்கப் பெற்றிருத்தலானும், இன்னும் கொங்கு வேளாளர்க்கு மங்கல நிகழ்ச்சிகளில் போற்றிப்பாடும் பூசகன் அருமைக்காரன் என அழைக்கப் படுதலானும், பாராட்டத்தக்க பெருமையுடைய பெண்ணுக்கு அருக்காணி எனப் பெயரிடுதல் தமிழரிடை இயல்பாக இருத்தலானும், வடமொழிக்கண் வழங்கும் ஆரியர், ஆரிடர், ரிஷி (இருடி) போன்றவற்றுக்குத் தமிழ்ச் சொற்களே மூலமென்க.

ஆரிடம்[4] āriḍam, பெ. (n.) ஆவும் ஆனேறும் பரிசமாகப் பெற்றுக் கொண்டு கன்னியைத் தீ முன்னர்க் கொடுக்கும் ஆரியத் திருமணமுறை (நம்பியகப், 117, உரை); Āryan practice in which the father gives his daughter in marriage before the sacred fire, after receiving a cow and a bull or two pairs as a present. (செ.அக.).

[ஆ → ஆரி (ஆநிரை) – ஆரிடம்.]

பெண்ணுக்குப் பரிசமாக மாப்பிள்ளை தரும் ஆவும் ஆனிரையும் தமிழ (திரவிட) நாகரிகம் தழுவியது. பெண்ணின் பெற்றோர் மாப்பிள்ளைக்குத் தருவது ஆரியர்களின் வழக்கம். ஆரியர் வகுத்த எண் வகை மணங்களுள் தமிழர் நாகரிகக் கூறும் ஒருசார் இடம் பெற்றிருந்தது என்பதற்கு இது சான்றாகிறது.

ஆரிடர்[1] āriḍar, பெ. (n.) 1. முனிவர்; sages. "ஆரிடர் நிலைமை தன்னை" (கந்தபு. மேருப். 17). 2. சமணர்; Jains.

[அரு → ஆர் → ஆரி → ஆரிதர் → ஆரிடர்.]

அசுரர், இயக்கர், சித்தர் முதலியவர்களால் நிறுவப்பட்டது ஆரிடலிங்கம் (த.சொ.அக.) எனக் குறிக்கப்படுதலால், தமிழ முனிவர்கள் பண்டைக் காலத்தில் ஆரியர் → ஆரிதர் → ஆரிடர் என அழைக்கப் பெற்றமை தெளிவாம். ஐயனாரிதனார் (ஐயன் + ஆரிதன் + ஆர்) என்னும்புலவர் பெயரும் இதற்குச் சான்றாம்.

ஆரிடர்[2] āriḍar, பெ. (n.) பெருந் துன்பம்; distress, misery affliction.

[ஆர் + இடர். ஆர் = மிகுந்த. இடர் = துன்பம்.]

ஆரிடை āriḍai, பெ. (n.) செல்லுதற்கரிய பாதை, அரியவழி; difficult route or rugged path. "புலம்பு கொள் ஆரிடை" (கலித். 4.).

[ஆர் + இடை. இடை = வழி.]

ஆரித்திரம் ārittiram, பெ. (n.) 1. மஞ்சள் நிறமுள்ளது; that which is yellow. 2. கடப்பமரம்; Cadamba tree, (சா.அக.).

[ஆர் = தீ, எரிநிறம், சிவப்பு, மஞ்சள். ஆர் → ஆரி → ஆரித்திரம்.]

ஆரிதம்[1] āridam, பெ. (n.) வெள்ளலரி; Indian oleander, (alba). (சா.அக.).

[ஆர் = வெண்மை, ஆர் → ஆரி → ஆரிதம்.]

ஆரிதம்[2] āridam, பெ. (n.) பதினெண்வகை அற நூல்களுள் ஒன்று; one of the eighteen codes of law.

[அரு → ஆர் → ஆரியம் → ஆரிதம். ஆரியம் = அரியநூல்.]

ஆரிதம்[3] āridam, பெ. (n.) துறவு, துறவுநிலை; ascetic, asceticism.

[அரு → ஆர் → ஆரி. ஆரிதம் (உயர்ந்த இயல்பு).]

ஆரிப்படுகர் āri-p-paḍugar, பெ. (n.) இழிந் தேறும் வழி, அரிதின் முயன்று ஏறியும் இறங்கியும் செல்லும் கடிய (மலை) வழி; difficult (mountain) path with ascents and descents. "அலங்கு கழையாலும் ஆரிப்படுகர்ச் சிலம்பு" (மலைபடு. 161).

[அரு → ஆர் → ஆரி + படுகர். ஆரி = அரிய. படுகர் = பள்ளத்தாக்குகள் அமைந்த மலைத்தொடர்.]

ஆரிய āriya, கு.பெ. எ. (adj.) சிறிய; small. "ஆரிய விடைதன் மாண்டவழகினைக் காட்ட" (திருவிளை. மாயப். 21).

[அரு → ஆர் → ஆரி → ஆரிய. ஆரிய = அரிதாதல், சிறிதாதல்.]

ஆரிய அண்ணல் ārya-aṇṇal, பெ. (n.) கடைக்கழகக் காலப் பெருமகன்; noble man of the sangam age. "ஆரிய அண்ணலை வீட்டி" (பதிற்று. 5.).

[ஆரியன் + அண்ணல்.]

ஆரியக்கூத்து āriya-k-kūttu, பெ. (n.) 1. கழைக்கூத்து; curious kind of dancing with poles on ropes, acrobatic feats. "ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு" (பழ.).

ம. ஆரியக்கூத்து.

[ஆரு → ஆர் → ஆரிய + கூத்து. ஆரிய = அரிய. அரிய கூத்தே ஆரியக் கூத்தாயிற்று.]

நிலத்தின் மேலன்றிக் கழைமேலேறி யாடும் அரிய கூத்தாதலின், இது ஆரியக் கூத்தாயிற்று. வடபுலத்தாரியர்க்கும் இக்கூத்துக்கும் எவ்வகைத் தொடர்புமில்லை. ஆரியர் என அழைக்கப்பட்ட பழங்குடிகள் ஆடி வந்த கழைக்கூத்து (acrobatic feats of an aboriginal tribe called Āriyan) எனச் சென்னை யகரமுதலி குறிப்பது ஏற்கத்தக்கதன்று. அரிய (கடிய) மலைப் பள்ளத்தாக்குப் பாதை 'ஆரிப்படுகர்' என மலைபடுகடாத்தில் சுட்டப்படுதல் காண்க.

ஆரியகம் āriyagam, பெ. (n.) சிறுகுறிஞ்சா; small Indian inecacaunha.

மறுவ, ஆலிகம்.

[அரு → ஆர் → ஆரி → ஆரியகம். ஆரி = சிறிய.]

ஆரியகாசம் āriya kāšam, பெ. (n.) 1. வெள்ளலரி; Indian oleander. 2. வெள்ளல்லி; white Indian water -lily.

[ஆர் = வெண்மை, ஆர் → ஆரி → ஆரிய + காசம்.]

ஆரியகுச்சரி āriya-kuccari, பெ. (n.) (இசை.) மருத யாழ்த்திற வகை (பிங்.); (Mus.) secondary melody-type of the agricultural tracts.

[அரிய → ஆரிய + குச்சரி.]

ஆரியச்சி āriyacci, பெ.(n.) **ஆரியத்தி** பார்க்க; see **ariyatti.**

[ஆரியன் (ஆ.பா.) → ஆரியத்தி → ஆரியச்சி (பெ.பா.).]

ஆரியத்தி āriyatti, பெ. (n.) ஆரியப்பெண்; woman of Ārya race.

[ஆரியன் → ஆரியத்தி.]

ஆரியத்திரிவு āriya-t-tirivu, பெ. (n.) (இலக்.) தமிழில் திரிந்து வழங்கும் வடசொல் (தற்பவம்); (gram.) loan-words from Sanskrit occurring in Tamil with altered forms, (உரி. நி.).

[ஆரியம் + திரிவு. ஆரியம் = வடமொழி.]

ஆரியநாடு āriya-ṇāḍu, பெ. (n.) 1. தண்ட காரணியத்தை உள்ளடக்கிய ஒரு நாடு; a region including Daṇḍakāraṇya. (பதிற்றுப். 6. பதி. உரை). 2. இமயத்துக்கும் விந்தமலைக்கும் இடையில் ஆரியர்கள் வாழ்ந்திருந்த நாட்டுப் பகுதி; tract of country in India lying between the Himalayas and the Vindhya mountains, the so called sacred land of the Āryas.

[ஆரியர் + நாடு.]

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் āriya-p-padai-kadanda-Neduñceliyan, பெ. (n.) கடைக்கழகக் காலத்தில் ஆரியப்படைகளை வென்றவனும், நன்னெறி பிறழாதவனும், கோவலனை ஆராயாது கொல்வித்ததால் தன்னுயிர் நீத்து அரசு கட்டிலிற் றுஞ்சிய பாண்டியன் எனப் பெயர் பெற்றவனும், சிலப்பதிகாரக் காப்பியக் கதை நிகழ்ந்த போது வாழ்ந்தவனுமான புகழ்பெற்ற பாண்டிய மன்னன்; legendary Pāṇḍiyan King (of Sangam age) who conquered Āryan army and well known for his justice and good administration, but fell dead from the throne hearing that he had committed a blunder in sentencing to death, Kōvalan, hero of the Tamil epic Silappadigāram.

[ஆரியர் + படை + கடந்த + நெடுஞ்செழியன். ஆரியர் = வடவர். படை கடத்தல் = வென்று நிற்றல்.]

ஆரியப்பப்புலவர் āriyappa-p-pulavar, பெ. (n.) திருக்குடந்தையில் (கும்பகோணம்) பிறந்தவரும், பாகவதத்தை 4970 விருத்தப் பாக்களால் பாடியவரும் ஆன தமிழ்ப்புலவர்; Tamil poet born in Tirukkuḍandai (Kumbakonam,) said to have composed 4970 poems of Bāgavadam, in **viruttappā** metre. (அபி. சிந்.).

[ஆரியன் + அப்பன் + புலவர்.]

ஆரியப்பாவை āriya-p-pāvai, பெ. (n.) பாவைக்கூத்து வகை; a kind of puppet show (W.).

[அரு → ஆர் → ஆரிய (அரிய) + பாவை. பாவை = மரப்பதுமை அல்லது தோற்பதுமைகளைக் கூத்தாட வைக்கும் கலை.]

ஆரியப்பாவை என்னும் பாவைக்கூத்தும் ஆரியக்கூத்து என்றாற் போல், அரிய பாவைக்கூத்து என்றே பொருள் படுதலானும், பாவைக்கூத்து இன்றும் பொம்மலாட்டம் எனப் பொதுமக்களிடை நின்று நிலவுதலானும், வடவாரியப் பண்பாட்டுக் கூறுகள் எதுவும் எள்ளளவும் காணப்படாமையானும் ஆரிய என்னும் சொல் அருமை குறித்ததே.

ஆரியப்பூமாலை āriya-p-pū-mālai, பெ. (n.) 1. காத்தவராயன் மனைவியின் பெயர்; gay, young, unruly wife of Kāttavarāyan. 2. அடங்காப்பிடாரி. காத்தவராயன் மனைவி போன்ற இயல்புள்ளவள்; audacious, insubordinate woman, any woman like the wife of Kāttavarāyan.

[ஒருகா. ஆரிய = அரிய, சிறந்த. ஆரிய + பூமாலை.]

ஆரியப்பேடி āriya-p-pēḍi, பெ. (n.) ஆரியக் கூத்தரிற் பேடி (மணிமே.); a hermaphrodite among rope-dancers.

[அரு → ஆர் → ஆரிய + பேடி.]

ஆரியப்படலம் āriya-p-paḍalam, பெ. (n.) முதனூலாற் பெயர் பெற்ற ஒரு பழைய நூல்; an ancient treatise named after its original work (நன். 48, மயிலை).

[ஆரிய + படலம்.]

ஆரியம்[1] āriyam, பெ. (n.) 1. அழகு; beauty. 2. நல்லது; good thing. 3. நற்குலமுடையது (த.சொ.அக.); animate or inanimate thing of blameless origin. 4. வழிபடப்படுவது; that which is venerated and worshipped.

[ஆர் → ஆரியம். ஆர்தல் = நிறைதல். ஆரியம் = சால்வு, நிறைவுடையது, நல்லது, போற்றத்தக்கது.]

ஆரியம்[2] āriyam, பெ. (n.) 1. செல்வம்; wealth, treasure. 2. தேட்டம், தேடிய பொருள்; earning.

[ஆர் → ஆரியம். ஆரியம் = நிறைவுடைய செல்வம், தேடி நிறைவு பெற்ற செல்வம்.]

ஆரியம்[3] āriyam, பெ. (n.) பொன்; gold. (சா.அக.).

[ஆர் → ஆரியம். ஆரியம் = நிறைதல், அழகாதல், அழகுள்ள பொன்.]

ஆரியம்[4] āriyam, பெ. (n.) மேன்மை, சிறப்பு, உயர்வு; excellence, elegance, that which is superior. "ஆரிய விடைதன் மாண்டவழகினைக் காட்ட" (திருவிளை. மாயப்,21).

[அரு → ஆர் → ஆரியம். ஆரியம் = அருமையுடையது, சிறப்புடையது, உயர்வுடையது.]

ஆரியம்[5] āriyam, பெ. (n.) கேழ்வரகு (தருமா.); cereal, ragi, cleusive coracana (G.Sa.D.i,217). (செ.அக.).

[ஆரு → ஆரி → ஆரியம். ஆரியம் = அருகிச் சிறுத்தது, வடிவில் சிறுத்த தவசம் கேழ்வரகு.]

வடிவில் சிறுத்த தவசங்களுள் 'அரிசி' என்னுஞ் சொல்லுக்கும், வித்தினைக் குறிக்கும் அரிசி, அரி என்னுஞ் சொற்களுக்கும் 'அரு' என்பதே வேராதல் காண்க. இனி, அர். → ஆர். → ஆரியம் = சிவப்புக் கேழ்வரகைக் குறித்ததெனின், அதனைக் கேப்பை என்றும், சிவப்பு ஆரியம் என்றும், மக்கள் பிரித்தே வழங்குதலானும், ஏனைத் திரவிடமொழிகளிலும் 'ஆரியம்', சிவப்புக்கேழ்வரகைத் தனித்துக் காட்டும் வழக்கு இருந்ததற்கான அடையாளம் தெளிவாக உறுதிப்படாமையானும், முன்னையதே ஏற்புடையதாகத் தெரிகிறது.

ஆரியம்[6] āriyam, பெ. (n.) 1. இமயத்திற்கும் விந்தத்திற்கும் இடைப்பட்ட நாடு; country from eastern to the western sea and bounded on the north and south by the Himalaya and Vindhya mountains respectively. "ஆரியவாசிவாணிகர் போலவே" (திருவாத.குதிரை. 2). 2. ஆரிய நாட்டில் குடியேறிய வடவாரிய வேத

நெறியாளாரின் தாய்மொழியாகிய வடமொழி; Sanskrit language of the Āryans. "ஆரியநூன் முழுதுணர்ந்தீர்" (சேதுபு.பிரமகத்தி.3).

Skt. Ārya, arya.

[அரு → அரி → அரியம் → ஆரியம்.]

[ஆரியம் = அருமை, பெருமை, சிறப்பு. அப் பண்புகளின் இருப்பிடமாகிய நாடு அல்லது மொழி.]

அரியநாயகம், அரியமுத்து , அரியநாதன் என்று இன்றும் தமிழ் மக்கள் பெயரிட்டுக் கொள்வதைக் காணலாம். அரியநாடு என்பதே ஆரியநாடு என வடநாட்டிலும், அருவாநாடு எனத் தமிழகத்தின் வடவெல்லையிலும் வழக்கூன்றியது : வடமொழியில் ஆரியம் என்னும் சொல்லும் அரிய (arya –ārya) என்னும் மூலத்தினின்றே திரிந்துள்ளது. கடற்கோளும் வற்கடமும் (மழை பெய்யாமையால் தோன்றும் வறுமைநிலை, பஞ்சம்) தோன்ற இடமின்றிக் கங்கை போன்ற வற்றாத ஆறுகளோடும் வளமான நாடு, அருவா நாடு, அரிய நாடு என்று பண்டைக் காலத்துச் சிந்துவெளித் தமிழராலும் தென்னகத் தமிழர்களாலும் சுட்டிச் சிறப்பிக்கப்பட்டு நின்று நிலைத்த பெயர்கொண்டு, வேதநெறி யொழுகும் பார்ப்பனர் வந்து பெருமளவில் குடியேற்றங்களை அமைத்த பின்னும் அதே அரிய நாடு அல்லது ஆரியநாடு (ஆரியாவர்த்தம்) என்றே அழைக்கப்பட்டது. அப்பொழுது தென்னகம் அவர்களால் பரததேசம் கடலால் (பரவை) சூழப்பட்ட தீவக்குறை (தீபகற்பம்) என்று அழைக்கப்பட்டது. எனவே, வட மொழியான சமற்கிருதமும், அம்மொழி அல்லது அதன் முந்து மொழியான வேத மொழியும் பேசிய பார்ப்பனர் இனமும் தாம் குடியேறிய நிலப் பெயரால் 'ஆரியம்' எனக் குறியீடு பெற்றன.

ஆரியம் 7 āriyam, பெ. (n.) 1. ஒருசிலரால் இந்தைரோப்பிய மொழிக்குடும்பங்களனைத்தையும் குறிப்பிடவும், ஏனையோரால் இந்திய ஈரானிய மொழிக் குடும்பங்களை மட்டும் குறிப்பிடவும் பயன்படும் சொல்லாட்சி; **applied by some to family of languages (also called Indo-European, or Indo-Germanic) that includes Sanskrit, Iranian, Greek, Latin, Celtic, Germanic, Slavonic, with their modern representatives, by others only to the Indo-Iranian portion of these (C.O.D.).**

Skt. ārya, arya

E.Aryan, **L.** Arianus of Aria **GK.** Areia (eastern persia)

[அரு → அரியம் → ஆரியம்.]

இந்தைரோப்பிய மொழிகளை நாம் ஆரியம் எனப் பெயரிட்டழைப்பினும் மேனாட்டார் அதனை ஏற்காது இந்தைரோப்பிய மொழிகள் என்று தாம் குறிப்பிட்ட பெயராலேயே அழைக்கின்றனர். வடமொழியாகிய சமற்கிருதத்துக்கும் அதனொடு நெருங்கிய தொடர்புடைய ஈரானிய மொழிகளுக்கு மட்டும் ஆரியம் என்னும் குறியீடு பொருந்துவதாக அவர்கள் நினைக்கின்றனர். Aryan > Skt. **ārya** noble (in earlier use a national name comprising worshippers of the gods of the Brahmans; earlier **Arian** is f. L. **A rianus** or Aria (F.GK.**Areia** eastern persia (C.O.D.). எனத் தெளிவாகக் கூறப்படுதலால் தாம் குடியேறிய வடஇந்திய நிலப் பெயராலேயே ஆரியர் எனப் பெயர்பெற்றனர் என்பதும், அவர்கள் மொழியும் ஆரியம் எனப்பட்டது என்பதும் வெள்ளிடைமலை. அதற்கு அரிய, அரியன், ஆரியன் → ஆரியம் என்னும் சொற்கள் உலகின் பல்வேறு மொழிகளில் பொருள் தந்து நிற்கும் சூழலையுணரப் பின்வரும் சான்றுகள் உதவும்.

Malay. arwah – soul. **Pali,** aria, noble, distinguished; noble man, one who has attained higher knowledge.aru – old wound, sore. arukaya – heap of sores. aruna – dawn, reddish colour , redness.

Chinese. rang – fertile soil, rich soil. roo – rich, plentiful. ren – human being, man, person. rēn – edge of a knife, sword. rui – sharp, acute, recognise, know, identify rē – sun.

E. Ariyan – pertaining to Arius or to his doctrines one who adheres to the doctrines of Arius, who held Christ to be a created, being inferior to God the Father in nature and dignity, though the first and noblest of all, created beings and also that the Holy spirit is not God; but created by the Holy spirit is not God; but created by the power of the son. Arius who was a priest of Alexandria, promulgated his doctrines in the early part of the fourth century. They are authoritatively condemned by the Council of Nice in 325 (Imperial Dictionary)

E. Aria – a song, an air, tune. **It.** aria, from **L.** aer, the air. **Russ.** Arian – respectable person. **GK.** Aryos – lazy, idle **Sinh.** Ariya – one of the highest orders of the Buddhist ascetic. Arya – term of high respect or veneration; name of Buddha, but particulary applied to the priests of Buddha.

Persn. arwah – soul. arghawani – red. arbāb – lords, masters, possessors. arab – being skilled arish – clever.

Guj. ārgva – straight forwardness, flattery, pressure with flattering words.

Pkt. ariha – deserve, be deserving of worship, worthy, fit. arihanta – one worthy of final liberation, a Tirthankara.

ஆரியம் 8 āriyam, பெ. (n.) ஆரியமொழிக் குடும்பத்தினரின் வழிவழிவந்த இயல்பு; **hereditary qualities of the people of Āryn family of language.** இவை இவை ஆரியம் எனக் காண்பது எளிது (உ.வ.).

[ஆரியர் → ஆரியம்.]

ஆரியமம் āriyamam, பெ. (n.) பகலில் வரும் பதினான்காம் முழுத்தம் (முகூர்த்தம்) (த.சொ.அக.);

[அரியமம் → ஆரியமம்.]

ஆரியமாது āriya - mādu, பெ. (n.) நன்னாரி; Indian sarasa parilla. (சா.அக.).

[அரிய → ஆரிய + மாது.]

ஆரியமொழி āriya-moḻi, பெ. (n.) வடமொழி, சமற்கிருதம்; Sanskrit.

[ஆரியம் + மொழி.]

ஆரியர் [1] āriyar, பெ. (n.) 1. அறிஞர்; learned people. the elite. "ஆரியரு மாரியரை யல்லாரைக் குலப் பழுது மறைவரேயோ" (சிவதரு.சிறப்.6). 2. ஆசிரியர்; teacher. 3. செயலாளர்கள்; secretaries. "முறைமுறை வணங்கி நின்ற வாரியர் முகத்தை நோக்கி" (திருவாத.மண்சுமந்த.17). 4. குரவர், குருமார்; preceptors, spiritual teachers. 5. புலவர்; poets . 6. மருத்துவர்; ஆயுள்வேதியர்; physicians.

[அரு → ஆர் → ஆரியர்= மேலோர், சிறந்தோர்.]

ஆரியன் [1] பார்க்க; see āriyan[1].

ஆரியர்[2] āriyar, பெ. (n.) 1. வடநாட்டிலிருந்து பரத கண்டத்தில் வந்து சரசுவதி ஆற்றுப்படுகையில் வாழ்ந்தவர்கள் (அபி.சிந்.); those who came from the north and finally settled on the banks of the river Sarasvathi. 2.வடக்கிலிருந்து வந்து இராமேசுவரத்திற் குடியேறிய பார்ப்பனப் பிரிவினர்; sect of Brahmins from the North, living at Rameswaram (I.M.P.Rd.108).

[அரு → அரி → ஆரி → ஆரியர்.]

ஆரியர்[3] āriyar, பெ. (n.) பழனிப் பகுதியில் வாழும் வேளாளப்பிரிவினர்; a sect of Vēlālars in and around the Palani hills. (அ. அக).

[அரு → அரி → ஆரி → ஆரியர்.]

ஆரியவரசன்யாழ்பிரமதத்தன் āriyavarasan-yāḻ-piramatattan, பெ. (n.) பத்துப்பாட்டுளொன்றாகிய் குறிஞ்சிப் பாட்டைத் தமிழின் சிறப்பை அறிவுறுத்துதற்குக் கபிலர் பாடியதை உணர்ந்து தமிழ் பயின்று சங்கத்தாரோடு பாடும் திறமையடைந்து குறுந்தொகை 184 ஆம் பாடல் இயற்றிய புலவர்; a poet of Sangam age who was facinated towards Tamil by Kabilar's Kurinji pāṭṭu and he authored 184th song of 'Kuruntogai'.

[ஆரிய+அரசன் + யாழ் + பிரமதத்தன்.]

ஆரியவராடி āriya - varādi, பெ. (n.) ஒரு பண்வகை, மூவகை வராடி வகைகளுள் ஒன்று; a variety of varadi, a melody type, a class of musical mode.

[ஆரி + வராடி. வராளி → வராடி.]

ஆரியவேளர்கொல்லி āriya-vēlar-kolli, பெ. (n.) செவ்வழி யாழ்த் திற வகையுளொன்று (பிங்.); (Mus.) a secondary melody–type of the pasture tract, a class of musical mode or tunes, sub–division of Kolli (W).

[ஆரியவேளர் + கொல்லி. கொல்லி = கொல்லிப்பண் வகை.]

ஆரியவேளாகொல்லி āriya-vēlā- kolli, பெ. (n.) **ஆரிய வேளர் கொல்லி** பார்க்க; see āriyavēlar - kolli,

ஆரிய வேளாளர் āriya-vēlālar, பெ. (n.) **ஆரியர்**[3] பார்க்க; see āriyar[3].

[ஒருகா. அரையர் →ஆரியர் + வேளாளர். இருங்கோவேள் மரபினர் ஆண்ட பகுதி சிற்றரையம் பேரரையம் எனப்பட்டமை காண்க.]

ஆரியன் [1] āriyan, பெ. (n.) 1. அறிவுடையவன்; learned man. 2.குரவன், குரு; priest. "பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே" (திருவாச.1,64). 3. புலவன்; poet. 4.மேலோன்; superior. 5.பெரியோன்; worthy respectable man. "ஆரியனாமாசான்வந்து"(சி.சி.8,28). 6. கழைக்கூத்தாடி; juggler. 7.மருத்துவன்; physician. 8.ஆசிரியன்; teacher. "ஆரியனாயினும் அப்பொழு தொழிக"(இலக்.கொத்.8). 9. ஐயனார் (சூடா.); god Aiyanār. 10. தலைவன்; chief, leader. 11. சிவன்; Śiva. "ஆரியன் குலாலனாய் நின்று" (சி.சி.க.18.). 12. நண்பன்; friend. 13. புத்தன்; Buddha. 14. கதிரவன்; sun. 15. வியாழன்; Jupitor.

ம., க., தெ., து. ஆர்ய

[அரு → அரி → அரியன் →ஆரியன் .]

Guji., Nep., arya. Pali. ariya (noble) the other pali forms are ariya and ayya (vedic arya) of uncertain Etymology. The early Buddhists had no such ideas as we cover with the words. Buddhist and Indian Ariya do not exactly mean either. But it often comes very near to what they would have considered the best in each (Pali Dictionary). எனப் பாலி அகரமுதலியில் கூறப்பட்ட செய்தி, ஆரியன் என்னும் சொல் அரியன் என்னும் தமிழ் வேரிலிருந்தே பிறந்தது என்பதற்குச் சான்றாதல் காண்க. ஆரியன் என்னும் சொற்கு 'உழவன்' என்று பொருள் கொண்டு ar என்னும் இலத்தீன் சொல்லை மூலமாகக் காட்டினார் மாக்சுமுல்லர். உழவுத் தொழிலில் முதன்முதற் சிறந்தவர் தமிழராதலானும், ar என்னும் இலத்தீன் சொல்லும் ear என்னும் ஆங்கில சாக்சனியச் சொல்லும், 'ஏர்'

என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபாதலானும், வேத ஆரியர் ஆடுமாடுமேய்க்கும் முல்லை நாகரிக நிலையிலிருந்தமையானும், "ஆரியர் மிலேச்சர்" என்று திவாகரம் கூறுதலானும் உயர்நாகரிகத்திற்கு அடிப்படையான உழவுத்தொழிலுக்கு அநாகரிகர் (மிலேச்சர்) என்னும் பெயர் பொருந்தாமையானும், கி.பி. 2—ஆம் நூற் றாண்டில் இயற்றப்பட்ட மனுதரும சாத்திரத்திலும், "சிலர் பயிரிடுதலை நல்ல தொழிலென்று நினைக்கிறார்கள். அந்தப் பிழைப்புப் பெரியோர்களால் நிந்திக்கப்பட்டது. ஏனெனில், இரும்பை முகத்திலேயுடைய கலப்பையையும்மண்வெட்டியும்பூமியையும்பூமியிலுண்டான பலப்பல ஜெந்துக்களையும் வெட்டு கிறதல்லவா?" (இராமா நுஜாசாரியர் மொழிபெயர்ப்பு.) — என்று கூறியிருத்தலானும், ஏரைக் குறிக்குஞ் சொல் இந்திய ஆரியத்திலின்மையானும், ஆரியன் என்னும் பெயர் முதன் முதல் வேத ஆரியனுக்கே இந்தியாவில் ஏற்பட்டதாகத் தெரிதலானும், அவர் கூற்றுப் பொருந்தாது.

வடநாட்டார் ஆரியன் என்னும் பெயரைத் தமக்கு இட்டுக் கொண்டனர். மானியர் வில்லியம் சமற்கிருத — ஆங்கில அகரமுதலியில் ஆரிய (ஆர்ய) என்னுஞ் சொற்கு "a respectable or honourable or faithful man" என்று பொருள் கூறி, 'அர்ய' என்பது மூலமாகக் காட்டப்பட்டுள்ளது. 'அர்ய' என்னுஞ் சொற்கு "kind, favourable, R.V; attached to, true, devoted, dear, R.V. excellent, (L)" என்று பொருளும் ஆட்சி நூலுங் குறிக்கப் பட்டுள்ளன. 'அர்ய' என்பதற்கு 'ரு' என்பதை வேராகக் காட்டுவது எத்துணையும் பொருந்தாது.

அருமை என்னும் தமிழ்ச் சொற்கு எளிதாய்க் கிடையாமை, பெருமை, மேன்மை என்பவற்றொடு பேரன்பிற்குரிமை (endearment) என்பதும் பொருளாயிருத்தல் கவனிக்கத்தக்கது. இச்சொல்லின் முதனிலையான 'அரு' என்பது 'ஆரி' என்றுந் திரியும்.

ஆரி = 1. அருமை. "ஆரிப்படுகர்" (மலை படு. 161).

2. மேன்மை. "ஆரியாகவஞ் சாந்தந் தளித்த பின்" (சீவக.129). 3. அழகு (சூடா.).

'ஆரி' என்னுஞ் சொல் 'அன்' னீறு பெற்று ஆரியன் (மேலோன், உயர்ந்தோன்) என்றாவது, மிக எளிதும் இயல்புமாகும். இச்சொல் ஆரியமொழியில் 'ஆர்ய' என்ற வடிவே ஏற்கும்.

ஆயினும் சிந்து வெளியிலிருந்த ஆரியனுக்குத் தென்னாட்டுத் தமிழ்ச் சொல்லால் எங்ஙனம் பெயர் அமைந் திருக்குமென்று பலர் ஐயுறலாம். ஆரியர் வருகைக்கு முன்பும் வட இந்தியாவில் திரவிடரே பெரும்பாலராய்ப் பரவியிருந்தனர் என்பதையும், வேதப் பெயரும் வேதப் பிரிவின் பெயரும் தென் சொற்றிரிபே என்பதையும், இந்தியாவிற்கு வருமுன்னரே வேத ஆரியரின் முன்னோர் மொழியில் தமிழ்ச் சொற்கள் கலந்திருந்தன என்பதையும், வேதகாலத்திலேயே ஆரியர்க்குத் தமிழரொடு தொடர்பு ஏற்பட்டு விட்டது என்பதையும் உணர்வார்க்கு, இதில் எள்ளளவும் ஐயத்திற்கிடமில்லை யென்க.

இராமன் சிறந்த அரசனாகவும் திருமாலின் அல்லது இறைவனின் தோற்றரவாகவும் கருதப்பெற்றதனாலேயே அவனை ஆரியன் என்று குறித்தனர் புலவர். அவன் ஆரிய இனத்தினன் என்னுங் கருத்தினாலன்று. "அஞ்சிலே யொன்றாறாக ஆரியற் காகவேகி" — தனியன். "ஆரியன் உரைப்பதானான் அனைவரும் அதனைக் கேட்டார்" (கம்பரா. விபீடண. 106.).

இராமன் கதிரவக்குல அரசனாதலின் சோழர்குடிக் கிளையாளனே. ஒரு மொழிக்கு, அதைப் பேசும் மக்களால், அல்லது அது வழங்கும் இடத்தினால், அல்லது அது எழுதப் பெற்ற நூலினால், அல்லது அதன் எழுத்து வடிவினால், அல்லது அதன் ஒலிச்சிறப்பியல்பால் பெயர் ஏற்படும். இவற்றுள் முதல் வகையால் ஆரியன் மொழி ஆரியம் எனப் பெற்றது. (வ.மொ.வ. 22—25).

ஆரியன்[2] āriyaṉ, பெ. (n.) 1. ஆரிய வகுப்பினன்; one who is an Āryaṉ by race. "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" (தேவா. 844,5). 2. ஆரிய நாட்டில் வாழ்பவன்; inhabitant of Āryavarta. "வடவாரியர் படைகடந்து" (சிலப்.23, கட்டுரை).

ஆரியன்[3] āriyaṉ, பெ. (n.) 1. இழிந்தவன் (பிங்.); barbarian, foreigner.

[ஒருகா. அல் + ஆரியன் = அல்லாரியன் → அலாரியன் → அனாரியன் → ஆரியன்.]

ஆரியன்[4] āriyaṉ, பெ. (n.) **அதிவிடயம்** பார்க்க; see **adi-viḍayam.**

ஆரியாங்கனை āriyāṅganai, பெ. (n.) சமணரிடை இல்லறத்தில் கணவனோடு வாழும்போதே துறவு பூண்ட தவப்பெண்; Jaina woman who renounces and enters the order of ascetics even as she is housewife. "கணவனிற் றுறவின் மன்னும் ஆரியாங் கனைகள்" (திருவிளை. சமணரை, 17.).

[ஆரிதம் = துறவு. ஆரிதம் → ஆரியம் + அங்கனை.]

ஆரியாவர்த்தம் āriyā–varttam, பெ. (n.) **ஆரியநாடு** பார்க்க; see **āriyā–nāḍu.**

[ஆரியம் + வர்த்தம்.]

ஆரியை[1] āriyai, பெ. (n.) 1. கொற்றவை; Durga. 2. உமையவள்; Pārvadi. "ஆரியை தவஞ்செய் பதி யாதியன" (கந்தபு. அடிமுடி. 15). 3. காளி; Kāḷi.

[அரு → ஆரி → ஆரி → ஆரியை.]

ஆரியை[2] āriyai, பெ. (n.) 1. ஆரியன் என்பதன் பெண்பால்; feminine of Āriyaṉ. 2. பதுமையின் தோழி (பெருங்.); lady attendent of Padumai.

[ஆரியன் → ஆரியை.]

ஆரிர—த்தல் ārira–, 3. செ.குன்றாவி (v.t.) சோழனின் ஆத்தி மாலையைத் தருமாறு வேண்டிக் கொள்ளுதல். ஆர் இரத்தல்; to beg the attti garland from the Chōlā king.

[ஆர் + இரத்தல். ஆர் = ஆத்தி.]

"பாவைமார் ஆரிக்கும் பாடலே பாடல்" (சிலப்.). என உ.வே.சா. பதிப்பில் காணப்படுவது தவறாகும்.

ஆரிராரோ ārirārō, இடை. (conj.) தாலாட்டில் வரும் அசைச் சொல்; an expletive in a lullaby.

[ஆரி+ஆரி+அரோ.=ஆரிராரோ–ஆரிராரோ= தாலாட்டு ஒலிக்குறிப்பு.]

ஆரிழை ārilai, பெ. (n.) ஆராய்ந்த அணிகலன் களை யுடைய பெண்; woman adorned with ornaments (சேரநா.).

ம. ஆரிழ.

ஆயிழை பார்க்க; see **āyilai**

[ஆயிழை → ஆரிழை.]

ஆரின்கண்ணியன் ārin-kanniyan, பெ. (n.) சோழன் (பிங்.); Chōlā King, so styled because he wore the royal bauhimia flower.

[ஆர் + இன் + கண்ணி + அன்.]

ஆரின்மாலையன் ārin-mālaiyan, பெ. (n.) **ஆரின்கண்ணியன்** பார்க்க; see **ārin-kanniyan**

[ஆர் + இன் + மாலையன்.]

ஆரினி ārini, பெ. (n.) சுடுகாடு; cremation ground. (சா.அக.).

[ஆர் → ஆரி = தீ, எரி. ஆர் → ஆரினி.]

ஆரீதம் āridam, பெ. (n.) கரிக்குருவி; blackbird. 'கறியிலை ஞீ்ரும் இருளில் ஆரீதம் புக்கு' (இரகு. திக். 119). 2. பச்சைப்புறா; green pigeon.

[ஆரி → ஆரீடம் → ஆரீதம்]

ஆரீரம் arīram, பெ. (n.) சிற்றீரம் (சா.அக.). a little wet

[அரு + ஈரம் = ஆரீரம். அரு = சிறு.]

ஆரு[1] āru, பெ. (n.) 1. நண்டு; crab. 2. பன்றி; pig, domestic hog. 3. குடம்; pot.

[அள் → ஆள் → ஆர் → ஆரு = செறிதல்.].

ஆரு[2] āru, பெ. (n.) ஒருமரம் (இ.வ.); tree. (த.சொ.அக.).

[ஆர் → ஆரு.]

ஆரு[3] āru, பெ. (n.) யார்என்பதன் மரூஉ; corrupt form of yar (who) ஆரு வந்தாங்க? (கொ.வ.).

[யார் → யாரு → ஆரு.]

ஆருகதம்[1] ārugadam, பெ. (n.) நாவல்மரம்; common black plum, Jamboline. (சா. அக)

[ஆரு[2] → ஆருகதம்.]

ஆருகதம்[2] ārugadam, பெ. (n.) மூவகை இறை மறுப்பு மதங்களுள் ஒன்றான அருகசமயம்; religion of the Jains.

அருகன் பார்க்க; see arugan

[அருகன் → அருகதம் → ஆருகதம்.]

ஆருகதன் ārugadan, பெ. (n.) சமணன்; Jain. (குறள். 256, உரை). Skt. ārhata.

[அருகன் → அருகதம் → அருகதன் → ஆருகதன்.]

ஆருங்காணாசலநதி ārun-kaṇāšalanadi, பெ. (n.) கருப்பத்திலுண்டாகும் பனிக்குடத்து நீர்; liquid in which the foetus floats, amniotic fluid **Liguor amni.** (சா.அக.).

[யாரும் → ஆரும் + காணாத + சலம் + நதி.]

ஆருணிநாடு āruṇi-nāḍu, பெ. (n.) பஞ்சாபு, அரியானா மாநிலத்தின் பழைய பெயர்; old name Punjab and Hariyānā.

[அரு → அருணி → ஆருணி. ஆருணி → அரிய, சிறந்த, உயர்ந்த ஆரிய நாடு எனினும் ஆருணி நாடெனினும் ஒக்கும்.]

ஆருணி யரசன் āruṇi–y–arašan–, பெ. (n.) உதயணனால் கொல்லப்பட்டவனும் பாஞ்சால தேசத்தரசனுமாகிய பாஞ்சாலராயன் (பெருங்.); King of pañcāla country, now known as Punjab and Hariyānā. (A".ØÒ.)

[ஆருணி + அரசன்.]

ஆருணி நாடு பார்க்க; see **āruṇi- nāḍu.**

ஆருத்திரை āruttirai, பெ. (n.) **திருவாதிரை** பார்க்க; see Tiruvādirai.

ஆருந்தின்னாமூலி āruntinnā–muli, பெ. (n.) பித்தம்; bile.

[யாரும் → ஆரும் + தின்னா + மூலி.]

ஆருயிர் āruyir, பெ. (n.) 1. அருமையான உயிர்; precious life. 2. அன்புக்குரியவர்; beloved, darling.

ம. ஆருயிர்

[அருமை + உயிர்.]

ஆருயிர் மருந்து āruyir - marundu, பெ. (n.) 1. சோறு, உணவு; food, so called because it sustains life. "ஆங்கதிற் பெய்த வாருயிர் மருந்து" (மணிமே. 11,48). 2. உயிர்பிழைப்பிக்கும் மருந்து; any medicine that restores life. 3. காயகற்பம்; a medicine taken by siddhas for prolonging life. (சா.அக.).

[அருமை + உயிர் + மருந்து.]

ஆருவம் āruvam, பெ. (n.) 1. நீர், water. 2. சாறு; juice from the leaves of a plant.

[வார் → ஆர் → ஆருவம்.]

ஒ.நோ. வார் → வாரணம், நீர், நீர் நிறைந்த கடல்.

ஆருழலைப்படுதல் ār–uḻalai–p–paḍu–, 20 செ.கு.வி. (v.i.) 1. நீர் வேட்கையால் வருந்துதல்; be tormented with thirst. 2. கதிரவனின் வெப்பத்தால் தாக்கப் படுதல்; be affected by sun–stroke, be scorched by heat.

[ஆர் + உழலை + படு.]

ஆரூடம் arūḍam, பெ. (n.) 1. உதயம், உதித்தல்; rising. 2. ஏறுதல்; arisen or ascended. 3. குறி கேட்போரு டைய ஓரை நிலை (ராசிநிலை–உச்சம்) கொண்டு கூறும் கணியம் (சோதிடம்); hoary astrology, the point with reference to the Zodiac, where a person stands to consult the astrologer or the sign designated by that mentioned at the time - one of the three parts in divination made by the astrologers. (W.). 4. முன்னறிவித்தல்; foretelling.

மறுவ. குறி, விரிச்சி, குறிப்பு.

[ஏர் + இடம் = ஏரிடம் – ஆரிடம் → ஆருடம் → ஆரூடம்.]

Skt. ārudha.

வடமொழியில் ஆரூடம் கூட்டுச் சொல்லாகவன்றித் தனிச் சொல்லாக வாராமையின் இது தமிழ்ச் சொல்லே.

ஆரூடம் பார்–த்தல் ārūḍam-pār–, 4 செ.கு.வி. (v.i.) கணி கூறுதல்; foretell the future.

ஆரூடன் ārūḍaṉ, பெ. (n.) 1. ஏறினவன்; rider, one who has mounted or climbed up. "இடபாரூடன்" (செய்.வ.). 2. மெய்யுணர்வில் தேர்ந்தவன்; one who is liberated from the trammels of wordly existence even during life. " உலகநிலை தோன்றாமல் தன்றிகழ் ஞானத்தா லுண்மை முத்தனா மவனே யாரூடன்" (வேதா. சூ.15) – (சா.அக.). உயிருடைமையாளன் (சீவன் முத்தன்), அதாவது உலக வாழ்க்கையிலும், உலகப்புலனங் (விஷயம்) களிலும், மாயையிலும், கட்டுப்படாமல் உலகத்தார்க்கு நன்மையே புரிந்து கொண்டு ஆதனாற்றலை (ஆன்மசக்தி) யடைந்த மேலோன். இத்தகைய மெய்யுணர்வு (ஞான) முதிர்ச்சியை யடைந்தவர்கள் உலகப் பற்றுப் பரிவு களினின்று விடுபட்டு, சமயம் வாய்த்தபோது இப்பூதவுடம்பினின்று பிரிந்து முத்திநிலையை யடைவார்கள்; a wiseman who is most indifferent to all concerns of life and hidden in the mood of the thought of ātman. He is always actuated by a cosmic sense to do good to others and so his action is stimulated by the one and only desire of service to others.

Persons of this class are types of liberated souls who move freely without any sense of restraint in the career of their lives and when occasion arises, they enter the deep and forsake the flesh and the acquired personality (S.D.).

[ஒருகா. ஆறு + ஊார்ந்தோன் = ஆறூர்ந்தோன் → ஆரூதன் → ஆரூடன்.]

ஊர்தியில் இவர்ந்து செல்பவன் என்னும் தெளிவான பொருளில் தோன்றிய இம்மூலச்சொல் வடமொழியில் ஆரூடன் எனத் திரிந்திருப்பதால், கூட்டுச்சொற்களிலன்றி தனிச் சொல்லாகப் பயன்படுத்தப்படுவதில்லை. இஃதொன்றே இது தமிழின் திரிபு என்பதைக் காட்ட வல்லது. ஆரூடன் என்பதனோடு இதற்குத் தொடர்பில்லை.

Skt. ārudha

ஆரூர் ārūr, பெ. (n.) திருவாரூர் (தேவா.690,1); Thiruvārur in Thanjavur district.

[ஒருகா. ஆர் + ஊர். ஆர் → ஆத்தி. ஆரூர் = சோழனுக்குரிய அடையாளப்பூவான ஆத்தி மலிந்த (ஆத்திமரம் நிறைந்த) ஊர்.]

ஆரூர்க்கால் ārūr-k-kāl, பெ. (n.) ஒருவகைக் கருப்பூரம்; a kind of camphor. (சிலப்.14–12, உரை).

ஆரூர் மன்னன் ārūr-maṉṉaṉ, பெ. (n.) வன்மீகநாதன் (தமி.மொழி.அக.); Vaṉmīganādaṉ.

ஆரூரன் ārūraṉ, பெ. (n.) நம்பியாரூரன் என்னும் சுந்தரமூர்த்தி நாயனார் (தேவா.); Saiva saint Sundaramurtti-nayanar, so called because he was a resident of Ārur.

[ஆரூர் + அன்.]

ஆரெயிலுழிஞை ār-eyil-uḻiṉai, பெ. (n.) வாள்வீரர் தம்மைப் பணியாதாருடைய உயர்ந்த புரிசை(மதில்)

யின் தன்மையைச் சொல்லும் புறத்துறை (பு.வெ.மா.); theme of minor literature grouped under a purattinai, describing sword-men's statement regarding the inaccessibility of enemy's fort-wall.

[ஆர் + எயில் + உழிஞை.]

ஆரேவதம் ārēvadam, பெ. (n.) சரக்கொன்றை; Indian laburnum "சம்புமா கமுகு தாழை நற்புன் காரேவதம்" (தைலவதைல. 135,60-61).

[ஆரே + Skt.vada → த.வதம். = நம்பிக்கை. நோய் நீங்கும் என்னும் நம்பிக்கை விளைத்தலால் வந்த பெயர் (த.சொ.அக்.)].

ஆரை[1] ārai, பெ. (n.) 1. நீராரைக்கீரை; aquatic cryptogamus plant, used for greens. "ஆரையடா சொன்னாயது" (ஔவை தனிப்பா). "ஆரையாம் பள்ளத்து ஊடே வாழினும்" (வெற்றிவேற்கை). 2.புற்பாய்; (பிங்.). mat made of grass or rushes. 3. புளியாரை; sour greens. 4. வல்லாரை; Indian penny wort. "வல்லாரை உணர்ந்தனம் மற்றும் கையாந்த கரையும் நாடுவமே" (ஒருதுறைக் கோவை). 5. செவ்வாரை; four leaved plant of a red colour, found on hills. (w.). 6. வறளாரை; plant on dry soils used for fodder. 7. புல்லாரை அல்லது நெடுநாரை; fragrant cherry nutmeg. 8. வெள்ளாரை; lance-leaved mercury. 9.கடலாரை; a wild species of the Marsilea genus found on the sea-shore. 10. கல்லாரை அல்லது காட்டாரை; rare plant on the slopes of mountains, capable of consolidating mercury.

[ஆர் → ஆரை. ஆர் =பொருந்து, நெருங்கு ஏற்றதாயிரு.]

ஆரை[2] ārai, பெ. (n.) ஆத்திமரம்; common mountain ebony.

க., து. ஆரெ.

[ஆர் →ஆரை.]

ஆரை[3] ārai, பெ. (n.) 1. வட்டம்; roundness. 2.கோட்டை மதில்; fort wall, surrounding wall.

[ஆல் → ஆர் → ஆரை.]

ஆரை[4] ārai, பெ. (n.) அச்சுமரம்; axis. "ஆரைச் சாகாட் டாழ்ச்சி" (புறநா. 60).

[ஆர் → ஆரை.]

ஆரை[5] ārai, பெ. (n.) 1. நாடியெலும்பு; shorter and smaller of the two bones of the fore-arms, radius. 2. ஆரையெலும்பு பார்க்க; see ārai-y-elumbu.

[ஆர் → ஆரை.]

ஆரை[6] ārai, பெ. (n.) தோல்வெட்டும் உளி (நாநார்த்த.); leather cutting chisel. (செ.அக.).

ஆரைக்கல்பாறை ārai-k-kal-pārai, பெ. (n). நாமக்கல் என்னும் ஊரின் பழைய பெயர்; old name of town Namakkal.

[ஆரை [3] = வட்டம், கோட்டை மதில். ஆரை + கல் + பாறை.]

ஆரைக்காலி ārai-k-kāli, பெ. (n. தாழைக்கோரை, கோரைப்புல்; (சங்.அக) a kind of grass, sedge.

[ஆரீ → ஆரை + காலி.]

ஆரைக்கிளவி ārai-k-kiḷavi, பெ. (n.) உயர்வுப் பன்மை யீறு; an honorific suffix. "இயற்பெயர்முன்னர் ஆரைக் கிளவி பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே" (தொல். சொல். இடை-22) (எ.டு) மருதனார், தொல்காப்பியனார்.

[ஆர் + ஐ + கிளவி - ஆர் என்னும் இடைச் சொல் ஆரைக்கிளவி எனப்பட்டது.]

ஆரைக்கீரை ārai-k-kīrai, பெ. (n.) நீராரை; vegetable green.

[ஆரை + கீரை.]

இது குளம், குட்டை, வாய்க்கால் நீரோடைகளின் ஓரங்களில் தண்ணீரிலமிழ்ந்து முளைத்துக் கிடக்கும். இலை நான்கு பிரிவினையுடையது. வட்டமாயும் சிறிதாயுமிருக்கும். கறி சமைத்துண்டால் சற்று இனிப்பாயிருக்கும். இரவில் மூடிக் கொள்ளும் இதன் இலைகளுக்கு நீண்ட காம்புண்டு. பித்தநோய், அதிமூத்திரம் (அரத்தமேகம்) (இரத்தப் பிரமேகம்) முதலியவற்றைக் குணப்படுத்தும். இதனால் சூதவெண்ணெய் இறுகும், நீற்றும் (பற்பமாக்கும்). புண்ணில் நீரைக் கொல்லும். தண்ணீரைச் சுருக்கி நீர்க்கோளைப் (சலரோகம்) போக்கும். (சா.அக.).

ஆரைக்குலகம் ārai-k-kulagam, பெ. (n.) **ஆரைக்குளகம்** பார்க்க; see ārai-k-kuḷagam.

ஆரைக்குளகம் ārai-k-kuḷagam, பெ. (n.) வெள்ளவரை; white beans.

[ஆரை + குளகம். ஆரை = வெள்ளை, குளகம் = இலை, கீரை.]

ஆரைச்சேவிதம் ārai-c-cēvidam, பெ. (n.) வெள்ளை யெள்; white sesamum.

[ஆரை + சேவிதம்.]

ஆரைத் துடுப்பு மீன் ārai-t-tuḍuppu-mīṉ, பெ. (n.) ஒரு வகைக் கடல் மீன்; kind of sea fish.



[ஆரை + துடுப்பு + மீன்.]

ஆரைப்பற்றி ārai-p-paṟṟi, பெ. (n.) உடும்பு (கதி.அக.); double tongued lizard, guana.

[ஆரை + பற்றி.]

ஆரையிலை ārai-y-ilai, பெ. (n.) **ஆரைக்கீரை** பார்க்க; see ārai-k-kīrai.

ஆரையெலும்பு ārai-y-elumbu, பெ. (n.) முன்னங்கை யெலும்பு இரண்டினுள் பெருவிரல் பக்கமாயுள்ளது. முன்கைச் சிற்றெலும்பு; bone on the outer or the thumb side of the fore arm, the shorter and smaller of the bones of the fore-arm.

[ஆரை + எலும்பு.]

ஆரோசை ārōśai, பெ. (n.) (இசை.) ஏற்றிப்பாடும் இசை; அமரோசைக்கு எதிரானது. (Mus.) high pitch, opp. to **amarōśai.** 'ஆரோசை யமரோசைகளினமைத் தார்'' (பெரியபு. ஆனாய.24).

[ஏர்+ஓசை → ஏரோசை → ஆரோசை. ஆரோசை → skt. arohana.]

ஆரோசையை ஆரோகணம் என்றும், அமரோசையை அவரோகணம் என்றும், வடமொழியாளர் திரித்துக் கொண்டனர்.

ஆல்[1] āl, 14 செ.கு.வி. (v.i.). ஒலித்தல் ; to sound. 'இருங்குயிலாலுமரோ''. 2. அகலுதல்; to spread, to widen. ஆல்வட்டு, ஆல்வட்டம் (அகன்றதட்டு) (இ.வ.). 3. சுற்றுதல்; to wave round, to rotate. ஆலாத்தி எடுக்க வேண்டும் (உ.வ.). 4. அசைதல், முன்னும் பின்னும் ஊக்குதல்; to move, to rock as a cradle. ஆலாட்டு (ஆராட்டு).

[அல் → ஆல். அல் = அசைதல், ஒலித்தல். ஆல் = ஒலித்தல், சுற்றுதல், பரவுதல்.]

ஆல்[2] āl, பெ. (n.) 1. நீர்; water. ''ஆலின் மேலால மர்ந்தான்'' (திவ். திருவாய். 9,10,1,ஈடு). 2. வெள்ளம்; flood. (மாற.962, பக்.466). 3. குளிர்ந்த நீர்; cold water.

ம. ஆல்; **க.** ஆலிநீர் (குளிர்ந்த நீர்)

[அல் → ஆல், அல் = அசைதல், ஒலித்தல். ஆல் = ஒலித்தல், ஒலிக்கும் நீர்ப்பெருக்கு.]

ஆல்[3] āl, பெ. (n.) 1. ஆலமரம் (திவ். இயற். 1,59); that species of banyan tree which casts roots from its branches. ''ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரோடி மூங்கிற் போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பீர்'' (சொல.); May you flourish as a banyan tree, put forth roots and spread as the creeping stems of the arugu grass, and prosper, being encircled by kinsmen as thickly crowed. 2. குறுவால மரம்; a species of tree, Subs errate bamboos (W). Rhombold leaved fig, Ficus gibbosa (tuberculata).

ம., கோத. ஆல்; **க.** ஆல், ஆல; **குட., கோண்.** ஆலி; **து.** ஆல; **பர்.** ஏல்

[அகல் → ஆல். அகற்சட்டியும் ஆலமரமும் அகன்றிருக்கும் இயல்பான் பெயர்பெற்றன.]

ஆல்[4] āl, பெ.(n.) ஆரல்; கார்த்திகை நாண்மீன்; the third naksatra. ''அகலிரு விசும்பினால் போல'' (மலைபடு. 100).

[ஆரல் → ஆல்.]

ஆல்[5] āl, பெ. (n.) 1. பொன்னாங்கண்ணி; an edible plant. 2. கரிசலாங்கண்ணி; medicinal plant, 3. அழிஞ்சில்; alingl tree, (சா.அக.).

ஆல்[6] āl, பெ. (n.) நஞ்சு; poison. ''ஆற்படு களத் தினான்'' (இரகு. மாலை. 41). Skt. ala

[ஆலம் → ஆல். ஆலம் என்பது 'அம்' கெட்டு நின்றது.]

ஆல்[7] āl, பெ. (n.) பத்து வகைத் துவர்களுள் ஒன்று; being astringent in taste and quality, astringence, as one of the ten.

ஆல்[8] āl, பெ. (n.) இடை. (part.) அல்லவென்னும் பொருளில் வரும் இடைச் சொல் (அக.நி.); word meaning no.

[அல் → ஆல்.]

ஆல்[9] āl, வி.எ. (adv.) ஆமெனல் (சூடா.); a form of affirmation, for yes. This definition though given in Saduragarādi and Nigaṇḍu, is not proved by examples (W.).

ஆல்[10] āl, இடை. (Part) வியப்பு, இரக்கம், தேற்றம் இவற்றைக் குறிக்கும் இடைச்சொல்; particle expressive of surprise, pity or certainty.

[அல் → ஆல். ஆல் = ஒலித்தல், ஓசை தொடர்பாக வியப்பு இரக்கம் முதலிய உணார்ச்சிகளைக் காட்டும் இடைச்சொல்லாகியிருக்கலாம்.]

ஆல்[11] āl, இடை. (part.) மூன்றாம் வேற்றுமையுருபு; chief form of the third case, or instrumental ablative implying cause. agency, instrumentality, by means of, with, by way of, in consequence of (W.) வாளால் வெட்டினான் (உ.வ.).

ம., பிரா., கோண். ஆல்

[அல் → ஆல். அசைதல், சுற்றுதல், நீளுதல் பொருளில்வரும் ஆல் என்னும் வினையடியின் சார்பாக அவ்வவ் வினைகளுக்குரிய துணைக் கருவிகளைச்சுட்டி, தொழிலுக்குத்துணையாகும் இயல்பான், துணைக் கருவிகளைச் சுட்டிய பொதுப் பெயரே இடைச் சொல்லாகியிருக்கலாம்.

ஒ.நோ: உழை - ஒடு - உடன் என்பவை பக்கத்துணைப் பொருளில் முதலில் ஆளப்பட்டுப் பிறகு இடைச் சொல்லானமை தேற்றம்.]

ஆல்[12] āl, இடை. (part.) 1. ஓர் அசைநிலை; poet. expletive affixed to nouns and finite verbs. and also used with அற்று, அன்று, ஆம். "யாதானு நாடாமால் ஊராமால்" (குறள்.397). 2. வினையெச்ச ஈறு; a form of the subjunctive, joined to the gerund or in poetry, to the infinite verb, expressing if. பட. அலெ; **கன்**, அடெ, அரெ, ஒடெ. வந்தால், கேட்டால், இருந்தால் (உ.வ.). 3. வியங்கோள் வினைமுற்று ஈறு ; an optative termination expressing may, let. "இரீஇய தொராஅல்" (தொல்.சொல்.443). 4. எதிர்மறை வியங்கோளீறு ; a negative form of the optative. ஒரால் (செய்.வ.). 5. ஒரு தொழிற் பெயரீறு; verbal noun ending. "அழால்" (அழுகை) (புறநா.46). "உழாலிற் பொலி வண்டிவர் பூந்தொடை"(தணிகை.வள்.59). 6. அற்று, அன்று, ஆம் இவற்றுடன் பயிலும் ஓர் அசைநிலை; an expletive affixed to aru, anru, am. "வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் (குறள் 192.).

[அல் → ஆல் துணைக்கருவிப் பொருளில் வரும் சொற்கள் நாளடைவில் அசைநிலைகளாகும்; வினை முடியாப் பொருளில் வினையெச்ச ஈறுகளாகும் தொழிற் பெயர்களில் 'அல்' என்னும் தொழிற்பெயரீறே 'ஆல்' என நெடுமுதலாகும். 'அல்' என்னும் எதிர்மறை இடை நிலையே எதிர்மறை வியங்கோளீறாகும்.]

ஆல்கெழு கடவுள் āl-kelu-kaḍavuḷ பெ. (n.) சிவன் (திரு முருகு. 256); Lord Śiva.

ஆல்கொடிச்சி āl-koḍicci, பெ. (n.) அரிதாரம்; yellow orpiment.

[ஆலக்கொடிச்சி → ஆல்கொடிச்சி.]

ஆல் வரு -தல் ālvaru-, 18.செ.கு.வி. (v.i.) சுற்றி வருதல்; to go round,

[ஆலுதல், சுற்றுதல். ஆல் + வரு]

ஆல்வாட்டு-தல் ālvāṭṭu-, 5 செ.கு.வி. (v.i). **ஆல வாட்டு-தல்** பார்க்க; see āla-vāṭṭu-,

[ஆலவாட்டு → ஆல்வாட்டு.]

ஆல்வாட்டு ālv āṭṭu, பெ. (n.) **ஆலவாட்டு** பார்க்க; see ālavāṭṭu.

[ஆலவாட்டு → ஆல்வாட்டு.]

ஆல்வு ālvu, பெ. (n.) அகன்றிருப்பது; that which is wide. "ஆல்வாய்ப் போகிற நதி"

[அகல் → ஆல் →ஆல்வு]

ஆலக்கட்டி āla-k-kaṭṭi, பெ. (n.) துரிசு (மூ.அ); copper acetate; commonly referring to copper sulphate. (சா.அக.).

[ஆலம் + கட்டி.]

ஆலக்கரண்டி āla-k-karaṇḍi, பெ. (n.) வாயகன்ற கரண்டி; broad spoon in which a small quantity of medicated oil, electuary etc, are prepared, ladle.

[அகலக்கரண்டி → ஆலக்கரண்டி.]

ஆலக்கொடி āla-k-koḍi, பெ. (n.) **ஆலக்கொடிச்சி** பார்க்க; see āla-k-koḍicci.

ஆலக்கொடிச்சி āla-k-koḍicci, பெ. (n.) அரிதாரம்; yellow orpiment or sulpheret of arsenic in its natural state. (சா.அக.).

மறுவ. ஆலக்கொடி, ஆலக்கொடிஞ்சி, ஆலக்கச்சி, ஆல்கச்சி.

[ஒருகா. ஆலம்+கொடிச்சி. ஆலம்= நஞ்சு.]

ஆலக்கொடிஞ்சி āla-k-koḍiñji, பெ. (n.) **ஆலக்கொடிச்சி** பார்க்க; see **āla-k-koḍicci.**

[ஆலக்கொடிச்சி → ஆலக்கொடிஞ்சி.]

ஆலக்கோயில் āla-k-kōyil, பெ. (n.) கோயில் அமைப்பு களுள் ஒன்று; an exclusive design of temple construction as found in Thirukkachur-in Chengai-Anna district.

[ஆலை - ஆலம் + கோயில்]

ஆரைக்கீரை வகைகள்:

நீராரை

புளியாரை



வல்லாரை

ஆனை நெருஞ்சி

ஆலகண்டன் āla-kaṇḍaṉ, பெ. (n.) 1. **சிவன்;** Śiva. 2. வாசுகி என்னும் பாம்பு; the snake, Vāsugi.

ம. ஆல்கண்டம்

[ஆலம் + கண்டன்.]

ஆலகண்டனி ālakaṇḍaṉi, பெ. (n.) இளமை காத்து வாழ்நாள் நீட்டிக்கச் சித்தர் பயன்படுத்திய இது வரை அறியப்படாத ஒரு மருந்துச் சரக்கு, நீலஞ் சோதி; an unknown drug said to be used by Siddhas to prolong life and to maintain youthfulness. (சா.அக.).

[ஒருகா. ஆலகண்டன் → ஆலகண்டனி. ஆலமுண்ட சிவனைப் போல் சாவை வெல்வதற்குரிய மருந்து என்னும் பொருளதாகலாம். ஈற்று இகரம் உடைமை குறித்த ஈறு.]

ஆலகம் ālagam, பெ. (n.) 1. நெல்லி; Indian goose berry, emblic myrobalan. 2. அல்லி; lily plant. 3. சோம்பு; anisee-seed, pimpinella anisum.

[ஒருகா. ஆல் → ஆலகம். ஆல்[1] = நீர். ஆலகம் = நீர்க் கோப்புள்ளது.]

ஆலகமாதிதம் ālagamādidam, பெ. (n.) வெற்றிலை வள்ளிக் கிழங்கு; betel-yam. (சா.அக.).

[ஒருகா. ஆல் → ஆலகம் = நீர். ஆலகம் + மாதிதம். நீர்ப்புள்ள அல்லது சாறுள்ள வள்ளிக் கிழங்கு என்னும் பொருளதாகலாம்.]

ஆலகாலம் ālakālam, பெ. (n.) 1. கொடிய நஞ்சு; deadly poison, animal poison. "ஆலகாலமு மஞ்சனக் குன்றமும்" (இரகு. இலவண,6). 2. பாம்பின் நஞ்சு; poison ejected by snakes. . 3. நிலவாகை; Tinnevelly senna. 4. நச்சுச் செடி (வசநாபி); aconite. (சா.அக.).

[ஒருகா. ஆலம்[2] + ஆலம் → ஆலவாலம் → ஆலகாலம் > skt. ālahāla. *அலம் → ஆலம். அலம் = வளைந்த தேட்கொடுக்கு, தேட் கொடுக்கிலுள்ள நஞ்சு.*

ஒ.நோ: அலம் → அலவன் = வளைந்த முன்கைக் கொடுக்குள்ளது.]

வடமொழியில் 'ஆலம்' என்னும் சொல்லுக்கு உடம்பினின்றும் வெளி வந்தது என்று பொருள் கூறுகின்றனர். வெளிவந்த தனைத்தும் நஞ்சாகாமையின் அது பொருந்தாது. நஞ்சு முறிக்கும் இயல்பால் நிலவாகையும், வசநாபியும் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

ஆலகாலம்போக்கி ālakālam-pōkki, பெ. (n.) நிலவாகை பார்க்க; see nila-vāgai.

[நஞ்சு முறிக்கும் ஆற்றலுடைமை பற்றி நிலவாகை இப்பெயர் பெற்றிருக்கலாம்.]

ஆலகாலவிடநிறம் ālakāla-viḍa-niṟam, பெ. (n.) கருப்புச் சித்திர மூலம்; blue- flowered lead wort.

[ஆலகாலம் + விடம் + நிறம்.]

கருங்கொடி வேலி பார்க்க; see **karuṅgodi-vēli.**

ஆலகாலவிடம் ālakāla-viḍam, பெ. (n.) 1. சாகாவுப்பு; a prepared salt intended for immortalising the body. (Although it may be considered to be a figment of imagination, yet the subject is very commonly dealt with in Siddha's science. The process is stated to have been held secret. 2. சவ்வீரம்; corrosive sublimate. (சா.அக.).

[ஆலகாலம் + Skt. visa > *த. விடம்.]*

ஆலகாலன் ālakālaṉ, பெ.(n.) சிவ பூதகணத் தலைவருள் ஒருவன் (அபி. சிந்.): one of the chief attendents of Śiva.

[ஆலகாலன் = சிவன், சிவனடியான்.]

ஆலகாலி ālakāli, பெ. (n.) காளி; Kāḷi. "அந்தரி யாமளை மயலை யால காலி" (அரிச்சந்.பாயிர. 7).

[ஆலகாலன் (சிவன்) மனைவி ஆலகாலி.]

ஆலங்கட்டி[1] ālaṅ-gaṭṭi, பெ. (n.) 1. மழைக்கல்; hail-stone. ஆலங்கட்டிகளைப் பொறுக்குகிறார்கள் (உ.வ.). 2. கல்மழை; frozen drops of rain. நேற்று ஆலங்கட்டி பெய்தது (இ.வ.).

க., து. ஆலிகல்; **ம.** ஆலிப்பழம்; **குட.** ஆலிகய்; **பட.** ஆனிகல்லு.

[ஆலம் + கட்டி.]

ஆலங்கட்டி[2] ālaṅ-gaṭṭi, பெ. (n.) **ஆலக்கட்டி** பார்க்க; see **āla-k-kaṭṭi.**

[ஆலக்கட்டி → ஆலங்கட்டி.]

ஆலங்கண்டனி ālaṉ-kaṇḍaṉi, பெ. (n.) **ஆலகண்டனி** பார்க்க; see āla-kaṇḍaṉi.

ஆலங்காட்டாண்டி ālaṅgāṭṭ(u)-āṇḍi, பெ. (n.) வரிக் கூத்துவகை (சில.3,13, உரை); a masquerade dance.

[ஆலங்காடு + ஆண்டி → ஆலங்காட்டாண்டி.]

ஆலங்காடு ālaṅgāḍu, பெ. (n.) திருவாலங்காடு (தேவா.); an ancient Śiva shrine in the North Arcot District. "ஆலங்காட்டு லாம்அத்தனே" (தேவா. 1:45:1).

[ஆலம் + காடு. ஆலம் = ஆலமரம்.]

ஆலங்காய்க்கிரந்தி ālaṅgāy-k-kirandi பெ. (n.) **ஆலங்காய்ப்புண்** பார்க்க; see **ālaṅgāy-p-puṇ.**

ஆலங்காய்ப்புண் ālaṅgāy-p-puṇ, பெ. (n.) மேகநோய் தொடர்பாக உடம்பு முழுவதிலும் கழற்சிக் காயைப் போல் புண்களுண்டாகி ஒவ்வொன்றாக வெடித்துக் குருதி வெளிப்பட்டுத் துன்பத்தை யுண்டாக்கும் நோய்; a skin affection, as in tertiary syphilis, marked by tumors of the shapes of bonduc nuts all over the body with an unbearable pain. (சா. அக.)

மறுவ. ஆலக்கொடி, ஆலக்கொடிஞ்சி, ஆலக்கச்சி, ஆல்கச்சி.

[ஒருகா. ஆலம்+கொடிச்சி. ஆலம்=நஞ்சு.]

ஆலங்கானம் ālaṅgāṉam, பெ. (n.) 1. தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போர் புரிந்த போர்க்களம், இப்பொழுது தலையாலங் காடென்று வழங்கப்படுகிறது (புறநா.); name of a battle field of the Pāndya king Nedunjeliyaṉ, now known as Tala-y-ālaṅgādu. 2. விந்திய மலை யடுத்த நருமதை யாற்றங்கரையிலுள்ள ஓர்இடம் (பெருங்.); place on the bank of the river Narmada, near Vindya hills. 3. விபுலகிரியின் பக்கத்திலுள்ள ஓர் இடம் (பெருங்.); a place near Vipulagiri..

[ஆலம் + கானம். ஆலம் = ஆலமரம்.]

ஆலங்குடி ālaṅguḍi, பெ. (n.) சோழ நாட்டிலுள்ள ஒரூர்; native place of the ancient Tamil poet Ālaṅguḍi Vaṅgaṉār, in Thañjāvūr Dist:

[ஆல்+அம்+குடி.]

ஆலங்குடி வங்கனார் ālaṅguḍi-vaṅgaṉār, பெ. (n.) கடைக்கழகப் புலவர்; a Tamil poet of the Sangam age.

[ஆலங்குடியில் பிறந்த வங்கன் என்னும் இயற்பெயரினர். ஆலங்குடி + வங்கன் + ஆர். (உ.ப.சு.) இவர் பாடினவாக நற்றிணையில் 230, 330, 400, குறுந். 45, அக. 106, புறம் 310 ம் கிடைக்கின்றன.]

ஆலச்சுவர் āla-c-cuvar, பெ. (n.). 1. ஆள்மட்டச் சுற்றுச் சுவர்; compound wall (C.E.M.). 2. சார்புச் சுவர்; retaining wall of the foot of a slope (C.E.M.).

[1. ஆரை → ஆர + சுவர் = ஆரச்சுவர் → ஆலச்சுவர். 2. அகலம் + சுவர் = அகலச்சுவர் → ஆலச்சுவர்.]

ஆலசுந்தரர் āla-sundarar, பெ. (n.) ஆலால சுந்தரர்; one of the names of Śiva. "ஆலசுந்தரர் பித்தவெனுஞ் சொற்பழி யாளர்" (வெங்கைக். 238).

[ஆலம் + Skt. Sundra > த. சுந்தரன் → சுந்தரர் (அர்-உ.ப.சு).]

ஆலடி[1] ālaḍi, பெ. (n.) 1. ஆலமரம்; banian tree. 2. புன்கு; poonga-oil tree, 3. மாவிலங்கு; lingam tree. (சா.அக.).

[அகல் → ஆல் + அடி = ஆலடி. மரம் அகன்று விரிந்திருப்பதால் அடிநிழல் தரவல்லது என்னும் பொருளதாகலாம்.]

ஆலடி[2] ālaḍi, பெ. (n.) ஊர்ப்பெயர்; place name.

[ஆல் + அடி.]

மரங்களின் அடியில் சில குடியிருப்புகள் தோன்றிப் பின் ஊரானது.

ஆலத்தி ālatti, பெ. (n.) 1. வழிபாட்டின்போது மங் கலப் பொருளாக வலமுறை சுற்றிக் காட்டப் படும் கருப்பூரத் திருவிளக்கு; ceremony of waving lighted camphor. 2. கண்ணேறு (திருஷ்டி) கழிப்பதற்காக முன்னால் நின்று இடமுறை யாகச் சுற்றப்படும் மஞ்சள்நீர் மங்கலத்தட்டு. அல்லது மஞ்சள் நீரிடை விளக்கிட்ட மங்கலத் தட்டு; ritual of waving turmeric water-plate to avert the blight of the eyes of unlucky persons on marriage or other special occasions, also in front of the idol, after the procession, before it is taken into the temple (W.).

[ஆல் + ஆற்று = ஆலாற்று → ஆலாத்து → ஆலாத்தி → ஆலத்தி. இனி ஆலாத்தி → ஆராத்தி → ஆரத்தி என்றுமாம். ஆலாற்றுதல் = சுற்றச் செய்தல்.]

ஆலத்தியெடுத்தல் என்னும் சொல்லாட்சி பொதுவாகச் சுற்றுதல் என்று பொருள்தரினும் வலஞ்சுற்றுதலையே மங்கல நிகழ்ச்சிகளில் குறிப்பதாகும். வலம் வருதல், வலஞ்சுற்றுக் கொடிகள், வலம்புரிச்சங்கு, வலக்கால் எடுத்து வைத்தல் என்னும் தொடராட்சிகள், நன்மை வெற்றி ஆகிய பொருள் களைக் குறித்தன. இடஞ்சுற்றுதல் தீமையின் அறிகுறியாகக் கருதப்பட்டது. இயந்திரங்களில் பொருத்தப்பட்டுள்ள திருகு மரைகள் வலம் சுற்றும் போது மரையேறுவனவாகவும், இடஞ்சுற்றும் போது கழல்வனவாகவும் அமைந்துள்ளமை காணலாம்.

உலகம் தன்னைத்தானே வலமாகச் சுழன்று கொள்கிறதென்பதும் அனைத்துக் கோள்களும் கதிரவனை வலமாகச் சுற்றுக்கின்றன என்பதும் மக்களின் மரபு வழிப்பட்ட நம்பிக்கை,நக்கீரனாரும் "வலனேர்பு திரிதரு" எனப்பாடுகிறார். கோயிலை அல்லது கருவறையை வலம் வருதல் இத்தகைய நம்பிக்கையால் வளர்ந்த வழக்கம்.

ஒன்றை வலம் வருதல் என்பது வலம் வரவேண்டிய பொருளை நோக்கித் தம் வலது தோள் இருக்குமாறு முன்னோக்கி வட்டப்பாதையில் இயங்குதலாகும்.

ஆலத்திகாட்டு—தல் ālatti - kāṭṭu–, 5 செ.கு.வி. (v.i.) ஆலத்தி சுற்றுதல்; wave the plate of turmeric water or lighted camphor. "பல்லாண்டங்கிசைக்கு கிற்பது மாலத்தி காட்டு கிற்பதும் வேந்தர்க்கே கடனதாயிற்று" (இரகு. குறை. 6).

[ஆலத்தி + காட்டு.]

ஆலத்தியெடு—த்தல் ālatti–y–eḍu–, 4 செ.கு.வி (v.i.) **ஆலத்திகாட்டு—தல்** பார்க்க; see ālatti - kāṭṭu.

[ஆலத்தி + எடு.]

ஆலத்திவழி—த்தல் ālatti–vaḻi–, 4 செ.கு.வி. (v.i.) ஆலத்தியெடுத்தல் (இ.வ.); wave light etc., before an idol or important personage. "வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டுங் கையிலேயிறே திருவாழிதரித்தது" (ஈடு, 1,8,9).

[ஆலத்தி + வழி.]

ஆலத்தூர்கிழார் ālattūr–kiḻār, பெ. (n.) கடைக்கழகப் புலவர்; a Tamil poet of the Sangam age. இவர் பாடியவை குறுந்தொகை. 112,350, புறம் 34,39, 69,225,324 ஆகிய பாடல்கள்.

ஆலப்பழுப்பு āla–p–paḻuppu, பெ. (n.) **ஆலம்பழுப்பு** பார்க்க; see **ālam–paḻuppu.**

[ஆலம்பழுப்பு →ஆலப்பழுப்பு.]

ஆலம்[1] ālam, பெ. (n.) 1. நீர்; water. "ஆலஞ்சேர் கழனி யழகார் வேணுபுரம்" (தேவா. 71,7). 2. கடல் (பிங்.); sea, ocean. 3. மழை (அக.நி.); rain. 4. பூவின் நீர்த் துளி; drops of water deposited on the petals of flowers.

ம. ஆலம்

[ஆல்[1] →ஆலம்.]

ஆலம்[2] ālam, பெ. (n.) 1. அகலம் (இ.வ.); breadth, width. (Loc.). **கச.**ஆடா. 2. ஆலமரம்; banyan tree. "சிறியதோர்வித்தின் ஆலம்" (கந்தபு. சூரனமைச். 125). 3. ஆலம்விதை; banyan seed. 4. மலர் (பிங்.); blossom, blown flower. 5. வானம்; sky. "ஆலத்தி னுடுக்கள் காட்டியருந்ததி காட்டுவார்போல்" (கைவல். தத்துவ.25). 6. புன்கு (பச்.மூ.); Indian beech. 7. மாவிலங்கம் (பச்.மூ.); lingam tree.

ம. ஆலம்; **க.** ஆல

[அகல் → ஆல் → ஆலம். ஆலம் = அகன்றிருப்பது.]

ஆலம்[3] ālam, பெ. (n.)1. கலப்பை (பிங்.); plough. 2. கலப்பைப் படை (ஆலாயும்) (கந்தபு. தாரக. 157); weapon shaped like a plough.

[அலம் → ஆலம். அலம் = வளைந்தது, வளைந்த வடிவுள்ள கலப்பை.]

ஆலம்[4] ālam, பெ. (n.) 1. கருமை; blackness. "ஆலக்கோலத் தினஞ்சு" (தேவா. 111,3). 2. நஞ்சு (திவா.); poison. "ஆலந்தான் உகந்து அமுது செய்தானை". (சுந்த.தேவா.) 3. நச்சுயிரி களினின்று வெளிவரும் நஞ்சு; any discharge of poisonous matter from venomous animals or creatures such as snakes. 4. தாளகம்; yellow arsenic, orpiment. 5. பாம்பு; snake. (ஆனந்தலகரி–24).

ம. ஆலம்.

[1. காளம் → ஆளம் → ஆலம் (கருமை). 2, 3, அலம் → ஆலம். அலம் = தேளின் கொடுக்கு.]

ஆலம்[5] ālam, பெ. (n.) 1. ஈயம் (பச். மூ.); lead. 2. துரிசு (சங்.அக.); blue vitriol.

[ஆல் → ஆலம்.]

ஆலம்[6] ālam, பெ. (n.) ஞாலம், உலகம்; world, universe. (செ.அக.).

ம. ஆலம்.

[ஞாலம் → ஆலம். **Arab.** ālam.]

ஆலம்[7] ālam, பெ. (n.) 1. அம்புக் கூடு; quiver. 2. மழு; battle–axe. "ஆலங்கணை யங்குலிசாயுத மாதியாக" (கந்தபு. தாரக. 157).

[அலம் → ஆலம். அலம் = வளைவு அல்லது வட்டம்.]

ஆலம்[8] ālam, பெ. (n.) மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த நீர்; ஆலத்தி நீர்; turmeric–lime water being waved before idol or at important function.

[ஆல் → ஆலம். ஆல் = நீர்.]

ஆலம்பம்[1] ālambam, பெ. (n.) 1. தூக்கம்; sleep. 2. நச்சுத் தன்மையுள்ள இலைகளைக் கொண்ட ஒரு வகைப் பூடு; a species of plant with poisonous leaves. (சா.அக.).

ஆலம்பம்[2] ālambam, பெ. (n.) 1. பற்றுக்கோடு; support. 2. வரி; tax 3. புகலிடம்: asylum. (கதி.அக.).

[ஆல் → ஆலம்பம்.]

ஆலம்பழுப்பு ālam-paluppu, பெ. (n.) பழுத்த ஆலம் இலை; yellow ripe leaves of the banyan tree.

[ஆலம் + பழுப்பு. ஆலம் = ஆலமரம்.]

ஆலம்பால் ālam-pāl, பெ. (n.) 1. ஆலமரத்தின் பால்; milky fluid extracted from the stem of the banyan tree. 2. தூய நீர்; pure water. 3. மழைநீர்; rain water. 4. ஆலங்கட்டியின் நீர்; water from the melting hail-stones. 5. பனிக்குடத்து நீர்; the amniotic fluid discharged from the uterus.

[ஆலம் + பால். ஆலம் = ஆலமரம், குளிர்ச்சி, குளிர்ந்த நீர்.]

ஆலம்பி ālambi, பெ. (n.) ஆலக்கொடி பார்க்க; see **āla-k-kodi.**

ஆலம்பேரிச்சாத்தனார் ālamberi-c-cāttanār, பெ. (n.) கடைக்கழகப் புலவருள் ஒருவர்; a Tamil poet of the Sangam age.

[ஆலம்பேரி + சாத்தனார். இவர் பாடியவை. நற். 152, 255, அகம் 47, 81, 143, 175.]

ஆலம்பொழில் ālam-polil, பெ. (n.) ஆல மரங்கள் செறிந்து விளங்கும் ஓர்ஊரின் பெயர்; a place name. "ஆலம் பொழில் அமர்ந்த பெருமான்".

[ஆலம் + பொழில்.]

ஆலம் விழுது ālam-viludu, பெ. (n.) ஆலமரத்தில் தொங்கும் விழுது; root hanging down from the branches of the banyan tree.

[ஆல் → ஆலம் + விழுது.]

ஆலமர்கடவுள் ālamar-kadavul, பெ. (n.) சிவன் (திவா.); Šiva, as Daksināmūrti, seated under a Kallāl tree. "எங்கள் ஆலமர் கடவுளன்றி யமரரில் யாவரம்மா" (கந்தபு. ததீசி. 20).

[ஆல் + அமர் + கடவுள்.]

ஆலமர் செல்வன் ālamar-šelvan, பெ. (n.) ஆலமர்கடவுள் பார்க்க; see ālamar-kadavul.

ஆலமரம் ālamaram, பெ. (n.) அகன்று பரவும் இயல்புடைய பெரிய மரம். இதன் விழுது நிலத்தில் ஊன்றிப் பருத்துத் தூண்களைப் போல் மரத்தின் சுற்றிலும் காணப்படும். வித்து மருந்துக்குப் பயன் படும். பாலும் பட்டையும் துவர்ப்பானவையா யிருத்தலால் பல்வலிக்கும் பல்துலக்கவும் பயன் படும். வெடித்த காலுக்குப் பாலடிப்பர். தொழு நோய்க்கும் நீரிழிவுக்கும் ஊதை (வாத) நோய்க்கும் இதன் பட்டை மருந்தில் சேர்க்கப்படும். கட்டிகளுக்கு இலையை வதக்கிக் கட்டுவர். இதன் பிசினில் எண்ணெய் கலந்து காதுப் புண்களுக்குப் பயன்படுத்துவர்; banyan tree It is an immense tree with branches spreading far and wide. It is common everywhere and it is remarkable for the singular property of letting a gummy kind of rootlet fall from its branches. These grow gradually down to the ground and from natural supports to the larger branches of the parent tree, forming a vast assemblage of pillar-like stems covering a considerable distance all around the original trunk. In old specimens it will be found that this is grown by the side of the peepul tree, when they will be regarded with great reverence by the people. It is the Hindu emblem of immortality.

The seed of the fruit is medicinally cooling and a tonic. The white glutinous juice from the stems is applied in tooth ache and also to the soles of the feet when cracked and inflamed. The bark given in infusion is a tonic used in diabetes. A bath using the bark of the root and the stem, is efficacious in leprosy and in mitigating pains in the limbs. Heated leaves from good poultices to abscesses, rootlets from the branches are used as tooth-brushes. The gum of this tree mixed with oil is used for lesion in the ear and for deafness.

The following are the different varieties:-

1. கல்லால் -stone banyan (title from the hardness of the wood),
2. குறுவால் - short banyan.
3. இச்சியால் (இத்தியால்) -chinese banyan.
4. சிற்றால் -small banyan.
5. கொடியால் - creeping banyan.
6. சீமையால் - foreign banyan (title from being introduced, from the Eastern peninsula) Indian caout chouc.
7. கருணியால் - another variety.
8. கோளியால் - large leaved yellow fig.
9. பேரால் - large or common banyan.
10. காட்டால் - wild banyan.
11. நீரால் - narrow leaved fig.

(சா.அக.).

ம. ஆலமரம்; **க.** ஆலமர; **தெ.** ஆலமானு; **துட.** ஆல்மேம்.

[அகல் → ஆல் + மரம் = ஆல்மரம் → ஆலமரம்.]

ஆலமுண்டோன் āla-muṇḍōṉ, பெ. (n.) நஞ்சுண்ட சிவபெருமான்; Šiva, as having swallowed the deadly poison.

[ஆலம் + உண்டோன்.]

ஆலயம் ālayam, பெ. (n.) கோயில்; temple.

[ஆலையம் → ஆலயம்.]

ஆலல்[1] ālal, பெ. (n.) 1. ஒலி (சூடா.); sound, cry. 2. மயிலின் குரல் (பிங்.); screech of the peafowl. 3. ஆடல்; dancing. "அணிக்குல மஞ்ஞைக ளகவி யாலுவ" (சேதுபு. கந்த. 3, 4.). 4. ஆரவாரித்தல்; shouting, roaring, bustle. "மகிழ் சிறந்தாலும் பீலி மஞ்ஞையி னிகலி" (பெரும்பா. 330).

[ஆல் + அல். ஆல் = அசைதல், ஒலித்தல்.]

ஆலல்[2] ālal, தொ.பெ. (vbl.n.) 1. சேருதல், பொருந்தல்; joining, fixing. "தேராலும் எழுபரியோன்" (சூத. சிவமா. 7,10).

[ஆல் + அல். ஆல் = அசை, பொருந்து.]

ஆலலம் ālalam, பெ. (n.) திருமணத்தின் போது மணமகன் மணமகளுக்குத் தரும் கூறைப் புடவை; a garment (saree) given by the bridegroom to the bride, at the time of marriage (W.).

[ஆலல் + அம்.]

ஆலவட்டம் āla-vaṭṭam, பெ. (n.) 1. பெருவிசிறி, கால்செய் வட்டம்; circular fan made of cloths, fragrant roots or palm leaves, carried in procession before idols and great personages. "படுவேய் வெள்வளையமுந் தண்பட் டாலவட்டமும்" (பாரத. காண்ட. 14). 2. விசிறி; small fan. "வீசாலவட்ட மரிவைய ரேந்தி யாற்ற" (சீவக. 839).

ம. ஆலவட்டம் Skt. ālāvarta

[அகலம் → ஆலம் + வட்டம் – ஆலவட்டம்.]

ஆலவருமுத்து āla-varu-muttu, பெ. (n.) உயர்வகை முத்து; superior class of pearls.

ஆலவன் ālavaṉ, பெ. (n.) 1. திருமால்; (கந்தபு. சூரனமைச். 43),; Viṣṇu, as lying on a floating banyan leaf at the submersion of the universe by flood. 2. நிலவு; moon, as one who came out of the sea.

[1. ஆல் + அவன் = ஆல இலையில் இருக்கும் திருமால். 2. ஆல் = நீர், குளிர்ச்சி, ஆலவன் = குளிர்ந்த பாற்கடலில் தோன்றிய நிலவு.]

ஆலவாட்டு—தல் āla-vāṭṭu-, 5. செ.குன்றாவி- (v.t.) சிறிது காயச் செய்தல், காயப் போடுதல்; to dry a little in the sun as boiled grain, dry to sufficient degree.

[அகல → ஆல + வாட்டு. வாட்டுதல் = காயச்செய்தல். ஆல = அகலமாக, பரவலாக, மேம்போக்காக, பதமாக, குறைவாக, சிறிது நேரம் வரை.]

ஆலவாட்டு āla-vāṭṭu, பெ. (n.) வெயிலிற் பதமாகக் காயவைத்தல்; drying of a thing in the sun. (w.). ஆலவாட்டுப் பதத்திலே எடுத்து நிழலில் வை. (உவ.).

[அகல→ ஆல +வாட்டு = ஆலவாட்டு.]

ஆலவாட்டு-தல் பார்க்க; see āla-vāṭṭu-,

உலகவழக்கில் ஆல வாட்டுதல்→ஆல் வாட்டுதல் எனக் கொச்சையாக வழங்கி வருகிறது.

ஆலவாட்டுப்பதம் ālavāttu-p-padam, பெ.(n.) பதமாகக் காயவைத்தல்; being suitably dried.

[ஆல+வாட்டு+பதம்.]

ஆலவாய் ālavāy, பெ.(n.) 1. பாம்பு; serpent, as having poison in its mouth. "மேருக்கோட்டி லலவாய் நெடுநாண் பூட்டி" (திருவிளை. சோழனை.13). 2. மதுரை (தேவா.); Madurai the capital city of Pāṇḍya, encircled by a coiled serpent which brought its mouth and tail together to indicate the boundaries of the city. (செ.அக.).

[ஆலம்+வாய்.]

ஆலவாலநண்டு ālavāla-naṇḍu, பெ.(n.) வயல்நண்டு; crab found in the fields.

[ஆலவாலம் + நண்டு.]

ஆலவாலம் āla-vālam, பெ.(n.) 1. மரத்தடியில் பாத்தி; a trench for water, round the foot of a tree (.w.). ம. ஆலவாலம். 2. சிறுபாத்தி; garden beds, or plats made with ridges round them so as to retain water (w.)." ஆலவாலத் தவிர்மதியாற் புனல் கால வாய்ந்த கதிர்மணி முல்லையின்" (நைடத. அன்ன. தூது.40).3. வயல்; corn field. 4. விளைநிலம் (சூடா.); cultivable field.

Skt. ālavāla.

[ஆலம்+வாலம். ஆலம்=நீர். வாலம் =நீண்டது, வளைந்தது.]

ஆலவிடம் āla-vidam, பெ.(n.) ஆலகால நஞ்சு; ālahāla poison.

[ஆலம்+ விடம். Skt. visa. > த. விடம்.]

ஆலவிடமுண்டான்வீடு ālavidam-undān-vīdu, பெ. (n.) கயிலைமலை; mount Kailas, the abode of Śiva.

[ஆலவிடம்+உண்டான்+வீடு.]

ஆலவிருக்கை ālavirukkai, பெ.(n.) 1. ஆலமரம்; banyan tree. 2. ஆதொண்டை; a thorny caper. (சா. அக.).

[ஒருகா. ஆலவிருட்சம் → ஆலவிருக்கை.

Skt. vruksa > த. விருட்சம்=மரம்.]

ஆலவூணி āla-vūni, பெ. (n.) உமையவள்; Pārvathi, consort of Śiva. "குணவதி யாலவூணி யபிராமி" (திருப்பு. 393).

[ஒருகா. ஆலம்+ஊண்+இ – ஆலவூணி=ஆலத்தை (நஞ்சு) உண்டவள். சிவபெருமானின் உடம்பில் பாதியாக இருக்கும் இமையவள். சிவன் உண்ட நஞ்சைத் தானும் உண்டவளாதலால் பெற்ற பெயர்.]

ஆலன் ālan, பெ (n.) 1. சிவன்; Śiva. "ஆலனிவ்வழி போந்த வதிசயம்" (தேவா 2. கூடலையா. 9.). 2. சாலிவாகனன், சாதவாகனன்; Sālivāhana alias Sāthavāhana. 3. ஏர்ப்படையன், பலராமன்; Balarāma, having plough as his weapon.

[ஆலம் +அன் – ஆலன் = நஞ்சுண்டவன், சிவன்.

2. சாலி வாகன மன்னன், ஆலன் என்னும் சிவன் பெயரை, இயற்பெயராகக் கொண்டிருந்திருக்கலாம். 3. அலம் → ஆலம். அலம் = கலப்பை, ஏர்.]

ஆலனந்தலன் ālanandalan, பெ. (n.) ஆலிலையில் துயின்ற திருமால்; Visnu, as having slept on a floating banyan leaf, during great deluge.

[ஆல் + அனந்தலன்.]

ஆலா ālā, பெ. (n.) 1. ஒரு பெரிய கடற்பறவை. இதன் தலை, கழுத்து, அடிவயிறு முதலியன தூய வெள்ளையாயும் சிறகுகள் வாலிற்குமேல் நீண்டு மிருக்கும். கடற்பாம்பு இதற்கிரையாகும்; large water-bird found in sea-coasts, white-bellied and greybacked sea eagle. It lives on sea-snakes. 2. ஒரு நீர்ப்பறவை; (பட்டினத்தடி. திருவொற்றி. 8). water-bird found near marshy soils and living on insects. (சாக. அக.).

[ஒருகா. ஆல் – ஆலா= மீன் பிடிப்பதற்காகச் சுற்றிப் பறக்கும் பறவை.]



ஆலாகதம் ālagadam, பெ. (n.) வெண்மாதுளை; white species of pomegranate.

[ஒருகா. ஆல் + ஆகம் – ஆலாகம் → ஆலாகதம். ஆல் = நீர், வெண்மை. ஆகம் = உடம்பு. ஆலாகதம் = வெண்மையான தோலுடையது அல்லது தோற்ற முடையது. யாக்கை → ஆக்கை → ஆக்கதம் → ஆகதம் =(உடம்பு).]

ஆலாகலம் ālāgalam, பெ. (n.) 1. ஆலகாலம் பார்க்க; see **ālagālam**. "கடியதோ ராலாகலவெள்ளம் போலக் கக்கினான்" (திருவிளை. நாக.17).

[ஆலகாலம் → ஆலாகலம்.]

Skt. hālahāla

ஆலாங்கட்டி ālāṅgatti, பெ. (n.) **ஆலங்கட்டி** பார்க்க; see ālaṅgatti. "மெய்ம்மயக்கமும் போக்கும் கக்குமா லாங்கட்டிகாண்" (பதார்த்தகுண.12).

ஆலாட்டம் ālāttam, பெ. (n.) அழைத்தல், ஒலித்தல்; calling, shouting (சேரநா.).

க. ஆலாட.

ஆலாட்டுதல் ālāttu-, 5. செ.குன்றாவி. (v.t.) தவசங்களை நிழலிற் காய வைத்தல் (நெல்லை.); to dry grains in the shade. (Tn.).

[ஆலவாட்டு → ஆலாட்டு.]

ஆலாத்தி ālātti, பெ. (n.) ஆலத்தியெடுத்தல்; camphor light, or turmeric -lime water in a plate, waved before an idol or any important personage. "ஆலாத்தி சுழற்ற லென்கோ" (சௌந்தரி, 103).

*[ஆல் + ஆற்று – ஆலாற்று + இ – ஆலாற்றி → ஆலாத்தி = சுற்றச் செய்தல், சுற்றிக் கழிக்கின்ற வினை. **ஆலத்தி** பார்க்க; see ālatti.]*

ஆலாத்து ālāttu, பெ. (n.) 1. அம்மாறு, கப்பலின் பெருங்கயிறு; cable, large rope. 2. ஒரு பறவை; bird. 3. கப்பல்; ship. 4. வெளவாற்கொடி முடியும் கயிறு (த.சொ.அக.); a rape.

[ஆல் → ஆலாத்து. ஆல் = பறத்தல், நீளுதல், செல்லுதல். ஆலாத்து = அவ்வியல்புகளுடைய பெருங் கயிறு, பறவை, கப்பல்.]

ஆலாப்பற -த்தல் ālā-p-para-, 3. செ.கு.வி. (v.i) 1. ஆலாப் பறவையைப் போலச் சற்றேனும் ஒழிவும் களைப்புமின்றித் திரிதல்; used figuratively to men who wander about restlessly as ālā bird. 2. ஆலிலை காற்றில் பறத்தல்போல, உணவின்றித் துயருற்றுத் திண்டாடுதல்; to be in utter distress, to wander about like a dry banyan leaf to and fro by the wind. (சா.அக.).

ம. ஆலாபறக்குக.

[ஆல் → ஆலா + பற. ஆல் = சுற்று, திரி, பற.]

ஆலாலசுந்தரர் ālāla-sundarar, பெ. (n.) சிவன்; Lord Śiva, enshrined at Madurai Temple. (கதி.அக.).

ஆலாலம் ālālam, பெ. (n.) 1. நஞ்சு, கடலிற் பிறந்த நஞ்சு; poison, poison produced at the time of the churning of the ocean. "ஆலால முண்டான் அவன் சதுர்தா னென்னேடீ" (திருவாச.11.8). 2. வெளவால்; bat in common. 3. துரிஞ்சில் என்னும் வெளவால்; small house-bat.

ம. ஆலாலம். **Skt.** hālāhalam.

[ஆல் + ஆலம் = ஆலாலம். (தன்மை பற்றி வந்த அடுக்குச் சொல்.) 1. ஆல் = நீர், நீர் நிலை, நீர் நிலையின் நிறமான கருநீலம், கருநீல நிறமுள்ள நஞ்சு. கடலில் தோன்றிய நஞ்சு. 2, 3. ஆல் = பறக்கும் இயல்புள்ள பறவை.]

ஆலாலர் ālālar, பெ. (n.) ஆலாலசுந்தரர், Lord Śiva. "ஆலாலர் தோற்றரவு" (சி.சி.1,61,சிவஞா.).

[ஆலாலம் → ஆலாலன் → ஆலாலர்.]

ஆலி[1]-த்தல் āli-, 4 செ.கு.வி. (v.i.) 1. ஒலித்தல்; to make a noise, roar. "வெங்கூற் றாலிப்ப" (பு.வெ.4,4). 2. நீர்தூவுதல்; to spray water. "ஆலித்தே வாளி கண் மீண்டே யுறுகாலை" (கந்தபு.சூர.401). 3. களித்தல்; to rejoice. "ஆலிக்கு மந்தணர் வாழ் கின்ற" (திருப்பல்.9:8.) 4. செருக்குறுதல்; to be proud. "பகலவ னோடிகல் செயக்கருதி யிருடிரண் டாலித் தெழுந்தன" (அரிச்.விவாககா.11) (த.சொ. அக.).

ம. ஆலிக்குக; **க.** ஆலிடு; **தெ.** ஆலின்சு.

[ஆல் → ஆலி.]

ஆலி[2] āli, பெ. (n.) 1. மழைத்துளி (சூடா.); rain-drops. 2. ஆலங்கட்டி; hail. "ஆலிபோல்...முத்திற்கும்" (சீவக.2786). 3. தலைப்பெயல் மழை (பிங்.); opening shower of the rainy season. 4. அமுதம்; nector. (த.சொ.அக.).

க. ஆலி, ஆணி, ஆரி; **பட.** ஆனிகல்லு; **கோத.** அரகசு; **தெ., குரு., மால்., குட.** ஆலி; **து.** ஆலிகல்லு; **குவி.** ஆஜி. **பர்.** ஏதிர், ஏயிர்.

[ஒருகா: ஆலித்துப் (ஒலித்து) பெய்யும் மழை நீரும், ஆலங்கட்டி மழையும் ஆலி எனப் பெயர் பெற்றிருக் கலாம். மழைநீர் அமுதம் எனப்படுவது மரபு "தான் அமிழ்தமென்று உணரற்பாற்று" -குறள்.]

ஆலி[3] āli, பெ. (n.) 1.காற்று (அக.நி.); wind. 2. பூதம்; a goblin, ghost.

[அகல் → ஆல் → ஆலி =பரவி வீசும் காற்று, பெருத்துப் பருத்துக் காணப்படும் பூதம்.]

ஆலி[4] āli, பெ. (n.) வரம்பு; low mud ridge put up to separate the fields.

skt. āli

[ஆல் = நீளுதல். ஆல் → ஆலி = நீண்ட வரம்பு.]

ஆலி[5] āli, பெ. (n.) 1.தோழி; maid attendent. 2. தொடர்ச்சி; continuity. 3.கூட்டம்; group, crowd. (த.சொ.அக.).

Skt. āli

[ஆல் = சுற்றுதல், சூழுதல், கூடுதல், தொடர்தல். ஆல் → ஆலி = தலைவியைச் சூழ்ந்திருக்கும் தோழி மார், பின்தொடரும் தோழியர் கூட்டத்தில் ஒருத்தி, கூட்டம்.]

ஆலி[6] āli, பெ. (n.) 1. கள்; toddy. "தேனுமாலியுந் தீமிசைச் சிந்தியே" (கந்தபு. அசுரயாக. 71).

[அல் → ஆல் = குளிர்ந்த நீர். ஆல் → ஆலி = குளிரப் புளித்த கள்.]

ஆலி[7] āli, பெ. (n.) 1.தேள்; scorpion. 2. தேனீ; bee. 3. கலப்பை; plough.

Skt. āli

[அல் → ஆல் → ஆலி = வளைந்த கொடுக்குள்ள தேள், தேனீ, வளைவான கலப்பை. ஒ.நோ: அல் = அலவன்; வளைந்த காலுள்ள நண்டு.]

ஆலி[8] āli, பெ. (n.) 1. கண்மணி; pupil of the eye. 2. கண்; eye itself. 3.கண் எரிச்சல்; inflammation of the eye. (கருநா.)

க. ஆலி

[ஆலல் = சுழலல். ஆலி = உருண்டது, திரண்டது. உருண்டவடிவ நீர்த்திவலை, உருண்ட வடிவுள்ள கண்]

ஆலிகன் āligan, பெ. (n.) 1. உழவன்; tiller. 2. கலப்பை போன்ற ஆய்தம் கொண்டு போர் செய்பவன்; one who fights with a weapon like plough. (த. சொ. அக.).

[அல் → அல → அலவன் → ஆலவன் → ஆலிவன் → ஆலிகன்.]

ஆலிகாசம் āligāsam, பெ. (n.) பச்சைக்கடலை; raw bengal gram. (சா. அக.).

[ஒருகா. ஆல் + காசம். ஆலி = ஈரமுள்ள, பச்சையான காய் . காய்ச்சம் → காசம். (முற்றியது, திரண்டகாய்).]

ஆலிகை āligai, பெ. (n.) அகலியை (கம்பரா. நட்புக். 6); Akalyā.

[அகலிகை → ஆலிகை. Skt. Akalyā]

த. அகலியை > அகலிகை.

ஆலிஞ்சரம் āliñjaram, பெ. (n.) நீர்ச்சாடி ; water-jug, water-pot.

[ஆலி = நீர். ஆலி → ஆலிஞ்சரம்.]

ஆலிடம் āliḍam, பெ. (n.) தெருச்சிறகு (திவா.); street row.

[ஒருகா. அகல் + இடம் – அகலிடம் → ஆலிடம்.]

ஆலிந்தகி ālindagi, பெ. (n.) அணில்; squirrel.

[ஒருகா: ஆலி → ஆலிந்தகி = தேட்கொடுக்குப்போல் வளைந்த வாலுள்ளது.]

ஆலிநாடன் āli-nāḍan, பெ. (n.) திருமங்கையாழ்வார் (திவ். பெரியதி. 3,4,10); Thirumangai-y-ālvār, who was the chief of the region about Tiruvāli in the Chōla Kingdom.

*[ஆலிநாடு → ஆலிநாடன். **ஆலிநாடு** பார்க்க,* see āli-nādu.]

ஆலிநாடு āli-nāḍu, பெ. (n.) சீர்காழிக்கு அண்மையிலுள்ள ஊர்; town near Seerkāli in Tanjore District

[ஆலி + நாடு. திருமங்கையாழ்வாரால் ஆளப்பட்டபகுதி.]

ஆலிநீர் āli-nīr, பெ. (n.) 1. குளிர்ந்த நீர் ; cold water. 2. மஞ்சின் நீர் (மழை); rain. 3. கண்ணீர் ; tears.

க. ஆலிநீர்

[ஆலி = ஆலங்கட்டி, குளிர்ந்த நீர். ஆலி + நீர்.]

ஆலிப்பு ālippu, பெ. (n.) ஆரவாரம்; great noise, uproar. "ஆலிப்பாலடுத் தந்நூல்களும் விரித்தே" (தாயு. ஆகார. 9).

ம. ஆலிப்பு; **க.** ஆல், ஆலு, ஆர்

[ஆல் → ஆலி → ஆலிப்பு.]

ஆலியகம் āliyagam, பெ. (n.) சிறுகுறிஞ்சா (மூ. அ.); edible and medicinal creeper.

[ஒருகா. ஆரி → ஆரியகம் → ஆலியகம். அரு → அரி → ஆரி = அருகியது, குறுகியது, சிறியது.]

ஆலியப்பறை āliya-p-parai, பெ. (n.) தாழ்த்தப்பட்டோருள் ஒரு வகுப்பார் (வின்.); a class of Scheduled Caste.

[ஆல் = ஆல நாடு.]

ஆலியார் āliyār, பெ. (n.) கடைக்கழகப் புலவருள் ஒருவர்; one of a poets of Sangam age.

[ஒருகா. ஆலி என்னும் ஊரினராகலாம். இவர் பாடியது புறம் 298.]

ஆலிலைத்துயின்றோன் ālilai-t-tuyiṉṟōṉ, பெ. (n.) 1. ஒருவகை செய்நஞ்சு, காய்ச்சற் பாடாணம்; a kind of prepared arsenic. 2. கண்ணன்; Viṣnu.

[ஆல் + இலை + துயின்றோன். 1. மருத்துவர் இட்ட குழூஉக் குறிப் பெயராகலாம். 2. ஆலிலையில் துயின்றவனாகக் கருதப்படும் கண்ணன்.]

ஆலிலைபோலொட்டல் ālilai-pōl-oṭṭal, பெ. (n.) வயிற்றுக் கழிச்சலுக்குப் பிறகு வயிறு ஆலிலை போல் ஒட்டிக் காணப்படுதல்; (figuratively) stomach appearing quite flat and incurved after a prolonged diarrhoea. (சா. அக.).

[ஆல் + இலை + போல் + ஒட்டல்.]

ஆலின்மேற் பள்ளி கொண்டோன் āliṉ – mēṟ – paḷḷi – koṇḍōṉ, பெ. (n.) 1. **ஆலிலைத் துயின்றோன்** பார்க்க; see ālilai-t-tuyiṉṟōṉ. 2. கண்ணன்; Viṣnu.

[ஆல் + இன் + மேல் + பள்ளி + கொண்டோன்]

ஆலின்மேற் புல்லுருவி āliṉ – mēṟ – pulluruvi, பெ. (n.) 108 கற்ப மூலிகைகளுள் ஒன்றானதும், நச்சுப்பாக நோயைத் தீர்க்க வல்லதும், தன் வயப்படுத்த உதவுவ தாகக் கருதப்படுவதுமான ஆலமரத்துப் புல்லுருவி; the mistletoe of the banyan tree . It is classified as one of the 108 drugs intended for rejuvenation (சா. அக.).

[ஆல் + இன் + மேல் + புல்லுருவி.]

ஆலின்மை āliṉmai, பெ. (n.) இடம்புரிக்காய்; plant with screw-like capsules. (சா. அக.).

[ஆல் = சுற்றுதல், வலமாகச் சுற்றுதல். ஆல் + இன்மை = வலமின்றி இடமாகச் சுற்றுதல்]

ஆலீடம் ālīḍam, பெ. (n.) நால்வகை விற்போர் நிலைகளுள் ஒன்று, இடக்கால் முந்துறுத்து வலக்கால் மண்டலிக்கும் வில்போர் நிலை (பிங்.); position of an archer in which the left leg is put forward and the right knee is bent, one of the four vilpōr – nilai. "வலக்கான் மண்டலித் திடக்கான் முந்துறு மதன் பெய ராலீட நிலையதாகும்" (திவா.).

[ஆல் + இடு – ஆலிடு → ஆலீடு → ஆலீடம். ஆலிடு = வளைந்திடுதல், கால் மண்டலித்திடுதல்.]

ஆலு[1]–தல் ālu–,5செ.கு.வி. (v.i.) 1. ஒலித்தல்; raise a noise, cry aloud. "அன்னச் சேவல் மாறெழுந் தாலும்" (புறநா. 128,4). 2. களித்தல்; to rejoice. (திவ். திருமாலை, 14. வியா.). 3. ஆடுதல்; dance. "கரை நின்றாலு மொருமயில் தனக்கு" (மணிமே. 4,11).

ம. ஆலுக

[ஆல் → ஆலு.]

ஆலு[2]–தல் ālu–, 5 செ.கு.வி. (v.i.) 1. நிறைதல் (த.சொ.அக.); to become full. 2. தங்குதல்;abide. (கலித். 36,2,உரை).

[ஆல் → ஆலு = சூழ்தல், நிறைதல், தங்குதல்.]

ஆலு[3] ālu, பெ. (n.) நீர்க்குடம் (வின்.); pitcher, a small water jar (W.).

ம., க., ஆலு.

[ஆல் → ஆலு. ஆல் = நீர்.]

ஆலு[4] ālu, பெ. (n.) ஆந்தை (சா. அக.); owl.

ம. ஆலு

[ஆல் → ஆலு = ஒலி எழுப்பிக் கொண்டிருக்கும் பறவை, ஆந்தை.]

ஆலு[5] ālu, பெ. (n.) 1. கருங்காலி மரம்; ebony tree. 2.பல்; tooth. 3.கிழங்கு; yam.

ம. ஆலு

[ஒருகா. ஆல் → ஆலு = வளைவுடையது. வளைந்த மரம், வளைந்த கோரைப்புல், வளைந்த கிழங்கு.]

ஆலுகம் ālugam,பெ. (n.) 1. அறுசுவைகளுள் புளிப்புத் தவிர்ந்த ஏனை, இனிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, துவர்ப்பு எனும் ஐஞ்சுவைகளின் கலப்பு; a mixure of five of the six tastes excepting sour viz. sweet, saltish,pungent,bitterandastringent. 2. உண்ணத்தக்க ஒரு கிழங்கு; an esculent root.

[ஒருகா. 1. ஆல் → ஆலு → ஆலுகம். ஆலுதல் = சூழ்தல், நிறைதல், கலத்தல். 2. ஆலு[2] பார்க்க; see ālu[2]]

ஆலேசிதம் ālesidam, பெ. (n.) இறங்கழிஞ்சில்; sage–leaved ālangium. It is so called from the notion that when the fruits fall, they scatter far and wide. (சா.அக.)

[ஒருகா. ஆல் → ஆலே → ஆலேசிதம். ஆலுதல் = சுற்றுதல், சிதறுதல். முற்றிய காய்கள் சிதறும் இயல்புடைய இறங்கழிஞ்சில்.]

ஆலை[1] ālai, பெ. (n.) 1.கரும்பாலை; sugar – cane press. "ஆலை நீள் கரும் பன்னவன் றாலோ" (திவ். பெருமாள். 7,1). 2. கரும்பு; sugar–cane. "ஆலை யஞ்சிலைவேள்" (கந்தபு. காமத்க.90). 3. கருப் பஞ்சாறு; juice of sugar–cane.

க. ஆலெ. **ம.**ஆல; **குட.** ஆலெ

[ஆல் → ஆலை. ஆல் = சுற்று, சுழற்று. ஆலை = கரும்பாட்டுதற்காகச்சுற்றும்பொறி. அதன்வாய்ப்பட்ட கரும்பு, அதன் சாறு.]

ஆலை[2] ālai, பெ. (n.) கள் (பிங்.); toddy, spirituous liquor, fermented liquor.

Skt. hālā

[ஆல் → ஆலை. ஆல் = குளிர்ந்த நீர், குளிர்ந்து புளித்த கள்.]

ஆலை[3] ālai,பெ, (n.) 1. சாலை; hall, apartment. "ஆலைசேர்வேள்வி" (தேவா. 844,7). 2. யானைக் கூடம்; elephant stable. "களிறு சேர்ந்தல்கிய வழுங்கலாலை" (புறநா. 220,3).

ம.ஆல **க.** ஆலான, ஆளான .

[ஆலை = ஆடு மாடுகள் அடைத்து வைக்கும் தொழுவம், யானையைக் கட்டுந் தறி.]

ஆலை[4] ālai, பெ. (n.) ஆலமரம்; banyan tree.

க. ஆலெ

[அகல் → ஆல் → ஆலை.]

ஆலை[5] ālai, பெ. (n.) தொல்லை, துன்பம்; affliction, distress.

[ஆல் → ஆலை = சுற்றுதல், சுழலுதல், மனச் சுழற்சி, கவலை, துன்பம், தொல்லை.]

ஆலை[6] ālai, பெ. (n.) நீராரை (இ.வ.); aquatic crotogamus plant (Loc.).

[ஆல் – ஆலை. ஆல் = நீர்.]

ஆலை[7] ālai, பெ. (n.) ஒருவகைக் கிட்டித் தண்டனை (வின்.); a kind of torture.

[அலை → ஆலை.அலை = துன்புறுத்து.]

ஆலை[8] ālai, பெ. (n.) 1. கொல்லைப்புறம்; farm house. 2.செங்கற் சூளை; kiln. (சேரநா.).

ம. ஆல

[அகல் – ஆல் – ஆலை.]

ஆலை[9] ālai, பெ. (n.) மதில்; compound, rampart. திருச்சுற்றாலை மண்டபம் (உ.வ.); pavilion.

[ஆலுதல் = சுற்றுதல். ஆல் → ஆலை.]

ஆலைக்கரும்பு ālai-k-karumbu, பெ. (n.) வெண் கரும்பு; white variety of sugar-cane.

[ஆலை + கரும்பு. ஆலை = நீர், நீர் போல் தெளிந்த வெண்மை.]

ஆலைக்குழி ālai-k-kuḻi, பெ. (n.) கரும்பாலையில் சாறு தங்கும் அடிக்கலம்; receptance for the juice in a sugar-cane press.

[ஆலை + குழி.]

ஆலைத்தொட்டி ālai-t-toṭṭi, பெ. (n.) கருப்பஞ்சாறு காய்ச்சும் சால்; cauldron for boiling sugar-cane juice.

[ஆலை + தொட்டி.]

ஆலைநிம்பம் ālai – nimbam, பெ. (n.) சருக்கரை வேம்பு; margosa tree characterised by its sweetness after a lapse of 100 years. This is one of the 108 drugs intended for rejuvenation according to Tamil medical science (சா. அக.).

[ஆலை+ நிம்பம். ஆலை= கரும்பின் சாறு போன்ற இனிப்பு. நிம்பம் = வேம்பு.]

ஆலைபாய்–தல் ālaipāy–, 2 செ.கு.வி. (v.i.) 1. ஆலை யாட்டுதல்; to work a sugar-cane mill. "ஆலை பாயோதை" (சேதுபு.நாட்டு.93). 2. அலைவுறுதல்; to move, toss as a ship. 3. மனஞ்சுழலுதல்; to be undecided, vacillating. "நெஞ்சம் ஆலைபாய்ந் துள்ள மழிகின்றேன்" (திருவருட். விண்ணப்பக் கலி. 406).

[ஆலை = கரும்பாலை. ஆலைபாய்தல் = கரும்பாலைபோல் மனம் ஓய்வின்றிச் சுழலுதல்.]

ஆலைமாலை ālai–mālai, பெ. (n.) 1. அலைச்சல், வருத்தம்; distress, vexation. 2. மயக்கம்; bewilderment (W.).

[1. அலை → ஆலை. மலை → மாலை. 2. ஆலை மாலை = சுற்றுவது போன்ற மயக்கம். எதுகை மரபிணைச் சொல்.]

ஆலையடி–த்தல் ālai–y–aḍi–, செ.கு.வி. (v.i.) **ஆலை யாட்டு–தல்** பார்க்க; see **ālai–y–āṭṭu–**.

ஆலையம்[1] ālaiyam, பெ. (n.) 1. திருச்சுற்றுகளைக் (சுற்றுமதில், சுற்றாலை) கொண்ட பெருங்கோயில்; temple having prakars. (கதி.அக.).

ம. ஆலயம் (கோயில்)

[ஆல்[1] → ஆலை = சுற்றிவருதல், சுற்று மதில், மதிலகத்துக்கோயில். ஆலை → ஆலையம். ஆலை = கோயிலின் சுற்றுமதில்.]

ஆலையம்[2] ālaiyam, பெ. (n.) 1. நெடுங்கூடம்; hall. 2 வீடு; house. 3. நெடிய வீடு; long house. 4. தங்குமிடம்; resting place. 5. நகரம்; city. 6. யானை கட்டுமிடம்; stable for elephant. 7. யானைக் கூட்டம்; herd of elephants. (கதி. அக.).

[ஆல்[3] → ஆலை → ஆலையம். ஆல் = நீள், நெடுகச்செல். நீண்ட கூடமும், நெடிய வீடும் ஆலையம் எனப்படும். யானை கட்டும் நெடுந்தறியும், அங்குத் திரளாகக் கட்டப்பட்டிருக்கும் யானைக் கூட்டமும் இடவாகுபெயரால் சுட்டப்பட்டன.]

ஆலையம்[3] ālaiyam, பெ. (n.) மூச்சிழுத்தல், பூரகம்; scientific inhaling or drawing of breath. (சா.அக.).

ஆலையாட்டு–தல் ālai–y–āṭṭu–, 15. செ.கு.வி. (v.i.) கரும்பாலைச் சுழற்றுதல், இயக்குதல்; to work a sugar-cane press.

க. ஆலெயாடு

[ஆலை + ஆட்டு.]

ஆலையோட்டு–தல் ālai-y-ōṭṭu-, 15 செ.கு.வி. (v.i.) **ஆலையாட்டு–தல்** பார்க்க; see ālai-y-āṭṭu-.

[ஆலை + ஓட்டு.]

ஆலோடி ālōḍi, பெ. (n.) **ஆளோடி** பார்க்க; see **ālōḍi.**

ஆலோலம் ālōlam, பெ. (n.) 1. நீரொலி (அக.நி.); sound of gushing water. 2. புள்ளோச்சும் ஒலிக்குறிப்பு; repeated notes or expression employed to drive away birds from corp. "பூவைகாள் செங்கட் புறவங்கா ளாலோலம்" (கந்தபு.வள்ளி.54). 3. அசைதல், அலைதல் (த.சொ.அக.); move, wander. 4. நடுங்கல், தடுமாற்றம்; trembling, agitation (W.).

ம. ஆலோல

[ஆல + ஒலம். 1. ஆல் = நீர். 3,4. அல் → ஆல் = அசைதல், நடுங்குதல்.]

ஆலோன் ālōṉ, பெ. (n.) நிலவு (சந்திரன்); moon. "கிளைக்கடல் வளைவு மாலோன் கிளருடு வளைவும்" (இரகு.குறை.9).

[ஆல்[1] → ஆலோன். ஆல்=குளிர்ந்த நீர், ஆலோன் = குளிர்ந்த நீர் போன்ற தன்மையுடைய நிலவு.]

ஆவ āva, இடை. (int.) 1. இரக்கக்குறிப்பு; term expressive of pity. "நாயினேனை யாவ வென் றருளுநீ" (திருவாச. 5.74.) 2. அடைக்கலக் குறிப்பு; term expressive of surrender. "நஞ்சமஞ்சி யாவ வெந்தாயென் றவிதாவிடு நம்மவர்" (திருவாச.5,4).

[ஒருகா. ஆ + ஆ – ஆவா → ஆவ. 'ஆ' – துன்பம், நோவு ஆகியவற்றையுணர்த்தும் குறிப்பு இடைச் சொல்.]

ஆவஞ்சி āvañji, பெ. (n.) (இசை.) இடக்கை என்னும் ஒருவகைத் தோற்கருவி; (சிலப். 3,47) (Mus.) percussion instrument known as idakkai, a drum made of cow hide.

மறுவ: இடக்கை, ஆமந்திரிகை.

[ஆ + வஞ்சி. ஆவின் (பசு) வஞ்சித் தோலைப் போர்த்தலால் இந்த இசைக்கருவி ஆவஞ்சி எனப் பெயர் பெற்றது. வஞ்சி = வயிறு. பருவமெய்தி கன்றீனு முன் இறந்த இளம் ஆவின் வயிற்றுத்தோல் இதற் குரியதாயிற்று.]

ஆவட்டங்கொட்டு–தல் āvaṭṭaṅ-koṭṭu-, 15. செ.கு.வி. (v.i.) இல்லையென்று சொல்லித் திரிதல் (யாழ். அக.); to go around denying something.

[ஆவட்டம் + கொட்டு. ஆவட்டம் = பெரிய வட்டம். ஒன்றுமில்லையென்னும் குறிப்பு.]

ஆவட்டேசுவரம் āvaṭṭēsuvaram, பெ. (n.) ஆயிரத் தெட்டு சிவன் கோயில்களுள் ஒன்று; one of the 1008 Śiva temples.

[ஆயிரத்தெட்டு → ஆவட்டு + ஈசுவரம்.]

ஆவட்டை āvaṭṭai, பெ. (n.) ஒரு பூண்டு; a plant. (த.சொ.அக.).

[ஆவட்டம் → ஆவட்டை.]

ஆவட்டை சோவட்டை āvaṭṭai-sōvaṭṭai, பெ. (n.) சோர்வு, தளர்ச்சி; weariness, exhaustion. அவன் ஆவட்டை சோவட்டையிட்டு வந்து விழுந்தான் (உ.வ.). 'ஆவட்டை சோவட்டை' எதுகை குறித்து வந்த மரபிணைமொழி.

[ஆவட்டை = ஒன்றுமில்லை.]

ஆவடி āvaḍi, பெ. (n.) 1. மாட்டுமந்தை, மாடுகள் தங்குமிடம் (செ. அக.); pen for cattle. 2. தங்குமிடம்; residence, a rest house. 3. வழிப்போக்கர் தங்கும் பொதுவிடம்; a choultry, a place of shelter, lodging for travellers. 4. சிற்றூர்ப் பொதுமனை, சாவடி; place where the chief of a village holds his conclaves. 5. பொருள்கள் வைப்பிடம்; depot. ஆளேற்றுகிற ஆவடி (இ.வ.) 6. சென்னைக்கு அருகே உள்ள ஊர்; name of a suburb of Madras city

[ஆ + அடி – ஆவடி. ஆ = ஆனிரை, மாட்டுமந்தை. அடி = நிலையம், தங்குமிடம்.]

ஆவடுதுறை āvaḍu-tuṟai, பெ. (n.) தஞ்சை மாவட்டத் திலுள்ள திருவாவடுதுறை, சிவன் கோயில் கொண்ட ஊர்; a Śiva shrine in Thañjāvūr district. "அதுவோவுன தின்னரு ளாவடு துறை யானே" (தேவா.திருஞான.1.)

[ஒருகா. ஆ + ஆடு + துறை. திருமூலர் திருமந்திரம் இயற்றிய ஊர்.]

ஆவணக்களம் āvaṇa-k-kaḷam, பெ. (n.) ஆவணப் பதிவு அலுவலகம்; registration office. "ஆவணக் களத்தே அறக்கொண்டு விற்று" (S.I.I.iii.108).

[ஆவணம் + களம்.]

ஆவணக்களரி āvaṇa-k-kaḷari, பெ. (n.) **ஆவணக் களம்** பார்க்க; see āvaṇa-k-kaḷam. "ஆவணக் களரியே காட்டிக் காப்பிட்டு" (சோழவ.68).

[ஆவணம் + களரி.]

ஆவணம்[1] āvaṇam, பெ. (n.) 1. பந்தல்; booth, temporary shed. 2. கடைத்தெரு (பிங்.); bazaar, market.

"குறுகியாவணஞ் சித்திரகூட நாற்சந்தி" (திரு விளை.என்வியம்.7). 3. தெரு (திவா); street. 4. கழை (புனர்பூச) நாண்மீன் (திவா); seventh naksatra, as resembling bazaar. "பாலையாவணம் புரை கொண் மூங்கில் புனர்பூசம்" (உள்ள முடை. கவி.16). 5. கடை (கதி.அக.); shop.

ம. ஆவணம். Skt. āpana.

[காவணம் → ஆவணம். காவணம் = சோலை, சோலைபோன்ற பந்தல், கொட்டகை, கடை, கடைத் தெரு, ஆலமரத்தடியிலும் தோப்பிலும் சந்தை கூடு வதும் அங்காடி வைப்பதும் பண்டை வழக்கம். தெருபோன்ற தோற்றமுடைய புனர் பூச நாண் மீன் ஆவணம் எனப்பட்டது.]

ஆவணம் [2] āvaṇam, பெ. (n.) 1. உரிமை ஒலை; legal document, bond, deed. "ஓராவணத்தால்..... எனை யாளுங் கொண்ட நம்பிரானார்" (தேவா. 977.5). 2. உரிமை (பிங்.); right to property, ownership. 3. அடிமைத்தனம்; slavery, bondage, service. இராவணன் திண்டோளிருபது நெறிதரலூன்றி ஆவணங் கொண்ட.... வண்ணல்" (தேவா. 869,8). 4. அடையாளம்; identification mark, sign.

[ஆ (கு) + வண்ணம் = ஆவண்ணம் → ஆவணம். ஆ(கு) தல் = உதவுதல், ஊழியஞ்செய்தல், வண்ணம் = எழுத்து. ஆவணம் = ஊழிய ஒப்பந்தம், அடிமை யோலை, ஊழியம், அடிமைத்தனம், அடிமைத்தனம் குறித்த அடையாளம்.]

ஆவணம் [3] āvaṇam, பெ. (n.) 1. தேர் மொட்டுப் பொருந்திய பீடம்(த.சொ.அக.); inner part of a car, in which idol is placed. 2. பூந்தட்டு (அக.நி.); flower tray. 3. கோழி (சேரநா.); fowl (Ker.).

[ஒருகா. காவணம் → ஆவணம். காவணம் = சோலை. பூஞ்சோலை போல் பொலிவுற அமைத்த பீடம் அல்லது தட்டுப்பகுதி. கொண்டையும் வாலும் பொலிந்து தோன்றும் சேவலும், கோழியும் சேர நாட்டுப் புள்ளுவர் (மருத்துவர்) வழக்கில் ஆவணம் எனப்பட்டன.]

ஆவணமாக்கள் āvaṇa-mākkaḷ, பெ. (n.) உரிமை அல்லது கடமைச்சூள் வாங்குவோர்; those who administer oath of office etc. "பொறிகண்டழிக்கும் ஆவண மாக்களின்" (அகம்.77).

[ஆவணம் + மாக்கள்.]

ஆவணவீதி āvaṇa-vīdi, பெ. (n.) கடைத்தெரு; bazaar. "ஆவண வீதிப் பூவணம்" (திருவிசை.கரு.7,1).

[ஆவணம் + வீதி.]

ஆவணவோலை āvaṇa-v-ōlai, பெ. (n.) உரிமை யாவணம்; title-deed. "அண்ணலோர் விருத்தன் போல்வந் தாவண வோலை காட்டி" (கந்தபு. வழிநடை.12).

[ஆவணம் + ஓலை.]

ஆவத்தனம் āvattaṉam, பெ. (n.) எதிர்காலத் தேவையுணர்ந்து பாதுகாத்து வைக்கப்படும் உடைமைகள்; property etc. reserved for future needs. "ஆவத்தனமென்று ..... சேவித்திருக்கும்." (திவ். பெரியாழ்.4,2,6).Skt. ā-vad-dhana.

[ஒருகா. ஆவத்து + தனம் - ஆவத்தனம். ஆவத்து = துன்பம், கேடு. தனம் = செல்வம்.]

ஆவத்து āvattu, பெ. (n.) துன்பம், கேடு; distress, critical time, affliction, sorrow. (கம்பரா. சூர்ப்ப.86).

Skt. ā-pad. Pkt. āvat.

[அவி - அவியத்து - ஆவத்து. அவிதல் = கெடுதல், கேடுறல், துன்பமுறல். இச்சொல் ஆபத்து எனவும் வழங்கும்.]

ஆவது [1] āvadu, பெ. (n.) ஆகவேண்டியது, செய்ய வேண்டிய செயல்; thing to be done. "ஆவதாகிய பரிசெலாம்" (கந்தபு.திக்குவி.3).

ம. ஆவது.

[ஆகுவது - ஆவது.]

ஆவது [2] āvadu, இடை (part.) 1. பின்வருஞ் செய்தியைச் சுட்டிக் குறிக்கும் சொல்; affix indicatting that explanation follows, that is to say. கொல்லையாவது (S.I.I.i. 103.). 2. எண்ணொடு வரும் சொல்; affix of ordinal numbers. இரண்டாவது பாடம், மூன்றாவது வீடு (உ.வ.). 3. ஆகினும்; even if so. அதை விற்றாவது கொடுத்துவிடு (உ.வ.). 4. குறிப் பிட்டதல்லாத, பொதுப்படையான; anything you like, not in particular. ஏதாவது கொடு (உ.வ.) 5. அசைமொழி; an explective. அதாவது (உ.வ.). - இடை. (conj.) விகற்பப் பொருள்தரும் ஓர் இடைச்சொல்; either.......or. அப்படியாவது இப்படி யாவது செய் (உ.வ.)

ம. ஆவது.

[ஆகுவது - ஆவது. ஆகின்ற அது எனப் பொருள் தந்த வினையாலணையும் பெயரே சொல்லிற்றில் இடைச் சொல்லாயிற்று. ஒன்றைப் பிரித்துக் கூறும் பொருளில் துணைச்சொல்லாகி நாளடைவில் துணைச் சொல் தன் பொருளிழந்து இடைச் சொல்லாயிற்று;

இடைச்சொல் தன் பொருளிழந்து பிறபொருள் பயந்து நிற்பதும் எப்பொருளும் குறியாதபோது பொருளிலா வறுமொழியாய் அசை நிலையாவதும் உண்டு.]

ஆவநாழி āvanāḻi, பெ. (n.) அம்பறாத்தூணி; quiver. (தேவா.531,8). "ஆவநாழி தானொன்று மருள வடைந்தே" (வேதாரணியபு.)

ம. ஆவநாழி; Pkt. cāva (வில்)

[ஆவம் + (நாளி) நாழி.]

ஆவநாழிகை āvanāḻigai, பெ. (n.) அம்புக்கூடு, அம்பறாத் தூணி; quiver. "சேடாலு நாழிகையிற் படைதிரண்டு" (சீவக.176).

[ஆவம் + (நாளி) நாழிகை]

ஆவம்[1] āvam, பெ. (n.) 1. வில்லின் நாண் (பிங்.); bow string. . 2. அம்பறாத்தூணி; quiver. "புற்றாகுமாவ முறைவாளிப் புயங்க முண்ண" (நைடத. அன்னத்தைத்தூ. 71).

[ஒருகா. அவ்வு – ஆவு – ஆவம் → Skt. capa.]

ஆவம்[2] āvam, பெ. (n.) 1. குங்கும மரம்; fragrant tree – (சா.அக.). **ஆவகம்** பார்க்க; see āvagam. . குங்குமம் (சங்.அக.); saffron. 3. கபிலப்பொடி; kamela (சா.அக.). 4. சிவப்பு நிறம்; redishness.

[ஆவம் – குங்குமம் போன்ற சிவப்பு நிறம்.]

ஆவயின் āvayiṉ, பெ. (n.) அவ்விடம்; there. "ஆவயின் மகிழ்ந்தவை யளித்து" (சீகாழி. சூரியன். 12.) –வி.எ. (adv.) அவ்விடத்தில்; in that place. (தொல்.சொல். 432).

[அ + வயின். அ → ஆ (சுட்டு நீண்டது). வயின் = இடம்.]

ஆவர் āvar, வினா பெ. (inter, pron.) யாவர், யார்; who. "ஆவரிவை செய்தறிவார்" (திவ். பெரியதி. 3.3.7).

க. ஆரு.

[யாவர் → ஆவர்]

ஆவர்த்தகம் āvarttagam, பெ. (n.) 1. சுழலுதல்; rotating, revolving. 2. சுழற்காற்று (த.சொ.அக.); whirlwind. 3. குதிரை மயிர்ச்சுருள் (த.சொ.அக.); mane. 4. தலைமயிர்ச்சுருள்; a curl of hair. 5. மனக்கலக்கம்; agitation of mind. 6. ஒரு பூண்டு; a plant (unidentified). (சா.அக.). 7. ஒரு நச்சுப் பூச்சி; a kind of venomous insect.

[ஒருகா. ஆ + வருதல் → ஆவருதல் → ஆவருத்தனம் → ஆவர்த்தனம் → ஆவர்த்தகம். ஆவரல் = முன்வரல், மேலெழுந்து வரல், சுற்றிவரல். மறித்து வரல்; மீண்டும் மீண்டும் வரல். ஆவருத்தகம் – வடதமிழ்ச் சொல்]

ஆவரகம்[1] āvaragam, பெ. (n) உட்தோல்; the thin cellular layer which lines the internal cavities and canals of the body, such as the mouth, the nose, etc. (சா.அக).

[ஆவரு → ஆவரகம் = சுற்றியிருப்பது, மூடியிருப்பது.]

ஆவரணச்சுவர் āvaraṇa-c-cuvar, பெ. (n.) உள்ளகம் மறைக்கும் கோவில் திருமதில்; temple wall which surround the interior.

[ஆவரணம் + சுவர் – ஆவரணச்சுவர்]

ஆவரணசத்தி āvaraṇa satti, பெ. (n.) முதற்பொருளின் (மூலப்பிரகிருதியின்) இருண்மை (தமோ குணம்) யிலுண்டான இரு ஆற்றல்களிலொன்றானதும், அறிவத்தை (ஞானத்தை) மறைப்பதுமாகிய மாயை யின் வல்லமை, வீடுபேற்றிற்குரிய வழியின்ன தென்று தெளிந்த மாந்தரின் அறிவையும் மறைத்து உலகியலில் மூழ்கச் செய்யும் இயல்புடையது; power of illusion, that which veils the real nature of things. It is this power which makes men so utterly blind that they cannot get out of worldly attachment in spite of straight path available to them for spiritual progress.

[ஆவரணம் – Skt. sakti > த.சத்தி.]

இறைவன், உயிர், கட்டு (பதி, பசு, பாசம்) மூன்றையும் ஒன்றற்கொன்று வேறுபாடு தெரியாவண்ணம் அறிவைத் திரிபுறுத்தி மறைக்கும் வல்லமை ஆவரண சத்தி (எஞ்சாயல் சுற்றி வளைத்தல்) எனப்பட்டது.

ஆவரணதேவதை āvaraṇa tēvadai, பெ. (n.) பரிவார தேவதை (த.நி.போ.247) (த.சொ.அக.); minor deity.

[ஆவரணம் + தேவதை]

[தேய் → தெய் → தெய்வம் → தெய்வதம் → தேவதை.]

ஆவரணதோடம் āvaraṇatōḍam, பெ. (n.) ஒரு குற்றத்தால் மறைக்கப்படும் மற்றொரு குற்றம்; morbid affliction which is being covered up by another or similar affliction. (சா.அக.)

[ஆவரணம் + Skt. Dōsa. > த. தோடம்.]

ஆவரணம்[1] āvaraṇam, பெ. (n.) 1. மறைப்பு; shelter, screen, covering. "ஆவரணந் தானே பாழ்" (கைவல்ய. தத்துவவி.53) 2. ஆணவ மலம்; one of the three evil passions. 3. சட்டை (சூடா.); shirt, coat,

garment. 4. ஆடை (பிங்.); cloth. 5. கோட்டை (சூடா.); fort, fortification. 6. புறவேலி; fence. 7. கோயில் திருச்சுற்று (பிரகாரம்); arcade. 8. அணிகலன் (நாநார்த்த); ornament. 9. மேற்புடவை (ஆ. அக.); upper portion of the saree.

ம. ஆவரணம். ஆவரணம் > Skt. ā–varana.

*[ஆல் + வரு – ஆவரு + அணம் – ஆவரணம் = சுற்றி வருதல். ஆலுதல் = சுற்றுதல். **ஆல்வருதல்** பார்க்க; see* **ālvaru—.]**

ஆவரணம்[2] āvaranam, பெ. (n.) 1. மூடுதல்; closing. "இலிங்கசிரசு ஆவரண மில்லாமல் சூனிய மாயிருந்தால்" (சி.வி.கிரி. 1 உவை). 2. தடுத்தல், தடை (சூடா.); obstruction, hindrance. 3. கேடகம், கேடயம்; a shield, a buckler. 4. ஈட்டி; lance.

[ஆல் + வரு – ஆவரு + அணம் – ஆவரணம் = சுற்றி வருதல், மூடுதல், தடுத்தல்.]

நெடிற்கீழ்லகரமெய் கெடுதல்கூட்டுச் சொற்களில் ஒரோ வழிக் காணப்படும். ஒ.நோ. கால் +படி – காபடி; கால் + மானம் = காமானம் (இ.வ.)

ஆவரணம் > Skt. ā–varana.

வடமொழியில் ஆவரணம் என்னும் சொல்லுக்கு ā–varana, ā–vrit என்பவை முன்வடிவங்களாகக் காட்டப் படினும் 'ஆ' முன்னடையாகவும் விட்டம் என்பதன் திரிபான 'vrit' பின்னடையாகவும் சேர்ந்த கூட்டுச் சொல்லாகவல்லது தனிவேர் முதல் வினையாகக் காட்டப் படாமையின், ஆல்வருதல் (சுற்றி வருதல்) என்னும் வினைவடிவே, வடமொழிச் சொல்லுக்கு மூலமாதல் தெளிவாகும். கூட்டு வினைச் சொற்களில் முன்னடையாக வருவன பொருளில்லாது வாரா. இதன் விளக்கத்தைச் சொற்பிறப்பியல் நெறிமுறைகளில் காண்க. ஆல்வரணம் பார்க்க; see ālvaranam.

ஆவரி-த்தல் āvari–, 14. செ. குன்றாவி. (v.t.) மறைத்தல் (சி.சி. 4.19. சிவாக்); to conceal. (செ. அக.).

[ஆல் + வரு – ஆல்வரு → ஆவருதல் = சுற்றி வருதல், ஆவரி–த்தல் = மறைத்தல்]

ஆவரி āvari, பெ. (n.) அம்பு (அக. நி.); arrow.

[ஆ + வரல் = ஆவரல் = முன்வரல், வெளிப்படுதல். ஆ + வரு – ஆவரு → ஆவரி = விரைந்து வெளியேறும் அம்பு. ஒ.நோ. ஆகாட்டு = வாய்திறந்து (வெளிப்பட) காட்டு.]

ஆவர்த்தனம், ஆவரணம், ஆவிர் பாவம் (வெளிப்படல்) போன்ற பல சொற்களையும் வடசொல் வடிவங்களாகக் காட்டுவோர் அம்பைக் குறிக்கும் '**ஆவரி**' என்பதை வட சொல்லாகக் காட்டாமை அறிக.

ஆவரிக்கை āvari-k-kai, பெ. (n.) மறைத்தல்; concealing. "இந்தக் கலாதி தத்துவங்கள் விபுவாயிருக்கிற ஆன்மாவை இலிங்க சரீர மாவரிக்கையால்" (சி.சி.2.55: சிவாக்.).

[ஆவரி – ஆவரிக்கை.]

ஆவரு-தல் āvaru–, 18 செ.கு.வி. (v.i.) 1. சுற்றிவருதல்; to go round. 2. உடுத்திக் கொள்ளுதல்; to dress. 3. அணிதல்; to wear.

[ஆல் + வரு – ஆல்வரு – ஆவரு]

ஆவரை āvarai, பெ. (n.) 1. ஆவாரை, ஆவிரைச் செடி (தைலவ. தைல. 135); tanner's senna. 2. நிலவாகை; Tinnevelly senna.

ம. ஆவர.

[ஆவிரை – ஆவரை]

ஆவிரை பார்க்க; see āvirai.

ஆவல்[1] āval, பெ. (n.) 1. பேராசை; craving, great desire, eagerness, earnestness. "ஆவற்பேரன்பினா லறைகின்றேன்" (கம்பரா. சூர்ப். 127). 2. விருப்பம்; desire. "ஆவலாலெமக் காமலர் மரங்களாக்கல்" (வாதவூர. திருப்பெரு. 69).

ம. ஆவல்.

[அவாவல் – ஆவல்]

ஆவல்[2] āval, பெ. (n.) வளைவு (அக. நி.); bend.

[ஒருகா → ஆல் → ஆலு → ஆவு → ஆவல். ஆலு = சுற்றுதல், வளைதல்.]

ஆவல்[3] āval, வி.மு. (f.v.) ஆவேன் எனப் பொருள்படும் ஒரு தன்மையொருமை வினைமுற்று; first pers. sing. finite verb – future tense. "கயிலைக்கிணை யாவலென்றே சிந்தித்தது கொல்" (கந்தபு. அகத்தி.6).

[ஆகு + அல் – ஆகுவல் →ஆவல். 'அல்' உடன்பாட்டுத் தன்மையொருமை வினைமுற்றீறு.]

ஆவல்லி āvalli, பெ. (n.) சீந்திற்கொடி (மூ. அக.); gulancha, the moon creeper. (சா.அக.).

ஆவல்லி – சீந்திற்கொடி

[ஒருகா. ஆவு + வல்லி – ஆவல்லி. ஆவுதல் = வளைதல். வல்லி = கொடி.]

ஆவல்லிவாழை āvalli vālai, பெ. (n.) வெண்கதலி (இரசதாளி) வாழை; a species of plantain with good colour and taste, chumpa banana.

[ஒருகா. அரு + அல்லி → அருவல்லி → ஆவல்லி + வாழை. அரு = அருமை, சிறப்பு. அல்லி = அல்லிபோன்ற அழகு. 'அல்லி', அழகு குறித்த அடைமொழி.]

ஆவலக போளம் āvalaga pōlam, பெ. (n.) சிவப்புக் குங்கிலியம் (சா. அக.): red dammer.

[ஆவலகம் + போளம். ஆவலகம் = சிவப்பு குறித்த அடைமொழி.]

ஆவலங்கொட்டு-தல் āvalan kottu-, 15 செ.கு.வி. (v.i.) ஆர்த்து வாய் கொட்டுதல், வாயாலார்த்து ஆடுதல்; to shout with the mouth, patting it at the same time with the hand, as a sign of triumph, of defiance. "மேவலன் றனதுசென்னி மெல்லிதழதுக்கி விண்மே லாவலங் கொட்டிச்செல்ல" (கந்தபு. சிங்கமு. 438).

[ஆவலித்தல் = வாய்திறத்தல், ஒலியெழுப்புதல். ஆவலி + கொட்டுதல் – ஆவலங்கொட்டுதல்.]

ஆவலப்பேச்சு āvala-p-pēccu, பெ. (n.) வலிவற்ற பேச்சு, வெறும் பேச்சு, வெற்றுப் புலம்பல்; vain talk.

[அவலப்பேச்சு → ஆவலப்பேச்சு.]

ஆவலம் 1 āvalam, பெ. (n.) ஆவலிக்கும் ஒலி, வாயால் எழுப்பும் ஓசை; noise made with the mouth.

[ஆவலி → ஆவலம்.]

ஆவலம் 2 āvalam, பெ. (n.) கொல்லை, சிறுதோட்டம்; garden.

[ஒருகா. ஆவலி → ஆவலம் = சுற்றிலும் வேலியிடப் பட்ட பகுதி.]

ஆவலம் 3 āvalam, பெ. (n.) 1. நூல் சுற்றும் படை மரம் என்னும் நெசவுக் கருவி (இ.வ.); rod round which yarn is wound (Loc.). 2. கூறை, புடவை (அக. நி.); saree.

[ஆவலி → ஆவலம் = நூல் சுற்றும் கருவி, சுற்றி உடுக்கப்படும் புடவை.]

ஆவலர் āvalar, பெ. (n.) 1. உற்றார், உறவினர்; relatives. 2. கணவர்; husband. 3. காதலர் (பிங்.); lover. (த.சொ.அக.).

[ஆவல் → ஆவலர். ஆவல் = ஆசை, அன்பு.]

ஆவலாதி āvalādi, பெ. (n.) 1. அடங்காத ஆசை; great desire. 2. அங்கலாப்பு; lamenting out of jealousy. 3. குறை கூறுதல் (அக. நி); complaint, grievance. 4. தூற்றுதல், அவதூறு; slander, defamatory statement (R). 5. பயனற்ற பேச்சு; useless talk.

ம. ஆவலாதி.

[ஆவல் + அதி – ஆவலதி → ஆவலாதி. அதி = மிகுதி. ஆவலாதி = ஆவல் மிகுதி, அடங்காத ஆசை மிகுதியான் தான் எண்ணியது ஈடேறப் பிறரைத் தாழ்த்தி யுரைத்தல், உணர்ச்சி கொப்புளிக்கும் வீண்பேச்சு.]

மன்னன் + அதி + மன்னன் – மன்னாதிமன்னன் என்றும், சூரன் + அதி + சூரன் – சூராதிசூரன் என்றும் வரும் தொடராட்சிகளை ஒப்பிட்டு நோக்குக.

ஆவலாதிக்காரன் āvalādikkāran, பெ. (n.) போக்கிரி, கொடியவன்; rogue, scandalous fellow (R.)

[ஆவலாதி + காரன்]

ஆவலி 1 **– த்தல்** āvali-, 4 செ. கு.வி. (v.i.) 1. அழுதல், புலம்பல்; to weep, cry, lament. "ஆவலித் தூற்றுறு கண்ணினன்" (கம்பரா. பள்ளி. 57). 2. ஆசைப் படுதல்; to desire.

[அவலி – ஆவலி.]

ஆவலி 2 **–த்தல்** āvali-, 4 செ.கு.வி. (v.i) 1. கொட்டாவி விடுதல்; to yawn. 2. வாய் திறத்தல்; to open the mouth. "அங்குள்ள பரிசனங்கள் ஆவலித் திரங்கிசூழ" (திருவிளை. வன்னியும். 12). **து.** ஆவல். 3. பட்டினிகிடத்தல்; to be starving. 4. பசியாயிருத்தல்; to be hungry.

[ஆ + வலித்தல் + ஆவலித்தல் = வாய்திறத்தல், பசியால் வாய் விடுதல்.]

ஆவலி 3 āvali, பெ. (n.) 1. வரிசை, ஒழுங்கு; row, range, series. "மஞ்சுளரோமாவலி" (கம்பரா.76). 2. கீற்று, இரேகை; scratch, line. 3. கூட்டம், ஆள்திரள்; crowd, (சேரநா.)

ம. ஆவலி

[ஆவளி – ஆவலி.]

ஆவளி 2 பார்க்க; see **āvali** 2

ஆவலிப்பு āvalippu, பெ. (n.) 1. பேராசை; keen desire, nostalgia. "ஆவலிப் புடைமை கண்டாய் அரங்கமா நகருளானே" (திவ். திருமாலை. 1) 2. செருக்கு; pride, arrogance. 3. வளைவு; curve, bend, turn.

ம. ஆவலிக (சிறிது வளைந்த)

[ஆவல் → ஆவலிப்பு = பேராசை, ஆசையான் தோன்றும்செருக்கு, மனக்கோட்டம், பிறழ்வு, வள்ளவு.]

ஆவளி 1–த்தல் āvaḷi–, 4.செ.குன்றாவி (v.t.) ஒழுங்கு படுத்துதல்; to regulate, order (R.).

[ஆகு + வழி – ஆகுவழி → ஆவழி → ஆவளி. ஆவளித்தல் = ஆகுநெறியில் (செவ்விய முறையில்) செலுத்துதல், ஒழுங்கு படுத்துதல், வரிசைப் படுத்துதல். பழி – பழித்தல் என வினையாவது போல வழி – வழித்தல் என வினையாகும்.]

வடமொழியில் ஆவளி என்னும் சொல்லின்மையும், ஆவளி என்னுஞ் சொல்லே வடமொழியில் ஆவலி எனத் திரிந்திருத் தலும் அதுவும் வினைச் சொல்லாக ஆளப்படாமையும், ஆ + வல் எனப் பிரித்துப் பொருள் புணர்த்தி வட நூலார் இடர்ப்படுதலும் ஆவளித்தல் தமிழ்ச் சொல்லே என்பதைக் காட்டும்.

ஆவளி 2 āvaḷi, பெ. (n.) 1. வரிசை; row, range, series. 2. ஒழுங்கு; order. 3. கொடிவழி, வழிவழி வரும் மரபு, தலைமுறை; continuous line, lineage, dynasty. 4. கைவரை, இரேகை (நாநார்த்த.); marks, as on the body or palm of hand.

[ஆகுவழி → ஆவழி → ஆவளி.]

ஆவளித்தல் பார்க்க; see **āvali–.**

ஆவளி 3 āvaḷi, பெ. (n.) வளி என்னும் சிறு கால அளவு (சமண); small division of time. (Jaina.)

[ஒருகா. ஆவளி – ஒழுங்குறுத்திய கால அளவு.]

ஆவளி 4 āvali, பெ. (n.) உறுதியின்மை; doubtfulness, uncertainty, undecisiveness. ஆவளிப்பேச்சு. (R.).

[அவை – அவல் – அவலி – ஆவலி – ஆவளி. அவைத்தல் = குற்றுதல், இடித்தல், குறைபடுத்தல், உறுதியிழத்தல்.]

ஆவளிச்சேவகம் āvali-c-cēvagam, பெ. (n.) நிலையற்ற வேலை, உறுதிப் பாடற்ற பணி; short duration service, temporary work (R).

[ஆவளி + Skt. sēvaka > த. சேவகம்.]

ஆவற்காலம் āvaṟkālam, பெ. (n.) 1. பெருந்துன்பம் நேரும் காலம்; time of distress. 2. வாழ்நாளின் இறுதிக்காலம்; last days. "சிவநாமந்தன்னை யாவற்காலத்திலிவன் செவியிற் புகவேபெற்றால்" (சிவரக. சிவநாம.45).

[அவல் → ஆவல் + காலம். அவலுதல் =கெடுதல்.]

ஆவறி āvaṟi, பெ. (n.) அவா, ஆசை; desire. (த.சொ.அக.).

[அவா – ஆவல் – ஆவறி.]

ஆவறியாவறியெனல் āvaṟi-y-āvaṟi-y-eṉal, பெ. (n.) பேராசை குறித்த அடுக்குத்தொடர்; onom. expr. signifying greed, eagerness, avidity. ஆவறி யாவறியென்று ஓடுகிறான் (வின்.)

[ஆவறி + ஆவறி. ஆவறி = பேராசை குறித்த ஒலிக்குறிப்பு.]

ஆவா āvā, இடை (int.) 1. இரக்கக்குறிப்பு; an exclamation of pity. "ஆவாவெனக் கொடுங் கூற்றென வொருசார் வரும்" (கந்தபு. சூரபன்.416). 2. வியப்புக்களிப்புக் குறிப்பு; an exclamation of surprise or joy. "ஆவா குறவர்தவ மாரளக்க வல்லாரே" (கந்தபு.வள்ளி. 45). 3. வியப்புக் குறிப்பு: an exclamation of wonder "ஆவா இருவர் அறியா அணிதில்லை அம்பலத்து" (திருக்கோ.).

ம. ஆங்கா; Skt. āhā

[ஆ + ஆ = ஆவா. – ஒலிக்குறிப்பு இரட்டைக் கிளவி.]

ஆவாகனம் āvāgaṉam, பெ. (n.) 1. ஒரு பொருளில் அல்லது படிமத்தில் எழுந்தருளும்படி மந்திரம் ஓதி தெய்வத்தை யழைத்தல்; invocation to deity by mantras to be present in an object. (சைவச. பொது. 525) 2. தீக் கடவுளுக்குக் கருப்பலி செலுத்துதல்; to offer obeisanceto fire god. (கதி.அக.).

[ஆவருதல் = முன்வரல், எழுந்தருளல். ஆவருத்து தல் – ஆவாகித்தல் – ஆவாகனம்.]

ஆவாகி–த்தல் பார்க்க; see **āvagi–,**

ஆவாகான முத்திரை āvāgāṉa muttirai, பெ. (n.) வழி பாட்டுக் கைமுத்திரை வகைகளுள் ஒன்று (கதி.அக.); hand pose in worship. (செந். 10.425).

[ஆவாகனம் + முத்திரை]

ஆவாகி–த்தல் āvāgi–, செ.குன்றாவி. (v.t) எழுந்தருளு மாறு மந்திரத்தால் தெய்வத்தை அழைத்தல்; to invoke a deity by mantras to be present in an object. "சிவன் றன்னை யாவாகித்து" (திருமந். 1825). (த.சொ.அக.).

[ஆ + வருவித்தல் – ஆவாவித்தல் – ஆவாகித்தல். ஆவருவித்தல் = முன்னால் வந்திருக்கச் செய்தல். 'ஆ' முற்படுத்தக் குறிப்புச் சொல். ஆவருவி – ஆவாவி – ஆவாகி > Skt. ā–vāhana.]

ஆவாகை āvāgai, பெ. (n.) நிலவாகை (மூ.அ.); Tinnevelly senna.

[அரு + வாகை – அருவாகை → ஆவாகை.]

பிஞ்சு காயாகும் வளர் நிலைகள் கட் புலனாகா' வகையில்விரைந்து நடைபெறுதலின்பெற்றபெயராம் என்பர்.

ஆவாசம் āvāsam, பெ. (n.) 1. நகரம் (பிங்.); town. 2. மருதநிலத்து ஊர் (சூடா.); agricultural town. 3. புகலிடம், வீடு; shelter, asylum, house.

[ஆ + வாசம். ஆ = முன்னிற்பது, முதன்மை யானது.]

ஆவாட்டு āvāṭṭu, பெ. (n.) **ஆலவாட்டு** பார்க்க; see ālavāṭṭu.

[ஆலவாட்டு – ஆவாட்டு.]

ஆவாப்பம் āvāppam, பெ. (n.) 1. கூடுதலாகச் சேர்மானப் பொருள்களைச் சேர்த்தல்; throwing additional ingredients into any mixture in the course of its preparation. 2. விதைப் பாத்தி; seed bed. 3. நீர் நிற்கும்படி மரத்தைச் சுற்றிலும் கிண்டிவிடும் பாத்தி; trench for water around a tree. (செ.அக.). 4. வளையல்; bangle. (த.சொ.அக.).

*[ஒருகா. ஆல் + ஆர்ப்பு + அம்– ஆலார்ப்பம். ஆ + ஆர்ப்பம் → ஆவார்ப்பம் → ஆவாப்பம். ஆலுதல் = பொருந்தல், சேர்த்தல், ஆர்த்தல் = கட்டுதல், சேர்த்தல். ஆவார்ப்பம் = சேரச்சேரக் கட்டுதல், பொருத்தல். ஆவாப்பம் → Skt. **āvāpa**.]*

ஆலாபனை என்னும் சொல்லை இதனுடன் ஒப்பிட்டு நோக்குக.

ஆவாபம் āvābam, பெ. (n.) ஆவாப்பம் பார்க்க; see āvāppam.

ஆவாய்கத்து–தல் āvāy kattu–, 15 செ.கு.வி. (v.i.) இல்லையென்று சொல்லித் திரிதல் (யாழ்.அக.); to go about denying.

[ஒருகா. ஆவாய் = திறந்தவாய், இல்லையென்னும் குறிப்பு. கத்துதல் = வெளிப்படுத்தல்.]

ஆவாயம் āvāyam, பெ. (n.) 1. பேறுகாலத் துன்பம், மகப் பேற்று வேதனை; pangs of child-birth, labour pain. 2. கடுமையான பிள்ளைப்பேறு, அல்லற் படுத்தும் பிள்ளைப்பேறு; painful child birth.

[அரு + பாயம் – அருபாயம் → ஆபாயம் → ஆவாயம். பயத்தல் = பிள்ளை பெறுதல். பயம் – பாயம். குடகு மொழியில் இன்றும் பிள்ளைப்பேற்றை (பிரசவத்தை) "பாயம்" என்பதை, ஒப்பிட்டு நோக்குக.]

ஆவாரகம் āvāragam, பெ. (n.) மறைப்பு; that which covers, screen, veil. "சர்வான்மாக்களுக்கும் ஆவாரக மல்ல" (சி.சி.2.80 சிவாக்.).

[ஆவரகம் – ஆவாரகம்.]

ஆவாரங்கரி āvāraṅkari, பெ. (n.) ஆவாரைவிறகை யெரித்து அதனின்றும் எடுத்த கரி; charcoal obtained by burning the **āvārai** fuel. (சா.அக.).

[ஆவாரை + கரி.]

ஆவாரம் āvāram, பெ. (n.) 1. **ஆவாரகம்** பார்க்க; see āvāragam. 2. ஆவாரைச் செடி; tanner's senna.

ஆவாரம்பூச்சம்பா āvāram pū–c–cambā, பெ. (n.) ஐந்து மாதத்தில் விளையும் சம்பா நெல்; a kind of red paddy reaped in five months (சா.அக.).

[ஆவாரை – ஆவாரம் + பூ + சம்பா. செம் – செம்பை – செம்பா = செந்நிற நெல்.]

ஆவாரமூலி āvāramūli, பெ. (n.) ஒரு கொடி வகை; creeper (சா.அக.).

[ஒருகா. ஆவாரை + மூலி.]

ஆவாரை āvārai, பெ. (n.) 1. ஆவிரைச்செடி (பதார்த்த. 240); tanner's senna. "ஆவாரை மூலியது" (பதார்த்த. 254). 2. நிலவாகை; Tinnevelly senna. 3. ஆவாரை வேர் ; tanner's root

க. ஆவரி; **ம.** ஆவீரம்.

[ஆவிரை → ஆவரை → ஆவாரை.]

ஆவாரை ஐந்து āvārai–aindu. பெ. (n.) ஆவாரச் செடியின் இலை, பூ, வித்து, பட்டை, வேர் என்னும் ஐந்து மருந்துச் சரக்கு; the five medicinal products of tanner's senna viz, leaf, flower, seed, bark, root.



ஆவாரைநெய் āvārai ney, பெ. (n.) ஆவாரை வித்தினின்றும் எடுக்கும் நெய்; oil extracted from the seeds of the plant āvārai.

[ஆவாரை + நெய்]

ஆவாரைப் பஞ்சகம் āvārai–p–pañjagam, பெ. (n.) **ஆவாரை ஐந்து** பார்க்க; see āvārai aindu. "ஆவாரைப் பஞ்சகங் கொளத்தி சுரந் தாகமும் போம்" (பதார்த்த.392).

[ஆவாரை + பஞ்சகம்]

ஆவாலம் āvālam பெ. (n.) **ஆலவாலம்** பார்க்க; see ālāvālam

[ஆலவாலம் → ஆவாலம்.]

ஆவாவிரை āvāvirai, பெ. (n.) ஆவாரைச் செடி; tanner's senna.

[ஒருகா. ஆகு + விரை – ஆகுவிரை – ஆவுவிரை – ஆவாவிரை – ஆவிரை – மருந்துச் சரக்காக ஆகும் விரை அல்லது வித்துச் செடி.]

ஆவி¹–த்தல் āvi–,4 செ.கு.வி. (v.i) 1. வாய்விடுதல், வாய்திறத்தல்; to open the mouth so as to express some thing loudly. 2. பெருமூச்சு விடுதல்; to sigh, as expressing grief. "இரும்பசியது கூர வரவமா விக்கும்" (திவ். பெரியதி.1,2,8). 3.கொட்டாவி விடுதல் (பிங்.) to gape, to yawn.

க. ஆகலிசு (வாய்திற); **ம.** ஆவிக்குக; **தெ.** ஆவுலின்சு (வாய்திற); **து.** ஆவளு; **கோத.** ஆவச், ஆய்வ; **து.**ட ஒபள்யு, ஒய்யு; **குட.** ஆவளிச்; **பர்.** ஆமு, ஆவு; **கட.** ஆமு; **குரு.** ஔவி, ஆனா; **மா.** ஆலொலெ; **பிரா.** ஆவானிங்.

[ஆவித்தல் = வெப்பமூட்டுதல் என்னுஞ் சொல், இருவகை வேரினின்று கிளைத்த சொல். இஃது இட வழக்குக் கேற்பப் பொருள் திரிபுற்றது.]

ஆ – வாய்திறத்தல் ஒலிக்குறிப்புச் சொல். ஆகாட்டு = வாய்திற. ஆ என்னு – ஆன்னு (கொச்சை) வாய்திற. ஆவித்தல் = வாய்திறத்தலால் வெளிவரும் வெப்ப ஆவி, வெது வெதுப் பூட்டுகை, வெப்பமூட்டுகை. ஆவித்தல் = வாய்விடுதல் (சீவக. 3124), பெருமுச்சு விடுதல். "இரும்பசியது கூர வரவமாவிக்கும்" (திவ். பெரியதி. 1,2,8) "உயிர்த்தன ளாவியே" (கம்பரா. உலா. 30).

ஆவி²–த்தல் āvi– 4. செ.குன்றாவி. (v.t.) 1. வெளி விடுதல்; to let out, to smoke. "தூபபாத்திரம் ஆவித்த புகையைச் சுழற்றி" (சீவக.2426, உரை) 2.வேக வைத்தல்; to boil, stream.. 3. வெப்பமூட்டுதல்; to heat.

[ஆ → ஆவு = முன்செல், மேலெழும்பு. ஆவு → ஆவி = மேலெழும்பி வரும் நீராவி அல்லது புகை. மேலெழும்பி வரும் கருத்து வெளியிடும் பொருளும் பெறும். மேலெழும்பி வரும் ஆவி வெப்பமூட்டும் இயல்பால் வேக வைத்தல், வெப்பமூட்டுதல் பொருள் தரும்.]

ஆவி³ –த்தல் āvi–, 4 செ. குன்றாவி (v.t.) அழிதல், கெடுதல்; to decay, to perish.

OF. avarice; **Sp.** averta; **Pg., It.** avaira; **Du.** avarij; G.hauarie; **Arab.** awanja – damaged goods. **F.**arwar–damage. **E.** ave rage – apportionment of loss of ship cargo, freight, through unavoidable accident.

[அவி–த்தல் → ஆவி–த்தல். ஆவித்தல் – அழிதல் பொருளில் மேலையாரிய மொழிகளில் வேரூன்றி யுள்ளது.]

ஆவி⁴–த்தல் āvi–⁴ செ. குன்றாவி. (v.t.) ஆரத் தழுவுதல்; to embrace. "ஆவிஆவிஆவிஆவி அன்பருள்ள முற்றதே" (சிவவாக்.).

ஆவி⁵ āvi, பெ. (n.) 1. மூச்சு, உயிர்ப்பு (திவா.); breath. 2. பெருமூச்சு, நெட்டுயிர்ப்பு; sigh. "உயிர்த் தனளாவியே" (கம்பரா. உலா. 30). 3. கொட்டாவி; yawn. (சீவக.1572). 4.நீராவி; steam, vapour. (பெரும்பாண். 469, உரை). 5. புகை; smoke. "நாவியங் காரகி லாவியுந் தோய்குழல்" (தஞ்சை வா.20). 6. புகையிலை; tobacco. "கடுபுளி பாறயிர்கைப் பாவி கண்டு" (தைலவ.பாயிர.58). 7. நறுமணம்; fragrance, odour. "கள்ளாவி நாறுங் கமழ் கோதையின்" (சீவக. 20). 8. பிட்டு (பிங்.); a kind of cake dressed in steam.

ம., க. ஆவி; **தெ.**ஆவி, ஆவிரி; **பர்.** ஆகுப். குட. ஆய்வ; **துட.** ஒய்ய.

ஆவு–முன்செல், மேலேறு. ஆவி–நீராவி, புகை. ஆவித்தல் – ஆவி வெளிவரச் செய்தல், புகை வெளிவரச் செய்தல், புகை மேலெழும்பச் செய்தல், வேகவைத்தல். (ஒ..நோ; ஆவு – வாவு (தாவு). ஆவுதல் – வாவுதல், வாவல் – வௌவால்). ஆவு என்னும் வேரினடியாக உலகமொழிகளில் இச் சொல் மேகம், பறவை என்னும் பொருள்களில் புடைபெயர்ந்துள்ளது. Skt. avi–bird. Lvavis – bird. (vf. a.iation, avion - aeroplane)

ஆவி⁶ āvi, பெ. (n.) 1. உயிர்; life. "பதுமகோமளை யெனுந் திருமங்கையாவி நீங்கினள்" (கந்தபு. இரணிய புல.2). 2. இறந்தோர் உயிர்கள்; spirits of the dead. 3. ஆதன் (ஆன்மா); soul. "ஆவியு முடலு முடைமையெல்லாமும்" (திருவாச.33.7). 4. மனம்; mind. "என்னாவிமலர்மேன்மிதித்து" (சீவக.1588). 5. தூய ஆவி (கிறித்.); Holy spirit. 6. வலிமை; strength, power. "ஆவியில் மனிதர்தம்மை" (கம்பரா. நிந்தனை. 69). 7. உயிரெழுத்து; vowel. "ஆவியுமொற்றும்" (நன். 101).

[ஆவு → ஆவி. முன்செலல், மேலேறுதல், என்னும் பொருளில் ஆவியென்னும் சொல் மேலெழும்பி கண்ணுக்குத் தெரியாமல் போய்விடும் உயிரையும், உயிரின் வேறு பிரித்தறியாத ஆதனை (ஆன்மா)யும், குறித்தது. உயிரைச் செயற்படுத்தும் மனமும், உயிர் துலக்கத்தின் அடையாளமாகிய உடல் வலிமையும் ஆவியென்றே பெயர் பெற்றன. உயிர் போன்றே மொழியினியக்கத்திற்கு உயிரான எழுத்தும் ஆவி எனப்பட்டது.]

ஆவி [7] āvi, பெ. (n.) 1. வேளிர் தலைவருள் ஒருவன், வேள் ஆவி; name of an ancient chief of the vēl tribe. "நெடு வேளாவி" (அக.1,61).

[ஆவு = ஆவி, முன்செலல், மேலேறுதல் என்னும் அடிப்படைப் பொருள்தரும் ஆவு என்னும் வேரினடியாகப் பிறந்த ஆவியென்னும் சொல் முற்படல், மேம்படல், முதன்மையுற்று விளங்குதல் என்னும் பொருளில் (முதன்மையும் தலைமையும் பெற்றவன் என்னும் பொருளில்) மன்னன் ஆவியையும் அவன் குடியையும் குறித்தது.

பேகனை வையாவிக்கோ பெரும் பேகன் என்றும், பதுமன் தேவியின் தந்தை வேளாவிக்கோமான் என்றும், வேளாவியின் மலை (பொதினி) ஆவிமலை, ஆவிநன்குடி எனவும் வழங்கப் பெற்றுள்ளதைக் காணலாம். ஆவி மரபினர்க்கு ஆவிநன்குடி என்பது மலையும் வையா(வி)புரி தலைநகரமுமாம்.]

ஆவி [8] āvi, பெ. (n.) 1. வெப்பம் (கதி.அக.); heat. 2. மட்பாண்டங்களைச் சுடும் சூளை; kiln.

ம.,பட. ஆவி.; **க.** ஆவெ, ஆவி, ஆவிகெ; **து.** ஆவெ; **தெ.** ஆவி. **க.** ஆவிகண்ணு – செங்கண், சூட்டுக்கண். **குட.** ஆவலிச்; **கோத.** ஆவச்; **துத.** ஒபுல்ய; **பர்.** ஆள, ஆள்குட்; **கட.** ஆய்; **ஒல்.** ஆம்; **குரு.** ஒலஆனா; **மா.**ஆவொலெ; **பிரா.** ஆவானிங்; **மரா.** ஆவா; **இந்.** ஆவா; **சீன.** ஆவொ – கொதிக்கவை, வேகவை, கஞ்சிகாய்ச்சு. **மலே.** அவ(ன்) மேகம்.**பாலி.** ஆவொப்ப–மட்பாண்டசூளை, அடுப்பு. ஆவொட்ட – குழி, பள்ளம்.

[ஆவு – ஆவி.]

வாய் திறத்தலாகிய ஆவித்தல் என்னும் வினையினின்று தோன்றிய புகைப்பொருள் தரும் ஆவி என்னும் பெயர்ச்சொல் மடிந்து மீண்டும் வினைச் சொல்லாகி வெப்பமூட்டும் பொருள் தந்து மீண்டும் பெயராயிற்று..

ஆவி [9] āvi, பெ. (n.) நீர்நிலை, குளம்; tank ."ஆவியம் புன லறா தமரும் (கந்தபு. சயந்தன் புல.8.).

Skt. Vapi – large, oblong pond, an oblong reservoir of water, pool or lake (M.S.E.D.).

ம. ஆவி; **க.** ஆவெய குண்ட்டெ – ஆவிக்குளம்.

த. ஆவித்திறை – குயவனின் சூளைக்கு வாங்கப்பட்ட வரி.

[ஆவு → ஆவி. ஆவி = சூளை, சூளையிருந்த பள்ளத்தில் தேங்கிய நீர் நிலை.]

ஆவித்தல் – வேகவைத்தல், எரித்தல், அழித்தல் பொருள்களிலும் எரித்தல், ஒளிர்தல் பொருள்களிலும் இடந்தோறும் காலந்தோறும் வேறுபட்டு வழங்கிவந்திருக்கிறது. ஒளிவிடற் பொருளில் வடவனலை (aurora borealis) ஆவியனல் என்னுஞ் சொல்லாட்சி பண்டு குறித்திருக்கிறது. அதன் விளைவாக ஆவி – auro என மருவி மேலையாரிய மொழிகளில் இன்றும் வழங்கி வருகிறது.

aurora – luminous atmospheric (prob. electrical) phenomenon radiating from earth's northern (borealis) or southern (–australis) magnetic pole; dawn; colour of sky at sunrise: (L. = dawn, goddess of dawn) (COD)

ஆவித்தல் – அழித்தல் பொருளில் மேலையாரிய மொழிகளில் வேரூன்றியுள்ளது.

OF. avarice. **Sp.** averta. **Pg., It.** avaira. **Du.** avarij. **G.** hauarie. **Arab.** awanja – damaged goods. **F.** awar – damage. **E.** average – apportionment of loss of ship cargo, freight, through unavoidable accident.

ஆவி எழும்புதல் āvi – elumbudal, பெ. (n.) நீராவி அல்லது புகை மேலெழுதல்; rising of steam or smoke.

[ஆவி + எழும்பு]

ஆவிக்கண் āvikkaṉ, பெ. (n.)சூட்டினால் சிவந்த கண்; eyes becoming red because of heat.

க. ஆவிகண்ணு.

[ஆவி + கண்]

ஆவிக் கப்பல் āvi–k–kappal, பெ. (n.) நீராவிக் கப்பல் (சேரநா.); steam ship (Ker.).

[ஆவி + கப்பல்]

ஆவிக் கலம் āvikkalam, பெ. (n.) வெள்ளாவிப் பானை (சேரநா.); washerman's boiler (Ker.).

[ஆவி + கலம்.]

ஆவிக்காட்டு–தல் āvi–k–āṭṭu–, 12 செ. குன்றாவி. (v.t.) தெய்வப் படையல் செய்தல் (நிவேதனம் செய்தல்) (திவ். பெரி. 3.3.8. வியா. பக். 580.); to make offering of food to a deity.

[ஆவி + காட்டுதல்]

ஆவிக்குளம் āvikkuḷam,பெ.(n.)மட்பாண்டச் சூளையிலிருந்த பள்ளம்; large pit dug out by potters converted in to a village tank.

க.ஆவெய குண்ட்டெ

[ஆவி + குளம். ஆவித்தல் – வாய்திறத்தல், கொட்டாவி விடுதல், வெப்பமூட்டுதல், வேகவைத்தல், மட்பாண்டத்தொழிலாளர் பெருமளவில் மட்பாண்டங்களைச் செய்வதால், குழித்த நிலம் பெரும் பள்ளமாக மாறி அதுவே பக்கப் படிக்கட்டுகள் கட்டப்பட்டு நிலைத்த நீர் நிலையாக மாற்றப்படும் வழக்கம் இந்தியாவின் பலவிடங்களிலும் பின்பற்றப்பட்டு

வந்திருக்க வேண்டும். ஆதலால், மட்பாண்டச் சூளையிலிருந்த பெருங்குழிகள் நீர்நிலைகளான போது ஆவிக்குளம் என்றும் பெற்றன.]

மட்பாண்டச் சூளைக்கு 'ஆவி' என்பது பரவலான பெருவழக்குச் சொல். ஆவி என்னுஞ் சொல்லே நாளடைவில் வகர முன்மெய் சேர்க்கப்பட்டு வாவி என்றும் வடமொழியில் வாபி (Vapi) என்றும் வழங்கத் தலைப்பட்டது. ஒ.நோ: ஆவு (முன்செலல்) → வாவி (தாவு). ஆவல் → வாவல் (வெளவால்). வடமொழியில் வாபி என்னும் சொல்லுக்கு வேரில்லை. ஆவி என்னும் சொல்லும் வடமொழியில் இல்லை. வாவியை வடமொழி தமிழிலிருந்து கடன் பெற்றிருக்கிறது. வடமொழி யிலுள்ள வாபி (Vāpi) நீள்சதுர வடிவமுள்ள குளத்தையே குறிக்கிறது.

தில்லையிலிருந்து சென்னைக்கு வந்துள்ள இளம் பொறியாளர் திரு. சோமசுந்தரம் தில்லை கிழக்குக் கோபுர யாகசாலையடுத்த திருக்குளத்தை உள்ளூர்மக்கள் ஆவிக்குளம் என்று வழங்குவதாகவும், பழங்காலத்தில் அக்குளமிருந்த இடத்தில் மட்பாண்டத் தொழிலாளர் சூளை வைத்திருந்ததாக நிலவும் செவிவழிச் செய்தியையும் கூறினார். இந்திய மொழிகள் பலவற்றிலும், குறிப்பாக வடபுலமொழிகளில் மட்பாண்டத் தொழிலாளர்களின் சூளை 'ஆவி' என்றே குறிக்கப் படுகிறது. வேகும் தொழிலை முழுவதும் ஏற்காமல் வெப்பமுறுதல் மட்டும் ஏற்கும் சலவைத் தொழிலாளரின் அழுக்குத் துணி வேக வைக்கும் அடுப்பு 'வெள்ளாவி' (வெள் – வெறுமை, இன்மை) எனப்படுதலை ஒப்பு நோக்குக. (கருங்களமர் – வயலில் உழைக்கும் வேளாளர். வெண்களமர் – உழுவித்துண்ணும் வேளாளர். வெண்மை – செயற்பாடின்மை).

ஆவிக்கொழுக்கட்டை āvi-k-kolukkattai, பெ. (n.) நீராவியினால் வேகவைத்த இனிப்பு; puff–like pastry dressed in steam.

[ஆவி + கொழுக்கட்டை]

ஆவிக்கோ āvikkō, பெ. (n.) கடைக்கழக கால வள்ளல்களில் ஒருவன்; philanthropical chief in Sangam age. **பேகன்** பார்க்க; see pēgan.

ஆவிகாட்டல் āvaikāttal, பெ. (n.) வேது பிடித்தல்; to have steam bath, to expose to vapour.

[ஆவி + காட்டல்]

ஆவிகிளம்பல் āvikiḷambal, பெ. (n.) காய்ச்சலால் உடம்பில் அதிக சூடுண்டாகி ஆவி கிளம்பல்; vapour arising from the body as a result of excessive temperature due to fever.

[ஆவி + கிளம்பல்.]

ஆவிகை āvigai, பெ. (n.) பற்றுக்கோடு (த.சொ.அக.); hold, support. "ஆகாயம் போவார்க்கு மாவிகை யோ" (ஒழிவி.கிரியை.5.).

[ஆவி + கை.]

ஆவிச்சேர்-த்தல் āvi–c–cēr–, 9 செ.குன்றாவி. (v.t.) கட்டியணைத்தல்; to embrace. ஆவிச்சேர்த்து முத்த மிட்டான். (இ.வா.).

[ஆவி + சேர்த்தல்.]

ஆவிசீவாளம் āvi-cīvāḷam, பெ. (n.) உடல் பொருள் ஆவி; one's goods, body and soul. "ஆவிச்சீவாள மெல்லாம் வாங்கி விடுகிறான்" (இராட்.).

[ஆவி + சீவாளம். ஆவி (உயிர்) முதலாகச் சீவித்தற்கு (வாழ்தற்கு) வேண்டியவை.]

ஆவிடை āviḍai, பெ. (n) **ஆவுடையாள்** பார்க்க; see **āvudatyal.**

[ஆவுடை – ஆவிடை]

ஆவிடையார் āviḍaiyār, பெ. (n.) **ஆவுடையாள்** பார்க்க; see **āvudaiyāl.**

ஆவித்திறை āvi–t–tiṟai, பெ. (n.) குயவனின் சூளைக்கு இடப்பட்ட வரி; tax collected on kiln.

[ஆவி + திறை.]

ஆவிதம் āvidam பெ. (n.) 1. துறப்பணம், துளைக்கும் ஊசி (த.சொ.அக.); piercing needle, drilling bit. 2. திருகூசி; screw.

[ஒருகா. ஆழி – ஆளி – ஆவி – ஆவிதம்]

ஆவிநன்குடி āvinaṉkuḍi, பெ. (n.) 1. வேள் ஆவியின் மலை; hill of Vēḷ Āvi. "ஆவிநன்குடி அசைதலு முரியன்" (திருமுருகா. 176). 2. பழநி என்னும் ஊர்.; Palani, a town.

[ஆவி + நன் + குடி]

ஆவிநீர் āvinīr, பெ. (n.) நீராவியைக் குளிரவைத்து உண்டாக்கும் நீர்; distilled water, or water obtained by condensing steam.

[ஆவி + நீர்]

ஆவிப்பதங்கம் āvi–p–padaṅgam, பெ. (n.) 1. வைப்புச் சரக்கு (த.சொ.அக.); a prepared medicine.. 2 பதங்க முறையாற் செய்யுமோர் வகை மருந்து; medicine prepared by the process of sublimation.

[ஆவி + பதங்கம்]

ஆவிப்பு āvippu, பெ. (n.) கொட்டாவி; yawning.

[ஆவி → ஆவிப்பு]

ஆவிபறிதல் āvipaṟidal, பெ. (n.) 1. உயிர் நீங்கல்; dying. 2. நீராவி எழும்புதல்; rising of steam.

[ஆவி + பறிதல்]

ஆவிபிடி-த்தல் āvipiḍittal, 4. செ.கு.வி. (v.i.) 1. வேது பிடித்தல்; to have a vapour bath. 2. ஆவிகாட்டுதல்; steam bath generally taken in cases of cold, fever, etc. (சா.அக.).

[ஆவி + பிடி]

ஆவிபிரிதல் āvipiridal, பெ. (n.) சாதல்; dying.

[ஆவி + பிரி.]

ஆவிபோக்கல் āvipōkkal, பெ. (n.) 1. உயிர்நீக்குதல்; taking away life, killing. 2. பேசிப்பேசிக் களைத்தல், மிகுதியாகப் பேசுதல்; wasting of energy by excessive talk.

[ஆவி + போக்கல்]

ஆவிபோதல் āvipōdal, பெ. (n.) உயிர் நீங்கல்; dying.

[ஆவி + போதல்]

ஆவியம் āvyam, பெ. (n.) 1. உயிர்; life. 2. உடல்வலிமை; strength. 3. உடம்பு; body. (சா.அக.).

[ஆவி + அம்]

ஆவியர் āviyar, பெ. (n.) 1. வேளாவியின் மரபினர்; descendants of Vēlāvi or Pegan. "அதுமனெம்பரிசில் ஆவியர் கோவே" (புறநா.147). 2. வேளாளர் (அக.நி.); Velalar. 3. வேடர் (அக.நி.); hunters.

[ஆவி + அர்]

ஆவியர்குலம் āviyar kulam, பெ. (n.) வையாவிக்கோ பெரும்பேகன் (வள்ளல்களில் ஒருவன்) தோன்றிய குடி; name of class to which Vaiyavi-k-ko-Perum Pegan belongs.

[ஆவி → ஆவியர் + குலம்]

ஆவியர்கோ āviyarkō, பெ. (n.) வள்ளல் பேகன்; Pēgan, a philanthrophic king. "ஆவியர்கோ" (புறநா.147).

[ஆவி + அர் + கோ]

ஆவியர்கோமான் āviyarkōmāṉ, பெ. (n.) **ஆவியர்கோ** பார்க்க; see āviyarkō.

[ஆவி +அர் +கோமான்]

ஆவியர் பெருமகன் āviyar perumagaṉ, பெ. (n.) பேகன் (சிறு.பா.86) Pēgan **ஆவியர்கோ** பார்க்க; see aviyarko.

[ஆவி + அர் + பெருமகன்]

ஆவியாடு āviyāḍu, பெ. (n.) பள்ளாடு, குறியாடு (சேரநா.); a kind of goat (Ker.).

[ஆவி + ஆடு.]

ஆவியாதல் āviyādal, பெ. (n.) ஆவியாய்ப் போதல்; evaporating.

[ஆவி + ஆதல்]

ஆவியிறக்கம் āvi-y-iṟakkam, பெ. (n.) வடித்தல்; distillation.

[ஆவி + இறக்கம்]

ஆவியேகல் āviyēgal, பெ. (n.) **ஆவியாதல்** பார்க்க; see aviyādal.

[ஆவி + ஏகல்.]

ஆவியேற்றம் āviyēṟṟam, பெ. (n.) பெருமூச்சு, மூச்சை அடக்கிவைக்கும் ஓகநிலை; condition in which the respiration is held up and retained. (சா.அக.)

[ஆவி+ஏற்றம்.]

ஆவிரங்காய் āviraṅgāy, பெ. (n.) ஆவாரைக்காய்; fruit of tanner's cassia (W.).

[ஆவாரை - ஆவிரை + காய்]

ஆவிரதம் āviradam, பெ. (n.) சுழற்சி (நாபதீப); whirl.

[ஒருகா : அலையுறு → ஆவுறு → ஆவிர் → ஆவிரதம்]

ஆவிரம் āviram, பெ. (n.) 1. நிரயங்களுள் (நரகம்) ஒன்று (நாமதீப.); one of several hells. 2. இடையர்சேரி; village of herdsmen.

[ஆவீரம் - ஆவிரம்.]

ஆவிருந்து āvirundu, இடை. (Part.) ஒரு நிகழ்கால இடைநிலை; present tense marker. "உண்ணா விருந்து" (நன். 145, இராமானுச. உரை). "கரும மாராயா விருந்து" (S.I.I. iii. 137).

ஆ. + இருந்து - ஆவிருந்து. செய்யா என்னும் இறந்தகால வினையெச்ச வாய்பாட்டின் ஈற்றெழுத்தும் வினையெச்சத் தொடரின் வருமொழியும் (செய்யா விருந்தான்) சேர்ந்த வடிவம்.

நன்னூல் இயற்றிய பவணந்தியார் சமணநெறி சார்ந்து வட புல மொழிகளில் தேர்ச்சி பெற்றவராகையால் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் ஈற்றெழுத்து ஆகாரத்தை வருமொழியுடன் புணர்த்து நிகழ்கால இடைநிலையென்று காட்டி விட்டார். காட்டிய மேற்கோள் 'உண்ணா விருந்து' என்பதும், 'ஆவிருந்து' என்னும் இலக்கண வகைமையும் உண்மையில் நிகழ்காலம் காட்டுவனவல்ல. ஆயிரு, (ஆயிருக்கின்றான்), உண்ணாயிருக்கின்றான் என எடுத்துக்காட்டு தந்திருப்பின் பொருத்தமாயிருந்திருக்கும்.

நன்னூலார்க்கு முந்தைய இலக்கண ஆசிரியர்கள் தமிழிலுள்ள தொடர் நிகழ்காலம், தொடர் இறந்தகாலம் ஆகியவற்றை முற்றாக எடுத்துக் காட்டவில்லை. தொடர் இறந்த

காலத்தை இறந்தகாலம் என்றும் தொடர் நிகழ்காலத்தை நிகழ்காலம் என்றும் குறித்துச் சென்றுள்ளனர்.

உண்டான் – இறந்தகாலம்.

உண்ணாநின்றான் – (உண்டுகொண்டிருந்தான்), தொடர் இறந்தகாலம்.

உண்ணா நிற்கின்றான் – (உண்டு கொண்டிருக் கின்றான்) தொடர் நிகழ்காலம்.

உண்ணா நிற்பான் – (உண்டு கொண்டிருப்பான்) தொடர் எதிர்காலம்.

செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்னும் ஐந்து வாய்பாடுகளும் இறந்தகாலம் காட்டுவன. 'செய்து' இடைநிலையாலும் ஏனையவை இறுதி நிலையாலும் இறந்த காலம் காட்டும் (ஆறுமுக நாவலர் உரை.)

செய்து செய்பு செய்யாச் செய்யூ
செய்தென செய–செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்துமொன் றாறுமுக் காலமு முறைதரும் (நன். 343)

நன்னூலார் இவற்றை முக்காலம் காட்டுவனவாகப் பிரித்தாலும் தொல்காப்பியர் பொதுப்பட வினையெஞ்சுகிளவி (வினையெச்சம்) என்றே கூறியிருக்கிறார். தொல்காப்பியர் 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தைக் குறிப்பிட வில்லை.

"செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி"
(தொல். சொல். 228. சேனா. உரை).

இத்தகைய வினையெச்சங்கள் வேறுபட்ட பல இலக் கணத்தையுடையன என்றும் தொல்காப்பியர் குறிப் பிட்டிருக்கிறார்.

"வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய"
(தொல். சொல். 457)

ஒரு சீரான செய்யுள் வழக்கும், இடத்திற்கு இடம் மாறும் உலக வழக்காகிய செந்தமிழ் வழக்கு, கொடுந்தமிழ் வழக்கு, திசை வழக்கு ஆகியனவும் நாடி ஆய்ந்த தொல்காப்பியர் அனைத்துத் திரிபுகளுக்கும் பொதுவான நூற்பா யாத்திருக்கிறார். மேற்கூறிய பலவாய்பாடுகள் உரையாசிரியர்கள் காலத்திலேயே தமிழில் காணப்படவில்லை. அவை பழங்கால வழக்குகள் என ஒதுக்கப் பட்டன.

திரவிட மொழிகள் பலவற்றையும், சிந்துவெளி தமிழர் பேசிய சொல்லாட்சிகள் வடபுலமொழிகளில் விரவிக் கிடத்தலையும் ஒப்பிட்டு நோக்கின் மேற்கண்ட வாய்பாடுகள் இன்றும் நின்று நிலவுதலைக் காணமுடிகிறது.

செய்யூ என்னும் வாய்பாடு தெலுங்கு மொழியில் தொடர் கால (continuous) வினையெச்சமாய் உள்ளது.

அடுகுதா உண்டாடு – வினவிக் கொண்டிருக்கிறான் (தொடர் நிகழ்காலம் – present continuous)

அடுகுதா உண்டெனு – வினவிக் கொண்டிருந்தான் (தொடர் இறந்தகாலம் –past continuous)

அடுகுதா உண்டுடு – வினவிக் கொண்டிருப்பான் (தொடர் எதிர்காலம் – future continuous)

செய்யா என்னும் தொடர்கால வினையெச்சம் வடதமிழ்நாட்டுப் பேச்சுவழக்கு, கன்னடம், இந்தியுள்ளிட்ட வடபுல மொழிகளில் உள்ளன.

தமிழ் : போ(த்)தா இருந்தான் (தொ.இ.கா.) (வடதமிழ்நாட்டுப் போ(த்)தா இருக்கின்றான் (தொ.நி.கா.) பேச்சு வழக்கு)
போ(த்)தா இருப்பான் (தொ.எ.கா.)

கன்னடம் : கேளுத்தா இத்தெனு – கேட்டுக் கொண்டிருந்தான்
கேளுத்தா இருத்தானெ – கேட்டுக் கொண்டிருக்கிறான்
கேளுத்தா இருவனு – கேட்டுக் கொண்டிருப்பான்

இந்தி : பட்தா ஐ – படித்துக் கொண்டிருக்கிறான்

இது தொடர் நிகழ்காலமாயினும் வெறும் நிகழ்காலமாக வழக்கூன்றி விட்டது.

ஆதலால், செய்யா என்னும் வாய்பாடு தொடர்காலங் குறித்த (continuous tense) வினையெச்சமே என்பதும், அதன் ஈற்றெழுத்தை (ஆ) தனியாகப் பிரித்து வருமொழி வினை யெச்சத்துடன் சேர்த்து இறந்தகால எச்சமாக வுரைப்பது மரபுக்கு ஒவ்வாது என்பதும் தெளிவாகும்.

உண்ணாவிருந்தான் (உண்டு கொண்டிருந்தான்) என்பதற்கு 'செய்யா இரு' எனவும், வாராநின்றான் (வந்து கொண்டிருந்தான்) என்பதற்கு 'செய்யாநில்' எனவும் தொடர்காலப் பொது கூட்டுவினை வாய்பாடாக்கி யுரைப்பது பொருத்தமாயிருக்கும். இதனை எளிதில் தொடர் முக்காலத்திற்கு செய்யா நிற்கின்றான், செய்யா நின்றான். செய்யாநிற்பான் என புடைபெயர்த்துக் கொள்ளலாம். 'ஆநின்று' என்பதை மட்டும் வாய்பாடாக்கியுரைப்பின் ஊ நின்று (செய்யூ வாய்பாடு), புநின்று (செய்பு வாய்பாடு) துநின்று (செய்து வாய்பாடு) எனப் பிற வாய்பாடுகளுக்கும் கூறவேண்டிய இடப்பாடு நேரும், மொழியமைப்பில் ஏற்கனவே அமைந்து கிடக்கும் தொடர் முக்காலத்தை இலக்கண ஆசிரியர்கள் குறிப்பாகக் கூறியிருப்பினும் அவற்றைத் தெளிவாக வரையறுத்துக் கொள்வது இன்றியமையாதது.

ஆவிரை āvirai, பெ. (n.) 1. ஆவாரைச் செடி; tanner's cassia, 2. ஒரு மரம்; a kind of tree. "வானளாவின வார்கனி யாவிரை" (காஞ்சிப்.சுரகர். 12).

ஆவாரைச் செடி, இச் செடி இளங்கிளைகளையுடையது, எங்கும் விளையும் இச்செடி மொசுமொசுப்பாகவும், இலை

வரிசைகள் 8 முதல் 12 இணைகள் உள்ளதாகவும், ஒவ்வொரு இணையின் நடுவிலும் கோளங்கள் உள்ளதாகவுமிருக்கும். மேற்பக்கம் வழவழப்பாகவும், அடிப்பக்கம் சொரசொரப்பாகவும் கிளைகளின் நுனியில் பூங்கொத்துகள் உள்ளனவாயும் காய்கள் தட்டையாகவும், பூங்கொத்தில் 3 முதல் 5 மஞ்சட்பூக்கள் உள்ளதாகவும் இருக்கும்.

இதன் பட்டைக் கருக்கு (கசாயம்) மிகவும் துவர்ப்பாதலின் வாய் கொப்பளித்தால் புண் ஆறும். இதன் பூவை நீரிழிவுக்குக் கருக்கிட்டு (கசாயம்) பருகுவர். இலைகளை இடித்து உச்சி முதல் பாதம் வரையில் உடம்பில் ஊறும்படித் துவாலையிட்டால் சூலை, ஊதை (வாதம்) புண் முதலியவை குணமாகும். மூத்திர எரிச்சல் நீக்க யூனானி மருத்துவர் பூவிலிருந்து மருந்து செய்வர். இதன் பொடி (சூரணம்) மருந்தாகப் பயன்படும். இதன் வேர் எஃகுக் காய்ச்சிப் பதப்படுத்த பயன்படும்; eared cassia, Tanner's cassia

It is a shrub with tender branches; petioles and peduncles pubescent; leaf lets 8 to 12 pairs with a gland between each pair; upper side glabrous, under slightly pubescent; legumes compressed and flowers 3 to 5 together, and of bright yellow colour.

The plant is commonly found largely in plains and sterile tracts. The bark which is highly astringent in effect is used for gargles, enemas etc; the seeds are used for application in sore–eyes (புளிச்சைக் கண்). Flowers are used in decoction for diuresis and diabetes.

Crushed leaves are applied for cure in arthritis and rheumatism. Unani doctors prepare syrup from flowers and prescribe it for stranguary and burning heat in the system. The powder of this flower is useful in urinary disorders and it strengthen the seminal fluid. The root is used for tempering steel. (சா. அக.)

ம. ஆவர; **க.** ஆவரிக்கெ; **கோத.** ஆவரம்.

ஆவாவிரை பார்க்க; See avavirai.

[ஆவாவிரை – அவிரை]

ஆவிவண்டி āvivaṇḍi, பெ. (n.) நீராவி வண்டி, தொடர் வண்டி இயந்திரம் (சேரநா.); steam engine (Ker.), steam train.

ஆவிவாங்குதல் āvivāṅgudal, பெ. (n.) 1. உள்ளே மூச்சு இழுத்தல்; inhaling. 2. மூச்சு வாங்குதல்; breathing hard. 3. கொல்லுதல்; killing. 4. கும்பித்தல்; retaining breath, suppressing breath. 5. வருத்துதல்; giving trouble, annoying.

[ஆவி + வாங்கு]

ஆவிவிடல் āvividal, பெ. (n.) 1. மூச்சு விடுதல்; exhaling. 2. உயிர் துறத்தல்; dieing.

ஆவி வீசு–தல் āvi vīsu–, 5 செ. குன்றாவி. (v.t) 1. மணம் பரவுதல்; to spread fragrance. 2. முடைநாற்றம் பரவுதல்; to spread as odors, to become diffused as an unpleasant smell (W.)

[ஆவி + வீசு]

ஆவின் குளம்படி āviṉ kuḷambaḍi, பெ. (n.) 1. மாட்டுக் குளம்படி; impression left by the hoof of the cow. 2. ஒரு பச்சிலை; a kind of plant, the leaves of which resemble the hoofs of cow.

[ஆ + இன் + குளம்பு + அடி]

ஆவின் பொகுட்டி āviṉ pogutti, பெ. (n.) இருப்பவல் என்னும் செடி; Indian everlasting plant. The root is prescribed in decoction for cachexia, scrofula and syphilis. (சா.அக.).

[ஆ + இன் + பொகுட்டி]

ஆவின்னுருவி āviṉṉuruvi, பெ. (n.) ஆவின்மேற் புல்லுருவி; honey suckle mistletoe.

[ஆ + இன் + உருவி.]

ஆவினன்குடி āvinaṉkuḍi, பெ. (n.) முருகன் கோயில், பழனி; Muruga's shrine. Palani ''ஆவினன்குடி வரும் அமலற் போற்றுவாம்'' (கந்த 4. கடவுள் வா.14).

ஆவிநன்குடி பார்க்க; see āvinaṉkuḍi,

ஆவீரம் āvīram, பெ. (n.) இடையரூர்; village of sheperds.

[ஆவீரர் – ஆவீரம்.]

ஆவீரன் āvīran, பெ. (n.) இடையன்; sheperd.

[ஆ + வீரன்]

ஆவு[1] **–தல்** āvu–, 5 செ. குன்றாவி (v.t.) விரும்பு; to desire.

ம. ஆவேற்றம் (பேராசை)

[அவாவு – ஆவு]

ஆவு[2] āvu, பெ. (n.) காற்று; wind.

ஆ – ஆவு.

ஆவு[3] āvu, பெ. (n.) 1. குன்றி (மூ.அ.); crab's eye. 2. ஆச்சா மரம்; ebony tree.

[ஆவு = சிவப்பு]

ஆவுடையார் āvuḍaiyār, பெ. (n.) **ஆவுடையாள்** பார்க்க; see āvuḍaiyāḷ.

[ஆவுடையாள் – ஆவுடையார்.]

ஆவுடையார் கோயில் āvuḍaiyār kōyil, பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள திருப்பெருந்துறைக் கோயில்; Siva shrine in Thanjavur District.

[ஆள் + உடையார் ஆவுடையார் = அடியார் தம்மை ஆட்கொண்ட இறைவன்.]

ஆவுடையாள் āvuḍaiyāḷ, பெ. (n.) வல்லமை (வல்லபை – சக்தி) யாகிய இறைவி உமையவளைக் குறிக்கும் இலங்க (இலிங்க) அடிவட்டம், பீடம்; pedestal representing divine energy on which the Linga is placed. "ஆவுடையாளுஞ் சிவலிங்கமும் ஒன்றை விட்டொன்று நீங்காமல்" (சி.சி.1,69, நிரம்ப.).

ம. ஆவுடையாள்.

[ஆள் + உடையாள் – ஆளுடையாள் (ஆ(ள்) + உடையாள்) – ஆவுடையாள் – உயிர்களை ஆட்கொள்ளும் அருளுடைய தேவி உமையவள். இனி, ஆயு – ஆவு = வலிமை, வல்லமை (சத்தி), ஆற்றலுள்ளவள் என்றுமாம்.]

(வல்லமை இருப்பதன் காரணமாக) உயிர்களை ஆட்கொண்டருளும் திறம்பெற்றிருத்தலான் வல்லமையும், வல்லமையைத் திறம்பட ஆளும் வல்லமையும் பெற்றவள் என்றே இச்சொல் பொருள் தருகிறது.

முதலும், முடிவும் இல்லா இறைவன் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில் புரிய அடிப்படையான ஒளிப்பிழம்பான இலங்க (இலிங்க) வடிவுக்கு நின்று நிலைத்த நிலைக்களமாகவும், அருளுக்கும் அமைதிக்கும் பற்றுக் கோடாகவும், வல்லமையின் பிறப்பிட மாகவும் உலகத் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் இருப்பிடமாகவும் முதலும் முடிவும் வரையறுக்கும் சிறப்பிடமாகவும், காலமும் இடமும் கணக்கிடவொண்ணாப் பெருவெளியில் கோள அமைப்பைக் காட்டும் வட்ட வடிவமாயும் கற்பின் திண்மை எனப் பாவலர் உரைக்குமாறு போல வல்லமையின் திண்மைக்கு வடிவு கொடுத்தாற் போன்று அடிப்பீடமாயும் ஆவுடையாள் வடிவம் அமைக்கப் பட்டுள்ளது.

ஆற்றலே ஆற்றலாய் முகிழ்த்து பல்வேறு வடிவு கொண்டு உருமாறி அழிந்து மீண்டும் ஆற்றலுள் அடங்குதலான், ஆண்மை பெண்மையென்னும் வேறுபாட்டுக்கு அறவே இடமின்மையின் அம்மையப்பன் என்று இறைவனை முழுமுதற் பொருளாக்கி வழிபடுவது சிவனியக் (சைவ) கோட்பாடாகலின், ஆவுடையாளைப் பெண்மைக்கும் இலங்கத்தை (இலிங்கம்) ஆண்மைக்கும் குறியாக்கியுரைப்பது வெற்றுரையும் சிவனியக் கோட்பாட்டைப்பழித்துரைக்கும் சமயப்பகைவர்கரவுரையுமாகும். இலங்க வடிவு ஒளியின் தோற்றமாய் ஆற்றலினின்று முகிழ்க்கும் ஆற்றலையே குறித்ததென்க. ஆற்றலுக்கு அடிபணிவதே சிவ வழிபாடாம்.

ஆவுதல் āvudal, தொ.பெ. (vbl.n.) விரும்புதல்; desiring. "செந்நெலங்கழனிச் செய்வேட் டாவிய மறை யோன்" (உபதேசகா. சிவத்துரோ.120).

[அவாவுதல் → ஆவுதல்.]

ஆவுதி āvudi, பெ. (n.) **ஆகுதி** பார்க்க; see **āgudi**. "ஆவுதி மண்ணி யவிர் துகின் முடித்து" (மதுரைக்.494).

[ஒருகா. அவி → ஆவி → ஆவுதி]

ஆவுரிஞ்சி āvuriñji, பெ. (n.) **ஆவுரிஞ்சுதறி** பார்க்க; see **āvuriñjutari**.

ஆவுரிஞ்சுதறி āvuriñju – tari பெ. (n.) ஆ (பசு) முதலிய கால்நடைகள் உராய்ந்து கொள்வதற்காக நடப் பட்ட மரக்கட்டை, ஆதீண்டு குற்றி (திவா.); rubbing post for cows. "அறுசமயத்தோர்க் குணவோடா வுரிஞ்சுதறி" (திருநெல். அறம் வள.33).

[ஆ + உரிஞ்சு + தறி.]

ஆவுறுபித்தம் āvuṟu pittam, பெ. (n.) உடல் வெதும்பிக் கொக்கரித்துக் கூவிக் கூத்தாடும் குணமுள்ள நோய்; a nervous disease marked by a peculiar cry like that of a cock's crow and a dancing mania, chorea. (சா.அக.)

[ஒருகா. ஆ + உறு + பித்தம். ஆவுறல் – வாய் திறந்து கொக்கரித்தல். பித்தம் = பித்த முதலியவற்றான் விளையும் நோய்.]

ஆவூர்க் காவிதிகள் சாதேவனார் āvūr-k-kāvidigaḷ sādēvaṉār; பெ. (n.) கடைக்கழகப் புலவர்; Sangam poet.

[ஆவூர் + காவிதிகள் + சாதேவன் + ஆர்.]

ஆவூர்கிழார் āvūrkiḻār பெ. (n.) கடைக்கழகப்புலவர்; sangam poet.

[ஆவூர் + கிழார்]

ஆவூர்கிழார் மகனார் கண்ணனார் āvūrkiḻār magaṉār kaṇṇaṉār, பெ. (n.) கடைக்கழகப்புலவர்; sangam poet.

[ஆவூர் + கிழார் + மகன் + ஆர் + கண்ணன் + ஆர் 'ஆர்' உயர்வுப்பன்மையீறு]

ஆவூர் மூலங்கிழார் āvūrmūlaṅkiḻār, பெ. (n.) கடைக் கழகப் புலவர்; Sangam poet.

[ஆவூர் + மூலம் + கிழார். மூலம் = நாண்மீன்]

ஆவெருது āverudu, பெ. (n.) காளை; bull

[ஆ + எருது – ஆவெருது.]

ஆவெனல் āveṉal, இடை. (part.) 1. வாய்திறத்தற் குறிப்பு; onom. expr. signifying opening the mouth. "காசினிக்கும்வெண்ணெய்க்கும்செம்பவளமா வென்றான்" (அட்டப். திருவேங்கடமா. 16). 2. அழுகைக் குறிப்பு; onom. expr. signifying crying. "ஆவென்றலற" (தேவா.70,8). 3. இரக்கக்குறிப்பு; onom. expr. signifying pity.

[ஆ + எனல். ஆ = வாய்திறத்தல் குறிப்பு வாய்திறத்தலே அழுகையும் இரக்கமும் குறித்தது.]

ஆவேரி āvēri, பெ. (n.) ஒருவகைக்கடல்மீன்; a kind of sea-fish. (சேரநா.)

ஆவேறு āvēṟu, பெ. (n.) காளை; bull, ox., "ஆவேறு யர்த்தோன்" (உபதேசகா. திருமால்.16).

[ஆ + ஏறு.]

ஆவோ āvō, இடை. (int.) வியப்பு, இரக்கம், வருத்தம் உணர்த்தும் குறிப்புச் சொல்; term expressive of wonder, pity, distress.

ம. ஆவோ.

[ஆ + ஒ – ஆவோ. ஆ, ஒ இரண்டும் வியப்பு குறித்த இடைச் சொற்கள்.]

ஆழ்[1]–தல் āḻ, 1. செ. குன்றாவி .(v.t) அகழ்தல்; to dig. "ஆழ்ந்து காணா ருயர்ந்தெய்த கில்லார்" (தேவா. 1153.9). –2 செ.கு.வி. (v.i.) 1. மூழ்குதல்; to sink, plunge, dive. "ஆழ்கலத் தன்ன கலி" (நாலடி.12). 2. அழுந்துதல்; to be absorbed, immersed, overwhelmed. "அல்லலுற் றழுங்கி நெஞ்சிற் கட்டியங் காரனாழ்ந்தான்" (சீவக. 438). 3. தாழ்தல்; to get lowered. "இன்னலங் கடலுளாழ்ந் திறக்குமே கொலாம்" (நைடத. அன்–கண்.68). 4. ஆழமாதல்; to deep on. ஆழ்கடல். 5. பதிதல்; to enter, pierce. "ஆளிக ளன்னவை..... நிறத் தினாழ்பவே" (கம்பரா. நகர. 64). 6. விழுதல்; to fall down. "கைம்முதல் துணிந்து களிறாழ" (சீவக. 282). 7. சோம்புதல் (திவா.); to be idle, lazy. 8. வருந்துதல் (பதினொ. காரைக். திருவிரட்டை.6); to suffer. 9. மனம் ஒன்றி ஈடுபடல்; to show interest; get involved.

ம., க. ஆழ்; **தெ.** ஆடு

[உல் (துளைத்தல்) – உள் – உளு – உழு – உகு – உகுள் – அகள் – அகழ் – ஆழ்.]

ஆழ்[2]–த்தல் āḻ–7. செ.குன்றாவி.(v.t.) 1. அமிழ்த்துதல்; to sink, immerse, plunge. "துன்பத்து ளாழ்த்தல் முறையோ" (தாயுமா. 61.11). 2. தாழ்த்தல், குறைத்தல்; to lower, minimise. "அடலேறனைய செருக்காழ்த்தி" (நன்னெறி.7) 3. கட்டல்;to bind. **ஆழ்**[1] பார்க்க; see āḻ[1].

[அழ்[1] – ஆழ்[2]]

ஆழ்கடல் மீன்கள் āḻkaḍal mīṉgaḷ, பெ. (n.) கடலின்



ஆழ்கடல் மீன்கள்

ஆழமான பகுதிகளில் வாழும் மீன்கள்; sea-fishes which dwell in deep sea.

[ஆழ் + கடல் + மீன்கள்]

ஆழ்கடற்றுயின்றோன் āḻkaḍaṟṟuyiṉṟōṉ பெ. (n.) கடல் மேல் துயிலுங் கோலத்தமர்ந்த திருமால்; Viṣnu, sleeping on the deep ocean.

[ஆழ் + கடல் + துயின்றோன்.]

ஆழ்த்து–தல் āḻttu–, 12 செ.குன்றாவி .(v.t) அமிழ்த்துதல்; to sink, immerse, plunge, caus. of ஆழ்[1].

[ஆழ் – ஆழ்த்து]

ஆழ்வள்ளிக்கிழங்கு āḻvaḷḷikkiḻaṅgu, பெ. (n.) **மரவள்ளி** பார்க்க; see maravaḷḷi.

ஆழ்வள்ளிக் கிழங்கு

[ஆழ் +வள்ளி + கிழங்கு.]

ஆழ்வார் [1] āḻvār, பெ. (n.) 1. தெய்வப் பண்புகளிலும் வழிபாட்டிலும் ஆழ்ந்து ஈடுபடுகின்ற இறையடியார்; one who is deep in meditation on the attributes of the

Supreme Being. (திவ். இயற். நான்மு. 14). 2. ஆழ்வார்கள், திருமால் அடியார் Vaisnava canonised saints whose hymns in praise of Visnu are regarded as sacred scriptures. 3. சமண பௌத்த துறவிகளுக்குரிய அடைமொழி; title of Jain and Buddhist, saints.

ம., க. ஆழ்வார்; தெ. ஆள்வாரு.

[ஆழ் – ஆழ்வார். 'ஆர்' உ.ப. ஈறு.]

இறைவன் நினைவிலேயே ஆழ்ந்த திருமாலடியார்களை 'ஆழ்வார்கள்' என்பது மரபு. தம் இயற்பெயரோடு ஆழ்வார் என்னும் சிறப்புப் பெயரையும் அடைமொழியாகப் பெற்ற பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை யாழ்வார், நம்மாழ்வார், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கை யாழ்வார் என்னும் பதின்மரும் ஆண்டாளும் மதுரகவியும் ஆக பன்னிரு வரும் ஆழ்வார் எனச் சிறப்பித்தற்குரியர். சமண பௌத்த துறவிகளும் அவிரோதியாழ்வார், மைத்திரியாழ்வார் என ஆழ்வார் அடைமொழியொடு அறியப்பட்டனர். சமய வேறுபாடின்றித் தவநிலையும் தொண்டும் கருதி இச்சொல் மதிப்புரவு அடைமொழியாயிற்று.

ஆழ்வார் [2] ālvār, பெ. (n.) 1. உடையவர், ஆட்கொண்ட எம்பெருமான், கடவுள்; Lord. 2. திருமால்; Visnu. "ஆழ்வார் திருவரங்க தேவர்" (S.I.I. iii. 150)

[ஆள்வார் – ஆழ்வார். அடியாரை ஆளும் (ஆட்கொளளும்) இறைவன். இனி, ஆழ்வாராகிய அடியார் உள்ளத்திலாழ்ந்துள்ள திருமால் என்றுமாம்.]

ஆழ்வார்கன்மி ālvār kanmi, பெ. (n.) திருமால் கோயில் பூசகன் (S.I.I. iii. 150); priest of a Visnu temple.

[ஆழ்வார் + (கருமி) – கன்மி. ஆள்வார் – ஆழ்வார் = திருமால்.]

ஆழ்வார் திருநகரி ālvārtirunagari, பெ. (n.) நெல்லை மாவட்டத்தில் ஊள்ள ஊர்; place name. நம்மாழ்வார் பிறந்த ஊர்.

[ஆழ்வார் + திருநகர் + இ.]

ஆழ்வார் திருநாள் ālvār tirunāl, பெ. (n.) திருமால் கோவிலில் விழா தொடங்குவதற்கு முன்பு முளைப்பாலிகை தெளிக்கும் (அங்குரார்ப்பணம்) திருவிழா (திவ். திருப்பல். 3. வியா); ceremony of seedling in a vessel prior to the commencement of festival in a Visnu temples.

[ஆழ்வார் + திருநாள் = விழா.]

ஆழ்வான் ālvān, பெ. (n.) சூரியன்; sun. "ஆழ்வான் சேய்காரி" (சினேந். தாது காண். 102).

[ஒருகா. ஆழ் – ஆழ்வான் = மேலைக்கடலில் மறையும் சூரியன்.]

ஆழ்வி ālvi, பெ. (n.) 1. தலைவன்; lord. "திருவான் பட்டியாண்டார்க்கு நம் ஆழ்விக்கு" (S.I.I. v. 84). 2. தலைவி; lady.

[ஆழ் – ஆழ்வி.]

ஆழ்வு ālvu, பெ. (n.) ஆழம்; depth. "ஆழ்வினிற் பதிந்த தாயினும்" (இரகு. திக்கு. 26).

[ஆழ் – ஆழ்வு]

ஆழங்கால் ālangāl, பெ. (n.) 1. அதிக ஆழமில்லாத நீர்நிலை; shallow water. "மேல வாழங்கா லெனக்கு முதல் நீச்சே" (குருகூர்ப் பள்ளு.பக்.7). 2. பலகை தாங்குவதற்காகச் சுவரிற் பதிக்கும் கட்டை (இ.வ.); wooden prop inserted in a wall to support a shelf (Loc.). 3. பல்கால் பழகி பட்டறிவும் ஈடுபாடும் மிகுதல்; getting involved after long experience.

[1. ஆழம் + கால். காலளவு, அதாவது கால் நிலைகொள்ளும் ஆழமுள்ள நீர் நிலை. 2. ஆழும் + கால் – ஆழங்கால். கால் = மரக்கட்டை 3. கால் – அடிப்பகுதி ஆழமாக வேர்பதிதல், பிடித்தம் மிகுதல், உரன் உறுதல், பட்டறிவு மிகுதல்.]

ஆழங்காற்படு–தல் ālangār-padu–, 2 செ.கு.வி. (v.i.) அழுந்துதல்; to be immersed in, become absorbed in, get involved. "பகவத் விஷயத்தில் ஆழங் காற்பட்டு" (ஈடு.4.3.6).

[ஆழம் – கால் – படு.]

ஆழநீளம்பார்–த்தல் ālanīlam pār–, 9 செ.குன்றாவி. (v.t.) தனியொருவனின் இயல்புகளை அல்லது ஆற்றலை நுட்பமாகவும், தந்திரமாகவும் ஆய்ந்தறிதல்; to test one's ability or character minutely and cunningly. 'எப்படிப்பட்டவரையும் அவன் ஆழநீளம் பார்த்து விடுவான்' (உ.வ.).

[ஆழம் + நீளம் + பார்.]

ஆழம் ālam, பெ. (n.) 1. ஆழ்ந்திருத்தல்; depth. 'இந்தக் கேணி அதிக ஆழம்' (உ.வ.). 2. நிலத்தில் மேற்பரப்பினின்று கீழே போகும் அளவு, மேலிருந்து கீழே தாழும் அளவு; measurement from top down. "உள்ளுற வாயிர வாயிர யோசனை யுறுநீளங் கொள்வதோ ராழமும்" (கந்தபு. அசுரயாக.42). 3. ஆழ்ந்த கருத்து; depth of thought. "ஆழமன்னோ

உடைத்திவ் வையர் வார்த்தை" (திருக்கோ. 61.). 4. நீராழம்; depth of water. 'ஆற்றில் ஆழம் பார்த்து இறங்கு' (உ.வ.). 5. உளவு, மந்தணம், (இரகசியம்); secret. 6. மனத்தின் ஆழம்; depth of mind. அவனை யாரும் ஆழம் கண்டறிய முடியாது (உ.வ.). 7. அறிதற்கு அருமை; difficulty of understanding, in-comprehensible. 'அது ஆழமான செய்தி, உனக்குப் புரியாது' (உ.வ.). 8. தாழ்வு ; bottom. 'வாளி ஆழத்தில் இருக்கிறது, எடுக்க முடியாது' (உ.வ.). 9. நீர்நிலை; pool, tank. 10. பெருமிதம் (கம்பீரம்); pride, dignity. 11. மறைந்துள்ள ஆற்றல்; potentiality.

ம. ஆழம்; **க.** அழ, ஆழி. **தெ.**லோது; **து., குட., பட.,** ஆள்; **கோத.** ஆளம்.

[ஆழ் → ஆழம்.]

ஆழம்பார்-த்தல் ālampār-, 14. செ.கு.வி. (v.i.) நீர் நிலையின் ஆழத்தை அளந்தறிதல்; take soundings, measure depth. 4 செ.குன்றாவி. (v.t.) ஒருவனறிவு ஆற்றல் பண்பு முதலியவற்றை ஆய்ந்தறிதல்; to sound, examine, test, as one's learning, one's depth of mind.

[ஆழம்+பார்-]

ஆழமுடைத்தாதல் ālamuḍai-t-ādal, பெ. (n.) நூலுக் குரிய பத்து அழகுகளுள் ஒன்று ; profundity of thought, terse but suggestive in meaning, one of ten essential qualities of a good book. "ஆழமுடைத்தாதல், அஃது, அரிதுணர் பொருளதாதல்" (நன். பொதுப். 13).

[ஆழம் + உடைத்து (உடையது) + ஆதல்.]

ஆழமோழை ālamōlai பெ. (n.) உள்ளே சுழித்துக் கொண்டு போகிற சுழியையுடைய கீழாறு (திவ். பெரியாழ். 3,7,4.) depth of a river with whirling water.

[ஆழம் + (மூழை) மோழை.]

ஆழல்[1] ālal பெ. (n.) 1. ஆழுதல், முழுகுதல்; submerging, sinking. 2. ஆழமுடைத்தாதல்; state of being deep. 3. ஈடுபடல்; being involved.

[ஆழி - ஆழல்.]

ஆழல்[2] ālal, பெ. (n.) கறையான்; white ant. (பிங். 2538).

[ஒருகா. ஆழ் - ஆழல் = மண்ணில் முழுகி வாழ்வது, மண்ணில் ஆழ்ந்து செல்வது.]

ஆழா-த்தல் āla-, 11. செ. குன்றாவி. (v.t.) 1. முகத்தல், முகந்து அளத்தல்; to measure. 2. ஆழ்ந்து சிந்தை செலுத்துதல், கருத்தூன்றி ஈடுபடுதல்; to be immersed, absorbed, "அருளின் பெருநசையாலாழ்ந்து (திவ். திருவாய். 2,1,8).

[ஆழ + ஆக்கு - ஆழஆக்கு - ஆழஆ - ஆழா = ஆழுமாறு செய்.]

ஆழாக்கு ālākku, பெ. (n.) உழக்கு, அரைக்காற்படி; 1/8 of a measure, dry or liquid measure known otherwise as ulakku.

ம. ஆழக்கு; **க.** ஆழாக்கு

[அரையுழக்கு - ஆழாக்கு]

ஆழாங்கு ālangu பெ. (n.) **ஆழங்கால்** பார்க்க; see ālangāl

ஆழாரம் ālāram, பெ. (n.) பண்டைத் தமிழகத்தில் இறந்தவர்களைப் புதைப்பதற்காகக் கற்களால் கட்டப்பட்ட 8 அடி முதல் 10 அடி வரை விட்டமுள்ள வட்டமான புதை குழி; circular stone pit of ancient Tamils, 8 to 10 ft. in diameter containing cinerary urns and bones, Indian cromlech (M.M.).

[ஒருகா. ஆழ் + ஆரம். ஆழ்த்தல் = புதைத்தல். ஆரம் = வட்டம், வட்டமான புதைகுழி.]

பெருங்கல் (Megalithic) காலம் என்னும் தொன்முதுகால நாகரிகத்தில் இறந்தவர்களைத் தாழியிலிட்டோ, தனித்தோ புதைத்த குழியின் மேல் மண்குவை அல்லது கற்குவை இட்டு அதனைச் சுற்றிலும் வட்டமாகக் கற்களை வரிசைப் படுத்தி வைப்பது வழக்கம். இதற்குக் கல்வட்டம் அல்லது கற்கிடை (cairn circle) என்று இக்காலத் தொல்பொருள் ஆய்வாளர் பெயரிட்டுள்ளனர். பண்டைத் தமிழர் அக்காலத்திலேயே இதனை 'ஆழாரம்' என வழங்கியிருக்கின்றனர்.

கல்லறை, கல்திட்டை, கற்பதுக்கை, கற்குடை, கற்கிடை குடவரைக் கல்லறை என்னும் பலவகை புதைகுழியமைப்பு முறைகளும், புதைகுழிகளில் பிணத்துடன் அல்லது எலும்புடன் கருப்பு சிவப்பு நிறமுள்ள மட்பாண்டங்களும், 53 வகை எழுத்து வேறுபாடுள்ள குறியீடுகளை எழுதியுள்ள முறையும் தென்னகம், சிந்துவெளி, பாரசீகம், மொசபதோமியா, எகுபது ஆகிய நாடுகளில் ஒன்று போலவே இருப்பது குமரிக்கண்ட தமிழர் நாகரிகம் குவலயம் முழுதும் பரவியதற்குச் சான்று பகர்கிறது.

ஆழாரை ālārai, பெ. (n.) **ஆழாரம்** பார்க்க; see ālāram.

[ஆழ் + ஆரை - ஆழாரை.]

ஆழி[1] āli, பெ. (n.) 1. மோதிரம்; ring. "ஆழிவாய் விரலில்" (சீவக.833). 2. சக்கரம் (பிங்.); wheel, carriage wheel. 3. மட்பாண்டம் செய்ய உதவும் சக்கரம்; potter's wheel. "மட்கலத்தாழியென்ன" (கம்பரா.வாலிவ.37). 4. கணவனைப் பிரிந்த மனைவி இழைக்குங் கூடற் சுழி; curved line of

loops drawn on sand by a woman to divine whether her husband will return in safety, the sum of which if even, indicating the safe return and if odd, failure to return. "ஆழியாற் காணாமோயாம்" (ஐந்திணை. ஐம். 43). 5. யானைக்கைந்நுதி (சா. அக.); tip of elephant's trunk. 6. சக்கரப் படை; discus weapon. "ஆழியெழச் சங்கும் வில்லுமெழ" (திவ். திருவாய்.7,4,1). 6. அரசனின் ஆணைச்சக்கரம் என்னும் அரசு ஆளுமை; royal power, as symbolised by the discus weapon. "ஆழிவேந்தன்" (கம்பரா. தைல.70). 7. கட்டளை; rule, command. "ஆழி நிற்குதி நிற்குதி யல்லையேற் பழிவரும்" (உபதேசகா. சிவவிரத.16). 8. வட்டம் (பிங்.); circle. 9. தேர் உருளை; wheel of the chariot. "ஆழித்தேர் வலவன்" (சேதுபு.தேவிபுர.50). 10. பூமாலை (கருவி.); garland (kar.).

ம., க. ஆழி; **தெ.** ஆணி (வட்டம்.)

[ஆல் - ஆள் - ஆழி.]

ஆனந்தவிகடன் அகராதியில் 'ஆழி' என்னும் சொல்லுக்குக் குயவன் என்று பொருள் கூறப்பட்டிருப்பது பொருத்தமாவதாகத் தோன்றவில்லை. ஆழி - குயவன்,திகிரி, என 'குயவன்' சொல்லை அடுத்து இடப்பட்ட காற்புள்ளி அச்சுப் பிழையாக இருக்கலாம்.

ஆழி[3] āḻi, பெ. (n.) கடல் (பிங்.); sea, as the deep. "ஆழிநீத்த மதொத்தது மதிற்புறத் தகழி" (கந்தபு. திருநகர.9). 2. கடற்கரை; seashore. "பெருங்கடற் காழியனையன்" (புறநா.338). 3. குளம்; tank.

க., ம. ஆழி

[ஆழ் - ஆழி.]

ஆழி[4] āḻi, பெ. (n.) தீக்குழி (சேரநா.); fire pit.

ம. ஆழி

[ஒருகா. ஆழி=வட்டம்,வட்ட வடிவமான தீக்குழி.]

ஆழி[5] āḻi, பெ. (n.) 1. ஏமாற்று (கருநா.); fraud, deceit. 2. விடாப்பிடித்தனம்; naughtiness. 3. உளவு, (இரகசியம்); secret.

க. ஆழி.

[ஆழ் → அழி = ஆழ்ந்த அல்லது மறைவான உள்நோக்கம், ஏமாற்று, உளவு, விடாப்பிடித்தனம்.]

ஆழி[6] āḻi, பெ. (n.) குன்றி (பச்.மூ.); crab's eye, red bead.

[ஆழி[4] → ஆழி[6]]

ஆழிக்கொடி āḻi-k-koḍi, பெ. (n.) பவளம் (யாழ்.அக.); coral.

[ஆழி + கொடி - ஆழிக்கொடி = கடலில் கொடிபோல் படரும் பவளம்.]

ஆழிச்சுழி āḻi-c-cuḻi, பெ. (n.) காலிலும் கையிலும் அரிதாகக் காணப்படும் சக்கர வடிவுடைய சுழி; wheel shaped lines in the palm of hands or legs.

ஆழிசங்கம் āḻi saṅgam, பெ. (n.) (ஓகம்), ஆதனுக்கு (ஆன்மா) ஏற்பட்ட ஐந்நிலைகளுள் ஒன்றானதும், தன்னைச் சுற்றிலும் நடக்கும் நிகழ்ச்சிகளை அறியமுடியாமையுமாகிய சுழுத்தி நிலை; (Yoga) one of the five states of the soul, i.e., deep sleep in yoga with total insensibility to surroundings. (சா.அக.)

[ஒருகா. ஆழிசங்கம் = அலைகடலில் அசைவற்று உள்ளுறங்கும் சங்கு போன்ற மனநிலையைக் குறித்ததாகலாம்.]

ஆழித்தீ āḻi-t-tī, பெ. (n.) வடவையனல்; submarine fire, aurora borealis

[ஆழி + தீ]

ஆழித்தேர் āḻi-t-tēr, பெ. (n.) 1. வட்டக்காலாற் சிறந்த தேர்; car made strong by choice wheels. (புறப். வெண்.). 2. சக்கரப்படை வடிவிலமைந்த திருவாரூர்த்தேர்; temple car at Tiruvārūr, as shaped like a discus. "ஆழித்தேர்வித்தகனை" (தேவா.699.7).

[ஆழி + தேர்.]

ஆழிதிருத்து-தல் āḻitiruttu-, 15 செ.கு.வி. (v.i) கூடலிழைத்தல்; to draw on sand a circle of loops for divination about the safe return of one's husband "ஆழிதிருத்திச் சுழிக்கணக் கோதி" (திருக்கோ. 186).

[ஆழி + திருத்து]

ஆழிதொட்டான் āḻitoṭṭāṉ, பெ. (n.) ஏனாதிமோதிரம் அணிந்த படைத்தலைவன்; general of an army, as one wearing the ring on his finger ēṉātimōdiram (சீவக. 2167).

[ஆழி = மோதிரம். தொடுதல் = அணிதல்.]

ஆழிநுரை āḻi nurai, பெ. (n.) கடல் நுரை; sea-froth.

[ஆழி + நுரை.]

ஆழிமால்வரை āḻimālvarai, பெ. (n.) (தொன்ம) சக்கர வாள மலைத்தொடர்; (myth.) range of mountains believed to be encircling the orb of the earth. "ஆழிமால் வரைக் கப்புறம் புகினும்" (புறத். ஆசிரிய மாலை).

[ஆழி + மால் + வரை. மால் = பெரிய. வரை = மலைத் தொடர்]

கடலுக்கு அப்பால் உலகத்தைச் சுற்றிலும் நெடிய மலைத் தொடர்களிருப்பதாகக் கருதி சக்கரவாளகிரி என வட மொழியாளர் புனைந்த தொன்மக் (புராண) கதையைப் பற்றுக் கோடாகக் கொண்டது இச்சொல். பழந்தமிழர் உலகம் உருண்டை என அறிந்திருந்ததாலும் ஞாலமுதல் சுற்றுக் கடலோடிகளாக (the first circum navigators of the World) விளங்கியதாலும் அவர்க் கிது உடன்பாடன்று.

ஆழிமுரசோன் āḻimuraśōṉ, பெ. (n.) காமன், மன்மதன் (சூடா.) (cupid) Kāma, for his drum is the sea.

[ஆழிமுரசோன் = கடலையே தன் முரசாகக் கொண்டவன், காமன்]

ஆழிமூலம் āḻi mūlam, பெ. (n.) ஒருவகை மூலநோய், இது, நீண்ட வள்ளிக் கிழங்கைப் போல் நிமிர்ந்து, சீழும் குருதியும் ஒழுகி ஒரே முனையாகக் காணப் படும்; (யூ.கி. 800); form of piles in which the enlarged veins in the mucous lining of the rectum push the membrane to such an extent as to assume the shape of a long root. It is accompanied by a purulent discharge. (சா.அக.).

[ஒருகா. ஆழிமூலம் = ஆழ்ந்து அல்லது நன்கு முற்றிப்போன மூலநோய்.]

ஆழிமுழையாய் āḻi mūḻai-y-āy, கு.வி.எ. (adv.) மிக விரைவாக, அதிக வேகமாய்; with great speed. "தடை யற்றால் ஆழிமுழையாய்ச் செல்லத் தட்டில் லையிறே" (திவ்.திருநெடுந். 19 வியா).

[ஆழிமுழை – எதுகை குறித்த மரபிணை மொழி. ஆழி – சக்கரம், சக்கரச் சுழற்சி போன்ற வேகம்.]

ஆழிய கடல் விழுது āḻiya kaḍal viḻudu, பெ. (n.) கடலின் பேராழத்தை அறிய உதவுங் கயிறு; deep-sea lead-line (M.Navi.71).

[ஆழி + அ (உடைமைகுறித்த ஆறன் உருபு) + கடல் + விழுது (விழுதுபோல் கடலில் இறங்கும் கயிறு).]

ஆழியளித்தோன் āḻi-y-aḻittōṉ, பெ. (n.) சிவன்; Siva.

[ஆழி + (அளித்தவன்) → அளித்தோன். சிவபெருமான் கண்ணனுக்கு ஆழிப்படை (சக்கர ஆய்தம்) கொடுத்தான் என்னும் தொன்மக் கதை தழுவிய செய்தி.

ஆழியன் āḻiyaṉ. பெ. (n.) வருணன்; Varuna, the sea-god.

[ஆழி → ஆழியன் = கடல் தெய்வமாகிய வருணன் எனப்படும் வாரணன்.]

ஆழியான் āḻiyāṉ, பெ. (n.) 1. திருமால்; Viṣnu, as wielding the discus. "ஆழியானென்று மாழமோழை யிற் பாய்ச்சி" (திவ். பெரியாழ். 3,7,4). 2. அரசன்; king, emperor. 3. வருணன்; Varuna, the sea-god. 4. ஏமாற்றுபவன்; cheat.

ம. ஆழியான்.

[ஆழி – ஆன் (ஆ.பா.ஈறு). சக்கரப்படையுடைமை யால் திருமாலையும் ஆட்சிச் சக்கரமுடையவன் என்பதால் அரசனையும், கடல் தெய்வமாக வழிபடப்படுவதால் வருணனையும், வளைவு, சுழிப்பு, சூழ்ச்சி எனவும் 'ஆழி' பொருள் தருதலால் சூழ்ச்சி செய்யும் ஏமாற்றுக்காரனையும் இச்சொல் குறித்தது.]

ஆழியிழை-த்தல் āḻi-y-iḻai-, 4.செ.கு.வி. (v.i.) கூட லிழைத்தல்; to draw on sand a circle of loops for divination about the safe return of one's husband. (சீவக. 1037)."வெண்முத்த வார்மணல்மே லன்றாங் கணியிழை யாளாழியிழைத்தாளே" (சீவக. குணமா. 187).

மறுவ ஆழிதிருத்துதல், கூடலிழைத்தல்,

[ஆழி + இழை. ஆழி = வட்டம். இழைத்தல் = செய்தல். கண்ணால் பார்க்காமல் விரலினால் நிலத்தில் சுழிக்கும் சுழி வட்டமாகப் பொருந்துமாயின் தலைவ னோடுகூடுதல்இயலும்என்று அறிதற்கான பழங்காலப் பெண்டிரின் நம்பிக்கை.]

ஆழிரேகை āḻi rēgai, பெ. (n.) **ஆழிச்சுழி** பார்க்க; see āḻi-c-cuḻi.

ஆழிவலியான்மணி āḻi valiyāṉ maṇi, பெ. (n.) மிளகு (தைலவ. தைல. 135); common pepper. "சோடசத் தொன்றாக் காழிவலியான் மணி பிளவு" (தைலவ. தைல. 135).

[ஒருகா. ஆழி + வலியான் + மணி. உருண்டதும் நோய் தடுத்து நலஞ்சேர்க்கும் வலிவுடையதும் ஆகிய சிறிய மணி போன்ற வடிவினது.]

ஆழிவித்து āḻivittu, பெ. (n.) முத்து (வின்.); pearl, as the seed of the sea.

[ஆழி + கடல். ஆழி + வித்து]

ஆழிவிரல் āḻi-viral, பெ. (n.) மோதிர விரல்; ring finger.

[ஆழி + விரல்.]

ஆழு-தல் āḻu- 2 செ.கு.வி. (v.i.) 1. அழுந்தல்; to be immersed, absorbed. 2. தாழ்தல்; to be lowered. "சொல்லரும்பிறவியுட்டுன்பத் தாழுவார்" (கந்தபு. காசிபனு. 21). 3. முழுகுதல்; to sink, dive.

[ஆழ் → ஆழு.]

ஆழும்பாழுமாய் āḻum-pāḻum-āy, கு.வி.எ. (adv.) 1. வீணாக; in vain, uselessly. 2. சீர்கேடாய்; in a ruined condition, wastefully.

[ஆழும் பாழும் + ஆய். எதுகை குறித்த மரபிணைச் சொல். ஆழ்தல் = முழுகுதல், பாழ்படுதல்.]

ஆள்[1]-தல் āḷ, 10. செ.குன்றாவி (v.t.) 1. கைக் கொள்ளுதல்; to hold, maintain, "நாணாள்பவர்" (குறள். 1017). 2. கையாளுதல்; to handle or make use of, எடுத்தாளாத பொருள் உதவாது (உ.வ.). 3. வழங்குதல்; to use a word in a particular sense and so give currency to it, to apply; சான்றோரால் ஆளப் பட்ட சொல் (உ.வ.) 4. ஆட்கொள்ளுதல்; to take charge of, cherish, give shelter to, "ஆள்கின்றா னாழியான்" (திவ். திருவாய், 10, 4:3). 5. அடக்கி யாளுதல்; to control, manage as a household. 6. அரசு செய்தல்; to rule, reign over, govern. 'வைய மெல்லாம் அரசாகி முன்னாண்டவரே" (திவ். பெரியதி. 6, 2:5).

ம., க. ஆள்; **தெ.** ஏலு; **கோத.** ஆண்; **துட.** ஒள்;

து. ஆருனி; **குட.** ஆள்.

[ஆலுதல் = ஒலித்தல், ஆடுதல், வினையாற்றல். ஆல் → ஆள் = வினையாற்றுதல், செயற்படுதல், சுற்றுதல், சுழற்றுதல், அடக்கியாளுதல்.]

ஆள்[2] āḷ, பெ. (n.) 1. திறனாளன்; stalwart, capable man, manly person. "ஆளல்லான் செல்வக் குடியுட் பிறத்தலும்" (திரிக.7). 2. ஆண்மகன்; man. "நல்லா ளிலாத குடி" (குறள். 1030). 3. கணவன்; husband. "ஆளில்லாத மங்கைக்கழகு" (வாக்குண். 3). 4. வீரன்; warrior, "பிள்ளை கடுப்பப் பிணம்பிறங்க ஆளெறிந்து" (பு.வெ.2,7). 5. காலாள்; artillery man soldier, swordsman. "ஆள் வெள்ளம் போகவும் போகான்" (பு.வெ.7,13). 6. ஊழியன்; servant; slave; labourer. "ஏதிலார்க் காளாய்" (நாலடி. 122). 7. ஆட்செய்கை; serving as a slave."ஆளரிக்கு மரி தாய்" (திருக்கோ. 225). 8. தொண்டன்; devotee. "நின்னாளானார்க் குண்ணார்ந்த வாரமுதே" (திருவாச.38,2). 9. வளர்ந்த ஆள்; person, adult, sturdy fellow. அந்தப் பையனும் பெண்ணும் இப்போது ஆளாய் விட்டார்கள் (உ.வ.). 10. ஆள் மட்டம்; man's height as a standard measure. அந்தக் கேணி எத்தனை ஆளாழம்? (உ.வ.). 11. பொறுப்பாளி; person responsible for something, an agent. அதற்கு நான் ஆளல்ல (உ.வ.). 12. மாந்தன்; man, person, individual. அந்த வீட்டில் ஆளே இல்லை (உ.வ.).

ம., க. ஆள்; **து.** ஆளு; **கோத.** ஆள்;

துட. ஒள்; **குட.** ஆளி; **குரு.** ஆல்; **குரு.** ஆலீ (பெண்.).

L. Aner; **Aust.** Atua.; **Skt.** alf (maid);

Heb. Adam; **GK.** Andros.

[ஆல் → ஆள் = வினையாற்றுபவன், செயல் திறவோன்.]

முதலில் வினைப்படுதலைக் குறித்த ஆள் என்னும் முதனிலைத் தொழிற்பெயர் வினையாற்றுதலில் வல்ல திறவோனையும், ஒரு குறிப்பிட்ட வினையின்கண், அவ் வினை வல்ல தொழிலாளர் பலரையும், நாளடைவில் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு வினையிலாயினும் தேர்ச்சி யுடைமை கருதி மாந்தரனைவரையும் குறித்த உயர்திணை இருபாற் பொதுச் சொல்லாய் வழக்கூன்றியது.

ஆள், முதலில் செய்தற்பொருள் வினைச் சொல்லாகவே குமரிநாட்டுத் தமிழில் வழங்கியதாகல் வேண்டும் என்பதற்குச் சான்றான இதே வினை மகரமெய் முன்னெழுத்துப் பேறு பெற்று (ஆள் → மாள்) மாள் → மாடு (செய்) எனக் கன்னடத்திலும், ஆள் → மாள் → மள் (செய்) எனத் துளுவமொழியிலும் வழங்கி வருகிறது. பெயர்ச் சொல்லானபோது இருபாற்பொதுவின் நீங்கிப் பெண்பாற் பெயராகத் தெலுங்கிலும் வடமொழியிலும் குருக்கத்திலும் நிலைபெறினும் ஏனை உலகமொழிகளில் ஆண்பாற் பெயராகவே ஆட்சி பெற்றுள்ளது.

மேலையாரிய மொழிகளில் Alan, Alaric, Allison, Albert என இயற்பெயர் முதனிலையாகவும், Adam என ளகரவீறு டகரவீறாகத் திரிந்த திரிபாகவும், இந்தி உருது போன்றவற்றில் ஆத்மி (மாந்தன்) எனத் தகரமெய்யீறு பெற்றும் வழங்கி வருகின்றது.

சேர மரபினர் ஆதன் (தலைவன்) எனப் பெற்ற மரபுப் பெயரும், ஆளன் → ஆடன் → ஆதன் என்னும் பழநிலைத் திரிபின்பாற்பட்டதாதலின் எபிரேய மொழிகளில் ஆடவனைக் குறித்த Adam என்னும் சொல் குமரித் தமிழின் பரவல் ஆகலாம்.

ஆள்[3] āḷ, பெ. (n.) 1. பெண்; female. 2. மனைவி; wife;

தெ. ஆள்; **குரு.** ஆலீ.

[ஆள் = ஆளப்படுபவள்]

ஆள்[4] āḷ, இடை (part.) 1. பெண்பாற் பெயரீறு; noun ending of the third pers. fem. sing. as in இல்லாள். 2. பெண்பால் வினைமுற்றீறு; verb ending of the third pers. fem. sing. as in வந்தாள்.

க. ஆளு

ஆள் = இருபாற் பொதுமையின் நீங்கிப் பெண்பாற் குறித்த பெயர், 'ஆள்' என்னும் பெண்பாற் பெயர்ச் சொல்லாகி, நாளடைவில் பெண்பாற் குறித்த வினையீறும் பெயரீறும் ஆயிற்று.

ஆள்[5] āl, பெ. (n.) இருபாற் பொதுப்பெயர்; common noun for masculine and feminine.

ஆள்காட்டி āl-kāṭṭi, பெ. (n.) மாந்தரைக் கண்டவுடன் கூச்சலிடுங் குருவி, ஆற்றோரங்களில் காணப் படும். மல்லாந்து படுத்துக் காலையுயர்த்திக் கொண்டு தூங்கும் இயல்புள்ளது; (man + pointer), red wattled lapwing, sand piper.. It is so called from its screeching at the approach of man by night and is very numerous on sandy banks and shores of rivers. It is said to sleep on its back with its legs turned upwards the sky as if to protect itself from the falling sky. (சா.அக.).

ம. ஆள்காட்டி.

மறுவ. ஆட்காட்டி, ஆக்காட்டி.

[ஆள் + காட்டி = ஆளைக்காட்டிக் கொடுக்கும் இயல்புள்ள பறவை.]

ஆள்காட்டி வேலை āḷ-kāṭṭi-vēlai, பெ. (n.) ஏமாற்று வேலை (மதி.கள.11, 72); betrayal, double-crossing, duplicity.

ஆள்கை āḷgai, பெ. (n.) ஆளுதல்; governing, rule. "பயங்காய்ந் தென்னையாள்கைக்கு" (மரு.தி. 22). (த.சொ. அக.).

க. ஆள்கெ, ஆளிகெ, ஆவிகெ.

[ஆள் → ஆள்கை]

ஆள்சுணங்கி āḷ-suṉaṅgi, பெ. (n.) தொட்டாற்சுருங்கி; touch-me-not plant.

மறுவ. தொட்டால் வாடி, தொட்டாற்சுருங்கி, தொட்டால் சிணுங்கி, ஆள், ஆள்வணங்கி

[ஆள் + சுணங்கி. சுணங்குதல் = வாடுதல், சுருங்குதல். ஆள் சுணங்கி என்னும் சொல் 'ஆள்' எனக் குறுகியும் வழங்கும்.]

ஆள்சொக்கு-தல் āḷ-šokku-, 15 செ.கு.வி. (v.i.) 1. தூங்குதல்; to sleep. 2. மயக்கம் அடைதல்; to become unconscious, be ensnared.

[ஆள் + சொக்கு.]

ஆள்தள்ளுதல் āḷ-taḷḷu -, 5 செ.குன்றாவி. (v.i.) குறிப்பிட்ட தோரிடஞ்சென்று செய்தி சொல்லி வருமாறு வேண்டியவரை அவ்விடத்திற்கு அனுப் புதல்; to send a messanger. (முகவை. மீன்)

[ஆள் + தள்ளு.]

ஆள்திட்டம் āḷ-tiṭṭam, பெ. (n.) 1. ஓர் ஆளுக்குரிய அளவு; quantity that is required or fixed for an adult. 2. ஒருவரை இன்னாரென்று தெரிந்து கொள்ள உதவும் உறுப்பு அடையாளம்; features for recognising a person.

[ஆள் + திட்டம். திட்டம் = அளவு, அறிகுறி.]

ஆள்தூண்டிவிரல் āḷ-tūṇḍi-viral, பெ. (n.) சுட்டுவிரல்; fore-finger.

[ஆள் + தூண்டி + விரல். தூண்டுதல் = சுட்டிக் காட்டுதல்.]

ஓர் ஆளையோ ஒரு பொருளையோ சுட்டிக் காட்டுவதற்கு உதவுவதால் இதற்கு இப்பெயர் அமைந்தது.

ஆள்நெல்லு āḷ-nellu, பெ. (n.) வரிவகை (s.i.i.vi.155); tax.

[ஆள் + நெல்.]

ஆள்பிடியன் āḷ-piḍiyaṉ, பெ. (n.) ஆட்பிடியன் பார்க்க; see āṭpiḍiyaṉ

ம. ஆள்ப்பிடியன்

ஆள்மட்டச்சுவர் āḷ-maṭṭa-c-cuvar, பெ. (n.) 1. ஆளுயரமுள்ள மதிற்சுவர் (இ.வ.); compound wall of a man's height (Loc.). 2. கைப்பிடிச் சுவர் (இ.வ.); parapet.

[ஆள் + மட்டம் + சுவர். மட்டம் = அளவு, உயரம்.]

ஆள்மட்டம் āḷ-maṭṭam, பெ. (n.) ஒரு மாந்தனின் உயர அளவு; man's height, as a measure for reckoning the depth of water or height of walls, trees, etc. கிணற்றின் ஆழம் மூன்று ஆள்மட்டம் இருக்கும் (உ.வ.).

க. ஆளுமட்ட

[ஆள் + மட்டம்.]

ஆள்மறித்தான்புல் āḷ-maṟittāṉ-pul, பெ. (n.) இராவணன் மீசைப்புல்; a kind of grass resembling Ravana's whiskers, found on the sea-shore. (சா.அக.).

[ஆள் + மறித்தான் + புல். ஆள்மறித்தல் = திடுக்கிடச் செய்தல், அச்சுறுத்தல், வடிவமைப்பில் பெரிதாயிருத்தல்.]

ஆள்மாகாணம் āḷmāgāṇam, பெ. (n.) மக்களின் திரள் கூட்டம், இனத்தார் அல்லது நட்பினர் கும்பு (கும்பல்); dependants, persons at one's command. அவனுக்கு ஆள்மாகாணம் அதிகம் (இ.வ.). 2. அலுவலகத்திலுள்ளவர் கூட்டம்; personnel of an office or establishment. 3. கூலியாட்கள் வேலை செய்யுமிடம்; group of workers, labourers (ஆ.அக.)

ம. ஆள்மாகாணம்

[ஆள் + மாகாணம். மாகாணம் = பெரிது, அதிகம். மா + கணம் = மாக்கணம் → மாக்காணம் → மாகாணம்.]

ஆள்மாறாட்டம் āḷmāṟāṭṭam, பெ. (n.) ஒருவன் தன்னை வேற்றாளாகக் காட்டி ஏமாற்றுதல்; personation.

ம. ஆள்மாறாட்டம்.

[ஆள் + மாறாட்டம்.]

ஆள்மிரட்டி āḷmiraṭṭi, பெ. (n.) மந்திரித்து மை செய்வோர் பயன்படுத்தும்ஒரு மூலிகை; plant used in magic for preparing collyrium. (சா.அக.).

[ஆள் + மிரட்டி. மிரட்டு + இ - மிரட்டி = அச்சுறுத்துவது, அடக்குவது, தன்வயப்படுத்துவது.]

ஆள்வணங்கி āḷvaṇaṅgi, பெ. (n.) 1. அரச மரம்; peepul tree. 2. தொட்டாற்சுருங்கி; touch-me-not- plant. 3. கல்லத்தி; stone-fig. 4. மலைச்சருக்கரைவள்ளி; mountain sweet potato, (சா.அக.) 5. மாமரம்; mango.6. ஆத்தி; common mountain ebony. (செ.அக.). 7. கல்லத்தி (த.சொ.அக.); stone fig. 8. வேப்பமரம். neem tree. (கதி.அக.).

[ஆள் + வணங்கி.]

ஆள்வரி āḷvari, பெ. (n.) தலைவரி; pool-tax (Ins.).

ஆள்வள்ளிக்கிழங்கு āḷvaḷḷi-k-kiḻaṅgu, பெ. (n.) மரவள்ளிக் கிழங்கு; root of cassava plant, wild yam,

இது தென்னிந்தியாவில் பொதுவாக எங்கும் பயிராக்கப்படும். திருவனந்தபுரத்தில் மிகுதியாய்க் கிடைக்கும். இதிலுள்ள நச்சுத் தன்மையை நீக்கிய மாவுக்கு 'டாபியோகா' என்று பெயர். குழந்தைகள், நோயாளர், வலிவற்றோர் ஆகியோர்க்கு இம் மாவினைக் கஞ்சிகாய்ச்சித் தருவர். கொப்புளம், சிலந்திமுதலிய புண்களுக்கு இதன் வேர்ப்பட்டை மேற்பூச்சு மருந்தாகப் பயன்படும்.

தென்னமெரிக்காவிலுள்ள செவ்விந்தியர் இக் கிழங்கிலுள்ள நச்சுநீரை (hydrocyanic acid) வடித்தெடுத்து அம்பின் நுனியில் தடவுதற்குரிய கொடிய நஞ்சை (maudian poison) உண்டாக்குகின்றனர் (சா.அக.).

[ஆழ்வள்ளி → ஆள்வள்ளி + கிழங்கு.]

ஆள்வாடைத்தட்டி āḷlvādai-t-taṭṭi, பெ. (n.) நோக்கு நோக்கி; a plant (unidentified) (சா.அக.).

[ஒருகா. ஆள்வாடையை உணர்ந்து கொள்வது அல்லது ஆள்வாடை படுவதால் வாடிப்போவதாக இருக்கலாம்.]

ஆள்வார் āḷvār, பெ. (n.) கடவுள்; deity as supreme ruler. 'திருத்தீக்காலி ஆள்வார் கூத்தப்பெருமான் அடிகளுக்கு' (s.I.I. iii, 103).

[ஆள் → ஆள்வார் = எல்லா உயிர்களையும் ஆளும் கடவுள்.]

ஆள்வாரம்[1] āḷlvāram, பெ. (n.) பண்ணையில் பணியாற்றிய குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அக்குடும்பத் தலைவனால் பண்ணையாளுக்குத் தரும் வாரம் அல்லது பங்கு (இ.வ.); system of crop-sharing in which the tenant's portion is determined by the number of labourers employed from his family (Loc.).

க. ஆளிவாறு (ஒருவகை வரி)

[ஆள் + வாரம்.]

ஆள்வாரம்[2] āḷlvāram, பெ. (n.) தட்டை முதலியன அடுக்கிய படப்பில் பொதியமையும் பகுதியின் இருபக்கத்திலும் உள்ள இடம் (முகவை.); path between two stacks of hey

[ஆள் + வாரம்.]

ஆள்வாரி āḷlvāri, பெ. (n.) ஆளோடி; paved passage on the inner side of the parapet of a tank. "தீர்த்தக்கரை மதிலும் மண்டபமும் மன்னுபுடை சுற்று மாள் வாரியுடன்" (பூவண.உலா. 101).

க. ஆள்வேரி, ஆளுவேரி (கோட்டைச்சுவர்)

[ஆள் + வாரி (வா → வரு) - வாரி.]

ஆள்வாரிதி āḷvāridi, பெ. (n.) அரசமரம்; peepul tree.

[ஆள்வார் = ஆள்வாரிதி. ஆள்வார் - ஆளுகின்ற அரசர். அரசமரம் என்பதற்குக் குறிப்பான் வேறு பெயராக நாட்டு மருத்துவரும் சித்தரும் கையாண்ட குழூஉக்குறிச்சொல்.]

செடி கொடி மரம் முதலியவற்றுக்கும் இன்றியமையாத மூலிகைகளுக்கும் இத்தகு வேறு பெயர்கள் பல வழங்குவதைக் காணலாம்.

ஆள்வாரிநிலம் ālvārinilam, பெ. (n.) கோட்டையுள் மதிற்புறமாக ஆள் சுற்றிவருவதற்குரியவழி (பிங்.); paved passage along the walls within a fortification.

[ஆள்வாரி + நிலம். ஆள்வாரி = ஆள் வருவதற் குரிய வழி. ஒ.நோ: வாரிப்புறம் போக்கு = மக்கள் வருவதற்குரிய அல்லது போக்கு வரத்துக்குரிய புறம்போக்கு நிலம்.]

ஆள்வாரில்லாமாடு ālvārillāmāḍu, பெ. (n.) 1. கோயில் மாடு (வின்.); cow or bull belonging to a temple. 2. கட்டின்றி மேய்ந்து திரியும் பட்டி மாடு; straying cattle.

[ஆள்வார் + இல்லா + மாடு. ஆள்வார் = மேய்ப்பவர்.]

ஆள்வாரிலி மாடு ālvārili māḍu, பெ. (n.) பட்டிமாடு; straying cattle. "ஆள்வாரிலி மாடாவேனோ" (திருவாச. 21.7).

[ஆள்வார் + இலி. + மாடு. இல்லி → இலி = இல்லாத.]

ஆள்வாரில்லா மாடு பார்க்க; See ālvārillā māḍu.

ஆள்விட்டுப்போ—தல் ālviṭṭu-p-pō--, 8 செ.கு.வி. (v.i.) உடம்பு இளைத்தல்; become weak and lean. போன மாதம் பார்த்ததைவிட இப்பொழுது மிகவும் ஆள்விட்டுப் போய்விட்டான் (உ.வ.).

[ஆள் + விட்டு + போ.]

ஆள்விடு—தல் ālviḍu--, 20செ.கு.வி. (v.i.) ஆள் வாயிலாகச் செய்தி அனுப்புதல்; (ஈடும். 1 .அவ.) to send a person, as a messenger.

[ஆள் + விடு.]

ஆள்விழுங்கி ālviluṅgi, பெ. (n.) நீண்ட அங்கி. (கதி.அக.); long gown.

[ஆள் + விழுங்கி.]

ஆள்வினை ālviṉai பெ. (n.) 1. முயற்சி; manly effort, enterprise. (குறள். 618). 2. ஊக்கம்; enthusiasm. 3. துணிவு; courage. 4. பணிவிடை; serving to the needs. "சுந்தர விடங்கன்தன்னை ஆள்வினை யன்பும் தானும் வைகலும் அடைந்து தாழ்ந்து" (திருவிளை: அங்கம். 3.).

[ஆள் + வினை. ஆள் = ஆள்திறன். வினை = செயல். ஆள்வினை = ஆள்திறன் ஆகிய செயல், முயற்சி, ஊக்கம்.]

ஆள்வினையுடைமை ālviṉai-y-uḍaimai, பெ. (n.) இடைவிடாத மெய்ம் முயற்சி யுடையவனாதல்; tireless effort. (குறள். அதி. 62).

[ஆள் + வினை + உடைமை.]

ஆள்வினை வேள்வி ālviṉai vēlvi, பெ. (n.) விருந்து புறந்தருதல் (பதிற்றுப். 21, 13, உரை); hospitality to guests held to be as meritorious as a sacrifice.

[ஆள்வினை + வேள்வி.]

ஆள்வு ālvu, பெ. (n.) ஆளுதல்; ruling. "அவனினி திருந்திவ் வேழுலகாள்விடம்" (கம்பரா. நகர. 5).

க. ஆள்தன, ஆளு விகெ.

[ஆள் → ஆள்வு]

ஆளகம் ālagam, பெ. (n.) 1. சுரைக்காய் (மலை.); calabash,bottle gourd. 2. சுரைக்கொடி; bottle gourd creeper. (சா.அக.).

தெ. ஆனுகமு, ஆனுகு

[ஆல் + அகம் - ஆலகம் → ஆளகம். ஆல் = நீர் ஆளகம் = நீர்ச்சுரப்புள்ளது. ஒ.நோ. சுரை = சுரப்புள்ளது, நீர்ப்பொருள் சுரந்து பருத்தது.]

ஆளடிமை āladimai, பெ. (n.) அடிமை, நிலைத்த பணியாளன்; slave, permanent servant. "ஆதியிற் செய்ததவ முண்டில்லை யென்பதற் காளடிமையே சாட்சியாம்" (அறப். சத. 52).

ம. ஆளடியான்.

[ஆள் + அடிமை.]

ஆளடியான் āladiyāṉ, பெ. (n.) ஆளடிமை பார்க்க; see aladimai.

[ஆள் + அடியான்]

ஆளத்தி ālatti, பெ. (n.) (இசை.) பண்ணிசைக்கும் போது மூலாதாரம் தொடங்கி வருமெழுத்தின் ஓசை; improvised introduction to a melody. (சிலப். 3, 26, உரை) (கூத்த.).

க. ஆளத்தி (பாடுதல்)

[ஆளல் → ஆளத்தி = ஒரு பண்ணை ஆண்டு பாடுவது. ஆளல் = பாடிப்பாடிப் பழகிப் பண்படுத்திக் கொள்ளுதல், ஆளத்தி = பாடிப்பழகி இனிமை மிகுவிக்கப்பட்ட ஓசையழகு.]

இது அச்சு, பாரணை என்று இருவகைப்படும். அச்சுக்கு எழுவாய் குற்றெழுத்து, பாரணைக்கு எழுவாய் நெட்டெழுத்து,. அச்சு தாளத்துடன் நிகழும். பாரணை கூத்துடன் நிகழும். ஆளத்தி செய்யுமிடத்துத் தென்னா என்றும், தெனா என்றும் இரண்ட சையும் கூட்டித் தென்னாதெனா என்று பாடப்படும்.

இவைதாம் காட்டாளத்தி, நிறவாளத்தி, பண்ணாளத்தி என மூன்று வகைப்படும். இவற்றுள் காட்டாளத்தி அச்சுடன் நிகழும். நிறவாளத்தி நிறம் குலையாமல் பாரணையுடன் நிகழும். பண்ணாளத்தி பண்ணையே கருதி வைக்கப்படும். பின்னும் மற்றொரு வகைக் குற்றெழுத்தாலும் நெட்டெழுத்தாலும் ஆளத்தி செய்யப்படும். மற்றும் மெய்யெழுத்துப் பதினெட் டினுள்ளும் மவ்வும் நவ்வுத் தவ்வும் என மூன்று எழுத்துகளும் இனமுமல்லா மற்றை எழுத்துகள் ஆளத்திக்கு வரப்பெறா. இவற்றுள் மவ்வினம் தூய்மை (சுத்தம்)க்கு உரித்து. நவ்வினம் சாளத்திற்கு உரித்து. தவ்வினம் தமிழிற்கு உரித்து. இங்ஙனம் மூலாதாரம் தொடங்கி எழுத்தின் ஓசை (நாதம்) ஆளத்தியாய்ப் பின்னிசை என்றும் பண் என்றும் பெயராம். பல இயற் பாக்களுடன் நிறத்தை இசைத்தலால் இசை என்று பெயராம்.

பெருந்தானம் எட்டனுள் செய்வு (கிரியை)கள் எட்டாலும் பண்ணப்படுதலால் பண்ணென்றும் பெயராயிற்று. பெருந் தானம் எட்டாவன; நெஞ்சு, மிடறு, நா, மூக்கு, அண்ணாக்கு, உதடு, பல், தலை, என்பவை. செய்வுகள் (கிரியை) எட்டாவன; எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்பவைகளாம்.

"மகரத்தி னொற்றுச் சுருதி விரவும்
பகருங் குறினெடில் பாரித்து – நிகரிலாத்
தென்னா தெனாவென்று பாடுவரே வாளத்தி
மன்னாவிச் சொல்லின் வகை"

முதல் பாடுமிடத்து மகரத்தின் ஒற்றாலே ஓசை (நாதம்) யைப் பலுக்கும் (உச்சரிக்கும்) மரபு பகரில் பாரித்து முற்கூறிய ஓசை (நாதம்) யினைத் தொழில் செய்யுமிடத்துக் குற்றெழுத் தாலும் நெட்டெழுத்தாலும் செய்யப்படும் (சிலப்.) (அபி.சிந்.)

ஆளம் āḷam, பெ. (n.) ஆளத்தி (ஆலாபனம்); elaboration of a tune. "வண்டினங்கள் ஆளம் வைக்கும் அரங்கமே" (திவ். பெரியாழ் .4,8,6).

[ஆல் → ஆலம் → ஆளம்.]

ஆளமஞ்சி āḷamañji, பெ. (n.) கூலியின்றிச் செய்யும் கட்டாய வேலை (S.I.I.i.103); forced labour, gratuitous supply of labourers.

[அமைந்த ஆள் → அமஞ்சியாள் → ஆளமஞ்சி. கால்வாய்–வாய்க்கால் என்றாற் போன்ற இலக் கணப் போலி. அமைந்த ஆள் = இன்ன பணி இலவயமாகச் செய்தாக வேண்டு மென்னும் கட்டாயத்திற்குட் பட்டவன். அமைதல் = கட்டுப்படல்.]

ஆளரவம் āḷaravam, பெ. (n.) மாந்தரின் நடமாட்டத் தால் உண்டாகும் ஓசை; noise of people moving about. "ஆளரவம் சற்றேயடங்கியபின்" (பத்ம. தென்றல் விடு.122).

[ஆள் + அரவம்.]

ஆளரி āḷari, பெ. (n.) 1. ஆண் அரிமா (சிங்கம்) (பிங்.); lion, 2. நரவரி (நரசிம்மம்) யாகத் தோன்றிய திருமால்; Visnu in his incarnation of man–lion. (திருக்கோ.225 உரை).

[ஆள் + அரி. அரி = அரிமா, சிங்கம்.]

ஆளல்[1] āḷal, பெ. (n.) 1. ஆளுதல்; ruling.

[ஆள் + அல் (தொ.பெ.ஈறு).]

ஆளல்[2] āḷal, பெ. (n.) மீன்வகை; a kind of fish. "கோளையாள லொஞ்சான் பஞ்சான்" (குருகூர்ப் பள்ளு. பக். 7).

[ஒருகா. ஆரால் → ஆரல் → ஆளல்.]

ஆளல்[3] āḷal, பெ. (n.) கறையான்; white–ant.

[ஆழல் → ஆளல்.]

ஆழல் பார்க்க; see āḻal.

ஆளவந்தார் āḷavandār, பெ. (n.) 1. ஒரு மாலியக் குரவர் (வைணவ ஆசாரியர்); Vaiṣnava Acarya in Srirangam who was the immediate predecessor of Rāmānuja. (அட்டப். சீரங்கநாய. ஊசல். 18). 2. தமிழ் ஞானவாசிட்ட ஆசிரியர்; a Brahmin poet, author of the Tamil Ñānavāsiṭṭam.

[உயிர்களை ஆளவந்த அருளாளனாகிய இறைவன் என்று பொருள்படும் கடவுட்பெயர், அத்தகு அருளாளராகிய அடியார் இட்டுக் கொள்ளும் இயற்பெயராயிற்று.]

ஆளவந்தார் கலியாண்டு 4017, தாதுஆண்டு கடக (ஆடி) மாதம் அறிவன் (புதன்) கிழமை வீரநாராயணபுரத்தில் ஈசுர முனிக்கும் அரங்கநாயகியம்மைக்கும் மகனாகப் பிறந்தார். மகா பாசிய பட்டரின் மாணாக்கர். ஆக்கியாழ்வான் என்னும் அரண்மனைப் புலவனுக்குக் கப்பம் கட்டவேண்டுமென்று மகா பாசிய பட்டருக்குத் திருமுகம் வந்தது கண்டு சினந்து அரசன் அனுப்பிய தண்டிகையிற் சென்று, அரசமாதேவியாகிய திருவரங் கத்தம்மையால் என்னை யாளவந்தவர் எனப் புகழப் பட்டவர். ஆக்கியாழ்வானை வென்றதால் அரசனால் பாதி அரசைப் பெற்றவர். மணக்கால்நம்பிக்குப்பின் வந்த திருமாலிய ஆசானாக விளங்கியவர் (குரு பரம்பரை).

ஞானவாசிட்டத்தைத் தமிழிற் செய்யுளாகச் செய்த ஆள வந்தார் பாண்டிநாட்டு விரையூரிற் பிறந்த தமிழ்ப்புலவர் (அபி.சிந்.).

ஆளவந்தாராண்டான் āḷavandārāṇḍāṉ, பெ. (n.) எழு பத்து நான்கு அரியணை யதிகருள் (சிம்மா சனாதிபதி) ஒருவர் (குரு பரம்பரை); one of the seventy four great men in the Vaiṣnava religion.

[ஆளவந்தார் + ஆண்டான்.]

ஆளவந்தாராழ்வார் āḷavandārāḻvār, பெ. (n.) திரு வரங்கப் பெருமாளரையரின் வேறு பெயர்; name of Tiruvaranga-p-perumāḷaraiyar.

[ஆளவந்தார் + ஆழ்வார்.]

ஆளறி-தல் āḻari-2. செ.கு.வி. (v.i.) ஆள் அடையாளம் அறிதல்; to idntify.

[ஆள் + அறி.]

ஆளறி சான்று āḻaricāṉṟu, பெ. (n.) ஆள் இன்னார் என்று காட்டும் சான்று; identification certificate

[ஆள் + அறி + சான்று.]

ஆளறிதல் āḻaridal, தொ.பெ. (vbl.n.) ஆளை அடையாளம் காட்டுதல்; identification.

[ஆள் + அறிதல்.]

ஆளறிஞர் āḻariñar, பெ. (n.) இவர் இன்னார் என்று அடையாளம் காட்டுபவர்; identifier.

[ஆள் + அறிஞர்]

ஆளறுதி āḻarudi, பெ. (n.) தனிமை; solitude. "இக்காம நோய்க்குத் துணையாவதோர் ஆளறுதியிலே" (கலித்.144. உரை).

[ஆள் + அறுதி. அறுதி = அற்ற நிலை. ஆளறுதி = துணையாகும் ஆள் எவரும் இல்லாத நிலை, தனிமை.]

ஆளன்[1] āḻaṉ, பெ. (n.) 1. அடிமை; slave. "ஆளராய்த் தொழுவாரு மமரர்கள்" (திவ். திருவாய். 9.3,10). 2. சிற்றூரில் பரம்பரையாய்ப் பாகவுரிமை உள்ளவன்; proprietor of a hereditary share in a village (R.T.). 3. ஆளுபவன், அரசன்; ruler, king. 4. தலைவன், முதலாளி; chief, boss.

[ஆள் → ஆளன்.]

ஆளன்[2] – āḻaṉ இடை. (part.) ஓர் ஆண்பாற் பெயரீறு; a mas. n. suff. கண்ணாளன், மணாளன் (உ.வ.).

ம. ஆளன்; **க.** ஆள்ம, ஆண்ம

[ஆள் → ஆளன்.]

ஆளா(கு)-தல் āḻā(gu)–, 9. செ.கு.வி. (v.i.) 1. அடிமையாதல், அடியவனாதல்; to become a servant or devotee. (திவ். பெரியதி. 11.7.9). 2. பெருமையடைதல்; become eminent, distinguished. ஊரில் அவர்தான் ஆளாயுள்ளவர் (உ.வ.). 3. மகளிர் பருவமடைதல் attain puberty, used only with reference to girls. அந்தப் பெண் ஆளாகிவிட்டாள் (உ.வ.). 4. கட்டமைந்த உடலினனாதல்; attain well built body. பையன் நல்ல ஆளாய்விட்டான் (உ.வ.).

[ஆள் + ஆகு + தல் – ஆளாகுதல் → ஆளாதல்.]

ஆளாங்கு āḻāṅgu, பெ. (n.) **ஆழங்கால்** பார்க்க; see āḻangāl.

[ஆழங்கால் → ஆழாங்கு → ஆளாங்கு]

ஆளாபம் āḻābam, பெ. (n.) ஆளத்தி, (ஆலாபனம்); improvised introduction of a melody. (சீவக. 1959 உரை). **ஆளத்தி** பார்க்க; See āḻatti.

ஆளாமை āḻāmai, பெ. (n.) **ஆளானம்** பார்க்க; see āḻāṉam

கதிரைவேற்பிள்ளை அகராதியில் ஆளாமை என்பதற்கு, கட்டுத்தறி, கலப்பை எனப் பொருள் வரைந்திருப்பது தவறு. இது ஆளானம் என்னும் சொல்லைப் பிறழக்கொண்டு பதிப்பித்ததால் நேர்ந்த பிழை.

ஆளாழம் āḻāḻam, பெ. (n.) ஓர் ஆள் அளவுள்ள ஆழம்; depth equal to the height of a full–sized man. அந்தக் கிணறு எத்தனை ஆளாழம் (உ.வ.).

[ஆள் + ஆழம்.]

ஆளானம் āḻāṉam, பெ. (n.) 1. தூண் (பிங்.); pillar, column. 2 யானை கட்டுந்தறி; stake, post to which an elephant is tied. "இருகோட்டுக் குன்றங்கன்றி யானை மதிற் பிணிப்புண்டு" (இரகு. குறை. 55). 3. கட்டுத்தறி; tying post. 4. கலப்பை; plough.

ம. ஆளானம்

[ஆல் → ஆலானம் → ஆளானம். ஆலுதல் சுற்றுதல், சுற்றிக் கட்டுதல், பிரித்தல், இறுகக்கட்டுதல், கட்ட உதவும் கட்டுத்தறி, கயிற்றால் நுகத்தொடு பொருத்திக் கட்டக் கூடிய கலப்பை.]

ஆளி[1] āḻi, பெ. (n.) ஆள்வோன்; one who rules or controls. "அரங்கமாளி என்னாளி" (திவ். பெரிய 7.3.4)

[ஆள் + இ.]

ஆளி[2] āḻi, இடை. (part) வில்லாளி, உழைப்பாளி, முதலாளி, தொழிலாளி, கொலையாளி (இ.வ.). sing. ending of rational nouns–denoting master or possessor of etc.

ம. ஆளி; **க.** ஆளு.

[ஆள் → ஆளி.]

ஆளி[3] āḻi, பெ. (n.) யானையாளி; fabulous animal with a proboscis like an elephant. "ஆளி நன்மானணங் குடைக் குருளை "(பொருந. 139). 2. அரிமா; lion." "ஆளிக்கொடி யேந்திய தங்கை" (தணி கைப்பு. நாட்டுப். 60). 3. அரிமா ஓரை (சிம்மராசி); Leo, fifth sign of the Zodiac. 4. யானை; elephant. 5. தேள்; scorpion. (சேரநா.). 6. உயிர்ப்பு, வாழ்வு, வலிமை (துளு); breath, life, strength.

ம. ஆளி.

[ஒருகா. அள்ளி → ஆளி = செறிந்த வலிமையுடைய விலங்கு.]

ஆளி[4] āḷi (n.) 1. தோழி (நாநார்த்); female companion. 2. மனைவி (ஆந்); wife.

ம., க., தெ. ஆளி;ஆ; **குரு., கோண்.** ஆலி.

[ஆல் →ஆள் = ஆளப்படுபவள், துணை கொள்ளப் படுபவள் த. ஆளி > Skt. āli.]

ஆளி[5] āḷi, பெ. (n.) 1. தூயகருத்து; honest thought. 2. ஒழுங்கு, வரிசை; row. 3. பாலம்; bridge. 4. வரம்பு; limit. 5. செய்கரை; bank of a river or the bound of a lake.

ம. ஆளி.

[அளி → ஆளி.]

ஆளி[6] āḷi, பெ. (n.) 1. சீனதேசத்துச் செடி வகை; linseed plant, 2. ஒருவகைக் கீரை; cress, 3. ஆளி விதை; seed of common flase plant.

ஆளி - சீனதேசத்துச் செடி

ஆளி[7] āḷi, பெ. (n.) வைத்தூற்றி; funnel.

[நாளி → ஆளி. நாளி = உட்டுளையுடையது.]

ஆளி[8] āḷi, பெ. (n.) 1. கிளிஞ்சில் போன்ற சிப்பி; oyster, ostrea edulis. 2. உடம்பு கருப்பாயும் தலை கபில நிறமாயுமிருக்கும் ஒருவகைக் கழுகு; tawny eagle, it has a black body and a brown head and it subsists on or by robbing other birds of prey. (சா.அக.).

[ஆல் → ஆலி → ஆளி.]

ஆளி[9] āḷi, பெ. (n.) 1. வழுக்கல் (நாமதப.); slipperiness. 2. பயனின்மை; uselessness.

[ஆழ் → ஆழி → ஆளி.]

ஆளி[10] āḷi, பெ. (n) சிறுமூட்டை; bundle.

[அள்ளி → ஆளி]

ஆளி[11] āḷi, பெ. (n.) வண்டு; bee.

ம. ஆளி

[ஆளி[9] → ஆளி[10]]

ஆளி[12] āḷi, பெ. (n.) உருப்படிவம் (மாதிரி), முன் வரைவு; sample, model, pattern, (ஆந்.).

[அளவு → ஆளி.]

ஆளிட்டான் காசு āḷiṭṭaṉ kāśu, பெ. (n.) பழைய நாணயம்; ancient coin. (பணவிடு.115).

[ஆளிட்டான் + காசு.]

ஆளிடு-தல் āḷiḍu–, 18 செ.குன்றாவி (v.t.) மாற்றாக வேறொருவரை அமர்த்துதல்; to depute as a substitute. "யோக்கியராயிருப்பாரை ஆளிட்டு" (s.I.I.ii. 254).

[ஆள் + இடு.]

ஆளிந்தம் āḷindam, பெ. (n.) திண்ணை; raised platform in front of the house. (த.சொ.அக.)

ம. ஆளிந்தம்

[ஆளி[5] → ஆளிந்தம்.]

ஆளிமுகன் āḷimugaṉ, பெ. (n.) சூரபதுமனுக்கு உள்ளடங்கி இலங்கையின் சிறு பகுதிக்குத் தலைவனான சிற்றரசன் (அபி.சிந்.); small chieftain of Sri Lanka under the rule of Sūrapaduma.

[ஆளி போன்ற முகமுடையவன் என்றும் ஆயிரம் யாளி முகம் உடையவன் மிருவலியன் என்றும் தொல் கதை வழங்குகிறது.]

ஆளியூர்தி āḷi-y-ūrdi, பெ. (n.) அரிமாவின் மீதமர்ந்த காளி; Durga, riding on lion

[ஆளி + ஊர்தி.]

ஆளிவித்து āḷivittu, பெ. (n.) ஆளிவிதை பார்க்க; see **āḷividai.**

[ஆளி + வித்து]

ஆளிவிதை āḷividai, பெ. (n.) சிறு சணல் வித்து (பதார்த்த.780). இது தொடக்கத்தில் சீன நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டது. கடுகுடன் சேர்த்துக்குளிர்காலத்தில்பயிரிடப்படும்.வெளிறிய மஞ்சள் நிறமுள்ள இதனை அகத்தி வித்துக்குப் பகரமாகப்பயன்படுத்துவர்.எல்லா மருத்துவர்களும் பயன்படுத்தும் இவ்வித்தினை அவிசி விதை யென்றும், ஆழிவிரையென்றும் கூறுவர். கட்டிகளின்மேல் களிபோல் கிண்டி வைத்துக் கட்டுவர். இருமல், குருதிகக்குதல், குளிர்வயிற்றுப் போக்கு (சீதபேதி), நீர்ச்சுருக்கு, அதிசாரம், வெள்ளை முதலிய நோய்களுக்கு மருந்துகளுடன் கலந்து சூரணமாகத் தரப்படும். இதன் எண்ணெய்க்குப் புண்ணாற்றும் குண முண்டு; seed of common flax

plant. Formerly it was imported from China. It is cultivated with mustard plant in cold weather.

The powdered seeds are used in the treatment of cough, dysentery, strangury, diarrhoea and other visceral obstructions. The oil extracted from the seeds is aperient and is used in the preparation of a liniment for burns (சா.அக.).

[ஆளி + விதை. வித்து – விதை]

ஆளிவிரை ālivirai, பெ. (n.) **ஆளிவிதை** பார்க்க; see ālividai.

[ஆளி[5] +விதை → விரை. த–ர போலி. ஒ.நோ.]

ஆளு –தல் ālu–, 10 செ. குன்றாவி (v.t.) ஆள்[1]–தல் பார்க்க; see āl[1]–.

ஆளுகை ālugai, பெ. (n) ஆள்கை பார்க்க see ālgai

ஆளுங்கணத்தார் ālun–k–anattar, பெ. (n.) ஊர்ச்சபை அதிகாரிகள் (IMP. TP. 725); executive members of the village assembly.

[ஆளும் + கணம் + அத்து + ஆர்.]

ஆளுங்கணம் ālun–kanam, பெ. (n.) ஊராட்சி புரியும் சபை (T.A.S.iv.24); governing body, as of a village.

[ஆளும் + கணம்.]

ஆளுஞ்சரக்கு āluñ–carakku, பெ. (n.) 1. நெருப்பிற்கு நில்லாமல் புகைந்தோ ஆவியாகியோ எழும்பிப் போகும் சரக்கு; mineral substance which evaporates on being exposed to fire as fictitious cinnabar. 2. மருந்துச்சரக்கு; drugs. (சா.அக.)

[ஆளும் + சரக்கு.]

ஆளுடையதேவர் āludaiyatēvar, பெ. (n.) திருஞான சம்பந்தர்.; (IMP.Tp.31); name of Saint Tiruñānasambandar.

[ஆளுடைய + தேவர்.]

ஆளுடைய நம்பி āludaiya nambi, பெ. (n.) சுந்தரமூர்த்தி நாயனார்; Saint Sundarar. "ஆளுடைய நம்பி ஸ்ரீபுராணம் கேட்டருளா நிற்க" (S.I.I.v.494).

[ஆளுடைய + நம்பி. ஆளுடைய = ஆட்கொள்ளப் பட்ட.]

ஆளுடைய பிள்ளையார் āludaiya pillaiyār, பெ. (n.) திருஞானசம்பந்தர்; Tiruñāna Sambandar, as a ruling son of Śiva. ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி.

[ஆளுடைய + பிள்ளையார்.]

ஆளுடையவரசு āludaya–v–arasu, பெ. (n.) திருநாவுக்கரசுநாயனார்; Saint Tirunāvukkarasu.

[ஆளுடைய + அரசு.]

ஆளுடையான் āludayan பெ. (n.) 1. அடிமை கொண்டவன்; one who has accepted a person as servant. (திவ்.திருவாய்.5,1,10). "எம்மை யாளுடையன் அன்பர் இதயதாம அரைக லெல்லாம்" (திருவாத.மந்.).2.தலைவன், கடவுள்; Lord, Supreme being. "ஆளுடையார்திருவனேக தங்கா பதமுடைய மகா தேவர்க்கு" (S.I.I.ii.392.)

[ஆள் + உடையான்.]

ஆளுயரம் āluyaram, பெ. (n.) ஓராள் உயரமுள்ள அளவு; man'sheight, asameasure. இந்தமரம் இரண்டாளுயரம் இருக்கும்.

[ஆள் + உயரம்.]

ஆளெழுத்துச்சேலை āl–eluttu–c–cēlai, பெ. (n.) சித்திர மெழுதிய சேலை வகை; a kind of saree with pictures worked out in it. "ஆளெழுத்துச் சேலையிலே யாறெழு" (விறலிவிடு.672).

[ஆள் + எழுத்து + சேலை. சேலையில் உருவங்களின் முத்திரை குத்தாமல் கைப்பட ஓவியங் களாக வரைதலால் இப்பெயர் பெற்றது.]

ஆளெனல் ālenal, பெ. (n.) நாயின் கதறற் குறிப்பு; onom. expr. signifying a dog's howling. (சீவக.936. உரை).

[வாள் எனல் → ஆள் எனல்.]

ஆளேறுந்துலா ālēdruntulā, பெ. (n.) பலர் குறுக்கு மரத்தில் ஏறி முன்னும் பின்னும் உலவ, கூந்தற் பனைவடிவிற் குடைந்த சாலில் ஒருவர் நீரிறைக் கும் பெரிய ஏற்றம் (வே.க.251). large well sweep pivoted on a fulcrum worked by one person with several persons walking up and down the long crossbar attached to it.

[ஆள் + ஏறும் + துலா.]

ஆளை ālai, பெ. (n) அறுகு (மூ.அ.); Bermuda grass (த.சொ.அக.)

[அள் → ஆள் → ஆளை. அள் = செறிவு]

ஆளைக் கொடு–த்தல் āllai–k–kodu, 4. செ.குன்றாவி. (v.t.) ஆள்விடு–தல் பார்க்க; see ālvidu.

ஆளைப்பற்றி ālai–p–parri, பெ. (n.) உடும்பு; guana.

[ஆளை + பற்றி.]

ஆளையடிச்சான் āḷai-y-aḍiccāṉ, பெ. (n.) புளியமரம்; tamarind tree.

[ஆளை + அடித்தான் → அடிச்சான்.]

ஆளொட்டி āḷoṭṭi, பெ. (n.) 1. காவற்கூடு (வின்); sentry-box, retiring place. 2. மறைவு; shed for hiding.

ம. ஆளொட்டி

[ஆள் + ஒட்டி.]

ஆளொதுங்கி āḷ-oduṅgi, பெ. (n.) **ஆளோட்டி** பார்க்க; see āḷōṭṭi.

[ஆள் + ஒதுங்கி.]

ஆளோட்டி āḷōṭṭi, பெ. (n.) வேலை வாங்குபவன்; overseer, taskmaster, superintendent.

[ஆள் + ஒட்டி.]

ஆளோடி āḷōḍi, பெ. (n.) 1. நீர் நிலையின் மதில் உட்புறமாக மக்கள் நடமாட்டத்திற்காக விடப்பட்ட வழி; paved passage along the inner side of the parapet. 2. வாயிற் பெருநிலைக்கதவின் உட்சிறு கதவு, திட்டிவாசல். small door within the compass of a large one.

[ஆள் + ஓடி.]

ஆளோலை āḷ-ōlai, பெ. (n.) அடிமையாவணம்; bond of a slave. "எழுதுமாளோலை வாங்கி" (பெரியபு. தடுத்தாட். 45).

[ஆள் + ஓலை.]

ஆற்பதம் āṟpadam, பெ. (n.) 1. சாரம்; essence. 2. பற்றுக்கோடு; hold. "எறும்புக்கு மாற்பதமில்லை கண்டாய்" (தமிழ்நா. 191).

[ஆல் + பதம் - ஆற்பதம் → Skt. aspada. ஆறுதல் - பொருந்துதல்.]

ஆற்பலம் āṟpalam, பெ. (n.) ஆறுபலம் (கொ.வ.); six palams in weight (colloq.). "பட்டிடா வெருமைத் தயிராற்பலம்" (தேவா. 100).

[ஆறுபலம் → ஆற்பலம். இக்கொச்சை வடிவைக் கற்போர் ஆளார். எனினும் செய்யுள் திரிபாக வந்த விலக்கெனக் கொண்டு கடைகணித்தல் வேண்டும்.]

ஆற்ற āṟṟa, வி.எ. (adv.) 1. மிக; greatly. 2. முழுவதும்; entirely. "ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே" (திருப்பாவை)

ஆற்றங்கரை āṟṟaṅ-karai, பெ. (n.) ஆற்றோரம்; bank of a river. "ஆற்றங்கரையின் மரமும் அரசறிய" (நல்வழி. 12)

[ஆறு + கரை - ஆற்றங்கரை.]

ஆற்றங்கரைத்தேவை āṟṟaṉ-karai-t-tēvai, பெ. (n.) ஒரு வகை வரி; a kind of tax (pudu. Ins. 399).

[ஆற்றங்கரை + தேவை.]

ஆற்றடம்பு āṟṟaḍambu, பெ. (n.) ஆற்றடப்பங் கொடி; a kind of bind-weed.

[ஆறு → ஆற்று + அடம்பு.]

ஆற்றமாட்டாமை āṟṟmāṭṭāmai, பெ. (n.) 1. முடியாமை; inability to cope with work. 2. வலிமையில்லாமை; lack of strength. 3. ஆண்மையின்மை; absence of manliness. 4. தாங்கமுடியாமை, பொறுத்துக் கொள்ள இயலாமை; inability to bear. (சா.அக)

[ஆற்றுதல் = செய்தல். மாட்டாமை = இயலாமை.]

ஆற்றரசு āṟṟarasu, பெ. (n.) **ஆற்றுப் பூவரசு** பார்க்க; see āṟṟu-p-pūvarasu

ஆற்றல்[1] āṟṟal, பெ. (n.) 1. வலிமை (திவா.); power, strength, prowess, ability. 2. முயற்சி (திவா.); endeavour, effort. 3. மிகுதி (பிங்.); abundance, copiousness. 4. கடைப்பிடி, உறுதி; determination. "ஆற்றலு மவள்வயி னான" (தொல். பொ. 129). 5. ஆண்மை (பிங்.); manliness, courage. 6. வெற்றி (பிங்.); victory. 7. வாய்மை (பிங்.); truth. 8. இன்னசொல் இன்ன பொருளுணர்த்தும் என்னும் அமைவு (நியதி) (தருக்கசங்); power inherent in a word to express a particular sense, connotative power of a word. 9. அறிவம், காட்சி, ஞானம் (பிங்.); wisdom, knowledge. 10. பொறுமை, பொறை; endurance, fortitude. "ஆற்று வாராற்றல் பசியாற்றல்" (குறள். 225) 11. ஒழிவு, ஓய்வு (இ.வ.) leisure (Loc.). எந்தக் காரியத்தையும் ஆற்றலிலே செய்ய வேண்டும் (நெல்லை). 12. பெருமை; magnanimity, greatness. "ஆற்றுவா ராற்றல் இகழாமை" (குறள். 191). 13. நீங்குதல்; leaving. "அன்னைமூப்பழிதர ஆர்கொ லாற்றுவார்" (நைடத. அன்.கண். 68). 14. வல்ல ராந்தன்மை; capability, being able and efficient. "ஆற்றுவாராற்றல் பணிதல்" (குறள். 985). 15. தணித்தல்; cooling.

[ஆல் → ஆலு → ஆறு → ஆற்று → ஆற்றல். ஆல் = அசை, சுற்று, செயற்படு. ஆற்றல் = செயற்படுதற்கேற்ற வலிமை, திறன்.]

ஆற்றல்[2] āṟṟal, பெ. (n.) 1. கூட்டல் (பிங்.); adding. "ஆற்றிய மெய்ச்செல்வத்தால்" (பாரத. சிறப். 21). 2. தாங்குதல்; supporting. 3. நிலைபெறுதல்; getting established, everlasting. "ஆற்றலேயுடைய தாகி" (சி.சி.க. 22). 4. ஒத்திருத்தல், உவமையாயிருத்தல்;

resembling, being equal "வையகமும் வானகமும் ஆற்றலரிது" (குறள். 101).

[ஆல் → ஆலு → ஆறு → ஆற்று → ஆற்றல். ஆலு= செய், சுழற்று. செய் – நடுங்கச் செய். ஒ.நோ: நீள் = நீடு → நீட்டு. நால் → நீல் → நீறு → நீற்று.]

ஆற்றல்[3] ā<u>rr</u>al, பெ. (n.) பித்தளை; brass. (சா.அக.).

[ஒருகா. ஆலு → ஆறு → ஆற்று → ஆற்றல். ஆலுதல் = கட்டுதல், சேர்த்தல். ஆற்றல் = கூட்டிச் செய்யப்பட்ட மாழை (உலோகம்).]

தகரம் துத்தநாகம் போன்ற தாழ்ந்த மாழைகளுடன் செம்பு சேர்த்துச் செய்யப்பட்ட கலவையே பித்தளை என்றழைக்கப் படுவதால் இஃது 'ஆற்றல்' எனப் பெயர் பெற்றிருக்கலாம். செம்பும், தகரமும் 2:1 என்னும் சேர்மானத்தில் சேர்க்கப்படும்.

ஆற்றலங்கல் ā<u>rr</u>alaṅgal, பெ. (n.) காட்டுப்பூவரசு; false fern tree. (சா.அக.).

[ஆறு = ஆற்று. ஆறு (ஆற்று) + அலங்கல்.]

ஆற்றலரி ā<u>rr</u>alari, பெ. (n.) 1. ஆற்றுச் சவுக்கு அல்லது கோடைச் சவுக்கு; common tarmarisk. 2. சுடலைப் பூச் செடி; a kind of flower plant with tubular stipules 3. முதலைப் பூண்டு; alligator's nose. 4. சேங்கொட்டை மரம்; marking nut tree,

[ஆறு (ஆற்று) + அலரி.]

சேங்கொட்டை என்னும் பொருள் சில அகராதிகளில் செங்கொட்டை என்று கூறப்பட்டிருப்பது அகரமுதலி தொகுப்பாளர் பிழையாகவோ, அச்சிட்டோர் பிழையாகவோ இருத்தல் வேண்டும்.

ஆற்றறு[1] **–த்தல்** ā<u>rr</u>a<u>r</u>u–, 4 செ.குன்றாவி (v.t) இடையிற் கைவிடுதல்; to forsake on the way, desert in the middle. "அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா" (குறள், 814).

[ஆறு – (ஆற்று) + அறு. ஆறு = வழி. அறுதல் = துறத்தல், விட்டு நீங்குதல். ஆற்றறுத்தல் = நடுவழியில் விட்டுப் போய்விடுதல்.]

ஆற்றறு[2] **–த்தல்** ā<u>rr</u>a<u>r</u>u–, 4 செ.குன்றாவி (v.t.) வலிய றுத்தல்; to undermine or sap one's strength of mind. "அற்றத்திட்டாற்றறுத்தான் மார்பு" (கலித். 144. 66).

[ஆற்றல் + அறு = ஆற்றலறு → ஆற்றறு. இனி, ஆற்று + அறு எனினுமாம். ஆற்று = ஆற்றும் வலிமை.]

ஆற்றறுகு ā<u>rr</u>a<u>r</u>ugu, பெ. (n.) ஆற்றங்கரையோரம் வளரும் அறுகம்புல் வகைகளுள் ஒன்று; a kind of grass growning near the river side. (சா.அக.).

[ஆறு (ஆற்று) + அறுகு.]

ஆற்றாக்கேடு ā<u>rr</u>ā-k-kēḍu, பெ. (n.) கொடிய வறுமை; extreme poverty (W.).

[ஆற்றாத + கேடு, 'த்' ஈறுகெட்டது.]

ஆற்றாச்சண்டி ā<u>rr</u>ā-c-caṇḍi, பெ. (n.) வறுமையின் கொடுமையால் விடாது பிச்சை கேட்பவன்; importunate beggar (W.).

[ஆற்றாத → ஆற்றா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + சண்டி.]

ஆற்றாத்தனம் ā<u>rr</u>ā-t-tanam, பெ. (n.) செய்யமாட்டாமை; irritability, insatiableness (W.).

[ஆற்றாத + தனம்.]

ஆற்றாமை ā<u>rr</u>āmai, பெ. (n.) 1. பொறுக்க முடியாத நிலைமை; inability to bear, excitability as excessive hunger, thirst, pain etc. (திவ். திருவாய். 2.1.7). 2. உடம்பின் தளர்ச்சி; infirmity. 3. முடியாமை, செய்யமாட்டாமை; want of capacity, lack of ability to perform. "அஃதாற்றா தெழுவாரை எல்லாம் பொறுத்து" (குறள். 1032). 4. துன்பம், துயரம்; sorrow, distress, concern. 5. மனநிறைவின்மை; voracity, voraciousness, insatiableness.

[ஆற்று + ஆ (எ.இ.நி.) + மை. (ப.பெ. ஈறு).]

ஆற்றாலின் சத்து ā<u>rr</u>āli<u>n</u> śattu, பெ. (n.) கற்சத்து (சிலாசத்து), கல்மதம், வேனிற்காலத்தில் பாறையின் கொதிப்பினால் கல்லிலிருந்து ஒழுகும் மதம்; gelatinous substance secreted from the sides of the rocks when they become heated by the rays of the sun, bituman. (சா.அக.).

[ஒருகா. அறை + ஆல் + அறையால் – ஆற்றால் – இன் + சத்து. அறை = பாறை.]

ஆற்றார் ā<u>rr</u>ār, பெ.. (n.) 1. வறியவர், ஏழையர்; the poor, the affilicted (P.). 2. பகைவர்; those who envy one, foes, opponents, rivals. 3. வலியரல்லாதார்; those who are unable (to do some thing) or incapable of. "ஆற்றாருமாற்றி யடுப" (குறள்.493). 4. தோற்ற வர்கள்; the defeated. 5. வருந்தியவர், துன்புற்றோர்; afflicted people.

[ஆற்று + ஆ (எ.ம.இ.நி.) + ஆர் (ப.பா. ஈறு).]

ஆற்றான் ā<u>rr</u>ā<u>n</u>, பெ. (n.) 1. வலிமை யில்லாதவன்; one who is without strength and ability. "ஆற்றானை யாற்றென் றலைப்பானும்" (திரிகடு. 45). 2. ஏழை; poor man.

[ஆற்று + ஆ (எ.ம.இ.நி.) + ஆன் (ஆ.பா.ஈறு).]

ஆற்றி ārri, பெ. (n.) 1. ஆறுதல் (த.சொ.அக.); solace. 2. புண்ணை ஆற்றும் மருந்து; medicine capable of healing wounds, healing drug. (சா.அக.). 3. விசிறி; fan.

[ஆற்று + இ(வி.மு.ஈ.).]

ஆற்றிக்கொடு–த்தல் ārri-k-kodu, 4 செ. குன்றாவி. (v.t.) 1. சூட்டைத்தணித்துக் கொடுத்தல்; to give after cooling 2. துணையாக உதவுதல்; help or provide relief (W.).

[ஆற்றி + கொடு. (து.வி.).]

ஆற்றிடு–தல் ārridu–, 18 செ.குன்றாவி (v.t.) செய்தல்; to perform. "அந்நாள மலன் பணியாற்றிடலும்" (கந்தபு. காமத.26).

[ஆற்று + இடு (து.வி.).]

ஆற்றிடைக்குறை ārridaikkurai, பெ. (n.) ஆற்றிடைத் திட்டு; island formed by river or rivers.

[ஆறு + இடை+குறை.]

ஆற்றிடைப்படு–தல் ārrdai–p–padu–, 20 செ.கு.வி. (v.i.) 1. வழியிலிருத்தல்; to be in the way. 2. வழியெதிர்படல்; to meet in the way (W.).

[ஆறு + இடை + படு.]

ஆற்றித்தேற்று–தல் ārri–t–terru, 12 செ.குன்றாவி. (v.t.) 1. மன அமைதிப் படுத்துதல்; to soothe, console, comfort. (செ.அக.). 2. நோயினின்றும் குணப் படுத்திய பிறகு, உடம்பை மெதுவாக வலிவடை யும்படிச் செய்தல்; to cure diseases and cause one to recover the normal state of health and strength. 3. புண்களை ஆற்றிய பின் உடம்பில் வலிமைசேர மருந்து கொடுத்துத் தேறப் பண்ணுதல்; to heal wounds and administer medicines to pick up strength. (சா.அக.).

[ஆற்றி + தேற்று .]

ஆற்றிப் போற்றிக்கொள்ளல் ārri–p–porri–k–kollal, பெ. (n.) 1. உவந்து மிக்க மதிப்புரவுடன் விருந்தேற்றல்; treating guests with civility, cherish. 2. துன்புற்றோ ரைக் காத்தல், புறந்தருதல்; helping one in distress, rendering aid, as to a sick person. (W). 3. மன ஆறுதல் அளித்தல்; consoling.

[ஆற்றி +போற்றி + கொள்ளல்.]

ஆற்றிலந்தை ārrilandai, பெ. (n.); ஒருவகை இலந்தை; a kind zizyphus. (சா.அக.).

[ஆறு → (ஆற்று) + இலந்தை.]

ஆற்றிலுப்பை ārriluppai, பெ. (n.) 1. ஒரு செடி; glabrous Mohwah of the Malabar coast. (சா.அக.). 2. மரவகை; tree (L.). – (செ.அக.)

[ஆறு (ஆற்று) + இலுப்பை.]

ஆற்றிறால் ārriral, பெ. (n.) நன்னீரில் வாழும் இறால் மீன்; river prawn, species of palaemon.



[ஆறு (ஆற்று) + இறால்.]

ஆற்றின் வித்து ārrin–vittu, பெ. (n.) கருப்பூரக்கற்சத்து (சிலாசத்து); foliated crystallised gypsum.

[ஒருகா. அறை + இன் – அறையின் → ஆற்றின் + வித்து. அறை = பாறை , கல்.]

ஆற்றினகடு ārrinagadu, பெ. (n.) ஆற்றில் வெள்ளம் ஓடும் பகுதி; flood - prone channel in the river's course. (அபி. சிந்.).

[ஆறு + அகடு.]

ஆற்று^{1}–தல் ārru–, 15. செ.கு.வி. (v.i.) 1. வலிவுறுதல்; to become strong, powerful. "ஆற்றாருமாற்றியடுப" (குறள். 493). 2. செய்யக் கூடியதாதல்; to be possible. "ஆற்றுந்துணையும் பொறுக்க" (நாலடி. 75). 3. போதியதாதல்; to be sufficient. "தட்டு முட்டுவிற்று மாற்றாது" (பணவிடு.225). 4. தப்பித் தல், உய்தல் (பிங்.); to escape, obtain deliverance, survive.

[ஆல் → ஆற்று.]

ஆற்று^{2}–தல் ārru–, 12. செ.குன்றாவி. (v.t) 1. தேடு தல்; to seek, acquire. "ஆற்றிய மக்களென்று மருந்தவ மிலார்க ளாகில்" (சீவக.2986). 2. செய்தல்; to do, perform. "மகன் தந்தைக் காற்றுமுதவி" (குறள். 70). 3. உதவுதல்; to give, as alms, to help, assist. "ஒருவீரொருவீர்க் காற்றுதிர்"

(புறநா.58). 4. நடத்துதல்; to lead, guide, conduct. "அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின்" (குறள்.46). 5. பொறுத் தல்; to bear, as on the head or shoulders. "ஆற்று வாராற்றல் பசியாற்றல்" (குறள்.225). 6. சுமத்தல்; to sustain, carry. "புடவி வைத்தாற்றிய பஃறலைப் பாந்தள்" (கல்லா. முருக.துதி.). 7. கூட்டுதல்; to accumulate, as wealth. 8. உவமை யாக்குதல்; to make equal to, compare with. "வையகமும் வானகமும் ஆற்றல் அரிது" (குறள்.101). 9. சுதை மா வாற்குழம்பாகப் பூசுதல்; to apply powder, etc.

ம. ஆற்று; **க.**ஆறு; **தெ.** ஆந்து. ஆத்து; **குட.** ஆத்.

[ஆல் → ஆற்று.]

ஆற்று ³–தல் ārru–, 12 செ.குன்றாவி (v.t.) 1. பசி முதலியன தணித்தல்; to assuage, appease, alleviate, mitigate. "அரும்பசி களைய வாற்றுவது காணான்" (மணிமே.11,86). 2. நீக்குதல்; to remove. "மைய லாற்றிய குணத்து மாதவர்" (அரிச். பு. விவாக. 42) 3. துயரம் முதலியன தணித்தல்; to comfort, console, soothe. அவன் துக்கம் ஆற்றினான் (உ.வ.). 4. வெப்பம் தணித்தல்; to cool. வெந்நீரை ஆற்றிக்கொடு (உ.வ.). 5. காலந்தாழ்த்துதல், ஆறப்போடுதல்; to delay, postpone. 6. ஈரமுலர்த்துதல்; to dry, as the hair. குஞ்சியை ஆற்றின பின்பு" (சீவக. 2422, உரை). 7. நூலின் முறுக்கு நெகிழாமலும் மடங்காமலும் இருக்க முறுக்கை வழித்துவிடுதல்; to smooth out a twisted thread in order to keep it from untwisting or knotting. நூலை முறுக்காற்றிவிடு (உ.வ.).

[அகற்று → ஆற்று.]

ஆற்று ārru, பெ. (n.) தலைவாயில், தலைக்கடை (த.சொ.அக.); threshold, entrance of a house, court yard.

[ஒருகா. ஆறு → ஆற்று . ஆறு = வழி.]

ஆற்றுக்கட்டிக்கோலா ārru–k–katti–k–kōlā, பெ. (n.) கொக்குமீன்; yellowish green garpiko, (சா.அக.).

[ஆற்றுக்கட்டி கோலா.]

ஆற்றுக்கால் ārru–k–kāl, பெ. (n.) ஆற்றிலிருந்து பாசனத்திற்காக வெட்டிய கால்வாய்; channel for conducting water from a river for irrigation.

[ஆறு (ஆற்று) + கால்.]

ஆற்றுக்காலாட்டியர் ārru–k–kālāttiyar, பெ. (n.) வயலில் பணியாற்றும் மருதநிலப் பெண்டிர்; women of the agricultural tracts. "ஆற்றுக் காலாட்டியர் முகத்துக் கழிந்த கமலங்களை" (நல்.பாரத.நாட். 8).

[ஆற்றுக்கால் + ஆட்டி (பெ.பா.ஈறு) + ஆர் (ப.பா. ஈறு). ஆற்றுக்கால் = வாய்க்கால். நீர் நிறைந்த வயல்.]

ஆற்றுக்காலாதாரம் ārru–k–kālādāram,பெ.(n.) ஆற்றி லிருந்து வரும் அடிப்படையான நீர்ப்பாசனம், ஆற்றங்காற் பாய்ச்சல்; irrigation by a spring–channel.

[ஆற்றுக்கால் + ஆதாரம்.]

ஆற்றுக்காலேரி ārru–k–kāleri, பெ. (n.) ஆற்றிலிருந்து பிரியும் கால்வாய் நீரால் நிரம்பும் ஏரி; tank fed by a water–course from a river (W.G.).

[ஆற்றுக்கால் + ஏரி.]

ஆற்றுக்காற் பாசனம் ārru-k-kār–pāsanam, பெ. (n.) **ஆற்றுக்காற் பாய்ச்சல்** பார்க்க; see ārru–k–kār–pāyccal.

[ஆறு + (ஆற்று) + கால் + பாசனம்]

ஆற்றுக்காற் பாய்ச்சல் ārru–k–kār–pāyccal, பெ. (n.) ஆற்று வாய்க்கால் வழிபெறும் நீர்ப்பாசனம்; irrigation by a spring–channel.

[ஆறு (ஆற்று) + கால் + பாய்ச்சல் .]

ஆற்றுக்கிளிஞ்சில் ārru–k–kilinjil, பெ. (n.) **ஆற்றுச் சிப்பி** பார்க்க; see ārru–c–cippi.

[ஆறு (ஆற்று) + கிளிஞ்சில்.]

ஆற்றுக்குருவி ārru–k–kuruvi, பெ. (n.) ஒரு நீர்ப்பறவை; tern.



ஆற்றுக்குருவி – நீர்ப்பறவை

[ஆறு (ஆற்று) + குருவி.]

ஆற்றுக்குலை ārru–k–kulai, பெ. (n.) 1. ஆற்றின் கரை; river bank (S.I.I.iv.167.) 2.வரிவகை; petty cess (S.I.I.v.241).

[ஆறு → (ஆற்று) + குலை.]

ஆற்றுக்குள்ளழகிய மணல் ā<u>rr</u>u-k-kuḷ-aḻagiya-maṉal, பெ. (n.) கருமணல்; fine black sand found in the inner layers of river-beds. (சா.அக.).

[ஆறு (ஆற்று) + கு (4.வே.உ.) + உள் + அழகிய + மணல்.]

ஆற்றுக்குறிச்சி ā<u>rr</u>u-k-kuṟicci, பெ. (n.) திருச்சி மாவட்டத்தில் உள்ள ஊர்ப் பெயர்; place name in Tiruchirappalli district.

[ஆறு → (ஆற்று) + குறிச்சி.]

ஆற்றுக்கெண்டை ā<u>rr</u>u-k-keṇḍai, பெ. (n.) ஆற்றில் வாழும் 6 அங்குல நீளமுள்ள சிறு கெண்டை மீன்; river carp or Nilgiri trout.

[ஆறு + கெண்டை.]

இதற்கு நீலகிரிக் கெண்டை என்றும் பெயர் உண்டு. சாம்பல் நிறமும் வெள்ளியைப் போன்ற பளபளப்பும் கொண்டது. முதுகில் 15 முட்கள் செங்குத்து வரிசையிலிருக்கும். முதுகின் பக்கமும், கீழ்ப்பாகமும், எருவாயிலும் (ஆசனவாயிலும்) சிறிது கருத்திருக்கும். ஆண் மீனுக்கும் சிறு மீன்களுக்கும் வழவழப்பான சிதல்கள் இருக்கும். நீலகிரியிலும் மலையாளத்திலும் இது மிகுதியாய் காணப்படும்;



ஆற்றுக் கெண்டை

ஆற்றுக்கொடி ā<u>rr</u>u-k-koḍi, பெ. (n.) பேய்த் தும்மட்டி; bitter-apple. (சா.அக.) – (செ.அக.) பேய்க் கொம்மட்டி (சங்.அக.); colocynth.

[ஆறு (ஆற்று) + கொடி.]

ஆற்றுத்தும்மட்டி பார்க்க; See ā<u>rr</u>u-t-tummaṭṭi.

ஆற்றுக்கொம்பொதி மரம் ā<u>rr</u>u-k-kombodi-maram, பெ. (n.) பெரும் பூம்பாதிரி மரம்; long-leaved trumpet tree. (சா.அக.).

ஆற்றுச்சங்கிலை ā<u>rr</u>u-c-caṅgilai, பெ. (n.) மலை வட்டை மரம்; mountain tamana oil tree. (சா.அக.).

[ஆறு (ஆற்று) → சங்கு → இலை.]

ஆற்றுச்சஞ்சலை ā<u>rr</u>u-c-cañcalai பெ. (n.) **ஆற்றுச் சங்கிலை** பார்க்க; see ā<u>rr</u>u-c-caṅgilai.

[ஆறு + (சங்கிலை.) → சஞ்சலை.]

ஆற்றுச்சவுக்கு ā<u>rr</u>u-c-cavukku, பெ. (n.) கோடைச் சவுக்கு, ஆற்றலரி; common tarnarisk. (L.). 2. வயிற்றுப் போக்கு மருந்துச்செடி; garden tarnarisk, it is useful in diarrhoea, dysentery etc. (சா.அக.).

[ஆறு (ஆற்று) + சவுக்கு.]

ஆற்றுச்சிப்பி ā<u>rr</u>u-c-cippi, பெ. (n.) ஆற்றுக்கிளிஞ்சில்; bivalue or mussel found in beds of rivers.

[ஆறு (ஆற்று) + சிப்பி.]

ஆற்றுச்செருப்படி ā<u>rr</u>u-c-ceruppaḍi, பெ. (n.) **ஆற்றுச் செருப்படை** பார்க்க; see ā<u>rr</u>u-c-ceruppaḍai.

[ஆற்று + (செருப்படை) → செருப்படி.]

ஆற்றுச்செருப்படை ā<u>rr</u>u-c-ceruppaḍai, பெ. (n.) ஆற்றுப் பகுதி நிலத்தில் வளரும் ஒரு பூண்டுச் செடி; low spreading small water-plant found grown in river-beds. (சா.அக.).

[ஆறு (ஆற்று + செருப்படை).]

செருப்படை பார்க்க; see **seru-p-paḍai.**

ஆற்றுணா ā<u>rr</u>uṇā, பெ. (n.) நெடுவழிப்போக்கர் வழியிடை உண்பதற்காக எடுத்துச் செல்லும் கட்டுச் சோறு , பொதி சோறு; food bundled and tied up in a cloth and taken while travelling along a river's course. "ஆற்றுணாக் கொள்ள" (சீவக. 1550) (சா.அக.).

[ஆறு + உணா.]

ஆற்றுத்தும்மட்டி ā<u>rr</u>u-t-tummaṭṭi, பெ. (n.) பேய்க் கொம்மட்டிப் பூடு. ஆற்றுப்படுகைகளில் ஆண்டிற் கொருமுறை விளையும். மழைக்காலத்தில் கீழ்க் கரை மணற்பாங்குகளில் பூக்கும். இதன் செடிப் பகுதிகளனைத்தும் (சமூலம்) கசப்பானது. இதன் தாள் கண்ணிலும் மூக்கிலும் படின் நெடியேறும்.

ஆற்றுத்தும்மட்டி

ஈரற்குலைநோய், மலக்கட்டு, குடல் நோய், பாண்டு முதலிய கழிச்சலால் (பேதியால்) குணப்படுத்தும் நோய்களுக்கு இதன் காயை மற்றச் சரக்குகளுடன் சேர்த்துக் கொடுப்பதுண்டு. விதையை வறுத்து உட்பருப்பைத் தின்பர். விதையின் எண்ணெய், பாம்புக்கடி, தேள்கடி, குடல்நோய், காக்கை வலிப்பு முதலிய வற்றுக்கும், முடிவளர்ச்சிக்கும், நரை மாறிக் கருப்பாவதற்கும் பயன்படுத்துவர்; bitter apple. It is so called from its usual growth on the river banks. All parts of the plant are very bitter and the dust when dry, is very irritating to the eyes and nostrils.

The fruit, particularly in combination with other drugs is very useful in constipation, hepatic and visceral congestions, dropsical affections and other diseases requiring purgatives. The kernal of the seed is eaten after a slight roasting; the oil from the seed is used for snake–bites scorpion stings, bowel complaints, epilepsy etc., and also for blackening grey hairs. (சா. அக.).

மறுவ. பேய்த்தும்மட்டி, பேய்க்கொம்மட்டி, பேய்க்கும்மட்டி, ஆற்றுக் கொடி.

[ஆறு (ஆற்று) + தும்மட்டி.]

ஆற்றுத்தும்மட்டிக்காய்ச்சத்து ārruttummatti–k–kāy–c–cattu, பெ. (n.) ஆற்றுத்தும்மட்டிக் காயினின்று வடிக்கும் சத்து; compound extract of colocynth (in allopathy). (சா.அக.).

[ஆறு (ஆற்று) + தும்மட்டி + காய் + சத்து.]

ஆற்றுத்துவரை ārru–t–tuvarai, பெ. (n.) ஒருவகைச் செடி; wild tea (சா. அக.).

[ஆறு + துவரை.]

ஆற்றுத்தும்பறுகு ārrū–t–tumbarugu, பெ. (n.) உப்பறு கம்புல்; a kind of Barbuda grass found in brackish soils.

[ஆறு (ஆற்று) + தும்பு + அறுகு.]

ஆற்றுதல் ārrudal, தொ. பெ. (vbl.n.) 1. புண்ணைக் குணப்படுத்தல்; healing up wounds. 2.குளிரப் பண்ணுதல்; cooling. 3. பசியைத் தணித்தல்; appeasing hunger. 5. ஈட்டுதல்; earning. 6. பொறுத்துக் கொள்ளுதல்; bearing, enduring. "விதுரனும் வெஞ் சொலாற்றான் வில்லினை யிறுத்து நின்றான்" (பாரத. எட்டாம். போர்.14). 7. நடத்துதல்; conducting, leading. "ஆற்றுதல் என்பதொன்றலந்தவர்க் குதவுதல்" (கலித். 133). 8. சுமத்தல்; carrying. "புவிமுற்றும் ஆற்றிய பணிக்கிறை" (கந்தபு. அசுரேந்.42). 9. செய்தல்; doing. "ஆதலின் மைந்தர் காளறத்தை யாற்றுதிர்" (கந்தபு. காசிபனுப. 24.). 10. அணிதல்; wearing, adorning. "ஆற்று தொல் கருப்பத்துடன்" (கந்தபு. துணைவ. 16). 11. நீக்கல்; discarding, removing. "மையலாற்றிய குணத்து மாதவர்" (அரிச்ச. விவாக. 12). 12. பிரித்தல்; dividing. "சேற்றுவார் கதிர்சேரக் கொணர்ந்து வைத்தாற்றுவார்" (அரிச்சந். நாட்டு. 46). 13. உய்தல்; escaping, living. (பிங்.). 14. உதவுதல்; helping. "ஒருவீரொருவீர்க் காற்றுதிர்" (புறநா.58). 15. போதியதாதல்; sufficing. "தட்டுமுட்டு விற்று மாற்றாது" (பணவிடு. 225). 16. வலியராதல்; becoming strong. 17. கூட்டுதல் (பிங்.); accumulating. 18. ஈரமுலர்த்துதல்; drying, as the hair. "குஞ்சியை யாற்றின பின்பு " (சீவக. 2422 உரை). 19. நூலை முறுக்காற்றுதல்; smothing out a twisted thread.

[ஆறு → ஆற்று → ஆற்றுதல்.]

ஆற்றுநண்டு ārru–naṇḍu, பெ. (n.) ஆற்றில் வாழும் நண்டு; crab living in rivers.

[ஆறு + நண்டு.]

ஆற்றுநத்தை ārru nattai, பெ. (n.) ஆற்றில் கிடக்கும் ஒருவகை நத்தை; snail found in large rivers. edible snail.

[ஆறு + நத்தை.]

ஆற்றுநர் ārrunar, பெ. (n.) வழிப்படுத்துவோர்; guide.

[ஆற்று + ஆற்றுநர்.]

ஆற்றுநீர்ப்பொருள் கோள் ārru–nīr–p–porulgōḷ, பெ. (n.) செய்யுளின் பொருளறிதற்குரிய பொருள்கோள் எட்டனுள் ஒன்று. செய்யுளில் சொல்லமைந்த முறைப்படி நிரலே பொருள் கொள்ளுமாறு ஆற்றொ ழுக்காக அமைந்த செய்யுளமைப்பு; mode of constructing poems, (one of eight poruḷkōḷ.) in such a form as to assist comprehension of meaning by refering and juxtaposing with corresponding series from beginning to end.

[ஆறு (ஆற்று) + நீர் + பொருள் கோள். பொருள்கோள் = பொருள் கொள்ளும் முறை.]

அடிதொறும் அற்றற்று ஒழுகும் ஆற்றுநீரைப் போல் கோர்வையாகப் பொருளுணர்தற்கேற்ற செய்யுளமைப்பு ஆற்று நீர்ப் பொருள்கோள் எனப்பட்டது.

"மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொருள்
அற்றற் றொழுகுமஃ தாற்றுப் புனலே" (நன்.)

"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே"

(சீவக. நாம. 24.)

இச்செய்யுளில் நெல் எனப் பொருள்படும் "சொல்" என்னும் எழுவாயை முதலெடுத்து அதன் தொழில்களாகிய வினையெச்சங்கள் ஒன்றையொன்று கொள்ளும்படி முறையாக வைத்து அவற்றை முடித்த "காய்த்த" என்னும் பயனிலையை இறுதியில் வைத்தமையால் இப்பொருள்கோள் ஆற்று நீரொழுக் கிற்குச் சமமாயிற்று (நன். பொது. 61. உரை).

ஆற்று நெட்டி ārru- netti, பெ. (n.) வறட்சுண்டி, நீர்ச் சுண்டி (மூ. அ.); sensitive plant, water mimosa. (சா. அக.).

[ஆறு + நெட்டி.]

ஆற்றுப்பசலி ārru-p-paśali, பெ. (n) ஒருவகைப் பசலைச் செடி; a kind of spinach.

[ஆறு (ஆற்று) + பசலி. பசலி = பச்சைநிற முடையது.]

ஆற்றுப்பச்சை ārru-p-paccai, பெ. (n.) 1. நாகப்பச்சைக் கல், மருத்துவத் துணைச் சரக்குகளில் ஒன்று; inferior variety of green – stone forming one of the 120 kinds of natural substances described in the Tamil medical science. 2. பச்சைக்கல்; green-stone, emerald, one of 9 gems.

[ஆறு + பச்சை]

ஆற்றுப்பஞ்சு ārru-p-panju, பெ. (n.) **கடற்கொஞ்சி** பார்க்க; see **kadarkonji.**

ஆற்றுப்படுகை ārru-p-padugai, பெ. (n.) ஆற்றுப் பாய்ச்சலுள்ள அல்லது பாய்ச்சலுக்கேற்ற ஆற்றை யடுத்த சமநிலம்; river bed, land adjoining a river and rich with its alluvial deposit.

[ஆறு (ஆற்று) + படுகை.]

ஆற்றுப்படுத்து—தல் ārru-p-paduttu–, 12. செ. குன்றாவி (v.t.) 1. வழிச் செலுத்துதல்; to direct in the right way, esp. to direct a professional, as a bard or dancer to a liberal patron. "விறலியை யாற்றுப் படுத்தன்று" (பு.வெ. 9,31). 2. போக்குதல்; to get rid of, remove. "துணையணைப் பள்ளித் துயிலாற்றுப் படுத்தாங்கு" (சிலப். 27, 209). 3. நன்னெறி யினுட் படுத்துதல்; to lead in a right path. "ஆற்றுப் படுத்தபின்" (கலித். 5) 4. வழிப் படுத்துதல்; to set right in a desired way. "நெஞ்சாற்றுப்படுத்த நிறைதபு புலம்பொடு" (முல்லைப். 81).

[ஆறு (ஆற்று) + படுத்து (பி.வி.) + தல்.]

சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலியில் 'ஆற்றுப் படுத்து—தல்' என இருக்க வேண்டிய பிறவினை வாய்பாட்டுக் கூட்டுவினையை ஆற்றுப்படு—த்தல் எனத் தந்திருப்பது தவறு. ஆற்றுப்பட்டான், —படுகின்றான் போன்று கூட்டுவினையாக்கிப் பண்டையிலக் கியங்களில் பயிலப்படாமை அறிக.

ஆற்றுப்படை ārru-p-padai, பெ. (n.) பரிசில் பெற்ற ஒருவன், அது பெறக் கருதிய மற்றொருவனைத் தனக்குப் பரிசளித்த தலைவனிடத்துச் செலுத்து வதாக அகவற்பாவில் பாடப்படும் சிற்றிலக்கியம்; form of panegyric poem generally in agaval metre in which the poet who has been rewarded with gifts directs another poet to the chief from whom the latter may also receive similar reward. (பன்னிருபா. 318, 319).

[ஆறு (ஆற்று) + படை. படு → படை.]

'ஆற்றுப்படு' என்னும் தன்வினை வாய்ப்பாட்டுக் கூட்டுவினை 'ஆற்றுப்படுத்து' என்னும் பிறவினை வாய் பாட்டுக் கூட்டுவினையாகவே பண்டையிலக்கியங்களில், (திருமுருகு. 244), (அக. 22, 71, 365) (குறுந். 241) (பரி. 4:2, 3:10) (முல்லை. 22:11, 71:9, 365:2,81) (கலி. 5,85) (சிறு.39) ஆகியவற்றில் ஆளப்பட்டுள்ளது. ஆற்றுப்படுகின்றான், ஆற்றுப்பட்டான் எனத் தன்வினை வாய்பாட்டால் ஆளப்பட்ட தற்கான இலக்கியச் சான்றுகள் கிடைத்தில. ஆற்றுப்படைக்கு ஆற்றுப்படுத்துதல் என்பதே உரையாசிரியர்கள் கொண்ட பொருளாயின், அஃது ஆற்றுப்படுத்தமென்றே ஆளப் பட்டிருத்தல் வேண்டும். கொடை – கொடுத்தல் எனப் பொருள் படுவதல்லது, கொடுப்பித்தல் எனப் பொருள்தருமாறில்லை. ஆற்றுப்படை என்பதும் இரவலர் சென்ற ஆற்றின்கண் படுவது (செல்வது) என்றல்லது படுத்துவது (செலுத்துவது) எனப் பொருள் படாது. பரிசில் பெற்ற ஒருவன் பெறநிற்கும் ஒருவனுக்கு வழிகாட்டுவது ஆற்றுப்படைகளில் கதையமைப் பாயினும் குறிப்பிட்ட வள்ளல் அல்லது தலைவன் வாழும் ஊருக்குச் செல்லும் வழியை, பிற வழிப்போக்கரோ, அல்லது வழியிடை ஊர்களில் வதியும் மக்களோ காட்டுவது இயல்பான நிகழ்ச்சி.

ஆதலான் பரிசு பெறுதற்குரிய ஆற்றின்கண் படுவதே ஆற்றுப்படை எனக் கொள்வதே சாலப் பொருத்தம்.

"பரிசு பெற்று வருவார், கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என்னும் நால்வருட் பரிசிற்குப் போவார் ஒருவரை ஆற்றிடைக் கண்டு, தலைவன் சீர்த்தி (கீர்த்தி) முதலியவைகளைச் சொல்லி வழிப்படுத்துவதாதலின், இது கூத்தராற்றுப்படை, பாணராற்றுப் படை, பொருநராற்றுப்படை, விறலியராற்றுப்படைஎனநான்குவகைப்படும்" (இலக். விளக். பாட்டி. 113) எனக் கூறப் பட்டிருப்பினும், கூத்தராற்றுப்படுவது, பாணராற்றுப்படுவது எனப் பொருள் கொளலே நேரிது.

"பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிர ச் சொன்ன பக்கமும்"

எனத் தொல்காப்பியர் கூறியது ஆற்றுப்படுத்துதல் என்னும் பிறவினை வாய்பாட்டதே யெனினும், தானே வழி வினவியறிந்து வள்ளலைக் காணும் ஆற்றுப் படையிலக்கியம் தொல்காப்பியத்திற்கு முந்தியதாகவும், பிறர் ஆற்றுப்படுத்தும் பாங்குற்ற பின்னைய இலக்கியம் அதே பெயரில் ஆட்சி பெற்றதாகவும் கொள்ள வேண்டியுள்ளது.

"செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினு ளுரித்தே"

என்று கூறிய தொல்காப்பியர் பிறவினைப் பொருளைத் தன்வினை போலத் தொழிற்படக் கிளத்தலுண்டு என யாண்டும் கூறிற்றிலர்.

தமக்கேற்ற ஆற்றின்கண் படுதலைக் கூறும் நூல் ஆற்றுப்படை என்னும் பெயர் பெற்றது. நாளடைவில் ஆற்றுப்படையின் பாங்கு வளர்ச்சியுறத் தலைப்பின் பொருள் திரிபுற்றது என அறியலாம்.

ஆற்றுப்பாசனம் āṟṟu–p–pāśaṉam, பெ. (n.) **ஆற்றுப் பாய்ச்சல்** பார்க்க; see āṟṟu–p–pāyccal.

[ஆற்றுப்பாய்ச்சல் → ஆற்றுப்பாசனம். பாய்ச்சல் → பாசல் → பாசலம் → பாசனம்.]

ஆற்றுப்பாசி āṟṟu–p–pāśi, பெ. (n.) ஒரு நீர்ப்பூண்டு; river–weed, Najas Indica alias caulinia Indica.

[ஆறு (ஆற்று) + பாசி.]

ஆற்றுப்பாட்டம் āṟṟu–p–pāṭṭam, பெ. (n.) பழங்கால வரி வகை; ancient tax (S.I.I.v. 365).

[ஆறு (ஆற்று) + பாட்டம்.]

ஆற்றுப்பாய்ச்சல் āṟṟu–p–pāyccal, பெ. (n.) ஆற்றுக்கால்வாய்ப் பாசனம்; river irrigation.

[ஆறு (ஆற்று)+ பாய்ச்சல்.]

ஆற்றுப்பாய்ச்சி āṟṟu–p–pāycci, பெ. (n.) ஆறுகளில் கப்பல் செலுத்துபவன்; river navigator. "ஆற்றுப் பாய்ச்சி கடற்பாய்ச்சி" (Insc.)

[ஆறு (ஆற்று) + பாய்ச்சி. பாய் → பாய்ச்சி = செலுத்துபவன்.]

ஆற்றுப்பாலை āṟṟu–p–pālai, பெ.(n.) 1. இலைகள் மாறிமாறியிருப்பதும், பூக்கள் அடர்த்தியாயில் லாததும், நீர்நிலைக் கரைகளில் காணப் படுவதுமாகிய சிறிய மரம். இதன் பட்டையைக் காய்ச்சலுக்குக் கருக்கிட்டுத் (கசாயம்) தருவர்; Indian willow, river panlay, It is a small tree; leaves alternate few flowered; peduncle 3 to 6 leaved. It is always found on river banks and near water. Leaves lopped and given to cattle, as fodder. Bark is a febrifuge. 2. கவிழ்ந்து நீண்ட கிளைகளும், 50 அடி உயரமும், 12 அடி பருமனும், 3 விரலம் முதல் 6 விரலம் (அங்குலம்) நீண்ட இலைகள் கொண்டதும், கிளைப்பகுதிகள் கூடை முடையப் பயன் படுவதுமான பெரிய மரம்; weeping–willow. Salix babylonica. Tree 50 ft. height, trunk 12 ft; in girth, flowering and leaping together; leaves 3 to 6 inches. Branches and twigs largely used for making baskets; long, slender, drooping branches. (சா.அக.).

[ஆறு (ஆற்று) + பாலை.]

ஆற்றுப்பிதலம் āṟṟu-p-pidalam, பெ. (n.) நிலத்தி னின்று ஆற்றைப் பிரிக்கும் எல்லை; line which separates land and river. (த.சொ.அக.).

[ஆறு (ஆற்று) + பிதலம். பின்தலம் → பிதலம் (பின்னம்).]

ஆற்றுப்பூவரசு āṟṟu-p-pūvaraśu, பெ. (n.) வெளிர் பச்சை நிறமுடையதும், சிறிய பூக்களுடையதும், கடற்கரை மணற்பாங்கில் காணப்படுவதுமாகிய செடிப் பூவரசு என்னும் பெரிய மரம்; large tree with small whitish-green flowers found in sandy places near the sea-shore. (சா.அக.).

[ஆறு (ஆற்று) + பூவரசு.]

ஆற்றுப் பொடி āṟṟu-p-podi, பெ. (n.) ஆற்றிலுள்ள சிறுமீன்கள்; river minnow.

[ஆறு + பொடி.]



ஆற்றுப்பொடி – மீன் வகை

ஆற்றுப்பொருவா āṟṟu-p-poruvā பெ. (n..) ஆற்று மீன் வகை; kind of river fish.

[ஆறு + பொருவா.]

ஆற்றுபவர் āṟṟubavar, பெ. (n.) ஆற்றலுடையவராய்ப் பிறர் மேற் செல்வார், invader with superior might. "ஆற்றுபவர்க்கு மரண்" (குறள். 741). (த.சொ. அக.).

[ஆற்று → ஆற்றுபவர்]

ஆற்றுமடை ār̲r̲u–madai, பெ. (n.) வாய்க்காலின் முகம்; sluice of a canal.

[ஆறு + மடை.]

ஆற்றுமரி ār̲r̲umari, பெ. (n.) 1. நீருமரி; bastard cyprus. 2. பேய்க்கொம்மட்டி, ஆற்றுக்கொம்மட்டி; colocynth.

[ஆறு + உமரி.]

ஆற்றுமருது ār̲r̲u–marudu, பெ. (n.) நீர்மருது; narrow leaved white winged myrobalan. (சா.அக.).

ம. ஆற்றுமருது

[ஆறு + மருது.]

ஆற்றுமல்லிகை ār̲r̲u–malligai, பெ. (n.) 1. ஒருவகை நீர்ப்பூண்டு; water–plant with white flowers, river jasmine. 2. ஒரு மல்லிகை; a species of Arabian Jasmine.

[ஆறு + மல்லிகை.]

ஆற்றுமீன் ār̲r̲u–mīn̲, பெ. (n.) ஆற்றில் வாழும் மீன்; நன்னீர்மீன்; river fish, as opposed to sea–fish, trout. It is a common name for various species of fish living in fresh water.

[ஆறு + மீன்.]

ஆற்றுமுள்ளி ār̲r̲u–mulli, பெ. (n.) 1. கழுதை முள்ளி; holly leaved bear's breech. 2. கண்டங்கத்திரி; blue–flowered prickly night shade. (சா.அக.).

[ஆறு + முள்ளி.]

ஆற்றுமேலழகி ār̲r̲u mēlalagi, பெ. (n.) 1. ஒருவகைப் பூடு; common weed. 2. சேம்பு; a garden plant with esculent leaves. (சா.அக.).

[ஆறு + மேல் + அழகி.]

ஆற்றுல்லம் ār̲r̲ullam, பெ. (n.) உல்லமீன்; sable fish, a variety of hilsa fish.

[ஆறு + உல்லம்.]

ஆற்றுவஞ்சி ār̲r̲u– vañji, பெ. (n.) பூக்கின்ற ஒரு வகைப் பூடு; flowering Asoea, 2. ஒருவகை நீளிலைப் பூடு; elliptic leaved cadamba. (சா.அக.).

ம. ஆற்றுவஞ்சி

[ஆறு + வஞ்சி.]

ஆற்றுவரி ār̲r̲u–vari, பெ. (n.) ஆற்றைப் பொருளாகக் கொண்டு பாடப்பெறும் காமங் கண்ணிய இசைப் பாட்டு; a kind of ancient exotic song on a river. (சிலப். 6, 35 உரை.).

[ஆறு + வரி. வரி = காமங் கண்ணிய இசைப்பாட்டு. ஆற்றின் மேல் வைத்துப் பாடப்படுதலின் ஆற்று வரியாயிற்று.]

ஆற்றுவாய்முகம் ār̲r̲u–vāy–mugam, பெ. (n.) ஆறு, கடலொடு கலக்குமிடம்; estuary, mouth of a river. "ஆற்றுவாய் முகத்திற் றேக்கி யுமிழ்வதே யொக்கும்" (கம்பரா. இராவணன். கள. 25).

ம. ஆற்றுவா.

[ஆறு + வாய் + முகம்.]

ஆற்றுவார் ār̲r̲u–vār, பெ. (n.) எடுத்த பணியை முடிக்க வல்லவர்; capable persons who can accomplish the work undertaken or entrusted. "ஆற்றுவா ராற்ற லிகழாமை" (குறள்.891).

[ஆற்று → ஆற்றுவார்.]

ஆற்றுவாளை ār̲r̲u–vālai, பெ. (n.) நன்னீரில் வாழும் வாளை மீன்; fresh–water fish.

ம. ஆற்றுவாளை



[ஆறு + வாளை.]

ஆற்றுவி–த்தல் ār̲r̲uvi–, 4 செ.குன்றாவி. (v.t.caus.) 1. வலியைப் பொறுக்கும் படி மன உறுதி செய்வித்தல்; enabling to bear or endure pains. 2. த்ணியச் செய்தல்; to alleviate, heal. 3. செய்வித்தல்: cause to do.

[ஆற்று (த.வி.) → ஆற்றுவி (பி.வி.).]

ஆற்றுவித்தம் ār̲r̲u–vittam, பெ. (n.) ஆறுபாய்முகம். river bed. (த.சொ.அக.).

[ஆறு + வித்தம். வித்தம் = துளைக்கப்பட்டது.]

ஆற்றுவைப்பு ār̲r̲u–vaippu, பெ. (n.) ஆற்றின் ஒதுக்கத்தால் சாகுபடிக்குத் தகுதியான நிலம்; lands that have become cultivable owing to the natural change of the course of a river providing alluvial soil.

ம. ஆற்றுவெப்பு.

[ஆறு + வைப்பு]

ஆற்றுள்ளம் ār̲r̲u–ḷḷam, பெ. (n.) **ஆற்றுல்லம்** பார்க்க. (சா.அக.); see ār̲r̲ullam.

ஆற்றுளுவை ār̲r̲uḷuvai, பெ. (n.) **நன்னீருளுவை** பார்க்க; see nannīru–ḷuvai. (சா.அக.).

ஆற்றொழுக்கு ār̲r̲oḻukku, பெ. (n.) 1. ஆற்றின் நீரோட்டம்; course of a river, flow of a river or stream. 2. இடையறாது ஒடுகின்ற ஆற்று நீரோட்டம் போல் தொடர்ந்து நிற்கும் நூற்பாக்களின் நூல் வகை, நூற்பா நிலைகளுள் ஒன்று; most natural order of words which clearly brings out the meaning, one of the four sūttira nilai.

[ஆறு + ஒழுக்கு.]

ஆற்றொழுக்கு நிலை ār̲r̲oḻukku–nilai, பெ. (n.) நூற்பாக்களின் நால்வகை நிலைகளுள் ஒன்று; one of the four sūttira nilai.

[ஆறு + ஒழுக்கு + நிலை.]

ஆற்றொழுக்கு பார்க்க; see ār̲r̲oḻukku.

ஆறக்கட்டு–தல் ār̲a–k–kaṭṭu–, 15 செ.குவி. (v.i.) 1. மேற்கொண்டு தீங்குசெய்து நலியாதவண்ணம் மந்திரம் முதலியவற்றால் பேய்க்கோளைத் தடுத்தல் (இ.வ.), (செ.அக.); prevent, by charm or spell, an evil spirit possessing a person from doing further mischief to the victim (Loc.) 2. புண், புரைபுண் (இரணம்), கட்டி முதலியவற்றை ஆற்றுவதற்காகத் தக்க மருந்து களையிட்டுக் கட்டுக் கட்டுதல்; application of a bandage for healing a wound, sore, abscess etc. (சா.அக.).

[ஆற (பெ.எ.) + கட்டு. ஆற = தீர, நலமுற.]

ஆறடிவிருத்தம் ār̲aḍi–viruttam, பெ. (n.) கலிவிருத்தம், தரவு, கொச்சகம்; a kind of prosodical construction, stanza with six metrical lines.

[ஆறு + அடி + விருத்தம்.]

ஆறத்தணிய ār̲a–t–taṇiya, வி.எ. (adv.) அமைதியாய் (உ.வ.); calmly, leisurely.

[ஆற + தணிய.]

ஆறதீகம் ār̲atīgam, பெ. (n.) தீப்பற்றாக் குணமுடைய கல்நார் (மு.அ.); mountain flax, magnesium fossil found in Mysore. Its texture is delicately fibrous. It is also called asbestos which has the quality of resisting fire.

[ஒருகா. ஆறு + திகம் = ஆறுதிகம் → ஆறதிகம். தி → திகம் = தீயின் இயல்பு ஆறதிகம் = தீயின் இயல்பை ஆறச் செய்யும் கல்நார்.]

ஆறந்தம் ār̲andam, பெ.(n.) முடிவிலே உறுதி செய்யப்படும் தெளிவுரைகள் ஆறு; six metaphysicl dispositions to be decided at the end. "ஆறந்தமாவன: நாதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், யோகாந்தம், காலாந்தம், வேதாந்தம் என்பன" (த.நி.போ.137).

[ஆறு + அந்தம் = ஆறந்தம்.]

ஆறப்போடு–தல் ār̲a–p–pōḍu–, 19 செ.குன்றாவி. (v.t) காலந்தாழ்த்துதல் (உ.வ.); allow a work to lose its importance by postponing it (com.).

[ஆற (பெ.எ.) + போடு. போக + அடு = போகடு → போடு.]

ஆறல் ār̲al, பெ. (n.) 1. ஆறுதல்; healing, as does a wound.2. குளிர்தல்; cooling, growing cold.

[ஆறுதல் → ஆறல்.]

ஆறல் பீறல் ār̲al – pīr̲al,பெ. (n.) பயனற்றது; that which is useless. 'தன்னோரொக்க ஆறல்பீறலாயிருப்ப தொரு தேவதையைப் பற்றி (ஈடு, 7,4,8).

[அறுதல் →அறல் → ஆறல். பீறுதல் = நெடுகக் கிழிதல். ஆறல்பீறல் (எதுகை குறித்து வந்த மரபிணைமொழி) = நைந்து கிழிந்த துகில் போல் பயனற்றது.]

ஆறலை–த்தல் ār̲alai–,2 செ. குன்றாவி. (v.t.) வழிப்பறித்தல்; to rob on the highway. "வன்கண்ண ராட்டி விட்டாறலைக்கு மத்தம்" (ஐந். ஐம்.34).

[ஆறு + அலை. அலை= துன்புறு, துன்புறுத்து. ஆறு = வழி, நெடுஞ்சாலை.]

ஆறலை ār̲alai, பெ. (n.) வழிப்பறி, வழியிடைக் கொள்ளை; highway robbery. "ஆறலை கள்வரூர் கலக்கி" (கந்தபு.ஆற்றுப்.14).

[ஆறு + அலை.]

ஆறலைப்பார் ār̲alai–p–pār, பெ. (n.) வழிப்பறி செய்யும் கள்வர்; highway robbers.

[ஆறு + அலைப்பார்.]

ஆறலைப்பு ār̲alaippu, பெ. (n.) **ஆறலை** பார்க்க; see ār̲alai.

[ஆறு + அலைப்பு.]

ஆறவமர ār̲a–v–amara, வி.எ. (adv.) அமைதியாய் (உ.வ.); calmly and patiently.

[ஆற + அமர = ஆறவமர.]

ஆறவிடு–தல் ār̲a–viḍu–,18 செ.குன்றாவி. (v.t.) **ஆறப்போடு–தல்** பார்க்க; see ār̲a–p–pōḍu–.

[ஆற + விடு.]

ஆறறிவுயிர் ār̲ari-v-uyir, பெ. (n.) ஐம்பொறியுணர் வோடு சிந்தித்தறியும் மனவுணர்வுடைய மக்கள்; human beings, as possessing six faculties viz. the five senses and the mind. "மக்கட் டாமே யாறறி வுயிரே" (தொல். பொருள். 588).

[ஆறு + அறிவு + உயிர்]

ஆறன்மட்டம் ār̲an̲-maṭṭam, பெ. (n.) (இசை) தாள வகை; (Mus.) a variety of time measure. (சிலப்.3.16. அரும்.).

[ஆறு + அன் + மட்டம். அன் சாரியை.]

ஆறாக்காரியம் ār̲ākāriyam, பெ. (n.) தேற்றம் (த.சொ.அக.); resolve.

[ஆறாத → ஆறா (ஈ.கெ.எ.ம.பெ.எ.) + காரியம்.]

ஆறாக்குழிப்புண் ār̲ā-k-kuḻi-p-puṇ, பெ.(n.) தீராத ஆழமான புண்; incurable deep sore such as carbuncle.

[ஆறாத → ஆறா + குழி + புண்.]

ஆறாங்காய்ச்சலுப்பு ār̲aṅ-kāyccal-uppu, பெ.(n.) ஆறு முறைகாய்ச்சி யெடுத்த வெடியுப்பு; nitre boiled and filtered 6 times. (சா.அக.).

[ஆறாம் + காய்ச்சல் + உப்பு]

ஆறாங்கூட்ட வெள்ளி ār̲aṅ-kūṭṭa-veḷḷi, பெ. (n.) விண் மீன் தொகுதி, மீனவர் இரவுப் பொழுதைக் கணித்து, மீன்பிடிக்கச் செல்லவுதவும் விண்மீன் (முகவை. மீ.வ); cluster of stars, one that helps fishermen to surmise the time of the night and go for fishing.

[ஆறாம் + கூட்டம் + வெள்ளி.]

ஆறாட்டம் ār̲āṭṭam, பெ. (n.) அதிக நோயால் படும் பெருந்துன்பம்; agony from extreme sickness. 2. நோயாளிகளின் பினத்தல் (பினாத்துதல்), பிரட்டல் முதலிய துன்பங்கள்; delirium, raving, restlessness etc., of the patient due to severe illness. (சா.அக.).

தெ. ஆறாட்டமு.

[ஆறாத → ஆறா + ஆட்டம் = ஆறாட்டம்.]

ஆறாட்டம் மாறாட்டம் ār̲āṭṭam-mār̲āṭṭam, பெ. (n.) **ஆறாட்டம்** பார்க்க; see ār̲āṭṭam. முதியவர் சாகக்கிடக்கிறார், அவர் நிலை ஆறாட்டம் மாறாட்டமாய் இருக்கிறது (உ.வ.)

[ஆறாட்டம் மாறாட்டம் = எதுகை குறித்துவந்த இணைமொழி.]

ஆறாட்டு ār̲āṭṭu, பெ. (n.) விழா முடிவில் தெய்வத் திருமேனியை ஆற்றில் அல்லது குளத்தில் முழுக்காட்டி அடியார்களும் நீராடும் நிகழ்ச்சி (தீர்த்தவாரி உற்சவம்); bath of an idol followed by the bath of the worshippers in a river or a tank at the close of a festival. (குற்றா.தல.வடவருவி.37).

ம. ஆறாட்டு

[ஆறு + ஆட்டு. ஆட்டு = நீராட்டுதல்.]

ஆறாடி ār̲āḍi, பெ. (n.) 1. தெருத்தோறும் அலைந்து திரிபவன்; ஊர் சுற்றி, நாடோடி; vagabond. 2. நிலைகெட்டவன்; worthless fellow (W).

[ஆறு + ஆடி. ஆறு = வழி. ஆடி = அலைந்து திரிபவன்.]

ஆறாடு-தல் ār̲āḍu-, 5. செ.கு.வி. (v.i.) 1. விழா முடிவில் ஆற்றில் அல்லது ஓடும் நீரில் நீராடுதல்; to bathe at the close of a festival, said of a temple idol and its worshippers. "ஏழுநாள் திருவிழாச் செய்து பங்குனிவியாகம் ஆறாடுவதாகவும்" (T.A.S.I.Vg. 1,6) 2. ஆற்றில் நீராடுதல்; to bathe in a river.

ம. ஆறாடு.

[ஆறு + ஆடு.]

ஆறாத்தவம் ār̲ā-t-tavam, பெ. (n.) இடைவிடாமல் செய்யும் தவம்; constant practice of Yoga, prolonged penance.

[அறாத → அறா → ஆறா + தவம்.]

ஆறாத்தூறு ār̲ā-t-tūr̲u, பெ. (n.) அவதூறு (இ.வ.); slander, calumny (Loc.).

[ஆறா + தூறு. ஆறாத்தூறு = அடங்காப் பழிச்சொல்.]

ஆறாதார நூற்பா ār̲ādāra-nūr̲pa, பெ. (n.) ஏற்ற சித்தர் இயற்றிய மருத்துவநூல்; treatise on medicines by one Yetrasiddha. (சா.அக.).

[ஆறாதாரம் + நூற்பா]

ஆறாதாரம் ār̲ādāram, பெ. (n.) உடம்பிற்கு அடிப் படையாகவுள்ள ஆறுவகை மெய்ம்மை (தத்துவம்) கள். அவை யாவன: மாந்தவுடம் பிலுள்ளமைந்த பாலகம் (மூலாதாரம்), அகட்டகம் (சுவா திட்டானம்), மூச்சகம் (மணிபூரகம்), நெஞ் சகம் (அனாகதம்), சுழியகம் (விசுத்தி), உச்சகம் (ஆக்கினை) முதலியவைகள் தாமரைக்கு ஒப் பாகச் சொல்லப்பட்டன. ஒகத்தினால் இம்மெய்ம்

மைகள் வலுவடைந்து தத்தங் காரியங்களைக் காட்ட முயலும் போதுஒகியர் (துறவிகள்) பல சித்துகள் கைவரப் பெறுவர். அவற்றால் நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு முதலியவைகளைக் கடந்து ஆதன்பேறு (ஆன்மலாபம்) பெறுவர். அவைசுழிமுனையினாலொன்றோ டொன்று தொடர்புற்றவை; The 6 nerve plexuses in the human ody as explained below. They are called in plain language lotuses with in which dynamic forces of life and energy are said to be stored.

As vitality is flowing through and centred in each of the lotuses, their latent forces are awakened in yoga practice and the man attains super–natural powers. He conquers death, infirmity etc., to which all mortals are liable and attains self–realisation. These different centres as mentioned below, are connected with one another by sulimunai, the nerve which is active in the yoga's alone.

1. பாலகம் (Mulādāram) – lowest region in the pelvic region. It is the seat of semi intellectual sentiments - Sacral plexus.
2. அகட்டகம் (Swadistānam) – corresponding to hypo - gastric centre wherein selfish sentiments are originated.
3. மூச்சகம் (Manipūragam) – corresponding to the epigastric centre is the seat of selfish propensities.
4. நெஞ்சகம் (Anāgadam) – corresponding to the cardiac centre, is the seat of domestic feeling.
5. சுழியகம் (Visutti) – corresponding to carotid plexus, the seat of perceptiveness
6. உச்சகம் (Āgginai) – corresponding to medulla oblongata, the seat of higher mental functions and spirituality. (சா. அக.).

[ஆறு + ஆதாரம் . ஆதல் → ஆதலை = உதவி . ஆறாதலை எனின் முற்றும் தமிழாம். ஒ.நோ. ஆதலம் → ஆதரம் → ஆதரவு ஆதலை → ஆதலம் → ஆதரம் → ஆதாரம் = உதவி, தாங்குதல், அடிப்படை, மூலம், மூலவிமை.]

ஆறாதூறு ārātūru, பெ. (n.) **ஆறாத்தூறு** பார்க்க; see ārā–t–tūru.

ஆறாப்பசி ārā–p–paśi, பெ. (n.) 1. மிகுபசி; voracious hunger. 2. அடங்காப் பசி, தீராப்பசி; insatiable hunger. (சா.அக.).

[ஆறாத → ஆறா + பசி.]

ஆறாப்புண் ārā–p–puṇ, பெ. (n.) சூலை நோயினால் ஏற்படும் ஒருவகை அழிபுண்; incurable ulcer arising from arthritic condition of the body, chronic ulcer or sore.

[ஆறாத → ஆறா + புண்.]

ஆறாமலெரித்தல் ārāmalerittal, பெ. (n.) இடைவிடாமல் எரித்தல்; to burn continuously as is done sometimes in preparing medicines without leaving an opportunity to cool down during the process.

[ஆறாமல் + எரித்தல்]

ஆறாமீன் ārāmīṉ, பெ. (n.) கார்த்திகை நாண்மீன்; pleiades, as containing six stars.

[ஆறு + ஆம் + மீன் – ஆறாம்மீன் =ஆறு ஆகிய மீன்கள், ஆறு நாண்மீன்கள்.]

ஆறாமீனறவோட்டு ārāmīṉara vōttu, பெ. (n.) கார்த்திகை நாண்மீனிடை கதிரவனின் செலவுக் குரியதும், கடலான் வரும் ஏதங்களைக் கடற்பயணம் செய்வோர் எதிர்பார்த்து அஞ்சக் காரணமானது மான காலம்; passage of the sun through the segment of the Zodiac occupied by pleiades, when rough weather is to be anticipated.

[ஆறு + ஆம்+ மீன் + அற+ ஒட்டு. அற = முழுமையாக. ஒட்டு = ஒட்டம், செல்லுதல், போதல்.]

ஒட்டு =அழிதல், கேடு, தோல்வி என்பதே இங்கும் பொருந்தும்..

அறுமீனாகிய ஆறாமீனிடைக் கதிரவனின் செலவு முழுமையான தீங்கின் அறிகுறியாகக் கருதப்பட்டதால் அறவோட்டு எனப் பெயர்பெற்ற தாகலாம்.

ஆறாயிரப்படி ārāyira–p–padi, பெ. (n.) திருவாய்மொழி விரிவுரைகளுள் முதலாவது; first commentary on the Tiruvaymoli by Tiru–k–kurugai–p–pirān pillāṉ, containing 6000 granthas. (உபதேசரத்.41 வியாக்.).

[ஆறாயிரம் + படி.]

ஆறாரச்சக்கரம் ārāra–c–cakkaram, பெ. (n.) ஆறு ஆரங்களைக் கொண்ட சக்கர வடிவிலுள்ள கட்டங்களில் எழுதப்படுவதும் நான்கடிகளைக் கொண்டதும் ஆரத்திற்கு ஆரம் படித்துச் செல்லும் போது சில எழுத்துகள் மீண்டும் மீண்டும் வருவதுமாகிய மிறைப்பா வகைகளுள் ஒன்று (மாறன. 282. உரை); stanza of four lines so composed that it can be written in the form of a wheel with six spokes, a variety of cakkara–pantam.

[ஆறு + ஆரம் + சக்கரம்.]

ஆறாறு āṟāṟu, பெ. (n.) 1. ஆறுமேனி; six each. 2. ஆறும் ஆறும் பெருக்கிய தொகை; six times six, thirty six.

[ஆறு + ஆறு]

ஆறானரம்பு āṟāṉarambu, பெ. (n.) காது கேட்க உதவும் நரம்பு, (கடாட்ச நரம்பு); auditory nerve (சா.அக.).

[ஆறான் + நரம்பு]

ஆறிதழ் āṟidaḻ, பெ. (n.) வெள்ளைப்பூண்டு; garlic consisting of 6 bulbs, Allium sativum. (சா.அக.).

[ஆறு + இதழ்.]

ஆறிய கற்பு āṟiya kaṟpu, பெ. (n.) அறக்கற்பு; மறக் கற்புக்கு எதிரானது; chastity guarded with patience under affronts, dist.fr.sīṟyakaṟpu. "ஆறிய கற்பிற் றேறிய நல்லிசை" (பதிற்றுப்.90,49; சிலப்பதி,42, உரை)..

[ஆறிய + கற்பு ஆறிய = அடங்கிய.]

ஆறிருகரத்தோன் āṟirukarattōṉ , பெ. (n.) முருகக் கடவுள்; Muruga, who has twelve arms.

[ஆறு + இரு + கரத்தோன். ஆறிரு = இரண்டு ஆறு, பன்னிரண்டு. கரு →த. கரம் > skt. kara.]

ஆறிலொன்று āṟiloṉṟu, பெ. (n.) அரசனுக்குரிய ஆறில் ஒன்றாகிய பங்கு, நில வருவாயில் வரிக்காகப் பெறும் பாகம்; one sixth of a crop, as the proportion due to the crown. "ஆறில் ஒன்றன்றோ புரவலர் கொள்ளும் பொருள்" (முத்தொள்ளாயிரம். 73.)

[ஆறு + இல் + ஒன்று.]

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென் றாங்கு ஐம்புலத்தா றோம்பல் தலை" (குறள். 43.) என்னும் குறளில் இல்வாழ்வான் தன் வருவாயை ஐவகைப்படுத்திச் செலவு செய்யும் முறை கூறப்பட்டது. ஆறாவது பங்கு, அரசர்க்கு வரியாக அளிக்கப்பட்டது. இதனால்தான் இல்வாழ் வான் தன் வருவாயை ஆறாகப் பங்கிட்டு ஒரு பங்கை அரசர்க்குச் செலுத்த வேண்டுமென்ற மரபே வழக்கூன்றியது.

ஆறு—தல் āṟu, 10 செ.கு.வி. (v.i.) 1. நீங்குதல்; to be relieved. "ஆறாவிட ரென்வயிறுக் கிணையால்" (கந்தபு. அக்கி. 235). 2. ஓய்தல் (கதி.அக.); to be tired,to cease. அவன் ஆறி அடங்கிவிட்டான் (உ.வ.). 3. அடங்குதல், குறைதல்; to be suppressed, to be reduced. "ஐம்புலனும் ஆறியவர்களும்" (கம்பரா. தேரேறு. 25). 4. புண் காய்தல்; to heal as a wound. "தீயினாற் சுட்ட புண் ணுள்ளாறும்" (குறள். 129). 5. அமைதியாதல்; to be preserved with patience, as chastity. "ஆறிய கற்பு" (சிலப்பதி. 42 உரை). 6. வெப்பம் குறைதல், சூடு தணிதல்; to abate, cool, grow cold. ஆறின கஞ்சி பழங்கஞ்சி (பழ.). 7. குறைவாதல், தணிதல்; to be appeased, alleviated, mitigated. உண்டதும் பசியாறியது (உ.வ.). 8. இளைப்பாறல் (கதி.அக.); to take rest. இப்பொழுது தான் வந்தீர்கள்; ஆற அமர இருந்து போங்கள் (உ.வ.).

ம, க. தெ. ஆறு; து. ஆருணி; **நா.** ஆர்;

பர். ஏர்; **கோன்.** ஆரானா (தண்ணீர்); **குவி.** ஆச.

Chinese – rong (dissolve, throw away).

[அறு → ஆறு. அறுதல் = நீங்குதல், விலகுதல், ஒய்தல், உட்படல், அடங்கல், குறைதல்.]

அறு என்னும் அடிவினை rive – to break, asunder என ஆங்கிலத்தில் வழங்கப்படுகிறது. rive → river அறுத்தல், அடித்துத் தள்ளிக் கொண்டு போதல், நீங்குதல், விலகுதல் என்பதே அடிப்பொருளாயினும் அதனின்றும் கிளைத்த வழிநிலைப் பொருளால் ஓய்தல், உட்படல், அடங்குதல், குறைதல் என்றும் வினைப்பொருள் வளர்ந்து வெப்பம் தணிதல், குறைதல், குளிர்தல் பொருள்களைத் தருகிறது. நீர்படியும் மலைச் சாரலில் விளையும் குளிர்ச்சி தரும் மருந்துச்செடி வடமொழியில் 'ஆருக்' எனப் படுகிறது.

āruk – a medicinal plant of cooling properties growing on the Himalaya mountains (M.W.S.E.D.).

ஆறு [1]āṟu, பெ. (n.) 1. மழை வெள்ள நீரோடைகள் பல சேர்ந்து பெருக்கெடுத்தோடும் நீரோட்டம், யாறு; river, brook. காவிரியாறு, வைகையாறு, பஃறுளியாறு (உ.வ.) 2. வழி, பாதை; way, road. "ஆறுசெல்வம்பலர்". 3. தலைக்கடை, தலைவாயில் (அக.நி.); front, entrance of a house. 4. வழிவகை; means,device. "ஆற்றின் வருந்தாவருத்தம்" (குறள். 468). 5. அறம்; morality, virtue, path of righteousness. "ஆறன் மையின் முதியாரையு மெறியானயி லுழவன்" (சீவக. 2261). 6. சமயம்; religion. "சைவ நல்லாறோங்க" (பெரியபு. சண்டேசு. 57). 7. பக்கம்; side. "நாலாறு மாறாய்" (நாலடி. 383). 8. பயன்; result. "அறத்தா றிதுவென வேண்டா" (குறள். 37). 9. இயல்பு; nature. "செயுநீர செய்யா தமைகலா வாறு" (குறள். 219). 10. வகை, விதம்; mode, manner, method. "கற்பழியா வாற்றால்" (நல்வழி. 10). போமாறு கூறினான் (உ.வ.). 11. ஒழுக்கம் (கதி.அக.); discipline.

மறுவ : யாறு , அருவி, உந்தி, ஒலியல், ஓணம், குடிஞை, சிந்து, கடினி, தரங்கிணி, திரை, தீர்த்திகை, துறை, துணி, புனல்,

யாறு, வருபுனல், வேணி, துறையாறு, பீராறு, வழாறு, வாரி, புதுப்புனல் வரவு, தலையல், நீந்துபுனல், நீத்து (ஆ.அக.). புழல், பொழியல், தோடு, பொருநை .

ம., க., ஆறு; **து.** ஆரு; **தெ.** ஏறு; **கோண்** . ஏர் (தண்ணீர்); **குவி.** ஏசு (தண்ணீர்). கோத. ஒய்ண (வழி). **துட.** ஓர் (வழி – புதர்க்கான நுழைவாயில்)

Tamil. ā<u>r</u>u, yā<u>r</u>u, (water) āral (water) aral (water) arai ān aquatic plant.

Eng. ore – (see–weed) (ore–weed) Basque – eri–on (to flow) a<u>r</u>a, aranc valley)ur, (water). Assyrian – ara–du (to flow) Somali – hari (water) Sumerian – er (tear) ur, (water) Coptic – yar (water) Hebrew – yor (river)

In England, of the rivers, Yare, Yarrow etc. The rivers in Iberia – Ar–ga, Ar–anda, Ar–agon Ar–an, Ara, –xes, Nubian – aru, are (rain) Names of streams in the Alps – Are, Ar, Ac, Arve, Aravo, Aronna.

In Switzerland (names of streams) Aar, Arve. In the British Isles – Are, Arre, Arro, Aire, Aray, Ayr.

In Sardinia – the rivers Arrai, Arralai, Arriaxiu – Dravidian Origins and the West (Dr.N.Lahovary)

(An ancient element) in river names is ar – appearing in Aar, Arno – meaning river. In Great Britain – Ayr, Oare, Ore. –George R.Stewart. "Names on the globe" Page 182–183. **L.** arere, **GK.** arassien, **Chinese,** rang– to give way. **F.** eau (water) pronounced 'a'

Malay. ayer (water)

[அறு → ஆறு. ஆறு மண்ணை அறுத்துச் செல்வதால் பெற்ற பெயர். மண்ணை அறுத்துச் சென்ற பகுதி காட்டுவழிப் போக்கர்க்குப் பாதையாய் அமைதலின் பாதைப் பொருள் ஏற்றது. நிலமுழுதும் சோலையாயிருந்த முது பண்டைக் காலத்தில் ஆறுகளே வழிகளாயிருந்தன. கல்லும் முள்ளுமற்ற நல்வழியாதலின் நன்னெறிப் பொருளும் பெறலாயிற்று.]

மண்ணை அறுத்துச் செல்லுதலாலே 'ஆறு' பெயர் பெற்றது என்பதை river என்னும் ஆங்கிலச் சொல்லாலும் தெளியலாம். rive – rend, cleave strike asunder, rive – river வடமொழியிலும் aruj – to break up, loosen, tear out எனப் பொருள் படும். அறு → ஆறு எனவும், அரி → அரிவி → அருவி எனவும் திரிந்து வழங்கும். நெடுக அறுத்தோடும் செயலால் பல ஓடைகள் சேர்ந்த வெள்ளப் பெருக்கு ஆறு எனவும், ஒரு குறிப்பிட்ட பாறையை அல்லது குறுகிய இடத்தை அரித்துச் செல்லும் சிற்றோடை அருவி எனவும் வழக்குப் பெற்றதென்க. நீரோட்டம் அல்லது வெள்ளப் பெருக்கின் இயல்புக்கேற்ப அவை பெற்ற பெயர் விளக்கத்தை ஆற்றின் மறு வடிவங்களாகத் தரப்பட்ட சொற்களின் கீழ்க் காண்க. கோட்டாறு, பொறையாறு என்னும் இடப்பெயர்கள் 'ஆறு' ஈறு பெற்றுள்ளன.

ஐரோப்பிய நாடுகளிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் ஆற்றுப் பெயர்களும் இடப் பெயர்களும் 'ஆறு' என்னும் தமிழ்ச் சொல்லை வேராகக் கொண்டிருத்தலைக் காணலாம். அதுவேயன்றி வழி, வகை, இயல்பு, தன்மை என்னும் பெயர்களில் இடைச்சொல் புடை பெயர்ந்த போது பெயரீறுகளாகவும் மாறியுள்ளன. dinner, danger, supper போன்ற சொல்லீறாக ஆறு – ஆர் வழங்குதலைக் காணலாம்.

ஆறு^{2} ā<u>r</u>u, பெ. (n.) 1. ஆறு என்னும் எண்ணுப் பெயர், ஐந்தின் மேல் ஒன்று ; number six. "ஆறறி வதுவே அவற்றொடு மனனே" (தொல். மரபி. 27.) 2. நளி (விருச்சிகம்) எனப்படும் ஆரல் ஓரை; constellation pleiades.

ம., க., தெ., கட., பட., குறும்., எரு. ஆறு; **குட.** ஆறி; **கோத.** ஆறெ; **துத.** ஓர்; **து.** ஆசி; **கொலா.** ஆர்; **கைக்.** ஆர்; **கோண்.** சாருங்; **நாய்.** சக; **கூ.** சோ; **குவி, சச்சி; பிராகு.** சாச்; **மித்துன் நாக.** ஆரொக்; **Turk.** alti; **Sum.** a–sh; **Hung.** hat; **Gk.** exi; **Mag.** hat; **Mong.** ot; **Malay.** anam.

[ஆறு – ஆறு விண்மீன்களின் கூட்டத்தைக் குறித்த சொல், ஆறு என்னும் எண்ணுப் பெயரைக் குறிப்ப தாயிற்று.]

ஆறுமீனாகியநளி (கார்த்திகை) நாண்மீன் கூட்டம், கிளை பிரிந்து கடலில் கலக்க வரும் ஆற்றின் வடிவாகப் பண்டைக் காலத்தில் கருதப்பட்டது. பின்னர் அது முன்கால்களை அகற்றிக் கொண்டியை உயர்த்தி நிற்கும் தேளின் வடிவாகக் கருதப்பட்டு நளி (விருச்சிகம்) எனப்பெயர் சூட்டப்பட்டது. ஆற்றின் வடிவாகக் கருதப்பட்டபோது ஆறு → ஆறல் → ஆரல் என்னும் பெயர் பெற்றது. கலித்தொகையிலும் ஆரல் என்னும் பெயரே பயின்றுள்ளது. "அரவுக்கண்ணணியுற ழாரன்மீன்றகை யொப்ப" (கலித். 64–4). ஆறு மீன்களும் ஆறு கார்த்திகைப் பெண்டிராகக் கருதப்பட்ட காலத்தில் கார்த்திகை மீன் என்றும் அறியப்பட்டது. ஆறு → ஆறல் → ஆரல் என்னும் பெயர்கள் காலத்தால் மிக மிகத் தொன்மை வாய்ந்தன. கார்த்திகை நளி (விருச்சிகம்) என்பன மிகமிகப் பிந்தியன.

பண்டைக் காலத்தில் கடல் வழி வாணிகரும் நிலவழி வாணிகரும் காடுகளில் கால் நடை மேய்ப்போரும் இரவில் திசையறிதற்கு விண்மீன் கூட்டங்களையே பெரிதும் நம்பியிருந்ததால் பன்னிரண்டு விண்மீன் கூட்டங்களாகிய ஓரைகளுக்கு இட்ட பெயர்களே மாதப்பெயர்களாக மாறிவிட்டன. ஆரல் அல்லது நளி என்றறியப்பட்ட மாதப்பெயர் கார்த்திகை எனப்பின்னாளில் பெயர் மாற்றம் பெற்றது.

ஆறுபோன்றவடிவம் நோக்கிக் கல்லாதமக்களால் இடப்பட்ட ஆறு என்னும் பெயர் கணியர்களின் பார்வையில் ஆறு விண்மீன்களின் எண்ணிக்கை கருதி 'அல்' ஈறு பெற்று ஆறல் → ஆரல் எனத்திரிவதாயிற்று. பழங்கால மக்கள் ஐந்துக்கு மேல் எண்ணத் தெரியாதிருந்த காலத்தில் 6,7,8 போன்ற எண்களை ஐந்து ஒன்று, ஐந்து இரண்டு, ஐந்து மூன்று என்றே வழங்கினர். கணியர்களின் புதிய சொல்லாட்சி ஆறல் என்ற சொல்லைப்

பெற்றுத் தந்தது. எனினும் கல்லாத மக்கள் ஆரல் மீனுக்குரிய ஆறு என்பதையே ஆறு என்னும் எண்ணுக்குப் பெயராக்கிக் கொண்டனர். ஐந்துக்கு மேல் எண்ணும் வழக்கமும் உருப்பெற்றது.

சிறுவர் விளையாட்டுகளில், இன்றும், 'அல்' ஈறு சேர்த்து எண்ணுப்பெயர்களை வழங்கும் முது பண்டைக் கால வழக்கம் நீடுநிலைத்திருத்தலைக் காணலாம். நாட்டுப் புறங்களில் கோலி என்னும் உருண்டை விளையாடும் சிறுவர் ஒக்கடை, இருவல், முவ்வல், நவ்வல், அஞ்சல், ஆறல் (அறுவல்), எழுவல் (ஏழன்) எட்டன், தொம்மன் என எண்ணுப் பெயர்களைப் பழைய மரபின் வண்ணம் கூறுகின்றனர். ஆதலின், ஆறு → ஆறல் என்னும் எண்ணுப்பெயர் தோற்றத்தின் மூலத்தைத் தமிழ் மொழி தொன்று தொட்டே காத்து வந்திருக்கிறது என்பதைத் தெளியலாம்.

இனி, ஆறு என்னும் எண்ணுப் பெயர் திரவிடமல்லாத இந்திய மொழிகளிலும் ஏனைய மொழிக் குடும்பங்களிலும் ஊடாடியுள்ளது. முன்னெழுத்தொடு ககரம் சேர்த்துக் கொள்ளல் தகரம் சேர்த்துக்கொள்ளல் சகரம் சேர்த்துக்கொள்ளல் என்னும் மூவகை அடிநிலைத் திரிபுகளுற்று வடஇந்திய. நட்டாசிய, செமித்திய, ஐரோப்பியமொழிக் குடும்பங்களிலும், முன்னெழுத்து நீங்கி **று, ரு** என்று ஈற்று வடிவிலும் ஈற்றெழுத்து **து** அல்லது **லு** வடிவிலும் ஆக மூவகை முடிநிலைத் திரிபுகளுற்று கிழக்காசிய மொழிகளிலும் வழங்கிவருதலைக் காணலாம். தரைவழி வணிகர் வாயிலாகக் கிழக்காசிய மொழிகளிலும் கடல் வழி வணிகர் வாயிலாக ஏனைமொழிக் குடும்பங்களிலும் இச்சொல் இடத் துழிப்பரவல் (geographical distribution.) பெற்றிருக்கலாம்.

ஐந்துக்கு மேல் வரிசையாக எண்ணும் வழக்கம் தொன்முது நாகரிக நாடுகளில் மட்டும் முதலில் காணப்பட்டிருத்தலானும், உலக நாகரிகத் தொல்லிடங்களில் திராவிட நாகரிகமே மூன்றில் இருபகுதியினதாகவும் காலத்தால் முந்தையதாகவும் அறியப் பட்டிருத்தலானும் எண்ணுப் பெயர்களின் பரவல் உலகத்தில் மிகப்பெரும்பான்மையான மொழிகளில் ஒரே சீராக உள்ளது.

முதல்வகை அடிநிலைத் திரிபுற்ற (சகரம் சேர்ந்த) **மொழிகள்** (வட இந்திய, நட்டாசிய, செமித்திய ஐரோப்பிய மொழிகள்.)

Hin. che, cha; **Sin.** Chah; **Uru.** che; **Guj.** chha; **Mar.** Chah; **Beng.** Chay; **Ori.** chhaa; **Punj.** chhe; **Kash.** shah; **Raj.** shah.

L. sex; G. sechs; **Ita.** sei; **F.** six; **Port.** seis; **Dut.** zes; **Sp.** seis; **Lith.** sheshi; **OE.** siex; **E.** six; **Goth.** saiks; **Pol.** szesc; **Russ.** shest; **O.Egy.** s-zsw; **Rum.** sase; **Sw.** sex; **Dan., Nor.** seks; Czec. sest; **Skt.** shash; **Yid.** seks.

Heb. schischar; **Iraq.** sitta; **Ar.** siteh; **Cer.** shu; **Akka.** skesh; **Bas.** sei. **Viet.** sau; **Ann.** sau. **Af. swa.** snta; **Berber.** sez.

மேற்கண்ட எண்ணுப் பெயர் பரவலின் வண்ணம் இந்தியாவின் வடபுல மொழிகளில் வல்லித்த சகர (C) முன்னெழுத்துச் சேர்ப்பும் நட்டாசிய, செமித்திய, ஆப்பிரிக்க மொழிகளில் வெறும் உரசொலியாக மாறிய முன்னெழுத்துச் சேர்ப்பும் பெற்றிருத்தலால் cha ஒலிப்பு முந்தையது என்பதையும் sa ஒலிப்பு பிந்தையது என்பதையும் அறிய முடிகிறது.

சிந்துவெளி நாகரிகக் காலத்து வணிகர்களின் வாயிலாக நட்டாசிய ஐரோப்பிய செமித்திய ஆப்பிரிக்க மொழிகளுக்கு இச்சொல் அறிமுகமாயிருக்கலாம்.

இரண்டாம் வகை அடிநிலைத் திரிபுற்றவை (தகரமெய் சேர்ப்பு.)

Nep. tāruk; **Sik.** torak; **Tib.** druk; **Bur. (Myanma).** tāru; **Sant.** turūyi; **Kols.** tūriya.

நேப்பாள, சிக்கிம், திபேத்திய, பருமிய மொழிகளில் ஆறு என்னும் எண்ணுப்பெயரோடு தகரமெய் முன்னெழுத்தாகச் சேர்ந்துள்ளது. சந்தாள கோலர் மொழிகளும் இதனைக் காத்து வந்துள்ளன. காலத்தால்மிகஒதுங்கிவாழ்ந்த இப்பழங்குடிகளின் மொழிகளில் சேர்ந்துள்ள தகர மெய்யெழுத்து சகர மெய் யெழுத்தினும் காலத்தால் முந்தையது. நிலவழி வணிகர்களால் வளர்ந்த இச்சொல்லாட்சியின் தகரமெய் சகரமெய்யெழுத்தாகத் திரிந்த காலம் பிந்தையது.

மூன்றாம் வகை அடிநிலைத்திரிபுற்றவை. (ககரமெய் சேர்ப்பு)

Siam. karung; **Fin.** kūsi; **Beng.** krok; **Bur.** kyok.

வல்லித்த சகரம் (Cha) ககரமாகத் திரியும் என்னும் ஒலியனியல் நெறியின் வண்ணம் வங்காள, பருமிய, சயாம் கிளை மொழிகளிலும் தொலையுறவு துரானியக் குடும்ப மொழியான பின்னிசிலும் சகரம் ககரமாகத் திரிந்துள்ளது. இத்திரிபு சகர முன்னெழுத்துக் காலத்தினும் பிந்தையது. அதாவது சகர முன்னெழுத்தைக் கொண்டிருந்த ஒருசார் கிளை மொழியினரே அதன் ஒலிப்பைக் ககர முன்னெழுத்தாகத் திரித்துக் கொண்டனர் என்பதாம்.

முதல்வகை முடிநிலைத் திரிபு (முன்னுயிர் 'ஆ' நீங்கி 'று' மட்டும் திரிந்து வழங்குதல்).

Jap. rōku; **Nep.** ruk, ru, rukka, rē

நேப்பாள சப்பான் மொழிகளில் காணப்படும் முடிநிலைத் திரிபுகல்லாதமக்களிடை பெருகியகொச்சைவழக்கு. சொல்லின் முன்னசை பின்னசைகளை முன்பின்னாக மாற்றிக் கொள்ளும் இலக்கணப்போலி மரபு கிழக்காசிய மொழிகளில் காணப்படுதலால் இச்சொல்லும் அதன் வயப்பட்டு ஆறு → றா → றோ என இலக்கணப் போலியாகச் சொல்லாக்க ஈறு பெற்று புதிய வடிவுற்றது. ஆறு என்னும் எண்ணுப்பெயர் தகர அல்லது சகரமுன்னெழுத்துப்பெறாமல் உள்ளவாறே இலக்கணப்போலித் திரிபுற்றுப் பரவியதற்கு இவை சான்றாகும்.

இரண்டாம் வகை முடிநிலைத் திரிபு (முன்னுயிர் 'ஆ' நீங்கி று → து எனத்திரிந்து வழங்குதல்)

Bhut. tu; **Tib.** thu; Nep. tuk.

குறிப்பாகத் திபேத்திய மொழியிலும் அதன் கிளை மொழிகளிலும் றகர ரகர ஒலிப்பு அருகியவை. இராமன் என்னும் பெயரை அவர்கள் லாமா என்றே ஒலிப்பர். ரகரம் தகரமெய்யாகவோ லகரமெய்யாகவோ மாறிவிடும். ஆதலால் ஆறு என்னும் எண்ணுப் பெயர் முடிநிலைத் திரிபுற்ற போது று → து எழுத்தாக மாறிட்டது. நேப்பாள பூட்டான் மொழிகளும் வணிகரின் ஊடாட்டத்தால் இச்சொல்லாட்சியைத்தத்தம் கிளை மொழிகளில் காத்துவரலாயின.

மூன்றாம் வகை முடிநிலைத்திரிபு (முன்னுயிர் ‘ஆ’ நீங்கி று → லு எனத்திரிந்து வழங்குதல்)

Chinese (Nank.) luh; **(Peking).** lin; **(canton).** luk, liu; **(sang).** loh; **Amo.** lak.

சீன மொழிக் குடும்பத்தில் றகர ரகர ஒலிப்புகள் அரியவை. ரகரங்கள் லகரங்களாகவே ஒலிக்கப்படும். ஆதலால் ஆறு என்னும் எண்ணுப் பெயர் இலக்கணப்போலியாகி ஆறு → றா → றூ எனத் திரிந்த போது தானாகவே லூ, லா, லி, லியூ எனத்திரிபுற்றது. தகர சகர முன்னெழுத்துச் சேர்ப்புகள் நிகழாத பழங்காலத்திலேயே ஆறு என்னும் திருந்திய எண்ணுப் பெயராகவே கிழக்காசிய நாடுகளுக்கு வணிகர் வாயிலாகப் பரவிய வகைமையைச் *சீனமொழியில்* காக்கப்பட்டுள்ள ஆறுக்குரிய எண்ணுப் பெயர்கள் நிலை நாட்டுகின்றன.

வணிகர்களின் வாயிலாக ஆறு என்னும் எண்ணுப்பெயரை எட்டாத தொலைவான இடங்களில் வாழும் பழங்குடிமக்கள் குறிப்பிட நேர்ந்த போது ஐந்தும் ஒன்றும் எனக் கூட்டலாகவே பேசத் தொடங்கினர். இதனைக் கூட்டுச்சொல் எண்ணுப்பெயர் எனலாம்.

கூட்டுச்சொல் எண்ணுப்பெயர் (5+1)

Burmese. khy-ok; **Siam.** h-ok; **Loss.** h-ok. **Red Indians** (Aztec). **shek-wa-sie** (5 and 1) **Nehuati.** chik-w-asin (5 and 1) **Thai.** hok (5 and 1)

மியான்மா எனப்படும் பருமிய நாட்டுக்கிளைமொழிகளில் ஐந்தைக் குறிக்கும் ‘கை’ யென்னும் சொல்லுடன் ஒன்றைக் குறிக்கும் ‘ஒக்’ சேர்ந்து ‘கையொக்’ என்றாகி ஐந்தும் ஒன்றும் எனக் கூட்டுச்சொல் எண்ணுப்பெயராக நீடுநிலைத்து வழக்கூன்றியிருப்பது மொழி வளர்ச்சிப் படிநிலைகளை உய்த்துணர உதவுகிறது. ஐந்தும் ஒன்றும் என்று ஆறினைக் குறிப்பிடுவது முந்து பழந்தமிழ் மரபே என்பதையும் இது காட்டுகிறது. ‘கை’ என்றும் ஐந்தைக் குறித்த சொல்லின் முன்னெழுத்து க → ச எனத்திரிந்த நிலையை அமெரிக்கச் செவ்விந்திய மொழியும் நெகுவாதி மொழியும் எடுத்தியம்புகின்றன.

கலியாண்டுக்கணக்கு கி.மு. 3101 முதல் தொடங்கியிருந்தலான் தமிழ் எண்ணுப்பெயர்கள் கி.மு. 4000 ஆண்டளவில் வளர்ந்திருக்கலாம் என்றும் ஐந்துக்கு மேல் எண்ணத்தெரியாத காலம் கி.மு. 5000 ஆண்டுக்கு முற்பட்டதாகலாம் என்றும் கருதலாம். சிந்துவெளி நாகரிகக் காலத்து எண்ணுக் குறியீடுகளில் ஆறுக்குரிய குறியீடு ஐந்தும் ஒன்றும் எனக்கூட்டு எண் அடையாளமாகவே உள்ளது. ஆறு என்னும் எண்ணுப்பெயர் தோன்றுவதற்கு முன்பே வரைபடக்குறியீடாக அது நிலவியது எனலாம்.

ஆறு என்னும் எண்ணுப்பெயர் துருக்கி அங்கேரியம் உள்ளிட்ட சித்திய துரானிய மொழிகளிலும் சுமேரியத்திலும் சீனம் திபேத்தியம் உள்ளிட்ட கிழக்காசிய மொழிகளிலும் இயல்பாகவும் அடிநிலை அல்லது முடிநிலைத்திரிபுற்றும் பரவியுள்ளது. வட இந்திய நட்டாசிய, ஐரோப்பிய செமித்திய மொழிகள் சகர முன்னெழுத்தைச் சேர்த்துக் கொண்டிருக்கின்றன. அடிநிலை முடிநிலைத்திரிபுகள் உலகில் எல்லா மொழிகளிலும் காணப்படும் சொற்சிதைவுப் பொது நெறிமுறைகளுக்கு உட்பட்டவை. உயிர் முதற் சொல்லாயின் ஏதேனும் ஒருமெய்யெழுத்தை முன்னெழுத்தாகச் சேர்த்துக் கொள்வது ஒவ்வொரு மொழிக் குடும்பத்திலும் புதிதாகக் கிளைத்து வளர்கின்ற புதுமொழியின் சொல்லாக்க வழிமுறைகளுள் ஒன்றாகும். முன்னெழுத்தைச் சேர்த்துக் கொள்ளாத சித்திய துரானிய சுமேரிய *சீன* திபேத்திய மொழிகள் காலத்தால் முற்பட்டனவென்பதும் முன்னெழுத்துச் சேர்த்துக் கொண்ட வடஇந்திய, நட்டாசிய, ஐரோப்பிய, செமித்திய மொழிகள் காலத்தால் பிற்பட்டனவென்பதும் அறியத்தக்கன. நட்டாசிய ஐரோப்பிய செமித்திய மொழிகளில் பெரும் பாலும் ஒவ்வொரு சொல்லின் முதலசையும் வல்லெழுத்து அல்லது வல்லெழுத்து மெய்ம்மயக்க எடுப்பொலி விரவி வருதலைத் தலைமைப் பண்பாகக் கொண்டவையாதலின் உயிர்முதற் சொற்கள் பிறமொழிகளிலிருந்து கடன் கொள்ளப்படும் போது உயிரெழுத் துடன் சகரம் போன்ற மெய்யெழுத்தைச் சேர்த்துக் கொள்வதால் அவர்தம் தாய்மொழிச் சொல்லைப் போன்று பலுக்குவதற்கு எளிதாகின்றது. உயிர்முதற் சொற்களில் மெய்யெழுத்து சேர்வதற்கு ஞாலமுதன்மொழி வளர்நிலைப் படிகளில் பல்வேறு காரணங்களிருப்பினும் ஒரு குடும்ப மொழியிலிருந்து கடன் கொள்ளப்படும் உயிர்முதற் சொற்களுக்குக் கடன் கொள்ளப் படும் மொழிக் குடும்பங்களின் ஒலிப்புப்பாங்கு நெறி முறைகளே சொற்றிரிபுத் தன்மைகளை வரையறுக்கின்றன என்பதற்கு இது இங்குச் சுட்டிக் காட்டப்பட்டது.

ஆறு[3] āṟu, பெ. (n.) நாரிசுக்கிலம் என்னும் மகளிர் வெள்ளை; semen like discharge from the female genital. (சா.அக.).

[அறு → ஆறு. அறுதல் = நீங்குதல், வெளிப்படல்.]

ஆறுகட்டி āṟu kaṭi, பெ. (n.) 1. ஆறு பற்களுக்குமேல் முளையாத மாடு (இ.வ.); breed of neat cattle that have not more than six teeth. 2. சிவனியர் (சைவர்) காதிலணியும் அக்கமணி (உருத்திராக்கம்) வீடம்; pendant of six rudrākṣa beads, worn round the ear by Saivas.

[ஆறு + கட்டி.]

பொதுவாக ஆனிரைகளுக்குக் கீழ்த்தாடையில் 20 பற்களும் மேல் தாடையில் 12 பற்களும் இருக்கும்.

ஆறுகழிச்சல் āṟu kaḻiccal, பெ. (n.) ஆறுவகைப்பட்ட செரியாக்கழிச்சல் நோய்; loose diarrohoea or dysentery arising from six different causes and they are:–

1. ஊதைக்கழிச்சல் (வாதக்கிராணி) – type of diarrohoea arising from vitiated wind, flatulent diarrohoea
2. பித்தக்கழிச்சல் (பித்தக்கிராணி) – dysentery caused by vitiated bile due to gastric disorders, Gastrogenic diarrohoea.

3. கோழைக்கழிச்சல் (சிலேட்டுமக்கிராணி) – diarrohoea caused by vitiated phlegm, muscous diarrohoea alias dysentric diarrohoea.

4. மூலக்கழிச்சல் (மூலக்கிராணி) – bleeding piles due to excess of heat caused at the plexus veins around the lower rectum.

5. மேகக்கழிச்சல் (மேகக்கிராணி) – dysentery caused from venereal complaints.

6. சூட்டுக்கழிச்சல் (சூட்டுக்கிராணி) – chronic dysentery due to excess of heat in the body either constitutional, or due to climatic changes, such as sprue, etc.

[ஆறு + கழிச்சல். **Skt.** grahani, > *த. கிரகணி கிராணி = கழிச்சல். செரியாமையால் ஏற்படும் கழிச்சல், (அதிசாரம்)]*

ஆறுகை ārugai, பெ. (n.) மன ஆறுதல்; solace. "மனமாறுகைக் கெம்மைவந்தானு நாதன்" (மரு தூரந்.12).

[ஆறு → ஆறுகை.]

ஆறுசூடி ārusūḍi, பெ. (n.) கங்கையாற்றைத் தலையில் கொண்ட சிவபெருமான்; Šiva whose head adorns the Ganges. (நல். பாரத. மருத்து.94.).

[ஆறு + சூடி. சூடு + இ. சூடி = சூடியவன், அணிந்தவன். ஆறு = கங்கையாறு.]

ஆறுசூலை āru šūlai, பெ. (n.) ஆறுவகைச் சூலை நோய்கள், குத்தல் நோய்கள்; diseases attended with acute pain said to arise from the following six different causes:–

1. ஊதை (வாத)ச் சூலை என்னும் வயிற்றுவலி (குத்தல் நோய்) – acute pain due to disorders of the gas in the system, as in arthritis or gout. வளி (வாயு) சூலை – wind colic.

2. பித்த சூலை என்னும் வயிற்றுவலி (குத்தல் நோய்) – acute pain in the stomach through gastric disorders, as in Bilious colic or Gastric colic.

3. சில்லச் (சிலேட்டும) சூலை என்னும் வயிற்றுவலி (குத்தல் நேய்) – sharp pain arising from phlegmatic causes.

4. மேக சூலை என்னும் வயிற்றுவலி (குத்தல் நோய்) – excessive pain due to venereal or syphilitic causes such as, in gonorrhoeal or dyphilitic arthritis, gout, etc. பிரமேகசூலை –renal colic, nephritic colic.

5. கருப்ப சூலை என்னும் வயிற்றுவலி (குத்தல் நோய்)–severe abdominal pain from some uterine disease or menstrual disorder, as in uterine colic, mentrual colic, etc.

6. கண் (நேத்திர) சூலை (குத்தல் நோய்)– acute or lancinating pain in the iris of the eye, Irititis. It is due to syphilis, gonorrhoea, etc. (சா.அக.).

[ஆறு + சூலை. சூலை = குத்தல், குடைச்சல் முதலிய பொறுக்கொணாவலிமிகுக்கும் நோய்.]

ஆறுதல் ārudal, பெ. (n.) 1. மனஅமைதிபெறுதல்; consolation, solace. 2. தணிதல், நீங்கல்; to be allayed. "ஆறா விடரென்வயி னாக்கினையால்" (கந்தபு. அஞ்சி. 235). 3. வெப்பம் குறைதல்; to grow cold. "ஆறிய பசுந்தண் காவினசை வொரீஇ" (பாரத. நிலைமீட்.109). 4. குணப்படுதல்; to be cured. 5. புண் காய்தல்; to heal, as a wound or sore does. 6. ஓய்தல், ஆறியிருத்தல், ஆர அமர்தல், கட்டுப்பாடின்றி ஓய்வெடுத்தல், நெகிழ்வாக அல்லது தளர்ந்திருத்தல்; to relax. 7. அடங்குதல்; to be subdued. "ஐம்புலனுமாறி னார்களும்" (கம்பரா. தேரரேறு.25).

[ஆறு → ஆறுதல்.]

ஆறுதிங்கட்காடி āru-tiṅgat-kāḍi, பெ. (n.) **ஆறு மாதக் காடி** பார்க்க; see ārumāda-k-kāḍi.

[ஆறு + திங்கள் + காடி.]

ஆறுநோன்பு āru nōṉbu, பெ. (n.) பெரு நாளைத் தொடர்ந்து ஆறுநாள் நோன்பு மேற்கொள்ளும் முகமதியர் பண்டிகை ஒழுகலாறு; Muhammadan fast following perunal, and continuing for six days.

[ஆறு + நோன்பு.]

ஆறுபரியான் āru-pariyāṉ, பெ. (n.) ஏறுஅரவு (இராகு); ascending node. 2. இறங்கரவு (கேது); descending node. (நாம தீப.).

[ஆறு + பரியான். கதிரவன் ஏழுபரியான் எனப் படுதலின் இவை ஆற்றல் குறைவு சுட்டின.]

ஆறுபருவம் āru-paruvam, பெ. (n.) ஓராண்டின் ஆறு பகுதிகளான கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் பெரும்பொழுதுகள்; seasons or six divisions of a year, as there are four in England i.e. spring, summer, autumn and winter corresponding to March to May, June to August, September to November and December to February.

[ஆறு + பருவம்.]

ஆவணி, புரட்டாசி – கார்; ஐப்பசி, கார்த்திகை –கூதிர்; மார்கழி, தை – முன்பனி; மாசி, பங்குனி – பின்பனி; சித்திரை,வைகாசி – இளவேனில்; ஆனி, ஆடி – முதுவேனில் இவை வடமொழியில் முறையே வர்ஷ, சரத், ஏமந்த, சிசிர, வசந்த, கிரீட்டிம ருதுக்கள் எனப் பெயர் பெற்றன.

ஆறுபுள்ளிவண்டு āṟupuḷḷi–vaṇḍu, பெ. (n.) **அறுபுள்ளி வண்டு** பார்க்க; see āṟupuḷḷi–vaṇḍu

மறுவ. அறுபுள்ளிவண்டு.

[ஆறு + புள்ளி + வண்டு.]

ஆறுபொழுது āṟu–poḻudu, பெ. (n.) ஒரு நாளை, மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு என ஆறுவகையாகப் பகுத்த சிறுபொழுதுகள்; six divisions of a day.

[ஆறு + பொழுது. பொழுது = காலம், நேரம்.]

ஆறுமணிப்பூ āṟu–maṇi–p–pū, பெ. (n.) மாலையில் மலரும் மலைப்பூ வகை (இ.வ.); evening primrose, for it blossoms at about 6 p.m. (Loc.).

[ஆறு + மணி + பூ.]

ஆறுமலடு āṟu–maladu, பெ. (n.) ஊதை (வாத), பித்தம், கோழை (சிலேட்டுமம்), பூச்சி(கிருமி), மாதவிடாய், (சூதகம்) தசை (மாமிசம்) ஆகிய இவ்வாறு வகைக் காரணங்களால் பெண்களுக்கு ஏற்படும் மலட்டுத் தன்மை; sterility caused in women in six different ways namely 1–3. through deranged condition of the humours in the system, 4. action of bacteria, 5. menstrual disorders, and 6. corpulency.

[ஆறு + மலடு. ஆறு = ஆறுவகை.]

மலடு பார்க்க; See **maladu.**

ஆறுமாதக்கடன்காரன் āṟu–māda–k–kaḍaṉkāraṉ, பெ. (n.) சிற்றூர்களில் திரிந்து பண்டங்களைக் கடனாக விற்று ஆறுமாதங் கழித்து வந்து பணம் பெற்றுச் செல்லும் சிறு வணிகர்கள், குறிப்பாக முகமதிய சிறுவணிகர் (இ.வ.); tallyman, pedlar, esp. among Muhammadans who travel about from village to village selling household articles for credit, and calling again for collection after six months. (சா.அக.)

[ஆறு + மாதம் + கடன்காரன்.]

ஆறுமாதக்காடி āṟumādakkāḍi, பெ. (n.) சமைத்த கருங்குறுவை அரிசிச் சோற்றைப் பானையிலிட்டு வேடுகட்டிச் சூரியப் புடத்தில் புளிக்கவைத்து ஆறு மாதங் கழித்து வடிகட்டியெடுத்த காடி. இக்காடி மஞ்சட்காமாலை, பாண்டு முதலிய நோய்களுக்கு மருந்தாகும். இதற்குப் 'பழச்சாறு' என்றும் பெயர்; matured vinegar obtained from water in which the boiled rice of black paddy has been washed and preserved in a pot kept with its mouth covered with a piece of cloth and exposed to the sun for six months for purposes of fermentation. It is used medicinally for jaundice, incipient dropsy, etc. (சா.அக.).

[ஆறு + மாதம் + காடி.]

ஆறுமாதத்தண்டு āṟu–māda–t–taṇḍu, பெ. (n.) ஆறு மாதங்கழித்துப் பூக்கும் கீரைத் தண்டு; common spinach which flowers after six months. (சா.அக.).

[ஆறு + மாதம் + தண்டு. தண்டு = தண்டுக்கீரை வகை. ஆறு மாதத்திற்குப் பிறகு பூத்து முதிர்ந்து விடும். அதற்குள்ளாகப் பயன் கொள்ள வேண்டும் என்பது கருத்து.]

ஆறுமாத்தாணி āṟu–māttāṇi, பெ. (n.) **ஆறுமாற்றாணி** பார்க்க; see āṟu–māṟṟu(u)–āṇi.

[ஆறுமாற்றாணி → ஆறுமாத்தாணி.]

ஆறுமாற்றாணி āṟu–māṟṟ–āṇi, பெ. (n.) காசுக் கடையில் மாற்றறிவதற்காக வைத்திருக்கும் ஆறு மாற்றுப் பொன்னினாற் செய்த கம்பி, உரையாணி; touch–needle made of six māṟṟu gold used by shroffs for ascertaining quality (சா.அக.).

[ஆறு + மாற்று + ஆணி.]

ஆணிக்கோவை பார்க்க; see āṇi–k–kōvai.

ஆறுமுகக்குரு āṟu–muga–k–kuru, பெ. (n.) கொங் கணர்வாத நூலில் சொல்லப்பட்ட ஊதை (வா தம்)க்கு உதவும் ஒரு குருமருந்து; quintessence prepared as per process laid down in the treatise on alchemy by Konganava. (சா.அக.)

[ஒருகா. ஆறு + முகம் + குரு.]

ஆறுமுகநாவலர் āṟumugaṉāvalar, பெ. (n.) யாழ்ப் பாணத்து நல்லூரிற் பிறந்தவரும் அளப்பரிய புலமைக் கடலாகத் திகழ்ந்தவரும் தமிழும் சிவனியமும் (சைவமும்) தழைக்கப் பெரிதும் உழைத்தவருமாகிய தமிழ்ப் பேராசான்; born in Yālpāṇam, Āṟumuga Nāvalar was a versatile and dedicated Tamil scholar. He expended his efforts for the weal of Tamil and Saivism.

[ஆறுமுகம் + நாவலர்.]

ஆறுமுக நாவலரின் தந்தை கந்தப்பிள்ளை. சேதிராய முதலியாரும் சரவண முத்துப் புலவரும் இவருக்குத் தமிழ்

கற்பித்த ஆசிரியர்கள். சிவனியத்தைப் பழிப்பவர்களைப் பொறாதவர். தம் செல்வத்தைத் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கே செலவிட்டவர். அராலி சித்தி விநாயகர் விருத்தம், நல்லை கைலாசப் பிள்ளையார் மங்களவிருத்தம், இலக்கணச் சுருக்கம், பெரியபுராண உரைநடை, பால பாடங்கள் ஆகியவற்றை இயற்றியவர். சாலி வாகன சகம் 1745 சித்தி பானுவிற் பிறந்தவர். இராமலிங்க வள்ளலாரின் அருட்பாவை ஏற்க மறுத்து 'மருட்பா' என்றவர்.

ஆறுமுகம் āṟumugam, பெ. (n.) 1. ஆறுமுகன், முருகன்: Lord Arumugan. 2. இயற்பெயர்; proper noun. 3. ஆறுமுகப்பட்டகம்; hexhedron

[ஆறு + முகம்.]

ஆறுமுகவன் āṟu–mugavaṉ, பெ. (n.) **ஆறுமுகன்** பார்க்க; see āṟumugaṉ.

[ஆறுமுகம் + ஆன் – ஆறுமுகமன் → ஆறுமுகவன்.]

ஆறுமுகன் āṟumugaṉ, பெ. (n.) முருகக் கடவுள் (சூடா); Muruga, having six faces. "ஆறுமுகனைப் பயந்த நதி "(பாரத. வாரணா. 85)

ம. ஆறுமுகன் ; க. ஆறுமுக.

[த. முகம் > skt. mukha. ஆறு + முகன்.]

ஆறுமுகனேரி āṟumugaṉēri, பெ. (n.) நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் முருகன் பெயரால் அமைந்த ஊர்; place name.

[ஆறுமுகன் + ஏரி.]

ஆறுவகைப் படையல் āṟu vagai–p–paḍaiyal, பெ. (n.) கடவுளுக்குப் படைக்கும் ஆறுவகை உணவுகள். அவை; மஞ்சள் சோறு (அரித்திரான்னம்), சருக்கரைச் சோறு (பரமான்னம்), தேங்காய்ச் சோறு (முற்கான்னம்), நெய்ச்சோறு (கிருதான்னம்), தயிர்ச்சோறு (தத்தியன்னம்), உளுத்தஞ் சோறு (குளான்னம்) என்பன. (த.போ. 302); six kinds of rice–offerings to the gods. (த.சொ.அக.).

[ஆறு + வகை + படையல்.]

ஆறுவிரல் āṟu–viral, பெ. (n.) அரிதாக ஒருவர் கை அல்லது காலில் ஐந்து விரல்களை யொட்டி நிற்கும் ஆறாவது விரல்; sixth or other supernumerary fingers or toes rarely seen in human beings.

[ஆறு + விரல்]

ஆறெழுத்து āreluttu, பெ. (n.) 1. ஓம், ந, ம, சி, வ, ய என்னும் மந்திர எழுத்துகள்; six mystic letters viz. Om, Na, Ma, Śi, Va, Ya; (சா.அக.) 2. ந, ம, கு, மா, ரா, ய என்னும் ஆறெழுத்து மந்திரம் (சடாட்சரம்) (திருமுருகு. 186); sacred formula attributed to Muruga (Skanda), and consisting of six syllables.

[ஆறு + எழுத்து.]

ஆறெறிபறை āreriparai, பெ. (n.) வழிபறிக்குங்கால் கொட்டும்பறை (சிலப்.வேட்டுவ.); drum beaten by robbers while waylaying.

[ஆறு + எறி + பறை. ஆறு = வழி, பாதை.]

ஆறோட்டம் ārōṭṭam, பெ. (n.) மட்டைப்பந்து (கிரிக்கெட்டு) விளையாட்டில் எதிராளி எறிந்த பந்தை அரங்கில் எல்லைக் கோட்டைத் தாண்டி விழுமாறு அடிக்கை; sixer in cricket.

[ஆறு + ஓட்டம்.]

ஆன்[1] āṉ, 11 செ.கு.வி. (v.i.) பொருந்துதல்; to stick to, fit in. நன்றாக ஆனிக் கொண்டு நிற்கிறது (கொங்.வ.); செ.குன்றாவி. (v.t.) 1. பொருந்துதல்; to connect, join. 2. பிடித்தல்; hold. 3. தடுத்தல்; to obstruct. 4. தடுத்து நிறுத்துதல், தடை செய்தல்; to prevent. 5. எதிர்த்தல்; to oppose.

க. ஆன், ஆனு; தெ. ஆனு; கோன். ஆன்சானா. பெங். ஆன்ச்; குட. ஆன்கோ–மீன் பிடிக்கும் வட்டக் கூடை

[ஆல் → ஆன்.]

பொருத்துதல், பிடித்தல் பொருளில் வழங்கிய ஆல் என்னும் வேர்ச்சொல் தமிழிலக்கியங்களில் ஆர்–தல், ஆர்–த்தல் என வழக்கூன்றியது போல் ஏனைத் திராவிட மொழிகளில் ஆல் – ஆன் என ஈறு திரிந்து பெருக வழங்கும் வினையாக வழக்கூன்றியது. தடுத்தல் பொருளில் விரைவு குறித்த ஏவல் வினையாக ஆல் – ஆன் – அவ் எனத் திரிந்து தமிழக நாட்டுப்புறங்களில் வழங்கி வருகிறது. விரைந்து ஓடும் கால்நடைகளை உழவர் ஆவ் – அவ் அவ்எனத் தடுத்துநிறுத்தும் ஒலிக்குறிப்புச் சொல்லாகப் பயன் படுத்துவதை இன்றும் காணலாம். இது தெலுங்கில் ஆவ் → ஆவு → ஆகு என வினையாகவும் ஆவ் – ஆவு – ஆபு என செ. குன்றா வினையாகவும் திரிந்து வழங்கி வருகிறது.

தெ. ஆகு = நில். ஆகண்டி = நில்லுங்கள்.

ஆன்[2] āṉ, பெ. (n.) 1. எருமை, பெற்றம், மரை இவற்றின் பெண். (திவா.); female of the buffalo, ox or deer. 2. பெற்றத்திற்கும் காளைக்கும் பொதுப் பெயர்; neat, cow or bull. 3. பெற்றம் (பசு); cow. 4. எருது; ox. "ஆன்முகத்தனடற்கணநாயகன்" (கந்தபு. பானுகோ.95).

ம. ஆன்; தெ. ஆவு; துட. ஆன் (யானை)

OE.oxa. OS, OHG ohso,ON.uxi, oxi, Goth. ausha, f. Gmc. ohsan, cogn. W. Skt. ukshan.

[மா → மான் → ஆன். மா = விலங்கு, மாடு. னகர மெய் ஒருமை குறித்த ஈறாயிறு.]

மா எனக் கத்தும் இயல்பு பற்றி எருமை, மாடு, மான், மரை ஆகியவை மா எனப்பட்டன. இச்சொல் நாளடைவில் விலங்குகளின் பொதுப்பெயராயிற்று.

ஆன்[3] ān, கு.வி.எ.(adv.) அவ்விடம் (தொல். பொருள். அகத்.24.இளம்.) there, in that place. "ஆன் வழிக் கொள்ளும் வேதன வன்றனைப் பற்றி வல்லே யீன்வருகென்ன"(தணிகைப்.வீராட.89)

[ஆ–செய்மைச் சுட்டடெழுத்து. ன் – சொல்லாக்க ஈறு. இனி ,அல் என்பதே அது எனப் பொருள் படும் செய்மைச் சுட்டாதலின் அது நெடுமுதலாகிப் பின் ஆல் –ஆன் எனத் திரிந்ததென்க]

ஆன்[4] ān, இடை.(part.) 1.மூன்றனுருபு; instr. ending. "மண்ணானியன்ற குடம்" (தொல். சொல்.75, உரை).2. ஆண்பாற் பெயரின் ஈறு; 3rd pers. masc. sing. marker. ஊரான், நாட்டாண் (உ.வ).3.ஆன் பாற் வினைமுற்றின் ஈறு; 3rd pers. masc. verbal ending.வந்தான்,சென்றான்(உ.வ).4.ஒருசாரியை; euphonic increment, used with a modification of பத்து 'ten', as in இருபான் (நன். 244). 5.ஒன்றன் பாலீறு; neut. sing. ending. கறையான், அகழான். 6. ஆயின்; but.(செ.அக.) "தங்கண்ணரானுந் தகவில கண்டக்கால்" (பழமொ. அரசி.10).

[மூன்றனுருபுஆல்→ஆன்.ஆண்பாலீறு அன்→ஆன். ஒன்றன்பாலீறு அன் → ஆன். சாரியை அன் →ஆன்]

ஆன்கன்று ānkanru, பெ. (n.) ஆவின் (பசுவின்) கன்று; calf. cow–calf

[மா →மான் → ஆன் + கன்று]

ஆன்காவலன் ānkāvalan, பெ. (n.) 1. ஆனிரைகளைக் காப்பவன்; protector of the cow. 2. வணிகப்பிரிவினன் (வைசியன்) (சூடா); vaisya.

[மா → மான் → ஆன் + காவலன்.]

ஆன்பொருந்தம் ānporundam, பெ. (n.) கருவூரைச் சார்ந்த ஆறு ஆன் பொருநை; river Ānporunai, near Karūr,

[ஆன் + பொருநை. பொருநை → பொருந்தம் – திரிபு வஞ்சி மாநகரத்தருகிலுள்ள ஆறும், ஆன் பொருநை, ஆனி, வானி, ஆன்பொருந்தம் தண் பொருநை, எனப்படும் (அபி. சிந்.).]

ஆன் பொருநை ānporunai, பெ. (n.) 1. கருருக்கு அருகில் காவிரியுடன் கலக்கும் சிற்றாறு; river Ānporunai near Karur. 2.வஞ்சி மாநகரத்திற்கருகில் ஓடும் ஆறு –(ஆனி, வானி, ஆன் பொருந்தம், தண் பொருநை எனப் பிற பெயர்களாலும் சுட்டப் படுவது.); river near vañji

[ஒருகா. ஆல் → ஆன் → ஆனுதல் = நிறைந்து விரிந்து செல்லுதல். பொருநை = கரைபொருது செல்வது. ஆன் பொருநை → ஆன் பொருந்தம் = வெள்ளம் நிறைந்து விரிந்து கரைபொருது செல்லும் ஆறு. இனி, கான் பொருநை → ஆன் பொருநை என்றுமாம்.]

ஆன் பொருநை என்னும் பெயர் தமிழகத்துப் பல ஆறுகளுக்கும் பெயராக இருத்தலின் ஆற்றைக் குறிக்கும் பொதுப் பெயராகவே இதனைக் கொளத்தகும்.

ஆன்மா ānmā, பெ. (n.) ஆனாகிய மா, (பசு.); soul. ஒ.நோ. அரிமா, கரிமா. முதன் முதலாய் மாந்தனால் வளர்க்கப்பட்ட விலங்கு ஆன்மா.

[ஆ → ஆன் + மா – ஆன்மா (ஒ.மொ.253)]

முதற்காலத்தில், இருதிணையுயிர்களும் ஒன்றாகவே கருதப்பட்டன, என்பது, மாக்கள் என்னும் பன்மைப் பெயர் இருதிணைக்கும், கணவன் அலவன் என்னும் ஆண் பாற் பெயர்கள் அஃறிணைக்கும் வழங்குவதாலும், தொல்காப் பியத்திற் கூறும் விரவுப் பெயராலும் பிறவற்றாலும் அறியப்படும்.

'ஆன்மா' என்னும் பெயர் பிற்காலத்தில் இருதிணையுயிர்களையும் குறித்தற்குரிய பொதுச்சொல்லாகக் கொள்ளப் பட்டது. 'மா' என்னும் பெயர் (பசு) (மாடு) உயிர் என்று இருபொருள் தருவது போன்று ஆன்மா என்னும் பெயரும் தரும்.

ஆன்மாவைப் பசு என்று மொழிபெயர்த்துச் சிவனைப் பசுபதியென்றனர் வடநூலார். ஆரியர் இந்தியாவிற்கு வரு முன்னமே ஆன்மா என்னுஞ் சொல் தமிழர்க்கிருந்தது.

L. animos, soul. ஆன்மா என்னும் வடிவமே பண்டைத் தமிழ் நூல்களில் வழங்கப்பட்டிருப்பதாலும், அது animos என்னும் இலத்தீன் வடிவத்தை ஒத்திருப்பதாலும் அச்சொல் ஆரிய மொழியிற் பிற்காலத்து வந்ததென்று மாக்சுமுல்லர் கூறுவதாலும் ஆன்மா, பசு என்னும் சொற்கள் ஒரு பொருள வாய் இருத்தலாலும், ஆரியர் வருமுன்பே சைவம் இந்தியாவில் இருந்ததினாலும் பிறவற்றினாலும் "ஆன்மா" என்பது தமிழ்ச் சொல்லேயென்பது துணியப்படும். (ஒ.மொ. 253).

ஆன்மெழுகு ānmelugu, பெ. (n.) ஆனிரைகளின் சாணம்; cowdung (தைலவ.தைல.)

[ஆன் + மெழுகு. தரை மெழுகப் பயன்படும் சாணம் மெழுகு எனப்பட்டது.]

ஆன்வல்லவர் ānvallavar, பெ. (n.) ஆனிரைகளை மேய்க்கும் முல்லை நில மக்கள்; inhabitants of forest pasture tracts, cowherds. (சூடா.).

[ஆன் + வல்லவர். வல்லவர் = செய்தொழில் திறன் பெற்றோர்.]

ஆன் வல்லோர் ān vallōr, பெ. (n.) **ஆன் வல்லவர்** பார்க்க; see ānvallavar.-

[ஆன் + (வல்லவர்) → வல்லோர்.]

ஆன்ற[1] ānra, பெ.எ. (adj.) 1. பண்புகளால் நிறைந்த, ஒள்ளிய, மாண்புற்ற; excellent, grand, splendid. "ஆன்ற தவச் செந்நெறி" (பெரியபு.திருநாவு.41). 2. அடங்கிய; having grown calm, owing to deep learning. "ஆன்ற பெரியா ரகத்து" (குறள்.694).

ம. ஆன்ற.

[ஆல் →ஆன்ற. ஆலுதல் = நிறைதல். ஆன்ற = நற்பண்புகளால் நிறைந்திருத்தல், நிறைந்து நிலை கொள்ளுதல், அடங்கியிருத்தல்.]

ஆன்ற[2] ānra, பெ.எ. (adj.) 1. அகன்ற; wide. "தூய தென்புனலா யான்ற தொல்கடல்" (கந்தபு.மூன்றா, 167). 2. இல்லாமற்போன, மறைந்துபோன; having ceased to exist. "அருவியான்ற வணியின் மாமலை" (மதுரைக்.306)

[அகல் →அகன்ற → ஆன்ற. முதனீண்டு இடைக் குறைந்த திரிபு. அகலுதல் = நீங்குதல், பரவுதல், விட்டுப் போதல், இல்லாமற் போதல்.]

ஆன்றல்[1] ānral, பெ. (n.) 1. அகலம் (திவா.); extension, width, breadth. 2. நீங்குதல், vanishing.

[அகல் →அகல்தல் →அகன்றல் →ஆன்றல்]

ஆன்றல்[2] ānral, பெ. (n.) 1. மாட்சிமை (தி.வா.); greatness, dignity 2. மிகுதி (திவா.); abundance, copiousness.

[ஆனுதல் = நிறைதல், மிகுதல். ஆல்தல் = ஆன்றல்.]

ஆன்றவர் ānravar, பெ. (n.) 1. அறிஞர், அறிவிற் சிறந்தோர்; erudite scholars, nobel men wise persons. "ஆன்றவர் அடக்கம் கற்றுத்துறை போய சான்றோர்;" (கலித். 32) (மணி. 2,34). 2. தேவர் (பரிபா. 19,3); gods, heavenly beings.

ஆன்றார் ānrār, பெ.(n.) **ஆன்றவர்** பார்க்க (குறள். 413); see an ravar.

[ஆன்றவர் → ஆன்றார்]

ஆன்று ānru, வி.எ. (vbl. ppl.) 1. நிறைந்து; filled, having been full. "பாடான்றவிந்த பனிக்கடல்" (மதுரைக். 629). 2. விரிந்து; stretched out, extended. "ஓசனை யளவை யான்று" (கந்தபு. நகரழி.1). 3. நீங்கி;be removed. "ஒலி யான்று "(கலித். 121).

[அகன்று → ஆன்று.]

ஆன்றோர் ānrōr, பெ. (n.) **ஆன்றவர்** பார்க்க; see **anravar.**

[ஆன்றவர் → ஆன்றோர்.]

ஆன்றோள் ānrōl, பெ. (n.) நற்பண்புகளால் நிறைந்த பெருமகள், மாண்புடையவள்; lady of exalted character. "ஆன்றோள் கணவ" (பதிற்றுப். 55).

[ஆலுதல் = நிறைதல். ஆல் → ஆன்றோள்.]

ஆன āna, சு.பெ.எ. (dem.adj.) அந்த; that. "ஆன காலை யரிய னாடொணா" (கந்தபு. தெய்வ. 213).

[அ → ஆ → ஆன. அங்கண் → அங்ஙனே → ஆன என்றுமாம்.]

ஆனகதுந்துபி ānagatundubi, பெ. (n.) 1. போர்ப்பறை; war-drum. 2. கண்ணனின் தந்தைக்குரிய பெயர்களுள் ஒன்று; ஆனக துந்துபி முழங்க அவருடைய பிறந்தநாள் கொண்டாடப்பட்ட மையால் பெற்ற சிறப்புப் பெயர் (பாரத.திரௌ.58); Vasudeva, Krishna's father, whose birth was celebrated amongst celestials by the beating of drums. **ஆனகம்** பார்க்க; see ānagam.

[ஆனகம் + துந்துபி.]

ஆனகம் ānagam, பெ. (n.) 1. ஒருகண் பெருமுரசு, போர் முரசு; drum with one side, "ஆனகம் பல முழங்க" (பாரத. சூது.56.) 2. துந்துபி, படகம் (பிங்.); kettle drum. 3. மேக முழக்கம்; din of the clouds.

[ஆல் → ஆன் → ஆனகம். ஆலுதல் = ஒலித்தல்.]

ஆனஞ்சு ānañju, பெ. (n.) **ஆனைந்து** பார்க்க; see **ānaindu.** "இகவா னஞ்சு மாடி "(கம்பரந். 25)

[ஆன் + ஐந்து – ஆனைந்து → ஆனஞ்சு.]

ஆனத்துமீன் ānattumīn, பெ. (n.) 1. குழம்பு செய்வதற்குரிய மீன்; fish meant for cooking. 2. தூண்டிலில் பிடிபட்ட பெரிய மீன்; large fish caught in the net. (முகவை. மீனவ.)

[ஆணம் + அத்து + மீன் . = ஆணத்து மீன் → ஆனத்து மீன் (கொ.வ.]

ஆணம் பார்க்க; see **ānam**

ஆனதும்பி ānatumbi, பெ. (n.) கடல் மீன் வகை; pinkish marine fish, Dactyleperus erientalis.

ஆனந்தக்கண்ணீர் ānanta-k-kaṇṇīr, பெ. (n.) மகிழ்ச்சிப் பெருக்கின் அடையாளமாய் வெளிப் படும் கண்ணீர்; tears of joy. (செ.அக..)"உலப்பிலா வானந்தக் கண்ணீர் தருவரால்" (திருவாச.17,2).

[ஆனந்தம் + கண்ணீர் = மகிழ்ச்சிப் பெருக்கால் கடைக்கண் விளிம்பில் சிலிர்க்கும் கண்ணீர்த்துளி ஆனந்தக் கண்ணீர் என்பர். ஆனந்தம்-வடதமிழ்ச் சொல்.]

ஆனந்தம் பார்க்க see **ānandam**

ஆனந்தக்கரப்பான் ānanda-k-karappān,பெ. (n.) தின வெடுப்பதும் சொறிந்த பின் எரிச்சல் தருவது மாகிய ஒருவகைக் கரப்பான் நோய்; eruption which causes an agreeable sensations when it is scratched but a burning sensation soon after. (செ.அக.)

[ஆனந்தம் + கரப்பான். ஆனந்தநோயால் விளையும் கரப்பானாக இருக்கலாம்.]

ஆனந்தக்களிப்பு ānanda-k-kaḷippu, பெ. (n.) 1. கழி பேருவகை, பெருமகிழ்ச்சி; ecstatic joy. (திருவாச.8, திருவம்மானைக் கருத்து). 2. மகிழ்ச்சிப் பெருக் கால் பாடும் இசைப்பாடல்; poem expressive of ecstatic delight. (தாயு.) (செ.அக.) 3. சிவஞான முனிவர் இயற்றிய நூல் (திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு); literary work by Sivagnana munivar.

[ஆனந்தம் + களிப்பு (ஒருபொருட் பன்மொழி) களிப்பு மிகுவிக்கும் தாளத்தொடும் பொருந்திய பாடல் வகையாதலின் ஆனந்தக் களிப்பு எனப்பட்டது.]

ஆனந்தகரம் ānandakaram, பெ.(n). மகிழ்ச்சி தரக்கூடியது; that which delights or exhilarates. "பாடுவது ஆனந்த கரம்". (பிராம.வ.) (செ.அக.).

[ஆனந்தம் +கரம். கருத்தல் = செய்தல். கருத்தல் என்னும் செந்தமிழ்ச்சொல் வடபுலத்தில் மட்டும் வினைச்சொற் பொருளில் ஆளப்பெற்று தென்ன கத்தில் நாளடைவில் வினைச்சொல்லாக ஆளப்பெறா மையின் வடதமிழ்ச் சொல்லாயிற்று. வடபுலத்தி லிருந்து தென் பால் குடியேறிய மக்கள் இச்சொல் லாட்சிகளைத் தொடர்ந்து ஆள நேர்ந்தது. மகிழ்ச் சிகரம் என்னும் சொல்லாட்சியை ஒப்பு நோக்குக. மகிழச் செய்வது மகிழ்த்தி → மகிழ்ச்சி எனத் திரிந்திருத் தலான் மகிழ்ச்சிகரம் என்னும் சொற்கூட்டு முற்றிலும் வேண்டாதது. இதுபோன்றே ஆனந்தகரமும் தமிழுக்கு வேண்டாத சொற்கூட்டு என்க.]

ஆனந்தகானம் ānandakānam,பெ.(n.) வீடு பேற ளிக்கும் என நம்பப்படும் காசி மாநகர்; Benares, as the place for attaining celestial bliss. (செ.அக.). "ஆனந்த கானந் தொடுத்திங்குளவான சைவத் தானம் பலவும்" (திருவிளை.கல்லானை.8).

[ஆனந்தம் + கானம். கானம் = சோலை, ஊர்.]

ஆனந்தகுறுவை ānandakuṟuvai, பெ. (n.) ஒருவகை நெல்; a kind of paddy. (செ.அக.).

ஆனந்தத்தாண்டவம் ānanda-t-tāṇdavam, பெ. (n.) தில்லைக்கூத்தனின் நாட்டிய வகைகளுள் ஒன்று; (கோயிற். பதஞ்..1, உரை); ecstatic dance of Śiva, as exhibited in the shrine at Chidambaram.

([ஆனந்தம் + தாண்டவம்.]

ஆனந்த தீர்த்தர் ānanda tīrttar, பெ. (n.) வேதாந்தக் கொண்முடிபுகளில் துவைதம் என்னும் இருமைக் கோட் பாட்டினை வகுத்தருளிய மாத்து வாச் சாரியார்; Mādhvācharyā, exponent of the Dvaita school of Vēdantic Philosophy. (செ.அக.).

[ஆனந்தம் + தீர்த்தர்.]

ஆனந்தப்பையுள் ānanda-p-paiyuḷ, பெ. (n.) 1. கணவன் இறந்ததால் மனைவி மெலிந்து வருந்து வதைக் கூறும் புறத்துறை (பு.வெ. 10,13); theme expressing emaciation and lament of a wife on her husband's bereavement. 2. பிரிவால் வருந்தும் தலைவன் தலைவியர் துயரமிகு தியைப் பாட்டுடைத் தலைவனின் நாட்டுடனும் ஊருடனும் சாத்திச் சொல்வதாகிய நூற்குற்றம். (யாப். வி. 96, பக். 523); fault in poetical composition, in which a patron's city or country is associated with the place where the lover became separated from his mistress. (செ.அக.). (யாப். வி. 96, பக்.523)

[ஆனந்தம் + பையுள். (ஒரு பொருட்பன்மொழி) பையுள் = துயரம். ஆனந்தம் = கேடு, அழிவு, துன்பம்.

ஆனந்தம் [2] *பார்க்க; see ānandam[2].]*

ஆனந்தக்களிப்பு என்றாற்போல் ஆனந்தப் பையுள் ஒரு பொருட்பன்மொழியாய் ஒருபொருளின் மேல் இருசொல்லடுக்கி வந்தது. நந்துதல் என்னும் சொல் செழித்தல் கெடுதல் என்னும் முரண்படு பொருள் தருவது போன்றே ஆனந்தம் என்பதும் முரண்படு பொருள் தந்தது. ஆல் + நந்தம் – செழிப்புடன் நிறைந்தது, கேடு அல்லது அழிவுடன் சார்ந்தது. (தீமை நிறைந்தது) என முரண்பொருள் தந்து நின்றது.

ஆனந்தபயிரவி ā̱nanda payiravi, பெ. (n.) பண்வகைகளுள் ஒன்று; specific musical mode.

[ஆனந்தம் + பயிரவி

பயிர்தல் = அழைத்தல், விளித்தல், வேண்டுகோள் விடுத்தல் இப்பொருள்களில் பாடப்படும் பண் வகை.]

ஆனந்த பைரவம் ā̱nanda pairavam, பெ. (n.) மருத்துவச் சூரணம், சிந்தூர வகை ; medicated mineral powder. (செ.அக.) ஆனந்த பைரவம் வருதிரிதோசம் போகும். (பதார்த்த.1209).

[ஆனந்தம் + பைரவம்.]

ஆனந்த பைரவி ā̱nanda pairavi, பெ. (n.) பண் வகைகளுள் ஒன்று; specific musical mode. (செ.அக.).

[ஆனந்தம்+பைரவி, ***ஆனந்த பயிரவி*** *பார்க்க; see ā̱nnanda payiravi.]*

ஆனந்தம் [1] ā̱nadam, பெ. (n.) 1. பெருமகிழ்ச்சி, பேரின்பம்; felicity, rapturous joy, bliss. "ஆனந்தம்மே யாறா வருளியும்" (திருவாச.2, 106); 2. மிகுதி , பெருக்கம்; excess, abundance.

ம. ஆனந்தம்; **தெ., க.** ஆனந்த; **பாலி.** ஆனந்த

[ஆல்+ நந்து + அம் = ஆனந்தம், அம் சொல்லாக்க ஈறு. ஆலுதல் = நிறைதல், பொருந்துதல், பெருகுதல், நல் → நன்று → நந்து = பெருகுதல், செழித்தல். நன்று பெரிதாகும். (தொல்.) நந்துதல் = செழித்தல். மகிழ்தல். "தீங்கனி மரம் நந்த" (கலித்.).]

நந்து, நந்தி, நந்தன், நந்தனார் என்னும் பெயர்களை ஒப்பு நோக்குக. ஆல் + நந்து – ஆநந்து. இடையில் லகர மெய்த் தொக்கது. நந்துதல் என்னும் செந்தமிழ்ச் சொல் வழக்கு வட தமிழில் பல்கி தென் தமிழில் சில்கியதால் வடசொல் போன்ற பொய்த் தோற்றம் தருகிறது. ஆதலின், ஆனந்தம் செவ்விய தமிழ் வழக்கே என்க.

ஆல் என்பதனடியாகப் பிறந்த ஆருர் (பெரிய ஊர் . ஆர் + ஊர்) ஆரோசை (ஏற்றிப்பாடும் இசை, அமரோசை என்பதன் எதிர்ச்சொல்) ஆகிய சொல்லாட்சிகளை ஆல் + நந்தம் என்னும் வழக்குடன் ஒப்புநோக்குக.

இனி வடமொழியாளர் ā+nanda எனச் சொற் கூட்டுவது பொருத்தமன்று. வடமொழியில் 'ஆ' என்னும் முன்னொட்டு எல்லைப் பொருளிலும் வெற்றசையாகவும், எதிர்மறைகுறித்தும்நிற்பதன்றிப்பெருக்கப்பொருளிலும்நிறைதற் பொருளிலும் வருதலின்றாம். **ஆ** பார்க்க; see ā; **நந்துதல்** பார்க்க; see **nandu.**

ஆனந்தம் [2] ā̱nandam, பெ. (n.) 1. சாவு, அழிவு (தொல். பொருள்.79, உரை); death, decay,. (தொல்.பொருள். 79, உரை). 2. பாடல்களில் காணப்படும் அறுவகைக் குற்றம், யாப்பு வழு; six kinds of fault or blemishes in poetry. (இலக். வி. 887).

[ஆல் + நந்து + அம். அம்– சொல்லாக்க ஈறு. ஆலுதல் = நிறைதல், சேர்தல், நது → நந்து (கெடுதல்) நதுத்தல் = அழிதல். நதுத்தல் = நைதல். பிரமாதம் என்னும் வடசொல் சிறப்பு, அருமை என்றும், தீங்கு, கேடு என்றும், எதிர்மறைப் பொருளிலும் ஆளப் படுதலை இதனுடன் ஒப்புநோக்குக.]

பாடலில் நேரும் குற்றங்களை எழுத்தானந்தம், சொல் லானந்தம், பொருளானந்தம், யாப்பானந்தம், தூக்கானந்தம், தொடையானந்தம் என அறுவகைப்படுத்துவர்.

ஆல் + நந்து + ஆம் –ஆனந்தம் என்னும் சொற் புணர்வில் ஆல் முன்னொட்டாக நின்றது. இப்பொருள் அ∴றிணை (அல் + திணை) என்பனவற்றில் இல், அல் முன்னொட்டாக நின்று எதிர்மறைப் பொருள் உணர்த்தியவாறு 'அல்' (அல் → ஆல்) முன்னொட்டு லகர மெய் கெட்டு ஆ– ரோக்ய (நோயில்லாத, ரோகமில்லாத) ஆரோக்கியம் என எதிர்மறைப் பொருள் தருவது வடமொழி வழக்கு. ஆலுதல் = தடுத்தல், நிறுத்துதல், இல்லாமற் செய்தல் பொருளில் தமிழில் வழங்க வில்லை. இம்முன்னொட்டு வடமொழியில் வழங்கும் தமிழ்ச் சொல்லாகும்.

ஆனந்தம்[3] ā̱nandam, பெ. (n.) **அரத்தை** பார்க்க; see **arattai** (மூ.அ.).

ஆனந்தமயம் ā̱nan̠da mayam, பெ. (n.) 1. இன்பம் நிறைந்தது; that which is full of bliss, replete with happiness. "ஆனந்தமயமான வாதியை" (தாயு. திருவருள்வி.3) 2. ஐங்கோசத்துள் (பஞ்சகோசம்) ஒன்று (ஆனந்தமய கோசம்); inner most sheath of the soul. (சி.சி.பர.மாயாடு). "போ-ற்று மானந்த மயமல்லாது" (த.நி.போ.பக்.284, பா. 264).

[ஆனந்தம் + மயம். மய்யம் → மயம்]

ஆனந்தமூலி ā̱nan̠ada mūli, பெ. (n.) கஞ்சாங்குல்லை, மயக்கமூட்டும் கஞ்சா என்னும் பயிர்; hemp, for it produces joy by intoxication. (சங்.அக.).



ஆனந்த மூலி – கஞ்சாங்குல்லை

[ஆனந்தம் + மூலி.மூலி → மூலிகை. மகிழ்ச்சி வெறி கொள்ளச் செய்வதால் ஆனந்தமூலி எனப்பட்டது.]

ஆனந்தவயிரவம் ānandavayiravam, பெ. (n.) மருத்து வப் பொடி (சூரணம்) சிந்தூ ரவகை; medicated mineral powder, **plumbi orcidumrubram** (செ. அக.).

[ஆனந்தம் + வயிரவம். ஆனந்தம் = மிகுதி, வயிரவம் = ஆற்றல் மிக்கது]

ஆனந்தவருவி ānandavaruvi, பெ. (n.) ஆனந்தக் கண்ணீர்ப் பெருக்கு. (செ.அக.); tears of joy.

[ஆனந்தம் + அருவி.]

ஆனந்தவல்லி ānandavalli, பெ. (n.) கோழித்தலைக் கந்தகம் (மூ.அ.); prepared arsenic..

[ஆனந்தம் + வல்லி.]

ஆனந்த வுவமை ānandavu vamai, பெ. (n.) மிக இழிந்த பொருளுடன் ஒப்பிடுவதனாலாகிய உவமைக் குற்றம் (புறநா. 60. உரை).; fault of comparing great things with petty ones.

*[ஆனந்தம்+உவமை. ஆனந்தம்=கெடுதி,குற்றம். **ஆனந்தம்**[2] பார்க்க; see ānandam[2]]*

ஆனந்தன் ānandan, பெ. (n.) பேரின்பத்தின் உறைவிட மான சிவபெருமான்; Śiva, Himself being the Supreme; Bliss. "அத்தன் ஆனந்தன்" (திருவாச. 17.5). 2. அருகன்; Arhat. (சூடா.).

*[ஆல் + நந்து + அன்.–ஆனந்தன். **ஆனந்தம்**[1] பார்க்க; See **ānandam**[1].]*

ஆனந்தி–த்தல் ānandi–, 4 செ.குன்றாவி. (v.t.) மகிழ்தல்; to feel joyful, to be glad (வின்).

[ஆல் + நந்து → ஆனந்து, ஆனந்தி.]

ஆனந்தை[1] ānandai, பெ. (n.) 1. பேரின்பத்தின் வடிவான உமாதேவி; Goddess Parvati as Supreme Bliss. 2. குறிஞ்சி யாழ்த் திறத்தின் ஒன்று; secondary melody – type of Kurinji' class. (பிங்.). 3. கொட்டைக் கரந்தை; Indian globe–thistle. "அதிற் பெய்நெய் யானந்தை யிரதம்" (தைலவ. தைல.39).

[ஆல் + நந்தம் – ஆனந்தம் → ஆனந்தை.]

ஆனந்தம்[1] பார்க்க; See ānandam[1]

ஆனம்[1] ānam, இடை. (part.) எழுத்துச் சாரியை; term used to designate some letters of the Tamil alphabet for facility of pronunciation. (தொல். சொல். 296 உரை).

[அனம் → ஆனம்.]

ஆனம் [2] ānam, பெ. (n.) கள், மதுவகை; toddy, any intoxicating liquor. (W.).

[ஆல் + அம் – ஆலம் → ஆனம். ஆல் = நீர், நீராளமாக இருப்பது. ஒருகா. பானம் → ஆனம்.]

ஆனம் [3] ānam, பெ. (n.) 1. தெப்பம்; float, raft. 2. மரக்கலம் (திவா.); ship, vessel, boat.

[யா – பரத்தல், செல்லுதல். யானம் → ஆனம். இயவு = பாதை, செல்லுதல். இயவு → யா, இது ஏ, ஏகு எனவும் திரியும்.]

ஆனம் [4] ānam பெ. (n.) பருமை, பெரியது; loftiness, that which is big.

[அகல் → ஆல் → ஆலம் → ஆனம்.]

ஆனமானத்திரி ānamāna-t-tiri, பெ. (n.) 1. சிறுவர் விளை யாட்டுவகை; a kind of children's play. 2. முறுக்கப்பட்ட சிறு துணியினாலாய திரி; tightly twined cloth wick.

[ஆனமானம் = பெரியது. ஆனமானத்திரி = துணியை முறுக்கிப் பருமனான கயிறுபோல் செய்து விளையாடும் விளையாட்டு.]

ஆனமானமாய் ānamānamāy, பெ. எ. (adj.) சிறப்பாக, பெருமளவுக்கு, நன்றாக; properly, in a proper manner. காரியத்தை ஆனமானமாய்ச் செய்ய வில்லை (இ.வ.) (செ.அக.).

*[ஆன + மானம் + ஆய். **ஆனம்**[4] → ஆன = பெருமளவுக்கு; மானமாய்=பெருமைப்படும் வகையில்.]*

ஆனமானவன் ānamānavan, பெ. (n.) சிறந்தவன்; worthy, respectable person (W.).

[ஆனமானம் + அன்.]

ஆனமை ānamai, பெ. (n.) ஆனதன்மை; condition or state of having become. "ஆனமையான் மேலான" (சி.சி.8.23.). (த.சொ.அக.).

[ஆகு → ஆகிய → ஆகியமை → ஆகினமை → ஆயினமை → ஆனமை = தொகுத்தல் திரிபு.]

ஆனவன் ānavan, பெ. (n.) 1. எழுவாய் வேற்றுமை ஆண்பாற் சொல்லுருபு; expletive ending of a masc. sing. noun. "தந்தையானவன் முனனரெய்தி" (கந்தபு. மார். 8). 2. நண்பன்; friend. உனக்கு ஆனவன் ஆகாதவன் கிடையாதா? (உ.வ.).

ம. ஆனவன்.

[ஆகியவன் → ஆயினவன் → ஆனவன்.]

ஆனவாசி ānavāsi, வி.எ. (adv.) ஆனதினால்; since, for that reason. அவன் புத்திமானானவாசி உன் சூதைக் கண்டுகொண்டான் (இ.வ.).

[ஆகிய → ஆயின → ஆன. வாய்ப்பு → வாய்ச்சி → வாசி (கொ.வ.).]

ஆனவாள் āṉavāḷ, பெ. (n.) தக்கார்; manager (of a temple) (S.I.I. iv, 88..).

ம. ஆனவாள்; தெ. ஆனவாளு.

[ஆ → ஆனம் = பெரியது, பெருமை. ஆனம் + ஆள்.]

ஆனன் āṉaṉ, பெ. (n.) ஆனேற்றை ஊர்தியாகக் கொண்ட சிவபெருமான்; Śiva, the rider on the bull. (தேவா. 1029, 2).

[ஆன் + அன். ஆன் = ஆனேறு, காளை.]

ஆனா[1] āṉā, பெ. எ. (adj.) 1. நீங்காத; unceasing. ஆனாத்துயரம்.

[அகலாத → ஆலாத → ஆனாத → ஆனா.]

ஆனா[2] āṉā, பெ. எ. (adj.) 1. அடங்காத; boundless; "நம்பற்பாலானாப் பேரன்புமிக" (பெரியபு. தடுத்தாட். 115). 2. கெடாத; imperishable. "ஆனா அமுதே" (கந்தரனு. 25).

ம. ஆனா.

[ஆனுதல் = பொருந்துதல், நிற்றல், அடங்குதல், தடுத்தல், கெடுத்தல், ஆல் + ஆ - ஆலா → ஆனா.]

ஆனாமை[1] āṉāmai, பெ. (n.) 1. நீங்காமை; not ceasing. "ஆனாமை யாயகில நிகிலபேதம் அனைத்தினுள்ளும் தானாகி" (தாயு. பன்மாலை.5). 2. கெடாமை; not decaying or perishing, perpetual.

[அகலாமை → ஆலாமை → ஆனாமை.]

ஆனாமை[2] āṉāmai பெ. (n.) கடைக்குளம் (உத்திராடம்); 21st naksatra (W)

ஆனாய நாயனார் āṉāya nāyaṉār, பெ. (n.) அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்; canonised Saiva Saint. (பெரியபு.)

[ஆன் + ஆயன் - ஆனாயன் + நாயன் + ஆர்.]

ஆனாயன் āṉāyaṉ, பெ. (n.) மாடு மேய்க்கும் இடையன்; ஆயன்; man of the cow-herd caste. "ஆனாயனா னானை" (திவ். பெரியதி. 5,6,3).

ம. ஆனாயன்

[ஆன் + ஆயன்.]

ஆனால் āṉāl, இடை. (conj.) 1. முதலில் சொன்ன பொருளுக்கு மாற்றாக வேறொரு பொருள் பின்வரும் என்பதனைக் காட்டும் இடைச்சொல், ஆயின்; but. 2. ஆகையால்; because. "அருளலா தணுவுமசைந்திடாதானால்" (அருட்பா. அருட் பெருஞ். ஆடி 976).

[ஆகின் → ஆயின் → ஆயினால் → ஆனால்.]

ஆனாலும் āṉālum, இடை. (conj.) ஆயினும் (தாயு. சுக வாரி. 5.); however, although, notwithstanding the fact that.

[ஆகின் → ஆயின் → ஆயினாலும் → ஆனாலும்.]

ஆனி[1] āṉi, பெ. (n.) கரூர்க்கு அருகிலுள்ள ஆன் பொருநை என்னும் ஆறு. (பிங்.); river near Karur.

[ஆன்பொருநை → ஆனி (மரூஉ மொழி).]

ஆனி[2] āṉi, பெ. (n.) 1. தமிழ் ஆண்டுமாதத்தின்படி மூன்றாம் மாதமாகக் கருதப்படும் ஆடவை மாதம்; third month of the Tamil calendar (June–July). 2. மூல நாண்மீன் (திவா.); 19th naksatra.

ம. ஆனி

[ஆனி = விளைச்சல் ஓராண்டில் முடிந்த ஒரு சுற்றினைக் குறிக்கும் சொல். ஆனுதல் = சுற்றுதல். ஆல் - ஆனி (ஒரு சுற்று) ஆடவை பார்க்க; See ādavai.]

ஆனி[3] āṉi, பெ. (n.) தீங்கு, கேடு; harm, injury; destruction, ruin. (செ.அக.). "நின் பிள்ளை மேனிக் கானி வந்திலது" (கம்பரா. இரணிய. 84).

Skt. hāni.

[அல் - ஆல் - ஆலி - ஆனி]

ஆடவைக்கருந்தலை பார்க்க; see ādavai-k-karundalai.

ஆனிக்காலாவதி āṉi-k-kālāvadi, பெ. (n). ஆடவை (ஆனி) மாதத்தோடு முடிவடையும் கோடைப் பருவ அறுவடைக் காலம்; harvest season which extends to the end of **Ani**.

[ஆனி + காலம் + அவதி.]

ஆனித்தூக்கம் āṉi-t-tūkkam, பெ. (n.) ஆடவை (ஆனி) மாதத்தில் கடலில் காணப்படும் அமைதி (யாழ்ப்.); calm prevailing on the sea in the month of **Ani**.

[ஆனி + தூக்கம். தூக்கம் = செயற்பாடற்ற அமைதியான தோற்றம்.]

ஆனியம் [1] āniyam, பெ. (n.) விடியலிலிருந்து மறுநாள் விடியல் வரை கணக்கிடப்படும் ஒரு நாள் (பிங்.); solar day from sunrise to sunrise. 2. அந்திப் பொழுதிலிருந்து மறுநாள் அந்திப்பொழுது வரை கணக்கிடப்படும் ஒரு நாள்; lunar day (செ.அக.). "பயன் கெழு வெள்ளி ஆனியநிற்ப" (பதிற்றுப்: 69, 14).

ஆலுதல் = சுற்றுதல். ஒ.நோ. ஆலவட்டம்.

[ஆலு → ஆலி → ஆனி. (ஒரு நாளின் சுற்று).]

ஆனியம் [2] āniyam, பெ. (n.) பருவம் (சூடா.); season. (செ.அக.).

[ஆல் → ஆலு → ஆலி → ஆனி → ஆனியம் – ஓராண்டில் சுழன்று வரும் பருவம்.]

ஆனியம் [3] āniyam, பெ. (n.) ஆநியம் பார்க்க; see āniyam.

ம. ஆனியம்.

[ஆனி = நாள். ஆனியம் = நாட்படி]

ஆனிரை ānirai, பெ. (n.) ஆக்களின் மந்தை; herd of cows. "ஆனிரை மேய்க்கநீ போதி" (திவ். பெரியாழ். 2,7,1.).

[ஆன்+நிரை=ஆனிரை. நிரை=கூட்டம், மந்தை.]

ஆனிலை ānilai, பெ. (n.). 1. ஆக்களைக்கட்டி வைக்கும் அல்லது அடைத்து வைக்கும் கொட்டில்; cow-shed, cow stall. "ஆனிலை .... உமிழ் வோடிரு புலனுஞ் சோரார்" (ஆசாரக்.33). 2. கருவூரிலுள்ள சிவன் கோயிலின் பெயர்; name of the Siva shrine at Karur. (தேவா. 929. 6.).

[ஆனிலை = ஆக்களின் தொழுவமாக இருந்த இடத்தில் எழுந்த கோயிலும் அப்பெயர் பெற்றிருக் கலாம்.]

ஆனிலையுலகம் ānilai-y-ulagam, பெ. (n.) **ஆனுலகு** பார்க்க; see **ānulagu**. "மேல தானிலை யுலகத் தானும்" (புறநா.6).

[ஆனிலை + உலகம்.]

ஆனீர் ānīr, பெ. (n.) ஆவின் சிறுநீர், உச்சில் (கோமூத்திரம்); urine of the cow. "ஆனீர் கண்கழு உக் காணப்பட்டான்." (இரகு.யாக. 98).

[ஆ + நீர் = ஆநீர் → ஆனீர்.]

ஆனும் [1] ānum, வி.எ. (adv.) ஆயினும்; also, at least, yet. "ஐந்தை யனைத்தானு மாற்றிய காலத்து." (நாலடி. 329).

[ஆயினும் – ஆனும்]

ஆனும் [2] ānum பெ. (n.) இடை. (conj.) ஆவது; either.... or. "எட்டானும் பத்தானும் இல்லாதார்க்கு" (சீவக. 1549).

[ஆகு → ஆகினும் → ஆயினும் → ஆனும்.]

ஆனுலகு ānulagu, பெ. (n.) கண்ணன் வாழ்வதாகக் கருதப்படுவதும் கோலோகம் என்று குறிக்கப் படுவதுமாகிய மேலுலகப் பகுதி; part of heaven, called **Gologam** identified with Krishna's Heaven. (செ. அக.).

[ஆன் + உலகு.]

ஆனேறு ānēṟu, பெ. (n.) காளை, எருது; bull, male of the cow. "ஆனே றூர்ந்தோன்" (சிலப் .30,141)

[ஆன் + ஏறு. ஏறு = ஆணினம். ஆனேறு = ஆவினத்துள் ஆணினமாகிய காளை.]

ஆனை [1] ānai, பெ. (n.) யானை; elephant. "ஆனையாய்க் கீடமாய்" (திருவாச. 8,14).

ம. ஆன; **க., து.** ஆனெ; **தெ.** ஏனுக. **ஏனை** பார்க்க; see ēnai.

[ஏனை → யானை → ஆனை.]

ஆனை [2] ānai, பெ. எ. (adj.) பெரியது என்னும் பொருளில் ஆளப்படும் பெயரெச்சம்; noun used as adj. in the sense of big, large, tall, great, etc.

[யானை – ஆனை.]

ஆனைக்கண் ānai-k-kaṇ, பெ. (n.) அறப்பழுத்த அல்லது அளிந்து போன பழத்தின் மேல் காணப் படும் முட்டைக் கரும்புள்ளி; round, black-spots apearing on fruits when they are over-ripe or spoiled. (W.) –பலாப்பழம், ஆனைக்கண் பட்டது.

*[ஆனை + கண். **யானைக்கண்** பார்க்க.]*

ஆனைக்கண்ணி ānai-k-kaṇṇi, பெ. (n.) அத்திமரத் தினிளந்தளிர்; tender leaves of Atti. (சா.அக)

[ஆனை + கண்ணி.]

ஆனைக்கரடு ānai-k-karaḍu, பெ. (n.) யானையறுகு படர்ந்த கரட்டு நிலம். (இ.வ.); hard soil occupied by large Bermuda grass.

*[யானை → ஆனை. யானை அறுகம்புல் சுருக்கமாக ஆனை என வழங்கும். ஆனை + கரடு → **யானைக்கரடு**, **யானையறுகு** பார்க்க.]*

ஆனைக்கள்ளி முளையான் āṉai-k-kaḻḻi muḷaiyāṉ, பெ. (n.). இலைகளில்லாத செதும்புப் பூண்டு வகை; leafless fleshy plant.

*[யானை → ஆனை + கள்ளி + முளையான். **ஆனை**² பார்க்க;* See **āṉai**² *கள்ளிபோல் இலைகளற்றது. பூண்டுபோல் முளைத்த அளவில் படர்வது. **யானைக்கள்ளி முளையான்** பார்க்க;]*

ஆனைக்கற்றலை āṉai-k-kaṟṟalai, பெ. (n.) சாம்பல்நிறக் கடல் மீன் வகை; greyish marine fish. Umbrina macroptera. (செ.அக.)



ஆனைக்கற்றலை – மீன்

*[யானை ஆனை + கற்றலை . **ஆனை**² பார்க்க;* see **ānni**²*]*

ஆனைக்கற்றாழை āṉai-k-kaṟṟāḻai, பெ. (n.) அமெரிக்க நாட்டு வகை சார்ந்த நீண்ட கற்றாழை; American aloe (m.sh.) Agave Americana. (செ.அக.).

ஆனைக் கற்றாழை

*[யானை → ஆனை + கற்றாழை. **ஆனை**² பார்க்க.* see **āṉai**²*]*

ஆனைக்கா āṉai-k-kā, பெ. (n.) திருவரங்கத்தின் அண்மையில் உள்ள சிவன் கோயில்; Śiva shrine on the island of Thiruvarangam (Srirangam). திருவானைக்காவல் (தேவா. 1185.2).

*[யானை → ஆனை + கா. **திருவானைக்கா** பார்க்க;* see **Tiruvāṉaikkā**.*]*

ஆனைக்காசு āṉai-k-kāśu, பெ. (n.) யானை இலச்சினை பொறித்த பழங்காலச் செப்புக்காசு; small ancient copper coin bearing the impression of an elephant. (W.).

*[யானை → ஆனை + காசு. **ஆனை**² பார்க்க.* see āṉai²*]*

ஆனைக்காயம் āṉai-k-kāyam, பெ. (n.) **ஆனைப் பெருங்காயம்** பார்க்க; see āṉai-p-peruṅgāyam (W.).

[யானை → ஆனை + பெருங்காயம் – ஆனைப் பெருங்காயம் – ஆனைக்காயம்.]

ஆனைக்காரன் āṉai-k-kāraṉ, பெ. (n.) யானைப்பாகன்; elephant keeper, mahout.

ம. ஆனக்காரன்.

[யானை → ஆனை + காரன் – ஆனைக்காரன்.]

ஆனைக்காரை āṉai-k-kārai, பெ. (n.) ஒதி யமரம்; goom pain (L). **ஒதி** பார்க்க; see Odi.

[யானை → ஆனை + காரை.]

ஆனைக்கால் āṉai–k–kāl, பெ. (n.) 1. யானைக்கால் நோய்; elephantiasis, Cohin leg. 2. வீடுகளின் இறப்பிலும் (இறவாணம்) சுவரிலும் நெட்டு வாக்கில் பதிக்கப்பட்ட மழைநீர் வடிகால் பெருந்தூம்பு; large tube fixed on the walls on roofs for rain water to drain.

ம. ஆனக்கால்; **க.** ஆனெகாலு; **தெ.** ஏனுக காலு ;

து. ஆனெகார்.

*[யானை → ஆனை + கால். 1. யானையின் கால் போன்று கால்வீங்கும் நோய். 2. **ஆனை**² பார்க்க:* see **āṉai**² *யானைக்கால் பார்க்க;* see **yāṉai—k—kāl.**]

ஆனைக்குப்பு āṉai–k–kuppu, பெ. (n.) சதுரங்க விளையாட்டு; chess, as having elephants for rooks. "ஆனைக்குப் பாடுவாரைப் போலே" (ஈடு. 10, 3, 9)

[யானை → ஆனை + குப்பு. ஒருகா. குப்பி → குப்பு. சதுரங்க விளையாட்டில் யானையைக் குறிக்கும் காய்களின் பெயர் விளையாட்டின் பெயராயிற்று.]

ஆனைக்குரு ānai-k-kuru, பெ. (n.) மரவகை; species of cinnamon

ம. ஆனக்குரு

[யானை → ஆனை + குரு. ஆனை² பார்க்க; see ānai².]

ஆனைக்குருகு ānai-k-kurugu, பெ. (n.) அன்றில் (நாமதீப.); anril bird.

[ஆனை + குருகு.]

ஆனைக்குருந்தோட்டி ānai-k-kuruntōṭṭi பெ. (n.) மயிர் மாணிக்க மரம்; twiner with beautiful flowers, country mallow.

[ஆனை + குரு + தோட்டி.]

ஆனைக்குழி ānai-k-kuḻi, பெ. (n.) யானையைப் பிடிக்க அது வரும் இடங்களில் தோண்டி வைக்கும் குழி; 'elephant-pit', a pit for entrapping and capturing wild elephants.

ம. ஆனைக்குழி.

[ஆனை + குழி.]

ஆனைக்குன்றிமணி ānai-k-kunrimaṇi பெ. (n.) மஞ்சாடி; red-wood.



[யானை → ஆனை + குன்றிமணி = ஆனை² பார்க்க; see ānai².]

ஆனைக்கூடம் ānai-k-kūḍam, பெ. (n.) யானை கட்டும் இடம் ; யானைத் தொழுவம் ; elephant stable. 2. யானைத் தொழுவங்களின் மீது இடப்படும் வரி வகை; tax on elephant stable. (SII.ii 115).

ம. ஆனைக்கூடம்.

[யானை → ஆனை + கூடம்.]

ஆனைக்கெளுத்தி ānai-k-keḷutti, பெ. (n.) துதிக்கையால் வளைத்துப் பிடிப்பது போன்று தான் விழுங்க நினைக்கும் இரையைத் தன் உடலால் வளைத்துப் பற்றிக் கொள்வதாகக் கருதப்படும் மீன் வகை (இ.வ.); fish which, it is believed, twins round its prey as an elephant's trunk round a tree, species of macrones. (செ.அக.).

[யானை → ஆனை + கெளுத்தி.]

ஆனைக்கொம்பன் ānai-k-komban, பெ. (n.) 1. வெள்ளிய நீண்ட நென்மணிக் கதிர்களைக் கொண்டதும் கன்னித் (புரட்டாசி) திங்களில் விதைத்து ஆறு திங்களில் அறுவடை செய்யப் படுவதுமாகிய நெல் வகை; species of paddy sown generally in Puraṭṭāci and reaped in six months, and having long, thin, white grains. (G.Tn.D.153). 2. வாழை வகை; a species of plantain.

ம. ஆனைக்கொம்பன்.

[யானை → ஆனை + கொம்பன். ஆனை² பார்க்க; see ānai².]

ஆனைக்கொம்பு ānai-k-kombu, பெ. (n.) யானையின் கொம்பு பார்க்க; elephant tusk.

ஆனைக்கோடன்சுரை ānai-k-kōḍan curai, பெ. (n.) யானையின் துதிக்கை போன்று நீண்டு காணப் படும் பேய்ச் சுரைக்காய்; bitter snake-gourd. bearing fruit resembling an elephants tusk (l.cl.).

[யானை → ஆனை + கோடன் + சுரை. கோடன் = வளைந்த துதிக்கை.]

ஆனைக்கோரை ānai-k-kōrai, பெ. (n.) பெருங் கோரைப் புல் வகை; elephant grass.

[யானை → ஆனை + கோரை. ஆனை² பார்க்க; See ānai².]

ஆனைச்சப்பரம் ānai-c-capparam, பெ. (n.) ஆனை மேல் தவிசு; howdah with canopy.

[ஆனை + சப்பரம்]

ஆனைச்சாத்தன் ānai-c-cāttan, பெ. (n.) கரிக்குருவி; king crow. "கீசுகீசென் றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து" (திவ்.திருப்பா.7).



[யானை – ஆனை + சாத்தன். சாத்தன் = வணிகன். ஆனை² பார்க்க; see ānai².]

[ஆனைச்சாத்தன் = பெரிய வணிகன். கரிக்குருவி வலம் போனால் பெருஞ்செல்வராகலாம் என்னும் பழங்கால நம்பிக்கையால் கரிக்குருவியை ஆனைச் சாத்தன் என்றனர்.]

ஆனைச்சிரங்கு ānai–c–cirangu, பெ. (n.) பெரிதாகக் கொப்பளிக்கும் சிரங்கு வகை; vascular eruption.

[யானை – ஆனை + சிரங்கு. ஆனை² பார்க்க; see ānai².]

ஆனைச்சிலந்தி ānai–c–cilandi, பெ. (n.) ஒருவகை நோய்; a kind of scabies.

ம. ஆனைச்சிலந்தி (ஒருவகை அம்மை நோய்)

[ஆனை + சிலந்தி]

ஆனைச்சீரகம் ānai–c–cīragam, பெ. (n.) பெருஞ்சீரகம்; anise.

[யானை – ஆனை + சீரகம். ஆனை² பார்க்க; see ānai².]

ஆனைச்சுண்டை ānai–c–cundai, பெ. (n.) 1. மலைச் சுண்டைக்காய்; Indian currant tomato. 2. ஒரு வகை சுண்டைக்காய் (L); hairy night shade.

ம. ஆனச்சுண்ட

[யானை → ஆனை + சுண்டை. ஆனை² பார்க்க; see ānai².]

ஆனைச்செவியடி ānai–c–ceviyadi, பெ. (n.) 1. ஆனைச் செவி போன்ற பெரிய காது; elephant's ear, elephants lobes. 2. ஒரு பூண்டு; plant. (சா.அக.).

[ஆனை + செவி + அடி.]

ஆனைச்சேவகன் ānai–c–cēvagan, பெ. (n.) யானை வீரன்; elephant trooper. யானைப் படைத்தலைவன்; commander of an elephant corps. (Insc.)

[ஆனை + சேவகன்.]

ஆனைசேனை ānai cēnai, பெ. (n.) மிகுதி (வின்); great quantity.

[ஆனை + சேனை.]

ஆனைச்சொறி ānai–c–cori, பெ. (n.) பெருஞ்சொறி, சிரங்கு; virulent type of scabies. **ஆனை**² பார்க்க; see ānai².

[ஆனை + சொறி]

ஆனைத்தடிச்சல் ānai–t–tadiccal, பெ. (n.) 1. மெல்லிலை படர்கொடி வகை (L); smooth leaved fish bone climbers. 2. புளி நறவை (மு.அக.); bristly trifoliate vine. 3. புளி அரணைப்பூண்டு; a kind of plant. (சா.அக.).

[ஆனை + தடிச்சல். ஆனை² பார்க்க; see ānai².]

ஆனைத்தடிப்பு ānai–t–tadippu, பெ. (n.) ஒரு பூண்டு வகை; plant (W.).

[ஆனை + தடிப்பு. ஆனை² பார்க்க; see ānai².]

ஆனைத்தாள் ānai–t–tāl, பெ. (n.) மதகு; sluice, "அகவாயிலுள்ளதுக் கெல்லாம் ஆனைத் தாளிறே திருக்கண்கள்" (ஈடு,6,1,7).

[யானை → ஆனை + தாள். யானைக்கால் போன்றவடிகால் மதகு யானைத்தாள் எனப்பட்டது.]

ஆனைத்திசை ānai–t–tisai, பெ. (n.) திசை; பெருந் திசையாகக் கருதப்படும் வடதிசை (சங்.அக); north, as the great quarter (astrol.)

[யானை → ஆனை + திசை. ஆனை² பார்க்க; see ānai².]

ஆனைத்திப்பிலி ānai–t–tippili, பெ. (n.) கொடிவகை; elephant–pepper climber.

[யானை → ஆனை + திப்பிலி. ஆனை² பார்க்க; see ānai²]

ஆனைத்தீ ānai–t–tī, பெ. (n.) எவ்வளவு உண்டாலும் அடங்காப் பசியைத் தூண்டும் யானைத்தீ என்னும் நோய்; disease in which no amount of food appeases the hungar which is abnormal. (மணிமே. பதி. 66).

[யானை → ஆனை + தீ. **ஆனை** ² பார்க்க; see **ānai** 2.]

ஆனைத் தும்பிக்கை ānai–t–tumbikkai, பெ. (n.) 1. யானையின் துதிக்கை; elephant's trunk, proboscis. 2. **ஆனைத்தூம்பு** பார்க்க; see ānai–t–tūmbu.

[யானை → ஆனை + தும்பிக்கை. தூம்பு + கை → தூம்பிக்கை → தும்பிக்கை. தூம்பு = துளையுள்ள நீண்ட குழல்.]

ஆனைத்தும்பை ānai–t–tumbai, பெ. (n.) பெருந் தும்பை; large species of white deadnettle.

[யானை → ஆனை + தும்பை. ஆனை² பார்க்க; see ānai²]

ஆனைத்தூம்பு ānai–t–tūmbu, பெ. (n.) யானையின் தலை வடிவிலமைந்த நீர் விழுங் குழாய்; gargoyle shaped like the head and trunk of an elephant. (செ.அக.).

[யானை → ஆனை + தூம்பு]

ஆனைத்தெல்லு ānai-t-tellu, பெ. (n.) படர் கொடி வகை; climber. Entada Scandens.

[யானை → ஆனை + தெல்லு. ஆனை [2] பார்க்க; See ānai [2].]

ஆனைத்தொழில் ānai-t-tolil, பெ. (n.) செயற்கரிய பெருஞ்செயல்; Herculian labour, mighty task. இவன் "பெரிய ஆனைத் தொழிலைச் செய்யா நிற்க" (ஈடு, 7, 4, 3).

[யானை → ஆனை + தொழில். ஆனை [2] பார்க்க see ānai [2].]

ஆனைத்தோட்டி ānai-tōtti, பெ. (n.) யானைத் துறட்டி (அங்குசம்); elephant-goad.

[யானை → ஆனை + தோட்டி. துறட்டி - தோட்டி.]

ஆனைந்து ānaindu, பெ. (n.) ஆவிடமிருந்து பெற்ற ஐம்பொருள்கள் (பஞ்சகவ்வியம்); five products of the cow. "ஆனைந்து மாடினான்" (தேவா. 720,4).

[ஆன் + ஐந்து. அவை பால், தயிர், நெய், ஆனீர், சாணம் என்பன.]

ஆனைநார் ānai nār, பெ. (n.) மரவகை (L.); elephanty rope tree. Sterculia villosa (l.tr.).

[யானை → ஆனை + நார். ஆனை [2] பார்க்க; see ānai [2] பெருநார் வகையைத் தரும் மரமாயிருக்கலாம்.]

ஆனை நெருஞ்சி ānai neruñji, பெ. (n.) பெருநெருஞ்சில்; small plant, Pedalium murex (S.sh.) (மூ.அக.).

ம. ஆனயிருத்தி.

[யானை → ஆனை + நெருஞ்சில் →நெருஞ்சி. யானை நெருஞ்சில் பார்க்க; see yānai nerunjil.]

ஆனைநேர்வாளம் ānainērvālam, பெ. (n.) கழிச்சலுக் காகப் பயன்படுத்தும் ஓர் வகை நேர்வாளச் செடி; a kind of Indian croton plant used as a purgative.

[ஆனை + நேர்வாளம்.]

ஆனை நொச்சி ānainocci, பெ. (n.) கருநொச்சி; black notchy, willow leaved justicia. (சா.அக.).

[ஆனை + நொச்சி.]

ஆனைப்படுவன் ānai-p-paduvan, பெ. (n.) அக்கி நோய் வகை; a kind of scabies. (W).

[ஆனை + படுவன். ஆனை [2] பார்க்க; see ānai [2].]

ஆனைப்பலா ānai-p-palā, பெ. (n.) மலைக் கொஞ்சில்; wild durian (சா.அக.).



[ஆனை + பலா.]

ஆனைப்பனை ānaippanai, பெ. (n.) கூந்தற்பனை; elephant's palm. (சா.அக.).

[ஆனை + பனை.]

ஆனைப்பார்வை ānai-p-pārvai, பெ. (n.) யானை தன் பகைவனைத் தேடும் கீழ் நோக்கிய கூரிய பார்வை; downward glance, as of an elephant when bent on mischief.

[ஆனை +பார்வை.]

ஆனைப்பிச்சான் ānai-p-piccān, பெ. (n.) ஒருபூண்டு; .plant (W.).

[ஆனை + பிச்சான்.]

ஆனைப்பிடுக்கு ānai-p-pidukku, பெ. (n.) ஒரு வகை அண்ட நோய்; a kind of chronic disease. (சா.அக.).

[ஆனை + பிடுக்கு.]

ஆனைப்பிடுக்கு மரம் ānai-p-pidukku maram, பெ. (n.) ஒருவகை மரம். இதன்காய் பெரியது; a kind of tree. (சா.அக.).

[ஆனை + பிடுக்கு + மரம்.]

ஆனைப்பிரண்டை ānaippirandai, பெ. (n.) ஒருவகைப் பெரும் பிரண்டை; a species of pirandai. (சா.அக.).

[ஆனை + பிரண்டை.]

ஆனைப்புல் a̱nai-p-pul பெ. (n.) 1. **ஆனைக்கோரை** பார்க்க; see a̱nai-k-ko̱rai. 2. சம்பங் கோரை; a kind of grass.



ம. ஆனப்புல்

[ஆனை + புல்.]

ஆனைப்புளி a̱nai-p-puḷi பெ. (n.) பப்பரப்புளி; baobah,



*[ஆனை + புளி. **ஆனை** ² பார்க்க; see a̱nai ².]*

ஆனைப்புளியாரை a̱nai-p-puḷiya̱rai, பெ. (n.) பெரும் புளியாரை; sorrel plant.

[ஆனை + புளியாரை.]

ஆனைப்பெருங்காயம் a̱nai-p-perunga̱yam, பெ. (n.) யானைகளுக்கான பெருங்காயக் கலவை மருந்து; medicinal preparation of asafoetida for elephants. (செ.அக.).

[ஆனை + பெருங்காயம்.]

ஆனைப்பேன் a̱nai-p-pe̱n, பெ. (n.) கத்தரிச் செடியிலுண்டாகும் பூச்சிவகை; plant louse, found on the brinjal plant. (W.).

*[ஆனை + பேன். **ஆனை** ² பார்க்க; see a̱nai ².]*

ஆனைமஞ்சள் a̱nai manjal, பெ. (n.) ஒரு பூண்டு வகை; plant (W.).

*[ஆனை + மஞ்சள். **ஆனை** ² பார்க்க; see a̱nai ².]*

ஆனைமடு a̱naimadu, பெ. (n.) ஆழமான நீர் நிலை; 2. ஊர்ப்பெயர்; place name.

[ஆனை + மடு.]

ஆனைமடை a̱naimadai, பெ. (n.) செய்நஞ்சு (கௌரி பாடாணம்); a kind of arsenic.

[ஆனை + மடை.]

ஆனைமயிர்க்காப்பு a̱naimayir-k-ka̱ppu, பெ. (n.) யானையின் வால் மயிரால் செய்தணியும் காப்பு; bracelets made of the hair of an elephant's tail. (W.)

[ஆனை + மயிர்+ காப்பு.]

ஆனைமல்லி a̱naimalli, பெ. (n.) **ஆனைமல்லிகை** பார்க்க; see a̱naimalligai.

[ஆனை + மல்லி.]

ஆனைமல்லிகை a̱naimalligai, பெ. (n.) பெருமல்லிகை; a big veriety of Jasmine. (சா.அக.).

[ஆனை + மல்லிகை.]

ஆனைமலை a̱nai malai, பெ. (n.) 1. மதுரைக்கு வடக்கில் யானை போன்று தோற்றமளிக்கும் ஒரு வறண்ட நீள்குன்று; a long, bare, elephant shapped rock near Madurai. (தேவா. 858.1). 2. கோவை மாவட்டத்தின் தென்புறத்திலுள்ள தொடர் குன்றுகள்; Anai malais, a range of mountains in Coimbatore district.

ம. ஆனமல

[ஆனை + மலை.]

ஆனைமீக்குவம் a̱nai mi̱kkuvam, பெ. (n.) கருமருது வகை; leathery winged myrobalan.

[யானை → ஆனை + மீக்குவம்.]

ஆனைமீன் a̱nai mi̱n, பெ. (n.) பெருமீன் வகை (சூடா.); huge fish.

*[ஆனை + மீன். **ஆனை** ² பார்க்க; see a̱nai ².]*

ஆனைமுகன் a̱nai mugan, பெ. (n.) 1. பிள்ளையார், Ganesa as the elephant - faced god. "யானை முகன் ஆதியரை யர்ச்சிக்க" (சைவச. பொது. 500). 2. யானைமுக அரக்கன்; Gaja - mukha Asura.

ம. ஆனமுகன்

[யானை → ஆனை + முகன்]

ஆனைமுள் ānaimuḷ, பெ. (n.) ஒருமுட்செடி; plant, Acacia latronum.

ம. ஆனமுள்ளு. (பெரிய முள்ளுள்ள ஒரு காட்டுக் கொடி)

ஆனையச்சு ānai-y-accu, பெ. (n.) யானை இலச்சினை பொறித்த பொற்காசு; gold coin bearing the figure of an elephant (I.M.P. Tp. 117).

ம. ஆனயச்சு

[ஆனை + அச்சு. அச்சு = அச்சடிக்கப் பட்ட காசு.]

ஆனையடி ānai-y-aḍi, பெ. (n.) நெடுகவும் கிடையாகவும் சதுரங்க ஆட்டத்தில் யானைக்காய் செல்லும் நிலை; vertical and horizontal movements, the movements of the elephant or rook in the game of chess.

ம. ஆனச்சுவடி, ஆனையடி.

[ஆனை + அடி. அடி = பாதம், கால்.]

ஆனையடிக்கிழங்கு ānaiyaḍi-k-kiḻaṅgu, பெ. (n.) கருணைக்கிழங்கு; elephant foot yam.

[ஆனை + அடி + கிழங்கு]

ஆனையடிச்சிலந்தி ānaiyaḍi-c-cilandi, பெ. (n.) பெருஞ்சிலந்தி; malignant growth of a cancer of black or deeply pigmanted colour.

[ஆனை + அடி + சிலந்தி]

ஆனையடிச் செங்கல் ānaiyaḍi-c-ceṅgal, பெ. (n.) வட்டமான செங்கல்; a kind of circular bricks used for pillar; தூண் கட்ட ஆனையடிச் செங்கல் வேண்டும். (உ.வ.).

[ஆனை + அடி + செங்கல்]

ஆனையடிப்பச்சிலை ānaiyaḍi-p-paccilai, பெ. (n.) ஆனையடிப்பூண்டு பார்க்க; see ānaiyaḍi-p-pūṇḍu,

ஆனையடியப்பளம் ānai-y-aḍi-y-appaḷam, பெ. (n.) விருந்துகளில் இடப்படும் பெரிய அப்பளம் (இ.வ.); large meal wafer of the size of an elephant's foot (Loc.).

[ஆனை + அடி + அப்பளம்.]

ஆனையர்க்குளா ānai-y-arkkuḷa, பெ. (n.) கடல் மீன் வகை; marine fish (Loc.).

[ஆனை + அறக்குளா – அர்க்குளா. அறக்குளா, மீன்களுள் சற்றுப் பெரிய வகை மீனாய் இருக்கலாம். யானை அறக்குளா பார்க்க; see yāni arakkuḷa]

ஆனையரசாணை ānai araśāṇai, பெ. (n.) மணமேடையில் அரசாணைப் பானைகளுக்கருகில் வைக்கப்படும் யானை குதிரை யாளி போன்ற களிமண் பொம்மைகள் (இ.வ.); clay images of elephant, horse, yali etc., to decorate marriage platform. (Loc.).

[ஆனை + அரசாணை.]

ஆனையறுகு ānai-y-arugu, பெ. (n.) அறுகம்புல்லின் வகை; a species of grass.

[ஆனை + அறுகு. ஆனை² பார்க்க; see ānai²]

ஆனையறையும்புள் ānai-y-araiyum puḷ, பெ. (n.) யானையைக் கொன்று தின்பதாகக் கருதப்படும் ஒரு பெரும் பறவை; fabulous bird, said to be able to devour an elephant. (W.).

மறுவ. ஆனைபிறாஞ்சிப்புள்.

[ஆனை + அறையும் + புள்.]

ஆனையாடு-தல் ānai-y-āḍu-, 5. செ.கு.வி. (v.i.) குழந்தைகள் உடம்பை முன்னும் பின்னுமாக அல்லது பக்கவாட்டில் அசைத்தாடும் விளையாட்டு; to move the body from front to back, from side to side like the elephant, a movement game for the babies.

[ஆனை + ஆடுதல். யானை பக்கவாட்டில் அசைவது போன்ற குழந்தை விளையாட்டு.]

ஆனையாள் ānai-y-āḷ, பெ. (n.) யானை வீரன்; elephant trooper (S.I.I. ii, 221).

[ஆனை + ஆள் யானையாள் பார்க்க; see yānaiyāḷ.]

ஆனைபிறாஞ்சிப்புள் ānai-yrirāñji-p-puḷ, பெ. (n.) ஆனையறையும் புள் பார்க்க; see ānai-y-āraiyum puḷ .

ஆனையுன் குருகு ānai-y-uṉ kurugu, பெ. (n.) ஆனையறையும் புள் பார்க்க; see ānai-y-rayum puḷ. (W.).

ஆனையுரித்தோன் ānai-y-urittōṉ, பெ. (n.) யானைத் தோலுடுத்த சிவன் (தொன்ம.); Śiva, who slayed an elephant and wore its skin (திவா.).

[யானை → ஆனை + உரித்தோன்.]

ஆனையேற்றம் ānnai-y-ērrm, பெ. (n.) யானையேற்றம் பார்க்க; see yānai-y-ērram.

[யானை – ஆனை + ஏற்றம்]

ஆனைவணக்கி ānaivaṇakki, பெ. (n.) ஆனைவணங்கி பார்க்க; see ānaivaṇaṅgi (சா.அக.).

[ஆனை + வணக்கி.]

ஆனை வணங்கி āṉai vaṇaṅgi, பெ. (n.) 1. தேட் கொடுக்கி (மூ.அக.); Indian turnsole.

ம. ஆனவணங்கி.

[ஆனை + வணங்கி.]

சாம்பசிவம் பிள்ளை இதனை ஆனைவணக்கி எனக் குறிப்பிடுவார்.

ஆனை வாயன் கற்றலை āṉai vāyaṉ kaṟṟālai, பெ. (n.) 1. சாம்பல் நிறக் கற்றலை மீன்; a greish marine fish. 2. வெண்ணிறப் பொருவாக் கற்றலை மீன்; a silvery marine fish.

[ஆனை + வாயன் + கற்றலை.]

ஒருகா: வாய் பெரிதாக இருத்தலின் பெற்ற பெயராகலாம்.

ஆனைவாலிகை āṉaivāligai, பெ. (n.) தாமரை இலை; lotus leaf.

[ஆனை + வாலிகை]

ஆனை வாழை āṉai vāḻai, பெ. (n.) 1. நீண்ட குலை தள்ளும் நான்கடி உயரக் குட்டை வாழை வகை; stunted plantain not more than four feet hight, and having its bunch of fruits hanging down like an elephant's trunk. 2. ஏரிகளின் முதன் மடையில் விளைவிக்கும் நெல்வகை; a species of paddy cultivated in the bed of a tank.

*[ஆனை + வாழை. **ஆனை**[2] பார்க்க; see* **āṉai**[2]*.]*

ஆனைவீரர் āṉaivīrar, பெ. (n.) அரசனுக்குரிய எண்வகைத் துணைவருள் ஒருவர்; one among eight counsellors of a king.

[ஆனை + வீரர்.]

ஆனை வேக்கட்டான் āṉai vēkkaṭṭāṉ, பெ. (n.) ஒரு நெல் வகை; a kind of paddy.

[ஆனை + வேக்கட்டான்.]

ஆனை வேணி āṉaivēṇi, பெ. (n.) பொற்கொன்றை அல்லது சரக்கொன்றை மரம்; connay. (சா.அக.).

[ஆனை + வேணி.]

ஆனோன் āṉōṉ, பெ. (n.) ஆனவன்; one who became, one who happended to be. "பெற்றிடுங் குரவரானோர்" (கந்தபு. மேருப். 45).

[ஆனவன் → ஆனோன்.]

இ

இ[1] *i*, பெ. (n.) ***பன்னிரு உயிரெழுத்துகளுள் மூன்றாம் உயிரெழுத்து;*** third letter and vowel of the Tamil alphabet, the close high front unrounded short vowel in Tamil. இற்றை மொழியியலார் இதைப் பிறப்பிடம் நோக்கி முன் அண்ணக் குவியா உயிர்க்குறில் என்பர்.

ம., க., தெ., து., இ.

இ[2] *i*, இடை. (part.) ***அண்மைச்சுட்டு;*** proximate demonstrative.

i) ***அகச்சுட்டு;*** demonstrative base forming an integral part of a word denoting or pointing out a proximate person, place, or thing.

(எ-டு) இவன், இங்கு, இது, இந்த.

ii) ***புறச்சுட்டு;*** demonstrative prefix.

"இப்பால் உருட்டுவோன் எனவே" (சிலப்.1:6-68).

(1) ***கண்டறிசுட்டு;*** demonstrative prefix to a noun, expressing proximity of a person, place or thing actually pointed out by the hand.

(எ-டு) இப்பையன், இப்பக்கம், இம்மரம்.

(2) ***பண்டறிசுட்டு;*** demonstrative prefix to a noun, its antecedent.

(எ-டு) நீர்மேற் குமிழி கண்டீரே! இத்தகைத்தே இவ்வுடம்பு.
ம., க., தெ., து., கோத., துட., குட., கொலா., நா., பர்., கூ., குரு., மால். இ; பிரா. தா.

(3) ***உலகறி சுட்டு;*** demonstrative prefix expressing world-wide eminence.

" இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே" (அப்பர். 6-97-10).

(4) ***உய்த்துணர் சுட்டு;*** demonstrative prefix expressing the power to recollect.

(எ-டு) "அ அவனும் இ இவனும் கூடியக்கால்".

இ[3] *i*, இடை. (part.) ***பல்வகையீறுகள்;*** multifarious formations and suffixes.

i) ***பெயரீறுகள்;*** noun endings.

(1) ***பெண்பாலீறு;*** feminine suff.

(எ-டு) மறத்தி, குயத்தி, தமிழத்தி, தோழி.
ம., க., தெ., து. இ.

(2) ***பண்புப்பெயரீறு;*** abstract noun suff.

(எ-டு) நன்றி, பெற்றி.

(3) ***தொழிற்பெயரீறு;*** verbal noun suff.

(எ-டு) வெற்றி, தோல்வி.

(4) ***எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும் பெயரீறு;*** neg. implicit verb based noun suff.

(எ-டு) நாணிலி, கண்ணிலி, தாயிலி, தந்தையிலி. "தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடி" (திருவா. திருச்சா. 3).

ii) ***வினையீறுகள்;*** verb endings.

(1) ***ஏவல் ஒருமை வினைமுற்றீறு;*** imperative sing. verb ending.

(எ-டு) மலி, பொலி, அறி, குவி.

(2) ***வியங்கோள் வினையீறு;*** optative verb ending.

(எ-டு) நில்லி, செல்லி, உண்ணி.

(3) ***இறந்தகால வினையெச்ச ஈறு;*** past adverb. ending.

(எ-டு) ஆடி, ஓடி, எழுதி, எண்ணி.

(4) ***எதிர்மறைக் குறிப்பு வினையெச்ச ஈறு;*** neg. appellative verb ending.

(எ-டு) அன்றி, இன்றி.

இ[4] *i*, இடை. (part.) ***சாரியை;*** enunciative and connective particle.

i) ***மெய்யெழுத்து ஒலித்துணைச் சாரியை;*** enunciative particle employed in Tamil grammar to designate certain consonants.

(எ-டு) க்-இக்; ச்-இச்; இக்கன்னா, இச்சன்னா எனலுமாம்.

ஆங்கிலம் கிரேக்கம் இலத்தீனம் செருமானியம் உருசியம் போன்ற ஆரிய மொழிகளில் B, C, D, G, P, T ஆகிய மெய்யெழுத்துகளுக்கு இகரம் ஒலித்துணைச் சாரியையாகி ப், ச், ட், ச், ப், ட் என்னும் மெய்யெழுத்துகளைப் பலுகக உதவுதல் காண்க. ஏனை ஆங்கில மெய்யெழுத்துகளுக்கு இகரம் எகரமாகி மெய்ம்முன் ஒலித்துணையாகும். (ஒ.நோ. L, M) மெய்யெழுத்தை எம்மொழியினரும் உயிரெழுத்தின் துணையின்றிப் பலுக்கவியலாது என்னும் மூலத்தாய் மொழியியல்பு பற்றி இஃது இவண் குறிக்கப்பட்டது. மூலத்தாய் மொழியியல்புகளை ஞாலச்சேய் மொழிகள் காத்துவந்துள எனற்கு இஃதொரு சான்றாம்.

ii) ***புணர்ச்சிச் சாரியை;*** connective particle.

ஏவலொருமை வினையையும் செயவென்னும் வாய்பாட்டு வினையெச்ச ஈற்றையும் இன்னோசை பட இணைக்கும் புணர்ச்சிச் சாரியை; euphonic augment used in combination of verbal root and participle ending

காணிய வருவோள் - காண்+இ + (ய்)+அ = காணிய.

தானாக் ஒலியாத மெய்யெழுத்தைச் சார்ந்து தன்னோடியைத் தொலிப்பது மெய்யெழுத்துச் சாரியை.

காண வருவோள் என இகரச் சாரியை யின்றிப் புணர்வதே இயல்பாயினும் இன்னோசையும் சந்த இயைபும் பற்றிக் காணிய வருவோள் எனப் புணர்ந்தது.

இ[5] *i*, இடை. (part.) ***குறிப்பொலி.***

(1) ***சிரிப்புணர்ச்சியைக் குறிக்கும் குறிப்பொலி;*** expression of joy. தாழ்வுணர்ச்சியையும் குறிக்கும்; may also indicate inferiority.

(எ-டு) இ என்று இளிக்காதே (உ.வ.).

(2) ***இசைவைக் குறிக்கும் குறிப்பொலி;*** expression of approval.

(எ-டு) இ என்று கேள் (கொங்.வ.). சிரித்த முகத்துடன் மகிழ்ந்து கேள் என்னும் இசைவுக் கருத்தினது.

இ[6] *i*, இடை. (part.) (1) ***வியப்பிடைச்சொல்;*** expression of exclamation.

(எ-டு) 'இ' இதென்ன (இ.வ.).

(2) ***வெறுப்பிடைச் சொல்;*** an expression of contempt.

(எ-டு) 'இ' தொடாதே (இ.வ.).

இ[7] *i*, இடை. (part.) ***பொருளின்றி இருவகை வழக்கிலும் இசை நிரப்ப வரும் ஓர் அசைச்சொல்;*** expletive used in dialectical and literary usage as enunciative particle.

(எ-டு) ஈதொன்று கேளி.

[கேள்+இ = கேளி.]

கேள் என்னும் ஏவலொருமைப் பொருள் வெளிப்படை. வியங்கோள் ஈறு போன்ற தோற்றம் தரினும் இகரம் ஒலித்துணையான அசைச்சொல்லே. வெறுப்பும் கண்டிப்பும் குரலில் வெளிப்படின் அசைச்சொல்லாம். கனிவும் மதிப்புரவும் வெளிப்படின் வியங்கோள் ஈறாம்.

இ[8] *i*, இடை. (part.) ***காரணப் பெயரீறு;*** causative verbal noun suff.

(எ-டு) வெட்டி, கொல்லி.

இ[9] *i*, இடை. (part.) ***அடிவினைத் திரிபீறு;*** verb base alternate ending.

(எ-டு) ஒன்றித்தல், இல்லித்தல்.

இ[10] *i*, இடை. (part.) ***மொழியிடைக் குற்றியலிகரம்;*** shortened 'i' in word combination.

(எ-டு) நாகியாது. "எனப்படுவ தியாதெனின்" (குறள்.291).

[நாகு + யாது, எனப்படுவது + யாதெனின்.]

இ[11] *i*, இடை. (part.) 1. ***வடமொழிச்சொல் தமிழில் வழங்கும்போது வரும் மெய்ம் மயக்க ஒலித்துணை;*** enunciative particle used for Sanskrit loan words in Tamil to avoid unusual geminations.

(எ-டு) வச்சிரம் < Skt. vajra.
வாக்கியம் < Skt. vākya.

2. ***மொழிமுதலாகாத ர, ல முதலிய எழுத்துகளில் படும் ஒலித்துணை;*** an enunciative particle used before loan words with the non-initial letters such as r, and l.

(எ-டு) ராமன் → இராமன்
லங்கா → இலங்கை.

இ[12] *i*, இடை. (part.) ***குறிலில் இறும் வண்ணப் பாட்டுச் சீர்களின் வண்ணக் குறிப்பு வாய்பாட்டீறு;*** ending of rhythmic formulas of metrical feet ending in short vowel.

(எ-டு) நன்னி நன்னி நனன நன்னி.
திந்தி திந்தி தினன திந்தி.
தங்கட்டி தங்கட்டி தங்கட்டி தங்கட்டி.

இ[13] *i*, இடை. (part.) ***சொல்லாக்க ஈறு;*** formative particle.

(எ-டு) அர் → அரி.

இ[14] *i*, பெ. (n.) 1. ***பறவை ஐந்தனுள் ஆந்தையைக் குறிக்கும் எழுத்து*** (பிங்.); letter representing owl in five birds (pañca patci) (Astrol.). 2. ***நூறு என்னும் எண்ணின்குறி;*** a symbol of the number hundred 3. ***காமனின் பெயர்களுள் ஒன்று;*** a name of the god of love.

[நூறு நிறைவைக் குறித்து அழகைக் குறித்தபோது காமனையும், வருவது கூவியுரைக்கும் அழகிய ஒட்பத்தால் ஆந்தையையும் குறித்திருக்கலாம். மயில், கிளி, கழுகு, ஆந்தை, காகம் என்பன ஐம்புட்கள்.]

இ[15] *i*, இடை. (part.) 1. ***மொழியிடை உகரத்தின் திரிபான இகரம்;*** derivative form of a 'u' ending word.

(எ-டு) புல் → பில்.

2. ***ஈகார ஐகார அளபெடைகளின் அடையாளக் குறி;*** a sign to designate extra long vowels ī and ai.

(எ-டு) ஈ இதொன்று, ஐஇ வண்ணம்.

3. ***பிறவினை இறந்தகால இடைநிலை எழுத்துப் பேறு;*** an augment in causative past verb time marker.

(எ-டு) உண்பித்தான், காண்பித்தான், கொடுப்பித்தான்.

4. ***ஒன்றன்பால் உரிமையீறு;*** neut. sing. possessive ending.

(எ-டு) கள்ளி, கள்ளி.

5. ***செயப்படுபொருள் தொழிற்பெயரீறு;*** verbal noun ending.

(எ-டு) கூலி.

இ[16] *i*, இடை. (part.) ***அரையென்னும் எண்ணின் குறி;*** symbol for the fraction 1/2, which symbol is now usually written as ௲ in Tamil arithmetics.

[ஒருகா. குற்றியலிகரம். அரை மாத்திரை பெறும் ஒப்புமை நோக்கி 'இ' உயிர்க்குறில் வரிவடிவம் அரை என்னும் எண்ணின் குறியாக ஆளப்பட்டிருக்கலாம்.]

இக்காலத்தில் இது ௲ எனத் தமிழ்க் கணக்கு நூலில் ஆளப்படுகிறது.

இஃகலாட்டம் *ikkalāttam*, பெ. (n.) 1. ***இழுபறிப்போர்;*** tug of war. 2. ***பகைமை;*** enmity.

க. எசலாட்ட; தெ. இக்கலாட்டமு.

[இல் + கு = இஃகு → இஃகல் + ஆட்டம்.]

இஃகு[1]**-தல்** *ikku-*, 21 செ.கு.வி. (v.i.) ***இழுத்தல்;*** pull, draw.

க., து. இக்கு.

[இல் + கு = இஃகு.]

இஃகு[2] *ikku*, பெ. (n.) ***எஃகு;*** steel.

[இல் + கு = இஃகு (அழுந்தப்பற்றுதல், இறுகுதல்) நன்கு இறுகிய மாழை.]

இஃது *ikdu* சு.பெ. (pron.) ***இது, உயிர் முதல் சொற்களின் முன்னும் செய்யுளில் யகரமுதற் சொற்களின் முன்னும் வழங்கும் சுட்டுச் சொல்;*** this, used before words with vowel initials and occasionally before words with 'y' initials in poetry. இஃதாவது, இஃதாம்பல், இஃதியாதென்றான் (தொல். எழுத். 423 உரை).

[இல் + து = இஃது. லகர மெய்யீற்றுத்திரிபு ஆய்தம்.]

இ + து = இஃது எனப் புணர்க்கப்படாமை காண்க. அ இ உ என்னும் சுட்டெழுத்துகளின் முந்து வடிவம் ஆ ஈ ஊ என நெடுஞ்சுட்டுகளாயினும், சுட்டுச்சொல் வடிவம் அல், இல், உல் என்பனவே. அவற்றைத் திரவிடமொழிகளுள் கன்னடம் மட்டும் தக்க வைத்துக்கொண்டிருக்கிறது. தமிழிலும் மெல் → மெது, பல் → பது என்றாற்போல், இல் → இது எனத் திரியுமாயினும் அசையழுத்தத்தால் லகரமெய் ஆய்தமாயிற்று.

இஃதொத்தன் *ikdottan*, பெ. (n.) ***இவனொருத்தன்;*** this man, "ஏஎ இஃதொத்தன் நாணிலன்" (கலித்.62).

[இஃது + ஒருத்தன். ஒருத்தன் → ஒத்தன் (இடைக்குறை).]

இஃதொத்தி *ikdotti*, பெ. (n.) இவளொருத்தி; this woman: "அஞ்சா அழாஅ அரற்றா இஃதொத்தி என் செய்தாள் கொல்லென்பீர்" (கலித்.143).

[இஃது + ஒருத்தி. ஒருத்தி → ஒத்தி (இடைக்குறை).]

இக்கட்டு[1] *ikkattu*, பெ. (n.) 1. ***இடுக்கண்;*** trouble, difficulty. இக் கட்டாம் வருவதெல்லாம் (தண்டலை.88); 2. ***நெருக்கடி;*** strained circumstances. 3. ***இட நெருக்கம்;*** narrowness. 4. ***தடை;*** hindrance, obstacle. 5. ***ஏழ்மை;*** poverty. 6. ***துன்பம்;*** affliction.

ம., க., தெ., து. இக்கட்டு.

[இடுக்கண் - இடுக்கட்டு - இக்கட்டு.]

இக்கட்டு[2] *ikkattu*, பெ. (n.) ***உருண்டை, வெல்லக் கட்டி;*** jaggery; the coarse juice of sugar cane boiled and then allowed to cool. When it is hardened it is made into balls with the hand.

[இக்கு = கரும்பு. இக்கு + கட்டி = இக்குக்கட்டி → இக்கட்டி → இக்கட்டு.]

இக்கணம் *i-k-kanam*, பெ. (n.) ***இப்போது, இந்த நிமயம்.*** (பாரத. மணிமான்.74); this moment, now.

ம. இக்கணம் த. கணம் > Skt. kṣana.

[இ + கணம். இ = அண்மைச்சுட்டு, கணம் = கணிக்கப்படும் பொழுது.]

இக்கரி *ikkari* பெ. (n.) ***புகைக்கரி, ஒட்டடை;*** soot, grime (சேரநா.).

ம. இக்கரி.

[இல்கரி - இக்கரி.]

இல்கரி பார்க்க; see ilkari.

இக்கரை[1] *ikkarai*, பெ. (n.) ***கடல் அல்லது ஆற்றின் ஒரு கரை;*** this side of the shore or bank (of a river, lagoon, etc.) "இக்கரையேறி" (திவ்.பெரியாழ். 5,3,7).

"அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை" (பழ.).

ம. இக்கர; க. இக்கரெ.

[இ + கரை.]

இக்கரை[2] *ikkarai*, பெ. (n.) ***இந்துப்பு.*** (ஆ.அக.); rock-salt, sodium chloride.

[இளக்கு → இளக்கரை → இக்கரை. இளக்க இயல்பு அல்லது கரையும் இயல்புநோக்கி இளக்கரை என்னும் முந்துவடிவம் இக்கரை எனத் திரிந்திருக்கலாம்.]

இக்கவம் *ikkavam*, பெ. (n.) ***கரும்பு பார்க்க*** (மூ.அ.); see karumbu.

[இக்கு → இக்கவம்.]

இக்கன் *ikkan*, பெ. (n.) ***காமன்*** (மன்மதன்); cupid. (ஆ.அக.).

[இக்கு = கரும்பு, இக்கன் = கரும்பு விற்கொண்ட காமன். இக்கு → இக்கன்.]

இக்கா *ikkā*, பெ. (n.) 1. ***கொட்டாவி;*** yawn. 2. ***விக்கல்;*** hiccup.

[எக்கு → இக்கு → இக்கா. இக்குதல் = விக்குதல் எனவும் திரியும்.]

இக்காசில்லம் *ikkāśillam*, பெ. (n.) ***ஒருவகைக் கோழை நோய்;*** a kind of disease.

[இக்கா + சில்லம்.]

இக்காபித்தம் *ikkāpittam*, பெ. (n.) ***பித்தநோய் வகையுளொன்று;*** a kind of disease. (ஆ.அக.).

[எக்கு → இக்கு → இக்கா + பித்தம்.]

இக்காலம் *ikkālam*, பெ. (n.) 1. ***இந்தக் காலம்;*** the present time. 2. ***இப்பொழுது, இப்பொழுதைய நேரத்தில்;*** at this time, in this period.

ம. இக்காலம்.

[இ + காலம் = இக்காலம்.]

இக்கிடைஞ்சல் *ikkidaiñjal,* பெ. (n.) 1. ***இடையூறு;*** obstacle, trouble. 2. ***இடுக்கண்;*** affliction.

[இடுக்கு → இக்கு + இடைஞ்சல்.]

இக்கியந்திரம் *ikkiyandiram* பெ. (n.) ***கரும்பாட்டும் ஆலை*** (ஆ.அக.); crushing mill for sugar cane.

[இக்கு + இயந்திரம்.]

இக்கிரி *ikkiri,* பெ. (n.) ***முட்செடி வகை*** (வின்.); a thorny shrub.

[ஒருகா. இனுக்கு → இக்கு + இலி = இக்கிலி → இக்கிரி. இனுக்கு அல்லது பற்றி ஒடிக்க இயலாத அளவுக்கு முள் ஊடர்ந்த செடி.]

இக்கு[1] *ikku,* இடை. (part.) ***தவறாகக்கொள்ளப்பட்ட ஒரு சாரியை.*** (தொல்.எழுத்.126); false euphonic augment, affixed usu. to names of months to denote the loc., as in ஆடிக்குக் கொண்டான் hence a misnomer.

['அக்கு' சாரியை பார்க்க. அதன் விளக்கமே இதற்கும் ஒக்கும். இகரவீற்றுச் சொற்களுடன் குகர உருபு சேர்தலான் இடையில் பெற்ற ககர எழுத்துப்பேற்றுடன் இது ஒரு தனிச்சாரியை போல் பொய்த் தோற்றம் அளிக்கிறது.]

இக்கு[2] *ikku,* பெ. (n.) 1. ***இடை;*** waist, middle. இக்கு முடிச்சு. (பே.வ.). 2. ***சீலையை இறுக்கிக் கட்டும் முடிச்சு;*** tucking in of a woman's cloth "இக்கு வைக்கு மாடை வீழ". (திருப்பு.375). 3. ***ஏதம்*** (சம்.அக.); danger, trouble. 4. ***தடை;*** obstruction. (ஆ.அக.).

ம., க., தெ. இக்கு.

[இடுக்கு - இக்கு.]

இக்கு[3] *ikku,* பெ. (n.) ***முள்;*** thorn.

[இல் - (குத்துதல்) +கு - இக்கு.]

இக்கு[4] *ikku,* பெ. (n.) 1. ***கரும்பு;*** sugar-cane. "இக்கொடு தென்னங்காயும்" (கந்தபு.காவிரி.25). 2. ***மூங்கில்;*** bamboo. 3. ***கள்.*** (திவா.); fermented liquor, toddy. 4. ***கூட்டில் வைத்த தேன்.*** (மாறன். 111, உதா.212); honey in the hive. 5. ***வெண்கரும்பு;*** white sugar cane.

இந். ஈக்(கரும்பு).

[இள் → இளக்கு → இக்கு. எளிதில் ஒடிக்கும் வகையில் இளக்க மானது, நீராளமானது.]

இக்குக்கொட்டு-தல் *ikku-k-kottu-,* 15 செ.கு.வி. (v.i.) ***ஒலிக்குறிப்பினா லொன்றை அறிவித்தல்.*** (தெ.ஆ.வ.); beckon or draw attention by a cluck.

[இக், இக் என்பன ஒலிக்குறிப்பு இடைச்சொற்கள். இக்கு + கொட்டுதல் = இக்குக்கொட்டுதல். கொட்டுதல் = ஒலித்தல். ஒ.நோ. லொச்சுக்கொட்டுதல்.]

இக்குகந்தை *ikku-kandai,* பெ. (n.) 1. ***நீர்முள்ளி;*** water thorn. 2. ***நெருஞ்சி;*** cowthorn. 3. ***நாணல்;*** wild sugar-cane. 4. ***வெள்ளிறில்;*** vellril. (சா.அக.).

[இள் → இளக்கு → இக்கு + கந்தை; கரந்தை - கந்தை. கரந்தை - தூவிபோல் பரந்த வேர்முளைகளைக் கொண்ட பூண்டு வகை.]

இக்குமுடிச்சு *ikku-mudiccu,* பெ. (n.) ***சீலையை இறுக்கிக் கட்டும் முடிச்சு.*** (இ.வ.); knot used for securely tucking in a cloth at the waist, especially in garments worn by women.

[இடுக்கு + முடிச்சு = இடுக்குமுடிச்சு → இக்குமுடிச்சு; இடுக்குதல் = செறிவாகச் செருகுதல்.]

இக்குவாகு[1] *ikkuvāgu* பெ. (n.) ***அயோத்தியை ஆண்ட ஞாயிற்றுக்குல முதலரசன்.*** (கலிங்.இராச. 11); first king of the solar dynasty who ruled in Ayōdhyā.

இக்குவாகு > Skt. ikṣvāku.

[இறுக்கு + வாகு = இக்குவாகு. இறுக்கு = வலிமை. வாகு = தோள். பக்கத்திலுள்ளது பாக்கம் எனப்பட்டது போல வாக்கில் (மருங்கில்) அமைந்த தோள் வாகு எனப்பட்டது. இது வடமொழியில் பாகு எனத் திரிந்தது.]

இக்குவாகு[2] *ikkuvāgu* பெ. (n.) 1. ***குருந்துருக்கம் பிசின்.*** (நாநார்த்த); konkany resin. 2. ***பேய்ச்சுரை;*** (ஆ.அக.); wild melon, *cucamis trigonus.*

[இளக்கு → இக்கு + ஆகு = இக்குவாகு.]

இக்குவிகாரம் *ikku vigāram,* பெ. (n.) ***இக்குவிளை பார்க்க;*** see *ikkuviḷai.*

இக்குவில்லி *ikkuvilli* பெ. (n.) ***இக்குவில்லோன் பார்க்க;*** see *ikkuvillōṉ.*

[இக்கு + வில்லி. இக்கு = கரும்பு.]

இக்குவில்லோன் *ikkuvillōṉ* பெ. (n.) ***காமன்;*** cupid. (ஆ.அக.).

[இக்கு + வில்லோன் = கரும்பு வில்லைக்கொண்ட காமன்.]

இக்குவிளை *ikkuviḷai* பெ. (n.) ***சருக்கரை;*** sugar.

[இக்கு + விளை.]

இக்குறி *ikkuṟi,* பெ. (n.) 1. ***இச்செலவு;*** this journey. 2. ***இம்முறை;*** this time. இக்குறிகேட்போன். 3. ***இவ்வடையாளம்;*** this mark or sign. (ஆ.அக.).

ம. இக்குரி.

[இ + குறி.]

இக்கூறு *ikkūṟu,* பெ. (n.) ***இக்குறி பார்க்க;*** see *ikkuṟi.*

[இ + கூறு.]

இக்கெனல் *ikkeṉal,* பெ. (n.) ***விரைவுக்குறிப்பு;*** onom.expr. of quickness. "இக்கென வினைய தீயோ னிறப்ப" (கந்தபு.வரவுகேள்வி.2).

[இக், இச், இம் என்பன ஒலிக்குறிப்புச் சொற்கள். ஒலிக்குறிப்பு இங்கு விரைவு குறித்தது. ஒ.நோ. 'இம்மென்னும் முன்னே (காளமே.).]

இக்கோ *ikkō,* இடை. (int.) *வியப்பு, இரக்கம், துயரம் முதலியவற்றை உணர்த்தும் குறிப்பு* (ஆ.அக.); exclamation of wonder, pity, grief, etc.

[அக்கோ → இக்கோ. அக்கோ = வியப்பிடைச்சொல்.]

இக[1]-த்தல், *iga-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. *தாண்டுதல்.* (திவா.); to leap over, jump over. 2. *கடத்தல். வரம்பிகந்தோடி* (கம்பரா.நாட்.9); to over flow, go beyond. 3. *வரம்புகடத்தல்;* to transgress, violate, deviate from a rule or justice. "நெறியிகந்து... நீரலசெய்யும்" (காசிகா. சிவகன்மாவாயு.28). 4. *போதல்;* to depart, go away. 5. *நீங்குதல்;* to leave. "முனிவிகந் துயர்ந்த" (நன்.சிறப்புப்பா.) 6. *நடத்தல்;* to walk. 7. *புறப்படுதல்;* to start. 8. *விட்டுவிடுதல்;* to abandon. 9. *பிரிதல். "இகந்துறைவ ரேதிலர்"* (குறள்.1130); to leave behind, go away from. 10. *பொறுத்தல்.* (பிங்.); to bear, endure.

ம. இகய்க்குக; மரா. இக் (செல்லுதல்).

[இய → இக. இய = செல், நட. இகத்தல் = செல்ல நேர்வதால் பிரிதல், நீங்குதல், தாண்டுதல் பொருள் சுட்டியது.]

இக[2]-த்தல்; *iga-,* 18 செ.கு.வி. (v.i.) 1. *புடைத்தல்;* to beat. 2. *காழ்த்தல்;* to become hard, mature. 3. *நெருங்குதல்;* to be close together, crowd. 4. *பழித்தல்;* to abuse. 5. *மீறுதல்;* to transgresse.

[இகத்தல் = நீங்குதல், விரிதல், பகுத்தல், பரவுதல், பரவுதலால் ஒன்றனை நெருங்குதல், மோதுதல், மீறுதல் பொருள்களில் புடைபெயர்ந்துள்ளது.]

இக[3] *-iga,* இடை. (part.) *முன்னிலையசைச் சொல்* (தொல்.சொல்.276); poet. expletive of the 2nd pers. of verbs.

[இய = வியங்கோள் ஈறு. இய → இக முன்னிலையசைமொழிகளாயின.]

இகசுக்கு *igacukku,* பெ. (n.) *நீர்முள்ளி* (மலை.); white long-flowered nail dye. (செ.அக.).

[இளக்கு → இக்கு. இக + சுக்கு.]

இகசேபம் *igasēbam* பெ. (n.) *எழுமுள்;* axil-spined mulberry - (சா.அக.).

[ஒருகா. இக்கு + சேபம்.]

இகடி *igaḍi* பெ. (n.) *கத்தூரி மஞ்சள்;* round zedoary (சா.அக.).

[இக்கு → இக்குளி → இகுளி → இகுடி → இகடி.]

இகணை *igaṇai,* பெ. (n.) *ஒரு மரம்;* a kind of tree. "இலையணி யிகணையும்" (பெருங். இலாவாண.9,8).

ம. இகண.

[இக்கு→ இக்குணி→ இகுணி→ இகணை.]

இகத்தாளம் *igattāḷam,* பெ. (n.) *ஏளனம்.* (தெ.ஆ.வ.); mockery.

[இகத்தம் - இகத்தானம் - இகத்தாளம் = ஒருவனைப் பிரித்து வைத்துப் பேசுதல், எள்ளுதல்.]

இகது *igadu,* பெ. (n.) *கரும்பு;* sugar-cane (சா.அக.).

[ஒருகா. இக்கு → இகுது → இகது.]

இகந்துபடுதல் *igandu paḍudal* தொ.பெ. (vbl.n) 1. *தவறுதல்;* erring. 2. *முற்கூறிய விதியைக் கடத்தல்;* transgressing. 3. *பிறழுதல்;* slip.

[இக→ இகந்து (வி.எ.) + படுதல்.]

இகந்துழி *iganduḻi,* பெ. (n.) *தொலைவான இடம்* (பழ.175); far-off place.

[இக → இகந்து (வி.எ.) + உழி.]

இகப்பு *igappu,* பெ. (n) *பழித்தல்;* insult.

[இக → இகப்பு.]

இகபரம் *igaparam,* பெ. (n.) *இம்மை, மறுமை;* this birth and the supposed next. "இகபரமு மெண்டிசையும்" (தேவா.48,3). 2. *இவ்வுலகம் மற்றும் மேலுலகம்;* this world and the supposed next, earth and heaven.

[இகம் + பரம்.]

இகபோகம் *igabōgam,* பெ. (n.) *இவ்வுலகவின்பம்;* earthly enjoyment, mundane pleasures.

த. போகம் < *Skt.* bhōga.

[இகம் + போகம். இகம் பார்க்க; புகு - புகவு - புகா (உணவு). புகவு - புஜ் - போகம் = நுகர்வது. புக்குதல் → முக்குதல் = உண்ணுதல்.]

இகம்[1] *igam,* பெ. (n.) *இவ்வுலகம்;* life in this world. "இகமொடு பரமும்" (கந்தபு.திருவிளை. 105); this world. (செ.அக.).

க. இக; த. இகம்; > *Skt.* iha.

[இ = அண்மைச்சுட்டு. இல் → இழ் → இகு - இகம் = இவ்வுலக வாழ்வு, இவ்வுலகம், இப்பிறப்பு. இகு = கீழ். இகம் = கீழிருப்பது. மேலுலகம் என்பதின் எதிர்.]

இகம்[2] *igam,* பெ. (n.) 1. *சந்தனம்;* sandal - wood 2. *இண்டங்கொடி;* a thorny creeper (சா.அக.).

இகமலர் *iga-malar,* பெ. (n.) *விரிமலர்.* (பிங்.); full-blown flower.

[இகத்தல் = நீங்குதல், விரிதல். இக + மலர் = விரிமலர்.]

இகரக்குறுக்கம் *igara-k-kuṟukkam,* பெ. (n.) *குற்றிய லிகரம்;* the shortened vowel, i. (த.சொ.அக.).

[இகரம் + குறுக்கம்.]

இகரம் *igaram,* பெ. (n.) *'இ' என்னும் எழுத்து;* the letter 'i'.

ம. இகாரம்.

[இ + கரம். கரம் - எழுத்துச்சாரியை.]

இகல்[1] **(லு)-தல்** *igal-,* 3 & 5 செ.குன்றாவி.(v.t.) *மாறு படுதல்;* to disagree, hate, be inimical. ''இன்ன காலையி னெல்லைமைந்த னிகன்று'' (சேதுபு. சேதுவந்த.12). 2. *போட்டி போடுதல்;* to vie, compete. ''கோதை சுண்ண மாலை யோடிகலித் தோற்றாள்'' (சீவக.904); 3. *ஒத் தல்;* to be similar ''குலிகமொ டிகலிய வங்கை'' (நன்.268, மயிலை).

ம. இகற்றுக.

[இகு → இக → இகல். நீங்குதலால் தோன்றும் மாறுபாடு, எதிர்ப்பு, பகைமை.]

இகல்[2] *igal,* பெ. (n.) 1. *பகை* (திருமுரு.132); enmity, hatred, hostility. 2. *போர்;* battle, war. ''இகன்மிக நவின்று'' (பரிபா.6,28. ம.இகல்). 3. *வலிமை;* puissance, strength, intrepidity. ''இலைப்பொலிதா ரிகல் வேந்தன்'' (பு.வெ.4,14, கொளு). 4. *சிக்கு;* intricacy, obscurity, involvedness. ''ஞான பாதப் பொருளி னிகலறுத்து'' (சி.போ.பா.மங்கல.1); 5. *அளவு; இகலிரி கடங்கண் டால்* (ஞானா.50,5); limit, bound. 6. *புலவி;* amatorial strifes between husband and wife. ''இகலினி கந்தாளை'' (பரிபா.9,36).

ம. இகல்; க. இக்கு; தெ. இங்கட; து. இங்கட, இச; குட. இச.

[இகு → இக → இகல், இகல் = பகை. வலிமையும் வரம்பும் துணைப்பொருள்கள்.]

இகல்[3] *igal,* பெ. (n.) *பெருங்காப்பிய உறுப்புகளு ளொன்று,* (ஆ.அக.); a part of an epic.

[இகு → இக → இகல்.]

இகல்வு *igalvu,* பெ. (n.) 1. *எதிரிடை;* contrariety. 2. *இகலுதல்;* opposing. (ஆ.அக.).

[இகல் → இகல்வு.]

இகலடு கற்பு *igaladu-karpu,* பெ. (n.) *போர் வெல்லும் பயிற்சி;* special training for warfare. ''...ஆஅய் எயினன் இகலடு கற்பின் மிஞலியொடு தாக்கி'' (அகம். 196).

[இகல் + அடு + கற்பு. கற்பு = கல்வி.]

இகலன் *igalan,* பெ. (n.) 1. *படைவீரன்* (பிங்.); warrior. 2. *நரி;* jackal, ''இகலன்வாய்த் துற்றிய தோற்றம்'' (களவழி.28). 3. *முதுநரி* (பிங்.); old jackal. 4. *பகைவன்;* enemy (ஆ.அக.).

[இகல் → இகலன்.]

இகலாட்டம் *igalāttam,* பெ. (n.) 1. *எதிராடல், வாய்ப்போர்;* controversy, disputation, altercation. ''எந் நேரமும் இகலாட்டமாயிருக்கிறவன்''. (W.). 2. *போட்டி;* (W.); competition, rivalry. 3. *போராட்டம்* (ஆ.அக.); struggle. 4. *இழுபறிப்போர்; tug of war.*

[இகல் + ஆட்டம் - இகலாட்டம். இகல் + ஆடுதல் = இகல் செய்தல். இஃகலாட்டம் பார்க்க; see ikkalāttam.]

இகலாட்டி *igalātti,* பெ. (n.) *மாறுபாடுடையவள்;* woman enemy. ''இகலாட்டி நின்னை எவன் பிழைத்தேன் எல்லாயான்'' (கலித்.108). (சங்.இலக்.சொற்.).

[இகல் + ஆட்டி.]

†**இகலாட்டு** *igalāttu,* பெ. (n.) *திடல்விளையாட்டு;* sports.

[இகல் + ஆட்டு.]

இகலி *igali,* பெ. (n.) *பெருமருந்து* (மலை.) பார்க்க; Indian birthwort. (செ.அக.). 2. *சில்லம்* (சிலேட்டுமம்); one of the three humours in the human system i.e. phlegm.

[இகல் → இகலி.]

இகலியார் *igaliyār,* பெ. (n.) *பகைவர்;* enemies. ''இகலியார்புர மெய்தவன்'' (தேவா. 75,1).

[இகல் → இகலியார்.]

இகலை *igalai,* பெ. (n.) *வெள்ளை;* white. (சா.அக.).

[இளக்கு → இக்கு = நீர்ப்பொருள், நீர்மம், கள். நீராளமான பொருள். ஓரளவுக்கு வெளிதாகத் தோன்றுதலின் வெண்மைப் பொருள் பெற்றிருக்கலாம்.]

இகலோகம் *iga-lōgam,* பெ. (n.) *இவ்வுலகம் பார்க்க;* see ivvulagam. *Skt.* ihalōka.

[இவ் → இவ → இக + உலகம் = இகவுலகம் → இகலோகம். வ → க, திரிபு. உலகம் → லோகம் என வடமொழியில் திரிந்தது.]

இகலோன் *igalōn,* பெ. (n.) *பகைவன்*(திவா.); enemy.

ம. இகலோன்.

[இகல் = பகைமை. இகல் + அன் = இகலன் → இகலான் → இகலோன்.]

இகழ்[1]**-தல்** *igal-,* 4. செ.கு.வி. (v.i.) *கவனிப்பின்மை;* to be careless, negligent. ''பிரியாரென விகழ்ந்தேன்'' (திருக்கோ.340).

இகழ்[2]**-தல்** *igal-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. *அவமதித் தல்;* to slight, despise, opp. to புகழ். ''இளையர் இனமுறையர் என்றிகழார்'' (குறள்.698). 2. *மறத்தல்;* to forget ''செய்யா திகழ்ந்தார்க் கெழுமையு மில்'' (குறள்.538).

ம. இகழுக.

[இக → இகழ் = தாழ்தல், தாழ்த்தல், எள்ளுதல். இல் → இள் → இழ் → இகு. இளப்பம் என்பதும் நீங்குதல், விலகுதல், விலக்குதல்வினை பொருட்புடை பெயர்ந்து தாழ்வுபடுத்து தல், எள்ளுதல் பொருளாதல் காண்க.]

இகழ்[3] *igal,* பெ. (n.) *இகழ்ச்சி;* contempt, reproach. ''இகழறு சீற்றத் துப்பின்'' (காஞ்சிப்பு.கச்சி.21).

[இக → இகழ். இகழ்[1]*-தல் பார்க்க; see igal-*[1]*.]*

இகழ்ச்சி *igalcci,* பெ. (n.) 1. *தாழ்வு;* undervaluing. 2. *இகழ்வு;* detraction. 3. *இழிவு;* dishonour. 4. *உவர்ப்பு;* insult. 5. *ஒவ்வாமை;* aversion. 6. *இகழ்தல்;* despise. 7. *நகை;* scorn. 8. *நிந்தை;* contempt. 9. *தாழ்ச்சி;* disparagement. 10. *ஈனம்;* baseness. 11. *ஓரணி;* a figure of speech. 12. *பழி;* scorn. 13. *குறைவு.* deficiency. 14. *மறதி;* forgetfulness. 15. *குற்றம்;* fault. 16. *விழிப்பின்மை;* remissness, negligence. ''இகழ்ச்சி

யிற் கெட்டாரை" (குறள்.539). 17. **வெறுப்பு;** dislike, aversion. "நன்றுதீ திகழ்ச்சி வேட்கை நட்பிகல்" (திருவிளை.உக்கிரபா.5).

[இகு → இகழ் → இகழ்ச்சி.]

இகழ்ச்சிக்குறிப்பு *igalcci-k-kurippu*, பெ. (n.) ***இகழ்ச்சியைக் காட்டவருஞ் சொற்கள்;*** words denoting dishonour or despising.

[இகழ்ச்சி + குறிப்பு.]

இல,. எல, எவன், எற்று, என், என்னே, ஏயே, சீச்சீ, சை, ஏஏ, என்பனவுமாம்.

இகழ்ச்சியணி *igalcci-yani*, பெ. (n.) ***ஒன்றன் குணங் குற்றங்கள் மற்றொன்றுக்கு உண்டாகாதிருப்பதைக் கூறும் அணி.*** (அணியி.70.); figure of speech in which the excellence or defect of one thing does not affect another with which it is connected. e-g., the grandeur of the ocean does not attach to a cup of sea-water, nor does the fault of the lotus which closes at the sight of the moon attach to the moon.

[இகழ்ச்சி + அணி.]

இகழ்ச்சியில் புகழ்ச்சி *igalcciyil pugalcci*, பெ. (n.) ***அணிவகையுளொன்று. அது இகழ்ச்சியின்றிப் புகழ்தல்;*** figure of speech (ஆ.அக.).

[இகழ்ச்சி + இல் + புகழ்ச்சி. இல் (எ.ம.).]

இகழ்ச்சியுட் புகழ்ச்சி *igalcciyu-t-pugalcci*, பெ. (n.) ***இகழ்ச்சியும் புகழ்ச்சியும் கலந்து கூறும் அணிவகையுளொன்று;*** figure of speech (ஆ.அக.).

[இகழ்ச்சி + உள் + புகழ்ச்சி.]

இகழ்ச்சி விலக்கு *igalcci vilakku*, பெ. (n.) ***ஏதுவையிகழ்ந்து விலக்கும் அணிவகையுளொன்று;*** figure of speech. (ஆ.அக.).

[இகழ்ச்சி + விலக்கு.]

இகழ்ந்துரை *igalndurai* பெ. (n.) ***இகழ்ச்சிச் சொல்*** (குறள்.182, உரை); expression of contempt, slander. (செ.அக.).

[இகழ் → இகழ்ந்து (வி.எ.) + உரை.]

இகழ்பதம் *igalpadam*, பெ. (n.) ***நெகிழ்ந்திருக்கும் செவ்வி;*** delicate condition."அருங்கடிக் காவல் இகழ்பதம் நோக்கி" (அகநா.162).

[இகழ் + பதம்.]

இகழ்மலர் *igal-malar*, பெ. (n.) ***பொலிவிழந்த மலர்;*** faded flower. "இகழ்மலர்க் கண்ணளாத் துறப்பயான்" (கலித்.135).

[இகழ் + மலர்.]

இகழ்வார் *igalvār*, பெ. (n.) 1. ***அவமதிப்பவர்;*** scorners, slanderers, vilifiers."இகழ்வார்ப் பொறுத்த றலை" (குறள்.151); (செ.அக.).

[இகழ் → இகழ்வார் (வினையா.பெ.).]

இகழ்வு *igalvu*, பெ. (n.) ***நிந்தை*** (திவ்.திருவாய்.3,4,1.); contempt, scorn, insult. (செ.அக.).

[இகழ் → இகழ்வு.]

இகழற்பாடு *igalarpādu*, பெ. (n.) ***இகழப்படுகை*** (குறள்.192,உரை); dishonour, disgrace, contemptibility, scorn. (செ.அக.).

[இகழ் → இகழல் + பாடு.]

இகழாவிகழ்ச்சி *igalāvigalcci*, பெ. (n.) ***புகழ்வது போலப் பழித்துக் கூறும் அணி*** (W.); irony; a figure of speech in which censure is conveyed by ironical praise. (செ.அக.).

[இகழாத → இகழா + இகழ்ச்சி.]

இகழி *igali*, பெ. (n.) 1. ***கொன்றை;*** a flower tree, 2. ***கடுக்காய்;*** Indian gallnut. (சா.அக.).

[இகழ் → இகழி.]

இகழுநர் *igalunar*, பெ. (n.) 1. ***பகைவர்;*** enemies. "இகழுந ரிசையொடு மாய" (புறநா.21. 12); (செ.அக.). 2. ***இகழ்கின்றவர்.*** (ஆ.அக.); vilifiers.

[இகழ் → இகழுநர் (வினையா.பெ.).]

இகள்(ளு)-தல் *igal*, 2 செ.கு.வி. (v.i.). 1. ***மாறுபடுதல்;*** to be in disparity or disagreement with one. 2. ***எதிராடல்;*** wrangle.

[இகல் → இகள்.]

இகளி[1] *igali*, பெ. (n.) 1. ***இடி;*** thunder. 2. ***இருள்;*** darkness.

[இகு → இருளி → இகளி. இருதல் = தாழ்தல், பொத்தென்று வீழ்தல், இடிந்து பொழிதல், மேகம் திரண்டு இடிதலால் கவிழும் இருள்.]

இகளி[2] *igali*, பெ. (n.) ***வெற்றிலை;*** betel leaf. (சா.அக.).

[இருல் → இருள் → இகள் → இகளி.]

இகளை *igalai* பெ. (n.) ***வெண்ணெய்*** (மூ.அ.); butter.

[இக → இகளை. இகத்தல் = பிரிந்து வருதல். கடையும்பொழுது தயிர்த் திரளிலிருந்து இகந்து வருதலால் வெண்ணெய் இகளை எனப்பட்டது.]

இகன்மகள் *igan magal*, பெ. (n.) ***கொற்றவை;*** Durga "இகன்மக ளையைகளிறு" (தக்க யாகப்.170); (செ.அக.).

[இகல் - இகன் + மகள். இகல் = மாறுபாடு, பகைமை. பகைவரை அழிப்பவள் இகன்மகள்.]

இகன்றவர் *iganravar*, பெ. (n.). ***பகைவர்;*** enemies. "இகன்றவர்ச் செற்று" (பாரத.வாரணா.113); (செ.அக.).

[இகல் = பகைமை, இகல் → இகன்றவர்.]

இகனி[1] *igani*, பெ. (n.) ***வெற்றிலை*** (மலை.); betel. (செ.அக.).

[இரு → இருல் → இருனி → இகனி (கொ.வ.) இருல் = குழை, மெல்லிலை.]

இகனி[2] *igaṉi* பெ. (n.) ***வெண்ணெய்;*** butter. (சா.அக.).

[இகளை → இகணை → இகனி.]

இகா *igā,* இடை. (part.) ***முன்னிலையசை*** (கலித்.105, உரை); poet, expletive of the 2nd pers. of verb. (செ.அக.).

[இ + கா - இகா. இகரம் ஏவல் கருதியும் வியங்கோள் கருதியும் இசை நிரப்பவும் வரும் முன்னிலையசை. உன்கா, செல்கா என்றாற் போல் கெழுதகைப் பொதுச் சொல்லாக வரும் 'கா' அசைமொழி, பால் வேறுபாடு கருதாது முன்னிலையசையாக வருவது. இரண்டும் ஒருங்கிணைந்து பெருங்கிழமையுணர்த்தும் கெழுதகைப் பொதுச் சொல் (word of endearment) ஆயிற்று.]

தாழ்த்தப்பட்ட மக்கள் வழக்கில், 'செல்வி இங்கே வாகா (வா), நீ போகா கா (போடா பேய்) என 'கா' என்னும் முன்னிலையசை பெருக வழங்குகின்றது. வட கொங்கு வேளாளர் பேச்சிலும் இதன் பெரு வழக்கைக் காண லாம். கை என்னும் சிறுமை குறித்த சொல் பெண்மை விளியாகி கன்னடத்தில் 'கே' (gē) விளிச்சொல்லான வாறு 'கா' ஆண்மை அல்லது இருபால் விளிச்சொல்லாகப் பண்டு தொட்டே வழங்கி வருகின்றது.

இகு[1]**-தல்** *igu-* 21 செ.கு.வி. (v.) 1. ***கரைந்து விழுதல்;*** to be eroded "கான்யாற் றிருகரை" (குறுந்.264); 2. ***தாழ்ந்து விழுதல்.*** to shower, to descend, as torrent. "மாரியி னிருதரு... கடுங்கணை" (மலைபடு.226); (செ.அக.). 3. ***இறுதல்*** (ஆ.அக.); to end.

[இல் - துளைத்தற் கருத்து வேர்ச்சொல். இல் → இள் → இழ் → இழு → இகு = கரைந்துவிழுதல், இடிதல், ஒடிதல், இறுதல்.]

இகு[2]**-தல்,** igu- து.வி. (Aux.v.) துணைவினை; auxiliary verb. கண்டிகும். சென்றிகும்.

[இகு[1] - இகு[2]]

இகு[3]**-த்தல்** *igu-,* 18 செ. குன்றாவி. (v.t.) 1. ***கொல்லுதல்*** (சூடா.); to kill, destroy. 2. ***வீழ்த்துதல்*** (திவா.); to throw down, to fell, as a tree. 3. ***தாழ்த்துதல்;*** to hand down loosely, as hair, lower. "கணங்கொ டோகையிற் கதுப்பிகுத் தசைஇ" (மலைபடு.44); 4. ***சொரிதல்;*** to pour forth, to shed, as tears. "இகுத்த கண்ணீர்" (புறநா.143, 13). 5. ***ஓடச்செய்தல்*** (சூடா.); to put to rout, as an army. 6. ***அறைதல்;*** to beat, as a drum. "முரசுகடிப் பிகுப்பவும்" (புறநா.158,1); 7. ***இசைக் கருவிகளை இசைத்தல்;*** to play, as on an instrument. "நும்மருப் பிகுத்து" (மலைபடு.391); 8. ***அழைத்தல்*** (பிங்.) to call, invite. 9. ***கொடுத்தல்*** (திவா.); to give, bestow, 10. ***விரித்தல்;*** spread out, to dishevel, as hair. "கணங்கொள் பேய்மகள் கதுப்பிகுத் தாட" (சிலப்.26,210). 11. ***மறித்தல்*** (நாநார்த்த.); to stop, prevent, to hinder. 12. ***எறிதல்*** (நாநார்த்த); to throw. 13. ***துன்புறுத்தல்*** (நாநார்த்த); to cause pain or affliction. 14. ***துடைத்தல்*** (அக.நி.); to wipe, to clean. (செ.அக.). 15. ***புடைத்தல்*** (ஆ.அக.); to winnow.

[இல் → இள் → இழ் → இழு → இகு = துளைத்தல், குத்துதல், தாக்குதல், தடுத்தல்.]

இகு[4]**-த்தல்** *igu-,* 21 செ.கு.வி. (v.i.). 1. ***ஒலித்தல்;*** to produce a sound, as from a drum "மழை யெதிர்படுகடீ ழுழவுக ணிகுப்ப" (மலைபடு.532); (செ.அக.). 2. ***தாண்டுதல்*** (நாநார்த்த); to leap, jump. 3. ***பரத்தல், பரவுதல்;*** to spread.

[உல் → இல் → இள் → இகு.]

இகு[5] *igu,* பெ. (n.) ***வீழ்ச்சி;*** rapid descent. "நீரிகு வன்ன நிமிர்பரி நெடுந்தேர்" (ஐங்குறு.465); (செ.அக.).

[இழி → இகி → இகு.]

இகுசி *igusi,* பெ. (n.) ***மூங்கில்;*** bamboo (சா.அக.).

[இகு[1] → இகுசு → இகுசி = ஒடியும் தன்மையுடையது.]

இகுசு *igucu,* பெ. (n.) ***மூங்கில்*** (மலை.); spiny bamboo. (செ.அக.).

[இகு → இகுசு.]

இகுடி *igudi,* பெ. (n.) ***காற்றொட்டி*** (மலை.) பார்க்க; thorny caper. (செ.அக.).

மறுவ ஆதண்டன், ஆதொண்டர், காத்தொட்டி.

[இகு → இகுள்[1] → இகுளி → இகுடி.]

இகுத்தல் *iguttal,* பெ. (n.) 1. ***குழைத்தல்;*** macerating. 2. ***கொல்லல்;*** killing, destroying life. 3. ***துடைத்தல்;*** wiping away. 4. ***தாழ்த்தல்;*** lowering. (சா.அக.).

[இகு[1] → இகுத்தல்.]

இகுத்துவி-த்தல் *iguttuvi-* 4 செ.கு.வி. (v.i.) ***மடைய டைத்தல்;*** to close, as by sluice. "ஏரி கட்டி இகுத்துவித் தோமானோம்" (S.I.I.iii,9); (செ.அக.).

[இகுத்தல் → இகுத்துவிடு → இகுத்துவி = தாழ அடைத்துச் சேமித்தல்.]

இகுதரல் *igudaral,* பெ. (n.) ***தாழ்ந்துவிடுதல்;*** get lowered, falling down.

[இகு + தரல் = இகுதலாகிய செயற்பாடு தருதல் அல்லது எய்தப்படுதல்.]

இகுந்தகம் *igundagam,* பெ. (n.) ***ஐங்கணுக் கள்ளி;*** a kind of euphorbin genus, with five points (சா.அக.).

[இகு[3] → இகுந்து → இகுந்தகம். இகு = திரட்சி.]

இகுப்பம் *iguppam,* பெ. (n.) 1. ***திரட்சி;*** boulder like the formation of a mountain side. "இருங்க விகுப்பத் திருவரை சேராது" (மலைபடு.367). 2. ***தாழ்வு*** (பெருங்.இலாவண.20,34); low spirit.

[இகு → இகுப்பம். தாழ்தலால் திரண்டு நிற்றல்.]

இகுப்பு *iguppu,* பெ. (n.) ***வாசிப்பு;*** reading.

[இகு → இகுப்பு = உட்பொருள் காணுதல்.]

இகுபறல் *igubaral,* பெ. (n.) ***அறுதியையுடையநீர்;*** tear. "என் கண்போல் இகுபறல் வாரும் பருவத்தும் வாரார்" (கலித்.33).

[இகுபு + அறல் = இகுபறல்.]

இகும்[1] *igum*, 18 செ.குன்றா.வி. (v.t) ***செய்யுளில் ஆளப்படும் தன்மைப்பன்மை வினைமுற்று;*** pl.first person finite verb. "கண்டிகும் அல்லமோ கொன்க நின்கேளே". (ஐங்குறு. 121).

[இகு → இகும் (தன்.ப.வி.மு.).]

இகு = தாழ்த்தல், இருத்தல் பொருள்படும் வினையடிச் சொல். கண்டிகும் கேட்டிகும் என்பவை கண்டிருக்கிறோம், கேட்டிருக்கிறோம் எனப் பொருள்படும் பண்டைத் தமிழ் வினைமுற்றுகள் ஒ.நோ. உண்கு → உண்கும்.

இகும்[2] *igum*, இடை. (part.) ***முன்னிலையசை;*** poet. expletive of 2nd pers. of verbs. "மெல்லம் புலம்ப கண்டிகும்" (தொல்.சொல்.276. உரை). (செ.அக.).

[இகும் = இக்காலத்திய "முடியும்" என்னும் வினைமுற்றுப் போன்று முடித்தோம் எனப் பொருள் காட்டும் பழைய வினைமுற்று. இதுவே நாளடைவில் முன்னிலை அசைமொழி யாயிற்று. இகுதல் = தாழ்ந்துவிழுதல், எல்லாம் முடிதல், செயற்பாட்டு முடிவு சாறுதல். கண்டு + இகும் = கண்டிகும், கண்டுமுடித்தாயிற்று.]

இகுர்-தல் *igur-*, 21 செ.கு.வி. (v.i.) 1. ***முளைத்தல்;*** to sprout, germinate. 2. ***மொட்டு அரும்புதல்;*** to bud.

க., து. இகுர்.

[உகல் → இகல் → இகுர்.]

இகுரி *iguri*, பெ. (n.) 1. ***மரக்கலம்;*** boat, ship. 2. ***வழக்கு;*** custom, usage. (செ.அக.).

[ஒருகா. இகுளி → இகுரி. இகுளி = உட்குடைவுள்ள மரக்கலம்.]

இகுல் *igul*, பெ. (n.) 1. ***முளை;*** sprout. 2. ***அரும்பு;*** bud. 3. ***குழை, மெல்லிலை, தளிர்;*** tender shoot.

[உகல் → இகுல்.]

இகுவான் *iguvān*, பெ. (n.) ***தமையன்;*** elder brother. (ஆ.அக.).

[ஒருகா. மிகுவான் → இகுவான்.]

இகுவை *iguvai*, பெ. (n.) ***வழி*** (உரி.நி.); path. (செ.அக.).

[இயவு = வழி. இயவை → இயுவை → இகுவை.]

இகுள்[1] *igul*, பெ. (n.) ***தோழி;*** women's confidante "எனக்கிகுளா யென்னைப் பெற்றவளாய்" (திவ்.திருவாய்.6,3,9). (செ.அக.).

[இகு → இகுள் = தாழ்தல், குள்ளமாதல், வடிவத்தில் சிறுத்திருத்தல், இளையவன், இளையவள்.]

இகுளை பார்க்க; see *igulai*.

இகுள்[2] *igul*, பெ. (n.) 1. ***இடி;*** thunderbolt. "இகுடனித்தனி கான்றன" (இரகு.ஆற்று.4). (செ.அக.). 2. ***ஆரல் மீன்;*** greenish or sand-eel - Rhynchobdetta aculeata. (சா.அக.).

[இகு[1] → இகுள். இகுளி பார்க்க; see iguli.]

இகுளி *iguli*, பெ. (n.) 1. ***இடி*** (பிங்.); thunderbolt. 2. ***கொன்றை*** (மலை.); cassia. (செ.அக.). 3. ***உட்குழி யுள்ள மரக்கலம்;*** pontoon.

[இகு → இகுள் → இகுளி.]

இகுளை *igulai*, பெ. (n.) 1. ***தோழி*** (தொல்.சொல்.400, உரை); woman's confidante. 2. ***சுற்றம்*** (பிங்.); kindred; relative. 3. ***நட்பு*** (சூடா.); friendship (செ.அக.). 4. ***கார்த்திகை நாள்.*** (ஆ.அக.).

[இகு → இகுள்→ இகுளை. இகுதல் - தாழ்தல், குள்ளமாதல், சிறிதாதல் இகுளை - தன்னினும் இளைய தோழி.]

இகுளைத்தோழி *igulai-t-tōḻi*, பெ. (n.) ***இகுளையாகிய தோழி;*** female attendent younger by age. "இகுளைத்தோழியிஃது என்னெனப் படுமோ" (நற். 332).

[இகு → இகுள் → இகுளை + தோழி. இகுளை → தாழ்வு, சிறுமை, தன்னினும் அகவையிற் குறைந்த தோழி.]

தென்னார்க்காடு மாவட்டத்தில் இச்சொல் இவளே எனத் திரிந்து வழங்குகிறது. என்ன இவளே, வா இவளே, போ இவளே, சொல்லு இவளே என்பன போன்ற சொல்லாட்சி களைக் கல்லா மக்களின் அன்றாட வழக்கில் இன்றும் காணலாம்.

இகுளை → இகுளே → இவுளே → இவளே. (கொ.வ.).

இகேசுவரம் *igēsuvaram*, பெ. (n.) ***சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று;*** one of the Siva shrines.

[உகே → இகே + ஈசுவரம்.]

இகை-தல் *igai*, 18 செ.குன்றாவி. (v.t.) 1. ***கொடு;*** to give. 2. ***நட;*** to proceed. (ஆ.அக.).

[ஈ → ஈகு → ஈகை → இகை. ஈகை பார்க்க; ஈன் → ஈ என வெளிப்படற் கருத்திலிருந்து வெளியிற் செல்லும் நடத்தற் பொருளும் பிறத்தல் காண்க.]

இங்கண் *iṅgaṇ*, பி.எ. (adv.) ***இவ்விடம்;*** this place. "இங்கண் மாஞாலத்து" (திவ்.திருவாய்.9,2,8); (செ.அக.).

[இ + கண். கண் = இடம், இடப்பரப்பு.]

இங்கம்[1] *iṅgam*, பெ. (n.) 1. ***குறிப்பு*** (நாநார்த்த.); implied idea. 2. ***புலக்குறும்பு*** (நாநார்த்த); mannerism. 3. ***இயங்கு பொருள்*** (நாநார்த்த); movable things. 4. ***அறிவு*** (சேதுபு.) knowledge, intelligence. (செ.அக.). 5. ***நோக்கம்;*** aim, goal.

[இல் → இங்கு → இங்கம் = உட்புதைந்திருப்பது.]

இங்கம்[2] *iṅgam*, பெ. (n.) ***ஊர்ந்து திரியும் உயிரி;*** a species of reptiles.

[இல் (துளைத்தற் கருத்து வேர்) → இள் → இய் → இயவு = செலவு, நடப்பு. இய் - இய்ங்கம் - இங்கம்.]

இங்கம்[3] *iṅgam*, பெ. (n.) ***பெருங்காயம்;*** asafoetida.

[இஞ்சு → இங்கு → இங்கம்.]

இங்கரி *iṅgari* பெ. (n.) ***மான்மணத்தி*** (கத்தூரி) (ஆ.அக.); musk.

[இங்குதல் = பதிதல். இங்கு → இங்குளி → இங்குரி → இங்கரி.]

இங்கா *iṅgā,* பெ. (n.) ***பால்;*** milk, in child language.

ம., க., தெ. இங்கா.

[இங்கு - இங்கா (மு.தா.15). இங்கு - குழந்தைகளின் ஒலிக் குறிப்புச்சொல். ஒலிக்குறிப்பே (குழந்தை அழலே) பாலைக் குறிக்கும் சொல்லாயிற்று. இ∴தோர் குழவி மொழி.]

இங்காலம் *iṅgālam,* பெ. (n.) ***கரி*** (வில. ரசா. 10); carbon. (செ.அக.).

தெ. இங்காலமு.

[இங்குதல் - உட்சுவறுதல் - உள்ளுறிஞ்சப்படுதல் - உட்சாரம் வெந்து கரியாதல்.]

இங்காலாமிலம் *iṅgālāmilam,* பெ. (n.) ***கரிவளி*** (வில. ரசா. 6); carbonic acid. (செ.அக.).

[இங்காலம் + அமிலம்.]

இங்கிக்கடமான் *iṅgikkaḍamāṉ,* பெ. (n.) ***எட்டு மெல்லிய கைகளையுடைய வோர் கடல்மீன். இது உடம்பிலிருக்குமோர் கருப்பு மையை வெளியிற்***



இங்கிக்கடமான்

கக்கித் தண்ணீரைக் கலக்கி அதன்மறைவில் தப்பி யோடும் ஆற்றல் வாய்ந்தது; two gilled cephatopodus malluse with eight arms covered with suckers having the body enclosed in a sac, from which it secretes a black ink like fluid (sepia) so as to darken the water and conceal itself - cuttle fish.

[இங்கு → இங்கி + இங்கிக் கடமான்.
இங்குள் = உட்சுவறுதல், ஒளிதல்.
இங்கிக்கடமான் = ஒளிந்தோடும் மான் போன்ற மீன்.]

இங்கிசை *iṅgišai,* பெ. (n.) 1. ***கொலை;*** murder. 2. ***துன்புறுத்தல்;*** teasing, troubling (ஆ.அக.).

[இங்குதல் → இங்குவித்தல் → இங்கித்தல் → இங்கித்தெ -இங்கிச்சை → இங்கிசை. இச்சொல்லே வடமொழியில் இம்சை எனத் திரிந்தது என்க. இங்குதல் பார்க்க.]

இங்கிட்டு *iṅgiṭṭu,* பெ. (n.) ***இங்கு*** (சம்.அக.); here. (செ.அக.).

ம. இங்ஙூடு.

[ஈங்கண் + இடை - ஈங்கணிடை → ஈங்கணிட்டு → இங்கணிட்டு - இங்கிட்டு.]

இங்கித்தை *iṅgittai,* பெ. (n.) ***இவ்விடத்தில்;*** in this place. "இங்கித்தை வாழ்வும்" (திருமஞ்.2117); (செ.அக.).

[ஈங்கண் + இடத்து - ஈங்கணிடத்து → இங்கணிடத்து → இங்கித்து - இங்கித்தை.]

இங்கிதக்களிப்பு *iṅgida-k-kaḷippu,* பெ. (n.) ***காமக் குறிப்போடு கூடிய களிப்பு.*** (சீவக.145); pleasure of indulging in amorous thoughts. (செ.அக.).

[இங்கிதம் + களிப்பு. இங்கிதம் = புணர்ச்சி. இங்கிதம்[3] பார்க்க.]

இங்கிதக்காரன் *iṅgida-k-kāraṉ,* பெ. (n.) 1. ***பிறன் குறிப்பறிந்து அதற்கிசைய நடப்பவன்;*** one who understands another's ways and so accommodates himself to his views and moods (செ.அக.). 2. ***இன்சொற் சொல்வோன்*** (ஆ.அக.); one who uses kind words.

[இங்கிதம் = விருப்பம், அன்பு. இங்கிதம் + காரன் = இங்கிதக் காரன்.]

இங்கிதகவி *iṅgida-kavi* பெ. (n.) 1. ***பாட்டுடைத் தலைவன் கருத்தை விளக்கும் பாடல்*** (வின்.); poem in which the poet brings out the inner thoughts of his patron. 2. ***இனிமை தரும் பாடல்கள் பாடுவோன்*** (வின்.); poet who expresses his thoughts in a very felicitous diction. (செ.அக.).

[இங்கிதம் + கவி = இங்கிதகவி. Skt. Kavi > த. கவி.]

இங்கிதம்[1] *iṅgidam,* பெ. (n.) 1. ***கருத்து*** (திவா.); purpose, object. 2. ***எண்ணம்;*** thought (ஆ.அக.). 3. ***குறிப்பு*** (சீவக.765); hint, sign; indication of feeling by gesture. "இங்கித நிலைமைநோக்கி". 4. ***அடையா ளம்;*** (ஆ.அக.); mark.

த. இங்கிதம் > *Skt.* ingita **க., தெ.** இங்குவா.

[இல் - துளைத்தற் கருத்துவேர். இல் → இல்கு → இக்கு → இங்கு - இங்குதல் = அழுந்துதல், மனத்தில் பதிதல். மனத்தில் பதிந்த கருத்து, கருத்தினால் உருவான எண்ணம், எண்ணத்தின் வெளிப்பாடான குறிப்பு, குறிப்பினைக் குறித்த அடையாளம்.]

இங்கிதம்[2] *iṅgidam,* பெ. (n.) 1. ***விருப்பம்;*** desire. 2. ***விரும்பத்தக்க இயல்புகள், நாகரிக நற்பண்புகள்;*** agreeable conduct, cultural finesse. 3. ***இனிமை*** (வின்.); sweetness, agreeableness. 4. ***சூழலுக்கேற்பப் பழகு முறை*** (சமயோசித நடை); harmonizing with the situation. (செ.அக.). 'அவன் இங்கிதம் தெரிந்தவன்' (உ.வ.).

[இங்குதல் = மனத்தில் அழுந்துதல், மனத்தில் பதிந்த நல்லியல்பு கள், நயந்து மனக்கொள்ளத்தக்க பண்புகள்.]

இங்கிதம்[3] *iṅgidam,* பெ. (n.) 1. ***புணர்ச்சி;*** sexual intercourse. 2. ***போகை;*** going. (செ.அக.).

[இங்குதல் = அழுந்துதல், அழுத்தத்தால் இடம்பெயர்தல்,

போதல். தெலுங்கு மொழியில் புணர்தல் பொருளில், இங்கு - தெங்கு எனத் திரிந்து வினையாய் வழங்குதல் காண்க.]

இங்கித மாலை *ingida mālai,* பெ. (n.) *இராமலிங்க அடிகளார் அருளிச் செய்த திருவருட்பாவினுள் ஒரு பகுதி* (ஆ.அக.); minor literary work by Ramalinga adigalar.

[இங்கிதம் + மாலை.]

இங்கிரி *ingiri,* பெ. (n.) 1. *மான்மணத்தி* (கத்தூரி) (வின்.); musk. 2. *செடிவகை.* (L.); monkey-flower, a genus of plants; mimulus. (செ.அக.).

மறுவ. இங்கரி.

[இங்குதல் - பதிதல். இங்குளி - இங்குரி - இங்கிரி.]

இங்கிலை *ingilai,* பெ. (n.) *பெருங்காய மரத்திலை;* leaf of the asafoetida tree.

[இங்கு[3] + இலை.]

இங்கிற்றி *ingiṟṟi,* பெ. (n.) *இங்குற்றி* பார்க்க; see *inguṟṟi.* "எல்லாந் துறந்துவிட்ட திங்கிற்றி' (பஞ்ச.திரு முக.580). (செ.அக.).

[இங்குற்றி → இங்கிற்றி.]

இங்கு[1] *ingu,* வி.எ. (adv.) *இவ்விடம்* (திவ்.திருவாய். 8,3,1); hither, here, in this place. (செ.அக.).

ம. இங்ஙு; க., பட. இல்லி, ஈசெ; தெ. இக்கட, இசடு, இசொடு, இச்சட, இச்சடு, இட, ஈகட, ஈட, இன்து; கோத. ஈக்; துட. ஈங்க்; குட. இல்லி; து. இன்சி; கொலா. இன்னில்; நா. இன்னில்; பர். இனி; கு. கும்ப; கோண். இக்கா; குர். இசல், இதா; மால். இனெ; பிரா. தாங்க்.

[இ - அண்மைச் சுட்டு. இ + கண் - இக்கண் - இங்கண் -இங்கு.]

இங்கு[2] -தல் *ingu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. *அழுந்துதல்;* to plant, go deep, sink. *"வேனிறத்திங்க"* (களவழி.41). 2. *தங்குதல்;* to abide, stay. "இங்கு சுவை யின்னமிர்த மேந்த" (சீவக.2025) 3. *குத்துதல்;* to stab. 4. *துன்புறுத்தல்;* to tease. 5. *எரிதல்;* to burn. 6. *கரிதாதல்;* to become black. (செ.அக.).

க. இங்கு.

[இல் - துளைத்தற் கருத்து வேர்ச்சொல். இல் + கு - இஃகு. இக்கு - இங்கு = அழுந்துதல், தங்குதல், இஃகு = அழுந்தப் பற்றுதல், பற்றியிழுத்தல். ஒ. நோ: இஃகலாட்டம் - (இழு பறி) இஃகலாட்டம் - எசலாட்டம் எனவும் திரியும்.]

இங்கு[3] *ingu,* பெ. (n.) *பெருங்காயம்;* asafoetida. "தசும்புறை யிங்காங் கசும்பறத் துடைத்து" (ஞானா.41, 14) (செ.அக.).

க., தெ. இங்குவ; Skt. hingu.

[இங்குதல் - சுவறுதல், சுண்டுதல். நீர்ப்புத்தன்மை இழந்து கட்டியாதல்.]

இங்குசக்கண்டன் *ingucakkaṇḍaṉ,* பெ. (n.) 1. *நீர்முள்ளி* (வின்.); white long-flowered nail-dye. 2. *நெருஞ்சி* (மூ.அ.); small prostrate herb. (செ.அக.). 3. *பெருங்கரும்பு* (ஆ.அக.); a kind of thick and tall sugarcane.

[ஒருகா. இங்கு - இங்குவ - இங்குய - இங்குச + கண்டன். இங்குதல் = நெருங்குதல். நெருங்கி அடர்ந்து வளரும் நிலைத்திணை வகை.]

இங்குசி *inguši,* பெ. (n.) *இங்குசக்கண்டன்* பார்க்க; see *ingušakkaṇḍaṉ.* (சா.அக.).

இங்குணம் *inguṇam,* பெ. (n.) *பூதிமரம்;* இது காரீயத்தைச் செந்தூரம் பண்ண உதவும்; tree capable of reducing lead into a red oxide. (சா.அக.).

[இங்கு - இங்குணம்.]

இங்குத்தி *ingutti,* பெ. (n.) *இங்குற்றி* பார்க்க; see *inguṟṟi;* (செ.அக.).

[ஒருகா. இங்கு + (உறு + இ) - உற்றி - இங்குற்றி - இங்குத்தி. இங்கு எழுந்தருளியிருக்கும் தாங்கள் என்னும் மதிப்புரவுச் சொல். அவ்விடம், இவ்விடம் என்பனவும் இப்பொருட்டே.]

இங்குத்தை *inguttai,* பெ. (n.) *இவ்விடம்;* here. "இங்குத்தை நின்றுந் துரப்பன்" (திவ். நாச். 5, 10) (செ.அக.).

[இங்கு - இங்குத்து - இங்குத்தை. இங்குத்து, இங்கிட்டு என்பன கொச்சை வழக்கு.]

இங்குப்பத்திரி *ingupattiri,* பெ. (n.) *இங்கிலை* பார்க்க; see *ingilai* (சா.அக.).

இங்குமங்கும் *ingumaṅgum,* வி. எ. (adv.) *அங்கிங்கு, அனைத்திடத்திலும்;* here and there, every where.

[இங்கும் + அங்கும்.]

இங்குயில் *inguyil,* பெ. (n.) *பெருங்காயம்* (சா.அக.); asafoetida.

[இங்கு - இங்குயில்.]

இங்குலிகம் *inguligam,* பெ. (n.) *சாதிலிங்கம்;* vermilion; red mercuric sulphide. "அகழு மிங்குலிக மஞ்சன வரைச் சொரிவன" (சீவக. 1898). (செ.அக.). 2. *சிவப்பு* (நாநார்த்த.); redness. (செ.அக.).

தெ. இங்குலிகம். *Skt.* hingula.

[இல் → இங்கு → இங்குள் - இங்குளிகம் → இங்குலிகம்.]

இங்குளி *inguḷi,* பெ. (n.) *பெருங்காயம்;* asafoetida. "இங்குளி வாங்குங் கலம்போல" (சி. பொ. 10,2,3). (செ.அக.).

க., தெ. இங்குவ.

[இங்கு → இங்குள் → இங்குளி.]

இங்குற்றி *inguṟṟi,* பெ. (n.) *திருமடத்தம்பிரான்மார் போலும் உயர்ந்தோரை நோக்கி வழங்கும் முன்னிலை உயர்வுச்சொல்;* term of highest respect, used in addressing religious dignitaries like heads of mutts meaning their worthiness or their holiness.

அங்குற்றி பார்க்க; see *aṅguṟṟi.*

[ஈங்கு + உற்றீர் - இங்குற்றீர் - இங்குற்றி. இங்கு எழுந்தருளி யிருக்கும் தாங்கள் என உயர்வுப்பன்மைப் பொருள் தந்தது. முன்னிலையாரை முன்னிலைப்படுத்திப் பேசுவது மதிப்புக் குறைவு என்று கருதி இடஞ்சுட்டிப் பேசுவது பழைய மரபு ஆங்கிலத்தில் His Exellency என்பதை ஒப்பிடுக.]

இங்கே *ingē*, வி. எ. (adv.) 1. ***இங்கு*** (திவ். திருவாய். 8.10.3.); here. (செ.அக.). 2. ***இவ்விடத்தில்;*** on this side of the place.

ம. இங்கே.

[இங்கண் → இங்கு + ஏ.]

இங்கை[1] *iṅgai*, பெ. (n.) ***இண்டங்கொடி*** (சா.அக.); plant.

[இண்டு - இஞ்சு - இங்கு - இங்கை.]

இங்கை[2] *iṅgai* வி. எ. (adv.) ***இங்கு, இவ்வாறு;*** here, thus.

[ஈங்கு - இங்கு - இங்கை. (மு. தா. 324).]

இங்ஙன் *iṅṅan*, வி. எ. (adv.) ***இவ்வாறு;*** thus. "இங்ஙனி யற்றிய மகத்தின்" (கந்தபு. யாகசங். 127).

[ஈங்கன் - இங்ஙன்.]

இங்ஙனம் *i-ṅ-ṅ-aṉam*, வி. எ. (adv.) 1. ***இங்கு;*** here, in this place. "இங்ஙனம் வருதலென்னா" (தணிகைப்பு. வீராட். 102). 2. ***இவ்வாறு;*** thus, in this manner. "இன்னதுன் கருத்தே லிங்ஙனமாக" (தணிகைப்பு. சீபரி. 141).

ம. இங்ஙனெ, இங்ஙினெ.

[ஈங்கண் - இங்ஙன் - இங்ஙனம். (மு. தா. 324).]

இச்சகம் *iccagam*, பெ. (n.) 1. ***முகமன்;*** flattery, sycophancy. "வரத்திலே கண்ணும் வாக்கி லிச்சகமும்" (பிரபோத. 11,16). 2. ***பெறக்கருதிய தொகை*** (சங். அக.); money desired or result sought. (செ.அக.).

[இசை → இச்சு → இச்சகம்.]

இச்சத்துப் பெருக்கம் *iccattu-p-perukkam*, பெ. (n.) ***ஆசை வெள்ளம்;*** profuse love, excessive desire (பரி. 7,37).

[இச்சை + அத்து + பெருக்கம்.]

இச்சம் *iccam*, பெ. (n.) ***இச்சை;*** wish. "புணர்த்திய விச்சத்துப் பெருக்கத்திற் றுனைந்து" (பரிபா. 7, 37). (செ.அக.).

[இசை - இச்சை - இச்சம்.]

இச்சலாத்தி *iccalātti*, பெ. (n.) ***துன்பம்*** (இ.வ.); annoyance, trouble.(செ.அக.).

[அச்சலத்தி → இச்சலத்தி → இச்சலாத்தி.]

இச்சாவான் *iccāvāṉ*, பெ. (n.) ***இச்சையுடையோன்*** (ஆ.அக.); one who is desirous; devoted person.

[இச்சை + அவன் - இச்சையவன் - இச்சாவான் (கொ.வ.).]

இச்சி-த்தல் *icci-*, 4 செ.குன்றாவி. (v.t.) ***விரும்புதல்;*** to desire, wish, crave for, covet. "இச்சித்த இன்பம் நுகராமல் இளைத்த மெய்யாள்" (பாரத. திரௌபதி. 75). (செ.அக.).

[இள் → இழை → இயை → இசை (விருப்பம்)
இள் - இள் + து - இத்து → இச்சு → இச்சி → இச்சித்தல்.]

இச்சி *icci*, பெ. (n.) 1. ***கல்லிச்சி*** (L.); oval - leaved fig. 2. ***மர வகை.*** (L); jointed ovate - leaved fig, l.tr., Ficus tsiela. (செ.அக.).

[இத்தி - இச்சி.]

இச்சிச் செனல் *iccicceṉal*, இடை. (part.) ***புள் முதலியவற்றை வெருட்டும் ஒலிக்குறிப்பு;*** onom. expr. for scaring away birds, etc., "காக்கை தனை யெய்யக் கோலில்லாமல் இச்சிச்சிச்சென்றானே" (பெருந்தொ. 1424) (செ.அக). 2. ***சலிப்பைக்காட்டும் ஒலிக்குறிப்பு*** (இச்சுக்கொட்டுதல்); onom. expr. indicating low spirits.

[இச்சு - ஓர் ஒலிக்குறிப்புச் சொல். இச்சு + இச்சு + எனல்.]

இச்சியால் *icciyāl*, பெ. (n.) ***இத்தி*** (மூ.அ.); jointed ovate - leaved fig. (செ.அக.).

[இத்தி - இச்சி + ஆல்.]

இச்சியை *icciyai*, பெ. (n.) 1. ***கொடை;*** gift, offering. 2. ***வேள்வி;*** sacrifice. 3. ***பூசனை;*** worship. (செ.அக.).

[இள் + து - இத்து - இச்சு = விருப்பம்.
இச்சு - இச்சியை = விரும்பிக் கொடுப்பது.]

இச்சில் *iccil*, பெ. (n.) ***இச்சியால்*** (மச்சபு. அத்திரி. 4) பார்க்க; see *icciyāl* (செ.அக.).

[இத்தி → இத்தில் → இச்சில்.]

இச்சுக்கொட்டு-தல் *iccu-k-koṭṭu-*, 12 செ.கு.வி. (v.i.) 1. ***புள் ஒலித்தல்;*** to utter sounds, as birds. 2. ***ஒலிக்குறிப்பினால் மறுமொழி கூறுதல்;*** to reply or draw attention by 'cu'. (செ.அக.).

[இச்சு + கொட்டுதல். இச்சு - ஒலிக்குறிப்பு. இது லொச்சு கொட்டுதல் எனத் திரிந்தது (கொ.வ.).]

இச்சை[1] *iccai*, பெ. (n.) 1. ***விருப்பம்*** (திருவாச. 41, 9); wish, desire, inclination. 2. ***பத்தியோடு புரியுந் தொண்டு;*** devoted service. "ஆட்கொண்டாய்க் கென் னினியான்செயு மிச்சைகளே" (தேவா. 672,6). 3. ***வினா*** (சங்.அக.); (Math.) question, problem, (செ.அக.). 4. ***இடித்தல்;*** pounding. 5. ***உறுதிச்சொல்;*** assurance. 6. ***பாலுணர்வில் நாட்டம்;*** sexual desire. (ஆ.அக.).

[இல் - இள் - இட்டம். இள் - இத்து - இச்சு - இச்சை. ஒ.நோ: நள் - நத்து - நச்சு - நசை. இள் - இத்து - இச்சு - இசை (புகழ், விருப்பம்). வடதமிழில் வழக்கூன்றித் தென்தமிழில் பண்டே வழக்கழிந்ததால் வடமொழிச்சொல் போல் தோற்றம் தருகின்றது. அலை - அசை ஆனாற்போல

இலை - இசையாகாமையின் இச்சை - இசை எனத் திரிந்ததே ஒப்பத்தக்கது என்க.]

த. இச்சை > *Skt.* icchā

இச்சை[2] *iccai,* பெ. (n.) 1. ***அறியாமை;*** ignorance, spiritual ignorance. 2. ***பொய்கூறுகை;*** lying, uttering falsehood. (செ.அக.).

[இல் - இன்மை. இல் - இய் - இச்சை = உள்ளீடின்மை, அறியாமை, பொய்மை. ஒ.நோ. பொய் - பொய்ச்சை -பொச்சை - பொச்சி (உட்டுளையுள்ள மலவாய்), பொச்சி கொங்குநாட்டு வழக்கு.]

இச்சையடக்கம் *iccai-y-aḍakkam,* பெ. (n.) ***ஆசையை அடக்கிக் கொள்ளுகை*** (விவிலி.கலா.6,23.); control of desires, self-restraint. (செ.அக).

[இச்சை + அடக்கம்.]

இசக்கி *isakki,* பெ. (n.) ***இசக்கியம்மன்*** பார்க்க; see *isakkiyammaṉ*

ம. இசக்கு; *Skt.* yakṣi.

[இயக்கி - இசக்கி .]

இசக்கியம்மன் *isakki-y-ammaṉ,* பெ. (n.) ***கொற்றவையின் பெயர்களுள் ஒன்று;*** name of a form of Durgā, worshipped in South India. (செ.அக.).

[இயக்கி - இசக்கி + அம்மன்.]

இசக்குப்பிசக்கு *isakku-p-pisakku,* பெ. (n.) ***இசகு பிசகு*** (தெ.ஆ.) பார்க்க; see *isagu-pisagu.*

[இசகுபிசகு - இசக்குப்பிசக்கு.]

இசகல் *isagal,* பெ. (n.) ***நரம்பு இழுத்துக்கொள்ளல்;*** dislocation of muscles or joints.

[இழுகு - இசகு - இசகல் (சு.வி.31).]

இசகுதப்பு *isagu-tappu,* பெ. (n.) ***எசகு பிசகு*** பார்க்க; see *esagu-pisagu.*

மறுவ. எக்கு தப்பு, இசகுபிசகு.

[இசகு + தப்பு.]

இசகுபிசகு *isagu-pisagu,* பெ. (n.) 1. ***முறைகேடு;*** (தெ.ஆ.); irregularity, inconsistancy. ***இசகுபிசகாக நடக்கின்றான்.*** (தெ.ஆ.). 2. ***குழப்பம்*** confusion. 3. ***பிறழ்வு;*** dislocation. (செ.அக.).

[இழுக்கு - இழுகு - இசுகு - இசகு ஒ.நோ. பிழை - பிழகு - பிசகு. இசகு + பிசகு - இசகுபிசகு = இழுக்கும் பிழையும் ஆகிய குறைபாடுகள். எசகு பிசகு என்பது கொச்சை வழக்கு. எசகு - எக்கு எனவும் எக்குதப்பு (எசகுதப்பு) எனவும் கொங்கு நாட்டில் வழங்குகிறது.]

இசங்கு[1] **-தல்** *isaṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***போதல்;*** to go on, to lead to, as a way. "ஸ்ரீபிருந்தா வனத்துக்கு வழி இசங்கும்படி" (ஈடு.5,10,2); (செ.அக.).

[இயங்கு - இசங்கு - இசங்குதல்.]

இசங்கு[2] *isaṅgu,* பெ. (n.) ***சங்கஞ்செடி*** (பிங்.); mistletoe-berry thorn. (செ.அக.).

ம. இசங்கு

இசடு *isaḍu,* பெ. (n.) ***அசறு, பொருக்கு;*** scab, flake.

[அசறு - அசடு - இசடு.]

இசதாரு *isadāru,* பெ. (n.) ***கடப்ப மரம்;*** common Indian oak (சா.அக.).

[இய - இச + தாரு. இய - கடவுள், முருகன். இசதாரு -முருகனுக்குரிய மரம்.]

இசப்பு-தல் *isappu-,* 5 செ. குன்றாவி. (v.t.) ***ஏமாற்று தல்;*** to deceive. (இ.வ.).

[இயப்பு - இசப்பு. இயப்பு - இயைந்தாற்போல் காட்டி ஏமாற்று தல்.]

இசலாட்டம் *isalāttam,* பெ. (n.) ***இகலாட்டம்*** (வின்.); strife. (செ.அக.).

[இகலாட்டம் - இசலாட்டம்.]

இசலி *isali,* பெ. (n.) 1. ***பிணங்குபவள்;*** quarrelsome woman. "குசலிக ளிசலிகள் முழுமோசம்" (திருப்பு.243) (செ.அக.). 2. ***சூளுரை*** (ஆ.அக.); challenge, vow.

[இகலி - இயலி - இசலி.]

இசலிப்புழுக்கு-தல் *isali-p-puḻukku-,* 14 செ.கு.வி. (v.i.) ***கலகப்படுதல்***(இ.வ.); to get entangled in a quarrel; start a quarrel (செ.அக.).

[இகலி - இசலி + புழுக்குதல். புழுக்குதல் = மனம் புழுங்கி பகை பாராட்டுதல்.]

இசவேல் *isavēl,* பெ. (n.) ***உடைவேல்;*** tree having large thorns; arrow thorn tree. (சா.அக.).

[இல் - இளி - இசி + வேல். இசி - குத்துதல், முள்.]

இசி[1] **-த்தல்** *isi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ***நரம்பிழுத்தல்*** (கொ.வ.); to contract, as the muscles in spasms. 2. ***நோவுண்டாதல்*** (கொ.வ.); to ache, as the muscles from over exertion.

[இழு - இசு - இசி. (கொ.வ.).]

இசி[2] **-த்தல்** *isi-* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***இழுத்தல்;*** to pull, draw, drag. "முட்களிற் கட்டியிசித்திட" (திருப்பு. 310). 2. ***முறித்தல்*** (திவா.); to break off. 3. ***உரித்தல்*** (வின்.); to strip off, as bark. (செ.அக.). 4. ***ஒடித்தல்*** (ஆ.அக.); to snap. 5. ***இணுங்கல்,*** நகத்தால் களைந் தெடுத்தல்; to nip.

[இழு - இசு - இசி.]

இசி[3] **-த்தல்** *isi-,* 4 செ.கு.வி. (v.i.) ***சிரித்தல்*** (சது.); to laugh. (செ.அக.).

H. hangsna.

[இளி - இசி.]

இசி[4] *isi,* பெ. (n.) 1. ***உரிக்கை*** (வின்.); stripping, as bark, leaves, or fibre. 2. ***ஒடிக்கை*** (வின்.); breaking off, as a branch. 3. ***நகத்தால் களைந்தெடுத்தல்*** (ஆ.அக.); nipping.

[இழு - இசு - இசி.]

இசிகடுகு *iśikaḍugu*, பெ. (n.) ***செங்கடுகு;*** brown mustard. (சா.அக.).

[எல் - எலில் - எழில் (செந்நிறம்). எழில்கடுகு - எழிகடுகு - எசிகடுகு - இசிகடுகு. இந்தி உள்ளிட்ட வடபுல மொழிகளில் எழில் - லால் எனத் திரிந்து செந்நிறம் குறித்தல் காண்க.]

இசிகப்படை *iśiga-p-paḍai*, பெ. (n.) ***ஒருவகை யம்பு;*** a kind of arrow. "இசிகப்படை யெய்தான்" (கம்பரா. நிகும்.130) (செ.அக.).

[இல் - இள் (பிளவு) - இளி - இசி - இசிகம் + படை.]

இசித்தல் *iśittal*, பெ. (n.) 1. ***இணுங்குதல்;*** pulling off, as bark, leaves, fibre etc. 2. ***சிரித்தல்;*** laughing. 3. ***நரம்பிழுத்தல்;*** straining of the muscles 4. ***நோவுண்டாதல்;*** aching. (சா.அக.).

[இழுத்தல் - இசித்தல்.]

இசிப்பு[1] *iśippu*, பெ. (n.) 1. ***இழுக்கை*** (வின்); pull, strain. 2. ***நரம்பு வலிப்பு*** (வின்.); spasm, convulsion, contraction of the muscles. (செ.அக). 3. ***வயிற்றுவலி;*** stomach pain.

[இழுப்பு - இசிப்பு.]

இசிப்பு[2] *iśippu*, பெ. (n.) ***சிரிப்பு*** (வின்.); laughter.

[இளி - இளிப்பு - இசிப்பு.]

இசியிழை *iśiyiḷai*, பெ. (n.) ***நெகிழத்தக்க நார்;*** elastic fibre. (சா.அக.).

[இழி - இசி - இழை.]

இசிவு *iśivu*, பெ. (n.) 1. ***நரம்பிழுப்பு*** (கொ.வ.); spasm, convulsions. 2. ***மகப்பேற்றுத்துன்பம்*** (கொ.வ.); labour pains. (செ.அக.). 3. ***வயிற்றுவலி*** (ஆ.அக.); stomach pain. 4. ***உரிவு;*** peeling. 5. ***இழுப்பு;*** a sudden attack of fits (சா.அக.).

[இழுப்பு → இசிப்பு → இசிவு.]

இசின் *iśin*, இடை. (part.) 1. ***இறந்தகால இடை நிலை*** (நன்.145, விருத்.); tense part. of verbs, showing the past, as in என்றிசினோர். 2. ***அசைநிலை;*** a poetic expletive. "காதலன்மா நீ மற்றிசினே". (தொல்.சொல். 298, உரை). (செ.அக.).

[ஈ - ஈய் - ஈயின் - ஈசின் இசின். (ஈ - ஈதற்பொருள்) தோற்றத்தால், 'வரின்', 'உணின்' என்றாற் போன்று செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகக் காணப்படினும், ஈயினன், ஈயினள், ஈயினர் என்பவற்றின் பொது வினைமுற்று மரூஉ வடிவமே என்க. இவை இடைநிலையுமாகும். (தொல். சொல். 1. உரை பாவாணர் அடிக்குறிப்பு) போங்காணும், இருங்காணும் முதலிய கூட்டு வினைகளில் துணை வினையாக வருபவை காலப்போக்கில் வெறும் அசைநிலைகளாதலும் உண்டு. அஃதொப்ப இசின் என்னும் துணைவினை இறந்த காலப் பொருளிலும் அசைநிலைப் பொருளிலும் வழக்கூன்றியது. தொல்காப்பியரும் நன்னூலாரும் இதனை வெறும் 'சின்' என்னும் இடைச் சொல்லாகக் கருதினர். 'சின்' பார்க்க. see 'sin']

இசீகம் *iśīgam*, பெ. (n.) 1. ***ஒருவகைக் கரும்பு;*** a kind of sugar-cane. 2. ***மூசையிலிட்டு உருக்கும் மாழைகள் உருகினவாவென்று சோதிக்கும் இரும்புக் காம்பு;*** a small stick or iron rod used for trying whether the gold or other metal in a crucible is melted or not, iron rod used in fusion of metals.

[இளகம் - இளிகம் - இசிகம் - இசீகம் (கொ.வ.).]

இசும்பு *iśumbu*, பெ. (n.) 1. ***வழுக்கு;*** precipice. "இசும்பினிற் சிந்தைக்கு மேறற்கரிது" (திருக்கோ. 149). 2. ***ஏற்ற விறக்கங்கள் மிகுந்த கடுவழி.*** (திருக்கோ. 149, உரை); rugged and broken pathway that is full of ascents and descents. (செ.அக.). 3. ***நீர்க்கசிவு;*** percolation of water. 4. ***எட்கசிவு;*** sesamum seeds ground into a pulp. (செ.அக.).

[இழி - இழிம்பு - இசிம்பு - இசும்பு.]

இசை[1] **-தல்** *iśai* - 4 செ.கு.வி. (v.i.) 1. ***பொருந்துதல்;*** to fit in, as one plank with another in joining. 2. ***ஒத்துச்சேர்தல்;*** to harmonise; to conform, as time-measure and melody. தாளம் அராகத்திற்கு இசைந்துள்ளது. 3. ***உடன்படுதல்;*** to consent, acquiesce, agree. "விண்பெறினு மிசையார் கொலைபொய்" (திருநூற்.83). 4. ***கிடைத்தல்;*** to acquire or get possession of. "ஈண்டு கனக மிசையப் பெறா அது" (திருவாச.2,39). 5. ***இயலுதல்;*** to be possible; to be with in one's power. "இசையா வொரு பொருளில்லென்றல்" (நாலடி.111) (செ.அக.).

ம. இசயுக.

[இயை - இசை.]

இசை[2]**-த்தல்** *iśai-*, 3 செ.குன்றாவி. (v.t.) 1. ***உண்டு பண்ணுதல்;*** to bring about. "இறுதியை யிசைத்த கந்தனை" (விநாயகபு.75,578). 2. ***கட்டுதல்*** (திவா.); to bind, tie, fasten. 3. ***ஒத்தல்;*** resemble. "கூற்றிசைக்கு மென" (பாரத.இராச.52). 4. ***மிகக் கொடுத்தல்*** (பிங்.); to give lavishly. (செ.அக.).

[இயை - இசை.]

இசை[3] *iśai*, பெ. (n.) 1. ***இசைவு*** (வின்.); union, agreement, harmony. 2. ***பொன்*** (அக.நி.); gold. 3. ***ஊதியம்;*** gain, profit. "இசைபெறுவா னெண்ணி யிழந்தாள் முதலும்" (சிவப்பிர. வெங்கையுலா.328). (செ.அக.).

[இயை - இசை.]

இசை[4] *iśai*, பெ. (n.) ***வண்மை*** (அக.நி.); bounty, liberality.(செ.அக.).

[இசை - புகழ், புகழ்தரத்தக்க கொடைத்தன்மை.]

இசை[5] *iśai*, பெ. (n.) ***திசை*** (அக.நி.) cardinal points, direction. (செ.அக.).

[திசை - இசை.]

இசை[6] *isai,* பெ. (n.) ***பண்;*** music.

[இயைத்தல் - பொருத்துதல், அடித்தல், முழக்குதல், ஒலித்தல். இயை - இசை. இசைத்தல் - ஒலித்தல், பேசுதல், புகழ்தல், பாடுதல்.]

இசை(3) மந்தரம், மத்திமம், தாரம். இசை(7) குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம். இவற்றுள் மிடற்றால் குரல், நாவால் துத்தம், அண்ணத்தாற் கைக்கிளை, தலையால் உழை, நெற்றியால் இளி, நெஞ்சால் விளரி, மூக்கால் தாரம். (இவற்றிற்கு ஓசையுவமை) முறையே மயில், இடபம், ஆடு, கொக்கு, குயில், குதிரை, யானை. (சுவையுவமை) பால், தேன், கிழான், நெய், ஏலம், வாழை, மாதுளங்கனி. (மணவுவமை), மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னா விரை, புன்னை. (எழுத்துகள்) ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ, (மாத்திரைகள்) குரல் 4, துத்தம் 4, கைக்கிளை 2, உழை 3, இளி 4, விளரி 3, தாரம் 2, இவற்றுள் ஏழுபாலை பிறக்கும். பாலையைக் காண்க. (அபி.சிந்)

இசை[7] *isai,* பெ. (n.) 1. ***ஓசை;*** sound, noise. "விண்ணதி ரிமிழிசை கடுப்ப" (மலைபடு.2). 2. ***சொல்;*** word from its being a combination of the sounds of letters which, together, convey a meaning. "இசைதிரிந் திசைப்பினும்" (தொல். பொருள்.195). 3. ***புகழ்;*** praise, fame, renown, opp.to வசை. "ஈட்ட மிவறி யிசை வேண்டா வாடவர்." (குறள்,1003). 4. ***இசைப்பாட்டு;*** song, music. "வாய்த்தில விசையென வாயுலர்ந்தனள்" (திருவாலவா. 57,25). 5. ***நரம்பிற் பிறக்கும் ஓசை;*** instrumental music. "இன்னிசை வீணையி லிசைந்தோன் காண்க." (திரு வாச.3,35). 6. ***இனிமை;*** sweetness, agreeableness. 7. ***ஏற்ற இறக்கம்;*** modulation of the voice in recitation, pitch of three degrees, high, low and middle, ஏந்திசை, தூங்கிசை, ஒழுகிசை. 8. ***சீர்*** (யாப்.வி.22); (pros.) foot. 9. ***சுரம்*** (பெருங்.வத்தவ.5,6); the gamut containing the seven notes, viz., குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம். (செ.அக.).

ம. இச; க., கூ. எச. *skt.* yasas.

[இயை - இசை.]

இசை[8]**-த்தல்** *isai-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***ஒலித்தல்*** (தொல்.பொருள்.195); to sound. 2. ***யாழ் முதலியன ஒலித்தல்;*** to sound as a musical instrument "பறையெ ழுந் திசைப்ப" (கலித்.104,29) 3 செ.குன்றாவி. (v.t.) 1. ***சொல்லுதல்;*** to disclose, express "மார்பனிற்றெென விசைத்த லோடும்." (சீவக.203). 2. ***அறிவித்தல்;*** to indicate, signify. "காலை யிசைக்கும் பொழுதொடு புலம்புகொள்" (பதிற்றுப்.81,5). 3. ***பாடுதல்;*** to sing. "கோகிலப் பறவைக ளிசைத்தல்"(கந்தபு.நாட்டு.44). 4. ***இசைக்கருவி இசைத்தல்;*** to play, as on a flute. "யாழிசைக்குப்புக்கு" (தொல்.சொல்.310,உரை).

[இயை - இசை. இயை - பொருத்து, அடி, முழக்கு, ஒலியெ முப்பு, இசைத்தல், ஒலித்தல், பேசுதல், பாடுதல், பண்ணுக் கேற்ற இசைக்கருவிகளில் ஓசை எழுப்புதல்.]

இசைக்கரணம் *isai-k-karanam,* பெ. (n.) ***இசைக் கருவியிற் காட்டுந் தொழில்*** (சிலப்.7.,கட்.15); different methods of handling the string of musical instruments so as to produce various tones. (செ.அக.).

[இசை + கரணம். கருத்தல் = செய்தல். கரணம் = செய்கை. அவை பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, குறும்போக்கு முதலியன.]

இசைக் கருவி *isai-k-karuvi,* பெ. (n.) ***இசையை உண்டாக்கும் கருவி;*** musical instrument. (செ.அக.).

[இசை + கருவி. அவை தோற் கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, மிடற்றுக்கருவி, கஞ்சக்கருவி என்பன.]

இசைக்கழல் *isai-k-kalal,* பெ. (n.) ***வீரக் கழல்;*** ornament.

[இசை + கழல். இசை - புகழ். கழல் - வீரக்கழல். தேர் நூறு, குதிரை ஆயிரம், யானை நூறு, காலாள் பதினாயிரம், போரில் மடியவென்ற வெற்றிபெற்ற வேந்தர் இடக்காலிலணியும் வீரவெண்டயம்.]

இசைக்காரன் *isai-k-kāran,* பெ. (n.) பாடுவோன் (சிலப்.3,64,உரை); one who sings. (செ.அக.).

[இசை + காரன்.]

இசைக்கிளை *isai-k-kilai,* பெ. (n.) ***ஆயத்தம், எடுப்பு*** முடுக்கு (உற்கிரகம்), அலைவு (சஞ்சாரம்), இடாயம் என்ற ஐவகை இசை (பெரியபு. ஆனாய.26.உரை); (Mus.) modes, of five kinds, viz., āyattam, eduppu, uṟkiragam, cañcāram, idāyam.

[இசை + கிளை.]

இசைக்குதல் *isaikkudal,* பெ. (n.) ***சொல்லுதல்*** (ஆ.அக.); uttering, speaking.

[இசை - இசைக்குதல்.]

இசைக்குரற்குருவி *isai-k-kuraṟ-kuruvi,* பெ. (n.) ***குயில்;*** koel, the Indian cuckoo. (செ.அக.).

[இசை + குரல் + குருவி.]

இசைக்குழல் *isai-k-kulal,* பெ. (n.) ***குழற்கருவி*** (பிங்.); flute, pipe made of bamboo or of some metal tube. (செ.அக.).

[இசை + குழல்.]

இசை கடன் *isai kadan,* பெ. (n.) ***நேர்த்திக் கடன்;*** vow made to a deity. "கோயிலுக்குப்போய் இசைகடன் முடித்து" (எங்களூர்.41). (செ.அக.).

[இசை + கடன்.]

இசைகாரர் *isai-kārar,* பெ. (n.) 1. ***பாடுவோர்;*** singers. "இசைகாரர் பத்தர்பரவு மாயிரத்தின்" (திவ்.திருவாய். 1,5,11). 2. ***பாணர்*** (திவா.); lute-players, the itinerant bards of ancient times. (செ.அக.).

[இசை + காரர் - இசைக்காரர் - இசைகாரர் (கொ.வ.).]

இசைகுடிமானம் *isai-kudimānam,* பெ. (n.) ***திரும ணத்தில் எழுதப்படும் சான்று ஆவணம்.*** (C. and T., Vol.v.P.267); written document executed by the

bridegroom's father and attested by witnesses in marriages among Nāttukōttai Chettiyārs.

[இசை + குடிமானம். இசைவு - இசை. குடிமானம் - குடித்தனம், இல்லறம். இல்லறம் ஏற்கும் மணமக்களுக்கான ஒப்பந்தம்.]

இசைகேடு[1] *iśai kēdu* பெ. (n.) 1. ***புகழின்மை;*** loss of fame; disrepute. 2. ***இசைத் தவறு*** (ஸ்வரத்தவறு); (Mus.) false note, disaccord in music. 3. ***சீர்கெட்ட நிலை;*** reduced circumstances, disreputable condition. (செ.அக.).

[இசை - புகழ். இசை + கேடு.]

இசைகேடு[2] *iśai-kēdu* பெ. (n.) 1. ***மதிகேடு;*** awkward predicament. 'இசைகேடாகக் காரியம் நடந்துவிட்டது.' 2. ***தவறான நிலை;*** wrong position. 'இசைகேடாகப் படுத்துக் கொண்டேன், சுளுக்கேறிவிட்டது.' 3. ***ஒழுங்கின்மை;*** disorder, irregularity. 4. ***பொருத்தமின்மை;*** disagreement, incompatibility. 5. ***கெடுதி*** (Pudu. Insc.609); damage, irregularity (செ.அக.).

[இசை + கேடு. கெடு - கேடு.]

இசைகொள்ளல் *iśaikollal,* பெ. (n.) ***புகழ்பெறல்*** (ஆ.அக.); gain reputation, become famous.

[இசைவு + கொள்ளல்.]

இசைகோள் *iśai-kōl* பெ. (n.) ***தாளம்*** (ஆ.அக.); rhythm.

[இசை + கோள். இசைக்குக் கொள்ளப்படுவது. கொள் - கோள்.]

இசைச்சிதடி *iśai-c-cidadi,* பெ. (n.) ***ஓசையையுடைய சிள்வீடு*** (பதிற்று.58;13); beetle which makes shrill sound.

[இசை + சிதடி.]

இசைச்சுவை *iśai-c-cuvai,* பெ. (n.) 1. ***பாடுவதற்காகக் குரலிசையைப் பக்குவப்படுத்தும் தின்பண்டங்கள் எனக் கருதப்படுபவை:*** தேன், பால், நெய், ஏலம், வாழைப்பழம், மாதுளங்கனி முதலியன; eatables serving to modulate the sound of the voice for singing, such as honey, milk, ghee, cardamom, plantain, pomegranate etc. (popular belief). 2. ***இசையின்பம்;*** enjoyment of music, appreciation of music.

[இசை + சுவை.]

இசைஞானியார் *iśai ñaniyār,* பெ. (n.) ***சடையனாரின் மனைவி, சுந்தரமூர்த்தி நாயனாரைப் பெற்றவர்.*** (பெரியபுராணம்.); wife of Cadaiyanār and mother of the great Śaiva śaint Śundaramoorthi.

[இசை + ஞானி + ஆர்.]

இசைத்தமிழ் *iśai-t-tamil,* பெ. (n.) ***முத்தமிழுள் ஒன்று*** (பிங்.); Tamil poetry composed to suit the several melody - types and time-measures; that division of Tamil literature which consists of verses set to music as dist. fr. poetry or drama; one of Mu-t-tamil.

[இசை + தமிழ். முத்தமிழ்ப் பாகுபாட்டுள் இசைத் தமிழ் பண்ணமைக்கப்பட்ட பாடல். இலக்கியத்தைக் குறித்தது.]

இசைந்தவேளை *iśainda vēlai,* பெ. (n.) ***ஏற்புடைய நேரம்*** (ஆ.அக.); appropriate time, suitable occassion.

[இயைந்த → இசைந்த + வேளை.]

இசைநாள் *iśai-nāl,* பெ. (n.) 1. ***முற்கொழுங்கால்*** (பூரட்டாதி.) (சங்.அக.); (சோதிட.); the 25th naksatra (star). 2. ***பிற்கொழுங்கால்*** (உத்தரட்டாதி.) (சங்.அக.); (சோதிட.); the 26th naksatra. (star). (செ.அக.).

[இசை[1] + நாள்.]

இசைநிறை *iśai-nirai,* இடை. (part.) ***செய்யுளில் இசை நிறைத்தற்கு வருஞ்சொல்*** (நன்.395); (Poet.) expletive used to fill a gap in the metre. (செ.அக.).

[இசை + நிறை. இசையை நிறைப்பது.]

இசைநிறைசொல் *iśai niraicol,* பெ. (n.) ***இசைநிறை பொருளைத் தரும்சொல்,*** (ஆ.அக.); word appearing as a poet. expletive.

[இசை + நிறை + சொல்.]

இசைநிறையசைச்சொல் *iśai-nirai-y-aśai-c-col,* பெ. (n.) ***இசையை நிறைத்தற்பொருட்டு வருமசைச் சொல்.*** (ஆ.அக.); word used as poet. expletive.

[இசை + நிறை + அசை + சொல்.]

இசைநிறையேகாரம் *iśai-nirai-ēgāram,* பெ. (n.) ***ஈற்றசையேகாரம்*** (ஆ.அக.); vowel 'ஏ' appearing at the end of a verse as poet. expletive.

[இசை + நிறை + ஏகாரம்.]

இசைநுணுக்கம் *iśai-nunukkam,* பெ. (n.) ***ஓர் இசை நூல்*** (இறை.1,உரை); work on music ascribed to Siganti a member of the Middle Tamil Sangam. (செ.அக.).

[இசை + நுணுக்கம்.]

இது சாரகுமாரன் இசை அறிதற்பொருட்டுச் சிகண்டியாரால் செய்யப்பட்ட இசைநூல்; அகத்தியர் காலத்திருந்தது; இடைச் சங்க மருவியதென்றுங் கூறுவர். (அபி.சிந்.).

இசைநூபுரம் *iśai-nūpuram,* பெ. (n.) ***வீரனணியுங் கழல்*** (சங்.அக.); single anklet worn on his right ankle by the mighty warrior who, among other deeds of valour, has also slain an elephant.

[இசை = புகழ். இசை + நூபுரம்.]

இசைநூல் *iśai-nūl,* பெ. (n.) ***இசையைப்பற்றிக் கூறும் நூல்*** (சிலப். 3,60, அரும்.); treatise on music. (செ.அக.).

[இசை + நூல்.]

இசைப்பா *iśai-p-pā,* பெ. (n.) ***இசையோடு சேர்ந்த பாக்களிலொருவகை*** (சிலப்.6,35,உரை); one of two classes of musical composition, the other class being known as இசையளவுபா (செ.அக.).

[இசை + பா.]

இசைப்பாட்டு *iśai-p-pāṭṭu,* பெ. (n.) ***இலக்கியப் பாட்டு*** (சிலப்:பதி.60, உரை); song, musical composition. (செ.அக.).

[இசை + பாட்டு.]

இசைப்பாடு *iśai-p-pāḍu,* பெ. (n.) ***புகழ் மிகுதி*** (பிங்.); rise of fame. (செ.அக.).

[இசை + பாடு.]

இசைப்பாணர் *iśai-p-pāṇar.* பெ. (n.) ***பாணருள் ஒரு வகையார்*** (தொல்.பொருள்.91, உரை); division of the ancient Pāṇar caste, famous for their singing, minstrels. (செ.அக.).

[இசை + பாணர்.]

இசைப்பு[1] *iśaippu,* பெ. (n.) 1. ***சொல்*** (திவா.); word. 2. ***யாழ் முதலியன இசைத்தல்*** (தொல்.சொல்.310); playing on a musical instrument.

[இசை → இசைப்பு.]

இசைப்பு[2] *iśaippu,* பெ. (n.) ***இசைவு*** (பிங்.); combination, suitability. (செ.அக.).

[இயை + இயைப்பு + இசைப்பு.]

இசைப்பு[3] *iśaippu,* பெ. (n.) 1. ***பொருத்துகை;*** joining so as to fit in. 2. ***பொருத்து;*** joint. (செ.அக.).

[இசை + இசைப்பு.]

இசைப்புள் *iśai-p-puḷ,* பெ. (n.) 1. ***அன்றிற் பறவை;*** a species of bird. 2. ***குயில்;*** koel. (ஆ.அக.).

[இசை + புள்.]

இசைப்பெருந்தானம் *iśai-p-peruntāṉam,* பெ. (n.) ***இசை பிறக்குமிடம். அவை: நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, இதழ், பல், தலை.*** (ஆ.அக.); organic points where musical sound originates.

[இசை + பெரும் + தானம்.]

இசைப்பொறி *iśai-p-poṟi,* பெ. (n.) ***செவி;*** ear, the sense of hearing. "வேறிசைப்பொறி விழியலா துற்றி லான்." (சேதுபு.காசிபத்.30). (செ.அக.).

[இசை - ஒலி, ஓசை. இசை + பொறி.]

இசைபேதம் *iśai-pēdam,* பெ. (n.) ***இசைகேடு*** பார்க்க; see *iśaikeḍu.* (செ.அக.).

[இசை + பேதம்.]

இசைமகள் *iśai-magaḷ,* பெ. (n.) ***கலைமகள்*** (பிங்.); Sarasvati, being the goddess of articulate sounds. (செ.அக.).

[இசை + மகள்.]

இசைமடந்தை *iśai-maḍandai* பெ. (n.) ***இசைமகள்*** (சூடா.) பார்க்க; see iśaimagaḷ (செ.அக.).

[இசை + மடந்தை.]

இசைமணி *iśaimaṇi,* பெ. (n.) ***பதினாயிரம் பேரை வென்ற வேந்தர் வலக்காலிலணியும் பொன்னாற் செய்த வீர கண்டை*** (சங்.அக.); tinkling gold anklet worn on his right ankle by a king who has slain 10,000 men, in battle. (செ.அக.).

[இசை = புகழ். இசை + மணி.]



இசைமணி

இசைமரபு *iśai marabu,* பெ. (n.) ***ஓர் இசைநூல்*** (சீவக.658,உரை); an ancient work on music. (செ.அக.).

[இசை + மரபு.]

இசைமறை *iśai maṟai,* பெ. (n.) ***சாமவேதம்*** (திவ்.திருவாய்.8,9,9); Sāmavēda, as the vēda of musical chants. (செ.அக.).

[இசை = பண். இசை + மறை.]

இசைமாத்திரை *iśai mättirai.* பெ. (n.) ***இசைக்குரிய மாத்திரைகள்;*** musical measure of time.

[இசை + மாத்திரை.]

அவை குரலிற்கு நான்கும், துத்தத்திற்கு நான்கும், கைக்கிளைக்கு மூன்றும், உழைக்கு இரண்டும், இளிக்கு நான்கும், விளரிக்கு ஒன்றும், தாரத்திற்கு இரண்டுமாம். (ஆ.அக.)

இசைமுட்டி *iśaimuṭṭi,* பெ. (n.) ***செருந்தி*** (மலை.); panicled golden-blossomed pear-tree. (செ.அக.).

[இசை + முட்டி.]

இசைமை *iśaimai,* பெ. (n.) 1. ***புகழ்;*** honour, esteem, the desire for abstention, at all costs, from blameworthy actions. "கல்வி தறுக ணிசைமைகொடை" (தொல்.பொருள்.257). 2. ***ஒலி*** (பரிபா.13,14); sound. (செ.அக.).

[இசை → இசைமை.]

இசையளவுகண்டான் *iśai-y-alavukaṇḍāṉ,* பெ. (n.) ***பாண்டியன் அரி இருக்கை.*** (I.M.P.M.200); name of the throne of the Pāṇdya kings. (செ.அக.).

[இசை + அளவு + கண்டான்.]

இசையளவுபா *iśai-yaḷavu-pā*, பெ. (n.) ***இசையோடு சேர்ந்த பாக்களு ளொருவகை*** (சிலப்.6,35,உரை.); one of two classes of musical compositions the other class being known as (இசைப்பா) Isaippā.

[இசை + அளவு + பா.]

இசையறிபறவை *iśai-y-aṟi-paṟavai*, பெ. (n.) ***அசுணம்*** (கேகயம்) (பிங்.); reputed bird that can discern notes of music. (செ.அக.).

[இசை + அறி + பறவை.]

இசையறு-த்தல் *iśai-y-aṟu-*, 4 செ.கு.வி. (v.i.) ***ஓசை வேறுபடப் பிரித்தல்;*** to distinguish by intonation. இசையறுத்து உச்சரித்துக் காண்க. (நன்.91, சங்கர.) (செ.அக.).

[இசை + அறு.]

இசையாசிரியன் *iśai-y-āśiriyaṉ* பெ. (n.) ***இசைப்புலவன்*** (சீவக.672, உரை); teacher of music, expert musician. (செ.அக.).

[இசை + ஆசிரியன்.]

இசையாயிரம் *iśai-y-āyiram*, பெ. (n.) ***செயங்கொண்டார் செட்டிமார்கள் மேல் ஆயிரம் பாடல்களாற் பாடிய நூல்*** (தமிழ்.நா.பக்.42); panegyric, not now extant, consisting 1000 verses sung in praise of the chetti community by Jeyankoṇḍār. (செ.அக.).

[இசை + ஆயிரம்.]

இசையானந்தம் *iśai-y-āṉandam* பெ. (n.) ***அவலமுற்றிருந்தோர்க்குரிய இசைகள் தலைவன் பாட்டிற்கு இசையாகி வரப்புணர்க்கும் நூற்குற்றம்*** (யாப்.வி.பக். 524); fault of poetic composition in which the melody types of the dirge or the elegy appropriate to the emotion of sorrow are introduced into an eulogistic poem in praise of a hero.

[இசை + ஆனந்தம்.]

இசையியம் *iśai-y-iyam*, பெ. (n.) ***ஒலிக்குமுழவு.*** (அகநா.25.); musical drum.

இசையிலக்கணம் *iśai-y-ilakkaṇam*, பெ. (n.) ***இசைக்குரிய இலக்கணம். அவை: ஆடல், பாடல், ஆதியிசை, முத்தமிழ், பண், பாணி, தூக்கு, முடம், தேசிகம் என்பன.*** (ஆ.அக.); elements of musical grammar.

[இசை + இலக்கணம்.]

இசையின்செல்வி *iśaiyiṉ celvi*, பெ. (n.) ***புகழ்மகள்;*** the goddess of fame. "இசையின்செல்வி எண்டிசை வளர்ப்ப" (S.I.I.iv.284) (செ.அக.).

[இசை + இன் + செல்வி.]

இசையுரிச்சொல் *iśai-y-uri-c-col*, பெ. (n.) ***ஓசையாலறியப்படும் குணச்சொல்*** (ஆ.அக.); word in musical usuage.

[இசை + உரி + சொல்.]

இசையுள்ளான் *iśai-y-uḷḷāṉ*, பெ. (n.) ***சிறந்தவன், புகழ்மிக்கோன்;*** gentleman, one who is famous. (ஆ.அக.).

[இசை + (உள்ளவன்) + உள்ளான்.]

இசையெச்சம் *iśai-y-eccam*, பெ. (n.) ***சொற்றொடரில் சொற்கள் எஞ்சிய பொருளுணர்த்தி வருவது*** (தொல்.சொல்.440.சேனா.); omission from a sentence, of words needed to complete the sense; ellipsis for the sake of brevity or elegance.

[இசை + எச்சம்.]

"அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற் றேறியார்க் குண்டோ தவறு" (குறள்.1154) நீத்தார்க்கே தவறு என எஞ்சிய இசைப்பொரு ளுணர்த்தலான் இசை யெச்சமாயிற்று. (தொல்.சொல்.440.சேனா).

இசையெஞ்சணி *iśai-y-eñjaṇi* பெ. (n.) ***இசையெச்சம்*** (ஆ.அக.); figure of speech.

[இசை + எஞ்சு + அணி.]

இசையெடு-த்தல் *iśai-y-eḍu*, 4 செ.கு.வி. (v.i.) 1. ***பாடுதல்;*** to sing a tune, sing the praise of. "என்னையா ளுடைய நாயகிக் கிசையெடுப்பவள்." (கம்பரா.அகலிகை.6). 2. ***அராகம் தொடங்குதல்;*** start a song. 3. ***இசை பாடுதல்;*** to execute a musical concert. (ஆ.அக.).

[இசை + எடு.]

இசையெழுத்து *iśai-y-eḻuttu*, பெ. (n.) ***இசைக்குரிய எழுத்துகள். அவை;*** ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஐ, ஔ; letters signifying pitch duration of a musical sound.

[இசை + எழுத்து. பண்டைக்காலத்தில் ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஐ, ஔ என்னும் ஏழு எழுத்துகளே ச, ரி, க, ம, ப, த, நி க்குப் பகரமாக இருந்தன.]

இசையோசை *iśai-y-ōsai* பெ. (n.) ***இசைக்குரிய ஓசைகள். அவை: வண்டு, கிளி, குதிரை, யானை, குயில், பெற்றம், ஆடு என்பன*** (ஆ.அக.); the sound of music.

[இசை + ஓசை. குதிரைக்கு மாற்றாகக் குருகு இருத்தல் வேண்டும்.]

இசையோர் *iśaiyōr*, பெ. (n.) ***கந்தருவர்;*** Gandharvas. "இசையோர் தேய வியக்கம்." (பெருங்.மகத.14,267). (செ.அக.).

[இசை + (ஆர்) ஓர்.]

இசையோலை *iśai-y-ōlai*, பெ. (n.) ***ஒப்பந்த ஓலை*** (I.M.P.N.A727); deed of consent or acceptance. (செ.அக.).

[இசை = இசைவு. இசை + ஓலை.]

இசைக் கருவிகள்:

தோற்கருவி

நரம்புக்கருவி



கஞ்சக்கருவி

துளைக்கருவி

இசையோன் *iśaiyōṉ,* பெ. (n.) ***இசைக்காரன்*** (சிலப்.3, 64); one who sings to the accompaniment of instrumental music. (செ.அக.).

[இசை + (ஆன்) ஓன்.]

இசைவந்தோன் *iśai vandōṉ,* பெ. (n.) ***புகழ் பெற்ற வன்;*** well known person, gentleman.

க. எசவந்த.

[இசை + வந்தோன்.]

இசைவல்லோர் *iśaivallōr,* பெ. (n.) 1. ***கந்தருவர்;*** Gandaruva. 2. ***இசைப்பாடகர்;*** musician. 3. ***இசைப்புல வர்*** (ஆ.அக.); teacher of music.

[இசை + வல்லோர்.]

இசைவலான் *iśai valāṉ,* பெ. (n.) ***இசை பாடுவதில் மிக்கான்*** (ஆ.அக.); musician, maestro, musicologist.

[இசை + (வல்லான்) - வலான்.]

இசைவளை *iśai-vaḷai.* பெ. (n.) ***குதிரை நூறு போர்க்களத்திற் பொருதுவென்ற மறவர் காற்பெரு விரலில் அணியும் வளை*** (ஆ.அக.); anklet worn by a hero who had defeated a cavelry consisting of more than 100 horses.

இசைவாணர் *iśai vāṇar,* பெ. (n.) 1. ***பாடகர்;*** career musicians. "தெள்ளுதமிழ் வாண ரிசை வாணர் சூழ" (திருவாலவா.57,22). (செ.அக.). 2. ***இசைவல்லோர்*** (ஆ.அக.); expert musicians.

[இசை + வாணர். வாழ்நர் - வாணர்.]

இசைவிரும்பி *iśai virumbi,* பெ. (n.) ***அசுணம்*** (ஆ.அக.); music loving bird.

[இசை + விரும்பி.]

இசைவிளங்கு கவிகை *iśai vilaṅgu kavigai,* பெ. (n.) ***புகழ் விளங்கிய இடக்கவிந்த கை;*** famous hand which tilts to give presents. ".....வுமணர் கீழ்மரத் தியாத்த சேமவச் சன்ன இசைவிளங்கு கவிகை நெடி யோய்" (புறம்.102). (சங்.இலக்.சொற்.).

[இசை + விளங்கு + கவி + கை.]

இசைவு *iśaivu,* பெ. (n.) 1. ***பொருந்துகை;*** suitability, fitting in one with another. "இன்னவைபிறவு மிசைவில வெல்லாம்" (பெருங்.மகத.15,9). 2. ***தகுதி;*** fitness. 3. ***உடன்பாடு;*** agreement, consent, approval. "மறை யோரி சைவினால்.........அளிப்பாராகி" (பெரியபு. சண் டேசுர.24). 4. ***ஏற்றது;*** appropriateness. கைக்கிசைவான குறுந்தடி. (செ.அக.). 5. ***இணக்கம்;*** agreement (ஆ.அக.). 6. ***பொருத்து*** (ஆ.அக.); joining so as to fit in, coordination.

[இசை → இசைவு.]

இசைவுக்குலைவு *iśaivu-k-kulaivu,* பெ. (n.) ***இசைவு கேடு*** (தஞ்சை.); mal-adjustment (செ.அக.).

[இசைவு + குலைவு.]

இசைவுகேடு *iśaivu kēḍu* பெ. (n.) 1. ***பொருத்த மின்மை*** (வின்.); difference, conflict, disagreement. 2. ***செயல் தவறு;*** failure, as of a project or undertaking. 'இசைவு கேடாய்ப்போன காரியம்.' (கொ.வ.) (செ.அக.).

[இசைவு + கேடு.]

இசைவுதீட்டு *iśaivu-tīṭṭu,* பெ. (n.) ***உடன்படிக்கை ஆவணம்*** (S.I.I.v.371.); deed of agreement. (செ.அக.).

[இசைவு + தீட்டு.]

இசைவுபிசகு *iśaivu-piśagu,* பெ. (n.) 1. ***இணக்க மின்மை;*** incongruity. 2. ***இசகு பிசகு*** (ஆ.அக.); error, irregularity.

[இசைவு + பிசகு.]

இசைவுபிறழ்வு *iśaivu-piṟaḻvu,* பெ. (n.) 1. ***ஒழுங் கின்மை;*** disorder. 2. ***இசைவு கேடு;*** disagreement. (செ.அக.).

[இசைவு + பிறழ்வு.]

‡**இஞ்சக்கம்** *iñjakkam,* பெ. (n.) ***கையூட்டு*** (தஞ்சை.); bribe, wrongful gratification. (செ.அக.).

[ஒருகா. இஞ்சுதல் - உறிஞ்சுதல், பறித்தல். அக்கம் - காசு. இஞ்சு + அக்கம். தவறான வழியில் பெறப்படும் பணம்.]

இஞ்சம் *iñjam,* பெ. (n.) ***வெண்காந்தள்*** (மலை.); white malabar glory lily.

[எல் - இல் - இஞ்சு - இஞ்சம்.]

இஞ்சி[1] *iñji,* பெ. (n.) 1. ***கரிப்புள்ள இஞ்சிப்பூண்டு;*** ginger plant. M.sh. Zingiber officinale, "இஞ்சிவீ விராய பைந்தார் பூட்டி" (பதிற்றுப்.42,10). "மஞ்சளும் இஞ்சி யும் மயங்கரில் வலயத்து" (சிலப்.10.74). 2. ***இஞ்சிக் கிழங்கு;*** ginger-tuber. "இஞ்சி தின்ற குரங்கு போல பஞ்சரித்தல் (தொந்தரவு செய்தல்)."



இஞ்சி

மறுவ. செய்யாப்பாவை, இஞ்சிவேர், இஞ்சிப்பாவை, இஞ் சிக்கிழங்கு.

ம. இஞ்சி; குட. இஞ்சி; கோத. இஞ்சி; பிரா, பாலி. சிங்கி; பா. சிங்கிவேர.

Skt. Srngavera; *M.E.* gingivere; *O.fr.* gengibre, *L.L.* gingiber; *G.K.* Zingiberis; *E.* ginger; *Maläy.* injivēr.

[இஞ்சு - இஞ்சி.]

'ஈ' அண்மையைச் சுட்டுமாறு உதட்டைப் பின்னுக்கு இழுத்தொலிக்கும் உயிரொலி. ஈ - ஈல் - ஈர் - ஈர்த்தல் = இழுத்தல். ஈர்தல் - இழுத்தறுத்தல், பல்லாற் கடித்திழுத்து உரித்தல், இழுத்தல் = அறுத்தல்.

ஈல் - இல் - இள் - இழு. ஒ.நோ: கொள்கொம்பு - கொழு கொம்பு. கொள்நன் - கொழுநன். இழுத்தல் = பின்னிழுத்தல், உள்ளிழுத்தல், உறிஞ்சுதல், இள் -(இய்) - (இய்ஞ்சு) - இஞ்சு.

இஞ்சுதல் = நீரை உள்ளிழுத்தல், நிலத்தில் நீர் சுவறுதல். இஞ்சு - இஞ்சி = நீரை உள்ளிழுத்துத் திரண்டிருக்கும் கிழங்கு வகை; அஃதுள்ள பூண்டு. இஞ்சி காய்ந்து நீர் வற்றினாற் சுக்கு. சுக்கு = நீர் வறண்டிருப்பது. சுள்ளுதல் (சுள்ளெனல் = காய்தல்) நீர்வற்றுதல். சுள் - சுள்கு - சுட்கு - சுக்கு. ஒ.நோ: வெள் - வெள்கு - வெட்கு - வெக்கம். கொள் - கொட்கு - கொக்கு = வளைந்த கழுத்துள்ள பறவை.

இஞ்சி பித்தத்தைப் போக்கும் எனப்படுவதால் மருந்துகளிலும் கறிவகைகளிலும் பெரும்பாலும் கூட்டுச்சரக்காகச் சேர்க்கப்படுகிறது.

இஞ்சி[2] *iñji,* பெ. (n.) ***கொத்தான்*** (மூ.அ.); parasitic leafless plant. (செ.அக.).

[இஞ்சுதல் = சுவறுதல். இஞ்சு → இஞ்சி.]

இஞ்சி[3] *iñji,* பெ. (n.) ***செம்புருக்கி வார்த்துத் திண்மையாகச் செய்யப்பட்ட மதில்;*** ramparts of a fort. "கொடுங்க ணிஞ்சி" (பதிற்றுப்.16.1.) (செ.அக.).

[உல் - ஒல். ஒல்லுதல் = பொருந்துதல். உல் - உர் - உறு. உறுதல் = பொருந்துதல், செறிதல், வலியுறுதல். உறு - உறுதி = திண்மை, வலிமை. உர் - உரம் = வலிமை, உறு - உற. உறத்தல் = செறிதல், இறுகுதல். "விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே" (தொல்.சொல்.345). உறந்த இஞ்சி = இறுகிய மதில். உல் உள் - அள் = செறிவு (திவா.), வன்மை.(சூடா.) அள்ளல் = நெருக்கம். அள்ளாகுதல் = செறிதல். அள்ளிருள் = செறிந்த இருட்டு. அள்ளுதல் = செறிதல் (சீவக.614) உள் - இள் - (இய்) - (இய்ஞ்சு) - இஞ்சு (ஒ.நோ: குள் -(குய்) - (குய்ஞ்சு) - குஞ்சு. புள் - பிள் - பிய் - (பிய்ஞ்சு) -பிஞ்சு. கொள் - கொய். பொள் - பொய். இஞ்சுதல் = செறிதல், இறுகுதல், திணிதல். இஞ்சு - இஞ்சி = திணிந்த மதில் வகை.]

பெரும்பாலும் செம்பு புனைந்தியற்றியதாகவும் சிறுபான்மை அரைத்த சாந்திட்டமைத்ததாகவும் பகைவரால் எளிதில் தாக்க முடியாதவாறு திண்ணிதாகக் கட்டப்பட்ட மதில். ஏனை வகை மதில்களிலும் மிக இறுகியிருத்தல் பற்றி இஞ்சி எனப்பட்டது.

இஞ்சிக்கருக்கு *iñji-k-karukku,* பெ. (n.) ***இஞ்சிச் சாற்றைக் கொதிக்க வைத்த குடிநீர்;*** boiled juice of ginger.

[இஞ்சி + கருக்கு.]

இஞ்சிக்கிழங்கு *iñji-k-kiḻaṅgu,* பெ. (n.) ***இஞ்சிவேர்;*** the tuber of the ginger plant. (சா.அக.).

[இஞ்சி + கிழங்கு.]

இஞ்சிச்சத்து *iñji-c-cattu,* பெ. (n.) ***இஞ்சிக்கிழங்கின் சாரம். இதைச் சாராயத்திலூறவைத்துப் பிறகு அதனின்று சாறு எடுப்பதுண்டு;*** essence of ginger. This is generally made by steeping it in alchohol. (சா.அக.).

இஞ்சிச் சாறு *iñji-c-cāṟu* பெ. (n.) ***இஞ்சியிலிருந்து எடுக்கும் சாறு;*** ginger juice.

[இஞ்சி + சாறு.]

இஞ்சிச்சுண்ணம் *iñji-c-cuṉṉam,* பெ. (n.) ***இஞ்சிச் சாற்றினடியில் நிற்கும் சுண்ணாம்பு;*** the white chalk - like deposit found of the juice of ginger. (சா.அக.).

[இஞ்சி + சுண்ணம்.]

இஞ்சித்தித்திப்பு *iñji-t-tittippu,* பெ. (n.) ***இஞ்சி விறைப்பு*** பார்க்க; see *iñji viṟai-p-pu.*

[இஞ்சி + தித்திப்பு.]

இஞ்சித் தீஞ்சாறு *iñji-tīñ-cāṟu,* பெ. (n.) ***இஞ்சிச் சாறும் சருக்கரையுங் கலந்து காய்ச்சி வடித்த ஒருவகைப் பாகு;*** syrup of ginger. (சா.அக.).

[இஞ்சி + தீம் + சாறு.]

இஞ்சித்துவையல் *iñji-t-tuvaiyal,* பெ. (n.) ***இஞ்சியைப் பிற கறிப்பொருள்களோடு சேர்த்தரைத்த ஒருவகை சுண்டாங்கி;*** ginger made into a paste by treating it with other condiments for use as a side dish for food. (சா.அக.).

ம. இஞ்சிப்பச்சடி. (இஞ்சி, தயிர் போன்றவற்றால் செய்யப்படும் பச்சடி.)

[இஞ்சி + துவையல்.]

இஞ்சித்தேறு *iñji-t-tēṟu,* பெ. (n.) ***இஞ்சித்துண்டு*** (யாழ்ப்.); small piece of green ginger. (செ.அக.).

[இஞ்சி + தேறு. தெறிதல் - கடித்தல், நறுக்குதல், தெறு - தேறு. (நறுக்கிய துண்டு).]

இஞ்சி நீர் *iñji nīr,* பெ. (n.) ***இஞ்சிச் சாறு;*** juice of green ginger. (சா.அக.).

[இஞ்சி + நீர்.]

இஞ்சிப்பாகு *iñji-p-pāgu,* பெ. (n.) ***இஞ்சிக்கூழ்வகை*** (வின்.); a kind of ginger electuary. (செ.அக.).

[இஞ்சி + பாகு.]

இஞ்சிப்பாவை *iñji-p-pāvai,* பெ. (n.) ***இஞ்சிக்கிழங்கு*** (மலைபடு.125, உரை); ginger in the shape of a doll. (செ.அக.).

இஞ்சிப்புளிப்பு *iñji-p-pulippu* பெ. (n.) ***காடியிலூற வைத்த இஞ்சி;*** green ginger preserved in vinegar (சா.அக.).

[இஞ்சி + புளிப்பு.]

இஞ்சி மாங்காய் *iñji-māṅgāy,* பெ. (n.) ***இஞ்சி வகை.*** (Madr.); mango ginger. (செ.அக.).

ம. இஞ்சி மாங்காய்.

[இஞ்சி + மாங்காய்.]

இஞ்சிமுறைப்பா *iñji muṟaippā,* பெ. (n.) ***இஞ்சி விறைப்பு*** பார்க்க; see *iñji viṟaippu.*

[இஞ்சி + விறைப்பு - இஞ்சிவிறைப்பு → இஞ்சிவிறைப்பா → இஞ்சிமுறைப்பா. யவன (யூனானி) மருத்துவர்கள் இஞ்சி விறைப்பினை இஞ்சி முறைப்பா என வழங்குவது கடுங் கொச்சை வழக்காகும்.]

இஞ்சியடைக்காய் *iñji-yaḍaikkāy,* பெ. (n.) ***இஞ்சியை உப்பிலிட்ட ஊறுகாய்;*** ginger pickled in salt.

[இஞ்சி + அடை + காய்.]

இஞ்சியூறுகாய் *iñji-y-ūṟukāy,* பெ. (n.) ***இஞ்சியுடன் மசாலையுங் கூட்டி எண்ணெய்யிலிட்ட ஊறுகாய்;*** ginger pickled in gingelly oil. (சா.அக.).

[இஞ்சி + ஊறுகாய்.]

இஞ்சிவடிப்பு *iñji-vaḍippu,* பெ. (n.) ***இஞ்சிவிறைப்பு*** பார்க்க; see *iñji-viṟaippu.*

இஞ்சி விறைப்பு *iñji viṟaippu,* பெ. (n.) 1. ***இஞ்சியை அறுத்துத் தேனிலிட்டுப் பாகம் செய்த ஒரு பாகு;*** ginger crushed and preserved in honey. 2. ***இஞ்சியை வெல்லத்திலிட்டுச் சமைத்த ஒருவகைச் சுண் டாங்கி;*** boiled with jaggery or sugar and used in food to give it relish; a seasoning for food.

மறுவ. இஞ்சிவடிப்பு, இஞ்சிமுறைப்பா, இஞ்சித் தித்திப்பு.

[இஞ்சி + விறைப்பு.]

இஞ்சிவேர் *iñjivēr,* பெ. (n.) ***இஞ்சிக்கிழங்கு, இஞ்சிப்பாவை;*** ginger root.

ம., குட., கோத. இஞ்சி; பர். சிங்கிவேர.

L. Zingiber; *G.K.* Zingiberis; *LL.* gingiber; *OE.* gingiber; *E.* ginger; *Skt.* Srngavera.

[இஞ்சு - இஞ்சி + வேர். இஞ்சுதல் = நீரை உள்ளிழுத்தல்.]

இஞ்சி என்பது தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டில் விளைந்து வரும் மருந்துக் கிழங்கு. "செய்யாப் பாவை வளர்ந்து கவின் முற்றிக் காயங் கொண்டன இஞ்சி" (மலைபடு.125-6). "இஞ் சிவிராய பைந்தார் பூட்டி" (பதிற்றுப்.42.10). "மஞ்சளும் இஞ்சியும் மயங்கரில் வலயத்து" (சிலப்.10:74).

இஞ்சி, கிறித்துவிற்கு முற்பட்ட பண்டைக்காலத்திலேயே இங் கிருந்து மேனாடுகளுக்கு ஏற்றுமதியான பொருள்களுள் ஒன் றாம்.

"மேலையாரியச் சொற்களெல்லாம் இஞ்சிவேர் என்னும் தமிழ் வடிவைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. அவற்றை வழங்குவோ ரும் அவற்றைத் தமிழ்ச் சொல்லின் திரிபென ஒத்துக்கொள்வர். ஆயின் வடமொழியாளரோ இஞ்சிவேர் என்பதைச் சிருங்க வேர் எனத் திரித்து மான்கொம்பு போன்ற வடிவினது என்று வலிந்தும் நலிந்தும் பொருள் கூறி, அதை வடசொல்லாகக் காட்ட முயல்வர். 'ச்ருங்க' என்பது கொம்பு என்று மட்டும் பொருள்படும். இஞ்சிவேர் பொதுவாகக் கிளை கிளையாயிருப்பது பற்றி, அதை மான்கொம்பொடு ஒப்பிட்டு மான் என்னும் சொல்லை யும் சேர்த்துக் கொண்டது பொருந்துவதன்று. வேர என்பதும் 'உடம்பு' என்று பொருள்படுவதேயன்றி வேர் என்னும் பொருள் கொண்டதன்று", (வ.மொ.வ.87) எனப் பாவாணர் தந்துள்ள விளக்கத்தைக் காண்க.

இஞ்சிவேர்ப் புல் *iñji-vēr-p-pul,* பெ. (n.) ***சுக்குநாறிப் புல்*** (K.R.) பார்க்க; ginger-grass. (செ.அக.).

ம. இஞ்சிப்புல்லு.

[இஞ்சி + வேர் + புல்.]

இஞ்சு[1]-தல் *iñju-,* 15 செ.கு.வி. (v.i.) 1. ***சுவறுதல்*** (இ.வ.); to be absorbed, as water in the ground. 2. ***சுண்டுதல்*** (இ.வ.); to evaporate. 3. ***இறுகுதல்*** (வின்.); to be curdled, as milk, become congealed; get thick, as ghee.

க. இங்கு; தெ. இங்கு, இகுக, இவுரு, இமுரு, இனுகு, ஈகு; து. இங்கு.

[இல் - (துளைத்தற் கருத்துவேர்) உட்புகுந்து துளைத்தலும் உள்ளீட்டை வெளியிலிழுத்துத் துளைத்தலும் ஆம். (இல் +து) - இல் + சு - இஞ்சு. இஞ்சுதல் = சுவறுதல், உள்ளீரம் அற்றுப்போதல்.]

இஞ்சு[2]-தல் *iñju,* 12 செ.குன்றாவி. (v.t.) 1. ***குத்துதல்;*** to pierce, to stab. 2. ***வருத்துதல், துன்புறுத்துதல்;*** to cause pain, inflict.

[இல் - இய் - இஞ்சு. ஒ.நோ. துல் - துய் (துயில்) - துஞ்சு.]

இஞ்சுசாரை *iñju-sārai,* பெ. (n.) ***வெல்லம்*** (இராட்.) jaggery. (செ.அக.).

[இஞ்சு + (சருக்கரை) சாரை. சருக்கரை - சாரை எனத் திரிந்தது மரூஉ. ஒ.நோ. பனை இஞ்சுசாரை > ம. பனஞ்சார. சருக்கரை = வட்டவடிவமாக வார்க்கப்படுவது. வார்க்கப்பட்டு ஈரம் குறைந்து கட்டியாதலின் இஞ்சுசாரை எனப்பட்டது.]

இஞ்சுச் சாறு *iñju-c-cāṟu,* பெ. (n.) ***வெல்லம்;*** jaggery. (சா.அக.).

[இஞ்சு + சாரை - இஞ்சிச்சாரை → இஞ்சிச்சாறு.]

இஞ்சை *iñjai,* பெ. (n.) 1. ***துன்பம்;*** injury, harm. 2. ***கொலை;*** killing, slaying, murder. "இஞ்சைபொய் களவு" (உத்தரரா. அரக்கர்பிற.26). (செ.அக.).

[இஞ்சு - இஞ்சை. > Skt. himsa.]

இட்டங்கட்டல் *iṭṭaṅkaṭṭal-,* தொ.பெ.(vbl.n.) ***இட்டங் கட்டுதல்*** பார்க்க (ஆ.அக.); see *iṭṭaṅ-kaṭṭu.*

இட்டங்கட்டு-தல் *iṭṭaṅkaṭṭu,* 15 செ.கு.வி. (v.i.) ***ஓரை*** (இராசி) ***நிலை வரைதல்.*** (வின்.); note on a diagram of the Zodiac indicating the position of the various planets at a particular time. (செ.அக.)

[இட்டம் + கட்டுதல். ஒருகா. விட்டம் - இட்டம். விண் - விட்டம் = விண்ணில் கோள்நிலை. இனி, விடு - விட்டம் (பிரிவு) என்றுமாம்.]

இட்டசட்டம் *itta-cattam,* பெ. (n.) ***தன்னிச்சை*** (வின்.); freedom from constraint, free choice. (செ.அக).

[இடு - இட்ட. இட்ட + சட்டம்.]

இட்டசித்தி *itta-citti* பெ. (n.) ***விருப்பவெற்றி*** பார்க்க; see *viruppa-verri.*

இட்டடுக்கி *ittadukki,* பெ. (n.) ***காதணிவகை;*** old-fashioned ear-ornament; one of many ornaments worn through the ear-lobes. (செ.அக.).

[இட்டு + அடுக்கி.]

இட்டடை *ittadai,* பெ. (n.) ***இட்டிடை*** (வின்.); dial. (செ.அக.).

[இட்டு + இடை - இட்டிடை - இட்டடை.]

இட்டடைச்சொல் *ittadai-c-col,* பெ. (n.) ***தீச்சொல்;*** foul word. ''இட்டடைச் சொல்லார் பொறுப்பார்'' (பெருந்தொ.பக்.609). (செ.அக.).

[இட்டிடை + சொல் → இட்டிடைச்சொல் → இட்டடைச்சொல்.]

இட்டம் *ittam,* பெ. (n.) 1. ***கோள் நிலையால் விளையும் விளைவு;*** (astrol.) good or evil consequences resulting from the position and influence of a planet in the horoscope. 2. ***ஞாலத்தின் முனைக்கும்*** (துருவத் திற்கும்) ***ஓரைக்கும் இடையேயுள்ள தொலைவு*** (வின்.); (astron.) longitudinal difference between the turuvam and the end of a sign. (செ.அக.).

இட்டலி *ittali,* பெ. (n.) ***இட்டளி*** பார்க்க; see *ittali.*

[இட்டளி → இட்டலி.]

இட்ட வழக்கு *itta-valakku,* பெ. (n.) ***சொன்னது சட்டமாயிருக்கை;*** issuing an order or directive by sheer force of authority; dictatorial assertion. 'அவர்கள் இட்ட வழக்கா யிருக்குமிறே' (ஈடு.அக.ஜீ.) (செ.அக.).

[இடு → இட்ட + வழக்கு.]

இட்டவை *ittavai,* பெ. (n.) ***வழி*** (அக.நி.); path. (செ.அக.).

[இட்டு - சிறிய. இட்டு - இட்ட. இயவு - வே - வை. இயவு = பாதை. இட்டு + இயவு - இட்டியவு - இட்டயவு - இட்டவை.]

இட்டளப்படு-தல் *ittala-p-padu-,* 20 செ.கு.வி. (v.i.) ***சிறிய இடத்தில் திரண்டு தேங்குதல்;*** to be brought together as fragments and concentrated within a small space. ''சௌந்தரிய சாகரம் இட்டளப் பட்டுச் சுழித்தாற் போலே.'' (ஈடு.10,10,9). (செ.அக.).

[இடு - இட்டு = சிறிது. அள் - அளம் = செறிதல், நெருங்குதல். இட்டு + அளம் - இட்டளம் + படுதல்.]

இட்டளம்[1] *ittalam,* பெ. (n.) 1. ***நெருக்கம்;*** crowd, throng, concourse, insufficient air-space. ''பரமபதத்தி லிட்டளமுந்தீர்ந்தது'' (ஈடு.3,8,2). 2. ***துன்பம்;*** difficulty affliction, pain, sorrow ''அடியே னிட்டளம் கெடவே'' (தேவா.988,1). 3. ***தளர்வு*** (பிங்.); weakness, weariness.

க. இட்டள; தெ. இட்டல.

[இட்டு + அளம். அள் - அளம் = செறிவு, நெருக்கம். இட்டு - சிறிது, சிறியஇடம்.]

இட்டளம்[2] *ittalam,* பெ. (n.) 1. ***பொன்*** (பெரியபு.ஏயர் கோன்.133, உரை); gold. (செ.அக.). 2. ***துன்பம்;*** distress. ''என்செய்த வாறடிகேள் அடியேன் இட்டளங் கெடவே.'' (சுந்தரர் தேவா.988-1).

[இட்டளம் = செறிவு, மிகுதி. மிகுதியாகக் காய்ச்சப்படும் பொன்.]

இட்டளர் *ittalar,* பெ. (n.) ***மனக்கலக்கமுள்ளவர்*** (திருநூற்.61,உரை); unsteady, wavering persons. (செ.அக.).

[இட்டளம் - சிறிய இடத்தில் நெருக்கமுறுதல். மனக்கலக்க மடைதல்.]

இட்டளி *ittali,* பெ. (n.) ***அரிசிமாவும், உளுந்து மாவும் சேர்த்து ஆவியில் வேகவைக்கும் சிற்றுண்டி வகை;*** cake prepared by steaming semi-solid dough made of rice mixed with black gram.

ம. இட்டலி; க. இட்டலி; தெ. இட்டென.

[இட்டம் - சிறிய இடத்தில் தேங்குதல். இட்டளப்படுதல், இட்ட ளித்தல் - தேங்கச் செய்தல். இட்டள் - இட்டளி.]

இட்டளிக்கொப்பரை *ittali-k-kopparai,* பெ. (n.) ***இட்டளி சமைக்கும் ஏனம்;*** brass vessel into which the ittali-t-tattu. is placed for making steamed rice-cakes.(செ.அக.).

[இட்டள் → இட்டளி + கொப்பரை.]

இட்டளிச்சட்டி *ittali-c-catti,* பெ. (n.) ***இட்டளி வேகவைத்தற்குரியதோரேனம்.*** (பாண்டி.வழ.); the vessel in which ittali is prepared.

[இட்டள் → இட்டளி + சட்டி.]

இட்டளித்தட்டு *ittali-t-tattu,* பெ. (n.) ***இட்டளிவார்க் கும் தட்டு;*** perforated metal plate, with depressions, inserted into the ittali-k-kopparai, with the dough to steam and prepare rice-cakes.

[இட்டளி + தட்டு.]

இட்டளித்தவலை *ittali-t-tavalai,* பெ. (n.) ***இட்டளிக் கொப்பரை*** பார்க்க; see *ittali-k-kopparai.*

[இட்டளி + தவலை.]

இட்டறுதி[1] *ittarudi,* பெ. (n.) ***உறுதிசெய்த எல்லை*** (வின்.); limited time or space. (செ.அக.).

[இடு → இட்டு + அறுதி. அறுதி - உறுதி, முடிவு. இட்டறுதி - உறுதியிடப்பட்டது - முடிவுசெய்யப்பட்டது.]

இட்டறுதி[2] *ittarudi,* பெ. (n.) 1. ***இக்கட்டான நேரம்*** (வின்.); critical time. 2. ***வறுமை*** (வின்.); destitution, extreme want. (செ.அக.).

[இட்டு - நெருக்கம், நெருக்கடி. அறு - அறுதி - நல்வாய்ப்பும் செல்வமும் அற்றுப்போன துன்பநிலை.]

இட்டறை *ittarai,* பெ. (n.) ***யானையை வீழ்த்துங் குழி*** (சம்.அக.); invisible deep pit covered over with twigs etc. for catching elephants.

[இட்டு - நெருக்கம்; சிறுமை அறை - சிறுமை இடம், பள்ளம்.]

இட்டன் *ittan,* பெ. (n.) ***வணங்கத்தக்க பெரியவன்*** (நாநார்த்த.); venerable person. (செ.அக.).

இட்டி[1] *itti,* பெ. (n.) ***ஈட்டி;*** spear, lance. "இட்டிவேல் குந்தங் கூர்வாள்" (சீவக.2764). (செ.அக.).

ம., க. இட்டி; *Skt.* yaṣṭi.

[ஈட்டி - இட்டி.]

இட்டி[2] *itti,* பெ. (n.) 1. ***சுருக்கச் செய்யுள்;*** epigrammatic verse. 2. ***கொடை;*** gift. 3. ***பூசை;*** worship. 4. ***இச்சை;*** desire, longing.

[இடு - இட்டு - இட்டி]

இட்டிகை[1] *ittigai,* பெ. (n.) ***செங்கல்;*** bricks. "கண்சொரீஇ யிட்டிகை தீற்றுபவர்". (பழமொழி.108). (செ.அக.).

க. இட்டகெ, இட்டிகெ.

[இட்டு - இட்டிகை (சிறிய வடிவிலான செங்கல்).]

இட்டிகை[2] *ittigai,* பெ. (n.) 1. ***இடுக்கு வழி;*** narrow way. 2. ***கூட்டுமெழுகு;*** mixture of wax, resin, etc. (செ.அக.).

[இட்டு = சிறிது. இட்டு - இட்டிகை.]

இட்டிகை[3] *ittigai,* (n.) ***பலிபீடம்;*** alter for offering sacrifice. "நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகை" (அகநா.287). (சங்.இலக்.சொற்.).

இட்டிகை[4] *ittigai,* பெ. (n.) 1. ***திண்மை,*** (குறள்.743 பரி.உரை); firmness, stability. 2. ***அருமை;*** rarity.

[இட்டு - இட்டி = செறிவு, திண்மை, அருமை.]

இட்டிகை வாய்ச்சி *ittigai-vāycci,* பெ. (n.) ***செங்கற் களைச் செதுக்கும் கருவி*** (சீவக.2689,உரை); chisel for cutting burned clay. (செ.அக.).



இட்டிகைவாய்ச்சி

[இட்டிகை + வாய்ச்சி. வாய்ச்சி - வாயகன்ற கருவி.]

இட்டிடை[1] *ittidai,* பெ. (n.) ***சிறுகிய இடை;*** slender waist. "இட்டிடையின் மின்னிப் பொலிந்து" (திருவாச.7, 16). (செ.அக.).

க. இட்டிடெ (நெருக்கம், சந்து).

[இட்டு + இடை.]

இட்டிடை[2] *ittidai,* பெ. (n.) 1. ***சிறுமை*** (சூடா.); smallness, minuteness. "இட்டிடை யிடை தனக்கு" (கந்தபு.தெய்வயா.183). 2. ***இடையூறு;*** hindrance, impediment. "மிகுபிணி யிட்டிடைசெய" (திருப்பு. 1053). 3 ***கடைசற்கருவியின் ஒருறுப்பு*** (யாழ்ப்.); vice in a turner's lathe. (செ.அக.).

[இட்டு + இடை. இடை - முதனிலைப்பொருள் ஈறு.]

இட்டிடைஞ்சல் *ittidaiñjal,* பெ. (n.) 1. ***துன்பம்;*** trouble, affliction.'யாதோர் இட்டிடைஞ்சலும் வாராமற் காப்பாற்றினான்.' (யாழ்ப்.). 2. ***வறுமை;*** adversity, straits, great want; இது இட்டிடைஞ்சல் வருங்காலத்திலுதவும் (யாழ்ப்.) (செ.அக.). 3. ***இட்டறுதி*** (வின்.); critical time.

[இட்டு + இடைஞ்சல்.]

இட்டிது *ittidu,* பெ. (n.) 1. ***சிறிது;*** scantiness, slenderness. "ஆகாறளவிட்டி தாயினும்" (குறள்.478). 2. ***அணுக்கம்;*** proximity, nearness. "இட்டிதாக வந்துரை மினோ" (தேவா.1240,2). (செ.அக.).

[இட்டு → இட்டிது.]

இட்டிமை *ittimai,* பெ. (n.) 1. ***சிறுமை*** (திவா.); smallness. 2. ***ஒடுக்கம்*** (திருக்கோ.149, உரை); narrowness. (செ.அக.).

[இட்டு → இட்டிமை.]

இட்டிய *ittiya,* கு.பெ.எ. (adj.) ***சிறிய*** (ஐங்குறு.215); small. (செ.அக.).

[இட்டு → இட்டிய.]

இட்டியம் *ittiyam,* பெ. (n.) ***பாகம்*** (ஆ.அக.); part.

[இட்டு → இட்டியம்.]

இட்டிவனம் *ittivanam,* பெ. (n.) ***ஒரு சடங்கு*** (ஆ.அக.); ritual.

[இடு → இட்டி → இட்டிவனம்.]

இட்டிறை *ittirai,* பெ. (n.) ***இறையிடுகை*** (கப்பம் கட்டுதல்); paying tribute. (திவ்.அக.).

[இட்டு + இறை.]

இட்டீடு *ittīdu,* பெ. (n.) ***வழக்கு;*** dispute. ''என்னோட இட்டீடு கொண்டல்லது தரியா தாளாய்'' (ஈடு.8,2,6).

[இட்டு + ஈடு. இடு → ஈடு = அடித்தல், அடிதடி, கலவரம், இட்டீடு = சில்லறைக் கலகம்.]

இட்டீடுகொள்ளு-தல் *ittīdu-kollu-,* 16. செ.கு.வி. (v.i.) ***சொல் கொடுத்துச் சொல் வாங்குதல்;*** provoke greater irritation and retort. ''அவனுக்கு இட்டீடுகொள்ளு கைக்குப் பற்றாசு இல்லாதபடி'' (ஈடு.6,2,ப்ர). (செ.அக.).

[இட்டு + ஈடு + கொள்ளு.]

இட்டீறு *ittīru,* பெ. (n.) ***செருக்காற்செய்யும் செயல்;*** action proceeding from one's haughtiness or arrogance. ''இட்டீறிட்டு விளையாடி'' (திவ். நாச்சி.14,1). (செ.அக.).

[இட்டு - சிறுமை. இட்டு + ஊறு → இட்டூறு → இட்டீறு. சிறுமையுறும் செயல்கள்.]

இட்டூறு பார்க்க: see *ittūru.*

இட்டு[1] *ittu,* கு.வி.எ. (adv.) 1. ***தொடங்கி;*** beginning with. ''முதலிட்டு ஐந்து பாட்டாலே'' (திவ்.திருவாய்.2,10 பன்னீ.ப்ர.). 2. ***காரணமாக*** (கொ.வ.); for the sake of, on account of, as in. அதையிட்டு வந்தான் - இடை. (part.) ஓர் அசை (உரி.நி.); expletive, as in செய்திட்டு. (செ.அக.).

[இடு → இட்டு.]

இட்டு[2] *ittu,* பெ. (n.) ***சிறுமை;*** smallness. ''இட்டுவாய்ச் சுனைய'' (குறுந்.193). (செ.அக.).

க. இட்டு.

[இடு → இட்டு. இள் → இடு = சிறுத்தல்.]

இட்டு[3] *ittu,* பெ. (n.) 1. ***விருப்பம்;*** desire. 2. ***நுண்மை*** (ஆ.அக.); minuteness.

[இள் → இட்டு.]

இட்டுக்கட்டு-தல் *ittu-k-kattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. ***இல்லாததை ஏற்றிச் சொல்லுதல்*** (கொ.வ.); to concoct. 2. ***கற்பனை செய்தல்*** (ஆ.அக.); to draw upon the imagination, as in writing poetry or drama. 'அவன் கவி இட்டுக் கட்டுகிறான்' (செ.அக.). 3. ***செயலை முடிக்க முனைந்து நிற்றல்;*** to determine, to finish a deed.

[இட்டு + கட்டு.]

இட்டுக்கொடு[1]**-த்தல்** *ittu-k-kodu-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***ஏற்றிக் கொடுத்தல்*** (ஆ.அக.); to give over and above or extra. ''ஒன்றிரண் டிட்டுக்கொடுத்த லியல்பு'' (பு.வெ.1,17). (செ.அக.).

[இடுதல் = வைத்தல். இடு → இட்டு + கொடு. இட்டுக்கொடுத்தல் = மேலொன்று வைத்துக்கொடுத்தல்.]

இட்டுக்கொடு[2]**-த்தல்** *ittu-k-kodu-,* 4 செ.கு.வி. (v.i.) ***புலாலுணவு படைத்தல்*** (இராட்.); to serve meat. (செ.அக.).

[இடுதல் = பிடுதல், பிசைதல். இடு → இட்டு + கொடு.]

இட்டுக்கொண்டுபோ-தல் *ittu-k-kondu-pō-,* 10 செ.குன்றாவி. (v.t.) ***கூட்டிக்கொண்டு செல்லுதல்*** (கொ.வ.); to take a person along with oneself. (செ.அக.).

[இட்டு + கொண்டு + போ. இடுதல் = வைத்தல். இடு → இட்டு = உடனழைத்து, உடன்வைத்து.]

இட்டுக்கொண்டுவா-தல் (இட்டுக்கொண்டு வருதல்) *ittu-k-konduvā-,* 15 செ.குன்றாவி. (v.t.) ***உடனழைத்து வருதல்;*** to bring, to take along with. 'செட்டியாரையுமிட்டுக் கொண்டு வாருங்கள்' (பிரதாப சந்.67).

[இட்டு + கொண்டு + வா.]

இட்டுநீட்டு-தல் *ittunīttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) (நேரே வாராது) ***தூதர் வாயிலாக வரவிடுதல்;*** to send through an emissary or messenger. (திவ்.81).

[இட்டு + நீட்டு.]

இட்டுநீர் *ittu-nīr,* பெ. (n.) ***தாரைவார்க்கும் நீர்*** (இ.வ.); water poured by the donor in the palms of the donee, in making a gift. (செ.அக.).

[இடுதல் = மேலிடுதல், தெளித்தல். இடு → இட்டு + நீர்.]

இட்டுப்பிரி-தல் *ittu-p-piri-,* 4 செ.குன்றாவி. (v.t.) ***அணிமையிற்றலைவன் பிரிதல்*** (கலித்.121, உரை); to be separated from one's lady - love by only a short distance. (செ.அக.).

[இட்டு - சிறுமை, சிறிதுகாலம். இட்டு + பிரி.]

இட்டுப்பிரிவு *ittu-p-pirivu,* பெ. (n.) ***மிக அண்மையிற் றலைவன் பிரியும் பிரிவு*** (ஆ.அக.); separation by a short distance; parting of a lover to go to a place not far off. ''இட்டுப்பிரி விரங்கினும்'' (தொல்.பொருள். 111.) (செ.அக.).

[இட்டு + பிரிவு.]

இட்டுப்பிற-த்தல் *ittu-p-pira-,* 3 செ.கு.வி. (v.i.) ***ஒரு காரியத்திற்காகப் பிறத்தல்*** (ஆ.அக.); to be born with a mission ''கைங்கரிய ஸாம்ராஜ்யத்துக்கு இட்டுப்பிறந்து.'' (ஈடு.2,3,1) (செ.அக.).

[இட்டு + பிறத்தல். இடுதல் - வைத்தல் ஒன்றின் மேலிட்டுப் (ஒரு காரணத்தை முன்வைத்து) பிறத்தல்.]

இட்டுப்புகுதல் *ittu-p-pugudal,* பெ. (n.) ***நாட்டியத்துக் குரிய கால்களுள் ஒன்று.*** (சிலப்.3.14,பக்.90.கீழ்க்கு றிப்பு); a kind of step in dance. (செ.அக.).

[இட்டு + புகுதல்.]

இட்டுமாறு-தல் *ittumāru,* 5 செ.கு.வி. (v.i.) ***பழைமை நீங்கிப் புது நிலைமை அடைதல்;*** old yielding place to new, revival, refreshment. (திவ்.அக.).

[இட்டு + மாறு.]

இட்டுரை-த்தல் *itturai-,* 4 செ.குன்றாவி. (v.t.) ***சிறப்பித்துச் சொல்லுதல்*** (பு.வெ.4,11); praise, extol, admire, value. (செ.அக.).

[இடு - இட்டு = மேல் வைத்து, புகழ்ந்து. இட்டு + உரைத்தல்.]

இட்டு வட்டி *ittu-vatti,* பெ. (n.) ***சோற்றுக்கரண்டி*** (நெல்லை.); vessel for serving rice.

[இடு → இட்டு. இடுதல் = பிடுதல், பிரிதல், இட்டுவட்டி = பிரித்தெடுக்கும் வட்டி.]

இட்டுவா(வரு)-தல் *ittu-vā-,* 15 செ.குன்றாவி. (v.t.) 1. ***அழைத்து வருதல்*** (கொ.வ.); fetch, as a person. 2. ***கொடுத்துவிட்டு வருதல்*** (ஆ.அக.); give and come back. ''இட்டுவாவென்றால் சுட்டுவந்தவன் இவ்வநுமா னன்றோ.''

[இடு → இட்டு + வா.]

இட்டுறுதி[1] *itturudi,* பெ. (n.) ***கண்டிப்பு*** (வின்.); firmness, severity, rigour.

[இட்டு + உறுதி. இடுதல் = வைத்தல், நம்புதல். இட்டுறுதி = நம்பிக்கை உறுதி.]

இட்டுறுதி[2] *itturudi,* பெ. (n.) ***இடுக்கண் காலத்து உதவி*** (யாழ்.அக.); help in times of distress.

[இடு = வைத்தல், தருதல். உதவுதல். இடு → இட்டு + உறுதி.]

‡**இட்டூறு** *ittūru,* பெ. (n.) ***பழிகூறுதல், செய்ய வேண் டிய நலன்களைச் செய்யவில்லை என்பதற்காகக் கூறப்படும் குற்றச்சாட்டு;*** grievance.

[இடு + ஊறு = இட்டூறு.]

இட்டேற்றம் *itterram,* பெ. (n.) 1. ***பொய்யாகக் குற்றஞ்சாட்டுகை;*** false accusation. இப்படி இட்டேற் றம் பேசுவதாகாது. (கொ.வ.). 2. ***கொடுமை;*** tyranny, cruelty, injustice. ஏனிப்படி இட்டேற்றம் பண்ணுகிறாய்? (யாழ்ப்.). (செ.அக.). 3. ***அல்நயன்;*** foulplay. 4. ***முழுப்பொய்;*** blatant lie. (ஆ.அக.).

[இடுதல் = வைத்தல். இடு → இட்டு + ஏற்றம்.]

இட்டேறி[1] *itteri,* பெ. (n.) 1. ***வயல்களினிடையே செல்லும் வரப்புப்பாதை*** (தெ.ஆ.); narrow raised foot path between two fields. 2. ***வண்டிப்பாதை*** (கோவை); cart-tract.

ம. இட்ளு.

[இடு - இட்டு = சிறுமை. ஏறு - ஏறி = ஏறிச்செல்லும் வரப்பு, ஒற்றையடிப் பாதை.]

இட்டேறு-தல் *itteru-,* 6 செ.கு.வி. (v.i.) 1. ***கூடியதா தல்;*** to be achieved. 2. ***போதியதாதல்;*** to be sufficient. (செ.அக.).

[இட்டு = வைத்து. ஏறுதல் = மிகுதல். இட்டேறுதல் - மிகுதியாக வைத்திருத்தல், வளமையால் சிறத்தல்.]

இட்டோட்டு *ittōttu,* பெ. (n.) ***அலைக்கழிவு*** (யாழ்ப்.); vexation, trouble. (செ.அக.).

[இட்டு + ஓட்டு. இட்டோட்டு = பிரித்து அலைத்தல், துன்புறுத்து தல்.]

இட்டோடு *ittōdu,* பெ. (n.) ***ஒன்றாமை;*** disunion, discord, separation. இட்டோடு பண்ணுகிறது. (வின்.).

[இட்டு + ஓடு. இட்டு = பிரிவு.]

இட-த்தல் *ida-,* 3 செ.கு.வி. (v.i.) 1. ***பிளவுபடுதல்;*** to be cracked, broken. ''களிறு வழங்கலி னிடந்தமண்'' (கூர்மபு.அந்தக.40). 2. ***உரிதல்;*** to be stripped off, as the outer covering. 'முத்துக்கள் தோல்தேய்ந்தனவும் தோலிடந்தனவும்' (S.I.I.93,49). - செ.குன்றாவி. (v.t.). 1. ***தோண்டுதல்*** (பெரியபு.கண்ணப்.183); to dig, scoop out, hollow. ம. இட. 2. ***பிளத்தல்;*** to force away through, as an elephant in battle; to root up, as a hog; to gore, as a bull. ''பொன்பெயரோன் மார்பிடந்த'' (திவ்.இயற்.1,23). 3. ***பெயர்த்தல்;*** to dislodge, as a stone, to throw up, as clods in a furrow. ''எயிற்றுப் படையா லிடந்து'' (பு.வெ.6,13). 4. ***குத்தியெடுத்தல்,*** (திவ். இயற்.1,2); to fork. 5. ***உரித்தல்*** (திவா.); to peel off. (செ.அக.).

[இல் - துளைத்தற் கருத்துவேர். இல் → இள் → இள → இட. இடத்தல்.]

இடக்கண் *idakkan,* பெ. (n.) 1. ***இடப்புறக் கண்;*** left eye. 2. ***ஓரப்பார்வை;*** side glance.

க. எடகண்.

[இடம் + கண்.]

இடக்கண்ணியன் *idakkanniyan,* பெ. (n.) ***அலர்ந்த கண்ணியன்;*** one wearing wreath on the head. ''பகலிடக் கண்ணியன் பைதற் குழலன்'' (கலி.101). (சங்.இலக்.சொற்.).

[இடம் + கண்ணியன்.]

இடக்கர்[1] *idakkar,* பெ. (n.) ***சொல்லத்தகாத சொல்;*** indecent words; terms denoting things or actions too obscene to be uttered in good society. (செ.அக.).

[இள் - இள - இட - இடக்கர்.]

இடக்கர்[2] *idakkar,* பெ. (n.) ***தாறுமாறு செய்பவர்*** (ஆ.அக.); wrong doer, rude person.

[இடக்கு → இடக்கர்.]

இடக்கர்[3] *idakkar,* பெ. (n.) ***குடம்*** (பிங்.); water pot. (செ.அக.).

[இடு - இடம் (சிறிய பகுதி). இட - இடக்கர். (குடம்).]

இடக்கர்[4] *idakkar,* பெ. (n.) 1. ***மீதூர்கை*** (நாநார்த்த.); being close and crowded. (செ.அக.). 2. ***நெருக்கம்*** (ஆ.அக.); compactness.

[இள் → இடு = நெருங்குதல், நெருக்கம்.]

இடக்கரடக்கல் *idakkar-adakkal,* பெ. (n.) ***தகுதிவழக் குகளிலொன்று*** (நன்.267), நன்மக்களிடத்தே சொல லத்தகாத இடக்கரான வார்த்தைகளை மறைத்துப் பிற வற்றாற் சொல்வது; euphemism; use of indirect expression to avoid indecent language; one of three tagudi-valakku.

[இடக்கர் + அடக்கல்.]

இடக்கரடக்கு *idakkar-adakku,* பெ. (n.) ***இடக்கரடக் கல்*** பார்க்க; (செ.அக.); see *idakkaradakkal.*

[இடக்கர் + அடக்கு.]

இடக்கரிசை *idakkarišai,* பெ. (n.) ***செய்யுட்குற்றத் தொன்று*** (யாப்.வி.525); defect in versification. (செ.அக.).

[இடக்கர் + இசை.]

இடக்கல் *idakkal,* பெ. (n.) 1. ***தோண்டல்;*** digging. 2. ***கடைக்கால்;*** foundation. (சேரநா.).

ம. இடக்கல் (அடிக்கல்).

[இடக்கு → இடக்கல்.]

இடக்கன் *idakkan,* பெ. (n.) ***தாறுமாறு செய்பவன்*** (வின்.); rude, disrespectful person.

க. இடக்கன் (பணிக்கு வராதோன், பயனற்றவன்).

[இடக்கு → இடக்கன்.]

இடக்காரை யென்பு *idakkārai enbu,* பெ. (n.) ***இடது சவடி யெலும்பு;*** left collar-bone. (சா.அக.).

[இட + காரை + என்பு.]

இடக்கியம் *idakkiyam,* பெ. (n.) ***வல்லூறு வடிவம் எழுதிய தேர்க்கொடி*** (வின்.); flag; swallow-tail banner; standard hoisted on a car.

தெ. டெக்கியமு; க. டெகெ.

[இடக்கு[3] → இடக்கியம்.]

ஏனைப்பறவைகளை எதிர்த்துத் தாக்கும் இயல்புள்ள வல்லூறு என்னும் பறவை வடிவம் எழுதியதேர்க் கொடி.

இடக்கு[1]**-தல்** *idakku,* செ.கு.வி. (v.i.) ***விழுதல்;*** to fall down, fall. "மேனின் றிடிக்குமேல்" (சினேந்.444).

[இடக்குதல் = இடத்தல். இடத்தல் = பெயர்த்தல், இடம் பெயர்த் தல், விழுதல்.]

இடக்கு[2] *idakku,* பெ. (n.) 1. ***இடக்கர்;*** vulgar language. 2. ***ஏறுமாறு*** (கொ.வ.); cavil, captious speech. 3. ***முரண்செயல்;*** rudeness, incivility, insubordination, pertinacity, obstinacy, as of a balky horse. குதிரை இடக்குப்பண்ணுகிறது. (கொ.வ.), (செ.அக.). 4. ***இழி சொல்;*** mean word (ஆ.அக.).

க. எடகு.

[இட → இடக்கு, இடத்தல் = தோண்டுதல், துருவுதல், துன்புறுத் தல்.]

இடக்கு[3] *idakku,* பெ. (n.) 1. ***தடை;*** obstacle. 2. ***வல்லூறு என்னும் பறவை;*** royal falcon.

[இட → இடக்கு.]

பறவையைக் குறித்த 'இடக்கு' என்னும் சொல் பேச்சு வழக்கில் 'டேகை' எனத் திரிந்துள்ளது.

இடக்குமடக்கு *idakku-madakku,* பெ. (n.) 1. ***ஏறு மாறு;*** cavil, specious objection. (செ.அக.). 2. ***அலைக் கழிவு;*** harassment.

[இடக்கு + மடக்கு. முடக்கு → மடக்கு.]

இடக்குமுடக்கு *idakku-mudakku,* பெ. (n.) 1. ***நெருக் கம்;*** straits, difficult circumstances. 2. ***இடர்ப்பாடு;*** dilemma, predicament.

[இடக்கு + முடக்கு.]

இடக்கை[1] *idakkai,* பெ. (n.) 1. ***இடது கை;*** left hand. 2. ***இடக்கையாற் கொட்டும் ஒரு தோற்கருவி*** (சிலப்.3,27, உரை); small drum beaten by the left hand.



இடக்கை

க. எடகய்.

[இள + இட + கை - இடக்கை. வலக்கையை நோக்க இடதுகை வலிமை குறைந்ததாகக் கருதப்படும் மென்மை நோக்கி, இள + கை - இளக்கை → இடக்கை என வழக்கூன்றியது.]

இடக்கை[2] *idakkai,* பெ. (n.) 1. ***ஆமந்திரிகை;*** musical instrument. 2. ***ஒரு நாடு;*** name of a territory.

[இட → இடக்கை. இட = அகன்ற.]

இடக்கை[3] *idakkai,* பெ. (n.) ***பெருமுரசு வகை;*** large double drum. (செ.அக.).

[இடம் → இடக்கை = வாயகன்ற தோற் கருவி.]

இடக்கைச்சி *iḍakkaicci,* பெ. (n.) ***ஒரு வகை நாடி;*** a kind of pulse. (சா.அக.).

[இடம் + கை + சி.]

இடக்கையன் *iḍakkaiyaṉ,* பெ. (n.) ***இடக் கையால் வேலை செய்பவன்;*** one who does work by left hand.

ம. இடத்தன்; க. எடகய்ய.

[இடம் + கையன்.]

இடக்கையான் *iḍakkaiyāṉ,* பெ. (n.) ***அஞ்சாவீரன்*** (கதி.அக.); man with undaunted courage.

[இடக்கு → இடக்கையான்.]

இடகலை *iḍa-kalai,* பெ. (n.) ***நிலவின் கலை;*** phase of the moon.

[இட + கலை.]

இடகன் *iḍagaṉ,* பெ. (n.) ***இடப்பக்கத்தவன்;*** one who is on the left side. "குடகர்க்கிடகர்" (பெருந்தொ. 1005). (செ.அக.).
(செ.அக.).

[இட → இடகன்.]

இடங்கசாலை *iḍaṅga-sālai,* பெ. (n.) ***அக்கசாலை;*** mint. "வேங்கடாத்திரி தேவமகாராஜய்யனுக்குத் திருவையாறு இடங்க சாலை பாலிக்கையில்" (S.I.I.V, 224.) (செ.அக.).

[ஒருகா: விடங்கசாலை - இடங்கசாலை. விடங்கன் - சிவன்; தெய்வச்சிற்பம், தெய்வப்படிமங்கள் செய்யுமிடம்.]

இடங்கட்டுக்கொம்பு *iḍaṅ-kaṭṭu-k-kombu,* பெ. (n.) ***மாட்டுக்குற்ற வகை*** (பெரியமாட்டு.161); defect in cattle. (செ.அக.).

[இட(து) + கட்டுக்கொம்பு.]

இடங்கண் *iḍaṅkaṇ* பெ. (n.) 1. ***பறையின் அகன்ற கண் பகுதி*** (அக.87); middle of the membrane of a drum. 2. ***அகற்சி, பரப்பு;*** broad, big in area.

[இடம் + கண்.]

இடங்கணம்[1] *iḍaṅkaṇam,* பெ. (n.) ***வெண்காரம்*** (நன். 273, மயிலை); borax. (செ.அக.).

[இள - இடம் + கணம். இடம் = வெண்மை.]

இடங்கணம்[2] *iḍaṅkaṇam,* பெ. (n.) ***56 நாடுகளுள் ஒன்று;*** country, one of 56 tēyam. "கன்னட மிடங்கணம்",(திருவேங்கட.97) (செ.அக.).

[இடங்கண் - இடங்கணம்.]

இடங்கணி[1] *iḍaṅ-kaṇi,* பெ. (n.) 1. ***சங்கிலி*** (திவா.); chain. 2. ***இடங்கணிப்பொறி***(சீவக.102, உரை) பார்க்க; see *iḍaṅkaṇi-p-poṟi.* 3. ***ஆந்தை;*** owl. (சா.அக.).

[இடம் + கணி. இடங்கணி = இடமகலப் பருத்தது.]

இடங்கணி[2] *iḍaṅ-kaṇi,* பெ. (n.) ***உளி*** (வின்.); chisel. (செ.அக.).

[இடுதல் - பிடுதல், பிளத்தல், பிரித்தல். இடு - இட - இடங்குணி - இடங்கணி.]

இடங்கணிப்பொறி *iḍaṅkaṇi-p-poṟi,* பெ. (n.) ***கோட்டை மதிலில் வைக்கப்படும் இயந்திரங்களு ளொன்று;*** (சிலப்.15,210 உரை); chain instrument mounted on the ramparts of a fort for slinging stones at the enemy, advancing to attack the fortification.

[இடங்கணி + பொறி. இடங்குணி → இடங்கணி.]

இடங்கப்பட்டை *iḍaṅga-p-paṭṭai,* பெ. (n.) ***இலவங் கப்பட்டை;*** cinnamon (சா.அக.).

[இலவங்கம் - இலங்கம் - இடங்கம் + பட்டை. (கொ.வ.).]

இடங்கம்[1] *iḍaṅgam,* பெ. (n.) ***உளி*** (தணிகைப்பு.அகத். 69); chisel, stone cutter's chisel. (செ.அக.).

[இடுதல் = பிடுதல், பிளத்தல், இடு → இடங்கம்.]

இடங்கம்[2] *iḍaṅgam,* பெ. (n.) 1. ***செம்மணி*** (இரத்தினம்) ***நிறுக்கப்பயன்படுவதும் 24 செம்மணி கொண்டதுமான நிறைகல்*** (சுக்கிரநீதி,189); weight of 24 iratti, for weighing precious stones. 2. ***மண் தோண்டும் படை*** (நாநார்த்த.); shovel. 3. ***வாளினுறை*** (நாநார்த்த.); scabbard. 4. ***கணைக்கால்*** (நாநார்த்த.); ankle. 5. ***பொரிகாரம்*** (நாநார்த்த.); borax. 6. ***சினம்*** (நாநார்த்த.); anger. 7. ***செருக்கு*** (நாநார்த்த.); pride, arrogance. 8. ***கற்சாணை*** (நாநார்த்த.); whetstone. 9. ***இலவங்கம்,*** (சா.அக.); clove.

[இடங்கம் - பிளக்கும் அல்லது தோண்டுங் கருவி. அவ்வடிவிலமைந்த நிறைகல். வெட்டு வாளின் உறை. வெட்டுவது போன்று சினத்தின் வெளிப்பாடான செருக்கு.]

இடங்கர்[1] *iḍaṅgar,* பெ. (n.) 1. ***இழிந்தோர்*** (சூடா.) debauchees, libertines, licentious men. 2. ***முதலை வகை*** crocodile. "கொடுந்தாண் முதலையு மிடங்கருங் கராமும்" (குறிஞ்சிப்.257). (செ.அக.).

[இடு - இட - இடங்கர். பிரிக்கும் குணம் கொண்ட கயவர், இழிகுணம் வாய்ந்தோர், வாயகன்ற முதலை.]

இடங்கர்[2] *iḍaṅgar,* பெ. (n.) 1. ***நீர்ச்சால்*** (திவா.) large bucket. 2. ***குடம்*** (திவா.); pot. (செ.அக.).

[இடம் - இடங்கர் = வாயகன்ற கலம்.]

இடங்கர்[3] *iḍaṅgar,* பெ. (n.) ***சிறுவழி*** (வின்.); narrow path. (செ.அக.).

க. இடுகுரு; தெ. டொங்க.

[இடு = சிறு. இடு - இடங்கர்.]

இடங்கரம் *iḍaṅgaram,* பெ. (n.) ***மகளிர்க்குண்டாகும் மாதவிடாய்த்தீட்டு;*** defilement from menses. (செ.அக.).

[இடு - இட - இடங்கரம் - பிரிந்து அல்லது விலகியிருத்தற்குக் காரணமான தீட்டுக் காலம்.]

இடங்கருங்குட்டம் *idankaruṅkuṭṭam,* பெ. (n.) ***இடம் கரிதாகிய குழி;*** dark depth. "இடங்கருங் குட்டத்துடன் றொக்கோடி" (புறம்.37).

[இடம் + கரும் + குட்டம்.]

இடங்கழி[1]-த்தல் *iḍaṅ-gaḻi-,4* செ.குன்றாவி. (v.t.) ***இடத்தினின்று நீக்கப்படுதல்;*** to be dismissed, to be expelled. "தடங்கணார்க் கிடங்கழி காமனன்ன காளை" (சீவக.2038) (செ.அக.).

[இடம் + கழி.]

இடங்கழி[2] *iḍaṅgaḻi,* பெ. (n.) 1. ***எல்லை கடக்கை;*** passing beyond bounds; overstepping the proper limit. "இடங்கழி காமமொ டடங்கா னாகி" (மணி.18,119). 2. ***காம மிகுதி;*** excess of lust. "இடங்கழிமான் மாலையெல்லை" (பு.வெ.12, பெண்பாற்.5). 3. ***மீதூர்கை*** (பிங்.); being pressed for want of space. 4. ***மர வேனம்;*** wooden vessel for keeping salt or other things. உப்பிடங்கழி. (கொ.வ.). 5. ***ஒரு படியளவு;*** (T.A.S.i, 293); measure of capacity = 8 ollocks. (செ.அக.).

ம. இடங்ஙழி. இடங்ஙாழி.

[இடம் + கழி. இடம் - இருப்பிடம், எல்லை.]

இடங்கழிநாயனார் *iḍaṅ-kaḻi-nāyaṉār,* பெ. (n.) ***அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவர்*** (பெரியபு.); chief of Kōnāḍu, who is canonized and included in the galaxy of 63 saiva saints (செ.அக.).

[இடங்கழி[2] + நாயனார்.]

இடங்கழிமை *iḍaṅgaḻi-mai,* பெ. (n.) ***இடங்கழி*** பார்க்க; see *iḍaṅgaḻi.*

இடங்கழியர் *iḍaṅgaḻiyār,* பெ. (n.) 1. ***கயவர்*** (சூடா.); lewd persons. 2. ***காமுகர்*** (செ.அக.); profligates.

[இடங்கழி + அர்.]

இடங்காரம்[1] *iḍaṅ-gāram,* பெ. (n.) 1. ***மத்தளத்தின் இடப்பக்கம்*** (வின்.); left hand side of a double drum, the end of which is glued to produce the required tone. 2. ***புகழ்;*** fame, reputation. (ஆ.அக.).

ம. இடங்காரம்.

[இடம் → இடங்காரம்.]

இடங்காரம்[2] *iḍaṅgāram,* பெ. (n.) ***வில்லின் நாணோசை*** (சங்.அக.); twang of a bow-string (செ.அக.).

[ஒருகா. இழுங்காரம் - இடங்காரம்.]

இடங்கெட்டபாவி *iḍaṅ-keṭṭa-pāvi,* பெ. (n.) 1. ***சீரழிந்தவன்*** (வின்.); utterly destitute, miserable wretch. (செ.அக.). 2. ***ஆதரவற்றவன்;*** destitute person.

[இடம் + கெட்ட + பாவி.]

இடங்கெட்டபேச்சு *iḍaṅ-keṭṭa-pēccu,* பெ. (n.) ***ஒழுங்கற்ற சொல்*** (கொ.வ.); words spoken without any regard to reason, season, place or person. (ஆ.அக.).

[இடம் + கெட்ட + பேச்சு.]

இடங்கெட்டவன் *iḍaṅ-keṭṭavaṉ,* பெ. (n.) 1. ***அலைபவன்;*** wanderer. 2. ***கயவன்;*** dishonest man. (செ.அக.).

[இடம் + கெட்டவன்.]

இடங்கேடு[1] *iḍaṅ-kēḍu,* பெ. (n.) 1. ***ஏழ்மை*** (வின்.); poverty. 2. ***தாறுமாறு;*** inconsistency, incoherence. (செ.அக.).

ம. இடங்கேடு.

[இடம் + கேடு.]

இடங்கேடு[2] *iḍaṅ-kēḍu-,* பெ. (n.) 1. ***நாடுகடத்துகை*** (இராட்.); banishment. 2. ***எக்கச்சக்கம்;*** awkward predicament. "இடங்கேடாய்ச் சென்று சிக்கிக்கொண்டாய் சிறுபிள்ளாய்" (தெய்வச். விறலிவிடு.373). (செ.அக.).

[இடம் + கேடு.]

இடங்கை *iḍaṅgai,* பெ. (n.) 1. ***இடக்கை;*** left hand. "நெடுங் கோதண்ட மிடங்கையி லெடுத்து" (திருவிளை. யானை.30). 2. ***திரவிடர்களின் மதிப்புரவின் பொருட்டுத் தங்களுக்குள் பகைத்துப் பிரிவுபட்ட வகுப்பினருள் ஒரு பிரிவார்;*** left hand clan, one of the two clans into which some Dravidian castes in the Cōḻā country had separated themselves by about the 11th c.A.D., such as the artisan against the agricultural - the fued arising chiefly from each claiming certain honours such as riding a horse on marriage occasions, etc. (செ.அக.).

ம. இடங்கை; **க.** எடகெய்; **தெ.** எடம; **கொலா.** எடமகை; **குவி.** டெம்பா; படை. எடகை.

[இடம் (இடது) + கை.]

இடங்கொடு-த்தல் *iḍaṅ-koḍu-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***கண்டிப்பின்றி நடக்கவிடுதல்;*** to be indulgent or lax; to show lenience. சிறுபிள்ளைகட்கு இடங்கொடுத்தால் தலைமேலேறும். 2. ***பிடிகொடுத்தல்;*** to yield, give in. "என்னவு மிடங்கொடாம லெதிருற" (பாரத. நிரைமீட்சி.124). (செ.அக.).

க. எடகொடு.

[இடம் + கொடு.]

இடங்கொள்(ளு)-தல் *iḍaṅ-koḷ-,* 16 செ.கு.வி. (v.i.) 1. ***பரவுதல்;*** to spread from place to place. "இடங்கொள் சமயத்தை யெல்லாம்" (திவ். திருவாய்.5,2,4). 2. ***இடம் பற்றுதல்;*** to have sufficient room. "சாது மருண்டால் காடு இடங்கொள்ளாது" (பழ.). 3. ***அகலமாதல்;*** to be spacious, vast, capacious. "இடங்கொள் பூதலம்" (நைடத.நகரப்.16) - 7 செ. குன்றாவி. (v.t.).

இருப்பிடமாகக் கொள்ளுதல்; take up one's abode in; to accept, as residence; to occupy, as one's residence. "இறைவ்னே நீ யென்னுட லிடங்கொண்டாய்" (திருவாச. 22,5). (செ.அக.).

க. எடெகொள்.

[இடம் + கொள்.]

இடங்கோலு-தல் *idaṅ-kōlu -*, 16 செ.கு.வி. (v.i.) 1. ***ஊன்ற இடஞ்செய்து கொள்ளுதல்*** (வின்.); to gain a footing, establish oneself in a place. 2. ***முன்னேற்பாடு செய்தல்;*** to take preparatory measures. (செ.அக.).

[இடம் + கோலு.]

இடச்சுக் குளம்பு *idaccu-k-kuḷambu*, பெ. (n.) ***நீர் முள்ளி;*** water-thorn (சா.அக.).

[இடத்து + குளம்பு.]

இடச்சுரிகை *idaccurigai*, பெ. (n.) ***உடைவாள்;*** sword or dagger suspended from the girdle.

ம. இடச்சுரிக.

[இடை → இட + சுரிகை.]

இடச்சுற்று *ida-c-cuṟṟu*, பெ. (n.) 1. ***இடப்புறமாய்ச் செல்லும் வளைவு;*** curving to the left as a line on the palm of the hand. 2. ***இடஞ்செல்லுகை;*** going from right to left. (செ.அக.).

[இடம் (இடது) + சுற்று.]

இடசாரி *ida-sāri*, பெ. (n.) ***இடப்பக்கமாக வரும் நடை;*** turning or wheeling to the left, as in dancing and in military tactics. (செ.அக.).

க. எடசாரி (இடத்தினின்று வலத்திற்குச் சுற்றுவது).

[இட(து) + சாரி.]

இடஞ்சுழி *idaṅ-cuḻi*, பெ. (n.) ***உடம்பிலே இடப்பக்கம் நோக்கியிருக்குஞ் சுழி;*** curl that turns to the left, as one of the points of a horse; curves that turn to the left, as on the thumb.

[இடம் (இடது) + சுழி.]

இடத்தகைவு *ida-t-tagaivu*, பெ. (n.) ***எதிர்வழக்காளியைக் குறிப்பிட்ட இடம் விட்டுப்போகாமல் வழக்காளி அரசாணை சொல்லித் தடுக்கை*** (சங்.அக.); prohibition by the complainant, in the name of the King, of a defendant's leaving a prescribed location (செ.அக.).

[இடம் + தகைவு.]

இடத்து *idattu*, இடை. (part.) ***இடத்தில் என்ற பொருளில் பெயரெச்சம் சுட்டு வினாவுடன் இணைந்துவரும் இடைச்சொல்;*** at the place, at the time. (எ-டு) அவ்விடத்து, எவ்விடத்து.

ம. இடத்து.

[இடம் → இடத்து.]

இடத்து மாடு *idattu-māḍu*, பெ. (n.) ***நுகத்தின் இடப்பக்கத்து எருது;*** ox tied to the left side of the yoke. (செ.அக.).

மறுவ. இடத்தை.

[இடது + மாடு = இடத்துமாடு.]

இடத்துய்த்தகறல் *idattuyttagaṟal*, பெ. (n.) ***தலைமகளை இடத்துய்த்த தோழி தலைமகன் எதிர்ப்படுவனென்று கருதித் தானீங்குதலைக் கூறும் அகத்துறை*** (களவியற்.73); theme which describes the maid leaving the heroine alone to meet the hero, in the appointed place.

[இடத்து + உய்த்து + அகறல்.]

இடத்துய்த்தல் *idattuyttal*, பெ. (n.) ***தோழி தலைமகற்கு இடங்காட்டி மீண்டுந் தலைமகளுழைச் சென்று அவளைத் தலைமகனின்றவிடத்துச் செலவிடுக்கும் அகத்துறை*** (களவியற்.72); theme in which the maid indicates to the hero, the appointed place of meeting and then leads the heroine to that place.

[இடத்து + உய்த்தல்.]

இடத்துறை *idattuṟai*, பெ. (n.) ***காசாகச் செலுத்தும் வரி;*** ancient tax in money.

[ஒருகா. இடத்து + உறு - இடத்துறு → இடத்துறி → இடத்துறை பொற்காசு அச்சிடப்படும் அக்கசாலையில் காசாகவே பெறப்படும் வழக்கம் நோக்கிப் பெற்ற பெயராகலாம்.]

இடத்தை *idattai*, பெ. (n.) ***இடத்து மாடு*** பார்க்க; see *idattu māḍu.*

[இடது → இடத்தை.]

இடத்தையச்சொல் *idattaiya-c-col*, பெ. (n.) ***இடத்தை ஐயப்படுத்துஞ் சொற்கள்: அவை, யாங்கு, யாண்டு, யாங்ஙனம் முதலியன;*** interrogative words which denote place (ஆ.அக.).

[இடம் → இடத்து + ஐயம் + சொல்.]

இடது *idadu*, கு.பெ.எ. (adj.) ***இடப்புறமான*** (கொ.வ.); left. (செ.அக.).

ம. இடது; க. எட; **கோத.** எட; **துட.** ஒட; **குட.** எடதெ; **து.** எட,யட; **கொலா.** எடம; **நா.** டாவ; **பர்.** எம்ப்ரி; **கோண்.** டாவா; **குவி.** டெம்ப.

[இடம் → இடது.]

இடது கன்னம் *idadu-kaṉṉam*, பெ. (n.) ***எழுவோரையின்*** (இலக்கினத்தின்) பதினோராமிடம். (சங்.அக.); the 11th house from the ascendant. (செ.அக.).

[இடம் → இடது + கன்னம்.]

இடது கை *idadu-kai*, பெ. (n.) ***இடக்கை*** பார்க்க; see *idakkai.*

[இடம் - இடது + கை.]

இடது கைக்காரன் *iḍadu-kai-k-kāraṉ,* பெ. (n.) ***இடக்கை வழக்கமுள்ளோன்;*** left handed man. (செ.அக.).

க. எடச.

[இடது + கை + காரன்.]

இடதுகைப் படுக்கை *iḍadu-kai-p-paḍukkai,* பெ. (n.) ***இடதுகைப் பக்கமாக ஒருக்கணித் துறங்கல்;*** lying resting the body on the left side. (சா.அக.).

[இடது + கை + படுக்கை.]

இடதுகைவெட்டு *iḍadu-kai-veṭṭu,* பெ. (n.) ***நாணயக் குற்ற வகை*** (சரவண.பணவிடு.67); blemish in coins. (செ.அக.).

[இடது + கை + வெட்டு.]

இடதுசெவி *iḍadu-ševi,* பெ. (n.) ***எழுவோரையின்*** (இலக்கினத்தின்) ***பதினோராமிடம்.*** (சங்.அக.); 11th house from the ascendant. (செ.அக.).

[இடம் - இடது + செவி.]

இடதுநாளக்குழல் *iḍadunāḷakkuḻal,* பெ. (n.) ***இடப் பக்கம் ஓடும் சாரி அரத்தக் குழாய்;*** left dilated channel for venous blood - left sinus venosus. (சா.அக.).

[இடது + நாளம் + குழல்.]

இடந்தலைப்படல் *iḍantalai-p-paḍal,* பெ. (n.) ***ஒன்று கூடுதல்;*** to join with, to meet.

[இடம் + தலைப்படல்.]

இடந்தலைப்பாடு *iḍan-talai-p-pāḍu,* பெ. (n.) ***இயற் கைப் புணர்ச்சி நிகழ்ந்த இடத்தில் இரண்டாமுறை தலைவனுந் தலைவியுங் கூடுகை*** (தொல்.பொ.498, உரை.); second meeting of the lovers in the same place where they first had intercourse.

[இடம் + தலைப்பாடு.]

இடந்துடி-த்தல் *iḍan-tuḍi-,* 4 செ.கு.வி. (v.i.) ***இடக் கண், இடத்தோள் துடித்தல்*** (கம்பரா.காட்சி.35); to have twitchings on the left side, referring to the muscles of the eyes and the shoulder, considered to forebode good if in women and evil if in men, the reverse being predicted of the twitchings on the rightside.

[இடம் + துடித்தல்.]

இடநாகம் *iḍa-nāgam,* பெ. (n.) ***அடைகாக்கும் நல்ல பாம்பு.*** (சங்.அக.); incubating cobra, (செ.அக.).

[இடம் + நாகம்.]

இடநாள் *iḍa-nāḷ,* பெ. (n.) ***உருள், கொடுநுகம், சுளகு, முக்கோல்*** (உரோகிணி, மகம், விசாகம், திருவோணம்) ***முதலாக மும்மூன்று விண்மீன்கள். (விதான.கால சக்.2);*** technical term referring to the set of three naksatras beginning with each of the 4th, 10th, 16th or 22nd asterism for calculation. (செ.அக.).

[இடம் + நாள்.]

இடநிலைப்பாலை *iḍa-nilai-p-pālai,* பெ. (n.) ***பண் வகை.*** (சிலப்.10.கட்டுரை,14.); class of ancient melody-types. (செ.அக.).

[இடை + நிலை + பாலை.]

இடப்படி *iḍappaḍi,* பெ. (n.) ***ஓர் அடிவைப்பு;*** length of a step, pace. (செ.அக.).

[இடம் + படி.]

இடப்பு *iḍappu,* பெ. (n.) 1. ***பிளப்பு;*** large cleft, gap. 2. ***பெயர்த்த மண்கட்டி*** (வின்.); clod of earth thrown out by digging or ploughing.

[இட → இடப்பு. இடத்தல் = பிளத்தல், தோண்டுதல், பெயர்த்தல்.]

இடப்புக்கால் *iḍappu-k-kāl,* பெ. (n.) ***அகல வைத்த கால்.*** (வின்.) legs spread apart. (செ.அக.).

[இடத்தல் = பிளத்தல், விரித்தல். இட + இடப்பு + கால்.]

இடப்புறம் *iḍa-p-puṟam,* பெ. (n.) ***இடது பக்கம்;*** left side. (செ.அக.).

க. எடகடெ.

[இடம் + புறம்.]

இடப்பெயர் *iḍa-p-peyar,* பெ. (n.) ***இடத்தைக் குறிக் கும் பெயர்ச்சொல்.*** (நன்.132) noun denoting place. (செ.அக.).

[இடம் + பெயர்.]

இடப்பொருள் *iḍa-p-poruḷ,* பெ. (n.) ***ஏழாம் வேற்று மைப்பொருள்.*** (நன்.302); sense of the locative. (செ.அக.).

[இடம் + பொருள்.]

இடம்[1] *iḍam,* பெ. (n.) 1. ***தாவு;*** place, room, site, spot, situation. 2. ***சூழல்;*** context. இடத்தைப் பார்த்துப் பொருள் கொள்க. 3. ***வீடு*** (திவா.); house, residence. 4. ***காரணம்;*** ground, reason. அப்படிச் சொல்லுவதற்கு இடமுண்டா? 5. ***வானம்*** (திவா); sky, heaven. 6. ***அகலம்*** (சூடா.); breadth, width, expanse.7. ***இடப்பக் கம்;*** left side. பாதையில் இடம் செல்க (உவ.). 8. ***அளவு;*** measure, degree, limit. "உகலிடந் தான்சென்று" (திருக்கோ.42). 9. ***ஆடையின் அகலமுழம்*** (இ.வ.); cubit, in measuring the width of cloth. 10. ***பொழுது;*** time. "அகலிரு விசும்பிற் பகலிடந் தரீஇயர்" (பதிற்றுப். 52,28). 11. ***ஏற்ற சமயம்;*** fitting time, opportunity. "நாடொறு மிடம்பெறாமல்" (திருவாலவா.35,8). 12. ***செல்வம்;*** wealth, affluence, prosperity. "இடமில்லாக் காலுமிரவொல்லாச் சால்பு" (குறள்.1064). 13. ***வலிமை*** (பிங்.); ability, power. 14. ***மூவகையிடம்*** (நன்.259); person, three in number, viz, தன்மை, முன்னிலை, படர்க்கை. 15. ***படுக்கை*** (பிங்.); bed. 16. ***தொலைவு;*** distance. திருநாவாய் எத்தனை இடம் போகும்? (ஈடு,9,8,1) - இடை. (part.) ஏழனுருபு (நன். 302); sign of the locative, as in அவனிடம். (செ.அக.).

ம. இடம்; **க.** இடெ, எட; **தெ.** எட, எடமு; **கோத.** எடம்; **துட.** இடன்; **குட.** எடெ.

[இல் → இள் → இடு → இடம் = இடைவெளி, பக்கம்.]

இடு → இடம். இடுதல் - வைத்தல். இடம் = ஒன்றை வைத்துக் கொள்ளுவதற்குரிய இருப்பிடம். இடு = ஒடுங்குதல், சிறுத்தல். ஓரிடத்தில் ஒரு பொருளை ஒடுக்கமாக ஒடுக்கிச் செப்பமாக நிலைபெறுத்துதல்; அங்ஙனம் வைத்தற்குரிய இடம். கக்கத்தில் இடுக்கிக் கொள்ளவும் குழந்தையை இடப்பக்கத்து இடுப்பில் இருத்திக்கொள்ளவும் உடம்பின் வலப் பகுதியை விட இடப் பகுதி இடமாகப் பயன்படுதலின் இடத்தோள் இடது இடுப்பு இவற்றுக்கு உரிய இடமாயின. தோள் கொடுத்துத் தூக்குதற்கு இடத்தோளே பயன்படுதல் காண்க. வலக்கை வலிமை (வலம்) யுடையதாதலின் வலம் - அப்பகுதி முழுவதும் வலப்பக்கம் ஆயிற்று.

இடம், வினையடியாக ஒரு பொருளை வைத்தற்குரிய இடத்தையும் பெயரடியாக இடைவெளி, பக்கம், அகலம் ஆகிய பொருள்களையும் குறித்தது.

இடம்[2] *iḍam,* இடை. (part.) ***உடன், ஒடு என்ற பொருளில் வரும் இடைச் சொல்;*** to, with.

ம. இடம்.

[இடு → இடம்.]

இடம்[3] *iḍam,* பெ. (n.) ***ஓரை*** (இராசி) (நாநார்த்த.); sign of the Zodiac. (செ.அக.).

[இடு → இடம் = விண்மீன்கள் பல இருத்தற்கு இடமாக இருப்பது.]

இடம்பகம் *iḍambagam,* பெ. (n.) ***பேய்;*** devil. "இடம்பக மகளிவள்" (நீலகேசி.64), (செ.அக.).

[இடம்பு → இடம்பகம்.]

இடம்படு-தல் *iḍam-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. ***அகலித்தல்;*** to be broad, be spacious, to cover a vast extent; "இடம்பட வீடெடேல்". (ஆத்திசூடி). 2. ***மிகுதியாதல்;*** to be intense, outreach. "இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினும்" (நாலடி.116). 3. ***விரிதல்;*** to expand (செ.அக.).

ம. இடம்பெடுக.

[இடம் + படு. படுதல் = உண்டாதல். இடம் = அகலம்.]

இடம் பண்ணு-தல் *iḍam-paṇṇu-,* 15 செ.கு.வி. (v.i.) ***பூசை, உணவு முதலியவற்றிற்கென்று இடத்தைத் தூய்மை செய்தல்,*** (கொ.வ.); to purify a place by daubing it with cowdung solution, as for worship, or by water before spreading the leaf for meal.

க. எடெமாடு.

[இடம் = இடைவெளி, அகலம். இடம் + பண்ணு.]

இடம்பம் *iḍambam,* பெ. (n.) ***பகட்டு;*** pomposity, ostentation (செ.அக.).

இடம் → இடம்பம் > Skt. ḍamba. இடம் = அகலம். இடம்பம் = பெருமை, வீம்பு.]

இடம்பரம் *iḍambaram,* பெ. (n.) 1. ***இடப்பக்கம்;*** left side. 2. ***வழிவகை;*** method, procedure. (ஆ.அக.).

[இடம் → இடம்பரம்.]

இடம்பன் *iḍamban,* பெ. (n.) ***பகட்டுள்ளவன்;*** pompous showy fellow, coxcomb. "இடம்பனை யழைத்து" (பிரபோத.24,67).

இடம்பன் > Skt. dambhaka.

[இடம் → இடம்பம் → இடம்பன்.]

இடம்பாடு *iḍam-pāḍu,* பெ. (n.) 1. ***அகலம்*** (வின்.); width. 2. ***செல்வம்;*** wealth. இடம்பாடுள்ளவன் அவன் (இராட்.). 3. ***பருமை;*** mass; bulkiness. 4. ***விரிவு;*** expansion; extensiveness. (ஆ.அக.).

ம. இடம்பாடு.

[இடம் + படு = இடம்படு → இடம்பாடு.]

இடம்பார்-த்தல் *iḍam-pār-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ***இடந்தேடுதல்;*** to seek a place, secure an abode, find a situation. 2. ***சமயமறிதல்;*** to seek an opportunity; wait for suitable occasion. (செ.அக.).

க. எடெநோடு.

[இடம் + பார்.]

இடம்பு[1]**-தல்** *iḍambu-,* 15 செ.கு.வி. (v.i.) 1. ***விலகுதல்*** (யாழ்ப்.); to keep aloof, as persons who are not on good terms with each other. (செ.அக.). 2. ***அகலித்தல்;*** *to widen. 3.* ***பெருமை பேசுதல்;*** to boast.

ம. இடம்பல் (பகைமை).

[இடம் → இடம்பு = விலகு. இடம்புதல் = விலகுதல், அகலித்தல், பெரிதாக்குதல்.]

இடம்பு[2] *iḍambu,* பெ. (n.) ***அகலம்;*** width.

[இட → இடம்பு.]

இடம்புரி[1] *iḍampuri,* பெ. (n.) 1. ***இடப்புறம் சுழியுள்ள சங்கு*** (பிங்.); common chank with spiral curving to the left. 2. ***இடப்பக்கந் திரிந்த கயிறு;*** rope twisted to the left. (செ.அக.).

ம. இடம்புரி (iḍampuri) க. எடெமுரி, எடெமுரிசங்கு.

[இடம் + புரி. புரிதல் = வளைதல், இடம் = இடப்பக்கம்.]

இடம்புரி[2] *iḍampuri,* பெ. (n.) ***பூடுவகை*** (வின்.); medicinal shrub (செ.அக.).

இடம்புரிக்காய் *iḍampuri-k-kāy,* பெ. (n.) ***திருகுகாய்;*** Indian screw tree. It is opposed to twisted horn. (சா.அக.).

[இடம் + புரி + காய்.]

இடம்பூணி *iḍam-pūṇi,* பெ. (n.) ***நுகத்தின் இடப் பக்கத்து மாடு;*** ox tied to the left side of the yoke. "இடம்பூணி யென்னாவின் கன்று அன்று". (நேமி. சொல்.5, உரை). (செ.அக.). 2. ***நுகத்தின் இடப் பக்கம்;*** left side of a yoke (கருநா.).

க. எடெகோலு.

[இடம் + பூண் + இ.]

இடம்பெறவிரு-த்தல் *idam-pera-viru-*, 3 செ.கு.வி. (v.i.) ***ஓலக்கமிருத்தல்;*** to give audience in the court. "இடம்பெறவிருந்த நல்லிமயத்துள்" (திவ்.பெரியதி. 1,2,1). (செ.அக.).

[இடம் + பெற + இருத்தல். இடம் = அகலம், பெருமை, உயர்வு.]

இடம் வருதல் *idam-varudal*, பெ. (n.) ***வலத்தினின்று இடம் நோக்கிச் சுற்றுதல்;*** to go round in the anti-clockwise direction.

ம. இடத்து வய்க்குக.

[இடம் + வருதல்.]

இடமயக்கம் *idamayakkam*, பெ. (n.) 1. ***ஒன்றற்குரிய உரிப்பொருளைப் பிறிதோரிடத்திற்குரியதாகக் கூறும் இடமலைவு*** (வின்.); fault in poetry, which consists in the ascription of a wrong place of origin to natural products. 2. ***ஓரிடத்திற்குரியதை மற்றோரிடத்ததாகக் கூறும் இலக்கண வழு*** (நன்.374, மயிலை); defect which consists in the wrong use of persons.

[இடம் + மயக்கம்.]

இடமலைவமைதி *ida-malaivamaidi*, பெ. (n.) ***இடமலைவாகிய வழுவை அமைத்துக்கொள்ளுகை;*** poetical licence which allows *'idamalaivu'* when it adds to the beauty. "மரகதச் சோதியுடன் மாணிக்கச் சோதி இருமருங்குஞ் சேர்ந்தரிவை பாகன் - உருவ மலைக்கு மகில்சுமந்தாரத்து வான்கோ டலைத்து வரும்பொன்னி யாறு" — இதில் காவிரியுட் பிற மலைக்கும் பிற நாட்டிற்குமுரிய மரகதமும், மாணிக்கமும், சந்தனமும் அலைத்து வருகின்றது என்றமையான் இடமலை வமைதி யாயிற்று. (தண்டி.125, உரை).

[இடம் + மலைவு + அமைதி.]

இடமலைவு *ida-malaivu*, பெ. (n.) ***ஓரிடத்துப் பொருளை மற்றோரிடத்துள்ளதாகச் சொல்லும் வழு;*** fault in poetry, which ascribes products to places where they are not found as pearls to the mountain or gold to the sea. "தொன்மலையின் மான்மதமும்" (தண்டி. 119.உரை).

[இடம் + மலைவு.]

இடமற்றபிள்ளை *idamarra-pillai*, பெ. (n.) ***நல்வினை*** (பாக்கியம்) ***அற்ற பிள்ளை*** (வின்.); child without inheritance or fortune (செ.அக.).

[இடம் + அற்ற + பிள்ளை.]

இடமன் *idaman*, பெ. (n.) ***இடப்புறம்;*** left side. (இ.வ.).

க. எடமக்குலு.

[இடம் → இடமன்.]

இடமானம்[1] *idamānam*, பெ. (n.) 1. ***அகலம்;*** spaciousness. இடமான வீடு. 2. ***மாளிகை;*** spacious place, magnificent house.

[இடம் → இடமானம். மானம் = பெயரீறு. ஒ.நோ. தேய் -தேய்மானம்.]

இடமானம்[2] *idamānam*, பெ. (n.) ***பறைவகை.*** (திருநெல்.பு.விட்டுணு.25); double drum carried on the back of an animal. (செ.அக.).

தெ. டமாரமு, டமாய, டம்மாரமு.

[இடம் + மானம் = இடமானம். ஒருகா. வாயகன்ற பறை.]

இடமிடு-தல் *idamidu-*, 20 செ.கு.வி. (v.i.) ***பருத்தல்;*** to become large in size. இந்தப்புண் இடமிட்டுக்கொண்டு வருகிறது (உ.வ.).

[இடம் + இடு.]

இடமிடைஞ்சல் *idamidaiñjal*, பெ. (n.) ***நெருக்கடி*** (கொ.வ.); lack of room; crowdedness for want of space. (செ.அக.).

ம. இடகூடுக.

[இடம் + இடைஞ்சல்.]

இடமுடங்கு *ida-mudangu*, பெ. (n.) ***இடமிடைஞ்சல்*** பார்க்க; see *idamidaiñjal*.

[இடம் + முடங்கு.]

இடமை *idamai*, பெ. (n.) 1. ***நிலம்;*** earth. 2. ***இடப்பக்கம்;*** leftside 3. ***இடையின எழுத்துகள்;*** Tamil letters called idaiyinam. "ஆவி இடைமை இடம் மிடறாகும்" (நன்.).

[இடம் → இடமை; இடைமை → இடமை.]

இடர் *idar*, பெ. (n.) 1. ***வருத்தம்;*** affliction, distress, trouble "எண்கணிடரினும் பெரிதாலெவ்வம்" (பு.வெ. 11.7). 2. ***வறுமை;*** poverty, pinch of poverty. "இன்றுபோ மெங்கட் கிடர்" (பு.வெ.8,32) 3. ***ஏதம்;*** jeopardy.

ம. இடர்; க. இடரு; தெ. எடரு.

[இல் → இள் → இடு = குத்துதல், துளைத்தல், பெயர்த்தல். இடு → இடல் → இடர் = துன்பம்.]

இடர்ப்படு-தல் *idar-p-padu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. ***வருத்தமுறுதல்;*** *to suffer affliction.* 2. ***நலிந்துகொள்ளுதல்;*** to labour hard, to put forth considerable effort, as in comprehending the sense of a passage. இடர்ப்பட்டுப் பொருள் கண்டார். (உ.வ.).

க. எடர்பாடு

[இடு → இடல் → இடர் + படு.]

இடர்ப்பாடு *idar-p-pādu-*, பெ. (n.) ***துன்புறுகை;*** experiencing affliction or a reverse of fortune. "இடுக்கணிடர்ப்பா டுடைத்து" (குறள்.624).

[இடு → இடல் → இடர் + படு. இடர்ப்படு → இடர்ப்பாடு.]

இடர்ப்பில்லம் *idar-p-pillam*, பெ. (n.) ***கண்ணோய் வகை*** (சீவரட்.); curable kind of blear-eye. (செ.அக.).

[இடர் + பில்லம்.]

இடரெட்டு *iḍar-eṭṭu,* பெ. (n.) ***நாட்டிற்கு வரக்கூடிய எண்வகைத் தீமை; இடரெட்டாவன: விட்டில், கிளி, நால்வாய், வேற்றரசு, தன்னரசு, நட்டம், பெரும்பு யல், காற்று*** (பு.வெ.9,17,உரை); eight forms of affliction that may afflict a country like locust, parrot, elephant, foreign royal tyranny, native royal tyranny, loss, rain, strong wind. (செ.அக.)..

[இடர் + எட்டு.]

இடல் *iḍal,* பெ. (n.) 1. ***எறிதல்;*** to throw. 2. ***கொடுத்தல்*** to give, bestow. 3. ***இடுதல்;*** to put, drop.

ம. இடல்.

[இடு → இடல்.]

இடலம் *iḍalam,* பெ. (n.) ***அகலம்;*** width, extent "இடலமாகிய ரத்தக் கடல்" (இராமநா.யுத்த.89), 'இது இடலமானது' (தஞ்சை.).

தெ. வெடல்ப்பு

[இடு → இடல் + அம்.]

இடலித்தல் *iḍalittal,* பெ. (n.) ***அகலித்தல்*** (ஆ.அக.); widening.

தெ. வெடலின்சுட

[இடு → இடல் → இடலித்தல்.]

இடலிப்பு *iḍalippu,* பெ. (n.) ***அகலம்;*** breadth, width.

தெ. வெடல்ப்பு.

[இடல் → இடலிப்பு.]

இடலை[1] *iḍalai,* பெ. (n.) 1. ***அகன்றது;*** that which is wide. 2. ***ஒரு மர வகை,*** *(L.); wild olive. (செ.அக.).*

ம. இடல

[இடல் → இடலை. ஒருகா. பருத்த மரமாகலாம்.]

இடலை[2] *iḍalai,* பெ. (n.) 1. ***துக்கம்;*** worry. 2. ***துன்பம்;*** distress.

[இடு → இடல் → இடலை. இடல் → இடர்.]

இடலை இட்டலி *iḍalai iṭṭali,* பெ. (n.) ***அகன்ற ஒரே இட்டலி;*** a large boiled rice cake prepared on a special occasion. (தஞ்சை.).

[இடலை[1] + இட்டலி.]

இடவகம் *iḍavagam,* பெ. (n.) 1. ***மா, பனை ஆகிய மரங்களின் பிசின்.***(வின்.); gum of the mango or the palmyra tree. 2. ***இலவங்கம்*** (மலை.); clove-tree. (செ.அக.).

[இல் → இள் → இடு = குத்துதல், பிளத்தல், பெயர்த்தல், வெளிவரல், இடு → இடுவு → இடவு → இடவகம் = கசியும் பிசின்.]

இடவகை *iḍa-vagai,* பெ. (n.) 1. ***வீடு,*** (பிங்.); house. 2. ***இடம்*** (ஆ.அக.); place.

[இடம் + வகை.]

இடவயின் *iḍavayiṉ,* இடை. (part.) 1. ***இடத்து;*** at, in. "ஒல்லா ரிடவயின்" (தொல்.பொருள்.76) 2. ***இடது பக்கம்;*** left side.

[இடம் + வயின்.]

இடவழு *iḍa-vaḻu,* பெ. (n.) 1. ***தன்மை முதலிய மூவகையிடங்களைப் பிறழக் கூறுகை.*** (நன். 375); fault in the usage of pronouns belonging to the three persons. 2. ***ஐந்திணைக்குரியவற்றுள் ஒன்றற்குரியவற்றை மற்றொன்றிற்குக் கூறுவதுமாம்.*** (ஆ.அக.); fault in the mentioning of the five divisions of land.

[இடம் + வழு.]

இடவன்[1] *iḍavaṉ,* பெ. (n.) ***மண்ணாங்கட்டி;*** lump of mud. "எந்தை யிடவனெழ வாங்கி யெடுத்த மலை". (திவ்.பெரியாழ்.3,5,5). (யாழ்ப்.).

[இடத்தல் = பெயர்த்தல். இட → இடவன் = பெயர்த்தெடுத்த மண்ணாங்கட்டி.]

இடவன்[2] *iḍavaṉ,* பெ. (n.) 1. ***நுகத்தில் இடப்பக்கத்து மாடு;*** left ox in the yoke. 2. ***கூட்டெருது*** (யாழ்ப்.); fellow or mate in a yoke of oxen. 3. ***எதிரிமாடு;*** ox of the opponent.

க. எடகோலு.

[இடம் = இடதுபக்கம். இடம் → இடவன் = இடப்பக்கத்து மாடு.]

இடவன்[3] *iḍavaṉ,* பெ. (n.) ***பிளக்கப்பட்ட பொருள்*** (வின்.); anything split or cloven.

[இடத்தல் = தோண்டுதல், பிளத்தல். இட → இடவன்.]

இடவாகுபெயர் *iḍa-v-āgupeyar,* பெ. (n.) ***இடப்பெயர் அவ்விடத்துள்ள பொருளுக்கு ஆகிவருவது*** (நன். 290,உரை); that kind of metonymy where the name of the location is used for the name of the person or thing located there in.

[இடம் + ஆகு + பெயர். எ-டு: கூறை உடுத்தாள். கூறை நாட்டில் நெய்யப்பட்ட புடவை கூறை எனப்பட்டது.]

இடவிய *iḍaviya,* கு.பெ.எ. (adj.) 1. ***பரந்த;*** wide, extensive, spacious. "இடவிய வறை நின்று" (தணி கைப்பு.வீராட்.65). 2. ***விரைவுள்ள;*** quick, swift "இட விய கதியின் வாசி", (திருவாலவா. 28,59). 3. ***சார்ந்த;*** adjoined, attached "இடவிய மனமே யின்பதுன்பங்க ளெய்துற" (ஞானவா.உற்பத்.33). (செ.அக.).

[இடத்தல் = பிளத்தல், அகலித்தல், பரவுதல், விரைதல், சார்தல். இட → இடவிய.]

இடவியம் *iḍaviyam,* பெ. (n.) ***அகலம்;*** breadth.

[இடம் → இடவியம்.]

இடவை *iḍavai,* பெ. (n.) *வழி* (பிங்.); way.

[இடம் = இடைவெளி. இடம் → இட → இடவை = பாதை, வழி.]

இடறல் *iḍaṟal,* பெ. (n.) 1. *கால்தடுக்குகை;* stumbling 2. *தடை;* obstacle, impediment. 3. *பழிச்சொல்* (ஆ.அக.); scandal. "இடறலுண்டாக்கினான்" (இராட்.). (செ.அக.). 4. *குறைகாணல்;* fault finding, (ஆ.அக.). 5. *பதறல்;* faltering, perturbation (சேரநா.).

ம. இடர்ச்ச; க. எடரு, இடரு; து. எட்டுனி.

[இடறுதல் = பெயர்தல், நிலை தடுமாறல். இடலல் - இடறல்.]

இடறி *iḍaṟi* பெ. (n.) *யானை;* elephant. (சா.அக.).

[இடறுதல் = பெயர்த்தல், பிளத்தல், உடைத்தல். இடறு → இடறி.]

இடறு[1]-தல் *iḍaṟu-,* 9 செ.கு.வி. (v.i.) 1. *கால்தடுக்குதல்;* to stumble, strike one's foot against. இடறின காலிலேயே இடறுகிறது. (உ.வ.). 2. *துன்பப்படுதல்;* to be afflicted, troubled. "ஈமி னெமக்கொரு துற்றென் றிடறுவர்" (திவ். திருவாய்.4,1,7) -12 செ.குன்றாவி. (v.t.) 1. *எற்றுதல்* (பெரியபு. திருநாவுக்.110); to strike against, kick, to kick off, as the elephant does the head of a criminal 3. *மீறுதல்;* to transgress. "எண்டரு நெறிமுறை யிடறு கீசகன்" (பாரத.கீசகன்.33). 4. *ஊறுபடுத்துதல்;* to wound. "ஊனிடறு வாளிகள்" (பாரத.மணிமான்.30). 5. *தடுத்தல்;* to obstruct, hinder. "இடையிலேன் கெடு வீர்கா ளிடறேன்மினே" (தேவா.717,1). (செ.அக.). 6. *கடத்தல்* (ஆ.அக.); to pass.

ம. இடறு; க. இடறு, எடறு; து. எட்டுனி.

[இடலுதல் = பெயர்த்தல். இடலு → இடறு..]

இடறு[2] *iḍaṟu,* பெ. (n.) *தடை* (வின்.); obstacle, barrier, impediment, hindrance. (செ.அக.).

[இடல் → இடறு.]

இடறுகட்டை *iḍaṟu-kaṭṭai,* பெ. (n.) *தடையாயிருப் பது;* stumbling block, hindrance, obstruction "தாய்மாரா கிற இடறுகட்டைகளாலே" (திவ்.திருநெடுந்.21,வ்யா, பக்.180). (செ.அக.).

[இடறு + கட்டை.]

இடன் *iḍaṉ,* பெ. (n.) 1. *அகலம்;* wide space. "இடனுடை வரைப்பு" (பொருந.65). 2. *நல்ல காலம்;* auspicious time, good time. "திண்டேர் களையினோ விடனே" (கலித்.121). 3. *செல்வம்* (ஆ.அக.); wealth. 4. *இடம்* (ஆ.அக.); space. 5. *இடப்பக்கத்திலிருப்பவன்* (ஆ.அக.); one who is on left side.

[இடம் → இடன்.]

இடனறி-தல் *iḍaṉaṟi-,* 2 செ.கு.வி. (v.i.) *அரசன் வினை செய்தற்குரிய இடத்தைத் தெரிகை* (குறள். அதி.50); knowing the most suitable strategic place for commencing hostilities against an enemy. (செ.அக.).

[இடம் → இடன் + அறிதல்.]

இடனறிந்தொழுகு-தல் *iḍaṉ-aṟindoḻugu-,* 9 செ.கு.வி. (v.i.) 1. *வணிகரெண்குணங்களுளொன்று* (பிங்.); adopting the customes and usages of different countries, a desirable virtue in merchants trading with many countries. 2. *இருக்கும் இடம் நோக்கி அதற் கிசைய நடக்கை;* adjusting one's conduct to one's environment. (செ.அக.).

[இடம் → இடன் + அறிந்து + ஒழுகல்.]

இடனில் சிறுபுறம் *iḍanilciṟupuṟam,* பெ. (n.) *அகற்சி யில்லாத பிடரி;* close set mane "இடனில் சிறுபுறத்தி ழையொடு துயல் வர" (அகம்.142).

[இடம் - இடன் + இல் + சிறுபுறம்.]

இடா *iḍā,* பெ. (n.) 1. *இடார், இறைகூடை* (சிலப்.10, 111, உரை); palm-leaf bucket for irrigation. 2. *ஓரளவு* (தொல்.எழுத்.170, உரை); a measure. 3. *படைக்கலன் வகை;* a weapon. 4. *அகப்படுத்தும் பொறி;* a trap.

[இடம் = இடைவெளி. இடம் → இடார் → இடா. இடா = குறித்த கொள்ளளவு கொண்ட கூடை, முகத்தலளவு வாயகன்ற கருவி.]

இடாகினி *iḍāgiṉi,* பெ. (n.) 1. *சுடுகாட்டிற் பிணங் களைத் தின்னும் பேய்* (சிலப்.9,21); female goblin feeding on corpses in the burning ground. (செ.அக.). 2. *காளியேவல் செய்பவள்;* a female demon attending on Kāḷi. (அபி.சிந்.).

க. டாகினி.

[இடுகாடு → இடுகாடினி → இடாகினி. இடாகினி > Skt. ḍākini.]

இடாகு *iḍāgu,* பெ. (n.) *புள்ளி* (அக.நி.); brand, spot, dot.

தெ. டாகு. *Skt.* dāku.

[ஒருகா. இலக்கு = புள்ளி, அடையாளம் புள்ளியிடுதல். இலக்கு → இளக்கு → இளாக்கு → இடாக்கு → இடாகு.]

இடாகுபோடு-தல் *iḍāgu-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) *கால்நடைகட்குச் சூடுபோடுதல்;* to brand, as on cattle. (செ.அக.).

[இலக்கு → இளக்கு → இளாக்கு → இடாக்கு → இடாகு + போடுதல்.]

இடாசல் *iḍāšal,* பெ. (n.) **இடாசு-தல்** பார்க்க; see *iḍāšu.*

இடாசு-தல் *iḍāšu-,* 5 செ. குன்றாவி. (v.t.) 1. *நெருக்குதல்* (வின்.); to press. 2. *மோதுதல்* (வின்.); to strike, collide. 3. *மேற்படுதல்* (வின்.); to beat, as in a competition. 4. *அவமதித்தல்* (வின்.); to disregard, slight, neglect.

OE. dassche; *E.* dash; *Dan.* dske; *Sw.* daska.

[இடுதல் = வைத்தல், நெருக்குதல்.]

இடாடிமம் *iḍāḍimam,* பெ. (n.) *தாதுமாதுளை* (மலை.); common pomegranate. (செ.அக.).

க. தாளிம்ப, தாளிம்பெ; தெ. தாளிம்ப, தாளிம்மு, தானிம்ம.

[தாதுமாதுளை > Skt. dāḍima > த. தாடிமம் - டாடிமம் -இடாடிமம் (கடுங்கொ.).]

இடாப்பு[1]-தல் *iḍāppu-,* 15 செ.கு.வி. (v.i.) ***காலை அகலவைத்தல்*** (வின்.); to straddle in walking. (செ.அக.).

[இடப்புதல் → இடாப்புதல்.]

இடாப்பு[2] *iḍāppu,* பெ. (n.) 1. ***அட்டவணை*** (வின்.); catalogue, list, register. 2. ***பார்த்தெழுதும்படி;*** copy-book. 3. ***பெயர், முகவரி*** (ஆ.அக.); name, address.

தெ. டாபு.

[இடு → இடப்பு → இடாப்பு.]

இடாம்பிகம் *iḍāmbigam,* பெ. (n.) ***இடம்பம்;*** pomposity, parade.

[இடம்பு → இடாம்பு → இடாம்பிகம்.]

இடாம்பிகன் *iḍāmbigaṉ,* பெ. (n.) ***இடம்பக்காரன்;*** pompous fellow, coxcomb. "இடாம்பிக ரோடும் புக்குநீ" (பிரபோத.24, 67). (செ.அக.).

[இடம்பு → இடாம்பு → இடாம்பிகம் → இடாம்பிகன். > Skt. ḍāmbika]

இடாமிடம் *iḍā-miḍam,* பெ. (n.) ***ஒழுங்கற்ற பேச்சு*** (சங்.அக.); improper or unbecoming language. (செ.அக.).

[இடம்பு → இடாம்பிகம் → இடாம்பிடம் → இடாமிடம் -(கொ.வ.).]

இடாமுடாங்கு *iḍā-muḍāṅgu,* பெ. (n.) ***ஒழுங்கின்மை*** (யாழ்.அக.); irregularity, impropriety. (செ.அக.).

[இடாம்பு + முடங்கு - இடாமுடாங்கு - எதுகை குறித்த இணைமொழி.]

இடாயம் *iḍāyam,* பெ. (n.) ***இசைத்துறை ஐந்தனுள் ஒன்று*** (பெரியபு. ஆனாய.26); one of five classification of music. (செ.அக.).

[ஒருகா. இடம் → இடாயம். விரித்த அலுக்கு (கமகம்) கொண்ட இசைத்துறையாகலாம்.]

இடாயர் *iḍāyar,* பெ. (n.) 1. ***இறைகூடை;*** palm-leaf bucket. 2. ***உலுத்தர்;*** miser. 3. ***எலி முதலியன பிடிக்கும் பொறி;*** rat-trap.

[இடா + அர் = இடாயர்.]

இடார் *iḍār,* பெ. (n.) 1. ***இறைகூடை*** (பிங்.); palm-leaf bucket for irrigation. 2. ***எலி முதலியன பிடிக்கும் பொறி;*** trap for squirrels or rats. "இடாரி லகப்பட்ட எலிபோல". (யாழ்ப்.).

[இடால் → இடார்.]

இடாரேற்று-தல் *iḍār-ēṟu-,* 15 செ.கு.வி. (v.i.) ***எலிப்பொறியை ஆயத்தப்படுத்தி வைத்தல்*** (யாழ்ப்.); to lay a trap as for squirrels and rats. (செ.அக.).

[இடார் + ஏற்றுதல்.]

இடால் *iḍāl,* பெ. (n.) 1. ***கத்தி;*** sword. "கண்டகோடாரி யைப்போல் ஏந்து வெள்ளைப் பக்கறை யிடாலினான்" (விறலிவிடு.49). (செ.அக.). 2. ***வாயகன்ற கூடை;*** wide mouthed basket.

[இடு → இடல் → இடால். இடால் = வாயகன்றது.]

இடாவு *iḍāvu,* பெ. (n.) ***இடைகலை;*** iḍaikalai, breath inhaled through the left nostril. "இடாவு பிங்கலையா னைய" (கம்பரா.மிதிலை.130). (செ.அக.).

இடைகலை பார்க்க see *iḍaikalai.*

[இடம் → இடவு → இடாவு.]

இடாவேணி *iḍā-vēṇi,* பெ. (n.) ***அளவிடப்படாத பரப்பு;*** unlimited extent. "இடாவேணி யியலறைக் குருசில்" (பதிற்றுப். 24,14).

[இடம் = அகலம். இடா = அகல எல்லைக்கு உட்படாத, பரந்து சென்று அணுகமுடியாத. இடா + ஏணி. ஏணி = உயர்ச்சி.]

இடி[1]-தல் *iḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ***தகர்தல்*** (கம்பரா. மருட்பங்.15); to break, crumble, to be in ruins, as a wall; to fall to pieces. 2. ***கரையழிதல்;*** to be washed away; to become eroded, as the bank of a river. 3. ***முனை முறிதல்;*** to become bruised; to be broken, as the grain of rice. அரிசி இடிந்து போயிற்று. (கொ.வ.). 4. ***வருந்துதல்;*** suffer. "என்னோயுங் கொண்டதனை யெண்ணி யிடிவேனோ" (அருட்பா. ஆற்றா.5). 5. ***மலைத்தல்;*** to be stunned, staggered. அவள் அந்த துக்க சமாசாரம் கேட்டு இடிந்து போனாள். 6. ***முறிதல்*** (பிங்.); to break in two, part in two. (செ.அக.).

தெ., க., ம. இடி.

[இல் → இள் → இடு → இடி = குத்துதல், துளைப்படல், உடைபடுதல், துன்புறுதல்.]

இடி[2]-த்தல் *iḍi-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***முழங்குதல்;*** to sound loud; to make a noise, as a gun, to roar, as a lion "அரிமா னிடித்தன்ன" (கலித்.15). 2. ***இடி யொலிபடுதல்;*** to thunder. "இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்" (நாலடி.100). 3. ***நோதல்;*** to throb, to beat, to ache, as the head. தலையிடிக்கிறது. 4. ***தாக்கிப்படுதல்;*** to come in contact with, hit against. 'கதவு நிலை தலையில் இடிக்கும்.' 5. ***மோதுதல்;*** to strike against, as a ship against the shore. கப்பல் கரையில் இடித்தது (வின்.). 6. ***சினத்தல்;*** to be angry, furious "கூற்றின் னிடிக்குங் கொலைவேலவன்" (சீவக.432) - 4 செ.குன்றாவி. (v.t.) 1. ***தூளாக்குதல்;*** to pound in a mortar; to bray with a pestle; to reduce flour. "பொற்சுண்ண மிடித்து நாமே" (திருவாச.9,1). 2. ***தகர்த்தல்;*** to beat so as to break, to batter to pieces, demolish, shatter. 'வீட்டையிடித்துத் தள்ளினான்.' 3. ***நசுக்குதல்;*** to press; to crush, as sugarcane. "கரும் பினை....யிடித்துநீர் கொள்ளினும்" (நாலடி.156). 4. ***தாக்குதல்;*** to push or thrust side-wise, as with the elbow.'குந்தத்தால் இடித்தான்.' 5. ***முட்டுதல்;*** to attack

with the horns, as a bull; to butt against the udder, as a sucking calf. அந்த மாடு இடிக்கும். 6. ***கழறிச் சொல்லுதல்;*** to reprove sharply or admonish incisively. "இடிப்பாரையில்லாத வேமரா மன்னன்" (குறள்,448). 7. ***கொல்லுதல்;*** to kill, slay. "இடிக்குங்கொ லிவனை யென்பார்" (சீவக. 1108). 8. ***தோண்டுதல்;*** to dig. "கணிச்சிகளிற் கயம்பட நன்கிடித்து" (சீவக.592). 9. ***கெடுத்தல்;*** to destroy, annihilate. "விருப்பிடித்து" (இரகு.தேனுவ.71). 10. ***உதைத்தல்;*** to kick. 11. ***துடித்தல்;*** to palpitate. 12. ***இடியிடித்தல்*** (ஆ.அக.); to thunder.

ம. இடிக்குக; **க.** இடி, இடகு, டிகா, டீகு; **துட.** இட்; **து.** எடபுனி, எடுபுனி, எட்புனி; **தெ.** டீகொனு; **கொலா.** இட்.

[இல் → இள் → இடு → இடி = குத்தல், துளைத்தல், உடைத்தல், துன்புறுத்துதல்.]

இடி[3] *iḍi,* பெ. (n.) 1. ***தாக்கு;*** stroke, blow, push. 'உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி'. 2. ***மா*** (பிங்.); flour, esp. of rice or millet. 3. ***சிற்றுண்டி*** (பிங்.); light meal with flour as its chief ingredient. 4. ***சுண்ணம்*** (பிங்.); powder, dust, anything pulverised. 5. ***இடியேறு*** (பிங்.); thunder. 6. ***பேரொலி*** (பிங்.); roar, great noise. 7. ***கழறுஞ்சொல்;*** rebuke, reproof. "இடிபுரிந் தெள்ளுஞ் சொற்கேட்பர்" (குறள்.607). 8. ***குத்துநோவு;*** ache, throbbing pain. 'மண்டையிடி' (கொ.வ.) (செ.அக.).

ம. இடி; **கோத.** இரி; **துட.** ஈரி.

[இல் → இள் → இடு → இடி.]

இடி[4] *iḍi,* பெ. (n.) ***நெருப்பு, தீ;*** fire. "இடியிருந்தகட் பதினொரீசர்" (தக்கயாகப்.353). (செ.அக.).

[இடு → இடி = வானம் இடித்தலால் தோன்றும் மின்னல், நெருப்பு.]

இடி[5] *iḍi,* பெ. (n.) ***உறுதிச்சொல்*** (அக.நி.); word of admonition. (செ.அக.).

[இடு → இடி.]

இடி[6] *iḍi,* இடை. (adj.). ***அனைத்து;*** எல்லா; the whole. (கருநா.).

குட., து. இடி.

[இடு[3] → இடி.]

இடி[7] *iḍi,* பெ. (n.) ***ஆட்டுக்கிடாய்*** (அக.நி.); ram, he-goat. (செ.அக.).

[ஏழகம் → ஏடகம். Skt. iḍika > த. ஈடி → இடி. (கொ.வ.).]

இடிக்கடை *iḍi-k-kaḍai,* பெ. (n.) ***இடுக்கடி*** (இ.வ.) பார்க்க; see *iḍukkaḍi.*

[இடுக்கடி → இடுக்கடை → இடிக்கடை.]

இடிக்கொடியன் *iḍi-k-koḍiyaṉ,* பெ. (n.) ***இடிக்கொடி யோன்*** பார்க்க; see *iḍikkoḍiyōṉ.* (ஆ.அக.).

[இடி + கொடியான். ஆன்-ஒன்-அன்.]

இடிக்கொடியோன் *iḍi-k-koḍiyōṉ,* பெ. (n.) ***இந்திரன்;*** Indra so called as he has the symbol of thunder bolt on his banner. (செ.அக.).

[இடி + கொடியோன்.]

இடிக்கொள்ளு *iḍi-k-koḷḷu,* பெ. (n.) ***காட்டுக்கொள்;*** black horse-gram. (செ.அக.).

[இடி + கொள்ளு. இடி = மாவு.]

இடிகரை *iḍi-karai,* பெ. (n.). ***ஆறு முதலியவற்றின் அழிந்த கரை;*** eroded bank, as of a river. "ஆக்கை யெனு மிடி கரையை" (தாயு.சின்மயா.2). (செ.அக.).

[இடி → இடிதல், சரிதல். இடி + கரை.]

இடிகிணறு *iḍi-kiṇaṟu* பெ. (n.) ***இடிந்துவிழு நிலையி லுள்ள கிணறு;*** dilapidated well.(செ.அக.).

[இடி → இடிதல். இடி + கிணறு.]

இடிகொம்பு *iḍi-kombu,* பெ. (n.) ***கழியில் அடித்துள்ள அதிர்வேட்டுக் குழாய்*** (வின்.); small mortars set into a pole, used in pyrotechny. (செ.அக.).

[இடிதல் = அதிர்தல், வெடித்தல். இடி + கொம்பு.]

இடிச்சக்கை *iḍi-c-cakkai,* பெ. (n.) ***பலாப்பிஞ்சு*** (நாஞ்.); tender jack fruit. (செ.அக.).

[இட்டி → இடி = சிறியது. இடி + சக்கை.]

இடிச்சொல் *iḍi-c-col,* பெ. (n.) ***இடித்துரைக்கும் கடுஞ்சொல்;*** sharp reproof. "இடிச்சொற் பொறாஅ விலக்கண வினையர்" (பெருங்.உஞ்சைக்.38,345). (செ.அக.).

[இடி + சொல்.]

இடிசல்[1] *iḍišal,* பெ. (n.) ***நொறுங்கின தவசம்*** (கொ.வ.); grain bruised in pounding. (செ.அக.).

[இடிதல் = நொறுங்குதல். இடி → இடியல் → இடிசல்.]

இடிசல்[2] *iḍišal,* பெ. (n.) 1. ***அழிவு;*** dilapidation; ruin. 'கோயில் இடிசலாய்க் கிடக்கிறது' (இ.வ.). 2. ***நொய்ய ரிசி*** (கொ.வ.); broken rice. (செ.அக.).

[இடி → இடியல் → இடிசல்.]

இடிசாந்து *iḍi-šāndu,* பெ. (n.) ***இடித்துத் துவைத்த சுண்ணாம்பு*** (இ.வ.); pounded mortar-lime. (செ.அக.).

[இடித்தல் = குற்றுதல், மாவாக்குதல். இடி + சாந்து.]

இடிசாமம்[1] *iḍi-šāmam,* பெ. (n.) ***கெடு காலம்*** (வின்.); evil hour. (செ.அக.).

[இடி + சாமம். யாமம் = பொழுது, காலம். யாமம் → ஜாமம் → சாமம்.]

இடிசாமம்[2] *iḍi-šāmam,* பெ. (n.) ***இகழ்ச்சி*** (நிந்தை) (வின்.); defamation, reproach. (செ.அக.).

[இடி + சாமம். சமம் = போர்க்களம், குழப்பம், கலவரம். சமம் → சாமம்.]

இடிசிலைச்சாறு *iḍiśilai-c-cāṟu,* பெ. (n.) ***இலையை யிடித்துப் பிழிந்த சாறு;*** extracted juice of the leaves (சா.அக.).

[இடித்த + இலை + சாறு = இடித்திலைச்சாறு → இடிசிலைச்சாறு (கொ.வ.).]

இடிசுவர் *iḍi-šuvar,* பெ. (n.) ***இடிந்த சுவர்;*** ruined wall. (செ.அக.).

[இடி + சுவர்.]

இடிசூலை *iḍi-šūlai,* பெ. (n.) ***மண்டையிடி, மண்டைக் குத்தல்;*** a type of severe head-ache attended with digging pain (சா.அக.).

[இடி + சூலை. சுல் - குத்துதல். சுல் → சூலை = மண்டையிடி. இடிதல் = வருத்துதல்.]

இடிஞ்சில் *iḍiñjil,* பெ. (n.) ***விளக்குத்தகழி;*** hollow portion of a lamp, which is the receptacle for the oil. "உடலெனு மிடிஞ்சி றன்னில் நெய்யமர் திரியுமாகி" (தேவா.503,2). (செ.அக.).

ம. இடிஞில் (சிறு மண்விளக்கு).

[இடிதல் = வீழ்தல், தாழ்தல், உட்குழிதல். இடி → இடிஞ்சில் = உட்குழிந்த தகழி.]

இடித்தடு *iḍittaḍu,* பெ. (n.) ***பிட்டு;*** loose confectionary made of flour. "நரைத்தலை முதியோ ளிடித்தடு கூலி கொண்டு" (கல்லா.46). (செ.அக.).

[இடித்தடு = பிட்டு, இட்டளி. இடித்து + அடு = இடித்தடு.]

இடித்துரை *iḍitturai,* பெ. (n.) ***கழறிக்கூறுஞ்சொல்;*** admonition, expostulation, criticism, at once kind and severe (செ.அக.).

[இடித்து + உரை.]

இடிதலைநோய் *iḍi-talainōy,* பெ. (n.) ***நோய் வகை*** (கடம்ப.பு. இலீலா.149); disease. (செ.அக.).

[இடி + தலைநோய்.]

இடிதாங்கி *iḍi-tāngi,* பெ. (n.) ***கட்டடத்தின்மீது இடி விழாதபடி காக்க வைக்குங் காந்தக்கம்பி;*** lightning conductor. (செ.அக.).



இடிதாங்கி

[இடி + தாங்கி.]

இடிப்பணி *iḍippaṇi,* பெ. (n.) ***குறிப்புரை, விளக்கவுரை*** (இலக்.அக.); gloss, comment. (செ.அக.).

க. டிப்பண, டிப்பணி; தெ. டிப்பணமு; மரா. டிப்பண.

[இடி + பணி. இடு → இடி = இட்டுரைக்கும் அல்லது விளக்கி எழுதும் உரை. இடு → ஈடு, ஈட்டுரை என்பவற்றை ஒப்புநோக்குக.]

த. இடிப்பணி > skt. tippaṇi.

இடிப்பு *iḍippu,* பெ. (n.) 1. ***இடி;*** thunder. "இடிப்பென வார்த்து." (கந்தபு. சிங்கமு.431). 2. ***ஒலி;*** noise, clangour. "சேவலங்கொடி யிடிப்பினால்" (கந்தபு.திருப் பரங்.20) (செ.அக.).

[இடி → இடிப்பு.]

இடிபடு-தல் *iḍi-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. ***தாக்கப்படுதல்;*** to be assaulted, elbowed. 2. ***நொறுங்குதல்;*** to be comminuted, as rice. இடிபட்ட அரிசி. 3. ***வெடிபடுதல்;*** to crackle, as fire. இடிபடமுழங்கிச் செந்தீ. (சீவக.1084). 4. ***துன்பப்படுதல்;*** to be vexed or harried. 'அவன் தரித்திரத்தால் இடிபடுகிறான்.' (கொ.வ.) (செ.அக.).

[இடி + படு.]

இடிம்பம் *iḍimbam,* பெ. (n.) 1. ***கைக்குழந்தை;*** baby, small child. 2. ***பெருந்துன்பம்;*** misery. 3. ***மண்ணீரல்;*** spleen. 4. ***பறவை முட்டை;*** egg of birds. 5. ***ஆமணக்கு;*** castor plant. (செ.அக.).

[இட்டி → இடி → இடிம்பம் = சிறியது. இடிம்பம் > skt. dimbha. சிறுமை.]

இடிம்பன் *iḍimbaṉ,* பெ. (n.) ***வீமனாற் கொல்லப்பட்ட ஓர் அரக்கன்*** (பாரத. வேத்திர.16); name of a Rāksasa who was slain by Bhīma. (செ.அக.).

[இடும்பன் → இடிம்பன்.]

இடிம்பை *iḍimbai,* பெ. (n.) ***வீமன் மனைவியாகிய அரக்கி*** (பாரத. வேத்திர.9); name of Hiḍimbā's sister, who married Bhīma. (செ.அக.).

[இடும்பை → இடிம்பை.]

இடிமயிர் *iḍi-mayir,* பெ. (n.) ***சவரி*** (இ.வ.); false hair, usually obtained from the tail of the yak. (செ.அக.).

[இடு + மயிர் - இடிமயிர். இடுமயிர் பார்க்க; see iḍumayir.]

இடிமரம் *iḍi-maram,* பெ. (n.) 1. ***உலக்கை*** (வின்.); pestle. 2. ***அவலிடிக்கும் ஏற்றவுலக்கை*** (இ.வ.); heavy wooden hammer in a frame, worked by a pedal and used for pounding parched rice into flakes. (செ.அக.).

ம. இடிமரம்.

[இடித்தல் = குற்றுதல். இடி + மரம்.]

இடிமருந்து *idi-marundu,* பெ. (n.) ***பொடி மருந்து;*** medicinal preparation of drugs pounded together. (செ.அக.).

[இடி + மருந்து. இடித்தல் - பொடித்தல்.]

இடிமாந்தம் *idi-māndam,* பெ. (n.) ***பொய்யான குற்றச் சாட்டு*** (இ.வ.); false accusation. (செ.அக.).

[இடு → இடுமம் → இடுமந்தம் → இடிமந்தம் → இடிமாந்தம்.]

இடிமீன் *idi-mīṉ,* பெ. (n.) ***மீன்வகை*** (பாண்டி.); fish. (செ.அக.).

[இடி + மீன் = இடிமீன் - தாக்கும்மீன் வகையைச் சார்ந்ததாய் இருக்கலாம்.]

இடிமுழக்கம் *idi-muḻakkam,* பெ. (n.) ***இடியொலி;*** thunder clap. (செ.அக.).

ம. இடிமுழக்கம்.

[இடி + முழக்கம்.]

இடிமேலிடி *idi-mēl-idi,* பெ. (n.) 1. ***மாட்டுச்சுழிக்குற்றம்*** (பெரியமாட்.20); defect in cattle. (செ.அக.). 2. ***அடுத்தடுத்து வரும் இடர்;*** continuous misfortunes. 'அவனுக்கு இடிமேல் இடி விழுந்தது.' (உ.வ.).

[இடி + மேல் + இடி.]

இடியப்பம் *idi-y-appam,* பெ. (n.) ***சிற்றுண்டி வகை;*** steamed rice-cake pressed through perforated mould and resembling vermicelli. (செ.அக.).

ம. இடியப்பம்.

[இடி + அப்பம். இடி = இடித்த மாவு.]

இடியப்பவுரல் *idiyappavural,* பெ. (n.) ***இடியப்பம் பிழியும் ஏனம்*** (ஆ.அக.); vessel used for making iḍi-y-appam.

[இடி + அப்பம் + உரல். உரல் = உருண்ட வடிவிலான குழி.]

இடியம்பு *idi-y-ambu,* பெ. (n.) ***இடிகொம்பு*** (வின்.) பார்க்க; see *idikombu.*

இடியல் *idiyal,* பெ. (n.) ***பிட்டு;*** loose confectionary made of flour. ''இடியலினுணவு'' (குமர.பிர.காசி.4). (செ.அக.).

[இடி → இடியல். இடி = மாவு.]

இடியாப்பம் *idi-y-āppam,* பெ. (n.) ***இடியப்பம்*** (செ.அக.) பார்க்க; see *idiyappam.*

ம. இடியப்பம்.

[இடி + அப்பம் - இடியப்பம் → இடியாப்பம். அப்பு → அப்பம் = நீரொடு பிசைந்த மாவினால் செய்த பண்ணிகாரம்.]

இடியிளகியம் *idiyilagiyam,* பெ. (n.) ***கல்லுரலில் வெல்லத்தையும், மருந்துப் பொடியையும் கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்த்துப் பூணில்லா உலக்கையால் இடித்தும் பிறகு அம்மியில் வைத்துக் குழவியால் புரட்டிப் புரட்டி இடித்து முடித்த இளகியம்*** (இலேகிய மருந்து); electuary prepared by pounding jaggery mixed with powdered drugs with a rice pounder without nozzle at the ends and then on a grinding stone till it is reduced to a soft and consistent paste. (சா.அக.).

[இடி + இளகியம்.]

இடியுரல் *idiyural,* பெ. (n.) 1. ***மருந்துச் சரக்குகளிடிக்கு மோர் வகைக் கல்லுரல்;*** stone vessel with obconical ends connected by a constricted neck, used for pounding drugs. 2. ***இடியப்ப வுரல்;*** mould made of iron or wood for making pastry.

[இடி + உரல்.]

இடியேறு *idi-y-ēṟu,* பெ. (n.) ***பேரிடி*** (திவா.); thunder-bolt. (செ.அக.).

[இடி + ஏறு.]

இடிலேகியம் *idi-lēgiyam,* பெ. (n.) ***இடியிளகியம்*** பார்க்க; see *idi-y-ilagiyam.*

இடிவளி *idivaḷi,* பெ. (n.) ***குத்தலோடு கூடிய வளி*** (வாயு); acute rheumatic pain (சா.அக.).

[இடி + வளி.]

இடிவாங்கி *idi-vāṅgi,* பெ. (n.) **இடிவிழுங்கி;** lightning conductor. (சா.அக.).

[இடி + வாங்கி.]

இடி விலக்கி *idi-vilakki,* பெ. (n.) ***காந்தம்;*** magnet, load stone. (சா.அக.).

[இடி + விலக்கி.]

இடிவிழு-தல் *idi-viḻu-,* 2 செ.கு.வி. (v.i.) ***இடி தரையில் இறங்குதல்;*** to strike, as lightning; to fall with a crash, as a thunderbolt. 'அடி வயிற்றில் இடி விழுந்தாற்போல.' (பழ).

[இடி + விழு.]

இடிவு *idivu,* பெ. (n.) 1. ***அழிவு;*** decay, destruction. ''இடிவில் பெருஞ்செல்வம்'' (தேவா.707,6). 2. ***இடிந்து விழுகை*** (வின்.); crumbling down, as of an undermined bank.

ம. இடிவு.

[இடி + இடிவு.]

இடிவெட்டு *idiveṭṭu,* பெ. (n.) ***இடிமுழக்கம்;*** thunder-stroke, thunder. (சேரநா.).

[இடி + வெட்டு.]

இடு[1]-த்தல் *idu-,* 20 செ.கு.வி. (v.i.) ***சிறுத்தல்;*** to be small (வே.க.13).

இடு[2]-தல் *idu-,* 18 செ.குன்றாவி. (v.t.). 1. ***குத்துதல்;*** to hit against, thrust in. ''இடுமருப்பியானை'' (கலித்.24, 10). 2. ***வெட்டுதல்;*** to cut off. 3. ***போகடுதல்;*** to throw, cast away. ''ஈந்தான் சிலைநிலத்தி லிட்டான்'' (கந்தபு.வள்ளி.36). 4. ***வைத்தல்;*** to place, deposit,

put in, keep. "காயத்திடுவாய்" (திருவாச.33,8). 5. ***பரிமாறுதல்;*** to serve, distribute. "இடுகிறவள் தன்னவ ளானால் அடிப்பந்தியி லிருந்தா லென்ன, கடைப்பந்தியி லிருந்தாலென்ன?" (உ.வ.). 6. ***கொடுத்தல்;*** to give, grant, bestow, as alms. "இட்டார் பெரியோர்" (நல்வ.2). 7. ***சொரிதல்*** (திவா.); to pour, shower as rain. 8. ***அணிவித்தல்;*** to put on, as a bangle on one's wrist. "புங்கவனிடுவளை" (திருவிளை.வளையல்.27). 9. ***உவமித்தல்.*** (சீவக.2423,உரை); to compare. 10. ***குறியிடுதல்;*** to give, as a name to a new-born child, to assign. "இட்டதொரு பேரழைக்க வென்னென்றாங்கு" (சி.போ.2,1,1). 11. ***ஏற்றிச்சொல்லுதல்;*** to charge, to incriminate by laying a false charge against. "படாத தொரு வார்த்தையிட்டன ரூரார்" (சிலப்.9,48). 12. ***சித்திரமெழுதுதல்*** (சீவக.2383); to draw, as a figure. 13. ***உண்டாக்குதல்;*** to yield, generate. "கள்ளியிட்ட வகில்" (இரகு.நகர.52). 14. ***முட்டையிடுதல்;*** to lay, as an egg. 15. ***தின்பண்டம் முதலியன உருவாக்கு தல்;*** to form or fashion, to mould, as cakes. "இன்றைக்கு எத்தனை அப்பளம் இட்டாய்?" (உ.வ.). 16. ***தொடுத்து விடுதல்;*** to discharge, as arrows. "கணையிட்டு" (திருப்பு.4180). 17. ***கைவிடுதல்;*** to forsake, desert. "இளையவள நாகிட்டு" (சீவக.1226). 18. ***தொடங்குதல்*** (திவ். திருவாய்.2,10,பன்னீ.ப்ர.); to begin. 19. ***செய்தல்;*** to do. "அரக்கனாங் காளமேக மிடுகின்ற வேள்வி." (கம்பரா.நிகும்.99). 20. ***புதைத்தல்;*** to bury. (சீவக. 1680,உரை). - து.வி. (v.caus.) ***ஒரு துணைவினை;*** auxiliary of verbs which become vbl.pple. of the past-tense before it. "உரைத்திடுகின்றான்." (செ.அக.).

ம., க., தெ., து. இடு; **கோத.** இட்; **குட.** ஈட்; **து.** இடுபிணி; **நாய்.** இர்; **கட.** இர்; **கொண்.** இட்; **குவி.** இட.

[இல் → இள் → இடு = குத்துதல், பொத்துதல், பொருத்துதல், வைத்தல்.]

இடு[3] *iḍu,* பெ. (n.) 1. ***குழி;*** pit. 2. ***வட்டம்;*** circle. 3. ***நிறைவு;*** fullness.

க. இடி (நிறைவு).

[இல் → இள் → இடு.]

இடுக்கடி *iḍukkaḍi,* பெ. (n.) ***துன்பம்*** (கொ.வ.). distress. (செ.அக.).

[இடு → இடுக்கு + அடி - இடுக்கடி. இடுக்கு = துன்பம். அடி = தாக்குறல்.]

இடுக்கண் *iḍukkaṇ,* பெ. (n.) 1. ***மலர்ந்த நோக்க மின்றி ஊயனோக்கம் படவரும் இரக்கம்*** (தொல்.பொ.260,உரை); misery that is reflected by shrunken eyes. 2. ***துன்பம்.*** (சீவக.509); distress, woe, affliction (செ.அக.). 3. ***இக்கட்டு*** (ஆ.அக.); trouble, difficulty. 4. ***வறுமை*** (ஆ.அக.); poverty. "இடுக்கண் வருங்கால் நகுக." (குறள்).

[இடு = குத்துதல், துன்புறுத்துதல். இடு → இடுக்கண். கண் -தொழிற்பெயரீறு. பண்புப் பெயரீறு, ஒ.நோ. அலக்கண், புன்கண், இன்கண்.]

இடுக்கணழியாமை *iḍukkaṇ-aḻiyāmai,* பெ. (n.) ***துன்பக் காலத்து மனங்கலங்காமை.*** (குறள்,அதி.63); imperturbability in distress, serenity of mind, courage in trouble. (செ.அக.).

[இடு → இடுக்கண் + அழியாமை.]

இடுக்கணி *iḍukkaṇi,* பெ. (n.) ***பொருள் வைக்கப்படும் மூலையான இடம்; கைக்குள் அல்லது விரல்களுக் குள்ளான இடம்; ஒரு பொருள் அல்லது ஒருவர் அகப்பட்டிருக்கும்படியான இடுக்கானவிடம்.*** (செ.அக.); corner, nook where a thing may be held, as under the arms or between the fingers or under the hams; a narrow niche where a person or thing may become confined, jammed in or wedged in.

[இடுக்கு = சிறிய இடம், மூலைமுடுக்கு. இடுக்கு → இடுக்கணி.]

இடுக்கப்படு[1]**-தல்** *iḍukka-p-paḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. ***ஒடுக்கப்படல்;*** to be suppressed. 2. ***துன்பப் படல்*** (ஆ.அக.); to be made to suffer.

[இடுக்கம் + படு.]

இடுக்கப்படு[2]**-த்தல்** *iḍukka-p-paḍu-,* 18 செ. குன்றாவி. (v.t.) 1. ***துன்பப்படுத்தல்;*** to torment. 2. ***நெருக்கல்*** (ஆ.அக.); to inflict pain.

[இடுக்கம் + படு.]

இடுக்கம் *iḍukkam,* பெ. (n.) 1. ***ஒடுக்கம்;*** closeness, narrowness of space. 2. ***துன்பம்;*** affliction, distress, trouble. "சொர்க்கத்த ரிடுக்கங்கெட" (திருப்பு.419). (செ.அக.). 3. ***நெருக்கம்*** (ஆ.அக.); crowdedness. 4. ***வறுமை*** (ஆ.அக.); poverty.

[இடுக்கு → இடுக்கம்.]

இடுக்கல் *iḍukkal,* பெ. (n.) ***ஒடுங்கிய இடைவெளி;*** crevice, aperture. (செ.அக.).

[இடுக்கு → இடுக்கல்.]

இடுக்காஞ்சட்டி *iḍukkāñ-caṭṭi,* பெ. (n.) ***விளக்குத் தகழி*** (நெல்லை.); bowl of a lamp made of clay. (செ.அக.).

[இடுக்கு + ஆம் + சட்டி.]

இடுக்கி *iḍukki,* பெ. (n.) 1. ***குறடு;*** pincers, tongs, forceps, tweezers, nippers. 2. ***எலி முதலியவற்றை அகப்படுத்தும் பொறி;*** steel trap. 3. ***உலுத்தன்*** (வின்.); stingy person, miser, niggard, pinch-fist. 4. ***நண்டு முதலியவற்றின் கவ்வுறுப்பு*** (இ.வ.); prehensile chelae of a crab or a scorpion.

ம. இடுக்கி; **க.** இக்குழ, இக்கழ; **கோத.** இக்கள்; **து.** ஈக்குளெ, இக்குளி.

[இடுக்கு → இடுக்கி.]



இடுக்கி

இடுக்கிச்சட்டம் *iḍukki-c-caṭṭam,* பெ. (n.) ***கம்பிச்சட் டம்;*** cleat. (செ.அக.).

[இடுக்கி + சட்டம்.]

இடுக்கிடை *iḍukkiḍai,* பெ. (n.) ***நெருக்கம்*** (வின்.); closeness, narrowness (செ.அக.).

[இடுக்கு + இடை.]

இடுக்கு[1]-தல் *iḍukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. ***கவ்வுதல்*** (ஆ.அக.); to take between the fingers or toes, to grasp or grip, as with pincers. 2. ***அணைத்தல்;*** to take under one's arm. "இடுக்குவார் கைப்பிள்ளை". (தாயு.பன்மா.6). 3. ***நெருக்குதல்;*** to press or squeeze as between two boards. 'இடுக்கு மரம்' (வின்.).

ம. இடுக்கு; க. இடிகு.

[இடு → இடுக்கு.]

இடுக்கு[2] *iḍukku,* பெ. (n.) 1. ***சந்து, முடுக்கு;*** narrow lane. 2. ***மூலை;*** nook, corner. 3. ***இடுக்கிக் கொள்ளக்கூடிய இடம்;*** parting between fingers, crevices between the teeth, cleft in the split wood, the axilla, any place where a person or thing may get pressed or wedged in. "கவட்டுத் தொன்மரத் திடுக்கிற் கானுழைத்துக் கொண்டே" (தனிப்பா.). 4. ***கவ்வுமுறுப்பு*** (வின்.); prehensile claws, as those of a scorpion or of a lobster. 5. ***இடைஞ்சல், துன்பம்.*** difficulty, trouble, straits. "இடுக்கில ணியம்புவ தில்லை" (கம்பரா.யுத்.மந்தி. 27). 6. ***இவறன்மை;*** miserliness, niggardliness. "இடுக் குடை யுள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம்" (நாலடி. 274).

ம. இடுக்கு; க. இடங்கு, இடுகு.

[இடு → இடுக்கு.]

இடுக்குடை *iḍukkuḍai,* பெ. (n.) ***இடுக்கிடை*** பார்க்க; see *iḍukkiḍai.*

[இடுக்கிடை → இடுக்குடை.]

இடுக்குத்திருத்துழாய் *iḍukku-t-tiru-t-tuḷāy,* பெ. (n.) ***திருமால் கோயிலில் மதிப்புரவாகத் திருவடி நிலையினிடையில் வைத்துக் கொடுக்கும் துளசி.*** (இ.வ.) (செ.அக.); tulasi leaves kept between the sacred sandals of the idol, which are, in a Vishnu shrine, enthroned on a pedestal, such leaves being specially given as 'pirasatam' to worshippers of great eminence.

[இடு → இடுக்கு. இடுக்குதல் = வைத்தல், இடுதல். இடுக்கு + திரு + துழாய்.]

இடுக்குதடி *iḍukku-taḍi,* பெ. (n.) ***கள்ளூறும்படி பாளையை நெருக்கிப் பிடிக்க வைக்கும் இரட்டைத் தடி*** (வின்.); double stick used to press things with, such as that used by a toddy-drawer to press the flower or fruit-stem of the palmyra.

[இடுக்கு + தடி. இடுக்குதல் = நெருக்குதல்.]

இடுக்குப்பனை *iḍukku-p-paṉai,* பெ. (n.) ***கள்ளூறும் பனை*** (யாழ்ப்.); palmyra tree from which toddy is drawn (செ.அக.).

[இடுக்கு + பனை.]

இடுக்குப்பாளை *iḍukku-p-pāḷai,* பெ. (n.) ***பதநீர் இறக்கும் பனை*** (வை.மூ.); palmyra tree for drawing sweet toddy (செ.அக.).

[இடுக்கு + பாளை.]

இடுக்குப்பிள்ளை *iḍukku-p-piḷḷai,* பெ. (n.) ***கைக் குழந்தை;*** infant in arms, as carried on the hip. (செ.அக.).

[இடுக்கு + பிள்ளை.]

இடுக்குப்பொட்டணி *iḍukku-p-poṭṭaṇi,* பெ. (n.) ***அக்குளில் இடுக்கிச் செல்லத்தக்க ஏனம் அல்லது பை, அக்குள்பாளம்*** (கக்கப்பாளம்) (யாழ். அக.); vessel or bag carried under the armpit. (செ.அக.).

[இடுக்கு + பொட்டணி. பொத்தலி → பொத்தளி → பொட்டளி - பொட்டணி (கொ.வ.) பொத்தலி = பை.]

இடுக்குமரம்[1] *iḍukku-maram,* பெ. (n.) ***கடவை மரம்*** (வின்.); narrow passage which leads to a field and is made of wooden posts. (செ.அக.).

[இடுக்கு + மரம்.]

இடுக்குமரம்[2] *iḍukku-maram,* பெ. (n.) ***செக்கு வகை*** (வின்.); a kind of oil-press. (செ.அக.).

[இடுக்கு + மரம்.]

இடுக்குமுடுக்கு *iḍukku-muḍukku,* பெ. (n.) 1. ***மூலை முடுக்கு;*** cramped place, narrow corner, tight spot. (செ.அக.). 2. ***இடர்ப்பாடு;*** predicament.

[இடுக்கு + முடுக்கு.]

இடுக்கு வழி *iḍukku-vaḻi,* பெ. (n.) ***சந்து வழி;*** narrow way or lane. (செ.அக.).

ம. இடுக்கு வழி; க. இடுக்கு; து. இட்டிமெ; தெ. இருக்கு.

[இடுக்கு + வழி. இடுக்கு = சிறுசந்து.]

இடுக்கு வாசல் *idukku-vāšal,* பெ. (n.) ***சிறு நுழைவாசல்*** (வின்.); strait narrow gate. (செ.அக.).

[இடுக்கு + வாசல். இடுக்கு - சிறுசந்து.]

இடுக்குவார்கைப்பிள்ளை *idukkuvārkai-p-pillai,* பெ. (n.) ***எடுப்பார் கைப்பிள்ளை*** (இ.வ.); one who is easily led by others; gullible fellow (செ.அக.).

[இடுக்கு - இடுக்குவார் (வினையா.பெ.). இடுக்குவார் + கை + பிள்ளை.]

இடுகடை *idu-kadai,* பெ. (n.) ***பிச்சையிடும் வீட்டு வாயில்*** (வின்.); front of a house, where alms are given. (செ.அக.).

[இடு + கடை. கடை = வாயில். வாயிலுள்ள வீடு.]

இடுகளி *idu-kali,* பெ. (n.) ***அதிமதுரத் தழை முதலிய வற்றை யானைக்கு இடுதலால் அதற்கு உண்டாம் மதம்;*** must caused to an elephant by feeding it with the leaves of 'atis', etc. ''இடுகளியானை'' (பெருங்.மகத. 27,145) (செ.அக.).

[இடு + களி.]

இடுகறல் *idugaral,* பெ. (n.) ***விறகு*** (நிகண்டு.); fuel. (செ.அக.).

[இடுகு - சிறியது. இடுகு + அறல். அறல் = உலர்ந்தது. இடுகறல் = உலர்ந்த சுள்ளி.]

இடுகாடு *idu-kādu,* பெ. (n.) ***பிணம் புதைக்குமிடம்*** (நாலடி.90); burial ground, cemetary. (செ.அக.).

ம. இடுகாடு.

[இடு + காடு. இடுதல் = புதைத்தல்.]

இடுகால் *idukāl,* பெ. (n.) ***பீர்க்கு*** (மலை.); spongegourd. (செ.அக.).

[இடுகல் → இடுகால். இடுகல் - உள்ளொடுங்குதல்.]

இடுகு-தல் *idugu-,* 6 செ.கு.வி. (v.i.) 1. ***ஒடுங்குதல்;*** to shrink ''கண்களை யிடுகக் கோட்டி'' (சீவக.2086). 2. ***சிறுகுதல்;*** to become shrivelled or dwindled. "இடுகிடைத்தோகாய்" (கம்பரா.சித்திர.19). (செ.அக). 3. ***சுருங்குதல்.*** (ஆ.அக.); to contract.

[இடு → இடுகு.]

இடுகுறி[1] *idu-kuri,* பெ. (n.) 1. ***வைக்கப்படும் அடையாளம்;*** symbol. 2. ***பெயர்;*** name given to a person by his parents. "இடுகுறி கோத்திர முதன்மற்றியாவுந் தோன்ற'' (திருவாலவா.31,3). 3. ***இடுகுறிப்பெயர்;*** name without any reason behind it to be called so.

[இடு + குறி.]

இடுகுறி[2] *idu-kuri,* பெ. (n.) ***முற்காலத்தில் நெல்லைச் சேமித்து வைக்கும் படியாக ஒருவரிடம் ஒப்புவிக்கும் ஆவணம்*** (Tm.Rev.N.iv; Glossary); document by which paddy was entrusted to private individuals, to be stored up in their houses.

ம. இடுகுறி.

[இடு + குறி.]

இடுகுறிச்சிறப்புப் பெயர் *idu-kuri-c-cirappu-p-peyar,* பெ. (n.) ***இடுகுறிக்கு மட்டுமே வருஞ் சிறப்புப்பெயர்.*** (ஆ.அக.); proper noun (grammar).

[இடு + குறி + சிறப்பு + பெயர்.]

இடுகுறிப்பெயர் *idu-kuri-p-peyar,* பெ. (n.) ***காரண மின்றி வழங்கி வரும் பெயர்*** (நன்.62); noun connoting the primeval sense in which it has been used, as dist. fr. Kārana-p-peyar.

[இடு + குறி + பெயர். எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவாதலின் இடுகுறிப்பெயர் என்று எதுவும் இல்லை என்பது பாவாணர் கருத்து.]

இடுகுறிமரபு *idu-kuri-marabu,* பெ. (n.) ***இடுகுறியாகத் தொன்று தொட்டு வரும் பெயர்***(நன்.275, உரை.) (செ.அக.); noun used in the conventional sense which it continues to bear from the remote past.

[இடு + குறி + மரபு. நன்னூலார் இடுகுறியாகக் கொள்ளும் பெயர்கள் ஒரு காலத்தில் காரணம் கருதியவை. ஆதலின் இடுகுறிப்பெயர் என்று ஒன்று இல்லை என்பதே பாவாணர் கருத்து. ஆதலின் இடுகுறி மரபு என்பதும் வறுஞ்சொல்லாதல் காண்க.]

இடுகுறியாக்கம் *idu-kuri-y-ākkam,* பெ. (n.) ***இடுகுறியாக ஒருவன் கொடுத்த அல்லது ஆக்கிக்கொண்ட பெயர்*** (நன்.275,உரை.) (செ.அக.); unconventional name which a person assumes of his own accord or is arbitrarily given by others, classified as a distinct class of proper names in Tamil grammar.

[இடு + குறி + ஆக்கம்.]

இடுகை[1] *idugai,* பெ. (n.) ***இடுங்கிய வழி;*** a narrow passage, lane.

ம. இடுவ.

[இடு - இடுகை.]

இடுகை[2] *idugai,* பெ. (n.) ***கொடை*** (பிங்.); gift (செ.அக.).

[இடு → இடுகை = இடுதல், வைத்தல், கொடுத்தல்.]

இடுங்கலம் *idun-kalam,* பெ. (n.) ***கொள்கலம்.*** (பிங்.); vessel, receptacle (செ.அக.).

[இடும் + கலம்.]

இடுங்கற்குன்றம் *idun-kar-kunram,* பெ. (n.) ***செய் குன்று;*** artificial hill; an artificially made up mound resorted to for pleasure ''எந்திரக் கிணறு மிடுங்கற் குன்றமும்'' (மணி. 19, 102). (செ.அக.).

[இடும் + கல் + குன்றம்.]

இடுங்கு-தல் *idungu-,* 15 செ.கு.வி. (v.i.) ***உள்ளொடுங்குதல்;*** to shrink, contract. ''கண்ணிடுங்கி'' (திவ். பெரியதி.1,3,4). (செ.அக.).

ம. இடுங்ஙுக; க. இடுங்கு; து. இட்டிடெ.

[இடு → இடுங்கு.]

இடுசிவப்பு *idu-šivappu,* பெ. (n.) ***செயற்கைச் சிவப்பு*** (ஈடு. 7,7,9); artificial red dye. (செ.அக.).

[இடு + சிவப்பு.]

இடுதங்கம் *idu-tangam,* பெ. (n.) ***புடமிட்ட தங்கம்*** (வின்.); refined gold, gold of the best quality. (செ.அக.).

[இடு[1] + தங்கம். இடுதல் - செய்தல், வேலைப்பாடு.]

இடுதண்டம் *idu-tandam* பெ. (n.) 1. ***தண்டம்;*** penalty, fine. 2. ***முறையற்ற தண்டம்;*** unjust penalty. (செ.அக.).

[இடு + தண்டம்.]

இடுதிரை *idu-tirai,* பெ. (n.) ***திரைச்சீலை*** (திவா); curtain.

[இடு + திரை.]

இடுதேளிடு-தல் *idu-tēl-idu-,* 20 செ.கு.வி. (v.i.) ***பொய்க்காரணங்காட்டிக் கலங்கப் பண்ணுதல்;*** cause needless panic by false suggestion, as by sending one into a fright by throwing an imitation scorpion at him. "இட்டன ரூரா ரிடுதேளிட் டென்றன் மேல்", (சிலப்.9, 48).

[இடு + தேள் + இடுதல். இடுதேள் = மற்றவர் மேல் இடுவதற் கான தேள், பொய்த்தேள், செயற்கைத்தேள். ஒ.நோ. இடுசி வப்பு.]

இடுப்பு *iduppu,* பெ. (n.) 1. ***அரை;*** waist, sides, loins. 2. ***ஒக்கலை;*** hip. 3. ***மறைவுறுப்பு;*** (C.G.); euphemism for the private parts. (செ.அக.).

[இடு → இடுப்பு. இடுதல் = வைத்தல். குழந்தை, குடம் போன்ற வற்றை வைத்துக்கொள்ளுதற்கு அல்லது இடுதற்குரிய இடம் இடுப்பு.]

இடுப்புக்கட்டு-தல் *iduppu-k-kattu-,* 15 செ.கு.வி. (v.i.). ***சண்டை பிடிக்க முந்துதல்;*** to gird up one's loins, as for a fight. "நீ சண்டைக்கு இடுப்புக்கட்டாதே" (பெண்மதி. மாலை.பக்.9). (செ.அக.).

[இடுப்பு + கட்டுதல் = இடுப்பில் ஆடையை வரிந்து கட்டுதல்.]

இடுப்பு வலி *iduppu-vali,* பெ. (n.) 1. ***இடுப்புநோவு*** (வின்.); pain in the loins; lumbago. 2. ***பிள்ளைப்பேற்று வலி;*** labour pains. (செ.அக.).

[இடுப்பு + வலி.]

இடுபலம் *idupalam,* பெ. (n.) ***பேய்ப்புடல்*** (வை.மூ.); wild snakegourd. (செ.அக.).

[இடு + புடல் - இடுபுடல் - இடுபலம். (கொ.வ.). இடுபுடல் = பொய்ப்புடல்.]

இடும்பர் *idumbar,* பெ. (n.) 1. ***அரக்கர்*** (அக.நி.); Raksasas. (செ.அக.). 2. ***செருக்கர்*** (ஆ.அக.); arrogant person. 3. ***துயர் செய்வோர்*** (ஆ.அக.); offender.

[இடும்பு → இடும்பர்.]

இடும்பன்[1] *idumban,* பெ. (n.) ***ஓர் அரக்கன்;*** a demon, Rāksasa.

இடும்பன்[2] *idumban,* பெ. (n.) ***செருக்குள்ளவன்*** (இராட்.); haughty man, arrogant person. (செ.அக.).

[இடம்பு → இடம்பன் → இடும்பன்.]

இடும்பன்[3] *idumban,* பெ. (n.) ***குமரக்கடவுள், கணத்த லைவன்*** (வின்.); name of the leader of Skanda's hosts. (செ.அக.).

Skt. hidimba

[இடும்பு → இடும்பன்.]

இடும்பாகம் *idumbāgam,* பெ. (n.) ***கொத்தான் கொடி*** (சா.அக.); leafless creeper, mose creeper.

[இடு = இடுகுதல், சிறுத்தல். இடு → இடும்பு → இடும்பகம் -இடும்பாகம் = சிறுத்த மெல்லிய கொடி.]

இடும்பி *idumbi,* பெ. (n.) 1. ***இடும்பை செய்பவள்;*** demoness. 2. ***இடும்பனின் தங்கை, வீமனின் மனைவி;*** name of Hidimba's sister; Bhima's wife. இடும்பி கொழுநன் (பிங்.).

[இடும்பு → இடும்பி.]

இடும்பில் *idumbil,* பெ. (n.) ***ஓர் ஊர்*** (சிலப்பதிகாரம்); name of a place.

[இடும்பு → இடும்பில்.]

இடும்பு[1] *idumbu,* பெ. (n.) 1. ***செருக்கு;*** haughtiness, arrogance. "இடும்பால்... உரைத்தாய்" (செவ்வந்திப்பு. பிரமதேவன்.15). 2. ***கொடுஞ்செயல்;*** cruelty, oppression, tyranny. "சம்பளத்து... அவரவரிடும்பா லழிந்த வன்றோ" (குமரே.சத.47). 3. ***புலக்குறும்பு*** (சேட்டை); mischief, pranks. ஏழையிடும்பு (இராட்.). 4. ***வெறுப்பு*** (ஆ.அக.); hatred. 5. ***அவமதிப்பு*** (ஆ.அக.); disgrace, dishonour. 6. ***துன்பம்*** (ஆ.அக.); affliction.

[இடு → இடும்பு.]

இடும்பு[2] *idumbu,* பெ. (n.) ***இடும்பாத வனம்;*** a forest. "மாறா வல்விலிடும்பிற் புறத்திறுத்து" (பதிற்று.பதிக.5:9).

[இடு → இடும்பு.]

இடும்பை *idumbai,* பெ. (n.) 1. ***துன்பம்;*** suffering, affliction, distress, calamity." ஏமஞ்சாலா விடும்பை" (தொல்.பொ.50). 2. ***தீமை;*** evil, harm, injury. "பூதம்... இடும்பை செய்திடும்" (மணி.1,22). 3. ***நோய்;*** disease. "கரப்பிடும்பை யில்லாரைக் காணின்" (குறள்.1056). 4. ***ஏழ்மை;*** poverty."இடும்பையா லடர்ப்புண்டு" (திவ். பெரியதி.1,6,5). 5. ***அச்சம்*** (திவா.); fear, dread. (செ.அக.). 6. ***ஏதம்;*** danger. (ஆ.அக.). 7. ***எலி;*** rat. (சா.அக.).

[இடும்பு + இடும்பை.]

இடும்போகம் *idumbōgam,* பெ. (n.) ***சிவப்பவரை;*** red bean. (சா.அக.).

இடுமம் *iḍumam,* பெ. (n.) ***குயவன் சக்கரத்தை நிலத்திற் பொருத்தற்கு இடும் மண்கட்டி*** (இ.வ.). (செ.அக.); clod of mud or earth on which the potter rests his wheel.

[இடு → இடுமம்.]

இடுமருந்து *iḍu-marundu,* பெ. (n.) 1. ***வசிய மருந்து;*** drugs administered secretly with food or drink in order to win over a person; philter potion stealthily administered. ''இடுமருந்தோடு சோற்றை யேயிடும்'' (திருப்பு.820). 2. ***கொல்லும் நோக்கத்துடன் இடும் கைமருந்து*** (நீர்நிறக்.18,உரை) (செ.அக.); potion containing a poisonous drug or the venom of reptiles.

[இடு + மருந்து.]

இடுமுடை *iḍu-muḍai,* பெ. (n.) ***நிறைந்த தீநாற்றம்;*** stench, bad smell, stink. ''இடுமுடை மருங்கில் தொடு மிடம் பெறாஅது'' (நற்.329).

[இடு + முடை.இடு = குழித்தல், வட்டமாதல், நிறைதல்.]

இடுமுள் *iḍu-muḷ,* பெ. (n.) ***வேலியாக இடும் முள்*** (சீவக.774,உரை) (செ.அக.); thorns thrown over the entrance to a field or garden to prevent intruders.

[இடு + முள்.]

இடுலி *iḍuli,* பெ. (n.) ***பெண் ஆமை*** (வின்.); female turtle. (செ.அக.).

Skt. ḍuli

[இடு - இடுலி. இடுதல் - குழித்தல், வட்டமாதல், வட்டமான ஆமை; முட்டையிட மண்ணைப்பறிக்கும் பெண்ணாமை.]

இடுவந்தி *iḍu-vandi,* பெ. (n.) ***குற்றமில்லாதவர்மேற் குற்றத்தையேற்றுகை;*** accusation of an innocent person. 'பொற்கொல்லன் நெஞ்சம் இடுவந்தி கூறுதலைப் புரிந்துநோக்க', (சிலப்.16,120,உரை), (செ.அக.).

Skt. kimvadanti

[இடு + வந்தி. வன் + தி - வந்தி = கடுஞ்சொல், தீமொழி, இடுவந்தி = செயற்கையாக அல்லது பொய்யாக இட்டுரைக்கும் கடுஞ்சொல்.]

இடுவல்[1] *iḍuval,* பெ. (n.) ***இடுக்கு;*** crevice, aperture (செ.அக.).

[இடு → இடுவல்.]

இடுவல்[2] *iḍuval,* பெ. (n.) ***வழி*** (நெல்லை); way (செ.அக.).

[இடு - இடுவு - இடுவல். இடுவு - சிறிய வழி.]

இடுவை *iḍuvai,* பெ. (n.) ***சந்து*** (இ.வ.); lane. (செ.அக.).

[இடு → இடுவை.]

இடை[1] *iḍai,* பெ. (n.) 1. ***நடு*** (திவா.); middle in space, midst, centre. 2. ***நடுவண் காலம்;*** middle in time. ''இடைக் கொட்கின்'' (குறள்.663). 3. ***அரை, இடுப்பு;*** middle of the body, the waist. ''மின்னேர் நுடங்கிடை'' (திருவாச.11,9). 4. ***நடுத்தர மக்கள்;*** middle class people. ''இடையெலாமின்னாமை யஞ்சும்'' (நாலடி. 297). 5. ***இடைக்குலம்;*** herdsman caste. 6. ***இடை எழுத்து;*** medial consonants of the Tamil alphabet. ''அல்வழி யுயிரிடைவரின்'' (நன்.220). 7. ***இடைச் சொல்*** (நன்.239); indeclinable particle, as one of the parts of speech. 8. ***இடம்;*** place, space. ''கருங்கல்லிடை தோறும்'' (புறநா.5,1). 9. ***இடப்பக்கம்;*** left side. ''எங்கள் பெம்மானி டையாளை'' (அபிரா.84). 10. ***வழி;*** way. ''நீரில்ல நீளிடைய'' (புறநா.3). 11. ***தொடர்பு;*** connection. ''உங்களோ டெங்களிடையில் லையே'' (திவ்.திருவாய்.8,2,7). 12. ***தக்க நேரம், தகுந்த சூழல்;*** suitable time, opportunity, season. ''உடையோர் போல விடையின்று குறுகி'' (புறநா.54). 13. ***காரணம்;*** cause. ''இடைதெரிவரியது'' (சூளா. கலியாண.144). 14. ***நீட்டலளவையு ளொன்று*** (வின்.); measure of length, breadth, thickness.

[இடு → இடை.]

இடை[2] *iḍai,* இடை. (part.) ***ஏழனுருபு;*** sign of the loc. ''நிழலிடையுறங்குமேதி'' (கம்பரா.நாட்டுப்.6). (செ.அக.).

[இடு → இடை.]

இடை[3]**-தல்** *iḍai-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***சோர்தல்*** (சீவக.446, உரை); to grow weary, as with long waiting. 2. ***மனந்தளர்தல்;*** *to be damped in spirits. ''இடைந்தி டைந் துருகு மெளியனேன்'' (தாயு.சிற்சு,3).* 3. ***பின் வாங்குதல்;*** to retreat, fall back. ''அசமுகி யிடைந்து போனாள்'' (கந்தபு.மகாகாளர்.20). 4. ***விலகுதல்;*** to make room, get out of the way. 'இடைந் தொதுங்குகை' (ஈடு.5,4,6). 5. ***தாழ்தல்;*** to submit. 'அவனுக்குச் சிறிது இடைந்துபோ' (செ.அக.).

[இழு → இழை → இடை - இடைதல். இழைதல் = தளர்தல்.]

இடை[4] *iḍai,* பெ. (n.) 1. ***தடுத்தல், இடையிடுதல்;*** check, stoppage, protest, impediment. ''இடை கொண்டி யாமிரப்ப'' (கலித்.3,7). 2. ***துன்பம்*** (திருக்கோ.368, உரை); trouble, difficulty.(செ.அக.).

[இடு → இடை.]

இடை[5] *iḍai,* பெ. (n.) 1. ***இடைவெளி;*** gap, unfilled space. ''இடையில் வண்புகழ்க் கொடைமை யானும்'' (தொல்.பொ.76). 2. ***உலகம்;*** earth. ''இடையிற் படுகி லம்யாம்'' (கம்பரா.அதிகாய.73). 3. ***வீடு பேற்றுலகம்;*** svarga, heaven.

[இடு → இடை.]

இடை[6] *iḍai,* பெ. (n.) ***பதின்நாடியுளொன்று*** (சிலப்.3, 26,உரை); principal tubular organ of the human body, one of tacanāḍi, (செ.அக.).

[இடு → இடம் → இடை.]

இடை[7] *iḍai,* பெ. (n.) ***எடை*** பார்க்க; see *eḍai,* ''இடை தான் குறைந்தது மச்சமுங் காட்டுவ தில்லை யென்றால்''

(ஒருதுறைக்.185), (கொ.வ.).

[எடை → இடை (கொ.வ.). இது வழுச் சொல்லாதலின் இரு வகை வழக்கிலும் தவிர்த்தல் வேண்டும்.]

இடை[8] *idai,* பெ. (n.) 1. ***இடைப்பட்ட காலம், பொழுது*** (குறிஞ்சிப்.137, உரை); time. 2. ***நடுவுநிலை;*** equity. "இடைதெரிந்துணரும்.....காட்சி" (பெரும் பாண்.445). 3. ***முன்னதற்கும் பின்னதற்குமுள்ள வேறுபாடு;*** difference. "வாசவதத் தையோ டிடைதெரி வின்மையின்" (பெருங்.வத்தவ.6,56) "இடைக்கண் முரிந்தார் பலர்" (குறள்.473) (செ.அக.).

[இடு → இடை (இடைவெளி).]

இடை[9] *idai,* பெ. (n.) ***பின்வாங்கி ஓடுதல்;*** retreating.

[திட - இடை. (ஒ.மொ.371).]

இடை[10] *idai,* பெ. (n.) 1. ***ஆ;*** cow. 2. ***மென்சொல்;*** softword. (செ.அக.).

ம. இட. *Skt.* idā

[இள → இட → இடை. இளமையுடைய ஆவும், இளக்கமான மென்சொல்லும் இடை எனப்பட்டன.]

இடைக்கச்சு *idai-k-kaccu,* பெ. (n.) ***அரைக்கச்சை*** பார்க்க; see *araik-kaccai.*

[இடை + கச்சு.]

இடைக்கச்சை *idai-k-kaccai,* பெ. (n.) ***இடைக்கச்சு*** பார்க்க; see *idai-kaccu,* (செ.அக.).

ம. இடக்கச்ச.

[இடை + கச்சை. இடை - இடுப்பு.]

இடைக்கட்டு[1] *idai-k-kattu,* பெ. (n.) 1. ***அரைக்கச்சு;*** girdle or belt. 2. ***ஓர் அணி*** (S.I.I.ii,205); front plate, an adornment of idols, so called from its being fastened in the middle. 3. ***இடைகழி;*** intermediate passage way between the entrance door and the second doorway in an Indian dwelling house. 4. ***வீட்டின் நடுக்கட்டு;*** the middle compartment of an Indian dwelling house. (செ.அக.).

ம. இடக்கெட்டு.

[இடை + கட்டு.]

இடைக்கட்டு[2] *idai-k-kattu,* பெ. (n.) ***சமன் செய்வதற் குரிய நிறை*** (இ.வ.); balancing weight (செ.அக.).

[இடை + கட்டு.]

இடைக்கணம் *idai-k-kanam,* பெ. (n.) ***இடையின எழுத்துகள்: ய,ர,ல,வ,ழ,ள;*** group of medial consonants in Tamil, as a classified group distinct from van-kanam and men-kanam. (செ.அக.).

[இடை + கணம்.]

இடைக்கருவி *idai-k-karuvi,* பெ. (n.) ***சல்லியென்னுந் தோற்கருவி*** (சிலப்.3,27,உரை); ancient musical instrument of percussion, a kind of drum. (செ.அக.).

[இடை + கருவி.]



இடைக்கருவி

இடைக்கலம் *idai-k-kalam,* பெ. (n.) ***மட்பாண்டம்;*** earthern vessel for cooking. 'இல்லுள்வில்லேற்றி இடைக் கலத் தெய்து விடல்' (பழ.24).

Skt. idā

[இடை + கலம் - வாயகன்ற மட்கலம்.]

இடைக்கழகம் *idai-k-kalagam,* பெ. (n.) ***கபாடபுரம் என்னும் கதவபுரத்தில் இருந்ததாகக் கூறப்படும் இரண்டாந் தமிழ்க் கழகம்*** (இறை.பாயி.); middle sangam, said to have flourished for a long period at Kapādapuram, the second of the three ancient Tamil academies. (செ.அக.).

Skt. sangha.

[இடை + கழகம்.]

இடைக்காடர் *Idai-k-kādar,* பெ. (n.) ***கடைக்கழகத்துச் சான்றோருள் ஒருவர்*** (திருவாலவா.20,1); a Tamil Sangam poet of Idai-k-kādu. (செ.அக.).

[இடைக்காடு + அர். தொண்டை மண்டலத்தில் இடையன் திட்டிலிருந்த இடையர்.]

இடைக்காடனார் *idai-k-kādanār,* பெ. (n.) ***இடைக்கா டர்*** (அகநா.) பார்க்க; see *idai-k-kādar.* (செ.அக.).

[இடைக்காடன் + ஆர்.]

இடைக்கார் *idai-k-kār,* பெ. (n.) ***நெல்வகை*** (நாநார்த்த.); a kind of paddy. (செ.அக.).

[இடை + கார்.]

இடைக்காலம் *Idai-k-kālam,* பெ. (n.) 1. ***இடையி லுள்ள காலம்;*** interim period. 2. ***குறைந்த முன்புள்ள காலம்;*** recent past. 3. ***காலமல்லாக்காலம்;*** improper time.

ம. இடைக்காலம்; க. எடகால.

[இடை + காலம்.]

இடைக்காற்பீலி *idai-k-kār-pīli,* பெ. (n.) ***பரதவ மகளிர் அணியும் கால்விரலணி வகை;*** a toe-ring worn on the toe next to the little toe usually by the women folk among the fishermen community (செ.அக.).

[இடை + கால் + பீலி.]

இடைக்கிடப்பு *iḍai-k-kiḍappu,* பெ. (n.) ***இடைப்பிறவ ரல்*** (சீவக.2697, உரை); word or words used as complement to the predicate or subject in a sentence. (செ.அக.).

[இடை + கிடப்பு.]

இடைக்கிடை *iḍai-k-kiḍai,* கு.வி.எ. (adv.) 1. ***ஊடே யூடே;*** at frequent intervals. (செ.அக.). 2. ***ஒன்றுவிட் டொன்று;*** alternate (ஆ.அக.).

[இடைக்கு + இடை.]

இடைக்குலநாதன் *iḍai-k-kula-nādaṉ,* பெ. (n.) ***கண் ணன்*** (இராட்.); Krishna (செ.அக.).

[இடை + குலம் + நாதன்.]

இடைக்குலம் *iḍai-k-kulam,* பெ. (n.) ***இடையரது குலம்*** (யாதவர்); community of sheperds. (ஆ.அக.).

[இடை + குலம்.]

இடைக்குழி *iḍai-k-kuḻi,* பெ. (n.) ***இடையெலும்பிரண் டுக்குமிடையிலுள்ள பள்ளம்*** (இங்.வை.); pelvic cavity. (செ.அக.).

க. எடெகுளி.

[இடை + குழி.]

இடைக்குறை *iḍai-k-kuṟai,* பெ. (n.) ***செய்யுள்திரிபுக ளுள் ஒன்று*** (நன்.156, உரை); (Gram.) poet. licence consisting in the shortening of a word by elision of one or more letters in the middle, syncope, (எடு) இல்லை - இலை, ஓதி (ஓந்தி).

[இடை + குறை.]

இடைக்குன்றூர்கிழார் *iḍai-k-kuṉṟūrkiḻār* பெ. (n.) ***தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழிய னைப் பாடிய புலவர்*** (புறநா.); Sangam poet of Iḍai-k-kuṉṟūr.

[இடைக்குன்றூர் + கிழார்.]

இடைக்கொள்ளை *iḍai-k-koḷḷai,* பெ. (n.) 1. ***ஊடு தட்டு;*** plunder by a third party of a property in dispute between two. 2. ***கொள்ளை நோயால் வரும் அழிவு*** (வின்.); ravages of an epidemic disease. (செ.அக.).

[இடை + கொள்ளை.]

இடைகலை *iḍai-kalai,* பெ. (n.) 1. ***பத்து நாடியுள் ளொன்று;*** principal tubular coil like organ of the human body. 2. ***இடது நாசியால் விடும் மூச்சு*** (செ.அக.); breathing through the left nostril.

[ஒருகா. இடது + கால் (காற்று). இடது - இடம் - இடை (திரிபு). கால் - காலை - கலை (திரிபு).]

இடைகழி[1] *iḍai-kaḻi,* பெ. (n.) 1. ***இடைக்கட்டு*** (திவ். இயற்.1,86); intermediate passage way between the entrance door and the second, doorway in an Indian dwelling house. (செ. அக.). 2. ***வாயில்*** (ஆ.அக.); gate. 3. ***இடைகழிநாடு;*** a region known as Iḍai-kaḻi-nāḍu.

[இடை + கழி. கழி = கழிந்து (கடந்து) செல்லும் வாயில். இடையிலுள்ள நிலப்பகுதி.]

இடைகழி[2] *iḍaikaḻi,* பெ. (n.) ***திருக்கோவலூர் திரு மால் கோயில்;*** Viṣṇu shrine at Tiru-k-kōvalūr, "நீயுந் திருமகளு நின்றாயால் .... கோவலிடை கழியே பற்றியி னி" (திவ்.இயற்.முதல் திருவந்.86). (செ.அக.).

[ஒருகா. இடைகழி நாட்டின் பெயரால் அமைந்த கோயிலாக லாம்.]

இடைகழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் *iḍai-kaḻi-nāṭṭu-nallūr-nattattaṉār,* பெ. (n.) ***கடைக்கழகப் புல வர்;*** Sangam poet.

[இடைகழி[1] + நாடு + நல்லூர் + நத்தத்தன் + ஆர்.]

இடைச்சரி *iḍai-c-cari,* பெ. (n.) ***தோள்வளை*** (ஈடு,2, 5,6); armlet worn by men as an ornament, arm. (செ.அக.).

[இடை + சரி. செறி → சரி.]

இடைச்சன் *iḍaiccaṉ,* பெ. (n.) 1. ***இரண்டாம்பிள்ளை*** (கொ.வ.); second child. (செ.அக.). 2. ***நடு மகன்;*** middle child. (ஆ.அக.). 3. ***இரண்டாம் பேறு*** (ஆ.அக.); second birth.

[இடை - இடைச்சன்.]

இடைச்சனி *iḍai-c-caṉi,* பெ. (n.) ***இடைக்காரி*** பார்க்க; see *iḍai-k-kāri* (செ.அக.).

[இடை + சனி.]

இடைச்சி *iḍaicci,* பெ. (n.) 1. ***முல்லைநிலப் பெண்*** (பிங்.); woman of the herdsmen caste inhabiting the forest pasture tracts. 2. ***இடையுடையவள்;*** woman, with special reference to her waist. "ஓசை பெற்ற துடிக்கொளி டைச்சிகள்" (திருப்பு.254). (செ.அக.).

ம. இடயத்தி; க. எடதி.

[இடைத்தி → இடைச்சி.]

இடைச்சியார் *iḍaicciyār,* பெ. (n.) ***கலம்பகத்துள் ஓர் உறுப்பு*** (குமர.பிர.மதுரைக்.62); stanza or stanzas forming part of the literary composition known as kalampakam and describing the iḍaicci. (செ.அக.).

[இடைத்தி - இடைச்சி + ஆர்.]

இடைச்சீலை *idai-c-cīlai,* பெ. (n.) *திரை* (இராட்.); curtain. (செ.அக.).

[இடை + சீலை.]

இடைச்சுரநாதர் *idai-c-curanādar,* பெ. (n.) *திருவி டைச்சுரத்திற் கோயில் கொண்டிருக்கு மிறைவன்* (ஆ.அக.); deity at Tiruvidaiccuram.

[இடைச்சுரம் + நாதர்.]

இடைச்சுரிகை *idai-c-curigai,* பெ. (n.) *உடைவாள்* (சம்.அக.); sword, dagger, as suspended from a girdle round the waist. (செ.அக.).

ம. இடச்சுரிக.

[இடை + சுரிகை.]



இடைச்சுரிகை

இடைச்சுருக்கம் *idai-c-curukkam,* பெ. (n.) 1. *உடுக்கை போல் நடுவில் சுருங்கி ஒடுக்கமா யிருத்தல்;* contraction of an organ (as the stomach or the uterus) at or near the middle of the body, hour-glass contraction. 2. *இடுப்பின் ஒடுக்கம்;* narrowness of the waist. (சா.அக.).

[இடை + சுருக்கம்.]

இடைச்சுவர் *idai-c-cuvar,* பெ. (n.) *இடையூறு;* impediment, obstacle as an intervening wall, barrier. "இதுக்கு இடைச்சுவ ருண்டாவதே" (திவ்.திருமா லை.வ்யா.19,பக்.69). (செ.அக.).

ம. இடச்சுவர்.

[இடை + சுவர்.]

இடைச்சூரி *idai-c-cūri,* பெ. (n.) *அக்கமணி முதலிய வற்றுக்கிடையில் கோக்கும் மணி* (செ.அக.); gold or silver beads interspersed in a rosary of rudraksha or tulasi etc.

[இடை + சூரி. செறி - சூரி.]

இடைச்செருகல் *idai-c-cerugal,* பெ. (n.) *ஒருவர் செய்யுளிற் பிறர் வாக்கைக் கலக்கை;* interpolation. (செ.அக.).

[இடை + செருகல்.]

இடைச்செறி *idai-c-ceri,* பெ. (n.) 1. *குறங்குசெறி* பார்க்க; ancient thigh ornament. "இடைச்செறி குறங்கு கௌவி" (சீவக.2445). 2. *துணை மோதிரம்* (ஈடு.6, 1,1); second ring on a finger worn to keep another ring in place. (செ.அக.).

[இடை + செறி.]

இடைச்சேரி *idai-c-cēri,* பெ. (n.) *இடையரூர்* (சீவக. 422, உரை); hamlet populated by herdsmen. (செ.அக.).

ம. இடச்சேரி.

[இடை + சேரி.]

இடைச்சொல் *idai-c-col,* பெ. (n.) *பெயர் வினைக ளைச் சார்ந்து வழங்குஞ் சொல்* (நன்.420); particle which cannot be used by itself in any sense but which, when occurring in combination with nouns and verbs, functions as inflectional or conjugational suffix, adverb, preposition, expletive, conjunction, interjection etc., one of the four parts of speech in Tamil grammar. (செ.அக.).

[இடை + சொல்.]

இடைச்சோழகம் *idai-c-cōlagam,* பெ. (n.) *தென்றல் வீசும் பருவத்தின் இடைக்காலம்* (யாழ்ப்.); middle period of the south-west monsoon (செ.அக.).

[இடை + சோழகம்.]

இடைசுருங்குபறை *idai-curungu-parai,* பெ. (n.) *துடி* (சூடா.); small drum tapering in the middle like an hour-glass (செ.அக.).

[இடை + சுருங்கு + பறை.]

இடைசூரி *idai-cūri,* பெ. (n.) *அறுப்பு, வளையம், அக்கமணி முதலியவற்றின் இடையிற்கோக்கும் மணி* (யாழ்ப்.); gold or silver beads interspersed in a rosary of rudrāksa, tulasi, etc. (செ.அக.).

[இடை + செறி = இடைச்செறி → இடைச்சூரி. இதனை இடைசூரி என்பது வழு.]

இடைஞ்சல் *idaiñjal,* பெ. (n.) 1. *நெருக்கம்;* narrowness, closeness. இடைஞ்சல் வழி (கொ.வ.). 2. *தடை* (கொ.வ.); obstruction, hindrance. 3. *தொல்லை;* trouble, distress. "அடியா ரிடைஞ்சல் களைவோனே" (திருப்பு.34) (செ.அக.).

ம. இடச்சல்.

[இடைதல் → இடைஞ்சல்.]

இடைத்தட்டு *idai-t-tattu,* பெ. (n.) 1. *இடைக் கொள்ளை;* plunder by a third party of a property about which two parties are quarrelling. (செ.அக.). 2. *இடையிலே காரியம் பார்த்தல்* (ஆ.அக.); to work during intervals.

ம. இடத்தட்டு.

[இடை + தட்டு.]

இடைத்தலைவலி *iḍai-t-talai-vali,* பெ. (n.) ***விட்டு விட்டு வரும் தலைநோய்;*** headache usually occurring at intervals - Intermittent headache (சா.அக.).

[இடை + தலைவலி.]

இடைத்தரம் *iḍai-t-taram,* பெ. (n.) ***நடுத்தரம்;*** medium quality, intermediate grade, neither big nor small. (செ.அக.).

ம. இடத்தரம்; க. எடெதர; து. இடெதர.

[இடை + தரம்.]

இடைத்திரிசொல் *iḍai-t-tiri-col,* பெ. (n.) ***இயற்சொற் போல் தம்பொருள் விளக்காது அரிதுணர் பொருளன வாய் நிற்கும் இடைச்சொல்*** (ஆ.அக.); grammatic terminology signifying inexplicable word formation.

[இடை + திரி + சொல்.]

இடைத்தீன் *iḍai-t-tīṉ,* பெ. (n.) ***இடைத்தின்றி, சிற்றுண்டி*** (பாண்டி.); lunch, light refreshments. (செ.அக.).

[இடை + தீன். தின் = தீன். தீன் = தின்னப்படும் சிற்றுண்டி, தீனி. தின்றி, திண்டி என்பவற்றை ஒப்புநோக்குக.]

இடைதல்[1] *iḍaital,* பெ. (n.) ***நிலம்*** (அக.நி.); earth. (செ.அக.).

[இட → இடம். இடை. இடைதல்.]

இடைதல்[2] *iḍaital,* தொ.பெ. (v.n.) 1. ***சேலை;*** clothing. 2. ***வசங்கெடுதல்*** (ஆ.அக.); losing consciousness.

[இடைதல் = நெருக்குதல். நெருங்க இறுக்கி உடுக்கும் துணி. பின் வாங்குதல், நினைவுதப்புதல்.]

இடை தெரி-தல் *iḍai-teri-,* 2 செ.குன்றாவி. (v.t.) ***செவ்வியறிதல்;*** to judge the appropriate time, as when one wishes to speak in an assembly. "இடை தெரிந்து நன்குணர்ந்து சொல்லுக." (குறள்.712), (செ.அக.).

[இடை + தெரிதல். காலம் தெரிதல் போன்று தக்க இடம் தெரிதல்.]

இடைதெரியா இருவர் *iḍai-teriyā-iruvar,* பெ. (n.) ***உருப்பசியும் திலோத்தமையும்;*** Ūrvasi and Thilōttamai. "இடைதெரியாஏஎள் இருவருந் தத்தம்" (கலித்.109). (சங். இலக்.சொற்.).

[இடை + தெரியாத + இருவர்.]

இடைநரை *iḍai-narai,* பெ. (n.) ***அங்கும் இங்கும் சிறிது நரைத்திருக்கை*** (வின்.); hair or beard grown grey here and there. (செ.அக.).

க. எடெநரெ.

[இடை + நரை.]

இடைநாடி *iḍai-nāḍi,* பெ. (n.) ***இடைகலை*** பார்க்க; principal tubular organ of the human body. (செ.அக.).

[இடை + நாடி.]

இடைநாழிகை *iḍai-nāḻigai,* பெ. (n.) 1. ***கோயிலில் உள் மண்டபத்துக்கும் வெளிமண்டபங்கட்கும் இடைப்பட்ட இடம்;*** (T.A.S.100); middle corridor, a passage between the ardha-maṇḍapa and the maha-maṇḍapa of a temple. 2. ***இரண்டு கட்டடத்துக்கோ, அறைகட்கோ நடுவே உள்ள வழி;*** a corridor.

ம. இடநாழிக.

[இடை + நாழிகை.]

இடைநிகரா-தல் *iḍai-nigarā-,* 6 செ.கு.வி. (v.i.) ***நடுத்தரமான நிலையிலிருத்தல்*** (குறள்.635, உரை); be neither affluent nor penurious.

[இடை + நிகராதல்.]

இடைநிகழ்வு *iḍai-nigaḻvu,* பெ. (n.) ***தற்செயல்;*** chance, accident. (செ.அக.).

[இடை + நிகழ்வு.]

இடைநிலை[1] *iḍai-nilai,* பெ. (n.) 1. ***நடுவில் நிற்கை;*** state of being in the middle. இடைநிலைத் தீவகம். 2. (இலக்.) ***பெயர்வினைகளின் பகுதிவிகுதிகளுக்கு இடையில் நிற்கும் ஓர் உறுப்பு*** (நன்.141); medial particles coming between the root and the ending in a word (i) in verbs, to indicate tense, as த் in செய்தான் (ii) in personal nouns as an inserted euphonic connective particle, as ஞ் in அறிஞன்.

ம. இடநிலை.

[இடை + நிலை.]

இடைநிலை[2] *iḍai-nilai,* பெ. (n.) 1. (இலக்.) ***எச்ச முதலியன கொண்டு முடியுஞ் சொற்களினிடையில் ஏற்ற பிறசொல் வருகை;*** (Gram.) occurrence of word or words as complementary to the subject or predicate in a sentence. 2. ***இரண்டுக்குமிடை, இடைப்பட்டிருத் தல்;*** middle stage. 3. ***இடைப்பட்டிருக்கும் நிலை, தடை;*** obstacle. 4. ***நடுநிலையில் இருத்தல்;*** intermediary.

ம. இடநில.

[இடை + நிலை.]

இடைநிலைத்தீவகம் *iḍai-nilai-t-tīvagam,* பெ. (n.) ***தீவகவணிவகை*** (தண்டி.38); (Rhet.) literally a lamp in the centre illuminating all around, applied to denote a figure of speech in which a word used in the middle of a sentence goes to amplify the sense of the poem in various parts of the same. (செ.அக.). நடுவில் உள்ள விளக்கொளி சுற்றிலும் ஒளி பரப்புவதைப்போல் சொற் றொடரின் இடையில் உள்ள ஒரு சொல், வேறு பகுதிக ளில் உள்ள சொற்களுடன் இணைந்து, பொருள் சிறக்க வைக்குமாறு பாடப்படும் அணி வகை.

[இடை + நிலை + தீவகம்.]

இடைநிலைப்பாட்டு *iḍai-nilai-p-pāṭṭu,* பெ. (n.) ***கலிப்பாவினோருறுப்பு*** (தாழிசை); (தொல்.பொ.

444); one of several parts of the verse appearing in the middle of the kali type. (செ.அக.).

[இடை + நிலை + பாட்டு. கலிப்பாவினிடையில் வரும் உறுப்பு இடைநிலைப்பாட்டு எனப்பட்டது.]

இடைநிலை மயக்கம் *idai-nilai-mayakkam*, பெ. (n.) ***இடைநிலை மெய்ம்மயக்கு*** பார்க்க; see *idai-nilai mey-m-mayakku*

இடைநிலைமயக்கு *idai-nilai-mayakku*, பெ. (n.) ***இடைநிலைமெய்ம்மயக்கு*** பார்க்க; see *idai-nilai-mey-m-mayakku*.

இடைநிலைமெய்ம்மயக்கு *idai-nilai-mey-m-mayakku*, பெ. (n.) (இலக்.) ***சொல்லிடையில் மெய்யெழுத்துகள் ஒன்றோடொன்று உடனிலை மெய்ம்மயக்கமாக அல்லது வேற்றுநிலை மயக்கமாகக் கூடும் நிலை.*** (நன்.110.உரை); (Gram.) permissible conjuction, in Tamil of consonantal sounds, either in the same word or in words coming together, classified into two kinds accg. as the consonants are similar or dissimilar, as உடனிலை மெய்ம்மயக்கு and வேற்றுநிலை மெய்ம்மயக்கு. (செ.அக.).

[இடை + நிலை + மெய்ம்மயக்கு.]

இடைநிலையெழுத்து *idai-nillai-eluttu*, பெ. (n.) ***இடைநிலை மெய்ம்மயக்கு*** பார்க்க; see *idai-nilai-mey-m-mayakku*.

[இடை + நிலை + எழுத்து.]

இடைநிலை விளக்கு *idai-nillai-vilakku*, பெ. (n.) ***இடைநிலைத்தீவகம்*** பார்க்க (சிலப்.1,22,உரை); see *idai-nilai-t-tivagam. (செ.அக.).*

[இடை + நிலை + விளக்கு.]

இடை நீக்கம் *idai-nīkkam*, பெ. (n.) 1. ***சம்பளம் பெறும் பணியாளரை, அவரது பணியொழுங்கின் மைக்காகப் பணியிலிருந்து விலக்கிவைத்தல்;*** to debar from any privilage, office, emolument, etc., for a time. 2. ***கட்சிக்கட்டுப்பாட்டை மீறும் தொண்டரைக் கட்சியிலிருந்து இடைக்காலமாக நீக்குகை;*** to put or hold in a state of suspense or suspension. 3. ***குறுங்காலிகமாக நிறுத்திவைத்தல்;*** to stop for a time.

[இடை + நீக்கம்.]

இடைநீரில்(நில்)-த(ற)ல் *idai-nīril-nil-*, 14.செ.கு.வி. (v.i.) ***நீந்துகையில் நிலைக் குத்தாய் நிற்றல்;*** to gain vertical posture while swimming.

[இடை + நீரில் + நில்.]

இடைநேரம் *idai-nēram*, பெ. (n.) 1. ***சிற்றுண்டி கொள்ளுஞ் சமயம்;*** recess, tiffin time, interval. (செ.அக.). 2. ***நடுப்பகல்;*** noon. 3. ***இரண்டு காலப்பகுதிகளுக்கு இடைப்படும் நேரம்;*** interval between two periods of time.

ம. இடநேரம்; க. எடெவகல்.

[இடை + நேரம். செய்யும் பணிக்கிடையில் விடப்படும் ஒழிவு நேரம்.]

இடைப்படி *idai-p-padi*, பெ. (n.) ***12 பலம் எடை கொண்ட ஒரு நிறை அளவு.*** (தைலவ.தைல.121, உரை); measure of weight equal to 12 palams. (செ.அக.).

[இடை + படி.]

இடைப்படு-தல் *idai-p-padu*, 20.செ.கு.வி. (v.i.) 1. ***நடுவாதல்;*** to appear in the midst, intervene. 2. ***இடையில் இருத்தல்*** (வின்.); to happen in an interim. (செ.அக.). 3. ***வழியிற் சந்தித்தல்*** (ஆ.அக.); to come across, encounter.

க. எடெவாய்.

[இடை + படு.]

இடைப்படுதானம் *idai-p-padu-tānam*, பெ. (n.) ***இடைப்பட்டோருக்குச் செய்யும் ஈகை;*** charity to the ordinary indigent folk being the medium grade of benevolence. (செ.அக.).

[இடை + படு + தானம்.]

இடைப்படு வள்ளல்கள் *idai-p-padu-vallalgal*, பெ. (n.) ***இடை வள்ளல்கள்*** பார்க்க; (கந்தபு.ஆற்று.39); intermediate galaxy of liberal benefactors. (செ.அக.).

[இடை + படு + வள்ளல் + கள்.]

இடைப்படை *idai-p-adai*, பெ. (n.) ***நடுவிலுள்ள படை;*** middle army. ''இடைப்படை யழுவத்து'' (புறம். 295-5).

[இடை + படை.]

இடைப்பரு *idai-p-paru*, பெ. (n.) ***இடைமுள்*** பார்க்க; (சா.அக.); see *idaimul*.

இடைப்பழம் *idai-p-palam*, பெ. (n.) ***காய்க்குலையில் இடையிடையே பழுத்திருப்பது*** (வின்); ripe - fruits interspersed in a bunch of unripe plantains. (செ.அக.).

[இடை + பழம்.]

இடைப்பழுப்பு *idai-p-aluppu*, பெ. (n.) ***பச்சையும் மஞ்சளுங்கலந்த இலை; முக்காற் பழுப்பிலை;*** leaf partially green and partially ripe. (சா.அக.).

[இடை + பழுப்பு.]

இடைப்பாட்டம் *idai-p-pāttam*, பெ. (n.) ***பழைய வரிவகை;*** (S.I.I.ii,521,ft.); ancient tax on herdsmen. (செ.அக.).

ம. இடயர்வரி.

[இடை + பாட்டம். இடை - இடையர். பாட்டம் - வரி. பாட்டம் பாட்டமாய் அல்லது காலமுறைப்படி பெறும் வரி.]

இடைப்பிறவரல் *idai-p-pira-varal*, பெ. (n.) (இலக்.) ***எழுவாய் முதலியன கொண்டுமுடியுஞ் சொற்களினிடையில் ஏற்ற பிறசொல் வருகை;*** (Gram.) word or words used as complements to the subject or predicate in a sentence. 'சாத்தன் (வயிறார) உண்டான்' (நன்.356. உரை).

[இடை + பிற + வரல்.]

இடைப்புணரியைபு *iḍai-p-puṇar-iyaibu,* பெ. (n.) ***நடுவிரு சீர்க்கண்ணுமியைபு வருவது.*** (ஆ.அக.); rhyming in the middle foot of a verse.

[இடை + புணர் + இயைபு.]

இடைப்புணரெதுகை *iḍai-p-puṇar-eḍugai,* பெ. (n.) ***நடுவிரு சீர்க்கண்ணும் எதுகை வருவது*** (ஆ.அக.); similarity or agreement of the second and/or subsequent syllables of the first foot of a metrical line with the other lines in a verse is termed edugai. If the same agreement occurs in the middle foot of a metrical line it is termed iḍaip-puṇar eḍugai.

[இடை + புணர் + எதுகை.]

இடைப்புணர்முரண் *iḍai-p-puṇar muraṇ,* பெ. (n.) ***நடுவிரு சீர்க்கண்ணும் முரண்வரத்தொடுப்பது.*** (ஆ.அக.); antithesis of words or ideas in the middle of a metrical line in a verse.

[இடை + புணர் + முரண்.]

இடைப்புலம் *iḍai-p-pulam,* பெ. (n.) ***நடுவிடம்;*** middle-land, intermediate land between the mountains and the low lands "திண்பிணி முரச மிடைப்புலத் திரங்க" (புறநா.288).

[இடை + புலம்.]

இடைப்புழுதி *iḍai-p-puḻudi,* பெ. (n.) ***விதைப்பாட்டு நிலம், புழுதி நிலம்*** (வின்.); land which is neither very moist nor very dry which is suitable for sowing. (செ.அக.).

[இடை + புழுதி.]

இடைப்பூட்சி *iḍai-p-pūṭci,* பெ. (n.) ***இடைப்பாட்டம்*** (S.I.I.ii, 521) பார்க்க; see *iḍai-p-pāṭṭam* (செ.அக.).

[இடை + பூட்சி.]

இடைப்பூட்டு *iḍai-p-pūṭṭu,* பெ. (n.) 1. ***அரைக்கச்சு*** (வின்); gridle belt. (செ.அக.). 2. ***அரைப்பூட்டு.*** (ஆ.அக.); knotted undergridle.

[இடை + பூட்டு]

இடைப்பேச்சு *iḍai-p-pēccu,* பெ. (n.) ***நடுநடுவே சொல்லும் சொல்;*** interject.

க. எடெவாது, எடெமாது.

[இடை + பேச்சு.]

இடைப்போகம் *iḍai-p-pōgam,* பெ. (n.) 1. ***இடைக்காலத்து விளைவு;*** interim crop. (செ.அக.). 2. ***இடையில் புன்செய்ப்பயிர் விளைவு*** (ஆ.அக.); dry crop between two spells of wet cultivation.

[இடை + போகம்.]

இடைபாகம் *iḍai-pāgam,* பெ. (n.) ***இடுப்புப் பாகம்;*** lumber region (சா.அக.).

[இடை + பாகம்.]

இடைபாடு *iḍai-pāḍu,* பெ. (n.) 1. ***அலுவல்;*** transaction. 2. ***வணிகம் முதலிய தொடர்பாக இருவரிடை நிகழுஞ் செய்தி;*** business liaison. (செ.அக.).

ம. இடபாடு.

[இடை + பாடு.]

†**இடைபேசி** *iḍai-pēci,* பெ. (n.) ***ஒரே வளமனையில் உள்ளவர்களுடன் மட்டும் பேசும் வகையில் அமைந்த தொலைபேசி;*** intercom, telephone system within a building.

[இடை + பேசி.]

இடைமகன் *iḍai-magaṉ,* பெ. (n.) ***இடையன்;*** cowherd or shepherd. "இடைமகன் கொன்ற வின்னா மரத்தினேன்." (சீவக.1914) (செ.அக.).

[இடை + மகன்.]

இடைமடக்கு *iḍai-maḍakku,* பெ. (n.) 1. ***பேச்சினடுவே தடுக்கை*** (வின்.); interrupting a conversation. 2. ***மடக்கணி வகை*** (தண்டி.91); play on words used in different senses. (செ.அக.). 3. ***இடக்குமடக்கான பேச்சு*** (ஆ.அக.); controversial verbal engagement.

[இடை + மடக்கு.]

இடைமடு-த்தல் *iḍai-maḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) ***இடைச்செருகுதல்;*** to interpolate. "புன்சொலிற் றந்திடை மடுத்த கந்தி" (பரிபா.பாயி.) (செ.அக.).

[இடை + மடு.]

இடைமதில் *iḍai-madil,* பெ. (n.) ***இடையேயுள்ள மதில்;*** middle wall of a fortress. "பருந்துயிர்த்திடை மதில் சேக்கும்" (புறம்.343-6).

[இடை + மதில்.]

இடைமிடை-தல் *iḍai-miḍai-,* 2 செ.குன்றாவி. (v.t.) ***நடுவே கலத்தல்;*** intermingle. "பொய்யோ டிடைமிடைந்த சொல்" (நாலடி.80). (செ.அக.).

க. எடெயொட்டு.

[இடை + மிடை.]

இடைமுள் *iḍai-muḷ,* பெ. (n.) 1. ***புண்ணிலே தோன்றும் மறுமுள்;*** small new eruption about a healing ulcer. 2. ***கரப்பான் வகை;*** a kind of eruption (செ.அக.).

மறுவ. இடைப்பரு; க. எடெமுள் (இடைஞ்சல்).

[இடை + முள்.]

இடைமூளை *iḍai-mūḷai,* பெ. (n.) ***நடுவிலுள்ள மூளை;*** interbrain - thalamencephalon. (சா.அக.).

[இடை + மூளை.]

இடைமேடு *iḍai-mēḍu,* பெ. (n.) ***இடையிடையே சிறிது மேடான பாகமுள்ள வயல்*** (வின்.); field, parts of which are slightly raised in level than the surrounding parts. (செ.அக.).

க. எடெதெவரு. (நடுத்திட்டு).

[இடை + மேடு.]

இடைமை *iḍai-mai,* பெ. (n.) ***இடையின வெழுத்து கள்; ய,ர,ல,வ,ழ,ள முதலியன;*** medial consonants of the Tamil alphabet. ''ஆவியிடைமை யிடமிடறாகும்.'' (நன்.75). (செ.அக.).

[இடை → இடைமை.]

இடையணி *iḍaiyaṇi* பெ. (n.) ***இடையில் அணியும் அணிவகை;*** 1. ***அரைப்பட்டிகை.*** 2. ***மேகலை.*** 3. ***குறங்கு செறி;*** kind of an ornament. (ஆ.அக.).

[(இடை + அணி.]

இடையது *iḍai-y-adu,* வி.எ. (adv.) ***இடையிலுள்ளது;*** that which is in the middle. ''வடமலைப் பெயர்குவை யாயி னிடையது'' (புறம்.67.7.).

[இடை + அது.]

இடைய நெடுங்கீரனார் *iḍai-y-aneḍuṅ kīranār,* பெ. (n.) ***கடைக்கழக மருவிய புலவர்.*** (அபி.சிந்.); poet of Sangam age.

[இடையன் + நெடும் + கீரன் + ஆர்.]

இடையர் *iḍaiyar,* பெ. (n.) ***குறிஞ்சி நிலத்துக்கும் மருத நிலத்துக்கும் இடைப்பட்ட காடும் காடு சார்ந்த நிலமாகிய முல்லை நிலத்தில் கால்நடைகளை மேய்த்து வாழும் இனத்தார்.*** (திவ்.பெரியதி.11,8,6); herdsmen of mullai or forest pasture lying midway between hilly tracks or kuṟinci and plains or marutam. (செ.அக.).

[இடை + அர்.]

நெய்தலும் பாலையும் தனிநிலங்களாக வகைப்படுத்தாமல், மலையும் காடும் வயலும் குறிஞ்சி முல்லை மருதம் ஆகிய முத்திணைகளாக மட்டும் வழங்கிய காலத்தில் முல்லை நிலம் இடைநிலமாகக் கருதப்பட்டிருக்கலாம். நெய்தல் மருதத்தை யொட்டிய கடற்புறமாதலின் மருதமாகவே கணிக்கப்பட்டுக் காலப்போக்கில் கடல்வளத்தையே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட மக்கள் தோன்றியபின் நெய்தல் திணை புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

இடையர் வரி *iḍaiyar vari,* பெ. (n.) ***இடைப்பாட்டம்*** பார்க்க; see *iḍai-p-pāṭṭam.*

இடையல்[1] *iḍaiyal,* பெ. (n.) ***இடுப்புத் துகில்*** (திவா.); garment, cloth worn round the waist. (செ.அக.).

[இடை + இடையல் (இடையில் உடுப்பது).]

இடையல்[2] *iḍaiyal,* பெ. (n.) 1. ***ஒதுங்கல்;*** withdrawing. 2. ***தாழல்;*** lowering. 3. ***பின்னிடல்;*** retreating.

[இடு - இடை - இடையல் = தாழ்தல்.]

இடையவியல் *iḍai-y-aviyal,* பெ. (n.) ***சதை உராய்வத னாலேற்படும் ஓர்வகைப்படை;*** ecezema resulting from a chafe of the skin-Intertriga. (சா.அக.).

[இடை + அ + வியல். இடை - இடுப்பு, வியல் - பரவுதல்.]

இடையறல் *iḍaiyaṟal,* பெ. (n.) ***நடுவே முடிந்து போதல்*** (ஆ.அக.); cease or end in the middle.

[இடை + அறல். அறு - அறல் = நீங்குதல்.]

இடையறவு *iḍai-y-aṟavu,* பெ. (n.) ***இடைவிடுகை;*** interval, break. ''இடையறவின் நிமைப்பளவும்'' (சூளா. துற.221) (செ.அக.).

தெ. எடபடு.

[இடை + அறவு.]

இடையறாவன்பு *iḍaiyaṟāvanbu,* பெ. (n.) ***முடியா வன்பு*** (ஆ.அக.); unbreakable love. ''இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும்'' (காஞ்சிப்பு.).

[இடை + அறா + அன்பு.]

இடையறு[1]**-தல்** *iḍai-yaṟu-,* 2 செ.கு.வி. (v.i.) ***தடைப் படுதல்;*** to be interrupted, to cease in the middle. ''இன்பமிடையறா தீண்டும்'' (குறள்.369). (செ.அக.).

[இடை + அறு.]

இடையறு[2]**-த்தல்** *iḍai-y-aṟu-,* 18 செ.குன்றாவி. (v.t.) ***படை முதலியவற்றை ஊடறுத்துச்சென்று பிரித்தல்;*** to cut through or divide, as an army."வருபுனற் கற்சிறை கடுப்பவிடையறுத்து" (மதுரைக்.725); (செ.அக.).

[இடை + அறு.]

இடையன் *iḍaiyaṉ,* பெ. (n.) 1. ***இடையர்*** பார்க்க; see *iḍaiyar.* 2. ***முல்லைநிலத்தவன்;*** herdsman. ''மா சுண் உடுக்கை மடிவாயிடையன்'' (புறம்.54-11).

ம. இடயன்; க. எடெய.

[இடை + அன்.]

இடையன்கால்வெள்ளி *iḍaiyaṉ-kāl-veḷḷi,* பெ. (n.) ***தாழி*** (பரணி) (வின்.); second nakṣatra. (செ.அக.).

[இடையன் + கால் + வெள்ளி.]

இடையன் சேந்தன் கொற்றனார் *iḍaiyaṉ šēndaṉ koṟṟaṉār,* பெ. (n.) ***கடைக்கழக மருவிய புலவர்;*** one of the poets of Sangam age.

[இடையன் + சேந்தன் + கொற்றன் + ஆர்.]

இடையாகெதுகை *iḍai-y-āgedugai,* பெ. (n.) ***அடி தோறும் இரண்டாமெழுத் தொன்றே யொன்றிவரத் தொடுப்பது*** (காரிகை.ஒழிபி.6,உரை); variety of initial edugai where only the second letter in each line of the verse is the same, as ''அகரமுதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு''. (குறள்.1) (செ.அக.).

[இடை + ஆகு + எதுகை.]

இடையாந்தரம் *iḍai-y-āndaram,* பெ. (n.) 1. ***இடைப் பட்ட காலம் அல்லது இடம்;*** intermediate space or time. 'அந்த வேலை இடையாந்தரத்திலே கெட்டுப்போ யிற்று' (வின்.) (செ.அக.). 2. ***நடு*** (ஆ.அக.); middle, centre.

[இடை + அந்தரம் - இடையந்தரம் - இடையாந்தரம்.]

இடையாபரணம் *iḍai-y-ābaraṇam,* பெ. (n.) ***இடையணி*** பார்க்க; see *iḍai-y-aṇi.*

Skt. ābharaṇa > த. ஆபரணம்.

[இடை + ஆபரணம்.]

இடையாமம் *iḍai-yāmam,* பெ. (n.) ***இடையிருள் யாமம்*** பார்க்க; (ஆசாரக்.43-1); see *iḍaiyiruḷ yāmam*

[இடை + யாமம்.]

இடையாமர் *iḍaiyāmar,* பெ. (n.) ***இடையாயார்*** பார்க்க; (ஆ.அக.); see *iḍaiyāyār.*

[இடை + (ஆயவர் → ஆயார்) ஆமர்.]

இடையாயார் *iḍai-y-āyār,* பெ. (n.) ***நடுவர்;*** middle class, those belonging to the intermediate grade in any broad classification "இடையாயார் தெங்கினனையர்" (நாலடி.216) (செ.அக.).

[இடை + ஆயார். ஆகியவர் → ஆயவர் → ஆயார்.]

இடையாள் *iḍaiyāḷ,* பெ. (n.) ***இருவர் அல்லது இரு குழுக்களிடை நின்று பணியை முடிப்பவன், தரகன்;*** intermediary, contact man, broker.

ம. இடயாள்.

[இடை + ஆள்.]

இடையாறு *iḍai-yāṟu* பெ. (n.) ***இடையாற்றுமங்கலம் என்னும் ஊர்;*** place name. "வெல்போர்ச் சோழனிடை யாற்றன்ன" (அகநா.141-23).

[இடை + ஆறு.]

இடையிட்டெதுகை *iḍaiyiṭṭedugai,* பெ. (n.) ***அடிக ளொன்றை விட்டொன்றெதுகை யொன்றி வருவது*** (ஆ.அக.); similarity or agreement of the second and/or subsequent letters of the first foot of alternate lines of a verse.

[இடை + இட்டு + எதுகை.]

இடையிடு-தல் *iḍai-y-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. ***இடையில் நிகழ்தல்;*** to intervene, happen or occur in the middle. "தலைமகள் காரணமாக இடையிடும் இடையீடில்லை" (இறை.33,உரை). 2 ***இடையில் ஒழிதல்;*** to be omitted in the middle. - 18 செ.குன்றாவி. (v.t.) 1. ***நடுவிலிடுதல்;*** to place between, interpose. "மறையொளி மணிச்சுவ ரிடையிட்டு" (சீவக.656). 2. ***மதித்தல்;*** to obstruct, "வாயிலை இடையிட்டுக் கொண்டு நிற்கும்படியாக" (கலித்.109,26 உரை). (செ.அக.). 3. ***முன்னிருத்துதல், காரணமாக்குதல்;*** to make (something or some one) cause of. 4. ***காலம் அல்லது தொலைவு முன்னிடுதல்;*** to pass time, to cover distance, etc. (சேரநா.).

ம. இடயிடுக.

[இடை + இடு.]

இடையிடை *iḍai-y-iḍai,* கு.வி.எ. (adv.) 1. ***ஊடே யூடே;*** intermittently, at frequent intervals. "இடையிடை யடிக்கும்" (கல்லா.7) (செ.அக.). 2. ***நடுவே, கூடக் கூட;*** occasionally, alternately. (சேரநா.).

ம. இடயிடெ; க. எடெயெடெ (திரும்பத்திரும்ப); தெ. எடனெட.

[இடை + இடை.]

இடையிருள்யாமம் *iḍai-y-iruḷ-yāmam,* பெ. (n.) ***இரவு 10 மணி முதல் 2 மணி வரைப்பட்ட நள்ளிருள் பொழுது*** (மணி.20-82); midnight from 22 to 2 hours.

[இடை + இருள் + யாமம்.]

இடையில் காட்சி *iḍai-y-il-kāṭci,* பெ. (n.) ***இடைவி டாத காட்சி; தொடர்ந்த நட்பின் நெருக்கம்;*** unbroken link of friendship. "இடையில் காட்சி நின்னோ டுடனுறை வாக்குக வுயர்ந்த பாலே" (புறநா.236-11).

[இடை + இல் + காட்சி. இடைதல் = பின்வாங்குதல், தளர்தல். இல் = இல்லாத.]

இடையினம் *iḍai-y-iṉam,* பெ. (n.) ***இடையெழுத்து;*** medial consonants of the Tamil alphabet. "இடையினம் ய ர ல வ ழ ள வென வாறே" (நன்.70).

ம. இடயினம்.

[இடை + இனம்.]

வன்மைக்கும் மென்மைக்கும் இடைநிகர்த்ததாதலாலும் வல்லெழுத்துத் தோன்றும் மார்புக்கும். மெல்லெழுத்துத் தோன்றும் மூக்குக்கும் இடையிலான கழுத்தில் பிறத்தலாலும் இடையின மாயிற்று. இற்றை மொழியியலார் வல்லின எழுத்துகளை நிறுத்தம் (stop) என்றும் மெல்லின எழுத்துகளை மூக்கினம் (nasal) என்றும் கருதுகின்றனர். இடையினம் என்று மரபிலக்கணத்தாரால் கொள்ளப்பட்டவை அதிர்வொலி (trill), பக்கவொலி (lateral), உரசுஒலி (fricative), அரையுயிர் (semivowel), எனப்பல பிரிவுகளுக்கு உட்படுத்தி விளக்கப்படுகின்றன.

இடையினமோனை *iḍai-y-iṉa mōṉai,* பெ.(n.) ***இடையினத்துள் யகரவகரங்கள் ஒன்றற்கொன்று மோனையாக வருவது*** (யா.கா. ஒழிபி.6, உரை); variety of consonantal alliteration at the beginning of lines in which medial consonants 'ya' and 'va' are interchangeable.

எ-டு: யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற.

[இடை + இன + மோனை.]

இடையினவெதுகை *iḍai-y-iṉa-v-edugai,* பெ. (n.) ***இடையினத்துள் வந்தவெழுத் தன்றி அவ்வினத்து வேறெழுத்து இரண்டாமெழுத்தாய் நிற்க வரும் எதுகை*** (யா.கா.ஒழிபி.6,உரை). (செ.அக.); interchangeability of any one of the medial consonants while determining the agreement of the second and/or subsequent letters of the first foot of successive lines in a metrical composition.

எ-டு: "எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு".

[இடை + இன + எதுகை.]

இடையீட்டெதுகை *idai-y-īttedugai*, பெ. (n.) ***ஒவ்வோரடி இடையிட்டு வரும் எதுகை*** (யா.கா. ஒழிபி.6, உரை); similarity or agreement of the second and/or subsequent letters of the first foot of alternate lines in a verse.

எ-டு: "தோடா ரெல்வளை நெகிழ நாளும்
நெய்த லுண்கண் பைதல கலுழ
வாடா வவ்வரி ததைஇப் பசலையும்
வைகல் தோறும் பையபய் பெருகின".

[இடை + ஈட்டு + எதுகை.]

இடையீடு[1] *idai-y-īdu*, பெ. (n.) 1. ***இடையில் தோன்றுவது;*** that which occurs or happens in the middle. 2. ***தடை;*** obstacle, impediment. 'பகற்குறி யிடையீடு' (நம்பியகப்.155). 3. ***மாறுபாடு;*** difference. "பெருமறை யுடன்மெய்த் தொண்டர்க் கிடையீடு பெரிதாமன்றே" (பெரியபு.திருஞான.592). 4. ***அமைவு;*** answer to a query. "ஏவிய கடாவுக் கிடையீடாவது" (ஞானா.67, 10). 5. ***இடையில் விடுகை;*** interruption. "விட்டுவிட்டறிவ தன்றி இடையீடின்றி அறியமாட்டாது" (சி.சி.2, 94, சிவஞா.). 6. ***இடையிட்டுக்கொண்டது*** (ஆ.அக.); that which had happened in the middle.

ம. இடயீடு.

[இடை + இடு = இடையிடு → இடையீடு.]

இடையீடு[2] *idai-y-īdu*, பெ. (n.) ***அரசின் வுரிமையாயிருந்து பிறருக்கு மாற்றப்பட்ட நிலம்;*** land, the ownership of which had been transferred from government to an individual. "இக்கச்சம் பிழைப்போர் யில்லங்களுடைய இடையீடு அக நாழியைச் செலவினோடொக்கும்." (T.A.S. iii, p.193) (செ.அக.).

[இடை + ஈடு.]

இடையுவா *idai-y-uvā*, பெ. (n.) ***முழு நிலவு; வெள்ளுவா.*** (திவ்.நாச்.7,3); full moon, as coming in the middle of the lunar month (செ.அக.).

[இடை + உவா.]

இடையுற்ற மலடி *idaiyurra maladi*, பெ. (n.) ***பெண்களுக்கு இடுப்பு பருத்து அதனாலுண்டாகு மோர் வகை மலட்டுத்தன்மை;*** abnormal growth of the hip in a woman causing barrenness. (சா.அக.).

[இடை + உற்ற + மலடி. இடை = இடுப்பு. உறுதல் = மிகுதல், பருத்தல்.]

இடையூறு *idai-y-ūru*, பெ. (n.) ***இடைஞ்சல், தடை*** (திருவிளை.விடையில.10); impediment, obstruction, hindrance. (செ.அக.).

ம. இடையூறு.

[இடை + ஊறு.]

இடையெடு-த்தல் *idai-y-edu-*, 18 செ.குன்றாவி. (v.t.) ***எடைஎடுத்தல்*** பார்க்க; see *edai-edu*.

[எடை + எடுத்தல். எடை - இடை (கொ.வ.) இஃது வழூஉச் சொல்லாதலின் ஆளாமல் விலக்குதல் வேண்டும்.]

இடையெண் *idai-y-en*, பெ. (n.) ***முச்சீர் ஓரடியாய் வரும் அம்போதரங்க வகை*** (யா.கா.செய்.10,உரை); verse of a class known as ambōtarangam-consisting of trimetric lines. (செ.அக.).

[இடை + எண்.]

இடையெழுஞ்சனி *idai-y-eluñ-cani*, பெ. (n.) ***கணை (பூர) நாள்*** (பிங்.); middle asterism of the fifth sign of the Zodiac wherein saturn is reputed to exert a malignant influence. (செ.அக.).

[இடை + எழும் + சனி.]

இடையெழுத்து *idai-y-eluttu*, பெ. (n.) ***வல்லினத்துக்கும் மெல்லினத்துக்கும் இடைப்பட்ட இடையின எழுத்துகள்;*** six consonants of the Tamil alphabet viz., ய், ர், ல், வ், ழ், ள். classified as medial consonants as dist. fr. valleluttu and melleluttu. (செ.அக.).

[இடை + எழுத்து.]

இடையொடிவு *idai-y-odivu*, பெ. (n.) ***கடைசி அழிவுக்குமுன் ஏற்படும் அழிவுகள்*** (ஈடு.1,3,3); calamity before the final dissolution of the world. (செ.அக.).

[இடை + ஒடிவு. ஒடிவு - அழிவு, முடிவு.]

இடையொடு கடைமடக்கு *idaiyodu-kadai-madakku*, பெ. (n.) ***அணி வகையுளொன்று. அஃது அடிகளினிடையுங்கடையும் மடங்கி வருவது;*** (ஆ.அக.); figure of speech based on metrical composition.

[இடை + ஒடு + கடை + மடக்கு.]

"வா மான மான மழைபோன்மத மானமான
நா மான மான கமுற்றாழக மானமான
தீ மான மான வர்புகாத்திற மானமான
கா மான மான கல்கரங்கனன் மானமான"
இதில் "மான மான" என்ற சொல் நான்கடிகளின் இடையிலும் ஈற்றிலும் மடங்கி வந்தது. (தண்டி.95,உரை).

இடையொத்து *idai-y-ottu*, பெ. (n.) ***தாள வகை*** (திவ்.திருவாய்.); variety of time-measure. (செ.அக.).

க. எடெயொத்து.

[இடை + ஒத்து. ஒற்று - ஒத்து.]

இடையோர் *idai-yōr*, பெ. (n.) ***இடையிற்செல்வோர்;*** those who are marching in the middle of a group. "இடையோர் பழத்தின் பைங்கனி மாந்த" (புறநா.225.2)

[இடை → இடையோர்.]

இடைவட்டை *idai-vattai*, பெ. (n.) ***நடுவிலுள்ளது*** (S.I.I.viii,232); that which is in the middle. (செ.அக.).

க. எடெகாண (நடு பாகம்).

[இடை + வட்டை.]

இடைவண்ணம் *iḍai-vaṇṇam*, பெ. (n.) ***இசை வகை*** (பெரியபு.ஆனாய.28); variety of melody. (செ.அக.).

க. எடெயொத்து (மத்திய தாளம்). *Skt.* varṇa.

[இடை + வண்ணம்.]

இடைவரி *iḍai-vari*, பெ. (n.) ***எடைவரி*** பார்க்க; எடைக்கற்களுக்கான வரி (Insc.); tax on measures and weights. (செ.அக.).

[எடை + வரி → எடைவரி → இடைவரி. எடை - இடை எனத் திரிந்த கொச்சை வழக்கு, வழூஉச் சொல்லாதலின் விலக்கத் தக்கது.]

இடைவழக்காளி *iḍai-vaḻakkāḷi* பெ. (n.) ***வழக்காளிக்கும் எதிர் வழக்காளிக்கும்*** (வாதி பிரதிவாதி) ***இடையில் தனி வழக்குக் கொண்டு வருவோன்*** (யாழ்ப்.); third party intervening between the plaintiff and the defendant in a law suit. (செ.அக.).

[இடை + வழக்கு + ஆளி.]

இடை வழக்கு *iḍai-vaḻakku*, பெ. (n.) 1. ***வழக்கின் நடுவே பிறராற் கொண்டுவரப்படும் வழக்கு*** (யாழ்ப்.); suit of law instituted by a new claimant while the previous suit is under trial, interlocutary suit (செ.அக.). 2. ***கிளை வழக்கு*** (ஆ.அக.); off shoot of a previous suit.

[இடை + வழக்கு.]

இடைவழி *iḍai-vaḻi*, பெ. (n.) 1 ***வழியின் நடு***, (திவ்.பெரியாழ்.4,5,5); middle of the way; half-way to a destination. (செ.அக.). 2. ***வலதோ இடதோ அன்றி நடுவழி;*** middle path.

க. எடெவட்டெ.

[இடை + வழி.]

இடைவழித்தட்டில் *iḍai-vaḻi-t-taṭṭil*, கு.வி.எ. (adv.) ***எதிர்பாராமல்;*** accidentally, unexpectedly, by chance. 'அந்தப் பொருள் எனக்கு இடை வழித் தட்டில் கிடைத் தது.' (இ.வ.) (செ.அக.).

[இடை + வழி + தட்டில்.]

இடைவள்ளல்கள் *iḍai-vaḷḷalgaḷ*, பெ. (n.) ***முதலேழு வள்ளல்கள், கடையேழு வள்ளல்கள் போன்று இடை ஏழு வள்ளல்கள்;*** intermediate galaxy of philanthropists or benefactors celebrated in literature there being seven such patrons, viz., அக்குரன், சந்திமான், அந்திமான், சிசுபாலன், தந்த வக்கிரன், கன்னன், சந்தன், dist. fr முதல் வள்ளல்கள் and கடை வள்ளல்கள் (பிங்.) (செ.அக.).

[இடை + வள்ளல்கள்.]

இடைவாய் *iḍai-vāy*, பெ. (n.) ***கழுத்துக்கோலின் அளவுக்குறியிடம்*** (இராட்.); degrees or marks upon a steelyard. (செ.அக.).

[இடை + வாய்.]

இடைவாவி *iḍai-vāvi*, பெ. (n.) ***வாவிகளில் ஒரு வகை*** (கருநா.); a kind of tank. (செ.அக.).

க. எடெபாவு.

[இடை + வாவி.]

இடைவாழை *iḍai-vāḻai*, பெ. (n.) ***ஒரு மலைச்செடி*** (இ.வ.); common bracken. (செ.அக.).

[இடை + வாழை.]

இடைவிடல் *iḍai-viḍal*, தொ.பெ. (vbl.n.) ***விட்டுவிட்டுத் தொடங்கல்*** (ஆ.அக.); off and on, intermittent activity, irregular functioning.

[இடை + விடல்.]

இடைவிடாமல் *iḍai-viḍāmal*, கு.வி.எ.(adv.) 1. ***எப்போதும்;*** always; incessantly, constantly. 2. ***தொடர்ந்து;*** uninterruptedly, continually. (செ.அக.).

[இடை + விடாமல்.]

இடைவிடு-தல் *iḍai-viḍu-*, 20 செ.கு.வி. (v.i.) ***இடையில் ஒழிதல்;*** to intermit or cease now and then. "இடைவிடாமற் றுழாவி" (தைலவ.தைல.94). (செ.அக.).

க. எடெவிடு, எடெபிடு.

[இடை + விடு.]

இடைவிரல் *iḍai-viral*, பெ. (n.) ***நடுவிலுள்ள விரல்;*** middle finger.

க. எடெவெரல்.

[இடை + விரல்.]

இடைவிழுநாடி *iḍai-viḻu-nāḍi*, பெ. (n.) 1. ***விட்டு விட்டு எழும்புவதும், அமிழுவதுமான நாடி நடை;*** pulsation sinking and rising at intervals - undulating pulse. 2. ***நடுவில் விட்டுவிட்டு அடிக்கும் நாடி;*** pulse in which beats are skipped. (சா.அக.).

[இடை + விழு + நாடி.]

இடைவீடு *iḍai-vīḍu*, பெ. (n.) ***நடுவில் விட்டு விடுகை*** (திவ்.திருவாய்.1,10,8); leaving in an incomplete condition, breaking off or ceasing in the middle. (செ.அக.).

[இடை + வீடு.]

இடைவு *iḍaivu*, பெ. (n.) 1. ***தோல்வி;*** defeat. 2. ***நீக்கம்;*** interspace, gap. 3. ***வெளி;*** open space. (செ.அக.).

[இடை - இடைவு.]

இடைவெட்டிலே *iḍai-veṭṭilē*, கு.வி.எ. (adv.) ***தற்செயலாய்;*** by chance, by accident. 'அவனுக்கு இது இடைவெட்டிலே கிடைத்தது.' (செ.அக.).

[இடை + வெட்டு + இல் + ஏ.]

இடைவெட்டு *iḍai-veṭṭu*, பெ. (n.) ***இடையிற்பெற்ற பொருள்*** (கொ.வ.); something other than the object

of pursuit; diversion from purpose or main issue. (செ.அக.).

[இடை + வெட்டு.]

இடைவெட்டுப் பணம் *idai-vettu-p-panam,* பெ. (n.) 1. ***மாறுமுத்திரை விழுந்த பணம்*** (வின்.); clipped or imperfectly stamped coin. 2. ***வேறு வழியாகக் கிடைத்த ஊதியம்*** (யாழ்ப்.); profit made indirectly; wrongful earning. (செ.அக.). 3. ***பொறுக்கியெடுத்த பணம்*** (ஆ.அக.); picked up money.

[இடை + வெட்டு + பணம்.]

இடைவெட்டுப்பேச்சு *idai-vettu-p-peccu,* பெ. (n.) ***ஏளனப்பேச்சு*** (வின்.); derision, ridicule, raillery, (செ.அக.).

[இடை + வெட்டு + பேச்சு.]

இடைவெளி *idai-veli,* பெ. (n.) 1. ***வெளிப்பரப்பு;*** gap, intervening space. 2. ***பிளப்பு;*** hole, as in a wall; cleft. (செ.அக.).

[இடை + வெளி.]

இடோல் *idol,* பெ. (n.) ***இடால்*** பார்க்க; see *idāl;* (செ.அக.).

[இடு → இடல் → இடால் → இடோல் = வாயகன்ற பறை. இச்சொல் இடோல் - டோல் எனத்திரிந்து வடபுல மொழிகளில் வழங்குகின்றது.]

இடோலி *idōli,* பெ. (n.) ***ஒருவகைச் சிவிகை*** (வின்.); litter. (செ.அக.).

H. dōli.

[இடல் - இடாலி - இடோலி. இடலுதல் - அகலமாதல். சற்று அகலமான பல்லக்கு இப்பெயர் பெற்றிருக்கலாம்.]

இண்டங்கொடி *indangodi,* பெ. (n.) ***இண்டு;*** sensitive creeper - (சா.அக.).

[இண்டு + அம் + கொடி.]

இண்டங்கொழுந்து *indangolundu,* பெ. (n.) ***இண்டஞ் செடியின் கொழுந்திலை;*** tender leaf of Indu, a sensitive plant. (சா.அக.).

[இண்டு + அம் + கொழுந்து.]

இண்டஞ்செடி *indañ cedi,* பெ. (n.) ***இண்டு*** பார்க்க; see *indu.* (சா.அக.).

[இண்டு + அம் + செடி.]

இண்டந்தண்டு *indan-tandu,* பெ. (n.) ***இண்டஞ் செடியின் அடித்தண்டு;*** stalk of Indu plant. (சா.அக.).

[இண்டு + அம் + தண்டு.]

இண்டம் *indam,* பெ. (n.) ***சவ்வரிசி;*** sago.

[இண்டு + அம்.]

இண்டம்பொடி *indam-podi,* பெ. (n.) ***சவ்வரிசி நொய்*** (M.M); sago grit (செ.அக.).

[இண்டு + அம் + பொடி.]

இண்டமுள்ளு *inda mullu,* பெ. (n.) ***இண்டஞ்செடியின் முள்;*** thorn of indu plant. (சா.அக.).

[இண்டு + அம் + முள்ளு.]

இண்டர்[1] *indar,* பெ. (n.) 1. ***இடையர்*** (வின்.); shepherds. 2. ***இழிந்தோர்;*** outcastes, men who are extremely degraded villains. "இண்டக்குலத்தை" (திவ்.திருப்பல்.5) (செ.அக.).

[இண்டு + அர்.]

இண்டர்[2] *indar,* பெ. (n.) 1. ***நண்பர்;*** friends. 2. ***சுற்றம்;*** relatives. (ஆ.அக.).

[இண்டு + அர்.]

இண்டரி *indari,* பெ. (n.) ***ஓர் பணிகாரம்;*** a kind of confection. (சா.அக.).

[இண்டு[1] + அரி. இண்டு = மாவு. அரி = அரிசி.]

இண்டல் *indal,* பெ. (n.) ***விரைதல்;*** to move quickly.

இண்டனம் *indanam,* பெ. (n.) 1. ***விளையாட்டு;*** play, sport. 2. ***புணர்ச்சி;*** sexual intercourse. 3. ***ஊர்தி;*** vehicle. (செ.அக.).

Skt. hindana.

[இண்டல் = நெருங்கல், விரைதல். இண்டல் + அம் - இண்டலம் → இண்டனம்.]

இண்டிடுக்கு *indidukku,* பெ. (n.) ***சந்துபொந்து;*** (கொ.வ.); nook and corner. (செ.அக.).

[இண்டு + இடுக்கு.]

இண்டிமாமா *indi-māmā,* பெ. (n.) ***கூட்டிக்கொடுப்பவன்;*** panderer, pimp, 'uncle' to every one in the house. (செ.அக.).

தெ. இண்டி மாமா.

[இல் = வீடு. இல் - தெ. இண்டி (வீட்டுக்குரிய) + மாமா.]

இண்டிறுக்கெனல் *indirukkenal,* பெ. (n.) ***குறட்டை விடுங் குறிப்பு;*** onom.expr. of snoring "இண்டிறுக்கென்னும் கொரக்கை விடுதலால்" (நீலகேசி,375,உரை) (செ.அக.).

[இண்டு + இறுக்கு + எனல்.]

இண்டு[1]**-தல்** *indu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***இடித்தல்;*** to pound.

[உள் - இள் - இண்டு.]

இண்டு[2] *indu,* பெ. (n.) ***மிகச்சிறிய இடைவெளி அல்லது துளை;*** cleft nook, minute cavity. "இண்டும் இடுக்கும்" (உ.வ.). (மு.தா.91). 2. ***மாவு;*** flour.

[உள் → இள் → இண்டு.]

இண்டு[3] *indu,* பெ. (n.) 1. ***கொடி வகை;*** eight-pinnate soap-pod. "இண்டு படர்ந்த இடுகாடு" (பதினோ.மூத். 10). 2. ***தொட்டாற்சுருங்கி*** (L.); sensitive plant, mimosa.

இண்டு

3. *செடி வகை* (L.); species of sensitive tree. 4. *புலி தொடக்கி* (மலை.); tiger-stopper (செ.அக.). 5. *மட்டிச் சிங்கை;* prickly brasiletto climber (சா.அக.).

[இள் → இண்டு (திரட்சி, தொகுதி).]

இண்டை[1] *indai,* பெ. (n.) 1. *தாமரை* (திவா.); lotus. 2. *மாலை வகை;* circlet of flowers, variety of garland. "இண்டைச் சடைமுடியா யென்றேனானே" (தேவா. 297,5). (செ.அக.).

ம. இண்ட; க. இண்டெ; தெ. இண்டெ.

[இண்டு → இண்டை.]

இண்டை[2] *indai,* பெ. (n.) 1. *இண்டு* (பிங்.); eight-pinnate soap-pod. 2. *முல்லை* (L.); trichotomous - flowering smooth jasmine. 3. *புலி தொடக்கி* (மலை.); tiger-stopper. 4. *இண்டு*[2] பார்க்க; species of sensitive-tree. 5. *ஆதொண்டை* (L.); thorny caper. (செ.அக.).

இண்டைகட்டு-தல் *indai-kattu,* 12 செ.குன்றாவி. (v.t.) *பூ மாலை தொடுத்தல்* (கருநா.); to twine garland.

க. இண்டெகட்டு.

இண்டைச்சுருக்கு *indai-c-curukku,* பெ. (n.) *மாலை வகை* (பெரியபு.முருக.9); chaplet of flowers. (செ.அக.).

[இண்டை + சுருக்கு.]

இணக்கம் *inakkam,* பெ. (n.) 1. *இசைப்பு;* fitting well together as two planks. 2. *பொருத்தம்;* fitness, suitability. 3. *நட்பு;* friendship, congeniality, compatibility. "நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்" (கொன்றைவே.). 4. *இசைவு;* agreement, acquiescene. 5. *திருத்தம்;* exactness. "இதனை யிணக்க மாய்ச்செய்" (யாழ்ப்.) (செ.அக.).

ம. இணக்கம்.

[இணக்கு - இணக்கம்.]

இணக்கு[1]**-தல்** *inakku-,* 12 செ.குன்றாவி. (v.t.) *இசைவித்தல்* (திவ்.திருவாய்.6,2,8); to cause to agree; to unite, connect, adjust, fit, persuade. (செ.அக.).

ம. இணக்குக; தெ. எனியின்சு (ஒன்றாதல், இணைதல்).

[இணங்கு → இணக்கு.]

இணக்கு[2] *inakku,* பெ. (n.) 1. *இசைவு;* union, harmony. "இணக்குறுமென் னேழைமைதான்" (தாயு.பராபர. 273). 2. *ஒப்பு;* comparison, match. "இணக்கிலாததோ ரின்பமே" (திருவாச.30,1). (செ.அக.). 3. *உடன்பாடு;* agreement.

ம. இணக்கு.

[இள் - இள - இளக்கு - இணக்கு.]

இணக்கு[3] *inakku,* பெ. (n.) 1. *சிறிது, கொஞ்சம்;* little quantity, twig. 2. *துண்டு;* a piece, bit.

ம. இணக்கு; க. இண்டெ; தெ. இண்டை.

[இள் - இள - இணக்கு.]

இணக்குப்பார்வை *inakku-p-parvai,* பெ. (n.) *பார்வை விலங்கு;* decoy. "இணக்குப் பார்வை யிட்டு மிருகம் பிடிப்பாரைப் போலே ஸஜாதீயரைக் கொண்டே காரியங்கொள்வோ மென்று" (ஆசார்ய.அவ.பக்.2) (செ.அக.).

க. இணிகு கண்டி (மறைவாக நின்று பார்ப்பதற்கு ஏற்ற சந்து).

[இணக்கு + பார்வை.]

இணக்கோலை *inakkolai,* பெ. (n.) 1. *உடன்படிக்கை முறி* (வின்.); deed of cession, of reconcilation or of agreement. (செ.அக.). 2. *பொருத்தோலை;* memorandum of association. (ஆ.அக.).

[இணங்கு - இணக்கு + ஓலை.]

இணகாலன் *inagalan,* பெ. (n.) *நேர்வாளம்;* croton seed, purging croton. (சா.அக.).

[இளகல் - இளகலன் - இளகாலன் - இணகாலன்.]

இணகு *inagu,* பெ. (n.) *உவமை;* simile. "இணகிறந் தகன்ற பாசம்" (ஞானா.45). (செ.அக.).

[இல் - இள் - இள - இண - இணை - இணைகு - இணகு.]

இணங்கர் *inangar,* பெ. (n.) *ஒப்பு;* match, comparison. "கற்பிற் கிணங்க ரின்மையான்" (கம்பரா.மீட்சிப்.147). (செ.அக.).

[இணைகு - இணங்கு - இணங்கர்.]

இணங்கல் *inangal,* பெ. (n.) 1. *உடன்பாடு;* consent, assent. 2. *எட்டு;* number 8. (செ.அக.).

[இணங்கு - இணங்கல்.]

இணங்கலர் *inangalar,* பெ. (n.) *பகைவர்;* enemies, adversaries. (செ.அக.).

[இணங்கு + அல் + அர்.]

இணங்கற்பிஞ்சு *iṇaṅgar-piñju,* பெ. (n.) ***இரண்டு;*** (செட்.நா.); two. (செ.அக.).

[இணங்கல் + பிஞ்சு.]

இணங்கன் *iṇaṅgaṉ,* பெ. (n.) 1. ***நண்பன்;*** friend, man in agreement with another. "வணங்குவோ ரிணங் கன் வந்தான்" (திருவாலவா.28,27). 2. ***வெடியுப்பு*** (வின்.); saltpetre. (செ.அக.).

ம. இணங்கன்.

[இணங்கு - இணங்கன்.]

இணங்கனுப்பு *iṇaṅgaṉuppu,* பெ. (n.) ***வெடியுப்பு;*** nitre or salt-petre. (சா.அக.).

[இணங்கன் + உப்பு.]

இணங்கார் *iṇaṅgār,* பெ. (n.) ***இணங்கலர்*** பார்க்க; see *iṇaṅgalar.* (செ.அக.).

[இணங்கலர் - இணங்கார்.]

இணங்கி *iṇaṅgi,* பெ. (n.) ***தோழி*** (பிங்.); girl's companion; lady's maid. (செ.அக.).

க. எணவளிகெ, ஏண்வளிகெ (பெண்கள் கூட்டம்).

[இணங்கு - இணங்கி.]

இணங்கு[1]-தல் *iṇaṅgu-,* 15 செ.கு.வி. (v.i.) ***மனம் பொருந்துதல், ஒத்துக்கொள்ளல்,*** to consent, comply with, agree to. "இச்சையாயின வேழையர்க்கே செய்தங் கிணங்கியே திரிவேனை" (திருவாச.41,9). (செ.அக.).

ம. இணங்கு; க. எணெ, எண; தெ. எனுசு, என்சு; குட. எணெ; து. இனெ, இணை.

[இள - இண - இணங்கு.]

இணங்கு[2]-தல் *iṇaṅgu-,* 15 செ.கு.வி. (v.i.) ***நட்புச் செய்தல்;*** to be friend. "இனிச் சிவபத்தர்களோ டிணங்குக." (சி.போ.12,2). (செ.அக.).

ம. இணங்கு (நட்பு).

[இண → இணங்கு.]

இணங்கு[3] *iṇaṅgu,* பெ. (n.) 1. ***இணக்கம்;*** union, friendship. "உள்ளப் பெறா ரிணங்கை யொழிவேனோ" (திருப்பு.288). 2. ***ஒப்பு;*** match, fitmate. "இணங்காகு முனக்கவனே" (திருக்கோ.68). 3. ***பேய்*** (திவா); devil. (செ.அக.).

ம. இணங்கு.

[இண - இணங்கு.]

இணங்கு[4] *iṇaṅgu,* பெ. (n.) 1. ***நண்பின-ன்-ள்;*** comrade. "அவனது துணை அவனது இணங்கு என்பன துணைக்கிழமை" (தொல்.சொல்.80, சேனா.) (செ.அக.). 2. ***உறவு*** (சேரநா.); relationship, kinship.

ம. இணங்கு.

[இண → இணங்கு.]

இணம் *iṇam,* பெ. (n.) 1. ***கிச்சிலி மரம்;*** orange tree. 2. ***தளிர்;*** sprout. (சா.அக.).

[இள → இண → இணம்.]

இணர்[1]-தல் *iṇar-,* 2 செ.கு.வி. (v.i.) ***நெருங்குதல்;*** to be dense, to intensify. "இணரிய ஞாட்பினுள்" (களவழி.34). (செ.அக.).

ம. இணர்.

[இள் - இண் - இணர்.]

இணர்[2]-தல் *iṇar-,* 2 செ.கு.வி. (v.i.) ***பரவுதல்;*** to pervade, spread. "இணரு மவன்றன்னை யெண்ணல்" (திருமந்.3035). (செ.அக.).

ம. இணர்ச்ச.

[இள் - இள - இளர் - இணர். ஒ.நோ. ஈண்டுதல்.]

இணர்[3] *iṇar,* பெ. (n.) 1. ***பூங்கொத்து;*** cluster of flowers. "மெல்லிணர்க் கண்ணி" (புறநா.24,8). 2. ***பூ;*** blossom, full-blown flower. "தேங்கமழ் மருதிணர் கடுப்ப" (திருமுருகு.34). 3. ***பூவிதழ்;*** flower petal. "பல்லிணர்க் குரவம்" (குறிஞ்சிப்.69). 4. ***பூந்தாது*** (பிங்.); pollen. 5. ***ஒளிச்சுடர்;*** flame. "இணரெரி" (குறள்.308). 6. ***காய்குலை;*** bunch of fruit. "இணர்ப்பெண்ணை" (பட்டினப்.18). 7. ***ஒழுங்கு;*** order, arrangement, as of troops, "புகரிணர்சூழ் வட்டத்தவை" (பரிபா.15,61). 8. ***தொடர்ச்சி*** (பழமொழி.78); continuance. 9. ***கிச்சிலி*** (மலை.) பார்க்க; orange. 10. ***மாமரம்*** (மலை.) பார்க்க; mango-tree. (செ.அக.). 11. ***மீன் முட்டை;*** spacon of fish.

ம. இணர்.

[இள் - இளர் - இணர்.]

இணர்[4] *iṇar,* பெ. (n.) ***சூலை;*** stomach pain.

[இள் - இளர் - இணர் = நெருக்குதல், வலித்தல்.]

இணர் ததை கடுக்கை *iṇar-tadai-kaḍukkai,* பெ. (n.) ***கொத்து நிறைந்த கொன்றை;*** bunch of a konṟai. "இணர் ததை கடுக்கை ஈண்டிய தாதிற் குடவர் புழுக்கிய பொங்கவிழ்ப்புன்கம்." (அகநா.393-15).

[இணர் + ததை + கடுக்கை.]

இணர்ததை தண்கா *iṇar-tadai-taṇkā,* பெ. (n.) ***பூங்கொத்து நெருங்கின குளிர்ந்த பொழில்;*** flower-garden. "இணர்ததை தண்காவின் இயன்றநின்குறி வந் தாள்" (கலித்.69-16).

[இணர் + ததை + தண்கா.]

இணரெரி *iṇareri,* பெ. (n.) ***பல சுடருள்ள நெருப்பு;*** conflagration, fire throwing ample flames. "இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்" (குறள்.308).

[இணர் + எரி.]

இணரோங்கு-தல் *inar-ōṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) ***குடிவழி உயர்தல்;*** to prosper from generation to generation. ''இணரோங்கி வந்தாரை'' (பழமொழி.72). (செ.அக.).

[இணர் + ஓங்குதல். இணர் - கொத்து, கொத்தான உறவு, தலைமுறை.]

இணாட்டு *iṇāṭṭu*, பெ. (n.) 1. ***மீன் செதிள்*** (யாழ்ப்.); gill of fish. 2. ***ஓலைத்துண்டு*** (யாழ்ப்.); small bit of palm leaf. (செ.அக.). 3. ***ஓலைத்தளிர்*** (ஆ.அக.); tender palm leaf.

[ஒருகா. இணர் + ஆட்டு - இணராட்டு - இணாட்டு (தொகுதியின் அடைவு).]

இணாப்பு[1]-தல் *iṇāppu-*, 5 செ.குன்றாவி. (v.t.) ***ஏய்த்தல்*** (யாழ்.); to deceive, cheat. defraud, beguile. (செ.அக.).

க. எட்டிசு.

[இணைப்பு → இணாப்பு.]

இணாப்பு[2] *iṇāppu*, பெ. (n.) ***ஏய்ப்பு*** (யாழ்.); deceit, cheating, fraud, guile. (செ.அக.).

[இணை → இணைப்பு → இணாப்பு. ஏய்த்தலாவது பொருந்தச் சொல்லி ஏமாற்றுதல், (வே.க.25).]

இணலாடு-தல் *iṇalāḍu-*, 5 செ.கு.வி. (v.i.) ***புணர்தல்;*** to copulate as snakes do. ''பாம்பு இணலாடுகிறது'' (கொங்.வ.).

[இணல் + ஆடு.]

இணி *iṇi*, பெ. (n.) 1. ***எல்லை;*** boundary. 2. ***தளை;*** fetter. 3. ***ஏணி;*** ladder. 4. ***அணி*** (ஆ.அக.); ornament.

[இள் → இளி → இணி.]

இணிக்கு-தல் *iṇikku*, 12 செ.குன்றாவி. (v.t.) 1. ***மறைவாக நின்று பார்த்தல்;*** to peep furtiveiy (கருநா.). 2. ***காட்டிக் கொடுத்தல்;*** to betray.

க. இணிக்கு, இணக்கு.

[இள் - இனி - இணி - இணிக்கு.]

இணுக்கு[1]-தல் *iṇukku-*, 6 செ.குன்றாவி. (v.t.) ***இணுங்கு*** பார்க்க; see *iṇuṅku.* 'இலைகளை இணுக்கிக் கொண்டு வந்தான்!' (செ.அக.).

[இல் - இள் - இண் - இணுக்கு.]

இணுக்கு[2] *iṇukku*, பெ. (n.) 1. ***கைப்பிடியளவு;*** little quantity, as a handful of leaves from a plant. 2. ***இலைக் கொத்து;*** stalk with leaves. ''ஒரு கருவேப்பிலையிணுக்குப் போதும்''. 3. ***வளார்;*** twig, forming part of foliage. 4. ***கிளை முதலியவைகளின் இடைச்சந்து*** (வின்.); fork or joining of a twig, its branch. (செ.அக.).

ம. இணுக்கு; **க.** இண்டெ; **தெ.** இண்டெ.

[இணுகு - இணுங்கு - இணுக்கு. இல் - இள் - இணு - இணுக்கு.]

இணுக்கு[3] *iṇukku*, பெ. (n.) ***அழுக்கு, கறை*** (அக.நி.); dirt, stain. (செ.அக.).

[இழுக்கு - இணுக்கு.]

இணுங்கு-தல் *iṇuṅgu-*, 5 செ.குன்றாவி (v.t.) ***பறித்தல்*** (சீவக.124,உரை); pull off, as a leaf from a twig; pluck, as a flower from a tree. (செ.அக.).

[இணுக்கு - இணுங்கு.]

இணை[1]-தல் *iṇai-*, 2 செ.கு.வி. (v.i.) 1. ***சேர்தல்;*** to join, unite. ''இணைந்துடன் வருவ திணைக்கை'' (சிலப்.3,18,உரை). 2. ***இசைதல்;*** to agree, acquiesce; to be suited. 3. ***ஒத்தல்*** (தனிகைப்பு.நாட்டு.53); to be like, to resemble. (செ.அக.). 4. ***கூடுதல்;*** to couple.

ம. இணயுக; **க.** எணெ, எண; **தெ.** எனயின்சு; **குட.** எணெ; **து.** இனெ, இணெ.

[இயை - இசை - இண - இணைதல். இள் - இள - இண - இணை.]

இணை[2]-த்தல் *iṇai*, 4. செ.குன்றாவி. (v.t) 1. ***கட்டுதல்;*** to fasten together, entwine, as a garland. ''இணைத்த கோதை'' (திருமுருகு.200). (செ.அக.). 2. ***சேர்த்தல்;*** to link, inter-connect, unite. 3. ***உவமித்தல்;*** to compare. (ஆ.அக.).

ம. இணய்க்குக.

[இயை - இசை - இணை - இணைத்தல்.]

இணை[3] *iṇai*, பெ. (n.) 1. ***இசைவு;*** union, conjunction. 2. ***ஒப்பு;*** likeness, similitude, resemblance, analogy. ''இணைகடி சீய மன்னான்'' (சீவக.1721). 3. ***இரட்டை;*** two things of a kind, pair, couple, brace. ''குறிலே நெடிலே குறிலிணை ஏனைக் குறில்நெடிலே'' (யா.கா.உறுப்.5). 4. ***உதவி*** (சூடா.); aid, help, support. 5. ***பின்னல்*** (சூடா.); woman's locks. 6. ***எல்லை;*** limit, boundary. ''இணையிலின்ப முடையோய் நீ'' (சீவக.1243). 7. ***இணைத்தொடை*** (யா.கா..உறுப்.19) பார்க்க; see iṇaittoḍai (செ.அக.). 8. ***கண்ணிணை*** (ஆ..அக.); eyes. 9. ***தோழன்*** (ஆ.அக.); friend, companion.

ம. இண; **க.** இண்டெ; **தெ.** இண்ட.

[உள் - இள் - இழை - இணை. ஒ.நோ. தழல் - தணல் (மு.தா.19).]

இணை அணை சேக்கை *iṇai-aṇai-sēkkai* பெ. (n.) ***அணைந்த படுக்கை*** (நெடுநல்.133); twin bed.

[இணை + அணை + சேக்கை.]

இணைஈர் ஓதி *iṇai-y-īr-ōdi*, பெ. (n.) ***கூடையொத்த நெய்ப்பினையுடைய மயிர்*** (திருமுருகு.20); tressed hair.

[இணை + ஈர் + ஓதி. இரு - ஈர்.]

இணைக்கயல் *inai-k-kayal,* பெ. (n.) 1. ***எண்மங்க லங்களுளொன்று*** (திவா.); brace of carp, in gold or silver, an auspicious object carried before kings or other great personages, one of atta-mangalam. 2. ***மீன வரி*** (மச்சரேகை); two lines on the palm of hand resembling a fish, and considered to augur prosperity. "மதிமருண்டா னிணைக்கயற் கையான்" (பாரத. கீசகன்.3) (செ.அக.).

[இணை + கயல்.]

இணைக் கருப்பம் *inai-k-karuppam,* பெ. (n.) ***இரட்டைப் பிள்ளை;*** two children born at the same birth, twins. (சா.அக.).

[இணை கருப்பம்.]

இணைக்கல்லை *inaik-k-kallai,* பெ. (n.) ***இரண்டிலைகளால் தைக்கப்பட்ட கலம்*** (தொண்ணை) (பெரியபு.கண்ணப்ப.118) (செ.அக.); cup shaped out of folded leaves.

[இணை + கல்லை. இணை = இரண்டு.]

இணைக்குறளாசிரியப்பா *inai-k-kural-āciriya-p-pā,* பெ. (n.) ***ஈற்றடியும் முதலடியும் அளவடியாக, இடையடிகள்பல குறளடியானும் சிந்தடியானும் வரும் அகவல்*** (யா.கா.செய்.8,உரை); variety of agaval verse where two or more lines contain lesser number of feet than the standard four. (செ.அக.).

[இணை + குறள் + ஆசிரியம் + பா.]

இணைக்கை *inai-k-kai,* பெ. (n.) ***இரண்டு கைகளாற் புரியும் 15 வகை செய்கைக்குறிகள்*** (அபிநயம்) (சிலப்.3,18,உரை); gesture involving the use of both the hands in one of 15 different attitudes, in dancing posture. அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கர்க்கடகம், சுவத்திகம், கடகாவருத்தம் , நிடதம், தோரம், உற்சங்கம், புட்படம், மகரம், சயந்தம், அபய வத்தம், வருத்தமானம் and dist. fr. inaiyā-vinai-k-kai. (செ.அக.).

[இணை + கை.]

இணைக்கொடைப்பொருள் *inai-k-kodai-p-porul,* பெ. (n.) ***திருவிழா முதலிய நல்ல காலங்களில் மணமக்களுக்கு உற்றார் முதலியோர் கொடுக்கும் பொருள்*** (சங்.அக.); gifts made to a married couple on auspicious and festive occasions by relatives and others. (செ.அக.).

[இணை + கொடை + பொருள்.]

இணைக்கோணம் *inai-k-kōnam,* பெ. (n.) ***மூக்கிரட்டைச் செடி*** (இராசவைத்.40); pointed-leaved hogweed. (செ.அக.).

[இணை + கோணம்.]

இணைத்தொடை *inai-t-todai,* பெ. (n.) ***அளவடியுள் முதலிருசீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது*** (இலக்.வி.723,உரை); concatenation in which there is metrical assonance or alliteration as between the first two feet of a line of four feet. (செ.அக.).

[இணை + தொடை.]

இணைதல் *inaidal,* பெ. (n.) 1. ***சேர்தல்;*** uniting. 2. ***விலங்குகளின் புணர்ச்சி;*** having sexual connection said of animals. (சா.அக.).

க. எணெ (இரட்டை; சேர்தல்).

[இல் - இள் - இணை.]

இணைதாரை *inaidārai,* பெ. (n.) ***விந்துவை விந்துக் குழியிலிருந்து வெளித்தள்ளும் நாடிக்குழல் தாரை;*** canal conveying the semen to the urethra - ejaculatory duct. (சா.அக.).

[இணை + தாரை.]

இணைப்படைத்தானை *inai-p-padai-t-tānai,* பெ. (n.) ***துணைப்படைச்சேனை;*** army with allies. "இணைப்படைத் தானை யரசோடுறினும்" (கலித்.15-3).

[இணை + படை + தானை.]

இணைப்பாம்பு *inai-p-pāmbu,* பெ. (n.) 1. ***சாரைப் பாம்பு;*** male-cobra. 2. ***பிணையும் பாம்பு;*** snake sexually uniting with another snake.

[இணை + பாம்பு.]

இணைப்பிணையல் *inai-p-pinaiyal,* பெ. (n.) ***இணை மாலை*** (பரிபா.2-53); pair of garlands.

[இணை + பிணையல்.]

இணைப்பிரியன் *inai-p-piriyan,* பெ. (n.) ***ஒரு வகைப் பாம்பு;*** a kind of snake. (சா.அக.).

[இணை + பிரியன்.]

இணைப்பிரியாமை *inaippiriyāmai,* பெ. (n.) ***ஆணும் பெண்ணும் துணைபிரியா திருத்தல்;*** indivisibility of couple.

[இணை + பிரியாமை (வே.க.25).]

இணைப்பு *inaippu,* பெ. (n.) 1. ***இசைப்பு;*** union, connection, coupling. 2. ***ஒப்பு;*** equality, similarity. "இணைப்பரும் பெருமையீ சன் காண்க" (திருவாச. 3,46). (செ.அக.).

க. எணவளிகெ, ஏணவளிகெ.

[இணை → இணைப்பு.]

இணைப்புறு பிணையல் *inaippuru pinaiyal,* பெ. (n.) ***கட்டுதலுறுகின்ற மாலை*** (திருமுருகு.30); twinned garlands.

[இணைப்பு + உறு + பிணையல்.]

இணைபிரியாமை *iṇai-piriyāmai,* பெ. (n.) ***விட்டுப் பிரியாதிருக்கை;*** inseparability of pair, impartibility of affinity, fastness of friendship,

[இணை + பிரியாமை.]

இணைமட்டப்பலகை *iṇai-maṭṭa-p-palagai* பெ. (n.) ***இரட்டைக்கோடு காட்டுங் கருவி*** (C.E.M.); parallel ruler; indicator of parallelism. (செ.அக.).

[இணை + மட்டம் + பலகை.]

இணை மடியூசி *iṇai-maḍi-ūci,* பெ. (n.) ***தாள்களை இணைக்கச் செய்யும் கம்பி;*** wire, or pin, to fasten the papers with stapler-pin.

[இணை + மடி + ஊசி.]

இணை மடியூசிக்கருவி *iṇai-maḍi-ūci-k-karuvi,* பெ. (n.) ***தாள்களை இணைக்கச் செய்யும் கம்பியை மடிக்க உதவும் கருவி;*** stapling-machine, a machine that stitches paper with wire.

[இணை + மடி + ஊசி + கருவி.]

இணைமணிமாலை *iṇai-maṇi-mālai,* பெ. (n.) ***சிற்றிலக்கிய வகை*** (இலக்.வி.818); அந்தாதியில் அமைந்திருக்கும் 100 பாடல்களைக் கொண்டது. பாடல்கள் இரண்டு இரண்டாக இருக்கும். பாடல்கள் வெண்பா, அகவல் அல்லது வெண்பா, கட்டளைக்கலித்துறையில் அமைந்திருக்கும்; literary work of 100 stanzas in andadi form, consisting of alternative pairs of either veṇpa and akaval or veṇpa and kaṭṭalai-k-kalitturai. (செ.அக.).

[இணை + மணி + மாலை.]

இணைமுரண் *iṇai-muraṇ,* பெ. (n.) ***ஓரடியின் முதலிரு சீரும் முரண்பட இணைந்து வருந் தொடை*** (யா.கா.உறுப்.16,உரை); anti-thesis in the first two feet of a line in a verse (செ.அக.).

[இணை + முரண்.]

இணைமுரண்தொடை *iṇai-muraṇ-toḍai,* பெ. (n.) ***இணை முரண்*** பார்க்க; see *iṇaimuraṇ* (ஆ.அக.).

[இணை + முரண் + தொடை.]

இணைமோனை *iṇai-mōṇai,* பெ. (n.) ***ஓரடியின் முதலிருசீரினும் மோனை இயைந்து வருந் தொடை*** (யா.கா.உறுப்.16,உரை); alliteration in the first two feet of a line of verse. (செ.அக.).

[இணை + மோனை.]

இணைமோனைத்தொடை *iṇaimōṇai-t-toḍai,* பெ. (n.) ***இணைமோனை*** பார்க்க; see *iṇaimōṇai.* (ஆ.அக.).

[இணை + மோனை + தொடை.]

இணையசை *iṇai-yasai,* பெ. (n.) ***நிரையசை*** (ஆ.அக.); (prosodical) two matching phonemes making up a syllable.

[இணை + அசை.]

இணையடி[1] *iṇaiyaḍi,* பெ. (n.) ***அணிவகைகளுளொன்று. அஃது இருசீரொன்றாய் வருதல்.*** (ஆ.அக.); metrical formulation of identical feet in adjacent lines as a figure of speech.

[இணை + அடி.]

இணையடி[2]**-த்தல்** *iṇai-y-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) ***முட்டுக்கால் தட்டுதல்*** (இ.வ.); knock-knee. (செ.அக.).

[இணை + அடித்தல்.]

இணையடிகால் *iṇai-y-aḍi-kāl,* பெ. (n.) ***மாட்டுக் குற்றவகை*** (பெரியமாட்.18); defect in cattle. (செ.அக.).

[இணை + அடி + கால்.]

இணையணை *iṇai-y-aṇai,* பெ. (n.) ***பலவணை;*** mattresses spread one over another for comfort. "இணையணை மேம்படத் திருந்து துயில்" (சிலப்.4:67). (வே.க.25).

[இணை + அணை.]

இணையளபெடை *iṇai-y-aḷabeḍai,* பெ. (n.) ***முதலிரு சீரினும் அளபெடை வருந் தொடை;*** (யா.கா. உறுப்16,உரை); variety of rhyme in which the first two feet of a line in a stanza have protracted vowel-sounds. (செ.அக.).

[இணை + அளபெடை.]

இணையாமார்பன் *iṇai-yā-mārbaṉ,* பெ. (n.) ***கம்பர் சோழ நாட்டை வெறுத்துப் பாண்டிய நாட்டிலிருந்த போது அவரை அழைத்துவரப் பாண்டியன் அவைக்குச் சென்றவர்*** (அபி.சிந்.); messenger sent by Chola king to bring the great poet Kamban from the Pandiyan court.

[இணையா + மார்பன்.]

இணையாவினைக்கை *iṇaiyā-viṇai-k-kai,* பெ. (n.) ***ஒரே கையால் புரியும் 33 வகை சைகை*** (அபிநயம்) (சிலப்.3,18,உரை); gesture with one hand, of which 33 varieties are mentioned in dancing treatise. (செ.அக.).

[இணையா + வினைக்கை. அவையாவன: பதாகை, திரிபதாகை, கத்தரிகை, தூபம், அராளம், இளம்பிறை, சுகதுண்டம், முட்டி, கடகம், சூசி, கமல கோசிகம், காங்கூலம், கபித்தம், விற்பிடி, குடங்கை, அலாபத்திரம், பிரமரம், தாம்பிர சூடம், பிசாசம், முகுளம், பிண்டி, தெரிநிலை, மெய்ந்நிலை, உன்னம், மண்டலம், சதுரம், மான்றலை, சங்கு, வண்டு, இலதை, கபோதம், மகரமுகம், வலம்புரி.]

இணையாளி *iṇaiyāḷi,* பெ. (n.) ***கூட்டுக்காரன்;*** companion. (சேரநா.).

ம. இணயாளி.

[இணை + ஆள் + இ.]

இணையியைபு *inai-y-iyaibu,* பெ. (n.) ***ஓரடியின் ஈற்றுச் சீரிரண்டும் இணைந்து வருந் தொடை*** (யா.கா.உறுப்.16,உரை). (செ.அக.); rhyming of the last two feet.

[இணை + இயைபு.]

இணையுதி *inaiyudi,* பெ. (n.) ***உடம்பினில் தசையிழைகளைப் பொருத்தும் பொருள்;*** tissue which binds together the various structures of the body - connective tissue. (சா.அக.).

[இணை + உதி. உத்து - உது - உதி. உத்துதல் = பொருத்துதல்.]

இணையுப்பு *inai-y-uppu,* பெ. (n.) ***இரண்டு வகை உப்பு சேர்ந்த கரைசல்;*** solution composed of two salts. (சா.அக.).

[இணை + உப்பு.]

இணையெதுகை *inai-y-edugai,* பெ. (n.) ***ஓரடியின் முதலிரு சீரினும் எதுகையியைந்து வருந் தொடை*** (யா.கா.உறுப்.16,உரை.); form of rhyme in which the first two feet of a line of verse rhyme with each other. (செ.அக.).

[இணை + எதுகை.]

இணையேருண்கண் *inaiyērunkan,* பெ. (n.) ***எழில் மிகு இருகண்கள்*** (ஐங்குறு.378); beautiful eyes.

[இணை + ஏர் + உண்கண்.]

இணைவன் *inaivan,* பெ. (n.) ***இணைந்திருப்பவன்;*** one who is closely related to or intimately associated with companion "இணைவனா மெப்பொருட்கும்" (திவ். திருவாய்.2,8,1). (செ.அக.).

[இணை → இணைவன்.]

இணைவிழைச்சு *inai-vilaiccu* பெ. (n.) ***புணர்ச்சி;*** sexual copulation. "இணைவிழைச்சு தீதென்ப" (இறை.1, உரை, பக்.9). (செ.அக.).

[இணை + விழைச்சு.]

இணைவு *inaivu,* பெ. (n.) 1. ***ஒன்றிப்பு;*** junction. 2. ***கலப்பு;*** merger. 3. ***சேர்மானம்;*** addition. 4. ***புணர்ச்சி*** (ஆ.அக.); copulation.

[இணை - இணைவு.]

இத்தம் *ittam,* பெ. (n.) ***புளி*** (சங்.அக.); tamarind. (செ.அக.).

[இந்தம் - இத்தம்.]

இத்தனை *i-t-tanai,* கு.வி.எ. (adj.). 1. ***இவ்வளவு;*** so much, this much. "இத்தனை காலமும் போய்க்கிறிப் பட்டேன்" (திவ்.பெரியாழ்.5,3,8). 2. ***சில;*** few. "இத்தனை நாளிலுயர்த்துகையே" (திருநூற்.85) (செ.அக.).

ம. இத்தின, இத்தினி; **க.** இனிது, இனித்து, இந்துடு, ஈசு; **து.** ஈது; பட. ஈசக.

[இத்துணை - இத்தனை.]

இத்தால் *ittāl,* கு.வி.எ. (adv.) ***இதனால்;*** hereby, by this means. "தான் வந்து தொடரு மித்தால்" (தாயு. ஆகார.15). (செ.அக.).

க. இத்தலு (இவ்வகையில்); *Skt.* ittham (thus, in this manner).

[இது + ஆல் - இத்தால்.]

இத்தி[1] *itti,* பெ. (n.) 1. ***கல்லால்*** (திருவாச.4,162); white fig. 2. ***கல்லிச்சி*** (L.); stone-fig. 3. ***கல்லித்தி*** (L.); tailed oval-leaved fig. (செ.அக.).

ம. இத்தி; **குட.** இத்தி.

[இல் - இத்தி. வன்னிலத்திலும் கல்லிலும் வேரூன்றி வளரும் மரம். இல் = குத்துதல், துளைத்தல்.]

இத்தி[2] *itti,* பெ. (n.) 1. ***பூனை*** (அக.நி.); cat. (செ.அக.). 2. ***வெண்மை;*** whiteness.

ம. இத்தி.

[இல் - இது - இத்து - இத்தி. இல் = மென்மை, இளமை, பிள்ளை.]

இத்திநடையம் *itti-nadaiyam,* பெ. (n.) ***நத்தை*** (வின்.); snail. (செ.அக.).

[இல் - இது - இத்து - இத்தி = மென்மை. நடையம் = மெதுவாக நடத்தல்.]

இத்தியால் *ittiyāl,* பெ. (n.) ***கல்லால்;*** white fig. (சா.அக.).

[இத்தி + ஆல். இத்தி = வெண்மை.]

இத்து[1] *ittu,* பெ. (n.) 1. ***ஒருவகைப்புல்*** (காமாட்சிப்புல்) (மலை.); citronella. (செ.அக.). 2. ***காவட்டம்புல்*** (ஆ.அக.); a kind of grass.

[இல் - இது - இத்து.]

இத்து[2] *ittu,* பெ. (n.) ***அண்மைச்சுட்டு;*** indicative of nearness or proximity.

[இல் - இஃது - இத்து (மு.தா.323).]

இத்துணை *i-t-tunai,* கு.வி.எ. (adv.) ***இவ்வளவு;*** this much, so much. "நங்களுக் கித்துணை யலக்கண்வந் தெய்திற்று" (கந்தபு.சூரனமை.98). (செ.அக.).

தெ. இன்னி, இனி; **ம.** இதர; **க.** இனிது, இனித்து, ஈசு; **துட.** இந்க்; **குட.** இச்செ; **கொலா.** இத்தெ; **நா.** இத்தெக்; **பர்.** இத்னி; **கோண்.** இச்சோர்; **கூ.** இசெ; **குவி.** இசெக; **குர்.** இயுந்தா, இயுரா; **மால்.** இனொந்த; **பிரா.** தாக; **பட.** ஈசக.

[இ + துணை.]

இத்தை[1] *ittai,* இடை. (part.) ***முன்னிலையசைச் சொல்;*** poet. expletive to indicate imperative of verbs. "நீயொன்று பாடித்தை" (நன்.440, உரை). (செ.அக.).

[ஈ - ஈத்தை - இத்தை.]

இத்தை[2] *ittai,* பெ. (n.) ***இதனை*** (கொ.வ.); this, in the accusative case (செ.அக.).

[இது + ஐ - இத்தை.]

இதக்கை *idakkai,* பெ. (n.) ***பனங்காயின் தலையி லுள்ள தோடு*** (அகநா.365); integument on the top of a palmyra fruit. (செ.அக.).

[உது - இது - இதண் - இதக்கை. உது = மேல். இதக்கை = மேலிருப்பது.]

இதஞ்சொல்(லு)-தல் *idañ-col-,* 13 செ.கு.வி. (v.i.) 1. ***புத்தி கூறுதல்;*** to give salutary advice or wholesome counsel. (செ.அக.). 2. ***ஆறுதல் மொழிதல்;*** to console.

[இதம் + சொல்லுதல்.]

இதடக்கு *idaḍakku,* பெ. (n.) ***அணியுறுப்பு வகை;*** part in jewels. (செ.அக.).

[இதழ் + அடக்கு.]

இதடி[1] *idaḍi,* பெ. (n.) ***பெண்ணெருமை;*** she-buffalo. "இதடி கரையும்" (திணைமாலை.83) (செ.அக.).

[இருளை - இதளை - இதளி - இதடி.]

விரவுப்பெயர்கள் மக்களுக்கும் வளர்ப்பு விலங்குகளுக்கும் பொதுவாய் வருதலின் பெண்ணைக் குறித்த இருளை வடிவு திரிந்து பெண்ணெருமையைக் குறித்தது.

இதடி[2] *idaḍi,* பெ. (n.) ***நீர்*** (பிங்.); water. (செ.அக.).

[இல் - இது - இதள் - இதடி = மண்ணைக் குடைந்து செல்லும் நீர்.]

இதண் *idaṇ,* பெ. (n.) 1. ***காவற்பரண்*** (திணைமாலை.2.); high shed put up temporarily with a platform from which to watch a field. (செ.அக.). 2. ***பரண்;*** loft. (ஆ.அக.).

[உது - இது - இதண் = உயரமானது.]

இதணம் *idaṇam,* பெ. (n.) ***இதண்*** (குறிஞ்சிப்.41) பார்க்க; see *idaṇ* (செ.அக.).

[உது - இது - இதண் (உயரம்) இதண் + அம் - இதணம்.]

இதம்[1] *idam,* பெ. (n.) 1. ***இன்பமானது;*** consensus comfort, agreeability. "இதந்தரு மடந்தை" (திருவாத.பு. கடவுள்வா.1). 2. ***நன்மை;*** sage counsel, wholesome words. "நேச ரிதங் கூற நிலவலயந் தாங்குநளன்" (நள.காப்பு.). (செ.அக.).

ம. இதம்; **தெ.** இதமு.

[இல் - இது - இதம். இல் - இளமை, மென்மை, இனிமை. இதம் > skt hida.]

இதம்[2] *idam,* பெ. (n.) ***அறிவு*** (நாநார்த்த.); knowledge, wisdom. (செ.அக.).

[இல் - இதம். இல் - இளமை, மென்மை, தெளிவு, அறிவு. இதம் > Skt. hida.]

இதம்[3] *idam,* பெ. (n.) ***இதயம்;*** heart. "இதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவும்" (திருவாச.2,139) (செ.அக.).

க. எதெ.

[இல் - இத்து - இது - இதம். (ஒ.நோ. மது - மதம்) இல் = குத்தல், துளைத்தல். இதம் = உட்டுளையுள்ளது, உட்குழிவா னது. ஒ.நோ. இல்லிக்குடம் = ஓட்டைக்குடம். குல் - குத்து - குதம். குல் - குந்து (புட்டம் தரையில் ஊன்ற உட்கார்) இதம் > Skt. hridaya. ஒ.நோ. மெது > Skt. mṛdu.]

இதம்பண்ணல் *idam-paṇṇal,* தொ.பெ. (vbl.n.) ***இன் பஞ்செய்யல்;*** give pleasure, gratify.

[இதன் + பண்ணு + அல்.]

இதமல்லிதம் *idamallidam,* பெ. (n.) ***நன்மை தீமை;*** good and evil.

[இதம் + அல் + இதம்.]

இதமாகச் செய்-தல் *idamāga-c-cey,* 1 செ.கு.வி. (v.i.) ***உடம்பிற்கொத்துக் கொள்ளும்படிச் செய்தல்;*** make or render anything suitable or agreeable to the constitution. (சா.அக.).

[இதம் + ஆக + செய்.]

இதமி-த்தல் *idami-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ***பற்றுச்செய் தல்;*** to be attached. "இதமித்தல் பாசத்திலின்றி" (சி.போ.10,2,5) (செ.அக.). 2. ***ஒன்றித்தல்*** (ஆ.அக.); unite.

Skt. hita.

[இதைத்தல் = இணைத்தல், கெட்டிப்படுத்துதல், ஒன்றிணைத் தல். இதை - இதம் - இதமித்தல்.]

இதமிப்பு *idamippu,* பெ. (n.) ***ஒன்றிப்பு*** (ஆ.அக.); union.

[இதம் - இதமிப்பு.]

இதமியம் *idamiyam,* பெ. (n.) 1. ***இதப்படுதல்;*** gratification. 2. ***இனிமை;*** pleasure.

[இதம் + இயம்.]

இதயம் *idayam,* பெ. (n.) 1. ***இதயப் பை;*** heart. "கருதுவாரிதயத்து" (தேவா.619,1). 2. ***மார்பு;*** chest. "இதயமென்மயி ரணிந்திடில்" (காசிக.மகளிர்.23). 3. ***மனம்;*** mind. (செ.அக.).

மறுவ. கருள், இதம், மாங்காய், தாமரைக்காய், குண்டிக்காய்; **க.** எதெ, எழ்தெ, எர்தெ; **தெ.** எத; **து.** எதெ; **பர்.** எத்ரம், எத்ரொம். *Skt.* hṛdaya.

[இல் - இத்து - இது - இதம்[3] > வ. ஹிர்தய - த. இதயம்.]

இதயம் இருக்கும் இடமாகிய மேற்புறத்து மார்பும் மனமும் வழிநிலைப்பொருள்களாகும். இது வடசொற்றிரிபாகும். *இதம்[3] பார்க்க; see idam[3]*

இதய மாற்றொட்டு *idaya-māṟṟoṭṭu,* பெ. (n.) ***மாற் றிதய அறுவை மருத்துவம்;*** heart transplantation.

[இதயம் + மாற்று + ஒட்டு.]

இதயாரி நோய் *idayāri-nōy,* பெ. (n.) ***இதயத்தின் நாளச்சுவரில் ஏற்படும் வலி;*** valvular disease of the heart. (சா.அக.).

[இதயம் + ஆர் + இ + நோய்.]

இதர்-தல் *idar-,* 6 செ.குன்றாவி (v.t.) ***பிரித்தல்;*** to divide.

[இதல் → இதர்.]

இதரக்கூடு மருந்து *idara-k-kūdu marundu,* பெ. (n.) ***இதளியம் சேர்ந்த மருந்து;*** any medicine containing mercury as the chief ingredient - mercurial compound. (சா.அக.).

[இதள் - இதளம் - இதரம் + கூடு + மருந்து.]

இதரம்[1] *idaram,* பெ. (n.) 1. ***வேறு;*** another, the other. 2. ***பகை;*** hostility, enmity. "இதரங் கடந்தா னுதிட்டிரன்" (பாரத.துருவாச.12). (செ.அக.).

Skt. itara.

[இது = பின்னுள்ளது. இது - இதுர் - இதிர் - இதிரம் - இதரம்.]

இதரம்[2] *idaram,* பெ. (n.) ***கீழ்மை*** (நாநார்த்த.); baseness. (செ.அக.).

Skt itara.

[இது = பின்னுள்ளது, கீழுள்ளது, கீழ்மை. இது - இதுர் - இதிர் - இதிரம்.]

இதரமதம் *idaramadam,* பெ. (n.) ***புறச்சமயம்;*** alien religion. (ஆ.அக.).

[இதரம் + மதம்.]

இதரமருந்து *idara-marundu,* பெ. (n.) ***இதளியத்திலி ருந்து செய்த மருந்து;*** any preparation of mercury. (சா.அக.).

[இதளமருந்து → இதரமருந்து.]

இதரயிட்டம்பனை *idarayiṭṭam-panai,* பெ. (n.) ***பிற பனை*** பார்க்க; see *pira panai* வருவாய்த் துறையில் வருவாய்க்காகப் பிரித்து வைத்துள்ள பருவப்பனை, காய்ப்பனை, காட்டுப்பனை, ஓலைவெட்டுப்பனை, வடலி என்னும் ஐந்துவகைப் பனைகள். (நெல்லை.); other items of palmyra trees; classification, for revenue purposes, of palmyras. (T.N.D.G.i.307) (செ.அக.).

Skt. itara.

[இதரம் + அயிட்டம் (E.item) + பனை.]

இதரர் *idarar,* பெ. (n.) 1. ***வேற்றவர்;*** strangers, foreigners. 2. ***கீழ்மக்கள்;*** inferiors, persons of no worth or character.(W.).

[இது - இதுர் - இதுரர் - இதரர்.]

இதரல் *idaral,* பெ. (n.) ***பிரித்தல்;*** dividing.

இதரன்[1] *idaran,* பெ. (n.) 1. ***எளியவன், பாமரன்*** (நாநார்த்த.); ignorant person, simpleton. 2. ***கீழ்மகன்*** (அக.நி.); mean person. (செ.அக.).

[இது → இதரன். இது - கீழ் நோக்கிய சுட்டு. தாழ்வு = தாழ்ந்த இடம்; தாழ்ந்தோர் எனப் பொருள் தந்து ஆகுபெயராயிற்று. ஒ.நோ. உது → உதரம். உடம்பின் நடுவிலுள்ள வயிற்றைக் குறித்தது. அது → அதரம். அதுத்தல் = பருத்தல்; சற்றே பருத்த இதழைக் குறித்தது.]

இதரன்[2] *idaran,* பெ. (n.) 1. ***அற்பன்;*** a low man. 2. ***பிறன், அன்னியன்;*** alien, other man, man of another group. "இதரர்க்கு மாதர்க் காகா" (விருத்தாசல.சிவபூ. 34; சங்.அக.).

[இல் = பிளத்தல், இரண்டாக்கல்; இல் → இது → இதலுதல். இதரல் = பிரித்தல். ஒ.நோ.மெல். - மெது. இதல் → இதலன் → இதரன். இதரர் என்னும் சொல்லை வடமொழி தமிழினின்று கடன் பெற்றுள்ளது. இதரர் > Skt. itara.]

இதல்-தல் *idal-,* 8 செ.குன்றாவி. (v.t.) ***பிரித்தல்;*** to divide.

[இல் - இது - இதல். தாயிடமிருந்து குழந்தையைப் பிரிக்கும் தொப்பூழ்க் கொடி இதலை எனப்படுதலை நோக்குக.]

இதல் *idal,* பெ. (n.) ***காட்டுக்கோழியைப்போல உருவுடையதும் கவுதாரியின் அளவுடையதுமான ஒரு பறவை;*** the red spur fowl. "புதன்மிசைத் தளவி னிதன்முட் செந்நனை" (அகநா.23.3.).



இதல்

மறுவ. சருகுக்கோழி, வரகுக்கோழி, மணிக்கண், முள்ளன் கோழி, சுண்டால் கோழி.

[இல் → இது → இதல். இல் = முள். காலின்புறத்தே முள்ளுடை மையின் பெற்றபெயர். இது கவுதாரியின் வேறுபட்டது. பல வண்ணங்கள் கொண்ட இதன் மற்றொருவகை, கல்கோழி எனப்பட்டது.]

இதலதம் *idaladam,* பெ. (n.) ***காரீயம்*** (சா.அக.); black lead.

[இது → இதுலம் → இதுலதம் → இதலதம். இது → இதுலம் = தாழ்வானது. தரத்தில் குறைந்தது.]

இதலை *idalai,* பெ. (n.) ***கொப்பூழ்*** (திவா.); navel, umbilicus. (செ.அக.).

[இல் → இது → இதல் → இதலை = தாயிடமிருந்து குழந்தை

கொப்பூழ்க்கொடி அறுப்பதன் மூலம் பிரிக்கப்படுதல்; பிரிக்கப் படுதற்கான கொப்பூழ்.]

இதவிய *idaviya,* கு.பெ.எ. (adj.) 1. ***நன்மையான;*** pleasant, agreeable, good. "இதவிய புல்லு மிட்டேம்" (திருவாலவா.29,6.). 2. ***பொருத்தமுள்ள;*** suitable.

ம. இதவிய.

[இல் → இளமை = குறுமை, நன்மை. இல் → இது → இதம் → இதவிய.]

இதவு *idavu,* பெ. (n.) 1. ***இதம்;*** pleasant, agreeable manners. "இதவார் குலசேகரன்" (அழகர்கலம்.காப் பு.3). 2. ***முகமன்;*** praise, flattery. (செ.அக.).

ம. இதவு.

[இல் - இது - இத - இதவு. ஒ.நோ. மெல் → மெது.]

இதழ்[1] *idal,* பெ. (n.) 1. ***பூவின் தோடு;*** petal, leaf of the corolla. "புல்லிதழ் பூவிற்கு முண்டு" (நாலடி. 221.). 2. ***உதடு;*** lip. "மீகீழிதழுறப் பம்மப் பிறக்கும்" (நன்.81). 3. ***கண்ணிமை;*** eyelid. "நீரெறி மலரிற் சாஅயிதழ் சோரா" (குறிஞ்சிப்.247). 4. ***பனையேடு*** (திவா.); palmyra leaf, palm leaf. 5. ***மாலை;*** garland. "சோர்ந்தவி ழிதழின்" (பரிபா.17,27). 6. ***பாளை*** (அக.நி.); coconut flower being the spadix of the coconut palm. 7. ***சாதிபத்திரி*** (மூ.அ.); mace. 8. ***கதவின் இலை*** (வின்.); thin slat in a venetian blind. 9. ***பொத்தகத்தின் தாள்;*** leaf of a book. 'இதழ் கிழிக்காத புதுப்புத்தகம்.' (செ.அக.).

ம. இதழ்; க. எசள்; து. எசள், எசளு.

[உதடு → (உதழ்) → இதழ்; உதடு போன்ற பூவிதழ்; இல் → இளமை, குறுமை, நன்மை, மென்மை. இல் → இது → இதழ் = மெல்லிய பூவின் பகுதி.]

இதழ்[2] *idal,* பெ. (n.) ***ஒரிதழ்த் தாமரை*** (வை.மூ.); pasture weed.

இதழ்[1] பார்க்க; see *idal*.[1]

இதழ்[3] *idal,* பெ. (n.) ***காலவரம்புக் குட்பட்டு வெளியி டப்படும் பருவ இதழ், தாளிகை*** (பத்திரிகை); periodical.

[பூவின் இதழ் போன்று புத்தம் புதியதாய்ப் பொலியும் பொத்தக வடிவிலான ஏடுகள், கிழமையிதழ், மாத இதழ் எனப் பல் வகைப் பருவ இதழ்கள் இப்பொதுப் பெயர் பெற்றன.]

இதழ்[4] *idal,* பெ. (n.) ***உதழ்*** பார்க்க; see *udal*.

[பூவின் இதழை ஒருமருங்கு ஒத்திருத்தலின் உதழ், இதழ் எனப்பெயர் பெற்றது.]

இதழ்க்குச்சி *idal-k-kucci,* பெ. (n.) ***வாயுதட்டுச் சாயமிடும் அழகுக் குச்சி;*** lip-stick.

இதழ் குவி[1]**-தல்** *idal-kuvi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ***மலர் கூம்புதல்;*** to close, as the petals of a flower. 2. ***இமை கூடுதல்;*** to droop one's eyelids. 3. ***மேலுதடுங் கீழுதடுங் குவித்து நிற்றல்*** (நன்.78); to join the lips conically, as in pronouncing the rounded vowels உ, ஊ, ஒ, ஓ, ஔ. (செ.அக.).

இதழ் குவி-த்தல் *idal-kuvi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. ***உதட்டைக் குவித்தல்;*** shrinking of the lips conically making a small orifice with the lips. 2. ***கண்மூடுதல்;*** closing the eye-lids. (சா.அக.).

[இதழ்[1] *+ குவித்தல்.]*

இதழ் விரிவு *idal-virivu,* பெ. (n.) ***பூவினிதழ் விரிந்து, மலர்தல்;*** process of bud opening petals into flower - florescence.

[இதழ்[1] *+ விரிவு.]*

இதழ் விள்ளல் *idal villal* பெ. (n.) 1. ***பேசல்;*** speaking. 2. ***மலரல்;*** blossom. 3. ***வாய்திறத்தல்;*** opening mouth as on speaking.

[இதழ்[1] *+ விள்ளல்.]*

இதழகலந்தாதி *idal-agal-andādi,* பெ. (n.) ***உதடு ஒட்டாமல் பாடப்படும் அந்தாதி;*** a kind of andādi verse without labio-dentals or labials (Pros.).

Skt. anta-ādi.

[இதழ்[1] *+ அகல் + அந்தாதி.]*

இதழலர்-தல் *idal-alar-,* 2 செ.கு.வி. (v.i.) ***பேச வாய் திறத்தல்;*** to open the lips. "இதழலர்ந்துநின் றோர் மொழி யென்னுடன் மொழிவீர்" (குலோத்.கோ.14).

[இதழ்[1] *+ அலர்.]*

இதழவிழ்தல் *idal-avildal,* தொ.பெ. (vbl.n.) ***பூத்தல்;*** to unfold petals (i.e.) blossoming. (சா.அக.).

[இதழ்[1] *+ அவிழ்தல்.]*

இதழி *idali,* பெ. (n.) ***கொன்றை*** (திவா.); cassia fistula. (செ.அக.).

க. எசளெ.

[இதழ்[1] *→ இதழி.]*

இதள் *idal,* பெ. (n.) 1. ***இதளியம்*** (பாதரசம்); mercury. (மூ.அக.). 2. ***சிறுதூறு*** (ஆ.அக.); low jungle, thicket, bushes(w.).

[இல் → இது → இதல் → இதள் = இளமை, அழகு, பளபளப்பு.]

இதளிய விளக்கு *idaliya-vilakku,* பெ. (n.) ***அதிகஒளி வழங்கும் வகையில் இதளிய ஆவி*** (பாதரசம்.) ***கொண்டமைக்கப்பட்ட மின் விளக்குவகை;*** mercury lamp.

[இதளியம் + விளக்கு.]

இதளை *idalai,* பெ. (n.) ***கொப்பூழ்*** (சங்.அக.); navel, umbilicus.

[இதலை → இதளை.]

இதளைக்காற்பூடு *idaḷai-k-kāṟpūḍu,* பெ. (n.) ***ஒரு பூடு*** (சா.அக.); plant.

[இதளை + கால் + பூடு.]

இதா *idā,* இடை. (int.) 1. ***அண்மைச் சுட்டு*** (வின்); demonstrative which refers to a person, place or thing near, opposed to சேய்மைச் சுட்டு. 2. ***இதோ*** (வின்.); see here! Lo! "மற்றிதா தோன்றுகின்ற" (சீவக.1232). 3. ***உடன், சிறிது நேரத்தில், இப்பொழுதுதான்;*** just now, immediately.

ம. இதா; **க.** இதா, இதோ; தெ. இதிகோ, இதெ, இகோ; **து.** இத்தெ, இந்தா; படு. இதா; **கோத.** இலா. *Gk.* itha; *Goth.* ith; *Z.* idha.

[ஈது → இது → இதா (சு.வி.16).]

இதாகிதம் *idākidam,* பெ. (n.) 1. ***நன்மை தீமை;*** good and evil "இதாகிதம் பகையுறவு விட்டு" (சேதுபு. விதும.32). 2. ***விருப்பு வெறுப்பு;*** like and dislike. ***இதமல்லிதம்*** பார்க்க; see *idamallidam.*

*[இல் → இன் → இனிமை. இல் → இது. இதமல்லிதம் → இதாமிதம் → இதாவிதம் → இதாகிதம். **ஒ.நோ.** தமல் → தமது. இது என்னும் சொல் கல்லாத மக்கள் பேச்சு வழக்கில் இன்பம் எனப் பொருள்படும். "குடிப்பது அவனுக்கு இது வாயிருந்தது" என்று உரையாடுதலைக் காணலாம்.]*

இதார்த்தம் *idārttam,* பெ. (n.) ***எதார்த்தம்*** (ஆ.அக.); conformable to the truth or true meaning, agreeing with fact, true, real, genuine, right, suitable, truthful etc.

Skt. yathārtha.

[இதம் + ஆர்த்தம். இதம் = இனிமை, நன்மை. ஆர்த்தம் = பொருந்தியது.]

இதி[1] *idi,* பெ. (n.) 1. ***ஈதி*** பார்க்க; see *īdi.* "ஈதி இடைஞ்சலிலே இடிவிழுந்த கானலிலே" (நாட்டுப்புறப் பாடல்). 2. ***இறுதி*** (அக.நி.); end.

ம. இதி, இறுதி. Skt. iti.

[வடமொழியில் இது → இதி எனத்திரிந்து வழங்கும். இதுதான் என்னும் உறுதிப்பொருள் தரும் iti என்னும் வடசொல் இதே என்பதன் திரிபாகும்.]

இதி[2] *idi,* பெ. (n.) ***பேய்*** (அக.நி.); devil, ghost (செ.அக.).

ம. இதி.

[இருளி → இருள்தி → இத்தி → இதி.]

இதிரக்கிழங்கு *idira-k-kiḻaṅgu,* பெ. (n.) ***காட்டுக் கருணைக் கிழங்கு*** (சா.அக.); wild yam tuber.

[இதை → இதிரம் + கிழங்கு; இதை = மேட்டுநிலம், காடு.]

இது[1] *idu,* சு.பெ. (demons. pron.) ***அஃறிணை ஒருமைச் சுட்டு;*** this, the thing close to the speaker, used impersonally - கு.பெ.எ. (adj.) ***இந்த;*** this before neut. sing. nouns. இது யாரும் அறிந்ததே. (செ.அக.).

ம. இது, ஈ; **க.** இது; **தெ.** இதி; **கோத.** இத்; **துட.** இந்த்; **குட.** இதி; **து.** இந்து; **கொல.** இத்; **நா.** இத்; **பர்.** இத்; **கூ.** இவி; **குவி.** ஈதி; **குரு.** ஈத்; **மா.** இத்; **பிரா.** தா.தாத்; *Skt.* idam. *L.* is; *Goth.* hita; **ஆத்.** இன்ன.

[ஈ → ஈது → இது.]

இது[2] *idu,* பெ. (n.) ***இன்பம், மகிழ்ச்சி;*** joy, happiness. "குடிப்பது அவனுக்கு ஒரு இதுவாயிருக்கிறது" (உ.வ.). (செ.அக.).

[இல் → இது. இல் = இளமை, மென்மை, இனிமை. ஒ.நோ. மெல் → மெது.]

இது[3] *idu,* பெ. (n.) 1. ***இழிவானது, தாழ்வானது;*** base, low, mean. 2. ***பின்னுள்ளது;*** the next.

[இ → இது. பின்மைச் சுட்டு, தாழ்வுப் பொருள் தரும்.]

இதை[1] *idai,* பெ. (n.) 1. ***கலப்பை;*** plough. 2. ***மேட்டு நிலம்;*** field for dry cultivation. "தத்தை தித்தித்த தோதிதை" (காஞ்சிப்பு. சுரகரீசப்.11). 3. ***தினை;*** italian millet. "பன்மணி யரித்திதை விளைப்பன குறிஞ்சி" (பெரியபு.திருக்குறிப்பு.7).

As. hoeth; *ME.* heth; *E.* heath; *Goth.* haithi; *L., G., D., Fris.* heide; *I.* heithr; *Dan.* hede; *Sw.* hed; *W.* hoed.

[இல் = துளைத்தற் கருத்து வேர்ச்சொல். இல் → இது → இதை = வன்னிலம் உழும் கலப்பை. கொத்திக் கிளறி அல்லது உழுது பயிர் செய்ய வேண்டிய மேட்டுநிலம். மேட்டுநிலத்துப் பயிர் தினை, காராமணி.]

இதை[2] *idai,* பெ. (n.) ***கப்பற்பாய்;*** sail of a ship. "நெடுங் கொடி மிசை யிதையெடுத்து" (மதுரைக்.79).

[உது → இது → இதை (உயரம், உயரத்திலிருப்பது கப்பற்பாய்).]

இதைப்புனம் *idai-p-puṉam,* பெ. (n.) ***புதுக்கொல்லை*** (திவா.); newly cultivated field of dry crops such as millet, dist. fr. முதைப் புனம். (செ.அக.).

[இதை[1] + புனம்.]

இதோ *idō,* இடை. (int.) ***அண்மைச் சுட்டு; இங்கே. வியப்பின் பொருட்டு முன்னிற்போரின் கவனத்தை ஈர்ப்பது;*** lo, behold! an exclamation calling a person's attention to something to be taken notice of. "இதோ வந்து நின்றதென் மன்னுயிரே (திருக்கோ.39).

க. இதோ, இதுகோ; தெ. இதிகோ; ம. இதா, இதிகோ; **து.** இதிகோ; **கோண்.** இத்ரா, இப்புடெ; **பிரா.** ஈரா, இதிகோ. *Pkt.* idō; *Skt.* itah. *E.* Lo.

[இது + இதோ; இதா → இதோ (சு.வி.16).]

இதோள் *idōḷ* கு.வி.எ. (adv.) ***இவ்விடம்*** (தொல்.எழுத். 398,உரை.); here.

As. hider; *E.* hither; *Goth.* hidre; *I.* hethra.

[இது + உள் - இதுள் → இதோள்.]

இதோளி *idōḷi,* கு.வி.எ. (adv.) ***இதோள்*** (தொல். பொருள்.392,உரை.) பார்க்க; see *idōḷ* (செ.அக.).

[இது + உள் - இதுள் - இதோள் → இதோளி.]

இந்த *inda,* சு.பெ.எ. (adj.) ***இந்த;*** this; demonstrative adjective and pronoun to indicate person or thing close at hand. 'இந்த நாடு' (நன்.267,உரை).

ம. இந்த; க. இந்த; தெ. இந்த; குட. இந்தெ, இன்னதெ.

[இ → இந்த.]

இந்தண்டை *indandai,* சு.வி.எ. (adv.) ***இப்பக்கம்*** (கொ.வ.); this side. (செ.அக.).

[இது → இந்த + அண்டை.]

இந்தப்படிக்கு *inda-p-padikku,* சு.வி.எ. (adv.) ***இப்படிக்கு*** பார்க்க; see *ippadikku.* term used in writing documents, and meaning 'in confirmation of which'. 'இந்தப் படிக்கு என் மனோராசியில் எழுதிக் கொடுத்த அடைமானப் பத்திரம்.' (செ.அக.).

[இந்த + படி + கு.]

இந்தம் *indam,* பெ. (n.) ***புளி*** (மூ.அ.); tamarind.

தெ. சிந்த.

*[இன் → இந்து → இந்தம். புளியம்பழம் அறப்பழுத்த நிலையில் புளிப்புச் சுவையுடன் சிறிது இனிப்பும் தருதலின் **இன்தீம்புளி** எனக்குறிப்பிடப்படும். வடபுலத்தில் சகர முதல் சேர்ந்து தெலுங்கில் சின்தபண்டு (புளியம்பழம்) ஆயிற்று. ஒ.நோ. முன் → முந்து → முந்தம்.]*

இந்தம்வரம் *indam varam,* பெ. (n.) ***நீலோற்பலம்*** (சங்.அக.); blue Indian water-lily. (செ.அக.).

Skt. indambara; ம. இந்தீவரம்.

[இந்தம் + வரம்; இந்தம் = இனிப்பு, சிறப்பு.]

இந்தளங்குறிஞ்சி *indalan-kurinji,* பெ. (n.) ***ஒரு பண்*** (திவ்.திருவாய்); (mus.) ancient melody-type.

ம. இந்தளம்.

[இந்தம் → இந்தளம் = இனிமை. இந்தளம் + குறிஞ்சி.]

இந்தளம்[1] *indalam,* பெ. (n.) ***தூபமுட்டி*** (சீவக.558, உரை); incensory, censer.

இந்தளம் > *Skt.* indhana.

[இன் → இந்து → இந்தளம்.]

இந்தளம்[2] *indalam,* பெ. (n.) ***மருதயாழ்த்திற வகை*** (பிங்.); (mus.) ancient secondary melody type of the marudam class. (செ.அக.).

இந்தளம் > *Skt.* hindōla.

[இன் → இந்து → இந்தளம்.]

இந்தளம்[3] *indalam,* பெ. (n.) ***இந்தனம், கும்மட்டிச் சட்டி;*** chafing dish, used for warming. "இந்தளத்திலே தாமரை பூக்கையிலே" (திவ்.திருக்குறுந்.5,வ்யா) (செ.அக.).

[இருந்தை = அடுப்புக்கரி. இருந்தை → இந்தை → இந்தனம் → இந்தளம்.]

இந்தனம்[1] *indanam,* பெ. (n.) 1. ***விறகு;*** fuel, fire-wood. "இந்தனத்திற்றீ" (வேதா.சூ.154) (செ.அக). 2. ***காடு*** (ஆ.அக.); jungle, forest. 3. ***மேல்;*** high, above (ஆ.அக.).

இந்தனம் > *Skt.* indhana.

[இருந்தை → இந்தை → இந்தனம்.]

இந்தனம்[2] *indanam,* பெ. (n.) 1. ***இந்தளம்***[1] (நாநார்த்த.) பார்க்க; see *indalam.*[1] 2. ***புகை*** (அக.நி.); smoke. (செ.அக.).

[இந்தளம் → இந்தனம்.]

இந்தா *indā,* இடை. (int.) 1. ***இதோ*** (சீவக.1232,உரை); exclamation calling a person's attention to something near. Lo! behold. 2. ***இங்கே வா என்னுங் குறிப்பு மொழி;*** come here! 3. ***இதை வாங்கிக்கொள் என்னுங் குறிப்புமொழி;*** an interjection used in the sense of Here! take this! "இந்தா விஃதோ ரிளங்குழவியென்றெடுத்து......தேவிகையிலீந்தனனே" (கந்தபு.வள்ளி.35) (செ.அக).

து. இத்தெ, இந்தா.

[இது → இதா → இந்தா.]

இந்தாளி *indāli,* பெ. (n.) ***தாளிப்பனை;*** South Indian talipot. palm. (செ.அக.).

[இது → இந்தாளி.]

இந்தி[1] *indi,* பெ. (n.) ***பூனை*** (வின்); cat. (செ.அக.).

ம. இத்தி.

[இத்தி → இந்தி; இள் → இத்தி = இளையது, சிறியது.]

இந்தி[2] *indi,* பெ. (n.) ***இந்தி மொழி*** (mod.); Hindi language. (செ.அக.).

இந்து பார்க்க; see *Indu.*

[இந்து → இந்தி. வடபுலத்துப் பிற சமயத்தாரை நோக்க இந்துக்களின் மொழியாகக் கருதப்பட்டு இந்தி எனப்பட்டது.]

இந்திகை *indigai,* பெ. (n.) ***மிகு ஆற்றலுள் ஒன்று*** (சதாசிவரூ.); one of the five energies of aparanātam. (செ.அக.).

[இந்துகை → இந்திகை.]

இந்திடம் *indidam,* பெ. (n.) ***இவ்விடம்;*** this place. "வேதிய ரோதிட முந்திட மிந்திடமே" (திருக்கோ.223).

[இங்கு → இந்து + இடம்.]

இந்தியம் *indiyam,* பெ. (n.) ***ஐம்பொறி*** (ஆ.அக.); five sense organs.

[இள் → இந்து → இந்தியம். இந்தியம் = மென்மையும் ஒண்மையும் வாய்ந்த புலன்கள்.]

இந்தியன் *indiyan,* பெ. (n.) ***இந்திய நாட்டான்;*** Indian. (ஆ.அக.).

[இந்து → இந்தியன்.]

இந்தியா *indiyā,* பெ. (n.) ***இந்தியநாடு;*** India, Bharat.

[சிந்து → இந்து → இந்தியா.]

இந்திரகணம் *indiraganam,* பெ.(n.) ***செய்யுட்கணத் தொன்று*** (இலக்.வி.800,உரை); foot of three nēr (---), as தேமாங்காய், considered as auspicious at the commencement of a poem. (செ.அக.).

[இந்திரம் + கணம்.]

இந்திர காந்தச் சேலை *indira-kānda-c-cēlai,* பெ. (n.) ***புடைவை வகை*** (பஞ்ச.திருமுக.1161); a kind of saree. (செ.அக.).

[இந்திரம் + காந்தம் + சேலை.]

இந்திரகாளியம் *indira-kāliyam,* பெ.(n.) ***ஓர் இசைத் தமிழ் நூல்*** (சிலப்.உரைப்பாயி.); name of an ancient Tamil treatise dealing with išai-t-tamiḻ written by Yāmalēndirar. (செ.அக.).

[இந்திரம்[1] + காளியம்.]

இந்திரகோபம் *indira-kōbam,* பெ. (n.) ***தம்பலப்பூச்சி;*** cochineal insect, coccus cacti. "இந்திர கோபங் கௌவி யிறகுளர்கின்ற மஞ்ஞை" (சீவக.1819) (செ.அக.).

[இந்திரம்[2] + கோபம்.]

இந்திரசாபம் *indira-šābam,* பெ. (n.) ***வானவில்;*** rainbow, poetically described as the bow of Indra. "தாலந் தனில் வந்ததொரிந்திர சாப மென்ன" (அரிச்சந்.நாட்டு.10), "தணியா திந்திர சாபமுண்டாகலின்" (மணி.24-65). (செ.அக.).

[ஐந்திரம் → இந்திரம் + சாபம்; சாய்பம் → சாபம் = சாய்ந்தது அல்லது வளைந்தது.]

இந்திரசாலம் *indira-šālam,* பெ. (n.) 1. ***புலன்களால் அறியப்படாத மாயவித்தை;*** magical tricks, sleight of hand, phantasmagoria, optical illusions. "இந்திர சாலங் காட்டிய வியல்பும்" (திருவாச.2,43). 2. ***வஞ்சகச் சொல்;*** specious doctrines, such as those of heretics. "உழல்வார் சொன்ன விந்திரசால மொழிந்து" (தேவா. 691,10). 3. ***சூரபதுமன் தேர்*** (கந்தபு.வரம்பெறு.21); name of the chariot of Šūrapadma. 4. ***அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்று;*** one of the sixty four arts and science. (செ.அக.).

[இந்திரம் + சாலம். சலம் - சாலம்.]

இந்திரசாலி *indira-šāli,* பெ. (n.) 1. ***இந்திரவித்தை எனப்படும் மாயவித்தை செய்பவன்;*** magician. 2. ***அழிஞ்சில்*** (மலை.); sage-leaved alangium, having fruits which are said to have the magic power to drop from and return to the tree on dark nights. (செ.அக.).

[இந்திரம்[2] + சாலி.]

இந்திரசித்து *indira-cittu,* பெ. (n.) ***இராவணனுடைய மூத்தமகன்*** (கம்பரா.பாசப்.38); Mēghanāda, Ravaṇa's eldest son, who vanquished Indra.

[இந்திரன் + சித்து. Skt. Jit → த. சித்து. இந்திரசித்து = இந்திரனை வென்றவன்.]

இந்திர சிற்பம் *indira-cirpam,* பெ. (n.) ***சிற்ப நூலி னொன்று*** (ஆ.அக.); work on sculpture.

[இந்திரம் + சிற்பம்.]

இந்திரசிறப்பு *indira-cirappu,* பெ. (n.) ***பகல் விருந்து படைப்பதற்குமுன், இந்திரன் உள்ளிட்ட தெய்வங்களுக்கு முன்னூட்டாக இடப்படும் தளிகை அல்லது சிறுபடையல்;*** religious ceremony performed before the midday meal, consisting in the offering of small portions of cooked food to Indra and other gods. "இந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்" (மணி.11,88).

[இந்திரம்[1] + சிறப்பு; இந்திரம் = உயர்வு, மேன்மை.]

இந்திரதந்திரம் *indira-tandiram,* பெ. (n.) ***இந்திர சாலம்*** (திருப்பு.229) பார்க்க; see *indirasālam.*

[இந்திரம்[2] + தந்திரம்.]

இந்திரதரு *indirataru,* பெ. (n.) ***மருது*** (சித்.அக.); Arjuna. (செ.அக.).

[இந்திரம்[1] + தரு.]

இந்திரதனு *indira-danu,* பெ. (n.) ***வானவில்;*** rainbow, the bow of Indra. "இந்திர தனுவென விலங்கக முடுத்து" (மணி.28,22.).

Skt. dhanu > த. தனு. ***வானவில்*** பார்க்க. see *vānavil.*

[இந்திரன் + தனு.]

இந்திரதிசை *indira-dišai,* பெ. (n.) ***கிழக்கு*** (திவா.); cardinal direction of the east of which the guardian deity is Indra.

[இந்திரன் + திசை.]

இந்திர திருவன் *indira-tiruvan,* பெ. (n.) ***இந்திரனைப் போற் செல்வமுடையவன்;*** person of great affluence, having the wealth of Indra. "இந்திர திருவன் சென்றினி தேறலும்" (மணி.19,116).

[இந்திரன் + திருவன்.]

இந்திர நீலம் *indira-nīlam,* பெ. (n.) ***நீலமணி;*** sapphire. "இந்திரநீல மொத் திருண்ட குஞ்சியும்" (கம்பரா. மிதிலைக்.56). (செ.அக.).

Skt. indra - nīla.

[இந்திரம்[1] + நீலம். இந்திரம் = அழகு, உயர்வு சிறப்புப் பொருள் குறித்த இச்சொல் தலைமைப் பொருள் முன்னொட்டாயிற்று. இந்திர நீலம் = சிறந்த நீலம்.]

இந்திரப் பிரத்தம் *indira-p-pirattam,* பெ. (n.) ***புது தில்லிக் கருகில் யமுனை நதிக் கரையில் அமைந்திருந்த பாண்டவர் தலைநகரம்*** (பாரத.இந்திரப்.14); Indra-prastha, a city on the banks of the Jumna and the ancient capital of the empire of the Pāṇdavas, situated near the site of the modern Delhi. (செ.அக.).

[இந்திரம்[1] + பிரத்தம். இந்திரம் = சிறப்பு, உயர்வு. புரம் + தானம் = புரத்தானம் → பிரத்தானம் → பிரத்தம் எனத் திரிந்தது. Skt. prasthanam → த. பட்டணம் எனத் திரிந்தது.]

இந்திரபதம் *indira-padam,* பெ. (n.) 1. ***துறக்கம்*** (வின்); svarga, Indra's heaven. 2. ***இந்திரபதவி*** பார்க்க; see *Indira padavi.* (செ.அக.).

[இந்திரம்[1] + பதம். இந்திரம் = தலைமைப் பொருள் குறித்த முன்னொட்டு; பதம் = நிலை, பதவி. இந்திரபதம் = தலை சிறந்த பதவி நிலையாகிய துறக்க வாழ்வையும், தேவருலக வாழ்வையும் குறித்தது. இந்திர பதவி நிலையில்லாதது. ஆத லின் நிலைத்த துறக்கம் இந்திரன் பதம் எனப் பெயர் பெற்றிருக்க வாய்ப்பில்லை; சிறப்பு, உயர்வு, தலைமை எனப் பொருள்படும் இந்திரம் என்னும் சொல்லே இக்கூட்டுச் சொல் லின் நிலைமொழியாதல் வேண்டும்.]

இந்திரபதவி *indira-padavi,* பெ. (n.) ***இந்திரனாயிருக் கும் நிலை;*** office of Indra. ''இந்திரன் முதலிய இறையவர் பதங்களும்''. (பரிமே.உரைப்).

[இந்திரன் + பதவி.]

இந்திரபுரி *indira-puri,* பெ. (n.) ***இந்திரனின் தலைநக ரான அமராவதி*** (பாரத.இந்திரப்.24); Amarāvati, Indra's capital. (செ.அக.).

Skt. indra pura.

[இந்திரன் + புரி.]

இந்திரம்[1] *indiram,* பெ. (n.) 1. ***வேந்தியல்பு;*** regal attitude. 2. ***உயர்வு, தலைமை;*** superiority, leadership.

[வேந்து → வேந்திரம் → விந்திரம் → இந்திரம். வேத்தியல், பொதுவியல் என நாடகம் இருவகைத்து; உயர்ந்த இலக்கிய, கலைப் பாங்குடையது வேத்தியல். வடமொழியாளர் வேந்தன் என்ற சொல்லை இந்திரன் எனத்திரித்து ஒலித்தமையின் உயர்வுப் பொருள் தந்த வேந்திரமும், இந்திரமாயிற்று.]

இந்திரம்[2] *indiram,* பெ. (n.) ***அழகானது;*** that which is beautiful. ''அச்சுதற் காமெனு மிந்திரத் திருமாமுடி'' (கந்தபு.பட்டாபி.6) (செ.அக.).

[ஐந்திரம் → இந்திரம். ஐ = அழகு, உயர்வு, மேன்மை, சிறப்பு. ஐ → ஐந்து → ஐந்திரம். ஒ.நோ. மன் → மந்தரன் → மாந்தரன். ஐந்திரம் - இந்திரம் > Skt. indra.]

இந்திரம்[3] *indiram,* பெ. (n.) ***ஐந்திரம் என்னும் பழைய இலக்கண நூல்;*** ancient Tamil grammar. ''இந்திரத்தை இனிதாக ஈந்தார் போலும்'' (தேவா.721.8).

[ஐந்திரம் → இந்திரம்.]

இந்திரர் *indirar,* பெ. (n.) ***தேவர்;*** Dēvas as those living in Indra's world. ''இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும்'' (புறநா.182). (செ.அக.).

[இந்திரம் → இந்திரர்.]

இந்திர வண்ணப்பட்டு *indira-vaṇṇa-p-paṭṭu,* பெ. (n.) ***பட்டுப் புடைவை வகை;*** kind of silk saree. ''இழையாயிரம் விலைப் பொன் இந்திரவர்ணப் பட்டாடை'' (கோவ.க.17).

[இந்திரம்[2] + வண்ணம் + பட்டு.]

இந்திர வருணி *indira-varuṇi,* பெ. (n.) ***பேய்க்கொம் மட்டி;*** wild bitter gourd.

[இந்திரம் + வருணி. வண்ணம் → வருணம் → வருணி.]

இந்திரவல்லி *indira-valli,* பெ. (n.) 1. ***பிரண்டை*** (தைலவ.); square-stalked vine. 2. ***முடக்கொற்றான்*** (தைலவ.தைல.93); balloon vine. 3. ***கொற்றான்*** (M.M.); parasitic leafless plant. (செ.அக.).

[இந்திரம்[1] + வல்லி.]

இந்திரவாசம் *indira-vāsam,* பெ. (n.) ***நெய்தல் மலர்*** (மலை.); white Indian, water-lily. (செ.அக.).

[ஐந்திரம் → இந்திரம் + வாசம். ஐந்திரம் = அழகு, சிறப்பு.]

இந்திரவாழை *indira-vāḻai,* பெ. (n.) ***கானல் வாழை;*** wild plantain.

[இந்திரம்[2] + வாழை.]

இந்திரவிகாரம் *indira-vigāram,* பெ. (n.) ***காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த ஒரு பவுத்தப்பள்ளி*** (மணி.26. 55); name of a Buddhist monastery in Kāviri-p-pū-m. paṭṭiṉam, reputed to have been established by Indra. (செ.அக.).

[இந்திரம்[1] + விகாரம்.]

இந்திரவில் *indira-vil,* பெ. (n.) ***வானவில்*** (திவா.); rainbow, the bow of Indra. (செ.அக.).

[ஐந்திரம் → இந்திரம் + வில். ஐந்திரம் = அழகு, சிறப்பு.]

இந்திரவிழவு *indira-viḻavu,* பெ. (n.) ***மேழ(சித்திரை)த் திங்களில் காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரனைக் குறித்துச் செய்யும் ஒரு விழா*** (சிலப்.பதி.67); ancient annual festival in honour of Indra held in the month of Cittirai by the Cōḻa kings in their capital city of Kāviri-p-pū-m-paṭṭiṉam. (செ.அக.).

[இந்திரன் + விழவு.]

இந்திரவிழா *indira-viḻā,* பெ. (n.) ***இந்திரவிழவு*** பார்க்க; see *Indiraviḻavu.* (அபி.சிந்.).

[இந்திரன் + விழா.]

இந்திரன் *indiraṉ,* பெ. (n.) 1. ***தலைவன்;*** chief. 2. ***அரசன்;*** king. ''இந்திரராகிப் பார்மேல்'' (கந்தபு.நூற் பயன்). 3. ***வேத கால ஆரியர்க்குத் தலைவனாகவும் வழிபடு தெய்வமாகவும் விளங்கியவன்;*** Indra who

was the chief and the god of the Vedic Aryans. ''இந்திரனே சாலுங்கரி'' (குறள்.25).

[வேந்தன் → இந்தன் → இந்தர் → இந்திரன்.]

வேதகால ஆரியர்களுக்கு முற்பட்ட மேலையாரியத்தில் 'இந்தர்' எனக்குறிப்பிடப்பட்ட ஆரியத்தலைவன் பெயர் வேத காலத்தில் இந்திரன் எனத்திரிந்தது.

''மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'' (தொல். பொருள்.5)

என்னும் தொல்காப்பிய நூற்பா உரையில் இளம்பூரணர் வேந்தன் என்னும் சொல்லுக்கு இந்திரன் எனப்பொருள் வரைந் திருப்பது ஏற்புடைத்தன்று. இந்திரனைத் தேவர் தலைவனாக வல்லது தமிழக நிலத்தெய்வங்களுள் ஒருவனாகக்கடைக்கழக இலக்கியங்கள் யாண்டும் குறிப்பிடவில்லை. வேந்தன் என் னும் சொல் அரசன் என்று மட்டும் பொருள் தரும் செந்தமிழ்ச் சொல். இது மேலையாரியத்தில் தலைவன் என்னும் பொரு ளில் இந்தர் என்னும் வடிவில் கடன் சொல்லாகப் புகுந்தது.

'The origin of the round proto Indian seals discovered in Sumer' என்னும் கட்டுரையில் திரவிடவியல் ஆராய்ச்சிவல்லுநராகிய அருளாளர் ஈராசு அடிகளார் இந்திரன் வரலாற்றை விரித் துரைத்திருக்கிறார்.

மொசபதோமியா பகுதியிலும் பாரசீகப் பகுதியிலும் பரவிய ஆரியர் குடியேற்ற காலத்தில் அவர்களுக்கிடையில் நேர்ந்த பூசல்களால் ஒரு பிரிவுக்குத் தலைவனாக இருந்த இந்திரன் யதுகுலத்தையும் துருவாசகுலத்தையும் சார்ந்த சிலரை உட னழைத்துக்கொண்டு கடல்கடந்து செல்லத் திட்டமிட்டான். மொச பதோமியாவில் தங்கியிருந்த பணிகள் (panis) என்னும் கடல் வாணிகர் துணைபெற்று கப்பலில் ஏறி இன்றைய கத்தியவார் (சூரிய ராட்டிரம் → சௌராட்டிரம்) தீவமுனைக்கு வந்து இந்திரன் குடியேறினான். இந்திரனின் முதற் கடற்பயணம் இருக்கு வேதத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலையாரியர் களால் கத்தியவார் உள்ளிட்ட மேற்கிந்தியப் பகுதி கதிரவன் தோன்றும் நாடு (கிழக்கு) என்று அழைக்கப்பட்டது. ஆரியர் களை மீண்டும் அழைத்து வருதற்காகக் கப்பலில் ஏறி மொசப தோமியாவுக்குச் சென்ற இந்திரன் ஆரியர்களுக்கிடையில் நிகழ்ந்த போரில் இறந்து விட்டான். அவன் நினைவைப் போற்றும் வகையில் யது துருவாச மரபினர் இந்திரனுக்குச் சோமநாதன் (சோம மதுவுக்குரிய கடவுள்) என்று பெயரிட்டு சோமநாதபுரம் கோயில் எழுப்பினர். அதுவே இந்தியாவில் ஆரியர் வருகையால் ஏற்பட்ட முதல் இந்திரன் கோயில் நாளடைவில் அது சிவன் கோயிலாகக் கருதப்படினும் நந்தி யின் வடிவத்துக்கு மாற்றாக இந்திரனின் யானை ஊர்தியே அக்கோயிலில் கல்லில் வடிக்கப்பட்டிருக்கிறது என்று ஈராசு அடிகளார் கூறுகிறார். செண்டு அவெத்தாநூலில் கொடிய அரக்கருள் ஒருவனாக இந்திரன் சித்தரிக்கப்படுகிறான் என்று இங்கிலாந்து நாட்டு சமற்கிருதப் பேராசிரியர் ஆர்தர்-ஏ-மாக்டொனால் (1899) A history of Sanskrit Literature (P.72) என்னும் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்திரனை மக்கள் வழிபடாததும் இந்திரன் சினந்து மழை பொழியச் செய்ததும் கண்ணன் கோவர்தன மலையைக் குடை யாகப் பிடித்ததுமாகிய தொன்மக்கதைகளும் ஆரிய இந்திரர் களுக்கும் திரவிடமன்னர்களுக்கும் நிகழ்ந்த பகைமைப் போராட்டங்களைக் காட்டுகின்றன. இருசாராரும் பகைமை நீங்கி நட்பாக வாழ்ந்த காலத்தில் அரசர்களுள் நூறு வேள்வி செய்தவன் இந்திரனாகலாம் என்னும் கொள்கை உருவாயிற்று. இந்தியாவுக்குக் கிழக்கே அசாம் மலைத்தொடர், காழகம் (Burma), கடாரம் (மலேயா) போன்ற பகுதிகளில் வென்றும் குடியேறியும் மேலாண்மை பெற்ற ஆரியக்குடிவழியினர் இந்தி யாவில் நூறு வேள்வி செய்து இந்திர பதவி பெற்றவர்களுக்கு நாடாளும் பெற்றி தந்தனர். தென்கிழக்கு ஆசியப்பகுதிகள் இந்திர உலகம் என்று அழைக்கப்பட்டன. இந்திரனுக்குரிய யானையின் பெயராகிய ஐராவதம் காழகத்திலுள்ள ஐராவதி ஆற்றுக்கும் இடப்பட்டது. இந்திரனின் செல்வாக்கு நன்கு பரவிய பிறகு தோன்றிய சமண பவுத்த மதத்தினரும் இந்தி ரனை விண்ணவர் கோமானாக ஏற்றுக் கொண்டனர். வடகிழக் குப் பருவக்காற்றால் இந்தியாவில் மழைமிகுதலின் கிழக்குத் திசைக்குரிய இந்திரனே மழைத் தெய்வமாகக் கருதப்பட்டான். ஆதலின் தமிழில் மருதநிலத் தெய்வமாகக் கருதப்பட்ட வேந்தனுக்கும், மழைத்தெய்வமாகிய ஆரிய இந்திரனுக்கும் வேர்ச்சொல்வழித் தொடர்பன்றி வரலாற்றுத் தொடர்பு எதுவும் இல்லை. வேள்வி செய்தும் இந்திரனுக்கு விழவெடுத்தும் மழைபெய்விக்கலாம் என்பது ஆரியமரபு. மன்னன் அறநெறி பிழையாது செங்கோலாட்சி புரிந்தால் மழை வளஞ்சிறக்கும் என்பதும், கொடுங்கோலாட்சி புரிந்தால் மழை பெய்யாது என்பதும் தமிழ்மரபு.

''முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்'' (குறள் 559).

என்னும் திருவள்ளுவர் கருத்தும் ஒப்புநோக்கத்தக்கது. தமிழ் வேந்தனும் ஆரிய இந்திரனும் மழைக்குக் காரணமானவர்கள் எனக் கூறப்படினும் தமிழ் மரபின் பாங்கு உலகியல் செம் மைக்கு ஊற்றுக் கண்ணாவதைத் தெற்றென உணரலாம்.

இந்திரன்றிசை *indiran-riśai,* பெ. (n.) ***கிழக்கு*** (திவா.): cardinal direction of the east, of which the guardian deity is Indra. ''அருணனிந்திரன் றிசை யணுகினன்'' (திருவாச.20.2).

[இந்திரன் + திசை.]

இந்திரனாள் *indiranāḷ,* பெ. (n.) ***தழல்*** (கேட்டை) (திவா.); 18th nakṣatra, an asterism sacred to Indra-Indra's day.

[இந்திரன் + நாள்.]

இந்திரனூர் *indiran-ūr,* பெ. (n.) ***பொன்னாங்காணி*** (தைலவ.தைல.66); plant growing in damp places. (செ.அக.).

[ஒருகா. இந்திரம் + ஊரி. இந்திரமூரி → இந்திரனூரி → இந்திரனூர். இந்திரனூர் = அழகு ஊரப்பெறுவது. பொன்னாங் காணிக் கீரை உண்பார்க்கு மேனி பொன்னாகும் என்னும் நம்பிக்கை இருந்தது.]

இந்திராணி *indirāṇi,* பெ. (n.) ***இந்திரை*** பார்க்க; see *Indirai.* (செ.அக.).

[இந்திரை → இந்திராணி.]

இந்திரி *indiri,* பெ. (n.) 1. ***ஒரு முள்மரம்;*** sensitive prickly tree. 2. ***காந்தம்;*** magnet or load-stone. (சா.அக.).

[இந்திரம் → இந்திரி.]

இந்திரை *indirai,* பெ. (n.) ***இந்திரன் மனைவி;*** wife of Indira.

ம. இந்திரை.

[இந்திரன் (ஆ.பா) - இந்திரை (பெ.பா.).]

இந்திவா *indivā,* பெ. (n.) 1. ***செங்குவளை;*** sweet smelling red water-lily. 2. ***நீர்க்குளிரி;*** water archer. (சா.அக.).

[இந்தீவரம் → இந்திவா. இந்தீவரம் கருங்குவளையைக் குறித் தாலும் குவளை என்னும் பொதுமையான் செங்குவளையை யும் குறித்ததாகலாம்.]

இந்து[1] *indu,* பெ. (n.) 1. ***நிலவு;*** moon. "அருக்க னெச்சன் இந்து அனல்" (திருவாச.13,4). 2. ***கருப்பூர மரம்*** (மூ.அ.); camphor, cinnamon. 3. ***மாழ்கு*** (மிருக சீரிடம்) (விதான. குணா.1.); fifth nakṣatra. 4. ***சிந்து நதி*** (வின்.); river Indus. 5. ***இந்து மதத்தவன்*** (ஆ.அக.); Hindu, as one who professes Hinduism. (செ.அக.).

இந்து > *Skt.* indu.

[நீர் → நீத்தம். நீர் → நீர்ந்து → ஈர்ந்து → ஈந்து → இந்து (தண்ணீர், குளிர்ச்சி; குளிர்ந்த நிலவு. இந்து → சிந்து (தண்ணீர்); ஒ.நோ. நீர் → நீரம் → ஈரம். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிந்து வெளி நாகரிகத்தின் எச்சமாகச் சிதைந்த பாகத, வடதமிழ் (பலவகைப் பிராகிருத மொழிகள்) வழக்குகளான இச்சொற்கள் வடபுலத்துக் கொச்சை வழக்குக ளாகத் தென்புலத்தில் வழக்கூன்றின.]

இந்து[2] *indu,* பெ. (n.) ***இந்துப்பு*** (தைலவ.); rock-salt (செ.அக.).

Skt. sindhuja.

[இன் → இந்து. ஒ. நோ. முன் → முந்து. இந்து = இனிமை அல்லது சுவை கூட்டுவது. உணவுக்குச் சுவை சேர்த்தலின் உப்பு இனிமைப் பொருள் பெற்றது. இந்து (உப்பு) விளைந்த இடம். இந்து - சிந்து எனப்பட்டது.]

இந்து[3] *indu,* பெ. (n.) ***கரடி*** (அக.நி.); Indian black bear. (செ.அக.).

[ஒருகா. இருள் → இருந்து → இந்து.]

இந்து[4] *indu,* பெ. (n.) ***கரி*** (அக.நி.); charcoal.

இருந்தை பார்க்க; see *Irundai.*

[இருந்தை → இருந்து → இந்து.]

இந்துக்கடுக்காய் *indu-k-kaḍukkāy,* பெ. (n.) 1. ***நாட்டுக் கடுக்காய்;*** Indian gall-nut, as opposed to காபுலிக் கடுக்காய்; foreign gall-nut exported from Kabul. 2. ***முதிர்ந்த கடுக்காய்;*** ripe gall nut as opposed to பிஞ்சிக் கடுக்காய்; tender or immature gall-nut. (சா.அக.).

[இந்து + கடுக்காய். இந்து = இந்திய நாட்டு. இந்து = குளிர்ச்சி, இளமை.]

இந்துப்பு *induppu,* பெ. (n.) ***மருந்துப்பு வகை*** (பதார்த்த.1096.); rock salt or sodium chloride used in medicine, so called because it was brought from Sindh. (சா.அக.).

Skt. sindhu.

[இந்து + உப்பு.]

இந்துரம் *induram,* பெ. (n.) 1. ***எலி;*** rat. 2. ***கப்பற் கடுக்காய்;*** large variety of gall-nut. (சா.அக.).

இந்துரம் > *Skt.* indira.

[ஒருகா. இண்டுரம் (குடையும் எலி.) → இந்துரம்.]

இந்துரு *induru,* பெ. (n.) ***பெருச்சாளி;*** bandicoot. (சா.அக.).

Skt. indūra.

[ஒருகா. இண்டுரம் → இண்டுரு → இந்துரு. இண்டு = பெரியது. இந்துரு > skt. indūra.]

இந்துள் *induḷ,* பெ. (n.) ***இந்துளி*** பார்க்க; see *induḷi.*

[இந்து + உள். இந்து - நீர்.]

இந்துளம் *induḷam,* பெ. (n.) ***நெல்லி*** (வை.மூ.); emblic myrobalan. (செ.அக.).

[இந்து → இந்துள் → இந்துளம்.]

இந்துளி *induḷi,* பெ. (n.) ***பெருங்காயம்;*** asafoetida. (செ.அக.).

[இந்துள் → இந்துளி. இந்து = நீர். இந்துளி = உள் ஈரம் கொண்டது.]

இந்தோ *indō,* இடை. (int.) ***அண்மைச் சுட்டு;*** lo behold.

க. இதோ.

[இந்தா → இந்தோ. (மு.தா.323).]

இப்படி[1] *i-p-paḍi,* கு.வி.எ. (adv.). 1. ***இவ்விதம்*** (ஆ.அக.); in this manner, thus, so. 2. ***இவ்வாறு;*** likewise (செ.அக.).

ம. இப்படி; க. இன்து; தெ. இப்பாடு; பிரா. தகன், தான்; படீ. இத்தெ.

[இ + படி = இப்படி; படி = வகை. இ = அண்மைச் சுட்டு.]

இப்படி[2] *ippadi,* பெ. (n.) ***தண்டத்தீர்வை*** (R.T.); penal assessment. (செ.அக.).

தெ. இப்புதி.

[ஒருகா. இழப்பு + படி = இழப்படி → இப்படி.]

இப்படிக்கு *i-p-padikku,* கு.வி.எ. (adv.). ***இங்ஙனம்*** (ஆ.அக.); thus: in these terms: a term used in the subscription in a letter or document over the writer's signature, meaning, I remain thus. 'இப்படிக்கு உங்கள் அன்புள்ள கண்ணன்' (உ.வ.) (செ.அக.).

[இ + படி = இப்படி + கு. படி = வகை, தன்மை.]

இப்படிக்கொத்த *i-p-padikkotta,* கு.பெ.எ. (adj.). ***இத்தன்மையான;*** such as this (செ.அக.).

[இப்படி + கு + ஒத்த.]

இப்பந்தி *ippandi,* பெ. (n.) ***இருபந்தி*** பார்க்க; see *irupandi.*

தெ. இப்புந்தி; க. இப்பந்தி.

[இரு + பகுதி. பகுதி → தெ. பந்தி. பந்தி = வரிசை. வகை. இரு + தெ. பந்தி → இப்பந்தி = இருவகைப்பட்டது, கலப்பானது.]

இப்பந்தி யாடு *ippandi-yādu,* பெ. (n.) ***இருபந்தியாடு*** பார்க்க; see *irupandiyādu.* (சா.அக.).

[இரு + பந்தி + ஆடு. பகுதி → தெ. பந்தி.]

இப்பம் *ippam,* கு.வி.எ. (adv) ***இப்பொழுது*** (கொ.வ.); now, at the present moment. (செ.அக.).

ம. இப்பம்; க., பட. ஈக; தெ. இப்புடு; து. இத்லெ.

[இப்பொழுதும் → இப்பவும் → இப்பம் (கொ.வ.).]

இப்பர் *ippar,* பெ. (n.) 1. ***வணிக இனத்தார்*** (சீவக.1756.); one of the three subcastes among the vaišyas. 2. ***கோவணிகர்*** (கோவைசியர்) (பிங்.); sect among the vaisyas whose chief vocation is to tend cows and live on dairy produce; dairymen vaišya. 3. ***வேளாளர்*** (ஆ.அக.); agriculturist.

[இடைப்பர் → இப்பர்.]

இப்பவும் *ippavum,* கு.வி.எ. (adv.) 1. ***இப்பொழுதும்*** (கொ.வ.); even now. 2. ***இப்பொழுது;*** term meaning just now, generally used as a prefatory word in epistolary writing. (செ.அக.).

ம. இப்போழும்.

[இப்பொழுதும் → இப்பவும்.]

இப்பாடு *ippādu,* கு.வி.எ. (adv.) ***இவ்விடம்;*** to this place, hither. "இப்பாடே வந்தியம்பு" (திருவாச.19,6).

[இ + பாடு. படு → பாடு. படுதல் = வைத்தல், தங்குதல். பாடு = வைத்தற்குரிய இடம்.]

இப்பால் *ippāl,* கு.வி.எ. (adv.) 1. ***இவ்விடம்*** (ஆ.அக.); on this side, herein. "இப்பா லலைத்தது காமன் சேனை" (சீவக.490). 2. ***பின்பு;*** hereafter, affer this event. "இப்பாற் பார்செலச் செல்லச் சிந்தி" (சீவக.469). 3. ***இனிமேல்*** (ஆ.அக.); hereafter.

ம. இப்பால்.

[இ + பால். பால் = பகுப்பு, பிரிவு, பகுதி. பகுக்கப்பட்ட இடம்.]

இப்பி *ippi,* பெ. (n.) 1. ***சங்கு;*** conch - shell. 2. ***கிளிஞ்சில்;*** bivalvular shell - fish. "விரிகதிர் இப்பியை வெள்ளி யென்றுணர்தல்" (மணி.27-64). 3. ***சிப்பி;*** oyster. 4. ***முத்துச் சிப்பி;*** pearl oyster - shell. (சா.அக.).

ம. இப்பி; க. சிப்பி; தெ. சிப்ப; து. சிப்பி.
Pkt. sippi.

[இல் → இள் → இளுப்பி → இப்பி = துளையுள்ளது சங்கு.]

இப்பியை *ippiyai,* பெ. (n.) 1. ***வெள்ளைக் குங்கிலியம்*** (நாநார்த்த.); konkani resin. 2. ***பெண்யானை; பிடி;*** female elephant. (செ.அக.).

இப்பியை> *Skt.* ibhya.

[இப்பி = சங்கு. இப்பி → இப்பியை = சங்கு போன்று வெண்மை யானது. இப்பி = ஒருபுடை ஒப்புமை கருதிய பெண்பாற் சொல்லாட்சி.]

இப்பிவெள்ளி *ippi-velli,* பெ. (n.) ***கிளிஞ்சிலை வெள்ளியென் றெண்ணும் மயக்க வுணர்ச்சி*** (சித். சிகா.23,5); mistaking a brilliant shell for silver. (செ.அக.).

[இப்பி = கிளிஞ்சில், சங்கு. இப்பி + வெள்ளி. கிளிஞ்சில்கள், சோழிகள் ஆகியவை பண்டமாற்றுக் காலத்தில் சில்லறை நாணயங்களாகக் கருதப்பட்டதும் ஒப்புநோக்கத்தக்கது.]

இப்புறம் *ippuram,* பெ. (n.) ***இவ்விடம்;*** this place, this side. "இப்புறப்பரப் பெங்கணும்" (இரகு. யாக.44).

ம. இப்புறம்.

[இ + புறம். புறம் = புறத்தேயுள்ள இடம், பகுதி.]

இப்பேர்ப்பட்ட *i-p-ēr-p-patta,* கு.பெ.எ. (adj.) ***இத்தன் மையதான;*** such as, of this kind. (செ.அக.).

ம. இப்பேர்ப்பட்ட.

[இ + பேர் + பட்ட = இப்பேர்ப்பட்ட. பெயர் → பேர். இத்தகைய பெயர் தாங்கிய என்பது இதன் சொல் வழிப்பொருள். இத்தன்மையுடைய என்பது சொல்லாட்சிப்பொருள்.]

இப்பை *ippai,* பெ. (n.). ***இருப்பை*** (L.); South Indian mahua. (செ.அக.).

தெ. இப்ப; க. இப்பெ.

[இலுப்பை → இருப்பை → இப்பை.]

இப்பொழுது *ippoludu,* கு.வி.எ. (adv.) ***இந்நேரம்*** (ஆ.அக.); now. "இப்பொழுது எம்மனோரால் இயம்பு தற்கெளிதோ?" (கம்பர்).

ம. இப்பொழுது; க. ஈஹொத்து, ஈபொத்து; தெ. இப்புடு, இபுடு; பர். இபொட; நா. இகட்; குர். ஈம்பிரி; பட. ஈக.

[இ + பொழுது.]

இப்பொழுதே *ippoḻude,* கு.வி.எ. (adv.) ***இந்நேரத்திலேயே;*** at this very moment, now itself.

ம. இப்போழே.

[இ + பொழுது + ஏ.]

இப்போ *ippō,* கு.வி.எ. (adv.) ***இப்பம்*** பார்க்க; see *ippam.* (செ.அக.).

ம. இப்போ.

[இ + பொழுது = இப்பொழுது → இப்போது → இப்போ (கொ.வ.).]

இப்போது *ippōdu,* கு.வி.எ. (adv.) ***இப்பொழுது*** (திவ். இயற். பெரியதிருவ.87); now, at this time. (செ.அக.).

ம. இப்போது.

[இப்பொழுது → இப்போது.]

இப்போதே *ippōdē,* கு.வி.எ. (adv.). ***இப்பொழுதே;*** this very moment. (செ.அக.). 'அப்போதைக்கு இப் போதே சொல்லிவைத்தேன்.'

ம. இப்போழே.

[இ + பொழுது + ஏ = இப்பொழுதே → இப்போதே.]

இம்பர் *imbar,* பெ. (n.) 1. ***இவ்வுலகம்;*** this material world. "உம்பரு மிம்பரு முய்ய" (திருவாச.9,17). -கு.வி.எ. (adv.). 2. ***இவ்விடத்து;*** here, in this place. "இம்பரிவ்வுலக மொப்பாய்க்கு" (சீவக.1737). 3. ***பின்;*** next, after. "நெட்டெழுத்திம்பர்" (தொல். எழுத்.41). (செ.அக.).

[இம் → இம்பு → இம்பர். (மு.தா.323.) இ → இம்பர்.]

இம்பரர் *imbarar,* பெ. (n.) ***இவ்வுலகத்தவர்;*** beings of this world. "இம்பர ரேக்குறு மினிய புத்தமுது" (திருவாட்போக்கிப். இந்திரன் சாப.6.) (செ.அக.).

[இ → இம்பர் → இம்பரர்.]

இம்பல் *imbal,* பெ. (n.) ***பலகைச் சுருக்கத்தால் தோன்றும் இடைவெளி*** (இ.வ.); slit caused by the shrinking of wood, as in a door.

[இம்பு → இம்பல்.]

இம்பி *imbi,* பெ. (n.) ***கருந்தினை*** (மூ.அ.) பார்க்க; black Italian millet. (செ.அக.).

[இரும்பி → இம்பி.]

இம்பிகம் *imbigam,* பெ. (n.) ***மிளகு;*** black pepper. (சா.அக.).

[மிரியல் → இரியல் → இம்பு → இம்பிகம்.]

இம்பிடி *imbiḍi,* பெ.எ. (adj.) ***சிறிய குறைந்த, கொஞ்சம்;*** small, little (சேரநா.).

[இம் + பிடி.]

இம்பில் *imbil,* பெ. (n.) ***பண்டைக்காலத்து விளையாட்டு வகை*** (பாடுது.109); ancient game with music. (செ.அக.).

[இம் → இம்பு → இம்பில்.]

இம்புசி *imbuśi,* பெ. (n.) ***கடலழிஞ்சில்;*** a kind of alangium tree.

[இம் → இம்பு → இம்புலி.]

இம்புராவேர் *imburā-vēr,* பெ. (n.). ***சாயவேர்*** (இ.வ.); root, used for dying scarlet. (செ.அக.).

[இம்பு → இம்புரி → இம்புரா + வேர்.]

இம்பூறல் *imbūṟal,* பெ. (n.) ***சாயவேர்*** (வின்.) பார்க்க; root, used for dying scarlet. (செ.அக.).

[இம்புரி → இம்பூரல் → இம்பூறல்.]



இம்பூறல்

இம்பூறற் சக்களத்தி *imbūṟaṟ-cakkaḷatti,* பெ. (n.) ***சாயவேர் போன்ற ஒருவகைப் பூண்டு*** (M.M.); root which resembles imbūṟal, (செ.அக.).

[இம்பூரி → இம்பூரல் → இம்பூறல் + சக்களத்தி.]

இம்மட்டும் *i-m-maṭṭum,* கு.வி.எ. (adv.) ***இது வரையும்;*** thus far, until now. (செ.அக.).

ம. இம்மட்டு (இவ்வாறு).

[இ → மட்டும்.]

இம்மடி *immaḍi,* பெ. (n.) ***யானை;*** elephant. (சா.அக.).

[இரு + மடி = இம்மடி.]

இம்மி[1] *immi,* பெ. (n.) 1. ***மத்தங்காய்ப் புல்லரிசி;*** grain of red little millet. "இம்மியன நுண்பொருள்களீட்டி" (சீவக.495). 2. ***அணு*** (வின்.); atom. minute particle. 3. ***ஒரு சிற்றெண்*** (சீவக.495,உரை); smallest fraction = the 1,075. 200-th part of a unit. 4. ***ஒரு சிறு நிறை*** (சீவக.3027); small weight.

ம. இம்மி.

[இல் → இம் → இம்மி (த.வ.145.).]

இம்மி[2] *immi,* பெ. (n.) 1. ***பொய்மை*** (அக.நி.); lie. 2. ***புலன்;*** sense. (செ.அக.).

[இ → இம் → இம்மி.]

இம்மிக்கணக்கு *immi-k-kaṇakku,* பெ. (n.) ***கீழ்வா யிலக்கக் கணக்கு;*** general term to indicate the computation of very small fractions. (செ.அக.).

[இம்மி + கணக்கு.]

இம்மிணி *immiṇi,* பெ. (n.) 1. ***மிகச்சிறிய; மிகக் குறைவு;*** a little, very little quantity. (சேரநா.). 2. ***மிகுதி;*** much.

[இம் → இம்மி → இம்மிணி.]

இம்மென்கீரனார் *immeṉkīraṉār* பெ. (n.) ***கடைக்கழ கப் புலவர்;*** a Sangam poet.

இம்மெனல் *im-m-eṉal,* பெ. (n.) 1. ***விரைவுக்குறிப்பு;*** onom. expr. of hurry. celerity, haste. "ஏறுடை முதல்வன் மைந்த னிம்மென வங்கட் சென்றான்" (கந்தபு.சூரபன் மன்வதை.245). 2. ***ஓர் ஒலிக்குறிப்பு;*** onom. expr. of humming, rustling, pattering. "இம்மெனப் பெய்ய வெழிலி முழங்குந் திசையெல்லாம்" (நாலடி.392). (செ.அக.).

[இம் + எனல்.]

இம்மை *immai,* பெ. (n.) ***இப்பிறப்பு;*** present birth, present state, this life. dist. fr. மறுமை, "இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும் பற்றாவான்" (திவ்.நாச்.6,8) "இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்" (புறநா. 134-1) (செ.அக.).

[இம் → இம்மை. (சு.வி.17).]

இமம்[1] *imam,* பெ. (n.) ***பனி;*** frost, snow "இமஞ்சூழ் மலையும்" (திவ்.இயற். 3,98) ***இமயம்*** பார்க்க; see *Imayam.* (செ.அக.).

இமம் > *Skt. hima.*

[இமயம் → இமம்.]

இமம்[2] *imam,* பெ. (n.) 1. ***சந்தனம்*** (நாநார்த்த.); sandal wood. 2. ***குளுமை*** (சீதளம்); coldness, chilliness.

Skt. hima.

[இமம்[1] → இமம். பனியைக் குறித்த சொல் குளிர்ச்சியையும் குளிர்ந்த சந்தனத்தையும் குறித்தது.]

இமயம் *imayam,* பெ. (n.) 1. ***ஒரு குலமலை*** (பதிற்றுப்.43,7); Himālayan range, one of the aṣṭa-kula-parvadam. 2. ***பாற்கடலில் அமுதம் கடைவதற்குப் பயன்பட்ட மந்தரமலை*** (சீவக.963); Mt.Mandara which was used as the churning staff for churning the sea of milk. 3. ***மேரு*** (கலித்.38); Mt.Mēru. 4. ***பொன்;*** gold. "இமயம்புனை மன்றில்" (குமர.பிர.சிதம்பரச் செய்.23). (செ.அக.).

[உம் → இம் → இமை → இமையம் → இமயம். உம் = உயர்வுக் கருத்து வினையடி. உயர்ந்த மலையைக் குறித்த இச்சொல் பனிபடர்ந்த மீமிசை ஓங்கலின் முகட்டையும் குறித்தலால், குளிர்ச்சிமிக்க பனிப்பொருளையும், அப்பனியின் மீது கதிரவனின் பொன்னொளி பட்டுப் பொன் என்னும் பொருளையும் குறித்தது. வடமொழியில் "ஹிம" என்னுஞ்சொல் பனியைக் குறிப்பி னும் அது தமிழ்ச் சொல்லின் திரிபேயாகும். சப்பானிய மொழியில் 'இம' மலையைக் குறிக்கிறது. மேலையாரிய மொழியில் "ஹிம" என்னுஞ்சொல் பனிப்பொருளிலும் மலைப்பொருளிலும் ஆளப்படவில்லை என்பது அறியத்தக்கது. "வடாஅது பனிபடுநெடுவரை" எனப் பண்டைத்தமிழில் ஆளப்பட்டிருத்தல் காண்க.]

இமயவரம்பன் *imaya-varambaṉ,* பெ. (n.) ***பனி*** (இமய) ***மலையை வரம்பாகக் கொண்டு ஆண்ட சேரமன்னன்*** (பதிற்றுப்.20,பதிகம்); name of a distinguished Chēra king implying that his conquests and jurisdiction extended upto the Himālayas. (செ.அக.).

[இமயம் + வரம்பன்.]

இமயவல்லி *imaya-valli,* பெ. (n.) ***இமவான் மகளான மலைமகள்*** (பார்வதி) (திவா); Pārvati, daughter of Himavat. (செ.அக.).

[இமயம் + வல்லி.]

இமயவில்லி *imaya-villi,* பெ. (n.) ***மேருமலையை வில்லாகக் கொண்ட சிவன்*** (சீகாழித்.சேட.27); Śiva, who took up Mt. Mēru as His bow in a war with asuras. (செ.அக.).

[இமயம் + வில்லி.]

இமிசை *imiśai,* பெ. (n.) ***தீங்கு;*** violence, annoyance, torment, injury, harm. "பொய்யிலாரி மிசை செய்யார்" (நல்.பாரத.ஆசார.30) (செ.அக.).

[இன்னாத்தல் - இன்னல்விளைத்தல். இன்னா - இன்மி - இன்மித்தல் - இமிசித்தல் (கொ.வ.) > Skt. himsa]

இமிர்[1]**-தல்** *imir-,* 2 செ.கு.வி. (v.i.) 1. ***ஒலித்தல்;*** to sound, hum. "சுரும்பிமிர்ந் திம்மென" (கலித்.119,8). 2. ***ஊதுதல்;*** to blow. "கைவைத் திமிர்பு குழல்" (பரிபா. 19,41).

ம. இமிருக.

[இம் → இமிர். இம் = ஒலிக்குறிப்பு.]

இமிர்[2]**-தல்** *imir,* 2 செ.கு.வி. (v.i.) 1. ***உலர்தல்;*** to dry up. 2. ***ஆறுதல், வற்றுதல்;*** to evaporate as in boiling, to disappear, as a boil. 3. ***களை குன்றுதல்*** (கருநா.); to waste away. 4. ***அவிதல், கெடுதல்;*** to get spoiled. 'அவனுக்குக் கண் இமிர்ந்து விட்டதா?' (கொங்.வ.).

க. இமரு, இமிரு, இமுரு; **தெ.** இவுரு, இமுரு.

[உம் → உமிர் → இமிர். உம் = வெப்பம்; வெப்பத்தால் உலர்தல், குறைதல்.]

இமில் *imil,* பெ. (n.) ***எருத்துத் திமில்;*** hump on the withers of an Indian bull, hump of the Zebu. "எழிலேற் றிமிலின் னேற்ப முடித்தான்" (சீவக.2437) (செ.அக.).

ம. இமி.

[உம் → இம் → இமில். உம் = கூடுதல், திரளுதல், பெருத்தல், உயர்தல்.]

இமிலெருது *imil-erudu,* பெ. (n.) 1. ***திமிலுடைய எருது*** (hump + bull); humped Indian ox. 2. ***பெருமாள் மாடு;*** temple bull. (சா.அக.).

[இமில் + எருது.]



இமிலெருது

இமிலை *imilai,* பெ. (n.) ***ஒருவகைப் பறை;*** a kind of drum. "தவில்கணம் பறைகாள மோடிமிலை" (திருப்பு.220) (செ.அக.).

[இமில் → இமிலை.]



இமிலை

இமிழ்[1]-தல் *imil-* 2 செ.கு.வி. (v.i.) 1. ***ஒலித்தல்;*** to sound. "புள்ளின மிமிழும் புகழ் சால் விளைவயல்" (புறநா.15,4.). 2. ***யாழொலித்தல்*** (பிங்.); to buzz; to make a low continued sound, as the strings of a yāḻ. 3. ***தழைத்தல்;*** to sprout, shoot forth. "மருதிமிழ்ந் தோங்கிய நளியிரும் பரப்பின்" (பதிற்றுப்.23). 4. ***மிகுதல்;*** to abound "உண்மகி ழுவகை யூக்க மிமிழ" (பெருங்.நரவாண 7,3).

[இம் - இமிழ். இம் = ஒலிக்குறிப்பு. இமிழ் = இன்னோசை, மகிழ்ச்சி, தழைத்தல்.]

இமிழ்[2]-தல் *imil,* 2 செ.குன்றாவி (v.t.) 1. ***கட்டுப்படுத்தல்;*** to bind, as by an order; to restrain. "ஆணையினா லிமிழ்ந்திடப்பட்டு" (விநாயகபு. 17,14). 2. ***சிமிட்டுதல்;*** to wink.

[அம் → இம் → இமிழ். அம்முதல் = அணைத்தல், கட்டுதல்.]

இமிழ்[3]-த்தல் *imil* 2 செ.கு.வி. (v.i.) ***ஒலித்தல்*** (பிங்.); to sound, hum.

[இமிழ்[1] பார்க்க; see imil.[1]]

இமிழ்[4]-த்தல் *imil-* 3 செ.குன்றாவி.(v.t.) ***கட்டுதல்*** to fasten or tie. "இரண்டுட னிமிழ்க் கொளீஇ" (சீவக. 1835).

[இமிழ்[2] பார்க்க - see imil[2]]

இமிழ்[5] *imil,* பெ. (n.) 1. ***ஒலி;*** sound, hum roar. "தெரியிமிழ் கொண்டநும் மியம்போ லின்னிசை" (மலைபடு.296). 2. ***பிணைப்பு;*** tie, bond, as of love or devotion. "இமிழ்கொளு மன்பு" (திருவானைக்.வரங் கொள்.20). 3. ***கயிறு;*** cord. "சொல்லிமிழிற் பூட்டி" (சீவக.1091) (செ.அக.).

[இமிழ்[1] → இமிழ் (பெ.) இமிழ்[1] பார்க்க; see imil.[1]]

இமிழ்[6] *imil,* பெ. (n.) 1. ***இனிமை*** (அக.நி.); sweetness, pleasantness, charm. 2. ***இசை;*** melody. (செ.அக.).

க. இம்பு; **தெ.** இலிமி; **து.** இம்பு.

[அம் → அமிழ் → இமிழ்.]

இமிழி *imili,* பெ. (n.) ***இசை*** (அக.நி.); melody. (செ.அக.).

[இமிழ்தல் = ஒலித்தல், இசைத்தல். இமிழ் → இமிழி.]

இமை[1]-த்தல் *imai-,* 4 செ.கு.வி.(v.i.) ***தூங்குதல்;*** to sleep. "பூணாக நோக்கி யிமையான்" (கலித்.60) (செ.அக.).

[அமைத்தல் = பொருத்துதல், கூடுதல். அமை → இமை. இமைத்தல் = கண்மூடுதல், தூங்குதல்.]

இமை[2]-த்தல் *imai-,* 4 செ.குன்றாவி. (v.t.) ***இமை கொட்டுதல்;*** to wink. "அழித்திமைப்பின்" (குறள். 775) - 4 செ.கு.வி. (v.i.) 1. ***ஒளிவிடுதல்*** (திவா.); to glitter, twinkle, shine. 2. ***சுருங்குதல்;*** to diminish, shrink "இமையா வருங்கடன்" (கல்லா.7).

ம. இமய்க்குக; **க.** சிமிடு, சிவடு, சிவிடு; **தெ.** சிமிடு.

[அமை → இமை. இமைத்தல்.]

இமை[3] *imai,* பெ. (n.) 1. ***கண்ணிமை;*** eye lid. 2. ***கண்ணிமைக்கை;*** winking of the eye. "கண்ணிமை நொடியென" (தொல்.எழுத்.7) 3. ***கண்ணிமைப் பொழுது;*** time spent in winking. "எண்ணத் தானாமோ விமை" (திவ்.இயற்.1,31). 4. ***கண்ணிமை மயிர், கண்பீலி*** (சேரநா.); eye lash.

ம. இம; **க.** இமெ, எமெ; **து.** இமெ, சிமெ, சிம்மெ.

[அமை → இமை.]

இமை[4] *imai,* பெ. (n.) 1. ***கரடி*** (அக.நி.); bear. 2. ***மயில்*** (அக.நி.); pea-cock. (செ.அக.).

[ஒருகா. இருமை → இமை. இருமை = கருமை.]

இமைக்கட்டி *imai-k-katti,* பெ. (n.) ***இமையி லுண்டா குமோர் கட்டி;*** adenoma of the eye-lid. (சா.அக.).

[இமை + கட்டி.]

இமைக்கண் *imai-k-kan* பெ. (n.) ***சிமிட்டுக்கண்;*** constantly winking eye, continuous blinking - Blepharism. (சா.அக).

[இமை + கண்.]

இமைக்குரு *imai-k-kuru,* பெ. (n.) ***இமையிலுண்டா கும் சிறு கட்டி;*** sty. (சா.அக.).

[இமை + குரு.]

இமைக்குலைவு *imai-k-kulaivu,* பெ. (n.) ***கண்ணிமை யிலேற்படும் நிலையழிவு;*** sagging of the skin of the eye-lid, due to atrophy of the tissues - Blepharochalasis. (சா.அக.).

[இமை + குலைவு.]

இமைக்கேடு *imai-k-kēdu,* பெ. (n.) ***வளியினால் இமைகளுக்கேற்படும் உணர்ச்சியழிவு;*** paralysis of the muscles of both eye-lids. (சா.அக.).

[இமை + கேடு.]

இமைகொட்டு-தல் *imai-kottu-,* 5 செ.கு.வி. (v.i.) ***கண்ணிதழ் சேர்தல்;*** to wink, twinkle. (செ.அக.).

ம. இமவெட்டுக; க. எமெயிக்கு.

[இமை + கொட்டுதல். கொட்டுதல் = அடித்தல், ஒன்றோ டொன்று இணைந்து பொருந்துதல்.]

இமைச்சந்தி *imai-c-candi,* பெ. (n.) ***கண்ணிமையி னுட்பக்கமுள்ள யிடைவெளி; இது வெள்விழிக்கும் இமைக்கும் நடுவேயுள்ளது;*** intervening crevice between the eyelids and the white of the eye. (சா.அக.).

[இமை + சந்தி.]

இமைதிறத்தல் *imai-tirattal,* பெ. (n.) ***மயிர் உதிர்ந்து இமை வெளித்தோன்றல்;*** eyelids losing hairs and opening out. (சா.அக.).

[இமை + திறத்தல்.]

இமை திறந்த கண் *imai-tiranda-kan,* பெ. (n.) 1. ***விழித்த கண்;*** wide-open eyes. 2. ***இமை மயிர் உதிர்ந்த கண்;*** eye lids deprived of lashes. 3. ***முண்டக்கண்; அளவிற்கு மேல் விலகிக் காணுங் கண்;*** blepharodiastasis. (சா.அக.).

[இமை + திறந்த + கண்.]

இமைநீர் *imai-nīr,* பெ. (n.) ***கண்ணீர்;*** tear, drops of water secreted from the eyes. (சா.அக.).

[இமை + நீர்.]

இமைநீர்ப்பாய்ச்சல் *imai-nīr-p-pāyccal,* பெ. (n.) ***தலையிலுள்ள நீர் இமை நரம்பின் வழியாகக் கண் ணிமையில் இறங்கி, வீக்கமுண்டாக்கும் கண் ணோய்;*** disease of the eye-lids marked by swelling supposed to be due to the draining of fluid from the head. (சா.அக.).

[இமை + நீர் + பாய்ச்சல்.]

இமைப்பளவு *imaippalavu,* பெ. (n.) ***இமைக்கின்ற நேரம்; சிறிது நேரம்; கண்ணிமைப்போது;*** time taken in winking; a moment. ''இமைப்பளவுந் துன்ப மொன்றில் லாத'' (சூளா.துற.221).

ம. இமப்பளவு.

[இமைப்பு + அளவு. அளவு = நேரம்.]

இமைப்பு *imaippu,* பெ. (n.) 1. ***இமைப்பளவு*** பார்க்க; see *imaippalavu.* ''இழைபக விமைப்பின் எய்திட்டு'' (சீவக.1680) 2. ***விளக்கம்;*** brilliance. ''மின்னுறழிமைப் பிற் சென்னிப் பொறப'' (திருமுரு.85). (செ.அக.).

[இமை → இமைப்பு.]

இமைப்பொழுது *imai-p-poludu,* பெ. (n.) ***கண்ணி மைக்கும் நேரம்;*** brief moment of time, as the twinkling of the eye. ''இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்கா தான் தாள் வாழ்க'' (திருவாச.1,2). (செ.அக.)

[இமை + பொழுது.]

இமைபிற-த்தல் *imai-pira-,* 3. செ.கு.வி. (v.i.) ***இமைத் தல்;*** to wink, as the eyes. ''உம்பரிமை பிறப்ப'' (பரிபா.17,31).

[இமை + பிற. பிறத்தல் = தோன்றுதல், செய்தல். இமைபிறத்த லாவது இமைக்குந் தொழில் வெளிப்படுதல்.]

இமை பொருந்து-தல் *imai-porundu-,* 15. செ.கு.வி. (v.i.) ***உறங்குதல்*** (திவ்.நாச்.5,4); sleep, close one's eyelids. (செ.அக.).

[இமை + பொருந்துதல். பொருந்துதல் = சேர்தல், மூடுதல்.]

இமையவர் *imaiyavar,* பெ. (n.) ***தேவர்*** (திவ்.பெரி யாழ்.4.7,4); celestials who have characterstic eyelids which do not bat. (செ.அக.).

ம. இமயவர், இமயோர்.

[இமையாதவர் → இமையார் → இமையவர் (கொ.வ.).]

இமையாடு-தல் *imai-yādu-,* 5. செ.கு.வி. (v.i.) ***கண்கொட்டுதல்;*** wink as the eyes. (செ.அக.).

[இமை + ஆடுதல். ஆடுதலாவது செயற்பாடுறுதல்.]

இமையார் *imaiyār,* பெ. (n.) ***தேவர்;*** gods, who never wink their eyes. ''இமையாரின் வாழினும் பாடிலரே'' (குறள்.906) (செ.அக.).

ம. இமயவர், இமயோர்.

[இமையாதவர் → இமையார்.]

இமையொட்டி *imai-yoṭṭi,* பெ. (n.) ***இயற்கையாகவே இமைகள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டு வளருதல்;*** growing together or adhesion of the eye-lids - Blepharosynechia. (சா.அக.).

[இமை + ஒட்டி.]

இமையொட்டிக் கொள்ளல் *imai-y-oṭṭi-k-koḷḷal,* பெ. (n.) ***கண்ணின் பீளை அதிகரிப்பதால் இமை மூடிக் கொள்ளுதல்;*** eye-lids adhering together from excessive purulence. (சா.அக.).

[இமை + ஒட்டி + கொள்ளல்.]

இமையோர் *imaiyōr,* பெ. (n.) ***இமையவர்*** (தொல். பொருள்.248) பார்க்க; see *imaiyavar.* (செ.அக.).

[இமை → இமையோர்.]

இமையோரம் *imaiyōram,* பெ. (n.) ***மயிர் முளைத்திருக்கும் கண்ணிமையின் நுனி;*** edge or the margin of the eye-lids - Tarsus. (சா.அக.).

[இமை + ஓரம்.]

இய-த்தல் *iya-,* 3 செ.குன்றாவி. (v.t.) ***கடத்தல்;*** to pass beyond; excel, transcend. "உணர்ந்துரு வியந்தவிந் நிலைமை" (திவ்.திருவாய். 1,3,6) (செ.அக.).

*[உ-உய்-இய்-இய. இயத்தல் = செல்லுதல், கடத்தல் இய என்னும் வினைச்சொல். யா → யாத்திரை. **இந்தி.** ஜா → ஜாத்திரை, என இந்தியிலும், பிற மொழிகளிலும், ஏ → ஏகு, எனப் பிற்காலத் தமிழிலும் மருவியது.]*

இயக்க சத்துவம் *iyakka - cattuvam,* பெ. (n.) ***பத்து மெய்ப்பாடுகளுள்*** (சத்துவங்களுள்) ***இயக்கசாதிப் பெண்ணின் சத்துவம்*** (கொக்கோ.4); (செ.அக.). natural disposition of a woman classed under the yaksa type.

[இயக்கர் + சத்துவம்.]

இயக்க நரம்பு *iyakka - narambu,* பெ. (n.) ***அசைவுறும் நரம்பு;*** nerve whose function is motion; vasomotor nerves. (சா.அக.).

[இயக்கம் + நரம்பு.]

இயக்கம்[1] *iyakkam,* பெ. (n.) 1. ***நடமாட்டம்.*** ***"நாணகத் தில்லார் இயக்கம்"*** (குறள்.1020); motion, moving, about, as showing signs of life, activity. 2. ***அசைவுக் குறிப்பு;*** expression as of the eyes "கண்ணிணையியக் கம்" (மணி.25-8). 3. ***வழி;*** way, path. "ஏறிநீ ரடைகரை யியக்கந் தன்னில்" (சிலப்.10.90). 4. ***இசைப்பாட்டு வகை, குழலிசைத்தல்;*** (சிலப்.3,67.); musical composition of four different kinds, viz., முதனடை, வாரம், கூடை, திரள். 5. ***இசை நடப்பு;*** pitch of three kinds, viz., powerful, weak and mean மெலிவு, சமன், வலிவு என்னும் மூவகை யியக்கம், "மூவகையியக்கமு முறையு ளிக் கழிப்பி" (சிலப்.8,42.). 6. ***நன்மை, மேன்மை, பெருமை*** (திவா.); greatness, goodness, excellence. 7. ***ஒளி;*** shine, splendour. 8. ***வாழ்வு;*** livelihood. 9. ***மரபு, பழக்கம்;*** custom, manner.

ம. இயக்கம்; க. எசக; தெ. எசகமு (மகிழ்வு); து. எத்து, எச்சு.

[இய → இயக்கம்.]

'இய்' என்னும் தமிழ் வினை ஆரிய மொழிகளில் 'இ' என்று குறுகி வழங்குகிறது. *G.K.* imen, *L.* imus; iter; *slav.* idu = I go, iti = to go *Goth.* iddja = I went. இ(இ.வே; அ.வே) = செல்; இத் = செல்கை, இத்த = போய், இத்தம் = வழி (ச.பி.) இயங்கு - இக் (ikh) = இயங்கு, செல்; இயங்கு - இங்க் (inkh) = இயங்கு, செல், இயங்கு - இங் (இ.வே.ing) - இயங்கு, செல், ஏ(இ.வே.) = ஏகு, நெருங்கு, அடை, ஏத்த = சென்று, அடைந்து (இ.வே.) ஏ → யா,(இ.வே.) = செல், யாத்த = போய்(இ.வே.) யாத்ரி(இ.வே.) = செலவு வழிப்போக்கு.

இ(இய்)ஏ(ஏகு) என்னும் இருவினைகளையும், வேதமொழி யில் செல்லுதல் சென்றடைதல், அடைதல், பெறுதல் என்னும் பொருள்களில் ஆண்டிருக்கின்றனர். இப்பொருள்களில் அவை 'எய்து' என்னும் வினையை ஒத்திருக்கின்றன. எய்து தல் = சென்றடைதல், அடைதல், பெறுதல், இய் - எய் - எய்து.

செல்லுதல் என்னும் பொருளில் வேத மொழியில் வழங்கும் 'கம்' (gam) என்னுஞ் சொல், தியூத்தானியத்திலுள்ள gan(E.go) என்னும் சொல்லைப் பெரிதும் ஒத்திருத்தல் காண்க.

செலவு என்று பொருள்படும் கம (gama), கமன (gamana) முதலிய சொற்களில் 'கம்' என்பது முதனிலையாயிருப்பினும், கத (போய்). கதி(போக்கு) முதலிய சொற்களில் 'க' (ga) என்பதே முதனிலையாயிருப்பது கவனிக்கத் தக்கது. மேலும் 'gan' என்பது 'gam' என்று திரிதலும் இயல்பே. (வ.மொ.வ. 16.17.).

இயக்கம்[2] *iyakkam,* பெ. (n.) ***வடதிசை*** (வின்.); north quarter, which is the abode of the yakṣas. (செ.அக.).

[இய → இயக்கம்.]

இயக்கம்[3] *iyakkam,* பெ. (n.) 1. ***கிளர்ச்சி;*** movement, agitation. 2. ***செயல், அமைப்பு, விளம்பரம்;*** activity, enterprise; 3. ***கூட்டுறவு இயக்கம்;*** co-operative movement. (செ.அக.).

ம. இயக்கம்.

[இயங்கு → இயக்கம்.]

இயக்கமாதர் *iyakka-mādar,* பெ. (n.) ***தேவ கன்னியர்;*** celestial damsels. (ஆ.அக.).

[இயக்கர் + மாதர்.]

இயக்கர் *iyakkar,* பெ. (n.) ***பதினெண் கணத்துளொரு கணத்தார்*** (கம்பரா.தாடகை.26); yakṣas, a class of celestials, one of padiṉeṉ - kaṇam. (செ.அக.).

ம. இயக்கன்.

[இயம் → இயக்கர்.]

இயக்கர் கோமான் *iyakkar-kōmāṉ,* பெ. (n.) ***குபேரன்*** (சூடா); kubēra, king of the yakṣas. (செ.அக.).

Skt. Yakṣa.

[இயக்கர் + கோமான். கோமகன் → கோமான் = அரசன்.]

இயக்கர் வேந்தன் *iyakkar-vēndaṉ,* பெ. (n.) ***இயக்கர் கோமான்*** (பிங்.) பார்க்க; see *iyakkar-kōmāṉ.* (செ.அக.).

[இயக்கர் + வேந்தன்.]

இயக்கல் *iyakkal,* பெ. (n.) ***மின்னல்;*** lightning. (ஆ.அக.).

[இயங்கு → இயக்கு → இயக்கல்.]

இயக்கன்[1] *iyakkaṉ,* பெ. (n.) 1. ***இயக்ககணத்தான்*** (கம்பரா.தாடகை.26); yakṣa. 2. ***குபேரன்*** (திவா.); Kubēra, king of the yakṣas. (செ.அக.).

[இயம் → இயக்கன்.]

இயக்கன்[2] *iyakkaṉ,* பெ. (n.) ***தலைமையாக நின்று நடத்துபவன்*** (கலித்.95,உரை.); leader.

[இய → இயக்கு → இயக்கன். இயக்குதல். முன்னின்று நடத்து தல்.]

இயக்கி *iyakki,* பெ. (n.) 1. ***இயக்கப்பெண்*** (சீவக. 1219); female yakṣa. 2. ***அறத்தெய்வம்*** (பிங்.); goddess of virtue. (செ.அக.).

இயக்கி > *Skt.* yakṣi.

[இயக்கு → இயக்கி. இயக்கி> Skt. yakṣi.]

இயக்கி காசு *iyakki-kāśu,* பெ. (n.) ***இயக்கியின் உருவம் பொறித்த ஒரு பழைய நாணயம்*** (சேரநா.); old coin bearing the figure of a yakṣi.

[இயக்கி + காசு.]

இயக்கினி *iyakkiṉi,* பெ. (n.) ***கண்டங்கத்திரி*** (மலை.) பார்க்க; prickly plant.

[இயக்கு → இயக்கி → இயக்கினி. இனி - பெண்பாலீறு. ஒ.நோ. நல்லி → நல்லினி.]

இயக்கு[1]**-தல்;** *iyakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. ***செலுத்துதல்;*** to drive, cause to go. "தோணியியக்கு வான்" (நாலடி.136). 2. ***தொழிற்படுத்துதல்;*** to activate and influence the movements of, as God prompts, all living beings. 3. ***பழக்குதல்;*** to train or break in, as a bull or a horse. 'காளையை இயக்குகிறது' (வின்.). 4. ***ஒலிப்பித்தல்;*** to cause, to sound. "கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி" (திருமுருகு.246). 5. ***நடத்துதல்;*** to conduct. "இயக்கக் கடவனாகவும்" (S.I.I.i,79) (செ.அக.).

ம. இயக்குக.

[இய → இயங்கு → இயக்கு.]

இயக்கு[2] *iyakku,* பெ. (n.) ***போக்கு;*** motion, as of a stream; flowing, going, marching, "நீரியக்கென்ன நிரை செல நெடுந்தேர்" (மலைபடு.571) (செ.அக.).

[இயங்கு → இயக்கு.]

இயக்குநர் *iyakkunar,* பெ. (n.) ***இயக்குபவர், தலைவர்;*** director, leader.

[இயக்கு → இயக்குநர்.]

இயங்கல் *iyaṅgal,* பெ. (n.) 1. ***நடத்தல்;*** walking. 2. ***உயிர்த்தல்;*** breathing, respiring. (சா.அக.).

[இயங்கு → இயங்கல்.]

இயங்கியற்பொருள் *iyaṅgiyaṟ-poruḷ* பெ. (n.) ***நகரும், இடம் பெயரும் பொருள்*** (நன்.259,விருத்.); living, animate and mobile beings. (செ.அக.).

[இயங்கு + இயற்பொருள். இயங்குகின்ற அல்லது அசைகின்ற உயிர்த்திரள்கள்.]

இயங்கியோர் *iyaṅgiyōr,* வி.அ.பெ. (vpl.n.) ***சென்றோர்;*** onward mover. "பெருவரை அத்தம் இயங்கியோரே" (அகநா.359).

[இயங்கு + ஆர் = இயங்கியார் → இயங்கியோர். ஆர் → ஓர் (திரிபு.).]

இயங்கு[1]**-தல்** *iyaṅgu-,* 15 செ.கு.வி. (v.i.) 1. ***அசைதல்;*** to move. stir. 2. ***போதல்*** (திவா.); to go, travel, proceed. 3. ***உலாவுதல்*** (பிங்.); to walk about, promenade. (செ.அக.).

ம. இயங்ஙுக.

[இய → இயங்கு.]

இயங்கு[2]**-தல்** *iyaṅgu-,* 15 செ.கு.வி. (v.i.) ***ஒளி செய்தல்*** (நாநார்த்த.); to shine, glitter. (செ.அக.).

[ஒருகா. வயங்கு → வியங்கு → இயங்கு.]

இயங்கு[3] *iyaṅgu,* பெ. (n.) ***செல்லுகை;*** movement, act of going. "இயங்கிடையறுத்த கங்குல்" (சீவக.1360) (செ.அக.).

[இய → இயங்கு.]

இயங்குதி *iyaṅgudi,* செ.கு.வி.மு. (v.i.fin) ***செல்கின்றாய்*** (அகநா.12.3); you go, move (2nd person, sing. finite verb).

[இயங்கு + தி.]

இயங்குதிசை *iyaṅgu-tiśai,* பெ. (n.) ***மூச்சுக்காற்று இயங்கும் மூக்குத்துளை*** (வின்.); nostril through which the breathing passes. (செ.அக.).

[இயங்கு + திசை.]

இயங்குதிணை *iyaṅgu-tiṇai,* பெ. (n.) ***அசையும் பொருள்*** (நன்.299,விருத்.); class of things that move, opp. to நிலைத் திணை. (செ.அக.).

[இய → இயங்கு + திணை.]

இயங்குநர் *iyaṅgunar,* பெ. (n.) ***வழிப்போவார்;*** travellers. "இயங்குநர் மடிந்த வயந்திகழ் சிறுநெறி" (நற். 257).

[இயங்கு + நர்.]

இயங்குபடையரவம் *iyaṅgu-paḍai-y-aravam,* பெ. (n.) ***பகையரணை முற்றுதற்கெழுந்த படையின் செலவால் உண்டாம் ஆரவாரத்தைக் கூறும் புறத்துறை***

(தொல்.பொருள்.63); literary theme describing the uproar caused by the march of a besieging army. (செ.அக.).

[இயங்கு + படை + அரவம்.]

இயங்கெயில் *iyaṅgeyil,* பெ. (n.) ***முப்புரம்;*** legendary three forts. ''இயங்கெயி லெய்யப் பிறந்த எரிபோல'' (கலித்.150-2.).

[இயங்கு + எயில்.]

இயங்கொலி *iyaṅgoli,* பெ. (n.) ***பரவுகின்ற ஒலி;*** vibrating sound. ''இயங்கொலி நெடுந்திண்தேர் கடவுமதி விரைந்தே'' (கலித்.135-20).

[இயங்கு + ஒலி.]

இயத்து *iyattu,* பெ. (n.) ***இயற்று***[2] (யாழ்ப்.) பார்க்க; implement, utensil. (செ.அக.).

[இயற்று → இயத்து (கொ.வ.).]

இயந்தா *iyandā,* பெ. (n.) 1. ***யானைப்பாகன்;*** mahout. 2. ***தேரோட்டி;*** driver of chariots, etc. (செ.அக.).

[இய = செல், நட, நடத்து. இய → இயந்தன் → இயந்தா.]

இயந்திரம்[1] *iyandiram,* பெ. (n.) 1. ***இயங்குபொறி;*** machine; ''இயந்திரப் படிவ மொப்பான்'' (கம்பரா. உருக்கா.78). 2. ***தேர்*** (திவா.); car, chariot (செ.அக.).

[இய → இயங்கு → இயந்திரம்.]

இயந்திரம்[2] *iyandiram,* பெ. (n.) 1. ***பாண்டவகை*** (நாநார்த்த.); a kind of vessel or receptacle. 2. ***கண்ணி;*** net. (செ.அக.).

[ஒருகா. உயந்திரம் → இயந்திரம். உய்த்தல் = உட்செலுத்துதல்.]

இயந்திரமயில் *iyandira-mayil,* பெ. (n.) ***மயிற்பொறி*** (வின்.); legendary flying machine fashioned after the pattern of a peacock. (செ.அக.).

[இயந்திரம் + மயில்.]

மயிற்பொறி பார்க்க; see *mayiṟpoṟi.*

இயந்திரி-த்தல் *iyandiri-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ***இயங்குபொறி அமைத்தல்*** (சீவக.103,உரை.); to design or construct, as mechanism. 2. ***இயந்திரத்தி லாட்டுதல்;*** to press, as seeds in an oil mill ''இக்கெனவே செக்கிடையிட் டியந்திரிப்பர்'' (சிவதரு. சுவர்க்க. நரகவி.161). 3. ***மந்திரம் ஓதி இயந்திரத் தகட்டில் எழுதுதல்;*** to write on a thin copper sheet chanting mantras.'மந்திரக்காரர் செப்புத்தகட்டில் யந்திரித் துக் கொடுத்தார்.' (உ.வ.), (செ.அக.).

[இயம் = ஒலியெழுப்பும் அல்லது இயக்கப்படும் கருவி. இயம் + திரித்தல். திரித்தல் = ஆட்டுதல், அசைத்தல், செய்தல்.]

இயந்தை *iyandai,* பெ. (n.) ***செவ்வழி யாழ்த்திறவகை*** (பிங்.); ancient secondary melody-type of the cevvaḻi class. (செ.அக.).

[இயம் → இயந்தை.]

இயபரம் *iya-param,* பெ. (n.) ***இம்மை மறுமை;*** this world and the next, here and hereafter. ''இயபரமாவன வின்னம் பரான்ற னிணையடியே'' (தேவா.252,9).

[இகம் + பரம் = இகபரம் → இயபரம். இவ் → இவம் → இகம் (இவ்வுலகம்). பரு → பரம் (பேரண்டம், எல்லா உலகங்களை யும் உள்ளடக்கிய அகல்விசும்பு.]

இயம்[1] *iyam,* பெ. (n.) ***முழைஞ்சினையுடைய மலை;*** high hill, mountain. ''விடரியங் கண்ணிப் பொதுவனைச் சாடி'' (கலித்.101-22).

[இய → இயம். உட்செலும் பாங்குடைய முழைஞ்சு.]

இயம்[2] *iyam,* பெ. (n.) 1. ***சொல்*** (திவா.); word. 2. ***ஒலி;*** (சூடா.); sound. 3. ***இசைக்கருவி*** (பிங்.); musical instrument. (செ.அக.).

[இய → இயம்.]

இயம்[3] *iyam,* பெ. (n.) ***ஈ;*** fly. (செ.அக.).

[ஒருகா. ஈ + அம் = ஈயம் → இயம். ஒ.நோ. குட + அம் = குடம். தட = வளைவு. தட + அம் = தடம் = வளைந்த பாதை.]

இயம்பல் *iyambal,* பெ. (n.) 1. ***சொல்*** (அக.நி.); word. 2. ***அம்பல், பழமொழி;*** gossip about love affairs, proverb, old saying. (செ.அக.).

[இய → இயம்பு → இயம்பல். இசைக்கருவியினின்றெழும் இமும் எனும் மெல்லோசை போல் இனிமையாகக் குரலெழுப் பிப் பேசுதல்.]

இயம்பு[1]**-தல்** *iyambu-,* 11 செ.கு.வி. (v.i.) 1. ***ஒலித்தல்;*** to sound. ''ஓசை... கடிமனையியம்ப'' (புறநா.36). 2. ***இசைக்கருவி ஒலித்தல்;*** to sound, as a musical instrument. ''வென்றிகெழு தொண்டகம் வியன்றுடியி யம்ப'' (கந்தபு.வள்.92)- 4 செ.குன்றாவி (v.t.). 1. ***சொல்லுதல்*** (பிங்.); to say, speak, utter. 2. ***துதித்தல்;*** to praise. ''ஞானக்கொடிதனை... இயம்புவோமே'' (குற்றா.குற.7); (செ.அக.).

ம. இயம்புக.

[இய → இயம்பு.]

இயம்பு[2]**-தல்** *iyambu-,* 11 செ.கு.வி. (v.i.) ***கூப்பிடுதல்;*** to call, as for help. ''மடப்பிடி... நெடுவரை யியம்பும்'' (மலைபடு.309,உரை), (செ.அக.).

[இயம்புதல் = ஒலித்தல், அழைத்தல், விளித்தல். குறிப்பிட்ட ஓசை யெழுப்பி அழைத்தல்.]

இயம்புணர்தூம்பு *iyambuṇar-tūmbu,* பெ. (n.) ***நெடு வங்கிய மென்னும் இசைக்கருவி*** (ஐங்குறு.377); ancient wind instrument. (செ.அக.).

[இயம்பு + உணர் + தூம்பு. சொல்லக்கருதும் அல்லது வெளியி டக் கருதும் உணர்வினை இசையான் வெளிப்படுத்தும் தூம்பா கிய நெடுவங்கியம் என்னும் நீண்ட புல்லாங்குழல்.]

இயமகம் *iyamagam,* பெ. (n.) ***மடக்கணி*** (தேவா.582); style of versification where a word or phrase is repeated but connotes different senses.

அடிதோறும் ஒன்றும் பலவுமாகிய சீர்கள் மடங்கிவருவது.
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்.

[இயம் + அகம். இசையொழுங்கினை உட்கொண்டது. இயமகம் → யமகம் எனத் திரிந்தது. இயமகம் > Skt. yamaka.]

இயமகாமாலை *iyama-kāmālai,* பெ. (n.) ***காமாலை வகை*** (தஞ்.சரசு.iii,122); a kind of jaundice.

[இயமம் + காமாலை.]

இயமநியமம் *iyama-niyamam,* பெ. (n.) ***இயல்மம்*** பார்க்க; see *iyalmam.* (அபி.சிந்.).

[இய → இயல் → இயல்மம் → இயமம். இய = நட. இயமம் = நடத்தை. இயமநியமம் என்பது எதுகைபற்றி வந்த அடுக்குத் தொடர்.]

இயமம் *iyamam,* பெ. (n.) ***ஓகத்திற்குரிய எண் வகை உறுப்புகளுள் ஒன்று*** (தொல்.பொருள்.75,உரை); abstention from lying, killing, theft, lust, covetousness etc., one of the elements of aṣṭāṅga yōgam. (செ.அக.).

[இயல்மம் → இயமம். இயல்மம் = ஒழுங்கு.]

இயமரம் *iya-maram,* பெ. (n.) ***பறைவகை*** (பதிற்றுப்.50, உரை); a kind of ancient drum. (செ.அக.).

[இயம் → இயமரம்.]

இயமன் *iyaman,* பெ. (n.) ***எமன்;*** yama, god of death. (செ.அக.).

இயமன் > Skt. yama.

[இய - இயமன் = செலுத்துவோன்.]

இயமனூர்தி *iyaman-ūrdi,* பெ. (n.) ***எருமைக்கடா*** (பிங்.); he-buffalo, yama's vehicle.

[இயமன் + ஊர்தி.]

இயமான் *iyamān,* பெ. (n.) ***இயவான் 1.*** பார்க்க; see *iyavān-1,* "நான்மறை யோனுமகத்திய மான்பட" (திருவாச.14.14), (செ.அக.).

இயமான் > *Skt* yajamāna.

[இய → இயமான்.]

இயமானன் *iyamāṉaṉ* பெ. (n.) ***இயவான்*** பார்க்க; see *iyavāṉ* 1. ***வேள்வித் தலைவன்;*** sacrificer. "இயமா னனாம் விமலா" (திருவாச.1,36). 2. ***ஆதன்*** (ஆன்மா); life, soul, "இருசுடரோ டியமான னைம்பூத மென்று" (மணி.27,89), (செ.அக.).

இயமானன் > *Skt.* yajamāna.

[இய → இயவன் → இயவான் → இயமான் → இயமானன் > Skt. yajamāna. ஒ.நோ. இயவுள் = கடவுள். இயவு = வழி. இயவுள் = வழிநடத்துபவன், தலைவன். இயவான் தமிழில் வழக்கிழந்த காலத்திற்கு முன்பே வடமொழி கடன்கொண்டது.]

இயர் *iyar,* இடை. (part.) ***வியங்கோள் ஈறு;*** vbl. opt. ending. "பொய்யா கியரோ பொய்யா கியரோ" (புறநா. 233). (செ.அக.).

[ஈ → ஈயர் → இயர் (வியங். வி.மு. ஈறு).]

இயல்[1](லு)-தல் *iyal-,* 13 செ.கு.வி. (v.i.) 1. ***கூடியதாதல்;*** to be possible. "இயல்வது கரவேல்" (ஆத்திசூ.). 2. ***நேர்தல்;*** to befall, happen. "இயன்ற தென் பொருட்டினா லிவ்விட ருனக்கு" (கம்பரா.குகப். 40). 3. ***பொருந்துதல்;*** to be associated with. "வெயிலி யல் வெஞ்சுரம்" (வின்.). 4. ***தங்குதல்;*** to abide. "மாவியல்கின்ற வீரமகேந்திர புரத்துக்கு" (கந்தபு. ஏமகூ.4). 5. ***செய்யப்படுதல்;*** to be made or constituted. "சிறியவர்கட் கெற்றா லியன்றதோ நா" (நாலடி.353). 6. ***அசைதல்*** (திருமுருகு.215); to move, dance, frisk about. 7. ***நடத்தல்;*** to go on foot; to move forward. "அரிவையொடு மென்மெல வியலி" (ஐங்குறு.175). 8. ***உலாவுதல்;*** to walk about gaily. "பீலி மஞ்ஞையி னியலி" (பெரும்பாண்.331)— 8 செ.குன்றாவி. (v.t.) 1. ***உடன்படுதல்;*** to accept, agree to. "யாதுநீ கருதிற் றன்ன தியன்றனன்" (ஞானவா. வைராக்.42). 2. ***அணுகுதல்*** (கலித். 83,16); to draw near, approach. 3. ***ஒத்தல்;*** to resemble; to be like. "பொன்னியலுந் திருமேனி" (திருவாச.49.6). 4. ***போட்டியிடுதல்;*** to compete, wager. "இயலுமாலொடு நான்முகன்" (தேவா. 601,8) (செ.அக.).

ம. இயலுக; க. ஈலு (விலங்குகள் மக்களுடன் கொள்வது போன்ற பிணைப்பு); து. இயவுனி.

[உய் → இய் → இய → இயல்.]

இயல்[2] *iyal,* பெ. (n.) 1. ***தன்மை;*** nature, property, quality. "ஈண்டு செலன் மரபிற் றன்னியல் வழாஅது" (புறநா.25,2). 2. ***தகுதி;*** fitness, worth. "இயலன் றெனக்கிற்றிலை" (திருக்கோ,240). ம. இயல். 3. ***ஒழுக்கம்*** (சூடா); good conduct; conduct appropriate to one's status, upbringing, rank or office. 4. ***உழுவலன்பு;*** affection continued from birth to birth. "தொல்லி யல் வழாமை" (கலித்.2). 5. ***செலவு;*** pace; gait, as of a horse. "புள்ளியற் கலிமா" (தொல். பொருள்.194). 6. ***ஒப்பு;*** likeness, similitude. "மின்னியற்சடை மாதவர்" (திருவிளை. குண்டோ.2). 7. ***இயற்றமிழ்*** (பிங்.); literary Tamil. 8. ***நூல்;*** treatise esp. the Āgama works. "இயலோதேல்" (சைவச. பொது.346). 9. ***நூலின் பகுதி;*** section of a work containing chapters treating of a series of subjects or things in order; chapter தொல்காப்பியத்தில் செய்யுளியல் உவமவியல் முதலியன. 10. ***மாலியப் பாடல்களை ஓதுதல்;*** (திவ்வியப்பிரபந்தத்தைச் சேர்ந்து நின்று ஓதுகை); chanting in a chorus the Divya-p-pirapandam, constituting the vaiṣṇava sacred hymns (செ.அக.). 11. ***ஆற்றல்;*** strength; power. 12. ***அழகு;*** beauty, delicacy. 13. ***நாட்டியத்தாளம்;*** dancing beats. "இயலைந்தும்" (சிலப்.அரங்.வெண்பா.).

ம. இயல்; க. இம்புகை.

[இய → இயல்.]

இயல்[3] *iyal,* பெ. (n.) ***தம்பலப் பூச்சி;*** scarlet insect called lady fly - (சா.அக.).

[இய → இயல்.]

இயல்[4] *iyal,* பெ. (n.) ***மாறுபாடு;*** rivalry, competition. "இயலாடிய பிரமன்னரி யிருவர்க்கறி வரிய" (தேவா. 979,9). (செ.அக.).

[இகல் → இயல் (கொ.வ).]

இயல்[5] *iyal,* பெ. (n.) 1. ***சாயல்*** (நாநார்த்த.); resemblance. 2. ***பெருமை;*** greatness. "இது தமிழ்முனி வன் வைகுமியற் குன்றம்" (கம்பரா. மீட்சிப்.174).

[இய → இயல்.]

இயல்[6]**(லு)-தல்** *iyal-,* 8 செ.குன்றாவி (v.t.) 1. ***சித்திர முதலியன எழுதுதல்;*** to paint, draw. "புது வதியன்ற மெழுகுசெய் படமிசை" (நெடுநல்.159), (செ.அக.). 2. ***கைக் கொள்ளுதல், சேர்தல், அணிதல்;*** to have, to be joined or united, be associated with, to put on, assume. (சேரநா).

ம. இயலுக; க. ஈலு; தெ. ஈலுவு (மதிப்பு, ஒன்றுதல்); து. இயவுனி (போதியதாதல்).

[இய → இயல் → இயலுதல்.]

இயல்பகத்திணை *iyalbagattiṇai,* பெ. (n.) ***அவ்வவ் வியல்பைக் கொண்டு பொருளைக் காட்டுவது;*** classification according to the nature and content of things. (ஆ.அக.).

[இயல்பு + அகம் + திணை.]

இயல்பளவை *iyalbaḷavai,* பெ. (n.) 1. ***சொல்லின் பொருளைச் சூழ்நிலையால் உறுதிப்படுத்தும் ஆணை*** (சந்தர்ப்பத்தினால் நிச்சயிக்கும் பிரமாணம்). (சி.சி. அளவை 1.); determination of the meaning of a word from the context; one of four kinds of judgement. (செ.அக.).

[இயல்பு + அளவை.]

இயல்பாயிரு-த்தல் *iyalbāyiru-,* 4 செ.கு.வி. (v.i.) ***செல்வாக்கோடிருத்தல்*** (வின்.); to be influential or powerful. (செ.அக.).

[இயல்பு + ஆய் + இருத்தல்.]

இயல்பு[1] *iyalbu,* பெ. (n.) 1. ***தன்மை;*** nature, property, quality. "இயல்புகாண்டோற்றி மாய்கை" (சி.சி.1.3.). 2. ***ஒழுக்கம்;*** proper behaviour, good conduct. "சால்பும் வியப்பு மியல்பும் குன்றின்" (குறிஞ்சிப்.15). 3. ***நற் குணம்;*** goodness "ஏதிலா ரென்பாரியல்பில்லார்" (நான் மணி.44). 4. ***நேர்மை*** (இ.வ.); propriety, regularity, genuineness. 5. ***முறை;*** prescribed code of conduct - "இயல்பினானில்வாழ்க்கை வாழ்பவன்" (குறள்.47). 6. ***வரலாறு;*** circumstances, account. "உலகீன்றாடக்கன் மகளா யுதித்த வியல்பும்" (கூர்மபு. திருக்கலி.1). (செ.அக.).

ம. இயல்வு.

[இய - இயல் → இயல்பு.]

இயல்பு[2] *iyalbu,* பெ. (n.) ***அளவை*** (பிரமாணம்) ***பத்தனுள் ஒன்று*** (மணி.27,10); one of ten methods of acquiring true knowledge. (செ.அக.).

[இயல் → இயல்பு.]

இயல்புகணம் *iyalpu-kaṇam,* பெ. (n.) ***உயிர்க்கணம் மென்கணம் இடைக்கணங்கள்*** (தக்கயாகப்.602); vowels, nasals and semi-vowels. (செ.அக.).

[இயல்பு + கணம்.]

இயல்புநயம் *iyalbu-nayam,* பெ. (n.) ***நயங்கள் நான்கி னுள் ஒன்று*** (மணி.30,218); one of nayaṅgaḷ nāṅgu, or four principles of life according to Buddhism. (செ.அக.).

[இயல்பு + நயம்.]

இயல்பு புணர்ச்சி *iyalbu-puṇarcci,* பெ. (n.) ***தோன் றல், திரிதல், கெடுதல் போன்ற மாற்றமின்றிச் சொற்கள் புணர்வது*** (நன்.153, உரை.); (gramm) natural combination of words without augmentation, change or elision. (செ.அக.).

[இயல்பு + புணர்ச்சி.]

இயல்பு வழக்கு *iyalbu-vaḻakku,* பெ. (n.) ***எப்பொரு ளுக்கு எப்பெயர் இயல்பிலமைந்ததோ அப்பெயரா லேயே அப்பொருளைக் கூறுகை*** (நன்.267); ***இது இலக்கணமுடையது; இலக்கணப் போலி, மரூஉ என்ற மூவகையில் ஆளப்படுகிறது;*** denoting a thing by the word that usage has sanctioned as its natural name, which usage is of three kinds, viz, இலக்கணமுடை யது; இலக்கணப்போலி, மரூஉ, as dist. fr. தகுதி வழக்கு. (செ.அக.).

[இயல்பு + வழக்கு.]

இயல்புவிளி *iyalbu-viḷi,* பெ. (n.) ***ஈறுதிரியாது நிற்கும் விளிவேற்றுமை*** (கலித்.80, உரை); vocative case in which the noun is uninflected. (செ.அக.).

[இயல்பு + விளி.]

இயல்புளி *iyalbuḷi,* கு.வி.எ. (adv.) ***முறைப்படி;*** in accordance with the established custom or order "இயல்புளி வழிபட்டு" (காஞ்சிப்பு. அபிராமி.4) (செ.அக.) "இயல்புளிக் கோலோச்சும் மன்னவன்" (குறள்.545).

[இயல்பு + உளி.]

இயல்பூ *iyalpū,* பெ. (n.) ***வில்வம்;*** beel flower. (ஆ.அக.).

*[இயல் + பூ.]

இயல்பொன் *iyalpon*, பெ. (n.) ***இயற்கைப் பொன்;*** natural gold as opposed to alchemical gold. (சா.அக.).

[இயல் + பொன்.]

இயல்மம் *iyalmam*, பெ. (n.) ***ஒழுங்கு, சீர்மை;*** regularity.

[இயல் + இயல்மம்.]

இயல் மொழி *iyalmoli*, பெ. (n.) ***இயன்மொழி*** (பதிற்று.24.11) பார்க்க; see *iyanmoli*.

[இயல் + மொழி.]

இயல்வது *iyalvadu*, பெ. (n.) ***பொருந்த நடப்பது;*** perfect functioning, natural existence. "உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராது இயல்வது நாடு" (குறள்.734). (பாண்டி.அக.).

[இயல்வு + அது.]

இயல் வரையறை *iyalvaraiyarai*, பெ. (n.) ***பொருளின் தன்மையை அல்லது சொல்லின் பொருளைத் திட்ப நுட்பமாக தெளிந்துரைத்தல்;*** stating precise nature of thing or meaning of word.

[இயல் + வரையறை. இயல் - இயல்பு.]

இயல்வாகை *iyalvāgai*, பெ. (n.) ***பெருங்கொன்றை*** (L.); a species of unarmed brasiletto. (செ.அக.).

[இயல் + வாகை.]

இயல்வாணர் *iyal-vānar*, பெ. (n.) ***புலவர்;*** poets. "இயல் வாணருக் களித்தான்" (பெருந்தொ.1348). (செ.அக.).

[இயல் + வாணர்.]

இயல்வு *iyalvu*, பெ. (n.) 1. ***இயல்பு;*** nature. 2. ***பெறுகைக்குத்தக்க ஆம்புடை;*** means of attaining, as salvation. "ஏனமாய் நின்றார்க் கியல்வு" (திவ்.இயற். 1,12). (செ.அக.).

[இய → இயல் → இயல்வு.]

இயலசை *iyal-asai*, பெ. (n.) ***நேரசை நிரையசைகள்;*** class of general metrical syllables. "இயலசை முதலிரண்டு" (தொல்.பொருள்.318), (செ.அக.).

[இயல் + அசை.]

இயலடி *iyaladi*, பெ. (n.) ***இயற்சீரான்*** (நான்கு சீரான்) ***வருமடி*** (ஆ.அக.); line containing feet of two metrical syllables each.

[இயல் + அடி.]

இயலவர் *iyalavar*, பெ. (n.) ***இயல்பினையுடையவர்;*** possessing desirable attributes. "தணந்ததன் றலையுநீ தளரியலவ ரொடு" (கலித்.66-17).

[இயல் + அவர்.]

இயலல் *iyalal*, பெ. (n.) 1. ***இசைதல்;*** agreeing. 2. ***ஏலுதல்;*** to be able. 3. ***கூடியதாயிருத்தல்;*** being accessible. 4. ***உடன்படல்;*** consent. 5. ***நடத்தல்;*** walking. 6. ***அசைதல்;*** moving. (ஆ.அக.).

[இயல் + அல்.]

இயலறிவு *iyal-arivu*, பெ. (n.) ***சொல்லறிவு*** (சப்த ஞானம்); knowledge of words with their meanings and relations to each other. "பிள்ளை இயலறிவுக்கு" (ஈடு.2,5,10). (செ.அக.).

[இயல் + அறிவு.]

இயலாசிரியன் *iyal-āśiriyan*, பெ. (n.) ***பரத நூல் கற்பிப்போன்*** (சீவக. 672, உரை.); dancing master. (செ.அக.).

[இயல் + ஆசிரியன்.]

இயலாமை *iyal-ā-mai*, பெ. (n.) ***கூடாமை,*** inability infeasibility, impossibility. (செ.அக.).

[இயல் → இயலாமை.]

இயலார் *iyalār* பெ. (n.) ***இயல்பினையுடையார்;*** people who possess good nature and conduct. "மயிலியலார் மருவுண்டு மறந்தமைகுவான் மன்னோ" (கலித்.30-6) (பாண்டி.அக.).

இயலிசை யந்தாதி *iyal-iśai-y-andādi*, பெ. (n.) ***பொருளாலன்றி ஓசையால் வரும் அந்தாதித் தொடை*** (ஈடு.1,6,2,ஜீ); variety of andādi-t-todai in which the concluding letter, word or phrase of a stanza is apparently repeated at the commencement of the next stanza but is different in sense though alike in sound, dist. fr. பொருளிசையந்தாதி (செ.அக.).

[இயல் + இசை + அந்தாதி.]

இயலொழுக்கம் *iyal-olukkam*, பெ. (n.) ***நல்லொழுக்கம்;*** right conduct. "இணையில்லா வியலொழுக்க மிசைத்ததுநின் னிறைமையோ" (பெருந்தொ.169).

[இயல் + ஒழுக்கம்.]

இயவம்[1] *iyavam*, பெ. (n.) 1. ***தவசவகை;*** a kind of grain. 2. ***நெல்;*** paddy. (செ.அக.).

இயவம் > *Skt.* yava.

[ஒருகா; வேய் → வேயம் (மூங்கிலரிசி). தெ. பிய்யமு. வேயம் → வியம் → வியவம் → இயவம்.]

இயவம்[2] *iyavam*, பெ. (n.) ***கண்ணுள்ளே வட்டமாயும், இருபுறமுங் குவிந்துமுள்ள பளிங்குபோன்ற ஆடிக்கல்;*** crystalline lens of the eyes. (சா.அக.).

இயவம் > *Skt.* yava.

இயவர் *iyavar*, பெ. (n.) ***இசைக்கருவிகளை இயக்குபவர்;*** operator of musical instruments, instrumentalist. (சு.வி.63).

[இய → இயவர்.]

இயவன் *iyavaṉ,* பெ. (n.) 1. ***தோற்கருவியாளன்;*** drummer. ''கலித்தவியவரியந்தொட்டன்ன'' (மதுரைக். 304). 2. ***கீழ்மகன்*** (அக.நி.); base man, man of low upbringing. (செ.அக.).

[இயம் - இய + அன் = இயவன்.]

இயவனர் *iyavaṉār,* பெ. (n.) 1. ***கம்மாளர்;*** smiths. 2. ***சித்திரக்காரர்;*** artists. 3. ***சோனகர்;*** Romans and Greeks. 4. ***பிறர்;*** others.

[இயவு - இயவனர் = வழிப்போக்கர்; பிறர், வேற்றூர் கம்மப் பணியாளர், அயலார்.]

இயவனன் *iyavaṉaṉ,* பெ. (n.) ***கிரேக்கநாட்டினன்*** (யவனன்); foreigner. ''இனைய நுட்பத் தியவன ரியற்றிய'' (பெருங்.நரவாண.9,59) (செ.அக.).

[G.K. Ayonia → yavana → த. இயவனன்.]

இயவனிகை *iyavaṉigai,* பெ. (n.) ***எழினி*** பார்க்க; see *eḻiṉi.* திரை; curtain. (ஆ.அக.).

[எழினி > Skt. யவனிகா > த. இயவனிகை.]

இயவான் *iyavāṉ,* பெ. (n.) 1. ***வழிநடத்துவோன், தலைவன்;*** one who leads, leader, chief. 2. ***கடவுள்;*** god.

[இய → இயவு (வழி) → இயவான்.]

இயவானி *iyavāṉi,* பெ. (n.) ***ஓமம்*** (தைலவ.தைல.77); bishop's weed. (செ.அக.).

இயவானி > *Skt.* yavānī.

[ஒருகா: இயவம் (= அரிசி) → இயவானி = மெல்லிய அரிசி போன்ற ஓமம்.]

இயவு *iyavu,* பெ. (n.) 1. ***வழி;*** way. ''இயவிடை வருவோன்'' (மணி.13,16). 2. ***செலவு;*** leading, proceeding. ''இடைநெறிக் கிடந்த வியவுக் கொண் மருங்கில்'' (சிலப்.11,168) (செ.அக.). 3. ***புகழ்*** (ஆ.அக.); renown, fame, celebrity.

[இய → இயவு.]

இயவுள்[1] *iyavuḷ,* பெ. (n.) 1. ***தலைமை;*** leadership, superiority. ''இயவுள் யானை'' (அகநா.29). 2. ***எப்பொருளுக்கும் இறைவன்;*** supreme Lord. ''பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்'' (திருமுருகு.274). 3. ***தெய்வம்*** (பிங்.); God, deity. 4. ***புகழாளன்*** (திவா.); famous person. 5. ***வழி*** (அகநா.29,உரை); way. (செ.அக.).

ம. இயவுள்.

[இய - இயவு - இயவுள்.]

இயவுள்[2] *iyavuḷ,* பெ. (n.) ***பிள்ளை*** (அக.நி.); child. (செ.அக.).

[இல் → இள. இய → இயவுள்.]

இயவை[1] *iyavai,* பெ. (n.) 1. ***வழி*** (திவா.); way, path. 2. ***காடு*** (அக.நி.); jungle. (செ.அக.).

OE. OS. OHG. Way; *ON.* Vegr; *Goth.* Wigs; *F.* Weg; *L.* Vehere; *G. Dutch. Yidd.* Veg; *Hung.* ut; *Nor.* Vei.

[இய → இயவு - இயவை.]

இயவை[2] *iyavai,* பெ. (n.) 1. ***மலைநெல்வகை*** (பிங்.); paddy raised in hilly districts. 2. ***மூங்கிலரிசி*** (திவா.); bamboo seed which resembles rice. (செ.அக.).

[வேய் → வேயம் (மூங்கிலரிசி) - வியம் → வியவு → வியவை - இயவை. இயவை > Skt. yava.]

இயவை[3] *iyavai,* பெ. (n.) ***துவரை*** (பச்.மூ.); dholl. (செ.அக.).

[ஒருகா. உலவை - உயவை - இயவை.]

இயற்காட்சி *iyaṟ-kāṭci,* பெ. (n.) ***நற்காட்சி;*** right faith. ''பேதில்லா வியற்காட்சியருளியது நின்பெருமையோ'' (பெருந்தொ.167). (செ.அக.).

[இயல் + காட்சி.]

இயற்காந்தம் *iyaṟ-kāndam,* பெ. (n.) ***இயற்கையாகவே நிலத்திலகப்படும் காந்தம்;*** load stone; natural magnet, as opposed to artificial magnet. (சா.அக.).

[இயல் + காந்தம்.]

இயற்குணப்பெயர் *iyaṟ-guṇa-p-peyar,* பெ. (n.) ***தொழிலையன்றிப் பண்பைக் குறிக்கும் பெயர்*** (நன். 269, மயிலை.); nomenclature which indicates nature but not function.

[இயல் + குணம் + பெயர்.]

இயற்கை[1] *iyaṟkai,* பெ. (n.) 1. ***இயல்பு*** (திவ்.திரு வாய்.4,9,1); nature, disposition; inherent quality. 2. ***இயல்பாக இருத்தல், செயற்கைக்கு எதிர்;*** that which is natural; opp.to செயற்கை. ''இயற்கை யல்லன செயற் கையிற் றோன்றினும்'' (புறநா.35). 3. ***வழக்கம்;*** custom, practice. ''உலகத் தியற்கை யறிந்து செயல்'' (குறள், 637.). 4. ***இலக்கணம்;*** distinguishing characteristic. ''பிரமசாரி யியற்கையைத் தெரித்த வாறும்'' (கூர்மபு. அறுக்கி.23). 5. ***நிலைமை;*** state, condition, circumstances வறுமையான இயற்கை (வின்.). 6. ***கொள்கை;*** opinion, conviction, belief. ''பெரியவரியற்கை'' (கம்பரா.அயோத்.மந்திர.63). 7. ***பணிமுட்டு*** (யாழ்ப்.); instrument, tool. (செ.அக.).

[இயல் + கை = இயற்கை.]

இயற்கைக்குணம் *iyaṟ-kai-k-kuṇam,* பெ. (n.) ***இயல்பு;*** natural disposition, temper. (செ.அக.).

[இயல் → இயற்கை + குணம்.]

இயற்கைக்குறி *iyaṟkai-k-kuṟi,* பெ. (n.) ***இயற்கையா கவே வுண்டாகுங் குறி*** (in pathology); natural symptoms as in diseases. (சா.அக.).

[இயல் → இயற்கை + குறி.]

இயற்கைப்புணர்ச்சி *iyaṟkai-p-puṇarcci,* பெ. (n.) ***தலைவனும் தலைவியும் தெய்வத்தால் கூடும் முதற் கூட்டம்*** (இறை.2, பக்.33.); first union of lovers brought about by destiny.

[இயல் → இயற்கை + புணர்ச்சி.]

இயற்கைப்பொருள் *iyar kai-p-porul*, பெ. (n.) ***தோன்றியபோது தொடங்கி ஒருநிலைய வாகிய பொருள்*** (தொல்.சொல்.19.); that which is natural; natural product. (செ.அக.).

[இயற்கை + பொருள்.]

இயற்கையளபெடை *iyarkai-y-alabedai*, பெ. (n.) ***இசை விளி பண்டமாற்று முதலிய இடங்களில் நிகழும் அளபெடை*** (பிர.விவே.5, உரை.); natural prolongation of a vowel sound as in singing, calling bartering, lamenting, etc., கண்ணாஅ; முருகாஅ; மோரோஒ மோர். (உ.வ.).

[இயற்கை + அளபெடை.]

இயற்கை யவா *iyarkai-yavā*, பெ. (n.) ***இயல்பாகவே ஏற்படும் ஆசை;*** natural desire "ஆரா இயற்கை அவா நீப்பின்" (குறள்.370) (சா.அக.).

[இயற்கை + அவா.]

இயற்கையறிவு *iyarkai-y-arivu*, பெ. (n.) ***உய்த்துண ரும் அறிவு;*** instinct, intuition. (செ.அக.).

[இயற்கை + அறிவு.]

இயற்கையின்பம் *iyar-kai-inbam*, பெ. (n.) ***இயற்கைப் புணர்ச்சியாலாகிய இன்பம்*** (சீவக.2063.); experience of pleasure by lovers in their first union brought about by destiny. (செ.அக.).

[இயற்கை + இன்பம்.]

இயற்கையுணர்வினனாதல் *iyarkai-y-unarvinan-ādal*, பெ. (n.) ***சிவனெண் குணத் தொன்று*** (குறள்,9, உரை); having intuitive wisdom; one of Šivan-en-kunam. (செ.அக.).

[இயற்கை + உணர்வினன் + ஆதல்.]

இயற்சீர் *iyar-cīr*, பெ. (n.) ***அகவலுரிச்சீர்*** (தொல். பொருள்.325); foot of two metrical syllables. (செ.அக.).

[இயல் + சீர்.]

இயற்சீர்வெண்டளை *iyar-cīr-vendalai*, பெ. (n.) ***மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருந்தளை*** (இலக்.வி.718, உரை.); metrical succession which should be observed in venbā. The metrical connection of a simple (நேரசை) syllable at the end of a foot with the compound (நிரையசை) syllable at the beginning of the succeeding foot and vice versa when both the feet happen to be two syllabled. (செ.அக.).

[இயல் + சீர் + வெண் + தளை.]

இயற்சொல் *iyar-col*, பெ. (n.) ***எல்லார்க்கும் பொருள் விளங்குஞ் சொல்*** (நன்.271); திரிசொல்லின் வேறா னது; standard words which are in common use and are understood by all, dist. fr. திரிசொல் (செ.அக.).

[இயல் + சொல்.]

இயற்பகை நாயனார் *iyar-pagai-nāyanār*, பெ. (n.) ***அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்*** (பெரியபு.); name of a canonized šaiva saint; one of the sixty-three.

[இயற்பகை + நாயனார்.]

இயற்படமொழிதல் *iyar-pada - molidal*, பெ. (n.) ***தலைவன் குணங்களைத் தலைவி புகழ்ந்து கூறும் அகத்துறை*** (திருக்கோ.378); woman's expatiation of her lover's good qualities. (செ.அக.).

[இயல் + பட + மொழிதல்.]

இயற்படுத்துரைத்தல் *iyar-padu-t-turai-t-tal*, பெ. (n.) ***வழிபடுத்திச் சொல்லல்*** (ஆ.அக.); indicate way while narrating.

[இயல் + படுத்து + உரைத்தல்.]

இயற்பலகை *iyar-palagai*, பெ. (n.) ***தமிழ்க்கழகப் பலகை,*** (சங்கப் பலகை), (திருவாலவா.56,10); miraculous seat-board of the last Tamil Sangam in Madurai. (செ.அக.).

[இயல் + பலகை.]

இயற்பழித்தல் *iyar-palittal*, பெ. (n.) ***தலைவன் குணங்களைத் தோழி இகழ்ந்து கூறும் அகத்துறை*** (திருக்கோ.376); literary theme in which the companion of the heroine belittles the hero's qualities. (செ.அக.).

[இயல் + பழித்தல்.]

இயற்பா *iyar-pā*, பெ. (n.) ***மாலியப் பாடல்களுள்*** (திவ்வியப் பிரபந்தத்துள்) ***ஒருபகுதி;*** name of a section of the Divya-p-pirabandam. (செ.அக.).

[இயல் + பா.]

இயற்பெயர்[1] *iyar-peyar*, பெ. (n.) 1. ***வழங்குதற்கு இடப்பட்ட சிறப்புப் பெயர்*** (தொல்.சொல்.173); proper name, naturally or arbitrarily given. (செ.அக.). 2. ***பெற்றோரிட்ட பெயர்*** (ஆ.அக.); christened name.

[இயல் + பெயர்.]

இயற்பெயர்[2] *iyar-peyar*, பெ. (n.) ***விரவுப்பெயர்*** (தொல்.சொல்.174, சேனா.); noun common to both uyartiṇai and akriṇai. (செ.அக.).

[இயல் + பெயர்.]

இயற்பெயர்க்கிளவி *iyar-peyar-k-kilavi*, பெ. (n.) ***இயற்பெயராகிய சொல்;*** proper noun. (தொல். சொல்.196-2).

[இயல் + பெயர் + கிளவி.]

இயற்றண்டம் *iyarrandam*, பெ. (n.) ***தண்டனை;*** ordinary fine. "நாலே கால் காணம் இயற்றண்ட மிடப் பெறுவதாகவும்" (SI.I.iv; 295) (செ.அக.).

[இயல் + தண்டம்.]

இயற்றமிழ் *iyarramil-*, பெ. (n.) ***முத்தமிழுள் ஒன்று*** (பிங்.); literary Tamil, poetry or prose, conforming to the rules of Tamil grammar; one of mu-t-tamil; a broad division of Tamil literature embracing all belles-letters except dramas and musical compositions. (செ.அக.).

[இயல் + தமிழ்.]

இயற்றல் *iyarral,* பெ. (n.) 1. ***முயற்சி*** (திவா.); effort, exertion, endeavour. (செ.அக.). 2. ***ஏவுதல்*** (ஆ.அக.); commanding. 3. ***செய்தல்*** (ஆ.அக.); doing, making. 4. ***யாத்தல்;*** composing.

[இயல் → இயற்றல். பி.வி.]

இயற்றளை *iyarralai,* பெ. (n.) 1. ***இயற்சீர் வெண்டளை*** (யா.கா.ஒழிபி.4.) பார்க்க; see *iyarcir vendalai.* (செ.அக.). 2. ***ஆசிரியத்தளை;*** metrical connection between the first and last syllables of - adjacent feet as applicable to āsiriya-p-pā.

[இயல் + தளை.]

இயற்றனம் *iyarranam,* பெ. (n.) 1. ***கருவி;*** instrument. 2. ***ஏனம்*** (பாத்திரம்); vessel. (ஆ.அக.).

[இயல் → இயற்று → இயற்றனம்.]

இயற்றி[1] *iyarri,* பெ. (n.) 1. ***முயற்சி*** (பிங்.); effort, exertion. 2. ***ஏந்து, வலிவு;*** position of ease, comfort and happiness; strength. ''தனக்கு இயற்றியுள்ள காலத்திலே'' (ஈடு.9,1,4). (செ.அக.).

[இயல் → இயற்றி.]

இயற்றி[2] *iyarri,* பெ. (n.) 1. ***உதவி;*** support. ''கைநிற்கும் பரிகர முண்டாயிருக்க இயற்றி யில்லாதாரைப் போலே'' (திவ்.பெரியாழ்.5,3,6, வ்யா.பக்.574). 2. ***திறமை*** (ஈடு.9,1,4.ஜீ); skill. 3. ***தகுதி*** (ஈடு.9,1,4,ஜீ); qualification. 4. ***உச்சாயம்*** (ஈடு.9,1,4,ஜீ); high position. (செ.அக.).

[இயற்று → இயற்றி.]

இயற்று[1]**-தல்** *iyarru,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. ***செய்தல்;*** to do, make, perform, effect, execute. ''இசையா தெனினு மியற்றியோ ராற்றால்'' (நாலடி. 194). 2. ***நடத்துதல்;*** to cause to act, direct or control the movements of ''நெஞ்சே யியற்றுவா யெம்மொடு'' (திவ்.இயற்.பெரிய திருவந்.1.). 3. ***பொருள்தேடல்;*** to acquire, earn; ''ஒண் பொருள் காழ்ப்ப வியற்றி யார்க்கு'' (குறள்.760). 4. ***தோற்றுவித்தல்*** (சிருஷ்டித்தல்); to create, germinate. ''கெடுக வுலகியற்றி யான்'' (குறள். 1062). 5. ***நூல் செய்தல்;*** to compose; to write, as a book.'சாத்தனார் இயற்றிய மணிமேகலை.' (செ.அக.).

ம. இயற்றுக; **க., தெ.** எசகு; **து.** இயருனி, இயவுனி.

[இயல் → இயற்று.]

இயற்று[2] *iyarru,* பெ. (n.) ***ஏனம்*** (யாழ்ப்.); implement, utensil; any hollow vessel, as a cup or a coconut shell. (செ.அக.).

[இயல் → இயற்று.]

இயற்றுதற் கருத்தா *iyarrudar-karuttā,* பெ. (n.) ***பயனிலைச் செயலை நேரே செய்யும் வினை முதல்*** (நன்.297, உரை.); direct agent who carries out a function, as in the sentence.'தச்சன் தேரை யமைத்தான்;' dist.fr. ஏவுதற்கருத்தா (செ.அக.).

[இயற்றுதல் + கருத்தா.]

இயறல் *iyaral,* பெ. (n.) 1. ***வீடுபேறு*** (அக.நி.); final bliss. (செ.அக.). 2. ***போதல்;*** the act of moving, going. (ஆ.அக.).

[இயலல் → இயறல்.]

இயன்ஞானம் *iyan-nānam,* பெ. (n.) ***நல்லறிவு;*** right knowledge. ''இருளில்லா வியன்ஞான மியம்புவதுன் னியல் பாமோ'' (பெருந்தொ.167.). (செ.அக.).

*[இயல் + ஞானம். **இயலறிவு** பார்க்க; see iyalarivu.]*

இயன்மகள் *iyan-magal,* பெ. (n.) ***கலைமகள்*** (பிரமோத்.8,20); Sarasvati, goddess of letters. (செ.அக.).

[இயல் + மகள்.]

இயன்மணம் *iyan manam,* பெ. (n.) ***இயற்கை மணம்;*** natural fragrance. (ஆ.அக.).

[இயல் + மணம்.]

இயன்மாலை *iyan-mālai,* பெ. (n.) ***இயங்கும் மாலைக் காலம்;*** agreeable evening. ''யாழ்கொண்ட இமிழிசை இயன் மாலை அலைத் தரூஉம்'' (கலித்.29-17).

[இயல் + மாலை.]

இயன்மொழி *iyan-moli,* பெ. (n.) ***இயன்மொழி வாழ்த்து*** (தொல்.பொருள்.90.உரை.) பார்க்க; see *iyan-moli-vālttu.* (செ.அக.).

[இயல் + மொழி.]

இயன்மொழி வாழ்த்து *iyan-moli-vālttu,* பெ. (n.) 1. ***தலைவன் குடியினர் செய்திகளை அவன் மேலேற்றி வாழ்த்தும் புறத்துறை*** (தொல்.பொருள். 90); literary theme of glorifying a hero by attributing to him all the noble deeds of his ancestors. 2. ***இன்னாரின்னது கொடுத்தார் அவர் போல நீயுங் கொடுப்பாயாக என யாவரும் அறியக் கூறும் புறத்துறை*** (பு.வெ.9,6.); literary theme of requesting one to emulate the noble example set by the great benefactors of olden times. 3. ***அரசன் தன்மையினைப் புகழ்ந்து சொல்லும் புறத்துறை*** (பு.வெ.9,7.); theme of extolling the high qualities of the king. (செ.அக.).

[இயல் + மொழி + வாழ்த்து.]

இயனம் *iyanam,* பெ. (n.) ***கள்ளிறக்குவோனது கருவிபெய் புட்டில்*** (யாழ்ப்.); bag which loosely hangs down from the waist belt of a toddy drawer, containing

implements which he may require for climbing trees and for cutting branches etc. (செ.அக.).

[ஏனம் → யானம் → இயானம் → (கொ.வ.)இயனம்.]

இயனிலை யுருவகம் *iyaṉilai-yuruvagam,* பெ. (n.) ***உருவக அணிவகையு ளொன்று; அஃது ஒன்ற னுறுப்பு பலவற்றை யுமுருவகித்தும் உருவகியாதும் உரைத்து அங்கியை வருவித்து உரைப்பது.*** (ஆ.அக.); figure of speech.

[இயன் + நிலை + உருவகம்.]

இயனெறி *iyaṉeṟi,* பெ. (n.) ***நல்லொழுக்கம்;*** path of approved conduct; even path of rectitude. "இயனெறி யுங் கைவிடாது" (நாலடி.294) (செ.அக.).

[இயல் + நெறி.]

இயூகம் *iyūgam,* பெ. (n.) ***கருங்குரங்கு*** (பெருங். வத்தவ.17,14); black monkey.

[ஏ - கருமை. ஏ + ஊகம் - ஏயூகம் - இயூகம்.]

இயை[1]-தல் *iyai-,* 2 செ.கு.வி. (v.i.) 1. ***பொருந்துதல்;*** to be agreeable, be palatable. "என்போ டியைந்த வமிழ்து" (நாலடி.210). 2. ***இணங்குதல்;*** to agree, harmonise. 3. ***நிரம்புதல்;*** to become quite full. "மாக்கடல் கண்டியைய மாந்திக் கார் தோன்ற" (திணை மாலை. 100) - 2 செ.குன்றாவி. (v.t.) ***ஒத்தல்*** (நன்.367); to resemble. (செ.அக.).

ம. இயயுக; **க.** ஈலு; **தெ.** ஈயகோலு, உய்யகோலு (ஒப்புகை.); **து.** இயருனி, இயவுனி.

[இல் → இள் → இய் → இயை.]

இயை[2]-த்தல் *iyai-,* 2 செ.குன்றாவி. (v.t.) ***பொருத்து தல்;*** to join, connect, adapt. (செ.அக.).

ம. இய்யக்குக.

[இள் → இய் → இயை - இயைத்தல்.]

இயைபிலிசைக்குறி *iyaipil-isai-k-kuṟi,* பெ. (n.) ***இடைப்பிறவரலாக வருஞ்சொற்களை யடைக்குங் குறிகள்*** (பாலபாடம்.); bracket. (செ.அக.).

[இயைபு + இல் + இசை + குறி.]

இயைபி லுருவகம் *iyaipil-uruvagam,* பெ. (n.) ***அணிவகையுளொன்று; அஃது பல பொருளையுந் தம்முளொன்றோ டொன் றியையாமல் உருவகஞ் செய்வது*** (ஆ.அக.); figure of speech.

[இயைபு + இல் + உருவகம்.]

இயைபின்மை நீக்கம் *iyaibiṉmai-nīkkam,* பெ. (n.) ***தன்னோடியை பின்மை நீக்கும் தன்மை;*** non-restrictive attribution of a quality to a noun by a purely descriptive epithet, as செம்மை in செஞ்ஞாயிறு which only defines ஞாயிறு without carrying with it any implication that there are other suns. (செ.அக.).

[இயைபு + இன்மை + நீக்கம்.]

இயை *iyai,* பெ. (n.) ***வாழை*** (அக.நி.); plantain. (செ.அக.).

[இள் - இள - இளை - இயை (கொ.வ.).]

இயைந்துரை *iyainturai,* பெ. (n.) ***பல பொருள்களின் வரையறைப்பட்ட தொகுதி*** (மணி.30,193); collection of several distinct objects. (செ.அக.).

[இயை → இயைந்து + உறை = இயந்துறை → இயைந்துரை.]

இயைபின்மை நீக்கல் *iyaibiṉmai-nīkkal,* பெ. (n.) ***இயைபின்மை நீக்கம்*** (தொல்.சொல்.182,சேனா.) பார்க்க; see *iyaibiṉmai-nīkkam* (செ.அக.).

[இயைபு + இன்மை + நீக்கல்.]

இயைபின்மையணி *iyaibiṉmai-y-aṇi,* பெ. (n.) ***பொருள் தனக்குத் தானே யுவமை என்று உரைக்கும் அணி*** (அணியி.2.); figure of speech in which a thing is compared only to itself as being peerless and as having nothing else comparable to it. (செ.அக.).

[இயைபு + இன்மை + அணி.]

இயைபு *iyaibu,* பெ. (n.) 1. ***புணர்ச்சி*** (தொல்.சொல். 308); combination, union. 2. ***பொருத்தம்;*** harmony. "பண்ணென் னாம் பாடற் கியைபின்றேல்" (குறள். 573). 3. ***இது கேட்டபின் இது கேட்கத்தக்கதென்னும் யாப்பு*** (நன்.சிறப்புப்.விருத்.); sequence of study; appropriateness, logical arrangement of subject matter which determines the order in which topics should be taken up for study. 4. ***எழுத் தொத்துவரும் தொடை வகை.*** (காரிகை, உறுப்.16.); rhyme. 5. ***மெல்லின இடையின மெய்களுள் ஒன்றில் முடியும் செட்யுட்க ளைக் கொண்ட வனப்பு வகை*** (தொல்.பொ.552) (ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்ற பதினொரு புள்ளியீறாய் வந்த பாட்டு); long, continuous, narrative poem consisting of verses which end in any one of the possible consonantal endings, (செ.அக.).

[இயை - இயைவு - இயைபு.]

இயைபுத்தொடை *iyaibu-t-toḍai,* பெ. (n.) ***ஐந்தொடை யுள்ளொன்று; ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது*** (இலக்.வி.723); rhyming, concatenation in which the last letter of each line of a verse is the same; one of five toḍais. (செ.அக.).

[இயைபு + தொடை.]

இயைபுருவகம் *iyaiburuvagam,* பெ. (n.) ***உருவக வணியு ளொன்று*** (தண்டி.35, உரை); a kind of metaphor. (செ.அக.).

Skt. rūpaka.

[இயைபு + உருவகம்.]

இயைபுவண்ணம் *iyaibu-vaṇṇam,* பெ. (n.) ***இடை யெழுத்துகள் மிகுந்து வருஞ் சந்தம்*** (தொல்.பொ.

530); rhythm produced by the frequent use of the consonants of the medial class. (செ.அக.).

[இயைபு + வண்ணம்.]

இயைபுவனப்பு *iyaipu-vaṉa-p-pu,* பெ. (n.) ***செய்யுள் வனப்பெட்டினொன்று: அஃது*** இடைமெல்லின வொற்றீற்றிற் பயின்று வருவது (ஆ.அக.); figure of speech.

[இயைபு + வனப்பு.]

இயைமே *iyaimē* பெ. (n.) ***இயை*** பார்க்க ***வாழைப்பொது*** (மலை); plantain, musa. (செ.அக.).

[இயை → இயைமே. (கொ.வ.).]

இயைவு *iyaivu,* பெ. (n.) 1. ***சேர்க்கை*** (திவா.); union, joining together. (செ.அக.). 2. ***பொருத்தம்*** (ஆ.அக.); harmony, appropriateness. 3. ***இசைவு*** (ஆ.அக.); consent, willingness.

[இயை → இயைவு.]

இர் *ir,* இடை. (part), 1. ***முன்னிலைப் பன்மை ஈறு;*** suffix denoting second person plural. "வந்தனிர்". 2. ***படர்க்கைப்பன்மை ஈறு;*** suffix denoting third person plural. கேளிர், பெண்டிர். (செ.அக.).

[நீர் → ஈர் → இர்.]

இர். விகுதி முன்னிலையாயின் வினையில் வரும். படர்க்கை யாயின் பெயரில் வரும்.

இர[1] *ira,* பெ. (n.) ***இரவு;*** night. "இர வரவுரைத்தது" (திருக்கோ.156, கொளு.) (செ.அக.).

[இரவு - இர.]

இர[2]**-த்தல்** *ira-,* 3 செ.குன்றாவி. (v.t.) 1. ***பிச்சையெடுத் தல்;*** to beg alms, solicit aid, seek livelihood by begging. "இரந்து முயிர்வாழ்தல் வேண்டின்" (குறள்.1062). 2. ***வேண்டுதல்;*** to pray, beseech, entreat, solicit. "இனி யுன்னை யென்னி ரக்கேனே" (திருவாச.22,5). (செ.அக.).

ம. இரக்குக; க. எரெ; தெ. எரவு (கடன்); து. எரவு; குவி. ரீசல லசலி, ரிஹனை; குட. எர.

[இள் → இள → இர.]

இரக்கக் குறிப்பு *irakka-k-kuṟippu,* பெ. (n.) ***பரிவு துயரம் இவைகளைக் குறிக்கும் மொழி*** (சீவக.295, உரை.); interjection expressive of pity or of grief. (செ.அக.).

[இரக்கம் + குறிப்பு.]

இரக்கம்[1] *irakkam,* பெ. (n.) 1. ***அருள்;*** mercy, grace, commiseration. "இரக்கமுடை யிறைய வனூர்" (தேவா. 145,9). 2. ***மனவுருக்கம்;*** pity, compassion; melting of heart, as of a mother at the sight of her child in distress, or of a cow for her calf. 3. ***மன வருத்தம்;*** regret, sorrow. "உரித்தென மொழிப வாழ்க்கையு ளிரக்கம்" (தொல்.பொ.226). 4. ***ஒலி;*** sound; squall, as of a pig. "பன்றி வாய்விடு மிரக்கமும்" (திருவிளை.பரிநரி. 31) (செ.அக.).

ம. இரக்கம்; க. எரக.

[இள → இர → இரங்கு → இரக்கம்.]

இரக்கம்[2] *irakkam,* பெ. (n.) ***ஈடுபாடு*** (திவ்.பெரியாழ். 3,6,10, வியா.பக்.696); absorption, involvement, state of being engrossed. (செ.அக.).

[இரங்கு → இரக்கம்.]

இரக்கி-த்தல் *irakki-,* 11 செ.குன்றாவி. (v.t.). ***பாதுகாத் தல்;*** to protect, safeguard. "இரக்கிக்கை யாலே யுயிரினை" (சைவச.பொது.204). (செ.அக.).

Skt. rakṣ.

[இரங்கு → இரக்கு → இரக்கித்தல் > Skt.-ரட்சித்தல்.]

இரகு *iragu,* பெ. (n.) ***கதிரவக் குலத்தரசருள் புகழ் பெற்ற ஒருவன்;*** name of a celebrated king of the Solar race and an ancestor of Rāma. (செ.அக.).

Skt. raghu.

[இரவி → இரவு → இரகு.]

இரகுநாத சேதுபதி *iragu-nāda-šēdu-padi,* பெ. (n.) ***இருநூற்று முப்பது ஆண்டுகட்கு முன்னர் இராமநாத புரத்தில் அரசு செய்த சேது மன்னர்*** (ஆ.அக.); Prince of Ramnad some 250 years ago.

[இரகுநாதன் + சேதுபதி.]

இரங்கல் *iraṅgal,* பெ. (n.) 1. ***அழுகை*** (திவா); weeping, crying. 2. ***நெய்த லுரிப்பொருள்*** (தொல்.பொ.14); lady's bemoaning her lover's absence, a mood appropriate to the maritime tracts; one of five uri-p-poruḷ. 3. ***ஒலி*** (திவா); sound, noise. 4. ***யாழ்நரம்போசை*** (பிங்.); sound of the yāḻ (செ.அக.). 5. ***துன்பப்பாடல்*** (ஆ.அக.); elegy, song of lamentation, esp. for the dead.

[உள் → இள் → இர → இரங்கு → இரங்கல்.]

இரங்கற்பா *iraṅgaṟpā,* பெ. (n.) ***துன்பியற் பாடல்கள்;*** elegy. (செ.அக.).

[இரங்கல் + பா.]

இரங்கு[1]**-தல்** *iraṅgu,* 15 செ.கு.வி.(v.i.) 1. ***கூறுதல்;*** tell, speak. "புலம்பெலாந் தீர்க்குவேமன் னென்றிரங்குபு" (கலித்.83-23). 2. ***ஈடுபடுதல்;*** to be absorbed, involved. "இரங்குங் கூம்பும்" (திவ்.பெரியாழ்.3,6,10).

[இள → இர → இரங்கு, இரங்குதல் = மனமிரங்கிக் கூறுதல்.]

இரங்கு[2]**-தல்:** *iraṅgu-,* 15 செ.கு.வி (v.i) 1. ***பரிவு காட்டு;*** to feel pity. "சிற்றுயிர்க் கிரங்கிக் காய்சின வால முண்டாய்" (திருவாச.6,50). 2. ***அருள் செய்தல்;*** to condescend, to show grace. "அரக்கர்க் காற்றா தெய்தின னிரங்கல் வேண்டும்" (ஞானவா.வைராக். 43). 3. ***மனமழிதல்;*** to be aggrieved; to be distressed in mind. "இரங்கி நாடொறும் வாய்வெரீஇ" (திவ். திரு

வாய்.6,5,9). 4. ***அழுதல்*** (திவா.); to weep, cry. 5. ***கழிவிரக்கம்;*** to repent, feel sorry. ''எற்றென் றிரங்குவ செய்யற்க'' (குறள்.655). 6. ***ஒலித்தல்;*** to roar. ''இரங்கிவீ ழருவி'' (திருவிளை.நாகமெய்.17). 7. ***யாழொலித்தல்*** (திவா.); to sound as a yāḻ.

ம. இரங்குக; க. எரத; (இளகிய மனநிலை).

[இள → இர → இரங்கு. இரங்குதல் = மனமிளகுதல், வருந்துதல், அன்புகாட்டுதல்.]

இரங்குக் கெளிறு *iraṅgu-k-keḷiṟu,* பெ. (n.) ***கெளிற்று மீன்வகை;*** brownish estuary fish. (செ.அக.).



இரங்குக் கெளிறு

[இரங்கும் + கெளிறு. இரங்கும் = மனமிளகத்தக்க ஓசையுண் டாக்குதல்.]

இரங்குகுடி குன்றநாடன் *iraṅgukuḍi kuṉṟa nāḍaṉ,* பெ. (n.) ***கடைக்கழக மருவிய தமிழ்ப்புலவர்;*** one of the poets of the Sangam age.

[இரங்கு + குடி + குன்றம் + நாடன். இரங்குகுடி என்பது குடிப்பெயராகலாம். எளியோர்க்கும் இரங்கும் கொடைத் தன்மை பெற்ற குடி இரங்குகுடி.]

இரங்கேச வெண்பா *iraṅgēśa veṇbā,* பெ. (n.) ***அறநெறிகளைக் கதைகளுடன் கூறும், நேரிசை வெண்பாவாலான சிற்றிலக்கியம்;*** name of a poem in the nērišaiveṇbā metre, composed by Cāntakavirāyar and addressed to God Iraṅgēšaṉ, the presiding deity in the shrine at Sriraṅgam, and consisting of verses the latter half of which is some couplet chosen from the Kural while the first half giving an illustrative story to enforce the moral of the Kural couplet. (செ.அக.).

[அரங்கு + ஈசன் + வெண்பா.]

இரங்கேசன்: *iraṅgēšaṉ,* பெ. (n.) ***அரங்கநாதன்;*** Viṣṇu, the Lord of Sriraṅgam. (செ.அக.).

[அரங்க + ஈசன். அரங்கேசன் - வ. ரங்கேசன் - இரங்கேசன் - த. ஈசன் = தலைவன்.]

இரஞ்சகம் *irañjagam,* பெ. (n.) ***துமுக்கியின் பற்றுவாய் மருந்து*** (வின்.); priming powder. (செ.அக.).

தெ. ரஞ்சகமு.

[இலஞ்சு → இலஞ்சகம் → இரஞ்சகம் = செந்நிறமுடையது.]

இரஞ்சனம் *irañjaṉam,* பெ. (n.) 1. ***செஞ்சாந்து*** (நாநார்த்த.); red sanders. (செ.அக.). 2. ***திரிவாய் மருந்து*** (ஆ.அக.); medicine.

[இலஞ்சனம் - இரஞ்சனம்.]

இரட்டபாடி *iraṭṭa-pāḍi,* பெ. (n.) ***சோழரால் வெல்லப் பட்ட நிலப்பகுதி;*** a territory conquered by Cholas.

[இரட்டம் + பாடி.]

இரட்டம் *iraṭṭam,* பெ. (n.) ***பெருநிலப்பகுதி, நாடு;*** land mass, country.

[இரு → இருமை = பெருமை, பெரும்பரப்பு. ஓ.நோ. இரு நிலம். இரு → இரட்டு → இரட்டம் > Skt. Rastra.]

இரட்டர் *iraṭṭar,* பெ. (n.) 1. ***இராட்டிர கூட அரசர்;*** Rāṣṭrakūṭa kings. ''ஒண்டிற லிரட்ட மண்டலம்'' (சோழ வழி.பக்.91) (செ.அக.). 2. ***வணிகர்*** (வைசியர்); mercantile community. (ஆ.அக.).

Skt. rāṣṭra kūṭa

[இரு → இருமை = பெருமை, பரப்பு, பகுதி. இரு → இரட்டும் → இரட்டம் = பரந்த நிலப்பகுதி. இரட்டம் → இரட்டர் = பெருநில மன்னர், இரட்டப்பகுதி வணிகர்.]

இரட்டல் *iraṭṭal,* பெ. (n.) 1. ***இரட்டிக்கை*** (நன்.136); doubling. 2. ***ஒலிக்கை*** (பிங்); sounding, roaring. 3. ***யாழ்நரம்போசை*** (பிங்); sound of the strings of a yāḻ. (செ.அக.).

ம. இரட்டி.

[இரட்டு → இரட்டல்.]

இரட்டாங்காலி *iraṭṭāṅ-kāli,* பெ. (n.) ***இரட்டையாகக் கிளைக்கும் மரம்*** (யாழ்ப்); double tree with single trunk. esp. a freak of the palmyra species. (செ.அக.).

[இரண்டு → இரட்டாம் + காலி.]

இரட்டி[1]-த்தல் *iraṭṭi-,* 4 செ.கு.வி.(v.i) ***இகழ்தல்;*** to slight, despise. ''இதை நாம் இரட்டிக்கப் போகாது.'' (தமிழறி.43) (செ.அக.).

[இரட்டுதல் = ஒலித்தல், முழக்குதல், பழி கூறித்திரிதல்.]

இரட்டி[2]-த்தல் *iraṭṭi-,* 11 செ.குன்றாவி (v.t.) 1. ***இரு மடங்காக்குதல்;*** to double. 2. ***திரும்பச் செய்தல்;*** to repeat; to continue crosswise, as ploughing. ''அடியிரட் டித் திட்டாடு மாட்டு'' (பு.வெ.2,8). 4. செ.கு.வி. (v.i.) 1. ***ஒன்று இரண்டாதல்;*** to be doubled. மகரம் இரட்டித்தது. 2. ***மீளவருதல்;*** to return, relapse. 'நோய் இரட்டிக் கின்றது' (வின்). 3. ***மாறுபடுதல்;*** to differ from; to be discrepant; to disagree. 'இந்தச் சாட்சி அந்தச் சாட்சிக்கு இரட்டிக்கிறது'' (வின்.) (செ.அக.). 4. ***ஒவ் வாமை;*** unfitness. (ஆ.அக.).

ம. இரட்டிக்குக; தெ. ரெட்டின்சு.

[இரு → இரட்டி.]

இரட்டி[3] *iratti,* பெ. (n.) 1. ***இருமடங்கு;*** double the quantity; twice as much. "அன்பிரட்டி பூண்டது" (கம்ப ரா.சூர்ப்ப.133). 2. ***இணைக்கை*** (சிலப்.3,20,அரும்.); gesture with both hands. (செ.அக.).

தெ. ரெட்டி; **ம.** இரட்டி; இரட்டிப்படி.

[இரு → இரட்டி (இருமடங்கு).]

இரட்டி[4] *iratti,* பெ. (n.) ***ரெட்டியார் எனப்படும் தெலுங்கு வேளாளர்;*** Telugu caste of cultivators. "இரட்டியாம் பண்ட குலத்தின்" (வெங்கையு.64) (செ.அக.).

தெ. ரெட்டி.

[இரு → இருமை = பெருமை, உயர்வு. இரு → இரட்டி = பெரியோர், பெருமைக்குரியோர். ஒ.நோ: க. இரியர் = பெரியோர். இனி, அரசர்களின் அரண்மனைகளில் கவரி வீசுவோரும், இசைக்கருவிகள் முழக்குவோரும் இரட்டிகள் எனப் பெயர் பெற்றிருத்தலால் அப்பணிகளை ஒருகாலத்தில் செய்தோரும் அப்பெயர்க்குரியராம்.]

இரட்டித்துச் சொல்லு-தல் *irattittu-c-collu-,* 8 செ.குன்றாவி. (v.t.) 1. ***மீட்டுங் கூறுதல்;*** to repeat, reiterate. 2. ***மாறுபடச் சொல்லுதல்*** (வின்.); to make a discrepant statement or a statement different from that given by some one else. (செ.அக.).

[இரட்டு → இரட்டித்து + சொல்.]

இரட்டிப்பு *irattippu,* பெ. (n.) ***இருமடங்கு*** (கொ.வ.); double quantity, duplication, doubling. (செ.அக.)

ம. இரட்டிப்பு.

[இரு → இரட்டு → இரட்டிப்பு.]

இரட்டு[1] *irattu,* பெ. (n.) ***இரட்டை நூலால் நெய்யப் பட்ட கம்பளி அல்லது போர்வை;*** dungaree, double - threaded cloth, sack cloth.

பட. ரட்டு; ம. இரட்டு.

[இரு → இரட்டு.]

இரட்டு[2]**-தல்** *irattu-,* 5 செ.கு.வி.(v.i) 1. ***இரட்டித்தல்;*** to double, as a consonant in sandhi or combination of words. "டற வொற்றிரட்டும்" (நன்.183). 2. ***மாறி யொலித்தல்;*** to sound alternately, as the beating of a double drum or the bells on an elephant. "இலங்கு வெள்ளருவியொடு சிலம்பகத் திரட்ட" (மதுரைக்.299). 3. ***ஒலித்தல்;*** to sound. "நுண்ணீராகுளி யிரட்ட" (மது ரைக்.606). 4. ***அசைதல்;*** to wave, as a leaf; to oscillate. "மென்கா லெறிதலி னிரட்டல் போலும்" (கந்தபு. திருவா.111). 5 செ.குன்றாவி (v.t.) 1. ***வீசுதல்;*** to wave alternately on opposite sides, as fly-whisks in a procession. "குளிர்சாமரை யிருபாலு மிரட்ட" (பாரத. அருச்சு னன்றவ.150). 2. ***கொட்டுதல்;*** to cause to sound; beat, as a drum. "அரசுடை வாணன் .... குடமுழ விரட்ட" (கல்லா.21). 3. ***உச்சரித்தல்;*** to pronounce; utter. "அஞ்செழுத்துக் குறையா திரட்ட" (கல்லா.57). 4. ***தெளித்தல்;*** to sprinkle, as water. "நீரை யிரட்டிக் கொள்ளுமா போலே" (திவ்.திருக்குறுந்.1,வ்யா). (செ.அக.).

[இரு → இரட்டு = இருபால் வீசுதல், இரண்டையும் மோதவிட்டு ஒலித்தல், கொட்டுதல், அசைதல், அசைத்தல்.]

இரட்டு[3] *irattu,* பெ. (n.) 1. ***இரட்டையாயிருக்கை;*** doubleness, twoness. "இரட்டைக்கிளவி யிரட்டிற்பிரிந் திசையா" (தொல்.சொல்.48). 2. ***ஒருவகை முருட்டுத் துணி*** (சிலப்.14,108,உரை); dungaree, as double-threaded cloth, sackcloth. 3. ***ஒலி;*** noise, vibrating sound. "முழக்கிரட்டொலிகலி" (நன்.459).

[இரண்டு → இரட்டு = இரட்டை நூலால் நெய்த துணி. இரண்டு பக்கமும் அசைத்து ஒலி எழுப்புதல்.]

இரட்டுமி *irattumi,* பெ. (n.) ***பறைவகை*** (வின்.); a kind of drum. (செ.அக.).

[இரட்டு → இரட்டுமி.]

இரட்டுறக் காண்டல் *irattura-k-kāndal,* பெ. (n.) ***ஐயக்காட்சி;*** indistinct perception; production of double images; problematical or hypothetical knowledge. "திரியக் காண்டலும் இரட்டுறக்காண்டலும் தெளியக்காண்டலு மெனக் காட்சி மூவகைப்படும்" (சி.போ.பா.9, பக்.190) (செ.அக.).

[இரண்டு + உற → இரட்டுற + காண்டல்.]

இரட்டுறமொழிதல் *irattura-molidal,* பெ. (n.) ***இரு பொருள்படக் கூறுமோர் உத்தி*** (நன்.14); making intentionally a statement capable of being interpreted in two ways, one of 32 uttis. (செ.அக.).

[இரண்டு + உற = இரட்டுற + மொழிதல்.]

இரட்டுறல் *irattural,* பெ. (n.) ***இருபொருள்படக் கூறு தல்*** (மாறன.299,உரை); paronomasia, in which a word or phrase has a double sense. (செ.அக.).

[இரண்டு + உறல் = இரட்டுறல்.]

இரட்டுறு-தல் *iratturu-,* செ.கு.வி.(v.i) 1. ***இரு பொருள்படுதல்;*** to be ambiguous. 2. ***ஐயுறுதல்;*** to be in doubt. "இரட்டுற வெண்ணலிர்" (சேதுபு.பலதீ. 14.). 3. ***மாறுபடுதல்;*** to change, metamorphose. "தானத்து மணியுந் தானு மிரட்டுறத் தோன்றினானே" (சீவக.387).

[இரண்டு + உறுதல் = இரட்டுறுதல்.]

இரட்டை *irattai,* பெ. (n.) 1. ***சோடு;*** pair. 2. ***தம்பதிகள்*** (சூடா.); married couple. 3. ***இரட்டைப் பிள்ளைகள்;*** twins. 4. ***இரண்டு ஒன்றானது;*** two things naturally conjoined, as a double fruit. 5. ***இரட்டையெண்;*** even numbers, as 2,4,6 opp.to ஒற்றை. 'ஒற்றையிரட்டை விளையாடுதல்'. 6. ***அரையாடை மேலாடைகள்;*** pair of cloths, one tied round the waist and the other thrown over the shoulders. "இரட்டைகளமுக்கானாலும் மடிகு

லையாமல் வைக்குமா போல" (ஈடு.5,9,3). 7. **துப் பட்டி;** double sheet. "மேலே சுற்றின இரட்டைகளும்" (ஈடு.3,5,4). 8. **ஆடவை ஓரை** (திவா.); sign Gemini in the Zodiac.9. **ஆடவைத் திங்கள்** (இராசவைத்.71); month Āṉi, June-July. 10. **வேதமோதுமுறைகளு ளொன்று** (சி.சி.8,11, மறைஞா); particular method of reciting the Vēdas. (செ.அக.).

ம. இரட்ட; க. இர்மெ, இம்மெ; தெ. ரெட்ட, ரெண்ட; துட. இம், இமு; குட. தண்டி, இம்ப; து. ரட்டு; கொலா. இன்தின்; நா. இன்திங்; பர். இர்டு, இரொடு; கோண். ரண்டெ, இருர்; கூ. ரிண்டெ; குவி. ரிண்டி; குர். இர்ம்ப், ஏண்டு; மால். இவ்ர், இஸ்; பிரா. இரா; பட. ரட்டெ.

[இரு → இரட்டை.]

இரட்டை[2] *iraṭṭai,* பெ. (n.) **முத்துவகை** (S.I.I.ii, 22); a kind of pearl. (செ.அக.).

[இரு → இரட்டை.]

இரட்டை அக்கமணி *iraṭṭai-akkamaṇi,* பெ. (n.) **இரட்டைமணி, அக்க மணி;** double beads of rudra's tears. (சா.அக.).

[இரு → இரட்டை + அக்கமணி.]

இரட்டைக் கத்தி *iraṭṭai-k-katti,* பெ. (n.) **இரண்டு அலகுள்ள கத்தி** (ஆ.அக.); double bladed knife. (செ.அக.).



இரட்டைக் கத்தி

[இரண்டு → இரட்டை + கத்தி.]

இரட்டைக்கதவு *iraṭṭai-k-kadavu,* பெ. (n.) **இரண்டு பிரிவாயுள்ள கதவு;** double doors. (செ.அக.).

[இரட்டை + கதவு.]

இரட்டைக்கரளன் *iraṭṭai-k-karaḷaṉ,* பெ. (n.) **மிகவும் திடமான ஆள்;** very strong man.

[இரட்டை + கரளன்.]

இரட்டைக் கருப்பம் *iraṭṭai-k-karuppam,* பெ. (n.) **இரண்டு பிள்ளை யுண்டா யிருத்தல்;** double pregnancy-twin pregnancy. (சா.அக.).

[இரட்டை + கருப்பம்.]

இரட்டைக் கழலை *iraṭṭai-k-kaḻalai,* பெ. (n.) **ஒன்றாக அல்லது ஒன்றன்பின் ஒன்றாக எழும்பும் கழலைக் கட்டி;** couple of contiguous tumours cropping up simultaneously or one after the other. (சா.அக.).

[இரட்டை + கழலை.]

இரட்டைக்கழு *iraṭṭai-k-kaḻu,* பெ. (n.) **பேரழிவு** (சேரநா.); double gallows, great peril.

ம. இரட்டக்கழு.

[இரட்டை + கழு.]

இரட்டைக் கற்றூண் *iraṭṭai-k-kaṟṟūṇ,* பெ. (n.) **இரண்டு கற்களால் ஆகிய தூண்** (C.E.M.); column assembled with two rocks. (செ.அக.).

[இரட்டை + கல் + தூண்.]

இரட்டைக்கிளவி *iraṭṭai-k-kiḷavi,* பெ. (n.) **இரட்டை யாக நின்றே பொருளுணர்த்துஞ் சொல்** (தொல். சொல்.48); words framed by doubling of certain syllables. எ-டு, கலகல, மளமள. (செ.அக.).

[இரட்டை + கிளவி.]

இரட்டைக்குச்சி *iraṭṭai-k-kucci,* பெ. (n.) **சிலம்பக் கலை வகை** (மதி.களஞ். 1,66); art of fencing with quarter staves in both hands.

[இரட்டை + குச்சி.]

இரட்டைக் குண்டட்டிகை *iraṭṭai-k-kuṇḍaṭṭigai,* பெ. (n.) **கழுத்தணி வகை;** necklace of double gold beads. (செ.அக.).

ம. இரட்டக்குழல்.

[இரட்டை + குண்டு + அட்டிகை.]



இரட்டைக் குண்டட்டிகை

இரட்டைக்குலுக்கி *iraṭṭai-k-kulukki,* பெ. (n.) **நெடுங் கோடுள்ள புடைவை வகை** (இ.வ.); a kind of saree, with long stripes. (செ.அக.).

[இரட்டை + குலுக்கி.]

இரட்டைக்குறுக்கு *irattai-k-kurukku,* பெ. (n.) ***மாட்டுக் குற்ற வகை*** (பெரியமாட்.141); defect in cattle. (செ.அக.).

[இரட்டை + குறுக்கு.]

இரட்டைக்கை *irattai-k-kai,* பெ. (n.) ***இணைக்கை*** (சிலப்.3,18,உரை) பார்க்க; gesture with both the hands.

[இரட்டை + கை.]

இரட்டைக் கொடியடுப்பு *irattai-k-kodi-y-aduppu-,* பெ. (n.) ***அடுப்புவகை*** (இந்துபாக.பக்.66): இது மூன்று பிரிவாக இருக்கும்; oven with two branches from the main chamber for the passage of flames, for the cooking of side dishes along with rice. (செ.அக.).



இரட்டைக் கொடியடுப்பு



இரட்டைக் கொடியடுப்பு

இரட்டைச் சிரட்டை *irattai-c-cirattai,* பெ. (n.) ***இரட்டைக் கொட்டாங் கச்சி*** (வின்.); shell with a scaly lining, from its looking like a double shell. (செ.அக.).

[இரட்டை + சிரட்டை.]

இரட்டைச் சிவப்பலரி *irattai-c-civappalari,* பெ. (n.) ***இரட்டைச் சிவப்புப் பூக்களை யுடைய அலரிச்செடி;*** oleander rosebay. (சா.அக.).

[இரட்டை + சிவப்பு + அலரி.]

இரட்டைச் சின்னம் *irattai-c-cinnam,* பெ. (n.) ***இரட்டையான ஊதுகுழல் வகை*** (தக்கயாகப்.344, உரை); double clarion.

[இரட்டை + சின்னம்.]

இரட்டைச்சுழி *irattai-c-culi,* 1. ***இருசுழி*** (வின்.); two curls, as marks on horses and cattle. 2. ***ஐகார வொலி யைக் குறிக்கும் "ை" என்னும் சுழி;*** secondary consonantal symbol. "ை" of the vowel 'ஐ' from its being a double loop. (செ.அக.).

[இரட்டை + சுழி.]

இரட்டைச் செம்பரத்தை *irattai-c-cemparattai,* பெ. (n.) ***இரட்டைப் பூக்களையுடைய செம்பரத்தைச் செடி;*** double shoe flower. (சா.அக.).

[இரட்டை + செம்பரத்தை.]

இரட்டைச் சொல்லு *irattai-c-collu,* பெ. (n.) ***இரட் டையாக வருங்குறிப்புச் சொல்*** (தக்க யாகப்.415, உரை); reduplicated onom. word (செ.அக.).

[இரட்டை + சொல் + உ. சொல்லு என்பது கொச்சை வழக்கு.]

இரட்டைத் தலையன் *irattai-t-talaiyan,* பெ. (n.) 1. ***இரண்டு தலையைப் பொருத்தியதுபோல் நடுவில் பள்ளமாகவுடைய தலையையுடையவன்;*** one having a skull with two prominences and a depression in between. 2. ***இருதலையையுடைய உரு;*** monster fetus (male) with two heads-Dicephalous. (சா.அக.).

[இரட்டை + தலையன்.]

இரட்டைத் தலைவலி *irattai-t-talaivali,* பெ. (n.) ***இரண்டு பக்கமும் வலியை யுண்டாக்கும் தலைவலி;*** head-ache affecting both the sides of the head. It is opposed to ஒற்றைத் தலைவலி, pain in one side of the head-Hemicrania. (சா.அக.).

[இரட்டை + தலை + வலி.]

இரட்டைத் தவிசு *irattai-t-tavišu,* பெ. (n.) ***இருவர் இருத்தற்கு உரிய ஓரிருக்கை*** (பெருங்.உஞ்சைக்.34, 42); double seat, seat for two. (செ.அக.).

[இரட்டை + தவிசு.]

இரட்டைத் தாப்பு *irattai-t-tāppu,* பெ. (n.) ***இருமுறை அளத்தல்; இருவேறு அணுகு முறை*** (சேரநா); two approaches, duplicity, double-dealing.

ம. இரட்டத்தாப்பு.

[இரட்டை + தாப்பு.]

இரட்டைத்தாளம் *irattai-t-tālam,* பெ. (n.) ***தாளவகை;*** a kind of tālam. "இரட்டைத் தாளத்திற்குப் பொருந்த ஒரு பாட்டினை யான் பேணிப் பாடுதற்கு முன்னே" (பொருந.71,உரை). (செ.அக.).

[இரட்டை + தாளம்.]

இரட்டைத் திருமுகம் *irattai-t-tirumugam,* பெ. (n.) ***முன்னாளில் திருவிதாங்கூர் மன்னர்கள் சிறப்பான தொண்டு புரிந்தோர்க்கு நல்கி வந்த ஓர் சிறப்புப் பெயர்*** (சேரநா.); title of honour awarded by the sovereigns of Travancore to persons who rendered meritorious service.

ம. இரட்டத்திருமுகம்.

[இரட்டை + திருமுகம்.]

இரட்டைத் தேங்காய் *irattai-t-tēngāy,* பெ. (n.) ***ஒரு காயுள் இரண்டு விதையுள்ள தேங்காய்*** (சேரநா.); double-coconut. Lodoicea Sechelliana.

ம. இரட்டத் தேங்க.

[இரட்டை + தேங்காய்.]

இரட்டைத்தொடை *irattai-t-todai,* பெ. (n.) ***ஓரடி முழுதும் ஒரு சொல்லே வரத்தொடுப்பது*** (காரிகை, உறுப்.18,உரை); concatenation in which the same word is repeated throughout a line of verse (pros.) (செ.அக.).

[இரட்டு - இரட்டை + தொடை.]

இரட்டை நந்தியாவட்டம் *irattai-nandiyā-vattam,* பெ. (n.) ***அடுக்கு நந்தியாவட்டம்;*** Indian rose bay-It is so called from its double petals. (சா.அக.).

[இரட்டை + நந்தியாவட்டம்.]

இரட்டை நாக்கோளி *irattai-nākkōli,* பெ. (n.) ***இரட்டை நாக்குடைய உடும்பு;*** a guana having double or forked tongue. (சா.அக.).

[இரட்டை + நா + கோளி. கொள் → கோள் → கோளி = இரையை விழுங்கிக் கொள்ளும் இயல்புடையது.]

இரட்டை நாடி *irattai-nādi,* பெ. (n.) ***தடித்த உடம்பு*** (கொ.வ.); corpulent body. (செ.அக.).

[இரட்டை + நாடி.]

இரட்டைப்படி *irattai-p-padi,* பெ. (n.) ***இரண்டு படிகள் உள்ள இடம்: அலுவலகம்*** (சேரநா.); place with two steps, office.

ம. இரட்டப்படி.

[இரட்டை + படி.]

இரட்டைப்படை *irattai-p-padai,* பெ. (n.) 1. ***இரட்டிப்பு*** (கொ.வ.); double. 2. ***இரட்டைப்பட்ட எண்*** (கொ.வ); even number (செ.அக.).

[இரட்டை + படை.]

இரட்டைப்பத்தாக்கு *irattai-p-pattākku,* பெ. (n.). ***திருவிதாங்கூரின் ஒரு பழைய நாணயம்; 264½. பணம் மதிப்பு*** (சேரநா.); coin used in Travancore in olden times. (செ.அக.).

ம. இரட்டப்பத்தாக்கு.

[இரட்டை + பத்தாக்கு.]

இரட்டைப்பாக்கு *irattai-p-pākku,* பெ. (n.) ***இரு கண்ணுள்ள பாக்கு*** (வின்.); arecanut with two eyes or germ pores (ஆ.அக.).

[இரட்டை + பாக்கு.]

இரட்டைப்பிள்ளை *irattai-p-pillai,* பெ. (n.) 1. ***ஒரே கருப்பத்தினின்றும் தனித்தனியாக ஒரே நேரத்தில் பிறந்த இருவர்;*** twins. 2. ***இரட்டையாகக் கிளைத்த தென்னை அல்லது கமுகு;*** double shoot young coconut or areca-nut tree. (செ.அக).

[இரட்டை + பிள்ளை.]

இரட்டைப்பூட்டு *irattai-p-püttu,* பெ. (n.) 1. ***இரு முறைபூட்டும் பூட்டு*** (கொ.வ.); double lock, requiring separate action for each part. 2. ***பாதுகாப்புக்காக இடும் இருவேறு பூட்டு*** (கொ.வ.); two locks put on for greater security. (செ.அக.).

[இரட்டை + பூட்டு.]

இரட்டைப்பூரான் *irattai-p-pūrān,* பெ. (n.) ***சதங்கைப் பூரான்*** (வின்.); a species of large centipede. (செ.அக.).

[இரட்டை + பூரான்.]

இரட்டைப்பேய்மருட்டி *irattai-p-pēy-marutti,* பெ. (n.) ***வெதுப்படக்கி;*** soft woolly plant. (செ.அக.).

இரட்டைப் பேய்மருட்டி

ம. இரட்டப்பே மருட்டி.

[இரட்டை + பேய் + மருட்டி.]

இரட்டைப்பேய்மிரட்டி *irattai-p-pēy-miratti,* பெ. (n.) ***இரட்டைப்பேய் மருட்டி*** பார்க்க; see *irattai-p-pēy-marutti* (பாலவா.494). (செ.அக.).

[இரட்டை + பேய் + (மருட்டி) → மிரட்டி.]

இரட்டைப்பேர் *iratti-p-pēr,* பெ. (n.) 1. ***இட்டபெயரோடு சேர்க்கும் மற்றொருபேர்;*** surname. 2. ***நகைச் சுவையாக விளிக்கும் பெயர்;*** nick name (சேரநா.).

ம. இரட்டப்பேரு.

[இரட்டை + பேர். பெயர் → பேர்.]

இரட்டைப் பேறு *iratti-p-pēṟu,* பெ. (n.) ***இரட்டைப் பிள்ளை பெறுதல்;*** giving birth to twins. (சா.அக.).

[இரட்டை + பேறு.]

இரட்டைபிரமட்டை *irattai piramattai,* பெ. (n.) ***இரட்டைப்பேய் மருட்டி*** பார்க்க; see *irattai-p-pēy-marutti.* (சா.அக).

[இரட்டை + பிரமட்டை.]

இரட்டை மஞ்சட் செம்பரத்தம் *irattai-mañjat sembarattam,* பெ. (n.) ***இரட்டை மஞ்சட் பூக்களை யுடைய செம்பரத்தஞ்செடி;*** double - buff shoe -flower - Hibiscus Rusasinensis. (flara plona) (சா.அக.).

[இரட்டை + மஞ்சள் + செம்பரத்தம்.]

இரட்டை மண்டை *irattai-mandai,* பெ. (n.) ***அகல மாய்ப் பருத்த தலை*** (கொ.வ.); huge head. (செ.அக.).

[இரு → இரட்டை. இரட்டை + மண்டை. மண்டை = மட்கலம், மட்கலம் போன்ற தலையோடு.]

இரட்டைமணி *irattai-mani,* பெ. (n.) ***அணிவகை*** (I.M.P.Tj.305); ornament. (செ.அக.).

[இரு → இரட்டை + மணி.]

இரட்டைமணிமாலை *irattai-mani-mālai,* பெ. (n.) ***அந்தாதித் தொடையாலமைந்த சிற்றிலக்கிய வகை; 20 பாடல்களைக் கொண்டது. வெண்பாவாலும், கட்டளைக் கலித்துறையாலும் இயற்றப்பட்டது*** (இலக்.வி.819); poem in andādi-t-todai consisting of 20 stanzas composed alternately in the two types, venbā and Kattalai-k-kalitturai. (செ.அக.).

[இரு → இரட்டை + மணி + மாலை.]

இரட்டை மல்லிகை *irattai-malligai,* பெ. (n.) ***இரண்டடுக்குப் பூவிதழுள்ள மல்லிகை;*** double petal-lined jasmine. (சா.அக).

[இரு → இரட்டை + மல்லிகை.]

இரட்டை முண்டு *irattai-mundu,* பெ. (n.) ***இரண்டாக மடக்கி யுடுக்கும் வண்ணம் நீளத்தில் நெய்த வேட்டி;*** double-dhoti. (சா.அக.).

ம. இரட்டமுண்டு.

[இரு → இரட்டை + முண்டு.]

இரட்டையர் *irattaiyar,* பெ. (n.) 1. ***இரட்டைப் பிள்ளைகள்;*** twins, "இனிய விரட்டையரிற் புந்தி நகுலன்" (பாரத வெண்.). 2. ***நகுல சகதேவர்*** (பிங்); Pāndava twins. Nakulan and Sagadēvan. 3. ***இரட்டைப் பிள்ளைகளான இளஞ்சூரியர், முதுசூரியர் என்ற புலவர்*** (தமிழ்நா.113.). இவர்களில் ஒருவர் கண்ணில் லாதவர்; மற்றவர் முடவர்; 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வர்கள். இருவரும் சேர்ந்து திருவேகம்ப நாதர் உலா, திருவாமாத்தூர் கலம்பகம், தில்லைக் கலம்பகம் முதலிய நூல்களை இயற்றினர். முடமானவர் வழிகாட்ட கண்ணி லார் அவரைத் தூக்கிக் கொண்டு செல்வார்; twin Tamil Poets named Ilañ-šuriyar and Mudu-šūriyar, one of whom was born blind and the other a cripple, who flourished about the 15th C., and who were the joint authors of the Tiru-v-ēkāmbaranātar-ulā, the Tiruvāmāttūr-k-kalambagam, the Tillai-k-kalambagam, and also of many occasional verses composed extempore as they travelled from place to place, the blind brother carrying the crippled one. (செ.அக.).

[இரு → இரட்டை → இரட்டையர்.]

இரட்டையாட்சி *irattai-y-ātci,* பெ. (n.) ***இருதிறத்தார் பகுத்துக் கொண்டு செய்யும் அரசாட்சி;*** dyarchy.

[இரட்டை + ஆட்சி.]

இரட்டையேணி *irattai-y-ēni,* பெ. (n.) 1. ***கவை யேணி;*** fork-legged ladder. 2. ***ஒன்றின்முன் ஒன்று வைத்துக் கட்டப்பட்ட ஏணி;*** longer ladder formed by tying together two ladders joined together at their ends. (செ.அக.).

[இரட்டை + ஏணி.]

இரட்டைவரி *irattai-vari,* பெ. (n.) ***ஒரே நிலத்துக்காக அரசுக்கும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் தனித் தனியாகச் செலுத்தும் வரி;*** double taxation, as taxes paid to Government and local body. (செ.அக.).

[இரட்டை + வரி. வரித்தல் = இழுத்தல், கோடிடுதல், கட்டுதல், கட்டுப்படுத்துதல். கட்டுப்படுத்தப்பட்ட அல்லது வரையறுக்கப் பட்ட தொகை.]

இரட்டைவாலன் (வாலி) *irattai-vālan (vāli)* பெ. (n.) 1. ***பொத்தகங்களிலும் துணிகளிலும் காணப்படும் வெண்ணிறப் பூச்சி வகை;*** silver - fish. 2. ***இரட்டை வால் உள்ள கருத்த சிறு பறவை;*** a kind of bird having twin tail.

ம. இரட்ட வாலன், இரட்டவாலி.

[இரட்டை + வாலன்.]

இரட்டை வாழைப்பூ *irattai-vālai-p-pū,* பெ. (n.) ***நெடுங்கோடுள்ள புடைவை வகை*** (இ.வ.); a kind of saree, with long stripes. (செ.அக.).

[இரட்டை + வாழை + பூ.]

இரட்டைவிரல் தேவாங்கு *irattai-viral-tēvāngu,* பெ. (n.) 1. ***இருவிரல்களுடைய தேவாங்கு;*** two toed sloth c.f. ***மூன்றுவிரல் தேவாங்கு;*** the three toed one. (சா.அக.).

[இரட்டை + விரல் + தேவாங்கு.]

இரட்டை விருத்தம் *irattai-viruttam,* பெ. (n.) ***பதி னொருசீர்க்கு மேற்பட்ட சீரான்வரும் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்*** (வீரசோ.யாப்.3, உரை.); verse of more than 11 metrical feet to a line. (செ.அக.).

[இரட்டை + விருத்தம்.]

இரட்டை வெள்ளைச் செம்பரத்தை *irattai-vellai-c-cembarattai,* பெ. (n.) ***இரட்டை வெள்ளைப் பூக்களையுடைய செம்பரத்தஞ்செடி;*** downy angular -leaved shoe flower. (சா.அக.).

[இரட்டை + வெள்ளை + செம்பரத்தை.]

இரட்டை வெள்ளையலரி *irattai-vellai-y-alari,* பெ. (n.) ***இரண்டு பூக்களுள்ள வெள்ளை யலரி;*** Indian double flowered white oleander. (சா.அக.).

[இரட்டை + வெள்ளை + அலரி.]

இரட்டை வேட்டி *irattai-vētti,* பெ. (n.) ***எட்டுமுழ வேட்டி;*** double - dhoti (சேரநா.).

ம. இரட்ட வேஷ்டி.

[இரட்டை + வேட்டி.]

இரண்டகம் *irandagam,* பெ. (n.) 1. ***ஏமாற்று;*** duplicity double dealing, treachery, perfidy. "உண்ட வீட்டுக்கிரண்டகம் நினையாதே". (பழ.). 2. ***இருமனம்*** (ஆ.அக.); double - mindedness, wavering.

[இரண்டு + அகம். அகம் = மனப்பாங்கு. இரண்டகம் = ஒருநெறி நில்லாது ஏய்த்தல், ஏமாற்றிக் கெடுக்கும் மனப்பாங்கு.]

இரண்டடியெதுகை *irandadi-y-edugai,* பெ. (n.) ***முதலிரண்டடி நேரெதுகையாய் மற்றையடிகளோ ரெதுகை யாயேனும் பலவெதுகையாயேனும் வருவது.*** (ஆ.அக.); agreement of the second/subsequent syllables of the initial foot in respect of two adjacent lines.

[இரண்டு + அடி + எதுகை.]

இரண்டகவாதி *irandaga-vādi,* பெ. (n.) ***நம்பவைத்துக் கெடுப்பவன்;*** betrayer, confidence trickster. (ஆ.அக.).

[இரண்டகம் + வாதி. வாதித்தல் = பேசுதல்.]

இரண்டறக்கல-த்தல் *irandara-k-kala-,* 3 செ.கு.வி. (v.i.) 1. ***வீடுபேறடைதல்;*** to so realize God in one's self as to merge emotionally with Him; to attain salvation. (செ.அக.). 2. ***ஒன்றாகக் கலத்தல்;*** to become merged into one.

[இரண்டு + அற + கலத்தல்.]

இரண்டாகு-தல் *irandāgu-,* 7 செ.கு.வி. (v.i.) ***இருதுண்டாதல்;*** to be split up, get divided; to fall into two pieces. (செ.அக.).

க. எரடாகு, எரடிடு.

[இரண்டு + ஆகு.]

இரண்டாங்கட்டு *irandān-kattu,* பெ. (n.) ***வீட்டின் இரண்டாம் பகுதி;*** second set of apartments inside a house; inner court. (செ.அக.).

[இரண்டு + ஆம் + கட்டு.]

இரண்டாங்காலம் *irandān-kālam,* பெ. (n.) ***கோயிலில் அந்திக் காப்புக்கும் நடு இரவுப் பூசைக்கும் நடுவில் நடக்கும் வழிபாடு*** (இ.வ.); temple services at night, services between the evening and the midnight. (செ.அக.).

[இரண்டு + ஆம் + காலம்.]

இரண்டாங்குட்டம் *irandān-kuttam,* பெ. (n.) ***உடம்பு கறுத்துச் சொறியுடன் எரிவுண்டாகிப் பன்னீர் பாய்ந்து கலங்கட்டுமோர் வகைக் குட்டநோய்;*** a form of leprosy known as the second stage of the 10 stages of leprosy. (சா.அக.).

[இரண்டு + ஆம் + குட்டம்.]

இரண்டாட்டு-தல் *irandāttu-,* 5 செ.கு.வி. (v.i) ***இருநெறிப்படுதல்;*** to be double minded; to be unstable, be irresolute between two paths; "இரண்டாட்டா தொழிந்தீ சன்றிறமே பேணி" (தேவா.811,3). (செ.அக.).

[இரண்டு + ஆட்டு.]

இரண்டாநிலம் *irandā-nilam,* பெ. (n.) ***மேன்மாடம்*** (திவ். திருப்பா.10,வ்யா); upper storey. (செ.அக.).

[இரண்டு + ஆம் + நிலம் = இரண்டாம் நிலம் → இரண்டா நிலம். மகரக்கேடு இடைக்குறை.]

இரண்டாம் நிலை *irandāmnilai,* பெ. (n.) 1. ***முதன்மையில்லாதது;*** secondary importance 2. ***உறுதி செய்யாதது;*** unconfirmed. 3. ***இரண்டாவது நிலை;*** second stage.

இரண்டாம் பாட்டன் *irandām-pāttan,* பெ. (n.) ***பாட்டனின் தந்தை;*** great-grandfather. (செ.அக.).

[இரண்டாம் + பாட்டன்.]

இரண்டாம் போகம் *irandām-bōgam,* பெ. (n.) ***இரண்டாமுறைப் பயிர் விளைவு;*** second crop raised on land in a year. (செ.அக.).

[இரண்டு + ஆம் + போகம்.]

இரண்டாம் வேளை *irandām-vēlai,* பெ. (n.) ***இரண்டாம்வேளைச் சிற்றுண்டி*** (இ.வ.); light luncheon, tiffin, as second meal during the day. (செ.அக.).

[இரண்டு + ஆம் + வேளை. வேலை = எல்லை. வேலை → வேளை = கால எல்லை.]

இரண்டா முறைக் காய்ச்சல் *irandā-murai-k-kāyccal,* பெ. (n.) 1. ***ஒரு நாள் விட்டு ஒருநாள் வருமோர்வகைக் காய்ச்சல்;*** form of intermittent fever -tertian fever. (சா.அக.). 2. ***மீண்டும் வரும் காய்ச்சல்;*** relapsing fever.

[இரண்டு + ஆம் + முறை + காய்ச்சல்.]

இரண்டிகை *irandigai,* பெ. (n.) ***இண்டை*** (மலை); eight-pinnate soap-pod.

[இரண்டு → இரண்டிகை. 'கை' சொல்லாக்க ஈறு. யகர மன்றி ஐகார வருமொழி முன்னும் குற்றுகரம் குற்றிய விகர மாயிற்று.]

இரண்டில் மூன்றில் *irandil-mūnril,* கு.வி.எ. (adv.) ***இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கொருமுறை;*** once in two or three days. 'அவன் இரண்டில் மூன்றில் வருவான்' (கொ.வ.) (செ.அக.).

[இரண்டு + இல் + மூன்று + இல்.]

இரண்டிலொன்று *irandilonru,* பெ. (n.) ***இறுதிமுடிவு;*** final decision. 'இரண்டிலொன்று இன்றைக்குள் பார்த்து விடவேண்டும்.' (உ.வ.).

[இரண்டு + இல் + ஒன்று.]

இரண்டு[1] *irandu,* பெ. (n.) 1. ***இரண்டு என்னும் எண்ணுப்பெயர், ஒன்றும் ஒன்றும் சேர்ந்த கூட்டுத் தொகை;*** number two. ''இரண்டறிவதுவே அதனொடு நாவே'' (தொல். மரபி.27). 2. ***சில;*** few. ''இரண்டு நாளைச் சுற்றமே இரங்கல் வேண்டா'' (சீவக.270). 3. ***உகரவெழுத்து;*** letter 'உ'. ''எட்டினோ டிரண்டும் மறியேனையே'' (திருவாச.5,49) (செ.அக.).

மறுவ. பாதி (பகுதி), துமி, ஒன்ஒன், ஓர்ஓர்;

ம. இரண்டு, ரண்டு; **க.** எரடு, எரழ்; பட. ஏரடு; குட. தண்டு, தண்டி; **கோத.** எடெ, எய்டு; **துத.** எட்; குறும். யெரடு; இரு. இரெண்டு; **து.** ரட்டு; **தெ.** எரு, ரெண்டு; **கொலா.** இண்டிங், இண்ட்; **பர்.** இர்டு; கட. இண்டி; **கோண்.** ராணு, ரண்ட்; **கூ.** ரி; குரு. ஏர், ஏண்ட்; **குவி.** ஏர், ஏண்ட்; மால். இவ், இத்தி; **நாய்.** இண்டி; **கைக்.** ரண்ட்; **பிராகு.** இராட்.

Central India: Gayati. rand; *Madi.* randu; *Madia.* rand; *Rutluk.* rand.

[இல் → ஈல் → ஈர் → இரு → இரள் → இரண்டு]

ஈர்தல் = பிளத்தல், வெட்டுதல், இரண்டாக்குதல். இதே பொருளில் பகுத்தல் துமித்தல் என்னும் வினையடியாகத் **தோன்றிய பகு →** பா, துமி, என்னும் சொற்களும் பண்டைக் காலத்தில் இரண்டைக் குறிக்கும் எண்ணுப் பெயர்களாக வழங்கின. இச்சொற்களை யறியாத ஒருசார் பழங்குடியினர் இரண்டு என்னும் பொருளில் ஒன்று ஒன்று, ஒன்னு ஒன்னு, ஒன்ஒன், ஒன்னும் ஒன்னும் போன்ற அடுக்குச் சொற்களை வழங்கினர். இவையன்றி இரண்டு என்னும் எண்ணுப் பெயரின் குறிப்புப் பெயரெச்ச அடியாகிய இரு, ஈர், என்பனவும் அவற்றின் திரிபுகளாகிய கொச்சைச் சொற்களும் பல்வேறு பழங்குடி மக்களிடை எண்ணுப் பெயர்களாகவே வழங்குகின் றன. எண்ணுப் பெயரின் முதனிலை திரிந்தனவெல்லாம் அடிநிலைத் திரிபுற்றவை யென்றும் முதனிலை நீங்கி ஈறு மட்டும் திரிந்தன வெல்லாம் முடிநிலைத் திரிபுற்றவை யென் றும் திரவிடமொழிகளிலும் ஏனைக் குடும்ப மொழிகளிலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இரண்டு என்னும் எண்ணுப்பெய ரின் ஒருபொருட் பன்மொழிகளாகப் பண்டுதொட்டே முந்துதி ரவிடத்தில் வழங்கி நாளடைவில் அருகிய பகு (பா = பாதி), **துமி, ஒன்ஒன், ஓர்ஓர்** என்னும் எண்ணுப்பெயர்களின் நிலவ ழிப் பரவலும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டு → இரு. முதல்வகை அடிநிலைத் திரிபுற்றவை.

Korean. iru; *Chinese. (Mandrin)* eer, erh; *(Canton)* i; *(Peking)* urh; *(Nankin)* urh (ar); (Shangai) ni; *Jap.* ni; *Tib.* nyi; *Tablung Naga* ih; *Bur* (kami) ni; *Turk.* iki; *Ara.* ethnan, itsnayn; *Hab.* schnayim; *O.Egy.* s.n.w.; *Burma.* nhit, nach; *Afri.* (peul + Housa). bin.

கொரியன் மொழியில் **'இரு'** என்றும் சீனமண்டாரின் மொழி யில் **'ஈர்'** என்றும், துருக்கி மொழியில் **'இக்கி'** என்றும் அடிநிலைத் திரிபுற்ற இரண்டு என்னும் எண்ணுப் பெயர் சித்திய கிழக்காசிய மொழிகளில் இயல்பான சொல் வடிவத்தி லேயே ஊடாடித் திரிந்துள்ள நிலையைக் காட்டுகிறது. திபேத் திய சப்பானிய பருமிய மொழிகளிலும் எபிரேய அராபிய எகுபதிய மொழிகளிலும் பன்மடி அடிநிலைத் திரிபுகளுற்றுள் ளன.

ஆறு ஏழு எட்டு என்னும் சொற்கள் ஒரே சீராகவும் விரைவாக வும் பெரும்பான்மை உலகமொழிக் குடும்பங்களில் ஊடாடியி ருப்பதுபோல் இரண்டு என்னும் எண்ணுப்பெயர் ஊடாட வில்லை. முந்துதமிழில் காலத்தால் முற்பட்ட எண்ணுப்பெயர் காலத்தால் முற்பட்ட மொழிகளில் ஊடாட்டம் பெற்றன வென்றே இதற்கு அமைவு கூறமுடியும்.

இரண்டு என்னும் பொருளில் உலகமொழிகளில் ஊடாடியுள்ள பகு - பாதி, துமி என்னும் வடதமிழ்ச் சொற்கள் வணிகராலும் பொதுமக்களாலும் ஆங்காங்குப் படைக்கப்பட்டவை.

சீன திபேத்திய மொழிக்குடும்பங்களும் சித்திய மொழிக் குடும்பங்களும் தமிழொடு நெருங்கியிருந்த காலத்திய சொல் லாட்சி என்று இரண்டு என்னும் எண்ணுப் பெயரை வகைப்ப டுத்தலாம்.

குடகு மொழியில் அடிநிலைத் திரிபுற்றபோது ரகரம் தகர மெய்யெழுத்தாகத் திரிந்து தண்டு, தண்டி எனத் திரிந்துவிட் டது. இதனை ஆறு என்னும் எண்ணுப் பெயரில் முடிநிலைத் திரிபுற்ற றுகரம் துகரமாகத் திரிந்த பூட்டானிய திபேத்திய நேப்பாள மொழிநிலைகளோடு ஒப்பிடலாம்.

பெரும்பாலும் குழந்தை மொழி நிலையில் ரகரம் ஒலிப்பருமை கருதி ல, ந, த, ட மெய்யெழுத்துக்களாகத் திரிவதுண்டு. கல்லாத மக்கள் குழந்தைகளின் ஒலிப்பையே வழக்குச் சொல் லாக்கியதால் நேர்ந்த விளைவாகக் குடகு மொழிச் சொல்லாட் சியைக் கொள்ளலாம். இரண்டு என்பதில் முன்னுயிர் நீக்கிய மொழிகளும் இடையில் ரகரம் நீக்கிய மொழிகளும் கூட குழந்தை மொழி ஒலிப்பை ஏற்றனவாகலாம். எழுத்து மொழியை அல்லது செவிவழி இலக்கியச் செல்வத்தைப் பேணிக் காக்காத மொழிகளில் குழந்தைமொழிச் சிதைவுகளே கிளை மொழிகளின் தோற்றத்திற்குக் காரணமாகிவிடுகின்றன.

கொரிய சீனமொழிகளில் இரு, ஈர் என்னும் ஓரசை வடிவிலான குறிப்புப் பெயரெச்சங்களே எண்ணுப் பெயர்களாகி யுள்ளன. சீனமொழியின் ஓரசையமைப்பு பெயரெச்சத்தையே எண்ணுப் பெயராக ஏற்றுக்கொள்ள வழிவகுத்தது எனலாம்.

பகு → பகுதி → பாதி: அடிநிலைத் திரிபுற்றவை

நடுவண் இந்திய மொழிகள்

Savara. bagu; ***Kuri.*** barku; ***Raj.*** makis; ***Mundala.*** baria; ***Bhumij.*** baria; ***Santali.*** barea; ***Ho-kol.*** barria; ***Guj.*** ba, be; ***Sin.*** ba. ***L.*** paria, par; ***F.*** pair; ***E.*** pair, bi-; ***Skt.*** uba, upa; ***Jap.*** fo, f'tats; ***Basque.*** bi, bia, biga; ***Siam*** (Talain). pa; ***Burmah.*** (Khyeng v. shou). pan-uhi (Mru v.Toung) pre.

வட இந்திய மொழிகள் பலவற்றிலும் ஐரோப்பிய மொழிகள் சிலவற்றிலும் சயாம் பருமியக் கிளைமொழிகள் ஒன்றிரண்டிலும் இரண்டைக் குறிக்கும் பாதி என்னும் சொல் அடிநிலைத் திரிபுற்று வழங்கி வருகின்றது. இலத்தீனம், பாசுக்கு, சப்பானியம் ஆகிய மொழிகளிலும் ஊடாடியிருப்பதால் கடல் வாணிகர் வாயிலாக வெளிநாடுகளுக்குப் பரவிய சொல்லாட்சியாகலாம். ஏனெனில் இதன் நிலவழிப் பரவல் ஒரு சீராக இல்லை. சப்பானியம், பாசுக்கு, சயாம், இலத்தீனம் நடுவணிந்தியாவிலுள்ள சவார் சந்தாளியர் மொழிகள் ஆகியவை நிலவழிச் சொற் பரவலுக்கு ஊடாட்ட எளிமை வாய்ந்தனவல்ல. அதுவும் இது பெருமளவில் பரவிய சொல்லாட்சியன்று.

ஏதேனும் ஒன்றைக் கையால் பகிர்ந்து அல்லது வகிர்ந்து இரண்டாக்கித் தருவதையே இச்சொல் முதலில் குறித்திருக்கலாம். குறிப்பாக இச்சொல் குச்சர மொழியில் காணப்படுதலால் குச்சரத்து வணிகர்களால் பரவிய சொல் என்று கருத முடிகிறது.

இரண்டு என்னும் எண்ணுப் பெயர் காலத்தால் முந்தையது. துமி அதனினும் பிந்தையது. பகு - பாதி என்பன மிகவும் காலத்தால் பிந்தைய சொல்லாட்சிகள். எனினும் அனைத்துமே கடல் வாணிகத்திற்கு முற்பட்ட காலத்தன. அரைப்படியளவுள்ள தவசத்தை இருபகுதியாகப் பங்கிட்ட காற்படியளவை வடபுலத்து வணிகர் பாவு எனக் குறிப்பிடுவதைக் காணலாம். சமமாகப் பகிர்ந்தது பங்கிட்டுக் கொண்டது என்னும் பொருளில் தோன்றிய சொல்லாதலின் வணிகரின் படைப்புச்சொல் என்று கூறப்படுகிறது.

துமி: அடிநிலைத்திரிபுற்றவை.

Mar. don, do; ***Punj.*** do, dwa; ***Rajas.*** dho; ***Beng.*** duli; ***Beng., Ass., Ori.*** dui; ***Hin., uru.*** do; ***Pkt.*** dva; ***Pal.*** dvi; ***Skt.*** dva, dwi; ***Sinh.*** dekay; ***Nep.*** (Darhi) (Denwar) dwi; (Tharu). dui; ***Beng.*** ***(Kocch).*** du; ***(Deoria chutia)*** dukuni; ***Nep.*** (Newar) dui; ***L.*** duo; ***Gk.*** dio; ***Russ.*** dva; ***F.*** deux; ***Sp.*** dos; ***Ita.*** due; ***Port.*** dois; ***Rum.*** doi; ***Dut.*** twee; ***Swed.*** twa; ***Dan.*** to; ***Pol.*** dwa; ***Czec.*** dve; ***Indon.*** dud; ***yidd.*** tsvei; ***O.Iri.*** da-du; ***Iri.*** ado; ***E.*** Two; ***Nor.*** to; ***Goth.*** twai; ***Serb.*** dva. ***Ger.*** zwei. ***Afri.*** twee, tve; ***Hung.*** ketto; ***Mong.*** khoyar, kaet. ***Mantshu.*** dchoue; ***Javanese*** (Krama). Kalish; ***Malay.*** dua.

வட இந்திய மொழிகளிலும் ஐரோப்பிய மொழிகளிலும் அங்கேரி உள்ளிட்ட துரானிய மொழிகளிலும் ஆப்பிரிக்க மொழிகள் சிலவற்றிலும் இரண்டைக் குறிக்கும் '**துமி**' என்னும் எண்ணுப்பெயர் ஊடாடியுள்ளது.

பொதுவாக ஒன்று முதல் ஐந்து வரையுள்ள எண்ணுப் பெயர்கள் வணிகர்களால் பரப்பப்படவில்லையென்றும் இவை நிலவழிப் பரவல்களாக ஒரு கூட்டத்தாரிடமிருந்து மற்றொரு கூட்டத்தார் அறிந்துகொண்டனவாகக் கற்காலம் முதல் வளர்ந்தவை என்றும் கூறப்படுகிறது. ஐந்துக்கு மேற்பட்ட எண்ணுப் பெயர்களே வணிர்களால் உலகெங்கும் அறிமுகப்படுத்தப்பட்டவை என்பர்.

துணித்தலும் துமித்தலும் வெட்டுதற் பொருள்தரும் தமிழ்ச் சொற்கள். சிந்துவெளியில் வாழ்ந்த தமிழருள் ஒருசாரார் இரண்டு என்பதைத் '**துமி**' என வழங்கியிருக்கலாம். துணையோர், துணைமையோர் என்பன 'இருவர்' எனப் பொருள்படுதலைக் காணலாம். இருவர் என்பதை இந்தியில் 'தோனோ' என்பர்.

உலக மொழிகள் பெரும்பாலானவற்றில் **இரண்டு, துமி** ஆகிய இருசொற்களே ஊடாடியுள்ளன. உலகின் பிறமொழிகளிலிருந்து கடன்பெறாமல் இரண்டு என்னும் கருத்துப் புலப்படுமாறு வெட்டுதல், பிளத்தல் பொருள்தரும் வினைச் சொற்களைத் தெரிந்தெடுத்து இரண்டைக் குறிக்கும் பெயர்ச்சொற்களை ஆங்காங்கு வாழ்ந்த தமிழ்மக்கள் தாம் விரும்பியவாறு படைத்துக்கொண்டனர்; உலகமொழிகளுக்கும் கடன்சொற்களாக வழங்கியுள்ளனர்.

ஒன்ஒன்: அடிநிலைத்திரிபுற்றவை.

Uraon. enotan; ***Bhut.*** nyi; ***Sik.*** nyet. ***Manipuri.*** ani; ***Mithan Naga.*** ane; ***Angami Naga.*** kane; ***Namsang Naga.*** vanyi; ***Nowgang Naga.*** anna; ***Tengsa Naga.*** annat; ***Abor Miri.*** aniko; ***Beng.*** (Bodo) mangne, manne; (Dhimal) nhelong gnelong; (Garo). gining aning; *(Kachari)* mannai, munai; ***Siamese.*** sang, song; ***shan.*** htsoung; ***Annamitic.*** hai. ***Ahom.*** sang; ***khamti.*** song; ***Laos.*** song; ***Egypt*** (coptic) sum, sem. ***Sum.*** min; ***Caucasian*** (Abkh) u-ba; ***America - (Aztec)*** u-me, umte; ***America (puebio Nahuati)*** ome; ***America (Huasteca Nahuati).*** O-me.

ஓர்ஓர் (ஒக்ஒக்-ஒச்ஒச்): அடிநிலைத்திரிபுற்றவை

Geor. ori; ***Circa.*** oh, ori; ***Javanses*** (Ngoko). ro; ***Tib.*** (sokpa) hoyur (Gyami) ăr; ***Fin.*** kaksi (1+1). ***Nep.*** (Dungmali) hi-chi; (Sang pang). hich-chi, hi-sali (Balaji) hich-che; (Lohorong) hich-chi, hi-pang; (Thulungya). ni-chi, (yakha) kich-chi; (Podong) hakara; (kiranti) ha-sat; ***Afri.*** **(Nubian).** orre. ***(Swa)*** eru; (Couch) ***ori;*** (Bari) ori-i, ***(Berber)*** rdet. ***(kabyl)*** eraa. ***O.Georg.*** jori.

பிளத்தல், துணித்தல், பகுத்தல் கருத்தின் அடிப்படையில் இரண்டு என்னும் எண்ணுப்பெயரை அமைத்துக்கொள்வதற்கு முன்பு **ஒன்றும் ஒன்றும்** என்னும் கூட்டுச்சொல் எண்ணுப்பெயரே பல்வேறு வகையில் அடுக்குச்சொல்லாகி வழக்கில் பயின்றுள்ளது.

வடபுலத்து மலைவாழ் பழங்குடிகளிடை ஒன்ஒன் என்பதும் ஆப்பிரிக்க மொழிகளில் 'ஓர்ஓர்' என்பதும் பெருக வழங்கியுள்ளன.

திபேத்திய சர்கேசிய சியார்ச்சிய மொழிகள் ஓர்ஓர் என்பதைத் தக்க வைத்துக்கொண்டிருப்பதால் ஆப்பிரிக்கா வரை இதன் ஊடாட்டம் புலப்படுகிறது. ஒக்ஒக் (1+1) என்பது

துரானிய மொழிக்குடும்ப மொழியான பின்னிசில் முடிநிலைத் திரிபுற்று கக்சி எனத் திரிந்துள்ளது.

சுமேரிய எகுபதிய நாகரிக மொழிகளிலும் அமெரிக்கச் செவ்விந்தியர் மொழிகளிலும் ஊடாடிய ஒன்ஒன் (1+1) என்னும் சொல்லாட்சி இரண்டைக் குறிக்கும் ஒரேசொல் வழக்கூன்றிய பின்னும் பழைய வழக்கத்தை மறக்கவியலாமல் நீடுநிலைத்ததாகலாம். தென்கிழக்காசிய மொழிகளிலும் புதுக்கலவை மொழியான எகுபதிய காப்டிக் மொழியிலும் சகர மெய்யெழுத்து முன்னெழுத்தாகச் சேர்ந்திருப்பது காலத்தால் பிந்தைய சொல்லாட்சி. பழைய எகுபதிய மொழியும் ஒன்ஒன் என்பதனுடன் சகரம் சேர்த்து வழங்கியுள்ளது. சுமேரிய வங்கக் கிளைமொழிகள் மகரமெய்யை முன்னெழுத்தாகச் சேர்த்துக் கொண்டன.

இரண்டு[2] *irandu,* பெ. (n.) ***ஈயத்தண்டு;*** lead rod (சா.அக.).

இரண்டுக்குற்றது *irandukkurradu,* பெ. (n.) 1 ***இதுவோ! அதுவோ வென்னு நிலை.*** (வின்.); that which is dubious, dilemma, that which admits of alternatives. (செ.அக.). 2. ***உண்மையோ, பொய்யோ வென்பது*** (ஆ.அக.); true or false.

[இரண்டு + கு + உற்றது.]

இரண்டுங்கெட்ட நேரம் *irandun-ketta-neram,* பெ. (n.) ***அந்திப் பொழுது;*** dusk of the evening which is neither day or night. (செ.அக.).

[இரண்டு + உம் + கெட்ட + நேரம்.]

இரண்டுங்கெட்டான் *irandun-kettan,* பெ. (n.) 1 ***நன்மை தீமை யறியாதவன்*** (கொ.வ.); one who cannot distinguish between good and evil. 2 ***ஒருவழிக்கும் வராதவன்*** (கொ.வ.); one who will not take up any course definitely, one who is not himself knowledgeable nor will heed good advice. (செ.அக.).

[இரண்டு + உம் + கெட்டான்.]

இரண்டு நினை-த்தல் *irandu-ninai-,* 4 செ.கு.வி. (v.i.) ***இரண்டகம் நினைத்தல்*** (கொ.வ.); to indulge in double dealing, duplicity, confidence tricking. (செ.அக.).

[இரண்டு + நினை.]

இரண்டுப்பு *irantuppu,* பெ. (n.) ***இருவகையுப்பு, அதாவது இயற்கை செயற்கை;*** two kinds of salt, viz; the natural and the artifical salts. (சா.அக.).

[இரண்டு + உப்பு.]

இரண்டுபடு-தல் *irandu-padu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. ***பிரிவுபடுதல்;*** to disagree, dissent, to get divided "ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" (பழ.). 2. ***ஐயுறுதல்;*** to be doubtful.

[இரண்டு + படு.]

இரண்டு பண்ணு-தல் *irandu-pannu-,* 15 செ.கு.வி. (v.i.) 1. ***புரளி பண்ணுதல்;*** to tease. 2. ***வேற்றுமை உண்டாக்குதல்;*** to cause to disagree. (ஆ.அக.).

[இரண்டு + பண்ணு.]

இரண்டுரு *iranduru,* பெ. (n.) 1. ***ஆணும் பெண்ணுமாகிய இரண்டு உரு;*** combination formed of male and female figures. "இரண்டுருவாய் ஈரணி பெற்ற வெழிற்றகையன்" (பதிற்.கட.7). 2. ***சிவனும் திருமாலும் ஆகிய இருவர் உருவங்கள்;*** Siva and Vishnu as manifestations of the supreme being. "இரண்டுருவும் ஒன்றாயிசைந்து" (திவ். திருவந்.63).

[இரண்டு + உரு.]

இரண்டுவவு *irantuvavu,* பெ. (n.) ***காருவாவும் வெள்ளுவாவும்;*** new moon and full moon.

[இரண்டு + உவவு.]

இரண்டெட்டில் *irandettil,* கு.வி.எ. (adv.) 1. ***விரைவில்;*** very soon, quickly, literally in two strides. 'இரண்டெட்டில் வா' (கொ.வ.). 2. ***வெகு அண்மையில்;*** very near. 'அவர் வீடு என் வீட்டிலிருந்து இரண்டெட்டில் இருக்கிறது' (உ.வ.).

[இரண்டு + எட்டில். எட்டு - எட்டிவைக்கும் பாதம். இரண்டு அடி எடுத்து வைக்கும் தொலைவு. இரண்டு அடி எடுத்து வைக்கும் குறுகிய நேரம்.]

இரண்டை *irandai,* பெ. (n.) 1. ***கைம்பெண்;*** widow. 2. ***எலியால் விதை;*** glaucous-leared physic nut. (செ.அக.).

[இரள் → இரண்டை. இரள் = பிரிதல், இரண்டாதல். இரண்டை = கணவனைப் பிரிந்தவள், தனிமையுற்ற கைம்பெண். பிளவுண்ட வித்து அல்லது முளை.]

இரண்டொன்று *irandonru,* கு.வி.எ. (adv.) ***சில;*** one or two, a few. 'இரண்டொன்று தா.' (உ.வ.).

[இரண்டு + ஒன்று - இரண்டொன்று. ஓரிரண்டுதா என்னும் போது சற்றுக் கூடுதலாகக் கொடு என்பதும், இரண்டொன்றுதா என்னும்போது எண்ணிக்கை சற்றுக் குறைந்தாலும் பழுதில்லை என்பதும் குறிப்பால் உணர்த்தப் படுவனவாம்.]

இரணமுட்டம் *irana muttam,* பெ. (n.) ***பழங்காலத்திலிருந்த ஊர்ப்பகுதி;*** a division of habitation.

[இரிணம் - இரணம். இரிணம் = உவர்நிலம். இரணம் முட்டம்.]

இரணியமுட்டத்துப் பெருங்கௌசிகனார் *iraniya muttattu-p-perunkausiganar,* பெ. (n.) ***கடைக்கழகப் புலவர்;*** Sangam poet.

[இரணமுட்டம் - இரணியமுட்டம் + பெரும் + கௌசிகன் + ஆர். இவர் மலைபடுகடாம் இயற்றிய புலவர். இரணமுட்டம் பார்க்க; see iraṇa muṭṭam.]

இரத்தி *iratti,* பெ. (n.) 1. ***இலந்தை மரம்;*** jujube tree. "இரத்தி நீடிய வகன்றலை மன்றத்து" (புறநா.34, 12). 2. ***மரவகை;*** tree. 3. ***இத்தி மரம்*** (சூடா.); jointed ovate - leaved fig.

ம. இலந்த, லந்த; **க** எர, எலசி, எளசி, இலிசி, எகசி, ரேகு; **தெ.** ரேகு; **கொலா.** ரெங்கா; **பர்.** ரேகா; **கோண்.** ரெங்கா, ரெங்கு.

[இல் → இர் → இரத்தி.]

இரத்திரி *irattiri,* பெ. ***இத்தி*** (வின்); fig tree. (செ.அக.).

[இரத்தி - இரத்திரி.]

இரதம் *iradam,* பெ. (n.) ***இரத்தி*** பார்க்க: see *iratti,* இத்தி (வை.மூ); jointed ovate leaved fig. (செ.அக).

[இரத்தி - இரதம்.]

இரந்திரி *irandiri,* பெ. (n.) ***இரத்தி*** பார்க்க; see *iratti.*

[இரத்தி - இரந்திரி.]

இரந்துண்ணி *irandunni,* பெ. (n.) ***இரப்போன்;*** begger (ஆ.அக.) "அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலை நீலி". (தனிப்பா.).

[இரந்து + உண்ணி. இரந்துண்ணி - இரந்து உண்பவன்.]

இரந்துணி *iranduṇi,* பெ. (n.) ***இரந்துண்ணி*** பார்க்க; see *irandunni.*

[இரந்துண்ணி - இரந்துணி.]

இரந்தை *irandai,* பெ. (n.) ***இலந்தை மரம்*** (ஆ.அக்.); jujube tree. "இரந்தையின் கனி" (சேதுபு. காசிப.46) (செ.அக.).

[இலந்தை - இரந்தை.]

இரப்பாண்டி *irappāṇḍi,* பெ. (n.) ***இரப்பாளன்*** பார்க்க; see *irappāḷan.*

[இரப்பு + ஆண்டி.]

இரப்பாளன் *irappāḷan,* பெ. (n.) ***வறுமையுற்று இரப்பவன்*** (ஈடு.2,6.1); beggar, mendicant, suppliant. (செ.அக.).

ம. இரப்பாளி; **குட.** எரபெ.

[இரப்பு + ஆளன்.]

இரப்பு *irappu,* பெ. (n.) 1. ***இரத்தல்;*** begging, asking alms. "இரப்பு மோஎர் ஏஎர் உடைத்து". (குறள்.1053) (செ.அக.). 2. ***வறுமை*** (ஆ.அக.); poverty.

ம. இரப்பு.

[இர → இரப்பு.]

இரப்புணி *irappuṇi,* பெ. (n.) ***இரந்துண்ணி*** (வின்): (ஆ.அக.); beggar who begs for his food. (செ.அக.).

[இரப்பு + (உண்ணி) உணி.]

இரப்பை *irappai,* பெ. (n.) ***இமையிதழ்;*** eyelid (செ.அக.).

க. ரெப்பெ; **தெ.** ரெப்ப.

[இறப்பை - இரப்பை (கொ.வ.).]

இறப்பை பார்க்க; see *iṟappai.*

இரப்போடு *irappōḍu,* பெ. (n.) ***இரப்பதற்குப் பயன் படுத்தும் ஏனம்;*** beggar's bowl. (சேரநா.).

ம. இரப்போடு.

[இரப்பு + ஓடு.]

இரப்போர் *irappōr,* பெ. (n.) 1. ***இரவலர்;*** poor people. 2. ***இரந்து வேண்டுவோர்;*** beggars. 3. ***பரிசிலாளர்;*** poets who seek presents from the patron. (ஆ.அக.).

[இர → இரப்பு → இரப்போர்.]

இரப்போன் *irappōṉ,* பெ. (n.) ***இரந்துண்ணி;*** beggar.

[இர → இரப்பு → (ஆன்) ஒன்.]

இரம்பம்[1] *irambam,* பெ. (n.) ***கத்தூரி மான்*** (அக.நி); musk deer. (செ.அக.).

[ஒருகா. இரு → இரும்பம் → இரம்பம்.]

இரம்பம்[2] *irambam,* பெ. (n.) ***அரம்பம் பார்க்க, மரமறுக்கும் வாள்;*** saw. (செ.அக.).

தெ. ரம்பமு.

[அரம்பம் → ரம்பம் - இரம்பம். அரம்பம் > Skt. ramba > இரம்பம்.]

இரம்பிகம் *irambigam,* பெ. (n.) ***மிளகு*** (சங்.அக.); pepper (செ.அக.).

இரம்பிலம் > இரம்பிகம்.

[மிரியல் - இரியல் - இரிம்பம் - இரிம்பகம் - இரம்பகம்.]

இரம்பிலம் *irambilam,* பெ. (n.) ***மிளகு;*** black pepper. (செ.அக.).

[இரிம்பம் - இரம்பகம் - இரம்பலம்.]

இரலை[1] *iralai,* பெ. (n.) 1. ***கலைமான்*** (திவா.); stag. 2. ***புல்வாய்*** (ஆ.அக.); a kind of deer. "இரலையுங்



இரலை

கலையும் புல்வாய்க்குரிய" (தொல்.பொருள்.600). 3. ***கரு மான்*** (ஆ.அக.); black-buck. (செ.அக.) "இரலை நன்மான் இனம் பரந்தவை போல்" (அகநா.194).

க. எரளெ, எரலெ; தெ. இற்ற, லேட்டி, லேடி; மால். இலரு.

[இரு - இரல் - இரலை. இரல் (இரள்) = வளைதல், திருகுதல், சுற்றுதல், முறுக்குதல். இரலை = திருகிய கொம்புடைய மான் வகை. இரு - இருல் = கருமை. இருலை - இரலை = கரிய மான்.]

இரலை2 *iralai,* பெ. (n.) 1. ***துத்திரி யென்னும் ஊதுகொம்பு*** (சீவக.434); trumpet. 2. ***இரலை நாண் மீன்*** (அசுவினி); first nakṣatra. (பிங்.).

[இரல் = வளைதல். இரலை = வளைந்த ஊது கொம்பு போன்று வளைந்த அமைப்பு காணப்படும் விண்மீன் தொகுதி.]

இரவச்சம் *iravaccam,* பெ. (n.) 1. ***மானந் தீரவரும் இரப்புக்கு அஞ்சுகை*** (குறள்.அதி.107); vexation of beggary. 2. ***குருதி கண்டு அஞ்சும் அச்சம்;*** hemophobia. (செ.அக.).

இரவணம் *iravaṇam,* பெ. (n.) 1. ***கழுதை கத்துகை;*** braying of a donkey. 2. ***வண்டு;*** beetle. (செ.அக.).

[இரை + அணம் = இரைவணம் - இரவணம். இரைதல் = தொடர்ந்து ஒலி எழுப்புதல்.]

இரவம்1 *iravam,* பெ. (n.) ***இருள்;*** darkness.

[இரு → இருவம்.]

இரவம்2 *iravam,* பெ. (n.) ***ஒலி;*** sound.

[அரவம் - இரவம்.]

இரவம்3 *iravam,* பெ. (n.) ***இரவமரம் - இலந்தை;*** jujube tree. "தீங்கனி யிரவமொடு வேம்பு மனைச் செரீஇ." (புறநா.281-1) (சங்.இலக்.சொற்).

[இரு - இர - இரவம்.]

இரவரல் *iravaral* தொ.பெ. (vbl.n.) ***இரவுக் குறியில் வருதல்;*** coming at the appointed time during night for love meeting. (குறிஞ்.239) (சங்.இலக்.சொற்).

[இரவு + வரல் = இரவரல்.]

இரவல் *iraval* பெ. (n.) 1. ***வேண்டிப் பெறுதல், கேட்டல்*** (ஆ.அக); begging, to get by asking. "இரவன் மாக்களீகை நுவல" (புறநா.24.30). 2. ***மீண்டு தருவ தாகக் கொண்ட பொருள்;*** materials borrowed. 'இரவ லுடம்போ சுமந்து கொண்டிருக்கைக்கு' (ஈடு.2.4.2) (செ.அக.).

[இரத்தல் = மனம் தாழ்ந்து வேண்டுதல். இர - இரவல்.]

இரவல் மாக்கள் *iraval mākkaḷ* பெ. (n.) ***பரிசிலர், வள்ளலின் பால் பரிசு வேண்டிச் செல்லும் புலவர், கலைவலார், பாணர், கோடியர், கூத்தர் முதலியோர்;*** poets, artists, singers, musicians and dancers who seek presents from the patron. "இரவன் மாக்களீகை நுவல" (புறநா.24-30).

[இர - இரவல் + மாக்கள். இரவல் = இரத்தல்.]

இரவலர்த் தடுத்த வாயில் *iravalar-t-taḍutta vāyil,* பெ. (n.) ***இரவலர்களை நீங்கிச் செல்ல மனமின்றித் தடுத்த வாயில்;*** gate of a patron, forbidding the prize. "குய்குரல் மலிந்த, கொழுந்துவை அடிசில் இரவலர்த் தடுத்த வாயில்." (புறநா.250).

[இரவலர் + தடுத்த + வாயில்.]

இரவலன் *iravalaṉ* பெ. (n.) ***இரப்பவன்*** (பெரும்பாண். 45); suppliant, recipient. (செ.அக.).

[இர - இரவல் - இரவலன்.]

இரவலாளன் *iraval-āḷaṉ* பெ. (n.) ***இரவலன்*** (தமிழ் நா.161); beggar.

[இரவல் + ஆளன்.]

இரவற்குடி *iravaṟ-kuḍi,* பெ. (n.) 1. ***குடிக் கூலியின்றிக் குடியிருக்குங் குடும்பம்*** (வின்.); family occupying a borrowed house. 2. ***அடுத்து வாழுங் குடும்பம்*** (வின்); family living with the owners of a house and without paying rent (செ.அக.). 3. ***இரவல் வீடு;*** house lent.

[இரவல் + குடி.]

இரவற் சோறு *iravaṟ-cōṟu,* பெ. (n.) ***பிறரைச் சார்ந்து பிழைக்கும் பிழைப்பு*** (யாழ்ப்.); livelihood obtained by sponging upon others. (செ.அக.).

[இரவல் + சோறு.]

இரவறிவான் *iravaṟi-vāṉ,* பெ. (n.) ***சேவற்கோழி*** (வின்); cock, from its making the watch of the night. (செ.அக.).

[இரவு + அறிவான். இரவுப் பொழுதின்கண் யாமம் அறிந்து கூவும் இயல்பான் பெற்ற பெயர்.]

இரவன் *iravaṉ,* பெ. (n.) ***திங்கள்;*** moon, who is lord of the night. "இரவன் பகலோனு மெச்சத் திமை யோரை" (தேவா.571,4). (செ.அக.).

[இரவு → இரவன் = இரவில் வரும் நிலவு.]

இரவாளர் *iravāḷar,* பெ. (n.) ***கொங்குப் பகுதியில் வாழும் இருளருள் ஒரு பிரிவினர்;*** sect of the iruḷar community in Coimbatore district.

[இரவு + ஆளர். ஒ.நோ. அருவாளர்.]

இரவி1 *iravi,* பெ. (n.) ***வாணிகத் தொழில்*** (பிங்.); commercial practice (செ.அக.).

[இரு → இருவி → இரவி. இரு = பெருமை; இரவி = பெருமள வில் செய்யப்படும் மொத்த வாணிகம்.]

இரவி[2] *iravi*, பெ. (n.) 1. ***ஞாயிறு;*** sun. "கண்ணாரிரவி கதிர்வந்து கார்கரப்ப" (திருவாச.7.18). 2. ***மலை*** (பிங்.); mountain. (செ.அக.).

[உல் - உரு - உரி (எரிதல்). உரு - உரவி - இரவி = ஒளி சிந்தும் கதிரவன், கதிரவன் சாயும் மலை.]

இரவிக்கை *iravikkai*, பெ. (n.) 1. ***மகளிர் சட்டை;*** blouse. (செ.அக.). 2. ***ஞாயிற்றுக்கதிர்கள்;*** sun's rays. (சா.அக.).

க. ரவிக்கெ; தெ. ரவிக.

[இறவு - இறவுதல் = சுற்றுதல், வளைதல். இறவு - இறவுகை - இறவுக்கை - இரவிக்கை. இரவி + கை = இரவிக்கை = கதிரவனின் கை, ஒளிக்கதிர். ஒ.நோ. இறவு = வளைந்த இறால் மீன். இறவு - இறா - இறால்.]

இரவிகாந்தம் *iravi-kāndam* பெ. (n.) 1. ***ஞாயிறு காந்தக்கல்*** (ஆ.அக.); sun-stone. "இரவி காந்தத் திலகமுமே" (நீதிவெண்.50). 2. ***தாமரை*** (மலை.); lotus. (செ.அக.).

[இரவி + காந்தம்.]

இரவிகுலம் *iravi-kulam*, பெ. (n.) ***கதிரவக்குலம்*** (ஆ.அக.); solar race. "இரவிகுலம் பாரிக்கத் தருவ னென்றே" (கலிங்.10,6) (செ.அக.).

[இரவி + குலம்.]

இரவிச் சீலை *iravi-c-cīlai*, பெ. (n.) ***சிவப்புக்கல், கற்காவி;*** red ochre. (சா.அக.).

[இரவி + (சிலை) சீலை. இரவி = கதிரவன், செந்நிறம். சிலை = கல்.]

இரவிற்றிரிவோன் *iraviṟṟirivōṉ*, பெ. (n.) ***அரக்கன்;*** demon or goblin, one who roams during night. "இரவிற் றிரிவோர் கட்கிறை" (தேவா.111,8) (செ.அக.).

[இரவு + இல் + திரி + (ஆன்) ஒன்.]

இரவு[1] *iravu*, பெ. (n.) 1. ***இருளடர்ந்தநேரம்;*** night, time from sunset to sunrise. "எல்லையு மிரவு மெண் ணாய்" (புறநா.7,7). 2. ***மஞ்சள்*** (தைலவ.தைல.103); c.f. Skt. niśākvā, turmeric. 3. ***இருள் மரம்*** (பெருங். உஞ்சைக் 52,40) பார்க்க; a kind of tree. (செ.அக.).

ம. இரவு; க. எரெ, இருள், இர; தெ. ரே, இருலு, ரேயி; கோத. இர்ல்; துட. இள்; குட. இரி; துளு. இர்க்; பட. இரு.

[இல் - இரு - இரவு.]

இரவு[2] *iravu* பெ. (n.) ***இரக்கம்*** (அக.நி.); mercy, compassion. (செ.அக.).

[இர - இரவு.]

இரவு[3] *iravu* பெ. (n.) ***பன்றி வாகை*** (L); tube-in-tube wood. (செ.அக.).

[இர - இரவு.]

இரவு[4] *iravu*, பெ. (n.) 1. ***இரத்தல்;*** beggary. "கோலொடு நின்றா னிரவு." (குறள்.552) (செ.அக.). 2. ***வறுமை*** (ஆ.அக.); poverty.

ம. இரவு; க. ரெவு; தெ., து. எரவு.

[இர - இரவு.]

இரவுக்குறி *iravu-k-kuṟi*, பெ. (n.) ***இரவிலே தலைவ னுந் தலைவியுஞ் சேரும்படி குறிக்கப்பட்ட இடம்*** (தொல்.பொருள்.131.); clandestine meeting place of lovers by night. (செ.அக.).

[இரவு + குறி.]

இரவுக்குறியிடையீடு *iravuk-kuṟi-yiḍai-yīḍu*, பெ. (n.) ***எட்டாம் நாள் இரவுக் குறிக்கண் வந்த தலைவன், அல்ல குறிப்படுதலால் இடையீடு பட்டுப் போதல்.*** (அபி.சிந்); interruption of regularity of love meeting at night, literary genre of Tamil agam poems.

[இரவு + குறி + இடையீடு.]

இரவுச்சோறு *iravu-c-cōṟu*, பெ. (n.) 1. ***அரசின் கீழ் நிலைப் பணியாளர்க்கு இராக் காலத்திலிடும் உணவு*** (T.A.S.ii,65); supply of food at night, to government menial servents. (செ.அக.). 2. ***இரந்து உண்ணும் உணவு;*** food got through begging at night. (சேரநா.).

ம. இரவு சோறு.

[இரவு + சோறு.]

இரவுத் தலைச் சேறல் *iravuttalaiccēṟal*, பெ. (n.) ***தலைவனைக் காணவேண்டும் என்னும் ஆசை யோடு இருள்செறிந்த யாமத்து மாண்புறு மென்மை யாள் தன் இல்லினின்றும் புறப்படுதல். பெருந் திணைத் துறைகளுள் ஒன்று.*** (பு.வெ.); literary genre of Tamil agam poems - peruntiṇai.

[இரவு + தலை + சேறல். பெண் ஆணை நாடிச் செல்லுதல் நாணுவரையிறத்தல் என்னும் குற்றத்தின் பாற்படுதலின் இதனைப் பெருந்திணைத் துறைகளுள் ஒன்றாக்கினர்.]

இரவு பகல் *iravu-pagal*, பெ. (n.) ***இராக் காலமும் பகற் காலமும்;*** day and night.

பட. இருஹகலு.

[இரவு + பகல்.]

இரவு மலர் *iravu malar*, பெ. (n.) ***பொய்கைப் பூப் போலன்றி இரவுக் காலத்தும் மலர்ச்சி நிலை பெற்ற மலர்;*** nocturnal flower. "இரவு மலர் நின்று, திருமுகத் தலமரும்" (பதிற்று.21-34).

[இரவு[1] + மலர்.]

இரவுரை *iravurai*, பெ. (n.) ***இரப்புரை;*** entreaty, imploration. "இரவுரை நெடுவாரரிப்ப வட்டித்து" (புறநா.398.13).

[இரவு[4] + உரை.]

இரவெரி *iraveri,* பெ. (n.) ***ஒளிமரம்*** (சோதி மரம்) (மச்சபு.நைமிச.8); a kind of tree said to shine at night. (செ.அக.) "செந்தழல் ஒளியிற் பொங்கும் தீபமா மரங்களாலும்" (பெரியபு.கண்ணப்ப.131).

[இரவு[1] + எரி.]

இரவைக்கு *iravaikku,* கு.வி.எ. (adv.) ***இராப்பொழுதுக்கு;*** to night; for the night. 'இரவைக்குப் புழுக்குக் கறியமுது' (S.I.I.vii, 267) (செ.அக.)..

[இரவு - இரவை + கு.]

இரவோன்[1] *iravōṉ,* பெ. (n.) 1. ***இரவலன்*** (திவா.); beggar. (செ.அக.). 2. ***வறியவன்;*** poor man. (ஆ.அக.).

[இரவு + (ஆன்) ஓன்.]

இரவோன்[2] *iravōṉ,* பெ. (n.) ***திங்கள்*** (பிங்.); moon, who is the lord of the night. (செ.அக.).

[இரவு + (ஆன்) ஓன்.]

இரளி *iraḷi,* பெ. (n.) ***கொன்றை*** (மலை); cassia. (செ.அக.).

க. ரேலா; **தெ.** ரேலா-செட்டு.

[இர - இரளி.]

இரற்று-தல் *iraṟṟu-,* 15 செ.கு.வி. (v.i.) 1. ***ஓலமிடுதல்;*** to shout; utter a shriek as a bird. "கடலினாரை யிரற்றும்" (ஐங்குறு.114). 2. ***ஒலித்தல்;*** to sound.

[அரற்று - இரற்று.]

இரா[1] *irā,* பெ. (n.) ***இரவு;*** night. "நீடுக மன்னோ விரா" (குறள்.1329).

ம. இரா; **தெ.** இருலு. *Skt.* rātri.

[இரவு - இரா.]

இராக்கடைப் பெண்டிர் *irā-k-kaḍai-p-peṇḍir* பெ. (n.) ***விலை மாதர்*** (சிலப்.5,50,உரை); prostitutes. (செ.அக.).

[இரவு + கடை + பெண்டிர்.]

இராக்கடை வேசையர் *irā-k-kaḍai-vācaiyar,* பெ. (n.) ***இராக்கடைப் பெண்டிர்*** பார்க்க; see *irā-k-kaḍai--p-peṇḍir.*

[இரவு + கடை + வேசியர்.]

இராக்கண் *irākkaṇ,* பெ. (n.) ***இரவில் கண் தெரியாதவொரு நோய்;*** failure of or imperfect vision at night or in a dim light, night blindness-nyctalopia.

[இரவு + கண்.]

இராக்கதம் *irākkadam,* பெ. (n.) 1. ***தலை மகளை வலிதிற் கொள்ளும் மணம்*** (தொல்.பொருள்.92, உரை); a form of marriage in which the bride is carried away by force characteristic of Rakshasas of asta-vivākam. 2. ***இரவின் 15 நேரப் பிரிவுகளுள் ஆறாவது*** (விதான,குணா.73,உரை); the sixth of 15 divisions of the night. (செ.அக.). 3. ***பெண்ணுஞ் சுற்றமும் உடன்படாது வலிதிற் கொள்ளும் மணம்*** (ஆ.அக.); forced marriage.

[அரக்கன் - அரக்கதம் - ராக்கதம் - இராக்கதம்.]

இராக்கதிர் *irā-k-kadir,* பெ. (n.) ***திங்கள்*** (திவா.); moon, from its shining at night. (செ.அக.).

[இரவு - இரா + கதிர்.]

இராக்கறி *irāk-kaṟi,* பெ. (n.) ***இரவுச் சாப்பாட்டிற் குதவுங் கறிகள்;*** curries fit to be used in food during nights, as distinguished from பகற்கறி, those taken during the day. (சா.அக.).

[இரவு + கறி = இராக்கறி.]

இராக்கனி *irākkaṉi,* பெ. (n.) ***இரவு உணவுக்குப் பின் மெல்லப்படும் வெற்றிலை;*** betel, it is so called from its being invariably chewed in the night before retiring to bed. (சா.அக.).

[இரவு + கனி. கண்ணுக்குப்புலப்படப்பூத்துக் காய்க்காத இயல்புடைய வெற்றிலை கனித் தன்மையைத் தனக்குள் பெற்றிருக்கிறது என்னும் கருத்தில் கனி எனப்பட்டது. இரவு நேரத்தில் வெற்றிலை போட்டுக் கொள்வது வழக்கமாதலின் இப்பெயர் பெற்றது.]

இராக்கனியாள் *irākkaṉiyāḷ,* பெ. (n.) ***இரவிற் குடிப்பதற்குப் பாலைக் கொடுக்கும் மாடு;*** cow, as supplying milk to drink in the night before bed time. (சா.அக.).

[இரவு + கனி + ஆள்.]

இராக்குருடு *irāk-kuruḍu* பெ. (n.) ***மாலைக்கண்;*** night-blindness, nyctalobia.

[இரவு - இரா + குருடு.]

இராட்டிரம் *irāṭṭiram,* பெ. (n.) 1. ***நாடு;*** country, territory. 2. ***நகரிலிலுள்ள மக்கள்;*** towns folk; citizens. (செ.அக.).

[இரு = பெரிய. இரட்டு = பெரியது, பெரிய நிலப்பரப்பு. இரட்டம் → Skt. rastra > த. இராட்டிரம். இரட்டபாடி என்னும் வழக்கை நோக்குக.]

இராட்டினத்தொட்டி *irāṭṭiṉatoṭṭi,* பெ. (n.) ***இராட்டினம் போலச் சுழல் தொட்டி;*** vessel rotating like a wheel.

[இரட்டுதல் = சுற்றுதல். இரட்டு → இரட்டினம் → இராட்டினம்.]

இராட்டினம் *irāṭṭinam* பெ. (n.) 1. ***நூல் நூற்குங் கருவி;*** spinning wheel. 2. ***நீரிறைக்கும் கருவி;*** machine for drawing water. 3. ***பஞ்சரைக்குங் கருவி;*** machine for reeling. 4. ***ஏறிவிளையாடும் சுழல்தேர்;*** giant wheel in which people ride and amuse themselves at festivals. (ஆ.அக.).

[இரட்டுதல் = சுற்றுதல். இரட்டு → இரட்டினம் → இராட்டினம்.]

இராட்டின வாழை *irāṭṭina vāḻai,* பெ. (n.) ***ஒரு தண்டில் நடுவிட்டு மேலுங்கீழுஞ் சீப்பிடும் வாழை;*** a species of plantain whose bunches have an intermediate blank space. (வின்.).

[இராட்டினம் + வாழை.]

இராட்டின வூசல் *irāṭṭina vūšal* பெ. (n.) ***இராட்டின வூஞ்சல்*** பார்க்க; see *irāṭṭina-vūñjal.* (ஆ.அக.).

[இராட்டினம் + ஊசல்.]

இராட்டின வூஞ்சல் *irāṭṭina-vūñjal,* பெ. (n.) ***இராட்டினம் போற் சுழலு மூஞ்சல்;*** a kind of turning swing with four vanes like a wind-mill-sometimes called the fandango. (வின்.).

[இராட்டினம் + ஊஞ்சல்.]

இராட்டு[1] *irāṭṭu,* பெ. (n.) ***தேன்கூடு*** (இ.வ.); honey comb. (செ.அக.).

[இறால் → இராட்டு.]

இராட்டு[2] *irāṭṭu,* பெ. (n.) ***இறால்;*** shrimp, prawn. (ஆ.அக.).

[இறால் → இறாட்டு → இராட்டு.]

இராட்டை *irāṭṭai,* பெ. (n.) ***நூல் நூற்குங் கருவி;*** spinning wheel.

[இரட்டுதல் = சுற்றுதல். இரட்டு - இராட்டு - இராட்டை.]

இராடம்[1] *irāḍam,* பெ. (n.) 1. ***பெருங்காயம்;*** asafoetida. 2. ***வெண்காயம்;*** onion. (சா.அக.).

[இரதம் - இராதம் - இராடம். இரதம் = சாறு, சாறுள்ளது.]

இராடம்[2] *irāḍam,* பெ. (n.) ***குச்சரநாடு;*** ancient Gujarat. (சா.அக.).

[இரட்டம் → இராடம்.]

இராத்திரி *irāttiri,* பெ. (n.) 1. ***இரவு;*** night. 2. ***இராக்காலம்;*** night time. (சா.அக.).

[இரவு → இரா > Skt. rāthri > த. இராத்திரி.]

இராத் தூக்கம் *irāttū-k-kam,* பெ. (n.) ***இரவுத்தூக்கம்;*** night sleep as opposed to day sleep. 'இராத்தூக்கம் கெட்டுப்போச்சு' (இ.வ.) (சா.அக.).

[இரா + தூக்கம்.]

இராப்பகல் *irā-p-pagal,* பெ. (n.) 1. ***இரவும் பகலும்;*** night and day. "இராப்பகனாம் பேசும்போது" (திருவாச.7,2). (செ.அக.). 2. ***எப்பொழுதும்;*** always, constantly. (சா.அக.).

[இரவு → இரா + பகல் = இராப்பகல்.]

இராப்பண் *irā-p-paṇ,* பெ. (n.) ***இராக்காலத்திற் பாடுதற்குரிய பண்கள்;*** melodies to be sung at night. (செ.அக.).

[இரவு → இரா + பண்.]

இராப்பத்து *irā-p-pattu,* பெ. (n.) ***விண்ணகப் பதினோரமை முதல்*** (வைகுந்த ஏகாதசி) ***வருகின்ற பத்து இரவுகள்;*** *latter half of the attiyayaṉōrcavam in Viṣṇu temples beginning with vaikuṇḍa-ēgādaši day and continuing for ten nights. (செ.அக.).*

[இரவு → இரா + பத்து.]

இராப்பள்ளிக்கூடம் *irā-p-paḷḷi-k-kūḍam,* பெ. (n.) ***இரவில் நடத்தப்படும் பள்ளி;*** night-school. (செ.அக.).

[இரவு → இரா + பள்ளி + கூடம்.]

இராப்பாடி *irā-p-pāḍi,* பெ. (n.) 1. ***இரவில் வீடுவீடாகச் சென்று சோறு வாங்கும் சலவைத் தொழிலாளி*** (இ.வ.); member of a sect of the washerman caste called pudara vaṇṇāṉ, who begs by singing from door to door during night. (செ.அக.). 2. ***இரவிற்பாடுங் குருவி;*** small bird that sings at night. (சா.அக.).

[இரவு → இரா + பாடி.]

இராப்பாடிக் குருவி *irā-p-pāḍi-k-kuruvi,* பெ. (n.) ***வால்கொண்டலாத்தி என்னும், இரவிற்பாடுமொரு வகைக் குருவி;*** Madras boolbool or paradise fly catcher. (சா.அக.).

[இரவு → இரா + பாடி + குருவி.]



இராப்பாடிக் குருவி

இராப்பாலை *irā-p-pālai,* பெ. (n.) ***மரவகை*** (L.); garden tree with smooth grey bark. (செ.அக.).

[இரு → இரா + பாலை.]

இராப்பாறை *irāppāṟai,* பெ. (n.) ***ஒருவகைக் கடல் மீன்;*** a kind of sea fish.



இராப்பாறை

இராப்பிச்சை *irā-p-piccai,* பெ. (n.) ***இரவில் எடுக்கும் பிச்சை;*** begging at night. (செ.அக.).

[இரவு → இரா + பிச்சை.]

இராப்பூ *irā-p-pū,* பெ. (n.) ***இரவில் மலரும் பூக்கள்*** (சிலப்.2,14,உரை); flowers that blossom at night-fall like the water-lily. (செ.அக.).

[இரவு → இரா + பூ.]

இராவைக்கு *irāvaikku,* கு.வி.எ. (adv.) ***இரவுக்கு;*** for or during night "இராவைக்குப் போனகப் பழவரிசி" (S.I.I.ii,146). (செ.அக.).

[இரவு → இராவு + கு = இராவுக்கு - இராவைக்கு (கொ.வ.).]

இராவோன் *irāvōṉ,* பெ. (n.) ***நிலவு;*** moon. "முளைத் தன னிராவோன்" (திருவாத.பு.புத்தரை.30). (செ.அக.).

[இரவு + ஆன் = இராவான் - இராவோன்.]

இரி[1]-தல் *iri-,* 4, செ.கு.வி. (v.i.) 1. ***கெடுதல், தோற்றோடுதல்;*** to be destroyed. "மாறிரியச்சீறி" (பு.வெ.2,9). 2. ***ஓடுதல்;*** to run, to flee away, as a defeated army; to scamper away through fear. "புனலொழுகப் புள்ளிரியும்" (நாலடி.212). 3. ***விலகு தல்;*** to fall away, as a garment; to drop; to recede. "உத்தரீயங்களு மிரிய வோடுவார்" (கம்பரா.ஊர்தேடு. 51). 4. ***வடிதல்;*** to drop, as perspiration; to ebb, as the tide. 5. ***அஞ்சுதல்*** (திவா.); to fear, dread (செ.அக.). 6. ***பின்னுக்கோடுதல்*** (மு.தா); to retreat.

ம. இரிதல் (அழிவு.).

[இல் → இலி → இரி.]

இரி[2]-த்தல் *iri-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***தோற்றோடச் செய்தல்;*** to rout, defeat. 2. ***கெடுத்தல்;*** to destroy, ruin; to dispel. "வெஞ்சிலைக் காய்ந்திரிக்கும் புருவக் கருங்கண்ணியர்" (சீவக.1769). 3. ***ஓட்டுதல்;*** to drive away, scare away. "மள்ளர் குழூஉக்குரல்... அன்ன மிரிக்கும்" (கம்பரா.நாட்.32) (செ.அக.).

[இல் → இலி → இரி.]

இரிக்கி *irikki,* பெ. (n.) ***பெருங்கொடிவகை*** (L.); scimitar-pod. (செ.அக.).

[இரிகம் → இரிக்கி.]

இரிகக்கத்தை *irigakkattai,* பெ. (n.) ***இதய சடாக்குழி யில் நீட்டிக் கொண்டிருக்கும் தசைநார்;*** muscular projections (fleshy columns) inside the ventricles of the heart - columna carneae. (சா.அக.).

[இரிகம் + கத்தை.]

இரிகநாடி *iriganāḍi,* பெ. (n.) ***இதயத்தின் நாடி;*** cardiac artery. (சா.அக.).

[இரிகம் + நாடி.]

இரிகம் *irigam,* பெ. (n.) 1. ***இதயம்;*** heart. 2. ***மனம்;*** mind. (செ.அக.). 3. ***வழக்கு;*** dispute. (ஆ.அக.).

[இரி → இரியம் → இரிகம்.]

இரிகரம் *irigaram,* பெ. (n.) ***இதயத்திற் குண்டான அழற்சி;*** inflammation of the heart-carditis. (சா.அக.).

[இரி → இரிகரம்.]

இரிகு *irigu,* பெ. (n.) ***பகைவன்;*** enemy. (ஆ.அக.).

[இரி (அச்சம்) → இரிகு.]

இரிங்கணம் *iriṅgaṇam,* பெ. (n.) ***ஒரு பறவை;*** a kind of bird. (சா.அக.).

[இரி → இரிங்கணம்.]

இரிசம் *irisam,* பெ. (n.) ***பூனைக்காலி*** (மலை.); cowhage. (செ.அக.).

[இரி - இரிசம்.]

இரிசல் *irišal,* பெ. (n.) 1. ***பிளவு*** (யாழ்ப்); break, crack. 2. ***மனமுறிவு*** (யாழ்ப்.); alienation of mind, discord. (செ.அக.). 3. ***புலனை வேறொன்றிற் செலுத் தல்;*** division of the mind; diversion.

[இரி → இரியல் → இரிசல் .]

இரிசியா *iriśiya-,* பெ. (n.) ***இரிசம்*** பார்க்க; see *irisam.*

இரிஞ்சகம் *iriñjagam,* பெ. (n.) ***ஊசிமல்லிகை;*** needle shaped jasmine; harlot jasmine. (சா.அக.).

[இரி → இரிஞ்சகம்.]

இரிஞ்சி *iriñji,* பெ. (n.) ***மகிழ்*** (மலை); pointed-leaved ape-flower. (செ.அக.).

[இரி → இரிஞ்சி.]

இரிஞ்சிகம் *iriñjigam,* பெ. (n.) ***இரிஞ்சி*** பார்க்க; see *iriñji.* (சா.அக.).

[இரி → இரிஞ்சி → இரிஞ்சிகம்.]

இரிஞன் *iriñan*, பெ. (n.) ***பகைவன்*** (திவா.); foe, enemy. (செ.அக.).

[இரி → இரிஞன்.]

இரிட்டம்[1] *iriṭṭam*, பெ. (n.) ***நல்லது;*** good. (செ.அக.).

[இரு - (பெரியது. நல்லது) இரு - இரி - இரிட்டம்.]

இரிட்டம்[2] *iriṭṭam*, பெ. (n.) 1. ***தீயது;*** inauspicious. 2. ***வாள்;*** sword. 3. ***அழிவு, முடிவு;*** end, destruction. 4. ***அறக்கடை*** (பாவம்); sin (செ.அக.).

[இரு - இரி - இரிட்டம். இரு - கரியது, தீயது, அழிவு, அழிப்பது.]

இரிணம் *iriṇam*, பெ. (n.) 1. ***உவர்நிலம்*** (சூடா.); saline soil. (செ.அக.). 2. ***பாழடைந்தது;*** ruined (ஆ.அக.).

[இரி - (கெடுதல்) - இரி - இரிணம்.]

இரித்தகம் *irittagam*, பெ. (n.) ***பாழடைந்த வீடு;*** ruined house. (ஆ.அக.).

[இரி → இரித்தகம்.]

இரித்தம் *irittam*, பெ. (n.) ***செல்வம்;*** wealth. (ஆ.அக.).

[இரு → இரி → இரித்தம். இரு = பெரியது. ஆக்கம்.]

இரித்தை *irittai*, பெ. (n.) 1. ***நான்காவது, ஒன்பதாவது, பதினான்காவது மதி நாள்கள்*** (சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி என்னும் திதிகள்); 4th, 9th and 14th phases of the moon. 2. ***நாழிகை*** (பிங்.); period of 24 minutes. (செ.அக.).

[இரு → இரி → இரித்தை (மீன் கூட்டம், அல்லது ஓரை).]

இரிப்பு *irippu*, பெ. (n.) 1. ***இருத்தல், உட்காரும் செயல்;*** sitting. 2. ***நிலை;*** state, condition. 3. ***இருப்பிடம்;*** residence. 4. ***வாழும் நிலை, ஒழுக்கம்;*** mode of living, position, conduct. 5. ***ஒருவருக்கொருவர் கொண்டுள்ள உறவு முறையின் நிலை;*** nature of mutual relations. 6. ***இருக்கை;*** a seat. (சேரநா.) 7. ***முறியடிக்கை;*** defeating, (W.).

ம. இரிப்பு; க. இரபு; தெ. இரவு.

[இருப்பு → இரிப்பு (கொ.வ.).]

இரிபு *iribu*, பெ. (n.) 1. ***அச்சம்;*** fear. 2. ***ஓடுதல்;*** fleeing. 3. ***பகை;*** hatred, animosity. 4. ***தோல்வி;*** defeat, discomfiture. (ஆ.அக.).

[இரி → இரிபு.]

இரிபேரம் *iripēram*, பெ. (n.) ***வெட்டிவேர்*** (தைலவ. தைல.56); cuscus grass. (செ.அக.).

Skt hribēra.

[இரு → இரி (வேர் - வேரம் -) + பேரம்.]

இரிமான் *irimāṉ*, பெ. (n.) ***எலிவகை*** (இ.வ.); a species of rat. (செ.அக.).

[இரு + (மா)மான். இரு = கரிய. மா = விலங்கு.]

இரியல்[1] *iriyal*, பெ. (n.) 1. ***அச்சத்தால் நிலைகெடுகை*** (பெரும்பாண்.202:); being agitated, perturbed or tossed about through fear. 2. ***விரைந்து செல்கை;*** running, speeding, racing. "பெருநீர் போகு மிரியன் மாக்களொடு" (சிலப்.6,112). 3. ***அழுகை;*** weeping. "அழுவாளிரியற் குரல்" (கம்பரா.நகர் நீ.35) (செ.அக.).

[இல் → இரி - இரியல்.]

இரியல்[2] *iriyal*, பெ. (n.) ***நல்லாடை*** (வின்.); fine cloth (w.).

[இரு → இரி → இரியல்.]

இரியல்[3] *iriyal*, பெ. (n.) ***இலவங்கப்பட்டை;*** cinnamon. (சா.அக.).

[இரி → இரியல்.]

இரியல்போ-தல் *iriyal-pō-*, 8 செ.கு.வி. (v.i.) ***தோற்றோடுதல்;*** to be routed, put to flight. "அமரினாற்றாது... இரியல் போக. (கூர்மபு.தக்கன் வேள்.47.) (செ.அக.).

[இரி → இரியல் + போதல்.]

இரியல்போக்கு-தல் *iriyal-pōkku-*, 5 செ.குன்றாவி. (v.t.) ***சாய்த்துக் கொடுத்தல்;*** to give unsparingly, liberally "கயைடி யானை யிரியல் போக்கும்" (புறநா.135,12). (செ.அக.).

[இரி → இரியல் + போக்கு.]

இரிவிகஞ்சம் *irivikañjam*, பெ. (n.) ***அருளாளர்கள் சட்டை;*** coat of fibres obtained from the substance between the bark and the wood of a certain tree. In olden days it was used by siddhars. (சா.அக.).

[இரி → இரிவி + கஞ்சம்.]

இரு[1]**-த்தல்** *iru-*, 2 செ.கு.வி. (v.i.) 1. ***உளதாதல்;*** to exist. 'ஊரிலே ஏரி இருக்கிறது' (தெ.ஆ.). 2. ***நிலைபெறுதல்;*** to remain. "வலம் வரும்படி யிருப்பது கயிலைமால் வரையே" (கந்தபு. திருக்கைலாச.12). 3. ***உட்காருதல்;*** to sit down. "நிற்றலிருத்தல் கிடத்தலியங்குத லென்று" (நாலடி.334). 4. ***உள்ளிறங்குதல்;*** to sink, as a foundation; to disappear, come down. 'சுவர் இருந்துபோயிற்று'. 5. ***உயிர்வாழ்தல்;*** to live. "நெடுநாளிருந்த பேரும்" (தாயு.பரிபூ.10). 6. ***அணியமாயிருத்தல்;*** to be ready to act., to be in readiness for any duty or project; to be on the point of acting or going. 'மீன் பிடிக்க இருக்கிறான்' (கொ.வ.). 7. ***நினைத்தல்;*** to fancy; imagine, expect, hope. "***நம்பிமா ரென்றிருந் தோம்***" (தமிழ் நா.216). - இடை (part.) ஒரு துணை வினை; auxiliary verb. 'எழுந்திருந்தான்'. (செ.அக.).

ம. இரி; க. இரு; ஆத். இக்கத்தி.

[இல் → இர் → இரு.]

இரு[2] *iru,* கு.பெ.எ. (adj.) 1. ***இரண்டு;*** two. 2. ***இரட்டை;*** double.

ம. இரு; கூ. ரி; க. இரு, இர், இக்; தெ. இரு, ஈர்; குட. இரு; து. இர்; குவி. ரீ; கட. இர்; குரு. இர்ப், (இருவிர்); பிரா. இரா.

[இரண்டு → இரு.]

இரு[3] *iru,* கு.பெ.எ. (adj.) 1. ***பெரிய;*** great, spacious, vast. "மாயிரு ஞாலம்" (குறள்.999). 2. ***கரிய;*** black. "இருமலர்க் குவளை யுண்கண்" (சீவக.1171) (செ.அக.). 3. ***காட்டுமல்லிகை;*** wild jasmine. (சா.அக.).

இருமை = கருமை, பெருமை.

[இருமை → இரு.]

இருக்கணை *irukkaṇai,* பெ. (n.) ***சித்திர வேலைக்குத வும் மரவகை*** (Nels.); crenulate leaved spindle tree. (செ.அக.).

[இரு + கணை.]

இருக்கம் *irukkam,* பெ. (n.) 1. ***விண்மீன்;*** nakṣatra, star. 2. ***கரடி;*** bear. 3. ***ஓரை*** (இராசி.); zodiacal sign. (செ.அக.).

[ஒருகா: இரு = கரிய. இரு → இருக்கம். கரடிவடிவிலமைந்த விண்மீன் தொகுதி.]

இருக்கமாலி *irukkamāli,* பெ. (n.) ***766 முழ அகலமும் உயரமுமுள்ளதாய் 766 உச்சிகளோடு 96 மேனி லைக்கட்டுகள் கொண்ட கோயில்*** (சுக்கிரநீதி, 229); temple of the width of 766 cubits and of the same height, with 766 towers and 96 storeys.

[இரு → இருக்க (பெரிய + (மா) மாலி.]

இருக்கன் *iru-k-kaṉ,* பெ. (n.) ***நான்முகன்;*** Brahmā, literally one who recites the vēda. "தரைவிசும்பைச் சிட்டித்த விருக்கன்" (திருப்பு.419).

[இருக்கு → இருக்கன். இருக்கு மறையை (வேதம்) ஓதுபவன்.]

இருக்கால் *iru-k-kāl,* பெ. (n.) 1. ***இரண்டு முறை*** (பாரத.பதின் மூன்றாம்.111.); twice 2. ***கவற்றிற் குறித்த ஓர் எண்*** (வின்.); cast of dice for the number 2. (செ.அக.).

ம. இருக்கால.

[இரண்டு → இரு + கால்.]

இருக்காவி *irukkāvi,* பெ. (n.) ***கட்டுமரப்பக்கங்களை இணைத்துக்கட்டுஞ் சிறு பலகை;*** small piece of wood which connects the planks of a catamaran. (சேரநா.).

ம. இருக்காவி.

[இரு + காவி. காவு - காவி; காவுதல் = தாங்குதல்.]

இருக்காழி *iru-k-kāḻi,* பெ. (n.) ***இரண்டு விதையுடைய காய்*** (யாழ்ப்.); fruit with two kernels, as the palmyra. (செ.அக.).

[இரண்டு → இரு + (காழ்.) காழி. காழ் = வித்து.]

இருக்கு *irukku,* பெ. (n.) 1. ***வேதமந்திரம்;*** vēdic hymns. "வேதப்புனித விருக்கை நாவிற் கொண்டு" (திவ்.திருவாய்.5,2,9). 2. ***இருக்குவேதம்*** (திவ்.பெரி யாழ்.5,1,6.); the rig. vēda. (செ.அக.).

[அருக்குதல் = புகழ்தல், பரவுதல். அருக்கு → Skt. ருக். அர்ச் → த. இருக்கு.]

இருக்குக்குறள் *irukku-k-kuṟaḷ,* பெ. (n.) ***சிறிய பாவகை;*** a kind of short verse. "ஏகபாதந் தமிழிருக்குக் குறள் சாத்தி" (பெரியபு.திருஞான.276) (செ.அக.).

[ஒருகா: இறுக்கு → இருக்கு + குறள்.]

இருக்குவேள் *irukku-vēḷ,* பெ. (n.) ***புதுக்கோட்டைக் கருகில் உள்ள கொடும்பாளூரில் 8வது 9வது நூற் றாண்டில் அரசாண்ட வேளிர் சிற்றரசர்*** (கல்வெ.); line of powerful chieftains who flourished about the 8th and 9th c at Koḍumbālūr, in the Pudukkōṭṭai Dt. (செ.அக.).

[இரு → இருக்கு (பெருமை) + வேள். ஒ.நோ. அருக்கு = அருமை. "நிதியினருக்கு முன்னி" (திருக்கோ.275).]

இருக்கை *irukkai,* பெ. (n.) 1. ***உட்கார்ந்திருக்கை;*** sitting. "பார்வலிருக்கை" (புறநா.3,19). 2. ***உட்காருமி டம்*** (ஆசனம்) (நாலடி.143.); seat. 3. ***இருப்பிடம்,*** residence, dwelling, situation. 4. ***குடியிருப்பு;*** residential quarters, as in a village. "தண்பணை தழீஇய தளரா விருக்கை" (பெரும்பாண்.242). 5. ***கோள்களிருக்கும் ஓரை*** (இராசி) (பரிபா.11,3); sign of the zodiac, as the seat of the planets. 6. ***திரிதரவுள்ள விருக்கை, திரிதரவில்லா இருக்கை என்ற இருவகை இருக்கை கள்*** (சிலப்.8,25, உரை.); posture of two kinds viz., திரிதரவுள்ள விருக்கை; 'moving posture', திரிதரவில்லா விருக்கை motionless posture mentioned in the treatise on painting. (சிலப்.8,25, உரை.). 7. ***ஊர்*** (பிங்); town, village. 8. ***கோயில்;*** temple. "நீலியிருக்கை" (கந்தபு. மார்க்க.144). 9. ***அரசர் போர் புரியுக் காலங் கருதியி ருக்கும் இருப்பு*** (பு.வெ.9,37, உரை.); waiting for an opportunity to open hostilities or to commence war. (செ.அக.).

ம. இரிப்பு; க. இரவு; தெ. இருவு.

[இரு → இருக்கை.]

இருக்கையுதவல் *irukkai-y-udaval,* பெ. (n.) ***உட்கார இடமளித்தல்*** (திருவேங்:சத.58.); providing a seat esp. for a great person. (செ.அக.).

[இருக்கை + உதவல்.]

இருகண் *iru-kaṇ,* பெ. (n.) ***ஊனக்கண், ஞானக்கண்;*** eye of the body and eye of the mind. "இருகணும் புதைத்து வைக்கும்" (சீவக.1578). (செ.அக.).

[இரண்டு → இரு + கண்.]

இருகணி *iru-kaṇi,* பெ. (n.) ***இரு கண்களாலும் தொலைவிலுள்ள பொருள்களைக் காணவுதவும் தொலை நோக்குக்கருவி;*** binoculars.

இருகரந்தை *irukarandai,* பெ. (n.) ***சிவகரந்தை, திருமால்*** (விட்டுணு) ***கரந்தை எனும் இருகரந்தை*** (ஒருவகைச்செடி); two kinds of plants of sweet basil.

[இரு + கரந்தை.]

இருகரையன் *iru-karaiyaṉ,* பெ. (n.) 1. ***இரண்டு எண்ணம் உடையவன்*** (திவ்.பெரியாழ். திருப்பல்.2. வியா.). 2. ***மற்றொன்றிலும் பற்றுள்ளவன்;*** double minded man, vacillating person. (செ.அக.).

[இரண்டு → இரு + கரையன்.]

இருகழஞ்சு *irukaḻañju,* பெ. (n.) ***இரண்டரை வராக னெடை;*** two and a half pagodas. (சா.அக.).

[இரண்டு → இரு + கழஞ்சு.]

இருகழுத்துக்குப்பி *irukaḻuttukkuppi,* பெ. (n.) ***இரண்டு கழுத்தமைந்த ஒருவகைக்குப்பி;*** two necked bottle used in medicinal preparation - woulfe's bottle. (சா.அக.).

[இரண்டு → இரு + கழுத்து + குப்பி.]

இருகால் *irukāl,* பெ. (n.) 1. ***அரை;*** half. (ஆ.அக.). 2. ***இருமுறை;*** two times. (சா.அக.).

[இரண்டு → இரு + கால்.]

இருகா லாட்டல் *irukālāṭṭal,* பெ. (n.) ***இரண்டு தடவை மருந்தைக் கலுவத்திலிட்டு அரைத்தல்;*** grinding a medicine twice in a stone mortar.

[இரண்டு → இரு + கால் + ஆட்டல்.]

இருகாற் பிரண்டை *irukāṟpiraṇḍai,* பெ. (n.) ***களிப்பி ரண்டை;*** a species of the vitis (genus). (சா.அக.).

[இரண்டு - இரு + கால் + பிரண்டை.]

இருகுரங்கின்கை *iru-kuraṅkiṉ-kai,* பெ. (n.) ***முசு முசுக்கை*** (மலை); bristly bryony. (செ.அக.).

[இரண்டு → இரு + குரங்கு + இன் + கை. முசு = குரங்கின் பெயர்களுள் ஒன்று. முசுமுசு = குரங்கின் பெயர் அடுக்கு. முசுமுசு + கை = முசுமுசுக்கை என்னும் கொடி.]

இருகுமிழி *iru kumiḻi,* பெ. (n.) 1. ***இரண்டுவகைக் குமிழ மரம். அதாவது பெருங்குமிழ், சிறுகுமிழ்;*** two species of trees viz. big cashmere tree - Gmelina arborea and small cashmere tree - Gmelina asiatica. 2. ***நீர்க்குமிழ்; நிலக்குமிழ் என இருவகைக் குமிழ்;*** two kinds of Gmelina water borne and earth borne. (சா.அக.).

[இரண்டு → இரு + குமிழி.]

இருகுறணேரிசை வெண்பா *irukuṟaṇēri šai veṇbā,* பெ. (n.) ***நேரிசை வெண்பா வகை*** (காரிகை, செய்.3.) இது இரண்டு குறள் வெண்பாவாலாகி இரண்டுக்கும் நடுவில் தனிச்சொல் பெற்று வரும்; variety of nēriśai-veṇbā composed of two Kuṟal-veṇbā linked by an isolated foot. (செ.அக.).

[இரண்டு → இரு + குறள் + நேரிசை + வெண்பா.]

இருகூறு *iru kūṟu,* பெ. (n.) 1. ***இரண்டு பங்கு;*** two parts, two shares. 2. ***மாறானது, எதிரானது;*** opposition, duelity, contrariety. (சேரநா.).

ம. இருகூறு.

இருகொம்பு *iru-kombu,* பெ. (n.) ***'ை' என்ற எழுத்திலுள்ள இரண்டு கொம்பு;*** double loop which stands as a symbol for the vowel ஐ when forming vowel consonants ai, viz ை in letters like கை, தை, etc. (செ.அக.).

[இரண்டு → இரு + கொம்பு.]

இருகோட்டறுவை *iru-kōṭṭaṟuvai,* பெ. (n.) ***முன்னும் பின்னும் தொங்கலாக நால விட்ட துகில்*** (ஆ.அக.); cloth left hanging on either ends.

[இரண்டு → இரு + கோடு + அறுவை.]

இருங்கரம் *iruṅgaram,* பெ. (n.) ***ஓரளவு;*** dry measure = குறுணி; பதக்கு. (தைலவ.தைல.6) (செ.அக.).

[இரு + கரம்.]

இருங்காரை *iruṅkārai,* பெ. (n.) ***ஒருவகைக் கடல் மீன்;*** a kind of sea fish.

[இரு - இரும் + காரை.]



இருங்காரை

இருங்கு *iruṅgu,* பெ. (n.) ***சிவப்புச்சோளம்:*** a kind of red millet. (சா.அக.).

[அரிங்கு - இரிங்கு - இருங்கு.]

இருங்கெளுத்தி *iruṅkeḷutti,* பெ. (n.) ***ஒருவகைக் கடல் மீன்;*** a kind of sea fish.



இருங்கெளுத்தி

இருங்கோவேள் *iruṅgōvēḷ*, பெ. (n.) ***வேளிர் தலைவருள் ஒருவன்*** (புறநா.201.); name of an ancient chief of the vēḷ line of ruling chiefs. (செ.அக.).

[இரு = பெரிய. இரு + கோ + வேள். ஓ.நோ. பெரு - பெரும், இரு - இரும். இருங்கோ = பெருங்கோ (பேரரசன்).]

இருங்கோன் ஒல்லை ஆயன் செங்கண்ணனார் *iruṅkōṉ-ollai-āyaṉ-seṅkaṇṇaṉār*, பெ. (n.) ***கடைக்கழகப் புலவருள் ஒருவர்*** (அகநா.279); Sangam poet.

[இரும் + கோன் + ஒல்லை + ஆயன் + செம் + கண்ணன் + ஆர்.]

இருசங்கன் *irušaṅgaṉ*, பெ. (n.) ***இருவகைச் சங்கன் செடி. அதாவது, நற்சங்கன், பீச்சங்கன்;*** two varieties of the plant 1. mistle berry thorn. 2. smooth velkameria. (சா.அக.).

[இரண்டு → இரு + சங்கன்.]

இருசமய விளக்கம் *iru-šamaya-viḷakkam*, பெ. (n.) ***அரிதாசர் 16 ஆம் நூற்றாண்டிலியற்றிய சிவ, மாலிய மதங்களை ஆராயும் ஒருநூல்;*** name of a controversial treatise on the relative merits of Šaivaism and Vaiṣṇavaism, by Ari-tācar, 16th C. (செ.அக.).

[இரண்டு → இரு + சமயம் + விளக்கம்.]

இருசீர்ப்பாணி *iru-cīr-p-pāṇi*, பெ. (n.) ***இரட்டைத் தாளம்*** (பொருந.71.); a kind of tāḷam. (செ.அக.).

[இரண்டு → இரு + சீர் + பாணி.]

இருசு[1] *irušu*, பெ. (n.) 1. ***நேர்மை*** (திவா.); straightness, directness. 2. ***வண்டியச்சு*** (பிங்.); axletree. 3. ***மூங்கில்*** (மலை); bamboo.

க. இரசு; தெ. இருசு.

[இரு = பெரிது, நேரிது. இரு → இருசு.]

இருசு[2] *irušu*, பெ. (n.) ***திருநாமப்பாலை;*** wild sarasaparilla (சா.அக.).

[இரு (வலிமை) → இருசு.]

இருசுகந்தப்பூண்டு *iru-šuganda-p-pūṇḍu*, பெ. (n.) ***மருக்கொழுந்து;*** southern wood. (செ.அக.).

[இரு + சுகந்தம் + பூண்டு.]

இருசுடர் *iru-šuḍar*, பெ. (n.) ***ஞாயிறு, திங்கள்*** (சந்திரசூரியர்); sun and moon, the two bright orbs which illumine the earth. "இருசுடர் மீ தோடா விலங்கை" (தேவா.320,10) (செ.அக.).

[இரண்டு → இரு + சுடர்.]

இருசுடர்த்தோற்றம் *iru-šuḍar-t-tōṟṟam*, பெ. (n.) ***பெருங்காப்பியவுறுப்பு ளொன்று*** (ஆ.அக.); appearance of sun and moon described in poetry-one of the elements of epics. "இருசுடர்த்தோற்றமென் றினையன புனைந்து" (தண்டி.8).

[இரண்டு → இரு + சுடர் + தோற்றம்.]

இருசுழி *iru-šuḻi*, பெ. (n.) ***இரட்டைச்சுழி;*** double curls or rings, believed to indicate either comfortable life or chill penury. 'இருசுழி இருந்துண்டாலு முண்ணும், இரந் துண்டாலுமுண்ணும்.' (செ.அக.).

[இரண்டு → இரு + சுழி.]

இருஞ்சிறை *iruñ-ciṟai*, பெ. (n.) 1. ***நரகம்*** (வின்.); hell, considered as a great prison-house. (செ.அக.). 2. ***மதில்*** (ஆ.அக.); fortress.

[இரும் + சிறை.]

இருட்கண்டம் *iruṭ-kaṇḍam*, பெ. (n.) ***கழுத்தணி வகை;*** necklace. "பிறங்கிருட்கண்டமும்" (S.I.I.viii, 39) (செ.அக.).

[இருள் + கண்டம்.]

இருட்கண்டர் *iruṭ-kaṇḍar*, பெ. (n.) ***சிவன்;*** Šiva as having a dark throat. "கூர்ந்த விருட்கண்டர்" (பெரியபு.திருமுறை.12). (செ.அக.).

[இருள் + கண்டம் + அர்.]

இருட்கம்மல் *iruṭkammal*, பெ. (n.) ***கண்ணிற் புகை சூழ்ந்தது போற் காணுமோர்வகைக் கண்நோய்;*** eye disease marked by smoky appearance. (சா.அக.).

[இருள் + கம்மல்.]

இருட்சி *iruṭci*, பெ. (n.) 1. ***இருட்டு;*** darkness. (செ.அக.). 2. ***மயக்கம்*** (ஆ.அக.); illusion.

[இருள் + சி. ஓ.நோ: மருள் + சி = மருட்சி.]

இருட்டல் *iruṭṭal*, பெ. (n.) ***இருளாதல்;*** becoming dark. (ஆ.அக.).

[இருள் → இருளல் → இருண்டல் → இருட்டல்.]

இருட்டறை *iruṭṭaṟai*, பெ. (n.) 1. ***ஒளியில்லா அறை;*** darkroom. "இருட்டறையி லேதில்பிணந் தழீஇ யற்று" (குறள்.913) (செ.அக.). 2. ***அறியாமை;*** ignorance. "இருட்டறையில் உள்ளதடா உலகம்" - (பாரதிதாசன்).

ம. இருட்டற.

[இருள் + து = இருட்டு + அறை. இருட்டு = இருள் உடையது.]

இருட்டு[1] *iruṭṭu,* பெ. (n.) 1. ***இருள்;*** darkness. 2. ***அறியாமை*** (வின்.); figuratively, obscurity of mind; ignorance. (செ.அக.). 3. ***மயக்கம்*** (ஆ.அக.); illusion.

தெ. இருளு. இருலு; ம. இரிட்டு. இருட்டு; க. இருள், இரடு, இருளு; கோத. இர்ள் (இரவு); துட. ஈள்; குட. இரிடி; து. இருலு. இளுளு; கொலா. சிரும் (மிகவிருள்); பர். சிருல் (கரி.).

[இருள் → இருட்டு.]

இருட்டு[2]**-தல்** *iruṭṭu-,* 15, செ.கு.வி. (v.i.) 1. ***இருளடைதல்;*** to grow dark. 2. ***மந்தாரமிடுதல்;*** to darken; as when clouds gather. 'வானம் இருட்டி வருவதால்' மழை விரைவில் வரும்,' (செ.அக.).

ம. இருட்டுக; க. இருளாகு.

[இருள் + து = இருட்டு + தல்.]

இருட்பகை *iruṭ-pagai,* பெ. (n.) ***ஞாயிறு;*** sun, the enemy of darkness. 'இருட்பகை மண்டிலம்' (கல்லா.13). (செ.அக.).

[இருள் + பகை.]

இருட்படலம் *iruṭ-paḍalam,* பெ. (n.) ***இருட்தொகுதி;*** sheet of darkness, as a dense layer. (செ.அக.).

[இருள் + படலம்.]

இருட்பிழம்பு *iruṭ-piḻambu,* பெ. (n.) ***இருள்;*** darkness. "படரு மிருட்பிழம் பறுக்கும் பண்ணவன்" (மச்சபு. மச்சா.12) (செ.அக.).

[இருள் + பிழம்பு.]

இருட்பூ *iruṭ-pū,* பெ. (n.) ***மரவகை*** (L); malabar wrinkled log's matrix. (செ.அக.).

[இருள் + பூ.]

இருடி[1] *iruḍi,* பெ. (n.) ***முனிவன்;*** saint.

[இரு = பெருமை. இரு - இருளி - இருடி.]

இருடி[2] *iruḍi,* பெ. (n.) ***ஆந்தை*** (பிங்.); owl. (செ.அக.).

[இருள் - இருளி - இருடி - இருளில் வாழும் ஆந்தை. முனிவனைப் போல் வருவது உரைக்கும் கணியனாகச் செயற்படுவது நோக்கி ஆந்தைக்கு இட்ட பெயர். சாவு அல்லது கேட்டினை முன்கூட்டி தெரிவிக்கும் என்னும் நம்பிக்கையால் இதனைச் சாக்குருவி என்றும் கூறுவர்.]

இருண்ட செவலை *iruṇḍa-ševalai,* பெ. (n.) ***கருமை கலந்த மங்கல் நிறமான மாட்டுநிறவகை*** (பெரிய மாட். 13); dark brown colour of cattle. (செ.அக.).

[இருள் → இருண்ட (பெ.எ.) + (சிவலை) செவலை (கொ.வ.).]

இருண்மதி *iruṇ-madi,* பெ. (n.) 1. ***தேய்பிறைத் திங்கள்;*** waning moon, in the dark fortnight. "இருண்மதி யிற் றேய்வன கெடுக" (மதுரைக்.195). 2. ***காருவா*** (அமாவாசை.) (பரிபா.11,37.); new moon. (செ.அக.).

[இருள் + மதி.]

இருண்மலம் *iruṇ-malam,* பெ. (n.) ***ஆணவமலம்*** பார்க்க; see *āṇavamalam.* "எண்ணரிதாய் நித்தமா யிருண்மலத்தி னழுந்தி" (சிவப்பிர.2, 1). (செ.அக.).

[இருள் + மலம்.]

இருண்மை *iruṇmai,* பெ. (n.) ***இருண்டிருக்குந் தன்மை;*** *being dark, darkness.*

[இருள் + மை = இருண்மை.]

இருணம்[1] *iruṇam,* பெ. (n.) 1. ***உவர் நிலம்*** (பிங்.); saline soil. (செ.அக.). 2. ***உப்பளம்;*** salt field; salt pan. 3. ***எதிர்மறை;*** negative. (சா.அக.).

[அளம் → அளவணம் > Skt. lavaṇa, ṛṇa > த. இருணம்.]

இருணம்[2] *iruṇam,* பெ. (n.) ***கடன்;*** debt. (செ.அக.).

க. ருண; தெ. ருணமு.

[உப்பைக் கடன் வாங்கும் தொன்முதுகால இயல்பினால் உப்பைக் குறித்த சொல் கடன் பொருளுக்கு உரியதாயிற்று.]

இருணாள் *iruṇāḷ,* பெ. (n.) ***தேய்பிறை நாள்*** (திவ் பெரியதி.8,8,9); titi of the dark fortnight. (செ.அக.).

[இருள் + நாள் = இருணாள்.]

இருணி *iruṇi,* பெ. (n.) ***பன்றி;*** hog. "இருணியா யெழுந்த சோதியிரணியாக் கனைத்தான் கொல்ல" (வரத. பாகவத. நரசிங்க.5). (செ.அக.).

ம. இருளி.

[இருளி → இருணி.]

இருத்தல் *iruttal,* பெ. (n.) 1. ***உரிப்பொருள்கள் ஐந்தனுள் முல்லைக் குரியது*** (நம்பியகப்.25); heroin's bearing patiently separation from hero, a literary mode appropriate to the mullai or forest pasture tracts, one of five uri-p-porul. (செ.அக.). 2. ***உயிரோடிருத்தல்;*** being alive. 3. ***வாழ்வு;*** living. (சா.அக.).

[இல்-குழித்தற் கருத்து. இருத்துதல் கருத்து. இல் → இர் → இருத்தல்.]

இருத்தி[1] *irutti,* பெ. (n.) ***வட்டி*** (T.A.S. viii,15); interest.

Skt. rddhi.

[இரு → இருத்து → இருத்தி (இ.எச்சம்).]

இருத்தி[2] *irutti,* பெ. (n.) 1. ***சித்தி;*** super natural powers obtained by abstract meditation and exercised at one's will. "அளப்பிலிருத்தியொடு" (மணி.21,166) (செ.அக.). 2. ***மேன்மை;*** excellence. (ஆ.அக.).

[இரு → இருத்து → இருத்தி = உள்ளத்தின் கண் இருத்திக் கொள்ளப் பட்ட ஆற்றல்கள்.]

இருத்திப்பேசு-தல் *irutti-p-pēcu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***அழுத்திச்சொல்லுதல்;*** to speak emphatically or impressively (w.).

இருத்தி + பேசு.]

இருத்திப்போடு-தல் *irutti-p-pōḍu-, 19 செ.குன்றாவி. (v.t.) 1.* ***நிலைக்கச் செய்தல்*** (வின்.); to cause to settle, fix; to cause to run aground, as a vessel. 2. ***அசையாமற்***

செய்தல் (கொ.வ.); to bring to a stand still, stop one's progress. (செ.அக.).

[இரு → இருத்து → இருத்தி + போடு.]

இருத்து[1]-தல் *iruttu-,* 5 செ.குன்றாவி(v.t.) 1. ***உட்காரச் செய்தல்;*** to cause to sit. "உபசாரமுடனருகுறவிருத்தி" (பாரத.நாடுகரந்.31). 2. ***தாமதிக்கச் செய்தல்;*** to detain, cause one to wait for a time. 3. ***அழுத்துதல்;*** to press down; to bear upon, as with a style or other instrument. "பொன் மௌலியை யிருத்தினான்" (பாரத. பதினெட்டாம்.187). 4. ***அடித்து உட்செலுத்துதல்;*** to beat down, as a floor, to drive in, as a nail, to make firm or compact by beating.'ஆணியை உள்ளே இருத்து.' 5. ***நிலை பெறச் செய்தல்*** (குறள்,660,உரை); to fix permanently, make stationary.- 5 செ.கு.வி. (v.i.) ***கீழிறங்குதல்;*** to sink down, as a foundation. "வீடு இருத்திக் கொண்டது" (செ.அக.).

[இரு → இருத்து.]

இருத்து[2] *iruttu,* பெ. (n.) ***வயிரக் குற்றங்களுள் ஒன்று*** (சிலப்.14,180,உரை); flaw in diamond one of twelve vayira-k-kuṟṟam. (செ.அக.).

[இருள் + து = இருத்து.]

இருத்து[3] *iruttu,* பெ. (n.) 1. ***நிலையான பொருள்;*** that which is firm, permanent. "என்னெஞ்சத்து இருத்தாக விருத்தினேன்" (திவ்.திருவாய்.9,4,6). 2. ***அழுக்குகை;*** pressure "அவனை ஓர் இருத்து இருத்தினான்" (கொ.வ.) (செ.அக.).

[இரு → இருத்து = நிலை பெற்ற பொருள். இறு → இறுத்து = தாக்குதல், கீழே அழுந்துமாறு அமுக்குதல்.]

இருத்தை[1] *iruttai,* பெ. (n.) ***சேங்கொட்டை*** (மலை); marking-nut tree. (செ.அக.).

[இரு - இருத்தை.]

இருத்தை[2] *iruttai,* பெ. (n.) ***ஒரு பெண் தேவதை;*** woman deity. (அபி.சிந்).

[இரு (கரிய) → இருத்தை.]

இருதலை *iru-talai,* பெ. (n.) ***இருமுனை;*** two ends. "நடுவண தெய்த விருதலையு மெய்தும்" (நாலடி.114) (செ.அக.).

[இரண்டு → இரு + தலை.]

இருதலை ஏய்ப்பு *irudalai-ēyppu,* பெ. (n.) 1. ***விலாங்கு மீன்*** (ஆ.அக.); eel. 2. ***ஏமாற்றும் பேச்சு;*** spoken of as being deceitful. (செ.அக.).

[இரு + தலை + ஏய்ப்பு. ஏய்ப்பு = ஒத்திருத்தல்.]

இருதலைக் குழவி *irutalai-k-kuḻavi,* பெ. (n.) ***அம்மிக் குழவி;*** pestle with grinding facility on both ends, as opposed to the common pestle shaped on one side. (சா.அக.).

[இரு + தலை + குழவி.]

இருதலைக்கொள்ளி *iru-talai-k-koḷḷi,* பெ. (n.) ***இரு முனையிலுந் தீயுள்ள கட்டை;*** brand burning at both ends. "இருதலைக் கொள்ளி யிடைநின்று வருந்தி" (அகநா.339-9). 2. ***எப்பக்கத்தும் துன்பஞ் செய்வது;*** that which causes trouble in all directions. (செ.அக.) "இருதலைக்கொள்ளியின் உள்ளெறும்பு ஒத்து" (திருவாச.113).

[இரு + தலை + கொள்ளி.]

இருதலைஞாங்கர் *iru-talai-ñāṅgar,* பெ. (n.) ***இருதலையுங் கூருள்ள குமரன்வேல்*** (யாழ்.அக.); double-pointed lance. (செ.அக.).

[இரு + தலை + ஞாங்கர்.]

இருதலைப்பகரங்கள் *iru-talai-p-pagaraṅgaḷ,* பெ. (n.) ***எழுத்துகளை உள்ளடக்கி நிற்கும் [ ] (பகர) அடைப்பு;*** square brackets. (செ.அக.).

[இரு + தலை + பகரங்கள்.]

இருதலைப்பாம்பு *iru-talai-p-pāmbu,* பெ. (n.) 1. ***இருதலை மணியன்;*** semi-nocturnal sand-snake. 2. ***இருதலைப்புடையன்*** (இ.வ.); blind snake with very short head and tail. 3. ***மண்ணுளிப் பாம்பு;*** harm less kind of snake (w.). (செ.அக.).

[இரு + தலை + பாம்பு.]



இருதலைப்பாம்பு

இருதலைப்புடையன் *iru-talai-p-puḍaiyaṉ,* பெ. (n.) ***இரண்டு பக்கமும் சிறிய தலையுடைய பாம்பு வகை;*** blind snake with very short head and tail, including the smallest species of snakes, supposed to have a head at either end, typhlopidae. (செ.அக.).

[இரு + தலை + புடையன்.]

இருதலைப்புள் *iru-talai-p-puḷ,* பெ. (n.) ***இரண்டு தலைகளுள்ள பறவை*** (சீவக.1631, உரை); fabulous bird with two heads. (செ.அக.).

[இரு + தலை + புள்.]

இருதலைமணியம் *iru-talai-maṇiyam,* பெ. (n.) 1 ***நண்பன் போல் நடித்து இருவருள் கலகம் விளைக் குந்தொழில்*** (செ.அக.); act of setting one person against another by pretending to be friend of each of them. 2 ***ஒருவகை நச்சுப் பாம்பு;*** a kind of poisionous snake. (சேரநா.).

ம. இருதலை மணியன்.

[இரு + தலை + மணியம்.]

இருதலைமணியன் *iru-talai-maṇiyan,* பெ. (n.) 1. ***தலைகள் இரண்டும் உடல் ஒன்றுமாகவுள்ள பாம்பு வகை;*** semi-nocturnal sand-snake. 2. ***குறளை சொல் வோன்*** (இ.வ.); back biter, tale bearer. (செ.அக.).

ம. இருதலை மணியன்.

[இரண்டு → இரு + தலை + மணியன்.]

இருதலைமாணிக்கம் *iru-talai-māṇikkam,* பெ. (n.) ***சிவமந்திரம்;*** a šaiva mantra, viz. சிவாயவாசி, which reads the same whether uttered from the beginning or from the end. (செ.அக.).

[இரண்டு → இரு + தலை + மாணிக்கம்.]

இரு தலை மூரி *iru-talai-mūri,* பெ. (n.) ***மண்ணுளிப் பாம்பு*** (இ.வ.); harmless kind of snake (w.). (செ.அக.).

[இரண்டு → இரு + தலை + மூரி.]

இருதலை விரியன் *iru-talai-viriyan,* பெ. (n.) ***இரண்டு தலையும் நான்கு அடி நீளமும் உடைய பாம்பு வகை;*** sand snake, nearly 4 ft. long, mutilated by snake charmers in such a way as to make the tail resemble the head-eryx johni. (செ.அக.).

ம. இருதல மூரி.

[இரண்டு → இரு + தலை + விரியன்.]

இருதாள் *irutāḷ,* பெ. (n.) ***இரண்டு திருவடிகள்*** (ஐங்குறு. கடை.); two divine feet. (w.).

[இரண்டு → இரு + தாள்.]

இருதிணை *iru-tiṇai,* பெ. (n.) 1. ***உயர்திணை, அஃறிணை என்ற இரண்டு பிரிவு;*** two classes of nouns and verbs referring to (i) the personal and (ii) the impersonal, viz., உயர்திணை, அஃறிணை. (தொல். சொல்.1.). 2. ***இயங் குதிணை, நிலைத்திணை என்ற இரு பிரிவு;*** two classes into which creatures are divided, viz, இயங்குதிணை 'moving' and நிலைத்திணை 'fixed' (செ.அக.).

[இரண்டு → இரு + திணை.]

இருதிரிமருப்பு *irutirimaruppu,* பெ. (n.) ***பெரிய முறுக்கு டைய கொம்பு;*** twisted horn. "இருதிரி மருப்பி னண்ணல் இரலை" (அகநா.34-4).

[இரு + திரி + மருப்பு.]

இருது *irudu,* பெ. (n.) 1. ***இரண்டு மாதம் கொண்ட பருவகாலம்;*** season of two months. "இருதிள வேனி லெரிகதி ரிடபத்து" (மணி.11,40). 2. ***மகளிர் பூப்பு;*** catamenia. 3. ***முதற் பூப்பு;*** first menstrual discharge. (செ.அக.).

[இரு → இருது = பெருகி முதிரும் பருவம்.]

இருதுக்கொடியோன் *irudu-k-koḍiyōn,* பெ. (n.) ***பவளம்; கொடிப் பவளம்;*** coral, coral creeper. (சா.அக.).

[அரு → அருது → இருது + கொடியோன்.]

இருதுகாலம் *irudu-kālam,* பெ. (n.) 1. ***மாதவிடாய்க் காலம்;*** time of woman's periods. 2. ***கருத்தரிக்குங் காலம்;*** period favourable for conception. (செ.அக.) 3. ***மழைக்கா லம்;*** rainy season.

[இருது + காலம். இரு - இருது > Skt. ṛutu.]

இருது சாந்தி *irudu-šānti,* பெ. (n.) ***சாந்திமணம்;*** propitiatory rite performed in connection with the ceremonial consummation of marriage in the period recognised in the šāstrās as favourable for conception, consummation. (செ.அக.).

[இருது + சாந்தி. சாந்தி = விழா.]

இருதுடையாதவள் *iruduḍaiyādavaḷ,* பெ. (n.) ***எப் பொழுதுமே பருவமடையாதவள்;*** woman who has not menstruated at all. (சா.அக.).

[இரு - இருது = பெரிது. வளர்ந்து எய்தும் பருவம், பருவ காலத்தில் மகளிர்க்குண்டாகும் பூப்பு இருது > Skt. ருது.]

இருதுத்தம் *iruduttam,* பெ. (n.) ***இருவகைத் துத்தம்;*** two kinds of vitriol (tuttam) - zinc sulphur or white vitriol and copper sulphate or blue vitriol. (சா.அக.).

[இரண்டு → இரு + துத்தம்.]

இருது நுகர்வு *irudu-nugarvu,* பெ. (n.) ***பருவங்கட் குரிய பட்டறிவு*** (சீவக.2668,தலைப்பு.); enjoyment appropriate to the season. (செ.அக.).

[இருது + நுகர்வு.]

இருதுப்பெண் *iruduppeṇ,* பெ. (n.) 1. ***திரண்ட பெண்;*** matured girl. 2. ***மாதவிடாய்ப் பெண்;*** a woman in her mensès. (சா.அக.).

[இருது + பெண்.]

இருதுமதி *irudu-madi,* பெ. (n.) 1. ***பருவப்பெண்;*** girl who has attained puberty. 2. ***மாதவிலக்கான பெண்கள்*** (சைவச.பொது.307); woman during her periods. 3. ***கருத்தரித்தற்குரிய நிலையிலிருப்பவள்;*** woman just after her periods, being then in a condition favourable for conception. (செ.அக.).

[இருது + மதி. மதி = பெண்பாலீறுகளுள் ஒன்று. நிலவைப் (மதி) பெண்ணாகக் கருதும் பெற்றி நோக்கி இச்சொல் பெண்பாலீ றாக ஆளப்பட்டது.]

இருதுவா-தல் *irudu-v-ā-*, 6 செ.கு.வி. (v.i.) ***பருவமடைதல்;*** to attain puberty, said only of a girl. (செ.அக.).

[இருது + ஆதல்.]

இருந்த திருக்கோலம் *irunda-tiru-k-kōlam,* பெ. (n.) ***திருமாலின் வீற்றிருக்கும் இருப்பு;*** sitting posture of Viṣṇu, one of three tiru-k-kōlams. (செ.அக.).

[இரு → இருந்த + திருக்கோலம்.]

இருந்ததேகுடியாக *irundade-kuḍi-yāga,* கு.வி.எ. (adv.) ***எல்லாருமாக;*** all gathered together. "இருந்ததே குடியாகக் காணும்படி" (ஈடு.4,1,1.) (செ.அக.).

[இரு → இருந்தது + ஏ + குடி + ஆக.]

இருந்த நம்பி *irunda-nambi,* பெ. (n.) ***நூற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்றாகிய திருக்குறுங் குடியிற் கோயில் கொண்ட திருமால்*** (ஆ.அக.); Lord Vishnu in sitting posture at Thirukkuruṅguḍi, one of 108 Vaiṣṇavite shrines.

[இரு - இருந்த + நம்பி.]

இருந்த வழி *irunda vaḻi,* பெ. (n.) ***இருந்த இடம்*** (மதுரைக்.158); place one had lived.

[இருந்த + (உழி) வழி.]

இருந்தவளமுடையார் *irunda-vaḷa-muḍaiyār,* பெ. (n.) ***கூடலழகர்*** (சிலப்.18,4,அரும்.); Viṣṇu in the perumāl temple at Madura so styled with special reference to the beauty of His sitting posture. (செ.அக.).

[இரு → இருந்த + வளம் + உடையார். வளம் = அழகு.]

இருந்தாழி *iruntāḻi,* பெ. (n.) ***கரிய தாழி;*** black vessel. "இருந்தாழி கவிப்ப" (நற்.271).

[இரு → இரும் + தாழி.]

இருந்தாற்போல் *irundāṟ-pōl,* கு.வி.எ. (adv.) ***திடீரென்று*** (திவ்.திருவிருத்.12, வ்யா.அப்பு); suddenly. (செ.அக.).

[இருந்தால் + போல். இருந்தாற்போலிருந்து என்னும் மரபுத் தொடர் திடுமென ஏற்படும் மாற்றத்தைக் குறித்தது. இருந்தாற் போலிருந்து - இருந்தாற்போல்.]

இருந்தில் *irundil,* பெ. (n.) 1. ***இருந்தை*** (திவ். பெரியதி.2,10,3) பார்க்க; see *irundai.* 2. ***நிலக்கரி;*** coal. (சேரநா.).

க. இத்தல்; ம. இருன்னல்.

[இரும் = கரிய - இரும் + த் + இல் = இருந்தில்.]

இருந்து[1] *irundu,* பெ. (n.) ***இருந்தை*** பார்க்க; see *irundai.* (செ.அக.).

[இருந்தில் → இருந்தை → இருந்து.]

இருந்து[2] *irundu,* இடை. (part.) ***ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபு;*** sign of the abl. case as in எங்கிருந்து. (செ.அக.).

[இரு → இருந்து.]

இருந்துபோ-தல் *irundu-pō-,* 8 செ.குன்றாவி. (v.t.) 1. ***செயலறுதல்;*** to be rendered inactive, to be stupefied; to be paralysed. 'அந்தத் துக்கத்தைக் கேட்டதும் அவன் இருந்து போனான்'. 2. ***கீழே அழுந்துதல்;*** to sink. 'அடிவாரம் இருந்து போயிற்று.' 3. ***விலை போகாது தங்குதல்;*** to remain unsold, as goods. 'இருந்து போன சாமான்.' (செ.அக.).

[இரு → இருந்து + போ.]

இருந்தும் *irundum,* இடை. (conj.) ***ஆகவும்;*** for all that, nevertheless, yet, notwithstanding. 'அப்படியிருந்துஞ் செய்தான்.' (செ.அக.).

[இரு → இருந்து + உம்.]

இருந்தேத்துவார் *irundēttuvār,* பெ. (n.) ***மாகதர்*** (சிலப்.5,48,உரை); courtiers. (செ.அக.).

[இரு → இருந்து + ஏத்துவார்.]

இருந்தை *irundai,* பெ. (n.) ***கரி;*** charcoal. "வாலி தாம் பக்கமிருந்தைக் கிருந்தன்று" (நாலடி.258). (செ.அக.).

[இருந்தில் → இருந்தை.]

இருந்தையூர் *iruntai-y-ūr,* பெ. (n.) ***மதுரையில் திருமால் கோயில் கொண்டுள்ள இடம்*** (பரிபா. பக்.165); ancient suburb of Madurai where a Viṣṇu temple dedicated to Irunta-vaḷam-uḍaiyār is situated.

[இரு → இருந்தை + ஊர். திருமால் இருந்த கோலத்தில் கோயில் கொண்டு இருக்கும் ஊர். இருந்த வளமுடையார் பார்க்க.]

இருந்தையூர்க் கருங்கோழி மோசியார் *irundai-yūrkkauṅ-kōḻi-mōśiyār,* பெ. (n.) ***கடைக் கழகத்திலிருந்த தமிழ்ப் புலவருள் ஒருவர்;*** poet of the Śangam age.

[இருந்தை + ஊர் + கரும் + கோழி + மோசி + ஆர். இருந்தையூர் = திருமால் இருந்த கோலங்கொண்ட கோயில் உள்ள ஊர்.]

இருந்தையூர்க் கொற்றன் புலவன் *irundai-yūr-k-koṟṟaṉ-pulavaṉ* பெ. (n.) ***கடைக்கழகப் புலவருள் ஒருவர்;*** poet of the Śangam age.

[இருந்தை + ஊர் + கொற்றன் + புலவன்.]

இருந்தோட்டுப்புள் *irundōṭṭu-p-puḷ,* பெ. (n.) ***பெருங் கூட்டப்பறவை;*** flock of birds.

[இரும் + தோடு + புள். இரும் = பெரிய. தோடு = தொகுதி, கூட்டம். புள் = பறவை.]

இருந்தோன்றல் *irun-tōṉṟal,* பெ. (n.) ***கரிய தோற்றத் தினையுடைய;*** blackish appearance. "அளப்பரிதாகிய குவையிருந்தோன்றல்" (அகநா.162).

[இரும் + தோன்றல்.]

இருநிதிக்கிழவன் *iru-nidi-k-kiḻavaṉ,* பெ. (n.) ***குபேரன்;*** kubēra, the possessor of wealth.

[இரு + நிதி + கிழவன். இரு = பெரிய.]

இருநிலம் *iru-nilam,* பெ. (n.) ***அகண்ட நிலப்பகுதி;*** wide world, vast expanse of earth. "இருநில மாள்வோன்" (சிலப்.28,78) (செ.அக.).

[இரு + நிலம்.]

இருநினைவு *iru-ninaivu,* பெ. (n.) ***இரண்டுபட்ட மனம்*** (கொ.வ.); double mindedness, wavering disposition. (செ.அக.).

[இரு + நினைவு.]

இருநூறு *iru-nūru,* பெ. (n.) ***இரண்டு நூறு;*** two hundreds.

ம. இருநூறு; க., தெ., பட. இன்னூறு; கோத. இனூர்; துட. இனூர்; குட. இன்னூர்; துளு. இர்நூறு; (செ.அக.).

[இரண்டு - இரு + நூறு.]

இருநெறித்தெரிப்பு *iru-neri-terippu,* பெ. (n.) ***இரண்டு தொடைச் சந்திலும் நெறிக்கட்டி, வலியைத் தருமோர் நோய்;*** disease characterised by the inflammation of the lymph glands of the groin. (சா.அக.).

[இரு + நெறி + தெரிப்பு.]

இருநேரம் *irunēram,* பெ. (n.) ***இரண்டு வேளை; அதாவது காலை, மாலை;*** two periods of the day viz. the morning and the evening. (சா.அக.).

[இரண்டு → இரு + நேரம்.]

இருநொச்சில் *irunoccil,* பெ. (n.) ***இருவகை நொச்சிச் செடி;*** two species of negundu plant viz. 1. ***வெண்ணொச்சி;*** white leaved negundo-itex negundo. 2. ***கருநொச்சி;*** black leaved negundu (unidentified). It is said that it is not ordinarity visible, but can only be recognised by siddhars and yogis through psychic vision. (சா.அக.).

[இரண்டு → இரு + நொச்சில்.]

இருப்படி *iruppadi,* பெ. (n.) ***குதிரைவண்டி போன்றவற்றில் உட்காருவதற்காக அமைக்கப்பட்ட இடம்;*** raised seat in a coach. (சேரநா.).

ம. இருப்படி.

[இருப்பு + அடி.]

இருப்பணிச் சட்டம் *iruppaṇi-c-cattam,* பெ. (n.) ***இருப்புச் சட்டம்*** பார்க்க (இ.வ.); cart-drivers seat. (செ.அக.).

[இரும்பு → இருப்பு + அணி + சட்டம்.]

இருப்பவல் *iruppaval,* பெ. (n.) ***ஒரு மருந்துப் பூண்டு*** (m.m.); Indian cudweed. (செ.அக.).

[ஒருகா. இரு + பவல். பவல் → பவர் = கொடிவகை.]

இருப்பன *iruppana,* பெ. (n.) ***நிலைத்திணைப் பொருள்கள்;*** motionless things such as vegetation and lower forms of life. "இருப்பன முதற் றேகங்க ளத்தனையும்" (தாயு.பரி.2) (செ.அக.).

[இரு - இருப்பன. (வினையா.பெ.).]

இருப்பாணி *iruppāṇi,* பெ. (n.) ***இரும்பாணி;*** iron nail. "அடிப்பேன் கவியிருப் பாணி கொண்டே" (தனிப்பா.1.120.22).

ம. இரும்பாணி.

[இரும்பு - இருப்பு + ஆணி.]

இருப்பாரை *iruppārai,* பெ. (n.) ***கருமூஞ்சிப்பாரை மீன்;*** grey horse-mackerel. caranire. (செ.அக.).

[இரு + பாரை.]

இருப்பாவல் *iruppāval,* பெ. (n.) ***கருநிறக்காயுள்ள பாவல்; காட்டுப் பாவல்;*** wild momordica eharantia. (சேரநா.).

ம. இருப்பாவல்.

[இரு + பாவல்.]

இருப்பிடம் *iruppidam,* பெ. (n.) 1. ***தங்குமிடம்*** (திவ்.இராமானுச.106); residence, lodging, abode, dwelling. 2. ***இருக்கை;*** seat. (செ.அக.).

ம. இருப்பிடம், இரிப்பிடம்.

[இருப்பு + இடம்.]

இருப்பு *iruppu,* பெ. (n.) 1. ***இருக்கை*** (பாரத.சூது.5); seat. 2. ***குதம்;*** seat of the body, posteriors. "இருப்பினி னாகர்" (கந்தபு.சூர.வதை.425). 3. ***இருப்பிடம்;*** residence: "முத்தொழிற்புரி மூவரிருப்புடன்" (சேதுபு. இராமதீர்த். 20). 4. ***நிலை;*** stage at which matter rests, condition, position in life. 'உன்னிருப்பென்ன அவளிருப்பென்ன?' 5. ***கையிருப்பு;*** balance on hand, surplus, whether of cash, reserve funds or commodities. 6. ***பொருண்முதல்;*** stores, merchandise, capital. (செ.அக.).

ம. இருப்பு.

[இரு → இருப்பு.]

இருப்புக்கச்சை *iruppu-k-kaccai,* பெ. (n.) ***வீரரணியும் இரும்புடை*** (வின்.); iron girdle worn by warriors. (செ.அக.).

[இரும்பு - இருப்பு + கச்சை.]

இருப்புக்கட்டி *iruppukkatti,* பெ. (n.) ***வரிவகை;*** tax (S.I.I.IV.79) (செ.அக.).

[இருப்பு + கட்டி.]

இருப்புக்கட்டை[1] *iruppu-k-kattai,* பெ. (n.) ***சுத்தியல்;*** hammer.

[இரும்பு - இருப்பு + கட்டை.]

இருப்புக்கட்டை[2] *iruppu-k-kattai,* பெ. (n.) ***திறவுகோல்*** (வின்.); shank of a key.

[இரும்பு - இருப்பு + கட்டை.]

இருப்புக்கம்பை *iruppu-k-kambai,* பெ. (n.) ***வண்டியோட்டுபவனுக்கு முன் வண்டியில் அமைக்கப் பட்ட இருக்கை*** (கொ.வ.); driver's seat, in front of a cart. (செ.அக.).

ம. இருப்படி.

[இரும்பு + கம்பை.]

இருப்புக்கரண்டி *iruppu-k-karaṇḍi,* பெ. (n.) ***இரும்புக் கரண்டி;*** iron ladle.

[இரும்பு + கரண்டி.]

இருப்புக்காய் வேளை *iruppu-k-kāyvēḷai,* பெ. (n.) ***இரும்புக்காய் வேளை*** (வின்.); plant. (செ.அக.).

[இரும்பு - இருப்பு + காய் + வேளை.]

இருப்புக்கிட்டம் *iruppu-k-kiṭṭam,* பெ. (n.) ***இரும்புருகிய கட்டி;*** scoria of iron, iron dross. (செ.அக.).

[இரும்பு - இருப்பு + கிட்டம்.]

இருப்புக்கொல்லி *iruppu-k-kolli,* பெ. (n.) ***சிவனார் வேம்பு;*** wiry indigo. (செ.அக.).

[இரும்பு - இருப்பு + கொல்லி.]

இருப்புகில் *iruppugil,* பெ. (n.) ***இருபோக முறை பயிர்;*** yielding two crops, double crops. (சேரநா.).

ம. இருப்புகில்.

[இரு + புகில்.]

இருப்புச்சட்டம் *iruppu-c-caṭṭam,* பெ. (n.) ***வண்டியோட்டுவோன் அமரும் முகவணை;*** cart-driver's seat from the slats united at the pole. (செ.அக.).

ம. இருப்படி.

[இருப்பு + சட்டம்.]

இருப்புச்சலாகை *iruppu-c-calāgai,* பெ. (n.) ***இரும்புச் சலாகை*** பார்க்க (செ.அக.); see *irumbu-c-calāgai.*

[இரும்பு - இருப்பு + சலாகை.]

இருப்புச்சிட்டம் *iruppu-c-ciṭṭam,* பெ. (n.) ***இருப்புக் கிட்டம்*** (வின்.); oxide of iron.

[இரும்பு - இருப்பு + சிட்டம்.]

இருப்புச்சில் *iruppu-c-cil,* பெ. (n.) ***சிறுவர் விளையாட்டுக் கருவி*** (வின்.); small round plate of iron used in a game played by children. (செ.அக.).

[இரும்பு - இருப்பு + சில்.]

இருப்புச்சீரா *iruppu-c-cīrā,* பெ. (n.) ***இருப்புச்சட்டை*** (வின்); iron coat of mail. (செ.அக.).

[இரும்பு - இருப்பு + சீரா. சீரை - சீரா.]

இருப்புச்சுவடு *iruppu-c-cuvaḍu,* பெ. (n.) ***இருப்புச் சீரா*** (வின்.); பார்க்க see *iruppu-c-cīrā.*

[இரும்பு - இருப்பு + சுவடு.]

இருப்புத்தாள் *iruppu-t-tāḷ,* பெ. (n.) ***இரும்புக்கோல்*** (ஞானா.55,12, உரை); iron rod. (செ.அக.).

[இரும்பு - இருப்பு + தாள்.]

இருப்புத்திட்டம் *iruppu-t-tiṭṭam,* பெ. (n.) ***செலவு நீக்கி எஞ்சியுள்ள தொகை;*** remanent after spending. (செ.அக.).

[இருப்பு + திட்டம்.]

இருப்புநகம் *iruppu-nagam,* பெ. (n.) ***வெற்றிலை கிள்ளும் கருவி*** (இ.வ.); betel clipper.

[இரும்பு - இருப்பு + நகம்]

இருப்புநெஞ்சு *iruppu-neñju,* பெ. (n.) ***வன்மனம்;*** cruel, unfeeling heart, heart steeled against all tender feelings. '"வன்னெஞ்சோ விரங்காத மரநெஞ்சோ விருப்பு நெஞ்சோ" (தாயு.ஆசையெனு.4) (செ.அக.).

[இரும்பு - இருப்பு + நெஞ்சு]

இருப்புப்பாதை *iruppu-p-pādai,* பெ. (n.) ***தொடர் வண்டிப்பாதை;*** railway. (செ.அக.).

[இரும்பு - இருப்பு + பாதை.]

இருப்புப்பாளம் *iruppu-p-pāḷam,* பெ. (n.) ***இரும்புக் கட்டி*** (வின்.); pig iron. (செ.அக.).

[இரும்பு - இருப்பு + பாளம்.]

இருப்புமணல் *iruppu-maṇal,* பெ. (n.) ***இரும்பு கலந்த மண்;*** sand containing iron, iron stone. (செ.அக.).

[இரும்பு - இருப்பு + மணல்.]

இருப்புமுகம் *iruppu-mugam,* பெ. (n.) ***இரும்புப் பூண்*** (தந்தப் பூண்); protective metal band at the end of a rod. "இருப்பு முகஞ்செறித்த வேந்தெழின் மருப்பிற் கருங்கை யானை" (புறநா.369-1).

[இரும்பு - இருப்பு + முகம்.]

இருப்புமுள் *iruppu-muḷ,* பெ. (n.) ***தாறு;*** spike of a goad. (செ.அக.).

[இரும்பு - இருப்பு + முள்.]

இருப்புமுளை *iruppu-muḷai,* பெ. (n.) ***குழிகல்லுங் கருவி;*** pickaxe. (ஆ.அக.).

[இரும்பு - இருப்பு + முளை.]

இருப்புமுறி *iruppu-muṟi,* பெ. (n.) ***செடிவகை*** (L.); silvory leaved indigo, m.gh. Indigofera. argentea. (செ.அக.).

[இரும்பு - இருப்பு + முறி.]

இருப்புயிர் *iruppuyir,* பெ. (n.) ***கொடியவர் உயிர், நிரயத்தில் இருப்பவர் உயிர்;*** literally, iron-soul, fig, souls that undergo purgation in hell, one of five class of souls arranged accg.to spiritual purity. "இருப்புயிராகி வெந்து" (சீவக.3108) (செ.அக.).

[இரும்பு - இருப்பு + உயிர்.]

இருப்புலக்கை *iruppulakkai,* பெ. (n.) ***ஒரு கருவி;*** iron pestle, a weapon in warfare. (செ.அக.).

[இரும்பு - இருப்பு + உலக்கை.]

இருப்பூறல் *iruppūṟal,* பெ. (n.) ***ஊறல், இரும்புக்கறை;*** iron stain on cloth. (செ.அக.).

[இரும்பு - இருப்பு + ஊறல்.]

இருப்பூறற்பணம் *iruppūṟaṟ - paṇam,* பெ. (n.) ***கலப்பு வெள்ளி நாணயம்*** (வின்.); adulterated silver counterfiet coin. (செ.அக.).

[இரும்பு - இருப்பு + ஊறல் + பணம்.]

இருப்பெழு *iruppeḻu,* பெ. (n.) ***உழலை;*** crossbar made of iron. "மருப்புநிலைக் கந்தி னிருப்பெழுப்போக்கு". (பெருங்.இலாவாண.5,38) (செ.அக.).

[இரும்பு - இருப்பு + எழு.]

இருப்பேனம் *iruppēṉam,* பெ. (n.) ***இரும்பினாற் செய்த ஏனம்;*** iron vessel. (சா.அக.).

[இரும்பு + ஏனம் - இரும்பேனம் - இருப்பேனம்.]

இருப்பை[1] *iruppai,* பெ. (n.) ***இலுப்பை மரம்;*** (பெருங்.உஞ்சைக்.50,53); South Indian Mahua. (செ.அக.).

ம. இருப்ப; க., து. இப்பெ மர; தெ. இப்ப.

[இரு + இருப்பை.]

இருப்பைத்திப்பி *iruppai-t-tippi,* பெ. (n.) ***இலுப்பைப் பிண்ணாக்கு;*** cake of mahua seed from which oil has been pressed out. (சா.அக.).

ம. இருப்பப்பிண்ணாக்கு.

[இருப்பை + திப்பி.]

இருப்பைப்பூச்சம்பா *iruppai-p-pū-c-cambā,* பெ. (n.) ***நெல்வகை;*** a kind of paddy of the campā variety, from its having the odour of the iruppai flower. (செ.அக.).

[இருப்பை + பூ + சம்பா.]

இருபத்துநாலாயிரப்படி *iru-pattu-nālā-yira-p-paḍi,* பெ. (n.) ***பெரிய வாச்சான் பிள்ளையால் எழுதப்பட்ட திருவாய்மொழியின் உரை;*** commentary on the Tiruvāymoḻi, by Periya-Vāccāṉ-Pillai, aggregating 24,000 granthas of 32 syllables each. (செ.அக.).

[இரண்டு - இரு + பத்து + நான்கு + ஆயிரம் + படி.]

இருபது *iru-padu,* பெ. (n.) ***ஓர் எண்;*** number 20, being twice ten. (செ.அக.).

ம. இருபது; க. இர்பத்து, இப்பத்து; தெ. இருவை, இருவதி; பட. இப்பத்து; இரு. இர்பது; எரு. யிர்வது, யிரபொத்து; கோத. இர்பத், இவொத்; குரு. இப்பத்த; குட. குர்பத, இருவத; து. இர்வ், இருவ; கொலா. இருவெ.

[இரண்டு - இரு + (பத்து) பது.]

இருபந்தியாடு *irupandiyāḍu,* பெ. (n.) ***எந்த இனத்திலும் சேராத ஆடு;*** sheep of mixed breed.

[இரு + பந்தி + ஆடு. பகுதி → தெ. பந்தி.]

இருபன்னியம் *irupaṉṉiyam,* பெ. (n.) ***சேங்கொட்டை*** (மலை.) பார்க்க; marking nut. (செ.அக.).

[இரண்டு - இரு + பன்னியம்.]

இருபாடு *irupāḍu,* பெ. (n.) ***இருபுறம்;*** two sides. (சேரநா.).

ம. இருபாடு.

[இரண்டு - இரு + பாடு.]

இருபாவிருபஃது *iru-pā-v-iru-paḵtu,* பெ. (n.) 1. ***சிற்றிலக்கிய வகை*** (பன்னிருபா.337); வெண்பாவும், அகவலுமாக மாற்றிமாற்றி அந்தாதித்தொடையில் பாடப்பட்ட இலக்கியம்; class of literary composition of 20 verses, in which veṇbā and agaval alternate in antāti-t-toḍai. 2. ***மெய்கண்ட சாத்திரத்தொன்று; அருணந்தி சிவாச்சாரியார் இயற்றியது;*** text-book of the saiva siddhānta philosophy by Arunanti-civācāriyar. one of 14 Meykaṇḍa-cāttiram. (செ.அக.).

[இரண்டு - இரு + பா + இரு + (பத்து) பஃது.]

இருபாவிருபது *iru-pā-irubādu,* பெ. (n.) ***இருபாவிருபஃது*** பார்க்க (செ.அக.); see *irupāvirupaḵtu.*

[இரு + பா + இரு + (பத்து) பது.]

இருபான் *iru-pāṉ,* பெ. (n.) ***இருபது;*** twenty. "இருபான் கணைதுரந்து" (கந்தபு.அக்கினிமு.82) (செ.அக.).

[இரண்டு - இரு + (பத்து-பதின்-பான்) பான்.]

இருபிறப்பாளன்[1] *iru-piṟappāḷaṉ,* பெ. (n.) 1. ***திங்கள்;*** moon. 2. ***வெள்ளி*** (சுக்கிரன்); Śukkiran, as twice -born.

[இரண்டு - இரு + பிறப்பு + ஆளன்.]

இருபிறவி *iru-piṟavi,* பெ. (n.) ***கலப்பின விலங்கு வகை;*** hybrid animal. (செ.அக.).

[இரண்டு - இரு + பிறவி.]

இருபுடைமெய்க்காட்டு *iru-puḍai-mey-k-kāṭṭu,* பெ. (n.) ***ஒன்றே இருவேறு வகையாகத் தோற்றுவது*** (திவ். திருநெடுந்.21,வ்யா); that which appears in two functions as the discus of viṣṇu which is at once a pleasing ornament as well as a destructive weapon. (செ.அக.).

[இரண்டு - இரு + புடை + மெய் + காட்டு.]

இருபுரியா-தல் *iru-puri-y-ā-* 6 செ.கு.வி. (v.i.) ***மாறுபாடாதல்*** (திவ்.கண்ணிநுண்.11,வ்யா); to be contrariwise one to another, as a rope twisted contrariwise at the two ends. (செ.அக.).

[இரண்டு - இரு + புரி + ஆ.]

இருபுலன் *iru-pulaṉ,* பெ. (n.) ***உடற்கழிவுகள்*** (மல சலங்கள்); two fold evacuation, urine and excrement. "உமிழ்வோ டிருபுலனுஞ் சோரார்" (ஆசாரக்.33) (செ.அக.).

[இரண்டு - இரு + புலன்.]

இருபுறம் *irupuṟam,* பெ. (n.) ***இரண்டு பக்கம்;*** two sides. (சேரநா.).

ம. இருபுறம்.

[இரண்டு - இரு + புறம்.]

இருபுறவசை *iru-puṟa-vasai,* பெ. (n.) ***வசைபோன்ற வாழ்த்து*** (யாப்.வி.95, பக்.512); what appears to be censure but is actually meant to praise. (செ.அக.).

[இரண்டு - இரு + புறம் + வசை.]

இருபுறவாழ்த்து *iru-puṟa-vāḻttu,* பெ. (n.) ***வாழ்த்துப் போன்ற வசை*** (யாப்.வி.95.பக்.512); seeming praise which is in such a form, that it is actually meant to censure. (செ.அக.).

[இரண்டு - இரு + புறம் + வாழ்த்து.]

இருபுனல் *iru-puṉal,* பெ. (n.) ***கீழ்நீர், மேல்நீர்கள்*** (குறள்.737); two sources of water. viz. underground water as that in springs, wells and tanks, and surface water as in lakes and rivers. (செ.அக.).

[இரண்டு - இரு + புனல்.]

இருபூ *iru-pū,* பெ. (n.) ***இருபோகம்*** பார்க்க (ஈடு.) (செ.அக.); see *irubōgam.*

[இரண்டு - இரு + பூ.]

இருபூலை *irupūlai,* பெ. (n.) 1. ***பூலா*** (L.) பார்க்க; small Indian snow - berry. 2. ***வெள்ளைப்பூலாஞ்சி*** (L.) பார்க்க; Indian snow berry. (செ.அக.).

[இரண்டு - இரு + (பூலாஞ்சி) பூலை.]

இருபெயரொட்டாகு பெயர் *iru-peyar-oṭṭāgu-peyar,* பெ. (n.) ***இரு பெயர் ஒட்டிநின்று ஒரு சொல்நீர்மைத் தாய் ஆகுபெயராகி வருவது;*** two nouns in apposition, one of which is used figuratively. "வகரக்கிளவி, அதுவாகு கிளவி மக்கட்சுட்டு". (நன்.290.விருத்).

[இரண்டு - இரு + பெயர் + ஒட்டு + ஆகுபெயர்.]

இருபெயரொட்டு *iru-peyar-oṭṭu,* பெ. (n.) ***ஆகிய என்னும் பண்புருபு தொக்கு நிற்கும் பெயர்கள் இணைந்து வருவது*** (நன்.365.உரை); combination of two nouns in apposition where the adj. particle ஆகிய is understood.

[இரண்டு - இரு + பெயர் + ஒட்டு.]

இருபெருந்தெய்வம் *iru-perun-teyvam,* பெ. (n.) ***பனைக் கொடியை உடையவனும், நீலநிறத் திருமேனியையுடையவனுமாகிய இரண்டு பெருந்தெய்வங் கள்:*** two gods Balaraman and Kannan. "இருபெருந் தெய்வமு முடனின்ற ஆங்கு" (புறநா.58.16).

[இரண்டு - இரு + பெரும் + தெய்வம்.]

இருபெருநியமம் *iru-peru-niyamam,* பெ. (n.) ***இரு பெரிய அறங்கள், இல்லறம், துறவறம்;*** two kinds of virtues, domestic and ascetic. (மதுரைக்.365).

[இரண்டு - இரு + பெரு + நியமம்.]

இருபொருள் *iru-poruḷ,* பெ. (n.) ***கல்வி, செல்வம் ஆகிய இரண்டு பொருள்கள்;*** two kinds of wealth, as learning and riches. (செ.அக.).

[இரண்டு - இரு + பொருள்.]

இருபோகம் *iru-pōgam,* பெ. (n.) 1. ***இருமுறை விளைவு;*** two crops, one raised in the wet season and another in the dry. 2. ***நிலமுடையோனுக்கும் பயிரிடுவோனுக்குமுரிய பங்கு;*** two shares of the crop, one of the landlord and the other of the tenant. (R.F) (செ.அக.).

ம. இருப்புகில்.

[இரண்டு - இரு + போகம்.]

இருபோது *iru-pōdu,* பெ. (n.) ***காலைமாலை பொழுது கள்;*** morning and evening. "இருபோதும் பணிவார்" (தேவா.634.6).

[இரண்டு - இரு + (பொழுது) போது.]

இரும்பல் காஞ்சி *irum-pal-kāñji,* பெ. (n.) ***ஒரு தமிழ் நூல்*** (புறத்.); ancient Tamil work. (செ.அக.).

[இரு - இரும் + பல் + காஞ்சி.]

இரும்பலி *irumbali,* பெ. (n.) ***இரும்பிலி*** (L.) பார்க்க; see *irumpili.* (செ.அக.).

[இரும்பிலி - இரும்பலி.]

இரும்பவல் *irumbaval,* பெ. (n.) ***இருப்பவல்*** பார்க்க; see *iruppaval.* (சா.அக.).

[இரும்பு + அவல்.]

இரும்பன் *irumbaṉ,* பெ. (n.) 1. ***எலி*** (திவா.); rat. 2. ***அகழெலி*** (பிங்.); field rat. 3. ***திருடன்;*** thief. (சேரநா.) (செ.அக.).

[இரும் = கரிய. இரும்பன் = கரிய எலி.]

இரும்பாட்டல் *irumbāṭṭal,* பெ. (n.) ***இதளிய வாதம் செய்தல்; இரும்பைப் பொன்னாக்கல்;*** play_with iron, transmuting iron into gold. (சா.அக.).

[இரும்பு + ஆட்டல்.]

இரும்பாரமூலி *irumbāra-mūli,* பெ. (n.) ***அழுகண்ணி*** பார்க்க; see *aḻukaṇṇi.* (சா.அக.).

[இரும்பு + ஆரல் + மூலி.]

இரும்பாலை *irum-bālai,* பெ. (n.) ***பாலைமரவகைக ளுள் ஒன்று*** (L.); blue - dyeing Rosebay.

ம. இரும்பால.

[இரு - இரும் + பாலை.]

இரும்பிடர்த்தலை *irumbiḍar-t-talai,* பெ. (n.) ***பெரிய கழுத்து;*** neck of abnormal size. "பெருங்கையானை யிரும்பிடர்த்தலை யிருந்து" (புறநா.3-11).

[இரும் + பிடர் + தலை.]

இரும்பிடர்த்தலையார் *irumbiḍar-t-talai-y-ār,* பெ. (n.) ***கரிகாற்சோழனிடம் அமைச்சராகவும், புலவராகவு மிருந்தவர். இவர் கரிகாற் சோழனின் தாய் மாம னாவார்;*** name of the poet who was the uncle of Chola king Karikālaṉ. (அபி.சிந்.).

[இரு - இரும் + பிடர் + தலை + ஆர். இரும்பிடர்த்தலை என்னும் ஊரில் வாழ்ந்தவர். பிடர் = பானை.]

இரும்பிலி *irumbili,* பெ. (n.) 1. ***செடிவகை;*** (L.) box leaved satin ebony, supposed to be used in alchemy to convert iron into gold. 2. ***ஓர் ஊர்ப்பெயர்;*** name of a village. 3. ***ஒரு வகைப்பாம்பு;*** a kind of snake. (செ.அக.).

[இரும்பு + இலி]

இரும்பினீர்மை *irumbiṉīrmai,* பெ. (n.) ***இழிந்தநிலை;*** state or condition of iron used fig. for low condition, mean position etc. "இரும்பினீர்மை கெடுத்து" (சீவக. 952) (செ.அக.).

[இரும்பின் + நீர்மை.]

இரும்பு[1] *irumbu,* பெ. (n.) 1. ***பொன்;*** gold. 2. ***செங்காந்தள்*** (L.) red species of malabar glorylily. (செ.அக.).

[இரும் + பொன் = இரும்பொன் - இரும்பு. இரும் = பெரிய. பெரிய பொன் என்னும் பொருளினது.]

இரும்பு[2] *irumbu,* பெ. (n.) 1. ***கரும்பொன்*** (தேவா. 209,3); iron, literally, the black metal. 2. ***கருவி;*** instrument, weapon. "இரும்பு மேல் விடாது நிற்பார்". (சீவக.782).

ம. இரும்பு; **க.** இரும்பு (கடினத்தன்மை); **தெ.** இனுமு, இனுப; **இரு.** இரும்பு; **எரு.** எயரும்பு; **கை.** இல்மு; **கோத.** இம்ப்; **துட.** இம்ப (ஊசி); **குட.** இரிம்பி; **து.** இரும்ப; **குவி.** இர்ப; **கொலா.** இனும்.

[இர் → இரு → இரும்பு (மு.தா.197). இரு - இரும் + பொன் = இரும்பொன் - இரும்பு. இரும் - கரிய. ஒ.நோ. கரும் + பொன் = கரும்பொன்.]

இரும்புக்காம்பு *irumbu-k-kāmbu,* பெ. (n.) 1. *இரும்புக் கோல்;* iron rod. 2. ***சூட்டுக்கோல்;*** branding iron. (சா.அக.) (செ.அக.).

[இரும்பு + காம்பு.]

இரும்புக்காய்வேளை *irumbu-k-kāy-vēḷai,* பெ. (n.) ***வேளைவகை*** (மூ.அ.); species of cleome. (செ.அக.).

[இரும்பு + காய் + வேளை.]

இரும்புக்கிட்டம் *irumbukkiṭṭam,* பெ. (n.) ***இரும்புருக் கும்போது மேல் திரண்ட கட்டி;*** iron dross; scoria of iron. (சா.அக.).

[இரும்பு + கிட்டம்.]

இரும்புக்குணம் *irumbukkuṇam,* பெ. (n.) ***இரும்பிற்கு இயற்கையாகவே அமைந்துள்ள ஐந்து குணம்; அவையாவன:- சவுடு, உடைதல், ஊறல், திரை, உருகாக்குணம்;*** natural qualities peculiar to iron ore; cracking, brittleness, prone to rust, contractile and not easily fusible or melted. (சா.அக.)

[இரும்பு + குணம்.]

இரும்புக்கெண்டி *irumbu-k-keṇḍi,* பெ. (n.) ***இரும்புக் கமண்டலம்;*** iron water-bowel used by mendicants. (சா.அக.).

[இரும்பு + கெண்டி.]

இரும்புக்கொல்லன் *irumbu-k-kollaṉ,* பெ. (n.) ***கருங் கொல்லன்;*** blacksmith. (செ.அக.).

[இரும்பு + கொல்லன்.]

இரும்புச்சட்டி *irumbu-c-caṭṭi,* பெ. (n.) ***இரும்பால் செய்த பெரிய ஏனம்; சீனச்சட்டி;*** an iron pan.

ம. இரும்புச்சட்டி.

[இரும்பு + சட்டி.]

இரும்புச்சலாகை *irumbu-c-calāgai,* பெ. (n.) 1. *அறுவை மருத்துவக்கருவி வகை;* surgeon's probe, pointed instrument made of iron. 2. ***இருப்புநாராசம்;*** iron rod.

[இரும்பு + சலாகை.]

இரும்புச்சிந்தூரம் *irumbu-c-cindūram,* பெ. (n.) ***அயச் சிந்தூரம் பார்க்க. இதைப் பலவீனத்திற்கும், மாத விடாய் நோய்களுக்கும், புழுக்களைக் கொல்லவும் பயன்படுத்துவதுண்டு;*** red oxide of iron - ferrus oxide alias ferric per oxidum alias F.rubizo. It is medicinally used as a tonic. (சா.அக.).

[இரும்பு + (செந்தூரம்) சிந்தூரம்.]

இரும்புச்செப்பு *irumbu-c-ceppu,* பெ. (n.) ***இரும்பா லாகிய செம்பு*** (சா.அக.); vessel.

[இரும்பு + (செம்பு) செப்பு.]

இரும்புண்டநீர் *irumbuṇḍa-nīr,* பெ. (n.) ***இரும்புண்ட நீரைப்போலா மென்பது பொதுவாக நோய் அகல்வ தைக் குறிக்கும்; இரும்புண்ட நீரானது மறுபடியும் தோன்றாவாறு போல் நோய்களும் மீண்டும் தோன் றாவாம்;*** water absorbed by heated iron. The disease absorbed by the system will just disappear as the water absorbed by heated iron. "இரும்பனன்று உண்ட நீரும்" (திவ்.திருக்குறுந்.13) (சா.அக.).

[இரும்பு + உண்ட + நீர்.]

இரும்புத்துப்பு *irumbu-t-tuppu,* பெ. (n.) ***இரும்புத்துரு*** (மூ.அ.) பார்க்க; iron rust. (செ.அக.).

[இரும்பு + (துரு - துருப்பு) துப்பு.]

இரும்புத்துரு *irumbu-t-turu,* பெ. (n.) ***மண்டூரம்;*** iron rust, ferri peroxidum. (செ.அக.).

[இரும்பு + துரு.]

இரும்புநாக்கு *irumbunākku,* பெ. (n.) ***அம்பின் கூரியமுனை;*** iron tongue, the sharp iron edge of an arrow.

ம. இரும்பு நாக்கு.

[இரும்பு + நாக்கு.]

இரும்புநீற்றி *irumbunīṟṟi,* பெ. (n.) ***எருக்கிலை;*** leaf of the madar plant. (சா.அக.).

[இரும்பு + நீற்றி.]

இரும்புப்பாளம் *irumbu-p-pāḷam,* பெ. (n.) ***இரும்புக் கட்டி;*** oblong mass of iron, as they come from the blast furnace, pig iron. (சா.அக.).

[இரும்பு + பாளம்.]

இரும்புப்பெட்டி *irumbu-p-peṭṭi,* பெ. (n.) ***உருக்கா லமைந்த பேழை;*** cash chest, iron safe. (செ.அக.).

ம. இரும்புப் பெட்டி.

[இரும்பு + பெட்டி.]

இரும்புப்பொடி *irumbu-p-poḍi,* பெ. (n.) ***அரப்பொடி*** (மூ.அ.); iron filings. (செ.அக.).

[இரும்பு + பொடி.]

இரும்பு மலை *irumbu-malai,* பெ. (n.) ***வடஅமெரிக்கா கண்டத்தில் உள்ள மெக்சிகோ நாட்டில் 640 அடி உயரமும் 4 சதுர கல் (மைல்) அகலமும் உள்ள மலை;*** iron mountain in Mexico. (அபி.சிந்.).

[இரும்பு + மலை.]

இரும்புயிர் *irumbuyir,* பெ. (n.) ***இருப்புயிர்*** (சீவக.3111, உரை) பார்க்க; see *iruppuyir.* (செ.அக.).

[இரும்பு + உயிர்.]

இரும்புருக்கி *irumburukki,* பெ. (n.) ***நத்தைச்சூரி, நத்தைமண்டலி;*** that which is capable of melting iron viz., butten weed, red water plant. (சா.அக.).

[இரும்பு + உருக்கி.]

இரும்புருக்கு *irumburukku,* பெ. (n.) ***எஃகு;*** steel. (சா.அக.).

[இரும்பு + உருக்கு.]

இரும்புலி *irumbuli,* பெ. (n.) ***துவரை;*** dhall. (ஆ.அக.).

[இரும் + புலி.]

இரும்புளி *irumbuḷi,* பெ. (n.) ***மரவகை*** (வின்.); tree whose fruit is sour and is used for curry. (செ.அக.).

[இரும் + புளி.]

இரும்பை[1] *irumbai,* பெ. (n.) ***இருப்பை*** (திருப்பு.105); South Indian mahua. (செ.அக.).

[இரும் + இரும்பை.]

இரும்பை[2] *irumbai,* பெ. (n.) 1. ***குடம்*** (பிங்.); water-pot. 2. ***பாம்பு*** (உரி.நி.); snake. (செ.அக.).

[இரும் + பை.]

இரும்பொறை *irum-poṟai,* பெ. (n.) ***சேரர் பட்டப் பெயர்களுள் ஒன்று*** (பதிற்றுப்.39.9); title of the Cēra kings. (செ.அக.).

[இரும் + பொறை. இரும் = பெரிய. பொற்றை - பொறை = மண் மலை.]

இருமடங்கு *irumaḍaṅgu,* பெ. (n.) 1. ***இரண்டு பங்கு;*** two portions or parts. 2. ***இரட்டித்த அளவு;*** doubled quantity. (ஆ.அக.).

[இரண்டு - இரு + மடங்கு.]

இருமடி *irumaḍi,* பெ. (n.) ***இருமடங்கு*** பார்க்க; see *irumaḍaṅgu.*

[இரண்டு - இரு + மடி.]

இருமடியாகுபெயர் *iru-maḍi-y-āgu-peyar,* பெ. (n.). ***இருமுறை மடிந்து ஆகி வரும் பெயர். ஆகுபெயர் வகைகளுள் ஒன்று;*** āgu-peyar of double transference; variety of metonymy, where in a word used fig. in one sense in the first instance is once again applied to signify another with which it bears a certain relation. Kār, meaning black used to signify a cloud is used again to connote the rainy season. (செ.அக.).

[இரண்டு + மடி + ஆகு + பெயர். கார் நிகர் வண்கை என்புழிக், காரென்னும் நிறப்பெயர் அதனையுடைய மேகத்திற்காதலால் ஆகுபெயர். கார் வந்தது என்புழிக், காரென்னும் நிறப்பெயர் மேகத்திற்காகி மேகத்தின் பெயர் அது பெய்யும் பருவத்திற் காதலால் இருமடியாகுபெயர். (நன்.290 - காண்டி. உரை).]

இருமடியேவல் *iru-maḍi-y-ēval,* பெ. (n.) ***பிறவினை யின்மேற் பிறவினை;*** double caus.verb as கற்பிப்பி. (செ.அக.).

[இரண்டு - இரு + மடி + ஏவல்.]

இருமண் *iru-maṇ,* பெ. (n.) ***மணற்களிமண்;*** sandy clay. (செ.அக.).

[இரு + மண்.]

இருமரபு *iru-marabu,* பெ. (n.) ***தாய்தந்தை வழிமுறை*** (திவா.); two fold ancestry, paternal and maternal. (செ.அக.).

[இரண்டு - இரு + மரபு.]

இருமருந்து *iru-marundu,* பெ. (n.) ***சோறும் தண்ணீரும்;*** two medicines. fig applied to rice and water as the mainstay of life. "இரு மருந்து விளைக்கு நன்னாட்டுப் பொருநன்". (புறநா.70-9) (செ.அக.).

[இரண்டு - இரு + மருந்து.]

இருமல் *irumal,* பெ. (n.) 1. ***செறுமுதல்*** (காசம்); cough, bronchitis. 2. ***ஆட்டுநோய்வகை*** (M.C.D. [1887] 249); contagious disease of sheep. (செ.அக.).

ம. இருமல்; க. கெம்மு; தெ. செருமல்; பட. கெம்மலு.

[இரு - இருமு (பெருகிய ஓசை எழுப்பு) - இருமு - இருமல்.]

இருமல்லி *irumalli,* பெ. (n.) 1. ***சிறுமல்லி;*** jasmine (small). 2. ***பெருமல்லி;*** jasmine (big).

[இரு + மல்லி.]

இருமனப்பெண்டிர் *iru-mana-p-pendir,* பெ. (n.) ***பரத்தையர்;*** prostitutes. "இருமனப்பெண்டிருங் கள்ளும்" (குறள்.920) (செ.அக.).

[இரண்டு - இரு + மனம் + பெண்டிர்.]

இருமனம் *iru-manam,* பெ. (n.) 1. ***இரண்டகம்;*** double-mindedness. "இருமனப்பெண்டிரும் (குறள். 920). 2. ***துணிவின்மை;*** irresolution, indecision. "இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிறையற்றவன்" (விவிலி.யாஞ்.1.8) (செ.அக.).

[இரண்டு - இரு + மனம்.]

இருமா *iru-mā,* பெ. (n.) ***பத்திலொரு பகுதியைக் (1/10) குறிக்கும் பின்னவெண் 'ஐ';*** fraction of 1/10.

ம. இருமா.

[இரண்டு - இரு + மா. மா என்பது இருபதில் ஒரு பங்கு.]

இருமாவரை *iru-mā-varai,* பெ. (n.) ***அரைக்கால்;*** fraction 1/8 being the sum of இருமா (1/10) and அரைமா (1/40). (செ.அக.).

[இரண்டு - இரு + மா + அரை (மா) அஃதாவது இருபதில் இரண்டரை அல்லது அரைக்கால்.]

இருமான் *irumān,* பெ. (n.) ***எலிவகை*** (இ.வ.); a species of rat. (செ.அக.).

ம. இருமான்.

[இரு - இருமான். இரு - கரிய.]

இருமியுமிழ்தல் *irumi-yumildal,* பெ. (n.) ***காரியுமிழ்தல்;*** act of coughing up and spitting out phlegm. (சா.அக.).

[இருமு - இருமி (வி.எ.) + உமிழ்தல்.]

இருமு[1]-தல் *irumu,* 8. செ.குன்றாவி. (v.i.) ***இருமல்;*** cough. "இருமி யிளைத்தீர்" (திவ்.பெரியதி.1,3,8) (செ.அக.).

க., பட. கெம்மு; தெ. செருமு.

[இரு - இருமு. இருமுதல்.]

இருமு[2] *irumu,* பெ. (n.) ***இருமல்;*** cough. "இருமிடை மிடைந்த சில சொல்" (புறநா.243,13) (செ.அக.).

பட. கெம்மலு.

[இருமல் - இருமு.]

இருமுடகநில்லான் *irumudaganillān,* பெ. (n.) ***கரிசலாங் கண்ணி;*** eclipse plant. (சா.அக.).

[இரு + முடகம் + நில்லான்.]

இருமுட்டி *irumutti,* பெ. (n.) ***இருவகைமுட்டி;*** two varieties of sticky mallow: 1. ***பேராமுட்டி;*** Ceylon sticky mallow. 2. ***சிற்றாமுட்டி;*** fragrant sticky mallow. (சா.அக.).

[இரண்டு → இரு + முட்டி.]

இருமுடி *iru-mudi,* பெ. (n.) 1. ***இரண்டு கட்டுகள் ஒன்றாக இணைத்து உயர்த்தித்தூக்கும் வண்ணம் நடுவில் சேர்த்துக் கட்டிய பண்டம்;*** double-baggage with equipoised load. 2. ***மலைகளுக்கு வழிநடைப்பயணம் செல்வோர் தோளில் அல்லது தலையில் சுமந்து செல்லும் இருமுடிப் பண்டங்கள்;*** double-baggage carried either on head or on shoulders by those who go on a pilgrimage to the hills.

[இரண்டு - இரு + முடி.]

இருமுடிக்கட்டு *irumudi-k-kattu,* பெ. (n.) ***இருமுடி*** பார்க்க; see *irumudi*

இருமுதுகுரவர் *iru-mudu-kuravar,* பெ. (n.) ***தாய்தந்தையர்*** (சிலப்.16,67); parents. (செ.அக.).

[இரண்டு - இரு + முது + குரவர்.]

இருமுதுமக்கள் *irumudu-makkal,* பெ. (n.) ***இருமுதுகுரவர்*** பார்க்க; see *irumudukuravar.* (ஆ.அக.).

[இரண்டு - இரு - முது + மக்கள்.]

இருமுரடன் *irumuradan,* பெ. (n.) ***முரட்டுக்குணன்;*** ruffian, muscle man. (ஆ.அக.).

[இரு (பெரிய) + முரடன்.]

இருமுள்ளூர் *irumullūr,* பெ. (n.) ***மலையமான் திருமுடிக் காரியின் ஊர்;*** native place of Malaiyamān Thirumudikkāri. "மாயிரு முள்ளூர் மன்னன்" (நற். 291-7) (பாண்டி.அக.).

இருமுற்றிரட்டை *iru-murrirattai,* பெ. (n.) ***ஒரு செய்யுளில் ஓரடி முற்றெதுகையாய், மற்றையடி மற்றொரு முற்றெதுகையாய் வருவது*** (யாப்.வி.பக். 182); concatenation in which each of two successive liness of a stanza has identical initial letters in all its feet. (செ.அக.).

[இரண்டு - இரு + முற்று + இரட்டை.]

இருமுறி *iru-muri,* பெ. (n.) ***இருப்புமுறி என்னும் செடி;*** silvery-leaved indigo. (செ.அக.).

[இருப்புமுறி - இருமுறி.]

இருமுறை *iru-murai,* பெ. (n.) ***இரண்டு முறை;*** twice, two times. "ஒன்றிருமுறை யிருந்துண்ட பின்றை"; (புறநா.269-5) (பாண்டி.அக.).

[இரண்டு - இரு + முறை.]

இருமூடம் *iru-mūdam,* பெ. (n.) ***தானாகவும் அறியாது பிறர் அறிவிக்கவும் அறியாத மூடத்தனம்*** (கொ.வ.); double stupidity, characterised by not knowing oneself and, in not listening to others' advice. (செ.அக.).

[இரண்டு - இரு + மூடம்.]

இருமூடி *irumūdi,* பெ. (n.) 1. ***இரண்டு பிரிவாகப் பொருந்தியது;*** that which consists of two parts. 2. ***கும்பிடுகிளிஞ்சில்;*** shell consisting of two parts which can be opened and shut, bivalve. (சா.அக.).

[இரண்டு - இரு + மூடி.]

இருமை[1] *irumai,* பெ. (n.) 1. ***பெருமை*** (தொல்.சொல். 396,உரை); greatness, largeness, hugeness, eminence. 2. ***கருமை*** (சீவக.1171); darkness, blackness. (செ.அக.).

[இரு - இருமை.]

இருமை[2] *irumai,* பெ. (n.) 1. ***இருதன்மை;*** two fold state. "அருவதா யுருவா யிருமையாயுறை பூரணன்" (கந்தபு.ததீசிப்.57). 2. ***இருபொருள்;*** two things. 'இருமை வகை தெரிந்து' (குறள்.23). 3. ***இம்மை மறுமைகள்*** (கம்பரா.அயோத்.மந்திர.63); this birth and the future birth, this life and the life to come. (செ.அக.).

ம. இருமை.

[இரண்டு - இரு - இருமை.]

இருமை[3] *irumai,* பெ. (n.) 1. ***துக்கம்;*** sorrow. 2. ***மகிமை;*** glory. 3. ***உள்ளும் புறமும்;*** in and out. (ஆ.அக.).

[இரண்டு - இரு - இருமை.]

இருமை[4] *irumai,* பெ. (n.) ***எருமை;*** buffalo.

கோத். இர்.

[இரு[1] - இருமை.]

இருமையியற்கை *irumai-y-iyarkai,* பெ. (n.) ***அணிவகையுள் ஒன்று;*** figure of speech. அஃது கூடுவதையும் கூடாததையும் கூடக் கூறுவது. (ஆ.அக.).

[இருமை + இயற்கை.]

இருமொழி *iru-moli,* பெ. (n.) ***இரண்டு வகைச் சொற்கள்;*** two kinds of words. "நல்ல பல்லோரிரு நன்மொழியே" (புறநா.85).

[இரண்டு - இரு + மொழி.]

இருமோட்டதிரை *irumōtta-tirai,* பெ. (n.) ***கரிய பெரிய அலைகள்;*** large black waves "பிணங்கிரு மோட்டதிரை வந்தளிக்கும்" (கலித்.131).

[இரு + (முகட்டு - மோட்டு) மோட்ட + திரை.]

இருமோட்டுவீடு *iru-mōttu-vīdu,* பெ. (n.) ***மச்சுங் கூரையுமுள்ள வீடு*** (இ.வ.); thatched house with a small upper room. (செ.அக.).

[இரண்டு - இரு + (முகட்டு) மோட்டு + வீடு.]

இருவகிர்ஈருள் *iru-vagir-īrul,* பெ. (n.) ***இருபிளவாகிய ஈரல்;*** lever consisting of two parts "இருவகிர் ஈருளின் ஈரிய துயல்வர" (அகம்.294-8) (சங்.இலக். சொற்.).

[இரு + வகிர் + ஈருள்.]

இருவகைத்தொட்டி *iruvagaittotti,* பெ. (n.) ***இரண்டு வகைத் தொட்டிச் செடி;*** two kinds of 'Thotti' plant viz. 1. ***சாத்தொட்டிச் செடி;*** Ceylon caper. 2. ***செந்தொட்டி,*** climbing nettle mercury. (சா.அக.).

[இரண்டு - இரு + வகை + தொட்டி.]

இருவங்கம் *iruvangam,* பெ. (n.) ***இரண்டுவகை ஈயம்;*** two kinds of lead. 1. ***வெள்வங்கம் அல்லது வெள்ளீயம்;*** white lead or powder. 2. ***கருவங்கம் அல்லது காரீயம்;*** black lead or graphite. (சா.அக.).

[இரண்டு - இரு + வங்கம்.]

இருவணைக்கட்டை *iru-v-anai-k-kattai,* பெ. (n.) ***வண்டியின் முகவணை;*** cart-driver's seat. (செ.அக.).

[இரண்டு - இரு + அணை + கட்டை.]

இருவயிற்பற்று *iru-vyir-parru,* பெ. (n.) ***இரண்டுவகைப்பற்று;*** 1. ***அகப்பற்று*** 2. ***புறப்பற்று;*** two kinds of desires one of the mind and the other of the world. (ஆ.அக.).

[இரண்டு → இரு + வயின் + பற்று.]

இருவர் *iruvar,* பெ. (n.) ***இரண்டு பேர்;*** two persons.

ம. இருவர்; க. இர்வர், இர்பர், இப்பர்; தெ. இருவுரு; குட. இப்ப; து. இர்வர், இர்வெரு; கோத. இத்தர்; நா. இத்தர்; பர். இருப்; கட. இருள்; கோண். ஈற்று; குரு. கிர்ப்; மால். இவ்வர்.

இருவரிசி *iruvariśi,* பெ. (n.) 1. ***கார் போக வரிசி;*** hazy leaved psoralea. 2. ***வெட்பாலரிசி;*** medicinal echitis. (சா.அக.).

[இரண்டு - இரு + அரிசி.]

இருவருந்தபுநிலை *iruvarun-tabu-nilai,* பெ. (n.) ***எயிலின் அகத்தும் புறத்தும் நின்ற வேந்தரிருவரும் பொருது வீழ்ந்ததைக் கூறும் புறத்துறை*** (தொல்.பொ. 68); theme describing the death of both the besieged and the besieging kings. (செ.அக.).

[இருவரும் + தபு + நிலை.]

இருவல்நொருவல் *iruval-noruval,* பெ. (n.) 1. ***இடிந்துமிடியாது முள்ள அரிசி முதலியன;*** rice inadequately pounded. 2. ***நன்றாக மெல்லப் படாத உணவு;*** food not-well masticated. (செ.அக.).

[இருவல் + நொருவல் - இருவல்நொருவல்.]

இருவாட்சி *iruvāṭci,* பெ. (n.) ***செடிவகை*** (திவ்.பெரி யாழ்.2,7,10); tuscan jasmine. (செ.அக.).

[இரு + வாய்ச்சி - இருவாய்ச்சி - இருவாட்சி.]

இருவாட்டித்தரை *iru-vāṭṭi-t-tarai,* பெ. (n.) ***மணலுங் களியுமான நிலம்;*** soil composed of sand and clay. (செ.அக.).

[இரண்டு - இரு + வாட்டி - இருவாட்டி + தரை. வாட்டு -வாட்டி. இருவாட்டி - இருவகை. ஒ.நோ. பக்கவாட்டு -பக்கப்பகுதி. பகுதிப்பொருள் வகைமைப்பொருளையும் சுட் டும்.]

இருவாடி *iruvāḍi,* பெ. (n.) ***இருவாட்சி;*** tuscan jasmine. (செ.அக.).

[இரண்டு - இரு + வாடி. ஒருகா. வாட்சி - வாடி.]

இருவாம் *iruvām,* பெ. (pron.) ***நாமிருவரும்;*** both of us; we two. "இருவாமையனை யேத்துவாம்" (கலித். 43.) (செ.அக.).

[இரண்டு - இரு + ஏம் - இருவேம் - இருவாம்.]

இருவாய்க்கட்டு *iru-vāy-k-kaṭṭu,* பெ. (n.) ***உடற்கழி வுக்கட்டு*** (மலசலக்கட்டு); suspension or retention of urine and facal matter. (stools) (சா.அக.).

[இரண்டு - இரு + வாய் + கட்டு.]

இருவாய்க்குருவி *iru-vāy-k-kuruvi,* பெ. (n.) ***ஒரு வகை மலைப் பறவை;*** concave-casqued hornbill, a mountain bird having harsh voice. (செ.அக.).

[இரு + வாய் + குருவி. இரு - பெரிய, கரிய.]



இருவாய்க்குருவி

இருவாய்க்குழல் *iruvāy-k-kuḻal,* பெ. (n.) ***இரட்டைக் குழல் துமுக்கி;*** double barrelled gun. (சேரநா.).

ம. இருவாய்க்குழல்.

[இரண்டு - இரு + வாய் + குழல்.]

இருவாய்ச்சி[1] *iruvāycci,* பெ. (n.) ***இருவாட்சி;*** tuscan jasmine. (செ.அக.).

ம. இருவாச்சி; க. இருவந்திகெ.

[இரு + வாய்ச்சி.]

இருவாய்ச்சி[2] *iruvāycci,* பெ. (n.) ***மரம் செதுக்கும் தச்சுக்கருவி;*** carpenter's tool. (செ.அக.).

[இரு - (பெரிய, அகன்ற) + (வாய்த்தி-) வாய்ச்சி = அகன்ற (வாயுடைய) விளிம்புடைய இரும்புக்கருவி.]

இருவாரம் *iru-vāram,* பெ. (n.) ***மேல்வாரமும், குடிவார மும்;*** two shares, viz., the landlord's and the tenant's share of the crop. (செ.அக.).

[இரண்டு → இரு + வாரம்.]

இருவாரு *iru-vāru,* பெ. (n.) 1. ***ஒருவகை வெள்ளரி;*** a kind of cucumber. 2. ***கொம்மட்டி;*** a kind of bitter gourd. (சா.அக.).

இருவி *iruvi,* பெ. (n.) ***தினை முதலியவற்றின் அரிதாள்;*** stubble of grain, esp. of Italian millet. "இருவி வேய்ந்த குறுங்காற் குரம்பை" (குறிஞ்சிப்.153) (செ.அக.).

ம. இருவி.

[இரு (கரிய) → இருவி.]

இருவிடரகம் *iruviḍaragam,* பெ. (n.) ***பெரிய முழைஞ் சிடம்;*** cavern. "நீடிரு விடரகஞ் சிலம்பக் கூய்" (கலித்.38).

[இரு (பெரிய) + விடர் + அகம்.]

இருவில் *iru-vil,* பெ. (n.) ***கரியவொளி;*** darkening, as of the countenance. "வாண்முகத் தோடிய விருவிலும்" (சீவக.339).

[இரு (கரிய) + வில்.]

இருவிள *iruviḷa,* பெ. (n.) 1. ***பனையோலை*** (தொல். எழுத்.216.உரை); palm leaf. 2. ***வேணாட்டகத்து ஓர் ஊர்;*** town in Vēṇāḍu. 3. ***கருவூரினிடத்து ஒருசேரி;*** slum in Karuvūr. (செ.அக.).

[இருவிளை - இருவிள (கொ.வ.).]

இருவினை *iru-viṉai,* பெ. (n.) ***நல்வினை தீவினை கள்;*** two classes of moral attributes, the good and the evil. "இருள்சேர் இருவினையும்" (குறள்.5.) (செ.அக.).

ம. இருவின.

[இரண்டு → இரு + வினை.]

இருவினையொப்பு *iru-viṉai-y-oppu,* பெ. (n.) ***அற னும் அறக்கடையும் சமனுறச் செய்துவிடுகை*** (சி.போ.பா.8,1 பக்.362, புதுப்); state of the soul in which it takes the attitude of perfect equanimity towards both meritorious and sinful deeds. (செ.அக.).

[இரண்டு - இரு + வினை + ஒப்பு.]

இருவீடு *iruvīḍu*, பெ. (n.) ***ஒருவகை மரம்*** (நாநார்த்த.); a kind of tree. (செ.அக.).

[இரு + வீடு.]

இருவீர் *iruvīr*, பெ. (n.) ***இருவர்;*** two persons. ''இருவீர் வேறலியற்கையு மன்றே'' (புறம்.45-6).

[இரண்டு → இரு + ஈர் = இருவீர்.]

இருவு-தல் *iruvu-*, 5. செ.குன்றாவி. (v.t.) ***இருக்கச் செய்தல்;*** cause to be or abide. ''என்னெஞ்சிரு வியவம் பொற்றிருவடி'' (காஞ்சிப்பு.தழுவ.145) (செ.அக.).

[இரு → இருவு (இருந்து) - தல்.]

இருவேரி *iruvēri*, பெ. (n.) ***வெட்டிவேர்;*** cuscuss grass. ''நறை நானமு நாறிருவேரியும்'' (பெருங்.இலா வாண.18,47.) (செ.அக.).

ம. இருவேரி.

[இரு + வேரி.]

இருவேல் *iru-vēl*, பெ. (n.) ***கீழ்நாட்டு மரவகை;*** Burmah iron wood. (செ.அக.).

ம. இருவுள்; க. இத்ரள்.

[இரு + வேல்.]

இருவேலி *iruvēli*, பெ. (n.) ***இருவேரி*** (திவா.) பார்க்க; see *iruvēri*. (செ.அக.).

[இருவேரி - இருவேலி.]

இருவேறுமண்டிலம் *iruvēṟu-maṇḍilam*, பெ. (n.) ***ஞாயிறும் திங்களும்;*** sun and moon. ''இருவேறுமண் டிலத்திலக்கம் போல'' (பரி-13-8).

[இரு + வேறு + மண்டிலம்.]

இருள் *iruḷ*, பெ. (n.) 1. ***இருட்டு;*** darkness. 2. ***கறுப்பு;*** dark colour, swarthiness, blackness. ''இரும்பிடி மேஎந்தோ லன்ன விருள்சேர்பு'' (மதுரைக்.634). 3. ***மயக்கம்;*** mental delusion, clouded state of mind. ''பொறிகட்கிருளீயு ஞாலத்து'' (பு.வெ.9,41). 4. ***அறி யாமை;*** spiritual ignorance concerning God. ''உலக மிருணீங்க விருந்தவெந்தை'' (சீவக.2812). 5. ***துன்பம்;*** trouble, difficulty. ''அச்சற் றேம மாகியிரு டீர்ந்து'' (பதிற்றுப்.90,2). 6. ***நிரய விசேடம்*** (குறள்.121); region of darkness, which is one of many hells. 7. ***பிறப்பு;*** birth. ''இருணீங்கி இன்பம் பயக்கும்'' (குறள்.352). 8. ***குற்றம்;*** fault, blemish. ''இருடீர் பொறையும்'' (ஞானா. ஆசிரியர்துதி). 9. ***மரகதக்குற்றம் எட்டனுள் ஒன்றா கிய கருகல்*** (சிலப்.14,184); flaw in emeralds, one of eight marakata-k-kuṟṟam. 10. ***மலம்*** (சி.சி.பாயி.50); corruption affecting the soul. 11. ***யானை*** (வின்.); elephant. 12. ***இருவேல்*** பார்க்க; Burmah iron wood. 13. ***இருள் மரம்*** பார்க்க (பெருங்.உஞ்சைக்.41,33); iron wood of Ceylon.

ம., க. இருள்; தெ. இருளு; து. இர்லு; பட. இரு (செ.அக.).

[இல் → இர் → இரு → இருள்.]

இருள்(ளு)-தல் *iruḷ*, 16 செ.கு.வி. (v.i.) 1. ***ஒளிமங்கு தல்; இருட்டாதல்; வானம் மேகத்தால் மறைத்து இருட்டாதல்;*** to become dark, as the sky over-cast, to become dim, to become obscure. 2. ***கறுப்பாதல்;*** to be black in colour. ''இருண்ட கல்லையும்'' (கம்பரா. வரைக்காட்சி). 3. ***அறியாமை கொள்ளுதல்;*** to be darkened, as the mind. ''இருளாத சிந்தையராய்'' (திவ். இயற்.3,19) (செ.அக.).

ம. இருளுக.

[இரு → இருள் - இருளுதல்.]

இருள்அளை *iruḷ-aḷai*, பெ. (n.) ***இருண்டகுகை;*** dark cave. ''ஏகல் அடுக்கத் திருளளைச் சிலம்பின்'' (அகநா.52).

[இருள் + அளை.]

இருள்கொள்நாகம் *iruḷ-koḷ-nāgam*, பெ. (n.) ***இருண்ட நிறமுடைய யானை;*** black elephant. ''கொ டிபிணங்கரில இருள் கொள் நாகம்'' (அகநா.73) (சங்.இலக்.சொற்.).

[இருள் + கொள் + நாகம். நாகு - நாகம் = பெண் யானை.]

இருள்பாலை *iruḷ-pālai*, பெ. (n.) ***ஏழிலைப்பாலை;*** (nels); seven leaved poon tree. (செ.அக.).

[இருள் + பாலை.]

இருள்புகா *iruḷ-pugā*, பெ. (n.) ***இருள்முகா*** பார்க்க; see *iruḷmugā*. (சா.அக.)

இருள்மதி *iruḷmadi*, பெ. (n.) ***இருள்உவா;*** new moon ''எண்மதிநிறை உவா இருண்மதிபோல'' (பரி.11-37).

[இருள் + மதி.]

இருள்மயக்கம் *iruḷmayakkam*, பெ. (n.) ***மூடல், சிறிது இருள் ஆதல், அந்திமயக்கம்;*** gloom, twilight. (செ.அக.).

ம. இருள்மயக்கம்.

[இருள் + மயக்கம்.]

இருள்மரம் *iruḷ-maram*, பெ. (n.) ***ஒருவகைப் பெரிய மரம்;*** ironwood of Ceylon. (செ.அக.).

[இருள் + மரம்.]

இருள்மருகி *iruḷ-marugi*, பெ. (n.) ***கருங்குவளை;*** blue lotus. (சா.அக.).

[இருள் + மருகி.]

இருள்மருது *iruḷ-marudu*, பெ. (n.) ***கருமருது;*** black murdah-Terminalia tomentosa (typica). (சா.அக.).

[இருள் + மருது.]

இருள்மூலி *iruḷ-mūli,* பெ. (n.) 1. ***இருள்செடி*** பார்க்க; see *iruḷsedi,* 2. ***கருங்காலி;*** black catechu. (சா.அக.).

[இருள் + மூலி.]

இருள்வட்டம் *iruḷ-vaṭṭam,* பெ. (n.) ***எழுநிரயத் தொன்று*** (திவா); hell of darkness, one of eḻu-narakam. (செ.அக.).

[இருள் + வட்டம்.].

இருள்வலி *iruḷ-vali,* பெ. (n.) ***ஞாயிறு*** (பிங்.); sun, as the dispeller of darkness. (செ.அக.).

[இருள் + வலி.]

இருள்விடுசெடி *iruḷ-viḍu-šeḍi,* பெ. (n.) ***காமாலை யைப் போக்கும் ஒரு வகை மூலி;*** herb capable of curing jaundice. (சா.அக.).

[இருள் + விடு + செடி.]

இருள்வெளி *iruḷ-veḷi,* பெ. (n.) ***இருட்டும் வெளிச்ச மும்;*** darkness and brightness. (சா.அக.).

[இருள் + வெளி.]

இருள்வேல் *iruḷ-vēl,* பெ. (n.) ***கீழ்நாட்டு மரவகை;*** Burmah iron wood. (செ.அக.).

[இருள் + வேல்.]

இருளடி-த்தல் *iruḷ-aḍi,* 4 செ.கு.வி. (v.i) ***இருளால் தீங்குண்டாதல்;*** to act malignantly, as the powers of darkness esp. on infants. (செ.அக.).

[இருள் + அடி.]

இருளடை-தல் *iruḷ-aḍai,* 2 செ.கு.வி. (v.i.) ***பொலி வின்றியிருத்தல்;*** to be void of beauty or charm, being steeped in darkness. 'வீடு இருளடைந்திருக்கிறது' (செ.அக.).

[இருள் + அடை.]

இருளப்பன் *iruḷ-āppaṉ,* பெ. (n.) ***பாண்டிநாட்டில் கொண்டாடப்பட்ட தெய்வம்;*** folk deity in Pandya country. (அபி.சிந்).

[இருள் + அப்பன்.]

இருளன் *iruḷaṉ,* பெ. (n.) 1. ***ஒருசார் வேட இனத்தான்;*** member of a primitive tribe of hunters inhabiting the Nilgiris and the Eastern Plains, so called from being dark in complexion. 2. ***ஒரு சிறு தெய்வம்;*** folk deity. 3. ***வரிக்கூத்துவகை*** (சிலப்.3,13,உரை); masquerade dance. (செ.அக.).

ம. இருளன்; கோத. எர்ல்.

[இருள் + அன்.]

இருளாயி *iruḷ-āyi,* பெ. (n.) ***பாண்டிநாட்டில் கொண்டாடப்பட்ட பெண் தெய்வம்;*** folk goddess. (அபி.சிந்.).

[இருள் + ஆயி.]

இருளி[1] *iruḷi,* பெ. (n.) ***வெட்கம்*** (யாழ்.அக.); shame. (செ.அக.).

[ஒருகா. இகுளி - இருளி.]

இருளி[2] *iruḷi,* பெ. (n.) 1. ***பன்றி*** (திவா.); pig. 2. ***கருஞ்சீரகம்*** (மலை.) பார்க்க; black cumin. 3. ***பெரிய சிலந்தி;*** a kind of spider. (சேரநா.) 4. ***ஈராவு என்னும் மரம்;*** tree. (சேரநா.).

ம. இருளி.

[இருள் - இருளி.]

இருளிச்செவி *iruḷi-c-cevi,* பெ. (n.) ***அமுக்கிரா*** (தைலவ.தைல.32); winter cherry.

ம. இருளிச் செவி.

[இருளி + செவி.]

இருளுலகம் *iruḷ-ulagam,* பெ. (n.) ***நிரையம்;*** hell, region of darkness. "இம்மூன்று மிருளுலகஞ் சேராத வாறு" (திரிகடு.90). (செ.அக.).

[இருள் + உலகம்.]

இருளுவா *iruḷ-uvā,* பெ. (n.) ***காருவா*** (அமாவாசை) (பரிபா.11,37,உரை); new moon. (செ.அக.).

[இருள் + உவா.]

இருளை *iruḷai,* பெ. (n.) ***நாணம்*** (பிங்.); bashfulness, shyness, delicacy. (செ.அக.).

[இகுளி - இகுளை - இருளை.]

இரெக்கை *irekkai,* பெ. (n.) ***சிறகு;*** feather. (ஆ.அக.).

[இறக்கை - இரெக்கை (கொ.வ.).]

இரெட்டி *ireḍḍi,* பெ. (n.) ***ஓர் இனம்;*** a kind of caste. (ஆ.அக.).

[இரட்டு - இரட்டர் - இரட்டியர் - இரெட்டி.]

இரெப்பை *ireppai,* பெ. (n.) 1. ***கண்மடல்;*** eyelid. 2. ***இரப்பை;*** lashes.

[இறப்பை - இரெப்பை (கொ.வ.).]

இரேக்கு *irēkku,* பெ. (n.) 1. ***தங்கத்தாள்*** (இ.வ.); gold leaf, tinsel. 2. ***பூவிதழ்*** (இ.வ.); petal of a flower 3. ***மென்துகில்;*** gauze. (செ.அக.).

தெ. ரேகு.

[இறகு - இறக்கு - றேக்கு - ரேக்கு - இரேக்கு.]

இரேழி *irēḻi,* பெ. (n.) ***இடைகழி*** (கொ.வ.); corridor between the entrance and the next inner door of an Indian house. (செ.அக.).

[இடைகழி - டேகழி - ரேழி - இரேழி.]

இரை[1]**-தல்** *irai-,* 2 செ.கு.வி. (v.i.) ***ஒலித்தல்;*** to sound; to roar, as the sea; to rumble, as a crowd; to wamble, as the bowels; to whiz, as birds when flying. (செ.அக.).

ம. இர.

[இல் - இர் (ஒலிக்குறிப்பு) - இரை.]

இரை[2]**-த்தல்** *irai,* 2 செ.கு.வி. (v.i.) 1. ***ஒலித்தல்*** (பாரத.வெளிப்பாட்டு.5); to cry out, as in anger. 2. ***சீறுதல்;*** to hiss and dart forth, as a snake. "இரைக்கின்ற பாம்பினை" (பதினொ.காரைக்.திருவிரட்.7). 3. ***மூச்சு வாங்குதல்;*** to pant, breathe hard; to palpitate, as from running; to wheeze, as an asthmatic. "ஈண்டு துன்பத் திரைத்திட வோடினான்" (உபதேசகா.அயமுகி.55). 4. ***வீங்குதல்;*** to puff up; to swell, as the body sometimes does after the use of sulphur. (செ.அக.).

ம. இரய்க்குக.

[இல் - இர் - இரை. இரைதல் - இரைத்தல்.]

இரை[3] *irai,* பெ. (n.) 1. ***ஒலி;*** sound, roar, splash, as of a running river. "இரையுந் தெழுதுநீர் வையை" (திருவிளை.பரிநரி.57). 2. ***பேச்சு;*** speech. (செ.அக.).

[இல் - இர் - இரை.]

இரை[4] *irai,* பெ. (n.) 1. ***நிலம்;*** earth. 2. ***நீர்;*** water. 3. ***கள்;*** toddy.

[இரை = ஒலித்தல், பசித்தல், பசி நீக்குதற்கான உணவும் நீரும்.]

இரை[5] *irai,* பெ. (n.) 1. ***பறவை விலங்கு முதலியவற் றின் உணவு*** (குறள்.946,உரை); food of birds, beasts, and of other inferior animals; prey. 2. ***உண்ட உணவு*** food eaten; nutriment in the system. 3. ***நாக்குப் பூச்சி*** (இ.வ.); intestinal worm, as interfering with digestion.

தெ. எர; **க.** எரெ; **ம.** இர; **கோத.** எர்; **பிரா.** இரக்; *Skt.* irā (any drinkable fluid, food or refreshment).

[இரைத்தல் = ஒலித்தல், பசித்தல், பசிதணித்தற்குரிய உணவு.]

இரைக்குடர் *irai-k-kuḍar,* பெ. (n.) ***இரைக்குடல்*** பார்க்க; see *irai-k-kuḍal.*

[இரை + (குடல்) - குடர்.]

இரைக்குடல் *irai-k-kuḍal,* பெ. (n.) ***இரைப்பை*** (வின்.); stomach.

[இரை + குடல்.]

இரைக்குடற்புளிப்பு *irai-k-kuḍaṟ-pulippu,* பெ. (n.) ***உண்ட உணவு சரியாகச் செரியாமையினால் இரைக் குடலுக்குள் ஏற்படும் புளிப்பு;*** acidity in the stomach. (சா.அக.).

[இரை + குடல் + புளிப்பு.]

இரைக்குழல் *irai-k-kuḻal,* பெ. (n.) ***உணவு செல்லுங் குழாய்*** (இங்.வை); oesophagus, gullet. (செ.அக.).

[இரை + குழல்.]

இரைகொள்ளி *irai-koḷḷi,* பெ. (n.) 1. ***இரையொதுக் கும் பறவை மிடறு;*** crop in birds, craw. 2. ***பெருந்தீனி தின்போன்*** (வின்.); glutton. (செ.அக.).

[இரை + கொள்ளி.]

இரைச்சல்[1] *iraiccal,* பெ. (n.) 1. ***ஒலி;*** sound, noise, clamour, hubbub, uproar, hullabaloo, vociferation, din. "இரைச்சலவ்லூ ரெடுத்திட" (இராமநா.யுத்.24). 2. ***தொடக்கம்;*** starting. (ஆ.அக.).

ம. இரைச்சல்.

[இரை - இரைதல் - இரைத்தல் - இரைச்சல்.]

இரைச்சல்[2] *iraiccal,* பெ. (n.) ***வீக்கம்;*** to puff up. (ஆ.அக.).

[இரை - இரைதல் - இரைத்தல். இரைச்சல் = ஒலித்தல், பெருகுதல்.]

இரைசல் *iraiśal,* பெ. (n.) 1. ***மாணிக்கக் குற்ற வகை;*** (கொ.வ.); flaw, as of a precious stone. 2. ***சுரசுரப்பு;*** roughness, as of a brick, pourousness 'அவ்வூர்ச் செங்கல்கள் இரைச்சலாயிருக்கு' (கொ.வ.).

[இரை - இரைசல்.]

இரைதல் *iraidal,* பெ. (n.) 1. ***ஒலித்தல்;*** sounding, making a rumbling noise. 2. ***வீங்குதல்;*** swelling. (சா.அக.).

[இரை - இரைதல்.]

இரைதேடுதல் *irai-tēḍutal,* பெ. (n.) ***இரைதேர்தல்*** பார்க்க; see *iraitērdal.* (ஆ.அக.).

[இரை + தேடுதல்.]

இரைதேர்தல் *irai-tērdal,* தொ.பெ. (vbl.n.) ***உணவு தேடுதல்;*** roam or fly about in search of food, as animals and birds. "இரைதேர்வண் சிறுகுருகே" (திவ்.திருவாய்.1,4,5). (செ.அக.).

[இரை + தேர்.]

இரைதேறு-தல் *irai-tēṟu,* 7 செ.கு.வி. (v.i) ***உணவு செரியாமறற்றங்குதல்*** (வின்.); to remain undigested, as food in the stomach. (செ.அக.).

[இரை + தேறு.]

இரைநீர் *irai-nīr,* பெ. (n.) ***கடல்;*** sea. (ஆ.அக.).

[இரை + நீர்.]

இரைப்பற்று *irai-p-paṟṟu,* பெ. (n.) ***செரியாத உணவு*** (யாழ்ப்.); undigested food lodged in the system. (செ.அக.).

[இரை + பற்று.]

இரைப்பு[1] *iraippu,* பெ. (n.) 1. ***இரைச்சல்;*** buzzing, din, hullabaloo. 2. ***மூச்சுவாங்குகை;*** hard breathing. wheezing, panting, shortness of breath. 3. ***ஈளை நோய்;*** asthma.

ம. இரைப்பு.

[இரை - இரைப்பு.]

இரைப்பு[2] *iraippu,* பெ. (n.) ***மோகம்;*** infatuation. "புதுப்பிணத் திரைப்புமிக்கு" (தக்கயாகப்.129) (செ.அக.).

[இரை → இரைப்பு.]

இரைப்பு[3] *iraippu,* பெ. (n.) ***கரப்புப்பூச்சி;*** cockroach. (செ.அக.).

[இரை → இரைப்பு.]

இரைப்புகாசம் *iraippu-kāšam,* பெ. (n.) ***நுரையீரலின் மூச்சுக் குழல்கள் சுருங்குவதால் மூச்சுவிட முடியாமை, நெஞ்சிலிரைச்சல், இருமல் முதலிய குணங்களைக் காட்டுமோர் நோய்;*** a disease marked by attacks of paroxysm with wheezing, coughing and a sense of constriction due to spasmodic contraction of the bronchi in the lungs. (சா.அக.).

[இரைப்பு + காசம்.]

இரைப்புகாப்பாசி *iraippu-kā-p-pāši,* பெ. (n.) ***கொடிப் பாசி;*** moss, creeping in water. (சா.அக.).

[இரைப்பு + புகா + பாசி.]

இரைப்புமாந்தம் *iraippu-māndam,* பெ. (n.) ***செரியாமை நோய்வகை*** (மாந்தவகை) (சீவரட்); kind of convulsion in children. (செ.அக.).

[இரைப்பு + மாந்தம்.]

இரைப்பூச்சி *irai-p-pūcci,* பெ. (n.) ***நாக்குப்பூச்சி*** (Tinn); worms in the stomach. (செ.அக.).

[இரை + பூச்சி]

இரைப்பெட்டி *irai-p-petti,* பெ. (n.) 1. ***பறவை இரையொதுக்கும் மிடற்றுப்பை*** (யாழ்ப்.); crop of birds, craw. 2. ***பிச்சை வாங்கும்பெட்டி;*** begging bowl. (செ.அக.).

[இரை + பெட்டி.]

இரைப்பெலி *iraippeli,* பெ. (n.) ***இழுப்புண்டாக்கும் எலி*** (வின்.); a species of rat whose bite is supposed to cause shortness of breath. (செ.அக.).

[இரைப்பு + எலி.]

இரைப்பை *irai-p-pai,* பெ. (n.) ***இரைக்குடல்;*** stomach. (செ.அக.).

[இரை + பை.]

இரைப்பையசைவு *iraippai-yasaivu,* பெ. (n.) ***உட்கொண்ட உணவு செரிப்பதற்காகக் குடலுக்கியற்கையாக அமைந்த வோர் அசைவு;*** natural movement during which the stomach digests the food. (சா.அக.).

[இரை + பை + அசைவு.]

இரைப்பை வீக்கம் *iraippai-vīkkam,* பெ. (n.) ***மாடுகளுக்கு வயிறுப்பிக்கொள்ளுமோர் நோய்;*** disease in cattle. (சா.அக.).

[இரை + பை + வீக்கம்.]

இரைமீள்(ட்)-த(ட)ல் *irai-mīl,* 16 செ.கு.வி. (v.i.) ***அசைபோடுதல்;*** chew the cud, ruminate. (செ.அக.).

[இரை + மீள்.]

இரையெடு-த்தல் *irai-y-edu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ***பறவை, பாம்பு முதலியன உணவு கொள்ளுதல்;*** pick up food, as birds; to catch prey, as snakes. 2. ***உணவு தின்னுதல்;*** to eat food, usu. said of dogs and cattle. 3. ***அசைபோடுதல்;*** to chew the cud. (செ.அக.).

[இரை + எடு.]

இல்[1]-தல் *il,* 8 செ.குன்றாவி. (v.t.) 1. ***குத்துதல்;*** to pierce, to make a hole. 2. ***பிளத்தல்;*** to cut into two, divide. 3. ***கீழே விழுதல்;*** to fall.

[உல் → இல்.]

இல்[2]-தல் *il,* 13 செ.கு.வி. (v.i.) 1. ***பொருந்துதல்;*** to fit, to adhere. 2. ***இணைதல், கூடுதல்;*** to join.

[உல் → இல்.]

இல்[3]-தல் *il,* 13 செ.கு.வி. (v.i.) 1. ***மெல்லியதாதல்;*** to become tender. 2. ***இளையதாதல்;*** to become young.

[உல் → இல்.]

இல்[4]-தல் *il,* 13 செ.கு.வி. (v.i.) 1. ***நடத்தல்;*** to walk. 2. ***இயங்குதல்; செல்லுதல்;*** to go.

[இல்[1] → இல்[4] = காலூன்றி நடத்தல்.]

இல்[5] *il,* பெ. (n.) 1. ***இடம்*** (பிங்.); place. 2. ***வீடு;*** house, home. "ஈனமா யில்லிருந் தின்றி விளியினும்" (நாலடி.198). 3. ***இல்லறம்;*** domestic life. "இல்வாழ்வா னென்பான்" (குறள்.41). 4. ***மனைவி;*** wife. "புகழ்புரிந் தில்லி லோர்க்கில்லை" (குறள்.59). 5. ***மருதமுல்லை நிலங்களின் தலைவியர்*** (திவா.); housewife of the families belonging to agricultural lands and forest lands. 6. ***குடி;*** family. "இற்பிறந்தார்"(குறள்.951). 7. ***ஓரை*** (பிங்.); constellation, zodiacal sign. 8. ***தேற்றாங் கொட்டை;*** clearing-nut. "இல்லா மலகமிரண்டு மபின்றால்" (இராசவைத்.45) (செ.அக.).

ம. இல்; க. இல், இல்லு; தெ. இல்லு; து. இல்லு; கோண். இல், இந்த்; பர். இல், பொதி (கூரை); நா. எல்ல; கொலா. எல்ல; கூ. இடு; குவி. இல்லு.

[இல் - துளைத்தற் கருத்துவேர். இல் = பாறைப்பிளவு. குகையிருப்பிடம், மலைபிளப்பு இருப்பிடம், இயற்கையான குகை போன்ற வாழிடம், தோண்டியெடுக்கப்பட்ட பக்கப்பள்ளம்.]

இல்[6] *il,* பெ. (n.) 1. ***இன்மை*** (நாலடி.52); non existence. 2. ***சாவு*** (சூடா.); death. - இடை. (part). ***ஓர் எதிர்மறையிடைநிலை;*** negative sign.' செய்திலேன்.' (செ.அக.).

[உல் - இல்[1]. இல் - துளைத்தல், குழித்தல், உள்ளீடு இல்லாமற் செய்தல்.]

இல்[7] *il,* பெ. (n.) 1. ***கருமை;*** blackness, darkness. 2. ***பெருமை, பெருக்கம்;*** largeness.

[உல் → இல்.]

இல்[8] *il,* இடை. (part.) 1. ***ஐந்தாம் வேற்றுமை உருபு*** (நன்.299); sign of abl. as in 'காக்கையிற் கரிது

களாப்பழம்.' 2. ***ஏழாம் வேற்றுமை யுருபு*** (நன்.302); sign of the loc. as in மணியில் ஒளி. 3. ***வினையெச்ச விகுதி;*** if, suffix of verbs used in a conjunctive sense. "இருவர் தந்நாளும் பெறில்" (விதான.கடிமண.17). 4. ***தொழிற்பெயர் பின்னொட்டு;*** suffix of verbal nouns. (எ.-டு.) 'வெயில்', 'துயில்.' (செ.அக.).

ம. இல்; க. ஒளகெ, ஒள்; தெ. லோ, இல்லு; து. ஒலை; பட. ஒகெ; இரு. இல்லெ; துட. ஒன்; கொலா. எல்ல; கோண். இல்; கூ. இடு; குவி. இல்லு, இல்லு.

[இல் = இடப்பொருளில் ஏழாம் வேற்றுமை உருபாயிற்று. இல் - குழித்தற் பொருளிலிருந்து தவிர்த்தல் பொருள் சுட்டி ஐந்தன் உருபாயிற்று. விட என்னும் ஐந்தன் சொல்லுருபு தவிர்த்தல் பொருளில் ஆளப்பட்டிருத்தல் காண்க. இல் = வாழிடம். குறிப்பிட்ட பண்புக்கு அப்பண்பியே இருப்பிட மாதலானும் உலகப்பெயர்களும் அப்பெயர்த் தன்மைகளுக்கு இருப்பிட மாதலானும் "இல்" இடப் பெயரீறு ஆயிற்று.]

இல்[9] *il,* பெ. (n.) ***இது;*** this.

க. இல்லி.

[இ - இல். இகரம் அண்மைச் சுட்டெழுத்து, லகர வீறு சேர்ந்து அண்மைச்சுட்டுச்சொல்லாயிற்று. கன்னடத்தில் இதே வடிவில் வழக்கூன்றியுள்ளது. தமிழில் இல் → இது எனத் திரிந்தது.]

இல்பொருள் *il-poruḷ,* பெ. (n.) ***இல்லாதது*** (அசத்து); that which does not exist. "பிரமப் பொருளாவது உள்பொருளுமன்று இல்பொருளுமன்று" (சி.சி.6,5, சிவஞா.) (செ.அக.).

[இல் + பொருள்.]

இல்பொருளுவமை *il-poruḷ-uvamai,* பெ. (n.) ***உலகில் இல்லாத ஒரு பொருளை உவமையாக்குவது*** (குறள்.273,உரை); figure of speech, a simile in which things non-existent are handled. (செ.அக.).

[இல் + பொருள் + உவமை.]

இல்பொலி மகடூஉ *il-poli-magaḍūu,* பெ. (n.) ***மனைவி;*** wife. "நீனெடும் பந்தருண் முறை யூட்டும் இற்பொலி மகடூஉப் போல" (புறநா.331-9) (பாண்டி.அக.).

[இல் + பொலி + மகடூஉ. மகள் - மகடு - மகடூஉ.]

இல்லக்கிழத்தி *illa-k-kiḻatti,* பெ. (n.) ***மனைவி;*** wife, mistress of the house. (செ.அக.).

[இல் - இல்லம் + கிழத்தி.]

இல்லகம் *il-l-agam,* பெ. (n.) ***வீடு;*** house, home. "மனையாளை யில்லா தானில்லகம்" (நாலடி.361) (செ.அக).

[இல் + அகம்.]

இல்லடை[1] *il-l-aḍai,* பெ. (n.) 1. ***அடைக்கலப் பொருள்*** (பிங்.); anything lodged in a house for security. 2. ***அடைமானப் பொருள்;*** pledged article. 3. ***பண்ட சாலை*** (ஆ.அக.); store-room. (செ.அக.).

[இல் + அடை.]

இல்லடை[2] *il-l-aḍai,* பெ. (n.) ***ஒட்டடை;*** cobweb, adhering to the inner side of the roof.

க. இல்லண; ம. இல்லட்டக்கரி.

[இல் + அடை.]

இல்லடைக்கலம் *il-l-aḍai-k-kalam,* பெ. (n.) ***இல்லடை***[1] *-1* பார்க்க; see *illaḍai-1.* (செ.அக.).

[இல் + அடை + கலம்.]

இல்லடைப்புல் *illaḍai-p-pul,* பெ. (n.) ***முயற்புல்;*** cough grass-cynoden dactylon. (சா.அக.).

[இல் + அடை + புல்.]

இல்லத்தலைவன் *illa-t-talaivan,* பெ. (n.) 1. ***வீட்டின் தலைவன்;*** head of the family. 2. ***அறிவுடையோன்;*** wiseman, the prudent. (அபி.சிந்.).

[இல்லம் + தலைவன்.]

இல்லத்துப் பிள்ளை *illattu-p-piḷḷai,* பெ. (n.) ***ஈழவர்*** (G.Tn.D.144); title assumed by people of the īḻavar caste.

[இல்லம் + அத்து + பிள்ளை.]

இல்லது *illadu,* பெ. (n.) ***இயற்கை*** (பிரகிருதி) (திவ்.திருவாய்.1,2,4); non-spirit matter.

[இல் → இல்லது.]

இல்லதுநிரப்பல் *illadunirappal,* பெ. (n.) ***இல்லாத பொருளைத் தேடி நிரப்புதல்;*** securing the unavailable. "இல்லது நிரப்பலாற்றா தோரினும்" (புறநா.203); (பாண்டி.அக.).

[இல் → இல்லது + நிரப்பல்.]

இல்லம் *illam,* பெ. (n.) 1. ***வீடு;*** house, home. "இல்லங்கடோறு மெழுந்தருளி" (திருவாச.7,17). 2. ***தேற்றா*** (அகநா.4) பார்க்க; clearing-nut tree. 3. ***மனைவி;*** wife. (செ.அக.).

ம. இல்லம்; க. இல்லு, இல்; குட. இல்லவெண் (உறவினன்); துளு. இல்லு; தெ. இல்லு; ஆத். வில்லும்.

[இல் + அம் - இல்லம்.]

இல்லர் *illar,* பெ. (n.) ***இல்லிடத்தர்;*** people of the house. "அன்னையு அத்தனும் இல்லராயாய் நாண" (கலித்.115-8).

[இல் + அவர் = இல்லவர். இல்லவர் → இல்லர்.]

இல்லல் *illal,* பெ. (n.) ***நடக்கை*** (பிங்.); walking. (செ.அக.).

[இல்[4] *- குழித்தல், செலுத்துதல், கடத்தல், நடத்தல். இல் + அல் = இல்லல்.]*

இல்லவர் *illavar,* பெ. (n.) 1. ***இல்லறத்தவர்;*** people following domestic life. "இல்லவர் ஒழுக்கம் போல் இருங்கழி மலர் கூம்ப" (கலித்.148-6). 2. ***இல்லில் உள்ளார்;*** people of the house. "இல்லவரறித லஞ்சி

மெல்லென" (அகநா.34-16). 3. ***மகளிர்;*** women, housewives.

[இல் + அவர் - இல்லவர்.]

இல்லவழிக்கார் *illavali-k-kār,* பெ. (n.) ***உறவினன், ஒரே குலத்தோன்;*** relative, people of the same class. (சேரநா.).

ம. இல்லவழிக்கார்.

[இல்லம் + வழிக்கார் (வழியர்).]

இல்லவள் *illaval,* பெ. (n.) ***மனைவி*** (குறள்.53); wife, mistress of the house. (செ.அக.).

[இல் + அவள் - இல்லவள்.]

இல்லவன் *illavan,* பெ. (n.) 1. ***ஏழ்மையன்;*** poor man. "இல்லவ ரொழுக்கம் போல்" (கலித்.148). 2. ***கணவன்;*** husband. (ஆ.அக.) (செ.அக.).

[இல் + அவன் - இல்லவன்.]

இல்லவை *illavai,* பெ. (n.) 1. ***இல்லாப் பொருள்;*** the unavailable, non existent. 2. ***மனைப்பொருள்;*** house-hold things. (ஆ.அக.).

[இல் + அவை - இல்லவை. இல் = குழித்தற் பொருளில் உள்ளீடு நீக்கிய இன்மைப்பொருள் குறித்தது.]

இல்லறத்தின் புலி *illa-arattin-puli,* பெ. (n.) ***பச்சைக் கல்*** (மரகதம்); emerald. (சா.அக.).

[இல்லறத்தின் + புலி.]

இல்லறம் *il-l-aram,* பெ. (n.) 1. ***இல்வாழ்க்கை;*** domestic life of the house holder, opp. to துறவறம். 2. ***இல்வாழ்தலின் அறம்*** (திவா.); duties incumbent on a house holder. (செ.அக.).

[இல் (வீடு) + அறம் - இல்லறம். இல்லறத்திலிருந்து செய்யும் அறம்]

இல்லாக்காட்டில் *illā-k-kāttil,* கு.வி.எ. (adv.) ***இல்லாவிட்டால்*** (pond.); if not, otherwise. (செ.அக.).

ம. இல்லாக்கால்.

[இல்லாக்கால் - இல்லாக்காலில் - இல்லாக்காலத்தில் - இல்லாக்காத்தில் - இல்லாக்காட்டில் - இல்லாக்காட்டி (கொ.வ.).]

இல்லாக்குடி *illā-k-kudi,* பெ. (n.) ***வறுமையான குடும்பம்;*** destitute family. (செ.அக.).

[இல் - இல்லா + க் + குடி.]

இல்லாக்குற்றம் *illā-k-kurram,* பெ. (n.) 1. ***ஏழ்மை;*** poverty. 2. ***இடுவந்தி*** (pond); calumny. (செ.அக.).

[இல் + ஆ + க் + குற்றம்.]

இல்லாங்காட்டி *illān-gātti,* கு.வி.எ. (adv.) ***இல்லாக் காட்டில்*** (இ.வ.) பார்க்க; see *illākāttil* (செ.அக.).

[இல்லாக்கால் - இல்லாக் காலத்தில் - இல்லாக்காத்தில் - இல்லாக்காட்டி - இல்லாங்காட்டி (கொ.வ.).]

இல்லாட்டி *illātti,* பெ. (n.) ***மனைக்கிழத்தி*** (குறள். 201); wife. (சங்.இலக்.சொற்).

[இல் + (ஆள் + தி) ஆட்டி.]

இல்லாண்முல்லை *illān-mullai,* பெ. (n.) 1. ***பாசறைத் தலைவனை இல்லாள் நினையும் புறத்துறை;*** literary theme of a faithful wife thinking about her husband during his absence from home or in a military camp. 2. ***தலைவி கணவனை வாழ்த்தி விருந்தோம்பும் இல்லின் மிகுதியைப் புகழும் புறத்துறை*** (பு.வெ.10, முல்லை.5); literary theme of a wife's loving adoration of her husband and her praise of his unstinting hospitality as a house holder. (செ.அக.).

[இல்லாள் + முல்லை.]

இல்லாண்மை *il-l-ānmai,* பெ. (n.) ***குடியினையாளுந் தன்மை;*** (குறள்.1026) ability to support one's family and manage domestic affairs. (செ.அக.).

[இல் + ஆண்மை = ஆளுந்திறம்.]

இல்லாத்தனம் *illā-t-tanam,* பெ. (n.) ***வறுமை;*** poverty, destitution. (செ.அக.).

[இல் + ஆ + த் + தனம். தன்மை - தனம்.]

இல்லாததும் பொல்லாததும் *illādadum-pollādadum,* பெ. (n.) ***பொய்யும் தீங்கு விளைப்பதும்*** (கொ.வ.); falsehood and slander. (செ.அக.).

[இல்லாதது + உம் + பொல்லாதது + உம்.]

இல்லாதபொய் *illāda-poy,* பெ. (n.) ***முழுப்பொய்*** (கொ.வ.); downright-lie, utter falsehood. (செ.அக.).

[இல் + ஆ + த + பொய்.]

இல்லாதவன் *illādavan,* பெ. (n.) ***வறியவன்;*** one utterly destitute, an impecunious person. (செ.அக.).

[இல் + ஆ + த - இல்லாத + அவன்.]

இல்லாது *illādu,* கு.வி.எ. (adv.) ***இல்லாமல்;*** without.

[இல்லது → இல்லாது (மு.தா.336) இல்லா + அது - இல்லாது.]

இல்லாப்புலம்பு *illāp-pulambu,* பெ. (n.) ***இல்லாத தனிமை;*** loneliness "நாமில்லாப் புலம்பாயின் நடுக்கஞ் செய் பொழுதாயின்" (கலித்.27-23) (சங்.இலக்.சொற்).

[இல் + ஆ + ப் + புலம்பு.]

இல்லாப் புளுகு *illā-p-pulugu,* பெ. (n.) ***பெரும்பொய்;*** utter falsehood.

[இல்லா + புளுகு.]

இல்லாமை *illāmai,* பெ. (n.) 1. ***இன்மை;*** non-existence. 2. ***ஏழ்மை;*** poverty, want. "இல்லாமை சொல்லி" (அபிரா.54) (செ.அக.).

ம. இல்லாய்ம; க. இல்லவெ, இல்லத, இல்லதன்; தெ. லேமி.

[இல் + ஆ + மை.]

இல்லாவாட்டி *illā-v-ātti,* பெ. (n.) ***வறியவள்*** (Tinn); destitute woman. (செ.அக.).

[இல்லா + (ஆள் + தி) ஆட்டி.]

இல்லாள் *illāḷ,* பெ. (n.) 1. ***மனைவி*** (குறள்.52); wife, mistress of the house. 2. ***மருதமுல்லை நிலங்களின் தலைவியர்*** (திவா.); term used to designate a lady of rank in towns or in forest-pasture tracts. 3. ***ஏழைப்பெண்;*** poor girl (செ.அக.).

[இல் + ஆள்.]

இல்லாளன் *il-l-āḷaṉ,* பெ. (n.) 1. ***இல்லவன்;*** householder. 2. ***கணவன்;*** husband, ruler of the home. "இல்லாளன் வைக்கவென" (பெரியபு.காரைக்.20) (செ.அக.).

[இல் + ஆளன்.]

இல்லாளி *il-l-āḷi,* பெ. (n.) ***குடும்பத்தான்*** (சைவச. பொது.376); householder, one who has entered on the order of a householder. (செ.அக.).

[இல் + ஆளி.]

இல்லான் *illāṉ,* பெ. (n.) 1. ***வறியவன்;*** poorman; one in want. "இல்லானை யில்லாளும் வேண்டாள்". (நல்வ.34). 2. ***கணவன்;*** husband. (ஆ.அக.) (செ.அக.).

[இல் + ஆன்.]

இல்லி *illi,* பெ. (n.) 1. ***துளை;*** orifice, as of the teat. 2. ***தேற்றா*** (மூ.அ.) பார்க்க; clearing-nut tree. 3. ***வால் மிளகு;*** tail pepper, 4. ***கடற்கரையோரங்களில் வாழும் புழு;*** small molluse found on the seashore. 5. ***வெற்றிலை;*** betel leaf-piper betel. 6. ***பெண்ணுறுப் பிற் குறையுடையவள்;*** woman wanting in or defective of genital organs in her body. 7. ***ஒருவகை மூங்கில்;*** a bamboo. (சா.அக.).

ம. இல்லி.

[உல் → இல் → இல்லி (வே.க.87) இல் - துளைத்தற்கருத்து வேர். இல் - இல்லி.]

இல்லிக்கண்ணன் *illi-k-kaṇṇaṉ,* பெ. (n.) 1. ***மிகச் சிறிய கண்ணுடையான்*** (இ.வ.); one who has eyes which appear like two small holes in the head, one with very tiny eyes. 2. ***கூச்சக்கண்ணுள்ளவன்*** (வின்.); one whose eyes are sensitive to light and who, therefore, contracts his eyes to a small aperture when facing light. (செ.அக.).

[இல் - இல்லி + கண்ணன்.]

இல்லிக்கயிறு *illi-k-kayiṟu,* பெ. (n.) ***சன்னமான கயிறு;*** very thin variety of coir. (சேரநா.).

ம. இல்லிக்கயர்.

[இல்லி + கயிறு.]

இல்லிக்காது *illi-k-kādu,* பெ. (n.) ***சிறு துளைக்காது*** (வின்.); bored ear with a small hole, opp to தொள்ளைக்காது. (செ.அக.).

[இல் - இல்லி + காது.]

இல்லிகம் *illigam,* பெ. (n.) ***சிறுகீரை;*** pig's greens - Amaranthus compestris. (சா.அக.).

இல்லிடம் *il-l-iḍam,* பெ. (n.) 1. ***வீடு*** (பிங்.); house, abode. 2. ***ஊர்*** (பிங்.); town, village. (செ.அக.).

[இல் + இடம்]

இல்லிப்பூச்சி *illippūcci,* பெ. (n.) ***கடற்கரையில் காணப்படும் பூச்சி;*** seashore insect.



இல்லிப்பூச்சி

இல்லிமூக்கு *illi-mūkku,* பெ. (n.) ***சில்லி மூக்கு;*** easily bleeding nose, epistaxis. (செ.அக.).

[இல்லி + மூக்கு.]

இல்லியல்பு *illiyalbu,* பெ. (n.) ***குடிப்பிறப்பிற்கு உரிய இயல்பு;*** nature of family people. "ஆயர் மகளிர்க்கு இருமணங்கூடுதல் இல்லியல்பன்றே" (கலித்.114-21).

[இல் + இயல்பு.]

இல்லிருந்தமைவோர் *illirund-amaivōr,* பெ. (n.) ***இல்லின்கண் வாளா அமைந்திருப்பவர்;*** - people settled in a family "இல்லிருந் தமைவோர்க் கில்லென் றெண்ணி" (அகநா.231-3).

[இல் + இருந்து + அமைவோர்.]

இல்லிறை *illiṟai,* பெ. (n.) ***வீட்டின் இறவாணம்;*** eaves of a house.

[இல் + இறை.]

இல்லுறைகல் *il-l-urai-kal,* பெ. (n.) ***அம்மிக்கல்;*** mashing stone, domestic utensil. ''இல்லுறைகல்லின் ... செங்கால் பிடித்து'' (கல்லா-18) (செ.அக.).

[இல் + உறை + கல்.]

இல்லுறைதெய்வம் *illurai-teyvam,* பெ. (n.) ***வீட்டுத் தெய்வம்;*** deity of a house. ''இல்லுறை தெய்வ மன்னார்'' (சீவக.1095) (செ.அக.).

[இல் + உறை + தெய்வம்.]

இல்லெலி *il-l-eli,* பெ. (n.) ***வீட்டெலி;*** house-rat, mus decumanus. ''இல்லெலி பார்த்து'' (சீவக.2985) ''இல் லெலி மடிந்த தொல்சுவர் வரைப்பிற்'' (புறநா.211-19) (செ.அக.).

[இல் + எலி.]

இல்லெழுவயலை *illalu-vayalai,* பெ. (n.) ***மனையில் முளைத்த வயலைக் கொடி;*** a kind of creeper growing around the house. ''இல்லெழு வயலை ஈற்று ஆ தின்றென'' (நற்.179-1) (பாண்டி.அக.).

[இல் + எழு + வயலை.]

இல்லெனல் *il-l-enal,* பெ. (n.) 1. ***சாவு*** (பிங்.); death. 2. ***இல்லாமல் செய்தல்;*** becoming extinct. 3. ***இல்லை யென்கை*** (பிங்.); negating existence. (செ.அக.).

[இல் + எனல்.]

இல்லை *illai,* பெ. (n.) ***உண்டென்பதன் எதிர்மறை;*** no. இல், இல்லை என்பன, உள், உண்டு என்னும் வினைகட்கு எதிர்மறையாம். (செ.அக.) ''உள்'' என் னும் வினை மலையாளத்தில், பழமொழிகளில் இன்றும் வழங்குகின்றது.

ம. இல்ல; **க.** இல்ல; **தெ.** லே, லேது; **து.** இச்சி, இஞ்சி; **குட., பட., இரு.** இல்லை; **கொர.** இல்ல; **கோத.** இல்; **பர்.** சில; **கோண்.** கில்லெ; **ஆத்.** இல்ல.

[இலது → லேது. இல் → லே(தெ) - இலக்கணப்போலி (metathesis) லே → னே → னை → நை (இந்தி) = இல்லை.]

O.G. ni, *Goth.* ni. *A.s.* ne. *M.E.* Ice - nei. Dan - net, E.nay,no.

அல் → அன் → ன. *Skt.* -na.

[இல் + ஐ.]

இல்லை செய்-தல் *illai-cey,* 1 செ.குன்றாவி. (v.t.) ***மறுத்தல்;*** to deny. 'இல்லை செய்யாதே இசை கையிறே' (திவ்.திருப்பா.15,வ்யா) (செ.அக.).

[இல்லை + செய்.]

இல்லையா-தல் *illai-y-ā-,* 6 செ.கு.வி. (v.i.) ***செத்து விடுதல்;*** to be no more; to die. ''இல்லையாயின னுன்மக னின்றென'' (கம்பரா.இராவணன்சோ.3) (செ.அக.).

[இல்லை + ஆதல்.]

இல்லொடுவரவு *illodu-varavu,* பெ. (n.) ***குடிப்பிறப்பு;*** high birth; noble parentage. ''இளமையும் வனப்பு மில் லொடு வரவும்'' (பெருங்.உஞ்சைக்.36,89) (செ.அக.).

[இல் + ஒடு + வரவு.]

இல்லொழுக்கம் *il-l-olukkam,* பெ. (n.) ***இல்லறம்;*** life of a house holder; family life. ''கூறுமில்லொழுக்கந்தன் னை'' (கந்தபு.மார்க்கண்டேய.33).

[இல் + ஒழுக்கம்.]

இல் வழக்கு *il-valakku,* பெ. (n.) 1. ***பொய்வழக்கு;*** false or untenable plea or contention. 2. ***இல்லதனை இல்லையென்கை;*** categorical denial. ''முயற்கோடின் றில் வழக்கே'' (சி.சி.பர.சௌத்.10) (செ.அக.).

[இல் + வழக்கு.]

இல்வழங்காமை *il-valaṅgāmai,* பெ. (n.) ***புடை பெயர்ந்து நடவாமை;*** inability to walk. ''இல்வழங்கா மையிற் கல்லென வொலித்து'' (புறநா.320-9) (சங்.இலக்.சொற்.).

[இல் + வழங்காமை.]

இல்வாழ்க்கை *il-vālkkai,* பெ. (n.) ***இல்லறத்தில் வாழ்கை*** (குறள்.5,அதி.); domestic life; the order of domestic life. (செ.அக.).

[இல் + வாழ்க்கை.]

இல்வாழ்வான் *il-vālvān,* பெ. (n.) ***இல்லறத்தான்;*** householder. ''இல்வாழ்வா னென்பான்'' (குறள்.41) (செ.அக.).

[இல் + வாழ்வான்.]

இல[1] *ila,* பெ. (n.) ***இலவு*** பார்க்க; red flowering silk-cotton tree. ''இலவலர்ப் பஞ்சிப் பாதத்து'' (சீவக.264) (செ.அக.).

[இல் - இல. (வே.க.16).]

இல[2] *ila,* பெ. (n.) ***ஏடியென்னும் பொருளுள்ள விளிப்பெயர்;*** always in the voc. case; used in ancient times in addressing a woman in an intimate manner ''எவனில குறுமக ளியங்குதி'' (அகநா.12). (செ.அக.).

[இல் - இல.]

இலக்கணக் கருமம் *ilakkana-k-karumam,* பெ. (n.) ***இயல்புணர்த்தும் மெய்க்குறி, முகக்குறி முதலாயின*** (பெருங்.உஞ்சைக்.38,292); descriptive marks or qualities. (செ.அக.).

[இலக்கணம் + கருமம்.]

இலக்கணக்கொத்து *ilakkana-k-kottu,* பெ. (n.) ***17-ஆம் நூற்றாண்டில் சுவாமிநாத தேசிகர் எழுதிய இலக்கண நூல்;*** treatise on grammar by Suvāminada-Dēsigar, 17th c. (செ.அக.).

[இலக்கணம் + கொத்து.]

இலக்கணச்சிதைவு *ilakkana-c-cidaivu,* பெ. (n.) ***வழுவாய் வழங்குஞ்சொல்;*** irregular usage of a word. (ஆ.அக.).

[இலக்கணம் + சிதைவு.]

இலக்கணச்சுழி *ilakkana-c-culi,* பெ. (n.) ***நற்சுழி*** (வின்.); auspicious curve or curvature in the lines of the body, in the hair of horses, and in cattle generally. (செ.அக.).

[இலக்கணம் + சுழி.]

இலக்கணச்சொல் *ilakkana-c-col,* பெ. (n.) ***இலக்கண வழியால் வரும்சொல்; இயற்சொல், செஞ்சொல்*** (நன்.267); word that is regularly formed, and is part of the legitimate vocabulary, one of three iyaibu. valakku. (ஆ.அக.).

[இலக்கணம் + சொல்.]

இலக்கண நூல் *ilakkana-nūl,* பெ. (n.) ***இலக்கணத்தைப் பற்றிக் கூறும் நூல்;*** treatise on grammar. (செ.அக.).

[இலக்கணம் + நூல்.]

இலக்கணப்போலி *ilakkana-p-pōli,* பெ. (n.) ***இலக்கணமுடையது போல் தொன்று தொட்டு வழங்குஞ் சொல்*** (நல்.267); words which, though not strictly grammatical, have, nevertheless, by long usage secured unquestioned admission into the standard dialect and are, on that account, accepted to be as good as 'ilakkanam -udaiyatu; one of three 'iyalpu - valakku,' (செ.அக.).

[இலக்கணம் + போலி.]

இலக்கணம் *ilakkanam,* பெ. (n.) 1. ***சிறப்பியல்பு*** (வேதா.சூ.20); definition, accurate description. 2. ***இயல்பு;*** quality, property, attribute, characteristic. 3. ***அடையாளம்;*** sign, symbol, distinctive mark. 4. ***அழகு;*** elegance, symmetry, comeliness, beauty. 5. ***ஐந்து இலக்கணம்;*** grammar, consisting of five parts, viz. எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம். 6. ***நூன்மொழி யொழுங்கு, அதைக்கூறும் நூல், சிறந்த நடைக்கு எடுத்துக்காட்டாக அல்லது கற்றோர் பின்பற்றும் இலக்காகக் கூறப்பெறும் மொழியமைதி;*** style of writing a mature work of literature etc. (செ.அக.).

இலக்கணம் என்பதற்குப் பாவாணர் காட்டும் விளக்கம்:

ஆரியர் இந்தியாவிற்குட் புகுமுன்னரே, தமிழுக்கு இலக்கணம் வகுக்கப்பட்டிருந்ததனாலும், வேறெம் மொழியிலுமில்லாத பொருளிலக்கணம் தமிழுக்கிருத்தலாலும்,

''கண்ணுதற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ.''

என்று பரஞ்சோதியார் கூறியதற்கேற்ப இலக்கண வரம்பிற் சிறந்த மொழி தமிழேயாதலாலும், இலக்கணத்தைத் தனிப்படச் சுட்ட வேறு தமிழ்ச் சொல்லின்மையாலும், இயல் என்னுஞ் சொல் ஒரு பொருளின் இயல்பையே குறித்தலாலும், இலக்கியத்தைக் குறிக்க இயல் என்னுஞ் சொற்கு இனமான தொன்று மின்மையாலும், இலக்கணம் இலக்கியம் என்னும் சொற்கள் தூய தென்சொற்களே யென்று தெளிக.

லக்ஷண, லக்ஷ்ய என்னும் வடசொற்கள், இலக்கண விலக்கியத்தைக் குறியாமல், குறி (அடையாளம்) என்னும் பொருளையும் அதன் வழிப் பொருள்களையுமே குறித்தலாலும், வடமொழியில் இலக்கணத்தைக் குறிப்பது 'வ்யாகரணம்' என்னும் சொல்லாதலாலும்; இலக்கணம் இலக்கியம் என்னுஞ் சொற்களின் பகுதியான இலக்கு என்னுஞ் சொற்கு அடிப்படையும் உயிர் நாடியுமான இகரம் வடசொற்களில் இன்மையாலும், அவை தென்சொற்கு மூலமன்மை யறிக.

இனி, குறி யென்னும் பொருள் இருமொழிச் சொற்கட்கும் பொதுவாயிருத்தலாலும், தென் சொற்கள் இயற்சொற்களாயும் வடசொற்கள் திரிசொற்களாயுமிருப்பதாலும், வடசொற்கட்குத் தென்சொற்களே மூலம் என்பது பெறப்படும்.

எழுதுதல் என்னும் பொருளில், இலக்கு என்னும் தென்சொல் வடமொழியில் 'லிக்' என்று திரியும். இலக்கு என்னுஞ் சொல் மிகப் பழைமையானதாதலால், அதன் பகுதி இன்று இழுத்தற் கருத்தை வெளிப்படையாய் உணர்த்தவில்லை. குமரிநாடும் தொன்னூலும் பல பழஞ்சொற்களும் மறைந்து போனமையும் இதற்குக் காரணமாம். (மு.தா.329,330).

[இலக்கு - இலக்கணம்.]

இலக்கணமுறை *ilakkana-murai,* பெ. (n.) ***இலக்கண நெறி;*** grammatical norm. (ஆ.அக.).

[இலக்கணம் + முறை.]

இலக்கண வழு *ilakkana-valu,* பெ. (n.) ***இலக்கணப் பிழை;*** grammatical error. (செ.அக.).

[இலக்கணம் + வழு.]

இலக்கண விளக்கச்சூறாவளி *ilakkana-vilakka-c-cūrāvali,* பெ. (n.) ***சிவஞான முனிவர் 18ஆம் நூற்றாண்டில் எழுதிய ஓர் இலக்கணநூல்;*** treatise on Tamil grammar written by Civañāna-Munivar, 18th c. in refutation of the Ilakkana-vilakkam. (செ.அக.).

[இலக்கணம் + விளக்கம் + சூறாவளி.]

இலக்கண விளக்கம் *ilakkana-vilakkam,* பெ. (n.) ***வைத்தியநாத தேசிகர் 17ஆம் நூற்றாண்டில் எழுதிய ஐந்திலக்கணமும் கொண்ட ஒரு நூல்;*** treatise on Tamil grammar in its five parts, by Vaittiyanāta-Tēcigar, 17th c. (செ.அக.).

[இலக்கணம் + விளக்கம்.]

இலக்கணை *ilakkanai,* பெ. (n.) ***ஒரு பொருளைக் காட்டற்கு உரிய சொல்லை மற்றொரு பொருட்குத் தந்து உரைப்பது*** (நன்.269.விருத்.). secondary significative capacity of a word, of three kinds. viz; விட்ட விலக்கணை, விடாதவிலக்கணை, விட்டும் விடாத விலக்கணை. (நன்.269.விரு.) (செ.அக.).

[இலக்கு + அணை.]

இலக்கம்[1] *ilakkam,* பெ. (n.) ***வெளிச்சம்;*** brightness, light. ''எல்லே யிலக்கம்'' (தொல்.சொல்.271) (செ.அக.).

[இலக்கு + அம்.]

இலக்கம்[2] *ilakkam,* பெ. (n.) 1. ***குறிப்பொருள்;*** target, butt, aim. ''இலக்க முடம் பிடும் பைக்கு'' (குறள்.627). 2. ***நூறாயிரம்;*** one lakh, 100,000. ''இலக்கத் தொன்பதின்மர்'' (கந்தபு.திருவவதார.129). 3. ***எண்;*** number, digit. ''அநந்தமென்று சொல்வதே... கணைக் கிலக்கம்'' (கந்தபு.சிங்கமு.386). 4. ***எண்குறி;*** numerical figure.

"குறியிலக்கமெழுதே" (தைலவ.பாயி.15) (செ.அக.).

[இல் - இலக்கு - இலக்கம்.]

இலக்கமடை-த்தல் *ilakkam-aḍai-* 3 செ.கு.வி. (v.i.) ***எப்படிக்கூட்டினும் மொத்த எண் ஒன்றேயாகும்படி எண்களைச் சதுரங்களில் அடைத்தல்*** (வின்.); to enclose numbers in squares in such a manner that in whatever way they are added the total shall be the same, a device used also for magical purposes. (செ.அக.).

[இலக்கம் + அடை.]

இலக்கமிடு-தல் *ilakkam-iḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) ***கணக்கிடுதல்*** (வின்.); count, reckon, compute, allot numbers as to pages. (செ.அக.).

[இலக்கம் + இடு.]

இலக்கர்[1] *ilakkar*, பெ. (n.) ***நூறாயிரவர், இலக்க மென்னுந் தொகையினர்*** (கந்தபு.சதமுகன்வ.15); multitude, numbering around 1,00,000. (செ.அக.).

[இலக்கு + அர்.]

இலக்கி-த்தல் *ilakki-*, 11 செ.குன்றாவி. (v.t.) ***உரு வரைதல்;*** to draw as a sketch on a canvas. "இவ்வுருவு நெஞ்சென்னுங் கிழியின் மேலிருந் திலக்கித்து" (சீவக.180) (செ.அக.).

[இலக்கு → இலக்கி - இலக்கித்தல் (மு.தா.329).]

இலக்கிதம் *ilakkidam*, பெ. (n.) ***குறிக்கப்பட்டது;*** that which is marked, indicated or characterised by. "பேசும் பொருளுக் கிலக்கிதமாம்" (திருவாச.48.7). (செ.அக.).

[இலக்கு - இலக்கிதம்.]

இலக்கியம் *ilakkiyam*, பெ. (n.) 1. ***இலக்கண மமைந்தது;*** thing defined. "இலக்கியமாம் பொருளில்" (வேதா.சூ.20.). 2. ***எடுத்துக்காட்டு;*** example from classical writings to illustrate rule of grammar, or the different meanings of a word or an expression. "ஏற்றப் படாதன வின்னிசைச் சிந்திற் கிலக்கியமே" (காரிகை. செய்.5,உரை). 3. ***ஆன்றோர் நூல்;*** classical writings which form the basis for inductively framing the rules of grammar, literary works. 4. ***குறி;*** mark, butt, "தாரணை மனோவியாபாரமின்றி யிலக்கியத்திற் சாரச் செய்தல்." (பிரபோத.44,19). (செ.அக.).

[இலக்கு + இயம்.]

பாவலன், இலக்கணம் வழுவாத முறையில் தான் எடுத்துக் கூறக்கருதும் இலக்கை, நால்வகைப்பாவினத்தில் ஏதேனும் ஒருவகையில் சொற்சுவை, பொருட்சுவை பொருந்த, அணிகள் பல அமைத்துப் பாடியவைகள் இலக்கியமாம்.

இலக்கு[1]**-தல்** *ilakku*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. ***ஒளிர்தல்;*** to brighten, cause to blaze. "எரியத்திரத்திலக்கியே" (சைவச.பொது.294). 2. ***அடையாளமிடுதல்*** (ஆ.அக.); impress a sign or stamp for identification. (செ.அக.).

[இலங்கு - இலக்கு.]

இலக்கு[2]**-தல்** *ilakku*. 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***குத்துதல்;*** to pierce. 2. ***வரைதல்;*** to draw, delineate. 'இரேகை யிலக்குக' (சைவச.பொது.274) 3. ***தைத்தல்;*** stitching. (செ.அக.).

[இல் - இல - இலக்கு.]

இலக்கு[3] *ilakku*, பெ. (n.) 1. ***குறிப்பொருள்;*** mark, butt, target. 2. ***அம்பெய்யும் இலக்கு*** (பாரத.வாரணா. 56); target for an arrow, of four kinds, viz. பெரு வண்மை, சிறுநுண்மை, சலம், நிச்சலம். 3. ***அடையா ளம்;*** distinguishing mark or sign. 'அவ்விடம் போக உனக்கு இலக்குச் சொல்வேன்;' distinguishing mark or sign. 4. ***இடம்;*** place. 'எந்த இலக்குக்குப் போகிறாய்?' (Madu.). 5. ***நாடிய பொருள்;*** end, object in view aim; 'இலக்கை நோக்கித் தொடருகிறேன்' (விவிலி.பிலிப்.3, 14). 6. ***எதிரி;*** rival, competitors, opponent in games or tests of ability and strength. 'உனக்கு இவனே இலக்கு' (வின்.). 7. ***அளவு;*** measure. "தடத்திட்டதேது மிலக் கின்றி யோங்குமால்" (சேதுபு.இராமதீ.3). 8. ***குறித்த காலம்;*** favourable opportunity, convenient time. "இலக்கு வாய்த்துழி ஏது வாதன் மாத்திரையே யாம்" (சி.போ.பா.12,2,பக்-233).

ம. இலக்கு.

[இல - இலக்கு.]

இலக்குப்பார்-த்தல் *ilakku-p-pār*, 4 செ.கு.வி. (v.i.). 1. ***குறிபார்த்தல்;*** to take aim. 2. ***நேரம்பார்த்தல்*** (கொ.வ.); to watch for opportunity generally to do evil. (செ.அக.).

[இலக்கு + பார்.]

இலக்குவை-த்தல் *ilakku-vai-*, 4 செ.கு.வி. (v.i.) ***குறிவைத்தல்;*** to take aim. (செ.அக.).

[இலக்கு + வை.]

இலக்கை[1] *ilakkai*, பெ. (n.) 1. ***ஆடை;*** clothing. 2. ***மாதச்சம்பளம்;*** monthly wages. (ஈடு.4,8,8,ஜீ). (செ.அக.).

[இலக்கு → இலக்கை. இலக்குதல் = தைத்தல், இலக்கை = தைத்த ஆடை.]

இலக்கை[2] *ilakkai*, பெ. (n.) ***பாதுகாவல்;*** protection. "இலக்கை யற்றதவ் விலங்கைக்கு மிராவணன் றனக்கும்" (கம்பரா.கும்பகரு.339). (செ.அக.).

[இலக்கு → இலக்கை.]

இலகு[1]**-தல்** *ilagu-*, 7 செ.கு.வி. (v.i). 1. ***விளங்குதல்*** (திவ்.திருவாய்.8,8,1); to shine, glisten, glitter. 2. ***மிகுதல்*** (சங்கற்பநி. சங்கிராந்த.96); to increase aggravate, expand. (செ.அக.).

ம. இலகு.

[உல் → இல் → இல → இலகு - இலகுதல்.]

இலகு[2] *ilagu*, பெ. (n.) 1. ***இலேசு*** (சூடா.); levity, lightness, as of cotton or feathers. 2. ***எளிது;*** ease, facility. 3. ***சிறுமை*** (உரி.நி.); minuteness, smallness. 4. ***காலவகை*** (பரத.தாள.27); one of ten varieties of time divisions which consists of 16384 moments. 5. ***தணிவு;*** relief, mitigation, alleviation. 'வியாதி கொஞ்சம் இலகுவாயிருக்கிறது.' 7. ***குற்றெழுத்து*** (யாப்.வி.95, பக்.471); short vowel. 8. ***அகில்*** (வின்.); eagle-wood. (செ.அக.).

Skt. laghu.

[இலவு → இலகு.]

இலங்கிழை *ilaṅgiḻai,* பெ. (n.) ***விளங்கும்படியான ஒளியுடைய கல்லிழைத்த அணி; பெண்;*** literally, glittering ornaments, figuratively applied to denote a woman adorned with jewels. "இலங்கிழை யெவ்வ நலிய" (பு.வெ.12, பெண்பாற்.19). (செ.அக.).

[இலங்கு + இழை.]

இலங்கிழைமகளிர் *ilaṅgiḻai-magaḻir,* பெ. (n.) ***அணிகலன்கள் பூண்ட மகளிர்;*** women adorned with jewels.

[இலங்கு + இழை + மகளிர்.]

இலங்கு[1]-தல் *ilaṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***வெட்டுதல், குழித்தல்;*** to dig, cut.

[இல் → இல → இலங்கு.]

இலங்கு[2]-தல் *ilaṅgu-,* 15 செ.கு.வி. (v.i.) ***ஒளிவிடுதல்*** (பிங்); to shine, emit rays, gleam, glitter, be bright. (செ.அக.).

[இல் → இல → இலங்கு.]

இலங்கு[3]-தல் *ilaṅgu-,* 15 செ.கு.வி. (v.i.) ***செல்லுதல், போதல்;*** to go, to pass.

[இல் → இல → இலங்கு.]

இலங்கு[4] *ilaṅgu,* பெ. (n.) ***குளம்*** (வின்.); tank, pool. (செ.அக.)

[இல் → இல → இலங்கு. குழித்து அல்லது நிலத்தைத்தோண்டிச் செய்த நீர்நிலை.]

இலங்குபொழுது *ilaṅgu-poḻudu,* பெ. (n.) ***படுஞாயிறு*** (J); glimmering sun as it shines when setting. (செ.அக.).

[இலங்கு + பொழுது.]

இலங்கேசன் *ilaṅgēsaṉ,* பெ. (n.) ***இராவணன்;*** Rāvaṇa, lord of Laṅkā. (செ.அக.).

[இலங்கை + ஈசன்.]

இலங்கை *ilaṅgai,* பெ. (n.) 1. ***ஆற்றிடைக்குறை*** (பிங்.); islet in a river, ait. 2. ***ஈழமண்டலம்*** (Ceylon); Srilanka. 3. ***இராவணன் தலைநகர்;*** ancient capital of Laṅkā. "பூரியரிலங்கை மூதூர்" (கம்பரா.ஊர்தே.96). 4. ***தொண்டை நாட்டில் ஓரூர்*** (புறநா.379); ancient town in the Tamil land, the capital of a chief named Oymāṉ villi-y-ātan. (செ.அக.).

Skt. laṅka. *[இலங்கு → இலங்கை.]*

இலங்கைக் கடற்பாசி *ilaṅgai-k-kaḍaṟ pāśi,* பெ. (n.) ***ஒருவகைக் கடற்பாசி;*** Ceylon moss or edible sea weed. (சா.அக.).

இலங்கைத்தீச்சுடர் *ilaṅgai-ttccuḍar,* பெ. (n.) ***மாவிலிங்க மரம்;*** lingam tree. (சா.அக.).

[இலங்கை + தீ + சுடர்.]

இலங்கை யேலம் *ilaṅgai-yēlam,* பெ. (n.) ***இலங்கைத் தீவில் விளையும் ஏலம்;*** Ceylon cardamom. (சா.அக.).

[இலங்கை + ஏலம்.]

இலச்சினை *ilacciṉai,* பெ. (n.) 1. ***முத்திரை;*** seal, signet. "அரக்கிலச்சினை செய்து" (திவ்.திருச்சந்த.76). 2. ***முத்திரை மோதிரம்*** (பிங்.); signet-ring. (செ.அக.).

ம. இலச்சன.

[இலக்கு → இலத்து → இலச்சு → இலச்சினை > Skt. lāñchana.]

இலசு *ilaśu,* பெ. (n.) ***சிறியது, கனமில்லாதது, எளியது;*** little, small, slight, unimportant, trivial, insignificant, of little worth or estimation.

Skt. laghu, *Gr.* elachys, *L.* levis, *Ger.* leight, *A.S.* leught, *E.* light, *Ice.* lettr, *Fr.* aise, *It.* agio, *E.* ease.

[இல் - இலகு - இலேசு (சு.வி.19).]

இலஞ்சி[1] *ilañji,* பெ. (n.) 1. ***குளம்;*** reservoir, tank for drinking and other purposes. "இலஞ்சி மீனெறி தூண்டில்" (ஐங்குறு.278). 2. ***ஏரி*** (சூடா.); lake for irrigation. 3. ***கொப்பூழ்;*** navel. "இலஞ்சி பெற்றோன்" (மாறன.மேற்.359). 4. ***குணம்*** (சூடா.); disposition, temper. 5. ***சாரைப்பாம்பு*** (பிங்.); rat snake. 6. ***மகிழமரம்*** பார்க்க; pointed-leaved ape flower. "நிழன் முதிரிலஞ்சி" (ஐங்குறு.94). 7. ***மதில்*** (சூடா.); wall round a fortress or a town. 8. ***புன்கு*** (மலை.); Indian beech. (செ.அக.).

ம. இலஞ்.

[இல் - இல - இலங்கு - இலங்கி - இலஞ்சி. இல் - குழித்தல், வெட்டுதல், துளைத்தல்.]

இலஞ்சி[2] *ilañji,* பெ. (n.) ***மாமரம்*** (அக.நி.); mango tree. (செ.அக.).

[இல் - இல - இலஞ்சி.]

இலஞ்சிமன்றம் *ilañji-maṉṟam,* பெ. (n.) ***காவிரிப்பூம் பட்டினத்திருந்த மன்றம் ஐந்தனுள் ஒன்று;*** one of the five pavilions in ancient Kāvirippūmpaṭṭiṉam. (அபி.சிந்.).

[இலஞ்சி + மன்றம்.]

இலஞ்சில் *ilañjil,* பெ. (n.) ***நீர்நிலை யருகில் தோன்றும் செடிகொடிகள்;*** flora near the water tank.

[இலஞ்சி → இலஞ்சில்.]

இலஞ்சிலாங்கொடி *ilañjilāṅkoḍi,* பெ. (n.) ***கருங் கோவை;*** a kind of black creeper. (சா.அக.).

[இலஞ்சில் + ஆம் + கொடி.]

இலண்டம் *ilaṇḍam,* பெ. (n.) ***இலத்தி*** (தொல்.சொல். 443,உரை); dung, as of elephants. (செ.அக.).

[இல்[1] - இலண்டு - இலண்டம். இல் = கீழிறங்குதல், விழுதல்.]

இலத்தி *ilatti,* பெ. (n.) 1. ***யானை முதலியவற்றின் கழிவு, எரு;*** dung of elephants, horses, camels and asses. "சோறு மத்தியிலத்தி சொரிந்த தால்" (திருவாலவா.26,18). 2. ***சிப்பிலி மீன்;*** purple sea-fish. (சா.அக.).

தெ., க. லத்தி.

[இல்[1] - இலண்டு - இலட்டு - இலத்து - இலத்தி. இல் = கீழேவிழுதல்.]

இலதை[1] *iladai,* பெ. (n.) 1. ***படர் கொடி*** (பிங்.); creeper, running plant, twining tendril. 2. ***வள்ளிக்கொடி*** (பிங்.) பார்க்க; panicled bindweed. 3. ***தக்கோலம்***

(தைலவ.); cubebs. (செ.அக.).

[இல்¹ - இலதை. இல்¹ - கீழே விழுதல் படர்தலுக்காயிற்று.]

இலதை² *iladai,* பெ. (n.) 1. ***இணையா வினைக்கை வகை*** (சிலப்.3,18, உரை); gesture with one hand in which the fore finger and the middle finger are joined and held up and the thumb touches their roots while the other two fingers are held erect. 2. ***ஒருவகை யொலி*** (இலக்.வி.3,உரை); a kind of sound. (செ.அக.).

[இல்¹ - இலதை.]

இலதைவன்னி *iladai-vanni,* பெ. (n.) ***கொடுவேலி*** (தைலவ.தைல.43.) பார்க்க; Ceylon leadwort. (செ.அக.).

[இலத்தை → இலதை + வன்னி.]

இலந்தை¹ *ilandai,* பெ. (n.) ***முள்மர வகை*** (திவா.); Jujube-tree.

ம. இலந்த; க. எலச்சி.

[இல்¹ - இலந்தை.]



இலந்தை¹

இலந்தை² *ilandai,* பெ. (n.) ***நீர்நிலை*** (பிங்.); water tank.

[இலஞ்சி - இலந்தை.]

இலந்தைவடை *ilandai vadai,* பெ. (n.) ***இலந்தைப் பழத்தின் சதைப்பற்றைக் காயவைத்துத் தட்டின அடை;*** round cake preserved by drying the fleshy portion of the jujube fruit. (சா.அக.).

இலந்தை வற்றல் *ilandai-varral* பெ. (n.) ***இலந்தைப் பழத்தைக் காயவைத்துப் பதப்படுத்தியது;*** dried jujube fruit. (சா.அக.).

இலம்¹ *ilam,* பெ. (n.) ***வறுமை;*** poverty. ''இலம் என்கிளவிக்குப் படுவரு காலை'' (தொல்.எழுத்.316); ''இலமென்று அசைஇ இருப்பாரை'' (குறள்.1040) (செ.அக.).

[இல்⁶ - இலம்.]

இலம்² *ilam,* பெ. (n.) ***வீடு*** (ஆ.அக.); house.

[இல்⁵ - இலம்.]

இலம்பகம் *ilambagam,* பெ. (n.) 1. ***நூலின் உட்பிரிவு;*** chapter or section. 'நாமகளிலம்பகம்' (சீவக.). 2. ***மாலை*** (திவா.); garland. 3. ***தலைக்கோலமென்னும் அணி;*** ornamental chain for a woman's fore head. ''மகளிர் ஆய்நுதல்... இலம்பகத் தோற்ற மொத்ததே''. (சீவக.1442) (செ.அக.).

[இலை - இலம்பகம்.]

இலம்படு-தல் *ilam-padu-,* 20 செ.கு.வி. (v.i.) ***வறுமை யடைதல்;*** to become poor. ''இலம்படு புலவரேற்றகைந் நிறைய'' (மலைபடு.576.) (செ.அக.).

[இல் - இலம் + படு.]

இலம்படை *ilam-padai,* பெ. (n.) ***வறுமை;*** want, poverty, destitution. ''இலம்படை வந்துழி'' (கந்தபு. மூவா.46). (செ.அக.).

[இலம் + படு. படு - படை. இலம் + படை - இலம்படை - இலம்பாடு = வறுமை.]

இலம்பத்தகடு *ilampa-t-tagadu* பெ. (n.) ***மூக்கினுட்பக் கத்தில் கீழ்ப்பகுதியில் அகம் புறமென, இருபக்கங்க ளுள்ள நீண்ட மெல்லிய வெலும்பு;*** long, soft bone or cartilage within the nose dividing it at the bottom - Nasal septum. (சா.அக.).

[இல்¹ - இலம்பம் + தகடு.]

இலம்பம்¹ *ilambam,* பெ. (n.) 1. ***தொங்கல்*** (யாழ். அக.); anything hanging down, as a pendulam. 2. ***செங்குத்து*** (வின்.); perpendicular. 3. ***மாலை*** (யாழ். அக.); garland. 4. ***புவியியலிற் கூறப்படும் ஒரு பாகையளவு*** (வின்.); complement of the latitude or arc between the pole and the zenith of a given place, which is the same as the altitude of the equator. (செ.அக.).

[இல் - இலம்பம். இல் = வீழ்தல்.]

இலம்பம்² *ilambam,* பெ. (n.) 1. ***உயர்வு;*** height. 2. ***அகலம்;*** expanse, width. (செ.அக.).

[இல் = குத்தல், குழித்தல் வேர்ச்சொல். இல் → இலம் → இலம்பம் = குழித்தலால் ஏற்படும் அகற்சியும், நீட்சியுமாம். பிளத்தற் கருத்துடைய விடு - வீடு என்னும் சொல்வளர்ச்சியும், பிளத்தலிலிருந்து தோன்றும் அகற்சிக்கருத்தால் மலைப் பாறைப் பிளப்புகள் மக்கள் வதியும் உள்ளகன்ற விடர்களாக வும், வீடுகளாகவும் இருந்ததையும் ஒப்பு நோக்குக.]

இலம்பாட்டார் *ilambāttār,* பெ. (n.) ***வறியோர்;*** the poor. (ஆ.அக.).

இலம்பாட்டோன் *ilam-pāttōn,* பெ. (n.) ***வறுமை யாளன்*** (சூடா.); destitute-person. (செ.அக.).

[இலம் + படு, படு - பாடு. இலம் + பாடு + ஆன் - இலம்பாட்டான் - இலம்பாட்டோன். ஆன் → ஒன் - ஈற்றுத்திரிபு.]

இலம்பாடு[1] *ilambāḍu,* பெ. (n.) ***வறுமை;*** privation, indigence. ''இலம்பாடு ஒற்கம் ஆயிரண்டும் வறுமை'' (தொல்.சொல்.360.) ''இலம்பாடு நாணுத்தரும்'' (சிலம்பு.) (செ.அக.).

[இலம் + படு. படு - பாடு. இலம் + பாடு - இலம்பாடு. இலம் = இன்மை, வறுமை. பாடு = படுதல், உண்டாதல்.]

இலம்பாடு[2] *ilambāḍu,* பெ. (n.) ***துயரம்,*** (அக.நி.); sorrow, grief. ''இலம்பாடுழந்த என்இரும்பேரொக்கல்'' (புறநா.378-13) (செ.அக.).

[இலம் + படு. படு → பாடு. இலம் + பாடு - இலம்பாடு = வறுமை, வறுமையால் அல்லது இன்மையால் தோன்றும் துன்பம்.]

இலம்பு *ilambu,* பெ. (n.) ***தொங்குகை;*** hanging down. ''இலம்புடை நறுமலர்'' (பெருங்.மகத.14,136.) (செ.அக.).

[இல் - இலம்பு. இல் = வீழ்தல், தொங்குதல்.]

இலம்பை *ilambai,* பெ. (n.) 1. ***வறுமை;*** penury. 2. ***இடுக்கண்;*** distress. 3. ***துயரநிலை;*** unfortunate plight or predicament. (செ.அக.).

[இலம் → இலம்பு → இலம்பை.]

இலமலர் *ila-malar,* பெ. (n.) ***இலவமலர்;*** flower of the silk-cotton tree. ''இலமலரன்ன வஞ்செந்நாவின்'' (அகநா.142.) (செ.அக.).

[இலவு + மலர் - இலவுமலர் - இலமலர். இலவமலர் எனப் புணர வேண்டிய சொல் யாப்பமைதி நோக்கி 'வ'கர ஈறு கெட்டது.]

இலவங்கப்பட்டை *ilavanga-p-paṭṭai,* பெ. (n.) 1. ***கருவாப்பட்டை;*** cinnamon bark. 2. ***தாளிசபத்திரி;*** cassia cinnamon. (செ.அக.).

[இலவங்கம் + பட்டை.]



இலவங்கப்பட்டை

இலவங்கப்பூ *ilavanga-p-pū,* பெ. (n.) 1. ***உலர்ந்த இலவங்கப்பூ;*** clove, flower of the clove tree. 2. ***காதணி வகை*** (கொ.வ.); ornament worn on the ear as having the design of a clove. (செ.அக.).

[இலவங்கம் + பூ.]

இலவங்கபத்திரி *ilavanga-pattiri,* பெ. (n.) ***ஒரு மருந்திலை*** (மூ.அ.); cinnamon leaf. (செ.அக.).

[இலவங்கம் + பத்திரம். இலவங்கம் போன்றது.]

இலவங்கம் *ilavangam* பெ. (n.) 1. ***இலவங்கப்பூ*** (திவா.); clove. 2. ***இலவங்க மரம்*** (சீவக.1901); clove tree. 3. ***கருவாமரம்;*** cinnamon-tree. 4. ***காட்டுக்கருவா மரம்;*** wild cinnamon. (செ.அக.).

ம. இலவங்கம். *Skt.* lavanga.

[இலவு - இலவம் - இலவங்கம். இலவம் என்னும் தீவிலிருந்து வந்ததால் பெற்ற பெயர்.]

இலவசம் *ilavaśam,* பெ. (n.) ***இலவயம்*** பார்க்க; see *ilavayam.* (செ.அக.).

[இல் - இலா + வயம். - இலாவயம் - இலவயம் - இலவசம். விலையேதும் இல்லாமல் வயப்படுத்திக் கொள்ளுதல்.]

இலவடி-த்தல் *ilavaḍi-,* 4 செ.கு.வி. (v.i.) ***நெற்கதி ரடித்தல்*** (கொ.வ.); to threshout sheaves of corn. (செ.அக.).

ம. இலவடித்தல்.

[ஒருகா. இணையடித்தல் - இளைவடித்தல் - இளவடித்தல் - இலவடித்தல். இணையடித்தல் = மாடுகளைப் பிணைகட்டி ஏற்கெனவே கதிரடித்த நெல்லரிதாளைக் களத்தில் பரப்பிப் பிணையோட்டுதல்.]

இலவணம் *ilavaṇam,* பெ. (n.) ***உப்பு;*** salt. (செ.அக.).

[அளம் = உப்பு. அளம் + அணம் - அளவணம்> Skt. lavaṇam > த. இலவணம்.]

இலவந்தி *ilavandi,* பெ. (n.) ***இலவந்திகை*** (சிலப். 25,4) பார்க்க; see *ilavandigai* (செ.அக.).

[இலவந்தி = இளமரக்கா. வாவியை நடுவணதாகக் கொண்ட இளமரக்கா.]

இலவந்திகை *ilavandigai,* பெ. (n.) 1. ***வாவியைச் சூழ்ந்த இனிய சோலை;*** garden encircling a large tank. ''இலவந்திகையி னெயிற்புறம் போகி'' (சிலப்.10, 31.). 2. ***இயந்திரவாவி*** (மணி.3,45.); big tank provided with machinery for filling as well as emptying. (செ.அக.).

[இலை + வந்தி → இலவந்தி = இலைகளும் தழைகளும் மண்டிய பசுஞ்சோலை. இலவந்தி - இலவந்திகை. இலவந்தி = இளமரக்கா. இலவந்திகை = இளமரக்கா சூழ்ந்த வாவி.]

இலவந்தீவு *ilavantīvu,* பெ. (n.) ***ஏழு தீவுகளுள் ஐந்தாவது*** (கந்தபு. அண்டகோ.19); fifth of legendary seven islands. (செ.அக.).

இலவம்[1] *ilavam,* பெ. (n.) 1. ***மென்மை;*** softness. 2. ***இலவமரம்;*** silk cotton tree. 3. ***இலவந்தீவு;*** a legendary island.

ம. இலவம்.

[இல - இலவு - இலவம்.]

இலவம்[2] *ilavam,* பெ. (n.) 1. ***சிறிது;*** little, trifle. 2. ***எட்டுக் கணங்களாலான காலவகை*** (பரத. தாள.27,உரை); variety of time measure which consists of eight moments. (செ.அக.).

ம. இலவம். *Skt.* lava.

[இலவு → இலவம்.]

இலவம்[3] *ilavam,* பெ. (n.) ***இலவங்கம்;*** clove. "ஏலத்தொடு நல்லிலவங் கமழுமீங்கோய்" (தேவா. 353,2) (செ.அக.).

[இலவு - இலவம். இலவு = சிறியது. சிறிதாகிய இலவத்தீவிலிருந்து கொண்டுவரப்பட்ட இலவங்கமரம்.]

இலவம்[4] *ilavam,* பெ. (n.) 1. ***பூ;*** flower. 2. ***பூசை*** (அக.நி.); worship. (செ.அக.).

இலவம்பஞ்சு *ilavam-pañju,* பெ. (n.) ***இலவமரத்துப் பஞ்சு;*** silk cotton. "இலவம்பஞ்சிற்றுயில்" (ஆத்திசூ.). (செ.அக.).

[இலவு - இலவம் + பஞ்சு. இல் - இல - இலவு = மென்மை.]

இலவம்பிசின் *ilavam piśin* பெ. (n.) ***இலவமரத்துண் டாகும் பிசின்;*** gum from silk cotton tree. (ஆ.அக.).

[இலவம் + பிசின்.]

இலவயம் *ilavayam,* பெ. (n.) ***விலையின்றிப் பெறுவது*** (வின்.); gratuity, anything obtained free, free gift.

[இல் → இலா + வயம் - இலாவயம் → இலவயம்.]

இலவர் *ilavar,* பெ. (n.) ***இல்லாதவர்*** those who does not possess. "அகத்துறுப்பு அன்பிலவர்க்கு" (குறள்.79-2.); (பாண்டிச்.அக.).

[இல்லவர் - இலவர்.]

இலவன் *ilavaṉ* பெ. (n.) ***இராமனுடைய மக்களுள் ஒருவன்;*** Lava, one of the sons of Sri Rama. (ஆ.அக.).

[இலவு (சிறியது) - இலவன் (இளையவன்).]

இலவன் கண்ணாடி *ilavaṉ kaṇṇāḍi* பெ. (n.) ***வாசப் புளியாறு என்னும் பறவை;*** a kind of bird. (சேரநா.).

ம. இலவன் கண்ணாடி.

[இலவன் (சிறிய) + கண்ணாடி. பளபளப்பான தோற்றத்தால் கண்ணாடி எனப்பெயர் பெற்றிருக்கலாம்.]

இலவியஞ் செய்தல் *ilaviyañ ceydal,* பெ. (n.) ***மொய்யளித்தல்;*** making presents on festival occasions especially to the bridal couple at wedding.

[இலவு - இலவியம் + செய்தல்.]

இலவியப்பணம் *ilaviya-p-paṇam,* பெ. (n.) ***மொய்ய ளித்ததிற்கிடைத்த பணம்;*** money collected by way of presents. (ஆ.அக.).

[இலவியம் + பணம்.]

இலவு[1]**-தல்** *ilavu-,* 8 செ.குன்றாவி. (v.t.) ***எழுதுதல்;*** to write

[இல் - இல - இலவு. இலவுதல் - இலக்குதல் என வழக்கூன்றியது.]

இலவு[2] *ilavu,* பெ. (n.) ***மரவகை;*** red silk-cotton tree. (செ.அக.).

ம. இலவு; **க.** எலவ; **கோண்.** எலகெ.

[இல் → இலவு (மென்மை).]



இலவு

இலவு[3] *ilavu,* பெ. (n.) 1. ***நொய்ய பஞ்சு;*** soft cotton. 2. ***கனமின்மை;*** lightness 3. ***எளிமை;*** simplicity 4. ***சிறுமை;*** tiny, small (objects).

[உல் → இல் → இல → இலவு.]

இலவு[4] *ilavu,* பெ. (n.) 1. ***நறுமணம்;*** fragrance. 2. ***அழகு;*** beauty.

[இல் → இல (மென்மை) → இலவு (நறுமணம், அழகு).]

இலாடம் *ilāḍam,* பெ. (n.) ***ஒரு நிலப்பகுதி;*** name of a country division.

[நாடு - லாடு - லாட த. இலாடம்.]

இலாமிச்சு *ilāmiccu,* பெ. (n.) ***இலாமிச்சை*** (கடம்ப.பு. இலீலா.182.) பார்க்க; see *ilāmiccai* (செ.அக.).

இலாமிச்சை *ilāmiccai,* பெ. (n.) ***ஒருவகை மணவேர்*** (திவா.); cuscus-grass, anatherum muricatum with aromatic root. (செ.அக.).

ம. இலாமச்சம்.

[இலவு - இலமு - இலமிச்சை - இலாமிச்சை. இலவு = நறுமணம்.]

இலாவணம் *ilāvaṇam,* பெ. (n.) 1. ***பெயர்ப் பதிவு;*** enlistment. 2. ***வீரர்களின்பட்டி*** (இ.வ.); list of soldiers, or recruits for army enlistment. 3. ***குடிவழி வரும் வேலை அமர்த்தத்துக்குக் கொடுக்கும் ஆணை.*** (கோவை வழக்கு); conferring on a person the permanent right to a hereditary office. 4. ***வீடுதோறும் இனவாரி வழங்கும் அரிசி, பணம் முதலியன;*** food

stuffs and money distributed to the needy of the villages on festive occasions by the Nāṭṭukkōṭṭai chettis according to a prepard list. (செ.அக.).

ம., க. இலாவண; தெ. லாவணமு.

[இல் - இலக்குதல் = குறித்தல், பொறித்தல், கணக்கு எழுதுதல், இல் - இலவு - இலவணம் - இலாவணம்.]

இலாவணமெழுது-தல் *ilāvaṇameḻudu-,* 5 செ.கு.வி. (v.i.) ***படைக்கு ஆள்சேர்த்தல்*** (இ.வ.); to enroll recruits for army etc. (செ.அக.).

[இலாவணம் + எழுது.]

இலாவணியம் *ilāvaṇiyam,* பெ. (n.) ***அழகு;*** beauty, loveliness, charm. (செ.அக.).

[இலவு = மென்மை, அழகு. இலவணியம் - இலாவணியம்> Skt. lāvaṇya]

இலாளம் *ilāḷam,* பெ. (n.) ***இலாடம்*** (S.I.I.183.) பார்க்க; see *ilāḍam.*

இலி[1] *ili,* பெ. (n.) 1. ***இல்லாதவன்;*** one who is without, generally used as a suffix at the end of compounds as in. பிறப்பிலி, இறையிலி. 2. ***ஒரு பாகையில் $^{1}/_{60}$ பாகம்;*** one sixtieth of a degree. 3. ***ஒரு சிறுபொழுது;*** moment. (சேரநா.).

ம. இலி.

[இல் - இல்லி - இலி (கு.வினையா.பெ.).]

இலி[2] *ili,* பெ. (n.) ***எலி;*** rat. (செ.அக.).

ம. இலி.

[இல் = துளைத்தல். இலி = மண்ணைத் துளைக்கும் எலி. இல் → இலி. இலி - எலி.]

இலிர்-த்தல் *ilir-,* 9 செ.குன்றாவி. (v.t.) ***சிலிர்த்தல்;*** to stand erect, as the hair stands on end from fright, rapture, anger or cold. "இலிர்த்த மெய்ம்மயிர்" (சீவக. 3009) - 4 செ.கு.வி. (v.i.) ***தளிர்த்தல்*** (திவா.); to sprout, germinate. (செ.அக.).

க. எலர்க; தெ. எலருச்சு.

[உலிர் - இலிர்.]

இலில் *ilil,* தொ.பெ. (v.n.) ***ஊறுதல்;*** oozing. (செ.அக.).

[இல் + இல் - இலில்.]

இலிற்று-தல் *iliṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. ***சுரத்தல்;*** to exude, percolate, spring, stream or flow, as milk from the breast or water from the fountain. "குழவிக்கிலிற்று முலைபோல" (புறநா.68). 2. ***துளிர்த்தல்;*** to fall in drops. "அமிழ்து பொதிந்திலிற்றும்" (சிறுபாண்.227). 3. ***சொரிதல்;*** to sprinkle, trickle. "தேனினங் கவர்ந்துண விலிற்று மும்மதத்து" (சீவக.2521) (செ.அக.).

[இலில் - இலிறு - இலிற்று.]

இலுப்பெண்ணெய் *iluppeṇṇey,* பெ. (n.) ***இலுப்பை நெய்*** பார்க்க; see *iluppainey.* (செ.அக.).

[இருப்பை → இலுப்பை + எண்ணெய்.]

இலுப்பை *iluppai,* பெ. (n.) ***இருப்பை*** (பிங்.) பார்க்க; see *iruppai* (செ.அக.).

ம. இலிப்ப; க. இப்பெ; தெ. இப்ப; பர். இர்ப, இருப; கோண். ஈரு; கொலா. இப்பா, இப்ப; கூ. இர்பி.

[இருப்பை → இலுப்பை.]

இலுப்பை

இலுப்பைக்கட்டி *iluppai-k-kaṭṭi,* பெ. (n.) ***இலுப்பைப் பிண்ணாக்கு*** பார்க்க; see *iluppai-p-piṇṇākku* (செ.அக.).

[இருப்பை → இலுப்பை + கட்டி.]

இலுப்பைக் கடுகு *iluppai-k-kaḍugu,* பெ. (n.) 1. ***இலுப்பெண்ணெய்க் கசடு*** (வின்.); sediment of mahua oil. 2. ***இலுப்பைப் பருப்பு*** (மூ.அ.); kernal of mahua seeds. (செ.அக.).

[இருப்பை → இலுப்பை + கடுகு. கடு → கடுகு = உலர்ந்து காய்ந்து கட்டியாதல், உலர்ந்து காய்ந்த வித்து அல்லது வித்துகளின் பருப்பு. - கடுகு ஆதல் பார்க்க.]

இலுப்பைக் கற்கண்டு *iluppai-k-kaṟkaṇḍu,* பெ. (n.) ***இலுப்பைப் பூவினின்று உருவாக்கும் கற்கண்டு;*** sugar candy obtained from the bassia flower. (சா.அக.).

[இருப்பை - இலுப்பை + கற்கண்டு.]

இலுப்பைச் சாராயம் *iluppai-c-cārāyam,* பெ. (n.) ***இலுப்பை மரத்தின் பூவினின்று காய்ச்சி வடிக்கும் சாராயம்;*** arrack distilled from bassia flower. (சா.அக.).

[இருப்பை → இலுப்பை + சாராயம்.]

இலுப்பை நெய் *iluppai-ney,* பெ. (n.) ***இலுப்பையெண்ணெய்*** (பதார்த்த.158); oil of mahua seeds. (செ.அக.).

[இருப்பை → இலுப்பை + நெய்.]

இலுப்பைப் பருப்பு *iluppai-p-paruppu,* பெ. (n.) ***இலுப்பை விதையினுள்ளிருக்கும் பருப்பு;*** kernal of mahua seeds. (சா.அக.).

[இருப்பை → இலுப்பை + பருப்பு.]

இலுப்பைப் பால் *iluppai-p-pāl,* பெ. (n.) ***இலுப்பை நெய்;*** oil of mahua seeds. "இலுப்பைப் பால் முக்கலனே குறுணி நானாழி!" (S.I.I. ii, 426.) (செ.அக.).

[இருப்பை - இலுப்பை + பால்.]

இலுப்பைமேற்புல்லுருவி *iluppai mēṟpulluruvi,* பெ. (n.) ***இலுப்பை மரத்தின் மேற்பாய்ந்த புல்லுருவி;*** parasitic plant grown on the bassia tree. (சா.அக.).

[இருப்பை → இலுப்பை + மேல் + புல்லுருவி.]

இலேசவணி *ilēsa-v-aṇi,* பெ. (n.) 1. ***குறிப்பை வெளிப்படுத்தும் மெய்ப்பாடு வேறொன்றால் நிகழ்ந்ததாக மறைத்துச் சொல்லும் அணி*** (தண்டி.64,உரை); figure of speech in which an expression is delibrately attributed to a different cause to conceal the original emotion. 2. ***குணத்தைக் குற்றமாகவும், குற்றத்தைக் குணமாகவும் சொல்லும் அணி*** (அணியி.72); figure of speech in which a merit is represented, as a demerit, and vice versa. (செ.அக.).

[இல - இலவு - இலசு + அணி. இலவு = மென்மை.]

இலேசு *ilēsu,* பெ. (n.) 1. ***நொய்ம்மை*** (திவா.); lightness in weight, buoyancy. 2. ***எளிது*** (கொ.வ.); easiness. 3. ***மிகச்சிறியவளவு*** (சீவக.770); minuteness smallness in quantity. 4. ***விதப்புச்சொல்*** (நன்.194. விருத்.); short and significant word.

[இல - இலவு - இலசு - இலேசு.]

இலை[1] *ilai,* பெ. (n.) 1. ***மரஞ்செடிகளின் இலை;*** leaf of trees or plants. "இலைவளர் குரம்பை" (சீவக. 1432). 2. ***பூவிதழ்;*** petal. "அகவிலை யாம்பல்" (தேவா.511,8). 3. ***வெற்றிலை;*** betal leaf, leaf of the betel-pepper. "இலை பிளவதனை நடித்துக் கேட்க வும்" (திருப்பு.47). 4. ***கதவின் இலை;*** wooden slats made to overlap one another as in a venetion-blind. 5. ***படலை மாலை*** (பரிபா.6,19); garland of green leaves and flowers. 6. ***அணிகளின் இலைத்தொழில்;*** foliage like ornamental work on jewels. "இலைகொள் பூண்" (சீவக.1371). 7. ***பச்சிலை*** (தைலவ.தைல.98); herb. 8. ***சக்கரத்தின் ஆர்;*** spoke of a wheel. "இலைமுகத் துழலுகின்ற வெந்திரத் திகிரி நாப்பண்" (பாரத.திரௌ.31). 9. ***ஆயுத வலகு;*** blade of a weapon or instrument. "நச்சிலை வேற்படைவீரர்" (சீவக.2229) (செ.அக.).

ம. இல, எல; **க.** எலெ, எல; **து.** இரெ, எரெ; **கோத.** எல்; **பட.** எலெ; **துட.** எல்; **குரு.** யெல்ல; **எர்.** யெரெ, எல; **இரு.** யெல்லெ; **கட.** வொல்ல; **கூ.** யெல; **பர்.** எவ்; **நா.** எல்; **கொலா.** எக.

[இல் - இல - இலை. இல் = மென்மை.]

இலை[2]**-த்தல்** *ilai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ***சோர்தல்*** (கொ.வ.); to grow weary. 2. ***தன்மை குன்றுதல்;*** to diminish or grow less and less. 'அவன் நிலைமை வரவர இலைத்துப் போயிற்று' (கொ.வ.). 3. ***சுவை குன்றுதல்;*** to become tasteless, as food when unseasoned or kept too long. 4. ***சுவைகுன்றல்*** (கொ.வ.); to lose the sense of taste, as one's mouth in sickness. (கொ.வ.) (செ.அக.).

[இளை - இலை.]

இலை[3]**-த்தல்** *ilai-,* 4 செ.கு.வி. (v.i.) ***பச்சை நிறமாதல்.*** (J); to become green. (செ.அக.).

[இலை - இலைத்தல்.]

இலைக்கடுக்காய் *ilai-k-kaḍukkāi,* பெ. (n.) 1. ***வெண்மருது;*** paniculate winged myrobalan. 2. ***பூ மருது;*** flowering mardas. (செ.அக.).

[இலை + கடுக்காய்.]

இலைக்கட்டு *ilaikkaṭṭu,* பெ. (n.) ***புண், கட்டி முதலியவைகளுக்குப் பச்சிலை மூலிகைகளை வைத்துக் கட்டுதல்;*** bandage of green medicinal leaves applied to ulcers, abscesses etc., (சா.அக.)

இலைக்கதவு *ilai-k-kadavu,* பெ. (n.) ***இலைபோல் மரத்தட்டுகள் தொடுக்கப்பட்ட கதவு;*** venetian door or window. (செ.அக.).

[இலை + கதவு.]

இலைக்கம்மம் *ilai-k-kammam,* பெ. (n.) ***இலைவடிவாக அணியிகலனமைக்கும் தொழில்*** (பெருங். இலாவண.19,136); art of making filigree; foliage ornamentation in jewels. (செ.அக.).

[இலை + கம்மம்.]

இலைக்கலம் *ilaikkalam,* பெ. (n.) ***இலைகளால் செய்த ஏனம், தொன்னை;*** cup like vessel formed out of dried leaves. (சா.அக.).

இலைக்கள்ளி *ilai-k-kaḷḷi,* பெ. (n.) 1. ***கள்ளி வகை;*** five - tubercled spurge. "ஓதுமிலைக்கள்ளிப் பால்" (பதார்த்த.123). 2. ***கானாங்கள்ளி;*** spiral five - tubercled spurge. (செ.அக.).

ம. இலக்கள்ளி.

[இலை + கள்ளி.]



இலைக்கள்ளி

இலைக்கற்றாழை *ilaik-k-kaṟṟāḻai,* பெ. (n.) ***முள்ளுக் கற்றாழை;*** prickly aloe, spiked aloe. (சா.அக.).

[இலை + கற்றாழை.]

இலைக்கறி[1] *ilai-k-kaṟi,* பெ. (n.) ***கீரைக்கறி*** (பிங்.); leaves prepared for food; greens. (செ.அக.).

ம. இலக்கறி.

[இலை + கறி.]

இலைக்கறி[2] *ilaikkaṟi,* பெ. (n.) ***அடகு;*** betal leaf. (ஆ.அக.).

இலைக்காம்பு *ilai-k-kāmbu,* பெ. (n.) ***இலையின் தண்டு;*** stalk of a leaf. (செ.அக.).

[இலை + காம்பு.]

இலைக்கிளி *ilai-k-kiḷi,* பெ. (n.) ***வெட்டுக்கிளி வகை;*** mantis having leaf-like wings. (செ.அக.).

ம. இலக்கிளி.

[இலை + கிளி.]



இலைக்கிளி

இலைக்கின்னி *ilai-k-kiṉṉi,* பெ. (n.) ***மழைக்கிளி*** (வின்.); grasshoper, locust, locustidae. (செ.அக.).

[இலை + கின்னி. கிளி → கிண்ணி. கிண்ணி - கின்னி (கடுங்கொச்சை).]

இலைக்குரம்பை *ilai-k-kurambai,* பெ. (n.) ***இலைக் குடில்*** (பர்ணசாலை) (திவ். இயற். பெரிய. திரும. 13); hut made of leaves and twigs. (செ.அக.).

ம. இலக்குடிஞ்ஞு ல்.

[இலை + குரம்பை.]

இலைக்குழல் *ilai-k-kuḻal,* பெ. (n.) ***இலையால் அமைந்த ஊதுகருவி;*** musical leaf-pipe. "அண்ண லிலைக் குழலூதி" (திவ். பெரியதி. 10,7,6) (செ.அக.).

[இலை + குழல்.]

இலைக்குறடு *ilai-k-kuṟaḍu,* பெ. (n.) ***ஒருவகைத் தட்டார் கருவி*** (வின்.); goldsmith's tongs. (செ.அக.).

ம. இலக்கொடில்.

[இலை + குறடு.]



இலைக்குறடு

இலைக்கூலம் *ilai-k-kūlam,* பெ. (n.) 1. ***கூலி;*** daily wage. 2. ***வரிவகை*** (S.I.I. iii.411); tax. (செ.அக.).

[இலை + கூலம். இலையில் கட்டித்தரப்படும் கூலம் ஆகலாம்.]

இலைக்கொடி *ilai-k-koḍi,* பெ. (n.) ***வெற்றிலைக் கொடி*** (பிங்.); betel creeper, piper betel. (செ.அக.).

[இலை + கொடி.]

இலைக்கொழுக்கட்டை *ilai-k-koḻu-k-kaṭṭai* பெ. (n.) ***பணிகாரவகை*** (வின்.); a kind of thin pastry. (செ.அக.).

[இலை + கொழுக்கட்டை.]

இலைக்கோட்டை *ilai-k-kōṭṭai,* பெ. (n.) ***தையலி லைக்கட்டு*** (கொ.வ.); bundle of stitched leaf plates. (செ.அக.).

[இலை + கோட்டை.]

இலைகிள்ளல் *ilai-kiḷḷal,* பெ. (n.) ***மகளிர் விளையாட் டுக் கைத்தொழில்களுள் ஒன்று*** (பிங்.); nipping leaves into various figures, a recreative hand - work of women. (செ.அக.).

[இலை + கிள்ளல்.]

இலைச்சருகு *ilai-c-carugu,* பெ. (n.) ***உலர்ந்த இலை;*** dry leaves. (சா.அக.).

[இலை + சருகு.]

இலைச்சாறு *ilai-c-cāṟu,* பெ. (n.) ***இலையினின்று பிழிந்த சாறு;*** juice extracted from leaves. (சா.அக.).

[இலை + சாறு.]

இலைச்சினை *ilaiccinai,* பெ. (n.) ***இலச்சினை;*** emblem, 'இடபவிலைச்சினையை' (கலித். 82, உரை).

*[இலைச்சு - இலைச்சினை - **இலைச்சுதல்,** பார்க்க; see ilaiccudal.]*

இலைச்சு-தல் *ilaiccu,* 4 செ.கு.வி. (v.i.) ***முத்திரை யிடுதல்*** (பெருங்.நரவா.1,46.); to mark with a seal. (செ.அக.).

[இலை - இலைத்தல் - இலைத்துதல் - இலைச்சுதல் = குத்துதல் அல்லது இலையொற்றி அடையாளம் செய்தல்.]

இலைச்சுருள் *ilai-c-curul,* பெ. (n.) ***வெற்றிலைச் சுருள்;*** roll of betel leaves. "இலைச்சுருளைப் பிளவோடே குதட்டிய" (திருப்பு.124.). (செ.அக.).

[இலை + சுருள்.]

இலைச்சுருளி *ilaiccuruli,* 1. ***ஒரு பூண்டு;*** grass. (ஆ.அக.). 2. ***வெற்றிலைச்சுருள்;*** betel leaf, vine-piper betel. (சா.அக.).

[இலை + சுருளி.]

இலைச்செப்பு *ilai-c-ceppu,* பெ. (n.) ***பூசைக்குரிய ஏனம்*** (S.I.I. ii, 5); utensil for worship. (செ.அக.).

[இலை + செப்பு.]

இலைச்செறிவு *ilaicceṟivu,* பெ. (n.) ***இலைநெருக்கம், இலைமிகுதி;*** leaves collectively - foliage. (சா.அக.).

[இலை + செறிவு.]

இலைச்சு *ilaiccu,* பெ. (n.) 1. ***இலையின் நிறம்;*** colour of the leaf. 2. ***பசுமை;*** green.

[இலை - இலைச்சு.]

இலைச்சை *ilaiccai,* பெ. (n.) ***நிறம்;*** colour. "வெண் சங்கே ரிலைச்சை". (சூளா.துற.226) (செ.அக.).

[இலை - இலைச்சு - இலைச்சை = பசுமைநிறம், நிறமூட்டுவதற் குப் பசிய இலைகளை ஆண்டதால் நிறத்தைக் குறிக்கும் பொதுச் சொல்லாயிற்று.]

இலைசாடு-தல் *ilai-cāḍu-,* 5 செ.கு.வி. (v.i.) ***செடி கொடிகள் மிகுதியாக வளர்தல்*** (Tinn.); to grow too luxuriantly to be productive, as plants. (செ.அக.).

[இலை + சாடு.]

இலைசுனி *ilaicuṇi,* பெ. (n.) ***மாணிக்கக் குணத் தொன்று;*** white speck, a property of ruby. "மாணிக்கம் சட்டமும் இலை சுனியும் ஒன்றும் உட்பட" (S.I.I.ii, 430, 434, 71). (செ.அக.).

[இலைச்சு - இலைச்சை - இலைச்சினி - இலைசுனி (பசுமை மிகுதி).]

இலைஞெமல் *ilai-ñemal,* பெ. (n.) ***இலைச் சருகு;*** dry leaves. "மகளிரிலைஞெமலு ளீன்ற குழவி" (முத்தொள்) (செ.அக.).

[இலை + ஞெமல்.]

இலைத்தகடு *ilaittagaḍu,* பெ. (n.) ***இலையைப் போல் மென்மையாகத் தட்டியெடுத்த தகடு;*** metal beaten into a sheet as thin as a leaf. (சா.அக.).

[இலை + தகடு.]

இலைத்தட்டு[1] *ilai-t-taṭṭu,* பெ. (n.) ***வெற்றிலைத் தட்டம்*** (S.I.I.ii,;419); salver for keeping betel leaves. (செ.அக.).

[இலை + தட்டு.]

இலைத்தட்டு[2] *ilai-t-taṭṭu,* பெ. (n.) ***பூசைத்தட்டு வகை*** (S.I.I. ii, 6); a kind of plate used in worship. (செ.அக.).

[இலை + தட்டு.]

இலைத்தடை *ilai-t-taḍai,* பெ. (n.) 1. ***வாழையிலை யேடு*** (இ.வ.); section of a plantain leaf cut lengthwise for a plate. 2. ***வாழைப்பட்டையிலை*** (இ.வ.); plate made by stitching together pieces of plantain sheaths. (செ.அக.).

[இலை + தடை.]

இலைத்தண்டு *ilaittaṇḍu* பெ. (n.) ***இலையைத் தாங்கிநிற்கும் காம்பு*** (in botany); a partial stem supporting the leaf foot-stalk. (செ.அக.).

[இலை + தண்டு.]

இலைத்திரி *ilai-t-tiri,* பெ. (n.) ***காதுத் துளையிற் செருகும் ஓலைச்சுருள்*** (வின்.); roll of palmyra leaf inserted in the bored perforation of the ear. (செ.அக.).

[இலை + திரி.]

இலைத்தொடை *ilai-t-toḍai,* பெ. (n.) ***அழகுத்*** (அலங்காரத்) ***தொங்கல்;*** decorative hangings, as garlands. "சாத்தின இலைத் தொடை யாதலாம்' (திவ். பெரியாழ்.3,4,1, வ்யா.பக்.592) (செ.அக.).

[இலை + தொடை.]

இலைநரம்பு *ilai-narambu,* பெ. (n.) ***இலையில் உள்ள நரம்பு;*** fibre of a leaf. (செ.அக.).

[இலை + நரம்பு.]

இலைநிறம் *ilainiṟam,* பெ. (n.) ***பச்சைநிறம்;*** green colour. (ஆ.அக.).

[இலை + நிறம்.]

இலைநொச்சி *ilai-nocci,* பெ. (n.) ***கருநொச்சி;*** black purification plant. (சா.அக.).

இலைப் பசலை *ilai-p-pašalai* பெ. (n.) ***பெரும் பசலை;*** large - flowered purslane - portulaca quadrifida. (சா.அக.).

[இலை + பசலை.]

இலைப்பசளி *ilai-p-pašaḷi,* பெ. (n.) ***பெரும்பசலை*** (மலை.); large-flowered purslane. (செ.அக.).

[இலை + பசளி.]

இலைப்பணி *ilai-p-paṇi,* பெ. (n.) ***இலை வடிவாகச் செய்யுந் தொழிலமைந்த அணி*** (பெருங்.மகத.5,22); leaf-shaped jewel. (செ.அக.).

[இலை + பணி.]

இலைப்பணிகாரம் *ilai-p-panigāram,* பெ. (n.) ***பணி கார வகையுளொன்று;*** edible delicacy.

[இலை + பணிகாரம்.]

இலைப்பருப்பு *ilai-p-paruppu,* பெ. (n.) ***மட்டமான துவரம் பருப்பு*** (கொ.வ.); inferior dhal which is as thin as a leaf. (செ.அக.).

[இலை + பருப்பு.]

இலைப்பழுப்பு *ilai-p-paluppu.* பெ. (n.) ***இலையுதிர் காலத்தில் இலைகளுக்குண்டாகும் பழுப்பு நிறம்;*** the yellow colour of plants with ripe leaves in the autumn. (சா.அக.).

[இலை + பழுப்பு.]

இலைப்பாசி *ilai-p-pāši,* பெ. (n.) ***பாசிவகை*** (மூ.அ.); a species of duckweed. (செ.அக.)

[இலை + பாசி.]



இலைப்பாசி

இலைப்பாசிக்கள்ளி *ilaippāši-k-kalli,* பெ. (n.) ***இலைக்கள்ளி*** பார்க்க; see *ilai-k-kalli.*

இலைப்புரைகிளை-த்தல் *ilai-p-purai-kilai-,* 4 செ.குன்றாவி. (v.t.) ***எங்குந்தேடுதல்;*** to make a through search everywhere, as among leaves turning them all over one by one. ''ஈட்டமும் வேறுமாகி யிலைப்புரை கிளைத்திட்டேமே'' (சீவக.1741) (செ.அக.).

[இலை + புரை + கிளை.]

இலைப்புரை தடவு-தல் *ilai-p-purai-tadavu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***இலைப்புரை கிளை*** பார்க்க; see *ilaippurai kilai.* (செ.அக.).

[இலை + புரை + தடவு.]

இலைப்புல் *ilai-p-pul,* பெ. (n.) ***புல்வகை*** (மூ.அ.); species of panic grass (செ.அக.).

[இலை + புல்.]

இலைப்பூச்சி *ilai-p-pūcci,* பெ. (n.) ***இலைதின்னும் புழு;*** insect which eats through leaves, pulchri-phyllium. (செ.அக.).

ம. இலப்புழு.

[இலை + பூச்சி.]



இலைப்பூச்சி வகை 1

இலைப்பூச்சி வகை 2

இலைப்பேன் *illaippēn,* பெ. (n.) ***இலைப்புழு;*** walking-leaf. (சேரநா.).

ம. இலப்பேன்.

[இலை + பேன்.]

இலைப்பொங்கு *ilaipporigu,* பெ. (n.) ***கோங்கு;*** common caung. (சா.அக.).

ம. இலப்போங்ங.

[இலை + பொங்கு.]

இலைப்பொல்லம் *ilai-p-pollam,* பெ. (n.) 1. ***இலை தைக்கை;*** sewing or stitching leaves together for use as plates. 2. ***வாழையிலைத் துண்டு;*** piece of plantain leaf used as a plate to eat from. (செ.அக.).

[இலை + பொல்லம்.]

இலைபோடு-தல் *ilai-pōdu-,* 20 செ.கு.வி. (v.i.) ***உணவுக்கு இலைக்கலம் இடுதல்;*** to set leaf-plates in order to serve food. (செ.அக.).

[இலை + போடு.]

இலைமறைகாய் *ilai-maṟai-kāy,* பெ. (n.) ***மறைபொருள்;*** meaning hidden in an expressoin, just as the fruit is hidden among the rich foliage. (செ.அக.).

[இலை + மறை + காய்.]

இலைமீன் *ilaimīṉ,* பெ. (n.) ***ஒருவகைமீன், தாடமீன்;*** a kind of marine fish. (சேரநா.).

ம. இலமீன்.

[இலை + மீன்.]



இலைமீன்

இலைமுலைமாது *ilaimulai mādu* பெ. (n.) ***தூதுவளை;*** three lobed night shade. (சா.அக.).

[இலை + முலை + மாது. மருத்துவப் பயன் நோக்கி இட்ட பெயர்.]

இலைமூக்கரி கத்தி *ilai-mūkkari-katti,* பெ. (n.) 1. ***வெற்றிலைக் காம்பரியுங்கத்தி*** (திவா.); special kind of knife for cutting the stem of the betel leaf. 2. ***குளிர்;*** cold. 3. ***கணிச்சி;*** axe. (செ.அக.).

[இலை + மூக்கு + அரி + கத்தி.]

இலைமேற்காய் *ilai-mēṟ-kāy,* பெ. (n.) 1. ***வெள்ளைக் கடம்பு*** (L.); bridal-couch plant. 2. ***மலைத்தணக்கு*** (L.); olio vateleaved bridal-couch plant. 3. ***நாய்க்கடம்பு;*** bastard cedar. (சா.அக.) (செ.அக.).

[இலை + மேல் + காய்.]

இலையடை *ilai-y-aḍai,* பெ. (n.) ***அப்பவருக்கம்;*** (பிங்.); a kind of flat sweet cake prepared by steaming the dough enclosed in a leaf. (செ.அக.).

ம. இலயட.

[இலை + அடை.]

இலையத்தி *ilaiyatti,* பெ. (n.) ***ஒருவகை அத்தி;*** a kind of fig. (சா.அக.).

[இலை + அத்தி.]

இலையப்பம் *ilaiyappam,* பெ. (n.) ***இலையடை*** பார்க்க; see *ilaiyaḍai.*

ம. இலயப்பம்.

[இலை + அப்பம்.]

இலையம் *ilaiyam,* பெ. (n.) ***ஒரு கூத்து வகை*** (அக.நி.); a kind of dance. (செ.அக.).

[இல - இலையம். மென்மெல இயங்கும் கூத்தாகலாம்.]

இலையமுதிடுவோர் *ilai-y-amudiḍuvōr,* பெ. (n.) ***வெற்றிலை விற்பார்*** (சிலப்.5,26,உரை.); venders of betel leaves. (செ.அக.).

[இலை + அமுது + இடுவோர்.]

இலையமுது *ilai-y-amudu* பெ. (n.) ***வெற்றிலை;*** betel leaf. 'அடைக்காயமுது இரண்டும் இலையமுது நாலும்' (S.I.I. iii, 136) (செ.அக.).

ம. இலயமிர்து.

[இலை + அமுது.]

இலையான் *ilaiyāṉ,* பெ. (n.) ***ஈ*** (J.); fly. (செ.அக.).

[இலை + ஆன்.]

இலையிலைத்தல் *ilaiyilaittal,* பெ. (n.) 1. ***சுவை கெடுதல்;*** to lose taste. 2. ***பச்சைநிறமாதல்;*** to become green. (செ.அக.).

[இலை + இலைத்தல்.]

இலையுதிர்காலம் *ilai-y-udir-kālam,* பெ. (n.) ***இலைகள் உதிர்தற்குரிய பருவம்;*** season when leaves wither from trees, autumn. (செ.அக.).

[இலை + உதிர் + காலம்.]

இலையுதிர்வு *ilai-y-udirvu,* பெ. (n.) 1. ***இலையுதிர்கை;*** deciduousness of leaves from trees. 2. ***முதுகாடு*** (திவா.); cremation ground. (செ.அக.).

[இலை + உதிர்வு.]

இலையெடு-த்தல் *ilai-y-eḍu-* 4 செ.கு.வி. (v.i.) ***எச்சிலிலையெடுத்துத் தூய்மை செய்தல்;*** to clear leaves after the meals. (செ.அக.).

[இலை + எடு.]

இலையொளி மாதர் *ilaiyoḷi-mādar* பெ. (n.) ***சாரைப் பாம்பு;*** rat snake or male cobra. (சா.அக.).

[இலை + ஒளி + மாதர்.]

இலைவடகம் *ilai-vaḍagam,* பெ. (n.) ***இலையில் எழுதிச் சமைக்கும் வடகம்;*** wafers of rice flour prepared on leaves and steamed. (செ.அக.).

[இலை + வடகம்.]

இலைவடாம் *ilai-vaḍām* பெ. (n.) ***இலை வடகம்*** பார்க்க; see *ilai vaḍagam.* (செ.அக.).

[இலை + வடகம். (வடகம் - வடாம்.) (கொ.வ.).]

இலைவாகை *ilaivāgai,* பெ. (n.) ***பெருவாகை;*** large vaugay tree. (சா.அக.).

[இலை + வாகை.]

இலைவாணிகம் *ilaivāṇigam,* பெ. (n.) 1. ***இலை வாணிகம்;*** trading in leaves. 2. ***வெற்றிலை முதலிய விளைபயிர் வேளாண்மை;*** cultivation etc. of betel leaves. (ஆ.அக.).

[இலை + வாணிகம்.]

இலைவாணிபம் *ilaivāṇibam,* பெ. (n.) ***இலைவாணிகம்*** பார்க்க; see *ilaivāṇigam.* (ஆ.அக.).

இலைவாணியர் *ilai-vāṇiyar,* பெ. (n.) ***வெற்றிலைப் பயிர் செய்யும் பிரிவினர்,*** (T.A.S.i.165); class of people who cultivate betel creepers and sell their leaves. (செ.அக.).

ம. இலவாணியன்.

[இலை + வாணியர்.]

இலைவாழை *ilai-vāḻai,* பெ. (n.) 1. ***மலட்டு வாழை வகை;*** a kind of plantain grown for its leaves which does not yield fruits. 2. ***கொட்டை வாழை;*** a kind of plantain yielding stony fruit. (செ.அக.).

[இலை + வாழை.]

இலைவித்துண்டாம்மரம் *ilaivittu uṇḍām maram,* பெ. (n.) ***இலைகள் முதிரும் காலத்தில் அதன் அடிப்புறத்தில் அரும்புகள் உண்டாகி முதிர்ந்து காய் கள் போன்று வெடித்து விதைகளை நாற்பக்கமும் பரவச் செய்யும் ஒருவகைமரம்;*** a kind of European tree. (அபி.சிந்.).

[இலை + வித்து + உண்டாகும் + மரம்.]

இது ஐரோப்பாவின் வடபாகத்தில் காணப்படுகிறது.

இலைவேல் *ilaivēl* பெ. (n.) ***இலைத் தொழில்களால் சிறந்தவேல்;*** spear decorated with foliage design. (ஆ.அக.).

[இலை + வேல்.]

இவ் *iv,* சு.பெ. (demons.pron.) ***இவை;*** these, used imper. ''இவ்வே பீலியணிந்து'' (புறநா.95) (செ.அக.).

ம. இவ; க., படு. இவெ; தெ. இவி.

[இ → இவ்.]

இவ்வத்து *ivvattu,* கு.வி.எ. (adv.) ***இங்கே;*** here.

[இவ் + அத்து. 'அத்து' ஏழனுருபு. இச்சொல் நாட்டுப்புறங்க ளில் 'இவத்தே' எனத் திரிந்து வழங்குவது கொச்சை.]

இவ்விடத்து *ivviḍattu,* கு.வி.எ. (adv.) ***இங்கே;*** here.

[இவ் + இடத்து.]

இவ்விடம் *ivviḍam* பெ. (n.) 1. ***இம்பர்;*** this place. 2. ***இவண்;*** here. (ஆ.அக.).

[இவ் + இடம்.]

இவ்விரண்டு *iv-v-iraṇḍu,* பெ. (n.) 1. ***தனித்தனி இரண்டு;*** two each. ''ஆளுக்கு இவ்விரண்டு கொடுத் தான்''. 2. ***இந்த இரண்டு*** (ஆ.அக.); these two. (செ.அக.).

[இ + இரண்டு.]

இவக்காண் *iva-k-kāṇ,* இடை. (int.) 1. ***இங்கே;*** here! ''இவக்காணென் மேனி பசப்பூர்வது'' (குறள்.1185). 2. ***இந்நேரமளவும்;*** up till now. (செ.அக.).

[இ - இவ் + அ + காண்.]

இவண் *ivaṇ,* பெ. (n.) 1. ***இவ்விடம்;*** this place. 2. ***இம்மை*** (திவா.); this world; present life. (செ.அக.).

[இ - இவ் + அண்.]

இவணம் *ivaṇam,* பெ. (n.) ***இங்கே;*** here. (ஆ.அக.).

[இவண் + அம்.]

இவணர் *ivaṇar,* பெ. (n.) ***இவ்வுலகத்தார்;*** people who inhabit this world. 'இவணர்க் கருங்கடனிறுத்த' (பதிற்றுப்.74) (செ.அக.).

[இவண் + அர்.]

இவர்-தல் *ivar-,* 15 செ.கு.வி. (v.i.) 1. ***உயர்தல்;*** to rise on high, ascend. ''விசும்பிவர்ந் தமரன் சென்றான்'' (சீவக.959). 2. ***செல்லுதல்;*** to go, proceed. ''இருவிசும் பிவர்தலுற்று'' (சீவக.959). 3. ***உலாவுதல்;*** to move about, pass to and fro. ''இரைதேர்ந்திவருங் கொடுந் தாண் முதலையொடு'' (மலைபடு.90). 4. ***பரத்தல்;*** to spread, as a creeper. ''தூவற் கலித்த விவர்நனை வளர்கொடி'' (மலைபடு.514). 5. ***செறிதல்*** (திவா.); to be close, crowded. 6. ***பாய்தல்;*** to spring, leap, rush out. ''குன்ற விறுவரைக் கேண்மா விவர்ந்தாங்கு'' (கலித். 86.132). 7. ***பொருந்துதல்;*** to be an integral part of, be united with, become inseparable from. ''மாதிவர் பாகன்'' (திருவாச.43,1) - 15 செ.குன்றாவி. (v.t.) 1. ***மேற்கொள்ளுதல்*** (குறள்.1055); climb over; mount, as on horseback. 2. ***விரும்புதல்;*** to desire, long far, hanker after. ''ஆனெய் பாற் கிவர்ந்த தொத்தது'' (சீவக. 1051). 3. ***ஒத்தல்*** (பு.வெ.11.ஆண்பாற்.1); to resemble, look like. (செ.அக.).

[உவர் → இவர் → இவர்தல்.]

இவர் *ivar,* சு.பெ. (demons.pron.) 1. ***இவன், இவள் என்பதன் பன்மை;*** pl. of இவன் or இவள்; these persons. 2. ***ஒருவரைக் குறிக்கும் பன்மைச் சொல்;*** this person, used as an honorific term of reference. (செ.அக.).

ம., க. இவர்; தெ. வீரு; **கோத.** இவ்ர்; **துட.** இந்தம்; **து.** இம்பெ, மேரு; கொலா. இவ்ர், இத்தர்; **கூ.** ஈயரு, ஈரி; நா. இதவ்; பர். இவ்; **குவி.** ஈவரி; **குரு.** இம்பர்; **மா.** ஈர்.

[இ + அர்.]

இவர்கள் *ivargaḷ,* சு.பெ. (demons.pron.) 1. ***இவன், இவள் என்பதன் பன்மை;*** double pl. of இவன் or இவள். 2. ***ஒருவரைக் குறிக்கும் பன்மைச் சொல்;*** this person, used as an honorific term and considered to be more so than- இவர். (செ.அக.).

ம. இவர்கள்.

[இ + அர் + கள். அர் - பன்மை குறித்த உயர்சொற் கிளவி 'கள்' பன்மையீறு அடுக்கிப் புணர்ந்தது. இவை இலக்கண வழக்கல்ல.]

இவரி-த்தல் *ivari-*, 18 செ.குன்றாவி. (v.t.) ***எதிர்த்தல்;*** to oppose; contend against, to attack, as an army. ''இவரித்தரசர் தடுமாற'' (திவ்.பெரியதி.8,8,9) (செ.அக.).

[உவர் - இவர் - இவரி.]

இவல்-தல் *ival-*, 13 செ.கு.வி. (v.i.) 1. ***மேலுயர்தல்;*** to go up. 2. ***மேலேறுதல்;*** to ascend. 3. ***மேன்மேலும் ஆசைப்படுதல்;*** to become greedy. 4. ***மேற் செல்லல், நடத்தல்;*** to go, proceed.

[உ - உவல் - இவல்.]

இவள் *ival*, சு.பெ. (demons.pron.) ***பெண்ணைக் குறிக்கும் அண்மைச்சுட்டுச்சொல்;*** this woman or girl; she, used to denote the female among rational beings. (செ.அக.).

ம. இவள்; **க.** இவளு, இவள்; **தெ.** இதி; பட. இவ; **துட.** இவள்; **கோத.** இவள்; **குட.** இவ; **து.** இமள், இம்பாள், இபொளு; **கொலா.** இத். இவர்; **நா.** இத்; **பர்.** இவ்; **கோண்.** இத்; **கூ.** ஈரி; **குவி.** ஈதி, ஈவதி; **குர்.** ஈத்; **மா.** ஈத்; **கட.** இத்.

[இ + அள்.]

இவறல் *ivaral*, பெ. (n.) 1. ***விருப்பம்;*** wish.''யாது கொலிவறலென்றான்'' (இரகு.சீதை.13). 2. ***பேராசை;*** covetousness, avarice. ''இவறலின்றிக் கோத் தொழி னடாத்து மன்றே'' (சீவக.2583). 3. ***இவறன்மை*** (தொல்.சொல்.396,உரை)miserliness, niggardliness. 4. ***மறதி*** (பிங்.); forgetfulness. (செ.அக.).

[இவறு + அல்.]

இவறன்மை *ivaranmai*, பெ. (n.) 1. ***ஈயாமை நிலை;*** parsimony, stinginess. ''பற்றுள்ள மென்னும் மிவறன்மை'' (குறள்.438). 2. ***அசட்டை;*** negligence. (ஆ.அக.) (செ.அக.).

[இவறு + இவறல் + மை.]

இவறு-தல் *ivaru-*, 8 செ.குன்றாவி. (v.t.) 1. ***விரும்பு தல்;*** to desire, earnestly wish for ''ஈட்டமிவறி யிசைவேண்டா வாடவர்'' (குறள்.1003). 2. ***மறத்தல்*** (பிங்.); to forget. - 5 செ.கு.வி. (v.i.) 1. ***ஈயாமை*** (கருமித்தனம்) (குறள்.432); to be niggardly. 2. ***மிகுதல்;*** to heighten, enhance, as pleasure. ''இன்பத் திவறினார் காமவெள்ளத்து'' (சீவக.966). 3. ***உலாவுதல்;*** to roll, as billows, to and fro. ''இவறு திரைதிளைக்கு மிடுமணல்'' (ஐங்குறு.177) (செ.அக.).

ம. இவருக; **க.** எகுரு; **தெ.** எகரு.

[இவல் - இவறு.]

இவன் *ivan*, சு.பெ. (demons.pron.) ***ஆணைக் குறிக்கும் சொல்;*** this man or this boy; he, is used to denote the male among rational beings. ''மவனிவன் உவன்'' (திவ்.திருவாய்,1,1,4) (செ.அக.).

ம. இவன்; **க.** இவ; **தெ.** வீடு; பட. இம; **கோத.** இவ்ன்; **துட.** இந்த்; **குட.** இவு, இவ, இவெனு; **து.** இம்பெ; **நா.** இவ்ந்த்; **பர்.** இத்; **கோண்.** ஏல்; **கொலா.** இந்த், இம்; **கூ.** இயன்சு; **குவி.** ஈவசி; **குர்.** ஈஸ்; **மால்.** ஈக்.

[இ + அன்.]

இவியாடம் *iviyādam*, பெ. (n.) ***இதளிய கருப்பூரம்*** (மூ.அ.); calomel. (செ.அக.).

[ஒருகா. அவியாடம் - இவியாடம். இதளியத்தைப் புடமிட்டு மாற்றிய பொடித்துகள்.]

இவுளி *ivuli*, பெ. (n.) 1. ***குதிரை;*** horse. ''வாச் செலலிவுளி'' (புறநா.197). 2. ***மாமரம்*** (இராசவைத்); mango tree. (செ.அக.).

[இவல் (இவர்) - இவலி - இவுலி - இவுளி = மேலேறிச் செல்லத்தக்கது.]

இவுளிமறவன் *ivuli-maravan*, பெ. (n.) 1. ***குதிரை வீரன்;*** mounted warrior, trooper. ''இவுளிமறவரும் யானை வீரரும்'' (ஞானா.9,18). 2. ***எண்பேராயத்து ளொருவன்*** (ஆ.அக.); a member of the assembly of the eight ministers. (செ.அக.).

[இவுளி + மறவன்.]

இவேசித் தொகையேடு *ivēci-t-togai-yēdu*, பெ. (n.) ***திரட்டிய தவசம், பணம் முதலியவற்றின் கணக் கைக் காட்டும் விளக்கக் குறிப்பு*** (R.t.); statement showing the amount of collection and balance in money or in kind. (செ.அக.).

[இவேசி + தொகை + ஏடு. ஒருகா. தவசி - அவசி - இவேசி. தவசி - தவசம்.]

இவை *ivai*, சு.பெ. (demons.pron.) ***சுட்டியறியப்படும் அண்மைப் பொருள்கள்*** (திருக்கோ.223,உரை); these, the things close to the speaker, impers. pl. (செ.அக.).

[இ → இவை.]

க. இவு, இதவ; **தெ.** இவி; **கோத.** இத்; **துட.** இதம்; **குட.** இதி; **து.** இன்து; **கோண்.** ஈவு, இவ்; **கூ.** ஈவி; **பர்.** இவ்; **குவி.** ஈவ்வதி; **கொலா.** இதவ்; **நா.** இதவ்; **குரு.** இப்பறா; **மா.** இத்; **பிரா.** எத்க்.

[இ + ஐ.]

இழ-த்தல் *ila-*, 3 செ.குன்றாவி. (v.t.) 1. ***தவறவிடுதல்*** (நாலடி.9); to lose, forfeit. 2. ***சாகக் கொடுத்தல்;*** to lose by death. ''மக்களிழந்த விடும்பையினும்'' (உத்தர.திக்குவி.138) (செ.அக.).

ம. இழக்குக.

[இழி - இழ.]

இழந்த நாக்கடி-த்தல் *ilanda-nākkadi-*, 3 செ.கு.வி. (v.i.) 1. ***முன்பின் நினையாமல் உறுதியின்றி வாக்க ளித்தல்*** (Tinn.); to promise or consent lightly without

due consideration. 2. ***இரக்கப்படுதல்*** (இ.வ.); to commisserate. (செ.அக.).

[இழந்த + நாக்கு + அடி.]

இழந்த நாள் *ilanda-nāl,* பெ. (n.) ***பயனின்றிக் கழிந்த நாள்*** (அஷ்டகா.முமுக்ஷிப்படி, திருமந்.1,110); wasted day.

[இழந்த + நாள்.]

இழப்பாளி *ilappāli,* பெ. (n.) ***செல்வத்தை வீணாகச் செலவழிப்பவன்;*** spend thrift. (ஆ.அக.).

[இழப்பு + ஆளி.]

இழப்பு *ilappu* பெ. (n.) ***இழக்கை*** (ஒழிவி. பொதுவிலு.2); loss. "இழப்பினும் பிற்பயக்கும் நற்பாலவை" (குறள்.659).

[இள் → இழ → இழப்பு]

இழப்புணி *ilappuni,* பெ. (n.) ***இழந்தவன்*** (வின்.); one who has suffered loss, as of child, husband or property. (செ.அக.).

[இழப்பு + உணி.]

இழப்புவெற்றிலை *ilappu-verrilai,* பெ. (n.) ***நல்லதுங் கெட்டதுங் கலந்த வெற்றிலை*** (இ.வ.); unsorted betel leaves. (செ.அக.).

[இழப்பு + வெற்றிலை.]

இழவு[1] *ilavu,* பெ. (n.) 1. ***இழப்பு;*** loss, deprivation, detriment. "உனக்கிங்கிழவென்றான்" (கம்பரா. ஊர்தேடு.83). 2. ***கேடு;*** destruction, ruin. "செந்தொடை இழவுபடுமென மறுக்க" (தொல்.பொ.406,உரை). 3. ***சாவு;*** death. 4. ***இறுதிச் சடங்கு;*** funeral. 'இழவுக்கு வந்தவள் தாலியறுப்பாளா? 5. ***தொந்தரவு*** (கொ.வ.); trouble, worry. 6. ***எச்சில்*** (பிங்.); leavings in plates after eating. 7. ***வறுமை;*** destitution. "பேறிழ வின்பமோடு.....ஆறும்" (சி.சி.2,9) (செ.அக.).

ம. இழவு.

[இள் → இழ → இழவு.]

இழவு[2] *ilavu,* பெ. (n.) ***கருவுளமைப்பு ஆறனுள் ஒன்றான பந்துநட்டம்*** (பிங்.); bereavement, one of six karuvul-amaippu, (செ.அக.).

[இழிவு → இழவு. பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாவு என்று கருவுளமைப்பு ஆறுவகை.]

இழவுக்கடி-த்தல் *ilavukkadi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ***செத்தவீட்டில் மார்படித்துக் கொள்ளுதல்;*** to beat one's breast-in funeral out of grief for the departed. 2. ***வீணுக்கு முயலுதல்;*** exert oneself in vain. (செ.அக.).

[இழவுக்கு + அடி.]

இழவுகா-த்தல் *ilavu-kā-,* 4 செ.கு.வி. (v.i.) ***சாவுத்துய ரங் கொண்டிருத்தல்*** (வின்.); to stay at home to mourn till the eighth day after the funeral ceremony. (செ.அக.).

[இழவு + கா.]

இழவுகாரன் *ilavukāran,* பெ. (n.) ***சாவுக்குரியவன்;*** mourner. (ஆ.அக.).

[இழவு + காரன்.]

இழவுகூட்டு-தல் *ilavu-kūttu* 5 செ.கு.வி. (v.i.) ***தொந்தரவுண்டாக்குதல்*** (இ.வ.); to cause confusion and uproar, as at a funeral; to create trouble; be a nuisance. (செ.அக.).

[இழவு + கூட்டு.]

இழவுகொடு-த்தல் *ilavu-kodu,* 3 செ.கு.வி. (v.i.) ***இழவு கூட்டு*** பார்க்க; see *ilavu-kūttu.* (செ.அக.).

[இழவு + கொடு.]

இழவுகொடுப்பான் *ilavu-koduppān,* பெ. (n.) ***தொல் லைகொடுப்பவன்*** (இ.வ.); troublesome fellow, a pest, rabble rouser. (செ.அக.).

[இழவு + கொடுப்பான்.]

இழவுகொண்டாடு-தல் *ilavu-kondādu-,* 5 செ.கு.வி. (v.i.) ***சாவுத்துயரங் கொண்டிருத்தல்*** (கொ.வ.); to mourn for the dead, in a public manner, both at the funeral as well as at subsequent obsequies. (செ.அக.).

[இழவு + கொண்டாடு.]

இழவு சொல்லு-தல் *ilavu-collu-,* 15 செ.கு.வி. (v.i.) ***சாவறிவித்தல்;*** to give intimation concerning a funeral. (செ.அக.).

[இழவு + சொல்லு.]

இழவுடுப்பு *ilavuduppu,* பெ. (n.) ***துயரக்குறியான உடை*** (pond); mourning dress. (செ.அக.).

[இழவு + உடுப்பு.]

இழுவு விழு-தல் *ilavu-vilu,* 2 செ.கு.வி. (v.i.) ***இறப்பு நேரிடுதல்;*** to befall, as death. (செ.அக.).

[இழவு + விழு.]

இழவுவீடு *ilavu-vīdu,* பெ. (n.) ***சாவீடு;*** house where a death has occurred. (செ.அக.).

[இழவு + வீடு.]

இழவூழ் *ilavūl,* பெ. (n.) ***கேடுதரும் வினைப்பயன்;*** destiny which brings trouble and loss. "பேதைப் படுக்குமிழவூழ்" (குறள்.372) (செ.அக.).

[இழவு + ஊழ்.]

இழவோலை *ilavōlai,* பெ. (n.) ***சாவையறிவிக்கும் மடல்;*** funeral notice. (செ.அக.).

[இழவு + ஓலை.]

இழி[1]**-தல்** *ili-,* 2 செ.கு.வி. (v.i.) 1. ***இறங்குதல்*** (அகநா.66); to descend, dismount. 2. ***விழுதல்;*** to fall, drop down. "வெண்மதியம்... நிலத்திழிந்த தொத்தனவே" (சீவக.2238). 3. ***இழிவுபடுதல்;*** to be degra-

ded, disgraced, reduced in circumstances. "மாந்தர் நிலையி னிழிந்தக் கடை" (குறள்.964). 4. ***தாழ்தல்*** "நாலிலும்கீழிழிந்து" (திவ்.திருவாய்.3,7,9); to be inferior, low in comparison. 5. ***வெளிப்படுதல்;*** to be revealed. "வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின்" (கம்பரா.அயோத்.மந்திர.1). 6. ***நுழைதல்;*** to enter into. "தருமத்தி னெறிக் கென்று மிழியா" (கம்பரா. பிரமா. 111) (செ.அக.).

ம. இழியுக; க. இழி; தெ. ஈடு, டிகு; கோத. உக்; துட. ஊக், ஊங்க்; குட. இளி; துட. இழி, இளியுனி; கொலா. டிக், டிக்கு; நா. டிக்கு; பர். இர், இர்வ், இரி; கூ. தீவ; கோண். ஈய்யானா; குவி. ரீயதி; பிரா. டரிங்கி; படை. ஈகு, எரகு.

[இ - இழி.]

இழி²-த்தல் *iḻi-*, 2 செ.குன்றாவி. (v.t.) 1. ***இறக்குதல்;*** to lower, let-down, degrade. "இழித்தனனென்னை யானே" (திருவாச.5,66). 2. ***நிந்தித்தல்;*** to condemn, despise. 3. ***அருவருத்தல்;*** to loathe. 4. ***கெஞ்சுதல்;*** to entreat, crave.

[இ → இழி → இழி.]

இழிக்கப் பெறு-தல் *iḻikka-p-peṟu*, 13 செ.கு.வி. (v.i.) ***ஆழமாகத் தோண்டப்படுதல்;*** to be dug or sunk, as a well. 'துரவு கிணறிழிக்கப் பெறுவதாகவும்' (S.I.I. ii, 521.) (செ.அக.).

[இழி - இழிக்க + பெறு.]

இழிகட்பெருங் கண்ணனார் *iḻikaṭperuṅkaṇṇaṉār*, பெ. (n.) ***கடைக் கழகப் புலவர்களுள் ஒருவர்;*** a Sangam poet.

[இழிகண் + பெரும் + கண்ணன் + ஆர். இழிகண் = ஊர்ப்பெயர். (ஒ.நோ.) பூங்கண் உத்திரையார்.]

இழிகடை *iḻi-kaḍai*, பெ. (n.) ***மிக இழிந்தது*** (வின்.); that which is lowest, most-mean, most degraded. (செ.அக.).

[இழி + கடை.]

இழிகண் *iḻi-kaṇ*, பெ. (n.) ***பீளைநீரொழுகுங் கண்;*** blear-eyes secreting matter. "குழிந்த கண்ணனிழி கண்ணன்" (சைவச.ஆசாரிய.11) (செ.அக.).

[இழி + கண்.]

இழிகு-தல் *iḻigu-*, 7 செ.கு.வி. (v.i.) 1. ***தாழ்தல், இறங்குதல்;*** to come down, godown. 2. ***வீழ்தல்;*** to fall. 3. ***குத்துதல்;*** to stab.

[இழி - இழிகு.]

இழிகுலத்தார் *iḻikulattār*, பெ. (n.) ***இழிந்த குலத்தார்*** low caste people. "இழிகுலத்தவர்களேனும் எம்மடி யார்களாகில்" (ஆ.அக.) (திருமாலை.42).

[இழி + குலத்தார்.]

இழிகுலம் *iḻi-kulam*, பெ. (n.) ***தாழ்ந்தகுடி;*** low caste or family. (அஷ்டப்.திருவரங்.கலம்.15) (செ.அக.).

ம. இழிகுலம்.

[இழி + குலம்.]

இழிகை *iḻigai*, பெ. (n.) ***கைச்சுரிகை;*** dagger. "பவளப் பாய்காற்பசுமணி யிழிகை" (சீவக.558) (செ.அக.).

[இழிகு - இழிகை. இழிகுதல் = ஆழக்குத்துதல்.]

இழிங்கு *iḻiṅgu*, பெ. (n.) 1. ***ஈனம்;*** meanness. 2. ***வடு;*** *scar. (ஆ.அக.).*

[இழி → இழிங்கு.]

இழிச்சல் *iḻiccal*, பெ. (n.) 1. ***பழித்தல்;*** despising. 2. ***இழிச்சுதல்;*** degrading. (ஆ.அக.).

[இழி → இழிச்சல்.]

இழிச்சல்வாய் *iḻiccalvāy*, பெ. (n.) ***திறந்தவாய்;*** open mouth.

[இழி → இழிச்சல் + வாய்.]

இழிச்சு-தல் *iḻiccu-*, 12 செ.குன்றாவி. (v.t.) 1. ***இறக்குதல்;*** to lower, let down, help or hand down. "அரிவழிபட்டிழிச்சிய விமானத் திறையவன்" (தேவா.584,7). 2. ***தள்ளிக் கொடுத்தல்;*** to remit, as taxes. "இறையிழிச்சிக் கொடுத்தோம்" (S.I.I. i,69). 3. ***இடித்தல்;*** to pull down, dismantle, as a building. 'திருமண்டபமிழிச்சி யெடுப்பதற்கு' (S.I.I. iii,93). 4. ***அவமதித்தல்*** (வின்.); to disgrace, insult. (செ.அக.).

[இழி → இழிச்சு.]

இழிச்சொல் *iḻi-c-col*, பெ. (n.) ***இழிசொல்*** (பிங்.); condemnatory, or deprecatory language. (செ.அக.).

[இழி + சொல்.]

இழிசினர் *iḻiciṉar*, பெ. (n.) 1. ***அறிவீனர்;*** ignoramous people. 2. ***கீழ்மக்கள்;*** mean-minded people. (செ.அக.).

[இழி → இழிசினர்.]

இழிசினர் மொழி *iḻiciṉar-moḻi*, பெ. (n.) ***இழிவழக்கு*** (அவப்பிரஞ்சம்) (உரி.நி.); slang, vulger dialect; corrupt language, as the spoken tongue of low, uncivilized people. (செ.அக.).

[இழி → இழிசினர் + மொழி.]

இழிசினன் *iḻiciṉaṉ*, பெ. (n.) 1. ***புலைமகன்;*** a man of oppressed class. "கட்டினிணக்கு மிழிசினன்" (புறநா. 82). 2. ***தாழ்ந்தோன்;*** low, uncivilized person. "இழிசி னர் வழக்கு" (தொல்.பொ.649,உரை) (செ.அக.).

[இழி → இழிசினன்.]

இழிசு-தல் *iḻicu-*, 12 செ.குன்றாவி. (v.t.) ***பூசுதல்;*** to smear, plaster, spread over. "சாந்திழிசிய கோலம்" (திவ்.பெரியதி.2,8,7) (செ.அக.).

[இழி → இழிசுதல்.]

இழிசொல் *iḻi-col*, பெ. (n.) 1. ***பழிச்சொல்*** (பிங்.); calumny, slander. 2. ***இழிவுச்சொல்;*** blame worthy term,

improper language of four kinds, viz., பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் (திவா.) i.e., flasehood, calumny gossip, harsh words and the useless ones. (செ.அக.).

[இழி + சொல்.]

இழிஞன் *ilinan,* பெ. (n.) ***இழிசினன்;*** a man of oppressed class. ''இழிஞன் புலைக்கரந் தீண்டி'' (காஞ்சிப்.பரசிரா.42) (செ.அக.).

[இழி → இழிஞன்.]

இழித்து-தல் *ilittu-,* 12 செ.குன்றாவி. (v.t.) 1. ***இறக்குதல்;*** to lower, let down. 2. ***வரிநீக்குதல்;*** to remit, as taxes. 'எப்பேர்ப்பட்ட இறையும் இழித்தி' (S.I.I.iii,103); (செ.அக.).

[இழி → இழித்து.]

இழிதகவு[1] *ilidagavu,* பெ. (n.) ***இழிவு*** (பிங்.); inferiority, baseness, meanness. (செ.அக.).

[இழி + தகவு.]

இழிதகவு[2] *ilidagavu,* பெ. (n.) ***எளிமை;*** simplicity. (ஆ.அக.).

[இழி + தகவு.]

இழிதிணை *ili-tinai,* பெ. (n.) ***அஃறிணை;*** nouns and verbs referring to impers, beings. ''எல்லா மென்ப திழிதிணை யாயின்'' (நன்.245) (செ.அக.).

[இழி + திணை. அல் + திணை - அஃறிணை என்பதே மரபு. உயர்திணை = மேன்மேலும் உயரும் மக்கள் பிரிவு. இஃதுணராத நன்னூலார் உயர்திணைக்கு எதிராக இழிதிணை எனச் சொற்படைத்தது தவறாகும்.]

இழிந்தார் *ilindār,* பெ. (n.) ***தாழ்ந்தோர்;*** inferiors (ஆ.அக.).

[இழி → இழிந்தார்.]

இழிந்தோர் *ilindōr,* பெ. (n.) ***இழிந்தார்*** பார்க்க; see *ilindār* (ஆ.அக.).

[இழிந்தார் → இழிந்தோர்.]

இழிப்பு *ilippu,* பெ. (n.) 1. ***தாழ்த்திப் பேசுதல்;*** insult, contemptuous treatment ''கையறியாமாக்க ளிழிப்பு மெடுத்தேத்தும்'' (நாலடி.163.). 2. ***இழிப்புச்சுவை*** (சிலப்.3,13,உரை); sentiment of disgust. (செ.அக.).

[இளி → இழி → இழிப்பு (மு.தா.301.).]

இழிப்புச்சுவை *ilippu-c-cuvai,* பெ. (n.) ***இழிவுணர்வு*** (சிலப்.3,13,உரை); sentiment of disgust. (செ.அக.).

[இளி - இழி - இழிப்பு + சுவை.]

இழிபு[1] *ilibu,* பெ. (n.) ***குறைவு;*** little, small quantity, minimum.

[இழி → இழிவு.]

இழிபு[2] *ilibu,* பெ. (n.) ***அணிவகையுளொன்று; அஃது இழிபுதோன்றக் கூறுவது;*** a figure of speech. ''வெள்ளைக் கிழிபு'' (யா.கா.உறுப்.15) (ஆ.அக.).

[இழி → இழிவு.]

இழியற்கண் *iliyar kan,* பெ. (n.) ***இமை திறந்த கண்;*** eye the lids of which remain open. (ஆ.அக.).

[இழி + அல் + கண்.]

இழியினன் *iliyinan,* பெ. (n.) ***இழிசினன்*** பார்க்க; see *ilisinan.* ''இழியினர்க்கே யானும் பசித்தார்க் கூணீதல்'' (சிறுபஞ்.75).

[இழி → இழியினன்.]

இழிவழக்கு *ili-valakku,* பெ. (n.) ***இழிசினர் வழக்கு*** (தொல்.எழுத்.64,நச்.); slang, vulgar usage. (செ.அக.).

[இழி + வழக்கு.]

இழிவு *ilivu,* பெ. (n.) 1. ***தாழ்வு*** (பிங்.); inferiority, lowness, baseness. 2. ***இகழ்ச்சி*** (சூடா.); disgrace, dishonour, ignominy. 3. ***குறைவு;*** diminution, decrease, deficiency. ''இழிவறிந்துண்பான்'' (குறள்.946). 4. ***கேடு*** (திவா.); ruin, destruction. 5. ***குற்றம்*** (திவா.); fault, blemish. 6. ***தீட்டு;*** pollution, defilement. ''இழிவு தொடக் கிற்று'' (பெரியபு. நமிநந்.24). 7. ***பள்ளம்*** (திவா.); hollow, depression, pit. (செ.அக.).

ம., க. இழிவு; **தெ.** திகுவு.

[உள் → இள் → இளி → இழி - இழிவு (மு.தா.301).]

இழிவுச்சிறப்பு *ilivu-c-cirappu,* பெ. (n.) ***ஒன்றிற்கே யுள்ள இழிவைக் காட்டியது;*** indicative of baseness as a special quality. (ஆ.அக.).

[இழிவு + சிறப்பு.]

இழிவுச்சிறப்பும்மை *ilivu-c-cirappummai,* பெ. (n.) ***இழிவின் மிகுதியை விளக்கும் உம்மை;*** particle expressing marked inferiority.

[இழிவு + சிறப்பும்மை.]

இழிவுபடல் *ilivu-padal,* பெ. (n.) ***ஈனப்படல்;*** get insulted. (ஆ.அக.).

[இழிவு + படல்.]

இழிவுபடுத்தல் *ilivupaduttal,* பெ. (n.) ***தாழ்வுபடுத்தல்;*** demean. (ஆ.அக.).

[இழிவு + படுத்தல்.]

இழிவுபண்ணல் *ilivupannal,* பெ. (n.) ***தாழ்வு படுத்துதல்;*** insult. (ஆ.அக.).

[இழிவு + பண்ணல்.]

இழினெனல் *ilin-enal,* பெ. (n.) ***ஓர் ஒலிக்குறிப்பு;*** onom expr. to denote the bustle and stir in an inhabited house. ''ஏந்து மாடங்க டாமிழி னென்பன'' (சீவக. 2315) (செ.அக.).

[இழி → இழினெனல்.]

இழு-த்தல் *iḻu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ***ஈர்த்தல்;*** to draw, pull, haul, drag along the ground. 2. ***கவர்தல்;*** to draw to oneself, attract as a magnet. 3. ***வயப்படுத்துதல்;*** to influence, persuade by coaxing, wheedle. 4. ***நீளச் செய்தல்;*** to lengthen, stretch, attenuate by pulling, draw out. 5. ***வலிந்து தொடர்பு படுத்துதல்;*** to drag one into an affair; to haul up a person, as to court; to delibrately bring in one's name in support of an argument. 6. ***காலநீட்டித்தல்*** (கொ.வ.); to protract as time. 7. ***ஒலியை நீட்டுதல்*** (கொ.வ.); to lengthen, as the sound in singing, speaking or in reading. 8. ***உள்வாங்குதல்;*** to draw into, as whirlwind; to swallow up, engulf, as vortex in a stream. 'வெள்ளம் இழுக்கிறது'. 9. ***உறிஞ்சுதல்;*** to absorb, as a sponge. - 3 செ.கு.வி. (v.i.) 1. ***வலிப்புண்டாதல்;*** to have one's features or limbs distorted in spasms, have convulsions; to be twitched with pain, often used impersonally. 'கைகால் வாயுவினால் இழுக்கிறது'. 2. ***மூச்சு வாங்குதல்;*** to grasp for breath, as from asthma or from approach of death. 3. ***பின்வாங்குதல்;*** to draw back, retreat. (செ.அக.).

ம. இழு; **க.** இழ்; **தெ.** இடு, ஈட்சு; **பட.** இகி.

[உ - உள் - இள் - இழு.]

இழுக்கடி-த்தல் *iḻukkaḍi-,* 3 செ.குன்றாவி. (v.t.) ***அலையவைத்தல்;*** cause vexatious trouble to a person by constantly putting off the fulfilment of an obligation to him. "இழுக்கடித்தாய் நெஞ்சே" (தாயு.உடல்பொய். 65) (செ.அக.).

[இழு → இழுக்கடி.]

இழுக்கம் *iḻukkam,* பெ. (n.) 1. ***பிழை;*** fault, offence, transgression. 'நாளிழுக்கம் நட்டார் செயின்' (குறள். 808). 2. ***ஒழுக்கந் தவறுகை;*** violation of social and caste rules. "இழுக்க மிழிந்த பிறப்பாய் விடும்" (குறள். 133). 3. ***ஈனம்;*** ignominy, discomfiture. "மழுவாளவ னிழுக்க முற்ற வன்றினும்" (கம்பரா.அயோத்.மந்திர. 41) (செ.அக.).

[இழு → இழுக்கு → இழுக்கம் (மு.தா.116).]

இழுக்கல்[1] *iḻukkal,* பெ. (n.) 1. ***தளர்வு*** (திவா.); languor, lassitude, enfeeblement. 2. ***வழுக்குகை;*** slipping, gliding. "இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே" (குறள்.415) (செ.அக.).

க. இழிகெ.

[இழு - இழுக்கல்.]

இழுக்கல்[2] *iḻu-k-kal,* பெ. (n.) ***வழுக்குநிலம்;*** slippery ground. (ஆ.அக.).

[இழு - இழுக்கல்.]

இழுக்காமை *iḻu-k-kāmai,* பெ. (n.) ***மறவாமை;*** remembering. "இழுக்காமை யார்மாட்டும்" (குறள்.536) unforgetting. (ஆ.அக.).

[இழுக்கு + ஆமை. 'ஆ' எ.ம.ஈறு.]

இழுக்காறு *iḻukkāṟu,* பெ. (n.) ***தீநெறி;*** evilway; path of iniquity. "இழுக்காற்றி னேதம் படுபாக்கறிந்து" (குறள்.164) (செ.அக.).

[இழுக்கு + ஆறு. ஆறு = வழி.]

இழுக்கியான் *iḻu-k-kiyāṉ,* பெ. (n.) ***மறந்திருந்தவன்;*** one who did not remember. "முன்னுறக் காவாது இழுக்கியான்" (குறள்.535) (ஆ.அக.).

[இழுக்கியவன் - இழுக்கியான்.]

இழுக்கு[1]**-தல்** *iḻukku-,* 7 செ.கு.வி. (v.i.) 1. ***தவறுதல்*** (சீவக.2238); to slip down from a great height, fall from a high rank. 2. ***துன்புறுதல்*** (அகநா.18); to suffer misery, undergo pain. 3. ***வழுக்குதல்*** (சீவக.476); to slip, slide. 4. ***தளர்தல்*** (திவா.); to grow weak, lose vigour; to become dispirited. 5. ***அகப்படுதல்*** (சிலப்.12, 24, அரும்.); to be caught, entrapped. 12 செ.குன்றாவி. (v.t.) 1. ***மறத்தல்;*** to forget. "முன்னுறக் காவா திழுக்கி யான்" (குறள்.535). 2. ***இழத்தல்;*** to lose. "மகிழ்நகை யிழுக்கியான்" (புறநா.71). 3. ***கடிதல்;*** to give up, avoid. "நான்கு மிழுக்கா வியன்ற தறம்" (குறள்.35). 4. ***அழித்தல்*** (சிலப்.12,24); to destroy. (செ.அக.).

க. இழிகு.

[இழு - இழுக்கு.]

இழுக்கு[2] *iḻukku,* பெ. (n.) 1. ***பொல்லாங்கு*** (பிங்.); evil, vice, wickedness. 2. ***இகழ்ச்சி*** (நிந்தை); disgrace, reproach. 'தன்குலத்துக் கிழுக்கு வைத்தான்' (வின்.). 3. ***வழு;*** imperfection, flaw, defect. "இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று" (நல்வழி.31). 4. ***தாழ்வு;*** inferiority, baseness. 'இழுக்கான பொன்னைப் புடத்தில் வைத்தெடுப்பார்கள்'. வ.உ. 5. ***மறதி*** (திவா.); forgetfulness. 6. ***வழுக்குநிலம்;*** slippery ground. "நூழிலுமிழுக்கும்' (குறிஞ்சிப்.258) (செ.அக.).

ம. இழுக்கு.

[இழு → இழுகு → இழுக்கு.]

இழுக்கு[3]**-தல்** *iḻkku-,* 7 செ.கு.வி. (v.i.) ***சாதல்;*** to die. "முள்ளினெய்தெற விழுக்கிய கானவர்" (மலைபடு. 301, உரை.) (செ.அக.).

ம. இழுக்குக; **க.** எழவு.

இழுக்குச்சொல் *iḻukku-c-col,* பெ. (n.) ***ஈனமான சொல்;*** slang term. (ஆ.அக.).

[இழுக்கு + சொல்.]

இழுக்குடையான் *iḻukkuḍaiyaṉ,* பெ. (n.) ***கீழானவன்;*** low, uncivilized person. (ஆ.அக.).

[இழுக்கு + உடையான்.]

இழுக்குப்பொடுக்கெனல் *iḻukku-p-poḍukkenal,* பெ. (n.) ***எச்சரிக்கைக் குறிப்பு*** (J.); expr. of warning. (செ.அக.).

[இழுக்கு + பொடுக்கு + எனல்.]

இழுகு-தல் *iḻugu,* 7 செ.கு.வி. (v.i.) 1. ***வீசுதல்;*** waft, blow, as the wind. "தென்றலிழுக மெலிந்து" (கம்பரா. ஊர்தேடு.174). 2. ***பரத்தல்;*** to extend, spread over. "மழைக்குலமிழுகித் திக்கெலாம்" (கம்பரா.இராவணன் வதை.62). 3. ***படிதல்;*** to settle, as particles of dust. "சீறடி கதுவுந்துகளிழுகப் பெற்றனன்" (உபதேசகா. சூராதி.73). 4. ***தாமதித்தல்*** (J.); to procrastinate, linger; to be tardy. - 5 செ.குன்றாவி. (v.t.) ***பூசுதல்;*** to daub, to smear, rub over, as mortar. "வெண்சுதையிழுகிய மாடத்து" (மணி.6,43) (செ.அக.).

[இழு → இழுகு → இழுகு (மு.தா.329).]

இழுகுணி *iḻuguṇi,* பெ. (n.) 1. ***சோம்பேறி;*** procrastinating person, sluggard. 2. ***இவறன்;*** miser. (செ.அக.).

[இழுகு + உணி]

இழுகுபறை *iḻugu-paṟai,* பெ. (n.) ***துடிப்பறை*** (அகநா. 19, உரை); small drum shaped like an hour-glass. (செ.அக.).

[இழுகு + பறை.]

இழுங்கு *iḻuṅgu,* பெ. (n.) ***நீங்குகை*** (சீவக.3093, உரை.); separation, withdrawal (செ.அக.).

[இழு - இழுகு - இழுங்கு.]

இழுத்தல் *iḻuttal,* பெ. (n.) ***ஈர்த்தல்;*** to draw or pull, as in drawing a wire. 2. ***மூச்சு வாங்கல்;*** to gasp for the breath, as in asthma or on the approach of death. 3. ***வலிப்புண்டாதல்;*** having convulsions; to twitch, with pain. 4. ***உள்வாங்குதல்;*** to draw into; to swallow up. 5. ***உறிஞ்சுதல்;*** to absorb. (சா.அக.).

[இள் → இழு → இழுத்தல்.]

இழுத்துக்கொண்டு நில்(ற்)-த(ற)ல் *iḻuttu-k-koṇḍu-nil-,* 14 செ.கு.வி. (v.i.) 1. ***இகலிமாறுபடுதல்*** (கொ.வ.); to pull against; to draw away from each other, as refractory oxen in yoke. (செ.அக.).

[இழுத்து + கொண்டு + நில்]

இழுத்துப்பறி-த்தல் *iḻuttu-p-paṟi,* 14 செ.குன்றாவி. (v.t.) ***வலிந்து கொள்ளுதல்;*** to take away by force. "அடர்ந்தியமனிழுத்துப் பறிக்கில்" (அருட்பா.5 வேட்கை.4) - 4. செ.கு.வி. (v.i.) 1. ***பெருமுயற்சி செய்தல்;*** put forth great and protracted effort. 'இழுத்துப் பறித்து அந்தக் காரியம் நடந்தது.' 2. ***போராடுதல்;*** to struggle against, contend. 'அவனோடு இழுத்துப் பறித்துக் கொண்டு நிற்கிறான்.' (செ.அக.).

[இழுத்து + பறி.]

இழுத்துப் பிடித்தல் *iḻuttu-p-piḍittal,* பெ. (n.) ***கை,கால்,வயிறு முதலிய பாகங்களில் தசை சுருங்குவதால் திடீரெனக் காணும் ஒருவகை நிலைமை;*** sudden involuntary rigid contraction of limbs, abdomen etc. due to mascular action - spasm. (சா.அக.).

[இழுத்து + பிடித்தல்.]

இழுத்துப்பேசு-தல் *iḻuttu-p-pēsu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. ***நிறுத்தி மெள்ளப்பேசுதல்;*** to speak slowly, in a measured manner. 2. ***நழுவ விட்டுப் பேசுதல்;*** to speak evasively. (செ.அக.).

[இழுத்து + பேசு.]

இழுத்துவிடு-தல் *iḻuttu-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. ***செயலை நீட்டித்து விடுதல்;*** to protract, delay, continue putting off indefinitely. 2. ***வலிந்து தொடர்புண்டாக்குதல்;*** to drag, as into court. அவனை அந்த வழக்கில் இழுத்து விட்டார்கள். 3. ***வெளிப்படுத்துதல்;*** to make public, as one's faults. 'கமுக்கத்தையெல்லாம் இழுத்து விட்டான்.' 4. ***புதிதாய் உண்டாக்குதல்;*** to bring about, cause produce. 'இம் மருந்து வயிற்று வலியை இழுத்து விட்டது' (செ.அக.).

[இழுத்து + விடு.]

இழுது[1] *iḻudu,* பெ. (n.) ***தித்திப்பு*** (நாநார்த்த.); sweetness. (செ.அக.)

[இள் → இழு → இழுது.]

இழுது[2] *iḻudu,* பெ. (n.) 1. ***வெண்ணெய்;*** butter. "இழுதார்மென் பள்ளிமேல்" (சீவக.1576). 2. ***நெய்;*** ghee. "இழுதமை யெரிசுடர் விளக்கு" (சீவக.2630). 3. ***நிணம்;*** fat, grease. "இழுதுடையினமீன்" (கம்பரா. வருண.29). 4. ***தேன்;*** honey. இழுதார்...பூ (சீவக. 3137). 5. ***குழம்பு;*** thick semi-liquid substance. "சேறிழுது செய்யினுள்" (பெரியபு.திருநாட்.12). 6. ***சேறு;*** mud. (செ.அக.).

ம. விழுது.

[இள் → இழு → இழுது.]

இழுது[3]**-தல்** *ilaudu-dal.* 2 செ.கு.வி. (v.i.) ***கொழுத்தல்;*** grow fat. (சா.அக.).

[இள் → இழு → இழுது.]

இழுதை *iḻudai* பெ. (n.) 1. ***அறிவின்மை;*** ignorance. "இழுதை நெஞ்சமிதென்படுகின்றதே" (தேவா.1203.8). 2. ***பேய்*** (சங்.அக.); devil. 3. ***பொய்*** (சங்.அக.); falsehood. 4. ***முட்டாள்;*** ignorant person. (செ.அக.).

[இழு → இதை.]

இழுப்பறை *iḻuppaṟai,* பெ. (n.) ***செருகுபெட்டியின் அறை*** (வின்.); drawer. (செ.அக.).

[இழுப்பு + அறை.]

இழுப்பாசாமி *iḻuppāsāmi,* பெ. (n.) ***ஒழுங்கற்ற நடத்தையுள்ளவன்;*** immoral person. (செ.அக.).

[இழுப்பு + ஆசாமி.]

இழுப்பாட்டம் *iḻuppāṭṭam,* பெ. (n.) 1. ***காலச்சுணக்கம்;*** tardiness, procrastination, lingering 2 ***உறுதியின்மை*** (யாழ்ப்.); uncertainty. (செ.அக.).

[இழுப்பு + ஆட்டம்.]

இழுப்பாட்டியம் *iḻuppāṭṭiyam,* பெ. (n.) ***இழுப்பாட்டம்*** பார்க்க; see *iḻuppāṭṭam.* (செ.அக.).

[இழுப்பு + ஆட்டியம்.]

இழுப்பாணி[1] *iḻuppāṇi,* பெ. (n.) ***சுணக்கம் செய்பவன்*** (J); one who delays or postpones; a lingerer. (செ.அக.).

[இழுப்பு + ஆளி - இழுப்பாளி - இழுப்பாணி.]

இழுப்பாணி[2] *iḻuppāṇi,* பெ. (n.) ***ஏர்க்காலை நுகத்தில் பூட்டும் முளை*** (ஆணி.) (யாழ்ப்.); movable peg which fastens the yoke to the beam of the plough. (செ.அக.).

[இழுப்பு + ஆணி.]

இழுப்பாளி *iḻu-p-pāḷi,* பெ. (n.) ***காலத்தாழ்வு செய் பவன்;*** procrastinator. (ஆ.அக.).

[இழுப்பு + ஆளி.]

இழுப்பு[1] *iḻuppu,* பெ. (n.) 1. ***இழுக்கை;*** drawing, pulling. 2. ***கவர்ச்சி;*** attraction. 3. ***இசிவுநோய்;*** spasm, convulsion. 4. ***ஈளைநோய்*** (சுவாசகாசம்) (தைலவ. தைல.117); asthma. 5. ***நீரிழுப்பு;*** force of a current of water. 6. ***காலத்தாழ்வு;*** procrastination, delay. 'காரியம் இன்னும் இழுப்பிலேயிருக்கிறது'. 7. ***குறைவு;*** deficiency, insufficienty. 'செலவுக்குப் பணம் இழுப்பாயிருக் கிறது'. 8. ***நிச்சயமின்மை;*** doubtfulness, uncertainty. 'அவன் வார்த்தை இழுப்புத்தான்.' (செ.அக.).

ம. இழுப்பு; **தெ.** ஈடுபு.

[இள் → இழி → இழு → இழுப்பு.]

இழுப்பு[2] *iḻu-p-pu,* பெ. (n.) ***நீட்டி இசைத்தல்;*** flow of music. (ஆ.அக.).

[இழு → இழுப்பு.]

இழுப்புண்ணுதல் *iḻuppuṇṇudal.* பெ. (n.) ***இழுக்கப்ப டுதல்;*** being drawn. (ஆ.அக.).

[இழுப்பு + உண்ணுதல்.]

இழுப்புத்தேர் *iḻuppu-t-tēr,* பெ. (n.) ***இழுத்துச்செல் லும் தேர்*** (w.); temple car to be dragged dist. for eḍuppu-t-tēr. (செ.அக.).

[இழுப்பு + தேர்.]

இழுப்புப்பறிப்பா-தல் *iḻuppu-p-parippā-,* 6 செ.கு.வி. (v.i.) 1. ***போராட்டமாதல்;*** to be in a state of scuffling and struggling; to be in a problematical or unsettled condition. 2. ***போதியதும், போதாததும் ஆதல்;*** to be scarce. (செ.அக.).

[இழுப்பு + பறிப்பு + ஆதல்.]

இழுப்புப்பறிப்பு *iḻuppu-p-parippu,* பெ. (n.) 1. ***ஒழுங்கீனமான நடக்கை;*** immorality ''அவனுக்கு இழுப்புப் பறிப்புண்டு''. 2. ***கடன்,*** debt. (செ.அக.).

[இழுப்பு + பறிப்பு.]

இழுப்பும்பறிப்புமா-தல் *iḻuppum-parippumā-,* 6 செ.கு.வி. (v.i.) ***இழுப்புப்பறிப்பா-தல்*** பார்க்க; see *iḻuppu-p-parippā.* (செ.அக.).

[இழுப்பும் + பறிப்பும் + ஆ.]

இழுப்புமாந்தம் *iḻuppu-māndam,* பெ. (n.) ***செரியாமை நோய்வகை*** (சீவரட்.); digestive disorder in children accompanied by fits. (செ.அக.).

[இழுப்பு + மாந்தம்.]

இழுப்புவலை *iḻuppu-valai,* பெ. (n.) ***மீன்பிடிக்கும் வலைவகை*** (pond.); a kind of fishing net. (செ.அக.).

[இழுப்பு + வலை.]

இழுபறி[1] *iḻu-pari.* பெ. (n.) ***இழுவை, 1, 2.*** பார்க்க; see *iḻuvai.* (செ.அக.).

[இழு + பறி.]

இழுபறி.[2] *iḻupari,* பெ. (n.) ***போராட்டம்;*** scuffle, struggle. 'அவனோடு பெரிய இழுபறியாயிருக்கிறது' (செ.அக.).

[இழு + பறி.]

இழும் *iḻum,* பெ. (n.) 1. ***தித்திப்பு*** (பிங்.); sweetness. 2. ***மகிழ்ச்சி*** (ஆ.அக.); happiness. (செ.அக.).

[இள் → இழு → இழும்.]

இழுமு *iḻumu.* பெ. (n.) ***தித்திப்பு;*** sweetness. (சா.அக.).

[இழு → இழுமு.]

இழுமெனல் *iḻum-eṉal,* பெ. (n.) 1. ***ஒலிக்குறிப்பு*** ''ஏம முரச மிழுமென முழங்க'' (புறநா.3). 2. ***இன்னோ சைக் குறிப்பு*** (தொல்.பொருள்.550); sweet, pleasant, agreeable sound, both vocal and instrumental. 3. ***வழுவ முப்பு;*** slipperiness. (செ.அக.).

[உள் → இள் → இழு → இழும் → இழுமெனல்.]

இழுவல் *iḻuval,* பெ. (n.) 1. ***இழுக்கை;*** drawing, pulling. 2. ***சுணக்கம்;*** putting off, delaying, postponing. 'வழக்கு இன்னும் முடியாமல் இழுவலிலிருக்கிறது'. 3. ***தன் செயலில் கவனமின்றிப் பிறர் செயலில் வீணே நுழைபவன்*** (யாழ்ப்.); one who neglects his own affairs and busies himself with those of others; a busy-body. 4. ***சுறுசுறுப்பில்லாதவன்;*** lazy, slothful person. 'அவன் பெரிய இழுவல்'. 5. ***குறைவு;*** a deficiency as of money.'கையில் பணம் இழுவலாயிருக்கி றது.' (இ.வ.). 6. ***உறுதியின்மை;*** uncertainty, unreliability. 'அவன் பேச்சு இழுவல்தான்'. (இ.வ.) (செ.அக.).

ம. இழுவலி.

[இழு → இழுவல்.]

இழுவல் நழுவல் *iḻuval-naḻuval,* பெ. (n.) ***உறுதி யின்மை*** (பாவலர்சரித்.11); uncertainty. (செ.அக.).

[இழுவல் + நழுவல்.]

இழுவை[1] *iluvai,* பெ. (n.) 1. ***பணியில் சுணக்கம்*** (இ.வ.); delay, procrastination, dilatoriness. 2. ***இடைஞ்சல்;*** obstruction. ''நற்குடிக்குத் துன்பமடா நாளும் பல விழுவை''. (பஞ்ச.திருமுக.768). 3. ***ஒரு முட்செடி*** (வின்.); thorny shrub. (செ.அக.).

[இழு → இழுவை.]

இழுவை[2] *iluvai,* பெ. (n.) 1. ***இழுக்கை;*** dragging, pulling, as of the eddies in a stream. 'வெள்ளத்தின் இழுவை அதிகம்'. 2. ***இழுக்கப்படுவது*** (வின்.); things drawn, as thorns, fishes or timber. 3. ***வடம்*** (வின்.); long rope for draught, cable. 4. ***இழுத்த தடம்;*** track made on the ground by a thing which is drawn. 'இழுவை கண்டால் அடிபார்க்கிறதேன்?' (உ.வ.) (செ.அக.).

[இழு → இழுவை.]

இழுவைக்கயிறு *iluvai-k-kayiru,* பெ. (n.) 1. ***இழுக் குங் கயிறு;*** rope used to pull or draw. 2. ***நெடுங்கயிறு;*** long rope.

[இழு → இழுவை + கயிறு.]

இழை[1]**-தல்** *ilai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ***நூற்கப்படுதல்;*** to be reeled as yarn. ''இழைந்த நூலிணை'' (கம்பரா.சித் திர.9). 2. ***உராய்தல்;*** to rub against as the shoots of the bamboo tree. 'மூங்கில் ஒன்றோடொன்று இழைந்து பற்றிக்கொள்ளும்' (உ.வ.). 3. ***சோறு குழைதல்*** (வின்.); to become soft and pasty, as boiled rice by being overcooked. 4. ***நெருங்கிப் பழகுதல்;*** to associate intimately. 'அவர்களிருவரும் இப்போது நிரம்ப இழைகிறார்கள்' (உ.வ.). 5. ***உள் நெகிழ்தல்;*** to have tender emotions, as in love. 'விழைந்திழைந்து வேண்டியவர்க் கண்ட கண்' (குறள். 1177). 6. ***கூடு தல்;*** to be together, as husband and wife. ''இழைந்தவர் நலத்தை யெய்தி'' (சீவக.2720). 7. ***பிணைதல்;*** to copulate as snakes. 'பாம்புகள் ஒன்றோ டொன்றிழையும்' (வின்.). 8. ***மூச்சு சிறுகுதல்;*** breathe in a scarcely audible manner, as by a dying person. 'உயிரிழைந்து கொண்டிருக்கிறது.' 9. ***மனம் பொருந்து தல்;*** to agree, be in accord. ''இழையச் சொல்லி'' (சீவக.1593) (செ.அக.).

[இள் → இழை.]

இழை[2]**-தல்** *ilai-,* 2 செ.கு.வி. (v.i.) ***மெலிதல்;*** to become emaciated, reduced. 'குழந்தை நூலாய் இழைந்து விட்டது'. (செ.அக.).

[இள் → இழை.]

இழை[3]**-த்தல்** *ilai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ***நூற்றல்;*** to spin. ''சின்னூல் பலபல வாயாலிழைத்துச் சிலம்பி பின்னும்'' (அட்டப்.திருவரங்.மாலை,18). 2. ***செய்தல்;*** to make do, construct, fabricate. ''இழைத்தவிச் சிற்றிலை'' (திவ்.நாச்.2,2). 3. ***சூழ்தல்*** (சீவக.1089); to turn over in one's mind, deliberate calmly, consider. 4. ***செதுக்குதல்*** (ஈடு.1.4,7); to plane, scrap off. 5. ***நுண்பொடியாக்குதல்*** (பரிபா.10.91); to grind into fine powder. 6. ***மா முதலியன மெதுவாக்குதல்;*** to make soft, as fine powder. '' இழையஞ்சன மால்களிறு'' (கம்பரா. அதிகாய.21). 7. ***பதித்துச் செய்தல்;*** to set, as precious stones. ''மணியினிழைத்த செய்குன்றின்'' (நைடத.நகர.6). 8. ***கூறுதல்;*** to utter, say. ''கிழவனை நெருங்கி யிழைத்து'' (தொல்.பொ.150). 9. ***விதித்தல்;*** to appoint, determine, destine, fix. ''இழைத்த நாளெல்லை கடப்பதன்றால்'' (தேவா. 727,5). 10. ***வரைதல்;*** to paint, draw, daub. ''குங்கும வருணங் கொங்கையினி ழைத்து'' (சிலப்.14,90). 11. ***அமைத்தல்;*** to take, accept. ''பொற்பாவிழைத்துக் கொளற்பாலர்'' (சீவக.4). 12. ***திரட்டி வைத்தல்;*** to store up. ''பொங்கரி னிழைத்த'' (மாறன.பக்.244). 13. ***தீர்மானித்தல்;*** to determine; to take a vow. ''இழைத்த திகவாமை'' (குறள்.779). 14. ***மாத்திரை முதலியன உரைத்தல்*** (கொ.வ.); to rub so as to be dissolved as a pill in honey or milk. 15. ***இழையாக்குதல்;*** to divide into strands as a thread. ''கதிரிலுள்ள நூலையிழைத்தான்'' (கொ.வ.). 16. ***நிமிண்டுதல்;*** to squeeze the flesh so as to give pain. 'கன்னத்தைப் பிடித்து இழைத்தான்' (இ.வ.). 17. ***பஞ்சு முதலியன ஆய்ந்தெடுத்தல்*** (வின்.); to select, pickout, separate; to cull, as cotton. 18. ***பின்னுதல்;*** to braid, as mats; to plait, weave. 'பாயிழைத்தான்' (J.). 19. ***நுண்ணிதாக ஆராய்தல்;*** to scrutinize. '''இழைத்துணர்ந்து'' (குறள்.417) - செ.கு.வி. (v.i.) மூச்சிரைத்தல்; to breathe hard. (செ.அக.).

[இள் → இழை. இழைத்தல் (வே.க.23).]

இழை[4] *ilai,* பெ. (n.) 1. ***நூல்;*** yarn, single twisted thread. ''பனுவலிழையாக'' (நன்.24). 2. ***நூலிழை;*** darning. 3. ***கல் இழைத்த அணிகலன்;*** ornament. ''வாலிழை மடமங்கையர்'' (புறநா.11,2). 4. ***மாதரணி வடம்*** (பிங்.); kind of necklace, garland. 5. ***கையிற் கட்டுங் காப்பு*** (வின்.); string tied about the wrist for a vow. (செ.அக.).

ம. இழ; க. எழெ; தெ. எள; கோத. எள்; து. எழெ; குவி. இச.

[இள் → இழை.]

இழைக்கட்டி *ilai-k-katti,* பெ. (n.) ***கழலை வகை*** (இங்.வை.); fibrous tumour. (செ.அக.).

[இழை + கட்டி.]

இழைக்கட்டு *ilai-k-kattu,* பெ. (n.) ***காப்புக்கட்டு*** (வின்.); tying of a string on the wrist for religious ceremonies and for vows. (செ.அக.).

[இழை + கட்டு.]

இழைக்கயிறு *ilai-k-kayiru,* பெ. (n.) 1. ***நூற்கயிறு;*** cord, piece of string. 2. ***காப்பு நூல்*** (வின்.); thread or string fastened as an amulet about the hair, on the arm or around a tree. (செ.அக.).

ம. இழக்கயிறு.

[இழை + கயிறு.]

இழைக்குதல் *ilaikkudal,* பெ. (n.) 1. ***கலத்தல்;*** mixing. 2. ***மருந்து கலத்தல்;*** *compounding medicine.* 3. ***இழைத்தல்;*** to rub with a liquid on a flat stone; the reduction of solid bodies to a powder by continuous rubbing. (சா.அக.).

[இழை → இழைக்கு.]

இழைக்குளிர்ச்சி *ilai-k-kulircci,* பெ. (n.) ***இழைக் குளிர்த்தி*** பார்க்க; see *ilaikkulirtti.* (செ.அக.).

[இழை + குளிர்ச்சி.]

இழைக்குளிர்த்தி *ilai-k-kulirtti,* பெ. (n.) ***ஆடையின் மென்மை*** (இ.வ.); fine texture of cloth pleasing to the sight. (செ.அக.).

[இழை + குளிர்த்தி.]

இழைக்கோல் *ilaikkōl,* பெ. (n.) ***பின்னல் ஊசி;*** knitting - needle. (சேரநா.).

ம. இழக்கோல்.

[இழை + கோல்.]

இழைகூடு *ilai-kūdu,* பெ. (n.) ***சிறு மரச்சட்டகத்துள் கூர்நுனி மட்டும் வெளியே அமைந்த உளிவகை*** (வின்.); joiner's plane. (செ.அக.).

[இழை + கூடு.]

இழைகொள்(ளு)-தல் *ilai-kol-,* 7 செ.குன்றாவி. (v.t.) ***தைத்தல்*** (பதிற்றுப்.42, உரை); to sew, stitch. (செ.அக.).

[இழை + கொள்.]

இழைநெருக்கம் *ilainerukkam,* பெ. (n.) ***ஆடையின் மென்மை;*** fine texture of the cloth.

[இழை + நெருக்கம்.]

இழைப்படம் *ilaippadam,* பெ. (n.) ***இரத்தினக்கல் பதித்துச் செதுக்கிச் செய்யும் வேலைப்பாடு;*** encasing gems in gold, by a kind of fine work, dist. fr. கட்டடம். (செ.அக.).

[இழை - இழைப்பு - இழைப்படம். அடம் - சொல்லாக்க ஈறு.]

இழைப்பு[1] *ilaippu,* பெ. (n.) ***செய்தொழில்;*** exertion, work; application of effort. "உழைக்கல மகளிரு மிழைப்பி ரிந்தரற்றவும்" (பெருங்.உஞ்ஞைக்.46,334) (செ.அக.).

[இழை → இழைப்பு.]

இழைப்பு[2] *ilaippu,* பெ. (n.) ***காசநோய்*** (இ.வ.); asthma. (செ.அக.).

[இழு - இழுப்பு - இழைப்பு.]

இழைப்புடைவை *ilai-p-pudavai,* பெ. (n.) ***நூலினால் நெய்யப்பட்ட சேலை;*** (ஆ.அக.); saree with woven - in design.

இழைப்புளி *ilaippuli,* பெ. (n.) ***இழைக்குந் தச்சுக் கருவி;*** tool for smoothening wooden surface, joiners plane, trying plane. (செ.அக.).

[இழைப்பு + உளி.]



இழைப்புளி

இழைப்புளியலகு *ilaippuli-y-alagu,* பெ. (n.) ***இழைப் புளியிரும்பு*** (C.E.M); steel chisel in a plane. (செ.அக.).

[இழைப்பு + உளி + அலகு.]

இழைபிடி-த்தல் *ilai-pidi-,* 4 செ.குன்றாவி. (v.t.) ***காயந் தைத்தல்*** (வின்.); to stritch up, as a wound. (செ.அக.).

[இழை + பிடி.]

இழைபு *ilaibu* பெ. (n.) ***வல்லொற்று வராது செய்யுளி யலுடையரால் எழுத்தெண்ணி வகுக்கப்பட்ட குற ளடி முதலாப்பதினேழ் நிலத்து ஐந்தடியு முறை யானே உடைத்தாய் ஓங்கிய சொற்களான் வருவது.*** (அபி.சிந்.); poetic composition in an easy flowing style of writing consisting of choice diction in which long vowels, soft consonants and the liquids 'l' and 'ḷ' are prominent and hard consonants are avoided.

[இழை - இழைபு.]

இழைபோடு-தல் *ilai-pōdu-,* 19 செ.குன்றாவி. (v.t.) ***இழையாடு*** பார்க்க; see *ilaiyādu.*

[இழை + போடு.]

இழைமுருந்து *ilai-murundu* பெ. (n.) ***நார்த்தசைக ளினா லாக்கப்பட்ட முருந்து;*** tough and elastic cartilage containing a large amount of fibrous tissue. (சா.அக.).

[இழை + முருந்து.]

இழையாடு-தல் *iḻai-y-āḍu-*, 12 செ.குன்றாவி. (v.t.) ***நூலால் தைத்தல்;*** to darn, draw together in sewing. (செ.அக.).

[இழைபு + ஆடு.]

இழையிடு-தல் *iḻai-y-iḍu-*, 18 செ.குன்றாவி (v.t.) ***இழையாடு*** பார்க்க; see *iḻaiyāḍu*. (செ.அக.).

[இழை + இடு.]

இழையூசி *iḻai-y-ūsi*, பெ. (n.) ***இழைவாங்கி;*** darning-needle. (செ.அக.).

ம. இழக்கோல்.

[இழை + ஊசி.]

இழையோட்டு-தல் *iḻai-y-ōṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) ***இழையாடு*** பார்க்க: see *iḻaiyāḍu*.

[இழை + ஓட்டு.]

இழையோடு-தல் *iḻai-y-ōḍu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. ***நூற்சரடு செல்லுதல்;*** to wind thread on a spindle. 2. ***மூச்சுக் குறைந்தோடுதல்*** (கொ.வ.); to breathe very gently, as when nearing death. (செ.அக.).

[இழை + ஓடு.]

இழைவாங்கி *iḻai-vāṅgi*, பெ. (n.) ***இழையூசி;*** darning - needle. (செ.அக.).

[இழை + வாங்கி.]

இள்(ளு)-தல் *iḷ(ḷu)*, 15 செ.கு.வி. (v.i.) 1. ***பொருந்துதல்;*** to fit. 2. ***இணைதல்;*** to join. 3. ***மெல்லியதாதல்;*** to become tender. 4. ***இளையதாதல்;*** to become young. 5. ***குத்துதல்;*** to pierce. 6. ***பிளத்தல்;*** to cut, divide. 7. ***பள்ளமாக்குதல், தாழ்த்துதல்;*** to make a dip, to lower the position or plane. 8. ***இழிவு படுத்துதல்;*** to degrade, look down, under-estimate.

[இல் → இள்.]

இள-த்தல் *iḷa-*, 3 செ.கு.வி. (v.i.) ***மெல்லியதாதல்;*** to become tender. (வே.க.16).

[இல் - இள் - இள. இளத்தல்.]

இள *iḷa*, பெ. எ. (adj.) 1. ***இளைய;*** young. "எள்ளல் இளமை" (தொல்.மெய்.4). 2. ***சிறிய;*** small. இளநாகன் (உ.வ.).

[இல் - இள் - இள.]

இளஃகு-தல் *ilaḵku-*, 5 செ.கு.வி. (v.i.) ***தளிர்த்தல்;*** to be so refreshed as to put on a fresh glow. "இன்னுயிர் .... இளஃகுமே" (சீவக.149) (செ.அக.).

[இளகு - இளஃகு. இளஃகுதல். (வே.க.17).]

இளக்கத்தாலி *iḷakkattāli*, பெ. (n.) ***ஒரு கழுத்தணி வகை;*** a kind of necklace. (சேரநா.).

ம. இளக்கத்தாலி.

[இளக்கம் + தாலி.]

இளக்கம் *iḷakkam*, பெ. (n.) 1. ***நெகிழ்ச்சி;*** laxity, relaxation, tenderness. 2. ***தளர்ச்சி;*** weariness, faintness. "இளக்கமில் கடற்படை" (கம்பரா.ஊர்தேடு.71). 3. ***விலைக்குறைவு;*** lessened amount, lower price. 'இளக்கமாய் விற்றேன்' (இ.வ.). 4. ***மென்மை;*** softness, as of pure gold. 'இளக்கமான பொன்' (வின்.). 5. ***இளக்காரம்;*** leniency.(செ.அக.).

ம. இளக்கம்.

[இளகு → இளக்கு → இளக்கம் (வே.க.17).]

இளக்கரம் *iḷakkaram*, பெ. (n.) ***இளக்கம்;*** softness. (ஆ.அக.).

[இள → இளக்கம்.]

இளக்கரி *iḷakkari*, ***இளக்கரி-த்தல் காண்க*** (ஆ.அக.); see *iḷakkari-*.

இளக்கரி-த்தல் *iḷakkari-*, 4 செ.கு.வி. (v.i.) 1. ***வேகந்தணிதல்;*** to relax, slacken. 2. ***கருமத்தில் விழிப்பின்றி யிருத்தல்;*** to be negligent in action. 3. ***தளிர்தல்;*** to become weary, dispirited, disheartened. "இளக்கரிப்பதேன்" (இராமநா. அயோத்.) 4. ***இளகிப் பின்னிடுதல்*** (வின்.); to yield before an opponent or a rival; the lose in a race or trial of strength. (செ.அக.). 5. ***மதிப்பின்மை;*** to dishonour.

[இள → இளகு → இளக்கு → இளக்குரு → இளக்குரி → இளக்கரி → இளக்கரித்தல்.]

இளக்கல் *iḷakkal* ***இளக்கு*** பார்க்க (ஆ.அக.); see *iḷakku*.

[இள → இளக்கல்.]

இளக்காரம் *iḷakkāram*, பெ. (n.) 1. ***ஈவிரக்கம்;*** indulgence. 2. ***மனநெகிழ்ச்சி;*** laxity, relaxation. 3. ***தாழ்நிலை;*** inferiority, low state. "இளக்காரமாய்த் தளர்ந்தேன்" (இராமநா.ஆரணிய.24). 4. ***குறைவு;*** defect. (செ.அக.).

[இளக்கரி → இளக்காரம்.]

இளக்கு-தல் *iḷakku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. ***நெகிழச்செய்தல்;*** to slacken; to relax, as a spring; to loosen, as a rope; to moisten, as the throat with liquid; to relieve, as the bowels by cathartics; to cause to relent. 2. ***அசைத்தல்;*** to shake; to make less firm, as a peg driven into the ground.

ம. இளக்குக; க. எலுகு.

[இளகு → இளக்கு.]

இளக்குமருந்து *iḷakku-marundu* பெ. (n.) 1. ***தசையை மென்மையாக்கும் மருந்து;*** an agent which softens or soothes the skin, as does gum etc.-emolient. 2. ***தடையை நீக்கும் மருந்து;*** a medicine that removes obstruction by softening the obstructing matter - De-obstruent. 3. ***குடலையிளகச் செய்து பேதியையுண்டாக்கும் மருந்து;***

a medicine capable of relaxing the bowels for a free discharge of the faeces; a laxative medicine. (சா.அக.).

[இளகு - இளக்கு + மருந்து.]

இளகக் காய்ச்சல் *iḷaka-k-kāy-c-cal,* தொ.பெ. (vbl.n.) ***இளகும்படி காய்ச்சுதல்;*** boiling to a soft semi-solid state as in the preparation of medicated oils. (சா.அக.).

[இளகு - இளக + காய்ச்சுதல்.]

இளகம் *iḷagam* பெ. (n.) ***மருந்துக் குழம்பு;*** unctuous medical preparation. (சா.அக.).

[இளகு → இளகம்.]

இளகல் *iḷagal,* பெ. (n.) 1. ***மெல்லிதாதல், சிறிதாதல்*** (சு.வி.18); to become mellow, thin. 2. ***அன்பு*** (அக.நி.); love. (செ.அக.).

[இள > இளகு > இளகல்.]

இளகாதவன் *iḷagādavaṉ,* பெ. (n.) ***மனமுருகாதவன், கன்னெஞ்சன்;*** unyielding person, merciless person.

[இளகு → இளகாதவன்.]

இளகிக்காண்(ணு)-தல் *iḷagi-k-kāṉ-,* 16 செ.கு.வி. (v.i.) ***நெகிழ்ந்து தோன்றுதல்*** (வின்.); to become soft; loose, pliant; to become yielding; to grow less strict or rigid, as the mind. (செ.அக.).

[இளகு + காண்.]

இளகிய *iḷagiya,* பெ.எ. (adj.) 1. ***குழம்பு போன்ற;*** resembling that which is reduced to a semi solid state. 2. ***மென்மையான;*** soft. 3. ***கைப்பான;*** flaccid. (சா.அக.).

[இளகு + இ + அ = இளகிய.]

இளகியம் *iḷagiyam* பெ. (n.) ***இளக்கமாகச் செய்த நாட்டுமருந்து;*** medicine in the form of doughy mixture.

[இளகு → இளகம் → இளகியம்.]

இளகிப்பதி-த்தல் *iḷagi-p-pati-,* 4 செ.கு.வி. (v.i.) ***அழகாகப்பதித்தல்*** (திவ்.அமலனாதி.3,வ்யா.பக்.48); to be nicely set. (செ.அக.).

[இளகு - இளகி + பதித்தல்.]

இளகு-தல் *iḷaku-,* 7 செ.கு.வி. (v.i.) 1. ***நெகிழ்தல்;*** to liquify; to grow soft; to become tender, mild, yielding. 2. ***மெல்குதல்;*** to get reduced in hardness owing to moisture, to become pliable, as heated iron. "நீர்நின் றிளகிற் றிதுவேண்டா" (சீவக.718). 3. ***கட்டுநெகிழ் தல்;*** to become relaxed, as a bowstring; to get loose, as screws. "வார்நின்றிளகும்" (சீவக.718). 4. ***களைத் தல்;*** to grow weary, to become tired. "மல்லாலிளகாது மலைந்தனன் மால்" (கம்பரா.அதிகாய.68). 5. ***அசை தல்;*** to shake, agitate. "காடிளகப் பரிகொண்டவே" (சீவக.1778). 6. ***படுதல்*** (சீவக.2146); to fade away, an euphemism meaning to die, to perish. 7. ***தழைத்தல்;*** to sprout afresh, send forth tender shoots. இளகு காடு (சீவக. 1778). 8. ***தணிதல்*** (J); to diminish, abate; to lessen in intensity or severity, as wind, rain, sunshine, fever etc. 9. ***உருகுதல்;*** to melt. (செ.அக.).

ம. இளகு; க. எளது.

[எல் → எல்கு → இளகு. (சு.வி.79) இளகு = நெருப்பின்சூட்டி னால் உருகு.]

இளகுசம் *iḷagušam* பெ. (n.) ***கத்தரி;*** brinjal - solanum melongena. (சா.அக.).

[இள - இளகு - இளகுயம் - இளகுசம்.]

இளகுபதம் *iḷagu padam* பெ. (n.) ***குழைந்த பதம் அதாவது சருக்கரையுடன் நீர்த்தன்மையான ஏதேனு மொன்றைச் சேர்த்துக் காய்ச்சும்போது அப்பாகு நார் போல் ஆகும்பதம். இதற்குப் பாகுபதம் அல்லது தந்துபாகம் என்று பெயர்;*** soft semi-solid state, the state to which a concentrated solution of sugar, often medicated, is reduced by boiling into a thick viscid consistence.

[இளகு + பதம்.]

இளங்கடுங்கோ *iḷaṅkaḍuṅkō,* பெ. (n.) ***கடைக்கழக மன்னருள் ஒருவன்;*** king in Sangam age.

[இளம் + கடும் + கோ.]

இளங்கண்டீரக்கோ *iḷaṅkaṇḍīrakkō,* பெ. (n.) 1. ***பெருந்தலைச் சாத்தனார்*** பார்க்க; see *perundalai-c-cāttaṉār.* 2. ***கண்டீரக்கோவின் தம்பி*** (புறநா.151); brother of Kaṇḍīrakkō.

[இளம் + கண்டன் + வீரன் + கோ.]

இளங்கண்ணி *iḷaṅgaṇṇi,* பெ. (n.) ***முதிராத அடைக் காய், பைங்காய்;*** tender arecanut. (சேரநா.).

ம. இளங்கண்ணி.

[இளமை + கண்ணி.]

இளங்கதிர் *iḷaṅkadir,* பெ. (n.) 1. ***பயிரின் முற்றாக்கதிர்*** (பிங்.); tender ears of corn. 2. ***எழுஞாயிற்றின் கதிர்;*** early rays of the sun. 3. ***எழுஞாயிறு;*** early morning sun. (செ.அக.).

ம. இளங்கதிர்.

[இளம் + கதிர்.]

இளங்கம்பு *iḷaṅ-kambu,* பெ. (n.) ***கம்புவகை*** (வே.க. 17); bulrush millet, sown in september and october. (செ.அக.).

[இளம் + கம்பு.]

இளங்கருக்கு *iḷaṅkarukku,* பெ. (n.) ***சிறிது காய்ச்சிய கருக்கு*** (கசாயம்); decoction, infusion.

[இளம் + கருக்கு (வே.க.18).]

இளங்கருவு *iḷaṅkaruvu,* பெ. (n.) ***முதிர்ச்சியடையாத கருப்பம் அதாவது கருப்பமடைந்த காலமுதல் மூன்றுமாதம் வரைக்கும் இளநீர் வழுக்கையைப் போல் வளருகின்ற கரு;*** foetus in its earlier stages of development, especially before the end of the third month, embryo. (சா.அக.).

[இளம் + கருவு.]

இளங்கலையன் *iḷaṅkalaiyaṉ,* பெ. (n.) ***நெல்வகை;*** a paddy that rippens early. (செ.அக.).

[இளம் + கலையன்.]

இளங்கள் *iḷaṅkaḷ* பெ. (n.) ***புளிக்காத கள், இனிப்புக் கள்;*** sweet toddy. (சேரநா.).

ம. இளங்கள்.

[இளம் + கள்.]

இளங்கன்று *iḷaṅ-kaṉṟu,* பெ. (n.) 1. ***ஆவின் கன்று;*** young calf. 2. ***மரக்கன்று;*** sapling. (செ.அக.).

[இளம் + கன்று.]

இளங்காட்டுத்தரிசு *iḷaṅ-kāṭṭu-t-tarišu,* பெ. (n.) ***பத்தாண்டுப் புறம் போக்கு*** (வே.க.18); land left waste for ten years so as to allow growth of young jungle. (செ.அக.).

[இளம் + காடு + தரிசு.]

இளங்காய் *iḷaṅgāy,* பெ. (n.) ***முதிராக்காய்*** (வின்.); fruit just formed. (செ.அக.).

[இளம் + காய்.]

இளங்கார் *iḷaṅkār,* பெ. (n.) 1. ***நெல்வகை*** (வே.க.18); variety of paddy which is reaped in the early part of the rainy season. (செ.அக.).

[இளம் + கார்.]

இளங்காரத்திரி *iḷaṅ-kāra-t-tiri,* பெ. (n.) ***காயத்திற்குப் பயன்படும் காரஞ்சேர்த்த மருந்துச் சீலை;*** a lint steeped in mild irritants. (சா.அக.).

[இளம் + காரம் + திரி.]

இளங்காரம் *iḷaṅkāram,* பெ. (n.) ***போதுமான காரம்;*** mild irritant. (சா.அக.).

[இளம் + காரம்.]

இளங்கால்[1] *iḷaṅkāl,* பெ. (n.) 1. ***தென்றல்;*** lit. gentle breeze generally, applied to the south wind. "இளங்காற்றூத னிசைத்தன னாதலின் (சிலப்.8,9). 2. ***வெற்றிலையிளங்கொடி*** (வின்.); betel creeper recently planted. (செ.அக.).

[இளம் + கால்.]

இளங்கால்[2] *iḷaṅ-kāl,* பெ. (n.) ***இளமைப்பருவம்;*** period of youth. "இளங்காற்றுறவாதவர்" (சிறுபஞ்.24) (செ.அக.).

[இளம் + கால்.]

இளங்கால் வெற்றிலை *iḷaṅ-kāl veṟṟilai,* பெ. (n.) ***இளங்கொடியிற் கிள்ளிய முதுவெற்றிலை*** (C.G.); well developed betels plucked from creepers planted comparatively recently. (செ.அக.).

[இளம் + கால் + வெற்றிலை.]

இளங்காலி *iḷaṅ-kāli,* பெ. (n.) ***மாட்டுக்கன்று*** (திவ். பெரியாழ் 3,31, வ்யா,பக். 560); calf. (செ.அக.).

[இளம் + காலி.]

இளங்காலை *iḷaṅ-kālai,* பெ. (n.) 1. ***வைகறை;*** early morning. "இளங்காலையிற் புதுமலர் கவர்ந்து" (செவ்வந்திப்பு.உறையூரழித்.5). 2. ***இளமைப்பருவம்;*** period of youth "இளங்காலையே யாண்டுகொண் டருளிய" (அருட்பா.9,அருட்பெருஞ்சோதியக.290) (செ.அக.).

[இளம் + காலை.]

இளங்காற்று *iḷaṅ-kāṟṟu,* பெ. (n.) ***மெல்லிய காற்று;*** gentle breeze. (செ.அக.).

ம. இளங்காற்று; க. எள காளி.

[இளம் + காற்று.]

இளங்கிடை *iḷaṅkiḍai,* பெ. (n.) ***ஊர்மாடுகளெல்லாம் வரும்வரை மாடுகளை நிறுத்திவைக்கும் வெளியிடம்*** (நாஞ்.); open place where the cattle of the village be gathered before driving them to regular pasture. (செ.அக.).

[இளம் + கிடை. கடை → கிடை.]

இளங்கிளை *iḷaṅgiḷai,* பெ. (n.) ***தங்கை;*** younger sister. "மாலவற் கிளங்கிளை" (சிலப்.12,68.).

[இளம் + கிளை.]

இளங்கீரந்தையார் *iḷaṅkīrandaiyār,* பெ. (n.) ***கடைக் கழகப் புலவர்*** a poet in Sangam age.

[இளம் + கீரன் + அந்தை + ஆர். அந்தை - மதிப்புரவுச்சொல்.]

இளங்கீரனார் *iḷaṅkīraṉār,* பெ. (n.) ***கடைக்கழகப்புலவர்;*** a poet in Sangam age.

[இளம் + கீரன் + ஆர். கீரன் = பழையன்.]

இளங்குடர் *iḷaṅkuḍar,* பெ. (n.) ***இளங்குடல்*** பார்க்க; see *iḷaṅkuḍal*

[இளம் + (குடல்) குடர்.]

இளங்குடல் *iḷaṅkuḍal,* பெ. (n.) 1. ***கடைக்குடல்;*** rectum. 2. ***சிறிய குழந்தையின் குடல்;*** the soft bowels of a child.

[இளம் + குடல்.]

இளங்குட்டம் *ilaṅguṭṭam,* பெ. (n.) ***தொழுநோயின் ஆரம்ப நிலை;*** leprosy in its early stage. (சா.அக.).

[இளம் + குட்டம்.]

இளங்குத்தி *ilaṅ-kutti,* பெ. (n.) ***இளங்கொற்றி*** பார்க்க; see *ilaṅkoṟṟi.*

[இளம் + குத்தி.]

இளங்குரல்[1] *ilaṅ-kural,* பெ. (n.) ***குழந்தையின் குரல்;*** shrill, fine voice as of a child. (செ.அக.).

[இளம் + குரல்.]

இளங்குரல்[2] *ilaṅkural,* பெ. (n.) 1. ***பயிர்;*** crops. 2. ***இளங்கதிர்;*** morning sun rays. (ஆ.அக.).

[இளம் + குரல். குரல் = கொத்து. கொத்தான பயிர், கொத்தான கதிர்.]

இளங்குருத்து *ilaṅkuruttu,* பெ. (n.) ***முதுமையில்லாத குருத்து;*** tender shoot. (ஆ.அக.).

[இளம் + குருத்து.]

இளங்குழம்பு *ilaṅkuḻambu,* பெ. (n.) ***திண்ணமில்லாத சாறு; ஒரு வகைக் குழம்பு;*** a kind of loose broth. (வே.க.18).

[இளம் + குழம்பு.]

இளங்குழவி *ilaṅkuḻavi,* பெ. (n.) ***பிறந்த குழந்தை;*** new-born baby.

[இளம் + குழவி.]

இளங்குளவி *ilaṅkuḷavi,* பெ. (n.) ***நீலநஞ்சு;*** a kind of arsenic. (சா.அக.).

[இளம் + குளவி.]

இளங்கூறு *ilaṅ-kūṟu,* பெ. (n.) ***இளவரசன்;*** crown prince. வேணாட்டு இளங்கூறு வாழுமவற்கு (T.A.S.ii,64) (செ.அக.).

[இளம் + கூறு.]

இளங்கேள்வி *ilaṅ-kēḷvi,* பெ. (n.) ***உதவிக் கோயிற் கண்காணியர்*** (கோயிலொ.); subordinate supervising officer, as of a temple. (செ.அக.).

[இளம் + கேள்வி.]

இளங்கொட்டைப்பாக்கு *ilaṅkoṭṭaippākku,* பெ. (n.) ***ஈழ நாட்டில் வளருமோர் முதிராப்பாக்கு;*** a kind of tender arecanut grown in Ceylon. (சா.அக.).

[இளம் + கொட்டை + பாக்கு.]

இளங்கொடி *ilaṅ-koḍi,* பெ. (n.) 1. ***கொடிபோன்ற உடலமைப்புள்ள இளம் பெண்;*** slim woman as resembling a young vine. "இருங்குன்ற வாண ரிளங்கொடியே" (திருக்கோ.15). 2. ***ஆவின் நஞ்சுக்கொடி*** (வின்.); after-birth of a cow. (செ.அக.). 3. ***முதிராத கொடி;*** tendril. (ஆ.அக.).

[இளம் + கொடி.]

இளங்கொற்றி *ilaṅ-koṟṟi,* பெ. (n.) ***ஈன்றணிமை ஆவு*** (வே.க.17); cow that has recently calved. (செ.அக.).

[இளம் + கொற்றி.]

இளங்கோ *ilaṅgō,* பெ. (n.) 1. ***இளவரசன்;*** prince who is either a brother or a son of the king. "இளங்கொடி தோன்றுமா விளங்கோ முன்னென்" (மணி.4,125). 2. ***வணிகக் குலத்துள் உழுதொழிலாளர்*** (பிங்.); agriculturist considered to be a member of a sub-division of the vaisya caste. (செ.அக.).

ம. இளங்கோ.

[இளம் + கோ. வணிகரும் அரசராதற்குத் தகுதியுடையராதலின் இளங்கோக்கள் எனப்பட்டனர்.]

இளங்கோசர் *ilaṅgōsar,* பெ. (n.) ***கொங்குமண்டலத் தரசர்*** (ஆ.அக.); chieftains of the Kongu region of Tamil Nadu.

[இளம் + கோசர்.]

இளங்கோயில் *ilaṅ-kō-y-il,* பெ. (n.) ***பழங்கோயில் பழுதுபார்க்கப்படும்போது கட்டப்பெறும் குறுங் காலக் கோயில்*** [T.A.S.I.177]; temporary shrine put up for worshipping while a temple is under renovation. (செ.அக.).

[இளம் + கோயில்.]

இளங்கோவடிகள் *ilaṅgō-v-aḍigaḷ,* பெ. (n.) ***சேரன் செங்குட்டுவனின் இளவல், தமிழ்க் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகார நூலினாசிரியர்;*** ascetic brother of the cēra king Ceṅkuṭṭuvaṉ, and the author of the Cilappatikaram. (செ.அக.).

[இளம் + கோ + அடிகள்.]

இளங்கோவேள் *ilaṅgō-vēḷ,* பெ. (n.) ***வேள் குலத்து இளவரசன்*** (சைவசிகா.36); prince of vēḷ family. (செ.அக.).

[இளம் + கோ + வேள்.]

இளசு *ilasu,* பெ. (n.) ***இளைது*** (கொ.வ.); that which is young or tender. (செ.அக.).

க. எளது; தெ. எல, லே, லேத; து. எள, எளெத், லத்; குட. ஏளீ; கொலா., நா. லேங்; கோண்டி. லயொர்; பட. எளசு.

[இள → இளது → இளசு (சு.வி.18.). இளசு = சிறியது, பிஞ்சு.]

இளஞ்சாமை *ilañ-cāmai,* பெ. (n.) ***சாமை வகை*** (விவசா.4); a kind of millet. (செ.அக.).

[இளம் + சாமை.]

இளஞ்சாயம் *ilañ-cāyam,* பெ. (n.) ***சிறிது தோய்த்த சாயம்; பற்றாத சாயம்*** (வின்.); slight tinge in dyeing. (செ.அக.).

[இளம் + சாயம்.]

இளஞ்சார்வு *iḷan-cārvu,* பெ. (n.) ***குருத்தோலை*** (யாழ்.); tenderleaf of the palmyra or talipot palm next to the core of the tree. (செ.அக.).

[இளம் + சார்வு.]

இளஞ்சாலவம் *iḷañ-cālavam,* பெ. (n.) ***சிவப்புச் சிற்றகத்தி;*** red variety of agathi. (அகத்தி) (சா.அக.).

[இளம் + சாலவம்.]

இளஞ்சிவப்பு *iḷan-civappu,* பெ. (n.) ***வெண்சிவப்பு*** (வின்.); light red, pink. (செ.அக.).

[இளம் + சிவப்பு.]

இளஞ்சினி *iḷañcini,* பெ. (n.) ***அவுரி;*** indigo plant. (சா.அக.).

[இளஞ்சு → இளஞ்சினி.]

இளஞ்சீலை *iḷañ-cīlai,* பெ. (n.) 1. ***மென்துகில்;*** muslin cloth. 2. ***வலைத்துணி;*** gauge. (சா.அக.).

[இளம் + சீலை.]

இளஞ்சூடு *iḷañ-cūḍu,* பெ. (n.) ***வெதுவெதுப்பு;*** gentle heat, warmth. (செ.அக.).

[இளம் + சூடு.]

இளஞ்சூரியர் *iḷañ-cūriyar,* பெ. (n.) ***இடைக்காலத்தில் வாழ்ந்த இரட்டைப் புலவர்களுள் இளையவர்*** (தமிழ்நா.103, தலைப்பு); younger of the twin poets irattaiyar. (செ.அக.).

[இளம் + சூரியர்.]

இளஞ்சூல் *iḷañ-cūl,* பெ. (n.) 1. ***பயிரினிளங்கரு*** (பிங்.); young ears of corn which have not yet shot forth. 2. ***முதிராக் கரு*** (வே.க.18); embryo. (செ.அக.).

[இளம் + சூல்.]

இளஞ்சென்னி *iḷañcenni,* பெ. (n.) ***சோழ அரசர்க ளுள் ஒருவன்;*** a king of Chola dynasty. (ஆ.அக.).

[இளம் + சென்னி.]

இளஞ்சேரலிரும்பொறை *iḷañcēral-irum-poṟai,* பெ. (n.) ***சேரவரசர்களுள் ஒருவன்;*** a king of Cēra Dynasty.

[இளம் + சேரல் + இரும் + பொறை.]

இளந்தண்டு *iḷan-taṇḍu,* பெ. (n.) ***முளைக்கீரை*** (தைலவ.பாயி.57); plant, the leaves of which serves as a pot. herb. (செ.அக.).

[இளம் + தண்டு.]

இளந்தயிர் *iḷantayir,* பெ. (n.); ***முற்றும் உறையாத தயிர்;*** half-curdled milk. (சா.அக.).

[இளம் + தயிர்.]

இளந்தலை *iḷan-talai,* பெ. (n.) 1. ***இளமைப்பருவம்;*** youth, juvenility. இளந்தலைப் பெண். 2. ***எளிமை;*** lowness of spirit or of circumstances; poverty, dejection. "இளந்தலை யுறாதபடி யேகுமின்" (பாரத.முதற்போர். 59). 3. ***கனமின்மை;*** lightness. "ஆளிளந்தலை கண்டு தோணி மிதக்கும்" (வின்.). 4. ***மரத்தின் முற்றாத பாகம்*** (சர்வார்த்த.சிற்.68); tender part of timber; dist. fr. முதுதலை.

ம. இளந்தல.

[இளம் + தலை.]

இளந்தலைக் கைம்பெண் *iḷantalai-k-kaimpeṇ,* பெ. (n.) ***இளம்வயதில் கணவனை இழந்த பெண்;*** young widow. (சா.அக.).

[இளம் + தலை + கைம்பெண்.]

இளந்தரன் *iḷandaran,* பெ. (n.) ***இளந்தாரி*** பார்க்க; see *iḷandāri.*

[இளந்தை → இளந்தரன்.]

இளந்தாரி *iḷan-dāri,* பெ. (n.) ***இளைஞன், இளைஞை*** (வே.க.17); youth; youngman or woman.

ம. இளந்தாரி.

[இளம் → இளந்தை → இளந்தரன் → இளந்தாரி.]

இளந்தாரிக்கல் *iḷan-dāri-k-kal,* பெ. (n.) ***உடல் வலிமை ஆய்ந்தறிய ஆகும் ஒருவகை உருண்டைக் கல்*** (இ.வ.); round stone about 1 ft in diameter, common in villages, with which the young men in a village test or compare their strength. (செ.அக.).

[இளந்தாரி + கல்.]

இளந்தாரித்தத்துவம் *iḷan-tāri-t-tattuvam,* பெ. (n.) ***இளமையின் வலிமை.*** (வின்.); vigour of youth. (செ.அக.).

[இளந்தாரி + தத்துவம் (மெய்மை).]

இளந்தை *iḷandai,* பெ. (n.) ***இளைமை;*** youth. (வே.க.17).

[இள் → இள → இளந்தை.]

இளந்திரையம் *iḷan-tirayam,* பெ. (n.) ***இளந்திரையன் என்பவனால் செய்விக்கப்பட்ட ஒரு நூல்*** (இறை.1,பக்.3,உரை.); literary work produced under the patronage of Iḷam-tiraiyan. (செ.அக.).

[இளந்திரையன் > இளந்திரையம்.]

இளந்தெய்வம் *iḷan-teyvam,* பெ. (n.) ***குக்குலத் தேவதை, சிறுதெய்வம்;*** minor malignant deity. "அணங்காடு மிளந் தெய்வ மன்று" (திவ்.திருவாய். 4,6,2). (செ.அக.).

[இளம் + தெய்வம்.).]

இளந்தென்றல் *iḷan-tenral* பெ. (n.) ***தென்திக்கி லிருந்து வீசும் மெல்லிய காற்று;*** gentle breeze from the south.

[இளம் + தென்றல்.]

இளந்தேகம் *iḷan-dēgam,* பெ. (n.) 1. ***இளமை உடம்பு;*** the body of a young man. 2. ***குழந்தைபெற்ற பெண் ணின் உடம்பு;*** the delicate body of a woman immediately after child birth. 3. ***குழந்தை உடம்பு;*** child's body. (சா.அக.).

*[இளம் + தேகம். **இளமேனி** பார்க்க; see iḷa-mēni.]*

இளந்தேவி *iḷan-dēvi,* பெ. (n.) 1. ***அரசனது இளைய மனைவி;*** younger queen. "இறந்தான்ற னிளந்தேவி". (கம்பரா.குக.68.) (செ.அக.). 2. ***அரசனின் மகள்;*** daughter of the king. (வே.க.17).

[இளம் + தேவி.]

இளந்தை *iḷandai,* பெ. (n.) ***இளமை;*** youth; tender years. "இளந்தைப் பருவமதன்" (திருப்பு.372). (செ.அக.).

க. எளபு.

[இளம் → இளமை → இளந்தை.]

இளந்தோகை *iḷan-tōgai* பெ. (n.) ***சிவப்புப் பொன்னாங்காணி;*** a kind of red plant. (சா.அக.).

[இளம் + தோகை.]

இளந்தோய்ச்சல் *iḷan-tōyccal,* பெ. (n.) 1. ***தயிர் சிறிது திரைதல்;*** state of milk when partially curdled. 2. ***அலகைச் சிறிது பதப்படுத்துதல்*** (வே.க.18); preparation in water of heated blade for tempering. (செ.அக.).

[இளம் + (தோய்த்தல்) தோய்ச்சல்.]

இளந்தோயல் *iḷan-tōyal,* பெ. (n.) ***இளந்தோய்ச்சல்*** பார்க்க; see *iḷan-tōyccal.*

[இளம் + தோயல்.]

இளநகை *iḷa-nagai,* பெ. (n.) ***புன்சிரிப்பு;*** smile. "இளநகை காணச் செல்வேன்" (அருட்பா,6, தலைவி வருந்துதல்,12) (செ.அக.).

க. எளநகெ.

[இளம் + நகை.]

இளநாக்கடி-த்தல் *iḷa-nākkaḍi-,* 4 செ.கு.வி. (v.i.) ***உடன்பாடின்மை போற் காட்டுதல்*** (யாழ்.); feign, reluctance. (செ.அக.).

[இளம் + நாக்கு + அடித்தல்.]

இளநாக்கு *iḷa-nākku,* பெ. (n.) ***பேச்சுத்திருந்தாத நாக்கு;*** tongue not yet fully drilled for clear speaking, as a child's.

[இளம் + நாக்கு.]

இளநாள் *iḷa-nāḷ,* பெ. (n.) ***இளவேனில்;*** temperate part of the hot season. "இகழுந ரிகழா விளநா ளமையம்" (அகநா.25) (செ.அக.).

[இளம் + நாள்.]

இளநிலா *iḷa-nilā,* பெ. (n.) ***அந்தி நிலா*** (சிலப்.14,103, உரை); evening moon. (செ.அக.).

[இளம் + நிலா.]

இளநீர் *iḷa-nīr,* பெ. (n.) 1. ***முற்றாத தேங்காய்நீர்;*** tender coconut. "தெங்கிளநீர் பெய்பண்டியும்" (சீவக. 62). 2. ***மணியின் இளநிறம்.*** (வின்.); faint colour in a gem. (செ.அக.).

ம. இளநீர்; க. எளநீரு; தெ. எடநீரு, எலநீரு.

[இளம் + நீர் = முதிராத தெங்கங்காயின் நீர்; மென்னீர்.]

இளநீர்க்கட்டு *iḷa-nīr-k-kaṭṭu,* பெ. (n.) ***உண்ணாக்கு நோய்;*** tonsillitis. (செ.அக.).

[இளம் + நீர் + கட்டு.]

இளநீர்க்காய் *iḷa-nīr-k-kāy* பெ. (n.) ***முற்றாத தேங்காய்;***
tender coconut. (சா.அக.).

[இளம் + நீர் + காய்.]

இளநீர்க்குழம்பு *iḷa-nīr-k-kuḻambu,* பெ. (n.) ***இளநீராற் செய்யப்படும் கண்மருந்து வகை;*** medicinal preparation of young coconut milk for certain diseases of the eye. "இளநீர்க்குழம்பு இடுகிற துரும்பைச் சொல்லுதல்." (ஈடு.5,6,1.ஜீ) (செ.அக.).

[இளம் + நீர் + குழம்பு.]

இளநீர்த்தா-தல் *iḷanīrttā-,* 6 செ.கு.வி. (v.i.) ***தேய்ந்து மெலிதல்*** (நன்.431, மயிலை); to grow lean, to be worn out and become thin. (செ.அக.).

[இளம் + நீர்த்து + ஆதல்.]

இளநீரமுது *iḷa-nīr-amudu,* பெ. (n.) ***வழிபாட்டின் போது படையல் செய்யப்படும் இளநீர்*** (S.I.I. iii, 150, 14); tender coconut milk used as an offering in connection with worship. (செ.அக.).

[இளநீர் + அமுது.]

இளநீலம் *iḷa-nīlam,* பெ. (n.) ***வெளிறிய நீலம்*** (வின்.); light blue. (செ.அக.).

[இளம் + நீலம்.]

இளநெஞ்சு *iḷa-neñju,* பெ. (n.) 1. ***இரக்கமுள்ள மனம்;*** tender, compassionate heart. 2. ***கோழைமனம்*** (வின்.); timidity, cowardice, pusillanimity. (செ.அக.).

[இளம் + நெஞ்சு.]

இளநேரம் *iḷa-nēram,* பெ. (n.) ***மாலை;*** evening. "இளநேரம் வீதியிலே வந்துநில்லு". (தெய்வச்.விறலிவிடு.337) (செ.அக.).

[இளம் + நேரம்.]

இளப்பம்[1] *iḷappam,* பெ. (n.) ***மதிப்புக்குறைவு;*** disgrace. 'அவனுக்கு இது பெரிய இளப்பம்' (கொ.வ.) (செ.அக.).

ம. இளப்பம்.

[இள → இளப்பு - இளப்பம் (வே.க.17).]

இளப்பம்[2] *iḷappam,* பெ. (n.) 1. ***தாழ்வு;*** Inferiority, baseness, meanness. 2. ***உறுதியின்மை;*** flimsiness, worthlessness. (செ.அக.).

ம. இளப்பம்.

[இள → இளப்பு → இளப்பம்.]

இளம்பச்சை *iḷam-paccai* பெ. (n.) ***வெளிறிய பச்சை;*** whitish green, light green. (சா.அக.).

[இளம் + பச்சை.]

இளம்பசி *iḷam-paši,* பெ. (n.) ***சிறுபசி;*** slight appetite, as that between meals which is easily relieved by light refreshments. (செ.அக.).

[இளம் + பசி.]

இளம்படியர் *iḷam-paḍiyar,* பெ. (n.) ***இளம்பெண்கள்;*** damsels. ''வானிளம்படியர் வந்துவந்தீண்டி'' (திவ்.பெரி யாழ்.3,6,3) (செ.அக.).

[இளம் + படியர். படி = தன்மை. படியர் = தன்மையர், மெல்லியலார்.]

இளம்பதம் *iḷam-padam,* பெ. (n.) 1. ***முற்றாநிலை;*** immaturity. 'இளம்பதத்திற் பயிரறுத்தான்.' 2. ***இளவரசுப் பதவி;*** position and responsibilities of the heir-apparent to the throne. ''இளம்பதமியற்றுநாள்'' (கம்பரா.நட்புக். 50). 3. ***மருந்தெண்ணெய் முதலியன காய்ச்சுவதில் இளம்பாகம்;*** consistency of a liquid resulting from the slow application of uniform gentle heat, as in the preparation of medicinal oils. 4. ***மாழைகளின் உருகு பதம்*** (வின்.); thin consistency obtained by melting; first stage of melting. 5. ***சிறிது வெந்த நிலை*** (வின்.); state of being moderately prepared, as in cooking, parching, toasting. 6. ***நெல் முதலியவற்றின் காய்ச்சற் குறைவு*** (வின்.); quality of soaked paddy that is not well dried after boiling. (செ.அக.).

[இளம் + பதம்.]

இளம்பயிர் *iḷam-payir,* பெ. (n.) ***நாற்றைப்பிடுங்கி நட்டுச் சிலநாளான பயிர்*** (இ.வ.); seedlings that have been recently transplanted. (செ.அக.).

[இளம் + பயிர்.]

இளம்பருவம் *iḷam-paruvam,* 1. ***இளமை;*** young age. 2. ***மெல்லிய பதம்;*** under-cooked. (ஆ.அக.).

[இள → இளம் + பருவம்.]

இளம்பறியல் *iḷam-paṟiyal,* பெ. (n.) ***முற்றாதநிலை யிற் பறிக்குங்காய்*** (வின்.); that which is plucked when it is yet immature, as tender coconuts etc. (செ.அக.).

[இள → இளம் + பறியல். பறியல் = பறித்தல்.]

இளம்பனை *iḷam-paṉai,* பெ. (n.) ***பனைமரத்தின் இளமை; போந்தை,*** (வடலி) (ஆ.அக.); young palm.

[இள → இளம் + பனை.]

இளம்பாக்கு *iḷam-pākku,* பெ. (n.) ***பாக்குவகை*** (விறலிவிடுதூது); a kind of areca nut. (செ.அக.).

[இளம் + பாக்கு.]

இளம்பாகம் *iḷam-pāgam,* பெ. (n.) *1* ***இளம்பதம், 3*** பார்க்க; see *iḷam-padam, 3.* (செ.அக.).

[இள → இளம் + பாகம்.]

இளம்பாடு *iḷam-pāḍu,* பெ. (n.) 1. ***இளமையிற் படும் பாடு;*** sufferings peculiar to the period of youth. 2. ***முற்றாமை*** (வின்.); immaturity. (செ.அக.).

[இள → இளம் + பாடு. படு → பாடு.]

இளம்பாலாசிரியன் *iḷampāl-āciriyaṉ,* ***பெ. (n.) இளம் பாலார்க்குக் கற்பிக்கும் ஆசிரியன்*** (அகநா.102); teacher of children, dist. fr. pātāciriyaṉ. (செ.அக.).

[இளம் + பாலர் + ஆசிரியன்.]

இளம்பிசின் *iḷam-pišiṉ* பெ. (n.) ***நல்ல பிசின்;*** gum of good quality and one easily soluble. (சா.அக.).

இளம்பிடி *iḷam-piḍi,* பெ. (n.) 1. ***அழகிய பெண்;*** beautiful woman. ''இளம்பிடி யிவனுக்கென்னினைந்தி ருந்தாய்''. (திவ்.பெரியதி.2,7,2) (அக.நி.). 2. ***இளைய பெண்யானை;*** young female elephant.

[இளம் + பிடி. பேடு - பெடு - பிடு - பிடி.]

இளம்பிள்ளை *iḷam-piḷḷai,* பெ. (n.) ***சிறுபிள்ளை*** (திவா.); baby, infant, child. (செ.அக.).

[இள - இளம் + பிள்ளை.]

இளம்பிள்ளைக்காரி *iḷam-piḷḷai-k-kāri,* பெ. (n.) ***கைக்குழந்தை வைத்திருக்குந் தாய்;*** mother with a child in arms. (சா.அக.).

[இள - இளம் + பிள்ளை + காரி.]

இளம்பிள்ளைவாதம் *iḷam-piḷḷai-vādam,* பெ. (n.) ***குழந்தைகளுக்கு வரும் வாதநோய்வகை;*** infantile paralysis. (செ.அக.).

[இளம் + பிள்ளை + வாதம்.]

இளம்பிறை *iḷam-piṟai,* பெ. (n.) 1. ***சிறு பிறை;*** crescent moon. இளம்பிறை நோக்கினன். (உபதேசகா.சிவவிர. 305). 2. ***இணையா வினைக்கை வகை*** (சிலப். 3,18,உரை); gesture in dance with one hand in which the four fingers are joined and curved like a crescent, while the thumb is kept apart. (செ.அக.).

[இள - இளம் + பிறை. சுட்டுவிரல் நடுவிரல் அணிவிரல் சிறுவிரல் சேர்ந்து உள்வளையப் பெருவிரல் அவற்றை விட்டு நீங்கி வேறாயிருப்பது. (சிலப்.3, 18 உரை).]

இளம்புடம் *iḷam-puḍam,* பெ. (n.) ***சிறியபுடம்;*** small fire for calcination. (சா.அக.).

[இள - இளம் + புடம்.]

இளம்புல் *iḷam-pul,* பெ. (n.) 1. ***முதிராப்புல்*** (திவா.); fresh, tendergrass. 2. ***அறுகு*** (மலை.); Bermuda grass (செ.அக.).

க. எளெவுல்.

[இள் - இளம் + புல்.]

இளம்பூரணர் *ilam-pūranar,* பெ. (n.) ***தொல்காப்பியத் தின் முதல் உரையாசிரியர்*** (நன்.359,மயிலை); first commentator of the Tholkāppiyam. (செ.அக.).

[இளம் + பூரணர். இளம்பூரணம் = பிறைநிலா. இளம்பூரணர் - சிவன் பெயர்களுள் ஒன்று.]

இளம்பூரணவடிகள் *ilam-pūrana-v-adigal,* பெ. (n.) ***இளம்பூரணர்*** (சிலப்.8,1,உரை); Ilampūranar, who was an ascetic. (செ.அக.).

[இளம் + பூரணம் + அடிகள். இளம்பூரணம் = பிறைநிலா.]

இளம்பெண் *ilam-pen,* பெ. (n.) 1. ***கற்றாழை*** (தைலவ.தைல.94) பார்க்க; aloe (செ.அக.). 2. ***இளகிய மனத்தினை உடைய பெண்;*** soft-hearted lady. (கருநா.). 3. ***இளமையுடையாள்;*** young lady.

க. எள்வெண்.

இளம்பெருவழுதி *ilam-peru-valudi,* பெ. (n.) ***கடைக்கழகக்கால அரசனும் புலவனும் ஆவன்;*** chieftain and poet of the third Tamil Sangam period.

[இளம் + பெரு + வழுதி. இவர் பெருவழுதியின் தம்பியாகலாம்.]

இளம்போதியார் *ilam-pōdiyār,* பெ. (n.) ***கடைக்கழக காலப் புலவருள் ஒருவர்;*** a Sangam poet.

[இளம் + போதி + ஆர்.]

இளம்வயிறு *ilam-vayiru,* பெ. (n.) 1. ***குழந்தை வயிறு;*** child's stomach. 2. ***பேறுகாலப்புண் ஆறாதவயிறு;*** painful abdomen of a woman after delivery. (சா.அக.).

[இள → இளம் + வயிறு.]

இளமகன் *ila-magan,* பெ. (n.) ***அகம்படியச் சாதியான்;*** member of a cultivating caste found chiefly in the zamin taluk of Tiruppattur in the Ramnad district. (செ.அக.).

க. எளமக.

[இள → இளம் + மகன்.]

இளமட்டம் *ila-mattam,* பெ. (n.) 1. ***குறுமட்டக்குதிரை*** (வின்.); small pony. 2. ***இளைஞன்*** (வே.க.17); little boy or girl; stripling, youth; young woman. (செ.அக.).

[இள → இளம் + மட்டம்.]

இளமண் *ila-man,* பெ. (n.) ***மணற்றரை*** (வின்.); sandy soil. (செ.அக.).

[இள → இளம் + மண்.]

இளமண்டை *ila-mandai,* பெ. (n.) ***சிறிய, மெல்லிய தலை, குழந்தையின் தலையோடு;*** skull of a child. (சா.அக.).

[இளம் + மண்டை.]

இளமணல் *ila-manal,* பெ. (n.) ***குருத்துமணல்;*** quick sand. "தேரோ டிளமண லுட்படலோம்பு" (கலித்.98) (செ.அக.).

[இளம் + மணல்.]

இளமணற்பாய்[1]-தல் *ilamanar-pāy-,* 2 செ.கு.வி. (v.i.) ***இளமணலிற் காலழுந்துதற்போல அகப்படுதல்;*** to be caught, as the feet in quick-sand. "திருச்சோலையின் யோக்யதையிலே இளமணற் பாய்ந்து கால்வாங்க மாட் டாதே நிற்கும்." (திவ்.அமலனாதி6,வியா.பக்.77) (செ.அக.).

[இளம் + மணல் + பாய்தல்.]

இளமணற்பாய்[2]-தல் *ila-manar-pāy-,* 2 செ.கு.வி. (v.i.) ***மனமிளகி யீடுபடுதல்*** (ஈடு.1,3,ப்ர.); to be irresistably drawn to, as a devotee to God in meditating on His attributes and benignity, just as fine sand is carried away by a flood. (செ.அக.).

இளமரக்கா *ila-mara-k-kā,* பெ. (n.) ***வயல்சூழ்ந்த சோலை.*** (சிலப்.11,14, உரை); grove reared in the midst of green fields. (செ.அக.).

[இளம் + மரம் + கா.]

இளமரல் *ila-maral,* பெ. (n.) ***அறுகம்புல்*** (சா.அக.); Bermuda grass.

[இளம் + அரல்.]

இளமழை *ila-malai,* பெ. (n.) ***சிறுபெயல் முகில்;*** drizzling. "இளமழையாடும்" (கலித்.41) (செ.அக.).

[இளம் + மழை.]

இளமார்பு *ila-mārbu,* பெ. (n.) ***கருப்பூரவகை;*** a kind of camphor. (செ.அக.).

["மலைச்சரக்கு கலை அடைவுசரக்கு மார்பு இளமார்பு ஆரூர்க் கால் கையொட்டுக்கால் மாரப்பற்று வராசான் குமடெறிவான் உருக்குருக்கு வாறோசு சூடன் சீனச்சூடன் என்று பெயர்கூறப் பட்ட பலவகை" (சிலப்.14, 109 உரை).]

இளமுறை *ila-murai,* பெ. (n.) ***குடும்ப வழிமரபினர்-பின்தோன்றியவர்*** (இ.வ.); heir apparent, the second member of a family. (செ.அக.)

ம. இளமுறை.

[இளம் + முறை.]

இளமை *ilamai,* பெ. (n.) 1. ***இளம்பருவத்து அழகிய தோற்றம்;*** childhood, youthfulness "இளமையிற் கல்" (ஆத்தி.). 2. ***மென்மை*** (வின்.); tenderness. 3. ***அறிவு முதிராமை*** (வின்.); indiscretion; immaturity of knowledge and intellect. 4. ***ஒன்றை வேறொன்றாக மயக்கும் மயக்கம்*** (பிங்.); illusion. 5. ***தாழ்வு*** (சூடா.); inferiority, baseness. 6. ***காமம்*** (சூடா.); amorousness. (செ.அக.).

ம. இளது; க. எளெமெ.

[இள → இளம் → இளமை.]

இளமைச்செவ்வி *ilamai-c-cevvi,* பெ. (n.) ***விடலைப் பருவ அழகு*** (திவா.); charm or beauty of youth. (செ.அக.).

[இளமை + செவ்வி. விடலைப் பருவம். 16 - 30 அகவை கொண்டது.]

இளமையாடு-தல் *iḷamai-y-āḍu-,* 5 செ.கு.வி. (v.i.); ***ஒன்றை மற்றொன்றாக உணர்தல், திரிபுணர்ச்சி யுறுதல்;*** be deluded into believing one thing to be quite a different one. மந்தி...."இளமையாடி யிருக்கும் வனத்து" (சீவக.2491) (செ.அக.).

[இளமை + ஆடு.]

இளவட்டக்கல் *iḷa-vaṭṭa-k-kal,* பெ. (n.) ***இளந்தாரிக் கல்*** பார்க்க; see *iḷandāri-k-kal.*

[இளம் + வட்டம் - இளவட்டம் + கல்.]

இளவட்டப்பணம் *iḷa-vaṭṭa-p-paṇam,* பெ. (n.) 1. ***மணமகன் தன்னூர் நோக்கிச் செல்லுமிடையிற் சந்திக்கும் ஊரார்க்கு அளிக்கும் கால்உருபா மதிப்புர வுப் பணம்;*** customary present of a quarter rupee coin which a newly married bridegroom has to pay to the people of the village or villages through which he passes on his return home after his marriage in the bride's house. 2. ***வேற்றூரிலிருந்து வந்த மணமகன் திருமணம் முடிந்து ஊர்கோலம் வருவதற்குப் பல் லக்கில் ஏறும்போது தான்மணம்புரிந்த சிற்றூர் இளைஞர்களுக்குக் கொடுக்கும் மதிப்புரவுப் பணம்;*** small present, prob. of the nature of a permit-fee, which a bridegroom who is not a native of the village wherein his marriage is celebrated has to pay to the youths of the locality, just before the usual marriage procession starts in a palanquin. (செ.அக.).

[இளவட்டம் + பணம்.]

இளவட்டம் *iḷa-vaṭṭam,* பெ. (n.) ***இளமட்டம்*** பார்க்க; see *iḷa-maṭṭam.*

இளவடி *iḷa-vaḍi,* பெ. (n.) ***இளம்பதத்தில் வடிக்கை*** (வின்.); imperfect distillation. (செ.அக.).

[இளம் + வடி.]

இளவணி *iḷa-v-aṇi,* பெ. (n.) ***காலாட்படை;*** infantry. "நின்ற இளவணி கலங்கி" (ஈடு.7.41) (செ.அக.).

[இளம் + அணி.]

இளவத்தி *iḷavatti* பெ. (n.) ***அத்திப்பிஞ்சு;*** young or tender fruit of the country fig tree. (சா.அக.).

[இளம் + அத்தி.]

இளவரசன் *iḷavarašaṉ,* பெ. (n.) 1. ***இளங்கோ*** (அருங்கலைச்.53); crown prince, heir-apparent to a throne. 2. ***இளம்பருவத்தரசன்;*** king in his minority. (செ.அக.).

ம. இளவரசு.

[இளம் + அரசன்.]

இளவரசு *iḷa-v-arašu,* பெ. (n.) ***பட்டத்திற்குரிய அரசனின் மகன்;*** crown prince "தன்போ லிளவரசாக் கினானே" (சீவக.2912).

ம. இளவரசு.

[இள + அரசு.]

இளவல் *iḷaval,* பெ. (n.) 1. ***தம்பி;*** younger brother, he who is younger than one's self. "இளவல்பின் னெழுந்து" (கம்பரா.மூலபல.67). 2. ***சிறுவன்;*** lad. "இளவறன் னுயிரும்...... காத்தார்" (கம்பரா.மிதிலை. 129). 3. ***மகன்;*** son. "கயமுக னாவி மாட்டுமுன் னிளவல்" (காஞ்சிப்பு.குமர.3). 4. ***முதிராதது;*** that which is not fully developed. இந்தத் தேங்காய் இளவல். (இ.வ.) (செ.அக.).

ம. இளவன்.

[இள + அல். அல் - சொல்லாக்கப் பெயரீறு.]

இளவழிபாடு *iḷa-vaḻipāḍu,* பெ. (n.) ***சிறுபிள்ளைக் கல்வி*** (யாழ்.அக.); child education. (செ.அக.).

[இள + வழிபாடு. ஆசிரியனை வழிபட்டுப் பெறுங் கல்வி.]

இளவழுக்கை *iḷa-vaḻukkai,* பெ. (n.) 1. ***இளங்காய்;*** any glutinous tender fruit, generally said of a cocoanut. 2. ***கருப்பையிலிருக்கும் முதிராத மூன்று மாதத்திய பிண்டக் கரு;*** an euphemistic term for an undeveloped foetus. (சா.அக.).

[இளம் + வழுக்கை.]

இளவளை *iḷavaḷai,* பெ. (n.) ***இளைய சங்கு;*** tender conch. "நாகிள வளையொடு" (புறநா.266.5) (சங்க. இலக்.சொற்.).

[இளம் + வளை.]

இளவறுப்பு *iḷavaṟuppu,* பெ. (n.) ***இளம்பதமாய் வறுத்தல்;*** frying without scorching with the aid of a gentle heat. (சா.அக.).

[இள + வறுப்பு.]

இளவன் *iḷavaṉ,* பெ. (n.) 1. ***ஒருவகை நஞ்சு*** (மூ.அ.); prepared arsenic (செ.அக.). 2. ***ஒரு வகைப் பூசணிக் காய்;*** a kind of pumpkin. 3. ***முதிராத காய்;*** young or unripe fruit. (சேரநா.).

ம. இளவன்.

[இள - இளவன். ஒருகா. இளக்கமாகச் செய்த செய்நஞ்சுக் கூட்டு.]

இளவனமுலை *iḷa-vaṉa-mulai* பெ. (n.) ***இளம் பெண் ணின் அழகிய மார்பகம்;*** breast with youthful elgance. "எதிர்த்த தித்தி ஏரிள வனமுலை" (நற்.160-4).

[இளம் + வன + முலை. வன-வனப்பு.]

இளவாடை *iḷa-vāḍai,* பெ. (n.) ***வடக்கிருந்து வரும் மென்காற்று;*** mild north wind. "இன்னிளவாடை" (திவ்.பெரியதி.9,5,2) (செ.அக.).

[இள + வாடை. வாடை = வடக்கினின்றும் வீசும் காற்று. இளவாடை = மென்பதமான வடகாற்று.]

இளவாளிப்பு *iḷa-vāḷippu,* பெ. (n.) 1. ***ஈரம்*** (யாழ்ப்.); dampness, moisture. 2. ***இளகுதல்;*** melting. (செ.அக.).

[இள + வாளிப்பு. ஒருகா. வளி - வாளிப்பு.]

இளவிச்சிக்கோ *iḷa-vicci-k-kō,* பெ. (n.) ***கடைக்கழக காலத்துமன்னருள் ஒருவன்;*** a king in Sangam age.

[இளம் + விச்சி + கோ.]

இளவித்து *iḷa-vittu,* பெ. (n.) ***மூன்று திங்களில் விளையும் ஒருவகை நெல்;*** a kind of paddy. (சேரநா.).

ம. இளவித்து.

[இளம் + வித்து.]

இளவிரிசு *iḷa-viriśu,* பெ. (n.) ***ஒருமரம்*** (சா.அக.); a kind of tree.

[இளம் + விரிசு.]

இளவிளவெனல் *iḷa-v-iḷa-v-eṉal,* பெ. (n.) ***பயிர் பசுஞ் செழிப்பாயிருத்தல்;*** expr. denoting luxuriant growth of vegetation. (செ.அக.).

[இள + இள + எனல்.]

இளவுச்சி *iḷa-v-ucci,* பெ. (n.) ***நண்பகற்கு அணித்தான முற்பொழுது*** (விதான.எச்சவினை.4); forenoon nearer midday. (செ.அக.).

[இள + உச்சி = உக்கம் → உத்தம் → உத்தி → உச்சி.]

இளவுடையான் *iḷa-v-uḍaiyāṉ,* பெ. (n.) ***இளவரசன்;*** son of a king. "இளவுடையானென்றேத்த" (சீவக.2568) (செ.அக.).

[இளம் + உடையான்.]

இளவுறை *iḷav-urai,* பெ. (n.) ***நன்றாகத் தோயாத தயிர்*** (யாழ்.அக.); milk not fully formed into curds. (செ.அக.).

[இளம் + உறை. உறைதல் - தோய்தல்.]

இளவெந்நீர் *iḷa-vennīr,* பெ. (n.) ***சிறுசூடுள்ள வெந்நீர்;*** tepid water. (செ.அக.).

[இளம் + வெம் + நீர்.]

இளவெந்நீர் முழுக்கு *iḷavennīr muḻukku* பெ. (n.) ***இளஞ்சூடான நீரில் தலைக்குக் குளித்தல்;*** having a bath in tepid water. (செ.அக.).

[இளம் + வெம் + நீர் + முழுக்கு.]

இளவெயில் *iḷa-veyil,* பெ. (n.) ***காலை வெயில்;*** morning sunshine which is warm but not sensibly hot. (செ.அக.).

ம. இளவெயில்; க. எளபிசில.

[இளம் + வெயில்; வெம் = வெய் - வெயில்.]

இளவெயிற் காய்தல் *iḷaveyiṟ-kāydal,* பெ. (n.) ***காலை நேரத்தில் சூரிய வெளிச்சத்தில் சூடேறும்படி உடம்பைக் காட்டிக் காய்தல்; இதனால் உடம்பிலுண்டான பித்தம் மயக்கம் முதலிய நோய்களெல்லா மதிகப் படும்;*** exposing oneself to the morning sun. (சா.அக.).

[இளம் + வெயில் + காய்தல்.]

இளவெழுத்து *iḷa-v-eḻuttu,* பெ. (n.) ***திருந்தா வெழுத்து*** (வின்.); unformed handwritting as that of a child just learning to write. (செ.அக.).

[இள + எழுத்து.]

இளவேங்கை *iḷa-vēṅgai,* பெ. (n.) ***முதிராதவேங்கை மரம்;*** young margosa tree. "நாகிள வேங்கையிற் கதிர்த்தொளி திகழும்" (புறநா.352.12) (சங்.இலக். சொற்.).

[இளம் + வேங்கை.]

இளவேனில் *iḷa-vēṉil,* பெ. (n.) 1. ***மேழம் விடைத் திங்கள்*** (சிலப்.8,7); period of time included in the months of Chitrai and Vaikāsi, being the milder part of the hot season, one of six paruvam. 2. ***வெப்பம் முதிராக் கோடை,*** (செ.அக.); summer season.

[இளம் + வேனில்.]

இளி[1]-தல் *iḷi-,* 4 செ.குன்றாவி. (v.t) 1. ***இணுக்குதல்;*** to pluck. "இளிந்த வீயும்" (சீவக.1241). 2. ***உரித்தல்*** (சூடா.); to strip off. - செ.கு.வி. (v.i.) ***இகழப்பட்டு எளிய னாதல்*** (தொல்.பொ.253,உரை); to become low spirited because of being ridiculed by others. (செ.அக.).

[இல் → இள் → இளி. இல் = குத்துதல். இளிதல் = குத்திப்பிரித்தல், உரித்தல்.]

இளி[2]-த்தல் *iḷi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ***இகழ்தல்*** (வின்.); to disgrace, condemn. 2. ***எள்ளல்*** (வின்.); to laugh, scorn, ridicule. - செ.கு.வி. (v.i.) ***பல்லைக் காட்டுதல்;*** to grin; to show the teeth, as in cringing or in craving servilely. (செ.அக.).

ம. இளிக்குக.

[இல் → இள் → இளி. இளித்தல் = பிரித்தல். உதடு பிரித்தல், பல்லைக்காட்டுதல்.]

இளி[3] *iḷi,* பெ. (n.) 1. ***இகழ்ச்சி;*** disgrace, contempt, contumely, scorn. 2. ***குற்றம்;*** fault, defect. "இளியொருவற் கஃதிறந்து வாழ்துமெனல்" (குறள்.971). 3. ***சிரிப்பு*** (பிங்.); grin, laughter. 4. ***இகழ்ச்சிக் குறிப்பு நகை;*** derisive laughter; unseasonable jocularity. 5. ***இசையின் ஏழொலியுள் ஐந்தாவது;*** the fifth tone of the gamut. (செ.அக.).

ம. இளி.

[இல் → இள் → இளி. இளி = பிறர் சிரிக்கத்தக்க எள்ளி நகையாடத் தக்க குற்றம், இகழ்ச்சி.]

இளிகண் *iḷi-kaṇ*, பெ. (n.) ***பீளைக்கண்;*** blear eyes; eyes sore with rheum; ectropion. "இளிகண்ணனைப் புண்டரீகாட்சனென்றும்" (ஈடு.3,9,10) (செ.அக.).

[இள் → இள → இளி. இளி + கண். இளி = குற்றம், நோய்.]

இளிச்சகண்ணி *iḷicca-kaṇṇi*, பெ. (n.) ***காமக்குறிப் போடு பிறரை நோக்குந் தன்மையுடையவள்;*** woman having amorous look. 'இளிச்சகண்ணிக்குப் புளிச்ச கண்ணி தேவலை' (செ.அக.).

[இளித்த + கண்ணி. இளித்த = சிரித்த.]

இளிச்சவாய் *iḷicca-vāy*, பெ. (n.) ***பல்தெரியும்படி திறந்தவாய்;*** open mouth in which the lips are parted so as to make the teeth visible. (சா.அக.).

[இளித்த → இளிச்ச + வாய்.]

இளிச்சவாய்ப்பட்டம் *iḷcca-vāy-p-paṭṭam*, பெ. (n.) ***ஒன்றுந் தெரியாதவன் என்ற பட்டம்;*** notoriety of being a fool. 'முடிச்சு அவிழ்க்கக் கொடுத்தது மல்லாமல் இளிச்ச வாய்ப்பட்டமுங் கிடைத்தது' (செ.அக.).

[இளித்த → இளிச்ச + வாய் + பட்டம்.]

இளிச்சவாயன் *iḷicca-vāyaṉ*, பெ. (n.) 1. ***எப்போதும் பல்லைக்காட்டுபவன்;*** one who is always showing his teeth; one who grins like a monkey. 2. ***எளிதில் ஏமாற்றப் படுபவன்;*** one who is easily misled, simpleton. (செ.அக.).

ம. இளிச்சவாயன்.

*[இளித்த → இளிச்ச + வாய் + அன். **இளித்த வாயன்** பார்க்க; see iḷittavāyaṉ.]*

இளிச்சற்கண் *iḷccaṟ-kaṇ*, பெ. (n.) ***இளிகண்*** (வின்.) பார்க்க (செ.அக.); see *iḷikaṇ*.

[இளித்தல் → இளிச்சல் + கண்.]

இளித்தல் *iḷittal* பெ. (n.) ***பல்லைக்காட்டல்;*** grinning to have the lips open so as to expose the teeth, as dogs do. (சா.அக.).

[இள் → இளி → இளி-த்தல்.]

இளித்தவாயன் *iḷitta-vāyaṉ*, பெ. (n.) ***குரங்குபோல் பல்லைக் காட்டுபவன்; இழுப்பு நோய் காணின் தோன்றும் குறி;*** one who shows his teeth like a monkey. It is also a sign in tetanus or delirium. (சா.அக.).

[இளி → இளித்த + வாயன்.]

இளிதேர்தீம்குரல் *iḷitēr-tīmkural* பெ. (n.) ***குரலாகத் தேர்ந்து இசைக்கும் மேற்செம்பாலை யென்னும் பண்;*** an ancient musical term. "இளிதேர் தீங்குர லிசைக்கு மத்தம்" (அகநா.33.7).

[இளி + தேர் + தீம் + குரல்.]

இளிந்த காய் *iḷinda-kāy* பெ. (n.) ***பாக்கு;*** areca-nut. Areca catechu (சா.அக.).

[இளி - இளிந்த + காய்.]

இளிப்படு-தல் *iḷi-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) ***அகப் படுதல்;*** to be caught, trepanned "இளிப்பட்டன வீகைப்போர்" (கலித்.95) (செ.அக.).

[இளி + படு.]

இளிப்பு *iḷippu* பெ. (n.) 1. ***பல்லைக் காட்டிச் சிரித்தல்;*** grinning. 2. ***நாணுதல்;*** feeling disgrace or bashful. 3. ***குதிரை கனைத்தல்;*** neighing of a horse. (சேரநா.).

ம. இளிப்பு.

[இளி → இளிப்பு.]

இளிம்பு *iḷimbu*, பெ. (n.) ***திறமையின்மை;*** unskilfulness incompetancy. 'இடையரிளிம்பு கண்டால்' (ஈடு.3,5,3) (செ.அக.).

[இளி → இளிம்பு.]

இளிவரல் *iḷi-varal*, பெ. (n.) ***இழிப்புச் சுவை;*** emotion of disgust one of eight mey-p-pāḍu. "மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு யாப்புற வந்த இளிவரல் நான்கே" (தொல்,பொருள்,மெய்.6) (செ.அக.).

[இளி + வரல்; இளிவரல் = இகழ்ச்சிவரல்.]

இளிவு *iḷivu*, பெ. (n.) 1. ***இகழ்ச்சி;*** disgrace, ridicule. "இளிவென்னு மேதப்பாடு" (குறள்.464). 2. ***இழிதகவு*** (திவா.); wretchedness, lowness in rank or character. 3. ***அருவருப்பு;*** disgust. "இரவும் பகலும் இளிவுடன் தரியாது" (மணி.6.28).

[இளி → இளிவு.]

இளை[1] *iḷai*, பெ, (n.) 1. ***தலைக்காவல்*** (திவா.); main guard; strong watch in a fortress. 2. ***காவற்காடு;*** jungle growth maintained as a defence around a fortified city. "இளையுங் கிடங்குஞ் சிதைய" (பு.வெ. 5,3). 3. ***கட்டுவேலி;*** hedge, fence, protecting enclosure. "இளைசூழ் மிளை" (சிலப்.14,62) (செ.அக.).

[மிளை → இளை. மிளை - மிடைந்துகட்டும் வேலி காவற்காடு.]

க. எளெ.

[இள் → இளை.]

இளை[2] *iḷai*, பெ. (n.) ***திருமகள்*** (ஆ.அக.); Lakshmi the goddess.

[இள் → இளை.]

இளை[3] *iḷai*, பெ. (n.) ***இளைப்பு;*** lean. (ஆ.அக.).

[இள் → இளை.]

இளை[4]**-த்தல்** *iḷai-*, 4 செ.கு.வி. (v.i.) 1. ***சோர்தல்;*** to grow weary, to be fatigued, to get exhausted. "எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன்" (திருவாச.1,31). 2. ***மெலிதல்;*** to be emaciated, to grow lean, to become worn out. "இளைத்தனர் நாயனா ரென்று" (பெரியபு.கண்

ணப்.123). 3. ***பின்னடைதல்;*** to fail before a foe; to lag behind a rival; to yield to superior force. "மதனனம்புக் கிளையார்" (பதினொ.திருவிடை.மும்.21). 4. ***ஏழைமைப்படுதல்;*** to become impoverished. 'அந்தக் குடும்பம் இளைத்துப் போயிற்று' (கொ.வ.). 5. ***வளங் குறைதல்;*** to reach the stage of diminishing returns as land; to grow weak and lacking in fruitfulness, as trees, to fade, lose vigour, as a plant. 'பயிர் இளைத்துக் காட்டுகிறது' (வின்.) (செ.அக.).

[இள → இளை-தல்.]

இளை[5]-த்தல் *iḷai-,* 4 செ.கு.வி. (v.i.) ***நெகிழநிற்றல்;*** to get slack. "தானே யிளைக்கிற் பார்கீழ் மேலாம்" (திவ்.இயற்.பெரியதிருவந்.24) (செ.அக.).

[இள → இளை → இளை-த்தல்.]

இளை[6] *iḷai-,* பெ. (n.) 1. ***கிடங்கு;*** ditch, moat. 2. ***கரடி;*** Indian black bear. (செ.அக.).

[இல் - இள் - இளை.]

இளை[7] *iḷai,* பெ. (n.) 1. ***தம்பி;*** younger brother. 'இளைபுரிந் தனித்தன்மே லிவர்ந்த காதலன்' (கம்பரா. கவந்த.27) (செ.அக.). 2. ***இளைமை;*** tenderness;

க. எளெ.

[இள - இளை.]

இளை[8] *iḷai,* பெ. (n.) ***முகில்*** (பிங்.); cloud. (செ.அக.).

[இல் - இள் - இளை.]

இளை[9] *iḷai,* பெ. (n.) ***நிலம்;*** earth. "இளையெனுந் திருவினை யேந்தினான்" (கம்பரா.கிளை.119).

[இள் → இளை.]

இளைச்சி *iḷaicci,* பெ. (n.) ***தங்கை;*** younger sister. "அகிலமுண்டார்க்கு நேரிளைச்சி" (திருப்பு.1037) (செ.அக.).

[இள் - இள - இளைச்சி.]

இளைசு *iḷaisu-,* பெ. (n.) ***இளைது*** பார்க்க; see *iḷadu.*

[இளைது - இளைசு.]

இளைஞன் *iḷainan,* பெ. (n.) 1. ***விடலைப் பருவத் தன்;*** lad, youngman. "இளையோர் சிந்தைபோல்" (கம்பரா.நாட்டுப்.52). 2. ***தம்பி*** (வின்.); younger brother. (செ.அக.).

[இள் - இளை → இளைஞன்.]

இளைத்தமண் *iḷaittaman* பெ. (n.) ***சத்துக் குறைந்த மண்;*** strengthless soil. (ஆ.அக.).

[இளைத்த + மண்.]

இளைத்தவன் *iḷaittavan,* பெ. (n.) 1. ***எளிமைப்பட்ட வன்;*** poorman. 2. ***மெலிவடைந்தவன்*** (கொ.வ.); weakman. (செ.அக.).

[இளை → இளைத்தவன்.]

இளைது *iḷaidu,* பெ. (n.) 1. ***முதிராதது;*** that which is young and not fully developed. "இளைதாக முண்மரங் கொல்க" (குறள்.879) (செ.அக.). 2. ***பக்குவம் சரியாக வராதது;*** (காய்ச்சிய எண்ணெய் போல்வன); that which is not fully boiled or heated (சேரநா.). 3. ***தாழ்ந்தது, குறைவு;*** inferiority, baseness, disgrace. (சேரநா.).

ம. இளது.

[இள் → இளை → இளையது → இளைது.]

இளைப்படு-தல் *iḷai-p-padu-,* 20 செ.கு.வி. (v.i.) ***வலையிலகப்படுதல்*** (அகநா.3,உரை); to be caught in the snare. (செ.அக.).

[இளை + படு.]

இளைப்படுபேடை *iḷai-p-padu-pēdai,* பெ. (n.) ***காவ லெய்திய பேடை;*** female detained for protection. "இளைப்படு பேடையிரிய" (அகம்.310-15) (சங்.இலக்.சொற்) "பருந்திளைப் படூஉம் பாறுதலை யோமை" (அகநா.21-15) (சங்.இலக்.சொற்).

[இள் → இளை → இளைப்படு + பேடை.]

இளைப்பாற்றி[1] *iḷaippāṟṟi,* பெ. (n.) ***இளைப்பை நீக்குதல்;*** that which refreshes; that which relieves fatigue. "கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த குளிர்தருவே" (திருவருட்பா) (செ.அக.).

[இளைப்பு + ஆற்றி.]

இளைப்பாற்றி[2] *iḷaippāṟṟi,* பெ. (n.) ***களைப்பை யாற்றும் சிற்றுணவு;*** refreshing light food after fatigue, refection. (சா.அக.).

[இளைப்பு + ஆற்றி.]

இளைப்பாற்று-தல் *iḷaippāṟṟu-,* 15 செ.கு.வி. (v.i.) ***விடாய் தீர்த்தல்;*** to refresh; to relieve fatigue, cause to rest,to quench thirst. (செ.அக.).

[இளைப்பு + ஆற்று.]

இளைப்பாறு-தல் *iḷaippāṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ***விடாய் நீங்குதல்;*** to allay fatigue by taking rest, enjoy repose after fatiguing work. 2. ***இளைப்பாறப் பொழுதின்றி நீங்கி ஓய்ந்திருத்தல் (இ.வ.) to retire from active work, as a pensioner. (செ.அக.).***

[இளைப்பு + ஆறு.]

இளைப்பாறுதல் *iḷaippāṟudal,* பெ. (n.) ***துஞ்சுதல்;*** eternal rest. "மேரியம்மாள் கருத்தருடைய இளைப்பாறு தலுக்குட் பிரவேசித்தாள்" (Chr.).

[இளைப்பு + ஆறுதல்.]

இளைப்பிருமல் *iḷaippirumal* பெ. (n.) ***இளைப்பை யுண்டாக்குமோர் வகைக் காசநோய்;*** a form of asthma causing fatigue by coughing. (சா.அக.).

[இளைப்பு + இருமல்.]

இளைப்பு[1] *iḷaippu*, பெ. (n.) 1. ***சோர்வு;*** weariness, fatigue, lassitude. "இளைப்பெய்த" (திவ்.இயற்.பெரிய திருவ.23). 2. ***அச்சம்;*** affliction, distress. "இளைப் பினை யியக்க நீக்கி" (திவ்.திருக்குறுந்.18) (செ.அக.).

ம. இளப்பு; **க.** டப்பு; **தெ.** ட்ய்யு; **கோத.** எள்வ்; **துட.** எள்வ்; **கொலா.** டய்.

[இளை - இளைப்பு.]

இளைப்பு[2] *iḷappu*-, பெ. (n.) ***மெலிவு*** (ஆ.அக.); leanness; emaciation.

[இளை - இளைப்பு.]

இளைமை *iḷaimai*-, பெ. (n.) ***இளமை*** பார்க்க; (செ.அக.); see *iḷamai*.

[இள - இளமை - இளைமை.]

இளைய ஆடுநடை *iḷaiya āḍu naḍai* பெ. (n.) ***இளமையில் அசைந்தியங்கும் நடை;*** swing walking "வாடாப் பைம்மயிரிளைய வாடுநடை" (பதிற்றுப். 12:11).

[இள் → இளைய + ஆடுநடை.]

இளைய நயினார் *iḷaiya-nayiṉār*-, பெ. (n.) ***முருகக் கடவுள்;*** Lord Murugan (M.E.R.507 of 1929-30); (செ.அக.).

[இள - இளைய + (நாயனார்) நயினார்.]

இளைய பிள்ளையார் *iḷaiya-piḷḷaiyār*, பெ. (n.) ***முருகக் கடவுள்;*** Muruga, the younger son of Śiva as dist. for Mūtta-pillaiyar. (செ.அக.).

[இள - இளைய + பிள்ளையார்.]

இளைய பெருமாள் *iḷaiya-perumāḷ*-, பெ. (n.) ***இராம னின் தம்பி; காட்டுக்கு இராமனோடு துணையாகச் சென்ற; இலக்குவன்*** (திவ்.திருநெடுந்.21,வ்யா.); lit; the junior Lord, an appellation of Lakṣhmana, who was the younger brother of Rāma the Perumāl or Lord, and who accompanied his elder brother through his voluntary exile. (செ.அக.).

[இள - இளைய + பெருமாள்.]

இளையம் *iḷaiyam*., பெ. (n.) ***இளமையையுடையது;*** that which is tender and young. "இளைய்மாகத் தழையா யினவே" (புறநா.248-2).

[இளை - இளையம்.]

இளையமரக்கால் *iḷaiya-marakkāl*, பெ. (n.) ***சிறு மரக்கால்;*** a small marakkāl. 'கலத்துவாய்த் தூணி இளையமரக்காலால் வரிசையிட்ட படி' (S.I.I.IV,30) (செ.அக.).

[இளம் - இளைய + மரக்கால்.]

இளையர் *iḷaiyar*, பெ. (n.) 1. ***இளைஞர்*** (பரிபா.6.27); youths, youngmen. 2. ***வேலைக்காரர்;*** servants. "இளையர் விருந்தினர்" (தொல்.பொ.193) (செ.அக.).

[இள → இளையர்.]

இளையவர் *iḷaiyavar*, பெ. (n.) ***இளம்பெண்கள்;*** young women. "இளையவர் வலைப்பட்டிருந்து" (தேவா. 462,9).

[இள → இளையவர்.]

இளையவள் *iḷaiyavaḷ*, பெ. (n.) ***திருமகள்;*** Lakshimi.

[இள் - இளை - இளையவள்.]

இளையவன் *iḷaiyavaṉ*, பெ. (n.) 1. ***அகவையிற் குறைந்தவன்;*** younger person, one who is junior in age. அவன் எனக்கு இளையவன். 2. ***விடலைப்பரு வத்தன்;*** lad, youth. 3. ***தம்பி;*** younger brother, so called because he is junior than oneself. "இதனைக் கேட்ட விளையவன்" (கம்பரா.மூலபல.62). 4. ***முரு கன்*** (திருவிளை.கடல்சுவற.1.); Murugan (செ.அக.).

ம. இளையவன்.

[இள → இளையவன்.]

இளையன் *iḷaiyaṉ*, பெ. (n.) ***தம்பி;*** younger brother. "வாலியோற்கவனிளையன்" (பரிபா.2,21).

[இள → இளையன்.]

இளையாட்டக்குடி *iḷaiyaṭṭa-k-kuḍi*-, பெ. (n.) ***நாட் டுக்கோட்டை செட்டிமார் பிரிவிலொன்று*** (அபி. சிந்.); a sub-division among the Nāttu-k-kottai chetty caste, and they are living in and around the village iḷaiyaṭṭa-k-kuḍi in Ramnad District.

[இள → இளை + ஆட்டக்குடி. ஆட்டக்குடி என்னும் ஊரின் தொடர்பால் பெற்ற பெயராயிருக்கலாம்.]

இளையார்[1] *iḷaiyār*, பெ. (n.) 1. ***பெண்கள்;*** young women, lasses. "முற்றா விளையார் விளையாட்டொடு" (திவ்.பெரியதி.3,8,8). 2. ***தோழியர்;*** female attendants. "இளையார் குழாத்திடையாள்" (சீவக.2585) (செ.அக.).

[இளை → இளையார்.]

இளையார்[2] *iḷaiyār*, பெ. (n.) ***கொழுந்தர்*** (இ.வ.); husband's younger brothers. (செ.அக.).

[இளை - இளையார்.]

இளையாழ்வார் *iḷai-y-āḻvār*, பெ. (n.) ***இராமானுசர்*** (குருபரம்); a distinctive appellation of Irāmāṉucar who is also called Laksmaṇa. (செ.அக.).

[இளம் - இளைய + ஆழ்வார்.]

இளையாள் *iḷaiyāḷ*, பெ. (n.) 1. ***தங்கை;*** younger sister. 2. ***திருமகள்*** (பிங்.); Lakshmi, as the younger of two sisters, mūtēvi being the elder. 3. ***பின் முறை மனைவி;*** any wife married after the first. (செ.அக.).

[இளை - இளையாள்.]

இளையான் *iḷaiyāṉ*, பெ. (n.) 1. ***தம்பி;*** younger brother. "அவனுமுனக் கிளையானோ" (கம்பரா.சூர்ப்ப.132). 2. ***இளமையுடையவன்*** (சீவக.1593); lad, youth.

ம. இளையான்; க. எளெய.

[இளை + ஆன்.]

இளையான்குடிமாறநாயனார் *iḷaiyāṉ-kuḍi-māṟa-nāyaṉār* பெ. (n.) ***நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர்*** (பெரியபு.); a canonized Saiva saint, one of Arupattu-mūvar. (செ.அக.).

[இளையான் குடி - ஊர்; மாறன் - இயற்பெயர். நாயனார் சிவத்தொண்டினால் பெற்ற பெயர். இளையான் + குடி + மாறன் + நாயன் + ஆர்.]

இளையெள் *iḷai-y-eḷ,* பெ. (n.) ***முற்றாத எள்*** (பிங்.); unripe rape seed. (செ.அக.).

[இளை + எள்.]

இளையோன்[1] *iḷai-y-ōn;* பெ. (n.) 1. ***சிறுவன்*** (பிங்.); boy, lad, youth. 2. ***தம்பி*** (பிங்.); younger brother. (செ.அக.).

ம. இளயோன்.

[இளை + ஆன் - இளையான் - இளையோன்.]

இளையோன்[2] *iḷaiyōṉ,* பெ. (n.) ***முருகக்கடவுள்*** (தக்கயாகப்.5,உரை); Murugan. (செ.அக.).

[இளை → இளையன் → இளையான் → இளையோன்.]

இற்கடை *iṟkaḍai,* பெ. (n.) ***வீட்டுவாயில்;*** entrance to a house. "இற்கடை... யூர்ந்தாயுநீ" (கலித்.97) (செ.அக.).

[இல் + கடை.]

இற்கிழத்தி *iṟ-kiḻatti,* பெ. (n.) ***குடும்பத்தலைவி;*** wife, who is the mistress of the house. "தனதிற்கிழத்தி தனையிகழின்" (கூர்மபு.தக்கன்.56).

[இல் + கிழத்தி.]

இற்செறி-த்தல் *iṟ-ceṟi-,* 4 செ.கு.வி. (v.i.) ***தலைவனைச் சந்தித்தற்கிடமின்றி, பெற்றோர் தலைவியை அவள் அகவை நோக்கி வீட்டினுள் இருத்துதல்*** (திருக்கோ.134); to restrain the heroine within the parental house in view of her adolescence, and thus indirectly impede her meeting her lover. (செ.அக.).

[இல் + செறி.]

இற்செறிவு *iṟ-ceṟivu,* பெ. (n.) ***தலைவனைச் சந்தித்தற்கிடமின்றிப் பெற்றோர் தலைவியை அவள் அகவை முதிர்ச்சி நோக்கி வீட்டினுள் இருத்துகை*** (திருக்கோ.133.கொளு); the restraint placed by her parents on the heroine in view of her reaching adolescent womanhood ;to stay within the house, which impedes her meeting her lover. (செ.அக.).

[இல் + செறிவு.]

இற்பரத்தை *iṟ-parattai,* பெ. (n.) ***காமக்கிழத்தியாகக் கொண்ட பரத்தை*** (பரிபா.6,உரை); concubine, kept as mistress, dist. fr. காதற்பரத்தை (செ.அக.).

[இல் + பரத்தை.]

இற்பாலர் *iṟ-pālar-,* பெ. (n.) ***நற்குடிப்பிறந்தவர்*** (பழ.1.84); persons of good birth, those born in a respectable family. (செ.அக.).

[இல் + பாலர்.]

இற்பிறந்தார் *iṟ-piṟandār,* பெ. (n.) ***நற்குடிப்பிறந்தார்;*** good qualities as inherited in a family. "இற்பிறந்தார் கண்ணேயும்" (குறள்.1044).

[இல் + பிறந்தார்.]

இற்பிறப்பு *iṟ-piṟappu-,* பெ. (n.) ***உயர்குடிப்பிறப்பு;*** descent from a good family, of noble extraction. "இற்பிறப் பறியீர்" (திவ்.பெரியதி.1,1,7) (செ.அக.).

[இல் + பிறப்பு.]

இற்புலி *iṟ-puli-,* பெ. (n.) ***பூனை*** (பிங்.); lit. domestic tiger, a familiar name for the cat. (செ.அக.).

[இல் + புலி.]

இற்றவை *iṟṟavai* பெ. (n.) ***முறிந்தவை;*** broken, wornout, corroded. "நறுவடி ஆர் இற்றவை போலழிய" (கலி 84-2).

[இறு + அவை - இற்றவை.]

இற்றி[1] *iṟṟi,* பெ. (n.) ***ஊன்*** (வின்.); meat. (செ.அக.).

[இல் + தி - இற்றி.]

இற்றி[2] *iṟṟi,* பெ. (n.) ***இத்தி;*** tailed oval-leaved fig. (செ.அக.) "கல்லிவரிற்றி" (ஐங்குறு.279).

[இல் + தி - இத்தி - இற்றி.]

இற்றிறந்துபோ-தல் *iṟṟiṟandu-pō-,* 8 செ.கு.வி. (v.i.) ***ஏழ்மையினால் இறத்தல்;*** to die of poverty. (சா.அக.).

[இற்று + இறந்து + போதல்.]

இற்று[1] *iṟṟu,* வி.மு. (fin.v.) ***இத்தன்மையுள்ளது;*** form of a verb, meaning, (lt.) is of such a nature. "இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்" (தொல்.சொல்.19) (செ.அக.).

[இல் + து → இற்று.]

இற்று[2] *iṟṟu,* இடை. (part.) ***ஒரு சாரியை*** (நன்.244); a euphonic particle occuring in the combination of the different parts of the same word, or of two distinct words, as in அவையிற்றை, பதிற்றுப்பத்து.

ம. இற்று

[இல் + து.]

இற்றுச் சொட்டு-தல் *iṟṟu-c-coṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) ***நீர் இடைவிட்டுச் சொட்டுதல்;*** to exude and drip at intervals, as water. (செ.அக.).

ம. இற்றிக்குக.

[இறு - இற்று + சொட்டுதல்.]

இற்றுப்போ-தல் *irru-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) ***நைந்து போதல்;*** to be worn off, reduced, broken; to become decayed. (செ.அக.).

[இறு → இற்று + போதல்.]

இற்றும் *irrum*, கு.வி.எ. (adv.) ***மேலும்;*** moreover, besides, further. 'இற்றுங்கூறுவேன்' (பெருங்.வத்தவ. 6,38) (செ.அக.).

[ஒருகா. இன்னும் → இத்தும் → இற்றும்.]

இற்றுவிழு-தல் *irru-vilu-*, 2 செ.கு.வி. (v.i.) ***நைந்து கெட்டு விழுதல்;*** to decay and fall. 'மரம் இற்று விழுந்தது' (வின்.) (செ.அக.).

[இறு - இற்று + விழு.]

இற்றை *irrai*, கு.வி.எ. (adv.) ***இன்றைக்கு;*** to day. "இற்றைப் பறைகொள்வா னன்றுகாண்" (திவ்.திருப்பா. 29) - பெ. (n.) இன்று; this day "இற்றையில் விளித்தனை" (கந்தபு.தெய்வயா.5) (செ.அக.)..

[இன்று → இற்றை (வலித்தல் திரிபு).]

இற்றைத்திங்கள் *irrai-t-tingal* பெ. (n.) ***இந்தத் திங்கள்,*** this month "இற்றைத் திங்களிவ் வெண்ணிலவின்" (புறநா.112) (சங்.இலக்.சொற்).

[இற்றை + திங்கள்.]

இற்றைநாள் *irrainā!*, பெ. (n.) ***இன்று;*** this day; today. (சா.அக.).

[இன்று → இன்றை - இற்றை + நாள்.]

இற-த்தல் *ira-*, 3 செ.குன்றாவி. (v.t.) ***கடத்தல்;*** to go beyond, transcend, pass over. "புலவரை யிறந்த தோன்றல்" (புறநா.21) - 3 செ.கு.வி. (v.i.) 1. ***கழிதல்;*** to pass by, elapse, as time. "இறந்தநாள் யாவர் மீட்பார் (சீவக.2616). 2. ***நெறிகடந்து செல்லுதல்;*** to transgress, trespass, overstep. "இல்லிறப்பா னெய்தும்... பழி" (குறள்.145). 3. ***மிகுதல்,*** to excel, to be pre-eminent. "இறந்த கற்பினாட்கு" (கலித்.9). 4. ***சாதல்:*** to die. "இறந்தாரை யெண்ணிக் கொண் டற்று" (குறள்.22). 5. ***வழக்கு வீழ்தல்;*** to cease to be current, become obsolete. 'இது இறந்த வழக்கு'. (சீவக.2108, உரை). 6. ***நீங்குதல்;*** to depart, leave. "உம்பரிமை பிறப்ப" (பரிபா.17,31) (செ.அக.).

ம. இறக்குக.

[இள் - இறு - இற. இறு = பின்வாங்குதல்; இற = பின்தங்கச் செய்தல்.]

இறக்கம்[1] *irakkam*, பெ. (n.) 1. ***இறங்குகை;*** descent, debarkation. 2. ***சரிவு;*** declivity, slope, depression. 'ஏற்றமு மிறக்கமுமான வழி'. 3. ***இறங்குதுறை*** (வின்.); ford, crossing of a river. 4. ***விலங்குகள் செல்வழி*** (வின்.); tracks of beasts in a jungle. 5. ***நிலை தவறுகை;*** decline from a high position. "இறக்கமுற் றானென வேக்க மெய்தினான்" (கம்பரா. சடாயுகா.19). 6. ***சாவு;*** death. (செ.அக.).

ம. இறக்கம்.

[இறு - இற - இறக்கம்.]

இறக்கம்[2] *irakkam*, பெ. (n.) ***குறைவு;*** deficiency.

[இற → இறக்கம்.]

இறக்கம்[3] *irakkam*, பெ. (n.) ***உணவு முதலியன உட்செல்லுகை;*** swallowing as of food. "சோற்றிறக்கமு மறந்தான்" (குருகூர்ப்.) (செ.அக.).

[இறு → இற - இறங்கு - இறக்கு - இறக்கம்.]

இறக்கமின்மை *irakkaminmai*, பெ. (n.) ***உண்ண இயலாமை;*** loss of appetite. 'நோயாளிக்குச் சோறு இறக்கமில்லை' (சா.அக.).

[இறக்கம் + இன்மை.]

இறக்கிடு-தல் *irakkidu-*, 20 செ.கு.வி. (v.i.) ***தாழ்த்து தல்;*** to bow low or bend, as one's head. "தலையிறக்கிட் டுச் செல்வார்" (திருவிளை.திருமண.125) (செ.அக.).

[இறக்கு + இடு.]

இறக்கு[1]**-தல்** *irakku-*, 15 செ.கு.வி. (v.i.) 1. ***இறங்கச் செய்தல்;*** to lower, let-down, put down as a load; to land, unload, as from a boat. 2. ***எண்ணெய் முதலியவை வடித்தல்;*** to distil. 3. ***அடக்குதல்;*** to reduce or bring down, as pride. 'கொழுப்பை யிறக்கி விடுவேன்'. 4. ***உயர்த்துவது போல இகழ்தல்;*** to praise ironically. 5. ***கெடுத்தல்;*** to injure; to aunnul, as a charitable gift. "இத்தர்ம மிறக்குவான்" (S.I.I.I.77). 6. ***கொல்லுதல்;*** to kill, slay. "எரிமாலை வேணுதி யினிறக்கி" (சீவக.961).

ம. இறக்கு; க. எறகு.

[இற - இறங்கு - இறக்கு.]

இறக்கு[2]**-தல்** *irakku-*, 15 செ.கு.வி. (v.i.) ***பணத்தைக் கட்டாயப்படுத்தித் திரும்பப்பெறல்*** (கொ.வ.); to compel repayment. (செ.அக.).

[இறு - இற - இறக்கு.]

இறக்கு[3] *irakku*, பெ. (n.) ***இறக்குகை;*** unburdening, discharging. 'சாமானிறக்கி முடிந்ததா?' (வின்.) (செ.அக.).

[இறக்கு → இறக்கு.]

இறக்கு[4]**-தல்** *irakku-*, 15 செ.கு.வி. (v.i.) 1. ***நஞ்சைத் தணித்தல்;*** to counteract or subdue the effect of poisons or poisonous bites. 2. ***எண்ணெய், அமிலம் வடித்தல்;***

to distil, as acid; to extract, as medicinal oils. 3. ***கொல்லல்;*** to kill. 4. ***சாதல்;*** to die. (சா.அக.).

[இறுக்கு - இறக்கு.]

இறக்குங்கால் *irakkuṅkāl* கு.வி.எ. (adv.) ***உயிர்போகும் நேரத்தில்;*** at the moment of death; while dying-inarticulo martis. (சா.அக.).

[இறக்கும் + கால். கால் - பொழுது, காலம்.]

இறக்குதுறை *irakku-tuṟai,* பெ. (n.) ***பொருளிறக்குந் துறைமுகம்;*** place of debarkation or of discharging cargo. (செ.அக.).

[இறங்கு - இறக்கு + துறை.]

இறக்குமதி *irakkumadi,* பெ. (n.) 1. ***துறைமுகத்திலிருந்து பொருள் இறக்குகை;*** importing. 2. ***இறக்குந் துறைமுகப் பொருள்கள்;*** imports.

ம. இறக்குமதி.

[இறக்கு + மதி. மதி - தொழிற்பெயரீறு.]

இறக்கை[1] *irakkai,* பெ. (n.) ***சிறகு;*** wing, pinion. (செ.அக.).

தெ. ரெக்க.

[இறுக்கு = தாழ்த்து. இறக்கு - இறக்கை = தாழ்த்தியுயர்த்தும் உறுப்பு.]

இறக்கை[2] *irakkai,* பெ. (n.) ***கண்ணாற்றின் இருபுறங்கவிலுமுள்ள துணைச்சுவர்*** (கட்டட.நாமா); wing wall. (செ.அக.).

தெ. ரெக்க.

[இறக்க - இறக்கை போல் இருபுறத்துமுள்ள சுவர்.]

இறக்கைச்சுவர் *irakkai-c-cuvar,* பெ. (n.) ***துணைச் சுவர்*** (C.E.M.); wing-wall. (செ.அக.).

[இறக்கை + சுவர்.]

இறகர் *iragar* பெ. (n.) 1. ***சிறகு;*** wing, pinion. 2. ***இறகு*** (வின்.); feather. (செ.அக.).

[இறகு + அர்.]

இறகின்முள் *iragiṉ-muḷ,* பெ. (n.) ***இறகின் அடிக் குருத்து*** (சூடா.); quill of a feather. (செ.அக.).

[இறகு + இன் + முள்.]

இறகு *iragu,* பெ. (n.) 1. ***சிறகு;*** wing; pinion. 2 ***தனியிறகு;*** feather, quill. 3. ***மயிற்பீலி*** (திவா.) peacock's feather. (செ.அக.).

[இறு - ஒடிதல், வளைதல், தாழ்தல். இறு - இற - இறகு.]

இறகுக்கூடு *iragu-k-kūḍu,* பெ. (n.) ***தூவல்*** (பேனா) ***வைக்குங் கூடு;*** pen rack. (செ.அக.).

[இறகு = எழுத உதவும் இறகின் அடி. எழுதுகருவி. எழுது கோல். இறகு + கூடு.]

இறகுதூவல் *iragu-tūval,* பெ. (n.) ***இறகாலான எழுதுகோல்;*** quill pen. (செ.அக.).

[இறகு + தூவல்.]

இறகுதூவல்

இறகுபேனா *iragu pēṉā,* பெ. (n.) ***இறகு தூவல்*** பார்க்க; see *iragu tūval.*

[இறகு + (E.Pen) பேனா.]

இறகுமஞ்சள் *iragu-mañjaḷ,* பெ. (n.) ***சாப்பிராவிரை*** (L.); arnotto. (செ.அக.).

[இறகு + மஞ்சள்.]

இறகுளர்-தல் *iraguḷar-,* 4 செ.கு.வி. (v.i.) ***சிறகடித்துக் கொள்ளுதல்;*** to flap the wings, as a bird. "எருவை யிறகுளரும்" (பு.வெ.9,19) (செ.அக.).

[இறகு + உளர்.]

இறகெறும்பு *iragerumbu,* பெ. (n.) ***சிறகுள்ள எறும்பு*** (m.m.); winged red ant, drepanagnathus saltator. (செ.அக.).

[இறகு + எறும்பு.]

இறங்கச்சங்கு *iraṅga-c-caṅgu-,* பெ. (n.) ***கோயிற்குக் கொடையளித்தோர் சிவிகை முதலியவற்றிலிருந்து இறங்கும்போது மதிப்புக்காக முழக்கப்படும் சங்கு*** (இ.வ.); blowing the chank, in honour of a chief or of any liberal donar to a temple just when he alights from his vehicle; dist fr. ஏறச்சங்கு. (செ.அக.).

[இறங்கு + சங்கு → இறங்கச்சங்கு.]

இறங்கண்டம் *iraṅgaṇḍam,* பெ. (n.) ***அண்ட நோய் வகை; குடலிறக்க நோய்*** (ஜீவரட்.112); hernia, rupture. (செ.அக.).

[இறங்கு + அண்டம்.]

இறங்கமாட்டான் *iraṅa-māṭṭāṉ,* பெ. (n.) ***கீழைநாட்டு நெல்வகை*** (யாழ்ப்); Burmese paddy. (செ.அக.).

இறங்கர் *iraṅgar,* பெ. (n.) ***குடம்*** (பிங்.); water pot. (கொ.வ.) (செ.அக.).

[இடங்கர் → இறங்கர்.]

இறங்கல் *iṟaṅgal,* பெ. (n.) 1. ***இறங்குமிடம்;*** place of descent, of debarkation. 2. ***அடைபடுகை*** (S.I.I. 1, 119); state of being closed; neglected condition, as of a temple. 3. ***அரசிறையின்மை*** (I.M.D.cg.1068); exemption from taxation. 4. ***நெல்வகை*** (Rd.); a variety of coarse paddy sown in July, and harvested after six months. (செ.அக.).

ம. இறங்கல்.

[இறங்கு → இறங்கல்.]

இறங்கல்மீட்டான் *iṟaṅgal-miṭṭāṉ,* பெ. (n.) ***ஒரு வகை நெல்;*** a kind of paddy. "போரிறங்கல்மீட்டான் புழுதிபு ரட்டி" (நெல்விடுதூது.189) (செ.அக.).

[இறங்கல் + மீட்டான்.]

இறங்கலிடு-தல் *iṟaṅgal-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. ***போதல்;*** to pass away, vanish. "ஏதங்களாயின வெல்லா மிறங்கலிடு வித்து" (திவ். பெரியாழ்.5,2,8). 2. ***கொடை, வழிபாடு முதலியன நிறுத்துதல்;*** to neglect, as a charitable endowment; to close, as a temple. "தானத்தை இறங்கலிட்ட இதுவும்" (S.I.I.1,119) (செ.அக.).

[இறங்கல் + இடு.]

இறங்கழிஞ்சில் *iṟaṅgaḻiñjil,* பெ. (n.) ***அழிஞ்சில்வகை*** (இ.வ.); sage-leaved alangium. (செ.அக.).

[இறங்கு + அழிஞ்சில்.]

இறங்கு[1]-தல் *iṟaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ***விட்டு நீங்குதல்;*** to leave, abandon. "அருணோக்க மிறங்காத தாமரைக்கணெம் பெருமான்" (கம்பரா.விராதன்.50). 2. ***தொடங்குதல்;*** to commence, begin to act. 'அற வழியில் இறங்கியுள்ளான்.' (செ.அக.).

[இறு - இற - இறங்கு.]

இறங்கு[2]-தல் *iṟaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ***இழிதல்;*** to descend; to get down, as from a tree; to alight, as from a horse; to fall, as rain; to flow down, as a torrent. 2. ***கரைசேர்தல்;*** to disembark, to be unladen. 'கப்பலிலிருந்து பயணிகள் இறங்கின பின்புதான் பொருள்கள் இறங்கும்.' 3. ***அடியில் தங்குதல்;*** to sink to the bottom as sediment in water. 'கலங்கல் தெளியும்பொழுது அழுக்கெல்லாம் அடியில் இறங்கிவிடுகிறது.' 4. ***உட்செல்லுதல்;*** to settle into its place, as a peg in a hole; to be driven home, as a nail. 'பலகையினுள்ளே ஆணியெல்லாம் இறங்கின.' 5. ***தங்குதல்;*** to halt; to stay; to encamp, as a company or an army. 'முதலியார் சென்னையில் சத்திரத்தில் இறங்குவது வழக்கம்.' 6. ***தாழ்வடைதல்;*** to be reduced in circumstances. 'அந்தக் குடும்பம் இறங்கிப் போயிற்று' (கொ.வ.). 7. ***நஞ்சு, நோய் முதலியன தணிதல்;*** to abate, as poison, small pox and other diseases, which are popularly supposed to pass away from the head, downward, to the extremities. 8. ***விலை குறைதல்;*** to fall or be reduced, as the prices of articles. 'அரிசி விலை இறங்கியிருக்கிறது.' (கொ.வ.). 9. ***தாழ்ந்து வணங்குதல்;*** to bow respectfully, show reverence. "இறங்கிச் சென்று தொழுமின்" (தேவா.1131,2). 10. ***நிலைகுலைதல்;*** to fall from a high state. "இறங்கு கண்ணிமையார்" (சீவக.248) (செ.அக.).

ம. இறங்ஙுக; **க.,** **பட.** எறகு, இறகு; **தெ.** எறகு; **கோத.** எர்க்; **துட.** எர்க்; **குட.** எறங்க்; **பிரா.** இரிங்க்.

[இள் → இற → இறங்கு.]

இறங்குஓரை *iṟaṅgu ōrai,* பெ. (n.) ***ஞாயிறு தென் திசையில் செல்வதற்கு இடமாய்க் கடக முதல் சிலை வரையுள்ள ஆறு ஓரைகள்;*** six signs through which the sun passes in its southern course.

[இறங்கு + ஓரை.]

இறங்குகிணறு *iṟaṅgu-kiṇaṟu,* பெ. (n.) ***உள்ளிறங்கிச் செல்வதற்குப் படிவரிசையுள்ள கிணறு*** (இ.வ.); well with steps leading down to the water. (செ.அக.).

[இறங்கு + கிணறு.]

இறங்குகெண்டை *iṟaṅgu-keṇḍai* பெ. (n.) ***வலிமைக் குறைவால் சொறுக்குவாங்கல் அதாவது நரம்பு இழுத்தல்;*** the alternate contraction or relaxation of muscles-clonic spasm. It is opposed to ஏறுகெண்டை, another form of spasm. (சா.அக.).

[இறங்கு + கெண்டை.]

இறங்குசட்டம் *iṟaṅgu-caṭṭam,* பெ. (n.) 1. ***மாட்டுக் குற்ற வகை*** (பெரியமாட்.18); a defect in cattle. (செ.அக.). 2. ***வீழ்ச்சிக்காலம்;*** a time of loses. "அவனுக்கு இப்போ இறங்குசட்டம்; தொட்டதெல்லாம் நட்டமாகுது". (முகவைவழக்.)

[இறங்கு + சட்டம் - மாட்டுக்குரிய மச்சங்களுள் ஒன்று.]

இறங்குசாத்து *iṟaṅgu-cāttu,* பெ. (n.) ***செட்டிமார்களுள் ஒரு சாரார்*** (S.I.I. VIII, 232); a sect of the chetti caste. (செ.அக.).

[இறங்கு + சாத்து. இறக்குமதி செய்யும் வணிகர்.]

இறங்குதுறை *iṟaṅgu-tuṟai,* பெ. (n.) ***இழியும். நீர்த் துறை;*** landing place. (செ.அக.).

[இறங்கு + துறை.]

இறங்குநாகம் *iṟaṅgu-nāgam,* பெ. (n.) ***மாட்டுச்சுழி வகை*** (பெரியமாட்.21); a kind of curl-mark in cattle. (செ.அக.).

[இறங்கு + நாகம்.]

இறங்குநெற்றி *iṟaṅgu neṟṟi* பெ. (n.) ***முன்பக்கமாகப் புடைத்துக்காணும் நெற்றி;*** a rounded eminence projecting on the surface of the forehead - bossy fore-head. It is opposed to ஏறுநெற்றி, receding forehead. (சா.அக.).

[இறங்கு + நெற்றி.]

இறங்குபனை *irangu panai,* பெ. (n.) ***ஒருவகை யம்மை;*** a severe type of small-pox. It is opposed to ஏறுபனை. (சா.அக.).

[இறங்கு + பனை.]

இறங்குபொழுது *irangu-poludu,* பெ. (n.) ***பிற்பகல்;*** afternoon, the period of the sun's declivity from the point overhead. It is opposed to ஏறுபொழுது (செ.அக.).

[இறங்கு + பொழுது.]

இறங்குபொறை *irangu porai,* பெ. (n.) ***வளைந்த கதிர்கள்;*** stooping ears of corn due to weight of grain. "ஏனலும் இறங்குபொறை உயிர்த்தன." (அகநா. 192-8). (சங்.இலக்.சொற்).

இறங்குமிராசி *irangum-iraši,* பெ. (n.) ***இறங்கு ஓரை*** பார்க்க; see *irangu orai.*

[இறங்கும் + இராசி.]

இறங்குமுகம் *irangu-mugam,* பெ. (n.) ***தணியும் நிலை;*** declination, ebb in affairs. "என் துன்பமனைத் தும்.... ஏறுமுகங் கொண்டதல்லா லிறங்குமுக மிலை யால்" (அருட்பா.5, தனித்திருத்.12) (செ.அக.).

[இறங்கு + முகம்.]

இறங்குவெயில் *irangu-veyil,* பெ. (n.) ***பிற்பகல் வெயில்;*** decreasing sunshine, as the sun descends towards the horizon. (செ.அக.).

[இறங்கு + வெயில்.]

இறங்கொற்றி *irangorri,* பெ. (n.) ***நுகர்வு ஒற்றி*** (இ.வ.); usufructuary mortgage. (செ.அக.).

[இறங்கு + ஒற்றி.]

இறசால் *irašāl,* பெ. (n.) ***இறையால்*** (J.) பார்க்க; see *iraiyāl.* (கொ.வ.) (செ.அக.).

[இறையால் - இறசால்.]

இறஞ்சி[1] *iranji,* பெ. (n.) ***ஒருவகைத் துகில்*** (சிலப்.14, 108, உரை); garment of ancient times. (செ.அக.).

[ஒருகா. இலஞ்சி - இறஞ்சி.]

இறஞ்சி[2] *iranji,* பெ. (n.) ***அவுரி*** (மலை); Indian indigo (செ.அக.).

இறஞ்சித சேம்பு *iranjida sēmbu,* பெ. (n.) ***கருஞ் சேம்பு;*** a black variety of சேம்பு; a garden plant. caladium nymphaefolium. (சா.அக.).

[இரு = கருமை. இரு - இறு - இற - இறஞ்சிதம் + சேம்பு.]

இறட்டு-தல் *irattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***முகந்து வீசுதல்;*** to sprinkle, splash. முகத்திலே நீரை இறட்டிக் கொள்ளுதல் (திவ்.திருமா.36, வ்யா.118) (செ.அக.).

[இற - இறட்டு.]

இறடி *iradi,* பெ. (n.) 1. ***தினை;*** Italian millet. "இறடிப் பொம்மல் பெறுகுவிர்" (மலைபடு.169). 2. ***கருந்தினை*** (திவா.); black Italian millet. (செ.அக.).

[இரு → இறு → இறடி. மு.தா.197.]

இறடிப்பொம்மல் *iradi-p-pommal,* பெ. (n.) ***தினைச் சோறு;*** cooked Italian millet. "இறடிப்பொம்மல் பெறுகு விர்". (மலைபடு.169) (சங்.இலக்.சொற்).

[இறடி + பொம்மல்.]

இறத்தல் *irattal,* பெ. (n.) 1. ***சாதல்;*** dying. 2. ***மிகுதி;*** being in excess. (சா.அக.).

[இற - இறத்தல்.]

இறத்திர் *irattir,* வி.மு. (v.) ***கடப்பீர்;*** let you pass. "குன்றழல் வெஞ்சுரம் இறத்திரால் ஐய" (கலித்.25-12) (சங்.இலக்.சொற்.).

[இற - இறத்திர்.]

இறந்த கற்பினாள் *iranda karpināl,* பெ. (n.) ***மிக்க கற்பினையுடையாள்;*** woman of perfect chastity. "இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்". (கலித்.9-21).

[இறந்த + கற்பினாள்.]

இறந்தகால இடைநிலை *iranda, kāla-idainilai,* பெ. (n.) ***சென்ற காலத்தைக் காட்டும் இடைநிலை;*** particle indicating past tense.

[இறந்த + காலம் + இடைநிலை.]

இறந்தகாலம் *iranda-kālam,* பெ. (n.) 1. ***சென்ற காலம்*** (மணி.30,14); past time. 2. ***முக்காலத்தொன்று*** (நன். 142); past tense. (செ.அக.).

[இற → இறந்த + காலம்.]

இறந்தது *irandadu,* பெ. (n.) ***தாண்டிச் சென்றது;*** that which has crossed. "பெருமலை இறந்தது நோவேன்". (அகநா.93-3).

[இற - இறந்தது.]

இறந்தது விலக்கல் *irandadu-vilakkal,* பெ. (n.) ***உத்தி 32-இல் ஒன்று*** (நன்.14); rejection of an obselete expression or usage, one of 32 utti. (செ.அக.).

[இறந்தது + விலக்கல்.]

இறந்தவழக்கு *iranda-valakku,* பெ. (n.) ***வீழ்ந்த வழக்கு*** (சீவக.2108, உரை); obselete usage. (செ.அக.).

[இறந்த + வழக்கு.]

இறந்திசினோர் *irandišinōr,* பெ. (n.) ***கடந்து சென் றோர்;*** those who have crossed. "வழங்கருங் கானம் இறந்திசினோரே" (நற்.302-10).

[இற → இறந்திசினோர்.]

இறந்திரி *irandiri*, பெ. (n.) ***இத்தி*** (மலை); white fig. (செ.அக.).

[இற → இறந்திரி.]

இறந்துபடு-தல் *irandu-padu-*, 20 செ.கு.வி. (v.i.) ***சாதல்;*** to die. "எனதாற்றாமை கண்டவிடத்து இறந்து படும்" (இறை.3, உரை பக்.53).

[இற → இறந்து + படு.]

இறந்துபாடு *irandu-pādu*, பெ. (n.) ***உயிர்நீத்தல்;*** death. "இறந்துபா டாயினான்கொல்" (கந்தபு. காமதக.91) (செ.அக.).

[இறந்து + பாடு. படு - பாடு.]

இறந்துபோ-தல் *irandu-pō-*, 8 செ.கு.வி. (v.i.) ***சாதல்;*** to die. (சா.அக.).

[இறந்து + போ.]

இறந்தை *irandai*, பெ. (n.) ***அழுகல்;*** decaying. (சா.அக.).

[இற - இறந்தை.]

இறப்ப *irappa*, கு.வி.எ. (adv.) ***மிகவும்;*** much, exceedingly. "இறப்பப் புகழ்ந்தன்று" (பு.வெ.11, ஆண் பாற். 7, கொளு).

[இற - இறப்ப.]

இறப்பருங்குன்றம் *irapparuṅ kuṉṟam*, பெ. (n.) ***கடத்தற்கரிய மலை;*** unsurmountable mountain. (குறுந்.109) (சங்.இலக்.சொற்).

[இற → இறப்பு + அருமை + குன்றம்.]

இறப்பு *irappu*, பெ. (n.) 1. ***வரம்பு கடத்தல்;*** transgression, trespass. "பொறுத்த லிறப்பினை யென்றும்" (குறள்.152). 2. ***போக்கு*** (பிங்.); going, passage, passing. 3. ***சாவு*** (திருவாச.5, 12); death. 4. ***மிகுதி*** (பிங்.); excess, abundance. 5. ***உயர்ந்த பொருள்;*** that which is superior; "ஒப்பிறப்பில் வெங்கையுடையோய்" (வெங்கைக்க.75). 6. ***துறக்கம்;*** heavenly bliss, emancipation. "இறுக லிறப்பென்னும் ஞானிக்கும்" (தில்.திருவாய். 4,1,10). 7. ***வீட்டிறப்பு;*** inside or under part of a sloping roof, eaves. "இறப்பிற் றுயின்று" (திருக்கோ. 328). 8. ***இறந்த காலம்;*** past tense. "இறப்பி னெதிர்வி னிகழ்வின்" (தொல்.சொல்.202) (செ.அக.).

ம. இறப்பு; **க.** இகுர், இக்கு; **து.** இர்காவுனி.

[இற - இறப்பு.]

இறப்புபிறப்பிலான் *irappu-pirappilāṉ*, பெ. (n.) ***தோன்றலும் மறைதலுமில்லாதவன்;*** one having neither death nor birth. (சா.அக.).

[இறப்பு + பிறப்பு + இலான்.]

இறல்[1] *iral*, பெ. (n.) 1. ***இறுதி;*** ruin, disaster. "இறலீனு மெண்ணாது வெஃகின்" (குறள்.180). 2. ***சிறு தூறு*** (சூடா.); small root. 3. ***கிளிஞ்சல்*** (திவா.); bivalve shell-fish, mussel. (செ.அக.).

[இறு - இறல்.]

இறல்[2] *iral*, பெ. (n.) 1. ***ஒடிவு;*** bend. 2. ***வளைவு;*** curve. 3. ***வட்டம்;*** round.

[இறு → இறல்.]

இறல்[3] *iral*, பெ. (n.) 1. ***விசை;*** force. 2. ***நரம்பு முறிதல்;*** nerve break. (ஆ.அக.).

[இறு → இறல்.]

இறலாகிகம் *iralāgigam*, பெ. (n.) ***எரிமூலிகை;*** blistering plant.

[இறு → இறலாகிகம்.]

இறலி[1] *irali*, பெ. (n.) ***பட்டுப்பூச்சி;*** silkworm.

[இறல் - இறலி.]

இறலி[2] *irali-*, பெ. (n.) 1. ***இத்தி*** (பிங்.) பார்க்க; white fig. 2. ***கொன்றை*** (மலை.); cassia. 3. ***மருது*** (மலை.); myrobalan. (செ.அக.).

[இற - இறலி.]

இறலித்தீவு *irali-t-tīvu*, பெ. (n.) ***ஏழுதீவினுளொன்று*** (திவா.); second annular continent, one of ēḻu-tīvu-, (செ.அக.).

[இறலி + தீவு.]

இறலிப்பை *irali-p-pai*, பெ. (n.) ***பட்டுப்பூச்சிக்கூடு;*** cacoon of the silk-worm. (Pond); (செ.அக.).

[இறலி + பை.]

இறவாணம்[1] *iravāṇam*, பெ. (n.) ***தோற்கருவி வகை*** (யாழ்.அக.); tambourine. (செ.அக.).

[இற + வாணம்.]

இறவாணம்[2] *iravāṇam*, பெ. (n.) ***இறவாரம்*** பார்க்க; see *iravāram* (செ.அக.).

[இற → இறவாணம் (மு.தா.24).]

இறவாரம் *iravāram*, பெ. (n.) ***தாழ்வாரத்து மேற் கூரையின் முன்பாகம்;*** eaves of a house. (செ.அக.).

ம. இறவாரம்.

[இற → இறவாரம் (மு.தா.247).]

இறவி *iravi*, பெ. (n.) ***சாவு;*** death. "இறவியொடு பிறவியற" (திருப்பு.790) (செ.அக.).

[இற → இறவி.]

இறவின்குப்பை *iravin kuppai,* பெ. (n.) ***இறாமீனின் தொகுதி;*** cloud of prawns. "சிறுவெள் ளிறவின் குப்பை யன்ன" (அகநா.152-8).

[இற → இறவின் + குப்பை.]

இறவு[1] *iravu,* பெ. (n.) 1. ***வீட்டிறப்பு;*** sloping roof. (யாழ்.அக.). 2. ***எல்லை;*** boundary. (செ.அக.).

ம. இறவு.

[இற → இறவு.]

இறவு[2] *iravu,* பெ. (n.) 1. ***மலைச்சாரல்;*** slope of the hill. 2. ***மலை;*** mountain.

[இற - இறவு.]

இறவு[3] *iravu,* பெ. (n.) 1. ***சாவு;*** death. "பிறவியொ டிறவு மானான்" (தேவா.447,1). 2. ***நீக்கம்;*** removal, separation. "இறவு பார்க்கின்ற... இராவணன்" (கம்பரா.சடாயுவு.20). 3. ***முடிவு;*** end, termination, close. "இறவிலே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்" (திருவாச.37,6) (செ.அக.).

ம. இறவு.

[இறு → இறவு.]

இறவு[4] *iravu,* பெ. (n.) ***இறால்மீன்;*** prawn. "கடலிறவின் சூடுதின்றும்" (பட்டினப்.63). 2. ***தேன்கூடு*** (ஞான வா.தா.சூர.69); honey comb. (செ.அக.).

[இற → இறவு.]

இறவுப்புறத்தன்ன பிணர் *iravu ppurattanna pinar,* பெ. (n.) ***இறால்மீனின் முதுகுபோன்ற சருச்சரை*** (சொரசொரப்பு); texture resembling the back of prawn "இறவுப்புறத்தன்ன பிணர்படுதடவு" (நற்.19) (சங். இலக்.சொற்.).

[இற → இறவுப்புறத்தன்ன + பிணர்.]

இறவுள் *iravul,* பெ. (n.) ***குறிஞ்சி நிலம்*** (யாழ்.அக.); hilly tract. (செ.அக.).

[இற → இறவுள் - சரிவான நிலம்.]

இறவுள்ளாளன் *iravullalan,* பெ. (n.) ***உள்ளாடன் என்னும் பறவை;*** a hawk. (சேரநா.).

ம. இறவுள்ளாளன்.

[இற → இற உள்ளாளன்.]

இறவுளர் *iravular,* பெ. (n.) ***குறிஞ்சிநில மக்கள்*** (பெரியபு.கண்ணப்.16); inhabitants of the hilly tracts; hill tribes. (செ.அக.).

ம. இறவாளர்; க. எறவ, இட; தெ. எறுக்குவாண்டு.

[இறவு = மலை. இறவு + உளர்.]

இறவெள்ளம் *ira-vellam,* பெ. (n.) ***இறவினின்று*** (கூரை) ***வீழும் தண்ணீர்;*** water dropping from the eaves. (சேரநா.).

ம. இறவெள்ளம்.

[இற → இறவெள்ளம்.]

இறவை[1] *iravai,* பெ. (n.) ***ஏணி*** (சூடா.); ladder. (செ.அக.).

[இற → இறவை (சாய்வானது).]

இறவை[2] *iravai,* பெ. (n.) ***இறைகூடை*** (சூடா.); irrigation basket. (செ.அக.).

ம. இறவ.

[இற → இறவை = வளைவானது.]

இறா *irā,* பெ. (n.) ***இறால்மீன்;*** prawn, shrimp, macroura. "கயலொடு பச்சிறாப் பிறழும்" (பெரும்பாண்.270) (செ.அக.).

ம. இறாவு.

[இற → இறா - வளைவானது.]

இறாசில் *irāsil,* பெ. (n.) ***மகிழம்பூ;*** west Indian medlar-mimusops elegi.

[இற → இறாசில்.]

இறாஞ்சு-தல் *irāñju-,* 5 செ.குன்றாவி (v.t.) 1. ***பறவையறைதல்;*** to pounce or dart upon, as a brid on its prey.'பருந்து இறாஞ்சினாற் போலே' (ஈடு.7,6,1). 2. ***பறித்தல்;*** to seize by force. 'தன்னதான பூமியை மகாபலிபோல்வார் இறாஞ்சிக் கொள்ள' (ஈடு.2,8,7) (செ.அக.).

[இற - இறாஞ்சு = இறக்கையால் அடித்துப் பறித்தல்.]

இறாட்டாணியம் *irāttāniyam,* பெ. (n.) ***இடுக்கண்*** (யாழ்.அக.); distress; trouble. (செ.அக.).

[இற → இறாட்டு + ஆணியம்.]

இறாட்டு[1] *irāttu,* பெ. (n.) ***மீன்;*** fish.

[இறா → இறால் → இறாட்டு.]

இறாட்டு[2]**-தல்** *irāttu-,* 5 செ.குன்றாவி (v.t.) 1. ***உரைசுதல்*** (யாழ்.அக.); to rub against each other as bamboos. 2. ***பகைத்தல்*** (யாழ்.அக.); to hate. (செ.அக.).

[இற → இறா → இறாட்டு.]

இறாட்டுப் பிறாட்டு *irāttu-p-pirāttu,* பெ. (n.) ***எதிரிடை*** (யாழ்ப்.); quarrel, squabble, strife, scuffie. (செ.அக.).

[இறா → இறாட்டு + பிறாட்டு.]

இறாத்தல் *irāttal,* பெ. (n.) ***மீனாயத்துறை*** (யாழ்ப்.); a place where custom is paid for fish. (செ.அக.).

[இறால் + தலம் - இறாத்தலம் - இறாத்தல்.]

இறாத்தலம் *irā-t-talam,* பெ. (n.) ***இறவுமீன் விற்குமிடம்*** (இ.வ.); place where prawns are offered for sale. (செ.அக.).

[இறவு + தலம்.]

இறாப்பாவை *irā-p-pāvai,* பெ. (n.) ***பாவைபோன்ற இறால்மீன்;*** maid-prawn, "முடிவலை முகந்த முடங்கி றாப் பாவை". (நற்.49-3).

[இற → இறா + பாவை. (இறால்மீன் கைமுதலாய உறுப்புகள் போலும் முள் முதலியவற்றை யுடைத்தாகிப் பாவை போறலிற் பாவையென்றார்.]

இறாய்-த்தல் *irāy-,* 4. செ.கு.வி. (v.i.) ***பின்வாங்குதல்;*** to draw back, retreat. "அவ்விருளுக் கிறாய்த்து அங்கே யிங்கே சஞ்சரியாநிற்க" (ஈடு.2,1,8) (செ.அக.).

[இற → இறாய்.]

இறால்[1] *iṟāl,* பெ. (n.) 1. ***மீன்வகை,*** (பிங்.); shrimp, prawn, macroura. 2. ***வெள்ளிறால்;*** bluish sea-fish. 3. ***ஆரல்*** (கார்த்திகை) (திவா.); the third naksatra. (செ.அக.).

ம. இறாவு.

[இற - இறால்.]



இறால் 1 - ஆண்



இறால் 2 - பெண்

இறால்[2] *iṟāl,* பெ. (n.) 1. ***எருது;*** bull. 2. ***விடைஒரை;*** sign of taurus.

[இறு - இற - இறல் - இறால்.]

இறால்[3] *iṟāl,* பெ. (n.) ***தேன்கூடு;*** honey comb. "பெருஞ்சினை தொடுத்த நெடுங்கண் இறாஅல்" (நற்.168).

[இறல்[2] - இறால்.]

இறால்[4] *iṟāl,* பெ. (n.) ***தங்குதல்;*** staying. "ஊர்முகத் திறா அலியரோ பெரும நின்றானை" (பதிற்.40-2).

[இறு - இறல் - இறாஅல் (உயிரளபெடை.).]

இறால்வறையல் *iṟāl-vaṟaiyal,* பெ. (n.) ***வறுத்த இறால்*** (வின்.); roasted shrimps prepared as a curry. (செ.அக.).

[இறால் + வறையல்.]

இறாவிமுகன் *iṟāvimugaṉ* பெ. (n.) ***கொல்லு நாபி;*** aconite of a killing nature. (சா.அக.).

[இறாவி + முகன்.]

இறாவு-தல் *iṟāvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***வாட்டி மயிர்போக்க வழித்தல்;*** to scrape off, after roasting, as the skin of a pig to remove the hair. "நளிபுகை கமழா திறாயினர் மிசைந்து" (மலைபடு.249) (செ.அக.).

இறாற்று *iṟāṟṟu,* பெ. (n.) 1. ***பெருவகை இறால்மீன்;*** a large species of prawn. 2. ***தேன்கூடு;*** honey comb. (சா.அக.).

[இறால் + இறட்டு → இறாட்டு - இறாற்று.]

இறு[1]-தல் *iṟu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ***முறிதல்;*** to break; to snap, as a stick; to become severed, as a limb; to crackle and split. "பீலிபெய் சாகாடு மச்சிறும்" (குறள்.475). 2. ***சாதல்;*** to perish, die. "இறுமளவு மின்புறுவ தின்புற்று" (நாலடி.209). 3. ***முடிவுறுதல்;*** to end, terminate "உயிரிறு கிளவியும்" (தொல்.எழுத். 202). 4. ***கெடுதல்;*** to moulder, to be corroded, to decay. "கபால முமிற்று மண்ணாமே" (திருமந்.371). 5. ***தளர்தல்;*** to grow weak, to be wearied. "பாதவைப்பிற" (இரகு.தேனு.45) (செ.அக.).

ம. இறு, இறுக.

[உறு → இறு. இறுதல்.]

இறு[2]-த்தல் *iṟu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ***முறித்தல்*** (திவா.); to break off, as a branch; to snap asunder. 2. ***உடைத்தல்;*** to smash; to knock out, to break in pieces, as pottery. "இருவிகளி லொருவன்பல் விறுத் துக் கொண்டார்" (தேவா.1233,9). 3. ***அழித்தல்;*** to destroy. "ஏழுலகத்தையு மிறுக்க" (கம்பரா.மூலபல.12). 4. ***முடித்தல்;*** to bring to an end, finish. "உரைத்திறுக்கு மேல்வையில்" (கம்பரா.யுத்.மந்திர.28). 5. ***வீழ்த்துதல்;*** to bring down. "என்படு மிறுத்தோன்" (பாரத.பழம்.3). 6. ***தாக்குதல், அடித்தல்;*** to attack, beat. (செ.அக.).

[உறு → இறு.]

இறு[3]-த்தல் *iṟu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ***வரிமுதலி யன செலுத்துதல்*** (திவ்.திருவாய்.5,2,8); to pay, as a tax, a debt. 2. ***எறிதல்;*** to throw, as a spear; to fling.

"முனைகெட விறுத்த வென்வே லாடவன்" (பு.வெ.3-24,கொளு). 3. ***விடை சொல்லுதல்;*** to answer in reply. "இல்லெனுந் தீச்சொ லிறுத்தனர் தோமும்" (கல்லா.74). 4. ***வினாதல்;*** to question, enquire. "எங்கே மகளென் றிறுப்பாள்" (வெங்கைக்கோ.319). 5. ***வடித்தல்;*** to strain; to percolate, as a liquid. "பதத்திறுத்துப் பருக" (தைலவ.தைல.32). - 2 செ.கு.வி. (v.i.) 1. ***தங்குதல்;*** to tarry, stay. "அந்தியென்னும் பசலை மெய்யாட்டி வந்திறுத்தனளால்" (மணி.5,141). 2. ***அம்பு முதலியன தைத்தல்;*** pierce through, as an arrow; to gore, stab. "அம்புசென் றிறுத்தவரும் புண் யானை" (புறநா.19,9) (செ.அக.).

[உறு → இறு → இறுத்தல். (மு.தா.105).]

இறு[4]-த்தல் *iṟu-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. ***சொல்லுதல்*** (நாநார்த்த.); to express. 2. ***நிறுத்துதல்;*** to stop. "வலஞ்செயவிடா விறுத்தனவேறு" (கலித்.104) (செ.அக.).

[உறு → இறு. இறுத்தல்.]

இறுக்கநெருக்கம் *iṟukka-nerukkam*, பெ. (n.) ***இடைவேளை;*** interval. 'தமது பணிக்கடமைகளுக்கு அடுத்த இறுக்க நெருக்கங்களில்' (மாலுமி.முக.1) (செ.அக.).

[இறுக்கம் + நெருக்கம்.]

இறுக்கம் *iṟukkam*, பெ. (n.) 1. ***நெகிழாத்தன்மை;*** tightness, compactness. 2. ***நெருக்கம்;*** closensss, rigidity. 3. ***கடுஞ்செட்டு;*** close-fistedness, niggardliness. 4. ***முட்டுப்பாடு;*** hardness, as of the times; immobility, as of trade. 'இப்பொழுது பணம் இறுக்கம்'. 5. ***புழுக்கம்;*** closeness of weather. sultriness. (செ.அக.).

ம. இறுக்கம்.

[உறு → இறு → இறுக்கம்.]

இறுக்கர் *iṟukkar*, பெ. (n.) ***பாலைநில மக்கள்*** (சூடா.); inhabitants of desert tracts, who live by oppression and rapine. (செ.அக.).

[இறு → இறுக்கர்.]

இறுக்கல் *iṟukkal*, பெ. (n.) ***செலுத்துதல்;*** paying, remitting. "இறுக்கல் வேண்டுந் திறையே" (புறநா.97-20).

[உறு → இறு → இறுக்கல்.]

இறுக்கன் *iṟukkaṉ*, பெ. (n.) ***ஈயாதவன்*** (கொ.வ.); miser. (செ.அக.).

ம. இறுக்கம்; க. இறுகு; குர். எர்க்.

[உறு → இறு → இறுக்கன்.]

இறுக்கு[1]-தல் *iṟukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. ***அழுந்தக்கட்டுதல்;*** to tighten, tie close or hard, make compact. "புயங்களாற் பிடித்திறுக்கினன்" (கம்பரா.கும்பக.266). 2. ***இறுக வுடுத்துதல்*** (சூடா.); to clothe tightly. 3. ***ஒடுக்குதல்;*** to repress, restrain. 'அவற்றை நன்றாய் இறுக்கிவிட்டான்.' 4. ***உள்ளழுத்துதல்;*** to drive in, as a nail. "இறுக்காணி காட்டி" (திருப்பு.695). 5. ***உறையச் செய்தல்*** (வின்.); to thicken a liquid inspissate. 6. ***உடும்பு, நண்டு முதலியவற்றின் கடி;*** to pinch or sting (of an insect). 7. ***இறுக்குகால்;*** crab's claw. (சேரநா.) (செ.அக.).

ம. இறுக்குக; க., பட. இறுகு; கோத. இர்க்; துட. இகொட்; து. இரியுனி; தெ. இறுகு.

[உறு → இறு → இறுக்கு.]

இறுக்கு[2] *iṟukku* பெ. (n.) 1. ***ஒடுக்குகை*** (கொ.வ.); pressure, coercion. 2. ***கண்டிக்கை*** (வின்.); reprimand, reproof. 3. ***இறுகல் முடிச்சு*** (வின்.); hard knot. (செ.அக.).

[உறு → இறு → இறுக்கு.]

இறுக்குவாதம் *iṟukku-vādam*, பெ. (n.) ***உடலை வளைத்துக்கொள்ளும் இழுப்பு நோய்;*** acute rheumatism. 'இறுக்குவாதம் பற்றினாற்போலே' (ஈடு.3,5,2) (செ.அக.).

[இறுக்கு + வாதம்.]

இறுகங்கியான் *iṟugaṅgiyāṉ*, பெ. (n.) ***கையாந்தகரை*** (மலை); a plant found in wet place. (செ.அக.).

[இறு + கங்கியான்.]

இறுகச்சுற்றல் *iṟuga-c-cuṟṟal*, பெ. (n.) ***காற்றுப்புகாத படி கெட்டியாய்த் துணியினாற் சுற்றுதல்;*** winding round the cloth tightly so as to be air tight.

[இறுக + சுற்றல்.]

இறு கண்ணியம் *iṟu kaṉṉiyam* பெ. (n.) ***கருடக் கொடி;*** Brahminic kite creeper-Aristolochia indica. It is so called from its being a cure for snake bites. (சா.அக.).

[இறு + கண்ணியம். கண்ணி = கயிறுபோன்ற கொடி.]

இறுகநீக்கு-தல் *iṟuga-nīkku-*, 5 செ.கு.வி. (v.i.) ***கைவிடுதல்;*** to abandon or give up absolutely. "தேனு மூனும் பிழியலு மிறுக நீக்கி" (சீவக.1237) (செ.அக.).

[இறுக + நீக்கு.]

இறுகப் பிசை-தல் *iṟuka-p-pišai-*, 2 செ.கு.வி. (v.i.) ***வேண்டிய அளவு அழுத்தமாகப் பிசைதல்;*** to kneed dough; to press dough into a mass to work it into a suitable consistency for bread, paste etc. (சா.அக.).

[இறுக + பிசை.]

இறுகப்பிடி-த்தல் *iṟuga-p-piḍi-*, 4 செ.குன்றாவி (v.t.) ***இவறுதல்;*** to be stingy, parsimonious. (செ.அக.).

[இறுக + பிடி.]

இறுகரை *iṟukarai*, பெ. (n.) ***இடிகரை*** (அக.நி.) eroded bank, as of a river. (செ.அக.).

[இறு + கரை.]

இறுகல் *irugal,* பெ. (n.) 1. ***சுருங்குகை*** (திவ்.திரு வாய்.4,1,10); contraction, shrinking, diminution. 2. ***செம்மணிக் குற்றங்களுள் ஒன்று*** (இ.வ.); a defect in a ruby. 3. ***நான்கு காசு*** (இ.வ.); four pies, one third of an-anna. (செ.அக.).

[இறு → இறுகல்.]

இறுகால் *iru-kāl-,* பெ. (n.) ***ஊழிக்காற்று;*** tempest blowing at the dissolution of the world. "இறுகால் மேன்மேல்வந் தெழுந்தது போல்" (பெரியபு.எறிபத்த. 33) (செ.அக.).

[இறு² + கால்.]

இறுகிய *irugiya* பெ.எ. (adj.) ***உறைந்த;*** that which is inspissated. (சா.அக.).

[உறு → இறு → இறுகிய.]

இறுகு¹-தல் *irugu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ***முடிச்சு முதலியன நெகிழாது அழுத்தமாதல்*** (நாலடி.328); to become tight, as a knot. 2. ***கெட்டிப்படுதல்;*** to harden, as land dried by the sun or as molten metals when they are cooled; to become dry, as mortar or as clay. 3. ***நெய் முதலியன உறைதல்;*** to thicken, as phlegm; to congeal, as wax; to coagulate; to be clotted, as blood; to soldify. 4. ***உறுதியாதல்;*** to become firm. "இறுகவேண் டும் பாவனை" (ஞான்வா.வேதாள.12). 5. ***நிலைபெறுதல்;*** to be fixed, to be rooted in. "அச்சத் திறுகல் நீ" (சீவக.946). 6. ***நெருங்குதல்;*** to be rich, luxuriant, as growing corn or as fruitful trees. "வாழை யிறுகு குலை முறுக" (மலைபடு.132). 7. ***மூர்ச்சித்தல்;*** to swoon. "இறுகி மெய்ம் மறந்து சோர்ந்தான்" (சீவக.299) (செ.அக.).

ம. இறுகு; தெ. இறுகு; க. இறுகு.

[உறு → இறு - இறுகு.]

இறுகுதல் *irugudal,* பெ. (n.) ***பைம்மணிக்*** (மரகதக்) ***குற்ற மெட்டனுள் ஒன்று*** (சிலப்.14,184,உரை); defect of emeralds, one of eight marakata-k-kurram, (செ.அக.).

[இறு → இறுகுதல்.]

இறுங்கு *irungu,* பெ. (n.) 1. ***சோளம்;*** great millet. "கதிரணி யிறுங்கொடு" (சீவக.1561). 2. ***காக்காய்ச் சோளம்*** (மலை); black šōlam. (செ.அக.).

[இறு → இறுங்கு.]

இறுங்குசோளம் *irungu šōlam* பெ. (n.) ***தித்திப்புச் சோளம்; இதனின்று கனிச்சாறு*** (சர்பத்) ***காய்ச்சலாம். ஒரு வகை மது இறக்குவர்;*** *kaffer corn; sweet reed; sugar millet-Sorghum saccharatum. It is useful in making syrup as it contains much sugar. A liquor like cider is also obtained from it. (சா.அக.).*

[உறு → இறு → இறுங்கு + சோளம்.]

இறுத்தரு-தல் *iru-t-taru-,* 15 செ.கு.வி. (v.i.) ***வருதல்;*** to come, arrive. "வேனி லிறுத்தந்த பொழுதினான்" (கலித்.34) (செ.அக.).

[இறு → இறுத்தருதல் (தங்குதலைத் தருதல்.]

இறுத்தது *irut-tatu* வி.மு. (fin.v.) ***தங்கியிருப்பது*** matter that settles to the bottom of the liquid. "ஆடுமழை இறுத்த தெங்கோடுயர் குன்றே" (நற்.156-10) (சங். இலக்.சொற்).

[இறு → இறுத்தது - (காலவழு).]

இறுதி¹ *irudi,* பெ. (n.) 1. ***முடிவு*** (பிங்.); termination, end. 2. ***அழிவு;*** death, extinction. "உயிர்க்கிறுதி யாகி விடும்" (குறள்.476). 3. ***வரையறை;*** limit, bound. "இறுதியில்லதோர் விலங்கு" (கந்தபு.அசுரர் தோற்.29) (செ.அக.).

ம. இறுது.

[இறு → இறுதி.]

இறுதிக்காலம் *irudi-k-kālam,* பெ. (n.) 1. ***இறுதிக் காலம்;*** time of death. 2. ***ஊழிக்காலம்;*** end of all things. (செ.அக.).

[இறுதி + காலம்.]

இறுதிநிலை *irudi-nilai,* பெ. (n.) 1. ***இறுதியில் நிற்பது*** (கலித்.124, உரை, பக்.778); that which occurs in the end; ending. 2. ***விகுதி*** (நன்.134, சங்கர); termination, ending of a word. (செ.அக.).

[இறுதி + நிலை.]

இறுதியிலின்பம் *irudi-y-il-inbam,* பெ. (n.) ***துறக்க நுகர்வு;*** everlasting bliss. "இம்மையு மறுமையு மிறுதியி லின்பமும்" (மணி.3,96) (செ.அக.).

[இறுதியில் + இன்பம்.]

இறுதியினற்கதி *irudiyinarkadi,* பெ. (n.) ***உய்தி;*** final emancipation. "இறுதியினற் கதி செல்லும் பெருவழி" (மணி.12-59) (செ.அக.).

[இறுதியில் + நற்கதி.]

இறுதி விளக்கு *irudi-vilakku,* பெ. (n.) ***கடைநிலை விளக்கு*** (குறள்.1281, உரை); figure of speech in which a word used at the end of a sentence has to be taken as understood in the other parts of the same. (செ.அக.).

[இறுதி + விளக்கு.]

இறுதிவேள்வி *irudi-vēlvi,* பெ. (n.) ***அந்திக்கடன்;*** funeral oblations. "அன்னையர்க் கிறுதி வேள்வி...... யாற்றினானே" (இரகு... அவதாரநீ.44) (செ.அக.).

[இறுதி + வேள்வி.]

இறுநாகம் *irunāgam,* பெ. (n.) ***இலாமிச்சை*** (மலை.); cuscus-grass. (செ.அக.).

[இறு + நாகம்.]

இறுப்பு[1] *iṟuppu,* பெ. (n.) 1. ***தங்குகை*** (இ.வ.); abiding, tarrying. 2. ***கடன்செலுத்துகை;*** liquidation, payment of debt. 3. ***குடியிறை;*** tax. "வைக லாயிர மிறுப்புத் தண்ட" (சீவக.2570) (செ.அக.).

ம. இறுப்பு.

[இறு → இறுப்பு.]

இறுப்பு[2] *iṟuppu,* பெ. (n.) ***ஆவண ஓலை;*** archive document. (ஆ.அக.).

[இறு → இறுப்பு.]

இறுபு *iṟubu,* பெ. (n.) ***இறப்பு;*** death."இறுபும் புலம்பும்" (பெருங்.இலாவண.13,12) (செ.அக.).

[இறு → இறுபு.]

இறும்பி *iṟumbi,* பெ. (n.) ***எறும்பு*** (யாழ்.அக.); ant (செ.அக.).

ம. இறும்பு; க. இறும்பு, இறும்பெ, இறுபெ, இறவெ, இறுவெ, இறுவு, இரிவெ; கோத. இர்ங்; துட. இர்ப்; குட. உருபி; பட. இறுப்பு.

[இறு → இறும்பி (கொட்டுவது, கடிப்பது).]

இறும்பு[1] *iṟumbu,* பெ. (n.) 1. ***வண்டு*** (யாழ்.அக); bee. 2. ***புழு*** (சங்கற்பநி.9,15); worm. (செ.அக.).

[இறு → இறும்பு. இறுத்தல் = தங்குதல்) .]

இறும்பு[2] *iṟumbu,* பெ. (n.) 1. ***குறுங்காடு;*** thicket. "வில்பயி லிறும்பிற் றகடூர் நூறி" (பதிற்றுப்.78,9). 2. ***தூறு*** (பிங்.); shrub, bush. 3. ***மலை*** (திவா.); hill, mountain. 4. ***புதுமை*** (பிங்.); wonder. 5. ***அடை மழைக் காலம்;*** rainy season. (செ.அக.).

[இறு → இறும்பு; இறுத்தல் = செறிதல், மிகுதல்.]

இறும்புகாப்பூ *iṟumbukā-p-pū* பெ. (n.) ***கார்த்தி கைப்பூ;*** november flower. (சா.அக.).

[இறும்பு + காப்பூ.]

இறும்புளி *iṟumbuḷi,* பெ. (n.) ***மரவகை*** (kodai); pulney rowan, Photinia notoniana, a Kodaikanal tree. (செ.அக.).

[இறும் + புளி.]

இறும்பூது *iṟumbūdu,* பெ. (n.) 1. ***புதுமை;*** amazement. "விட்புலம் போய திறும்பூது போலும்" (சிலப்.பதி.8). 2. ***வண்டு;*** bee. 3. ***தகைமை*** (சூடா.); magnanimity. 4. ***மலை*** (திவா.); mountain. 5. ***சிறுதூறு*** (திவா.); shrub, bush. 6. ***தளிர்*** (சூடா.); shoot, sprout. 7. ***தாமரை;*** *lotus.*

[இறு → இறும் + பூது. இறு = செறிவு. பூது = மிகுதி.]

இறுமா-த்தல் *iṟumā-,* 19 செ.கு.வி. (v.i.) 1. ***பெருமை பாராட்டுதல்;*** to be elated; to feel exulted. "இறுமாந் திருப்பன் கொலோ" (தேவா.1182,11). 2. ***செருக்கடை தல்;*** to be self-conceited. (செ.அக.).

ம. இறுமான்னு.

[இறு - இறும் + ஆர்த்தல் - இறுமார்த்தல் - இறுமாத்தல்; ஒ.நோ. உரு - உரும்.]

இறுமாப்பு *iṟumāppu,* பெ. (n.) 1. ***பெருமை பாராட் டுகை;*** elation, exultation. 2. ***செருக்கு*** (திருவிளை. வெள்ளை.14); pride, self-conceit, arrogance. 3. ***நிமிர்ச்சி*** (வின்.); erect posture. (செ.அக.).

[இறு → இறும் + ஆர்ப்பு - இறுமார்ப்பு → இறுமாப்பு. இறும் = செறிவு, பெருக்கம். ஒ.நோ். உரு - உரும். ஆர்த்தல் = சேர்த்தல், கட்டுதல். ஆர்ப்பு → ஆப்பு = சேர்ப்பு, கூடுகை.]

இறுமுறி *iṟu-muṟi,* பெ. (n.) ***தீர்ந்து போன காதற்ற ஆவணம்*** (வின்.); discharged bond, having a vital part of torn off. (செ.அக.).

[இறுத்தல் = இறுக்குதல், நெருக்குதல், ஒடித்தல், எறிதல், இறுதி யாதல். இறு + முறி.]

இறுமுறை *iṟu-muṟai,* பெ. (n.) ***அழியும் முறைமை, இறந்துபடும் நிலைமை;*** turn to die "இறுமுறை செய்யு முருவொடு" (கலித்.93-19) (சங்.இலக்.சொற்.).

[இறு + முறை.]

இறுவதஞ்சாமை *iṟuvadañjāmai,* பெ. (n.) ***வணிகர் குணங்களுள் ஒன்று*** (பிங்.); indifference to losses, a desirable virtue in merchants. (செ.அக.).

[இறுவது + அஞ்சாமை. இறுவது = மேற்கொண்ட செயலில் தோல்வியுறல். இழப்புகளை எதிர்கொள்ளல்.]

இறுவரை[1] *iṟu-varai,* பெ. (n.) ***அழியுங்காலம்;*** time of ruin, downfall, death. "இறுவரை காணிற் கிழக்காந் தலை." (குறள்.488) (செ.அக.).

[இரு → இறு + வரை.]

இறுவரை[2] *iṟu-varai,* பெ. (n.) 1. ***பெரியமலை;*** high mountain "இறுவரை வீழ" (பு.வெ.7.20). 2. ***பக்க மலை;*** foot hill. "இருடூங் கிறுவரை" (கலித்.43). 3. ***அடிவாரம்;*** foot of a mountain. "குன்ற விறுவரைக் கோண்மா" (கலித்.86) (செ.அக.).

[இரு → இறு + வரை. வரை = வளைவு, சரிவு. சரிவுகள் உள்ள மலை.]

இறுவரையம் *iṟu-varaiyam,* பெ. (n.) 1. ***எல்லை*** (யாழ்.அக.); limit. 2. ***இவ்வேளை*** (தற்சமயம்); present moment. (செ.அக.).

[இல் = குழித்தல், நிலைப்படுத்ல். இல் → இரு → இறு + வரை + அம் = இறுவரையம். வரை = எல்லை, காலம், நேரம்.]

இறுவரையும் *iṟu-varai-y-um,* பெ. (n.) ***இறக்குமள வும்;*** till death. (ஆ.அக.).

[இறுத்தல் = இறத்தல். இறு + வரை + உம்.]

இறுவாக *iṟu-v-āga,* கு.வி.எ. (adv.) ***இறுதியாக*** (சூடா. 12,98); at last, finally. (செ.அக.).

[இறு + ஆக. இறு = இறுதி.]

இறுவாய் *iṟu-vāy,* பெ. (n.) 1. ***ஈறு;*** end, termination. "னகர விறுவாய்" (தொல்.எழுத்.1). 2. ***சாவு;*** death. "இறுவா யெய்த" (கந்தபு.அசுரேந்.58).

[இறு + வாய் = இறுவாய் = சாவு; வாய் = இடம்.]

இறுவேல் *iṟu-vēl,* பெ. (n.) ***இருள்வேல்*** பார்க்க; see *iṟuḷvēl.*

[ஒருகா. இருள்வேல் - இருவே - இறுவேல்.]

இறே *iṟē,* இடை (part.) ***அன்றோ, அறிவிப்பு*** (பிரசித்தி) ***தெரியவேண்டிய செய்தி, தெளிவு இவற்றைக் குறிக்குஞ் சொல்*** (ஈடு.2,1,1); a particle, frequently used in vaisnava religious writings and occurring mostly at the end of sentences to indicate that the subject mentioned is either (1) common knowledge, or (2) one which must be known by all, or (3) one that is emphatically so.

[ஈறு - இறே.]

இறை[1] *iṟai,* பெ. (n.) 1. ***உயரம்;*** height. "ஏந்து கொடி யிறைப் புரிசை" (புறநா.17,27). 2. ***தலை*** (சூடா.); head. 3. ***கடவுள்;*** supreme God. "இறைநிலையுணர்வரிது" (திவ்.திருவாய்.1,3,6). 4. ***சிவன்*** (பிங்.); Siva. 5. ***நான்முகன்*** (பிரமன்) (பிங்.); Brahmā. 6. ***அரசன்;*** king, sovereign, monarch, "இறைகாக்கும் வையக மெல்லாம்" (குறள்.547). 7. ***தலைமை*** (பிங்.); eminence, greatness. 8. ***நடுவு நிலைமை;*** impartiality, justice. "கண்ணோடா திறைபுரிந்து" (குறள்.541). 9. ***உயர்ந்தோர்*** (தொல்.பொ.256), (திவா.); anyone who is great, as one's father or guru or any renowned and illustrious person. 10. ***தலைவன்*** (திவா); superior, master, chief. 11. ***தமையன்*** (பரிபா.11-8); elder brother. 12. ***கணவன்;*** husband, as lord of his wife. "நப்பின்னை தனக்கிறை" (திவ்.பெரியதி.2,3,5). 13. ***வீட்டிறப்பு;*** inside of a sloping roof, eaves of a house. "குறியிறைக் குரம்பை" (புறநா.129). 14. ***இறகு*** (பிங்.); feather, quill. 15. ***சிறகு;*** wing, plumage. 16. ***இறத்தல்.*** (கலித்.18, உரை.); death, dying, extinction. 17. ***மாமரம்*** (மலை.); mango tree. (செ.அக.).

ம. இற; க. எறகெ, எறகில்; குட. எறகி.

[1-2. ஏறு → ஏறை → இறை = உயரம், தலை. 3-12. இறுத்தல் = தங்குதல். நிலைபெற்றிருத்தல். இறு → இறை. எங்கும், என்றும் நிலையாக இருப்பவன், நிலைத்திருந்து காப்பவன், கடவுள், அரசன், தலைவன். 13-17. இறங்கு → இறப்பு → இற = தாழ்த்தல், சரிவாதல். வீட்டின் இறவாணம். இறகு, இறக்கை, கிளை, தாழ்ந்து கனி கொடுக்கும் மாமரம்.]

இறை[2] *iṟai,* பெ. (n.) 1. ***தங்கல்;*** abiding, halting tarrying. "நெஞ்சிறை கொண்ட" (மணி 4,69). 2. ***இருக்கை;*** seat. "இறையிடை வான்முறை யேறி" (கம்பரா. அயோத். மந்திர.12). 3. ***கடமை*** (திவ்.திருவாய்.5,2,8); duty, obligation. 4. ***அரசிறை;*** tax on land, duty, share of the produce accuring to the king as rent. "இறைவற் கிறையொருங்கு நேர்வது நாடு" (குறள்.733). 5. ***விடை;*** answer, reply. "எண்ணிறையுள்" (நன்.386). 6. ***விரல் வரை;*** lines inside the finger joints. "இறைக்கரஞ் சிவப்பெய்திட" (இரகு. நாட்டுப். 34). 7. ***விரலிறையளவு;*** measure of the first joint of the fore finger being about 1 inch. 8. ***சிறுமை*** (அற்பம்); very small particle, atom. minute quantity, short space of time. "இறையு ஞானமி லாதவென் புன்கவி" (கம்பரா.சிறப்பு.10). 9. ***முன்கை;*** wrist, fore-arm "எல்வளை யிறை யூரும்மே" (கலித்.7). 10. ***கை;*** arm. "இறைவளை யாழ்தழீஇ யிருப்ப" (சீவக. 656). 11. ***உடலுறுப்பின் மூட்டுவாய்;*** joints of the body. "இறைகளவை நெறு நெறென" (திவ்.பெரியதி. 5.10,4). 12. ***மூலை;*** corner. "முடங்கிறை" (முல்லை.87). (செ.அக.).

[இறுத்தல் = தங்குதல், வைத்தல், தங்குதற்குரிய இடம். இறு → இறை. நிலைத்து ஆளும் அரசன். அரசனுக்குச் செலுத்தும் வரிப்பணம். இறு → இறை = வைத்தல், செலுத்துதல், விடையளித்தல். இறு → இறை = ஒடித்தல், சிறிதாக்குதல், சிறிது. இறு → இறை = தாழ்தல், தாழ்ந்த முன்கை, தாழ்வான பகுதி.]

இறை[3]**-தல்** *iṟai-,* 2 செ.குன்றாவி. (v.t.) ***வணங்குதல்;*** to bow before, as in salutation; to worship. "இணையடி யிறைமின்" (பதினோ.ஆளு.திருக்கலம்.48). (செ.அக.).

க. எறகு.

[இறு → இறை. ஒடிதல், வளைதல், வணங்குதல்.]

இறை[4]**-தல்** *iṟai-,* 2 செ.கு.வி. (v.i.) ***சிதறிப் போதல்;*** to scatter, disperse. "வளை முத்திறைய வெற்றும்........ வெண்டிரை" (சூத.சிவமான்...2,2). (செ.அக.).

[இறு → இறை. ஒடிதல், முறிதல், வெடித்துச் சிதறுதல்.]

இறை[5]**-த்தல்** *iṟai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ***நீரை வீசித் தெளித்தல்;*** to splash, spatter, dash. 'அவன் முகத்தில் நீரை யிறைத்தான்.' 2. ***சிதறுதல்;*** to scatter abroad, strew, cast forth. 'பண்டங்களை யெல்லாம் இறைத்து விட்டான்.' 3. ***நீர் பாய்ச்சுதல்;*** to draw and pour out water, irrigate, bale out. "இறைப்பவர்க் கூற்றுநீர் போல மிகும்" (குறள்.1161). 4. ***நிறைத்தல்;*** to fill, as one's ears with strains of music. "வீணையரின்னிசை செவிதொறு மிறைப்ப" (உபதேசகா.சிவபுண்ணிய. 318). 5. ***மிகுதியாகச் செலவிடுதல்;*** to lavish, squander 'பணத்தை வாரி யிறைக்கிறான்.'

[இறு → இறை = ஒடிதல், முறிதல், வெடித்துச் சிதறுதல், வீசுதல். நிறையத் தருதல். செலவழித்தல்.]

இறை[6] *iṟai,* பெ. (n.) 1. ***கடன்*** (அக.நி.); debt. 2. ***வாளின் உறை;*** sheath of a sword. "வாய்ந்த விறைவிட்டால் மருவலர்கள் மார்புறையாப் பாய்ந்து" (கூளப்ப.45). 3. ***கூட்டம்*** (தக்கயாகப்.638, உரை); crowd. (செ.அக.).

[இறு → இறை = நெருக்கம். நெருக்கடி.]

இறைக்கட்டு *iṟai-k-kaṭṭu,* பெ. (n.) ***வரி;*** taxation. 'இறைக்கட்டும் தவிர்த்து' (S.I.I.VII.414). (செ.அக.).

ம. இற.

[இறை + கட்டு.]

இறைக்கடன் *iṟai-k-kaḍaṉ,* பெ. (n.) ***நிலவரி*** (சேரநா.); land-tax.

ம. இறக்கடம்.

[இறை + கடன்.]

இறைக்கள்ளன் *irai-k-kallan,* பெ. (n.) ***இறைப் பிளவை*** (வின்.) பார்க்க; see *irai-p-pilavai.* (செ.அக.).

[இறை + கள்ளன்.]

இறைக்காசான் *irai-k-kāšān,* பெ. (n.) ***முருகக் கடவுள்;*** Skanda, as the Guru of Šiva. ''இறைக்காசா னெம்மருளா மாலையு மாலை'' (பெருந்தொ.102). (செ.அக.).

[இறைக்கு + ஆசான்.]

இறைக்குடி *irai-k-kudi,* பெ. (n.) ***வரிகொடுப்போன்*** (சிலப்.4,9, உரை.); tax payer. (செ.அக.).

[இறை + குடி.]

இறைக்குத்து *irai-k-kuttu,* பெ. (n.) ***இறக்குந் தறுவா யில் கண்விழி அசைவற்று நிற்கை*** (இ.வ.); fixed gaze of the eyes at the approach of death. (செ.அக.).

[இறை + குத்து. இறை = நிலையான, நெட்டான.]

இறைகாவல் *irai-kāval,* பெ. (n.) ***தலையாரிக்குரிய வரி*** (I.M.P. TP.121-2); police cess, an ancient rate paid towards the cost of watch and ward in a village. (செ.அக.).

[இறை + காவல்.]

இறைகிழவன் *irai-kilavan,* பெ. (n.) ***அரசனாகுந் தன்மையை யுடையவன்;*** ruler endowed with all kingly qualities. ''நில்லாத் தானை யிறை கிழவோயே'' (பதிற் றுப்.54, 17). (செ.அக.).

[இறை + கிழவன். கிழமை = உடைமை.]

இறைகுத்து-தல் *irai-kuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. ***விரலிறையா லளவிடுதல்*** (வின்.); to dip the finger into a fluid to ascertain its depth. 2. ***மதிப்பிடுதல்;*** to estimate.

[இறை + குத்துதல். இறை = முன்கை, முன்கை விரல்.]

இறைகூடு-தல் *irai-kūdu-,* 5 செ.குன்றாவி. (v.t.). ***அரசாளுதல்*** (பொருந.79); to rule over, exercise authority. (செ.அக.).

[இறை + கூடுதல்.]

இறைகூடை *irai-kūdai,* பெ. (n.) ***நீரிறைக்கும் கூடை*** (திவா.); water-basket made of palmyra leaves for baling out water for irrigation purposes. (செ.அக.)

[இறை + கூடை. இறை = இறைத்தல், நீரிறைத்தல்.]



இறைகூடை

இறைகூத்தன் *irai-kūttan,* பெ. (n.) ***குராமரம்;*** common bottle flower - webera corymbosa. (சா.அக.).

[இறை + கூத்தன்.]

இறைகூர்-தல் *irai-kūr-,* 2 செ.கு.வி. (v.i.). ***தங்குதல்;*** to dwell, abide. ''தெறன்மறவரிறை கூர்தலின்'' (புறநா.345-5).

[இறை + கூர்.]

இறைகொள்ளு-தல் *irai-kollu-,* 13 செ.கு.வி. (v.i.) ***தங்குதல்;*** to dwell, abide.

[இறை + கொள்ளுதல். இறை கொள்ளுதல் = இருப்புக் கொள் ளுதல்.]

இறைச்சி *iraicci,* பெ. (n.) 1. ***இறைச்சி;*** flesh. ''இறைச்சிக் குன்றாக்கினானே'' (சீவக.801). 2. ***இறைச் சிப் பொருள்*** (தொல்.பொருள்.229) பார்க்க; see *Iraicci-p-porul.* 3. ***கருப்பொருள்;*** distinctive features of each of the ain-tinai relating to five tracts of land. ''அன்புறு தகுந விறைச்சியுட் சுட்டலும்'' (தொல்.பொருள்.231). 4. ***விருப்பமானது;*** that which is agreeable, pleasing. ''வீழுநர்க் கிறைச்சியாய்'' (கலித்.8).

ம. இறச்சி; தெ. எரசு, எரசி; குட. எரசி.

[இறு → இறை = தங்குதல். இறை → இறைச்சி = தங்கியிருப்பது. சேர்ந்திருப்பது. ஒட்டியிருப்பது. உள்ளிருப்பது, உள்ளம் விரும்புவது. கவனத்தைக் கவர்வது.]

இறைச்சிக்குத்தி *iraicci-k-kutti,* பெ. (n.) ***இறைச்சி குத்தி பார்க்க;*** see *iraicci-kutti.*

[இறைச்சி + குத்தி.]

இறைச்சி குத்தி *iraicci-kutti,* ***இறைச்சியைக் குத்தி வாட்டுங் கருவி*** (வின்.); spit, rod for holding meat while roasting. (செ.அக.).

[இறைச்சி + குத்தி.]

இறைச்சி நீர் *iraicci-nīr,* பெ. (n.) ***ஊன் தண்ணீர்;*** the thin transparent watery part of the blood-serum. (சா.அக.).

[இறைச்சி + நீர்.]

இறைச்சிப்பொருள் *iraicci-p-porul,* பெ. (n.) ***கருப் பொருளினுள்ளே கொள்ளும் பொருள்*** (தொல். பொருள்.229); suggestive meaning conveyed indirectly by reference to the distinctive features of the tract of land. (செ.அக.).

[இறைச்சி + பொருள்.]

இறைச்சிப்போர் *irraicci-p-pōr,* பெ. (n.) ***உடம்பு;*** the body, considered as a mass of flesh. ''இறைச்சிப்போ ரிதனை யென்றான்'' (சீவக.1585) (செ.அக.).

[இறைச்சி + போர். போர் = குவியல்.]

இறைச்சோறு *irai-c-cōru,* பெ. (n.) ***வரிவகை*** (S.I.I. VIII.87); a kind of tax. (செ.அக.).

[இறை + சோறு.]

இறைஞ்சலர் *irainjalar,* பெ. (n.) ***பகைவர்;*** enemies, foes or adversaries, as those who do not yield or submit.

"இறைஞ்சலர்க் கெழிலியே றனையான்" (பாரத.பதி னேழா.241) (செ.அக.).

[இறைஞ்சு + அல் + அர். இறைஞ்சலர் = வணங்காதவர், பகைவர்.]

இறைஞ்சாடிப்பூ *iṟaiñjāḍi-p-pū,* பெ. (n.) ***கஞ்சாங் கோரை;*** holy basil - ocimum sanctum. (சா.அக.).

[இறைஞ்சு + ஆடி + பூ.]

இறைஞ்சார் *iṟaiñjār,* பெ. (n.) ***இறைஞ்சலர்*** பார்க்க; see *iṟaiñjalar.* (செ.அக.).

[இறைஞ்சாதார் → இறைஞ்சார்.]

இறைஞ்சி *iṟaiñji,* பெ. (n.) ***மரவுரி*** (திவா.); bark of a certain tree, used for clothing. (செ.அக.).

[இறைஞ்சு → இறைஞ்சி.]

இறைஞ்சு-தல் *iṟaiñju-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ***தாழ்தல்;*** to hang low, as a cluster of coconuts; to bow, bend. "குலையிறைஞ்சிய கோட்டாழை" (புறநா.17,9). 2. ***வீழ்ந்து கிடத்தல்;*** to fall down. "புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி" (கலித்.3,13). - 5 செ.குன்றாவி. (v.t.) ***வணங்குதல்;*** to make obeisance; to pay reverence; to worship by bowing or prostrating. "எழிலார் கழலி றைஞ்சி" (திருவாச.1,21).

ம. இரஞ்சுக; க. எரகு; தெ. எரகு; து. எரகுனி.

[இற → இறை → இறைஞ்சு.]

இறைப்பாரம் *iṟai-p-pāram,* பெ. (n.) ***பல்லுயிரைக் காக்கின்ற அரசன் பொறுப்பு;*** burden of government, responsibility of the king for the welfare of his subjects. "இறைப்பாரமெல்லாம்.......பூட்டி" (சீவக.475).

[இறை + பாரம். இறை = அரசன்.]

இறைப்பிளவை *iṟai-p-piḷavai,* பெ. (n.) ***கையிடை யில் வரும் ஒருவகைப்புண்;*** eruption in the finger joints or between the fingers at the roots. (செ.அக.).

[இறை + பிளவை.]

இறைப்புரிசை *iṟai-p-puriśai,* பெ. (n.) ***உயர்ந்த மதில்;*** high wall. "ஏந்து கொடி யிறைப்புரிசை" (புறநா.17-27).

[இறை + புரிசை.]

இறைப்பொருட்டலைவன் *iṟai-p-poruṭ-ṭalaivan,* பெ. (n.) ***குடிகளுக்கு வேண்டிய உதவி யனைத்துஞ் செய்து அவர்களிடம் குடியிறை கொள்ளுவோன்;*** person collecting tax and attending to public services. (அபி.சிந்.).

[இறை + பொருள் + தலைவன். இறைப்பொருள் = வரிப்பணம்.]

இறைப்பு *iṟaippu,* பெ. (n.) ***நீர் இறைக்கை;*** drawing out and pouring water. (செ.அக.).

[இறை → இறைப்பு.]

இறைப்புணைப்படு-தல் *iṟai-p-puṇai-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) ***ஒருவன் இறுக்க வேண்டும் வரிக்குப் புணை கொடுத்தல்*** (S.I.I. V, 376); to stand security for the payment of tax by a person. (செ.அக.).

[இறை → இறைப்புணை + படு.]

இறைப்புப்பட்டரை *iṟaippu-p-paṭṭarai,* பெ. (n.) ***கிணற்றுப் பாய்ச்சலுள்ள நிலம்*** (C.G.); land exclusively irrigated from wells. (செ.அக.).

[இறைப்பு + பட்டரை.]

இறைப்பெட்டி *iṟai-p-peṭṭi,* பெ. (n.) ***தண்ணீர் இறைக்க உதவும் ஓலைப்பெட்டி;*** ola basket for baling water. (செ.அக.).

[இறை + பெட்டி.]

இறைபயப்பது *iṟai-payappadu,* பெ. (n.) ***குறிப்பாகப் பொருளை விளைக்கும் விடை*** (தொல்.சொல்.13); indirect answer to questions. (செ.அக.).

[இறை + பயப்பது.]

இறைமகள் *iṟai-magaḷ,* பெ. (n.) 1. ***கொற்றவை;*** Koṟṟavai "இறைமக ளமுதுசெய்ய" (தக்கயாகப்.751) (செ.அக.). 2. ***அரசன் மகள்;*** king's daughter. (ஆ.அக.).

[இறை + மகள்.]

இறைமகன் *iṟai-magaṉ,* பெ. (n.) 1. ***அரசன்;*** king. "இன்னுயிராகி நின்றா னிறைமகன்" (சூளா.நகர.31). 2. ***பிள்ளையார்*** (பிங்.); Ganēśa, son of iṟai, i.e. Śiva. (செ.அக.).

[இறை + மகன்.]

இறைமரம் *iṟai-maram,* பெ. (n.) 1. ***இறைகூடை தாங்கும் மரம்*** (வின்.); three poles united at the top to support a basket in irrigation. (செ.அக.). 2. ***ஏற்றமரம்*** (வின்.); well-sweep. 3. ***நீரிறைக்கும் மரப்பத்தல்*** (j.); long, boat shaped wooden trough suspended for watering fields. (செ.அக.).

[இறை + மரம்.]

இறைமலை *iṟai-malai,* பெ. (n.) ***மேருமலை;*** Mt. Meru. "இறைமலை வில்லி" (தக்கயாகப்.170) (செ.அக.).

[இறை + மலை.]

இறைமா *iṟaimā,* பெ. (n.) ***மாமரம்;*** mango tree. (சா.அக.).

[இறை + மா.]

இறைமை *iṟai-mai,* பெ. (n.) 1. ***தலைமை;*** kingly superiority, eminence, celebrity. "வீரங் குறைவரே

யிறைமை பூண்டோர்'' (கம்பரா.மூலபல.46). 2. *அரசாட்சி;* government, dominion. ''பாண்டியற்குத் தன்னிறைமை முழுதுமீந்தான்'' (திருவிளை.அங்க.27). 3. *தெய்வத்தன்மை;* divinity, divine nature. ''அவனது இறைமைக்கு, இழுக்காய் முடியும்'' (சி.சி.8,38, சிவஞா). (செ.அக.).

[இறை → இறைமை.]

இறைமையாட்டி *iṟaimai-y-āṭṭi,* பெ. (n.) 1. *தலைவி* (திவா.); lady, mistress. 2. *அரசி;* queen. (செ.அக.).

[இறைமை + ஆட்டி. இறைமை = தலைமை.]

இறைமொழி[1] *iṟai-moḻi,* பெ. (n.) *மறுமொழி;* answer, reply. ''அன்பர் கேட்க விறைமொழி கொடுத்து'' (திருவிளை.மண்.112) (செ.அக.).

[இறை + மொழி. இறை = விடை.]

இறைமொழி[2] *iṟai-moḻi-,* பெ. (n.) *இறைவனருளிய மறை* (ஆகமம்); āgamas. ''இறைமொழிக் கல்லது மறுதரவோதி'' (சிலப்.10, 206) (செ.அக.).

[இறை + மொழி. இறை = தெய்வம்.]

இறையணி *iṟai-y-aṇi,* பெ. (n.) *வினாவுக்கு விடை கூறுதல் அணி;* figure of speech in the form of question and answer. (அபி.சிந்).

[இறை + அணி. இறை = விடை.]

இறையமன் *iṟai-yamaṉ,* பெ. (n.) *காரி* (பரிபா.11,8); Saturn whose elder brother is Yama. (செ.அக.).

[இளை → இறை + யமன் (கொ.வ.).]

இறையவன் *iṟaiyavaṉ,* பெ. (n.) 1. *தலைவன்;* chief. 2. *கடவுள்;* God. 3. *தேவர் தலைவன்;* a leader among the gods. ''இந்திரன் முதலிய இறைய்வர் பதங்களும்'' (குறள், பரி, உரைப்பா) (செ.அக.).

ம. இறையான், இறையுவன்.

[இறை → இறையவன்.]

இறையனார் *iṟaiyaṉār,* பெ. (n.) *கடைக்கழகப் புலவருள் ஒருவர்; 'கொங்குதேர் வாழ்க்கை' யென்னும் பாடலை எழுதியவர்* (குறுந்.2); a poet of the time of the third Sangam at Madurai, popularly identified with Śiva. (செ.அக.) (அபி.சிந்).

இறையனாரகப் பொருள் *iṟaiyaṉār-aga-p-poruḷ,* பெ. (n.) *இறையனாரியற்றிய களவியல்;* grammar on agapporuḷ by Iṟaiyaṉār. (செ.அக.).

[இறையனார் + அகப்பொருள்.]

இந்நூல் அறுபது நூற்பாக்களைக் கொண்டது. இதன் உரை நக்கீரர் இயற்றியது என்பர்.

இறையாமணக்கு *iṟai-y-āmaṇakku,* பெ. (n.) *செவ்வாமணக்கு;* red variety of castor plant - Ricinus communis. (சா.அக.).

[இறை + ஆமணக்கு]

இறையாயிரங்கொண்டான் *iṟai-y-āyiraṅ-koṇḍāṉ,* பெ. (n.) *ஒரு விரலிறைக்கு ஆயிரங்கலம் நெற்கொள்ளும் களஞ்சியம்* (கோயிலொ.63); *திருவரங்கம் கோயில், இராமநாதபுரம் அரண்மனை ஆகிய இடங்களில் இருப்பது போன்றது;* large granary as in Srirangam temple and in the Ramnad pālace, in which paddy spread over the floor to the thickness of one iṟai or an inch would amount to 1000 kalam. (செ.அக.).

[இறை + ஆயிரம் + கொண்டான்.]

இறையார் *iṟaiyār* பெ. (n.) *மகளிர்;* ladies. ''வளை முன்கை வணங்கிறையார்''. (பரி.17-33) (பாண்டிச்.அக.).

ம. இறையாள்.

[இறை + ஆர். இறையார் = அழகிய முன்கையை உடையவர்.]

இறையான் *iṟaiyāṉ,* பெ. (n.) *சிவன்;* Śivaṉ ''இறையான் கையில் நிறையாத'' (திவ்.பெரியதி.5.1,8) (செ.அக.).

[இறை + ஆன்.]

இறையிலி *iṟai-y-ili,* பெ. (n.) *வரிநீக்கப்பட்ட நிலம்;* land that is tax-free. 'அறத்திற்குவிட்ட இறையிலி நிலங்களும்' (செ.அக.).

ம. இறயிலி.

[இறை இல் + இ]

இறையிழிச்சு-தல் *iṟai-y-iḻiccu,* 5 செ.கு.வி. (v.i.) *இறையிழித்து* பார்க்க; see *iṟaiy-iḻittu.* இறையிழிச்சிச் சிலாலேகை செய்து கொடுத்தோம் (S.I.I.iii,6) (செ.அக.).

[இறை + இழிச்சுதல். இழிச்சுதல் = நீக்குதல்.]

இறையிழித்து-தல் *iṟai-y-iḻittu-,* 15 செ.கு.வி. (v.i.) *வரி நீக்குதல்;* to exempt from payment of taxes. 'இறையிழித்திச் சிலாலேகை செய்து கொடுத்தோம்.' (S.I.I. iii.4). (செ.அக.).

இறையிறுக்குங்கோல் *iṟai-y-iṟukkuṅkōl,* பெ. (n.) *வரியிடுவதற்காக நிலத்தை அளக்கப் பயன்படும் அளவுகோல்;* rod for measuring land for the purpose of fixing the tax. 'இவ்வூரில் இறையிறுக்குங் கோலால் இந்நிலம் ஏழுமாவரை.' (S.I.I.V,107) (செ.அக.).

[இறை + இறுக்கும் + கோல்.]

இறையிறை *iṟai-iṟai,* இடை. (part.) *சிறிது சிறிது* (குறுந்.52); little by little. (சங்.இலக்.சொற்.).

[இறை + இறை.]

இறையுணர்வு *iṟai-y-uṇarvu,* பெ. (n.) *வாலறிவு* (பதிஞானம்); knowledge concerning the supreme being. (செ.அக.).

[இறை + உணர்வு.]

இறையூர்தி *iṟai-ūrdi,* பெ. (n.) *காளை;* bull, Śiva's vehicle. (பிங்.) (செ.அக.).

[இறை + ஊர்தி.]

இறையெண்ணு-தல் *irai-y-ennu-*, 11 செ.கு.வி. (v.i.). ***விரலிறையாற் கணக்கிடுதல்*** (வின்.); to count by the joints or lines on the fingers. (செ.அக.).

[இறை + எண்ணுதல்.]

இறையோன் *iraiyōn*, பெ. (n.) 1. ***கடவுள்*** (திவ்.திருவாய். 1,3,2); God. 2. ***சிவன்*** (திவா.); Śiva (செ.அக.).

ம. இறயோன்.

[இறை → இறையோன்.]

இறைவரை *irai-varai*, பெ. (n.) ***கணப்பொழுது;*** moment of time. "இதோ ரிறைவரையாகும்." (கந்தபு. மோன.8) (செ.அக.).

[இறை + வரை.]

இறைவளை *iraivaḷai* பெ. (n.) ***தோள்சந்தில் அணிந்த வளை*** (குறுந்.289); a kind of ornament.

[இறை + வளை.]

இறைவன்[1] *iraivan*, பெ. (n.) ***எப்பொருளிலுந் தங்குதலுடைய கடவுள்*** (சிலப்.10,184, உரை); God, the all-abiding. (செ.அக.).

ம. இறயவன்.

[இறை + அன்.]

இறைவன்[2] *iraivan*, பெ. (n.) 1. ***தலைவன்;*** chief, master, superior. "இவ்வூ ரிறைவனை யிழந்து" (சிலப். 22,144). 2. ***கடவுள்;*** God. இறைவன் மலரடி (பாரத. இராசசூ.146). 3. ***திருமால்*** (குறள்.610,உரை); Viṣṇu. 4. ***சிவன்*** (பரிபா.11,78,உரை); Śiva. 5. ***நான்முகன்*** (பிங்.); Brahmā. 6. ***அரசன்;*** king. "இறைவற் கிறையொருங்கு நேர்வது நாடு" (குறள்.733). 7. ***கணவன்;*** husband; lord, in relation to a wife. "நற்புவி தனக்கிறைவன்" (திவ்.பெரியதி.2,3,5). 8. ***மூத்தோன்.*** (திவா); elder, venerable person. 9. ***குரு*** (பிங்.); preceptor. (செ.அக.).

ம. இறவன்.

[இறை → இறைவன்.]

இறைவன்றொழில் *iraivan-ṟōḻil*, பெ. (n.) ***இறைவனது செயற்பாடுகள்; அவை; படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாம்;*** God's deeds viz creation, protection, destruction, suppression and showing grace or mercy.

[இறைவன் + தொழில்.]

இறைவனிம்பம் *iraivanimbam*, பெ. (n.) ***சிவனார் வேம்பு*** (மலை.); wiry indigo. (செ.அக.).

[இறைவன் + நிம்பம்.]

இறைவனூல் *iraivanūl*, பெ. (n.) ***கடவுளருளிய (ஆகமம்) மறை நூல்கள்;*** agamas. 'இறைவனூலையும் அவனருள் வழிப்பட்டுத் தத்தமரபின்வரும் குரவர் பலர் நூலையும்' (நன்.7, சங்கர) (செ.அக.).

[இறைவன் + நூல்.]

இறைவனெண்குணம் *iraivan-engunam*, பெ. (n.) ***இறைவனின் எட்டுக்குணங்கள்;*** eight attributes of God. எண்குணங்களாவன: தன்வயத்தனாதல், தூயஉடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருள் உடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை எனவிவை (குறள்.பரி.உரை,9) "எண்குணத்தான் கண்டாய்" - (அப்பர் தேவாரம்). (செ.அக.).

[இறைவன் + எண் + குணம்.]

இறைவாகனம் *irai-vāganam*, பெ. (n.) (பிங்.); ***இறையூர்தி*** பார்க்க; see *irai-ūrdi*. (செ.அக.).

[இறை + வாகனம்.]

இறைவாங்கு உயர்சினை *iraivāngu uyarsinai* பெ. (n.) ***வளைதலையுடைய பெருங்கிளை;*** a big branch of a tree capable of being bent. "உழையணந்து உண்ட இறைவாங்கு உயர்சினை" (நற்.113-1).

[இறை + வாங்கு + உயர்சினை.]

இறைவி *iraivi*, பெ. (n.) 1. ***உமை*** (பிங்.); Pārvati. 2. ***கொற்றவை*** (சிலப்.12,உரைப்பாட்டுமடை,உரை); Goddess Korravai. 3. ***தலைவி;*** mistress, lady, queen. "இந்துவின் றிருமுகத் திறைவி" (கம்பரா.யுத்.மந்திர. 94) (செ.அக.).

[இறை → இறைவி.]

இறைவிழுத்து-தல் *irai-viluttu-*, 15 செ.கு.வி. (v.i.) ***வரிநீக்குதல்;*** to excempt from payment of taxes. 'சந்திராதித்தவரை இறைவிழுத்திக் கொடுத்தோம்.' (S.I.I. iii, 80) (செ.அக.).

[இறை + விழுத்து.]

இறைவை[1] *iraivai*, பெ. (n.) 1. ***புட்டில்*** (திவா.); a kind of basket. 2. ***இறைகூடை;*** receptacle for drawing water for irrigation purposes, as a well basket. "இறைவை கொளுங் கூவல்." (திருப்பு.321) (செ.அக.).

ம. இறவ.

[இறை → இறைவை.]

இறைவை[2] *iraivai*, பெ. (n.) ***ஏணி;*** ladder. "ஏறுதற்கமைத்த..... இறைவையின்" (இரகு.யாக.104) (செ.அக.).

[இறை → இறைவை.]

இறைவைமரம் *iraivai-maram*, பெ. (n.) ***தண்ணீர் இறைக்க மரத்தாற் செய்த ஓடம் போன்ற கருவி*** (இ.வ.); a boat-like wooden trough used for bailing out water. (செ.அக.).

[இறைவை + மரம்.]

இன்[1] *in*, பெ. (n.) ***இனிமை;*** sweetness, pleasantness. "இன்வள ரிளம்பிறை" (சீவக.1008) (செ.அக.)

ம. இன்.

[இல் = மென்மை, நொய்மை, இனிமை. இல் - இன்.]

இன்[2] *in,* கு.பெ.எ. (adj.) ***இனிய;*** sweet, pleasant, agreeable. "இன்சொ லினிதீன்றல் காண்பான்" (குறள். 99).

[இல் - இன்.]

இன்[3] *in,* இடை. (part.) 1. ***ஐந்தனுருபு*** (நன்.299); an abl. ending. 2. ***ஏழனுருபு*** (திருக்கோ.19, உரை); a loc. ending. 3. ***இறந்தகால இடைநிலை;*** a sign of the past tense. உறங்கினான். 4. ***சாரியை;*** an euphonic augment. "வைப்பிற்கோர் வித்து" (குறள்.24) (செ.அக.).

ம., க. இன்; தெ. னி.

[இல் - இடப்பொருள். இல் - இன்.]

இன்கடுங்கள் *inkaḍuṅkaḷ,* பெ. (n.) ***உண்டற்கினிமை யும் மயக்கமுந்தரும் கடுமையுமுடைய கள்;*** toddy. "இன்கடுங் கள்ளின் அஃதை" (அகநா.76).

[இல் - இன் + கடுங்கள்.]

இன்கண்[1] *in-kaṇ,* பெ. (n.) 1. ***இன்பம்;*** delight, pleasure. "இன்க ணுடைத்தவர் பார்வல்" (குறள்.1152). 2. ***கண்ணோட்டம்;*** kindness, special favour. "இன் கணுடைய னவன்" (கலித்.37,22) (செ.அக.).

[இல் - இன் + கண்.]

இன்கண்[2] *in-kaṇ,* பெ. (n.) ***ஒன்பது வகை மெய்ப்பாட் டுள் ஒன்று*** (நவரசத்திலொன்று); one of nine manifestations of emotions according to literary theory.

[இன் + கண்.]

இன்கண்[3] *inkaṇ,* பெ. (n.) ***இனிய முழவின் கண் பகுதி;*** eye of a drum head. "மண்கனை முழவின் இன்கண் இமிழ்வில்" (பரிபா.22-36) (சங்.இலக். சொற்.).

[இன் + கண்.]

இன்கண்ணி *in kaṇṇi,* பெ. (n.) ***இனிய மாலை*** (பெரும்பாண்.218); pleasant evening.

[இல் → இன் + கண்ணி.]

இன்கல் *inkal,* பெ. (n.) ***இனிய மலை;*** gratifying hill or mountain. "இன்கல் யாணர்தம் உறைவின் ஊர்க்கே" (நற்.344.).

[இல் → இன் + கல்.]

இன்கலியாணர் *inkali yāṇar,* பெ. (n.) ***இனிய செருக்கினை யுடைத்தாகிய புதுவருவாய்*** (மதுரைக். 330); thriving income or new prosperity. (சங்.இலக். சொற்.).

[இல் → இன் + கலி + யாணர்.]

இன்கழை *inkaḻai,* பெ. (n.) ***அழகிய மூங்கில்;*** bamboo. "இன்கழை யமல்சிலம்பின்" (அகநா.177-6) (சங்.இலக்.சொற்.).

[இன் + கழை.]

இன்களி *inkaḷi,* பெ. (n.) ***இனிய செருக்கு;*** haughtiness. "இன்களி மகிழ்நகை" (புறநா.71) (சங்.இலக்.சொற்.).

[இன் + களி.]

இன்களி நறவு *inkaḷi naṟavu,* பெ. (n.) ***இனிய களிப்பைத் தரும் கள்;*** toddy. "இன்களி நறவி னியறேர் நன்னன்" (அகநா.173).

[இன் + களி + நறவு.]

இன்காலை *inkālai,* பெ. (n.) 1. ***இனிய காலம்;*** morning, "புதலொளி சிறந்த காண்பின் காலை" (அகநா. 139-8). 2. ***இனிய காலைப் பொழுது;*** morning. "வாந்தளி பொழிந்த காண்பின் காலை" (நற். 264-2) (சங்.இலக்.சொற்.).

[இன் + காலை.]

இன்குரல் எழிலி *inkural eḻili,* பெ. (n.) ***இனிய முழக்கம் செய்கின்ற முகில்கள்;*** clouds, as gives good sound. "இன்குரல் எழிலி" (நற்.247-3) (சங்.இலக்.சொற்.).

[இன் + குரல் + எழிலி.]

இன்குளகு *inkuḷagu,* பெ. (n.) ***இனியதழை*** (முல்லை. 33); agreeable foliage. (சங்.இலக்.சொற்.).

[இன் + குளகு.]

இன்சாயல் *inšāyal,* பெ. (n.) ***இனிய மென்மை;*** elegant appearance. "அறலென விரிந்த உறலின் சாயல்" (அகநா.191-15) (சங்.இலக்.சொற்.).

[இன் + சாயல்.]

இன்சாயலன் *inšāyalaṉ,* பெ. (n.) ***மென்மையினிய நெஞ்சினன்;*** soft at heart. "பெரும்பெயர்ச் சாத்தன் ஈண்டோவின் சாயலன்" (புறநா.178-6).

[இன் + சாயலன்.]

இன்சிறு பிண்டம் *inširu piṇḍam,* பெ. (n.) ***இனிய சிறு பிண்டம்*** (இகழ்ச்சிக் குறிப்பு); sweet little thing. "இன்சிறு பிண்டம் யாங்குண்டனன் கொல்" (புறநா. 234-4).

[இன் + சிறு + பிண்டம்.]

இன்சீர் *inšīr,* பெ. (n.) ***இனிய ஓசை;*** sweet tone. "படுதிரை யின்சீர்ப் பாணி தூங்கும்" (புறநா.209-5).

[இன் + சீர்.]

இன்சீர்ப்பாணி *inšīr-p-pāṇi,* பெ. (n.) ***இனிய சீராகிய தாளம்;*** pleasant rhythm. "படுதிரை யின்சீர்ப் பாணி" (புறநா.209-5).

[இன் + சீர் + பாணி.]

இன்சுவை மூரல் *inšuvai mūral,* பெ. (n.) ***இனிய சுவையுடைச் சோறு*** (பெருபாண்.196); good tasteful food.

[இன் + சுவை + மூரல்.]

இன்சொல் *in-col,* பெ. (n.) ***இனிமையான சொல்;*** pleasant speech, kind word, courteous language, compliment opp. to வன்சொல். "இன்சொ லினிதீன்றல்" (குறள்.99) (செ.அக.).

[இல் → இன் + சொல்.]

இன்சொல்லுவமை *in-col-vuvamai,* பெ. (n.) ***அணிவகையு ளொன்று. இது பொருளில் உவமைக் கொரு விகுதி தோன்றக்கூறி இன்ன மிகுதியுடைத் தெனினு மொப்பதன்றிச் சிறந்ததன் றென்பது*** (ஆ.அக.); figure of speech.

[இன் + சொல் + உவமை.]

இன்தீங் கிளவி *intīṅkiḷavi,* பெ. (n.) ***மிக இனிய மொழி;*** sweet language. "இன்தீங் கிளவியாய்" (கலித். 24-3).

[இன் + தீம் + கிளவி.]

இன்துகிர் *intugir,* பெ. (n.) ***இனிய பவளப் பலகை;*** coral decoration. "காண்பு இன் துகிர்மேல்" (கலித்.86) (சங்.இலக்.சொற்.).

[இல் → இன் + துகிர்.]

இன்தொடைச் சீறியாழ் *intodaiccīṟiyāḻ,* பெ. (n.) ***இனிய நரம்பினை யுடைய சிறிய யாழ்*** (மதுரை.559) stringed musical instrument. (சங்.இலக்.சொற்.).

[இன்தொடை + சீறியாழ்.]

இன்ப உத்தி *inba utti,* பெ. (n.) ***அறம், பொருள், இன்பம், அச்சம் என்ற நான்கு உத்திகளுள் ஒன்று;*** crucial test of the continence of a minister or other officer of state conducted sub rosa, by a king, which consists in his (the king's) sending an old maid long in the service of the harem, to tempt the officer concerned, with a story that one of the queen is desperately in love with him (the officer), and that not only great pleasure but also splendid destiny await him if he would meet the queen's wishes, one of four utti.

[இன்பம் + உத்தி.]

இன்பக்கொடி *inba-k-kodi,* பெ. (n.) ***காமவல்லிக் கொடி;*** twining creeper found in svarga. "நந்தையுமின் பக் கொடியொத்தாள்" (சீவக.365) (செ.அக.).

[இல் - இன் - இன்பம் + கொடி.]

இன்ப துன்பம் *inba-tunbam,* பெ. (n.) ***நலமும் கேடும்;*** joy and sorrow, pleasure and pain. "சென்றாங்கு இன்ப துன்பங்கள்" (திவ்.திருவாய்.8,8,6).

[இன்பம் + துன்பம்.]

இன்பம்[1] *inbam,* பெ. (n.) 1. ***அகமகிழ்ச்சி*** (திவா.); delight, joy, happiness. 2. ***இனிமை*** (மதுரைக்.16); sweetness, pleasantness. 3. ***இன்பம்*** (காமம்); sensual enjoyment, sexual love. "அறம் பொருளின்பம்" (குறள். 501). 4. ***திருமணம்;*** marriage "கொம்பனையாளையும்... குன்றனையானையும்... இன்பமியற்றினார்" (சீவக.1980). 5. ***சொல்லினும் பொருளினுஞ் சுவை படுவதாகிய கணம்*** (தண்டி.18); sweetness of subject matter and of style and diction, a merit of poetic composition. (செ.அக.).

ம. இன்பம்.

[இல் → இன் → இன்பு → இன்பம்.]

இன்பம்[2] *inbam,* பெ. (n.) 1. ***நூற்பயனான்கி லொன்று;*** one of four benefits of learning. 2. ***பெரியோ ரியல்பி னொன்று;*** one of the characteristics of noblemen.

[இல் → இன் → இன்பு → இன்பம்.]

இன்பவணி *inba-v-ani,* பெ. (n.) ***முயற்சியின்றி விரும்பப்பட்ட செயல் கைகூடுதலும் விரும்பப்பட்ட பொருளினும் நிறைவாய்க் கைகூடுதலும், கைகூடு தற் பொருட்டுச் செய்யும் முயற்சி மற்றும் வழிவகை களால் திறன் வெளிப்படுதலுமாம்*** (அபி.சிந்.); figure of speech depicting fulfilment of desire.

[இன்பம் + அணி.]

இன்பவுபதை *inbavubadai,* பெ. (n.) ***இன்பஉத்தி*** பார்க்க; see *inbautti.*

இன்பன் *inban,* பெ. (n.) ***கணவன்;*** husband, as being dear to the wife. "பதுமத்தலர்மக டனக்கு மின்பன்" (திவ். பெரியதி.2,3,5).

[இன்பு → இன்பன்.]

இன்பாயல் *inpāyal,* பெ. (n.) ***இனிய படுக்கை;*** comfortable bed. "புரையோ ருண்கட் டுயிலின் பாயல்." (பதிற்றுப்.16:18).

[இன் + பாயல்.]

இன்பி-த்தல் *inbi-,* 11 செ.குன்றாவி. (v.t.) ***இன்ப மூட்டுதல்;*** to cause to be happy. "என்னையுருக்கி யின்பித்தவடி" (பாடு.திருவருட்) (செ.அக.).

[இன்பு → இன்பி.]

இன்பு *inbu,* பெ. (n.) ***இன்பம்*** பார்க்க; see *inbam.* "வளநக ரும்ப ரின்பொடு புரியவர்" (தேவா.553,8).

க., தெ. இன்பு.

[இன் → இன்பு.]

இன்புளி *inbuli,* பெ. (n.) ***நற்புளிப்பு;*** sour. (மலை.179); (சங்.இலக்.சொற்.).

[இன் + புளி.]

இன்புளிப்பு *inpulippu,* பெ. (n.) 1. ***தித்திப்பும் புளிப்புங் கலந்த சுவை;*** mixture of the sweet and the sour. 2. ***காடியுந் தேனுங்கலந்த குழம்பு;*** mixture or medicated syrup of vinegar and honey, used as an expectorant or demulcent-Oxymel. (சா.அக.).

[இன் + புளிப்பு.]

இன்புளி வெஞ்சோறு *inpuli vencōṟu,* பெ. (n.) ***இனிய புளிங்கறி யிடப்பட்ட வெவ்விய சோறு;***

tamarind rice. "ஈயல் பெய்தட்ட இன்புளி வெஞ்சோறு" (அகநா.394) (சங்.இலக்.சொற்.).

[இன்புளி + வெஞ்சோறு.]

இன்புறல் *inbu-ṟal,* பெ. (n.) ***மகிழ்ச்சி பொருந்தல்*** (ஆ.அக.); enjoyment.

[இன்பு + உறல்.]

இன்புறவு *inbuṟavu,* பெ. (n.) ***மகிழ்கை;*** gratification, pleasure. (திருக்கோ.219,அவ.) (செ.அக.).

[இன்பு + உறவு.]

இன்புறாவேர் *inbuṟāvēr,* பெ. (n.) ***சாயவேர்*** பார்க்க; see *sāyavēr.* (சா.அக.).

[இன்பு → உறா + வேர்.]

இன்பை *inbai,* பெ. (n.) ***துளசி;*** basil - ocimum sanctum. (சா.அக.).

[இன்பு → இன்பை.]

இன்மணியாரம் *in-maṇi-y-āram,* பெ. (n.) ***இறந்துபட்டதோ ரிசைநூல்*** (யாப்.வி.540); an ancient musical treatise. (செ.அக.).

[இன் + மணி + ஆரம்.]

இன்மை *inmai,* பெ. (n.) 1. ***இல்லாமை*** (திவ்.திருவாய்.6,3,4); total negation of existence, dist.fr. அன்மை and opp. உண்மை. 2. ***வறுமை;*** poverty, destitution, adversity. "இன்மைதீர்த்தல் வன்மை யானே" (புறநா.3). 3. ***இன்மைவகை*** (வேதா.சூ.35); absolute negation, of four kinds, viz., முன்னின்மை, பின்னின்மை, ஒன்றினி லொன்றின்மை, என்றுமின்மை (செ.அக.).

[இல் + இன் → இன்மை.]

இன்மை நவிற்சி யணி *inmai naviṟci aṇi,* பெ. (n.) ***அணிவகையு ளொன்று. இது யாதேனு மொன்றின்மையால் உவமியத்துக்கு உயர்வேனுந் தாழ்வேனுந் தோன்றச் சொல்லுதல்;*** figure of speech. (ஆ.அக.).

[இன்மை + நவிற்சி + அணி.]

இன்மை வழக்கு *inmai vaḻakku,* பெ. (n.) ***இல்வழக்கு*** (மணி.30,194) பார்க்க; see *ilvaḻakku.* (செ.அக.).

[இன்மை + வழக்கு.]

இன்றி *iṉṟi,* கு.வி.எ. (adv.) ***இல்லாமல்;*** without. "தனக்கொரு பயனின்றி யிருக்க" (கலித்.96,30,உரை) (செ.அக.).

ம. இன்னி.

[இல் - இன்றி.]

இன்றிய *iṉṟiya,* கு.பெ.எ. (adj.) ***இல்லாத;*** that which is not, a word used as a negative affix. "தரித்தரலின்றிய விவற்றை" (பெருங்.மகத. 14,24) (செ.அக.).

[இல் - இன்றி - இன்றிய.]

இன்றியமையாமை *iṉṟi-y-amaiyāmai,* பெ. (n.) ***தானில்லாமல் முடியாமை;*** indispensableness, necessity, sinequa non. "இன்றியமையாச் சிறப்பின வாயினும்" (குறள்.961).

[இன்றி + அமையாமை.]

இன்று[1] *iṉṟu,* பெ. (n.) கு.வி.எ. (adv.) ***இந்நாள்;*** this day, to-day. "இன்று நம் ஆனுள் வருமேல் அவன் வாயில்" (சிலப்.17-20) (செ.அக.).

ம. இன்னு; க., பட. இந்து. தெ. இந்து, நேடு; கோத. இந்த்ய, துட. ஈத்; கு. இந்து; குட. இந்தி; து. இனி, இன்னெ; கொலா. இந்கெட், நெடீ; நா. இந்தர்; பர். இனெ; கூ. நேன்சு; குவி. நின்சு; கோண். நேண்ட்; குரு. இன்னா; மால். இனெ, அகினோ.

[இஞ்ஞான்று → இஞன்று → இன்று.]

இன்று[2] *iṉṟu,* இடை; (part.) ***ஓர் அசைச்சொல்*** (திவா.); expletive. (செ.அக.).

[இன்று = இற்று. முடிந்தது எனப் பொருள்படுவதோர் இறந்த காலக் குறிப்பு வினைமுற்று. பழங்கால உலகவழக்கிலும் செய்யுள் வழக்கிலும் அசைநிலையாயிற்று.]

இன்று[3] *iṉṟu,* கு.வி.எ (adv.) ***இன்றி;*** without. "உப்பின்று புற்கை யுண்கமா கொற்கை யோனே" (நன்.172, மயிலை).

[இல் - இன்று இல்லை எனப் பொருள்படுவதோர் குறிப்பு வினைமுற்று இல்லாமல் எனப் பொருள் படுவதோர் குறிப்பு வினையெச்சம் ஆயிற்று.]

இன்று[4] *iṉṟu,* கு.வி.மு. (imp.v.) ***இல்லை;*** no. "பருவந்து பாழ்படுத லின்று" (குறள்.83).

[இல் + து - இல்து - இன்று.]

இன்றேல் *iṉṟēl,* வி.எ. (adv.) ***இல்லாவிடில்;*** if not or else. "அஃதின்றேல் மன்னாவாம் மன்னர்க் கொளி" (குறள்.556).

[இன்று → இன்றேல்.]

இன்றைக்கு *iṉṟaikku,* கு.வி.எ. (adv.) ***இன்று;*** today "இன்றைக்கு இருப்பாரை நாளை இருப்பர் என்று எண்ணவோ திடமில்லை" (தாயுமானவர்) (செ.அக.).

[இஞ்ஞான்று → இன்று + ஐ + கு.]

இன்ன *iṉṉa,* கு.பெ.எ. (adj.) 1. ***இத்தன்மையான;*** such. 2. ***உவமவுருபு*** (நன்.367); like, a sign of comparison - பெ. (pron.) இப்படிப்பட்டவை; such things. "இன்னவாகிய பலவளனுண்டு" (கந்தபு.தவங்கண்.17) (செ.அக.).

ம. இன்ன; க., இந்து; தெ. இட்லு; கோத. இன, இன்னெ; துட. இனொவ்; குட. இன்னதெ, இந்தெ; து. இன்து; குரு. என்னெ; பட. இத்தெ.

[இல் → இன் → இன்ன. இல் - இது எனப் பொருள்படும் அண்மைச்சுட்டு. கன்னடத்தில் இல்லி - இங்கேயென ஆளப்படுதல் நோக்குக.]

இன்னணம் *innanam*, கு.வி.எ (adv.) ***இவ்வாறு;*** thus; in such state, "ஈங்கிவ ளின்னண மாக" (மணி.8,1) (செ.அக.).

[இல் → இன் → இன்ன + அணம். இல் - இது. இன்ன - இந்த. வண்ணம் - வணம் - அணம்.]

இன்னதல்லதிதுவென மொழிதல் *innatallatitu-v-ena-molidal*, பெ. (n.) *32 வகை உத்திகளி லொன்று* (நன்.14); making a definite statement about a thing where there is any room for doubt, that is only this and not the other, one of 32 utti, (செ.அக.).

[இன்னது + அல்லது + இது + என + மொழிதல்.]

இன்னது *innadu*, சு.பெ. (pron.) 1. ***இத்தன்மையுடையது;*** such as this. "வளவயல் வைகலு மின்ன தென்ப" (சீவக.64). 2. ***இது;*** this thing; what follows. "இன்னது கேண்மென" (கந்தபு.அசுரர்யாக.1) "இன் னது இன்னுழி இன்னணம் இயலும்" (நன்னூல்).

ம. இன்னது.

[இன்ன + அது.]

இன்னம் *innam*, கு.வி.எ. (adv.) ***இன்னும்*** பார்க்க; see *innum*. (செ.அக.).

[இன்னும் → இன்னம்.]

இன்னமும் *innamum*, கு.வி.எ. (adv.) ***இன்னும்*** (கம்பரா.திருவடி.59); yet. (செ.அக.).

ம. இன்னியும்.

[இல் - இன் - இன்னும். இல் - இது. இன்ன = இதன். இன்னும் - இதனினும், மேலும்.]

இன்னயம் *innayam*, பெ. (n.) *முகமனுரை* (உரி.நி.); word of courtesy, of welcome. (செ.அக.).

[இல் → இன் (மென்மை, இனிமை) இன் + நயம்.]

இன்னர் *innar*, பெ. (n.) ***விளைகேடு;*** portent, foreboding. "இன்ன லின்னரொடு" (பரிபா.4,19) (செ.அக.).

[இல் → இல்லு → இன்னு → இன்னல் → இன்னர். இல்லுதல் = துளைத்தல், குத்துதல், துன்புறுத்துதல்.]

இன்னவை *innavai*, பெ. (n.) ***கொடியவை;*** woe, outrage. "ஈரத்துள் இன்னவை தோன்றின்." (கலித்.41-30) (பாண்டிச்.அக.).

[இல் → இன் → இன்னவை.]

இன்னல் *innal* பெ. (n.) ***துன்பம்;*** unpleasantness, trouble, pain, affliction. "இன்னல் செயிராவணன்" (கம்பரா.மந்தரை.39) (செ.அக.).

[இல் - இல்லு - இன்னு - இன்னல். இல்லுதல் = குத்துதல், துளைத்தல், துன்புறுத்துதல்.]

இன்னலம் *innalam*, பெ. (n.) ***நன்னலம்;*** welfare, good prosperity. (ஆ.அக.).

[இல் → இன் + நலம் = இன்னலம்.]

இன்னவர் *innavar*, பெ. (n.) ***இத்தகையவர்;*** the person indicated. (ஆ.அக.).

ம. இன்னவன்

[இன் → இன்னவர்.]

இன்னன் *innan*, பெ. (n.) ***இன்னான்*** பார்க்க, see *innān*. (செ.அக.).

[இல் → இன் → இன்ன + ஆன் = இன்னான் - இன்னன்.]

இன்னா[1] *innā*, பெ. (n.) 1. ***தீங்குதருபவை*** (குறள்.32, அதி); those that cause misery. 2. ***துயரம்*** (திவா.); misery, distress. (செ.அக.).

[இல் → இல்லு → இன்னு → இன்னல் - இன்னா.]

இன்னா[2] *innā*, பெ. (n.) 1. ***துன்பம்;*** affliction. 2. ***இகழ்ச்சி;*** insult.

[இன் → இன்னா.]

இன்னா[3] *innā*, இடை. (int.) ***இதோ;*** behold, here. (Tinn.).

ம. இன்னா; க. இகொ, இதிகோ; தெ. இதிகொ, இகோ, இதோ; து. இந்தா; பட. இதா.

[இல் → இன் → இன்னா (மு.தா.324).]

இன்னாங்கு *innāṅgu*, பெ. (n.) 1. ***தீமை;*** evil, hurt, injury. "இன்னாங்கு செய்வார்" (நாலடி.355). 2. ***துன்பம்;*** pain, remorse, suffering. "இன்னாங் கெழுந்திருப் பார்" (நாலடி.11). 3. ***கடுஞ்சொல்;*** aspersion, insult; harsh, cruel words. "ஒருவன் இன்னாங் குரைத்தான்" (தொல்.சொல்.246,உரை) (செ.அக.).

ம. இன்னாங்கம்.

[இல் → இன் + (ஆ) ஆங்கு.]

இன்னாங்கோசை *innāṅg-ōsai*, பெ. (n.) ***கடுமையான ஓசை*** (திவா.); discord, harsh sound, cacophony. (செ.அக.).

[இன் → இன்னா → இன்னாங்கு + ஓசை.]

இன்னாச்சொல் *innāccol*, பெ. (n.) ***இழிசொல்;*** insult. (ஆ.அக.).

[இல் + இன் + ஆ + சொல்.]

இன்னாத *innāda*, பெ. (n.) ***துன்பஞ்செய்வன;*** that which are evil or atrocious.

[இன் + ஆ + த் + அ. (கு.வி.(அ)பெ).]

இன்னாதா-தல் *innadā-*, 6 செ.கு.வி. (v.i.) ***துன்புறுதல்;*** to suffer pain, to be miserable. "அவள்... இன்னா தாகிறாள்" (ஈடு.1,4,7) (செ.அக.).

[இல் → இன் + ஆ + து + ஆதல்.]

இன்னாதார் *innādār*, பெ. (n.) 1. ***பகைவர்;*** adversaries, enemies. (ஆ.அக.). 2. ***தீயோர்;*** the wicked.

[இல் → இன் + ஆ + த + ஆர்.]

இன்னாது *innādu,* பெ. (n.) 1. ***தீது;*** evil. "பிறப்பின்னா தென்றுணரும்" (நாலடி.173). 2. ***துன்பு*** (ஈடு); pain. (செ.அக.).

[இல் → இன் + ஆ + து.]

இன்னாநாற்பது *innā-nārpadu,* பெ. (n.) ***பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுளொன்று; கபிலர் எழுதியது. 40 பாடல்கள் கொண்டது. ஒவ்வொரு பாடலும், இன்னாத கருத்துகள் நான்கினைக் கூறுவது;*** ancient didactic work by Kabilar consisting of 40 stanzas in each of which are mentioned certain outstanding causes of pain and suffering in general, one of patiṉeṉ-kīḻ-k-kaṇakku (செ.அக.).

[இல் → இன் + ஆ + நாற்பது.]

இன்னாப்பு *innāppu,* பெ. (n.) ***துன்பம்;*** sorrow, pain "இன்னாப்பாலே சொல்லுகிறார்" (ஈடு.5,4,3) (செ.அக.).

[இல் → இன் + ஆ + (ப்) + பு.]

இன்னா முகம் *innāmugam,* பெ. (n.) ***மகிழ்ச்சியில்லாத முகம்*** (ஆ.அக.); sorrowful face.

[இல் - இன் - ஆ + முகம்.]

இன்னாமை *innāmai,* பெ. (n.) ***துன்பம்;*** pain, distress, misfortune. "இன்னாமை யின்பமெனக் கொளின்" (குறள்.630) (செ.அக.)

[இல் - இன் + ஆ + மை.]

இன்னார் *innār,* பெ. (n.) ***பகைவர்;*** enemies; persons not agreeable; unfriendly people "இனியார்போன் றின் னாராய்" (நாலடி.378) (செ.அக.).

ம. இன்னார்.

[இல் - இன் + ஆ + ஆர்.]

இன்னாரினியார் *innār-iniyār,* பெ. (n.) 1. ***பகைவரும் நண்பரும்;*** foes and friends. 'துறவிகட்கு இன்னா ரினியா ரென்பதில்லை' (உ.வ.). 2. ***இன்னா ரினையார்*** பார்க்க; see *innār-inaiyār* (செ.அக.).

[இல் → இன் + ஆ + ஆர் + இனியார்.]

இன்னா ரினையார் *innār-inaiyār,* பெ. (n.) ***இத்தன் மையுடையவர்;*** what sort of persons, such and such persons. "இன்னா ரினையாரென் றெண்ணுவா ரில்லை காண்" (திவ்.நாச்சி.75) (செ.அக.).

[இல் → இன் + ஆர் + இனையார்.]

இன்னாலை *innālai* பெ. (n.) ***இலைக்கள்ளி*** (மலை); five tubered spurse. (செ.அக.).

[இல் → இன் + ஆலை. ஆலை = பாலுடையது (இல் → இன் = உட்புறம்).]

இன்னாவிச்சை *innā-v-iccai,* பெ. (n.) ***செய்யுட் குற்றம் இருபத்தேழனு ளொன்று*** (யாப்.வி.525); one of the defects in the composition of verses. (செ.அக.).

[இல் → இன் + ஆ + (வித்தை) விச்சை.]

இன்னாள்[1] *innāl,* பெ. (n.) ***இன்ன ஆள்;*** such and such a person, so and so.

ம. இன்னாள்.

[இன்ன + ஆள்.]

இன்னாள்[2] *innāl,* கு.வி.எ. (adv.) 1. ***இந்நாள்*** பார்க்க; see *innāl.* 2. ***இன்றைய நாள், நடக்கும் நாள்; இன்று;*** (கொ.வ.); the day, on the day of occurance, today.

ம. இன்னாள்.

[இன் + நாள் - இந்நாள். இதனை இன்னாள் என்பது தவறு.]

இன்னான்[1] *innān,* பெ. (n.) 1. ***இத்தன்மையான்;*** person of such a character. "இனத்தானா மின்னா னெனப்படுஞ் சொல்" (குறள்.453). 2. ***இன்னார்;*** so and so, such a person. "இன்னாரோலை இன்னார் காண்க" (சீவக.1041,201) (செ.அக.).

ம. இன்னான்.

[இல் → இன் + ஆன்.]

இன்னான்[2] *innān,* பெ. (n.) ***துன்பஞ்செய்வோன்;*** tantaliser, tormentor, persecutor. "புணர்வினின்னான்" (ஐங்குறு.150) (செ.அக.).

[இல் → இன் + ஆ + ஆன்.]

இன்னிக்கிலை *innikkilai,* பெ. (n.) ***கம்மாறு வெற் றிலை;*** black betel. (சா.அக.).

[இல் → இன் → இன்னிக்கு + இலை. இல் = கருமை.]

இன்னிசை *in-n-isai,* பெ. (n.) 1. ***இன்பந்தரும் இசை;*** melody, harmony. 2. ***பண்வகை*** (திவா.); melody type. 3. ***இன்னிசை வெண்பா*** (காரிகை.செய்யு.4) பார்க்க; see *innisai venbā.* (செ.அக.).

ம. இந்நிச.

[இல் → இன் + இசை.]

இன்னிசைக் கலிப்பா *in-n-isai-k-kalippa,* பெ. (n.) ***கலிப்பாவு ளொன்று;*** class of kalip-pā. (ஆ.அக.).

[இல் → இன் + இசை + கலிப்பா.]

இன்னிசைகாரர் *in-n-isai-kārar,* பெ. (n.) ***பாணர்*** (திவா.); ancient caste of bards. (செ.அக.).

[இல் → இன் + இசை + காரர்.]

இன்னிசைச் சிந்தியல் *in-n-isai-c-cindial,* பெ. (n.) ***வெண்பா வகையு ளொன்று;*** class of venba. இன் னிசை வெண்பாபோனடந்து மூன்றடியாக முடிவது.

[இன்னிசை + சிந்தியல்.]

இன்னிசைமாலை *innisai-mālai,* பெ. (n.) ***அகப்பொ ருள் பற்றிய பெருநூல்*** (களவழி.24); treatise on akapporul. (செ.அக.).

[இல் → இன் + இசை + மாலை.]

இன்னிசை வெண்பா *iṉ-ṉ-iśai-veṇbā*, பெ. (n.) ***நான்கடியாய்த் தனிச்சீரின்றிவரும் வெண்பா*** (காரிகை.செய்.4,உரை); veṇpā of four lines in which the second line has four feet instead of three feet plus the taṉi-c-cīr. (செ.அக.).

[இல் → இன் + இசை + வெண்பா.]

இன்னிசை வெள்ளை *iṉ-ṉ-iśai-veḷḷai*, பெ. (n.) ***இன்னிசை வெண்பா*** (பிங்.) பார்க்க; see *iṉṉiśai veṇbā* (செ.அக.).

[இல் → இன் + இசை + வெள்ளை.]

இன்னியம் *iṉ-ṉ-iyam*, பெ. (n.) ***இசைக்கருவிகள்*** (பெருங்.வத்தவ 2,30); musical instruments (செ.அக.).

[இல் → இன் + இயம்.]

இன்னியர் *iṉṉ-iyar*, பெ. (n.) ***பாணர்*** (அகி.நி.); bards, singers. (செ.அக.).

[இல் → இன் + இயர்.]

இன்னிலை *iṉṉilai*, பெ. (n.) ***இல்வாழ்க்கை*** (குறள்.45, பரி.உரை); life of a householder, homelife. (செ.அக.).

[இன் + நிலை. இதனை இல் + நிலை - இல்வாழ்க்கை பற்றிக் கூறுவதெனக் கொள்ளவியலாது. முப்பாலுடன் காட்டுலக வானப் பிரத்தம் ஒவ்வாதென்க.]

இன்னினி *iṉṉ-iṉi*, கு.வி.எ (adv.) ***இப்பொழுதே;*** now, ever now, without a moments delay. "இன்னினியே செய்க வறவினை" (நாலடி.29) (செ.அக.).

[இல் → இன் + இனி.]

இன்னீர் *iṉṉīr*, பெ. (n.) ***இத்தன்மையீர்*** (you) of this nature or character "இன்னீ ராகலி னினியவு முளவோ" (புறநா.58-18).

[இல் - இன் + நீர்.]

இன்னும் *iṉṉum*, கு.வி.எ. (adv.) ***இவ்வளவு காலஞ் சென்றும்;*** still, yet. இன்னுந் தெரியவில்லை. 2. ***மறுபடியும்;*** again. இன்னும் வரும். 3. ***மேலும்;*** still more; more than this. இன்னும் வேண்டும். 4. ***அன்றியும்;*** also, more than that, in addition to, in a conjunctive sense. "இன்னு மிழத்துங் கவின்" (குறள்.1250) (செ.அக.).

ம. இன்னும்; க. இன்னும், இன்னு; குட. இஞ்ஞ ; து. நந; பட. இன்னு.

[இல் → இன் + உம். இல் + இது. இன்னும் = இதன்மேலும்.]

இன்னுமின்னும் *iṉṉum-iṉṉum*, கு.வி.எ. (adv.) ***மேன் மேலும்;*** more and more. "இன்னுமின்னுமெங் காம மிதுவே" (பரிபா.13,64) (செ.அக.).

[இன்னும் + இன்னும்.]

இன்னுழி *iṉṉuḻi*, கு.வி.எ (adv.) ***இன்னவிடத்து;*** in such a place "இன்னுழி யாகாது" (தொல்.பொருள்.186, உரை) (செ.அக.).

[இல் → இன் + உழி.]

இன்னூகம் *iṉṉūgam*, பெ. (n.) ***கப்பற்கடுக்காய்;*** large variety of foreign gall nut. (சா.அக.).

[இல் → இன் + ஊகம்.;

இன்னே *iṉṉē*, கு.வி.எ. (adv.) 1. ***இப்பொழுதே;*** now itself; at this moment. "உற்றதின்னே யிடையூ றெனக்கு" (சீவக.226). 2. ***இவ்விடத்தே;*** here, in this place. "இன்னே வாருங்கள்" (திருக்கோ.55). 3. ***இவ்விதமாக;*** thus, in this manner. "விதியார் செய்கை யின்னேயோ" (கந்தபு.மார்க்கண்.103) (செ.அக.).

[இல் → இன் + ஏ.]

இன்னோசை *iṉṉōśai*, பெ. (n.) ***இனிய ஓசை;*** melodious sound.

[இல் → இன் + ஓசை.]

இனக்கட்டு *iṉa-k-kaṭṭu*, பெ. (n.) 1. ***உறவின் நெருக்கம்;*** bond of union between relatives. 2. ***முறைமை*** (வின்.); due respect among the several branches of a family. (செ.அக.).

[இனம் + கட்டு.]

இனங்கண்டு சேர்த்தல் *iṉaṅkaṇḍu cērttal*, தொ.பெ. (vbl.n.) ***உறவான சரக்கைக் கலத்தல்;*** adding allied drugs in alchemy; finding which drug is suitable to add. (சா.அக.).

[இனம் + கண்டு + சேர்த்தல்.]

இனங்காப்பார் *iṉaṅ-kāppār*, பெ. (n.) ***கோவலர்;*** cowherds who protect cattle. (கலித்.143,37) (செ.அக.).

[இனம் + காப்பார். இனம் = கால்நடையினம்.]

இனசாரிச்சரக்கு *iṉa-cāriccarakku*, பெ. (n.) 1. ***ஓரினத்தைச் சேர்ந்த சரக்கு;*** drug falling under one group or class. 2. ***இனம்பிரித்த சரக்கு;*** sorted drug. (சா.அக.).

[இனம் + சாரி + சரக்கு.]

இனத்தான் *iṉattāṉ*, பெ. (n.) 1. ***உறவினன்*** (செ.அக.); relative. 2. ***ஓரினத்தவன், தன் இனத்தைச் சார்ந்தவன்;*** person belonging to one's own community or caste.

ம. இனத்தான்.

[இனம் + அத்து + ஆன்.]

இனம்[1] *iṉam*, பெ. (n.) 1. ***'வகை, வகுப்பு*** (நன்.91); class, group, division, kind, species; sort. 2. ***குலம்;*** race, tribe. "விண்ணோர்க ளொருபடை தானும் நங்க ளினத்தை யுயிருண்ணாது" (கந்தபு.அக்கினிமு.203). 3. ***சுற்றம்*** (அக.நி.); comrades, associates, neighbours. 4. ***துணையாகச் சேரும் கூட்டம்;*** brotherhood, fellowship, society, company. "இனத்தானா மின்னா னெனப் படுஞ் சொல்" (குறள்.453). 5. ***நிரை;*** pack, herd. "கழுதைப் புல்லினம் பூட்டி" (புறநா.15). 6. ***ஒரு தொகுதியுட் சேர்த்து வழங்குதற்குரியது*** (நன்.358);

associated items. 7. ***அமைச்சர்;*** ministers in council. ''இனத்தாற்றி யெண்ணாத வேந்தன்''(குறள்.568). 8. ***ஒப்பு;*** equality. comparison. ''இனமேதுமிலானை'' (திவ்.திருவாய்.9,3,5). 9. ***ஆள்;*** individual.' பணத்தை நல்ல இனத்திற் கொடுத்திருக்கிறேன்' (இ.வ.) (செ.அக.).

ம. இனம்; க. என.

[இல் = வீடு. இல் - (இலம்) - இனம் = வீட்டைச் சார்ந்தவர் உறவினர், உறவு.]

இனம்[2] *inam,* பெ. (n.) ***தொடர்புடைய, உவமை;*** relatedness, simile, comparison. ''இன்னுனார் முழுநலம்'' (திவ். திருவாய்.111,2) (செ.அக.).

இனம்பிரி-தல் *inam-piri-,* 4 செ.கு.வி. (v.i.) ***துணைக் கூட்டத்தினின்று விலகுதல்;*** to be separated from the class or company. (செ.அக.).

[இனம் + பிரிதல்.]

இனமாற்றல் *inamāṟṟal,* பெ. (n.) ***ஓரினக்கணக்கைப் பிறிதோரினக் கணக்காய் மாற்றுகை;*** reduction from one denomination to another. (செ.அக.).

[இனம் + மாற்றல்.]

இனமுறை *ina-muṟai,* பெ. (n.) ***ஒத்த இனம்*** (C.G.); relationship of the same caste. (செ.அக.).

[இனம் + முறை.]

இனமொழி *ina-moḻi,* பெ. (n.) ***எண்வகை விடைகளு ளொன்று*** (நன்.386); நேரடியாக விடையளிக்காமல், ''பயருளவோ வணிகீர்?'' என்றார்க்கு ''உழுந்து அல்ல தில்லை'' எனக் கூறுவது; indirect answer related to the subject of the question, as, for example, when questioned "Have you green gram to sell," to answer "We have nothing but black gram" one of eight kinds of viḍai, (செ.அக.).

[இனம் + மொழி.]

இனமோனை *ina-mōnai,* பெ. (n.) ***இனவெழுத்தால் வரும் வல்லின மெல்லின இடையின மோனைகள்*** (யா.கா.ஒழி.6); consonantal alliteration in which any letter of the group are repeated instead of, the usual, the same letter, of the three kinds, viz., வல்லின மோனை, மெல்லின மோனை, இடையின மோனை (செ.அக.).

[இனம் + மோனை.]

இனவண்டு *inavaṇḍu,* பெ. (n.) ***இனமான வண்டு கள்;*** same class of bees; ''யாழோர்த்தன்ன இன்குரல் இனவண்டு'' (நற்.176).

[இனம் + வண்டு.]

இனவரி *ina-vari* பெ. (n.) ***பழைய காசாய வரிவகை*** (S.I.I.i,89); ancient tax in cash (செ.அக.).

ம. இனவரி.

[இனம் + வரி. ஆனினங்களுக்கு இடப்பட்ட வரியாகலாம்.]

இனவரிக்காசு *ina-vari-k-kāsu,* பெ. (n.) ***பழையதொரு வரி*** (I.M.P.cg.1068); ancient village rate. (செ.அக.).

ம. இனவரி.

[இனம் + வரி + காசு.]

இனவழி *ina-vaḻi,* பெ. (n.) 1. ***குடிவழி;*** descent from the same line or ancestry. 2. ***தலைமுறை*** (பரம்பரை) (வின்.); descent from the same breed, as of cattle. (செ.அக.).

[இனம் + வழி.]

இனவழிக்கணக்கு *ina-vaḻi-k-kaṇakku,* பெ. (n.) ***பேரேடு;*** ledger. (செ.அக.).

[இனம் + வழி + கணக்கு.]

இனவாரி *ina-vāri,* கு.வி.எ. (adv.) ***இனம் இனமாய்;*** distributively, according to items of different classes. (செ.அக.).

[இனம் + வாரி. வரை - வரி - வாரி = வரம்புக்குட்பட்டது. இஃது உருதுச்சொல்லன்று.]

இனவாளை *ina-vāḷai,* பெ. (n.) ***வாளையின மீன்;*** a kind of fish. 'பூக்கதூஉ மினவாளை' (புறநா.18) (சங்.இலக்.சொற்.).

[இனம் + வாளை.]

இனவெதுகை *ina-v-edugai,* பெ. (n.) ***இனவெழுத் தால் வரும் வல்லின மெல்லின இடையின வெதுகை*** (யா.கா.ஒழிபு.6); rhyme in which the rhyming letters of the lines in a stanza are not the same, but are of the same class; this being of three kinds, viz., வல்லினம், மெல்லினம், இடையினம் (செ.அக.).

[இனம் + எதுகை.]

இனவெழுத்து *inaveḻuttu,* பெ. (n.) ***ஓரினவெழுத்து;*** letter of a main class as those related to each other.

[இனம் + எழுத்து.]

இனவெழுத்துப்பாட்டு *ina-v-eḻuttu-p-pāṭṭu,* பெ. (n.) ***வல்லினம் முதலிய மூவினங்களுள் ஓரினத் தெழுத் துகளே வரப்பாடுஞ் சித்திரப் பாடல்வகை*** (கவி வகை) (யாப்.வி.503); a kind of cittira-kavi. (செ.அக.).

[இனம் + எழுத்து + பாட்டு.]

இனன்[1] *iṉaṉ,* பெ. (n.) 1. ***உறவினன்;*** kinsman. ''இன்னா தினனில்'' (குறள்.1158). 2. ***ஒப்பானவன்;*** (திவ்.திருவாய்.1,1,2); equal. 3. ***ஆசிரியர்*** (யாழ்.அக.); teacher. (செ.அக.).

ம. இனக்கார்.

[இனம் + அன்.]

இனன்[2] *iṉaṉ,* பெ. (n.) ***சூரியன்*** (பிங்.); sun. (செ.அக.).

[உல் - இல் - இன் - இனன்.]

இனாப்பி-த்தல் *inappi*, 4 செ.கு.வி. (v.i.) ***துன்பமுண் டாக்குதல்;*** cause affliction, torment. "இனாப்பிச் செற்றிடு கூட்டில்" (திருப்பு.90).

இனி[1] *ini*, கு.வி.எ (adv.) 1. ***இப்பொழுது;*** now, immediately. "கேளினி" (மலைபடு.94) "இனிமேல்" (திவ்.இயற்.4,95); hereafter, henceforth. "இனிஅன்ன நின்னொடு சூழ்வார்" (குறள்.1294). 3. ***இப்பால்;*** from here onwards, used of place. "இனி நம்எல்லை வந்துவிட்டது" (செ.அக.).

ம. இனி; க. இன்னெ, இன்னு, இன்ன; கோத. இனி; குட. இக்க, இக்கனிஞ்சி; து. குத்தெ, குத்தெனெ; தெ. இக, இங்க, இந்த, இந்தட; நா. இன்டி; கோண். இன்கா, இத்ரா; பிரா. தாசா; ஆத். இன்ய.

[இல் → இன் → இனி.]

இனி[2]**-த்தல்** *ini-*, 4 செ.கு.வி. (v.i.) 1. ***தித்தித்தல்;*** to be sweet, to the taste "இனித்தமுடைய எடுத்த பொற்பாதம்" (அப்பர் தேவாரம்). 2. ***இன்பமாதல்;*** to be pleasant, attractive, fascinating. இனிக்கப் பேசினான் (செ.அக.).

ம. இனிக்குக; க. இன், இனி, இம்பு; து. இனி, இம்பு; தெ. இம்பு, இன்சு.

[இல் → இனிமை, மென்மை. இல் → இன் → இனி. இனித்தல்.]

இனிச்ச பண்டம் *inicca pandam*, பெ. (n.) ***தித்திப்புப் பொருள்*** (J); sweet eatable, confectionery. (செ.அக.).

[இனி → இனித்த → இனிச்ச + பண்டம்.]

இனிதின் இனிது *inidin inidu*, பெ. (n.) ***இனியவற் றினு மினிது;*** sweeter than most sweets. "இனிதினினிது தலைப்படுதும்" (நற்.134) (சங்.இலக்.சொற்.).

[இனிதின் + இனிது.]

இனிது *inidu*, பெ. (n.) 1. ***இன்பந்தருவது;*** that which is sweet, pleasing, agreeable. இனிதுறு கிளவியும் (தொல்.பொருள்.303). "அமிழ்தினும் ஆற்ற இனிதே" (குறள்.64). 2. ***நன்மையானது;*** that which is good. - கு.வி.எ. (adv.) ***நன்றாக;*** sweetly, favourably. "புலியூர்ப் புக்கினி தருளினன்" (திருவாச.2,145) (செ.அக.).

ம. இனிது; க. இனிது; தெ., து. இம்பு.

[இல் → இன் → இனி+து - இனித்து - இனிது.]

இனிப்பி-த்தல் *inippi-*, 4 செ.குன்றாவி. (v.t.) ***தித்திப் பாகச் செய்தல்;*** to sweeten. (சா.அக.).

[இனிப்பு → இனிப்பி.]

இனிப்பிலந்தை *inippilandai*, பெ. (n.) ***தித்திப் பிலந்தை;*** sweet Indian apple. (சா.அக.).

[இனிப்பு + இலந்தை.]

இனிப்பு *inippu*, பெ. (n.) 1. ***தித்திப்பு;*** sweetness. "இனிப்பை நல்கு முக்கனி" (வைராக்.சத.45). 2. ***மகிழ்ச்சி;*** pleasure, delight. "இனிப்போடு நகையாடவே" (குமர.பிர.மதுரைக்.39) (செ.அக.).

ம. இனிப்பு; க. இனி, ஈன், இம்பு, இம்மு; து. இனி, இம்பு; தெ. இம்பு, இம்மு.

[இல் → இன் → இனி → இனிப்பு.]

இனிப்புக்காட்டு-தல் *inippu-k-kattu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. ***ஆசைகாட்டுதல்;*** to give a gratifying foretaste. 2. ***இனிப்பாதல்*** (வின்.); to be sweet, delicious. (செ.அக.).

[இனிப்பு + காட்டு.]

இனிப்புக் குழம்பு *inippu-k-kulambu*, பெ. (n.) ***சருக்க ரையிட்ட பழக்குழம்பு;*** a conserve of fruits boiled with sugar and water, Jam. (சா.அக.).

[இனிப்பு + குழம்பு.]

இனிப்புத்தட்டு-தல் *inippu-t-tattu-*, 5 செ.கு.வி (v.i.) 1. ***ஆசையுண்டாதல்;*** to get relish for a thing. 2. ***சுவையுண்டாதல்;*** to be sweet to the taste. (செ.அக.).

[இனிப்பு + தட்டுதல்.]

இனிப்பு நவ்வல் *inippu navval*, பெ. (n.) ***தித்திப்பு நாவற்பழம்;*** sweet rose apple. (சா.அக.).

[இனிப்பு + நாவல். நாவல் - நவ்வல்.]

இனிப்பு நாரத்தை *inippu narattai*, பெ. (n.) 1. ***சருக்கரை நாரத்தை;*** sweet lemon - circus medica lumia. 2. ***கொடி நாரத்தை;*** litron. (சா.அக.).

[இனிப்பு + நாரத்தை.]

இனிப்புப் பிசி *inippu-p-pisi* பெ. (n.) ***தித்திப்பான ஒருவகைப் பழம்;*** fruit.

[இனிப்பு + பிசி.]

இனிப்பு மாதுளை *inippu madulai*, பெ. (n.) ***தித்திப்பு மாதுளை;*** sweet pomegranate as opposed to புளி மாதுளை (சா.அக.).

[இனிப்பு + மாதுளை.]

இனிமேல் *ini-mel*, கு.வி.எ (adv.) 1. ***இதற்குப் பிற்பாடு*** (பு.வெ. 8,33,உரை); hereafter, at some future time. 2. ***இதுமுதல்;*** henceforth, from now onwards. (செ.அக.).

[இன் → இனி + மேல்.]

இனிமை[1] *ini-mai*, பெ. (n.) 1. ***தித்திப்பு*** (பிங்.); sweetness. 2. ***இன்பம்;*** pleasure, delight. "இனிமைகூர்ந்து" (திருவாலவா.1,18) (செ.அக.).

ம. இனிமை.

[இன் → இனி → இனிமை.]

இனிமை[2] *ini-mai* பெ. (n.) 1. ***மேன்மை;*** greatness. 2. ***அமிழ்து;*** ambrosia, nector. 3. ***இதளியம்;*** mercury. 4. ***சோறு;*** rice.

[இன் → இனிமை.]

இனிய *iniya,* கு.பெ.எ. (adj.) 1. ***இனிப்பான, மனத்துக்கு ஏற்றதான, அழகான;*** sweet, pleasant, agreeable. "இனிய உளவாக இன்னாத கூறல்" (குறள்.100). 2. ***நல்ல, சிறந்த;*** good, noble.

[இன் → இனி → இனிய.]

இனிய உள்ளம் *iniya ullam,* பெ. (n.) ***நல்ல நெஞ்சம்;*** mind. "இனிய உள்ளம் இன்னா வாக", (அகநா.98) (பாண்டிச்.அக.).

[இன் → இனிய + உள்ளம்.]

இனிய சந்தம் *iniya šandam,* பெ. (n.) ***நறுமணம்;*** perfume, scent; fragrant smell. (சா.அக.).

[இன் → இனிய + சந்தம்.]

இனிய பிரிவு *iniya-pirivu,* பெ. (n.) ***வைப்பாட்டி வீடு;*** concubine's house. "சம்பிருதி யெல்லா மினிய பிரிவுக் களந்தாரென்றும்" (சரவண.பணவிடு.182) (செ.அக.).

[இன் → இனிய + பிரிவு.]

இனியர் *iniyar,* பெ. (n.) 1. ***இனிமை தருபவர்;*** agreeable, loving person. "நச்சுவார்க் கினியர் போலும்" (தேவா.439,1). 2. ***மகளிர்;*** young ladies. "இளையரு மினியரும்" (பரிபா.6,27) (செ.அக.).

[இன் → இனி + அர்.]

இனியவன் *iniyavan,* பெ. (n.) 1. ***பிறரை மகிழ்விப்ப வன்;*** benign person. 2. ***இனிமையுடையவன்;*** one with lovable qualities. (ஆ.அக.).

[இன் → இனி → இனிய + வன்.]

இனியவை *iniyavai,* பெ. (n.) ***இனிய தன்மையுடை யவை*** (நான்மணி.78,1); desirable things.

[இன் → இனி → இனியவை.]

இனியவை நாற்பது *iniyavai-nārpadu,* பெ. (n.) ***பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுளொன்று; பூதஞ் சேந்தனார் பாடியது; 40 பாடல்கள் கொண்டது;*** ancient didactic work by pūdañ-cēndaṉār, consisting of 40 stanzas one of Patiṉeṇ-kīḻ-k-kaṇakku, q.v. (செ.அக.).

[இன் → இனி → இனியவை + நாற்பது.]

இனியும் *iniyum,* பெ. (n.) ***இனிமேலும், மீண்டும்;*** even after this, again.

ம. இனியும்.

[இனி + உம்.]

இனுக்கா வலை *inukkā-valai,* பெ. (n.) ***கடலில் வேலிபோற் கட்டி மீன்பிடிக்க உதவும் வலை;*** (இ.வ.); a kind of net, used in fishing at sea. (செ.அக.).

[இல் → இன் → இனுக்கு → இனுக்கா(த) + வலை.]

இனை[1] *inai,* கு.பெ.எ. (adj.) ***இன்ன;*** of this degree, used in respect of size or quantity. "இனைத்துணைத்து" (குறள்.87) (செ.அக.).

[இல் → இன் → இனை.]

இனை[2]-தல் *inai,* 2 செ.கு.வி. (v.i.) 1. ***வருந்துதல்;*** to be thrown into an agony of grief. "இனைந்திரங்கிப் பள்ளி படுத்தார்களே" (சீவக.292). 2. ***இரங்குதல்*** (திவா.); to lament, cry. 3. ***அஞ்சுதல்;*** to be afraid; "என்னை வருவ தெனக் கென்றினையா" (பரிபா.7,68) (செ.அக.).

[இல் → இனை → இனைதல்.]

இனை[3]-த்தல் *inai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ***வருத்துதல்*** (ஐங்குறு.237); to torment, worry. 2. ***கெடுத்தல்;*** to destroy, consume, ravage. "வெவ்வெரி யினைப்ப" (புறநா.23) (செ.அக.).

[இள் → இளை → இனை. இனைத்தல்.]

இனைநலம் *inai nalam,* பெ. (n.) ***இவ்வாறான நலம்;*** goodness of this sort, similar welfare; "இனைநல முடைய கானஞ் சென்றோர்" (கலித்.11-19).

[இனை + நலம்.]

இனை நோக்கு *inai-nōkku,* பெ. (n.) ***வருந்தும் நோக்கு;*** worried look. "இனை நோக்குண் கண்நீர் நில்லாவே" (கலித்.7-12).

[இனை + நோக்கு.]

இனைபவள் *inaibaval,* பெ. (n.) ***வருந்துபவள்;*** people who are worried. "புலம்புகொண் டினைபவள்" (கலித்.10-11).

இனைபுகு நெஞ்சம் *inaipugu neñjam* பெ. (n.) ***வருந்திக் கெடுகின்ற நெஞ்சம்;*** tormented mind; "இனைபுகு நெஞ்சத்தால்" (கலித்.35-1) (பாண்டிச். அக.).

[இனை + புகு + நெஞ்சம்.]

இனைய *inaiya,* கு.பெ.எ. (adj.) 1. ***இத்தன்மைய;*** of this nature. 2. ***இதுபோல்வன;*** of this appearance. (ஆ.அக.).

[இல் → இன் → இனைய.]

இனையர் *inaiyar* பெ. (n.) 1. ***இத்தன்மையர்;*** of this nature. 2. ***இவர்கள்;*** these people. "இனையர் இவர் எமக்கு" (குறள்.790) (ஆ.அக.).

[இல் → இன் → இனை + அர்.]

இனையள் *inaiyal,* பெ. (n.) ***இத்தன்மையள்;*** female person of a particular kind. (ஆ.அக.).

[இன் → இனை + அள்.]

இனைவு *inaivu,* பெ. (n.) 1. ***வருத்தம்;*** harrowing, sorrow, anguish, great pain of mind. (பாரத.சீசக.40). 2. ***இரக்கம்*** (சூடா); crying in distress. (செ.அக.).

[இல் → இலை → இனை → இனைவு.]

இனைவி-த்தல் *inaivittal,* பி.வி. (v.t.) ***வருந்துவித்தல்;*** to torment "தன்னெஞ் சொருவற் கினைவித்தல்" (கலித்.147-46) (பாண்டிச்.அக.).

[இனை → இனைவி.]

ஈ

ஈ[1] *ī*, பெ. (n.) 1. ***தமிழ் மொழியின் நெடுங்கணக்கில் வரும் நான்காம் நெட்டுயிர்;*** symbol of the close front tense unrounded vowel in the Tamil language, being the fourth letter among the vowels of the Tamil alphabet, lengthened form of *i*. 2. ***அவ்வொலியைக் குறிக்கும் வரிவடிவு;*** written character representing that sound. இவ்வெழுத்தின் நெடில் வடிவமாகிய வளைகொம்பு குறில் மெய்களுடன் இணைக்கப்படுகிறது; secondary form of the letter is (ீ) "இ, ஈ, எ, ஏ, ஐ என இசைக்கும் அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன, அவைதாம் அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய" (தொல்.எழுத்.86).

ஈ[2] *ī*, பெ. (n.) ***அண்மைச் சுட்டெழுத்து;*** demons. letter or pronomical adj. pointing to what is near; this, these.

ம., க., தெ., து., பட. ஈ.

[ஈ - இ என்பன அண்மை சுட்டிய ஒலிக்குறிப்பு. ஐந்திரவிட மொழிகளுள் ஒன்றாகக் கருதப்படும் மராத்தியில் ஈகார அண்மைச் சுட்டு இடப்பொருளில் புடை பெயர்ந்து ஏழன் உருபாயிற்று.]

'ஈ' என்னும் நெடிலே இயற்கை அண்மைச் சுட்டு - அதன் குறுக்கமே 'இ'. நெடில் வடிவமாகிய 'ஈ' தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய திரவிடமொழிகளில் வழங்கி வரினும், தமிழுலக வழக்கில் வழக்கற்றுப் போயிற்று. மலையாளம் பழஞ்சேர நாட்டு மொழியாதலால் அதில் வழங்கும் நெடிற் சுட்டு வழக்கைச் சேர நாட்டுத் தமிழ் அல்லது பழந்தமிழ் என்றுங் கொள்ளலாம்.

ஈ[3] *ī*, இடை. (int.) 1. ***வியப்புக் குறிப்பு;*** exclamation, expressive of wonder; யாருக்குந் தெரியாதபடி யிராநின் றதீ! (ஈடு.1, 3, 9). 2. ***வலி, துன்பம் முதலானவற்றைக் குறிக்கும் இடைச்சொல்;*** interjection of pain, sorrow, etc., 3. ***இகழ்ச்சிக் குறிப்பு;*** derisive expression. 'ஈ என்ன இது' (உ.வ.). 4. ***பேதைத்தனமாகப் பல்லிளித்தல்;*** baring teeth in sign of unrestrained stupidity. 'ஈ என்று இளிக்காதே'. 5. ***தனக்கு மேலுள்ளோர் மனம் கவர்தல் வேண்டி அவர் விருப்பத்திற்கிணங்க வலிந்து சிரித்தல்;*** showing teeth as a sign of amusement or to show affirmation to superiors.

ம., மரா. ஈ.

[இ - ஈ. ஒலிக் குறிப்புகள். ஈ என்னும் இகழ்ச்சிக் குறிப்பு சீ என்றும் மருவியது.]

ஈ[4] *ī*, இடை. (part.) 1. ***ஒரு முன்னிலையசை*** (நன்.440, உரை); poetic expletive in the 2nd pers. 2. ***ஒரு முன்னிலை வினை யீறு, வினைச்சொன்முன் வரும்;*** second person verb ending. "சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ" (அகநா.46) "முன்னிலை முன்னர் ஈயும் ஏயும் அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே" (தொல்.சொல்.451).

[ஈ = ஒலிக்குறிப்பு ; முன்னிலையசை, அசைமொழி.]

ஈ[5] *ī*, இடை. (int., part.) ***இசைவுக் குறிப்பு, இடைச்சொல்;*** particle indicative of affirmative sense. 'ஈ' என்று கேள் (கொங்கு.வ.).

[உம் என்னும் ஒப்புதல் குறிப்பு இடைச்சொல், ஊம் - ஊ என்று ஈறு குறைந்ததுபோல ஈம் - ஈ எனத் திரிந்தது. உம் - இம் - ஈம் - ஈ. பல்லிளித்தல் வாய்திறத்தல் குறிப்பினதாகிய இகரஉயிர் நீட்டம் 'ஈ'.]

ஈ[6] *ī*, பெ. (n.) ***இனிப்பு முதலானவற்றில் மொய்க்கும் தன்மையுடைய சிறகுகள் உள்ள சிறு பூச்சி;*** housefly. "ஈச்சிற கன்னதோர் தோலறினும்" (நாலடி.41). 2. ***தேனீ;*** honey bee. "ஈயின்றி யிருந்த தீந்தேன்" (சீவக. 712). 3. ***வண்டு*** (திவா.) beetle. 4. ***சிறகு*** (பிங்.); wing. 5. ***பூச்சி, உயிரி;*** insect.

ம. ஈ; க. ஈசல், ஈச்சல்; **கோத.** ஈப்; **துட.** ஈப்ய; **தெ.** ஈக்; **மரா.** ஈ; **கொலா.** நீங்க், நீங்க; **நா.** நீங்க; **கோண்.** கக்கி, பசீ; **கூ.** புகி, புக்கு; **குர்.** தீனி; **மால்.** தெனி; **பிராகு.** கீல், சீல்; பட. குன்னி (தேனீ).

[ஈள் - ஈண் - ஈண்டு - மொய்த்தல், நெருங்குதல். ஈண் - ஈ=மொய்க்கும் உயிரினம்.]

ஈ[7] *ī*, பெ. (n.) 1. ***அழிவு;*** destruction. "ஈபாவஞ் செய்து" (திருவாய். 2.2.2.). 2. ***அம்பு;*** arrow.

[ஈ → ஈல், பிளத்தல், அழித்தல்.]

ஈ[8] *ī*, பெ. (n.) ***துத்தவிசையின் எழுத்து*** (திவா.); symbol representing the second note of the gamut, usu. denoted by 'ரி'.

[ஏழிசை நெடில்களுள் ஒன்று; இதன் பழைய வடிவம் ஈ.]

ஈ[9] *ī*, பெ. (n.) 1. ***பாம்பு;*** snake. 2. ***அரைநாண்;*** waistcord. 3. ***குகை;*** cave. 4. ***தாமரை இதழ்;*** lotus leaves. 5. ***திருமகள்:*** Laksmi, Goddess of wealth. 6. ***கலைமகள்;*** Sarasvati, Goddess of learning. 7. ***மலைமகள்;*** Parvati, Goddess of valour.

[ஈ = வளைவு, சுற்று, வட்டம்.]

ஈ[1]-தல் *ī*, 2. செ.குன்றாவி. (v.t.) 1. ***ஈனுதல்;*** to give birth to. 2. ***கொடுத்தல்;*** to give. "ஈதல் இசைபட வாழ்தல்" (குறள்.23). 3. ***பகிர்ந்து கொடுத்தல்;*** to distribute, apportion. 4. ***இழிந்தோர்க்குக் கொடுத்தல்;*** to give to inferiors, give alms, bestow, grant. "ஈயென்கிளவி இழிந்தோன் கூற்றே" (தொல்.சொல்.445). 5. ***வீசுதல்;*** to give liberally, throw.

தெ. ஈ, இச்சு; க. ஈ, ஈயு; **கோண்.** சீயானா, சீ; **நா.** சீ; பர். சீ; குவி. சீவ.

[ஈல் - ஈன் - ஈ. ஈதல் = வெளிவருதல், வெளித்தள்ளுதல், கொடுத்தல், வீசுதல்.]

ஈ²-தல் *ī-*, 2 செ.குன்றாவி. (v.t.). 1. ***வகுத்தல்;*** to divide (arith.) (w.), ஈய (கணக்கதி.). 2. ***படிப்பித்தல்;*** to arrange instruction. "ஈதலியல்பே யியம்புங் காலை" (நன்.36). 3. ***படைத்தல்;*** to create. "எவ்வுயிர்களு மீந்தான்" (கம்பரா.அகலி.49). 4. ***பரவுதல்;*** to spread.

[ஈல் - ஈர் - ஈ = பிரித்தல், பிளத்தல், வகுத்தல், அமைத்தல், பரவல்.]

ஈ³-தல் *ī-*, 6 செ.கு.வி. (v.i.) ***நேர்தல்*** (பரிபா.9,17); to agree, consent.

[ஈ - ஈதல் = தருதல், மனமிசைதல், ஒத்துப்போதல்.]

ஈ⁴ *ī*, து.வி. (v.aux.). ***துணை வினை;*** an auxiliary verb. "தேறீயல் வேண்டும்" (கலித்.98,2.).

[ஈ-பணிவொடு வேண்டிக்கோடற் குறிப்புவினை. நில்லீ, சென்றீ என்பனவற்றுள் துணைவினையாயிற்று.]

ஈக்கணம் *īkkaṇam*, பெ. (n.) 1. ***தேனீத்தொகுதி, தேன்கூடு;*** bee-hive. 2. ***தேனீக்களைப் போன்ற பார்வை நுட்பம்;*** keen eye-sight as of the bees.

[ஈ + கணம் = ஈக்கணம். ஈ = தேனீ. கணம் = தொகுதி, கூட்டம்.]

ஈக்கணி-த்தல் *īkkaṇi-*, 4 செ.கு.வி. (v.i.) ***நல்லதைத் தேர்தல்;*** to distinguish the best.

[ஈ + கணி - ஈக்கணி = தேனீக்கள் தேனுள்ள இடத்தைத் தேர்ந்தறிதல் போல நல்லனவற்றை நாடியறிதல், அறிவுநுட்பப் பணியாற்றுதல்.]

ஈக்கணிகை *īkkaṇigai*, பெ. (n.) ***நற்குறி கூறுபவள்;*** conjuring woman.

[ஈக்கணம் - ஈக்கணி - ஈக்கணிகை. ஈக்கணம் சிறப்பாகத் தேனீக்களின் கூட்டத்தைக் குறித்த சொல். தேன் உள்ள இடத்தைச் சரியாக நாடியறிதலின் ஈக்கணித்தல் நல்லது காணும் பார்வைத் திறமாயிற்று. நற்குறி கூறும் பெண்ணும் ஈக்கணிகை எனப்பட்டாள்.]

ஈக்கால் *īkkāl*, பெ. (n.) ***வயிரக் குற்றவகை*** (கொ.வ.); flaw in a gem. esp. a diamond, so called from its resemblance to a fly's leg. (செ.அக.).

ம. ஈக்கால்.

[வயிரத்தில் ஈக்கால் போன்ற (ஈ + கால்) பட்டைக் கீறல் குற்றம் ஆகலாம்.]

ஈக்காலாணி *ī-k-kāl-āṇi*, பெ. (n.) ***சிற்றாணி*** (S.I.I.ii,213); rivet in an ornament, as small as a fly's leg.

[ஈ + கால் + ஆணி. ஈக்கால் - சிறுமை குறித்த சொல்.]

ஈக்குடி *ī-k-kuḍi*, பெ. (n.) ***சாவிக்கதிர்*** (இ.வ.); chaff left in the growing ears of paddy when insects have consumed the undeveloped grain.

[ஈக்குடை - ஈக்குடி, ஈக்குடை = ஈ குடைந்ததால் உள்ளீடற்றுப் போன கதிர்.]

ஈக்கை *īkkai*, பெ. (n.) 1. ***புலி தொடக்கி*** பார்க்க, (மூ.அ.); see *puli toḍakki*. 2. ***உப்பிலி*** (மலை.); species of stinking swallow wort. (செ.அக.).

ஈக *īga*, து.வி. (v.aux.) ***இக என்பதன் திரிபாய் வந்த ஒரு முன்னிலையசை;*** poetic expletive in second person. "என் போரியானை வந்தீக வீங்கு" (கலித்.86).

ஈகம்¹ *īgam*, பெ. (n.) ***சந்தனமரம்*** (மலை.); sandal-wood tree.

[ஈ - ஈகு = வீசுதல், பரவுதல், மணம் பரவுதல்.]

ஈகம்² *īgam*, பெ. (n.) ***ஒப்புரவு*** (தியாகம்); sacrificing.

[ஈ → ஈகு → ஈகம். எதனையும் சுணங்காது கொடையளிக்கும் மனப்பாங்கு.]

ஈகு-தல் *īgu-*, 2 செ.கு.வி. (v.i.) 1. ***ஈ-தல்*** பார்க்க; see *ī-dal*. 2. ***கட்டியாதல்;*** to solidify. "திரட்டுப்பாலும் ஈகின நெய்யும் கட்டித் தயிரும்" (திவ்.பெரியாழ்.3,2,6, வியா. பக்.545).

[ஈல் - ஈள் - ஈ - ஈகு.]

ஈகை¹ *īgai*, பெ. (n.) 1. ***கொடை;*** gift, grant. "வறியார்க்கொன் றீவதே யீகை" (குறள்.221). 2. ***பொன்;*** gold. "ஈகையங் கழற்கால்" (புறநா.99). 3. ***தொன்மக்கதையின்படி விரும்பியதை நல்குவதாகக் கருதப்பட்ட வானுலகக் கற்பக மரம்*** (அக.நி.); Kalpaga tree of heaven (Cuvarkkam) which according to Hindu myth, bestows everything that one desires.

cf., E yield; *A.S.* gildon, to pay; *Goth.* gildun; *Ger.* gelten; *Ice.* gjalda. see guild. *"E"* guild (orig.) an association in a town where payment was made... (A.S.gild, money, gildan, to pay, it is the same word as gold and gild) ch.E.D.

[ஈ → ஈகை. (சு.வி.35) ஈ = கீழிடு, இடு. ஈல் → ஈகு → ஈகை.]

ஈகை² *īgai*, பெ. (n.) 1. ***இண்டு*** (பிங்.); species of mimosa. 2. ***புலி தொடக்கி*** (மலை.) பார்க்க; see *puli toḍakki*.

[ஈ - ஈங்கை - ஈகை.]

ஈகை³ *īgai*, பெ. (n.) ***காடை;*** quail. "ஈகைப்போர்" (கலித்.95,12).

[ஈ → ஈகு → ஈகை = வீசுதல், பரவுதல், பறத்தல், பறவை.]

ஈகை⁴ *īgai*, பெ. (n.) 1. ***காற்று;*** wind. 2. ***மேகம்;*** cloud. 3. ***இல்லாமை*** (அக.நி.); want.

[ஈ - ஈகு - ஈகை, வீசுதல், பரவுதல், கொடையளித்தல், வாரிக்கொடுத்தலால் வறுமையுறல்.]

ஈகையன் *īgaiyan*, பெ. (n.) ***கொடையாளன்;*** liberal, munificent person, philanthrophist. "இனிய சொல்லினன் ஈகையன்" (கம்பரா.மந்தரை.18).

[ஈ - ஈகு - ஈகை - ஈகையன்.]

ஈகையாளன் *īgai-y-āḷaṉ,* பெ. (n.) **ஈகையன்** (பிங்.) பார்க்க; see *īgaiyaṉ.*

[ஈ - ஈகு - ஈகை. ஈகை + ஆளன்.]

ஈங்கண் *īṅgaṇ,* பெ. (n.) **இவ்விடம்** (தொல்,எழுத்.114, உரை); this place.

[ஈ = அண்மைச் சுட்டு. ஈ + கண் - ஈக்கண் - ஈங்கண்.]

ஈங்கரம் *īṅgaram,* பெ. (n.) **குப்பைமேனி;** dung-hill plant, (சா.அக.).

[இங்கு - இங்கரம் - ஈங்கரம்.]

ஈங்கன் *īṅgaṉ,* கு.வி.எ. (adv.) **இவ்வாறு;** thus "ஈங்கனங் கனையிரு ளெல்லை நீந்தினான்" (சீவக. 1942).

ஈங்கிசை *īṅgišai,* பெ. (n.) 1. **கொலை** (வின்.); murder, killing. 2. **தொந்தரை;** affliction. "ஈங்கிசையுற்ற வலக்கு ணமட்டைகள்" (திருப்பு.263).

[இமிசை - இங்கை - ஈங்கிசை (கொ.வ.).]

ஈங்கு[1] *īṅgu,* கு.வி.எ. (adv.) 1. **இவ்விடம்;** here. "ஈங்கு நம்ஆனுள் வருமேல்" (சிலப்.17, பாட்டு.2). 2. **இப்படியே** (சீவக.1593); in this manner.

[இங்கு - ஈங்கு.]

ஈங்கு[2] *īṅgu,* பெ. (n.) 1. **ஈங்கை** (வின்.); species of a sensitive tree. 2. **புலி தொடக்கி** (மலை.).

[இங்கு - ஈங்கு.]

ஈங்கு[3] *īṅgu,* பெ. (n.) **சந்தனம்** (சங்.அக.); sandal-wood.

[இங்கு - ஈங்கு.]

ஈங்கூகம் *īṅgūgam* பெ. (n.) **குக்கில்;** false myrrh.

[இங்கு + ஊகம்.]

ஈங்கூங்கு *īṅgūṅgu,* பெ.எ. (adj.) **இங்கும் அங்கும்;** here and there.

[ஈங்கு + ஊங்கு.]

ஈங்கை *īṅgai,* பெ. (n.) 1. **இண்டஞ்செடி;** species of a sensitive-tree. "ஈங்கைப் பைம்புத லணியும்" (ஐங் குறு.456). 2. **உப்பிலி** (மூ.அ.) பார்க்க; see *uppili.*

ஈங்கைத்துவக்கு *īṅgai-t-tuvakku,* பெ. (n.) **ஒரு மரப்பட்டை** (தைல.தைலவ.அரும்பத.); the bark of a tree. (த.சொ.அக.).

[ஈங்கை + துவக்கு.]

ஈச்சங் கசங்கு *īccaṅ-kašaṅgu,* பெ. (n.) **ஈஞ்சினீர்க்கு;** switch of the date-palm, used in making country baskets.

[ஈந்து - ஈத்து - ஈச்சு + அம் + கசங்கு.]

ஈச்சங்கள் *īccaṅ-kaḷ* பெ. (n.) **ஈச்சமரத்தினின்றிறக் குங்கள்;** wild-date toddy. (சா.அக.).

[ஈந்து + அம் + கள் = ஈந்தங்கள் - ஈத்தங்கள் - ஈச்சங்கள்.]

ஈச்சங்காடி *īccaṅkāḍi,* பெ. (n.) **ஈச்சங்கள் பார்க்க;** see *īccaṅ-kaḷ.*

[ஈச்சம் + காடி.]

ஈச்சங்குடை *īccaṅkuḍai,* பெ. (n.) **ஈச்சம்புல் வேய்ந்த நிழற்குடை** (மதுரை.); umbrella made of date-palm leaves.

[ஈச்சம் + குடை.]

ஈச்சம்பனை *īccampaṉai,* பெ. (n.) **காட்டீந்து;** wild date-palm.

[ஈந்தம் - ஈத்தம் - ஈச்சம் + பனை.]

ஈச்சம்பாய் *īccam-pāy* பெ. (n.) **ஈந்திலை யாலாகிய பாய்;** mat made of the leaves of the date-palm.

[ஈச்சம் + பாய்.]

ஈச்சமது *īccamadu,* பெ. (n.) **ஈச்சங்கள்;** toddy from the date-palm.

[ஈச்சம் + மது.]

ஈச்சவெல்லம் *īccavellam,* பெ. (n.) **ஈச்சம்பாளையில் வடியும் சாற்றினின்று காய்ச்சியெடுக்கும் வெல்லம்;** jaggery prepared from the date-palm juice.

[ஈச்சம் + வெல்லம்.]

ஈச்சாட்டி *īccāṭṭi,* பெ. (n.) **இவறன், ஈயாதவன்;** avaricious person, miser.

ம. ஈச்சாட்டி.

ஈச்சாடி *īccāḍi,* பெ. (n.) 1. **அதிகமாகப் புழுங்கியபின் குற்றிய புழுங்கல் அரிசி;** rice husked after overboiling. 2. **நன்கு உலருமுன் குற்றிய புழுங்கலரிசி;** rice husked before it is dried adequately.

ம. ஈச்சாடி.

ஈச்சில் *īccil,* பெ. (n.) **இழிச்சில்** பார்க்க; see *iliccil.*

ம. ஈச்சில்.

ஈச்சு *īccu,* பெ. (n.) **ஈந்து** பார்க்க; see *īndu.*

[ஈந்து - ஈத்து - ஈச்சு.]

ஈச்சுக்கொட்டு-தல் *īccu-k-koṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) **சீழ்க்கையடித்தல்** (வின்.); to whistle.

[இச்சு - ஈச்சு + கொட்டு. இச் - இச்சு = ஒலிக்குறிப்பு.]

ஈச்சுரம் *īccuram,* பெ. (n.) **தூய மெய்ம்மங்களுள் (சுத்த தத்துவங்களுள்) ஒன்று** (சிவப்.கட்.3); one of the five sutta-tattuvam.

[ஈ - ஈச்சுரம். ஈ - ஈதல். வாய்மொழிந்தருளல், ஆசான் வழி அருளப்பட்ட மெய்ம்மொழி.]

ஈச்சுரமூலி *īccura-mūli,* பெ. (n.) **பெருமருந்துக் கொடி** (பதார்த்த.256); Indian birth wort.

[ஈச்சுரம் + மூலி.]

ஈச்சை *īccai,* பெ. (n.) ***ஈந்து*** (கொ.வ.); date-palm.

[ஈந்தை - ஈத்தை - ஈச்சை.]

ஈச்சோப்பி[1] *īccōppi,* பெ. (n.) ***ஈயோட்டி*** (தேவா. 692,7); whisk for flies, fly-flapper.

[ஈ + ஓப்பி - ஈயோப்பி - ஈச்சோப்பி.]

ஈச்சோப்பி[2] *īccōppi,* பெ. (n.) ***சிலந்தி*** (யாழ்.அக.); spider.

[ஈ + ஒப்பு. ஒப்பு - ஒப்பி.]

ஈசல்[1] *īsal,* பெ. (n.) ***ஈயல்*** பார்க்க; see *īyal,* winged white ant. (செ.அக.).

[ஈயல் = ஈக்களைப் போன்று மொய்க்கும் உயிரி வகை. ஈயல் → ஈசல்.]



ஈசல்

ஈசல்[2] *īsal,* பெ. (n.) ***சீழ்க்கை;*** whistle; 'ஈசல் கொட்டுகிறான்' (இ.வ.) (செ.அக.).

[இச் - ஈச் - ஈசல் = ஒலிக்குறிப்பு.]

ஈசலிறகு *īsaliṟagu,* பெ. (n.) ***மெல்லியபொருள்;*** any substance as thin as a wing of a white ant.

[ஈசல் + இறகு = ஈயலின் இறகுபோல் மெல்லியது.]

ஈசுக்கணுவெலும்பு *īsukkaṇu-v-elumbu,* பெ. (n.) ***முழங்காலின் எலும்பு;*** the joint connecting the two principal parts of leg, knee, knee-cap. (சா.அக.).

[ஈ - ஈசு (மெல்லிய) + கணு + எலும்பு.]

ஈசுரக் கோவை *īsura-k-kōvai,* பெ. (n.) ***ஒருவகை மட்டையரிசி;*** a kind of brown rice.

[ஈசல் - ஈசர - ஈசுர + கோவை.]

ஈசை *īsai,* பெ. (n.) ***ஏர்க்கால்*** (வின்.); pole or shaft of a plough.

[இத்தை → ஈத்தை → ஈதை → ஈசை.]

ஈஞ்சக்காடன் *īñja-k-kāḍan,* பெ. (n.) ***மலைநெல் வகை;*** a variety of mountain paddy.

ம. ஈஞ்சக்காடன்.

[ஈஞ்சல் + காடன்.]

ஈஞ்சல் *īñjal,* பெ. (n.) ***மீன்சிறகு;*** fin of a fish.

ம. ஈஞ்சல்.

[ஈல் = பிளத்தல், குத்துதல். ஈல் → ஈஞ்சு → ஈஞ்சல்.]

ஈஞ்சு *īñju,* பெ. (n.) 1. ***பேரீஞ்சு;*** date-palm. 2. ***காட்டீஞ்சு;*** wild date-palm. 3. ***சிற்றீஞ்சு;*** dwarf wild date-palm.

[ஈந்து - ஈத்து - ஈச்சு - ஈஞ்சு.]

ஈஞ்சை *īñjai,* பெ. (n.) 1. ***கொலை;*** murder. 2. ***இகழ்ச்சி*** (நிந்தை); insult. (வின்.); disgrace, reproach. 3. ***தீங்கு;*** evil, harm.

[ஒருகா. இழிஞ்சு → ஈஞ்சு = தாழ்வுபடுத்து, அல்லற்படுத்து. இழிஞ்சு → ஈஞ்சு → ஈஞ்சை.]

ஈட்டம்[1] *īṭṭam,* பெ. (n.) ***பொருள் தேடுகை;*** acquiring, earning. "ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்" (குறள். 1003).

[ஈண்டு - ஈட்டு - ஈட்டம்.]

ஈட்டம்[2] *īṭṭam,* பெ. (n.) 1. ***கூட்டம்;*** concourse, throng, congregation, group, assembly, etc. "அடியா ரீட்டம்" (தேவ.1100.11). 2. ***மிகுதி;*** store, treasure, abundance. "புண்ணியத் தின்ப வீட்டம்" (சி.சி.2,41). 3. ***செய்தல்;*** doing.

ம. ஈட்டம்.

[ஈள் - ஈண்டு - ஈட்டு - ஈட்டம்.]

ஈட்டம்[3] *īṭṭam,* பெ. (n.) 1. ***வலிமை;*** strength, force, vigour. "ஈட்டமொ டொருகணை யேவி" (கந்தபு.தாரக. 146). 2. ***நோயின் நீட்சி;*** height or crisis of a disease. (சா.அக.).

[ஈள் = நெருங்குதல், வலிமை செறிதல். ஈள் - ஈடு - ஈட்டம்.]

ஈட்டல் *īṭṭal,* பெ. (n.) ***வணிகர் எண் குணங்களு ளொன்று*** (பிங்.); amassing wealth, a desirable quality in merchants.

[ஈண்டு - ஈட்டு - ஈட்டல்.]

ஈட்டி[1] *īṭṭi,* பெ. (n.) 1. ***ஈட்டிமரம்;*** a kind of tree. 2. ***தோதகத்தி*** (L.); black wood.

ம. ஈட்டி; க. இம்படி, இட்டி; து. பீடி; தெ. இட்டிடி, இருகுடு, இருவுடு.

[ஈட்டி = ஈட்டி செய்யப் பயன்பட்ட மரம். பதப்படுத்து முன் நீரிலிட்டால் அமிழும் தன்மையது. ஒரு கனஅடி மரம் 50-60 (பவுண்டு) கல்லெடையுள்ளது.]

ஈட்டி[2] *īṭṭi,* பெ. (n.) ***குந்தம்*** (குத்தித் துளைக்கும் கருவி); lance, spear; pike.

ம., க. ஈட்டி; தெ. ஈடெ.

[இல் - குத்தல் கருத்துவேர்; இல் - இள் - ஈட்டு (செலுத்து, குத்து) - ஈட்டி.]

ஈட்டிக்காரன் *itti-k-kāraṉ,* பெ. (n.) 1. ***வட்டிக்குப் பணம் கொடுத்துத் தண்டுபவன்;*** pathan, money lender. 2. ***கொடுமைக்காரன்;*** usurer.

[ஈட்டி + காரன்.]

ஈட்டித்தாங்கு *itti-t-tāṅgu,* பெ. (n.) ***ஈட்டிப் பிடி*** (வின்.); shaft of a spear; hilt.

[ஈட்டி + தாங்கு.]

ஈட்டிப் பிடங்கு *itti-p-piḍaṅgu,* பெ. (n.) ***ஈட்டியின் முனையுள்ள பகுதி*** (வின்.); spear-head.

[ஈட்டி + பிடங்கு.]

ஈட்டிமீன் *ittimīṉ,* பெ. (n.) ***மீன்வகை;*** a kind of fish.

ம. ஈட்டிமீன்.

ஈட்டியது *ittiyadu,* வினையா.பெ. (vbl.n.) 1. ***தேட்டம்;*** acquisition, accumulation. (வின்.). 2. ***ஒருவன் இப்பிறப்பில் அல்லது முற்பிறப்பில் தேடிய வினை*** (சா.அக.); total quantity of karmic actions which one has acquired in this life or in his supposed previous birth.

[ஈண்டு - ஈட்டு - ஈட்டி + அது.]

ஈட்டியெறி-தல் *itti-y-eṟi-,* 2 செ.குன்றாவி. (v.t.) ***ஈட்டியால் குத்துதல், கொல்லுதல்;*** to throw spear, to thrust through and kill with spear.

[ஈட்டி + எறி.]

ஈட்டியெழுபது *itti-y-eḻubadu,* பெ. (n.) ***ஒட்டக்கூத்த ராற் பாடப்பெற்ற ஒரு நூல்;*** poem in 70 verses composed by Otta-k-kūttar having for its theme the spearmanship of the Ceṅkuntar clan. (செ.அக.).

[ஈட்டி + எழுபது. குந்தம் எனப்படும் ஈட்டிப் படைக்கலன்களை ஆளும் திறன் பெற்ற செங்குந்தரைப் பாராட்டும் நோக்குடைய நூலாதலின் ஈட்டியெழுபது எனப் பெயர் பெற்றது.]

ஈட்டு[1]-தல் *ittu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. ***கூட்டுதல்*** (பிங்.); to collect, amass, accumulate. 2. ***தடித்தல், பருத்தல், கொழுத்தல்;*** to become fat. 3. ***தேடுதல்;*** to earn, acquire, secure. "அறநோக்கா தீட்டிய வொண் பொருள்" (குறள்.1009) (செ.அக.).

ம. ஈட்டுக.

[ஈண்டு - ஈட்டு. ஈட்டுதல்.]

ஈட்டு[2] *ittu,* பெ. (n.) ***கூட்டம்;*** flock, swarm, flight. "ஈட்டறாப் புள்ளினம்" (சீவக.95).

[ஈண்டு - ஈட்டு.]

ஈட்டுக்கீடு *ittu-k-kīḍu,* பெ. (n.) ***சரிக்குச்சரி*** (வின்.); measure for measure. (செ.அக.).

[ஈடு - ஈட்டு + கு + ஈடு.]

ஈட்டுமுறி *ittumuṟi,* பெ. (n.) ***அடைமான முறி;*** deed of hypothecation.

[ஈட்டு + முறி.]

ஈடகம் *iḍagam,* பெ. (n.) 1. ***மனத்தைக் கவர்வது;*** that which is charming, fascinating. "ஈடகமான நோக்கி" (தேவா.607,3) (செ.அக.). 2. ***புகழ்;*** fame.

[ஈடு + அகம் = ஈடகம். இடு - ஈடு (செலுத்துதல்) + அகம் (மனம்).]

ஈடணத்திரயம் *iḍaṇa-t-tirayam,* பெ. (n.) ***ஈடணமுப் பொருள்*** பார்க்க; see *iḍaṇa-mu-p-poruḷ.*

ஈடணம் *iḍaṇam,* பெ. (n.) 1. ***விருப்பம்;*** desire. 2. ***புகழ்*** (யாழ்.அக.); fame.

[இடு - ஈடு + அணம் - ஈடணம் = விருப்பம், புகழ்.]

ஈடண முப்பொருள் *iḍaṇa-mupporuḷ,* பெ. (n.) ***மூவகைப் பொருள்களின் விருப்பம்; அவையாவன மக்கள், மனைவி, பொன்;*** the three possessions which men commonly desire, the first for children, the second for wife, and the third for gold or riches (w.).

[ஈடணம் + முப்பொருள்.]

ஈடணை *iḍaṇai,* பெ. (n.) 1. ***ஆசை;*** attachment, wish, desire. மனைவி மக்க ளர்த்தவீ டணைகள் மூன்று (கைவல்ய.தத்துவ.13). 2. ***துன்பம்;*** distress, affliction. "என்னை வேறாக்கி யிந்த வீடணையில் விட்டதுவும் முன்னை வினை தானோ" (பதசாகித்தியம்). (செ.அக.).

Skt. īṣaṇā.

[ஈடு = ஈடுபாடு, விருப்பம். ஈடு + அணை. அணை = சொல் லாக்க ஈறு. இச்சொல்லை வடமொழி 'ish' என்பதன் திரிபாகக் கூறுவது பொருந்தாது. இடு, இட்டம் என்பவை தூய தென்சொற்கள். இட்டம் வடமொழியில் iṣṭa எனத் திரிந்துள் ளது. iṣṭa என்பது வடமொழிச் சொல்லாயின் மேலையாரிய மொழிகளிலும் இச்சொல் அடிப்படைச் சொல்லாக வழங்கியி ருத்தல் வேண்டும். இட்டம் பார்க்க; see iṭṭam.]

ஈடத்து *iḍattu,* வி.எ. (adv.) ***சிறிது*** (சங்.அக.); little.

[இடு - இட்டு = சிறிது. இட்டு - இட்டித்து - இடத்து - ஈடத்து.]

ஈடம்[1] *iḍam,* பெ. (n.) ***பிணை, பணயம்;*** bail, security.

ம. ஈடம்.

[இடு - ஈடு - ஈடம்.]

ஈடம்[2] *iḍam,* பெ. (n.) ***இடம்;*** place, location "நஞ்சுண்ட இருள்கண்டத்த ரீடமாவது" (தேவா.திரு.13).

[இடம் - ஈடம். (உயிர் முதல் நீண்டது).]

ஈடழி-த்தல் *iḍaḻi-,* 2 செ.குன்றாவி. (v.t.) ***வலிகெடுத் தல்;*** to quell one's power. "இராவணனை யீடழித்து" (தேவா.350,8) (செ.அக.).

[இடு - ஈடு = அடித்தல், தாக்குதல் தாக்கியழித்தற்குரிய வலிமை. ஈடு + அழித்தல்.]

ஈடழி-தல் *īḍali-*, 2 செ.கு.வி. (v.i.) ***வலிமை, பெருமைகள் கெடுதல்*** (திவ்.நாச்சி.8,3); to suffer, loss of power, of authority, of dignity or of wealth; to become poor. (செ.அக.).

[ஈடு + அழி.]

ஈடழிவு *īḍalivu*, பெ. (n.) 1. ***சீர்கேடு;*** disorder, derangement, irregularity. 2. ***நிலைகுலைவு*** (வின்.); misfortune. (ஆ.அக.).

[ஈடு + அழிவு.]

ஈடறல் *īḍaṟal*, பெ. (n.) ***வலி கெடுதல்;*** loss of power etc. ***ஈடழிவு*** பார்க்க; see *īḍalivu*. "இந்தவெம் பகழிக் கெல்லாம் ஈடறான் இவனென்றெண்ணி", (பாரத.நீரை மீட்சி.95) (த.சொ.அக.).

[ஈடு + அறல்.]

ஈடறவு *īḍaṟavu*, பெ. (n.) ***பெருமைக்கேடு*** (திவ்.இயற். பெரியதிரும.143); loss of diginity. etc. (செ.அக.).

ம. ஈடறவு.

[ஈடு + அறவு.]

ஈடன் *īḍaṉ*, பெ. (n.) 1. ***வலியோன்;*** influential man. 2. ***செல்வன்;*** wealthy man. 3. ***பெருமையுடையோன்;*** great person. (ஆ.அக.).

[ஈடு + அன்.]

ஈடாக்கு-தல் *īḍākku-*, 5 செ.குன்றாவி. (v.t.) ***வரிதண்டு தல், திரட்டுதல்;*** to collect tax, realise arrears.

ம. ஈடாக்குக.

[ஈடு + ஆக்கு.]

ஈடாட்டம் *īḍāṭṭam*, பெ. (n.) 1. ***போட்டி;*** competition. 2. ***செல்வரிடம் உள்ளதுபோன்ற பணப்புழக்கம்;*** money dealing; free use or employment of money, as by rich merchants. 3. ***நெகிழ்ச்சி;*** looseness, as of a dislodged nail. 4. ***ஏழ்மை நிலை;*** poorness, poverty, (செ.அக.).

[ஈடு + ஆட்டம்.]

ஈடாடு-தல் *īḍāḍu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. ***போட்டி போடுதல்*** (வின்.); to compete with another. 2. ***நெகிழ்ந்தசைதல்*** (யாழ்ப்.); to be shaky, loose, as a tooth, a nail, the spoke of a wheel. 3. ***தளர்தல்;*** to grow slack, become relaxed. 4. ***நேர் நிற்றல்;*** to stand face to face. 5. ***உழலல்*** (த.சொ.); to get involved in a monotonous work.

[ஈடு = ஒப்பு, சமம். ஈடு + ஆடு = ஈடாடு. ஈடாடு = சமவலிமை யுள்ளவரோடு போட்டியிடுதல். ஆடுதல் = அசைத்தல், தளர்தல்.]

ஈடாதண்டம் *īḍā-daṇḍam*, பெ. (n.) ***ஏர்க்கால்;*** thill or shaft of a vehicle. "நகைபெரும் ஈடாதண்டம்" (மச்சபு.சூரிய ரத.21).

[ஈடு + ஆ(கு) + தண்டம்.]

ஈடி *īḍi*, பெ. (n.) 1. ***மண்சுவர்;*** mud wall. 2. ***மண் சுற்றுமதில்;*** mud compound, boundary wall.

ம. ஈடி.

[ஈடு → ஈடி. சம உயரத்துக்கு எழுப்பப்படும் சுவர்.]

ஈடிகை *īḍigai*, பெ. (n.) ***எழுதுகோல்*** (யாழ்.அக.); painter's pencil, quill.

[ஒருகா. : இழிகை - ஈழிகை - ஈடிகை.]

ஈடிடு-தல் *īḍiḍu-*, 20 செ.கு.வி. (v.i.) ***முழங்கையாலும் முன்கையாலும் மோதிப் போரிடும் முட்டிப் போர்;*** to fight with fists and elbows.

ம. ஈடிடுக.

[ஈடு + இடு. ஈடு = ஒப்பு. ஒப்பான முறையில் போரிடுதல். இதற்கு முட்டாமுட்டி என்றும் பெயர்.]

ஈடிதம் *īḍidam*, பெ. (n.) ***முகமன் கூறுதல்;*** praising. (ஆ.அக.).

[ஈடு = புகழ். ஈடு - ஈடிதம் = போற்றுதல், பரவுதல், தொழுதல்.]

ஈடிருப்பு *īḍiruppu*, பெ. (n.) ***அடகுவைத்தல்;*** mortgaging, a pledge.

ம. ஈடிருப்பு.

[ஈடு + இருப்பு.]

ஈடு[1] *īḍu*, பெ. (n.) ***தாக்குதல், அடித்தல்;*** blow, stroke.

[இல் - இள் - இடு - ஈடு. இல் = குத்துதல்.]

ஈடு[2] *īḍu*, பெ. (n.) 1. ***இடுகை;*** applying, putting on. "ஈடமை பசும்பொற் சாந்தம்" (சீவக.1256). 2. ***பிறர்பால் ஒப்புவிக்கை*** (திருவாலவா.28,36); delivering, handing over. 3. ***மாற்று;*** substitute. 'அதற்கீடாகத் தந்தான்'. 4. ***மணமக்களின் அகவை, வளர்ச்சிப் பொருத்தம்;*** appropriateness, in respect of age and physical development, as between a would-be bridegroom and bride. அவளுக்கும் அவனுக்கும் ஈடு போதாது. 'இது ஈடான சோடி' (உ.வ.) 5. ***தகுதி;*** fitness, suitability. "ஆட்செய்யு மீடே" (திவ்.திரு வாய்.1,6,2). 6. ***ஒப்பு;*** equality, comparison "ஈடு மெடுப்புமி லீசன்" (திவ்.திருவாய்.1,6,3). 7. ***அடைமா னம்;*** pledge, security, mortgage. 8. ***பருமன்;*** bulkiness, bigness. "ஈடுசால் போரழித்து" (சீவக.59). 9. ***சுமை;*** heaviness. 10. ***எடை, கனம்;*** weight. 11. ***வலிமை;*** power, might, force. "ஒருகரி யீடழித் துரித்தனை" (தேவா.142, வரி,13). 12. ***நிலைமை;*** condition, state. "மலர்ந்த வீட்டினால்" (கம்பரா.இலங்கைகே.4). 13. ***மன வருத்தம்;*** unhappiness, pain of mind. "ஈடினா லிருந் தெண்ணி" (சீவக.1762). 14. ***உள்ளீடான பொருள்;*** content, subject as of a letter. "முடங்க லிமிர்த்தத னீடு நோக்கி" (கம்பரா.பள்ளி.6). 15. ***வழி;*** way, means. "அறியேன் சொல்லு மீடவர்க்கே" (திருக்கோ.111). 16. ***மெய்ம்மறை*** (கவசம்); coat of mail. "உடம்புக் கீடிடாதே" (ஈடு.7,5,9). 17. ***குழைவு*** (சூடா.); melting, becoming soft. 18. ***ஈடு முப்பத்தாறா***

யிரம் (உபதேசரத்.) பார்க்க; see īḍu muppat-tā ṟāyiram. name of a commentary on the Tiruvāymoḻi, by Vaḍakku-t-tiru-vīdi-p-piḷḷai. (செ.அக.).

ம. ஈடு; க. ஈடு.

[இல் = குத்துதல், இருத்துதல், வைத்தல், பொருத்துதல். இல் - இள் - இடு - ஈடு.]

ஈடு[3] *īḍu,* பெ. (n.) 1. ***ஏற்றபொருள்;*** fit or proper subject. "நின் சோதனைக்கு நான் ஈடா". (சர்வசமய. பக்.126). 2. ***முறை, தடவை;*** turn. 'இந்தத் தென்னை ஒரு ஈட்டுக்கு முப்பதுகாய் காய்க்கும்.' (உ.வ.).

[ஈடு = பொருந்துதல், பொருந்தும் நிலை. முறை, தடவை. இடு - ஈடு.]

ஈடு[4] *īḍu,* பெ. (n.) ***ஒரு அடைவு;*** set, collection. 'அவன் ஒரு ஈடு இட்டலி தின்பான்.' (தஞ்சை.வ.).

[இடு → ஈடு. இடு = வைத்தல்.]

ஈடுகட்டு[1]**-தல்** *īḍu-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***பிணை கொடுத்தல்;*** to give as security.

[ஈடு = ஒப்பு, சமம். ஈடு + கட்டு.]

ஈடுகட்டு[2]**-தல்** *īḍu-kaṭṭu,* 15 செ.கு.வி. (v.i.) 1. ***துணி முதலான பொருள்கள் பல நாள் பயன்படுத்தப்பட்டும் வன்மை கெடாது இருத்தல்*** (இ.வ.); to be durable, as a piece of cloth for wear. 2. ***இழப்பீடு செய்தல்;*** to make amends, to make good; to indemnify. 3. ***பிணையாதல்;*** to be appropriate security. 4. ***பேரன்பு கொள்ளுதல்;*** to feel ardent devotion. "ஈடு கட்டி வருவீரே லின்ப மிகப்பெறுவீர்" (அருட்பா.6,உறு திகூறல்,2,2).

[ஈடு = ஒப்பு, சமம். ஈடு + கட்டு. ஈடு = வலிமை. ஈடு + கட்டு.]

ஈடுகொடு-த்தல் *īḍu-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ***இணையாதல்*** (வின்.); to be equal. 2. ***போட்டி போடுதல்*** (வின்.); to compete. 3. ***எதிர்ப்புக்குத் தளராது நிற்கை;*** to bear the brunt. 'வீடு பலமாக விருப்பதால் புயலுக்கு ஈடு கொடுக்கும்.' (இ.வ.). 4. ***பொருந்திகை (திருப்தி) செய்தல்;*** to give satisfaction. (செ.அக.).

[ஈடு = ஒப்பு, வலிமை. ஈடு + கொடு.]

ஈடுகொள்ளு-தல் *īḍu-koḷḷu-,* 13 செ.கு.வி. (v.i.) ***மனங்கனிதல்;*** to soften; to melt, as the heart. "திருமுக மிறைஞ்சி யீடுகொண்டு" (திருவாலவா.55,20). (செ.அக.).

[ஈடு + கொள்.]

ஈடுசெய்-தல் *īḍu-cey-,* 1 செ.குன்றாவி. (v.t.) 1. ***மாற்றாகச் செய்தல்*** (இ.வ.); to compensate. 2. ***சரிக்கட்டுதல்;*** to adjust, balance. (செ.அக.).

[ஈடு + செய்.]

ஈடுசெலுத்தல் *īḍuśeluttal,* பெ. (n.) ***ஈடு செய்-தல்*** பார்க்க: see *īḍucey.*

[ஈடு + செலுத்தல்.]

ஈடுசோடு *īḍu-śōḍu,* பெ. (n.) ***இணை;*** pair, condition of being equal between two persons or things. "ஈடுசோடற்ற சிற்சத்தியாம்" (மசூதான்.92).

[ஈடு = ஒப்பு. ஈடு + சுவடு. சுவடு - சோடு.]

ஈடுபடு-தல் *īḍu-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. ***வலியழிதல்;*** to become weak, feeble. 2. ***அகப்படுதல்;*** to be ensnared, entangled. "விலங்க ரீடுபட்டதே" (பாரத.வாரணா.79). 3. ***மனங்கவிதல்;*** to be absorbed, engrossed, involved. 'பகவத் குணங்களில் ஈடுபட்டவர்கள்.' 4. ***துன்பப்படுதல்;*** (சிவப்பிர.உண்மை.40. உரை); to suffer.

[ஈடு = வலிமை, விருப்பம். படுதல் = அழிதல், குவிதல், உண்டாதல். ஈடு + படு.]

ஈடுபாடு *īḍu-pāḍu,* பெ. (n.) 1. ***துன்பம்;*** trouble, suffering. "ஈடுபாடித்தனையும் பட்டு" (அரிச்.பு.மயான. 34). 2. ***மனங்கவிகை;*** state of being absorbed, en-grossed, involvement. 3. ***ஆதாயம் இழப்பு*** (இலாப நட்டம்) (வின்.); profit and loss. 4. ***ஈட்டுக்கமைந்திருத்தல்*** (த.சொ.அக.); remaining as security. 5. ***சார வைத்தல்*** (தாயு.ஆகாரபுவந.2.உரை); making one dependent. (செ.அக.).

[ஈடு + (படு) - பாடு.]

ஈடுமாடு *īḍumāḍu,* பெ. (n.) 1. ***எல்லை, வரம்பு;*** limit. 2. ***சுற்றுச் சுவர்;*** compound wall, boundary.

ம. ஈடுமாடு.

[ஈடு + மாடு. 'மாடு' எதுகை மரபிணைமொழி.]

ஈடுமுட்டு *īḍumuṭṭu,* பெ. (n.) ***தடை;*** resistance, obstruction.

ம. ஈடுமுட்டு.

[ஈடு + முட்டு.]

ஈடுமுப்பத்தாறாயிரம் *īḍu-muppattā ṟāyiram,* பெ. (n.) ***திருவாய்மொழி விரிவுரைகளு ளொன்று*** (உபதேசரத்.44); exhaustive commentary on the Tiruvāy-moḻi, written by Vaḍakku-t-tiru-vīti-p-piḷḷai following the discourse of his guru Nam-Piḷḷai, consisting of 36,000 granthas of 32 syllables each. (செ.அக.).

[ஈடு + முப்பது + அத்து + ஆறு + ஆயிரம்.]

ஈடுமேடு *īḍu-mēḍu,* பெ. (n.) ***மேடும் பள்ளமும், குண்டும் குழியும்;*** ups and down, undulations. (செ.அக.).

ம. ஈடுமேடு.

[ஈடு + மேடு.]

ஈடேற்றம் *īḍēṟṟam,* பெ. (n.) 1. ***உய்வு;*** deliverance. 2. ***விடுதலை;*** liberation, emancipation. 3. ***பாதுகாப்பு*** (வின்.); protection. 4. ***மீட்பு*** (த.சொ.அக.); redemption. 5. ***பேரின்ப வாழ்வு;*** bliss.

ம. ஈடேற்றம்; க. ஈடேரிக; தெ. ஈடேறுட.

[ஈடு = விருப்பம்; ஏற்றம் = நிறைவுறுதல். ஈடு + ஏற்றம்.]

ஈடேற்றல் *īḍēṟṟal*, தொ.பெ. (vbl.n.) ***ஈடேறச் செய்தல்;*** act of redeeming, liberating. (த.சொ.அக.).

[ஈடு + ஏற்றல்.]

ஈடேற்று-தல் *īḍēṟu-*, 6 செ.குன்றாவி. (v.t.) ***உய்வித்தல்;*** to deliver, redeem, liberate, emancipate.

[ஈடு + ஏற்று.]

ஈடேறு-தல் *īḍēṟu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. ***முடிவுறுதல்;*** to be completed. 2. ***உய்வடைதல்;*** to be liberated from a worldly life, saved from ruin, rescued from danger, difficulty or disease. "தொண்டர் குழா மீடேற" (குற்றா.தல. கடவுள்,13). 3. ***வாழ்வடைதல்;*** to become prosperous. "என்னை நீ யீடேறத் திருவுளத் தருள் செய்குக" (பாரத.நச்சு.5). 4. ***மனநிறைவடைதல்;*** to be pleased.

ம. ஈடேறுக.

[ஈடு = விருப்பம். ஈடு + ஏறு.]

ஈடை *īḍai*, பெ. (n.) 1. ***ஈசை*** (வின்.) பார்க்க; see *īšai*. 2. ***புகழ்ச்சி;*** fame, praise.

[ஈடு - ஈடை.]

ஈண்டல் *īṇḍal*, தொ.பெ. (vbl.n.) ***ஈண்டு-தல்*** பார்க்க: see *īṇḍu*.

[ஈண்டு → ஈண்டல். 'அல்' = பெயரீறு.]

ஈண்டி *īṇḍi*, பெ. (n.) ***மண்சுவர்;*** mud wall.

ம. ஈண்டி.

[இண்டு - ஈண்டி.]

ஈண்டு[1] *īṇḍu*, கு.வி.எ. (adv.) 1. ***இவ்விடத்தில்*** (திவா.); here, in this place. 2. ***இம்மையில்;*** in this world, in the present birth. "ஈண்டறம் பூண்டார்" (குறள்.23). 3. ***இவ்வாறு*** (சூடா.); in this way. 4. ***இப்பொழுது;*** now. "ஈண்டேகிக் கொணர்வேன்" (கம்பரா.திருவவ.57) (செ.அக.).

[ஈ - ஈண்டு.]

ஈண்டு[2]**-தல்** *īṇḍu-*, 15 செ.கு.வி. (v.i.) 1. ***கூடுதல்;*** to gather, come together. "ஈண்டிய வடியவ ரோடும்" (திருவாச.2,144). 2. ***செறிதல்;*** to be close together, to get to be a compact mass, as the atoms of matter/element. "இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கை" (புறநா.19). 3. ***மிகுதல்;*** to abound, to be numerous. "இயைந் தொருங் கீண்டி" (சிலப்.6.145). 4. ***விரைந்து செல்லுதல்;*** to speed, make haste. "இடுக்கண் களைதற் கீண்டெனப் போக்கி" (சிலப்.13,101) - 5 செ.குன்றாவி (v.t.). ***தோண்டுதல்;*** to gouge, extract, pluck out, dig out. "மலர்க்கண்ணை யீண்ட.... ஆழி யீந்தார்" (தேவா.192.5).

க. இடி.

[இல் = குத்துதல். நெருக்குதல், செறியச் செய்தல். இல் → இள் → இண்டு → ஈண்டு.]

ஈண்டு[3]**-தல்**, *īṇḍu-*, 15 செ.கு.வி. (v.i.) 1. ***வருதல்;*** to come. 2. ***செல்லுதல்;*** to go.

சிந். ஈண்டு.

[இல் - இள் - இண்டு - ஈண்டு.]

ஈண்டு[3] *īṇḍu*, பெ. (n.) ***விரைவு*** (திவா.); haste, speed, despatch.

[ஈண்டு = செறிவு, விரைவு.]

ஈண்டு[4] *īṇḍu*, பெ. (n.) ***புலி தொடக்கி*** (மலை.); tiger stopper. (செ.அக.).

[இண்டு - ஈண்டு.]

ஈண்டுநீர் *īṇḍu-nīr*, பெ. (n.) ***கடல்;*** sea, literally a large collection of water. "ஈண்டுநீர் மிசைத் தோன்றி" (கலித்.100).

[ஈண்டு + நீர்; ஈண்டுதல் = பெருகுதல், மிகுதல்.]

ஈண்டென *īṇḍeṉa*, கு.வி.எ. (adv.) ***விரைவாக;*** expeditiously, promptly, speedily. "நீயே ஈண்டெனத் தந்தருள வேண்டுமென்கிறார்". (திவ்.திருவாய்.2,9,2, ஆறா) (செ.அக.).

[ஈண்டு = செறிவு. விரைவு. ஈண்டு + என = ஈண்டென.]

ஈண்டை *īṇḍai*, கு.வி.எ. (adv.). ***இங்கு;*** here, in this world. "ஈண்டை வலையகத்துச் செம்மாப்பார்" (நாலடி. 331). (செ.அக.).

[இங்கு - ஈங்கு - ஈண்டு - ஈண்டை.]

ஈண்டையார் *īṇḍaiyār*, பெ. (n.) ***ஈண்டையான்*** பார்க்க: see *īṇḍaiyāṉ*

[ஈண்டை + ஆர்.]

ஈண்டையான் *īṇḍaiyāṉ*, பெ. (n.) ***இவ்விடத்தான்;*** man of this place, locality etc. "ஈண்டையாரல்லர்" (கம்பரா. தைல.75).

[ஈண்டு - ஈண்டை + ஆன்.]

ஈணி *īṇi*, பெ. (n.) ***பனை நார்;*** palm-fibre (வின்.) (த.சொ.அக.).

[ஈல் - ஈள் - ஈளி - ஈணி = பிரிக்கப்பட்ட நார்.]

ஈணு-தல் *īṇu-*, 16 செ.குன்றாவி. (v.t.) 1. ***ஒடித்தல்;*** to break. 2. ***முன்னும் பின்னுமாக வளைத்தல்.*** to bend backward and forward, to snap.

ம. ஈணுக.

ஈணை *īṇai*, பெ. (n.) 1. ***அகணி;*** inferior, as of the fibrous part of the bark of a tree. 2. ***பனைநார்;*** palm-fibre. (த.சொ.அக.).

[ஈல் - ஈள் - ஈணி - ஈணை - ஈணை.]

ஈத்தா *īttā*, பெ. (n.) ***எச்சில், உமிழ்நீர்;*** saliva, spittle.

ம. ஈத்தா.

[இழி - இழித்து - ஈத்து (கொ.வ.).]

பழ ஈ



ஆட்டு ஈ



மாட்டு ஈ



இறகு எறும்பு

ஈக்கள் வகைகள்:

வீட்டு ஈ

இறைச்சி ஈ

கண் ஈ

கள் ஈ

ஈத்து[1] *ittu,* பெ. (n.) 1. ***வண்டியச்சு;*** axle of a cart. 2. ***ஏர்த்தடி;*** thill.

ம. ஈத்து.

[உல் - உத்து - இத்து - ஈத்து.]

ஈத்து[2] *ittu,* பெ. (n.) 1. ***பயப்பு, பிள்ளைப்பேறு;*** delivery. "ஒரு ஈத்தில் மூன்று பிள்ளை பெற்றாள்" (இ.வ.). 2. ***விலங்கு குட்டிபோடுதல்;*** yeaning of animals. 'இந்தக் கன்று எங்கள் மாட்டுக்கு நாலாம் ஈத்து.' (உ.வ.). 3. ***நிலைத்திணைகளின் கதிர் புடைவிடுதல்;*** sprouting of corn etc. from plants or crop. 'அவரை மறு ஈத்து விட்டிருக்கிறது.' (இ.வ.).

[ஈன் → ஈத்து.]

ஈதா *īdā,* இடை (int.). ***இந்தா;*** exclamation inviting attention; Lo, see here. "அறிந்திலே னீதா" (பரிபா. 8,60). (செ.அக.).

[இது - இதா (இதோ) - இந்தா = இங்கு. இந்தா - ஈதா. ஈதா = இங்கே பார்.]

ஈதி *īdi,* பெ. (n.) 1. ***நாட்டுக்குவருங் கேடு*** (குறள்.732, உரை); disaster which may befall the land, scourge in six forms, viz. storm, drought, rodent, locust proximity of royalty. 2. ***துன்பம், தொல்லை, நச்சரவு;*** affliction. "ஈதி இடைஞ்சலிலே இடி விழுந்த கானலிலே" (நாட்டுப்பா.).

ம. ஈதி.

[இதை - ஈதை - ஈதி.]

ஈதிபாதை *īdipādai,* பெ. (n.) 1. ***ஈதி*** பார்க்க: see *īdi.* pestilence. 2. ***இக்கட்டான நிலை;*** perplexity, quandary, dilemma.

[இதை - ஈதை - ஈதி + பாதை.]

ஈது *īdu,* சு.பெ. (demon.pron.) ***இது;*** this. "ஈதேயென் றோழி" (திருவாச.7,1) (செ.அக.).

[இது - ஈது.]

ஈதை *īdai,* பெ. (n.) ***துன்பம்;*** calamity, affliction. "ஈதைகள் தீர்க்கும் நாமத் திராமனை" (கம்பரா.நாகபா. 275) (செ.அக.).

[இதை - ஈதை.]

ஈந்து[1] *īndu,* பெ. (n.) 1. ***பேரீச்சைமரம்;*** date-palm. "ஈந்தின் முற்றிய பெரு நறவு" (கல்லா.24). 2. ***சிற்றீந்து;*** dwarf wild date-palm. (வ.மொ.வ.90).

வ. ஹிந்தால; ம. ஈத்த; தெ. ஈத்த.

[ஈர் (நுண்மை) - ஈர்ந்து - ஈந்து. கிளையில்லா மரங்கட்குள் மிகச் சிறிய ஓலையுள்ளது, அல்லது ஏறுவாரை அறுக்கும் அடியினது. ஈர் = நுண்மை. "ஈரயிர் மருங்கின்" (சிலப்.6.146).]

ஈந்து[2] *īndu,* பெ. (n.) ***நஞ்சு*** (சங்.அக.); poison.

[ஈர் - ஈர்ந்து - ஈந்து. பிளக்கச் செய்வது; சாகச் செய்வது.]

ஈப்பி *īppi,* பெ. (n.) ***பேன்முட்டை*** (யாழ்.அக.); nit.

ஈர்ப்பி பார்க்க; see *īrppi*

[ஈர்ப்பி - ஈப்பி.]

ஈப்பிணி *īppiṇi,* பெ. (n.) ***கருமி, இவறன், ஈயாமாறி*** (யாழ்ப்.); miser.

ஈப்பிலி பார்க்க; see *īppili.*

[ஈ - ஈப்பு + இலி - ஈப்பிலி - ஈப்பினி - ஈப்பிணி. (கொ.வ.).]

ஈப்பிலி *īppili,* பெ. (n.) ***ஈயாதவன்;*** miser.

[ஈ - ஈப்பு (ஈகை) + இலி.]

ஈப்புகு-தல் *ī-p-pugu-,* 21 செ.கு.வி. (v.i.) ***காதில் ஈ நுழைதல்;*** entry of fly (into the ear).(சா.அக.).

[ஈ + புகு.]

ஈப்புலி *īppuli,* பெ. (n.) 1. ***ஒருவகைச் சிறு சிலந்திப் பூச்சி;*** species of small spider which devours flies. "ஈப்புலியோ டெலிப்புலியாய் வடிவங் கொண்டு" (தனிப்பா.1,86,169). 2. ***நாய்ப்புலி விளையாட்டு;*** native game similar to the game of fox and geese. (செ.அக.).

[ஈ + புலி. ஈயைத்தின்னும் சிலந்திப்பூச்சி. ஈயைக் கொல்லும் புலியாக உருவகம் கொண்டது.]



ஈப்புலி

ஈம் *īm,* பெ. (n.) ***சுடுகாடு;*** place for the cremation of the dead, burning-ground. "ஈமுங் கம்மும்" (தொல். எழுத்.328).

[ஈ - ஈம். ஈ = இளைதல் (வருந்தல்). துயரம் மிகுவிக்கும் இடம். குறிப்புக்கிளவி. ஒ.நோ.: பே - பேம்., தீ - தீம்.]

ஈமக்கடன் *īma-k-kaḍan,* பெ. (n.) ***இறந்தோர்க்குச் செய்யும் சடங்கு;*** funeral rites. "ஈமக்கடனிறுவிப் போதென்றேவி" (திருவிளை.பழியஞ்.30).

ஈம் பார்க்க; see *īm.*

[ஈ - ஈம் + அம் + கடன்.]

ஈமக்காடு *īmakkāḍu,* பெ. (n.) ***இறந்தவுடலை எரிக்குமிடம்; புதைக்குமிடம்;*** place where dead bodies are

cremated, burial ground.

ஈம் பார்க்க; see *īm.*

[ஈ - ஈம் + அம் + காடு.]

ஈமக்கொடி *īma-k-kodi,* பெ. (n.) ***இண்டங்கொடி*** பார்க்க; see *indankodi.*

[ஈம் + அ + கொடி.]

ஈமத்தாடி *īmattādi,* பெ. (n.) ***சுடலையில் ஆடும் சிவன்*** (திவா.); Siva, dancing on the burning-ground. (செ.அக.).

[ஈமம் + அத்து + ஆடி.]

ஈமத்தாழி *īmattāli,* பெ. (n.) ***முதுமக்கள்தாழி*** (புறநா. 256); burial urn for the dead in ancient times. (செ.அக.).

ம. ஈமத்தாழி.

[ஈமம் + தாழி.]

ஈமந்தன் *īmandan,* பெ. (n.) ***மேலுதடு;*** upper lip. (சா.அக.).

[உம் - இம் - ஈம் - ஈமந்தன்.]

ஈமப்பந்தர் *īma-p-pandar,* பெ. (n.) ***சுடுகாட்டுப் பந்தர்;*** pavilion in burning ground. "ஈமப்பந்தரும் யாங்கணும் பரந்து" (மணிமே.6.63).

[ஈமம் + பந்தர். பந்தல் - பந்தர்.]

ஈமப்பறவை *īma-p-paravai,* பெ. (n.) ***இடுகாட்டில் அல்லது சுடுகாட்டி லிருக்கும் காகம், கழுகு முதலி யன;*** crow, vulture, etc., found in the burial or cremation ground; birds of prey living on dead bodies.

[ஈமம் + பறவை.]

ஈமப்புறங்காடு *īma-p-purangādu,* பெ. (n.) ***சுடுகாடு;*** burial ground. "ஈமப் புறங்கா டங்கி தனயல" (மணி மே.6-38).

[ஈமம் + புறம் + காடு. ஊர்ப்புறத்தே இருக்கும் காடாதலின் புறங்காடு எனப்பட்டது.]

ஈமம்[1] *īmam,* பெ. (n.) 1. ***சுடுகாடு;*** burning ground. "ஈமஞ்சேர் மாலைபோல" (சீவக.210). 2. ***பிணஞ்சுடு தற்கு அடுக்கும் விறகடுக்கு;*** funeral pyre. "ஈமவொள் ளழற் குறுகினுங் குறுகுக" (புறநா.231).

ம. ஈமம்.

[ஈ - ஈம் + அம். ஈம் பார்க்க; see īm.]

ஈமம்[2] *īmam,* பெ. (n.) ***பாதிரி*** (மலை.); trumpet-flower.

[ஈம் - ஈமம். இருளில் ஈமத்துத் தீயைப் போலச் சிவந்தொளி ரும் பூக்களுடைய மரம்.]

ஈமவனம் *īma-vanam,* பெ. (n.) ***சுடுகாடு;*** burning-ground. "ஈமவனத் தெரியாட் டுகந்த வெம்பெரு மான்" (தேவா.84,7).

[ஈமம் + வனம்.]

ஈமவாரி *īma-vāri,* பெ. (n.) ***வசம்பு*** (மலை.); sweet-flag. (செ.அக.).

[ஈமம் + வாரி.]

ஈமவிதி *īma-vidi,* பெ. (n.) ***இறந்தோர்க்குச் செய்யுஞ் சடங்கு;*** funeral rites. "அரசை யீமவிதி செய்ய" (பாரத.சம்பவ.105) (செ.அக.).

[ஈமம் + விதி.]

ஈமவிளக்கு *īma-vilakku,* பெ. (n.) ***பிணஞ்சுடும் விறகின் அழல்;*** funeral fire. "ஈமவிளக்கிற் பேஎய் மகளிரொடு" (புறநா.356-3).

[ஈமம் + விளக்கு.]

ஈமவிறகு *īma-viragu,* பெ. (n.) ***சிதை;*** funeral pile, pyre (w.). (ஆ.அக.).

[ஈமம் + விறகு.]

ஈமன் *īman,* பெ. (n.) ***சிவன்;*** Lord Siva. (ஆ.அக.).

[ஈமம் - ஈமன்.]

ஈமவொள்ளழல் *īmavollalal,* பெ. (n.) ***பிணஞ்சுடும் தீ;*** funeral fire. "கரிபுற விறகினீம வொள்ளழல்" (புறநா.231).

[ஈமம் + ஒள் + அழல்.]

ஈமுக்கடுமை *īmu-k-kadumai,* பெ. (n.) ***ஈமக்கடுமை;*** heat of a burning place. (ஆ.அக.).

[உரும் - ஊம் - ஈம். ஈம் - ஈமு + கடுமை.]

ஈமோதல் *īmōdal,* பெ. (n.) ***சிலந்தி, புண் முதலியவற் றில் ஈமொய்த்து முட்டை வைத்தல்;*** depositing of eggs by the fly on exposed wound or ulcer.

[ஈ + மோதல்.]

ஈய *īya,* கு.வி.எ. (adv.). ***வகுக்க*** (கணக்.); to divide.

[ஈ - ஈய. ஈதல் = பிரித்தல், தருதல், வகுத்தல்.]

ஈயக்கந்தகம் *īya-k-kandagam,* பெ. (n.) ***ஈயக் கலப் புள்ள கந்தகம்;*** sulphur mixed with lead ore. (சா.அக.).

[ஈயம் + கந்தகம்.]

ஈயக்கல் *īya-k-kal,* பெ. (n.) 1. ***கல்வங்கம்;*** lead-stone. 2. ***கல்லீயம்;*** pewter. (சா.அக.).

[ஈயம் + கல்.]

ஈயக்களங்கு *īya-k-kalangu,* பெ. (n.) ***வங்கவெட்டை;*** (in alchemy) stage at which lead crumbles to powder by over-heating (natural or artificial). (சா.அக.).

[ஈயம் + களங்கு.]

ஈயக்களிம்பு *īya-k-kalimbu,* பெ. (n.) ***ஈயத்தைக் கொண்டு செய்யும் பசை;*** lead carbonate - Aerugo Plumbi.

[ஈயம் + களிம்பு.]

ஈயக்கற்கண்டு *īya-k-kaṟkaṇḍu,* பெ. (n.) **வங்கச் சுண்ணம்** (M.M.); sugar of lead, plumbi acetas. (செ.அக.).

[ஈயம் + கற்கண்டு.]

ஈயக்காடி *īya-k-kāḍi,* பெ. (n.) ***ஈயஞ்சேர்ந்த காடி;*** vinegar of lead. (சா.அக.).

[ஈயம் + காடி.]

ஈயக்காரிகை *īya-k-kārigai,* பெ. (n.) ***சுளுக்கு மருந்து;*** a kind of herb used in sprain. (சா.அக.).

[ஈயம் + காரிகை.]

ஈயக்கிட்டம் *īya-k-kiṭṭam,* பெ. (n.) 1. ***ஈயமுருக்கியெடுத்த கிட்டம்;*** refuse of melted lead. 2. ***ஈயத்துரு*** (வின்.); lead rust. (சா.அக.).

[ஈயம் + கிட்டம்.]

ஈயக்கேணி *īya-k-kēṇi,* பெ. (n.) ***ஈயமெடுக்கும் சுரங்கம்;*** lead mine.

[ஈயம் + கேணி.]

ஈயக்கொடி *īya-k-koḍi,* பெ. (n.) ***இண்டங்கொடி;*** tiger-stopper. (சா.அக.).

[ஈயம் + கொடி.]

ஈயங்கட்டி *īyaṅgaṭṭi,* பெ. (n.) ***இரும்பிலி இலை;*** leaves of irumbili plant. (சா.அக.).

இரும்பிலி பார்க்க: see *irumbili.*

[ஈயம் + கட்டி.]

ஈயங்கொல்லி *īyaṅgolli,* பெ. (n.) ***கரியபோளம்;*** black myrrh.

[ஈயம் + கொல்லி.]

ஈயச்சத்துநீர் *īya-c-cattu-nīr,* பெ. (n.) ***நிலத்திற் புதைந்து கிடக்கும் ஈயத்தின் வழியாகச் சூடேறி, வெந்நீராக மாறுந் தண்ணீர்;*** natural fountain of hot water issuing from the soil containing lead tin. (சா.அக.).

[ஈயம் + சத்து + நீர்.]

ஈயச் சிமிழ் *īya-c-cimiḻ,* பெ. (n.) ***மருந்தைப் பதனப் படுத்துவதற்காகப் பயன்படுத்தும் ஈயத்தாற் செய்த சிமிழ்;*** small round box made of lead for preserving medicines. (சா.அக.).

[ஈயம் + சிமிழ்.]

ஈயச்சிவப்பு *īya-c-civappu,* பெ. (n.) 1. ***சிவப்பு ஈயம்;*** red-lead. 2. ***ஈயச் செவ்வச்சிரம்;*** lead tetroxide. (Pb_3O_4). 3. ***ஈயச் செந்தூரம்;*** calcined red oxide of lead.

[ஈயம் + சிவப்பு.]

ஈயச்சுண்ணம் *īya-c-cuṇṇam,* பெ. (n.) ***ஈயத்தினின் றெடுக்கு மோர் மருந்து;*** preparation from lead, carbonate of lead.

[ஈயம் + சுண்ணம்.]

ஈயச்செடி *īya-c-ceḍi,* பெ. (n.) ***இண்டு*** (மூ.அ.); tiger - stopper

[ஈயம் + செடி.]

ஈயச்செந்தூரம் *īya-c-cendūram,* பெ. (n.) 1. ***ஈயச்சிந்தூரம்*** பார்க்க: see *īya-c-cindūram.* 2. ***ஈயச் சிவப்பு;*** red-lead. (சா.அக.).

[சிந்தூரம் - செந்தூரம். ஈயம் + செந்தூரம்.]

ஈயசோலி *īya-šōli,* பெ. (n.) ***வேலிப்பருத்தி;*** hedge cotton - Damoa extensa.

[ஈயம் + சோலி.]

ஈயடிச்சான் காப்பி *īyaḍiccāṉ kāppi,* பெ. (n.) ***ஈயடிச்சான் படி*** பார்க்க; see *īyḍiccāṉ-paḍi.*

[ஈ + அடிச்சான் + காப்பி. E-copy > த. காப்பி. அடித்தான் - அடிச்சான்.]

ஈயடிச்சான் படி *īyaḍiccāṉ-paḍi,* பெ. (n.) ***மூலத்திலுள்ளவாறு எழுதும் படி;*** exact reproduction, copy, including mistakes and all, even extending to ridiculous length, as the fixing of a dead fly on the page of the copy similar to the one found on the original page.

[ஈ + அடித்தான் + படி.]

ஈயத்தகடு *īya-t-tagaḍu,* பெ. (n.) ***ஈயத்தை இலையைப்போல் மெல்லியதாகத் தட்டிய தகடு;*** leaf or thin plate of lead foil. (சா.அக.).

[ஈயம் + தகடு.]

ஈயத்தண்டிலை *īya-t-taṇḍilai,* பெ. (n.) ***இண்டிலை;*** leaf of the plant iṇḍu.

[ஈயம் + தண்டு + இலை.]

ஈயத்தண்டு *īya-t-taṇḍu* பெ. (n.) ***இண்டு*** (மூ.அ.); tiger - stopper.

[ஈயம் + தண்டு.]

ஈயத்தின் குற்றம்போக்கி *īya-t-tiṉ-kuṟṟam-pōkki,* பெ. (n.) ***பாற் சோற்றி;*** medicinal creeper - Euphorbia hypericifolia. It is so called by virtue of its characteristic of removing lead poisioning from the system. (சா.அக.).

[ஈயம் + அத்து + இன் + குற்றம் + போக்கி.]

ஈயத்தை நாசமாக்கி *īyattai nāšamākki,* பெ. (n.) ***கொடிக்கள்ளி;*** squat flowered creeping milk hedge-sarcos-temma brevistingma. It is so called from its destructive action on lead. (சா.அக.)

ஈயநஞ்சு *īyanañju,* பெ. (n.) ***ஈயத்தினா லுடம்பி லேற்பட்ட நஞ்சு;*** lead poison - Plumbism.

[ஈயம் + நஞ்சு.]

ஈயப்பற்று - *īya-p-paṟṟu,* பெ. (n.) ***வங்கப்பற்று;*** solder used for metal. (சா.அக.).

ம. ஈயப்பற்று.

[ஈயம் + பற்று.]

ஈயப் பாளம் *īya-p-pāḷam,* பெ. (n.) ***ஈயமூலக்கனி;*** oblong mass of unforged lead, as when first extracted from the ore-pig lead. (சா.அக.).

[ஈயம் + பாளம்.]

ஈயப்பூச்சு *īya-p-pūccu,* பெ. (n.) ***ஏனங்களுக்கு ஈயப்பூச்சிடுதல்;*** to coat vessals with lead lorication. (சா.அக.)

ஈயப்பொடி *īya-p-poḍi* பெ. (n.) ***ஈயத்தை முறைப்படி மூலிகைகளைக் கொண்டு தூய்மை செய்த வங்க பற்பம்;*** powdered lead. (சா.அக.).

[ஈயம் + பொடி.]

ஈயபற்பம் *īya paṟpam,* பெ. (n.) ***ஈயப்பொடி*** பார்க்க; see *īya-p-poḍi.*

ஈயபற்பி *īyapaṟpi,* பெ. (n.) ***ஈயத்தைப் பற்பமாக்கும் மூலிகை அதாவது வறட்சுண்டி;*** drug used for calcining lead, viz. - a species of sensitive plant - Mimosa tripuetra.

[ஈயம் + பற்பி.]

ஈயம்[1] *īyam,* பெ. (n.) 1. ***வெள்ளீயம்*** (திவா.) பார்க்க: see *veḷḷīyam.* white-lead. 2. ***காரீயம்:*** black-lead. 3. ***கல்லீயம்;*** a hard kind of lead.

Skt. sīsa; *Sinh.* īya; *MHG.* lot; *O.E.* lead; *MLG.* lōd.

[ஈயம் = வெண்மை. வெண்ணிற மாழை. எல் = வெள்ளை. எல் - இல் - ஈள் - ஈயம். இள் - இய - ஈ - ஈயம். (வ.மொ.வ.90).]

ஈயம்[2] - *īyam,* பெ. (n.). 1. ***பாதிரி*** (மூ.அ.) பார்க்க: see *pādiri.* 2. ***மிருதார சிங்கி*** (மூ.அ.); prepared arsenic.

[ஈயம் = வெண்மை. வெண்ணிறப்பூ பூப்பதனால் பாதிரி ஈயம் எனப்பட்டது.]

ஈயம்பூசு-தல் *īyam pūsu-,* 5 செ.கு.வி. (v.i.) ***ஏனங்களுக்கு ஈயப்பூச்சிடுதல்;*** to coat utencils with lead. (செ.அக.).

[ஈயம் + பூசுதல்.]

ஈயமஞ்சள் *īyamañjaḷ,* பெ. (n.) ***ஈயங்கலந்த ஒருவகை மஞ்சள்தூள்;*** lemon-yellow powder called chrome yellow, lead chromate. (சா.அக.).

[ஈய + மஞ்சள்.]

ஈயமணல் *īyamaṇal,* பெ. (n.) 1. ***ஈயப்பொடி;*** granular particles of lead. 2. ***ஈயஞ் சேர்ந்துள்ள மண் முதலிய கசடு;*** lead mixed with earth or other matter; lead ore. (செ.அக.).

[ஈயம் + மணல்.]

ஈயமரம் *īyamaram,* பெ. (n.) ***பாதிரிமரம்;*** tree with trumpet like flowers - Bignonia chelonocides.

[ஈயம் + மரம்.]

ஈயமலை *īyamalai,* பெ. (n.) ***ஈயமகப்படும் மலை;*** mountain yielding ore of lead.

[ஈயம் + மலை.]]

ஈயமாக்கி *īyamākki,* பெ. (n.) ***காட்டாமணக்கு;*** physic nut plant - Jatropha glandulifera.

[ஈயம் + ஆக்கி.]

ஈயமூலிகை *īyamūligai,* பெ. (n.) ***ஈயச்சத்து அடங்கிய மூலிகை;*** plants said to contain essence of lead.

[ஈயம் + மூலிகை.]

ஈயல் *īyal,* பெ. (n.) 1. ***சிறகு முளைத்த கறையான்;*** winged white ant, Terms bellicosus. "மஞ்ஞை ஈயற் கிவரும் வகை போல்" (சீவக.925). 2. ***தம்பலப்பூச்சி*** (இந்திரகோபப்பூச்சி) (சா.அக.); lady fly - Mutella occidentalis.

ம. ஈயல்; **க.** ஈசல்; **தெ.** ஈசுள்ளு; **குரு.** ஈம; **மால்.** இமெ.

[ஈ + அல் = ஈயல் (ஈபோன்றது).]

ஈயலி *īyali,* பெ. (n.) ***தம்பலப்பூச்சி*** (வை.மூ.); cochineal insect, scarlet moth.

[ஈயல் - ஈயலி.]

ஈயவரி *īyavari,* பெ. (n.) ***பெருமருந்து*** பார்க்க; see *perumarundu* plant. Aristolochia Indica (W.).

[ஈயம் + வரி.]

ஈயவாகை *īya vāgai,* பெ. (n.) ***வாகை மரத்தின் ஒருவகை, வெண்வாகை.;*** a variety of vāgai tree.

ம. ஈயவாக.

[ஈயம் + வாகை.]

ஈயவாரிகம் *īya-vārigam,* பெ. (n.) ***வெள்ளறுகு;*** white doob grass-Enicostema littorale alias Adene ma hyssopifolium.

[ஈயம் + வாரி + இகம்.]

ஈயவுப்பு *īya-vuppu,* பெ. (n.) ***ஈயக்காடியுப்பு;*** salt of lead.

[ஈயம் + உப்பு.]

ஈயவெண்பற்பம் *īyaveṇpaṟpam,* பெ. (n.) 1. ***ஈய வெள்ளை;*** soft white powder, blackened by sulphureted hydrogen - carbonate of lead. 2. ***வங்க பற்பம்;*** oxide of lead. It is a native preparation.

[ஈயம் + வெண்மை + பற்பம்.]

ஈயவெள்ளை *īya-veḷḷai,* பெ. (n.) ***பொடிவகை;*** lead sulphide.

ம. ஈயவெள்ள.

[ஈயம் + வெள்ளை.]

ஈயவெள்ளைக் களிம்பு *īya veḷḷai-k-kaḷimbu,* பெ. (n.) ***ஈயவெள்ளையினின்று செய்வித்த மேற்பூச்சு மருந்து;*** ointment of lead carbonate - Unguentum Plumbi

carbonatis. (சா.அக.).

[ஈயம் + வெள்ளை + களிம்பு.]

ஈயன்மூதா *īyaṉ-mūdā,* பெ. (n.) ***ஈயன் மூதாய்*** (பிங்.) பார்க்க; see *īyaṉ mūdāy.*

[ஈயல் + மூதா. மூதாய் - மூதா.]

ஈயன்மூதாய் *īyaṉmūdāy,* பெ. (n.) ***தம்பலப்பூச்சி.*** (இந்திரகோபம்) (கலித்.85. உரை); cochineal insect, coccus cacti.

[ஈயல் + மூதாய். ஈசலின் பாட்டி என்னும் நகைச்சுவைக் குறிப்பினால் ஈயன் மூதாய் எனப்பட்டது.]

ஈயாப்பத்தன் *īyā-p-pattaṉ* பெ. (n.) ***இவறன்*** (கஞ்சன்) (மதி.களஞ்.1,88); miser.

[ஈ + ஆ + பத்தன். பற்றன் - பத்தன் ஆ.எ. ம. இ. நி.]

ஈயாம் கிழங்கு *īyām-kiḻaṅgu,* பெ. (n.) ***யாமிச்சங் கிழங்கு;*** yam tuber - Dioscorea sativa. (சா.அக.).

[ஈயாம் + கிழங்கு.]

ஈயிலை *īyilai,* பெ. (n.) ***இண்டு*** பார்க்க: see *iṇḍu.* (சா.அக.).

[ஈகை + இலை.]

ஈயுவன் *īyuvaṉ,* பெ. (n.) ***இராவணன்*** (அக.நி.); Rāvaṇaṉ.

[ஈழவன் - ஈயவன் - ஈயுவன் (கொ.வ.).]

ஈயெச்சத்தோல் *ī-y-ecca-t-tōl,* பெ. (n.) ***பூச்சி யரித்த தோல்*** (யாழ்ப்.); fly-blown skin; worm-eaten sheath of the palmyra fruit. (சா.அக.).

[ஈ + எச்சம் + தோல்.]

ஈயெச்சிற்கீரை *īyecciṟ-kīrai,* பெ. (n.) ***புதினாக்கீரை*** (இ.வ.); mint, mentha viridis. (செ.அக.).

[ஈ + எச்சில் + கீரை.]

ஈயெனல் *īy-eṉal,* பெ. (n.) ***பல்லைக்காட்டுங் குறிப்பு*** (வின்.); expression signifying grinning.

[ஈ + எனல். ஈ = இளித்தற்குறிப்புச் சொல்.]

ஈயோட்டி *ī-y-ōṭṭi,* பெ. (n.). ***ஈயை விலக்குங் கருவி*** (சூடா.11.39); fly-whisk.

[ஈ + ஓட்டி.]

ஈயோட்டு-தல் *ī-y-ōṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.). ***வேலை யொன்றுமின்றியிருத்தல்*** (கொ.வ.); to drive away flies; fig. to be without any employment or work.

[ஈ + ஓட்டு.]

ஈயோப்பி *īyōppi,* பெ. (n.) ***ஈயோட்டி*** (சங்.அக.) பார்க்க; see *yōṭṭi.*

[ஈ + ஓப்பி.]

ஈர்[1]-தல் *īr-,* 2 செ.குன்றாவி. (v.t.) ***அறுத்தல்;*** to saw. ''உயிரீரும் வாளது'' (குறள்.334) - 2 செ.கு.வி. (v.i.) ***இழுக்கப்படுதல்;*** to be drawn out. ''ஈர்ந்து நிலந் தோயு மிரும்பிடித் தடக்கை'' (சிறுபாண்.19).

ம. ஈர்.

[இல் - ஈல் - ஈர்.]

ஈர்[2]-த்தல் *īr-,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. ***இழுத்தல்;*** to draw along, pull; to attract, as a magnet; to carry away, as does a current. ''சிறுதே ரீர்த்து'' (மணிமே.7.55). 2. ***உரித்தல்;*** to excoriate, as a tiger does; to flay. ''புலியி னீருரி யுடுக்குமோ'' (கந்தபு. ததீசியுத்.3). 3. ***எழுதுதல்;*** to draw, paint, write. ''மென்றோட் பெய்கரும் பீர்க்கவும் வல்லன்'' (கலித்.143.32) (செ.அக.).

[இல் → ஈல் → ஈர்.]

ஈர்[3] *īr,* பெ. (n.) 1. ***நுண்மை;*** minuteness. ''ஈரயிர் மருங்கின்'' (சிலப்.6.146). 2. ***பேன்முட்டை;*** nit., Hemitera insecta. ''நித்திலமாலை போற் றவளவீர் பொருந்தி'' (செவ்வந்திப்பு. உறையூ.23). 3. ***ஈர்க்கு;*** rib of a palm leaf. ''இடையீர் போகா விளமுலையாளை'' (தேவா.1061.2). 4. ***இறகு*** (பிங்.); wing.

ம., க. ஈர்; தெ. ஈரு.

[இல் = குத்தல், பொடித்தல், நுண்ணிதாக்கல். இல் - ஈல் -ஈர்.]

ஈர்[4] *īr,* பெ. (n.) 1. ***ஈரம்;*** moisture, wetness. ''ஈர்நறுங் கமழ் கடாஅத்து''. (கலித்.21). 2. ***பசுமை;*** freshness, greenness. ''இருவெதி ரீர்ங்கழை'' (மலைபடு.207). 3. ***நெய்ப்பு;*** smoothness, oiliness. ''ஈர்பெய்யுந் தளிரொடு '' (கலித்.32). 4. ***இனிமை*** (திருக்கோ.28); sweetness, pleasantness, agreeableness. 5. ***கரும்பு***(மலை.) பார்க்க; see *karumbu.* (செல்வி.'73, நவம்.138).

ம. ஈர்; க. ஈர; தெ. .ஈமிரி; கொல. ஈர்; நா. ஈர்; பிரா. தீர்.

[நீர் - ஈர்.]

ஈர்[5] *īr,* இடை (part.). ***முன்னிலைப் பன்மை ஈறு*** (தொல்.சொல்.226); 2nd pers. pl. ending as in வந்தீர்.

ம. ஈர்; க. இரி, ஈரி; குரு. அரி; கோத. இரி, ஈரி; துட. இ, எ; குட. இர; து. அர்; தெ., ரு. ரி; கோண். ஈத்; கூ. எரு, ஆரு; பிரா. ரி; பட. ரி.

[நீர் - ஈர். நீர் - முன்னிலைப் பன்மை இடச் சொல்.]

ஈர்[6] *īr,* பெ. (n.) ***கதுப்பு*** (அக.நி.); cheek.

[எயிறு - ஈறு - ஈர். எயில் போல் சுற்றுக் காப்பானது எயிறு.]

ஈர்க்கம்பி *īr-k-kambi,* பெ. (n.) ***ஈர்க்குக் கம்பி*** பார்க்க: see *īr-k-ku-k-kambi.* narrow stripes in the border of clothe.

[ஈர் + கம்பி.]

ஈர்க்கில் *īrkkil,* பெ. (n.) 1. ***அம்பினிறகு*** (சூடா.); feather of an arrow. 2. ***ஓலை நரம்பு*** (இ.வ.); rib of a palm leaf.

[ஈர்க்கு + இல்.]

ஈர்க்கிறால் *īrkkiṟāl,* பெ. (n.) ***இறால்மீன் வகை;*** lobster-, Astaeus marinus.

[ஈர்க்கு + இறால்.]

ஈர்க்கு[1] *īrkku*, பெ. (n.) 1. ***ஓலை நரம்பு;*** rib of a palm leaf. "ஈர்க்கிடை போகா" (திருவாச.4,34). 2. ***அம்பினிறகு;*** feather of an arrow. "சிலைவா ளிடமீர்க்கு" (கம்பரந்.21).

[ஈர் - ஈர்க்கு.]

ஈர்க்கு[2] *īrkku*, பெ. (n.) ***இறகு;*** feather. மஞ்ஞை யீர்க்கு.

[ஈர் - ஈர்க்கு.]

ஈர்க்குக் கம்பி *īrkku-k-kambi*, பெ. (n.) ***ஆடையின் சன்னக்கரை;*** narrow stripe in the border of a silk or cotton fabric.

[ஈர்க்கு + கம்பி.]

ஈர்க்குக்கருக்குநீர் *īrkku-k-karukku-nīr*, பெ. (n.) ***வேம்பீர்க்கு முதலான இலைகளைப் போட்டு நீர் விட்டுச் சுண்டக் காய்ச்சி யிறக்கும் நீர்; இந்நீர் நோய்களுக்குப் பயன்படும்;*** medicinal decoction prepared from the ribs of the leaves, such as those of margosa etc. (சா.அக.).

[ஈர்க்கு + கருக்கு + நீர்.]

ஈர்க்குச்சம்பா *īrkku-c-cambā*, பெ. (n.) ***சம்பாநெல் வகை*** (பதார்த்த.801); a variety of paddy with very slender stalk, sown between June and September and ripening in six months.

[ஈர்க்கு + சம்பா.]

ஈர்க்கு மல்லிகை *īrkku-malligai*, பெ. (n.) ***முல்லை வகை*** (மூ.அ.); a kind of jasmine with slender petioles - eared-jasmine - jasminum - auriculatum

[ஈர்க்கு + மல்லிகை.]

ஈர்க்குழாம் *īrkkuḻām*, பெ. (n.) ***ஈரினது திரள்;*** swarm of nits. "ஈர்க்குழாத்தோ டிறைகூர்ந்தபே எற்பகையென வொன்றென்கோ" (புறநா.136,4).

[ஈர் + குழாம்.]

ஈர்க்கோல் *īr-k-kōl*, பெ. (n.) ***ஈர்வலி*** (இ.வ.) பார்க்க; see *īr-vali.*

[ஈர் + கோல்.]

ஈர்கொல்லி[1] *īrkolli*, பெ. (n.) ***உப்பிலி*** (மூ.அ.) பார்க்க; see *uppili.* a species of stinking swallow-wort.

[ஈர் + கொல்லி.]

ஈர்கொல்லி[2] *īrkolli*, பெ. (n.) ***ஈர்வலி*** பார்க்க: see *īrvali.*

ம. ஈர்கொல்லி.

[ஈர் + கொல்லி.]

ஈர்கொல்லிக்கொடி *īrkolli-k-kodi*, பெ. (n.) ***ஒரு செடி;*** a kind of climbing plant, pentatropis microphylla. (வின்.)

[ஈர்கொல்லி + கொடி.]

ஈர்கோலி *īr-kōli*, பெ. (n.) ***ஈர்வலி*** (வின்.) பார்க்க; see *īrvali.*

[ஈர் + கொல்லி, கொல்லி - கோலி.]

ஈர்ங்கட்டு *īr-ṅ-kaṭṭu*, பெ. (n.) ***குளிர் காலத்துக்குரிய உடை;*** clothing suitable for cold weather. "இளையரு மீர்ங்கட் டயர" (கார்நாற்.22).

[ஈரம் + கட்டு.]

ஈர்ங்கதிர் *īr-ṅ-kadir*, பெ. (n.) ***ஈர்ங்கதிர்த் திங்கள்*** பார்க்க (வின்.); see *īr-ṅ-kadir-t-tiṅgal* moon, emitting cool rays. (அகநா.130.9) (செ.அக.).

[ஈரம் + கதிர்.]

ஈர்ங்கதிர்த்திங்கள் *īr-ṅ-kadir-t-tiṅgal*, பெ. (n.) ***குளிர்ந்த ஒளிக்கற்றைகளைச் சொரியும் திங்கள்;*** cool-rayed moon (w.).

[ஈரம் + கதிர் + திங்கள்.]

ஈர்ங்கழை *īṛṅgaḻai*, பெ. (n.) ***பசியகோல்;*** moist stem. "இருவெதிரீர்ங்கழை தத்தி" (மலைபடு.207).

[ஈரம் + கழை.]

ஈர்ங்கை *īṛṅgai*, பெ. (n.) ***உண்டு பூசிய கை;*** wet hand, fig. hand that has been washed after taking one's meal and therefore wet. "ஈர்ங்கை விதிரார் கயவர்" (குறள்.1077).

[ஈரம் + கை.]

ஈர்ந்தமிழ் *īrntamiḻ*, பெ. (n.) ***தண்டமிழ்;*** sweet, melodious Tamil.

[ஈரம் + தமிழ்.]

ஈர்ந்தளிர் *īrn-taḻir*, பெ. (n.) ***ஈரிய தளிர்;*** wet, tender leaves. 'மாரி ஈர்ந்தளி ரன்ன மேனி' (அகநா.337.2).

[ஈரம் + தளிர்.]

ஈர்ந்திரி *īr-n-diri*, பெ. (n.) ***நெய் தோய்ந்த திரி;*** wick immersed in oil. "இரும்புசெய் விளக்கி னீர்ந்திரிக் கொளீஇ" (நெடுநல்.42).

[ஈரம் + திரி.]

ஈர்ந்தை[1] *īrndai*, பெ. (n.) 1. ***தோயன் மாறனுடைய கோ நகரம்;*** royal city of the chieftain Toyanmaran. 2. ***ஈரோடு நகரம்;*** The town 'Īrōdu' (Erode) 3. ***ஈர்ந்தையென்னும் ஊர்;*** village Īrndai. "ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்" (புறநா.180.7).

[ஈர் - ஈர்ந்தை ஒ.நோ. உறை - உறைந்தை - உறந்தை.]

ஈர்ந்தை[2] *īrndai*, பெ. (n.) ***பொடுகு;*** dandruff.

[ஈர் - பேன்முட்டை, பொடுகு. ஈர் - ஈர்ந்தை.]

ஈர்ப்பி *īrppi*, பெ. (n.) 1. ***ஈர்*** (வின்.); nits, scurf, dandruff in the hair.

[ஈல் - (ஈன்) - ஈர் - ஈர்ப்பி.]

ஈர்ப்பு *īrppu,* பெ. (n.) 1. ***இழுப்பு;*** pull, tug, attraction. "ஈர்ப்புடைக் கராத் தன்ன வென்னை" (புறநா.104). 2. ***இசிவுநோய்*** (வின்.); lock-jaw, tetanus, spasmodic contraction of the features or limbs. 3. ***இறக்குந் தறுவாயி லுண்டாகும் வலியோடு கூடிய மதி மயக்கம்:*** acute terminal delirium.

[இல் - ஈல் - ஈர் - ஈர்ப்பு.]

ஈர்பட்டு *īrpaṭṭu,* பெ. (n.) ***ஈர்வெட்டு*** (யாழ்.அக.) பார்க்க; see *īrveṭṭu.*

[ஈர்வெட்டு - ஈர்பட்டு.]

ஈர்பாதம் *īrpādam,* பெ. (n.) ***ஒரு வகைப் பாம்பு;*** a kind of snake.

ஈர்ம்படை *īrmpaḍai,* பெ. (n.) ***ஈரியபடை;*** weapon, tool with both the points sharpened. "ஈர்ம்படைக்கொங்கர் ஆபரந்தன்ன" (பதிற்றுப்.77.10) நீர் வேண்டிக் கூவல் முதலியன தோண்டுதற்குரிய குந்தாலி முதலிய படைகளை "ஈர்ம்படை" யென்றார். (பதிற்.77.10,உரை) கூந்தாலி என வழங்குவர் பரிமேலழகர் (குறள்.1251). இருபுறமும் கூர்ந்த ஓராயுதம். (ஐங்.354.1)

ஈர்ம்புறம் *īrmpuṟam,* பெ. (n.) ***நனைந்த இடம்;*** wet location. "துறைமேய் இப்பி ஈர்ம்புறத்து உறைக்கும்" (நற்.87.7).

[ஈரம் + புறம்.]

ஈர்மணி *īrmaṇi,* பெ. (n.) ***சிவப்பு ஒளிவட்டத்தையுடைய அளறு*** (ஏலா.67); hell, irattina-p-pirabai.

[ஈர் + மணி.]

ஈர்மலர் *īrmalar,* பெ. (n.) ***மெல்லிய மலர்;*** delicate flower. "இலையில் பிடவம் ஈர்மலர் அரும்ப" (நற்.242).

ஈர்மை *īrmai,* பெ. (n.) 1. ***நுண்மை;*** minuteness, subtlety. 2. ***வருத்தம்;*** distress, pain, suffering. "என்னை யீர்மை செய்து" (திவ்.திருவாய்.9,6,3). 3. ***குளிர்ச்சி;*** coolness.

[இல் - ஈல் - ஈர் - ஈர்மை.]

ஈர்வடம் *īrvaḍam,* பெ. (n.) ***பனையீர்க்குக் கயிறு*** (யாழ்ப்.); rope made of ribs of the palmyra leaf (w.).

[ஈர் + வடம்.]

ஈர்வலி *īrvali,* பெ. (n.) ***ஈர்வாங்குங் கருவி;*** long narrow wooden comb for clearing the hair of nits.

ம. ஈர்வலி.

[ஈர் + வலி. வலி = இழு.]

ஈர்வலித்தல் *īrvalittal,* தொ.பெ. (vbl.n.) ***ஈர்வாரல்*** (வின்.); combing out nits.

[ஈர் + வலித்தல்.]

ஈர்வளி *īrvaḷi,* பெ. (n.) ***ஓர் மரவகை;*** a kind of tree.

ஈர்வாங்கி *īrvāṅgi,* பெ. (n.) ***ஈர்வலி*** பார்க்க: see *īrvali.* (செ.அக.).

[ஈர் + வாங்கி.]

ஈர்வாணி - *īr-vāṇi,* பெ. (n.) ***ஈர்வடம்*** (யாழ்ப்.) பார்க்க; see *īrvaḍam.*

[ஈர் + வாணி. வலி - வாலி - வாளி - வாணி (இழுக்குங் கயிறு.]

ஈர்வாரி *īrvāri,* பெ. (n.) ***ஈர்வலி*** பார்க்க: see *īrvali.*

[ஈர் + வாரி. வாறு - வாறி - வாரி.]

ஈர்வாள் *īrvāḷ,* பெ. (n.) 1. ***அரம்பம்*** (திவா.); saw. 2. ***அரிவாள்*** (அக.நி.); sickle.

ம. ஈர்வாள்.

[ஈர் + வாள்.]

ஈர்வெட்டு *īr-veṭṭu,* பெ. (n.) ***பனையீர்க்குக் கயிறு*** (யாழ்.அக.); rope made of ribs of palmyra leaf.

[ஈர் + வெட்டு.]

ஈரக்கல் *īra-k-kal,* பெ. (n.) ***குருவிந்தக்கல்*** (வின்.); corundum.

[ஈரம் + கல்.]

ஈரக்கற்பூரம் *īra-k-kaṟpūram,* பெ. (n.) ***பச்சைக் கருப்பூரம்;*** camphor, menthol. (சா.அக.)

[ஈரம் + கருப்பூரம்.]

ஈரக்குழி *īra-k-kuḻi,* பெ. (n.) ***கருப்பை;*** womb. (சா.அக.).

[ஈரம் + குழி. குழி - கழி - கடும்பு. கடும்பு = வயிறு.]

ஈரக்கையாலேதடவு-தல் *īra-k-kaiyālē-taḍavu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***அன்புகாட்டித் தேற்றுதல்;*** to console, to caress lovingly. "நாட்டை ஈரக்கையாலே தடவி கம்சன் காலத்திற்பட்ட நோவுதீரப் பாதுகாத்து" (திவ்.இயற்.திருகுறுந்.1.வியா).

[ஈரம் + கை + ஆல் + தடவு.]

ஈரங்காயம் *īraṅgāyam,* பெ. (n.) ***வெண்காயம்;*** onion - Allium cepa. (சா.அக.).

[ஈரம் + காயம்.]

ஈரங்கார்த்தல் *īraṅgārttal,* தொ.பெ. (vbl.n.). ***கசிவாயிருத்தல்;*** being in a state between dry and wet; holding water in suspension or absorption. (சா.அக.).

[ஈரம் + கார்தல்.]

ஈரங்கை *īraṅgai,* பெ. (n.) ***கொடுங்கை*** (அக.நி.); curved cornice or projection; corbel. ***ஈறங்கை*** பார்க்க: see *īraṅgai.*

[ஈறு + அம் + கை. ஈறு - ஈர்.]

ஈரங்கொல்லி *īraṅ-kolli,* பெ. (n.) ***வண்ணான்.*** (பிங்.) (ஈடு.7,6,10); washerman.

ம. ஈரங்கொல்லி.

[ஈரம் + கொல்லி. ஈரம் கொல்லுதல் - ஈரம் உலர்த்துதல்.]

ஈரங்கொல்லு-தல் *īrańkollu-*, 7 செ.குன்றாவி. (v.t.) ***ஈரமுலர்த்துதல்;*** to expel moisture from; to dehydrate, to allow to dry. "ஈரங்கொன்றவின் .... குஞ்சியை" (சீவக.2422).

[ஈரம் + கொல்லுதல். கொல்லுதல் = இல்லாமல் செய்தல் நீக்குதல்.]

ஈரங்கோலி *īrańgōli*, பெ. (n.) ***ஈரங்கொல்லி*** பார்க்க: see *īrańkolli*.

[ஈரம் + கொல்லி. கொல்லி - கோலி.]

ஈரங்கோலியர் *īrańgōliyar*, பெ. (n.) ***ஈரங்கொல்லி*** பார்க்க: see *īrańkolli*. (த.சொ.அக.).

[ஈரம் + (கொல்லி) கோலி + அர்.]

ஈரஞ் சுவறுதல் *īrancuvaṟudal*, பெ. (n.) ***ஈரங் காய்தல்;*** drying (சா.அக.).

[ஈரம் + சுவறுதல்.]

ஈரடி[1] *īraḍi*, பெ. (n.) 1. ***இரண்டடி;*** two lines. "ஈரடிவெண்பா" (யா.கா.செய்யு.3) 2. ***ஐயம்*** (வின்); uncertainity. 3. ***கவர்*** (வின்); fork, that which is bifurcate. (செ.அக.).

ம. ஈரடி.

[இரண்டு → ஈர் + அடி.]

ஈரடி[2] *īraḍi*, பெ. (n.) ***ஈராடி***[1] (இ.வ.) பார்க்க; see *īrāḍi*.

[ஈராடி - ஈரடி.]

ஈரடிப்பயன் *īraḍi-p-payaṉ*, பெ. (n.) 1. ***கவர் பொருள்*** (வின்.); ambiguity in conversation, equivocation. 2. ***ஏமாற்றுவேலை;*** double dealing, acting with duplicity so as to suit both parties. 3. ***ஐயம்*** (வின்.); uncertainty, dubiousness. 4. ***மாறுபாடு*** (யாழ்ப்.); diverseness, disagreement, discrepancy, as of a report or an account differently related. (செ.அக.).

[இரண்டு - ஈர் + அடி + பயன்.]

ஈரடிமடக்கு *īraḍi-maḍakku*, பெ. (n.) ***அடிகளு ளிரண் டடி மடங்கி வருவது;*** repetition of a word/phrase in two successive lines in a stanza each time in a different sense.

[இரண்டு → இரு → ஈர் + அடி + மடக்கு.]

ஈரடிவருக்கம் *īraḍi-varukkam*, பெ. (n.) 1. ***செய்யுள் வகை;*** name given to a verse of two lines in which the first and middle letters of each are the same. (செ.அக.).

[இரண்டு → இரு → ஈர் + அடி + வருக்கம்.]

ஈரடிவெண்பா *īraḍi-veṇbā*, பெ. (n.) ***குறள் வெண்பா*** பார்க்க (யா.கா.செய்.3); see *kuṟaḷ veṇbā*. veṇbā of two lines. (செ.அக.).

[இரண்டு → இரு → ஈர் + அடி + வெண்பா.]

ஈரடுக்கொலி *īraḍukkoli*, பெ. (n.) ***இரட்டையாக அடுக்கி வரும் ஒலிக்குறிப்புச் சொல்;*** reiterated words imitative of sound, as நெறுநெறெனல்.

[இரண்டு - இரு - ஈர் + அடுக்கு + ஒலி.]

ஈரண்டஊதை *īrandaūdai*, பெ. (n.) 1. ***இரண்டு விரைப்பக்கமும் நீர் கோத்துக்கொண்டு உண்டாகும் ஓதம்;*** double hydrocele. 2. ***இரண்டு பக்கமும் குடலிறக்கம்;*** scrotal hernia. (சா.அக.).

[இரண்டு - இரு - ஈர் + அண்டம் + ஊதை.]

ஈரண்டவாதம் *īraṇḍavādam*, பெ. (n.) ***ஈரண்டஊதை*** பார்க்க; see *īraṇḍaūdai*.

[இரண்டு - இரு - ஈர் + அண்டம் + வாதம்.]

ஈரணம் *īraṇam*, பெ. (n.) 1. ***கள்ளி;*** plant of the Euphorbia genus. 2. ***வயிறு வலித்து மலங் கழித்தல்;*** painful and laborious evacuation of the bowels. 3. ***களர் நிலம், வெறுநிலம்;*** dry land.

[ஈரம் + அணம்.]

ஈரணி *īraṇi*, பெ. (n.) ***புனலாடும்போது மகளிர் அணிதற்குரியவை;*** garments put on by women while bathing. "விரும்பிய ஈரணி மெய்யீரந் தீர" (பரிபா.7,61).

[ஈரம் + அணி.]

ஈரணை *īraṇai*, பெ. (n.) ***இரண்டு இணை மாடு*** (யாழ்ப்.); two pairs of oxen. ஈரணை ஏர் கொண்டு உழுது (உ.வ.) (செ.அக.).

[இரண்டு - இரு - ஈர் + அணை.]

ஈரத்தட்டை *īrattaṭṭai*, பெ. (n.) ***ஈரக்குழல் தட்டை;*** a kind of reed. (சா.அக.).

[ஈரம் + தட்டை.]

ஈரத்திரையம் *īrattiraiyam*, பெ. (n.) ***குங்கிலியம்;*** resinous gum.

[ஈரம் + திரையம்.]

ஈரந்துவட்டு-தல் *īrantuvaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) ***நீராடியபின் ஈரத்தைத் துடைத்தல்;*** to wipe the head and body after bathing.

[ஈரம் + துவட்டு.]

ஈரநா *īranā*, பெ. (n.) ***புறங்கூறும் நாக்கு;*** slanderous tongue. ஈரநாவுக் கெலும்பில்லை' (வின்.).

[ஈரம் + நா.]

ஈரப்பச்சை *īrappaccai,* பெ. (n.) ***ஈரப்பசை*** பார்க்க: see *īrappašai.*

[ஈரம் + பச்சை. பச்சை = செழிப்புநிலம்.]

ஈரப்பசுமை *īra-p-pašumai,* பெ. (n.) ***ஈரப்பற்று;*** moisture. (சா.அக.).

[ஈரம் + பசுமை.]

ஈரப்பசை *īra-p-pašai,* பெ. (n.) 1. ***ஈரக்கசிவு;*** moisture, as in hands; wetness as in clothes. 2. ***இரக்கம்;***sympathy, mercy, kindness, as the moisture in one's heart.'அவன் மனத்தில் ஈரப்பசையற்றவன்' (உ.வ.) (செ.அக.).

[ஈரம் + பசை. பச்சை - பசை.]

ஈரப்பசையுள்ளவன் *īra-p-pašai-y-uḷḷavan,* பெ. (n.) 1. ***இரக்கமுள்ளவன்;*** benevolent man. 2. ***செல்வமுடையவன்;*** prosperous man. (வின்.).

[ஈரம் + பசை + உள்ளவன்.]

ஈரப்பலா *īra-p-palā,* பெ. (n.) 1. ***ஆசினி*** (திவா.); bread-fruit tree, the wood of which is used for musical instruments, the Āšini. 2. ***மரவகை;*** monkey Jack.

மறுவ. ஆசினிப் பலா.

[ஈரம் + பலா. கொட்டையற்றதாகவும், மணமற்றதாகவும் உள்ள சீமைப்பலா. bread fruit tree cultivated in Ceylon and west coast resembling common jack fruit perfectly scentless and seedless. It is gathered before getting ripe, sliced and baked on cinders and eaten like bread (சா.அக.).]



ஈரப்பலா

ஈரப்பலாதிதம் *īra-p-palādidam,* பெ. (n.) ***குதிரைவாலி;*** a kind of grass.

[ஈரம் + பலாதிதம்.]

ஈரப்பற்று *īra-p-paṟṟu,* பெ. (n.) 1. ***ஈரக்கசிவு*** (வின்.); moisture, dampness, fluid exuding or diffused. 2. ***இரக்கம்;*** sympathy, as the moisture in one's heart. 3. ***செல்வம்*** (வின்.); health, prosperity. 4. ***நன்றி;*** benevolence (w.).

[ஈரம் + பற்று.]

ஈரப்பாடு *īra-p-pāḍu,* பெ. (n.) 1. ***ஈரமாயிருக்கை*** (இ.வ.); condition of being moist. opp. to ulaṟttarpāḍu. 2. ***மனநெகிழ்ச்சி;*** tenderness of heart. "ஈரப்பாட்டை விளைத்து" (ஈடு.9,6,4) (செ.அக.).

[ஈரம் + பாடு. படு - பாடு.]

ஈரம் *īram,* பெ. (n.) 1. ***நீர்ப்பற்று*** (பாரத. திரௌபதி.97); wetness, moisture, humidity, dampness. 2. ***பசுமை;*** freshness, greenness. 3. ***குளிர்ச்சி*** (சூடா.); coolness, agreeableness, pleasantness. 4. ***நயனுடைமை;*** love, affection, attachment. "எதிர்பெய்து மறுத்த வீரத்து மருங்கினும்" (தொல்.பொருள்.147). 5. ***அருள், பரிவு;*** grace, mercy, favour. "நாடனீரத்துள்" (கலித்.41). 6. ***அறிவு*** (அக.நி.); knowledge, wisdom. 7. ***குங்குமம்*** (மலை.); arnotto. 8. ***கரும்பு*** (மலை.); sugar-cane. 9. ***அழகு;*** beauty. 10. ***வெள்ளரி;*** cucumber. (செ.அக.).

ம. ஈரம்; க., பட. ஈர; தெ. ஈமிரி; கொலா. ஈர்; நா. ஈர்; பிரா. நீர்.

[நீரம் - ஈரம் (செல்வி.'77. நவம்.பக்.138).]

ஈரம் *īram,* பெ. (n.) 1. ***பகுதி;*** part. 2. ***குங்குமப்பூ*** (அக.நி.); saffron powder.

[நிறம் - நீரம் - ஈரம்.]

ஈரம்பனை *īram panai,* பெ. (n.) ***கூந்தற்பனை*** jaggery-palm (L.); ***ஈறற்பனை*** பார்க்க; see *īraṟ-panai.*

[ஈறல் = விரிதல். ஈரம் + பனை.]

ஈரம்போக்கல் *īram-pōkkal,* தொ.பெ. (vbl.n.). ***உலர்த்தல்;*** to dry thoroughly - desiccation.

[ஈரம் + போக்கல்.]

ஈரம்போக்கி *īram-pōkki,* பெ. (n.) 1. ***உலர்த்து மருந்து;*** drugs having drying properties - exsiccant. 2. ***மின்னாற்றல்;*** electric current.

[ஈரம் + போக்கி.]

ஈரமாப்பூ *īramāppū,* பெ. (n.) ***குங்குமப் பூ;*** English saffron; flower of crocus sativus, arnotto.

[ஈரம் + மா + பூ.]

ஈரமாலை *īramālai,* பெ. (n.) ***குளிர்ந்த மாலை;*** fresh garland, wreath. "ஈரமாலை இயலணியார்" (பரிபா.17.36).

ஈரமானி *īramāni,* பெ. (n.) ***காற்றின் ஈரத்தைக் காட்டுங் கருவி;*** instrument for measuring the moisture of the atmosphere, hydro-meter.

[ஈரம் + மானி.]

ஈரமுலர்த்தல் *īramularttal,* தொ.பெ. (vbl.n.). ***ஈரம் சிறிதேனுமில்லாதபடி உலர்த்தல்;*** drying thoroughly - exsiccation. (சா.அக.).

[ஈரம் + உலர்த்தல்.]

ஈரமுறிஞ்சல் *īramuriñjal,* தொ.பெ. (vbl.n.) ***ஈரமுறிதல்*** பார்க்க: see *īra-muridal.* (சா.அக.).

[ஈரம் + உறிஞ்சல்.]

ஈரமுறிஞ்சி *īramuriñji,* பெ. (n.) ***ஈரத்தைக் கவர்ந்து இளகித் தண்ணீராகுந் தன்மையுள்ளது;*** that which has a tendency to become a liquid by absorbing moisture from the atmosphere. (சா.அக.).

[ஈரம் + உறிஞ்சி.]

ஈரமுறிதல் *īramuridal,* தொ.பெ. (vbl.n.). ***காற்றினிலுள்ள ஈரத்தைக் கவர்ந்து இளகித் தண்ணீராகுந் தன்மை;*** characteristic of becoming liquified by absorbing water from the air - deliquescence. (சா.அக.).

[ஈரம் + முறிதல்.]

ஈரரசு *īrarašu,* பெ. (n.) ***இருவர் ஆளுகை;*** government by two, dyarchy. "ஈரரசு தவிர்த்தாலிறே சேசித்துவம் பூர்ணமாவது" (திவ். அமலனாதி.1.வியா.).

[இரண்டு - இரு - ஈர் + அரசு.]

ஈரரத்தை *īrarattai,* பெ. (n.) ***இரண்டு வகை யரத்தை - சிற்றரத்தை, பேரரத்தை;*** two kinds of galangal viz. the smaller and the bigger.

[இரண்டு - இரு - ஈர் + அரத்தை.]

ஈரல்[1] *īral,* பெ. (n.) 1. ***ஈருள்*** (பிங்.); internal organ in the body as the liver or spleen. 2. ***குடல்;*** intestines. 3. ***விரிதல்;*** spliting.

ம. ஈரல்; **க.** கீரி; **கோத.** இருவ்; **துட.** இருப்.

[ஈரல் = பிளத்தல், இரண்டாதல், இரண்டாகப் பிரிந்திருக்கும் உறுப்பு.]

ஈரல்[2] *īral,* பெ. (n.) ***வருத்தல்;*** harassing, tormenting. "பாதகவர்க்கத்துக்கு ஈரலாம்படி" (ஈடு.9,9,ப்ர.).

[ஈரல் = பிளத்தல் போன்று நெஞ்சத்தை வருத்தும் துன்பம்.]

ஈரல்கட்டி *īralkatti,* பெ. (n.) ***ஈரற்கட்டி*** பார்க்க: see *īrarkatti.* (சா.அக.).

[ஈரல் + கட்டி.]

ஈரல்கருகல் *īralkarugal,* பெ. (n.) ***அளவிடற்கரிய அச்சத்தாலேற்படும் கல்லீரல் நடுக்கம்;*** fear, supposed to affect the liver, showing extreme shiver.

[ஈரல் + கருகல்.]

ஈரல்கருகு-தல் *īral-karugu-,* 7 செ.கு.வி. (v.i.) ***துன்பம் மிகுதல்;*** to be tormented with such intense anguish as to scorch the liver. 'ஈரல் கருகிப் போயிற்று' (வின்.) (சா.அக.).

[ஈரல் + கருகுதல்.]

ஈரல்கழலை *īral-kalalai,* பெ. (n.) ***ஈரற்கழலை*** பார்க்க: see *īrar-kalalai.* (சா.அக.).

ஈரல்குடைச்சல் *īral-kudaiccal,* பெ. (n.). ***ஈரற் குடைச்சல்*** பார்க்க: see *īrar kudaiccal.* (சா.அக.).

[ஈரல் + குடைச்சல்.]

ஈரல்குழி *īral-kuli,* பெ. (n.) ***ஈரற்குழி*** பார்க்க: see *īrarkuli.*

[ஈரல் + குழி.]

ஈரல்தாங்கி *īraltāngi,* பெ. (n.) ***மார்புக்குள் வயிற்றிற்கும் நெஞ்சிற்கும் நடுவாகவுள்ளவோர் தசைப்பற்றுள்ள சவ்வு;*** muscular and membraneous partition that separates the abdomen from the thorax-diaphragm. (சா.அக.).

[ஈரல் + தாங்கி.]

ஈரல் நழுகல் *īral nalugal,* பெ. (n.) ***ஈரல் சரிதல்;*** dislocation of the liver-hepatoptosis. (சா.அக.).

[ஈரல் + நழுவல் - நழுகல்.]

ஈரல் நிறம் *īral niram* பெ. (n.) ***கருஞ்சிவப்பு நிறம்;*** dark red, purple, the colour of the liver.

[ஈரல் + நிறம். நிழல் - நிறன் - நிறம்.]

ஈரல் படைச்சால் *īral padaiccāl,* பெ. (n.) ***ஈரலின் நாளம்;*** hepatic vein - vena portae. (சா.அக.).

[ஈரல் + படைச்சால். படைச்சால் - உழுபடைச்சால் போன்ற நாளம்.]

ஈரல் பதறல் *īral padaral,* பெ. (n.) ***அச்சப்படுதல்;*** frightened. 'அவன் புலியைக் கண்டு ஈரல் பதறிப்போய் விட்டான்.' (இ.வ.).

[ஈரல் + பதறு.]

ஈரல் பனை *īral panai,* பெ. (n.) ***உலட்டிப்பனை; ஆண்டப்பனை, ஆணைப்பனை;*** bastard sagopalm, jaggery-palm.

ம. ஈறம்பன.

[ஈரல் + பனை. ஈரல் = விரிதல்.]

ஈரல் வீக்கம் *īral vīkkam,* பெ. (n.) ***கல்லீரலின் வீக்கம்;*** enlargement of the liver-hepatomegalia. (சா.அக.).

[ஈரல் + வீக்கம். வீங்கு - வீக்கம்.]

ஈரலித்த சோறு *īralittašōru,* பெ. (n.) ***தண்ணீர் அல்லது ஈரங் கசியுஞ் சோறு;*** cooked rice which has absorbed moisture. (சா.அக.).

மறுவ. தங்கல்சோறு, பழைய சோறு, பழசு, பழஞ்சோறு.

[ஈரம் → ஈரலித்தல் + சோறு.]

ஈரலி-த்தல் *īrali-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ***ஈரமாதல்;*** to become moist, damp (j). 2. ***பதனழிந்து நீர்கசிதல்;*** to perish and become moist. 'பலாப்பழம் அறக்கனிந்து ஈரலித்தது' (உ.வ.).

[ஈரம் - ஈரலி. ஈரலித்தல். ஈரலித்ததை 'ஈத்துப் போய்விட்டது நீத்துப்போய்விட்டது' என்று கொச்சையாக வழங்குவர்.]

ஈரலிரத்தம் *īralirattam,* பெ. (n.) 1. ***நுரை யீரலினின்று வரும் அரத்தவொழுக்கு;*** discharge of blood, 2. ***ஈரலில் நிற்கு மிரத்தம்;*** blood contained in the lungs. 3. ***கல்லீரலினின் றுண்டாகும் அரத்தப்போக்கு;*** hemorrhage of the liver - hepatorrhagia. (சா.அக.).

[ஈரல் + இரத்தம்.]

ஈரலுலர்த்தி *īralulartti,* பெ. (n.) ***மாட்டுநோய் வகை*** (மாட்டுவை.சி.41); disease of the spleen, in cattle. (செ.அக.).

[ஈரல் + உலர்த்தி.]

ஈரலுறுத் தானம் *īraluruttāṉam,* பெ. (n.) ***ஈரற்குழி*** பார்க்க: see *īraṟkuḻi.*

[ஈரல் + உறு + தானம்.]

ஈரலெரிச்சல் *īralericcal,* பெ. (n.) 1. ***ஒருநோய்;*** inflammation of the liver. 2. ***மாட்டுநோய்;*** inflammation of the liver in cattle. (சா.அக.).

[ஈரல் + எரிச்சல்.]

ஈரவணி *īravaṇi,* பெ. (n.) ***ஈரணி*** பார்க்க (பரிபா.11,86, உரை); see *īraṇi.*

[ஈரம் + அணி - ஈரவணி.]

ஈரவன் *īravaṉ,* பெ. (n.) 1. ***குளிர் நிலா;*** moon, producing coolness (w.). 2. ***ஈரம்*** (ஆ.அக.); moisture. 3. ***ஈர்ங்கதிர்;*** coolrays. (ஆ.அக.).

[ஈரம் - ஈரவன்.]

ஈரவாலி *īravāli,* பெ. (n.) ***குதிரைவாலி யரிசி*** (சா.அக.); a kind of millet.

[ஈரம் + ஆலி. ஈரவாலி.]

ஈரவிதைப்பு *īravidaippu,* பெ. (n.) 1. ***ஈர நிலத்தில் விதைக்கை;*** sowing on land when wet. 2. ***ஈரநிலத் துண்டான பயிர்;*** crop produced from seed sown in moist land.

[ஈரம் + விதைப்பு. நீர் - நீரம் - ஈரம். ஈரம் பார்க்க; see īram.]

ஈரவுள்ளி *īravuḷḷi,* பெ. (n.) ***ஈருள்ளி*** பார்க்க (மலை); see *iruḷḷi.*

ம. ஈரவுள்ளி; க. ஈருள்ளி.

[ஈரம் + உள்ளி. உள்ளில் - உள்ளி. உள்ளில் = உள்ளே ஒன்றும் இல்லாதது.]

ஈரவூணிகம் *īravūṇigam,* பெ. (n.) ***குத்து வல்லாரை;*** a species of Indian pennywort grown on mountains or on the top of hills.

[ஈரம் + ஊணிகம்.]

ஈரவெங்காயம் *īravengāyam,* பெ. (n.) ***வெங்காயம்;*** onion.

பட. ஈர பெங்குவெ.

[ஈரம் + வெம் + காயம். வெள்ளை வெங்காயம் எனப்படும் வெள்ளைப் பூண்டினின்றும் வேறுபடுத்துவதற்காக ஈர வெங் காயம் என்னும் சொல்லாட்சி தோன்றியது.]

ஈர வெண்காயம் *īravengāyam,* பெ. (n.) ***ஈரவெங் காயம்*** பார்க்க: see *īravengāyam.*

[ஈரம் + வெம் + காயம். வெம் + காயம் - வெங்காயம் -வெண்காயம் என்பது பிழையான வழக்கு.]

ஈரற்கட்டி *īraṟkaṭṭi,* பெ. (n.) 1. ***கல்லீ ரலிலுண்டாகுங் கட்டி;*** abscess of the liver. (சா.அக.). 2. ***மண்ணீரலின் வீக்கம்;*** enlargement of spleen.

[ஈரல் + கட்டி.]

ஈரற்கதிப்பு *īraṟkadippu,* பெ. (n.) ***நோயினால் கல்லீரல் பருத்தல்;*** enlargement of the liver.

[ஈரல் + கதிப்பு.]

ஈரற்கருகு-தல் *īraṟkarugu-,* 5 செ.கு.வி. (v.i.) ***மிகவும் அச்சப்படுதல்*** (யாழ்.அக.); to be very much afraid.

ஈரற்கல் *īraṟkal,* பெ. (n.) ***மந்தாரச்சிலை எனப்படும் கல்*** (யாழ்.அக.); medicinal stone.

[ஈரல் + கல்.]

ஈரற்கழலை *īraṟ kaḻalai,* பெ. (n.) ***கல்லீ ரலிலுண்டா குங் கழலைக் கட்டி;*** tumour of the liver-hepatoma. (சா.அக.).

[ஈரல் + கழலை.]

ஈரற்குலை *īraṟkulai,* பெ. (n.) ***ஈரலின் கொத்து;*** lobes of the liver.

[ஈரல் + குலை.]

ஈரற்குலை நடுக்கம் *īraṟkulainaḍukkam,* பெ. (n.) ***அச்சத்தினால் ஈரற்குலைக்கேற்படும் அதிர்ச்சி;*** shock due to visceral tremor through fear. (சா.அக.).

[ஈரல் + குலை + நடுக்கம்.]

ஈரற்குலை பதை-த்தல் *īraṟkulaipadai-,* 4 செ.கு.வி. (v.i.) ***மிகுவேதனைப்படுதல்;*** to become deeply grieved.

[ஈரல் + குலை + பதை.]

ஈரற்குழி *īraṟkuḻi,* பெ. (n.) ***ஈரலுக்கு நேராக வயிற் றுக்கு மேலிருக்கும் குழி;*** upper middle portion of the abdomen, over or in front of the stomach - epigastric region. It is also called the pit of the stomach. (சா.அக.).

[ஈரல் + குழி.]

ஈரற்கேடு *īraṟkēḍu,* பெ. (n.) ***கல்லீ ரலுக் கேற்படும் அழிவு;*** atrophy and degeneration of the liver - cirrhosis. (சா.அக.).

[ஈரல் + கேடு.]

ஈரற்கொத்து *īraṟkottu,* பெ. (n.) ***ஈரற்குலை*** பார்க்க: see *īraṟkulai.*

[ஈரல் + கொத்து.]

ஈரற்கோளாறு *īraṟkōḷāṟu*, பெ. (n.) *ஈரற்பிசகு;* பார்க்க: see *iraṟ piśagu.*

[ஈரல் + கோளாறு.]

ஈரற்பிச்சு *īraṟ piccu*, பெ. (n.) *ஈரற்பித்து* பார்க்க: see *īraṟ pittu.* (சா.அக.).

[ஈரல் + பித்து → பிச்சு.]

ஈரற் பிசகு[1] *īraṟ piśagu*, பெ. (n.) *கல்லீ ரலிலுண்டா குங் கோளாறு;* hepatic disorder. 2. *பொதுவாக ஈரலி லுண்டாகுங் குற்றம்;* disorder of the liver or the lungs or the spleen in general. (சா.அக.).

[ஈரல் + பிசகு.]

ஈரற்பித்து *īraṟ pittu*, பெ. (n.) 1. *கல்லீ ரலில்உண்டா கும் பித்தம்;* bile secreted in the liver. 2. *பித்தநீர் தங்கும் பை;* small membraneous sac which receives the bile from the liver gall-bladder. (சா.அக.).

[ஈரல் + பித்து.]

ஈரறிவு *īraṟivu*, பெ. (n.) 1. *இம்மை மறுமை;* this birth and the supposed next. 2. *உற்றறிவு, சுவையறிவு;* senses of touch & taste. ''நந்தும் முரளும் ஈரறிவினவே'' (தொல்.பொருள்.மரபி.29).

[இரு - ஈர் + அறிவு.]

ஈரா *īrā*, பெ. (n.) *வெட்டுப்படாத;* not cut. ''இருங்கோள் ஈராப்பூட்கை'' (புறநா.381.25).

[ஈர் + ஆ. (எ.ம.இ.நி.).]

ஈராங்கொல்லி *īrāṅkolli*, பெ. (n.) *சலவைத் தொழி லாளி;* washerman. *ஈரங்கொல்லி* பார்க்க see *īraṅkolli.*

ம. ஈராங்கொல்லி.

[ஈரம் + கொல்லி - ஈரங்கொல்லி - ஈராங்கொல்லி (கொ.வ.).]

ஈரறம் *īraṟam*, பெ. (n.) *இல்லறம் துறவறம் ஆகிய இருவகை அறம்;* family life and ascetic life.

[இரு → ஈர் + அறம்.]

ஈரறிவுயிர் *īraṟivuyir*, பெ. (n.) 1. *ஊற்றறிவும் சுவையறிவுமுடைய சங்கு நத்தை முதலியன* (நன். 446); beings that have only two senses, viz., touch and taste like shell-fish, snail etc.

[இரு - ஈர் + அறிவு + உயிர்.]

ஈராசிடை வெண்பா *īrāśiḍai venbā*, பெ. (n.) *ய், ர், ல், ழ் ஒற்று நான்கும் ஆசாய் வரும் வெண்பா;* to insert ய், ர், ல், or ழ் in the rhyming foot in two lines of a stanza.

[இரு → ஈர் + ஆசு + இடை + வெண்பா.]

ஈராட்டி[1] *īrāṭṭi*, பெ. (n.) 1. *இரண்டு மனைவிகள்;* two wives. 2. *இரண்டு பெண்டாட்டிக்காரன்;* man having two wives. (சா.அக.).

[இரு → ஈர் + ஆட்டி.]

ஈராட்டி[2] *īrāṭṭi*, பெ. (n.) 1. *காற்று மாறியடிக்கை;* changeable state of the wind and weather, previous to the change of monsoon, indicative of rain. 2. *காற்றின் அமைதி;* calm, lull, failing of the wind between monsoons. 3. *நிலையின்மை;* fickleness, hesitation, fluctuation of mind. 'மனம் ஈராட்டிப்படுகின்றது'. (இ.வ.).

[இரு - ஈர் + ஆட்டி. ஆடு - ஆட்டு - ஆட்டி. இருபாலும் இழுக்கப்படல் ஆட்டப்படுதல்.]

ஈராட்டை *īrāṭṭai*, பெ. (n.) *இரண்டு ஆண்டுகள்;* two years.

[இரு - ஈர் + ஆட்டை. ஆண்டு - ஆண்டை - ஆட்டை.]

ஈராட்டைப்பூடு *īrāṭṭaippūḍu*, பெ. (n.) *இரண்டு ஆண்டு நிலைத்திருக்கும் பூடு அல்லது இரண்டு ஆண்டுக் கொருமுறை பூத்துக் காய்க்கும் பூடு;* plant which lives only for two years or which produces its flower and fruit once in two years. (சா.அக.).

[இரு + ஆட்டை + பூடு. ஆண்டு - ஆண்டை - ஆட்டை. பூண்டு - பூடு.]

ஈராடி *īrāḍi*, பெ. (n.) 1. *ஈரம்* (யாழ்.அக.); wetness, dampness. 2. *மழைக் குணம்;* cloudiness.

[ஈரம் + ஆடு - ஆடி. ஈரம் ஆடியது என்பது ஈரம் பட்டது எனப் பொருள்படும்.]

ஈராண்டு மூலி *īrāṇḍu mūli*, பெ. (n.) *சித்தர்கள் பசியெடுக்காதிருக்கவேண்டி இரண்டு ஆண்டிற் கொருமுறை யுட்கொள்வதாகக் கருதப்பட்ட அரிய தோர் மூலிகை;* unknown drug said to be taken by Siddhars once in two years with a view to keeping off hunger. (சா.அக.).

[இரண்டு - இரு - ஈர் + ஆண்டு + மூலி.]

ஈரான் *īrāṉ*, பெ. (n.) *பாரசீகம்;* Iran formerly known as Persia, (muham).

ஈரி[1] *īri*, பெ. (n.) 1. *இளம் மகளிர் கழற்சிக் காய்களில் ஒன்றை எற்றியும் பலவற்றை அள்ளியும் ஆடும் விளையாட்டு;* play of girls, usu. with molucca beans, in which first two and then more beans are taken up together from the ground while one bean is tossed in the air. 2. *ஐந்து அல்லது ஏழு கூழாங்கற்களைக் கொண்டு சிறுமியர் ஆடும் கொக்கான் விளை யாட்டு;* a game played by girls with five or seven pebbles.

[இரண்டு - இரு - ஈர் → ஈரி.]

ஈரி[2] *īri*, பெ. (n.) 1. *கந்தை;* rags, torn clothes. 2. *பலாக்காய்த் தும்பு;* fibres between the pulps in a jack fruit.

[ஈர்தல் = பிளத்தல். ஈர் - ஈரி = பிளவுண்டது. பிய்ந்தது, சிதர்ந்த சிதார்.]

ஈரி³-த்தல் *īri-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ***ஈரமாதல்;*** to become wet, moist, damp, cool. "சோறு ஈரித்துவிட்டது." 2. ***குளிர்தல்;*** to be cool, as a breeze; to be benumbed, or stiffened, by coldness or disease. "ஈரித்த தென்றல்" (குமர.பிர.மதுரைக்.31).

[ஈரம் → ஈரி.]

ஈரி⁴ *īri,* பெ. (n.) ***மனக்கனிவுள்ளவன்;*** affectionate person. "என் கண்ணனுக்கென்றீரியா யிருப்பாள்" (திவ்.திருவாய்.6,7,9).

[ஈரம் → ஈரி.]

ஈரிச்சல் *īriccal* பெ. (n.) ***ஈரி-த்தல்*** பார்க்க: see *īri.* (சா.அக.).

[ஈரித்தல் - ஈரிச்சல்.]

ஈரிடம் *īriḍam,* பெ. (n.) ***இரண்டிடம்*** (தொல்.சொல். 226); two places. "முன்னிலை தன்மை ஆயீரிடத்தொடும்" (தொல்.சொல்.வினை.29).

[இரண்டு → இரு → ஈர் + இடம்.]

ஈரிணம் *īriṇam,* பெ. (n.) ***உழமண் நிலம்;*** soils of fuller's earth.

[ஒருகா. ஈரம் + நிலம் = ஈரநிலம் → ஈரிலம் → ஈரிணம்.]

ஈரித்த சோறு *īritta-sōṟu,* பெ. (n.) ***சில்லிட்டு ஈரந்தங்கிய சோறு;*** watery boiled rice which has absorbed moisture through coldness. ***ஈரலித்த சோறு*** (சா.அக.) பார்க்க; see *īralitta sōṟu.*

[ஈரம் → ஈரித்தல் → ஈரித்த + சோறு.]

ஈரித்துப் போ-தல் *īrittu-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) 1. ***குளிர் அல்லது நோயினால் தொடுவுணர் வற்றுப் போதல்;*** to be benumbed or deadened by coldness or disease. 2. ***குளிர்ந்து போதல்;*** to get cold or moist. (சா.அக.).

[ஈரம் → ஈரித்தல் → ஈரித்து + போதல்.]

ஈரிப்பு *īrippu,* பெ. (n.) 1. ***ஈரம்;*** dampness, moisture. 2. ***நட்பு*** (ஈடு.2,4,3); friendship.

[ஈரம் - ஈரி - ஈரிப்பு.]

ஈரிம்பு *īrimbu,* பெ. (n.) 1. ***ஈரம்;*** moisture, dampness. 2. ***குளிர்மை;*** coldness.

[ஈரம் - ஈரிப்பு - ஈரிம்பு.]

ஈரிய *īriya,* கு.பெ.எ. (adj.) 1. ***ஈரமுள்ள;*** damp, wet. 2. ***குளிர்ந்த*** (ஆ.அக.); cold. "ஈரிய நிறம்பூ வாளி" (திருவிளை.மாயப்.21). 3. ***அன்புடைய;*** kindly, loving, affectionate. "ஈரிய நெஞ்சம்"

[ஈரம் → ஈரி → ஈரிய.]

ஈரியம் *īriyam,* பெ. (n.) ***உடம்பின் நான்குவகை நிலைகள். அவையாவன: நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல்;*** four positions of the body viz., going, standing upright, sitting and lying down.

[ஈரி → ஈரியம். ஈரித்தல் = பிளத்தல், இரண்டாக அல்லது நான்காகப் பிளவுபடுதல், நான்கு வகை.]

ஈரிலை *īrilai,* பெ. (n.) ***ஞாயிறு*** (அக.நி.); sun. (செ.அக.).

[ஒருகா. ஏர் + எல் - ஏரெல் - ஈரில் - ஈரிலை. ஏரெல் -எழுஞாயிறு.]

ஈரிலைத் தாமரை *īrilai-t-tāmarai,* பெ. (n.) ***ஒருவகைப் பூடு;*** a kind of flowering (lotus) plant with leaves divided in to two parts. It is opposed to ஓரிலைத் தாமரை.

[இரண்டு → இரு → ஈர் + இலை + தாமரை.]

ஈரிலைப்பயிர் *īrilai-p-payir,* பெ. (n.) ***இரண்டிலையுள்ள இளம்பயிர்;*** young shoot when two blades appear. (w.).

[இரண்டு → இரு → ஈர் + இலை + பயிர்.]

ஈரிழை *īriḻai,* பெ. (n.) ***ஆடையினிரட்டை நூல்;*** double thread used in weaving, as in muslin.'ஈரிழைத் துண்டு.'

ம. ஈரிழ.

[இரண்டு → இரு → ஈர் + இழை.]

ஈரிறை *īriṟai,* பெ. (n.) 1. ***ஈரரசு;*** dyarchy. 2. ***இரண்டு முறை பெறும் வரி;*** double duty or similar impost. "நானும் பிறந்து அவர்களும் பிறக்க வேணுமோ? ஈரிறையுண்டோ?" (ஈடு.1,3,ப்ர.).

[இரண்டு → இரு → ஈர் + இறை.]

ஈரீற்றா *īrīṟṟā* பெ. (n.) ***இரண்டாம் ஈற்று மாடு*** (ஆ.அக.); the cow which yeaned for the second time.

[இரண்டு → இரு → ஈர் → ஈற்று + ஆ.]

ஈருடல் *īruḍal,* பெ. (n.) ***இருதன்மைத்தான வுடல்;*** body, which has two features. (ஆ.அக.) ஈருடல் ஒருயிர் (உ.வ.).

[இரண்டு → இரு → ஈர் + உடல்.]

ஈரு-தல் *īru-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ***ஈர்தல்;*** to fascinate. (ஆ.அக.). 2. ***வருத்துதல்;*** to afflict. "காமநோய் ஈருகின்றது" (கந்தபு.மாயைப்.72).

[ஈர் → ஈரு. ஈருதல்.]

ஈருயிர் *īruyir,* பெ. (n.) ***சூல்;*** pregnancy as the body is consisting of two lives. (சா.அக.).

[இரண்டு → இரு → ஈர் + உயிர்.]

ஈருயிர்க்காரி *īruyir-k-kāri,* பெ. (n.) ***சூல்கொண்ட பெண்;*** pregnant woman, as holding two lives. (w.).

[இரண்டு → இரு - ஈர் + உயிர் + காரி.]

ஈருயிர்ப்பிணவு *īruyir-p-piṇavu,* பெ. (n.) ***சூற்கொண்ட பிணவு*** (அகநா.72); pregnent female, either human or animal, having another life within her.

[இரண்டு → இரு → ஈர் + உயிர் + பிணவு.]

ஈருயிராயிருத்தல் *īryuirā-yiruttal,* பெ. (n.) ***கருக் கொண்ட பெண்ணாயிருத்தல்;*** woman in a state of pregnancy. (சா.அக.).

[இரண்டு → இரு → ஈர் + உயிராய் + இருத்தல்.]

ஈருவாதி *īru-vādi,* பெ. (n.) ***குப்பைக்கீரை;*** rubbish green. (சா.அக.).

[ஒருகா. ஈரம் + வளர்த்தி = ஈரவளர்த்தி → ஈரவாதி → ஈருவாதி.]

ஈருவா *īruvā,* பெ. (n.) ***காருவா, வெள்ளுவாக்கள்;*** new moon and full moon.

[இரண்டு → இரு → ஈர் + உவா.]

ஈருருவி *īruruvi,* பெ. (n.) ***ஈர்வலி*** பார்க்க (யாழ்ப்.); see *īrvali.*

[இரண்டு → இரு → ஈர் + உருவி.]

ஈருள் *īrul,* பெ. (n.) ***ஈரல்*** பார்க்க; see *īral,* "ஈருட்டடி மூடி." (சீவக.2791). (அகநா.394.8).

[இரண்டு - இரு - ஈர் + உள்.]

ஈருள்ளி *īrulli,* பெ. (n.) ***வெங்காயம்*** (மூ.அ.); onion, allium cepa.

ம., க. ஈருள்ளி; **தெ.** நீருல்லி, நீருல்லெ; **து.** நீருள்ளி.

[ஈரம் + உள்ளி. உள்ளே ஈரமுடையது.]

ஈருள்ளிக்கோரை *īrulli-k-kōrai,* பெ. (n.) ***கோரை வகை;*** a sedge, culon terete, cyperus articulatus. (செ.அக.).

[ஈரம் + உள்ளி + கோரை.]

ஈரெச்சம் *īreccam,* பெ. (n.) 1. ***பெயரெச்சம்;*** adjective. 2. ***வினையெச்சம்:*** adverb.

[இரண்டு → இரு → ஈர் + எச்சம்.]

ஈரென்புப் பொருத்து *īrenbu-p-poruttu,* பெ. (n.) ***நடுவே சதைப் பற்றின்றி இரண்டெலும்புங்கூடிய அசையா மூட்டு;*** an immovable joint with no intervening tissue between the bones - Synarthrosis. (சா.அக.).

[இரண்டு → இரு → ஈர் + என்பு + பொருத்து.]

ஈரெண்வகைக்கூலம் *īrenvagai-k-kūlam,* பெ. (n.) ***நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இறகி (ராகி.), எள், கொள், பயறு, உழுந்து, அவரை, கடலை; துவரை, மொச்சை என்பன;*** sixteen varieties of grain.

[இரண்டு - இரு + ஈர் + எண் + வகை + கூலம்.]

ஈரெழுத்து ஒருமொழி *īreluttu-orumoli,* பெ. (n.) ***இரண்டெழுத்துகளாலாகிய சொல்*** (தொல். சொல்.45); word made of two letters. (பல, சில).

[இரண்டு - இரு - ஈர் + எழுத்து + ஒரு + மொழி.]

ஈரொட்டு[1] *īrottu,* பெ. (n.) ***உறுதியின்மை;*** uncertainty, doubt. 'நோயாளியின் காரியம் ஈரொட்டாயிருக்கிறது.' (உ.வ.).

[இரு → ஈர் + ஒட்டு = ஈரொட்டு = இருவகை.]

ஈரொட்டு[2] *īrottu,* பெ. (n.) ***உறுதியின் அடிப்படையி லமைந்த கொள் கொடை;*** conditional bargain.

[இரு → ஈர் + ஒட்டு = ஈரொட்டு. ஒட்டு = ஆணை, சூளுரை, உறுதிமொழி. இரு → ஈர் = பெரிது, மிகுதி.]

ஈரொற்றுவாரம் *īroṟṟu-vāram,* பெ. (n.) ***இரண்டு மாத்திரை பெற்றுவருஞ் செய்யுள்*** (சிலப்.3,136, உரை); musical composition sung with double beat.

[இரண்டு → இரு → ஈர் + ஒற்று + வாரம்.]

ஈலி *īli,* பெ. (n.) 1. ***கைவாள்;*** sword. 2. ***சுரிகை;*** dagger.

[இல் (குத்துதல்) → ஈல் → ஈலி.]

ஈவி-த்தல் *īvi-,* 4 செ.குன்றாவி. (v.t.) ***பங்கிடுதல்;*** to distribute, apportion.

[ஈதல் = தருதல், பங்கிடுதல். ஈ → ஈவி → ஈவித்தல் (பி.வி.).]

ஈவிழுங்கி *ī-vilungi,* பெ. (n.) 1. ***ஈயை விழுங்கும் பறவை;*** fly-catcher. 2. ***ஈத்தின்னும் பல்லி;*** fly-catching lizard. 3. ***ஈயுண்ணுஞ் செடி;*** fly-trap. 4. ***எதையும் நம்பும் மூடன்;*** simpleton who believes in any and everything told.

[ஈ + விழுங்கு. ஈ = ஈதல்.]

ஈவிரக்கம் *īvirakkam,* பெ. (n.) ***மனக்கசிவு;*** compassion associated with liberality, sympathy. (colloq).

[ஈவு + இரக்கம்.]

ஈவு *īvu* பெ. (n.) 1. ***கொடை;*** giving, bestowing. "ஈவுதனை மேற்கொண்ட" (கம்பரா.கார்முக.22). 2. ***நன்கொடைப் பொருள்;*** gift, donation. "புத்தியுள்ள மனைவியோ, கர்த்தரருளும் ஈவு" (விவிலி.நீதி.19,14). 3. ***பங்கிடுகை;*** distribution, sharing. 4. ***ஒழிகை;*** disappearance, vanishing. "ஈவிலாத தீவினைகள்" (திவ்.திருவாய்.4,7,3). 5. ***கணக்கிற் பிரித்துக் கண்டபேறு;*** quotient. (math.).

ம. ஈவு; **க.** ஈ; **தெ.** ஈவி.

[ஈ - ஈவு.]

ஈவுக்கணக்கு *īvu-k-kaṇakku,* பெ. (n.) 1. ***வகுத்தல் கணக்கு;*** division (w.). 2. ***பிரிவு;*** part. 3. ***கணக்கு;*** mathematics.

[ஈவு + கணக்கு.]

ஈவுசோய்வு *īvu-šōyvu,* பெ. (n.) 1. ***மனம் இளகிக் கொடுக்கும் கொடை*** (யாழ்.அக.); gift out of sympathy. 2. ***கொடையும் இளக்காரமும்;*** charity and debasement.

[ஈவு + சோய்வு, சோர்வு → சோய்வு.]

ஈவுசோர்வு *īvu-šōrvu,* பெ. (n.) ***சூழ்நிலை அமைவு;*** seasonableness and unseasonableness with particular reference to the resources on hand. "ஈவு சோர்வு பார்த்துச் செய்ய வேண்டும்" (இ.வ.).

[ஒருகா. ஈவு சோவு - ஈவுசோர்வு.]

ஈவுதரம் *īvu-taram,* பெ. (n.) ***சராசரி வரித்தண்டல்;*** average collection (G.Tn.D.288).

[ஈவு + தரம். ஈவு = கொடுத்தல். தரம் = அளவு.]

ஈவுமானியம் *īvu-māṉiyam,* பெ. (n.) ***நில வரும்படிக்குத் தக்கபடி ஈவித்துக் கொடுக்கும் உரிமை;*** grant of a proportion or percentage on any branch of land revenue, which fluctuates with the improvement or deterioration of the produce. (R.F.).

[ஈவு + மானியம்.]

ஈவோன் *īvōṉ,* பெ. (n.) 1. ***கொடையாளி;*** donor, benefactor. 2. ***கற்பிப்போன்*** (தொல்.பாயி.உரை.); teacher.

ம. ஈவோன்.

[ஈ → ஈவோன்.]

ஈழக்கருங்காசு *īḻa-k-karuṅkāšŭ,* பெ. (n.) ***பழைய நாணய வகை;*** an old coin (M.E.R.47 of 1925).

[ஈழம் + கரும் + காசு.]

ஈழக்காசு *īḻa-k-kāšu,* பெ. (n.) ***நாணய வகை;*** a coin of Srilanka (I.M.P.Tj.38) ஈழநாட்டு நாணயம்.

ம. ஈழக்காசு.

[ஈழம் + காசு.]

ஈழக்குலச்சான்றார் *īḻa-k-kulaccāṉṟār,* பெ. (n.) ***சான்றார் பிரிவினர்*** (பெரியபு.ஏனாதி.2); division of the cānār caste.

[ஈழம் + குலம் + சான்றார். சான்றார் = போர்மறவர்.]

ஈழங்கனாக் காண்(ணு)-தல் *īḻaṅ-kaṉā-k-kāṇ-,* 12 செ.கு.வி. (v.i.) ***கண்ணாற் காணாததைக் கனவில் காணுதல்*** (திவ்.திருக்குறுந்.1.வியா.); to dream of things which had never before been in one's experience, referring to the dream experiences of those in ancient times who had not seen Ceylon.

[ஈழம் + கனா + காணுதல் • ஈழத்துக்குப் பண்டைக் காலத்தில் சேரன்தீவு எனப்பெயரிருந்தது. அந்நாட்டுச் சேர இளவரசர்கள் எவரும் கண்டும் கேட்டு மிராத புதுமைப் பொருள்களைத் தம் கடற்பயணங்களால் கொணர்ந்து சேர்த்ததால் ஈழக்கனவு புதுமை காணலுக்கு ஆயிற்று.]

ஈழங்கிழங்கு *īḻaṅ-kiḻaṅgu,* பெ. (n.) ***பெருவள்ளி;*** wing-stalked yam.

ம. ஈழச்சேம்பு.

[ஈழம் + கிழங்கு.]

ஈழச்சேரி *īḻa-c-cēri,* பெ. (n.) ***கள்ளிறக்குபவர் வாழிடம்;*** locality inhabited by toddy-drawers. (S.I.I.ii.44).

[ஈழவர் + சேரி - ஈழவச்சேரி → ஈழச்சேரி.]

ஈழஞ்சுற்றியோடல் *īḻañcuṟṟi-y-ōḍal,* பெ. (n.) ***இலங்கையின் கிழக்கு வழியே செல்லுங் கப்பற் செலவு*** (பயணம்); sailing round the eastern side of Ceylon.

[ஈழம் + சுற்றி + ஓடல்.]

ஈழத்தலரி *īḻattalari,* பெ. (n.) ***அலரி வகை;*** pagoda tree.

ம. ஈழத்தலரி.

[ஈழம் + அத்து + அலரி.]

ஈழத்தி *īḻatti,* (n.) ***கல்லத்தி;*** hill banyan.

[ஈழம் + அத்தி.]

ஈழத்திமரவாழை *īḻatti-maravāḻai,* பெ. (n.) 1. ***ஈழநாட்டின் மரவாழை;*** a kind of plantain in Srilanka. 2. ***நாட்டுமர வாழை;*** indegenous plantain. (சா.அக.).

ம. ஈழத்தி மரவாழ.

[ஈழம் + அத்து + மரம் + வாழை. அத்து → அத்தி - சாரியைத்திரிபு.]

ஈழத்துத் தேங்காய் *īḻattu-t-tēṅgāy,* பெ. (n.) ***இலங்கையில் விளையும் தேங்காய்*** (யாழ்ப்பாணத்துக்காய் என்றும் சொல்வதுண்டு); cocoanut variety of Srilanka. (சா.அக.).

[ஈழம் + அத்து + தேங்காய்.]

ஈழத்துணவு *īḻattuṇavu,* பெ. (n.) ***ஈழநாட்டு உணவுப் பொருள்கள்;*** food preparation from Srilanka. "ஈழத்துணவும் காழகத் தாக்கமும்" (பட்டினப்.).

[ஈழம் + அத்து + உணவு.]

ஈழத்துப்பூதன்றேவன் *īḻattu-p-pūdaṉṟēvaṉ,* பெ. (n.) ***கடைக் கழகப் புலவருள் ஒருவர்*** (குறுந்.343); a poet of Sangam Age.

[ஈழம் + அத்து + பூதன் + தேவன். பூதன்றேவன் → பூதன்மகன் தேவன்.]

ஈழநாடு *īḻa-nāḍu,* பெ. (n.) ***இலங்கை*** (தேவா.1239.7); Srilanka (Ceylon).

ம. ஈழத்து நாடு.

[ஈழம் + நாடு.]

ஈழப்புளி *īḻa-p-puḷi,* பெ. (n.) ***கொடுக்காய்ப் புளி;*** malabar gamboge.

[ஈழம் + புளி.]

ஈழம் *īḻam,* பெ. (n.) 1. ***இலங்கை*** (சிங்களம்) (திவா.); Srilanka (Ceylon). 2. ***பொன்*** (இரகுநகர.68); gold. 3. ***கள்*** (சூடா.); toddy, arrack. 4. ***கள்ளி*** (மலை.); spurge.

ம. ஈழம்; *pāli.* Sīhala.

ஈழம் = ஈழநாடு, ஈழத்தில் விளைந்த பொன் மாழை. 1. இல் = குத்தல், தாழ்வு, பள்ளம், கிழக்கு. இல் → ஈல் → ஈளம் → ஈழம் = கிழக்கிலுள்ள 2. கிழக்கினின்று வந்தபொன். 3. ஈள் → ஈளம் (ஈளை) = தொய்வு, மயக்கம். ஈளம் → ஈழம் = மயக்கமுண்டாக்கும் கள். 4. உட்சாறு(கள்) கொண்ட கள்ளிச்செடி.]

ஈழம்புஞ்சை *īḻam-puñjai,* பெ. (n.) ***வரிவகை;*** tax (S.I.I.Vii,122).

[ஈழம் + பூட்சி = ஈழப்பூட்சி → ஈழப்பூஞ்சி → ஈழப்புஞ்சை.]

ஈழம்பூட்சி *īḻam-pūṭci,* பெ. (n.) ***ஒரு பழைய வரி;*** ancient tax. (S.I.I.ii, 521,31).

[ஈழம் + பூட்சி. ஈழம் = கள். பூண் → பூட்சி (கடமையாகச் செலுத்தப்பட்டது. ஈழப்பூட்சி=கள் வரி.]

ஈழமண்டலம் *īḻa-maṇḍalam,* பெ. (n.) ***இலங்கை;*** country of Srilanka (Ceylon.) "ஈழமண்டல மளவு திறைகொண்ட" (தமிழ்நா.253).

[ஈழம் + மண்டலம்.]

ஈழவக்கத்தி *īḻava-k-katti,* பெ. (n.) ***ஈழவர்க்குரிய கத்தி*** (தொல்.எழுத்.153,உரை); knife used by īḻavas.

[ஈழவர் + கத்தி.]

ஈழவர் *īḻavar,* பெ. (n.) ***ஈழவன்*** பார்க்க; see *īḻavaṉ.*

[ஈழம் → ஈழவர்.]

ஈழவன் *īḻavaṉ,* பெ. (n.) ***மலையாள நாட்டிற் கள்ளிறக்கும் குடியினன்;*** class of people who emigrated from ceylon in the remote past and settled in Tirunelveli district and Kerala, the caste of toddy-drawers. 'தெங்கும் பனையும் இவர்கள் மனமின்றி ஈழவர் ஏறப் பெறாதா ராகவும்' (S.I.I.ii,509).

ம. ஈழவன்; க. ஈடிக; தெ. ஈடிக.

[ஈழம் → ஈழவன்.]

ஈழற்கடிவரி *īḻaṟkaḍivari,* பெ. (n.) ***வரிவகை;*** tax. (S.I.I.vii,24) (செ.அக.).

[ஈழன் + கு + அடிவரி. ஈழநாடு காத்தற்குரிய வரியாகலாம்.]

ஈழுவன் *īḻuvaṉ,* பெ. (n.) ***ஈழவன்*** பார்க்க; see *īḻavaṉ.*

ஈழை *īḻai,* பெ. (n.) 1. ***தொய்வு;*** slackening. 2. ***இளைப்பு;*** emaciation. 3. ***ஈளைநோய்;*** asthma. 4. ***பித்தம்;*** bile. 5. ***மஞ்சள் நிறம்;*** yellow colour.

[ஈளை → ஈழை.]

ஈழைக்கொல்லி *īḻai-k-kolli,* பெ. (n.) ***அரிதாரம்*** (சங்.அக.); yellow dye, orpiment. (செ.அக.).

[ஈளை - ஈழை + கொல்லி.]

ஈளம் *īḷam,* பெ. (n.) ***பாதிரி*** (சங்.அக.); yellow flower, fragrant trumpet flower-tree. (செ.அக.).

[ஈளை - ஈளம்.]

ஈளமிளகு *īḷa-milagu,* பெ. (n.) ***கொச்சி மிளகு;*** Cochi pepper. (சா.அக.).

[ஈழம் + மிளகு. ஈழம் → ஈளம். ஈழத்திலிருந்து கொணர்ந்து பயிராக்கிய மிளகு.]

ஈளை *īḷai,* பெ. (n.) 1. ***கோழை;*** phlegm. "ஈளையேங்கி யிருமி" (திவ்.பெரியதி.1,3,6). 2. ***இழைப்பு;*** asthma. "ஈளையும் வெப்பும்" (திருமந்.263). 3. ***எலும்புருக்கி நோய்;*** consumption, tuberculosis. 4. ***உமிழ் நீர்;*** saliva, spittle. (சேரநா.).

ம. ஈள; க. ஈளெ.

[இளை → ஈளை.]

ஈளைக்காரன் *īḷai-k-kāraṉ,* பெ. (n.) ***கோழை நோயாளி*** (ஆ.அக.); patient afflicted with bronchitis.

[ஈளை + காரன்.]

ஈளைக்கொல்லி *īḷai-k-kolli,* பெ. (n.) 1. ***காசநோயைக் கொல்லும் மருந்து;*** any medicine capable of killing (curing) asthma. 2. ***தாளகம்;*** orpiment. (சா.அக.).

[ஈளை + கொல்லி.]

ஈளைத்தரை *īḷai-t-tarai,* பெ. (n.) ***ஈரத்தரை;*** moist ground. "தெய்வத் தானமும் ... உமியும் பரலும் சேர்ந்த நிலம் களித்தரை, உவர்த்தரை, ஈளைத்தரை, பொல்லாச் சாம்பல் தரை பொடித்தரை என்று சொல்லப்பட்டன ஒழிந்து" (சிலப்.3.96,உரை).

[ஈரம் → ஈலம் → ஈளம் + தரை.]

ஈளைபிடித்தான் *īḷai-piḍittāṉ,* பெ. (n.) ***ஈளைக்காரன்*** பார்க்க: see *īḷai-k-kāraṉ.*

[ஈளை + பிடித்தான்.]

ஈளையிருமல் *īḷai-y-irumal,* பெ. (n.) ***கோழையுடன் கூடிய விருமல்;*** a cough attendant on expectoration, a wet cough. (சா.அக.).

[ஈளை + இருமல்.]

ஈற்றசை *īṟṟasai,* பெ. (n.) ***அடியிறுதி, சொல்லிறுதிக ளில் வரும் அசைச்சொல்*** (சீவக.334,228); expletive at the end of a line or sentence in a verse or at the end of a word.

[ஈறு → ஈற்று + அசை.]

ஈற்றடி *īṟṟaḍi,* பெ. (n.) ***செய்யுளின் இறுதியடி;*** last line of a verse

[ஈறு → ஈற்று + அடி.]

ஈற்றம் *īṟṟam,* பெ. (n.) 1. ***ஈனுகை;*** giving birth, bringing forth. "பேரறத் தாலீற்றம்" (சிறுபஞ்.74). 2. ***பெண் விலங்குகளின் பிறப்புறுப்பு;*** the generative organ of female animals. (சேரநா.).

ம. ஈற்றம்.

[ஈன் → ஈற்றம்.]

ஈற்றயல் *īṟṟayal,* பெ. (n.) ***இறுதிக்கடுத்தது;*** penultimate. ''ஈற்றய லாவோ வாகலும்'' (நன்.353).

[ஈறு → ஈற்று + அயல்.]

ஈற்றரத்தம் *īṟṟarattam,* பெ. (n.) ***பல்லீறுகளில் ஏற்படும் குருதி ஒழுக்கு;*** oozing of the blood from the gums, ulorrhea.

[ஈறு → ஈற்று + அரத்தம்.]

ஈற்றா *īṟṟā,* பெ. (n.) ***கன்றீன்ற பெற்றம்*** (சூடா.); cow that has calved. ''ஈற்றாவை வெகுளவிடுத்து'' (திருவிளை.பழியஞ்.37).

ம. ஈற்ற.

[ஈன் → ஈற்று + ஆ.]

ஈற்று *īṟṟu* பெ. (n.) 1. ***ஈனுகை;*** bringing forth, applied to animals. ''மானீனு மீற்றினிடை'' (பிரபோத.11,88). 2. ***ஈனப்பட்டது;*** young one brought forth. ''தலையீற்று''. 3. ***மரக்கன்று;*** young plant. - பெ.எ. (adj.) ***கடைசி;*** last. ''ஈற்றுப்பல்.''

ம. ஈற்று; க. ஈன்; தெ. ஈனு, ஈக.

[ஈன் → ஈற்று.]

ஈற்றுக்கடன் *īṟṟu-k-kaḍaṉ,* பெ. (n.) ***இறுதிக் கடன்;*** funeral rites, being the last duty to be performed to one's relative. ''ஈற்றுக் கடன் பிறவுந் தாதைக்கு விதியா லாற்றி'' (திருவிளை.தடாதகை.42).

[ஈறு → ஈற்று + கடன்.]

ஈற்றுத்தாய் *īṟṟu-t-tāy,* பெ. (n.) ***பெற்ற தாய்*** (திவ்.பெரி யாழ்.3,9,4); one's own mother, dist. fr. māṟṟu-t-tāy.

[ஈன் - ஈற்று + தாய்.]

ஈற்றுமிசை *īṟṟu-misai,* பெ. (n.) ***ஈற்றயல்*** பார்க்க; see *īṟṟayal.* 'பாவு மென்னு மீற்றுமிசை உகரம் மெய்யொடுங் கெட்டுக் கால மயக்கமாய் நின்றது (திருக்கோ.164,உரை).

[ஈறு → ஈற்று + மிசை.]

ஈற்றுளை-தல் *īṟṟuḷai-,* 2 செ.கு.வி. (v.i.) ***மகப்பேற்று வலி, பேறுகாலப் பையுள்;*** to travail, to undergo pangs of child birth.(த.சொ.அக.).

[ஈன் → ஈற்று + உளை.]

ஈற்றெழுத்து *īṟṟeḻuttu,* பெ. (n.) ***உயிர் பன்னிரண்டும், ஞ், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ன் என்னும் மெய் எழுத்துகளும்;*** twelve vowels and ஞ், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ன் eleven consonants (த.சொ.அக.).

[ஈறு → ஈற்று + எழுத்து. சொல்லுக்கு ஈறாகும் எழுத்து ஈற்றெழுத்து எனப்பட்டது.]

ஈற்றெழுத்துக் கவி *īṟṟeḻuttu-k-kavi,* பெ. (n.) ***முதற் பாட்டின் ஈற்றில் வரும் சொல்லேனும் எழுத்தேனும் அடுத்த செய்யுளின் அல்லது அடியின் தொடக்க எழுத்தாகவோ சொல்லாகவோ வருவது;*** starting a new stanza with a letter or word from the end of the previous stanza in verse.

[ஈறு - ஈற்று + எழுத்து + கவி.]

ஈற்றெழுத்துக் கவி சொல்லல் *īṟṟeḻuttu-k-kavi-sollal,* பெ. (n.) ***ஒருவர் கூறிய பாட்டின் கடையெழுத்தை முதலாகக் கொண்டு பிறர் கவியை ஒப்பித்தல்;*** exhibition of one's memory in which after one has recited a verse, another, must recite a verse beginning with the last letter of that very verse or the letter next to it.

[ஈறு → ஈற்று + எழுத்து + கவி + சொல்லல்.]

ஈற்றேறு-தல் *īṟṟēṟu-,* 5 செ.கு.வி. (v.i.) ***பயிர்க்கரு முதிர்தல்;*** grain maturing on the stalk. ''சாவி யீற்றேறும் போது'' (ஏரெழு.47) (செ.அக.).

[ஈன் - ஈற்று + ஏறுதல்.]

ஈறயில் *īṟayil,* பெ. (n.) ***முரசு வெட்டி;*** gum lancet, a knife for incising the gums.

[ஈறு + அயில்.]

ஈறல் *īṟal,* பெ. (n.) 1. ***துயரம்;*** grief, as of a broken heart; deep-seated sorrow. என்னெஞ் சீறலை யாருக்குச் சொல்லி ஆற்றுவேன்' (யாழ்ப்.). 2. ***நெருக்கம்;*** closeness, thickness (w.).

[இறு → இறல் → ஈறல். இறுக்குதல் = நெருக்குதல், நெருக்கும் துன்பம், நெருங்கப் பின்னும் பின்னல்.]

ஈறழற்சி *īṟaḻaṟci,* பெ. (n.) ***பல்லீற்றுக்கேற்படும் எரிச்சல்;*** inflammation of the gum - gingivitis. (சா.அக.).

[ஈறு + அழற்சி.]

ஈறற்பற்றை *īṟaṟ-paṟṟai,* பெ. (n.) ***நெருக்கமான தூறு;*** dense thicket. (w.).

[இறு → இறல். ஈறல் + பற்றை. இறுக்கம் = நெருக்கம்.]

ஈறாந்தம் *īṟāndam,* பெ. (n.) ***ஆகமுடிவு;*** end, finiteness, utmost limit. (w.).

[ஈறு + அந்தம்.]

ஈறாம் வரிசை *īṟām-varisai,* பெ. (n.) ***கடைமுறை*** (திருவாலவா.); regularity of occuring in the final position. (த.சொ.அக.).

[ஈறு + ஆம் + வரிசை.]

ஈறிலான் *īṟilāṉ,* பெ. (n.) ***கடவுள்;*** God; He who has no end. ''ஈறிலாரை யிவரணைந் தார்கொலோ'' (கந்தபு.திருக்கல்.22).

[ஈறு + இல்லான். இல்லான் → இலான்.]

ஈறிலி *īṟili,* பெ. (n.) ***ஈறிலான்*** பார்க்க (அக.நி.); see *īṟilāṉ.*

[ஈறு + இல்லி → இலி.]

ஈறு[1] *īṟu,* பெ. (n.) 1. ***முடிவு*** (திவா.); end, termination. 2. ***இறப்பு;*** death. "புழுவுமீறெய்தின்" (காசிக. தேவ.அக.5). 3. ***எல்லை;*** limit, boundary. "கொன்ற மன்னரீறிலர்" (பாரத.நிரைமீ.49).

ம. ஈறு.

[இறு → ஈறு. இறுதல் = முடிதல்.]

ஈறு[2] *īṟu,* பெ. (n.) ***எயிறு, பல் நிற்கும் தசை;*** gum of the teeth.

[இறு → ஈறு. இறு = இறுக்கிப் பிடிக்கும் தசை.]

ஈறு[3] *īṟu-,* பெ. (n.) 1. ***பயன்*** (அக.நி.); result. 2. ***உப்பளம்;*** salt-pan.

[இறு → ஈறு. இறு = முடிவு. இறுதி; வரப்புள்ள உப்பளம்.]

ஈறுகட்டல் *īṟu-kaṭṭal,* தொ.பெ. (vbl.n.) ***ஈறு வீக்கம்;*** swelling of the gums. ***ஈறுகாப்பு*** பார்க்க: see *īṟukāppu.* (சா.அக.).

[ஈறு + கட்டல.]

ஈறுகட்டி *īṟu-kaṭṭi,* பெ. (n.) ***இதளியம்*** (சங்.அக.); calomel, bichloride of mercury.

[ஈறு + கட்டி.]

ஈறுகடை *īṟu-kaḍai,* பெ. (n.) ***இறுதிமுடிவு*** (யாழ்.அக.); final end.

[இறு → ஈறு + கடை. இறு → இறுதி.]

ஈறுகரை-தல் *īṟu-karai-,* 4 செ.கு.வி. (v.i.) ***பல்லீறு வீங்குதல்;*** to waste away as the gums of the teeth. (செ.அக.).

[ஈறு + கரை.]

ஈறுகழலை *īṟu-kaḻalai,* பெ. (n.) ***பல்லீ றிலுண்டாகுங் கழலை;*** carcinoma of the gums-Ulocarcinoma. (சா.அக.).

[ஈறு + கழலை.]

ஈறு கொப்புளம் *īṟu-koppuḷam,* பெ. (n.) ***ஈறுகட்டி;*** a disease in which the roots of 2 or 3 teeth are marked by a violent swelling and pain-gumboil. (சா.அக.).

[ஈறு + கொப்புளம்.]

ஈறுகொல்லி *īṟu kolli,* பெ. (n.) ***ஈர்க்கொல்லி*** பார்க்க; see *īr-k-kolli.* (சா.அக.).

[ஈறு + கொல்லி. ஈறு = ஈறில் உள்ள நோய்.]

ஈறு கொழு-த்தல் *īṟu-koḻuttal,* 4 செ.கு.வி. (v.i.) ***பல்லீறு வீங்குதல்;*** to become swollen as the gums of the teeth. (செ.அக.).

[ஈறு + கொழு-த்தல்.]

ஈறு தப்பின பேச்சு *īṟu-tappiṉa-pēccu,* பெ. (n.) ***தகாத சொல்;*** improper language.

[ஈறு + தப்பின + பேச்சு. ஒருகா: பல்லை மீறிய பேச்சு.]

ஈறு சுரப்பு *īṟu-šurappu,* பெ. (n) ***ஈறு வீக்கம்;*** swelling of the gums through inflammation. (சா.அக.).

[ஈறு + சுரப்பு.]

ஈறுநாவழற்சி *īṟu-nā-v-aḻaṟci,* பெ. (n.) ***பல்லீறும் நாவும் புண்ணாதல்;*** inflammation of the gums and the tongue. (சா.அக.).

[ஈறு + நா + அழற்சி. நாக்கு → நா.]

ஈறுபுண் *īṟu-puṇ,* பெ. (n.) ***பற்களின் சந்தில் ஈறுகள் வெந்து நோயை யுண்டாக்குமோர் பல் வலி;*** superficial or deep-seated inflammation of the alveolar process-Interstilial gingivitis. (சா.அக.).

[ஈறு + புண். ஈற்றுப்புண் → ஈறுபுண் (கொ.வ.).]

ஈறுவலி *īṟu-vali,* பெ. (n.) 1. ***பல் லீற்றுக்குண்டாகும் வலி;*** inflammation of the gum of the teeth. 2. ***பல்லீறு நோய்;*** gingivitis. (சா.அக.).

[ஈறு + வலி = ஈற்றுவலி → ஈறுவலி (கொ.வ.).]

ஈறு வெடிப்பு *īṟu-veḍippu* பெ. (n.) ***குழந்தைகளுக்கு ஈறுசுரந்து வெடிப்புண்டாகிக் குருதி யொழுகு மோர் நோய்;*** an eruption in the gum of infants, attended with fissure and bleeding. (சா.அக.).

[ஈறு + வெடிப்பு.]

ஈன்[1] *īṉ,* பெ. (n.) 1. ***இவ்விடம்;*** this place. "ஈன் வருகென்ன" (தணிகைப்பு.வீராட்ட.89); 2. ***இவ்வுல கம்;*** *this world.* "ஈனு மும்பரும் பெறலருங் குரைத்தே" (ஐங்குறு.401).

[ஈ = அண்மைச் சுட்டு. ஈ → ஈன் = இவண், இங்கு.]

ஈன்[2] *īṉ,* பெ. (n.) 1. ***மர வகை;*** ainecwood loc. 2. ***ஆச்சா*** (சித்.அக.); sal tree.

[ஒருகா: ஊ - ஊன் - ஈன் (உயரமானது).]

ஈன்(னு)-தல் *īṉ(ṉu)-,* 14 செ.குன்றாவி. (v.t.) ***கருவுயிர்த்தல்*** (நாலடி.400); to bear, bring forth, yean. 2. ***உண்டாக்குதல்;*** to produce, yield, bring into being. "நயனீன்று நன்றி பயக்கும்" (குறள்.97).

ம. ஈனுக; க., தெ., கோத., துட., பட., பர். ஈன்; பிரா. கீனிங்க்.

[இல் - ஈல் - ஈன்.]

ஈன்றணிமை *īṉṟaṇimai,* பெ. (n.) 1. ***புனிறு*** (திவா.); time immediately after calving, said of cow. "நாளீன் றணிய.... கன்று" (கூர்ம்பு.கன்னை.80).

[ஈன்று + அணிமை.]

ஈன்றணிமைப்பால் *īṉṟ-aṇimai-p-pāl,* பெ. (n.) ***மாடு கன்று போட்டவுடன் சுரக்கும் பால். இதைச் சீம் பால் என்றும் சொல்வதுண்டு;*** first milk given by a cow after calving.

[ஈன்று + அணமை + பால்.]

ஈன்றணுமை *īnṟaṉumai* பெ. (n.) *ஈன்றணிமை* பார்க்க (தொல்.பொருள்.146); see *īnṟaṉimai.*

[ஈன்று + அணிமை. அணிமை → அணுமை. (கொ.வ.).]

ஈன்றதாய் *īnṟa-tāy,* பெ. (n.) ***பெற்ற தாய். ஐவகைத் தாயரில் ஒருவர்;*** mother who brought forth, one of ai-vagai-tāyar "உயிர்த்த பொழுதே ஓடிற் றீன்ற தாய்" (பிரபுலிங்.பிரபுதே.63) (செ.அக.).

[ஈன் → ஈன்ற + தாய்.]

ஈன்ற நோக்காடு *īnṟa-nōkkāḍu* பெ. (n.) ***பிள்ளை பிறந்ததால் உண்டாகும் வலி;*** pain which succeeds child birth-after pains. This is due to the contraction of the uterus.

[ஈன்ற + நோக்காடு. நோக்காடு → நோவு.]

ஈன்றல் *īnṟal,* தொ.பெ. (vbl.n.) 1. ***பெறுதல்;*** bringing forth. 2. ***உண்டாதல்;*** becoming. 3. ***விளைதல்;*** yielding. "இன் சொல் இனிதீன்றல் காண்பான்" (குறள்.99).

[ஈன் → ஈன்றல்.]

ஈன்றார் *īnṟār,* பெ. (n.) ***தந்தை தாயர்;*** father and mother. (ஆ.அக.).

[ஈல் → ஈன் → ஈன்ற + (அவர்) ஆர்.]

ஈன்றாள் *īnṟāḷ,* பெ. (n.) ***தாய்;*** mother. "ஈன்றாள் பசி காண்பானாயினும்" (குறள்.656).

[ஈன் → ஈன்றவள் → ஈன்றாள்.]

ஈன்றான் *īnṟāṉ,* பெ. (n.) ***தந்தை*** (பிங்.); father. (செ.அக.).

[ஈன் → ஈன்றவன் → ஈன்றான்.]

ஈன்றுளார் *īnṟuḷār,* பெ. (n.) ***தாய்தந்தையர்;*** parents. (ஆ.அக.) "ஆண்டையரோ எமை ஈற்றுளர்" (கந்தபு. சய.17).

[ஈன் → ஈன்று + உளார்.]

ஈன்றோன் *īnṟōṉ,* பெ. (n.) ***ஈன்றான்*** (சூடா.) பார்க்க; see *īnṟāṉ.* (செ.அக.).

[ஈன்றான் → ஈன்றோன். ஆன் → ஓன். ஈறு திரிபு.]

ஈன்னம் *īnnam,* பெ. (n.) ***வெள்ளி;*** silver. (சா.அக.).

[ஈ → ஈயம் → ஈயன்னம் → ஈன்னம்.]

ஈனசாமந்தன் *īṉa-šāmandaṉ,* பெ. (n.) ***சாமந்தர் வகையினர்*** (சுக்கிர.நீதி.26); class of Cāmantar.

[ஈன + சாமந்தன்.]

ஈனதை *īṉadai,* பெ. (n.) ***இழிவு;*** "தரமற வீனதை யடைய" (ஞானவா.தாகு.23). low state, degraded condition.

[ஈன் → ஈனம் → ஈனதை.]

ஈனம்[1] *īṉam,* பெ. (n.) 1. ***இழிவு;*** degradation, baseness, meaness. "ஈனமா யில்லிருந்து" (நாலடி.198). 2. ***குறைபாடு;*** deficiency, want. (உரி.நி.).

Skt. hīna,

[இல் → இள் (இளி, இழி) → ஈளம் → ஈனம் - என்பன தாழ்த்தலும் இழித்தலுமாகிய நேர்ப்பொருள் தரும் தூய தமிழ்ச் சொற்களாம். இவற்றை வடசொல்லெனக் காட்டல் பொருந்தாது.]

ஈனம்[2] *īṉam,* பெ. (n.) ***சரிவு*** (அக.நி.); inclination, slope. (செ.அக.).

[இல் → இள் → ஈளம் → ஈனம்.]

ஈனம்[3] *īṉam,* பெ. (n.) ***முயல்*** (அக.நி.); hare.

[இல் = மென்மை. இல் → ஈல் → ஈலம் → ஈனம்.]

ஈனல் *īṉal* பெ. (n.) 1. ***கதிர்*** (வின்.). 2. ***ஈனுதல்;*** bringingforth, as a cow brings forth a calf. (சா.அக.).

ஏனல் பார்க்க; see *ēṉal.*

தெ. என்னு.

[ஈன் → ஈனல்.]

ஈனவன் *īṉavaṉ,* பெ. (n.) ***இழிந்தோன்*** (திவ்.இயற். நிரன்மு.6); degraded person, low fellow.

[ஈனம் → ஈனவன்.]

ஈனன் *īṉaṉ,* பெ. (n.) ***ஈனவன்*** பார்க்க (திருவாத.9, திருப்பெரு.133); see *īṉavaṉ.*

[ஈனவன் → ஈனன்.]

ஈனா *īṉā-,* பெ. (n.) ***ஈனாத பசுங்கன்று;*** uncalving cow-calf. (சா.அக.)

[ஈன் + ஆ (எ.ம.இ.நி.).]

ஈனாக்கடாரி *īṉā-k-kaḍāri,* பெ. (n.) ***கன்று போடாத ஆன் அல்லது எருமை;*** cow or buffalo that has not calved.

[ஈன் + ஆ (எ.ம.இ.நி) + கடாரி.]

ஈனாக்குமரி *īṉā-k-kumari,* பெ. (n.) ***மகப்பெறாத இளம்பெண்*** (வின்.); young woman who has not yet given birth to child.

[ஈன் + ஆ (எ.ம.இ.நி.) + குமரி.]

ஈனாத்தாயர் *īṉā-t-tāyar,* பெ. (n.) ***செவிலித்தாய்;*** foster mother. "ஈனாத் தாயர் மடுப்பவும் உண்ணாள்" (அகநா.105.6).

[ஈன் + ஆ + தாயர். (ஆ.எ.ம.இ.நி).]

ஈனாமலடி *īṉā-maladi,* பெ. (n.) 1. ***பிள்ளை பெறாத மலடி;*** barren woman. 2. ***மலட்டு ஆ;*** barren cow. (சா.அக.).

[ஈல் + ஆ + மலடி.]

ஈனாமலடு *īṉā-malaḍu,* பெ. (n.) ***ஈனாமாடு*** பார்க்க: see *īṉā-māḍu*

[ஈன் + ஆ + மலடு.]

ஈனாமாடு *īṉā-māḍu,* பெ. (n.) ***மலட்டு ஆன்;*** barren cow or buffalo. (செ.அக.).

[ஈன் + ஆ + மாடு.]

ஈனாமேகப்பூ *īṉā-mēga-p-pū,* பெ. (n.) ***செம்பரத்தம் பூ;*** shoe-flower. (சா.அக.).

[ஈன் + ஆ + மேகம் + பூ.]

ஈனாயம் *īṉāyam,* பெ. (n.) 1. ***இழிவு;*** ignominy, disgrace, dishonour. 2. ***இழித்துரை;*** rebuke, abuse. (ஆ.அக.).

[ஈனம் + ஆயம்.]

ஈனாவரக்கி *īṉā-v-arakki,* பெ. (n.) ***மகப்பெறாக் கொடியவள்*** (வின்.); cruel, merciless woman. lit., Rakṣasa woman who has not borne children. (செ.அக.).

ம. ஈனாஞ்சக்கி.

[ஈன் + ஆ + அரக்கி.]

ஈனாவாழை *īṉā-vāḻai,* பெ. (n.) ***பூ விடாத அல்லது குலைதள்ளாத வாழை மரம்;*** plantain tree which has not put forth flower. (சா.அக.).

[ஈன் + ஆ + வாழை.]

ஈனில் *īṉil,* பெ. (n.) ***பிள்ளைப்பேற்றிடம்;*** lying-in-chamber. ''பேடைச் செவ்வி நோக்கி யீனி லிழைக்க'' (பதினோ.திருவாரூ.19). (செ.அக.).

[ஈன் + இல்.]

ஈனு-தல் *īṉu-,* 14 செ.குன்றாவி. (v.t.). 1. ***ஈன்*** பார்க்க; see *īṉ.* 2. ***காய்த்தல்;*** to bear fruit. 3. ***வயிற்றினின்று குழவியைக் கீழிடுதல், பிள்ளை பெறுதல் அல்லது குட்டி போடுதல்;*** to bring forth a young one.

E. yean; *A.S.* eanian = to bring forth.

[ஈ → ஈன் → ஈனு.]

ஈனு மணிமை *īṉu-maṉimai,* பெ. (n.) ***பிள்ளை பெற்ற தீட்டு;*** ceremonial uncleanliness after delivery. (சா.அக.).

[ஈனும் + அணிமை.]

ஈனை *īṉai,* பெ. (n.) 1. ***இலை நரம்பு;*** vein of a leaf. 2. ***சித்திரக் குறிப்பு*** (w.); outline of a picture.

[ஈன் - ஈனை. இல் - ஈல் - ஈன் = குத்துதல். புள்ளியிடுதல், வரை, படம் எழுதுதல்.]

ஈனையெழுது-தல் *īṉai-y-eḻudu-,* 5 செ.கு.வி. (v.i.) ***சித்திரக் குறிப்பு வரைதல்;*** to delineate, make the first outline of a picture, design, or pattern. (w.).

[ஈன் - ஈனை + எழுதுதல்.]

ஈனை வாங்கு-தல் *īṉai-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) ***ஈனையெழுது*** பார்க்க; see *īṉai-y-eḻudu.*

[ஈனை + வாங்குதல்.]

ஈனோர் *īṉōr,* பெ. (n.) ***இவ்வுலகத்தோர்;*** those who are of this world. ''ஈனோர் வடிவிற் காண்டலில்லென'' (சிலப்.பதிகம்.53).

[ஈ - அண்மைச் சுட்டு. ஈ - ஈன் + ஓர்.]

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

முதன்மடலம்-மூன்றாம் பாகம்
VOLUME I - PART III

வை. பழனிச்சாமி, இ.ஆ.ப.,
முதன்மைப் பதிப்பாசிரியர்-இயக்குநர்
(முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்
திட்ட இயக்கக வெளியீடு

1997

விற்பனை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

முதன்மடலம் - மூன்றாம் பாகம்

(உ-ஔ)

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

Volume I - Part III

வை. பழனிச்சாமி, இ.ஆ.ப.,
முதன்மைப் பதிப்பாசிரியர் - இயக்குநர்
(முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்
திட்ட இயக்ககத்திற்காக அச்சடிப்பு :
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை - 600 113.

செ.சொ.பி.அகரமுதலித்திட்ட இயக்கக வெளியீடு □ 3.
முதற்பதிப்பு : கும்பம் (மாசி) தி.பி. உ0உஅ; மார்ச்சு 1997

(c) தமிழ்நாட்டரசு

A Comprehensive Etymological Dictionary
of the Tamil Language, Vol.I, Part-III

விலை : உருபா 150.00/-

குறியீட்டெண் : Colon No. P.J1-J, 314" K.M4

Published by :
Directorate of Tamil Etymological
Dictionary Project,
Govt. Museum Campus,
Egmore,
Chennai - 600 008.

Copies available at :
International Institute of Tamil Studies,
Tharamani,
Chennai - 600 113.

Type Setting by :
Savithri Laser
Chennai 600 028.

Printed at :
Udhyam Offset Printers
Chennai 600 002.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககத்தை உருவாக்கிய
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
'முத்தமிழறிஞர்'

கலைஞர் மு. கருணாநிதி



"ஈரெண்கால் மண்டபம் ஈந்தான் கரிகாலன்
பார்போற்றப் பாவாணர் இல்லத்தார்க் கெம்கலைஞர்
ஈந்தார் இருபான் இலக்கம் தமிழ்த்தாயோ
ஆர்ந்துபூ ரித்தாள் அகம்."

"தமிழினம் காக்கும் தலைவர் கலைஞர்
தமிழ்காக்கும் பாவாணர் சொல்லாய்வு பேணி
அகர முதலி அருந்திட்டம் கண்டார்
நிகரின்றி வாழ்க நெடிது"

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

அணிந்துரை

தமிழ் காட்சிக்கு மட்டும் 'ஆட்சி மொழி' என்றில்லாமல், 'மாட்சிமை' மிகுந்த மகத்தான மொழி என்பதை உணர்த்தும் பொருட்டுக் கழக ஆட்சி, தேவநேயப் பாவாணர் அவர்களை இயக்குநராகக் கொண்டு 8.5.1974 அன்று "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்" ஒன்றை அமைத்தது.

ஒவ்வொரு நாளும் வழக்கில் சேர்ந்துவிடும் அந்நிய மொழிச் சொற்களுக்கு இணையாகப் புதிய சொற்களை உருவாக்கித் தமிழின் வளமையை மேன்மைப்படுத்தும் உன்னத முயற்சியாய் அது மலர்ந்தது.

1976ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு இப்பணி அன்றைய ஆட்சியாளர்களால் ஆற்றுப்படுத்தப்படாமையால் தொய்வுற்றுப் போய் ஏறத்தாழ 23 ஆண்டுகட்குப் பின் மூன்றாம் தொகுதி வெளியிடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

கழக ஆட்சி அமையும் போதெல்லாம் அதுவரை நத்தை வேகத்தில் நகர்ந்த இப்பணி முழு மூச்சுடன் முயல் வேகத்தில் முடுக்கி விடப்படும்; இது மீண்டும் 1989இல் புதிய உத்வேகம் பெற்றது. 1991இல் நூல் அச்சடிக்கும் வேலை நிகழும் போது, மீண்டும் கழக ஆட்சி கலைக்கப் பட்டது. இருப்பினும் பெரும்பாலான பணிகள் முடிவுற்றிருந்ததால் இரண்டாவது தொகுதியை 1992ஆம் ஆண்டில் வெளியிட முடிந்தது. அதன்பின் ஐந்தாண்டுகள் கழிந்த நிலையில் மூன்றாவது தொகுதிக்கு முகவுரை எழுதும் பேற்றினைப் பெற்றிருக்கிறேன்.

இயக்ககத்தின் முதல் இயக்குநராகப் பணியேற்று, அரும்பணியாற்றிய பாவாணர் அவர்களுக்கு, மரியாதை செலுத்தும் வகையில் அவர்தம் நூல்கள் எல்லாம் அரசுடைமையாக்கப்பட்டு, அவரது குடும்பத்தாருக்குப் பரிவுத் தொகையாக அரசின் சார்பில் 20 இலட்சம் ரூபாயை வழங்கிப் பெருமைப்படுத்தியிருக்கிறோம் என்பது இந்நேர்வில் நினைவுகூரத்தக்கது.

அகர முதலி தொடர்ச்சியாக இனி விரைவில் வெளிவர வேண்டும் என்பதற்காக - செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககத்தை மேலும் சீரமைத்து, நான்கு ஆய்வாளர்கள் உட்படப் பன்னிரண்டு பேர் புதிதாகப் பணிஅமர்த்தப்பட்டு, தற்போது பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. எனவே, இனிமேல் தொடர்ச்சியாக அடுத்தடுத்த தொகுதிகள் வெளிவருவதில் எந்தவிதமான தடையும் ஏற்படாது என நம்புகிறேன். மேலும், தமிழ் வளர்ச்சிக்கென்று தனியாக ஒரு அமைச்சகமும் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் இன்னும் ஐந்தாண்டுக்காலத்திற்குள் அகர முதலியின் அனைத்துத் தொகுதிகளும் வெளிவர வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

இந்த மூன்றாவது தொகுதி 427 பக்கங்களைக் கொண்டு வெளிவருகிறது. 'உ' விலிருந்து தொடங்கி ஆய்த எழுத்து 'ஃ' வரை விளக்கம் இதில் இடம் பெற்றுள்ளது. ஆய்வு சிறப்பான முறையிலே செய்யப்பட்டுள்ளது என்பதற்கு அடையாளமாக ஒரு உதாரணம் கூற வேண்டுமேயானால்,

ஏற்றம் ērram, பெ. (n)

1. மேல் ஏறுகை ; mounting, as on a ladder, a horse, ascending ;
2. மேடு ; ascent., acclivity
3. உயர்கை, கொடியேற்றம் ; hoisting, as a flag, raising up
4. நீர்ப்பெருக்கு ; rising, as the flowing tide; "ஆணையாலே யேற்றந் தொடங்காக் கடலின்" (கம்பரா. நகர்நீ.141)
5. புகழ் (திவா.) ; praise, eulogy
6. இடிமரம் ; heavy wooden rammer set to a frame for pounding parched rice
7. அதிகப்படி ; increase, increment
   "மேல் ஏற்றம் ஒரு நாளைக்கு மூன்று மாவாக" (S.I.I. ii. 129)
8. மிகுதி ; excess "ஏற்றம் நெல்லுக்குறுணி எழுநாழியும்"
   (S.I.I.ii.70.5)
9. மேன்மை ; distinction, superiority, exaltation, pre-eminence
   "பத்தர்கட் கேற்ற நல்கினீர்" (தேவா. 599.6)
10. நினைவு ; remembrance
11. துணிவு ; courage "ஏற்ற மிலாட்டியென் னேமுற்றாள்"
    (தொல். சொல். 337, உரை)
12. ஏற்றமரம்; well sweep, picottah. "ஏற்றமிரண்டுள" (திருமந். 2873)
    ம: ஏத்தம்: க: ஏத, யாத: தெ: ஏதமு
    (ஏறு-ஏற்று-ஏற்றம் (சு.வி.78)

என்று பன்னிரண்டு வகையான பொருள் இருப்பதை மேற்கோளோடு குறிப்பிடும்போது இதன் தரம் தெரிகிறது. இப்போது நாம் 'உள்ளிருப்பு' என்று சொன்னதும் Internal Strike/pen-down strike எனப்படும் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் தான் நினைவுக்கு வருகிறது. இக்காலத்தில் 'உள்ளிருப்பு' க்கு இப்படி ஒரு பொருள் இருந்தாலும், வைப்பு நிதி (reserve cash) எனும் பொருளையும், கருவூலக் காவல் (watching the treasury) எனும் பொருளையும் இந்த நூல் தந்திருப்பதை உணர்கிறோம்.

இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் இலக்கை அடைய முழுமையான ஒப்படைப்புடன் செயற்பட்டுக் கடுமையாக உழைக்க வேண்டும். ஏற்கனவே காலம் விரயமாகியிருக்கிறது என்கிற எச்சரிக்கை உணர்வை அடிக்கடி மனதில் உச்சரித்துக் கொண்டு ஒவ்வொரு நிமிடமும் அரும் பணியாற்ற வேண்டும்.

தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் முனைந்து பாடுபட்டு இந்த உயர்ந்த பணியைச் செய்து முடிப்பார் என்ற திடமான நம்பிக்கை எனக்கிருக்கிறது.

இந்த மூன்றாம் தொகுதி தமிழ் கூறு நல்லுலகத்திற்கும், பிறமொழி ஆய்வாளர்களுக்கும் பெய்யெனப் பெய்யும் மழை போன்று அமைந்துள்ளது. தொன்மைச் சிறப்பில் மலை போல் உயர்ந்திருந்தாலும், புதுமைகளைப் போற்றி உள் வாங்கிக் கொள்வதில் கடல் போன்ற ஆழத்தையும் உள்ளடக்கிய உயரிய மொழி நம் தமிழ் மொழி என்பதை உணரச் செய்வதாய் இத்தொகுதி விளங்கிட விழைகிறேன்.

சென்னை
25.02.97

மு. கருணாநிதி

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்,
எம்.ஏ., பிஎச். டி.
தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்
துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

முன்னுரை

சொல்லாய்வறிஞர் ஞா.தேவநேயப் பாவாணர் அவர்களின் வாழ்நாட் பணியாகக் கருதப்பட்ட 'சொற்பிறப்பியல் அகரமுதலி'யின் மூன்றாவது தொகுதி இப்போது வெளியிடப்படுகிறது. 1957-இல் திராவிட இயக்க அடிப்படை உணர்வோடு வளர்ந்த எங்களை அழுத்தமான தனித்தமிழ் நோக்கில் திசை திருப்பிய பாவாணரின் நூலைப் பயின்ற என்போல்வார்க்கு நாற்பதாண்டுகட்குப் பின் அவரது நோக்கை நிறைவேற்றும் திட்டத்தைச் செயற்படுத்த வாய்ப்புக் கிட்டியுள்ளதை எண்ணி நெஞ்சு நெகிழ்கிறது; கண்கள் கசிகின்றன.

அந்த நினைவோடு இந்த முன்னுரை தொடர்கிறது.

பாவாணர் தரும் முன்னுரையிலிருந்து சில பகுதிகளைச் சுட்டிக் காட்டினால் இந்த நூலின் மேன்மை புரிந்து விடும்.

சொல்லின் பிறப்பை மட்டும் உணர்த்துவதே எல்லையென்று மேலை நாட்டார் கருதினர். ஆனால் பிறப்போடு நில்லாமல் சொல் வரலாற்றை வரைவது பாவாணர் பணி. இதற்குத் தமிழ் இடந்தருகிறது என்று உறுதிபடக் கூறுகிறார் அவர்.

அவருடைய நோக்கமே தமிழ் - தென்னாட்டுப் பழங்குடி மொழி, குமரி நாட்டு மொழி, திராவிடத் தாய்மொழி, ஆரியத்திற்கு முந்தைய மொழி, ஆரியத்துக்கு மூல மொழி, தற்சார்பு மொழி, உலக முதன் மொழி என்பது தான். இந்தக் கோட்பாடுகளில் அழுந்தி நிற்கும் தன் சொல்லாராய்ச்சியையும் இந்தக் கோட்பாடுகளை மெய்ப்பிக்கும் வகையிலேயே நகர்த்துகிறார். மேனாட்டறிஞர்களாகிய பரோவும் எமனோவும் வெளியிட்ட திராவிட மொழிகள் பற்றிய சொற்பிறப்பியல் அகரமுதலி மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். எனினும், அதில் பல தவறுகளும் உள்ளன என்கிறார் பாவாணர். அவரே பின் வருமாறு எழுதுகிறார் :

"ஒரு சில கூட்டுச் சொற்களைத் தவறாகவும் அவ்வகரமுதலி பிரித்துள்ளது.

எ-டு : தகப்பன் - தகு + அப்பன்.

தம் + அப்பன் - தமப்பன் - தகப்பன் என்பதே உண்மையான வரலாறு.

வரலாற்றிற் கெட்டாத தொல்பழங்காலத்தில் தோன்றிய உலக முதன்மொழியாகிய குமரிநிலத் தமிழின் சொற்பிறப்பியலை, உழைப்பொடும் பொறுமையொடும் நுண்மையொடும் மெய்யறியவாவொடுங்கூடி - நீண்டு ஆழ்ந்து நுணுகிய ஆராய்ச்சியாலன்றிப் பெருந் தமிழ்ப்புலவரும் அறியவொண்ணா நிலையில், வரலாறறியாது சமற்கிருத அடிப்படையில் தமிழாய்ந்த மேலையரிடம் எதிர்பார்ப்பது, இயற்கைக்கு முற்றும் மாறானதே. ஆதலால், பரோ எமனோவர் அகரமுதலிக் குறைபாட்டினால் அவர்க்கு எள்ளளவும் இழுக்கின்று."

இந்த ஆழம் இருப்பதால்தான் பாவாணர் நிமிர்ந்து நிற்கிறார்.

இந்த நிலையில்தான், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களே 8.5.1974-இல் இத் திட்டத்தை அரசின் திட்டமாக அறிவித்துத் தமிழ் நெஞ்சங்களைக் குளிர்வித்தார். முதல் தொகுதியில் 25 பக்கங்களில் பட விளக்கங்கள் அமைகின்றன. அதிலும் 135 வண்ணப்படங்கள் மிக அருமையாக அச்சாகியுள்ளன. படத்தாள் 8-இல் அடுக்கு வாழை பச்சை நிறத்தில் - அண்டிக் கொட்டை எனும் முந்திரிக்கொட்டை அதற்கேயுரிய நிறத்தில். 'அடுப்பு ஊதி' எனும் மீனும் அணிலும் அழகிய வண்ணங்களில் - ஒரு தாய், பசுமாட்டில் பால்கறக்கும்போது இரு பின்னங்கால்களையும் ஒரு கயிற்றால் கட்டி வைப்பாள், உதைத்து விடாமலிருக்க - அந்த அணை கயிற்றை விளக்க ஓர் அருமையான படம். ஆனால், இரண்டாம் தொகுதியில் படங்கள் ஒன்பது பக்கங்களில் - அதிலும் 35 படங்கள் மட்டுமே வண்ணத்தில்.

இரண்டு தொகுப்பிலுமே வண்ணமல்லாத கறுப்பு வெள்ளைப் படங்கள் பல இடம் பெற்றுள்ளன. ஆனாலும், வண்ணப்படங்கள் யாவும் தொகுப்பின் தன்மையை வெகுவாக உயர்த்துகின்றன. இந்த மூன்றாவது தொகுதியிலும் வண்ணப் படங்கள் உள்ளன.

வழக்கத்தில் உள்ள பிறமொழிச் சொற்களையெல்லாம் அப்படியே தமிழாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வஞ்சமனத்தொடும் நச்சு நினைப்பொடும் புலம்பித் திரிவோர்க்குப் பாவாணர் ஒரு சாட்டையடி தருகிறார்:

"அயன்மொழிச் சொற்களுள், சிறப்பாக வடமொழி, ஆங்கிலம் ஆகிய இருமொழிச் சொற்களே தமிழுக்குப் பெருங்கேடு விளைத்து வருகின்றன. வடசொற்கள் வலிந்து புகுத்தப்பட்டவை; ஆங்கிலச் சொற்களோ வலியப் புகுத்திக் கொண்டவை. முன்னதற்கு வடமொழி தேவமொழியென்னும் ஏமாற்றும், பின்னதற்கு ஆங்கிலம் அறிவியன்மொழியும், உலகமொழியும் ஒரு கால ஆட்சி மொழியுமாகும் என்னும் உண்மையும் துணைநிற்கின்றன.

அயன்மொழிச் சொற்களை வேண்டாது வழங்குவதனால் தமிழ்ச் சொற்கள் வழக்கு வீழ்ந்து நாளடைவில் இறந்துபடுவதுடன், புதுச்சொல் புனையும் ஆற்றலும் அவாவும் தமிழர்க்கு அற்றுப்போகின்றன. அதோடு, வழக்கிறவாத பல அடிப்படைத் தமிழ்ச் சொற்களும் அயற்சொற்களாக மாறிவிடுகின்றன.

பேசுவதே மொழியென்றும், கருத்தைத் தெரிவிக்கக் கருவியாயிருப்பதே மொழியின் பயனென்றும், கடன்சொற்களாலேயே மொழி வளருமென்றும்,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே" என்றும்,

சிறந்த அறிவும் பரந்த நோக்கும் உள்ளவர்போற் சிலர் நடித்துத் தம் புல்லறிவைப் புலப்படுத்துவர். இக் காலத்தில் நாட்டுப்புறக் கல்லாமக்களும் 'ஐயா' என்னும் தமிழ்ச் சொல்லைப் புறக்கணித்து, 'சார்' என்னும் ஆங்கிலச் சொல்லையே ஆண்டு வருகின்றனர். அதனால், அச் சொல்லையும் அகரமுதலியிற் சேர்க்கவேண்டுமென்று தமிழ்ப் பகைவரும் கூறத் துணியார். ஆகவே, ஆழ வழக்கூன்றியனவும் தமிழுக்குத் தேவையானவுமான அயன் மொழிச் சொற்களே இங்குச் சேர்க்கப்பெற்றுள்ளன. அவற்றை மெள்ளமெள்ள ஒவ்வொன்றாக உதறிவிட்டு, பழந்தமிழ்ச் சொல்லையோ புதுப்புனைவுச் சொல்லையோ நாளடைவில் ஆளவேண்டும் என்னுங் கருத்தையே, தமிழர் உள்ளத்திற் பதித்தல் வேண்டும்" என்கிறார்.

'ஓசனை' என்ற தமிழ்ச் சொல் வடமொழியில் எப்படி 'யோசனை' யாகிறது என்பதை நயம்பட விளக்குகிறது அகரமுதலி. அதிலும் நீட்டலளவையோடு தொடர்பு கொண்டு - தொலைவை அளக்கும் ஓர் அளவுகோலாக விளங்குவது 'ஓசனை'. அந்த விளக்கம் ஏற்கும்படியாக அமைந்துள்ளது.

ஓசனை ōsaṉai பெ. (n) நான்கு கூப்பிடு தொலைவு; a measure of distance = 4 kūppiḍu. "இன்கருப்பூரமும்... ஓசனை கமழுமே" (சீவக. 1901.).

[ஓ - ஓயல் - ஓசல் - ஓசனை]

இச்சொல் வடமொழியில் யோசனையெனத் திரிந்தது. ஓ- ஓசனை = தொலைவு, ஓட்டுதல், சேர்தல் எனப்பொருள்படும். Yuj என்னும் சொல்லிலிருந்து yojana தோன்றியதாகக் கூறுவது பொருந்தவில்லை. குதிரை அல்லது எருதுகளைப் பூட்டுதல் என்று மட்டும் பொருள் தரும்சொல் எவ்வளவு தொலைவு ஓடவேண்டும் என்பதற்கான அடிப்படையும், சொல்லின் புடை பெயர்ச்சி ஒழுங்கும் (Semantic expansion) கருதாமல் வெறுமனே பொருள் புணர்த்திக் காட்டப்பட்டுள்ளது.

தமிழில் பண்டுதொட்டே நீட்டலளவுகளும் கீழ்வாயிலக்கங்களும் மிகச் செம்மையாகப் பேணப்பட்டதால் அளவைப் பெயர்கள் செப்பம் பெற்றுள்ளன. 5 1/4. அடி நீளமுள்ள கோலால் 2000 தடவை அளக்கும் தொலைவு ஒரு குரலோசை அல்லது கூப்பிடு தொலைவாகும். நான்கு கூப்பிடு தொலைவு ஒரு ஓசனை அல்லது காவதம் எனப்படும். இது, இக்காலத்திய 11 கி.மீ. தொலைவுக்குச் சற்றேறப்பப் பொருத்தமானது. இத்தொலைவு 7½ நாழிகை (3 மணி) நேரத்தில் மெதுவாகச் செல்லும் வண்டி அல்லது மென்னடையாளர் கடக்கக் கூடிய தொலைவு என்று கூறப்பட்டுள்ளது. நிறுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவை மூன்றையும் குறித்த 'கா' என்னும் சொல்லினடியாகத் தோன்றிய காவதம் - காதம் என்னும் சொல்லும் ஓசனை என்னும் சொல்லும் இந்திய மொழிகளில் ஊடாடியுள்ளன." என்கிறது அகரமுதலி.

'உய்த்தல்' எனும் ஒரு சொல்லுக்குத் தான் எத்தனை விளக்கங்கள்?

இந்த 'அகரமுதலி'யின் பயன் என்னவென்று விளங்கிக்கொள்ள இந்த விளக்கமே போதும்.

இதோ விளக்கம் :

உய்²-த்தல் uy-4 செ. குன்றாவி. (v.t.) 1. உய்யச் செய்தல்; to ensure salvation. "உய்த்த வியோமரூபர்" (சதாசிவ.29). 2. நீக்குதல்; to drive away, dispel as darkness. "பல்விளக் கிருளின் றுன்னற வுய்க்கும்" (திருக்கோ.175). (செ.அக.)

(உ - உய் - உய்-த்தல்.)

உய்³-த்தல் uy - 4 செ.குன்றாவி. (v.t.) 1. செலுத்துதல்; to direct, guide. "நன்றின்பா லுய்ப்ப தறிவு" (குறள், 422). 2. படைக்கலம் விடுதல்; to discharge, let fly, as an arrow. "அம்புய்க்கும் போர்" (கம்பரா. மாரீச. 186)

3. அனுப்புதல்; to send, despatch. "பட்டிமையோலை யுய்ப்பான்" (திருவிளை. மெய்க்கா.13). 4. நடத்துதல்; to conduct, lead, direct "உய்த்திடு மிச்சை செய்தி" (சி.சி.1.62, நிரம்ப.) 5. கொண்டுபோதல்; to carry. "வேட்டுவ ருய்த்தன ரோவென" (சீவக.425). 6. நுகர்தல்; பட்டறிதல் to enjoy, experience. "காதல காத லறியாமை யுய்க்கிற்பின்" (குறள்.440). 7. கொடுத்தல்; to give. "மீளியாளர்க்கு மிகவுய்த்தன்று" (பு.வெ.3,9,கொளு.). 8. அறிவித்தல்; to make known, tell, reveal. "அவ்வழி யரசற் குய்த்தார்க்கு" (சீவக.1407). 9. ஆணை செலுத்துதல்; to rule. "ஞால முழுது முய்த்திடு மகவு" (பாரத. சம்பவ.10). 10.குறிப்பித்தல்; to mention. 11. ஊர்தியில் செல்லுதல்; to fly, as vehicle. 12. அமிழ்த்தல்; to press, sink. 13. ஈடேறச் செய்தல்; to realise. "உய்த்த வியோமரூபர்" (சதாசிவ. 29). மதியைச் செலுத்தி ஆராய்தல், உய்த்தறிதல், உய்த்துணர்தல். உய்த்தலில் பொருண்மை என்னும் தொடர்களை நோக்குக.

ம., க. உய்.

[உ - உய் - உய்-த்தல்]

இந்த ஆய்வில் ஈடுபட்டுள்ள பதிப்பாசிரியர்களும் தொகுப்பாளர்களும் பாவாணர்தம் நூல்கள் அனைத்தையும் முழுமையாகப் படிக்க வேண்டும். அவரது 'வேர்ச் சொல் கட்டுரைகள்' போன்ற நூல்களின் கருத்தினை நெஞ்சில் பதித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் 'சொற்பிறப்பியல் அகரமுதலி'யின் தரம் தெளிவாக இருக்கும்.

எடுத்துக் காட்டுக்கு ஒன்றைக் கூறலாம். 'வள்' என்பது வேர்ச்சொல் (Basic Verbal Root). இதிலிருந்து வளை, வளையம், வளைவு, வளையல் போன்ற சொற்கள் பிறக்கின்றன. 'ள-ட' உறவு அடிப்படையில் வட்டு, வட்டை, வட்டாரம், வட்டம் போன்ற சொற்கள் பிறக்கின்றன.

இந்த ஆய்வுணர்ச்சியும் வட்டார வழக்கு (Regional dialect), இலக்கிய ஆட்சி (Literary usage) இவை பற்றிய தெளிவும் கொண்டுதான் இந்த ஆய்வை மேற்கொள்ள முடியும். எனவே, ஐந்தாண்டுகட்குள் அனைத்துப் பகுதிகளையும் ஆய்வு செய்து முடிப்போம் எனும் அறைகூவலோடும் ஆழ்ந்து பயின்று அருமையான முறையில் இப்பணியை முடிப்போம் எனும் நெஞ்சுறுதியோடும் ஆய்வாளர்கள் தங்கள் தொகுப்பு முயற்சியைத் தொடரவேண்டும்.

ஆழமும், ஆர்வமும், அக்கறையும் உடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் பாவாணர் அன்பராகிய என் போன்றாரின் உறுதுணையோடு இந்தப் பணியை முடிப்பதே தமிழுக்கு நாம் செய்யும் தொண்டு.

மு. தமிழ்க்குடிமகன்

சென்னை
25.02.1997

வை. பழனிச்சாமி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர், மற்றும்
முதன்மைப் பதிப்பாசிரியர் - இயக்குநர்
(முழுக் கூடுதல் பொறுப்பு),
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்
திட்ட இயக்ககம்.

தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

பதிப்புரை

ஞாலத் தொன்மொழிகளுள் தாய்மையும் தலைமையும் கொண்டது தமிழ்மொழி. நாட்டு வரலாறு, மொழி வரலாறு எழுதப்படுவதுபோல் சொற்களுக்குப் பிறப்பு மூலம் கண்டு சொல் வரலாறு விளக்கும் அகரமுதலியைச் சொற்பிறப்பு அகரமுதலி (Etymological Dictionary) என்பர். உலகின் பல மொழிகளில் வெளிவந்துள்ள சொற்பிறப்பு அகரமுதலிபோல் தமிழிலும் சிறந்த சொற்பிறப்பியல் அகரமுதலியைப் பன் மடலங்களாக வெளியிடும் நோக்கில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் இப்பொழுது முதன் மடலத்தின் மூன்றாம் பகுதியை வெளியிடுகிறது.

ஒரு மொழியின் அனைத்துச் சொற்களுக்கும் வேர்மூலம் காணும் முயற்சி மேற்கொள்ளப்படுவதில்லை. ஏனெனில் அனைத்துச் சொற்களுக்கும் வேர்மூலம் காண்பது கடினம். ஆங்கிலத்தில் 10 இலக்கம் சொற்களிருந்தாலும் 45,000 சொற்களுக்குத் தான் ஆங்கிலச் சொற்பிறப்பு அகரமுதலி வேர்மூலம் காட்டுகிறது. ஆயின், தமிழ் மொழியில் உள்ள அனைத்துச் சொற்களுக்கும் வேர் மூலம் காண முடியும் என்பதால் 12 மடலங்களாக இதனை வெளியிட, மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் அவர்கள் இத்திட்டத்திற்கு முதல் இயக்குநராக இருந்து ஆற்றுப்படுத்தியுள்ளார்.

பொதுவான அகரமுதலியைவிட இது பலவகையில் வேறுபட்டது. இனச்சொல் காட்டுதல், ஒரு பொருள் குறித்த பலசொல் காட்டுதல், ஒரு பொருளின் இனவகைகள் காட்டுதல், உண்மையான வேர்மூலத்தைப் பாவாணர் வேர்ச்சொற் கட்டுரைகளில் பொதித்த நெறிமுறைகளாலும், மரபிலக்கணம், மொழியியல் கூறுகள், இலக்கியம், வரலாறு, கல்வெட்டு, உலக வழக்கு ஆகியவற்றின் அணுகுமுறைகளாலும் கண்டறிதல், இன்றியமையாத சொற்களுக்கு அரைக்கலைக்களஞ்சியப் பாங்குடன் சிறப்புக் குறிப்புகள் தருதல் போன்றவற்றைச் சான்றாகச் சுட்டிக்காட்டலாம்.

பிற அகரமுதலிகளில் உள்ள பிழைகளைத் திருத்துதலும், பிறமொழிச் சொற்களுக்கும் மிகவும் திரிபடைந்த உலக வழக்குச் சொற்களுக்கும் செந்தமிழ்ச்சொல் வடிவம் தரப்படுவதும் இதன் சிறப்புக் கூறுபாடாகும்.

தமிழ் மொழியின் தூய்மை பேணவும், தாய்மை நிலைநாட்டவும் சொற்களின் செவ்விய பொருளறிந்து தரமாகப் பயன்படுத்தவும், ஆராய்ச்சி யாளர்க்கு மொழியியல் புதைபொருள்களை அகழ்ந்து காட்டவும் இந்தத் தொகுப்புகள் பெரிதும் பயன்படும்.

சான்றாக, ஒன்று, இரண்டு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது போன்ற எண்ணுப் பெயர்களுக்குத் தரப்பட்டுள்ள விளக்கங்களும், ஐந்திரம், ஆதி, இந்திரன், ஆய்த எழுத்து போன்றவற்றிற்குத் தரப்பட்டுள்ள மரபிலக்கண விளக்க நுட்பங்களும், இதன் முதன்மைப்பதிப்பாசிரியர் - இயக்குநராக இருந்து இதனைத் தொகுப்பித்த பேராசிரியர் இரா. மதிவாணன், மொழி ஞாயிறு பாவாணர் நெறியில் தடம் பிறழாது ஆய்வுசெய்ய முயன்றிருக்கிறார் என்பதைத் தெற்றெனக் காட்டுகின்றன.

இனி, அடுத்து வரவிருக்கும் மடலங்களை விரைந்து வெளிக்கொணருதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர், முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களும், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களும், உற்றுழி உதவி ஊக்கம் தந்து, ஆக்கம் சேர்க்கும் ஆர்வம் கொண்டு செயற்கரிய செய்யும் செந்தமிழ்ச் செம்மல்களாக நமக்கு வாய்த்திருத்தலின், எண்ணிய எண்ணியாங்கு திண்ணமாக எய்தலாம் எனப் பெருமிதம் கொள்ளலாம். தமிழுக்கும் தமிழகத்துக்கும் பெயர் விளங்கும் காலம் வந்ததெனப் பெரிதும் மகிழலாம்.

தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் திரிந்து தமிழ்ச்சொற்களை ஒன்றுவிடாமல் தொகுத்தல், உரிய விளக்கம் எழுதுதல், நன்கு பதிப்பித்தல் ஆகிய முப்பணிகளிலும் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் பதிப்பாசிரியர்கள், தொகுப்பாளர்கள், பணியாளர்கள் அனைவரும் மேலும் திறம்பட உழைத்து அடுத்தடுத்த அகரமுதலி மடலங்களை ஐந்தாண்டுக் கால வரம்புக்குள் வெளியிடப் பாடுபடவேண்டும் என்று விழைகிறேன்.

வை. பழனிச்சாமி

வண்ணப்படங்களின் பட்டியல்

படத்தாள் எண் (1)	படத்தின் பெயர் (2)	எதிரும் பக்கம் (3)
1.	**உள்ளான் குருவி வகை**	140
	கோரையுள்ளான்	
	கீறியுள்ளான்	
	கோழியுள்ளான்	
	காட்டு உள்ளான்	
	துடுப்பு உள்ளான்	
	மாறியுள்ளான்	
	பதுங்கையுள்ளான்	
	வாலாட்டியுள்ளான்	
	மயில் உள்ளான்	
	மூக்கு உள்ளான்	
	கட்டித்தலை உள்ளான்	
	தடிமூக்கு உள்ளான்	
2.	**உளுவை மீன் வகை**	148
	வெள்ளுளுவை	
	கல்லுளுவை	
	கோரையுளுவை	
	மண்ணுளுவை	
	ஊசிக்கணவாய்	
	ஊசிக்கழுத்தி	
3.	ஊதுவிரியன்	182
	ஊமத்தை	
	ஊளாமீன்	
	ஊற்றுப்பறி	
4.	எக்காளம்	246
	எந்திரம் (திரிகை)	
	எருக்கு	
	எருமைச்சுறா	

படத்தாள் எண் (1)	படத்தின் பெயர் (2)	எதிரும் பக்கம் (3)
5.	எலிக்காதிலை	252
	ஏலரிசிமணி	
	ஏழிலைப்பாலை	
	ஐங்கனி வகை	
	மாதுளை	
	கொளுஞ்சி	
	நாரத்தை	
	எலுமிச்சை	
	தமரத்தை	
6.	ஐம்படைத்தாலி	326
	ஐம்பான்முடி	
	பனிச்சை	
	கொண்டை	
	துஞ்சை	
	குழல்	
	அளகம்	
	ஒட்டாம்பாரை மீன்	
7.	ஒட்டியாணம்	340
	ஒட்டுக்கணவாய்	
	ஒட்டுத்துத்தி	
	ஒட்டுமீன்	
8.	ஓலைப்பாம்பு	422
	ஓலைவாளை	
	ஓரிதழ்தாமரை	
	ஓலைவாலன்	

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

உ

உ[1] *u, தமிழ்நெடுங்கணக்கில் இதழ் குவிவு ஐந்தாமுயிர்க் குற்றெழுத்து;* fifth letter of the Tamil alphabet representing the close back short rounded (labial) vowel sound.

[உ - முன்மைச் சுட்டெழுத்து.]

உ[2] *u, தமிழ் எண்களில் இரண்டு என்னும் எண்;* symbol for the number 2 usually written without the loop. "அ உ வறியா வறிவிலிடை மகனே" (யாப்.வி. 37.) (செ.அக.).

உ[3] *u,* இடை. (part.) 1. (அ) ***தமிழில் மொழி முதலாகாத அயன்மொழி முன்னெழுத்துச் சொற்களுக்கு முன்னொட்டாக வரும் உயிர்க்குறில்;*** prothetic vowel added to Sanskrit and other foreign loan-words beginning with யு, யூ, யோ, ரு, ரூ, ரோ, லு, லூ, லோ, as in உயுத்தம் for யுத்தம். உரோகிணி for ரோகிணி, உலோபி for லோபி. (ஆ) வடமொழி வேற்றுநிலை மெய்ம் மயக்கங்களின் தமிழ் மரபாக்கத்திற்காக மெய்யை உயிர்மெய்யாகப் பிரித்துக் காட்டும் மொழியிடைச் சாரியை; euphonic medial anaptyxis appearing in Sanskritic words in order to separate certain consonantal cluster sounds, as பதுமம் for பத்மம், சுவாமி for ஸ்வாமி, சுலோகம் for ஸ்லோகம், சுருதி for ஸ்ருதி. (நன். 149, உரை). 2. ***மெய்யில் முடியும் எழுத்துடன் சேரும் சாரியை;*** final euphonic anaptyxis developing from the consonantal ending of a word, as in பல்லு for பல், and also in combinations, as in அவனுக்கு for அவற்கு.

உ[4] *u,* இடை. (part.) 1. (அ) ***ஓர் அகச்சுட்டு;*** base of the demons. pronoun expressing a person, place or thing occupying an intermediate position, neither far nor near, and meaning yonder or occupying a position near the person or persons spoken to "செய்குன்று வை" (திருக்கோ. 223). (ஆ) *புறச்சுட்டு;* demons. part. before nouns, expressing intermediate position or position near the person or persons spoken to, as உக்கொற்றன்; expressing a position, as behind or beyond. "ஊழையுமுப் பக்கங் காண்பர்" (குறள். 620). 2. (அ) ***தொழிற்பெயர் ஈறுகளுளொன்று;*** an ending of vbl. nouns as in வரவு. (ஆ) ***பண்புப்பெயர் ஈறுகளுளொன்று;*** an ending of abstract nouns, as in மழவு. (இ) ***வினையெச்ச ஈறுகளுளொன்று;*** ending of the past vbl. pple., as in செய்து; செய்பு. 3. ***ஏவல் ஒருமை வினையீறு;*** sing. imp.vbl. ending. நில்லு, எண்ணு. (செ.அக.).

க., ம., கோத. உ; து. உந்து; பர்., ஊத், ஊர்; கூ. ஒயர்சு; குவி. ஊ; குரு., குச்., மால். உதி; பிரா. ஒ, ஒத்.

[உ[1] → உ[4].]

உகரச்சுட்டு தமிழ்நாட்டில் வழக்கற்றது. ஆயினும் யாழ்ப்பாணத்தில் வழங்குவதாகத் தெரிகின்றது. இது குடியேற்றப் பாதுகாப்பு என்னும் நெறிமுறைப்பட்டது. (வே.க.29).

உ[5] *u,* பெ. (n.) ***சிவசக்தி*** (திருமந். 1751); energy of Śiva. (செ.அக.).

[உ - முன்செலற் கருத்து வேர். ஊக்கம், ஆற்றல்.]

உ[6] *u,* பெ. (n.) ***ஐம்புள்ளுள் காகத்தைக் குறிக்கும் எழுத்து*** (பிங்.); letter representing crow, in pañchapatchi. (செ.அக.).

[உ - பழங்கால உருவெழுத்தமைப்பில் உகரம் காகத்தைக் குறிக்கும் கோட்டுருவத்தில் வரையப்பட்டிருக்கலாம்.]

உ[7] *u,* பெ. (n.) 1. ***உயர்ச்சி;*** height. 2. ***வியப்பு;*** surprise. 3. ***நீர்நிலைகளின் கரை;*** embankment.

[உ → உ[7].]

உ[8] *u,* பெ. (n.) 1. ***நான்காம் வேற்றுமையீறு;*** an ending of dative case. 2. ***இரண்டாம் வேற்றுமையீறு;*** an ending of accusative case.

ம., தெ. உ.

[ம. அவன் + உ = அவனு (அவனுக்கு) தெ. நன்னு (என்னை) - மறைந்து போன வழக்கு. மலையாளத்திலும் தெலுங்கிலும் எஞ்சியுள்ளது.]

உ[9] *u,* இடை. (part.) 1. ***ஒலிக்குறிப்பு இடைச்சொல்;*** onomatopoeic. 2. ***வியப்பு, சினக்குறிப்பு உணர்த்தும் இடைச்சொல்;*** interjection of anger, etc.

ம., க., து., தெ. உ.

உக்கடணம் *ukkadaṇam,* பெ. (n.) 1. ***உரத்துக் கூவுதல்; பேரோசை எழுப்புதல்;*** loud call, clarion call. 2. ***சான்றோர் பலரறியக் கூறி ஒன்றைத் தொடங்கி வைத்தல்;*** inaugurating something in the presence of the elite.

க. உக்கடணெ.

[உகு → உக்கடம்[1] → உக்கடணம். உக்கடணம் → வ. உத்காட்டண.]

உக்கடம்[1] *ukkadam,* பெ. (n.) 1. ***முதலாவது; தொடக்கம்;*** first, beginning. 2. ***வீட்டின் முன்னுள்ள தெருவாயில்; அரண்மனையின் முகப்பு; மதில்; வாயில்;*** gate, facade, entrance.

[உக்கடை → உக்கடம்.]

உக்கடம்[2] *ukkaḍam,* பெ. (n) ***நீர்ச்சால் வடத்தில் தலைக்கண்ணி; முடிகயிறு;*** rope used in well-irrigation.

உக்கடம்[3] *ukkaḍam,* பெ. (n) 1. ***முன் பக்கத்தில் அமர்ந்து செலுத்தும் ஓடம்;*** steering boat. 2. ***ஊரின் எல்லையிலுள்ள காவலிடம்; காவற்பரண்;*** watch-tower.

க. உக்கட; **து.** உக்கடோ.

[உக்கம் = பக்கம், கடைசி, இறுதி, முனை, பின்பக்கமுள்ள பிடரி. ஒ.நோ. உக்கடைப்புனம் = ஊரின் எல்லையிலுள்ள நிலம். உக்கடைவாயில் (கடைசி எல்லை வாயில் (gate) → உக்கடை → உக்கடம்.]

உக்கடம்[4] *ukkaḍam,* பெ. (n.) ***கோவைக்கு அருகிலுள்ள ஓர் ஊர்;*** village near Coimbatore.

[உக்கடை → உக்கடம்.]

உக்கடை *ukkaḍai,* பெ. (n.) ***நீரிறைக்கும் ஏற்றம்;*** wicker basket for drawing water for irrigation.

க. உக்கடியன்த்ர.

[உகு → உக்கு → உக்கடை.]

உக்கணி *ukkaṇi,* பெ. (n.) ***கைத்தறியில் கயிறு இழுத்துக் கட்டுவதற்காக உள்ள ஒரு கருவி;*** accessory of the handloom. (சேரநா.).

ம. உக்கணி.

[உக்கம் → உக்கணி. உக்கம் = கயிறு.]

உக்கம்[1] *ukkam,* பெ. (n.) 1. ***இடை;*** waist. "உக்கஞ்சேர்த் திய தொருகை" (திருமுரு. 108). 2. ***பொருந்திய பக்கம்;*** conjoined side. (செ.அக.).

ம. உக்கம்; **து.** ஒக்க, ஒக்கம்.

[உ → உக்கம். உ = நடுப்பகுதி.]

உக்கம்[2] *ukkam,* பெ. (n.) 1. ***பேரால வட்டம்;*** large circular fan. "உக்கமுந்தட்டொளியும் தந்து" (திவ். திருப்பா. 20). 2. ***சிற்றால வட்டம்;*** small ornamental fan. "உழைச்சென் மகளிருக்க மேற்றி" (பெருங். 1, 34, 213). 3. ***பொன்*** (சங்.அக); gold.

[உகு → உக்கம். உகுத்தல் = கொட்டுதல், சொரிதல், வீசுதல், பொலிதல்.]

உக்கம்[3] *ukkam,* பெ. (n.) ***கட்டித் தூக்கியெடுக்குங் கயிறு;*** rope or cord attached to anything as to a handle. (செ.அக.).

ம. உக்கம்; **க.** உக்க; **து.** உக்கி, ஒக்கி; **தெ.** உக்கமு.

[உ → உக்கம் (உயரம்) = மேலிழுக்கும் அல்லது மேலுயர்த்தும் கயிறு.]

உக்கம்[4] *ukkam,* பெ. (n.) 1. ***நெருப்பு*** (சூடா.); fire. 2. ***வெப்பம்;*** heat.

தெ. உக்க.

[உல் → உள் → உக்கம். உல் = தீ.]

உக்கம்[5] *ukkam,* பெ. (n.) 1. ***உயர்ச்சி;*** height. 2. ***உயர்வு; சிறப்பு;*** sublimity.

[உ[7] → உக்கம்.]

உக்கம்[6] *ukkam,* பெ. (n.) 1. ***எருது*** (பிங்.); bull, ox. 2. ***ஆன்;*** cow.

[ஆ = ஆக்கள். ஒ.நோ. ox. ஆக்கம் → அக்கம் → உக்கம்.]

உக்கம்[7] *ukkam,* பெ. (n.) 1. ***தலை;*** head. "உக்கத்து மேலும் நடுவுயர்ந்து" (கலித். 94). 2. ***சேவற் கொண்டை;*** plume on the head of the cock. 3. ***கோழி;*** fowl.

ம. உக்கம்.

[உ = மேல், உயர்வு. உ → உக்கம். (மேலிருப்பது.)]

உக்கம்[8] *ukkam,* பெ. (n.) ***கடுமை; மிகுதி;*** severity, excess. 'உக்கதவர் தித்ததவர்" (மேருமந். 1097).

[உ → உக்கு → உக்கம்.]

உக்கம்பருத்தி *ukkam-parutti,* பெ. (n.) ***உப்பம் பருத்தி; வனப்பருத்தி;*** Indian cotton-plant. (செ.அக.).

[உக்கம் + பருத்தி.]

உக்கரணம் *ukkaraṇam,* பெ. (n.) 1. ***வீட்டின் சரக்கறை;*** store-house for provisions. 2. ***அரண்மனையின் களஞ்சியம்;*** granary in a palace.

ம. உக்கரணம்; **க., து.** உக்ராண; **தெ.** உக்ராணமு; **மரா.** உக்ராணி.

[உள் + கரணம் = உட்கரணம் - உக்கரணம்; உள் = வீடு, அரண்மனை, அகம் → Skt. griha > த. கிருகம் > கரணம்.]

உக்கரி[1]**-த்தல்** *ukkari-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***வாயாலெடுத்தல்;*** to vomit. (W.).

[உ + கரி.]

உக்கரி[2]**-த்தல்** *ukkari-,* 4. செ.கு.வி. (v.i.) ***உக்காரமிடுதல்;*** hunkara, to bellow, as a bull. (W.).

[முக்காரமிடு → முக்கரி → உக்கரி.]

உக்கரை *ukkarai,* பெ. (n.) ***அக்கரை;*** opposite bank. "இக்கரை நின்றிவர்ந் துக்கரை கொளவே" (புறநா. 357.9).

[உ = அந்த. உகரச்சுட்டு முன்மையும் உயர்ச்சியும் நடுவும் குறித்ததாம்.]

உக்கரைத்தட்டு *ukkarai-t-taṭṭu,* பெ. (n.) ***மண முழவின் வலந்தரையின் நடுப்பாகத்துக்கு மேலுள்ள பாகம்*** (கலைமகள் xii, 400); part just above the middle of the Valantarai of a Mirutaṅgam. (செ.அக.).

[உ + கரை + தட்டு.]

உக்கல்[1] *ukkal,* பெ. (n.) 1. ***பதனழிவு;*** rottenness, putridity. 2. ***உளுத்தது;*** that which is rotten or decayed.

[உகு → உக்கல்.]

உக்கல்² *ukkal,* பெ. (n.) 1. ***பக்கம்;*** side. (W.) 2. ***மருங்கு;*** hip. 3. ***ஆலவட்டம்;*** circular fan made of fragrant roots or palm leaves, carried in procession before idols and great persons. 4. ***ஏறு;*** bull. 5. ***ஆன்;*** cow. 6. ***கோழி;*** fowl. 7. ***தீ;*** fire. (ஆ.அக.).

ம. உக்கல்; **து.** ஒக்க.

உக்கலரிசி *ukkalariši,* பெ. (n.) ***நொறுக்கலரிசி, நொய்யரிசி;*** crushed rice. (சா.அக.).

[உக்கல் + அரிசி.]

உக்கலை *ukkalai,* பெ. (n.) ***மருங்கின் பக்கம்*** (பிங்.); hip.

ம. உக்கல்.

[உக்கம் → உக்கலை.]

உக்கழுத்துமணி *ukkaluttu-mani,* பெ. (n.) ***கழுத்தணி வகை;*** closely fitted necklace of gold beads. (செ.அக.)

ம. உக்கழுத்து.

[உள் + கழுத்து + மணி.]



உக்கழுத்துமணி

உக்களம் *ukkalam,* பெ. (n.) 1. ***யாமக்காவல்;*** night watch. 2. ***தலைக்காவல்;*** advance guard. 3. ***பாளையஞ் சூழகழி;*** entrenchment around a camp. (செ.அக.).

ம. உக்களம்; **க.** உக்கட; **தெ.** உக்களமு; **து.** உக்கட.

[உள் + களம்.]

உக்களவர் *ukkalavar,* பெ. (n.) ***இராக்காவலர்;*** night watchmen. (கதி.அக.).

[உள் + களம் - உக்களம் + அவர்.]

உக்களி *ukkali,* பெ. (n.) ***இனிய பணிகார வகை*** (இராசவைத். 125.); sweet confection. (செ.அக.).

ம. உக்காளி; **தெ.** உக்கர.

[உக்கம் + களி.]

உக்களை *ukkalai,* பெ. (n.) ***இடுப்பு;*** hip. உக்கலை பார்க்க; see *ukkalai.* (செ.அக.).

[உக்கலை → உக்களை. (கொ.வ.)]

உக்காக்கம் *ukkākkam,* பெ. (n.) ***அரைஞாண்;*** waist cord. (யாழ்.அக.).

[உக்கம் + அக்கம் = உக்காக்கம். உக்கம் = இடுப்பு. அக்கம் = கயிறு.]

உக்காரம்¹ *ukkāram,* பெ. (n.) ***கக்கல்*** (பிங்.); vomiting. (செ.அக.).

[உகு → உக்கரம் → உக்காரம்.]

உக்காரம்² *ukkāram,* பெ. (n.) ***ஒலி எழுப்புகை;*** bellowing, as of a bull. (W.) (செ.அக.).

[முக்காரம் → உக்காரம்.]

உக்காரை *ukkārai,* பெ. (n.) ***நீராவியில் வெந்த அஃகுல்லி என்னும் பிட்டு;*** steamed meal-cake.

ம. உக்காலி, உதிரு; **தெ.** உக்கெர

[உஃகுல்லி → உக்குல்லி → உக்கலி → உக்காலி → உக்காலை → உக்காரை. ஒரு கலத்தின் வாயைத் துணியால் கட்டி அதன் மேல் அரிசி மாவையோ அல்லது பிற மாவையோ ஆவியில் வேகவைக்கும் ஒருவகைச் சிற்றுண்டி.]

உக்கி *ukki,* பெ. (n.) 1. ***இருகாதையும் இருகையால் மாறிப்பிடித்துக் கொண்டு உட்கார்ந்தெழும் தோப்புக் கரணம்;*** form of salutation, specially before Ganesa, in which the worshipper is lowering and raising his body a certain number of times while folding his arms across his breast and holding his two ear lobes by alternate hands. 2. ***தண்டனை வகை;*** form of punishment. (செ.அக.).

[உள்கி → உட்கி → உக்கி.]

உக்கிட்டு *ukkittu,* பெ. (n.) ***உட்கட்டு;*** kind of necklace. (செ.அக.).

[உள் + கட்டு - உக்கட்டு → உக்கிட்டு (கொ.வ.).]

உக்கிடர் *ukkidar,* பெ. (n.) ***சிலந்திப்பூச்சி;*** spider. (W.) (செ.அக.).

[உள் + கூடு = உட்கூடு → உக்கூடு → உக்கிடு → உக்கிடர். கூட்டினுள் இருக்கும் பூச்சி வகைகள். கூடு → கூடி → கூடன் என வழங்கி, வடபுல மொழிகளில் 'கீட்' எனத் திரிந்துள்ளதை ஒப்பு நோக்குக.]

உக்கிடு *ukkidu,* இடை. (int.) ***நாணத்தைக் காட்டும் குறிப்புச் சொல்*** (இ.வ.); word expressive of shyness. (செ.அக.).

[உள்கு → உள்கிடு → உக்கிடு.]

உக்கிப்போ-தல் *ukki-p-pō-,* 8. செ.கு.வி. (v.i.) 1. ***உருகிப் போதல்;*** wasting away with grief or pain. 2. ***இளைத்துப் போதல்;*** to pine away. 3. ***அழுகல்;*** to rot.(சா.அக.).

[உள் → உளு → உளுகு → உக்கு → உக்கி + போ.]

உக்கிரநாள் *ukkiranāl,* பெ. (n.) ***தாழி.*** (பரணி), ***கொடு நுகம்*** (மகம்), ***கணை*** (பூரம்), ***முற்குளம்*** (பூராடம்), ***முற்கொழுங்கால்*** (பூரட்டாதி) ***ஆகிய ஐந்து நாண்மீன் கள்*** (சோதிட சிந். 36); five naksatras Parani, Magam, Pūram, Pūrādam, Pūrattādi. (செ.அக.).

[உக்கிரம் + நாள்.]

Office of the Curator, Govt. Oriental Manuscripts Library, Madras-600 005

உக்கிரப்பாண்டியன் *ukkirappāṇḍiyaṉ,* பெ. (n.) ***பாண்டிய மன்னர்களுளொருவன்;*** Pāṇḍiyaṉ monarch.

[இவன் சோம சுந்தர பாண்டியன் மகன்; கடல் சுவற வேல்விட்ட திருவிளையாடல் கண்டவனும் இவனேயாவான்.]

உக்கிரப்பெருவழுதி *ukkira-p-peruvaḻudi,* பெ. (n.) ***கடைக் கழகத் திறுதிப் பாண்டியன்*** (இறை. 1, உரை. பக்.11). ***அகநானூற்றைத் தொகுப்பித்தோன்;*** Pāṇḍiya king who reigned during the period of the Third Tamil Sangam in Madurai and under whose patronage Agaṉāṉūṟu was compiled.

*[உல் → உல்கு → உக்கு → உக்குரம் → உக்குரன் → உக்கிரன். ஒ.நோ. அக்குரன். **உக்குரன்** பார்க்க; see ukkuraṉ.]*

உக்கிரம்[1] *ukkiram,* பெ. (n.) 1. ***கொடுமை;*** blaze, glow, fierceness. "உக்கிர வடவைக்கனல்" (திருவிளை. யானை யெய். 20). 2. ***ஊக்க மிகுதி;*** vehemence, ardour, intensity, fervency, impetuosity. 3. ***சினம்;*** wrath, rage, fury. "உக்கிரமாக வீமன் வந்தவுறுதி கண்டு" (பாரத. இரண்டாம். போ. 12). (செ.அக.).

[உல் = தீ, அனல், எரிதல். உல் + கு = உக்கு → உக்குரம் → உக்கிரம். ஒ.நோ. சுல் = எரிதல். சுல் + கு = சுக்கு → சுக்கிரன். சுக்கி = விண்மீன்.]

உக்கிரம்[2] *ukkiram,* பெ. (n.) ***இலாமிச்சை*** (மலை.); cuscus grass. (செ.அக.).

உக்கிரம்[3] *ukkiram,* பெ. (n.) ***இசையுறுப்புகளுளொன்று*** (சிலப். 3, 150 உரை); limb of a musical piece, one of four Gīta-v-uṟuppu.

உக்கிரமருந்து *ukkiramarundu,* பெ. (n.) 1. ***காரமருந்து;*** pungent and stimulating medicine. 2. ***இதளிய கந்தக பாடாணங்களைக் கொண்டு செய்யுமருந்து;*** powerful medicine prepared from mercury, sulphur and arsenical compounds. 3. ***வேதைக்குதவும் மருந்து;*** one used in alchemy for transmuting metals. 4. ***கொப்புளத்தை எழுப்பு மருந்து;*** blistering agent. 5. ***வெடிமருந்து;*** gun powder. (செ.அக.).

உக்கிரவெயில் *ukkira-veyil,* பெ. (n.) ***கடுமையான வெயில்;*** intense heat of the sun.

[உக்கிரம் + வெயில்.]

உக்கிரன் *ukkiraṉ,* பெ. (n.) ***சிவத்திரு மேனிகளுள் ஒன்று*** (காஞ்சிப்பு. சிவபுண்.15); manifestation of Siva. (செ.அக.).

[உல் = தீ. உல் → உக்கு → உக்குல் → உக்குலன் → உக்குரன் → உக்கிரன். ஒ.நோ. அக்கு → அக்குரன்.]

உக்கிராணக்காரன் *ukkirāṇa-k-kāraṉ,* பெ. (n.) ***சரக்கறை மேற்பார்ப்போன்;*** steward incharge of provisions, store keeper.

ம. உக்ராண்; க. உக்ராண்க, உக்ராணதவ; து. உக்ராண்; தெ. உக்ராணி, உக்கிராபுவாடு.

[உள் + கரணம். உள் = வீடு, அரண்மனை. கரணம் = மேற்பார்ப்பவன், கணக்கன். காரன் பெயரீறு.]

உக்கிராணம் *ukkirāṇam,* பெ. (n.) ***வீட்டுச் சரக்கறை;*** store house for provisions, granary. (செ.அக.).

தெ. உக்ராண; க., து. உக்ராண; ம. உக்ராணம். *Mar.* ugraṇi.

*[உள் + கரணம் - உக்கரணம் → உக்கிராணம் (கொ.வ.) **உக்கரணம்** பார்க்க; see ukkaraṇam.]*

உக்கு[1]**-தல்** *ukku-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***மேலெழும்புதல்;*** to rise, go up. 2. ***பொங்குதல்;*** to spring.

க., து. உக்கு.

[உ → உகு → உக்கு.]

உக்கு[2]**-தல்** *ukku-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***மக்கிப்போதல்;*** to rot, decay, moulder. உக்கின மரம். 2. ***மெலிதல்;*** to pine away, waste away. அவள் துக்கத்தால் உக்கிப் போகிறாள் (இ.வ.). (செ.அக.).

ம. உக்குக.

[உள்கு → உட்கு → உக்கு. உள்குதல் = உள்ளொடுங்குதல், உகுத்தல், உட்குதலாம். ஒ.நோ. வெள்கு → வெட்கு - வெட்குதல்.]

உக்கு[3] *ukku,* பெ. (n.) ***இலவங்கம்*** (சங்.அக); clove.

[உள்கு = உட்சுருங்கு. உள்கு → உக்கு.]

உக்குவிடு-தல் *ukkuviḍu-,* 20. செ.கு.வி. (v.i.) ***கரைந்து விடுதல்;*** to dissolve. "உப்பியல் பாவையுறையுற்றது போல உக்குவிடு மென்னுயிர்" (கலி. 132. 17).

[உள்கு = சுருங்குதல், கரைதல், உள்ளு → உக்கு + விடு.]

உக்குளான் *ukkuḷāṉ,* பெ. (n.) ***சருகு தின்னும் முயல்;*** hare which is supposed to live on dried leaves (W.). (செ.அக.).

[உகுதல் = சொரிதல், வீழ்தல். உகு → உக்கு = கீழே விழுந்த சருகு. உக்கு → உக்குளான் = சருகு தின்னும் முயல்.]

உக்குறள் *ukkuṟaḷ,* பெ. (n.) ***குற்றியலுகரம்;*** shortened 'u'. "உயிர்வரி னுக்குறள் மெய்விட் டோடும்" (நன். 164). (செ.அக.).

[உ + குறள் - குறள் = குறுகியது. உக்குறள் = குறுகிய உகரம்.]

உக்குறுமை *u-k-kuṟumai,* பெ. (n.) ***உகரக் குறுக்கம்;*** shortened 'u'. (ஆ.அக.).

உக்கெலும்பு *u-k-kelumbu,* பெ. (n.) ***மார்பெலும்பு;*** breast bone. (சா.அக.).

[உ - முன்மைச் சுட்டு மார்பைக் குறித்தது. உ + எலும்பு - உக்கெலும்பு.]

உக்கை *ukkai,* பெ. (n.) ***எருது;*** ox. (loc.). (ஆ.அக.).

[உக்கு = உயர்வு, செருக்கு, செருக்குள்ள காளை. உக்கு → உக்கை.]

உக[1]-த்தல் *uga-*, 3. செ.கு.வி. (v.i.) 1. ***உயர்தல்;*** to ascend, rise stately, soar upward. "மாவிசும் புகந்து" (மதுரைக். 334). 2. ***உயரப் பறத்தல்*** (பதிற். 779); to fly high.

ம. உக்குக; **க.** உக்கு (உப்பு); **து.** உக்கு; **தெ.** உக்கின்சு (குதித்தல்); *Goth.* hanhs; *Ger.* hock; *Ice.* har; *As.* heat; *E.* high.

[உவ → உக → உக-த்தல். ஒ.நோ. சிவப்பு → சிகப்பு. ஆவா → ஆகா (இடைச்சொல்).]

உக[2]-த்தல் *uga-*, 3. செ.கு.வி. (v.i.) 1. ***மகிழ்தல்*** (திவ். இயற். 2,8); to enjoy, to be glad, pleased, satisfied. 2. ***விரும்புதல்;*** to like. "காக்கை யுகக்கும் பிணம்" (வாக்குண். 24).

[உவ → உக → உக-த்தல் = மகிழ்தல், உயர்தல். மேற்செலற் கருத்து மகிழ்தற் கருத்தில் விரியும்.]

உகட்டு-தல் *ugattu-*, 20. செ.கு.வி. (v.i.) ***அருவருப்பா தல்;*** to nauseate. "உகட்டிப் போந்த செய்தி" (திவ். திருக்குறுந். 4. வியா. பக்.17).

[உகள் = வெளிவரல். உகள் + து = உகட்டு = புறந்தள்ளு, உருட்டு.]

உகந்துடைமை *ugand-udaimai*, பெ. (n.) ***கணவ னுடைய சொத்தில் மனைவிக்குரிய பங்கு;*** right of a married woman to a share of her husband's property. (Nāñ.). (செ.அக.).

[உவ → உவந்து → உகந்து + உடைமை = விரும்பி எடுத்துக் கொள்ளத்தக்க உடைமை.]

உகப்பார்பொன் *ugappār-pon*, பெ. (n.) ***வரிவகை*** (S.I.I. iii. 110.); tax. (செ.அக.).

[உவ → உவப்பார் → உகப்பார் + பொன்.]

உகப்பு[1] *ugappu*, பெ. (n.) ***உயர்ச்சி; "உகப்பே உயர்வு"*** (தொல்.சொல். 306); height, elevation. (செ.அக.).

[உ → உக → உகப்பு.]

உகப்பு[2] *ugappu*, பெ. (n.) 1. ***மகிழ்ச்சி;*** pleasure; joy. "பூதலத்தோ ருகப்பெய்த" (திருவாச. 11..5). 2. ***விரும்பி வாழுமிடம்;*** happy resort, favourite resort. "இராவணனை..., யெய்தானுகப்பு" (திவ். இயற். நான்மு. 28). 3. ***விருப்பம்;*** wish, choice. (செ.அக.).

[உவ → உக → உகப்பு.]

உகம்[1] *ugam*, பெ. (n.) ***ஊழி;*** age of the world, long mundane period of years. "உகம் பல சென்றன" (கந்தபு. மேருப். 66).

ம. உகம்; *O.E.* geoc; *E.* yoke; *OHG., G.* joch; *OS., Goth.* juk; *ON.* ok; *L.* jugum; *Skt.* yuga.

[உகு → உகம். உகுதல் = கெடுதல், அழிதல். முடிதல் = உலகம் முடியும் காலம்.]

உகம்[2] *ugam*, பெ. (n.) 1. ***நுகம்;*** yoke. 2. ***இணை;*** pair.

[உகு → உகம் = முடிவு, முனை, ஏர்க்காலின் முனைப்பகுதியில் பொருத்தப்படுவது.]

உகம்[3] *ugam*, பெ. (n.) ***நிலவுலகம்;*** earth, world.

ம. உகம்.

[உலகம் → உகம்.]

உகம்[4] *ugam*, பெ. (n.) 1. ***தோற்றம்; தொடக்கம்;*** beginning. 2. ***முதலாவது;*** first for most. 3. ***தலைப்பாட்டு*** (சிலப். 14. 156, உரை.); leading song.

[உகு → உகம். உகு = மேலெழும்புதல், உயர்தல், முதலாதல்.]

உகம்[5] *ugam*, பெ. (n.) 1. ***நாள்*** (அக.நி.); day. 2. ***நீட்சி;*** length. (செ.அக.).

[உகு → உகம். உகுதல் = கழிதல். உகம் = கழியும் நாள், நீட்சி.]

உகமகள் *ugamagal*, பெ. (n.) ***நிலமகள்*** (ஆ.அக.); goddess of the earth. "உகமகணுதற்கண்" (இரகு. திக்குவி. 208).

[உகம்[3] + மகள்.]

உகமம் *ugamam*, பெ. (n.) ***பிறந்த இடம்;*** birth place.

[உகு → உகம் + அம்.]

உகமுடிவு *ugamudivu*, பெ. (n.) ***ஊழியிறுதி*** (திவா.); end of the world.

[உகம் + முடிவு.]

உகரக்குறுக்கம் *ugara-k-kurukkam*, பெ. (n.) ***குற்றிய லுகரம்;*** shortened 'u'.

*[உகரம் + குறுக்கம். **குற்றியலுகரம்** பார்க்க; see **kurriyalugaram.**]*

உகரக்கேடு *ugara-k-kēdu*, பெ. (n.) ***நிலை மொழியி னிறுதியில் நின்ற உகரம் வருமொழி புணருமிடத்துக் கெடுதல்;*** elision of final 'u' of the first-word when joining with another word having a vowel for initial.

[உகரம் + கேடு. கெடு → கேடு.]

உகரம் *ugaram*, பெ. (n.) 1. ***ஐந்தாமுயிர்;*** fifth letter (vowel) of the Tamil alphabet. 2. ***தமிழ் எண்களில் இரண்டு என்னும் எண்;*** symbol for the number two usually written without the initial loop (2).

[உ + கரம். கரம் - சாரியை.]

உகல்[1]-தல் *ugal-*, 2. செ.கு.வி. (v.i.) 1. ***உதிர்தல்; கீழேவிழுதல்;*** to drop off; as leaves, fruits; to fall out, as hair; to be blasted, nipped, shaken with the wind, to drop down, as tears. 2. ***சிந்துதல்;*** to be spilled, to fall. 3. ***சொரிதல்;*** to pour out. 4. ***சுழலல்;*** to be disconnected. 5. ***இறங்குதல்;*** to descend. 6. ***குதித்தல்;*** to jump.

[உக → உகம்.]

உகல்²(லு)-தல் *ugal(lu)-,* 2. செ.கு.வி. (v.i.) 1. ***குதித்தல்;*** to jump. 2. ***தாவு;*** to billow. "உகலியாழ் கடலோங்கு பாருளீர்" (தேவா. 75.1).

[உகு → உகல் → உகல்(லு)தல். (வே.க. 31.)]

உகவல்லி *ugavalli,* பெ. (n.) ***நாகமல்லி;*** ringworm-root.

[உகம்[5] + வல்லி.]

உகவு *ugavu,* பெ. (n.) ***நிலையழிவு;*** to be agitated, to wear off, to pass away. (செ.அக.).

[உகு → உகுவு → உகவு]

உகவை¹ *ugavai,* பெ. (n.) 1. ***மகிழ்ச்சி;*** joy, happiness. "உகவையா னெஞ்ச முள்ளுருகி" (திவ். திருவாய். 6,2,9). 2. ***உவப்பு;*** cheer, inspiration. "முகவை யின்மையின் உகவை யின்றி" (புறம். 362-11).

[உவ → உக → உகவை.]

உகவை² *ugavai,* பெ. (n.) 1. ***உதவி; நன்மை;*** help, good, favour. "உள்குவார்கட்கு உகவைகள் பலவுஞ் செய்து" (தேவா. 1146). உகவைப்பொன் பார்க்க (S.I.I. iii, 38); see *ugavai-p-poṉ.* (செ.அக.).

[உவ → உக → உகவை = உவத்தற்குரியது.]

உகவைப்பொன் *ugavai-p-poṉ,* பெ. (n.) ***காசாயவகை*** (S.I.I. v.ii, 290); a tax in money. (செ.அக.).

[உவ → உக → உகவை + பொன்.]

உகள்-தல் *ugaḷ-,* 5. செ.கு.வி. (v.i.) ***உகளு-தல்*** பார்க்க. see *ugaḷu.*

உகளம்¹ *ugaḷam,* பெ. (n.) ***விருப்பம்*** (அக.நி.); desire, delight.

உகளம்² *ugaḷam,* பெ. (n.) 1. ***இணை;*** pair, brace, couple. "உகளமு முணரின்" (கோயிற்பு. பதஞ். 65). 2. ***இரண்டு;*** two.

உகளி¹-த்தல் *ugaḷi-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***குதித்தல்;*** to leap. "பேய்பிண மிக்கன வென்றுகளித் தனவே" (பாரத. பதினாறாம். 51). 2. ***மகிழ்ச்சி மிகுதல்;*** to delight, exult. "மேலைத் தொண்டு களித்து" (திவ். திருவாய். 10,8,7). 3. ***பாய்தல்;*** to jump.

[உகுதல் = மேலெழும்புதல். உகு → உகள் → உகளு → உகளி-த்தல்.]

உகளி² *ugaḷi-,* பெ. (n.) ***பிசின்*** (நாமதீப.); gum.

[உகள் → உகளி. மரப்பிசின் தானாகப் பொங்கி மேல் வருத லால் பெற்ற பெயர்.]

உகளு¹-தல் *ugaḷu-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***தாவுதல்;*** to leap, bound, frisk. "இரலை...யுகள" (குறுந். 65). 2. ***ஓடித்திரிதல்;*** to run about. "பன்மயிர்ப் பிணவொடு கேழ லுகள" (மதுரை. 74). 3. ***பாய்தல்;*** to leap over, bound. 4. ***கடத்தல்;*** to pass over (ஆ.அக.). 5. ***நழுவி விழுதல்;*** to slip down, fall off. "ஒளிமேகலை யுகளும்" (திருக்கோ. 350). 6. ***பிறழ்தல்;*** to turn upside down. "பொருகய லுகளிப் பாய" (சீவக. 1854). 7. ***வாயா லெடுத்தல்;*** to vomit.

Mar. ugal.

[உகு → உகுள் → உகள் → உகளு. உகுதல் = மேலெழும்புதல், ததும்புதல், பொங்கி எழுந்து சிதறுதல்.]

உகளு²-தல் *ugaḷu-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***உயர்தல்;*** to go up. 2. ***பெருகுதல்; மிகுதல்;*** to become excess, grow more.

க. உக்கலி.

[உகு → உகுள் → உகள் → உகளு.]

உகா *ugā,* பெ. (n.) 1. ***ஓமைமரம்*** (பிங்.); tooth-brush tree. 2. ***உவா மரம்*** (மலை.); sand paper tree.

ம. உகமரம்.

[உவா → உகா.]



உகாமரம்

உகாக்காய் *ugā-k-kāy,* பெ. (n.) ***உகா மரத்தின் காய்;*** ooga fruit. (சா.அக.).

[உகா + காய்.]

உகாதி *ugādi,* பெ. (n.) ***ஆண்டின் தொடக்கம்;*** beginning of the year.

க., தெ. உகாதி.

[உகம்[4] + ஆதி.]

உகாப்பட்டை *ugā-p-paṭṭai,* பெ. (n.) ***உகா மரத்தின் பட்டை;*** bark of the tree, ugā. (சா.அக.).

[உகா + பட்டை.]

உகாமை *ugāmai,* பெ. (n.) 1. ***சிதறாமை;*** not spilled. 2. ***வெளியிடாமை;*** not let out, not spoken.

[உகு + ஆ + மை.]

உகாய் *ugāy,* பெ. (n.) ***ஒருவகை மரம்;*** a kind of tree. "உலறுதலை உகாஅய்" (நற். 66).

[உவா → உகா → உகாய். உவப்பு = உயரம்.]

உகாய்க்குடிகிழார் *ugāy-k-kuḍikiḻār,* பெ. (n.) ***கடைக்கழகப் புலவர்களுள் ஒருவர்;*** poet of the Sangam period.

[உகாய்க்குடி + கிழார். உகாய்க் குடி என்னும் ஊரினர். உகாய்க் குடி என்பது உகாய் (ஓமை) மரத்தினால் பெற்ற பெயர்.]

உகாயவாகை *ugāyavāgai,* பெ. (n.) ***ஒருவகை வாகை மரம்;*** a kind of sirissa tree. (சா.அக.).

[உகாய் + வாகை → உகாய வாகை.]

உகாரம் *ugāram,* பெ. (n.) 1. ***உகரக்குறில் எழுத்து;*** short vowel 'u'. 2. ***இரக்கம் சுட்டிய இடைச்சொல்;*** interjection denoting compassion. 3. ***இளகும் உப்பு; கல்லுப்பு;*** black salt.

[உ + காரம்.]

உகாரவுப்பு *ugāra-v-uppu,* பெ. (n.) ***கல்லுப்பு*** (மூ.அ.); black salt, impure chloride of sodium.

[உகாரம் + உப்பு.]

உகிர் *ugir,* பெ. (n.) ***நகம்;*** finger or toe nail, talon, claw. ''உகிர்த்தொடர் கழன்று'' (மணிமே. 20:59).

ம. உகிர்; **கை.** கோரு; **க.** உகுரு; **கோத.** **ஊர்,** ஊர்கள்; **துட.** ஊர்; **குட., நா., து.** உகுரு; **தெ.** கோரு; **கொலா.** கோர்; **பர்.** கோரி; **கூ.** கோர; **குவி.** கோரு; **கட.** கேரெ; **குரு.** ஒரோக்; **மால்.** ஓர்கு; **பிரா.** கோர் (விரல்); **பட.** உகில்.

[உகு → உகுல் → உகுர் → உகிர். உகுதல் = மேலெழும்புதல், முளைத்தல்.]

உகிர்ச்சுற்று *ugir-c-cuṟṟu,* பெ. (n.) ***நகச்சுற்று;*** whitlow. ''உகிர்ச்சுற்றில் உலக்கை விழுந்தாற்போல்'' (பழ.). (செ.அக.).

[உகிர் + சுற்று.]

உகிர்நிலைப்பசாசம் *ugir-nilai-p-pašāšam,* பெ. (n.) ***பிண்டிக்கை முப்பத்து மூன்றனுள் ஒன்று. அது சுட்டு விரலும் பெருவிரலும் உகிர்நுனை கவ்வி நிற்பது.*** (சிலப். 3,18. உரை); variety of gesticulation in which the tip of the nail in the thumb is brought into close with that of the fore-finger. (செ.அக.).

[உகிர் + நிலை + பசாசம். பசைதல் = விரும்புதல், ஒட்டுதல், சேர்தல். பசை → பசையம் → பசாயம் → பசாசம்.]

உகிர்ப்புறவன் *ugir-p-puṟavaṉ,* பெ. (n.) ***நகத்தின் மேல் அணியும் அணிவகை*** (S.I.I. ii. 16); jewel for nails. (செ.அக.).

[உகிர் + புறவன். புறம் → புறவன். புறம் = மேலே.]

உகிரம் *ugiram,* பெ. (n.) ***இலாமிச்சை;*** cuscus-grass.

[உகிர் → உகிரம்.]

உகிலாதி *ugilādi,* பெ. (n.) ***புளி;*** tamarind. (சா.அக.)

[எகின் + ஆதி - எகினாதி → எகிலாதி → உகிலாதி.]

உகின் *ugiṉ,* பெ. (n.) ***எகின்; புளிமா*** (மலை.); Indian hogplum.

[எகின் → உகின்.]

உகு[1]**-தல்** *ugu-,* 21. செ.கு.வி. (v.i.) 1. ***உதிர்தல்;*** to shed or part with, as leaves from a tree, to shed, as feathers or hair, to become separated. ''போயுகு மிலைகள்'' (சி.சி. 1,15). 2. ***சிதறுதல்;*** to be strewed, scattered. ''உண்கவுகாமை நன்கு'' (ஆசாரக். 21.). 3. ***சிந்துதல்;*** to be spilled; to fail; to pour out. ''அங்கணத்து ளுக்க வமிழ்தற்றால்'' (குறள். 720). 4. ***சுரத்தல்;*** to trickle gently as water from a spring, or gush forth, as milk from cow's udder (J). 5. ***கெடுதல்;*** to wear off, pass away; to be lost. ''இளமையுகா நின்ற மேனியும்'' (திருநூற். 45). 6. ***சாதல்;*** to fall down, fig. to die. ''உக்கார் தலைபிடித்து'' (தேவா. 641,4). 7. ***கரைந்து தேய்தல்;*** to melt, pine, languish, wither. ''உக்குவிடு மென்னுயிர்'' (கலித். 138). 8. ***மறைதல்;*** to set, as heavenly bodies. ''உதயக் குன்றினின்றுகு குன்றில்'' (கம்பரா. இராவணன்றா. 39.). 9. ***பறத்தல்;*** to fly about. ''ஊதவுகு தன்மையினொடொல்கியுற நின்றான்'' (சீவக. 2014). 10. ***நிலை குலைதல்;*** to be agitated. ''நெஞ்சுக... கண்ணீர் மல்க'' (தஞ்சைவா. 150). 11. ***உமிழ்தல்;*** to spit.

க., து. உகு, உகி.

[உளு → உகு → உகு-தல் (வே.க.29.).]

உகு[2]**-தல்** *ugu-,* 21. செ.கு.வி. (v.i.) 1. ***முளைத்தல்; தோன்றுதல்;*** to sprout, appear. 2. ***சிறத்தல்;*** to be glorified.

[உ → உகு → உகு-தல். உ = உயர்ச்சி.]

உகு[3]**-த்தல்** *ugu-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***சிதறச்செய் தல்;*** to let fall, spill, scatter. ''ஊஉனன்மையி னுண்ணா துகுத்தென'' (மலைபடு. 148). 2. ***உதிர்த்தல்;*** to cast, as leaves, to exuviate, as a bird its feathers. ''பழன மஞ்ஞை யுகுத்த பீலி'' (புறநா. 13). 3. ***வெளியிடுதல்;*** to emit, pour out. ''சீற்றமுகுத்த செந்தீ'' (கம்பரா. இராவணன்றா. 27.). 4. ***சிந்துதல்;*** to shed, as tears. ''நெடுங்கணீ ருகுத்து'' (சிலப்.பதிக. 32). 5. ***சொரிதல்;*** to pour. ''மென்பழ லுகுத்த தேனும்'' (நைடத.நாட்டுப். 20).

க. உகிசு.

[உழு → உகு → உகு-த்தல். உகு = சிந்து (சிந்துதல்), சிதறுதல், தெளித்தல். உகு > வ. உக்ஷ (வ.மொ.வ. 90.).]

உகுணம் *uguṇam,* பெ. (n.) ***மூட்டுப்பூச்சி;*** bed-bug. (W.)

[உருள் → உகுள் → உகுணம்.]

உகுருவி *uguruvi,* பெ. (n.) ***சூரைச்செடி;*** jackal jujuba. (சா.அக.).

[உகு → உகுல் → உகுர் → உகுருவி.]

உகுல் *ugul,* பெ. (n.) 1. ***வீழ்ச்சி;*** fall. 2. ***கேடு;*** ruin.

[உகு → உகுல்.]

உகுவு *uguvu,* பெ. (n.) 1. ***சிந்துகை;*** spilling. "சோர்ந்துகு வன்ன" (மதுரைக். 415).

[உகு → உகுவு.]

உகுழ் *uguḻ* பெ. (n.) ***உகுள்*** பார்க்க; see *uguḷ.*

க. *உகும்.*

[உகுள் → உகுழ்.]

உகுள் *uguḷ,* பெ. (n.) 1. ***சொரிதல்;*** pouring. 2. ***உமிழ்தல்;*** spitting. 3. ***கொப்பளித்தல்;*** to wash the mouth inside.

க. உகுள்.

[உகு → உகுல் → உகுள்.]

உகுனை *ugunai,* பெ. (n.) ***நெற்பயிருக்குரிய நோய் வகை*** (நீலகேசி. 366. உரை); disease affecting paddy. (செ.அக.).

[உகு + நோய் - உகுநோய் → உகுனை.]

உகே *ugē,* பெ. (n.) ***கொண்டாட்டங்களின் போது வெற்றியாகட்டும் என்னும் பொருளில் எழுப்பப்படும் முழக்கம்;*** slogan raised on the occasion of festivals or function of grand celebration. மாதையனுக்கு உகே; மாதேவனுக்கு உகே! (கொங்.வ.).

க. உகே.

[உகை → உகே. உகை = செலுத்துதல், முன்வருதல், மேலோங்கு தல், வெற்றி பெறல்.]

உகை[1]-தல் *ugai-,* 4. செ.கு.வி. (v.i.) ***செல்லுதல்;*** to move, as a boat; to go, as a vehicle; to walk, as an animal. "காமவுததியைக் கரைவிட வுகையு நாவா யானும்" (கல்லா. 19). (செ.அக.).

[உகு → உகை → உகை-தல் = மேற்செல்லுதல், எழுதல்.]

உகை[2]-த்தல் *ugai-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***செலுத்து தல்;*** to drive as a carriage, to ride, as a horse, to row, as a boat, to discharge, as an arrow. "பெருந்தோணி பற்றி யுகைத்தலும்" (திருவாச. 30,4). 2. ***எழுப்புதல்;*** to stir up, as dust. "பலபுரவி நீறுகைப்ப" (மதுரைக். 184). 3. ***பதித்தல்;*** to set, as a gem. "நீலமொன் றுகைக்கு நிறைந்த கணையாழி" (பணவிடு. 97). 4. செ.கு.வி. (v.i.) 1. ***எழுதல்;*** to rise. "உகத்தின் முடிவினி லுகைத்த கனைகடல்" (கலிங். 342. புதுப். 11,44). 2. ***உயரவெழும்புதல்;*** to leap, jump up. "கொடித்தடந் தேரினின் றுகைத்துமுன் குதியா" (பாரத. நிரைமீ. 41).

க. உகு; *GK.* ago; *L.* ago.

[உ → உகு → உகை → உகை-த்தல்.]

உகை[3] *ugai,* பெ. (n.) ***உகா;*** tooth-brush tree. (செ.அக.).

[உகா → உகை.]

உகை[4] *ugai,* பெ. (n.) ***பானை;*** pot.

[உகு → உகை. கொட்டிவைக்கப் பயன்படுவது.]

உங்கண் *uṅgaṇ,* வி.எ. (adv.) ***உவ்விடம்;*** yonder, where the person spoken to is chiefly poetic. "தனயரைக் கண்டீரோ வுங்க ணென்ன" (சேதுபு. அக்கினி. 32).

[உ + கண் → உக்கண் → உங்கண்.]

உங்கரி-த்தல் *uṅgari-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***உம்மென் றொலித்தல்;*** to utter the exclamatory sound of 'hum' expressive of contempt or displeasure. "காமர் வில்லாளி யாகி யுங்கரித்து" (திருக்காளத்.பு. 6, 39). 2. ***அதட்டு தல்;*** to rebuke authoritatively, hector, threaten. 3. ***உரப்புதல்;*** to whoop, vociferate inarticulately as when driving cattle or in scaring away birds, beasts, or human beings. 4. ***உங்காரஞ் செய்தல்;*** to utter 'hum' expressive of menace.

ம. உங்கு.

[உம் + கரி-த்தல். உம் = ஒலிக்குறிப்பு இடைச்சொல். கருத்தல் → கரித்தல். கருத்தல் = செய்தல். உம்கரித்தல் = உம் என்னும் ஓசை எழுப்புதல். விரைவாகச் செலுத்துதல் குறிப்புமாம்.]

உங்காரணை *uṅgāraṇai,* பெ. (n.) ***அவுரி;*** indigo, Indigofera tinctoria. (சா அக.).

[உங்காரம் → உங்காரணை.]

உங்காரம் *uṅgāram,* பெ. (n.) 1. ***அச்சுறுத்தும் ஒலி*** (தொனி); exclamation 'hum' expressive of menace. "உங்காரத்தி னுரப்பு மோதையாள்" (கந்தபு.அக்கினி. 95). 2. ***வண்டின் ஒலி;*** buzzing sound, as that made by bees in flight. "உங்கார மதுகரங்கள்" (பாரத.வசந்த. 3).

[உம் + காரம் - உங்காரம்.]

உங்கு[1] *uṅgu,* வி.எ. (adv.) ***உவ்விடம்*** (கந்தபு.உமைவரு. 31); yonder, where the person spoken to is.

[உ → உங்கு (முன்மைச் சுட்டு).]

உங்கு[2] *uṅgu,* பெ. (n.) ***முன்னிலையில்; முன்பு;*** in the presence of, in front of.

[ஊங்கு → உங்கு. ஒ.நோ. ஊது → உது.]

உங்குணி *uṅguṇi,* பெ. (n.) ***பெருங் கிளிஞ்சில் எனப் படும் நீலநிறக் கடல்மீன்;*** bluish sea-fish.

[உ → உங்குணி.]

உங்கை *uṅgai,* இடை. (part.) 1. ***உன் தங்கை;*** your sister younger than you. "மூக்குங்கையரியுண்டாள்" (கம்பரா. சூர்ப்பண. 125). 2. ***உன் தாய்;*** your mother.

[உன் + கை = உங்கை. கை ≈ இளையள், மெல்லியள், பெண். ஐ = மென்மை, அழகு, ஐ → கை (மென்மையுடைவள்).]

உங்ஙன்[1] *uṅṅaṉ,* வி.எ. (adv.) 1. ***உவ்வாறு;*** in the way you do. 2. ***உவ்விடம்;*** in the place where you are. "என் தனயரைக் கண்டீரோ உங்ஙன்" (சேதுபு. அக்கினி. 32).

[ஊங்கு → ஊங்கண் → உங்கண் → உங்கன் → உங்ஙன். (மு.தா. 32.)]

உங்஧ன்[2] *uṅṅan,* வி.எ. (adv.) 1. ***அத்தன்மை;*** thus, so, in that way. 2. ***இத்தன்மை;*** thus, so, in this way. 3. ***உத்தன்மை;*** thus, so, this or that (intermediate) way.

[ஊங்கண் → உங்கண் → உங்கன் → உங்஧ன்[2].]

உச்சக்கோள் *ucca-k-kōḷ,* பெ. (n.) ***உச்ச நிலையடைந்த கோள்;*** planet occupying an exalted position or sign in the zodiac (astrol.). (ஆ.அக.).

[உச்சம் + கோள்.]

உச்சகாரம் *uccagāram,* பெ. (n.) ***உகரமூர்ந்த சகர எழுத்து, 'சு';*** letter 'cu' being a vowel consonant of the combination 'u' and 'c'. (பாண்டி.அக.).

[உ + சகாரம்.]

உச்சசந்தி *ucca-sandi,* பெ. (n.) ***உச்சநிலைக் கோள் களின் சந்திப்பு;*** superior conjunction of planets. (Astrol.) (C.G.)

[உச்சம் → உச்ச + சந்தி.]

உச்சட்டம் *uccaṭṭam,* பெ. (n.) 1. ***நேர்மை;*** straightness. 2. ***இலக்கு;*** mark. (செ.அக.).

[உச்சம் → உச்சட்டம். அட்டம் = தன்மை சுட்டிய பெயர் ஈறு.]

உச்சட்டை *uccaṭṭai,* பெ. (n.) 1. ***ஒல்லி;*** thinness, slenderness (Loc.). 2. ***ஒஞ்சட்டை*** பார்க்க; see *oñjaṭṭai.*

[ஒஞ்சட்டை → உஞ்சட்டை → உச்சட்டை]

உச்சடம்[1] *uccaḍam,* பெ. (n.) 1. ***ஓர் புல்;*** a kind of cyprus. 2. ***ஓர்வகை வெள்ளைப் பூண்டு;*** a kind of garlic. 3. ***குன்றிமணி;*** Indian liquorice. 4. ***சரளங்காய்;*** Indian plum. (சா.அக.).

[ஒருகா. ஒள் + சடம் - ஒச்சடம் → உச்சடம்]

உச்சடம்[2] *uccaḍam* பெ. (n.) 1. ***சினம்;*** anger. 2. ***விரைவு;*** speed.

[உச்சம் → உச்சடம்.]

உச்சடை[1] *uccaḍai,* பெ. (n.) 1. ***நறுமணப்புல்;*** fragrant grass. 2. ***ஒருவகைக் கிழங்கு;*** edible tuber, root edible. 3. ***சிறுநெல்லிச் செடி;*** plant.

க. உச்சடெ

[உச்சடம் → உச்சடை.]

உச்சடை[2] *uccaḍai,* பெ. (n.) 1. ***ஆகுலம்*** (இடம்பாசாரம்); foppishness. 2. ***வெள்ளுள்ளி;*** garlic. 3. ***வட்டக்கோரை;*** a kind of grass. 4. ***சீற்றம்;*** anger. 5. ***வழக்கம்;*** habit.

[உச்சடம் → உச்சடை.]

உச்சண்டம்[1] *uccaṇḍam* பெ. (n.) ***கடுமையான தீவிர மானது;*** ferocious. இது உச்சண்ட மாகாளி கோவில் (உ.வ.).

க. உச்சண்ட

[உச்சி → உச்சம் → உச்சண்டம்.]

உச்சத்தலம் *ucca-t-talam,* பெ. (n.) ***உச்சி;*** pate, crown of head; top, summit. 'உச்சத் தலத்திடை நிற்ப தபானன்' (பிங்.).

[உச்சம் + தலம்.]

உச்சத்தாவு *ucca-t-tāvu,* பெ. (n.) ***கோளின்*** (கிரகத்தின்) ***உயர்நிலை;*** exalted position of a planet.

[உச்சம் + தாவு.]

உச்சத்தானம் *ucca-t-tāṉam* பெ. (n.) ***உச்சக்கோள்*** பார்க்க; see *uccakkōḷ.*

[உச்சம் + தானம்.]

உச்சத்திசை *ucca-t-tiśai,* பெ. (n.) ***நற்பேற்றுநிலை*** (நல்லாகூழ்நிலை); prosperous period; the highest point of success; good fortune.

[உச்சம் + திசை.]

உச்சதசை *ucca-daśai,* பெ. (n.) ***உச்சத்திசை*** பார்க்க; see *ucca-t-tisai.*

[உச்சம் + தசை.]

உச்சதரு *ucca-taru* பெ. (n.) ***தென்னை*** (பச்.மூ.); coconut tree.

[உச்சம் → உச்ச + தரு. உச்சம் = உயரம். உச்சதரு = உயரமான மரம்.]

உச்சந்தம் *uccandam,* பெ. (n.) 1. ***விலையுயர்வு;*** being at the highest price in the market. 2. ***தணிவு;*** decline, after the height or crisis is past. 3. ***அதிகப்படுதல்;*** being increased. (ஆ.அக.)

[உச்சம் → உச்சந்தம்.]

உச்சந்தமா-தல் *uccandamā-,* 6. செ.கு.வி. (v.i.) ***தணி தல்;*** to be past the highest point, to be lessening, as rain; to become mitigated, as disease(J.).

[உச்சம் + அந்தம் + ஆ-தல். அந்தம் சொல்லாக்க ஈறு.]

உச்சந்தலம் *uccandalam,* பெ. (n.) ***உச்சந்தலை*** பார்க்க; see *uccantalai* (சா.அக.).

உச்சந்தலை *uccantalai,* பெ. (n.) 1. ***தலையின் உச்சி*** (ஆசாரக்.6); crown of head; pate. 2. ***நடுத்தலை;*** the top of the head; the point on the surface of the skull at the junction of the coronal and saggital sutures-Bregma. (சா.அக.).

ம. உச்சதல.

[உச்சம் + தலை.]

உச்சநிலைநாள் *ucca-nilai-nāḷ* பெ. (n.) ***மாழ்கு*** (மிருகசீரிடம்), ***நெய்ம்மீன்*** (சித்திரை), ***பறவை*** (அவிட்டம்) ***என்ற மூன்று நாண்மீன்கள்;*** three stars Mirugacīriḍam, Cittirai, Aviṭṭam.

[உச்சம் + நிலை + நாள்.]

உச்சம்[1] *uccam,* பெ. (n.) 1. ***உயரம்*** (திவா.); height, elevation, altitude. 2. ***உச்சந்தலை;*** extreme top, overhead. 3. ***தலைக்கு நேரான வான்முகடு;*** zenith, meridian, position overhead. "வெங்கதி ருச்சமாம் பொழுது" (காஞ்சிப்பு. பன்னிரு. 341). 4. ***சிறப்பு;*** excellence, superiority. "உச்ச மாணிக்கத்தாலே" (இராமநா. பாலகா. 17) 5. ***வல்லிசை*** (திவா.); treble. 6. ***கோள் நிலையுளொன்று*** (விதான. நட்பா. 21); exalted position of a planet one of five kiraga-nilai. 7. ***அறுதியளவு;*** extreme limit. தோணி உச்சவோட்டு ஒடிற்று. 8. ***நுனி;*** edge. 9. ***முனை;*** brink. 10. ***நண்பகல்;*** noon, midday. 11. ***உயர்வு;*** supremacy.

ம. உச்சம்; க. உச்ச.; *Skt* ucca

[உ → உச்சி → உச்சம்.]

உச்சம்[2] *uccam,* பெ. (n.) 1. ***எண்வகைப் பாடற் பயன்களுள் ஒன்று.*** (சிலப்.16 உரை); one of eight pādar-payan; effect of music. 2. ***புணர்ச்சி வகையுள் ஒன்று*** (கொக்கோ. 3,5); mode of sexual union. (செ.அக.).

[உச்சி → உச்சம்.]

உச்சம்போது *uccam-pōdu,* பெ. (n.) ***நடுப்பகல்;*** lit. time when the sun is in meridian, noon, midday. "உச்சம் போதே யூரூர் திரிய" (தேவா. 298,9.).

[உச்சம் + (பொழுது) போது.]

உச்சம்பொழ்து *uccam-pōḻdu,* பெ. (n.) ***உச்சம்போது*** பார்க்க. (S.I.I. iii 3.); see *uccampōdu.*

உச்சயம் *uccayam,* பெ. (n.) 1. ***குவியல்;*** heap. 2. ***வாழைக்காய்;*** unripe plantain fruit.

[உச்சம் → உச்சயம்.]

உச்சயினி *uccayiṉi,* பெ. (n.) ***ஒரு நகரம்.*** (காஞ்சிப்பு. தீர்த். 75); ancient city of Ujjain, formerly the capital of king Vikramāditya.

[உஞ்சை → உச்சயினி.]

உச்சரம் *uccaram,* பெ. (n.) ***உட்பருப்பு சிறியதாயும் வெளி ஒடு பெரிதாகவும் உள்ள தேங்காய்;*** coconut with a thick shell and thin kernal.

ம. உச்சரம்.

[உ → உச்சு → உச்சரம்.]

உச்சராசி *uccarāsi,* பெ. (n.) 1. ***கோள் உச்சத்திலிருக்கப் பெற்ற ஓரை*** (இராசி); (Astrol.) exalted sign of a planet. 2. ***ஆகூழ் ஓரை*** (அதிட்ட ராசி) (C.G.); fortunate natal sign.

[உச்சம் + ராசி. Skt. rāsi > *த.* ராசி. ***உச்சவோரை*** *பார்க்க see ucca-vōrai.]*

உச்சரி-த்தல் *uccari-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***இதழ் முதலியவற்றின் தொழில்களால் எழுத்துகளைப் பிறப் பித்தல்; பலுக்குதல்;*** to pronounce, enunciate, articulate with the organs of speech. 2. ***ஓதுதல்;*** worship; pray. "அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க" (சி.சி. 9, 1).

[உத்து → உச்சு → உச்சரி. ஒ.நோ. நச்சு → நச்சரி. உத்து = நாவைப் பொருத்திப் பேசு.]

உச்சரிப்பு *uccarippu,* பெ. (n.) 1. ***உச்சரிக்கை; பலுக்கல்;*** pronunciation. 2. ***எழுத்தினோசை*** (ஆ.அக.); sound of a letter.

க. உச்சார.

[உத்து → உச்சு → உச்சரி → உச்சரிப்பு.]

உச்சல் *uccal,* பெ. (n.) ***கரிய மச்சம்;*** black mole. (சேரநா.).

ம. உச்சல்.

[உச்சு → உச்சல்.]

உச்சவம் *uccavam,* பெ. (n.) 1. ***விழா*** (திவா.); festival, festivity. 2. ***செல்வம்;*** prosperity. "மாவுச்சவ மாபத்தும்" (ஞானவா. உபசா.12).

க. உச்சவ; *Skt.* utsava

*[உத்தம் = மேலெழுதல், மனம் பொங்குதல், மகிழ்ச்சியுண்டா தல். உத்தம் → உத்தவம் → உச்சவம். **உத்தவம்** பார்க்க; see uttavam.]*

உச்சவீடு *ucca-vīḍu,* பெ. (n.) ***உதயத்துக்கேழாமிடம்;*** exalted sign of a planet. (சா.அக.).

[உச்சம் → வீடு.]

உச்சன்[1] *uccaṉ,* பெ. (n.) ***விளையாட்டில், குறிவைத் தெறியும் கல், விதை முதலியவற்றுள் ஒன்று;*** cowrie, arecanut or tamarind seed, used for pitching in games. (J.). (செ.அக.).

[ஒச்சு → உச்சு → உச்சன்.]

உச்சன்[2] *uccaṉ,* பெ. (n.) 1. ***ஓரைச் சக்கரத்தில் தன் உச்சநிலையில் நிற்கும் கோள்*** (பஞ்.); planet in its exalted sign of the zodiac. 2. ***நெட்டையானவன்;*** tall man. (சா.அக.).

ம. உச்சன்.

[உ → உச்சன்.]

உச்சன்[3] *uccaṉ,* பெ. (n.) ***பித்தன்;*** madman.

க. உச்சு; தெ. உச்சு.

[உச்சு → உச்சன்.]

உச்சனிமாகாளி *uccaṉi-māgāḷi,* பெ. (n.) 1. ***உச்சயனி நகரத்திலுள்ள காளிதேவி;*** guardian goddess of the ancient city of Ujjain. 2. ***ஒரு சிற்றூர்த்*** (கிராம) ***தேவதை;*** village goddess. (Tinn). (செ.அக.).

[உச்சயினி → உச்சனி + மாகாளி.]

உச்சாணி *uccāṇi*, பெ. (n.) *எல்லாவற்றினும் உயரமானது;* highest point, top, summit. உச்சாணிக் கொம்பிலிருந்து விழுந்தான், உச்சாணிக்கிளை. (உ.வ.).

[உச்சி → உச்சாணி.]

உச்சாயம் *uccāyam*, பெ. (n.) 1. *உயர்வு;* stateliness, loftiness, dignity. "உச்சாயமாக முகமன்கள் உரை செய்து" (நல். பாரத. ஆசிரமவாச. வனம்புகு. 163) 2. *மனவெழுச்சி; ஆர்வம்; ஊக்கம்;* enthusiasm.

[உ → உத்தம் → உத்தாயம் → உச்சாயம். உத்தாயம் பார்க்க; see *uttāyam.]*

உச்சாரணை *uccāraṇai*, பெ. (n.) *உச்சரிப்பு* பார்க்க (வீரசோ. யாப். 35.); see *uccarippu.*

க. உச்சரண, உச்சாரண.

[உ → உந்து → உத்து → உத்தாரம் (குரலையுயர்த்தி உரத்துச் சொல்லுதல்) → உச்சாரம் → உச்சாரணம் → உச்சாரணை.]

உச்சாரம்[1] *uccāram*, பெ. (n.) *உச்சரிப்பு* பார்க்க (சி.சி. 4.35 மறைஞா); see *uccarippu.*

க. உச்சார.

[உ → உந்து → உத்து (குரலை உயர்த்து) உத்தாரம் → உச்சாரம் (உரத்துச் சொல்லுதல்).]

உச்சாரம்[2] *uccāram*, பெ. (n.) 1. *உயர்ச்சி* (யாழ்.அக.); height. 2. *மேன்மை; வளர்ச்சி;* development.

[உ → உந்து → உத்து → உத்தம் (உயர்வு) → உத்தாரம் → உச்சாரம்.]

உச்சி[1] *ucci*, பெ. (n.) 1. *முகடு; உயர்வு;* height, summit, meridian. 2. *தலை;* head. 3. *நடுப்பகல்* (பிங்.); midday, high noon. உச்சிப்பொழுது ஆகிவிட்டது (உ.வ.). 4. *ஆண்மயிர்;* hair of male. 5. *எல்லை;* limit, border, boundary. 6. *குடுமி;* tuft of hairs. 7. *தலைக்கு நேரிடம்;* zenith.

க., ம., தெ., உச்சி; து. உச்ச.

[உ → உத்து → உச்சு → உச்சி.]

உச்சி[2] *ucci*, பெ. (n.) *நாய்* (பிங்.); dog. (Onom. imit. of beckoning sound 'cu'.).

[ஊசு = ஒலிக்குறிப்புச் சொல். ஊசு → ஊச்சு → உச்சு → உச்சி - நாயை விளிக்கும் ஒலிக்குறிப்புச் சொல் நாயைக் குறித்தது.]

உச்சிக்கடன் *ucci-k-kaḍaṉ*, பெ. (n.) *நண்பகல் கடமை* (கூர்மபு. நித்தியகன். 15); midday worship or prayers.

[உச்சி + கடன்.]

உச்சிக்கரண்டி *ucci-k-karaṇḍi*, பெ. (n.) *குழந்தைகளுக்கு உச்சியில் எண்ணெய் விடுஞ் சிறுகரண்டி;* small spoon that is used when pouring oil on the head of a baby.

[உச்சி + கரண்டி. உச்சியில் எண்ணெய் தேய்த்தற்குரிய சிற்றளவுள்ள கரண்டி.]

உச்சிக்கரண்டியளவு *ucci-k-karaṇḍi-y-aḷavu*, பெ. (n.) *தேயிலைக் கரண்டியளவு;* tea spoonful.

[உச்சி + கரண்டி + அளவு.]

உச்சிக்கலயம் *ucci-k-kalayam*, பெ. (n.) 1. *அடுக்கின் மேலிருக்கும் மட்பானை;* pot which is on top (ஆ.அக.). 2. *சிறிய மட்பானை;* small pot.

[உச்சி + கலயம்]

உச்சிக்கவாஅன் *ucci-k-kavāaṉ*, பெ. (n.) *குன்றத்துச்சியின் பக்கம்;* side of a peak, "வறன் பொருந்து குன்றத்து உச்சிக்கவாஅன்" (நற். 92-4).

[உச்சி + கவாஅன்.]

உச்சிக்காலம் *ucci-k-kālam*, பெ. (n.) 1. *நண்பகல்;* midday. 2. *கோயிலின் நண்பகல்* (மத்தியான) *பூசை;* noon service in the temple.

[உச்சி + காலம்.]

உச்சிகாய்-தல் *uccikāy-*, 2. செ.கு.வி. (v.i.) *அறிவிழத்தல்;* to lose sense.

[உச்சி + காய்.]

உச்சிகாய்ந்தவன் *ucci-kāyndavaṉ*, பெ (n.) *அறிவிழந்தவன்;* fool. அவன் ஒரு உச்சி காய்ந்தவன்.

[உச்சி + காய்ந்தவன்.]

உச்சிக்கிழான் *ucci-k-kiḻāṉ*, பெ. (n.) *கதிரவன்;* sun, lit. lord of the zenith. "உச்சிக்கிழான் கோட்டம்" (சிலப். 9.11). (செ.அக.).

[உச்சி + கிழான்.]

உச்சிக்குடுமி *ucci-k-kuḍumi*, பெ. (n.) *ஆடவரின் தலையில் சுற்றிலும் மழித்து உச்சந்தலையில் மட்டும் மழிக்காமல் விடப்படும் மயிர்க் கற்றை;* crest, hair-tuft on the centre of the head.

ம. உச்சிகுடும்மி.

[உச்சி + குடுமி. கொடி (மேற்பகுதி உயர்ந்திருப்பது) → கொடிமி → குடுமி.]

உச்சிக்குருடன் *ucci-k-kuruḍaṉ*, பெ. (n.) *குள்ளன்;* dwarf.

ம. உச்சிக்குருடன்.

[உச்சி + குருடன்.]

உச்சிக்குழி *ucci-k-kuḻi*, பெ. (n.) *துளை; குழந்தையின் தலையுச்சிப் பள்ளம்* (ஆ.அக.); membranous dent or depression in an infant's head, fontanelle.

[உச்சி + குழி.]

உச்சிக்குழிகை *ucci-k-kuḻigai*, பெ. (n.) *உச்சி விழுகை* பார்க்க; see *ucci-viḻugai.* (சா.அக.).

[உச்சி + குழிகை.]

உச்சிக்கொடி *ucci-k-kodi*, பெ. (n.) *புல்லுருவி;* parasitic plant. (சா.அக.).

[உச்சி + கொடி.]



உச்சிக் கொண்டை

உச்சிக்கொண்டை *ucci-k-kondai*, பெ. (n.) 1. *உச்சிமுடி;* tuft or braid of hairs on the crown of one's head. 2. *சேவல் முதலியவற்றின் தலைச்சூட்டு;* cockscomb; crest as of a cock. (ஆ.அக.).

[உச்சி + கொண்டை.]

உச்சிக்கொம்பன் *ucci-k-komban*, பெ. (n.) 1. *உச்சியில் நிமிர்ந்த கொம்புள்ள மாடு;* bull or cow that has erect horns near together. 2. *கல்யானை* (காண்டா விலங்கு); rhinoceros, from its having one straight horn.

[உச்சி + கொம்பன்

உச்சிக்கொம்பன் என்பதற்குக் கல்யானை (காண்டா மிருகம்) என மற்றொரு பொருளைப் பிற அகரமுதலிகள் கூறியிருப்பது பொருத்தமாக இல்லை. ஏனெனில் கல்யானைக்குக் கொம்பு மூக்கின் மேல் உள்ளது. உச்சி என்னும் சொல் தலை உச்சி யையே சிறப்பாகக் குறிப்பது. சிந்துவெளி முத்திரையில் மாட்டு வகையைச் சார்ந்த உச்சிக் கொம்பன் *(unicorn)* பொறிக் கப்பட்டுள்ளதை ஒப்புநோக்குக. சா. அகர முதலியில் நிமிர்ந்த கொம்புள்ள மாடு எனப்பொருள் கூறப்பட்டிருப்பது பொருத்த மாகத் தெரிகிறது.*]*



உச்சிக்கொம்பன்

உச்சிகுளிர்-தல் *ucci-kulir-*, 2. செ.கு.வி. (v.i.) *மகிழ்வடைதல்;* lit. cooling of the head, fig. to feel happy, to be highly pleased, delighted. 'அப்பா என்றால் உச்சி குளிருமோ' (ஈடு. 4,3, ப்ர.ஜீ). (செ.அக.).

உச்சிச்சமயம் *ucci-c-camayam*, பெ. (n.) *நண்பகல்;* midday. (ஆ.அக.).

[உச்சி + சமயம்.]

உச்சிச்சுட்டி *ucci-c-cutti*, பெ. (n.) *குழந்தைகளின் தலையணி வகை;* ornament for the forehead of children. (செ.அக.).

[உச்சி + சுட்டி.]

உச்சிச்செடி *ucci-c-cedi*, பெ. (n.) *புல்லுருவி;* Indian mistletoe (செ.அக.).

[உச்சி + செடி.]

உச்சிச்செடில் *ucci-c-cedil*, பெ. (n.) *செடிலாட்டம்;* hook - swinging. (செ.அக.).

[உச்சி + செடில்.]

உச்சிசந்தி *ucci-candi*, பெ. (n.) *உச்சிக்காலப் பூசை;* noon service in the temple. (செ.அக.).

[உச்சி + சந்தி.]

உச்சிட்டம் *uccittam*, பெ. (n.) 1. *எச்சில் பண்டம்* (பிங்.); unconsumed food remaining after one had eaten, regarded as being unclean and unfit to be eaten by another. 2. *மிச்சில்;* that which is left, refuse. "உச்சிட்டம் மென் நுலகினை யுண்கிலார்" (கந்தபு. வீரபத்.41).

[எச்சில் → உச்சில் → உச்சிட்டம்.]

உச்சித்தம் *uccittam*, பெ. (n.) *மகரக்கை* (சிலப். 3,18, உரை); variety of gesture with both hands.

[ஒருகா. உத்து → உத்தித்தம் → உச்சித்தம்.]

உச்சித்திலகம் *ucci-t-tilagam*, பெ. (n.) *செம்மலருள்ள ஒருவகைப் பூஞ்செடி;* flowering shrub with red blosssoms. "உதிக்கின்ற செங்கதிருச்சித் திலகம்... என்ன விதிக்கின்ற மேனி" (அபிராமி.1).

[உச்சி + திலகம்.]

உச்சிதபண்டம் *uccida-pandam*, பெ. (n.) *தகுதியாகச் செய்த பண்டம்;* delicious thing; preparation high pleasing to the taste. (சா.அக.).

[உத்து → உத்தித → உச்சித + பண்டம். உத்து = பொருந்து. உத்தித = பொருந்திய, ஏற்ற, தகுந்த.]

உச்சிதம்¹ *uccidam*, பெ. (n.) 1. *உயர்ச்சி;* height. 2. *அழகு* (சா.அக.); beauty. 3. *அரியது* (ஆ.அக.); rare thing. 4. *கொடை;* gift.

[உத்து → உத்திதம் → உச்சிதம் = பொருத்தமானது, தக்கது, சிறந்தது, அரியது.]

உச்சிதம்² *uccidam*, பெ. (n.) *நெருஞ்சி* பார்க்க; see *neruñji*. (செ.அக.).

[உச்சி → உச்சிதம்.]

உச்சிப்படு-தல் *ucci-p-paḍu-,* 20. செ.கு.வி. (v.i.) ***உச்ச மாதல்;*** to ascend as of morning sun. "வெள்ளி உச்சிப்பட்டது, வியாழன் அஸ்தமித்தது" (திவ். திருப்பா. 13 வ்யா.). (செ.அக.).

[உச்சி + படு.]

உச்சிப்பள்ளி *ucci-p-paḷḷi,* பெ. (n.) ***பதினான்காம்*** (சதுர்த்தசி) ***நாள்தோறும் பள்ளிக்கூடத்தில் விடப் பெறும் பகல் விடுமுறை;*** noonday dismissal of school on the day preceding the new moon or the full moon. (செ.அக.).

[உச்சி + பள்ளி. உச்சிநேரம் (நண்பகல்) வரை மட்டும் நடை பெறும் பள்ளி.]

உச்சிப்பிளவை *ucci-p-piḷavai,* பெ. (n.) ***உச்சந்தலையி லுண்டாகும் புண்*** (மூ.அ.); ulcerous scab or sore on the crown of the head. (செ.அக.).

[உச்சி + பிளவை.]

உச்சிப்பிறை *ucci-p-piṟai,* பெ. (n.) ***பரவ மகளிரணியுந் தலையணிவகை;*** crescent shaped head ornament, a common ornament among women of the Parava Caste. (செ.அக.).

[உச்சி + பிறை.].

மணவிழாவின் போது பரதவ மகளிர் பிறை வடிவில் தலை யணி ஒப்பனை செய்து கொள்வர். சிந்துவெளி முத்திரைகளில் காணப்படும் மகளிர் தலையணியை இது ஒத்துள்ளது.

உச்சிப்பின்னல் *ucci-p-pinnal,* பெ. (n.) ***உச்சிச்சடை;*** plait of the crown. (ஆ.அக.).

[உச்சி + பின்னல்.]

உச்சிப்பூ *ucci-p-pū,* பெ. (n.) ***குழந்தைகளின் தலையணி வகை;*** ornament for a child's forehead.

ம. உச்சிப்பூவு.

[உச்சி + பூ.]

உச்சிப்பொழுது *ucci-p-poḻudu,* பெ. (n.) ***நடுப்பகல்;*** noon, midday. (செ.அக.).

[உச்சி + பொழுது.]

உச்சிமல்லிகை *uccimalligai,* பெ. (n.) ***ஊசி மல்லிகை*** பார்க்க; see *ūsimalligai.*

ம. உச்சிமலரு.

[ஊசி → உச்சி + மல்லிகை.]

உச்சிமலை *uccimalai,* பெ. (n.) 1. ***மலையுச்சி;*** hill top. 2. ***செங்குத்தான குன்று;*** steep hill (செ.அக.).

[உச்சி + மலை.]

உச்சிமீன் *uccimīṉ,* பெ. (n.) ***புள்ளிமீன்;*** spotted butter fish.

து. உச்சிமீன்.

[உச்சி + மீன்.]

உச்சிமுகடு *uccimugaḍu,* பெ. (n.) ***கூரையின் இரு பக்கமும் சேருகின்ற மேலிடம்;*** ridge of roof. (செ.அக.).

[உச்சி + முகடு.]

உச்சிமுகரல் *uccimugaral,* பெ. (n.) ***குழந்தையி னுச்சியை அன்பு மேலீட்டினால் முகருதல்;*** smelling the crown of the head of a child through affection. (சா.அக.).

[உச்சி + முகரல்.]

உச்சிமூலம் *uccimūlam,* பெ. (n.) ***உச்சிமேடு*** பார்க்க; see *uccimēḍu.* "தானவனாகி நின்ற தவமது உச்சிமூலம்" (திருவள்ளு. சற்பம்).

[உச்சி + மூலம்.]

உச்சிமேடு *uccimēḍu,* பெ. (n.) ***தலையின் நடுவிடம்;*** central region of the head.

[உச்சி + மேடு. முகடு → மேடு.]

உச்சிமோ-த்தல் *uccimō-,* 3. செ.குன்றாவி. (v.t.) ***உச்சந் தலையை மோந்து அன்பு பாராட்டுதல்;*** smell the crown of the head especially of a child, from affection. "தனிப் புதல்வன்றனை.. உச்சி மோந்து" (கோயிற்பு. வியாக்கிர. 2).

[உச்சி + (முகர்தல்) மோ-த்தல்.]

உச்சிமோடு *ucci-mōḍu,* பெ. (n.) ***உச்சி முகடு*** பார்க்க; see *ucci-mugaḍu.*

[உச்சி → (முகடு) மோடு. முகடு → மோடு → மேடு.]

உச்சியணி *ucci-y-aṇi,* பெ. (n.) ***தலைச் சீராவில் உள்ள அணித் தொங்கல்;*** pendant of a head-gear. (pond.)

[உச்சி + அணி.]

உச்சியாட்டம் *ucci-y-āṭṭam,* பெ. (n.) ***விளையாட்டு வகை;*** a kind of four-a-side game.

ம. உச்சிள்ளியாட்டம்.

[உச்சி + ஆட்டம்.]

உச்சியார் *ucci-y-ār,* பெ. (n.) ***தேவர்;*** celestial beings. "உச்சியார்க் கிறைவனாயுலக மெலாங்காத் தளிக்கும்" (யாப்.வி. 86. பக். 315).

[உச்சி + ஆர்.]

உச்சியிடிக்கை *ucci-y-iḍikkai,* பெ. (n.) ***குழந்தையி னுச்சந்தலை தாய்மார்பிற் படுதலால் அவட்குண்டா கும் நோய்;*** disease of the nursing mother caused by her nipple being touched by the crown of her suckling baby's head. (செ.அக.).

[உச்சி + இடிக்கை. இடி → இடிக்கை.]

உச்சியெடு-த்தல் *ucci-y-eḍu-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***வகிர் எடுத்தல்;*** part the locks of hair in two with a cleavage line from the crown to the forehead (J.).

2. ***உச்சி முடியை மென்மையாகப் பற்றியிழுத்தல்;*** slow pull of few hairs in the crown to relieve ailment.

[உச்சி + எடு-த்தல்.]

உச்சிமுடியை வகிர் எடுத்தலை உச்சியெடுத்தல் என்பது பொதுவழக்கு. உள்நாக்கு அல்லது சிறு நாக்கு மேலெடுப்பதற் காக மிளகுப் பொடியை உள்நாக்கில் தடவித் தலையின் உச்சியிலுள்ள சில முடிகளை மென்மையாக ஒரிருமுறை பற்றியிழுப்பது நாட்டுப்புறங்களில் நிலவும் பழங்காலக் கைமருத்துவ முறைகளுள் ஒன்று.

உச்சியெண்ணெய் *ucci-y-eṉṉey,* பெ. (n.) ***குழந்தை களின் உச்சந்தலையிலிடும் எண்ணெய்;*** oil smeared on the crown of the head especially of infants. (செ.அக.).

ம. உச்செண்ணெய்

[உச்சி + எண்ணெய்.]

உச்சில் *uccil,* பெ. (n.) ***ஒரு வகைச் செடி;*** a kind of plant,

ம. உச்செலி, ஒச்செலி.

உச்சிவிடுதி *ucci-viḍudi,* பெ. (n.) 1. ***உச்சிவீடு*** பார்க்க; see *ucci vīḍu.* 2. ***தொழிலாளிகள், பள்ளிச் சிறுவர்களின் நண்பகல்*** (மத்தியான) ***விடுவு;*** midday recess for labourers, or for children at school. 3. ***நண்பகல் நேரத்தில் மழை விடுகை;*** cessation of rain at noon. (செ.அக.).

[உச்சி + விடுதி. உச்சி = நண்பகல்.]

உச்சிவிழுகை *ucci-viḻugai,* பெ. (n.) ***குழந்தைகளின் உயிர் ஏதத்திற்குரியதான உச்சிக் குழிகை;*** dangerous disease of infants, the most prominent symptom of which is an increased depression in the head of the infant. (செ.அக.).

[உச்சி + விழுகை.]

உச்சிவினை *ucci-viṉai,* பெ. (n.) ***உச்சிக் கடன்*** பார்க்க; see *ūcci-k-kaḍaṉ* (சேதுபு. துத்தம். 6). (செ.அக.).

[உச்சி + வினை.]

உச்சிவீடு *ucci-vīḍu,* பெ. (n.) 1. ***உச்சிவேளையில் மழைவிட்டிருக்கை;*** cessation of rain at noon. 2. ***இடைவிடுகை;*** stopping at intervals. 'உச்சிவீடு விடாதே இத்தையே மனோரதியா நின்றது' (ஈடு. 9,3,7).

[உச்சி + வீடு. வீடு = விடுபடுதல், நிற்றல்.]

உச்சிவுதயம் *ucci-v-udayam,* பெ. (n.) ***குழந்தைப் பேற்றின் போது முதலாக உச்சிவெளிக் காணல்;*** (In mid-wifery) the appearance of the upper part of the foetal head in labour vertex presentation. (சா.அக.).

[உச்சி + உதயம்.]

உச்சிவுருமம் *ucci-v-urumam,* பெ. (n.) ***நடுப்பகல்;*** midday.

[உச்சி + உருமம். உருமம் = வெயில்.]

உச்சிவெளி *ucci-veḷi,* பெ. (n.) ***உச்சிவீடு*** பார்க்க; see *ucci-vīḍu.* (செ.அக.).

[உச்சி + வெளி.]

உச்சிவெறி *ucci-veṟi-,* பெ. (n.) ***உச்சிவீடு*** பார்க்க; see *ucci-vīḍu.* (செ.அக.).

[உச்சி + வெறி.]

உச்சிவேர் *ucci-vēr,* பெ. (n.) ***மூலவேர்;*** top-root.

[உச்சி + வேர்.]

உச்சு[1]-தல் *uccu-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***இலக்கிற் காய் முதலியன எறிதல்;*** to pitch at a mark, to play such a game of pitching with areca nuts, shells or coins. 2. (வஞ்சகத்தால்) ***வெல்லுதல்;*** to conquer in a game, come out successful in a controversy, win, secure an advantage by subtlety or artifice. 3. ***பிறர் பொருளை ஏய்த்துக் கவர்தல்;*** to get possession of another's property by fraud, stratagem, cunning, or deceit. 4. ***பித்துப் பிடித்தல்;*** to go mad, to become demented. (செ.அக.).

உச்சு[2]-தல் *uccu-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***தேய்த்தல்;*** to rub.

க. உச்சு.

[உல் → உத்து → உச்சு.]

உச்சு[3] *uccu,* பெ. (n.) ***பித்தன்;*** mad man, mentally retarded.

ம. உச்சு; க. உச்சு.

[உய்த்து → உத்து → உச்சு = அறிவிழந்தவன், நினைவு தப்பிய வன்.]

உச்சுக்காட்டு-தல் *uccu-k-kāṭṭu-,* 5. செ.கு.வி. (v.i.) ***நாயைத் தூண்டிவிடுதல்;*** to urge or set a dog on a person or an object by repeating the sound 'உச்சு, உச்சு' while simultaneously pointing to the object of attack. நாயை உச்சுக்காட்டு. (கொங்.வ.).

[உச்சு + காட்டு-தல். உச்சு = நாயை ஏவும் ஒலிக் குறிப்புச் சொல். நாயை உச்சுக்காட்டுகிறான் அல்லது உசுக் காட்டு கிறான் என்பது நாட்டுப்புற வழக்கு.]

உச்சுக்கொட்டு-தல் *uccu-k-koṭṭu-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***இக்குக்கொட்டு*** பார்க்க; see *ikku-k-koṭṭu.* 2. ***வெறுப்புக்குறி காட்டுதல்;*** to manifest one's dissatisfaction or disapproval by smacking the lips, so as to produce an interjectional sound like 'pshaw' expressive of contempt. (செ.அக.).

[உச்சு + கொட்டு-தல். உச்சு = வாயால் எழுப்பப்படும் இரக்கம் குறித்த ஒலிக் குறிப்புச் சொல்.]

உச்சுச்செனல் *uccucceṉal,* இடை. (part.) ***நாயைக் கூப்பிடுதல்;*** calling a pet dog. (ஆ.அக.).

உச்சூடை *uccūḍai,* பெ. (n.) ***கொடிக்கம்பத்தின் நுனி;*** pointed head of flag - pole.

[உச்சி + சூடை.]

உச்சூன் *uccūṉ,* பெ. (n.) ***உச்சூனம்*** பார்க்க; see *uccūṉam.*

[உச்சு + ஊன். ஊனொடு ஒட்டியிருப்பது, கொழுப்பு.]

உச்சூனம் *uccūṉam,* பெ. (n.) ***கொழுப்பு;*** fat. (செ.அக.).

[உத்து → உச்சு = பொருந்துதல். ஊன் தசையோடு பொருந்தி யிருப்பதால் உச்சூனம் எனப்பட்டது. உச்சு + ஊனம். ஊன் → ஊனம்.]

உச்செனல் *uccel̠al,* இடை. (part.) ***நாயை அழைத்தற் குறிப்பு;*** utterance of an imit. word used in calling a dog. (செ.அக.).

[உச்சு + எனல்.]

உச்சேதம் *uccēdam,* பெ. (n.) ***உட்சிதைவு*** பார்க்க; see *utsidaivu.*

[உள் + சேதம்.]

உச்சை *uccai,* பெ. (n.) ***சிறுநீர்; மூத்திரம்;*** urine.

க. உச்செ; **தெ.** உச்ச.

[உய் → உய்த்து → உத்து → உத்தே → உச்செ (பெய்தது, சொரிந்தது) → உச்சை]

உச்சைனி *uccaiṉi,* பெ. (n.) ***உச்சயனி*** பார்க்க; see *uccayaṉi.*

உசகம் *uśagam,* பெ. (n.) ***ஆமணக்கு*** (சங். அக.); castor-plant. (செ.அக.).

[ஒருகா. உச்சகம் → உசகம் = உயரமாக வளரும் செடி.]

உசத்தி *uśatti,* பெ. (n.) 1. ***உயர்த்தி; உயரம்;*** height. ***உயர்த்தி*** பார்க்க; see *uyartti.*

[உயர்த்தி → உசத்தி.]

உசரம் *uśaram,* பெ. (n.) ***உயரம்;*** height, elevation. 'நாலுதோரை உசரத்து' (S.I.I. ii, 134).

[உயர் → உயரம் → உசரம் (கொ.வ.). ***உயரம்*** பார்க்க; see *uyaram.]*

உசரி *uśari,* பெ. (n.) ***முள்ளி;*** a thorny shrub in common.

[ஒருகா: உத்தரி → உச்சரி → உசரி. அரிதல் = குத்துதல், புண்படுத்துதல்.]

உசல் *uśal,* பெ. (n.) 1. ***விடியல்;*** dawn. 2. ***ஒருவகை மரம்;*** a kind of tree.

[ஊசல் = மேல்வருதல், ஒளி மேலெழும்புதல். ஊசல் → உசல். Skt. *usal.]*

உசவு[1]-தல் *uśavu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***சிந்தித்தல்; கலந்தாய்தல்;*** to consider, to think and decide to scrutinize. ''ஏவவென் றுசவியே'' (பாரத. பதினேழாம். 221). 2. ***வேவுபார்த்தல்;*** to spy, to discern by careful observation.

[உசாவு → உசவு.]

உசவு[2]-தல் *uśavu-,* 5. செ.கு.வி. (v.i.) ***உசாவா நிற்கும்;*** to enquire, to ask question. 'தனிக் குருகுசவு' (கலித். 121-15.) (சங்.இலக்.சொற்.).

[உசாவு → உசவு.]

உசவு[3] *uśavu,* பெ. (n.) ***எந்திரங்கட்கூட்டும் கரியுமெண்ணெயுஞ் சேர்ந்த கூட்டு*** (சீவக. 78 6, உரை.); **grease.** (ஆ.ஆக.).

[மசகு → முசகு → உசகு → உசவு.]

உசற்காலம் *uśaṟkālam,* பெ. (n.) ***விடியற்காலம்*** (யாழ். அக.); dawn. (செ.அக.).

[ஊசல் → உசல் + காலம். ஊசல் = மேலெழுதல், கிழக்கிற் கதிரொளி தலைகாட்டுதல்.]

உசனன் *uśaṉaṉ,* பெ. (n.) ***வெள்ளி; சுக்கிரன்*** (கம்பரா. ஆறுசெல். 6); Venus. (செ.அக.).

[ஒருகா. உசல் → உசன் → உசனன்.]

உசனார் *uśaṉār,* பெ. (n.) ***உசனன்*** பார்க்க (பாரத.குரு. 23); see *uśaṉaṉ.* (செ.அக.).

உசா[1] *uśā,* பெ. (n.) 1. ***ஆராய்ச்சி;*** enquiry, investigation, question. ''சான்றோருசாப் போல'' (தொல். பொருள். 285, உரை). 2. ***ஒற்றன்*** (திவா.); spy.

[உசாவு → உசா.]

உசா[2] *uśā,* பெ. (n.) ***மூக்குத்திச்செடி;*** pointed leaved hogweed. (L.) (செ.அக.).

[உச்சம் → உசை → உசா.]

உசாக்காலம் *uśā-k-kālam,* பெ. (n.) ***கதிரவன் தோன்ற லுக்கு நான்கு கடிகை முற்பட்ட காலம்;*** dawn, time of day before day break.

[உசா + காலம்.]

உசாக்கேட்டல் *uśā-k-kēṭṭal,* தொ.பெ. (vbl.n.) ***கருத்துரை கேட்டல்;*** investigation, consultation. (ஆ.அக.).

[உசா + கேட்டல்.]

உசாக்கையர் *uśākkaiyar,* பெ. (n.) ***கருத்துரை வழங்கு வோர்;*** consultant, investigator. ''உசாக்கைய ரொருங்கு போனார்'' (இரகு. அயனெ.12). (செ.அக.).

[உசாவு → உசா → உசாக்கை + அர்.]

உசாத்துணை *uśā-t-tuṇai,* பெ. (n.) ***உற்ற துணைவன்*** (திருக்கோ. 400 உரை); best adviser, reliable friend, faithful companion, congenial comrade. (செ.அக.).

[உசாவு → உசா + துணை.]

உசாதல் *uśādal,* தொ.பெ. (vbl.n.) ***வினாவுதல்;*** questioning.

[உசாவுதல் + உசாதல்.]

உசாவடி *uśāvaḍi,* பெ. (n.) ***உட்பிரிவு;*** separation into smaller parts, subdivision. (i.m.p.tj. 894). (செ.அக.).

[உசாவு + அடி.]

உசாவல் *uśāval,* பெ. (n.) 1. ***ஆராய்தல்;*** investigating. 2. ***எண்ணல்;*** thinking, considering. 3. ***வினாவல்;*** questioning.

[உசாவு → உசாவல்.]

உசாவு-தல் *usāvu-*, 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***சிந்தித்தல்;*** to consider, to take counsel with oneself, deliberate. "அரசியலுசாவி" (பாரத. வாரணா. 128). 2. ***கேட்டறிதல்;*** to enquire or investigate. "உசாவுகோ வைய சிறிது" (கலித். 7-4). 3. ***செவியுறுதல்*** (ஆ.அக.); to hear, to listen. உரைத்தமை யனைவரு முசாவி" (விநாய கபு. 75, 84).

[உல் = பொருந்துதல் கருத்து. உல் → உல → உலவு → உலாவு → உசாவு. பிறரோடு பொருந்துதல், கலத்தல், சென்றுவரல், பிறரோடு கலந்து கருமம் மேற்கொள்ளல். ஆராய்தல், பேசுதல், வினாதல். உலாவு → உசாவு. ஒ.நோ. அலை → அசை → அசைவு → அசா. உசாவு என்னும் வினை வட புலத்திலும் வேரூன்றி வழக்குப் பெற்றதால் வடமொழியிலும் உசாவு → உவாசு எனத் திரிந்து பெருக வழங்கலாயிற்று.]

உசாவுந்துணை *usāvuntuṇai,* பெ. (n.) ***துன்பம் தீரக் கேட்டறியும் துணை; கேள்வித்துணை;*** counsel, adviser, consultant. "..உளையான் உற்றது உசாவுந்துணை" (கலித். 136.25). (சங்.இலக்.சொற்.).

[உசாவும் + துணை.]

உசிப்பி-த்தல் *usippi-*, 5. செ.குன்றாவி. (v.t) 1. ***சேர்த்தல்;*** to unite, associate, to join with another. "உன்னிடத் தெங்களை யுசிப்பித்துக் கொள்வாய்" (திருக்காளத்.பு. காளன். 60).

*[உய் → உய்ப்பி → உயிப்பி → உசிப்பி → உசிப்பி-த்தல். (கொ.வ.) **உய்ப்பி-த்தல்** பார்க்க; see uyppi-.]*

உசிர் *usir,* பெ. (n.) ***உயிர்;*** life animal or vegetable. "உசிர்க்கொலை பல நேர்ந்து" (தேவா. 918, 3).

க. உசிர்; து., தெ. உசுரு; பட. உசரு.

*[உயிர் → உசிர் (கொ.வ.). **உயிர்** பார்க்க; see uyir.]*

உசில் *usil,* பெ. (n.) ***ஒரு மரம்;*** a tree. 'உசிலங்கோடு. (தொல். எழுத். 405, உரை).

[உசல் → உசில்.]

உசிலம் *usilam,* பெ. (n.) ***உசில்*** பார்க்க (மலை.); see *usil.* (செ.அக.).

[உசில் → உசிலம்.]

உசிலரைப்பு *usilaraippu,* பெ. (n.) ***அரைப்புப்பொடி;*** powder made of dried sirissa leaves.

[உசில் + அரைப்பு.]

உசிலி[1]-த்தல் *usili-*, 4. செ.குன்றாவி. (v.t) ***சம்பாரப்பொடி கலந்து தாளித்தல்;*** to prepare with condiments as curry.

[உசில் → உசிலி → உசிலி-த்தல் = உசிலை சேர்த்துத் தாளித்தல்.]

உசிலி[2] *usili,* பெ. (n.) ***கடலை அல்லது தவசங்களை வேகவைத்துப் பொடிதூவின கறி*** (இ.வ.); boiled pulse (also grains) seasoned with salt, chilli, mustard, oil etc., (செ.அக.).

க. உசலி, உசளி, உசளெ, உசுளெ; தெ. உசல்; *Mar.* usal.

[உசில் → உசிலி.]

உசிலை *usilai,* பெ. (n.) ***அரைப்புப்பொடி; சீக்கிரி;*** black sirissa. (செ.அக.).

[உசில் → உசிலை.]

உசீரம் *usīram,* பெ. (n.) ***இலாமிச்சை வேர்;*** cuscuss-root. "சந்தன முசீரங் கோட்டம்" (திருவாலவா. 43, 16). (செ.அக.).

[உசில் → உசிலம் → → உசிரம் → உசீரம்.]

உசு[1]-த்தல் *usu-*, 4. செ.கு.வி. (v.i.) ***துளைத்தல்;*** to bore, punch.

[உளு → உசு.]

உசு[2] *usu,* பெ. (n.) ***மரத்தைத் துளைக்கும் புழு;*** wood worm.

ம. உளும்பு.

[உல் → உள் → உளு → உசு.]

தொல்காப்பியர் காலத்தில் குறிலடுத்த உச்சகாரம் இரண்டே சொற்களில் ஆளப்பட்டது என்பதற்குச் சான்றாக உசு, முசு என்னும் இரு சொற்களை உரையாசிரியர் மேற்கோள் காட்டினர். "உச்சகாரம் இருமொழிக் குரித்தே" (தொல். எழுத். 75).

உசுக்கல் *usukkal,* தொ. பெ. (vbl.n.) ***ஏவுதல்;*** driving, as of a dog to an object or person. (ஆ.அக.).

[உ → உது → உதுக்கல் → உசுக்கல்.]

உசுப்பு[1] *usuppu,* பெ. (n.) ***உடற்கழிவு;*** dung, faeces. (Tinn.) (செ.அக.).

[உல் → உலுப்பு → உசுப்பு.]

உசுப்பு[2]-தல் *usuppu-*, 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***எழுப்புதல்;*** to rouse, wake up; to urge, as dogs. 2. ***வெருட்டுதல்;*** to frighten, to drive away as birds.

[உசும்பு → உசுப்பு → உசுப்பு-தல். உசும்பு (த.வி.) → உசுப்பு (பி.வி.).]

உசும்பு-தல் *usumbu-*, 5. செ.கு.வி. (v.i.) 1. ***அசைதல்;*** to move, stir, to be in motion as wind.-5. செ.குன்றாவி. (v.t.). ***அதட்டுதல்;*** to rebuke, rant, hector. "மாக்கள திர்ப் பினுசும்ப" (பெருங். மகத. 13,59). (செ.அக.).

[உல் → உலு → உலும்பு → உசும்பு.]

உசுல் *usul,* பெ. (n.) 1. ***துளைத்தல்;*** piercing. 2. ***தோண்டியெடுத்தல்; பறித்தெடுத்தல்;*** digging out, plucking out. 3. ***விளைந்தவற்றில் அரசனுக்குரிய பங்காகப் பெறல்; வரிப்பணம் தண்டுதல்;*** collecting tax.

[உசு → உசுல்.]

உசுலாத்திமாடு *usulāttimāḍu,* பெ. (n.) ***அதிமாகப் பால் கொடுக்கும் மாடு;*** a kind of a big cow, giving plenty of milk as from Gujarat. (செ.அக.).

[உசுலாத்தி + மாடு. உசல் → உசப்பு = அதிகப்படுத்து. உசல் → உசலாத்தி = சுரப்பு மிகுந்த, அதிகமாகப் பால் தருகின்ற.]

உஞ்சட்டை *uñjaṭṭai,* பெ. (n.) ***உச்சட்டை*** பார்க்க; see *uccaṭṭai.*

[உச்சட்டை → உஞ்சட்டை. (வே.க. 81.)]

உஞ்சயினி *uñjayiṉi,* பெ. (n.) ***உச்சயினி*** பார்க்க. (யசோதர 2.1.); see *uccayiṉi* (செ.அக.).

உஞ்சல் *uñjal,* பெ. (n.) ***ஊஞ்சல்;*** swing. "உஞ்சனிகர் காதிற்கும்" (சிவப். பிரபந். வெங்கையு. 78).

மறுவ. உய்யாலை, ஊஞ்சல்.

க. உய்யல்; தெ. உய்யாலை, உய்யேலே, ஊயலே; ம. உழிஞ்ஞல், ஊஞ்சல்; து. உச்சால், உய்யால்.

[உந்து → உஞ்சு → உஞ்சல்.]

உஞ்சவிருத்தி *uñjavirutti,* பெ. (n.) 1. ***தவசங்களைப் பொறுக்கி நடத்தும் வாழ்க்கை*** (காஞ்சிப்பு. ஒழுக்கப். 36); gleaning grains of rice, as a means of livelihood. 2. ***அரிசிப் பிச்சை யெடுத்துச் செய்யும் வாழ்க்கை;*** living by gleaning handfuls of rice, as alms, from door to door. (செ.அக.).

[உய் → உய்ந்து → உஞ்ச + விருத்தி.]

உஞ்சி *uñji,* பெ. (n.) ***நாயை ஏவிவிடும் குறிப்புச் சொல்*** (ஆ.அக.); onom. expr. of setting dog against an object or person.

[உச்சு → உஞ்சு → உஞ்சி.]

உஞ்சில் *uñjil,* பெ. (n.) ***உசில்*** பார்க்க. see *usil.* (செ.அக.).]

உஞ்சு *uñju,* இடை. (part.) ***நாயை அழைக்கும் ஒலிக் குறிப்பு;*** Onom. expr. used in calling dogs.

[உஞ்சு - ஒலிக்குறிப்புச் சொல்.]

உஞ்சுக்காட்டு-தல் *uñju-k-kāṭṭu-,* 5. செ.குன்றாவி (v.t.) ***உச்சுக்காட்டு*** பார்க்க; see *uccu-k-kāṭṭu.* நாயை உஞ்சுக் காட்டுகிறான். (செ.அக.).

[உஞ்சு + காட்டு-தல்.]

உஞ்சேனை[1] *uñjēṉai,* பெ. (n.) ***உச்சயினி*** பார்க்க. (தேவா. 1221, 8); see *uccayiṉi.*

உஞ்சேனை மாகாளம் *uñjēṉai-mākāḷam,* பெ. (n.) ***உச்சயினியிலுள்ள சிவன் கோயில்*** (தேவா. 1221,8); Śiva shrine at Ujjaiṉ. (செ.அக.).

[உஞ்சை → உஞ்சேனை + மாகாளம்.]

உஞ்சை *uñjai,* பெ. (n.) 1. ***உசல்மரம்;*** tree known as usal. 2. ***அவந்திநகர்;*** city of Avanthi.

[உஞ்சை என்பது மரத்தின் பெயராலமைந்த ஊராகலாம்.]

உஞ்சையம்பதி *uñjaiyambadi,* பெ. (n.) ***உஞ்சை நகர்*** (சிலப். 6.20); city of Uñjainagar.

[உஞ்சை + அம் + பதி.]

உஞ்ஞார் *uññār,* பெ. (n.) ***ஞாயிறு உதிக்கும் திசை; கிழக்கு;*** east. (சேரநா.).

ம. உஞ்ஞாரு.

[உதி + ஞாயிறு - உதிஞாயிறு → உஞ்ஞார் (மலை).]

உஞற்று[1]**-தல்** *uñaṟṟu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***முயலுதல்;*** to attempt vigorously, strive diligently. "தாழா துஞற்றுபவர்" (குறள். 620). 2. ***செய்தல்;*** to do, perform, accomplish. "மறத்துறை.. எதிர்வன் கெழீஇ யுஞற்றல்" (ஞான. 17,48). 3. ***தூண்டுதல்;*** to urge, incite, spur to action. "உள்ளம் உஞற்றுகையினாலே" (கலித். 18, உரை). (செ.அக.).

[உய் → உயல் → உயற்று → உஞற்று.]

உஞற்று[2] *uñaṟṟu,* பெ. (n.) 1. ***பாடாற்றுதல்*** (பிங்.); enthusiasm; striving, exertion. 2. ***முயற்சி;*** application, effort. "தன்னுஞற் றொழிந்திடான்" (இரகு. தசரத. 13). 3. ***தூண்டுதல்;*** inciting. 4. ***வழக்கம்;*** practice. (செ.அக.).

[உய் → உயல் → உயற்று → உஞற்று.]

உட்கட்டி *uṭkaṭṭi,* பெ. (n.) 1. ***அகக்காழ்ப்பு; உள்திடத் தன்மை;*** inner hardness or thickness. 2. ***அடர்த்தி;*** density. 3. ***உட்பொருள்;*** inner substance. (சேரநா.).

ம. உள்கட்டி

[உள் + கட்டி.]

உட்கட்டு *uṭkaṭṭu,* பெ. (n.) 1. ***வீட்டின் உட்பகுதி;*** inside of a house, private apartments. 2. ***பரதவச் சிறுமியர் குழந்தைப் பருவத்தில் அணியுஞ் சிறுதாலி;*** kind of necklace, worn especially by Parava girls. 3. ***உள்ளுரம்;*** mental courage. 4. ***உவளகம்;*** inner appartment. 5. ***மாதர் கழுத்திலணியும் ஒரு மணிவடம்;*** a kind of necklace, worn by women. (செ.அக.).

[உள் + கட்டு.]

உட்கண் *uṭkaṇ,* பெ. (n.) ***காட்சி;*** mind's eye, insight, wisdom. "நெஞ்சென்னும் உட்கண்ணேற்காணும் உணர்ந்து" (திவ். இயற். பெரியதிருவந். 28).

ம. உள்கண்; க. ஒளகண்ணு.

உட்கண்டம் *uṭkaṇḍam,* பெ. (n.) 1. ***கழுத்தினுட்பாகம்;*** inner part of the neck, throat. 2. ***உட்கழுத்து*** பார்க்க; see *uṭkaḻuttu.* (சா.அக.).

[உள் + கண்டம் - உட்கண்டம். கண்டம் = கழுத்து. கழுத்து > Skt. kaṇḍam.]

உட்கனு *uṭkaṉu,* பெ. (n.) 1. ***மரத்தினுள் முளி;*** (In botany) knobby or wart-like prominences on the inner side of any plant or tree - internal tuberosity. 2. ***எலும்பினுள்ளேயிருக்கு முளி;*** eminence on the inner side of a bone - inner tuberosity. (சா.அக.).

[உள் + கனு - உட்கனு. கன் → கனு.]

உட்கதவு *utkadavu,* பெ. (n.) ***திட்டிவாயில்;*** wicket-door. கணையமரம் ஏறட்ட உட்கதவினையுடைய வாயிலினையும் (பெரும் பாண். 127. உரை). (செ.அக.).

க. ஒளஅகுணி (உள்தாழ்ப்பாள்).

[உள் + கதவு - உட்கதவு.]

உட்கதை *utkadai,* பெ. (n.) ***கதைக்குள் வரும் கிளைக் கதை;*** episode.

க. ஒளகதெ.

உட்கந்தாயம் *utkandāyam,* பெ. (n.) ***நிலக்கிழார்க்குக் கட்டும் வரி*** (c.c.); levy or assessment paid to private land-lords. (செ.அக.).

[உள் + கந்தாயம் - உட்கந்தாயம்.]

உட்கரு *utkaru,* பெ. (n.) ***உள்ளே அடங்கி இருக்கும் பொருள்;*** things contained within; that which is inside, such as precious stones enclosed in the interior of an anklet. உட்கருவை யுடைத்தாகிய... சிலம்பின் (சிலப். 16, 118, உரை). (செ.அக.).

உட்கருத்து *utkaruttu,* பெ. (n.) 1. ***உள்மன நோக்கம்;*** innermost thought, real purpose, motive. 2. ***ஆழ்ந்த கருத்து;*** the deeper sense of a passage, underlying theme.

[உள் + கருத்து - உட்கருத்து.]

உட்கருவி *utkaruvi,* பெ. (n.) ***அகக்கருவி*** பார்க்க; see *aga-k-karuvi.* (செ.அக.).

க. ஒள அட்டை.

[உள் + கருவி.]

உட்கல் *utkal,* பெ. (n.) ***உட்கு-தல்*** பார்க்க; see *utku-.*

[உள் → உள்கு → உள்கல் → உட்கல்.]

உட்கலகம் *utkalagam,* பெ. (n.) ***உட்பூசல்;*** intestine broil civil war. (செ.அக.).

[உள் + கலகம் = உட்கலகம்.]

உட்கழுத்து *utkaluttu,* ***கழுத்தின் முன் பாகம்;*** front part of the neck.

[உள் + கழுத்து = உட்கழுத்து.]

உட்கழுத்துச்சரடு *utkaluttu-c-caradu,* பெ. (n.) ***கழுத்தோடு அணியப்படும் பதக்கஞ் சேர்ந்த பொற்சரடு வகை;*** close fitting golden necklace, with a pendant. (செ.அக.).

[உள் + கழுத்து + சரடு.]

உட்கள்ளம் *utkallam,* பெ. (n.) 1. ***உள் கரவு;*** deep-seated vice, dissimulation. 2. ***புண்ணினுள் நஞ்சு;*** hidden tumour or matter in a boil (செ.அக.).

ம. உள்களவு.

[உள் + கள்ளம் = உட்கள்ளம்.]

உட்கள்ளன் *utkallan,* பெ. (n.) 1. ***இடத்திற்குள் உள்ள கள்ளன்;*** thief within. 2. ***பருவின் உள்ளில் ஏற்படும் ஆணி;*** core of an ulcer.

ம. உள்கள்ளன்;.

[உள் + கள்ளன்.]

உட்கள்ளி *utkalli,* பெ. (n.) ***உட்பொருள்; உள்ளிடத்து மந்தணம்;*** inner secret, hidden meaning. (சேரநா.)

ம. உள்கள்ளி

உட்களவு *utkalavu,* பெ. (n.) ***உள்வஞ்சகம்; மனத்தின் கபடத் தன்மை; கரவு;*** deceit, trick. (ஆ. அக.).

ம. உள்களவு.

[உள் + களவு = உட்களவு.]

உட்காந்தல் *utkāndal,* பெ. (n.) ***உள்வெப்பம்;*** inner heat. (ஆ.அக.).

[உள் + காந்தல் = உட்காந்தல். காந்துதல் → காந்தல்.]

உட்காய்ச்சல் *utkāyccal,* பெ. (n.) 1. ***உள்ளாக அடிக்கும் காய்ச்சல்;*** internal fever. 2. ***உள்ளெரிச்சல்;*** envy, jealousy.

ம. உள்ப்பனி.

[உள் + காய்ச்சல் = உட்காய்ச்சல்.]

உட்காய்வு *utkāyvu,* பெ. (n.) ***பொறாமை;*** envy, jealousy.

[உள் + காய்வு = உட்காய்வு.]

உட்கார்[1]-தல் *utkār-,* 2. செ.கு.வி. (v.i.) ***வீற்றிருத்தல்;*** to sit down, to occupy a seat.

[உள் → உள்கு → உள்குறு → உள்குறு-தல் → உள்கார்-தல் → உட்கார்-தல். மலையாளத்தில் இன்னும் இங்கே உட்கார் என்பதை 'இவ்விடெ உள்ளு' என்பர்.]

உட்கார்[2] *utkār,* பெ. (n.) ***பகைவர்;*** foes, those who oppose openly without fear. "உட்காரெதிரூன்றல் காஞ்சி." (பு.வெ.).

[உள் → உட்கு = சினம், சினம் பொங்கும் பகைமை. உட்கு + ஆர் = உட்கார் = பகைவர்.]

உட்கார்த்து-தல் *utkārttu-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***உட்கார வைத்தல்;*** to seat, make to sit.

[உட்கார் → உட்கார்த்து.]

உட்காரம் *utkāram,* பெ. (n.) 1. ***அச்சம்;*** fear. 2. ***நெஞ்சுறுதி;*** resolution, courage. (ஆ.அக.).

[உட்கு → உட்காரம்.]

உட்காரல் *utkāral,* தொ.பெ. (vbl.n.) ***உட்கார்தல்;*** sitting, taking seat. "உட்கார்ந்த பிராமணர்" (பிராச. 174).

[உட்கார் → உட்காரல்.]

உட்காரவை-த்தல் *utkāravai-,* 5. செ.குன்றாவி (v.t.) 1. ***இருக்கையி லிருக்கச் செய்தல்;*** to seat, to make one sit by providing a seat. 2. ***அடக்குதல்;*** to floor, as an opponent, fig. to put to silence, as by a decisive argument, vanquish, overcome.

[உட்கார் → உட்காரவை.]

உட்கால் *utkāl,* பெ. (n.) ***நீர் வரத்திலுள்ள கால்வாய்*** (ஆ.அக); a channel.

[உள் + கால். கால் = கால்வாய்.]

உட்கிடக்கை *utkiḍakkai,* பெ. (n.) ***உட்கருத்து*** பார்க்க; see *utkaruttu.* (செ.அக.).

[உள் + கிடக்கை = உட்கிடக்கை. கிடக்கை = கிடந்துள்ள, படிந்துள்ள எண்ணம், கருத்து. உட்கிடக்கை = உள்ளெண்ணம்.]

உட்கிடை *utkiḍai,* பெ. (n.) 1. ***உட்கருத்து*** பார்க்க; see *utkaruttu.* 2. ***ஊரகச் சிற்றூர்;*** subordinate hamlet in a village group. "சுரண்டையூர் முதலுட்கிடை" (குற்றா. குற. 89.3).

[உள் + கிடை = உட்கிடை. கிடை = கிடக்கை.]

உட்கு[1]-தல் *utku-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***அஞ்சுதல்;*** to be afraid, to stand in awe, to show signs of fear. "நண்ணாரு முட்குமென்பீடு" (குறள், 1088). 2. ***நாணு தல்;*** to be bashful, be shy. "சேரன் வருக .. உட்காதே" (தமிழ்நா. ஔவை). 3. ***நிலை கெடுதல்;*** to be nervous, to collapse. 4. ***மடிதல்;*** to die, to be ruined. (செ.அக.).

[உள்கு → உட்கு. உள்குதல் = அஞ்சுதல்.]

உட்கு[2]-தல் *utku-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***வெட்டுதல்;*** to cut.

உட்கு[3] *utku,* பெ. (n.) 1. ***அச்சம்;*** fear, dread, terror. "நாணுமுட்கு மடைதர" (குறிஞ்சிப். 184). 2. ***நாணம்*** (பிங்.); shame, bashfulness, modesty.

[உள்கு → உட்கு.]

உட்கு[4] *utku,* பெ. (n.) 1. ***மிடுக்கு;*** strength, might. "உட்குடை யசுரர்" (திவ். திருவாய். 7,2,3). 2. ***மதிப்பு;*** dignity, respect. "உட்கில் வழி வாழாவூக்கம்" (இனி. நாற்.27).

[உள்கு → உட்கு.]

உட்குடி *utkuḍi,* பெ. (n.) 1. ***உள்ளூரிலிருந்து பயிர் செய்து முழு வாரமும் பெறுதற்குரிய குடிகள்;*** (G.Sm.D.I. 11,62); resident ryots who farm lands in time for the major crops and are entitled to the full shares or rates, dist. fr. 2. ***புறக்குடி;*** a class of farmers in Salem District. (செ.அக.).

ம. உள்குடியான்.

[உள் + குடி. உள்ளூரில் வாழும் குடி மக்கள்.]

உட்குடிப்பாயகாரி *utkuḍi-p-pāyakāri,* பெ. (n.) ***உரிமை பெற்ற குடி*** (M.NA.D. 284); tenant who has acquired an occupancy right in a village. (செ.அக.).

[உள் + குடி + (பாயகாரன்) பாயகாரி. பயன்காரன் → பாய காரன் = உட்குடியாய் இருந்து பயன்பெறும் உரிமைக்கு உரியவன். பயன் → பாயம்.]

உட்குடைச்சல் *utkuḍaiccal,* பெ. (n.) ***உடம்பினுள் உண்டாகும் நரம்பைப் பற்றியவோர் வலி;*** pain, affecting the nerves internally. (சா.அக.).

[உள் + குடைச்சல் = உட்குடைச்சல்.]

உட்குத்தகை *utkuttagai,* பெ. (n.) ***கீழ்க்குத்தகை;*** sub-lease. (செ.அக.).

ம. உள்குத்தகை.

[உள் + குத்தகை = உட்குத்தகை.]

உட்குத்தல் *utkuttal,* பெ. (n.) 1. ***கட்டி, பிளவை, சிலந்தி போன்றவற்றில் ஊசியால் குத்துவது போல் ஏற்படும் குத்தல் வலி;*** deep seated pricking pain in boil carbuncle, ulcer etc. 2. ***உட்செலுத்துதல்; உள்ளே குத்திச் செலுத்துதல்;*** piercing through a part or organ of the body for purposes of injection. (சா.அக.).

[உள் + குத்தல் = உட்குத்தல்.]

உட்குத்து *utkuttu,* பெ. (n.) 1. ***உடம்பு காய்ந்து, வியர்த்து, பல் கிட்டி, நா வறண்டு, வாய் கீழ்நோக்கி, அன்னந் தண்ணீர் செல்லாது வருந்துமோர் குலையைப் பற்றிய நோய்;*** a kind of tetanus form heart disease, marked by perspiration, lock-jaw, dryness of the tongue, passage of gas downwards, aversion to food and drink etc, a kind of tetanus. 2. ***உடம்பினுள் ஊசியால் குத்தி மருந்தையுட் புகுத்துதல்;*** act of passing a liquid medicine into a part of the body-injection. 3. ***உள்ளுறுப்பு களைத் தாக்கும்படி கொடுத்த குத்து;*** blow dealt so as to affect the internal organs.

[உள் + குத்து = உட்குத்து.]

உட்குத்துப்புறவீச்சு *utkuttu-p-puṟavīccu,* பெ. (n.) ***ஒரு இசிவுநோய்*** (வின்.); hepatic complaint attended with convulsions. (செ.அக.).

[உள் + குத்து + புறம் + வீச்சு.]

உட்குப்பாயம் *utkuppāyam,* பெ. (n.) ***உள் உடுப்பு;*** inner garment. (சேரநா.).

ம. உள்குப்பாயம்; க. ஒளஉடுபு.

[உள் + குப்பாயம்.]

உட்குழி *utkuḻi,* பெ. (n.) 1. ***நாவாய்க்குழி அல்லது யோனியின் உட்குழி;*** cavity behind the vaginal aperture; fossa navicularis. 2. ***இடுப்பெலும்பினுட்புறம்;*** inner part of ilium-Venter. (சா.அக.).

[உள் + குழி = உட்குழி.]

உட்குளிர் *utkuḷir,* பெ. (n.) 1. ***உள்ளில் தோன்றும் குளிர்;*** internal cold. 2. ***விடுப்பு;*** relief.

ம. உள்குளிர்.

உட்குற்றம் *utkuṟṟam,* பெ. (n.) ***ஆசை, அவா, பகைமை, இவறன்மை, செருக்கு, பொறாமை, முதலியன;*** innate or inborn human foible such as lust, anger etc.

[உள் + குற்றம் = உட்குற்றம்.]

உட்குறி *utkuri,* பெ. (n.) ***உள்ளிருந்து காட்டும் குறி;*** internal symptom. (சா.அக.).

[உள் + குறி = உட்குறி.]

உட்குறிப்பு *utkurippu,* பெ. (n.) ***உட்கருத்து*** பார்க்க; see *utkaruttu.* (செ.அக.).

[உள் + குறிப்பு = உட்குறிப்பு.]

உட்கூதல் *utkudal,* பெ. (n.) ***உடம்பினுள்ளாக உண்டா கும் குளிர்;*** internal cold, shivering, chillness. (செ.அக.).

[உள் + கூதல் = உட்கூதல். கூதற் காற்றால் நடுங்குவது போன்று உட்குளிரால் நடுங்குதல்.]

உட்கூதிர் *utkūdir,* பெ. (n.) ***உட்கூதல்*** பார்க்க; see *utkūdal.*

[உள் + கூதிர் = உட்கூதிர். கூதல் → கூதர் → கூதிர். கூதிர் = கூதல்காற்று, கூதல் காற்று வீசும் குளிர்காலம்.]

உட்கை *utkai,* பெ. (n.) 1. ***உள்ளங்கை;*** palm (of hand). 2. ***உள்ளாள்;*** one who is privy to, or in collusion with, another. 3. ***உட்கைச்சுற்று*** பார்க்க; see *utkaicuṟṟu.* 4. ***உட்பக்கம்;*** innser side. 5. ***உளவு;*** spying. 6. ***உதவி*** (சேரநா.); help, assistance. 7. ***அக்குள்*** (கருநா.); armpit.

ம. உளக்கை; க. ஒளகை, ஒளகெய்.

[உள் + கை = உட்கை.]

உட்கைச்சுற்று *utkaiccuṟṟu,* பெ. (n.) ***நாட்டியத்தில் இடக்கைப் புறமாகச் சுற்றுகை;*** turning to the left in dancing or winding, turning backwards or contrary to the sun. (செ.அக.).

[உள் + கை + சுற்று.]

உட்கொள்[1]**(ளு)-தல்** *utkollu-,* 10. செ.குன்றாவி. (v.t.) 1. ***தன்னகத்துக் கொள்ளுதல்;*** to take, inclose, as one's own; to appropriate. "பாலையுட் கொண்டிடு செருக் கால்" (கந்தபு. ஆற்று. 14). 2. ***உட்கருதல்;*** to regard, look upon, consider. 3. ***உண்ணுதல்;*** to take in, as one's food or drink to swallow. "யாவரு மணிந்துட் கொண்டு" (கந்தபு. திருக்கல். 82). 4. ***உள்ளிழுத்தல்;*** to draw in or absorb, as the earth absorbs the rain water.

ம. உள்கொள்ளுக; க. ஒளகொள்.

[உள் + கொள் = உட்கொள்.]

உட்கொள்[2]**(ளு)-தல்** *utkollu-,* 10. செ.குன்றாவி. (v.t.) ***வரி முதலியன தண்டுதல்;*** to collect, as taxes, etc. 'உட்கோளடங்க உட்கொண்டு' (S.I.I. vi, 147). (செ.அக.).

[உள் + கொள்.]

உட்கோட்டை *utkōttai,* பெ. (n.) 1. ***உள்ளான அரண்;*** citadel. (C.E.M.). 2. ***கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அண்மையிலுள்ள ஓர் ஊர்;*** village near Gangai konda chōla puram. (செ.அக.).

[உள் + கோட்டை = உட்கோட்டை.]

உட்கோடல் *utkōdal,* பெ. (n.) ***உட்கொளல்*** பார்க்க; see *utkolal.*

[உள் + கோடல். கொளல் → கோடல்.]

உட்கோயில் *utkōyil,* பெ. (n.) ***கோயில் கருவறை;*** inner shrine, the sanctum sanctorum. "உட்கோயில் புறக்கோயி லுட்பட" (S.I.I. v. 328).

[உள் + கோயில்.]

உட்கோள்[1] *utkōl,* பெ. (n.) ***வரி;*** tax, cess. "உட்கோள டங்க உட்கொண்டு" (S.I.I. vi. 147). (செ.அக.).

க. ஒளதெறகெ. (உள் நாட்டில் போடப்படும் வரி).

[உள் + கோள் = உட்கோள்.]

உட்கோள்[2] *utkōl,* பெ. (n.) 1. ***உட்கருத்து;*** inner meaning, underlying theme. 2. ***கருத்து;*** meaning, significance. 3. ***கோட்பாடு;*** principle, concept. 4. ***அணிவகையுள் ஒன்று;*** figure of speech. (ஆ.அக.).

[உள் + கோள் = உட்கோள். கொள் → கோள்.]

உட்சட்டை *utcattai,* பெ. (n.) ***உள்ளுக்கிடும் அங்கி;*** vest, shirt, undergarment. (செ.அக.).

ம. உள்சட்ட; க. ஒளஉடுபு.

[உள் + சட்டை = உட்சட்டை.]

உட்சண்டை *utcandai,* பெ. (n.) ***உட்கலகம்;*** internal disturbance, family quarrel, civil war. (செ.அக.).

க. ஒளதோடி.

[உள் + சண்டை = உட்சண்டை.]

உட்சமயம் *utcamayam,* பெ. (n.) ***இந்து சமயத்திலுள்ள அறுவகைப் பிரிவுகளு ளொன்று;*** one of the sub classes of six religious sects in Hinduism fold, viz., வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம் (பிங்.). (செ.அக.).

[உள் + சமயம் = உட்சமயம்.]

உட்சாடை *utcādai,* பெ. (n.) 1. ***உட்கருத்து;*** inner sense. 2. ***குழூஉக்குறி;*** conventional term, peculiar to a society or profession.

[உள் + சாடை = உட்சாடை.]

உட்சாத்து *utcāttu,* பெ. (n.) ***அரைக்கச்சை;*** short inner garment worn round the waist, a kind of tunic. "உழுவை தான் கொடுத்த உட்சாத்தும்" (ஏகாம்.உலா. 203). (செ.அக.).

[உள் + சாத்து = உட்சாத்து.]

உட்சிதைவு *utcidaivu,* பெ. (n.) 1. ***அழிவு*** (நீலகேசி. 657); desolation. 2. ***வெட்டல்;*** cutting.

[உள் + சிதைவு.]

உட்சீலை *utcīlai,* பெ. (n.) 1. ***உள்ளே கட்டும் சீலை;*** under or inner garment. 2. ***உள்வைத்துத் தைக்கும்***

துணி; lining of a garment. 3. ***புண்ணிற்குள் ஏற்படும் புரை;*** sinus of an ulcer. (செ.அக.).

[உள் + சீலை = உட்சீலை.]

உட்சுரம் *utcuram,* பெ. (n.) ***உட்காய்ச்சல்;*** internal fever; low fever. (செ.அக.).

ம. உள்ச்சூடு.

[உள் + சுரம் = உட்சுரம்.]

உட்சூத்திரம் *utcūttiram,* பெ. (n.) 1. ***எந்திரத்தின் மூலக்கருவி*** (வின்.); main spring of a machinery. 2. ***உள்ளுளவு;*** clue to an affair. 3. ***கணிதத்தில் குறுக்கு வழி;*** (Arith.) short method or formula of working a sum. 4. ***எளிதான வழி;*** easy process. 5. ***உட்குறிப்பு;*** deeper meaning of a passage. 6. ***மூலகாரணம்;*** fundamental cause. 7. ***மூலநூற்பா;*** original, head verse. 8. ***நுட்பமானவகை*** (ஆ.அக.); minute design. (செ.அக.).

[உள் + சூத்திரம்.]

உட்செல்-தல் *utsel-,* 13. செ.கு.வி. (v.i.) ***உள்ளே செல்லுதல்;*** to enter, go in.

க. ஒளகெகோகு, ஒளகெசேரு.

[உள் + செல்.]

உட்செல்லல் *utsellal,* பெ. (n.) ***உட்செலுத்து-தல்*** பார்க்க; see *utseluttu-.*

[உள் + (செல்லுதல்) செல்லல்.]

உட்செலுத்து-தல் *utseluttu-,* 13. செ.குன்றாவி. (v.t.) 1. ***உள்ளே செலுத்துதல்;*** to insert, inject. 2. ***சூழ்ச்சி செய்து உள்ளே புகுவித்தல்;*** to administer, as a medicine or a poison, by sweet persuasion. 3. ***கையூட்டுக்கொடுத்தல்;*** to send in a bribe secretly. (செ.அக.).

[உள் + செலுத்து = உட்செலுத்து.]

உட்சேவகம் *utsēvagam,* பெ. (n.) ***வரிவகை*** (S.I.I. vi. 147.); cess. (செ.அக.).

[உள் + சேவகம் = உட்சேவகம். செய் → செவை → செவகம் → சேவகம்.]

உட்டாகம் *uttāgam,* பெ. (n.) ***உள்வறட்சி*** பார்க்க; see *ulvaratci.*

மறுவ. நீர்வேட்கை, வாயறுகை, விடாய், நாவறட்சி, தழப்பி.

[உள் + தாகம்.]

உட்டாணி *uttāni,* பெ. (n.) ***கனத்த மணி;*** heavy, solid gem.

ம. உட்டாணி; *Mar.* uthavana.

[ஒருகா. உருட்டாணி → உட்டாணி.]

உட்டாறா *uttārā,* பெ. (n.) ***கப்பலில் சவாப் பாய்களை இறக்க வுதவுங் கயிறுகள்*** (M.Navi. 87); ropes used to tighten sails of a ship.

[ஒருகா. உருட்டு → உட்டு + (ஆர்த்து) ஆறா.]

உட்டி *utti,* பெ. (n.) 1. ***விளையாட்டில் பயன்படுத்தும் வித்துகள் அல்லது காய்கள்;*** seeds used in games. 2. ***கன்றுகளுக்கு வாயிலிடும் முச்சாணு அல்லது வலை;*** small basket or coir net for calves' mouths to prevent eating soil etc.

க. உட்பு.

[உண்டை → உட்டை → உட்டி.]

உட்டினிடம் *uttinidam,* பெ. (n.) 1. ***தலைப்பாகை;*** turban. 2. ***மூடி;*** lid. (ஆ.அக.).

[உச்சி → உத்தி → உட்டி + இன் + இடம்.]

உட்டுளை *uttulai,* பெ. (n.) ***உள்ளே உள்ள துளை;*** inner hole, bore or hallow space in a tube or pipe. (செ.அக.).

[உள் + துளை = உட்டுளை.]

உட்டுறவு *utturavu,* பெ. (n.) ***உள்ளத்துறவு;*** mental renunciation of one's desires and attachments. (செ.அக.).

[உள் + துறவு = உட்டுறவு. உள் = உள்ளம்.]

உட்டுறை *utturai,* பெ. (n.) 1. ***கோயில் முதலியவற்றில் உட்காரியம் நடத்தும் பிரிவு;*** department of internal affairs as in a temple. (Loc.). (செ.அக.). 2. ***உள்துறை;*** Home Dept.

[உள் + துறை = உட்டுறை.]

உட்டெளிவு *ut-telivu,* பெ. (n.) 1. ***மனத்தெளிவு;*** clearness of mind, freedom from doubt. 2. ***வடித்தசாறு*** (வின்.); clear liquid, poured off from the sediment. 3. ***உள்வயிரம்*** (வின்.); strength and soundness, as in timber. 4. ***உட்பக்க வளவு*** (வின்.); inner measurement. 5. ***பேரறிவு*** (ஆ.அக.); wisdom. 6. ***பழுது திருத்தி யெடுத்துக் கொண்டது.*** (ஆ.அக.); that which has been selected after clarification.

க. ஒளகறிவு.

[உள் + தெளிவு = உட்டெளிவு. உள் = உள்ளம்.]

உட்டேட்டம் *uttēttam,* பெ. (n.) 1. ***மன நாட்டம்;*** secret object of pursuit; activating motive. 2. ***உட்சம்பாத்தியம்;*** property acquired and kept in secret. (செ.அக.).

[உள் + தேட்டம் = உட்டேட்டம். தேட்டம் = தேடியது, தேடித் திரட்டிய செல்வம்.]

உட்டை[1] *uttai,* பெ. (n.) ***விளையாட்டுக்காய்;*** seeds used in Indian indoor games of children. "உட்டையென வைத்து விளையாடு பைங்கழற்காய்" (திருப்போ. சந். பிள்ளைத். அம்புலி. 6). (செ.அக.).

[உண்டை → உட்டை.]

உட்டை[2] *uttai,* பெ. (n.) ***குவியல்;*** heap. ஒரே உட்டையாகப் போட்டுவைக்காதே. (கொங்.வ.).

[ஒட்டு → உட்டு → உட்டை.]

உட்டொடர் *uttodar,* பெ. (n.) ***பெருந்தொடர் மொழியின் பாகமான சிறுதொடர்*** (தொல். சொல். 42. சேனா.); simple sentence forming part of a compound sentence. (செ.அக.).

[உள் + தொடர் = உட்தொடர்.]

உட்டொளை *uttolai,* பெ. (n.) 1. ***உள்ளான ஓட்டை;*** hollow space or bore in a pipe or tube. 2. ***உட்டுளை*** பார்க்க; see *uttulai.* (செ.அக.).

[உள் + துளை = உட்டுளை → உட்டொளை. (கொ.வ.).]

உட்டொளைப்பொருள் *uttolai-p-porul* பெ. (n.) 1. ***உட்டொளையுள்ள குழல் முதலியன;*** anything tubular or hollow. 2. ***உட்டுளைப் பொருள்***பார்க்க; see *uttulai-p-porul.* (செ.அக.).

[உள் + துளை + பொருள் = உட்டுளைப்பொருள் → உட்டொளைப் பொருள். துளை → தொளை.]

உட்டோல் *uttol,* பெ. (n.) 1. ***மீத்தோலுக்கடியிலுள்ள தோல்;*** true skin below the epidermiscorium or dermis. 2. ***உட்சவ்வு;*** inner membrane. (சா.அக.).

[உள் + தோல் = உட்டோல்.]

உட்பகை *utpagai,* பெ. (n.) 1. ***நட்புப் பாராட்டிக் கெடுக்கும் பகைமை*** (விரோதம்) (குறள். 889); internal enmity, hatred or grudge; rancour at heart with out-ward profession of friendship. 2. ***குடிகளின் பகைமை;*** civil hostility. 3. ***காமம் முதலிய அறுபகை*** (பிங்.); internal enemy of man having reference to the six emotions which tend to corrupt and taint his soul. "பற்றற்ற ஒகப் பகையால் உட்பகையாறும் முற்றத் துறந்து" (பாரத. சம்பவ. கீழ்.). (செ.அக.).

ம. உள்பக; க. ஒளவகை.

[உள் + பகை = உட்பகை.]

உட்பட *utpada,* இடை. (part.) ***உள்ளாக;*** together with, inclusive of. "நாடும் பொய்கையு முட்பட வுரைத்தனன்" (சீவக. 1216). (செ.அக.).

[உள் + பட = உட்பட.]

உட்படி *utpadi,* பெ. (n.) 1. ***துலாக்கோலிலிடும் படிக்கல் எவ்வளவு குறைகின்றதென்பதை அறிதற்கு இடும் சிறு படிக்கல் முதலியன*** (வின்.); that which is thrown into a scale to make up the weight; a makeweight. 2. ***நடப்புப் பயிராண்டு;*** current year for the assessment of tax etc. (செ.அக.).

[உள் + படி = உட்படி.]

உட்படு[1]-தல் *utpadu-,* 20. செ.கு.வி. (v.i.) 1. ***உள்ளாதல்;*** to be within, included. 2. ***கீழாதல்;*** to be under, as in age. 3. ***அகப்படுதல்*** (பு.வெ. 8.34.); to fall into, as a trap; to be caught. 4. ***உடன்படுதல்;*** to be taken in, concerned in; to become a party. 5. ***சேர்தல்;*** to join. "ஆறுட்பட்டவை யிருகாலத்து". (கந்தபு. அக்கினி. 205). (செ.அக.).

ம. உள்பெடுக; க. ஒளபடு.

[உள் + படு = உட்படு.]

உட்படு[2]-த்தல் *utpadu-,* 18. செ.குன்றாவி. (v.t.) 1. ***உள்ளாக்குதல்;*** to cause to be put in. 2. ***அகப்படுத்துதல்;*** to inclose, ensnare, envelop. 3. ***உடன்படுத்துதல்;*** to persuade, bring round. 4. ***உட்செலுத்துதல்;*** to thrust in, as is done with a gauze through a wound or injury. (சா.அக.).

[உள் + படு = உட்படு.]

உட்பத்தியம் *utpattiyam,* பெ. (n.) ***மருந்துண்ணுங்காலத்தில் புணர்ச்சி விலக்கும் பத்தியம்*** (வின்.); abstinence from sexual indulgence as regimen to be observed while one is taking medicine. (செ.அக.).

[உள் + பத்தியம் = உட்பத்தியம். உள் = உள்முகமான, வெளிப் படச் சொல்லாமல் குறிப்பாய் உணரத்தக்க.]

உட்பந்தி *utpandi,* பெ. (n.) ***விருந்தில் தலைவரிசை;*** inmost or first row of guests at a feast. (செ.அக.).

[உள் + பந்தி = உட்பந்தி.]

உட்பலம் *utpalam,* பெ. (n.) 1. ***அகவலிமை;*** reserve strength, as of one's physique, property, friends, or fighting force. 2. ***ஆண்மை;*** vitality. 3. ***துணைவர் வலிமை;*** supporter's strength. 4. ***செல்வ வலிமை;*** wealth strength. 5. ***படை வலிமை;*** military strength. (செ.அக.).

*[உள் + பலம் = உட்பலம். த. வலம் > Skt. bala > த. பலம். **உள்வலி** பார்க்க; see uvali.]*

உட்பாய்ச்சல் *utpayccal,* பெ. (n.) ***உள்ளே மருந்தைப் புகட்டல்;*** lit. throwing in, the act of passing a liquid or a medicine in liquid form into a part of the body such as the rectum or a blood vessel. (சா.அக.).

[உள் + பாய்ச்சல் = உட்பாய்ச்சல்.]

உட்பாயம் *utpayam,* பெ. (n.) ***கருவழிதல்;*** abortion.

[உள் + பாயம் பயத்தல் → பாயம் (பிரசவம்).]

உட்பிடி *utpidi,* பெ. (n.) ***கைவேல்*** (அக.நி.); lance; spear.

க. ஒலவிடு. (அகங்கையின் உட்பாகம்).

[உடன் + பிடி → உடம்பிடி → உட்பிடி.]

உட்பிரசவம் *utpirasavam,* பெ. (n.) ***உட்பாயம்*** பார்க்க; see *utpayam.* (சா.அக.).

[உள் + பிரசவம் = உட்பிரசவம். பயத்தல் → பாயம் → Skt prasava > த. பிரசவம்.]

உட்பிரிவு *utpirivu,* பெ. (n.) ***ஒன்றின் பல வகைகளுள் ஒன்று; உள்பாகம்;*** subdivision. (சேரநா.).

ம. உள்பிரிவு.

[உள் + பிரிவு.]

உட்புகவு *utpugavu,* பெ. (n.) ***உள்ளே புகுகை;*** act of entering as into a room or a house. (செ.அக.).

[உள் + புகவு. புகு → புகவு.]

உட்புகு-தல் *utpugu-,* 21. செ.கு.வி. (v.i.) 1. ***உள்ளே புகுதல்;*** to get into, enter. "உட்புகுந் தென்னுளமன்னி" (திருவாச. 31.3.). 2. ***ஆழ்ந்து கவனித்தல்;*** to enter deeply into, get into the heart of. அந்தச் செய்தியை உட்புகுந்து பார். (உ.வ.). (செ.அக.).

ம. உள்புகுக; க. ஒளவோகு, ஒளபுகு.

[உள் + புகு - உட்புகு → உட்புகு-தல்.]

உட்புண் *utpun,* பெ. (n.) 1. ***உள்ளாகவிருக்கும் ஆறாப்புண்;*** internal or deep seated ulcer. 2. ***உள்ளகத் திலேற்படும் புண்;*** inflammation of internal organs. 3. ***புரைப்புண்;*** scar with a sinus. (சா.அக.).

ம. உள்புண்ணு.

[உள் + புண் = உட்புண்.]

உட்புரவு *utpuravu,* பெ. (n.) ***அரசினைச் சாராத அறப் புறம்;*** endowed land. "நாட்டு நீங்கலாய் உட்புரவாய்த் தேவதானமாக" (S.I.I.ii. 509). (செ.அக.).

[உள் + புரவு = உட்புரவு.]

உட்புரை *utpurai,* பெ. (n.) 1. ***உட்டுளை;*** tubular cavity. 2. ***உள்மடிப்பு;*** small inner folds of a garment. 3. ***மந்தணம்;*** secret part of a matter. (W.) (செ.அக.).

[உள் + புரை = உட்புரை.]

உட்புளகம் *utpulagam,* பெ. (n.) 1. ***மயிர்க் கூச்சிடல்;*** hair on ends through joy or rapture. (சா.அக.). 2. ***மெய்சிலிர்-த்தல்*** பார்க்க; see *meycilir.*

[உள் + புளகம் = உட்புளகம்.]

உட்புறக்குடி *utpura-k-kudi,* பெ. (n.) ***நிலவுரிமையில்லா விடினும், நீண்டகாலப் பயன்படுத்தத்தால் வாரஞ் செலுத்திக் கொண்டுவரும் வரை அந்நிலத்திற்கு உரிமையுள்ளவனான குடியானவன்;*** cultivator who has no title to a piece of land but who by the right of long enjoyment, cannot be dispossessed as long as he pays the stipulated rent. (செ.அக.).

[உள் + புறம் + குடி.]

உட்புறம் *utpuram,* பெ. (n.) ***உட்பக்கம்;*** inner side of a thing. (செ.அக.).

[உள் + புறம் = உட்புறம்.]

உட்புறம்பாதல் *utpurambādal,* பெ. (n.) ***உட்பக்கம் வெளிப்பக்கமாதல்;*** assuming a perverse position or the turning inside out, etc. as in inversion of the womb. (சா.அக.).

[உள் + புறம்பு + ஆதல்.]

உட்புறம்பின்மை *utpurambinmai,* பெ. (n.) ***இடையீ டின்மை*** (நாநார்த்த. 733.); continuity, non-interruption. (செ.அக.).

[உள் + புறம்பு + இன்மை.]

உட்புறவு *utpuravu,* பெ. (n.) ***உட்புரவு*** பார்க்க; see *utpuravū.* (ஆ.அக.).

[உள் + புறவு = உட்புறவு (கொ.வ.).]

உட்புறவுறுப்புகள் *utpuravuruppugal,* பெ. (n.) ***உடம்பி னுள்ளேயிருக்கும் நுரையீரல், தாமரைக்காய், கல்லீ ரல், இரைப்பை முதலியன;*** the internal organs of animals such as the lungs, the heart, the liver, the stomach and the other viscera. (சா.அக.).

[உள் + புறம் + உறுப்புகள் = உட்புறவுறுப்புகள்.]

உட்பூசை *utpūšai,* பெ. (n.) ***மனத்தகப் பூசை*** (சி.சி. 2.28); mental and spiritual worship. (செ.அக.).

[உள் + பூசை = உட்பூசை. பூசை = பூக்களைக் கொண்டு செய்வது. பூ + செய் - பூசை.]

உட்பேதம் *utpēdam,* பெ. (n.) ***அகவேறுபாடு*** (சி.போ.பா. 1); internal or sectional difference, subdivision, opp. to புறப்பேதம். (செ.அக.).

[உள் + பேதம் = உட்பேதம்.]

உட்பொய் *utpoy,* பெ. (n.) ***உள்ளீடற்ற பொருள்;*** hollow, unsubstantial thing. உட்பொய்யான காளாம்பி (சிறு பாண். 134, உரை). (செ.அக.).

[உள் + பொய் = உட்பொய்.]

உட்பொருள் *utporul,* பெ. (n.) 1. ***உண்மைக் கருத்து;*** real purport or significance. "வேதத்தினுட்பொருள்" (திவ். கண்ணிநுண். 8). 2. ***மறைபொருள்;*** secret or esoteric meaning. 3. ***உட்பயன்*** (ஆ.அக.); intrinsic benefit. (செ.அக.).

ம. உள்பொருள்.

[உள் + பொருள் = உட்பொருள்.]

உட்போடு-தல் *utpōdu-,* 19 செ.குன்றாவி. (v.t.) 1. ***வயமாக்குதல்;*** to entice, coax, wheedle. அவனை உட்போட்டுக் கொண்டு காரியம் நடத்துகிறான். 2. ***காயச் செய்தல்*** (ஆ.அக.); to cause to dry. 3. ***வாட்டுதல்*** (ஆ.அக.); to wither. (செ.அக.).

[உள் + போடு = உட்போடு → உட்போடு-தல்.]

உடக்கு[1]-தல் *udakku-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***செலுத்துதல்;*** to dart or shoot, as an arrow. "வில்வாங்கி யுடக்குஞ் சரத்தால்" (மாறன. பா. 660). 5. செ.கு.வி. (v.i.) 2. ***நாணிற்செறிதல்*** (மாறன.பா. 374); to be fitted to the string of the bow, as an arrow. (செ.அக.).

[ஒடுக்கு → உடுக்கு → உடக்கு.]

உடக்கு[2]-தல் *udakku-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***உள்ளீ டின்றி யிருத்தல்;*** to lack strength or solidity; to be tubular, to be hollow. (Tinn.) (செ.அக.).

[உணக்கு → உடக்கு.]

உடக்கு[3] *udakku*, பெ. (n.) 1. ***உடல்;*** body. "உடக்கைத் தகர்த்தே யுயிரையமன் கொள்கையிலே" (பட்டினத்துப். பக். 260). 2. ***உள்ளீடின்மை;*** hollowness. (Tinn.). (செ.அக.).

[விடக்கு → உடக்கு.]

உடக்கு[4] *udakku*, பெ. (n.) ***திருகாணிச் சுரையி னுட்சுற்று*** (வின்.); thread of a screw. (செ.அக.).

[ஒடுக்கு → உடுக்கு → உடக்கு.]

உடக்கெடுத்துப்போ-தல், *udak-k-eduttu-p-pō-*, 15. செ.கு.வி. (v.i.) ***உடம்புமிக மெலிதல்;*** to grow lean and emaciated; to become skin and bone. (Loc.) (செ.அக.).

[உணக்கு → உடக்கு + எடுத்து + போ.]

உடங்கு *udaṅgu*, பெ. (n.) ***பக்கம்;*** propinquity, side, nearness. "எமதுடங்கிற் பலித்ததோ" (விநாயகபு. 622, 19). கு.வி.எ. 1. ***ஒத்து;*** amicably, harmoniously. "உடங்குயிர் வாழ்க வென்று" (மணிமே. 10.664). 2. ***ஒருபடியாக;*** (மணிமே. 10, 64, உரை.); in the same manner. 3. ***சேர;*** together, closely. "தடந்தோட் கொப்ப வுடங்கணிந்து" (பெருங். மகத. 2, 231). 4. ***உடனே;*** immediately. "ஒலிகேட்டோ னுடங்கெழில் யானையங் குண்டென வுணர்தல்" (மணிமே. 27, 32).

[உடன் → உடங்கு (வே.க. 43).]

உடங்கோடி *udaṅgōḍi*, பெ. (n.) ***இண்டு*** (பெரியமாட். 160); tiger stopper. (செ.அக.).

உடசம்[1] *udašam*, பெ. (n.) ***இலைக்குடில்;*** hut made of leaves, hermit's thatched hut. "உடசமேற்படரு மாடன் மென்கொடி" (சேதுபு.நைமி. 12). (செ.அக.).

[உலவை → உலசம் → உடசம்.]

உடசம்[2] *udašam*, பெ. (n.) ***வெட்பாலை*** (தைலவ. தைல. 72); ivory tree.

[உலவை → உலசம் → உடசம்.]

உடசிப்பி *udašippi*, பெ. (n.) ***சிப்பிமுத்து;*** oyster pearl as distinguished from pearls got from other sources. (சா.அக.).

[உடசம் + சிப்பி = உடசற்சிப்பி → உடற்சிப்பி → உடசிப்பி.]

உடணம் *udaṇam*, பெ. (n.) 1. ***இஞ்சி;*** ginger. 2. ***மிளகு;*** pepper. 3. ***சுக்கு;*** dried ginger. 4. ***திப்பிலி மூலம்;*** root of piper longum - Piper cubeba. (சா.அக.).

[உல் → உள் → உடு → உடணம்.]

உடந்தை *udandai*, பெ. (n.) 1. ***சேர்க்கை;*** union. "மனைவியா மனந்தையோடுடந்தையாய்" (மச்சபு. ஆதிசிருட்டி. 15). 2. ***துணை;*** alliance, support, abetment. "உடந்தையாய்த் திரிவாரும்" (இராமநா. அயோத். 4). 3. ***உறவு;*** relationship. எனக்கும் அவனுக் கும் உடந்தையில்லை. (உ.வ.) 4. ***கூட்டாளி;*** companion.

ம. உடந்த; க., து. ஒட; தெ. ஒட.

[உடன் → உடந்தை. (வே.க. 43).]

உடந்தைக்குற்றவாளி *udandai-k-kuṟṟavāḷi*, பெ. (n.) ***சேர்க்கைக் குற்றவாளி;*** a better of an offence, co-offender, accomplice. (செ.அக.).

[உடன் → உடந்தை + குற்றவாளி.]

உடந்தையாதல் *udandai-y-ādal*, பெ. (n.) 1. ***ஒருமித் தல்;*** coalese. 2. ***ஒன்றுபட்டிருத்தல்;*** combine into one. (ஆ.அக.).

[உடந்தை + ஆதல்.]

உடப்பிறந்தாள் *uda-p-piṟandāḷ*, பெ. (n.) ***உடன்பிறந்த வள்;*** sister. (செ.அக.).

[உடன் + பிறந்தாள் = உடன்பிறந்தாள் → உடப்பிறந்தாள் (கொ.வ.).]

உடப்பிறந்தான் *uda-p-piṟandāṉ*, பெ. (n.) ***உடன்பிறந்த வன்;*** brother.

ம. உடப்பிறன்னவன்; க. ஒடவுட்டி தவனு; தெ. தோடபுட்டின வாடு.

[உடன் + பிறந்தான் → உடன் பிறந்தான் → உடப்பிறந்தான் (கொ.வ.).]

உடப்பிறப்பு *uda-p-piṟappu*, பெ. (n.) 1. ***உடன்பிறந்த வன்-ள்;*** one born of the same parents, brother or sister. 2. ***தம்மக்கள்; பிறவிகள்;*** brotherhood, fraternity. (செ.அக.).

ம. உடப்பிறப்பு, உடப்பிறவி; க. ஒடவுட்டித.

[உடன் + பிறப்பு = உடன்பிறப்பு → உடப்பிறப்பு (கொ.வ.).]

உடப்பு[1] *udappu*, பெ. (n.) ***துறட்டு முள்*** பார்க்க (மூ.அ.); see *turaṭṭumuḷ*. (செ.அக.).

[ஒடு → ஒடம் → உடம் → உடப்பு.]

உடப்பு[2] *udappu*, பெ. (n.) ***உடைப்பு*** பார்க்க; *see udaippu.*

[உடைப்பு → உடப்பு.]

உடம் *udam*, பெ. (n.) ***வேலமரம்;*** babool tree. (சா.அக.).

[ஒடு → ஒடம் → உடம்.]

உடம்படல் *udampaḍal*, பெ. (n.) ***உடன்படு-தல்*** பார்க்க; see *udaṉpaḍu-*.

[உடன் + படல் = உடன்படல் → உடம்படல்.]

உடம்படிக்கை *udampaḍikkai*, பெ. (n.) ***உடன்படிக்கை*** பார்க்க; see *udaṉpaḍikkai*.

ம. உடம்படி; க. ஒடம்படிகெ; தெ. ஒடம்படிக; து. ஒடம்படிகெ.

[உடன் + படிக்கை = உடன்படிக்கை → உடம்படிக்கை (கொ.வ.).]

உடம்படு-தல் *udampaḍu-*, 20. செ.கு.வி. (v.i.) ***ஒப்புதல்;*** to consent, agree to acquire.

ம. உடம்பெடுக; க. ஒடம்படு.

*[உடன் + படு = உடன்படு → உடம்படு. **உடன்படு** பார்க்க; see uḍaṉpaḍu.]*

உடம்படுத்தநோய் *uḍampaḍutta-nōy,* பெ. (n.) ***முகக்குற்றக் கோளாறுகளினாலும் மனவருத்தங்களினாலும் இயல்பாகவே உடம்பிலேற்படும் நோய்;*** disease of an idiopathic type due to the morbid diathesia of the body arising from the action of any of the three fundamental bodily humours or from the dynamical energies of the mind. (சா.அக.).

[உடம்பு + அடுத்த + நோய்.]

உடம்படுமெய் *uḍampaḍu-mey,* பெ. (n.) ***நிலைமொழி யீற்றிலும் வருமொழி முதலிலும் உள்ள இரண்டு உயிர்களைச் சேர்க்கும் மெய்யெழுத்து*** [அவை 'ய், வ்' என்பன. (நன்.162.).]; (gram.) consonantal glide 'y' or 'v' which comes in combination of two vowels to prevent a hiatus.

[உடம்பு + அடு + மெய்.]

உடம்படுவிலக்கு *uḍampaḍu-vilakku,* பெ. (n.) ***அணி வகையுளொன்று; அஃது உடம்பட்டார் போலக் கூறி விலக்குவது;*** figure of speech. (ஆ.அக.).

[உடன் + படு + விலக்கு.]

உடம்பறியாமற்போதல் *uḍampaṟiyāmaṟpōdal,* பெ. (n.) 1. ***மயக்கமுறல்;*** swooning. 2. ***உணர்ச்சியற்றுப்போதல்;*** becoming senseless, to be void of perception. 3. ***மெய்மறத்தல்;*** becoming unconscious. (சா.அக.).

[உடம்பு + அறியாமல் + போதல்.]

உடம்பறியாமை *uḍampaṟiyāmai,* பெ. (n.) 1. ***தன்னை மறத்தல்;*** unconsciousness. 2. ***சுழுத்தி நிலை;*** (in yoga philosophy) state of insensibility to one's own surroundings. 3. ***மருள்;*** (in religious philosophy) degree of delight that arrests the whole mind or in which the mind is carried away, as it were, from the body, ecstasy. (சா.அக.).

[உடம்பு + அறியாமை.]

உடம்பாடு[1] *uḍambāḍu,* பெ. (n.) 1. ***இசைவு;*** agreement, consent. அது எனக்கும் உடம்பாடு. (உ.வ.). 2. ***ஒற்றுமை;*** union, concord. "உடம்பாடிலாதவர் வாழ்க்கை" (குறள். 890). 3. ***உடன்படிக்கை;*** agreement.

ம. உடம்பாடு; தெ. ஒடம்பாடு.

[உடன் + (படு) → பாடு = உடன்பாடு → உடம்பாடு.]

உடம்பிடி *uḍambiḍi,* பெ. (n.) ***வேல்;*** spear. "உடம்பிடித் தடக்கை" (பெரும்பாண். 76).

[உடன் + பிடி = உடன்பிடி → உடம்பிடி = கையில் எப்பொழுதும் உடன்பிடித்திருக்கும் வேல்.]

உடம்பிலை *uḍambilai,* பெ. (n.) ***நெடுநாரை*** பார்க்க; see neḍunārai.

[ஒருகா. உடம்பில் → உடம்பிலை.]

உடம்பின்கூறு *uḍambiṉkūṟu,* பெ. (n.) ***உடற்கூறு*** பார்க்க; see uḍaṟkūṟu. (சா.அக.).

[உடம்பு + இன் + கூறு.]

உடம்பு *uḍambu,* பெ. (n.) 1. ***உடல்*** (குறள். 338.); body. 2. ***மெய்யெழுத்து;*** consonant. "உயிரு முடம்புமா முப்பதும்" (நன். 59). 3. ***உயிருக் கிருப்பிடம்*** (ஆ.அக.); receptacle for life.

ம. உடம்பு; க. ஒடம்பெ, ஒடம்பி; து. உடலு, ஒடாலு; தெ. ஒடலு, ஒள்ளு.

[உழல் → உடல் → உடம்பு.]

உடம்புக்கீடு *uḍambuk-k-īḍu,* பெ. (n.) ***மெய்ம்மறை*** (கவசம்); armour, coat of mail. சீலமே யுடம்புக்கீடு (சீவக. 3074. உரை).

[உடம்பு + கு + ஈடு = உடம்புக்கீடு = உடம்புக்கு இட்டுக் (அணிந்து) கொள்வது.]

உடம்புகட்டுவிடல் *uḍambu-kaṭṭu-viḍal,* பெ. (n.) ***உடம்பு தளர்தல்;*** infirmity through old age, to lose strength.

[உடம்பு + கட்டுவிடல்.]

உடம்புகருத்தல் *uḍambu-karuttal,* பெ. (n.) ***காய்ச்சலால் கருத்தல்;*** dosha (defect) arising from fever, asphixiated condition.

[உடம்பு + கருத்தல்.]

உடம்புகாந்தல் *uḍambu-kāndal,* பெ. (n.) ***உடம்பு வெப்பங்கொள்ளல்;*** body becoming hot. (சா.அக.).

[உடம்பு + காந்தல்.]

உடம்புதேற்று-தல் *uḍambu-tēṟṟu-,* 5. செ.கு.வி. (v.i.) ***உடம்பை வலிமையாக்குதல்;*** to make one grow strong in body.

[உடம்பு + தேற்று-தல். தேறு → தேற்று (பி.வி.).]

உடம்புதேறு-தல் *uḍambu-tēṟu-,* 5. செ.கு.வி. (v.i.) ***உடல் நலம் அடைதல்;*** to recover one's health and strength as a convalescent.

[உடம்பு + தேறு.]

உடம்புநடுக்கம் *uḍambu-naḍukkam,* பெ. (n.) 1. ***நோய், அச்சம், சினம் முதலியவற்றால் உடம்பில் ஏற்படுமோர் வகை அசைவு;*** trembling arising from disease, fear, anger or excitement. 2. ***குளிரினால் உடம்பு உதறல்;*** shivering out of cold.

[உடம்பு + நடுக்கம். நடுங்கு → நடுக்கம்.]

உடம்புபிடி-த்தல் *uḍambu-piḍi-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***உடம்பிற் சதை உண்டாதல்;*** to pick up flesh. 2. ***உடம்பைக் கையாற் பிடித்து அமுக்குதல்;*** the process of pressing the parts of a person's body, shampooing, to massage, (சா.அக.).

[உடம்பு + பிடி-த்தல்.]

உடம்பெடு-த்தல் *udambeḍu-,* செ.கு.வி. (v.i.) 1. ***பிறத்தல்;*** to be born with a material body. "படிக்க வுடம்பெடுத்தேன்" (இராமநா. ஆரன். 25). 2. ***செய லுடையனாதல்;*** to lift oneself up; to have the strength to move. அடித்த அடியால் அவன் உடம்பெடுக்க முடிய வில்லை. 3. ***உடம்பு தேறல்;*** recover from ailment. ஆ.அக.).

[உடம்பு + எடு-த்தல். எடுத்தல் = பிறத்தல், தோன்றுதல், செயற்படல், நலமுறல்.]

உடம்பை *udambai,* பெ. (n.) ***கலங்கற்புனல்*** (பிங்.); turbid water.

[உழம்பு → உழம்பை → உடம்பை. உழம்புதல் = கலங்குதல்.]

உடம்பைத்தேற்றல் *udambai-t-tēṟṟal,* பெ. (n.) 1. ***நோயா லிளைத்த உடம்பை மருந்து கொடுத்துத் தேற்றுதல்;*** toning up the body with medicine. 2. ***இளைத்த உடம்பிற் குத் தகுந்தபடி ஊட்டங்கொடுத்தல்;*** strengthening the body by nourishment during convalescence. 3. ***உடம்பை வலுவடையச்செய்தல்;*** invigorating the system. (சா.அக.).

[உடம்பு + ஐ + தேற்றல். தேறு → தேற்று → தேற்றல்.]

உடம்பொடுபுணர்த்தல் *udambodu-puṇarttal,* பெ. (n.) ***கூறும் இலக்கியத்திலேயே சொல்ல வேண்டிய தொன்றை உய்த்துணர வைக்கை*** (குறள், 27. உரை); device in literary art in which an author seeks skilfully to suggest by implication certain ideas which, being quite germane to the subject he is dealing with, would in his opinion, help to make his presentation quite clear to the reader, but which he (the author) could not, except as digression, proceed to elaborate in the regular course in his work.

[உடம்பு + ஒடு + புணர்த்தல்.]

உடமுள் *udamuḷ,* பெ. (n.) ***வேல மரத்தின் முள்;*** thorn of the Acacia tree. (சா.அக.).

[ஒடு → உடு + முள் - உடமுள்.]

உடமை *udamai,* பெ. (n.) 1. ***ஒருவனுக்கு உரியதான தன்மை;*** ownership, proprietorship. 2. ***உடனிருக்கும் பொருள்;*** belongings. 3. ***செல்வம், பொருள்;*** wealth, property.

ம. உடம; **க.** ஒடமெ; **தெ.** ஒடமி, ஒடமை; **து.** ஒடவெ; பட. ஒடமெ; **கோத.** ஒடய்ன் (பொருளுக்குரியவர்).

[உடு → உடை → உடைமை → உடமை (வே.க.).]

உடர் *udar,* பெ. (n.) ***உடம்பு;*** body. "உடரெலா முயிரிலா" (கம்பரா.குக.70). (ஆ.அக.).

[உடல் → உடர். ஒ.நோ. சாம்பல் → சாம்பர்; பந்தல் → பந்தர்.]

உடர்கரி-த்தல் *udarkari-,* 4. செ.கு.வி. (v.i.) ***உடற்கரி*** பார்க்க; see *udaṟkari.*

[உடல் + கரி - உடற்கரி → உடர்கரி.]

உடல்[1] *udal,* பெ. (n.) 1. ***உடம்பு*** (பிங்.); body. 2. ***மெய்யெழுத்து;*** consonant. "உடன் மேலுயிர் வந்து" (நன். 204). 3. ***பிறவி;*** birth. "தோலினுடையாலும் தீரா துடல்" (சைவச. பொது. 403). 4. ***கருவி;*** means, instrument. "பகவதனுசந்தானத்துக்குடலாமே" (ஈடு. 1,2,8). 5. ***பொன்*** (திவா.); gold. 6. ***பொருள்;*** money, the wherewithal. "விளக்கேற்றற் குடலில னாப" (பதினொ. திருத்தொண். 54). 7. ***ஆடையின் கரை யொழிந்த பகுதி;*** main body of a cloth, excluding the border spaces. உடல் அரக்கு (உ.வ.). 8. ***ஆடையி னிழை;*** texture of a cloth as judged by the warp and woof. 9. ***உயிருடனிருப்பது;*** alive. 10. ***உடலிருக் கும் கூடு;*** skeletal frame.

ம. உடல்; **க.** ஒடல்; **தெ.** ஒடலு, ஒன்று; **கோத.** ஒட்ள்வ; துட. விடன்; **து.** உடலு; உடாலு; **கூ.** ஒல்லு.

[உழல் → உடல்.]

உடல்[2] *udal,* பெ. (n.) ***பெரிய முரசு;*** big drum (Loc.).

*[உதள் → உதல் → உடல். **உதள்** பார்க்க; see udaḷ. ஒ.நோ. Hind. dhol.]*

உடல்(லு)-தல் *udal-,* 13., செ.கு.வி. (v.i.) 1. ***சீற்றங் கொள்ளுதல்;*** to be enraged. "உடன்று மேல் வந்த வம்ப மள்ளரை" (புறநா. 77,9). 2. ***மாறுபடுதல்;*** to quabble; to bicker; wrangle. "உடலினேனல்லேன்" (ஐங் குறு.66). 3. ***போர் புரிதல்*** (திவா.); to fight, wage war. 4. ***ஆசையால் வருந்துதல்;*** to pine for, yearn after. "உள்ளமுடன் றெழுகின்றதே" (சீவக. 2005). 5. ***ஒளிர் தல்*** (ஆ.அக.); to shine, glitter.

[உள் → உடு → உடல் (வெப்பமடைதல்) → உடலு-தல்.]

உடல்கனத்தல் *udalkaṉattal,* பெ. (n.) ***உடம்பு பருத்தல்;*** growing stout and heavy. (சா.அக.).

[உடல் + (கனம்) கனத்தல்.]

உடல்கனப்பு *udal-kaṉappu,* பெ. (n.) ***உடம்பு காந்தல்;*** growing hot. (சா.அக.).

[உடல் + கனப்பு. கனல் → கனப்பு.]

உடல்காய்தல் *udal-kāydal,* பெ. (n.) ***காய்ச்சல்;*** suffering from fever. (சா.அக.).

[உடம்பு + காய்தல் (காய் = காய்தல், வெப்பமடைதல்).]

உடல்தளிர்காணல் *udal-taḷir-kāṇal,* பெ. (n.) ***மெலிந்த உடம்பு மறுபடியும் சதைபற்றல்;*** putting on flesh. (சா.அக.).

[உடல் + தளிர் + காணல்.]

உடல்வளர்ச்சி *udal-vaḷarcci,* பெ. (n.) 1. ***உயிர் வாழ்வ தற்கு வேண்டும் பொருள்கள்;*** necessaries of life. "திண்ணெனவென் னுடல் விருத்தி தாரீரேயாகில்" (தேவா. 678, 9). 2. ***உடல் வளருகை;*** growing physically.

[உடல் + வளர்ச்சி.]

உடல்வாசகம் *uḍal-vāšagam,* பெ. (n.) 1. *முதலும் முடிவு மொழிந்த மடல்* (எழுத்தாவணம்) *பாகம்* (வின்.); main body of any writing exclusive of the greeting and the signature, as in a letter (W.).

[உடல் + வாசகம். வாசி → வாசகம்.]

உடல்விடாவீடு *uḍal-viḍā-vīḍu,* பெ. (n.) *உடலிருந்த வீடு* பார்க்க; see *uḍalirunda-vīḍu.*

[உடல் + விடா + வீடு.]

உடல்விடுவீடு *uḍal-viḍu-vīḍu,* பெ. (n.) *உடலிறந்த வீடு* பார்க்க; see *uḍaliṟanda-vīḍu.*

உடல்வினை *uḍal-viṉai,* பெ. (n.) *முன்வினை;* fruits of one's previous karma that are experienced in the present life. "உடல்வினையோடும் ஆண்டுப் பிறந்தது" (சி.போ. பா. 8,1,1). (செ.அக.).

[உடல் + வினை. உடலோடு வந்த வினைப்பயன்.]

உடல்வெதுப்பு *uḍal-veduppu,* பெ. (n.) *உடம்பை யடுத்த சூடு;* bodily heat, animal heat. (சா.அக.).

[உடல் + வெதுப்பு. வெதும்பு → வெதுப்பு.]

உடல்வெள்ளை *uḍal-veḷḷai,* பெ. (n.) *பக்கங்கள் மட்டும் சாயமூட்டிய வெள்ளையுடை* (யாழ்ப்.); cloth that is dyed only at the borders leaving the main body of the cloth white. (செ.அக.).

[உடல் + வெள்ளை. உடம்பு = புறத்தே வெளிப்படக் காணும் பகுதி.]

உடல்வேதிச்சி *uḍal-vēdicci,* பெ. (n.) *கொடி வேலி* பார்க்க; see *koḍivēli.*

உடல்வேலை *uḍal-vēlai,* பெ. (n.) *ஓவியம் வரைதல், வண்ணம் பூசுதல் ஆகியவற்றின் அடிப்படை வேலை;* body of a work, chiefly applied to painting or any other art work. (செ.அக.).

[உடல் + வேலை.]

உடலக்கண்ணன் *uḍal-a-k-kaṇṇaṉ* , பெ. (n.) *உடல் முழுமையும் கண்கள் கொண்ட இந்திரன்* (கல்லா.1); Indra who has eyes all over his body. (செ.அக.)

[உடல் + அ + கண்ணன். அகரம் ஆறனுருபு. உடலக்கண்ணன் = உடம்பெல்லாம் கண்ணுடையவன். கண் = துளை, துளை யடையாளம்.]

உடலதிர்ச்சி *uḍal-adircci,* பெ. (n.) *காயம் அல்லது மன வருத்தத்தினால் நரம்புக் குண்டாகு மதிர்ச்சி;* sudden vital depression due to an injury or emotion, acting on the nervous system-shock. (சா.அக.)

[உடல் + அதிர்ச்சி.]

உடலந்தம் *uḍal-andam,* பெ. (n.) *உடம்பழிவு* பார்க்க; see *uḍambaḻivu.* (செ.அக.).

[உடல் + அந்தம்.]

உடலம் *uḍalam,* பெ. (n.) *உடம்பு;* body. "சலந்தர னுடலந்தடிந்த". (தேவா. 584,7). (செ.அக.).

ம. உடலம்.

[உடல் → உடலம்.]

உடலல் *uḍalal,* தொ.பெ. (vbl.n.) *உடல்(லு)-தல்* பார்க்க; see *uḍal-.* (செ.அக.).

[உடல் + அல்.]

உடலவருத்தனை *uḍala-varuttaṉai,* பெ. (n.) *மெய்யாற் செய்யும் நடனக்குறி* (சிலப். 3,16, உரை); gesticulation by means of movements of the body. (செ.அக.).

[உடல் + அ + வருத்தனை. த. வருத்தல். Skt. vartana. வருத்தனை. அகரம் சாரியை.]

உடலற்பனை *uḍalaṟpaṉai,* பெ. (n.) *திப்பிலிப்பனை;* elephant's palm. (சா.அக.).

[உடலல் + பனை.]

உடலற்றநாள் *uḍalaṟṟanāḷ,* பெ. (n.) *மாழ்கு* (மிருகசீரிடம்), *நெய்ம்மீன்* (சித்திரை), *பறவை* (அவிட்டம்) *ஆகிய நாள்கள்* (சோதிட சிந்.40); nakṣatras, mirukacīri-dam, chittirai, and avittam, their earlier halves belonging to certain signs of the Zodiac and the latter halves to the next signs. (செ.அக.).

[உடல் + அற்ற + நாள். இந்நாளில் மனை கோலக்கூடாது.]

உடலனல் *uḍal-aṉal,* பெ. (n.) *உடம்பில் நிற்கும் சூடு;* bodily temperature, animal heat. (சா.அக.).

[உடல் + அனல்.]

உடலாட்டம் *uḍal-āṭṭam,* பெ. (n.) *மாட்டுக் குற்றவகை* (பெரியமாட்.20); defect in cattle. (செ.அக.).

[உடல் + ஆட்டம்.]

உடலிம்பனை *uḍal-imbaṉai,* பெ. (n.) *கூந்தற்பனை;* elephant's palm. (சா.அக.).

[உடலும் + பனை - உடலும்பனை → உடலிம்பனை. (கொ.வ.)]

உடலிரண்டுயிரொன்று *uḍaliraṇḍuyiroṉṟu,* பெ. (n.) 1. *கிளிஞ்சல்;* shell. 2. *நட்பு;* friendship.

[உடல் + இரண்டு + உயிர் + ஒன்று.]

உடலிருந்தவீடு *uḍalirunda-vīḍu,* பெ. (n.) *உடலொடு பேறு, உயிர்ப்பேறு* (சீவன் முத்தி), (ஞானவா. ஞான. விண். 36); emancipation of the soul while it is still in the bondage of the flesh, opp to. உடலிறந்தவீடு. (செ.அக.).

[உடல் + இருந்த + வீடு.]

உடலிலான் *uḍal-ilāṉ,* பெ. (n.) *சிவனின் கனலால் எரிக்கப்பட்டுச் சாம்பலாக்கியதால் உடலற்று இருக் கும் காமன்;* one who has no body, referring to mythical

Manmadan, the Indian Cupid, whose body was burnt to ashes by the fiery stare of Śivā. (W.) (செ.அக.).

[உடல் + (இல்லான்) இலான்.]

உடலிறந்தவீடு *uḍa-liṟanda-vīḍu,* பெ. (n.) ***உடல் விட்டபேறு*** (விதேகமுத்தி), (ஞானவா. ஞானவிண். 36); emancipation of the soul after death, opp. to உடலிருந்த வீடு. (செ.அக.).

[உடல் + இறந்த + வீடு.]

உடலுநர் *uḍalunar,* பெ. (n.) ***பகைவர்;*** foes. "உடலுந ருட்க" (புறநா. 17,36).

[உடல் → உடலு → உடலுநர்.]

உடலுருக்கி *uḍal-urukki,* பெ. (n.) ***கணைச்சூடு*** (பைஷஜ); wasting disease of childhood. (செ.அக.).

[உடல் + உருக்கி.]

உடலூதல் *uḍal-ūdal,* பெ. (n.) ***உடம்பு பருத்தல் அல்லது வீங்கல்;*** swelling of the body-edima. (சா.அக.).

[உடல் + ஊதல். ஊதல் = பருத்தல்.]

உடலெடு-த்தல் *uḍal-eḍu-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***உடம்பெடு*** பார்க்க; see *uḍambeḍu.*

[உடல் + எடு-.]

உடலெழுத்து *uḍal-eḻuttu,* பெ. (n.) ***மெய்யெழுத்து;*** consonant. (செ.அக.).

[உடல் + எழுத்து.]

உடவாரம் *uḍavāram,* பெ. (n.) ***உடன்வாரம்*** பார்க்க; see *uḍan-vāram.*

[உடன் + வாரம் = உடன்வாரம் → உடவாரம் (கொ.வ.).]

உடற்கடுப்பு *uḍaṟ-kaḍuppu,* பெ. (n.) 1. ***உடம்பினி லேற்பட்ட யெரிவு;*** burning sensation in the body. 2. ***உடல்வெதுப்பு;*** irritation. 3. ***உடம்பின் குத்தல்;*** darting pain in the body as in rheumatism. (சா.அக.).

[உடல் + கடுப்பு.]

உடற்கரி-த்தல் *uḍaṟ-kari-,* 4. செ.கு.வி. (v.i.) ***தோள் தட்டுதல்*** (சிலப். 6,49, உரை); pat one's own shoulder, as in challenging. (செ.அக.).

[உடல்+கரி-த்தல், கருத்தல் = செய்தல். கருத்தல் → கரித்தல்.]

உடற்கருவி *uḍaṟ-karuvi,* பெ. (n.) ***மெய்ம்மறை*** (வின்.); coat of mail, armour. (செ.அக.).

[உடல் + கருவி.]

உடற்கழிவு *uḍaṟ-kaḻivu,* பெ. (n.) ***உடம்பினின்று கழியும் கழிவுகள்*** (மலம், சிறுநீர் முதலியன); waste matter discharged from the body such as, urine, faeces, etc. (சா.அக.).

[உடல் + கழிவு.]

உடற்காப்பு *uḍaṟ-kāppu,* பெ. (n.) ***உடற்கருவி*** பார்க்க; see *uḍaṟkaruvi.* "இருப்புடற் காப்பினர்" (திருவிளை. நரிபரி. 29). (செ.அக.).

[உடல் + காப்பு.]

உடற்காயம் *uḍaṟkāyam,* பெ. (n.) ***உடம்பி லேற்பட்ட காயம்;*** physical injury. (சா.அக.).

[உடல் + காயம்.]

உடற்காவல் *uḍaṟkāval,* பெ. (n.) ***உடற்கருவி*** பார்க்க; see *uḍaṟkaruvi.* "ஒன்றானு மறாவுரு வாவுடற் காவலோ டும்" (கம்பரா. நாகபா. 15). (செ.அக.).

[உடல் + காவல்.]

உடற்குற்றம் *uḍaṟkuṟṟam,* பெ. (n.) ***மாந்தனின் உடம்புக்கு உளதாகும் பதினெண் குற்றங்கள்;*** eighteen moral and physical imperfections or defects attributed to the human body viz., 1. ***பசி;*** hunger. 2. ***நீர் வேட்டல்;*** thirst. 3. ***அச்சம்;*** fear. 4. ***வெகுளி;*** anger. 5. ***உவகை;*** delight. 6. ***வேண்டல் ஆசை;*** desire. 7. ***நினைப்பு;*** thought. 8. ***உறக்கம், தூக்கம்;*** sleep. 9. ***நரை;*** grey hair. 10. ***நோய்;*** disease. 11. ***சாவு;*** death. 12. ***பிறப்பு;*** birth. 13. ***மதம்;*** self-conceit. 14. ***இன்பம்;*** pleasure. 15. ***வியப்பு;*** surprise. 16. ***வியர்த்தல்;*** perspiration. 17. ***துன்பம்;*** grief. 18. ***கையறவு;*** inability. (சா.அக.).

[உடல் + குற்றம்.]

உடற்குறை *uḍaṟkuṟai,* பெ. (n.) ***தலையற்ற உடல்; தலையரிந்த மரம்;*** headless body, trunk.

[உடல் + குறை.]

உடற்கூற்றிலக்கணம் *uḍaṟkūṟṟilakkaṇam,* பெ. (n.) ***உடம்பி னுறுப்புகளின் தொழில்களையும் அவை களின் தன்மைகளையும் பற்றிக் கூறுமோர் நூல்;*** science of parts of the human body, its structure, frame, quality and also the functions of the several organs. (சா.அக.).

[உடல் + கூற்று + இலக்கணம்.]

உடற்கூற்றுவண்ணம் *uḍaṟkūṟṟuvaṇṇam,* பெ. (n.) ***பட்டினத்தடிகள் செய்த ஒரு நூல்;*** treatise by Paṭṭinatt-aḍigaḷ.

[உடல் + கூற்று + வண்ணம்.]

உடற்கூறு *uḍaṟkūṟu,* பெ. (n.) ***உடல் அமைப்பு; உடலின் கூறு;*** anatomy of the body. (செ.அக.).

[உடல் + கூறு.]

உடற்சி *uḍaṟci,* பெ. (n.) ***சினம்;*** irritation, resentment, anger. "உடற்சி செய்ய" (சீவக. 1078). (செ.அக.).

[உடல் → உடற்சி.]

உடற்பொருள் *uḍaṟporuḷ,* பெ. (n.) ***உடலுக்குள் உண்டாகும் மான்மணத்தி*** (கஸ்தூரி), ***ஆன்மணத்தி*** (கோரோசனை), ***புனுகு, அம்பர் முதலிய பொருள்கள்;*** scented substances such as musk, bezoar, amber etc. found inside the body of animals. (சா.அக.).

[உடல் + பொருள்.]

உடற்றத்துவம் *udarrattuvam,* பெ. (n.) ***உடல்மெய் யியல்*** பார்க்க; see *udalmeyyiyal.*

[உடல் + தத்துவம்.]

உடற்றல் *udarral,* பெ. (n.) 1. ***பெருஞ்சினம்*** (திவா.); wrath, exasperation. 2. ***அழித்தல்*** (ஆ.அக.); destroying. 3. ***அலைத்தல்;*** tormenting. 4. ***சிதறவடித்தல்;*** damaging. 5. ***துரத்தல்;*** chasing. 6. ***போர் செய்தல்;*** fighting. (ஆ.அக.).

[உடல் → உடற்று → உடற்றல்.]

உடற்றியோர் *udarriyōr,* பெ. (n.) ***சினப்பித்தவர்;*** provocator, enemy. "ஓவாது கூஉநின் றுடற்றியோர் நாடே" (புறநா. 419).

[உடற்று → உடற்றியோர்.]

உடற்று[1]-தல் *udarru-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***பொருதல்;*** to fight. 2. ***சிதறடித்தல்;*** to make the enemies flee.

[உடல் → உடற்று.]

உடற்று[2]-தல் *udarru-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***வருத்துதல்;*** to afflict, torment. "உண்ணின்றுடற்றும் பசி" (குறள், 13). 2. ***சினமூட்டுதல்;*** to provoke, infuriate, enrage. "நின்னுடற்றியோர் நாடே" (புறநா. 4). 3. ***மூண்டு நடத்துதல்;*** push on vigorously as a campaign in war. "அமருடற்றினான்" (பாரத. இராச. 50). 4. ***விடுத்தல்;*** to discharge briskly, as a shower of arrows. "பலகோடிபாண முடற்றினான்" (பாரத. பதின்மூ. 24). 5. ***கெடுத்தல்;*** to balk, spoil, damage, thwart. "ஒல்லுங்கரும முடற்றுபவர்" (குறள், 818).

[உடறு → உடற்று → உடற்று-தல்.]

உடறு-தல் *udaru-,* செ.கு.வி. (v.i.) ***சினத்தல்;*** to be enraged at. "காலனைத் துண்டமதா வுடறிய சேவடி யான்" (தேவா. 524.7). (செ.அக.).

[உடல் → உடறு → உடறு-தல். உடலுதல் = சினத்தல்.]

உடன் *udan,* வி.எ. (adv.) 1. ***ஒக்க;*** together with. "உடன்கலந்தார்க்கு" (பு.வெ.10; சிறப்பிற்.9). 2. ***ஒரு சேர;*** altogether. "உள்ளியவெல்லாம் உடனெய்தும்" (குறள். 309). 3. ***அப்பொழுதே;*** instantly, immediately after, at once. "அட்டுடனுயிரு நல்கி" (கந்தபு. பாயி. 67). - இடை. (part.) மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு; an instr. ending as in சாத்தனுடன். - கு.பெ.எ. (adj.) 4. ***ஒரே வகுப்பைச் சேர்ந்த;*** belonging to the same class. உடன்மாணாக்கன். (உ.வ.). (செ.அக.)

உடன்கட்டி *udan-katti,* பெ. (n.) ***சூட்டடிக் கதிர்களைக் கடாவிட்டுழக்குகை;*** treading out grain sheaves, a second time by buffaloes or bulls. (Loc.). (செ.அக.).

[உடன் + கட்டு + அடி.]

உடன்கட்டை *udan-kattai,* பெ. (n.) ***கணவன் பிணத்துடன் தானும் இணைந்து வெந்து கொள்வது;*** widow's burning herself in the funeral pyre of her husband.

ம. உடன்கட்ட.

[உடன் + கட்டை. கட்டை = விறகு.]

உடன்கட்டையேறு-தல் *udan-kattai-y-ēru-* 5. செ.கு.வி. (v.i.) 1. ***இறந்த கணவனுடன் ஒன்று கூடித் தீயில் உயிர்விடுதல்;*** to ascend, as a woman, the funeral pyre of her husband, to perform *suttee.* 2. ***பிரியேனென்று நிற்றல்;*** to be inseparable.

மறுவ. தலையொடு முடிதல்; ஆஞ்சிக் காஞ்சி.

[உடன் + கட்டை + ஏறு-தல்.]

போர்க்களத்தில் கணவர் இறந்த பின் தாம் பகைவரால் சிறைப்பிடிக்கப் படலாகாது என நினைத்த மகளிர் பாதுகாப்பு நோக்கில் உடன்கட்டை யேறியும் தீப்பாய்ந்தும் உயிர் மாய்த்துக் கொண்ட தொன்முது வழக்கம் தமிழகத்தில் தானாகவே மறைந்தது. வடபுலத்தில் மூடநம்பிக்கையாக வளர்ந்திருந்தது.

உடன்குற்றவாளி *udankurravāli,* பெ. (n.) ***உடனிருந்து குற்றஞ்செய்தவன்;*** co-offender, accomplice, abettor. (செ.அக.).

[உடன் + குற்றவாளி. குற்றம் + ஆளி - குற்றவாளி.]

உடன்கூட்டத்ததிகாரி *udan-kūttatt-adigāri,* பெ. (n.) ***சோழர் காலத்துச் சிற்றூர் அவைத்தலைவன்*** (S.I.I.iii.35); head of the village assembly in the days of Chola administration. (செ.அக.).

[உடன் + கூட்டத்து + அதிகாரி.]

உடன்கூட்டாளி *udan-kūttāli,* பெ. (n.) 1. ***கூட்டுப் பங்காளி;*** partner, participator, associate. 2. ***உடனொத்தவன்;*** play fellow, companion, friend; equal in status, age or rank. (செ.அக.).

[உடன் + கூட்டு + ஆளி - உடன் கூட்டாளி.]

உடன்கேடு *udan-kēdu,* பெ. (n.) ***உடனிருந்து துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளுதல்;*** be a companion in grief. "தம்மொடுடன் கேடான நெஞ்சுமேயா யிருந்தது" (ஈடு, 10, 6, ப்ர.). (செ.அக.).

[உடன் + கேடு.]

உடன்கேடன் *udan-kēdan* பெ. (n.) ***உடனிருந்து துன்புறுபவன்;*** sharer with another of his grief and sorrow. "உடன்கேடனாய் நின்றுநோக்கும்" (ஈடு. 1,1,3). (செ.அக.).

[உடன் + கேடன்.]

உடன்கையில் *udan-kaiyil,* கு.வி.எ. (adv.) ***உடனே;*** immediately, as soon as. (Loc.) 'உடன் கையிலே கூலி கிடைக்குமா?' (இ.வ.) (செ.அக.).

[உடன் + கை + இல்.]

உடன்பங்காளி *udan-pangāli,* பெ. (n.) ***கூட்டுக்காரன்*** (ஆ.அக.); co-partner.

[உடன் + பங்காளி.]

உடன்பங்கு *udan-pangu,* பெ. (n.) ***கூட்டுப் பங்கு;*** joint share, joint heirship. (W.). (செ.அக.).

[உடன் + பங்கு.]

உடன்படல் *udan-padal,* தொ. பெ. (n.) 1. ***இசைதல்;*** agreeing. 2. ***உடன்படிக்கை செய்தல்;*** entering into an agreement. 3. ***இசைதல், எழுவகை மதத்தினொன்று;*** one of the seven *mathams.* 4. ***சேரல்;*** joining. 5. ***பொருந்தல்;*** sticking. 6. ***ஒட்டல்;*** adhering. 7. ***நேர்தல்;*** happening.

[உடன்படு + அல்.]

உடன்படி *udan-padi,* பெ. (n.) ***ஒப்பந்தம்;*** agreement. (செ.அக.).

[உடன் + படி. படு → படி.]

உடன்படிக்கை *udanpadikkai,* பெ. (n.) 1. ***ஒப்பந்தம்;*** contract, agreement, covenant, treaty. 2. ***உறுதிப்பாடு;*** promise, assurance. அவனுக்கு அவன் உடன்படிக்கை சொல்லுகிறான். (R.).

ம. உடம்படி; க. ஒடம்படிகெ; தெ. ஒடம்படிக.

[உடன்படு → உடன்படிக்கை.]

உடன்படிக்கைக் கணக்கு *udanpadikkai-k-kanakku,* பெ. (n.) ***பேரேடு;*** ledger. (C.G). (செ.அக.).

[உடன் + படிக்கை + கணக்கு.]

உடன்படு[1]-தல் *udan-padu-,* 20. செ.கு.வி. (v.i.) ***இசைதல்*** (பிங்.); to agree, assent, consent, acquiesce, yield. (செ.அக.).

க. ஒடம்படு; தெ. ஒடம்படு.

[உடன் + படு.]

உடன்படு[2]-த்தல் *udanpadu-,* 17. செ.குன்றாவி. (v.t.) ***உடன்படுத்து-தல்*** பார்க்க; see *udanpaduttu.*

உடன்படுத்து-தல் *udanpaduttu-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***இணைத்தல்;*** persuade into giving consent, make one yield or agree. "இசைந்துடன் படுத்தினான்" (பாரத. குருகுல. 44).

க. ஒடம்படிசு; தெ. உடம்பருன்சு.

[உடன் + படுத்து.]

உடன்பறிமுதல் *udan-parimudal,* பெ. (n.) 1. ***முறைமன்றக் கட்டளைப்படி பொருட் பறிமுதல் செய்கை;*** immediate seizure of property according to legal decree. 2. ***தீர்ப்பளிக்கும் முன்னே சொத்தைக் கைப்பற்றுகை;*** attachment before judgement.

[உடன் + பறிமுதல்.]

உடன்பாட்டுவினை *udanpattu-vinai,* பெ. (n.) ***உடன்பாட்டைத் தெரிவிக்கும் வினை;*** affirmative verb, opp.to எதிர்மறைவினை. (செ.அக.).

[உடன்படு → உடன்பாடு → உடன்பாட்டு + வினை.]

உடன்பாடு *udanpadu,* பெ. (n.) 1. ***இசைகை*** (பிங்.); consent, accord, acquiescence. 2. ***மனப்பொருத்தம்;*** concord, harmony, unanimity. "உடன்பாடிலாத மனைவி தொழிலின்னா" (இன்னா. 12).

ம. உடம்பாடு; தெ. ஒடபாட்டு.

[உடம்பாடு → உடன்பாடு (வேக.43).]

உடன்பாடுவான் *udan-paduvan,* பெ. (n.) ***பக்கப் பாட்டுக்காரன்*** (S.I.I. vii, 65); supporting chorus, accompanist. 'வீணை வாசிப்பானுக்கும் உடன் பாடுவானுக்கும்' (உ.வ.). (செ.அக.).

[உடன் + பாடுவான். பாடு → பாடுவான்.]

உடன்பிறந்தார் *udan-pirantar,* பெ. (n.) ***கூடப்பிறந்தவர்;*** children of the same parents, brothers or sisters or both. "உடன் பிறந்தார் சுற்றத்தார்" (வாக்குண். 20).

மறுவ. பிறவர்.

[உடன் + பிறந்தார்.]

உடன்பிறந்தாள் *udan-pirandal,* பெ. (n.) ***கூடப் பிறந்தவள்;*** sister. (செ.அக.).

மறுவ. பிறவி.

[உடன் + பிறந்தாள்.]

உடன்பிறந்தான் *udan-pirandan,* பெ. (n.) ***கூடப் பிறந்தவன்;*** brother.

மறுவ. பிறவன்.

[உடன் + பிறந்தான்.]

உடன்பிறப்பு *udan-pirappu,* பெ. (n.) 1. ***உடன்பிறந்த தன்மை;*** state of being born of the same parents. "இன்றொடுந் தவிர்ந்த தன்றே யுடன்பிறப்பு" (கம்பரா. கும்பக. 166). 2. ***கூடப்பிறந்தவர்*** (நல்வ. 24); person or persons born of the same parents. (செ.அக.).

ம. உடப்பிறப்பு, உடப்பிறவி; க. ஒடகுட்டிக.

[உடன் + பிறப்பு.]

உடன்புணர்ப்பு *udan-punarppu,* பெ. (n.) ***சமகூட்டு*** (மணிமே. 227,243) (அரும்.); inseparable concomittance (Log.).

[உடன் + புணர்ப்பு.]

உடன்போக்கிடையீடு *udanpokk-idai-y-idu,* பெ. (n.) ***இது நம்மனையில் வரைந்து கொள்ளாது தன்னூரில் வரைந்தானென்று, தலைவி சுற்றத்தார் வெறுப்படைதலால் தலைவியை உடன்கொண்டு போகும் போது தலைவி சுற்றத்தாரிடை ஈடுபட்டு மீண்டு வருதல்;*** intimate movement of the heroine with her own relations before going away with her lover since after elopement the heroine will have to marry the hero in his place against the wishes of her people.

[உடன்போக்கு + இடையீடு.]

இது, போக்கறிவுறுத்தல், வரவறிவுறுத்தல், நீக்கமிரக்கம், மீட்சி யென நால் வகையினையும், நீங்கும் கிழத்தி பாங்கியர் தமக்குத் தன் செலவுணர்த்தி விடுத்தல், தலைமகன் தன் செலவின்னாட் குணர்த்தி விடுத்தல். நற்றாய்க் கந்தணர் மொழிதல், தலைவற்குணர்த்தல், தலைமகளைத் தலைமகன் விடுத்தல், தமருடன் செல்பவள் அவன் புறநோக்கிக் கவன்றரற்றல் எனும் விரிவினையு முடைத்து. (அபி.சிந்).

உடன்போக்கு *uḍaṉ-pōkku,* பெ. (n.) 1. ***பெற்றோரறியா மல் தலைவி தலைவனுடன் செல்கை*** (நம்பியகப். 181); an unmarried young woman going away with her lover to his own place without the knowledge of her parents. 2. ***கூடப்போதல்;*** accompanying. போக்கறி வுறுத்தல் முதலாகத் தேற்றலீறாகிய வெட்டும் உடன் போக்கினுள் அடங்கும்.

க. ஒடவோகு.

[உடன் + போக்கு.]

உடன்போக்குவிரி *uḍaṉ-pōkku-viri,* பெ. (n.) ***பாங்கி தலைவர்க் குடன்போக் குணர்த்தல் முதலாகத் தலை வன்றன் பதியடைந்தமை தலைவிக் குணர்த்த லீறா கிய பதினெட்டு;*** process of revelation by the heroine's friend the news of elopement. (ஆ.அக.).

[உடன் + போககு + விரி.]

உடன்மாணாக்கன் *uḍaṉ-māṇākkaṉ,* பெ. (n.) ***உடன்பயி லும் மாணாக்கன்;*** classmate. (செ.அக.).

[உடன் + மாணாக்கன்.]

உடன்வந்தி *uḍaṉ-vandi,* பெ. (n.) ***கூடவே வருவது;*** inseparable companion, as one's shadow. 'உடன் வந்தி யான வல்வினை' (ஈடு, 5,8,5). (செ.அக.).

[உடன் + வந்தி.]

உடன்வயிற்றோர் *uḍaṉ-vayiṟṟōr,* பெ. (n.) ***உடன் பிறந்தவர்*** (சிலப். 10,227); those born of the same mother like brothers and sisters. (செ.அக.).

க. ஒடகுட்டு.

[உடன் + வயிற்றோர். வயிறு → வயிற்றோர்.]

உடன்வயிறு *uḍaṉ-vayiṟu,* பெ. (n.) ***உடன் வயிற்றோர்*** பார்க்க; see *uḍaṉvayiṟṟōr.* "பிறப்போரன்ன உடன்வயிற் றுள்ளும்" (புறநா. 183). (செ.அக.).

[உடன் + வயிறு.]

உடன்வாரம் *uḍaṉ-vāram,* பெ. (n.) ***மேல் வாரம் குடிவாரமாகப் பிரிக்கப் படாத நெல்*** (T.A.S.i.7.); gross produce before it is divided between landlord and tenant. (செ.அக.).

ம. உடன்பாரம்; க. ஒடவார.

[உடன் + வாரம்.]

உடன்றல் *uḍaṉṟal,* பெ. (n.) ***போர்;*** war. (செ.அக.).

[உடல் → உடலு → உடன்றல்.]

உடனடி *uḍaṉ-aḍi,* வி.எ. (adv.) ***உடனே;*** immediately. (Tinn.). (செ.அக.).

ம. உடனடி.

[உடன் + அடி.]

உடனா-தல் *uḍaṉ-ā-,* 6. செ.கு.வி. (v.i.) ***கூடிநிற்றல்*** (சி.சி. 2,80); to be in company with associate.

[உடன் + (ஆகு) ஆ.]

உடனாளி[1] *uḍaṉāḷi,* பெ. (n.) ***உடன் கூட்டாளி*** பார்க்க; see *uḍaṉ-kūṭṭāḷi.* (செ.அக.).

[உடன் + ஆளி.]

உடனாளி[2] *uḍaṉāḷi,* பெ. (n.) ***சொத்துள்ளவன்;*** wealthy person.

க. ஒடெய; தெ. ஒடயடு. ஒடயுடு; து. ஒடயெ, ஒடெயெ; குட. ஒடைவே.

[உடைமை + ஆளி - உடைமையாளி → உடனாளி.]

உடனிகழ்தல் *uḍaṉigaḻdal,* பெ. (n.) ***ஒருங்கு நிகழ்தல்*** (நன். 297, விருத்.); happen simultaneously. (செ.அக.).

[உடன் + நிகழ்தல்.]

உடனிகழ்ச்சியணி *uḍaṉigaḻcci-y-aṇi,* பெ. (n.) 1. ***அஃதாவது கற்றோரை மகிழ்விக்கும் உடனிகழ்தலைச் சொல்லும் அணி;*** figure of speech. இதனை வடநூலார் சகோத்தியலலங்கார மென்பர். தண்டியாசிரியர் புணர் நிலை என்பர். 2. ***புணர்நிலையணி*** பார்க்க (அணியி.21); see *puṇarnilaiyaṇi.* (அபி.சிந்.).

[உடன் + நிகழ்ச்சி + அணி.]

உடனிகழ்வான் *uḍaṉigaḻvāṉ,* பெ. (n.) ***துணைவன்*** (திவா.); companion, comrade. (செ.அக.).

[உடன் + நிகழ்வான்.]

உடனிகழ்வு *uḍaṉigaḻvu,* பெ. (n.) ***உடனிகழ்ச்சி*** பார்க்க; see *uḍaṉigaḻcci* (நன். 297)

[உடன் + நிகழ்வு.]

உடனிலை *uḍaṉilai,* பெ. (n.) 1. ***கூடி நிற்கை;*** the state of being together. உரோணியோ டுடனிலை புரிந்த மறுவுடை மண்டிலக் கடவுளை (பெருங். இலாவாண. 9,67) 2. ***உடனிருந்த இருவரைப் பாடும் ஒரு புறத் துறை*** (புறநா. 58); (puṟap.) singing the praise of two companions.

[உடன் + நிலை.]

உடனிலைக்குதிரைச்சேவகர் *uḍaṉilai-k-kudirai-c-cēvagar,* பெ. (n.) ***பரியேறும் மெய்க்காவலர்*** (S.I.I.ii, 274); mounted body guards. (செ.அக.).

[உடனிலை + குதிரை + சேவகர்.]

உடனிலை இரட்டுறமொழிதல் *uḍaṉilai-iraṭṭuṟa-moḻi-dal,* பெ. (n.) ***ஒரு பாட்டு நேரேவரும் பொருளையன்றி வேறொரு பொருள் கொண்டு நிற்கும் அணி*** (திருக்கோ. 1, உரை); figure of speech, paronomasia as a literary embellishment in a stanza conveying both the natural as well as a hidden meaning. (செ.அக.).

[உடனிலை + இரட்டுற + மொழிதல்.]

உடனிலைச்சிலேடை *uḍaṉilai-c-cilēḍai,* பெ. (n.) ***உடனிலை இரட்டுறமொழிதல்*** பார்க்க; see *uḍaṉilai-iraṭṭuṟamoḻidal.*

[உடனிலை + சிலேடை.]

உடனிலைச்சொல் *uḍaṉilai-c-col,* பெ. (n.) ***ஒப்புமைக் கூட்டம்*** பார்க்க; see *oppumaikkūṭṭam.* (செ.அக.).

[உடனிலை + சொல்.]

உடனிலைமயக்கம் *udanilai-mayakkam*, பெ. (n.) ***உடனிலை மெய்ம்மயக்கம்*** பார்க்க; see *udanilai-mey-m-mayakkam.*

[உடன் + நிலை + மயக்கம்.]

உடனிலைமெய்ம்மயக்கம் *udanilai-mey-m-mayakkam*, பெ. (n.) ***'ர்' 'ழ்' என்னும் இரண்டு மொழிந்த 16 மெய்களுள் ஒவ்வொன்றும் தன்னுடன் தான் நின்று மயங்குகை*** (நன்.110, உரை); (Gram.) doubling of any consonant other than 'ர்' 'r' or 'ழ்' 'ḻ' whether in single or in compound words as அப்பம், அப்படி. opp-to வேற்றுநிலை மெய்ம்மயக்கம். (செ.அக.).

[உடன் + நிலை + மெய்ம்மயக்கம்.]

உடனுக்குடனே *udanu-k-kudanē*, வி.எ. (adv.) ***அப்போ தைக்கப்போது;*** then and there. வந்த கடிதத்துக்கு உடனுக்குடனே மறுமொழி எழுது. (உ.வ.).

ம. உடனுடன்; க. ஒடனோடனே, ஒடனொடனெ; தெ. தோடதோடனெ.

[உடனுக்கு + உடனே.]

உடனுற்றவன் *udan-uṟṟavan*, பெ. (n.) ***ஒரே வகுப்பு வேலையாள்*** (ஆ.அக.); servant of the same grade.

[உடன் + உற்றவன்.]

உடனுறவு *udan-uṟavu*, பெ. (n.) ***உடல் தொடர்பு; புணர்ச்சி;*** sexual combination: the habitual coition or sexual intercourse of man and woman. (சா.அக.).

[உடல் + உறவு - உடலுறவு → உடனுறவு (கொ.வ.).]

உடனுறை *udan-uṟai*, பெ. (n.) ***ஒரு நிலத்தில் உடனு றைகின்ற கருப்பொருளாற் பிறிதொரு பொருள் பயப்ப மறைத்துத் கூறும் இறைச்சி*** (தொல். பொருள். 242); suggestive meaning conveyed indirectly by means of a specific reference to a distinctive feature of any tract of land. (செ.அக.).

[உடன் + உறை.]

உடனுறைவு *udan-uṟaivu*, பெ. (n.) 1. ***புணர்ச்சி*** (பெரியபு. திருநீலகண்.5); cohabitation. 2. ***கூடி வாழ் தல்;*** living together. (செ.அக.).

[உடன் + உறைவு.]

உடனே *udanē*, வி.எ. (adv.) 1. ***கூடிய அதே நேரத்தில்;*** immediately. 2. ***ஒருசேர;*** simultaneously. "உருவமுமா ருயிரு முடனே யுண்டான்" (திவ். திருவாய். 9,6,5.). 3. ***முழுக்க;*** entirely. "உடனேகூட" (சீவக. 1966). (செ.அக.).

ம. உடனே; க. ஒடனே; தெ. தொடனே; குட. ஒடனெ; து. ஒட்டு.

[உடன் + ஏ.]

உடனொடியில் *udanodiyil*, வி.எ. (adv.) ***உடனடி*** பார்க்க; see *udanadi. (Loc.).* (செ.அக.).

[உடன் + நொடியில்.]

உடனொத்தபங்காளி *udan-otta-pangāli*, பெ. (n.) ***சரிபங் குடையவன்*** (ஆ.அக.); co-partner.

[உடன் + ஒத்த + பங்காளி.]

உடனொத்தவன் *udan-ottavan*, பெ. (n.) ***சமமானவன்;*** equal fellow, compeer. (செ.அக.).

[உடன் + ஒத்தவன்.]

உடா *udā*, பெ. (n.) ***உடும்பு;*** iguana.

க. உடா.

[உடு → உடுவு → உடா.]

உடு¹-த்தல் *udu-*, 18. செ.குன்றாவி. (v.t.) 1. ***சேர்தல், பொருந்துதல்;*** to join, stick. 2. ***ஆடை முதலியன அணிதல்;*** to put on as clothes. "பட்டுடுந்துகிலு முடுத்து" (நாலடி. 264). 3. ***சூழ்தல்;*** to surround, encircle "அருங்குறும் புடுத்த கானப் பேரெயில்" (புறநா.21). 3. ***சேர்தல்; பொருந்தல்;*** to join, stick.

ம. உடுக்குக; க. ஒடு, உடி, உடிகெ, உடுகெ; தெ. உடுபு; துட. உட்ப்; குட. உடி, உடிபி; து. உடுங்ரே; கோண்., கட. ஊட்.

[உள் → உடு → உடு-த்தல்.]

உடு² *udu*, பெ. (n.) 1. ***உடும்பு;*** iguana. 2. ***உடைபோற் கோட்டை மதிலைச் சுற்றியுள்ள அகழி;*** moat.

க. உடு, உட; தெ. உடு; து. உடு, ஒடு, ஒட்டு; ம. உடும்பி; கொலா. உடுகை.

[உள் → உடு. உள் = பொருந்துதல், பற்றுதல். உடு = பற்றிக் கொள்ளும் இயல்புடைய உடும்பு.]

உடு³ *udu*, பெ. (n.) 1. ***விண்மீன்;*** star. 2. ***வெள்ளி;*** Venus.

க., தெ. உடு.

[உடு = விளங்குதல் (எரிதல்) கருத்துவேர். ஒளியுள்ள நாண் மீன், வெள்ளி. உள் → உடு, (ஒ.நோ.) தொள் → தொடு; பள் → படு.]

உடு⁴ *udu*, பெ. (n.) 1. ***இடுப்பு;*** waist. 2. ***ஆடு*** (பிங்.); goat, sheep.

[உள் → உடு = ஒடுங்கிய மருங்குடையது.]

உடு⁵ *udu*, பெ. (n.) 1. ***நாணைக் கொள்ளுமிடம்*** (குறிஞ்சிப். 170); point where the arrow is pressed against the bow-string. 2. ***அம்பு;*** arrow. "உடுவென்று நஞ்சந் துய்த்து" (இரகு. மீட்சி. 50). 3. ***அம்பினிறகு;*** feather of an arrow. "உடுவமை பகழிவாங்க" (சீவக. 2191). 4. ***அம்புத்தலை*** (பிங்.); arrow-head. 5. ***ஓடம் இயக்குங் கோல்*** (பிங்.); oar, boatman's pole. (செ.அக.).

[உள் → உடு. உள் = பொருந்தல். உடு = பொருந்துவது.]

உடு⁶ *udu*, பெ. (n.) 1. ***பள்ளம்;*** deep pit. 2. ***அகழி;*** moat. 3. ***நீர்நிலை;*** pool, tank.

[உள் → உடு (பள்ளம்).]

உடு[7] *udu,* பெ. (n.) ***உசிலைமரம்;*** black sirissa.

க. உடு. (உசிலைப்பூ)

மறுவ. சீக்கிரி மரம், உசிலை, ஊஞ்சமரம், துரிஞ்சில்மரம், அரஞ்சி, அரைப்புமரம், உறிஞ்சுமரம், உடுப்பை.

[உள் → உடு. உள் = வெப்பம். உடு = வெப்பத்தால் கோடையில் இலையுதிர்க்கும் மரம்.]

உடு[8] *udu,* பெ. (n.) ***உடுத்துக்கொள்ளும் உடுப்பு;*** dress, robe.

[உடு (வி.) → உடு (பெ.).]

உடு என்னும் முதனிலைத் தொழிற்பெயர் உடுத்துக்கொள்ளும் ஆடைக்கு ஆயிற்று.

உடுக்கு[1] *udukku,* பெ. (n.) ***இடையொடுங்கிய சிறு பறை;*** small drum tapering in the middle.

தெ. உடுக; **ம.** உடுக்க; **க., து.** உடுகு; **குவி.** டுறு; *Pkt* hudukku; *Skt* hudukka.

[(உடு → உடுக்கு. உடு=ஒடு ஒடு → ஒடுகு → ஒடுங்கு → ஒடுக்கு → ஒடுக்கம். (வ.மொ.வ.22).]

உடுக்கு[2] *udukku,* பெ. (n.) 1. ***வெப்பம்;*** heat. 2. ***கொதித்தல்;*** boiling.

தெ. உடுக்கு.

[உள் → உடு → உடுக்கு.]

உடுக்குச்சுருக்கம் *udukku-c-curukkam,* பெ. (n.) ***உடம்பின் நடுவிலிருக்கும் உறுப்பினுடைய*** (அதாவது வயிறு அல்லது கருப்பையின்) ***சுருக்கம்;*** contraction of an organ (as the stomach or the uterus) at or near the middle of the body, hour-glass contraction. (சா.அக.).

[உடுக்கு + சுருக்கம்.]

உடுக்கை[1] *udukkai,* பெ. (n.) ***உடை; ஆடை;*** raiment, clothing. "உடுக்கை யிழந்தவன் கைபோல" (குறள். 788). (செ.அக.).

க. உடுகெ, உடிகெ.

[உடு → உடுக்கை. உள் → உடு = பொருந்துதல், இடுப்பிற்செருகிக் கட்டுதல், உடுத்தல்.]

உடுக்கை[2] *udukkai,* பெ. (n.) ***இடைசுருங்கு பறை;*** small drum tapering in the middle. நிலையாய் உடுக்கை வாசிப்பான். (SII.ii.254).



உடுக்கை

ம. உடுக்க; க. உடுகு, தெ. உடுக; து. உடுகு > *Skt. hudukka.*

[உடு → உடுக்கு → உடுக்கை. உடுக்கை = ஒடுங்கிய நடுப்பகுதியை உடையது.]

உடுக்கைக்கொடி *udukkai-k-kodi,* பெ. (n.) ***வள்ளிக் கொடி;*** creeper of the sweet potato plant. (சா.அக.).

[உடுக்கை + கொடி. உள் → உடு = பொருந்தல், நடுவிருத்தல், நடுவு.]

உடுக்கைச்சுருக்கம் *udukkai-c-curukkam,* பெ. (n.) ***நடுவிற் சுருங்கல்;*** tapering in the middle as in the small drum.

[உடுக்கை + சுருக்கம். உள் → உடு = பொருந்தல், நடுவிருத்தல், நடுவு.]

உடுக்கைமரம் *udukkai-maram,* பெ. (n.) ***கருங்காலி மரம்;*** black wood. (சா.அக.).

[உடுக்கை + மரம்.]

உடுக்கைரேகை *udukkai-rēgai,* பெ. (n.) ***உடுக்கை வரிகை*** பார்க்க; see *udukkai-varigai.*

உடுக்கைவரிகை *udukkai-varigai,* பெ. (n.) ***கை வரி*** (ரேகை) ***வகை*** (சிவக். பிரபந். சரபே.குற. பக். 344); (palmistry) line in the palm. (செ.அக.).

[உடு → உடுக்கை + வரிகை.]

உடுக்கோன் *udukkōn,* பெ. (n.) ***திங்கள்;*** moon, lord of the stars. "உடுக்கோனாலும்.. அகன்றிடாத் திமிரவீட்டம்" (பிரமோத். 2,40). (செ.அக.).

Skt. uduganādhipā.

[உடு + கோன்.]

உடுகாட்டி *udu-kātti,* பெ. (n.) ***பொன்னாங்காணி*** பார்க்க; see *ponnāngāni* (செ.அக.).

[உடு + காட்டி.]

உடுசி *uduci,* பெ. (n.) ***உசிலை மரம்;*** black sirissa. (சா.அக.).

[உடு → உடுசி.]

உடுத்து-தல் *uduttu-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***ஆடையணிவித்தல்;*** to dress on. (செ.அக.).

[உடு → உடுத்து.]

உடுநீர் *udu-nīr,* பெ. (n.) ***அகழிநீர்;*** ditch water. (சா.அக.).

[உடு + நீர். உடு = பள்ளம், அகழி.]

உடுப்பம் *uduppam,* பெ. (n.) ***தெப்பம்,*** raft, float.

[உடு → உடுப்பம். உடு = பள்ளம்.]

உடுப்பாத்தி *udu-p-pātti,* பெ. (n.) ***சிறு கடல் மீன் வகை;*** light-green, fresh water fish. (செ.அக.).

[உடு + பாத்தி.]



உடுப்பாத்தி

உடுப்பு *uḍuppu,* பெ. (n.) 1. ***ஆடை;*** cloth, unsewn garment. "மணிக்கோவை யுடுப்பொடு துயல்வர" (மணிமே. 3, 140). 2. ***அங்கி முதலியன;*** clothes, clothing, vesture, dress. (செ.அக.)

ம. உடுப்பு; க. உடபு, உடுபு; துட. உட்ப்வ; குட. உடிபி; து. உடுச்ர; தெ. உடுபு.

[உடு → உடுப்பு.]

உடுப்பை *uḍuppai,* பெ. (n.) ***நிலப்பாலை;*** round-leaved discous featherfoil. (செ.அக.).

[உடு → உடுப்பை.]

உடுபதம் *uḍu-padam,* பெ. (n.) ***விண்;*** firmament, from its being the path of the stars. "உடுபதத்தினு முடிவில்லை" (பாரத. கிருட். 60).

[உடு + பதம். உடு = விண்மீன். உடுபதம் = விண்மீன்கள் இருக்குமிடம்.]

உடுபதி *uḍu-pati,* பெ. (n.) ***உடுக்கோன்*** பார்க்க (திவ்.); see *uḍukkōṉ.* (செ.அக.).

[உடு + பதி.]

உடுபம் *uḍubam,* பெ. (n.) ***தெப்பம்;*** raft, float. (செ.அக.).

[உடு → உடுப்பம் → உடுபம் (கொ.வ.) = உட்குழிவான தோணி அல்லது தெப்பம்.]

உடுபுடைவை *uḍu-puḍaivai,* பெ. (n.) 1. ***உடை;*** garments (W.). 2. ***எளிய உடை;*** dress for daily wearing.

ம. உடுபுடவ.

[உடு + புடவை.]

உடும்பு *uḍumbu,* பெ. (n.) ***மூன்று அடி நீளம் வரை வளரும், இந்தியா முழுமையும் காணப்படும், பெரிய பிளவுபட்ட நாக்குள்ள பல்லிவகை;*** genus of large thick-tongued aboreal lizards found all over India, and growing to 3 ft. in length, varamus bengalenis. "அரவு முடும்பும் போல் ஏறினார் ஏணிபலர்" (பு. வெ. 619).

ம. உடும்பு; க. உட, உடு; குட. உடும்பி; து. உடு, ஒடு, ஒட்ட; தெ. உடுமு; கொலா. உடுக், உருக்; நா. கீடுக்; பர். உடு.

[உள் → உடு = சேர்த்தல், நெருக்கல், இறுகப்பிடித்தல், பற்றுதல். உடு → உடும்பு.]



உடும்பு

உடும்புக்கல் *uḍumbu-k-kal,* பெ. (n.) ***உடும்பினுடம்பிலிருக்குங்கல். இது மருந்திற்குப் பயன்படும்;*** stone or calculus found inside the body of a guana useful in medicines. (சா.அக.).

[உடும்பு + கல்.]

உடும்புக்காலிவரகு *uḍumbu-k-kāli-varagu,* பெ. (n.) ***வரகுவகை;*** variety of millet which is sown in September and matures in three months. (செ.அக.).

[உடும்பு + காலி + வரகு.]

உடும்புநாக்கன் *uḍumbu-nākkaṉ,* பெ. (n.) ***பொய்யன், ஏமாற்றுக்காரன்;*** one who has a double tongue as the big lizard, deceitful man. (செ.அக.).

[உடும்பு + நாக்கன்.]

உடும்பின் நா பிளவுபட்டிருத்தலின் முன்னொன்றும் பின்னொன்றுமாகப் பேசும் இரட்டை நாக்கு படைத்தவன் என்னும் பொருளில் இச்சொல் வழக்கூன்றியது.

உடுமடி *uḍu-maḍi,* பெ. (n.) ***ஆடை*** (அமரா. கதை. 84); apparel. (செ.அக.).

[உடு + மடி. மடி = ஆடை.]

உடுமாற்று *uḍu-māṟṟu,* பெ. (n.) 1. ***உடை மாற்றுகை;*** change of dress. உடுமாற்றுக்குச் சேலையுண்டா? (உ.வ.) 2. ***நடைபாவாடை;*** clothes used for spreading on the floor on certain special occasions.

[உடு + மாற்று. உடு = உடுத்துக் கொள்ளும் உடை.]

உடுமானம் *uḍu-māṉam,* பெ. (n.) ***உடை*** (யாழ்.அக); dress, clothing. 2. ***தகுதிக்குத் தகுந்த உடை;*** dress style according to etiquette. (செ.அக.).

[உடு + மானம். உடு = உடுத்தல்; மானம் - பெயரீறு. ஒ.நோ. வருமானம்.]

உடுவம் *uḍuvam,* பெ. (n.) ***அம்பின் ஈர்க்கு;*** shaft of an arrow. "உடுவந்தோன்ற ... எய்திடுதலோடும்" (சீவக. 2275). (செ.அக.).

[உடு + அம்.]

உடுவலை *uḍu-valai,* பெ. (n.) ***ஆழமில்லா ஆற்றுப்பகுதியின் குறுக்கே அல்லது படகின் அடிப்பகுதியில் கட்டப்படும் சற்றொப்ப நாற்பது இரட்டை முழ நீளமுள்ள மீன் வலை வகை;*** fisherman's net, about 40 yards in length, tied across a stream in its shallow part.

[உடு + வலை.]

உடுவிலான் *uḍuvilāṉ,* பெ. (n.) ***உடுக்கோன்*** பார்க்க (பிங்.); see *uḍukkōṉ.* (செ.அக.).

[உடு + இல் + ஆன்.]

உடுவேந்தன் *uḍu-vēndaṉ,* பெ. (n.) ***உடுக்கோன்*** பார்க்க (பிங்.) see *uḍukkōṉ.* (செ.அக.).

[உடு + வேந்தன்.]

உடுவை[1] *uḍuvai,* பெ. (n.) 1. ***அகழி;*** ditch surrounding a fort. (W.). 2. ***நீர்நிலை;*** pool, reservoir of water.

[உள் → உடு → உடுவை. உடு = பள்ளம்.]

உடை[1]-தல் *uḍai-,* 3. செ.கு.வி. (v.i.) 1. ***தகர்தல்;*** break as a pot; to burst into fragments. "என்னாகும் மண்ணின் குடமுடைந்தக் கால்" (வாக்குண். 18.). 2. ***பிளத்தல்;*** to crack, split, to be cloven. "உடைகவட்டோமை" (கல்லா. 7.). 3. ***ஏரி ஆறு முதலியன கரையுடைதல்;*** to be breached, as a tank. வீராணத்தேரி உடைந்தது. (உ.வ.). 4. ***புண்கட்டியுடைதல்;*** to burst open, as a boil. 5. ***முறுக்கு அவிழ்தல்;*** to become untwisted, as a rope. கயிற்றின் முறுக்குடைந்தது. (உ.வ.). 6. ***மலர்தல்;*** to blossom as a flower. "கோடுடையும்.. சேர்ப்பன்" (பு.வெ. 12, பெண். 3.). 7. ***தோற்றோடுதல்;*** to be discomfited, routed, broken, as the ranks of an army. "வழுதி சேனையுடைந்ததே" (திருவிளை. சுந்தரப். 18.). 8. ***மனங்குலைதல்;*** to be dispirited, dejected, as one's heart with grief; to be in despair. "உடைபு நெஞ்சுக" (கலித். 10.). 9. ***எளிமைப்படுதல்*** (பிங்.); to become poor, reduced in circumstances. 10. ***வெளிப்படுதல்;*** to be divulged, to become publicly known 11. ***சாதல்;*** to die. "உடைந்துழிக் காகம்போல்" (நாலடி. 284.). 12. ***கெடுதல்;*** to be ruined (W.). 13. ***உலைதல்;*** to break down, as a witness in cross-examination. (Mod.). சாட்சியுடைந்து போயிற்று (உ.வ.). (செ.அக.).

ம. உடயுக; **க.** ஒடி, ஒடெ, உடி; **கோத.** ஒட்வ்; **துட.** வட்; **குட.** ஒடெ, ஒட; **து.** உடெபுனி, உடெவினி; **தெ.** ஒடபி; **கொலா.** நாட்; **நா.** ஒட்வ; **பர்.** ஒட்; **கோண்.** வோடானா; **கட.** ஒர்.

[உள் → உளை → உடை → உடை-தல்.]

உடை[2]-த்தல் *uḍai-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***தகர்த்தல்;*** to break into pieces, as a vessel a lamp, a clod, any solid or massive substance, teeth. "மகுட கோடிகளுடைத்தலின்" (பாரத. காண்டவ. 27.). 2. ***குட்டுதல்*** (திவா.); to cuff on another's head with the knuckles. 3. ***பிளத்தல்;*** to split, as wood; to fracture, as the skull. "கட்டையையுடைத்துக்கொடு" (உ.வ.). 4. ***கரை உடைத்தல்;*** to burst, as the bank of a river. "செறுத்தோறுடைப்பினுஞ் செம்புனலோ டூடார்" (நாலடி. 222.). 5. ***புண்கட்டியுடைத்தல்;*** to open, as a boil. 6. ***முறுக்கவிழ்த்தல்;*** untwist, untwine. 7. ***தோற்கச் செய்தல்;*** to defeat, rout, put to disorderly flight. "படைக்குட்டம் பாய்மா வுடையா னுடைக்கிற்கும்" (நான்மணி. 18.). 8. ***வெளிப்படுத்துதல்;*** to break, as news; to reveal. அவன் அந்த இரகசியத்தை உடைத்து விட்டான் (உ.வ.). 9. ***அழித்தல்;*** to damage, ruin, impoverish. "பெண்மையுடைக்கும் படை" (குறள். 1258.). 10. ***வருத்துதல்;*** to trouble, distress. "பொறாமை யுள்ளுடைக்கு மென்க" (இரகு.யாக. 12.). (செ.அக.).

[உள் → உளை → உடை → உடை-தல் → உடை-த்தல் (பி.வி.).]

உடை[3] *uḍai,* பெ. (n.) 1. ***இடுப்பு;*** waist. 2. ***இடுப்பில் உடுத்தும் ஆடை*** (திவா.); clothes, garment, dress. (செ.அக.).

ம. உட; **க.** உடெ; **தெ.** உடுபு; **துட.** உட்ப்; **குட.** உடிபம்; **து.** உடுதல்ரெ; **கோண்.** உகாதானா.

[உடு[4] → உடை.]

உடை[4] *uḍai,* பெ. (n.) ***செல்வம்*** (பிங்.); wealth.

ம ஒட; **க.** ஒடெ, ஒடமெ; **கோத.** ஒட்பயன் (முதலாளி), ஒட்ரம் (வீட்டுப் பொருள்); **குட.** ஒடவெ (முதலாளி); **தெ.** ஒடமி, ஒடமெ; **து.** ஒடவெ. (செ.அக.).

[உள் → உடு → உடை. உடைத்தாதல், உள் = இருத்தல். உடு = தன்பாலிருத்திக்கொள்ளுதல்.]

உடை[5] *uḍai,* பெ. (n.) 1. ***குடைவேல்மரம்*** (திவா.); umbrella-thorn babul. 2. ***நீருடைமரம்;*** buffalo-thorn cutch. 3. ***வேலமரவகை;*** pea-podded black babul. (செ.அக.).

[உடு → உடை = வட்டமாய் (சுற்றாய்)க் கிளை பரப்பிய மரம்.]

உடை[6] *uḍai,* பெ. (n.) 1. ***விடியற்காலம்;*** dawn. (regarded as the spouse of the sun). "உடைதன் காந்த" (இரகு. திக்கு. 85.). 2. ***எருதின் விதை;*** testicles of ox. எருதுக்கு உடை அடித்து விட்டார்கள் (உ.வ.). (செ.அக.).

[உள் → உடு → உடை. உள் = வெப்பம். உடு = வெப்பமுடையது, ஒளியுடையது, வெளிப்படுவது. உடை = வெளிப்படுத்துவது. உடை = வெளிப்படுத்துவது. ஒளியை வெளிப்படுத்தும் பாங்குடைய விடியற்காலமும், விள்ளு (விந்து) வெளிப்படும் பாங்குடைய எருதின் விதையும் உடை எனப்பட்டன. இச் சொல் தொடக்கத்தில் உள் → உளை → உழை என வழங்கிப் பின் வடமொழியில் உஷை → உஷா எனத் திரிந்தது.]

உடை[7] *uḍai,* பெ. (n.) 1. ***முள்;*** thorn. 2. ***சாணம்;*** cowdung. (செ.அக.).

[உள் → உடு → உடை. உள் = இருத்தல். உடு = இருக்கச் செய்தல், கீழே கிடத்தல்.]

உடை[8] *uḍai,* பெ. (n.) ***சேணம்*** (அக.நி.); horse - saddle. (செ.அக.).

[உள் → உடு → உடை. உள் = இருத்தல்; உடு = இருத்துதல்.]

உடை[9] *uḍai,* பெ. (n.) ***அணிகலன்*** (அக.நி.); jewellery. (செ.அக.).

[உள் → உடு → உடை = உடைமை. உள் = இருத்தல். உடு = தன்பாலிருத்திக்கொள்ளுதல்.]

உடைக்கல் *uḍai-k-kal,* பெ. (n.) ***காவிக்கல்*** (தைலவ. தைல. 33.); redochre, used in dyeing. (செ.அக.).

[உள் → உடு → உடை + கல். உடு = வெப்பமுடையது, ஒளியுடையது, செந்நிறமுடையது.]

உடைகுலைப்படு-தல் *uḍaikulai-p-paḍu-,* 20. செ.கு.வி. (v.i.) 1. ***கரையழிதல்*** (ஈடு. 6,4,4.); be breached, as a bank of river or the shore of a tank. 2. ***நிலையழிதல்;*** be deranged, discomfited. 'உடை குலைப்படுகிற மனஸ்' (ஈடு. 5,1,4.). (செ.அக.).

[உடை + குலை + படு-தல். உடை = சுற்று, சுற்றியிருப்பது.]

உடைகுளம் *uḍai-kuḷam,* பெ. (n.) ***முற்குளம்*** (பூராடம்.) (திவா.); 20th nakṣatra whose configuration looks as if it were a breached tank. (செ.அக.).

[உடை + குளம். கரையுடைந்த குளம் போன்ற தோற்றமுடையது.]

உடைகொல் *uḍai-kol,* பெ. (n.) ***குடைவேல மரம்;*** umbrella - thorn, babul. (செ.அக.).

[உடை + கொல். கொல் = கொலு, சீராய் அமைதல், சுற்றிலும் ஒரு சீராய்க் குடைபோல் கவிந்தமரம்.]

உடைசல் *uḍaisal,* பெ. (n.) ***உடைந்த பொருள்;*** cracked, worthless articles; broken pieces. (செ.அக.).

[உடை → உடைசல்.]

உடைஞாண் *uḍai-ñāṉ,* பெ. (n.) ***உடைநாண்*** பார்க்க; see *uḍaināṉ.* "உடுத்த பஞ்சிமேற்கிடந் துடைஞாண் பதைத்திலங்க" (சீவக. 2240.).

ம. உடஞாண்; **க.** ஒட்யாணெ; **தெ.** ஒட்யாணமு; **து.** ஒட்யாண.

[உடை + ஞாண். நாண் → ஞாண். ஊடு → உடு → உடை = இடுப்பு. இச்சொல் நாளடைவில் உடைஞாண் → ஒடிஞாண் → ஒடிஞாணம் → ஒட்டியாணம் எனத் திரிந்துவிட்டது.]

உடைத்தானவன் *uḍaittāṉavaṉ,* பெ. (n.) ***உடையவன்;*** proprietor, possessor, owner. (செ.அக.).

[உடைமைத்து → உடைத்து + ஆனவன்.]

உடைதாரம் *uḍai-tāram,* பெ. (n.) ***அரையிலணியும் அணிவகை;*** cord or girdle used as an ornamental belt over the waist-cloth. "உடைதாரமு மொட்டியாண மும்" (மீனாட். பிள்ளைத். ஊசற். 10.). (செ.அக.).

க. உடுதார, உடிதார, உடெதார.

[ஊடு → உடு → உடை + தாரம். (கயிறு). உடை = இடுப்பு.]

உடைதோல் *uḍai-tōl,* பெ. (n.) ***தோற்பரிசை;*** buck. "முதற்சுரிகை யுடைதோலும் வாங்கிக் கொண்டு" (பெரியபு.கண். 54.). (செ.அக.).

க. உடெதோல், உடெதொவல்.

[உடை + தோல். உடை = சுற்று, சுற்றான.]

உடைந்தவாய்ச்சிலந்தி *uḍainda-vāy-c-cilandi,* பெ. (n.) ***ஆழ்ந்த நீண்ட பிளப்புள்ள சிலந்தி;*** deep and more or less linear from the ulcer - Dissured ulcer. (சா.அக.).

[உடை → உடைந்த + வாய் + சிலந்தி.]

உடைநாண் *uḍai-nāṉ,* பெ. (n.) ***இடுப்பில் அணியும் நாண் அல்லது அணிகலன்;*** cord or ornament worn round the waist - cloth to serve as a waist band and confine the cloth at the waist. "உடைநாணொடு கடிவட்டி னொடு" (சீவக. 2263). (செ.அக.).

க. உடெநேண், உடெநூல்.

[உடை + நாண் (கயிறு).]

உடைப்பட்டை *uḍai-p-paṭṭai,* பெ. (n.) ***உடைக்கு மேற் கட்டுங் கச்சை;*** kind of sash. "அரைப்பட்டையுடைப் பட்டை யூடு கட்டி" (கூளப்ப. 43.). (செ.அக.).

[உடை + பட்டை.]

உடைப்படை *uḍai-p-paḍai,* பெ. (n.) ***நிலைப்படை*** (S.I.I. iv, 492); standing army. (செ.அக.).

[உடை + படை.]

உடைப்பிற்போடு-தல் *uḍaippiṟ-pōḍu-,* 10. செ.குன் றாவி. (v.t.) ***அகலத் தள்ளுதல்;*** cast away as worthless as a thing thrown into a breach. அதை உடைப்பிற் போடு. (உ.வ.).

[உடைப்பு + இல் + போடு. உடைப்பு = நீண்ட பள்ளம், நெடுங்குழி, கரையுடைத்தோடும் நீர்ப்பெருக்கு, மீட்டெடுக்க வேண்டாத கழி பொருள்களை வீசி எறிதற்குரிய இடம். இக்கால் சாய்க்கடையையும் குறிக்கும்.]

உடைப்பு *uḍaippu,* பெ. (n.) 1. ***உடைத்தல்;*** causing to break. 2. ***உடைகை;*** breach, bursting of a tank. 3. ***உடைந்த அறுவாய்*** (S.I.I. ii, 393); portion breached, channel cut through a ridge in a field.

ம. உடப்பு; **க.** ஒடபு; **து.** உடி.

[உடை → உடைப்பு. தொ.பெ.]

உடைப்புக்கட்டு *uḍaippu-k-kaṭṭu,* பெ. (n.) ***அணை, குளம் முதலியவற்றிலுள்ள உடைப்புகளைச் செப்ப னிடுகை;*** repair of a breach in an embankment. (செ.அக.).

[உடைப்பு + கட்டு.]

உடைப்பெடு-த்தல் *udaippedu-*, செ.கு.வி. (v.i.) ***வெள்ளத்தாற் கரையழிதல்;*** to be breached, as a tank. ஏரி உடைப்பெடுத்துவிட்டது (உ.வ.). (செ.அக.).

[உடைப்பு + எடு.]

உடைப்பொருள் *udai-p-poruḷ*, பெ. (n.) ***உடைமைப் பொருள்*** (சி.போ. அவையடக்கம், சிற்.); property in one's possession meaning a slave when referring to human beings, and other items of worldly goods when referring to animals and things. (செ.அக.).

[உடை + பொருள்.]

உடைமணி *udai-maṇi*, பெ. (n.) 1. ***குழந்தைகளின் அரையணி;*** waist ornament with bells worn by a child. "உடைமணி கட்டிச் சிறுதே ருருட்டி" (திருக்கோ. 385). 2. ***மேகலை*** (சீவக. 2407); jewelled gridle worn by women. (செ.அக.).

[உடை + மணி. உடை = இடுப்பு.]

உடைமுள் *udai-muḷ*, பெ. (n.) ***குடை வேலின் முள்;*** thorn of the babul. (செ.அக.).

[உடை (குடைவேலமரம்) + முள்.]

உடைமேற்புல்லுருவி *udaimēṟ-pulluruvi*, பெ. (n.) ***உடைவேலின் மேல் வளரும் புல்லுருவி;*** parasitic plant found grown on arrow-thorn tree. (சா.அக.).

[உடை + மேல் + புல் + உருவி. உடை = குடைவேலமரம்.]

உடைமை[1] *udaimai*, பெ. (n.) 1. ***உடையனாந்தன்மை;*** state of possessing, having, owning. "அன்பீனு மார்வ முடைமை" (குறள், 74). 2. ***உடைமைப் பொருள்;*** possession, property. "உடைமை யெல்லாமும்" (திருவாச. 33.7). 3. ***செல்வம்;*** wealth, riches. "உடைமையாற் போத்தந்த நுமர்" (கலித். 58). 4. ***அணிகலன்கள்*** (ஆ.அக.).; ornament. (செ.அக.).

ம. உடம; க. ஒடமெ; தெ. ஒடமி, ஒடமெ; கோத. ஒட்ய்ன்; துட. விடம் (இடுகாட்டில் இடும் பொருள்கள்); குட. ஒடெவெ; து. ஒடெவெ.

[உடு → உடை → உடைமை (வே.க. 43).]

உடைமை[2] *udaimai*, பெ. (n.) ***மேல்வாரம்; வருவாய்;*** perquisite. "பணஉடைமை நெல்லுடைமை" (S.I.I.v. 331). (செ.அக.).

[உடை → உடைமை.]

உடைய *udaiya*, இடை. (part.) ***ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு*** (நன். 300 சங்கர.); particle of the genitive case. (செ.அக.).

ம. உடய; க. ஒடெய.

[உடை → உடைய (சு.வி. 69).]

உடையநம்பி *udaiya-nambi*, பெ. (n.) ***சுந்தரமூர்த்தி நாயனார்;*** Sundaramurti Nayanar. "உடையநம்பி தனி வரும் மகிழ்ச்சி பொங்க" (பெரியபு. ஏயர். 107). (செ.அக.).

[உடை → உடைய + நம்பி.]

உடையல் *udaiyal* பெ. (n.) 1. ***உடைதல்;*** breaking. 2. ***உடைந்தது;*** that which is broken. 3. ***கெடல்;*** losing.

[உடை → உடையல்.]

உடையல் விடு-தல் *udaiyal-vidu-*, 18. செ.குன்றாவி. (v.t.) ***ஏளனஞ் செய்தல்;*** to mock, ridicule, banter, make fun of. (செ.அக.).

[உடை → உடையல் + விடு.]

உடையவர் *udaiyavar*, பெ. (n.) 1. ***கருவறைத் தெய்வம்;*** Master, Lord. "உடையவர் கோயில்" (பெரியபு. திருஞான. 664). 2. ***ஆன்மார்த்த இலிங்கம்;*** Siva-linga used in private worship. 3. ***இராமானுசர்,*** (ஈடு. 10,7,1); Ramanuja, the Guru of Sri Vaishnavas. 4. ***செல்வர்;*** prosperous man, rich fellow. (செ.அக.).

ம. உடயர்.

[உடை + அவர்.]

உடையவன் *udaiyavaṉ*, பெ. (n.) 1. ***உரியவன்;*** owner, one who possesses. 2. ***செல்வமுள்ளவன்;*** possessor of wealth. "உடையவர்களௌனநாடி" (திருப்பு. 249). 3. ***கடவுள்;*** God, as possessing the universe.

ம. உடயவன், உடயக்காரன்; தெ. ஒடயடு.

[உடை + அவன்.]

உடையார் *udaiyār*, பெ. (n.) 1. ***கருவறைத் தெய்வம்;*** Lord, Master. "உடையார்...திருவிழாவில்" (S.I.I.ii, 306). 2. ***சில குலப்பிரிவினரின் பட்டப் பெயர்;*** title of certain castes of cultivators. 3. ***இலங்கையில் ஒரு சிற்றூர்ப் பணியாளன்;*** village official in North and East Ceylon. 4. ***செல்வர்;*** the rich, as those who have world's goods. "உடையார்மு னில்லார்போல்" (குறள், 395).

[உடை → உடையார்.]

உடையார் சாலை *udaiyār-sālai*, பெ. (n.) ***கோயிலில் உணவளிக்கும் இடம்;*** place where food is served in a temple. 'சிவயோகிகள் பதின்மரும் உடையார் சாலையிலே உண்ணக்கடவர்' (S.I.I.ii. 133). (செ.அக.).

[உடை → உடையார் + சாலை.]

உடையாள் *udaiyāḷ*, பெ. (n.) ***உமாதேவி;*** Goddess Parvathi.

[உடை + ஆள்.]

உடையாளி *udaiyāḷi*, பெ. (n.) ***கடவுள்;*** Lord of the universe, God. (செ.அக.).

[உடை + ஆளி.]

உடையான்[1] *uḍaiyāṉ,* பெ. (n.) 1. ***இறைவன்;*** Master, Lord. "உடையா னல்லாதானை உடையானென" (சி.போ. அவையடக்கம், சிற்.). 2. ***சிறப்புப்பெயர்*** (பி.வி. 31, உரை); (Gram). substantive noun as qualified by an attributive. 3. ***உடையவன்;*** a possessor or an owner. (செ.அக.).

ம. உடயோன்; **க.** ஒடெய.

[உடை + அவன் = உடையவன் → உடையான்.]

உடையான்[2] *uḍaiyāṉ,* பெ. (n.) ***உடுத்தவன்;*** one who is wearing dress. (ஆ.அக.).

[உடை + ஆன்.]

உடைவாரம் *uḍai-vāram,* பெ. (n.) ***மேல்வாரங் குடி வாரமாகப் பிரிப்பதற்கு முன்னுள்ள மொத்த விளைவுத் தவசம்;*** gross produce from the land before it is divided between the landlord and the cultivators. (செ.அக.).

[உடை + வாரம்.]

உடைவாலக்கீரை *uḍai-vālakkīrai,* பெ. (n.) ***தண்டங் கீரை;*** garden-green. (சா.அக.).

[உடைவால் + அ + கீரை.]

உடைவாள் *uḍai-vāḷ,* பெ. (n.) ***உடையிற் செருகும் சுரிகை*** (திவா.); short scimitar.

ம. உடவாள்.

[உடை + வாள். உடை = இடுப்பு. இடுப்பிற் செருகும் வாள். உடையிற் செருகும் வாள் எனின் உடையின் எப்பகுதி எனத் தெளிவுபடாமை காண்க.]

உடைவு *uḍaivu,* பெ. (n.) 1. ***தகர்கை;*** cracking, fracturing. 2. ***உடைப்பு;*** breach. 3. ***தோற்றோடுகை;*** defeat, discomfiture. "களிற்றை ..பொருதுடைவு கண்டானும்" (திவ். இயற். 1,18). 4. ***தளர்வு;*** debility, weakness. (W.). 5. ***களவு*** (பழ. 194); theft, stealing. 6. ***கேடு*** (த.சொ.அக.); reduction of circumstances from wealth to poverty. (செ.அக.).

ம. உடவு; **க.** ஒடி, உடி; **தெ.** ஒடபி; **துட.** விட்ய்; **குட.** ஒடவெ; **து.** ஒட்கு.

[உடை → உடைவு.]

உடைவேல் *uḍai-vēl,* பெ. (n.) ***வேலமரவகை; குடை வேல்;*** pea-podded black babul. (செ.அக.).

[உடை + வேல். வேல் = வேலமரம்.]

உடோ *uḍō,* இடை. (int.) ***அடா;*** exclamation, addressed familiarly to an inferior. "நேரே நின்றன்றோ உடோ பரிமாறுவது" (ஈடு, 4,8,2).

[ஏல → ஏழ → ஏட → அட → அடா → உடோ. (கொ.வ.)]

உடோளக்கை *uḍōḷakkai,* பெ. (n.) ***விரல்களை நெருக் கிக் கொண்டு தோளுக்கு நேராக இரு கைகளையும் நீட்டும் இணைக்கை வகை*** (பரத. பாவ. 52.); (Natya.) hand-pose in which both hands are stretched in front of the shoulders, with fingers kept close to one another. (செ.அக.).

[உ + தோள் + அ + கை = உதோளக்கை → உடோளக்கை. உ = முன்மை சுட்டிய குறிப்பு. ஒ.நோ. உக்கடை = வீட்டின் அல்லது ஊரின் முன்வாசல் (gate).]

உடோளாயம் *uḍōḷ-āyam,* பெ. (n.) ***கட்டித் தூக்குஞ் சிறு மூட்டை*** (நாம தீப.); small package or bundle. (செ.அக.).

[உ + தோள் + ஆயம் = உதோளாயம் → உடோளாயம்.]

உண்[1]**(ணு)-தல்** *uṇ(ṇu)-,* 13. செ.குன்றாவி. (v.t.) 1. ***உண்ணுதல்;*** to eat or drink; to suck as a child; take food. 2. ***உணவைக் கடியாது உட்கொள்ளுதல்*** (திவ். திருவாய். 6,7,1); to swallow without biting. 3. ***துய்த்தல்;*** to enjoy, experience. "மங்கைய ரிளநல மைந்த ருண்ண" (கம்பரா. உண்டா. 63). 4. ***உட்கொள்ளுதல்;*** to draw in, receive. "நதியுண்ட கடல்" (தாயு. மலைவளர். 1.). 5. ***பொருந்துதல்;*** to be fitted to. "உறியுண்ட கரகத்தோடு" (திருவிளை. யானையெய். 38). 6. ***ஒத்தல்;*** to resemble. "சேலுண் கண்ணியர்" (சீவக. 2383). 7. ***கவர்தல்;*** to seize, grasp. "அவுணனா ருயிரை யுண்ட கூற்றினை" (திவ். திருக்குறுந். 2.). 8. ***இசைவாதல்;*** to harmonise with, to be agreeable to. "ஓசை யூட்டினு முண்ணாத வாறும்" (யாப். வி.பக்.97) - து.வி. (aux.v.) ***செய்ப்பாட்டு வினைப்பொருள் உணர்த்தும் ஒரு ஈறு;*** used with vbl. bases and vbl. nouns to form the passive, as in. கட்டுண்டான், கேடுண் டான். (செ.அக.).

ம. உண்ணுக; **க.** உண்ணு; **தெ.** ஊடு (குடித்தல்); **கோத.** உண்; **துட.** உண் (குடித்தல்); **குட.** உண்ண; **து.** உண்பினி, உணுபினி; **கொலா.** உண் (குடித்தல்); **நா.** உண்; **பா.** உண்; **கூ.** உண். **கோண்.** உண்டினா; **குரு.** ஒணா; **மால்** ஒனெ; **பிரா.** குனிங்.

[உல் → உள் → உண்.]

உண்[2] *uṇ,* பெ. (n.) ***உணவு;*** food. "உண்விழைவார்க் கில்லை யுயிரோம்பல்" (அறநெறிச். 115.).

[உள் → உண்.]

உண்[3] *uṇ,* பெ. (n.) 1. ***மென்மை;*** tenderness. 2. ***சிறியது;*** tiny.

[இல் → உல் → உள் → உண்.]

உண்கண் *uṇ-kaṇ,* பெ. (n.) ***மையெழுதிய கண்;*** eye painted black on the lower lid. "இருநோக்கு இவளுண் கண் உள்ளது" (குறள், 1091). (செ.அக.).

[உண் + கண்.]

உண்கல் *uṇ-kal,* பெ. (n.) ***சுக்காங்கல்*** (சுக்கான்கல்) (R.); lime stone. (செ.அக.).

[வெண் + கல் = வெண்கல் → உண்கல்.]

உண்கலம் *uṇ-kalam,* பெ. (n.) ***உண்ணும் ஏனம்;*** plate or dish to eat from, whether of metal, China glass or leaf.

[உண் + கலம்.]

பொன், வெள்ளி, வெண்கலம் இவற்றால் செய்த கலங்கள்; வாழையிலை, பலா, முந்திரி, தாமரை, மந்தாரை, காட்டு முருக்கு போன்ற இலைகளால் தைத்த தொன்னைகள் முதலியன உண்கல வகைகளாகும்.

உண்கலன் *un-kalan,* பெ. (n.) ***உண்கலம்*** பார்க்க; see *un-kalam.*

[உண் + கலம் = உண்கலம் → உண்கலன் ஈற்றுத் திரிபு.]

உண்டல் *undal,* பெ. (n.) 1. ***உண்டாகுகை;*** coming into existence. ''காட்டாத்திலங்கி வேறுண்டல் போல்'' (சி.போ.பர. 12,3,2). 2. ***உட்கொள்ளல்;*** eating, swallowing. (செ.அக.).

[உள் → உண் → உண்தல் → உண்டல்.]

உண்டழிவு *undalivu,* பெ. (n.) ***உணவிடுதற்குரிய செலவு;*** feeding expenses. ''திருவிழா உண்டழிவுக்கு மாக'' (S.I.I. iii 298). (செ.அக.).

[உண்டு + அழிவு. அழிவு = செலவு.]

உண்டறு[1]-த்தல் *undaru-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***புசித்துச் செரிப்பித்துக் கொள்ளுதல்*** (ஈடு. 10,5,11); eat and digest. 2. ***துய்த்து முடித்தல்;*** experience to the fullest extent, enjoy the maximum benefit of. ''உண்டறுக்க வொண்ணாத போக்யதாதி சயத்தை'' (ஈடு, 10,3,2). 3. ***நன்றி மறத்தல்;*** to be ungrateful. ''அல்லாத உபகாரங்களை உண்டறுக்கிலும்'' (திவ்.திருநெடுந். 2. வ்யா.). (செ.அக.).

[உண்டு + அறு.]

உண்டறு[2]-த்தல் *undaru-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***ஈடுசெய்து தீர்த்தல்;*** to exhaust. ''இவ்வுக்தி மாத்ரமும் உண்டறுக்க மாட்டாது சரண்யன் கிருபை'' (ரஹஸ்ய. 340). (செ.அக.).

[உண்டு + அறு.]

உண்டா-தல் *unda-,* 6. செ.கு.வி. (v.i.) 1. ***உளதாதல்;*** to come into existence, rise into being, to be formed. ''நன்றுண்டாகவென'' (சீவக. 1159). 2. ***விளைதல்*** (பிங்.); to grow as vegetables; to thrive, flourish. 3. ***செல்வச் செழிப்பாதல்;*** to become rich, wealthy, opulent, to prosper. ''உண்டாய போழ்தில்.. தொண்டாயி ரவர் தொகுபவே'' (நாலடி, 284). 4. ***நிலையாதல்;*** to be permanent, lasting, durable. ''செல்வமொன் றுண் டாக வைக்கற்பாற் றன்று'' (நாலடி. 1). 5. ***கருவுண்டா தல்;*** to conceive. அந்த அம்மையார் உண்டாகியிருக் கிறார் (உ.வ.).

[உண்டு + ஆ (கு).]

உண்டாக்கல் *undakkal,* பெ. (n.) 1. ***உண்டாக்குதல்;*** making, producing. 2. ***உருவாக்கல்;*** creating, bringing into being. 3. ***விளைவித்தல்;*** cultivating, rearing. 4. ***உயர்த்துதல்; உரிய இடத்துக்குக் கொண்டு வருதல்;*** enriching, raising, bringing up.

[உண்டு + ஆக்கல்.]

உண்டாக்கு-தல் *undakku-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***ஒன்றை உண்டாக்குதல்;*** to make, produce. ''மண் ணால் பிரதிமை யுண்டாக்கினான்'' (உ.வ.). 2. ***படைத் தல்;*** to bring into being, create. ''தீர்த்தமிங்குண்டாக்கெ னச் செப்பலோடும்'' (திருவிளை. தீர்த்தவி. 8). 3. ***விளைவித்தல்;*** to raise, as crops or trees; to cultivate. ''நந்தனம்... உண்டாக்கி'' (திருவிளை. தருமிக். 4). 4. ***வளர்ச்சிக்குக் கொண்டு வருதல்;*** to enrich, raise to affluence. அந்தப் பிரபு அவனை உண்டாக்கி வைத்தார். (உ.வ.). 5. ***சம்பாதித்தல்;*** to earn. (சேரநா.). (செ.அக.).

ம. உண்டாக்கு.

[உண்டு + ஆக்கு.]

உண்டாக *undaga,* வி.எ. (adv.) 1. ***உரிய காலத்துக்கு முன்; முன்பே;*** early, betimes; before it is too late. ''வேண்டி னுண்டாகத் துறக்க'' (குறள், 342). 2. ***மிகுதியாக;*** abundantly. என்னிடம் அந்தப் பண்டம் உண்டாக விருக்கிறது. (உ.வ.). (செ.அக.).

[உண்டு + ஆக.]

உண்டாட்டம் *undattam,* பெ. (n.) ***விளையாட்டு;*** festivity, joviality. ''கொண்டலுண்டாட்டங் கொண்டான்'' (கம்பரா. சூர்ப்ப. 51). (செ.அக.).

[உண்டு + ஆட்டு = உண்டாட்டு → உண்டாட்டம்.]

உண்டாட்டு[1] *undattu,* பெ. (n.) 1. ***கள்ளுண்டு மகிழ்கை*** (பிரமோத். 22.13); festivity, joviality, as of warriors celebrating the seizure of cows by indulging in drink. 2. ***கள்ளுண்டு மகிழ்தலைத் தெரிவிக்கும் புறத்துறை*** (தொல். பொருள். 58); (purap.) poems describing the merry-making of victors. (செ.அக.).

[உண்டு + ஆட்டு.]

உண்டாட்டு[2] *undattu,* பெ. (n.) 1. ***விளையாட்டு;*** play, game. 2. ***மகளிர் விளையாட்டு வகை;*** ladies' game. (செ.அக.).

[உண்டு + ஆட்டு. கள்ளுண்டு வேல் திரித்து விளையாடும் ஆடவர்க்கே உரிய உண்டாட்டு பொதுவாக விளையாட்டைக் குறித்தது.]

உண்டாயிரு-த்தல் *unday-iru-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***கருக்கொண்டிருத்தல்;*** to be pregnant. அவள் உண்டா யிருக்கிறாள் (கொ.வ.). 2. ***உளதாயிருத்தல்;*** to come into existence, rise into being, be formed.

[உண்டு + (ஆகி) ஆய் + இரு.]

உண்டி[1] *undi,* பெ. (n.) 1. ***உணவு;*** food. ''அறுசுவை யுண்டி'' (நாலடி.1). 2. ***சோறு*** (சூடா.); boiled rice. ''உண்டி முதற்றே உணவின் பிண்டம்'' (புறநா.). 3. ***பறவை முதலியவற்றின் இரை*** (சூடா.); food of birds and beasts in general. 4. ***நுகர்ச்சி;*** experience. ''உண்டி வினையின்றி'' (சி.போ. 3,5. அதிகரணம், அவ.).

க. உன்னி.

[உண் → உண்டி]

உண்டி[2] *undi*, பெ. (n.) ***உண்டிகை*** பார்க்க; see *undigai*.

உண்டிகை *undgai*, பெ. (n.) 1. ***கூட்டம்;*** huge gathering, large concourse of people. "சாரிகை மறுத்துத் தண்டா வுண்டிகை" (பரிபா. 6,36). 2. ***பணம் இட்டுவைக்கும் பெட்டி அல்லது குடுவை;*** box, pot with a line-shaped opening for saving money.

[உள் → உண்டு → உண்டிகை. உள் = இருத்தல், இருத்துதல், வைத்தல், இடுதல்.]

உண்டிசுருங்கல் *undi-surungal*, பெ. (n.) ***உணவு குறைவாகவுண்ணல்;*** eating less than the required quantity. "உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு" (கொன்றை வேந்தன்-5). (சா.அக.).

[உண் → உண்டி + சுருங்கல்]

உண்டிப்பொருத்தம் *undi-p-poruttam*, பெ. (n.) ***செய்யுண் முதன் மொழிப் பொருத்த வகை.*** (பிங்.); rule of propriety which enjoins that the initial letter of a poem should be one of amuta-v-eluttu, and not one of naccelluttu one of ten ceyyun-mutan-moli- p-poruttam. (செ.அக.).

[உண் → உண்டி + பொருத்தம்.]

உண்டியச்சு *undi-y-accu*, பெ. (n.) ***கி.பி. 13ஆம் நூற்றாண்டில் மலை நாட்டில் வழங்கிய நாணய வகை;*** coin current in the West Coast about the 13th A.D. (M.E.R. 20 of 1916). (செ.அக.).

[உண் → உண்டி + அச்சு.]

உண்டு[1] *undu-*, 15. செ.கு.வி. (v.i.) ***உள்ள தன்மையை உணர்த்தும் ஐம்பால் மூவிடத்துக்கு முரிய ஒரு குறிப்பு வினைமுற்றுச் சொல்*** (நன்.339); finite verb denoting existence, used in common to all genders and persons and both numbers - கு.வி.மு. (adv.) அற்பத்தைக் குறிக்குஞ் சொல்; expr. used to denote a diminutive sense in respect of quantity or measure such as இத்தனை, அத்தனை. இத்தனையுண்டு கொடுத்தான்டா. (உ.வ.).

ம. உண்டு; தெ. உண்டு; க. உண்டு; கோத. ஒள்; துட. விள்ட்; குட. உன்று; து. உண்டு; கொலா; அன், அன்டி; பிரா. அன்னிங்.

[உள் + து - உண்டு.]

ஒன்றன்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்றும் வினையாலணையும் பெயருமாகிய 'உண்டு' என்னும் சொல் இன்று பால்வழு வமைதியாக இருதிணையைம்பால் மூவிட ஈரெண் கட்கும் பொதுவாக வழங்கி வருகின்றது. இன்றும், அதுவுண்டு மரமுண்டு என்பவற்றில் ஒன்றன்பாற் குறிப்புவினைமுற்றாகவும் உண்டு பண்ணு (உள்ளது பண்ணு), உண்டாக்கு (உள்ளதாக்கு) என்பவற்றில் ஒன்றன்பாற் படர்க்கை வினையாலணையும் பெயராகவும், ஆளப்பெறுதல் காண்க (வே.க. 42). 'உள்' குறிப்பு வினையை இற்றை மொழியியலார் குறைவினை (defective verb) என்பர். இதனைப் பிழைபடப் பேசியது மக்கள் குறையேயன்றி மொழியின் குறைபாடு அன்று என்பது பாவாணர் கருத்து. இருத்தல் அல்லது உளதாகும் பொருளில் 'உள்' வினைச்சொல் உண்டிந்தி → உண்ட்டுந்தி → உண்டுனு என முக்காலத்திலும் புடைபெயர்தலால் குறைவினை எனக் குறை கூறல் நன்றன்று.

உண்டு[2] *undu*, இடை. (part.) 1. ***ஓர் உவமவுருபு;*** suffix used as a sign of comparison. "குன்றுண் டோங்கு திரடோளவன்" (சீவக. 1159). 2. ***ஒரு துணைச் சொல்;*** expletive. தேவரைத் திருவடி தொழ நெடுந்தூர முண்டு வந்திருக்கிறது. (ஈடு. 6,9,3, வ்யா. பக். 403). (செ.அக.).

[உள் → உண் → உண்டு.]

உண்டு[3] *undu*, பெ. (n.) ***ஊன்றுகால்*** (யாழ். அக.); support. (செ.அக.).

[ஊன்று → உண்டு (கொ.வ.).]

உண்டுபடர்க்கொடி *undu-padar-k-kodi*, பெ. (n.) ***வெள்ளிண்டங்கொடி;*** shining leaved soap pod. (சா.அக.).

[உண்டு + படர் + கொடி. உண்டு = வெண்மை உட்கொண்டு.]

உண்டுபடு-தல் *undu-padu-*, 20. செ.கு.வி. (v.i.) 1. ***உண்டாதல்;*** to appear, come into existence. "உண்டு படு விடங்கண்டத் தொடுக்கினான்காண்" (தேவா. 1047, 8). 2. ***தோன்றுதல்;*** to be formed or produced by natural processes observable by the sense, to happen, occur (W.). 3. ***மேன்மேலும் உண்டாதல்;*** to grow, thrive, flourish. 4. ***முளைத்தல்*** (ஆ.அக.); to be sprouted. 5. ***தோன்றுதல்;*** to be seen, appear. (செ.அக.).

[உண்டு + படு.]

உண்டுபடுத்து-தல் *undu-paduttu-*, 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***படைத்தல்; உண்டாக்குதல்;*** to make, create. 2. ***கட்டிவிடுதல்;*** to fabricate, concoct. (செ.அக.).

[உண்டு + படுத்து.]

உண்டுபண்ணிவை-த்தல் *undu-panni-vai-*, 4. செ.குன்றாவி. (v.t.) ***நல்ல நிலையில் வைத்தல்;*** to put into the state or condition of being, to set up or establish the fortune or standing of, to elevate, as a person. (செ.அக.).

[உண்டு + பண்ணி + வை.]

உண்டுபண்ணு-தல் *undu-pannu-*, 12. செ.குன்றாவி. (v.t.) ***உண்டாக்குதல்;*** to make, create, give rise to. "துவிதமே அத்துவித ஞானத்தை யுண்டு பணு ஞானம்" (தாயு. எங்கு. 3). (செ.அக.).

[உண்டு + பண்ணு.]

உண்டுருட்டி *undurutti*, பெ. (n.) ***முன்னோர் ஈட்டிய பொருள்களை யெல்லாம் தின்று அழிப்பவன் (ள்);*** one who squanders and eats away all his ancestral property. (செ.அக.).

[உண்டு + உருட்டி.]

உண்டுறையணங்கு *undurai-yanangu,* பெ. (n.) ***நீருண் ணுந் துறையிலுள்ள தேவதை;*** malignant goddess presiding over springs or streams from which fountain or ghat people take their drinking water; naiad of Indian myth. "உண்டுறை யணங்கிவ ளுறை நோயா யின்" (ஐங்குறு.28).

[உண் + துறை + அணங்கு.]

உண்டென *undena-,* கு.வி.எ. (adv.) ***நிரம்ப;*** profusely, lavishly. உண்டெனத் தரவேணும் (உ.வ.) (செ.அக.).

[உண்டு + என.]

உண்டை[1] *undai-,* பெ. (n.) 1. ***திரண்ட வடிவுள்ளது;*** ball, globe, sphere, anything round or globular, commonly rather small. பொரியுண்டை. 2. ***வில்லுண்டை;*** ball of stone or earth shot from a bow. "உடுத்திரள் பலகோ ளின்ன வுண்டையாக் கொண்டு" (கந்தபு. திருவிளை. 29). 3. ***கவளம்;*** food in the shape of a ball, mouthful. "உண்டைகொண் மதவேழம்" (கம்பரா. கடிமண.28). 4. ***ஒருவகைச் சருக்கரை*** (பிங்.); a kind of sugar. 5. ***ஆயமாடுகருவி;*** dice. உண்டையுருட்டல் (குறள். 401, உரை). 6. ***குறுக்கிழை;*** woof, weft. 'மடிப் புடைவை வெந்தால் உண்டையும் பாவும் ஒத்துக்கிடக் கும்' (ஸ்ரீவசன. 2,191). 7. ***படைவகுப்பு;*** a form of array of an army; "உண்டையுமழிதலுற்ற" (கந்தபு. தரும கோபன். 79.). 8. ***கூட்டம்;*** group, collection. கோவுண்டை கோட்டாற் றழிவித்த கோன் (பரிபா. 6,36, உரை). 9. ***கஞ்சாவுண்டை;*** ball of ganja mixed with jaggery. "அவன் உண்டை போடுகிறவன்" (செல்வி, 77 நவம். 122).

ம. உண்ட; **க.** உன்டெ; **தெ.** உண்ட; **கோத.** உண்ட்; **துட.** உட்ய்; **து.** உன்டெ; **கோண்.** உன்தா.

[உருண்டை → உண்டை.]

உண்டை[2] *undai,* பெ. (n.) ***சிற்றுண்டி*** (யாழ்.அக.); light refreshment. (செ.அக.).

[உருண்டை → உண்டை. சோற்றுருண்டையை முதலில் குறித் துக் கவள அளவிலான சிற்றுண்டிக்கு ஆகிவந்தது.]

உண்டைக்கட்டி *undai-k-katti,* பெ. (n.) ***கோயிலில் பட்டையாகத் தரும் படையல் செய்த உணவு;*** balls of offering distributed in temples. (செ.அக.).

[உருண்டை → உண்டை + கட்டி.]

உண்டைக்கார் *undai-k-kār,* பெ. (n.) ***நான்கு மாதங் களிற் பயிராகும் நெல் வகை;*** a coarse paddy sown in August and maturing in four months. (செ.அக.).

[உருண்டை → உண்டை + கார்.]

உண்டைக்கெளுத்தி *undai-k-keluttì,* பெ. (n.) ***சிறு கடல் மீன் வகை;*** bluish leaden salt-water cat fish. (செ.அக.).

[உருண்டை → உண்டை + கெளுத்தி.]

உண்டைச்சம்பா *undai-c-cambā,* பெ. (n.) ***ஐந்து திங்களிற் பயிராகும் நெல்வகை;*** a paddy maturing in five months. (செ.அக.).

[உருண்டை → உண்டை + சம்பா.]

உண்டைச்சாதம் *undai-c-cādam,* பெ. (n.) ***உண்டைக் கட்டி*** பார்க்க (வின்.); see *undai-k-katti.* (செ.அக.).

[உருண்டை → உண்டை + சாதம்.]

உண்டைச்சுரை *undai-c-curai,* பெ. (n.) ***சுரைவகை*** (நாமதீப.); a kind of calabash. (செ.அக.).

[உருண்டை → உண்டை + சுரை.]

உண்டைநிலைமை *undai-nilaimai,* பெ. (n.) ***உருண்டை வடிவமாயிருக்கும் நிலைமை;*** the state of being a globule, spheroidal state. (சா.அக.).

[உருண்டை → உண்டை + நிலைமை.]

உண்டைநூல் *undai-nūl,* பெ. (n.) 1. ***நூலுண்டை;*** ball of thread. 2. ***நெசவின் குறுக்கிழை;*** woof, weft. (செ.அக.).

[உருண்டை → உண்டை + நூல்.]

உண்டையம் *undaiyam,* பெ. (n.) ***கடுக்காய்;*** gall-nut. (சா.அக.).

[உருண்டை → உண்டை → உண்டையம்.]

உண்டைவிடு-தல் *undaividu-,* 18. செ.குன்றாவி. (v.t.) ***குத்துதல்;*** to strike with the first; to cuff. (செ.அக.).

[உருண்டை → உண்டை + விடு.]

உண்டைவில் *undaivil,* பெ. (n.) ***காய்ந்த களி மண் ணுருண்டையை வைத்துத் தெறிக்கும் சுண்டுவில்;*** bow from which dried balls of clay are shot. "கூனே சிதைய வுண்டைவில் நிறத்தில் தெறித்தாய்" (திவ். திருவாய். 1,5,5.). (செ.அக.).

[உருண்டை → உண்டை + வில்.]

உண்ணம்[1] *unnam,* பெ. (n.) ***உடை***[5] பார்க்க (மலை); see *udai.* (செ.அக.).

உண்ணம்[2] *unnam,* பெ. (n.) 1. ***வெப்பம்;*** heat. 2. ***நெருப்பு;*** fire. "உண்ணவண்ணத் தொளி நஞ்ச முண்டு" (தேவா. 510.6.). (செ.அக.).

[உல் → உள் → உண் → உண்ணம் > Skt. usna.]

உண்ணல் *unnal,* பெ. (n.) 1. ***துய்த்தல்;*** enjoying, experiencing. 2. ***விழுங்கல்;*** swallowing. (ஆ.அக.).

[உள் → உண் → உண்ணல்.]

உண்ணா *unnā,* பெ. (n.) ***அண்ணத்துள்ள சிறு நாக்கு*** (திவா.); uvula. (செ.அக.).

[உள் + நா - உண்ணா.]

உண்ணாக்கு *unnākku,* பெ. (n.) ***உண்ணா*** பார்க்க; see *unnā.* (செ.அக.).

ம. உண்ணாக்கு.

[உள் + நாக்கு = உண்ணாக்கு.]

உண்ணாச்சி *uṉṉācci*, கு.பெ.எ. (adj.) ***மிகவும் சிறிய;*** very small. உண்ணாச்சி மாங்காய். (சேரநா.).

ம. உண்ணாச்சி.

[உள் → உண் → உண்ணி → உண்ணாச்சி.]

உண்ணாட்டம் *uṉṉāṭṭam*, பெ. (n.) 1. ***ஆராய்ச்சி;*** searching, enquiry. "உண்ணாட்டங் கொள்ளப் படுதலால்" (நாலடி. 18.). 2. ***உட்கருத்து*** (வின்.); real purpose; motive. (செ.அக.).

[உள் + நாட்டம் - உண்ணாட்டம்.]

உண்ணாநோன்பி *uṉṉānōṉbi*, பெ. (n.) ***குறித்த காலங்களிற் பட்டினி விட்டுண்ணுஞ் சமண முனிவன்;*** Jaina ascetic who fasts on specified occasions. "உண்ணா நோன்பி தன்னொடுஞ் சூளுற்று" (மணிமே. 3, 102.). (செ.அக.).

[உண்ணு + ஆ + நோன்பி. நோன்பு → நோன்பி. 'ஆ' எதிர்மறை இடைச்சொல்.]

உண்ணாநோன்பு *uṉṉānōṉbu*, பெ. (n.) ***விரும்பிய செய்கையை முடிக்கப் பட்டினி கிடக்கை;*** hunger-strike. (mod.).

[உண்ணா + நோன்பு.]

உண்ணாமறிப்பு *uṉṉā-marippu*, பெ. (n.) ***கடன் கொடுத்தோர் கடன் வாங்கினவர்களை உணவு கொள்ள வொட்டாமல் தகையும் மறியல்;*** the creditor's act of preventing his debtor from taking food till he is paid. "கடன்காரர் வந்திமுக்க வுண்ணா மறிப்பி லுடை வாரும்" (தெய்வச். விறலிவிடு. 366.). (செ.அக.).

[உண்ணு + ஆ = உண்ணா + மறிப்பு. ஆ (எ.ம.இ.நி.).]

உண்ணாமுலை *uṉṉāmulai*, பெ. (n.) ***திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் அம்பிகை;*** Parvathi, worshipped in the shrine at Tiruvaṇṇāmalai. "உண்ணா முலை உமையாளொடு முடனாகிய வொருவன்" (தேவா. 1025.).

[உண்ணு + ஆ + முலை. ஆ (எ.ம.இ.நி.).]

உண்ணாமுலை எல்லப்பநயினார் *uṉṉāmulai-ellappa-nayiṉār*, பெ. (n.) ***திருவண்ணாமலையில் வாழ்ந்த ஒரு புலவர்;*** name of a poet who lived at Tiruvaṇṇāmalai.

உண்ணாவரகு *uṉṉāvaragu*, பெ. (n.) ***வெள்வரகு;*** coarse millet, unsuited for fodder. "உண்ணா வரகொடு கொள்வித்தின்று" (பு.வெ. 6,26, கொளு.). (செ.அக.).

[உண்ணு + ஆ + வரகு. ஆ எதிர்மறை இடைச்சொல்.]

உண்ணாவிரதம் *uṉṉāviradam*, பெ. (n.) ***உண்ணா நோன்பு*** பார்க்க; see *uṉṉānōṉbu*.

[உண்ணு + ஆ - உண்ணா + விரதம்.]

உண்ணாழிகை *uṉṉāḻigai*, பெ. (n.) ***கோயில் கருவறை*** (கருப்பக் கிருகம்); innermost sanctuary of a temple. "உண்ணாழிகையா ருமையாளோடு" (தேவா. 592.3.). (செ.அக.).

ம. உண்ணாழிக.

[உள் + நாழிகை - உண்ணாழிகை. நாழிகை = இடைவெளி, இடம்.]

உண்ணாழிகையார் *uṉṉāḻigaiyār*, பெ. (n.) ***கோயில் கருவறையில்*** (கருப்பக் கிருகத்தில்) ***வாழுங்கடவுள்;*** God abiding in the sanctum sanctorum. "அந்தணர்கள் மாடக் கோயி லுண்ணாழிகையார்" (தேவா. 592,3.). (செ.அக.).

[உள் + நாழிகை + ஆர். - உண்ணாழிகையார்.]

உண்ணாழிகையுடையார் *uṉṉāḻigaiyuḍaiyār*, பெ. (n.) ***கோயில் கருவறையில் திருப்பணி செய்வோர்*** (S.I.I. 115.); servants grafted for duty in the inner most sanctuary of a temple. (செ.அக.).

[உள் + நாழிகை = உண்ணாழிகை + உடையார்.]

உண்ணாழிகை வாரியம் *uṉṉāḻigai-vāriyam*, பெ. (n.) ***கோயில் ஆளுவக் குழு*** (I.M.P.cg. 205.); managing committee of a temple. (செ.அக.).

[உள் + நாழிகை = உண்ணாழிகை + வாரியம்.]

உண்ணி[1] *uṉṉi*, பெ. (n.) 1. ***உண்பவன்;*** one who eats. "அப்ப னிரந்துண்ணி" (தனிப்பா. i, 35,66.). 2. ***உயிர் வகை;*** acarus, tick on dogs, sheep and cattle. "புலிமுகத் துண்ணி பறித்துவிடல்" (பழ. 109.). 3. ***பாலுண்ணி*** (வின்.); wart. (செ.அக.).

ம., க. உண்ணி.

[உண் → உண்ணி.]

உண்ணி[2] *uṉṉi*, பெ. (n.) 1. ***குழந்தை;*** infant, baby, child. 2. ***மாட்டின் கன்று;*** calf of a cow. 3. ***பிஞ்சு;*** tender fruit. 4. ***சிறியது;*** that which is small.

ம. உண்ணி.

[உண்[3] (சிறுமை) → உண்ணி.]

உண்ணிக்கொக்கு *uṉṉi-k-kokku*, பெ. (n.) ***ஒருவகைப் பறவை;*** species of stork. (செ.அக.).

[உண் → உண்ணி + கொக்கு.]

உண்ணிமாங்காய் *uṉṉi-māṅgāy*, பெ. (n.) ***பிஞ்சு மாங்காய்;*** tender mango. (சேரநா.).

ம. உண்ணிமாங்ங.

[உண்ணி + மாங்காய்.]

உண்ணியப்பம் *uṉṉi-y-appam*, பெ. (n.) ***சிறிய உருண்டை வடிவான இனிப்புப் பணிகார வகை;*** small, round, sweet cake. (செ.அக.).

ம. உண்ணியப்பம்.

[உண்ணி + அப்பம் = உண்ணியப்பம். உள் = உள்ளே, கீழே, தாழ இருத்தல், சிறிதாய் இருத்தல். உள் → உள்ளி → உண்ணி = சிறுவன், சிறியது. ஒ.நோ; ம. உண்ணி = சிறுவன்.]

உண்ணீடம் *unnīdam,* பெ. (n.) 1. ***தலைப்பாகை;*** turban. 2. ***மணிமுடி;*** crown. (செ.அக.).

[உள் + நீடு + அம் = உண்ணீடம் = உட்கூம்பு வடிவாக அமைந்த தலைப்பாகை அல்லது மணிமுடி.]

உண்ணீர் *unnīr,* பெ. (n.) ***குடிக்கும் நீர்;*** drinking water. "சிற்றூற லுண்ணீரு மாகி விடும்" (வாக்குண். 12.). (செ.அக.).

[உண்ணு + நீர் = உண்ணீர்.]

உண்ணீரம் *unnīram,* பெ. (n.) ***உள்ளீரம்;*** internal moisture.

[உள் + ஈரம் = உள்ளீரம் → உண்ணீரம்.]

உண்ணுகை *unnugai,* தொ.பெ. (vbl.n.) 1. ***துய்த்தல்;*** enjoying. 2. ***உண்டல்;*** eating, swallowing. (ஆ.அக.).

[உண் → உண்ணு → உண்ணுகை.]

உண்ணோக்கல் *unnōkkal,* பெ. (n.) ***எண்ணத்தை ஒருமுகப்படுத்தல்;*** meditation. (செ.அக.).

[உள் + நோக்குதல் = உண்ணோக்குதல் → உண்ணோக்கல்.]

உண்பலி *unbali,* பெ. (n.) ***பிச்சை;*** alms of food. "உடைதலையி லுண்பலிதே ரம்பலவன்" (திருவாச. 10,2.). (செ.அக.).

[உண் + பலி.]

புலால் தவிர்த்துத் தவமேற்கொண்ட துறவியர்க்குப் பழம் தருதல், வடபுல மொழிகளில் பலம் தருதல் பலி தருதலாயிற்று. கடவுளுக்கு இடும் படையலும் பலியாயிற்று.

உண்மட்டைநார் *un-mattai-nār,* பெ. (n.) ***பனை மட்டையின் உட்பக்கத்து நார்*** (யாழ்ப்); fibre of the inner side of the palmyra leaf stem. (செ.அக.).

[உள் + மட்டை + நார் = உண்மட்டைநார்.]

உண்மடை *unmadai,* பெ. (n.) 1. ***அடிமதகுத் திறப்பு;*** lower opening of a sluice in a water course. 2. ***கோயிற்குள்ளிடும் படைப்பு;*** offerings of fruits, betel, cooked rice and pastries presented to village deities. 3. ***உள்வாய்க்கால்*** (ஆ.அக.). inside the temples, opp. to புறமடை. (செ.அக.).

[உள் + மடை = உண்மடை.]

உண்மலம் *un-malam,* பெ. (n.) ***மனமாசு*** (பிங்.); mental impurity. ஆணவம், கன்மம், மாயை. (செ.அக.).

[உள் + மலம் = உண்மலம்.]

உண்மாசு *un-māsu,* பெ. (n.) ***உண்மலம்*** பார்க்க; see *unmalam* "உண்மாசு கழுவுவது நீறு" (திருவிளை. விருத் தகு. 16.). (செ.அக.).

[உள் + மாசு = உண்மாசு.]

உண்மிடறு *un-midaru,* பெ. (n.) ***உட்கண்டம்*** (பிங்.); inner throat, larynx. (செ.அக.).

[உள் + மிடறு = உண்மிடறு.]

உண்முகம் *un-mugam,* பெ. (n.) ***மனத்தால் உட்புறம் நோக்கும் நோக்கம்;*** looking inward. "கான நீரிற்கண் டுண்முக மடைவார்" (மகராஜாதுறவு, 102.). (செ.அக.).

[உள் + முகம் = உண்முகம்.]

உண்முடிச்சு *un-mudiccu,* பெ. (n.) ***உள்ளாகச் செய்யும் வஞ்சம்;*** a deep - seated knot said of a treacherous design to inveigle another (W.).

[உள் + முடிச்சு = உண்முடிச்சு.]

உண்மூக்கு *un-mūkku,* பெ. (n.) ***மூக்கின் உட்புறத்தின் மேற்பாகம்*** (யாழ்.அக.); top of the nostril. (செ.அக.).

[உள் + மூக்கு = உண்மூக்கு.]

உண்மூலம் *un-mūlam,* பெ. (n.) ***உட்பக்கமாக உண்டாகும் மூலநோய்;*** internal piles. (செ.அக.).

[உள் + மூலம் = உண்மூலம்.]

உண்மை[1] *unmai,* பெ. (n.) 1. ***உள்ளது;*** existence, reality, opp. to இன்மை. "உண்மையுமாய் இன்மையுமாய்" (திருவாச. 38.8.). 2. ***உளதாகை;*** state of being. "கூற்றுண்மையான்" (நாலடி. 20.). 3. ***உள்ள தன்மை;*** nature, intrinsic quality, essence. 4. ***மெய்ம்மை*** (திவா.); sincerity, honesty, probity, veracity, truth. 5. ***ஊழ்.*** (குறள். 38. அதி. அவ.); destiny, inevitability of the issue of one's actions. 6. ***பொருள்களின் இயற்கைக் குணத்தைச் சுட்டிச் சொல்லுதல்;*** (சி.சி. அளவை, 1.) (Log.). statement regarding natural objects, that such an object has such an attribute as 'fire burns'. (செ.அக.).

ம. உண்ம; **க.** ஒள்பு; **தெ.** உணிக; **கோத.** ஒட்.

[உள் → உண்மை.]

'உள்ளதாயிருக்கும் தன்மை, உள்ளத்தொடு பொருந்தியது என்னும் பொருள் மொழிநூற்கு ஒவ்வாது. வாய்மை = வாய்ப்பது, நிறைவேறுவது. மெய்ம்மை = உடம்புபோல் உண்மையானது (substance, substantiality) உண்மை, வாய்மை, மெய்ம்மை என்னும் சொற்களின் முக்கரணத் தொடர்பு, தன்னேர்ச்சியான (accidental) போலியே. (வே.க. 42.).

உண்மை[2] *unmai,* பெ. (n.) ***ஆதன்*** (ஆன்மா) (சி.சி.பர. ஆசீவக. 8.); individual soul. (செ.அக.).

[உள் + மை = உண்மை.]

உண்மைஏய்ப்பு *unmai-ēyppu,* பெ. (n.) ***நம்பிக்கை ஏமாற்றம்; இரண்டகம்*** (துரோகம்); flagrant breach of trust.

[உண்மை + ஏய்ப்பு.]

உண்மைத்தாழ்ச்சி *unmai-t-tālcci,* பெ. (n.) ***உண்மைக் குறைவு*** (சங்.அக.); lack of truthfulness. (செ.அக.).

[உண்மை + தாழ்ச்சி.]

உண்மைநெறிவிளக்கம் *unmai-neri-vilakkam,* பெ. (n.) ***உமாபதி சிவாச்சாரியாரியற்றிய சிவ நூல்;*** treatise on the Šaiva Šiddhānta Philosophy by Umāpati-Sivāccāriyār one of 14 Meykanda - Cāttiram. (செ.அக.).

[உண்மை + நெறி + விளக்கம்.]

உண்மைப்படு-தல் *unmai-p-padu-,* 20. செ.கு.வி. (v.i.) ***உறுதிப்படுதல்;*** to become evident to the mind to appear as certainty as the deity to His worshippers; to prove true, as religion. (செ.அக.).

[உண்மை + படு.]

உண்மைப்படுத்து-தல் *unmai-p-paduttu-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***மெய்ப்பித்தல்;*** to prove or demonstrate to be true. (செ.அக.).

[உண்மை + படுத்து.]

உண்மைப்பிடி *unmai-p-pidi,* பெ. (n.) ***உறுதியான சமயப்பற்று*** (வின்.); unfaltering adherence to religious truth, consistent and steady perseverance in religion (W.). (செ.அக.).

[உண்மை + பிடி.]

உண்மைப்பொருள் *unmai-p-porul,* பெ. (n.) 1. ***கடவுள்;*** God, as the only Reality. 2. ***சரியான பொருள்;*** true meaning. 3. ***மறுக்கலாகாத உண்மைச் செய்தி;*** unquestionable or axiomatic truth. "ஞானத் திரளாய் நின்ற பெருமான் நல்லடியார் மேல், ஊனத் திரளை நீக்குமது வும் உண்மைப் பொருள்" (தேவா. 1026, 3.). 4. ***உள்ள பொருள்;*** existing material. 5. ***உவமப் பொருள்;*** that which is compared, subject of comparison. (செ.அக.).

[உண்மை + பொருள்.]

உண்மையதிகாரம் *unmai-y-adigāram,* பெ. (n.) ***சிவஞானபோத முதலிய நூல்களில் இறைவனுடைய வடிவிலக்கணமெனப்படும் சிறப்பியல்பைக் கூறும் பகுதி;*** portion in Saivaite sacred works describing the characteristics of the Lord's personality. (ஆ.அக.).

[உண்மை + அதிகாரம்.]

உண்மையளவை *unmai-y-alavai,* பெ. (n.) ***மெய்ம்மையினால் அளவைப்படுத்தல்;*** measure of truth.

[உண்மை + அளவை.]

உண்மையறிவு *unmai-y-arivu,* பெ. (n.) 1. ***மெய்யறிவு;*** knowledge of the truth. 2. ***மெய்யான அறிவு;*** true knowledge. 3. ***ஊழாலுளதாகிய அறிவு;*** knowledge acquired as a result of the inevitable consequence of past karma, as dist. from that acquired by learning. "உண்மையறிவே மிகும்" (குறள். 373.). (செ.அக.).

[உண்மை + அறிவு.]

உண்மையுத்தரம் *unmai-y-uttaram,* பெ. (n.) ***வழக்காளி கூறும் உண்மை மொழிகளை எதிர்வழக்காளி யொப்புக் கொண்டு கூறும் விடை*** (சுக்கிரநீதி. 270.); answer of the defendant admitting the truth of the plaint. (செ.அக.).

[உண்மை + உத்தரம்.]

உண்மைவழக்கு *unmai-valakku,* பெ. (n.) ***உள்வழக்கு*** பார்க்க (மணிமே. 30.194.); see *ulvalakku.* (செ.அக.).

[உண்மை + வழக்கு.]

உண்மைவிளக்கம் *unmai-vilakkam,* பெ. (n.) ***மனவாசகங் கடந்தாரியற்றிய சைவநூல்;*** text-book of the Šaiva Šiddhanta Philosophy by Mana-Vācakan-Kadandār, one of 14 Meykanda Cāttiram. (செ.அக.).

[உண்மை + விளக்கம்.]

உண *una,* பெ. (n.) ***உணவு*** (சிலப். 2,28, உரை.); food. (செ.அக.).

[உள் → உண் → உணா → உண (கொ.வ.).]

உணக்கம் *unakkam,* பெ. (n.) 1. ***உலர்ந்த தன்மை;*** withering, drooping, dejection (W.). 2. ***வாட்டம்;*** slackness, languidness, inactivity. (செ.அக.).

ம. உணக்கம்; **து.** ஒணகெலு; **க.** ஒணகிலு.

[உணங்கு → உணக்கு → உணக்கம்.]

உணக்கு[1]-தல் *unakku-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***உலர்த்துதல்;*** to cause to dry, to dry in the sun. "தொடிப் புழுதி கஃசா வுணக்கின்" (குறள். 1037.). 2. ***கெடுத்தல்;*** to injure, ruin. "உணக்கினான்... என் வாழ்க்கை" (விநாயகபு. 80,120.). 3. ***வருத்து;*** torment, give trouble. (செ.அக.).

ம. உணக்குக; **க.** ஒணத்த; **கோத.** ஒண்க்; **துட.** விண்க்; **குட.** ஒணக்; **து.** உணங்கு; **பட.** ஒணக்கு.

[உணங்கு → உணக்கு (பி.வி.) → உணக்குதல்.]

உணக்கு[2] *unakku,* பெ. (n.) ***உணக்கம்*** பார்க்க; see *unakkam.* "உணக்கலாததோர் வித்து" (திருவாச. 30,1.). (செ.அக.).

[உணங்கு → உணக்கு.]

உணக்குப்பொருள் *unakku-p-porul,* பெ. (n.) ***காய்கறிகளின் வற்றல்*** (நாமதீப.); dried vegetables. (செ.அக.).

[உணக்கு + பொருள்.]

உணங்கல் *unangal,* பெ. (n.) 1. ***உலர்த்திய கூலம்;*** dried grain. "உணங்கல் கெடக்கழுதை யுதடாட்டங்கண்டென் பயன்" (திவ். திருவாய். 4,6,7.). 2. ***வற்றல்;*** dried food material. "வெள்ளென் புணங்கலும்" (மணிமே. 16,67). 3. ***உணவு;*** cooked food. "ஒடு கையேந்தி.. உணங்கல் கவர்வார்" (தேவா. 1030, 3.). 4. ***உலர்ந்த பூ*** (பிங்.); withered flower. 5. ***வற்றலிறைச்சி;*** dried meat. 6. ***ஒசிதல்;*** suffer. 7. ***துயருறல்;*** feel sorry. (ஆ.அக.).

ம. உணங்ஙல்; **க., பட.** ஒணகலு; **து.** ஒணகெலு.

[உணங்கு → உணங்கல்.]

உணங்கு-தல் *unaṅgu-,* செ.கு.வி. (v.i.) 1. ***உலர்தல்;*** to dry, as grain, vegetables or fish. ''தினைவிளைத்தார் முற்றந் தினையுணங்கும்'' (தமிழ்நா. 154.). 2. ***மெலிதல்;*** to become gaunt, as the body by fasting. ''ஊடலுணங்க விடுவாரோடு'' (குறள். 1310.). 3. ***வாடுதல்;*** to be dejected in mind, to languish. ''வணங்கிய சிந்தையீர்'' (கந்தபு. மோன. 21.). 4. ***சுருங்குதல்;*** to shrink, shrivel. ''உணங்கரும் புகழ்'' (காஞ்சிப்பு. நாட்டுப்.1.). 5. ***செயலறுதல்;*** to pine away, droop, become listless. ''உணங்கிடுங் கரண மென்னில்'' (சி.சி. 4,7.).

ம. உணங்ஙுக; க. ஒணகு; கோத. ஒண்க்; துட. விங்க், விண்க்; குட. ஒணங்க்; து. ஒணகட்டு (உலர்ந்தது).

[உண் → உணங்கு → உணங்கு-தல்.]

உணத்தல் *uṇattal,* பெ. (n.) ***உணத்து-தல்*** பார்க்க; see *uṇattu-.* (ஆ.அக.).

உணத்து-தல் *uṇattu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***காயவிடுதல்;*** to cause to dry. நெல்லை யுணத்தினான் 2. ***வற்றுவித்தல்;*** to emaciate as the body; to attenuate. ''மெய்யுணத்தலும்'' (தைலவ. தைல. 110). (செ.அக.).

[உண → உணத்து → உணத்து-தல்.]

உணப்பாடு *uṇappāḍu,* பெ. (n.) ***உண்ணப்படுகை*** (நன்.274. மயிலை); edibility, state of being eaten or consumed. (செ.அக.).

[உண்ண + படு - உண்ணப்படு → உணப்பாடு. படு → பாடு (மு.தி.தொ.பெ.).]

உணர்[1]-தல் *uṇar-,* 2. செ.குன்றாவி. (v.t.) 1. ***அறிதல்;*** to be conscious of; to know, make out, understand. ''முன்ன முகத்தினுணர்ந்து'' (புறநா. 3,25.). 2. ***கருதுதல்*** (திவா.); to think, reflect, consider, contemplate. 3. ***ஆராய்தல்;*** to examine, test, oberve, scrutinize. ''உற்று நாறியுங் கண்டு முணர்ந்து'' (சீவக. 885.). 4. ***நுகர்தல்;*** to experience, as a sensation. ''ஐந்தினையு மொன்றொன் றாப் பார்த்துணர்வது'' (சி.போ. 11,1,1.). 5. ***நினைத்தல்;*** to realize, conceive, imagine. ''அண்டனை யான் மாவி லாய்ந்துணர'' (சி.போ. 9,2,3). 6. ***உள்ளம் நெகிழ்தல்;*** to feel. 7. ***பகுத்தறிதல்*** (ஆ.அக.); to rationalize. 8. ***உணர்ந்தறிதல்*** (ஆ.அக.); to known by sense or perception (செ.அக.).

ம. உணருக; க. ஒணர்.

[உள் → உள்ளார் → உளர் → உணர் (உள்ளத்தால் அறிதல்).]

உணர்[2]-தல் *uṇar-,* 2 செ.குன்றாவி. (v.i.) 1. ***துயிலெழுதல்;*** to wake from sleep. ''மன்னநீ யுணர்தி யென்னா'' (கம்பரா. கும்ப.44.). 2. ***அயர்வு நீங்குதல்;*** to get back to consciousness, recover from languor. 3. ***பிரிதல்*** (பிங்.); to separate. 4. ***ஊடல் நீங்குதல்;*** to become reconciled as a husband to his wife: to be reunited after a love quarrel. ''ஊடலுணர்தல்'' (குறள், 1109.). (செ.அக.).

[உள் → உளர் → உணர். உளர் = முன்னுறல், அசைதல், எழுதல், விலகல்.]

உணர்ச்சி *uṇarcci,* பெ. (n.) 1. ***உணர்கை;*** consciousness, perception, understanding, knowledge, feeling. 2. ***மனம்;*** mind. ''சிறியாருணர்ச்சி யுளில்லை'' (குறள். 976.). (செ.அக.).

ம. உணர்ச்சி.

*[உணர் → உணர்ச்சி. **உணர்த்தி** பார்க்க; see uṇarttі.]*

உணர்த்தி[1] *uṇartti,* பெ. (n.) 1. ***உணர்தல்;*** feeling. 2. ***அறிதல்;*** knowing.

[உணர் → உணர்த்தி.]

உணர்த்தி[2] *uṇartti,* பெ. (n.) ***நினைவு;*** recollection, remembrance. ''மறந்தமையை ஸ்மரிப்பியுங்கோள்; உணர்த்தியற்றாரை யுணர்த்த வேணுமே'' (ஈடு. 6,1,4.).

[உணர்த்து → உணர்த்தி.]

உணர்த்தி[3] *uṇartti,* பெ. (n.) ***சுவை;*** taste. தேங்கூழ் உணர்த்தியாய் இருந்தது (இ.வ.). ஒணத்தியா தின்கிறியே (கொ.வ.).

[உணர் → உணர்த்தி. உணர்த்தி என்னும் தென்சொல் வடபுல மொழிகளில் உணர்த்தி → ருத்தி → ருச்சி → ருசி எனத் திரிந்தது.]

உணர்த்தியறு-தல் *uṇarttiyaṟu-,* 4. செ.கு.வி. (v.i.) ***மெய்ம்மறத்தல்;*** to swoon; to lose consciousness. ''ஸ்வதஸ்ஸர் வஜ்ஞமான வஸ்துவும் உணர்த்தியறும் படி யாய்த்துப் படுக்கை வாய்ப்பு'' (ஈடு. 10,2,8. வ்யா. பக்.60.). (செ.அக.).

[உணர் → உணர்த்தி + அறு-தல்.]

உணர்த்து-தல் *uṇarttu-,* 15. செ.கு.வி. (v.i.) 1. ***அறிவித்தல்;*** to teach, instruct, cause to feel or understand, enlighten, convince. ''உடல நைந்தொருத்தி யுருகுமென் றுணர்த்துமினே'' (திவ். திருவாய். 6,1,4). 2. ***துயிலெழுப்புதல்;*** to wake from sleep. ''ஏனல் காப்போ ருணர்த்திய கூஉம்'' (புறநா. 28.). 3. ***ஊடல் தீர்த்தல்;*** to pacify, as the husband his wife. ''உணர்த்தல் வேண்டிய கிழவோன்'' (தொல். பொருள். 150). 4. ***நினைப்பூட்டுதல்;*** to put in mind, remind, recall to mind. ''உணர்த்த லூட லுணர்ந்து'' (திவ். திருவாய். 6,1,5). 5. ***பெரியோர் அறியுமாறு செய்தல்;*** to inform a superior, to submit.

ம. உணர்த்து; க. உன்னிசு.

[உணர் → உணர்த்து.]

உணர்ந்ததையுணர்-தல் *uṇarndadai-y-uṇar-,* 2. செ.குன்றாவி. (v.t.) ***ஓரளவை, அது முன் குறித்துவந் துற்ற காலத்து நெருப்பு மருந்தென்றறிந்தான் பின்பும் அது மருந்தெனவுள்ளங் கோடல்;*** to remember the previous remedy for something in a new tangle. (ஆ.அக.).

[உணர் → உணர்ந்தது + ஐ + உணர்.]

உணர்ந்தோர் *unarndōr,* பெ. (n.) ***அறிவுடையோர்;*** wise, learned men.

[உணர் → உணர்ந்தோர்.]

உணர்ப்பு *unarppu,* பெ. (n.) 1. ***தெளிவிக்கப்படுகை;*** regaining clarity of mind. "உணர்ப்புவயின் வாரா ஊட லுற்றோள்" (தொல். பொருள். 150). 2. ***கல்வி;*** education. (செ.அக.).

தெ. நேர்ப்பு; ம. உணர்ப்பு.

[உணர் → உணர்ப்பு = மனத்தெளிவு. எப்பொருளைப் பற்றியும் தெளிவான விளக்கம் தரும் எழுத்தறிவான கல்வியும் தெலுங் கில் நேர்ப்பு எனப்படுகிறது. உணர்ப்பு → தெ. நேர்ப்பு.]

உணர்வு *unarvu,* பெ. (n.) 1. ***அறிவு*** (திவா.); consciousness, sense-perception. 2. ***தெளிவு*** (திவா.); clear discernment. 3. ***துயில் நீங்குகை;*** waking from sleep. 4. ***ஊடல் தீர்கை*** (சூடா.); reconciliation after a love quarrel. 5. ***ஒழிவு*** (பிங்.); separation, cessation. 6. ***ஆதன்;*** soul. 'ஒருவனையே நோக்குமுணர்வு" (திவ். இயற். 1,67). (செ.அக.).

ம. உணர்வு.

[உணர் → உணர்வு.]

உணர்வுக்கேடு *unarvu-k-kēdu,* பெ. (n.) 1. ***அறிவுக் கேடு;*** loss of wisdom. 2. ***கேடு;*** loss of perception.

[உணர்வு + கேடு. கெடு → கேடு (மு.தி.தொ.பெ).]

உணர்வெழுத்து *unarveluttu,* பெ. (n.) ***குறியினா லுணரப்படும் ஒருவகையெழுத்து*** (யாப். வி. 535); symbolic letter. (செ.அக.).

[உணர்வு + எழுத்து.]

உணர்வோர் *unarvōr,* பெ. (n.) ***உணர்ந்தோர்*** பார்க்க; see *unarndōr.* (ஆ.அக.).

[உணர்வு + (ஆர்) ஓர் → உணர்வோர்.]

உணராமை *unarāmai,* பெ. (n.) 1. ***அறியாமை;*** ignorance, lack of knowledge. 2. ***உள்ளம் நெகிழாமை;*** lack of feeling, unmindfulness. 3. *மயக்கம்;* intoxication, infatuation, bewilderment. (செ.அக.).

[உணர் + ஆ (எ.ம.இ.) + மை.]

உணரார் *unarār,* பெ. (n.) ***அறிவை இயைத்துப் பாராதார்;*** the ignorant, the foolish, the uninformed folk. "உணரார் புரமூன்றெரிய" (தேவா. 508,2). (செ.அக.).

[உணர் + ஆ + ஆர். ஆ (எ.ம.இ.) தொக்கது.]

உணவின்பிண்டம் *unavinpindam,* பெ. (n.) ***உடம்பு;*** body.

[உணவு + இன் + பிண்டம்.]

உணவு *unavu,* பெ. (n.) 1. ***உண்ணப்படுவன; உட கொள்ளப்படுவன;*** food, sustenance, eatables. "உண வெனப் படுவது நிலத்தொடு நீரே" (புறநா. 18). 2. ***சோறு*** (பிங்.); boiled rice. 3. ***உணவுப்பொருள்;*** food-stuffs. "எண்வகை யுணவு" (தொல்.பொருள். 633). 4. ***மழை*** (அக.நி.); rain. (செ.அக.).

[உள் → உண் → உண → உணவு. உண் + அ + உ = உணவு. அகரம் வினைத்தொகையைப் பெயரெச்சமாக்க வந்தது. உண் ணும் தொழிலுறுதற்குகந்த உண்பொருளைக் குறிக்க வந்த முன்மைச் சுட்டாகிய உகரம் ஈறாயிற்று. உண்ணக்கூடியது எனப் பொருள் படுதலான், இதனை முதனிலை வினையா லணையும் பெயர் எனலாம்.]

உணா *unā,* பெ. (n.) 1. ***உணவு;*** food, sustenance. "இந்நான் கல்லது உணாவு மில்லை". (புறநா. 335). 2. ***சோறு*** (சூடா.); boiled rice.

ம. உணா (படையல்).

[உண் → உணவு → உணா.]

உணாப்பொருத்தம் *unā-p-poruttam,* பெ. (n.) ***உண்டிப் பொருத்தம்*** பார்க்க (வெண்பாப். முதன்.7); see *undi-p-poruttam.*

[உண் → உணவு → உணா + பொருத்தம்.]

உணி *uni,* பெ. (n.) 1. ***நுகர்வது, நுகர்வர்;*** enjoyer. 2. ***நுகர்விப்பது என்னும் பொருள்பட நிற்கும் ஒருமைப் படர்க்கை இறுதி;*** third person singular or plural termination to denote getting someone enjoyed or experienced. 3. ***ஒருயிரி;*** animate being.

[உண் → உண்ணி → உணி.]

உணை[1]-தல் *unai-,* 2. செ.கு.வி. (v.i.) 1. ***உரைமெலி தல்;*** to emaciate, slacken. 2. ***உள்நைதல்;*** to be frayed, to be wornout, as cloth.

[உள் + நை - உணை. இக்கால் இச்சொல் உணைதல் → நொணைதல் → நொணத்தல் எனத் திரிந்தது.]

உணை[2] *unai,* பெ. (n.) ***மெலிவு*** (யாழ்.அக.); emaciation, weakening.

[உள் + நை - உணை.]

உணைவு *unaivu,* பெ. (n.) ***உணைதல்;*** fraying.

[உள் + நைவு - உணைவு.]

உத்தண்டம் *uttandam,* பெ. (n.) 1. ***கொடுமை;*** fierceness, relentlessness, barbarity. 2. ***இறுமாப்பு;*** imperiousness, haughtiness. அவன் உத்தண்டமாகப் பேசுகி றான். (உ.வ.). (செ.அக.).

[உத்து → உத்தண்டம்.]

உத்தண்டமணி *uttanda-mani,* பெ. (n.) ***பொன் மணி களாலான மாதர் கழுத்தணி வகை*** (வின்.); woman's necklace make of gold beads (W.). (செ.அக.).

தெ. உத்தண்டமு; க. உத்தண்ட.

[உத்து → உத்தண்டம் + மணி.]

உத்தண்டமாலை *uttanda-mālai,* பெ. (n.) ***பொன் மணிகளாலான மாதர் கழுத்தணி வகை;*** woman's necklace made of gold beads. "உத்தண்ட மாலையைக்

காதோலையைப் பொன் மோதிரத்தை வைத்தென் றாலுங் கடுகு வாங்கித்தா'' (விறலி.விடு. 258). (செ.அக.).

க. உத்தண்ட, உத்தண்டாலெ; தெ. உத்தண்டமு.

[உத்து → உத்தண்டம் + மாலை.]

உத்தண்டன் *uttaṇḍaṉ*, பெ. (n.) 1. ***கொடியவன்;*** fierce, cruel person. ''தண்டனை செய்யும் உத்தண்டனை'' (தனிப்பா. 1,224,14). 2. ***இறுமாப்புள்ளவன்;*** haughty, conceited person. (செ.அக.).

[உத்து → உத்தண்டன்.]

உத்தண்டால் *uttaṇḍāl*, பெ. (n.) ***உத்தண்டமணி*** பார்க்க; see *uttaṇḍamaṇi*. (செ.அக.).

[உத்து → உத்தண்டம் → உத்தண்டால்.]

உத்தம்[1] *uttam*, பெ. (n.) ***உத்தமபலம்*** பார்க்க (மூ.அ.); see *uttamabalam*. (செ.அக.)

உத்தம்[2] *uttam*, பெ. (n.) ***கொட்டை முந்திரி;*** cashew nut. (ஆ.அக.).

[உத்து → உத்தம்.]

உத்தம்[3] *uttam*, பெ. (n.) ***பித்தேறுகை*** (அக.நி.); becoming mad or maddened. (செ.அக.).

[உத்து → உத்தம்.]

உத்தம்[4] *uttam*, பெ. (n.) ***போர்க்களம்;*** battle-field.

[உத்து → உத்தம்.]

உத்தம்பகம் *uttampagam*, பெ. (n.) ***வளர்ச்சி;*** augmenting, raising. ''அது பழைய அபிநிவேசத்திற்கு உத்தம்பகமாய் '' (திவ். இயற். திருநெடுந். 1. வ்யா.). (செ.அக.).

[உத்து → உத்தம் → உத்தம்பகம்.]

உத்தம்பரி *uttambari*, பெ. (n.) ***கொத்துமலி*** பார்க்க (மூ.அ.); coriander. (செ.அக.).

[உத்து → உத்தம் → உத்தம்பரி.]

உத்தம்பி-த்தல் *uttambi-*, 4. செ.கு.வி. (v.i.) ***வளர்தல்*** (ரஹஸ்ய. 94); to augment, develope. (செ.அக.).

[உ → உத்து → உத்தமம் → உத்தம்பி.]

உத்தமம் *uttamam*, பெ. (n.) 1. ***எவற்றுள்ளும் சிறந்தது;*** that which is pre-eminent. ''உத்தம குணத்தார்க்கு'' (தணிகைப்பு. அகத். 159). 2. ***நன்மை*** (பிங்.); excellence; nobility; goodness. (செ.அக.). 3. ***அரத்தை*** (சங்.அக.) galangal.

ம. உத்தமம்; க. உத்தம; *Skt. uttama.*

[உ → உத்து → உத்தம் → உத்தமம். உத்து = உயர்வு. உத்தமம் = உயர்வானது.]

உத்தமன் *uttamaṉ*, பெ. (n.) ***சான்றோன்*** பார்க்க; see *sāṉṟōṉ*. ''உத்தம னித்த அடியார் மனமே நினைந்துருகி'' (திருவாச. 5,3). (செ.அக.).

ம. உத்தமன்.

[உத்து = உயர்வு. உத்து → உத்தம் → உத்தமன்.]

உத்தமாகாணி *uttamāgāṇi*, பெ. (n.) ***வேலிப்பருத்தி;*** hedge-twiner. (W.). (செ.அக.).

ம. உத்தமாரணி; *Skt. uttamarani.*

[உத்தமன் + காணி]

உத்தமி *uttami*, பெ. (n.) 1. ***மிக உயர்ந்த பெண்;*** excellent woman. ''போதுமென் றுத்தமி யெழலும்'' (தணிகைப்பு. வள்ளி. 63.). 2. ***கற்புடையவள்;*** chaste woman.

[உத்து = உயர்வு. உத்து → உத்தம் → உத்தமி.]

உத்தர *uttara*, பெ. (adj.) ***மேலான;*** upper. (சா.அக.).

ம., க. உத்தர; *Skt. uttara.*

[உத்து = உயர்வு. உத்து → உத்தர.]

உத்தரக்கணம் *uttara-k-kaṇam*, பெ. (n.) ***அடுத்த நிமயம்;*** next moment. (செ.அக.).

[உத்தரம் + கணம்.]

உத்தரக்கற்கவி *uttara-k-kaṟ-kavi*, பெ. (n.) ***கதவு நிலைக்கு மேற் சித்திரம் வகுக்கப்பட்ட உத்திரம்*** (நெடுநல். 82. உரை.); ornamented entablature of stone forming part of the lintel in a building. (செ.அக.).

[உத்தரம் + கல் + கவி.]

உத்தரகாண்டம் *uttarakāṇḍam*, பெ. (n.) ***இராமாயணத்தின் இறுதிக்காண்டம்;*** seventh book of the Rāmāyaṇa, so called because it relates events after the coronation of Rāma; prob, also because it is a later work that has been appended to Vālmīki's Rāmāyana. (செ.அக.).

Skt. uttara kaṇda.

[உத்தரம் + காண்டம்.]

உத்தரகாலம் *uttara-kālam*, பெ. (n.) 1. ***எதிர்காலம்;*** future time. 2. ***ஒரு வெள்ளுவா*** (பௌர்ணமி) ***வுக்கும் அடுத்த வெள்ளுவாவுக்கும் இடைப்பட்ட காலம்;*** the time reckoned from full-moon to full-moon (சேரநா.). (செ.அக.).

ம. உத்தரகாலம்.

[உத்தரம் + காலம்.]

உத்தரம் *uttaram*, பெ. (n.) 1. ***மறுமொழி;*** answer, reply, rejoinder. ''வத்தவர் பெருமகனுத்தர நாடி'' (பெருங். மகத. 10, 55). 2. ***எதிராடல்;*** written statement filed by the defendant in a case. 3. ***பின் நிகழ்வது;*** that which follows; that which comes later. 4. ***மேற்பட்டது;*** that which is superior. ''அதுக்குத் தரமில்லதை'' (உத்த ரரா. திருவோலக். 4). 5. ***தலைக்கு மேலுள்ள முகட்டு விட்டம்*** (நெடுநல்; 82, உரை); beam, or cross-beam in a building. 6. ***வடகதிர் வழி*** (விதான. குணா. 74); period of the sun's progress towards the north. 7. ***குமரிமலை முழுகியபின் உயர்ந்த வடக்குத்திசை*** (திவா.); north. 8. ***வடவனல்*** (பிங்.); submarine fire. 9. ***12ஆவது விண்மீன், மானேறு;*** 12th nakṣatra, part of Ciṅka-rāci and Kaṉṉi-rāci containing Denebola or *Leonis*. (செ.அக.).

ம. உத்தரம்; *Skt.* uttara.

[உ + தரம் - உத்தரம். தட → தடம் → தரம்.]

உ - உயர்வுக் கருத்து முன்மைச் சுட்டு. தடம், தடவை என்பன முறை எனப் பொருள் படுதலான தடம் → தரம் எனத் திரிந்த திரிபுச் சொல்லும் அதே பொருள் சுட்டியது. தட → தடம் → தரம் = வளைவு. சுற்றிச் சுற்றி வரும் முறைமை, ஒரு சீரான இயங்கு நிலைமை அல்லது இருப்பு நிலைமை. தன்மை, இயல்பு, ஒழுங்கு, பெருமை, அருமை, தரம் = அகலம், அகன்ற பக்கம், பகுதி என்னும் பொருளிலும் இருவேறு பொருட்பாடு களில் புடைவிரிந்து வழங்கும். இங்கு, உ + தரம் - உத்தரம் = உயர்ந்த பக்கம், உயரத்திலுள்ள நிலம், எனப் பொருள்பட்டது. "uttara", northern because the northern part of India is higher என்று Monier Williams அகரமுதலியும் கூறுதல் காண்க.

[உ = உயர்ந்த. தரம் = நிலைமை. உ + தரம் = உத்தரம்.]

வடமொழியாளர் உத் + தர என்று பகுத்து, தர என்பதை உறழ்தர (comp. degree.) ஈறாகக் காட்டுவர். அங்ஙனங் காட்டினும், உத் என்பது உயர்வு குறித்த தமிழுகரச் சுட்டி னின்று தோன்றியதே. மேலும் உத்தர தேசம், உத்தரமடங்கல், உத்தர மதுரை முதலிய சொற்களில், உறழ்தரக் கருத்தின்மை யையும் நோக்குக. "உப்பாலுயர்ந்த உலகம் புகும்." (நான் மணி. 27). "உப்பக்கம் நோக்கி யுபகேசி தோண்மணந்தான்" (திருவள்ளுவ மாலை, 21). இதில் உப்பக்கம் என்பதற்கு (உயர்ந்த) வட திசை என்று பொருளுரைப்பதே சாலச் சிறந்ததாம். (வ.மொ.வ. 92; வே.க. 32,37.).

உத்தரமடங்கல் *uttaramaḍaṅgal,* பெ. (n.) ***வடவைத்தீ*** (வடமுகாக்கினி) பார்க்க; see *Vaḍavai-t-tī* submarine fire. (செ.அக.).

[உத்தரம் + மடங்கல்.]

உத்தரமத்திமபூமி *uttara-mattima-būmi,* பெ. (n.) 1. ***வடகுளிர் வெப்பச் சமநிலம்*** (வின்.); north temperate zone. 2. ***வட வெப்பநிலம்*** பார்க்க; see *vaḍa-veppanilam.* (செ.அக.).

[உத்தரம் + மத்திமம் + பூமி (வட நடுநிலம்).]

உத்தரமதுரை *uttara-madurai,* பெ. (n.) ***கண்ணன் தோன்றிய வடமதுரை*** (திருவள்ளுவமாலை. 21.); Matura, the birth place of Krishṇa. (செ.அக.).

[உத்தரம் + மதுரை.]

உத்தரமந்திரி *uttara-mandiri,* பெ. (n.) ***முதன்மை அமைச்சர்;*** prime minister. "உத்தர மந்திரி பதமெய் தின" (I.M.P.Mr. 366.). (செ.அக.).

[உத்தரம் + மந்திரி.]

உத்தரமீன் *uttara-mīṉ,* பெ. (n.) ***வடமீன்*** பார்க்க; see *vaḍamīṉ.* "உத்தரமீனின் கொண்கன்" (சேதுபு. துத்தம. 6.). (செ.அக.).

[உத்தரம் + மீன்.]

உத்தரமீனோரை *uttara-mīṉ-ōrai,* பெ. (n.) ***கோள் மண்டல விண்மீன்களுக்கு வடபாலுள்ள விண்மீன் தொகுதி;*** (M.Navi. 109.); constellations to the north of the Zodiac.

[உத்தரம் + மீன் + ஓரை.]

உத்தரமும்மை *uttara-mummai,* பெ. (n.) ***மானேறு*** (உத்தரம்), ***கடைக்குளம்*** (உத்தராடம்), ***பிற்கொழுங் கால்*** (உத்தரட்டாதி) ***ஆகிய மூன்று விண்மீன்கள்;*** the three nakṣatras. Viz. Uttaram, Uttarāḍam, Uttaraṭṭādi.

[உத்தரம் + மும்மை.]

உத்தரமுனை *uttara-muṉai,* , பெ. (n.) ***வடமுனை,*** (வடதுருவம்); north pole.

[உத்தரம் + முனை.]

உத்தரவாணி *uttara-vāṇi,* பெ. (n.) ***கண்டங்கத்தரி*** (வை.மூ); a highly thorny plant with diffuse branches. (செ.அக.)

[ஒருகா. உத்தரம் + ஆணி. மேற்பகுதியில் ஆணிபோன்ற முள் உள்ளது.]

உத்தரவு *uttaravu,* பெ. (n.) 1. ***கட்டளை;*** order, command. 2. ***அனுமதி;*** grant, leave, permission. 3. ***தெய்வ ஒப்புதல்;*** divine permission such as that suggested in dreams or revealed by inspiration. 4. ***விடை; மறுமொழி;*** answer, reply. 5. ***வேண்டுகோட்குப் பின் தரும் விடையோலை;*** reply.

ம., தெ. உத்தரவு.

[உ + தரம் = உத்தரம் → உத்தரவு.]

உகரம் முன்மையும் உயர்ச்சியும் குறித்த சுட்டு. உத்தரம் என்பது மேலோர் உயர்ந்தோர் பதவிநிலை சுட்டியது. மேலிடத்திலிருந்து விடப்படும் கட்டளை, உத்தரவு. கீழ்த்தரத்திலுள் ளவர்களின் வேண்டுகோளை ஏற்று ஆணையிடப்படும் விடை யோலையும் உத்தரவு, மறுமொழி எனும் பொருளில் வழக் கூன்றியது.

உத்தரவுகொடு-த்தல் *uttaravu-koḍu-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***இசைவளித்தல்;*** to give permission. 2. ***கட்டளை கொடுத்தல்;*** to issue an order. 3. ***போகச் சொல்லுதல்;*** to send away, dismiss. (செ.அக.).

[உத்தரவு + கொடு.]

உத்தரவுச்சீட்டு *uttaravu-c-cīṭṭu,* பெ. (n.) 1. ***கடவுச்சீட்டு;*** passport, permit. 2. ***அதிகாரச் சான்றிதழ்;*** certificate of right, of authority. (செ.அக.).

உத்தராசங்கம் *uttarāsaṅgam,* , பெ. (n.) ***மேலாடை;*** upper garment, cloth worn loosely over the shoulders. "உத்தராசங்கம் வைத்தார்". (சீவக. 2457.). (செ.அக.).

[உத்தரம் + ஆசங்கம். < Skt. ā-saṅga]

உத்தாமணி *uttāmaṇi,* பெ. (n.) ***வேலிப் பருத்தி;*** hedge - twiner.

[ஒருகா. உத்து + ஆமணி.]



உத்தாமணி

உத்தி[1] *utti,* பெ. (n.) 1. ***அணிகலத்தொங்கல்*** (பிங்.); pendant of an ornament. 2. ***திருமகள் உருவம் பொறித்த தலையணி;*** head-ornament of women, with figure of Lakshmi, embossed upon it. ''தெய்வவுத்தியோடு'' (திரு முரு. 23.). (செ.அக.).

[உ → உத்து → உத்தி.]

உத்தி[2] *utti,* பெ. (n.) 1. ***பாம்பின் படப்பொறி;*** spots on the hood of the cobra. ''கேழ்கிளருத்தி யரவு'' (நற். 129). 2. ***தேமல்*** (திவா.); yellow or tawny spots on the skin, chiefly of women, considered as marks of beauty. (செ.அக.).

[உ → உத்து → உத்தி (மேல் தோன்றும் நிற அழகு.]

உத்தி[3] utti, பெ. (n.) 1. ***பேச்சு*** (பிங்.); words; speech. (செ.அக.).

[உ → உத்து. மேலெழுப்புதல், வெளியிடுதல், பேசுதல். உத்து → உத்தி.]

உத்தி[4] *utti,* பெ. (n.) 1. ***சேர்க்கை;*** union, mixture, combination. ''கந்த உத்தியினால்'' (மணிமே. 28,15.). 2. ***நூலுக்குச் சொல்லப்படும் 32 வகை உத்தி;*** (Gram.) literary devices employed by an author of a standard work who keeps in mind the rules of exegesis, 32 in number, viz., நுதலிப்புகுதல், ஒத்துமுறை வைப்பு, தொகுத்துச்சுட்டல், வகுத்துக் காட்டல், முடித்துக் காட் டல், முடிவிடங்கூறல், தானெடுத்து மொழிதல், பிறன் கோட்கூறல், சொற்பொருள் விரித்தல், தொடர்சொற் புணர்த்தல், இரட்டுற மொழிதல், ஏதுவின் முடித்தல், ஒப்பின் முடித்தல், மாட்டெறிந்தொழுகல், இறந்தது விலக்கல், எதிரது போற்றல், முன் மொழிந்து கோடல், பின்னது நிறுத்தல், விகற்பத்தின் முடித்தல், முடிந்தது முடித்தல், உரைத்துமென்றல், உரைத்தாமென்றல், ஒரு தலை துணிதல், எடுத்துக் காட்டல், எடுத்த மொழியின் எய்த வைத்தல், இன்னதல்ல திதுவென மொழிதல், எஞ்சிய சொல்லினெய்தக் கூறல், பிறநூன் முடிந்தது தானுடன் படுதல், தன் குறிவழக்கம் மிக வெடுத்துரைத் தல், சொல்லின் முடிவினப்பொருள் முடித்தல், ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல், உய்த்துணரவைப்பு. (நன். 14.). (செ.அக.).

ம. உத்து.

[உ → உத்து = சேர்த்துக் கட்டு, பொருத்து. மாடுகளைச் சேர்த்துக் கட்டும் கயிறு உத்தாணி எனப்படுதல் நோக்குக. புணர்ப்பு, பொருத்தம், பொருத்தமானதை அறியும் அகக்கரணம், நூற்கும் உரைக்கும் பொருந்தும் நெறிமுறை. ''உத்தி'' இதில் 'உத்' என்னும் செயற்கையடியை வடமொழியார் யுத் (இ.வே.) என்று திரிப்பர். விளையாட்டில் இவ்விருவராய்ச் சேர்ந்து வரும் சேர்க்கையைக் குறிக்கும் உத்தி என்னும் சொல்லும் இதுவே. தெ.உத்தி. கழித்தலை அல்லது தள்ளுதலைக் குறிக் கும் உத்து என்னும் சொல்லும் உகர அடியானதே. உ → உந்து. உந்துதல் = முன்தள்ளுதல், தள்ளுதல். உந்து → உத்து → உத்தி. ''பொன்னெல்லா முத்தியெறிந்து'' (கலித்.64). உ → யு (இ.வெ.). (வ.மொ.வ.92.93).]

உத்தி[5] *utti,* பெ. (n.) 1. ***விளையாட்டில் எதிர்ப்பக்கத்தில் ஒருவனுக்கு நிகரான துணைவன்;*** player on the opposite side, corresponding to one on one's own side in a game in which the players are divided into two parties. 2. ***விளையாட்டிற் கன்னை*** (கட்சி) ***பிரித்தற்கு ஈரிருவராய்ச் சேர்தல்*** (வே.க.44); to divide a team in doubles for play. என் உத்தி யார்? (உ.வ.). (செ.அக.).

தெ. உத்தி.

[உ → உத்து → உத்தி.]

உத்தி[6] *utti,* பெ. (n.) 1. ***கடல்*** (அக.நி.); sea. 2. ***நிகழ்நிலையாக அமைக்கப்பட்ட கண்ணிக் கால்;*** temporary irrigation channel. (Madr.) (செ.அக.).

[உ → உத்து → உத்தி. உத்து = மேலெழும்புதல். உத்தி = மேலெழும்பும் அலைகளைக் கொண்ட கடல்.]

உத்திக்கட்டு-தல் *utti-k-kattu-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***விளையாட்டிற் கன்னை*** (கட்சி) ***பிரித்தற்கு ஈரிரு வராய்ச் சேர்தல்;*** to divide a team in doubles for play. (வே.க.44).

[உத்தி + கட்டு.]

உத்திகை *uttigai,* பெ. (n.) ***உத்தி***[1] பார்க்க see *utti*[1]. (செ.அக.).

உத்திரம்[1] *uttiram,* பெ. (n.) 1. ***உத்தரம்***[4] பார்க்க; see *uttaram*[4] ''உத்திர நூல்களெல்லாம்'' (விநாயக.75.6). 2. ***உத்தரம்***[4] பார்க்க; see *uttaram*[4] ''செழுந்து கிருத்திரம் பரப்பி'' (பாரத. இராச.6). (செ.அக.).

ம. உத்திரம்.

[உள் + திரம் - உத்திரம். உத்தரம் → உத்திரம்.]

உத்திரம்[2] *uttiram,* பெ. (n.) 1. ***மஞ்சள்;*** turmeric. 2. ***மரமஞ்சள்;*** tree of turmeric. (செ.அக.).

[உருத்தரம் → உத்தரம் → உத்திரம்.]

உத்து[1]**-தல்** *uttu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***கழித்தல்;*** to discard, throw away. ''பொன்னெல்லா முத்தியெறிந்து'' (கலித்.64). 2. ***முன்தள்ளுதல்;*** to push. (செ.அக.).

[உந்து → உத்து - உத்து-தல்.]

உத்து[2] *uttu,* பெ. (n.) 1. ***உயரம்;*** height, elevation. 2. ***உயர்வு, பெருமை;*** elegance, excellence. 3. ***சிவந்தது, செம்பு;*** copper.

[உ → உத்து.]

உத்துங்கம் *uttungam,* பெ. (n.) 1. ***உயர்ச்சி;*** height, eminence, grandeur, loftiness. "உத்துங்க மிக்க வொரு வன் றவிசேறி" (கந்தபு. சிங்க. 475). 2. ***உயர்ந்தது;*** that which is superior, excellent. "உத்துங்க துங்க னுலா" (விக்கிரம. உலா.). (செ.அக.).

[உ + துங்கம். உ + உயர்வு, துங்கம் = வெண்மை, அழகு, சிறப்பு.]

உத்தும்பரம் *uttumbaram,* பெ. (n.) ***செம்பு;*** copper. (சா.அக.).

[உது → உத்து → உத்தும்பரம்.]

உதக்கு[1] *udakku,,* பெ. (n.) **வடக்கு** (திவா.); north.

[உ → உத்து = உயரம், மேடு. உத்து → உது → உதக்கு = மேடான வடக்குத் திசை. உதக்கு = இடப்பக்கம். உதட்டாங்கை, ஒரட்டாங்கை என்னும் கொங்கு நாட்டு வழக்குகள் உதட்டு, உதக்கு என்னும் சொற்களுக்கு இடப்பக்கம் எனப் பொருளைத் தெளிவுபடுத்துகின்றன. மேற்கு மேடான திசையாகத் தமிழக மக்களுக்குத் தென்பட்டமையின் அதனின்றும் வேறுபடுத்த, காலையில் கதிரவனைக் கண்டு வழிபடுவோர்க்கு உதக்குத் திசை இடப்பக்கம் இருத்தலின் இடப்பக்கப் பொருளும் பெறலாயிற்று.]

உதக்கு → வதக்கு → வடக்கு எனத் தமிழிலும், உதக்கு → உடக்கு → உணக்கு → நாக்கு → நாத்து → நார்த்து → (North) என மேலையாரிய மொழிகளிலும், திரிபுற்றிருத்தலைக் காணலாம். ஆங்கிலச் சொற்பிறப்பு அகரமுதலி தொகுத்த கிளெயின் பெருமகனாரும், இதே கருத்தை North என்னும் சொல் விளக்கத்தில் வலியுறுத்தி இருக்கிறார். North இடப்பக்கம் எனப் பொருளாட்சி பெற்றிருத்தலை அவர் காட்டினார். ஆயின் அதற்கு மூலமான உதக்கு தமிழில் உள்ளது என்பதை அவர் அறியாராயினார். வட மொழியில் இடது பக்கம், வாமபாகம், உத்தரம் எனப் பெயர் பெற்றிருந்தாலும், அவை உதக்கு என்னும் சொல்லின் வேர் மூலத்திரிபுகளேயாகும்.

உதகக்கொட்டு *udaga-k-kottu,* பெ. (n.) ***நீரிழிவு நோய்;*** diabetes. "ஊனுருகு தொழுனையி னுதகக் கொட்டின் வெப்பிற் சூலையின்" (ஞானா.19). (செ.அக.).

[உதகம் + கொட்டு.]

உதகஞ்செய்-தல் *udagañcey-,* 1. செ.கு.வி. (v.i.) ***பொருளை நீர் வார்த்துக் கொடையளித்தல்;*** to pour water into the hand of the recipient of a gift by the donor when it is handed to him. (செ.அக.).

[உதகம் + செய்.]

உதகநெறி *udaganeri,* பெ. (n.) ***கொடையளிக்க வேண்டியமுறை;*** prescribed form in which a gift is to be made. "உதக நெறி தப்பாவாறு முந்தவளித்து" (திருவாலவா.31,5). (செ.அக.).

[உதகம + நெறி.]

உதகம்[1] *udagam,* பெ. (n.) ***நீர்;*** water. "வாசநல் லுதகம்" (கந்தபு. திருக்கல்.70).

[ஊறு → ஊற்று → ஊத்து → ஊத்தம் → உத்தம் → உத்தகம் → உதகம். ஓடும் இயல்பினால் நீல் = (நீள்) நீர் எனப் பெயர் பெற்றது போல, தோண்டிய இடங்களில் ஊறும் இயல்பினால் ஊற்று எனப் பெயர் பெற்றது. கொச்சைத் திரிபுற்று ஊத்து → உத்து → உதகம் என மருவியது. வழிப்போக்கர் மணலில் ஊற்றெடுத்து நீர் பருகுவதும், கால்நடைகளை நீர் பருகச் செய்வதும், தொன்று தொட்டு வரும் தலைமுறை வழக்கம். உலக மொழிகள் பலவற்றிலும் இச்சொல் வேரூன்றிவிட்டது. I.E ued, Skt. ud, Av. vaidai, Lit. udra, GK. udar, Alb. uje, L. undu, Gothic. wato. E. water. மிகுமழையால் தரையில் ஊற்றுகள் காணப்படின், தரை முழுவதும் ஓதம் பரவிவிட்டது என்று தமிழக நாட்டுப்புற மக்கள் பேசுவதைக் காணலாம். ஊற்று → ஊத்து → ஓதம் எனத் தமிழிலும் உதகம் என வடபுல மொழிகளிலும் இந்தைரோப்பிய மொழிகளிலும் வழக்கூன்றியது. தமிழில் பிறந்து உலக மொழிகளில் வேரூன்றிய தமிழ்ச் சொற்களுள் இதுவும் ஒன்றாகும்.]

உதகம்[2] *udagam,* பெ. (n.) ***நிலவுலகம்*** (உரி.நி.); earth. (செ.அக.).

[உதகம். = நீர், கடல், கடலுடுத்த நிலம்.]

உதகம்[3] *udagam,* பெ. (n.) ***காய்கறிகளிட்டுச் சமைத்த குழம்பில் காய்கறி தவிர்த்த நீராளப் பகுதி; தெளிசாறு;*** thin porridge after separating vegetable pieces.

க. உதக.

[உதகம் = நீர், நீராளமான குழம்பு.]

உதகம்பண்ணு-தல் *udagam-pannu-,* 12. செ.குன்றாவி. (v.t.) **உதகஞ்செய்** பார்க்க. (S.I.I. iii. 35.); see *udagañcey.*

உதகமண்டலம் *udaga-mandalam,* பெ. (n.) 1. ***நீலமலை மாவட்டத் தலைநகரின் பெயர்;*** name of the Nilgiri District head quarters. 2. ***மேகமண்டலம்;*** cloudy region referring to the Nilgris. (சா.அக.).

பட. ஒத்தெகெ.

[ஒற்றை + கல் + மன்று - ஒற்றைக்கல் மன்று → ஒத்தக்கல் மந்து → உதகமண்டலம்.]

உதகம் = நீர் எனப் பொருள் கொண்டு, நீர் சூழ்ந்த பகுதி என்று மூலம் காட்டுவது பொருந்தாது. நீலமலைப் பழங்குடி மக்கள் இதனை ஒத்தக்கல் மந்து என்றே அழைப்பர். ஒற்றைக்கு நின்றான் மன்று எனக் காட்டி தனியொருத்தனாய் நின்று பொருது வென்றவனின் ஊர் எனவும் கூறுகின்றனர்.

உதகமந்தம் *udaga-mandam,* பெ. (n.) ***தண்ணீர்ச் சோறு;*** mixture of water and meal stirred together. (சா.அக.).

[உதகம் + மத்தம் - உதகமத்தம் → உதகமந்தம். மத்துதல் = கடைதல். மத்து → மத்தம் → மந்தம்.]

உதகமுய்-த்தல் *udaga-muy-,* 4. செ.குன்றாவி. (v.t.) **உதகஞ்செய்** பார்க்க; see *udagañcey.* (செ.அக.).

[உதகம் + உய்.]

உதகமூலம் *udaga-mūlam,* பெ. (n.) 1. ***தண்ணீர் விட்டான் கிழங்கு*** பார்க்க. (தைலவ.. தைல. 77.); see *taṇṇīrviṭṭāṉ kiḻaṅgu.* 2. ***பச்சைவேர்;*** green root. "சால விருட் சோதகமூலம்" (தைலவ. தைல. 85.). (செ.அக.).

[உதகம் + மூலம்.]

உதகமேல்-தல் *udaga-mēl-,* 7. செ.குன்றாவி. (v.t.) ***கொடை பெறுதல்;*** to receive gifts. "நான் உதகமேற்றது அளந்து கொள்ள வேண்டாவோ" (திவ். பெரியாழ். 1,8,8. வ்யா.பக். 173.). (செ.அக.).

[உதகம் + ஏல். ஏலுதல் = ஏற்றல், பெறுதல், வாங்கிக் கொள்ளு தல்.]

உதகரணம் *uda-garaṇam,* பெ. (n.) ***உதைத்து அழுத் துகை;*** pressing by leg (after kicking). "இலங்கைக் கோமானை... திருவிரலால் உதகரணம் செய்து" (தேவா. 286.10.).

[உதை + கரணம் - உதகரணம்.]

உதகு *udagu,* பெ. (n.) ***புன்கு.*** (மூ.அ.); Indian beech.

[உதவு → உதகு. கோடை நீழலும் புன்கின் எண்ணெயும் தரும் உதவி நோக்கி உதவி → உதகு (மரம்) எனப் பெயர் பெற்றதாகலாம். மிகவும் பரவலாக எள்ளின் நெய், ஆமணக்கு நெய் போன்றவை விளக்கெரிக்கப் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு புன்கின் விதையிலிருந்து எடுத்த எண்ணெய் விளக் கெரிக்கப் பயன்பட்டமையின் ஆக்கம் கருதி உதகு எனப்பட்ட தாகலாம்.]

உதச்சீரகம் *uda-c-cīragam,* பெ. (n.) ***பெருஞ்சீரகம்;*** anise-seed. (சா.அக.).

[உ → உது = உயரம், பெரியது. உது + சீரகம் - உதச் சீரகம்.]

உதட்டடி *udaṭṭaḍi,* பெ. (n.) 1. ***அதிரடி;*** rebuking. 2. ***வாய்வெருட்டு;*** threatening.

[உதடு + அடி - உதட்டடி.]

உதட்டாங்கை *udaṭṭāṅgai,* பெ. (n.) ***இடக்கை;*** left hand. (செ.அக.).

[உதடு² + ஆம் + கை - உதட்டாங்கை.]

உதட்டுநோய் *udaṭṭu-nōy,* பெ. (n.) ***உதட்டி லேற்படும் பதினாறுவகை நோயினுள் ஒன்று;*** one of the sixteen ailments which affects the lips. (சா.அக.).

[உதடு + நோய்.]

உதட்டுரோகம் *udaṭṭu-rōgam,* பெ. (n.) ***உதட்டு நோய்*** பார்க்க; see *udaṭṭu-nōy.*

உதட்டைப்பிதுக்கல் *udaṭṭai-p-pidukkal,* பெ. (n.) ***நிந் தனை அல்லது இல்லை என்பதைக் காட்டு மோர் குறி;*** gesture to show remorse or negation.

[உதடு + ஐ + பிதுக்கல்.]

உதடன் *udaḍaṉ,* பெ. (n.) ***தடித்த உதடடையுடையவன்.*** (வின்.); thick lipped person or the blubber - lipped.

[உதடு → உதடன்.]

உதடி *udaḍi,* பெ. (n.) 1. ***தடித்த உதட்டையுடையவள்;*** blubber - lipped woman. 2. ***தடித்த உதடுகளை உடைய கடல் மீன்வகை;*** purplish mullet, Upenius macronema, having thick lips.

[உதடு → உதடி.]

உதடு¹ *udaḍu,* பெ. (n.) 1. ***வாயிதழ்*** (கலிங். 128. புது); lip. 2. ***பானை முதலியவற்றின் விளிம்பு;*** brim, margin (W.). 3. ***வெட்டுவாய்.*** (வின்.); edge of a wound. 4. ***அல்குலின் இருபக்கத்து உதடு;*** hairy fold of skin on either side of the slit of the vulva - labium majus. (சா.அக.).

Skt. oṣṭa; **ம.** உதடு; **க.** ஒதடு, ஒதுடு, ஒதரு; **தெ.** பெதவி; **கொலா.** பெதவே, பெத்தேல்; **பட.** துடி.

[உதழ்தல் = மேலெடுத்தல், திறத்தல், வாய்திறத்தல். உதழ் → உதடு = திறக்கும் தன்மையது.]

உதடு² *udaḍu,* பெ. (n.) 1. ***இடதுகை;*** left hand. 2. ***இடதுபக்கம்;*** left side.

[உதழ்தல் = மேலெடுத்தல், விலக்குதல், ஒதுக்குதல். உதழ் → உதடு = நற்பணிக்கு ஆகாது என விலக்கப்பட்ட இடது கை, இடது பக்கம்.]

உதண் *udaṇ,* பெ. (n.) ***மொட்டம்பு;*** arrow - head of the sharp of a bud. "யானை யுதணாற் கடிந்தான்" (திணைமாலை. 2.).

[உதள் → உதண்.]

உததி *udadi,* பெ. (n.) 1. ***கடல்;*** sea. "ஒருததி காட்டுமால்" (இரகு. நாட்டுப் 41.). 2. ***முகில்*** (ஆ.அக.); cloud. 3. ***நீர்க்குடம்;*** water jar.

[உதகம் → உததி.]

உதப்பி *udappi,* பெ. (n.) 1. ***செரியாத இரை;*** undigested food in the stomach of a beast. "இலத்தி வாயாலோடிய துதப்பியோட" (திருவாலவா. 26.17.). 2. ***ஈரல்;*** ventricle of animals. 3. ***தெறிக்கும் எச்சில்;*** saliva drivelling from the mouth, slaver (J.). (செ.அக.).

ம. உதப்பி.

[உதப்பு → உதப்பி.]

உதப்பிவாயன் *udappi-vāyaṉ,* பெ. (n.) ***எச்சில் தெறிக்கப் பேசுவோன்;*** one who emits saliva while speaking; a drooler (J.). (செ.அக.).

[உதகம் → உதப்பி + வாயன்.]

உதப்பு¹ *udappu,* பெ. (n.) 1. ***எதிர்ப்பு; இடறுதல்;*** offence, opposition. 2. ***அடித்தல்; உதைத்தல்;*** kicking, striking, kick. (சேரநா.).

ம. உதப்பு; **க.** ஒதெ; **கோத.** ஒத். (உதை = துன்புறுத்தல்).

[உதை → உதைப்பு → உதப்பு.]

உதப்பு²-தல் *udappu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***கடிந்து கூறுதல்*** (வின்.); to scold, reprove. 2. ***அச்ச மூட்டுதல்;***

இகழ்ந்து நீக்குதல் (வின்.); to reject with an exclamation of disdain, to rebuff. 3. *குதப்புதல்;* to move about in the mouth, mumble. 4. *வாயினின்று உண்ணும் பொருள் வெளிவரும்படி மிகுதியாய்ச் சுவைத்தல்* (சொ.ஆ.க.); munching awkwardly (செ.அக.).

[குதப்பு → உதப்பு.]

உதம்¹ *udam,* பெ. (n.) **உத்தகம்** (சூடா); water. (செ.அக.)

[உதகம் → உதம். இனி, ஒதம் → உதம் என்றுமாம்.]

உதம்² *udam,* பெ. (n.) 1. *அழைத்தல்;* calling. 2. *கேட்டல்;* hearing.

[உது → உதம்.]

உதம்பல் *udambal,* பெ. (n.) *அதட்டுதல்;* frightening.

[உது → உதம்பல் = உரத்த குரலுடன் பேசும் பேச்சு. உது = குரலின் உயர்ச்சி.]

உதம்பு-தல் *udambu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *மறுத்தல்;* to deny, refuse.

[உது → உதம்பு = உரத்த குரலில் பேசு, எதிர்த்துப்பேசு.]

உதயகாலம் *udayakālam,* பெ. (n.) 1. *ஞாயிறு, திங்கள், விண்மீன்கள் தோன்றுங் காலம்;* rising time of any heavenly body. 2. *ஞாயிறு தோன்றுங்காலம்;* time of sunrise, early morning. (செ.அக.).

[உது → உதய + காலம். உது = மேலெழும்புதல், தோன்றுதல்.]

உதயகாலை *udaya-kālai,* பெ. (n.) **உதயகாலம்** பார்க்க (வின்.); see *udayakālam.* (செ.அக.).

[உதயம் + காலை.]

உதயகிரி¹ *udayagiri,* பெ. (n.) **உதயப்பொருப்பு** பார்க்க; see *udaya-p-poruppu.* (செ.அக.).

[உதயம் + கிரி.]

உதயகிரி² *udayagiri,* பெ. (n.) *குறிஞ்சி யாழ்த்திற வகை* (பிங்.); ancient secondary melody type of the Kuriñchi tracts. (செ.அக.).

[உதயம் + கிரி.]

உதயகுமரன் *udaya-kumaran,* பெ. (n.) *காவிரிப்பூம் பட்டினத் தரசனாகிய நெடுமுடிக் கிள்ளியின் புதல்வன்;* son of the king Neḍumuḍi-k-kiḷḷi of Kāvirippūmpaṭṭinam. (அபி.சிந்.).

[உதயம் + குமரன்.]

உதயணகுமாரகாவியம் *udayaṇa-kumārakāviyam,* பெ. (n.) *வத்தவநாட்டு அரசனாகிய உதயண குமாரனுடைய வரலாற்றைக் கூறும் ஒரு தமிழ் நூல்;* Tamil epic which describes the history of Udayaṇa kumāraṉ of Vatsava country.

[உதயணன் + குமரன் + காவியம். Skt. kavya > த. காவியம்.]

உதயணன் *udayaṇaṉ,* பெ. (n.) *பெருங்கதையின் காப்பியத்தலைவன்;* Udayaṇa, a celebrated King of Vatsa and hero of the Peruṅ-kadai.

[உது → உதயம் → உதயணன்.]

உதயணன்கதை *udayaṇaṉ kadai,* பெ. (n.) *கொங்கு வேளிரால் இயற்றப்பட்ட பெருங்கதை;* Peruṅ-kadai, an epic written by Koṅgu-vēḷir, Cir. 10th C. recounting the life and exploits of Udayaṇaṉ.

[உதயணன் + கதை.]

உதயப்பருப்பதம் *udaya-p-paruppadam,* பெ. (n.) **உதயப்பொருப்பு** பார்க்க (திவ். நாய்ச். 14,6.); see *udaya-p-poruppu.*

[உதயம் + பருப்பதம். பொற்றை → பொறை → பொருப்பு → பருப்பதம்.]

உதயப்பொருப்பு *udaya-p-poruppu,* பெ. (n.) *ஞாயிறு உதிக்கும் மலை.* (சீவக. 2153, உரை.); eastern mountain from behind which the sun is supposed to rise.

[உதயம் + பொருப்பு.]

உதயபர்வதம் *udaya-parvadam,* பெ. (n.) **உதயப் பொருப்பு** பார்க்க; see *udaya-p-poruppu.* (செ.அக.).

[உதயம் + பர்வதம். பருப்பதம் → பர்வதம்.]

உதயம் *udayam,* பெ. (n.) 1. *தோற்றம்;* appearance, becoming visible. "உதயாத்தமன மறிவுக்குள வாகாவே" (பிரபோத. 32,18.). 2. *நாண்மீன். கோள்மீன் முதலியன கீழ்த்திசை யடிவானத்துத் தோன்றுகை;* rising of the sun, planets and stars, appearance of heavenly body above the horizon. 3. *உதிக்குங்காலம்;* time of rising of a heavenly body. 4. *பிறப்பு;* birth, origin, appearance 5. **உதயப்பொருப்பு** பார்க்க; see *udaya-p-poruppu.* "உதயத்தி னெற்றி சேர்ந்த வொண்சுடர்" (சீவக. 2153). 6. *உதய ஓரை;* constellation in which a planet is seen when on the horizon, ascendant. 7. *ஊதியம்.* (ஆ.அக.); gain, earning. (செ.அக.).

[உது → உதயம்.]

உதயராகம் *udaya-rāgam,* பெ. (n.) 1. *காலைப்பண்* (பரத. இராக. 69, உரை); melody-type appropriate to the time of sun rise. 2. **உதயப்பண்** பார்க்க; see *udaya-p-paṇ.*

உதயராசி *udaya-rāśi,* பெ. (n.) **உதயவோரை** பார்க்க; see *udaya-v-ōrai.*

உதயலக்கினம் *udaya-lakkiṉam,* பெ. (n.) **உதயவெழுவோரை** பார்க்க; see *udaya-v-eḻu-v-ōrai.*

[உதயம் + இலக்கினம்.]

உதயவெழுவோரை *udaya-v-eḻu-v-ōrai,* பெ. (n.) *பிறக்கும் போது உதயமாயுள்ள எழுவோரை* (இலக்கினம்); sign rising at the moment of one's birth.

[உதயம் + எழும் + ஓரை.]

உதயவோரை *udaya-v-ōrai,* பெ. (n.) 1. *பிறக்கும்போது உதயமாயுள்ள ஓரை* (இராசி); (Astrol.) sign rising at the moment of one's birth. "ஒடை மாகளிறனானுதயராசி" (கம்பரா. திருவவ. 110). 2. *தற்காலத்து உதிக்கு மோரை* (வின்.); sign rising at present. (செ.அக.).

[உதயம் + ஓரை.]

உதயன் *udayan,* பெ. (n.) **ஞாயிறு** (பாரத. இந்திர. 5.); sun. (செ.அக.).

[உது → உதி → உதியன் → உதயன்.]

உதயாத்தமனம் *udayāttamanam,* பெ. (n.) 1. ***ஞாயிறு எழுவது மறைவதுமாகிய காலை, மாலைகள்;*** sunrise and sunset. 2. ***ஞாயிறு, திங்கள், விண்மீன்களின் தோற்றமறைவுகள்;*** rising and setting of the sun, moon, or other heavenly bodies. (செ.அக.).

[உதயம் + அத்தமனம்.]

உதயாதிபன் *udayādiban,* பெ. (n.) 1. ***ஞாயிறு;*** sun. "உதயாதிப னென நின்றார்தம் வெங்கையில்" (வெங்கைக்கோ. 15). 2. ***உதய ஓரையை ஆளும் கோள்;*** planet which is the lord of the rising sign. (செ.அக.).

[உதயம் + அதிபன். அதியன் → அதிபன்.]

உதயாலை *udayālai,* பெ. (n.) ***உதயகாலம்*** பார்க்க; see *udayakālam.*

[உதயம் + காலை - உதயகாலை → உதயாலை. (கொ.வ.).]

உதரக்கட்டு *udara-k-kaṭṭu,* பெ. (n.) ***அரைப்பட்டிகை;*** girdle or belt made of gold or silver and worn over the dress.

[உதரம் + கட்டு.]

உதரக்கனல் *udara-k-kaṉal,* பெ. (n.) 1. ***செரிமானத்துக்கு உதவும் வெப்பம்;*** body heat promoting proper digestion. 2. ***பசித்தீ;*** fire of hunger.

[உதரம் + கனல்.]

உதரக்கொதி *udara-k-kodi,* பெ. (n.) ***மிகுபசி*** (வின்.); great hunger. (செ.அக.).

[உதரம் + கொதி. கொதி = கொதித்தல், பசிமிகுதல்.]

உதரத்தீ *udara-t-tī,* பெ. (n.) ***உயிர்த் தீயுள் ஒன்றான சாடரா அழல்*** (சாடராக்கினி) (சூடா.); fire of hunger lit., stomach-fire, one of Uyir-t-tī.

[உதரம் + தீ.]

உதரத்துடிப்பு *udara-t-tuḍippu,* பெ. (n.) ***மிகுபசி;*** great hunger (W.). (செ.அக.).

[உதரம் + துடிப்பு.]

உதரபந்தனம் *udara-bandaṉam,* பெ. (n.) ***உதரக்கட்டு*** பார்க்க; see *udara-k-kaṭṭu.* "திருவயிற்றுதர பந்தனம்" (திவ். அமலனாதி. 4).

[உதரம் + பந்தனம்.]

உதரம் *udaram,* பெ. (n.) 1. ***வயிறு;*** stomach, belly, abdomen. "உதரங் குளிர்ந்து" (பாரத. துருவாச. 12). 2. ***கருப்பை*** (ஆ.அக.); womb, uterus.

ம. உதரம்; *Skt.* udara; *Mar.* udara; *AL.* uerus; *Lith.* vedaras.

[உது → உதரம். உது = நடுப்பகுதி, இடைப்பகுதி. உடம்பின் நடுப்பகுதியில் உள்ள வயிறு உதரம் எனப்பட்டது. அது, இது, உது என்னும் முச் சுட்டுகளில் 'உது' இடைப்பட்டதைக் குறித்தல் காண்க. ஒ. நோ. அது → அதை → அதைத்தல் = வீங்குதல், பருத்தல். அது → அதரம் = பருத்த உதடு.]

உதவடு-த்தல் *udavaḍu-,* 4. செ.கு.வி. (v.i.) ***உதவி செய்தல்;*** to do a favour, bestow a benefit. "ஏவல் வினை செய் திருந்தார்க் குதவடுத்தல்" (பழ. 274). (செ.அக.).

[உதவு + அடு - உதவடு.]

உதவரங்கெட்டது *udavaraṅkeṭṭadu,* பெ. (n.) ***உதவறக் கெட்டது*** பார்க்க (யாழ்ப்) see *udavaṟa-k-keṭṭadu.* (செ.அக.).

[உதவு + அற + கெட்டது = உதவறக்கெட்டது → உதவரக்கெட்டது → உதவரங்கெட்டது (கொ.வ.).]

உதவரங்கெட்டவன் *udavaraṅkeṭṭavan,* பெ. (n.) ***முழுதுங் கெட்டவன்;*** person who is spoiled beyond hope of redemption (J.). (செ.அக.).

[உதவு + அற + கெட்டவன் – உதவறக் கெட்டவன் → உதவரங்கெட்டவன் (கொ.வ.).]

உதவல் *udaval,* பெ. (n.) 1. ***கொடுக்கை*** (சூடா.); giving. 2. ***துணை செய்தல்*** (ஆ.அக.); helping. (செ.அக.).

ம. உதவல்.

[உதவு → உதவல்.]

உதவறக்கெட்டது *udavaṟa-k-keṭṭadu,* பெ. (n.) ***முற்றுங் கெட்டது;*** that which is spoiled beyond redemption (J.). (செ.அக.).

[உதவு + அற + கெட்டது → உதவறக்கெட்டது.]

உதவாக்கட்டை *udavā-k-kaṭṭai,* பெ. (n.) ***பயனற்றவன்;*** worthless fellow, person who is good - for - nothing as a rotten piece of wood. (செ.அக.).

[உதவாத + கட்டை – உதவாக்கட்டை.]

உதவாக்கடை *udavā-k-kaḍai,* பெ. (n.) ***பயனற்றவன்;*** worthless fellow, low-down creature. (செ.அக.).

[உதவாக்கட்டை → உதவாக்கடை (கொ.வ.).]

உதவாக்கரை *udavā-k-karai,* பெ. (n.) ***பயனற்றவன்;*** unhelpful person as useless as a crumbling bank. (செ.அக.).

[உதவாத + கட்டை - உதவாக்கட்டை → உதவாக்கடை → உதவாக்கரை (கொ.வ.).]

உதவாக்கழிகுறடு *udavā-k-kaḻikuṟaḍu,* பெ. (n.) ***பயனில்லாதவன்;*** worthless person. "கானடுக்க முற்றனையோ போடா வுதவாக் கழி குறடே" (பஞ்ச.திருமுக. 1142). (செ.அக.).

[உதவாத + கழி + குறடு – உதவாக்கழிகுறடு. கழி = மிகுதி; குறடு = சம்மட்டி அடிவாங்கும் கிடை, இரும்புக்கட்டை; இழிவு சுமக்கும் இயல்பினன்.]

உதவாத்தேன் *udavā-t-tēṉ,* பெ. (n.) *கள்ளிச் செடியி னருகிறகட்டிய தேன், இது மருந்துக்கும் கண் நோய்க்கு முதவாது;* honey from the honey comb found near Kalli, a plant of the Euphorbia genus. This kind of honey is prohibited in medicine.

[உதவாத + தேன்.]

உதவாரக்கெட்டது *udavāra-k-keṭṭadu,* பெ. (n.) *உதவ றக்கெட்டது* பார்க்க (யாழ்ப்.); see *udavaṟa-k-keṭṭadu.* (செ.அக.).

[உதவு + அற + கெட்டது - உதவறக் கெட்டது → உதவரக்கெட்டது → உதவாரக்கெட்டது (கொ.வ.).]

உதவாரங்கெட்டவன் *udavāraṅgeṭṭavan,* பெ. (n.) *உதவ ரக்கெட்டவன்* பார்க்க. (J.); see *udavara-k-keṭṭavaṉ.* (செ.அக.).

[உதவு + அற + கெட்டவன் - உதவறக்கெட்டவன் → உதவரக் கெட்டவன் → உதவாரங்கெட்டவன். (கொ.வ.)]

உதவி *udavi,* பெ. (n.) 1. *துணை;* help, assistance, support. "செய்யாமற் செய்த உதவிக்கு" (குறள், 101). 2. *கொடை;* gift, donation, contribution. "உயர்ந்தவர்க் குதவிய வுதவி" (கம்பரா. வேள்வி 35). 3. *துணை* (ஆ.அக.); companionship. (செ.அக.).

ம. உதவி; க. ஒதவு; கோத. ஒத்க், ஒத்கி; துட. விதொவ்ய; து. ஒதகுனி; பட. ஒதவு.

[உய் → உய்ந்து → உத்து → உது → உதவு → உதவி.]

உதவிசெய்யானை *udavi-šey-yāṉai,* பெ. (n.) *யானைக் கூட்டத்துக்குத் தலைமையான யானை* (பிங்.); chief in a herd of wild elephants. (செ.அக.).

[உதவி + செய் + யானை.]

உதவிந்து *udavindu,* பெ. (n.) *நீர்த்துளி;* drop of water. (சா.அக.).

[உதகம் + விந்து - உதகவிந்து → உதவிந்து.]

உதவு[1]-தல் *udavu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. *கொடுத் தல்;* to give, contribute, bestow. "ஈக்காற்றுணையுமுத வாதார்" (நாலடி.218). 2. *துணை செய்தல்;* to help, aid, assist. "நம்மாட்டுதவிய நன்னர்க்கு" (பெருங். வத்தவ. 3:11). 3. *தடுத்து நிற்றல்;* to withstand, as an invading army. "இடத்துதவும் நல்லாளுடைய தரண்". (குறள்,746). 4. *சொல்லுதல்;* to report, tell, inform. "அன்னையர்க்குதவல் வேண்டும்" (கல்லா.40).

[உய் → உய்த்து → உத்து → உது → உதவு.]

உதவு[2]-தல் *udavu-,* 5. செ.கு.வி. (v.i.) 1. *கூடியதாதல்;* to be possible. "உதவியதேதும் பெரியோர்க் கூட்டி" (சைவச.பாயி.19). 2. *பயன்படுதல்;* to be of use. இது மருந்துக்குதவும். (செ.அக.).

ம. உதவுக; க., தெ. ஒதவு.

[உத்து → உது → உதவு.]

உதவு[3] *udavu,* பெ. (n.) *கூரை வேயுங் கழி;* bamboo pole used in the frame work for thatched buildings. (செ.அக.).

[உ. → உத்து → உது → உதவு.]

உதள் *udaḷ,* பெ. (n.) 1. *ஆட்டுக்கடா;* ram, he-goat. "உதளு மப்பரும்" (தொல். பொருள். 602). 2. *ஆடு* (திவா.); goat, sheep. 3. *மேழ ஒரை* (திவா.); aries of the zodiac. 4. *மரவகை* (தொல்.எழுத்.400, உரை); tree. (செ.அக.).

ம. உதள்; க., பட. ஹோது.

[உது → உதள். ஆட்டினங்களில் ஆணினம், உயர்ந்து பருத்துக் காணப்படுதலின் உதள் எனப்பட்டது. உது = உயர்வு, பருமை.]

உதளிப்பனை *udaḷippaṉai,* பெ. (n.) *கூந்தற்பனை* பார்க்க; see *kūndaṟpaṉai.* (செ.அக.).

[உது → உதள் → உதளி + பனை. உதள் = பருத்திருத்தல்.]

உதளை *udaḷai,* பெ. (n.) *காட்டலரி வகை;* jungle mango. (செ.அக.).

ம. உதளம்..

[உதள் → உதளை. பருத்த அல்லது அகன்ற இதழ்களைக் கொண்ட அலரி வகை.]

உதறிநட-த்தல் *udaṟinaḍa-,* 3. செ.கு.வி. (v.i.) *வெடுக்கு வெடுக்கென்று நடத்தல்;* to walk with short, quick, jerky steps. (செ.அக.)

[உதறு → உதறி + நட.]

உதறிமுறிப்பான் *udaṟimuṟi-p-pāṉ,* பெ. (n.) *மருந்துச் செடி;* medicinal plant that grows only in hot and dry places. (செ.அக.).

உதறு[1]-தல் *udaṟu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. *அசைத்து எற்றுதல்;* to shake off, throw off, shake out as a cloth. "பாய லுதறிப் படுப்பது" (கம்பரா. கடல்தா. 4). 2. *விலக்குதல்;* to renounce, as the world, friends, etc. "பேறனைத்து மணுவெனவே யுதறித்தள்ள" (தாயு. ஆகார.3).

[உதல் → உதறு.]

உதறு[2]-தல் *udaṟu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. *விரைந்து அசைதல்;* to move to and fro, to shake. 2. *குளிர், அச்சம் முதலியவற்றாற் கை கால் நடுங்குதல்;* to shake, as one's hands, feet or body, through cold, fear or anger. (செ.அக.).

ம. உதறுக; க. ஒதறு, ஒதரு; தெ. உதரு, உதுரு, உதிலு; து. உதேவுனி; கட. உதர்ப்; பட. ஒதரு.

[உதல் → உதறு.]

உதறுஇசிவு *udaṟu-išivu,* பெ. (n.) *இசிவுக் காய்ச்சல்;* fever attended with trembling.

[உதறு + இசிவு.]

உதறுகாலி *udaṟukāli,* பெ. (n.) 1. ***உதைகாற்பெற்றம்*** (வின்.); cow that kicks or twitches away its leg and does not allow to be milked. 2. ***காலை இழுத்து நடப்பவள்;*** woman who shakes her feet in walking, such gait being supposed to bring evil upon her household. உள்ளதையுங் கெடுத்தா ளுதறுகாலி வந்து. (உ.வ.). (செ.அக.).

[உதறு + காலி.]

உதறுசன்னி *udaṟuśaṉṉi,* பெ. (n.) 1. ***கைகால்களில் நடுக்கங் காணுமோர் வகை இசிவுக்காய்ச்சல்;*** a kind of fever attended with shaking or trembling of the limbs like typhoid. 2. ***உடம்பில் நடுக்க முண்டாக்கும் இசிவு;*** delirium. 3. ***உதறு இசிவு*** பார்க்க; see *udaṟu - iśivu.* (சா.அக.).

[உதறு + சன்னி.]

உதறுசுரம் *udaṟu-šuram,* பெ. (n.) 1. ***குளிர் காய்ச்சல்;*** intermittent fever accompanied by cold and shivering. 2. ***நச்சுக்காய்ச்சல்;*** malarial fever. (சா.அக.).

[உதறு + சுரம்.]

உதறுவலி *udaṟu-vali,* பெ. (n.) நடுக்கு ***ஊதை;*** shaking palsy. (செ.அக.).

[உதறு + வலி.]

உதறுவாதம் *udaṟu-vādam,* பெ. (n.) ***உதறு வலி*** பார்க்க; see *udaṟu-vali.* (செ.அக.).

உதன் *udaṉ,* பெ. (n.) ***சிவன்;*** Siva. (ஆ.அக.).

[உது → உதன் = மேலானவன், உயர்ந்தவன்.]

உதாத்தம் *udāttam,* பெ. (n.) 1. ***செல்வத்தினுயர்ச்சியை யேனும், மனத்தின் பெருமையையேனும், மேம்படுத் திக் கூறுவதாகிய ஓர் அணிவகை*** (தண்டி.72); figure of speech which expresses either abundance of wealth, or the greatness of thought. 2. ***மறைகளைச் சொல்லும் ஓசை நான்கனுள் ஒன்றாகிய எடுத்தலோசை*** (திரு விளை. தடாதகை.8); rising accent of one of the four Vēdasvaram.

[உது → உதாத்தம் = உயர்வு, முன்னேற்றம், செழிப்பு.]

உதாத்தன் *udāttaṉ,* பெ. (n.) 1. ***பெரியோன்;*** great man. 2. ***கொடையாளி;*** liberal donor. (செ.அக.).

[உது → உதாத்தம் → உதாத்தன்.]

உதாம்பரம் *udāmbaram,* பெ. (n.) ***செம்பு;*** copper. (செ.அக.).

[உது → உதும்பரம் → உதாம்பரம். (கொ.வ.).]

உதி[1] *udi,* பெ. (n.) 1. ***ஒதிய மரம்;*** goom pain tree. "உதிமரக் கிளவி" (தொல். எழுத். 243). 2. ***மரவகை;*** falcate trumpet flower. 3. ***உலைத்துருத்தி*** (பிங்.); bellows of the furnace of the iron smith. 4. ***விச்சை;*** science, learning knowledge. "உதியொரேழிரண்டுந் தந்த முனிவ" (இரகு. அயனு.19). 5. ***உளுந்து;*** black gram. 6. ***இழைக்கட்டு;*** any layer of the body with an aggregation of cells-tissue. 7. ***கடலாத்தி;*** falcate trumpet flower. (சா.அக.).

[உது → உதி (பருத்தது). உது = மேலெழும்புதல், கிளர்தல், விளங்குதல்.]

உதி[2]**-த்தல்** *udi-,* 4. செ.கு.வி. (v.i.) ***பருத்தல்;*** to swell, increase in size. ஆள் உதித்து விட்டான். (உ.வ.).

[உது → உதி. உது = மேலெழும்பு, பெரியதாகு.]

உதி[3]**-த்தல்** *udi-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***எழுதல்; உதயமாதல்;*** to rise or appear as a heavenly body. "மீளவு முதித்தனன்" (பாரத. இரண்டாம். 32). 2. ***தோன்றுதல்;*** to spring up, come into existence, arise, as primitive elements one out of another. "உதிப்பது மீறு முண்டு" (சி. சி.1,2). 3. ***பிறத்தல்;*** to commence, as a new year, an age; to be born, as a great personage (W.)

[உது → உதி. உது = மேலெழும்பு.]

உதிச்சியம் *udi-c-ciyam,* பெ. (n.) ***வெட்டிவேர்;*** fragrant root. (சா.அக.).

[உதித்தியம் → உதிச்சியம்.]

உதிதன்[1] *udidaṉ,* பெ. (n.) ***தோன்றினவன்;*** one who is born. "உதிதற்குரியாள் பணியால்" (சீவக. 23).

[உது → உதி → உதிதன்.]

உதிதன்[2] *udidaṉ,* பெ. (n.) ***பாண்டிய மன்னன்*** (இறை.2,31); *Pāṇḍiya king.* (செ.அக.).

[உது → உதி → உதியன் → உதிதன்.]

உதிப்பு *udi-p-pu,* பெ. (n.) 1. ***தோற்றம்;*** birth, appearance. "மரிப்பொடுதிப்பு" (பிரபுலிங். முத்தாயி. 23). 2. ***மெய்யறிவு;*** knowledge, wisdom. "ஊற்றுச் செறித்துட னுதிப்பை யாக்கும்" (யசோதர. 1,65). 3. வீக்கம்; swelling. (சா.அக.).

[உது → உதி → உதிப்பு.]

உதியஞ்சேரல் *udiyañ-jēral,* பெ. (n.) ***மாபாரதப் போரில் பாண்டவப் படைகளுக்குப் பெருஞ்சோறு அளித்தவ னாகக் கருதப்படும் பழைய சேரருள் ஒருவன்*** (பதிற் றுப். 20, பதிகம்); king who is said to have fed the armies of the Pāṇḍavās in the Mahābhārata War.

[உது → உதி → உதியன் + சேரல்.]

உதியம்பால் *udiyampāl,* பெ. (n.) ***ஒதிய மரத்தின் பால்;*** essence of the odina tree. (சா.அக.).

[உது → உதி + அம் + பால்.]

உதியம்பூர் *udiyampūr,* பெ. (n.) ***ஒரூர்;*** name of a village. (செ.அக.).

[உதியன் + புரம் = உதியன்புரம் → உதியம்பூர்.]

உதியமரம் *udiyamaram,* பெ. (n.) ***ஒதியமரம்;*** goom pain tree. (சா.அக.).

[உதி + மரம்.]

உதியன் *udiyaṉ*, பெ. (n.) 1. ***இயற்பெயர்;*** proper name. 2. ***சேரன்*** (திவா.); title of Cēra dynasty. 3. ***அறிவாளி;*** learned man.

[உது → உதி → உதியன். உதி = உயரம், மேன்மை.]

உதிர்[1] *udir*, பெ. (n.) ***நறுமணச்செடி;*** the fragrant root of a plant. (சா.அக.).

[உது → உதுர் → உதிர். உதுர் = மேலெழும்பல், நறுமணம்.]

உதிர்[2]**-தல்** *udir-*, 2. செ.கு.வி. (v.i.) ***கீழ்விழுதல்;*** to drop off, as leaves, fruits; to fall out, as hair; to be blasted, nipped, shaken with the wind; to drop down, as tears. "தீவளியா னற்கா யுதிர்தலு முண்டு" (நாலடி.19). 2. ***பிதிர்தல்;*** to crumble, fall to pieces, as cakes. "உதிருகின்ற சிற்றுண்டி கொண்டு" (கந்தபு. ஆற்றுப்.27). 3. ***சாதல்;*** to die, used in imprecations (W.). நீ சீக்கிர முதிர்ந்து போவாய். (வின்.). 4. ***குலைதல்;*** to be demolished. "உதிராமதிலு முளகொல்" (பு.வெ.6,4.).

ம. உதிருக; க. உதிர், உதிரு, உதுர்; துட. வித் (இடை ஆடை நெகிழல்); து. உதுருனி, உதருனி.

[உது → உதுர் → உதிர்.]

உதிர்[3]**-த்தல்** *udir-*, 2. செ.குன்றாவி. (v.t.) 1. ***வீழ்த்துதல்;*** to cast leaves or fruits, as trees, to cause to drop or fall in numbers or succession to shake off, beat off, peel off, strip; to knock out, as teeth; to shed, as tears. "குயில் குடைந் துதிர்த்த புதுப்பூஞ் செம்மல்" (சிறு பாண்.4). 2. ***பிதிர்த்தல்;*** to break in pieces. பிட்டையு திர்த்தான். 3. ***உதறுதல்;*** to shake out, as a cloth. "பலரிடை யாடை யுதிரார்" (ஆசாரக்.37). (செ.அக.).

ம. உதிர்; க. உதிரிக.

[உ → உது → உதுர் → உதிர்.]

உதிர்[4] பெ. (n.) 1. ***துகள்;*** crumb. "உடைந்தன வுதிராகி" (கந்தபு. சதமக.13). 2. ***முத்தக் காசு;*** straight-sedge tuber. (W).

[உதுர் → உதிர்.]

உதிர்க்கிடாரி *udir-k-kiḍāri*, பெ. (n.) ***கருடன் கிழங்கு;*** Indian birth-wort. (சா.அக.).

[உதிர் + கிடாரி. கடாரி → கிடாரி. கடாரி = கன்னித்தன்மை, இளமை.]

உதிர்க்குக்கிடாரி *udirkku-k-kiḍāri*, பெ. (n.) ***உதிர்க் கிடாரி*** பார்க்க *udir-k-kiḍāri.]*

உதிர்காய் *udir-kāy*, பெ. (n.) 1. ***சொரி காய்; காற்றடித்து உதிர்ந்த காய்;*** fallen fruit. 2. ***குலையினின்று பிரிந்த காய்;*** fruit shaken from a bunch.

[உதிர் + காய்.]

உதிர்காலம் *udir-kālam*, பெ. (n.) ***இலையுதிர் காலம்;*** season of the year during which leaves fall off from trees - Autumn. (சா.அக.).

[உதுர் → உதிர் + காலம்.]

உதிர்கோலகம் *udirkōlagam*, பெ. (n.) ***கம்மாறு வெற்றிலை;*** a dark and thick species of betel - Piper betel. (சா.அக.).

[உதுர் → உதிர் + கோலகம். (கருப்பு.)]

உதிர்சம்பம் *udir-šambam*, பெ. (n.) ***பழுத்து உதிர்ந்த எலுமிச்சை;*** ripe lime fallen or dropped off the tree. (சா.அக.).

[உதுர் → உதிர் + சம்பம்.]

உதிர்சருகு *udir-šarugu*, பெ. (n.) ***மரத்தினின்று காய்ந்து விழுந்த இலை;*** the dried leaves dropped off the tree. (சா.அக.).

[உதிர் + சருகு.]

உதிர்ப்பகம் *udirppagam*, பெ. (n.) ***சவுக்கு மரம்;*** casuarina equisetifolia. (சா.அக.).

[உதிர்ப்பு → உதிர்ப்பகம். கோடையில் அல்லது வறட்சியில் இலையுதிர்த்து நிற்கும் இயல்புடைய மரம்.]

உதிர்ப்பு *udirppu*, பெ. (n.) 1. ***உகுக்கை;*** spitting. 2. ***உதிர்வு;*** falling. (ஆ.அக.).

[உதிர் → உதிர்ப்பு.]

உதிர்பன்னீர் *udirpaṉṉīr*, பெ. (n.) ***பன்னீர் மரம்;*** dew-flower.

[உதிர் + பன்னீர்.]

உதிர்மணல் *udir-maṇal*, பெ. (n.) 1. ***சிற்றீரமுள்ள மணல்;*** loose damp sand (W.). 2. ***புதைமணல்;*** quick sand.

[உதிர் + மணல்.]

உதிர்வு *udirvu*, பெ. (n.) ***உதிர்கை;*** falling.

[உதிர் → உதிர்வு.]

உதிர்வேங்கை *udir-vēṅgai*, பெ. (n.) ***உதிரவேங்கை*** பார்க்க; see *undiravēṅgai.* (சா.அக.).

[உதிரம் + வேங்கை = உதிர்வேங்கை.]

உதிரக்கட்டு *udira-k-kaṭṭu*, பெ. (n.) 1. ***அரத்தத்தை நிறுத்துகை;*** stoppage of hemorrhage. 2. ***பூப்புப் படாமை;*** non occurrence or suppression of the menses.

[உதிரம் + கட்டு.]

உதிரக்கல் *udira-k-kal,* பெ. (n.) ***மாணிக்க வகை;*** blood stone, heliotrope.

[உதிரம் + கல்.]

உதிரக்கலப்பு *udira-k-kalappu,* பெ. (n.) ***அரத்தத் தொடர்புள்ள உறவு;*** blood relationship, consanguinity.

[உதிரம் + கலப்பு.]

உதிரக்குடோரி *udira-k-kudōri* பெ. (n.) ***கருடன் கிழங்கு.*** (மூ.அ.) பார்க்க; see *karuḍan kiḻaṅgu.*

உது →' உதுரம் - உதிரம் + குடோரி. (கிடாரி → கடாரி → குடோரி)
உதிரம் = செந்நீர், செந்நிறம்
[கிடாரி (குடோரி) இளமை, கன்னித்தன்மை.]

உதிரங்களை-தல் *udiraṅ-kaḷai-,* 2. செ.கு.வி. (v.i.) ***அரத்தம் வடித்தல்.*** (குறள், 948, உரை); to bleed, draw out blood.

[உதிரம் + களைதல்]

உதிரச்சிக்கல் *udira-c-cikkal,* பெ. (n.) ***மாதவிலக்கு பற்றிய நோய்;*** painful menstruation.

*[உதிரம் + சிக்கல். **உதிரம்** பார்க்க; see udiram.]*

உதிரசூலை *udira šūlai* பெ. (n.) ***கருப்ப நோய் வகை;*** clots of blood formed in the uterus (W.)

*[உதிரம் + சூலை. **உதிரம்** பார்க்க; see udiram.]*

உதிரத்துடிப்பு *udira-t-tuḍippu,* பெ. (n.) ***நெருங்கிய உறவினர் படுந்துன்பங் கண்டு உண்டாகும் மன வருத்தம்;*** painful sensation felt on seeing a near relation in suffering (W.)

*[உதிரம் + துடிப்பு. **உதிரம்** பார்க்க; see udiram.]*

உதிரத்தெறிப்பு *udira-t-teṟippu,* பெ. (n.) ***அரத்தந் தொடர்பான உறவு;*** blood relationship. 'நாராயணத்வ பரயுக்தமான உதிரத் தெறிப்பாலே' (ஈடு.)

*உதிரம் + தெறிப்பு. தெறிப்பு = பரவல், தொடர்ந்து வருதல். **உதிரம்** பார்க்க; see udiram.]*

உதிர நரம்பு *udira-narambu,* பெ. (n.) ***அரத்த நாடி;*** blood-vessel.

*[உதிரம் + நரம்பு. **உதிரம்** பார்க்க; see udiram]*

உதிரப்பாடு *udira-p-pāḍu,* பெ. (n.) ***மகளிர்க்கு நேரும் பெரும்பாடு என்னும் நோய், பெருங்குருதிப்போக்கு;*** excessive menstruation.

[உதிரம் + பாடு. படு → பாடு (படுவது பாடு) படுதல் = விழுதல், ஒழுகுதல், கசிதல்.]

உதிரப்போக்கு *udira-p-pōkku,* பெ. (n.) ***அரத்தம் வெளிப்போகை;*** bleeding.

*[உதிரம் + போக்கு. **உதிரம்** பார்க்க; see udiram.]*

உதிரம் *udiram,* பெ. (n.) ***அரத்தம்;*** blood. 'உதிரம் உறவறியும்' (சீவக. 1910, உரை.).

உல் - எரிதல் கருத்து வேர். உல் → உல → உலு → உது (உரு) = எரிநிறம், சிவப்பு. உது → உதுர் - உதுரம் → உதிரம் = செந்நீர், குருதி, அரத்தம்.

அரத்தத்தைக் குறிப்பிடும் குருதி (குருநிறம் = செந்நிறம்) என்னும் சொல்லும் 'குரு' (சிவப்பு) வேரடியாகப் பிறந்தது என்பதை ஒப்பிடுக.

உதிரமாகாளி *udiramākāḷi,* பெ. (n.) ***பெரிய வௌவால் வகை;*** Vampire.

[உதிரம் + மாகாளி.] உதிரம் = செந்நிறம்.
மாகாளி என்பது வடிவில் பெரியது, கொடுந்தன்மையது என்னும் பொருள்களைக் குறிப்பால் சுட்டியதாகலாம்.

உதிர முறிப்பான் *udira murippāṉ,* பெ. (n.) ***விட்டுணுக்கி ராந்தி என்றழைக்கப்படும் மூலிகைச் செடி. (மூ.அ.)*** a plant that grows only in hot and dry places.

[உதிரம் + முறிப்பான்]

உதிரல் *udiral,* பெ. (n.) ***உதிர்ந்த பூ;*** flowers that have fallen down. "வேங்கை விரிந்த விணருதிரலோடு" (பரிபா.7,12.). (செ.அக.).

[உதிர் → உதிரல்.]

உதிரவேங்கை *udira-vēṅgai,* பெ. (n.) ***வேங்கை மர வகை*** (மூ.அ.); East-Indian Kino, as having reddish sap. (செ.அக.).

உது *udu,* சு.பெ. (demons. pron.). 1. ***சேய்மைக்கும் அண்மைக்கும் நடுவணதைக் குறிக்கும் ஒரு சுட்டுப் பெயர்;*** that which is between the near and the more remote. "உதுக்காண்"(யாப்.வி.94, பக். 356.). 2. ***முன்னிலையாளனிடம் உள்ள பொருள்;*** that which is near the person(s) spoken to. உது என்ன? (யாழ்ப்.). 3. ***முன்னால்;*** in front of. (எனக்கு முன்). (செ.அக.).

ம. உது; க. உது; தெ. உ; து. உன்த்; பர். ஊத்; கூ. ஓவி; குவி. ஊதி, ஊஅதி; குரு. கீத்; பிரா. ஒத்.

[உ → உந்து → உது.]

உதுக்கம் *udukkam,* பெ. (n.) 1. ***நீர்;*** water. 2. ***சம்பாரம் கூட்டிய குழம்பு;*** curry juice.

க. உதுக.

[ஓதம் = நீர். ஓதம் → உதம் → உதுகம் → உதுக்கம்.]

உதுக்கலம் *udu-k-kalam,* பெ. (n.) ***நடுவில் குழிந்த மரவுரல் அல்லது கல்லுரல்;*** mortar either of wood or stone.

Skt. உலூகல. (உரல்).

[உது = நடுப்பகுதி. கலம் = குழிவான ஏனம். நடுப்பகுதியில் குழியுள்ள உரல், உதுக்கலம் எனப்பட்டது. இது உதுகலம் → உலூகல எனச் சமற்கிருதத்திலும், உலூகல → ரோகல எனத் தெலுங்கிலும் திரிந்தது. வடமொழி அகரமுதலியில், ulūkala = a wooden mortar, name of a particular kind of cup for holding the soma, shaped like a mortar, எனக் கூறப்பட்டிருத்தலால் மரவுரலையே முதலிற் குறித்த சொல்லாக இது வழங்கியது என அறியலாம்.]

உதுகதி *udugadi,* பெ. (n.) ***வாயாலெடுத்தல்;*** vomiting. (சா.அக.).

[உது + கதி. உது + மேலெழும்பல். கதி = நிலைமை.]

உதும்பரக்குட்டம் *udumbarakkuttam,* பெ. (n.) ***உடம்பு முழுவதும் செம்புள்ளிகளையுடைய ஒருவகைக் குட்டம். இது அரத்தத்தில் உதிக்கும் பூச்சிகளால் ஏற்படுவதாகச் சொல்லப்படும்;*** a species of leprosy with red spots all over the body. It is said to be caused by a kind of germ supposed to be generated in the blood. (சா.அக.).

[உதும்பரம் + குட்டம்.]

உதும்பரப்பரணி *udumbara-p-parani,* பெ. (n.) 1. ***காட்டாமணக்கு;*** wild croton. 2. ***சிவப்புக் காட்டாமணக்கு;*** red physic nut. (சா.அக.).

[உதும்பரம் + பரணி.]

உதும்பரம்[1] *udumbaram,* பெ. (n.) 1. ***செம்பு*** (பிங்.); copper. 2. ***அத்தி மரம்*** (பிங்.); red-wooded fig tree. 3. ***வாயிற்படி;*** threshold of a house (W.). ஒன்றிய கபாடஞ் சாரு முதும்பரங் கடந்து சென்றான். 4. ***செவ்வகத்தி*** (மூ.அ.); red-flowered West-Indian pea--tree. 5. ***எருக்கு*** (மூ.அ.); madar. 6. ***நெற்களம்*** (ஆ.அக.); threshing floor. 7. ***சிவப்பு;*** redness. 8. ***பேயத்தி;*** wild fig-ficus oppositifolia. 9. ***அத்திப்பழம்;*** the fruit of ficus glomerata. 10. ***சீமையத்தி அல்லது தேரத்தி;*** hebrew tenah or European fig tree. (சா.அக.).

உதும்பரம்[2] *udumparam,* பெ. (n.) ***செங்குட்ட நோய்*** (நாநார்த்த.); red leprosy.

உதூகலம் *udūgalam,* பெ. (n.) ***உரல்;*** mortar. (ஆ.அக.).

[உது = நடுப்பகுதி. உது → உதூ + கலம் (நடுவில் கலம்போல் குழிந்தது.).]

இச்சொல் வடமொழியில் உலூகல எனத் திரிந்தது. உதுக்கலம் பார்க்க; see udu-k-kalam.]

உதை[1]-தல் *udai-,* 4. செ.குன்றாவி. (v.t.). 1. ***காலால் எற்றுதல்;*** to kick. அவன் என்னை உதைத்தான். 2. ***நன்றாக ஊன்றுதல்;*** to plant the foot firmly against a post or a wall. 'முட்டுக்கட்டை சுவரை உதைத்துக் கொண்டிருக்கிறது. (இ.வ.). (செ.அக.). 3. ***தாக்கி மீளுதல்;*** to dash and retreat. (ஆ.அக.).

[உது → உதை (முன் தள்ளுதல்.)]

உதை[2]-த்தல் *udai-,* 4. செ.குன்றாவி. (v.i.) 1. ***காலாலெற்றுதல்;*** to kick. "கூற்றொன்றை யுதைத்தாய் போற்றி" (தேவா. 966, 1). 2. ***அவமதித்தல்;*** to spurn, reject, as advice. (W.). அவன் என் பேச்சை யுதைத்துத் தள்ளி விட்டான் (இ.வ.). 3. ***செலுத்துதல்;*** to discharge, as an arrow. "இச்சிலையுதைத்த கோற் கிலக்கம்" (கம்பரா. கார்முக.9.). 4. ***அடித்தல்;*** to beat, strike. அவனை நன்றாய் உதைத்தான். (உ.வ.).

[உது → உதை (முன் தள்ளுதல்).]

உதை[3]-த்தல் *udai-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***நடுங்குதல்;*** to tremble with fear, shiver with cold used impers. அதைக் கேட்டதும் அவனுக்கு உதைக்கிறது. 2. ***மாறுபடுதல்;*** to be inconsistent. அவன் சொன்னது முன்னுக்குப் பின் உதைக்கிறது.

க., து., பட. ஒதெ; ம. உத.

[உது → உதை = முன்தள்ளுதல், உதைத்தல்.]

உதை[4] *udai,* பெ. (n.) 1. ***காலினெற்று;*** kick. ஓர் உதை உதைத்தான். 2. ***காலாலமுத்துகை;*** pressure of foot, as in pushing (W.). 3. ***உதைகால்*** பார்க்க; see *udaikāl.* 4. ***அடி;*** beating, flogging. 5. ***குதிப்பு;*** leap to recoil or rebound of a sun. 6. ***தாங்குதல்;*** support. (சேரநா.).

ம. உத; க., து., பட. ஒதெ; தெ. ஊத.

[உ → உது → உதை.]

உதைகால் *udai-kāl,* பெ. (n.) 1. ***தாங்கு முட்டுக்கால்;*** prop, set against a slanting wall or a falling tree. 2. ***முட்டுக்கால்;*** physical deformity whereby the hind-legs of an animal touch each other; knock-knee, as in the case of overloaded donkeys. 3. ***உதைக்குங்கால்;*** kicking leg. "உதைகாற் பசு" (குடா. 3, 13). 4. ***உத்திரத்தின் மீதுள்ள குத்துக்காலின் ஆரக் கால்கள்;*** supports to king post (C.E.M.). (செ.அக.).

[உதை + கால்.]

உதைகால்பெற்றம் *udai-kāl-perram,* பெ. (n.) ***பால் கறக்கும் போது உதைக்கும் இயல்புள்ள கறவை மாடு;*** cow with kicking leg.

[உதை + கால் + பெற்றம்.]

உதைகாலி *udaikāli,* பெ. (n.) ***உதைக்குங் குணமுள்ள மாடு*** (அபி.சிந்.பக்.788); cow with kicking leg. (செ.அக.).

[உதை + காலி. கால் → காலி.]

உதைகாற்பசு *udaikāṟpašu,* பெ. (n.) ***உதைகால்பெற்றம்*** பார்க்க; see *udai-kāl-peṟṟam.*

[உதை + கால் + பசு. பெற்றம் → பெத்த → பெச்சு → பெசு = பசு.]

உதைகொடு[1]-த்தல் *udai-koḍu-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***உதைத்தல்;*** to give kicks.

[உதை + கொடு.]

உதைகொடு[2]-த்தல் *udaikoḍu-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***முட்டுக்கொடுத்தல்;*** to set a prop, put a buttress as against a wall or a tree. 2. ***ஊஞ்சலை ஆட்டிக்கொள்ளுதல்;*** to push and give impulse to a swing. (J). (செ.அக.).

[உதை + கொடு.]

உதைசுவர் *udai-šuvar,* , பெ. (n.) 1. ***முட்டுச்சுவர்;*** wall rest, buttress. 2. ***அணை சுவர்;*** supporting wall. (ஆ.அக.).

[உதை + சுவர்.]



உதைசுவர்

உதைத்துக்கொள்ளல் *udaittu-k-koḷḷal,* பெ. (n.) 1. ***குளிரால் நடுக்கங்கொள்ளல்;*** shivering with cold. 2. ***அச்சத்தால் நடுக்கங் கொள்ளல்;*** trembling with fear. 3. ***வலிப்பு அல்லது இழுப்பினால் கை கால் உதைத்துக் கொள்ளல்;*** violent and irregular motion of the limbs through fits. (சா.அக.).

[உதை → உதைத்து + கொள்ளல்.]

உதைப்பளவு *udaippaḷavu,* பெ. (n.) ***கைந்நொடிப் பொழுது;*** moment. ''கன்னன் உதைப்பளவு போது போக்கின்றி'' (திவ். இயற். நான்முக. 32). (செ.அக.).

[உதை → உதைப்பு + அளவு.]

உதைப்பு *udaippu,* பெ. (n.) 1. ***தாக்குகை;*** dashing against. 2. ***அச்சம்;*** fright, alarm. (செ.அக.).

[உதை → உதைப்பு.]

உதைபு *udaipu,* பெ. (n.) ***கதவு*** (பிங்.); door. (செ.அக.).

[உதைப்பு → உதைபு. (முன் தள்ளுவது.)]

உதைமானம் *udaimāṉam,* பெ. (n.) 1. ***முட்டு;*** backing of an abutment, buttress of an arch; prop, support. 2. ***கருநாடகத் துப்பாக்கிக் கைப்பிடி;*** pistol grip of a Karnatic gun.

[உதை → உதைமானம். மானம் = சொல்லாக்க ஈறு.]

உதையக்காப்பு *udaiya-k-kāppu,* பெ. (n.) ***நன்றாக அடிக்கை;*** sound thrashing. (செ.அக.).

[உதை + அ + காப்பு. (காய்ப்பு.)]

உதையப்பெருமாள் *udaiya-p-perumāḷ,* பெ. (n.) ***பட்டினி;*** starvation. (செ.அக.).

[உதை → உதைய + பெருமாள். பெருமாளுக்குரிய நோன்பு.]

உதையம் *udaiyam,* பெ. (n.) ***செருப்படை;*** a low spreading plant grown in the fields.

[உதை → உதையம்.]

உதையரலிக்கஞ்சி *udai-y-arali-k-kañji,* பெ. (n.) ***பச்சைக் கருப்பூரம்;*** crude camphor. (சா.அக.).

[உதை + அரலி + கஞ்சி.]

உதையவன்பால் *udaiyavaṉpāl,* பெ. (n.) ***எருக்கன் பால்;*** the milky juice of madar or sun plant. (சா.அக.).

[உதையவன் + பால்.]

உதையுண்ணி *udai-y-uṇṇi,* பெ. (n.) ***காலால் உதைபடுபவர்;*** one who is repeatedly kicked. (சா.அக.).

[உதை + உண்ணி.]

உதோள் *udōḷ,* கு.வி.எ. (adv.) ***உதோளி*** பார்க்க; see *udōḷi.* (தொல். எழுத். 398, உரை.). (செ.அக.).

[உ → உது → உதா → உதோ → உதோள்.]

உதோளி *udōḷi,* பெ. (n.) ***உவ்விடம்*** (தொல். எழுத். 159); the place where the person addressed is or the intermediate place.

[உ → உது → உதா → உதோ → உதோள் → உதோளி.]

உந்த *unda,* கு.பெ.எ. (adj.) ***உங்கேயுள்ள;*** which is near the person addressed or which is intermediate. ''உந்தவேல்'' (பாரத. பதினான். 213.). (செ.அக.).

[உ → உந்து → உந்த.]

உந்தரம் *undaram,* பெ. (n.) 1. ***வழி;*** way (W.). 2. ***எலி;*** rat. (செ.அக.).

[உந்து → உந்தரம்.]

உந்தல்[1] *undal,* பெ. (n.) 1. ***தள்ளு; உந்து;*** push. 2. ***தள்ளியிருக்கின்ற பாகம்;*** the projecting part. 3. ***முளைத்து நிற்கின்ற நிலை;*** jutting out, projection. (சேரநா.).

ம. உந்தல்; கோத. உந்து (தள்ளு); துட. உந்து.

[உந்து → உந்தல்.]

உந்தல்[2] *undal,* பெ. (n.) 1. ***உயர்ச்சி;*** height. 2. ***யாழ் நரம்பு தடவுகை;*** thrumming to test the strings of the yāḻ. "நரம்பு முழுதினையுந் தடவித் தள்ள லுந்தல்" (கூர்மபு. கண்ணன் மணம். 146). (செ.அக.). 3. ***ஏறுகை*** (ஆ.அக.); climbing.

[உ → உந்து → உந்தல்.]

உந்தி[1] *undi,* பெ. (n.) 1. ***பேசும்போது வாய் வழிக் காற்றைத் தள்ளுவதாகக் கருதப்படும் கொப்பூழின் உட்பக்கம்; கொப்பூழ்;*** naval. "உந்தி மேல் நான்முக னைப் படைத்தான்" (திவ். பெரியதி. 5,4,1.). 2. ***வயிறு;*** belly, stomach. "உந்தியுறுபசிக்கு" (திருவாலவா. பதி. 1.). 3. ***நீர்ச்சுழி*** (திவா.); whirlpool. 4. ***ஆறு;*** river. "அரும்புறவுந்தி மடந்தையர்" (இரகு. திக்குவி. 267.). 5. ***யாற்றிடைக்குறை;*** small island in a river. "குணகடற் கிவர்தருங் குருஉப்புன லுந்தி" (மதுரைக். 245.). 6. ***நீர்*** (பிங்.); water. 7. ***கடல்;*** sea. "உந்தியுலகத்தில்" (சி.சி. பர. உலோகா. 1). 8. ***தேரின் உருளை;*** car wheel. "உந்தி கனாலுடை யுந்திரதம்" (பாரத. பதின் மூன். 12). 9. ***தேர்த்தட்டு*** (பிங்.); middle loft of a car. 10. ***மகளிர் விளையாட்டுவகை*** (பிங்.); a game of Indian women somewhat akin to the English game of battle dore and shuttlecock. 11. ***யாழ்ப்பத்தல்*** (தொல். சொல். 399, உரை); body of a yāḻ. 12. ***நடு*** (அக.நி.); middle space. 13. ***உயர்ச்சி*** (அக.நி.); height, eminence.

ம. உந்தி.

[உ → உந்து → உந்தி.]

உந்தி[2] *undi,* பெ. (n.) 1. ***துணை;*** companion. 2. ***பறப்பவை;*** birds. (செ.அக.).

[உ → உந்து → உந்தி.]

உந்திச்சுழி *undi-c-culi,* பெ. (n.) 1. ***கொப்பூழ்ச்சுழி;*** curve or involution of the naval. 2. ***நீர்ச்சுழி;*** whirlpool. (செ.அக.).

[உந்தி + சுழி.]

உந்திடம் *undidam,* பெ. (n.) ***உவ்விடம்;*** yonder place, where the person addressed is. "பொய்குன்ற வேதிய ரோதிடு முந்திடம்" (திருக்கோ. 223.). (செ.அக.).

[உ → உந்து → இடம்.]

உந்திநாளம் *undi-nālam,* பெ. (n.) ***கொப்பூழ்க் கொடி;*** umbilical cord. "உந்தி நாளத்தை மெல்லவரிந்து" (திரு வானைக். கோச்செங். 73.). (செ.அக.).

[உந்து → உந்தி + நாளம்.]

உந்திபற-த்தல் *undipara-,* 3. செ.கு.வி. (v.i.) ***குழாங் கூடிய மகளிர் உந்தி விளையாட்டாடுதல்;*** to play the game of *unti,* an ancient game, consisting prob. in jumping accompanied by singing. "உந்திபறந்த வொளியிழையார் கள்" (திவ். பெரியாழ். 3,9,11.). (செ.அக.).

[உ → உந்து → உந்தி + பறத்தல்.]

உந்திபூத்தோன் *undi-pūttōṉ,* பெ. (n.) ***திருமால்*** (திவா.); Visṇu, with a lotus flower sprouting from His navel. (செ.அக.).

[உந்தி + பூத்தோன்.]

உந்தியில்வந்தோன் *undiyil-vandōṉ,* பெ. (n.) ***நான் முகன்*** (பிங்.); Brahma who has sprung from Visṇu's navel lotus. (செ.அக.).

[உந்தி + இல் + வந்தோன்.]

உந்தியிலுதித்தோன் *undiyiludittōṉ,* பெ. (n.) ***உந்தியில் வந்தோன்*** பார்க்க; see (திவா.) *undiyil-vandōṉ.* (செ.அக.).

[உந்தி + இல் + உதித்தோன்.]

உந்து[1]**-தல்** *undu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***தள்ளுதல்;*** to push out, thrust forward. "உந்திடவெழுந்து மூழ்கி" (ஞானா. 16,17.). 2. ***வீசியெறிதல்;*** to cast away. "கரிகடேர்த்தொகை.... யள்ளியே யுந்தினன்" (கந்தபு. நகரழி. 23.). 3. ***அம்பு முதலியன விடுதல்;*** to shoot, as an arrow, as a spear. "சரங்கள். வீமனுந்த" (பாரத. புட்ப. 104.). 4. ***செலுத்துதல்;*** to drive as a chariot. "தேரினைத் துரோண னுந்தினான்" (பாரத. நிரைமீ. 86.). 5. ***அனுப்புதல்;*** to despatch, send. "வயிரவி தன்னை யாங்கே யுந்தினன்" (பிரபோத. 24,45.). 6. ***வெளிப்படுத்தல்;*** to produce, cause to appear. "கடல் வண னுந்தியுந்திய நாற்றிதழ்த் தாமரை" (கம்பரா. கிளை. 121.). 7. ***யாழ்நரம்பு தெறித்தல்;*** to thrum, as a string of the *yāḻ.* "வாரியும் வடித்து முந்திய முறழ்ந்தும்" (பொருந. 23.). 8. ***மரமுதலியன கடைதல்;*** to turn in a lathe, to rub, as two sticks together till they ignite. "உந்தவே காட்டாக் கிற்றோன்றி" (சி.போ. 9,3,2.). 9. ***ஆயக்காய் முதலியன உருட்டுதல்;*** to toss, as dice. கவறுந்தினார். (வின்.)

[உ → உந்து.]

உந்து[2]**-தல்** *undu-,* 15. செ.கு.வி. (v.i.) 1. ***எழும்புதல்;*** to rise, flow, as water; to swell, as the sea. "உந்து நீர்க்கங்கை" (கூர்மபு. இராமனவ. 39). 2. ***பெருகுதல்;*** to grow, enlarge, as wisdom. "உந்துசுடர் ஞானத்தை" (சேதுபு. நாட்டு. 3). 3. ***செல்லுதல்;*** to go, move along. "வானுந்து மாமதி (திருக்கோ. 147.). 4. ***தங்குதல்;*** to

crawl, trudge. ''அன்பர்...........உந்தினர் மார்பினால்'' (பெரியபு. திருநா. 358.). 5. ***நீங்குதல்;*** to cease. ''உந்தாத வன்போடு'' (பதினொ. திருத்தொண். 19). 6. ***பொருந்துதல்;*** to be united. ''தானந்தோறு முந்திடுங் கரணம்'' (சி.சி. 4,34. சிவஞா.).

ம. உந்துக; **கோத.** உத்; **துட.** உத்; பட. உந்து; *L.* unda; *G.K.* hunder; *Goth.* lato; *Lith.* wandu; *E* water; *OHG.* warar. உந்து > வ. உந்த். (இ.வே.). (வ.மொ. 93.).

[உ → உந்து.]

உந்து³ *undu,* பெ. (n.) ***ஏலக்காய்த்தோல்;*** cardamom husk. (j). (செ.அக.).

ம. உந்து.

[உ → உம் (மேலிருப்பது) → உந்து.]

உந்து⁴ *undu,* இடை. (part.). ***பெயரச்சத்திறுதியாகிய 'உம்'மின் திரிபு;*** variant of the ending 'உம்' in rel.pple. ''கூப்பெயர்க்குந்து'' (தொல்.சொல். 294.). (செ.அக.).

[உம் → உந்து.]

உந்து⁵ *undu,* பெ. (n.) ***ஆவை யழைக்கும் ஒலிக் குறிப்பு;*** onom. term used in calling cows (j). (செ.அக.).

[உம் - ஒலிக்குறிப்பு. உம் → உந்து.]

உந்துரம் *unduram,* பெ. (n.) ***எலி;*** mouse. (ஆ.அக.).

[உந்து → உந்துரம். உந்துரல் = குடைதல்.]

உந்துரு *unduru,* பெ. (n.) 1. ***பெருச்சாளி*** (பிங்.); bandicoot. 2. ***எலி*** (ஆ.அக.); mouse. (செ.அக.).

ம. உந்துரு.

[உந்து → உந்துரு. உந்துரல் = குடைதல்.]

உந்துவண்டி *unduvandi,* பெ. (n.) ***உந்திக் கொண்டு போவதுபோல் அமைந்த வண்டி*** (சேரநா.); go-cart.

ம. உந்துவண்டி.

[உந்து + வண்டி.]

உந்தூழ் *undūḻ,* பெ. (n.) ***பெருமூங்கில்;*** large bamboo. ''உரிதுநா றவிழ்தொத் துந்தூழ் கூவிளம்'' (குறிஞ்சிப். 65.). (செ.அக.).

[உ → உந்து → உந்துல் → உந்தூழ். உந்துதல் = பருத்தல்.]

உந்தெழுச்சி *undeḻucci,* பெ. (n.) ***கண்ணில் பருத்திக் காயைப்போல் கெட்ட தசை வளரும் கண்ணோய் வகையுளொன்று;*** eye disease. (ஆ.அக.).

[உந்து + எழுச்சி.]

உந்தை *undai,* பெ. (n.) ***உன் அப்பன்;*** your father. ''தூதர் வந்தன ருந்தை சொல்லோடு'' (கம்பரா. பள்ளி. 2.).

[உன் + தந்தை - உந்தை.]

உப்பக்கம் *uppakkam,* பெ. (n.) 1. ***உந்தப்பக்கம்;*** yonder, where the person addressed is, or that (intermediate) side. ''உப்பக்க நோக்கி'' (வள்ளுவமா. 21.). 2. ***முதுகு;*** back. ''ஊழையு முப்பக்கங்காண்பர்'' (குறள், 620). 3 ***பின்பக்கம்;*** back or hind side. (செ.அக.).

மறுவ. உப்பால், வெரிந்.

[உ + பக்கம்.]

உப்பங்கழி *uppaṅkaḻi,* பெ. (n.) 1. ***காயல்;*** backwater. 2. ***உப்பளம்*** (வின்.); salt-pan. (W.). (செ.அக.).

[உப்பு + அம் + கழி.]

உப்பங்காற்று *uppaṅkāṟṟu,* பெ. (n.) ***கடற் காற்று;*** see breeze. (செ.அக.).

[உப்பு + அம் + காற்று.]

உப்பங்கோரை *uppaṅgōrai,* பெ. (n.) ***உவர் நிலத்தில் முளைப்பதான கைப்புக் கோரை.*** (M.N.A.D. ii,170); a bitter sedge that grows only by the side of salt marshes.

[உப்பு + அம் + கோரை.]

உப்பங்கோரை

Curator, Oriental Manuscripts Library, Madras-600 005

உப்பசம் *uppašam,* பெ. (n.) 1. ***ஈளைநோய்;*** asthma. 2. ***வீக்கம்;*** swelling, as of the abdomen. வயிறு உப்பசமாயிருக்கிறது (உ.வ.). (செ.அக.).

தெ. உப்பசமு.

[உப்பு → உப்பம் (தொ.பெ.). உ → உப்பு (வீங்குதல்) → உப்பசம்.]

உப்பட்டம் *uppaṭṭam,* பெ. (n.) 1. ***உப்புக்குட்டி மரம்;*** white mangrove. 2. ***சிறுவர் விளையாட்டு வகை;*** children's game.

ம. உர்ப்பம்.

[உப்பு + ஆட்டம் - உப்பாட்டம் → உப்பட்டம். உப்புப் பொதியைச் சுமப்பது போன்ற ஆட்டம்.]

உப்பட்டி *uppaṭṭi,* பெ. (n.) ***அரிக்கட்டு*** (யாழ்ப்.); sheaf.

[உ → உப்பு → உப்பட்டி. ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து உயர்த்திக் கட்டும் கட்டு.]

உப்பட்டு *uppaṭṭu,* பெ. (n.) 1. ***போளிப்பணிகாரம்;*** cake made of wheat flour enclosing it boiled with *dhal* and sugar or jaggery. (ஆ.அக.).

[உள் → உப்பட்டு (உட்பகுதியில் அதாவது நடுவில் இனிப்பு வைத்துச் சுடப்பட்ட பணிகாரம்.)]

உப்பந்தரவை *uppandaravai,* பெ. (n.) ***உவர் நிலம்;*** saline soil. (செ.அக.).

[உப்பு + அம் + தரவை. தரவை = தரிசுநிலம்.]

உப்பம்பருத்தி *uppam-parutti,* பெ. (n.) ***பருத்தி வகை;*** Indian cotton plant, M.sh. Gossypium herbaceum (G.sm.D.I.i. 226). (செ.அக.).

[உ → உப்பம் + பருத்தி.]

உப்பமை-த்தல் *uppamai-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***உப்பு விளைத்தல்;*** to produce salt. (ஆ.அக.).

[உப்பு + அமை.]

உப்பமைப்போர் *uppamaippōr,* பெ. (n.) ***உமணர்*** (திவா.); salt manufacturers; dwellers in maritime tracts. (செ.அக.).

மறுவ. உப்பளவர், கழியர்; உப்புச் செய்வோர், உப்பாரவர், அளவர்.*]*

உப்பர் *uppar,* பெ. (n.) ***உப்பமைப்போர்*** பார்க்க; see *uppamaippōr.* (செ.அக.).

[உப்பு → உப்பர்.]

உப்பரம் *upparam,* பெ. (n.) ***வயிற்றுப் பொருமல்;*** flatulent distension of the abdomen, tympanites. (செ.அக.).

தெ. உப்பரமு.

[உப்பு → உப்பரம்.]

உப்பரவர் *upparavar,* பெ. (n.) 1. ***குள முதலிய அகழுந் தெலுங்கர்;*** a Telugu caste who are usually tank and well diggers, and road-workers, and who ordinarily bear the title *mēstiri.* 2. ***குறவருள் ஒரு வகுப்பார்;*** a branch of *Kuṟavās* who deal in *karu-vēppilai* and style themselves Chetties. (செ.அக.).

தெ. உப்பர.

[உ → உப்பரம் → உப்பரவர்.]

உப்பரி *uppari,* பெ. (n.) 1. ***மிகை; மிகுதி;*** excess. 2. ***மேற்படல்; உயர்தல்;*** heightening.

[உப்பு → உப்பரி.]

உப்பரிகாண்(ணு)-தல் *uppar-i-kāṇ-,* 12. செ.கு.வி. (v.i.) ***அளவு மிகுந்து காணுதல்;*** to swell, increase in quantity, as old raw rice in boiling. (செ.அக.).

க., பட. உப்பரிசு; **தெ.** உப்பரின்சு.

[உ → உப்பு → உப்பரி + காண்(ணு)-தல். உப்பரி = மேற்படுதல், மிகுதல். உப்பரி - உபரி எனத் திரிந்தது.]

உப்பரிகை[1] *upparigai,* பெ. (n.) ***மேல்மாடம்;*** upper storey. "ஆடகப்புரிசை யுப்பரிகை" (மச்சபு. நைமிசா. 2.).

ம. உப்பரிக்க; **க.** உப்பரிகெ; **தெ.** உப்பரிக.

[உ → உப்பரி → உப்பரிகை. உப்பரி = மேற்படுதல், மேற்கட்டடம்.]

உப்பல் *uppal,* பெ. (n.) ***ஊதிப் பருத்தல்;*** distension, flatulence.

க., தெ., து., பட. உப்பு.

[உ → உப்பு (உப்புதல்) → உப்பல்.]

உப்பளநீலம் *uppaḷanīlam,* பெ. (n.) ***ஒருவகை நீலமணி;*** variety of sapphire (S.I.I.ii. 204,63). (செ.அக.).

[உப்பு → உப்பளம் + நீலம்.]

உப்பளம் *uppaḷam,* பெ. (n.) 1. ***உப்புவிளை நிலம்*** (பிங்.); salt-pans. 2. ***கழிநிலம்*** (பிங்.); saline soil. (செ.அக.).

ம. உப்பளம்; **க.** உப்பள; **குட.** உப்பாலெ; **தெ.** உப்பளமு.

[உப்பு + அளம். அளம் = செறிவு. உப்புச் செறிந்த நிலம்.]

உப்பளவர் *uppaḷavar,* பெ. (n.) ***நெய்தல் நில மக்கள்;*** dwellers in maritime tracts. (ஆ.அக.).

[உப்பு + அளம் + அர்.]

உப்பளவன் *uppaḷavaṉ,* பெ. (n.) ***உப்பு விளைப்போன்;*** salt-maker.

ம. உப்பளவன்; **க.** உப்பார.

[உப்பு + அள(ம்) + அன்.]

உப்பளறு *uppaḷaṟu,* பெ. (n.) ***களிமண்ணும் உப்புமண லுங் கலந்த களர்நிலம்*** (m.m.); soil containing clay and sand impregnated with alkaline matters, generally found along the coasts. (செ.அக.).

[உப்பு + அளறு - உப்பளறு. அளை (சேறு) → அளறு.]

உப்பறுகு *uppaṟugu,* பெ. (n.) ***உவர் நிலத்துள்ள ஒருவகை யறுகு*** (சங்.அக.); species of Bermuda-grass growing in maritime tracts. (செ.அக.).

[உப்பு + அறுகு.]

உப்பனாறு *uppaṉāṟu,* பெ. (n.) ***கடலிலிருந்து எதிர்த்துப் பெருகிய உவர்நீருள்ள ஆறு*** (அசுவசா. 147.); backwater, regarded as a river of salt water. (செ.அக.).

[உப்பு → உப்பன் + ஆறு.]

உப்பாயம் *uppāyam,* பெ. (n.) ***உப்புவரி;*** salt tax. (S.I.I.ii, 115.). (செ.அக.).

[உப்பு + ஆயம்.]

உப்பாரக்காரன் *uppāra-k-kāraṉ,* பெ. (n.) ***சுண்ணாம்பு பூசும் வேலைக்காரன்*** (சங்.அக.); one who plasters a wall, who rubs mortar. (செ.அக.).

[உப்பு → உப்பாரம் + காரன். உப்பு + அளம் → உப்பளம் → உப்பாளம் → உப்பாரம். உப்புவிளைப்போர் கடற்கிளிஞ்சில் சுண்ணாம்பும் விற்றதால், காலப்போக்கில் சொல் இப்பொருள் பெற்றது.]

உப்பால் *uppāl*, பெ. (n.) 1. ***உந்தப் பக்கம்;*** the side near person addressed, intermediate side. 2. ***மேலிடம்;*** upper of further region. "உப்பாலுயர்ந்த உலகம் புகும்" (நான்மணி. 27.). 3. ***முதுகு;*** back.

[உ + பால்.]

உப்பாறு *uppāṟu*, பெ. (n.) ***காட்டாறு;*** country stream, usu. dry except in the rainy season. (Tinn.). (செ.அக.).

[உப்பு + ஆறு. உருப்புதல் → உப்புதல் = உலர்தல், விரைந்தோடி வறண்டு போதல்.]

உப்பானி *uppāṉi*, பெ. (n.) ***உப்புச் சுமத்தல்*** பார்க்க; see *uppu-c-cumattal.* அவன் உப்பானி தூக்குகிறான். (செ.அக.).

ம. உப்புத்தூக்குதல், உப்புமூட்டை.

[உப்பு → உப்பானி.]

உப்பி *uppi*, பெ. (n.) ***செவ்வகத்தி;*** scarlet, flowered cessabame.

[உருப்பு → உப்பு → உப்பி. உருப்பு = எரிதல், சிவப்பு.]

உப்பிசம் *uppiśam*, பெ. (n.) ***உப்பசம்*** பார்க்க; see *uppaśam.*

[உப்பு → உப்பசம் → உப்பிசம் (கொ.வ.).]

உப்பிஞ்சி *uppiñji*, பெ. (n.) ***இஞ்சிவகை;*** a kind of ginger (S.I.I.ii 299). (செ.அக.).

[உப்பு + இஞ்சி.]

உப்பிட்டது *uppiṭṭadu*, பெ. (n.) 1. ***ஊறுகாய்;*** pickles. 2. ***உப்பிட்டுப் பாதுகாத்த பண்டம்;*** that which is salted and preserved. (செ.அக.).

[உப்பு + இட்டது-உப்பிட்டது.]

உப்பிட்டவர் *uppiṭṭavar*, பெ. (n.) ***உணவளித்தவர்;*** one who offered food, help.

[உப்பு + இட்டவர்.]

உப்பிடு-தல் *uppiḍu-*, 20. செ.கு.வி. (v.i.) ***உப்பிட்ட உணவளித்தல்;*** to furnish food seasoned with salt. உப்பிட்டவரை உள்ளளவும் நினை. (செ.அக.).

[உப்பு + இடு.]

உப்பிதம் *uppidam*, பெ. (n.) ***கூத்தின் வகை*** (பிங்.); a kind of dance.

[உப்பு → உப்பிதம்.]

உப்பில்லாப்பேச்சு *uppillā-p-pēccu*, பெ. (n.) ***பயனற்ற உரையாடல்;*** insipid discourse. (செ.அக.).

[உப்பு + இல்லா + பேச்சு.]

உப்பிலாங்கொடி *uppilāṅgoḍi*, பெ. (n.) ***இண்டங்கொடி;*** a species of stinking swallow-wort. (செ.அக.).

[உப்பிலாம் + கொடி.]



உப்பிலாங்கொடி

உப்பிலி[1] *upili*, பெ. (n.) ***உப்பில்லாதது;*** that which is without salt. "உப்பிலிப்புழுக்கல்" (சீவக. 2984.). (செ.அக.).

ம. உப்பில, உப்பிலி.

[உப்பு + இலி.]

உப்பிலி[2] *uppili*, பெ. (n.) 1. ***புலிதொடக்கி*** (மலை.); tiger-stopper. 2. ***இண்டு;*** species of sensitive tree (W.). 3. ***ஈர்கொல்லிக் கொடி*** (மலை.); a species of stinking swallow-wort.

[உப்பு + இலி.]

உப்பிலி[3] *uppili*, பெ. (n.) ***ஒரூர்;*** name of a village.

*[ஒப்பிலி → உப்பிலி. **ஒப்பிலி** பார்க்க; see oppili.]*

உப்பிலிகம் *uppiligam*, பெ. (n.) ***கருப்புச் சோளம்;*** black millet.

[உருப்பு (வேதல்) → உப்பு → உப்புலிகம். எரிந்து கருத்துப் போனாற் போல் கருநிறம் பெற்றதால் கறுப்புச் சோளம் உப்பிலிகம் எனப்பட்டது.]

உப்பிலிடு *uppiliḍu*, பெ. (n.) ***உப்பிட்ட பொருள்;*** pickles, that are salted. (செ.அக.).

[உப்பு + இல் + இடு.]

உப்பிலிப்பானை *uppili-p-pāṉai*, பெ. (n.) ***உப்பின்றி உண்ணும் கைம்மை நோன்பு;*** observance in which widows in mourning abstain from salted food. (Tinn.). (செ.அக.).

[உப்பு + இலி + பானை. பாரனை → பானை.]

உப்பிலியப்பன் *uppiliyappaṉ*, பெ. (n.) ***ஒப்பிலியப்பன்*** பார்க்க; see *oppiliyappaṉ.* (ஆ.அக.).

[நூற்றெட்டுத் திருப்பதிகளுளொன்றாகிய திருவிண்ணகரிற் கோயில் கொண்ட திருமால். ஒப்பிலியப்பன் என்பது, ஒப்பில் லாதவனாகிய திருமாலைக் குறித்தது. ஒப்பு + இலி = ஒப்பிலி → உப்பிலி (கொ.வ.). உப்பிலி + அப்பன். கன்னடநாட்டில் இச்சொல் ஒபிலி, ஒபிலியப்பன் எனத் திரிந்துள்ளது. தெலுங் கில் ஒபிளிகான், ஒபிளிகாடு எனத் திரிந்துள்ளது.]

உப்பிலியன் *uppiliyaṉ,* பெ. (n.) ***உப்பமைக்கும் பணியாளன்;*** member of a caste of salt-workers. (செ.அக.).

க. உப்பலிக.

[உப்பளன் → உப்பிலியன் (கொ.வ.).]

உப்பிற்குஉறுதி *uppiṟku-uṟudi,* பெ. (n.) ***கட்டுக்கொடி;*** a creeper, smilax pseudochina.

[உப்பிற்கு + உறுதி. மருத்துவப்பயன் கருதியது.]

உப்பீண்டுவரி *uppīṇḍuvari,* பெ. (n.) ***உப்பு நிறைந்த கடல்;*** sea, as full of salt. (ஆ.அக.).

[உப்பு + ஈண்டு + உவரி.]

உப்பு[1] *uppu,* பெ. (n.) 1. ***கடல் நீரை ஆவியாக்கி உணக்கிய படிக வடிவ உவர்ப்புடைய வெண் சிறுகல்*** (குறள், 1302.); salt, alkali. 2. ***கறியுப்பு, வெடியுப்பு, இந்துப்பு, ஒட்டுப்பு, அமரியுப்பு;*** each of five kinds of salt said to be used by alchemists. 3. ***உவர்ப்பு*** (பிங்.); saltness. 4. ***உவர்க்கடல்;*** sea of salt water. "உப்பினிற் கயல் பொறித்துள பதாகையார்" (இரகு. திக்குவி. 125). 5. ***இனிமை;*** sweetness, deliciousness. "கூடலிற் றோன்றிய வுப்பு" (குறள். 1328.). 6. ***மகளிர் விளையாட்டு வகை*** (திவா.); a game of women.

ம., க., தெ., து., பட., **கொர., இரு.,** குரும்., குட. உப்பு; **கை.** உபு; **கோ., து.** உப்; **கொலா.** சுப, **நா.** சுப்; **கோண்.** ஒவர்; **பர்.** சுப; **கட.** சுப, சுப்பு; **குரு.** பெக்; **மா.** பெக்; **பிரா.** பே.

[உ → உப்பு. உப்புதல் = உயர்தல், மேலெழும்பித்தோன்றுதல், படுதல்.]

உப்பு வயலில் கடல் நீர் ஆவியான பின் மேல் திரண்ட படிகத் துகளின் திரட்சி நோக்கி உப்பு எனப் பெயர் பெற்றது.

உப்பு[2] *uppu,* பெ. (n.) 1. ***அன்பு;*** love. 2. ***எல்லை*** (ஆ.அக.); demarcation; border.

[உ-உப்பு. உணவில் உப்பு சேர்த்தபின் சுவை மிகுதலின் இனிமைப் பொருள் பெறுவதாயிற்று. இனிமைப் பொருள் அன்புப் பொருளிலும், குறிப்பிட்ட அளவுக்கேற்ப உப்பின் சுவை வரையறை பெறுதலின் எல்லைப் பொருளிலும் விரிந்தது.]

உப்பு[3]**-தல்** *uppu-,* 15. செ.கு.வி. (v.i.) 1. ***பருத்தல்*** (வேதா.சூ. 67, உரை); to become big, as a seed; to bloat, puff up, as the abdomen by wind, from indigestion. 2. ***பொங்குதல்;*** to raise, as leaven. (செ.அக.).

ம. உப்புக; **க.** உப்பு; **தெ.** உப்பரின்சு, உப்பு; **கோத., துட.** உப்; **து.** உப்புவி.

[உ → உப்பு → உப்புதல். உப்புதல் = உயர்தல், பருத்தல், வீங்குதல்.]

உப்புக்கசனை *uppu-k-kasaṉai,* பெ. (n.) ***உப்பூறணி*** பார்க்க. (வின்.); see *uppūṟaṇi.* (செ.அக.).

[உப்பு + கசனை. கசி → கசனை.]

உப்புக்கட்டி *uppu-k-kaṭṭi,* பெ. (n.) 1. ***உப்புக்கல்;*** grain of salt. 2. ***சிறுகட்டுக் கொடி*** (மலை.); kind of milky medicinal creeper, useful as a remedy for dysentery. (செ.அக.).

[உப்பு + கட்டி.]

உப்புக்கட்டு[1]**-தல்** *uppu-k-kaṭṭu-,* 12. செ.குன்றாவி. (v.t.) ***குழந்தையை முதுகில் தூக்கி விளையாடுதல்;*** to carry a child on one's back and cry out merrily, 'salt for sale' in a game.

[உப்பு + கட்டுதல். உப்பு மூட்டையை முதுகிற் சுமந்தவாறு பண்டமாற்று வாணிகம் செய்த பழங்காலச் சூழலில் தோன்றிய சொல்லாட்சி யாதலின் குழந்தையை முதுகில் சுமந்து விளையாடும் விளையாட்டைக் குறித்தது.]

உப்புக்கட்டு[2]**-தல்** *uppu-k-kaṭṭu-,* 5. செ.கு.வி. (v.i.) ***சடுகுடு விளையாட்டிற்கு மணல் குவித்தல்;*** to make a sand goal in the game of "Palinjaḍgudu".

[உப்பு + கட்டு-தல். உப்புதல் = உயர்தல், உப்புக் கட்டுதல், மணலை உயரக் கட்டுதல்.]

உப்புக்கடல் *uppu-k-kaḍal,* பெ. (n.) 1. ***உப்பு மிகுதியான கடல்*** (பிங்.); ring-shaped sea of salt water. 2. ***சாக்கடல்;*** the Salt Sea, the old name for the Dead Sea (விவிலி. ஆதி. 14,3). (செ.அக.).

ம. உப்புகடல்.

[உப்பு + கடல்.]

உப்புக்கடலை *uppu-k-kaḍalai,* பெ. (n.) ***உப்பும் மஞ்சட் பொடியும் தூவி வறுத்த கடலை*** (இ.வ.); parched bengal-gram seasoned with salt and turmeric powder. (செ.அக.).

[உப்பு + கடலை.]

உப்புக்கண்டம் *uppu-k-kaṇḍam,* பெ. (n.) ***உப்பூட்டிக் காயவைத்த இறைச்சித்துண்டு அல்லது மீன்;*** piece of salted meat, or salt fish. .(செ.அக.).

[உப்பு + கண்டம்.]

உப்புக்கந்தம் *uppu-k-kandam,* பெ. (n.) ***உப்புக் கோடு*** பார்க்க; see *uppu-k-kōḍu.* (செ.அக.).

[உப்பு + கந்தம்.]

உப்புக்கரி-த்தல் *uppu-k-kari-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***உவர்ப்பு மிகுதல்;*** to have an intensely saline taste. 2. ***உப்புலர்த்தல்;*** to dry salt. (செ.அக.).

[உப்பு + கரி-த்தல்.]

உப்புக்கரிநீர்முள்ளி *uppu-k-kari-nīrmuḷḷi,* பெ. (n.) ***கழுதை முள்ளி*** (L.); holly-leaved bears-breech. (செ.அக.).

[உப்பு + கரி + நீர்முள்ளி.]

உப்புக்கல் *uppu-k-kal,* பெ. (n.) 1. ***உப்புத்துண்டு;*** lump or pinch of salt. கறிக்கு ஓர் உப்புக்கல் வேண்டும். 2. ***ஒருவகைக் கடற்கல்;*** fine-grained grit stone formed by the induration of the upper surface of the sea bed. (Loc.). (செ.அக.).

[உப்பு + கல்.]

உப்புக்கழி *uppu-k-kaḻi,* பெ. (n.) ***உப்பங்கழி*** பார்க்க; see *uppaṅgaḻi.* (செ.அக.).

[உப்பு + கழி.]

உப்புக்கறி *uppu-k-kaṟi,* பெ. (n.) ***உப்பிட்டு உணக்கிய கிழங்கு அல்லது பழத்துண்டுகளின் வறுவல்;*** curry of fruits or tubers salted and fried. (சேரநா.).

[உப்பு + கறி. கறி = மிளகு. மிளகிட்டுச் செய்தது.]

உப்புக்காகிதம் *uppu-k-kāgidam,* பெ. (n.) *மரங்களை மெருகிடுவதற்கு உதவும் ஒருவகைத் தாள்;* sand paper. ***உப்புத்தாள்*** பார்க்க; see *upputtāḷ.* (செ.அக.).

[உப்பு + காகிதம்.]

உப்புக்காசு *uppu-k-kāśu,* பெ. (n.) *பழைய வரிவகை* (S.I.I. vii, 41); ancient tax. (செ.அக.).

[உப்பு + காசு.]

உப்புக்கீரை *uppu-k-kīrai,* பெ. (n.) *கீரை வகை;* common Indian saltwort. (செ.அக.).

[உப்பு + கீரை. உவர்ப்புள்ள கீரை.]

உப்புக்குஞ்சம் *uppu-k-kuñjam,* பெ. (n.) *கருஞ்சீரகம்;* black cumin.

[உப்பு + குஞ்சம்.]

உப்புக்குட்டி[1] *uppu-k-kuṭṭi,* பெ. (n.) 1. *கடற்கரையிலுள்ள ஒருவகை மரம்;* white mangrove. (m.m.). 2. *உப்பு மரவை;* wooden vessel with a lid, for keeping salt. (செ.அக.).

ம. உப்புகுத்தி.

[உப்பு + குட்டி. குற்றி → குட்டி (சிறியது).]

உப்புக்குட்டி[2] *uppu-k-kuṭṭi,* பெ. (n.) 1. *சிறுவர் விளையாட்டுகளுள் ஒன்று;* game of children. 2. ***உப்புக்கட்டு*** பார்க்க; see *uppu-k-kaṭṭu.*

[உப்புக்கட்டி → உப்புக்குட்டி.]

உப்புக்குத்தி[1] *uppu-k-kutti,* பெ. (n.) *ஒரு வகைமீன்;* a kind of fish.

உப்புக்குத்தி[2] *uppu-k-kutti,* பெ. (n.) *பறவை வகை;* a kind of bird. (W.). (செ.அக.).

[உப்பு + குத்தி.]



உப்புக்குத்தி

உப்புக்குறவன் *uppu-k-kuṟavaṉ,* பெ. (n.) ***உப்புவிற்குங் குறச்சாதியான்;*** member of a division of the *Kuṟava* caste, trafficking in salt. (செ.அக.).

[உப்பு + குறவன்.]

உப்புக்குறுதி *uppu-k-kuṟudi,* பெ. (n.) ***கொடுக்காய்ப் புளி;*** sweet babool.

[உப்புக்கு + உறுதி.]

உப்புக்கூர்-த்தல் *uppu-k-kūr-,* 2. செ.கு.வி. (v.i.) ***உப்புக் கரித்தல்*** (வின்.); to have a saline taste. (செ.அக.).

[உப்பு + கூர்-த்தல். கூர்த்தல் = மிகுதல்.]

உப்புக்கொள்(ளு)-தல் *uppu-k-koḷ-,* 13. செ.குன்றாவி. (v.t.) ***உப்புக்கட்டு*** பார்க்க; see *uppu-k-kaṭṭu.* (செ.அக.).

[உப்பு + கொள்(ளு)-தல்.]

உப்புக்கோடு *uppu-k-kōḍu,* பெ. (n.) ***சதுரக் கோடு கிழித்து ஆடும் கிளித்தட்டு விளையாட்டு;*** a game consisting of running through a diagram of squares marked on the ground. (Loc.). (செ.அக.).

[உப்பு + கோடு.]

உப்புகை *uppugai,* பெ. (n.) *பருத்தல்; வீங்குதல்;* enlarging, swelling.

[உப்பு → உப்புகை.]

உப்புச்சரக்கு *uppu-c-carakku,* பெ. (n.) ***உப்பிட்ட பணிகாரம்;*** salted, fried, savoury cakes. (செ.அக.).

[உப்பு + சரக்கு.]

உப்புச்சாறு *uppu-c-cāṟu,* பெ. (n.) 1. *கடல் நீர்;* sea water. (vaiṣn.). 2. *அமுதம்;* nectar produced at the churning of the ocean. உப்புச்சாறு கிளறுவது எப்போதோ என்று கிடக்கிற தேவசாதி" (ஈடு. 1,3,11.). (செ.அக.).

[உப்பு + சாறு.]

உப்புச்சீடை *uppu-c-cīḍai,* பெ. (n.) ***உப்புச் சுவையுள்ள சீடைப்பணிகாரம்;*** small balls of pastry fried and salted. (செ.அக.).

[உப்பு + சீடை.]

உப்புச்சுமத்தல் *uppu-c-cumattal,* பெ. (n.) ***ஒருவகை விளையாட்டில் வென்றவனைத் தோற்றவன் முதுகிற் சுமக்கை;*** carrying the winner on one's back, as a penalty of discomfiture in a game. (செ.அக.).

[உப்பு + சுமத்தல்.]

உப்புச்சுன்னம் *uppu-c-cuṉṉam,* பெ. (n.) ***மருந்து வகை*** (தமிழரசு.); a kind of medicinal drug. (செ.அக.).

[உப்பு + சுன்னம்.]

உப்புச்சோளம் *uppu-c-cōḷam,* பெ. (n.) ***சோள வகை*** (விவசா. 3.); a kind of maize. (செ.அக.).

[உப்பு + சோளம்.]

உப்புசம் *uppušam*, பெ. (n.) 1. ***வீக்கம்;*** swelling. 2. ***உப்பசம்*** பார்க்க; see *uppašam.*

[உப்பு → உப்புதல் → உப்புசம்.]

உப்புடாலி *uppudāli*, பெ. (n.) ***கடல் கொழிஞ்சிச் செடி;*** a medicinal plant, species of citrus - ruella ringins. (செ.அக.). (கொ.வ.).

[உப்பு + உடலி – உப்புடலி → உப்புடாலி.]

உப்புத்தண்ணீர் *uppu-t-tannīr*, பெ. (n.) 1. ***உப்புநீர்; கடல் நீர் போல் உப்புள்ள நீர்;*** salt, brackish water, opp. to-நல்ல தண்ணீர். 2. ***உப்பு இட்டுக் கலக்கிய நீர்;*** water in which salt is dissolved. (செ.அக.).

ம. உப்புநீர்.

[உப்பு + நீர்.]

உப்புத்தரவை *uppu-t-taravai*, பெ. (n.) ***உவர் நிலம்;*** saline soil. (W.). (செ.அக.).

க. உப்புநெல.

[உப்பு + தரவை.]

உப்புத்தரை *uppu-t-tarai*, பெ. (n.) ***உப்புத் தரவை*** பார்க்க; see *upputtaravai.* (செ.அக.).

[உப்பு + தரை. தரவை → தரை.]

உப்புத்தள்ளல் *uppu-t-tallal*, பெ. (n.) ***பத்தியத்தில் உப்பு நீக்கல்;*** the removal of the salt from diet. de cleridin.

[உப்பு + தள்ளல்.]

உப்புத்தாள் *uppu-t-tāl*, பெ. (n.) ***சொர சொரப்பாக ஆக்கிய தாள்*** (உப்புக் காகிதம்); sand paper. (loc.). (செ.அக.).

[உப்பு + தாள்.]

உப்புத்திரி *uppu-t-tiri*, பெ. (n.) ***மலங்கழிக்க ஏற்றுந்திரி.*** (வின்.); twist dipped in a preparation of salt, to serve as a rectal injection for a child. (W.). (செ.அக.).

[உப்பு + திரி.]

உப்புத்தூக்கு-தல் *uppu-t-tūkku-*, 5. செ.குன்றாவி. (v.t.) ***உப்புக்கட்டு***[1] பார்க்க; see *uppu-k-kattu.* (செ.அக.).

[உப்பு + தூக்கு-தல்.]

உப்புநீக்கி *uppunīkki*, பெ. (n.) ***காட்டு மருக்கொழுந்து;*** a species of mad's love.

[உப்பு + நீக்கி.]

உப்புநீர் *uppunīr*, பெ. (n.) ***உப்புத்தண்ணீர்*** பார்க்க; see *uppu-t-tannīr.*

[உப்பு + நீர்.]

உப்புப்படு-தல் *uppu-p-padu-*, 20. செ.கு.வி. (v.i.) 1. ***உப்புவிளைதல்;*** to form as salt by natural process (W.). 2. ***உப்புத்தன்மையடைதல்;*** to become saline. (செ.அக.).

[உப்பு + படு-தல்.]

உப்புப்பண்டம் *uppu-p-pandam*, பெ. (n.) ***உப்புச் சுவையுள்ள உணவுப் பண்டம்;*** salted food. (செ.அக.).

[உப்பு + பண்டம்.]

உப்புப்பயிர் *uppu-p-payir*, பெ. (n.) ***உப்பளங்களின் பாத்திகளிலே கடல் நீரைப் பாய்ச்சுவதால் விளைந்த உப்பு;*** crop of salt. (செ.அக.).

[உப்பு + பயிர்.]

உப்புப்பற்று-தல் *uppu-p-parru-*, 15. செ.கு.வி. (v.i.) ***உவர்பிடித்தல்;*** to become saline, as land. (செ.அக.).

[உப்பு + பற்று-தல்.]

உப்புப்பாத்தி *uppu-p-pātti*, பெ. (n.) ***உப்பு விளைதற்கிட மான பாத்தி;*** beds in salt-pans. உப்புப் பாத்தியிலே வெள்ளிய உப்பு விற்கும் அளவர் (மதுரைக். 117, உரை.). (செ.அக.).

ம. உப்புப்பாத்தி; க. உப்புகட்டே.

[உப்பு + பாத்தி.]

உப்புப்பார்-த்தல் *uppu-p-pār-*, 11. செ.குன்றாவி. (v.t.) ***சுவைபார்த்தல்;*** to try seasoning, as of curry by the taste. (செ.அக.).

[உப்பு + பார்-த்தல்.]

உப்புப்பால் *uppu-p-pāl*, பெ. (n.) ***ஈன்றணிமையுள்ள தாயின்பால்;*** colostrum, the first milk secreted in the breasts after childbirth. (செ.அக.).

[உப்பு + பால்.]

உப்புப்புல் *uppu-p-pul*, பெ. (n.) ***உவர் நிலத்துண்டாகும் புல்;*** grass growing on saline soils. (W.). (செ.அக.).

[உப்பு + புல்.]

உப்புப்பூ-த்தல் *uppu-p-pū-*, 4. செ.கு.வி. (v.i.) 1. ***உப்புண்டாதல்;*** to form, as salt or a lamina. 2. ***உப்புப்படிதல்;*** to form,a coating salt on any surface. 3. ***உடலிலுப்புப் படர்தல்;*** to form, as concretion on the skin, from perspiration (W.). 4. ***உப்பங்காற்றா லிற்றுப்போதல்;*** to crumble, as masonry because of weathering by a salt atmosphere.

[உப்பு + பூ-த்தல்.]

உப்புப்பொரி-தல் *uppu-p-pori-*, 4. செ.கு.வி. (v.i.) ***உப்புப்பூ-த்தல்*** பார்க்க; see *uppu-p-pū.* (செ.அக.).

[உப்பு + பொரி-தல்.]

உப்புமண் *uppu-man*, பெ. (n.) 1. ***உவர்நிலம்;*** saline soil, salt earth. 2. ***உடம்பில் உப்புப் பூத்தல்;*** formation of concretion on the skin, from perspiration. (செ.அக.).

க. உப்புமண்ணு.

[உப்பு + மண்.]

உப்புமணி *uppu-mani*, பெ. (n.) 1. ***உப்புமண்*** பார்க்க; see *uppu-man.* (ஆ.அக.). 2. ***சித்தர்கள் பயன்படுத்திய***

தாகக் கருதப்படும் கல்லுப்பு மணி; a string of beads as hard of ivory made of salt consolidated by a peculiar process known to siddhar's.

[உப்பு + மணி.]

உப்புமா *uppumā,* பெ. (n.) 1. *ஒருவகைச் சிற்றுண்டி;* salted confection of flour or meal. 2. *உடம்பிற் பூக்கும் உப்பு* (பதார்த்த. 634, உரை.); beriberi, producing a sallow colour all over the body. (செ.அக.).

ம. உப்புமா.

[உப்பு + மா. மாவு → மா.]

உப்புமாந்தம் *uppu-māndam,* பெ. (n.) *குழந்தைகளுக்கு வயிறு உப்புசத்தாலுண்டாகும் நோய்;* puffing of the abdomen, a disease of children. (செ.அக.).

[உப்பு + மாந்தம். மந்தம் → மாந்தம்.]

உப்புமாறு-தல் *uppu-māṟu-,* 5. செ.குன்றாவி. (v.t.) *ஏமாற்றுதல்;* to cheat. (செ.அக.).

[உப்பு + மாறு. பண்டமாற்று வணிகரும் உப்புவிற்கும் உமணரும் உப்பின் கொள்ளளவுக்குச் சமமாக நெல், பயறு போன்ற தவசங்களைப் பெறுவது நாளடைவில் ஏமாற்றுவதாகக் கருதப் பட்டதால் இச்சொல் இப்பொருளுக்குரியதாயிற்று.]

உப்புமாறு[2]-தல் *uppu-māṟu-,* 5. செ.கு.வி. (v.i.) *உப்பு விற்றல்;* to sell salt. "உயிருண்டாகில் உப்பு மாறியுண்ணலாம்" (அஷ்டாதச. பிரபந்த. பக். 71.).

[உப்பு + மாறு-தல்.]

உப்புமிளகி *uppu-miḷagi,* பெ. (n.) *ஐந்து மாதத்தில் விளையும் நெல்வகை* (விவசா. 1.); a kind of paddy; maturing in five months. (செ.அக.).

[உப்பு + மிளகி. மிளகு → மிளகி.]

உப்புமூலிகை *uppu-mūligai,* பெ. (n.) *உப்புச் சத்துள்ள மூலிகைகள்;* the herbaseous plants containing the essence of salt. எருக்கு, துத்தி, குப்பைமேனி, வாழை, முருங்கை, ஊமத்தை, நாயுருவி, தென்னோலை, அறுகு, பிரண்டை, எள், பூவரசு.

[உப்பு + மூலிகை.]

உப்புமெழுகு *uppu-meḻugu,* பெ. (n.) *உப்பினால் செய்த மெழுகு;* medicinal wax-like preparation of salve obtained by special process from the common salt.

[உப்பு + மெழுகு.]

உப்புரிசை *uppuriśai,* பெ. (n.) *உப்பரிகை* (ஆ.அக.); upper storey.

[உப்பு → உப்புரிகை → உப்புரிசை.]

உப்புல் *uppul,* பெ. (n.) *செங்கள்ளி;* red species of rate - spurge.*]*

[உருப்பு (சிவப்பு) → உப்பு → உப்புல்.]

உப்புவாடி *uppu-vāḍi,* பெ. (n.) *உப்புக் கொட்டும் மேடை;* platform on which salt is heaped up (m.m.). (செ.அக.).

ம. உப்புசாப்ப (உப்பு வைக்கும் அறை.).

[உப்பு + வாடி. வழங்குதல் = புழங்குதல். வழங்கு → தெ.வாடு (பயன்கொள், புழங்கு.). தெ. வாடு → த. வாடு → வாடி. ஒ.நோ. மரவாடி.]

உப்புவாணிகன் *uppu-vāṇigaṉ,* பெ. (n.) 1. *உப்பு விற்கும் குடியினன்* (சூடா.); member of a caste of salt vendors. 2. *உப்பளவர்* பார்க்க; see *uppaḷavar.*

[உப்பு + வாணிகன்.]

உப்புவாயு *uppu-vāyu,* பெ. (n.) *உப்பங்காற்று* பார்க்க; see *uppaṅkāṟu.*

[உப்பு + வாயு.]

உப்புறை-த்தல் *uppuṟai-,* 4. செ.கு.வி. (v.i.) 1. *உப்புச் சுவை காணுதல்;* to be well flavoured with salt. 2. *உப்புக் கரித்தல்;* to be over-flavoured with salt. (செ.அக.).

[உப்பு + உறை-த்தல்.]

உப்பூரிகுடிகிழார் *uppūrikuḍikiḻār,* பெ. (n.) *உருத்திரசன்மர் தந்தை;* father of Uruttirasaṉmar. (ஆ.அக.).

[உப்பூர் + குடி - உப்பூரிகுடி + கிழார்.]

உப்பூறணி *uppūṟaṇi,* பெ. (n.) 1. *உப்புச் செறிவு;* being impregnated with salt, as saline soil. 2. *உவர்நிலம்* (ஆ.அக.); saline soil. (செ.அக.).

[உப்பு + ஊறு + அணி.]

உப்பெடுத்தல் *uppeḍuttal,* பெ. (n.) *நாட்டுக் கோட்டைச் செட்டியார்களில் மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்கு உப்பும், ஒன்பான் வகைத் தவசமும், திருமண உடன்படிக்கை யெழுத ஓலையும் எடுத்துச் செல்லும் சடங்கு;* ceremony among Nāṭṭukkōṭṭai chettis in which the bridegroom's party carries to the bride's house a basket containing salt and nine kinds of grain together with a palmyra scroll for writing the marriage contract on. (செ.அக.).

[உப்பு + எடுத்தல்.]

உப்பேறி *uppēṟi,* பெ. (n.) 1. *உப்புடன் உசிலை இட்டுப் பொரித்த கிழங்கு அல்லது பழ உணங்கல் கறி;* curry of chopped fruit or tubers well seasoned with salt, pepper and other condiments and then fried in ghee or oil. 2. *உப்புக்கறி* பார்க்க; see *uppu-k-kaṟi.* (செ.அக.).

ம. உப்பேறி.

[உப்பு + கறி - உப்புக்கறி → உப்பேறி = உப்புச்சுவையூட்டுவதால் பெற்ற பெயர். இது சேர நாட்டுப் பண்டம். வறுத்துப் பேரி, வெள்ளுப் பேரி, சேன உப்பேரி, சீனியுப்பேரி, சக்கயுப் பேரி, சருக்கரையுப்பேரி எனப் பல வகைப்படும்.]

உப்பை *uppai,* பெ. (n.) 1. ***ஓரியற்பெயர்;*** a proper name. 2. ***திருவள்ளுவர் உடன் பிறவிகளுள் ஒருத்தி;*** name of one of the reputed sisters of Tiruvalluvar, the author of the *Kural.* "வயலூற்றுக் காட்டிலுப்பை" (தனிப்பா.). (செ.அக.).

[உப்பு → உப்பை (உயர்ந்தவள், சிறந்தவள்.)]

உம்[1] *um,* இடை. (part.) (அ) 1. ***எண்ணும்மை;*** connective particle implying simple connection as in சேரனும் பாண்டியனும். 2. ***எதிர்மறையும்மை;*** negation, as in மறப்பினு மோத்துக் கொளலாகும். 3. ***சிறப்பும்மை;*** speciality whether of superiority or inferiority as in "குறவருமருளுங்குன்றம்" அல்லது புலையனும் விரும் பாத யாக்கை. 4. ***ஐயவும்மை;*** uncertainty as in அவன் வெல்லினும், வெல்வான். 5. ***எச்சவும்மை;*** something understood, as in சாத்தனும் வந்தான். 6. ***முற்றும்மை;*** universality as in தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார். 7. ***தெரிநிலையும்மை;*** declaration of a conviction as in ஆணுமன்று, பெண்ணுமன்று when speaking of a hermaphrodite. 8. ***ஆக்கவும்மை*** (நன். 425.); in addition to as in பாலுமாயிற்று, which signifies that milk is not only food, but also medicine. (ஆ) 1. ***பலர்பாலொழிந்த படர்க்கை நிகழ்கால எதிர் கால முற்று ஈறு;*** ending of 3rd pers. sing of all genders and of the impers. pl. of verbs of the present as well as the future tense.

உம்[2] *um,* இடை. (part.) 1. ***ஏவற்பன்மை ஈறு;*** imp.pl. 2. ***ஒரு வியங்கோள் துணை ஈறு;*** opt. auxiliary. "பழுதுறா வகையிய ற்றவும்" (பிரபோத. 10,16). 3. ***எதிர்காலப் பெயரெச்ச ஈறு;*** fut.rel.pple. 4. ***விரைவுப் பொருளைக் காட்டும் வினையெச்ச ஈறு;*** vbl. part. indicating immediate occurrence. "நடக்கலு மாங்கே" (கலித். 39,34.). 5. ***ஓர் அசைநிலை;*** poetic expletive. "காமக்கடல் மன்னுமுண்டே" (குறள். 1164). 6. ***மேலெழுதற் கருத்து ஒலிக்குறிப்புச்சொல்;*** "உம்" எழுந்திரு. (உ.வ.). onom. expr. signifying ascending.

ம., க. உம்.

[உ → உம். உம்முதல் = பொருந்துதல், மூடுதல், கவித்தல், முழுமையாக உள்ளடக்கிக் கொள்ளுதல்.]

உம்[3] *um,* இடை. (part.) 1. ***உடன்பாட்டைக் குறித்த இடைச் சொல்;*** an expletive denoting 'yes'. 2. ***மேலும் கேட்பதோர் அவாவினை வெளிப்படுத்துமோர் இடைச்சொல்;*** an expletive expressing the desire to know further.

[உ → உம்.]

உம்கூட்டு-தல் *um-kūttu-,* 15. செ.கு.வி. (v.i.) ***உம் கொட்டு-தல்*** பார்க்க; see *um-kottu.*

உம்கொட்டு-தல் *umkottu-* 5. செ.கு.வி. (v.i.) 1. ***உம்மொலியிட்டுப் பிறர் கூறுவதைக் கேட்டல்;*** to respond by ejaculating 'um' as in listening to a story that is told. 2. ***இசைவு தெரிவித்தல்;*** to say 'yes', agree without questioning.

தெ. ஊகொட்டு; பட. ஊங்கட்டு; ஆத். உங்கூ.

[உம் - இசைவு குறித்த ஒலிக்குறிப்பு. உம் + கொட்டு.]

உம்பங்காய் *umbangāy,* பெ. (n.) ***கொட்டையில்லாப் பனங்காய்;*** palmyra fruit without seed. (சா.அக.).

[உரும்பு → உம்பு + அம் + காய்.]

உம்பர் *umbar,* பெ. (n.) 1. ***மேலிடம்;*** elevated spot, higher place. "மாடத்தும்பர்" (ஞானா. 9,6). 2. ***உயர்ச்சி*** (திவா.); height, elevation. 3. ***வானம்;*** sky. "உம்பருச்சி யிற்.... கதிர்பரப்பு கடவுள்" (திருவிளை. தண்ணீர். 22.). 4. ***தேவலோகம்;*** celestial world, paradise. "உம்பர்க்கிடந்துண்ண" (நாலடி. 37). 5. ***தேவர்;*** celestials, immortals, gods. "ஒலி கடல் சூழுலகாளு மும்பர்தா மே" (திவ். பெரியதி. 7,8,10). 6. ***பார்ப்பார்;*** Brahmans (W.). - கு.வி.எ. (adv.) 1. ***அப்புறம்;*** yonder, on the farther side of. "ஆறைங்காத நம் மகனாட் டும்பர்" (சிலப். 10,42). 2. ***மேலே;*** over head, aloft. "யான் வருந்தி யும்பரிழைத்த நூல்வலயம்" (பெரியபு. கோச்செங். 5.).

[உ → உம் → உம்பு → உம்பர்.]

ம. உம்பர் (தேவர்); வ. உபரி (இ.வே.); *Z.* upairi; *Goth.* ufar; *OG.* obar; *M.G.* uber; *E.* over; *L.* super; *G.K.* huper. உம்பர் என்னுஞ்சொல்லைத் தேவரைக் குறிக்கும் போது உம்பு + அர் என்று பிரிக்கலாம். உப்பர் = மேலே. உப்பரி = மேல், மேலே, மேற்பக்கம், மேனோக்கி, மேற்கொண்டு, அப்பால், அப்புறம். இச்சொல் வடமொழியில், வேரில்லாததும், வேற்றுமைப் படுத் தப் படாததும், குறிப்பு வினை யெச்சமாகவும் (adv.) முன் னொட்டாகவும் (Pref.) ஆளப் படுவதும் ஆன தனிச்சொல். ஆதலால், தென் சொற்றிரிபு என்பது தெளிவு. இந்தியிலுள்ள ஊப்பர் என்னுஞ்சொல், அம்மொழிக்கு நேர் மூலமான சூரசே னிப் பிராகிருதத்திலும், பெரும்பாலும் உப்பர் என்று வழங்கி யிருத்தல் வேண்டும். அதிலிருந்து இலத்தீனத்திற்குச் சென்று சூப்பெர் (super) என்று திரிந்தது. சொற்களின் உயிர்முதல் இங்ஙனம் சகர மெய்யேறுவது இயல்பே. ஒ.நோ: உதை → சுதை (உதைக்கும் ஆ) உருள் → சுருள். உலவு → சுலவு. உவணம் → சுவணம். உழல் → சுழல். Super என்னும் இலத்தீன் சொல், மேலுள்ள, மேற்பட்ட, மேலை, மேனோக்கிய, மேற் செல்லும், மேற்கொள்ளக்கூடிய, மேனோக்கான, மேலான என்னும் குறிப்புப் பெயரெச்சப் பொருள்களிலும்; மீது, மேல், மேலே, மேலாக, மேனோக்காக, மேனோக்கி, மேலும், மேற் பட்டு, மேற்கொண்டு, அதிகமாக, அப்பால், அப்பாற்பட்டு, அப்புறம் என்னும் குறிப்பு வினையெச்சப் பொருள்களிலும் முன்னொட்டாகவும் அடை சொல்லாகவும் வழங்கும். *Supera-supra; above. superabilis; It.* superabile; *OF., E.* superable, Superaddo; *E.* superadd, superbus; *E.* superb, Supercilious; *E.* supercilious, with raised eyebrows, Superficies; *E.* superfice, Superfluus; *E.* Superfluous, Super-humanus; *E.* Superhuman, Superior; *It.* superiore; *Sp.Pg., OF., E.* superior, Supernus; *It., Sp., Pg.* superno; *OF.* superne; *E.* supern, Superscribo; *E.* superscribe, Supremus; *E.* supreme,. Super என்னும் இலத்தீனச் சொல்லின் பகரம் சில கிளைமொழிகளில் வகரமாக மாறுகின்றது. *L.* superanus; *It.* soprano, sovrano; *Sp.Pg.* soberano; *MDU.* soferein, sov(e)rein; *OF.* severain, souverein; *mod., F.* souverain; *E.* sovereign; *E.* soprano - the highest kind of female voice; *Sp.* sobrecargo; *E.* supercargo, person in merchantship managing sales etc., of cargo. Super என்னும் இலத்தீன முன்னொட்டு

பிரெஞ்சிலும் அதன் வழியாக ஆங்கிலத்திலும் Sur என்று தொக்கும் - வழங்கும். (எ.டு.) surplus, surround, surcharge, surveillance. Sur என்பது Sir என்றும் திரியும். (எ.டு.) surloin - sirloin supperloin. Sur என்பது Su என்றும் குறுகும். (எ.டு.) sur(r), sum, upward. Super என்னும் இலத்தீனச் சொல் கிரேக்கத்தில் huper என்று திரிந்துள்ளது. சகர முதற்சொற்கள் கிரேக்கத்தில் ககர முதலாகத் திரிதல் இயல்பே.

இலத்தீனம்	கிரேக்கம்	ஆங்கிலம்
sex	hex	six
septem	hepta	seven
semi	hemi	same (Goth)
similis	homos	sama (ON)
somnus	hupnos	(slup)

ஆங்கிலத்தில் huper என்னும் கிரேக்கச் சொல் hyper என்று திரியும் (எ.டு.). hyper bole, hypereltie, hypergamy, hypermetric, hupermetropia, hyperphysical, hypertension, hypertrophy.

உம்பர் என்னும் சொல் இலத்தீனத்திற்கும் அப்பாற்பட்ட செருமானியக் குடும்ப மொழிகளில் கிரேக்கத்திலும் மிகத்திரிந் திருப்பினும், சகர மெய்ம் முதல் கொள்ளாது தமிழ்ச் சொல்லை ஒருபுடை யொத்து uber, up என்று இருவேறு வடிவிலும் அவற்றின் மேலுந்திரிந்தும் வழங்குவது, வரலாற்றுத் தொடர்பில் மிகக் கவனிக்கத்தக்கது. *Uber: OHG.* uber (adv.) ubiri. (prep.); *MHG.* uber; *G.* uber, ober; Goth. ufar (prep. & adv.); *OS.* obar; *OMG.* obar; *MG.* ober; *OFris.* over; *MDU., MLG., DU.LG.* over; *D.* over; *OE.* ofer; *SW.* ofver; *ON.* yfer. உகரத்திற்கு ஒகர ஓகாரமும் பகரத்திற்கு வகரமும் வகரத்திற்கு f உம் இன வெழுத்துகளாதலால் மேற்குறித்த சொல்லெல்லாம் ஒன்றோடொன்று தொடர்புடையன. above - என்னும் ஆங்கிலச் சொல் a + be + ufan - என்னும் முச்சொல் கூட்டு. அன் (மேல்) on - an - a. பூ > *Skt.*bhu-*E*-be. பூத்தல், தோன்றுதல், உண்டாதல், உண்டாயிருத்தல். ''பூத்தலிற் பூவாமை நன்று'' (நீதிநெறி. 6.). புகு → பொகு → பொகில் = அரும்பு. புகு → பூ. உம்பு upa → ufa → uf (ufan.). இங்ஙனம் ''பல செருமானியக் கூட்டுச் சொற்களின் உறுப்பாகத் தமிழ்ச் சொற்கள் உருத்தெரியாது திரிந்து பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. செருமானியம் என்பது தியூத் தானியம் (Teutonic). வட செருமானியம், கீழைச் செருமானியம், மேலைச் செருமானியம் எனச் செருமானியப் பெருங்குடும்பம் முச்சிறு குடும்பங்களாகப் பிரிக்கப்படும். ஆங்கிலம் மேலைச் செருமானியத்தைச் சேர்ந்தது. கோதியம் (Gothic) கீழைச் செருமானியம். காண்டினேவியம் (Scandinavian), வட செருமானியம். பல செருமானியச் சொற்கள் ஐரோப்பாவின் தெற்கில் வழங்கும் இத்தாலியச் சொற்களிலும் கிரேக்கச் சொற்களிலும் தமிழுக்கு மிக நெருக்கமாயிருக்கின்றன. *UP: OE.* upp, up; *OFris.* up, op; *OL., Fr.* up; *Mdu.* up, op; *Os.* up; *MLG., LG.* up, on, upp; *Norw.* upp; *MSW.* up, op; *SW.* upp; *Du.* op; *Da.* Op; *N., Frish.*ap; *WFRISH.* op; *Goth.* iup; *OHG.* uf; *MHG.* uf, ouf; *G.* auf.

உம்பு → உப்பு → உப் → உவ். தென்கிழக்கைரோப்பாவை யடுத்த மேலையாசியாவினின்று வந்ததாகத் தெரிகின்ற கீழை யாரியம், ஈரானியம், இந்தியம் என இரு கிளைகளுள்ளது. ஈரானியத்தின் முதுநிலை செந்து (Send). புதுநிலை பாரசீகம் (Persian). இந்தியத்தின் முதுநிலை வேதமொழி, புதுநிலை சமற்கிருதம். உம்பர் → உப்பைரி (செந்து) → உப்பரி (வேத மொழி).

இத்தாலியச் சொற்போல் சகரமெய்ம்முதல் பெறாமலும், கிரேக்கச் சொற்போல் முதலாகத் திரியாதும், உகர முதலதாகவே தமிழ்ச் சொற்போலும் ஒருசார் செருமானியத்தை யொத்தும், கீழையாரியச் சொற்கள் வழங்குவது கவனிக்கத்தக்கது. ஆரிய வல்லினம் தமிழ் வல்லினத்தை நோக்கக் கடியனவாதலால் *Upari, upairi* என ஒற்றைப் பகரத்தொடு குறிக்கப்படும் ஆரியச் சொற்கள் தமிழ் ஒலிக்கேற்ப இரட்டைப் பகரத்தோடு குறிப்பிட்டன என அறிக.

குமரி நிலத் தமிழினின்று திரவிடமும், திரவிடத்தினின்று பிராகிருதமும், பிராகிருதத்தினின்று ஆரியமும் திரிந்திருத்தலால் வேதமொழி திரிமொழியேயன்றி தமிழ்போல் இயன்மொழியன்று. ஆதலால், உப்பரி என்னும் வேதமொழிச் சொல் உப்பர் என்னும் தென் சொற்றிரிபே யென்பது தெரிதரு தேற்றம்.

Upariya, to go upwards. Upari sailam gam, to go over the mountain.Sahasram satani upari castaw 1000 and 800 in addition. Upari payah pibet, he must drink milk after wards. Upary upari sarvesam at is that, he stood at the very head of all at, manam tasya upari ksiptva, having thrown himself upon him, mamopari vikaritatih, changed in feeling with regard to me. Putrasyopari kruddhah, enraged towards his son. Muhūrtad upari, after a minute, Uparikuti, an upper room, upary upari, higher and higher, replatedly, continuously (R.V.) இவ்வெடுத்துக் காட்டுகளினின்று, வடமொழி உப்பரிச் சொல்லாட்சி தென்மொழி உம்பர்ச் சொல் லாட்சியை யொத்திருப்பதைக் காணலாம். அம்பர், இம்பர், உம்பர், எம்பர் எனச் சுட்டு வினாச் சொற்கள் மட்டுமின்றி, இடக்கர், இடங்கர் எனப் பிறசொற்களும் ''அர்'' ஈறு பெற்றிருப்பதால், super, hyper, uber, ufar, over.. .. .. என்பன up, upper.. என்னும் பிற்காலச் சொற்போல் உயர்தரச் சொல் (Comparative term) அல்ல. உப்பரி, உப்பைரி என்னும் வடிவுகளையும் நோக்குக. (செல்வி 77, செப். 21,22.).]

உம்பர்காட்டிளங்கண்ணனார் *umbar-kāṭṭiḷaṅ-kaṇṇaṉār,* பெ. (n.) ***கடைச் சங்கமருவிய காலப் புலவர்;*** name of a poet of later 'Sangam age'.

[உம்பல் → உம்பர் + காடு + இளங்கண்ணன் + ஆர். உம்பல் = யானை.]

உம்பர்கோன் *umbar-kōṉ,* பெ. (n.) ***கடவுள் தலைவர், இந்திரன்;*** Indira, the lord of the celestials. ''உம்பர் கோனு முலகேழும் வந்தீண்டி வணங்கும்'' (திவ். பெரியதி. 5,4,5).

ம. உம்பர்கோன்.

[உம்பர் + கோன்.]

உம்பர்நாடு *umbar-nāḍu,* பெ. (n.) ***தேவ உலகம்;*** world of the gods, heaven.

[உம்பர் + நாடு.]

உம்பர்நாயகன் *umbar-nāyagaṉ,* பெ. (n.) ***இந்திரன்;*** Indiran.

[உம்பர் + நாயகன்.]

உம்பரம் *umbaram,* பெ. (n.) 1. ***மேலுலகம்;*** heaven. 2. ***வானம்;*** sky.

உம்பராகம் *umbarāgam,* பெ. (n.) ***ஆத்திமேற் புல்லுருவி;*** parasitic plant found grown on mountain ebony tree.

உம்பரார் *umbarār,* பெ. (n.) ***தேவர்;*** celestials. "உம்ப ரார்க்கு முறைப்பருந் தகைய ரானார்". (சீவக. 1678.).

[உம்பர் + ஆர்.]

உம்பரான்[1] *umbarāṉ,* பெ. (n.) ***தேவருலகத்துப் பெற்றம்; காமதேனு*** (வின்.); cow of the celestial world. (செ.அக.).

[உம்பர் + ஆன். ஆ → ஆன். (பெற்றம்.)]

உம்பரான்[2] *umbarāṉ,* பெ. (n.) ***உயர்நிலையிலிருப்ப வன்;*** person in high state, one in exalted position. "உவப்பி னும்பரான்" (கந்தபு. மாயைப். 33). (செ.அக.).

[உம்பர் + ஆன். (ஆ.பா.ஈறு.).]

உம்பருலகு *umbarulagu,* பெ. (n.) ***தேவருலகம்;*** world of the Gods. "கற்போர்.. உம்பருலகாள்வர்" (திருவா லவா. பயன்மு. 5). (செ.அக.).

[உம்பர் + உலகு.]

உம்பரூர் *umbarūr,* பெ. (n.) ***பொன்னாங்காணி;*** an edible plant bearing white flowers. (சா.அக.).

[உம்பர் + ஊர்.]

உம்பல்[1] *umbal,* பெ. (n.) ***குமிழ்*** (மலை.); coomb teak.

[உம் → உம்பு → உம்பல்.]

உம்பல்[2] *umbal,* பெ. (n.) 1. ***எழுச்சி*** (பிங்.); rising. 2. ***யானை*** (உயரமான விலங்கு); elephant. "யானைக்க மரரும்பல்" (திருவள்ளுவ. மா. 36). 3. ***வலிமை*** (திவா.); strength.

[உம் → உம்பு → உம்பல். (வே.க. 32).]

உம்பல்[3] *umbal,* பெ. (n.) ***வழிப்பிறந்தோன்; பின்னோன்;*** descendant. "நல்லிசைச் சென்றோரும்பல்" (மலைபடு. 540).

[உம்பு → உம்பல். கொடிவழியில் மேற்றொடரும் பிறங்கடை பின்னோனாதலின் உம்பல் எனப்பட்டது. (வே.க. 37).]

உம்பளச்செய் *umbaḷa-c-cey,* பெ. (n.) ***செய்த ஊழியத் துக்காக விடப்பட்ட நிலம்;*** land granted for services rendered. "மடுத்தகுடி அம்பலத்தா ரும்பளச்செய் யவ்வ ளவும்" (சரவண. பணவிடு. 186). (செ.அக.).

[உம்பளம்[1] + செய்.]

உம்பளம்[1] *umbaḷam,* பெ. (n.) 1. ***மானியநிலம்;*** land granted rent-free for the performance of service. (Loc.). 2. ***பரிசு;*** gift. (ஆ.அக.). (செ.அக.).

ம. உம்பளம்; **க.** உம்பணி, உம்பழி, உம்பழிகை, உம்புழி, உம்மழி; **து.** உம்பொளி; **தெ.** உம்பொளமு, உம்பளமு, உம்பளிக, உம்பள்.

[உண்பு + அளி - உம்பளி → உம்பளம். உண்பதற்காக அல்லது உணவுப் பொருளுக்காக அளிக்கப்பட்ட இறையிலி நிலம் உம்பளி எனப்பட்டது.]

உம்பளம்[2] *umbaḷam,* பெ. (n.) ***உப்பளம்;*** salt pan. "உம்பளந் தழீஇய வுயர்மண னெடுங்கோட்டு" (மணிமே. 24,27). (செ.அக.).

[உம்பு + அளம் - உம்பளம். உம்புதல் = மேலெழுதல்; பொங்கு தல். அள் → அளம் = ஏதேனும் பொருள் செறியும் இடம். பொரிந்து மேலெழும் இயல்பினால் உப்புக்கு உம்பு எனும் பெயர் தொடக்கத்தில் அமைந்தது. பின்னர் உம்பு → உப்பு என வலித்தது.]

உம்பன் *umbaṉ,* பெ. (n.) 1. ***உயர்ந்தோன்;*** pre-eminent being. "உம்பரீச ரும்பன்" (ஞானா. பாயி. 7,4.). 2. ***கடவுள்;*** god. "நீலமேனி உம்பனை" (காஞ்சிப். அந் தர்வே. 32).

[உம்பு + அன். உம்பு = உயர்வு.]

உம்பி *umbi,* பெ. (n.) ***உன் தம்பி;*** he who was born after you, your younger brother. "உம்பியெம்பியென்று" (திவ். பெரியதி. 5,8,1). (செ.அக.).

[உம் + பின் - உம்பின் → உம்பி. பின் = பின் பிறந்தவன், தம்பி.]

உம்பிடிக்கோல் *umbiḍi-k-kōl,* பெ. (n.) ***நிலவளவு கோல் வகை;*** a standard measuring rod used for measuring lands. (Rd.). (செ.அக.).

[உம்பன் → உம்பனி → உம்பிளி → உம்பிடி + கோல்.]

உம்பிலாதி *umbilādi,* பெ. (n.) **உம்பிலிக்கொடி** பார்க்க; see *umbili-k-koḍi.* (சா.அக.).

உம்பிளிக்கை *umbiḷi-k-kai,* பெ. (n.) **உம்பளம்** பார்க்க; see *umbaḷam.*

க. உம்பழிகெ; **தெ.** உம்பளிக; **து.** உம்பொளி.

[உம்பு + அளம் - உம்பளம் → உம்பளக்கை → உம்பிளிக்கை.]

உம்பு *umbu,* கு.வி.எ. (adv.) ***மேலே;*** up a high(er) place, position, degree, amount, value.

[உ → உம் → உம்பு. (மு.தா. 339).]

உம்மங்காய் *ummaṅgāy,* பெ. (n.) ***கொட்டையில்லாப் பனங்காய்.*** (யாழ்ப்.); seedless palmyra fruit. (செ.அக.).

[உம் → உம்மி + காய் - உம்மிக்காய் → உம்மக்காய் → உம்மங்காய். உம்மி = மேற்பற்றுள்ளது, உமிபோல்வது, உள்ளீடில்லாதது.]

உம்மச்சு[1] *ummaccu,* பெ. (n.) **உம்மிசம்** பார்க்க; see *ummišam.* (செ.அக.).

தெ. ஒம்மத்சு.

உம்மச்சு[2] *ummaccu,* பெ. (n.) ***கம்பியிழுக்கும் சட்டம்;*** wire - drawer's plate.

தெ. கம்மத்சு.

[உம் = கூடுதல், பொருத்துதல். உம் + அச்சு - உம்மச்சு.]

உம்மணாமூஞ்சி *ummaṇā-mūñji,* பெ. (n.) 1. ***தாராளமா கப் பேசத் தெரியாதவன்;*** one who is unable to speak

freely. 2. **ஊக்கமில்லாத முகத்தினன்;** sullen, sulky person. (Vul.). (செ.அக.).

[உம் - உதடுகள் மூடிய நிலையில் பேசாமலிருக்கும் ஒலிக் குறிப்பு. உம் → உம்மணம் + மூஞ்சி. முகம் → மூஞ்சி.]

உம்மம் *ummam,* பெ. (n.) 1. **முத்தம்;** kiss. 2. **தொங்கல்;** fringe, tassel. (சேரநா.).

ம. உம்மம்; **க.** உம்மு; மால். சுங்வெ.

[உம் → உம்மம்.]

உம்மரப்படி *ummarappaḍi,* பெ. (n.) **வாசற்படி;** threshold. (சேரநா.).

ம. உம்மரப்படி.

[உம்பரம் → உம்மரம் + படி.]

உம்மரப்பல் *ummarappal,* பெ. (n.) **முன்பல்;** fore-tooth.

ம. உம்மரப்பல்லு.

[உம்பரம் → உம்மரம் + பல்.]

உம்மரம் *ummaram,* பெ. (n.) 1. **வாசற்காலின் மேற்ப லகை;** upper timber of a door-frame. 2. **வாசற்படி;** front of a house, door - way threshold. 3. **வாசற்காலின் கீழ்ப்பலகை;** lower timber of a door-frame.

ம. உம்மரம்.

[உ → உம் → உம்மரம். ummara > Skt. umbara.]

உம்மளம் *ummaḷam,* பெ. (n.) **உப்பளம்;** salt pan.

[உப்பு → உம்பு → உம்பளம் → உம்மளம் (கொ.வ.).]

உம்மா *ummā,* பெ. (n.) **அம்மா;** mother. Ar. umma.

[அம்மா → உம்மா (கொ.வ.).]

உம்மாச்சி *ummācci,* பெ. (n.) **பெண்தெய்வம்;** Goddess. உம்மாச்சி கும்பிடு (பிரா.வ.).

[அம்மை → உம்மை + ஆச்சி - உம்மாச்சி. ஆத்தாள் → ஆத்தி → ஆச்சி.]

உம்மாண்டி *ummāṇḍi,* பெ. (n.) 1. **பூச்சாண்டி;** bug bear. (J.). 2. **வெருட்டுஞ் சொல்;** frightening word. (செ.அக.).

ம. உம்மாக்கி.

[உம் - அச்சுறுத்தும் ஒலிக்குறிப்புச் சொல். உம் + ஆண்டி - உம்மாண்டி = ஆண்டிக் கோலத்தில் வருபவன். பேசாமல் பதுங்கிவரும் பகைவிலங்கு போன்றவன் என்பது குறிப்புப் பொருள்.]

உம்மி *ummi,* பெ. (n.) **காய்ந்தது; உலர்ந்தது;** dried.

[உல் → உம் → உம்மி.]

உம்மிசம் *ummišam,* பெ. (n.) **வயிரக்கல் பதிக்க அமைத்த நகைக் கட்டடம்;** groove in the framework, of a jewel in which stones are to be set. (Loc.). (செ.அக.).

தெ. ஓம்மத்சு.

[உம் = பொருத்துதல். உம் → உம்மிதம் → உம்மிசம். (கொ.வ.).]

உம்மியம் *ummiyam,* பெ. (n.) 1. **பிறவி நஞ்சு** (சங்.அக.); mineral poison. 2. **நஞ்சு விளையும் நிலம்.** (ஆ.அக.); poisonous land. (செ.அக.).

உம்மு¹-தல் *ummu-,* 5. செ.கு.வி. (v.i.) **கூடுதல்; இணைதல்; உடனிருத்தல்; பொருந்துதல்; ஒட்டுதல்; ஒத்தல்;** to join, fix together, mix, mingle.

[உ → உம் → உம்மு.]

ம., **க.** உம்.

''உம்'' என்னும் சொற்குக் கூடுதற் பொருள் இருத்தலாலேயே அது இன்றும் எண்ணுப் பொருளிடைச் சொல்லாக வழங்குகின் றது. (எ.டு.) அறமும் பொருளும், இன்பமும் வீடும், வந்தும் போயும். எண்ணும்மை இடைச் சொல் பல பொருள்களை அல்லது சொற்களை ஒன்று சேர்த்தல் காண்க. உம்மிடைச் சொற்குக் கூடுதற் பொருளிருப்பதை இருவகைச் சிறப்பும்மைக் கும் பகரமாக (பதிலாக)க் கூட என்னும் சொல் ஆளப்பெறின், பொருள்களை அல்லது சொற்களை ஒன்று சேர்த்தல் காண்க. உம்மிடைச் சொற்குக் கூடுதற் பொருளிருப்பதை, இருவகைச் சிறப்பும்மைக்கும் பகரமாக (பதிலாக)க் கூட என்னும் சொல் ஆளப்பெறின் பொருள் மாறாதிருப்பதாலும் அறியலாம். (எ.டு.) புலவர்க்கும் தெரியாப் பொருள் = புலவர்க்கும் கூடத் தெரியாத பொருள். புலையனும் விரும்பாப் புன்புலால் யாக்கை=புலையன் கூட விரும்பாப் புன்புலால் யாக்கை. யாம், நாம், நீம், தாம் முதலிய மூவிடப் பெயர்களின் பன்மையுணர்த் தும் மகரவொற்றும், உம்மிடைச் சொற் குறிப்பே. (வே.க. 38, த.ம.4.).

உம்மு²-த்தல் *ummu-,* 5. செ.கு.வி. (v.i.) **காய்தல்;** to become dry.

[உல் → உம் → உம்மு.]

உம்மெனல் *ummeṉal,* பெ. (n.) 1. **உடன்பாடு, சினம் முதலியவற்றின் ஒலிக்குறிப்பு;** utterance of an interj. sound 'um' expressive of assent, anger or threat. 2. **ஓர் ஒத்தொலித்தலோசை;** onom. expr. denoting the sound of bubbling streams, pattering of rain, murmuring of the wind. உம்மென்றெழு மருவித்திரள்'' (தேவா. 244.3). (செ.அக.).

[உம் + எனல்.]

உம்மை¹ *ummai,* பெ. (n.) **உம்மெனிடைச் சொல்;** part. உம். ''உம்மை எட்டே'' (நன். 425.). (செ.அக.).

[உம் → உம்மை.]

உம்மை² *ummai,* பெ. (n.) 1. **முற்பிறப்பு;** birth previous to the present one. ''உம்மை வினை வந்துருத்த லொழி யாது'' (மணிமே. 26, 32). 2. **மறுமை;** life beyond the grave, existence after the present life. ''உம்மை யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்'' (நாலடி. 58.). (செ.அக.).

[உ → உம் → உம்மை. ''உம்'' எனும் முன்மைச்சுட்டு காலமுன், இடமுன் என்னும் இருவகையினும் முன்னோக்கும் பின்னோக் கும் கொண்டது. எனவே, முற்பிறப்பும் மறுபிறப்பும் குறித்தது.]

உம்மைத்தொகை *ummai-t-togai,* பெ. (n.) **'உம்' என்பது தொக்க தொகை.** (நன். 368. உரை); (Gram.) an elliptical compound in which the conj. part. 'உம்' is understood, as இராப்பகல். (செ.அக.).

[உம் → உம்மை + தொகை.]

உம்மையெஞ்சணி *ummai-y-eñjaṇi,* பெ. (n.) **அணி வகையுளொன்று;** a kind of rhetoric.

[உம்மை + எஞ்சு + அணி.]

உம்வரம் *umvaram,* பெ. (n.) **மேல்வாயிற்படி.** (சங். அக.); upper timber of a door frame. (செ.அக.).

[உம் = உயர்வு, மேல். உம் + (வாரம்) வரம்.]

உமட்டியர்[1] *umaṭṭiyar,* பெ. (n.) **உமணக் குலத்துப் பெண் மக்கள்;** women of the Umaṇ caste. "உமட்டிய ரீன்ற ...புதல்வரொடு" (சிறுபாண். 60). (செ.அக.).

[உம்மளம் → உம்மளன் → உம்மணன் → உமணன் → உமணத்தி → உமட்டி + அர்.]

உமட்டியர்[2] *umaṭṭiyar,* பெ. (n.) **நுளைச்சியர்** (அக.நி.); fisher-women. (செ.அக.).

[உமணத்தி → உமட்டி + அர். உப்பு விளைப்பவரே மீனவராக வும் இருந்தமையை இச்சொல் காட்டுகிறது.]

உமண் *umaṇ,* பெ. (n.) 1. **உப்பமைப்போர் குலம்** (நன். 210. மயிலை.); the caste of salt-makers. 2. **உப்பு மண்;** saline soil. 3. **உப்பு;** salt. (செ.அக.).

[உமணன் → உமண். ஒ.நோ. பாணன் → பாண்.]

உமண்பகடு *umaṇ-pagaḍu,* பெ. (n.) **உப்பு வாணிகரது மூட்டை சுமந்து செல்லும் எருது** (தொல்.பொருள். 18. உரை); pack-ox carrying salt. (செ.அக.).

[உமண் + பகடு.]

உமணத்தி *umaṇatti,* பெ. (n.) **உமணப் பெண்.** (வின்.); woman of the caste of salt makers. (செ.அக.).

[உமண் + அத்தி.]

உமணத்தியர் *umaṇattiyar,* பெ. (n.) **உப்பு விற்றிடும் மகளிர்** (ஆ.அக.); women of the salt sellers caste.

[உமண் + அத்தி + அர்.]

உமணர் *umaṇar,* பெ. (n.) **உமணன்** பார்க்க. (ஆ.அக.); see *umaṇaṉ.*

[உமண் + அர்.]

உமணன் *umaṇaṉ,* பெ. (n.) 1. **உப்பமைக்கும் குலத்தி னன்** (திவா.); member of the ancient caste of salt makers. 2. **உப்புவாணிகன்;** dealer in salt. "பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி" (பெரும்பாண். 65). (செ.அக.).

[உம்மளம் → உம்மணம் → உம்மணன் → உமணன்]

உமது *umadu,* பெ. (n.) 1. **உம்முடைய;** that which belongs to you, yours. 2. **உம்மை;** yourself.

[உம் + அது - உமது.]

உமர்[1] *umar,* பெ. (n.) **உம்மவர்;** your friends and relations. "உமர் கூறுநிதி கொணர்ந்து" (திருக்கோ. 268). (செ.அக.).

[உம் + அவர் + உம்மவர் → உமர்.]

உமர்[2] *umar,* பெ. (n.) 1. **குதிர்;** clay receptacle for grain. (Loc.). 2. **இகழ்ச்சிச் சொல்;** a term of contempt. (Tinn.). (செ.அக.).

[உ → உம் → உமர் = உயரமாய் இருப்பது, உயர்த்துவது போன்று பழித்தல்.]

உமரி *umari,* பெ. (n.) 1. **ஒரு பூண்டு** (மலை.); marsh-samphire. 2. **பவளப்பூண்டு;** species of glasswort. 3. **நத்தை;** snail. (வின்.). (செ.அக.).

ம. உமரி.

[உம் → உமரி.]

உமரிக்காசு *umari-k-kāśu,* பெ. (n.) **பலகறை;** cowry used as money. (செ.அக.).

[உமரி + காசு.]

உமரிக்கீரை *umari-k-kīrai,* பெ. (n.) **கோழிப் பசளை;** sea-blite.

[உமரி + கீரை.]

உமரிச்சாரக்கட்டி *umari-c-cāra-k-kaṭṭi,* பெ. (n.) **உமரி யுப்பின் கட்டி;** a lump of salt wort, soda. (சா.அக.).

[உமரி + சாரம் + கட்டி.]

உமரிச்சாரம் *umari-c-cāram,* பெ. (n.) **உமரிப் பூண்டி னின்று எடுக்கும் சத்து;** saltwort soda obtained from the plant Umari. (சா.அக.).

[உமரி + சாரம். சாறு → சாறம் → சாரம்.]

உமரிச்சாறு *umari-c-cāṟu,* பெ. (n.) **உமரியிலையின் சாறு;** juice of the leaves of the saltwort plant. (சா.அக.).

[உமரி + சாறு.]

உமரித்தாமிரம் *umari-t-tāmiram,* பெ. (n.) **கருஞ் சிற் றகத்தி;** a black variety of sasbane. (சா.அக.).

[உமரி + தாமிரம்.]

உமரிப்பூடு *umari-pūḍu,* பெ. (n.) **உமரி** பார்க்க; see *umari.* (சா.அக.).

[உமரி + பூடு. பூண்டு → பூடு.]

உமரியுப்பு *umari-y-uppu,* பெ. (n.) 1. **உமரிச் செடியைக் கொளுத்திய சாம்பல்;** ash obtained from burning the plant (marsh-samphire). It is an alkali or saltwort soda and is used as a mordant in medicine. 2. **அமுரியுப்பு;** uric salt. (சா.அக.).

[உமரி + உப்பு.]

உமல் *umal,* பெ. (n.) 1. **ஓலைப்பை;** long bag of palmyra leaves or of rushes. (J.). 2. **ஓலைக் கூடை; மீன் பிடிக்கப் பயன்படுத்தும் பனையோலைக் கூடை;** basket made of palmyra-leaf. (செ.அக.).

ம. உமல்.

[உம் → உமல்.]

உமலகம் *umalagam,* பெ. (n.) ***அரிதாரம்;*** orpiment. (W.). (செ.அக.).

[உமல் → உமலகம்.]

உமலிச்சாரம் *umali-c-cāram,* பெ. (n.) ***உமரிச்சாரம்*** பார்க்க; see *umari-c-cāram.* (சா.அக.).

[உமலி → சாரம்.]

உமற்கடம் *umaṟkaḍam,* பெ. (n.) ***தருப்பை*** (மலை.); darbha grass. (செ.அக.).

[உமல் + கடம்.]

உமறுப்புலவர் *umaṟuppulavar,* பெ. (n.) ***சீறாப்புராணம் பாடிய முகம்மதியப் புலவர்;*** Muhammadan Tamil poet patronized by a mussalman patron of learning Cīdakkādi, author of the Cīṟā-p-purāṇam, 17th C. (செ.அக.).

[உமறு + புலவர்.]

உமா *umā,* பெ. (n.) ***குன்றி*** (மூ.அ.); crabs - eye. (செ.அக.).

[உம்மி → உமா.]

உமாகடம் *umāgaḍam,* பெ. (n.) ***சணற்கொத்து;*** sun-hemp bundle. (ஆ.அக.).

தெ. உமி

[உமகடம் → உமாகடம். உமி போன்று உட்சாறற்று வெளிறியது.]

உமாதகியரிசி *umādagiyariśi,* பெ. (n.) ***கருங்குருவை யரிசி;*** rice of a black variety of paddy. (சா.அக.).

[ஒருகா. உமி + அதக்கு + அரிசி.]

உமாதி *umādi,* பெ. (n.) ***அறிவில்லா-ன்-ள்;*** un-wise person. (ஆ.அக.).

[உள் + மத்தம் → உண்மத்தம் → உமத்தம் → உமாதம் → உமாதி. உள் → உள்ளம். மத்தம் = சுழற்சி.]

உமாதேவி *umādēvi,* பெ. (n.) ***அறிவும் அருளுமாகிய சிவசத்தி;*** Goddess Pārvati.

[உமை → உமா + தேவி.]

உமாபதிசிவாசாரியார் *umāpadi-śivācāriyār,* பெ. (n.) ***வழிமுறை*** (சந்தான) ***குரவருள் ஒருவர்;*** a Siva ācārya, author of the Siva-p-pirakāsam and seven other treatises of the 15 Sidhānta-Sāttiram besides several other works like Kōyiṟpurāṇam, 13th c., one of four Santāṉa-kuṟavar.

[உமை → உமா + பதி + சிவ + ஆசாரியர்.]

உமாமகேச்சுரம் *umāmagēccuram,* பெ. (n.) ***ஒரு நோன்பு;*** religious observance in honour of umāmakecuvaram. உமா மகேச்சுரமென்றொரு தவவிரதம்'' (பிரமோத். உமாம.17). (செ.அக.).

உமி[1] *umi,* பெ. (n.) ***நெல்லின் மேல்தொலி;*** husk;chaff. ''நெல்லுக் குமியுண்டு'' (நாலடி. 221).

குட., ம. உமி க. உம்பி; து. உமி, உம்மி; தெ. உமக்க, உமுக, மக; குரு. உம்கு.

[உம் → உமி. உம் = மேலிடுதல், மூடுதல், கவித்தல்.]

உமி[2]**-த்தல்** *umi-,* 2. செ.கு.வி. (v.i.) 1. ***பதராதல்;*** to become chaff. 2. ***சாரமறுதல்;*** to become insipid, spoiled (W.). சோறு உமித்துப் போயிற்று. (செ.அக.).

[உம் → உமி → உமி-த்தல்.]

உமி[3]**-த்தல்** *umi-,* 2. செ.கு.வி. (v.i.) 1. ***கொப்புளங் கொள்ளுதல்;*** to blister, become sore. ''உள்ளடி யுமித் துமித் தழன்ற'' (சூளா. அரசி. 93). 2. ***பதன் அழிதல்;*** to decay, deteriorate, to lose soundness, as timber. வீட்டு மரங்கள் உக்கியுமித்துப் போயின. (செ.அக.).

[உம் → உம்மு → உமி. உமித்தல்.]

உமி[4]**-தல்** *umi-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***கொப்புளித் தல்;*** to gargle. ''நீராடும்போது... நீந்தா ருமியார்'' (ஆசாரக். 15). 2. ***இதழ்*** (உதடு) ***கூட்டித் துப்புதல்*** (தனிப்பா. 1, 25, 45); to spit.

ம. உமிக்குக; க. உகி, உகழ், உகுழ்; து. உபி (உமிழ் நீர்), உகிபுனி; தெ. உமியு.

[உம் → உமி → உமிழ் (இதழ் மூடுதல், இதழ் மூடித் துப்புதல்.]

உமி[5]**-தல்** *umi-* 4 செ.குன்றாவி. (v.t.) ***உறிஞ்சுதல்;*** to suck, sip. முலையுமிந்து குடிக்க. (யாழ்ப்.).

[உம் → உம்மி → உமி.]

உமிக்கரப்பான் *umi-k-karappāṉ,* பெ. (n.) ***குழந்தை கட்கு வரும் கரப்பான் வகை*** (வின்.); a kind of small eruption over the head and body, esp. in children. (செ.அக.).

[உமி + கரப்பான்.]

உமிக்கரி *umi-k-kari,* பெ. (n.) 1. ***உமி எரித்ததனாலாகிய கரி;*** burnt rice-husk. (used as tooth powder.). (செ.அக.).

ம. உமிக்கரி.

[உமி + கரி.]

உமிக்காடி *umi-k-kāḍi,* பெ. (n.) ***உமிக்கருக்கு;*** gruel made of barley, sour rice gruel or barley - gruel.

ம. உமிக்காடி.

[உமி + காடி.]

உமிக்காந்தல் *umi-k-kāndal,* பெ. (n.) ***உமியிலுண்டாகும் தழல்;*** fire of rice husks, fire smouldering in a heap of rice husk. ''உண்ட வயிற்றி லுமிக்காந்த லிட்டதே'' (தமிழ்நா. 227).

ம. உமித்தீ.

[உமி + காந்தல்.]

உமிக்கூர் *umi-k-kūr,* பெ. (n.) ***உமிமூக்கு;*** point of the rice-husk. (செ.அக.).

[உமி + கூர்.]

உமிச்சட்டி *umi-c-catti,* பெ. (n.) ***கணப்புச்சட்டி;*** vessel containing rice-husks in which fire is kept alive. (செ.அக.).

[உமி + சட்டி.]

உமிச்சாம்பல் *umi-c-cāmbal,* பெ. (n.) ***உமி எரிந்துண்டாகும் சாம்பல்;*** ashes obtained from the burning of rice-husks (loc.). (செ.அக.).

[உமி + சாம்பல்.]

உமிச்சிரங்கு *umi-c-cirangu,* பெ. (n.) ***உமியைப் போன்ற பருக்கள் அல்லது சிறு சிரங்குகள்; நமைச்சிரங்கு*** (யாழ்ப்.); a superficial, troublesome kind of itch, Prurigo (j.). (செ.அக.).

[உமி + சிரங்கு.]

உமிசம் *umišam,* பெ. (n.) 1. ***உம்மிசம்;*** groove in the frame work of a jewel in which stones are to be set. 2. ***கணு;*** notch. (செ.அக.).

[உமி → உமிசம்.]

உமித்தவிடு *umi-t-tavidu,* பெ. (n.) ***உமி கலந்த தவிடு;*** bran mixed with fine or broken husks for feed, coarse bran. (செ.அக.).

[உமி + தவிடு.]

உமிநகம் *umi-nagam,* பெ. (n.) ***மெல்லிய நகம்;*** finger and toe nails that are very thin like husk (W.). (செ.அக.).

[உமி + நகம்.]

உமிநீர் *umi-nīr,* பெ. (n.) ***வாயூறு நீர்;*** spittle, saliva.

ம. உமிநீரு; க. உகுள் நீரு; து. உம்பி; தெ. உம்மி.

[உமிழ் + நீர் – உமிழ்நீர் → உமிநீர்.]

உமிப்புடம் *umi-p-pudam,* பெ. (n.) ***குழி நிறைய உமியிட்டு எரிக்கும் புடம்*** (சங். அக.); calcination by heating medicinal drugs over a pitful of burning paddy-husk. (செ.அக.).

[உமி + புடம்.]

உமிமூக்கு *umi-mūkku,* பெ. (n.) ***உமிக்கூர்*** பார்க்க; see *umi-k-kūr.* (செ.அக.).

[உமி + மூக்கு.]

உமியம் *umiyam,* பெ. (n.) 1. ***கனிமநஞ்சு விளையும் நிலம்;*** paddy field. 2. ***செய்நஞ்சு*** (பாடாணம்) ***விளையும் நிலம்;*** soil or mine from which mineral poison is dug out.

[உமி + அம்.]

உமியல் *umiyal,* பெ. (n.) ***வசம்பு*** (மலை.); sweet-flag. (செ.அக.).

ம. உமியல்.

[உம் → உமியல்.]

உமியுண்ணி *umi-y-unni,* பெ. (n.) ***தவிட்டுண்ணி;*** small tick. (செ.அக.).

[உமி + உண்ணி.]

உமிர் *umir,* பெ. (n.) ***உடல் மயிர்;*** the hair of the body.

[உம் → உமி → உமிர்.]

உமிரி *umiri,* பெ. (n.) ***உமரி*** பார்க்க; (மலை.); see *umari.*

[உமரி → உமிரி.]

உமிலிசாரம் *umili-šāram,* பெ. (n.) ***கறிக்கூட்டு*** (பதார்த்த. 1113.); vegetable salt.

[உமிலி + சாரம்.]

உமிவு *umivu,* பெ. (n.) ***துப்புகை;*** spitting. "உமிவும்... புணரார் பெரியா ரகத்து" (ஆசாரக். 71). (செ.அக.).

[உமிழ் → உமிழ்வு → உமிவு.]

உமிழ்-தல் *umil* 2. செ.குன்றாவி. (v.t.) 1. ***துப்புதல்;*** to spit. 2. ***கொப்பளித்தல்*** (திவா.); to gargle. 3. ***வாயாலெடுத்தல்;*** to vomit, reject from an overcharged stomach. 4. ***வெளிப்படுத்துதல்;*** to emit, as rays of light, to discharge, as arrows, to send forth, as sparks, to yield, as fragrance, to reveal as news. "உள்ளத்தாலுமிழ வேண்டா" (சீவக. 2149). 5. ***தெவிட்டுதல்*** (திவா.); to be satiated. 6. ***சொரிதல்;*** to pour.

ம. உமிழ்க; க. உகி, உகுழ், உகழ்; து. உம்பியுனி, உகிபுயு; தெ. உமியு; கோண். உகியன், உச்சான்; கொலா., நா. உச்; பர். உச், உச்ச; பட. உகி.

[உ → உம் → உமி → உமிழ்.]

உமிழ்[2] *umil,* பெ. (n.) ***உமிழ்நீர்*** பார்க்க; see *umil-nīr.*

உமிழ்நீர் *umil-nīr,* பெ. (n.) ***வாயூறு நீர்;*** spittle, saliva. (செ.அக.).

ம. உமிழ்நீர்.

[உமி → உமிழ் + நீர்.]

உமிழ்நீர்ப்பெருக்கி *umilnīr-p-perukki,* பெ. (n.) ***கொடுவேலி;*** Ceylon lead wort.

[உமிழ் + நீர் + பெருக்கி.]

உமிழ்வு *umilvu,* பெ. (n.) 1. ***துப்புகை;*** spitting. "உமிழ்வோடிருபுலனுஞ் சோரார்" (ஆசாரக். 33.). 2. ***உமிழப்படுவது;*** anything ejected from the mouth as spittle, vomit. (செ.அக.).

[உமிழ் → உமிழ்வு.]

உமை[1] *umai,* பெ. (n.) 1. ***மஞ்சள்*** (நாநார்த்த.); turmeric. 2. ***புகழ்.*** (நாநார்த்த.); fame. 3. ***ஒளி*** (நாநார்த்த.); brilliance. 4. ***நெல்வகை*** (நாநார்த்த.); a kind of paddy. 5. ***சணல்;*** sunhemp. (pond.).

[அம் → உம் → உமை.]

உமை[2]**-த்தல்** *umai-,* 2. செ.கு.வி. (v.i.) ***தினவு தின்னு தல்;*** to itch. ''உமைத்துழிச் சொறியப் பெற்றாம்'' (சீவக. 2617.).

உமை[3] *umai,* பெ. (n.) ***மலைமகள்;*** Pārvathi, consort of Sivā. ''ஒளி நீறணிந்து வுமையோடும் வெள்ளை விடைமேல்''. (தேவா. 1171,3). (செ.அக.).

[அம்மை → உம்மை → உமை.]

உமைகரநதி *umaikaranadi,* பெ. (n.) ***மலைமகளின் கையிலிருந்து வருவதாகிய கங்கை*** (பிங்.); Ganges supposed to flow from the hand of Pārvati. (செ.அக.).

[உமை + கரம் + நதி - உமைகர நதி.]

உமைமகன் *umai-magan,* பெ. (n.) 1. ***யானை முகன்;*** Vināyakā. 2. ***முருகன்;*** Murugan. 3. ***வீரபத்திரன்;*** Vīrabhadra son of Pārvathi. (செ.அக.).

[உமை + மகன்.]

உமையவட்பெற்றோன் *umaiyavatperrōn,* பெ. (n.) ***இமவான்*** (பிங்.); Himalaya, father of Pārvathi. (செ.அக.).

[உமையவள் + பெற்றோன்.]

உமையவள் *umaiyaval,* பெ. (n.) ***பார்வதி;*** Pārvati. ''கொடியி னொல்கிய நுசுப்புடை யுமையவள்'' (கந்தபு. தவங்காண்.8). (செ.அக.).

[உமை + அவள்.]

உமையாள்[1] *umaiyāl,* பெ. (n.) ***உமையவள்*** பார்க்க; see *umaiyaval.* ''உமையாள் கணவா'' (திருவாச. 33.1). (செ.அக.).

[உமை + (அவள்) ஆள்.]

உமையாள்[2] *umaiyāl,* பெ. (n.) 1. ***சவுக்காரம்;*** soap. 2. ***மயிலிறகு;*** feather of pea-cock.

உய்[1]**-தல்** *uy-,* 2. செ.கு.வி. (v.i.) 1. ***பிழைத்தல்; வாழ்தல்;*** to live, to subsist, have being. ''உண்ணா வறுங்கடும் புய்தல் வேண்டி'' (புறநா. 181). 2. ***ஈடேறு தல்;*** to be saved, redeemed. ''தினைத்தனைப் பொழு தும் மறந்துய்வனோ'' (தேவா. 5,1). 3. ***நீங்குதல்;*** to be relieved, as from trouble. ''தாவலுய்யுமோ'' (பதிற்றுப். 41.17). 4. ***துன்பத்தினின்று தப்புதல்;*** to eacape as from danger. ''சார்புடைய ராயினு முய்யார்'' (குறள், 900) 5. ***உண்டாக்குதல்;*** to make, prepare. 6. ***வலிதல்;*** to get strong. 7. ***ஆற்றுதல்;*** to engage. 8. ***முற்செல்லுதல்; செலுத்தல்;*** to lead.

ம. உய்யுக.

[உ → உய் → உய்-தல்.]

உய்[2]**-த்தல்** *uy-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***உய்யச் செய்தல்;*** to ensure salvation. ''உய்த்த வியோமரூபர்'' (சதாசிவ. 29). 2. ***நீக்குதல்;*** to drive away, dispel as darkness. ''பல்விளக் கிருளின் றுன்னற வுய்க்கும்'' (திருக்கோ. 175). (செ.அக.).

[உ → உய் → உய்-த்தல்.]

உய்[3]**-த்தல்** *uy-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***செலுத்துதல்;*** to direct, guide. ''நன்றின் பாலுய்ப்ப தறிவு'' (குறள், 422). 2. ***படைக்கலம் விடுதல்;*** to discharge, let fly, as an arrow. ''அம்புய்க்கும் போர்'' (கம்பரா. மாரீச. 186). 3. ***அனுப்புதல்;*** to send, despatch. ''பட்டிமை யோலை யுய்ப்பான்'' (திருவிளை. மெய்க்கா. 13). 4. ***நடத்துதல்;*** to conduct, lead, direct. ''உய்த்திடு மிச்சை செய்தி'' (சி.சி., 1, 62, நிரம்ப.) 5. ***கொண்டு போதல்;*** to carry. ''வேட்டுவ ருய்த்தன ரோவென'' (சீவக. 425). 6. ***நுகர்தல்; பட்டறிதல்;*** to enjoy, experience. ''காதல காத லறியாமை யுய்க்கிற்பின்'' (குறள், 440). 7. ***கொடுத்தல்;*** to give. ''மீளியாளர்க்கு மிகவுய்த் தன்று'' (பு.வெ. 3,9, கொளு.). 8. ***அறிவித்தல்;*** to make known, tell, reveal. ''அவ்வழி யரசற் குய்த்தார்க்கு'' (சீவக. 1407). 9. ***ஆணை செலுத்துதல்;*** to rule. ''ஞால முழுது முய்த்திடு மகவு'' (பார்த. சம்பவ. 10). 10. ***குறிப்பித் தல்;*** to mention. 11. ***ஊர்தியில் செல்லுதல்;*** to fly as vehicle. 12. ***அமிழ்த்தல்;*** to press, sink. 13. ***ஈடேறச் செய்தல்;*** to realise. ''உய்யத்த வியோமரூபர்'' (சதா சிவ. 29). மதியைச் செலுத்தி ஆராய்தல், உய்த்தறிதல், உய்த்துணர்தல். உய்த்தலில் பொருண்மை என்னும் தொடர்களை நோக்குக.

ம., க. உய்.

[உ → உய் → உய்-த்தல்.]

உய்[4] *uy,* இடை. (part). ***ஒலிக்குறிப்பு இடைச்சொல்;*** onomatopoeic expression.

[உ → உய்.]

உய்கதியால் *uygadiyāl,* பெ. (n.) ***உய்தடி*** பார்க்க; see *uydadi.* (செ.அக.)

உய்கை *uygai,* , பெ. (n.) 1. ***ஈடேறுகை;*** salvation, deliverance. 2. ***துன்பம் நீங்குகை;*** escaping from hardship, relief from distress. ''உய்கை பொருளா வொரு வர்க்கு மோருதவி செய்கை யிலனேல்'' (கந்தபு. காம. 47). (செ.அக.).

[உ → உய் → உய்கை = உய்தல்.]

உய்த்தலில்பொருண்மை *uyttalilporunmai,* பெ. (n.) ***கருதிய பொருள் தெளிவாகப் புலப்படுமாறு எளிய சொல்லுடைமையாகிய குணம்*** (தண்டி. 21.); (poet.). the merit of transparency of sense achieved by a careful choice of unambiguous simple words, a merit of poetic composition. (செ.அக.).

[உய்த்தல் + இல் + பொருண்மை.]

உய்த்தறி-தல் *uyttaṟi-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***உய்த்து ணர்*** பார்க்க; see *uyttuṇar.* இப்பொருள் உய்த்தறியத் தக்கது. (செ.அக.).

[உய்த்து + அறி.]

உய்த்துக்கொண்டுஉணர்தல் uyttu-k-koṇḍu-uṇardal, பெ. (n.) ***32 உத்திகளுள் ஒன்று. அஃது ஒரு பொருள் சொல்லியக்கால் அதன் மற்றொரு பொருளினையும் யுணர்ந்து கொண்டறியுமாறு தோன்றச்செய்தல்*** (தொல்.பொருள். 656.); a literary method consisting in the use in exposition of such expressions of additional meaning is incorporated with the prime meaning, one of 32 utti.

[உய்த்து + கொண்டு + உணர்தல்.]

உய்த்துணர்-தல் *uyttuṇar-,* 8. செ.குன்றாவி. (v.t.) ***மனத்தைச் செலுத்தி ஆராய்ந்தறிதல்;*** to know by careful investigation. "உய்த்துணர்ந்த வருரைத்த". (சூளா. சீய.37) (செ.அக.).

[உய்த்து + உணர்-தல்]

உய்த்துணர்மொழி *uyttuṇar-moḻi,* பெ. (n.) ***செய்யுட்குற்றங்களுளொன்று*** (யாப். வி. 525.); (pros). defect in versification. (செ.அக.).

[உய்த்து + உணர் + மொழி.]

உய்த்துணர்வணி *uyttuṇar-v-aṇi,* பெ. (n.) ***ஒரு செயல் முற்றுப் பெறுதற் கிஃதிவ்வாறா மென ஊகித்தல்.*** (அபி. சிந்.); informing means and ways to finish a matter.

[உய்த்து + உணர்வு + அணி. இது வடமொழியில் சம்பாவ னலங்காரம் எனப்படுகிறது.]

உய்த்துணர்வு *uyttuṇarvu,* , பெ. (n.) 1. ***ஆராய்ந்துணரும் அறிவு;*** knowledge obtained by study, keen research and observation. "உய்த்துணர் வில்லெனி னில்லாகும்" (நீதிநெறி. 5.). 2. ***ஞானம்;*** wisdom. "உய்த்துணர் வென்னும் ஒளி" (திவ். இயற். 3,94). (செ.அக.).

[உய்த்து + உணர்வு.]

உய்த்துணரவைப்பு *uyttuṇaravaippu,* பெ. (n.) ***ஓர் உத்தி*** (நன். 14.); (gram). Literary method consisting in the use in exposition of such expressions as would stimulate thought or further enquiry, one of 32 utti. (செ.அக.).

[உய்த்து + உணர + வைப்பு.]

உய்தடி *uydaḍi,* பெ. (n.) ***கிளைக்கும் வேலிக்கொம்பு*** (யாழ்ப்.); live hedge stick. (செ.அக.).

[உய் + தடி.]

உய்தி *uydi,* பெ. (n.) 1. ***ஈடேற்றம்.*** salvation, deliverance. "சார்பறுத் துய்தியும்" (மணிமே. 25,5). 2. ***கழுவாய்;*** remedy, atonement, expiation. "செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென" (புறநா. 34). 3. ***நீங்குகை*** (புறநா. 34. உரை.); ceasing. (செ.அக.).

[உய் → உய்தி.]

உய்மணல் *uymaṇal,* பெ. (n.) ***கருமணல்*** (வின்.); black sand. (செ.அக.).

[உய் + மணல்.]

உய்யக்கொண்டார் *uyya-k-koṇḍār,* பெ. (n.) *1.* ***நாத முனிகளுக்குப் பின்வந்த மாலியக் குரவர்;*** a Vaisnava ācharyar. 2. ***புண்டரீகாசர்*** பார்க்க; see *Puṇḍarīkāsar.*

[உய்ய + கொண்டார்.]

உய்யக்கொண்டான்[1] *uyya-k-koṇḍāṉ,* பெ. (n.) ***வாழச் செய்தவன்;*** saviour. (செ.அக.).

[உய்ய + கொண்டான்.]

உய்யக்கொண்டான்[2] *uyya-k-koṇḍāṉ,* பெ. (n.) ***எருமை முல்லை*** (மூ. அ.); white bracted Jasmine.

[உய்ய + கொண்டான்.]

உய்யப்பிணக்கம் *uyyappiṇakkam,* பெ. (n.) ***வாழ்க்கைப் போராட்டம்;*** doldrums of life. (செல்வி. 77. புரட்டாசி. 74).

[உய்ய + பிணக்கம்.]

உய்யவந்ததேவநாயனார் *uyya-vanda-dēva-nāyaṉār,* பெ. (n.) 1. ***சிவனியக் கொண்முடிபுகளுள் திருவுந்தியார் நூலை யியற்றியவர்;*** the author of the Tiru-v-untiyār, native of Tiruviyalūr 12th C. 2. ***சிவனியக் கொண்முடிபுகளுள் திருக்களிற்றுப்படியார் இயற்றியவர்;*** author of Thiru-k-kaḷiṟṟu-p-paṭiyār, native of Tirukkaṭavūr 12th C. (செ.அக.).

[உய்ய + வந்த + தேவன் + நாயனார்.]

உய்யாக்கடிப்பான் *uyyākkaḍippāṉ,* பெ. (n.) ***பிழைக்காத படி கடிக்கும் உயிரி; அதாவது கருநாகம்.*** a black cobra the bite of which is sure to bring on death. (சா.அக.).

[உய்யா + கடிப்பான்.]

உய்யானம் *uyyāṉam,* பெ. (n.) ***பூங்கா;*** park, pleasure garden. "உய்யானத்திடை யுணர்ந்தோர் செல்லார்" (மணிமே. 3,52). (செ.அக.).

[உய்யும்வனம் → உய்யுவனம் → உய்யானம். ஒ.நோ.உய்தடி.]

உய்வனவு *uyvaṉavu,* , பெ. (n.) 1. ***செழிப்பு;*** flourishing, reviving, as a tree. 2. ***பிழைப்பு; வாழ்வு;*** living, subsistence, maintenance. 3. ***ஈடேற்றம்; வீடுபேறு;*** attaining eternal bliss. (செ.அக.).

[உய் → உய்வனவு. உய்யக்கொண்டான், உய்யவந்த தேவ நாயனர் முதலான பெயர்களில் உய்தல் ஈடேற்றத்தை உணர்த் தும்.]

உய்வி-த்தல் *uyvi-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***பிழைக்கச் செய்தல்;*** to restore one to life. (சா.அக.).

[உய் → உய்வி (பி.வி.).]

உய்விடம் *uyvidam*, பெ. (n.) ***பிழைக்குமிடம்;*** asylum, place of refuge, shelter. "உய்விட மறியே மாகி" (குறிஞ்சிப். 166.). (செ.அக.).

[உய்வு + இடம்.]

உய்வு *uyvu*, பெ. (n.) 1. ***உயிர் தப்புகை;*** escaping from danger. "எரியாற் சுடப்படினு முய்வுண்டாம்" (குறள், 896). 2. ***ஈடேற்றம்;*** salvation. "உய்வுபாய மற்றின்மை தேறி" (திவ். திருவாய். 4,3,11). 3. ***கழுவாய்;*** expiation. "உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (குறள், 110). (செ.அக.).

[உய் → உய்வு.]

உயக்கம் *uyakkam*, பெ. (n.) ***வருத்தம்;*** suffering, distress, trouble. "உண்ணா வுயக்கத்து" (மணிமே. 7,66).

[உயங்கு → உயக்கம்.]

உயங்கு-தல் *uyangu-*, 5. செ.கு.வி. (v.i.) 1. ***வருந்துதல்;*** to suffer, to be in distress, to be pained in body or mind. "உயங்குவன் கிடந்த கிழத்தியை" (தொல். பொருள். 146). 2. ***மெலிதல்;*** to grow thin, become emaciated. "உயங்குசாய் சிறுபுறம்" (அகநா. 19). 3. ***துவளுதல்;*** to be flexible, slender. "உயங்கு செங்கழுநீர்"(திருவாத.பு.மண்சுமந்த. 4.).

[உய் → உய → உயங்கு.]

உயந்து-தல் *uyandu-*, 3. செ.கு.வி. (v.i.) ***ஏப்பம் விடுதல்*** to belch (சேரநா.).

ம. உயந்துக.

[உ → உய் → உயந்து (மேலெழும்புதல்).]

உயம் *uyam*, பெ. (n.) ***செலுத்துதல்; தள்ளுதல்;*** driving, pushing.

[உய் → உயம் (சு.வி. 41.).]

உயர்[1]-தல் *uyar-*, 2. செ.கு.வி. (v.i.) 1. ***மேலெழுதல்;*** to rise, as water; to ascend, as a body in the air; to move towards the meridian, as a heavenly body. "வடபுவி தாழ்ந்து தென்பா லுயர்தலும்" (கந்தபு. பாயி. 63). 2. ***உயர்வுள்ளதாதல்;*** to be high, elevated, tall, lofty. உயர்ந்த மலை. 3. ***வளர்தல்;*** to grow, increase, expand. 'நெல்லுயரக் குடியுயரும்'. 4. ***மேன்மை யுறுதல்;*** to be excellent, exalted, eminent, dignified, superior. "உயர்ந் தவர்க் குதவிய வுதவி" (கம்பரா. வேள். 35) 5. ***நீங்குதல்;*** to vanish, disappear, to be removed. "இனிவரி னுயருமற் பழியென" (கலித். 129,17) (செ.அக.). 6. ***அலை முதலியன மேல் எழும்புதல்;*** to rise as water or waves. 7. ***நீர் பொங்கி மேலே வருதல்;*** to spring, bubble up, gush, flow forth. 8. ***குனிந்து கிடக்கும் தலை, மேலே உயர்தல்;*** to be raised (as head).

ம. உயருக.

[உ → உய் → உயர்.]

உயர்[2] *uyar*, பெ. (n.) ***உயர்ச்சி;*** greatness, nobility, fame. "உயர்மிக்க" (சீவக. 473).

[உ → உய் → உயர்.]

உயர்[3]-த்தல் *uyar-*, 2. செ.கு.வி. (v.i.) ***உயர்த்து*** பார்க்க; see *uyarttu*. "மேன் மேலுயர்த்து நிறுப்பானும்" (நாலடி; 248.). (செ.அக.).

[உ → உயர் → உயர்த்தல்.]

உயர்[4] *uyar*, பெ. (n.) ***குன்றி*** (மலை.); crab's - eye. (செ.அக.).

[உய → உயர்.]

உயர்குடி *uyarkudi*, பெ. (n.) ***மேலான குடி;*** high caste, noble family. "உயர்குடியுட் பிறப்பி னென்னாம்" (நாலடி. 199).

[உயர் + குடி.]

உயர்குலம் *uyarkulam*, பெ. (n.) ***உயர்குடி*** பார்க்க; see *uyarkudi*. "ஒழுக்க முயர் குலத்தி னன்று" (நல்வ. 31). (செ.அக.).

[உயர் + குலம்.]

உயர்ச்சி *uyarcci*, பெ. (n.) 1. ***உயரம்;*** height, elevation, altitude. "மண்டபத்தி னளவு நீளம்...உயர்ச்சி" (பாரத. இராச. 8). 2. ***மேன்மை;*** excellence, superiority, moral worth, valuable trait. (செ.அக.).

ம. உயர்ச்ச.

[உயர் → உயர்த்தி → உயர்ச்சி.]

உயர்சொல் *uyar-šol*, பெ. (n.) ***உயர்த்திக் கூறுஞ் சொல்;*** honorific expression, term of respect. "உயர்சொற் கிளவி" (தொல். சொல். 27). (செ.அக.).

[உயர் + சொல்.]

உயர்த்தி *uyartti*, பெ. (n.) ***மேன்மை;*** excellence, superiority. "உயர்த்திக டாழ்த்தியறைதி" (நல்.பாரத. கிருட்டிணார்ச். 83). (செ.அக.).

[உயர் → உயர்த்தி.]

உயர்த்திப்பேசு-தல் *uyartti-p-pēšu-*, 5. செ.கு.வி. (v.i.) 1. ***புகழ்ந்து கூறுதல்;*** to speak highly, of a person or a thing. 2. ***குரலெடுத்துப் பேசுதல்;*** to raise the voice and speak.

[உயர்த்தி + பேசு-தல்.]

உயர்த்து-தல் *uyarttu-*, 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***உயரச்செய்தல்;*** to lift up, elevate; to build up, as a wall in building. 2. ***அதிகப் படுத்துதல்;*** to raise, as price; to increase, as expenditure. விலையை யுயர்த்தி னான். 3. ***மேனிலைக்குக் கொண்டு வருதல்;*** to promote to higher office, exalt, ennoble. 4. ***மேன்மைப் படுத்துதல்;*** to honour, treat with respect; to praise, magnify. "எப்புன்மையரை மிகவே யுயர்த்தி" (திருவாச. 5,10) 5. ***இசை யெடுத்தல்;*** to raise the voice, as

in singing or speaking. உயர்த்திப் பாடினான். 6. ***தூக்குதல்;*** to lift, hold up, as a sceptre; to hoist, as a flag. 7. ***ஒரு பொருளைக் கொள்ளச் சில ஏமாற்று வேலைகளைக் கையாளுதல்;*** to get something by playing a trick, deceive. 8. ***திருடுதல்;*** to steal, lift.

ம. உயர்த்துக, உய்த்துக; க., தெ. எத்து.

[உயர் → உயர்த்து.]

உயர்திணை *uyar-tiṇai,* பெ. (n.) 1. ***மேற்குலம்;*** high caste, noble family. "உயர்திணை யூமன் போல" (குறுந். 224.). 2. ***மக்கள் தேவர் நரகரென்னு முத்திறத்தாரைக் குறிக்கும் சொல்*** (நன். 261) (Gram). nouns denoting personal class of beings, including men, gods and demons opp. to அஃறிணை.

[உயர் + திணை (வி.தொ.)]

ஏனைய உயிரிகள் போலாது மேன்மேலும் உயரும் தன்மைய ராதல் நோக்கி மக்கள் உயர்திணை எனப் பெயர்பெற்றனர்.

உயர்ந்தவன் *uyarndavan,* பெ. (n.) 1. ***சிறந்தோன்.*** man of rank, man of high character. 2. ***நெடியவன்;*** man of tall stature. "உயர்ந்தவர் குறளானோர்" (கந்தபு. மார்க். 64).

[உயர் → உயர்ந்தவன்.]

உயர்ந்தோர் *uyarndōr,* பெ. (n.) 1. ***பெரியோர்*** (திவா.); the great; the learned, the exalted, as in piety, in virtue, or in austerities. 2. ***தேவர்;*** celestials "வேள்வி வேட் டனை யுயர்ந்தோ ருவப்ப" (பதிற்றுப். 74). 3. ***முனிவர்*** (திவா.); sages.

[உயர் → உயர்ந்தோர்.]

உயர்நில்(ற்)-த(ற)ல் *uyar-nil* 14. செ.கு.வி. (v.i.) ***உச்சமாதல்;*** to be in a zenith, as a constellation. "அங்கியுயர் நிற்ப" (பரிபா. 11,7). (செ.அக.).

[உயர் + நில்.]

உயர்நிலத்தவர் *uyar-nilattavar,* பெ. (n.) ***தேவர்*** (சூடா.); celestials, those whose abode is on high. (செ.அக.).

[உயர்நிலம் + அத்து + அவர்.]

உயர்நிலம், *uyar-nilam,* பெ. (n.) 1. ***தேவலோகம்;*** world of the gods, lit., the higher regions; "உயர்நில மடைந்தான் கொணர்ந்தனன்" (உபதேசகா. உருத்திராக்க. 90.). 2. ***மேடு*** (பிங்.); mound, hillock, highland. 3. ***உப்பரிகை*** (வின்.); upper storey in a building. (செ.அக.).

ம. உயர்நிலம்.

[உயர் + நிலம்.]

உயர்நிலை *uyar-nilai,* பெ. (n.) 1. ***மேலான பதவி;*** high position. "உயர்நிலை வான்றோய் மாடம்" (பெரும் பாண். 332). 2. ***தெய்வத் தன்மை;*** godhead, divine nature. "அணங்குசா லுயர்நிலை தழீஇ" (திருமுரு. 289). 3. ***உப்பரிகை;*** upper storey in a building. (செ.அக.).

ம. உயர்நிலை.

[உயர் + நிலை.]

உயர்நிலையோர் *uyar-nilaiyōr,* பெ. (n.) ***உயர்நிலத்தவர்*** பார்க்க (பிங்.); see *uyar-nila-t-tavar.* (செ.அக.).

[உயர்நிலை + ஓர். ஆர் → ஓர்.]

உயர்பு *uyarbu,* பெ. (n.) 1. ***உயரம்.*** (சூடா.); height, loftiness, elevation. 2. ***உயர்ந்தவிடம்;*** mound, rising ground, hillock. "கல்லுயர்பேறி" (குறுந். 275). 3. ***மேன்மை;*** greatness, excellence. 4. ***உயர்வானது;*** that which is excellent. "உயர்பிழி விரண்டுங்கூடி யியங்கிய பிள்ளைப் பேரே யனுலோமன்" (சூடா. 2,60). (செ.அக.).

[உயர் + பு.]

உயர்மிசையவர் *uyaramiśaiyavar,* பெ. (n.) ***உயர்நிலத்தவர்*** பார்க்க; see *uyarnilattavar* (சீவக, 966). (செ.அக.).

[உயர் + மிசை + அவர்.]

உயர்மொழி *uyarmoḻi,* பெ. (n.) ***உயர்த்துக்கூறும் கூற்று;*** compliment, high encomium. "உயர்மொழிக்கிளவியு முரிய" (தொல் பொருள். 240). (செ.அக.).

[உயர் + மொழி.]

உயர்வண்ணத்தி *uyar-vaṇṇatti,* பெ. (n.) ***மருதாணி;*** fragrant nail dye

மறுவ. அழவணம். மருதோன்றி. Hindi. mehanti.

[உயர் + வண்ணத்தி.]

உயர்வு[1] *uyarvu,* பெ. (n.) 1. ***உயரம்;*** lofty height, elevation. "உயர்வகலந்திண்மை" (குறள், 743). 2. ***மேன்மை;*** eminence, dignity, greatness. "மாந்தர்த முள்ளத் தனைய துயர்வு" (குறள், 595). 3. ***ஏற்றம்;*** increase, as of price of commodities. விலை உயர்வாயிருக்கிறது. 4. ***உயர்வு நவிற்சியணி*** (திவா.); hyperbole.

ம. உயர்வு.

[உயர் → உயர்வு.]

உயர்வு[2] *uyarvu,* பெ. (n.) ***வருத்தம்*** (மாறன. 262. மேற். 738); trouble, woe, suffering, affliction. (செ.அக.).

[உயல் → உயல்வு → உயர்வு.]

உயர்வுக்கல் *uyarvu-k-kal,* பெ. (n.) ***வைடூரியம்;*** precious stone. It is a variety of chalcedony which in light, gives an effect resembling the pupil of a cat's eye. (சா.அக.).

[உயர்வு + கல்.]

உயர்வுக்கொடி *uyarvu-k-koḍi,* பெ. (n.) ***குன்றிமணி;*** crab's eye. (சா.அக.).

[உயர்வு + கொடி.]

உயர்வுசிறப்பும்மை *uyarvu-śiṟa-p-pummai,* பெ. (n.) ***உயர்வு மிகுதியைக் காட்டும் உம்மென்னுஞ் சொல்;***

(Gram.) the particle உம் expressing unquestionable superiority, as in குறவரு மருளுங் குன்றம். (செ.அக.).

[உயர்வு + சிறப்பு + உம்மை.]

உயர்வுநவிற்சியணி *uyarvu-navirci-y-aṇi,* பெ. (n.) ***உயர்த்திச் சொல்லப்படும் அணிவகை*** (அணியி. 13.); hyperbole. (செ.அக.).

[உயர்வு + நவிற்சி + அணி.]

உயர்வுவமை *uyarvuvamai,* பெ. (n.) ***இயைபின்மை யணி*** (வீரசோ. அலங்.14); a figure of speech in which a thing is compared to itself. (செ.அக.).

[உயர்வு + உவமை.]

உயர்வேகி *uyar-vēgi,* பெ. (n.) ***கல்மதம்;*** mineral wax bitumen. It is a dark sticky unctuous substance supposed to issue from rocks in hot weather.

[உயர் + வேகி. வெப்பத்தால் உருகிப் பொங்கிக் கசிவது. பழங்கால நீராடுங் குளங்களில் நீர்க் கசிவைத் தடுக்கத் தரைக்கற்களிடையே பயன்படுத்தப்பட்டது.]

உயரங்காட்டு-தல் *uyaraṅkāṭṭu-,* 5. செ.கு.வி. (v.i.) ***நடை பழகும்போது குழந்தை தடுமாறி நிற்றல்;*** to stand up casually, as a little child does when attempting to walk. (செ.அக.).

[உயரம் + காட்டு]

உயரம் *uyaram,* பெ. (n.) 1. ***ஆள், மரம் முதலியவற்றின் உயரம்;*** height. 2. ***உயர்நிலை;*** elevation, eminence, loftiness. 3. ***உச்சம்*** (வின்.); (Astron.) altitude. (செ.அக.).

ம. உயரம்; **க.,** பட. உத்த; **தெ.** உயர், உசர்; **கோத.** உதமன்; **குரு.** உத்தலு; **குட.** ஒதர; **து.** உசர், உயர்; *Skt.* urdhan.

[உ → உயர் → உயரம்.]

உயராடு *uyar-āḍu,* பெ. (n.) ***வெள்ளாடு;*** goat, supposed to be taller than a sheep. "உயராட்டுப் பால்" (தைலவ. தைல. 12). (செ.அக.).

[உயர் + ஆடு.]

உயரி *uyari,* பெ. (n.) ***உயரமானது;*** that which is tall, as a palm tree; tall person. (செ.அக.).

[உயர் + இ.]

உயல்[1] *uyal,* பெ. (n.) 1. ***வாழ்தல்;*** living. 2. ***தப்புதல்;*** escaping. "உயலாகா ஆழ்த் திறத்த வென்னார்" (நீதி நெறி. 50). 3. ***உளதாதல்;*** being, existing. "செல்வ முயற்பால தன்றிக் கெடும்" (குறள். 437.). (செ.அக.).

[உய் + தல் - உய்தல் → உய்யல் → உயல்.]

உயல்[2](லு)-தல் *uyal-,* 13. செ.கு.வி. (v.i.) 1. ***அசைதல்;*** to wave, shake. "உயலுங்கோதை" (பதிற்றுப். 52,17). 2. ***செல்லுதல்; நடத்தல்;*** to go, to walk.

[உள் → உய் → உயல் → உயலுதல். (வே.க. 48.).]

உயவர் *uyavar,* பெ. (n.) ***துன்புறுவோர்;*** persons in distress.

[உயவு + அர். உயவு = அசைவு, துன்பம்.]

உயவல் *uyaval,* பெ. (n.) ***வருத்தம்;*** distress, affliction, pain, suffering. "சிதாஅ ரோம்பி யுடுத்த வுயவற் பாண" (புறநா. 69). (செ.அக.).

[உயவு + அல்.]

உயவற்பெண்டிர் *uyavaṟ-peṇḍir,* பெ. (n.) ***கைம்மை நோன்பினால் வருந்தும் மகளிர்;*** women who suffer under very trying austerities enjoined upon widowhood. "பாயின்று வதியு முயவற் பெண்டிரே மல்லேம்" (புறநா. 246). (செ.அக.).

[உயவு → உயவல் + பெண்டிர்.]

உயவு[1]-தல் *uyavu-,* 5. செ.கு.வி. (v.i.) ***வருந்துதல்;*** to suffer. "உண்டென வுணரா வுயவு நடுவின்" (பொருந. 38). (செ.அக.).

[உய் → உய்வு → உயவு.]

உயவு[2]-தல் *uyavu-,* 5. செ.கு.வி. (v.i.) ***வண்டிச் சக்கரத்திற்கு மையிடுதல்;*** to apply grease to a cart-wheel. "தஞ்சாகாடேனு முயவாமற் சேறலோவில்" (பழ. 168). (செ.அக.).

[உ → உய் → உய்வு (செலுத்து, உட்புகட்டு) → உயவு.]

உயவு[3] *uyavu,* பெ. (n.) ***வருத்தம்;*** distress, trouble, suffering. "உயவுநோய் கைம்மிக" (கலித். 58). (செ.அக.).

[உய → உயவு. (வே.க.48)]

உயவு[4] *uyavu,* பெ. (n.) ***உயிர் பிழைக்கச் செய்யும் வழி;*** means of saving life. "உய்யா வருநோய்க் குயவாகும்" (கலித். 139). (செ.அக.).

[உய் → உயவு.]

உயவு[5]-தல் *uyavu-,* 5. செ.குன்றாவி, செ.கு.வி. (v.t. & v.i.) ***உசாவுதல்;*** to take counsel, consult. "வஞ்ச மைந்தரொ டுயவி" (பாரத. சஞ்சய. 2). (செ.அக.).

[உயவு = அசைதல், வாயசைதல், பேசுதல். உய் → உயவு.]

உயவுத்துணை *uyavu-t-tuṇai,* பெ. (n.) ***உசாத்துணை;*** intimate friend. "சுரஞ்சென் மாக்கட் குயவுத்துணை யாகுங் கல்வரை" (குறுந். 207). (செ.அக.).

[உயவு + துணை.]

உயவுநெய் *uyavu-ney,* பெ. (n.) 1. ***சகடத்திற்கு இடும் எண்ணெய்;*** lubricating oil for the wheels of carts, etc. "அஃ்தா லுயவுநெய் யுட்குளிக்கு மாறு" (பழ. 385.). (செ.அக.).

[உயவு[2] + நெய்.]

உயவை[1] *uyavai,* பெ. (n.) 1. ***காக்கணம் கொடி;*** *mussell - shell creeper.* "ஊறுநீ ருயவை" (மலைபடு. 136). 2. ***வெண்கருவிளை*** (பிங்.); white - flowered mussel - shell creeper. (செ.அக.).

[உயவு → உயவை.]

உயவை² *uyavai,* பெ. (n.) 1. ***காடு.*** (பிங்.); jungle. 2. ***காட்டாறு*** (பிங்.); jungle stream. 3. ***செல்லும் வழி;*** path. (செ.அக.).

[உயவு → உயவை.]

உயா *uyā,* பெ. (n.) ***வருத்தம்;*** distress, suffering. "உயாவே யுயங்கல்" (தொல். சொல். 369). (செ.அக.).

[உய் → உயா. (வே.க. 48.)]

உயாவு-தல் *uyāvu-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***கேட்டறிதல்;*** to inquire after. (செ.அக.).

[உய → உயவு = அசைதல், வாயசைத்தல், பேசுதல். உயவு → உயாவு. உயாவு → உசாவு எனவும் திரியும்.]

உயாவுத்துணை *uyāvu-t-tuṇai,* பெ. (n.) ***உசாத்துணை*** பார்க்க; see *uśā-t-tuṇai.* "உயாவுத் துணையாக வயா வொடும் போகி" (மணிமே. 20.93). (செ.அக.).

[உயாவு + துணை.]

உயிர்¹-த்தல் *uyir-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***உயிர் பெற்றெழுதல்;*** to revive, to regain consciousness; to be re-animated. 2. ***தொழிற்படுதல்;*** to be in vigorous functioning activity. "அவ்வுடலி னின்றுயிர்ப்ப வைம் பொறிகள்" (சி.போ. 3,4.). 3. ***மூச்செறிதல்;*** to breathe hard. "உரைதடுமாறாவுயிர்த்து" (பாரத. பதினெட். 173). 4. ***கமழ்தல்;*** to be wafted as fragrance. "உயிர்த்த தாமத்தன" (கம்பரா. நிகும். 114) 5. ***இறந்துபடுதல்;*** to breathe one's last. "உயிர்ப்பது மோம்பி" (சீவக. 1989).

[உய் → உயிர்-.]

உயிர்²-த்தல் *uyir-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***ஈனுதல்;*** to give birth to, bring forth. "குழந்தையை யுயிர்த்தமலடிக் குவமை கொண்டாள்". (கம்பரா. உருக்காட். 65). 2. ***மோத்தல்;*** to smell. "கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறி யும்" (குறள். 1101). 3. ***கூறுதல்;*** to say, declare. "விட்டுயிர்த் தழுங்கினும்" (தொல். பொருள். 111). 4. ***பெருக்குதல்;*** to multiply a number. அம்மூ வாறுமுயி ரொடு முயிர்ப்ப (நேமிநா. 3, உரை) 5. ***வெளிப்படுத்து தல்;*** to emit, send forth. "கொங்குயிர்த்த பூந்தடத் துலாய்" (நைடத. நாட்டுப்.5). (செ.அக.).

ம. உயிர், உயிர்க்குக; **க.** உயிர், உசுர்; **குட.** உசிரி (மூச்சு.); **து.** உசுரு; **கோத.** உசிர்; **துட.** உசிர்; **குரு.** உச்சனா; **மால்.** உசெ; **பிரா.** உச்ர்.

[உய் → (உயில்) உயிர். உயிர்த்தல். உய் + இல் - உயில். இல் - உடைமைப் பொருளீறு. உய்தலை அல்லது இயங்குத லைத் தன்பாற் கொண்டது.]

உயிர்³ *uyir,* பெ. (n.) 1. ***தானாக இயங்காத உடம்பை இயக்கும் அல்லது செலுத்தும் ஆவி*** (திவா.); life of human being, animal or vegetable. 2. ***ஆதன்.*** (ஆன்மா.); soul. "தன்னுயிர் தானறப் பெற்றானை" (குறள். 268). 3. ***உயிரி;*** living being. "எல்லாவுயிருந் தொழும்" (குறள், 260). 4. ***பிறப்போரை*** (சன்மலக்கினம்); (Astro) ascendant, sign of nativity. "உயிர்க்கிரு பாலி னும்" (விதான. சாதக.19.). 5. ***தனித்தியங்கும் உயி ரெழுத்து;*** vowel. "உயிரு முடம்புமா முப்பதும்" (நன். 59). 6. ***உயிர்வளி*** (பிராணவாயு); oxygen, one of the vital airs. "வைகரியில்... உயிரணைந்து வந்த மொழி" (சிவப்பிர. 2,20.). 7. ***காற்று*** (பிங்.); wind. 8. ***ஓசை;*** voice, spoken sound. "வள்ளுயிர்த் தெள் விளி" (குறிஞ்சிப். 100). 9. ***ஒரு நாழிகையில் 4320இல் ஒரு கூறு*** (கணக்கதி. பக்.13.); measure of time, 1/4320 of nāḻikai.

ம. உயிர்; க. உசிர்; **தெ., பட., து.** உசுரு; **கோத.** உச்ர்; **துட.** உசிர்; **குட.** உசிரி; **குரு.** உச்சனா; மால். உசே; **பிரா.** உச்ர்; *E.* air; *M.E.* eir, ayre; *OF.*air; *L.*aer.

[உய் → உயிர்.]

உயிர்ஊது-தல் *uyir-ūdu-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***குழந்தையின் நெற்றியில் ஊதுதல்;*** to blow the forehead of infants.

க. உசுரு ஊது.

[உயிர் + ஊது. உயிர்ப்பது = உயிர்த்தல், மூச்சு விடுதல். உயிர் - முதனிலைத் தொழிலாகுபெயர்.]

உயிர்க்கட்டை *uyir-k-kaṭṭai,* பெ. (n.) ***உடல்;*** (வின்.); body. (செ.அக.).

க. உசிர்நெலே.

[உயிர் + கட்டை.]

உயிர்க்கணம் *uyir-k-kaṇam,* பெ. (n.) ***உயிரெழுத்துக் கூட்டம்;*** vowels. (செ.அக.).

[உயிர் + கணம்.]

உயிர்க்கப்பண்ணல் *uyirkka-p-paṇṇal,* பெ. (n.) ***உயிர் பிழைக்கச் செய்தல்;*** to reanimate; to bring back to life. (சா.அக.).

[உயிர்க்க + பண்ணல்.]

உயிர்க்கயிறு *uyir-k-kayiṟu,* பெ. (n.) 1. ***உறுதியுள்ள கயிறு;*** strong rope or cable. "வடம் போலேயிருக்கிற வாசுகியை வலிய உயிர்க் கயிறாகச் சுற்றி" (திவ். பெரியாழ். 1,6,11, வியா, பக்.135): 2. ***பாம்பு;*** snake. (செ.அக.).

[உயிர் + கயிறு.]

உயிர்க்கழு *uyir-k-kaḻu,* பெ. (n.) ***கழுவகை;*** form of stake for impalement designed to prolong the agony. "உயிர்க்கழு வினவா முன்னர்" (திருவாலவா. 38,27). (செ.அக.).

[உயிர் + கழு.]

உயிர்க்காப்பாற்றி *uyir-k-kāppāṟṟi,* பெ. (n.) ***உயிர் மருந்து;*** elixir of life.

[உயிர் + காப்பாற்றி.]

உயிர்க்கால் *uyir-k-kāl,* பெ. (n.) ***முதன்மைக்காற்று;*** one of the five vital airs (prana) supposedly controlling the functions of the body. (சா.அக.).

[உயிர் + கால். கால் = காற்று.]

உயிர்க்கிழவன் *uyir-k-kiḻavaṉ,* பெ. (n.) ***கணவன்;*** husband, considered as the lord of his wife's life. ''தன்னுயிர்க் கிழவனை யடைந்து'' (திருவிளை. மலயத்.9). (செ.அக.).

[உயிர் + கிழவன்.]

உயிர்க்குயிர் *uyir-k-kuyir,* பெ. (n.) ***கடவுள்;*** god, who is the soul of the soul. உயிர்க்குயிரா யங்கங்கே நின்றான் கோயில்'' (தேவா. 575,4). (செ.அக.).

[உயிர் + கு + உயிர்.]

உயிர்க்குரங்கு *uyir-k-kuraṅgu,* பெ. (n.) ***எலும்புக்கூடு;*** the skeleton. (சா.அக.).

[உயிர் + குரங்கு = வளைந்த எலும்புக்கூடு.]

உயிர்க்குறடு *uyir-k-kuṟaḍu,* பெ. (n.) ***எலும்பு;*** bone. (சா.அக.).

[உயிர் + குறடு.]

உயிர்க்கொலை *uyir-k-kolai,* பெ. (n.) 1. ***உயிர் வாங்குதல்;*** taking of animal or human life. ''ஊனை விரும்பி யுயிர்க்கொலை யெண்ணுவான்'' (சிவதரு. பாவ. 75). 2. ***துன்புறுத்திக் கொல்லல்;*** taking of life by gradual dismemberment of limbs and organs. ''நற்கொலையாகக் கொல்ல வொண்ணாது, உயிர்க் கொலையாகக் கொல்ல வேணும்'' (ஈடு, 9,9,1). (செ.அக.).

[உயிர் + கொலை.]

உயிர்குடி-த்தல் *uyir-kuḍi-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***உயிரைப்போக்குதல்;*** to devour life, said of blood thirsty demons and malevolent deities. ''வானவரை யெல்லாந் தின் றுயிர்குடித்து'' (கந்தபு. சூரபன். வதை. 455.). (செ.அக.).

[உயிர் + குடி.]

உயிர்கொடுக்குமூலி *uyir-koḍukku-mūli,* பெ. (n.) 1. ***பிழைக்கச் செய்யும் மூலிகைகள்;*** herbs giving or prolonging life. 2. ***உயிர்தரு மருந்து;*** the philosopher's stone sought for by the alchemists for prolonging life. (சா.அக.).

[உயிர் + கொடுக்கும் + மூலி.]

உயிர்ச்சரக்கு *uyir-c-carakku,* பெ. (n.) 1. ***ஒவ்வொரு சரக்கினுள் ளமைந்த வலிவுள்ள பொருள்;*** the component part in every drug. 2. ***முதன்மைச் சரக்கு;*** main substance in medicine; main drug in a medicine. (சா.அக.).

[உயிர் + சரக்கு.]

உயிர்ச்சூது *uyir-c-cūdu,* பெ. (n.) ***ஆடு, கோழி முதலிய வற்றைப் போர் பொருத்தி யாடுகை*** (சங். அக.) gambling with living animals as stakes, a term used to denote that kind of gambling involved in cock-fight, ram-fight,etc. (செ.அக.).

[உயிர் + சூது.]

உயிர்த்தறுவாய் *uyir-t-taṟuvāy,* பெ. (n.) ***சிக்கலான நேரம்;*** great emergency, critical moment, extreme danger. (செ.அக.).

[உயிர் + தறுவாய்.]

உயிர்த்தன்மை *uyir-t-taṉmai,* பெ. (n.) ***உயிரோடு கூடிய தன்மை;*** living date. (சா.அக.).

[உயிர் + தன்மை.]

உயிர்த்துணை *uyir-t-tuṇai,* பெ. (n.) 1. ***இக்கட்டான நேரத்தில் உதவுபவன்(ள்);*** friend in need. 2. ***உயிர்த் தோழன்,தோழி;*** intimate friend, dear as life. ''ஆருயிர்த் துணையாய் வந்த'' (பாரத. இராச. 28). 3. ***மனைவி;*** wife. (செ.அக.).

[உயிர் + துணை.]

உயிர்த்துணைவன் *uyir-t-tuṇaivaṉ,* பெ. (n.) 1. ***இக்கட்டான நேரத்தில் உதவுபவன்;*** he who is an intimate friend. ''உங்கள் குலத்தனி நாதற்குயிர்த் துணைவன்'' (கம்பரா. குகப். 25). 2. ***கணவன்;***husband. (செ.அக.).

[உயிர் + துணைவன்.]

உயிர்த்துணைவி *uyir-t-tuṇaivi,* பெ. (n.) 1. ***கலைமகள்*** (பிங்.); Sarasvati. 2. ***மனைவி;*** wife. (செ.அக.).

க. உசுருவெண்.

[உயிர் + துணைவி.]

உயிர்த்தூண்டிற்காரன் *uyir-t-tūṇḍiṟkāraṉ,* பெ. (n.) ***ஒரு தீத்தெய்வம்*** (m.m.); a demon in the temple of the goddess Aṅgāḷammai, who brings to her the souls of suicides. (செ.அக.).

[உயிர் + தூண்டில் + காரன்.]

உயிர்த்தெழு-தல் *uyir-t-teḻu* 2. செ.கு.வி. (v.i.) 1. ***மயக்கமடைந்தவர் தெளிவு பெற்றெழுதல்;*** to be revived, restored to life. 2. ***செத்தவன் மீட்டும் உயிர் பெற்றெழுதல்;*** to rise from the dead. இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். (செ.அக.).

[உயிர்த்து + எழு-தல்.]

உயிர்த்தோழன் *uyir-t-tōḻaṉ,* பெ. (n.) ***உற்ற நண்பன்;*** bosom friend, inseparable companion. (செ.அக.).

[உயிர் + தோழன்.]

உயிர்த்தோழி *uyir-t-tōḻi,* பெ. (n.) ***பாங்கி;*** woman's trusted female companion. ''தன்னுடைய வின்னுயிர்த் தோழியால்'' (திவ். இயற்.பெரியதிரும. 62). (செ.அக.).

[உயிர் + தோழி.]

உயிர்த்தோற்றம் *uyir-t-tōṟṟam,* பெ. (n.) ***உயிர்களின் பிறவி;*** genesis of life in four classes of living organisms. (செ.அக.).

[உயிர் + தோற்றம்.]

உயிர்தருமருந்து *uyirtaru-marundu,* பெ. (n.) ***உயிர் நீட்டிக்கும் மருந்து*** (திவா.); elixir of life. (செ.அக.).

[உயிர் + தரு + மருந்து.]

உயிர்நிலை *uyir-nilai,* பெ. (n.) 1. ***உடம்பு;*** body as the seat of life. "அன்பின் வழிய துயிர்நிலை" (குறள்.80). 2. ***ஆதனின் இயல்நிலை;*** nature of soul. "மெய்யாமுயிர் நிலையும்" (திவ். திருவாய். தனியன்.). 3. ***உயிர் தங்கும் இடம்;*** seat of life, any vital part of the body. "நீயுன துயிர்நிலை கூறாய்" (பாரத. பதினெட். 173). 4. ***உயிர்ப்பு ஒழுங்கு*** (பிராணாயாமம்); regulation of breath 5. ***உட்கருத்து;*** inner meaning. 6. ***ஆண்குறி அல்லது பெண்குறி*** (உ.வ.); genital organs. (செ.அக.).

க. உசிர்நெலே.

[உயிர் + நிலை.]

உயிர்நிலைப்புண் *uyir-nilai-p-puṇ,* பெ. (n.) ***உடம்பின் உயிர்நிலைப் பாகங்களிலேற்படும் புண்;*** wound, injury or sore on a vital part of the body. (சா.அக.).

[உயிர் + நிலை + புண்.]

உயிர்நூல் *uyir-nūl,* பெ. (n.) ***உயிரோம்பும் முறையைத் தழுவிய நூல்;*** a treatise on protection of life; science of health. (சா.அக.).

[உயிர் + நூல்.]

உயிர்ப்பயிர்கள் *uyir-p-payirgaḷ,* பெ. (n.) ***எல்லாவகை உயிர்கள்;*** all lives in the animal kingdom; all things with life. (சா.அக.).

[உயிர் + பயிர்கள்.]

உயிர்ப்பலி *uyir-p-pali* பெ. (n.) 1. ***உயிரையே கொடுக்கும் காணிக்கை;*** sacrifice of life. . 2. ***வீரன் தன் தலையைக் கொற்றவைக்குக் கொடுக்கும் பலி.*** (தொல். பொருள்.59 உரை.); warrior beheading himself as an offering to the goddess of war, an ancient custom. 3. ***உயிர்ப்பிச்சை;*** saving a person's life. "ஒருயிர்ப்பலி நீ வழங் கென்றாள்" (பிரமோத்.2,16). (செ.அக.).

[உயிர் + பலி.]

உயிர்ப்பலைவு *uyir-p-palaivu,* பெ. (n.) ***மூச்சினலைவு;*** the wave life motion of respiration. (சா.அக.).

[உயிர்ப்பு + அலைவு.]

உயிர்ப்பழி *uyir-p-paḻi,* பெ. (n.) ***கொலை செய்தவனைத் தொடரும் பழி*** (வின்.); guilt of murder, vengeance, divine or human, of the foul deed of murder pursuing the murderer to death. (செ.அக.).

[உயிர் + பழி.]

உயிர்ப்பற்று *uyir-p-paṟṟu,* பெ. (n.) ***உயிரின் தொடர்பு;*** desire for life (சேரநா.).

க. உசிர்பத்து.

[உயிர் + பற்று.]

உயிர்ப்பன *uyir-p-paṉa,* பெ. (n.) ***மூச்சுடைய விலங்குகள்;*** breathing animals. (சா.அக.).

[உயிர்ப்பு + அன் + அ = உயிர்ப்பன. (வி.அ.பெ.).]

உயிர்ப்பாங்கி *uyir-p-pāṅgi,* பெ. (n.) ***தன்னை விட்டு நீங்காத தோழி;*** intimate female friend. (ஆ.அக.).

[உயிர் + பாங்கி.]

உயிர்ப்பி¹-த்தல் *uyirppi-,* 1. பி.வி. (caus). 1. ***பிழைக்கச் செய்தல்;*** reviving; restoring to life; reanimating. 2. ***உயிர்கொடுத்தல்;*** giving life. 3. ***இறந்தோரை எழுப்புதல்;*** animating persons apparently dead. (சா.அக.).

ம. உயிர்ப்பிக்குக; **க.** உசிரிக்கு.

[உயிர் → உயிர்ப்பி. (பி.வி.)]

உயிர்ப்பிச்சை *uyir-p-piccai,* பெ. (n.) ***உயிரையளிக்கை;*** gift of life, saving one's life. உயிர்ப்பிச்சை தரவேணுமென்று தெய்வத்தினிடம் வேண்டிக்கொண்டார். (செ.அக.).

[உயிர் + பிச்சை.]

உயிர்ப்பிப்பு *uyir-p-pippu,* பெ. (n.) ***பிழைப்பித்தல்;*** reviving life. (சா.அக.).

[உயிர் → உயிர்ப்பி → உயிர்ப்பிப்பு.]

உயிர்ப்பு¹ *uyirppu,* , பெ. (n.) 1. ***உயிர்த்தெழுகை;*** reanimation, resurrection. 2. ***சோர்வு நீங்கிப் புதுவலிவு அடைகை;*** revival. 3. ***மூச்சு;*** breath, respiration. "ஊனிலுயிர்ப்பை யொடுக்கி" (தேவா.1173,3). 4. ***தெய்வப்படிமையிலுள்ள தெய்வ ஆற்றலை வருவிக்கை;*** invocation to a deity to come and abide in an idol. 5. ***காற்று;*** wind, air. "ஒல்லென வீழ்வுறு முயிர்ப்பின் காவலன்" (கந்தபு. திருவவ.13). 6. ***பெருமூச்சு.*** sighing. "நெட்டுயிர்ப் போடுற்ற பிணம்" (நீதிநெறி.31). 7. ***நறுமணம்;*** sweet fragrance. "உயிர்க்குமெல் லுயிர்ப்பெதி ரோடி" (பாரத.குருகுல.91). 8. ***இளைப்பாறுகை;*** rest, repose. "நின்னுயவுநோய்க் குயிர்ப்பாகி" (கலித். 35). 9. ***செயலறவு;*** state of being undone, helplessness when deprived of power or energy. கருத லாராய்ச்சி விரைவுயிர்ப் பெனாஅ" (தொல். பொருள்.260.).

ம. உயிர்ப்பு.

[உயிர் → உயிர்ப்பு.]

உயிர்ப்பு² *uyirppu,* பெ. (n.) ***ஒரு கால அளவு;*** a measure of time. கணம் வளியுயிர்ப்புத் தோவம்" (மேருமந்.94). (செ.அக.).

[உயிர் → உயிர்ப்பு.]

உயிர்ப்புவீங்கு-தல் *uyirppu-vīṅgu-,.* 5. செ.கு.வி. (v.i.) ***பெருமூச்சு விடுதல்;*** to heave a deep sigh, fetch a deep breath. ''உண்ணினைப் போவிநின் றுயிர்ப்பு வீங்கி னாள்'' (கம்பரா. மீட்சி.70). (செ.அக.).

[உயிர்ப்பு + வீங்குதல்.]

உயிர்ப்புனல் *uyir-p-puṉal,* பெ. (n.) ***குருதி;*** blood, lit., life-fluid. ''புண்ணிடைப் பொழியுயிர்ப்புனல் பொலிந்து வரவும்'' (கம்பரா.விராதன்.44). (செ.அக.).

[உயிர் + புனல்.]

உயிர்ப்பொறை *uyir-p-poṟai,* பெ. (n.) ***உடம்பு;*** body, the support of life. ''உழந்து விழிபெற்ற தொருயிர்ப் பொறையும்'' (கம்பரா.உருக்காட்,65). (செ.அக.).

[உயிர் + பொறை.]

உயிர்பிழை-த்தல் *uyir-piḻai-,* 4. செ.கு.வி. (v.i.). 1. ***உயிர் வாழ்தல்;*** to live, subsist. 2. ***தப்பிப்பிழைத்தல்;*** to survive, escape with life, live through a time of peril. (செ.அக.).

[உயிர் + பிழை.]

உயிர்போ-தல் *uyir-pō-,.* 8. செ.கு.வி. (v.i.). 1. ***சாதல்;*** to expire, die. 2. ***அறிவு போதல்;*** to become insensible, lose consciousness, faint. ''உயிர் போயிருந்தான் மாதோ'' (சீவக. 2196). (செ.அக.).

[உயிர் + போ.]

உயிர்மருந்து *uyir-marundu,* பெ. (n.) 1. ***வாழ்நாள் நீட்டிக்கும் மருந்து;*** elixir of life. ''தெளிந்தவ ருயிர்மருந் தாய்'' (திருவாலவா.43,17). 2. ***சோறு;*** food, the sustainer of life; boiled rice.''அருந்துயிர் மருந்து முன்னங் கையிற் கொண்டு'' (மணிமே.25,160). (செ.அக.).

[உயிர் + மருந்து.]

உயிர்மாய்-த்தல் *uyir-māy-,.* 2. செ.குன்றாவி. (v.t.) ***கொல்லல்;*** to deprive of life, to kill. (சா.அக.).

[உயிர் + மாய்-த்தல்.]

உயிர்மாற்றல் *uyir-māṟṟal,* பெ. (n.) 1. ***கொலை செய்தல்;*** murdering. 2. ***தற்கொலை;*** suicide.

[உயிர் + மாற்றல்.]

உயிர்மூலி *uyir-mūli,* பெ. (n.) ***உயிர்ச்சத்துள்ள மூலி;*** any drug with an active principle. (சா.அக.).

[உயிர் + மூலி.]

உயிர்மெய் *uyir-mey,* பெ. (n.) 1. ***ஒற்று முன்னும் உயிர் பின்னுமா யிணைந்து ஒலிக்கு மெழுத்து;*** consonant -vowel, composed of a consonant and a vowel, in the written character of which the vowel animates the consonantal sound whose articulation always precedes in pronunciation, one of ten cārpeḻuttu. ''ஒற்றுமுன் னாய் வரு முயிர்மெய்'' (நன்.89). 2. ***உயிருடம்பு;*** a living body. (செ.அக.).

[உயிர் + மெய்.]

உயிர்வாங்கு-தல் *uyir-vāṅgu-,.* 5. செ.குன்றாவி. (v.t.) ***கொல்லல்;*** to kill. (சா.அக.).

[உயிர் + வாங்கு.]

உயிர்வாழ்-தல் *uyirvāḻ-,.* 2. செ.கு.வி. (v.i.) ***உயிருட னிருத்தல்;*** to live. ''இரந்து முயிர் வாழ்தல் வேண்டின்'' (குறள், 1062). (செ.அக.).

[உயிர் + வாழ்.]

உயிர்வாழ்க்கை *uyir-vāḻkkai,* பெ. (n.) ***உயிர் வாழ்தல்;*** living. (செ.அக.).

[உயிர் + வாழ்க்கை.]

உயிர்விடு-தல் *uyir-viḍu-,* 20. செ.கு.வி. (v.i.) 1. ***ஒருவருக்காக அல்லது நற்செயலுக்காக உயிரைத் தானே விடுதல்;*** to lay down one's life for a person or cause. ''உயிர் விடுவான் வனக்கனல் வளர்த்து'' (ஞானவா. சித்தன்.24). 2. ***மிகப்பாடுபடுதல்;*** to work hard. (கொ.வ.). (செ.அக.).

க. உசுருபிடு.
[உயிர் + விடு.]

உயிர்விளக்கம் *uyir-viḷakkam,* பெ. (n.) ***ஆதன்*** (ஆன்ம) ***நிலையை அறிகை*** (திருவருள் தலைப்பு. பக்.59); knowledge of the nature of Ātmaṉ. (செ.அக.). (செ.அக.).

[உயிர் + விளக்கம்.]

உயிர்வை-த்தல் *uyir-vai-,* 4. செ.கு.வி (v.i.). 1. ***இறத்தல்;*** to die. ''அழனிலை யத்தத் தசைந்துயிர் வைப்ப'' (பெருங். இலாவாண. 9,129). 2. ***பற்றுவைத்திருத்தல்;*** to have more affection, regard. (செ.அக.).

ம. உயிரெடுக்குக.

[உயிர் + வை.]

உயிரடங்கு-தல் *uyir-aḍaṅgu-,* 5. செ.கு.வி. (v.i.). 1 ***மூச்சொடுங்குதல்;*** to be in a state of unconsciousness in a swoon; to have one's animation suspended. 2. ***இறந்துபடுதல்;*** to die. (செ.அக.).

[உயிர் + அடங்கு.]

உயிரடை-தல் *uyir-aḍai-,* 2. செ.கு.வி. (v.i.) ***மயக்கந் தெளிதல்;*** to revive, to be re-animated. (செ.அக.).

[உயிர் + அடை-தல்.]

உயிரவர் *uyir-avar,* பெ. (n.) ***வாழ்கின்றவர்;*** living persons. (செ.அக.).

ம. உயிரவர்; க. உசிரி.
[உயிர் + அவர்.]

உயிரவை *uyir-avai,* பெ. (n.) ***உயிர்த்தொகுதி;*** the world with all its life. ''உயிரவை யொடுங்கி'' (சி.சி.1,32). (செ.அக.).

[உயிர் + அவை.]

உயிரளபு *uyir-aḷabu* பெ. (n.) ***உயிரளபெடை*** பார்க்க; see *uyir-aḷabeḍai,* "உயிரள பெழுமூன்று" (நன்.61). (செ.அக.).

[உயிர் + அளவு.]

உயிரளபெடை *uyir-aḷabeḍai,* பெ. (n.) ***தனக்குரிய மாத்திரையின் மிக்கொலிக்கும் உயிரெழுத்து.*** (நன்.91, உரை); vowel which sounds with more than its normal quantity, which fact is indicated in writing by placing a short vowel of the class after the long vowel, as in ஓஒதல் வேண்டும், one of šārbeḷuttu. (செ.அக.).

[உயிர் + அளபெடை.]

உயிரிலங்கி *uyiril-angi,* பெ. (n.) ***உயிர்த்தீ*** பார்க்க. (சூடா.); see *uyirttī.* (செ.அக.).

[உயிர் + இல் + அங்கி. 'இல்' இடப்பொருளில் வந்த ஏழன் உருபு. அங்கி = தீ.]

உயிரினம் *uyiriṉam,* பெ. (n.) 1. ***உயிர் வகைகள்;*** living beings. 2. ***உயிரெழுத்துகள்;*** vowels. (ஆ.அக.).

[உயிர் + இனம்.]

உயிருண்(ணு)-தல் *uyir-uṇṇu-,* 13. செ.குன்றாவி. (v.t.). 1. ***உயிரைப் போக்குதல்;*** to devour life, kill. "பெருங் கூற் றுயிருண்ணு மாறும்" (திரிகடு.88). 2. ***தன்னுணர் விழத்தல்;*** to subjugate a person's will. "இன்பேயருளி யெனையுருக்கி யுயிருண்கின்ற வெம்மானே" (திரு வாச.44,3). (செ.அக.).

[உயிர் + உண்ணு-தல்.]

உயிருதவி *uyir-udavi,* பெ. (n.) 1. ***இக்கட்டில் உதவுகை;*** aid when life is in danger. 2. ***உயிர்கொடுத்துதவுகை;*** aid by sacrificing one's life. (செ.அக.).

[உயிர் + உதவி.]

உயிரெடு-த்தல் *uyir-eḍu-,* 18. செ.குன்றாவி. (v.t.). 1. ***உயிரை வாங்கிவிடுதல்;*** to take away life. 2. ***துன்புறுத் துதல்*** (வின்.); to give great trouble. (செ.அக.).

ம. உயிரு எடுக்குக.
[உயிர் + எடு.]

உயிரெழுத்து *uyir-eḻuttu,* பெ. (n.) ***உயிர் போல் தனித்தியங்கக்கூடிய எழுத்து;*** vowel, a sound having life in itself or its written character. மெய் எழுத்துக்கு உயிர் போல இருத்தலால் இப்பெயர் பெற்றன. அவை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகப் பன்னிரண்டு.

[உயிர் + எழுத்து.]

உயிர்த்த அளவிலேயே தோன்றுவது. நா, உதடு போன்ற ஒலிப்புறுப்புகளின் தொடுதல், படுதல், சுருங்கல் போன்ற எவ்வகை முயற்சியினையும் துணைக்கொள்ளாது வாய்திறந்த குரலோசையின் வேறுபாட்டளவிலேயே உயிர்கள் பிறக்கின் றன என்பது புளும்பீல்டின் வரையறை - உயிர்த்த அளவி லேயே தோன்றுவது உயிரெழுத்து என்பது தம் அளவில் தம்மையே சுட்டி நிற்பதைக் காண்க; 'vowels' are modifications of voice sound that involve no closure, friction or contact of the tongue or lips' - Bloomfield, L., Language, P.102.

உயிரைவாங்கு-தல் *uyirai-vāngu-,* 5. செ. குன்றாவி. (v.t.). 1. ***கொலை செய்தல்;*** to take away life. 2. ***துன்பப்படுத்துதல்;*** to persecute. (செ.அக.)

[உயிர் + ஐ + வாங்கு-தல்.]

உயிரொடுங்கு-தல் *uyir-oḍungu-,* 7. செ.கு.வி. (v.i.) 1. ***உயிர் வலுக் குறைதல்;*** to be reduced considerably, as the animating powers before death. 2. ***சாதல்;*** to die. (W.). 3. ***ஓகத்தில் மூச்சொடுங்கல்;*** suspension of breath in Yoga practice. (சா.அக.).

[உயிர் + ஒடுங்கு.]

உயிரொழி-த்தல் *uyir-oḻi-,* 18. செ.குன்றாவி. (v.t.) ***கொல்லல்;*** to kill, murder. (ஆ.அக.).

[உயிர் + ஒழி.]

உயிரொளி-த்தல் *uyir-oḷi-,* 7. செ.கு.வி. (v.i.) ***உயிர்க்கு இக்கட்டுவந்தது போற் காட்டுதல்;*** to feign great weariness or sickness, in order to gain an object. (J.). (செ.அக.).

[உயிர் + ஒளி.]

உயிரொளித்தகள்ளன் *uyir-oḷitta-kaḷḷaṉ,* பெ. (n.) ***தன் செல்வநிலையை மறைத்துப் பிறரை இரந்து ஏமாற்று வோன்;*** cringing deceiver who, when he is really rich and strong, pretends the contrary state. (செ.அக.).

[உயிர் + ஒளித்த + கள்ளன்.]

உயிரோடிரு-த்தல் *uyirōḍiru-,* 3. செ.குன்றாவி. (v.t.) ***பிழைத்திருத்தல்;*** to survive.

[உயிர் + ஓடு + இரு. ஓடு - மூன்றன் உருபு.]

உர-த்தல் *ura-,* 3. செ.கு.வி. (v.i.). 1. ***கெட்டியாதல்;*** to become firm, hard, as the soil. "உரத்துத் தரிக்கு மிகுதரணி தானே" (சிவப்பிர.2.27). 2. ***முருடாதல்;*** to become thick, coarse, as paper. உரத்த கடுதாசி. 3. ***வலத்தல்;*** to become strong, furious as the wind. உரத்த காற்று. 4. ***எடுப்பாதல்;*** to become loud, as the voice; to become harsh, as a noise. உரத்துப் பேசினான். 5. ***கொந்தளித்தல்;*** to rage, be boisterous as the sea. உரத்த கடல். 6. ***கடுமையாதல்;*** to become sharp, as a contest; to become violent as a controversy. உரத்த தருக்கம். 7. ***மிகுதல்;*** to become powerful, intense, as the hot sun. உரத்த காய்ச்சல்.

ம. உரக்குக; க. ஒரபு (கெட்டி); தெ. உக்கு (கெட்டி).

[உல் → உரு → உர. உல் = செறிதல், இறுகுதல், மிகுதல், கடுமையாகுதல்.]

உரக்க[1] *urakka,* கு.வி.எ (adv.). ***குரலோங்க;*** loudly, distinctly. உரக்கப் பேசு. (செ.அக.).

ம. உரத்த (சொன்ன).

[உல் = செறிதல், இறுகல், மிகுதல், கடுமையாதல். உல் → உரு → உர → உரக்க.]

உரக்க[2] *urakka,* கு.வி.எ (adv.). ***உறுதியாக;*** firmly, tightly. 'அவற்றை யுரக்கப் பிடித்துக்கொண்டேன்'. (ஈடு. 10,8,3, வ்யா. பக். 263). (செ.அக.).

ம. உரத்த.

[உல் → உரு → உர → உரக்க.]

உரகடல் *urakaḍal,* பெ. (n.) 1. ***கொந்தளிக்குங்கடல்.*** (வின்.); boisterous sea, sea generally rough. 2. ***பெருங்கடல்*** (ஆ.அக.); ocean. (செ.அக.).

[உரு → உர + கடல்.]

உரகசீரகம் *uraga-šīragam,* பெ. (n.) ***காட்டுச் சீரகம்;*** wild cumin-vernonia anthelmintica. (சா.அக.).

[உரகம் + சீரகம். உரகம் = கடுமை.]

உரகதம் *uragadam,* பெ. (n.) ***பாம்பு;*** serpent. ''உரகத வாரந் தோற்றாது'' (திருவிளை. நரிபரி.85). (செ.அக.).

[உர + கதம். உர = கடுமையான. கதம் = சினம்.]

உரகபுரி *uraga-puri,* பெ. (n.) ***தஞ்சை மாவட்டத்திலுள்ள கடல்துறைப் பட்டினம், நாகப்பட்டினம்;*** Nāgapaṭṭiṉam, a seaport town.

[உரகம் + புரி.]

உரகம் *uragam,* பெ. (n.) 1. ***பாம்பு;*** snake, serpent. ''உரக மெல்லணையான்'' (திவ். பெரியாழ். 4, 4, 4.). 2. ***நாகமல்லிகை.*** (மலை.); ringworm-root.

[உரம் → உரகம் (சு.வி.48.).]

உரகமல்லி *uraga-malli,* பெ. (n.) ***நாகமல்லிகை*** (மலை.); ringworm root. (செ.அக.).

[உரகம் + மல்லி.]

உரகர்[1] *uragar,* பெ. (n.) ***நாகர்;*** a class of demigods called Nāgās, who are supernatural serpents, the upper half being human in form, one of *patiṉeṉ-kaṇam.* ''உரகர்பே ருயிர்ப்பினான் மயங்கி'' (பாரத.குருகுல. 3. (செ.அக.).

[உரகதம் → உரகம்+அர்.]

உரகர்[2] *uragar,* பெ. (n.) ***உரவர்*** பார்க்க; see *uravar.* (செ.அக.).

[உல் → உர் → உர → உரகர்.]

உரகவல்லி *uraga-valli,* பெ. (n.) ***வெற்றிலைக்கொடி;*** betal creeper.

[உரகம் + வல்லி.]

உரகவாதம் *uragavādam,* பெ. (n.) ***உடம்பின் ஒரு பாதியில் வலியேற்பட்டுக் கழுத்தும் வாயும் கோணிக் கண்கள் இமை கொட்டாது துன்புறுத்தும் ஒருவகை ஊதைநோய்.*** (யூகிமு.800); paralysis of one side of the body marked by wryneck, wrymouth and inability to wink - a kind of Hemiplegia. (சா.அக.).

[உரகம் + வாதம்.]

உரகன் *uragaṉ,* பெ. (n.) ***பாம்பு;*** snake, serpent. ''உரகன்வாய் கீண்ட மாதவன் போல'' (கல்லா.46).

[உரகம் → உரகன்.]

உரங்கம் *uraṅgam,* பெ. (n.) ***பாம்பு;*** snake, serpent. உரங்கவெங்கொடி யுயர்த்த காவலன்'' (பாரத. பதி னான்காம். 115). (செ.அக.).

[உரகம் → உரங்கம்.]

உரங்காட்டு-தல் *uraṅ-kāṭṭu-,* 5. செ.கு.வி. (v.i.) ***அன்பு பாராட்டுதல்;*** to show kindness, love. (செ.அக.).

[உரம் + காட்டுதல்.]

உரங்குத்து-தல் *uraṅ-kuttu-,* 5. செ.கு.வி. (v.i.) ***மரத்தைச் சுற்றி மண்கொட்டிக் கெட்டிப் படுத்தல்;*** to pound and harden the earth around trees newly set. (J). (செ.அக.).

[உரம் + குத்து.]

உரங்கொள்ளு-தல் *uraṅkoḷḷu,* 16. செ.கு.வி. (v.i). 1. ***உக்கிரமாதல்;*** to gain force, blow strong, as the wind; to become boisterous as the sea; to rage, as fever. காய்ச்சல் உரங்கொண்டு காய்கிறது. 2. ***கடினமாதல்;*** to be hardened, obdurate. நெஞ்சுரங்கொண்டவன். (செ.அக.).

[உரம் + கொள்ளுதல்.]

உரசு-தல் *urašu-,* 10. செ.கு.வி. (v.i.). 1. ***உராய்தல்;*** to rub against. உரசியு முரன்றும் (சிலப். 3,14, உரை). 2. ***உறிஞ்சுதல்;*** to absorb. (ஆ.அக.).

ம. உரசுக; க. ஒரசு.

[உர் → உரை → உரைசு → உரசு → உரசு-தல் (சு. வி.48).]

உரஞ்சிவந்தான் *urañjivandāṉ,* பெ. (n.) ***குதிரைவகை*** (அசுவசா.152); species of horse having red hairs on its chest. (செ.அக.).

[உரம் + சிவந்தான்.]

உரஞ்சு-தல் *urañju-,* 15. செ.குன்றாவி. (v.t.). 1. ***துடைத்தல்;*** to rub. 2. ***தேய்த்தல்;*** to scrape.

[உரசு → உரஞ்சு.]

உரஞ்செய்-தல் *urañjey-,* 7. செ.கு.வி. (v.i.). 1. ***உறுதி கொள்ளுதல்;*** to take effect; to be forceful, as in an argument. அவரெடுத்த காரியங்களொன்றும் உரஞ்செய் யவில்லை. 2. ***வலியுறுதல்;*** to grow strong. (W).

ம. உரசெய்யுக (சொல்லுதல்).

[உரம் + செய்-தல்.]

உரஞ்சொல்(லு)-தல் *urañ-jol-*,. 13. செ.கு.வி. (v.i.). 1. ***உறுதி கூறுதல்.*** (வின்.); to encourage. 2. ***துணை யாக நிற்றல்; அருகில் இருத்தல்;*** to support, to back up. (சேரநா.)

ம. உரசாருக.

[உரம் + சொல்லு.]

உரட்டுக்கை *urattukkai*, பெ. (n.) ***இடதுகை;*** left hand. (சென்னை வழக்கு).

[ஒரட்டு → உரட்டு. ஒரட்டு + கை.]

உரண்டம் *urandam*, பெ. (n.) ***காக்கை*** (அ.க.நி.); crow. (செ.அக.).

[உரள் → உரண்டு → உரண்டம் = ஒரு பக்கமாகத் தலை சாய்த்துப் பார்ப்பது.]

உரண்டை *urandai*, பெ. (n.) ***உரண்டம்*** பார்க்க; see *urandam*.

[உரண்டு → உரண்டம் → உரண்டை.]

உரண்டைவலி *urandai-vali*, பெ. (n.) ***காக்கை வலி;*** epileptic fits. (சா.அக.).

[உரண்டை + வலி.]

உரத்த *uratta*, கு.பெ.எ. (adj.). 1. ***ஆற்றல் உள்ள; உரம் உள்ள;*** strong, vigorous. 2. ***பெருகிய; தீவிரமான;*** increased, severe, intense. 3. ***பருத்த; மோட்டமான;*** loud, coarse, rough. (சேரநா.).

[உரம் → உரத்த.]

உரதாரை *uradārai*, பெ. (n.) ***நெஞ்சுக்குழல்;*** canal in the region of the thorax - thoracic duct. (சா.அக.).

[உரம் + தாரை.]

உரநோய் *uranōy*, பெ. (n.) 1. ***மார்புநோய்;*** chest pain from any cause. 2. ***சுளுக்கு;*** sprain. (சா.அக.).

[உரம் + நோய்.]

உரப்பம் *urappam*, பெ. (n.) ***பெருங்காயம்*** (மலை.); asafoetida. (செ.அக.).

[உர → உரப்பு → உரப்பம்.]

உரப்பல் *urappal*, பெ. (n.) 1. ***அடரொலி;*** whoop. 2. ***திரட்டோசை*** (பிங்.); roaring sound. 3. ***வலுவான பல்;*** strong tooth. (சா.அக.).

தெ. ரொப்பு.

[உர → உரப்பு → உரப்பல்.]

உரப்பன் *urappan*, பெ. (n.) 1. ***கரப்பான்;*** tetter, scall, scruf. 2. ***பாக்கு;*** areca-nut. 3. (பாக்கு முதலியவற்றை) ***சீவும் கருவி;*** scraper (esp. for scraping areca-nuts). 4. ***சீவு கருவி;*** curry-comb. (சேரநா.)

ம. உரப்பன்.

[உரப்பு → உரப்பன்.]

உரப்பியடி-த்தல் *urappi-yadi-*,. 4. செ.குன்றாவி. (v.t.) ***பேச்சால் வெல்லுதல்;*** to overcome by boisterous talk; to brow beat. (செ.அக.).

[உரப்பு → உரப்பி + அடி-த்தல்.]

உரப்பு[1]-தல் *urappu-*, 15. செ.கு.வி. (v.i.). 1. ***அதட்டி யொலித்தல்;*** to whoop, vociferate inarticulately as in driving cattle or in scaring away birds, beasts, or human beings, to shout so as to menace or intimidate. "நின் நுரப்பி" (திவ் இயற்.சிறிய. ம. 37). 2. ***திரண் டொலித்தல்.*** (பிங்.); to bluster, roar, sound loudly.

[உர → உரப்பு.]

உரப்பு[2]-தல் *urappu-*, 5. செ.குன்றாவி. (v.t.). 1. ***அச்ச முறுத்துதல்;*** to frighten. "காலனை.. உரப்பிய சேவடி யான்" (தேவா.524,3). 2. ***வடமொழி யெழுத்தின் ஐவருக்கத்திலும் இரண்டாம் எழுத்தை உச்சரித்தல்;*** to sound kh, ch, th, th, ph, the aspirates of hard consonants in Skt. ஐந்தன் வருக்கத்திலும் உரப்பியும் எடுத்துங் கனைத்தும் சொல்லப்படும் மூன்றும் (நன்.146, மயிலை); 3. ***உரத்து ஒலிக்கச் செய்தல்;*** to cause to sound loudly. "ஒலி முரசுரப்பினானால்" (தணிகைப்பு. வள்ளி.38). (செ.அக.).

[உர → உரப்பு-.]

உரப்பு[3] *urappu*, பெ. (n.) ***புகழ்;*** fame.

ம. உரப்பு

[உரம் → உரம்பு → உரப்பு.]

உரப்பு[4] *urappu*, பெ. (n.) 1. ***பேரொலி;*** shout, vociferation, roar. "நீங்கா வுரப்பினில் வீழ்வதேபோல்" (கந்தபு. காவிரி.44). 2. ***அதட்டு;*** intimidation, bluster, threat. (செ.அக.).

[உர → உரப்பு.]

உரப்பு[5] *urappu*, பெ. (n.) 1. ***கடினம்;*** hardness, as of rice that is not well boiled. சோறு உரப்பாயிருக்கிறது. 2. ***முருடு;*** coarseness or roughness, as of cloth or paper. உரப்பானபுடைவை. 3. ***மனத்திண்மை;*** resoluteness, strength, firmness of mind. 'உரப்பு எத்தைப்பற்ற வெனில்' (ஈடு, 1, 7, 8). 4. ***ஆற்றல்;*** strength. (சேரநா). (செ.அக.)

[உர → உரப்பு.]

உரப்பு[6] *urappu*, பெ. (n.) 1. ***உரசல்; தேய்ப்பு;*** the act of rubbing. 2. ***எதிர்ப்பு;*** rivalry. (சேரநா.).

ம. உரப்பு.

[உரை → உர → உரப்பு.]

உரப்புத்தாள் *urappu-t-tāl*, பெ. (n.) ***உப்புத்தாள்;*** sand-paper.(சேரநா.).

ம. உரப்பு தாள்.

[உரப்பு + தாள்.]

உரப்புப்பிசின் *urappu-p-pisin*, பெ. (n.) ***மியான்மரிலும்*** (பருமாவிலும்) ***அந்தமான் தீவுகளிலும் 80 அடிக்கு***

மேல் வளரும் மரவகை; an ever green tree growing to a height of 80 ft. or more, a native of Burma and the Andaman Islands. (செ.அக.).

ம. உரிப்பு.

[உரப்பு + பிசின்.]

உரபடி *ura-padi,* பெ. (n.) *வலிமை; திடம்;* strong physique, roughness, strength, firmness of body. உரபடி யான மனிதன் (யாழ்ப்.). (செ.அக.).

[உரம் + படி.]

உரபிடி *ura-pidi,* பெ. (n.) **உரபடி** பார்க்க (யாழ்ப்.); see *ura-padi.* (செ.அக.).

[உர + பிடி.]

உரம்[1] *uram,* , பெ. (n.) 1. *வலிமை* (திவா.); strength. 2. *திண்மை;* hardness, compactness. 3. *திடம்;* resolution, fortitude, firmness of mind, strength of will. "ஓட்டை மனவ னுரமிலி யென்மரும்" (பரிபா.12,51). 4. *வைரம்* (வின்.); solid part of timber, heart of a tree. 5. *எரு;* manure, fertilizer, as strengthening the soil. நிலத்துக்கு உரம்போட வேணும். (செ.அக.).

ம. உரம்; **க.** ஒப்பு, உர்கு; **தெ.** உக்கு.

[உர → உரம்.]

உரம்[2] *uram,* பெ. (n.) 1. *மார்பு;* chest, breast, bosom. "வாளிவந் துரங்குடைந்து" (கம்பரா. மாரீச. 93). 2. *அறிவு* (பிங்.); wisdom, spiritual, knowledge, clearness of understanding. 3. *ஊக்கம்* (பிங்.); energy, zeal, spirit. 4. *படையமைப்பின் முன்னணி* (குறள், 767, உரை); van of an army. 5. *குழந்தைகட்கு விழுஞ் சுளுக்கு வகை;* infantile sprain. உரம் எடுக்க வேண்டும். (செ.அக.). 6. *நஞ்சுக்கொடி;* naval cord. 7. *மாரடைப்பு;* disease of the heart marked by thoracic pain suffocation. (செ.அக.).

ம. உரம்.

[உர் → உரம். இனி, உரம் = தழுவும் உறுப்பு என்றுமாம். உர் → உறு. உரம் > வ. உரம் (இவே.) = மார்பு. (வே.க.39).]

உரம்[3] *uram,* பெ. (n.) *மதில்* (பிங்.); rampart. (செ.அக.).

[உர → உரம்.]

உரம்புகு-தல் *urampugu-,* 4. செ.கு.வி. (v.i.) *விசையோடு புகுதல்;* to fierce with force. (ஆ.அக.).

[உரம் + புகு.]

உரம்விழு-தல் *uram-vilu-,* 2. செ.கு.வி. (v.i.) *விழிப்பின்மையால் குழந்தையைத் தூக்கும்போது சுளுக்கு உண்டாதல்;* to be sprained; to suffer sprain, from rolling on the ground or from being carelessly lifted up, as an infant by one arm. குழந்தைக்கு உரம் விழுந்திருக்கிறது (கொ.வ.). (செ.அக.).

[உரம் + விழு.]

உரமடி-த்தல் *uram-adi-,* 4. செ.கு.வி. (v.i.) *எருக்கொணர்ந் திடுதல்;* to cart manure. (உ.வ.). (செ.அக.).

[உரம் + அடி.]

உரமண் *uraman,* பெ. (n.) 1. *சத்துள்ள நிலம்;* rich soil. 2. *கெட்டியான மண்.* (வின்.); hard ungenial soil. (செ.அக.).

[உரம் + மண்.]

உரமாயிரு-த்தல் *uramāyiru-,* 2. செ.கு.வி. (v.i.) 1. *வலுவாயிருத்தல்;* to be strong. 2. *சுளுக்குக் கொண்டிருத்தல்;* to be in a sprained condition. (சா.அக.).

[உரம் + ஆய் + இரு.]

உரமெடு-த்தல் *uramedu-,.* 18. செ.குன்றாவி. (v.t.) *குழந்தையின் சுளுக்கை நீக்குதல்;* to relieve an infant of the sprain caused by careless handling. (உ.வ.). (செ.அக.).

[உரம் + எடு.]

உரல்[1] *ural,* பெ. (n.) 1. *ஒலித்தல்;* sound. 2. *இடிக்கும் உரல்;* mortar, made of wood or stone for pounding or polishing grains. "முகைவளர் சாந்துரல் முத்தார் மருப்பின்... உலக்கை" (கலித். 40). 3. *இடியப்பந் தேங்குழல் முதலிய பணிகாரம் பிழியும் அச்சு;* mould for making pastry like vermicelli. (செ.அக.).

ம. உரல்; **க.** வொரலு, ஒரலு, ஒரள், ஒரளு, ஒள்ளு; **தெ.** ரோலு; **கோத.** ஒள்கால்; **குட.** ஒர; **து.** ஒரளு; **பட.** ஒரலு.

[உல் → உர் → உரல். உல் = குத்துதல்.]

உரல்[2] *ural,* பெ. (n.) *சிவப்பு;* redness.

[உல் → உர் → உரல் = சிவப்பு.]

உரல்பலம் *ural-palam,* பெ. (n.) *செங்கள்ளி;* red variety of square spurge - Euphorbia antiquorum (ruba). (சா.அக.).

[உரல் + பலம். உரல் = சிவப்பு.]

உரல்புரம் *ural-puram,* பெ. (n.) **உரல்களம்;** *நெல் குத்துகின்ற இடம்;* mortar - shed, a shed in which paddy is pounded.(சேரநா.).

ம. உரல்புரம்.

[உரல் + புரம்.]

உரல்வரி *ural-vari,* பெ. (n.) *வரிவகை;* ancient tax (S.I.I.v. 106).

[உரல் + வரி.]

உரலடி *ural-adi,* பெ. (n.) *யானை;* elephant which has legs like mortars. "கடுக்கை யுரலடிமீ துற்றானும்" (தனிப்பா. 1,79,158). (செ.அக.).

[உரல் + அடி.]

உரலாணி *ural-āṇi,* பெ. (n.) 1. **உலக்கை** (வின்.); pestle, rice-pounder. 2. *உரலின் அடிக்கிடும் மரத்துண்டு;*

wooden plug inserted in a mortar when the bottom is worn away. உரலாணியிட்டாற்போல (தொல். எழுத்து. 99. உரை). (செ.அக.).

[உரல் + ஆணி.]

உரலாமணக்கு *ural-āmaṉakku,* பெ. (n.) ***ஆமணக்கு வகை;*** species of castor - plant. "உரலாமணக்குக்கு... குன்மமும் போம்" (பதார்த்த.248).

[உரல் + ஆமணக்கு.]

உரலில் துவைத்தல் *uralil-tuvaittal,* பெ. (n.) ***உரலிலிட்டு இடித்தல்;*** bruising or pounding in a mortar. (சா.அக.).

[உரலில் + துவைத்தல்.]

உரலிலை *ural-ilai,* பெ. (n.) ***உலகுய்யக் கொட்டான்*** பார்க்க. (பெரியமாட்.); see *ulaguyyak-koṭṭāṉ.*

[உரல் + இலை.]

உரவக்காடு *urava-k-kāḍu,* பெ. (n.) ***மலையில் நிலையாகச் செய்யும் வேளாண்மை*** (G.S.A.D. 333); permanent hill cultivation, dist. fr. புனக்காடு. (செ.அக.).

[உரவம் + காடு.]

உரவண்டு *uravaṇḍu,* பெ. (n.) ***ஒரு கொடிய வண்டு;*** a poisonous beetle. (செ.அக.).

[உரம் + வண்டு.]

உரவம் *uravam,* பெ. (n.) 1. ***வலிமை;*** strength, force, firmness. "உரவ முள்ள தொருழை யின்னுரி" (தேவா. 344,8). (செ.அக.) 2. ***மலை;*** mountain.

ம. உரவம்; **க.** ஒர்பு; **தெ.** உக்கு.

[உர → உரவு → உரவம்.]

உரவர் *uravar,* பெ. (n.) ***சமணர்*** (யாழ்.அக.); Jains. (செ.அக.).

[உர → உரவர் = மனவலிமை மிக்கவர்.]

உரவல் *uraval,* பெ. (n.) ***உலாவல்;*** wandering, roaming. (ஆ.அக.).

[உலவல் → உரவல்.]

உரவன் *uravaṉ,* , பெ. (n.) 1. ***வலியோன்;*** strong man. 2. ***அறிஞன்;*** learned man, man of knowledge. "உரவரு மடவரு மறிவு தெரிந்தெண்ணி" (பதிற்றுப். 71,25). (செ.அக.). 3. ***அருகன்*** (ஆ.அக.); Arhat.

[உரவு → உரவன்]

உரவியன் *uraviyaṉ,* பெ. (n.) ***வலியோன்;*** strong man. "முன்கை உரவியரா யிருப்பார்" (திவ். திருப்பா.3, வ்யா.63). (செ.அக.).

[உர → உரவு → உரவியன்.]

உரவிழுக்கு *uraviḷukku,* பெ. (n.) ***மார்புக்கேடு;*** deformity of the chest. (சா.அக.).

[உரவு + இழுக்கு.]

உரவு[1]-தல் *uravu-,* 5. செ.கு.வி. (v.i.) ***வலியுறுதல்;*** to become vigorous, get strong. "வாசிகள் புனலுண் டுரவாவிடில்" (பாரத. பதினான்.51). (செ.அக.).

[உரம் → உரவு.]

உரவு[2]-தல் *uravu,-* செ.கு.வி. (v.i.) ***உலாவுதல்;*** to be in constant motion, as the sea, a river. "உரவுநீ ரழுவத் தோடுகலம்" (பெரும்பாண். 350).

ம. உரவுக.

[உல் → உல → உலவு → உரவு → உரவு-தல்.]

உரவு[3] *uravu,* பெ. (n.) 1. ***வலிமை;*** strength, firmness. "உரவுச்சினந் திருகிய" (புறநா. 25,3). 2. ***நெஞ்சுரம்;*** strength of mind or will. "உரவுசான் முனிவோர்களுக்கு" (சேதுபு. காசிப. 43). 3. ***மிகுகை;*** increasing, heightening. "உரவுக் கதிர்தெறூஉ முருப்பவி ரமயத்து" (குறிஞ்சிப்.45). 4. ***நஞ்சு;*** poison. "உரவுநீர்ப் பொய்கை நாகங் காய்ந்ததும்" (திவ். திருவாய். 6, 4, 1). 5. ***கடல்;*** sea. (செ.அக.).

[உரம் → உரவு.]

உரவுநீர் *uravunīr,* பெ. (n.) 1. ***கடல்;*** sea, being water in motion. "உரவுநீர்ப்பரப்பினூர்" (சிலப். 4,79). 2. ***யாறு;*** river, torrent. "ஊரங்கணநீ ருரவுநீர் சேர்ந்தக் கால்" (நாலடி, 175). (செ.அக.).

[உரவு + நீர்.]

உரவோன் *uravōṉ,* பெ. (n.) 1. ***வலியோன்;*** strongman. "ஒருதா மாகிய வுரவோ ரும்பல்" (புறநா.18,4). 2. ***ஊக்கமுடையோன்;*** person of spirit, of enthusiasm. "சிதைவிடத் தொல்கா ருரவோர்" (குறள், 597.). 3. ***மூத்தோன்.*** (திவா.); senior, elder. (செ.அக.).

[உரவு → உரவோன்.]

உரளி *uraḷi,* பெ. (n.) ***ஒருவகைப்பூண்டு;*** plant. (சா.அக.).

[உரள் → உரளி.]

உரற்கட்டை *uraṟkaṭṭai,* பெ. (n.) 1. ***உரற்குரிய மரக் கட்டை;*** wooden block for a mortar. 2. ***உரல்;*** mortar formed from a block or wood. (செ.அக.).

[உரல் + கட்டை.]

உரற்களம் *uraṟkaḷam,* பெ. (n.) ***அறிஞர் கூடிப் பேசுமிடம்;*** place where wise men hold their debates. "உரற்களத்து மட்டிலும்... நோக்கார்" (ஆசாரக்.100). (செ.அக.).

[உரன் + களம்.]

உரற்குழி *uraṟ-kuḻi,* பெ. (n.) 1. ***உரலிற் குற்றுங்குழி;*** hollow of a mortar. 2. ***குற்றுதற்குத் தரையில் அமைத்த குழி;*** mortar sunk in a floor, hole in the floor for pounding rice. "இடுப்பொடிந்த கோழிக்கு உரற்குழியே கைலாசம்". (செ.அக.).

ம. உரல்குழி.

[உரல் + குழி.]

உரற்குற்றி *urar-kurri,* பெ. (n.) ***உரற்கட்டை*** பார்க்க; see *urarkattai.* (செ.அக.).

[உரல் + குற்றி.]

உரற்பணை *urar-panai,* பெ. (n.) ***தீட்டும்போது அரிசி சிந்தாதவாறு உரலின் மேல் வைக்குங்கூடு;*** cylindrical ring of wicker work placed over the mortar so that rice may not spill in pounding. (செ.அக.).

[உரல் + பணை.]

உரற்பெட்டி *urar-petti,* பெ. (n.) ***அரிசி சிந்தாதபடி வைக்கும் உரலின் வாய்க்கூடு;*** circular basket or earthen ring placed around the mouth of a mortar for keeping the grain within when pounding it. (செ.அக.).

ம. உரல் பெட்டி.

[உரல் + பெட்டி.]



உரற்பெட்டி

உரற்று-தல் *urarru-,* 5. செ.கு.வி. (v.i.) ***முழங்குதல்;*** to resound; to roar, as an elephant; to roll, as thunder. யானை யுரற்றொலி யோசையும்" (சீவக. 865). (செ.அக.).

[உரறு → உரற்று.]

உரறு-தல் *uraru-,* 5. செ.கு.வி. (v.i.) ***முழங்குதல்;*** to resound, reverberate, roar; "உருமுரறு கருவிய பெரு மலை பிற்பட" (மலைபடு. 357).

[உரு → உர → உரலு → உரறு.]

உரன்¹ *uran,* பெ. (n.) 1. ***திண்மை;*** strength of will, self-control. "உரனென்னுந் தோட்டியான்". (குறள், 24). 2. ***பற்றுக்கோடு;*** support, prop. "ஊரன்மன் னுரனல்லன்" (கலித்.68). 3. ***வெற்றி;*** victory. "உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்" (குறள், 1263). 4. ***அறிவு;*** knowledge. "உரியதாகுந் தோழிகண் ணுரனே" (தொல். பொருள். 239).

[உரம் → உரன்.]

உரன்² *uran,* பெ. (n.) 1. ***மார்பு;*** breast. "உரன்சிங்கநாதங் கிடந்தசைய" (திருவிளை.உலவாக்.7). 2. ***உள்ளமிகுதி*** (திவா.); impulse, zeal. (செ.அக.).

[உரம் → உரன்.]

உரனர் *uranar,* பெ. (n.) ***மனவலியுடையோர்;*** persons of strong will. "உரனர்.. புந்தியாற்றடுப்பர்" (ஞானவா. உபசாந். 66). (செ.அக.).

[உரம் → உரன் → உரனர்.]

உராய்-தல் *urāy,* 2. செ.கு.வி. (v.i.) ***உரிஞ்சுதல்*** (பிங்.); to rub, as an animal against a tree, as two branches together. (செ.அக.).

[உரை → உராய்.]

உராய்ஞ்சு-தல் *urāyñju-,* 8. செ.கு.வி. (v.i.) ***பொருத்தித் தேய்த்தல்;*** to rub.

உராய்வு *urāyvu,* பெ. (n.) 1. ***தேய்மானம்; உராய்ந்து போதல்;*** rubbing, wearing away. 2. ***உராய்ந்த பகுதி;*** a bruise.

ம. உரவு.

[உரை → உராய் → உராய்வு.]

உரால் *urāl,* பெ. (n.) ***ஓடுகை;*** running as a horse, "குரூஉமயிர்ப் புரவி யுராலிற் பரிநிமிர்ந்து" (மதுரைக். 387). (செ.அக.).

[உல் → உலவு → உரவு → உரால்.]

உராவு¹-தல் *urāvu-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***பரவுதல்;*** to move away, spread. 2. ***பரத்தல்;*** to spread over, extend. "நிறை கடன் முகந்துராய்" (பரிபா. 6,1). 3. ***இடம் விட்டுப் பெயர்தல்;*** to move from its place, to be dislodged. "பொன்னசும்பாடி யளைந்துராய்" (சீவக. 37). 4. ***செல்லுதல்;*** to go, pass. "காலென்னக் கடிதுராய்" (மதுரைக். 125). (செ.அக.).

உராவு²-தல் *urāvu-,* 5, செ.கு.வி. (v.i.). ***வலியடைதல்;*** to become strong, to grow powerful. "உராவி விழுங்கப் பட்டது". (ஞானவா.புசுண்.93). (செ.அக.).

[உரவு → உராவு.]

உரி¹-தல் *uri-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***ஆடை களைதல்;*** to strip off, as clothes. "உரிந்த கூறை யுருவத்தொடு" (தேவா.1011,10). 2. ***தானே எடுத்துக் கொள்ளல்*** (அபகரித்தல்); to deprive of, rob. அவன் சொத்தையெல்லாம் உரிந்து விட்டான். (உ.வ.) (செ.அக.). 3. ***இடம் பெயர்தல்; பரவுதல்;*** to shift, spread,

[உல் → உரு → உரி.]

உரி²-தல் *uri-,* 4. செ.கு.வி. (v.i.) ***தோல் முதலியவை கழலுதல்;*** to peel, as skin, bark. (செ.அக.).

ம. உரி.

[உல் → உரு → உரி.]

உரி³-த்தல் *uri-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***தோல், பட்டை முதலியவற்றைக் கழற்றுதல்;*** to slough off, as a serpent its skin; to flay, excoriate; to strip off, as bark. "உரித்திடு

முழுவைவன்றோல்" (கந்தபு. ததீசியு.127). (செ.அக.). 2. *பரவுதல்;* to spread.

[உல் → உரு → உரி.]

உரி[4] *uri,* பெ. (n.) 1. ***மரம் முதலியவற்றினின்று உரிந்து வரும் தோல்;*** rind, peel, skin stripped off. "பேழ்வயிற் றரவுரி" (கம்பரா. சித்திர.4). 2. ***பட்டை;*** bark. "உடுப் பன மரவுரி தழைகள்" (தணிகைப்பு: நாட். 47). (செ.அக.).

[உல் → உரு → உரி.]

உரி[5] *uri,* பெ. (n.) ***உரிச்சொல்*** பார்க்க; see *uri-c-col.* "இடையுரி யடுத்து நான்குமாம்" (நன்.270). (செ.அக.).

[உரு → உரி.]

உரி[6] *uri,* பெ. (n.) ***அரைநாழி;*** a measure of capacity = 1/2 measure. "உரிவருகாலை" (தொல்.எழுத்து. 240). (செ.அக.).

[உரு → உரி.]

உரி[7] *uri,* பெ. (n.) 1. ***சிவப்பு நிறம்;*** red colour. 2. ***கொத்துமல்லி*** பார்க்க. (மலை.); see *kottumalli.* (செ.அக.).

[உரு → உரி.]

உரிக்குட்டி *urikkutti,* பெ. (n.) 1. ***கடல்மீன் வகை;*** brownish grey suckerfish. 2. ***கடல் மீன் வகை;*** light brown, suckerfish. (செ.அக.).

[உரம் → உரி + குட்டி.]



உரிக்குட்டி

உரிச்சீர் *uri-c-cīr,* பெ. (n.) ***மூவசைச்சீர்*** (யாப்.12.) foot of three asai. (செ.அக.).

[உரி + சீர்.]

உரிச்சொல் *uri-c-col,* பெ. (n.) 1. ***பெயரெச்சம், வினையெச்சம் போன்றவற்றிற்கு அடியாக விளங்கும் தமிழின் நால்வகைச் சொற்களுள் ஒன்று*** (நன். 442); (Gram) one of a few indeclinables which always have the force of adjective or adverb, one of four parts of speech in Tamil. 2. ***திரிசொல்*** பார்க்க; see *tiri-šol.*

[உரி + சொல்.]

பொருளால் புடைபெயரும் சொல் உரிச் சொல்லாயிற்று.

உரிச்சொற்பனுவல் *uri-c-cor-panuval,* பெ. (n.) ***நிகண்டு நூல்;*** lexicon, nigandu "பிங்கல முதலான உரிச்சொற் பனுவல்களுள்" (நன்.459, மயிலை).

[உரி + சொல் + பனுவல்.]

உரிச்சொன்னிகண்டு *uri-c-connigandu,* பெ. (n.) ***காங் கேயர் இயற்றிய வெண்பாவினா லமைந்த ஒரு நிகண்டு நூல்;*** name of a lexicon compiled by Kāṅgēyar in venbā metre. (செ.அக.).

[உரி + சொல் + நிகண்டு.]

உரிசூறைகொள்(ளு)-தல் *uri-šūraikol-,* 13. செ.குன் றாவி. (v.t.) ***ஆடையைப் பிடுங்கிக்கொள்ளல்;*** to strip off a person's clothes by force. "உரிசூறை கொண்டு போனவனை" (ஈடு, 7, 3, 4). (செ.அக.).

[உரி + சூறை + கொள்.]

உரிசை *urišai,* பெ. (n.) ***சுவை;*** taste, relish. "கைப்புப் புளிப்புரிசை" (சினேந்.244). (செ.அக.).

[உரி → உரிசை.]

உரிஞ்சல் *uriñjal,* பெ. (n.) ***உராய்கை;*** rubbing, chafing. "போர்மதக்குன் றுரிஞ்சலின்" (இரகு. தேனு.88). (செ.அக.).

[உரிஞ்சு → உரிஞ்சல்.]

உரிஞ்சு[1]**-தல்** *uriñju-,* 5. செ.கு.வி. (v.i.) ***உராய்தல்.*** (பிங்.); to rub oneself; to rub, as beasts; to rub against one another, as trees.

[உரை → உரி → உரிஞ்சு.]

உரிஞ்சு[2]**-தல்** *uriñju-,* 5. செ.குன்றாவி. (v.i.) 1. ***தேய்த் தல்;*** to wear away by rubbing; to grind away, as sandal; to scrape, triturate. "நறுங்குறடுரிஞ்சிய... தேய்வை" (திருமுரு. 33). 2. ***பூசுதல்;*** to rub on, smear, anoint, as with oil, soap, aromatics. "ஊடுமின்னனா ருரிஞ்சி யாட்டினார்" (சீவக. 2418). (செ.அக.).

[உரி → உரிஞ்சு.]

உரிஞ்சு[3]**-தல்** *uriñju-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***உள்ளிழுத் துக் கொள்ளுதல்;*** to sip, suck up.

[உறிஞ்சு → உரிஞ்சு. (கொ.வ.)]

உரிஞு -தல் *uriñu-,* 5. செ.கு.வி. (v.i.) ***உரிஞ்சுதல்;*** to rub. "உரிஞுகன் னடுவோர்" (தணிகைப்பு. அகத்.497). (செ.அக.).

[உரி → உரிஞு.]

உரித்தாளி *urittāli,* பெ. (n.) ***உரித்தானவன்*** பார்க்க; see *urittānavan,* . (செ.அக.).

[உரித்து + ஆளி.]

உரித்தானவன் *urittāṉavaṉ,* பெ. (n.) 1. ***சொத்துக் குரியவன்;*** proprietor, owner, heir. (கொ.வ.). 2. ***தக்கோன்;*** suitable, worthy person. 3. ***நண்பன்;*** friend. (செ.அக.).

[உரித்து + ஆனவன்.]

உரித்திரம் *urittiram,* பெ. (n.) 1. ***மஞ்சள்*** (மலை.); turmeric. 2. ***மரமஞ்சள்*** (மலை.); tree turmeric. (செ.அக.).

உரித்து *urittu,* பெ. (n.) 1. ***உரியது;*** that for which one has a claim. 2. ***உரிமை*** (திவா.); right, proprietorship. 3. ***உற்ற நட்பு:*** intimacy, affection, tender regard. அவனுக்கு உரித்துள்ளவன். (உ.வ.). (செ.அக.).

[உரி → உரித்து.]

உரித்துவை-த்தல் *urittuvai-,* செ.குன்றாவி. (v.t.) 1. ***வெளிப்படுத்தி வைத்தல்;*** to disclose, reveal, make known. "கீழே உரித்து வைத்தாரிறே அவர்கள் ஸ்வரூபத்தை" (ஈடு, 3, 9, 2). 2. ***நேரொப்பாதல்;*** to resemble completely. இந்தப் பிள்ளை தகப்பனை உரித்து வைத்திருக்கிறது. (உ.வ.). (செ.அக.).

[உரித்து + வை.]

உரிது *uridu,* பெ. (n.) ***உரிமையானது;*** that which is related. "உரிதி னின்னோ டுடன்பிறப் புண்மையின்" (சிலப்.2,40). (செ.அக.).

[உரித்து → உரிது.]

உரிப்பொருட்டலைவன் *uri-p-poruṭṭalaivaṉ,* பெ. (n.) ***கிளவித் தலைவன்;*** (Akap.) male lover in an erotic appropriate to the special uri-p-poruḷ. "உரிப்பொருட்டலைவன் ஒருவனே யானவாறும். (தொல்.பொருள். 55, உரை). (செ.அக.).

[உரி + பொருள் + தலைவன்.]

உரிப்பொருள் *uri-p-poruḷ,* பெ. (n.) ***ஐந்திணைகட்கு உரியனவான புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கலகளும் அவற்றின் நிமித்தங்களும்.*** (நம்பிய கப். 25); (Akap.) that distinctive erotic mood in love appropriate to each of the five tracts of land. (செ.அக.).

[உரி + பொருள்.]

நிலத்திற்கு ஏற்பப் புடை பெயரும் பண்பு உரிப்பொருள் எனப்பட்டது.

உரிமை *urimai,* பெ. (n.) 1. ***உரித்தாந் தன்மை;*** ownership, proprietorship. 2. ***உரித்தான சொத்து;*** that which is owned. "உரியா ருரிமை யடக்கம்" (நாலடி,170). 3. ***உரிமைநாட்டுதல்;*** claim for right of possession. "உரிமை மைந்தரைப் பெறுகின்றது" (கம்பரா. அயோத். மந்திரப். 63.). 4. ***மனைவி;*** wife. "அரசனுரிமையோ டப்பொழில் புகுந்து" (மணிமே. 25,1) 5. ***அடிமை;*** slave, dependant, acquisition. 6. ***அடிமைத் தொழில்;*** the services of a bondservant. "எந்தமக் குரிமை செய்யென" (திவ். பெரியதி 2, 3, 6). 7. ***கடமை;*** duty, obligation. "உரிமைதன்னை.. ஆற்ற" (கந்தபு.பட்டாபி.14). 8. ***குணம்*** (திவா.); disposition, nature, quality. 9. ***அன்பு;*** love, affection, tender regard. "உரிமையோடொருவ னோக்கினான்" (பாரத. குருகுல. 58). 10. ***நட்பு பற்றிய உரிமை;*** privilege of intimacy, liberty on the ground of friendship. நட்பிற்கு அவயவமாவன நட்டார் உரிமையாற் செய்வன (குறள், 802, உரை). 11. ***உரிமை;*** liberty. "மீண்டுமுரிமையின் றெய்த" (பாரத. சூது.278).

[உரி → உரிமை. (சு.வி.69.)]

உரிமைக்கஞ்சி *urimai-k-kañji,* பெ. (n.) 1. ***இறக்குந் தறுவாயி லுள்ளவனுக்குக் கடைசியாக இனத்தார் வார்க்கும் கஞ்சி;*** conjee poured into the mouth of a dying person as the last token of love and respect (J.). 2. ***ஒருவர் இறந்தவன்று அவருடைய சுற்றத்தார்க்குப் படைக்கும் உணவு*** (வின்.); food served to the relations of a person on the day of his death by the members of his family.(செ.அக.).

[உரிமை + கஞ்சி.]

உரிமைக்கட்டு *urimai-k-kaṭṭu,* பெ. (n.) 1. ***திருமணத்திற் குரிய இனமுறைத் தொடர்பு*** (வின்.); consanguinity that allows marriage between the two. 2. ***இனக்கட்டுப் பாடு;*** preservation of one's rights as a relative. (செ.அக.).

[உரிமை + கட்டு.]

உரிமைக்கடன் *urimai-k-kaḍaṉ,* பெ. (n.) 1. ***உரிமை பற்றிச் செய்யுங் கடமை;*** obligation, as that of a son to support his parents. 2. ***பிணக்கடமை;*** duties and obligations of near relations to perform funeral rites and to show respect to a deceased person. (செ.அக.).

[உரிமை + கடன்.]

உரிமைக்கலியாணம் *urimai-k-kaliyāṇam,* பெ. (n.) ***உரிமைத் திருமணம்*** பார்க்க; see *urimai-t-tirumaṇam.*

[உரிமை + கலியாணம்.]

உரிமைக்காணி *urimai-k-kāṇi,* பெ. (n.) ***உரிமையாற் கிடைத்த நிலம்;*** inherited land. (செ.அக.).

[உரிமை + காணி.]

உரிமைக்காரர் *urimai-k-kārar,* பெ. (n.) 1. ***உரிமைக் காரன்*** பார்க்க; see *urimai-k-kāraṉ.* 2. ***மதுரை முதலிய இடங்களில் வாழும் தப்பட்டை அடிக்கும் இனத்தைச் சார்ந்த பழந்தமிழர்*** (ஆதி திராவிடர்); an Adidravidar drum-beating professional caste living in places like Madurai etc.

[உரிமை + காரர்.]

உரிமைக்காரன் *urimai-k-kāraṉ,* பெ. (n.) 1. ***சொத்துக் குரிமை யானவன்;*** heir, claimant to a property. 2.

பொறுப்பு ஏற்றற்குரிய இனத்தான்; responsible relative, natural guardian. (W.). (செ.அக.).

[உரிமை + காரன்.]

உரிமை கொண்டாடு-தல் *urimai-kondādu-,* 5. செ.கு.வி. (v.i.) *உறவுமுறை கொண்டாடுதல்;* to claim kinship or friendship. (செ.அக.).

[உரிமை + கொண்டாடு.]

உரிமைச்சுற்றம் *urimai-c-curram,* பெ. (n.) *அடிமைத் திரள்;* retinue of slaves. "உரிமைச்சுற்றமொடு ஒரு தனி புணர்க்க" (சிலப். 2,88). (செ.அக.).

[உரிமை + சுற்றம்.]

உரிமைச்சோறு *urimai-c-cōru,* பெ. (n.) *உரிமைக் கஞ்சி* பார்க்க. (வின்.); see *urimai-k-kañji.* (செ.அக.).

[உரிமை + சோறு.]

உரிமைசெப்பு-தல் *urimai-šeppu-,* 15. செ.கு.வி. (v.i.) *மணம் பேசுதல்;* to negotiate a marriage. "துறைவற் குரிமை செப்பினர்" (குறுந்.351). (செ.அக.).

[உரிமை + செப்பு.]

உரிமைசெய்-தல் *urimaišey-,.* 1. செ.கு.வி. (v.i.) . 1. *கடமை செலுத்தல்* (வின்.); to discharge one's duties. 2. *அடிமைத் தொழில் செய்தல்;* to do the duties of a servant. "எந்தமக் குரிமை செய்யெனத் தரியாது" (திவ்.பெரியதி. 2, 3, 6). 3. *சாச்சடங்கு நடத்துதல்* (வின்.); to perform obsequies. (செ.அக.).

[உரிமை + செய்.]

உரிமைத்தத்துவம் *urimai-t-tattuvam,* பெ. (n.) 1. *இறந்தவருடைய சொத்தைக் காக்க முறைமன்றத் தலைவரிடம் பெறும் அதிகாரம்;* right of letters of administration to the estate of a deceased person. 2. *வைத்துக் காப்பாற்றும் உரிமை;* right of guardianship as of a minor or a person of unsound mind. (செ.அக.).

[உரிமை + Skt. tatva > தத்துவம்.]

உரிமைத்திருமணம் *urimai-t-tirumanam,* பெ. (n.) *இனத் திற்செய்யும் மணம்;* marriage within the prescribed degrees of consanguinity.

[உரிமை + திருமணம்.]

உரிமைப்பங்கு *urimai-p-pangu,* பெ. (n.) *உரிமை வழியாய் வரும் பங்கு;* hereditary heirship. (ஆ.அக.).

[உரிமை + பங்கு.]

உரிமைப்படை *urimai-p-padai,* பெ. (n.) *கூலிப் படை* (சுக்கிரநீதி.303); paid soldiers, mercenaries.

[உரிமை + படை.]

உரிமைப்பள்ளி *urimai-p-palli,* பெ. (n.) *உரிமை மகளிர் இருப்பிடம்;* queen's apartments. "உரிமைப் பள்ளியும் விரிபூஞ் சோலையும்" (சிலப். 27,19). (செ.அக.).

[உரிமை + பள்ளி.]

உரிமைப்பாடு *urimai-p-pādu,* பெ. (n.) *உரிய கடமை* (வின்.); obligation, duty. (செ.அக.).

[உரிமை + பாடு.]

உரிமைப்பிள்ளை *urimai-p-pillai,* பெ. (n.) *வளர்ப்பு மகன்* (வின்.); adopted child, who is entitled to the property of the adopter.(செ.அக.).

[உரிமை + பிள்ளை.]

உரிமைப்பெண் *urimai-p-pen,* பெ. (n.) 1. *திருமணம் செய்தற்குரிய முறைமையுடையவள்* (வின்.); girl in the proper degree of consanguinity to be taken in marriage. 2. *உரிமை பற்றித் திருமணம் செய்யப்படும் பெண்* (G.Tp.D.i, 94); girl married because of her relationship to the bridegroom, opp.to பெருமைப்பெண். (செ.அக.).

[உரிமை + பெண்.]

உரிமைபாராட்டு-தல் *urimai-pārāttu-,* 5. செ.கு.வி. (v.i.) *உரிமை கொண்டாடு* பார்க்க; see *urimaikondādu.* (செ.அக.).

[உரிமை + பாராட்டு.]

உரிமைமண் *urimaiman,* பெ. (n.) *பிணத்தை இடும் குழியில் இனத்தார் போடும் மண்;* earth thrown into the grave by near relatives of the deceased, at a funeral. (செ.அக.).

[உரிமை + மண்.]

உரிமைமாநகர் *urimai-mānagar,* பெ. (n.) *உவளகம்.* (அந்தப்புரம்); harem in a king's palace; zanana. "ஒன்னலர் நுழையா வுரிமை மாநகர்" (பெருங்.உஞ் சைக்.35, 4). (செ.அக.).

[உரிமை + மா + நகர்.]

உரிமையாட்சி *urimai-y-ātci,* பெ. (n.) *சொத்தின் உரிமை யைத் துய்த்தல்* (வின்.); possession or right of possession of property devolving on an heir. (செ.அக.).

[உரிமை + ஆட்சி.]

உரிமையாளி *urimai-y-āli,* பெ. (n.) *சொந்தக்காரன்;* owner. (ஆ.அக.).

[உரிமை + ஆளி.]

உரிமையிடம் *urimai-y-idam,* பெ. (n.) *வீட்டில் மனைவி வாழும் பகுதி;* wife's apartment. பள்ளியம்பலம் உரிமை யிடம் கூத்தப் பள்ளி யென இவற்றுள் நீங்கி. (இறை.21, உரை). (செ.அக.).

[உரிமை + இடம்.]

உரிமையில் *urimai-y-il,* பெ. (n.) *உரிமை மாநகர்* பார்க்க; see *urimai-mānagar.* "ஒழுகுவனண் மாதோ உரிமையின் மறைந்தென்" (பெருங்க. மகத. 14, 296). (செ.அக.).

[உரிமை + இல்.]

உரிமையெடு-த்தல் *urimai-y-eḍu-,* 4. செ.கு.வி. (v.i.) ***உரிமை பெறுதல்*** (வின்.); to take possession of one's share, as of an inheritance or of produce. (செ.அக.).

[உரிமை + எடு.]

உரிமைவழி *urimai-vaḻi,* பெ. (n.) 1. ***தொடர்பு முறை;*** consanguinity, lineage. 2. ***கொடிவழி உரிமை;*** ancestral inheritance. (செ.அக.).

[உரிமை + வழி.]

உரிமைவிடு-தல் *urimai-viḍu-,* 20. செ.கு.வி. (v.i.) 1. ***உரிமை அளித்தல்*** (வின்.); to set free, manumit, as a slave. 2. ***உரிமையை விட்டு விடுதல்;*** to give up one's right. (செ.அக.).

[உரிமை + விடு.]

உரியசை *uri-y-asai,* பெ. (n.) ***நேர்பு நிரைபசைகள்*** (தொல். பொருள். 318); particular kinds of metrical syllables. (செ.அக.).

[உரி + அசை.]

உரியடி[1] *uri-y-aḍi,* பெ. (n.) ***உரிச்சீரான் வருமடி;*** metrical syllabus of uri-c-cīr.

[உரி + அடி. உரிச்சீரா லானது உரியடி.]

'மூவசைச் சீர்உரிச் சீர்இரு நான்கனுள் நேரிறு நான்கும் வெள்ளை; அல்லன பாவினுள் வஞ்சியின் பாற்பட்டனவே'. மூன்று அசையான் ஆகிய சீர் உரிச்சீர். அஃது எட்டு வகைப்ப டும். அவற்றுள் நேரசை இறுதியாகிய நான்கும் வெண்பா உரிச்சீர்; அவை அல்லனவாகிய நிரையசை இறுதியாகிய நான்கும் பா வகையுள் வஞ்சிப்பாவின் பகுதியாய் வஞ்சி உரிச்சீர் எனப்படும் (யாப்.விருத்.12).

உரியப்பம் *uri-y-appam,* பெ. (n.) ***ஒருவகை அப்பம்;*** a kind of cake.

ம. உறியப்பம்.

[உரி + அப்பம்.]

உரியர் *uriyar,* பெ. (n.) 1. ***உடையவர்கள்;*** possessor. 2. ***அறிஞர்;*** wisemen. (ஆ.அக.).

[உரி + அர்.]

உரியவர் *uri-y-avar,* பெ. (n.) ***உரிமையுள்ளவர்;*** those who have rights.

[உரி + அவர்.]

உரியவள் *uri-y-avaḷ,* பெ. (n.) ***உரித்தானவள்; மனைவி;*** wife.

[உரி + அவள்.]

உரியவன் *uri-y-avaṉ,* பெ. (n.) 1. ***உரிமையுள்ளவன்;*** one who has rights, heir. 2. ***அதிகாரி;*** one who is worthy, qualified. 3. ***உறவினன்*** (பிங்.); relative. 4. ***கணவன்;*** husband. (செ.அக.).

ம. உரியன்.

[உரி + அவன்.]

உரியள் *uriyaḷ,* பெ. (n.) ***உரியவள்*** பார்க்க; see *uri-y-avaḷ.* (ஆ.அக.).

உரியன் *uriyaṉ,* பெ. (n.) ***உரியவன்*** பார்க்க; see *uri-y-avaṉ.*

உரியார் *uriyār,* பெ. (n.) ***உரியவர்*** பார்க்க; see *uri-y-avar.*

[உரியவர் → உரியார்.]

உரியாழாக்கு *uri-y-āḻākku,* பெ. (n.) ***அரையே அரைக் காற் படி;*** 5/8 of measure.

[உரி + ஆழாக்கு. உரியும் ஆழாக்கும்.]

உரியாள் *uriyāḷ,* பெ. (n.) ***உரியவள்*** பார்க்க; see *uri-y-avaḷ.*

[உரியவள் → உரியாள்.]

உரியுழக்கு *uri-y-uḻakku,* பெ. (n.) ***முக்காற்படி;*** 3/4 of measure. (சா.அக.).

[உரி + உழக்கு. உரியும் உழக்கும்.]

உரியோர் *uriyōr,* பெ. (n.) ***உரியவர்*** பார்க்க; see *uri-y-avar.*

[உரியவர் → உரியார் → உரியோர்.]

உரியோள் *uriyōḷ,* பெ. (n.) ***உரியவள்*** பார்க்க; see uri-y-avaḷ.

[உரியவள் → உரியாள் → உரியோள்.]

உரியோன் *uriyōṉ,* பெ. (n.) ***உரியவன்*** பார்க்க; see *uri-y-avaṉ.* (செ.அக.).

[உரியவன் → உரியான் → உரியோன்.]

உரிவலை *uri-valai,* பெ. (n.) ***சிறிய மீன்களைப் பிடிக்கப் பயன்படுத்தும் ஒருவகை வலை;*** a kind of fishing-net (சேரநா.).

ம. உரிவல.

[உரி + வலை.]

உரிவை *urivai,* பெ. (n.) 1. ***தோல்;*** skin, hide, peel, rind. "காரானை யீருரிவைப் போர்வை யானை" (தேவா. 13, 8). 2. ***உரிக்கை;*** stripping, peeling off, flaying. "மதகரி யுரிவை செய்தவர்" (தேவா. 578, 3). (செ.அக.).

ம. உரி.

[உரி → உரிவை.]

உரு[1]**-த்தல்** *uru-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***பெருஞ்சினங் கொள்ளுதல்;*** to get angry, to be provoked; to exhibit signs of anger. "ஒருபக லெல்லா முருத்தெழுந்து" (கலித்.39, 23). 2. ***அழலுதல்;*** to burn, smart. "ஆக முருப்ப நூறி" (புறநா.25,10). 3. ***முதிர்தல்;*** to become ripe, mature. "பண்டையூழ்வினை யுருத்தென்" (சிலப். 16,217).

[உல் → உர் → உரு.]

உரு[2]**-த்தல்** *uru-,* 4. செ.குன்றாவி. (v.i.) 1. ***வெருளுதல்;*** to be angry with. "ஒள்வாட்டானை யுருத்தெழுந்தன்று".

(பு.வெ.3,2). 2. ***ஒத்தல்;*** to bear likeness to, resemble. "நின்புக ழுருவின கை" (பரிபா. 3,32).

[உர் → உரு → உரு-த்தல்.]

உரு[3]-த்தல் *uru-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***தோன்றுதல்;*** to appear, come into existence. "உம்மை வினைவந் துருத்த லொழியாதெனும்" (மணிமே. 26,32). 2. ***முளைத்தல்*** (திவா.); to sprout, shoot up. 3. ***உரு வெடுத்தல்;*** to take shape, assume a form. "அறமுருத் தனையான்" (அரிசமய. பரகால. 91). 4. ***சுரத்தல்;*** to issue forth, flow up, well, as a spring. "உருத்துருத் தமுதூற்றிருந்து" (உபதேசகா. அயமுகி. 16).

[உல் → உர் → உரு.]

உரு[4]-த்தல் *uru-,* 4. செ.கு.வி. (v.i.) ***மிகுதல்*** (சூடா.); to increase. (செ.அக.).

[உல் = தோன்றுதல், மிகுதல். உல் → உர் → உரு.]

உரு[5] *uru,* பெ. (n.) ***மான்;*** deer. "கானிடை யுருவைச் சுடுசரந் துரந்து" (திவ்.பெரியதி. 1, 4, 2).

[உரு = அழகு, அழகுடைய மான்.]

உரு[6] *uru,* பெ. (n.) 1. ***அச்சம்;*** fear. "உருவுட்காகும்" (தொல். சொல். 302). 2. ***அட்டை*** (பிங்.); leech. (செ.அக.).

[உல் → உர் → உரு = வெப்பம், அச்சம்.]

உரு[7] *uru,* பெ. (n.) 1. ***வடிவு;*** form, shape, figure. "அற்றே தவத்திற் குரு" (குறள், 261). 2. ***வடி வழகு;*** beauty of form, loveliness, attractiveness. "உருவுடைக் கன்னியரைப் போல" (நாலடி, 274). 3. ***உடல்;*** body. "உருவினி னிறைந்து நின்று" (சி.சி. 4,17). 4. ***சிலை;*** idol. "தேவதார்ச்சனை தாம் பண் ணல்போ லுருப்பல பரப்பி" (பிரபோத. 11,12) 5. ***உருவமுள்ளது;*** that which appears in outline. "உருவுயி ரென்னின்" (சி.சி. 4.9). 6. ***உளியாற் செய்த ஓவிய வேலை;*** decorative work in wood carved with the chisel. சிற்றுளிகள் சென்று செத்தின உருக்க ளமுந்தின... குறடு (சிறுபாண். 252, உரை). 7. ***தோணி;*** schooner, sloop, small vessel. ஐந்து உரு வருகிறது (உ.வ.). 8. ***தாலி முதலியவற்றிற் கோக்கும் உரு;*** gold bead or other ornament strung on either side of the marriage badge. தாலியுரு (உ.வ.) 9. ***கரு*** (வின்); embryo.

ம. உரு; *Skt. rūpam.*

[உல் (தோன்றுதல்) → உர் → உரு.]

உரு[8] *uru,* பெ. (n.) 1. ***பலமுறை செய்யும் வழிபாடு;*** repetition of a prayer, an incantation or a lesson. 2. ***இசைப்பாட்டு;*** music, song, musical composition. "தாளத்தின் வழியுருவெடுத்து" (உத்தரரா. சீதை 25).

[உல் → உர் → உரு.]

உரு[9] *uru-,* பெ. (n.) ***நிறம்;*** colour. "பல்வேறுருவின் வனப்பமை கோதை" (குறிஞ்சிப். 103).

[உல் → உர் → உரு.]

உருக்கங்காட்டு-தல் *urukkaṅkāṭṭu-,* 5. செ.கு.வி. (v.i.) ***அன்பு காட்டுதல்;*** to show kindness, love. (செ.அக.).

[உருத்தல் = வெப்பமுறல்; வெய்துறல், மனம் உருகுதல். உரு → உருக்கம் + காட்டு.]

உருக்கம் *urukkam,* பெ. (n.) 1. ***மனநெகிழ்ச்சி;*** melting of heart, tenderness, sympathy. 2. ***இரக்கம்;*** compassion, mercy, pity. "உருக்கமிலவ் வசுரக் குலம்" (இரகு. மாலையீ.113). 3. ***அன்பு;*** love, as to a deity, a friend, or a child. "உருக்கத்திற் கரத்தேந்தி" (விநாயகபு. 75,121). (செ.அக.).

ம. உருக்கம்.

[உல் → உர் → உரு → உருக்கம்.]

உருக்கரக்கடை *uru-k-karakkaḍai,* பெ. (n.) ***உருக்கரக்கு*** பார்க்க; see *urukkarakku.*

[உருக்கு + அரக்கு + அடை.]

உருக்கரக்கு *urukkarakku,* பெ. (n.) ***நெருப்பிலுருக்கிச் செய்த அரக்கு;*** seed-lac melted and formed into thin cakes, shellac. (சா.அக.).

[உருக்கு + அரக்கு.]

உருக்கரம் *urukkaram,* பெ. (n.) ***வெண்காரம்;*** borax. (சா.அக.).

[உரு + காரம் = உருக்காரம் → உருக்கரம்.]

உருக்கல்[1] *urukkal,* பெ. (n.) 1. ***கோயில் கட்டியவ ருடைய உரு;*** (Arch.) small statue in stone of a benefactor who built a temple. 2. ***போரில் இறந்த வீரனது உருச்செதுக்கிய கல், வீரக்கல்;*** stone effigy of a hero who died in a battle. (செ.அக.).

[உரு + கல்.]

உருக்கல்[2] *urukkal,* பெ. (n.) 1. ***செங்கல்;*** brick. 2. ***உருகின கல், அதாவது சிட்டம்;*** over heated brick or over burnt brick in kilns. (சா.அக.).

[உரு + கல்.]

உருக்கன் *urukkaṉ,* பெ. (n.) ***உடலை வாட்டும் நோய்*** (யாழ்ப்.); wasting disease, of men or of plantains. (செ.அக.).

[உருக்கு → உருக்கன்.]

உருக்கனடி-த்தல் *urukkaṉaḍi-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***கருகச்செய்தல்*** (யாழ்ப்.); to blight, as disease, esp. in plantains. 2. ***உடம்பை இளைக்கச் செய்தல்;*** to reduce to leanness; to cause to emaciate.(சா.அக.).

[உருக்கல் → உருக்கன் + அடி.]

உருக்காங்கட்டி *urukkāṅkaṭṭi,* பெ. (n.) ***உருக்காங்கல்*** பார்க்க; see *urukkāṅkal.* (செ.அக.).

[உருக்கு + ஆம் + கட்டி = உருக்காங்கட்டி.]

உருக்காங்கல் *urukkāṅkal,* பெ. (n.) ***உருகிப்போன செங்கல்;*** overburnt brick. (செ.அக.).

[உருக்கு + ஆம் + கல்.]

உருக்காட்டி *uru-k-kāṭṭi-,* பெ. (n.) ***கண்ணாடி;*** mirror. (செ.அக.).

[உரு + காட்டி.]

உருக்காட்டு-தல் *urukkāṭṭu-,* 5. செ.கு.வி. (v.i.) ***உரு வெளியாகத் தோன்றுதல்;*** to appear as a hallucination, a visionary object. "மாயவன்வந் துருக்காட்டுகின்றான்" (திவ்.நாச். 12, 3).

[உரு + காட்டு.]

உருக்கி *urukki,* பெ. (n.) 1. ***உருகச் செய்வது;*** that which induces melting. 2. ***இளைக்கச் செய்வது;*** that which causes one to be reduced, said of a disease or a medicine bringing about such a condition. 3. ***மாழை வகைகளை உருக்குபவன்;*** one who melts metals. 4. ***உருகிப்போன செங்கல்*** overburnt brick.

[உருக்கு → உருக்கி.]

உருக்கிச்சாய்-த்தல் *urukki-c-cāy-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***மாழைகளை*** (உலோகங்களை) ***நீண்ட கட்டி யாக உருக்குதல்*** (வின்.); to cast or run metals in bars, or in mass, further use. 2. ***வேதியியல் முறையில் மாழைகளை யுருக்கி மருந்தினங்களி லூற்றல்;*** (In Alchemy) pouring a melted metal into a liquid medicine as a method of its purification. (சா.அக.).

[உருக்கி + சாய்.]

உருக்கியூற்றல் *urukki-y-ūṟṟal,* பெ. (n.) ***உருகிய மாழை களைப் பொதுவாகச் சாய்த்தல்;*** an ordinary process of casting. (சா.அக.).

[உருக்கி + ஊற்றல்.]

உருக்கிவார்-த்தல் *urukki-vār-* 4. செ.குன்றாவி. (v.t.) ***உருக்கின மாழைகளைக் கருவில் வார்த்தல்;*** to cast, found, run, as a metal. (செ.அக.).

[உருக்கி + வார்.]

உருக்கினம் *urukkiṉam,* பெ. (n.) 1. ***உருக்குச் சரக்கு;*** that which facilitates the fusion of metals, as borax. 2. ***மைநஞ்சு;*** mineral poison. 3. ***தேன்;*** honey. 4. ***மெழுகு*** wax. (சா.அக.).

[உருக்கு → உருக்கினம்.]

உருக்கு[1]-தல் *urukku-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***இளகிவிழச் செய்தல்;*** to melt with heat, as metals or congealed substances; to dissolve, liquefy, fuse. "தீயிடை யுருக்குதன் முயன்றான்" (கந்தபு. மார்க்க. 131). 2. ***மனம் நெகிழ்த்துதல்;*** to soften, as feelings; to melt, as one's heart. எம்பிரானாமஞ்சொல்லி யுருக் கினன்" (கம்பரா. உருக்காட். 27). 3. ***மெலியச் செய் தல்;*** to reduce, emaciate, as the body. அந்த நோய் உடம்பை உருக்கிவிட்டது. 4. ***அழித்தல்*** (திவா.); to destroy. 5. ***வருத்துதல்;*** to afflict, distress.

க. உக்கு (உருக்கப்பட்ட பொருள்); ம. உருக்குக; குரு. உர்.
[உருகு → உருக்கு. உருக்கு-தல் (செல்வி.80, துலை.53).]

உருக்கு[2] *urukku,* பெ. (n.) 1. ***எஃகு*** (சூடா.); steel. 2. ***உருக்கின பொருள்;*** anything melted, product of liquefaction. "செப்புருக்கனைய" (கம்பரா. கார்கா.91). (செ.அக.).

ம. உருக்கு; தெ. உக்கு; க. உர்கு, உக்கு; கோத. உக்; குட. உக்கீ; து. எரக.
[உருகு → உருக்கு.
பழங்காலத்தில் இந்தியாவில் செய்யப்பட்ட எஃகு, உக்கு எனப்பட்டதால் அது மேலை நாட்டு மொழிகளில் wook எனவும், wootz எனவும் திரிந்தது; Wootz-steel made in India, from ancient time, by fusing iron with carbonaceous matter. (for wook Ka. ukku.) (chamber). A kind of steel made in India - misprint for 'wook' on exact rendering of Kannada 'ukku' - steel.*]*

உருக்கு[3] *urukku,* பெ. (n.) 1. ***வெள்ளி;*** silver. 2. ***வெள்ளிப்பணம்;*** silver coin. 3. ***வெண்மை;*** whiteness.

தெ. ருக்கு, ரூக்க = ரொக்கம்.
[உருகு → உருக்கு.]

உருக்குக்குகை *urukku-k-kugai,* பெ. (n.) 1. ***மாழைக ளையும் மற்றச் சரக்குகளையும் அதிகமாக உருக்க வேண்டிப் பயன்படுத்துமொரு பெரிய மூசை;*** a big and strong crucible used for melting metals and other substances requiring higher temperature. 2. ***மிகு நெருப் பைத் தாங்குவதற் கேற்ற சரக்குகளைப் பயன்படுத்திச் செய்த வச்சிர மூசை;*** a crucible specially made of heat resisting substances and fire-proof materials, so as to withstand great heat or higher temperature. (சா.அக.).

[உருக்கு + குகை.]

உருக்குக்குநண்பன் *urukku-k-ku-naṉbaṉ,* பெ. (n.) ***வெள்ளை யாமணக்கு;*** a white of castor plant. (சா.அக.).

[உருக்கு + கு + நண்பன்.]

உருக்குகாரம் *urukku-kāram,* பெ. (n.) 1. ***வெண்காரம்*** (வின்.); borax. 2. ***உருக்குச் சரக்கு;*** anything which promotes melting or fusion.

[உருக்கு + காரம்.]

உருக்குகை *urukkugai,* பெ. (n.) ***உருக்குதல்;*** the act of melting. (சா.அக.).

[உருக்கு → உருக்குகை.]

உருக்குச்சட்டம் *urukku-c-caṭṭam,* பெ. (n.) ***வார்த்த இரும்பு;*** iron which has been cast into moulds - cast iron. (சா.அக.).

[உருக்கு + சட்டம்.]

உருக்குச்சரக்கு *urukku-c-carakku,* பெ. (n.) ***வெண்காரம்;*** borax. (சா.அக.).

[உருக்கு + சரக்கு.]

உருக்குச்சுண்ணம் *urukku-c-cunnam,* பெ. (n.) ***எஃகைக் கொண்டு புடமிட்டெடுத்த சுண்ணம்;*** alkali preparation containing iron and insoluble calcium carbonate as chief ingredients - A kind of ferrous carbonate. (சா.அக.).

[உருக்கு + சுண்ணம்.]

உருக்குச்செங்கல் *urukku-c-cengal,* பெ. (n.) ***உருக்காங்கல்*** பார்க்க; see *urukkāngal.*

[உருக்கு + செங்கல்.]

உருக்குத்தட்டார் *urukku-t-taṭṭār,* பெ. (n.) ***பொற்கொல்லர்.*** (சிலப்.5, 31, உரை); goldsmiths. (செ.அக.).

[உருக்கு + தட்டார்.]

உருக்குத்து-தல் *uru-k-kuttu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***உருவம் அமைய வார்ப்படம் வார்த்தல்*** (நெடுநல். 57, உரை); to cast in a mould. 2. ***அம்மை குத்துதல்;*** to vaccinate. (செ.அக.).

[உரு + குத்து.]

உருக்குநெய்யம் *urukku-neyyam,* பெ. (n.) 1. ***வெண்ணெய், கோழிமுட்டைக்கரு முதலிய பொருள்களினின்றும் இறக்கும் எண்ணெய்;*** oil extracted from butter, the yolk of fowl's eggs, etc. 2. ***எஃகை யுருக்கும் எண்ணெய்;*** universal solvent for melting steel. (சா.அக.).

[உருக்கு + நெய்யம்.]

உருக்குப்பாறை *urukku-p-pārai,* பெ. (n.) ***உட்சூட்டினாலிளகி மொத்தையாகத் திரண்ட கற்பாறை;*** (In Geology) massive rocks called also plutonic or igneous rocks which are believed to have undergone fusion. They lie beneath all the other rocks or have some times been forced up through them from beneath. They were once in a melted state and on cooling at the surface, formed the original crust of the globe. (சா.அக.).

[உருக்கு + பாறை.]

உருக்குமண் *urukku-man,* பெ. (n.) ***உருக்கு மணல்*** பார்க்க; see *urukku-maṇal.* (செ.அக.).

[உருக்கு + மண்.]

உருக்குமணல் *urukku-maṇal,* பெ. (n.) ***இரும்புக்கனிமம் அடங்கிய மணல்*** (வின்.); iron ore, iron-sand. (சா.அக.).

[உருக்கு + மணல்.]

உருக்குமணி *urukku-maṇi,* பெ. (n.) ***காதணிவகை*** (வின்.); solid globules or gold soldered together around a ring and worn by women as ear-drops. (செ.அக.).

ம. உருக்குமணி.

[உருக்கு + மணி.]

உருக்குமம் *urukkumam,* பெ. (n.) 1. ***பொன்*** (சங். அக.); gold. 2. ***உருக்கு*** (நாநார்த்த.); steel.

[உருக்கு → உருக்குமம்.]

உருக்குமுகம் *urukku-mugam,* பெ. (n.) ***உருகிவரும் சமயம்;*** the stage at which fusion or melting takes place - melting point. (சா.அக.).

[உருக்கு + முகம்.]

உருக்குமுறை *urukku-murai,* பெ. (n.) ***முறியாதபடி சரியான பதமாய் உருக்கியெடுத்தல்;*** melting in consistence with the principle of melting process. (சா.அக.).

[உருக்கு + முறை.]

உருக்குருக்கு *urukkurukku,* பெ. (n.) ***கருப்பூரவகை*** (சிலப்.14, 109 உரை); variety of camphor. (செ.அக.)

[உருக்கு + உருக்கு.]

உருக்குலை-தல் *uru-k-kulai-,* 2. செ.கு.வி. (v.i.) . 1. ***முன்னுருவம் அழிதல்;*** to become dismembered; to be disunited, as parts of a lock, a house; to become loose deranged, disorganized. 2. ***உடல் மெலிதல்;*** to be emaciated, as the body by illness. (செ.அக.).

[உரு + குலை-தல்.]

உருக்குவளை *urukku-vaḷai,* பெ. (n.) ***மெருகாணி*** (சங்.அக.); instrument for polishing the precious metals. (செ.அக.).

[உருக்கு + வளை.]

உருக்கூட்டு-தல் *uru-k-kūṭṭu-,* 7. செ.குன்றாவி. (v.t.) ***ஒன்றாக்குதல்; ஒன்று கூட்டுதல்;*** to collect, amass, accumulate (சேரநா.).

ம. உருக்கூட்டுக.

[உரு + கூட்டு.]

உருக்கெண்ணெய் *uru-k-kenney,* பெ. (n.) ***உருக்கி வடித்த எண்ணெய்;*** oil prepared by boiling coconut-milk (சேரநா.).

ம. உருக்கெண்ண.

[உருக்கு + எண்ணெய்.]

உருக்கொடு-த்தல் *uru-k-koḍu-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***ஏவி விடுதல்;*** to instigate, set on. 2. ***கொடுமை செய்யத் தூண்டுதல்;*** to incite to evil deeds. 3. ***அறிவுரைத்தல்;*** to give advice. (செ.அக.).

[உரு + கொடு.]

உருக்கொள்(ளு)-தல் *uru-k-kol(lu)-*, 16. செ.கு.வி. (v.i.) 1. ***வடிவெடுத்தல்;*** to take shape. 2. ***கருவிலுருவாதல்*** (வின்.); to be conceived in the womb. 3. ***ஒழுங்கான வளர்ச்சிடையதல்;*** to attain normal development. 4. ***ஆத்திரங் கொள்ளுதல்*** (யாழ்ப்.); to be possessed as by a spirit for uttering oracles. (செ.அக.).

[உரு + கொள்.]

உருகு-தல் *urugu-*, 9. செ.கு.வி. (v.i.) 1. ***வெப்பத்தால் இளகுதல்;*** to dissolve with heat; to melt, liquefy, to be fused. 2. ***மனநெகிழ்தல்;*** to become tender, to melt, as the heart, to be kind, to commisserate, to sympathize, to glow with love. "பூண்முலையார் மனமுருக" (பு.வெ. 9.41, கொளு.). 3. ***மெலிதல்;*** to be emaciated. "அந்த நோயால் உடம்பு உருகிவிட்டது". (செ.அக.).

ம. உருகு

[உரு → உருகு.]

உருகுநிலையம் *urugu-nilaiyam*, பெ. (n.) ***உருகும் நிலை;*** the state at which a substance changes from solid to liquid, melting point. (சா.அக.).

[உருகு + நிலையம்.]

உருகுபதம் *urugu-padam*, பெ. (n.) ***இளகுதற்குரிய பக்குவம்;*** softness of condition, melting state. "உருகு பதத்திலே வளைந்தவை" (ஈடு. 1, 4, 3). (செ.அக.).

[உருகு + பதம்.]

உருகுமயம் *urugumayam*, பெ. (n.) ***உருகும் பதம்;*** melting point. (சா.அக.).

[உருகு + மயம்.]

உருகுமுப்பு *urugum-uppu*, பெ. (n.) ***கட்டுப்பு;*** fusible salt prepared out of common salt by a special process; a consolidated salt usually melting when exposed to heat. It is opposed to உருகாவுப்பு. (சா.அக.).

[உருகும் + உப்பு.]

உருகை *urugai*, பெ. (n.) 1. ***புல்லூரி;*** a parasitic plant. 2. ***அறுகம்புல்;*** harialligrass. (சா.அக.).

[உரு → உருகை.]

உருங்கு-தல் *urungu-*, 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***உண்ணுதல்;*** to eat. "அரவினுட லுயிருருங் குவணம்" (பரிபா. 4,42). 2. ***தேய்தல்;*** to wear away. 3. ***உராய்தல்;*** to rub (சேரநா.).

ம. உருங்ஙுக.

[உல் → உர் → உரு → உருங்கு = தேய்த்தல். சிறிது சிறிதாகப் பறித்து அல்லது குறைத்துண்ணுதல்.]

உருசி *uruši*, பெ. (n.) 1. ***சுவை;*** taste. 2. ***இனிமை*** pleasantness. 3. ***விருப்பம்;*** disire.

[உருசு → உருசி.]

உருசிதட்டு-தல் *urušitattu-*, 5. செ.கு.வி. (v.i.) ***சுவை தோன்றுதல்;*** to be sweet, pleasant to the taste. (செ.அக.).

[உருசி + தட்டு.]

உருசிபார்-த்தல் *urušipār-*, 4. செ.குன்றாவி. (v.t.) ***சுவைத்தறிதல்;*** to taste, examine, ascertain as the nature of a thing by tasting it. (செ.அக.).

[உருசி + பார்.]

உருசு-தல் *urušu-*, 5. செ.குன்றாவி. (v.t.) ***உறிஞ்சுதல்; சிறிது சிறிதாகக் காற்றை உள்ளிழுப்பதன் வாயிலாக நீர்ம உண்பொருளை நாவில் சுவைத்தவாறே மென் மெல விழுங்குதல்;*** to suck.

[உ → உல் → உரு = தோன்றுதல், மேலெழுப்புதல். உருசு = மேலெழச் செய். உருப்புதல், உருசுதல் ஆகிய இரு வினைக ளும் காற்றை உறிஞ்சுவதன் வாயிலாக உணவுப் பொருளை மேலெழுப்பி வாய்க்குள் விழச் செய்யும். உருப்பு, உருசு என்பன பிறவினைகள். உரு, உரும்பு இரண்டும் தன்வினை கள். உரு → உருந்து → உருத்து → உருச்சு → உருசு எனத் திரிந்ததால் இது திரிபுப் பிறவினை; உருப்பு இயல்புப் பிற வினை.]

உருட்சி *urutci*, பெ. (n.) 1. ***உருளுகை;*** revolving, as a wheel. 2. ***திரட்சி;*** rotundity, globularity. உருட்சிக்கு நீட்சி. (செ.அக.).

[உருள் + சி = உருட்சி.

உரு = மேலெழுப்பு. உருள் = மேலெழும்பும் செய்கை. மீண்டும் மேலெழும்பும் செய்கையைக் குறித்த போது சுழற்சிப் பொருள்களும் சுழலும் வட்டமும், உருண்டை, கோளம், சக்கரம் ஆகியவற்றையும் குறிக்கும்.]

உருட்டிக்காய் *urutti-k-kāy*, பெ. (n.) ***பெருந்தும்மட்டி;*** callous leaved bryonia. (செ.அக.).

[உருள் → உருட்டு → உருட்டி + காய்.]

உருட்டித்தை-த்தல் *urutti-t-tai-*, 4. செ.குன்றாவி. (v.t.) ***துணியைச் சுருட்டித் தைத்தல்;*** to roll, and sew a border, a kind of hemming. (செ.அக.).

[உருள் → உருட்டு → உருட்டி + தை-த்தல்.]

உருட்டிப்பார்-த்தல் *urutti-p-pār-*, 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***விழியை உருட்டிப் பார்த்தல்;*** staring after rolling the eyes. 2. ***கண்சிமிட்டாது விழியை உருட்டி உற்றுப் பார்த்தலாகிய ஒரு சாக்குறி;*** a symptom of death in which the dying person rolls his eyes and stares at or looks intently. 3. ***மண்டையோட்டுப் பகுதியால் விழியையுருட்டிக் கீழாகச் சொருகி, மேற்புருவம் வளையமிட்டுக் காணுதல்;*** peculiar expression of the eyes in meaning it is due to downward rolling of the eye ball and retraction of the upper lid - post basic stare. (சா.அக.).

[உருட்டி + பார்.]

உருட்டிப்போடு-தல் *urutti-p-pōdu-,* 19. செ.குன்றாவி. (v.t.) 1. ***பேச்சால் மருட்டி வெல்லுதல்;*** to defeat by argument, by a display of skill or by sophistry; to overcome in games. அவர்களைப் பேச்சில் உருட்டிப் போட்டான். (இ.வ.). 2. ***அழித்து விடுதல்;*** to bring to ruin, as a family. வஞ்சகமே அந்தக் குடியை யுருட்டிப் போட்டது. (உ.வ.). 3. ***சாகச் செய்தல்;*** to cause to die. அந்தக் குழந்தை பிறந்து தாயை யுருட்டிப் போட்டது. (செ.அக.).

[உருட்டி + போடு.]

உருட்டிவிடு-தல் *urutti-vidu-,* 18. செ.குன்றாவி. (v.t.) ***உருட்டிப்போடு*** பார்க்க; see *urutti-p-pōdu.* (செ.அக.).

[உருட்டு → உருட்டி → விடு.]

உருட்டு[1]-தல் *uruttu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***உருளச் செய்தல்;*** to roll, as a ball or wheel, as a barrow; to bowl, turn about, revolve, as a thing on a plane; to throw, as dice; to whirl, as a discus. "அறக்கதிராழி திறப்பட வுருட்டி" (மணிமே. 5,76). 2. ***உருண்டை யாகச் செய்தல்;*** to form, as clay or other substances into balls or globules. முருடீர்ந்துருட்டற்கு (கம்பரா. மாரீசன். 139) 3. ***வருத்துதல்;*** to afflict, cause pain, to vex. "உய்ந்து போம்வழி யுருட்டுவா னொருவனை" (சூளா. முத். 9). 4. ***இசை நரம்பை வருடுதல்*** (கூர்மபு. கண்ணன். 147); to play upon a stringed musical instrument with pressure of fingers, as lute springs. 5. ***விளையாட்டில் வெல்லுதல்;*** to overcome in athletic exercises of games. 6. ***ஒலியின் வேறுபாட்டால் மருட் டுதல்;*** impose and confound as by hard sounding verbiage. கடபடமென் றுருட்டுதற்கோ" (தாயு. நின்ற. 3). (செ.அக.).

ம. உருட்டுக; **க.,** பட. உருடு; **கோத.** உர்ண; **துட.** ஊட்; குட. உரிட், உரிக்; **து.** உருண்டு; **தெ.** உரலு, குவி. டுபலி.

[உருள் → உருட்டு → உருட்டு-தல்.]

உருட்டு[2] *uruttu,* பெ. (n.) 1. ***உருட்டுகை;*** rolling, revolving in a plane, turning of a wheel, whirling. உன்னை ஓர் உருட்டு உருட்டிவிடவா? 2. ***சக்கரம்;*** wheel of a car. உருட்டோட வோடிய தேர் (குலோத். கோ. 212). 3. ***திரட்சி;*** roundness, globularity. உருட்டான வடிவம். 4. ***கட்டடவளைவு;*** (Arch.) moulding. 5. ***வெருட்டு;*** terrifying, frightening, intimidation. உன்னுடைய உருட் டுக்கு அஞ்ச மாட்டேன் (கொ.வ.). 6. ***புரளும் குரலிசை*** (உ.வ.); (mus.) quavering note. 7. ***விரலணிவகை.*** (உ.வ.); ring for the fingers or toes. i.e. மெட்டி. 8. ***சரிவு;*** slope. மலையுருட்டாயிருப்பதால், விழிப்புடன் இறங்க வேண்டும். 9. ***ஏமாற்றுகை;*** fraud. பொய்யும் புரட்டும் உருட்டும் திருட்டும். 10. ***கைம்மரம்;*** rafter. 11. ***ஒருவகை வெண்கல ஏனம்;*** a kind of brass vessel.

ம., **க.** உருட்டு.

[உருள் → உருட்டு.]

உருட்டுக்காரன் *uruttu-k-kāran,* பெ. (n.) ***புரட்டன்;*** deceiver, tricker.

[உருட்டு + காரன்.]

உருட்டுப்புரட்டு *uruttu-p-purattu,* பெ. (n.) ***வஞ்சகச் செயல்;*** tricks and frauds. (செ.அக.).

[உருட்டு + புரட்டு.]

உருட்டுமோதிரம் *uruttu-mōdiram,* பெ. (n.) ***விரலணி வகை*** (இ.வ.); plain gold-ring. (செ.அக.).

ம. உருட்டுமோதிரம்.

[உருட்டு + மோதிரம்.]

உருட்டுவண்ணம் *uruttu-vannam,* பெ. (n.) ***அராகந் தொடுத்துவருஞ் சந்தம்;*** variety of rhythm effected by using short syllables in quick succession, as free rolling on. "உருட்டு வண்ண மராகந்தொடுக்கும்" (தொல். பொருள். 544). (செ.அக.).

[உருட்டு + வண்ணம்.]

உருடை *urudai,* பெ. (n.) 1. ***வண்டி;*** cart. "உருடை யூடுதிரியும்" (சேதுபு. முத்தீர். 42). 2. ***சக்கரம்;*** wheel. (செ.அக.).

[உருள் → உருடை (ரோடை → ரோதை).]

L. rota, a wheel; *L.* roto, a cause to turn round like a wheel, to whirl round, swing round; *L.* rotula, a little wheel; *L.* rotunde, roundly; *L.* rotunditos, roundness, rotundity (plin.); *L.* rotundo, to round, make round; *L.* rotund us round, circular, spherical; இவற்றினின்று பின்வருமாறு ஆங்கிலச் சொற்கள் தோன்றித் திரிந்துள்ளன. *E.* rota, list of persons acting, or duties to be done, in rotation; *E.* rotary, acting by rotation; *E.* rotate, v. move round axis or centre, revolve, adj. wheel-shaped; *E.* rotation, rotating, recurrence, recurrent series or period, regular succession in office, in by, rotation; *E.* rotator, muscle that rotates a limb etc; *E.* rotifer, wheel animalcule, member of class rotifer with rotatory organs used in swimming; *E.* rotograph, print of Ms. page etc. got by sensitized roll; *E.* rotor, rotary part of machine; *E.* rotund, a circular, round, rotundate; *E.* rotunda, building of circular ground plan, esp. one with dome;

Roll என்னும் ஆங்கிலச்சொல் 'உருள்' என்பதை ஒத்திருக்கின் றது. ஆயின், அதை rotula அல்லது rotilla என்னும் இலத்தீன் குறுமைப் பொருட் சொல்லினின்று திரிக்கின்றனர் மேலையறி ஞர்கள். இது வட்ட வழித் திரிபு. L. rotulus. தமிழில் 'இல்' என்பது ஒரு குறுமைப் பொருட்பின்னொட்டென்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

(எ-டு.) குடி (வீடு) → குடில் (குடிசை.) (ஒ.நோ.) விட்டி → விட்டில். தொட்டி → தொட்டில் (சிறு ஆடுகட்டில்.). இன்று ஏணையென்று தவறாக வழங்குகின்றது.

E. roll, n. cylinder formed by turning flexible fabric such as paper or cloth over and over upon itself without folding, v. move or send or go in same direction by turning over on axis often with aid of gravitation. *ME & OF* rolle, role; *E.* roller, cylinder of wood, stone, metal etc; *E.* role, actor's part, one's function, F. role = roll; *E.* roly-poly, pudding made of sheet of paste covered with

jam etc. formed into roll, and boiled. Round என்னும் ஆங்கிலச் சொல்லும் உருண்டை என்பதை ஒத்திருக்கின்றது. *E.* round, n. round object; v. invest with, assume, round shape. a spherical or circular or cylindrical or approaching these forms; adv. with more or less circular motion; *ME* round. *OF* rund; *E.* roundel, small disc; *E.* roundelay, short simple song with refrain; *E* rounder, one complete run of player through all the bases arranged in a round; *E.* roundly, adv. in thorough going manner; *E* rondeau; *F.* rondel, a poem with opening words used twice as refrain; *E* rondel, special form of rondeau; *ME* rond. *OF.* round; *E* rondo, *It & F.*rondeau; *E.* rondure, round outline or object; *F.* rondeur, round.

தமிழில் உகர முதல் மூல வேர்ச்சொல் க ச த ந ப ம என்னும் ஆறு சொல் முதல் மெய்யெழுத்துகளொடுங் கூடி, ஆறுவழி வேர்களை அல்லது வழியடிகளைப் பிறப்பிக்கின்றது. இங்ஙனமே 'உருள்' என்ற சொல்லும் பிறப்பிக்கின்றது. உருள் ஒ.நோ. *E.* Whirl, swing round and round, revolve; *ON.* hvirfla, rotate; *E.* whorl, ring of leaves, one turn of a spiral, disc on spindle; *ME.* wharwyl whorail.

குருள் → குருளுதல் = சுருளுதல், சுருளாதல். "குரண்டவார் குழல்" (திருவிசை. திருவா. 1:3). ஒ.நோ. *MDu.* krul, *G.* Krollen; *L.G.Du; E. Fris.* krullen to curl; *E.* curl; சுருள் - *E.* swirl, eddy. Sec. Norw. svirla; *Du.* Zwirrelen, to whirl; *G.* Schwirrlen, to totter. (செல்வி. 77. துலை, 123-125)

உருண்டுபோ-தல் *urundupō-*, 8. செ.கு.வி. (v.i.) ***சாதல்;*** to die, said in cursing or in mentioning in a disrespectful way. (செ.அக.).

[உருள் → உருண்டு + போ.]

உருண்டை *urundai,* பெ. (n.) 1. ***உண்டை;*** ball, bowl, globe, anything round, as a pill. 2. ***கவளம்;*** mouthful of food in the shape of a ball. 3. ***திரட்சி;*** roundness, globularity. 4. ***உலகம்;*** world. "அண்டைப்பகுதியின் உண்டைப் பிறக்கம்" (திருவாச. திருவண்டப்.1); 5. ***கூட்டம்;*** crowd. கோவுண்டை கோட்டாற்ற ழிவித்த கோன் (பரிபா. 6.36 உரை).

உருண்டையான பொருள் உண்டை எனப்பட்டது. பொரியுண்டை, சோற்றுண்டை, வெல்லவுண்டை, மண்ணுண்டை, வில்லுண்டை, கஞ்சாவுண்டை முதலியன.

ம. உருண்ட; **க., பட., து.** உண்டெ; **தெ.** உண்ட; **குரு.** உருடெ; **கோத.** உண்டய; **துட.** உடய; **கோண்.** உன்தா.

[உருள் → உருண்டை.]

உருணி[1] *uruṇi,* பெ. (n.) ***உருளுந் தன்மையுடையது;*** that which has capacity to roll.

[உருளி → உருணி.]

உருணி[2] *uruṇi,* பெ. (n.) 1. ***எலும்புத் தட்டு;*** pan of bone. 2. ***மாங்காய்ப்பிஞ்சு;*** tender mango (சேரநா.).

ம. உருணி.

[உருள் → உருளி → உருணி.]

உருத்தரி-த்தல் *uruttari-,* 4. செ.கு.வி. (v.i.) ***வடிவங் கொள்ளுதல்;*** to take shape, as an embryo. ***உருக்கொளல்*** பார்க்க; see *urukkoḷal.* (செ.அக.).

[உரு + தரி.]

உருத்திரங்கண்ணன் *uruttiraṅkaṇṇaṉ,* பெ. (n.) ***பத்துப் பாட்டுள் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப்படையை யாத்த கடைக் கழகப் புலவர்;*** name of a sangam poet who authored the 'Perumbāṇāṟṟu-p-paḍai'.

[உருத்திரம் + கண் + அன்.]

உருத்திரசருமன் *uruttiraśarumaṉ,* பெ. (n.) ***இறையனார கப்பொருளுரை கேட்டவரும் அகநானூறு தொகுத்த வருமாகிய ஒரு புலவர்;*** name of a dumb poet in Madura who acted as arbitrator on the commentaries of the Iraiyaṉāraga-p-poruḷ, and who was himself the compiler of the Aga-nāṉūṟu.(செ.அக.).

[உருத்திரன் + சருமன்.]

உருத்திரசோலை *uruttiraśōlai,* பெ. (n.) ***காஞ்சியிலுள்ளதும் தன்னை அடைந்தவர்களின் பிறப்பினையழிக்க வல்லதாகக் கருதப்படுவதுமான ஒரு சோலை;*** a grove in kāñji, entry into which is supposed to free one from future births. "சுரர்கள் உருத்திரசோலை" (பெரியபு. திருக்குறிப்பு. 84). (செ.அக.).

[உருத்திரம் + சோலை.]

உருத்திரபசுபதி நாயனார் *uruttira-paśupadi-nāyaṉār,* பெ. (n.) ***அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்;*** a canonized Śaiva Saint, one of 63 (பெரியபு.).

[உருத்திரம் + பசு + பதி + நாயனார்.]

உருத்திரம்[1] *uruttiram,* பெ. (n.) 1. ***பெருஞ்சினம்;*** fury, violent anger. 2. ***வெகுளிச்சுவை*** (தண்டி.69.); (Poet) sentiment of wrath, fury.

க., து. ருத்ர; **தெ.** ருத்ரமு; *Skt.* roudra; *OE.* wreth; *OS.* writh; *OHG.* reid; *ON.* reigher; *E.* wrath, wroth.

[உல் → உரு (தீ) → உருத்தல் → உருத்திரம்.]

உருத்திரம் = பெருஞ்சினம். உருத்திரம், வ. (ருத்ர.). 'திரம்' ஒரு தொழிற்பண்பீறு. ஒ.நோ: மாத்தல் = அளத்தல். மா + திரம் - மாத்திரம் (அளவு.). அவன் எனக்கு எம்மாத்திரம்? என்னும் வழக்கை நோக்குக. மானம் (மா + அனம்) என்னும் அளவுப் பொதுப் பெயரையும், மா, மானம், ஒருமா, இருமா, மாகாணி முதலிய அளவுச் சிறப்புப் பெயர்களையும், மேலை வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் படி என்னும் முகத்தலளவைப் பெயர் மானம் என்று வழங்குதலையும் நோக்குக. மாத்தல் என்னும் வினைச்சொல் பண்டே வழக்கிறந்தது. திரம் → திரை. மா + திரை - மாத்திரை = அளவு, எழுத்தொலிக்குங் கால அளவு, உண்ணும் மருந்தளவு. சினம் தீயொத்தலால் தீ பற்றிய சொற்கள் எல்லாம் சினத்தையும் குறிக்கும்.

உரு → உருத்திரம். உருத்திரம் > வ. *ரௌத்ர* (Roudra) = வெகுளி. ஒ. நோ: *E.* wroth; *N.* anger; *O.E.* Wreth thu, As and *On.* Wraedo; *M.E.* wrathu; *E.* sroth, adj. angry; *OE.* wrath; *OS.* wreth; *OHG.* reid; *ON.* reither.

கீற்றும் (Skeat) கிளெய்னும் (klein) இச்சொற்களை reid (twisted) என்னும் மூலத்தினின்று திரிக்கின்றனர். அது அவர்கள் தென் சொல்லை அறியாததனாலும் இருக்கலாம் (வ.மொ.வ. 94.).]

உருத்திரம்². *uruttiram,* பெ. (n.) 1. ***மஞ்சள்*** (வின்.); turmeric. 2. ***மரமஞ்சள்*** (சங்.அக.); tree turmeric. (செ.அக.)

உருத்திரன் *uruttiran,* பெ. (n.) 1. ***சிவன்*** (திவா.); Śiva. 2. ***பதினொரு உருத்திரருளொருவன்*** (திவா.); Ruttiran one of ēkātaca ruttirar. 3. ***அழற்கடவுள்;*** Agni. "உருத்திர னென்னுநாமம்... செந்தீப் பண்ணவன் றனக்குமாமால்" (கந்தபு. ததீசிப். 45). 4. ***சிவகணத்தோன்;*** attendant of Siva (கந்தபு. ததீசிப். 45). 5. ***கடுஞ்சினத்தான்;*** ferocious visage.

[உருத்திரம் → உருத்திரன் > Skt. rudra .

சிவன் நெருப்பின் தன்மையும், அழிப்புத் தொழிலும் உடைய வனாதலின் உருத்திரன் எனப்பட்டான். (ஒ.மொ. 25). தமிழ ரின் முத்தொழிலோனான சிவன் ஆரியரின் முத்திரு மேனிய ருள் (திரிமூர்த்திகளுள்) ஒருவனான அழிப்புத் தொழிலோ னாக்கப்பட்டபின், ஆரியக் கடுங்காற்றுத் தெய்வமாகிய ருத்ர (உருத்திரன்) அழிப்புத் தொழிலொப்புமை பற்றிச் சிவனோடு இணைக்கப்பட்டான். ருத்ர ஆரியத் தெய்வமாயினும், தமிழ்த் திரி சொல்லாலேயே குறிக்கப்பட்டான் என அறிக.]

உருத்திரி-தல் *uruttiri-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***உருமாறு தல்;*** to be metamorphosed, changed in form. 2. ***மாறுவேடங்கொள்ளுதல்;*** to wear a mask, assume a disguise. "உருத்திரிந்து தனித்து வந்து" (திருவிளை. விடையிலச். 7). (செ.அக.).

ம. உருத்திரியுக.

[உரு + திரி-தல்.]

உருநாட்டு *urunāṭṭu,* பெ. (n.) 1. ***படிமம்; சிலை;*** idol. (J.). 2. ***ஓவியம்;*** picture (யாழ்.அக.).

[உரு + நாட்டு.]

உருப்படி *uruppaḍi,* பெ. (n.) 1. ***கணக்கிடக்கூடிய பொருள்;*** item, piece, any article admitting of counting, unit. "நித்யம் ஏழுருப்படி பணியாரம்" (கோயிலொ. 69.). 2. ***பயன்படும் பொருள்;*** article of value, useful thing. உருப்படியாக என்னிடம் ஒன்றுமில்லை (உ.வ.). 3. ***இசைப்பாட்டு;*** piece of music. அவனுக்கு நூறு உருப்படி பாடம் உண்டு (செ.அக.).

[உரு → உருப்படி.]

உருப்படியா-தல் *uruppaḍiyā-,* 6. செ.கு.வி. (v.i.) ***உருவாதல்;*** to take a tangible shape, come to something. (Colloq.). அந்தக் காரியம் உருப்படியாகாமற் போயிற்று. (செ.அக.).

ம. உருப்பிடிக்குக.

[உருப்படி + ஆ-தல்.]

உருப்படியாய் *uruppaḍiyāy,* கு.வி.எ. (adv.) ***யாதொரு அங்கப்பழுதுமின்றி;*** soundly, wholly, unhurt, without any injury to any part of the body. உருப்படியாய் வந்து சேர்ந்தான் (செ.அக.).

[உரு → உருப்படி + ஆய்.]

உருப்படு-தல் *uruppaḍu-,* 20. செ.கு.வி. (v.i.) 1. ***உருவாதல்;*** to be formed, shaped. 2. ***சீர்ப்படுதல்;*** to improve in body, mind or morals, to rise to a position. 3. ***மருந்தைப் புடமிட்டு நிறைவாக்கல்;*** completing the preparation of a medicine by calcining it.

[உரு + படு.]

உருப்பம்¹ *uruppam,* பெ. (n.) 1. ***வெப்பம்;*** heat, as of the sun, temperature. "கனலும்... வந்துகுடிகொண் டவனுறைந்தன வுருப்பமெழ" (அரிச்.பு. விவா.104) 2. ***நெருப்பு;*** fire. 3. ***வெப்பமிக்க நண்பகல்;*** midday.

ம. உருப்பம்.

[உல் → உரு → உருப்பம்.]

உருப்பம்² *uruppam,* பெ. (n.) ***உருப்பு*** பார்க்க. (பிங்.); see *uruppu.* (செ.அக.).

[உல் → உரு → உருப்பம்.]

உருப்பாத்தி *uruppātti,* பெ. (n.) ***கடல் மீன் வகை;*** flathead brownfish. (செ.அக.).

[உரு + பாத்தி - உருப்பாத்தி.]

உருப்பிடி-த்தல் *uruppiḍi-,* 4. செ.குன்றாவி. (v.i.) ***படம் பிடித்தல்;*** to take a photograph. (செ.அக.).

[உரு + பிடி-த்தல்.]

உருப்பிணி *uruppiṇi,* பெ. (n.) ***கண்ணன் மனைவி*** (திவ். திருவாய். 7,10,6); Krishna's consort.

[உரு → உருப்பு → உருப்பிணி (வெண்ணிறத்தவள்).]

உருப்பு¹ *uruppu,* பெ. (n.) 1. ***வெப்பம்;*** heat. "கன்மிசை உருப்பிறக் கனைதுளி சிதறென" (கலித். 16.7). 2. ***சினத்தீ;*** anger, heated emotion. "உருப்பற நிரப்பினை யாதலின்" (பதிற்றுப். 50. 16). 3. ***கொடுமை;*** cruelty. "உருப்பில் சுற்றமோ டிருந்தோற் குறுதி" (பெரும்பாண். 447). (செ.அக.).

ம. உருப்பம்; க. உருபு.

[உல் → உரு → உருப்பு.]

உருப்பு² *uruppu,* பெ. (n.) ***மிகுதி*** (திவா.); abundance, increase. (செ.அக.).

[உல் → உரு → உருப்பு.]

உருப்பு³ *uruppu,* பெ. (n.) 1. ***துயரம்;*** grief. 2. ***அடுக்களை;*** kitchen. (செ.அக.).

[உரு → உருப்பு.]

உருப்பெயர்-த்தல் *uruppeyar-,* 4. செ.குன்றாவி. (v.i.) ***ஒரு சொல்லைப் பிறமொழியெழுத்தில் எழுதுதல்;*** to transliterate (mod.). (செ.அக.).

[உரு + பெயர்-த்தல்.]

உருப்போடு-தல் *uruppōdu-*, 19. செ.குன்றாவி. (v.t.) 1. ***மந்திரத்தைப் பலமுறை சொல்லுதல்;*** to repeat mantras a number of times. 2. ***மனப்பாடம் பண்ணுதல்;*** to repeat so as to commit to memory. (செ.அக.).

ம. உருவிக்குக.

[உரு + போடு-தல்.]

உருபு[1] *urubu*, பெ. (n.) 1. ***வடிவம்;*** form, shape (தொல். சொல். 24, சேனா). 2. ***நிறம்;*** colour. "உருபுகிளர் வண்ணம் கொண்ட" (பதிற்றுப். 52,30). 3. ***வேற்றுமை முதலியவற்றைக் காட்டும் இடைச்சொல்*** (தொல். சொல். 69.); (Gram.) particle such as case endings, etc. (செ.அக.).

[உரு → உருவு → உருபு]

உருபு[2] *urubu*, பெ. (n.) ***நோய்*** (அக. நி.); malady. (செ.அக.).

[உல் → உரு (வெப்பம், நோய்.) → உருபு.]

உருபுப்புணர்ச்சி *urubu-p-punarcci*, பெ. (n.) ***வேற்றுமை யுருபு புணர்ந்து வருவது;*** function with case ending.

[உருபு + புணர்ச்சி.]

உருபுமயக்கம் *urubu-mayakkam*, பெ. (n.) 1. ***ஒரு வேற்றுமையுருபு பிறிதொரு வேற்றுமை உருபின் பொருள் கொண்டு நிற்றல்;*** (Gram.) use of the ending of one case for that of another, as the dat. ending கு for the loc. இன் in the sense of the latter. சிலையினாற்கு, உருபு மயக்கம் (சீவக. 1889, உரை). 2. ***ஒரு வேற்றுமைக்குள் ஒருருபு வேறோருருபோடு மயங்குகை;*** use of one ending of a case in the sense connoted by another ending of the same case, as அறத்தான் வருவதேயின்பம் (குறள். 39) for அறத்தோடு வருவதே இன்பம்.

[உருபு + மயக்கம்.]

உரும் *urum*, பெ. (n.) 1. ***இடி;*** thunder. "உருமுற்ற பாம்பின்" (சீவக.27). 2. ***அச்சம்*** (தொல். சொல். 365); fear; dread, alarm. 3. ***சினம்*** anger. 4. ***நெருப்பு;*** fire. (செ.அக.).

தெ. உருமு.

[உல் → உரு → உரும். உரு = வெப்பம், அனல், இடி.]

உரும்பு *urumbu*, பெ. (n.) ***கொதிப்பு;*** ire, exasperation. "உரும்பில் கூற்றத் தன்னநின்" (பதிற்றுப். 26. 13).

[உரு → உரும் → உரும்பு.]

உருமகாலம் *urumakālam*, பெ. (n.) 1. ***கோடைக்காலம்*** (வின்.); hot weather. 2. ***நடுப்பகல்;*** midday. (சா.அக.).

[உரும் → உரும → காலம்.]

உருமணி *urumaṇi*, பெ. (n.) 1. ***கருவிழி*** (யாழ். அக.); pupil of the eye. 2. ***அடிவயிற்றிலுள்ள ஓர் உயிர்ப்பகுதி;*** mortal spot in the abdomen (சேரநா.).

ம. உருமணி.

[உல் → உரு + மணி.]

உருமத்துக்குவிடு-தல் *urumattukkuvidu-*, 20. செ.கு.வி. (v.i.) ***நண்பகல் வேலை நிறுத்தல்;*** to cease at noon, as from study from labour (செ.அக.).

[உருமம் + அத்துக்கு + விடு.]

உருமம் *urumam*, பெ. (n.) 1. ***வெப்பம்*** (பிங்.); heat as of the sun, of the atmosphere, sultriness, closeness. 2. ***நடுப்பகல்;*** noon, noon-day "உருமத்திற் கதிரே" (சேதுபு. இராமனருச். 218). (செ.அக.).

[உல் → உரு → உரும் → உருமம்.]

உருமலைவாரி *urumalai-vāri*, பெ. (n.) ***மாழை (உலோக) மணல்;*** sand containing metal (W.). (செ.அக.).

[உரு + மலை + வாரி.]

உருமவிடுதி *urumaviduḍi*, பெ. (n.) ***நண்பகலில் வேலை நிறுத்துகை;*** midday recess. (J.). (செ.அக.).

[உரும் → உருமம் + விடுதி. விடுதி = விடுப்பு, ஓய்வு.]

உருமவேளை *uruma-vēlai*, பெ. (n.) ***உச்சிப்பொழுது;*** noon. (சா.அக.).

[உருமம் + வேளை.]

உருமாற்றம் *urumāṟṟam*, பெ. (n.) 1. ***உருவம் வேறுபடல்;*** change of shape or form. 2. ***விலங்குகள் அல்லது பூண்டுகளிலாவது அவற்றின் பகுதிகளிலாவது ஏற்படும் வேறுபாடு;*** change of form in animals or plants or in their parts during life. 3. ***உடலமைப்புமாறி வேற்றுருக் கொளல்;*** (in Biology or Morphology) the modification of organs or structure in form and function. 4. ***இக்கோளகத்தின் (பிரபஞ்சத்தின்) காரணமாக மாயையின் வல்லமையால் ஒன்று மற்றொன்றாக மாறுதல்;*** (In Evolution.) the secular change from a simple or rudimentary condition to one that is more complex and of a higher order. 5. ***வேதியியலின்படி ஒரு பொருளின் உரு வேறுபடுதல்;*** in chemistry, the change of a compound into a new form, chemical change. 6. ***மாந்தர் உருவத்தை மாற்றி வேற்றுருவங் கொள்ளுதல்;*** (In psychology) the change of human body into a quite different one as desired, by enchantment or other supernatural means, metamorphosis. 7. ***நிறம், தோற்றம் முதலியன மாறுதல்;*** change of colour, appearance etc. என்ன இப்படி உருமாறி விட்டீர்களே (உ.வ.).

[உரு + மாற்றம்.]

உருமாறு-தல் *urumāṟu-*, 5. செ.கு.வி. (v.i.) 1. ***வேற்றுருக் கொள்ளுதல்;*** to change one's shape, disguise oneself. "வாசி வணிகர் போலவே யேசிலா வுருமாறினார்" (திருவாத. பு. குதிரையிட்ட. 2). 2. ***தோற்றம் வேறாதல்;*** to become changed in appearance, as by disease. (செ.அக.).

ம. உருவழியுக (மறைத்தல்).

[உரு + மாறு.]

உருமாறுமூலி *urumāṟumūli*, பெ. (n.) ***தொட்டாற் சிணுங்கி;*** humble plant; touch me not - mimosapudica.

It is so called from its leaves mimicking sensibility by folding themselves at the slightest touch. (சா.அக.).

[உரு + மாறு + மூலி.]

உருமானம் *urumāṉam,* பெ. (n.) 1. ***உருவம்;*** figure, shape. 2. ***முற்றினது;*** anything ripe or full grown.

[உரு + மானம்.]

உருமி-த்தல் *urumi-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***வெப்பமாதல்;*** to be hot, sultry, close, as the weather. (W.) 2. ***மனவெப்பமடைதல்;*** to grow excited in mind. (சா.அக.).

[உரும் → உருமி → உருமி-த்தல்.]

உருமு[1]-தல் *urumu-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***உரப்புதல்;*** to thunder, roar. ''உருமிநக்கு'' (கந்தபு. அசுரேந். 35). 2. ***முறுமுறுத்தல்;*** to growl, grumble. (செ.அக.).

தெ. உருமு.

[உரும் = அச்சம். உருமுதல் = அச்சமுண்டாக உரத்து ஒலித்தல்.]

உருமு[2] *urumu,* பெ. (n.) ***உரும்*** பார்க்க; (பிங்.); see *urum.* (செ.அக.).

[உரும் → உருமு.]

உருமுக்குரல் *urumukkural,* பெ. (n.) ***இடியோசை;*** noise of thunder. (செ.அக.).

[உரும் → உருமு + குரல்.]

உருமேறு *urumēṟu,* பெ. (n.) ***பேரிடி;*** thunderbolt. ''அச்சொற் றத்தஞ் செவிக்குரு மேறாகக் கலங்கு மரவன் னார்'' (பாரத. திரௌ. 32). (செ.அக.).

[உரு → உரும் + ஏறு.]

உருமேனி *urumēṉi,* பெ. (n.) ***சிவன், உயிர்கள் தங்கண் ணாற் காணும்படியெடுக்கும் வடிவம்;*** invisible form of god. ''உருமேனிதரித்துக் கொண்ட தென்றலும்'' (சி.சி, 55). (செ.அக.).

[உரு + மேனி.]

உருமை *urumai,* பெ. (n.) ***உப்புவிளையும் நிலம்;*** saline soil.

[உரும் → உருமை. உருமை = வெப்பத்தால் ஆவியாகி நிற்கும் உப்பு வயல்.]

உருவ *uruva,* கு.வி.எ. (adv.) 1. ***நன்றாக;*** thoroughly, fully, carefully. ''புயவலிமை நீயுருவ நோக்கையா'' (கம்பரா, குலமுறை. 26). 2. ***திரும்பத் திரும்ப;*** again and again ''பின்னையும் விட மாட்டாளே, இங்ஙனேயுரு வச் சொல்லு மித்தனை'' (ஈடு, 10,3,4). (செ.அக.).

[உல் → உரு → உருவ. (வே.க. 9).]

உருவகப்படுத்து-தல் *uruvagappaḍuttu-,* 5. செ.குன் றாவி. (v.t.) ***உவமேயத்தை உவமானத்தோடு பொருந் தக் கூறுதல்;*** to speak metaphorically. (செ.அக.).

[உரு → உருவு → உருவகம் + படுத்து.]

உருவகம்[1] *uruvagam,* பெ. (n.) ***உவமத்தைப் பொரு ளுடன் வேறுபாடின்றிப் பொருந்தக் கூறும் அணி*** (தண்டி. 34); figure of speech in which the uvameyam or the thing compared is represented as identical with the uvamāṉam or the object of comparison, metaphor. (செ.அக.).

[உரு → உருவு → உருவகம்.]

உருவகம்[2] *uruvagam,* பெ. (n.) ***நாடகம்*** (நாநார்த்த.) drama. (செ.அக.).

[உரு → உருவு → உருவகம்.]

உருவகவணி *uruvagavaṇi,* பெ. (n.) ***உருவகம்[1]*** பார்க்க; see *uṟuvagam.*

[உருவகம் + அணி.]

உருவங்காட்டி *uruvaṅkāṭṭi,* பெ. (n.) ***கண்ணாடி*** (பிங்.); mirror. (செ.அக.).

[உருவம் + காட்டி.]

உருவத்திருமேனி *uruvattirumēṉi* பெ. (n.) ***வடிவுடைய வராகக் கருதப்படும் கடவுள்*** (சீகாழி. கோ. பக். 88); god, as assuming form or shape. (செ.அக.).

[உருவம் + திருமேனி.]

உருவப்பரப்பு *uruva-p-parappu,* பெ. (n.) ***கடவுளின் மேன்மையான எண் குணங்கள்;*** the eight characteristics of the Supreme Being. ''தன்னுருவப் பரப்பையெல் லாம் கொடுபுகுந்து பதிப்பன்'' (சி.சி. 9,12). (செ.அக.).

[உருவம் + பரப்பு.]

உருவப்பொம்மை *uruva-p-pommai,* பெ. (n.) ***வைக் கோல் போன்ற பொருள்களால் செய்யப்படும் உருத் தோற்றம்;*** effigy.

[உருவம் + பொம்மை.]

ஒருவரை மதிப்புக்குறைவு செய்ய நேரும்போது அவரது உருவப் பொம்மையைப் பிணம் போலக் கருதித் தெருத்தோ றும் இழுத்துவந்து ஒப்பாரி வைத்து எரிப்பது வழக்கம்.

உருவம் *uruvam,* பெ. (n.) 1. ***வடிவம்.*** shape, visible form, figure. ''சோதியாய்த் தோன்றுமுருவமே'' (திரு வாச. 22,9). 2. ***உடல்;*** body. ''உருவமு முயிருமாகி'' (தேவா. 1028.3). 3. ***அழகு;*** beauty. ''உருவப்பூணி னாய்'' (நைடத.தேவியைக். 3). 4. ***நிறம்;*** colour, hue. ''உருவப் பல்பூத் தூஉய்'' (திருமுருகு. 241). 5. ***புனைவு*** (வேடம்); disguise, assumed form. ''வலியினி லைமையான் வல்லுருவம்'' (குறள், 273). 6. ***கவறு;*** die used in gaming. 'முன்னாயம் பத்துருவம் பெற்றவன் மனம்போல்'' (கலித். 136); 7. ***மந்திரவுரு;*** repetition of mantras. ''நின்றிரண் டுருவ மோதி'' (சீவக. 1289). 8. ***படிமை;*** image made of clay or fashioned of brick, idol, statue. 9. ***ஐந்தளை*** (கந்தங்) ***களுளொன்று;*** bodily form, one of pañcakantam. ''ஓங்கியவுருவமோடும்'' (சி.சி.பர. சௌத்.30).

ம. உருவம்.

[உரு → உருவு → உருவம் → உருவம் > Skt. rūpa.]

உருவமெடு-த்தல் *uruvamedu, 4.* செ.கு.வி. (v.i.) ***வடிவங் கொள்ளுதல்*** to assume a form, as a deity. (செ.அக.).

[உருவம் + எடு-த்தல்.]

உருவரை *uruvarai,* பெ. (n.) ***செழிப்புள்ள நிலம்*** (சூடா.); fertile soil, productive land. (செ.அக.).

[உரு + வரை. வரை → வரைப்பு = பகுதி, நிலம்.]

உருவல் *uruval,* பெ. (n.) ***காதணி வகை;*** kind of ear - drops. (செ.அக.).

[உரு → (உருக்கு) உருவல்.]

உருவழி-தல் *uruvaḻi-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***உருவம் வேறாதல்;*** to become disfigured by disease, to be deformed. 2. ***முழுதுஞ் சிதைதல்;*** to be entirely ruined. 3. ***கரு கலைதல்;*** to abort. 4. ***மறைதல்;*** to disappear. (சேரநா.) (செ.அக.).

ம. உருவழியுக.

[உரு + அழி-தல்.]

உருவறை *uruvaṟai,* பெ. (n.) ***உடலழகற்றவன்-வள்-து;*** one who has bodily defects. "உருவறைக் கோபாலர்" (திவ். பெரியாழ். 3,8,2 வ்யா. பக். 740) (செ.அக.).

[உரு + அறை. அறை = அறுபட்டவள், குறைபட்டவள்.]

உருவா-தல் *uruvā-,* 6. செ.கு.வி. (v.i.) 1. ***வடிவுறுதல்;*** to assume a form, take shape. 2. ***சீர்ப்படுதல்;*** to become sound, to improve, to be reformed. (செ.அக.).

ம. உருவிக்குக.

[உரு + ஆ(கு).]

உருவாக்கு-தல் *uruvākku-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***உருவமுடையதாகச் செய்தல்;*** to shape, fashion, mould. 2. ***சீர்ப்படுத்துதல்;*** to repair, reform, improve.

ம. உருவாக்குக.

[உரு + ஆக்கு.]

உருவாணி *uruvāṇi* பெ. (n.) 1. ***அச்சாணி;*** axle bolt, linch pin. "தேரகத் தூடுரு வாணியின்" (உபதேசகா. சிவத்துரோ. 411). 2. ***மெலிந்த வுடல்;*** emaciated body, body which is all skin and bone only. (J.) (செ. அக.).

[உருவு + ஆள். ஆள் → ஆண் → ஆணி.]

உருவாணிபற்று-தல் *uruvāṇipaṟṟu-,* 5. செ.கு.வி. (v.i.) ***மெலிவடைதல்;*** to grow lean, to be emaciated. (செ.அக.).

[உருவாணி + பற்று.]

உருவாரம்[1] *uruvāram,* பெ. (n.) 1. ***வெள்ளரி*** (பிங்.); mottled melon. (செ.அக.).

ம. உருவாரம்.

[உரு + வாரம் - உருவாரம்.]

உருவாரம்[2] *uruvāram,* பெ. (n.) 1. ***நிழலுருவம்; உருவப்படிவம்;*** image. கோவிலில் உருவாரம் செய்து வைத்திருக்கிறார்கள் (இ.வ.). 2. ***கொடும்பாவி;*** effigy. (செ.அக.).

ம. உருவாரம்.

[உரு → உருவாரம்.]

உருவி[1] *uruvi,* பெ. (n.) 1. ***நாயுருவி;*** plant growing in hedges and thicket. "எள்ளிரதம் படியுருவி" (தைலவ. தைல. 103). 2. ***புல்லுருவி;*** honey suckle mistletoe. 3. ***முள்ளி;*** Indian night shade. (செ.அக.).

ம. உருவி.

[உரு → உருவு → உருவி.]

உருவி[2] *uruvi,* பெ. (n.) ***உலகம்;*** wide earth. "பாருருவி நீரெரிகால்" (திவ். திருநெடுந். 2). (செ.அக.).

[உரு → உருவு → உருவி. உரு = தோற்றம், படைப்பு.]

உருவி[3] *uruvi,* பெ. (n.) ***பாட்டுடைத் தலைவன்;*** hero extolled by name in a poem, dist. fr. aruvi. "உருவியாகிய வொருபெருங் கிழவனை" (யாப்.வி.பக்.525). (செ.அக.).

[உரு → உருவு → உருவி.]

உருவிடு-தல் *uruviḍu-,* 18. செ.குன்றாவி. (v.t.) ***மந்திரத்தை உருப்போடுதல்;*** to repeat (as a mantra), learn by note, repeat so as to commit to memory. (செ.அக.).

ம. உருவிடுக.

[உரு + இடு.]

உருவிப்பாய்தல் *uruvippāydal,* பெ. (n.) ***வேகமாகத் துளைத்துக் கொண்டு செல்லல்;*** piercing through rapidly. (சா.அக.).

[உருவி + பாய்தல்.]

உருவியழு-தல் *uruviyaḻu-,* 1. செ.கு.வி. (v.i.) ***விம்மியழுதல்;*** to weep and sob. (செ.அக.).

[உருவி + அழு. உருவி = மூச்சு உருவி, மூச்சு வாங்கி.]

உருவியுப்பு *uruviyuppu,* பெ. (n.) ***நாயுருவி யுப்பு;*** medicinal salt made from achyranthes aspera. (செ.அக.).

[உருவி + உப்பு.]

உருவில் *uruvil,* பெ. (n.) ***உருவிலாளன்*** பார்க்க; see *uruilāḷaṉ*

[உருவு + இல்.]

உருவிலாளன் *uruvilāḷaṉ,* பெ. (n.). ***காமன்;*** kāmā, who has no corporal body. "மீன விலோதனத் துருவிலாளன்" (மணிமே. 5.6). (செ.அக.).

[உருவு + இல் + ஆளன்.]

உருவிலாளி *uruvilāḷi,* பெ. (n.) ***உருவிலாளன்*** பார்க்க; see *uruvilāḷaṉ.* "உருவிலாளி உடல் பொடித்த வொருவர்" (திருவிளை. வளையல். 35). (செ.அக.).

[உருவு + இல் + ஆளி.]

உருவிலி *uruvili,* பெ. (n.) ***உருவிலாளன்*** பார்க்க. (பிங்.); see *uruvilāḷaṉ.* (செ.அக.).

[உருவு + இலி.]

உருவிழ-த்தல் *uruviḻa-,* 2. செ.குன்றாவி. (v.i.) ***வடிவமிழ-த்தல்*** பார்க்க; see *vaḍivamiḻa-.*

[உருவு + இழ.]

உருவு[1]-தல் *uruvu-*, 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***உறைகழித் தல்;*** to unsheath, as a sword. "வாளுரீஇ யினானே" (*சீவக.* 2247). 2. ***கையாற் பொருள் வரும்படி உருவு தல்;*** to strip, as beads from a string, as leaves from a twig, "அடகுரீஇ" (*சீவக.* 2625). 3. ***சுளுக்கு முதலிய வற்றைப் போக்கத் தடவுதல்;*** to massage, draw the hand down over a sprained part of the body. 4. ***கயிற்றுச் சுருக்கை யுருவுதல்;*** to loosen or tighten a noose. 5. ***ஊடுருவிச்செல்லுதல்;*** to pierce through, penetrate, as an arrow, a needle, "உலக மூடுருவுஞ் செம்பெருமா னே" (திருவாச. 28.2).

ம. உருவுக; க. ஒரெ; தெ. ஒரி (பறித்தல்).

[உல் → உரு → உருவு.]

உருவு[2]-தல் *uruvu-*, 7. செ.கு.வி. (v.i.) 1. ***தப்பித்துக் கொள்ளுதல்;*** to escape, to give the slip. பையன் உருவிவிட்டான். 2. ***துளைத்தல்*** (ஆ.அக.); to pierce. (செ.அக.).

உருவு[3] *uruvu*, பெ. (n.) ***உருவம்*** பார்க்க; see *uruvam.* "உருவு நுகர்ச்சி... யைங்கந்த மாவன" (மணிமே. 30,189) (செ.அக.).

ம. உருவு.

[உரு → உருவு.]

உருவுகயிறு *uruvu-kayiru*, பெ. (n.) ***மாடு கட்டுங் கயிறு;*** stall rope for tying an ox. (செ.அக.).

[உரு → உருவு + கயிறு.]

உருவுகை *uruvugai*, பெ. (n.) ***சுளுக்குப் பாய்ந்த விடத்தை விரல்களினாலமுத்தி மெதுவாய் உருவுதல்;*** a gentle movement of the affected part by someone else pressing with the fingers and drawing the hand down a number of times, passive movement. (சா.அக.).

[உருவு → உருவுகை (உருவுதல்).]

உருவுசுருக்கு *uruvu-śurukku*, பெ. (n.) ***முடிச்சு*** (அக.நி.); slip-knot, noose. (செ.அக.).

[உரு → உருவு + சுருக்கு.]

உருவுடம்பு *uru-v-udambu*, பெ. (n.) ***கண்ணுக்குப் புலனாகும் உடம்பு;*** physical (matter) body.

[உரு + உடம்பு.]

உருவுதடம் *uruvu-tadam*, பெ. (n.) ***உருவுசுருக்கு*** பார்க்க; see *uruvu-śurukku.* (செ.அக.).

[உரு → உருவு + தடம்.]

உருவுதிரை *uruvu-tirai*, பெ. (n.) ***திரைவகை*** (*சீவக.* 2471, உரை); stage curtain. (செ.அக.).

[உரு → உருவு + திரை.]

உருவுபற்றல் *uruvu-parral*, பெ. (n.) ***கருப்பையிலுள்ள பிண்டத்துக்கு உறுப்புகள் உண்டாதல்;*** formation of organs in a foetus in the womb; development of the product of conception, gestation (சா.அக.).

[உருவு + பற்றல்.]

உருவுவமம் *uru-v-uvamam*, பெ. (n.) ***வண்ணம் பற்றி வரும் ஒப்புமை*** (தொல். பொருள். 276, உரை); (poet) comparison based on colour, as in gold like body. பொன்மேனி. (செ.அக.).

[உருவு + உவமம்.]

உருவுள்ளு *uruvullu*, பெ. (n.) ***கொள்;*** horsegram.

க. உருளி, உள்ளி; தெ. உறுவுறு, உறுவுளு.

[உரு + உள்ளு. உருளி → உள்ளி → உள்ளு. உருளி என்னும் தமிழ்ச்சொல்லும் உள்ளி என்னும் திரிபும் சேர்ந்து தெலுங்கில் பெற்ற வடிவம் உருவுள்ளி. இது விலக்கத்தக்கது.]

உருவெடு-த்தல் *uruvedu-*, 4. செ.கு.வி. (v.i.) ***வடிவ மெடுத்தல்;*** to take a body, as a soul; assume a form, as a deity, to represent a character, as in a drama. (செ.அக.).

[உரு + எடு.]

உருவெடுத்தல் *uruveduttal*, பெ. (n.) ***திரு உருவத்தை ஊர்வலமாகக் கொண்டு வருதல்;*** taking out an idol or image in procession (சேரநா.).

ம. உருவெடுப்பு.

[உரு + எடுத்தல்.]

உருவெடுப்பு *uruveduppu*, பெ. (n.) 1. ***நேர்ச்சிக்கடன் செலுத்தற் பொருட்டுச் சுடுமண் உருவம் செய்தல்;*** to fulfill a vow making clay images. 2. ***குறித்த உருவில் அல்லது வடிவில் பதுமை செய்தல்;*** making image in particular shape. 3. ***குறித்த வடிவமுடைய உயிராய்ப் பிறப்பெடுத்தல்;*** incarnation.

[உருவு + எடுப்பு.]

உருவெழுத்து *uru-v-eluttu*, பெ. (n.) ***வரிவடிவுள்ள எழுத்து*** (யாப். வி.535); letters of an alphabet, as having forms.

[உரு + எழுத்து.]

உருவெளி *uruveli*, பெ. (n.) ***உருவெளித்தோற்றம்*** பார்க்க; see *uruvelittorram.* "உருவெளி யருகு தோன்ற வுற்றன னிறைவ னென்னா" (தணிகைப்பு. வள்ளி. 245). (செ.அக.).

[உரு + வெளி.]

உருவெளிக்காட்சி *uruveli-k-kātci*, பெ. (n.) ***உருவெளித் தோற்றம்*** பார்க்க; see *uruveli-t-torram.* (செ.அக.).

[உரு + வெளி + காட்சி.]

உருவெளித்தோற்றம் *uru-velittorram*, பெ. (n.) ***இடை விடா நினைப்பினால் தான் விரும்பியது எதிரிலுள்ளது போலத் தோன்றும் போலித் தோற்றம்;*** imaginary appearance of a person or thing, visionary object, hallucination usu. applied, to the supposed sight of absent lovers. (செ.அக.).

[உரு + வெளி + தோற்றம்.]

உருவெளிப்பாடு *uru-veḷi-p-pāḍu,* பெ. (n.) ***உருவெளித் தோற்றம்*** பார்க்க; see *uruveḷittoṟṟam.* (செ.அக.).

[உரு + வெளி + பாடு.]

உருவெளி மயக்கம் *uru-veḷi-mayakkam,* பெ. (n.) ***உடம்பின் நரம்புகளின் ஆற்றல் குறைவால் பல வகையான உருவங்கள் புலனுக்குத் தோன்றல்;*** disease due to nervous weakness, in which a variety of strange images float before the mind. (சா.அக.).

[உரு + வெளி + மயக்கம்.]

உருவேற்று-தல் *uruvēṟu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***மந்திரத்தைப் பலமுறை உருவேற்றுதல்;*** to repeat mantras. "எட்டெழுத்தாலுரு வேற்றலார்" (சேதுபு. சேது பல. 114). 2. ***நெட்டுருப் பண்ணுதல்;*** to repeat or rehearse a lesson frequently in order to learn it by heart. 3. ***ஆத்திரமேற்றுதல்;*** to cause a spirit to possess some one for uttering oracles or for ascertaining future events. (W.). 4. ***முறையற்ற தீயறிவூட்டுதல்;*** to give evil advice, usu. taking the form of a persuasive talk. (colloq.). (செ.அக.).

[உரு + ஏற்று.]

உருவேறு-தல் *uru-vēṟu-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***மந்திரவுரு அதிகமாதல்;*** to increase in number as repetition of mantras. 'உருவேறத் திருவேறும்'. 2. ***வெறி யுணர்வு மிகுதிப்படல்;*** to be possessed by a spirit for the utterance of oracles. (W.) 3. ***கடுஞ்சீற்றம் கொள்ளுதல்*** (மூர்க்கமிகுதல்); to become furious. (W.) 4. ***நிலை தளர்தல்;*** to fall into a fit. (செ.அக.).

[உரு + ஏறு.]

உருவை *uruvai,* பெ. (n.) 1. ***சூரை*** (மலை.); oblique leaved jujube. 2. ***முள்ளி;*** Indian night shade. (செ.அக.).

[உரு → உருவை.]

உருவொளி *uru-voḷi,* பெ. (n.) ***கண்ணாடி முதலியவற்றில் காணும் நிழல்;*** mirror images etc.

[உரு + ஒளி.]

உருவோட்டம் *uru-vōṭṭam,* பெ. (n.) ***கப்பலோட்டம்;*** sailing. (சேரநா.).

ம. உருவோட்டம்.

[உரு + ஓட்டம்.]

உருள்[1](ளு)-தல் *uruḷ-,* 16. செ.கு.வி. (v.i.) 1. ***தொடர்ந்து புரளுதல்;*** to turn about, as dice; to roll, tumble over and over, revolve on a plane, as a wheel; to spin, whirl round, as discus. "திண்வரை யுருள் கிலேன்" (திருவாச. 539). 2. ***உருண்டு திரளுதல்;*** to become round, to grow globular. அரத்தக் கட்டியுருண்டு வருகிறது. 3. ***அழிதல்;*** to perish, die, as in battle or by an epidemic, to become extinct. "உலகெலா முருளுமின்றென" (சீவக. 2452). 4. ***செல்லுதல்;*** to go, proceed. "நூல்வழி யுருள்விலா மனத்தவர்க்கு" (சூளா. முத்தி 13). 5. (சக்கரம்) ***உருண்டு செல்லுதல்;*** to roll on. "உருள் பெருந்தேர்க்கு அச்சாணி யன்னா ருடைத்து" (குறள். 66).

ம. உருள்; க. உருள், உருளி, உருளு; கு. உரிட்; து. உருளு; தெ. உரலு; குவி., பட. உருளு; *E* roll; *OF.* rolle; *D.* rotulus.

[உல் → உரு → உருள்.]

உருள்[2] *uruḷ,* பெ. (n.) 1. ***தேர்ச்சக்கரம்;*** car wheel. "உருள் பூந்தண்டார்" (திருமுரு. 11). 2. ***வண்டி*** (திவா.); wheeled vehicle, cart. 3. ***நாண்மீன்*** (உரோகிணி); the fourth nakṣatra. 4. ***வட்டம்;*** circle (ஆ.அக.) 5. ***கவறு*** (சூதாட்டம்); gambling. (செ.அக.).

[உரு → உருள்.]

உருள்வண்டு *uruḷ-vaṇḍu,* பெ. (n.) ***பீவண்டு;*** dung beetle, scarab. "உருள் வண்டினந் துர்மலத்தை நாடும்" (குமரேச.சத. 83). (செ.அக.).

[உருள் + வண்டு.]

உருளரிசி *uruḷ-arisi,* பெ. (n.) ***உருண்டையான கொத்து மல்லி*** (திவா.); coriander seed. (செ.அக.).

[உருள் + அரிசி.]

உருளாயம் *uruḷ-āyam,* பெ. (n.) ***கவறாட்டத்தால் வரும் ஆதாயம்;*** gains from playing dice. "உருளாய மோவாது கூறின்" (குறள், 933). (செ.அக.).

[உருள் + ஆயம்.]

உருளி *uruḷi,* பெ. (n.) 1. ***உருளை;*** wheel of a vehicle. "வல்வா யுருளி கதுமென மண்ட" (பதிற்றுப். 27,11). 2. ***வட்டம்;*** circle. "உருளிமாமதி" (சீவக. 532). 3. ***எலும்புப் பொருத்து;*** ball and socket joint, enarthrosis. 4. ***ஒருவகை வெண்கல ஏனம்;*** small vessel of bell-metal that is circular in shape 5. ***திரிகையின் மேற்கல்;*** upper mill stone, as the one that turns on the lower stationary one. 6. ***கொள்; காணம்;*** horsegram. (செ.அக.).

ம. உருளி; க., து. உருளி.

[உருள் → உருளி.]

உருளிபுரள்(ளு)-தல் *uruḷi-puraḷ-,* 6. செ.கு.வி. (v.i.) ***எலும்புப் பொருத்து விலகுதல்;*** to be dislocated, as a joint. (செ.அக.).

[உருளி + புரள்-தல்.]

உருளிபெயர்-தல் *uruḷi-peyar-,* 4. செ.கு.வி. (v.i.) ***உருளிபுரள்-தல்*** பார்க்க; see *uruḷi-puraḷ.*

[உருளி + பெயர்.]

உருளை[1] *uruḷai,* பெ. (n.) 1. ***சக்கரம்;*** wheel of a vehicle. "சகடிரு சக்கர வுருளைக ளுய்க்கவே" (பாரத. வேத்திர. 50). 2. ***உருண்டை;*** anything that rolls or turns, as a ball or a wheel. 3. ***உருளைக்கிழங்கு;*** potato.

ம. உருள; க. உரளி; தெ. உர்ளி; கோத. உண்டாய்; கோண். உள்தா; பட. உண்டெ; *L.* rota, wheel.

[உருள் → உருளை.]

உருளை[2] *uruḷai,* பெ. (n.) 1. ***வைரவகை;*** (S.I.I.ii, 78); a kind of diamond. 2. ***பிட்டம்;*** hip-joint of a bull. 3. ***முட்டை*** (வை.மூ.); egg. 4. ***வெள்ளை நஞ்சு*** (பாடாணம்) (வை.மூ.); white oxide of arsenic. (செ.அக.).

[உருள் → உருளை.]

உருளைக்கல் *uruḷai-k-kal,* பெ. (n.) ***பரற்கல்;*** pebble.

[உருளை + கல்.]

உருளைக்கிழங்கு *uruḷai-k-kiḷaṅgu,* பெ. (n.) 1. ***கிழங்கு வகை;*** potato, tuber of solanum tuberosum. 2. ***செடிவகை;*** potato-plant.

[உருளை + கிழங்கு.]

உருளைப்பிரண்டை *uruḷai-piranḍai,* பெ. (n.) ***கோப் பிரண்டை;*** a long round and smooth creeper of vitis. (zenus.). (சா.அக.).

[உருளை + பிரண்டை.]

உரை[1]**-தல்** *urai-,* 3. செ.கு.வி. (v.i.) 1. ***தேய்தல்;*** to be reduced in to a powder or paste; to wear away by attrition; to be indented or effaced by rubbing. (W.) 2. ***வீணாதல்;*** to prove abortive. (W.) காரிய மெல்லா முரைந்து போயிற்று.

க. ஒரெ; ம. உர; தெ. ஒரயு.

[உல் → உல் → உர → உரை.]

உரை[2]**-த்தல்** *urai-,* 3. செ.குன்றாவி. (v.t.) 1. ***தேய்த்தல்;*** to rub in to a paste, wear away by rubbing, grate. "வெண்ணெ யுரைஇ விரித்த கதுப்போடே" (கலித். 115). 2. ***மருந்திழைத்தல்;*** to rub in to a nice powder, or paste to levigate or titrate. 3. ***மாற்றறியத் தேய்த்தல்*** (திவ். பெரியாழ். 5,4,5); to test to the touchstone, as valuable metals like gold. 4. ***பூசுதல்;*** to smear, daub. "உரைக்கு நானமும்" (சீவக. 831) 5. ***மெருகிடுதல்;*** to polish. "ஒடவைத்துரைத்த" (ஈடு 3,1,2). (செ.அக.).

தெ ஒரச்சு; க. ஒரே; ம. உர; து. உரெ.

[உர → உரை-த்தல்.]

உரை[3]**-த்தல்** *urai-,* 3. செ.குன்றாவி. (v.t.) 1. ***சொல்லு தல்;*** to tell, speak. 2. ***ஒலித்தல்;*** to sound.

ம. உர; க. ஒரே.

[உர → உரை.]

உரை[4] *urai,* பெ. (n.) 1. ***தேய்வு*** (குடா.); rubbing, friction, attrition. 2. ***துணிவு;*** courage. 3. ***உயர்ச்சி;*** excellence. (செ.அக.).

க. ஒரெ; ம. உர; தெ. ஒர.

[உர → உரை.]

உரை[5] *urai-,* பெ. (n.) 1. ***மாற்று;*** fineness of gold or silver as tested on the touchstone. "உரைகுறைபடாது" (அழகர்கல. 55). 2. ***பொன்*** (திவா.); gold. (செ.அக.).

[உர → உரை.]

உரை[6] *urai,* பெ. (n.) 1. ***உரைக்கை;*** speaking, utterance. "உரைமேற் கொண்டு" (திவ். இயற். 1,2,5). 2. ***சொல்*** (திவா.); word, expression, saying. 3. ***உரைவளம்;*** explanation, interpretation, commentary, exposition, gloss. "உரையாமோ நூலிற்கு நன்கு" (நாலடி. 319). 4. ***எழுத்தொலி*** (பிங்.); sound of a letter. 5. ***புகழ்;*** fame, reputation. "உரைசால் பத்தினிக்கு" (சிலப்.பதி. 56). 6. ***மறைமொழி அளவை*** (ஆகமப் பிரமாணம்) (சி.சி. அளவை, 1); sacred writings, holy writ. 7. ***முழக்கம்;*** roar, loud noise. "குன்றங் குமுறியவுரை" (பரிபா. 8.35). 8. ***பிறருக்குக் கேட்கும்படி சொல்லும் மந்திர முறை*** (சைவச. பொது. 151); mantra recited aloud.

ம. உர; க. ஒரெ; குட. ஒரட்; தெ. ஒர, வெதெ; பர். உர் (முனகுதல்.); கோண். ரொன்சானா (அழைத்தல்.); *L.* oris, the mouth, oro, to speak; *E* oral, oration, oracle etc.

[உல் → உர → உரை.]

உரைக்கிழத்தி *urai-k-kiḷatti,* பெ. (n.) ***கலைமகள்*** (திருக்காளத்.பு.பதி.3); Sarasvati, the deity over speech, the goddess of learning. (செ.அக.).

[உரை + கிழத்தி.]

உரைக்கோள் *urai-k-kōḷ,* பெ. (n.) ***உரையாசிரியனின் கருத்து;*** interpretation given to the text by a commentator. (W.) (செ.அக.).

[உரை[6] + கோள்.]

உரைகட்டு-தல் *uraikaṭṭu-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***உரை செய்தல்;*** to comment on a work. (W.) (செ.அக.).

[உரை[6] + கட்டு.]

உரைகல் *urai-kal,* பெ. (n.) 1. ***பொன், வெள்ளி யுரைக்கும் கல்;*** touchstone, used in testing the particular quality of the fineness of precious metals. "பொன்னைக் கொண்டுரைகல் மீதே" (திவ். பெரியாழ். 5,4,5) 2. ***மருந்துரைக்குஞ் சிறுகல்;*** small stone for rubbing pills and other forms of medicine into powder. (செ.அக.).

ம. உரகல்லு; க., து. ஒரெகல்; தெ. ஒரெகல்லு; கொலா., நா. ரொகல்.

[உரை[5] + கல்.]



உரைகல்

உரைகலங்கு-தல் *uraikalaṅgu-*, 15. செ.கு.வி. (v.i.) ***பேச்சுத்தடுமாறுதல்;*** to be confused in speech. "சிந்தை தூயோனுரை கலங்க" (பாரத. புட்ப.20).

[உரை[6] + கலங்கு.]

உரைகாரன் *urai-kāraṉ*, பெ. (n.) ***உரையாசிரியன்*** (நன். 51); commentator. (செ.அக.).

[உரை[6] + காரன்.]

உரைகோள் *uraikōḷ*, பெ. (n.) ***நூலுக்குச் செய்யும் உரையில் சொல்லப்படுவன;*** the contents, description in a commentary.

[உரை + கோள்.]

உரைகோளாளன் *urai-kōḷāḷaṉ*, பெ. (n.) ***சொல்லும் உரையை எளிதிலறிய வல்லவன்;*** he who can easily grasp what is taught. "உரை கோளாளற் குரைப்பது நூலே". (நன். 37). (செ.அக.).

[உரை[6] + கோள் + ஆளன்.]

உரைச்சூத்திரம் *urai-c-cūttiram*, பெ. (n.) ***உரைநூற்பா*** பார்க்க; see *urai-nūṟpā.*

[உரை[6] + சூத்திரம்.]

Skt. Sūtra > த. சூத்திரம்.

உரைச்செய்யுள் *urai-c-ceyyuḷ*, பெ. (n.) ***கட்டுரை;*** prose composition. "வார்த்திகப் பொழிப்பென்பது உரைச் செய் யுளானும் பாச்செய்யுளானுஞ் செய்யப்படும்" (சி.போ. பா.) (செ.அக.).

[உரை[6] + செய்யுள்.]

உரைசல் *uraisal*, பெ. (n.) ***உராய்கை;*** rubbing against, friction. (செ.அக.).

ம. உரசல்.

[உரை[1] → உரைதல் → உரைசல்.]

உரைசு[1]-தல் *uraisu-*, 5. செ.கு.வி. (v.i.) 1. ***உரிஞ்சுதல்;*** to rub against, as a post; to chafe. 2. ***தேய்தல்;*** to wear away by use, as a seat, as one's feet by walking.

[உரை[6] → உரைசு.]

உரைசு[2]-தல் *uraisu-*, 5. செ.குன்றாவி. (v.t.) ***தேய்த்தல்;*** to rub hard, scour, scrape, scratch as with the head of a nail, clean off or waste away by rubbing. (செ.அக.).

ம. உரசுக; க. ஒரசு; தெ. ஒரசு.

[உரை → உரைத்து → உரைச்சு → உரைசு. ஒ. நோ. உரை[1].]

உரைசெய்[1]-தல் *urai-šey-*, 1. செ.குன்றாவி. (v.t.) ***சொல்லுதல்;*** to speak, talk. "இருந்தவாற்றை யுரை செய்தான்" (திருவாய். நூற்.99). (செ.அக.).

ம. உரசெய்யுக.

[உரை[6] + செய்.]

உரைசெய்[3]-தல் *urai-šey-*, 1. செ.கு.வி. (v.i.) ***உரை*** (விளக்கவுரை) ***செய்தல்;*** to write a commentary.

[உரை[6] + செய்.]

உரைசொல்லல் *urai-šollal*, பெ. (n.) ***இறந்தார் முன்பு மாரடித்துக் கொண்டு பெண்கள் புலம்பிக் கற்பனையா கப் பாட்டுச் சொல்லுதல்;*** mournful singing by the females lamenting at the funeral with rhythmic breast beating for the departed soul;. (சா.அக.).

[உரை[6] + சொல்லல்.]

உரைஞ்சு-தல் *uraiñju-*, 5. செ.குன்றாவி. (v.t.) ***உரைசு தல்;*** to rub. ஆனையு மானையு முதுகுரைஞ்ச இடையி லிருந்து கொசுகு நசுங்குகிறது. (செ.அக.).

[உரை → உரைந்து → உரைஞ்சு.]

உரைத்தாமென்றல் *uraittām-eṉṟal*, பெ. (n.) ***ஓர் உத்தி*** (நன். 14.); (Gram.) drawing attention to a subject that has already been explained, one of 32 utti. (செ.அக.).

[உரை[6] → உரைத்தாம் + என்றல்.]

உரைத்துமென்றல் *uraittum-eṉṟal*, பெ. (n.) ***ஓர் உத்தி*** (நன். 14.); (Gram) hint thrown out to suggest that the explanation of an item may be looked for in a subsequent place, one of 32 utti. (செ.அக.).

[உரைத்தும் + என்றல்.]

உரைநடை *urai-naḍai*, பெ. (n.) ***யாப்பமைதிக்குட்படாது இயல்பாக அமையும் எழுத்து நடை;*** prose style. (செ.அக.).

[உரை[6] + நடை.]

உரைநயம் *urai-nayam*, பெ. (n.) ***உரையின் இனிமை;*** excellence of the exposition on a work. (செ.அக.).

[உரை[6] + நயம்.]

உரைநூல் *urai-nūl*, பெ. (n.) 1. ***உரையாகிய நூல்;*** commentary, as a recognized work possessing literary merit and forming part of literature. 2. ***உரைபெற்ற நூல்;*** a work on which a commentary has been written. (W.) (செ.அக.).

[உரை[6] + நூல்.]

உரைநூற்பா *urai-nūrpā,* பெ. (n.) ***உரையிடையே உரைகாரரியற்றிய யாப்புப் பாவகை*** (இலக். கொத். 25); aphoristic rule composed by the commentator in the course of his commentary on a work in order to furnish additional information.

[உரை[5] + நூற்பா.]

உரைப்பாட்டு *urai-p-pāttu,* பெ. (n.) ***கட்டுரைநடை*** (சிலப். பதி.60, உரை); rhetorical prose. (செ.அக.).

[உரை[5] + பாட்டு.]

உரைப்பு *uraippu,* பெ. (n.) 1. ***தேய்ப்பு;*** rubbing. 2. ***மாற்றறிய உரைக்கை;*** assaying, testing the quality of fineness of precious metals. (செ்.அக.).

[உரை[5] → உரைப்பு.]

உரைப்பொருள் *urai-p-porul,* பெ. (n.) 1. ***உரைக்கப் படும் பொருள்;*** core subject or content of the text. "மணிமேகலைமேல் உரைப்பொருள் முற்றிய" (சிலப்.27-55). 2. ***விரித்துரைக்கும் மெய்யுரை*** (திவா.); commentary which seeks to give the real meaning of the text. (செ.அக.).

[உரை[5] + பொருள்.]

உரைபாடம் *urai-pādam,* பெ. (n.) ***மூலமும் உரையும்*** (வின்.); text with commentary. (செ.அக.).

[உரை[5] + பாடம்.]

உரைபெறுகட்டுரை *uraiperu-katturai,* பெ. (n.) ***காப்பி யங்களில் உரைநடையி லமைந்த தொடர்*** (சிலப்.); rhetorical prose, in an epic poem. (செ.அக.).

[உரை[5] + பெறு + கட்டுரை.]

உரைமானம் *uraimānam,* பெ. (n.) ***தேய்ப்பு;*** rubbing. (செ.அக.).

ம. உரமானம்.

[உரை[1] + மானம். 'மானம்' சொல்லாக்க ஈறு.]

உரைமுடிவு *urai-mudivu,* பெ. (n.) ***நயனீடு, முறை வழங்குதற்கான தீர்வுரை;*** decision arrived at after hearing both parties to a suit; considered judgment. "உரைமுடிவு காணா ளிளமையோன்" (பழ. 6). (செ.அக.).

[உரை[5] + முடிவு.]

உரைமெழுகு *urai-melugu,* பெ. (n.) ***உரைத்த பொன் வெள்ளிகளை ஒற்றும் மெழுகு;*** darkish kind of wax, used by goldsmiths as well as by assayers in cash bazaars to take up the dust falling from precious metals that are tested on the touchstone. (செ.அக.).

[உரை[5] + மெழுகு.]

உரையசை *urai-y-asai-,* பெ. (n.) ***தன்னாற்றலைப் பெரும்பான்மையுமிழந்து சிறிது பொருளுணர்த்தி வரும் இடைச்சொல்*** (தொல். சொல். 279, உரை.); word which has lost much of its original signification and is almost an expletive as 'ஆங்க'. (செ.அக.).

[உரை[5] + அசை.]

உரையசைக்கிளவி *urai-y-asai-k-kilavi,* பெ. (n.) ***ஒருவனை எதிர்முகமாக்குஞ் சொல்*** (தொல். எழுத். 34); word used in inviting attention, as கேள், i.e. listen in கேண்மியா. (செ.அக.).

[உரை[5] + அசை + கிளவி.]

உரையல் *uraiyal,* பெ. (n.) ***சொல்லுகை;*** narrating, relating. "களவின் றலையிட் டுரையல்" (கலித். 92,57). (செ.அக.).

ம. உரயபு.

[உரை[5] + அல்.]

உரையளவை *urai-y-alavai,* பெ. (n.) ***முறைமை அளவை*** (ஆகமப் பிரமாணம்) (சி. சி. அளவை, 2.சிவஞா.); proof from the sāstrās. (செ.அக.).

[உரை + அளவை.]

உரையறிகருவி *urai-y-ari-karuvi,* பெ. (n.) 1. ***உரைகல்*** (திவா.); touch stone. 2. ***மாற்றறிவிக்கும் ஆணி;*** touch needle. (W.) (செ.அக.).

[உரை[5] + அறி + கருவி.]

உரையன் *uraiyan,* பெ. (n.) ***'செப்பினஞ் செலினே' எனும் குறுந்தொகைப் பாவைப் பாடிய சங்க மருவிய தமிழ்ப் புலவருள் ஒருவர்;*** a poet of later Sangam age.

[உரை[5] + அன்.]

உரையனுமானம் *urai-y-anumānam,* பெ. (n.) ***உரை யுய்த்துணர்வு*** பார்க்க; see *urai-y-uyttunarvu.*

உரையாசிரியர் *urai-y-āsiriyar,* பெ. (n.) 1. ***உரையாசிரி யன்*** பார்க்க; see *urai-y-āsiriyan.* 2. ***இளம்பூரணர்;*** Ilampūranar the first commentator of Tolkāppiyam. "உரையா சிரியரும்... விரிப்புழி" (தொல். சொல். 2. சேனா.).

[உரை[5] + ஆசிரியர்.]

உரையாசிரியன் *urai-y-āsiriyan,* பெ. (n.) ***உரைகாரன்*** (இலக். கொத்.6); comentator. (செ.அக.).

[உரை[5] + ஆசிரியன்.]

உரையாடு-தல் *urai-y-ādu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***சொல்லுதல்;*** to say, tell. "பணிந்த சொல்லுரை யாடினன்" (பிரபுலிங். இட்டலிங். 42). 2. ***கலந்து பேசுதல்;*** to converse. (செ.அக.).

[உரை[3] + ஆடு.]

உரையாணி *urai-y-āni,* பெ. (n.) ***மாற்றறிவிக்கும் ஆணி;*** touch-needle. "சிவஞானசித்தி சிவாகமார்த்தங்களுக் கெல்லாம் உரையாணி" (சிவசம. 33). (செ.அக.).

[உரை[5] + ஆணி.]

உரையிடு-தல் *urai-y-iḍu-*, 20. செ.கு.வி. (v.i.) 1. ***நூற்கு உரை செய்தல்;*** to annotate. 2. ***சொற்போர் செய்தல்;*** to enter into controversy, to debate. "ஒருவர்க் கொருவ ருரையிடு மவ்வோலை" (தெய்வச். விறலிவிடு. 99).

[உரை[6] + இடு.]

உரையிலக்கணம் *urai-y-ilakkaṇam*, பெ. (n.) ***பாடம், கருத்து, சொல்வகை, சொற்பொருள் தொகுத்துரை,*** (உதாரணம்), ***வினா, விடை, சிறப்பு*** (விசேடம்), ***விரிவு, அதிகாரம், துணிவு, பயன் ஆகியவை ஆசிரிய உரை*** (வசனம்) ***க்கு வேண்டுமிலக்கணம்;*** the contents of commentary.

[உரை[6] + இலக்கணம்.]

உரையிற்கொள்(ளு)-தல் *uraiyiṟ-koḷ(ḷu)-*, 10. செ. குன்றாவி. (v.t.) ***மூலத்திற் சொல்லப்படாததை உரை யிற் சேர்த்துக் கொள்ளுதல்*** (மாறன. 275, உரை.); to make additional statements in a commentary about a subject mentioned in the text. (செ.அக.).

[உரை[6] + இல் + கொள்.]

உரையிற்கோடல் *uraiyiṟ-kōḍal*, பெ. (n.) ***மூலத்திற் சொல்லாதவற்றையும் உரையிற் கொள்ளும் ஒரு நூலுத்தி*** (இறை. 27, உரை.); an accepted canon of exegesis which permits of addtions being made to the subject-matter of a text by the commentator in the course of his exposition, one of 32 utti. (செ.அக.).

[உரை[6] + இல் + கோடல்.]

உரையுய்த்துணர்வு *urai-y-uyttuṇarvu*, பெ. (n.) ***நூலிற் சொல்லியது கொண்டு, சொல்லாததையும் ஒப்புமை பற்றியறியும் உய்த்துணர்வு*** (சி.சி. அளவை, 12. சிவஞா.); inference by analogy of things that are not specifically mentioned in the sāstrās from those that are mentioned there in.

[உரை[6] + உய்த்துணர்வு.]

உரையுரைத்தல் *urai-y-uraittal*, தொ.பெ. (vbl.n.) 1. ***பயனுரைத்தல், மெய்யுரைத்தல், பிரித்துரைத்தல் அன்றியும் பதவுரையுரைத்தலின் பெயர்;*** name of the branches of the commentary. 2. ***பொழிப்புத்திரட்டல்;*** compiling the commentary description.

[உரை[3] + உரைத்தல்.]

உரையேடு *uraiyēḍu*, பெ. (n.) ***உரைபாடம்*** பார்க்க; (W.); see *urai-pāḍam*.

[உரை[6] + ஏடு.]

உரைவன்மை *urai-vaṉmai*, பெ. (n.) ***பேச்சுவன்மை;*** eloquence, oratorical power.

[உரை[6] + வன்மை.]

உல்[1] *ul*, பெ. (n.) ***முன்மை;*** frontness.

[ஊ → உ → உல்.]

உல்[2] *ul*, 14. செ.கு.வி. (v.i.) 1. ***முன்னுறுதல்; முற்படுதல்;*** to move forward, go forward. 2. ***மேற் செல்லுதல்; உயர்தல்;*** to go up. 3. ***விரைதல்;*** to go fast, hasten. 4. ***மிகுதிப்படுதல்;*** to become excess.

[ஊ → உ → உல்.]

உல்[3] *ul*, 14. செ.கு.வி. (v.i.) 1. ***தோன்றுதல்;*** to originate, appear. உல்லரி (தளிர்), உரு (உருவம்). 2. ***முளைத்தல்;*** to sprout. 3. ***மென்மைப்படுதல்;*** to become thin. 4. ***பெரிதாதல்;*** to grow big.

[ஊ → உ → உல்.]

உல்[4] *ul*, 14. செ.கு.வி. (v.i.) 1. ***நெருங்குதல்;*** to go near, approach. 2. ***தொடுதல்;*** to touch. 3. ***உராய்தல்;*** to rub. 4. ***வலிதாதல்;*** to become strong.

[ஊ → உ → உல்.]

உல்[5] *ul*, 14. செ.கு.வி. (v.i.) 1. ***எரிதல்;*** to burn. 2. ***வருந்துதல்; துன்பப்படுதல்;*** to feel extreme pain or agony.

[ஊ → உ → உல்.]

உல்[6] *ul*, 14. செ.கு.வி. (v.i.) 1. ***உள்ளொடுங்குதல்.*** to become lean, emaciate. 2. ***காய்தல்;*** to dry. 3. ***சிறிதாதல்;*** to become small in size. 4. ***கீழிறங்குதல்;*** to get down 5. ***கீழே தங்குதல்;*** to set beneath. 6. ***உள்ளடங்குதல்.*** to be inside.

[ஊ → உ → உல்.]

உல்[7] *ul*, 14. செ.கு.வி. (v.i.) 1. ***வளைதல்;*** to bend. 2. ***சுற்றுதல்; உலாவுதல்;*** to go round. 3. ***சுற்றி வருதல்; வட்டமாகச் சுழலல்;*** to rotate.

[ஊ → உ → உல்.]

உல்[8] *ul*, 9. செ.குன்றாவி. (v.t.) 1. ***குத்துதல்;*** to pierce. 2. ***துளைத்தல்;*** to make hole. 3. ***அழித்தல்; கெடுத்தல்;*** to decay, ruin.

[ஊ → உ → உல்.]

உல்[9] *ul*, 14. செ.கு.வி. (v.i.) 1. ***ஊடுருவுதல்;*** to penetrate. 2. ***ஊடுருவிவெளிப்படுதல்;*** to penetrate and come out otherside.

[ஊ → உ → உல்.]

உல்[10] *ul*, பெ. (n.) 1. ***தேங்காயுரிக்கும் கருவி;*** sharp stick or iron to peel coconuts. 2. ***கழு;*** impaling stake.

[உ → உல் (குத்தல் கருத்து.) உல் = குத்தியுரிக்கும் கருவி.]

உல்[11] *ul*, பெ. (n.) 1. ***குத்தியெடுப்பதற்குப் பயன்பட்ட பழங்காலக் கற்கோடரி;*** hand-axe of stone. 2. ***கல்;*** stone.

[உ → உல்.]

உல்கு[1] *ulgu*, பெ. (n.) ***சுங்கவிறை;*** toll, custom, duty. "உறுபொருளு முல்குபொருளும்" (குறள், 756).

[உல் = பொருந்துதல், செறிதல், கொடுத்தல். உல் → உல்கு.]

உல்குசெய்-தல் *ulgu-sey-,* 4. செ.கு.வி. (v.i.) ***சுங்கங் கொள்ளுதல்*** (பட்டினப். 125); to levy a duty.

[உல்கு + செய்.]

உல்கூட்டுஞ்சரக்கு *ulkūṭṭuñcarakku,* பெ. (n.) ***சுங்கந் தரும் பண்டம்*** (T.A.S.ii, 82.); merchandise from which customs are derived. (செ.அக.).

[உல்கு + ஊட்டும் + சரக்கு.]

உல்லங் கருவாடு *ullaṅ-karuvāḍu,* பெ. (n.) ***காயவைத்துப் பதப்படுத்திய உல்லமீன்;*** the salted sable fish. (சா.அக.).

[உல்லம் + கருவாடு.]

உல்லடைப்பு *ulalḍaippu,* பெ. (n.) ***மரத்தால் ஆற்றுக்கு அணையிடுகை;*** damming a river with stockade (pond.). (செ.அக.).

[உல் + அடைப்பு.]

உல்லம் *ullam,* பெ. (n.) 1. ***மீன்வகை;*** hilsa, silvery-shot with gold and purple clupea ilisha. 2. ***கடல் மீன்வகை;*** sea-fish, silvery shot with yellow and purple, clupea toli. 3. ***வாசற்கால்;*** frame of a door. (சேரநா.) (செ.அக.).

ம. உல்லம்; தெ. உல்லாகு.

[உல் → உல்லம்.]



உல்லம்

உல்லரி. *ullari,* பெ. (n.) ***தளிர்*** (அக.நி.); shoot bud.

ம. உல்லரி;

[உல்[3] → உல்லரி. உல்லரி > Skt. vallari.]

உல்லாகம் *ullāgam,* பெ. (n.) ***நோய்நீங்கி உடல்நலம் தேறுதல்;*** health and strength after disease or from sickness- convalescence. (சா.அக.).

[உல்லாயம் → உல்லாகம்.]

உல்லாசம் *ullāsam,* பெ. (n.) 1. ***உள்ளக்களிப்பு;*** mirth, gaiety. "உல்லாச நிராகுல" (கந்தரனு.2.). 2. ***அத்தவாளம்;*** shawl, upper garment. "உயர்ந்த தலைப்பாகை உல்லாச வல்லவட்டு சபையடக்கிப் பேசி வரும் சமத்தரோ உன் மாமன்" (நாட். பா.). 3. ***இறுமாப்பு;*** pride. (செ.அக.).

ம., து. ஒல்லி; க. ஒல்லி; தெ. ஒல்லெ, ஒல்லிய (an upper cloth).

[உல்லாத்தம் → உல்லாசம்.]

உல்லாடி *ullāḍi,* பெ. (n.) ***ஒல்லியான ஆள்*** (யாழ். அக.); thin, gaunt person.

ம. ஒல்லாடி.

[உல்[3] → உல்லி → உல்லாடி.]

உல்லாயம் *ullāyam,* பெ. (n.) ***நிரம்பா மென்மொழி*** (திவா.); babble, prattle, stammering; imperfect utterence, as of children, of birds. (செ.அக.).

[உல்லாத்தம் → உல்லாசம் → உல்லாயம்.]

உல்லி[1] *ulli,* பெ. (n.) 1. ***மெலிந்த ஆள்*** (யாழ்.அக.); thin person.

ம. ஒல்லி.

[உல்[3] → உல்லி.]

உல்லி[2] *ulli,* பெ. (n.) 1. ***வெங்காயப்பூ;*** onion flower. 2. ***தலை;*** head. (ஆ.அக.).

[உல் → உல்லி.]

உல்லி[3] *ulli,* பெ. (n.) ***மதில்.*** (அக.நி.); high wall, fort. (செ.அக.).

[உ → உல்[3] → உல்லி = உயரமானது.]

உல்லியக்கூலி *ulliya-k-kūli,* பெ. (n.) ***வரிவகை*** (S.I.I.ii. 252); ancient tax.

[உல்லியம் + கூலி.]

உல்லியநூல் *ulliya-nūl,* பெ. (n.) ***நீர்நிலைகளை உண்டாக்க நிலத்தை அகழ்வதற்குமுன் நிலத்தடி ஊற்றுக் கால்களைத் தெரிந்து கொள்ள உதவும் நூல்;*** the branch of science relating to the secrets of the nature of the soil to determine the springs or sources for purposes of digging out wells and tanks of water supply.

[உல்லியம் + நூல்.]

உல்லியம் *ulliyam,* பெ. (n.) 1. ***இறைகிணறு;*** well. (W.). 2. ***நிலத்தடியிலுள்ள ஊற்றுக்கால்களைத் தெரிந்து கொள்ளும் கலை;*** the art of finding out the sources of springs under the earth. (சா.அக.).

[உல் → உல்லியம் = கிணறு. உல் = குத்துதல்.]

உல்லியர் *ulliyar,* பெ. (n.) ***கூவநூலோர்*** (திவா.); persons reputed to be skilled in determining suitable places for digging wells. (செ.அக.).

[உல் → உல்லியர்.]

உல்லு *ullu,* பெ. (n.) ***கோட்டான்;*** rock horned owl.

Hindi, ullu; *E.* owl.

[உல் → உல்லு = மரத்தைப்பற்றிக் கொண்டிருப்பது.]

உல்லேற்று-தல் *ullēṟu-*, 5. செ.குன்றாவி. (v.t.) ***கழு வேற்றுதல்*** (யாழ்ப்.); to impale. (செ.அக.).

[உல் → உழு = கழுமுனை. உல் + ஏற்று-தல்.]

உல-த்தல் *ula-*, 3. செ.கு.வி. (v.i.) 1. ***குறைதல்;*** to become diminished; to be spent, wasted. "உலவாக் கோட்டை" (திருவாலவா. 50, 13). 2. ***அழிதல்;*** to be devoid of, to be ruined. "நட்புலந்தவரால்" (பாரத. நச்சு. 33). 3. ***சாதல்;*** to die, pass away. "உலந்தவன் றாரொடு பொங்கி" (பு.வெ. 10, சிறப்பிற்பொது. 4). 4. ***கழிதல்;*** to terminate, expire, "உலந்த பிறவியை.. காட்ட" (மணிமே. 25, 13.5). 5. ***நீங்குதல்;*** to leave, be away from. 6. ***முடிவு பெறுதல்;*** to be full, complete, perfect. "எங்குலக்க வோதுவனே" (திவ். திருவாய். 3. 1, 5). 7. ***எரிதல்;*** to glow. 8. ***காய்தல்;*** to wither.

ம. உலக்குக.

[உ → உல் → உல.]

உலக்கை[1] *ulakkai*, பெ. (n.) ***அழிவு;*** end, ruin, disaster, death. "பொருப் புலக்கையுற் றலமர வரிந்தவன்" (பாரத. பதினெட். 5). (ஆ.அக.).

[உல் → உல (குத்துதல், அழித்தல்) → உலக்கு → உலக்கை.]

உலக்கை[2] *ulakkai*, பெ. (n.) 1. ***இடிமரம்; கூலம் முதலியன குற்றும் உருண்டு நீண்ட கருவி;*** pestle. "மிளகெறி யுலக்கையின்" (பதிற்றுப். 41). 2. ***ஒரு படைக்கலம்;*** iron bar shaped like a pestle and used as a weapon in ancient warfare. "உலக்கை சூலம் வேல்" (கந்தபு. சதமுகன். 15). 3. ***முக்கோல்*** (பிங்.); 22nd nakṣatra.

ம. உலக்க; **க.** ஒலகெ, ஒனகெ, ஒனிகெ; **கோத.** எல்க்; **துப.** வல்க்; **குட.** ஒலகெ; **தெ.** ரோகலி; **கொலா.** ரொகால், ரோக; **நா.** ரோகல்; **கோண்.** ராகால்; **பட.** ஒணகெ.

[உல்[8] → உல → உலக்கு (குத்துதல், இடித்தல்.). → உலக்கை.]

உலக்கை[3] *ulakkai*, பெ. (n.) ***வெருகன் கிழங்கு*** (தைலவ. தைல. 84); bulbous root of the long - rooted arum. (செ.அக.).

[உல்[6] → உல → உலக்கை.]

உலக்கை[4] *ulakkai*, பெ. (n.) ***கடல்*** (அகநி.); sea. (செ.அக.).

[உல் → உல → (எழுதல், பொங்குதல்.) → உலக்கை.]

உலக்கைக்கணை *ulakkai-k-kaṇai*, பெ. (n.) 1. ***உலக் கைப்பூண்;*** ferrule on the pestle. 2. ***தேய்ந்துபோன உலக்கை நுனி;*** worn-out end of a pestle. (J.). (செ.அக.).

[உலக்கை + கணை.]

உலக்கைக்கழுந்து *ulakkai-k-kaḻundu*, பெ. (n.) ***உலக் கைப் பிடி;*** end of a pestle inserted into the mortise, tenon. (செ.அக.).

[உலக்கை + கழுந்து.]

உலக்கைக்கனி *ulakkai-k-kaṉi*, பெ. (n.) ***தேங்காய்;*** cocoanut - cocod nucifera. (சா.அக.).

[உலக்கை + கனி.]

உலக்கைக்கொழுந்து *ulakkai-k-koḻundu*, பெ. (n.) ***அறிவுக் குறையுள்ளவன்;*** stupid fellow, whose wit is as blunt as the tenon of a pestle, or who is such a simpleton as to believe that the pestle is a sprout from the mortar-root. உலக்கைக் கொழுந்தும் குந்தாணி வேரும்.

[உலக்கை + கொழுந்து.]

உலக்கைசாத்து-தல் *ulakkai-šāttu-*, 5. செ.குன்றாவி. (v.t.) ***அடிக்கடி சொல்லிச் சொல்லி அறிவுறுத்துதல்;*** to din a thing several times into a person's ears so as to make him comparehend it. "இச்செய்தியை அவனிடம் உலக்கை சாத்த வேண்டியதாயிற்று (கோ.வ.).

[உலக்கை + சாத்து.]

உலக்கைசார்த்து-தல் *ulakkai-cārttu-*, 5. செ.குன்றாவி. (v.t.) ***அழித்தல்;*** to ruin, destroy. (W.) (செ.அக.).

[உலக்கை + சார்த்து.]

உலக்கைப்பாட்டு *ulakkai-p-pāṭṭu*, பெ. (n.) ***வள்ளைப் பாட்டு*** (திவா.); species of poetical composition in which the poet feigns women pounding grain and singing the praises of a hero. பறவைப் பேடுகள் உலக்கைப் பாட்டால் கண்ணுறங்குகின்ற (வள்ளுவமா. 5. உரை). (செ.அக.).

[உலக்கை + பாட்டு.]

உலக்கைப்பாலை *ulakkai-p-pālai*, பெ. (n.) ***பாலை மரவகை;*** wedge-leaved ape flower, m.tr., Mimusops hexandra. (L.). (செ.அக.).

[உலக்கை + பாலை.]

உலக்கைப்பிடங்கு *ulakkai-p-piḍaṅgu*, பெ. (n.) ***உலக் கைக்கணை*** பார்க்க; see *ulakkai-k-kaṇai*. (செ.அக.).

[உலக்கை + பிடங்கு.]

உலக்கையாணி *ulakkai-y-āṇi*, பெ. (n.) ***பூட்டினுடு வாணி;*** pin of a lock which passes into the hole of the key. (W.) (செ.அக.).

[உலக்கை + ஆணி.]

உலக்கைவள்ளி *ulakkai-vaḷḷi*, பெ. (n.) ***உலக்கை போல் நீண்ட வள்ளிக் கிழங்கு;*** a long and thick sweet potato, resembling a pestle - Dioscoria sativa. (சா.அக.).

[உலக்கை + வள்ளி.]

உலகஅறிவு *ulaga-aṟivu*, பெ. (n.) 1. ***உலகத்தைப் பற்றிய அறிவு;*** wisdom of the world. 2. ***கருவி நூலறிவு;*** secular knowledge.

[உலகம் + அறிவு.]

உலகத்தார் *ulagattār*, பெ. (n.) 1. ***உலகிலுள்ளோர்;*** people of the world. 2. ***உயர்ந்தோர்;*** great men, men of eminence.

"உலகத்தா ருண்டென்ப தில்லென்பான்" (குறள். 850). 3. ***உலகப் பற்றுடையார்;*** worldly persons.

உலகநடை *ulaga-nadai,* பெ. (n.) 1. ***உலகத்தாரொழுக்கம்;*** fashion, custom, usage. உலகநடை வேதநடை போல அறநூல்களுட் கூறப்படுவதன்றி (குறள். 22, அதி. அவ.). 2. ***உலக வழக்கு;*** colloquial language. (W.) பரிமேலழகர், உலகநடையாவது ஒப்புரவு செய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்தல் என்றிவை முதலாயின என்பர் (குறள். 572. பரிமே. உரை).

[உலகம் + நடை.]

உலகநீதி *ulaga-nīdi,* பெ. (n.) 1. ***உலகநடை;*** customs and usages of the world. 2. ***அன்றாட வாழ்வில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுக்கங்களைச் சொல்லும் ஒரு அறநூல்;*** name of a well-known popular work on every day ethics mentioning categorically the "don'ts" or things to be guarded against in one's conduct in life.

[உலகம் + நீதி. Skt. nīti > த. நீதி.]

உலகநூல் *ulaga-nūl,* பெ. (n.) ***உலகநடை நூல்;*** secular literature, book dealing with the subject matter of knowledge relating to the world dist. fr. அறிவுநூல். "உலகநூ லோதுவ தெல்லாம்" (நாலடி. 140). (செ. அக.).

[உலகம் + நூல்.]

உலகநோன்பிகள் *ulaganōnbigaḷ,* பெ. (n.) ***சமண புத்த மதங்களில் இல்லறத்தார்;*** householders among Jains or Buddhists. "உலகநோன்பிக ளொருங்குட னிட்ட" (சிலப். 10,24). (செ.அக.).

[உலகம் + நோன்பிகள்.]

உலகநோன்பு *ulaga-nōnbu,* பெ. (n.) ***துறவாது நோன்பு காக்கை;*** observances of religious rites by householders among Buddhists and Jains. "உலக நோன்பி னுயர்ந் தோய்" (மணிமே. 5,99).

[உலகம் + நோன்பு.]

உலகப்பற்று *ulaga-p-paṟṟu,* பெ. (n.) ***உலகில் வாழ வேண்டும் என்னும் ஆசை;*** attachment to the world. (செ.அக.).

[உலகம் + பற்று.]

உலகப்புரட்டன் *ulaga-p-puraṭṭan,* பெ. (n.) ***பெருமோசக் காரன்;*** great rogue, one who turns the world upside down, well-known cheat.

[உலகம் + புரட்டன்.]

உலகபுராணம் *ulaga-purāṇam,* பெ. (n.) ***ஒரு பழைய தொன்மம்;*** an ancient Purana. "அலகை சான்ற வுலகபுராணமும்" (பெருங். உஞ்சைக். 32,2). (செ.அக.).

[உலகம் + புராணம்.]

உலகம் *ulagam,* பெ. (n.) 1. ***ஞாலம்.*** (பிங்.); earth. 2. ***உலகப்பொது*** (திவ். திருவாய். 6,10,1); any world. 3. ***நிலப்பகுதி;*** country, territory, region. "மாயோன் மேய காடுறை உலகமும்" (தொல். பொருள். 5). 4. ***வானம்*** (பிங்.); sky, etherial regions. 5. ***திசை*** (திவா.); point of the compass. 6. ***மக்கட்டொகுதி.*** (தொல். சொல். 57, சேனா.); inhabitants of the world, mankind in general. 7. ***நன்மக்கள்;*** the excellent, the good. "உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்" (திருமுரு. 124). 8. ***உயிரினங்கள்;*** created beings. "உலக முவப்ப வலனேர்பு திரிதரு". (திருமுரு. 1). 9. ***உயர்குணம்*** (பிங்.); lofty character. "ஒழுக்கநடையே யுலகமதாகும்" (மாற. 320). 10. ***வழக்கம்;*** usage, custom.

ம. உலகம்; க. லோக; தெ. லோகமு; பட. ஒலக.

[உலகு → உலகம்.]

உலகம் என்னுஞ் சொல்லிலுள்ள 'அம்' ஈறு பெருமைப் பொருட் பின்னொட்டு (aug. suf.). ஒ. நோ. கம்பு (stick) → கம்பம் (pillar), நிலை (stand) → நிலையம் (station), மதி (moon) → மதியம் (fullmoon), விளக்கு (lamp) → விளக்கம் (light-house), அரங்கு → அரங்கம், கடுகு → கடுகம், குண்டு → குண்டம், குன்று → குன்றம், சங்கு → சங்கம், துண்டு → துண்டம், நகர் → நகரம், முத்து → முத்தம் முதலிய பல சொற்களில் அம்மீறு தன் பெருமைப் பொருளையிழந்துள்ளது. இங்ஙனமே உலகம் என்பதும். குடும்பு → குடும்பம் என்பதிலோ, அம்மீறு தன் சிறப்புப் பொருளை யிழந்ததுமின்றி, அதற்கு நேர்மாறான சிறுமைப் பொருளையுந் தருகின்றது. குடும்பம் என்பது, சிறிதும் பெரிதுமான ஒரு தனிக்குடும்பத்தையே குறிக்கும் போது, குடும்பு என்பது பல குடும்பஞ் சேர்ந்த சேரியை அல்லது ஊர்ப் பகுதியைக் குறிக்கின்றது. (உத்தர மேரூர்க் கல்வெட்டைப் பார்க்க.) பாண்டியராட்சியும் பண்டைப் பைந் தமிழ்க் கழகமும் இன்மையே, இத்தகைய வழுவழக்கிற்குக் கரணியம். மொழி வரலாற்றையும் சொல்லமைப்பையும் அறி யாத அல்லது பிறழவுணர்ந்த தமிழ்ப்புலவர் சிலர், உலகம் என்னுஞ் சொல்லின் கடைக்குறையே உலகு என்னும் வடி வென்று கொள்வர். "பகவன் முதற்றே யுலகு" (குறள். 1), "நீரின் றமையா துலகெனின்" (குறள். 20), "வகைதெரிவான் கட்டே யுலகு" (குறள். 27), "பெருமை பிறங்கிற் றுலகு" (குறள். 23), "உலகவாம் பேரறிவாளன் திரு" (குறள். 215), "என்னாற்றுங் கொல்லோ வுலகு" (குறள். 211) எனச் செய்யுள் வழக்கிலும்; உலகளவு, உலகியல், உலகாளி, உல கழிவு என உலக வழக்கிலும் உலகு என்னுஞ் சொல் உலகம் என்னும் வடிவு போன்றே பெரு வழக்காய் வழங்குதலையும் சொல்லமைதி யொன்றுங் குறையாதிருத்தலையும் நோக்குக. "உலகு" என்பதன் விரித்தலே "உலகம்". "உலகம்" என்னும் சொல்வடிவு, வடமொழியில் 'லோக' என்றும், சூரசேனிப் பிராகிருத வழிவந்த இந்தியில் 'லோக்' என்றும் திரியும். உலக சவை → லோக்ஸபா. தமிழுக்கு அடுத்து வடபால் வழங்குவ தால் வடகு (வடுகு.) என்று பெயர்பெற்ற தெலுங்கில், உலகம் என்னும் தமிழ்ச் சொல் லோகமு என்று திரிந்துள்ளது. இது தெலுங்கியல்பென்பது, உரல் → (தெ.) ரோலு என்னும் திரிபால் அறியப்படும். பிற்காலச் சேண் வடமொழியாகிய சமற்கிருதத்தில் லோகமு என்னுந் தெலுங்க வடிவு ஈறு கெட்டு 'லோக' என்றாயிற்று. இங்ஙனம் ஈறு கெடுவது சமற்கிருத வியல்பே.

ஒ. நோ. அம்பலம் → அம்பல. அரங்கம் → ரங்க. கடுகம் → கடுக. காலம் → கால. குடும்பம் → குடும்ப. சகடம் → சகட. சங்கம் → சங்க. தண்டம் → தண்ட. தானம் → தான. திடம் → த்ருட. நகரம் → நகர. நாகரிகம் → நாகரிக. நாகம் → நாக. நாடகம் → நாடக. நீலம் → நீல. நீரம் → நீர. பக்கம் → பக்ஷ. பாகம் → பாக. பூதம் → பூத (பெரும்பேய்.). மங்கலம் → மங்கல. மண்டபம் → மண்டப. மண்டலம் → மண்டல. மீனம் → மீன. முகம் → முக. மாதம் → மாஸ. வாலம் → வால.

இவையும் இவை போன்ற பிறவும் வடமொழி யென்னும் சமற்கிருதத்திற்கு இன்றியமையாதனவாயிருப்பதால், வட மொழியாளர் தமிழரின் பேதைமையைப் பெரிதும் பயன்ப டுத்தி, சமற்கிருதம் தேவ மொழியாதலால், அதிலுள்ள சொற்க ளெல்லாம் அதற்குரியனவே யென்றும், தமிழே சமற்கிருதத்தி னின்று தனக்கின்றிமையாத அடிப்படைச் சொற்களை யெல் லாம் கடன் கொண்டுள்ள தென்றும், தொன்றுதொட்டுத் துணிச் சலுடன் ஏமாற்றி வந்திருக்கின்றனர். சமற்கிருதம் தேவமொழி யென்பது, பிராமணன் நிலத்தேவன் (பூசுரன்) என்பதையே முற்றுந் தழுவிய தென்றும், சமற்கிருதச் சொற்களில் ஐந்திலிருப குதி தூய தமிழென்றும் அறிதல் வேண்டும்.

கடன்கொண்ட தமிழ்ச் சொற்களையெல்லாம் சமற்கிருதச் சொல்லென்று காட்டற்கு, பொருந்தப் பொய்த்தலாகவும் பொருந்தாப் பொய்த்தலாகவும் குறிக்கோட் சொற்பிறப்பிய லையே (Tendentious Etymology) வடமொழியாளர் கையாண்டு வந்திருக்கின்றனர். லோக் என்னும் சொல்லிற்கு அவர் கூறும் பொருட்கரணியம், 'பார்க்கப் படுவது' என்பதே. 'லோக்' என்னும் ஆரியச் சொல்லிற்குப் 'பார்' (look) என்பது பொருள். ஆதலால், அதை மூலமாகக் கொண்டு அங்ஙனங் கூறினர். *அச்சொல் look என்னும் ஆங்கிலச் சொல்லொடு தொடர்புடை யது; OE.* locian, *OS.* locon, *OHG.* luogen, *W.G.* lok.

'லோக்' என்னும் ஆரியச் சொல் 'நோக்கு' என்னும் தென் சொல்லின் திரிபே. நகர (னகர) லகரங்கள் ஒன்றோடொன்று மயங்கும். நோக்கு என்பது இந்தியில் 'தேக்' என்று திரிந்துள் ளது. உலகு (உலகம்) என்னுஞ் சொல்லிற்கு, உருண்டையா னது அல்லது சுற்றிவருவது என்னும் பொருள் பொருந்துமா அல்லது பார்க்கப்படுவது என்னும் பொருள் பொருந்துமா என்று அறிஞர் கண்டு கொள்க. உலகம் என்னும் சொல் பொதுமக்களைக் குறிப்பது பெருவழக்கு. எ-டு. உலகம் என்ன சொல்லும்? ஒ.நோ. *L* vulgus (volgus), the people, common people, the great multitude, the public. *L* vulgaris *E* vulgar, Characteristic of the common people.

உலகமலையாமை *ulaga-malaiyāmai*, பெ. (n.) ***நூலழகி னுளொன்று*** (நன். 13); conformity of one's opinions with those held by the good and great so that there is no variance, one of ten nūl-aḻagu.

[உலகம் + மலையாமை.]

உலகமலைவு *ulaga-malaivu*, பெ. (n.) ***நூற்குற்றங்களு ளொன்று*** (தண்டி. 119, உரை); (poet) non-conformity with the opinions of the good and great, one of ten nūṟ-kuṟṟam.

[உலகம் + மலைவு.]

உலகமளந்தான் *ulagamaḷandān*, பெ. (n.) ***திருமால்;*** Viṣṇu, who measured the world with His feet in His incarnation as a dwarf. ''உலகமளந்தானே தாலேலோ'' (திவ். பெரியாழ்..1,3,2).

[உலகம் + அளந்தான்.]

உலகமன்னவன் *ulaga-maṉṉavaṉ*, பெ. (n.) ***மன்னர் மன்னன்;*** world ruler, emperor. ''உலக மன்னவன் வாழ்கென் றேத்தி'' (சிலப். 28.7).

[உலகம் + மன்னவன்.]

உலகமீன்றாள் *ulagam-īṉṟāḷ*, பெ. (n.) ***மலைமகள்;*** Goddess Pārvathi. ''வந்திடுமுலக மீன்றாள் வதுவையஞ் சாலை நண்ணி'' (கந்தபு. திருக்கல். 67).

[உலகம் + ஈன்றாள்.]

உலகமுண்டோன் *ulagam-uṇḍōṉ*, பெ. (n.) ***ஊழிக்கால இறுதியில் உலகத்தை உண்டு வயிற்றுள் அடக்கிக் காத்த திருமால்*** (பிங்.); Viṣṇu who swallowed the world and preserved it in His stomach at the great deluge. ''உம்மை அதனில் உலகமுண்டோன்றன் மகன்'' (கந் தபு. வள்ளி. 119). (செ.அக.).

[உலகம் + உண்டோன்.]

உலகர் *ulagar*, பெ. (n.) 1. ***உலகத்தார்;*** people of the world. ''உலகர் சேருறுதிப்பயன்'' (சிவதத்துவ.7; சங். அக.). 2. ***பாண்டியர்*** (அக.நி.); the pāndyās.

ம. லோகர்.

[உலகம் → உலகர்.]

உலகவழக்கம் *ulaga-vaḻakkam*, பெ. (n.) ***உல கொழுங்கு;*** custom or usage of the world. (செ.அக.).

[உலகம் + வழக்கம்.]

உலகவழக்கு *ulaga-vaḻakku*, பெ. (n.) 1. ***உலக வழக்குச் சொல்*** (நன். 267. விருத்.); words in common speech or popular words, dist. fr. செய்யுள் வழக்கு. i.e., words used in the language of poetry. 2. ***உலக வழக்கம்*** பார்க்க; see *ulaga-vaḻakkam*. (செ.அக.).

[உலகம் +வழக்கு.]

உலகவறவி *ulaga-v-aṟavi*, பெ. (n.) ***எல்லாக் குலத்தவ ரும் வந்து தங்குதற்கு உரிய அறச்சாலை;*** any big charitable institution or rest-house established for the benefit of all castes and classes. ''புலர்புகத் திறந்த பகுவாய் வாயிலுலக வறவி'' (மணிமே. 7,93).

[உலகம் + அறவி.]

உலகவறிவு *ulaga-v-aṟivu*, பெ. (n.) ***பொதுஅறிவு;*** knowledge of the world. (செ.அக.).

[உலகம் + அறிவு.]

உலகவிடைகழி *ulaga-v-iḍai-kaḻi*, பெ. (n.) ***மக்கள் கடந்து செல்லற்குரிய பெருவாயில்;*** public passage, as the gateway of a city. ''உலகவிடைகழி யொருங் குடனீங்கி'' (சிலப். 10, 27). (செ.அக.).

[உலகம் + இடைகழி.]

உலகளந்தோன் *ulagaḷandōṉ*, பெ. (n.) ***உலகமளந்தான்*** பார்க்க (திவா.); see *ulaga-maḷandāṉ*. (செ.அக.).

[உலகு + அளந்தோன்.]

உலகளவு *ulagaḷavu,* பெ. (n.) ***நாட்டின் நிலவளவு;*** (I.M.P.Ct. 326); survey of the country. (செ.அக.).

[உலகு + அளவு.]

உலகாசாரம் *ulagācāram,* பெ. (n.) ***உலக வழக்கம்*** பார்க்க; see *ulaga-vaḻakkam.* (செ.அக.).

[உலகம் + ஆசாரம். Skt. ācāra > த. ஆசாரம்.]

உலகாள்வோன் *ulagāḷvōṉ,* பெ. (n.) 1. ***இறைவன்;*** God, Lord. 2. ***அரசன்;*** King.

[உலகு + ஆள்வோன்.]

உலகியல் *ulagiyal,* பெ. (n.) 1. ***உலக வழக்கம்;*** custom of the world. 2. ***உலகமுறைமை;*** order of the world. 3. ***உலகநடை*** (சீவக. 245. உரை); universal code of morals.

[உலகு + இயல்.]

உலகியல்வழக்கு *ulagiyal-vaḻakku,* பெ. (n.) ***உலகவழக்கம்*** (தொல். பொருள். 53); actual usage of the world, dist. fr. நாடகவழக்கு i.e., stage usage. (செ.அக.).

[உலகு + இயல் + வழக்கு.]

உலகியற்கை *ulagiyaṟkai,* பெ. (n.) ***உலகியல்*** பார்க்க; see *ulagiyal.* "இவையென்ன வுலகியற்கை" (திவ். திரு வாய். 4,9,1).

[உலகு + இயற்கை.]

உலகியற்சொல் *ulagiyaṟ-sol,* பெ. (n.) ***உலகவழக்கிலே வழங்குஞ்சொல்.*** (கலித்.1,உரை); world of daily usage. (செ.அக.).

[உலகு + இயல் → உலகியல் + சொல்.]

உலகின்பொது *ulagiṉ-podu,* பெ. (n.) 1. ***இடம்*** (தலம்); place. 2. ***நாடு;*** country. 3. ***நானிலம்;*** world. 4. ***பொழில்;*** grove.

[உலகு + இன் + பொது.]

உலகு *ulagu,* பெ. (n.) 1. ***உலகம்;*** world. 2. ***மக்கள்;*** people.

ம. உலகு; க. லோக; தெ. லோகமு. *H.* log. *Skt.* loka. *L.* vulgus. the people. *E.* Vulgar. used by the common people.

[உல் → உலவு → உலகு.]

உலகுடையபெருமாள் *ulaguḍaiya-perumāḷ,* பெ. (n.) ***அரசன்*** (M.E.R. 211 of 1927-8); King. (செ.அக.).

[உலகு + உடைய + பெருமாள்.]

உலகுண்டவன் *ulaguṇḍavaṉ,* பெ. (n.) ***உலகமுண் டோன்*** பார்க்க; see *ulagamuṇḍōṉ.*

[உலகு + உண்டவன்.]

உலகுண்டோன் *ulaguṇḍōṉ,* பெ. (n.) ***உலகமுண்டோன்*** பார்க்க; see *ulagam-uṇḍōṉ.*

[உலகு + உண்டோன்.]

உலகுய்யக்கொட்டான் *ulaguyya-k-koṭṭāṉ,* பெ. (n.) ***ஒருவகை மருந்துப் பச்சிலை*** (பெரிய மாட். 15-A); a medicinal herb. (செ.அக.).

[உலகு + உய்ய + கொட்டான். கொற்றான் → கொட்டான் (கொ.வ.).]

உலகோர் *ulagōr,* பெ. (n.) ***உலகர்*** பார்க்க; see *ulagar.*

[உலகு → உலகர் → உலகோர்.]

உலங்கலம் *ulaṅgalam,* பெ. (n.) ***கல் ஏனம்;*** vessel of stone.

[உல்³ → உல்லம் + கலம் - உல்லங்கலம் → உலங்கலம்.]

உலங்கு¹ *ulaṅgu,* பெ. (n.) ***கொதுகு;*** gnat, mosquito, Culicidae. (செ.அக.). "கலுழ னுலங்கின்மே லுருத் தென்ன" (கம்பரா. பஞ்சசே. 2).

[அலம் → உலம். உலம் → உலங்கு.]

உலங்கு² *ulaṅgu,* பெ. (n.) ***உலம்*** பார்க்க; see *ulam.* (செ.அக.).

உலட்டை *ulaṭṭai,* பெ. (n.) ***உலுட்டை*** பார்க்க; see *uluṭṭai.*

உலண்டங்கொல்லி *ulaṇḍaṅ-kolli,* பெ. (n.) ***புழுக் கொல்லி;*** plant whose medicinal effects counteract the poision of worms, bees etc.- aristolochia indica. (சா.அக.).

[உலண்டம் + கொல்லி.]

உலண்டம் *ulaṇḍam,* பெ. (n.) ***வண்டு;*** beetle. (ஆ.அக.).

[உல் → உலண்டம்.]

உலப்படி *ulappaḍi,* பெ. (n.) ***உலைப்பானையின் மேல்மூடி;*** lid of the cooking pot.

[உலை + படி - உலைப்படி → உலப்படி.]

உலப்பல் *ulappal,* பெ. (n.) ***கலப்புக் கட்டோசை*** (பிங்.); combined noise of many sounds, hubbub, clamour. (செ.அக.).

ம. உலப்பர்; க. உலிவு, உலிப, உலிபு, உலுபு; குட. ஒலி; தெ. உலிவு, உலியு.

[உலப்பு → உலப்பல்.]

உலப்பு¹ *ulappu,* பெ. (n.) 1. ***அழிவு;*** wasting, perishing. "உலப்பிலின்பமோடு" (மணிமே. 6.111). 2. ***குறைவு;*** defect, deficiency. "உலப்புறா தெவையு மீவோர்" (கந் தபு. திருவவ.9) 3. ***சாவு;*** death. "உலப்பினைக் கடக்கு மாறு" (காஞ்சிப்பு. மணிக. 5). 4. ***காய்ச்சுதல்;*** boiling.

[உல → உலப்பு.]

உலப்பு² *ulappu,* பெ. (n.) 1. ***அளவு;*** limit, measure. "மிடைந்தவ ருலப்பிலர்" (கம்பரா. உருக்கா. 23). 2. ***உதவுகை;*** assistance, help. "ஒல்கிடத் துலப்பிலா வுணர்விலார்" (கலித். 25).

[உல் → உலப்பு.]

உலப்பெண்ணெய் *ulappenney,* பெ. (n.) ***காய்ச்சிய குளியலெண்ணெய்;*** boiled oil used for oil bath. oil.

ம. உலப்பெண்ண.

[உலப்பு (காய்ச்சிய) + எண்ணெய்.]

உலப்பேறி *ulappēri,* பெ. (n.) ***திருத்தப்பட்ட நிலம்;*** permanently improved lands. (G.Tn.D.i., 294). (செ.அக.).

[உல → உலப்பு + ஏறி.]

உலம்[1] *ulam,* பெ. (n.) 1. ***உருண்டு திரண்ட கல்;*** roundstone, large pebble. "உலஞ்செய்த... தோளான்" (சீவக. 2915). 2. ***திரட்சி;*** roundness. "உலங்கொள் சங்கத் தார்கலி" (தேவா. 112, 8). (செ.அக.).

ம. உலம்; *Skt.* upala.

[உல்[11] → உலம்.]

உலம்[2] *ulam,* பெ. (n.) 1. ***வலிமை;*** strength. 2. ***அச்சக்குறிப்பு;*** manifesting symptom of fear. 3. ***துன்பம்;*** grief. 4. ***பிணம்;*** corpse. 5. ***பட்டாடை;*** silk cloth. 6. ***வாசல்;*** doorway. 7. ***அகலம்;*** breadth. 8. ***நீர்;*** water. (செ.அக.).

[உல் → உலம்]

உலம்[3] *ulam,* பெ. (n.) 1. ***ஒலித்தல், ஓசை;*** sound. 2. ***உலவை, காற்று;*** wind.

[உல் → உலம்.]

உலம்பல் *ulambal,* பெ. (n.) ***ஆரவாரம்*** (பிங்.); roar of many sounds. (செ.அக.).

ம. உலம்புக (ஒலியெழுப்புதல்.); மால். ஒல்கெ (அழு.); குட. ஒலி (மணியோசை.).

[உல் → உல → உலம்பு → உலம்பல்.]

உலம்பு-தல் *ulambu-,* 15. செ.கு.வி. (v.i.) 1. ***பேரொலி செய்தல்;*** to make a loud noise, cryout, roar, thunder. "யாளிநின் றுலம்புமே" (சீவக. 1900). 2. ***அலப்புதல்;*** prate, chatter. "ஒல்காதார் வாய்விட் டுலம்புப" (நீதி நெறி. 72).

ம. உலம்புக; க. உலி; தெ. உலியு.

[உல் → உல → உலமு → உலம்பு → உலம்பு-தல்.]

உலம்வா(வரு)-தல் *ulam-vā(varu)-,* 18. செ.கு.வி. (v.i.) ***நெஞ்சு உழலுதல்;*** to be perturbed in mind, confused. "உயிர்க்கு முசாஅ முலம்வரும்" (கலித். 145,4.).

ம. உலயுக.

[உல்[7] → உல → உலம் + வா-தல்.]

உலமரல் *ulamaral,* பெ. (n.) 1. ***துன்பம்*** (சூடா.); suffering. 2 ***அச்சக்குறி காட்டுகை*** (சூடா.); manifesting symptoms of fear. 3. ***உழலுதல்;*** afflicting 4. ***சுழலுதல்;*** stirring. (செ.அக.).

[உலம்வரல் → உலமரல்.]

உலமரு-தல் *ulamaru-,* 18. செ.கு.வி. (v.i.) ***உலம்வா (வரு)-தல்*** பார்க்க; see *ulam-vā (varu)-,* "புலம்பியா முலமரா" (கலித். 83,2.). (செ.அக.).

ம. உலர்.

[உலம் + வரு-தல் = உலம்வரு-தல் → உலமரு-தல்.]

உலர்-தல் *ular-,* 2. செ.கு.வி. (v.i.) 1. ***காய்தல்;*** to become dry, to wither, to be parched up. 2. ***வாடுதல்;*** to pine away, as from grief, disease or hunger; to flag, droop. "உலர்ந்து போனே னுடையானே" (திருவாச. 32.1.). (செ.அக.).

ம. உலருக.

[உல்[6] → உல → உலல் → உலர்.]

உலர்ச்சி *ularcci,* பெ. (n.) 1. ***காய்வு;*** dryness, withered state, aridity. 2. ***வாட்டம்;*** emaciated condition of the system occasioned by travel, hunger or disease; weariness of the mind. (செ.அக.).

ம. உலர்ச்ச.

[உலர் → உலர்ச்சி.]

உலர்த்தற்பாடு *ulartta<u>r</u>pādu,* பெ. (n.) ***உலர்த்தப்பட்ட நிலைமை;*** condition of being fully dried, as groundnut kernels ready for crushing, opp. to ஈரப்பாடு. (செ.அக.).

[உலர் → உலர்த்தல் + பாடு.]

உலர்த்தி *ulartti,* பெ. (n.) ***உலர்ச்சி*** பார்க்க; see *ularcci.* (செ.அக.)

உலர்த்து-தல் *ularttu-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***ஈரம் புலர்த்துதல்;*** to dry, air, desiccate. "நனைந்த வான்றுகி லுலர்த்திய" (சேதுபு. கந்த. 41.) (செ.அக.).

ம. உலர்த்துக.

[உலர் → உலர்த்து.]

உலர்ப்பெலி *ularppeli,* பெ. (n.) ***ஓர் எலி;*** species of rat (W.). (செ.அக.).

[உலர் → உலர்ப்பு + எலி.]

உலர்மரம் *ular-maram,* பெ. (n.) 1. ***வானம்;*** sky. (ஆ.அக.). 2. ***பட்டுப்போன மரம்;*** lifeless or decayed tree. (சா.அக.).

[உலர் + மரம்.]

உலர்வு *ularvu,* பெ. (n.) ***உலர்ச்சி;*** dried state, withered condition.

[உலர் → உலர்வு.]

உலரி *ulari,* பெ. (n.) ***நன்னீர் மீன்;*** fresh-water fish. (செ.அக.).

[உல் → உலரி]

உலவக்காரன் *ulava-k-kāraṉ,* பெ. (n.) ***மற்றவரோடு பழக நாணுபவன்;*** he who is shy with strangers. (J.). (செ.அக.).

[உல → உலவை + காரன்]

உலவம் *ulavam,* பெ. (n.) 1. ***பிறர் முன்பு ஏற்படும் மனக்கூச்சம்;*** bashfulness, shyness, diffidence before strangers. கடன் கேட்க உலவமாயிருக்கிறது (வின்.). 2. ***இவறன்மை; கருமித்தனம்*** (சங்.அக.); miserliness. 3. ***இலவ மரம்;*** silk cotton. (செ.அக.).

[உல் → உல → உலபு → உலவம்.]

உலவமரம் *ulavamaram,* பெ. (n.) ***இலவமரம்;*** silk cotton tree.

[உல் → உலவம் + மரம்.]

உலவல் *ulaval,* பெ. (n.) 1. ***துறந்தோன்*** (அக.நி.); ascetic. 2. ***குறைதல்*** (ஆ.அக.); diminishing, shrinking. (செ.அக.).

[உல → உலவல்.]

உலவாக்கிழி *ulavā-k-kiḻi,* பெ. (n.) ***எடுக்கவெடுக்கக் குறைபடாப் பொன்முடிப்பு;*** inexhaustible quantity of gold tied up in a cloth-bag. "கன்னி நாடன் தனக்கு இசைந்தபடியால் உலவாக்கிழி கொடுத்த படியை அறிந்தபடி பகர்வாம்" (திருவிளை. உலவாக்.1).

[உல → உலவு → உலவா + கிழி.]

உலவாநில்(ற்)-த(ற)ல் *ulavānil(ṟ)-,* 16. செ.கு.வி. (v.i.) ***பரத்தல்;*** to spread. "இன்பவெள்ளம் உலவா நிற்கும்." (தாயு. நின்ற. 2).

[உலவா + நிற்றல். உலவா என்பது செய்யா என்னும் வாய் பாட்டு வினையெச்சம். உலவா = உலந்து நிற்றல், பரவுதல்.]

உலவி-த்தல் *ulavi-,* 4. செ.கு.வி. (v.i.) ***கூசியொழுகுதல்;*** to be bashful in eating, to evince diffidence in accepting favours or gifts, to be backward in coming into company. (J.). உலவியாமற் சாப்பிடும். (செ.அக.).

[உல் → உலவு → உலவி-த்தல்.]

உலவிபொன் *ulavipoṉ,* பெ. (n.) ***தூய தங்கம்;*** pure gold. "உலவிபொன் இருபதின் கழஞ்சு பொன்னுக்கும்" (S.I.I.v.281). (செ.அக.).

[உல் → உலவி + பொன். உலவி = காய்ச்சிய.]

உலவு-தல் *ulavu-,* 5. செ.கு.வி. (v.i.) ***திரிதல்;*** to go around. "ஒருங்குதிரை யுலவுசடை" (திருவாச. 38,1). (செ.அக.).

ம. உலவுக.

[உலம் → உலவு → உலவு-தல்.]

உலவை[1] *ulavai,* பெ. (n.) 1. ***தழை;*** green twig with leaves upon it. 'ஈயுலவைபி னோப்பி" (இரகு. தேனு. 35) 2. ***மரக்கொம்பு;*** branch of tree, bough. "இலைதீந்த வுலவையால்" (கலித். 11). 3. ***மரச்செறிவு*** (பிங்.); grove. 4. ***விலங்கின் கொம்பு;*** horn, tusk. "யானைத் தரள நீளுலவை" (காஞ்சிப்பு. கழுவா. 397). 5. ***குடைவேல்*** (சூடா.); umbrella thorn babool, buffalo thorn cutch. 6. ***ஒடை*** பார்க்க (மலை.); oval-leaved wheel creeper. 7. ***வள்ளிக்கொடி*** (அக.நி.); sweet potato creeper; panicled-bindweed. 8. ***கிலுகிலுப்பை*** (மலை.); rattlewort. 9. ***இளந்தளிர்;*** tender leaves. "அலங்க லுலவையேறி பொய்யேன்" (குறுந்.79).

[உல் → உலவை. (வே.க. 16.55.]

உலவை[2] *ulavai,* பெ. (n.) 1. ***காற்று*** (திவா.); wind. 2. ***ஊதைநோய்;*** rheumatism, gout, paralysis. "வழுத்துல வைக் குலமுழுதும்" (தைலவ, தைல.88). 3. ***வற்றிய கிளை;*** dried branch. (செ.அக.).

[உலவு → உலவை.]

உலவை[3] *ulavai,* பெ. (n.) ***குலவையிடல்;*** a type of sound made by women during functions.

[உல → உலவை]

உலவை[4] *ulavai,* பெ. (n.) ***அவா*** (அக.நி.); desire. (செ.அக.).

[உல் → உல (மிகுதல், பெருகுதல்) → உலவை.]

உலவையான் *ulavaiyāṉ,* பெ. (n.) ***காற்றுத் தேவன்;*** Vāyu, the god of wind. "அண்டரும் உலவையானை அவுணர்மாத் தலைவன் பாரா." (கந்தபு. அரசு.7). (செ.அக.).

[உலவை → உலவையான்.]

உலறல் *ulaṟal,* பெ. (n.) ***கடுஞ்சீற்றம்*** (பெருங்கோபம்.) (திவா.); fierce anger, rage.

[உல → உலறு → உலறல்.]

உலறு[1]**-தல்** *ulaṟu-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***வற்றுதல்*** (அகநா. 19.) to dry up, wither. 2. ***சிதைதல்;*** to be injured, to be spoiled, worn out as clothes. "உலக்கை யுலறி யுடம்பழிந்தக் கண்ணும்" (நாலடி. 141). 3. ***பொலிவழிதல்;*** to become rough, shaggy, brush. "கண்ணு முகமு முலறி" (சீவக. 2966). (செ.அக.).

[உல் → உல → உலறு.]

உலறு[2]**-தல்** *ulaṟu-,* 5. செ.கு.வி. (v.i.) ***உரை தடுமாறு தல்;*** to howl, scream; to babble, as in a rapture. "அலறிடே னுலறிடே னாவி சோரேன்" (திருவாச. 5,22). (செ.அக.).

ம. உலறுக.

[உல → உலறு.]

உலா *ulā,* பெ. (n.) 1. ***அரசன் தலைநகரைச் சுற்றி வரும் உலா;*** procession. "போந்தானுலா" (சங்கர. உலா). 2. ***பேதை முதலிய ஏழு பருவப் பெண்களும் கண்டு மயங்கும்படி தலைவன் உலாவருதலைக் கலிவெண்பாவால் கூறுவது;*** poem in kaliveṇpā metre

which describes how women of the seven *magaḷir paruvam* are love-striken at the sight of a hero as they see him coming along in procession. "கலிவெண்பா வுலாவாம்" (வெண்பாப். செய். 27). 3. ***மக்கள் காற்றாடச் சுற்றி வரல்;*** walking.

[உலவு → உலா.]

உலாங்கு-தல் *ulāṅgu-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***அசைதல்;*** to move. 2. ***தள்ளாடுதல்;*** to stagger.

[உலவு → உலா → உலாங்கு.]

உலாஞ்சு-தல் *ulāñju-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***அசைந்தாடுதல்;*** to move, work about, as the head. கப்பல் உலாஞ்சுகிறது. 2. ***தலைசுற்றுதல்;*** to be giddy, dizzy, to suffer swimming in the head. 3. ***தள்ளாடுதல்;*** to stagger as sway in walking. (செ.அக.).

[உலாங்கு → உலாஞ்சு.]

உலாத்து[1]-தல் *ulāttu-,* 6. செ.கு.வி. (v.i.) 1. ***உலாவச் செய்தல்;*** to take out for a walk, as a child; to lead about, as a horse. 2. ***பரவச் செய்தல்;*** to spread out, extend on all sides. வேட்டியை யுலாத்திக் கொண்டு போகிறான் (உ.வ.). 3. ***அசைத்தாட்டுதல்;*** to cause to shake (செ.அக.) கொண்டையுலாத்தி - கொண்டையை ஆட்டும் பறவை. 4. ***சிறுநடை கொள்ளல்;*** to walk taken by a patient in convalescent state.

ம. உலாத்துக.

[உலா → உலாத்து → உலாத்து-தல்.]

உலாத்து[2] *ulāttu,* பெ. (n.) 1. ***உலாவுகை;*** walking up and down for amusement, display or exercise moving to and fro. 2. ***சுற்றுதல்;*** wandering, revolving. (செ.அக.).

[உல → உலா → உலாத்து.]

உலாத்துக்கட்டை *ulāttu-k-kaṭṭai,* பெ. (n.) ***கதவுக் குடுமி; கதவு நின்றாடுஞ் சுழியாணி;*** shutter turns. (W.). (செ.அக.).

[உலாத்து + கட்டை.]



உலாத்துக்கட்டை

உலாத்துக்கதவு *ulāttu-k-kadavu,* பெ. (n.) ***பிணையற் கதவு*** (யாழ். அக.); folding door. (செ.அக.).

[உலாத்து + கதவு.]

உலாத்துகண்டன் *ulāttu-kaṇḍaṉ,* பெ. (n.) ***ஓணான்;*** a kind of lizard. (சா.அக.).

[உலாத்து + கண்டன்.]

உலாப்புறுத்து-தல் *ulāppuṟuttu-,* 6. செ.குன்றாவி. (v.t.) ***அழித்தல்;*** to destroy. "நாளுலாப்புறுத்தும் வாள்வலி" (பெருங். உஞ்சைக். 56, 252).

[உலாப்பு + உறுத்து.]

உலாப்போ-தல் *ulāppō-,* 8. செ.கு.வி. (v.i.) ***வலம் வருதல்;*** to go in procession. (செ.அக.).

[உலா + போ.]

உலாம் *ulām,* இடை. (part.) ***ஒருவமச்சொல்;*** word used as a sign of comparison. "வேயுலாந் தோளினார்" (சீவக. 1581) (செ.அக.).

[உல் (பொருந்துதல்) → உல → உலாம்.]

உலாமடல் *ulāmaḍal,* பெ. (n.) ***ஒரு பெண்ணைக் கனவிற் புணர்ந்தோன் விழித்தபின் அவள் பொருட்டு மடலூர்வேன் எனக் கலி வெண்பாவால் பாடப்படும் ஒரு சிற்றிலக்கியம்;*** poem in kali-veṇpā metre, in which a man who has beheld an unknown woman in a dream vows to possess her in reality or die by riding a palmyra stem. கனவில் ஒருத்தியைக் கண்டு புணர்ந்தோன் நனவில் அவள் பொருட்டாக நானே ஊர்வன் மடல் என்றுரைப்பது உலாமடல் (இலக். வி. 857). (செ.அக.).

[உலா + மடல்.]

உலாவல் *ulāval,* பெ. (n.) ***பொழுது கழித்து விளையாடல்;*** playing after the stipulated period.

[உலா → உலாவல்.]

உலாவரிசி *ulāvarisi,* பெ. (n.) ***வெட்பாலையரிசி;*** blue dyeing rosebay.

[உல் → உலாவல் + அரிசி.]

உலாவா(வரு)-தல் *ulāvā(varu)-,* 18. செ.கு.வி. (v.i.) 1. ***அங்குமிங்கும் அலைதல்;*** to wander about. "கராமுலாவரு பைந்தடமும்" (பாரத. நாடு. 8). 2. ***வீதிவலம் வருதல்;*** to move in procession. "வீதிதோறூர்ந் துலாவருமால்" (இரகு. நாட்டுப். 13). 3. ***அசைதல்;*** to wave as a flag. "உலாவரு பதாகையி னீட்டம்" (கந்தபு.யுத்த. முதனாட். 53). (செ.அக.).

[உலா + வரு.]

உலாவு[1]-தல் *ulāvu-,* 6. செ.கு.வி. (v.i.) 1. ***அலைதல்;*** to move about, walk or ride for recreation take a jaunt, a stroll or a ramble. "நிலவுலாவிய நீர்மலி வேணியன்" (பெரியபு. பாயி. 1). 2. ***வீதிவலம் வருதல்;*** to go in procession, parade the streets, as festal processions.

3. *இயங்குதல்; வீசுதல்;* to move, stir. "வந்துலாய்த் துயர்செய்யும் வாடை" (பு.வெ. 8,16, கொளு.). 4. *பரவுதல்;* to spread over, as a flood. "உயிரென வுலாய தன்றே" (கம்பரா. ஆற்றுப். 20) (செ.அக.).

ம. உலாவுக; தெ. ஒலயு; பட. ஒலாத்து.

[உலவு → உலாவு.]

உலாவு²-தல் *ulāvu-*, 6. செ.குன்றாவி. (v.t.) *சுற்றிக்கட்டு தல்;* to surround, encircle as a garment. "தூசுலாய்க் கிடந்த" (சீவக. 550).

[உல் → உலவு → உலாவு]

உலாவுகாட்சை *ulāvu-kāṭsai,* பெ. (n.) *வரிவகை* (S.I.I.v.330.) tax. (செ.அக.).

ம. உலாவு காழ்ச்ச.

[உலாவு + காட்சை. காட்சி → காட்சை. (கொ.வ.)]

உலிமணி *ulimaṇi,* பெ. (n.) *நாயுருவி* (மலை.); a plant growing in hedges and thickets. (செ.அக.).

[உல் → உலி + மணி.]



உலிமணி

உலு *ulu,* பெ. (n.) *தினை முதலியவற்றின் பதர்;* chaff of inferior grains (J.). (செ.அக.).

[உல் → உலு = உலுக்குவதனால் அல்லது குத்துவதனால் நீங்கும் பதர்.]

உலுக்கல் *ulukkal,* தொ.பெ. (vbl.) 1. *குலுக்கல்;* shaking.

[உல் → உலுக்கு → உலுக்கல்.]

உலுக்கு¹-தல் *ulukku-,* 5. செ.குன்றாவி. (v.t.) *குலுக்கு தல்;* to shake, as a tree.

ம. உலுக்கு; க. உலுகு; குட. ஒலிப், ஒலிச்; தெ. உலுகு, உலுக்கு.

[உல் → உலு → உலுக்கு.]

உலுக்கு²-தல் *ulukku-,* 7. செ.கு.வி. (v.i.) *நடுங்குதல்;* to tremble, as in an earthquake.

[உலு → உலுக்கு.]

உலுக்குமரம் *ulukkumaram,* பெ. (n.) *நெம்பு கட்டை;* lever (W.). (செ.அக.).

[உலு → உலுக்கு + மரம்.]

உலுட்டை *uluṭṭai,* பெ. (n.) *சொட்டைப்பேச்சு; பயனில் சொல்* (யாழ்ப்.); slanderous talk.

[உல் → உலு → உலுட்டை = உலுத்துப்போனது, பயனற்றது.]

உலுத்தத்தனம் *ulutta-t-taṉam,* பெ. (n.) *ஈயாக் குணம்;* niggardliness, stinginess. (செ.அக.).

[உல் → உலு = வெப்பம், கொடுமை. உல் → உலு → உலுத்தன் + தனம்.]

உலுத்தம் *uluttam,* பெ. (n.) *உலுத்தத்தனம்* பார்க்க; see *ulutta-t-taṉam.* (செ.அக.).

[உல் → உலு → உலுத்தம்.]

உலுத்தன் *uluttaṉ,* பெ. (n.) 1. *ஈயாதவன்;* niggard, miser, close-fisted person. "இல்லையென்றே சொலு முலுத்தன்" (அறப். சத. 38). 2. *வாங்கின கடனைக் கொடாதவன்* (ஆ.அக.); debtor, who disinclines to repay debt.

ம. உலுத்தன்.

[உல் → உலு → உலுத்தன். இச்சொல் வடதிரவிட நடுவன் மொழிகளில் உலுத்தன் → லுத்தன் → லுத்தா → லுச்சா எனத் திரிந்து வழங்குகிறது.]

உலுத்து-தல் *uluttu-,* 8. செ.குன்றாவி. (v.t.) *உலுப்பு-தல்* பார்க்க; see *uluppu-,*

[உலு → உலுத்து → உலுத்து-தல் = உதிர்த்தல். உலு → உது → உதுர் → உதிர் → உதிர்த்தல் எனவும் திரிபுறும்.]

உலுப்பு-தல் *uluppu-,* 8. செ.குன்றாவி. (v.t.) 1. *உதிர்த்தல்* (யாழ்ப்.); to shake off, cause to shed, as fruits or leaves from a tree. 2. *அசைத்தல்;* to shake. (செ.அக.).

[உல் → உலு → உலுப்பு → உலுப்பு-தல். இக்காலத்தில் உலுப்பு → உதுப்பு → உசுப்பு எனத் திரிபுற்றன. உலுப்பிவிடு, உதுப்பி விடு, உசுப்பிவிடு என்னும் கூட்டு வினைகளும் உருப்பெற் றன. நகர முன்னெழுத்துப்பேறு பெற்று நுதுப்பு என்னும் வினையும் அக்காலத்தில் உருப்பெற்றது.]

உலுப்பை *uluppai,* பெ. (n.) 1. *அதிகாரிகள் பெரியோர் முதலியோர்க்கு மதிப்புரவாக அனுப்பும் உணவுப் பண்டங்கள்;* presents of fruits, articles of food etc., offered to great personages; supplies gratuitously given to officials on tour by people or subordinates. "உம்பர் கோன் வைத்த வுலுப்பையென" (வருணகுலா. 219). 2. *பை;* bag. 3. *சிறுகாய்;* unripe fruit in common (சா.அக.). 4. *கோயில் முதலியவற்றிற்கு அனுப்பும் காணிக்கை.* (த.சொ.அக.); presentation to temple etc.

[உல் → உலு → உலுப்பை, உலுப்புதல் = உதிர்த்தல், உதிர்த்துத் திரட்டிய தவசம். தவசம் உதிர்க்காமல் அரிதாள் கட்டுகளையே வழங்கும் வழக்கமும் இருந்ததால், உதிர்த்த தவசம் மட்டும் வழங்குவதை வேறுபடுத்திக் கூறுவதும் இன்றியமையாத தாயிற்று.]

உலுப்பைகட்டு-தல் *uluppaikattu-*, 15. செ.கு.வி. (v.i.) ***பெரியோர் அருள் பெறுவதற்காகப் பரிசுப்பொருள் அனுப்புதல்*** (ஆ.அக.); to send presentation to revered persons to get blessings.

[உலுப்பை + கட்டு.]

உலுப்பைகொடு-த்தல் *uluppai-kodu-*, 4. செ.கு.வி. (v.i.) ***தம் கீழ்ப் பணியாற்றுபவர்களுக்குப் படிகொடுத்தல்;*** to give supplies to an inferior or dependent (W.).

[உலுப்பை + கொடு.]

உலூகம்[1] *ulūgam*, பெ. (n.) ***கோட்டான்*** (பிங்.); rock horned owl. (செ.அக.).

Hindi. ullu.

[உல் → உல்லு → உல்லுகம் → உலூகம். உல்லு பார்க்க; see ullu.]

உலூகம்[2] *ulūgam*, பெ. (n.) 1. ***உரல்*** (அக.நி.); mortar. 2. ***குங்கிலியம்;*** konkani resin (செ.அக.).

[உலங்கலம் → உலூகம்.]

உலூகலம் *ulūgalam*, பெ. (n.) 1. ***உரல்;*** wooden mortar. "உலூகலமுடன்றவழ்ந்தவன்" (பாரத. உலூகன்.5). 2. ***குங்கிலியம்*** (மலை.); resin.

[உலங்கலம் → உலூகலம். உல் = குத்துதல்.

உலை[1]**-தல்** *ulai-*, 2. செ.கு.வி. (v.i.) 1. ***நிலை குலைதல்;*** to be disordered, as one's affairs; to become deranged, unsettled, loose; to degenerate in morals or character; to be overripe, as fruit. "உலையாமுயற்சி" (நீதிநெறி. 51.). 2. ***அழிதல்.*** (திவா.); to perish; to be ruined, as houses, land or crops. 3. ***அஞ்சுதல்...*** (திவா.); to be afraid, to be agitated in mind.. 4. ***கலைந்து போதல்;*** to be dispersed, as an assembly; put to rout, as an army. "ஒன்னாத் தெவ்வ ருலை விடத்து" (பெரும்பாண். 491.) 5. ***அலைதல்;*** to wander about. "உலகஞ்சுற்றி... உலையவிட்டாயெனின் " (தாயு. சுகவாரி, 6.). 6. ***சோறு கெடுதல்;*** to spoil, as of boiled rice etc.

[உல் → உலை → உலை-தல்.]

உலை[2]**-த்தல்** *ulai-*, 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***கெடுத்தல்;*** to ruin, injure. காரியத்தை உலைத்துவிடாதே. 2. ***கலைத்தல்;*** to throw into disorder, derange, unhinge, unsettle. 'சான்றாளியை உலைத்து விட்டான்'. 3. ***அலைத்தல்;*** to harass as a demon. பேய் அவனை உலைத்துப் போட்டது. (செ.அக.).

[உல் → உலை → உலை-த்தல்.]

உலை[3] *ulai*, பெ. (n.) 1. ***நெருப்புள்ள அடுப்பு;*** fire place for cooking, oven. (W.) 2. ***கொல்லனுலை;*** smith's forge or furnace. "கொல்ல னுலையூதுந் தீயேபோல்" (நாலடி. 298). 3. ***சோறு சமைத்தற்காகக் கொதிக்க வைக்கும் நீர்;*** pot of water set over the fire for boiling rice. "உலைப்பெய்து அடுவது போலுந் துயர்" (நாலடி. 114). 4. ***மனநடுக்கம்;*** flurry, excitement, agitation of the mind. "உலைதருமலின மொன்ற தொழித்திடுஞ் சுத்தமொன்றே" (ஞானவா. வைரா. 26). (செ.அக.).

ம. உல; **க.** பட, ஒலெ; **கோத.** எல்கால்; **துட.** வல்; **குவி.** கொல்லு

[உல் → உலை.]

உலைக்களம் *ulai-k-kalam*, பெ. (n.) ***கொல்லனுலைக் கூடம்*** (பிங்.); smith's forge. (செ.அக.).

[உலை + களம்.]

உலைக்குழல் *ulai-k-kulal*, பெ. (n.) ***துருத்தி;*** blow-pipe, the bellows of a forge.

[உலை + குழல்.]

உலைக்குறடு *ulai-k-kuradu*, பெ. (n.) ***உலை முகத்திலிரும்பு தூக்குங் குறடு*** (வின்.); smith's tongs. (செ.அக.).

[உலை + குறடு.]

உலைகட்டு-தல் *ulai-kattu-*, 15. செ.கு.வி. (v.i.) ***பொங்கற்பானைக்கு மாவிலை செருகிய கயிறு கட்டுதல்;*** to decorate the top of a pot with mango leaves and set it on the fire with water for boiling rice for a sacred meal. (செ.அக.).

[உலை + கட்டு.]

உலைகொதி-த்தல் *ulai-kodi-*, 4. செ.கு.வி. (v.i.) ***சோறு சமைத்தற்குரிய நீர் கொதிப்புறுதல்;*** to boil, as water in a pot, when rice should be put in for cooking. (செ.அக.).

[உலை + கொதி-த்தல்.]

உலைச்சல் *ulaiccal*, பெ. (n.) ***அலைகை;*** trouble, vexation, harassment. அதிலே மெத்த உலைச்சல். (செ.அக.).

[உலை → உலைத்தல் → உலைச்சல்.]

உலைத்தண்ணீர் *ulai-t-tannīr*, பெ. (n.) 1. ***காய்ந்த இரும்பைத் தோய்க்கும் நீர்;*** water used by the smith at his forge for dipping hot iron. (W.) 2. ***சோறு சமைத்தற்குக் கொதிக்க வைக்கும் நீர்;*** water in a pot. set over the fire for boiling rice. (செ.அக.).

[உலை + தண்ணீர்.]

உலைத்துருத்தி *ulai-t-turutti*, பெ. (n.) 1. ***கொல்லுலையிலுள்ள நெருப்பூதுந் துருத்தி*** (திவா.); smith's bellows. (செ.அக.).

[உலை + துருத்தி.]

உலைந்தபழம் *ulainda-palam*, பெ. (n.) ***அளிந்தபழம்*** (வின்.); overripe fruit. (செ.அக.).

[உலைந்த + பழம்.]

உலைநீர் *ulai-nīr*, பெ. (n.) ***உலைத்தண்ணீர்*** பார்க்க; see *ulai-t-tannīr*. (செ.அக.).

[உல் → உலை + நீர்.]

உலைப்பாடு *ulai-p-pāḍu,* பெ. (n.) ***மிக்க நடுக்கம்;*** great excitement. "உலைப்பாடே படத்தழுவி" (தேவா. 1109,8). (செ.அக.).

[உல் → உலை + பாடு]

உலைப்பு[1] *ulaippu,* பெ. (n.) 1. ***வருந்துகை*** (திவா.); troubling, vexing, harassing. 2. ***முறியடிக்கை;*** putting to rout. (W.) (செ.அக.).

[உல் → உலை² → உலைப்பு.]

உலைப்பு[2] *ulaippu,* பெ. (n.) ***அழிவு;*** destruction, eradication, extirpation. "உலைப்புறுவன வதினுவந்து தோய்நர்க்கே" (தணிகைப்பு. அகத்.29). (செ.அக.).

[உலை → உலைப்பு.]

உலைமுகம் *ulai-mugam,* பெ. (n.) 1. ***கொல்லனுலை யிடம்;*** central part of a smith's forge. (W.) 2. ***கொல்லனுலை வாயில்;*** the fire in the furnace in the smith's workshop. (செ.அக.).

[உல் → உலை + முகம்.]

உலைமூக்கு *ulai-mūkku,* பெ. (n.) ***கொல்லுலையில் துருத்தி வைக்கும் துளை*** (பிங்.); hole in a forge in which the bellows are inserted. (செ.அக.).

[உல் → உலை + மூக்கு.]

உலைமூட்டு-தல் *ulai-mūṭṭu-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***உலை வைத்து நெருப்புமூட்டுதல்;*** to set a pot of water over the fire for cooking. 'உலை மூட்டினா லுண்டுலகு'. 2. ***மூன்று கற்களை வைத்து உலை கூட்டுதல்;*** to put three stones together to form an ulai. (செ.அக.).

க. ஒலெ கொத்திசு (நெருப்பு மூட்டுதல்).

[உலை + மூட்டு.]

உலைமூடி *ulai-mūḍi,* பெ. (n.) ***உலைப்பானையின் மேல்மூடி;*** lid placed over a pot of water set on the fire. ஊர்வாயை மூட வுலைமூடி யில்லை.(உ.வ.).

[உல் → உலை + மூடி. மூடு → மூடி.]

உலையேற்று-தல் *ulai-y-ēṟṟu-,* 6. செ.கு.வி. (v.i.) ***சமையல் செய்வதற்கு உலைப்பானையை அடுப்பில் வைத்தல்;*** to set a pot of water on the fire for boiling rice. "தமக்கென் றுலையேற்றார்" (ஆசாரக். 40). (செ.அக.).

[உலை + ஏற்று.]

உலைவு *ulaivu,* பெ. (n.) 1. ***நடுக்கம்*** (சூடா.); tremor, trembling. 2. ***கலக்கம்;*** tribulation, uneasiness. "உலைவுறு சைசவத்துடன்" (ஞானவா. வைராக். 88.). 3. ***அழிவு;*** ruin, destruction. 4. ***தோல்வி;*** rout, defeat. "தெவ்வ ருலைவிடத் தார்த்து" (பெரும்பாண். 419) 5. ***அலைவு;*** agitation, trouble, vexation. (W.) 6. ***வறுமை;*** poverty, indigence. "உயங்குபடர் வருத்தமு முலைவு நோக்கி" (புறநா. 150.4). 7. ***ஊக்கக் குறைவு;*** languor, weariness. "உலைவின்றித் தாழா துஞற்றுபவர்" (குறள். 620). (செ.அக.).

ம. உலவு; க. உலெக; தெ. உலுகு.

[உல் → உலை → உலைவு.]

உலைவை-த்தல் *ulai-vai-,* 4. செ.கு.வி. (v.i.) ***உலை யேற்று*** பார்க்க; see *ulai-y-ēṟu.*

[உலை + வை.]

உலொட்டை *ulottai,* பெ. (n.) ***சொட்டைப் பேச்சு*** (யாழ். அக.); slanderous talk. அந்த லொட்டைப் பேச்செல் லாம் எனக்குப் பிடிக்காது (கொங். வ.).

[உலுட்டை → உலொட்டை = உருள்கின்ற, பிறழ்கின்ற பேச்சு, நிலையில்லாத பேச்சு, பொய்யுரை.]

உலொடலொடெனல் *uloḍa-loḍenal,* பெ. (n.) ***ஒரு வகை யொலிக்குறிப்பு;*** onom. expr. signifies rattling sound. (ஆ.அக.).

[உலுடல் + உலுடல் + எனல் - லொடலொட எனல் எனத் திரிந்தது. உலுடல் → உலுட்டை + பேச்சு. இது இக்காலத்தில் லொடலொட்டைப்பேச்சு எனத் திரிபுற்றது.]

உலொடுக்கு *uloḍukku,* பெ. (n.) 1. ***ஒலிக்குறிப்பு;*** onom. expr. signifies rattling sound. 2. ***வெறுப்பு;*** disgust. (ஆ.அக.).

[உலொடு → உலொடுக்கு. 'உலொடு' ஓர் ஒலிக்குறிப்பு. நொடுக்கு பார்க்க; see noḍukku.]

உவ் *uv,* சு. பெ. (pron.) ***உவை;*** they, those things in between or above. "உவ்வு மெவ்வயி னோவு நீயே" (பரிபா. 2. 58).

க. உவ. (இடைப்பட்ட நிலையில் இருப்போன்.)

[உ → உவ்.]

உவ்வி *uvvi,* பெ. (n.) 1. ***வரிவகை*** (T.A.S.iii, 32); a customary due. (செ.அக.). 2. ***தலை;*** head. (சா.அக.).

[உ → உவ்வி.]

உவ்விடம் *uvviḍam,* பெ. (n.) ***அவ்விடத்திற்கும் இவ் விடத்திற்கும் இடைப்பட்டது;*** intermediate place, in between proximity and distance.

[உ → உவ் + இடம்.]

உவ்வு[1]**-தல்** *uvvu-,* 6. செ.கு.வி. (v.i.) ***விரும்புதல்;*** to like, desire.

[உ → உவ் → உவ்வு. (பொருந்து.).]

உவ்வு[2]**-தல்** *uvvu-,* 6 செ.கு.வி. (v.i.) 1. ***முளைத்தல்;*** to sprout. 2. ***தழைத்தல்;*** to foliate.

[உவ் → உவ்வு.]

உவ்வு[3] *uvvu,* பெ. (n.) 1. ***தவம்*** (யாழ்.அக.); penance (செ.அக.). 2. ***வெள்ளுவா அல்லது காருவா;*** full moon or new moon. (சேரநா.).

ம. உவ்வு.

[உவவு → உவ்வு = நிறைவு, மகிழ்வு.]

உவ[1]-த்தல் *uva-*, 3. செ.கு.வி. (v.i.) 1. ***மகிழ்தல்*** (திருமுருகு.1); to be glad, to rejoice, to be delighted. 2. ***பிரியமுடையதாதல்;*** to be pleased with, to approve of, like. அவருக்கு வந்த செய்கை. 3. ***உள்ளத்தாற் பொருந்துதல்;*** to be agreed. 4. ***பொருந்துதல்;*** to be joined. 5. ***ஒத்தல்;*** to be resembled.

ம. உவக்கு; க., கோத. ஒக், ஒக்ய (புணர்தலின் மிகுவிருப்பம்.); தெ. உவ்வி, உவ்வாயி (மகிழ்ச்சி).

[உவ்வு → உவ → உவ-த்தல்.]

உவ[2]-த்தல் *uva-*, 3. செ.குன்றாவி. (v.t.) ***விரும்புதல்;*** to be pleased with, to approve of, like.

[உவ்வு[1] → உவ.]

உவக்காண் *uva-k-kāṉ* இடை. (int.) ***உங்கே பார்;*** behold, see where you are. "உவக்காண்.. வரிக்கச்சினனே" (ஐங்குறு. 206).

[உவ் → உவ + காண்.]

உவகை *uvagai*, பெ. (n.) 1. ***மகிழ்ச்சி;*** joy, gladness, delight. "நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்தின்" (குறள், 304). 2. ***அன்பு;*** love, fondness. "அச்சமு முவகையு மெச்ச மின்றி" (தொல். பொருள். 91). 3. ***காமம்;*** sexual desire; amorous passion. "உவகை யாசையா லுள்ளழிந்து" (பாரத. வேத். 11). 4. ***இன்பச் சுவை*** (சிருங்கார ரசம்.) (திருக்கோ.1. உரை); sentiment of love.

ம. உவ்வி; தெ. உவ்வி, உவ்வாயி.

[உவ் → உவ்வு → உவ → உவகை.]

உவகைக்கண்ணீர் *uvagai-k-kaṇṇīr*, பெ. (n.) ***மகிழ்ச்சிக் கண்ணீர்;*** tears of joy. "அழுகைக் கண்ணீர் போல உவகைக் கண்ணீர் வீழ்வதுண்டு" (தொல். பொருள். 253. உரை).

[உவ → உவகை + கண்ணீர்.]

உவகைக்கலுழ்ச்சி *uvagai-k-kaluḻcci*, பெ. (n.) ***வாட்புண் மிகுந்த கணவனைக் கண்டு மனைவி மகிழ்ச்சிக் கண்ணீர் சிந்தும் புறத்துறை.*** (பு.வெ.7,25); (puṟap.) theme of a wife's shedding tears of exultation on seeing her warrior husband lying sorely wounded by the sword in battle. (செ.அக.).

[உவ → உவகை + கலுழ்ச்சி.]

உவகைச்சொல் *uvagai-c-col*, பெ. (n.) ***முகமன்;*** kind and polite words, as to a visitor; congratulation, felicitation (W.)

[உவ → உவகை + சொல்.]

உவகைப்பறை *uvagai-p-paṟai*, பெ. (n.) ***மகிழ்ச்சியைக் குறிக்கும் பறை*** (திவா.); drum used to be beaten on occasions of joy.

[உவ → உவகை + பறை.]

உவச்சக்காணி *uvacca-k-kāṇi*, பெ. (n.) ***உவச்சனுக்குக் கோயிற் கொட்டுழியத்திற்காக விடப்படும் மானியம்*** (கல்வெட்டு); lands granted rent-free to a person of the uvaccan caste for service as a temple drummer (Insc.).

[உவச்சு + காணி. உவச்சுத்தொழில் செய்வோர்க்காகத் தரப்பட்ட காணி.]

உவச்சவரி *uvaccavari*, பெ. (n.) ***உவச்சரிடமிருந்து வாங்கும் வரி*** (S.I.I.i, 81); tax collected from uvaccar.

[உவச்சு + வரி.]

உவச்சன் *uvaccaṉ*, பெ. (n.) 1. ***பூசகக் குடியினன்*** (நன். 144. மயிலை.); member of a caste of temple drummers and pūjāris of Kāḷi. 2. ***ஆசிரியன்;*** teacher. 3. ***மத்தளம் கொட்டியவாறு பாடியாடும் கூத்தன்;*** dancer who beats drum and sings simultaneously.

ம. உவச்சன் க. ஒவச, ஒச.

[உவச்சு → உவச்சன். உவச்சு = மத்தளம். மத்தளம் கொட்டிய வாறு ஆடிக்கொண்டே பாடும் பாணர் இனத்தினன். வயிரியர் என்னும் கூத்தர் குலத்தினன்.]

உவச்சு *uvaccu*, பெ. (n.) ***மத்தளம்;*** drum. "உவச்சும் பறையும் கொட்டக் கடவதல்லன்" (S.I.I.vii. 450). (செ.அக.).

[உவ → உவச்சு = மகிழ்ச்சியை மிகுவிக்கும் பறை.]

உவட்சி *uvaṭci*, பெ. (n.) 1. ***துவளுகை;*** flexibility. 2. ***அசைப்பு*** (ஆ.அ.க.); litheness.

[உவள் + சி - உவட்சி. உவள் = துவளுதல்; தளர்ந்து அசைதலும், ஆடுதலுமாம்.]

உவட்டி-த்தல் *uvaṭṭi-*, 4. செ.குன்றாவி. (v.t.) ***அருவருத்தல்;*** to nauseate, loathe. (J.)

[உவள் → உவட்டு → உவட்டி → உவட்டித்தல்.]

உவட்டிப்பு *uvaṭṭippu*, பெ. (n.) **உவட்டி** பார்க்க; see *uvaṭṭi*. (செ.அக.).

[உவள் → உவட்டு → உவட்டி → உவட்டிப்பு.]

உவட்டு[1]-தல் *uvaṭṭu-*, 5. செ.கு.வி. (v.i.) 1. ***வெறுப்புறுதல்;*** to loathe abominate, recoil from. "மாய வாழ்க்கையி லூனமே யிருத்தலென் றுவட்டினோர்களும்" (அருட்பா, குடும்ப. 18). 2. ***தெவிட்டுதல்;*** to satiate, surfeit. "உவட்டாத பேரின்பமான சுகவாரியினை" (தாயு. சின்மயா. 2). 3. ***மிகுதல்;*** to increase. மயலுவட்டி... கதமொடு பிளிறும்" (கல்லா. 20.37). 4. ***புரளுதல்*** (ஆ.அக.); to roll.

ம. உவட்டுக; க. உகி (துப்பு), ஒகெ (மேலெழு); து. உச்சியுனி (துப்பு); தெ. உமியு (துப்பு), உகி (துப்பு).

[உவள் → உவட்டு. உவள் = தவறுதல், அசைதல், தளர்த்தல், வெறுப்புறல்.]

உவட்டு[2] *uvaṭṭu,* பெ. (n.) 1. ***குமட்டுகை (வின்.);*** nausea. 2. ***பெருக்கு;*** increasing, overflowing as from a fountain. "மதநதி யுவட்டின்" (கல்லா. கணபதி.). (செ.அக.).

[உவள் → உவட்டு.]

உவட்டுமண் *uvaṭṭuman,* பெ. (n.) ***சவுட்டு மண்;*** fuller's earth. i.e. soil impregnated with soda. (செ.அக.).

[உவள் → உவட்டு + மண். உவள் = உவர்ப்பு.]

உவட்டெடு-த்தல் *uvaṭṭeḍu-,* 4. செ.கு.வி. (v.i.) ***பெருக்கெடுத்தல்.*** to swell, as a river. "உவட்டெடுத் தொழு கருவி" (தணிகைப்பு. வீராட்ட. 76). (செ.அக.).

[உவள் → உவட்டு = பொங்குதல், மிகுதல், பெருக்கெடுத்தல். உவட்டு + எடு.]

உவடு *uvaḍu,* பெ. (n.) ***உவட்டுநிலம்*** பார்க்க; see *uvaṭṭunilam.*

[உவள் → உவடு. இச்சொல் திரவிட மொழியில் சவடு → சவுடு எனவும் சவள் → சவுளு எனவும் திரிந்துவிட்டது.]

உவண் *uvaṇ,* கு.வி.எ. (adv.) ***மேலிடம்.*** (சீவக. 2853); upper-place, place above. (செ.அக.).

[உவள் → உவண்.]

உவணக்கொடியோன் *uvaṇa-k-koḍiyōṉ,* பெ. (n.) ***திருமால்;*** Visnu, who has the white-headed kite on his banner.

[உவண் → உவணம் + கொடியோன்.]

உவணம் *uvaṇam,* பெ. (n.) 1. ***கருடன்;*** white-headed kite. "சிறையுவண மூர்ந்தாய்" (திவ். இயற். 1,22). 2. ***கழுகு*** (திவா.); vulture. 3. ***உயர்ச்சி;*** excellence. (செ.அக.).

[உவண் → உவணம் = உயரத்தில் பறப்பது.]

உவணமுயர்த்தோன் *uvaṇamuyarttōṉ,* பெ. (n.) ***உவணக்கொடியோன்*** பார்க்க; see *uvaṇa-k-koḍiyōṉ.*

[உவணம் + உயர்த்தோன்.]

உவணர் *uvaṇar,* பெ. (n.) ***கருடர்;*** garudas, a race of demigods. "உவணரோ டியக்கர்" (கந்தபு. அயனைச் சிறைநீ. 2). (செ.அக.).

[உவணம் → உவணர்.]

உவணவூர்தி *uvaṇa-vūrdi,* பெ. (n.) ***உவணக் கொடியோன்*** பார்க்க. (தணிகைப்பு. அகத். 370); see *uvaṇa-k-koḍiyōṉ.* (செ.அக.).

[உவணம் + ஊர்தி.]

உவணன் *uvaṇaṉ,* பெ. (n.) ***கருடன்*** (தி.வா.); white-headed kite. (செ.அக.).

[உவணம் → உவணன்.]

உவணி *uvaṇi,* பெ. (n.) ***வாள்*** (தி.வா.); sword.

ம. உவணி.

[உவள் → உவளி → உவணி.]

உவணை *uvaṇai,* பெ. (n.) ***மேலுலகம்;*** svarga, the celestial region. "ஆகநீத் துவணைமே லுறைந்தான்" (சேதுபு. விதூம. 54). (செ.அக.).

[உவண் → உவணை.]

உவதி *uvadi,* பெ. (n.) ***இளம்பெண்;*** young woman. (செ.அக.).

[உவ்வு → உவவு = நிறைவு. உவவி → உவதி. நிறைபருவம் எய்தியவள். உவதி → Skt. yuvati.]

உவதை *uvadai,* பெ. (n.) ***பேரருவி*** (சூடா.); high waterfall. (செ.அக.).

[உவ்வு → உவவு = நிறைவு. உவவு → உவதை = நிறைந்து பெருகும் ஆறு.]

உவப்பு[1] *uvappu,* பெ. (n.) 1. ***மகிழ்ச்சி*** (தொல். சொல். 306); joy, delight, rapture. 2. ***பொலிவு*** (திவா.); prosperity, luxuriance, fertility. 3. ***விருப்பம்;*** desire, wish. "உவப்பொடு தவப்பாந்தையி னிவர்ந்தன்றி" (வைராக். தீப. 18). 4. ***அன்பு;*** love, affection. (சேரநா.) (செ.அக.).

[உவ்வு → உவ → உவப்பு.]

உவப்பு[2] *uvappu,* பெ. (n.) ***உயரம்*** (பிங்.); height. (செ.அக.).

ம. உவப்பு.

[உ = உயரம். உ → உவ → உவப்பு.]

உவமச்சொல் *uvama-c-col,* பெ. (n.) ***உவமவுருபு*** பார்க்க. (சீவக. 2490, உரை.); see *uvama-v-urubu.* (செ.அக.).

[உவ் → உவ்வு → உவ → உவமம் + சொல்.]

உவமத்தொகை *uvama-t-togai,* பெ. (n.) ***உவமைத் தொகை*** பார்க்க; see *uvamai-t-togai.* (செ.அக.).

[உவ்வு → உவ → உவமம் + தொகை.]

உவமப்பொரு *uvama-p-poru,* பெ. (n.) ***ஒன்றை ஒப்பாகக் கூறும் உவமை*** (தொல். சொல். 78, உரை.); comparison based on exact likeness, opp. to உறழ்பொரு. (செ.அக.).

[உவமம் + பொரு. பொரு = ஒப்பு.]

உவமப்போலி *uvama-p-pōli,* பெ. (n.) ***உள்ளுறையுவமம்*** (தொல். பொருள். 299); a variety of simile. (செ.அக.).

[உவமம் + போலி.]

உவமம் *uvamam,* பெ. (n.) ***உவமை*** (தொல். பொருள். 276); comparison. (செ.அக.).

[உவ → உவமம்.]

உவமவளவை *uvama-v-aḷavai,* பெ. (n.) ***ஒப்பளவை*** (குறள், 253, உரை.); (Log.) analogy recognition of likeness, one of six *piramāṇam.* (செ.அக.).

[உவமம் + அளவை.]

உவமவாசகம் *uvamavāšagam,* பெ. (n.) ***உவமவுருபு*** பார்க்க. (சீவக. 10, உரை.); see *uvama-v-urubu.* (செ.அக.)

[உவமம் + வாசகம்.]

உவமவுருபு *uvama-v-urubu,* பெ. (n.) ***உவமையைக் குறிக்கும் உருபு.*** (தொல். பொருள். 286, உரை); sign of comparison. (செ.அக.).

[உவமம் + உருபு.]

உவமன்¹ *uvamaṉ,* பெ. (n.) ***ஊமன்;*** dumb person. "உரைத்தக்கா லுவமனே யொக்கும்" (தேவா. 351, 1). (செ.அக.).

[உவமன் → ஊமன். பிறர் பேசக் கேட்டுத் தான் பேச இயலாமை யால் நகைமுகம் காட்டி உவந்து இருப்பவன்.]

உவமன்² *uvamaṉ,* பெ. (n.) ***உவமை;*** comparison. "உவமனி லிறந்தன" (திருவாச. 5, 39). (செ.அக.).

[உவமை → உவமன்.]

உவமானம் *uvamāṉam,* பெ. (n.) ***உவமம்*** பார்க்க; see *uvamam.* "மருவுநே ருவமானம் வகுத்திட" (சேதுபு. இராமதீ. 36).

[உவமை → உவமானம்.]

உவமானி-த்தல் *uvamāṉi-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***உவமி-த்தல்*** பார்க்க; see *uvami-.* (செ.அக.).

[உவ → உவமானம் → உவமானி → உவமானி-த்தல். (வே.க. 39)*]*

உவமி-த்தல் *uvami-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***ஒப்புக்கூறு தல்*** (கந்தரல. 9); to liken, compare. (செ.அக.).

[உவமை → உவமி (வ.மொ.வ. 96.). ஒ.நோ: ஒருமை → ஒருமி.]

உவமியம் *uvamiyam,* பெ. (n.) ***உவமிக்கப்படும் பொருள்;*** thing that is compared with.

[உவ → உவமி → உவமியம்.]

உவமேயப்பொருள் *uvamēya-p-poruḷ,* பெ. (n.) ***உவமி யம்*** பார்க்க. (சி.போ. பாயி. சிற்.); see *uvamiyam.* (செ.அக.).

[உவமியம் → உவமேயம் + பொருள்.]

உவமேயம் *uvamēyam,* பெ. (n.) ***உவமியம்*** பார்க்க; see *uvamiyam.*

[உவமியம் → உவமேயம்.]

உவமை *uvamai,* பெ. (n.) 1. ***ஒப்பு*** (தி.வா.); resemblance, similarity. 2. ***உவமையணி*** (தண்டி. 29.); simile. 3. ***ஒட்டணியாகக் கூறப்படும் அறநெறிகள்;*** parable. (chr.). (செ.அக.).

[உ → உவ் → உவ → உவமை.]

மகிழ்ச்சிக்கு விருப்பமும் விருப்பத்திற்கு மனப் பொருத்தமுங் காரணமாம். நாட, விழைய, வீழ என்னும் உவம உருபுகள் விருப்பக் கருத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. உவமை என்னும் சொல் விருப்பப் பொருளை உணர்த்துவது மட்டுமின்றி ஒப்புமைப் பொருளை இயல்பாகக் கொண்டும் உள்ளது. உவமித்தல் = ஒப்பாக்குதல், ஒப்பாகக் கொள்ளுதல், ஒப்பிடுதல். ஆளப் பெற்ற வடிவம் உவமம் என்பதே. உவமை என்னுஞ் சொல் வடமொழியில் உபமா என்று திரியும். அதை உப + மா என்று பிரித்து இருசொற் கூட்டாக்கி, ஒத்த அளவு என்று பொருள் கூறுவர். உப = உடன். மா = அளவு. தமிழில். உவமை என்பது 'உவ' என்னும் முதனிலையும் 'மை' என்னும் ஈறுங்கொண்ட ஒரு சொல்லே. இருக்கு வேதத்தில், உபமா என்பது கூட்டுச்சொல்லாயிருந்து முன் சொல்லிற் பொருள் சிறந்து, அளத்தல், பங்கிடுதல், அளித்தல் என்று பொருள்பட்ட தாகத் தெரிகின்றது. சதபத பிரமாணம், மகாபாரதம் முதலிய பின்னூல்களில் அது தமிழ்த் தொடர்பினால் ஒப்புமைப் பொருள் பெற்றுவிட்டது. ஒப்பு, ஒப்புப் பொருள் என இருகூறு கொண்டது உவமை என்னும் அணி. ஒப்பு உவமம் என்றும் ஒப்புப்பொருள் என்றும் தமிழிற் சொல்லப் பெறும். வடமொழி யாளர் பிற்காலத்தில் பிரமாண(ம்) பிரமேய(ம்) என்னும் முறையில் உவமத்துக்கும் பொருளுக்கும் உபமான உபமேய என்னும் சொல்லிணையை ஆக்கிக் கொண்டனர். இதிலும் மான என்பது, அளவு குறித்த மானம் என்னும் தென் சொல்லே. (வ.மொ.வ. 96).

உவமைத்தொகை *uvamai-t-togai,* பெ. (n.) ***உவமை யுருபு தொக்க தொகை;*** (Gram.) elliptical compound in which the sign of comparison is understood, as in மதிமுகம். (செ.அக.).

[உவமை + தொகை.]

உவமையணி *uvamai-y-aṇi,* பெ. (n.) ***இரண்டு பொருள் களுக்கிடையே ஒப்புமையை விளங்கச் சொல்லும் அணிவகை;*** simile.

[உவமை + அணி.]

உவமையாகுபெயர் *uvamai-y-āgupeyar,* பெ. (n.) ***உவமையான பொருளின் பெயர் உரிய பொருளுக்கு ஆகிவருவது*** (நன் 290. உரை); a figure of speech in which the thing compared stands for the subject of comparison as in மயில் வந்தாள். (செ.அக.).

உவமையின்மை *uvamai-y-iṉmai,* பெ. (n.) ***இறைவன் எண்குணத்தொன்று*** (பிங்.); incomparableness, transcendence, one of Iṟaivaṉ - eṇkuṇam. (செ.அக.).

[உவமை + இன்மை.]

உவர்¹-த்தல் *uvar-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***உப்புக்கரித்தல்;*** to taste saltish, to brackish, as a mineral salt. 2. ***துவர்த்தல்*** (சங்.அக.); to taste astringent. (செ.அக.).

[உவள் → உவர்.]

உவர்²-த்தல் *uvar-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***அருவருத்தல்;*** to dislike, abhor, feel aversion to, loathe.

[உவள் → உவர்.]

உவர்[3] *uvar,* பெ. (n.) 1. ***உப்புச்சுவை;*** saltishness, brackishness, the taste of any kind of salt, acid or alkaline substance. "உவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்" (நாலடி. 263). 2. ***உப்பு;*** salt. "கறிக்கு வேண்டுமுவர் முதலமைந்த நல்கி" (கந்தபு. வில்வல.வதை. 17). 3. ***களர்நிலம்;*** brackish soil. 4. ***உவர்மண்;*** fuller's earth, crude carbonate of soda. "உவரு மாப்பியு முறுத்து" (காஞ்சிப்பு. கழுவாய்ப். 268). 5. ***கடல்;*** sea. "வரை நிரை கிடந்த திரையுவர் புகுந்து" (கல்லா. 15,22). 6. ***இனிமை;*** pleasantness. "வீங்குவர்க் கவவினீங்கல் செல்லேம்" (நற். 52). (செ.அக.).

ம. உவர்; **க.** ஒகர்; **து.** உகரு; **தெ.** ஒகரு, வகரு; **கொண்.** உவ்வோரிக; **கோண்.** சௌவ்வர்; **கூ.** சாரு; **குவி.** காரு.

[உவள் → உவர்.]

உவர்க்கடல் *uvar-k-kaḍal,* பெ. (n.) ***உப்புக் கடல்;*** salt sea. "உவர்க்கடலன்ன செல்வருமுளரே" (நன். 268, மயிலை.). (செ.அக.).

ம. உவர்கடல்.

[உவர் + கடல்.]

உவர்க்கம் *uvarkkam,* பெ. (n.) ***கடற்கரை;*** seashore. "உவர்க்கத் தொரோவுதவிச் சேர்ப்பன்" (திணைமாலை. 62). (செ.அக.).

[உவர் + அகம்-உவரகம் → உவர்க்கம் (கொ.வ.)]

உவர்க்கல் *uvar-k-kal,* பெ. (n.) ***சவர்க்காரம்;*** a hard concretion found in the soil of fuller's earth.

[உவர் + கல்.]

உவர்க்களம் *uvar-k-kaḷam,* பெ. (n.) 1. ***களர் நிலம்*** (பிங்.); saltish land. 2. ***உப்பளம்*** (திவா.); salt-pans, land where salt is formed. (செ.அக.).

[உவர் + களம்.]

உவர்க்காரம்[1] *uvar-k-kāram,* பெ. (n.) ***உவர்நிலம்*** பார்க்க; see *uvar-nilam.* (செ.அக.).

உவர்க்காரம்[2] *uvar-k-kāram,* பெ. (n.) ***சவர்க்காரம்*** (வின்.); soap.

ம. உவர்காரம்.

[உவர் + காரம்.]

உவர்காலி *uvar-kāli,* பெ. (n.) ***உப்புநீரில் கிடக்கும் விருப்பமுள்ள, எருமை அல்லது மாடு;*** buffalo, cows that prefer to lie in salt water.

ம. உவர்காலி.

[உவர் + காலி.]

உவர்ச்சங்கம் *uvar-c-caṅgam,* பெ. (n.) ***முட்சங்கு*** (மலை.); mistletoe berry thorn. (செ.அக.).

உவர்ச்சாரநீர் *uvar-c-cāranīr,* பெ. (n.) ***பூ நீறு;*** the essence or the salt derived from the soil of fuller's earth.

[உவர்ச்சாரம் + நீர்.]

உவர்ச்சாரம் *uvar-c-cāram,* பெ. (n.) ***உவருப்பு;*** fuller's earth. (செ.அக.).

[உவர்க்காரம் - உவர்ச்சாரம்.]

உவர்த்தரை *uvar-t-tarai,* பெ. (n.) ***களர் நிலம்*** (பிங்.); saline soil.

[உவர் + தரை.]

உவர்நிலம் *uvar-nilam,* பெ. (n.) ***உவர்த்தரை*** பார்க்க; see *uvar-t-tarai.* (செ.அக.).

ம. உவர்நிலம்.

[உவர் + நிலம்.]

உவர்நீர் *uvar-nīr,* பெ. (n.) ***உப்புநீர்*** (பிங்.); salt water, brackish water. (செ.அக.).

[உவர் + நீர். உவர் → உவர்ப்பு → உப்பு.]

உவர்ப்பில்லாமை *uvarppillāmai,* பெ. (n.) ***கைப்பில்லாமை;*** freshness as opposed to saltness in water. (செ.அக.).

[உவர்ப்பு + இல்லாமை.]

உவர்ப்பு[1] *uvarppu,* பெ. (n.) 1. ***உப்புச்சுவை;*** saltishness. 2. ***துவர்ப்பு;*** astringency. (W.) 3. ***இகழ்ச்சி*** (சூடா.); insult, contempt. 4. ***வெறுப்பு;*** dislike, aversion. "இவற்றி னுவர்ப்புத் தோன்றி" (சி.போ.பா. அவையடக்கம், பாசுபதம்). 5. ***அவாவின்மை*** (திவா.); absence of desire, suppression of passion. (செ.அக.).

ம. உவர்ப்பு; **க., து.** ஒகர்; **தெ.** ஒகரு.

[உவர் → உவர்ப்பு.]

உவர்ப்பு[2] *uvarppu,* பெ. (n.) ***உயிரால் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளுள் இனி நுகரக் கிடந்த வினைகளின் பயன்கள்*** (குறள். 350. உரை); that portion of *karma* that still remains to be experienced. (செ.அக.).

[உவர் → உவர்ப்பு.]

உவர்மண் *uvar-maṇ,* பெ. (n.) 1. ***களர்நிலம்;*** saline-soil. 2. ***உவர்மண்;*** fuller's earth, crude carbonate of soda. (செ.அக.).

ம. உவர்மண்ணு.

[உவள் → உவர் + மண்.]

உவர்மண்ணுப்பு *uvar-maṇṇuppu,* பெ. (n.) ***உவர்மண் நிலத்திலுள்ள*** (சோடா) ***உப்பு;*** carbonate of soda found in fuller's soil. (செ.அக.).

[உவர்மண் + உப்பு.]

உவரகம் *uvaragam,* பெ. (n.) ***உவர்மண்*** (அக.நி.); saline earth.

[உவர் → உவரகம்.]

உவராகம் *uva-rāgam,* பெ. (n.) ***கோள் மறைப்பு*** (கிரகணம்); eclipse of the sun or moon. "உவராக் மாயிரத்துக் கொப்பாம்" (சேதுபு. சேதுபல. 78).

[உவவு + அறுகம் = உவவறுகம் - உவறாகம் → உவராகம். (கொ.வ.)]

உவரி[1] *uvari,* பெ. (n.) 1. ***உப்புநீர்;*** brackish water. "மலைசார்ந்து முப்பீண்டுவரி பிறத்தலால்" (நாலடி, 245). 2. ***சிறுநீர்*** (பிங்.); urine. 3. ***கடல்;*** sea. "உலகுசூ ழுவரி" (கம்பரா. ஊர்தே. 15).

ம. உவரி.

[உவர் → உவரி.]

உவரி[2] *uvari,* பெ. (n.) ***மகளிர் விளையாட்டு;*** women's game. (செ.அக.).

[உவர் → உவரி = கடற்கரை மணலில் விளையாடும் விளையாட் டாகலாம்.]

உவரிக்கெண்டை *uvari-k-kendai,* பெ. (n.) ***மீன்வகையு ளொன்று*** (ஆ. அக.); a kind of fish.

[உவரி + கெண்டை.]



உவரிக்கெண்டை

உவரிநீர் *uvari-nīr,* பெ. (n.) ***கடல் நீர்;*** sea-water, salt-water.

ம. உவர்வெள்ளம்.

[உவர் → உவரி + நீர்.]

உவருப்பு *uvaruppu,* பெ. (n.) ***பூ நீருப்பு; வழலையுப்பு;*** an efflorescent salt collected from the soil of fuller's earth much valued in the Tamil medical science. (செ.அக.).

ம. உவருப்பு.

[உவர் + உப்பு.]

உவரை *uvarai,* பெ. (n.) ***பயிர் எழும்பிய விளைநிலம்*** (ஆ. அக.); cultivated land with crop.

[உவர் → உவரை.]

உவல்[1] *uval,* பெ. (n.) ***பள்ளம்;*** depression.

[உவ் → உவ → உவல்.]

உவல்[2] *uval,* பெ. (n.) 1. ***தழை;*** twigs and sprays. "பாசுவ லிட்ட புன்காற் பந்தர்." (புறநா. 262) 2. ***சருகு;*** dried leaves. "கானவ னுவல்சுடு கமழ்புகை" (நற். 282). (செ.அக.).

[உவ்வு → உவ்வல் → உவல்.]

உவலை[1] *uvalai,* பெ. (n.) 1. ***தழை;*** twigs and sprays. "உவலை சூடி யுருத்துவரு மலிர்நிறை" (பதிற்றுப். 28,12). 2. ***சருகு*** (அகநா. 21); dried leaves. 3. ***இழிவு;*** meanness. "சிறு மனிச ருவலை யாக்கை." (திவ். திரு வாய். 1, 5, 8). 4. ***பொய்*** (ஆ.அக.); falsehood, lie. "உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்" (திரு வாச. திருத்தாள். 17). (செ.அக.).

[உவல் → உவலை.]

உவலை[2] *uvalai,* பெ. (n.) ***ஓட்டை;*** hole, hallow.

[உல் → உவ் → உவலை.]

உவலைக்கூவல் *uvalai-k-kūval,* பெ. (n.) ***தழைமூடிய கிணறு;*** well covered by plants.

[உவலை + கூவல்.]

உவவனம் *uva-vanam,* பெ. (n.) ***பூங்கா;*** grove, park. "உவவன மருங்கினவ் வுரைசா றெய்வதம்" (மணிமே. பதி. 45). (செ.அக.).

[உவ்வு → உவவு (மகிழ்வு) → உவ + வனம்.]

உவவு[1] *uvavu,* பெ. (n.) 1. ***உவகை, உவப்பு;*** joy, love, desire, great pleasure, fondness. 2. ***கொடை;*** charity, liberality. 3. ***மிகுமகிழ்ச்சி;*** gladness. (சேரநா.).

ம. உவவி, உவ்வாயி.

[உவ்வு → உவ → உவவு.]

உவவு[2] *uvavu,* பெ. (n.) 1. ***மிகு உவப்பு;*** great pleasure, gladness. "உவவுபொன் றருகென." (விநாயகபு. 54.12). 2. ***உவா;*** full moon and new moon. "உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை" (புறநா. 3.1). 3. ***தவம்*** (பிங்.); religious austerity. (செ.அக.).

ம. உவவு.

[உவ்வு → உவ → உவவு.]

உவள்[1] *uval,* சு.பெ. (demons.pron.) ***முன் நிற்பவள்;*** she who is yonder. "படையுவள் கண் காண்மின்" (பரிபா. 11,123). (செ.அக.).

க. உவள்.

[உ → உவள்.]

உவள்(ளு)[2]**-தல்** *uval-,* 15. செ.கு.வி. (v.i.) 1. ***துவளு தல்*** (சூடா.); to quiver; be unable to support a weight, as the poplar or the asp. 2. ***அதிர்தல்;*** to quake, as the earth. "கடல் நில முவளுற" (பிரமோத். 4,46). 3. ***பரத்தல்;*** to spread, extend in all directions. "உவள்தரு மறையினொடு" (கம்பரா. திருவவ. 127). (செ.அக.).

[உவ → உவள்.]

உவளகம் *uvalagam,* பெ. (n.) 1. ***அரண்மனையின் உட்புறம்;*** zenana, interior part of a mansion set apart for women. "உவளகந் தனதாக வொடுங்கினான்" (சீவக. 243). 2. ***சிறைச்சாலை;*** prison. "பல்லமரரை யுவளகந் தன்னி லிருத்தினாயென" (கந்தபு. அவைபுகு. 98). 3.

ஒருபக்கம் (சீவக. 243. உரை); one side. 4. **மதில்** (திவா.); rampart. 5. **மனைவாயில்** (பிங்.); gateway, entrance. 6. **இடைச்சேரி** (பிங்.); hamlet of herds men. 7. **பள்ளம்** (பிங்.); hollow depression in the ground. 8. **நீர்நிலை** (பிங்.); tank, lake. 9. **அகழி;** trench, fosse. "உவளகங் கண்ணுற்றுவர்க் கடலி தென" (குமர. பிர. திருவாரூ. 32). 10. **அகலம்** (பிங்.); expanse, wideness. 11. **உப்பளம்** (பிங்.); salt-pan. 12. **பிரிகை** (பிங்.); separating, parting. (செ.அக.).

[உவல் → உவள் → உவளகம். (வே.க. 91).]

உவளம் *uvaḷam,* பெ. (n.) 1. **சோறு;** boiled rice. 2. **யானைக் கவளம்;** elephant fodder. (செ.அக.).

[உவல் → உவள் → உவளம். உவல் = தழை, உணவு.]

உவளி-த்தல் *uvaḷi-,* 4. செ.குன்றாவி. (v.t.) **தூய்மை செய்தல்** (பிங்.); to cleanse, purify. (செ.அக.).

[உவல் → உவள் → உவளி-த்தல் = தழைகளால் தரையைக் கூட்டித் துப்புரவு செய்தல்.]

உவற்று-தல் *uvaṟṟu-,* 6 செ.குன்றாவி. (v.t.) **சுரக்கச் செய்தல்;** to cause to swell up, to flow. "ஒண்செங் குருதி யுவற்றியுண் டருந்துபு" (அகநா. 3).

[உவறு → உவற்று → உவற்று-தல்.]

உவறு-தல் *uvaṟu-,* 6. செ.கு.வி. (v.i.) **சுரத்தல்;** to spring up, well up. "உவறுநீ ருழக்கி" (சீவக. 966).

[உவல் → உவறு.]

உவன் *uvaṉ,* சு.பெ. (demons.pron.). 1. **முன்நிற்பவன்;** he who is yonder. "பார்த்தானுவன்" (பரிபா. 12,55). 2. **நடுவர்;** he who takes an intermediate position; arbitrator. "பிராப்தமென்று உவரருளிச் செய்ததற்கு" (ரஹஸ்ய. 262). (செ.அக.).

[உ → உவன்.]

உவன்றி *uvaṉṟi,* பெ. (n.) **நீர்நிலை;** fountain-head, head of water. 'வாய்த்தலைக்கும் உவன்றிக்குமாகப் பங்கொன் றும்' (S.I.I.ii. 220).

[உவல் → உவன்றி.]

உவன்றிசெய்[1]-தல் *uvaṉṟi-šey-,* 1. செ.குன்றாவி. (v.t.) **நீர்நிலையுண்டாக்குதல்;** to make or construct a head of water. (S.I.I.ii. 521).

[உவன்றி + செய்.]

உவனி-த்தல் *uvaṉi-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. **தூய்மை செய்தல்** (பிங்.; Ms.); to clean, as the bow before shooting. 2. **எய்யத் தொடங்குதல்;** to begin to shoot an arrow from the bow. "வில்லன்றே யுவனிப்பாரும்" (சீவக. 2179). 3. **ஈரமாதல்;** to grow moist when exposed to dew; to become damp, as the ground, clothes, furniture. (J.) (செ.அக.).

[உவல் → உவலி → உவனி.]

உவனிப்பு *uvaṉippu,* பெ. (n.) **ஈரம்;** moisture, dampness, humidity. (J.) (செ.அக.).

[உவல் → உவலிப்பு → உவனிப்பு.]

உவா[1] *uvā,* பெ. (n.) 1. **இளமை;** youthfulness, juvenility. "வந்தன வெண்ணரை போயிற் றுவா" (திருநூற். 95). 2. **இளையோன்** (பிங்.); young man, youth, lad. 3. **முழுநிலவு;** fullmoon. "உவாமதி கிடக்குங் குண்டு கடல்" (கல்லா. 41,25). 4. **காருவா;** new moon. "பூரணை யுவாவென் றளவு சேர்திதி" (பிரமோத். 18,18).

[உவவு → உவா.]

உவா[2] *uvā,* பெ. (n.) 1. **கடல்** (பிங்.); sea. 2. **யானை;** elephant that is 60 years old. "உவாவணி யூர்ந்தாயு நீ" (கலித். 97). 3. **உகாமரம்** (L); sand paper-tree.

[உவவு → உவா.]

உவாஏர் *uvā-ēr,* பெ. (n.) 1. **உழவுத்தொழில் தொடங்கு வதற்கு அடையாளமாகிய பொன்னேர் கட்டுதல்;** first ploughing of the land. 2. **பொன்னேர் கட்டுவதற்குத் தரும் கொடை;** a gift for first ploughing. (மரக்காணம் கல்வெட்டு).

[உவா = முழுநிலா. உவா + ஏர். முழுநிலா நாளில் பூட்டும் பொன்னேர்.]

உவாத்தேக்கு *uvā-t-tēkku,* பெ. (n.) **உகாமரம்;** sand paper - tree.

[உகா → உவா + தேக்கு.]

உவாந்தம் *uvāndam,* பெ. (n.) 1. **காருவா;** new moon, conjuction of sun and moon. 2. **வெள்ளுவா;** full moon, opposition of sun and moon.

[உவா + அந்தம். 'அந்தம்' சொல்லாக்க ஈறு.]

உவாமதி *uvā-madi,* பெ. (n.) **வெள்ளுவா;** full moon. "உவாமதி யுடலுரிஞ்சுதலால்" (நைடத. நகர. 8). (செ.அக.).

[உவவு → உவா + மதி.]

உவாவறுதி *uvā-v-aṟudi,* பெ. (n.) **காருவா, வெள்ளுவாக் களின் முடிவு;** end of the new or full moon when, if there is an eclipse, religious duties are to be performed. (W.) (செ.அக.).

[உவா + அறுதி.]

உவாவு-தல் *uvāvu-,* 6. செ.குன்றாவி. (v.t.) **நிறைதல்;** to fill in. "பெருமண்ணுவாவும் பேராப் பல்படை" (பெருங். உஞ்சைக். 58, 106.). (செ.அக.).

[உவவு → உவாவு.]

உவி[1]-தல் *uvi-,* 2. செ.கு.வி. (v.i.) 1. **வற்றுதல்;** to boil away, as water in a pot of rice. 2. **சாதல்;** to die in great numbers as in war or pestilence. அம்மையினால் வெகுசனம் உவிந்து போயிற்று. (செ.அக.).

[உல் → உள் → உவ் → உவி = வெதுப்புதல், சூடேற்றுதல், அவித்தல்.]

உவி²-த்தல் *uvi-,* 18. செ.குன்றாவி. (v.t.) ***அவித்தல்;*** to boil. ''சாந்த விறகி னுவித்த புன்கம்'' (புறநா. 168.11). (செ.அக.).

[உல் → உள் → உவ் → உவி = வேகச் செய்தல்.]

உவியல் *uviyal,* பெ. (n.) ***சமைத்த கறி;*** boiled dish. ''நெடுவாளைப் பல்லுவியல்'' (புறநா. 395). (செ. அக.).

[உல் → உள் → உவ் → உவி (வேகச் செய்தல்.) → உவியல்.]

உவை *uvai,* சு.பெ. (demons. pron.) ***உங்குள்ளவை*** (திவ். திருவாய் 1,1,4); they or those things that are near you, or yonder, at a distance not far off. (செ.அக.).

[உவ் → உவ → உவை. (மு.தா. 32)]

உழ¹-த்தல் *u̱la-,* 3. செ.கு.வி. (v.i.) 1. ***வருந்துதல்;*** to suffer; to experience sorrow, pain, trouble or fatigue. ''அருந்துத லின்றி யடைகட லுழந்தோன்'' (மணிமே. 16, 74). 2. ***பழகுதல்*** (சீவக. 597); to be accomplished, as in an art. 3. ***முயற்சி செய்தல்;*** to try, make an effort. ''செயற்றலை நின் றுழப்பவர்கள்'' (தணிகைப்பு. நாட்டு. 130). (சா.அக.).

[உலை → உழை → உழை-த்தல் → உழ-த்தல்.]

உழ²-த்தல் *u̱la-,* 3. செ.குன்றாவி. (v.t.) ***வெல்லுதல்;*** to conquer. ''பாடகச் சீறடி பரற்பகை யுழவா'' (சிலப். 10,52).

[உலை → உழை → உழ.]

உழக்கால் *u̱lakkāl,* பெ. (n.) ***உழவுக்கோல்;*** ox-goad.

[உழவுகோல் → உழவுக்கோல் → உழக்கால். (கொ.வ.)]

உழக்காழாக்கு *u̱lak-k-ālākku,* பெ. (n.) ***காலேயரைக்காற் படி;*** $^{3}/_{8}$ of a measure. (சா.அக.).

[உழக்கு + ஆழாக்கு.]

உழக்கு¹-தல் *u̱lakku-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***கலக்குதல்;*** to disturb, stir up. ''பேரகழியி னுழக்கிய கரிகள்'' (நைடத. நகர. 2). 2. ***மிதித்தல்;*** to trample down, tread upon. ''அவரைக் கழலவுழக்கி'' (கலித். 106,18). 3. ***கொன்றுதிரிதல்;*** to ravage, devastate. ''சினஞ் சிறந்து களனுழக்கவும்'' (மதுரைக். 48). 4. ***உழுதல்*** (பிங்.); to plough. (செ.அக.).

[உழ → உழக்கு.]

உழக்கு²-தல் *u̱lakku-,* 7. செ.கு.வி. (v.i.) 1. ***விளையாடு தல்;*** to play. ''உரவுத்திரை யுழக்கியும்'' (பட்டினப். 101). 2. ***பழகுதல்*** (நாநார்த்த.); to be used or accustomed to.

[உழ → உழக்கு.]

உழக்கு³ *u̱lakku,* பெ. (n.) 1. ***காற்படி;*** measure of capacity, 2 *ollocks* = $^{1}/_{4}$ of a measure. ''உழக்கேயுண்டு படைத்தீட்டி'' (தேவா. 1154,4). 2. ***கவறிட் டுருட்டும் உழக்கு;*** dice box. ''பவள வுழக்கிற் கோதை புரள'' (சீவக. 927). (செ.அக.).

ம. உழக்கு.

[உழ → உழக்கு. உழக்குதல் = ஆழ்த்தி முகந்தெடுத்தல்.]

உழக்குருட்டு-தல் *u̱lakkuruṭṭu-,* 15. செ.கு.வி. (v.i.) ***கவறாடுதல்*** (சூதாடுதல்); to indulge in gambling at dice. (Loc.). (செ.அக.).

[உழக்கு + உருட்டு-தல்.]

உழக்கோல் *u̱la-k-kōl,* பெ. (n.) ***தாற்றுக்கோல்;*** goad used to drive oxen when ploughing, oxgoad. இல்லை யாகில் உழக்கோலாலே தகர்க்கிறோம். (ஈடு 6,4,5). (செ.அக.).

[உழவு + கோல் - உழக்கோல்.]

உழச்சாரம் *u̱laccāram,* பெ. (n.) ***சவுட்டுப்பு;*** impure carbonate of soda. (சா.அக.).

[உழல் + காரம் - உழக்காரம் → உழச்சாரம்.]

உழச்சியர் *u̱lacciyar,* பெ. (n.) ***மருதநிலப் பெண்கள்;*** women of agricultural tract.

[உழத்தி → உழச்சி + அர்.]

உழத்தி *u̱latti,* பெ. (n.) ***உழவர்குடிப் பெண்*** (தொல். பொருள். 20, உரை); woman of the u̱lavan, i.e ploughman caste. (செ.அக.).

[உழு → உழவன் → உழத்தி.]

உழத்திப்பாட்டு *u̱latti-p-pāṭṭu,* பெ. (n.) ***உழவுச் செய்தி களைக் கூறும் ஒரு சிற்றிலக்கியம்*** (பன்னிருபா. 333); species of agricultural poem. (செ.அக.).

[உழத்தி + பாட்டு.]

உழப்பம்¹ *u̱lappam,* பெ. (n.) ***வேலை;*** work. (S.I.I.vii. 47). (செ.அக.).

[உழு → உழப்பம் = உழவு வேலை.]

உழப்பம்² *u̱lappam,* பெ. (n.) ***குழப்பம்;*** confusion. (Loc.). (செ.அக.).

[உலப்பு → உலப்பம் → உழப்பம்.]

உழப்பறையர் *u̱lappar̠aiyar,* பெ. (n.) ***உழுது வாழும் பறையர்;*** a sub-division of Paraiyas who earn their livelihood by serving as ploughmen. ''உழப்பறைய ரிருக்கும் கீழைச் சேரியும்'' (S.I.I.ii.). (செ.அக.).

[உழு + பறையர் = உழுபறையர் → உழப்பறையர்.]

உழப்பன் *u̱lappan̠,* பெ. (n.) ***போலியாக அறம் பேசு வோன்;*** quibbler (J.). (செ.அக.).

[உலப்பு → உலப்பன் → உழப்பன்.]

உழப்பு¹-தல் *u̱lappu-,* 6. செ.குன்றாவி. (v.t.) 1. ***சொற்களால் மழுப்புதல்;*** to confuse, disconcert, embroil, mix altogether, nonplus. ''உழப்பிப்போட்டாய் குறியைக் குழப்பிப் போட்டாய்'' (குற்றா. குற 73,2). 2. ***போலியாக எதிராடல்;*** to sophisticate. 3. ***காலங்கடத் துதல்;*** to delay, protract. ''பரிசி லுழப்புங் குரிசிலை''

(பன்னிருபா. 353). 4. *பழக்குதல்* (யாழ். அக.); to practise. (செ.அக.).

[உலப்பு → உழப்பு.]

உழப்பு[2] *ulappu*, பெ. (n.) 1. ***வருத்தம்;*** suffering. "சென்ற தேஎத் துழப்புநனி விளக்கி" (தொல்.பொருள். 146). 2. ***மனக் கலக்கம்;*** mental disquiet. "உள்ளமறி வாயுழப் பறிவாய்" (தாயு. பராபரக். 33). 3. ***முயற்சி*** (திவா.); effort, close application, exertion. 4. ***பழக்கம்;*** practice, habit. "உறுபடை யுழப்பினை யுணர்வுறாததோர் சிறு வரை" (கந்தபு. சிங்க. 210) 5. ***வலிமை*** (சூடா.); strength. 6. ***கைத்தொழில்;*** handicraft. (செ.அக.).

ம. உழப்பு.

[உலப்பு → உழப்பு.]

உழப்பெருது *ulapperudu*, பெ. (n.) ***உழுமெருது;*** team oxen. "உழப்பெருது பொன்றப் புடைத்துழுது" (சீவக. 2783).

[உழு → உழப்பு + எருது.]

உழுபுலவஞ்சி *ulapulavañji*, பெ. (n.) ***பகைவர் நாட்டைச் சுட்டெரித்தலைக் கூறும் புறத்துறை*** (பு.வெ. 3,14); theme of describing the setting fire to an enemy's country.

[உல் → உல (= எரிதல், எரித்தல்). உழ + புலம் + வஞ்சி=உழபுல வஞ்சி.]

உழம்பல் *ulambal*, பெ. (n.) ***குமுறல்;*** uttering indistinct sounds. (சா.அக.).

[உலம்பு → உழம்பு → உழம்பல்.]

உழம்பு-தல் *ulambu-*, 6. செ.கு.வி. (v.t.) 1. ***பலவோசை கலந்தொலித்தல்*** (திவா.); to make a confused hullabloo of many noises. 2. ***குழம்புதல்;*** to be disturbed, disconcerted, thrown into disorder. (W.) (செ.அக.)

[உலப்பு → உழப்பு → உழம்பு.]

உழமண் *ula-man-*, பெ. (n.) ***உழைமண்*** பார்க்க; see *ulaiman*. (செ.அக.).

[உழைமண் → உழமண்.]

உழமண்காரம் *ula-mankāram*, பெ. (n.) ***உவர் மண்காரம்;*** a solution prepared from fuller's earth - mortant. (சா.அக.).

[உழைமண் → உழமண் + காரம்.]

உழமண்ணுப்பு *ula-mannuppu*, பெ. (n.) ***உவர் மண்ணி லிருந் தெடுக்கு முப்பு;*** an impure carbonate of soda. (சா.அக.).

[உழை → உழ + மண் + உப்பு.]

உழல்(லு)-தல் *ulal(lu)-*, 13. செ.கு.வி. (v.i.) 1. ***அசைதல்;*** to oscillate, swing, to be in motion. "சிறுகாற்றுழலும்" (கல்லா. கண.). 2. ***சுழலுதல்*** (பிங்.); to whirl, revolve. 3. ***அலைதல்;*** to wander, roam about. "ஆட்பார்த் துழலு மருளில் கூற்றுண்மை யால்" (நாலடி, 20). 4. ***நிலை கெடுதல்;*** to lose condition or status, become poor. (Loc.). அந்தக் குடி உழன்று போயிற்று. 5. ***துன்புறுதல்;*** to suffer*]*

[உல் → உள் → உழ் → உழ → உழல் → உழல்(லு)-தல்.]

உழல்மான் *ulalmān*, பெ. (n.) ***ஒருவகை மான்;*** a kind of deer. (சேரநா.).

ம. உழல்மான், உழமான்.

[உழை → உழல் + மான்.]

உழலல் *ulalal*, பெ. (n.) 1. ***மனஞ்சுழலல்;*** restlessness of mind. 2. ***வருத்தம்;*** being in a state of suffering and distress, as the soul is in connection with birth. 3. ***பிறந்திளைத்தல்;*** the sufferings undergone in the evolution in the births.

[உலல் → உழல் → உழலல்.]

உழலாத்தி *ullātti*, பெ. (n.) ***ஊழலாத்தி*** பார்க்க; see *ūlalātti*. (சா.அக.).

[ஊழல் → உழல் + ஆத்தி.]

உழலை[1] *ulalai*, பெ. (n.) 1. ***செக்கு முதலியவற்றின் உழலைமரம்;*** cylindrical beam of wood, in an oil or sugarcane press, by the revolution of which the oil or juice is expressed (W.). 2. ***குறுக்குமரம்;*** horizontal bar of wood in a doorway or across a road. "உழலை மரத்தைப் போற்றொட்டன" (கலித். 106). 3. ***கணைய மரம்;*** cross bar. "வேழம்... உழலையும் பாய்ந்திறுத்து" (பு.வெ. 12, வென்றிப். 8). 4. ***உழலைமரம்*** பார்க்க; see *ulalaimaram*. 5. ***மிகுந்த நீர்வேட்கை*** (தைலவ. தைல. 58); great thirst. (செ.அக.).

[உழல் → உழலை.]

உழலை[2] *ulalai*, பெ. (n) ***வெப்புறுத்தம்;*** burning sensation, heat. "உழலை சேர் காட்டு வேனிற்கு" (விருத் தாசலபு. சிவபூசாவிதி. 6).

[உழல் → உழலை.]

உழலைக்கழிச்சல் *ulalai-k-kaliccal*, பெ. (n.) ***வயிற் றுளைச்சல் வகை;*** a kind of dysentery, accompanied by thirst. பித்தசுரம் மற்றும் உழலைக் கழிச்சல் விடும் (தஞ்.சரசு. 111,81). (செ.அக.).

[உழல் → உழலை + கழிச்சல்.]

உழலைத்தடி *ulalai-t-tadi*, பெ. (n.) ***உழலை*** பார்க்க; see *ulalai*. உழலைத் தடி கோத்தாற் போலே யிருக்கிற எலும்புகள் (ஈடு.). (செ.அக.).

[உழல் → உழலை + தடி.]

உழலைப்படு-தல் *ulalai-p-padu-*, 20. செ.குன்றாவி. (v.t.) 1. ***பகலவன் வெப்பக் கொடுமையினால் தாக்கப் படுதல்;*** to be affected by sun-stroke, to be scorched with great heat. 2. ***நீர் வேட்கையால் வருந்துதல்;*** to be tormented with thirst.

[உழல் → உழலை + படு.]

உழலைப்பிணி *u̱lalai-p-piṉi,* பெ. (n.) *நா வறட்சி, கடுநீர்வேட்கை முதலிய குணங்களோடு கூடிய நோய்;* any disease attended with parched tongue and intense thirst. (சா.அக.).

[உழல் → உழலை + பிணி.]

உழலைமரம் *u̱lalai-maram,* பெ. (n.) *மாட்டின் கழுத்துக் கட்டை;* block of wood suspended from the neck of a cow to prevent it from straying.

[உழலை + மரம்.]

உழலைமாடு *u̱lalai-mādu,* பெ. (n.) *ஓடிப்போகாதபடி கழுத்தில் உழலை மரங்கட்டியுள்ள மாடு;* cow from whose neck a block of wood is suspended so as to impede its running and thus prevent its straying away. (செ.அக.).

[உழல் → உழலை + மாடு.]

உழவட்டம் *u̱lavaṯṯam,* பெ. (n.) *பெருக்கற் கணக்கு வகை;* a process in multiplication (t.c.m. 2, ii, 473). (செ.அக.).

[உழலை + வட்டம் = உழலைவட்டம் → உழவட்டம்.]

உழவடை[1]-த்தல் *u̱lavaḍai-,* 2. செ.கு.வி. (v.i.) *உழுவதற்காக நிலத்தை ஒப்படைத்தல்;* to make over to another a piece of land for purposes of cultivation (W.). (செ.அக.).

[உழவு + அடை.]

உழவடை[2] *u̱lavaḍai,* பெ. (n.) *நிலத்தின் உரிமை;* right of cultivating land. (செ.அக.).

[உழவு + அடை.]

உழவணிகம் *u̱la-vaṉigam,* பெ. (n.) *பொன்னாங்காணி;* edible plant bearing yellow flowers - Illecerbrum senssile. (சா.அக.).

உழவன் *u̱lavaṉ,* பெ. (n.) 1. *உழுபவன்;* ploughman, agriculturist. "பயந்த விளைநிலமுள்ளு முழவன்" (நாலடி, 356). 2. *மருதநிலக் களமன்* (தொல். பொருள். 20, உரை); member of the ploughing class in an agricultural tract. 3. *ஏர்மாடு;* ploughing ox. (செ.அக.).

ம. உழவன்.

[உழவு + அன்.]

உழவன்பாம்பு *u̱lavaṉ-pāmbu,* பெ. (n.) *ஒரு வகைப் பாம்பு;* a kind of snake.



உழவன் பாம்பு

உழவாரக்குருவி *u̱lavāra-k-kuruvi,* பெ. (n.) *ஒருவகைக் குருவி;* a kind of bird.



உழவாரக்குருவி

உழவாரப்படை *u̱lavāra-p-paḍai,* பெ. (n.) **உழவாரம்** பார்க்க; see *u̱lavāram.* "உழவாரப் படை கையிலுடையான்" (பதினொ. திருநாவுக். 2). (செ.அக.).

[உழு → உழவு + ஆர் + அ + படை. படை = கருவி. ஆர் + அ = ஆர = பொருந்த, சார்ந்த.]

உழவாரம் *u̱lavāram,* பெ. (n.) *புற்செதுக்குங் கருவி;* small hoe for weeding or cutting grass; weeding - spade. "கையிற்றிகழு முழவாரமுடன்" (பெரியபு. திருநாவு. 77). (செ.அக.).

ம. உழவாரம்.

[உழு → உழவு + ஆரம். உழவுத்தொழிலுக்குத் துணைபுரியும், களையெடுக்கும் கருவி.]



உழவாரம்

உழவிடை *uḻavidai,* பெ. (n.) ***உழவுநீக்கம்;*** cessation from ploughing. (W.) (சா.அக.).

[உழவு + இடை. இடை = இடைவெளி, ஓய்வு, ஒழிவு.]

உழவீரம் *uḻavīram,* பெ. (n.) ***உழுதற்குத் தக்க ஈரம்;*** condition of the ground when it has as much moisture as is needed for ploughing. (செ.அக.).

[உழவு + ஈரம்.]

உழவு[1] *uḻavu,* பெ. (n.) 1. ***உழுகை;*** ploughing. "உழந்து முழவே தலை" (குறள். 1031). 2. ***வேளாண்மை;*** agriculture, husbandry. "உழவின் மிக்க வூதியமில்லை" (பழ.).

ம. உழவு; **க.** உழ், உழமெ, உழல்; **கோத.** உக்; **துட.** உழ்வ்; **குட.** ஊள்; **து.** உர, ஊடுனி; **தெ.** துக்கி.

[உழு → உழ → உழவு.]

பழநார்வீசி *(Old Norse), ஆங்கிலோ சாக்சன் என்ற மொழிக ளில், முறையே,* erfidhi, earfodh என்ற சொற்கள் முதலாவது உழவைக் குறித்துப் பின்பு உழைப்பைக் குறித்தன வென்றும், இலத்தீனில் ars, artis என்ற சொற்கள் முதலாவது உழவைக் குறித்துப் பின்பு கலைப்பொதுப் பெயராயிற்றென்றும் அச் சொற்கட்கு மூலம் art (to plough) என்றும் முதலாவது கற்பிக்கப்பட்ட கலை உழவேயென்றும் மாக்சு முல்லர் கூறியி ருத்தல் காண்க. (ஒ.மொ. 168, 170).

உழவு[2] *uḻavu,* பெ. (n.) ***உடலுழைப்பு;*** bodily exertion. "மெய்யதுழவி னெதிர்புனன் மாறாடி" (பரிபா. 10, 103). (செ.அக.).

[உழு → உழவு.]

உழவுகட்டி *uḻavu-kaṭṭi,* பெ. (n.) ***உழவிற்பெயரும் மண்கட்டி;*** clods in a ploughed field. (செ.அக.).

[உழவு + கட்டி.]

உழவுகட்டு-தல் *uḻavu-kaṭṭu-,* பெ. (n.) 5. செ.கு.வி. (v.i.) ***முதற்சால் போதல்;*** to take the lead in ploughing so as to mark the course, as done by the head team. (J.). (செ.அக.).

[உழவு + கட்டு.]

உழவுகாடு *uḻavu-kāḍu,* பெ. (n.) ***உழவுக்கேற்ற நிலம்*** (G.Sm.D.I, ii, 43.); lands that can be ploughed and brought under cultivation opp, to கொத்துக்காடு. (செ.அக.).

[உழவு + காடு.]

உழவுகாணியாட்சி *uḻavu-kāṇi-y-āṭci,* பெ. (n.) ***நிலத்தை உழுது பயிர்செய்யும் உரிமை*** (I.M.P.NA.154.); sole right to plough and cultivate a land. (செ.அக.).

ம. உழவொற்றி.

[உழவு + காணியாட்சி.]

உழவுகுடி *uḻavu-kuḍi,* பெ. (n.) ***உழுகுடி*** பார்க்க; see *uḻukuḍi.* 'உழவுகுடி கைவினைக்கும் காசாயக் குடியிற் கொள்ளும் ' (S.I.I.v. 95.). (செ.அக.).

[உழவு + குடி.]

உழவுகுண்டை *uḻavu-kuṇḍai,* பெ. (n.) ***உழவுமாடு;*** ox trained to the plough. (செ.அக.).

[உழவு + குண்டை.]

உழவுகோல் *uḻavu-kōl,* பெ. (n.) 1. ***தாற்றுக்கோல்*** (சங். அக.); ox - goad. 2. ***குதிரை தூண்டுங் கருவி;*** horse-whip, a goad used (for driving oxen) when ploughing. கையும் உழவுகோலும் சிறுவாய்க்கயிறும் (ஈடு. 7,4,5). (செ.அக.).

[உழவு + கோல்.]

உழவுசால் *uḻavu-sāl,* பெ. (n.) ***படைச்சால்;*** furrow. "உழவு சாலணி வீதி தோறூர்ந்து" (இரகு. நாட்டுப். 13).(செ.அக.).

ம. உழவுசால்.

[உழவு + சால்.]

உழவுபாட்டம் *uḻavu-pāṭṭam,* பெ. (n.) ***ஒருவகை நில வுடைமை;*** name of a land-tenure. (சேரநா.).

ம. உழவுபாட்டம்.

[உழவு + பாட்டம்.]

உழவுமழை *uḻavu-maḻai,* பெ. (n.) ***உழுதற்கு வேண்டிய பருவமழை;*** rain in sufficient quantity, to moisten the ground, and at the proper season, for ploughing and sowing. (செ.அக.).

[உழவு + மழை.]

உழவெருது *uḻaveruḍu,* பெ. (n.) ***உழுங்காளை;*** ploughing ox.

[உழவு + எருது.]

உழவை *uḻavai,* பெ. (n.) ***ஒருவகை மீன்;*** a green sea-fish, a brown fresh water fish.

ம. உழவ.

*[உளுவை → உழுவை → உழவை. **உளுவை** பார்க்க; see uḻuvai.]*

உழவோன் *uḻavōṉ,* பெ. (n.) ***உழவன்;*** ploughman. (செ.அக.).

[உழவு → உழவோன்.]

உழற்சி *uḻaṟci,* பெ. (n.) 1. ***சுழற்சி;*** whirling, revolving. 2. ***அலைகை;*** roaming, wandering. 3. ***வருத்தம்;*** suffering, distress. (செ.அக.).

[உழல் → உழற்சி.]

உழற்றல் *uḻaṟṟal,* பெ. (n.) ***நீர்வேட்கை;*** thirst. எனக்கு உழற்றலாயிருக்கிறது. (வின்.).

[உழல் → உழற்றல்.]

உழற்றி[1] *uḻaṟṟi,* பெ. (n.) 1. ***சுழற்சி;*** rolling, twisting, writhing with pain. 2. ***கடுநீர்வேட்கை;*** great thirst. (செ.அக.).

[உழல் → உழற்று → உழற்றி.]

உழற்றி[2] *uḻaṟṟi,* பெ. (n.) ***வருத்தம்;*** affliction. "பிள் ளையை இழந்தாளாக நினைத்துப் பயப்பட்ட உழற்றி யாலே" (திவ். பெரியாழ். 1,2,4 வ்யா, பக். 27). (செ.அக.).

[உழல் → உழறு → உழற்று → உழற்றி.]

உழற்று[1]**-தல்** *uḻaṟṟu-,* 6. செ.குன்றாவி. (v.t.) 1. ***அலையச் செய்தல்;*** to drive to and fro, cause to wander. என்னை யவமே யுழற்றி (திருக்கோ. 100, உரை, அவ.). 2. ***சுழற்றுதல்;*** to twist, whirl about. 3. ***வருத்தத்தோடு கழித்தல்;*** to pass tediously, as time. (J.). (செ.அக.).

ம. உழற்றுக.

[உழறு → உழற்று.]

உழற்று[2]**-தல்** *uḻaṟṟu-,* 6. செ.கு.வி. (v.i.) ***கைகால் நோவாற் புரளுதல்;*** to writhe, move the arms and legs about on account of pain.

[உழறு → உழற்று.]

உழற்று[3] *uḻaṟṟu,* பெ. (n.) ***சுழற்சி;*** whirling, revolving. "மாயை யுழற்றினிற்படு வம்பனேனை" (திருப்பு. 1052). (செ.அக.).

ம. உழற்று.

[உழறு → உழற்று.]

உழறு[1]**-தல்** *uḻaṟu-,* 6. செ.கு.வி. (v.i.) ***கலங்குதல்;*** to be disturbed. "என்னக் கண்டுழறா நெகிழ்ந்தாய்" (திவ். பெருமாள். 6,8). (செ.அக.).

ம. உழறுக.

[உழல் → உழறு-தல்.]

உழறு[2]**-தல்** *uḻaṟu-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***அலைதல்;*** to move about. "உழறலர் ஞானச்சுடர் விளக்காய்" (திவ். இயற். திருவிருத். 58). 2. ***அளைதல்;*** to mix with, play about. "திருத்துழாயிலே புக்குழறி" (திவ். இயற். திருவிருத். 74, பெரியவாச்.). 3. ***உருக்காட்டுதல்;*** to show oneself. "உழறு மேலுலகிறும்" (தக்கயாகப். 32). (செ.அக.).

[உழல் → உழறு → உழறு-தல்.]

உழன்றறு-த்தல் *uḻaṉṟaṟu-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***கடிய வேலை செய்தல்;*** to labour hard, strive with might and main. 2. ***பழகித்தேர்தல்;*** to become skilful or dexterous by practice. (செ.அக.).

[உழன்று + அறு.]

உழன்றி *uḻaṉṟi,* பெ. (n.) ***மாட்டின் கழுத்தில் மாட்டுங் கட்டை*** (சங். அக.); stick fastened under a cow's neck with a hole for the tether to play in, neck piece to prevent an ox from turning its head. (செ.அக.).

[உழல் → உழன்றி.]

உழன்றுவரு-தல் *uḻaṉṟuvaru-,* 18. செ.கு.வி. (v.i.) ***களைப்புறல்;*** to grow tired or fatigued. (சா.அக.).

[உழல் → உழன்று + வரு.]

உழாஅன் *uḻāaṉ,* பெ. (n.) ***உழவன்*** (தொல். சொல். 137, உரை); cultivator. (செ.அக.).

[உழவு → உழா + அன்.]

[உழு + அன் - உழுவன் → உழவன் என இடையில் வகர உடம்படு மெய் பெற்றுப் புணர்வது போல, உடம்படுமெய் பெறாமல் உயிரளபெடை போல் உழா + அன் உழாஅன் எனப் புணர்வதும் உண்டு. ஒ. நோ. கிழவன் → கிழாஅன்.]

உழால் *uḻāl,* பெ. (n.) 1. ***உழுகை;*** ploughing. 2. ***கிண்டுதல்;*** scratching, probing, as bees the flowers. "உழாலிற் பொலிவண்டு" (தணிகைப்பு. வள்ளி. 59). (செ.அக.).

[உழ → உழல் → உழால்.]

உழி[1]**-தல்** *uḻi-,* 2. செ.கு.வி. (v.i.) 1. ***அலைதல்;*** wander about. "உழிதலை யொழிந்துள ருமையுந் தாமுமே" (தேவா. 553,10). 2. ***வளைதல்;*** to bend. (செ.அக.).

[உல் → உள் → உளி → உழி → உழி-தல்.]

உழி[2] *uḻi,* பெ. (n.) 1. ***இடம்;*** place, site. "செல்வுழிச் செல்கயான்" (நன். 163, விருத்.). 2. ***பக்கம்*** (திவா.); side. 3. ***அகலம்; பரப்பு;*** width, area. (செ.அக.).

[உள் → உளி → உழி.]

உழி[3] *uḻi,* ***இடை.*** (part.) ***ஓர் ஏழனுருபு*** (நன். 302.); a loc. ending.

[உள் → உளி → உழி.]

உழி[4] *uḻi* கு.வி.எ. (adv.) ***அளவில்;*** when, while. "மகிழ்ந்துழி" (சிலப். 1,42).

[உள்[1] → உளி → உழி. இடப்பொருள் குறித்த பெயர்சொல் இடைச்சொல்லாயிற்று.]

உழிஞ்சில் *uḻiñjil,* பெ. (n.) 1. ***வாகை;*** sirissa. "பொரி யரை யுழிஞ்சிலும்" (சிலப். 11,76). 2. ***உன்னம்*** (திவா.); short tree with golden flowers and small leaves, the withering of which was considered a bad omen as it was believed to foreshadow trouble. (செ.அக.).

[உழி → உழிஞ்சில்.]

உழிஞ்சில்வாகை *uḻiñjil-vāgai,* பெ. (n.) ***உழிஞ்சில்*** பார்க்க; see *uḻiñjil.* (சா.அக.).

உழிஞை *uḻiñai,* பெ. (n.) 1. ***கொற்றான்*** (புறநா. 50, உரை); balloon vine, s.cl., Cardiospermum halicacabum. 2. ***சிறுபூளை*** (திவா.); a common wayside weed, Aerua lanata. 3. ***பகையரண் வளைப்போர் சூடும் மாலை;*** chaplet, balloon vine garland worn by soldiers when storming a fort. "உழிஞை முடிபுனைந்து" (பு.வெ. 6.1). 4. ***உழிஞைத் திணை*** பார்க்க (தொல். பொருள். 64); see *uḻiñai-t-tiṇai.* (செ.அக.).

ம. உழிஞ்ஞ.

[உழி → உழிஞை.]

உழிஞைத்திணை *uḻiñai-t-tiṇai,* பெ. (n.) ***பகையரண் வளைத்தலையுணர்த்துந் திணை*** (தொல். பொருள். 65); theme describing the laying siege to a fort.

[உழி → உழிஞை + திணை.]

உழிஞைமாலை *uḻiñai-mālai,* பெ. (n.) ***ஒரு சிற்றிலக்கியம்*** (தொன். 283, உரை); poem which describes the storming of a fort. (செ.அக.).

[உழிஞை + மாலை.]

உழிஞையிலக்கணம் *uḻiñai-y-ilakkaṇam,* பெ. (n.) ***வேற்று வேந்தனுடைய அரணை வென்ற வேந்தன் வளைத்தல்;*** literary theme of besieging a fort.

[உழிஞை + இலக்கணம்.]

உழிதா(தரு)-தல் *uḻitā(taru)-,* 18. செ.கு.வி. (v.t.) 1. ***அலைதல்;*** to wander about, move to and fro. "உன்மத்த மேற்கொண்டுழிதருமே" (திருவாச. 5,7). 2. ***அங்கு மிங்கு மலைதல்;*** to wander from place to place. "மண்மேல்... உழிதரக் கண்டோம்" (திவ். திருவாய். 5,2,1.). (செ.அக.).

[உழிதரு → உழிதா.]

உழு[1]-தல் *uḻu-,* 1 செ.குன்றாவி. (v.t.) 1. ***நிலத்தைக் கிளைத்தல்;*** to dig up, root up, as pigs. "உழுது மாநிலத் தேனமாகி" (தேவா. 929.9.). 2. ***நிலத்தை ஏரால் துன்னுதல்;*** to plough. "உழவருழுபடைக்கு" (நாலடி. 178). 3. ***கிண்டுதல்;*** to scratch, incise, as bees in a flower. "அறுகா லுழுமலர்" (இரகு. தசரத. 95). 4. ***மயிரைக் கோதுதல்;*** to arrange or adjust, as the hair with the fingers. "உகிரி னுழுதாங் கணிந்தாரே" (சீவக. 2692).

ம. உழுக; க. உழு; **கோத.** உக்; **துட.** உழ்வ்; **குட.** ஊழு, ஊலு, ஊள்; **து.** ஊடுனி; **தெ.** துன்னு, துனு; **நா.** உர்; **கொலா.** உர்; **குவி.** ருயிலி, லூனை; **கூ.** முவ, ருவ; **கோண்.** உரான, உழன; **பர்.** உழ், உர்; **குரு.** உயினா, உய்னா; **மால்.** உசெ.

[உல் → உளு → உழு.]

உழு[2]-தல் *uḻu-,* 1 செ.குன்றாவி. (v.t.) ***உகளுதல்*** (அக.நி.); to leap.

[உல் → உளு → உழு.]

உழு[3]-த்தல் *uḻu-,* 2. செ.கு.வி. (v.i.) ***பதனழிதல்;*** to decay, rot, putrefy. "உழுக்குமுன் விதத்தை யுண்டு" (சிவதரு. சிவதருமம. 7). (செ.அக.).

[உள் → உளு → உளு-த்தல் → உழு-த்தல்.]

உழு[4] *uḻu,* பெ. (n.) 1. ***மென்மை;*** softness. 2. ***வழவழப்பு;*** slippery soft surface.

[இல் → உல் → உள் → உளு → உழு.]

உழு[5] *uḻu,* பெ. (n.) ***பிள்ளைப்பூச்சி*** (வின்.); mud gryllus. (செ.அக.).

[இல் → உல் → உளு → உழு.]

உழுகு *uḻugu,* பெ. (n.) ***ஒழுகு*** பார்க்க; see *oḻugu.* (செ.அக.).

[ஒழுகு → உழுகு.]

உழுகுடி *uḻukuḍi,* பெ. (n.) ***உழுது பயிர் செய்வோன்.*** (S.I.I.V. 264.); ryot. (செ.அக.).

ம. உழுகுடி.

[உழு + குடி.]

உழுகை *uḻugai,* பெ. (n.) ***உழுதல்;*** ploughing.

[உழு → உழுகை.]

உழுத்தம்பொடி *uḻuttampoḍi,* பெ. (n.) ***உழுத்தமா*** பார்க்க. (சீவக. 2736, உரை); see *uḻuttamā.* (செ.அக.).

[உள் → உளு → உளுந்து → உழுந்து → உழுத்தம் + பொடி.]

உழுத்தமா *uḻuttamā,* பெ. (n.) ***உழுந்தின்மா;*** blackgram flour used for cakes. (செ.அக.).

[உழுந்து + மா - உழுந்துமா → உழுத்தமா.]

உழுத்து *uḻuttu,* பெ. (n.) ***ஓர் அணிகலன்;*** ancient ornament. "முத்தின் உழுத்து ஒன்றிற் கட்டின வயிரமூன் றும்" (S.I.I.ii, 430). (செ.அக.).

[உழுந்து → உழுத்து. நெருங்கக்கட்டிய மாலை.]

உழுதான்குடி *uḻudāṉkuḍi,* பெ. (n.) ***பழைய வரிவகை;*** tax. "இறைகுடிமை உழுதான் குடி உட்பட மற்றெப்பேர்ப் பட்டனவும்" (S.I.I.V. 141). (செ.அக.).

[உழு → உழுதான் + குடி.]

உழுதுண்பான்காணி *uḻuduṇbāṉkāṇi,* பெ. (n.) ***வரியில்லாது பயன்கொள்ளும் நிலம்,*** (P.T.L); land held free of rent. (செ.அக.).

[உழுது + உண்பான் + காணி.]

உழுதுண்போர் *uḻuduṇbōr,* பெ. (n.) ***வேளாளரில் தாமே பயிரிட்டுண்ணும் ஒருவகையாளர்*** (தொல். பொருள். 30, உரை); a division of the Vēḷāḷas who themselves cultivate the land, dist. fr. உழுவித்துண்போர். (செ.அக.).

[உழுது + உண்போர்.]

உழுதூண் *uḻudūṇ,* பெ. (n.) ***பயிர் செய்து வாழ்தல்;*** living by cultivating the land. "வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது" (தொல். பொருள். 635). (செ.அக.).

[உழுது + ஊண்.]

உழுந்து *uḻundu,* பெ. (n.) ***பயறுவகை;*** black-gram, Phaseolus mungo glaber. "நெய்யொடு மயக்கிய வுழுந் துநூற் றன்ன" (ஐங்குறு. 211). (செ.அக.).

மறுவ. மாடம், உளுந்து.

ம. உழுன்னு. **க.** உத்து; **தெ.** உத்துலு.

[இல் → உல் → உள் → உளு → உழு → உழுந்து = மென்மை அல்லது வழவழப்பானது.]

உழுந்துசோறு *uḻundu-śōṟu,* பெ. (n.) ***உழுந்துணா*** பார்க்க; see *uḻunduṇā.*

ம. உழுந்து சோறு.

[உழுந்து + சோறு.]

உழுந்துணா *uḻunduṇā,* பெ. (n.) ***உழுந்தம் பயற்றொடு கலந்தட்ட சோறு*** (பதார்த்த. 1408); preparation of food made of rice mixed with bruised black-gram and boiled together.

ம. உழுந்து சோறு.

[உழுந்து + உணா. உணவு → உணா.]

உழுநர் *uḻunar,* பெ. (n.) ***உழவர்;*** ploughmen. "கழனியுளு முநர் வெள்ளமே" (சீவக. 44). (செ.அக.).

[உழு + நர்.]

உழுநிலம் *uḻunilam,* பெ. (n.) ***உழுதற்குரிய நிலம்;*** cultivable land, arable land. (செ.அக.).

ம. உழுநிலம்.

[உழு + நிலம்.]

உழுநூல் *uḻunūl,* பெ. (n.) ***இழைநூல்; பட்டுநூல்;*** silk-thread. (செ.அக.).

ம. உழுநூல்.

[உழு[4] + நூல்.]

உழுபடை *uḻu-paḍai,* பெ. (n.) ***கலப்பை;*** plough. "உழுபடை யூன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே" (புறநா. 35.25).

[உழு + படை.]

உழுபடைச்சால் *uḻu-paḍai-c-cāl,* பெ. (n.) 1. ***கலப்பை;*** plough. 2. ***உழவுச்சால்;*** furrow.

[உழு + படை + சால்.]

உழுமகன் *uḻu-magaṉ,* பெ. (n.) ***உழவன்;*** plough-man. "உழுமகற்குக் கேடினுரை" (சிறுபஞ். 50). (செ.அக.).

[உழு + மகன்.]

உழுமுளை *uḻu-muḷai,* பெ. (n.) ***உழுமுனை*** பார்க்க; see *uḻu-muṉai.*

[உழு + முளை.]

உழுமுனை *uḻu-muṉai,* பெ. (n.) ***கலப்பைக் கூர்;*** plough - share. (Loc.). (செ.அக.).

[உழு + முனை.]



உழுமுனை

உழுவம் *uḻuvam,* பெ. (n.) ***எறும்பு;*** ant. (W). (செ.அக.).

[ஒழுகு → ஒழுகம் → உழுகம் → உழுவம்.]

உழுவல்[1] *uḻuval,* பெ. (n.) 1. ***குணம்*** (திவா.); quality, temper, disposition characteristic of a person or thing. 2. ***அன்பு;*** love. "பழுத்த-வுழுவலமரர்" (விநாயகபு. 72,54).

க. உழ்கெ.

[உல் → உழு → உழுவல்.]

உழுவல்[2] *uḻuval,* பெ. (n.) 1. ***முறை*** (நாநார்த்த.); order, regularity. 2. ***எழுமை*** (அக.நி.); seven successive births. 3. ***புணர்ச்சி*** (அ.க.நி.); sexual union. (செ.அக.).

[உழு + அல்.]

உழுவலன்பு *uḻuval-aṉbu,* பெ. (n.) ***எழுமையும் தொடர்ந்த அன்பு*** (தொல்.பொருள். 125, உரை); love, esp. sexual love persevered in with constancy through seven successive births. (செ.அக.).

[உழுவல் + அன்பு.]

உழுவளைப்பு *uḻu-vaḷaippu,* பெ. (n.) ***உழவின்-சால் வளைவு;*** turnings in ploughing. (W.) (செ.அக.).

[உழு + வளைப்பு.]

உழுவன்பு *uḻuvaṉbu,* பெ. (n.) ***உழுவலன்பு*** பார்க்க; see *uḻūval-aṉbu.*

[உழுவல் + அன்பு - உழுவலன்பு → உழுவன்பு.]

உழுவாங்கோல் *uḻuvāṅ-gōl,* பெ. (n.) ***உழவெருதைத் தூண்டுங்கோல்;*** goad for driving cattle when ploughing. (Loc.). (செ.அக.).

[உழு + ஆம் + கோல்.]

உழுவித்துண்போர் *uḻuvittuṇbōr,* பெ. (n.) ***வேளாளருள் பிறரைக் கொண்டு பயிர் செய்வித்துண்ணும் ஒரு வகையார்*** (தொல். பொருள். 30, உரை); a division of the Vēḷāḷās who are owners of the land but who cause it to be cultivated by others, dist.fr. உழுதுண்போர். (செ.அக.).

[உழு → உழுவித்து + உண்போர்.]

உழுவை[1] *uḻuvai,* பெ. (n.) 1. ***புலி;*** tiger. "உழுவை... இருந்த தொத்தான்" (சீவக. 2469). 2. ***ஒருவகை மீன்*** (சூடா.); green seafish, Gobius ornatus 3. ***நல்லதண் ணுழுவை;*** brown fresh - water fish. 4. ***குண்டல வுழுவை;*** a yellowish fish, found in fresh and back waters. 5. ***தும்பிலி;*** sea fish. (செ.அக.).

ம. உழுவ.

[உல் → உலு = எரித்தல், அழித்தல், கொல்லுதல், விழுங்குதல். உலு → உழு → உழுவை.]

உழுவை[2] *uḻuvai,* பெ. (n.) ***பெருமை*** (அக.நி.) grandeur. (செ.அக.).

[உல் → உழு → உழுவை. உல் = உயர்வு.]

உழை[1]-த்தல் *uḻai-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***முயற்சி செய்தல்;*** to labour hard, toil, drudge. "உழைத்தாலுறுதி யுண்டோதான்" (திருவாச. 33,1). 2. ***வருந்துதல்;*** to suffer hardship, to be afflicted. "வலையிற் பட்டுழைக் கின்றேற்கு" (திவ். திருமாலை, 36). (செ.அக.).

ம. உழ.

[உல் → உலை → உழை → உழை-த்தல்.]

உழை[2]-த்தல் *uḻai-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***ஈட்டுதல்;*** to earn. (J.). அவன் மாதம் பத்து உரூபா உழைக்கிறான்.

[உல் → உலை → உழை → உழை-த்தல்.]

உழை[3] *uḻai,* பெ. (n.) 1. ***பூவிதழ்;*** petal of a flower. "வாலுழை யெருக்கமும்" (கல்லா. 19). 2. ***மான்;*** deer. "உழையாடு கரதலமொன்று டையான்" (தேவா. 234,7). 3. ***ஆன்*** (நாநார்த்த.); cow.

ம. உழ.

[உழு[4] → உழை.]

உழை[4] *uḻai,* பெ. (n.) 1. ***இடம்;*** place. "உழைதங்கட் சென்றார்க்கு" (நாலடி.167). 2. ***நடுவண்*** (மத்திம) ***சுரம்*** (திவா.); fourth note of the gamut. 3. ***யாழினொரு நரம்பு*** (பிங்.); a string of the yāḻ.

[உள் → உளி → உளை → உழை.]

உழை[5] *uḻai,* இடை. (part.) ***ஓர் ஏழனுருபு*** (நன். 302); a loc. ending.

[உள் → உளி → உளை → உழை.]

உழை[6] *uḻai,* கு.வி.எ. (adv.) 1. ***பக்கத்தில்;*** by the side of. "நங் கேள்வ ருழைவந்தார்" (பு.வெ. 10,3).

[உள் → உளி → உளை → உழை.]

உழை[7] *uḻai,* பெ. (n.) 1. ***கதிரவன் மனைவியருள் ஒருத்தி;*** one of the wives of Sūrya. "உருக்கொள் சாயையு முழையும்" (பாரத. சம்பவ. 34). 2. ***வைகறை*** (சங். அக.); dawn. 3. ***வாணாசுரன் மகள்*** (சிலப். 6, 54, உரை); name of the daughter of Bāṇā. (செ.அக.).

[உல் → உலை → (வெப்பம், வைகறை) → உழை.]

உழைக்கலம் *uḻaikkalam,* பெ. (n.) ***பொன் வெள்ளி முதலியவற்றாற் செய்த ஆளும் ஏனங்கள்;*** collective term for various vessels of gold and silver which royalty takes into camp. "உயர்ந்தவுழைக் கலத்து" (பெருங். உஞ்சைக். 38, 129). (செ.அக.).

[உல் → உலை (சூடேற்றி உருக்குதல்.) → உழை + கலம்.]

உழைச்சுற்றாளன் *uḻai-c-cuṟṟāḷaṉ,* பெ. (n.) ***பக்கத்தில் நின்று ஏவல் கேட்போன்;*** personal attendant. "உழைச்சுற்றாளரைப் புகுத்துமின்" (பெருங். உஞ்சைக். 33,14.). (செ.அக.).

[உள் → உழு → உழை + சுற்றாளன்.

உழைச்செல்வான் *uḻai-c-celvāṉ,* பெ. (n.) ***நோயாளிக் குப் பக்கத்திலிருந்து மருந்து முதலியன கொடுப்ப வன்*** (குறள், 950); one who has the care of a sick person as an attendant. (செ.அக.).

[உழை + செல்வான்.]

உழைஞர் *uḻaiñar,* பெ. (n.) ***பக்கத்தில் நிற்கும் ஏவலாளர்;*** attendants.

[உழை + நர் - உழைநர் → உழைஞர்.]

உழைத்துக்கொடு-த்தல் *uḻaittu-k-koḍu-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***ஊதியம் பெற்றுக் கடன் முதலியன தீர்த்தல்;*** to earn and pay off, as one's debts. (J.). 2. ***பெற்றோர் முதலியவரைப் பேணுதல்;*** to support, as one's parents. (J.). 3. ***வீணாக உழைத்தல்.*** to labour in vain. (W.).

[உழை → உழைத்து + கொடு.]

உழைப்பறி[1]-த்தல் *uḻai-p-paṟi-,* 4. செ.கு.வி. (v.i.) ***வருந்தி முயலுதல்;*** to struggle, labour under difficulties (W.) (செ.அக.).

[உழை + பறி.]

உழைப்பறி²-த்தல் *uḻai-p-paṟi-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***சேற்றிலுழலுதல்;*** to wallow, flounder, roll in mire or in anything filthy. (W.) (செ.அக.).

[உழை + பறி.]

உழைப்பாளி *uḻaippāḷi,* பெ. (n.) ***முயற்சி செய்வோன்-ள்;*** industrious person, one who takes great pains. (செ.அக.).

மறுவ. கருவாளி, பாட்டாளி.

[உழைப்பு + ஆளி.]

உழைப்பு *uḻaippu,* பெ. (n.) 1. ***உழைப்பு;*** toil, industry, diligence. 2. ***முயற்சி;*** effort, active endeavour, exertion. 3. ***ஊதியம் பெறுதல்;*** earnings, gain, acquisition. (J.) 4. ***சுறுசுறுப்பு;*** diligence. (செ.அக.).

[உழை → உழைப்பு.]

உழைப்பேறு-தல் *uḻaippēṟu-,* 5. செ.கு.வி. (v.i.) ***செய்த் திருத்தமடைதல்;*** to improve in productivity, as the soil. (செ.அக.).

[உழைப்பு + ஏறு.]

உழைமண் *uḻai-maṇ,* பெ. (n.) ***உழமண்*** (மூ.அ.); fuller's earth. (செ.அக.).

[உழை + மண்.]

உழையர் *uḻaiyar,* பெ. (n.) 1. ***பக்கத்தவர்*** (ஐங்குறு. 12, உரை.); neighbours. 2. ***அமைச்சர்*** (சூடா.); King's counsellors. 3. ***ஏவலாளர்;*** attendants. "உழையரோடி யரசுவா வருகவென்ன" (சூளா. கலியா. 100). (செ.அக.).

[உழை → உழையர்.]

உழையவர் *uḻaiyavar,* பெ. (n.) ***உழையர்*** பார்க்க; see *uḻaiyar.* "இளங்கோவென் றுழையவர் கூற" (சீவக. 2864). (செ.அக.).

[உழை + அவர்.]

உழையன் *uḻaiyaṉ,* பெ. (n.) ***பித்த நோயாளி;*** any person suffering from the effects of biliousness or other similar disease due to the aggravated condition of bile in the system. (சா.அக.).

[உழை + அன்.]

உழையாளன் *uḻai-y-āḷaṉ,* பெ. (n.) ***வேலைக்காரன்;*** attendant. "உரைசெய்தா ரரசர்க் குழையாளரே" (யசோதர. iii, 48). (செ.அக.).

[உழை + ஆளன்.]

உழையிருந்தான் *uḻai-y-irundāṉ,* பெ. (n.) ***அமைச்சன்;*** minister of state, companion of the king. "உறுதி யுழையிருந்தான் கூறல் கடன்" (குறள், 638). (செ.அக.).

[உழை + இருந்தான்.]

உழையோர் *uḻaiyōr,* பெ. (n.) 1. ***உழையர்*** பார்க்க; see *uḻaiyar.* "உலகமன்னவ னுழையோ ராங்குளர்" (மணிமே. 3,46). 2. ***அமைச்சர்களின் நட்பாளர்*** (பிங்.); friends of the counsellors. (செ.அக.).

[உழை → உழையோர்.]

உழைவலி *uḻai-vali,* பெ. (n.) ***பக்கவலி;*** pain on the sides. (சா.அக.).

[உழை + வலி.]

உழைவு *uḻaivu,* பெ. (n.) ***யாழின் உள்ளோசை*** (திவா.); secondary sound of a string of yāḻ. (செ.அக.).

[உழை → உழைவு.]

உள்¹, *uḷ.* 1. ***இருத்தற் பொருள் குறிக்கும் குறிப்பு வினைப்பகுதி;*** base of a tenseless verb meaning. (1) 'to be', as in உள்ளேன். "I am". (2) ***உடைமைப் பொருள் குறிக்குங் குறிப்பு வினைப்பகுதி;*** to have. யான் பொருள் உள்ளேன் (செ.அக.). 2. ***வீடு;*** house.

க., ம. உள். ம. கேளியே உள்ளு (கேள்விப்பாடாகத்தான் உள்ளது). கண்டிட்டில்ல (கண்டதில்லை).

[உ → உல் → உள். உல் = பொருந்துதல், இருத்தல். பொருந்தி யுள்ளது, உள்ளது. இச்சொல் சேரநாடாகிய மலையாள நாட்டில் மட்டும் வழக்கிலுள்ளது. சோழ, பாண்டிய நாடுகளில் வழக்கில் இல்லை.]

உள்² *uḷ,* பெ. (n.) 1. ***உள்ளிடம்;*** inside, interior of a place. 2. ***மந்தணமானது;*** that which is private, secret, esoteric. உட்பூசை புறப்பூசைகள். 3. ***மனம்;*** mind, heart. "தலைகொடு வந்தானுண் மலிய" (பு.வெ. 4,12, கொளு.). 4. ***மனவெழுச்சி;*** cheer, highspirits. "உப்பிலி வெந்தைதின் றுள்ளற்று வாழ்பவே" (நாலடி, 289). 5. ***இடம்*** (திவா.); place.

[உ → உல் → உள்.]

உள்³ *uḷ,* இடை. (part). 1. ***ஏழனுருபு;*** a loc. ending. "செத்தாருள் வைக்கப்படும்" (குறள், 214). 2. ***தொழிற் பெயர் ஈறு*** (நன். 140, உரை); a vbl. noun ending, as in விக்குள்.

ம. உள்; க. உள், ஒள்; **கோத., துட.** உள்; **குட.** ஒளி; **து.** உள, ஒள; **தெ.** உல்லுமு, லோ(உள்); **கொலா.** லோபல்; **நா.** லோப்; **பர்.** ஒபெ; **கட.** உலெ; **பிரா., கோண்.** ரோன்; **குர்.** உலா; **மால்.** உலெ.

[உ → உல் → உள்.]

உள்⁴ *uḷ,* பெ. (n.) ***உள்ளான்²*** பார்க்க; see *uḷḷāṉ* "உள்ளு மூரலும்" (சிலப். 10.117).

[உல் → உள்.]

உள்⁵ *uḷ,* பெ. (n.) 1. ***மேன்மை;*** superiority. உள்மனமும் இடமும் மேலும் (ஈடு. 1,3,10). 2. ***மேல்;*** on, up.

[உ → உல் → உள்.]

உள்கடுப்பு *ul̤kaḍuppu,* பெ. (n.) 1. ***உள்வலி;*** internal pain. 2. ***உள்ளழற்சி;*** internal irritation or inflammation. (சா.அக.).

[உள் + கடுப்பு.]

உள்கரு *ul̤karu,* பெ. (n.) ***உட்கரு*** பார்க்க; see *uṭkaru.*

உள்கு[1]-தல் *ul̤gu-,* 6. செ.குன்றாவி. (v.t.) ***உள்ளு*** பார்க்க; see *ul̤l̤u.* "நின்றனையுள்கி யுள்ள முருகும் பெருங்காதல் ". (திருவாச. 5,56). (செ.அக.).

[உள் + கு.]

உள்கு[2]-தல் *ul̤gu-,* 2. செ.கு.வி. (v.i.) ***உள்ளழிதல்;*** to be disheartened, dispirited. "சிந்தையுள்கி" (இரகு. அய னுதய. 20). (செ.அக.).

[உல் → உள் + கு. (வே.க. 79.)]

உள்குருந்து *ul̤-kurundu,* பெ. (n.) ***குருத்து போல் மென்மையாக உள்ள மனம்;*** the soft mind (சேரநா.).

ம. உள்குருந்து.

[உள் + குருந்து.]

உள்படு-தல் *ul̤-paḍu-,* 20. செ.கு.வி. (v.i.) 1. ***மன மொப்பி நடத்தல்;*** to engage in or take to willingly. "கருமமு முள்படா" (நாலடி, 250). 2. ***அறிதல்;*** to know understand. "ஒன்றிய சுடர்நிலை யுள்படுவோரும் " (பரிபா. 19,47). (செ.அக.).

[உள் + படு.]

உள்பற்று *ul̤-paṟṟu,* பெ. (n.) 1. ***வரவு;*** income. 2. ***விளைச்சல்*** (உற்பத்தி.); harvest.

[உள் + பற்று. → பற்று = வரவு.]

உள்பாடன் *ul̤-pāḍaṉ,* பெ. (n.) ***கோயிற்பணிகளுள் ஒன்று;*** an office in the temple. (T.A.S. iii, 166.) (செ.அக.).

[உள்படு → உள்பாடு + அன்.]

உள்பொருள் *ul̤-poruḷ,* பெ. (n.) ***உள்ள பொருள்;*** reality, that which is, opp. to இல்பொருள். "உள் பொருளெனப் பட்ட பிரபஞ்சம்" (சி.போ. 1, 2, சிற்.).

ம. உள்பொருள்.

[உள் + பொருள், 'உள்' இருத்தல் பொருள்படும் வினைச் சொல்லாதலின் உட்பொருள் எனத் திரியாதாயிற்று. உள் பொருள்-வினைத் தொகை.]

உள்மருந்து *ul̤-marundu,* பெ. (n.) ***உள்ளுக்குக் கொள் ளும் மருந்து;*** medicine taken internally, opp.to வெளிம ருந்து. (செ.அக.).

[உள் + மருந்து.]

உள்மனை *ul̤-manai,* பெ. (n.) ***ஊர்க்குடியிருப்பு மனை;*** house site within a village, opp. to புறமனை. (C.G.). (செ.அக.).

[உள் + மனை.]

உள்மானம் *ul̤-māṉam,* பெ. (n.) ***சிற்றெல்லை;*** inferior limit. "இந்த அஸ்தைர்யத்திலும் உள்மானம் புறமான மொழிய நித்யராயிருப்பா ரொருவருமில்லை" (திவ். திருச்சந். 66, வ்யா. பக். 191). (செ.அக.).

[உள் + மானம்.]

உள்வட்டம் *ul̤-vaṭṭam,* பெ. (n.) ***நாணயமாற்றிற் பெறும் ஊதியம்;*** agio, premium in exchange of coins or other money for difference in value. (W.) (செ.அக.).

[உள் + வட்டம்.]

உள்வணக்கம் *ul̤-vaṇakkam,* பெ. (n.) ***உள்மன வழி பாடு;*** worship in spirit. (செ.அக.).

[உள் + வணக்கம்.]

உள்வந்தை *ul̤-vandai,* பெ. (n.) ***உள்ளுறுப்புகளிலுண் டாகும் தூக்குணி;*** internal parasites.

[உள் + வந்தை.]

உள்வயிரம் *ul̤-vayiram,* பெ. (n.) 1. ***அகக்காழ்;*** firmness of wood in the centre of an exogenous tree, core of a tree. 2. ***செற்றம்;*** malice, internal hatred. (செ.அக.).

[உள் + வயிரம்.]

உள்வயிரிப்பு *ul̤-vayirippu,* பெ. (n.) 1. ***புண்ணின் உரத்த உட்பாகம்;*** internal hardness of a boil (W.) 2. ***கை யிருப்பு;*** property possessed, money in hand. (J.) (செ.அக.).

[உள் + வயிரிப்பு.]

உள்வரி[1] *ul̤-vari,* பெ. (n.) ***மாற்றுப்புனைவு;*** disguise. "உள்வரிக் கொண்ட... மணிமேகலை" (மணிமே. 19, 29). (செ.அக.).

[உள் + வரி. வரி = வரைதல். மேற்கொள்ளல், புனைதல். உ → உள்[5] = மேல்]

உள்வரி[2] *ul̤vari,* பெ. (n.) ***சிற்றாயம்;*** petty tax or cess. "உள்வரி உடையார் திருவேகம்ப முடையாற்கு... இறுப் பதாக" (S.I.iv, 284). (செ.அக.).

ம. உள்வரி.

[உள் + வரி. உள் = குறைவு, சிறிது.]

உள்வலி *ul̤-vali,* பெ. (n.) 1. ***புண்புரை முதலியவைகளி னுட்பக்கத்தில் காணும் வலி;*** inward pain as in an abscess etc. 2. ***உள்ளுறுப்பின் வலி;*** pain in the internal organ. (சா.அக.).

[உள் + வலி.]

உள்வழக்கு *ul̤-vaḻakku,* பெ. (n.) ***உள்ளதையுள்ள தென்கை;*** assertion of that which is or exists. "உள்வழக்குளதுண்டென்கை" (சி.சி.பர. சௌத். 10.). (செ.அக.).

[உள் + வழக்கு. உள்ளதாகிய வழக்கு, உண்மையைச் சொல்லு தல்.]

உள்வளையல் *u|-valaiyal,* பெ. (n.) ***உள்வளைவு*** பார்க்க; see *u|vala|ivu.*

[உள் + வளையல். வளையல் = வளைவு.]

உள்வளைவு *u|-valaivu,* பெ. (n.) ***உட்கவிவு;*** inward curvature, concavity. (செ.அக.).

[உள் + வளைவு.]

உள்வறட்சி *u|-varatci,* பெ. (n.) 1. ***உடம்பினுள்ளுறுப்புகள் தாக்கப்படுவதா லேற்படும் ஒருவகை இசிவு;*** apoplexy arising from the affection of internal organs. 2. ***இருமலினாலும், வெட்டைச் சூட்டினாலு முண்டாகும் வறட்சி;*** dryness due to cough as experienced in asthma, consumption, venereal heat etc. (சா.அக.).

[உள் + வறட்சி.]

உள்வாங்கு-தல் *u|-vāṅgu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***உள்ளுக்கிழுத்தல்;*** to draw in, as the head; to withdraw; to absorb, as moisture. 2. ***படைத்தல்;*** to create. "ஒருநான்று நீயுயர்த்தி யுள்வாங்கி" (திவ். இயற். 4, 5). (செ.அக.).

[உள் + வாங்கு.]

உள்வாய் *u|-vāy,* பெ. (n.) 1. ***வாயினுட்புறம்;*** inner-part of the mouth. "பிள்ளை யுள்வாய்ச் செரீஇய" (குறுந். 92.). 2. ***ஏரியினுட்பக்கம்;*** inside of a lake. (செ.அக.).

[உள் + வாய்.]

உள்வாயில் *u|-vāyil,* பெ. (n.) ***வீட்டின் வெளிவாயிலை அடுத்து உள்ளே இருக்கும் வாயில்;*** inner door.

[உள் + வாயில்.]

உள்வாரம் *u|-vāram,* பெ. (n.) 1. ***உள்மனச் சார்பு;*** secret leaning, inclination. 2. ***மேல்வாரம்;*** owner's share in the produce of a field. (செ.அக.).

[உள் + வாரம்.]

உள்விழு[1]-தல் *u|-vi|u-,* 2. செ.கு.வி. (v.i.) ***உள்ளாதல்;*** to fall in with, join a party.

[உள் + விழு.]

உள்விழு[2]-தல் *u|-vi|u-,* 2. செ.குன்றாவி. (v.t.) ***பயன் கருதி நண்பராதல்;*** to assume the appearance of friendship for a sinister object, to pretend kindness.

[உள் + விழு.]

உள்வினை *u|-vinai,* பெ. (n.) 1. ***உட்பகை;*** malice, evil in the heart long cherished. (W.) 2. ***ஊழ்வினை;*** inherited fate. (செ.அக.).

[உள் + வினை.]

உள்வீக்கம் *u|-vīkkam,* பெ. (n.) ***உடம்பினுள் உண்டாகும் வீக்கம்;*** internal swelling. (சா.அக.).

[உள் + வீக்கம்.]

உள்வீடு *u|-vīdu,* பெ. (n.) ***உள்ளின் உள்ளறை;*** room within a room, closet. (செ.அக.).

[உள் + வீடு.]

உள்வீழ்-தல் *u|-vī|-,* 2. செ.கு.வி. (v.i.) ***குறைதல்;*** to decrease, diminish, retrench, reduce. "வழங்குவ துள் வீழ்ந்தக் கண்ணும்" (குறள், 955).

[உள் + வீழ்.]

உள்வெட்டு *u|-vettu,* பெ. (n.) 1. ***உரையாணியின் உள்வெட்டுக்குறி;*** marks on a testing piece of gold, for trying the fineness of other pieces, from eight degrees and upwards. 2. ***உயர்ந்த மாற்றுப் பொன்;*** gold of a high degree of fineness. 3. ***மரத்தின் உட்பகுதிப் பலகை;*** inner boards or planks from a log exclusive of the slabs. (செ.அக.).

ம. உள்வெட்டு.

[உள் + வெட்டு.]

உள்வெண்டயம் *u|-vendayam,* பெ. (n.) 1. ***அரசரேறும் குதிரைக்குக் காலில் அணிவிக்கும் பித்தளைக் கழல்;*** tinkling ring of brass put as an ornament on the feet of horses mounted by kings. 2. ***பொதிமாட்டின் முதுகில் வைக்கும் அணை;*** pad placed between a load and the back of a pack-ox. (செ.அக.).

[உள் + வெண்டயம்.]

உள்வெதுப்பு *u|-veduppu,* பெ. (n.) 1. ***உள்வெக்கை;*** internal heat. 2. ***மனவெறுப்பு;*** displeasure, dissatisfaction, vexation of mind. "அவன் பரமபதத்தில் உள் வெதுப்போடே போலே காணுமிருப்பது" (ஈடு, 4,10,2). (செ.அக.).

[உள் + வெதுப்பு.]

உள்ள *u|la,* பெ.எ. (adj.) 1. ***இருக்கிற;*** who is, which is. அங்கே உள்ள மனிதன். 2. ***உண்மையான;*** true, actual, உள்ள செய்தி இது. (செ.அக.).

ம. உள்ள; **க.** உள்ள; **கோத.** ஒள்; **துட.** ஒள்த், ஒள்; **குட.** உள்ள; **து.** உள்ள, உள், உண்டு; **கொலா.** அனு; **நா.** அனுட்; **பிரா.** அன்னிங்க்.

[உள் + அ - உள்ள.]

உள்ளக்கருத்து *u|la-k-karuttu,* பெ. (n.) ***உண்ணோக்கம்;*** secret thought or intention that is not clearly evident from one's words. "உள்ளக் கருத்தை யொழித்தேகுதி யென்றான்" (நள. சுயம்வர. 159). (செ.அக.).

[உள்ளம் + கருத்து]

உள்ளக்களிப்பு *u|la-k-kalippu,* பெ. (n.) ***மனமகிழ்ச்சி*** (திவா.); heartfelt joy, delectation. (செ.அக.).

[உள்ளம் + களிப்பு.]

உள்ளக்குறிப்பு *u|la-k-kurippu,* பெ. (n.) ***உள்ளக்கருத்து*** பார்க்க; see *u|la-k-karuttu.* (செ.அக.).

[உள்ளம் + குறிப்பு.]

உள்ளகம் *u|lagam,* பெ. (n.) ***நெஞ்சு;*** mind, heart. "உள்ளகங் கனல" (அகநா. 19). (செ.அக.).

ம. உள்ளகம்.

[உள் + அகம் - உள்ளகம்.]

உள்ளங்கால் *ullan-gāl,* பெ. (n.) ***உள்ளடி;*** sole of the foot, opp. to புறங்கால். "உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற" (தனிப்பா. 1,6,119). (செ.அக.).

ம. உள்ளங்கால்.

[உள் + அம். + கால். அம் - சாரியை.]

உள்ளங்கை *ullangai,* பெ. (n.) ***அகங்கை;*** palm of the hand opp. to புறங்கை. "உலகினை யுள்ளங்கைக் கொண்டு" (சூளா. அரசி. 18).

ம. உள்ளங்கை; க. ஒளகை, ஒளகெய்; தெ. லோசெயி.

[உள் + அம் + கை. அம் - சாரியை.]

உள்ளங்கைநெல்லிக்கனி *ullan-gainelli-k-kani,* பெ. (n.) ***உள்ளேயுள்ள நிறத்தையே புறத்திலும் காட்டும் நெல் லிக்கனியைப் போல் தெளிவாகவும் உறுதியாகவும் அறிந்திருப்பது;*** anything that is as clear and certain as the *nelli* fruit which is transparent as a crystal for clarity.

[உள்ளகம் + காண் + நெல்லி + கனி. உள்ளகங்காண் என்பது உள்ளங்கை எனத் திரிபுற்றது. புறத்தே உள்ள நிறத் தோற் றத்தை உள்ளேயும் பெற்றிருப்பதால் இக்கனி இப்பெயர் பெற்றது.]

உள்ளங்கைவரிகை *ullangai-varigai,* பெ. (n.) ***உள்ளங் கையிலமைந்த வரிகள்;*** the lineaments on the palm of the hand from which is predicted fortune etc. (செ.அக.).

[உள் + அங்கை + வரிகை. வரிகை வடபுல மொழிகளில் ரேகா எனத் திரிந்தது.]

உள்ளடக்கம் *ul-l-adakkam,* பெ. (n.) 1. ***எண்ணங்களை வெளிவிடாமை;*** reservedness, reticence, uncommunicativeness. 2. ***அடக்கி வைத்த பொருள்;*** hidden resources, content. (செ.அக.).

உள்ளடக்கு-தல் *ul-l-adakku-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***உட்படச் செய்தல்;*** to enclose, shut in, shut up, in a place. 2. ***மறைத்தல்;*** to conceal, keep secret. "அறி வினை யுள்ளடக்கி" (நாலடி. 196). (செ.அக.).

[உள் + அடக்கு.]

உள்ளடங்கு-தல் *ul-l-adangu-,* 15. செ.கு.வி. (v.i.) ***உட்படுதல்;*** to be shut in, included. (செ.அக.).

[உள் + அடங்கு.]

உள்ளடி *ul-l-adi,* பெ. (n.) 1. ***உள்ளங்கால்;*** sole of the foot, opp. to புறவடி. "உள்ளடி யூசிபாய.... வீழ்ந்தார்" (சீவக. 2768). 2. ***அண்மை;*** nearness, vicinity, neighbourhood. (J.) 3. ***நெருங்கிய சுற்றம்;*** own relations, own circle. (J.) 4. ***கமுக்கம்*** (இரகசியம்); that which is secret (W.) (செ.அக.).

ம. உள்ளடி.

[உள் + அடி - உள்ளடி = உள்ளத்தின் அடியில் பதிந்த கமுக்கமான செய்தி. உள்ளுக்குள் நெருங்கிய உறவு.]

உள்ளடிக்குள் *ul-l-adikkul,* கு.வி.எ. (adv.) ***வீட்டிலுள்ள வர்க்குள்ளே*** (கமுக்கமாகப் பேசிக்கொள்வது); at home, within doors, spoken in cases of theft or mischief. (செ.அக.).

[உள்ளடி + கு + உள்.]

உள்ளடிநிலம் *ul-l-adinilam,* பெ. (n.) ***ஏரியை அடுத்துள்ள நிலம்;*** land next to a tank or lake. (செ.வ.). (செ.அக.).

[உள் + அடி + நிலம்.]

உள்ளடை *ulladai,* பெ. (n.) ***உள்ளீடாக இடப்படும் பொருள்;*** that which is placed inside as in a trinket or jewel. "உடைமணியில் உள்ளடை விழுந்துசப்திக்கை யாலும்" (திவ். பெரியாழ். 2,10,5, வ்யாக். 495.). (செ.அக.).

[உள் + அடை.]

உள்ளத்தம் *ullattam,* பெ. (n.) ***கருத்துப்பொருள்;*** meaning. (ஆ.அக.).

[உள் + அத்தம்.]

உள்ளதன்இன்மை *ulladan-inmai,* பெ. (n.) ***உள்ளதை இல்லை எனல்;*** relative negation as in "we do not find the elephant in the stable". "ஆனையைப் பந்தியிற் கண்டிலமென் றாற்போலும் அபாவம்." (சி.சி. அளவை.1. மறைஞா.).

[உள்ளதன் + இன்மை.]

உள்ளதனபாவம் *ulladan-apāvam,* பெ. (n.) ***உள்ளதன் இன்மை*** பார்க்க; see *ulladan-inmai.*

உள்ளது *ulladu,* பெ. (n.) 1. ***உள்பொருள்*** (சி.போ. 1,1,1. சிற்.); that which exists, which is prevalent or present. 2. ***மெய்;*** truth, that which is true. "ஆவதுள்ளதே யைய" (கம்பரா. வனம்புகு. 33). 3. ***விதிக்கப்பட்டது;*** that which is destined. "உள்ளதொழிய வொருவர்க் கொருவர் சுகம்" (நல்வ. 6). 4. ***ஆதன்;*** soul, spirit. "உள்ளது மில்லது மல்லதவனுரு" (திவ். திருவாய். 1,2,4.). (செ.அக.).

ம. உள்ளது; க. உள்ளது, உள்ளிது; தெ. உன்னதி.

[உள் → உள்ள + து.]

உள்ளந்தண்டு *ullan-dandu,* பெ. (n.) ***கழுத்தெலும்பு;*** bone of the neck. (cervical vertebrae.) "உள்ளந்தண்டற... ஊட்டியு மரியா நின்றார்" (பெரியபு. அரிவா. 17). (செ.அக.).

[உள் + அம் + தண்டு.]

உள்ளந்தம் *ullandam,* பெ. (n.) ***உள்நம்பகம்;*** close confidence.

[உள் → உள்ளந்தம்.]

உள்ளந்தாள் *ullan-dāl,* பெ. (n.) ***உள்ளங்கால்;*** sole of the foot, opp. to. புறந்தாள். "உள்ளந்தாணின் றுச்சியள வும்" (திருவாச. 5,21). (செ.அக.).

[உள் + அம் + தாள்.]

உள்ளநிகழ்ச்சி *ul̤l̤a-nigal̤cci,* பெ. (n.) ***மனக்கருத்து;*** intention, thought. "கேண்மனொனாவுள்ள நிகழ்ச்சி யுணர்த்தினனால்" (பிரபோத. 4.16). (செ.அக.).

[உள்ளம் + நிகழ்ச்சி.]

உள்ளநெறி *ul̤l̤a-neṟi,* பெ. (n.) ***நிகழ்ச்சி அளவை;*** mode of reasoning. "மீட்சியழிவறி, வெய்தியுண்டாநெறி யென்றிவைதம்மால்" (மணிமே. 27,55). (செ.அக.).

[உள்ள + நெறி.]

உள்ளநோய் *ul̤l̤a-nōy,* பெ. (n.) ***மனநோய்;*** distress of mind, mental pain, anguish. "உள்ளநோய் வேண்டா வுயிர்க்கு" (சிறுபஞ்.62). (செ.அக.).

[உள்ளம் + நோய்.]

உள்ளப்புணர்ச்சி *ul̤l̤a-p-puṇarcci,* பெ. (n.) ***தலைவனும் தலைவியும் உள்ளத்தாற் கூடுங்கூட்டம்;*** union of lovers, in mind, dist. fr. மெய்யுறுபுணர்ச்சி. "முன்ன ருள்ளப் புணர்ச்சி யுரியதாகும்" (இலக். வி. 404). (செ.அக.).

[உள்ளம் + புணர்ச்சி.]

உள்ளபடி[1] *ul̤l̤apaḍi,* பெ. (n.) ***உண்மை;*** truth. உள்ளபடி சொல்லவா" (தனிப்பா.). (செ.அக.).

[உள்ள + படி. படி = நிலைமை, இருப்பு, நடப்பு.]

உள்ளபடி[2] *ul̤l̤apaḍi,* கு.வி.எ. (adv.) 1. ***உண்மையாக;*** truly, indeed. "உள்ளபடி யாமூர் முதலி... இங்கிருக்க" (தனிப்பா. 1,60,119). 2. ***தக்கவளவு;*** in due measure. அவனுக்கு உள்ளபடி கிடைக்கும். (இ.வ.).

[உள்ள + படி. படி = தன்மை.]

உள்ளபிள்ளை *ul̤l̤apil̤l̤ai,* பெ. (n.) ***பணக்காரப் பிள்ளை;*** child of rich parents, opp. to வறியபிள்ளை. (செ.அக.).

[உள்ள + பிள்ளை.]

உள்ளம்[1] *ul̤l̤am,* பெ. (n.) 1. ***மனம்;*** mind, heart. "உள்ளத்தா லுள்ளலுந் தீதே" (குறள், 282). 2. ***கருத்து;*** thought, intention, purpose. "என்னுங்கட் குள்ளம்" (சீவக. 2347). 3. ***ஊக்கம்;*** energy, zeal, fervour. "உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ" (குறள், 798). 4. ***அறிவியல்;*** consciousness, intellect or thought. "உள்ள முறுவிக்க வுறுமிடனாகும்" (மணிமே. 30,87). 5. ***மனச் சான்று;*** conscience. "உள்ளத்தாற் பொய்யா தொழு கின்" (குறள், 294). 6. ***ஆதன்;*** soul. "ஐம்பொறியை யாண்டங் கரசாயுள நிற்ப" (சி.போ. 5,1,1).

ம. உள்ளம்; **க.** உள், ஒள்; **கோத.** துட. **உள்; குட.** ஒளி; **து.** உள்; **தெ.** உல்லமு; **கொலா.** லோபல்; **நா.** லோபல்; **பர்.** ஒலெக் (வீடு.); **கோண்.** லொன்; **கட.** உலெ. உல்லென் (வீடு.); **குரு.** உலா (உள்ளறை.); **மால்.** உலெ; **பிரா.** உரா. (வீடு.).

[உள் → உள்ளம்.]

உள்ளம்[2] *ul̤l̤am,* பெ. (n.) ***உண்மை;*** truth.

[உள் → உள்ளம்.]

உள்ளம்[3] *ul̤l̤am,* பெ. (n.) ***உல்லமீன்வகை;*** a sea-fish, silvery shot with yellow and purple. (செ.அக.).

[உல்லம் → உள்ளம். (கொ.வ.)]

உள்ளம்மி *ul̤l̤ammi,* பெ. (n.) ***மருந்தரைக்கப் பயன்படும் ஆழமாயுள்ள குழி அம்மி;*** a vessel made of granite stone with an oval shaped cavity, in which ingredients are pounded. (சா.அக.).

[உள் → அம்மி.]

உள்ளமட்டும் *ul̤l̤a-maṭṭum.* கு.வி.எ. (adv.) ***இருக்கிற வரையிலும்;*** as long as (anything) lasts. (சா.அக.).

[உள்ள + மட்டும்.]

உள்ளமிகுதி *ul̤l̤a-migudi,* பெ. (n.) ***உள்ளக்கிளர்ச்சி*** (திவா.); zeal, enthusiasm. (செ.அக.).

[உள்ளம் + மிகுதி.]

உள்ளமுடையான் *ul̤l̤a-muḍaiyāṉ,* பெ. (n.) ***வானநூல் பயிற்சியைக் குறிக்கும் பட்டப்பெயர்;*** common title of certain astrol. works, as சூடாமணியுள்ளமுடையான், வீரமேசுவரவுள்ளமுடையான். (செ.அக.).

[உள்ளம் + உடையான். உள்ளம் = உண்மை. உள்ளமுடையான் = வானநூல் தொடர்பான பல உண்மைகளை உடைமையாக் கிக் கொண்ட நூல்.]

உள்ளமை *ul̤l̤a-mai,* பெ. (n.) ***உண்மை;*** truth, sincerity. (J.) உளுமை சொல்லு (இ.வ.). (செ.அக.).

[உள் → உள்ளமை (உண்மை); இது யாழ்ப்பாண வழக்கு, தமிழகத்திலும் கல்லாத மக்கள் உளுமை எனக் குறிப்பிடுவர்.]

உள்ளரங்கம் *ul-l-araṅgam,* பெ. (n.) 1. ***அகத்தில் வைப்பது; கமுக்கமானது;*** that which is secret, opp. to வெளியரங்கம். 2. ***மறைவான செய்தி;*** secret, private matter.

[உள் + அரங்கம்.].

வீட்டில் உள்ளறையில் உட்கார்ந்து யாருக்கும் வெளிப்படாமல் பேசப்படும் கமுக்கமான உரையாடல் அல்லது கூற்று. யாருக் கும் சொல்லாமல் உள்மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டிய அருஞ்செய்தி.

[உள் + அரங்கம்.]

உள்ளரங்கு *ul-l-araṅgu,* பெ. (n.) ***மனையின் உள்ளறை;*** room in the interior of a house. "உள்ளரங்கிலே நின்றுபசாரச் சொல்லாலுருக்கத் தொடங்கினான்." (தெய்வச். விறலிவிடு. 204). (செ.அக.).

[உள் + அரங்கு.]

உள்ளல்[1] *ul̤l̤al,* பெ. (n.) ***கருத்து*** (திவா.); intention, thought. (செ.அக.).

[உள் → உள்ளல் = நினைவு, கருத்து, எண்ணல்.]

உள்ளல்[2] *ul̤l̤al,* பெ. (n.) ***உள்ளான்;*** common snipe. "வாளைமீனுள்ள றலைப்படலும்" (திரிகடு.7). (செ.அக.).

*[உள் → உள்ளல். **உள்ளான்** பார்க்க; see ul̤l̤āṉ.]*

உள்ளலார் *u!!alār,* பெ. (n.) ***பகைவர்;*** enemies. "உள்ள லார் புரநீறெழ" (பெரியபு. சேக். 33). (செ.அக.).

[உள் + அல் + ஆர். அல் (எ.ம.).]

உள்ளவன் *u!!avan,* பெ. (n.) 1. ***உடையவன்;*** he who has. 2. ***பொருளுடையவன்;*** moneyed man, rich person. (செ.அக.).

ம. உள்ளவன்.

[உள்ள + அவன்.]

உள்ளவாறு[1] *u!!avāru,* பெ. (n.) ***உண்மை;*** that which is actual, true, right. "உள்ளவாறெனக் குரைசெய்ம்மின்" (தேவா. 385, 2.). (செ.அக.).

[உள்ள + ஆறு. ஆறு = நெறி.]

உள்ளவாறு[2] *u!!avāru,* கு.வி.எ. (adv.) ***உள்ளபடி;*** truly, rightly, actually.

[உள்ள + ஆறு. ஆறு = வகை.]

உள்ளழலை *u!-!-alalai,* பெ. (n.) ***உடம்பினுட் கொதிப்பு;*** internal heat in the system. (சா.அக.).

[உள் + அழலை.]

உள்ளழற்சி *u!-!-alarci,* பெ. (n.) ***உடம்பினுள் ளேற்படும் வேக்காடு;*** inflammation of the internal organ of the body as in tuberculosis. (சா.அக.).

[உள் + அழற்சி.]

உள்ளழி-தல் *u!-!-ali-,* 2. செ.கு.வி. (v.i.) ***மனமழிதல்;*** to lose heart. "அகவாயி லின்றிக்கே யிருக்கை யன்றிக்கே யுள்ளழியா நின்றாள்" (ஈடு. 4,2,1). (செ.அக.).

[உள் (உள்ளம்) + அழி-தல்.]

உள்ளவறிவு *u!!a-varivu,* பெ. (n.) ***உள்ளுணர்வு, உள்ம னம்;*** (Buddh.) consciousness, intellect, thought-faculty. "உருவு... உள்ளவ றிவிவை யைங்கந்த மாவன" (மணிமே. 30, 190).

[உள்ளம் + அறிவு.]

உள்ளறிவு *u!!arivu,* பெ. (n.) ***உள்ளவறிவு*** பார்க்க; see *u!!a-varivu.*

[உள் + அறிவு.]

உள்ளளவும் *u!!alavum,* கு.வி.எ. (adv.) ***உள்ளமட்டும்;*** as long as (anything) lasts. "வேதமுள்ளளவும் வேதகீத முள்ளளவும்" (இராமநா. யுத்த. 10). (செ.அக.).

[உள்ள + அளவும்.]

உள்ளறை *u!-!-arai,* பெ. (n.) 1. ***உள்வீடு;*** inner room, closet. 2. ***பெட்டியின் அறை;*** division in a drawer or box, pigeonhole. (செ.அக.). 3. ***மூலவறை*** (கருப்பக்கிரு கம்); sanctum sanctorum in a temple. 4. ***உடம்பினுட் பகுதிகள்;*** internal cavities of the body. (சா.அக.).

ம. உள்ளற.

[உள் + அறை.]

உள்ளன் *u!!an,* பெ. (n.) 1. ***உள்ளிருக்கும் ஆள்;*** one of the party or family, domestic. உள்ளனும் கள்ளனுமாய் இருக்கிறான். 2. ***உற்றவன்;*** near acquaintance. 3. ***போரடிக்கும் தலைமாடு;*** head or middle ox in the team for threshing grain. (W.) (செ.அக.).

[உள் → உள்ளன்.]

உள்ளா-தல் *u!-!-ā-,* 6. செ.கு.வி. (v.i.) 1. ***வயப்படுதல்;*** to submit. 2. ***உட்படுதல்;*** to be involved as in suffering. துன்பத்திற்குள்ளானான். 3. ***உடன்படுதல்;*** to become privy to an affair. (W.) (செ.அக.).

[உள் + ஆகு - உள்ளாகு → உள்ளா-தல். ஆகுதல் → ஆதல்.]

உள்ளாக்கு-தல் *u!-!-ākku-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***உட்படச்செய்தல்;*** to cause to submit; to bring into one's party or association; to cause to be involved, as in suffering. (செ.அக.).

[உள் + ஆக்கு.]

உள்ளாடு-தல் *u!-!-ādu-,* 5. செ.கு.வி. (v.i.) ***உளவறிய உள்ளே பயிலுதல்;*** to have intimate intercourse with an enemy in order to effect ulterior object. (W.).

[உள் + ஆடு.]

உள்ளாடுபகைவன் *u!-!-ādu-pagaivan,* பெ. (n.) ***உட் பகைவன்;*** enemy in the camp, snake in the grass, treacherous companion. (W.)

[உள் + ஆடு + பகைவன்.]

உள்ளாடை *u!-!-ādai-,* பெ. (n.) ***மகளிருள்ளுடை;*** woman's undergarment, chemise. (W.) (செ.அக.).

ம. உள்ளாடை.

[உள் + ஆடை.]

உள்ளாந்தம் *u!-!-āndam,* பெ. (n.) ***உள்ளந்தம்*** பார்க்க; see *u!!andam.*

[உள்ளந்தம் → உள்ளாந்தம்.]

உள்ளாந்தரம் *u!-!-āndaram,* பெ. (n.) 1. ***நடுவாயிருப்பது;*** medial. 2. ***உள்நம்பகம்;*** close confidence. (செ.அக.).

[உள் → உள்ளந்தம் → உள்ளாந்தரம்.]

உள்ளாப்பு *u!-!-āppu,* பெ. (n.) ***உட்கருத்து;*** idea. 2. ***கமுக்கம், மறைவான செய்தி;*** secret.

[உள் → உள்ளாப்பு.]

உள்ளாய்தம் *u!-!-āydam,* பெ. (n.) 1. ***தடிக்குளடங்கிய கத்தி;*** sword-cane. 2. ***உடம்பினுள் ஏறுவைக்காகப் பயன்படுத்தும் கருவி;*** any instrument set up for internal use in surgery.

[உள் + ஆய்தம் - உள்ளாய்தம்.]

உள்ளார் *u!!ār,* பெ. (n.) 1. ***இருப்போர்;*** those who are present. இங்குள்ளார்க்குத் தெரிந்த செய்தி (உ.வ.). 2. ***உடையவர்;*** those who possess, as money. "ஒண்புய முள்ளார்" (கந்தபு. சகத்திர. 6). (செ.அக.).

உள்ளான் குருவி வகை


கோரையுள்ளான்
கீறியுள்ளான்
கோழியுள்ளான்
காட்டு உள்ளான்
துடுப்பு உள்ளான்
மாறியுள்ளான்
பதுங்கையுள்ளான்
வாலாட்டியுள்ளான்
மயில் உள்ளான்
மூக்கு உள்ளான்
கட்டித்தலை உள்ளான்
தடிமூக்கு உள்ளான்

[உள் = உள்ளார். உள் = இரு. உள்ளார் = இருப்பவர். உள்ளவர் = செல்வம் உள்ளவர். உள்ளவர் → உள்ளார். தானே இருத்தலும் தன்பால் பிறிதொன்றை இருத்திக் கொள்ளலும் (உள்.) அடிவினையின் பொருளாகும். அடிவினை செய் வினையிலும் செயப்பாட்டு வினையிலும் பொருளால் புடை பெயரும்.]

உள்ளார்² *uḷḷār,* பெ. (n.) ***பகைவர்*** (சூடா.); foes, enemies, as those who do not care or regard others.

[உள்ளாதவர் → உள்ளாதார் → உள்ளார்.]

உள்ளால் *uḷ-ḷ-āl,* கு.வி.எ. (adv.) 1. ***உள்ளாலை*** பார்க்க; see *uḷḷālai.* "சிந்தையுள்ளால்" (தேவா. 319).

[உள் + (ஆலை.) ஆல்.]

உள்ளாலயம் *uḷ-ḷ-ālayam,* பெ. (n.) ***இதயம்;*** heart. (சா.அக.).

[உள் + ஆலயம்.]

உள்ளாலை *uḷḷālai,* கு.வி.எ. (adv.) 1. ***உட்பக்கம்;*** inside. "கடிசேர் நாற்றத்துள்ளாலை இன்பதுன்பக் கழிநேர்மை" (திவ். திருவாய். 8,8,2).

ம. உள்ளால.

[உள் + ஆலை. ஆலை = சுற்று, சுற்றுப்பக்கம், பக்கம்.]

உள்ளாள் *uḷ-ḷ-āḷ,* பெ. (n.) 1. ***வீட்டின் உறுப்பினன்;*** member of a family or party, domestic. 2. ***உளவறிவோன்-ன்;*** traitor in the guise of a friend, spy. அவனுக்கு உள்ளாள் இருக்கிறான் (வின்.). (செ.அக.).

ம. உள்ளாள்.

[உள் + ஆள்.]

உள்ளாளம்¹ *uḷ-ḷ-āḷam,* பெ. (n.) ***உடம்பசையாமல் உள்ளடக்கமாகப் பாடும் பாட்டு;*** mode of singing without any motion of the features or limbs, in imitation of the Gandharvās. கந்தருவ ருள்ளாளப் பாடலுணர் (சீவக. 658, உரை).

[உள் + ஆளம். பண்ணின் திறத்தைப் புறத்தசைவால் புலப்படுத் தாமல் ஓசையளவாகவே உள்ளுக்குள் ஆளுதல்.]

உள்ளாளம்² *uḷ-ḷ-āḷam,* பெ. (n.) ***கூத்தின் வேறுபாடு*** (பிங்.) kind of dance. (செ.அக.).

[உள் + ஆளம். கூத்தாடுபவன் பாடாமல், உறுப்பசைவுகளை மெய்ப்பாடு தோன்றக் காட்ட, அதற்குரிய பண்ணசைவுகளை உள்ளாளமாகப் பாடிக்காட்டுதல். இது இக்காலப் பரத நாட்டிய மாயிற்று.]

உள்ளாளனம் *uḷḷāḷaṉam,* பெ. (n.) ***உள்ளாளம்²*** பார்க்க; see *uḷḷāḷam².* (செ.அக.).

[உள்ளாளம் → உள்ளாளனம்.]

உள்ளாளுங்கள்ளாளும் *uḷḷāḷuṅ-kaḷḷāḷum,* பெ. (n.) ***இரு புறத்துக்கு மிணங்கிக் கள்ளமாய் நிற்பவன்;*** a treacherous person.

[உள் + ஆள் + உம் + கள் + ஆள் + உம். கள் = கள்ளம்.]

உள்ளான்¹ *uḷḷāṉ,* பெ. (n.) ***உள்ளன்*** பார்க்க; see *uḷḷaṉ.* (செ.அக.).

[உள்ளன் → உள்ளான்.]

உள்ளான்² *uḷḷāṉ,* பெ. (n.) ***நீருள் மூழ்கிச் செல்லும் பறவை;*** common snipe, gallinago media, of which there are many varieties. "உள்ளானும் வலியானு மெண்ணிக்கொண்டு" (குற்றா. குற. 85,1).



உள்ளான்

இதன் இனம்: கோரையுள்ளான், கீறியுள்ளான், வாலாட்டியுள்ளான், தடிமூக்கு உள்ளான், துடுப்பு உள்ளான், மாறியுள்ளான், பதுங்கையுள்ளான், கோழியுள்ளான், மயில் உள்ளான், சிவப்பு மூக்கு உள்ளான், காட்டு உள்ளான், கட்டித்தலை உள்ளான், கொசு உள்ளான்.

தெ. உள்லமு; **க.** உல்லங்கி

[உள் → உள்ளான். நீருள் மூழ்கும் இயல்புபற்றி உள்ளான் (உள்ளே செல்வது.) எனப்பட்டது.]

உள்ளான்³ *uḷḷāṉ,* பெ. (n.) ***பூச்சிவகை;*** insect. (நெல்லை.) (செ.அக.).

[உள் → உள்ளான்.]

உள்ளி¹ *uḷḷi,* பெ. (n.) ***கருதுவது, கருத்து;*** that which is considered, thought.

[உள்ளுதல் = கருதுதல், உள் → உள்ளி, 'இ' வி.முத. ஈறு.]

உள்ளி² *uḷḷi,* பெ. (n.) ***வெண்காயம்*** (பிங்.); onion, allium cepa. 2. ***வெள்ளைப்பூண்டு*** (மூ.அ.); garlic. ***உள்ளில்*** பார்க்க; see *uḷḷil.* (செ.அக.).

ம. உள்ளி; க. உள்ளி, உரளி, உர்ளி; **கோத.** உள்ய்; **துட.** ஊண்ய்; **து.** உல்லி, உள்ளி; **தெ.** உல்லி; **கோண்.** உல்லீ; **கொலா.** உல்லி; பர். உல்லி, **குவி.** ஊல்லி, உல்லி.

[உள் + இல் - உள்ளில் → உள்ளி (உள்ளே ஒன்றும் இல்லாதது.)]

உள்ளிக்கோளம் *uḷḷi-k-kōḷam,* பெ. (n.) ***கழுத்தின் கீழ் மார்பறையுள் திரண்டு காணும் கோளம்;*** a two-lobed body in the neck and the thorax of an infant - thymus gland.

[உள் + கோளம்.]

உள்ளிட்டம் *ulliṭṭam* பெ. (n.) ***இழப்பு;*** loss, ஏற்ற உள்ளிட்டம் வாராமல் காத்து நோக்கக் கடவராகவும் (புது. கல். 475).(செ.அக.).

மறுவ. இழப்பு, போக்கு, போகு.

[உள் → உள்ளிடு = உள்ளேகுழிதல், சரிதல், இழந்துபோதல், உள்ளிடு → உள்ளிட்டம் = உட்குழிந்து போனது, ஒன்று மில்லாமற் போனது, குறைவு பட்டுப் போனது. பொருள் இழப்பு.]

உள்ளிட்டார் *ulliṭṭār,* பெ. (n.) 1. ***கூட்டாளிகள்.*** partners concerned in the same bargain, co-partners in land, co-heirs. சாத்தனையும் அவனுள்ளிட்டாரையும் சேர்ந்த காணி. 2. ***முதலானவர்;*** all the rest, 'and company'. "செத்தன ரெழுவர் சிங்கசேனனை யுள்ளிட் டாரே" (பாரத. பதினே. 100). (செ.அக.).

[உள் → உள்ளிடு → உள்ளிட்டார்.]

உள்ளிடு-தல் *ulliḍu-,* 18. செ.குன்றாவி. (v.t.) ***உள்ளடக் குதல்;*** to include, comprise. "உரையாசிரியரை உள் ளிட்டோ ரெல்லாரும்" (தொல்.விருத். 45). (செ.அக.).

[உள் + இடு.]

உள்ளிடை *ulliḍai,* பெ. (n.) 1. ***உள்ளிடம்;*** inner space. "உள்ளிடை யடுத்த கோட்டத்து" (இரகு. தசரத. 51). 2. ***மந்தணம்;*** private affair, secret, உள்ளிடை பார்க்க வந்து நிற்கிறான் (வின்.). 3. ***இடுப்பின் உட்பக்கம்;*** pelvis, inside the hip. (செ.அக.).

ம. உள்ளிட.

[உள் + இடை.]

உள்ளிடையானவன் *ulliḍaiyāṉavaṉ,* பெ. (n.) ***இனத் தான்;*** one of our fold or party. (W.) (செ.அக.).

[உள்ளிடை + ஆனவன்.]

உள்ளித்திரி *ullittiri,* பெ. (n.) ***உள்ளிப்பூண்டின் உள் ளிருக்கும் பகுதி;*** clove of garlic. (செ.அக.).

[உள்ளி + திரி.]

உள்ளிப்பல் *ulli-p-pal,* பெ. (n.) ***உள்ளித்திரி*** பார்க்க; see *ullittiri.* (செ.அக.).

[உள்ளி + பல்.]

உள்ளிப்பூடு *ulli-p-pūḍu,* பெ. (n.) ***உள்ளிப்பூண்டு*** பார்க்க; see *ulli-p-pūṇḍu.*

[உள்ளி + (பூண்டு.) பூடு.]

உள்ளிப்பூண்டு *ulli-p-pūṇḍu,* பெ. (n.) ***உள்ளி;*** garlic or onion. (செ.அக.).

[உள்ளி + பூண்டு. பீள் → பூள் → பூண் → பூண்டு.]

உள்ளியாமணக்கு *ulli-yāmaṇakku,* பெ. (n.) ***ஒருவகை யாமணக்கு;*** a variety of castor plant - ricinus communis. (சா.அக.).

[உள்ளி + ஆமணக்கு.]

உள்ளியெண்ணெய் *ulliyeṇṇey,* பெ. (n.) 1. ***உள்ளியாம ணக்கெண்ணெய்;*** oil extracted from a variety of castor seeds. 2. ***வெள்ளைப் பூண்டு எண்ணெய்;*** oil obtained from garlic. (சா.அக.).

[உள்ளி + எண்ணெய்.]

உள்ளிருப்பு *ulliruppu,* பெ. (n.) 1. ***வைப்புநிதி;*** reserve cash. 2. ***கருவூலக்காவல்;*** watching the treasury. (செ.அக.).

ம. உள்ளிருப்பு.

[உள் + இருப்பு.]

உள்ளில்[1] *ullil,* பெ. (n.) ***உள்ளிடம்; உட்பக்கம்;*** inside.

[உள் + இல் = உள்ளில்.]

உள்ளில்[2] *ullil,* பெ. (n.) 1. ***வெங்காயம்;*** onion. 2. ***வெள்ளைப்பூண்டு;*** garlic.

[உள் + இல். உள்ளில் = உள்ளே ஒன்றும் இல்லாதது. உள்ளில் → உள்ளி என மருவியது.]

உள்ளில்நோய் *ullil-nōy,* பெ. (n.) ***உடம்பினுள்ளிருக்கும் நோய்;*** internal disease. (சா.அக.).

[உள்ளில் + நோய்.]

உள்ளிவிழவு *ulliviḻavu,* பெ. (n.) ***பண்டைக்காலத்துக் கருவூரில் நிகழ்ந்த திருவிழா;*** name of a festival in Karuvūr, the ancient Cēra capital. "கொங்கர் மணியரை யாத்து மறுகினாடு முள்ளி விழவினன்ன" (அகநா. 368).

[உள்ளி + விழவு. உள்ளியை (வெங்காயம்.) ஒத்த வெண்கல மணிகளை இடுப்பில் கட்டிக்கொண்டு ஆடும் விழா ஆகலாம்.]

உள்ளிவிழா *ulliviḻā,* பெ. (n.) ***உள்ளிவிழவு*** பார்க்க; see *ulliviḻavu.* அவை மதுரையாவணி யவிட்டமே உறையூர்ப் பங்குனி யுத்தரமே கருவூர் உள்ளி விழாவே யென் றிவை போல்வன (இறை. 16, உரை). (செ.அக.).

[உள்ளி + விழா.]

உள்ளிழிச்சு-தல் *ulliḻiccu-,* 6. செ.குன்றாவி. (v.t.) ***உட்கொள்ளுதல்;*** to gulp, to swallow. ஸாரஸ்யத்தாலே உள்ளிழிச்சவும் மாட்டாதே உமிழவும் மாட்டாதே நடுவே நாக்கடியிலே வைத்திருக்கிற படியைச் சொல்லு தல் (திவ். திருநெடுந். 11, வ்யா.). (செ.அக.).

[உள் + இழிச்சு.]

உள்ளினர் *ulliṉar,* பெ. (n.) ***அணுக்கமானவர்*** (திரு வருட்.2, பக். 43); intimate friends. (செ.அக.).

[உள் = உள்ளினர். உள் = மனம்.]

உள்ளீடு *ullīḍu* (n.) 1. ***உள்ளிருக்குஞ்சத்து;*** that which is within, as the kernel in a nut. அறிவென்னுமுள்ளீ டின்மையின், மக்கட் பதடியென்றார். (குறள், 196. உரை). 2. ***உள்ளான கருத்து;*** inner meaning, inherent substance. "அவ்வெழுத்தினுள்ளீடு மறிவித்து" (காஞ் சிப். கடவுள்.18). 3. ***உடன்படிக்கை;*** bond (W.). 4.

மந்தணம்; secret. உள்ளீட்டுக்காரியம் (வின்.). 5. *உள்ளே இடப்பட்டது.* (ஆ.அக.); that which is kept inside. (செ.அக.). 6. *இனிப்பு போன்ற பணியாரங்களில் உள்ளிடும் பொருள்.* the essential inclosed in a cake.

[உள் + ஈடு. இடு → ஈடு.]

உள்ளு¹-தல் *u||u-,* 6. செ.குன்றாவி. (v.t.) 1. *நினைதல்;* to think of, remember. "ஒருதிசை யொருவனை யுள்ளி" (புறநா. 121). 2. *ஆராய்தல்;* to revolve in the mind, investigate. "உள்ளப்படுவன வுள்ளி" (திருக்கோ. 87). 3. *நன்கு மதித்தல்;* to honour, esteem. "வேந்தன்கணூறெய்தி யுள்ளப் படும்" (குறள், 665). 4. *திரும்ப நினைத்தல்;* to recollect. "'உள்ளினே னென்றேன்மற் றென் மறந்தீ ரென்றென்னைப் புல்லாள் புலத்தக் கனள்" (குறள், 1316) 5. *இடைவிடாது நினைத்தல்;* to think without ceasing. (செ.அக.).

[உள் → உள்ளு]

உள்ளு² *u||u,* பெ. (n.) *நினைவு, கருத்து;* thought, idea.

[உள் → உள்ளு.]

உள்ளு³ *u||u,* பெ. (n.) *உள்ளான்;* common snipe. "உள்ளு மூரலும் புள்ளும் புதாவும்" (சிலப். 10, 117.). (செ. அக.).

ம. உள்ளி.

[உள் → உள்ளு. உள்ளான் பார்க்க; see u||ān.]

உள்ளுக்குக்கொடு-த்தல் *u||ukku-k-kodu-,* 4. செ.குன்றாவி. (v.t.) *உண்ணும்படி மருந்து கொடுத்தல்;* to administer internally, as medicine.

[உள் → உள்ளுக்கு + கொடு.]

உள்ளுச்செல்(லு)-தல் *u||u-c-cel-,* 13. செ.குன்றாவி. (v.t.) 1. *நினைவோடுதல்;* to pursue in thought. ஸர்வஜ்ஞனானவனை உணர்த்த வேண்டியிறே உள்ளுச்செல்லுகிறது (திவ். திருப்பா. 21.வ்யா.).

[உள் → உள்ளு + செல்.]

உள்ளுடன் *ul-|-udan,* பெ. (n.) 1. *பணிகாரத்தினுள்ளீடு;* ingredients inclosed in the interior of a cake or tart. 2. *உட்கிடக்கை;* matter within, hidden meaning. (செ.அக.).

[உள் + உடன்.]

உள்ளுடுப்பு *u||uduppu,* பெ. (n.) *உள்ளாடை;* inner garment.

ம. உள்ளுடுப்பு.

[உள் + உடுப்பு.]

உள்ளுடை¹-தல் *u||udai-,* 2. செ.கு.வி. (v.i.) 1. *மனமுறிதல்;* to be heart broken, sorely grieved. "பிணிக்குள்ளுடைந்தேன்" (மறைசை. 63). 2. *முழுதுஞ்சிதைதல்;* to be destroyed utterly. "ஊக்கித் தாங்கொண்ட விரதங்களுள்ளுடைய" (நாலடி. 57). (செ.அக.).

[உள் + உடைதல்.]

உள்ளுடை² *u||udai,* பெ. (n.) 1. *கோவணம்.* (சா.அக.); inner garment worn by man; strip of cloth used as man's fore-lap to cover nudity. 2. *உட்சட்டை;* shirt, inner garment. (செ.அக.).

[உள் + உடை.]

உள்ளுணர்ச்சி *u||unarcci,* பெ. (n.) *உள்ளுணர்வு; அறிவு;* inner consciousness, awakening of the mind, knowledge.

ம. உள்ளுணர்ச்சி.

[உள் → உணர்ச்சி.]

உள்ளுப்புடை *u||u-p-pudai,* பெ. (n.) *உட்டுளை* (பதிற்றுப். 47.5. உரை) hole in a pipe, spout. (செ.அக.).

[உள் → உள்ளு + புடை = உள்ளுப்புடை. புழை → புடை.]

உள்ளுயிர் *ul-|-uyir,* பெ. (n.) *உள் ஆதனாகிய கடவுள்;* God, who is the inmost life of all creation. (செ.அக.).

[உள் + உயிர்.]

உள்ளுயிர்க்குன்று *ul-|-uyir-k-kunru,* பெ. (n.) *நத்தை;* snail. (W.) (செ.அக.).

[உள் + உயிர்க்குந்து = உள்ளுயிர்க்குந்து. உயிர்க்குந்து = உயிர்ப்பது, மூச்சுவிடுவது. உயிர்க்குன்று (கொ.வ.).]

உள்ளுருக்கி *u||urukki,* பெ. (n.) *கணைநோய்* (இங்.வை.); wasting disease of childhood, tabes mesenterica. (செ.அக.).

[உள் + உருக்கி.]

உள்ளுருகு-தல் *ul-|-urugu-,* 5. செ.கு.வி. (v.i.) *மனங்கரைதல்;* to melt, as the heart. "உண்ணிறைந்த பேரன்பா லுள்ளுருகி" (தாயு.பொருள். 10). (செ.அக.).

[உள் + உருகு.]

உள்ளுலவு *ul-|-ulavu,* பெ. (n.) *சிற்றொடுவை* பார்க்க; see *cirroduvai.*

[உள் + உலவு.]

உள்ளுளவு *u||ulavu,* பெ. (n.) *உடந்தை;* collusion. "உள்ளுளவான கடைக்காரர்கள்" (மதி.களஞ். 1,9). (செ.அக.).

[உள் + உளவு.]

உள்ளுறப்பு *u||urappu,* பெ. (n.) *நெஞ்சுரம்;* firmness of mind.

மறுவ. துணிவு, உரம்; ம. உள்ளுறப்பு.

[உள் + உறப்பு.]

உள்ளுறு-தல் *u||uru-,* 4. செ.கு.வி. (v.i.) *உள்ளிருத்தல், உட்படுதல்;* to be in, concerned in, involved. (செ.அக.).

[உள் + உறு.]

உள்ளுறு²-த்தல் *u/-/-uṟu-*, 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***உட்செலுத்துதல்;*** to thrust in, insert, instil, as principles. "மட்பெருங் குகையினின் மருந்தையுள் ளுறுத்தான்" (கந்தபு. மார்க். 132). 2. ***உட்கருதுதல்;*** to consider, think about. "உள்ளுறுத் திதனோ டொத்துப் பொருண் முடிகென" (தொல். பொருள். 48). 3. ***உள்ளிடுதல்;*** to include, comprise. "தோழி யுள்ளுறுத்த வாயில்" (தொல். பொருள். 149). (செ.அக.).

[உள் + உறு.]

உள்ளுறுப்பு *u//uṟuppu*, பெ. (n.) ***உடம்பின் உள்ளே இருக்கும் உறுப்புகள்;*** the internal organs of the body.

[உள் + உறுப்பு.]

உள்ளுறை[1] *u/-/-uṟai*, பெ. (n.) 1. ***உட்கருத்து;*** inward thought, real opinion, the thing intended. உன் உள்ளுறை எது? (வின்.). 2. ***மறைபொருள்;*** hidden meaning. இப்பாட்டிற்கு உள்ளுறை யாது? 3. ***ஆசுகவிக்குக் கொடுக்குந் தலைப்பு;*** subject matter proposed for composing a verse *impromptu*. "ஒருவன் நேர் கொடுத்த வுள்ளுறைக் கப்போது உரைப்பதனை யாசென்றார்" (வெண்பாப். செய். 2). 4. ***பொருளடக்கம்;*** contents, as of a book 5. ***உள்ளுறையுவமம்*** பார்க்க; see *u//uṟai-y-uvamam*. "உள்ளுறை தெய்வமொழிந்ததை நில னெனக் கொள்ளும்" (தொல். பொருள். 47). (செ.அக.).

குறிப்பால் புலப்படுத்தும் கருத்து உள்ளுறை எனப்படும். அன்புணர்வை மட்டும் புலப்படுத்திக் காட்டும் குறிப்பு இறைச்சி என வேறு பிரித்துக் காட்டப்படும். "அன்புறுதகுந இறைச்சியுட் சுட்டலும்". (தொல். பொருள். 231) என்றார் தொல்காப்பியர். உள்ளுறையின் பாற்பட்ட குறிப்பு தெய்வ மல்லாத கருப்பொருள்களைப் பற்றுக்கோடாகக் கொண்டு வரும்.

[உள் + உறை.]

உள்ளுறை[2] *u/-/-uṟai*, பெ. (n.) 1. ***உட்புகட்டும் மருந்து;*** any medicine given to be taken internally. 2. ***புண்புரை களுக்கு உள்ளே புகட்டும் மருந்து;*** any medicine which is inserted into cavities of sores.

[உள் + உறை.]

உள்ளுறையுவமம் *u//uṟai-y-uvamam*, பெ. (n.) ***வெளிப்ப டையானன்றிக் குறிப்பாற் பொருளைப் புலப்படுத்தும் உவமம்;*** indirect suggestion by which an author who does not propose to explicitly state his idea, endeavours, however, to present it through the skilful employment of such telling comparisons as would help people to infer there from that he actually intended to convey, opp. to ஏனையுவமம்.

[உள் + உறை + உவமம்.]

உள்ளூர் *u//ūr*, பெ. (n.) 1. ***ஊர்நாடு;*** heart of a town, interior of a village. 2. ***சொந்தவூர்;*** own town, home. "உள்ளூ ரிருந்துயிர் கொன்னே கழியாது" (நாலடி. 286). (செ.அக.).

[உள் + ஊர்.]

உள்ளூர்ச்சரக்கு *u//ūr-c-carakku*, பெ. (n.) 1. ***உள் நாட்டு மருந்துச்சரக்கு;*** local product, indigenous drugs. 2. ***சொந்த ஊரில் விளையும் பொருள்;*** local product. (செ.அக.).

[உள் + ஊர் + சரக்கு.]

உள்ளெரிச்சல் *u/-/-ericcal*, பெ. (n.) ***பொறாமை;*** envy, jealousy. (செ.அக.).

[உள் + எரிச்சல்.]

உள்ளெரிவு *u/-/-erivu*, பெ. (n.) ***உள்ளழற்சி;*** inflammation of the internal organs.

[உள் + எரிவு.]

உள்ளே *u//ē*, கு.வி.எ. (adv.) ***உள்ளாக; அகத்த;*** inside.

ம. உள்ளே.

[உள் + ஏ - உள்ளே.]

உள்ளேபோடு-தல் *u//ē-pōḍu-*, 19. செ.குன்றாவி. (v.t.) ***தன்வயப்படுத்துதல்;*** to get into one's power, bring over to one's interests. (W.) (செ.அக.).

[உள்ளே + போடு.]

உள்ளேயிறக்கு-தல் *u//ē-y-iṟakku-*, 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***விழுங்குதல்;*** to swallow. 2. ***உள்ளே புகும்படி செய்தல்;*** to let in. (சா.அக.).

[உள் → உள்ளே + இறக்கு.]

உள்ளொடுக்கம் *u/-/-oḍukkam*, பெ. (n.) ***தன்னடக்கம்;*** self control. (செ.அக.).

[உள் + ஒடுக்கம்.]

உள்ளொலி *u/-/-oli*, பெ. (n.) ***உள்ளோசை*** பார்க்க; see *u//ōšai*.

[உள் + ஒலி.]

உள்ளொற்று-தல் *u//oṟṟu-*, 15. செ.கு.வி. (v.i.) ***உண் ணிகழ்ச்சியை உய்த்துணர்தல்;*** to discern a thing that is hidden from public view. "உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவர்" (குறள். 927). (செ.அக.).

[உள் + ஒற்று.]

உள்ளோக்காளம் *u/-/-ōkkā/am*, பெ. (n.) ***குமட்டல்;*** inclination to vomit.

[உள் + ஒக்காளம்.]

உள்ளோசை *u/-/-ōšai*, பெ. (n.) 1. ***உள்ளொலி*** (பிங்.); internal sound unheard by others, as the beating of the heart. 2. ***மெல்லோசை*** (திவா.); low note, as of a lute. (செ.அக.).

[உள் + ஓசை.]

ஞெளிர், தெளிர், நரல்வு, நுழைவு, நுணுக்கம், முரல், முரல்வு, விழைவு முதலியவற்றின் உள்ளாளம் உள்ளோசை எனப்படும்.

உளகன் *ulagan,* பெ. (n.) ***உள்ளானவன்;*** one who is subjected to, enthralled. ''பல்வினைக்கே யுளகரெல்லாம்'' (திருநூற். 61).

[உள் → உள்கன் → உளகன்.]

உளகு[1] *ulagu,* பெ. (n.) ***உட்டுளையுள்ள யாழின் தண்டு;*** stem of the *yāl.* ''உளகு புரையு முன்கை யவளோடும்'' (சேதுபு. தருமகுத். 22). (செ.அக.).

[உள் → உளகு.]

உளகு[2] *ulagu,* பெ. (n.) ***சிற்றூர்வொழுகு; விலைமதிப்புக் குறிப்பேடு;*** standard rate, as for assessment; register or detailed account of the lands in a village. (C.G.). (செ.அக.).

[ஒழுங்கு → ஒழுகு → ஒளகு → உளகு. (கொ.வ.). ஒழுகு பார்க்க; see olugu.]

உளதா-தல் *uladā-,* 18. செ.கு.வி. (v.i.) 1. ***உண்டாதல்;*** to originate; come into being. ''இலதுகாரிய முதலுளதாகு மென்னில்'' (சி.சி. 1,7). 2. ***இருத்தல்;*** to exist. (செ.அக.).

[உளது + (ஆகுதல்.). ஆ-தல்.]

உளது *uladu,* பெ. (n.) 1. ***இருப்பது;*** that which is. 2. ***மெய்ம்மை;*** truth. ''இலையெனினுளதே சொல்'' (வைராக்.சத. 27). (செ.அக.).

ம. உளது.

[உள்ளது → உளது.]

உளப்படு[1]**-தல்** *ula-p-padu-,* 20. செ.கு.வி. (v.i.) ***இசைதல்;*** to agree. (W.) (செ.அக.).

[உள்ளம் → உளம் + படு.]

உளப்படு[2]**-தல்** *ula-p-padu-,* 20. செ.கு.வி. (v.i.) 1. ***உள்ளடங்குதல்;*** to be included. ''அன்னென் கிளவி யுளப்பட'' (தொல். எழுத். 119). 2. ***உரியதாதல்;*** to be proper, fitting, appropriate. ''மன்னவற் குளப்படு கடன் முறையுதவி'' (கந்தபு. திருநாட். 25). (செ.அக.).

[உள் → உள + படு.]

உளப்படுத்து[1]**-தல்** *ula-p-paduttu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***மனத்துட் கொள்ளுதல்;*** to bear in mind, keep in remembrance. ''ஈதுளப்படுத்திருத்திர் நீர்'' (உபதேசகா. சூராதி. 90).

[உள் → உளம் + படுத்து.]

உளப்படுத்து[2]**-தல்** *ula-p-paduttu-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***உட்படுத்துதல்*** (வின்.); to include, cause to agree.

[உள் + படுத்து.]

உளப்பறி-தல் *ula-p-pari-,* 4. செ.கு.வி. (v.i.) ***உளவறி*** பார்க்க; see *ulavari.* (செ.அக.).

[உள்ளாப்பு → உளப்பு + அறி. (கொ.வ.)]

உளப்பாட்டுத்தன்மை *ulappāttu-t-tanmai,* பெ. (n.) ***முன்னிலை, படர்க்கையிடத்தாரைத் தனித்தனியேனும் சேர்த்தேனும் உடன்கூட்டுந் தன்மையிடம்*** (நன். 332. விருத்.); (Gram.) Ist pers. pl. which of necessity must include the 2nd pers. or 3rd pers. or both. (செ.அக.).

[உள் → உளப்படு → உளப்பாடு → உளப்பாட்டு + தன்மை.]

உளப்பாட்டுமுன்னிலை *ulappāttu-munnilai,* பெ. (n.) ***படர்க்கையிடத்தாரை உடன் கூட்டும் முன்னிலை;*** (Gram.) 2nd pers. which includes also the 3rd pers. (செ.அக.).

[உளப்பாட்டு + முன்னிலை.]

உளப்பாடு[1] *ula-p-pādu,* பெ. (n.) 1. ***எண்ணம்;*** object, intention, purpose. ''முயற்சியும் உளப்பாடுமின்றி'' (திருக்கோ. 14, உரை). 2. ***மனத்துயர்;*** mental suffering, sorrow, grief. ''உளப்பா டுணர்பவர் யாவர்'' (தாயு. ஆரணம், 6). (செ.அக.).

[உளம் + படு - உளப்படு → உளப்பாடு.]

உளப்பாடு[2] *ula-p-pādu,* பெ. (n.) ***உட்படுத்துகை;*** including, enclosing. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை. (செ.அக.).

[உள் + படு - உளப்படு → உளப்பாடு.]

உளப்பு *ulappu,* பெ. (n.) ***நடுக்கம்;*** trembling, shaking. ''தன்னுளப்பருந் தகைமை தன்னால்'' (கம்பரா. இராவணன்களங். 15). (செ.அக.).

[உள+பு → உளப்பு.]

உளம் *ulam,* பெ. (n.) 1. ***உள்ளிருக்கும் மனம்;*** mind, heart. 2. ***மார்பு;*** breast. ''நரிமா வுளங்கிழித்த வம்பினில்'' (நாலடி. 152). 3. ***எண்ணம்;*** thought. (செ.அக.).

ம. உளம்.

[உள் → உள்ளம் → உளம்.]

உளம்பு[1]**-தல்** *ulambu-,* 6. செ.குன்றாவி. (v.t.) 1. ***அலைத்தல்;*** to stir up, beat up, as game. ''கைம்மா வுளம்புநர்'' (கலித். 23). 2. ***புதரைத் தட்டி வேட்டை விலங்கைக் கிளப்புதல்;*** to drive out the animals from thicket in hunting.

[உல் → உள் → உள → உளம்பு.]

உளம்பு[2]**-தல்** *ulambu-,* 15. செ.கு.வி. (v.i.) ***ஒலி எழுப்புதல்;*** to make a noise, to howl. ''குறுநரியுளம்பும்'' (அகநா. 94).

[உல் → உள் → உள → உளம்பு.]

உளமை *ulamai,* பெ. (n.) ***உண்மை;*** truth reality. ''உளமை யுணரா தொடுங்கி'' (பு.வெ. 10. காஞ்சி. 5). (செ.அக.).

ம. உளமை.

[உள் → உளமை.]

உளர்[1]**-தல்** *u!ar-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***கோதுதல்;*** to adjust, smooth out, as birds their feathers. "கதுப் புளரி". (குறுந். 82). 2. ***தலை மயிர் ஆற்றுதல்;*** to spread out and draw the fingers through, as in drying wet hair. "கூந்தலுளர" (கலித். 105). 3. ***அசைத்தல்;*** to shake, cause to move or fly about. "விரைவளர் கூந்தல் வரைவளி யுளர" (புறநா. 133,4). 4. ***சிதறுதல்;*** to scatter, throw about, strew. "கனைத்துவண் டுளர்ந்த தார்க் காளைசீவ கன்னரோ" (சீவக. 707). 5. ***தடவுதல்;*** to draw the fingers over, as a bow string. "வல்லின்ஞா ணுளர்தீயே" (கலித். 7). 6. ***யாழ் முதலியன இசைத் தல்;*** to thrum, as a yāḻ; to play, as an instrument. "மென்மொழி மேவல ரின்னரம் புளர" (திருமுரு. 142). 7. ***கலக்குதல்;*** to disturb, ruffle, stir up, as fish the water of a pool. "சேலங் குளர்வயற் சேலூர்" (இறை. 2. பக்.41).

[உல் → உள் → உள → உளர்.]

உளர்[2]**-தல்** *u!ar-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***காலம் கடத்துதல்;*** to delay. "அவனை யுளரா தழிக்க" (விநாயகபு. 52,18). 2. ***அசைதல்;*** to stir, move. "நீருளர் பூந்தா மரைப் போது" (கலித். 112). 3. ***சுழலுதல்;*** to whirl, whiffle, as wind (W.). 4. ***உறுதியற்றாடுதல்;*** to be loose, as a pin or a screw.

[உல் → உள் → உளர் → உளர்-தல்.]

உளர்[3] *u!ar,* பெ. (n.) ***உடந்தை*** (யாழ்.அக.); accomplice.

[உள் → உளர்.]

உளர்ச்சி *u!arcci,* பெ. (n.) 1. ***சுழற்சி;*** whirling. 2. ***உளர்ப்பு;*** shaking.

[உல் → உள் → உள → உளர் → உளர்ச்சி.]

உளர்ப்பு *u!arppu,* பெ. (n.) ***அலைக்கை;*** stirring, shaking, agitating. "விரலுளர்ப்பவிழ்ந்த" (திருமுரு. 198). (செ.அக.).

[உளர் → உளர்ப்பு.]

உளர்வு[1] *u!arvu,* பெ. (n.) 1. ***அசைகை;*** moving. 2. ***யாழ்வாசிக்கை;*** playing a *yāḻ*. "கையுளர்வின் யாழிசை கொண்ட வினவண்டு" (கலித். 131,8). 3. ***சுழலுகை;*** whirling, whiffling, turning (W.). (செ.அக.).

[உல் → உள் → உள → உளர் → உளர்வு.]

உளர்வு[2] *u!arvu,* பெ. (n.) ***பேரொலி;*** loud noise.

[உல் → உள் → உள → உளர் → உளர்வு.]

உளவறி-தல் *u!avari-,* 2. செ.கு.வி. (v.i.) ***துப்பறிதல்;*** to spy out the secrets of a person, family or state, for some sinister object. (செ.அக.).

[உளவு + அறி-தல்.]

உளவன் *u!avaṉ,* பெ. (n.) ***துப்பாள்;*** spy; he who is in the secret; secret agent. "உளவனில்லாம லூரழியாது" (குமரே. சத. 91). (செ.அக.).

து. உளவு; **க., தெ.** ஒலவு.

[உளவு → உளவன்.]

உளவாடம் *u!avādam,* பெ. (n.) ***முன்பணம்;*** advance of money. (செ.அக.).

[உள்ளவடம் → உளவடம் → உளவாடம். உள்ளவடம் = உள்ளதாகிய பொருளை முன்பணமாக இடுதல்.]

உளவாள் *u!avāl,* பெ. (n.) ***துப்பாள்;*** spy, male or female. (செ.அக.).

[உளவு + ஆள்.]

உளவாளி *u!avāli,* பெ. (n.) 1. ***உளவாள்.*** (தாசில்.நா.); spy, informer. 2. ***உளவு*** பார்க்க; see *u!avu.* (செ.அக.).

[உளவு + ஆள் + இ.]

உளவு[1] *u!avu,* பெ. (n.) 1. ***மந்தணம்;*** secrecy, privacy. "உளவி லேயெனக் குள்ள வாறுணர்த்தின்" (தாயு. எனக்கென. 19). 2. ***உள்ளாராயும் துப்பு;*** secret, internal affair espied or ascertained by an emissary in disguise to be afterwards disclosed to others. 3. ***வேவு;*** spying, prying, espionage. "கண்ணிறக்கண்ட வுளவு" (கம்பரா. பிணிவீ. 116). 4. ***ஒற்றன்;*** spy, informer. 5. ***வழி;*** means, method, expedient. "ஊழை யகற்ற வுளவறியாப் பொய்யனிவன்" (அருட்பா, 11, எழுத்தறி. 24). 6. ***உள்ளதன்மை;*** real nature. "உளவறிந்தெல்லா நின் செய லாமென" (தாயு. எனக்கென. 2).

ம., து. உளவு; **க., தெ.** ஒளவு.

[உள் → உளவு.]

உளவு[2] *u!avu,* பெ. (n.) ***உளவன்*** பார்க்க; see *u!avaṉ.* (செ.அக.).

[உள் → உளவு.]

உளவுகாரன் *u!avu-kāraṉ,* பெ. (n.) ***உளவன்*** பார்க்க; see *u!avaṉ.* (செ.அக.).

[உளவு + காரன்.]

உளறல் *u!aral,* பெ. (n.) 1. ***பேரொலி*** (பிங்.); shouting, clamour, sound of many voices. 2. ***குழறுபடையான மொழி;*** incoherent speaking. (செ.அக.).

[உளறு → உளறல்.]

உளறு-தல் *u!aru-,* 10. செ.கு.வி. (v.i.) 1. ***ஆரவாரித்தல்*** (பிங்.); to roar, shout, vociferate. 2. ***கண்டபடி பிதற்றுதல்;*** to clamour without sense, utter unmeaning vociferations, speak incoherently as through fear, talk blatantly. "பந்த மயக்கிருக்கப் பற்றொழிந்தே னென்றுள றும்" (தாயு. பராபர. 336). (செ.அக.).

ம. உளறுக; **க.** ஒளறு; **தெ.** ஊல (நரி ஊளையிடல்); **பட.** ஊவலிக்கு (ஊளையிடல்).

[உளர்தல் = அசைத்தல், நடுங்குதல், ஒலித்தல். உளர் → உளறு.]

உளறுபடி *u!aru-padi,* பெ. (n.) ***உளறுபடை*** பார்க்க; see *u!aru-padai.* (செ.அக.).

[உளறு + படு = உளறுபடு → உளறுபடை → உளறுபடி.]

உளறுபடை *ulaṟu-paḍai,* பெ. (n.) ***பேச்சிற் குழறுகை;*** incoherence in speaking. (செ.அக.).

[உளறு + படு = உளறுபடு → உளறுபடை.]

உளறுவாயன் *ulaṟu-vāyaṉ,* பெ. (n.) ***பிதற்றுவோன்;*** babbler, he that chatters. ஊமைக் குளறுவாயன் உற்பாத பிண்டம். (செ.அக.).

[உளறு + வாய் + அன்.]

உளி[1] *uḷi,* பெ. (n.) 1. ***தச்சுக்கருவிகளுளொன்று;*** chisel. "கூருளி குயின்ற வீரிலை" (நெடுநல். 119). 2. ***கணிச்சி*** (திவா.); battle-axe. 3. ***சித்திரிக்குங்கருவி;*** burin, engraver's tool. (W.) 4. ***நகஞ்சீவி;*** barber's instrument for paring nails. (J.) 5. ***கூர்மை;*** sharpness. (செ.அக.).

ம., க., து. உளி; தெ. உலி; கோத., துட. உள்ய்.

[உள் → உளி = உள்ளே செல்வது, வெட்டுவது.]

உளி[2] *uḷi,* பெ. (n.) ***இடம்*** (பிங்.); place. (செ.அக.).

[உள் → உளி.]

உளி[3] *uḷi,* இடை. (part.) 1. ***ஓர் ஏழனுருபு.*** (திருமுரு. 95); in or at, a loc. ending. 2. ***மூன்றாம் வேற்றுமைப் பொருள்படும் இடைச்சொல்*** (குறள். 545, உரை); by or along, a particle having the force of an instr. ending. 3. ***ஒரு முதனிலைப் பொருளீறு*** (மலைபடு. 153. உரை); an expletive suff. (செ.அக.).

[உள் → உளி. உள் = இடம்.]

உளிக்குத்து *uḷi-k-kuttu,* பெ. (n.) ***முட்டியாற் குத்துங் குத்து*** (நெல்லை.); fisticuff. (செ.அக.).

[உளி + குத்து. உளி குத்தினாற்போல் ஆழப்பதியும் குத்து.]

உளிக்கொம்பு *uḷi-k-kombu,* பெ. (n.) ***விலங்கின் அடிக் கொம்பு;*** stump of a horn. (செ.அக.).

[உளி + கொம்பு = உளிக்கொம்பு = அடிப்பக்கம் பருத்த கொம்பு.]

உளிகை *uḷigai,* பெ. (n.) ***ஐங்காய மென்னும் ஐம்மலம்;*** the five evils attached to the soul. (சா.அக.).

[உள் → உளிகை (உள்ளிருப்பது).]

உளிஞை *uḷiñai,* பெ. (n.) 1. ***கோபுரவாயில்;*** entrance of a fort. 2. ***படை;*** army.

[உள் → உளி → உளிஞை.]

உளித்தலைக்கோல் *uḷi-t-talai-k-kōl,* பெ. (n.) ***இருப்புப் பாரை;*** crowbar. "எயின்சேரியி னுள்ளமாத ருளித்த லைக் கோல்கொடு" (கந்தபு. வள்ளி. 28). (செ.அக.).

[உளி + தலை + கோல். உளியை அல்லது கூர்மையுள்ள இரும்பைத் தலையிற் செருகிய மரக்கோல்.]

உளிப்பாரை *uḷi-p-pārai,* பெ. (n.) ***உளித் தலைக்கோல்*** பார்க்க. (யாழ்.அக.); see *uḷi-t-talai-k-kōl.* (செ.அக.).

[உளி + பாரை. பாரை = நீண்டது.]

உளியம் *uḷiyam,* பெ. (n.) ***கரடி;*** bear "நாளுலா வெழுந்த கோள்வ லுளியம்" (அகநா. 81). (செ.அக.).

ம. உளியம்.

[உளி → உளியம். உளிபோன்ற கூரிய உகிர்களை உடையது.]

உளிவை-த்தல் *uḷivai-,* 4. செ.குன்றாவி. (v.i.) ***மரத்தை உளியிட்டுப்பிளத்தல்*** (யாழ்.அக.); to split wood with an iron tool. (செ.அக.).

[உளி + வை.]

உளு[1]**-த்தல்** *uḷu-,* 4. செ.கு.வி. (v.i.) ***மர முதலியவை புழுவால் அரிக்கப்பட்டுக் கெடுதல்;*** to be worm eaten, as wood; to be eaten out by insects, as grain, as seeds. (செ.அக.).

[உள் → உளு → உளுத்தல். உளு = உட்செல்.]

உளு[2] *uḷu,* பெ. (n.) 1. ***உள்ளே துளைத்துச் செல்லும் புழு;*** wood-worm, wood-borer, wood-fretter. "விண்ணுளு வுண்டென" (சீவக. 1899). 2. ***உளுத்தது;*** that which is rotten. "மிளகுளு வுண்பான் புகல்" (பழ. 23). (செ.அக.).

ம. உளு, உளும்பு; க. உபுளு (ஒருவகை அட்டை); து. உபுளு; தெ. உலுமு; கூ. லூபென்.

[உள் → உளு = உள்ளே துளைத்துச் செல்வது.]

உளுக்கா-த்தல் *uḷukkā-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ***உள்ளொடுங்குதல்; ஓரிடத்தில் இருத்தல்;*** to sit down. "சோளேந்திரசிங்கனை யுளுக்காக்கப் பண்ணுகிறேன்" (ஈடு. 6,4,9). 2. ***சுவர் முதலியவை கீழிறங்குதல்;*** to sink as a wall. (W.) (செ.அக.).

[உளுக்கு + ஆர்-த்தல் - உளுக்கார்-த்தல் → உளுக்கா-த்தல்.]

உளுக்காரு-தல் *uḷukkāru-,* 9. செ.கு.வி. (v.i.) ***உளுக்கா*** பார்க்க; see *uḷukkā.* (செ.அக.).

[உள் → உள்கு → உளுகு → உளுக்கு = உள்ளொடுங்க, உயராமல் கீழே தாழ்ந்திரு. உளுக்கு + ஆர் + உ. தாழ்ந்திருத் தலை எய்து. உகரம் ஏவலொருமையீறு.]

உளுக்கு[1]**-தல்** *uḷukku-,* 15. செ.கு.வி. (v.i.) 1. ***சுளுக்கு தல்;*** to be sprained, dislocated. 2. ***நெளிதல்;*** to writhe. "நிலமுது குளுக்கிக் கீழுற" (கம்பரா. கார்முக. 10). (செ.அக.).

ம., உளுக்கு., க., தெ. ஊலு. (அமுகுதல்.); து. உள்கு.

[உள் → உளுக்கு = உள்ளசைதல்.]

உளுக்கு[2]**-தல்** *uḷukku-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***மெருகிடு தல்;*** to polish or streak metallic articles. (W.).

[உள் → உளுக்கு.]

உளுக்கு[3]**-தல்** *uḷukku,* பெ. (n.) ***சுளுக்கு;*** sprain, dislocation. (செ.அக.).

ம. உளுக்கல்; தெ. இலுகு; க. உளுகுகு; து. உள்கு.

[உல் → உலு → உலுக்கு → உளுக்கு = உள்ளிசைப்பு.]

உளுத்தம்பயறு *uluttam-payaru,* பெ. (n.) ***உளுந்து*** பார்க்க; see *ulundu.* (சா.அக.).

[உளுந்து → உளுத்து + பயறு - உளுத்தம்பயிறு.]

உளுத்தமா *uluttamā,* பெ. (n.) ***உளுந்து மாவு;*** the flour of black-gram.

ம. உளுத்த மாவு.

[உளுந்து → உளுத்தம் + மாவு - உளுத்தமாவு → உளுத்தமா.]

உளுத்தவெலும்பு *ulutta-v-elumbu,* பெ. (n.) ***அரித்த வெலும்பு;*** gangrenuous eating of a bone - caries. (சா.அக.).

[உலு → உளுத்த + எலும்பு.]

உளுத்திரம் *uluttiram,* பெ. (n.) ***மஞ்சள்;*** turmeric. (சா.அக.).

[உளு → உளுத்து → உளுத்திரம்.]

உளுத்துப்போ-தல் *uluttu-p-pō-,* 8. செ.கு.வி. (v.i.) 1. ***புழு வரித்தல்;*** to be eaten up by worm. 2. ***வெடிப்பி னால் உளுத்தல்;*** to be corroded by salt-petre. (சா.அக.).

[உளு → உளுத்து + போ.]

உளுந்து *ulundu,* பெ. (n.) ***பயறுவகை;*** black-gram. (செ.அக.).

[உள் → உளு = உள்ளொடுங்குதல், தாழ்தல். உளு → உளுந்து = உயரமாகாமல் தாழ்ந்து குட்டையாய் வளரும் செடி. உள்ளொடுங்கித் தாழ்ந்து பற்றிக் கொள்ளும் இயல்பால் உளும்பு → உடும்பு எனப் பெயர் பெற்றமை ஒப்பு நோக்குக.]

உளுந்துச்செடி *ulundu-c-cedi,* பெ. (n.) ***உளுந்து விளையும் செடி;*** plant of black-gram, phaseolus radiatus. (சா.அக.).

[உளுந்து + செடி.]

உளுந்தூர்ச்சக்கரம் *ulundūr-c-cakkaram,* பெ. (n.) ***பழைய நாணய வகை.*** (பணவிடு. 145.); an ancient coin, probably after a place ulundūr. (செ.அக.).

[உளுந்தூர் + சக்கரம்.]

உளுப்பு[1] *uluppu,* பெ. (n.) 1. ***உளுக்கை;*** condition of being worm - eaten. (W.) 2. ***உளுத்தமரம்*** (திவ். பெரியாழ். 3,7,3. ஸ்வா.வ்யா.); worm-eaten tree. (செ.அக.).

ம. உளுப்பு.

[உள் → உளு → உளுப்பு.]

உளுப்பு[2] *uluppu,* பெ. (n.) ***நாணம்; கூச்சம்;*** shame, shame-facedness. (சேரநா.).

ம. உளுப்பு.

[உள் → உளு → உளுப்பு.]

உளுப்புத்தாவு-தல் *uluppu-t-tāvu-,* 8. செ.கு.வி. (v.i.) ***உளுக்கத் தொடங்குதல்;*** to be attacked by a pest, as a crop. (W.). (செ.அக.).

[உளுப்பு + தாவு.]

உளுவாய் *uluvāy,* பெ. (n.) ***வெந்தயம்;*** fenugreek. (சா.அக.).

[உள் → உளு + வாய். உளு = சிறியது. 'வாய்' சொல்லாக்க ஈறு.]

உளுவை *uluvai,* பெ. (n.) 1. ***உழுவைமீன்;*** a sea-fish, green with brown spots, gobius ornatus. 2. ***ஆற்றுமீன் வகை;*** a fresh water-fish, variable, generally fawn-coloured with spots, gobius, giuris. 3. ***கடல் மீன்வகை*** (பாலவா. 1085); a sea-fish, brownish gray, saurida tumbil. (செ.அக.).

உளுவைகள்

ஆற்றுளுவைகள்	கடலுளுவைகள்
1. வெள்ளுளுவை 2. கல்லுளுவை 3. கோரையுளுவை	1. மண்ணுளுவை 2. குண்டலவுளுவை

[உளு + வாய் - உளுவாய் → உளுவை.]



உளுவை

உளை[1]**-தல்** *ulai-,* 2. செ.கு.வி. (v.i.) 1. ***குடைச்சல் நோவடைதல்;*** to ache or suffer pain in the limbs, as from weariness, cold, rheumatism. கால் உளைகிறது. 2. ***வயிறுளைதல்;*** to suffer griping pain, as with dysentery. 3. ***பேறுகால வேதனைப்படுதல்;*** to travail. 4. ***மனம் வருந்துதல்;*** to suffer in mind, to be in distress; to touch deeply. "உளையச் சொன்னான்" (கம்பரா. கையடை. 10). 5. ***அழிதல்;*** to perish; to be destroyed. "உளையா வலியொல்க" (தேவா. 570.8). 6. ***தோற்றல்;*** to be defeated, vanquished. "சுடருக் குளைந்து" (திவ். இயற். திருவிருத். 69). 7. ***சிதறிப்போ தல்;*** to disperse, scatter, to be diffused. "காலுளைக் கடும்பிசி ருடைய வாலுளை" (பதிற்றுப். 41.25).

[உள் → உளு → உளை.]

உளுவை மீன் வகை



வெள்ளுளுவை



ஊசிக்கணவாய்



கல்லுளுவை



கோரையுளுவை



மண்ணுளுவை

ஊசிக்கழுத்தி

உளை[2]-த்தல் *ulai-,* 2. செ.குன்றாவி. (v.t.) 1. ***வருத்து தல்;*** to afflict torment, make sorrowful. "மாலையென் னுயி ருளைப்பதும்" (கல்லா. 70.31). 2. ***வெறுத்தல்;*** to dislike. "உளைத்தவர் கூறு முரையெல்லா நிற்க" (பு.வெ. 12, இருபாற். 14). (செ.அக.).

[உள் → உளு → உளை.]

உளை[3]-த்தல் *ulai-,* 2. செ.கு.வி. (v.i.) 1. ***ஒலித்தல்;*** to sound, roar. "கடலுளைப்பதும்" (கம்பரா. நட்புக். 45). 2. ***ஊளையிடுதல்;*** to howl, as a jackal. "உலப்பி லின்பமோ டுளைக்கு மோதையும்" (மணிமே. 6,111). 3. ***யாழ் ஒலித்தல்*** (திவா.); sound of a harp. 4. ***சிந்துதல்;*** over flowing. 5. ***தடவுதல்;*** shampooing. (செ.அக.).

[உள் → உளை (உள்ளசைவு.) = ஒலித்தல்.]

உளை[4]-த்தல் *ulai-,* 12. செ.குன்றாவி. (v.t.) ***அழைத்தல்;*** to call, invite. (செ.அக.).

து. ஒளெப்பு.

[உள் → உளை.]

உளை[5] *ulai,* பெ. (n.) ***எழுத்திலாவோசை*** (நாநார்த்த.). (திவா.); inarticulate sound. (செ.அக.).

[உளு → உளை = உள்ளீடாகிய எழுத்தில்லாத ஓசை. எழுத் தின்மையின் பொருளுமில்லை என்பதாம்.]

உளை[6] *ulai,* பெ. (n.) ***குழைந்த சேற்று நிலம்;*** marsh land. "கரா முளை உழையிற்போக" (பிரமோத். 6,20).

[உள் → உளை = உட்குடைவுள்ளது, செறிவில்லாதது. நெகிழும் தன்மையுடையது.]

உளை[7] *ulai,* பெ. (n.) 1. ***குதிரை, அரிமா போன்றவற்றின் பிடரி மயிர்;*** mane, esp. of a horse or lion. 2. ***ஆண்களின் கூந்தல்;*** man's hair. "உளைபசுங்கொடி யின் வீக்கி" (இரகு. தேனுவ. 34). 3. ***தலை;*** head; upper part. "மிசையலங் குளைய பனைப்போழ் செரீஇ" (புறநா. 22,21). 4. ***குதிரையின் தலையாட்டம் என் னும் அணி;*** hair plume on a horse's head. "பரியுடை நன்மான் பொங்குளை யன்ன". (ஐங்குறு. 13).

க. ஒளெ.

[உள் → உளை = அசைதல்.]

உளை[8] *ulai,* பெ. (n.) 1. ***பொன்னிறம்;*** golden colour. 2. ***விடியற்காலம்;*** dawn. 3. ***மான்;*** deer.

க. உளை; து. உளெ.

[உல் → உள் → உளை. உல் = எரிதல், சிவப்பு.]

உளைக்கால் *ulai-k-kāl,* பெ. (n.) ***மயிர்க்கால்;*** roots of hair. (colloq.). (செ.அக.).

[உள் → உளை. (உள்ளார்ந்த அடிப்பகுதி) + கால்.]

உளைக்குதல் *ulaikkudal,* பெ. (n.) ***மார்பு, கை, கால் முதலியன குடைச்சலெடுத்தல்;*** suffering from pain in the breast and the limbs. (சா.அக.).

[உள் → உளை. (உள்ளசைவு.)]

உளைச்சல் *ulaiccal,* பெ. (n.) ***நோதல்;*** pain. (செ.அக.).

ம. உளச்சில்.

[உள் → உளை → உளைச்சல். (மு.தா. 314)]

உளைந்துபேசு-தல் *ulaindu-pēsu-,* 5. செ.கு.வி. (v.i.) ***மனம் நொந்து பேசுதல்;*** to express anguish from revolving in mind an injury received. (W.) (செ.அக.).

[உள் → உளை → உளைந்து + பேசு.]

உளைப்பு[1] *ulaippu,* பெ. (n.) ***உளைவு*** பார்க்க; see *ulaivu.* "நாக்குளெழு மருப்ப முளைப்புழலை" (தைலவ. தைல. 140). (செ.அக.).

[உள் → உளை → உளைப்பு.]

உளைமயிர் *ulai-mayir,* பெ. (n.) ***பிடரிமயிர்;*** mane. 'திருமேனியும் உளைமயிருமாய் நின்றநிலை" (ஈடு. 1,9,2). (செ.அக.).

[உள் → உளை = (உள்ளசைவு.) அசைதல். உளை + மயிர்.]

உளைமாந்தம் *ulai-māndam,* பெ. (n.) ***குழந்தைகளுக் குண்டாகு மொருவகை மாந்த நோய்;*** disease in children arising chiefly from indigestion. (சா.அக.).

[உளை + (மந்தம்) மாந்தம்.]

உளைமாந்தை[1] *ulai-māndai,* பெ. (n.) ***உட்புண்;*** internal abscess. (W.) (செ.அசு.)

[உள் → உளை + மாந்தை.]

உளைவு *ulaivu,* பெ. (n.) 1. ***வயிற்றுளைவு;*** griping pain in the stomach. 2. ***குடைச்சனோவு;*** intense pain in the limbs, as from rheumatism, weariness or cold. (செ.அக.).

ம. உளவு.

[உள் → உளை + உளைவு.]

உளைவுக்கண் *ulaivu-k-kan,* பெ. (n.) ***கண்மணியுள் உளைந்து வலிக்கு மொருவகைக் கண்நோய்;*** inflammation of the iris-iritis. (சா.அக.).

[உள் → உளை → உளைவு + கண்.]

உளைவெடு-த்தல் *ulaivedu-,* 4. செ.கு.வி. (v.i.) ***நோவுண்டாதல்;*** to be attacked with griping pain. (செ.அக.).

[உள் → உளை → உளைவு + எடு-த்தல்.]

உற்கட்டிசம் *urkattidam,* பெ. (n.) ***இருக்கை வகை*** (சிலப். 8,25, உரை.); a posture of sitting, one nine tiritaravillā-v-irukkai.

உற்கை *urkai,* பெ. (n.) ***விண்வீழ் கொள்ளி; எரிமீன்;*** meteor. "இழிந்தவா னுற்கை யென்ன" (பாரத. இரண்டா. 9).

[உல் + கை - உற்கை. உல் = எரிதல்.]

உற்றது *urradu,* பெ. (n.) 1. ***நிகழ்ந்த செயல்;*** that which has happened, event, occurrence. "உற்றதெல்லாஞ் சொன்னபின்" (கம்பரா. கைகேசி. 5). 2. ***உண்மை;*** truth, fact, what has actually happened. உற்றது சொன் னால் அற்றது பொருந்தும். (செ.அக.).

[உறு → உற்றது.]

உற்றதுரைத்தல் *uṟṟaduraittal,* பெ. (n.) ***ஒன்றைச் செய்வாயா என்று வினவியவனுக்குத் தனக்கு நேர்ந் துள்ளதைக் கூறும் முகத்தான் மறுப்பதைத் தெரிவிக் கும் விடை*** (நன். 386. உரை); an indirect way of replying in the negative in answer to a question, which consists in the person questioned mentioning as a fact which precludes his answering in the affirmative, as to say 'I am ill' in reply to question "will you do this?" (செ.அக.).

[உற்றது + உரைத்தல்.]

உற்றபடி *uṟṟa-padi,* பெ. (n.) ***நிகழ்ந்தவாறு;*** lit, how a thing has actually happened, hence, truth. "உற்றபடி... உரைத்தான்" (பாரத. சடாசுரன். 23). (செ.அக.).

[உறு → உற்ற + படி.]

உற்றவன் *uṟṟavan,* பெ. (n.) 1. ***சுற்றத்தான்*** (சூடா.); relation. 2. ***நண்பன்;*** friend, one who can be trusted. 3. ***நோயாளி;*** patient, sick person. "உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று" (குறள், 950). (செ.அக.).

ம. உற்றுவன்.

[உறு → உற்ற + அவன்.]

உற்றவிடம் *uṟṟa-v-idam,* பெ. (n.) 1. ***துன்பக்காலம்;*** time of distress, hour of trail. "உற்றவிடத்தி லுயிர்வழங் குந் தன்மையோர்" (வாக்குண். 6). 2. ***நட்பான இடம்;*** place where intimate friends are.

[உற்ற + இடம்.]

உற்றளவு *uṟṟaḷavu,* பெ. (n.) 1. ***சரியளவு;*** accurate measurement. (W.) 2. ***உள் அளவு;*** inside measurement; depth, as of a beam. 3. ***உண்மைச் செய்தி;*** real state of things, authentic news. (W.) (செ.அக.).

[உறு → உற்ற + அளவு.]

உற்றறி-தல் *uṟṟaṟi-,* 2. செ.குன்றாவி. (v.t.) 1. ***தொட்டறி தல்;*** to feel by touch; to make observation by the sense of touch. "ஒன்றறி வதுவே யுற்றறிவதுவே" (தொல். பொருள். 582). 2. ***பயின்றறிதல்;*** to learn by experience. (W.) (செ.அக.).

[உற்று + அறி-தல்.]

உற்றறிவு *uṟṟaṟivu,* பெ. (n.) 1. ***தொடு உணர்வு;*** sensation of touch. 2. ***மெய்யறிவு; நுண்ணறிவு;*** true knowledge, the knowledge of Atman, spiritual knowledge. (செ.அக.).

ம. உற்றறிவு.

[உற்று + அறிவு.]

உற்றாண்மை *uṟṟāṇmai,* பெ. (n.) ***நெருங்கியவுரிமை;*** interest among near relatives and friends, intimate friendship, attachment. (W.).

[உறு + ஆண்மை.]

உற்றாண்மைபேசு-தல் *uṟṟāṇmai-pēsu-,* 10. செ.கு.வி. (v.i.) ***பரிந்துபேசுதல்;*** to speak for, as a near relative or friend interested in one's welfare. (W.) (செ.அக.).

[உறு + ஆண்மை + பேசு.]

உற்றார் *uṟṟār,* பெ. (n.) 1. ***சுற்றத்தார்;*** relatives. "உற்றாரை யான்வேண்டேன்" (திருவாச. 39,3). 2. ***நண்பர்;*** friends. 3. ***மிக்கவர்;*** those who excel. "ஓதலுற்றா ருற்று" (திருக்கோ. 309). (செ.அக.).

ம. உற்றார்.

[உறு → (உற்று) உற்றார்.]

உற்றாருறவினர் *uṟṟār-uṟavinar,* பெ. (n.) ***அரத்தக் கலப்புடைய உறவினர்;*** kith and kin. (செ.அக.).

[உற்றார் + உறவினர்.]

உற்றான் *uṟṟāṉ,* பெ. (n.) 1. ***கணவன்;*** husband "உற்றார்க்குரியார் பொற்றொடி மகளிர்" (இறை. 14,94). 2. ***உறவினன்;*** relative. (செ.அக.).

[உறு → உற்றான்.]

உற்றிடம் *uṟṟidam,* பெ. (n.) ***துன்பக்காலம்;*** time of trouble or distress. உற்றிடத்துதவுதல். (உ.வ.).

[உறு + இடம்.]

உற்று *uṟṟu,* இடை. (part.) 1. ***ஓர் உவமச்சொல்.*** a sign of comparison. "தோளுற்றொரு தெய்வம்" (சீவக. 10). 2. ***உணர்ச்சியாய்ப் பரிவு கொண்டு;*** intimately, affectionately, kindly. 3. ***நிறைந்து, உடன்;*** full of, with. 4. ***எச்சரிக்கையாய், மனமாழ்ந்து;*** carefully, attentively, deeply. (சேர.நா.).

ம. உற்று.

[உறு → உற்று.]

உற்றுக்கேள்-(ட்)த(ட)ல் *uṟṟu-k-kēḷ-,* 11. செ.குன் றாவி. (v.t.) ***கூர்ந்து கேட்டல்;*** to listen attentively. (செ.அக.).

[உறு → உற்று + கேள்.]

உற்றுநோக்கு-தல் *uṟṟu-nōkku-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***கவனித்துப்பார்த்தல்;*** to look steadfastly. "உற்று நோக் குழி" (காஞ்சிப்பு. நகரே. 198). 2. ***கூர்ந்தாராய்தல்;*** to examine minutely; to scrutinize carefully. (செ.அக.).

ம. உற்றுநோக்குக.

[உறு → உற்று + நோக்கு.]

உற்றுப்பார்-த்தல் *uṟṟu-p-pār-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***உற்றுநோக்கு*** பார்க்க; see *uṟṟunōkku.* (செ.அக.).

[உறு → உற்று + பார்.]

உற்றுழி *uṟṟuḻi,* கு.வி.எ. (adv.) 1. ***துன்புறு காலத்தில்;*** at the time of imminent danger. "உற்றுழி யல்லது சொல்ல லின்மையின்" (தொல். பொருள். 208). (செ.அக.).

[உறு → உற்று + உழி.]

உற்றோர் *urrōr,* பெ. (n.) ***உற்றார்*** பார்க்க; see *urrār.* "உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்" (நறுந்.). (செ.அக.).

ம. உற்றோர்.

[உறு → உற்றார் → உற்றோர்.]

உற[1] *ura,* கு.வி.எ. (adv.) 1. ***அண்மையில்;*** near, nigh. "ஒல்கியுற நின்றான்" (சீவக. 2014).

[உறு → உற.]

உற[2] *ura,* இடை. (part.) ***ஓர் உவம உருபு;*** sign of comparison. "முந்துறக் காண்டல்" (தஞ்சைவா. 35, தலைப்பு).

[உறு → உற.]

உற[3]**-த்தல்** *ura-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***கிள்ளியெடுத்தல்;*** to nip, pinch off, tear open. "பொற்கை நகத்தாலுறக்கும்" (காளத். உலா, 460). 2. ***பிளத்தல்;*** to split with force, cleave, rend, rive. "உகிர்களா லுறக்கும்" (கம்பரா. இரணி. 138). 3. ***அழுத்துதல்;*** to squeeze out, as juice. உறந்துபிழி (வின்.). 4. ***உறிஞ்சுதல்;*** to suck in. இரத்தத்தை உறந்து போட்டது (இ.வ.). 5. ***ஒட்டக் கறத்தல்;*** to milk to the last drop. கன்றுக்கு விடாமல் பாலை உறந்து விட்டான் (இ.வ.). 6. ***முற்றுங்கவர்தல்;*** to drain to the last farthing. அவன் சொத்துகளை யெல்லாம் உறந்து போட்டான் (இ.வ.). 7. ***பிழிதல்;*** pressing out the juice as from leaves, flowers etc. 8. ***பிதுக்கல்;*** pressing out the pulp from any grain as in shelling peas etc.

[உல் → உறு → உற.]

உற[4]**-த்தல்** *ura-,* 3. செ.கு.வி. (v.i.) 1. ***சிறிதாதல்;*** to be very small, minute, as capable of being nipped. "உறக்குமால் வித்தினுள்ளால்" (காஞ்சிப்பு. கச்சிமயா. 22). 2. ***செறிதல்;*** to crowd, to be close together. "உறந்த விஞ்சி" (தொல். சொல். 347). (செ.அக.).

ம. உறக்குக; தெ. உறு.

[உல் → உறு → உற.]

உறக்கப்பாட்டு *urakka-p-pāttu,* பெ. (n.) ***குழந்தைகளைத் தூங்கவைக்கும் பாட்டு; தாலாட்டுப் பாட்டு;*** a cradle-song, lullaby. (சேரநா.).

ம. உறக்குபாட்டு.

[உறு → உறக்கம் + பாட்டு.]

உறக்கம் *urakkam,* பெ. (n.) 1. ***தூக்கம்*** (திவ்.திருப்பா. 12); sleep, slumber, drowsiness. 2. ***சோர்வு;*** weariness, lassitude. 3. ***நடுக்கம்;*** suspension of the faculties by sleep or otherwise. 4. ***மயக்கம்;*** fainting. 5. ***இறப்பு;*** death. (செ.அக.).

ம. உறக்கம்; க. ஒரகு. ஒரங்கு; கை. ஒர்க்; துட. வர்க்; குட. ஒரகி; து., பட. ஒரகு; தெ. ஒரகு; பர். ஒர்க்.

[உறங்கு → உறக்கம்.]

உறக்கமருந்து *urakka-marundu,* பெ. (n.) ***தூக்கமருந்து; உறக்கம் வரும் மருந்து;*** medicine to induce sleep, sleeping - draught. (சேரநா.).

ம. உறக்க மருந்து.

[உறக்கம் + மருந்து.]

உறக்காய்ச்சல் *ura-k-kāyccal,* பெ. (n.) ***மருந்தின் சத்து இறங்கும்படி காய்ச்சல்;*** boiling a drug in water for extracting its essence. (சா.அக.).

[உறு → உற + காய்ச்சு + அல்.]

உறக்கு[1]**-தல்** *urakku-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***தூங்கச்செய்தல்;*** to put to sleep, as a child (W.) 2. ***இமையை மூடச்செய்தல்;*** to weigh down the eyelids, as in sleep. நித்திரை கண்ணை உறக்குகின்றது (இ.வ.). 3. ***அழித்தல்;*** to destroy, ruin. (W.) என் குடியை உறக்கிப் போட்டான் (இ.வ.). (செ.அக.).

ம. உறக்கு; பட. ஒரகுசு.

[உறங்கு → உறக்கு.]

உறக்கு[2] *urakku,* பெ. (n.) ***உறக்கம்*** பார்க்க; see *urakkam* "உறக்கெனு மோடை யானை" (சீவக. 3075). (செ.அக.).

[உறங்கு → உறக்கு.]

உறக்குத்து[1] *ura-k-kuttu,* பெ. (n.) ***மரங்களில், தவசங்களில் உண்டாகும் புழுக்குத்து;*** damage caused (to timber or corns) by worms. (சேரநா.).

ம. உறக்குத்து.

[உறு → உற + குத்து.]

உறக்குத்து[2]**-தல்** *urakkuttu-,* 6. செ.குன்றாவி. (v.t.) 1. தவசம், மரம் முதலியவற்றைப் புழுக்குத்துதல்; to be worm-eaten (as wood etc.); to be eaten by insects. (சேரநா.).

ம. உறக்குத்துக.

[உறு → உற + குத்து.]

உறகு-தல் *uragu-,* 4. செ.கு.வி. (v.i.) ***ஒடுங்கித் தூங்குதல்;*** to sleep. "பறவை யரையாவுறகல்" (திவ். பெரியாழ். 5,2,9).

க., பட. ஒரகு.

[உறங்கு → உறகு.]

உறங்காப்புளி *urangā-p-puli,* பெ. (n.) ***இரவில் இலை குவியாத புளிய மரம்;*** species of tamarind tree whose leaves do not fold up at night. (செ.அக.).

[உறங்காத + புளி.]

உறங்காப்புளியன் *urangā-p-puliyan,* பெ. (n.) ***ஒரு சிறுதெய்வம்;*** an inferior deity. "உன்னி வளர்ந்த உறங்காப் புளியனென்னும்" (பஞ்ச. திருமுக. 736). (செ.அக.).

[உறங்காத → உறங்கா + புளியன்.]

உறங்கி *uṟaṅgi,* பெ. (n.) ***புளியமரம்*** (சங்.அக.); tamarind tree. (செ.அக.).

[உறங்கு → உறங்கி. இரவில் இலைகள் குவிந்து - உறங்கி யிருப்பதால் உறங்கி.]

உறங்கு-தல் *uṟaṅgu-,* 15. செ.கு.வி. (v.i.) 1. ***தூங்குதல்*** (குறள், 339); to sleep, slumber. 2. ***தூக்க மயக்கமுறு தல்;*** to feel drowsy, as on account of a tedious journey, disease, or want of food. 3. ***ஒடுக்கநிலையடை தல்;*** to become closed; to droop, as flowers or leaves by the absence of the sun. ''தண்டலைக் காவுறங்கின'' (தமிழ்நா. 132). 4. ***சோர்தல்;*** to be weary. 5. ***தங்குதல்;*** to dwell, abide, reside. ''தாமரை யுறங்குஞ் செய்யாள்'' (கம்பரா. நாட்டுப். 6).

து. ஒரங்கு, ஒரகுனி; **தெ.** ஒரகு; **கோண்.** வீரன்கு; **பர்.** ஓர்க்; **ம.** உறங்ஙுக; **எர., பட.** ஒரகு; **க.** ஒரகு, ஒரங்கு; **துட.** வொரக்; **கோத.** ஓர்க்; **குரும்.** வொகினெ; **குட.** வரகு, ஒர்.

[உற → உறங்கு.]

உறங்குசுறா *uṟaṅgu-šurā,* பெ. (n.) ***சுறா மீனின் ஒரு வகை;*** a kind of shark.

[உறங்கு + சுறா.]



உறங்குசுறா

உறங்கொட்டாமை *uṟaṅgoṭṭāmai,* பெ. (n.) ***தூக்கம் பிடியாமை;*** sleeplessness. (சா.அக.).

[உறக்கம் + ஒட்டாமை - உறக்கொட்டாமை → உறங்கொட் டாமை.]

உறட்டல் *uṟaṭṭal,* பெ. (n.) ***வறட்சி;*** sterility.

[உறட்டு → உறட்டல்.]

உறட்டலன் *uṟaṭṭalaṉ,* பெ. (n.) ***உடல் வற்றியவன்;*** slim, thin, lank person, emaciated person.

[உறன் → உறட்டவன் → உறட்டலன்.]

உறட்டற்களி[1] *uṟaṭṭaṟkaḷi,* பெ. (n.) ***வறண்ட களிமண் தரை;*** sterile, clayey soil (W.). (செ.அக.).

[உறண்டல் → உறட்டல் + களி.]

உறட்டி *uṟaṭṭi,* பெ. (n.) 1. ***வறண்டது;*** that which is dried. 2. ***அப்பம்;*** a kind of cake.

[உல் → உர் → உரட்டு → உறட்டு → உறட்டி = வெப்பம் மிகுதல், சுடுதல், காய்தல்.]

உறட்டு[1]**-தல்** *uṟaṭṭu-,* 6. செ.குன்றாவி. (v.t.) ***வறட்டுதல்;*** to dry, reduce, cause to wither, emaciate. (W.).

[உல் → உர் → உரட்டு → உறட்டு.]

உறட்டு[2] *uṟaṭṭu,* பெ. (n.) ***கரம்பை நிலம்;*** rugged uneven ground as dried mud which hurts the feet. (J.) (செ.அக.).

[உறண்டு → உறட்டு.]

உறட்டுக்கண் *uṟaṭṭu-k-kaṇ,* பெ. (n.) ***ஓரக்கண்;*** squint eye. (Loc.).

[உல் → உர் → உரு → உறல் → உறள் → உறட்டு + கண். உறட்டு = தீய, கொடிய, வளைந்த.]

உறட்டுக்கை *uṟaṭṭu-k-kai,* பெ. (n.) ***இடக்கை;*** left hand. (செ.அக.).

ம. எடங்கை.

[உறள் = மாறான, மாறுபட்ட. உறட்டு + கை. ஒரட்டாங்கை, ஒட்டாங்கை என்பன கொச்சை வழக்கு.]

உறட்டை *uṟaṭṭai,* பெ. (n.) ***கெட்ட நாற்றம்;*** bad offensive smell, stench, as of a carcass, of bugs (J.). (செ.அக.).

[உறள் → உறட்டு → உறட்டை = வெப்பம் அல்லது வெயில் படுதலால் பரவும் முடைநாற்றம்.]

உறட்டையடி-த்தல் *uṟaṭṭai-y-aḍi-,* 4. செ.கு.வி. (v.i.) ***கெட்ட நாற்றம் வீசுதல்;*** to smell offensively. (J.) (செ.அக.).

[உறள் → உறட்டு → உறட்டை + அடி.]

உறட்டைவீசு-தல் *uṟaṭṭai-vīšu,* 10. செ.கு.வி. (v.i.) ***உறட்டையடி*** பார்க்க; see *uṟaṭṭai-y-aḍi.* (செ.அக.).

[உறள் → உறட்டு → உறட்டை + வீசு.]

உறண்டல் மண் *uṟaṇḍal-maṇ,* பெ. (n.) ***வறள் மண்;*** dried soil.

[உறண்டல் + மண்.]

உறண்டற்களி *uṟaṇḍaṟ-kaḷi,* பெ (n.) ***உறட்டற்களி*** பார்க்க; see *uṟaṭṭaṟkaḷi.*

[உறண்டல் + களி.]

உறண்டு-தல் *uṟaṇḍu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***வறளுதல்;*** to become reduced, emaciated, by journeying, by want of sufficient food, by disease (J.). சாப்பாடில் லாமல் உறண்டிப் போனான் (இ.வ.). (செ.அக.).

[உறள் → உறண்டு → உறண்டு-தல் = வெம்பிக் காய்தல், மெலிதல்.]

உறண்டை *uṟaṇḍai,* பெ. (n.) 1. ***தொல்லை தருதல்;*** annoying, harassing, mischievous or offensive sport, as pinching, pushing. 2. ***முரட்டுத்தனம்;*** sourness or coarseness of disposition. 3. ***கெட்ட நாற்றம்;*** rank smell, as of bugs, of fish, or rancid ghee. (செ.அக.).

[உறள் → உறண்டு → உறண்டை.]

உறண்டைக்கு நிற்றல் *urandaikku-niṟṟal,* பெ. (n.) ***முரணுகை;*** disagreeing, dissenting (W.). (செ.அக.).

[உறண்டை + கு + நிற்றல்.]

உறண்டையடி-த்தல் *urandai-y-adi-,* 4. செ.கு.வி. (v.i.) ***உறட்டையடி-த்தல்*** பார்க்க; see *uṟattai-y-adi.*

[உறண்டை + அடி.]

உறண்டையாடு-தல் *urandai-y-ādu-,* 5. செ.கு.வி. (v.i.) ***அலைக்கழித்தல்;*** to annoy, harass (W.). (செ.அக.).

[உறண்டை + ஆடு.]

உறண்டையிடு-தல் *urandai-y-idu-,* செ.குன்றாவி. (v.t.) ***உறண்டையாடு*** பார்க்க; see *urandai-y-ādu.* (செ.அக.).

[உறண்டை + இடு.]

உறந்தி *urandi,* பெ. (n.) ***உறங்கி*** பார்க்க; see *urangi.*(சா.அக.).

[உறங்கி → உறந்தி. (கொ.வ.)]

உறந்தை *urandai,* பெ. (n.) ***உறையூர்;*** uraiyūr in Tiruchirāpaḷḷi an ancient capital of the Cōḷa kingdom. "சோழ ருறந்தை யவையத்து" (புறநா. 39): (செ.அக.).

[உறு → உறை → உறைந்தை → உறந்தை. உறை = தங்கு, வாழ்ந்திரு.]

உறப்பு[1] *urappu,* பெ. (n.) ***செறிவு;*** denseness, thickness, closeness. "விறப்பு முறப்பும் வெறிப்புஞ் செறிவே" (தொல். சொல். 347).

[உறு → உற → உறப்பு.]

உறப்பு[2] *urappu,* பெ. (n.) ***பிளப்பு*** (நாநார்த்த.); cleavage. (செ.அக.).

[உறு → உற → உறப்பு.]

உறமுறையார் *ura-muraiyār,* பெ. (n.) ***உறவின்முறையார்*** பார்க்க; see *uravinmuraiyār.* (செ.அக.).

[உறவு + முறையார் = உறவுமுறையார் → உறமுறையார் (கொ.வ.).]

உறல் *ural,* பெ. (n.) 1. ***அடைகை;*** being near, coming, drawing near, approaching. "உறற்பால வூட்டா கழியு மெனின்" (குறள். 378). 2. ***உறவு; உறவின் முறை;*** relationship. "உறன்முறையா னுட்பகை தோன்றின்" (குறள், 885). 3. ***தொடுகை;*** tactile sense, a property of the skin. "நாற்றத் தோற்றச் சுவையொலி யுறலாகி நின்ற" (திவ். திருவாய். 3,6,6). (செ.அக.).

[உறு → உறல்.]

உறவன்[1] *uravan,* பெ. (n.) ***உறவுடையான்*** (சங். அக.); relation. (செ.அக.).

ம. உறவன்.

[உறவு + அன்.]

உறவன்[2] *uravan,* பெ. (n.) ***ஒருவகைப் பட்டு;*** a kind of silk. (சேரநா.).

ம. உறவன்.

[உறு → உறவு → உறவன்.]

உறவாக்கி *uravākki,* பெ. (n.) 1. ***இயைதல் படும்படி செய்யும் மருந்துச் சரக்குகள்;*** drugs or medicine acting as chemical agents. 2. ***இயைபுறும் பொருள்;*** that which induces chemical combination. 3. ***மருந்துகளை இயைவிப்போன்;*** a pharmaceutical chemist. 4. ***மாழைகளை வாத முறையின்படி கலக்கச் செய்து இயைபுறுத்தி மாற்றமடையச் செய்வோன்;*** (In alchemy) one who practises the obsolete art which aims at the transmutation of metals; alchemist. (சா.அக.).

[உறவு + ஆக்கி.]

உறவாக்கு-தல் *uravākku-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***அமைதி செய்தல்;*** to reconcile, conciliate (J.). (செ.அக.).

[உறவு + ஆக்கு.]

உறவாடு-தல் *uravādu-,* 5. செ.கு.வி (v.i.) 1. ***உறவு கொண்டாடுதல்;*** to be on terms intimacy with one's relations. 2. ***நட்புப் பாராட்டுதல்;*** to be friends with. "தம்பலவாயொடு பேசிக் கொண்டுறவாடி" (திருப்பு. 581). (செ.அக.).

[உறவு + ஆடு.]

உறவாளி *uravāḷi,* பெ. (n.) ***உறவினன்;*** relation. (செ.அக.).

[உறவு + ஆள் + இ.]

உறவி[1] *uravi,* பெ. (n.) 1. ***உயிர்*** (பிங்.); life, soul. 2. ***உறவு*** (திவா.); relationship. 3. ***இவ்வுலகத் தொடர்பு*** (திவா.); worldly attachment. 4. ***எறும்பு;*** ant. "உறவி யோம்பி யொதுங்கியும்" (சீவக. 3119). 5. ***ஒருவகைப் பூச்சி;*** a moth varrat port. 6. ***மலைமுருங்கை*** (மலை.); wild drumstick tree, prickly sesban.

ம. உறவி; க. ஒர; தெ. உறு.

[உறு → உறவி = உறவு கொண்டு நெருங்கி வாழும் இயல் புடைய எறும்புகள்.]

உறவி *uravi,* பெ. (n.) 1. ***நீரூற்று*** (பிங்.); spring, fountain. 2. ***கிணறு*** (பிங்.); well.

[உல் → உறு → உறவி. உறு = மிகுதல், நீரூறுதல்.]

உறவி[3] *uravi,* பெ. (n.) ***உலைக்களம்*** (பிங்.); smith's forge.

[உல் → உறு → உறவி.]

உறவிடம் *uravidam,* பெ. (n.) ***மூலம்;*** source, origin.

[உறு → உற + இடம்.]

உறவின்முறையார் *uṟaviṉ-muṟaiyār,* பெ. (n.) ***உறவினர்;*** relations. "உறவின் முறையார்கள் பகையும்" (குமரே. சத. 22). (செ.அக.).

[உறவு + இன் + முறை + ஆர். உறவுத் தொடர்புகளால் முறைப்படி நெருங்கி வாழும் இயல்பினர். ஒரம்பர என இச்சொல் மருவி வழங்குவது கடுங்கொச்சை வழக்கு. இன் சாரியை.]

உறவு[1] *uṟavu,* பெ. (n.) 1. ***உறுகை;*** entering upon, commencing. "யானையோ டாட லுறவு" (பழ. 16). 2. ***சுற்றம்;*** relation, relationship. "உருவே யென்னுறவே யென்னூனே" (தேவா. 482,1). 3. ***நட்பு;*** friendship, love, intimacy. "ஒருவே னொடுநீ யுறவாக லையோ" (கம்பரா. கடிமண. 14). 4. ***விருப்பம்;*** desire. "தலைவனைக் காணவுறவினளாம்" (இறை. களவி. 11. உரை) 5. ***உலகப்பற்று*** (திவா.); worldly attachment, opp. to துறவு. (செ.அக.).

ம. உறவு; க. ஒலுவு.

[உறு → உறவு.]

உறவுகல-த்தல் *uṟavu-kala-,* 3. செ.கு.வி. (v.i.) 1. ***திருமணத்தினால் புதிய தொடர்பு ஏற்படுதல்;*** to form new relationship by intermarriage. 2. ***தொடர்பு பாராட்டுதல்;*** to be friends. "காகமுறவு கலந்துண்ணக் கண்டீர்" (தாயு. காடுங்கரையும், 3). (செ.அக.).

[உறவு + கல-.]

உறவுகூடு-தல் *uṟavu-kūḍu-,* 5. செ.கு.வி. (v.i.) ***நட்பாதல்;*** to become friends, to grow intimate. (W.). (செ.அக.).

[உறவு + கூடு.]

உறவுமுறி-தல் *uṟavu-muri-,* 4. செ.கு.வி. (v.i.) ***நட்புக் கெடுதல்;*** to cease to be friends, become disunited. (W.). (செ.அக.).

[உறவு + முறி.]

உறவுமுறை *uṟavu-muṟai,* பெ. (n.) ***சுற்றம்;*** relationship, kinship. உறவுமுறையாராம் இத்தனையோ வேண்டுவது (ஈடு, 5,6,7). (செ.அக.).

[உறவு + முறை.]

உறவுமுறையார் *uṟavu-muṟaiyār,* பெ. (n.) ***உறவுமுறை*** பார்க்க; see *uṟavu-muṟai.*

[உறவு + முறை + ஆர்.]

உறவெடு-த்தல் *uṟaveḍu-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***ஊறிவருதல்;*** to ooz out. 2. ***உண்டாதல்;*** to orginate, form. (சேரநா.).

ம. உறவெடுக்குக.

[உறவு + எடு.]

உறவோர் *uṟavōr,* பெ. (n.) 1. ***சுற்றத்தோர்;*** relation. 2. ***சிறந்தோர்;*** persons of eminence.. 3. ***சூழ்ந்தோர்;*** companion. 4. ***குடியிலிறந்தோர் பெயர்;*** deceased name in a family 5. ***நண்பர்;*** friends.

[உறவு + (ஆர்) ஓர்.]

உறழ்[1]**-தல்** *uṟaḻ-,* 2. செ.கு.வி. (v.i.) 1. ***வேறுபடல்;*** to admit of option, in combination of words, as to whether a letter undergoes any change or remains unchanged. "கன்னவ் வேற்று மென்மையோ டுறழும்" (நன். 217). 2. ***திரிதல்;*** to change, vary. "உறழ்ச்சி வாரத்து" (தொல். எழுத். 102). 3. ***எதிராதல்;*** to be contrasted. "உறழுங் கிளவி" (தொல். பொருள். 238).

[உறு → உறன் → உறழ்.]

உறழ்[2]**-தல்** *uṟaḻ-,* 2. செ.கு.வி. (v.i.) 1. ***செறிதல்*** (திவா.); to be close, dense, crowded. 2. ***ஒன்றனான் ஒன்று மிகுதல்;*** to be compared with.

[உறு → உறள் → உறழ்.]

உறழ்[3]**-தல்** *uṟaḻ-,* 2. செ.கு.வி. (v.i.) 1. ***இடையிடுதல்*** (திவா.); to interfere. 2. ***வீணையில் அல்லது யாழில் ஒரு நரம்பைவிட்டு ஒரு நரம்பைத் தெறித்தல்;*** to change, as the string in playing a *vīṇā.* "வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்தும்" (பொருந. 23). 3. ***பெருக்குதல்;*** to multiply. "இருநான்குருபு முறழ்தர" (நன். 240).. 4. ***ஒத்தல்;*** to resemble. "துப்புறழொண்டளிர்" (ஐங்குறு. 273).

[உறு → உற → உறழ். உற = மிகுதல். அதிகரித்தல், நெருக்கம் மிகுதல். உறழ் = மிகச்செய்தல், அதிகரிக்கச்செய்தல்.]

உறழ்கலி *uṟaḻ-kali,* பெ. (n.) ***கலிப்பா வகை;*** a variety of Kali verse in which statement and response alternate. "கூற்று மாற்றமு மிடையிடை மிடைந்தும் போக்கின்றாக லுறழ்கலிக் கியல்பே" (தொல். பொருள். 468). (செ.அக.).

[உறழ் + கலி.]

உறழ்குறி-த்தல் *uṟaḻ-kuṟi-,* 4. செ.கு.வி. (v.i.) ***சொற்போர் செய்யக் கருதுதல்;*** to intend to engage in a disputation. "உறழ்குறித்தெடுத்த... கொடியும்" (பட்டினப். 171). (செ.அக.).

[உறழ் + குறி.]

உறழ்ச்சி *uṟaḻcci,* பெ. (n.) 1. ***மாறுபாடு;*** rivalry, competition. "சுண்ண வுறழ்ச்சியுள் வெல்வது" (சீவக. 879). 2. ***திரிகை;*** changing. "உறழ்ச்சிவாரத்து" (தொல். எழுத். 102). 3. ***வேறுபாடு*** (நன். 123, மயிலை.); (Gram.) admission of an option in the combination of words in regard to a letter undergoing a change or remaining unchanged.. 4. ***யாப்பில் குறுகிய நெடிய அசைகள் அல்லது எண்கள் பல இணைத்து வரும் இணைப்பு*** (யாப். வி. 95, 471.); all possible combinations of certain given numbers, or of the short and the long syllables in metre. (செ.அக.).

[உறழ் → உறழ்த்தி → உறழ்ச்சி.]

உறழ்ப்பு *uṟaḻppu,* பெ. (n.) 1. ***பண்வகை*** (காந்தார பஞ்சமம்) (பிங்.); a specific melody - type. 2. ***நெருக்கம்;*** denseness, closeness. (செ.அக.).

[உறு → உற → உறழ் → உறழ்ப்பு.]

உறழ்பொரு *uṟaḻ-poru,* பெ. (n.) ***உவமையினும் பொருளை மிகுத்துக் கூறும் ஒப்பு*** (தொல். சொல். 78. உரை); comparison of degree, opp. to உவமப் பொரு. (செ.அக.).

[உறழ் + பொரு.]

உறழ்பொருள் *uṟaḻ-poruḷ,* பெ. (n.) ***ஒப்பு மாறுபடக்கூறு வது*** (தொல். சொல். 16, சேனா.); that which is compared with another. (செ.அக.).

[உறழ் + பொருள்.]

உறழ்வு *uṟaḻvu,* பெ. (n.) 1. ***உறழ்ச்சி***[3] பார்க்க; see *ūṟaḻcci-,* "அல்வழி யவற்றோ டுறழ்வும்" (நன். 227). 2. ***பகை*** (திவா.); enmity, hostility. 3. ***போர்*** (திவா.); battle. 4. ***இடையீடு*** (திவா.); obstacle, impediment. 5. ***ஒப்பு;*** resemblance, likeness. "ஐந்துவாளியே யுறழ் வென" (பாரத. சூது. 77). 6. ***செறிவு.*** (திவா.); closeness denseness, as of a forest. 7. ***உணர்வு*** (திவா.); perception. 8. ***காலம்*** (சூடா.); time. (செ.அக.).

[உறழ் → உறழ்வு.]

உறழ *uṟaḻa,* இடை. (part.) ***உவமையுருபு;*** sign of comparison. "என்ன வுறழத் தகைய நோக்கொடு" (தொல். பொருள். 287). (செ.அக.).

[உறு → உறழ் + அ.]

உறள் *uṟaḷ,* பெ. (n.) 1. ***ஒருவகை ஈ;*** a kind of bee. 2. ***ஒருவகைப் புழு;*** wood-worm. 3. ***தீப்பொறி;*** a spark. 4. ***ஓரினமீன்;*** a kind of fish. (சேரநா.).

ம. உறள்.

[உல் → உறு → உறல் → உறள். உல் = குத்துதல்.]

உறன்முறை *uṟaṉ-muṟai,* பெ. (n.) ***உறவுமுறை*** பார்க்க; see *uṟavu-muṟai.* "உறன் முறையா னுட்பகை தோன்றின் " (குறள், 885). (செ.அக.).

[உறு → உற → உறவு + இன் + முறை → உறவின்முறை → உறன்முறை.]

உறாதவன் *uṟādavaṉ,* பெ. (n.) ***நொதுமலன்;*** one who is neither friend nor foe, neutral. "உறாஅதவர் போற் சொலினும்" (குறள், 1096). (செ.அக.).

[உறு → உறாத + அவன்.]

உறாமை *uṟāmai,* பெ. (n.) ***மதியாமை;*** cavalier act. "ஒருவரை மதியா துறாமைகள் செய்தும்" (தேவா. 1115,1). (செ.அக.).

[உறு → உறா + மை.]

உறார் *uṟār,* பெ. (n.) ***பகைவர்;*** foes. "உறாரிலாவகை" (விநாயகபு. 22,44). (செ.அக.).

[உறு + ஆர்.]

உறாவரை *uṟāvarai,* பெ. (n.) ***முற்றூட்டு;*** land or property in full possession. "இதெந்தை யுறாவரை" (திருக்கோ. 252). (செ.அக.).

[உறு + ஆவரை. ஆவரை = எல்லை.]

உறாவு-தல் *uṟāvu-,* 7. செ.கு.வி. (v.i.) 1. ***சோர்தல்;*** to be weary, exhausted; to faint. இவள் பரிஸரத்தி லுள்ளவையிறே உறாவிக் கிடப்பன (ஈடு, 6,8,4). (செ.அக.).

[உறத்தல் = மிகுதல், சோர்வு, உறவு → உறாவு.]

உறி[1]**-தல்** *uṟi-,* 2. செ.குன்றாவி. (v.t.) ***உறிஞ்சுதல்;*** to snuff up, sip up. (செ.அக.).

க. உறி.

[உறு → உறி = உறச்செய், பெறச்செய், நுகரச்செய்.]

உறி[2] *uṟi,* பெ. (n.) ***பண்டம் வைக்கும் பொருட்டுத் தொங்கவிடும் உறி;*** hoop or a network of rope for placing pots, and suspended by a cord from the roof of a house, from the hand, or from the end of a pole carried on the shoulder. (செ.அக.). 2. ***ஏணை;*** children's hummock.

ம. உரி; **க.** உட்டி, ஒட்டி, உரி; **கோத.** உர்ய; **து.** உரிகச்செ(சிறு மணி); **தெ.** உட்டி.

[உறு → உறி. உறு = பொருந்து. உறி = பொருந்துமிடம்.]

உறிக்கா *uṟi-k-kā,* பெ. (n.) ***இரு பக்கத்திலும் உறிதொங் கிய காவடி;*** balancing pole used by pilgrims for carrying burdens. "உறிக்கா வூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவல்" (பெரும்பாண். 171). (செ.அக.).

[உறி + கா.கா → காவடி = காவுகின்ற (சுமக்கின்ற) வடி (தடி.).]

உறிச்சமணர் *uṟi-c-camaṇar,* பெ. (n.) ***சமணமுனிவரி லொருசாரார்;*** ascetics of the Jaiṇa sect who sit in swings that they may not tread upon and thus destroy insect life. (செ.அக.).

[உறி + சமணர். உறியில் அமர்ந்த சமணர்.]

உறிஞ்சு-தல் *uṟiñju-,* 10. செ.குன்றாவி. (v.t.) 1. ***வாயால் உள்ளிழுத்தல்;*** to sip, suck up, draw into the mouth, as in tasting liquids. "நன்குறிஞ்சிப் பேய்த்தநஞ் சுவைத் தார்" (அஷ்டப். திருவே. மாலை, 41.). 2. ***மூக்கால் உறிஞ்சுதல்;*** to snuff up, sniff, draw in sharply through the nose. "மூக்குறிஞ்சி முலையுணாயே" (திவ். பெரி யாழ். 2,2,2). 3. ***உள்ளேயிழுத்தல்;*** to suck up, take in, absorb, as a sponge. மழைநீரைப் பூமி உறிஞ்சி விட்டது (உ.வ.). (செ.அக.).

ம. உறிஞ்சுக.

[உல் → உறு → உறி → உறிஞ் → உறிஞ்சு. உரிஞ கொற்றா, நாகா, மாடா எனவரும் இலக்கண மேற்கோள்களில் றகரம் ரகரமாகத் திரிந்தது.]

உறிஞ்சுப்பு *uriñjuppu,* பெ. (n.) ***மூக்கால் முகரும் ஒரு வகையுப்பு;*** volatile salt used as a stimulant - smelling salt. (சா.அக.).

[உறிஞ்சு + உப்பு.]

உறியடி *uri-y-adi,* பெ. (n.) ***கண்ணன் பிள்ளைப் பருவத்தில் உறிவெண்ணெ யெடுத்ததைக் கொண் டாடும் திருநாள்;*** annual festival in Āvaṇi corresponding to August-September in which herdsmen break pots suspended in networks of rope, to commemorate the mythological story of Sri Krişhṇa stealing butter during His childhood. (செ.அக.).

ம. உறியடி.

[உறி + அடி.]

உறியடுக்குச்சட்டி *uri-y-adukku-c-catti,* பெ. (n.) ***உறி யில் வைக்கப்படும் அடுக்குப்பானை;*** a number of small kitchen utensils placed one over the other and suspended from the roof in a net work of rope. (W.) (செ.அக.).

[உறி + அடுக்கு + சட்டி.]



உறியடுக்குச்சட்டி

உறிவலை *uri-valai,* பெ. (n.) 1. ***சிறிய மீன்களைப் பிடிக்கப் பயன்படுத்தும் ஒருவகை வலை;*** a kind of fishing-net.

ம. உறிவல.

[உறி + வலை.]

உறு[1]-தல் *uru-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***இருத்தல்;*** to be, exist. 2. ***நேர்தல்;*** to happen, occur, befall, as good or evil. "மெய்த்திரு வந்துற்றாலும்" (நள. சுயம். 5). 3. ***தங்குதல்;*** to dwell, reside. 4. ***நன்மையாதல்;*** to be desirable, useful, worthy of choice. "இரவாமை கோடியுறும்" (குறள், 1061). 5. ***உறுதியாதல்;*** to be permanent, lasting, stable. "வேல்வா யுயிர் வழங்கும் வாழ்க்கையுறும்" (பு.வெ. 2,13). 6. ***மனத்தில் நிகழ் தல்;*** to pass in one's mind. "நினக்குறுவது சொல்லுதி" (கம்பரா. கும்பக. 325). 7. ***மிகுதல்;*** to be numerous "பல்லெலாம் உறத்தோன்றும் பகுவாயாள்" (கம்பரா. சூர்ப்ப. 138). 8. ***சார்ந்திருத்தல்;*** to be attached. "அங்குற்றே னல்லேன்" (திவ். திருவாய். 5,8,2). 9. ***பொருந்துதல்;*** to join, associate with. "நீலுறு மணிசெய் மாடம்" (இரகு. நகரப். 42). 10. ***படுதல்;*** to touch, come in, contact with. "நெருப்புற்ற போல" (சீவக. 2339). 11. ***ஓரிடம் அடைதல்;*** to move towards a point. "எங்குற்றா யென்ற போதா லிங்குற்றே னென்கண் டாயே" (தேவா. 1190.8).

[உல் → உறு.]

உறு[2]-தல் *uru-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***வருந்துதல்*** (பழ. 226); to suffer. 2. ***பழுதுபடுதல்*** (குறள், 662); to be infructuous, damaged, spoiled.

[உல் → உறு.]

உறு[3]-தல் *uru-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***தொடுதல்;*** to perceive by touch. "கண்டு கேட் டுண்டுயிர்த் துற்றறி யும்" (குறள், 1101). 2. ***அன்பு கொள்ளுதல்;*** to love. "யாமுற்றா லுறாஅதவர்" (குறள், 1245). 3. ***ஒத்தல்;*** to resemble. "உண்டுபொழி லிமையவர்க ளுலக முறுவதுவே" (சீவக. 1780). 4. ***தொடங்குதல்;*** to begin, commence, start, usu. with a vbl. noun. "யான் மொழியலுற்றேன்" (கம்பரா. நாட்டுப்.1) 5. ***அடைதல்;*** to approach, gain access to, each. 6. ***நுகர்தல்;*** to enjoy. "உற்றலாற் கயவர்தேறார்" (தேவா. 523, 8.). 7. ***நினைத்தல்;*** to think. "வில்லு மல்ல திழைக்க லுறாள்" (திவ். பெரியாழ். 3,7,8).

ம. உறுக. க.உறு, ஊறு; துட. உர்வ்; து. உந்துனி; தெ. உறு.

[உல் → உறு → உறு-தல் (வேக. 40,41,42.]

உறு[4]-த்தல் *uru-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***அடைவித் தல்,*** to cause to move towards a point. 2. ***சேர்வித்தல்;*** to cause to join.

[உல் → உறு.]

உறு[5]-த்தல் *uru-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***துன்புறுத்து தல்;*** to cause to suffer. 2. ***முள்போல் குத்துதல்;*** to pierce. 3. ***மிகச் சினத்தல்;*** to have wrath.

[உல் → உறு.]

உறு[6] *uru* பெ.எ. (adj.) மிக்க; much, abundant, copious. "உறு.... மிகுதி செய்யும் பொருள்" (தொல். சொல். 301). (செ.அக.).

ம. உறு; க. உறு, உறை; து. உறுபு, உறும்பி; தெ. றவு.

[உல் → உறு.]

உறுக்காட்டம் *urukkāttam,* பெ. (n.) 1. ***அதட்டுகை;*** rebuking, threatening, reprimanding. 2. ***அதிகாரஞ் செலுத்துகை;*** command, exercise of authority. (செ.அக.).

[உறுக்கு + ஆட்டு. ஆட்டு → ஆட்டம்.]

உறுக்காட்டியம்[1] *uṟukkāṭṭiyam,* பெ. (n.) ***உறுக்காட்டம்*** பார்க்க; see *uṟukkāṭṭam.* (செ.அக.). அவனுடைய உறுக்காட்டியத்தைப் பார் (வின்.).

[உறுக்கு + ஆட்டு. ஆட்டு → ஆட்டியம்.]

உறுக்கு[1]**-தல்** *uṟukku-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***அதட்டுதல்;*** to menace, threaten. "தஞ்சொலாற்றின் வந்திடாவிடி லுறுக்கி வளாரினா லடித்து" (சி.சி. 2,16). 2. ***சினத்தல்;*** to address with harshness, severity, anger. உறுக்கிக் கட்டுவிப்பாரைப் போலே (ஈடு. 7,1,1.). 3. ***தண்டித்தல்;*** to punish. "காலனைத் தானலற யுறுக்கிய சேவடியான்" (தேவா. 524,4.). 4. ***தாண்டுதல்*** (பிங்.); to jump, leap over. (செ.அக.).

ம. உறுக்குக.

[உல் → உறு → உறுக்கு.]

உறுக்கு[2] *uṟukku,* பெ. (n.) ***அதட்டுகை;*** threatening. "உறுக்குறு சொல்லர்" (கம்பரா. பஞ்சசேனா. 66). (செ.அக.).

[உல் → உறு → உறுக்கு.]

உறுகண் *uṟu-kaṇ,* பெ. (n.) 1. ***வருத்தம்;*** suffering, affliction, distress. "உறுகணோம்பல்" (தொல். பொருள். 239). 2. ***நோய்*** (பிங்.); disease. 3. ***ஏழ்மை*** (சூடா.); poverty, want. 4. ***அச்சம்*** (சூடா.); fear. (செ.அக.).

[உல் → உறு + கண் (சொல்லாக்க ஈறு).]

உறுகண்ணாளர் *uṟukaṇṇāḷar,* பெ. (n.) ***நோயாளிகள்;*** patients. (சா.அக.).

[உறுகண் + ஆள் + அர்.]

உறுகணாளன் *uṟukaṇ-āḷaṉ,* பெ. (n.) 1. ***வறுமையன்;*** poor, destitute, indigent person. "உறுகணாளரிற் கடைகழிந்து" (சிலப். 10,48.). 2. ***தீவினையாளன்.*** (சிலப். 10,48. உரை); one who suffers the inevitable effects of the sins he had committed in previous births. (செ.அக.).

[உறு + கண் + ஆளன்.]

உறுகிழாத்தி *uṟukiḻātti,* பெ. (n.) ***மீன்வகை;*** a kind of fish. "உறுகிழாத்தி காலை மாலை" (பறாளை. பள்ளு.75). (செ.அக.).

[உறு + கிழாத்தி.]

உறுகுங்கனலி *uṟuguṅkaṉali,* பெ. (n.) ***பிரண்டை;*** square stalked vine-vitis quadrangularis. (சா.அக.).

[உறுகும் + கனலி.]

உறுகோள் *uṟu-kōḷ,* பெ. (n.) ***நிகழ்வு;*** happening, event. "ஒரு மூவேங்கலந்த காலைக் குளங்கோடு மென்றிதுவு முறுகோளே" (கம்பரா. சூர்ப்ப. 140). (செ.அக.).

[உறுகொள் → உறுகோள் = நிகழ்வு கொண்டது, நிகழ்ச்சி.]

உறுசுவை *uṟu-suvai,* பெ. (n.) ***ஒரு செய்யுள் அணிவகை*** (மாறன். 235); figure of speech in which a particular object is described as being superior in sweetness to a series of several sweet objects.

உறுசூது *uṟu-śūdu,* பெ. (n.) ***ஏய்ப்பு; ஏய்த்தல்;*** deceit. (ஆ.அக.).

[உறு + சூது.]

உறுத்தல்[1] *uṟuttal,* பெ. (n.) 1. ***மிகுக்கை*** (பிங்.); increasing. 2. ***ஒற்றுகை*** (திவா.); bringing into contact, clapping. (செ.அக.).

[உல் → உறு → உறுத்து → உறுத்தல்.]

உறுத்தல்[2] *uṟuttal,* பெ. (n.) 1. ***கண்ணில் தூசு முதலியன படிதலால் ஏற்படும் தவிப்பு;*** irritation, uncomfortable sensation caused by dust etc., falling in the eye. 2. ***ஏற்படுதல்;*** happening. 3. ***தாக்கல்;*** offending. 4. ***அழுத்துதல்;*** pressure, instigation.

[உறு → உறுத்தல்.]

உறுத்தா(தரு)-தல் *uṟuttā-,* 15. செ.குன்றாவி. (v.t.) ***நெருக்குதல்;*** to crowd, constrict. "ஒரியவுறுத்தர" (பரிபா. 6,37). (செ.அக.).

[உறு + தரு = உறுத்தரு → உறுத்தா.]

உறுத்து-தல் *uṟuttu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***உண்டாக்குதல்;*** to cause to be, to originate. "அறவரே தோழ ரிவர்க்களு ருறுத்தல்" (தணிகைப்பு. அகத். 234). 2. ***அமைத்தல்;*** to put up, as the saddle on a horse, to fit up. "புரவி பண்ணுறுத் திடுவார்" (நைடத. சுயம். 58). 3. ***அடைவித்தல்;*** to arrange to get, cause to obtain. "கொடிச்சியை யிலைவேல் இளவற்கும்... கானத் தம்ம முந்துபுக்குறுத்துவன்" (தணிகைப்பு. விநா. காப்.). 4. ***ஒற்றுதல்*** (திவா.) to bring in contact, clap together. 5. ***பதித்தல்;*** to insert, encase. 6. ***மனத்தழுந்தச் செய்தல்;*** to strongly impress upon the mind. அச்செய்தியை உறுத்திப் பேசினான் (இ.வ.). 7. ***அழுத்துதல்;*** to cause smarting, as a thorn in the flesh; to produce irritation, as dust in the eye; to press uncomfortably, as a rough or uneven surface on one sitting or lying down. "முள்ளுறுத்தி" (சேதுபு. அனும. 12.). 8. ***மனத்தை வருத்துதல்;*** to cause pain of mind, afflict, rankle, as by a sarcastic remark. அவன் கூறிய சொல் என்னை உறுத்துகிறது (உ.வ.). 9. ***மிகுத்தல்;*** to increase. "இல் வலியுறுத்தல்" (தொல். பொருள் 263). 10. ***விரித்தல்;*** to spread out, open. "முடங்கத ளுறுத்த முகிழ்நகை யெய்தியும்" (கல்லா. 12). 11. ***சினந்து சீறுதல்;*** to huff with anger, swell with rage. "உறவுறுத் தின ரொட்டலர்" (பிரபுலிங். சித்த. 12).

ம. உறுத்துக.

[உல் → உறு → உறுத்து.]

உறுத்தை *uruttai,* பெ. (n.) ***அணில்;*** squirrel. (W.). (செ.அக.).

ம. உறுத்த; க. உடுதெ; தெ. உறுத.

[உறு → உறுத்தை. உறு = விரைவு.]

உறுதி *urudi,* பெ. (n.) 1. ***திடம்;*** firmness, strength, stability. 2. ***வல்லமை;*** power, energy, force. "இருவருந்த முறுதியி னின்றா ரென்னில்" (சி.சி. 1,35). 3. ***திண்ணம்;*** certainty, assurance. 4. ***மாந்தர்க்குரிய குறிக்கோள்;*** aims of mankind, objects of human pursuit, four in number viz., அறம், பொருள், இன்பம், வீடு. மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரா னெடுக்கப்பட்ட பொருள் (குறள், உரைப்பாயிரம்); 5. ***உறுதி வாக்கு;*** positive declaration. "ஆண்டவன் புகலுறுதியு மாண்மை யுங் கேட்டு" (பாரத. புட்ப. 47). 6. ***செய்யத்தக்கது;*** appropriate thing to do, suitable action. "வீடுதலுறுதி யென்றே விளம்பி" (கந்தபு. சூர. வதை. 64). 7. ***நன்மை;*** good, benefit. "புத்தேளாவதே யுறுதியென் றான்" (சீவக. 1235). 8. ***மந்திரம்;*** mantiram, as that which is efficacious "பொய்கையு முட்பட வுரைத்தன னுறுதிநோக்கினான்" (சீவக. 1216). 9. ***பற்றுக்கோடு;*** support, prop. "உலகுக்கோ ருறுதி தன்னை" (தேவா. 481,5). 10. ***அறிவுரை;*** moral or religious advice (W.). 11. ***ஊதியம்; வருவாய்;*** profit, benefit. "கேட்டினுமுண் டோருறுதி" (குறள், 796). 12. ***கல்வி*** (திவா.); learning. 13. ***ஆட்சி ஆவணம்*** (பத்திரம்.); bond, title deed. 14. ***விடாப்பிடி;*** stubbornness, pertinacity (W.).

ம. உறுதி; க. உரிதி, உறும்பு; தெ. உரிதி; *L.* verus, true; *O.Fr.* verai; *Fr.* verai; *Ger.* wahr; *A.S.* voer; *E.* very; real in agreat degree; verity, truth.

[உறு → உறுதி.]

உறுதிக்கட்டுரை *urudi-k-katturai,* பெ. (n.) ***இடித்துக் கூறுகை*** (பிங்.); admonition, remonstrance. (செ.அக.).

[உறுதி + கட்டுரை.]

உறுதிச்சீட்டு *urudi-c-cittu,* பெ. (n.) ***உறுதிப்படுத்தும் ஆவணம்;*** written contract, bond. (செ.அக.).

[உறுதி + சீட்டு.]

உறுதிச்சொல் *urudi-c-col,* பெ. (n.) 1. ***உறுதிமொழி;*** assurance. 2. ***தக்க அறிவுரை*** word of advice, good counsel. 3. ***இடித்துரை;*** admonition. (செ.அக.).

[உறுதி + சொல்.]

உறுதிப்படு-தல் *urudi-p-padu-,* 20. செ.கு.வி. (v.i.) 1. ***நிலைப்படுதல்;*** to be firmly established, to be assured. 2. ***திடப்படுதல்;*** to be confirmed, as a member in a church. (செ.அக.).

[உறுதி + படு.]

உறுதிப்படுத்து-தல் *urudi-p-paduttu-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***நிலைப்படுத்துதல்;*** to confirm, corroborate, establish. (செ.அக.).

[உறுதி + படுத்து.]

உறுதிப்பத்திரம் *urudi-p-pattiram,* பெ. (n.) 1. ***உறுதிச் சீட்டு*** பார்க்க; see *urudi-c-cittu.* (செ.அக.).

ம. உறப்புபத்ரம். *Skt.* patra.

[உறுதி + பத்திரம்.]

உறுதிப்பாடு *urudi-p-pādu,* பெ. (n.) 1. ***நிலைப்படுகை;*** confirmation. 2. ***வாக்குறுதி;*** pledge, promise. (செ.அக.).

[உறுதி + பாடு.]

உறுதிப்பொருள் *urudi-p-porul,* பெ. (n.) 1. ***உறுதி*** பார்க்க; see *urudi.* 2. ***கடவுள்;*** god (W.). 3. ***காட்சி*** (ஆ.அக.); wisdom. (செ.அக.).

[உறுதி + பொருள்.]

உறுதிபண்ணு-தல் *urudi-pannu-,* 12. செ.குன்றாவி. (v.t.) ***நிலைப்படுத்துதல்;*** to corroborate, confirm. (செ.அக.).

[உறுதி + பண்ணு.]

உறுதிபூசுதல் *urudi-pūsudal,* பெ. (n.) ***திடப்படுத்துகை;*** sacrament of confirmation. (செ.அக.).

[உறுதி + பூசுதல்.]

உறுதிமுடி-த்தல் *urudi-mudi-,* 4. செ.கு.வி. (v.i.) ***ஆவணம் எழுதிக் கொடுத்தல்;*** to execute a title deed or bond. (J.) (செ.அக.).

[உறுதி + முடி.]

உறுதிமொழி *urudi-moli,* பெ. (n.) 1. ***உறுதிச்சொல்*** பார்க்க; see *urudi-c-col.* 2. ***உறுதி மொழியாகச் சொல்லும் சொற்கள்;*** statement made on oath, solemn affirmation before a magistrate or a judge. (செ.அக.).

[உறுதி + மொழி.]

உறுதியோர் *urudiyōr,* பெ. (n.) ***தூதர்*** (பிங்.); messengers of state, confidential emissaries. (செ.அக.).

[உறுதி + (ஆர்) ஓர்.]

உறுதுணை *uru-tunai,* பெ. (n.) ***உற்றதுணை;*** faithful friend, boon companion. "உறுதுணை யாவர் போலும்" (தேவா. 476,3.). (செ.அக.).

[உறு + துணை.]

உறுநர் *urunar,* பெ. (n.) ***உறுநன்*** பார்க்க; see *urunan.*

உறுநன் *urunan,* பெ. (n.) ***சேர்ந்தவன்;*** votary, he who seeks protection, follower. "உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்" (திருமுரு. 4.). (செ.அக.).

[உறு → உறுநன்.]

உறுப்படக்கி *uruppadakki,* பெ. (n.) ***ஆமை*** (பிங்.); tortoise, turtle, so called from its being able to draw in its limbs. (செ.அக.).

[உறுப்பு + அடக்கி. உறுப்புகளை உள்ளடக்கிக் கொள்வது.]

உறுப்பணங்கெட்டவன் *uruppanankettavan,* பெ. (n.) 1. ***உடற்குறையினன்;*** ill shaped, maimed, ugly person. 2. ***மூடன்;*** foolish fellow. (செ.அக.).

[உறுப்பு + இனம் + கெட்டவன். உறுப்பணம் என்பது கொச்சை வழக்கு.]

உறுப்பற்றவன் *uruppaṟṟavaṉ,* பெ. (n.) 1. ***உறுப்புக் குறையன்;*** ill-formed, deformed person. 2. ***ஒழுக்கமில் லாதவன்;*** ill-bred person (W.). (செ.அக.).

[உறுப்பு + அற்றவன்.]

உறுப்பறை *uruppaṟai,* பெ. (n.) 1. ***உறுப்புக்குறையன்;*** deformed person. "ஆதுல ரந்தக ருறுப்பறைக ளாதர்" (பிங். 3.35). 2. ***உறுப்புக்குறை;*** dismembering the limbs. "உறுப்பறை குடிகோள்" (தொல். பொருள். 258). (செ.அக.).

[உறுப்பு + அறை.]

உறுப்பா *uruppā,* பெ. (n.) ***கப்பல் செய்வதற்குப் பயன்படும் மரவகை*** (மூ.அ.); a tree, the timber of which is used instead of teak in ship-building. (செ.அக.).

[ஒருகா. உறு + பால். பால் = பாலைமரம். உறு + பால் - உறுப்பால் → உறுப்பா.]

உறுப்பிசைக்குறி *uruppišai-k-kuṟi,* பெ. (n.) ***படிக்கையில் ஒரு மாத்திரைக்காலம் நிறுத்துவதற்கு அடையாளமாக இடுங்குறி*** (பாலபா. பக். 170); the sign comma. (செ.அக.).

[உறுப்பு + இசை + குறி. இசைத்தல் = ஒலித்தல்.]

உறுப்பில்பிண்டம் *uruppil-piṇḍam,* பெ. (n.) ***கருவில் வடிவுறுமுன் சிதைந்த தசைப்பிண்டம்;*** aborted embryo. "சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்" (புறநா. 28). (செ.அக.).

[உறுப்பு + இல் + பிண்டம்.]

உறுப்பினர் *uruppiṉar,* பெ. (n.) ***உறுப்பினன் என்பதன் பன்மை;*** pl. of uruppiṉaṉ.

உறுப்பினன் *uruppiṉaṉ,* பெ. (n.) 1. ***குழுவில் அல்லது நிறுவனத்தில் பங்கேற்கும் உரிமை பெற்றவன்;*** member of an association or institution. 2. ***தெரிந்தெடுக் கப்பட்ட நிகராளி;*** elected or selected candidate for an assembly or forum.

[உறுப்பு → உறுப்பினன்.]

உறுப்பு[1] *uruppu,* பெ. (n.) 1. ***உறுப்புகள்*** (சூடா.); limb, member of body. 2. ***பாகம்;*** division, as of an army; part of whole, component part, department, section. "உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை" (குறள், 761). 3. ***உடம்பு;*** body. "உறுப்பொத்தன் மக்களொப் பன்றால் (குறள். 993). 4. ***மெய்யெழுத்து;*** consonant. "மூன்றனு றுப் பழிவும்" (நன். 190) 5. ***பாலை யாழ்த் திறம்*** (திவா.); secondary melody type of the pālai class. 6. ***மரக்கொம்பு*** (திவா.); bough, branch. 7. ***உறுப் பமைதி;*** just proportion symmetry of form. அவன் உறுப்புள்ளவன் (வின்.). 8. ***மேல்வரிச் சட்டம்;*** copy of single letters set for a child to imitate. 9. ***நில ஆவணம்;*** title deed, as of land. "அந்தக் காணிக் கோருறுப்பு மில்லை (இ.வ.). (செ.அக.).

ம. உறுப்பு.

[உறு → உறுப்பு.]

உறுப்பு[2] *uruppu,* பெ. (n.) 1. ***அதிகம்*** (நாநார்த்த.); excess, abundance. 2. ***நெருக்கம்;*** denseness. (செ.அக.).

[உறு → உறுப்பு.]

உறுப்புக்கழலை *uruppu-k-kaḻalai,* பெ. (n.) ***உடம்பில் தோன்றும் கொப்புளம்;*** tumour arising in any of the organ or organs of the body. (செ.அக.).

[உறுப்பு + கழலை.]

உறுப்புக்குறை *uruppu-k-kuṟai,* பெ. (n.) ***உறுப்புக்குறை பாடு;*** maimedness, body defect, deformity. (செ.அக.).

[உறுப்பு + குறை.]

உறுப்புக்கேடு *uruppu-k-kēdu,* பெ. (n.) ***உடற்குறை;*** deformity in limb. (pond.). (செ.அக.).

[உறுப்பு + கேடு.]

உறுப்புத்தள்ளுகை *uruppu-t-taḷḷugai,* பெ. (n.) ***அண்டு தள்ளுகை;*** prolapsus ani. (Loc.).

[உறுப்பு + தள்ளுகை.]

உறுப்புத்தோல் *uruppu-t-tōl,* பெ. (n.) ***மான் தோல்;*** deer-skin, a piece of which, according to the *śāstrās,* the Brahmachāri should fasten to his sacred thread. "உறுப்புத்தோலும் வெண்ணெய் பூசின உடம்புமான யஜமான வேஷத் தோடே" (ஈடு, 4,8,4). (செ.அக.).

[உறுப்பு + தோல். உறுப்பு = அடையாளம்.]

உறுப்புநூல் *uruppu-nūl,* பெ. (n.) ***உறுப்பு நலங்கூறும் பனுவல்;*** science dealing with the characteristics of human form and features. "நல்லவெண வுறுப்பு நூலா ருரைக்கு நல நிரம்பி" (பெரியபு. காரைக். 6). (செ.அக.).

[உறுப்பு + நூல்.]

உறுப்புமயக்கம் *uruppu-mayakkam,* பெ. (n.) ***உறுப்புக் குறை எட்டினொன்று;*** one of the deformities. (செ.அக.).

[உறுப்பு + மயக்கம்.]

உறுப்புள்ளவன் *uruppuḷḷavaṉ,* பெ. (n.) 1. ***உறுப்பு நலமுடையவன்;*** beautiful, well-formed man. 2. ***திற முடையவன்;*** man of enterprising character qualified for business. 3. ***ஒழுக்கமுள்ளவன்;*** man of good conduct, virtuous person. (செ.அக.).

[உறுப்பு + உள்ளவன்.]

உறுபாதை *urupādai,* பெ. (n.) ***வரிவகை.*** **(S.I.I. vii, 214);** a tax. (செ.அக.).

[உறு + பாதை.]

உறுபு *urubu,* பெ. (n.) ***பாலையாழ்த்திறம்*** (வின்.); musical mode of the pālai class. (செ.அக.).

உறுபூசல் *uṟu-pūšal,* பெ. (n.) ***கைகலந்த போர்;*** hard scuffle, hand to hand fight. "பேரணி உறுபூச லானவாறே" (ஈடு. 9,9,2). (செ.அக.).

[உறு + பூசல்.]

உறுபொருள் *uṟu-poruḷ,* பெ. (n.) ***உடையாரில்லாமை யால் ஒருவனுக்குக் கிடைக்கும் பொருள்;*** unclaimed property which a man appropriates to himself. "உறுபொரு ளும் உல்கு பொருளும்" (குறள், 756). (செ.அக.).

[உறு + பொருள்.]

உறும்பு[1] *uṟumbu,* பெ. (n.) ***உலர்ந்த கரம்பை மண்ணின் கூரிய சிறுகட்டி;*** small piece of dried clay with a sharp edge. (செ.அக.).

[உறு → உறும்பு = நடந்தால் பாதத்தை உறுத்துவது.]

உறும்பு[2]**-தல்** *uṟumbu-,* 5. செ.கு.வி. (v.t.) ***உறுமு*** பார்க்க; see *uṟumu.* (செ.அக.).

ம. உறும்புக; க. ஒறலு; து. உறல், ஒரல்.

[உறு → உறுமு → உறும்பு.]

உறுமாலை *uṟumālai,* பெ. (n.) ***மேலே போட்டுக்கொள் ளும் துண்டுவகை;*** upper garment. "நற்பொரு ளுலா வென்னி லுறுமாலை" (திருவேங். சத. 29.). (செ.அக.).

ம. உறுமால்; *U.* rumā, rūmāl; *Pers.* rūmāl.

[உறு + மாலை.]

உறுமி *uṟumi,* பெ. (n.) ***ஒருவகைத் தோற்கருவி*** (சங். அக.); a kind of drum . (செ.அக.).

ம. உறுமி.

[உறும் → உறுமி. உறும் ஒலிக்குறிப்பு இடைச்சொல்.]



உறுமி

உறுமியடி-த்தல் *uṟumi-y-aḍi-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***குறுந்தடியால் ஒலி யுண்டாகுமாறு உறுமியைத் தேய்த்தடித்தல்;*** to alternately rub and beat on one side of uṟumi with a curved stick in order to produce a characteristic humming sound. (செ.அக.).

[உறும் → உறுமி + அடி-த்தல்.]

உறுமு-தல் *uṟumu-,* 10. செ.கு.வி. (v.i.) 1. ***உறுமென்று ஒலித்தல்;*** to growl, as a wild beast; to grunt, as a pig; to rumble, as thunder; to sound, as the uṟumi drum. 2. ***முறுமுறுத்தல்;*** to murmur angrily. "இல்லத் துறுமி நெடிது மிராஅர்" (ஆசாரக் 81). 3. ***எழும்புதல்*** (திவா.); to rise; to be stirred up. (செ.அக.).

ம. உறுமுக; க. ஒரல் (கீச்சிடுதல்); தெ. உறுமு; பர். உறும்பில் (இடி.); கூ. ரும்பு.

[உறும் → உறுமு.]

உறுமை *uṟumai,* பெ. (n.) ***உறுமி*** பார்க்க; see *uṟumi.* "கம்பலி யுறுமை தக்கை" (கம்பரா. பிரமாத்திர. 5). (செ.அக.).

[உறும் → உறுமை. உறும் ஒலிக்குறிப்பு இடைச்சொல்.]

உறுவது *uṟuvadu,* பெ. (n.) 1. ***நிகழ்வது;*** that which happens. "உறுவதொன்று முணர்கலாது" (பாரத வாரணா. 81). 2. ***ஊதியம்;*** that which accrues; gain. "உறுவதும்.. பேதைக ளோர்கிலரே" (திருநூற். 13). 3. ***ஒப்பது;*** that which resembles. "இமையவர்களுலக முறுவதுவே" (சீவக. 1780). 4. ***தகுவது;*** that which is proper. "உறுவதாவது... குடக்கூத்தனுக் காட்செய் வதே" (திவ்.திருவாய். 4,10,10). (செ.அக.).

[உறு → உறுவது.]

உறுவதுகூறல் *uṟuvadu-kūṟal,* பெ. (n.) ***ஒன்றைச் செய்வாயா என்று வினாவியவிடத்து நேர்வதுகூறு முகத்தான் மறுப்பதைத் தெரிவிக்கும் விடைவகை*** (நன். 386. உரை); form of indirect negative reply consisting in the person questioned stating what would happen to him if he were to answer 'yes' as for e.g., when a person who is asked a question like 'Will you do this" replies, 'My health will be affected'.

[உறுவது + கூறல்.]

உறுவதுதெரிதல் *uṟuvadu-teridal,* பெ. (n.) ***பின்வருவன அறிதல் என்னும் வணிகர் குணம்*** (திவா.); foresight in regard to the future state of the market, a quality or character in merchants. (செ.அக.).

[உறுவது + தெரிதல்.]

உறுவர் *uṟuvar,* பெ. (n.) ***உறுவரர்*** பார்க்க; see *uṟuvarar.]*

உறுவரர் *uṟuvarar,* பெ. (n.) ***தேவர்;*** celestials. "உறுவரர் பலிசெல" (சீவக. 119.). (செ.அக.).

[உறுவர் (மிக்கவர்) + அர்.]

உறுவல் *uṟuval,* பெ. (n.) ***துன்பம்;*** suffering, affliction, distress. "பெண்பா றன்னுறுவ றீர்ப்பான்" (கம்பரா. சடாயு. 183). (செ.அக.).

[உறு → உறுவல்.]

உறுவலி *uṟu-vali,* பெ. (n.) ***மிக்க வலியுடையோன்;*** lit. great strength, man of great strength. "உறுவலி தாக்கினானே" (சீவக. 2282.). (செ.அக.).

[உறு + வலி. அன்மொழித்தொகை.]

உறுவன்[1] *uṟuvaṉ,* பெ. (n.) 1. ***மிக்கோன்;*** great one, lord, master. "உறுவனோ டியானுற்ற நற்றிறம்" (சிலப். 9,53). 2. ***முனிவன்;*** sage, saint. "உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா" (நாலடி. 104). 3. ***அடைந்தோன்;*** new arrival, guest. "உறுவரார வோம்பாதுண்டு" (பதிற் றுப். 43,19). 4. ***அருகன்*** (பிங்.); Arhat. (செ.அக.).

[உறு → உறுவன் (மிக்கோன்.).]

உறுவன்[2] *uṟuvaṉ,* பெ. (n.) 1. ***பெரியோன்;*** great man, elder. "உறுவருஞ் சிறுவரு மூழ்மாறுய்க்கும்" (புறநா. 381). 2. ***எதிர்த்து நிற்போன்;*** opponent. "துப்புறுவர் புறம்பெற் றிசினே" (புறநா. 11). (செ.அக.).

[உறு → உறுவன். உறு = பெரிது. உறுவன் = பெரியோன்.]

உறுவாவரிசி *uṟuvā-v-ariśi,* பெ. (n.) ***அறுவகை யரிசியு ளொன்று.*** (சங். அக.); one of *aṟuvakai-y-arisi;* rice. (செ.அக.).

[உறவு → உறுவா + அரிசி.]

உறுவி-த்தல் *uṟuvi-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***நுகர்வித்தல்;*** to cause to experience, as pleasure or pain. "பலமுறுவிப் பான் வேண்டும்" (சி.சி. 2,21.). (செ.அக.).

[உறு → உறுவி.]

உறை[1] *uṟai,* 1. ***பெருமை*** (பிங்.); greatness; excellence. 2. ***உயரம்*** (பிங்.) height. 3. ***நீளம்*** (திவா.); length. 4. ***பொருள்*** (பிங்.); wealth 5. ***வெண்கலம்.*** (பிங்.); bell metal. 6. ***பேரளவுக்கு அடையாளமாக*** (சங்கேத மாக) ***விடுஞ் சிற்றளவுக் குறி;*** units used as symbols for hundreds or thousands. "உறையிடவும் போதார்" (கம்பரா. உருக்காட். 117). 7. ***மிகக் குறைவானது;*** that which is exceedingly low, as price. "உறைவிற்குலா நுதலாள் விலை" (திருக்கோ. 266). 8. ***60 மரக்கால் கொண்ட ஓரளவு;*** a measure of grain. 9. ***துன்பம்*** (பிங்.); affliction, distress. (செ.அக.).

[உறு → உறை.]

உறை[2]**-தல்** *uṟai-,* 2. செ.கு.வி. (v.i.) 1. ***இறுகுதல்;*** to thicken, curdle; to coagulate, congeal, freeze. "குடப்பா லுறையா" (சிலப். ஆய்ச்சி. 1. உரைப்பாட்டுமடை.). 2. ***செறிதல்*** (வின்.); to be close, dense, as tress in a forest. 3. ***கட்டியாதல்;*** to thicken. 4. ***வாழ்தல்;*** to reside, dwell. உம்ப ருறைவார் பதி (நாலடி, 137). 5. ***ஒழுகுதல்;*** to live, conduct oneself, "உலகத்தோ டவ்வ துறைவ தறிவு" (குறள், 426.). (செ.அக.).

ம. உறயுக; குட. ஒரெ; து. உர்குனி; கோண். உர்ரானா.

[உறு → உறை → உறை-தல்.]

உறை[3]**-த்தல்** *uṟai-,* 2. செ.கு.வி. (v.i.) 1. ***துளித்தல்;*** to drop, as the rain; to form, as the dew. "தெண்பனி யுறைக்குங்கால்" (கலித். 15). 2. ***உதிர்தல்;*** to fall down, as pollen from flowers. "தாதுறைக்கும் பொன் னறை" (கலித். 39,32). 3. ***சுவையுறைத்தல்;*** to be pungent, biting, sharp. "உப்புறைத்தன மேகமுகுத்தநீர்" (கம்பரா. சேதுபந். 60). 4. ***சுடுதல்;*** to scorch, as the sun. இன்றைக்கு வெயிலுறைக்கிறது. 5. ***தாக்கிப் பயன் விளைத்தல்;*** to produce effect, as words of advice, to sting, as a rebuke or sarcasm. "ஆற்றவும்∴ துனக்குறைக்குங் கண்டாய்" (திவ். நாய்ச். 1,9). 6. ***முள் முதலியன உறுத்துதல்;*** to prick, as a thorn. "பாத மெல்லிய வுறைக்கும்." (கம்பரா.கோல. 24). 7. ***ஊன்று தல்;*** to become firm, steadfast, decided, as the mind. "புந்திநின் றுறைக்க" (கைவல். சந். 5). 8. ***மோதுதல்;*** to beat upon, as wind. "ஆடை வளியுறைப்பப் போகார்" (ஆசாரக். 37). 9. ***மிகுதல்;*** to increase grow. "யானை யிருஞ் சினமுறைக்கும்" (ஐங்குறு. 352). (செ.அக.).

[உறு → உறை → உறை-த்தல்.]

உறை[4]**-த்தல்** *uṟai-,* 2. செ.குன்றாவி. (v.t.) 1. ***அதட்டுதல்*** (பிங்.); to rebuke authoritatively. 2. ***அமுக்குதல்;*** to press down. "முதுகுறைப்பப் பொறையாற்றும்" (குமர. பிர. மதுரைக். 17). 3. ***ஒத்தல்;*** to resemble. "இலக்கு முத்துறைக்கு மெயிறு" (ஐங்குறு. 18.5).

[உறு → உறை.]

உறை[5] *uṟai,* பெ. (n.) 1. ***இருப்பிடம்;*** place of residence, town, apropriate or customary place for a person or thing. உறையிலேயிருக்கிறார் (வின்.). 2. ***வாணாள்;*** lifetime. "வேந்தனுறை கடுகி யொல்லைக் கெடும்" (குறள், 564). 3. ***படைக்கலக்கூடு;*** sheath, scabbard, case "உறைகழித்திலங்குவாள்" (சீவக. 656). 4. ***தூசு முதலியன படாதவாறு மூடுகின்ற ஆடையுறை;*** cover; e.g. pilow - case. "செந்துகி லுறையின் மூடி" (சூளா. கல்யா. 180). 5. ***பண்டம் செய்யும் கூடு*** (வின்.); receptacle for grain, a kind of sack. 6. ***கிணற்றுறை;*** burnt clay curb, used for the construction of well. 7. ***போர்வை*** (பிங்.); upper garment, cloak, shaw. 8. ***காணிக்கைப் பொருள்;*** offering. "நாணாளுறையு நறுஞ் சாந்துங் கோதையும்" (பரிபா. 16,52). 9. ***பாம்பின் நச்சுப்பை*** (வின்.); the poison bag of the snake. (செ.அக.).

ம. உற; க. ஒரெ; கோத., நா., குட. ஒரெ; து. ஒரெ, உதெ; தெ. ஒர; பர். ஒர.

[உறு → உறை.]

உறை[6] *uṟai,* பெ. (n.) 1. ***வீடு;*** house. 2. ***மனைவி;*** wife.

பிராகு. உறா (வீடு.); பாசு. உறா (மனைவி).

[உறை என்னும் முதனிலை இருமடி ஆகுபெயராய் வீட்டையும் மும்மடி ஆகு பெயராய் மனைவியையும் குறித்தது.]

உறை[7] *uṟai,* பெ. (n.) 1. ***ஒழுகல்*** (திவா.); leaking. 2. ***நீர் முதலியவற்றின் துளி*** (திவா.); drop of water or other liquid. 3. ***மழை;*** rain. "உறைகோடி யொல்லாது வானம்பெயல்" (குறள், 559). 4. ***மழைக்காலம்;*** rainy season. "நாளாலுறையெதிர்ந்து" (திணைமாலை.1). 5. ***உறைமோர்;*** reserve of curds for curdling milk.

"உறையமை தீந்தயிர்" (பெரும்பாண்; 158). 6. ***காரம்*** (திவா.); pungency, corrosiveness. 7. ***ஆடையழுக் ககற்றும் உவர்நீர்*** (திவா.); washerman's lye. 8. ***மருந்து;*** medicine. கயற்கண் செய்த வுறைமலி யுய்யாநோய்" (சிலப். 7,8). 9. ***உணவு*** (பிங்.); food. "உறைவள ருனிலாய வுயிர்" (தேவா. 212,6). 10. ***ஆலங்கட்டி;*** hail stone. (செ.அக.).

[உறு → உறை]

உறை[8] *urai,* பெ. (n.) 1. ***கிணற்றடியில் வைக்கும் மரவளையம்;*** circular frame work of wood over which a well is built. 2. ***பொன்*** (நாநார்த்த.); gold. (செ.அக.).

[உறு → உறை]

உறை[9] *urai,* பெ. (n.) 1. ***அவரை மேற்றொலி; அவரைக்காய் பொட்டு;*** sheath of the beans. 2. ***உமி;*** husk.

இருள. உறை; *L.* eris (husk); *On.* *ax;* *Goth* ahs; *OHG.* ahir; *Os.* ahar; *OF.* ear.

[உறு → உறை]

உறை[10] *urai,* பெ. (n.) ***காது;*** ear.

ஆத். உரெ; *E.* ear; *OE.* ēare; *OS;* *OHG.* ora; *ON.* eyra; *Goth.* auso; *L.* auris; *G.* ous.

[உறை = அவரைக்காயின் மேற்றொலி. அவரைக்காயின் மேற் றொலி அல்லது உலர்ந்த பொட்டு காதின் வடிவை ஒத்திருத்த லில் ஆகுபெயராகிக் காதைக் குறிக்கும் சொல்லாயிற்று.]

உறைக்கப்பார்-த்தல் *uraikka-p-pār-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***உற்றுநோக்குதல்;*** to look at intently. (செ.அக.).

[உறை → உறைக்க + பார்.]

உறைக்கிணறு *urai-k-kinaru,* பெ. (n.) ***சுடுமண்ணுறை யிட்ட கிணறு;*** well formed of burnt clay curbs placed one upon another. "உறைக்கிணற்றுப் புறச்சேரி" (பட்டி னப். 76). (செ.அக.).

[உறை + கிணறு.]

உறைக்குமிலை *uraikkum-ilai,* பெ. (n.) ***வெற்றிலை;*** betal leaf, it is so called from its leaf being pungent. (சா.அக.).

[உறைக்கும் + இலை.]

உறைகாய் *urai-kāy,* பெ. (n.) ***செங்காய்;*** unripe fruit. (செ.அக.).

[உறு → உறை + காய்.]

உறைகாரன் *urai-kāran,* பெ. (n.) ***படைக்கல உறை செய்பவன், காரோடன்*** (சிலப். 5,32, உரை); sheath maker. (செ.அக.).

[உறை + காரன்.]

உறைகாலம்[1] *urai-kālam,* பெ. (n.) ***வாணாள்;*** (வின்.). lifetime. (செ.அக.).

[உறை + காலம்.]

உறைகாலம்[2] *urai-kālam,* பெ. (n.) ***மழைக்காலம்*** (வின்.); rainy season. (செ.அக.).

[உறை + காலம்.]

உறைகுத்து-தல் *urai-kuttu-,* 10. செ.கு.வி. (v.i.) ***பாலுக் குப் பிரைகுத்துதல்;*** to pour a small quantity of curd into milk to curdle it.(செ.அக.).]

உறைகோடு-தல் *urai-kōdu-,* 5. செ.கு.வி. (v.i.) ***பருவ மழை பெய்யா தொழிதல்.*** to fail, as rain, in its season. "உறை கோடி ஒல்லாது வானம் பெயல்" (குறள். 559). (செ.அக.).

[உறு → உறை + கோடு.]

உறைச்சாலை *urai-c-cālai,* பெ. (n.) ***மருந்துச்சாலை;*** dispensary, hospital. "பல்லுறைச் சாலைகளும்" (தைலவ. பாயி. 12). (செ.அக.).

[உறை + சாலை.]

உறைத்தயிர் *urai-t-tayir,* பெ. (n.) ***கட்டித்தயிர், உறைந்த தயிர்;*** curd.

ம. உறதைரு.

[உறை + தயிர்.]

உறைத்தல் *uraittal,* பெ. (n.) ***அதட்டுகை*** (பிங்;); reproving, rebuking. (செ.அக.).

[உறு → உறை.]

உறைத்துளி *urai-t-tuli,* பெ. (n.) ***மழைத்துளி;*** raindrop. (ஆ.அக.).

[உறை + துளி.]

உறைநாழி *urai-nāli,* பெ. (n.) ***வெட்டியான் மானியம்;*** share of the village watchman in ancient times. "உறை நாழி வெட்டி... உள்ளிட்ட அனைத்துவற்கமும்" (S.I.I.ii, 247,8). (செ.அக.).

[உறை + நாழி. உறை = தங்கிப் பணியாற்றுதல். நாழி = அளந்து தரும் கூலி.]

உறைநீர் *urainīr,* பெ. (n.) 1. ***காரமான நீர்;*** any alkaline liquid. 2. ***பனிநீர்;*** dew-water. 3. ***உறைந்த நீர்;*** frozen water such as ice. 4. ***மருந்து நீர்;*** solution of medicine. (சா.அக.).

ம. உறநீர் (கஞ்சிநீர்).

[உறை + நீர்.]

உறைப்பன் *uraippan,* பெ. (n.) ***வலுவுள்ளவன்;*** strong, powerful man. "ஒருப்படுத்த வுறைப்பனூர்" (திவ். பெரி யாழ். 4,8,2). (செ.அக.).

[உறை → உறைப்பன்.]

உறைப்பு *uraippu,* பெ. (n.) 1. ***சுவைக்கூர்மை;*** sharpness of taste. 2. ***காரம்;*** pungency. 3. ***ஊற்றம்;*** firmness, steadfastness. "சேஷித்வ வுறைப்புத் தோற்ற இருக்கிற வனை" (ஈடு. 2,5,8.). 4. ***வாய்ப்பு;*** opportunity, a

favourable time. "அங்குள்ளம் கூடக் கூடிற்றாகில் நல்லுறைப்பே" (திவ். திருவாய். 8,8,8). 5. ***கொடுமை;*** severity, sternness, harshness. "உறைப்புடைய விராவணன்" (தேவா. 45,10). 6. ***அழுத்தம்;*** impressiveness, positiveness. "உறைப்பான பேச்சு" (வின்.). 7. ***அல்லல்;*** painful sensation of body or painful feeling of mind. 8. ***மழைபெய்கை;*** falling of rain. "உறைப்பருங் காலத்தும்" (நாலடி. 184). 9. ***தாக்குகை;*** blowing. "கல்லக வுறைப்பின் வீழ" (கந்தபு. நகரழி. 70.). (செ.அக.).

ம. உறப்பு; க. ஒரபு; தெ. ஒறபு.

[உறு → உறை → உறைப்பு.]

உறைப்பு என்னும் பண்புப்பெயர் விதந்து சுட்டுவது காரத்தையே. உறைக்கும் பொருளைச் சுள்ளென்றிருக்கிறது என்பர். காரத்தை எரிச்சல் என்று கூறுவர். இதனால் உறைத்தலைச் சுடுதலோடொப்பக் கொண்டமை புலனாம். (மு.தா. 166).*]*

உறைப்புக்காட்டு-தல் *uraippu-k-kāṭṭu-,* 5. செ.கு.வி. (v.i.) ***காரமாதல்;*** to be pungent. (செ.அக.).

[உறை → உறைப்பு + காட்டு.]

உறைபதி *urai-padi,* பெ. (n.) ***உறைவிடம்*** பார்க்க; see *uraiviḍam.* "நாணுக் குறைபதி" (குறள், 1015). (செ.அக.).

[உறை + பதி.]

உறைபனி *urai-paṉi,* பெ. (n.) ***இறுகிய பனி;*** hoar frost. (செ.அக.).

[உறை + பனி.]

உறைபோ-தல் *urai-pō-,* 8 செ.கு.வி. (v.i.) ***உறையிட முடியா தொழிதல்;*** to exceed computation; to be too numerous even for numbering by symbols; "அம்பண வளவை விரிந்துறை போகிய" (பதிற்றுப் 66,8). (செ.அக.).

[உறை + போ.]

உறைமருந்து *urai-marundu,* பெ. (n.) ***குழந்தைகளுக்கு முழுக்காட்டியவுடன் தேன் அல்லது முலைப்பாலில் இழைத்து மாந்தம் அணுகாதபடி கொடுக்கும் ஒரு வகைக் காரமான மாத்திரை;*** pungent pill administered to children by mothers as a home-remedy immediately after a bath as a preventive against indigestion etc.

[உறை + மருந்து.]

உறைமழை *urai-maḻai,* பெ. (n.) ***ஆலங்கட்டி;*** hail-stone. (சா.அக.).

[உறை + மழை.]

உறைமோர் *urai-mōr,* பெ. (n.) ***பாலிலிடும் பிரைமோர்;*** sour butter-milk used for curdling milk. (செ.அக.).

[உறு → உறை + மோர்.]

உறையல் *uraiyal,* பெ. (n.) ***பிணக்கு.*** (அ.க.நி.); quarrel. (செ.அக.).

[உறை + அல் (தொ.பெ.ஈறு.).]

உறையாணி *urai-y-āṇi,* பெ. (n.) ***பொன், வெள்ளி இவற்றை மாற்றறிவதற்காகப் பயன்படுத்தப்படும் பொன், வெள்ளிகளாற் செய்த ஆணிகள்;*** touch needles made of gold or silver. (சா.அக.).

[உரை + ஆணி = உரையாணி → உறையாணி (கொ.வ.).]

உறையிடு-தல் *urai-y-iḍu-,* 18. செ.குன்றாவி. (v.t.) ***பேரளவைக் குறிப்பதற்குச் சிற்றளவுக்குறியமைத்துக் கொள்ளுதல்;*** to put down a particular mark or symbol to stand for a number, in numbering, measuring a weighing as 1 for 100. "உறையிடத் தேய்ந்திடும் இவ்வந்தி வானத்து உடுக்குலமே" (அட்டப். திருவேங்கடத்தந். 34). (செ.அக.).

[உறை + இடு.]

உறையுதிரம் *urai-y-udiram,* பெ. (n.) 1. ***உறைந்த அரத்தம்;*** blood clot, gore. 2. ***செங்குருதிக் கட்டி;*** blood clot, containing red-corpuscles-cruor. (சா.அக.).

[உறை + உதிரம்.]

உறையுள் *urai-y-uḷ,* பெ. (n.) 1. ***உறைகை;*** living, residing, abiding. "உறையுண் முனியும்" (புறநா. 96). 2. ***தங்குமிடம்;*** abode, resting place. "உறையுளுங் கோட்டமுங் காப்பாய்" (மணிமே. 6,137). 3. ***வீடு*** (திவா.); house, residence. 4. ***ஊர்*** (திவா.); village, town. 5. ***நாடு*** (சூடா.); district, land province. 6. ***மாந்தர் துயிலுமிடம்*** (திவா.); sleeping place; dormitory. 7. ***உகம்;*** age, aeon. (செ.அக.).

[உறை + உள்.]

உறையூர்[1] *urai-y-ūr,* பெ. (n.) ***சோழநாட்டின் பழைய தலைநகருள் ஒன்று*** (சிலப். 10.242.); name of an ancient Cōḷa capital, now a suburb of Tiruchirāpaḷḷi. (செ.அக.).

ம. உறையூர்.

[உறை + ஊர்.]

உறையூர்[2] *urai-y-ūr,* பெ. (n.) ***மருதநிலத்தூர்;*** village in an agricultural tract. (அக.நி.). (செ.அக.).

[உறை + ஊர். உறை = நீர்.]

உறையூர்[3] *urai-y-ūr,* பெ. (n.) ***கருப்பை;*** womb being dwelling for the infant.

[உறை + ஊர்.]

உறைவி *uraivi,* பெ. (n.) ***உறைபவள்;*** woman resident. "நோயுழந் துறைவி" (குறுந். 400). (செ.அக.).

[உறை → உறைவி.]

உறைவிடம் *uṟaiviḍam,* பெ. (n.) 1. ***இருக்குமிடம்;*** dwelling-place, residence. "அன்றவ ருறைவிடத் தல்கின ரடங்கி" (சிலப். 11,9). 2. ***பொருட்கிடங்கு; கொட்டில்*** (திவா.); godown. (செ.அக.).

[உறை + இடம்.]

உறைவு[1] *uṟaivu,* பெ. (n.) 1. ***தங்குகை;*** abiding. "உடங்குறைவு தானுங்கருதி வந்தான்" (தணிகைப்பு. களவு. 558). 2. ***இருக்குமிடம்;*** dwelling-place, abode. (செ.அக.).

[உறை → உறைவு.]

உறைவு[2] *uṟaivu,* பெ. (n.) ***பிரைமோர்;*** butter milk used for curdling milk. *(Pond.).* (செ.அக.).

[உறை → உறைவு]

உன்[1] *uṉ-,* 4. செ.கு.வி. (v.i.) ***உண்ணு-தல்*** பார்க்க; see *uṉu-,*

உன்[2] *uṉ,* பெ. (n.) ***நீ என்பதன் வேற்றுமையடி;*** oblique form of the second pers. pron. 'thee'.

[நுன் → உன்.]

உன்[3] *uṉ,* பெ. (n.) ***உயர்வு; மேன்மை;*** greatness, gloriousness.

[உ → உல் → உன்]

உன்[4] *uṉ,* பெ. (n.) ***நெருக்கம்;*** closeness.

[உல் → உன்.]

உன்மணி *uṉmaṇi,* பெ. (n.) ***உயர்ந்த மணி;*** superior gem.

[உல் → உன் + மணி.]

உன்னநிலை *uṉṉa-nilai,* பெ. (n.) 1. ***போர் தொடங்கு முன் உன்னமரத்தால் நிமித்தமறியும் புறத்துறை*** (தொல். பொருள். 60, உரை); (Puṟap.) theme of invoking an uṉṉam tree for omens before a battle. 2. ***உன்னம்*** பார்க்க; see *uṉṉam.* உன்னநிலையேயுணருங் காலை (சிலப். 3,18, உரை). (செ.அக.).

[உன் → உன்னு → உன்ன + நிலை. உன்னுதல் = நீளநினைத்தல், ஆழ்ந்து சிந்தித்தல்.]

உன்னம்[6] *uṉṉam,* பெ. (n.) 1. ***கருத்து*** (திவா.); thought, object, intention. 2. ***ஊழ்கம்;*** contemplation. "அகத்தி யான் பள்ளியை யுன்னஞ் செய்த" (தேவா. 847.2). 3. ***மனம்*** (திவா.); mind. 4. ***குறியாகக் கொள்ளும் ஒரு மரம்*** (தொல். பொருள். 60, உரை); a small tree with golden flowers and small leaves which, in ancient times, was invoked for omens before warriors proceeded to battle. 5. ***கற்பனை;*** imagination.

ம. உன்னம்; க. உன்னிசு (நினைத்தல்.); கோத. உன்ப, உனிப (குறி.); துட. உன்ய (நினைத்.); தெ. உங்கிசு (பார், ஏற்றுக் கொள்.); குவி. ஒன்பினை (நினை.); பிரா. கன்னிங் (பார்.).

[உல் → உன் → உன்னு → உன்னம்]

உன்னம்[2] *uṉṉam,* பெ. (n.) 1. ***ஓதிமப் பறவை வகை*** (திவா.); kind of swan. 2. ***தசை கிழிக்குங் கருவி*** (வின்.); pincers for tearing off flesh. 3. ***சிறுவிரலும் பெருவிரலும் தம்முட்கூட மற்றை மூன்று விரல்களும் விட்டு நிமிரும் இணையா வினைக்கை*** (சிலப். 3,18); (Nāṭya.) a gesture with one hand, in which the thumb and the little finger are kept united and the other three fingers are held upright. (செ.அக.).

[உ → உல் → உன் → உன்னம்.]

உன்னயம் *uṉṉayam,* பெ. (n.) 1. ***குதிரையிலக்கண நூல்களு ளொன்று;*** a treatise on hippology. "உன்னய முதலாம் புரவிநூல்" (பாரத. நாடுக. 21). (செ.அக.). 2. ***உயர்த்துதல்;*** raising, lifting up.

[உன்னம் → உன்னயம்.]

உன்னல் *uṉṉal,* பெ. (n.) 1. ***கருதுகை*** (பிங்.); thinking. "உன்னல் காலே ஊன்றல் அரையே முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே" (உரை நூற்பா). 2. ***மனம்*** (பிங்.); mind.

ம. உன்னல்.

[உன் → உன்னு → உன்னல்.]

உன்னலர் *uṉṉalar,* பெ. (n.) ***பகைவர்;*** enemies, lit, those who are unmindful. (செ.அக.).

[உன் → உன்னு + அல் + அர். "அல்" எ.ம.இ.நி.]

உன்னாகங்கொடி *uṉṉākaṅ-koḍi,* பெ. (n.) ***பெருமுசுட்டை;*** many-flowered bindweed. (L). (செ.அக.).

[உன் + நாகம் + கொடி.]

உன்னாயங்கொடி *uṉṉāyaṅkoḍi,* பெ. (n.) 1. ***கொடி வகை;*** elliptic-leaved silverweed. 2. ***கொடிவகை;*** bristly heart-leaved silverweed. (செ.அக.).

[உன்னாகன் → உன்னாயன் + கொடி.]

உன்னாயம் *uṉṉāyam,* பெ. (n.) ***உயர்வு;*** height. (ஆ.அக.).

[உன்[3] + நயம் - உன்னயம் → உன்னாயம். 'நயம்' சொல்லாக்க ஈறு.]

உன்னாலகம் *uṉṉālagam,* பெ. (n.) ***பின் தொடரி;*** a plant causing bewilderment. It is opposed to முன் றொடரி. (செ.அக.).

[உன் + நாலகம்.]

உன்னி[1]**-த்தல்** *uṉṉi-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***எண்ணுதல்;*** to think, consider. 2. ***உயர்தல்;*** to climb up.

ம. உன்னிக்குக; க. உன்னிசு, உன்னுக.

[உன் → உன்னி → உன்னி-த்தல்.]

உன்னி[2] *uṉṉi,* பெ. (n.) ***ஊழ்குதற்குரிய*** (தியானித்தற் குரிய.) ***பொருள்;*** that which is fit to be meditated

upon. ''ஞால முன்னியைக் காண்டு நாங்கூரிலே'' (திவ். பெரியதி. 10,1,3).

[உன் + இ]

உன்னி[3] *unni*, பெ. (n.) 1. ***குதிரை;*** horse. ''உன்னிவாய்ப் பொன் கறித்திட'' (இரகு. நகர. 51.). 2. ***அழிஞ்சில்*** (மூ.அ.); sage-leaved alangium. 3. ***செடிவகை;*** Indian lantana. (செ.அக.).

[உல் → உன் → உன்னு = முன்னோக்கிச் செலுத்துதல், விரைதல். உன்னு → உன்னி.]

உன்னிப்பு *unnippu*, பெ. (n.) 1. ***கவனிப்பு;*** intentness. உன்னிப்பாய்க் கேட்கிறான் (உ.வ.). 2. ***அறிவுக்கூர்மை;*** acuteness of mind, discernment. 3. ***ஊகிப்பு;*** guess. 4. ***குறிப்பு;*** unerring sign by which a place or person is known (W.). இருட்டிலும் உன்னிப்பாக எடுத்துவிட்டான் (உ.வ.). 5. ***முயற்சி*** (வின்.); exertion, effort. 6. ***உயரம்;*** height. உன்னிப்பான மலை. 7. ***கண்ணியம்;*** dignity. உன்னிப்பான பேச்சு (வின்.). (செ.அக.).

[உல் → உன்னு → உன்னிப்பு.]

உன்னியம் *unniyam*, பெ. (n.) ***சொந்தம்;*** that which is ours, on our side. (W.). (செ.அக.).

[உல் → உன் → உன்னியம்.]

உன்னியர் *unniyar*, பெ. (n.) ***சுற்றத்தார்;*** relations (W.). (செ.அக.).

[உல் → உன் → உன்னியர்.]

இச்சொல் வன்னியர் எனத்திரிந்து உழவருள் ஒரு சாராரைக் குறித்தது. ஒ.நோ. ஒக்கல் → ஒக்கலியர்.*]*

உன்னியன் *unniyan*, பெ. (n.) ***உரிமையன், சொந்தக் காரன்;*** relative.

[உன்னியம் → உன்னியன் (வேக. 39.).]

உன்னு-தல் *unnu-*, 11. செ.கு.வி. (v.i.) ***பேசவாய் கூட்டுதல்;*** to be on the point of speaking, as having words on the tongue. பேசவுன்னுகிறான். (இ.வ.).

[உல் → உன் → உன்னு.]

உன்னு[2]**-தல்** *unnu-*, 12. செ.குன்றாவி. (v.t.) ***கருதுதல்; ஊழ்குதல்*** (தியானம்); to think, consider. ''உன்னலே தியானம்'' (கந்தபு. திருநகர. 81).

ம. உன்னுக; க. உன்னிசு; **கோத**. உன்ய **துட**. உன்ய; **தெ**. உங்கிசு; **குவி**. ஒன்பினை, **பிரா**. கன்னிங்க்.

[உல் → உன் → உன்னு → உன்னு-தல்.]

உன்னு[3]**-தல்** *unnu-* 11. செ.கு.வி. (v.i.) 1. ***எழும்புதல்;*** to rise. குதிரை யுன்னிப் பாய்ந்தது (உ.வ.). 2. ***முன்னங் கால் விரலை யூன்றி நிமிர்தல்;*** to be on tiptoe.

[உல் → உன் → உன்னு.]

உன்னு[4]**-தல்** *unnu-* 12. செ.குன்றாவி (v.t.) 1. ***இழுத்தல்;*** to pull. (W.). 2. ***ஊஞ்சலுந்துதல்;*** to propel (L). (செ.அக.).

தெ. உங்கு.

[உல் → உன் → உன்னு.]

உன்னு[5] *unnu-*, பெ. (n.) 1. ***விரைந்தெழும்புகை;*** spring, jump. அவன் இரண்டு உன்னிலே வந்துவிடுவான் (இ.வ.). 2. ***இழுக்கை;*** effort, tug, impulse. எருது இரண்டு உன்னிலே கயிற்றை இழுத்துப் போடும். (இ.வ.). (செ.அக.).

[உல் → உன் → உன்னு.]

உன்னு[6] *unnu*, பெ. (n.) ***சடைச்சி*** பார்க்க; see *šaḍaicci* (L). (செ.அக.).

[உல் → உன் → உன்னு.]

உனகன் *unagan*, பெ. (n.) ***இழிந்தவன்;*** low, mean person. ''உனகனா யரக்கனோடி யெடுத்தலும்'' (தேவா, 1198,1).

[உலகன் → உனகன்.]

ஊ

ஊ[1] *ū,* 1. ***ஆறாமுயிரெழுத்து; உயிர் முயற்சியாற் பிறக்கும் எழுத்துகளுள் வாயைத் திறத்தலோடு இதழ் குவிவாற் பிறக்கும் ஒரு நெட்டுயிர்;*** sixth letter and vowel of the Tamil alphabet, the close back tense rounded vowel in Tamil.

[உ → ஊ.]

ஊ[2] *ū,* இடை. (part.) 1. ***முன்மைச்சுட்டு;*** frontal demonstrative. 2. ***இடைமைச்சுட்டு;*** intermediate demonstrative.

[ஊ - சுட்டெழுத்தாகமட்டுமன்றிச் சுட்டுச்சொல்லாகவும் வழங்கியது. ''நெட்டெழுத்தேழே. ஓரெழுத்தொருமொழி'' (தொல்.எழுத்.43).]

ஊ[3] *ū,* சு.பெ. (pron.) ***நீ என்னும் முன்னிலை ஒருமைப்பெயர்;*** you, second pers. sing.

[ஊன் → ஊ (மறைந்துபோன தமிழ்ச்சொல்).]

முது பண்டைக்காலத்தில் ஆன் ஈன் ஊன் என்பன மூவிட ஒருமைச் சுட்டுப்பெயர்களாக இருந்தன. ஆன் → நான் என்றும், ஊன் → நூன் → நீன் → நீ என்றும் திரிந்தன.

ஊன் *பார்க்க; see ūṉ*

ஊ[4] *ū,* பெ. (n.) ***கைக்கிளையென்னும் இசையின் எழுத்து*** (திவா.); symbol representing the third note of the gamut, usu. ga.

[உ → ஊ (இருமாத்திரை நெட்டுயிர்) சரிகமபதநி என்னும் ஏழு சுரங்களின் மூன்றாம் எழுத்து 'க'வுக்கு நிகரான பண்டைய இசையெழுத்துக் குறியீடு.]

ஊ[5] *ū,* பெ. (n.) 1. ***தசை*** (தொல்.எழுத்.269); flesh, meat. 2. ***நலமின்மை;*** illness. (சேரநா.).

ம. ஊ; **கோத.** ஊ (எயிர்); **கூ.** ஊஞ்ச; **குவி.** ஊயு; **பிரா.** சூ.

[ஊன் → ஊ.]

ஊ[6] *ū,* பெ. (n.) ***ஊண், உணவு*** (நாநார்த்த.); food. (செ.அக.).

ஊண் → ஊ (கடைக்குறை) = உணவு.]

ஊ[7] *ū,* இடை. (part.) ***இறந்தகால வினையெச்ச ஈறு;*** ending of past vbl. pple. செய்யூ, காணூஉ.

[உ → ஊ. இறந்தகால வினையெச்ச ஈறாகிய உகரம் நெடிலாகிச் செய் → செய்யு → செய்யூ எனத் தொடர் இறந்தகாலம் குறித்தது. தகர எழுத்துப்பேறு பெறும்போது, செய் → செய்து எனத் திரிந்து இறந்த காலம் மட்டும் சுட்டும்.]

ஊ *ū,* இடை. (part.) ***நோவு குறித்த ஒலிக்குறிப்பு இடைச்சொல்;*** expression of pain or shivering. ஊ! வலிக்கிறது; 'ஊ' வென்று நடுங்குகிறான். (இ.வ.).

[ஊ - ஒலிக்குறிப்பு.]

ஊக்கப்பாடு *ūkka-p-pāḍu,* பெ. (n.) ***ஊக்கங்கொள்கை;*** zeal, fervour. ''குன்றா நன்றியு மூக்கப்பாடும்'' (திருவிளை.நகரப்.57). (செ.அக.).

[ஊக்கம் + பாடு.]

ஊக்கம் *ūkkam,* பெ. (n.) 1. ***மனக்கிளர்ச்சி*** (குறள்.382); impulse, ardour, zeal. 2. ***முயற்சி;*** exertion, effort. ''ஊக்க வேர்பூட்டி'' (சீவக.962). 3. ***வலிமை;*** strength, power, force. ''ஊக்கமுடையா னொடுக்கம்'' (குறள். 486). 4. ***வினைமேற் கொண்ட எண்ணம்;*** firm persuasion, conviction. ''இடஞ் சிறிதென்னு மூக்கந் துரப்ப'' (புறநா.8,3). 5. ***உயர்ச்சி*** (சூடா.); height, elevation, hugeness. 6. ***மிகுதி*** (பிங்.); abundance. 7. ***உண்மை*** (திவா.); truth. (செ.அக.). 8. ***உள்ளத்தின் மிகுதி*** (ஆ.அக.); enthusiasm. 9. ***மனத்தாற்றல்;*** will power.

ம. ஊக்கம்; **க.** உர்க்கு, உக்கு; **தெ.** உக்கு.

[ஊக்கு → ஊக்கம்.]

ஊக்கல் *ūkkal,* பெ. (n.) 1. ***முயலுகை;*** putting forth effort. ''என்று நன்றூக்க லந்தண ருள்ளம்'' (நான்மணி. 86). 2. ***மிகுதி*** (சூடா.); abundance. (செ.அக.). 3. ***எழுப்பல்;*** raising. 4. ***ஏறுதல்;*** climbing. 5. ***தளர்த்தல்;*** relaxing. 6. ***அசைத்தல்;*** shaking, moving. 7. ***அதிகப்படுத்துதல்;*** enhancing, boosting. 8. ***உள்ளத்தை உந்துவித்தல் அல்லது ஒருவினையின் மேற்செலுத்தல்*** (சு.வி.41); encouraging, inspiring.

[ஊக்கு → ஊக்கல்.]

ஊக்கலர் *ūkkalar,* பெ. (n.) ***முயற்சியுடையவர்;*** persons of energy, of spirit, of pluck. ''உயர்ந்த வுதவி யூக்கலர்த் தம்மின்''. (மதுரைக்.743). (செ.அக.).

[ஊக்கு → ஊக்கல் → ஊக்கலர்.]

ஊக்கிறாக்குருவி *ūkkiṟā-k-kuruvi,* பெ. (n.) ***ஒரு வகைக் குருவி;*** a kind of sparrow. (சா.அக.).

[ஊக்கு → ஊக்கணம் + குருவி - ஊக்கணாங்குருவி → ஊக்கராங்குருவி → ஊக்கிறாக்குருவி (கொ.வ.). ஊக்குணா (நிலப்பனை) மரத்தில் வாழும் குருவியாகலாம்.]

ஊக்கு[1]**-தல்** *ūkku-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஆட்டுதல்;*** to swing, shake. ''ஐய சிறிதென்னை யூக்கி யெனக்கூற'' (கலித்.37). 2. ***நெகிழ்த்துதல்;*** to loosen, as one's hold. ''கைகளை யூக்கப் பசந்தது.... நுதல்'' (குறள்.1238). 3. ***தப்புதல்;*** to miss the mark. ''ஊக்கருங் கணையினர்'' (மதுரைக்.647). 4. ***ஊக்கமூட்டுதல்;*** to encourage, motivate, prompt. அந்தக் காரியத்தில் அவனை ஊக்கினார். 5. ***முயலுதல்;*** to make an effort, act with energy. ''நீணெறி யூக்கினா னுவவுறு மதியி னொண்மையான்'' (சீவக.1409). 6. ***கற்பித்தல்;*** to teach, instruct.

"விஞ்சைகளிரண்டும்.....ஊக்கினன்" (கம்பரா.தாடகை.18). 7. *நினைத்தல்;* to consider, ruminate. (செ.அக.). 8. *அசைத்தல்* (ஆ.அக.); to move, stir up.

ம. ஊக்குக; க. உய், ஒய்; து. உச்சாலு; தெ., பட. ஊகு.

[ஊகு → ஊங்கு → ஊக்கு.]

ஊக்கு²-தல் *ūkku-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. *ஏறுதல், இவர்தல்;* to ride. 2. *நோக்குதல்;* to look at, to perceive. (செ.அக.). 3. *உள்ளத்தை முற்செலுத்துதல்;* to impel.

[ஊங்கு → ஊக்கு → ஊக்குதல் (சு.வி.41).]

ஆரிய மொழிகளிலும் முற்செலவும் ஊக்கலும் பற்றிய சொற்கள் சில ஊகாரச் சுட்டடியாய்ப் பிறந்துள்ளன.

O.Fr. ussier, *Fr.* huissier, *E.* usher, to walk before, *L.* urgeo, *E.* urge, to drive, to press. *Sans.* urja, U = ஊ, உ.

ஊக்கு³ *ūkku,* பெ. (n.) 1. *ஊக்கம்;* zeal, spirit. "ஊக்கொடு பரலென வுருமுப் பற்றுமால்" (கந்தபு. திருப்பர.11). (செ.அக.). 2. *எழுப்புதல்;* arousal, awakening. 3. *கற்பித்தல்;* briefing. 4. *சிந்தித்தல்;* thinking.

ம. ஊக்கு.

[ஊங்கு → ஊக்கு. (சு.வி.41).]

ஊக்குணா *ūkkunā,* பெ. (n.) *நிலப்பனை* (சித்.அக.); moosly root. (செ.அக.).

[ஒருகா. ஊக்கு¹ + உணா.]

ஊகதன் *ūgadan,* பெ. (n.) *முருங்கை;* drumstick.

[ஊகு¹ + ஊகதன்.]

ஊகம்¹ *ūgam,* பெ. (n.) 1. *ஊகம்புல்;* broomstick-grass. "ஊகம் வேய்ந்த உயர்நிலை வரைப்பின்" (பெரும்பாண்.122). 2. *கருங்குரங்கு;* black monkey. "பைங்கணூகம் பாம்பு பிடித்தன்ன" (சிறுபாண்.221). 3. *பெண் குரங்கு;* female monkey.

க. ஊக.

[1. ஊகு → ஊகம். 2. உலுமம் → உலுகம் → ஊகம். உலுமம் = கரியமயிர்.]

ஊகம்² *ūgam,* பெ. (n.) 1. *உய்த்துணர்தல்;* inference, conjecture, guess. "ஊகமனுபவம் வசனமூன்றுக்கும்" (தாயு.எங்குநிறை.3). 2. *கருத்து* (சூடா.); thought, consideration, deliberation. 3. *உத்தி;* skill, discernment. "ஊக முளதேற் சிறுவருரையுங் கொள்க". (ஞானவா. முமுட்.27). 4. *அறிவு;* knowledge.

[உல் → ஊல் → ஊகு → ஊகம்.]

ஊகம்³ *ūgam,* பெ. (n.) *படை வகுப்பு;* military array, squadron. "ஊகவான் படையுலப்ப" (கந்தபு. சூரனகர்புரி.1).

[உகு → ஊகு → ஊகம்.]

ஊகம்⁴ *ūgam,* பெ. (n.) *புலி.* (அக.நி.); tiger.

[உகு → ஊகு → ஊகம். உகுத்தல் = அழித்தல், கொல்லுதல். ஊகம் = கொல்லும் தன்மை வாய்ந்த புலி.]

ஊகனம் *ūganam,* பெ. (n.) 1. *காரணங் காட்டுகை;* reasoning. 2. *ஊகம்;* inference, deduction. 3. *துணிபு;* conclusion. (செ.அக.).

[ஊகம் → ஊகனம் (கொ.வ.).]

ஊகனி *ūgani,* பெ. (n.) *துடைப்பம்* (வின்.); broom. (செ.அக.).

[ஊகை → ஊகனி.]

ஊகாமுள் *ūgā-mul,* பெ. (n.) *ஊகம்புல்லின் முள்;* spiny thorn of broomstick grass. (செ.அக.).

க. ஊகு.

[ஊகை → ஊகா + முள்.]

ஊகி¹-த்தல் *ūgi-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. *முன்னதாகக் கருதுதல்;* to conjecture, guess, infer. 2. *கலந்தாய்தல்;* to consider, deliberate. (செ.அக.). 3. *இட்டுக்கட்டுதல்* (ஆ.அக.); to imagine.

[உல் (கூர்மை) → ஊல் → ஊ → ஊகு → ஊகி (சு.வி.41).]

ஊகி² *ūgi,* பெ. (n.) *நுண்ணறிவுடையோன்-ள்;* intelligent, discerning person. (செ.அக.).

[ஊகம் → ஊகி.]

ஊகிமொழி *ūgi-moli,* பெ. (n.) *செய்கை* (சைகை) *காட்டிப் பேசும்மொழி* (Pond.); language by signs. (செ.அக.).

[ஊகி + மொழி.]

ஊகு¹-தல் *ūgu-,* 7. செ.கு.வி. (v.i.) 1. *அசைதல்;* to move. 2. *ஊசலாடுதல்;* to swing; 3. *நீளுதல்;* to lengthen.

க. ஊகு.

[ஊ → ஊகு.]

ஊகு² *ūgu,* பெ. (n.) 1. *கூர்மை;* sharpness. 2. *நுண்ணறிவு;* intellect.

[உ → உல் (கூர்மை) → ஊல் → ஊகு.]

ஊகுமுள் *ūgu-mul,* பெ. (n.) 1. *சுணை;* prickles or sharp points as on certain leaves. 2. *துடைப்பம் முள்;* thorn of broom-stick grass. (சா.அக.).

[உ → உல் (கூர்மை) → ஊல் → ஊகு + முள்.]

ஊகூ *ūgū,* பெ. (n.) 1. *கந்தருவர் எனப்படும் யாழோருள் ஒருவன்;* Huhu, a Gandharva, associated with Hāhā. ஆகாவு மூகூவும். 2. *சிந்துவெளி முத்திரையில் காணப்படும் இயற்பெயர்;* proper name in the Indus seal No.2803.

[ஊஊ → ஊகூ.]

ஆஆ (ஆகா) எனவும் ஊஊ (ஊகூ) எனவும் பெயரிட்டுக் கொள்வது தொன்முது கால மரபு. சிந்துவெளி முத்திரைகளிலும் ஆஆ, ஊஊ என்னும் இயற்பெயர்கள் காணப்படுகின்றன.

ஊகை[1] *ūgai,* பெ. (n.) ***கல்வி;*** learning, erudition. wisdom; (செ.அக.).

[ஊகு[2] → ஊகை.]

ஊகை[2] *ūgai,* பெ. (n.) ***ஊகம்***[1] பார்க்க; see *ūgam*[1]

ஊங்கண் *ūṅgaṇ,* வி.எ. (adv.) 1. ***உவ்விடத்து*** (தொல்.எழுத்.114); yonder, where you are. 2. ***முற்காலத்தில்;*** in former time. "ஊங்க ணோங்கிய வுரவோன் றன்னை." (மணி.21,181).

[ஊங்கு → ஊங்கண். (வே.க.29).]

ஊங்கணோர் *ūṅgaṇōr,* பெ. (n.) ***முன்னுள்ளோர்;*** those who lived in former times ancestors. "தூங்கெயி லெறிந்த நின் னூங்க ணோர் நினையின்" (புறநா.39). (செ.அக.).

[ஊங்கண் → ஊங்கணோர்.]

ஊங்கனூர் *ūṅgaṉūr,* பெ. (n.) ***சேரநாட்டின் கடற்கரை யூர்;*** ancient city on the seashore of Chēra land.

[ஊங்கண் + ஊர். (முன்னுள்ள ஊர்). இவ்வூரில் சேரன் கடப்ப மரத்தை வெட்டினான் எனக் கூறப்படுகிறது (அபி.சிந்.).]

ஊங்காரப்பறவை *ūṅgāra-p-paṟavai,* பெ. (n.) ***பறவை வகைகளுள் ஒன்று;*** a species of bird.

[ஊங்காரம் + பறவை. ஊங்காரம் - ஒப்புதல் காட்டும் ஒலிக்கு றிப்பு.]

ஊங்கு[1] *ūṅgu,* வி.எ. (adv.) 1. ***முன்னிலையிடம், உவ்விடம்;*** yonder, where you are. "ஊறுகட மாவுற லூங்கெலாம்" (கம்பரா.வரைக்காட்.60). 2. ***முன்பு;*** in former times. "உணரா வூங்கே" (குறுந்.297).

[ஊ → ஊங்கு.]

ஊங்கு[2] *ūṅgu,* பெ. (n.) 1. ***மிகுதி*** (சூடா.); superiority, greatness. 2. ***மேம்பட்டது;*** that which is lofty "கல்வியி னூங்கில்லை". (நீதிநெறி.2).

[உங்கு → ஊங்கு. (வே.க.29).]

ஊங்கு[3]**-தல்** *ūṅgu-,* 5.செ.கு.வி. (v.i.) ***ஆடுதல்;*** to swing. "பூங்க ணாய மூக்க வூங்காள்". (நற்.90). (செ.அக.).

தெ. ஊகு.

[ஊ → ஊகு → ஊங்கு.]

ஊங்கொட்டு-தல் *ū-ṅ-koṭṭu-,* 5.செ.கு.வி. (v.i.) ***பிறர் சொல்வதைத் தொடர்ந்து கேட்பதற்கும், சரி என்று ஒப்புவதற்கும் அடையாளமாக 'ஊ' என்று சொல்லுதல்;*** to respond by ejaculating 'um' as in listening to a story that is to say 'yes', agree without questioning. (செ.அக.).

ம., க. ஊம்; தெ. ஊ.

[உம் → ஊம் + கொட்டுதல்.]

ஊச்சில் *ūccil,* பெ. (n.) ***தசை நோய்;*** morbid state of a muscle, myalgia. (செ.அக.).

[ஊன் → ஊச்சு → ஊச்சில்.]

ஊச்சு[1]**-தல்** *ūccu-,* 5. செ.குன்றாவி. (v.t.) ***உறிஞ்சுதல்;*** to absorb. "கள்ளத்தி னூச்சுஞ் சுரம்" (ஐந்.ஐம்.38).

[உறிஞ்சு → ஊஞ்சு → ஊச்சு.]

ஊச்சு[2] *ūccu,* பெ. (n.) ***அச்சம்*** (அக.நி.); fear.

[ஊசு → ஊச்சு.]

ஊசகம் *ūsagam,* பெ. (n.) 1. ***உப்பு;*** salt. 2. ***மிளகு;*** pepper. 3. ***விடியற்காலம்;*** day-break.

[ஊசல் = புலர்தல், உலர்தல். ஊசு → ஊசகம்.]

ஊசணம் *ūsaṇam,* பெ. (n.) 1. ***மிளகு;*** black-pepper. 2. ***திப்பிலி;*** long-pepper. (சா.அக.).

*[ஊசு → ஊசணம். **ஊசகம்** பார்க்க; see ūsagam.]*

ஊசநாற்றம் *ūsanāṟṟam,* பெ. (n.) ***ஊசல் நாற்றம்;*** foul smell.

[ஊ → ஊள் → ஊசு → ஊசல் + நாற்றம்.]

ஊசம் *ūsam,* பெ. (n.) 1. ***உவர்மண் பூமி;*** salt-ground. 2. ***சவர்க்கார நிலம்;*** soil impregnated with soda or saline particles. 3. ***துளை;*** cleft or a hole. (சா.அக.).

[உவல் → ஊவல் → ஊசல் → ஊசம்.]

ஊசமன் *ūsamaṉ,* பெ. (n.) ***ஆவி;*** vapour, (சா.அக.).

[உல் → ஊல் → ஊசு → ஊசமன்.]

ஊசரக்கல் *ūsarakkal,* பெ. (n.) ***சுக்கான் கல்;*** lime-stone. (சா.அக.).

[ஊசு → ஊசரம் + கல்.]

ஊசரம் *ūsaram,* பெ. (n.) 1. ***உவர்த்தரை;*** brackish, sterile land. 2. ***உவர்மண்;*** washerman's or fuller's earth. (செ.அக.). 3. ***பூவழலை*** (ஆ.அக.); saline soil.

[உவல் → ஊவல் → ஊயல் → ஊசல் → ஊசலம் → ஊசரம்.]

ஊசல் *ūsal,* பெ. (n.) 1. ***அசைவு;*** moving to and fro. "பூங்குழை யூசற் பொறை சால் காதின்" (பொருந.30). 2. ***ஊஞ்சல்;*** swing. "ஊசலூர்ந்தாட" (கலித்.37). 3. ***ஒருவகைச் சிற்றிலக்கியம்;*** swing-song, a poem in praise, composed of verses in agaval viruttam or kali-t-tāḷiśai metre, purporting to be sung when moving a swing on which is seated the idol or the person. 4. ***கலம்பக உறுப்புகளுளொன்று;*** member or component part of Kalambagam. (இலக்.வி.812). 5. ***மனத்தடு மாற்றம்;*** trepidation, perturbation, fear. "ஊசனீங்கினர்" (கம்பரா.நாகபா.130). (செ.அக.).

ம. ஊஞ்சல்; து. உச்சலு; தெ. உய்யல்; க. உய்யாலெ, உய்யால; *L.* Oscillum, a swing, *E.* Oscillate, to swing.

[உந்து → உந்தல் → உஞ்சல் → ஊஞ்சல் → ஊசல்.]

ஊசல்² *ūsal,* பெ. (n.) 1. ***பதனழிந்தது;*** that which is fetid, that which has become stale, rank. "குணத்ரயத் தொடு தடுமாறு மூசலை" (திருப்பு.532). 2. ***இவறுதல்;*** miserliness, stinginess, prob. fig from fetidness.

[உல் → ஊல் → ஊள் → ஊளல் → ஊசல்.]

ஊசல் வரி *ūsal-vari,* பெ. (n.) ***ஊஞ்சற் பாட்டு*** (சிலப்.291.); song to accompany swinging. (செ.அக.).

[ஊஞ்சல் → ஊசல் + வரி.]

ஊசலாங்கொடி *ūsalāṅgoḍi,* பெ. (n.) ***சகுண்டைக் கொடி;*** creeping plant (unidentified).

[ஊசல் + ஆம் + கொடி.]

ஊசலாட்டம் *ūsal-āṭṭam,* பெ. (n.) 1. ***ஊஞ்சலாடுகை;*** swinging. 2. ***போக்குவரத்து;*** going backward and forward (W.).

[ஊஞ்சல் → ஊசல் + ஆட்டம்.]

ஊசலாட்டு *ūsal-āṭṭu,* பெ. (n.) ***ஊசலாட்டம்*** பார்க்க; see *ūsalāṭṭam.*

[ஊஞ்சல் → ஊசல் + ஆட்டு.]

ஊசலாடு-தல் *ūsal-āḍu-,* 5.செ.குவி. (v.i.) 1. ***ஊஞ்சலாடு தல்;*** to swing. "பொன்னூ சலாடாமோ" (திருவாச. 16,1). 2. ***அசைதல்;*** to move to and fro. "ஊசலாடு பைங்கமுகு" (சீவக.68). 3. ***போக்குவரத்தாயிருத்தல்*** (வின்.); to frequent, come and go. (செ.அக.). 4. ***உலவித் திரிதல்*** (ஆ.அக.); to wander, roam.

[ஊசல் + ஆடு.]

ஊசலி *ūsali,* பெ. (n.) ***ஊசலாங்கொடி*** பார்க்க; see *ūsalāṅgoḍi.* (சா.அக.).

[ஊசல் → ஊசலி.]

ஊசற்கறி *ūsaṟkaṟi,* பெ. (n.) ***பதனழிந்த கறி;*** old curry grown stale and nauseous. (சா.அக.).

[ஊசல் + கறி.]

ஊசற்சீர் *ūsaṟ-sīr,* பெ. (n.) ***ஊசல்வரி*** பார்க்க; see *ūsal-vari* "நாம் பாடுஞ் சேயுய ரூசற்சீர்" (கலித்.131). (செ.அக.).

[ஊசல் + சீர்.]

ஊசற்பயற்றுக்காரி *ūsaṟ-payaṟṟu-k-kāri,* பெ. (n.) ***வறுமைமிக்க கிழவி;*** destitute old woman. Lit., she that strives to make a living out of stale or spoiled preparation of pulse. (செ.அக.).

[ஊசல் + பயறு + காரி. பயறுகளை வேக வைத்து விற்றுவாழும் பெண்.]

ஊசற்பருவம் *ūsaṟ-paruvam,* பெ. (n.) ***பெண்பாற்பிள்ளைத் தமிழ்ப் பருவங்களுளொன்று;*** one of ten paruvams which describes the stage of childhood in which a girl delights in being swung on a swing. (செ.அக.).

[ஊசல் + பருவம்.]

ஊசா *ūsā,* பெ. (n.) ***மூக்குத்திக்கொடி.*** (வின்.); blunt-leaved hogweed. (செ.அக.).

[ஊசு → ஊசா.]

ஊசாட்டம் *ūsāṭṭam,* பெ. (n.) 1. ***ஊசலாட்டம்*** பார்க்க; see *ūsalāṭṭam.* 2. ***களவு;*** theft. 3. ***விரைவு;*** speed.

[ஊசல் + ஆட்டம்.]

ஊசாம்பி *ūsāmbi,* பெ. (n.) ***பருமனானவன்;*** bulky stupid man. (சேரநா.).

[ஊது → ஊதாம்பி → ஊசாம்பி.]

ஊசாலி *ūsāli,* பெ. (n.) ***ஊற்றால், மீன்பிடி கூடை;*** pointed basket fish trap. (செ.அக.).

[ஊசு = கூர்மூக்கு. ஊசு → ஊசாலி. கூம்புவடிவ மீன்கூடை.]



ஊசாலி

ஊசான் *ūsāṉ,* பெ. (n.) ***நெட்டையாக வளர்ந்து மெலிந்தவன்;*** tall slender person. (சேரநா.).

[ஊசல் → ஊசலான் → ஊசான். ஊசல் = நீட்சி, மெலிவு.]

ஊசி¹ *ūsi,* பெ. (n.) 1. ***தையலூசி*** (பிங்.); sewing-needle. 2. ***எழுத்தாணி;*** iron style for writing on palmyra leaves. "பொன்னோலை செம்பொனூசியா லெழுதி" (சீவக. 369). 3. ***துலாக்கோலின் முள்;*** needle of a balance, magnetic needle. 4. ***சூரியக் கடிகாரத்தின் முள்*** (வின்.); pointer of a dial. 5. ***நிரைக்கழு;*** spike put up to protect gates and walls. "பெய ரூசியும்" (சிலப்.15, 213). 6. ***அடியொட்டி;*** instrument with spikes to pierce the feet. "உள்ளடி யூசிபாய" (சீவக.2768). 7. ***குண்டூசி;*** pin. 8. ***குயவர் மட்கலத்தை அறுக்குங் கருவி;*** potter's instrument used for fashioning clay. 9. ***கூர்மை;*** sharpness, pointedness. "குவிமுகி ழூசிவெண் டோடு" (பதிற்றுப்.70,7). 10. ***சிறுமை;*** slenderness, thinness, lightness. ஊசித்தொண்டை. (செ.அக.).

ம. ஊசி; க. சூசி; பட. சூஞ்சி.

[உளி → உசி → ஊசி (வே.க.87-88).]

ஊசி[2] *ūsi,* பெ. (n.) *வடக்கு;* north. "பாசிச் செல்லா தூசித்துன்னாது" (புறநா.229). (செ.அக.).

[உடு + தி → உடுதி → உடுசி. (வடகோடி உடுமண்டலத்திசை). உடுசி → ஊசி. இனி, உடு → உடுக்கு → உடக்கு → வடக்கு என்பதும் வடகோடி உடுமண்டலத்திசை சுட்டியது காண்க.]

த. உடுசி > Skt. udici.

ஊசிக்கண் *ūsi-k-kaṇ,* பெ. (n.) *சிறுகண்;* small eyes. ஊசிக் கண்ணிலே ஆகாசம் பார்த்ததுபோல் (இ.வ.). (செ.அக.).

[ஊசி = சிறியது. ஊசி + கண். வடபுலத்தில் சகரச் சேர்ப்பால் ஊசி → சூசி எனத் திரிந்தது.]

ஊசிக்கணவாய் *ūsi-k-kaṇavāy,* பெ. (n.) *மீன்வகை* (வின்.); a species of cuttle fish. (செ.அக.).

ம. ஊசியுடத்தேடு.

[ஊசி (சிறுமை) + கணவாய்.]

ஊசிக்கப்பல் *ūsikkappal,* பெ. (n.) *புகையிலை வகை;* indigenous variety of tobacco. (செ.அக.).

[ஊசி + கப்பல். கப்பல் = கப்பல் வழிவந்த சரக்கு.]

ஊசிக்கழுத்தி *ūsi-k-kaḻutti,* பெ. (n.) *கொக்கு மீன்;* marine fish, long-nosed yellowish green. (செ.அக.).

ம. ஊசிமீன்.

[ஊசி + கழுத்தி.]

ஊசிக்களா *ūsi-k-kaḷā,* பெ. (n.) *முள்ளுக்களாச் செடி.* (L.); fascicled-leaved spinous barberry. (செ.அக.).

[ஊசி + களா.]

ஊசிக்காது *ūsi-k-kādu,* பெ. (n.) 1. *ஊசித்துளை;* eye of a needle. 2. *நுனித் தறியுஞ் செவிப்புலன்;* sharp ear, acuteness of hearing. (செ.அக.).

[ஊசி + காது.]

ஊசிக்காய் *ūsi-k-kāy,* பெ. (n.) *தேங்காய் வகை;* a species of coconut. (செ.அக.).

[ஊசி + காய்.]

ஊசிக்கார் *ūsi-k-kār,* பெ. (n.) *மூன்று மாதத்திற் பயிராகும் நெல் வகை;* a kind of paddy sown in May and reaped in July. (செ.அக.).

[ஊசி + கார்.]

ஊசிக்கால் *ūsi-k-kāl,* பெ. (n.) *நடுக்குத்துக்கால்* (வின்.); king post. (செ.அக.).

[ஊசி + கால்.]

ஊசிக்குத்தல் *ūsi-k-kuttal,* பெ. (n.) *உடம்பினுள் ஊசியின் வழியாக மருந்து புகட்டல்;* throwing or introducing a liquid medicine within the body by a needle-injection.

[ஊசி + குத்தல்.]

ஊசிக்குத்தாளை *ūsi-k-kuttāḷai,* பெ. (n.) *நெல்வகை;* a variety of paddy. (செ.அக.).

[ஊசி + குத்தாளை.]

ஊசிக்குறண்டி *ūsi-k-kuṟaṇḍi,* பெ. (n.) *முட் குறண்டி;* thorny shrub. (சா.அக.).

[ஊசி + குறண்டி.]

ஊசிக்கூடு *ūsi-k-kūḍu,* பெ. (n.) *ஊசி வைக்குங்கூடு;* needle-case. (செ.அக.).

[ஊசி + கூடு.]

ஊசிச்சம்பா *ūsi-c-cambā,* பெ. (n.) *சம்பா நெல்வகை;* a variety of cambā paddy, yielding a slender kernel. (செ.அக.).

[ஊசி + சம்பா.]

ஊசித்தகரை *ūsi-t-tagarai,* பெ. (n.) *அவரை வகை.* (L); shrubby bean. (செ.அக.).

[ஊசி + தகரை.]

ஊசித்தூறல் *ūsi-t-tūṟal,* பெ. (n.) *சிறுமழை;* light drizzle. (செ.அக.).

[ஊசி + தூறல்.]

ஊசித்தொண்டை *ūsi-t-toṇḍai,* பெ. (n.) *சிறு தொண்டை;* slender, narrow throat. ஊசித் தொண்டை யும் தாழி வயிறும் (இ.வ.).

[ஊசி + தொண்டை.]

ஊசிநரம்பு *uši-narambu,* பெ. (n.) *காதிலுள்ள ஊசியைப் போன்றவோர் நரம்பு, கேள்வி நரம்பு;* auditory nerve - acusticus. (சா.அக.).

[ஊசி + நரம்பு.]

ஊசிநீர் *ūsinīr,* பெ. (n.) 1. *மூத்திரம்;* urine. "தொடுத்திடுவாய் தங்கள்தங்கள் ஊசிநீரில் அடுத்திடு வாய் நடுநீர்ச்சு டாறுமுன்னே" (சா.அக.). 2. *மழை நீர்;* rain water. 3. *வாய்நீர்;* saliva. (சா.அக.). 4. *பிறப்பு உறுப்பு;* genital organ. உசுநீர் (கொங்.வ.).

[ஊசு + நீர் - ஊசுநீர் → ஊசிநீர்.]

ஊசிப்பலகை *ūsi-p-palagai,* பெ. (n.) *வலை பின்னும் ஊசி;* needle for making nets. (செ.அக.).

[ஊசி + பலகை.]

ஊசிப்பார்வை *ūsi-p-pārvai,* பெ. (n.) *பார்வை;* acuteness or clearness of vision-acuity. (சா.அக.).

[ஊசி + பார்வை.]

ஊசிப்பாலை *ūsi-p-pālai,* பெ. (n.) *கொடிவகை* (L.); needle-leaved swallow-wort. (செ.அக.).

[ஊசி + பாலை.]

ஊசிப்புல் *ūsi-p-pul,* பெ. (n.) *ஊசியைப்போன்ற புல்;* needle-shaped grass. (சா.அக.).

[ஊசி + புல்.]

ஊசிப்புழு *ūši-p-puḻu*, பெ. (n.) ***புழு வகை;*** worm of the shape of a needle, brought out of the ground by a light drizzle on a sunny day. (செ.அக.).

[ஊசி + புழு.]

ஊசிப்போ-தல் *ūši-p-pō-*, பெ. (n.) ***ஊசல் நாற்றமடித்தல்;*** becoming putrified from being kept long; becoming stale and nauseous. (சா.அக.).

[ஊசி + போதல்.]

ஊசி மல்லிகை *ūši-malligai*, பெ. (n.) ***முல்லைக்கொடி வகை*** (L.); eared jasmine.

[ஊசி + மல்லிகை.]

ஊசிமிளகாய் *ūši-milagāy*, பெ. (n.) ***கொச்சி மிளகாய்;*** bird pepper, very fiery. (செ.அக.).

[ஊசி + மிளகாய்.]

ஊசிமிளிரை *ūši-milirai* பெ. (n.) ***காசி யாளி;*** a species of oleander with yellow flowers. (சா.அக.).

[ஊசி + மிளிரை.]

ஊசி மீன் *ūši-mīṉ*, பெ. (n.) ***ஊசிக்கழுத்தி*** பார்க்க; see *ūši-k-kaluṭṭi.*

[ஊசி + மீன்.]

ஊசிமுல்லை *ūši-mullai*, பெ. (n.) ***ஊசிமல்லிகை*** (பிங்.); eared jasmine. (செ.அக.).

[ஊசி + முல்லை.]

ஊசிமுறி *ūši-muṟi*, பெ. (n.) ***இடைக்காடரியற்றிய ஒரு நூல்.*** (யாப்.வி.95,பக் 375); poem by Idai-k-kādar, not extant.

[ஊசி + முறி.]

ஊசிமுனை *ūši-muṉai*, பெ. (n.) ***ஊசி நுனி;*** needle's point.

[ஊசி + முனை.]

ஊசிமுனையளவு *ūši-muṉai-yaḷavu*, பெ. (n.) ***மிகச் சிறிய அளவு;*** extremely small size or quantity. (சா.அக.).

[ஊசி + முனை + அளவு.]

ஊசியாவரை *ūši-y-āvarai*, பெ. (n.) ***வெள்ளை யாவரை;*** Italian senna. (சா.அக.).

[ஊசி + ஆவரை.]

ஊசியுப்பு *ūši-yuppu*, பெ. (n.) ***வெடியுப்பு;*** nitre-potassium nitrate. (சா.அக.).

[ஊசி + உப்பு.]

ஊசியேற்றல் *ūši-yēṟṟal*, பெ. (n.) ***ஊசியை உடம்பினுட் பாய்ச்சி மருந்தேற்றல்;*** injecting medicines into the system by means of a needle. (சா.அக.).

[ஊசி + ஏற்றல்.]

ஊசியோட்டல் *ūši-y-ōṭṭal*, பெ. (n.) ***ஊசியேற்றல்*** பார்க்க; see *ūši-yēṟṟal.* (சா.அக.).

[ஊசி + ஒட்டல்.]

ஊசியோடு-தல் *ūši-y-ōḍu-*, 5.செ.கு.வி. (v.i.) ***ஊசித் தையல் செல்லுதல்;*** to pass the needle through in sewing. (செ.அக.).

[ஊசி + ஓடு.]

ஊசிவண்ணம் *ūši-vaṇṇam*, பெ. (n.) ***ஒருவகைப் புடவை;*** a kind of saree. (செ.அக.).

[ஊசி + வண்ணம்.]

ஊசிவாசி *ūši-vāši*, பெ. (n.) ***தட்டார், தையற்காரர் ஆகியோரிடமிருந்து அரசு பெறும் வரி;*** tax collected from goldsmiths and tailors. 'தட்டார் பெரால் ஊசிவாசி' (S.I.I.vii.820).

[ஊசி + வாசி. வாசி = வரி.]

ஊசிவாணம் *ūši-vāṇam*, பெ. (n.) ***ஊசிவண்ணம்*** பார்க்க; see *ūši-vaṇṇam.*

[ஊசிவண்ணம் → ஊசிவாணம்.]

ஊசிவெடி *ūši-veḍi*, பெ. (n.) ***சிறிய வெடிவகை;*** a kind of small-sized crackers. (செ.அக.).

[ஊசி + வெடி.]

ஊசு[1]-தல் *ūšu-*, 7.செ.கு.வி. (v.i.) 1. ***அழுகுதல்;*** to decay, become fetid, rotten; to putrefy, as a corpse. "ஊசிடு மிடும்பை யாகிய உடம்பு" (திருப்பு.). 2. ***சுவை கெடுதல்;*** to become stale, sour, rank insipid, as food by keeping. "மாசி லோதனம்..... ஊசு மேலினியென் செய்வது" (திருவாலவா.6,4).

ம., க. ஊசு; **து.** ஊசு.

[உல் → ஊல் → ஊள் → ஊழ் → ஊய் → ஊசு. ஊழ்த்தல் = முற்றுதல், முதிர்தல், பதனழிதல், அழுகுதல், கெடுதல், நாறுதல்.]

ஊசு[2]-தல் *ūšu-*, 5.செ.குன்றாவி. (v.t.) ***சீவுதல்;*** to shave, cut off in slices, pare off. "கனிச்சி போல் கோடூசி" (கலித்.101-8).

[உய் → ஊய் → ஊசு = செலுத்துதல், போக்குதல், நீக்குதல், சீவுதல்.]

ஊசு[3] *ūšu*, பெ. (n.) ***குசு;*** emission of wind from the anus.

க., து., பட. ஊசு.

[ஊள் → ஊழ் → ஊய் → ஊசு = பதனழிந்த நாற்றம்.]

ஊசெனல் *ūšeṉal*, பெ. (n.) ***இளைப்பாறற் குறிப்பு;*** onom.expr. of relief in sitting down to rest. ஊசென்று உட்கார நேரங்கிடையாது (செ.அக.).

[ஊசு + எனல். ஊசு - பெருக மூச்சுவிடும் இளைப்பாறல் ஒலிக் குறிப்புச்சொல். ஓடிக் களைத்த நாய் ஊசுஊசு என்று மூச்சு வாங்குகிறது (உ.வ.).]

ஊஞ்சல் *ūñjal,* பெ. (n.) 1. ***ஊசல்*** (திவா.); swing. 2. ***ஊசற்பாட்டு;*** song to accompany swinging. திருமணத்தில் ஊஞ்சல் பாடுகிறார்கள் (இ.வ.).

ம. ஊஞ்சல், ஊஞ்சால்; **க.** உய்யல், ஊய்யல், உய்யாலு, உய்யலு, உவாலெ, உவ்வாலெ; **து.** உச்சால், உய்யால், உச்சாலு, உய்யாலு; **தெ.** உய்யலி, உயலி, ஊஞ்சால், உய்யல, ஊக, உயால, உய்யால; **கொலா.** ஊசெ; **நா.** ஊசெ; **பர்.** ஊசல்; **கோண்.** ஊகாசு.

[ஊக்கு → ஊஞ்சு → ஊஞ்சல். ஊக்குதல் = முன்னே தள்ளுதல். "ஐயசிறிதென்னை ஊக்கி" (கலித்.3).]

ஊஞ்சல் கட்டில் *ūñjal-kaṭṭil,* பெ. (n.) ***ஊஞ்சல்போல் ஆடும் வண்ணம் அமைந்த கட்டில்;*** swinging cot. (சேரநா.).

ம. ஊஞ்சால் கட்டில்.

[ஊஞ்சல் + கட்டில்.]

ஊஞ்சற்பாட்டு *ūñjaṟ-pāṭṭu,* பெ. (n.) ***ஊஞ்சலாடும் போது பாடும் பாட்டு;*** song sung in swinging, as an idol, or as the bride and bridegroom seated on a swing at wedding. (செ.அக.).

ம. ஊஞ்சால் பாட்டு.

[ஊஞ்சல் + பாட்டு.]

ஊஞ்சற்பாலம் *ūñjaṟ-pālam,* பெ. (n.) ***சங்கிலியால் பிணைத்து ஊஞ்சல்போல் அமைத்துள்ள பாலம்;*** suspension-bridge. (சேரநா.).

ம. ஊஞ்சால் பாலம்.

[ஊஞ்சல் + பாலம்.]

ஊஞ்சற்பிசின் *ūñjaṟ-piśiṉ,* பெ. (n.) ***உசில மரத்தின் பிசின்;*** gum of the usilam tree. (சா.அக.).

[ஊஞ்சல் + பிசின்.]

ஊட்டம் *ūṭṭam,* பெ. (n.) 1. ***உண்பிக்கை;*** feeding. 2. ***உணவு;*** food, refreshment. "ஊட்டமின்றித் துறந்தா லொக்குமே" (திவ்.நாச்.1,9). 3. ***செழிப்பு;*** fertility of land, fatness of a person, opp. to வாட்டம். இந்தக் குழந்தை ஊட்டமாயிருக்கிறது (செ.அக.). 4. ***சோற்றுப் படையல்;*** giving a feast (சேரநா.).

ம. ஊட்டம்.

[ஊட்டு → ஊட்டம்.]

ஊட்டல் *ūṭṭal,* பெ. (n.) 1. ***உண்பித்தல்;*** nursing by forcing food into the mouth as in children or patients. 2. ***பால் கொடுத்தல்;*** breast feeding. 3. ***பால் பருகுதல்;*** the act of sucking in milk. 4. ***இன்பதுன்பங்களை உறுத்தல்;*** (In Philosophy) causing to experience joys and sufferings as the fruits of action in former births. 5. ***பிழைப்பூட்டல்;*** restoring to life. (சா.அக.).

ம. ஊட்டல்; **க.** ஊடு; **து.** ஊட.

[ஊட்டு → ஊட்டல்.]

ஊட்டவிடு-தல் *ūṭṭaviḍu-,* 18.செ.குன்றாவி. (v.t.) ***கன்றை அல்லது குட்டியைப் பால் குடிக்கவிடுதல்;*** to let the young of an animal suck. (சா.அக.).

[ஊட்டு → ஊட்ட (வி.எ.) + விடு.]

ஊட்டாக்குழந்தை *ūṭṭā-k-kuḻandai,* பெ. (n.) 1. ***நோய் வருத்தத்தால் பாலுண்ணாக் குழந்தை;*** child which does not suckle owing to suffering from disease or pain. 2. ***பால் மறந்த குழந்தை;*** child which has passed through the stage of suckling. 3. ***ஊட்டி வளர்க்காத குழந்தை;*** child not brought up by artificial feeding or by a wet nurse. (சா.அக.).

[ஊட்டாத → ஊட்டா + குழந்தை.]

ஊட்டி[1]-த்தல் *ūṭṭi-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***தாளியடித்தல்;*** to level a field with a harrow.

[ஊட்டு → ஊட்டி. (இருமடிப்பிறவினை) ஊட்டித்தல் = பள்ளத்திற்கு மேட்டு மண்ணைத் தள்ளிச் சமனுறச் செய்தல்.]

ஊட்டி[2] *ūṭṭi,* பெ. (n.) 1. ***ஊட்டும் உணவு;*** food. "வரபலம் புஜபலம் ஊட்டியாக வளர்த்த சரீரமானது" (ஈடு.2,6,6). 2. ***பறவை விலங்குகளினுணவு*** (திவா.); food of birds and beasts. 3. ***வளர்ப்பு விலங்குகளுக்குத் தீனியிட்டு வைக்கும் தொட்டி அல்லது கழுநீர் வைக்கும் தாழி;*** a vessel or big earthern pot meant for providing cattle-feed.

[உண் → ஊண் → ஊட்டு → ஊட்டி.]

ஊட்டி[3] *ūṭṭi,* பெ. (n.) 1. ***குழந்தைகட்குப் பாலூட்டும் சங்கு;*** feeding conch. 2. ***சங்கு போன்ற குரல்வளை;*** Adam's apple. "கழுத்தி னோடே ஊட்டியும் அரியாநின் றார்," (பெரியபு.அரிவா.17). 3. ***மழை*** (அக.நி.); rain, lit. that which feeds. (செ.அக.). 4. ***ஊட்டப்படும் பன்றி;*** pig.

ம. ஊட்டி.

[ஊட்டு → ஊட்டி.]

ஊட்டி[4] *ūṭṭi,* பெ. (n.) ***நீலகிரி மாவட்டத்தின் தலைநகரான உதகமண்டலம்;*** Ooty, the headquarters of Nilgiri district.

[ஒற்றைக்கு + நின்றான் + மன்று - ஒத்தைக்கமந்து - உதகமண்டு - உதகமண்டலம் > E. Ooty> த. ஊட்டி.]

ஊட்டி[5] *ūṭṭi,* பெ. (n.) 1. ***ஊட்டப்பட்ட நிறம்;*** paint or colour. 2. ***செவ்வண்ணத்தால் வரைந்த ஓவியம்;*** picture drawn with red-ochre. "ஊட்டியன்ன ஒண்டளிர்ச் செயலை" (குறுந்.68-5).

ஊட்டிக்குற்றி *ūṭṭi-k-kuṟṟi,* பெ. (n.) ***குரல்வளை*** (யாழ்ப்.); Adam's apple. (செ.அக.).

[ஊட்டி + குற்றி. குற்றி = சிறியது.]

ஊட்டியார் *ūṭṭiyār,* பெ. (n.) ***தம் பாடலுள் 'ஊட்டி' என்ற சொல் அமைந்ததனால் பெயர்பெற்ற கடைச்***

சங்க காலத்துத் தமிழ்ப் புலவர்; poet of Sangam age who is named as such because the word ūṭṭi' appears in one of his poems.

[ஊட்டி + ஆர்.]

ஊட்டிரம் *ūṭṭiram,* பெ. (n.) *தேட் கொடுக்கி* (மூ.அக.); Indian turnsole. (செ.அக.).

[ஊட்டி → ஊட்டிரம்]

ஊட்டு *ūṭṭu,* பெ. (n.) 1. *குழந்தைக்கு உணவு செலுத்தல்;* feeding child. 2. *உணவு;* food. 3. *குழந்தை அல்லது நோயாளிக்குக் கொடுக்கும் கவளம்;* morsel of food given to a child or to a patient. (சா.அக.).

ம. ஊட்டு; க. ஊட்ட, ஊடெ; து. ஊட.

[உண் → ஊண் → ஊட்டு.]

ஊட்டு¹-தல் *ūṭṭu-,* செ.குன்றாவி. (v.t.). 1. *உண்ணும்படி உணவைப் பிறர் வாயிலே யிடுதல்;* to put small quantity of food into the mouth, as of a child, of a sick person, as of a token of affection. "பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும்" (கலித்.11). 2. *உண்ணச் செய்தல்;* to coax and make one eat one's food, as a mother, her child, to entertain, as a guest. "ஊற்றுப் பெருக்கா லுலகூட்டும்" (நல்வ.9). 3. *புகட்டுதல்;* to instil, infuse. அறிவூட்டினான் (உ.வ.). 4. *வண்ண மேற்றுதல்;* to dye. "அரக்கார்ந்த பஞ்சி கொண் டூட்டினும்" (நாலடி.396). 5. *நுகரச்செய்தல்;* to cause, to experience, as the fruits of one's actions. "உறற்பால வூட்டா கழியு மெனின்" (குறள்.378). 6. *கன்று அல்லது குட்டி பால்குடித்தல்;* to suck as a calf or a kid. இரண்டாட்டில் ஊட்டின குட்டியானான். 7. *விருந்திடல்;* to give a feast. (செ.அக.).

ம. ஊட்டுக; க. ஊடிசு, ஊடு; கோத. உண்க்ச்; தெ. ஊடு (கால்நடைக்கு நீர்கொடுத்தல்); கொலா. உணிப், ஊர்ன், உர்ன்; நா. ஊர்ன்.

[ஊட்டுதல் = உட்கொளச்செய்தல். உண் (த.வி.) → ஊடு (பி.வி.) → ஊட்டு (செயப்.வி.) ஒ.நோ. வாடு → வாட்டு, கூடு → கூட்டு. தொடு → தோண்டு.]

ஊட்டு² *ūṭṭu,* பெ. (n.) 1. *உண்பிக்கை;* feeding. "ஊட்டயர்வார்" (சீவக.926). 2. *உணவு;* food. "தரணி யெல்லா மூன்புக்க வேற்காளிக் கூட்டாம் காண்" (திருவாச.12,14). 3. *ஊட்டுங் கவளம்;* morsel given to a child or a sick person. (W) (செ.அக.).

க., து. ஊட; ம. ஊட்ட.

[உண் → ஊண் → ஊடு → ஊட்டு.]

ஊட்டுக்கன்று *ūṭṭu-k-kaṉṟu,* பெ. (n.) *பால்குடிக்குங் கன்று;* sucking calf.

[ஊட்டு + கன்று.]

ஊட்டுக்குழந்தை *ūṭṭu-k-kuḻandai,* பெ. (n.) 1. *பாலுண்ணும் குழந்தை;* sucking child. 2. *செவிலித்தாயால் ஊட்டப்பட்ட குழந்தை;* child feeding at the breast of a wet nurse. (சா.அக.).

[ஊட்டு + குழந்தை.]

ஊட்டுந்தாய் *ūṭṭun-tāy,* பெ. (n.) *ஐவகைத் தாயாருளொருத்தி* (பிங்.); foster-mother, one of ai-vagai-t-tāyar.

மறுவ. முலைத்தாய், வளர்ப்புத்தாய்.

[ஊட்டு → ஊட்டும் + தாய்.]

ஊட்டுப்புரை *ūṭṭu-p-purai,* பெ. (n.) *கேரள நாட்டில் ஏழையர்க்கு உணவளிக்குஞ் சாலை;* rest-house in the Kerala country in S.India where the poor are given free feeding. (செ.அக.).

ம. ஊட்டுபுர.

[ஊட்டு + புரை.]

ஊட்டுமற-த்தல் *ūṭṭumaṟa,* 3 செ.குன்றாவி. (v.t.) *கன்று பால் குடி மறத்தல்;* to make the calf to forget milk.

[ஊட்டு + மற-.]

ஊட்டுவான் *ūṭṭuvāṉ,* பெ. (n.) *சமையற்காரன்;* one who prepares food; cook. "அவர் பாலூட்டுவான் றனை விட்டார்" (பெரியபு.திருநாவுக்.55).

[ஊட்டு + ஆன் - ஊட்டுவான் (சமைத்து உணவளிப்பவன்).]

†**ஊட்டெழுத்து** *ūṭṭeḻuttu,* பெ. (n.) *எழுத்துகளை மின்னணுச் சிப்பத்தில் பதிவிக்கும் ஒளிப்படத் தட்டச்சு;* electronic type-setter.

[ஊட்டு + எழுத்து.]

எழுத்துக்களை ஒளிப்பதிவுச் சிப்பத்தில் ஊட்டுதலான் தோன்றிய படைப்புச்சொல்.

ஊடகம் *ūḍagam,* பெ. (n.) *கடல்மீன் வகை;* marine fish silvery. (செ.அக.).

ம. ஊடவம்.

[ஊடு → ஊட' கம்.]



ஊடகம்

ஊடணம் *ūḍaṇam,* பெ. (n.) 1. ***சுக்கு;*** dried ginger. 2. ***மிளகு;*** pepper. 3. ***மிளகுக்கொடி;*** pepper creeper.

[ஊடு + அணம்.]

ஊடணை *ūḍaṇai,* பெ. (n.) ***திப்பிலி;*** long pepper. (சா.அக.).

[ஊடு + அணை.]

ஊடம் *ūḍam,* பெ. (n.) 1. ***உவர் மண்;*** saline soil. 2. ***விடியற்காலம்;*** dawn.

[ஊடு + அம்.]

ஊடரக்கல் *ūḍara-k-kal,* பெ. (n.) ***சுக்கான் கல்;*** lime-stone. (சா.அக.).

[ஊடு → ஊடரம் + கல்.]

ஊடரம் *ūḍaram,* பெ. (n.) ***பூவழலை;*** saline soil. (சா.அக.).

[ஊடு → ஊடரம். ஊடு = வெப்பம், வெதும்பல்.]

ஊடல்[1] *ūḍal,* பெ. (n.) 1. ***மருதத்திணையினுரிப் பொருள்களுள் ஒன்றாகிய புலவி;*** love quarrel, between husband and wife, arising from jealousy. appropriate to the agricultural tracts, one of five uri-p-porul. (நம்பியகப்.25) (செ.அக.). 2. ***பிணக்கு;*** disaccord. 3. ***வெறுப்பு;*** dislike. 4. ***கணவன் மனைவி இருவரிடைத் தோன்றும் உரையாடாத மென்சினம்;*** domestic disharmony between husband and wife.

[ஊடு → ஊடல்.]

ஊடல்[2] *ūḍal,* பெ. (n.) ***மர நிழல்;*** shade of a tree. (செ.அக.).

[ஊழ் → ஊடு → ஊடல்.]

ஊடல்விரி *ūḍalviri,* பெ. (n.) ***வெள்ளணி யணிந்து விடுத்துழித் தலைவன் வாயில் வேண்டன் முதலா கப் பாங்கி தலைவனை, அன்பிலை, கொடியை யென்றிகழ்தல் ஈறாகியவை;*** theme of agam classification of esoteric poem, in which the conversation leading to love quarrel between the hero and heroine groups is elaborately narrated.

[ஊடல் + விரி.]

ஊடலுவகை *ūḍal-uvagai,* பெ. (n.) ***புலவியின்பின் கூடலால் நிகழும் மகிழ்ச்சி;*** pleasure derived from reunion after sulking, from temporary variance and huff between husband and wife. (குறள்.133,அதி.).

[ஊடல் + உவகை.]

ஊடலொழித்தல் *ūḍaloḻittal,* தொ.பெ. (vbl.n.) ***பிணக்குத் தீர்த்தல்;*** husband removing the feigned dislike of a wife for the purpose of reunion. (சா.அக.).

[ஊடல் + ஒழித்தல்.]

ஊடறு[1]**-த்தல்** *ūḍaṟu-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஊடுருவுதல்;*** to cut through, cleave, sunder, pierce, as an arrow; to force one's way through. 2. ***வழக்குத் தீர்த்தல்;*** to decide between parties, settle amicably. (W).

[ஊடு + அறு - ஊடறு-.]

ஊடறு[2]**-த்தல்** *ūḍaṟu-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***இடையில் அடைத்தல்*** (ஈடு.1,4,4); to dam; to obstruct in the middle.

[ஊடு + அறு.]

ஊடன் *ūḍaṉ,* பெ. (n.) ***மீன்வகை;*** fresh water fish. (செ.அக.).

[ஊடு → ஊடன்.]



ஊடன்

ஊடாட்டம் *ūḍāṭṭam,* பெ. (n.) 1. ***பல்காற் பயிலுகை;*** frequent communion, intercourse. 2. ***பழக்கம்;*** intimacy.

ம. ஊடாட்டம்.

[ஊடாடு → ஊடாட்டம்.]

ஊடாடு-தல் *ūḍāḍu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***நடுவே திரிதல்;*** to move about, go among. "ஊடாடு பனிவாடாய்" (திவ்.திருவாய்.1,4,9). 2. ***பலகாற் பயிலுதல்;*** to frequent, move about very often. "தேன் கொண் டூடாடுங் கூந்தல்" (கம்பரா.மாரீசன்.79). 3. ***கலந்து பழகுதல்;*** to be familiar; to get into close intimacy. "சீதையென்னு மான்கொண்டூடாடும் வண்ணம்" (கம் பரா.மாரீசன்.79). 4. ***கலத்தல்;*** to come in contact, get in touch. "கையெழுத்தோ டூடாடாமறை" (குற்றா. தல.திரிகூட.34). 5. ***பெரு முயற்சி செய்தல்;*** to make supreme effort. அவன் அதுநிறைவேற மிகவும் ஊடாடு கிறான். (இ.வ.) (செ.அக.). 6. ***கல்வி பயிலுதல்*** (ஆ.அக.); to gain knowledge.

ம. ஊடாடுக; க. ஒடாடு; தெ. ஊடாடு.

[ஊடு + ஆடு - ஊடாடு.]

ஊடாளன் *ūḍāḷaṉ,* பெ. (n.) 1. ***ஒற்றன்;*** spy. 2. ***இருவர் அல்லது இருசாரார்க் கிடையில் கருத்து ஊடாட்டத் திற்கு உதவும் நடுவன்;*** mediator.

[ஊடு + ஆளன்.]

ஊடான் *ūḍāṉ,* பெ. (n.) 1. ***ஊடக மீன்;*** fish, silvery, Gerres filamentosus. 2. ***கடல் மீன்வகை;*** marine fish, pristipoma furcatum. (செ.அக.).

[ஊடன் → ஊடான். ஊடன் பார்க்க; see ūḍan.]

ஊடு[1]-தல் *ūḍu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***புலத்தல்;*** to feign displeasure, as a wife of her husband or vice versa in order to enhance his or her affection. "ஊடுதல் காமத்திற்கின்பம்" (குறள்.1330). 2. ***பிணங்குதல்;*** to be impatient, to show resentment, "செறுத்தோ றுடைப்பி னுஞ் செம்புனலோ டூடார்" (நாலடி.222).

[உள் → உடு → ஊடு. வாய் திறந்து பேசாமல் உள்ளத்தின் உளைச்சல்களைக் குறிப்பால் புலப்படுத்துதல். நாளடைவில் சொல்லாடிப் புலப்படுத்தலும் ஊடுதலாயிற்று. ஊடுதல் = (உள்ளத்தின்) உளைச்சல்.]

ஊடு[2]-தல் *ūḍu-,* 5.செ.கு.வி. (v.i.) ***உண்ணுதல்;*** to eat. பன்றி வள்ளிக்கிழங்கை ஊட்டிவிட்டது. (இ.வ.).

[உள் → உண் → ஊடு (உட்கொள்).]

ஊடு[3] *ūḍu,* பெ. (n.) 1. ***நடு;*** middle, that which comes between. "ஊடாடு பனிவாடாய்" (திவ்.திரு வாய்.1,4,9). 2. ***இடை;*** waist. 3. ***நெசவின் தார்நூல்*** (வின்.); woof, thread woven across the warp. (செ.அக.).

ம. ஊடு; க. உடு; கோத. ஊட்; து. ஊடு.

[உள் → உடு → ஊடு.]

ஊடு[4] *ūḍu,* பெ. (n.) ***துளை, வழி;*** hole.

[உடு → ஊடு (வே.க.73).]

ஊடு[5] *ūḍu,* பெ. (n.) ***குறுவையும் ஒட்டடையுங் கலந்து விதைத்துச் செய்யும் விளைச்சல்*** (G.Tj.D.I,93.); simultaneous cultivation of kuṟuvai and oṭṭaṭai paddy in the same field.

[உடு → ஊடு (கலப்பு).]

ஊடுசாகுபடி *ūḍu-cāgupaḍi,* பெ. (n.) ***இருவகைத் தவசங்களைக் கலந்து பயிரிடுகை;*** cultivating by mixing two kinds of grain in a seed bed and planting the seedlings indiscriminately. (G.II. 1,93). (செ.அக.).

[ஊடு + சாகுபடி.]

ஊடுசெல்(லு)-தல் *ūḍu-cel,* 13.செ.கு.வி. (v.i.) 1. ***நடுவிற்போதல்;*** to pass through, the centre. "உடைகப்பல் கப்பலாய்த் திரையாழி யூடுசெலுமோ" (தாயு.சுகவா.11). 2. ***இடையே போதல்;*** to enter in between.

[ஊடு + செல்.]

ஊடுதட்டி *ūḍutaṭṭi,* பெ. (n.) ***இடைத்தரகன்; இடையில் நின்று மாறுகொண்ட இருவரை ஏய்த்துச் செல்பவன்;*** go between, intermediary cheating both the conflicting parties.

[ஊடு + தட்டி.]

ஊடுதட்டு *ūḍutaṭṭu,* பெ. (n.) ***இருவர் காரியத்தின் இடையிற் புகுந்து பெற்ற வருவாய்;*** snatching away something as gain, often illegally, as by interfering while two people are quarrelling amongst themselves.

[ஊடு + தட்டு. தட்டு = தட்டிச்செல்லுதல், பறித்துச்செல்லுதல்.]

ஊடுதல் *ūḍudal,* பெ. (n.) ***கலவியிற் பிணங்குதல்;*** feigning displeasure in sexual affair as a wife does with her husband chiefly with a view to increase his affection. (சா.அக.).

[உள் → உடு → ஊடுதல்.]

ஊடுதாக்கு[1]-தல் *ūḍu-tākku-,* 7.செ.கு.வி. (v.i.) ***பின்னிடாமல் எதிர்த்து நிற்றல்;*** to oppose with firmness, stand resolutely.

[ஊடு + தாக்கு.]

ஊடுதாக்கு[2]-தல் *ūḍu-tākku,* 5.செ.குன்றாவி. (v.t.) ***இரண்டு பொருள்களின் வலிமையை யொப்பிடுதல்;*** to compare two things with regard to their relative strength (செ.அக.).

[ஊடு + தாக்கு.]

ஊடுபற்று-தல் *ūḍu-paṟṟu-,* 5.செ.கு.வி. (v.i.) ***விளக்கு உள்ளே பற்றி யெரிதல்*** (வின்.); to burn whithin the hollow or bowl of an open lamp, as the wick when the oil is out. (செ.அக.).

[ஊடு + பற்று.]

ஊடுபாட்டு *ūḍupāṭṭu,* பெ. (n.) 1. ***பழக்கம் அறிந்திருத்தல்;*** custom, habit, familiarity. 2. ***அறிவு;*** knowledge. (சேரநா.).

ம. ஊடுபாட்டு.

[ஊடு + பாட்டு.]

ஊடுபோக்கு[1]-தல் *ūḍu-pōkku-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***இடையே போகச் செய்தல்;*** to run through, cause to pass through. 2. ***வழக்குத் தீர்த்தல்;*** to decide between parties, settle amicably. (செ.அக.). 3. ***ஊடுருவச் செய்தல்;*** to penetrate. (ஆ.அக.).

ம. ஊடு போக்கு.

[ஊடு + போக்கு.]

ஊடுபோக்கு[2] *ūḍu-pōkku,* பெ. (n.) 1. ***ஊடு செல்லுகை;*** passing through, as a jungle, a crowd. ஆளிகன் ஊடுபோக்கற நிமிர்த்து (திருக்கோ.151,உரை.) 2. ***ஒரு பழைய வரி;*** ancient tax. "ஊடுபோக்கும்........ கோக்கொள்ளப் பெறாதே" (S.I.I.ii,509).

[ஊடு + போக்கு.]

ஊடுருவிப்பாய்-தல் *ūḍuruvi-p-pāy-,* 2. செ.கு.வி. (v.i.) ***நடுவினுள் வேகமாய் முழுவதையும்***

துளைத்துச் செல்லல்; passing through anything forcibly and rapidly inter-penetrating. (சா.அக.).

[ஊடு + உருவி + பாய்.]

ஊடுருவு-தல் *ūḍuru-,* 5.செ.கு.வி. (v.i.) 1. **இடையுருவிச் செல்லுதல்;** to penetrate, pierce, as weapons. "நெற்றிதொறு மோரொரு வடிக்கணை யூடுருவ." (பாரத.இரண்டாம்போ.26).

ம. ஊடுருவுக.

[ஊடு + உருவு.]

ஊடுவெளி *ūḍuveḷi,* பெ. (n.) **இடைவெளி;** space in between, gap.

[ஊடு + வெளி.]

ஊடுளைச்சல் *ūḍuḷaiccal,* பெ. (n.) **மாதவிடாய்களுக்கிடையே காணும் வலி;** pain occurring between the menstrual periods - midpain. (சா.அக.).

[ஊடு + உளைச்சல்.]

ஊடூடே *ūḍūḍē,* வி.எ. (adv.) 1. **இங்குமங்கும், இடையிடையே;** off and on, irregularly, interspersed. 2. **அப்போதைக்கப்போது;** there and then. 3. **அடிக்கடி;** frequently.

[உடு → ஊடு + ஏ.]

ஊடேவிழு-தல் *ūḍēviḻu-,* 2.செ.கு.வி. (v.i.) **நடுவிற் புகுதல்;** to come between, rush into the midst, interfere.

[ஊடு + ஏ + விழு.]

ஊடை *ūḍai,* பெ. (n.) 1. **ஆடையின் குறுக்கிழை** (வின்.); woof. (செ.அக.). 2. **நூற்றார்;** garland of fibres. 3. **உண்டை;** ball of thread.

[ஊடு → ஊடை.]

ஊடை மா *ūḍaimā,* பெ. (n.) **தேட்கொடுக்கி;** scorpion plant or scorpion sting. (சா.அக.).

[ஊடு → ஊடை + மா.]

ஊடையம் *ūḍaiyam,* பெ. (n.) **நீரரண்** (வின்.); ditch round a fort or a camp. (செ.அக.).

மறுவ. அகழி, அகழ்ப்பு, அகப்பா.

[ஊடு → ஊடையம்.]

ஊண் *ūṇ,* பெ. (n.) **உண்கை;** eating. "பாத்தூண் மரீஇயவனை" (குறள்.227). 2. **உணவு;** food. "உடை செல்வமூ ணொளிகல்வி" (குறள்.939). 3. **ஆன்மாவின் இன்பதுன்பப் பட்டறிவு;** experience of joys and sorrows by the soul, as the inevitable fruits of karma. "ஊணொழியா துன்னின்" (சிவப்பிர.19) (செ.அக.).

ம. ஊண், ஊணு; க. ஊட, உணிசு; கோத., துட. ஊண்; து. உணசு, ஒணசு.

[உண் → ஊண்.]

ஊண்சாலை *ūṇ-šālai,* பெ. (n.) **ஊட்டுப்புரை;** choultry where food is distributed gratis. (செ.அக.).

[உண் → ஊண் + சாலை.]

ஊண்டழல் *ūṇḍalal,* பெ. (n.) **பசியழல்;** power of digesting food, lit. food-fire. "ஊண்டழல் வெறுக்கும் வண்ண மூட்டுவம்" (பிரபுலிங். ஆரோகண.40) (செ.அக.).

[ஊண் + தழல்.]

ஊண்பாக்கு *ūṇ-pākku,* பெ. (n.) **உண்டபின் தின்னும் வெற்றிலை பாக்கு;** betel and nut taken after a meal, dist. fr. வெறும் பாக்கு (வீண் பாக்கு) ஊண்பாக்கொழிய வீண்பாக்காகாது. (பழ.).

[ஊண் + பாக்கு.]

ஊண்பித்தை *ūṇ-pittai,* பெ. (n.) **ஓர் பெண்பாற் புலவர்;** a poetess.

[ஊண் + பித்தை. பித்தை = சிறுமி, பெண்.]

குறுந்தொகையில் 232ஆம் பாடலைப் பாடிய ஊண்பித்தையார் உணவுபடைக்கும் பணிப்பெண்ணாக வாழ்ந்தவராகலாம். புல் → புத்து → பித்து என்னும் சொற்கள் இளமை, மென்மை, புதுமை, அழகு என்று பொருளால் விரிவன. துளுமொழியில் 'புத்து' இன்றும் பெண்பாற் பெயராக வழங்குகிறது. புல் → புது → புதல் → புதல்வன். புல் → புது → புத்து → புத்தன்(மகன்) த. புத்து → புத்தன் *Skt.* putra.

கன்னடத்தில் புத்து → புட்டு → புட்ட என்பன இளமையும் அழகும் குறித்து வழங்குவன. புல் → புள் → பிள் → பிள்ளை என்பன இளமைப்பெயர்கள். புத்தை → பித்தை.

ஊணம் *ūṇam,* பெ. (n.) **ஒரு நாடு;** name of the country of the Huns. "ஊண நாட்டோரூரின்" (ஞானவா. காதிக.7).

[அவுண் → ஊண் → ஊணம். ஊணம் = அவுணர்வாழ்வகம்.]

ஊணன்[1] *ūṇan,* பெ. (n.) **ஊண நாட்டான்;** Hun, barbarian. (செ.அக.).

[அவுணன் → ஊணன்.]

ஊணன்[2] *ūṇan,* பெ. (n.) **மிக வுண்போன்;** glutton. ஊணன் கருமமிழந்தான் (வின்.) (செ.அக.).

ம. ஊணன்.

[ஊண் + அன்.]

ஊணா *ūṇā,* பெ. (n.) **சடைச்சி மரம்** (L.); common Indian linder. (செ.அக.).

[ஊள் → ஊண் → ஊணா.]

ஊணாட்டம் *ūṇāṭṭam,* பெ. (n.) **பல்லாங்குழியில் ஆடும் ஓர் ஆட்டம்;** a kind of game. (சேரநா.).

[ஊண் + ஆட்டம்.]

ஊணாளி *ūṇāḷi,* பெ. (n.) **அதிகமாக உண்பவன்;** glutton, great eater. (சேரநா.).

[ஊண் + ஆளி.]

ஊணி[1] *ūṇi,* பெ. (n.) ***உணவுகொள்பவன்;*** one who eats. "காளவிட மூண்" (திருப்பு.69). (செ.அக.).

ம. ஊணி; க. உணி.

[ஊண் → ஊணி.]

ஊணி[2] *ūṇi,* பெ. (n.) ***பாவாற்றுதற்கு ஊன்றும் கவர்க் கால்;*** weaver's stand for the threads of the woof.

[ஊண் → ஊணி.]

ஊணிக்கம்பு *ūṇi-k-kambu,* பெ. (n.) 1. ***மொட்டை வண்டியின் இரு பக்கத்திலும் ஊன்றப்பட்ட முளைக் கம்புகள்*** (நெல்லை); stakes on the sides of an open country cart. 2. ***பாவாற்றுதற்கு ஊன்றும் கவர்க்கால்;*** weaver's stand for the threads of the woof.

[ஊன்றி + கம்பு - ஊன்றிக்கம்பு → ஊணிக்கம்பு.]

ஊணு-தல் *ūṇu-,* 13.செ.குன்றாவி. (v.t.) ***உணவு கொடுத்துப் பேணுதல்;*** to feed and nourish. "உழலை யாக்கையை யூணுமுணர்விலீர்" (தேவா.588.6).

[உண் → ஊண் + உ - ஊணு.]

'உண்' என்னும் தன்வினை 'ஊண்' என நெடுமுதலாகிப் பிறவினையாகும் பெற்றியுடையதாயினும் முதனிலை திரிந்த தொழிற்பெயராகிய 'ஊண்' என்பதனின்றும் வேறுபடுத்த 'ஊணு' என உகர ஈறுபெற்றுப் பிறவினை ஏவலாகி "ஊட்டு" எனப்பொருள் தந்துநின்றது.

ஊத்தங்காய் *ūttaṅ-gāy,* பெ. (n.) ***புதைத்துப் பழுக்க வைத்த காய்;*** green unripe fruit buried to ripen, as plantains. Loc. (செ.அக.).

[ஊழ்த்தல் = புதைத்தல். ஊழ்த்தம் → ஊத்தம் + காய்.]

ஊத்தட்டம் *ūttāṭṭam,* பெ. (n.) ***மாழைகளை யுருக்க வைக்குந் தழல்;*** fire for melting metal. (செ.அக.).

[ஊது → ஊத்து → ஊத்தட்டம்.]

ஊத்தப்பம் *ūttappam,* பெ. (n.) ***பருத்த தோசை வகை;*** thick rice-flour cake. (செ.அக.).

ம ஊத்தப்பம்.

[ஊற்று → ஊத்து + அப்பம்.]

ஊத்தம் *ūttam,* பெ. (n.) 1. ***வீக்கம்;*** swelling, puffing up of the limbs or body. அவன் உடம்பு ஊத்தமாயிருக்கிறது. (இ.வ.). 2. ***காய்களைப் பழுக்கவைக்கும் புதைப்பு;*** burying of green unripe fruits to ripen. (செ.அக.).

[ஊது → ஊத்து → ஊத்தம்.]

ஊத்தமுறை *ūtta-muṟai,* பெ. (n.) ***ஊது திட்டம்*** பார்க்க; see *ūdu-tiṭṭam.*

ஊத்தல் *ūttal,* பெ. (n.) ***பித்தளை;*** brass. (சா.அக.).

[ஊற்று → ஊற்றல் → ஊத்தல். காய்ச்சி உருக்கிவார்த்த கலப்பு மாழையாதலின் இப்பெயர் பெற்றது.]

ஊத்தாம்பிள்ளை *ūttām-pillai,* பெ. (n.) 1. ***பேழை;*** container. 2. ***மூத்திரப்பை*** (இங்.வைத்.43); bladder. (செ.அக.).

[உத்து → உத்தாம் → ஊத்தாம் + பிள்ளை.]

ஊத்து *ūttu,* பெ. (n.) 1. ***ஊதுகை;*** blowing a musical instrument. ஓர் ஊத்து ஊதினான். (உ.வ.). 2. ***காகளத்தின் ஒலி;*** sound of a wind instrument. "பெரிய திருநாளாய்ச் செல்லும்படி பண்ணினால் புறம்பு ஊத்தும் சுவடு மற்றுக் கிடக்கவும் வேணுமா?" (திவ்.திருநெடுந்.8.வியா.). 3. ***உடம்பு ஊதிப்பருத்தல்*** (சங்.அக.); swelling of body. 4. ***ஊதல்;*** whistle. (Tinn.).

ம. ஊத்த; க. ஊது; து. ஊதுனி.

[ஊது → ஊத்து.]

ஊத்தை *ūttai,* பெ. (n.) 1. ***அழுக்கு;*** dirt, impurity, filth, excrement, that which is ceremonially unclean, as catamenia. "ஊத்தைக் குழியி லமுதம் பாய்வது போல்" (திவ்.பெரியாழ்.4,6,10) (செ.அக.). 2. ***ஊன், ஊனீர்;*** water oozing from flesh. 3. ***மாதவிலக்கு நீர்;*** menstrual blood - catamenia. 4. ***பல்லழுக்கு;*** foul matter which collects on the teeth ordinarily; a composed accumulation about the teeth in sickness - scordes. 5. ***புலால்;*** meat. "ஊத்தைச் சடலத்தை உப்பிருந்த பாண்டத்தை." 6. ***நாற்றம்;*** stench.

ம. ஊத்த.

[ஊழ் → ஊழ்த்தை → ஊத்தை.]

ஊத்தைகழல்(லு)-தல் *ūttai-k-kaḻal,* 13.செ.கு.வி. (v.i.) 1. ***அழுக்கு வெளியேறுதல்*** (வின்.); to come off as dirt from a vessel (செ.அக.). 2. ***ஊத்தை கழலுதல்;*** to remove foul matter.

[ஊழ்த்தை → ஊத்தை + கழல்.]

ஊத்தைச்சீலை *ūttai-c-cīlai,* பெ. (n.) 1. ***அழுக்குச் சீலை;*** dirty cloth or clothes. 2. ***விலக்குச்சீலை;*** sanitary towel or napkin.

[ஊத்தை + சீலை.]

ஊத்தை நாறி *ūttai-nāṟi,* பெ. (n.) 1. ***பீநாறி*** (மூ.அ.); fetid tree. 2. ***முடைநாற்றம் உடையவள்;*** dirty woman or a woman ceremonially unclean, said of a woman as a low term of abuse. (சா.அக.).

[ஊத்தை + நாறி.]

ஊத்தைப்பல் *ūttai-p-pal,* பெ. (n.) 1. ***அழுக்குச் சேர்ந்த பல்;*** dirty tooth. 2. ***ஊன் படிந்த பல்;*** tooth with the dark brown foul matter collected on it in low fevers - scordes. 3. ***சீழ்வடியும் பல்;*** tooth with a discharge of pus as in pyorrhoea. (சா.அக.).

[ஊத்தை + பல்.]

ஊத்தைப்பல்லன் *ūttai-p-pallan*, பெ. (n.) ***தூய்மையற்ற பற்களுடையவன்;*** one with unclean teeth. (செ.அக.).

[ஊத்தை + பல்லன்.]

ஊத்தைப்பாட்டம் *ūttai-p-pāttam*, பெ. (n.) ***வரி வகை;*** tax (S.I.I.V.330), (செ.அக.).

ம. ஊத்தப்பாட்டம்.

[ஊத்தை + பாட்டம்.]

ஊத்தைப்பாண்டம் *ūttai-p-pāṇḍam*, பெ. (n.) 1. ***ஊத்தை யுடம்பு;*** body, full of filth, called contemptuously by renunciative moralizers. 2. ***நாற்றம் வீசும் உடம்பு;*** body emitting a fetid smell (சா.அக.).

[ஊத்தை + பாண்டம்.]

ஊத்தைப்பிணம் *ūttai-p-piṇam*, பெ. (n.) 1. ***நாறிய பிணம்*** (வின்.); putrid corpse, decomposed carcass (செ.அக.). 2. ***அழுக்குடம்பு;*** filthy body. (சா.அக.).

[ஊத்தை + பிணம்.]

ஊத்தையட்டு-தல் *ūttai-y-aṭṭu-*, 5.செ.கு.வி. (v.i.) ***ஊனமுறுதல்;*** to sustain dishonour, suffer disgrace "கோழிப் போரில் ஊத்தையட்டாமல்" (S.I.I.ii 251), (செ.அக.).

[ஊத்தை + அட்டு.]

ஊத்தையெடு-த்தல் *ūttai-y-eḍu-*, 4.செ.கு.வி. (v.i.) ***அழுக்ககற்றுதல்*** (யாழ்ப்.); to remove tarnish from jewels, stain from silk or other cloth. (செ.அக.).

[ஊத்தை + எடு.]

ஊத்தைவாசல் *ūttai-vāšal*, பெ. (n.) ***பெண் நோனி;*** vagina from its serving as a passage for the discharge of menses. (சா.அக.).

[ஊத்தை + வாசல்.]

ஊதடைப்பான் *ūdaḍaippāṉ*, பெ. (n.) ***மாட்டுநோய் வகை;*** disease, among cattle. (மாட்டுவை.சிந்.பக்.25), (செ.அக.).

[ஊது + அடைப்பான்.]

ஊதம் *ūdam*, பெ. (n.) ***யானைக்கூட்டம்;*** herd of elephants. "உலவை நீள்வனத் தூதமே யொத்தது." (கம்பரா.வரைக்.7), (செ.அக.).

[ஊ → ஊது → ஊதம் (பெருக்கம்).]

ஊதல்[1] *ūdal*, பெ. (n.) 1. ***குளிர்க்காற்று;*** cold wind. ஊதலடிக்கிறது. (உ.வ.). 2. ***வீக்கம்;*** swelling. 3. ***ஆரவாரம்*** (வின்.); great noise. 4. ***ஊதைநோய்;*** rheumatism. ஊதலினம். (தைலவ.தைல.130). 5. ***மிகுதி;*** fullness, "இருமலீளை யென்றிவை யூதலாக்கை" (தேவா.996.8). 6. ***குழந்தைகள் ஊதுங் கருவி;*** toy trumpet, small pipe. ஓர் ஊதல் வாங்கிக்கொடு (உ.வ.), (செ.அக.).

[ஊது → ஊதல்.]

ஊதல்[2] *ūdal*, பெ. (n.) ***கருநீலப் படர்கொடி;*** dark blue creeper.

[ஊது → ஊதல்.]

ஊதல் போடுகை *ūdal-pōḍugai*, பெ. (n.) 1. ***புகைபோட்டுப் பழுக்கச் செய்கை;*** fumigation for ripening unripe fruits as plantains. 2. ***பெருச்சாளி போன்றவை பொந்தினின்று வெளியேறப் புகை மூட்டுகை;*** fumigation, so as to expose the hole of rodents as bandicoots, to smoke, and so force them to run away. (செ.அக.).

[ஊது → ஊதல் + போடுகை.]

ஊதற்காற்று *ūdaṟ-kāṟu*, பெ. (n.) ***பனிக்காலத்துக் குளிர்க்காற்று;*** cold biting wind of the dewy season. (செ.அக.).

[ஊதல் + காற்று. ஊதல் = பெருகுதல், மிகுதல், குளிரை மிகுவிக்கும் காற்று.]

ஊதற்கொடி *ūdaṟ-koḍi*, பெ. (n.) ***கொடிவகை*** (L.); dark-blue creeper. (செ.அக.).

[ஊதல் + கொடி.]

ஊதன் *ūdaṉ*, பெ. (n.) ***ஆண்பாற் பெயர்;*** name of a person. ஆதனுக்குக் கொடுத்தாலென்ன ஊதனுக்குக் கொடுத்தாலென்ன. (கொங்.வ.).

க. ஊதன்.

[ஊ → ஊது → ஊதன் (பருத்த தோற்ற முள்ளவன்).]

ஊதா *ūdā*, பெ. (n.) 1. ***செம்மை கலந்த நீலநிறம்;*** purple, violet. (செ.அக.). 2. ***செம்மை கலந்த கருநிறம்*** (ஆ.அக.); reddish black.

ம. ஊதா.

[ஊது → ஊதல் → ஊதா.]

ஊதல் என்னும் கொடியின் நிறம் ஊதா என வழங்கலாயிற்று. ***ஊதற்கொடி*** பார்க்க; see *ūdaṟ-koḍi*.

ஊதா இறுங்கு *ūdā-iṟuṅgu*, பெ. (n.) ***சோள வகை*** (விவசா.3); a kind of maize.

[ஊதல் → ஊதா + இறுங்கு.]

ஊதாக்கத்திரி *ūdā-k-kattiri*, பெ. (n.) ***கத்திரி வகை;*** New York - purple brinjal. Solanum melongena Americana. (செ.அக.).

[ஊதல் → ஊதா + கத்திரி.]

ஊதாங்குச்சி *ūdāṅ-kucci*, பெ. (n.) ***நெருப்பூதுங் குழாய்;*** blow-pipe (Loc.). (செ.அக்.).

[ஊது + ஆம் + குச்சி.]

ஊதாங்குழல் *ūdāṅ-kuḻal*, பெ. (n.) ***ஊதாங்குச்சி*** பார்க்க; see *ūdāṅ-kucci*. (செ.அக.).

[ஊது + ஆம் + குழல்.]

ஊதாசி *ūdāši*, பெ. (n.) ***ஊதாரி*** பார்க்க; see *ūdāri*.

ஊதாப்பூ *ūdā-p-pū,* பெ. (n.) ***மரவகை*** (L); medium membranous lance to obovate accuminate or cuspidate leaved jungle geranium. (செ.அக.).

[ஊதா + பூ.]

†ஊதாம்பி *ūdāmbi,* பெ. (n.) ***காற்றூதிச் சிறுவர் விளையாடும் காற்று முட்டை;*** balloon.

[ஊது + ஆம் + பை - ஊதாம்பை → ஊதாம்பி.]

†ஊதாம்பை *ūdāmpai,* பெ. (n.) ***ஊர்திச் சக்கரங்களில் வட்டையினுள் உள்ள காற்றுப்பை;*** tube in the tyre of a vehicle.

[ஊது + ஆம் + பை. 'ஆம்' சொற்சாரியை. படைத். இரா. மதிவாணன் 1988]

ஊதாமுள்ளி *ūdā-muḷḷi,* ***செம்முள்ளி*** (L.); crested purple, nail dye.

[ஊதாய் → ஊதா + முள்ளி.]

ஊதாய் *ūdāy,* பெ. (n.) ***செம்மை கலந்த நீலநிற ஊமத்தம்பூ;*** purple blue datura.

[ஊதல் → ஊதாய்.]

ஊதாரி[1] *ūdāri,* பெ. (n.) ***வீண்செலவுக்காரன்;*** spendthrift, prodigal, squanderer. "கொடையிலாத ஊதாரி" (திருப்பு.) (செ.அக.).

ம. ஊதாரி.

[ஊதுதல் = பறக்கச் செய்தல், வீணடித்தல். ஊது + ஆளி - ஊதாளி → ஊதாரி (துகளை ஊதித் துடைத்தாற்போல் செல்வத்தை வாரி இறைத்துக் கழிப்பவன்.).]

ஊதாரிபடுதல் = கேடுறுதல். "உடலூ தாரிபட் டொழிய" (திருப்பு.904). ஊதாரி என்னுஞ் சொல், உதார என்னும் வடசொல்லினின்று திரிந்ததாகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி காட்டியிருப்பது, உண்மைக்கு மாறானதும் முற்றும் பொருத்தமற்றதுமாம். உதார என்னும் வடசொல் ஈகைத் தன்மையைக் குறிப்பதாகும். ஊதாரி என்னும் தென் சொல்லே அழிப்பாளியைக் குறிப்பதாகும். அழிப்பாளி வீண் செலவு செய்பவனேயன்றி அளிப்பாளியல்லன். (வே.க.98).

ஊதாரி[2] *ūdāri,* பெ. (n.) ***பயனிலி;*** worthless person. "ஊதாரியாய் நானழியா வண்ணம்" (பாடுது.63,பந்து).

[ஊது + ஆளி - ஊதாளி → ஊதாரி. ஊதுதல் = பறக்கச் செய்தல், வீணடித்தல்.]

ஊதாரித்தனம் *ūdārittaṉam,* பெ. (n.) 1. ***அழிப்பு;*** wasting, destruction. 2. ***வீண்செலவு;*** wasteful, immoderate spending. (ஆ.அக.).

[ஊதாரி + தனம்.]

ஊதாரிபடு-தல் *ūdāri-paḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***கேடுறுதல்;*** to become damaged, spoiled, impaired, blighted. "உடலூதாரி பட்டொழிய" (திருப்பு.904).

[ஊது + ஆர் + இ - ஊதாரி + படு. ஊது = பறக்கச்செய்தல், போகச் செய்தல், இழத்தல், அழிவுறல், கேடு. ஆர் = ஆர்தல். இகரம் - தொ.பொ.ஈறு.]

ஊதாவல்லி *ūdāvalli,* பெ. (n.) 1. ***நீலச் செவ்வாம்பற் கொடி;*** purple Indian water lily. 2. ***நீலவல்லி; இது நீலப்பூக்களையுடைய ஓர் பூங்கொடி;*** blue Indian water lily or Star flower lily. It is a perennial creeper with blue flowers, flowering all round the year. (சா.அக.).

மறுவ. ஊதற்கொடி, ஊதல்.

[ஊதாய் → ஊதா + வல்லி.]

ஊதிகை *ūdigai,* பெ. (n.) ***முல்லைக்கொடி*** (மூ.அக.); eared jasmine, jasimum auriculatum. (செ.அக.).

[ஊது → ஊதிகை. (பெருகிப் படரும் கொடி).]

ஊதிப்பார்-த்தல் *ūdi-p-pār-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***புடமிட்டு நோக்குதல்;*** to test by blowing, as a goldsmith. (செ.அக.). 2. ***மந்திரித்தல்*** (வின்.); to attempt a cure by enchantment consisting in part of blowing into the patient's body.

[ஊதி + பார்-.]

ஊதிப்போடு-தல் *ūdi-p-pōḍu-,* 19.செ.குன்றாவி. (v.t.) ***எளிதில் வெல்லுதல்;*** to overcome easily, overthrow without the least difficulty. (செ.அக.).

[ஊதி + போடு. ஊது = வாயால் ஊதிப் பறக்கச் செய்தல். ஊதிப்போடுதல் = பகைவரைப் பறந்தோடச்செய்தல், வெல்லுதல்.]

ஊதியம் *ūdiyam,* பெ. (n.) 1. ***மேல் வருவாய், ஆதாயம்;*** profit, gain. "முதலிலார்க்கூதிய மில்லை" (குறள்.449). 2. ***பயன்;*** benefit, advantage. "ஊதியங்கருதியவொரு திறத்தானும்" (தொல்.பொருள்.41). 3. ***கல்வி*** (திவா.); learning, erudition. (செ.அக.).

[ஊது → ஊதியம். ஊது = பெருக்கம், மிகுதி.]

ஊதியிரு-த்தல் *ūdiyiru-,* 3.செ.கு.வி. (v.i.) 1. ***வீங்கியிருத்தல்;*** to be in a swollen condition. 2. ***பருத்திருத்தல்;*** to be stout or bloated. (சா.அக.).

[ஊதி + இரு.]

ஊதியொடுக்கம் *ūdiyoḍukkam,* பெ. (n.) ***மூச்சு;*** breathing, respiration. (சா.அக.).

[ஊதி + ஒடுக்கம்.]

ஊதில் *ūdil,* பெ. (n.) 1. ***பாம்பாட்டிகள் ஊதுங் குழல்;*** a kind of musical pipe, used by snake charmers. 2. ***குழந்தைகள் ஊதுங்கருவி;*** toy pipe for children. (Tinn.). (செ.அக.).

[ஊது → ஊதில். 'இல்' சொல்லாக்க ஈறு.]

ஊதிலி *ūdili,* பெ. (n.) ***ஊதில்*** பார்க்க; see *ūdil.*

[ஊதில் + இ. இகரம் ஒருமைகுறித்த ஈறு.]

ஊதின பொன் *ūdiṉa-poṉ,* பெ. (n.) ***புடமிட்ட பொன்;*** refined gold. (சா.அக.).

[ஊது + இன் + அ - ஊதின + பொன் 'இன்' சாரியை. 'அ' பெ.எ.ஈறு.]

ஊதினமரம் *ūdiṉa-maram,* பெ. (n.) ***வண்டு துளைத்த மரம்;*** tree pierced by beetle. (சா.அக.).

[ஊது + இன் + அ - ஊதின + மரம். 'இன் சாரியை. 'அ' பெ.எ.ஈறு.]

ஊதின வெள்ளி *ūdiṉa-veḷḷi,* பெ. (n.) ***நெருப்பிலிட்டுக் கலப்பின்றி ஊதியெடுத்த சொக்க வெள்ளி;*** wrought silver; purified silver. (சா.அக.).

[ஊது + இன் + அ - ஊதின + வெள்ளி. 'இன் சாரியை. 'அ' பெ.எ.ஈறு.]

ஊது[1]-தல் *ūdu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***குழல் முதலியன ஊதுதல்;*** to blow, as a wind instrument. "ஊதுகின்ற குழலோசை" (திவ்.பெரியாழ்.3,6,1). 2. ***தீ எரிய ஊதுதல்;*** to blow, as a fire, to kindle a blaze. 3. ***விளக்கு முதலியன அவிய ஊதுதல்;*** to blow out, as a lamp "ஊழித்தீ யவிய வூதுவான்" (கம்பரா.கும் பக.311). 4. ***நோவு தீர ஊதுதல்;*** to blow, breathe upon, in order to allay pain. 5. ***துளைத்தல்;*** to gnaw through and bore holes, as a beetle, to injure by drilling through, as a moth. வண்டூதின மரம். 6. ***பொன்னைப் புடம் போடுதல்;*** to refine with fire, as gold. ஊதின பொன். 7. ***நுகர்தல்;*** to feed on, as bees honey. "பாய்ந்தூதிப்படர்தீர்ந்து" (கலித்.66). 8. ***சூடாற்ற ஊதுதல்;*** to blow over to cool a liquid. 9. ***துகள் நீக்க ஊதுதல்;*** to blow chaff away. 10. ***ஊத்தாம்பை ஊதுதல்;*** to blow pipe. 11. ***காய்களை மூட்டம்போட்டு ஊதிப் பழுக்க வைத்தல்;*** fumingation to ripen unripe fruit. 12. ***நோயாளி உடம்பிற்குள் ஊதி மந்திரித்தல்;*** to blow on a patient's body to cure by enchantment. 13. ***உடல் வீங்குதல்;*** swelling.

[உல் → ஊல் → ஊது.]

ஊது[2]-தல் *ūdu-,* 7.செ.கு.வி. (v.i.) 1. ***வண்டு முதலிய ஒலித்தல்;*** to hum, as bees or beetles, in getting out honey from flowers "சேவடிக்கே சென்றூதாய் கோத் தும்பீ" (திருவாச.10,1). 2. ***வீங்குதல்;*** to swell, as the stomach after eating; to be inflated. "ஊதியூதி வயிறுள்ளனவெல்லாம்." (சூளா.சுயம்.15). 3. ***துருத்தி யாற் காற்றெழுப்புதல்;*** to blow with bellows with a blow-pipe. "ஊதுலைக் குருகி னுயிர்த்து" (மணி.2,43). (செ.அக.).

ம. ஊதுக; **க.** ஊது, ஊதலு, ஊதிகெ;**கோத.** ஊத; **கொலா.** ஊந்த்; **நா.** ஊந்த்; **கட.** ஊந்த; **கோண்.** உக் காரை, உதானா; **கூய்.** ஊகுடி; **பர்.** ஊத்; **குவி.** ஊகலி.

[உல் → ஊல் → ஊது.]

ஊது[3] *ūdu,* பெ. (n.) ***ஊதுகுழல்;*** trumpet, esp. toy trumpet. (செ.அக.).

[உல் → ஊல் → ஊது (மு.தொ.பெ.).]

ஊதுகட்டி *ūdu-kaṭṭi,* பெ. (n.) ***சொக்கவெள்ளி;*** silver of the purest kind. (செ.அக.).

ம. ஊதுகட்டி.

[ஊது + கட்டி. ஊதுதல் = ஊதி உருக்குதல். உருக்கியுருக்கித் தூய்மை செய்த சொக்கவெள்ளி.]

ஊதுகலம் *ūdu-kalam,* பெ. (n.) ***உரல்;*** vessel used for pounding grains for removing husk - mortar. (சா.அக.).

[ஊது + கலம்.]

ஊதுகாமாலை *ūdu-kāmālai,* பெ. (n.) ***காமாலை நோய்வகை;*** jaundice with dropsy. "ஊதுகாமாலை சோகை" (திருப்பு.790) (செ.அக.).

[ஊது + காமாலை.]

ஊதுகுழல் *ūdu-kuḻal,* பெ. (n.) 1. ***ஊதும் இசைக்குழல்;*** musical pipe. 2. ***நெருப்பூதுங்குழாய்;*** blow pipe. (செ.அக.).

[ஊது + குழல்.]

ஊதுகொம்பு *ūdu-kombu,* பெ. (n.) ***கொம்பு இசைக் கருவி*** (திவா.); horn, used as a trumpet.

[ஊது + கொம்பு.]



ஊதுகொம்பு

ஊதுமாக்கூழ் *ūdu-mā-k-kūḻ,* பெ. (n.) ***ஒருவகை யுணவு;*** a kind of pasty pudding. (செ.அக.).

[ஊது + மாவு + கூழ்.]

ஊதுமுகம் *ūdu-mugam,* பெ. (n.) 1. ***மாழைகளை யுருக்கும் உலைவாயில்;*** forge; melting furnace. 2. ***உருகி நிற்கும் நிலைமை;*** state of fusion. 3. ***வீங்கிய முகம்;*** swollen or bloated face. 4. ***பருத்த முகம்;*** bloated face. (சா.அக.).

[ஊது + முகம்.]

ஊதுவத்தி *ūdu-vatti,* பெ. (n.) ***நறுமணச் சரக்குத் தீற்றிய குச்சி;*** incense stick, joss stick. (செ.அக.).

ம., க., பட. ஊதுபத்தி; *Skt.* vartti (a wick).

[ஊது + வத்தி. ஊது = பெருகுதல், பரவுதல். வல் = கல். வல்லி → வன்னி = கற்களை உரசுவதால் உண்டான தீ. வத்தி = தீப்பற்றக்கூடியது.]

ஊதுவத்திநோய் *ūduvatti-nōy,* பெ. (n.) ***நெற்பயிருக்கு உண்டாகும் நோய் வகை;*** disease of paddy crops. (Loc).

[ஊதுவத்தி + நோய்.]

ஊதுவாரம் *ūduvāram,* பெ. (n.) 1. ***வெள்ளி*** (மூ.அ.); silver 2. ***வெள்ளிமீன்;*** Venus. 3. ***வெள்ளிக்கிழமை;*** Friday. In plain language, meltable day of the week; the Tamil word velli connoting the metal silver as well as the Planet Venus, a periphrastic method of denoting silver. (செ.அக.).

[ஊது + வாரம். ஊது = ஊதி உருக்கிய வெள்ளி. ஊதுவாரம் = உருக்கிய வெள்ளியைப்போல் ஒளிரும் வெள்ளி மீன், அம்மீன் பெயரிலமைந்த வெள்ளிக்கிழமை.]

ஊதுவிரியன் *ūdu-viriyaṉ,* பெ. (n.) ***தீண்டுவதனால் உடம்பை வீங்கச் செய்யும் ஒருவகை விரியன் பாம்பு;*** a kind of viper, whose bite causes swelling of the whole body. (செ.அக.).

[ஊது + விரியன்.]

ஊதுவெள்ளி *ūdu-veḷḷi,* பெ. (n.) ***ஊதுகட்டி*** பார்க்க; see *ūdu-kaṭṭi.*

[ஊது + வெள்ளி.]

ஊதுளை *ūduḷai,* பெ. (n.) ***நீர்நிலைகளின் ஓரங்களில் விளையுமோர் வகைப் பூண்டு;*** plant found growing generally at the margins of places where water remains stagnant. (சா.அக.).

[ஓது → ஓதம் (நீர்). ஓதம் → ஓதுள் → ஓதுளை → ஊதுளை = நீர்க்கால் பகுதிகளில் வளரும் பூண்டு.]

ஊதை *ūdai,* பெ. (n.) 1. ***காற்று*** (திவா.); wind, gale. 2. ***வாடைக்காற்று;*** cold wind. "பனிப்புலர்பாடி...... ஊதையூர் தர" (பரிபா.11,84). 3. ***வளி நோய்;*** rheumatism. "தலைவலி பன்னமைச்ச லூதை" (தைலவ. தைல.7).

[ஊ → ஊது → ஊதை (வீசுவது). ஊதை > வ. வாத. வடமொழியாளர் வா என்பதை மூலமாகக்கொள்வர். அது "ஊ" என்பதன் திரிபே. (வ.மொ.வ.97,வே.க.96).]

ஊதைக்காற்று *ūdai-k-kāṟu,* பெ. (n.) ***ஊதற்காற்று*** பார்க்க; see *ūdaṟ-kāṟu.*

[ஊதை + காற்று.]

ஊப்பம்[1] *ūppam,* பெ. (n.) 1. ***உயர்ச்சி, எழுச்சி;*** height, elevation. 2. ***தலையற்ற நெடுந்தோற்றம்;*** headless appearance.

[உ → உப்பம் → ஊப்பம்.]

ஊப்பம்[2] *ūppam,* பெ. (n.) ***வெப்பம்;*** heat.

[உல் → உலுப்பம் → ஊப்பம்.]

ஊப்பு[1]**-தல்** *ūppu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***உறிஞ்சுதல், உறுப்புதல், பருகுதல், உட்கொளல்;*** to suck.

[உறும்பு → உறுப்பு → ஊப்பு.]

ஊப்பு[2] *ūppu,* பெ. (n.) ***ஊப்பம்***[2] பார்க்க; see *ūppam*[2].

ஊப்பை *ūppai,* பெ. (n.) ***பன்றியைப்போல் தின்னுகை;*** gluttony, as of a pig. (Tinn) (செ.அக.).

[ஊ → ஊப்பு → ஊப்பை.]

ஊபம் *ūbam,* பெ. (n.) 1. ***போரின் அணி;*** battle array. 2. ***குறைத்தலையுடல்;*** headless trunk.

[ஊப்பம் → ஊபம்.]

ஊபு[1]**-தல்** *ūbu-,* 7.செ.கு.வி. (v.i.) 1. ***ஊதுதல்;*** to blow. 2. ***சூடேற்றுதல்;*** to heat.

[உல் → உலுப்பு → ஊபு (கொ.வ.).]

ஊபு[2] *ūbu,* பெ. (n.) 1. ***வீச்சு;*** blow, stroke. 2. ***கதிர் நுனி;*** tip of the corn. 3. ***வெப்பம்;*** heat.

[உல் → உலுப்பு → ஊப்பு → ஊபு. (கொ.வ.).]

ஊம் *ūm,* பெ. (n.) 1. ***ஊமை;*** (onom.) dumbness, from its being the ordinary ejaculation of a dumb person. "ஊமுஞ் செவிடும்" (மணி.12,97) (செ.அக.). 2. ***செயற்பாடின்மை;*** inactiveness. 3. ***பயனின்மை;*** uselessness. 4. ***தீங்கு;*** evil.

ம. ஊம; க. ஊமெ.

[உம் → ஊம். 'உம்' பேசாமலிருக்கும் குறிப்பிடைச்சொல்.]

ஊம்பு-தல் *ūmbu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***சப்புதல்;*** to suck. "விழிகட்பேய் புண்ணளைந்து கையூம்பப் போர் மணலூர் வென்றதே." (Insc.செந்.பத்.6,11) (செ.அக.).

ம. ஊம்பு.

[உறும்பு → உறுப்பு → ஊப்பு → ஊம்பு.]

ஊமச்சி *ūmacci,* பெ. (n.) 1. ***மூங்கைப்பெண்;*** dumb woman, she who is dumb. 2. ***ஒருவகை நத்தை;*** roman snail, Helix Pomatia. 3. ***மட்டி;*** common cockle. codium edule. (செ.அக.).

[ஊம் → ஊமத்தி → ஊமச்சி.]

ஊமணாமூஞ்சி *ūmaṇā-mūñji,* பெ. (n.) 1. ***பொலிவற்ற முகமுள்ளவன்-ள்;*** stupid, sullen, pouting person; one with an ugly or forbidding countenance. 2. ***பேசுந்திறமில்லாதவன்;*** one who is unable to speak with ease. (செ.அக.).

[உம் → உம்மணம் + மூஞ்சி. முகம் → மூஞ்சி (கொ.வ.).]

ஊமணி *ūmaṇi,* பெ. (n.) ***ஆட்டின் கழுத்தில் தொங்கும் இரட்டைத் தொங்குவால் தசைக்காம்பு;*** a kind of wattle or excrescense under the neck of goats and sheep.

மறுவ. அதர்.

[ஊன் → ஊ + மணி. ஊன் = தசை.]

ஊமணை[1] *ūmaṇai,* பெ. (n.) ***பேசுந்திறமற்றவன்;*** one unable to speak freely.

[உம் → ஊம் + அணை. (சொல்லாக்க ஈறு).]

ஊமணை[2] *ūmaṇai,* பெ. (n.) ***அழகற்றது;*** that which is defective, misshappen, clumsily made. (செ.அக.).

[உம் → ஊம் + அணை - ஊமணை = பொலிவு வெளிப்படாதது.]

ஊமணைச்சட்டி *ūmaṇai-c-caṭṭi,* பெ. (n.) ***சூளையில் நன்றாய் வேகாத சட்டி*** (யாழ்ப்.); half baked earthen pot, misshappen and easily broken. (செ.அக.).

[உம் → ஊம் + அணை - ஊமணை + சட்டி - ஊமணைச்சட்டி = வேகும் செயலுறாதது.]

ஊமணைச்சி *ūmaṇaicci,* பெ. (n.) ***அழகற்றவள்*** (யாழ்ப்.); she who is ugly. (செ.அக.).

[ஊமணை → ஊமணைச்சி.]

ஊமணையன் *ūmaṇaiyaṉ,* பெ. (n.) ***அழகற்றவன்*** (யாழ்ப்.); he who is ugly. (செ.அக.).

[ஊமணை + அன்.]

ஊமணையுரல் *ūmaṇi-y-ural,* பெ. (n.) ***நடுப்பாகம் ஒழுங்காய்ச் செய்யப்படாத உரல்*** (வின்.); mortar that is not well formed in its waist. (செ.அக.).

[ஊமணை + உரல்.]

ஊமத்தங்கூகை *ūmattaṅ-kūgai,* பெ. (n.) ***கோட்டான் வகை;*** a species of a very large size owl. (W.). (செ.அக.).

[ஊமத்தம் + கூகை.]

ஊமத்தஞ்செடி *ūmattañ-šeḍi,* பெ. (n.) ***ஊமத்தை*** பார்க்க; see *ūmattai.*

[ஊமத்தம் + செடி.]

ஊமத்தம் *ūmattam,* பெ. (n.) ***ஊமத்தை*** பார்க்க; see *ūmattai.*

[ஊமத்தை → ஊமத்தம்.]

ஊமத்தை *ūmattai,* பெ. (n.) 1. ***செடி வகை*** (திவா.); thorn-apple. 2. ***வெள்ளூமத்தை*** (திவா.); white flowered thorn-apple. 3. ***கருவூமத்தை;*** purple stramony. (செ.அக.).

ஊமத்தையின் வகைகள்: 1. வெள்ளூமத்தை, 2. கருவூமத்தை, 3. அடுக்கூமத்தை, 4. பேயூமத்தை, 5. மருளூமத்தை, 6. பொன்னூமத்தை, 7. நீல ஊமத்தை.

ம. ஊமத்தன்.

[உன்மத்தம் → ஊமத்தை. (மு.தா.196).]

ஊமத்தைக்கூடு *ūmattai-k-kūḍu,* பெ. (n.) ***கிளிஞ்சல்;*** bivalve shell. (சா.அக.).

[ஊமத்தை + கூடு.]

ஊமல் *ūmal,* பெ. (n.) ***கிழங்கு கழிந்த பனங்கொட்டை*** (யாழ்ப்.); dried hollow shell of the palymyra seed after it has been put into the ground and has struck root. (செ.அக.).

[உம் → ஊம் + அல் - ஊமல் = காய்ந்தது. உலர்ந்தது.]

ஊமற்கச்சி *ūmaṟ-kacci,* பெ. (n.) ***உலர்ந்த பனங்கொட்டையின் பாதி;*** half of a dried palmyra nut. (W). (செ.அக.).

[ஊமல் + கச்சி.]

ஊமற்கரி *ūmaṟ-kari,* பெ. (n.) ***பனங்கொட்டைக்கரி*** (யாழ்ப்.); charcoal made of palmyra nuts, used by blacksmiths. (செ.அக.).

[ஊமல் + கரி.]

ஊமன் *ūmaṉ,* பெ. (n.) 1. ***ஊமையன்;*** dumb man. "ஊமன் கண்ட கனா" (திரிகடு.7). 2. ***கூகை;*** owl. 3. ***பெருங்கோட்டான்;*** a kind of big owl. "சிறுகூகை யுட்கவிழிக்க ஆமன் வெருட்ட" (பதினொ.காரைக். மூத்த.2,3) (செ.அக.).

ம. ஊமன்; **க.** ஊமெ.

[ஊம் → ஊமன்.]

ஊமன் குரங்கு *ūmaṉ-kuraṅgu,* பெ. (n.) ***ஓர் இனக் குரங்கு;*** a variety of monkey. (சேரநா.).

[ஊம் + அன் → ஊமன் + குரங்கு.]

ஊமாண்டி *ūmāṇḍi,* பெ. (n.) 1. ***பூச்சாண்டி;*** bugbear. 2. ***பிள்ளை விளையாட்டுவகை;*** play among children, to frighten each other. (W.). (செ.அக.).

[ஊ + ஆண்டி.]

ஊமாண்டிகாட்டு-தல் *ūmāṇḍi-kāṭṭu,* 5.செ.கு.வி. (v.i.) ***பிள்ளைகளை அச்சமுறுத்துதல்*** (யாழ்ப்.); to frighten children with a bugbear. (செ.அக.).

[ஊம் + ஆண்டி + காட்டு.]

ஊமிள் *ūmiḷ,* பெ. (n.) ***சிறு பூளை*** (மலை.); common way side weed. (செ.அக.).

[ஊம் + இல் = ஊமில் → ஊமிள்.]

ஊமுட்டை *ūmuṭṭai,* பெ. (n.) ***கெட்ட முட்டை;*** rotten egg.

[ஊழ் முட்டை → ஊமுட்டை (மு.தா.313).]

ஊமெனல் *ūm-eṉal,* பெ. (n.) ***இசைவு, கவனங்களின் குறிப்பு;*** onom. expr. signifying assent, attentiveness. (செ.அக.).

[உம் + எனல் - உம்மெனல் → ஊமெனல்.]

ஊமை[1] *ūmai,* பெ. (n.) 1. ***மூங்கைத்தன்மை;*** dumbness. "கூன் செவிடூமை" (திருவிளை.எல்லாம்.10). 2. ***வாயிலி;*** dumb person. "உன்மகடா னூமையோ" (திவ்.திருப்பா.9). 3. ***ஒலிக்குறைவு;*** dullness of sound, as in a coin that has no proper ring. ஊமைப்பணம். 4. ***ஒரு இசைக்கருவி;*** ancient war drum. "ஊமை சகடையோ டார்த்த வன்றே." (கம்பரா.பிரமாத்.5). 5. ***கீரி*** (அக.நி.); mongoose. (செ.அக.). 6. ***வாய்பேசாமல் அமைதியாய் இருப்பவன்;*** one who is silent. 7. ***இளைய அம்மா;*** step-mother. (சேரநா.).



ஊதுவிரியன்

ஊமத்தை



ஊளாமீன்

ஊற்றுப்பறி

ம. ஊம; க., பட. ஊமெ.

[ஊம் → ஊமை (சு.வி.99).]

ஊமை² *ūmai,* பெ. (n.) 1. ***சிப்பி;*** conch. (நாமதீப.). 2. ***ஊமச்சி;*** roman snail. (நாமதீப.). 3. ***மெய்யெழுத்து;*** consonant. "ஊமை வியஞ்சன மெய்" (பேரகத்.27) (செ.அக.). 4. ***கிளிஞ்சல்;*** bi-valve shell. 5. ***மூன்று மாதத்திய கருப்பிண்டம்;*** foetus three months old. (சா.அக.).

[ஊமை = உள்ளீடற்றது, சிப்பி, கிளிஞ்சல். உரு = கரு. உரு → உரும் → ஊம் → ஊமை = கருப்பிண்டம்.]

ஊமைக்கட்டி *ūmai-k-katti,* பெ. (n.) 1. ***முகங்கொள்ளாத சிலந்திக்கட்டி;*** blind boil, boil that does not gather to a head. 2. ***கூகைக்கட்டி*** (வின்.); mumps. (செ.அக.).

[ஊமை + கட்டி.]

ஊமைக்கடுப்பு *ūmai-k-kaḍuppu,* பெ. (n.) ***ஊமை வலி;*** dull pain. (சா.அக.).

[ஊமை + கடுப்பு.]

ஊமைக்கணவாய் *ūmai-k-kaṉavāy,* பெ. (n.) ***மீன்வகை*** (வின்.); a species of cuttlefish. (செ.அக.).

[ஊமை + கணவாய்.]



ஊமைக்கணவாய்

ஊமைக்காடை *ūmai-k-kāḍai,* பெ. (n.) ***ஒருவகைக் காடை;*** slow quail that does not rise at once - Coturnix textilis. (சா.அக.).

[ஊமை + காடை.]

ஊமைக்காய் *ūmai-k-kāy,* பெ. (n.) 1. ***பருப்பற்ற காய்;*** fruit that does not have seed, as a withered palmyra fruit. (Loc.) (செ.அக.). 2. ***தசைப் பற்றில்லாத காய்;*** any fruit without pulp or kernal inside, c.f. a tender cor onut (சா.அக.).

[ஊமை + காய்.]

ஊமைக்காய்ச்சல் *ūmai-k-kāyccal,* பெ. (n.) ***வெளிக் காட்டாத காய்ச்சல்;*** latent or masked fever, dumb ague. (சா.அக.).

[ஊமை + காய்ச்சல்.]

ஊமைக்காயம் *ūmai-k-kāyam,* பெ. (n.) ***முரட்டடியால் வெளிக்குக் காயந்தெரியாது உண்டான உள்வீக்கம்;*** internal injury from blows that do not produce any visible wound on the skin. (செ.அக.).

[ஊமை + காயம்.]

ஊமைக்கிளாத்தி *ūmai-k-kiḷātti,* பெ. (n.) ***கடல்மீன் வகை;*** trigger-fish, buff in colour. (செ.அக.).

[ஊமை + கிளாத்தி.]



ஊமைக்கிளாத்தி

ஊமைக்கூறன் *ūmai-k-kūṟaṉ,* பெ. (n.) ***ஊமையன் பேச்சு;*** inarticulate sounds uttered by a dumb person. ஊமைக் கூறனாகக் கூப்பிடுவது (ஈடு.2,1,3). (செ.அக.).

[ஊமை + கூறன்.]

ஊமைக்கோட்டான் *ūmai-k-kōṭṭāṉ,* பெ. (n.) 1. ***கோட்டான்;*** large species of owl. 2. ***பேசத் தெரியாமல் விழிப்பவன்;*** one who merely stares or blinks and gives no answer, like an owl. (செ.அக.).

[ஊமை + கோட்டான்.]

ஊமைக்கோட்டான் வெயில் *ūmai-k-kōṭṭāṉ-veyil,* பெ. (n.) ***மேகமூட்டத்தில் உறைக்கும் வெயில்;*** clouded but scorching sunshine. (செ.அக.).

[ஊமை + கோட்டான் + வெயில்.]

ஊமைச்சி *ūmaicci,* பெ. (n.) 1. ***ஊமைப்பெண்;*** dumb woman. 2. ***கடல்மீன்வகை;*** trunk-fish, light brown, ostracion cornutus. 3. ***நத்தை வகை*** (வின்.); cockle, cardium edule. (செ.அக.).

[ஊமை → ஊமைத்தி → ஊமச்சி.]

ஊமைச்சொறி *ūmai-c-coṟi,* பெ. (n.) ***சொறி வகை;*** skin marked by violent itching, prurigo. (செ.அக.).

[ஊமை + சொறி.]

ஊமைத்தசும்பு *ūmai-t-tašumbu,* பெ. (n.) ***வாயில்லாத குடம்;*** earthen pot which is without a mouth, but is porous to absorb water. ஊமைத் தசும்புள் நீர் நிறைந்தாற்போல ஆனந்த மயமான ஒளி மாணாக் கர்க்கு நிறைதலின் (திருமுரு.112,உரை). (செ.அக.).

[ஊமை + தசும்பு.]

ஊமைத்தனம் *ūmai-t-tanam,* பெ. (n.) 1. ***பேச முடியாமை;*** muteness; inability to speak, mutism. 2. ***ஊமையாயிருத்தல்;*** state of being dumb - dumbness. 3. ***அமைதி காக்கும் தன்மை;*** observance of silence. 4. ***உரையாடாமை;*** reservedness in speech - taciturnity. 5. ***உடம்பினுள் காயம் அடைவதால் பேசுந்தன்மையை இழத்தல்;*** loss of the power of speech due to a central lesion - Aphemia. (சா.அக.).

[ஊமை + தனம்.]

ஊமைத்தேங்காய் *ūmai-t-tēngāy,* பெ. (n.) 1. ***நீராடாத் தேங்காய்;*** coconut in which the milk does not sound when shaken. 2. ***உள்ளே ஒன்றுமில்லாத தேங்காய்;*** coconut that is useless, having no kernel. (செ.அக.).

ம. ஊமைத்தேங்ங.

[ஊமை + தேங்காய்.]

ஊமைப்பூச்சி *ūmai-p-pūcci,* பெ. (n.) ***அட்டை;*** leech. (சா.அக.).

[ஊமை + பூச்சி.]

ஊமைமணி *ūmai-mani,* பெ. (n.) ***நாக்கில்லாத மணி;*** tongueless bell. "ஊமைமணியாட்டுகினு மோசை ஒழிந்தாற்போல்" (ஒழிவி.துறவு.9).

[ஊமை + மணி.]

ஊமைமரம் *ūmai-maram,* பெ. (n.) ***மலை வேம்பு;*** hill-neem - Melia semperriren. (சா.அக.).

[ஊமை + மரம்.]

ஊமையடி *ūmai-y-adi,* பெ. (n.) ***குருதிக்காய முண்டாக் காத அடி;*** contused wound, bruise (Tinn.). (செ.அக.).

ம. ஊமையடி.

[ஊமை + அடி.]

ஊமையறுவாள் *ūmai-y-aruvāl,* பெ. (n.) ***முட்டை;*** egg. (சா.அக.).

[ஊமை + அறுவாள். கற்காலத்துக் கற்கோடரி போன்ற வடிவொப்புமை யுடையதாக முட்டையின் தோற்றம் காணப் படுதலின் ஒருசார் ஒப்புமை கருதி இட்ட பெயராகலாம்.]

ஊமையன் *ūmaiyan,* பெ. (n.) ***மூங்கையன்;*** dumb, speechless man. (செ.அக.).

[ஊமை + அன் - ஊமையன்.]

ஊமையாமொழி *ūmaiyā-moli,* பெ. (n.) ***அசையா மந்திரம்*** (திருமந்.1611); the ajapā mantra.

[ஊமை + ஆ + மொழி.]

ஊமையெழுத்து *ūmai-y-eluttu,* பெ. (n.) 1. ***மெய்யெழுத்து;*** consonant, being mute. 2. ***ஓம் என்னும் உள்ளகமான மந்திர எழுத்து;*** the mystic syllable ōm. "மறை நான்கின் முதற்கிடந்த ஊமையெழுத்து" (குற்றா. தல.திரிகூடமலை.34). (செ.அக.).

[ஊமை + எழுத்து.]

ஊமை விளையாட்டு *ūmai-vilaiyāttu,* பெ. (n.) ***பிள்ளை விளையாட்டு வகை;*** play among children in which they imitate a dumb person. (செ.அக.).

[ஊமை + விளையாட்டு.]

ஊமை வீக்கம் *ūmai-vīkkam,* பெ. (n.) ***அடியினால் வெளிக்குக் காயந் தெரியாது உண்டாகும் வீக்கம்;*** contusion, swelling on account of a bruise. (செ.அக.).

ம. ஊமை வீக்கம்.

[ஊமை + வீக்கம்.]

ஊமை வெயில் *ūmai-veyil,* பெ. (n.) ***ஊமைக்கோட்டான் வெயில்*** பார்க்க; see *ūmai-k-kōttān veyil.*

ம. ஊமை வெயில்.

[ஊமை + வெயில்.]

ஊய்-தல் *ūy-,* 2.செ.கு.வி. (v.i.) ***பதனழிதல்;*** to become overripe, to deterioate, to decay. (யாழ்.அக.). (செ.அக.).

[உல் → ஊல் → ஊழ் → ஊய்.]

ஊய்ந்துபோ-தல் *ūyndu-pō-,* 6.செ.குன்றாவி. (v.t.) ***பெருவாரி நோயாலிறத்தல்;*** to die in plague or pestilence. (சா.அக.).

[ஊய் → ஊய்ந்து + போ.]

ஊயல் *ūyal,* பெ. (n.) ***ஊஞ்சல்;*** swing.

தெ. உய்யால.

[உந்தல் → உஞ்சல் → ஊஞ்சல் → ஊசல் → ஊயல் (சு.வி.40).]

ஊர்¹-தல் *ūr-,* 2.செ.கு.வி. (v.i.) 1. ***அடர்தல்;*** to come to close quarters. "வெஞ்சம மூர்ந்தமரு ழக்கி" (சிலப்.27,28,அரும்.). 2. ***நகர்தல்;*** to move slowly, to creep as a infant, to crawl, as a snake. "நந்தூரும் புனனாட்டின்" (பாரத.கிருட்டிண.11). 3. ***பரவுதல்;*** to spread, circulate, as blood, to extend over a surface, as spots on the skin. "இவ்க்காணென் மேனி பசப்பூர்வது" (குறள்.1185). 4. ***வடிதல்;*** to flow, as juice from the sugarcane. "கரும்பூர்ந்த சாறுபோல்" (நாலடி.34). 5. ***கழலுதல்;*** to unloosen, be relaxed "அவிர்தொடி யிறையூர" (கலித்.100). 6. ***சுற்றி வருதல்;*** to go round.

[உல் → ஊல் → ஊர்.]

ஊர்²-தல் *ūr-,* 2.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஏறுதல்;*** to mount "பாசடும்பு பரியவூர் பிழிபு ..... வந்தன்று .... தேர்" (ஐங்குறு.101). 2. ***ஏறிநடத்துதல்;*** to ride, as a horse, to drive as a vehicle. "சிவிகை பொறுத்தானோ டூர்ந்தானிடை" (குறள்.37). (செ.அக.).

ம. ஊருக; க. உரிசு, உச்சு; துட. உச்த்; தெ. ஊடு; நா. உயப்; கொலா. உட்பேங், ஊர்பேங்; குரு. உர்னா.

[உல் → ஊல் → ஊர்.]

ஊர்³-தல் *ūr-*, 2.செ.குன்றாவி. (v.t.) 1. ***நிலைகொள்ளுதல், ஊன்றுதல்;*** to set firmly, to plant. 2. ***உட்கொள், உறிஞ்சு;*** to suck. "ஊர்த்துயி ருன்னை யுண்ண" (சீவக.2286). (செ.அக.).

க. ஊர்; து. ஊரு (நிலைகொள், ஊன்று).

[உல் = பொருந்துதல், தங்குதல். உல் → ஊல் → ஊர். ஊல் + து - ஊன்று எனச் சொல்லாக்கம் பெறுதலை ஒப்புநோக்குக.]

ஊர்⁴ *ūr*, பெ. (n.) 1. ***ஊர்கை;*** going, riding. "ஊருடைத் திண் புரவி யுலைத்தனள்" (சேதுபு.தேவி.43). 2. ***வாழும் ஊர்;*** village, town, city. (தொல்.பொருள்.37). 3. ***இடம்;*** place. "ஓரூரிரண்ட ஃகமாயிற் றென்று" (சீவக.2087). 4. ***ஊரிலுள்ளார்;*** resident population. "ஊரு மயலுஞ் சேரியோரும்" (இலக்.வி.563). 5. ***திங்கள், பகலவனைச் சூழும் பரிவேடம்;*** halo round the sun or moon. "செங்கதிர் தங்குவதோ ரூருற்றது" (கம்பரா.சரபங்.9). (செ.அக.). 6. ***வட்டம்;*** circle.

ம. ஊரு; கை. உர்; இரு. ஊரு; க., பட. ஊரு, ஊர்; துட. ஊர்; கோத. ஊர்; குட. ஊரு, ஊரி; து. ஊரு; தெ. ஊரு; நா. ஊர்; கொலா. ஊர், *Heb.* ār; *IR., Bab.* er; *Assyrian.* uri; *Acadian.* uri; *Pkt.* ūr.

[உ → உல் → ஊல் → ஊர். ஊர்தல் = தங்குதல், ஓரிடத்தில் நிலைகொள்ளல், குடியேறுதல்.]

"ஊர்தியிற் கொண்டு போகப்படும் கூண்டு, குடில், அல்லது வீடு, வீட்டுத்தொகுதி ஊர் எனப்பட்டது (ஒ.நோ.) நகர்தல் = மெல்லச்செல்லல்" என்றும் "இன்றும் நாடோடிகள் (nomads) மாடு, குதிரை முதலியவற்றின்மேல் தங்கள் குடிலைக்கொண்டு போவதையும், சில இடங்களில் ஒரே வீட்டிலிருந்து ஒற்றையூர் எனப்படுவதையும் காண்க." (சு.வி.41) என்றும் பாவாணர் கூறியிருப்பினும் தங்குதல். நிலைகொள்ளல் (உல் → ஊல் → ஊர் → ஊருதல்) என்னும் வேர்மூலமே பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது. ஊர் என்னும் வினையடி, ஆகுபெயராய் வண்டியை அல்லது ஊர்தியைக் குறிப்பதில்லை என்பதும் கவனிக்கத் தக்கது.

ஊர்க்கணக்கன் *ūr-k-kaṇakkaṉ*, பெ. (n.) ***ஊர்க்கணக்கு பதவி மேற்கொள்பவன்*** (கிராமக் கணக்கன்); village accountant.

ம. ஊர்க்கணக்கன்; க. ஊருக்கரண; தெ. ஊர்க்கரணம்.

[ஊர் + கணக்கன்.]

ஊர்க்கணக்கு *ūr-k-kaṇakku*, பெ. (n.) ***ஊர்க்கணக்கன் பதவி;*** post or appointment of a village-accountant.

ம. ஊர்கணக்கு.

[ஊர் + கணக்கு.]

ஊர்க்கதை *ūr-k-kadai*, பெ. (n.) 1. ***ஊர்ப்பேச்சு;*** rumour, country talk. 2. ***வம்பு;*** gossip. (செ.அக.).

[ஊர் + கதை.]

ஊர்க்கலகம் *ūr-k-kalagam*, பெ. (n.) 1. ***ஊரிலுண்டாகுங் கலகம்;*** village quarrel. 2. ***நாட்டுக்குழப்பம்;*** insurrection. (செ.அக.).

[ஊர் + கலகம்.]

ஊர்க்கலாபம் *ūr-k-kalābam*, பெ. (n.) ***மக்கட்குளுண்டாகுங் கலகம்;*** revolt civil disorder. (W.).

[ஊர் + கலாபம். கலகம் → கலாபம்.]

ஊர்க்கழஞ்சி¹ *ūr-k-kaḻañji*, பெ. (n.) ***மக்கட்குளுண்டாகுங் கலகம்*** (வின்.); insurrection. (செ.அக.).

[ஊர் + கழஞ்சி. கலாம் → கலஞ்சி → கழஞ்சி (கொ.வ.).]

ஊர்க்கழஞ்சி² *ūr-k-kaḻañji*, பெ. (n.) ***ஊர்க்கழஞ்சு*** பார்க்க; see *ūr-k-kaḻañju* (T.A.S.I,165).

ஊர்க்கழஞ்சு *ūr-k-kaḻañju*, பெ. (n.) ***ஒரு பழைய வரி வகை;*** ancient tax. (செ.அக.) (S.I.I.ii,425).

ம. ஊர்கழஞ்சு.

[ஊர் + கழஞ்சு.]

ஊர்க்கள்ளி *ūr-k-kaḷḷi*, பெ. (n.) ***ஓர்வகைக் கள்ளி அதாவது கொம்புக் கள்ளி;*** any spurge, of the Eupborbia genus grown near a village or in a country, but it generally refers to the creeper kalli - sarcostemma intermedium.

[ஊர் + கள்ளி. (வி.தொ.).]

ஊர்க்கற்செம்மை *ūr-k-kaṟ-cemmai*, பெ. (n.) ***புடமிட்ட நிலை;*** refinement as of gold. (I.m.P.cg.1027) (செ.அக.).

[உருக்கல் → ஊர்க்கல் (கொ.வ.) ஊர்க்கல் + செம்மை.]

ஊர்க்காரம் *ūrkkāram*, பெ. (n.) ***உவர்க்காரம்;*** fuller's earth. (சா.அக.).

[உவர் → ஊர் + காரம்.]

ஊர்க்காவல் *ūr-k-kāval*, பெ. (n.) ***ஊரைக் காப்பவன்; தலையாரி*** (I.N.P.Tj.76); village watchman.

க. ஊர்க்காவலிக.

[ஊர் + காவல்.]

ஊர்க்குருவி *ūr-k-kuruvi*, பெ. (n.) ***அடைக்கலான்*** (திவா.); house - sparrow, passer domesticus. (திவா.).

ம. ஊர்க் குருவி; க. ஊரு குப்பி; தெ. ஊருகுவ்வ; பட. குப்பிசி.

[ஊர் + குருவி.]



ஊர்க்குருவி

ஊர்க்குறவர் *ūr-k-kuṟavar,* பெ. (n.) ***திரியும் வழக்கத் தைவிட்டு ஓர் ஊரிலிருந்து வாழும் குறவர்;*** section of the Kuṟava caste who have given up their nomadic life and have settled themselves in villages

[ஊர் + குறவர்.]

ஊர்க்கூட்டம் *ūr-k-kūṭṭam,* பெ. (n.) ***ஊரிலுள்ளோர் கூடுங்கூட்டம்;*** village crowd, gathering of people. (செ.அக.).

ம. ஊர்க்கூட்டம்.

[ஊர் + கூட்டம்.]

ஊர்க்கூடு-தல் *ūr-k--kūḍu-,* 5.செ.கு.வி. (v.i.) ***ஊரார் திரளுதல்;*** to throng in a body, as all the villagers for any common purpose. ஊர் கூடிச் செக்குத் தள்ளுதல் போல. (பழ.). (செ.அக.).

[ஊர் + கூடு.]

ஊர்க்கூரம் *ūr-k-kūram,* பெ. (n.) ***பாகற்காய்;*** bitter-fruit-Mimordica charantia. (சா.அக.).

[ஊர் + கூரம்.]

கூலம் = தவசம். கூழ் = தவசம், தவசத்தால் செய்த உணவு. தெலுங்கில் கூழ் → கூழம் + காய் - கூழங்காய் → கூரகாய் = காய்கறிகளைக் குறிக்கும். இங்கு கூரம், காய்கறி குறித்துப் பின்னர், காய் வகைக்குப் பொதுப்பெயராயிற்று.

ஊர்கொலை *ūr-kolai,* பெ. (n.) ***பகைமேற் செல்வோர் நிரை கொள்ளுமுன் நிரைகாவலரைக் கொல்லும் புறத்துறை;*** literary theme depicting the slaughter of herdsmen by the enemy before capturing the cows. "முற்றியவூர் கொலை" (தொல்.பொருள்.58).

[ஊர் + கொலை.]

ஊர்கொள்(ளு)-தல் *ūr-koḷ-,* 16.செ.கு.வி. (v.i.) 1. ***சுற்றுவட்டங் கொள்ளுதல்*** (திருக்கோ.262,உரை); to have a halo as the sun or moon. 2. ***குறைவின்றி மண்டலமாக ஒளிபரத்தல்*** (திருக்கோ.262,உரை); to shine in its fulness, as the moon.

[ஊர் + கொள்.]

ஊர்கொள்ளை *ūr-koḷḷai,* பெ. (n.) 1. ***ஊரில் நடக்கும் கொள்ளை;*** robbery in a town by a gang of robbers, dacoity. 2. ***அதிகாரிக்கொள்ளை;*** extortion by the headman of a village. (W.). (செ.அக.). 3. ***கொள்ளை நோய்;*** epidemic.

[ஊர் + கொள்ளை.]

ஊர்கோலம் *ūr-kōlam,* பெ. (n.) ***ஊர்வலம் வருகை;*** procession on festive occasions. (செ.அக.).

[ஊர் + கோலம். கோலம் = அழகு, அழகிய காட்சி.]

ஊர்கோள் *ūr-kōḷ,* பெ. (n.) ***ஒளிவட்டம்;*** halo round the sun or moon. "கூட்டழற் கதிரையூர்கோள் வளைத்த வா" (சீவக.1136).

[ஊர் + கோள். கொள் → கோள்.]

ஊர்ச்சோறு *ūrccōṟu,* பெ. (n.) ***ஊரார்க்குக் கொடுக்கும் விருந்து;*** feast given to the villagers.

ம. ஊருச்சோறு.

[ஊர் + சோறு.]

ஊர்த்தலைமை *ūr-t-talaimai,* பெ. (n.) ***நாட்டாண்மை;*** office of village chief, position of the accredited headman of a caste or guild community. (செ.அக.).

[ஊர் + தலைமை.]

ஊர்த்தலையாரி *ūr-t-talai-y-āri,* பெ. (n.) ***ஊர்க் காவற்காரன்;*** village watchman. (தாசில்.நா.).

[ஊர் + தலையாரி. தலையாள் → தலையாளி → தலையாரி.]

ஊர்த்தலைவன் *ūr-t-talaivaṉ,* பெ. (n.) ***ஊரின் தலைவன்;*** headman of a village.

ம. ஊர்த்தலைவன்.

[ஊர் + தலைவன்.]

ஊர்தண்டம் *ūr-taṇḍam,* பெ. (n.) ***ஊரின்மேல் சுமத்தும் தண்டம்;*** collection of community fine, fine imposed on a village. (சேரநா.)

ம. ஊர்த்தண்டம்.

[ஊர் + தண்டம்.]

ஊர்தா(தரு)-தல் *ūrtā-,* 2.செ.கு.வி. (v.i.) 1. ***ஊர்தல்;*** to move slowly, crawl. 2. ***வீசுதல்*** (பரிபா.11,84); to blow, as the wind. 3. ***மிகுதல்;*** to abound, to overpower. "ஒன்றிய வேட்கை யூர்தர" (மாறன.560,உதா).

[ஊர் + (தரு)தா.]

ஊர்தி *ūrdi,* பெ. (n.) 1. ***ஏறிச்செல்லும் விலங்கு, பறவை, வண்டி முதலியன;*** vehicle, conveyance in general. 2. ***ஆருடம்;*** that which has risen, that which has ascended. "ஊர்தி குடையுதய மூன்றில்" (சினேந்.158). (செ.அக.).

[ஊர் → ஊர்தி. (வே.க.33).]

ஊர்நத்தம் *ūr-nattam,* பெ. (n.) 1. ***ஊரில் வீடுகள் கட்டுவதற்காக விடப்பட்டிருக்கும் இடம்;*** site set apart for building purposes in a village. (செ.அக.). 2. ***சிற்றூர்;*** hamlet or a village. (Insc.). 3. ***குடியிருப்பு;*** group of homesteads in a village (Loc).

[ஊர் + நத்தம். நந்து → நந்தம் → நத்தம்.]

ஊர்நாவு *ūr-nāvu,* பெ. (n.) ***ஊரிலுள்ளோரது நா, மக்கள் பேச்சு;*** village-gossip. (சேரநா.)

ம. ஊர்ந்நாவு.

[ஊர் + நாவு. நா → நாவு.]

ஊர்நேரிசை *ūr-nēr-isai,* பெ. (n.) ***தலைவனது ஊரை நேரிசை வெண்பாவாற் சிறப்பிக்கும் சிற்றிலக்கிய வகை*** (இலக்.வி.830,உரை.); poem, containing 50, 70, or 90 nērišai-veṇpā verses written in eulogy of the town or place of residence of the hero.

[ஊர் + நேரிசை.]

ஊர்ப்பகை *ūr-p-pagai,* பெ. (n.) ***ஊரிலுள்ளாரோடு கொள்ளும் எதிருணர்வு*** (விரோதம்); enmity with the local residents of a place. (செ.அக.).

ம. ஊர்ப்பக.

[ஊர் + பகை.]

ஊர்ப்பட்டது *ūr-p-pattadu,* பெ. (n.) ***மிகுந்தது;*** great quantity, much. (செ.அக.).

[ஊர் + பட்டது. படுதல் = தோன்றுதல், உண்டாதல்.]

ஊர்ப்பட்டி *ūr-p-patti,* பெ. (n.) 1. ***ஊரில் சுற்றும் நாய்;*** stray dog. 2. ***நாட்டு நாய்;*** native dog. (சேரநா.).

ம. ஊர்ப்பட்டி.

[ஊர் + பட்டி. பள் → படு → பட்டி = கிடப்பது, ஓரிடத்திருப்பது.]

ஊர்ப்பழி *ūr-p-pali,* பெ. (n.) ***ஊர்நிந்தை;*** public censure; displeasure of the people in a village. (செ.அக.).

ம. ஊர்ப்பழி.

[ஊர் + பழி.]

ஊர்ப்பள்ளி *ūr-p-palli,* ***வேடர்களுக்கென்றே ஊரில் கட்டப்பட்ட கட்டடம்;*** exclusive building for the hunters of a parish. (சேரநா.).

ம. ஊர்ப்பள்ளி.

[ஊர் + பள்ளி.]

ஊர்ப்பன்றி *ūr-p-panri,* பெ. (n.) ***நாட்டுப்பன்றி;*** village pig. "உழுத வுழுத்தஞ்செய் யூர்ப்பன்றி மேய" (முத் தொள்.). (செ.அக.).

ம. ஊர்ப்பன்னி.

[ஊர் + பன்றி.]

ஊர்ப்பாக்கு *ūr-p-pākku,* பெ. (n.) ***திருமணவழைப்புக் காக வைக்கும் வெற்றிலைப்பாக்கு;*** distribution of pan supari among the residents of a place as in an invitation to a wedding. (Loc.). (செ.அக.).

[ஊர் + பாக்கு.]

ஊர்ப்பாடு *ūr-p-pāḍu,* பெ. (n.) ***பிறருடைய செயல்;*** others' affairs, matters which concern other folk. (செ.அக.).

[ஊர் + பாடு.]

ஊர்ப்பு *ūrppu,* பெ. (n.) ***உரிமை, பங்கு;*** share, claim, right. (சேரநா.).

ம. ஊர்ப்பு.

[ஊர் → ஊர்ப்பு (தாயஉரிமை).]

ஊர்ப்புரட்டு *ūr-p-purattu,* பெ. (n.) ***பெரும் பொய்;*** utter false-hood. (W.). (செ.அக.).

[ஊர் + புரட்டு.]

ஊர்ப்புரளி *ūr-p-purali,* பெ. (n.) 1. ***ஊர்க்குழப்பம்;*** tumult, insurrection, general commotion. 2. ***ஊர்ப்புரட்டு*** பார்க்க; see *ūr-p-purattu.* (செ.அக.).

[ஊர் + புரளி.]

ஊர்ப்புல் *ūr-p-pul,* பெ. (n.) ***கோரை வகை;*** creeping grass, Papyrus pangorei. (மூ.அக.), (செ.அக.).

[ஊர் + புல்.]

ஊர்ப்புள் *ūr-p-pul,* பெ. (n.) ***ஊர்க்குருவி*** (சூடா.); house sparrow, passer domesticus (செ.அக.).

ம. ஊர்க்குருவி; க. ஊரு குப்பி.

[ஊர் + புள்.]

ஊர்மணியம் *ūr-maniyam,* பெ. (n.) 1. ***சிற்றூர் மேற் பார்வை;*** superintendance of a village. 2. ***சிற்றூரை மேற்பார்ப்பவன்;*** supervision of a village. (செ.அக.).

[ஊர் + மணியம்.]

ஊர் மன்றம் *ūr-manram,* பெ. (n.) ***ஊர்மன்று*** பார்க்க; see *ūr-manru.*

[ஊர் + மன்றம்.]

ஊர்மன்று *ūr-manru,* பெ. (n.) ***ஊர்ப் பொதுவிடம்;*** place for public gathering in a village, usu.situated under a tree. (செ.அக.).

[ஊர் + மன்று.]

ஊர்மானியம் *ūr-māniyam,* பெ. (n.) ***ஊர்ப் பொதுவூழி யத்துக்காக விடப்பட்ட மானிய நிலம்;*** lands in a village exempted from taxes and set apart for enjoyment by those who perform common village duties. (செ.அக.).

[ஊர் + மானியம். மானம் → மானியம் (பெருமதிப்பு கருதி அளிக்கப்படும் கொடை).]

ஊர்மி *ūrmi,* பெ. (n.) ***அலை*** (விசாரசந்.344); wave. (செ.அக.).

[ஊர் → ஊர்மி. ஊர்ந்து மேல் வருவது.]

ஊர்முகம் *ūr-mugam,* பெ. (n.) ***படைகள் பொருமிடம்;*** battle-field, prob. because it was the open ground in front of a village. "ஊர்முகத் திறாஅலியரோ பெருமநின் றானை" (பதிற்றுப்.40,1).

[ஊர் + முகம்.]

ஊர்வரப்பன் *ūr-varappan,* பெ. (n.) ***வெள்ளரி;*** cucumber. (மூ.அ.)

[ஊர் + வரம்பு. வரம்பு → வரப்பு → வரப்பன். (வரப்பில் ஊர்ந்து படரும் கொடி).]

ஊர்வரை *ūr-varai,* பெ. (n.) ***யானை;*** elephant. "பொன் னூர் வரைதனில்" (சிவக்.பிரபந்த.கோட்டீச்சுர.241) (செ.அக.).

[ஊர் + வரை. வரை = மலை. ஊர்ந்து செல்லத்தக்க மலை போன்ற யானை.]

ஊர்வலம் *ūr-valam,* பெ. (n.) ***ஊர்கோலம்;*** procession on festive occasions around a town or village, keeping the village always to one's right side. (செ.அக.).

[ஊர் + வலம். ஊரை வலமாக வருதல்.]

ஊர்வன *ūrvana,* பெ. (n.) ***ஊரும் பூச்சிகள்;*** reptiles, creeping things. "ஊர்வன நடப்பன பறப்பன" (தாயு.பரிபூ.2). (செ.அக.).

ம. ஊர்வ்வ.

[ஊர் → ஊர்வன.]

ஊர்வாயில் *ūr-vāyil,* பெ. (n.) ***ஊரின் பெரிய வாயில்;*** entrance of a village.

க. ஊரு பாகிலு.

[ஊர் + வாயில்.]

ஊர்வாரி *ūr-vāri,* பெ. (n.) ***ஊர்க் கழிவுநீர்க்கால்;*** public drain of a town or village. ஊர்வாரி நீரிலே உடம்பு தூய்மை பெறுதற்குக் குளித்துத் திளைத்ததனோடொக்கும் (பழ.98,உரை.).

[ஊர் + வாரி. வார் = நீர். வாரி = நீரோடும் கால்வாய்.]

ஊர் வாரியம் *ūr-vāriyam,* பெ. (n.) ***ஊர்மன்றம்;*** village committee. (I.M.P.N.A.40). (செ.அக.).

ம. ஊர்வ்வாரியர்.

[ஊர் + வாரியம்.]

ஊர்வாருகம் *ūr-vārugam,* பெ. (n.) ***வெள்ளரி*** (நாமதீப); cucumber. (செ.அக.).

[ஊர் + வாருகம். வாருகம் = கொடி. படரும் கொடி.]

ஊர்விருத்தம் *ūr-viruttam,* பெ. (n.) ***தலைவனூரை மண்டிலச்*** (விருத்தச்) ***செய்யுள் பத்தினாற் சிறப்பிக் கும் சிற்றிலக்கிய வகை;*** eulogistic poem describing the town of the hero in ten viruttam verses. (இலக்.வி.853) (செ.அக.).

[ஊர் + விருத்தம்.]

ஊர்வெண்பா *ūr-venbā,* பெ. (n.) ***தலைவனூரை வெண்பாப் பத்தினாற் சிறப்பிக்கும் சிற்றிலக்கிய வகை*** (வெண்பாப்.செய்யு.22); eulogistic poem describing the town of the hero, in the venbā verses.

[ஊர் + வெண்பா.]

ஊரகம் *ūragam,* பெ. (n.) 1. ***ஊரின் நடு;*** centre of a village, a village. 2. ***காஞ்சியிலுள்ள நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று;*** one of the 108 sacred places situated in Kāñchipuram.

ம. ஊரகம்; க. ஊரிக.

[ஊர் + அகம்.]

ஊரகமல்லி *ūragamalli,* பெ. (n.) ***நாகமல்லி;*** snake jasmine.

[ஊரகம் + மல்லி.]

ஊரடி[1] *ūradi,* பெ. (n.) 1. ***ஊரவர் வரையறை செய்யும் அளவு;*** limit of villagers. (கருநா.). 2. ***ஊரை யொட்டிய விடம்;*** place adjacent to a village.

க. ஊரடி.

[ஊர் + அடி.]

ஊரடி[2] *ūradi,* பெ. (n.) ***ஊரின் அடியவன், அடிமை;*** village servant, slave. (சேரநா.).

ம. ஊரடி.

[ஊர் + அடி.]

ஊரடி வயல் *ūradi-vayal,* பெ. (n.) ***ஊரொடு சேர்ந்திருக் கும் வயல்;*** rice lands adjoining a village. (சேரநா.).

ம. ஊரடி வயல்.

[ஊர் + அடி - ஊரடி + வயல்.]

ஊரதிசயங்காட்டி *ūr-adišayaṅ-kātti,* பெ. (n.) ***ஊரில் வியப்பாக உள்ளவற்றை யெல்லாம் அங்குப் புதிதாக வருபவர்க்குக் காட்டுபவன்;*** cicerone, guide. (செ.அக.).

[ஊர் + அதிசயம் + காட்டி.]

ஊரப்பார்-த்தல் *ūra-p-pār-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***நஞ்சு போக்குதல்;*** to put in motion, to cause to move or pass away as poison, by a magician. (செ.அக.).

[ஊர் → ஊர + பார். ஊர்தல் = நகர்தல், நீங்குதல்.]

ஊரம் *ūram,* பெ. (n.) ***செடி வகை;*** country-mallow, (சேரநா.).

ம. ஊரம்; ஆத். ஊர (மரம்).

[ஊர் + அம் - ஊரம் (உயரமானது).]

ஊரம்மை *ūrammai,* பெ. (n.) ***ஊர்த்தெய்வம்;*** village goddess. (சேரநா.).

ம. ஊரம்ம; க. ஊருதேவம்ம.

[ஊர் + அம்மை. அம்மை = அம்மன்.]

ஊரமை *ūramai,* பெ. (n.) ***சிற்றூர்ப் பொதுப் பணிகளை மேற்பார்த்தல்;*** administration of a village. "ஊரமை செய்யும் வாரியப் பெருமக்களோடு" (S.I.I.i.117) (செ.அக.).

[ஊர் + ஆண்மை - ஊராண்மை → ஊராமை → ஊரமை.]

ஊரயன் *ūrayan,* பெ. (n.) ***பொறாமை கொண்டவன்;*** envious person. (சேரநா.).

ம. **ஊரயன்.**

[ஊர் → ஊரல் → ஊரலன் → ஊரயன்.]

ஊரரிசி *ūrariśi,* பெ. (n.) ***மலை நெல்லின் அரிசி;*** rice obtained from wild paddy. (சேரநா.).

ம. ஊரரி.

[வரை → வார் → ஊர் + அரிசி.]

ஊரல்[1] *ūral,* பெ. (n.) 1. ***ஊர்வது;*** creeping thing (W.). 2. ***கிளிஞ்சில்*** (பிங்.); shell-fish. 3. ***குளுவைப் பறவை;*** water-bird. "உள்ளு மூரலும்" (சிலப்.10,17). 4. ***தினவு;*** itching sensation. 5. ***தேமல் வகை;*** eruptive patch on the skin. 6. ***படர் தாமரை நோய்;*** ringworm, tinea circinata.

ம. ஊரல்.

[ஊர் + அல் - ஊரல். அல் (தொ.பெ.ஈறு.).]

ஊரல்[2] *ūral,* பெ. (n.) ***பசுமை;*** greenness, moistness, as of a vegetable.

ம. ஊரல்.

[ஊர் → ஊரல் = படரும் பசுங்கொடி, கொடியின் பசுமை நிறம்.]

ஊரல்[3] *ūral,* பெ. (n.) ***பிடித்து இழுத்தல்;*** drawing out or pulling out, extraction. (சேரநா.).

ம. ஊரல்.

[ஊர் → ஊரல்.]

ஊரவர் *ūravar,* பெ. (n.) ***ஊரார்;*** inhabitants of a village or town. "ஊரவர் கௌவை யெருவாக" (குறள்.1147) (செ.அக.).

ம. ஊராங்கள்.

[ஊர் + அவர்.]

ஊரவியன் *ūraviyan,* பெ. (n.) ***வணிகன்;*** merchant. ***ஊரவையன்*** பார்க்க; see *ūravaiyan.*

ம. ஊரவ்யன்.

[ஊர் + அவையன் - ஊரவையன் → ஊரவியன் (கொ.வ.).]

ஊரழிபூசல் *ūr-ali-pūśal,* பெ. (n.) ***ஊரைக் கொள்ளை யிட்டழிக்கும் போர்;*** war in which the whole village is looted. 'ஊரழி பூசல் போலே திருமேனியின் நிறமானது எல்லாவற்றையுங்கூடக் கொண்டு வந்து என்னெஞ்சைக் கொள்ளை கொண்டது' (திவ்.அமலனாதி.9.வியா. பக்.99). (செ.அக.).

[ஊர் + அழி + பூசல்.]

ஊரற்சொறி *ūrar-cori,* பெ. (n.) ***மிக்க தினவையுண் டாக்கும் ஓர் வகைச்சொறி;*** skin disease marked by small purple spots and intense itching.

[ஊரல் + சொறி.]

ஊரற்பரி *ūrar-pari,* பெ. (n.) 1. ***சேம்பு;*** garden plant with vesculent seeds and roots. 2. ***நீர்ச்சேம்பு;*** another variety of 'sēmbu'.

[ஊரல் + பரி.]

ஊரற்புண் *ūrar-pun,* பெ. (n.) ***ஆறாப்புண்;*** raw wound, unhealed wound. (W.). (செ.அக.).

[ஊரல் + புண்.]

ஊரறுகு *ūrarugu,* பெ. (n.) ***அறுகு வகை*** (தஞ்சை.சரசு.iv.144); a kind of grass. (செ.அக.).

[ஊர் + அறுகு.]

ஊரன் *ūran,* பெ. (n.) 1. ***மருதநிலத் தலைவன்;*** chief of an agricultural tract. "தண்டுறை யூரனை" (ஐங் குறு.88). 2. ***சுந்தரமூர்த்தி நாயனார்*** (தேவா.1242,10); St. Sundarar. (செ.அக.). 3. ***செல்வக் குடியினன்;*** man of wealthy family.

[ஊர் + அன் - ஊரன். மருதநிலத்து நகரங்களே ஊர்கள் எனச் சிறப்பாகக் குறிக்கப்படுதலின் கோட்டையும் மதிலும் ஊர் கொண்டதே (சூழ்ந்ததே) ஊராயிற்று எனவும் கருதலாம். ஊரன் = கோட்டையூரினன்.]

ஊரா *ūrā,* பெ. (n.) ***ஊர்ப்பெற்றம்;*** village cow. "ஊராமிலைக்கக் குருட்டா மிலைக்கும்" (திவ்.இயற். திருவிருத்.94). (செ.அக.).

[ஊர் + ஆ.]

ஊராட்சி *ūr-ātci,* பெ. (n.) 1. ***ஊராளுகை;*** administration of a village. 2. ***ஒரு பழைய வரி;*** ancient tax. "நாடாட்சி யும் ஊராட்சியும் ... எவ்வகைப்பட்டதும்" (S.I.I ii, 509).

ம. ஊராச்சி.

[ஊர் + ஆட்சி.]

ஊராண்மை *ūrāṇmai,* பெ. (n.) 1. ***ஊரையாளுந் தன்மை;*** commanding influence in a locality. 2. ***ஈயும் தன்மை;*** generosity, benignity. "ஒன்னுற்றக்கா லூராண்மை மற்றதன் எஃகு" (குறள்.773). 3. ***மிக்க செயல்;*** great, wonderful performance. 4. ***பகைமேற் செல்லுகை;*** military expedition. (செ.அக.).

ம. ஊராண்ம.

[ஊர் + ஆண்மை. ஆள் - (ஆளுமை) - ஆண்மை.]

ஊராண்மைக்காரன் *ūrāṇmaikkāran,* பெ. (n.) ***கோயில் தக்கார்;*** trustee of a temple. (சேரநா.).

ம. ஊராண்மைக்காரன்.

[ஊர் + ஆண்மை + காரன். காரன் - உடைமை அல்லது உரிமை குறித்த சொல்லாக்க ஈறு.]

ஊராநற்றேர் *ūrā-naṟṟēr,* பெ. (n.) ***வானூர்தி;*** aerial car, so called because it does not run on the ground. "ஊரா நற்றே ரோவியப்படுத்து" (மணி.6.39). (செ.அக.).

[ஊர் + ஆ + நல் + தேர் - ஊராநற்றேர். ஊரா = நிலத்தில் ஓட்டிச் செல்லப்படாத. 'ஆ' எ.ம.இ.நி.]

ஊராமை *ūr-āmai,* பெ. (n.) ***மகளிர்க்குக் கருப்பையிலுண் டாகுங் கட்டி; ஆமையைப் போல் ஊரும் கட்டி;*** tumour developing in the uterous and having a sensation of crawling like the tortoise.

மறுவ. கெண்டைக்கட்டி, வல்லைக்கட்டி.

[ஊர் + ஆமை.]

ஊரார் *ūrār,* பெ. (n.) 1. ***ஊரவர்;*** inhabitants of a village or town "மறைபெற லூரார்க் கரி தன்றால்" (குறள்.1180). 2. ***பிறர்;*** others, strangers, those who are not one's own people. 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்'. (பழ.). (செ.அக.).

ம. ஊரார்.

[ஊர் + அவர் - ஊரவர் → ஊரார்.]

ஊராள் *ūrāḷ,* பெ. (n.) 1. ***ஊரவன்;*** villager. 2. ***கோயில் தக்கார்;*** temple trustee. 3. ***புதியவன்;*** stranger.

க. ஊராளு; ம. ஊராள்.

[ஊர் + ஆள்.]

ஊராளன் *ūr-āḷaṉ,* பெ. (n.) ***ஊராட்சி செய்யும் ஓர் அதிகாரி;*** official who superintends the village affairs. (T.A.S.iv.i.10). (செ.அக.).

[ஊர் + ஆளன்.]

ஊராளி[1] *ūrāḷi,* பெ. (n.) ***மதுரை, திருநெல்வேலியி லுள்ள உழவரின் ஒரு வகையினர்;*** name of a sect of agriculturists who inhabit Madurai and Tirunelvēli districts.

[ஊர் + ஆளி - ஊராளி. ஊராளும் தலைவராயிருந்து உழவரா னவராயிருக்கலாம்.]

ஊராளி[2] *ūrāḷi,* பெ. (n.) ***ஊர்த்தலைவன்;*** headman of a village. இவர் ஊராளிக் கவுண்டரின் மகன் (கொங்.வ.).

ம. ஊராளன்.

[ஊர் + ஆளி. ஆள் → ஆளி.]

ஊராளி[3] *ūrāḷi,* பெ. (n.) ***வரிக்கூத்து வகை;*** a kind of 'vari-k-kūttu' dance.

[ஊர் + ஆளி.]

ஊர் மக்களை விழாக் காலங்களில் மகிழ்விப்பதற்காக ஊராளி யால் நடத்தப்படும் வரிக்கூத்து.

ஊரான் *ūrāṉ,* பெ. (n.) ***ஊர்க்காரன்;*** inhabitant of a village or town.

ம. ஊரான்.

[ஊர் + அவன் - ஊரவன் → ஊரான்.]

ஊரி[1] *ūri,* பெ. (n.) 1. ***புல்லுருவி;*** species of Loranthus. "உயர்மர முளைத்த வூரிபோல" (கல்லா.38). 2. ***சங்கு*** (அக.நி.); conch. 3. ***மேகம்*** (அக.நி.); cloud. 4. ***இளமை;*** youth, juvenility. (செ.அக.).

[ஊர் → ஊரி.]

ஊரி[2] *ūri,* பெ. (n.) 1. ***நத்தை வகை;*** a kind of a snail. (Pond.) 2. ***ஊர்ந்து செல்லும் உயிர் வகைகள்;*** reptile.

[ஊர் → ஊரி.]

ஊரிடுவரிப்பாடு *ūr-iḍu-varippāḍu,* பெ. (n.) ***சிற்றூரார் விதித்துக் கொண்ட நிலவரி*** (S.I.I.iii.14); land cess assessed by the village. (செ.அக.).

[ஊர் + இடு + வரி + பாடு.]

ஊரிருக்கை *ūr-irukkai,* பெ. (n.) ***ஊரைச் சார்ந்த இடம்;*** land adjoining a village. 'ஊரும் ஊரிருக்கையும்' (S.I.I.(iii)-19).

[ஊர் + இருக்கை.]

ஊரிலி கம்பலை *ūri-ili-kambalai,* பெ. (n.) ***ஊர்க்கல கம்;*** village quarrel, tumult, civil disorder. (W.).

[ஊர் → ஊரில் + கம்பலை. ஊரில் → ஊரிலி எனத்திரிந்தது கொச்சைத்திரிபு.]

ஊரின்னிசை *ūr-iṉṉišai,* பெ. (n.) ***தலைவனூரை இன்னிசை வெண்பாக்களாற் சிறப்பிக்கும் சிற்றிலக் கிய வகை*** (இலக்.வி.825); eulogistic poem describing the town of the hero in 50, 70, or 90 iṉṉišai-veṇbā verses.(செ.அக.).

[ஊர் + இன்னிசை.]

ஊரு[1]**-தல்** *ūru-,* 7.செ.கு.வி. (v.i.) ***நிலைகொள்ளுதல்;*** to set firm.

க., து. ஊரு.

[உல் → ஊல் → ஊர் → ஊரு. பார் → பாரு எனத்திரிந்தாற் போன்ற கொச்சை வழக்கு. ஊல் → ஊன்று எனத்திரிவதே சொல் வளர்ச்சி மரபாயினும் மக்கள் பேச்சு வழக்கில் 'ஊரு' எனத்திரிந்தது.]

ஊரு[2] *ūru,* பெ. (n.) ***அச்சம்;*** fear. (ஆ.அக.).

[உரு = அச்சம். உரு → ஊரு.]

ஊருகட்டி *ūru-katti,* பெ. (n.) ***ஊர்மன்றம் கூடுவதற்கு மரத்தைச் சுற்றி யமைக்குந் திண்ணை.*** (R.T.); raised platform round a tree in a village, where the villagers asemble. (செ.அக.).

[ஊர் → ஊரு + கட்டி. ஊர்தல் = வளைதல், சுற்றுதல். கட்டி = கட்டப்பட்டது, திண்ணை.]

ஊருகால் *ūru-kāl,* பெ. (n.) 1. ***நத்தை;*** snail. 2. ***சங்கு;*** conch. (செ.அக.).

ம. ஊருகால்.

[ஊர் → ஊரு → ஊருகு → ஊருகல் → ஊருகால். ஊருகால் = வளைந்த வடிவுடையது.]

ஊருடை *ūruḍai*, பெ. (n.) **உருடை** பார்க்க; see *uruḍai*.

[உருள் → உருடை → ஊருடை.]

ஊருடையான் *ūruḍaiyāṉ*, பெ. (n.) **ஊர்க்கணக்கன்;** village accountant who has the records of lands (வின்.). (செ.அக.).

[ஊர் + உடையான்.]

ஊருணி *ūr-uṇi*, பெ. (n.) **ஊராருண்ணு நீர்நிலை;** public drinking water tank in a village or town. "ஊருணி நீர் நிறைந்தற்றே" (குறள்.215). (செ.அக.).

[ஊர் + உணி. உண்ணி → உணி.]

ஊருப்பு *ūruppu*, பெ. (n.) **சோற்றுப்பு;** common salt. (சா.அக.).

[உவர் + உப்பு → உவருப்பு → ஊருப்பு.]

ஊருவாரக்கொடி *ūruvāra-k-koḍi*, பெ. (n.) **வெள்ளரி;** mottled melan. (சித்.அக.). (செ.அக.).

[உருவாரம் + கொடி - உருவாரக்கொடி → ஊருவாரக்கொடி.]

ஊருவாள் *ūruvāḷ*, பெ. (n.) **ஒரு வகை வாள்;** a kind of sword.

ம. ஊருவாள்.

[ஒருகா. உர + வாள் - உரவாள் → ஊரவாள் → ஊருவாள்.]

ஊரெட்டு *ūr-eṭṭu*, பெ. (n.) **வரி வகை;** tax. (S.I.I.ii,52) (செ.அக.).

[ஊர் + அட்டு - ஊரட்டு → ஊரெட்டு. அட்டுதல் = கொடுத்தல்.]

ஊரெழுச்சி *ūr-eḻucci*, பெ. (n.) 1. **ஊர் திரண்டெழுகை;** raising or gathering together of the citizens of a place, as for presenting complaints or making other representation to the authorities. (J). 2. **ஊர்க்கலகம்;** riot, insurrection. (W.). (செ.அக.).

[ஊர் + எழுச்சி.]

ஊரெறி-தல் *ūr-eṟi-*, 2.செ.கு.வி. (v.i.) **ஊர்க் கொள்ளை யிடுதல்** (இறை.1.பக்.18); to sack a village. (செ.அக.).

[ஊர் + எறி-தல்.]

ஊரெறிபறை *ūr-eṟi-paṟai*, பெ. (n.) **பாலை நிலத்துப் பறை;** drum used to be beaten by people of the arid tracks in their plundering expeditions. (இறை.1.பக்.18).

[ஊர் + எறி + பறை.]

ஊரேறு *ūrēṟu*, பெ. (n.) 1. **ஊர்ப்பன்றி;** country pig, domesticated pig. 2. **ஊர்க்காளை, பொலிகாளை;** bull (uncastrated).

[ஊர் + ஏறு.]

ஊரை *ūrai*, பெ. (n.) **மலை நெல்** (நாமதீப.); mountain paddy. (செ.அக.).

[தோரை → துரை → ஊரை.]

ஊல்[1]-தல் *ūl-*, 13.செ.கு.வி. (v.i.) 1. **பொருந்துதல், நிலைகொள்ளல்;** to join, to set firm. 2. **முதிர்தல்;** to ripen.

[உல் → ஊல்.]

ஊல்[2]-தல் *ūl-*, 13.செ.கு.வி. (v.i.) 1. **வேகுதல்;** to boil. 2. **கெடுதல், அழிதல்;** to decay.

[உல் → ஊல்.]

ஊழ்[1]-தல் *ūḻ-*, 2.செ.கு.வி. (v.i.) **முதிர்தல்;** to grow old. "பெரும்பாம் பூழ்ந்து தோலுரிப்பன போல்" (சீவக.1560). (செ.அக.).

[உல் → ஊல் → ஊழ்.]

ஊழ்[2]-த்தல் *ūḻ-*, 2.செ.கு.வி. (v.i.) 1. **முதிர்தல்;** to grow old, pass the prime of life. "காந்த ளூழ்த்துச் சொரிவபோல்" (சீவக.1742). 2. **உட்குலைதல், பதன ழிதல்;** to decay, as flesh, as fruits, to become putrid, to be spoiled, to rot, to fade. "அருவிதந்த பழம்... ஊழ்த்து" (மலைபடு.174,180). 3. **நாறுதல்** (பிங்.); to stink. 4. **விரிதல், மலர்தல்;** to blossom. "நனையூழ்த்த செருந்தி" (கலித்.26). (செ.அக.).

[ஊள் → ஊழ். ஊழ்த்தல். (வே.க.92).]

ஊழ்[3]-த்தல் *ūḻ-*, 2.செ.குன்றாவி. (v.t.) 1. **நினைத்தல்** (நாமதீப.); to think. 2. **மூடுதல்** (நாமதீப.); to cover. 3. **சிந்துதல்** (நாமதீப.); to spill. (செ.அக.).

[உல் → ஊல் → ஊழ்.]

ஊழ்[4]-த்தல் *ūḻ-*, 2.செ.கு.வி. (v.i.) **உதிர்தல்;** to fall off. (நாநார்த்த.)

[உல் → ஊல் → ஊழ்.]

ஊழ்[5] *ūḻ*, பெ. (n.) 1. **பழமை;** that which is pristine, of long date. "ஊழ்படு காதலானை" (சீவக.1452). 2. **பழவினை;** karma. "ஊழிற் பெருவலி யாவுள" (குறள். 380). 3. **பழவினைப்பயன்;** fruit of karma, fruit of deeds committed in a former birth or births. 4. **முறைமை;** rule, established usage, long standing custom. "ஊழிற்றா கநின் செய்கை" (புறநா.29). 5. **குணம்;** disposition, temperament (திவா.). 6. **முதிர்வு;** maturity. "பயம்புக் கூழுற் நலமரும்" (மலைபடு.133). 7. **முடிவு;** end, completion, termination. "ஊழின் மண்டிலமாச் சூழுமிந் நுகர்ச்சி" (மணி.30,118). 8. **மலர்ச்சி;** blossoming. "முதிரிணரூழ் கொண்ட .... வேங்கை" (கலித்.44-4). 9. **திருக்குறளின் ஓர் அதிகாரம்;** name of a chapter in Tirukkuṟaḷ. (செ.அக.).

[உல் → ஊல் → ஊழ்.]

ஊழ்[6] *ūḻ-*, பெ. (n.) 1. **வெம்மை;** heat, being angry. 2. **பகைமை;** hatred, enmity, malice. (பிங்.). 3. **வெயில்;** sunshine. 4. **கதிரவன்;** Sun. "பொங்கூ ழொளி நிகர் வெங்கை புரேசர்" (வெங்கைக்கோ.90). (செ.அக.).

[உல் = சுடு, வெயில், கொதிப்பு. உல் → ஊல் → ஊழ்.]

ஊழ்கு-தல் *ūḻku-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***அடிமனம் ஒன்றித்தல், மனமொருங்கு குவிதல்;*** to meditate. "புனிதன் பங்கய மூழ்கி" (கோயிற்பு.பாயி.17). (செ.அக.).

[உல் → உள் → உழு → ஊழ்.]

ஊழ்த்தசை *ūḻ-t-tasai,* பெ. (n.) ***புலால்;*** flesh. (பிங்.) (செ.அக.).

[உல் → ஊள் → ஊழ் + தசை.]

ஊழ்த்தல்[1] *ūḻttal,* பெ. (n.) 1. ***இறைச்சி;*** flesh. 2. ***முடைநாற்றம்;*** stench. (பிங்.). 3. ***நிரையம்*** (நரகம்); hell. (பிங்.) (செ.அக.).

[உல் → ஊள் → ஊழ் → ஊழ்த்தல்.]

ஊழ்த்தல்[2] *ūḻttal,* பெ. (n.) ***முதிர் பருவம், விளை பருவம்*** (சூடா.); opportunity, seasonable time. (செ.அக.).

[உல் → ஊள் → ஊழ்.]

ஊழ்த்தனோய் *ūḻttaṉōy,* பெ. (n.) ***ஆட்டின் ஈரல் நோய்;*** rot, fatal distemper of sheep. (கால்.வி.).

[உல் → ஊள் → ஊழ் → உழ்த்தல் + நோய்.]

ஊழ்த்துணை *ūḻ-t-tuṇai,* பெ. (n.) ***மனைவி;*** wife, as one's destined helpmate. (W.). (செ.அக.).

[உல் → ஊள் → ஊழ் + துணை.]

ஊழ்பாடு *ūḻ-pāḍu,* பெ. (n.) ***முடிவுபடுகை;*** coming to an end. "நின்மிதி யின்றி யூழ் பாடின்றி" (மணி.30,37). (செ.அக.).

[ஊழ் + பாடு. படு → பாடு.]

ஊழ்முறை *ūḻ-muṟai,* பெ. (n.) ***வினைப்பயன் முறை;*** order of experiences resulting from Karma in previous births. (செ.அக.).

[ஊழ் + முறை.]

ஊழ்மை *ūḻmai,* பெ. (n.) ***முறைமை;*** established rule, regulation. "ஊழ்மையிற் கண்ணபிரான் கழல் வாழ்த்துமின்" (திவ்.திருவாய்.4,6,9). (செ.அக.).

[ஊழ் → ஊழ்மை.]

ஊழ்வலி *ūḻvali,* பெ. (n.) 1. ***முதிர்ந்த நோய், பழைய வலி;*** long standing or chronic pain. 2. ***முன்வினை வன்மை;*** inevitability of Karma or the result of actions in the previous birth. (சா.அக.).

[ஊழ் + வலி.]

ஊழ்வினை *ūḻ-viṉai,* பெ. (n.) 1. ***பழவினை;*** deed done by a soul in former birth, considered as the cause of the present life with all its fortunes. "யாரே யூழ்வினை தீர்க்கிற்பார்" (இரகு.தேனு.35). 2. ***உழுவலன்பு;*** attachment continued from birth to birth. "இஃதூழ்வினையா லுள்ளஞ்சுடு மாலென்ன" (சீவக.1670). (செ.அக.).

[ஊழ் + வினை.]

ஊழ்வினைப்பயன் *ūḻ-viṉai-p-payaṉ,* பெ. (n.) ***கரும பலன்;*** fruit of deeds in previous births. (செ.அக.).

[ஊழ் + வினை + பயன்.]

ஊழகம் *ūḻagam,* பெ. (n.) ***விடியற்காலை;*** dawn, morning twilight. (சா.அக.).

[ஊழ் → ஊழகம்.]

ஊழம்[1] *ūḻam,* பெ. (n.) ***வைகறை;*** dawn. (யாழ்.அக.).

[ஊழ் → ஊழம். ஊழ்தல் = முதிர்தல், விடிதல்.]

ஊழம்[2] *ūḻam,* பெ. (n.) 1. ***முறை, தவணை, நேரம்;*** time, turn. 2. ***சேவை, பணி;*** service turn (of duty). 3. ***பட்டறிவு;*** experience.

ம. ஊழம்.

[ஊழ் → ஊழம்.]

ஊழல்[1] *ūḻal,* பெ. (n.) ***அறநெறிக்கும் சட்டத்திற்கும் புறம்பான செய்கைகள்;*** malpractice, moral turpitude, corruption.

[ஊழ் + அல் (எ.ம.இ.நி.) - ஊழல் = முறையற்றது.]

ஊழல்[2] *ūḻal,* பெ. (n.) 1. ***அருவருக்கத்தக்கது, அளறு, சேறு முதலியன;*** dirt, mud, mire, that which is putrid, nasty as excrement. (W.). 2. ***நிரையம்;*** hell. (சூடா.). 3. ***கெட்டது;*** that which is decayed, spoiled, bad in quality. 4. ***தாறுமாறு;*** slovenliness. ஊழற்குடித்தனம். (செ.அக.). 5. ***குலைவு;*** degradation. 6. ***உலைவு;*** deterioration. 7. ***நாற்றம்;*** stench. 8. ***கேடு;*** impairment. 9. ***பாடு;*** trauma. 10. ***தளர்ச்சி, தளர்ந்த தசை;*** depravity, weariness.

ம. ஊழல்; தெ. ஊம்பி.

[ஊள் → ஊழ் → ஊழல். அல் = தொ.பெ.ஈ.று. ஊழ்த்தல் = கெடுதல்.]

ஊழல் நாற்றம் *ūḻal-nāṟṟam,* பெ. (n.) ***கெட்ட வீச்சு;*** putrified or rotten smell, a term usually used for rancid ghee. (சா.அக.).

[ஊழல் + நாற்றம்.]

ஊழல் நாறி *ūḻal-nāṟi,* பெ. (n.) 1. ***மாதவிடாய்ப் பெண்;*** woman in her menses. 2. ***நாற்ற வுடம்புள்ள பெண்;*** woman with a stinking body. (சா.அக.).

[ஊழ் → ஊழல் + நாறி. நாறு → நாறி.]

ஊழல் மூக்கு *ūḻal-mūkku,* பெ. (n.) ***தொடர்ந்து சளி வடியும் மூக்கு;*** running nose; the free discharge of a thin nasal mucous - Rhinorrhea. (சா.அக.).

[ஊழல் + மூக்கு.]

ஊழலி[1]-த்தல் *ūḻali-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***பதனழிதல்;*** to become spoiled. 2. ***மெலிதல்;*** to break down, as the constitution by disease; to grow thin. ஊழலித்த நண்டு. 3. ***சோர்தல்;*** to be dispirited. ஊழலித்த மனம். (இ.வ.).

[ஊழ் → ஊழல் → ஊழலி-த்தல்.]

ஊழலி²-த்தல் *ūḻali-,* 4.செ.குன்றாவி. (v.t.) *அருவருத்தல்;* to loathe, to be disgusted with. (செ.அக.).

[ஊழ் → ஊழலி.]

ஊழலிப்பு *ūḻalippu,* பெ. (n.) *பதனழிவு;* the state of being rotton, putrefaction. (சா.அக.).

[ஊழல் → ஊழலிப்பு.]

ஊழலுடம்பு *ūḻaluḍambu,* பெ. (n.) 1. *நாற்ற வுடம்பு;* stikning body. 2. *அழுக்கு நிறைந்த வுடம்பு;* body full of filth. 3. *பருத்துத் தளர்ந்த உடம்பு;* fat and slack body hanging loose for want of firmness; a body with sluggish muscles. (சா.அக.).

[ஊழ் → ஊழல் + உடம்பு.]

ஊழற்சதை *ūḻar-šadai.* பெ. (n.) 1. *உடம்பு பருத்துத் தளர்வதனால் தொங்கும் தசை;* flesh hanging loose owing to flabby nature. 2. *புன் புலால்;* proud flesh. 3. *நாற்றமுள்ள தசை;* rotten flesh. 4. *ஊழற்றசை* பார்க்க; see *ūḻaṟṟašai.*

[ஊழல் + சதை. தசை → சதை (இலக்கணப்போலி).]

ஊழறுத்தல் *ūḻaṟuttal,* பெ. (n.) 1. *வினைப்பயனை நீக்குதல்;* renunciation of Karma. 2. *உடம்பிலுள்ள மாசுகளை அகற்றல்;* removing filth and obnoxious matter from the system. 3. *புண்புலால் சீழ் முதலியவை களைப் புண்புரைகளினின்று வெளிப்படுத்தல்;* removal of purulent and putrid matter from an ulcer, abscess, etc.

[ஊழ் + அறுத்தல்.]

ஊழறுதல் *ūḻaṟudal* பெ. (n.) 1. *ஊழ்வினைப்பயன் நீங்குதல்;* liberation from karma. 2. *உடம்பினின்று அழிந்த நாற்றமுள்ள பொருள்கள் அகலல்;* (In medicine) discharge of foul matter from the body. (சா.அக.).

[ஊழ் + அறுதல்.]

ஊழனாற்றம் *ūḻanāṟṟam,* பெ. (n.) *தீநாற்றம்;* offensive odour. மோர் ஊழனாற்றமடிக்கிறது (செ.அக.).

[ஊழல் + நாற்றம்.]

ஊழனிலம் *ūḻanilam,* பெ. (n.) *சேற்று நிலம்;* miry, muddy land. (செ.அக.).

ம. ஊழனிலம்.

[ஊழல் + நிலம்.]

ஊழான் *ūḻāṉ,* பெ. (n.) 1. *வெட்டுக்கிளி;* grasshopper. 2. *மண்புழு;* earthworm. (சேரநா.).

ம. ஊழான்.

[உழு → உழான் → ஊழான்.]

ஊழி *ūḻi,* பெ. (n.) 1. *கடற்கோளால் உலகம் முடியுங் காலம்;* time of universal deluge and destruction of all things, end of the world. (சீவக.1157). 2. *உகம்;* aeon. "பண்டை யூழியிற் பார்மலி வுற்றதே" (சீவக.2581). 3. *நெடுங்காலம்;* very long time. "ஊழிவாழ் கென்று" (பு.வெ.8,7). 4. *வாழ்நாள்;* life-time. "அன்ன வாக நின்னூழி" (புறநா.135). 5. *உலகம்;* world. "ஊழியேழான வொருவா போற்றி" (தேவா.1160,8). 6. முறை; fate. "நல்லூழிச் செல்வம் போல்" (கலித். 130). 7. *முறைமை;* regular order. "தீந்தேனூழி வாய்க்கொண்ட தொக்கும்பாடலும்" (சீவக.2974). 8. *கேடு, அழிவு;* destruction. (செ.அக.).

ம. ஊழி.

[ஊழ் → ஊழி.]

ஊழிக்காய்ச்சல் *ūḻi-k-kāyccal,* பெ. (n.) *ஊரையே பற்றி நிற்கும் தொற்றுக்காய்ச்சல்;* epidemic fever, pestilence, an acute infectious epidemic fever or disease spreading throughout vast area. (செ.அக.).

[ஊழ் → ஊழி + காய்ச்சல்.]

ஊழிக்காரம் *ūḻi-k-kāram,* பெ. (n.) *இதளியம்* (இரசம்); mercury - Hydrargyrum. (சா.அக.).

[ஊழி + காரம்.]

ஊழிக்கால் *ūḻi-k-kāl,* பெ. (n.) *ஊழிக்காற்று* பார்க்க; see *ūḻi-k-kāṟṟu.* "ஊழிக்காலு மாற்றலா திரியல் போன" (கந்தபு.கடல்பாய்.3). (செ.அக.).

[ஊழ் → ஊழி + கால்.]

ஊழிக்காலம் *ūḻi-k-kālam,* பெ. (n.) *உலகத்தின் எல்லை.* (சீவக.274,உரை.); end of the ages. (செ.அக.).

[ஊழ் → ஊழி + காலம்.]

ஊழிக்காற்று *ūḻi-k-kāṟṟu,* பெ. (n.) 1. *உலக முடிவிலுண் டாகுங் காற்று;* destructive wind that prevails at the end of the world. 2. *நச்சுக்காற்று;* poisonous vapour that causes epidemic diseases and pestilence. (W.). (செ.அக.).

[ஊழ் → ஊழி + காற்று.]

ஊழித்தீ *ūḻi-t-tī,* பெ. (n.) 1. *வடவைத்தீ* (பிங்.); submarine fire. 2. *கொடுந்தீ;* destructive fire. 3. *காட்டுத்தீ;* wild fire.

[ஊழி + தீ.]

ஊழிநாள் *ūḻi-nāḷ,* பெ. (n.) *உலக முடிவு நாள்;* period of termination of earthy life. (ஆ.அக.).

[ஊழி + நாள்.]

ஊழிநோய் *ūḻi-nōy,* பெ. (n.) *தொற்றுநோய்;* pestilence, supposed to be induced by a malignant demon. (W.). (செ.அக.).

[ஊழ் → ஊழி + நோய்.]

ஊழிமுதல்வன் *ūḻi-mudalvaṉ,* பெ. (n.) *கடவுள்;* God, He who is eternal. "ஊழிமுதல்வன் உருவம் போல்" (திவ்.திருப்பா.4). (செ.அக.).

[ஊழ் → ஊழி + முதல்வன்.]

ஊழியக்காரன் *ūḻiya-k-kāraṉ,* பெ. (n.) 1. ***அடியான்;*** slave. 2. ***வேலைக்காரன்;*** servant, a drudge. "விரி கருவியாறாறு மிவனேவறலை கொண்ட வீறூழியக்காரர்" (திருப்போ.சந்.பிள்ளை.அம்புலி.6). (செ.அக.).

ம. ஊழியக்காரன்.

[ஊழியம் + காரன்.]

ஊழியம்[1] *ūḻiyam,* பெ. (n.) 1. ***தொண்டு;*** service due to a deity, a guru, or a superior by birth, natural obligation; obligation of a slave to his master. "மங்கையர்க் கூழியஞ் செய்வது" (திருப்பு.548). 2. ***சிறைப்பட்டோர் செய் யும் வேலை;*** duty of convict labour. (செ.அக.). 3. ***தொழில்;*** business. 4. ***அரசுப்பணி, படைப்பணி;*** govt. or military service.

ம. ஊழியம்; க. ஊழிகெ; தெ. ஊடிகமு.

[உழு → உழ → உழை → ஊழை → ஊழையம் → ஊழியம் (சு.வி.47).]

ஊழியம்[2] *ūḻiyam,* பெ. (n.) ***கூலி;*** wage. (R.t.) (செ.அக.).

[உழு → உழ → உழை → ஊழை → ஊழையம் → ஊழியம்.]

ஊழியமறியல் *ūḻiya-maṟiyal,* பெ. (n.) கடுங்காவல்; rigorous imprisonment. (J) (செ.அக.).

[ஊழியம் + மறி + அல்.]

ஊழியமானியம் *ūḻiya-māṉiyam,* பெ. (n.) ***பொதுமக்கள் சேவைக்காகக் கொடையாக விடப்பட்டநிலம்*** (R.T.); land granted rent-free for the performance of public service. (செ.அக.).

ம. ஊழியமானியம்.

[ஊழியம் + மானியம்.]

ஊழியன் *ūḻiyaṉ,* பெ. (n.) 1. ***ஊழியம் செய்பவன்;*** employee, worker. 2. ***பணியாள், வேலைக்காரன்;*** servant.

ம. ஊழியன்.

[ஊழ் → ஊழியம் → ஊழியன். ஊழ் = முற்றுதல், செய்தல்.]

ஊழியான் *ūḻiyāṉ,* பெ. (n.) 1. ***நெடுங்கால வாழ்க்கை யுடையோன்;*** one who lives long life. "ஊழியா ரெளிதினிற் கரசுதந் துதவுவார்" (கம்பரா.நட்புக் கோட்.4). 2. ***அழிவுக் காலத்தும் அழியாமலிருக்குங் கடவுள்*** (தேவா.270.5); God, one who will survive final destruction of the world. (செ.அக.).

[ஊழி → ஊழியான்.]

ஊழில் *ūḻil,* பெ. (n.) ***அருவருப்புறு சேறு*** (பிங்.); filthy mire. (செ.அக.).

[ஊழ் → ஊழில். (வே.க.92).]

ஊழிலை *ūḻ-ilai,* பெ. (n.) ***இலைச்சருகு;*** dead, dry leaves. "கோடை தூற்றக் கூடிய ஓழிலை" (ஞானா.28,12). (செ.அக.).

[ஊழ் + இலை.]

ஊழுறு-தல் *ūḻ-uṟu-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***குடைதல்;*** to scoop out. "காழியர் மோதகத் தூழுறு விளக்கமும்." (சிலப்.6,137,அரும்.). (செ.அக.).

[ஊழ் + உறுதல்.]

ஊழூழிக்காலம் *ūḻūḻi-k-kālam,* பெ. (n.) 1. ***நெடுங்கா லம்;*** duration without end, eternity. 2. ***நீடூழிக் காலம்;*** longest period imaginable. (சா.அக.).

[ஊழ் + ஊழி + காலம் = ஊழூழிக்காலம்.]

ஊழை *ūḻai,* பெ. (n.) ***பித்தம்*** (பிங்.); bile.

[ஊழ் → ஊழை.]

ஊழைக்காய்ச்சல் *ūḻai-k-kāyccal,* பெ. (n.) ***பித்தக்காய்ச் சல்;*** fever arising from the deranged condition of the bile, billious fever. (சா.அக.).

[ஊழை + காய்ச்சல்.]

ஊழைக்குருத்து *ūḻai-k-kuruttu,* பெ. (n.) ***துளசி*** (பச்.மூ.); sacred basil. (செ.அக.).

[உழை → ஊழை + குருத்து.]

ஊளல் *ūḷal,* பெ. (n.) ***உள்ளான்மீன்*** பார்க்க; see *uḷḷāṉ mīṉ.*

[உள்ளான் → உள்ளன் → உள்ளல் → ஊளல்.]

ஊளன் *ūḷaṉ,* பெ. (n.) 1. ***நரி*** (பிங்.); jackal, fox. (செ.அக.). 2. ***விரகன்*** (தந்திரக்காரன்); cunning man, trickster. (சேரநா.).

ம. ஊளன்; க. ஊள், ஊளு (ஊளையிடுதல்). தெ. ஊல (ஊளையிடுதல்).

[ஊள் → ஊளை → ஊளன்.]

ஊளா *ūḷā,* பெ. (n.) ***நெடுவாய் மீன்;*** carnivorous marine fish, dark leaden colour-Sphyraena acutipinnies. (செ.அக.).

ம. ஊளாவு.

[ஊள் → ஊளவு → ஊளா.]

ஊளான் *ūḷāṉ,* பெ. (n.) 1. ***கடல் மீன் வகை;*** sea-bream, greyish silvery fish. (செ.அக.). 2. ***நரி;*** jackal. (ஆ.அக.).

[ஊள் → ஊளான்.]



ஊளான் மீன்

ஊளி[1] *ūḷi,* பெ. (n.) 1. ***இரைச்சல்*** (ஈடு.7,4,4); sound. 2. ***பசி;*** hunger. "ஊளி யெழவுலக முண்ட வூணே" (திவ்.திருவாய்.7,4,4 பன்னீ.). (செ.அக.).

ம. ஊளி; **க.** ஊள், ஊளவெ; **கோத.** ஒளாட்; **தெ.** ஊல, ஊன; **பிரா.** ஊலிக்; (ஊளையிடுதல்).

[உல் → உலி → ஒலி. உல் → உலி → ஊலி → ஊளி.]

ஊளி[2] *ūḷi,* பெ. (n.) ***ஊளா மீன்;*** carnivourous marine fish. (யாழ்.அக.).

[ஊளா → ஊளி.]

ஊளை[1] *ūḷai,* பெ. (n.) ***நாய், நரி முதலியவை இடும் கூக்கூரல்;*** howl of a dog or jackal, bleat of a sheep when diseased; cry of a person in anguish, applied contemptuously. "ஊளைப் பெருநரி வவ்விய வூளை." (தணிகைப்பு.களவு.617).

ம. ஒளி; **க.** ஊள்; **தெ.** ஊள.

[உல் → ஊல் → ஊள் → ஊளை.]

ஊளை[2] *ūḷai,* பெ. (n.) ***தீ நாற்றம்;*** offensive smell. ஊளைமோர். (செ.அக.).

[ஊள் → ஊளை.]

ஊளை[3] *ūḷai,* பெ. (n.) 1. ***தொள்வு, தொய்வு;*** weariness, exhaustion. 2. ***உலைவு;*** wandering. 3. ***பதனழிவு;*** rottenness. 4. ***பதனழிந்த மோர்;*** spoiled buttermilk. 5. ***காதுச்சீழ்;*** purulent or mucopurulent of ear.

[உள் → ஊள் → ஊ.. (வே.க.92).]

ஊளைக்காது *ūḷai-k-kādu,* பெ. (n.) ***சீழ்வடியுங்காது;*** purulent or mucopurulent discharge from the ear, Otorrhoea. (செ.அக.).

[ஊளை + காது.]

ஊளைச்சதை *ūḷai-c-cadai,* பெ. (n.) ***ஊழற்சதை*** பார்க்க; see *uḷar-šadai.*

[ஊளை + சதை. தசை → சதை.]

ஊளைமூக்கன் *ūḷai-mūkkaṉ,* பெ. (n.) ***சளி வடியும் மூக்கன்;*** snotty fellow.

[ஊளை + மூக்கன்.]

ஊளைமூக்கு *ūḷai-mūkku,* பெ. (n.) ***சளிபிடித்த மூக்கு;*** running nose. (செ.அக.).

[ஊளை + மூக்கு.]

ஊளையிடு-தல் *ūḷai-y-iḍu-,* 20.செ.கு.வி. (v.t.) ***நாய் நரி முதலியவை கூக்குரலிடுதல்;*** to howl as jackal or dog. "முதிர்நரிக ளூளையிடின்" (சூத.எக்கி பூ.46,20). (செ.அக.).

படு. ஊவலிக்கு; **க.** ஊளிடு.

[ஊளை + இடு.]

ஊற்காரம் *ūṟkāram,* பெ. (n.) ***கக்கலெடுத்தல்*** (நாம தீப); vomitting. (செ.அக.).

[ஊக்காளம் → ஊக்காரம் → ஊற்காரம் (கொ.வ.).]

ஊற்றக்காரன் *ūṟṟa-k-kāraṉ,* பெ. (n.) 1. ***வலிமை பொருந்தியவன்;*** strong and arrogant man. 2. ***தந்திரக் காரன்;*** clever man. 3. ***செல்வந்தன்;*** wealthy man. (சேரநா.).

ம. ஊற்றக்காரன்.

[ஊற்றம் + காரன்.]

ஊற்றங்கால் *ūṟṟaṅ-gāl,* பெ. (n.) ***வயல் முதலியவைக ளில் நீர் வடியுங்கால்;*** water channel in fields. (ஆ.அக.).

[ஊற்று → ஊற்றம் + கால்.]

ஊற்றங்கோல் *ūṟṟaṅ-gōl,* பெ. (n.) ***ஊன்றுகோல்;*** staff to lean on "ஒல்லையுயிர்க் கூற்றங்கோலாகி" (சிறு பஞ்.57). (செ.அக.).

[ஊன்று → ஊன்றம் + கோல் - ஊன்றம்கோல் → ஊற்றங்கோல்.]

ஊற்றப்பம் *ūṟṟappam,* பெ. (n.) ***ஒருவகை ஆப்பம்;*** a kind of cake.

ம. ஊற்றப்பம்.

[ஊற்று + அப்பம். மொத்தமாக அல்லது பருமனாக வார்த்த அப்பம்.]

ஊற்றம்[1] *ūṟṟam,* பெ. (n.) 1. ***பற்றுக்கோடு;*** walking stick, crutch, prop. "உண்முதற் பொருட்கெலா மூற்ற மாவன" (கம்பரா.கிளை.74). 2. ***உறுதியாயிருக்கை;*** stability, immobility. 3. ***வலிமை;*** strength, power. "ஊற்ற முடையாய்" (திவ்.திருப்பா.21). 4. ***மனவெழுச்சி;*** ardour, eagerness. "ஊற்றமொடு பறித்தார்" (சேதுபு. திருநா.42). 5. ***மேம்பாடு;*** greatness, eminence. 6. ***பழக்கம்;*** training, practice. "படையூற்றமிலன்" (கம்பரா.கையடை.12). (செ.அக.).

ம. ஊற்றம்; **க.** ஊத; **து.** உத (கனம்); **தெ.** ஊத, ஊதமு.

[ஊன்று → ஊற்றம் (வே.க.91).]

ஊற்றம்^{2} *ūṟṟam,* பெ. (n.) 1. ***இடையூறு;*** hindrance. "மெல்லடியா ரொடு மூற்ற மஞ்சா" (திருவிளை.திருமணப்.34). 2. ***கேடு;*** harm, injury. "மேல் வருமூற்ற முணர் கில்லாய்" (கந்தபு.மார்க்.248). 3. ***தொடு உணர்வு;*** sensation of touch. "தழுவுவா ரூற்றங் காணாள்" (திருவிளை.திருமணப்.131). (செ.அக.).

[ஊறு → ஊற்றம்.]

ஊற்றருகி *ūṟṟarugi,* பெ. (n.) ***நீர்*** (சங்.அக.); water. (செ.அக.).

[ஊற்று + அருகி.]

ஊற்றல் *ūṟṟal,* பெ. (n.) 1. ***ஊற்றுதல்;*** the act of pouring. 2. ***நீர் முதலிய ஊறி வருதல்*** (ஆ.அக.); welling up or oozing water etc. as from spring.

[ஊற்று → ஊற்றல்.]

ஊற்றவாக்கு *ūṟṟavākku,* பெ. (n.) ***பெருமை சொல்லுதல், தற்புகழ்ச்சி;*** boasting, braggadocio.

ம. ஊற்றவாக்கு.

[உறு → ஊற்று → ஊற்ற + வாக்கு. உறு = மிகுதி.]

ஊற்றறிவு *ūṟṟaṟivu,* பெ. (n.) ***தொடுவுணர்ச்சி;*** sense of touch. (சா.அக.).

[ஊற்று + அறிவு. உற்றறிவு → ஊற்றறிவு.]

ஊற்றன் *ūṟṟaṉ,* பெ. (n.) ***ஊற்றமுள்ளவன், வலிமையன்;*** mighty one. (சேரநா.).

ம. ஊற்றன்.

[ஊற்றம் → ஊற்றன்.]

ஊற்றாணி *ūṟṟāṇi,* பெ. (n.) ***கலப்பையுறுப்பி னொன்று;*** nail which fastens the plough-beam to the plough. "கலப்பை யூற்றாணி யுளதாயி னுலகுநிலை குலையாதே" (ஏரெழு.5).

ஊட்டாணி பார்க்க; see *ūṭṭāṇi.*

[ஊட்டு + ஆணி - ஊட்டாணி → ஊற்றாணி (கொ.வ.).]

கலப்பையில் கார் என்னும் இரும்புப்பட்டை செருகுதற்கு இடும் கொண்டி,ஊட்டாணி எனப்படும். இதனை ஊற்றாணி என ஆண்டிருப்பது கொச்சை வழக்கு.

ஊற்றாம்பெட்டி *ūṟṟām-peṭṭi,* பெ. (n.) 1. ***ஊற்றுப் பெட்டி*** பார்க்க; see *ūṟṟu-p-peṭṭi.* 2. ***சிறுநீர் ஊறும் பை;*** urinary bladder.

[ஊற்று + ஆம் + பெட்டி.]

ஊற்றால் *ūṟṟāl,* பெ. (n.) 1. ***மீன்பறி;*** wicker basket for catching fish (W.). 2. ***கோழிக்குஞ்சுகளை யடைக்குங் கூடை;*** wicker basket for covering chickens (W.). 3. ***உருள்.*** (உரோகிணி) (பிங்.); 4th nakṣatra, whose shape resembles a fish basket net.

[உறு → உற்று → உற்றால் → ஊற்றால்.]

ஊற்றால்கவி-த்தல் *ūṟṟāl-kavi-,* 4.செ.கு.வி. (v.i.) ***மீன் பிடிக்கப் பறியை மூடுதல்;*** to set a wicker basket for catching fish (W.). (செ.அக.).

[ஊற்று + ஆல் + கவி.]

ஊற்றிரு-த்தல் *ūṟṟiru-,* 3.செ.கு.வி. (v.i.) ***தொழும்பு கொண்டிருத்தல்;*** to be devoted. "இத்தலை ஊற்றிருக்க வேணும்" (ஈடு). (செ.அக.).

[ஊற்று + இரு.]

ஊற்றிறை-த்தல் *ūṟṟiṟai-,* 4. செ.கு.வி. (v.i.) ***ஊற்றிலுள்ள நீரை யிறைத்துத் தூய நீர் ஊறச் செய்தல்;*** to scoop and throw out the water of a spring in the bed of a river until it becomes pure. (செ.அக.).

[ஊற்று + இறை.]

ஊற்றின எண்ணெய் *ūṟṟiṉa-eṇṇey,* பெ. (n.) ***ஆமணக் கெண்ணெய்;*** castor-oil obtained by boiling the seeds, dist. fr. ஆட்டின எண்ணெய், which is cold-drawn. (செ.அக.).

கைபிழி எண்ணெய் பார்க்க; see *kaipiḻi eṇṇey.*

[ஊற்று → ஊற்றின + எண்ணெய்.]

ஊற்று^{1}**-தல்** *ūṟṟu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***வார்த்தல்;*** to pour out, cause to flow, spill. "ஒழிவுறக் கடத்தினீ ரூற்றி" (சேதுபு.கந்தமா.87). 2. ***எண்ணெய் வடித்தல்;*** to extract, as oil from the castor seeds by boiling them. கொட்டை முத்தினின்று எண்ணெய் ஊற்றுவார்கள். 3. ***வெளியே விடுதல்;*** to pour out, cast away as useless, empty or clean as a vessel of its contents. "கங்கை புடை யூற்றுஞ் சடையான்" (கம்பரா.கையிடை.12). (செ.அக.).

ம. ஊத்து.

[ஊறு → ஊற்று → ஊற்று-தல் (வே.க.91).]

ஊற்று^{2} *ūṟṟu,* பெ. (n.) 1. ***சுரக்கை;*** flowing, gushing forth, as blood from an artery, milk from the udder; pouring of rut from a must elephant. "ஊற்றிருந்த மும்மதத் தோடையானை" (சீவக.152). 2. ***நீரூற்று;*** spring, fountain "வல்லூற் றுவரில் கிணற்றின்கண்" (நாலடி.263). 3. ***கசிவு;*** moisture oozing from the ground. "ஊற்றுடை நெடுவரை" (சீவக.278). (செ.அக.).

நா. ஊற்; கொண். ஒசா; கூ. உற்ப; ம. ஊற்று; தெ. ஊட; கொலா. ஊர் (ஒழுகும் வீடு); து. ஊடி, உர; க. ஊடெ, ஒரதே, ஒரவு; துட. ஊற்.

[ஊறு → ஊற்று.]

ஊற்று^{3} *ūṟṟu,* பெ. (n.) 1. ***ஊன்றுகோல்;*** staff. 2. ***பற்றுக்கோடு;*** prop, support. "உடம்புயிர்க் கூற்றாக." (கலித்.146). (செ.அக.).

[ஊன்று → ஊற்று.]

ஊற்றுக்கண்[1] *ūṟṟu-k-kaṇ,* பெ. (n.) ***ஊற்றுத்துறை;*** orifice of a spring. (செ.அக.).

[ஊறு → ஊற்று + கண். கண் = இடம், துளை.]

ஊற்றுக்கண்[2] *ūṟṟu-k-kaṇ,* பெ. (n.) ***கண்களினின்று எப்போதும் நீர் வடிந்து கொண்டிருக்கும் மாட்டு நோய் வகை*** (பெரியமாட்.15); disease in cattle, in which water flows from the eyes. (செ.அக.).

[ஊறு → ஊற்று + கண்.]

ஊற்றுக்களம் *ūṟṟu-k-kaḷam,* பெ. (n.) ***பலரும் வந்து சேர்தலையுடைய இடம்;*** common meeting place. "கதழ்விடைக் காரியை யூற்றுக் களத்தே யடங்கக் கொண்டு" (கலித்.103).

[ஊன்று + களம் - ஊன்றுகளம் → ஊற்றுக்களம்.]

ஊற்றுக்கால் *ūṟṟu-k-kāl,* பெ. (n.) ***ஊற்றினின்று பெருகி வருங்கால்;*** channel for irrigation issuing from a spring. (C.G.).

[ஊறு → ஊற்று + கால்.]

ஊற்றுக்குழி *ūṟṟu-k-kuḻi,* பெ. (n.) 1. ***ஊற்றுள்ள பள்ளம்;*** spring pool (W.). (செ.அக.). 2. ***ஓரூர்;*** name of a village. (ஆ.அக.).

ம. ஊற்றுக்குழி.

[ஊறு → ஊற்று + குழி.]

ஊற்றுக்கோல் *ūṟṟu-k-kōl,* பெ. (n.) ***ஊன்றுகோல்;*** staff. "இழுக்கலுடையுழி யூற்றுக் கோலற்றே" (குறள்.415). (செ.அக.).

[ஊன்று + கோல் - ஊன்றுகோல் → ஊற்றுக்கோல்.]

ஊற்றுண்(ணு)-தல் *ūṟṟuṇ-,* 12.செ.கு.வி. (v.i.) 1. ***நீர் ஒழுகி வடிதல்;*** to leak out. (W.). (செ.அக.). 2. ***சாதல்;*** to die. (ஆ.அக.).

[ஊற்று + உண்.]

ஊற்றுத்துலை *ūṟṟu-t-tulai,* பெ. (n.) ***நீர்நிலை;*** reservoir. (pond.). (செ.அக.).

[ஊறு → ஊற்று + துலை.]

ஊற்றுத்தோண்டு-தல் *ūṟṟu-t-tōṇḍu-,* 5.செ.கு.வி. (v.i.) ***ஊற்றுண்டாகத் தோண்டுதல்;*** to scoop out the sand for a spring in the bed of a river, dig out a spring in the bottom of a well. (செ.அக.).

[ஊற்று + தோண்டு.]

ஊற்றுநீர் *ūṟṟu-nīr,* பெ. (n.) ***ஊறுநீர்;*** inflowing water from a spring. "இறைப்பவர்க் கூற்றுநீர் போல மிகும்." (குறள்.1161). (செ.அக.).

[ஊறு → ஊற்று + நீர்.]

ஊற்றுப்பட்டை *ūṟṟu-p-paṭṭi,* பெ. (n.) ***ஊற்றுநீரிறைக் கும்பட்டை;*** scoop for throwing out water from artificial springs in river beds.

[ஊறு → ஊற்று + பட்டை.]

ஊற்றுப்பறி *ūṟṟu-p-paṟi,* பெ. (n.) ***மடு முதலியவற்றில் மீன் பிடிக்குங் கருவி;*** wicker basket for catching fish in tanks and ponds. (செ.அக.)

[ஊற்று + பறி.]

ஊற்றுப்பூ *ūṟṟu-p-pū,* பெ. (n.) ***தேங்காய்ப் பிண்ணாக்கு*** (யாழ்ப்.); residuum of the kernel of the coconut after the oil has been expressed therefrom, dist. fr. பிழிந்த பூ. (செ.அக.).

[ஊறு → ஊற்று + பூ.]

ஊற்றுப்பெட்டி *ūṟṟu-p-peṭṭi,* பெ. (n.) ***எண்ணெயூற்றுங் கூடை;*** basket in which seeds, kernals, etc., are put for expressing oil. (J). (செ.அக.).

[ஊற்று + பெட்டி.]

ஊற்றுப்பெயர்-தல் *ūṟṟu-p-peyar-,* 2.செ.கு.வி. (v.i.) ***ஊற்றுண்டாதல்;*** to flow from a spring, as water into a well. (W). (செ.அக.).

[ஊற்று + பெயர்.]

ஊற்றுப்போடு-தல் *ūṟṟu-p-pōḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***ஆற்றில் ஊற்றுக் குழி தோண்டுதல்;*** to scoop out a hollow for fresh water in the bed of a river. (செ.அக.).

[ஊற்று + போடு.]

ஊற்றுமரம் *ūṟṟu-maram,* பெ. (n.) 1. ***எண்ணெயூற்றும் மரம்;*** a kind of oil-press. 2. ***செக்குலக்கை;*** cylindrical shaft in an oil-press. (செ.அக.).

[ஊற்று + மரம்.]

ஊற்றெடு-த்தல் *ūṟṟeḍu-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***ஊற்றுத் தோன்றுதல்;*** to flow from a spring, as water into a well. 2. ***ஊற்றுத்தோண்டுதல்;*** to scoop out a spring. (செ.அக.).

[ஊற்று + எடு-த்தல்.]

ஊற்றெண்ணெய் *ūṟṟeṇṇey,* பெ. (n.) ***வடித்த எண் ணெய்;*** oil extracted by pressing or pounding the seeds. (வின்.) (செ.அக.).

[ஊற்று + எண்ணெய்.]

ஊற்றெழு-தல் *ūṟṟeḻu-,* 2.செ.கு.வி. (v.i.) ***ஊற்றுப்பெயர்*** பார்க்க; see *ūṟṟu-p-peyar.* "ஊற்றெழு மிருகவுள்" (கல்லா.4.). (செ.அக.).

[ஊற்று + எழு.]

ஊற்றை *ūṟṟai,* பெ. (n.) ***அழுக்கு;*** filth. "ஊற்றைச் சடலத்தை யுண்டென் றிறுமாந்து" (பட்டினத்துப். பக்.257). (செ.அக.).

[ஊழ் → ஊழ்த்தை → ஊத்தை → ஊற்றை (கொ.வ.).]

ஊறணி *ūṟaṇi,* பெ. (n.) 1. ***ஊற்று*** (யாழ்.அக.); spring. 2. ***கசிவு நிலம்*** (யாழ்.அக.); good, moist land where water oozes out. 3. ***சேற்றுநிலம்*** (சங்.அக.); wet marshy

land. 4. **வருவாய்** (சங்.அக.); income, source of income. (செ.அக.).

[ஊறு + அணி - ஊறணி.]

ஊறல்[1] *ūṟal,* பெ. (n.) 1. ***ஊறுகை;*** oozing, percolation, discharge. ஊறற் கடுதாசி. 2. ***நீரூற்று;*** small spring, spring water. "சிற்றூறல் ஒண்ணீரு மாகி விடும்" (வாக். குண்.12). 3. ***சாறு;*** juice, extracted by squeezing. "கரும்பினூறல் கண்டாய் கலந்தார்க்கவன்" (தேவா.369,1). 4. ***மருந்தின் சாரம்;*** tincture, infusion. (வின்.). 5. ***மாழைக்கலப்பு*** (வின்.); faint mixture of an inferior metal with a more precious one. 6. ***வருவாய், செல்வம்;*** income, acquisition, property. 7. ***களிம்பு*** (வின்.); slight amount of verdigris. 8. ***நீர்வற்றாப் பசுமை*** (வின்.); greenness, moisture, as of a vegetable. (செ.அக.).

ம. ஊறல்.

[ஊறு → ஊறல்.]

ஊறல்[2] *ūṟal,* பெ. (n.) ***கிணறு;*** well. (Pudu.Insc.1094). (செ.அக.).

[ஊறு → ஊறல்.]

ஊறல்[3] *ūṟal,* பெ. (n.) ***சாராயம் காய்ச்சுதற்காகப் பானையிலிட்டு ஊற வைக்கும் பொருள்கள்.*** ingredients of arrack before distillation.

[ஊறு → ஊறல்.]

ஊறல்சாரல் *ūṟal-šāral,* பெ. (n.) ***ஒரு வயலின் வரப்பிலிருந்து உள்ளூறிப் பக்கத்து வயலில் கசிந்து வரும் ஊறல்நீர்;*** water oozing through embankment of fields.

[ஊறு → ஊறல் + சாரல்.]

ஊறல் தெறித்தல் *ūṟal-teṟittal,* பெ. (n.) 1. ***களிம்பற்றுப் போதல்;*** being deprived of rust or verdigris. 2. ***உடம்பின் தினவு அல்லது நமைச்சல் நீங்குதல்;*** to be cured of itching sensation (சா.அக.).

[ஊறு → ஊறல் + தெறித்தல்.]

ஊறல்பாறை *ūṟal-pāṟai,* பெ. (n.) ***படிவியற் படுகைப் பாறை;*** sedimentary rock. (சேரநா.).

ம. ஊறல்பாற.

[ஊறல் + பாறை.]

ஊறல் மண் *ūṟal maṇ,* பெ. (n.) ***வண்டலாகப் படிந்த மண்;*** sedimentary soil. (சேரநா.).

ம. ஊறல் மண்ணு.

[ஊறு → ஊறல் + மண்.]

ஊறவை-த்தல் *ūṟa-vai-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***நீரிற் பதம் பெறச் செய்தல்;*** to steep, soak, pickle. (செ.அக.).

[ஊறு → ஊற + வை.]

ஊறற்பதம் *ūṟaṟ-padam,* பெ. (n.) 1. ***பச்சைப் பதம்;*** anything softened with moisture or by soaking. 2. ***முழுதும் ஊறிய பதம்;*** condition in which anything is completly soaked. (சா.அக.).

[ஊறல் + பதம்.]

ஊறற்பாக்கு *ūṟaṟ-pākku,* பெ. (n.) ***நீரில் ஊறிய பாக்கு;*** areca nut soaked to render it fit for use. (செ.அக.).

[ஊறல் + பாக்கு.]

ஊறாமை *ūṟāmai,* பெ. (n.) ***கசியாமை;*** not oozing as blood from sores or ulcers. (சா.அக.).

[ஊறு + ஆ + மை. 'ஆ' (எ.ம.இ.நி.).]

ஊறு[1]**-தல்** *ūṟu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***நீரூறுதல்;*** (குறள்.396); to spring, flow, as water in a well, to issue. 2. ***கசிதல்;*** to ooze, percolate. (W.). 3. ***ஊறுகாய்ப் பதமாதல்;*** to soak, to be steeped, pickled. 4. ***பால் முதலியன சுரத்தல்;*** to gather, as milk in the breast, as toddy in palm flowers. 5. ***மை முதலியன ஊறுதல்;*** to run, to spread, as ink on flimsy paper, to keep, as moisture around a spring or in a river bank. 6. ***காயத்தில் ஊன் வளர்தல்*** (வின்.); to form, as new flesh in a sore, to heal. 7. ***மெலிந்தவுடல் தேறுதல்;*** to increase, as flesh in a person wasted by disease, to improve by slow degrees. 8. ***பெருகுதல்;*** to increase. அவனுக்குச் செல்வம் ஊறுகிறது. 9. ***வாயூறுதல்;*** to water, as the mouth. "கனிகாண்டொறு மூறுமேயெயினூறுமே." (சூளா.சுயம்.66). (செ.அக.).

ம. ஊறுக; க., து. ஊறு; தெ. ஊறு.

[உல் → உறு → ஊறு. உறுதல் = மிகுதல், அதிகரித்தல்.]

ஊறு[2] *ūṟu,* பெ. (n.) 1. ***உறுகை;*** joining, approaching. "பருந்தூறளப்ப" (பதிற்றுப்.51.32). 2. ***தொடு உணர்வு;*** sense of touch. "சுவையொளி யூறோசை" (குறள்.27). 3. ***இடையூறு*** (திவா.); obstacle, hindrance, obstruction. 4. ***துன்பம்;*** evil, blight. "ஊறுசெய் நெஞ்சம்" (நாலடி.379). 5. ***கொலை;*** killing, murder. "ஊறுதான் செயக் கூடுறாது" (கந்தபு.சூரனமைச்.115). 6. ***அழிவு;*** ruin, destruction "இருவினைக் கூறு காண்கிலாது" (கம்பரா. வாலிவதைப்.22). 7. ***உடம்பு;*** body. "அரவூறு சுலாய்." (திவ்.திருவாய்.7,4,2). 8. ***புண்;*** scar, wound, hurt, injury inflicted by violence. "ஊறறியா மெய் யாக்கை யொடு" (புறநா.167,6). 9. ***வல்லூறு;*** royal falcon. "பறவையை யூறுகொண்டெழச் சிறற்றின பார்ப்பினில்" (கம்பரா.கும்ப.268). (செ.அக.).

ம. ஊறு.

[உறு → ஊறு.]

ஊறுகறி *ūṟu-kaṟi,* பெ. (n.) ***ஊறுகாய்*** (பெரும்பாண். 310,உரை.) பார்க்க; see *ūṟugāy.*

[ஊறு + கறி. கறி = காய்கறி.]

ஊறுகாய் *ūṟu-gāy,* பெ. (n.) ***உப்பிட்டு ஊறவைத்த காய்*** (பதார்த்த.1378); pickled vegetable or fruit. (செ.அக.).

ம. ஊறுகாய்; தெ. ஊருகாய; க. உப்பினகாயி.

[ஊறு + காய்.]

ஊறுகோள் *ūṟu-kōḷ,* பெ. (n.) 1. ***காயம்;*** injury, wound. 2. ***கொலை;*** murder. (செ.அக.).

[உறு → ஊறு + கோள். ஊறு = துன்பம். கொள் → கோள் (நேர்ச்சி.).]

ஊறுதல் *ūṟudal,* பெ. (n.) 1. ***நீர்க்கசிவு;*** oozing of water as from a boil or a wound. 2. ***தண்ணீரில் போட்டு வைத்தல்;*** to retain steeped in any fluid as is done to greens in pickless. 3. ***புண்ணில் தசை வளர்தல்;*** formation of a new layer of flesh over a healing wound. 4. ***மெலிந்த உடம்பில் அர்த்தம் சேருதல்;*** increase of blood in a convalascent's body. 5. ***சதை பிடித்தல்;*** picking up or putting on flesh. 7. ***பெருகுதல்;*** increasing.

[உறு → ஊறு → ஊறுதல்.]

ஊறுநீர் *ūṟunīr,* பெ. (n.) 1. ***புண்ணிலிருந்து கசியும் நீர்;*** thin serous fluid oozing from a sore or from a wound - Ichor. 2. ***நிலத்தில் ஊறும் நீர்;*** water springing from earth. 3. ***உமிழ்நீர்;*** saliva.

[ஊறு + நீர்.]

ஊறுபாடு *ūṟubāḍu,* பெ. (n.) 1. ***தாக்குதல்;*** beating, butting. 2. ***ஆயுதங்களாற் காயமுண்டாக்குகை*** (பிங்.); wounding of which there are four methods. viz. குத்தல், வெட்டல், எய்தல், எறிதல். 3. ***புண்படுதல்;*** having wound. 4. ***புண்;*** wound, sore. 5. ***துன்பம்;*** trouble, distress. "ஊறுபாடில்லை யுயிர்க்கு" (குறள்.945). 6. ***இடையூறு;*** obstacle, obstruction, hindrance. "மாலை தாழகலத் தூறு - பாடற வந்தரத் தளிகவர்ந் துண்ப" (திருவிளை.தருமிக்.56).

[உறு → ஊறு + பாடு.]

ஊறுபுண் *ūṟu-puṇ,* பெ. (n.) ***ஆறிவரும் புண்*** (வின்.); wound that is healing (செ.அக.).

[ஊறு + புண். ஊறுதல் = மேலிடல், நலமாதல்.]

ஊறெண்ணெய் *ūṟeṇṇey,* பெ. (n.) ***உச்சியிலூறு மெண்ணெய்;*** oil placed upon the head for purposes of health. (திவ்.திருப்பா.17, வ்யா.பக்.164) (செ.அக.).

[ஊறு + எண்ணெய்.]

ஊறை *ūṟai,* பெ. (n.) ***சவ்வரிசி*** (L.); sago fern palm. (செ.அக.).

[உறை → ஊறை.]

ஊன்[1] *ūṉ,* பெ. (n.) 1. ***தசை;*** flesh, muscle. "ஊனுடுத்தி யொன்பது வாசல் வைத்து" (தேவா.29,1). 2. ***உண்ணும் இறைச்சி;*** meat, animal food. "ஊனமுதம் விருப்புற்று" (திருவாச.15,3). 3. ***உடல்;*** body "ஊனைக் குறித்த வுயிரெல்லாம்" (குறள்.1013). (செ.அக.).

ம. ஊன்; க. ஊறு, ஊக்ரு (எயிர்); கோத. ஊ (எயிர்); துட. ஊர்; தெ. ஊகுரு; குவி. ஊயு.

[உல் → ஊல் → ஊன். உல் = பொருந்தியிருப்பது, பற்றியிருப்பது. உல் → ஊல் = எலும்பைப் பற்றியிருப்பது. ஊல் → ஊன். ஒ.நோ: ஊன்றுதல் = பற்றுதல், நிலைகொள்ளுதல்.]

ஊன்[2] *ūṉ,* பெ. (n.) ***புலால் வெட்டும் அடிக்கட்டை, அடிக் குறடு;*** block of wood on which butchers mince meat.

[ஊண் → ஊன் (ஆகுபெயர்) இது ஊனம் என்றும் வழங்கும்.]

ஊன்[3] *ūṉ,* பெ. (n.) ***நீ*** (முன்னிலை யொருமைப் பெயர்); you.

[ஊ → ஊன். ஊ - முன்மைச்சுட்டு, னகரமெய் ஒருமை குறித்த ஈறு.]

ஊன், ஊம் என்னும் முன்னிலைப் பெயர்கள், நூன், நூம் என்று நகர மெய்ம் முதல் பெற்று, பின்னர் நீன், நீம் எனத் திரிந்தன.

நூன், நூம் என்பன, வட திரவிடத்துள் ஒருவகையான சூரசேனிப் பிராகிருதத்தில் தூன், தூம் என்று திரிந்து இன்று அதன் வழிப்பட்ட இந்தியில் தூ, தும் என்று வழங்குகின்றன.

து (நீ) என்னும் இந்தி வடிவமே இயல்பாகவும் குறுகியும் மேலையாரிய மொழிகளில் வழங்குகின்றன.

OE, OS. thu; *OHG.* dū; *ON.* thu; *Goth;* thu; *E.* thou.

ஊன்கணார் *ūṉ-kaṇār,* பெ. (n.) ***மானிடர்;*** men who have the physical eye only. "கழனி யாக்கமு மூன்கணார்க் குரைப்பரிது" (சீவக.54). (செ.அக.).

[ஊன் + கண் + ஆர். கண்ணார் → கணார்.]

ஊன்செய்கோட்டம் *ūṉ-cey-kōṭṭam,* பெ. (n.) ***உடல்;*** body as a structure formed of flesh. "ஊன்செய் கோட்டக்கு..... வள்ளுரமே சுமந்து.... புறஞ்செய்கின் றார்." (சீவக.1552). (செ.அக.).

[ஊன் + செய் + கோட்டம்.]

ஊன்தள்ளல் *ūṉ-taḷḷal,* பெ. (n.) ***ஊன்றள்ளல்*** பார்க்க; see *ūṉṟaḷḷal.*

ஊன்வலி *ūṉvali,* பெ. (n.) ***உடம்பின் வலிமை*** (நீலகேசி.486,உரைமேற்கோள்); bodily vigour. (செ.அக.).

[ஊன் + வலி.]

ஊன்விலைஞர் *ūṉ-vilaiñar,* பெ. (n.) ***ஊன்விற்போர்*** (திவா.); meat sellers. (செ.அக.).

[ஊன் + விலைஞர்.]

ஊன்றக்கட்டு-தல் *ūṉṟa-k-kaṭṭu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***வலிமைபடுத்துதல்;*** to edify, strengthen. 2. ***புண்காயம் முதலியவற்றை உறுதியாய்க் கட்டுதல்;*** to

bandage firmly as is done to wound, injury, fracture etc. (சா.அக.).

[ஊன்று → ஊன்ற + கட்டு.]

ஊன்றள்ளு-தல் *ūṉṟaḷḷu-,* 15.செ.கு.வி. (v.i.) 1. ***ஊன் வளர்தல்;*** to be formed as proud flesh. 2. ***புலாலுண் டலை விலக்குதல்*** (வின்.); to abstain from meat. (செ.அக.).

[ஊன் + தள்ளு-தல்.]

ஊன்றி *ūṉṟi,* பெ. (n.) ***பாம்பு வகை*** (அக.நி.); a kind of snake. (செ.அக.).

[ஊன்று → ஊன்றி.]

ஊன்றிக்கேள்(ட்)-த(ட)ல் *ūṉṟi-k-kē]-,* 11.செ.குன்றாவி. (v.t.) 1. ***அழுத்தி வினாவுதல்;*** to interrogate with attention, press for an answer. 2. ***உற்றுக்கேட்டல்;*** to hear attentively. (செ.அக.).

[ஊன்று → ஊன்றி + கேள்.]

ஊன்றிக்கொள்(ளு)-தல் *ūṉṟi-k-koḷ-,* 7.செ.குன்றாவி. (v.t.) ***நிலை பெறுதல்;*** to gain a firm footing, as in an office, to establish oneself somewhere. (செ.அக.).

[ஊன்று → ஊன்றி + கொள்.]

ஊன்றிச்சொல்(லு)-தல் *ūṉṟi-c-col,* 8.செ.குன்றாவி. (v.t.) 1. ***தெளிவாய்ப் பேசுதல்;*** to speak distinctly, articulate. 2. ***உறுதியாய்ச் சொல்லுதல்;*** to speak emphatically, stress, assert.

[ஊன்று → ஊன்றி + சொல்.]

ஊன்றித்தாங்கு-தல் *ūṉṟi-t-tāṅgu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***கோலை யூன்றித் தோணியைத் தள்ளுதல்*** (வின்.); to press on the pole either in stopping or in pushing a boat. (செ.அக.).

[ஊன்று → ஊன்றி + தாங்கு.]

ஊன்றிநட-த்தல் *ūṉṟi-naḍa-,* 3.செ.கு.வி. (v.i.) 1. ***உறுதியாய் நடத்தல்;*** to walk firmly so as to quicken one's gait. 2. ***காலைப் பதிய வைத்து நடத்தல்;*** to walk cautiously, as on slippery ground, or as one regaining the use of his legs. (செ.அக.).

[ஊன்று → ஊன்றி + நட.]

ஊன்றிநில்(ற்)-த(ற)(ல்) *ūṉṟi-nil-,* 14.செ.கு.வி. (v.i.) ***உறுதியாயிருத்தல்;*** to hold fast, as by an opinion, be firm. காரியத்தில் ஊன்றி நிற்கிறான். (செ.அக.).

[ஊன்று → ஊன்றி + நில்.]

ஊன்றிப்படி-த்தல் *ūṉṟi-p-paḍi-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***கருத்தாய்ப் படித்தல்;*** to read attentively. 2. ***நிறுத்தி வாசித்தல்*** (வின்.); to read with proper intonation or emphasis. (செ.அக.).

[ஊன்று → ஊன்றி + படி.]

ஊன்றிப்பாட்டம் *ūṉṟi-p-pāṭṭam,* பெ. (n.) ***ஓர் வரி வகை;*** old tax.

ம. ஊன்னிப்பாட்டம்.

[ஊன்று → ஊன்றி + பாட்டம்.]

ஊன்றிப்பார்-த்தல் *ūṉṟi-p-pār-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***உற்று நோக்குதல்;*** to look at steadfastly or intently. 2. ***ஆராய்ந்து பார்த்தல்;*** to consider carefully, fix the mind intently upon. 3. ***அழுத்திப் பார்த்தல்;*** to feel, try, press, in order to test, as a fruit.

[ஊன்று → ஊன்றி + பார்.]

ஊன்றிப்பெய்-தல் *ūṉṟi-p-pey-,* 1.செ.கு.வி. (v.i.) ***விடா மல் ஓங்கிப் பெய்தல்;*** to pour incessantly, as rain. மழையூன்றிப் பெய்கின்றது. (செ.அக.).

[ஊன்று → ஊன்றி + பெய்.]

ஊன்று[1]-தல் *ūṉṟu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***நிலைபெறு தல்;*** to be fixed, settled, gain a firm footing, become established, strike root. "கற்பினிற் றிரித லின்றி யூன்றுக." (சீவக.604). 2. ***சென்று தங்குதல்;*** to stop in a place. "புகை... விசும்பி னூன்றுஞ் சூளை" (புறநா.228,3).

[உல் → ஊல் + று - ஊன்று.]

ஊன்று[2]-தல் *ūṉṟu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***அழுந்த வைத்தல்;*** to fix, place firmly, as a pole in fixing a boat. "முன்னொரு கோலூன்றி" (திவ்.பெரியதி. 1,3,2). 2. ***பள்ளத்தில் அல்லது குழியில் நடுதல்;*** to plant, set firmly in the ground, as a post. "காழூன்றிய கவிகிடுகின்" (பட்டினப்.167). 3. ***நிலைநிறுத்துதல்;*** to establish, as fame, position. "புதையம்பிற் பட்டுப்பா டூன்றுங் களிறு" (குறள்.597). 4. ***துணையாகப் பற்று தல்;*** to lean upon, recline or depend on, as a staff, a person. "கைதருவார் தமையூன்றி" (பெரியபு.திருநாவு. 61). 5. ***தாங்குதல்;*** to support. "துன்பந் துடைத் தூன்றுந் தூண்" (குறள்.615). 6. ***தீர்மானித்தல்;*** to determine, decide. "ஊன்றியில் விரண்டினுள்ளு முறுதிநீ யுரைத்திடென்ன" (சீவக.1235). 7. ***அமுக்குதல்;*** to press down, bear down with pressure. "உடுப்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றி" (பெரும்பாண்.200). 8. ***தள்ளுதல்*** (திவா.); to push, propel. 9. ***உறுத்துதல்;*** to hurt, to cause smarting, irritation "அல்லி யூன்றிடு மென்றஞ்சி யரஷிந்தந் துறந்தாட்கு" (கம்பரா. நாடவி.42). 10. ***குத்துதல்;*** to drive in as a spear. "மருப்பதனா லூன்றிப் பிளந்திரு கூறுசெய்து" (கூர்மபு. அந்தசா.80).

ம. ஊன்னுக; க. ஊறு, ஊர்; **கோத.** ஊத்; **துட.** ஊண்; **குட.** ஊர்; **து.** ஊரணி, ஊன்துனி, ஊடுனி, ஊடபுனி, ஊண்டுனி; **தெ.** ஊட், ஊனு, ஊஞ்சு; **கூ.** உக; **பர்.** உத்; **கட.** உண்டுப் **குர்.** ஊத்னா.

[உவல் (உவன்று) → ஊன்று.]

ஊன்று[3] *ūṉṟu,* பெ. (n.) ***சார்பு;*** prop, support. "தனியோங் கார மூன்றற.... மேலுற்று நின்றது" (ஞானவா.உத்தால கன்.41). (செ.அக.).

ம. ஊன்னு; க. ஊடு; து. ஊரு, ஊது; தெ. ஊக, ஊதமு.

[உவல் → உவன்று → ஊன்று.]

ஊன்றுகட்டு *ūṉṟu-kaṭṭu,* பெ. (n.) ***ஊன்றும்படி கட்டிய விறகு கட்டு;*** bundle of firewood placed on end, when offered for sale. "விறகு வெட்டி யூன்றுகட்டாக் கட்டி" (திருவாலவா.54.24). (செ.அக.).

[உவல் → உவன்று → ஊன்று + கட்டு.]

ஊன்றுகாரன் *ūṉṟukāraṉ,* பெ. (n.) ***படகோட்டி;*** one who propels a boat with a pole.

ம. ஊன்னுகாரன்.

[ஊன்று + காரன். ஊன்று = ஊன்றும் துடுப்பு.]

ஊன்றுகால் *ūṉṟu-kāl,* பெ. (n.) ***ஊன்றுகோல்*** பார்க்க; see *ūṉṟukōl.*

ம. ஊன்னுகால்.

ஊன்றுகால் செடி *ūṉṟu-kāl-šeḍi,* பெ. (n.) ***கழுதைத் தும்பை;*** donkey toombay, Indian borage - Trichodesma Indicum alias Borago indica. (சா.அக.).

[ஊன்று + கால் + செடி.]

ஊன்றுகோல் *ūṉṟu-kōl,* பெ. (n.) ***பற்றுக்கோடு;*** staff, walking stick, support, whether for body or mind. "ஊன்றுகோலெனக் காவதொன் றருளாய்" (தேவா. 1110,4).

ம. ஊன்னுகோல்; க. ஊறுகோலு; து. ஊறுகோலு; தெ. ஊதகோல.

[உவல் → உவன்று → ஊன்று + கோல்.]

ஊன்றுவலை *ūṉṟu-valai,* பெ. (n.) ***ஊன்று குச்சியுடன் சேர்த்துக் கட்டிய வலை;*** a kind of fishing net tied to stakes.

ம. ஊன்னிவல.

[ஊன்று + வலை.]

ஊனக்கண்[1] *ūṉa-k-kaṉ,* பெ. (n.) ***கட்பொறி;*** physical eye. opp.to ஞானக்கண். "ஊனக்க ணிரண்டு மூடி" (ஞானவா.சுக்கிர.37). (செ.அக.).

[ஊன் + அ + கண்.]

ஊனக்கண்[2] *ūṉa-k-kaṉ,* பெ. (n.) 1. ***மெய்யறிவு;*** soul's intellingence as being defective. "ஊனக்கண் பாசமுணரா ப் பதியை" (சி.போ.9,1). (செ.அக.). 2. ***பொட் டைக்கண்;*** defective eye.

[உல் → உலம் = கெடுதல், எரிதல், அழிதல். உலம் → ஊலம் → ஊனம். ஊன் = தானாக அழுகும் இயல்புடையது. ஊனம் + கண்.]

ஊனக்கால் *ūṉa-k-kāl,* பெ. (n.) 1. ***குறைந்த கால்;*** short leg, short distorted limb. 2. ***பிறவி நொண்டி;*** disabled leg; a deformity of the foot generally of a congenital origin - club-foot. (சா.அக.).

[ஊனம் + கால்.]

ஊனகத்தண்டு *ūṉaga-t-tanḍu,* பெ. (n.) ***கருவண்டு*** (வின்.); black beetle. (செ.அக.).

[ஊன் + அகத்து + வண்டு. ஊனில் அல்லது புண்ணில் மொய்க்கும் வண்டு.]

ஊனகாரகன் *ūṉa-kāragaṉ,* பெ. (n.) ***இழிதொழில் செய்விப்போன்;*** one who causes vile actions to be done by others. "ஊனமாயினகள் செய்யு மூனகாரகர்க ளேலும்" (திவ்.திருமாலை.41). (செ.அக.).

[ஊனம் + காரகன்.]

ஊனஞ்சவ்வு *ūṉañcavvu,* பெ. (n.) ***ஊன் வழியும் சவ்வு;*** membrane secreting scrum - serous mebrane. (சா.அக.).

[ஊனம் + சவ்வு.]

ஊனப்படு-தல் *ūṉa-p-paḍu-,* 18.செ.குன்றாவி. (v.t.) 1. ***குற்றப்படுதல்;*** to be hurt. 2. ***துன்பப் படுதல்;*** to be grieved. (சேரநா.).

ம. ஊனப்பெடுக.

[ஊனம் + படு.]

ஊனம்[1] *ūṉam,* பெ. (n.) 1. ***குறைவு;*** defect, deficiency, as of a member; flaw. "அந்நாளுறு சிலை தானூன முளது" (கம்பரா.பரசுரா.25). 2. ***குற்றம்;*** fault. "ஊன மில் காலன்றன்னை" (ஞானவா.சுக்கிர.32). 3. ***பழி;*** calumny, slander. "கேள்வற் கூனமும் பரிவு மஞ்சி" (சீவக.1530). 4. ***தீமை;*** evil, injury. "ஊனமாயினகள் செய்யும்" (திவ்.திருமாலை.41). 5. ***அழிவு;*** destruction. "ஊனம்பி னுறவே வேண்டும்" (சி.சி.2,21). (செ.அக.).

ம. ஊன.

[ஊன் → ஊனம்.]

ஊனம்[2] *ūṉam,* பெ. (n.) 1. ***ஊனமர்குறடு*** பார்க்க; see ūṉamar-kuṟaḍu. "ஊனத்தழித்த வானிணக் கொழுங் குறை" (பதிற்றுப்.21) (செ.அக.). 2. ***ஊன்;*** flesh. 3. ***கொழுப்பு;*** fat. 4. ***பிணம்*** (பிங்.); corpse, carcass.

[ஊன் → ஊனம். ஊன் வெட்டுதலால் மேற்புறம் சிதைவுற்ற அடிக்குறடு.]

ஊனம்[3] *ūṉam,* பெ. (n.) ***ஆந்தை;*** owl. (செ.அக.).

[ஊம் → ஊமம் → ஊனம்.]

ஊனம்[4] *ūṉam,* பெ. (n.) ***ஊனீர்*** பார்க்க; see *ūṉīr.*

[ஊன் → ஊனம்.]

ஊனமர்குறடு *ūṉ-amar-kuṟaḍu,* பெ. (n.) ***இறைச்சி கொத்தும் பட்டடை மரம்*** (சீவக.2281); block of wood on which butchers mince meat. (செ.அக.)

[ஊன் + அமர் + குறடு.]

ஊனமா-தல் *ūṉam-ā-,* 8.செ.குன்றாவி. (v.t.) 1. ***நொண்டியாதல்;*** to be crippled. 2. ***பழுதுறல்;*** to be maimed. 3. ***அங்கம் பழுதாதல்;*** to be defective of any organ in the body. (சா.அக.).

[ஊனம் + ஆ + தல்.]

ஊனவன் *ūṉavaṉ,* பெ. (n.) ***மனிதன்;*** man, he who is in the flesh. "ஊனவருயிரி னோடும்" (தேவா.1050,5). (செ.அக.).

[ஊன் + அவன்.]

ஊனவாளி *ūṉavāḷi,* பெ. (n.) ***குறைபாடுள்ளவன்;*** maimed or lame person. (சா.அக.).

[ஊனம் + ஆளி.]

ஊனன் *ūṉaṉ,* பெ. (n.) 1. ***உடற்குறைபாடுள்ளவன்;*** one who is defective in some member, one who has a physical imperfection. (செ.அக.). 2. ***முடவன்;*** lame person. 3. ***ஊனாங்கொடி;*** creeper-convol-vulus racemosus.

[ஊனம் → ஊனன்.]

ஊனாம்பல் *ūṉ-āmbal,* பெ. (n.) ***ஆம்பல் வகை*** (மூ.அக.); a kind of water lily. (செ.அக.).

[ஊன் + ஆம்பல்.]

ஊனாயம்[1] *ūṉāyam,* பெ. (n.) ***பிழை*** (சங்.அக.); mistake. (செ.அக.).

[ஊனம் → ஊனாயம்.]

ஊனாயம்[2] *ūṉāyam,* பெ. (n.) ***விரகு*** (தந்திரம்) (வின்.); trick. (செ.அக.).

[உன்னயம் → ஊனாயம்.]

ஊனான் *ūṉāṉ,* பெ. (n.) 1. ***உன்னாயங் கொடி;*** elliptic leaved silver-weed. 2. ***பெருமுசுட்டை;*** (தைலவ. தைல.102); many-flowered bind weed.

[உன்னாயம் → ஊனாயம் → ஊனான்.]

ஊனி *ūṉi,* பெ. (n.) ***மாந்த உடம்பினன்;*** one who has corporeal existence. "விரவ லாகா ஊனிகளா யுள்ளாா்." (தேவா.982,10). (செ.அக.).

[ஊன் + இ.]

ஊனின்பூடு *ūṉiṉ-pūḍu,* பெ. (n.) ***சிறுபூளை;*** wooly caper - Achyranthe lanata.

[ஊன் + இன் + பூடு.]

ஊனீர் *ūṉīr,* பெ. (n.) 1. ***தசையினின்று வடியும் நீர்;*** water oozing from flesh. 2. ***குருதியின் மேல் வடியும் நீர்;*** serum, a thin watery transparent liquid separated from blood - serum.

[ஊன் + நீர்.]

ஊனுடம்பு *ūṉuḍambu,* பெ. (n.) ***தசையினாலான வுடம்பு;*** body composed of flesh.

[ஊன் + உடம்பு.]

ஊனுருக்கி *ūṉ-urukki,* பெ. (n.) ***ஈளை நோய்;*** tuberculosis, consumption, as a wasting diease. (செ.அக.).

[ஊன் + உருக்கி.]

ஊனேறி *ūṉ-ēṟi,* பெ. (n.) ***கருப்பம்*** (சங்.அக.); embryo. (செ.அக.).

[ஊன் + ஏறி.]

ஊனொட்டி *ūṉoṭṭi,* பெ. (n.) 1. ***உடும்பு;*** iguana. 2. ***உடும்பிறைச்சி*** (சங்.அக.); flesh bengalensis. (செ.அக.).

[ஊன் + ஒட்டி. உடம்பு ஒட்டிக்கொள்வது.]

எ

எ[1] *e*, ***தமிழ் வண்ணமாலையில் ஏழாம் உயிரெழுத்தாகிய இதழ் குவியா முன்னண்ண உயிர்க்குறில்;*** seventh letter and vowel of the Tamil alphabet, the half-close front lax unrounded vowel in Tamil.

[இ → எ.]

இகரச்சுட்டு வேர்முதலானபோது வேரடித்திரிபுகளால் பெற்ற திரிபு வடிவமே எகரம். இகரவேர்முதற்பொருள்களை எகர வேர்முதலும் பெறும். ஆ, ஈ, ஊ எனும் நெடில் முச்சுட்டுகளே அ, இ, உ எனும் குறில் முச்சுட்டுகளானவாறு ஏகார ஓகார நெடில்கள் எகர ஒகரங்களாகக் குறுகவில்லை. எகர ஒகரங்கள் ஏகார ஓகாரங்களாக நீட்சியும் பெறவில்லை. இவற்றின் குறில்நெடில் தோற்றங்கள் ஒன்றற்கொன்று தொடர்பற்றவை. இவற்றின் விளக்கம் சொற்பிறப்பு நெறிமுறைகளில் காண்க.

அசையெழுத்துக்காலத் தொன்முது தமிழில் இரு உயிர்க்குறில் இணைந்து நெட்டுயிர் வடிவம் பெற்றதால் ஏகார ஓகாரங்கள் இஅ(ஏ) எனவும் உஅ(ஓ) எனவும் எழுதப்பட்டன. ஈரெழுத்துக்கு ஒருவடிவம் தந்து நெடிலாக்கியபின் எகர ஒகரக் குறிலெழுத்தை எழுதுவதற்குத் தனியெழுத்து படைக்காமல் ஏகார ஓகார நெட்டெழுத்தின் மேல் மெய்யெழுத்தைப்போல் புள்ளியிட்டுக் குறிலாக்கினர். இதனாற்றான் தொல்காப்பியர்

''மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்''
எகர ஒகரத் தியற்கையு மற்றே'' (தொல்.எழுத்:15,16)

என நூற்பா யாத்தார் என்க.

எ[2] *e*, ***ஏழென்னும் எண்ணின் குறி;*** symbol for the number 7 in Tamil Arithmetic. (செ.அக.).

[எ - தமிழ் எண்களில் ஏழுக்குரிய வரிவடிவம்.]

எ[3] *e*, இடை. (part.) ***ஓர் அகவினா;*** interrog. base of the interrg. pron. ''எவன் கொல்யான்'' (குறள்.1225). - பெ.எ. (pron.adj.) ஒரு புறவினா; interrog. prefix before a noun, meaning what, which. எக்கொற்றன் (நன்.67.உரை.). (செ.அக.).

ம., க., து., தெ., பட. எ.

[ஆ → யா → ஏ → எ.]

எ[4] *e*, பெ. (n.) ***ஐம்பறவைகளுள் கோழியைக் குறிக்கும் எழுத்து.*** (பிங்.); letter representing the cock, in pañja-paṭci.(astrol).(செ.அக.).

[சே → ஏ → எ. சே - உயிரினங்களுள் ஆண்பாற்குறித்த சொல். ஒ.நோ. சேய் = ஆண் குழந்தை.]

எஃகம் *eḵkam*, பெ. (n.) 1. ***கூர்மை;*** sharpness, pointedness. ''எஃகவேற் புங்கவன்'' (கந்தபு. அவைய.12). 2. ***உருக்காய்தப் பொது.*** (சூடா.); any weapon made of steel. 3. ***வாள்;*** sword. ''எஃகம் புலியுறை கழிப்ப'' (பதிற்றுப்.19). 4. ***கைவேல்;*** lance. ''புலவு வாயெஃகம்'' (பெரும்பாண்.119). 5. ***சக்கரம்.*** (திவா.); discus. 6. ***எறியீட்டி.*** (பிண்டிபாலம்); javelin. 7. ***வேல்.*** (சூலம்.) (கம்பரா.மந்தரை.11); trident. (செ.அக.).

ம. எக்கண்டம்.

[எய் → எய்கு → எஃகு + அம் - எஃகம். 'அம்' சொல்லாக்க ஈறு, எஃகம் = தாக்கும் படைக்கலம், கூரிய முனையுடைய கருவி.]

எஃகல் *eḵkal*, பெ. (n.) 1. ***நொய்தாக்கல்;*** pulverizing. 2. ***மேலே வாங்குதல்;*** drawing upwards. 3. ***எதிர் தாக்குதல்;*** opposing. 4. ***அவிழ்தல்;*** loosening. 5. ***ஏறுதல்;*** climbing.

[எஃகு → எஃகல் = தாக்குதல், வலிமை அழித்தல்.]

எஃகா-தல் *eḵ-kā-*, 6.செ.குன்றாவி. (v.t.) ***உருக்காக மாறுதல்;*** to turn into steel. acierate.

[எஃகு + ஆ.]

எஃகு[1]**-தல்** *eḵku-*, 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***பன்னுதல்;*** to pull with fingers, as cotton. எஃகின பஞ்சு போல (பதிற்றுப்.55,14,உரை.). 2. ***ஆராய்தல்;*** to search for, as the true meaning of a passage; to sift, scrutinize. வழுக் களைந்த எஃகிய இலக்கணங்களை. (தொல்.நூன் மரபு.1,உரை.). 3. ***எட்டுதல்;*** to reach up, stretch one self in reaching for a thing. அவனை எஃகிப்பிடி. (உ.வ.).

[இழு → எழு → எழுகு → எஃகு.]

எஃகு[2]**-தல்** *eḵku-*, 7.செ.கு.வி. (v.i.) 1. ***நெகிழ்தல்;*** to be yielding, pliable.(w.). 2. ***அவிழ்தல்;*** to become unfastened, unclasped, loosened. 3. ***வளைவு நிமிர்தல்;*** to spring back, rebound, as a bent bow. வளைந்த வில் எஃகிற்று (உ.வ.). 4. ***தாழ்ந் தெழும்புதல்;*** to lift, carry, as a well sweep. துலா அத்னைக் கொண்டெஃகிற்று. 5. ***ஏறுதல்*** (திவா.); to climb, mount, get up. 6. ***உருகுதல்;*** to melt. 7. ***வயிற்றுப் பக்கத்தை மேலெழும்பச் செய்தல்;*** lift up the abdomen. 8. ***பஞ்சை மேலெழச் செய்தல்;*** to draw the cotton up.

ம. எக்குக; க. எக்கு, எகரு; துட. பிடெக்; து. எக்கு, எக்கல்யுனி; தெ. எக்கு, எக்கின்சு, எகரு. எகயு; குவி. என்கலி; கூ. எகசி, என்கசி. *Gael.* lag, feeble; *A.S.* las, feeble; *Goth.* lasivs, weak; *Ice.* las, weakness, *E.* less. *Celt-w.* lag, loose; *Gr.* lagares, slack; *L.* lacus, loose; *E.* lag, slack, lak, loose.

[எள்கு → எஃகு (வே.க.20).]

எஃகு[3] *eḵku-*, பெ. (n.) 1. ***கூர்மை;*** edge, pointedness, keenness. ''ஒன்றுற்றக்கா லூராண்மை மற்றத னெஃகு'' (குறள்.773). 2. ***மதிநுட்பம்;*** acuteness of intellect, mental acumen. "இகலில ரெஃகுடையார் தம்முட்குழீஇ." (நாலடி.137). 3. ***உருக்கு.*** (சூடா.); steel. 4. ***போர்க்கருவி.*** (பிங்.); weapon in general. 5. ***வேல்;*** lance. ''எஃகொடு வாண்மாறுழக்கி'' (பரிபா.10,109). (செ.அக.).

[என்கு → எஃகு.]

எஃகுகோல் *ekku-kōl,* பெ. (n.) ***பஞ்சு கொட்டும் வில்*** (வின்.); bow for ginning cotton. (செ.அக.).

[எஃகு + கோல்.]

எஃகுச் செவி *ekku-c-cevi,* பெ. (n.) ***நுட்பமான செவிப்புலன்;*** acute hearing, sharp ears. எஃகுச் செவியும் நுண்ணுணர்வு முடையார் (திருமுருகு. 140,உரை.). (செ.அக.).

[எஃகு + செவி.]

எஃகுபடு-தல் *ekkupadu-,* 20.செ.கு.வி. (v.i.) ***இளகின நிலையை யடைதல்;*** to melt; to soften. உருகக் காய்ச்சி யெறிதற்கு எஃகுபட்டிருக்கும் உலையினையும் (சிலப்.15,210,உரை.).

[எஃகு + படு.]

எஃகுவெட்டிரும்பு *ekku-vettirumbu,* பெ. (n.) ***ஒரு வகையான இரும்புளி*** (C.E.M.); cold chisel. (செ.அக.).

[எஃகு + வெட்டு + இரும்பு.]

எஃகுறு-தல் *ekkuṟu-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***அறுக்கப்படுதல்;*** to be sawn through. "எஃகுற்றிருவேறாகிய.... மாவினறுவடி" (அகநா.29). 2. ***பின்னப்படுதல்;*** to be pulled thinly with the fingers, as cotton. "எஃகுறு பஞ்சித் துய்ப்பட டன்ன" (அகநா.217).

[எஃகு + உறு-தல்.]

எக்கச்சக்கம் *ekka-c-cakkam,* பெ. (n.) 1. ***தாறுமாறு;*** confusion, muddle, disorder. எக்கச்சக்கமாய்ப் பேசுகிறார். 2. ***ஒழுங்கின்மை;*** unevenness, irregularity. 3. ***இசகுபிசகு;*** fix, awkward, predicament. எக்கச்சக்கமாய் அகப்பட்டுக் கொண்டான்.

ம. எக்கச்சக்கம்; க. எக்கசக்க; து. எக்கச்சக்க. தெ. எகக சக்கெடு.

[இழுக்கு → எக்கு + சக்கம் - எக்கச்சக்கம். சக்கம் - எதுகை குறித்த இணைமொழி.]

எக்கடமை *ekkadamai,* பெ. (n.) ***வரிவகை*** (புது. கல்.513); tax.

[ஏர் + கடமை - எக்கடமை.]

எக்கண்டம் *ekkandam,* பெ. (n.) 1. ***முழுக் கூறு;*** whole, not made up of parts or pieces, as a monolith. உடல் எக்கண்டமாய் வீங்கி விட்டது (இ.வ.). 2. ***கண்ணோட்டமின்மை;*** unmindfulness, absence of courtesy, roughness, lack of consideration. அவன் எக்கண்டம் பண்ணுகிறான். (இ.வ.). (செ.அக.).

[ஒரு + கண்டம் - ஒருக்கண்டம் → ஒக்கண்டம் → எக்கண்டம் (முழுமையான ஒரே தொகுதி).]

எக்கண்டவலி *ekkandavali,* பெ. (n.) ***உடம்பு முழுமையும் ஏற்படும் வலி;*** pain all over the body. (சா.அக.).

[எக்கண்டம் + வலி.]

எக்கண்ட வீக்கம் *ekkandavīkkam,* பெ. (n.) ***உடம்பு முழுமையும் பரவிய வீக்கம்;*** swelling extending all over the body. (சா.அக.).

[எக்கண்டம் + வீக்கம்.]

எக்கம்[1] *ekkam,* பெ. (n.) ***சுரையாழ்*** (ஏகதந்திரி) ***என்னும் இசைக் கருவி;*** one-stringed musical instrument. "தண்ணுமை எக்கம் மத்தளி தாழ்பீலி" (திவ்.பெரியாழ். 3,4,1). (செ.அக.).

[ஒருக்கம் → ஒக்கம் → எக்கம்.]

எக்கம்[2] *ekkam,* பெ. (n.) 1. ***தாளம்*** (திவ்.திருப்பள்ளி. 9,வியா.பக்.41); cymbal. 2. ***ஒருதலைப் பறை வகை*** (திவ்.பெரியாழ்.3,4,1,ஸ்வா.); a kind of single-headed drum.

[ஒருக்கம் → ஒக்கம் → எக்கம்.]

எக்கமத்தளி *ekka-mattaḷi,* பெ. (n.) ***ஒரு வகை முழவு*** (திவ்.பெரியாழ்.3,4,1,வியா.); a kind of drum. (செ.அக.).

[எக்கம் + மத்தளி.]

எக்கர்[1] *ekkar,* பெ. (n.) 1. ***இடுமணல்;*** sandy place, sand heaped up, as by the waves. "எக்கர் மணலினும் பலரே." (மலைபடு.556). 2. ***மணற்குன்று;*** sand hill. "மட்டறல் நல்யாற்று எக்கர் ஏறி" (புறநா.177). 3. ***நுண்மணல்;*** fine sand.

[எக்கல் → எக்கர்.]

எக்கர்[2] *ekkar,* பெ. (n.) ***வேளாண்கருவிகள்;*** agricultural implements, apparatus for ploughing.(சேரநா.).

ம. எக்கரு.

[ஏர்க்கலம் → ஏக்கல் → எக்கர்.]

எக்கர்[3] *ekkar,* பெ. (n.) 1. ***சொரிதல்;*** pouring. 2. ***ஏறுதல்;*** climbing, ascending. 3. ***குவிதல்;*** dumping, heaping.

[எக்கல் → எக்கர்.]

எக்கர்[4] *ekkar,* பெ. (n.) ***இறுமாப்புடையவர்;*** proud, haughty persons.; "எக்கராம மண்கையருக்கு" (தேவா. 859,11). (செ.அக.).

[எக்கல் → எக்கர்.]

எக்கர்[5] *ekkar,* பெ. (n.) ***அவையல் கிளவி*** (பிங்.); vulgar expression or word not fit to be used in decent society. (செ.அக.).

[இடக்கர் → எக்கர் (கொ.வ.).]

எக்கரணம் *ekkaranam,* பெ. (n.) ***எருத்தின் உரப்பொலி;*** bellowing of a bull when about to attack another.

[எ → எக்ரு → எக்கரணம். எ - ஒலிக்குறிப்பு.]

எக்கல் *ekkal,* பெ. (n.) 1. ***மணல்மேடு;*** sand hill "கடலெக் கலி னுண்மணலிற் பலர்" (திவ்.திருவாய்.4,1,4). 2. ***நெருக்கம்*** (பிங்.); closeness, denseness. (செ.அக.).

ம. எக்கல்; தெ. எக்கலி (ஆற்றால் கொண்டு செல்லும் மணல்).

[எ → எக்கு → எக்கல் = மேலெழும்புதல், உயர்தல், மேடாதல், உயரமாய்க் குவிந்த மணற்குன்று.]

எக்கல் *ekkal,* பெ. (n.) 1. ***வயிற்றை மேலுக்கிழுத்தல்;*** drawing up of the stomach or of the belly; contracting the belly. 2. ***மேலுக்கேறச் செய்தல்;*** causing to rise up. 3. ***வற்றல்;*** contracting. (செ.அக.).

[எ → எக்கு → எக்கல்.]

எக்கலாதேவி *ekkalādēvi,* பெ. (n.) 1. ***ஒரு சிறு தெய்வம்;*** minor goddess. (சரபேந்திர.குறவஞ்சி. 55,13) 2. ***செவ்வாமணக்கு;*** red caster plant.

எக்கழுத்தம் *ekkaluttam,* பெ. (n.) ***இறுமாப்பு;*** pride; arrogance. (ஆ.அக.).

[ஏ + கழுத்து + அம் - ஏக்கழுத்தம் → எக்கழுத்தம் (நிமிர்ந்த தலை, இறுமாப்பு).]

எக்கழுத்தல் *ekkaluttal,* பெ. (n.) ***எக்கழுத்தம்*** பார்க்க; (ஆ.அக.); see *ekkaluttam.*

எக்களி[1]-த்தல் *ekkali-,* 4.செ.கு.வி. (v.i.) ***பெருகமகிழ் தல்;*** to be overjoyed. "எக்களித்து வாழ்கின்றேன் யான்" (அருட்பா.சிவநேச.78). (செ.அக.).

ம. எக்களிக்குக; க. எக்கு (முன்னங்காலால் நிற்றல்); து. எக்கல்யுனி (உடம்பை நீட்டுதல்); தெ. எக்கு; கூ. எகசி; குவி. என்கலி.

[ஏ → எ + களித்தல். ஏ = உயர்வு, மிகுதி.]

எக்களி[2]-த்தல் *ekkali-,* 4.செ.கு.வி. (v.i.) ***குமட்டுதல்;*** to nauseate, retch.

ம. எக்களிக்குக; க. அக்களிரு; தெ. அக்களின்சு; மால். அகெலெ.

[ஒக்களி → ஏக்களி → எக்களி.]

எக்களிப்பு *ekkalippu,* பெ. (n.) ***செருக்கோடு கூடிய மிகு மகிழ்ச்சி;*** excessive joy tinged with conceit. "எக்களிப் பாயவன் பக்கற் குரங்கிற்கு மென்னோ டெதிர்க்க லாச்சே." (இராமநா.உயுத்.31).

ம. எக்களிப்பு; க. அக்களிக; தெ. வெக்கலமு (மிகுதி).

[எக்களி → எக்களிப்பு.]

எக்காளம்[1] *ekkālam,* பெ. (n.) 1. ***ஓர் இசைக்குழலாகிய ஊதுகருவி;*** trumpet, a kind of clarinet. 2. ***தாளக்கருவி;*** a kind of cymbal.

ம. எக்காளம்; க. கெக்காளெ; தெ. கெக்காள.

[ஏ + காளம் - ஏக்காளம் → எக்காளம். ஏ = உயர்வு, நீட்சி. ஏக்காளம் = நீண்டகாளம் என்னும் இசைக்குழல் 2. தாளம் = காய்ச்சி உருக்கிச் செய்த தாளம்.]

எக்காளம்[2] *ekkālam,* பெ. (n.) 1. ***செருக்கு;*** pride. 2. ***இகழ்ச்சி;*** mockery.

[எக்களிப்பு → எக்காளம்.]

எக்காளை *ekkālai,* பெ. (n.) ***வெண்கலக் கருவி*** (அபி.சிந்.); a kind of cymbal. (செ.அக.).

[ஏ → எ + காளம் - எக்காளம் → எக்காளை. எக்காளம் - 2 பார்க்க; see ekkālam - 2.]

எக்கி *ekki,* பெ. (n.) ***நீர் முதலியன பீச்சுங் கருவி;*** syringe, squirt. "நீரெக்கி யாவையும்" (பரிபா.19,12). (செ.அக.).

[எஃகு → எக்கு → எக்கி.]

எக்கிடு-தல் *ekkidu-,* 20.செ.கு.வி. (v.i.) ***தாராளமாகக் கொடுத்தல்;*** to be profuse or liberal, as in giving alms or presents.

[ஏ → எக்கு + இடு - எக்கிடு = மிகுத்துக் கொடுத்தல்.]

எக்கு[1]-தல் *ekku-,* 7.செ.கு.வி. (v.i.) 1. ***குவிதல்;*** to be heaped up, as sand on the shore. 2. ***மேலெழும்புதல்;*** to rise, go up. "எடுத்தவே யெக்கி" (பரிபா.16,45).

[ஏ → எ → எக்கு.]

எக்கு[2]-தல் *ekku-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***தாக்கி யூடுருவுதல்;*** to force through, as one's way in a crowd. "கூட்டத்தை எக்கிக் கொண்டு வந்துவிட்டான். 2. ***உள்ளிழுத்தல்;*** to contract the abdominal muscles, as beggars do to show hunger, as persons while dressing round the waist, as a cow in refusing to give milk. "எக்கும் வயிறு" (திருக்காளத்.4,31,110). 3. ***மேலே செல்ல வீசுதல்;*** to squirt, throw up, as water. "நீரெக்குவோரும்" (பரிபா.11,57). 5. ***எட்டுதல்*** (வின்.); to stand on tip-toe. (செ.அக.).

ம. எக்குக; க. எக்கு, எகரு; துட. பிடெக்; து. எக்கு, எக்கல்யுணி; தெ. எக்கு, எக்கின்சு, எகுரு, எகயு, அக்கலின்சு; கூ. எகசி, என்கசி; குவி. என்கலி.

[ஏ → எ → எக்கு. எக்குதல் = மேலெழும்புதல், பீறிட்டெழுதல், உயர்தல்.]

எக்குத்தக்கு *ekku-t-takku,* பெ. (n.) ***எக்கச்சக்கம்;*** awkward predicament (Madr.). (செ.அக.).

[இழுக்கு → எக்கு + தக்கு.]

எக்குத்தப்பு *ekku-t-tappu,* பெ. (n.) ***எக்குத்தக்கு*** பார்க்க; see *ekku-t-takku.* (கொங்.வ.). (செ.அக.).

[இழுக்கு → எக்கு + தப்பு.]

எக்கே *ekkē,* இடை. (Int.) ***வருத்தக் குறிப்பு;*** exclamation of sorrow. "எக்கே யிதுவென்" (திவ்.பெரியதி.10,8,8). (செ.அக.).

[அக்கை → அக்கே → எக்கே (கொ.வ.) அம்மே, அன்னே என்றாற் போன்ற விளியிடைச்சொல்.]

எகத்தாளம் *egattāḷam,* பெ. (n.) ***எகத்தாளி*** பார்க்க; see *egattāḷi.*

க. எகதாள.

*[இகழ் → இகழ்த்தல் → இகழ்த்தாளம் → **க.** எகத்தாளம். → **த.** எகத்தாளம்.]*

எகத்தாளி *egattāḷi,* பெ. (n.) ***எள்ளி நகையாடுதல்;*** mockery, jest, ridicule.

க. எகதாளி, எக்கதாளி; **தெ.** கெதாளி,

[இகழ் → இகழ்தல் → இகழ்த்தல் → இகழ்த்தாளம் → இகழ்த்தாளி → எகத்தாளி.]

எகரம் *egaram,* பெ. (n.) ***ஏழாம் உயிர் எழுத்தாகிய 'எ';*** seventh short vowel of Tamil alphabet.

[எ + கரம். 'கரம்' எழுத்துச் சாரியை.]

எகனை *eganai,* பெ. (n.) 1. ***எதுகை;*** rhyme in Tamil. 2. ***பொருத்தம்;*** concord, harmony, agreement.

[எதுகை → எகனை.]

எகனை மொகனை *eganai-maganai,* பெ. (n.) ***எதுகை, மோனை;*** rhyme in Tamil. "எகனை மொகனையாப் பேசுகிறான்" (உ.வ.).

[எதுகை + மோனை - எதுகை மோனை - எதுகை ஒலிஇயைபு கருதி எகனை மொகனை எனத் திரிந்தது. (கொ.வ.).]

எகிர் *egir,* பெ. (n.) ***எயிறு;*** gums. (கொ.வ.).

ம. எகிறு; **தெ.** இகறு, சிகுறு.

[எயிறு → எகிர்.]

எகிர்க்கொழுப்பு *egir-k-koluppu,* பெ. (n.) ***பல்லீற்றின் வீக்கம்;*** swelling of the gums. (செ.அக.).

[எயிறு → எகிர் (கொ.வ.) + கொழுப்பு.]

எகிரு-தல் *egiru-,* 3.செ.கு.வி. **(v.i.)** ***துள்ளுதல்;*** to cut capers; to leap; to bounce. "சிரசுதா னெகிரி... வீழ்ந்து" (கோவ.கதை.6).

தெ. எகுரு; **க.** எகரு.

[எ → எக்கு + உறு - எக்குறு → எகுறு → எகிரு (கொ.வ.).]

எகின் *egin,* பெ. (n.) 1. ***அன்னம்*** (ஆ.அக.); swan. "மடலவிழ் மரைமாட் டெகினென" (சிவப்.பிரபந். சோணசைல.5). 2. ***கவரிமா*** (சூடா.); yak. 3. ***புளிமா*** (சூடா.); Indian hog-palm. 4. ***புளியமரம்*** (சூடா.); tamarind. 5. ***அழிஞ்சில்*** (மூ.அ.); sage-leaved alangium. 6. ***செம்மரம்*** (மூ.அ.); marking-mut tree. (செ.அக.).

[எழின் → எகின். உகின் → எகின்.]

எகினத்திலை *eginattilai,* பெ. (n.) ***புளியிலை;*** leaf of the tamarind tree. (சா.அக.).

[எகின் + அத்து + இலை. எகின் = புளி. 'அத்து' சாரியை.]

எகினம்[1] *eginam,* பெ. (n.) ***எகின்*** பார்க்க; see *egin.*

[உகின் → உகினம் → எகினம் (மு.தா.68).]

எகினம்[2] *eginam,* பெ. (n.) 1. ***நாய்;*** dog. (திவா.). 2. ***நீர் நாய்*** (சூடா.); otter. (செ.அக.).

[எயின் → எகின் → எகினம். எயின் = வேடன், வேட்டைநாய்.]

எகினன் *eginan,* பெ. (n.) ***நான்முகன்;*** Brahmā, who rides on a swan. "எகினனை யுதவிய கருமுகில்" (திருப்பு.609). (செ.அக.).

[எகின் + அன்.]

எங்கண் *e-ṅ-gaṇ,* கு.வி.எ. (adv.) ***எவ்விடம்;*** which place. "எங்கணேகுதி" (கந்தபு.பானுகோ.136).

[எங்கு → எங்கண்.]

எங்கணும் *e-ṅ-gaṇ-um,* கு.வி.எ. (adv.) ***எங்கும்;*** everywhere. "உலக மெங்கணும் வியக்குறும்" (கம்பரா. தாடகை.26). (செ.அக.).

ம. எங்ஙானும்.

[எங்கண் + உம்.]

எங்கள் *eṅgaḷ,* கு.வி.எ. (adj.) ***யாங்கள்*** (நாங்கள்) ***என்பதன் வேற்றுமையடி, யுருபை யேற்கும்போது அடையும் வடிவம்;*** oblique form of 1st pers.pl.occurs before case-endings. "எங்கள் பெருமானை யிமையோர் தொழுதேத்தும்" (தேவா.410,7). (செ.அக.).

ம. எங்கள்; **க.** நாவு, ஆம், எம்; **துட.** எம்; **கோத.** எம்; **குட.,** பட. எங்க; **து.** எங்குளெ; **தெ.** ஏமு, மேமு; **கொலா.** அம்; **நா.** ஆம்; **கோண்.** அம்மட், அம்மாட்; **கு.** ஆமு, ஆஞ்ஞு; குரு. எம், ஏம்; **மால்.** எம், ஏம்.

[யாம் → எம் + கள் - எங்கள். இனி, யாம் + கள் - யாங்கள் → எங்கள் என்றுமாம்.]

எங்களாழ்வான் *eṅgaḷāḻvāṉ,* பெ. (n.) ***திருவெள்ளறைச் சோழியர்*** (அபி.சிந்.); name of a sect of choliars belonging to Tiruveḷḷaṟai.

[எங்கள் + ஆழ்வான்.]

எங்கித்தை *eṅgittai,* கு.வி.எ. (adv.) ***எவ்விடத்தில்;*** in whatever place. "எங்கித்தைக் கன்மமெலாஞ் செய்தா லும்." (சி.சி.10,6). (செ.அக.).

[எங்குற்றை → எங்குத்தை → எங்கித்தை. (வே.க.104).]

எங்கு *eṅgu,* ***எவ்விடம்;*** where. "எங்குப்போ யுய்கேன்" (திவ்.பெருமாள்.5,5).

ம. எங்ஙு; **க.** எத்த, எல்லி; **கோத.** எய், எத்; **துட.** எத், ஏல்; **குட.,** பட. எல்லி; **து.** ஒளு, ஒள்ப; **தெ.** எந்து, எக்கட, எ்ட, ஏட, எசட, எகடு, எசொடு; **கொலா.** எத்தின்; **நா.** எத்தின்; **பர்.** எதொட், எத்தொல்; **கூ.** எம்பெ; **குவி.** இம்பிய; **கட.** ஏட்; **குரு.** எகே்ர், எகோ, ஒவோ, எகய்யா; **மால்.** இக், இகெனொ; **பிரா.** அராங், அராடேக்.

[எ + கண் - எக்கண் → எங்கண்.]

எங்கும் *eṅgum,* கு.வி.எ. (adv.) ***எவ்விடத்தும்;*** everywhere, in all directions. "எங்கும் போய்க் கரைகாணாது" (திவ்.பெருமாள்.5,5).

ம. எங்ஙும், **க.,** பட. எல்லியு; **தெ.** எக்கட.

[எங்கு + உம்.]

எங்குற்றை *eṅguṟṟai,* கு.வி.எ. (adv.) ***எவ்விடம்;*** which place.

[எங்கு → எங்குற்றை.]

எங்கே *eṅgē,* கு.வி.எ. (adv.) 1. ***எங்கு*** பார்க்க; see *eṅgu.* ''எங்கே காண்கே னீன்றுழா யம்மான்றன்னை'' (திவ்.திருவாய்.8,5,11). (செ.அக.). 2. ***எவ்விடம்*** (ஆ.அக.); whither, where, to which place.

ம. எங்ஙே; க., பட. எல்லி; தெ. எக்கட.

[எங்கு + ஏ. 'ஏ' பிரிநிலைப் பொருளில் வந்த இடைச்சொல்.]

எங்கை *eṅgai,* பெ. (n.) ***என் தங்கை;*** my younger sister. (திருக்கோ.373,உரை.). (செ.அக.).

[என் + கை - எங்கை. கை = சிறுமை, இளமை. இளையபெண்.]

எங்கைச்சி *eṅgaicci,* பெ. (n.) ***எங்கை*** பார்க்க; see *eṅgai.* (செ.அக.).

[என் + கை + அச்சி - எங்கைச்சி.]

எங்ஙன் *eṅṅaṉ,* கு.வி.எ. (adv.) 1. ***எங்ஙனம்*** பார்க்க; see *eṅṅaṉam.* ''இவைகளுிம்மை யணையா தகல்வ தெங்ஙன்'' (சிவதரு.சுவர்க்கநா.94). (செ.அக.). 2. ***எங்கே;*** where. (ஆ.அக.).

[எங்கண் → எங்கணம் → எங்கணம் → எங்ஙணம் → எங்ஙன்.]

எங்ஙனம் *e-ṅ-ṅaṉ-am,* கு.வி.எ. (adv.) 1. ***எவ்வாறு;*** how, in what manner. ''எங்ஙனம் மறந்து வாழ்கேன்'' (திவ்.திருமாலை.23). 2. ***எவ்விடம்;*** where, to what place. ''சிறுவர்க ளெங்ஙனம் போயினார்'' (கந்தபு.தக்கன்மக.52). (செ.அக.). 3. ***எத்தன்மை*** (ஆ.அக.); what manner.

ம. எங்ஙனெ; க. எந்த; பட. எத்தெ; துட. எகிக; கோத. என்ம், யேகெ; குரு. யெத்தெ; குட. யென்னனெ, என்னனெ; து. யென்ச, எஞ்ச; தெ. எட்லு; கொலா. எனன்; நா. எனன். பர். என்தி; குவி. இனகி; மால். இக்னா; பிரா. அமா.

[எங்கண் → எங்கணம் → எங்ஙணம் → எங்ஙன்.]

எங்ஙனே *e-ṅ-ṅaṉ-ē,* கு.வி.எ. (adv.) ***எங்ஙனம்*** பார்க்க; see *eṅṅaṉam.* ''எங்ஙனே நீர் முனிவது'' (திருவாய்மொழி நூ.45). (செ.அக.).

ம. எங்ஙனே.

[எங்ஙன் + ஏ.]

எச்சம்[1] *eccam,* பெ. (n.) 1. ***மிச்சம்;*** remainder, remnant, residue. ''வினை பகை யென்றிரண்டி னெச்சம்'' (குறள்.674). 2. ***பிறங்கடை*** (சந்ததி); posterity, offspring. ''ஆக்கம்... எச்சத்திற் கேமாப்புடைத்து'' (குறள்.112). 3. ***மகன்;*** son. 4. ***எச்சில்;*** orts, remains of food, spittle, whatever has come in contact with the mouth, as defiling. 5. ***பறவை முதலியவற்றின் கழிவு;*** dung of birds, lizards, etc. ''குரண்டமொன் றெச்ச நீங்குதலும்'' (நல்.பாரத.கௌசி.10). 6. ***நறுமணப் பொருள்*** (சிலப்.14,108,உரை.); aromatic substance. 7. ***குறைவு*** (சூடா.); deficiency, defect, lack. 8. ***பிறப்பிலே வரும் குறை;*** deformity at birth of which eight types are mentioned, viz., சிதடு, உறுப்பில் பிண்டம், கூன், குறள், ஊமை, செவிடு, மா, மருள். ''எண்பேரெச்சம்.'' (புறநா.28). 9. ***எச்சக்குறிப்பு;*** inference. ''எச்சமென்பது வெள்ளவேதுவினான்.... மழை நிகழ்வுரைத்தல்''. (மணி.27,33). 10. (இலக்.) ***தொக்குநிற்பது;*** ellipsis. ''பெயர்.... குறிப்புந் தந்த மெச்சங் கொள்ளும்'' (நன். 360). 11. ***உருபுகளும் முற்றுகளும் முடியும் பெயரும் வினையும்;*** noun or verb that completes the sense of case-endings, participles and finite verbs. ''எச்சப் பெயர் வினை யெய்துமீற்றினும்'' (நன்.357).

ம. எச்சம்; க. எரும்பு (கழிச்சல்); தெ. எருவு.

[எஞ்சு → எச்சு → எச்சம்.]

எச்சம்[2] *eccam,* எச். (parti) ***பெயரெச்ச வினையெச்சங்கள்;*** relative or verbal participle. ''ஈரெச்சம்'' (நன்.356).

ம. எச்சம்.

[எஞ்சு → எச்சு → எச்சம்.]

எச்சம்[3] *eccam,* பெ. (n.) ***செயல்*** (யாழ்.அக.); work.

[இய → இயத்தம் → எத்தம் → எச்சம். இய = செல், நட. இயத்தம் = நடப்பு, செயல்.]

எச்சமிடு-தல் *eccam-iḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***பறவைகள் மலங்கழித்தல்;*** to drop excrement, as birds. (செ.அக.).

[எஞ்சு → எச்சு → எச்சம் + இடு.]

எச்சரி-த்தல் *eccari-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***முன்னறிவித்து எச்சரிக்கை செய்தல்;*** to caution, warn, forewarn. (செ.அக.). 2. ***அறிவுரை கூறுதல்;*** to instruct, admonish. 3. ***விழிக்கப் பண்ணுதல்*** (ஆ.அக.); to awaken.

க. எச்சரிசு; து. எச்சரி; தெ. எச்சரின்க.

[எழு + தரு + கை - எழுதருகை = விழித்திருத்தல், விழிப்பாயிருத்தல். எழுதருகை → எழ்தருகை → எழ்சரிகை → எச்சரிக்கை → எச்சரி.]

எழுதரு என்னும் செந்தமிழ்ச் சொல் எழ்தரு என்னும் திசைச் சொல்லாகிப் பின்னர் எச்சரி எனத்திரவிடத் திரிபுற்றது. இதனைத் திரவிட மரூஉச்சொல் எனலாம்.

எச்சரிக்கை *eccarikkai,* பெ. (n.) 1. ***விழிப்புணர்வு;*** caution, circumspection, vigilance. அவன் எச்சரிக்கையுள்ளவன். 2. ***முன்னறிவிப்பு;*** prior notice, warning. பொது மக்களுக்கு எச்சரிக்கை கொடுத்தார்கள். 3. ***அரசர் போன்ற உயர்பேராளர் அவைக்கு வருதலையறிவித்துத் தக்க மதிப்புரவு காட்டுமாறு அறிவுறுத்தும் சொல்;*** exclamatory word enjoining care, silence, uttered in advance on the approach of a king, or any exalted personage; attention, called for in an assembly or court. ''மன்னவர்க ளெச்சரிக்கை பேச'' (இராமநா.பாலகா.18). 4. ***எச்சரிக்கை என்னும் சொல்லில் முடியும் தெய்வப்பாடல்;*** hymn sung before an idol, each of the verses of which ends in this word. 5. ***கருத்து;*** conception. 6. ***ஒரு சிற்றிலக்கியம்;*** a class of literary genre.

க. எழுதருவிகெ, எச்சரெ; **தெ.** எச்சரிக.

[எழுதருதல் > க. எழுதருவிகை → எழ்தரிகெ > தெ. எச்சரிக > த. எச்சரிக்கை. விழிப்பாயிருத்தல் என்று பொருள்படும் எழுதருதல் என்னும் தமிழ்ச் சொல் கன்னட மொழிவழியாகத் தெலுங்கில் எச்சரிக்கை எனத் திரிந்து தமிழில் வழக் கூன்றியது.]

எச்சரிப்பு *eccarippu,* பெ. (n.) 1. ***முன்னறிவிப்பு;*** caution, forewarning. (செ.அக.). 2. ***ஓர் பாட்டு;*** a kind of song. (ஆ.அக.).

[எச்சரி → எச்சரிப்பு.]

எச்சவாய் *ecca-vāy,* பெ. (n.) ***மலவாய்*** (வின்.); anus.

ம. எச்சவாய்.

[எச்சம் + வாய்.]

எச்சவும்மை *ecca-v-ummai,* பெ. (n.) ***விடுபட்டசெய்தியை உய்த்துணர வைக்கும் 'உம்' என்னும் இடைச்சொல்;*** particle 'um' suggestive of something to be understood. சாத்தனும் வந்தான்.

[எச்சம் + உம்மை - எச்சவும்மை. எஞ்சிய பொருளுணர்த்தும உம் என்னும் இடைச்சொல்.]

எச்சில் *eccil,* பெ. (n.) 1. ***உமிழ்நீர்;*** saliva, spittle. 2. ***உமிழ்நீர்பட்டுத் தூய்மை அறுவது*** (அசுத்தமாவது); anything defiled by contact with the mouth. 3. ***தூய்மை இல்லாதது*** (அசுத்தமானது); anything defiled. அவனிடமிருந்து என்வாய் எச்சிலாயிற்று. 4. ***உண்டு கழித்த மிச்சில்;*** orts, refuse of food, leavings. "நாய் பிற ரெச்சிற் கிமையாது பார்த்திருக்கும்" (நாலடி.345). 5. ***உடற்கழிவுகள்*** (ஆசாரக்.8); excretions from the body, as faeces, urine, semen.

ம. எச்சில்; **க.** எஞ்சல்; **கோத.** எச்ல்; **துட.** இசில்; **குட.** எச்சி; **து.** எஞ்சல்; **தெ.** என்கிலி, எங்கிலி; **கோண்.** எஞ்சு, எங்கூல்; **குரு.** எங்நீரை.

[எஞ்சல் → எஞ்சில் → எச்சில்.]

எச்சில் கழி-த்தல் *eccil-kaḻi-,* 4.செ.கு.வி. (v.i.) ***எச்சிலிடத்தைத் தூய்மை செய்தல்*** (வின்.); to clean the spot where one has taken food. (ஆ.அக.).

[எஞ்சல் → எஞ்சில் → எச்சில் + கழி.]

எச்சிலன் *eccilaṉ,* பெ. (n.) ***இவறன், ஈயாதவன்*** (யாழ்.அக.); miser. (ஆ.அக.).

[எச்சில் + அன்.]

எச்சிலாக்கு-தல் *eccil-ākku-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***உண்ணும் போது எச்சில் படச் செய்தல்;*** to defile food or anything else either by bringing it into contact with the mouth or by touching it with the hand that has already come into contact with the mouth.

க. எஞ்சலிசு.

[எச்சில் + ஆக்கு.]

எச்சிலிடு-தல் *eccil-iḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***உண்டவிடத்தைச் சாணமிட்டு மெழுகுதல்;*** to clean the place where food has been eaten, by smearing cowdung and water.

[எச்சில் + இடு.]

எச்சிலிலை *eccil-ilai,* பெ. (n.) ***உணவு உண்ணப்பட்ட இலை;*** leaf-plate from which food has been eaten.

க. எஞ்சலெலெ.

[எச்சில் + இலை.]

எச்சிலூண் *eccilūṇ,* பெ. (n.) ***உண்டு மிஞ்சிய வுணவு;*** refuse or remains of food. (சா.அக.).

[எச்சில் + ஊண்.]

எச்சிலூறல் *eccil-ūṟal,* பெ. (n.) ***எச்சில் வாயி லூறுதல்;*** secretion of saliva. (செ.அக.).

[எச்சில் + ஊறல்.]

எச்சிலெடு-த்தல் *eccil-eḍu-,* 4.செ.கு.வி. (v.i.) ***எச்சிலிலையை யகற்றுதல்;*** to remove the leaf-plate after one has eaten from it.

[எச்சில் + எடு.]

எச்சிற்கல்லை *eccir-kallai,* பெ. (n.) ***உண்டதையலிலைக்கலம்;*** plate of leaves sewn together from which food has been eaten.

[எச்சில் + கல்லை.]

எச்சிற்குழி *eccir-kuḻi,* பெ. (n.) ***எச்சிலிலையிடும் பள்ளம்;*** pit in the backyard of a house for throwing used leaf-plates.

ம. எச்சில் குழி; **க.** எஞ்சலுருணி; **தெ.** எங்கிலி குந்த.

[எச்சில் + குழி.]

எச்சிற்படு[1]-த்தல் *eccir-paḍu-,* 18.செ.குன்றாவி. (v.t.) 1. ***எச்சிலாக்கு*** பார்க்க; see *eccil-ākku-.* 2. ***புண்படுத்தல்;*** to cause a sore, to injure. "இரும்பெச்சிற் படுத்த மார்பர்" (சீவக.2353). 3. ***கன்னிமை கெடுதல்;*** to deprive a damsel of her virginity, either by force or with her consent (W.).

[எச்சில் + படு.]

எச்சிற்படு[2]-தல் *eccir-paḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***உமிழ்நீர்பட்டுத் தூய்மை கெடுதல்;*** to become defiled, as food by contact with the mouth.

[எச்சில் + படு.]

எச்சு[1] *eccu,* பெ. (n.) ***குறை;*** defect. "எச்சுநாட்டங் கொடு" (இரகு.குறைகூ.29).

[எஞ்சு → எச்சு.]

எச்சு[2] *eccu,* பெ. (n.) 1. ***மிகுதி;*** excess, increase. 2. (இசை) ***உயர்ந்த இசை;*** high pitch, (in music) opp.to. தக்கு. அவன் எச்சிலே பாடுகிறான்.

ம., க., தெ., பட. எச்சு.

[எஞ்சு → எச்சு. எஞ்சு = மிகுதல்.]

எச்சு³-தல் *eccu-*, 5.செ.குன்றாவி. (v.t.) ***வணங்குதல்;*** to worship. "பெருமானை யெச்சுமடியார்கட் கில்லையி டர் தானே". (தேவா.410,10).

[ஏத்து → எத்து → எச்சு.]

எச்சோறு *eccōṟu*, பெ. (n.) ***எற்சோறு*** பார்க்க; see *eṟcōṟu*. (I.M.P.Sm.2).

[எற்சோறு → எச்சோறு.]

எசப்பு *ešappu*, பெ. (n.) ***பொருள் விற்பனையில் இருதரத்தாரையும் இசைவிக்கும் முயற்சி; தரவாளித் தொழில், தரவு;*** brokerage.

[இசை → இசைப்பு → எசப்பு.]

எசப்புச் செலவு *ešappu-c-celavu*, பெ. (n.) ***தரகு கொடுத்தற்குப் பிடிக்குஞ் செலவு;*** brokerage expenses in business (Loc.).

[இசைப்பு → எசப்பு + செலவு.]

எசர் *ešar*, பெ. (n.) ***உலைநீர்;*** water in a pot set over the fire for boiling rice. (இ.வ.).

க. எசர்; தெ. எசரு; பட. எசரு.

[பெயல் → பெசர் → எசர். (கொ.வ.).]

எசர்கட்டு-தல் *ešar-kaṭṭu-*, 5.செ.குன்றாவி. (v.t.) ***உலை நீர் வைத்தல்*** (இ.வ.); to keep a pot of water over the fire for boiling rice.

[எசர் + கட்டு. எசர் கட்டுதல் என்னும் திசைச்சொல்லாட்சி தமிழுக்குத் தேவையில்லாதது.]

எசலாட்டம் *ešalāṭṭam*, பெ. (n.) ***இகலாட்டம்*** பார்க்க; see *igalāṭṭam*.

[இகலாட்டம் → எகலாட்டம் → எசலாட்டம்.]

எசெலி *ešali*, பெ. (n.) ***முரணுகை;*** contradicting.

[இகலி → எகலி → எசலி. (கொ.வ.).]

எஞ்சல்¹ *eñjal*, பெ. (n.) 1. ***குறை;*** defect, blemish. "எஞ்சலி லமரர் குலமுதல்" (திவ்.திருவாய்.3,6,9). 2. ***சுருங்குதல்;*** contracting, shrinking, 3. ***அற்றொழிகை;*** extinction. "வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்" (குறள்.44). (செ.அக.).

க. எஞ்சல்; தெ. எங்கிலி; **கோண்.** யெங்குல்; **மால்.** எங்கே.

[இஞ்சு → எஞ்சு → எஞ்சல்.]

எஞ்சல்² *eñjal*, பெ. (n.) 1. ***மிஞ்சுதல், அதிகரித்தல், மிகுதல்;*** exceeding, expanding. 2. ***மீதியாதல்;*** remaining. (சா.அக.).

[எ → எச்சு → எஞ்சு → எஞ்சல்.]

எஞ்சலார் *eñjalār*, பெ. (n.) ***புதியவர்;*** strangers. "எஞ்சலார் சொன்ன தெவன்வாழி தோழி" (சிலப்.18,24).

[எஞ்சு + அல் - எஞ்சல்² + ஆர். எஞ்சல் = மிகுதல், செருக்கு.]

எஞ்சலி-த்தல் *eñjali-*, 4.செ.குன்றாவி. (v.t.) ***எஞ்சல், குறைவு செய்தல்;*** to bring discredit upon, to cause degradation, as of a person; to cause discomfiture. "படைக்கடலா லமரேசனை யெஞ்சலித்திட" (ஞானவா. தாமவியாள.21).

[எஞ்சல் = எஞ்சலி.]

எஞ்சாமை *eñjāmai*, பெ. (n.) ***முழுமை;*** entirety, totality.

[எஞ்சு + ஆ + மை - எஞ்சாமை. 'ஆ' - எ.ம.இ.நி. "மை" - பண்புப் பெயரீறு.]

எஞ்சிநில்(ற்)-த(ற)ல் *eñji-nil-*, 14.செ.கு.வி. (v.i.) 1. ***தொக்குநிற்றல்;*** to be elliptical, as a word. "சொல்லென் னும் முதனிலை மாத்திரை தன்னுள்ளேயே எஞ்சிநிற்ற லல்லது" (தொல்.சொல்.441,உரை.). 2. ***ஒழிந்து நிற்றல்;*** to remain, to be left. உணர்த்துதற்கு இடமின்றி எஞ்சிநின்ற சொல்லிலக்கணங்களை. (தொல்.சொல். 397,உரை.).

[எஞ்சு → எஞ்சி + நில்.]

எஞ்சியசொல்லினெய்தக்கூறல் *eñjiya-šolliṉ-eyda-k-kūṟal*, பெ. (n.) ***சொன்னவற்றால் சொல்லாதனவற்றை யும் உய்த்தறியுமாறு கூறுகையாகிய ஓர் உத்தி.*** (நன்.14); (Gram). stating a fact in such a way as to suggest by inference other things not specifically mentioned. One of 32 Utti.

[எஞ்சிய + சொல்லின் + எய்த + கூறல்.]

எஞ்சு¹-தல் *eñju-*, 15.செ.கு.வி. (v.i.) 1. ***குறைதல்;*** to lack, diminish, to be deficient. "எஞ்சா வின்னரு ணுண்டுளி கொள்ள" (திருவாச.3,76). 2. ***கெடுதல்;*** to be spoiled, injured, marred. "வகையெழில் வனப்பெஞ் சு" (கலித்.17,13). 3. ***ஒழிதல்*** (குறள்.382); to cease. 4. ***(இலக.) தொக்குநிற்றல்;*** to be elliptical, as a word-to. "சொல்லளவல்ல தெஞ்சு தலின்றே" (தொல். சொல்.441). 5. ***செய்யாதொழிதல்;*** to refrain. "இறுதி பயப்பினும் எஞ்சாது" (குறள்.690).

[இஞ்சு → எஞ்சு. இஞ்சுதல் = உறிஞ்சுதல், உள்ளிழுத்தல், குறைதல், கெடுதல்.]

எஞ்சு²-தல் *eñju-*, 15.செ.கு.வி. (v.i.) 1. ***மீதியாதல்;*** to remain, to be left behind, to survive. "எஞ்சினா ரிவ்வுலகத்தில்" (நாலடி.21). 2. ***கடத்தல்;*** to transgress, go beyond, overstep. "இரக்கு வாரே னெஞ்சிக் கூறேன்" (பதிற்றுப்.61,11).

[எ → எச்சு (உயர்தல், மிகுதல், மீதியாதல்).]

எஞ்சு³-தல் *eñju-*, 5.செ.குன்றாவி. (v.t.) ***தனக்குப்பின் உரிமையாக வைத்தல்;*** to leave behind, as to one's

heir. "நின் பெருஞ் செல்வம் யார்க்கெஞ்சுவையே" (புறநா.213).

[எஞ்சு[2] → எஞ்சு[3]]

எஞ்ஞான்றும் *eññāṉṟum,* கு.வி.எ. (adv.) ***எக்காலமும்;*** always, ever. "வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்" (குறள்.44).

[எ + ஞான்று + உம்.]

எட்கசி *eṭ-kaši,* பெ. (n.) ***எள்ளாற் செய்யப்பட்டதோர் உணவு, எள்ளுருண்டை*** (சிலப்.12,37,உரை); cake prepared with sesame seed.

[எள் + கசி.]

எட்கசிவு *eṭ-kašivu,* பெ. (n.) ***எட்கசி*** பார்க்க. (சிலப்.5-68,உரை.); see *eṭkaši.*

[எள் + கசிவு.]

எட்கடை *eṭkaḍai,* பெ. (n.) ***எட்கிடை*** பார்க்க; see *eṭ-kiḍai.*

[எள் + கிடை - எட்கிடை → எட்கடை.]

எட்கிடை *eṭ-kiḍai,* பெ. (n.) ***எள்ளளவு இடம்;*** space occupied by a sesame seed. "எட்கிடை... மாத்திரை வெளிவிட் டிழைநூல்சுற்றி" (கடம்ப.பு.இல்லாசங்கிரக. 476).

[எள் + கிடை. கிடை = கிடத்தற்குரிய இடம்.]

எட்கிடை, எள்ளிடை, எட்பகவு, எள்ளளவு என்னும் சொற்கள் மிகக் குறுகிய அடிப்படை நீட்டலளவு குறித்தவை.

எட்கோது *eṭ-kōdu,* பெ. (n.) ***எள்ளின் மேற்றோல்*** (சங்.அக.); sesame husk.

[எள் + கோது.]

எட்சத்து *eṭ-cattu,* பெ. (n.) ***நல்லெண்ணெய்*** (தைலவ. தைல.134); oil extracted from sesame.

[எள் + சத்து.]

எட்சோறு *eṭcōṟu,* பெ. (n.) ***எள்ளிட்டு ஆக்கிய சோறு*** (யாழ்.அக.); boiled rice mixed with powdered sesame seeds.

ம. எள்ச்சோறு.

[எள் + சோறு.]

எட்ட *eṭṭa,* கு.வி.எ. (adv.) ***சேய்மையாக;*** far off. further away, out of the way. எட்டநில் (உ.வ.).

[எ → எட்டு → எட்ட. ஏ → எ (உயரம், நீட்சி, தொலைவு).]

எட்டக்கட்டு-தல் *eṭṭa-k-kaṭṭu-,* 5.செ.கு.வி. (v.i.) ***நெருங்கி வாராதிருத்தல்;*** to keep away, hold off. மழை எட்டக் கட்டிவிட்டது (இ.வ.).

[எட்ட + கட்டு.]

எட்டக்கரம் *eṭṭakkaram,* பெ. (n.) 1. ***திருமால் வழிபாட டிற்கான எட்டெழுத்தாலாகிய மந்திரம்;*** mantra or prayer of eight syllables in honour of Viṣṇu. "அரங்க னெட்டக்கரமே" (அஷ்டப்.திருவரங்கத்தந்.27). 2. ***எட் டெழுத்து*** பார்க்க; see *eṭṭeḻuttu.*

[எட்டு + அக்கரம்.]

எட்டடிச்சுவடன் *eṭṭaḍi-c-cuvaḍaṉ,* பெ. (n.) ***எட்டடி விரியன்*** பார்க்க; see *eṭṭaḍi-viriyaṉ.*

ம. எட்டடிச்சுவடன்.

[எட்டு + அடி + சுவடன்.]

எட்டடிப்பறவை *eṭṭaḍi-p-paṟavai,* பெ. (n.) ***சிம்புள்;*** fabled eight-footed bird. "எட்டடிப் பறவை மூக்கிடை யுரிஞ்சிடும்" (சேதுபு.கந்த.58).

[எட்டு + அடி + பறவை - எட்டடிப்பறவை. தொன்முது காலத்தில் எட்டடி நீளமுள்ள கொடிய பறவை இருந்திருக்க லாம். எட்டடியை எட்டு கால்களாகப் பிற்காலத்தார் பிறழக் கருதி எண்காற்புள் எனப் புதுச்சொல் படைத்தது ஒவ்வாத கற்பனையாகும்.]

எட்டடிமான் *eṭṭaḍimāṉ,* பெ. (n.) ***எண்கால் வருடை*** பார்க்க; see *eṇkāl-varuḍai.*

ம. எட்டடிமான்.

[எட்டு + அடி + மான்.]

எட்டடிவிரியன் *eṭṭaḍi-viriyaṉ,* பெ. (n.) ***விரியன் பாம்பு வகை;*** a viper.

ம. எட்டடிவிரியன்.

[எட்டு + அடி + விரியன். கடித்ததும் எட்டடி போதற்கு முன் ஆளைக் கொன்றுவிடும் நச்சுத் தன்மை வாய்ந்தது என்று கருதப்பட்டதால் பெற்றபெயர் என்பர். எட்டடி நீளம் குறித்த தாகலாம்.]



எட்டடிவிரியன் பாம்பு

எட்டம்[1] *eṭṭam,* பெ. (n.) 1. ***உயரம், தொலைவு*** (யாழ்.அக.); height, distance. 2. ***நீளம்;*** length. "பின்பு கொண்டுவந்திணைக்க எட்டம் போராமையாலே" (ஈடு.4,1,5).

க. எத்தர; E. height.

[ஏண் → எட்டு + எட்டம்.]

எட்டம்[2] *ettam,* பெ. (n.) ***அடைதற் கெளிதாந்தன்மை;*** accessibility.

[அண் → அட்டு → எட்டு → எட்டம்.]

எட்டம்பற்று-தல் *ettam-parru-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***கிடைத்தல்*** (யாழ்.அக.); to be available. (செ.அக.).

[எட்டம் + பற்று.]

எட்டமன் *ettaman,* பெ. (n.) ***திருநெல்வேலி மாவட்டம் எட்டையபுரத்து நிலக்கிழாரின் பட்டப்பெயர்;*** title of the Zamindars of Ettaiyapuram in the Tinnevelly District." குமார வெட்டமனைச் சேர" (தனிப்பா.1,317,7)

[எட்டயபுரம் → எட்டம் → எட்டமன்.]

எட்டர் *ettar,* பெ. (n.) ***அரசனுக்கு நாழிகைக் கணக்குக் கூறும் மங்கலப்பாடகர்*** (திவா.); panegyrists in ancient royal households whose duty it was to tell the hours to the king.

[ஏடு → ஏட்டர் → எட்டர்.]

எட்டவிடு-தல் *etta-vidu-,* 18.செ.குன்றாவி. (v.t.) 1. ***பிறரைக் கொண்டு செய்தி தெரிவித்தல்;*** to communicate, inform. அவனுக்கு இந்தச் செய்தியை எட்டவிடு. 2. ***பரப்புதல்;*** to spread over. "எட்டவிட்ட விடுமண லெக்கர்" (தேவா.360,8).

[எட்ட + விடு.]

எட்டன்[1] *ettan,* பெ. (n.) ***எட்டமன்*** பார்க்க; see *ettaman.* "வேங்கடேசுரெட்டன்" (தனிப்பா.1,314,1).

[எட்டமன் → எட்டன்.]

எட்டன்[2] *ettan,* பெ. (n.) ***மூடன்*** (இ.வ.); boor, fool.

க. எட்ட; **தெ.** எட்டெ.

[இழுதை → எழுதை → எட்டன்.]

எட்டன்மட்டம் *ettan-mattam,* பெ. (n.) (இசை) ***தாள வகை*** (சிலப்.3,16,உரை.); time-measure in music.

[எட்டன் + மட்டம்.]

எட்டாக்கை *etta-k-kai,* பெ. (n.) ***தொலைவான இடம்;*** distant place, place out of reach. அவன் எட்டாக்கையில் இருக்கிறான். (இ.வ.).

[எட்டு + ஆ + கை - எட்டாக்கை. 'ஆ' - எ.ம.இ.நி.]

எட்டாம் *ettam,* கு.பெ.எ. (adj.) ***எட்டின், எட்டாவது எண்ணின்;*** the eighth.

ம. எட்டாம்.

[எட்டு + ஆம்.]

எட்டாமாறல் *ettamaral,* பெ. (n.) ***எட்டாங்காய்ச்சல்*** பார்க்க (சா.அக.); see *ettan-kayccal.*

எட்டாமிடம் *ettamidam,* பெ. (n.) ***கோள்களின் எட்டாம் இடம்;*** eighth house of the Zodiac. (சேரநா.).

ம. எட்டாமிடம்.

[எட்டு + ஆம் + இடம்.]

எட்டாமுட்டி *etta-mutti,* பெ. (n.) ***அகலக் குறைவு*** (மதி.க.1,76); insufficient width. இந்த வேட்டி, உயர மாக இருக்கும் அவருக்கு எட்டாமுட்டியாக இருக்கிறது. (உ.வ.).

[எட்டு + ஆ + முட்டி - எட்டாமுட்டி. 'ஆ' எ.ம.இ.நி. முட்டு → முட்டி (குறைவானது).]

எட்டி[1] *etti,* பெ. (n.) ***நச்சுவித்துகளைக் கொண்டமரம்;*** strychnos nux-vomica; strychnine-tree. m.tr. "எட்டி பழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன?" (பழ.).

ம. எட்டி; **க.** இட்டி, இட்டங்கி, இட்டெ, ஈடங்கி.

[இள் → இட்டு → இட்டி → ஏட்டி.]

காஞ்சிரங்காயை எட்டிக்காய் எனப் பொருள் கொண்டு எட்டி யைக் காஞ்சிரமரம் எனப் பிறழப் பொருள் கொள்வது தவறு. இரண்டும் வெவ்வேறு மரங்கள்.

எட்டி[2] *etti,* பெ. (n.) ***எண்வகைப் பண்புகளால் சிறந்த வணிகனுக்கு அரசன் வழங்கும் மதிப்புரவு விருது;*** title of distinction conferred on persons of the merchant community encouraging their eight noble qualities. "எட்டி சாயல னிருந்தோன் றனது" (சிலப்.அடைக்கல.193).

ம. எட்டி; **பிரா.** செட்டி; **மரா., குச்.** சேட்.

[எண் → எட்டு → எட்டி = எட்டுவகை உயர்பண்புகள் கொண்ட வணிகன்; நேர்மையும் வாய்மையும் வாய்ந்தவன்.]

நாட்டின் பொருளியல் வாழ்க்கைக்குக் குலைவு நேரா வண ணம் நேர்மையாக வாணிகத் தொழில் நடைபெறுவதற்காகப் பண்டுதொட்டே தமிழ்வேந்தர் வணிகர்க்கு 'எட்டி' என்னும் பட்டம் தந்து, எட்டிப்பூ எனும் பொற்பூச்சூட்டி, எட்டிப்புரவு என்னும் நிலக்கொடை யளித்துப் பாராட்டினர். இதனை வாகைத் திணையின் உட்பிரிவாக "எட்டு வகை நுதலிய அவையத்தானும்" என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அரசனின் எண்பேராயத்தில் சிறந்த வணிகரும் இடம் பெற்றி ருந்தனர்.

"அழுக்கா றிலாமை யவாவின்மை தூய்மை
ஒழுக்கம் குடிப்பிறப்பு வாய்மை இழுக்காத
நற்புலமை யோடு நடுவு நிலைமையே
கற்புடைய எட்டுறுப்புக் காண்" (வீரசோ.பொரு.19,உரை.)

மேற்கண்ட எட்டுப் பண்புகளும் அரசனின் பேரவையில் இடம் பெறுவார்க்கு வேண்டிய (அவையமுல்லைத் துறைக்குரிய) நற்பண்புகளாம்.

எட்டி[3] *etti,* பெ. (n.) 1. ***வணிகக் குலத்துப் பெண்கள் பெறும்பட்டம்;*** title taken by the wife, or daughter of a vaiśya on whom the title of etti has been conferred. "எட்டி காவிதிப் பட்டந்தாங்கிய மயிலியன்மாதர்" (பெருங்.இலாவா.3,144). 2. ***வணிகக்குலம்*** (திவா.); vaiśya caste.

ம. எட்டி; *Pkt.* sēṭṭi.

[எட்டு → எட்டி.]

எட்டிப்பட்டம் பெற்ற வணிகர் குலத்தாரும் மகளிரும் அப்பெ யராலேயே அழைக்கப்பட்டனர். இது வடபுல மொழிகளில் சேட் என்றும்,தென்னக மொழிகளில் செட்டி எனவும் திரிந்தது.

எட்டிக் கசப்பு *etti-k-kašappu,* பெ. (n.) *மிகக் கசப்பு;* extreme bitterness. (சா.அக.).

[எட்டி + கசப்பு.]

எட்டிக்காய் *etti-k-kāy,* பெ. (n.) *எட்டி மரத்தின் காய். இது உருண்டையாகவும் மென்மையாகவும் சிறிய ஆப்பிள் பழமளவுள்ளதாயுமிருக்கும்;* berry of the nux-vomica tree. It is round smooth, and about the size of a small apple. (சா.அக.).

[எட்டி + காய்.]

எட்டிநோக்கு-தல் *etti-nōkku-,* 7.செ.கு.வி. (v.i.) 1. *அண்ணாந்து பார்த்தல்;* to look up. ''இஃதிட்டோ ளார்கொலென் றெட்டி நோக்கினன்'' (பெருங். நரவாண.8,82). 2. *தாவிப்பார்த்தல்;* to stretch oneself and see.

[எட்டி + நோக்கு.]

எட்டிப்பழம் *etti-p-palam,* பெ. (n.) *எட்டிமரத்தின் பழம்;* etti fruit. (சா.அக.).

[எட்டி + பழம்.]

எட்டிப்புரவு *etti-p-puravu,* பெ. (n.) *வாணிகத்தாற் சிறந்தோர்க்கு அரசன் கொடுத்த நிலம்* (நன்.158, மயிலை.); land presented by the king to eminent merchants.

[எட்டி + புரவு.]

எட்டிப்பூ *etti-p-pū,* பெ. (n.) *எட்டிப் பட்டம் பெற்ற வணிகர்க்கு அரசர் கொடுக்கும் பொற்பூ;* golden flower gifted by a king to the distinguished member of the vaišya community on whom the title of etti has been conferred. ''எட்டிப்பூப்பெற்று'' (மணிமே. 22-115).

ம. எட்டிப்பூ.

[எட்டி + பூ.]

எட்டி மரம் *etti-maram,* பெ. (n.) *கைப்புத் தன்மையுள்ள மரம்;* strychnine tree, nux-vomica.

க. இட்டி.

[எட்டி + மரம்.]



எட்டி மரம்

எட்டில்பத்தில் *ettil-pattil,* கு.வி.எ. (adv.) 1. *எட்டு அல்லது பத்து நாளில்;* in eight or ten days. 2. *இடையிடையே* (யாழ்.அக.); now and then, occasionally.

[எட்டில் + பத்தில்.]

எட்டு¹-தல் *ettu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. *ஒன்றையடைய நெருங்குதல்;* to reach up to. ''பிறையை யெட்டினள் பிடித்து'' (கம்பரா.சித்திர.22). 2. *கிட்டுதல்;* to come within reach, approach. கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை. 3. *அகப்படுதல்;* to be attained, realised, gained. ''முன்னம் பலர் .... முடிவுதேடவு மெட்டா'' (பாரத.அருச்சுனன்றீர்.18). 4. *புலப்படுதல்;* to be with mental grasp, within the powers of comprehension. ''எண்ணுதற்கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி'' (திருவாச.1,22). 5. *நீர் கழுத்துக்கு மேற்படாதிருத்தல்* (யாழ்ப்.); to be so shallow, as water, as not to submerge one. 6. *தாவிப் பாய்தல்;* to spring, leap up or forward. ''எட்டின வயவரியென'' (இரகு.திக்குவி.89). 7. *விலகுதல்;* to go out of reach, move away from. ''எட்டியன்ன மிரிந்துபறக்க'' (அரிச்.பு.நாட்டு.51). 8. *நீளம் போதியதாதல்;* to be sufficient in length so as to reach, as a rope, the water in a well. கிணற்றுக்கு இந்தக் கயிறு எட்டாது.

ம. எட்டு. க. எண்டு.

[அண் → அட்டு → எட்டு.]

எட்டு² *ettu,* பெ. (n.) 1. எட்டு என்னும் எண்ணுப்பெயர், ஏழின்மேல் ஒன்று; number eight. 2. ***'அ' என்னும் எண்ணுக்குறியீட்டுக்குரிய தமிழ் எண்ணுப் பெயர்;*** name of the eigth numerical number 'அ' in Tamil.

மறுவ. எண், எள்.

ம. எட்டு; **க.** எண்ட்டு; **து.** எண்ம; **தெ.** எனிமிதி; **துட.** ஒட்; **பட.** எட்டு, யெட்டு; **குட.** எட்டீ; **கொலா.** எண்மதி, எனுந்தி, என்மிதி; **கோண்.** அட்மூர், அட்முல், என்மிதி; **பர்., கூ.** அட்; **குரு., மால்.** ஆட்; **கோத.** எட்; **குரும்., இரு.** யெட்டு; **பிரா.** கச்ட்; **மபு.** அட்; **கைத்.** யெட்; **எடு.** யெட்டு; **செஞ்.** அட்.

Nep (Thulungya). yen. *Afri* (Nubi) eddo; *Tib.* (Tharu, kuswar) ath; *Sinh.* atai; *Nep* (pakya) ath. *Jap* yats, yatsu, hachi. *L.* octo; *Goth.* ahtan; *Gk.* okto; *G.* acht; *OHG.* ahto; *Dut.* acht; *Iri.* hocht; *Sp.* ocho; *F.* huit; *OF.* eahta; *E.* eight; *Circ.* yid; *It. Port.* otto; *Norw.* atte *Port.* oito; *Rum.* opt; *Swed.* atta; *Dan. otte; Esp.* ok; *Beng.* ashto; *Skt.* asta; *Pkt., pali.* atta, Punj; *Sind.* at; *Mitum Naga* aachet; *Kash., Ass., Hind.* āt; *Guj., Mar., Ori.* āti.

[எள் → எண் + து - எட்டு. 'து' சொல்லாக்க ஈறு]

தொன்முது காலத்தில் எள், நெல், விரல், சாண், முழம், கோல், காவதம், என்னும் நீட்டலளவைகளுக்குப் புலப்பாடான அடிப் படைச் சிற்றளவாக **எள்** கருதப்பட்டது. 8 கடுகு - 1 எள், 8 எள் - 1 நெல் என அளவைகள் கூறப்பட்டன. எள்ளளவு என்பதே எல்லாருக்கும் எளிதில் விளங்கும் வகையில் பார்த் தறியக் கூடிய மிகச்சிறிய நீட்டலளவையாக இருந்தது. எள் ளைக் குறித்த சொல்லே 8 என்னும் எண்ணைக் குறிக்கும் பெயராயிற்று.

இச்சொல் உலகமொழிகளில் ஊடாடிய போது க, ச, த, ந, ப என்றும் முன்னொட்டுகளைப்பெற்று ஐவகை அடிநிலைத்திரிபுகளையும், ள, ர என்னும் இருவகை ஈறுகளாலுற்ற முடிநிலைத்திரிபுகளையும் பெற்றுள்ளது.

எள் → **எண் → கெண்:** முதல்வகை அடிநிலைத்திரிபுற்றவை. *O. Egy.* hmn; *Tib.* gzud, gye, gsed; *Sikk.* kāke; *Buta.* gye, *Fin.* kahdeksan; *Siam* (karen) ko, kho.

எள் → எண் → செண்: இரண்டாம் வகை அடிநிலைத்திரிபுற்றவை. *Burm.* shyet, shyēt; *Egy* (cop) smn; *Turk.* sekiz; *Heb.* schmonah; *Basq.* zortsi.

எள் → எண்ம் → தெண்ம்: மூன்றாம் வகை அடிநிலைத்திரிபுற்றவை. *Naga.* the, thetha; *Ara.* tsamaniya, tarnan; *Iraq.* thaman; *Anna., Viet.* tam; *Afri.* (Berber) tam; *Indon* (Baoli) (ad) dasa. *Malay.* dalāpan; *Indone.* detapan; *shant.* tet.

எள் → எண்ம் → நெண்ம்: நான்காம் வகை அடிநிலைத்திரிபுற்றவை. *Afri.* (Swahili) nane; *Mongol.* nemen; *Hung.* nyolc.

எள் → எண்ம் → பெண்ம்: ஐந்தாம் வகை அடிநிலைத்திரிபுற்றவை. *Chine.* (Nank) pāh; (peking). pa; (cant) pet; (shang)peh. *Siam.* pet; *Thai.* paed; *Laos.* pet; *Chine.* (Mand) baa; *Tib.* (Gyami) pa; *Nep* (Murmi) pre.

எள் → ளெ → லெ: முதல்வகை முடிநிலைத்திரிபுற்றவை.

எள் → ளெ → லெ → ரெ: இரண்டாம் வகை முடிநிலைத்திரிபுற்றவை. *Georg.* rua; *Tib.* (Horpa). Rhi-ce; *Burm.* rhach, riyat.

எள் → எண் → எட்டு → டு → உ: மூன்றாம் வகை முடிநிலைத்திரிபுற்றவை. *Poli.* uusman; *Jawa.* woolu; *Russ.* vosgian, vosem; *Serbo.* Osam; *Czeeh.* osm.

கூட்டுச்சொல்லாக வழங்குவன:

எட்டு என்னும் எண்ணுப்பெயரை ஐந்தொடு மூன்று கூட்டியும் பத்திலிருந்து இரண்டைக் கழித்தும் கூட்டுச்சொல்லாகப் பழங்குடி மக்களுள் சிலர் வழங்கியுள்ளனர். அமெரிக்கப் பழங்குடிகளுள் அசுதெக்கு வகையினரும் நகுவாத்தி வகையினரும் ஐந்தும் மூன்றும் கூட்டி எட்டினை வழங்கினர்.

Ameri. (astec): shew-w-ieye (5 + 3) (Nahumti): chik-w-eyi (5 + 3)

பாசுக்கு, காக்கேசிய பின்னிசு வகையினர் பத்திலிருந்து இரண்டைக் கழித்து எட்டினை வழங்கினர்.

Basq. Zor-tyi - - (இரண்டு குறைந்த பத்து).
Canc. Or-atsi - (இரண்டு குறைந்த பத்து).
Finn. Kah-deksan - (இரண்டு குறைந்த பத்து).

எட்டு³ *eṭṭu*, பெ. (n.) ***இறந்தவர்களுக்கு எட்டாநாளிற் செய்யும் கருமம்;*** ceremony performed in honour of a deceased on the eighth day after his death.

[எள் → (எண் + து) எண்டு → எட்டு. தொன்முது காலத்தில் எள் உணவாகக் கருதப்பட்டது. இறந்தார்க்கு எட்டாம் நாளில் எள்ளும் நீரும் படைப்பதும் தெளிப்பதும் 'எட்டு' எனப்பட்டது. எள் + து - எட்டு என்னும் சொல்லுக்கு எள்ளை உண் என்று பொருளிருப்பதை ஒப்பு நோக்குக.]

எட்டு⁴ *eṭṭu*, பெ. (n.) ***உயரம்;*** height.

[அண் → அட்டு → எட்டு.]

எட்டு⁵ *eṭṭu*, பெ. (n.) ***அடிவைப்பு;*** step. இரண்டு எட்டில் அங்குப் போய் விடுவேன் (உ.வ.).

[எடு → எட்டு = காலின் எடுப்பு, அடிவைப்பு.]

எட்டுக்கண்விட்டெறி-தல் *eṭṭu-k-kaṇ-viṭṭeṟi-*, 2.செ.கு.வி. (v.i.) ***எங்குந் தன் அதிகாரஞ் செல்லுதல்;*** to exercise authority everywhere as of one had eight eyes; to have very wide influence.

[எட்டு + கண் + விட்டு + எறி. எட்டுக்கண் = எண்திசைக்கண்.]

எட்டுக்காற்பூச்சி *eṭṭu-k-kāṟ-pūcci*, பெ. (n.) ***சிலந்திப் பூச்சி;*** spider, so called because it has eight legs.

ம. எட்டுகாலன், எட்டுகாலி.

[எட்டு + கால் + பூச்சி.]

எட்டுக்கொண்டார் *eṭṭu-k-koṇḍār*, பெ. (n.) ***எண் தோன்றலாகிய (அட்டமூர்த்தமுடைய) சிவபெருமான்.*** Śiva, as having aṭṭamūrttam. "எட்டுக் கொண்டார் தமை" (திருவுந்தி.24).

[எட்டு + கொண்டார்.]

எட்டுச்சார் *eṭṭu-c-cār*, பெ. (n.) ***இரண்டு கட்டாயுள்ள சதுர வீடு*** (யாழ்ப்.); two four-square houses connected together.

[எட்டு + சார்.]

எட்டுச்செய்-தல் *eṭṭu-c-cey-*, 1.செ.கு.வி. (v.i.) ***சில வகுப்பாரிடையே ஒருவர் இறந்த எட்டாம் நாளில் செய்யும் சிறப்புச் சடங்கு;*** to perform special ceremonies on the eighth day after a person's death, among certain castes.

[எட்டு + செய்.]

எட்டுணை *eṭṭuṇai*, பெ. (n.) ***எள்ளளவு;*** size of a single grain of sesame of the size or weight of a sesamum seed, very little.

ம. எள்ளளவு.

[எள் + துணை.]

எட்டுத்திக்கு *eṭṭu-t-tikku*, பெ. (n.) ***எண் திசை;*** eight directions, viz., the four cardinal points and the four between them.

ம. எட்டு திக்கு.

[எட்டு + திக்கு. திசை → திக்கு.]

எட்டுத்தொகை *eṭṭu-t-togai*, பெ. (n.) ***ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தொகுக்கப்பட்ட நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய எட்டுத் தொகுப்பு நூல்கள்;*** eight anthologies of the Sangam period. "இத்திறத்த வெட்டுத்தொகை" (தனிப்பா.).

[எட்டு + தொகை.]

எட்டெட்டு *ettettu,* பெ. (n.) *எட்டின் மடங்கு;* eight multiplied by eight i.e. 64. (ஆ.அக.).

மறுவ. எண்ணெண்.

ம. எட்டெட்டு; க. எண்டெண்டு.

[எட்டு + எட்டு - எட்டெட்டு.]

எட்பகவு *et-pagavu,* பெ. (n.) 1. *எள்ளளவு என்னும் மிகச் சிறு நீட்டலளவு;* very small linear measure. 2. *மிகச்சிறுமை;* very little, tiny. "எட்பகவன்ன சிறுமைத்தே ஆயினும்" (குறள்.889).

[எள் + பகவு - எட்பகவு = எள்ளளவு.]

எட்பாகு *et-pāgu,* பெ. (n.) *எள்ளுப்பாகு;* sweet paste made of sesame seeds.

[எள் + பாகு.]

எட்பூ *et-pū,* பெ. (n.) *எள் செடியின்பூ;* flower of the plant sesamum Indicum.

ம. எள்ப்பூவு.

[எள் + பூ.]

எடார் *edār,* பெ. (n.) *பரந்தவெளி, வெளியிடம்;* plain, open field.

தெ. எடாரி.

[இடை → இடார் → எடார்.]

எடார்வெளி *edār-veli,* பெ. (n.) *வெட்டவெளி;* vacant forlorn land. காடுவெட்டி அந்த இடமெல்லாம் எடார் வெளியாகிவிட்டது (இ.வ.).

[எடார் + வெளி.]

எடு¹-த்தல் *edu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. *உயர்த்துதல்;* to take up, raise. "பாண்டிலெடுத்த பஃறாமரை" (திருக்கோ.249). 2. *தூக்கிப் பிடித்தல்;* to hold up. எடுக்கப்பட்ட குடைநிழலிலே (கலித்.9,உரை.). 3. *மேற் கொள்ளுதல்;* to undertake, take in hand. அந்தச் செயலை எடுத்திருக்கிறேன். 4. *திரட்டுதல்;* to recruit. "சிலசேனையெடுத் தெழுதிக் கொள்கென்றான்" (திரு விளை.மெய்க்கா.5). 5. *தெரிந்தெடுத்தல்;* to select, choose. "எடுத்தணி கையே றினவளை யார்ப்ப" (திருக்கோ.352). 6. *விலைக்கு வாங்குதல்;* to buy, as in a bazaar, to purchase, as in auction. 7. *நீக்குதல்;* to remove, take off. வண்ணான் ஆடையிலழுக்கெடுப் பான். 8. *வாயுட்கொள்ளுதல்;* to take into the mouth, as fish the bait. "தூண்டிலெடுத்த வரால்" (திருக்கோ. 249). 9. *எடுத்து வளர்த்தல்;* to bring up. "ஆண்டி லெடுத்தவரா மிவர்" (திருக்கோ.249). 10. *வாயிலெ டுத்தல்;* to vomit. சாப்பிட்ட தெல்லாம் எடுத்துவிட் டான். 11. *தனக்கென எடுத்துக் கொள்ளுதல்;* to take to one's self.

ம. எடுக்குக; க. எத்து, எர்பு; தெ., பட. எத்து; எரு. யெடுக; கோத. எட்வ்; துட. ஒட்; குட. எடி, எடிப்; து. எர்புனி; கொலா. எத்; நா. எத்த; பர். எதிப்; கோண். அத்தானா; குரு. யெத்த; பிரா. கேபிங்.

[உல் → எல் → எள் → எடு. எடு = மேலெடு, தூக்கு, வெளிப்படுத்து நீக்கு.]

மேலையாரிய மொழிகளில் பெருக வழங்குகின்ற educate, elate, erect, eructate, heave, heaven.... முதலிய சொற்களெல்லாம், எகர, ஏகார அடியாய்ப்பிறந்த எழல் அல்லது எடுப்புப் பொருளை உணர்த்துவனவே.

ஒ.நோ. சுவரெடு - to errect a wall. எகரம் அல்லது எடுத்தல் என்னுஞ்சொல் எடுப்பாக (உயரமாக) வளர்த்தல், வெளியே எடுத்தல், வெளியே எடுத்து நடத்தல், வெளியே என்னுங்கருத் துகளை முறையே தழுவும். ஒ.நோ: *L.* educo; *E.* educate, to bring up; to draw out the mental powers of, as a child. *L.* educo, *E.* educe, to draw out; *L.* educo, duco(aphesis) to lead; *L.* e.ex; *Gr.* ec.ex; *E.* ex, out, out of.

எடு²-த்தல் *edu-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. *சுமத்தல்;* to bear, carry, hold. "நிலனெடுக் கல்லா வொண்பல் வெறுக்கை" (மதுரைக்.215). 2. *நிறுத்துதல்;* to weigh (in a balance). 3. *உண்டாக்குதல்;* to produce, cause. "கௌவை யெடுப்பவள்போல்" (கலித்.109). 4. *கட்டு தல்;* to build, raise up, as a wall. "உதிரநீராற் சுவரெடுத்து" (தேவா.838).

ம. எடுக்குக; கூ. எத (குழந்தையை இடுப்பில் வைத்தல்); குவி. எதலி, தெகலி (தோளில் வைத்துத்தூக்குதல்).

[உல் → எல் → எள் → எடு. எல் = சுமத்தல், நிறுத்துதல், உண்டாக்குதல்.]

எடு³-த்தல் *edu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. *உரத்துச் சொல்லுதல்;* to utter in a high pitch of voice. "எடுத்தல் படுத்த லலித லுழப்பின்" (நன்.88). 2. *குரலெடுத்துப் பாடுதல்;* to sing in a loud voice. "கொடிச்சிய ரெடுத்த வின்குறிஞ்சி" (கம்பரா.சித்திர.24). 3. *மேம்படுத்து ரைத்தல்;* to speak highly. "மழைதரு மிவளென... நங்கையையெடுத்தலும்" (மணி.22,94). 4. *எடுத்துக் காட்டுதல்;* to adduce, as an argument. உண்மையையெ டுத்துச் சொன்னான். 5. *குறிப்பிடுதல்;* to bring in, introduce, as one's name. அவன் பெயரை யெடுத்தால் பொங்கிக் கொண்டு வருகிறது.

[உல் → எல் → எள் → எடு. உல் = உரத்துச்சொல்லுதல், பாடுதல் மேம்படுத்துரைத்தல்.]

எடு⁴-த்தல் *edu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. *புடைபருத்தல்;* to be inflated, as a monkey's cheeks. "மந்தி கவுளெடுக்கச் சுவைத்து" (காசிக்.காசிப்.49). 2. *மேல்நோக்கியிருத் தல்;* to be high, as the forehead, to be prominent, as the nose or ear. எடுத்த செவி (பெரும்பாண்.80, உரை.). 3. *பொருந்துதல்;* to be associated with "மல்லெடுத்த தோள்" (பாரத.பதினெட்.25). 4. *மேலெ ழுந்துவருதல்* (படையெடுத்தல்); to invade. 'எடுத்து வந்து...... வீரபாண்டியனை முடித்தலை கொண்டு' (S.1.1.iii.214). 5. *தகுதியாதல்;* to be fit, proper.

[உல் → எல் → எள் → எடு. உல் = பருத்தல், மேல்நோக்கியிருத் தல், மேலெழுந்துவருதல்.]

எடுக்கல் *edu-k-kal,* பெ. (n.) 1. ***தூக்குகை;*** lifting. "எடுக்கல் செல்லா துழப்பவன் போல" (கலித்.38). 2. ***அளவிட்டறிகை;*** conceiving, comprehending. "ஞானங்களா லெடுக்க லெழாத வெந்தாய்" (திவ்.திருவாய்.2,3,5).

[எடு → எடுக்கல்.]

எடுகூலி *edu-küli,* பெ. (n.) ***சுமைகூலி;*** porterage, hire for carrying a burden. அவனுக்கு எடுகூலி கட்டாது.

[எடு + கூலி.]

எடுகூறு *edu-küru,* பெ. (n.) பங்கு பிரித்தல் (சுக்கிர நீதி.12); partition, a part to be set aside, a surplus (taken by any one beyond his actual share). (சேரநா.).

ம. எடுகூறு.

[எடு + கூறு.]

எடுத்தகை *eduttakai,* பெ. (n.) 1. ***ஓங்கியகை;*** raised hand. 2. ***அதிகாரம்;*** power. அவனுக்கு அவ்வளவு எடுத்தகையா? (இ.வ.).

க. எத்துகை, எத்து கெய்.

[எடு → எடுத்த + கை.]

எடுத்தடிமடக்கு *eduttadi-madakku,* பெ. (n.) 1. ***ஒருவர் சொன்னதைக் கொண்டே மறுக்கை;*** confuting a person by using his own arguments. 2. ***முன்சென்று தடுக்கை;*** forestalling a person in word or action in order to thwart him. 3. ***இடையிற் றடுத்துப் பேசுகை;*** interrupting one while he is speaking. 4. ***அஞ்சவேண்டிய தற்கு அஞ்சாமை;*** rashness. 5. ***விரைவு*** *(யாழ்.அக.); suddenness.*

[எடு + எடுத்து + அடிமடக்கு.]

எடுத்தடிவை-த்தல் *eduttadi-vai-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***அடிபெயர்த்து நடத்தல்;*** to raise the foot and step forward, as a child or a feeble person. 2. ***பாதத்தைத் தூக்கி வைத்தல்;*** raising and planting of the foot slowly as do debilitated or sick persons. 3. ***தளர் நடையாய் நடத்தல்;*** taking a leisurely, light walk. (சா.அக.).

[எடுத்து + அடி + வை.]

எடுத்தபடி *edutta-padi,* கு.வி.எ. (adv.) 1. ***உடனே;*** immediately, at once, promptly. எடுத்தபடி வா. (இ.வ.). 2. ***முன்னணியமின்றி;*** extemporaneously, without previous preparation.

ம. எடுத்தபடி.

[எடுத்த + படி. படி = நிலை.]

எடுத்தமொழி *edutta-moli,* பெ. (n.) 1. ***எடுத்துக்காட்டு;*** illustration, example (Logic). "ஏதுக்களாலு மெடுத்தமொழியாலும்" (தேவா.1178,5). 2. ***உயர்த்திய குரலில் பிறரை அடக்கிப் பேசும் பேச்சு;*** authoritative or dictative terms.

[எடு + எடுத்த + மொழி.]

எடுத்தமொழியினெய்தவைத்தல் *eduttamoliyin-e-yda-vaittal,* பெ. (n.) (இலக்.) ***தான்கூறும் இலக்கியத் திலே இலக்கணமமைந்திருப்பதைக் காட்டுதலாகிய ஓர் உத்தி*** (நன்.14); (Gram) adducing examples from the very work under discussion to illustrate the application of a rule, one of 32 utti.

[எடுத்த மொழியின் + எய்தவைத்தல்.]

எடுத்தல் *eduttal,* பெ. (n.) 1. ***நிறுத்தலளவு;*** weight measurement by balance. "எண்ணலெடுத்தல்" (நன்.368). 2. ***எடுத்தலோசை;*** acute accent, sharp tone. "எடுத்தல் படுத்த லலித லுழப்பின்" (நன்.88). 3. ***வெளியிலெடுத்தல்;*** to bring out.

[எடு → எடுத்தல்.]

எடுத்தலளவை *eduttal-alavai,* பெ. (n.) ***நிறை*** (நன்.290,விருத்.); weight in a scale.

[எடுத்தல் + அளவை.]

எடுத்தலளவையாகுபெயர் *eduttal-alavai-yāgu-peyar,* பெ. (n.) ***அளவையாகுபெயர் வகை*** (நன்.290,உரை.); metonymy, in which weight is used for the article weighed, one of four kinds of alavai-y-āgu-peyar.

[எடுத்தல் + அளவை + ஆகுபெயர்.]

எடுத்தலோசை *eduttal-ōsai,* பெ. (n.) ***உயர்த்துக்கூறும் ஓசை;*** acute accent, sharp tone. முற்படக் கிளந்தவென எடுத்தலோசையாற் கூறவே (தொல்.பொருள்.1, உரை.).

[எடுத்தல் + ஓசை.]

எடுத்தளவு *eduttalavu,* பெ. (n.) ***ஒரு பழையவரி*** (S.1.1.i.103); ancient village cess.

[எடு → எடுத்து + அளவு.]

எடுத்தன் *eduttan,* பெ. (n.) ***எருது, பொதிமாடு*** (யாழ். அக.); pack ox.

[எடு → எடுத்தன். எடுத்தல் = சுமத்தல்.]

எடுத்தாட்சி *eduttātci,* பெ. (n.) ***பயன்படுத்தம், வழக்கு;*** usage.

[எடு → எடுத்து + ஆட்சி - எடுத்தாட்சி (எடுத்தாளுதல், பயன்படுத்துதல்).]

எடுத்தாள்(ளு)-தல் *eduttāl-,* 10.செ.குன்றாவி. (v.t.) 1. ***வழங்குதல்;*** to use, as utensils; தேநீர் அருந்தகண்ணாடி குவளையை எடுத்தாளுகிறார். 2. ***மேற்கோள் காட்டு தல்;*** to quote as an expression. இவர் திருக்குறளை அடிக்கடி எடுத்தாளுகிறார்.

[எடுத்து + ஆள்.]

எடுத்தியல்கிளவி *eḍuttiyal-kiḷavi,* பெ. (n.) ***மேற்கோள் காட்டுதல்;*** illustration. "எடுத்தியல் கிளவியோ டேதுக் காட்டி" (பெருங்.உஞ்சை.35,143).

[எடுத்து + இயல் + கிளவி.]

எடுத்து *eḍuttu,* பெ. (n.) ***சுமை*** (யாழ்.அக.); burden.

[எடு → எடுத்து.]

எடுத்துக்கட்டல் *eḍuttu-k-kaṭṭal,* பெ. (n.) 1. ***தாங்கிப் பேசுதல், சார்பாக நின்று கூறுதல்;*** support, buttress. அவனுக்காக இவன் எடுத்துக்கட்டிப் பேசுகிறான் (உ.வ.). 2. ***உயர்த்திக் கட்டுதல்;*** to bind or tie up at a considerable height.

[எடுத்து + கட்டல்.]

எடுத்துக்கட்டி[1] *eḍuttu-k-kaṭṭi,* பெ. (n.) 1. ***கட்டடவகை*** (E); (Arch.) structure raised above the surrounding buildings. எதிரிலிச்சோழன் திருவெடுத்துக்கட்டிலே தன் மிசெய்து (S.i.i.vi.492). 2. ***உயரமாகக் கட்டப்பட்ட இடம்;*** high or raised structure. 3. ***ஆடையை வரிந்து கட்டுதல்*** (சேரநா); to tighten the dress around the waist.

ம. எடுத்துக்கெட்டி.

[எடு → எடுத்து + கட்டி.]

எடுத்துக்கட்டி[2] *eḍuttu-k-kaṭṭi,* பெ. (n.) 1. ***சுவரின் தலை வரிக்கட்டு;*** coping, covering course of a wall. 2. ***கைப்பிடிச் சுவர்*** (i.m.p.Pd.163); parapet wall.

[எடுத்து + கட்டி.]

எடுத்துக்கட்டி உழுதல் *eḍuttu-k-kaṭṭi-uḻudal,* பெ. (n.) ***ஆழமில்லாமல் உழுவது;*** ploughing at surface level.

[எடுத்து + கட்டி + உழுதல்.]

எடுத்துக்கட்டிப்பந்தல் *eḍuttu-k-kaṭṭi-p-pandal,* பெ. (n.) ***பந்தல் வகை;*** a kind of pandal.

[எடுத்து + கட்டி + பந்தல்.]

எடுத்துக்கட்டு[1]**-தல்** *eḍuttu-k-kaṭṭu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***உயரத்துக்கட்டுதல்;*** to raise to a higher level. "தளவரிசை மட்டத்துக்கு மேலேயும் எடுத்துக்கட்டி" (கோயிலொ.3). 2. ***இல்லாத செயலைத் தொடுத்தல்*** (j); to fabricate, invent. 3. ***தாலியை யறுத்துக் கட்டுதல்;*** to remarry, as a widow.

[எடுத்து + கட்டு.]

எடுத்துக்கட்டு[2] *eḍuttu-k-kaṭṭu,* பெ. (n.) 1. ***கட்டுக்கதை*** (யாழ்ப்.); fable. 2. ***புதுப்புனைவு*** (வின்.); invention, coining as of a word. 3. ***பின்னின மயிரைச் சுருட்டிக்கட்டும் கட்டு;*** coil of braided hair on the back or top of the head.

[எடுத்து + கட்டு.]

எடுத்துக்காட்டல் *eḍuttu-k-kāṭṭal,* பெ. (n.) 1. ***சான்று காட்டுகையாகிய ஓர் உத்தி*** (நன்.14); citing examples for rules laid down or opinions expressed, one of 32, utti. 2. ***நோயுற்ற காலத்தில் குணம் குறி முதலியவை களை வெளிப்படையாகக் காட்டுதல்;*** indicating or exhibiting symtoms prominently when suffering an ailment. (சா.அக.).

[எடுத்து + காட்டல்.]

எடுத்துக்காட்டு *eḍuttu-k-kāṭṭu,* பெ. (n.) 1. ***மேற்கோள்;*** citation, quotation. 2. ***சான்று;*** example, illustration. "தீயவெடுத்துக் காட்டாவன" (மணி.29,325).

[எடுத்து + காட்டு.]

எடுத்துக்காட்டுவமை *eḍuttu-k-kāṭṭuvamai,* பெ. (n.) ***உவமை பொருள் என்னும் இரண்டும் தனித்தனி ஒவ்வொரு தொடராய் உவமஉருபு இன்றி வரும் அணி;*** figure of speech containing a statement in a sentence, with an illustration forming another sentence, the two sentences standing contiguously without any sign of comparison between them.

[எடுத்து + காட்டு + உவமை.]

எடுத்துக்காட்டுவமையணி *eḍuttu-k-kāṭṭuvamaiyaṇi,* பெ. (n.) எடுத்துக்காட்டுவமை பார்க்க; see *eḍuttu-k-kāṭṭuvamai.* (ஆ.அக.).

[எடுத்து + காட்டு + உவமை + அணி.]

எடுத்துக்காரர் *eḍuttu-k-kārar,* பெ. (n.) ***பொதிமாட்டுக் காரர்*** (யாழ்ப்.); those who rear or drive pack cattle.

[எடுத்து + காரர். எடுத்து = சுமை, பொதி.]

எடுத்துக்கொட்டி *eḍuttu-k-koṭṭi,* பெ. (n.) ***ஒரு வகை நெல்லாயம்*** (s.i.i.i.89); tax paid in kind, esp.paddy.

[எடுத்து + கொட்டி.]

எடுத்துக்கொள்(ளு)-தல் *eḍuttu-k-koḷ-,* 13.செ.குன் றாவி. (v.t.) 1. ***ஏற்றுக்கொள்ளுதல்;*** to accept, admit, approve. 2. ***தூக்கிக் கொள்ளுதல்;*** to take up. குழந் தையை எடுத்துக்கொள். 3. ***தத்தெடுத்தல்;*** to adopt as a child. அந்தப் பணக்காரர் ஒரு பிள்ளையை எடுத்துக் கொண்டிருக்கிறார். 4. ***இறப்பு வாயிலாகக் கடவுள் அழைத்துக் கொள்ளுதல்;*** (Chr.) to take into Himself by death, as God. என் பிள்ளையைக் கர்த்தர் எடுத்துக் கொண்டார். (இ.வ.).

தெ. எத்து கொனு.

[எடுத்து + கொள்.]

எடுத்துக்கொள்ளல் *eḍuttu-k-koḷḷal,* பெ. (n.) ***உட் கொள்ளல், அருந்தல்;*** taking in, eating. இவர் இரண்டு நாளாய் உணவெடுத்துக் கொள்ளவில்லை. (இ.வ.).

[எடுத்து + கொள்ளல்.]

எடுத்துக்கோடல் *eḍuttu-k-kōḍal,* பெ. (n.) ***தொடக்கம்*** (தொல்.சொல்.397,சேனா.); beginning.

[எடுத்து + கோடல்.]

எடுத்துக்கோள் *eḍuttu-k-kōl,* 1. *சான்று;* example. "எடுத்துக் கோளும் வாய்ந்தன்று" (ஞானா.51,15). 2. *எடுத்துக்கோள்வரி* பார்க்க; see *eḍuttu-k-kōlvari.* "எடுத்துக்கோளை யிசைக்குங் காலை" (சிலப். 8,108,உரை.).

[எடுத்து + கோள்.]

எடுத்துக்கோள்வரி *eḍuttu-k-kōl-vari,* பெ. (n.) *கையற வெய்தி வீழ்தலைக் கண்டு பிறர் எடுத்துக்கொள் ளும்படி நடிக்கும் நடம்;* theatrical action of swooning in extreme anguish in order to be lifted up by others. "அடுத்தடுத்தவர்முன் மயங்கிய மயக்க மெடுத்தவர் தீர்த்த வெடுத்துக் கோள்வரியும்" (சிலப்.8,108).

[எடுத்து + கோள் + வரி.]

எடுத்துச்செலவு *eḍuttu-c-celavu,* பெ. (n.) *படையெ டுத்துச் செல்லுகை;* leading forth an army with a view to invasion. "மண்ணசை வேட்கையால் எடுத்துச் செலவு புரிந்த வேந்தன்மேல்" (தொல். பொருள்.புறத்.1,இளம்பூ.).

[எடுத்து + செலவு.]

எடுத்துச்சொல்(லு)-தல் *eḍuttu-c-col-,* 8.செ.குன் றாவி. (v.t.) 1. *விளக்கமாகக் கூறுதல்;* to explain clearly. 2. *சிறப்பித்துக் கூறுதல்;* to extol, eulogize. 3. *அறிவுரை சொல்லுதல்;* to advise.

ம. எடுத்து பரயுக.

[எடுத்து + சொல்.]

எடுத்துத்தொடு-த்தல் *eḍuttu-t-toḍu-,* 17.செ.குன் றாவி. (v.t.) 1. *இல்லாததைக் கட்டிக்கூறுதல்;* to fabricate, concoct. 2. *பொய் வழக்குப் பிணைத்தல்;* to invent, as a cause of quarrel or litigation.

ம. எடுத்து நடத்துக.

[எடுத்து + தொடு.]

எடுத்துநிலை *eḍuttu-nilai,* பெ. (n.) *போயினதை மீட்டும் நிலை நிறுத்துகை;* rehabilitation. "எடுத்து நிலையரிதென வேதுக் காட்டி" (பெருங்.மகத.19,89).

[எடுத்து + நிலை.]

எடுத்துப்பிடி-த்தல் *eḍuttu-p-piḍi-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. *தூக்கிப்பிடித்தல்;* lifting and holding aloft. 2. *குற்றத்தைப் பெரிதாக்கித் தூற்றுதல்;* to hold up and expose to view, as little faults. 3. *திடப்படுத்துதல்;* to encourage, strengthen, establish.

[எடுத்து + பிடி.]

எடுத்துப்பேசு-தல் *eḍuttu-p-pēsu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. *உரத்துப்பேசுதல்;* talking loudly. 2. *மற்றவர் வழக்கினை வழக்கறிஞன் எடுத்துப்பேசுதல்;* to speak as an advocate, pleading on behalf of a person. 3. *ஒரு செய்தியைக் குறித்துப் பேசுதல்;* to treat of, speak on a subject. 4. *புகழ்ந்து கூறுதல்;* to praise, commonly one who is absent. 5. *பிறர் குற்றங்களைச் சுட்டிக்காட்டித் தூற்றுதல்;* to make open rebuke pointing the mistakes or faults one by one.

ம. எடுத்துப்பரயுக.

[எடுத்து + பேசு.]

எடுத்துப்போடு[1]-தல் *eḍuttu-p-pōḍu-,* 14.செ.குன் றாவி. (v.t.) 1. *நீக்கி விடுதல்;* to deprive of office, turn out of situation, remove. அவன் பெயரைப் பட்டியி னின்று எடுத்துப்போடு. (உ.வ.). 2. *திடுக்கிடச் செய் தல்;* to startle. அந்தக் கடுஞ்செய்தி என்னை எடுத்துப் போட்டது.

[எடுத்து + போடு.]

எடுத்துப்போடு[2]-தல் *eḍuttu-p-pōḍu-,* 20.செ.கு.வி. (v.i.) *விலாப் புடைக்க மூச்சு வாங்குதல்;* to alternate contraction and relaxation, as of intercoastal muscles in children affected with sparm. குழந்தைக்கு விலா வெடுத்துப்போடுகிறது. (உ.வ.). (சா.அக.).

[எடுத்து + போடு.]

எடுத்துமொழி-தல் *eḍuttu-moḻi-,* 2.செ.குன்றாவி. (v.t.) *விளங்கச் சொல்லுதல்;* to explain clearly. "இருந்தவற் கெல்லா மெடுத்து மொழிந்தான்" (சீவக.518).

[எடுத்து + மொழி.]

எடுத்துரை-த்தல் *eḍuttural-,* 4.செ.குன்றாவி. (v.t.) *எடுத்துமொழி-தல்* பார்க்க; see *eḍuttumoḻi-.* "விழுமநிலை யெடுத்துரைப்பினும்" (தொல்.பொருள்.39).

[எடுத்து + உரை.]

எடுத்துரைமலைவு *eḍuttural-malaivu,* பெ. (n.) *செய் யுட் குற்றங்களுள் ஒன்று* (யாப்.வி.525); rhet. defect in poetry. (செ.அக.).

[எடுத்து + உரை + மலைவு.]

எடுத்துவளர்-த்தல் *eḍuttu-valar-,* 4.செ.குன்றாவி. (v.t.) *பிறர் குழந்தையை ஊட்டி வளர்த்தல்;* to bring up, as a destitute child.

ம. எடுத்து வளர்த்துக.

[எடுத்து + வளர்.]

எடுத்துவாலன் *eḍuttuvālaṉ,* பெ. (n.) *நீண்ட வாலுள்ள குருவி;* long tail bird.



எடுத்துவாலன்

எடுத்துவிடல் *eduttu-vidal,* பெ. (n.) 1. ***வேரோடு களைதல்;*** (lit.) rooting out or eradicating. 2. ***நோயைக் கொஞ்சமேனு மில்லாமல் குணப்படுத்தல்;*** (in medicine) curing a disease. (சா.அக.).

[எடுத்து + விடல்.]

எடுத்துவிடு-தல் *eduttu-vidu-,* 20.செ.கு.வி. (v.i.) 1. ***படையெடுத்தல்;*** to lead a compaign, conduct on expedition. "காங்கேயன் தெற்கே யெடுத்துவிட்ட போது" (திவ்.கண்ணிநுண்.3,வியா.). 2. ***படை நீங்குதல்*** (பு.வெ.6,30,உரை); to withdraw.

[எடுத்து + விடு.]

எடுத்தெறி-தல் *edutteri-,* 2.செ.குன்றாவி. (v.t.) 1. ***பறை முழக்குதல்;*** to beat, as a drum. 2. ***பொருட்படுத் தாமை;*** to disregard one's advice or commands. நான் சொன்னதை அவன் எடுத்தெறிந்துவிட்டான். (உ.வ.).

ம. எடுத்தெறியுக.

[எடுத்து + எறி.]

எடுத்தேத்து *eduttettu,* பெ. (n.) ***புகழ்ச்சி;*** praise, eulogy. "கையறியா மாக்க ளிழிப்பு மெடுத்தேத்தும்" (நாலடி.163).

[எடுத்து + ஏத்து.]

எடுத்தேற்றம் *eduttērram,* பெ. (n.) ***குறிப்பின்மை*** (வின்.); random chance.

[எடுத்து + ஏற்றம்.]

எடுத்தேற்றி *eduttērri,* பெ. (n.) 1. ***பொருட்படுத்தாமை;*** disregard, அவன் என்னை எடுத்தேற்றியாய்ப் பேசினான். (இ.வ.). 2. ***இணக்கமின்மை*** (வின்.); discrepancy, discord.

[எடுத்து + ஏற்றி.]

எடுத்தேறி *eduttēri,* பெ. (n.) ***மிகுமுயற்சி;*** over effort. மெனக்கெட்டு இதுக்கென்றே எடுத்தேறிப் போகணும் அங்கெ. (இ.வ.).

[எடுத்து + ஏறி.]

எடுத்தேறு *eduttēru,* பெ. (n.) ***எடுத்தெறிகை;*** beating as of a drum. "எடுத்தே றேய கடிப்புடை யதிரும்" (பதிற்றுப்.84).

[எடுத்து + ஏறு.]

எடுத்தோத்து *eduttōttu,* பெ. (n.) 1. ***எடுத்து ஓதுகை;*** exposition. "எடுத்தோத்துரையின்" (பெருங்.மகத.15,11). 2. ***எடுத்துக்கூறும் நெறி;*** expositive statement. 'இந்நூலுள் எடுத்தோத்தே இலேசேயென்று இவற்றான் முடியாது நின்றனவெல்லாம்' (இறை.59,உரை.).

[எடுத்து + ஒத்து.]

எடுப்பார்கைப்பிள்ளை *eduppār-kai-p-pillai,* பெ. (n.) ***யாவர்க்கும் வசப்படக்கூடியவன்;*** simpleton; one who is easily guided by others, as an infant in arms.

[எடுப்பார் + கை + பிள்ளை.]

எடுப்பார் பிடிப்பார் *eduppār-pidippār,* பெ. (n.) ***நோயாளிக்குத் துணையாளர்;*** persons attending or waiting upon a patient. 'எடுப்பார் பிடிப்பாரிருந்தால் இளைப்புங் களைப்பு மெத்த வுண்டு' (சா.அக.).

[எடுப்பார் + பிடிப்பார்.]

எடுப்பானவன் *eduppāṉavaṉ,* பெ. (n.) 1. ***தோற்றப் பொலிவுள்ளவன்;*** conspicuous personality. 2. ***இடம் பக்காரன்*** (வின்.); one who lives above his rank or circumstances. 3. ***செருக்கன்;*** haughty man.

[எடுப்பு + ஆனவன்.]

எடுப்பு[1] *eduppu,* பெ. (n.) ***இசைக்கிளை ஐந்தனு ளொன்று*** (பெரியபு.ஆனாய.26,உரை.); one of five išai-k-kilai.

ம. எடுப்பு.

[எடு → எடுப்பு.]

எடுப்பு[2] *eduppu,* பெ. (n.) 1. ***உயரம்;*** elevation. வீடு எடுப்பாயிருக்கிறது (உ.வ.). 2. ***ஏற்றம்;*** superiority. "ஈடும் எடுப்புமி லீசன்" (திவ்.திருவாய்.1,6,3). 3. ***கண்டெடுக்கும் புதையல்;*** buried treasure. 'இவன் எடுப்பெடுத்தான்' (ஈடு.8,1,3). 4. ***வழிமுறை;*** device, plan, scheme. அவன் நல்ல எடுப்பு எடுத்தான் (இ.வ.). 5. ***தொடங்கின செயல்;*** undertaking. எடுத்த எடுப்பு விடான். (இ.வ.). 6. ***இறுமாப்பு;*** pride. எடுப்பாய்ப் பேசுகிறவன். 7. ***மேட்டிமை;*** high pretention, style of living above one's rank or circumstances. எடுப்பானவன் அவன் (உ.வ.). 8. ***பழிப்பு;*** abusive language, censure. 9. ***நால்வகையான தாளத் தொடக்கமுறை;*** time when the song is begun as compared with the time when tālam begins, of four kinds. 10. ***விளைநிலப்பரப்பு;*** plot of cultivated land. 11. ***தத்து;*** adoption.

ம. எடுப்பு.

[எடு → எடுப்பு.]

கிழங்கெடுத்தல், முள்ளெடுத்தல் முதலிய வழக்குகள் வெளிப்படுத்தற் பொருளைக் குறித்தல் காண்க. Cf., E., Gr. epi, *Sans.* ap, *L.* ob, on. ஆங்கிலத்தில் Elevate, erect, edify, educate, elicit போன்ற சொற்களும், E, ex-, முதலிய முன்னொட்டுகளும், ஏகார முதனிலையைக் கொண்டு மேற்படுத்தல் எடுத்தல் வெளிப்படுத்தல் முதலிய பொருள்களை உணர்த்தல் காண்க. (சு.வி.81).

எடுப்பு[3]**-தல்** *eduppu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***துயிலெழுப்புதல்;*** to awake, rouse from sleep. "ஊர்துயிலெடுப்பி" (சிலப்.4.79). 2. ***இசை யெழுப்புதல்;*** to raise, produce, as harmonious sounds from an instrument. "மகரவீணைத் தெள்விளி யெடுப்பி" (சீவக.608). 3. ***போக்குதல்;*** to dispel, drive away, banish. "அரவம் வந்தெடுப்புமே" (கலித்.70).

[எழுப்பு → எடுப்பு.]

எடுப்புச்சாப்பாடு *eḍuppu-c-cāppāḍu,* பெ. (n.) 1. ***உணவ கத்திலிருந்து வீட்டிற்கு எடுத்துவரும் உணவு;*** meal taken from a hotel to the residence of a person. (Mod.). 2. ***எடுப்புச் சோறு*** பார்க்க; see *eḍuppu-c-cōṟu.*

[எடுப்பு + சாப்பாடு.]

எடுப்புச்சாய்ப்பு *eḍuppu-c-cāyppu,* பெ. (n.) 1. ***ஒப்புர வான நடை;*** gentle and obliging behaviour consistent with one's dignity. 2. ***உயர்வு தாழ்வு;*** ups and downs.

[எடுப்பு + சாய்ப்பு.]

எடுப்புச்சாய்வு *eḍuppu-c-cāyvu,* பெ. (n.) ***எடுப்புச் சாய்ப்பு*** பார்க்க; see *eḍuppu-c-cāyppu.* (ஆ.அக.).

[எடுப்பு + சாய்வு.]

எடுப்புச்சீட்டு *eḍuppu-c-cīṭṭu,* பெ. (n.) 1. ***குலுக்குச் சீட்டு;*** chit fund conducted on the lottery system. (Tinn.). 2. ***ஏலச்சீட்டு;*** chit fund conducted on the auction system. (Madr.) (செ.அக.).

[எடுப்பு + சீட்டு.]

எடுப்புச்சோறு *eḍuppu-c-cōṟu,* பெ. (n.) ***விருந்திற்கு வரவியலாத உறவினருக்கு அனுப்பும் உணவு*** (Tinn.); meal sent to a relative who is unable to attend a special dinner.

[எடு → எடுப்பு + சோறு.]

எடுப்புண்(ணு)-தல் *eḍuppuṇ-,* 12.செ.கு.வி. (v.i.) ***எடுபடுதல்;*** to be taken up, absorbed, engrossed. "அவன் வைலட்சண்யத்திலே யெடுப்புண்டு பின்பற்றித் திரிகிற இவளை" (திவ்.பெரியாழ்.3,7,5,வ்யா, பக்.713).

[எடுப்பு + உண்.]

எடுப்புத் தண்ணீர் *eḍuppu-t-taṇṇīr,* பெ. (n.) ***நடவு செய்த பின் விடப்படும் முதல் தண்ணீர்;*** first watering after transplanting in the field.

[எடுப்பு + தண்ணீர்.]

எடுப்புத்தேர் *eḍuppu-t-tēr,* பெ. (n.) ***சுமந்து செல்லப்படும் தேர்*** (வின்); portable car. for the conveyance of an idol on men's shoulders.

[எடுப்பு + தேர்.]

எடுப்புப் பிள்ளை *eḍuppu-p-piḷḷai,* பெ. (n.) 1. ***கமுக்கமாக மாற்றி வைக்கப்பட்ட பிள்ளை;*** child substituted by trick in place of the geniune child. 2. ***கண்டெடுத்த பிள்ளை;*** child found without a parent or anyone to take care for it, foundling. 3. ***கைவிடப்பட்ட பிள்ளை;*** child left wihout resources - destitute child. 4. ***வாங்கி வளர்த்த பிள்ளை;*** child received in adoption and treated as one's own child - adopted child. (சா.அக.).

[எடுப்பு + பிள்ளை.]

எடுப்புழவு *eḍuppuḻavu,* பெ. (n.) ***மானாவாரியில் விதைப்பதற்கு முன்பு உழும் உழவு;*** preseasonal ploughing of the rainfed arable land. "எட்டு உழவு போட்டாலும் ஒரு எடுப்பொழவு போடுறதுக்குக் காணாது" (சொலவம்.).

[எடுப்பு + உழவு.]

எடுப்பெடு-த்தல் *eḍuppeḍu-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***ஒரு வழிவகை மேற்கொள்ளுதல்;*** to contrive a way, devise a plan. 2. ***படையெடுத்துப் பொருதல்;*** to lead an army and fight. "எடுப்பெடுத்துய்ய வென்னா" (சீவக.450). 3. ***அரியதை முயலுதல்*** (யாழ்.); to attempt the impossible. 4. ***செருக்குக் கொள்ளுதல்;*** to put on airs.

[எடுப்பு + எடு.]

எடுபட்ட *eḍupaṭṭa,* பெ.எ. (adj.) ***அழிந்துபோன, தொலைந்த;*** lost, destroyed, removed. எடுபட்ட சிறுக்கி (வசவு). அந்தக் கூட்டம் எடுபட்டுப் போச்சி. (வட்.வழ.சொல்லக.).

எடுபட்டவன் *eḍu-paṭṭavaṉ,* பெ. (n.) ***ஒழுக்கக் கேட்டால் கூட்டத்திலிருந்து விலக்கப்பட்டவன்*** (இ.வ.); one who has been expelled from society for violation of its rules; outcaste.

[எடு + பட்டவன்.]

எடுபடு¹-தல் *eḍu-paḍu-,* 20.செ.கு.வி. (v.i.) 1. ***நீக்கப்படுதல்;*** to be taken out, be abolished. 2. ***நிலைபெயர்தல்*** (வின்.); to be detached, displaced, dislodged. குடியெல்லாம் எடுபட்டுப் போயிற்று (இ.வ.). 3. ***அதிர்தல்;*** to be stirred. அவள் பேச்சினால் அயலெல்லா மெடுபடுகின்றது (இ.வ.). 4. ***வழக்கில் தோற்றுப் போதல்;*** to be overcome in argument; refuted. உன்னால் நான் எடுபட்டுப் போவேனோ? 5. ***விற்றழிதல்;*** to be spent, sold out. வந்த சரக்கெல்லாம் எடுபட்டுவிட்டன. 6. ***கைக்கொள்ளப்படுதல்.;*** to be taken over. வண்டியிலிருந்து சரக்கெல்லாம் எடுபட்டு விட்டன. 7. ***மேம்படுதல்;*** to be exalted or elevated. அவன் பணத்தினால் எடுபடுகிறான். (இ.வ.).

ம. எடுபெடுக; தெ. எடுபடு (பிரித்தல்).

[எடு + படு.]

எடுபடு²-தல் *eḍu-paḍu-,* 20.செ.கு.வி. (v.i.) 1. ***திக்கற்றுப் போதல்;*** to become destitute. 2. ***முறைதவறுதல்;*** to violate the rules of conduct. (செ.அக.).

ம. எடுபெடுக; தெ. எடபடு (to separate).

[எடு + படு.]

எடுபாடு¹ *eḍu-pāḍu,* பெ. (n.) 1. ***குலைவு;*** degeneration. 2. ***நிலையின்மை;*** instability.

[எடு + பாடு.]

எடுபாடு² *eḍu-pāḍu,* பெ. (n.) 1. ***புகழ்ச்சி, சீர்மை;*** renown, eminence, notoriety. 2. ***நிமிர்வு;*** uprightness. 3. ***பகட்டு;*** gaiety in dress; ostentation, as in a woman.

[எழு → எடு + பாடு.]

எடுபிடி *eḍu-piḍi,* பெ. (n.) 1. ***முயற்சி.***(சங்.அக.); great activity. 2. ***விருது;*** appendage. 3. ***மதிப்பு;*** respect. 4. ***துணைப் பணியாளர்;*** attendants.

ம. எடுபிடீன்னு.

[எடு + பிடி.]

எடுவு-தல் *eḍuvu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***எடுத்தல்;*** to hold up "வரைகுடை யெடுவிய நெடியவர்" (திவ்.பெரி யதி.8,7,3).

[எடு + உ → எடுவு.]

எடை[1] *eḍai,* பெ. (n.) 1. ***துயிலெழுப்புதல்;*** rousing one from sleep. "துயிலெடைநிலை" (தொல்.பொ ருள்.91). 2. ***மிகுதல்;*** lengthening, increasing. அள பெடை (இலக்.).

[ஏ → ஏல் → எல் → எள் → எடு → எடை.]

எடை[2] *eḍai,* பெ. (n.) 1. ***நிறுக்கை.***(வின்.); weighing. 2. ***நிறையளவு;*** standard weight. 3. ***25 பலங்கொண்ட நிறுத்தலளவு;*** measure of weight = 25 palams. 4. ***விறகின் நிறையளவு*** (c.g.); weight for weighing firewood = 54 lbs.

ம. எட; க., தெ. எத்து.

[எடு → எடை.]

எடைக்கட்டு *eḍai-k-kaṭṭu-,* பெ. (n.) ***நிறுக்கப்படும் பொருளுக்கு அதைத்தாங்கும் கலத்தின் கழிவு நிறை;*** allowance made for the weight of a receptacle before weighing its contents.

[எடை + கட்டு.]

எடைக்கெடை *eḍai-k-keḍai,* பெ. (n.) ***நிறைக்கு நிறை.*** (வின்.); like weight, even weight.

[எடை + கு + எடை.]

எடைகட்டு[1]-தல் *eḍaikaṭṭu-,* 5.செ.கு.வி. (v.i.) ***பாலில் நீர்சேர்த்தல்;*** to dilute milk with water. இன்று பாலில் எவ்வளவு எடைகட்டப் போகிறீர் (மதுரை.வ.).

மறுவ. எடைபோடுதல் (சென்னை.வ.).

[எடை + கட்டு. எடை = அளவு.]

பாலின் அளவுக்குச் சமமாக நீர் கலக்கும் முறை எடை கட்டுதல் எனப்பட்டது. பாலின் அளவுக்கு இரண்டு எடை கட்டு, மூன்றெடை கட்டு என்பன முறையே, இருமடங்கு, மும்மடங்கு எனப் பொருள்படும்.

எடைகட்டு[2]-தல் *eḍai-kaṭṭu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***நிறுத்தல்;*** to weigh. 2. ***நிறுக்கும் பொருளின் அடிக்க லத்தினை நிறுத்துக் கொண்டு எடை போடுதல்;*** to allow for the weight of the receptacle while weighing the contents with the receptacle.

[எடை + கட்டு.]

எடைபாகம் *eḍaipāgam,* பெ. (n.) 1. ***நிறுத்தலின் முறை;*** the process of weighing. 2. ***இராம தேவர் செய்தவோர் ஊத*** (வாத) ***நூல்;*** treatise on alchemy in Tamil compiled by Ramadēva, a Siddhā. (சா.அக.).

[எடை + பாகம்.]

எடைபோடு-தல் *eḍai-pōḍu-,* 20.செ.கு.வி. (v.i.) 1. ***பொருள்களை எடையிடுதல்;*** to weigh as measure. 2. ***பாலில் நீர் கலத்தல்;*** to dilute milk with water. பாலில் எடைபோட்டாயா? (சென்னை.வ.).

[எடை + போடு.]

எடைவரி *eḍai-vari,* பெ. (n.) ***எடைகல்லின்மேல் வாங்கப்படும் பழைய அரசிறை.***(கல்வெட்டு.); ancient tax on weights.

ம. எடவரி.

[எடை + வரி.]

எடைவாய்[1] *eḍai-vāy,* பெ. (n.) ***எடைவரி*** பார்க்க; see *eḍaivari.*

[எடை + வாய்.]

எடைவாய்[2] *eḍai-vāy,* பெ. (n.) ***எடையின் அளவுக்குறி;*** mark or number on measure of weights. (ஆ.அக.).

[எடை + வாய்.]

எண்[1] *eṇ,* பெ. (n.) 1. ***இலக்கம்*** (சூடா.); number, digit. "ஒன்று முதலெட்டீறா மெண்ணுள்" (நன்.உயி ரீற்.36). 2. ***கணக்கு;*** mathematics. "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப" (குறள்.393). 3. ***கணியநூல்*** (சோதிடநூல்); astronomy including astrology. "கற் பங்கை சந்தங்கா லெண்கண்" (மணி.27-100).

ம., க. எண்.

[இல் (குத்துதல், பொத்துதல்) → இள் (இழுத்தல், கோடிழுத்தல்) → எள் → எண் = மேலிருந்து கீழ்நோக்கி இழுக்கும் கோடு, கோடுகளின் எண்ணிக்கை, எண்ணிக்கைக் குரிய இலக்கம்.]

கோடுகளை எண்ணுவதும், கூட்டுவதும், கழிப்பதும், வகுப்ப தும், பெருக்குவதுமாகிய செய்கை நினைவுத்திறனைக் கூட்டி ஆராய்ந்து சிந்திக்கும் ஆற்றலை நல்குவதால், எண்ணிக்கை யைக் குறித்த 'எண்' என்னும் பெயர்ச்சொல் எண்ணிப்பார்த்தல் (சிந்தித்தல்) என்னும் ஏவல் வினையுமாயிற்று; கணக்கு, கணியநூல் ஆகியவற்றையும் குறித்தது.

தொன்முது காலத்தில் விரலால் கிடையாகவோ, நெடுக்கா கவோ கோடு கிழிப்பதே, எண்ணிக்கையைக் குறிப்பதாக இருந்தது. பிறகு புள்ளிகளிட்டும் எண்ணினர். மொழியின் எழுத்துகளையே எண்களைக் குறிக்கும் குறியீடுகளாகவும் பண்டையோர் ஆண்டுள்ளனர். எழுத்தைக் கற்பித்த ஆசிரி யரே எண்களையும் (கணக்கு) கற்பித்ததால், அவரைக் கணக்கா யர் என்று அழைத்தனர். எண்களாகப் பயன்படுத்தப்பட்டிருந்த தமிழ் எழுத்துகளே இன்றைய 1-முதல் 10 வரையிலான இலக்கக் குறியீடுகளாகியுள்ளன.

க	உ	ங	ச	ரு	சூ	எ	அ	கூ	ய
1	2	3	4	5	6	7	8	9	10

இவை, முற்றிலும் தமிழ் எழுத்துகளின் திரிபு என்பதும், வணிகர் வாயிலாக அரேபியாவில் அறிமுகமானதால், அராபிய எண்

கள் எனத்தவறாக வழங்கின என்பதும், அறியத்தக்கன. தமிழ்க் ககரம் 2000 ஆண்டுகளுக்கு முன்பு + என எழுதப்பட்டதால் அதில் பக்கக் கோடுகளிழந்து ஒன்றைக்குறிக்கு (1) குறியீடா யிற்று. இவ்வாறே ஏனையவற்றையும் பழந்தமிழ் எழுத்து வடிவங்களுடன் பொருத்திக் காண்க.

எண்[2] *eṇ,* பெ. (n.) 1. ***கணக்கிடுகை*** (சீவக.2353, உரை.); calculation, computation. 2. ***எண்ணம்;*** thought; imagination; intention. "எண்பிறக் கொழிய விறந்தோய் நின்னடி" (மணி.11,65). 3. ***சூழ்ச்சி*** (ஆலோசனை); deliberation; counsel. "எண்சேர்ந்த நெஞ்சத்து" (குறள். 910). 4. ***அறிவு;*** knowledge. "தொக்கிருந் தெண்ணினா னெண்ணப்படும்" (நான்மணி.77). 5. ***மனம்;*** mind. "கலைவலோ ரெண்சுழன்று" (பாரத.நிவாத.125). 6. ***மதிப்பு;*** esteem. "வீரனை யெண்பெறக் கொணர்வாயென" (பாரத.அருச்.தவ.168). 7. ***வரையறை*** (தொல்.எழுத். 308,உரை.); limit. 8. ***ஏரணம்*** (தருக்கம்); logic. ஏரணங்காணென்பர் எண்ணர் (திருக்கோ.நூற்சிறப். உரை.). 9. ***மாற்று;*** fineness of gold or silver as tested by the touchstone. "எண்ணில்பொன்" (சீவக.72). 10. ***மந்திரம்;*** mantras. "பல்பச்சிலையிற் சீலெண்ணுண்டு சாத்த" (பட்டினத்.திருப்பா.பொது.3). 11. ***கலிப்பா உறுப்புகளுள் ஒன்றான அம்போதரங்கம்*** (தொல். பொருள்.452,உரை.); one of the component parts of kali verse.

ம. எண்; க. எணிகெ.

[எண்ணு → எண். எண்ணு-தல் பார்க்க.]

எண்[3] *eṇ,* பெ. (n.) ***உணவு;*** food. "எண்ணென் உணவுப் பெயர்" (தொல்.எழுத்.308).

து. எண்மெ.

[எள் → எண்.]

பழங்காலத்தில் எள்ளும் நீருமே உணவாகக் கருதப்பட்டன. இறந்தார்க்கு எட்டாம் நாளில் எள்ளும் நீரும் படைப்பர். கடற்செலவின் போது பலநாள் கெடாத எள்ளுருண்டைக ளையே உணவாக எடுத்துச் செல்வது மரபு.

எண்[4] *eṇ,* பெ. (n.) ***எட்டு;*** eight.

ம. எண்; க. எண்ட்டு; து. எண்மொ.

[எள் → எண். எள் பார்க்க; see eḷ.]

எண்[5] *eṇ,* பெ. (n.) 1. ***வலிமை*** (அக.நி.); strength. 2. ***அறிவு;*** knowledge. 3. ***உண்மை;*** truth.

[ஏண் → எண்.]

எண்[6] *eṇ,* பெ. (n.) ***எளிமை;*** simplicity, ease.

[இள் → எள் = எண். இள் = இழிவு, தாழ்வு.]

எண்கலையர் *eṇ-kalaiyar,* பெ. (n.) ***கோயிலுக்குவிடப் பட்ட மாதர், தேவரடியார்*** (அக.நி.); dancing girls attached to a temple, as knowing the 64 kalai. (செ.அக.).

[எண் + எண் - எண்ணெண் → எண் + கலை + ஆர். எண்ணெண் (8x 8) = 64.]

எண்கனப்பூடு *eṇ-kaṉappūḍu,* பெ. (n.) ***வெங்காயப் பூடு*** (சா.அக.); onion plant.

[எண் + கனம் + பூடு. எண்கனம் = எட்டடுக்கு.]

எண்காற்பறவை *eṇ-kāṟparavai,* பெ. (n.) ***எண்காற்புள்*** பார்க்க; see *eṇ-kāṟpuḷ.*

[எட்டு + கால் + பறவை.]

எண்காற்புள் *eṇ-kāṟ-puḷ,* பெ. (n.) ***அரிமாவையும் கொல்லும் வலிமை சான்றதாகக் கருதப்பட்ட*** (சரபம் என்றழைக்கப்பட்ட) ***பறவை;*** fabulous bird capable of killing the lion.

[எண் + கால் + புள்.]

இப்பறவைக்கு முற்காலத்தில் எட்டடிப்பறவை என்று பெய ரிருந்தது. எட்டடி நீளமுள்ள பறவை யென்பதை அறியாமல் பிற்காலத்தில் அடியைப்பாதம் என்று பிறழவுணர்ந்து எண்காற் புள் எனப் புதுச் சொல்லைப் படைத்துக் கொண்டனர் போலும்.

எண்கு *eṅgu,* பெ. (n.) ***கரடி;*** bear. "எண்குதன் பிணவோ டிருந்தது போல" (மணி.16,88).

தெ. எலுகு.

[இல் → இள் → இண் → இண்கு → எண்கு. எண்கு = கரியது, கரடி.]

எண்கு

எண்குணத்தான் *eṇ-guṇattāṉ,* பெ. (n.) 1. ***கடவுள்;*** God, who has eight attributes. "எண்குணத்தான் றாளை வணங்காத் தலை" (குறள்.9). 2. ***அருகன்;*** Arhat. 3. ***சிவன்;*** Lord Śiva. (செ.அக.).

[எண் (எட்டு) + குணத்தான்.]

எண்குணம் *eṇ-guṇam,* பெ. (n.) ***அருகனெண்குணம்;*** *eight attributes of God.*

[எண் (எட்டு) + குணம்.]

எண்குணன் *eṇ-guṇaṉ,* பெ. (n.) 1. ***அருகன்*** (திவா.); Arhat. 2. ***சிவன்*** (பிங்.); Śiva.

[எண் (எட்டு) + குணம்.]

Curator Govt. Oriental Manuscripts Library Madras-600 005

எண்குற்றம் *eṉ-kuṟṟam*, பெ. (n.) *அறிவை மறைக்கும் ஆனால் அருகனை அணுகாத எண்வகைக் குறைகள்;* eight impediments or karmas which obscure one's knowledge and intuition as a cloud obscures the sun, but from which an Arhat is free.

[எண் (எட்டு) + குற்றம்.]

உண்மை மறைப்பு, மெய்யுணர்வு மறைப்பு, இன்ப துன்ப நுகர்விப்பு, ஆன்மாவை மயக்குதல், வாணாள் வரையறுப்பு, வாழ்நிலை (கதி) வரையறுப்பு, மறுபிறப்புக்கு மூலம், இடையூறு ஆகியவற்றுக்கு வித்தான செயற்பாடுகளை எண்வகைக் குற்றங்களாகச் (தரிசனாவரணீயம், ஞானாவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயு, நாமம், கோத்திரம், அந்தராயம்) சமணசமயத்தார் கூறுவர்.

எண்கோணம் *eṉ-kōṇam*, பெ. (n.) *எட்டுமூலைகளையுடைய பரப்புருவம்;* octagon.

ம. எண்கோணம்.

[எண் (எட்டு) + கோணம்.]

எண் கோவை *eṉ-kōvai*, பெ. (n.) *காஞ்சி யென்னும் அரையணி* (சூடா.); waist ornament.

[எண் + கோவை.]

எண்சாணுடம்பு *eṉ-cāṇuḍambu*, பெ. (n.) *மாந்த உடல்;* human body of eight span in height when measured by one's own hand.

[எண் (எட்டு) + சாண் + உடம்பு.]

எண்சிறப்புள்ளோன் *eṉ-ciṟappuḷḷōṉ*, பெ. (n.) *அருகன்* (சூடா.); Arhat, recipient of eight kinds of honour.

[எண் (எட்டு) + சிறப்பு + உள்ளோன்.]

எண்சுவடி *eṉ-cuvaḍi*, பெ. (n.) *பெருக்கல்வாய்பாட்டு நூல்;* book of multiplication tables.

ம. எண்சுவடி.

[எண் + சுவடி.]

எண்செய்யுள் *eṉ-ceyyuḷ*, பெ. (n.) *எண்ணாற் பெயர் பெறும் நூல்;* treatise named after number.

[எண் + செய்யுள்.]

எண்டிக்கு *eṇḍikku*, பெ. (n.) *எட்டுத்திக்கு* பார்க்க; see *eṭṭu-t-tikku*.

[எண் + திக்கு.]

எண்டிசை *eṉ-ḍicai*, பெ. (n.) *எட்டுத்திக்கு* பார்க்க; see *eṭṭu-t-tikku*.

ம. எண்டிச.

[எண் + திசை.]

எண்டோளன் *eṉ-ṭōḷaṉ*, பெ. (n.) *எட்டுத்தோள் கொண்ட சிவன்* (பிங்.); Śiva, who has eight shoulders. "எண்டோள் ஈசற்கு எழுபது மாடஞ்செய்தோன்" (திவ்ய-திருமங்கை.).

[எண் + தோள் + அன்.]

எண்டோளி *eṉ-ḍōḷi*, பெ. (n.) *கொற்றவை, காளி* (திவா.); kāḷi, Durga.

[எண் + தோள் + இ.]

எண்ணக்குறிப்பு *eṇṇa-k-kuṟippu*, 1. *நோக்கம்;* motive, object, intention, design. 2. *உள்ளாசை;* internal desire aspiration. (செ.அக.).

[எண்ணம் + குறிப்பு.]

எண்ணங்குலை-தல் *eṇṇaṅ-kulai-*, 4.செ.கு.வி. (v.i.) 1. *மனம் கலங்குதல்* (வின்.); to be perplexed in mind. 2. *எண்ணம் வீணாதல்;* to be disconcerted in a plan, thwarted in one's expectation. 3. *மதிப்புக் கெடுதல்* (வின்.); to lose reputation.

[எண்ணம் + குலை.]

எண்ணங்கொண்டிரு-த்தல் *eṇṇaṅ-koṇḍiru-*, 3.செ.கு.வி. (v.i.) 1. *நோக்கங் கொண்டிருத்தல்; to intend, purpose.* 2. *நம்பி எதிர்பார்த்தல்,* (வின்.); to entertain hope. 3. *மனத்தில் கனவு காணல்;* to build castles in the air. 4. *கவலைப்படுதல்* (வின்.); to be anxious, deeply concerned. 5. *சிந்தித்தல்* (வின்.); to muse, ponder, ruminate.

[எண்ணம் + கொண்டு + இரு.]

எண்ணப்படு-தல் *eṇṇa-p-paḍu*, 20.செ.கு.வி. (v.i.) 1. *கணிக்கப்படுதல்;* to be counted, reckoned. 2. *மதிக்கப் படுதல்;* to be esteemed, respected.

ம. எண்ணப்பெடுக.

[எண் → எண்ண + படு.]

எண்ணம் *eṇṇam*, பெ. (n.) 1. *நினைப்பு;* conception, thought, idea. "எண்ணந்தடுமாறி" (திருவாச.5,25). 2. *கருத்து;* intention, idea. 3. *நாடிய பொருள்;* end, goal. "எண்ணியா ரெண்ண மிழப்பர்" (குறள்.494). 4. *மதிப்புரவு;* respect, reverence. யாராயினும் அவனுக்கு எண்ணமில்லை (உ.வ.). 5. *மதிப்பீடு;* estimation. 6. *சூழ்ச்சி* (பிங்.); deliberation; counsel. 7. *கவலை;* care, anxiety. "எண்ணமிக்கான்" (பெரியபு.தடுத்தாட்.54). 8. *நம்பி எதிர்பார்க்கை* (வின்.); hope, expectation. 9. *எண்ணிக்கை;* number. 10. *கணக்கு;* mathematics.

ம. எண்ணம்; க. எணிதெ, எண்ணிகெ; துட. ஒண், ஒணம்; குட. எண்ண்; து. எண்ணிகெ, எணிகெ, எணெ, எங்கெ; தெ. எனனு, எணிக; பர். எச (எண்), எசவாச்; குவி. எசிகீனை.

[எண் → எண்ணம்.]

எண்ணர் *eṇṇar*, பெ. (n.) 1. *கணிதர்;* mathematicians, astronomers. 2. *ஏரணர்;* logicians. "ஏரணங் காணெனப ரெண்ணர்" (திருக்கோ.நூற்சிறப்பு.சங்.அக.). 3. *அமைச்சர்* (பிங்.); king's ministers, counsellors.

[எண் + அர்.]

எண்ணல் *ennal*, பெ. (n.) 1. ***கருத்து*** (திவா.); purpose, intention. 2. ***கணக்கிடுகை*** (பிங்.); counting. 3. ***எண்ணலளவை;*** computation. 4. ***கருத்தாய்வு;*** deliberation. "நீயே பேரெண்ணலையே" (புறநா.138,6).

[எண் + அல்.]

எண்ணலங்காரம் *en-n-alangāram*, பெ. (n.) ***எண்கள் முறையே வரும் ஓர் அணி*** (சி.சி.விநாயக.காப்பு. சிவஞா.); figure of speech, use of terms of number in succession.

[எண்ணல் + அலங்காரம்.]

எண்ணலர் *ennalar*, பெ. (n.) ***எண்ணார்*** பார்க்க; see *ennār*.

ம. எண்ணலர்.

[எண் + அல் + அர்.]

எண்ணலளவு *ennal-alavu*, பெ. (n.) ***எண்ணலளவை*** பார்க்க; see *ennal-alavai*.

[எண்ணல் + அளவு.]

எண்ணலளவை *ennal-alavai*, பெ. (n.) ***இலக்கத்தால் எண்ணுமளவு*** (நன்.290,உரை.); computation, one of four alavai. "எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் எனும் நான்களவையும்" (நன்.368).

[எண்ணல் + அளவை.]

எண்ணவி *en-n-avi*, பெ. (n.) ***நல்லெண்ணெய்;*** gingili oil. "எண்ணவியரை" (தைலவ.தைல.45).

[எண் + அவி. எண் = எள். எண்ணவி = எள்ளை அவித்து எடுத்த நெய்மம்.]

எண்ணாட்டிங்கள் *ennāttingal*, பெ. (n.) ***எட்டாம் நாள் வளர்பிறைநிலவு;*** crescent moon eight days old. "எண்ணாட் டிங்க ளனைய கொடுங்கரை...... சிறு குளம்" (புறநா.118).

[எண் (எட்டு) + நாள் + திங்கள்.]

எண்ணாதவன் *ennādavan*, பெ. (n.) 1. ***ஆராய்ச்சியில்லாதவன்;*** thoughtless man. 2. ***எதையும் பொருட்படுத்தாதவன்*** (கொ.வ.); one who shows no concern, who does not care. (செ.அக.).

[எண் + ஆ + த + அவன். ('ஆ' எ.ம.இ.நி.) எண்ணாதவன் (வினையா.பெ.).]

எண்ணாப்பு *ennāppu*, பெ. (n.) ***இறுமாப்பு*** (நேமிநா.59, உரை.); arrogance, pride. (செ.அக.).

[எண் + ஆப்பு.]

எண்ணாமை *ennāmai*, பெ. (n.) ***மதியாமை;*** disrespect.

[எண் + ஆ + மை. 'ஆ' எ.ம.இ.நி.]

எண்ணாயிரம் *ennāyiram*, பெ. (n.) 1. ***எட்டாயிரம்;*** eight thousand, 8000. 2. ***ஊர்ப்பெயர்;*** place name.

ம. எண்ணாயிரம்.

[எண் + ஆயிரம்.]

எண்ணாயிரத்தார் *en-n-āyirattār*, பெ. (n.) ***எண்ணாயிரவர்*** பார்க்க; see *en-n-āyiravar*.

[எண் + ஆயிரத்தார்.]

எண்ணாயிரவர் *en-n-āyiravar*, பெ. (n.) 1. ***சமணரிலொரு தொகுதியார்;*** body of 8,000 jains, who disputed with Sambandhar. "எண்பெருங் குன்றத்தெண் ணாயிரவரு மேறினார்கள்" (பெரியபு. திருஞா.855).

[எண் (எட்டு) + ஆயிரவர்.]

எண்ணார் *ennār*, பெ. (n.) ***பகைவர்;*** foes, enemies, those who are supercilious. "எண்ணா ரெயில்கண் மூன்றும்" (தேவா.45,2).

[எண் + ஆ + அர். 'ஆ' (எ.ம.இ.நி.).]

எண்ணாழி *ennāli*, பெ. (n.) ***எட்டு நாழி;*** measure of eight nālis.

ம. எண்ணாழி.

[எண் + நாழி.]

எண்ணான் *ennān*, பெ. (n.) ***உழுந்து;*** black gram.

[இல் → இள் → எண் → எண்ணான். இள் = கருமை.]

எண்ணிக்கை[1] *ennikkai*, பெ. (n.) 1. ***கணக்கிடுகை;*** numbering. 'இந்த எண்ணிக்கையாகிய கால்களால்' (சங். அக.,திருநெல்.பு.சிவபுண்,11). 2. ***மதிப்பு;*** esteem, reverence.

ம. எண்ணிக்க; க., து. எண்ணிகெ; தெ. என்னிக.

[எண் → எண்ணிக்கை. 'கை' பெயரீறு.]

எண்ணிக்கை[2] *ennikkai*, பெ. (n.) ***விழிப்புணர்வு, எச்சரிக்கை*** (யாழ்.அக.); caution.

[எண்ணுதல் = கருதுதல், ஆராய்தல், எண்ணு → எண்ணுகை → எண்ணிக்கை = விழிப்புணர்வு.]

எண்ணிடு-தல் *en-n-idu-*, 18.செ.குன்றாவி. (v.t.) 1. ***கணக்கிடுதல்;*** to count, calculate. 2. ***வரிசையில் எண் குறித்தல்;*** to allot a number in a series.

[எண் + இடு.]

எண்ணிடைச்சொல் *en-n-idai-c-col*, பெ. (n.) ***எண்ணுப்பொருளைக் காட்டும் இடைச்சொல்*** (நன்.429, விருத்.); particle signifying addition or of enumeration. "பொய்படும் ஒன்றோ புனை பூணும்" (குறள்.836). இதில் "ஒன்றோ" என்பது எண்ணிடைச்சொல்.

[எண் + இடை + சொல்.]

எண்ணியற்பெயர் *en-n-iyarpeyar*, பெ. (n.) ***எண்ணாகிய இயல்பு பற்றிவரும் உயர்திணைப் பெயர்*** (தொல்.சொல்.165); (Gram.) noun formed of a numeral. மூவர், ஐவர், நூற்றுவர்.

[எண் + இயல் + பெயர்.]

எண்ணியார் *enniyār*, பெ. (n.) ***நோக்கங்கொண்டவர்;*** designing, scheming persons. "எண்ணியாரெண்ண மிழப்பர்" (குறள்.494).

[எண் → எண்ணி + அவர் - எண்ணியவர் → எண்ணியார்.]

எண்ணிலார் *ennilār*, பெ. (n.) ***எண்ணார்*** பார்க்க; see *ennār*. "எண்ணிலா ரெயின் மூன்று மெரித்த" (தேவா. 221,4).

[எண் (எண்ணுதல்) + இல் + ஆர். 'இல்' - எ.ம.இ.நி.]

எண்ணிலி *en-n-ili*, பெ. (n.) ***எண்ணிலடங்காதது;*** that which is beyond computation. "எண்ணிலி யாகிய சித்திகள் வந்து" (திருவாச.49,5).

[எண் + இலி. இல் → இலி, எ.ம.கு.வி.க.பெ.]

எண்ணிறந்த *en-n-iranda*, கு.வி.எ. (adj.) ***எண்ணமுடியாத;*** innumerable. "எண்ணிறந்த வமணர்களும்" (தேவா.575,10).

[எண் + இறந்த.]

எண்ணின் வகுப்பு *ennin-vaguppu*, பெ. (n.) *ஒன்று முதல் 36 இடங் கொண்ட எண்வரையுள்ள வாய்பாடு (வின்.); numeration table, extending from one to 36 digits.*

[எண் + இன் + வகுப்பு.]

எண்ணீர் *ennīr*, பெ. (n.) ***எள்ளும் நீரும்;*** water with sesame seeds, offered to the dead as libation. "எண்ணீரா லெனினுமிறந்தோர்கட னல்க" (கூர்மபு.உத்.21,15).

ம. எண்ணீர்.

[எள் + நீர். (உம்மைத்தொகை).]

எண்ணு-தல் *ennu-*, 12.செ.குன்றாவி. (v.t.) 1. ***நினைத்தல்*** (பிங்.); to think, to ruminate. 2. ***ஆராய்தல்;*** to consider, ponder on, weigh mentally. "எண்ணித் துணிக கருமம்" (குறள்.467). 3. ***தீர்மானித்தல்*** (பிங்.); to resolve upon, decide, determine. 4. ***மதித்தல்;*** to esteem, respect. "வெயிலோன் மகற்கு முட னெண்ணத்தகுந் திறலினான்" (பாரத.பதினெட்.4). 5. ***உன்னித்தல்;*** to guess, conjecture, surmise. 6. ***வழிபடல்;*** to meditate upon. "எண்ணி யஞ்செழுத்து மாறி" (சிவப்பிர. உண்மை.47). 7. ***கணக்கிடுதல்;*** to count, reckon. "அன்ன கேள்வ ரனேகரை யெண்ணினான்" (உபதே சகா.அயமுகி.59). 8. ***மதிப்பிடுதல்;*** to value. "எண் ணற்கரிய முடிவேந்தர்" (பாரத.இராச.32). 9. ***துய்த்தல்;*** to enjoy. "எண்ணான் சிவனசத்தை" (சி.போ.5,2,1).

ம. எண்ணுக; **க.** எண்ணு, எணிகெ; **துட.** ஒண்; **குட.** எண்ண்; **து.** எண்ணுனி; **தெ.** என்னு; **பர்.** எசு சாத்; **குவி.** எசிகீனை; **கூ.** இன்பெ; **நா.** யன்னேர்; **குரு.** ஆன்னா.

*[எண் = எண்ணுதல், நினைத்தல், ஆராய்தல். எள்ளுக்கு **எண்** என்று பெயர். "8 எள் கொண்டது 1 நெல்" என்னும் நீட்டலளவைக்கு எள் (எண்) அடிப்படை அளவாக இருந்த தால் இதுவே கணக்கிடுதல், ஆராய்தல் பொருள்களில் வளர்ந் தது.]*

எண்ணுப்பெயர் *ennu-p-peyar*, பெ. (n.) ***ஒன்றுமுதலா கிய மேல்வாயிலக்கங்களுக்கும் அரை, கால் போன்ற கீழ்வாயிலக்கங்களுக்கும் வழங்கிவரும் பெயர்.*** name for numerical and fractional digits. "எண்ணுப்பெயர்க் கிளவி உருபியல் நிலையும்" (தொல்.எழுத்.419).

[எண் + பெயர் - எண்ணுப்பெயர் (எண்களின் பெயர்.).]

ஒன்று முதல் பத்து வரையிலான இலக்கங்களுக்குப் பெயராக வரும் எண்ணுப்பெயர்களும் அவற்றின் ஒருபொருள் குறித்த பல சொற்களாக வரும் எண்ணுப்பெயர்களும் உலகமொழிகள் பெரும்பாலானவற்றில் ஒருசீராக ஊடாடியிருப்பதை அந்தந்த எண்ணுப்பெயர் விளக்கங்களில் காண்க.

எண்ணும்மை *en-n-ummai*, பெ. (n.) ***எண்ணுப் பொருளில் வரும் "உம்" என்னும் இடைச்சொல்;*** particle 'um' used in the sense of computation.

[எண் + உம்மை.]

எண்ணும்மைத்தொகை *en-n-umai-t-togai*, பெ. (n.) ***எண்ணலும்மை தொக்கு வருதல்;*** elliptical compound in which the computation part. 'um' is understood. இராப்பகல் (ஆ.அக.).

[எண் + உம்மை + தொகை.]

எண்ணுவண்ணம் *ennu-vannam*, பெ. (n.) ***எண்ணி டைச்சொல் பயின்றுவரும் வண்ணக்குழிப்பு*** (சந்தம்); (Pros.) rhythm produced bythe frequent use of the enumerative particle. e.g. 'உம்' "எண்ணுவண்ண மெண்ணுப்பயிலும்" (தொல்.பொருள்.540).

[எண்ணு + வண்ணம்.]

எண்ணுறுத்தல் *en-n-uruttal*, பெ. (n.) ***உறுதிப்படுத்துகை*** (சங்.அக.); confirming, establishing.

[எண் + உறுத்தல்.]

எண்ணூல் *ennūl*, பெ. (n.) ***கணக்கு நூல்;*** mathematics. "பன்னுமெண்ணூன் முக்கந்தம் பலவு முறையி னோதின னால்" (காஞ்சிப்பு.சனற்கு.40).

[எண் + நூல்.]

எண்ணூறு *ennūru*, பெ. (n.) ***எட்டு நூறுகள்;*** eight hundreds. "இம்மென்னும் முன்னே எழுநூறு மெண்ணூறும்" (தனிப்.).

ம. எண்ணூறு; **க.** எண்ட்டுநூறு; **கூ.** எட்நூறி; **து.** யெண்மனூது; **தெ.** எனம நூறு, எனமன்னூறு.

[எண் + நூறு.]

எண்ணெட்டு *en-n-ettu*, பெ. (n.) ***அறுபத்து நான்கு;*** eight eights, i.e., sixty four, dist. fr. *'evvettu'*.

[எண் + எட்டு.]

எண்ணெய் *enney*, பெ. (n.) 1. ***நல்லெண்ணெய்;*** gingili oil. 2. ***எண்ணெய்ப்பொது, நெய்மம்;*** common name for oil. 3. ***எண்ணெய் தரும் ஒரு மரவகை;*** Malabar wood-oil tree, having oil in the pores of the wood, 1. tr. Dipterocar-pus indicus. (L).

ம. எண்ண; தெ., கொலா. நூனெ; கை. யன; எரு. வன்ன; கோத. எண், எண்ணெ; க., து., இரு., துட., பட., குட. எண்ணெ.

நெய்ப்பொரு ளெல்லாவற்றுள்ளும் ஆவின் அல்லது எருமை யின் நெய் ஊட்டமான உணவிற் குரியதாய்த் தலைசிறந்ததாத லால், நெய்யென்னும் பொதுப் பெயரே சிறப்புப் பெயரா யிற்று. முதன் முதலாக எள்ளின் நெய்யைக் குறித்த எண்ணெய் என்னுஞ்சொல், மிகப் பெருவழக்காய் வழங்கியதால் நாளடை வில் தன் சிறப்புப் பொருளை யிழந்து, நெய்யல்லாத நெய்மப் பொருள்களின் பொதுப் பெயராயிற்று. அதனால் தன் பழம் பொருளைக் குறித்தற்கு 'நல்' என்னும் அடைபெற்றது. இத னால், நெய்க்கு அடுத்துச் சிறந்தது நல்லெண்ணெய் என்பது பெறப்படும். "வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக் குக் கொடு" என்பது பழமொழி. (செல்வி.74.பிப்.).

"எண்ணெய் முந்துதோ திரிமுந்துதோ" என்றும் ஒரு பழ மொழி வழங்குகிறது. அகல்விளக்கு, திரி முதலில் தீர்ந்து அவியுமோ! எண்ணெய் முதலில் வறண்டு அவியுமோ! என்று பார்த்தமட்டில் திட்டமாகச் சொல்லமுடியாத நிலையைச் சாக் காட்டு வாயிலில் தவிக்கும் படுகிழட்டுப் பருவமெய்திய மூதாளத்துணைவர்க்குப் பொருத்தி உவமையாக்கிப் பேசுவது உலக வழக்கு.

எண்ணெய்க்கசடு *eṇṇey-k-kaśaḍu,* பெ. (n.) ***எண் ணெய் மண்டி;*** dregs of oil.

[எண்ணெய் + கசடு.]

எண்ணெய்க்காரன் *eṇṇey-k-kāraṉ,* பெ. (n.) ***எண் ணெய் விற்பவன்;*** oil-monger.

ம. எண்ணக்காரன்; க. எண்ணெகார.

[எண்ணெய் + காரன்.]

எண்ணெய்க்குத்தி *eṇṇey-k-kutti,* பெ. (n.) ***சிறிய எண்ணெய்ச் சாடி;*** small oil jar. (இ.வ.).

ம. எண்ணக்குற்றி; க. எண்ணெ கடிகெ; பட. எண்ணெமான.

[எண்ணெய் + குத்தி. குற்றி → குத்தி.]

எண்ணெய்ச்சாணை *eṇṇey-c-cāṇai,* பெ. (n.) ***எண் ணெய் பூசிய ஒருவகைச் சாணைக்கல்;*** stone prepared for sharpening knife etc. by oiling.

ம. எண்ணச்சாண.

[எண்ணெய் + சாணை.]

எண்ணெய்ச்சாயப்படம் *eṇṇey-c-cāya-p-paḍam,* பெ. (n.) ***எண்ணெய் வண்ணப்படம்;*** oil painting.

ம. எண்ணச் சாயப்படம்.

[எண்ணெய் + சாயம் + படம்.]

எண்ணெய்ச்சாயம் *eṇṇey-c-cāyam,* பெ. (n.) 1. ***எண்ணெயாற் செய்யப்பட்ட வண்ணம்*** (ராட்.); oil paint. 2. ***எண்ணெயிற்றோய்த்தேற்றுவண்ணம்*** (கொ.வ.); colouring substance used in dying a cloth red after soaking it in oil.

ம. எண்ணச்சாயம்.

[எண்ணெய் + சாயம்.' சாயம் = நிழல், நிறம்.]

எண்ணெய்ச்சிக்கல் *eṇṇey-c-cikkal,* பெ. (n.) 1. ***எண்ணெய் வயிற்றில் தங்குதலா லுண்டாகும் செரி யாமை*** (கொ.வ.); indigestion caused by unassimilated oily food. 2. ***எண்ணெய் மயிரினின்று நீங்காமையாலா கும் சிக்கல்*** (வின்); greasy, clotted state of the hair. 3. ***எண்ணெய் நாற்றம்*** (வின்.); oil odour, as obnoxious. 4. ***ஆடையிற்பற்றின எண்ணெயழுக்கு;*** oily, stained condition of cloth.

ம. எண்ணச்சிக்கல்.

[எண்ணெய் + சிக்கல்.]

எண்ணெய்ச்சுண்டு *eṇṇey-c-cuṇḍu,* பெ. (n.) ***எண் ணெய்க் கசடு*** (வின்.); dregs of oil.

[எண்ணெய் + சுண்டு.]

எண்ணெய்த்தண்டு *eṇṇey-t-taṇḍu,* பெ. (n.) ***எண் ணெய் பெய்துவைக்கும் குழாய்;*** bamboo tube in which oil is kept. "முருகுலா மெண்ணெய்த்தண்டும்" (காஞ்சிப்பு.திருக்கண்.36).

[எண்ணெய் + தண்டு.]

எண்ணெய்த்தருவை *eṇṇey-t-taruvai,* பெ. (n.) ***ஒருவ கைப் புல்;*** a kind of grass.

ம. எண்ணக்கடகல்.

[எண்ணெய் + தருவை. தருவை = தருப்பைப்புல்.]

எண்ணெய்தேய்த்துக்கொள்(ளு)-தல் *eṇṇey-tēyttu-k-koḷ-,* 12.செ.கு.வி. (v.i.) ***உடம்பு முழுவதும் எண்ணெய் தேய்த்துக் குளித்தல்;*** to smear one's head as well as body and limbs with gingili oil immediately before a bath.

[எண்ணெய் + தேய்த்து + கொள்.]

எண்ணெய்ப்பற்று *eṇṇey-p-paṟṟu,* பெ. (n.) ***எண் ணெய்ச்சிக்கு*** (இ.வ.); adherence of oil or unctuous matter to hair or clothes; greasy substance in food.

[எண்ணெய் + பற்று.]

எண்ணெய்ப்பனையன் *eṇṇey-p-paṉaiyaṉ,* பெ. (n.) ***பனைவிரியன் பாம்பு*** (இ.வ.); krait, a small venomous snake, oily in appearance, Bungarus carulens.

[எண்ணெய் + பனையன்.]



எண்ணெய்ப்பனையன்

எண்ணெய்ப்பிசுக்கு *enney-p-pisukku,* பெ. (n.) *எண் ணெய்ப்பற்று;* adherence of oil to hair or clothes.

[எண்ணெய் + பிசுக்கு.]

எண்ணெய்ப்பிணக்கு *enney-p-pinakku,* பெ. (n.) *எண்ணெய் தேய்த்துக் குளித்ததனால் வரும் காய்ச் சல்* (இ.வ.); fever caused by oil-bath.

[எண்ணெய் + பிணக்கு.]

எண்ணெய்ப்புல்லிடு-தல் *enney-p-pull-idu-,* 18.செ.குன்றாவி. (v.t.) *நெசவுபாவுக்கு எண்ணெயிடு தல்* (யாழ்.அக.); to apply oil to the warp, in weaving.

[எண்ணெய் + புல் + இடு. புல்லிடல் = நன்கு தடவுதல்.]

எண்ணெய்மணி *enney-mani,* பெ. (n.) *கழுத்திலணி யும் ஒரு வகை மணி* (சங்.அக.); kind of plain bead used in necklaces.

[எண்ணெய் + மணி.]

எண்ணெய்மரம் *enney-maram,* பெ. (n.) 1. *மலையா ளத்தில் வளருமோர் எண்ணெய்மரம்* (சா.அக.); tree usually growing in the western ranges of Kerala. 2. *வழுக்குமரம்;* slippery post especially for sport event on festival occasion.

[எண்ணெய் + மரம்.]

எண்ணெய் முறித்தல் *enney-murittal,* பெ. (n.) *பழுக் கக் காய்ச்சிய இருப்புக் கரண்டியி லிட்டாவது, இரும்பைப் பழுக்கக் காய்ச்சி எண்ணெயில் தோய்த் தாவது, எண்ணெயின் நீர்க்கலப்பு முதலிய குற்றங் களை நீக்கல்;* removing the admixture of water or other bad qualities in oil, by pouring it into a well-heated large spoon or small vessel made of iron or by dipping into it a piece of red hot iron. (சா.அக.).

[எண்ணெய் + முறித்தல்.]

எண்ணெய்மெழுகு *enney-melugu,* பெ. (n.) 1. *உறைந்த இலுப்பெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்;* vegetable wax, it is a term used for solidified coconut oil or iluppai oil. 2. *ஒரு வகை மெழுகு* (M.M.); solidified oil, vegetable wax.

ம. எண்ணக்கூடி.

[எண்ணெய் + மெழுகு.]

எண்ணெய்வடி-த்தல் *enney-vadi-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. *எண்ணெயூற்றுதல்;* to express oil by boiling oleaginous seeds. 2. *எண்ணெயைத் தெளிவித்து இறுத்தல்;* to filter oil from impurities.

[எண்ணெய் + வடி.]

எண்ணெய்வழுக்கு *enney-valukku,* பெ. (n.) 1. *எண்ணெய்சிக்கு;* oleaginousness, greasiness. 2. *எண் ணெய் பிசுக்கு;* sleekiness, glossiness, oily brightness.

[எண்ணெய் + வழுக்கு.]

எண்ணெய் விளக்கு *enney-vilakku,* பெ. (n.) *எண் ணெய்யில் எரியும் விளக்கு;* oil-lamp.

ம. எண்ணவிளக்கு.

[எண்ணெய் + விளக்கு.]

எண்ணெழுத்து *eneluttu,* பெ. (n.) 1. *எண்ணும் எழுத்தும்;* number and alphabet. 2. *இலக்கம்;* the written form of a letter used as digit. "எண்ணெழுத்து இகழேல்" (ஆத்திசூடி.).

[எண் + எழுத்து.]

எண்ணேகாரம் *en-n-ēgāram,* பெ. (n.) *ஏ*[4]*-3* பார்க்க; see *ē*[4]*-3.* "எண்ணேகாரம் இடையிட்டுக் கொளினும்" (நன்.).

[எண் + ஏகாரம்.]

எண்ணைப்பந்தம் *ennai-p-pandam,* பெ. (n.) 1. *எண் ணெயிட்டு எரிக்கும் தீப்பந்தம்;* torch. 2. *வரி வகை;* tax. (S.i.i.vii.69). (செ.அக.).

[எண்ணெய் + பந்தம்.]

எண்ணோகாரம் *en-n-ōgāram,* பெ. (n.) *எண்ணுப்பொ ருளில் வரும் ஓகாரவிடைச்சொல்;* computative parti-cle 'Ō'. எண்ணோகாரம். (நன்.இடை.4.இராமநுச கவிரா யருரை).

[எண் + ஓகாரம்.]

எண்படு-தல் *en-padu-,* 20.செ.கு.வி. (v.i.) *அகப்படு தல்* (யாழ்.அக.); to be obtainable, available. (செ.அக.).

[எண்[5]* + படு - எண்படு. எண் = எளிமை. எண்படல் = எளிதாய்க் கிடைத்தல்.]*

எண்பதம்[1] *en-padam,* பெ. (n.) *எளியசெவ்வி;* easy accessibility. "எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்ன வன்" (குறள்.548).

[எள் + பதம்.]

எண்பதம்[2] *en-padam,* பெ. (n.) *எட்டுவகையான தவசம்;* eight kinds of millet.

[எண் + பதம். பதம் = பயிர், தவசம், உணவு. நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, கேழ்வரகு, துவரை என்பன எண்வகைக் கூலங்களாம்.]

எண்பது *en-padu,* பெ. (n.) *80 என்னும் எண்;* number 80. "எண்பது கோடி நினைந்து எண்ணுவன" (ஔவை யார்.).

ம. என்பது; க., பட. எம்பத்து; துட. எட்டபொத்; கொலா. எம்பத்; குட. எம்பதி; து. யென்ப, எண்ப; தெ. எனுபதி, எனபதி, எனுபதி, எனபய், என்பதி.

[எண் + (பத்து) பது.]

எண்பி-த்தல் *enbi-,* 4.செ.குன்றாவி. (v.t.) *மெய்ப்பித் தல்* (யாழ்ப்.); to prove, show, substantiate.

மறுவ. முதலித்தல், மெய்ப்பித்தல், நிறுவுதல்;
தெ. எனிபின்சு.

[ஏ → ஏண் → எண் → எண்பி (பி.வி.) ஏ (ஏண்) = உயர்வு, எண் = எடுத்துநிறுத்துதல், எண்பி = நிலைநாட்டுதல்.]

எண்பெருந்துணைவர் *en-perun-tunaivar,* பெ. (n.) ***அரசருக்குரிய எட்டுவகை ஆயத்தார்.*** (திவா.); the eight groups of attendants necessary for a monarch.

[எண் + பெரும் + துணைவர்.]

அரசர்க்கு உசாத் துணையாக இருந்த கரணத்தியலவர், கருமகாரர், பொன்சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர். யானைமறவர், இவுளிமறவர் என்னும் எண்வகை ஆயத்தார் எண் பெருந்துணைவர் எனப்பட்டனர்.

எண்பெற்றி *enperri,* பெ. (n.) 1. ***எண் குணம் வாய்ந்தோன்;*** one possessing eight qualities - Śiva. 2. ***எட்டுப்பிள்ளை பெற்றவள்;*** woman who has borne eight children - octipara. (சா.அக.).

[எண் (எட்டு) + பெற்றி.]

எண்பேராயம் *enpēr-āyam,* பெ. (n.) ***எண்பெருந்துணைவர்*** பார்க்க; see *enperuntunaivar.* ''ஐம்பபெருங் குழுவு மெண்பேராயமும்'' (மணி.1,17).

[எண் (எட்டு) + பேராயம்.]

எண்மதி *enmadi,* பெ. (n.) ***எண்ணாட்டிங்கள்*** (பரிபா.1,1,37) பார்க்க; see *ennāttingal.*

[எண் (எட்டு) + மதி. மதி = நிலவு.]

எண்மயம் *enmayam,* பெ. (n.) ***எண்செருக்கு*** பார்க்க; see *enšerukku.* ''முடந் திரித்தெண் மயத்து நின்றார்'' (திருநூற்.62). (செ.அக.).

[எண் + மயம். மயல் → மயம்.]

எண்மர்[1] *enmar,* பெ. (n.) ***கணக்கியல் வல்லுநர்*** (யாழ்.அக.); mathematicians. (செ.அக.).

[எண் + மர். எண் → எண்ணுதல், ஆராய்தல், கணக்கிடுதல். 'நர்'; 'மர்' என்பன பலர்பாலீறுகள்.]

எண்மர்[2] *en-mar,* பெ. (n.) ***எட்டுப்பேர்;*** eight persons. ''மாதிரங் காக்கு மெண்மர்க்கும்'' (கம்பரா.பிணிவீ.44).

ம. எண்மர், எண்வர்; **க.** எண்பர்; **தெ.** எனமண்டுகு; **கொலா.** என்மாதெர், என்மாடர்.

[எண் (எட்டு) + மர்.]

எண்மானம் *en-mānām,* பெ. (n.) ***எண்ணை எழுத்தாலெழுதுகை.*** (Mod.); (Arith.) notation.

[எண் + மானம்.]

எண்மை[1] *enmai,* பெ. (n.) ***மதிப்புரவு.*** (யாழ்.அக.); honour. (செ.அக.).

[எண் = எண்ணப்படுதல், மதிக்கப்படுதல். எண் + மை - எண்மை. (மதிக்கற்பாடு).]

எண்மை[2] *enmai,* பெ. (n.) 1. ***எளிமை;*** easiness, as of acquisition. ''எண்மைக்காலத்து'' (தொல்.பொருள். 150). 2. ***தாழ்மை;*** lowness of rank or condition, position of inferiority. ''எண்மையா ருலகினில்'' (கம்பரா.சடாயுவுயிர்.5).

[எண் → எண்மை (எளிமை).]

எண்மையவன் *enmaiyavan,* பெ. (n.) ***எளியவன்;*** poor person.

[எண்மை + அவன்.]

எண்வகுப்பு *envaguppu,* பெ. (n.) ***ஒன்று முதல் முப்பத்தாறு இடம் (தானம்) வரை வருவது;*** numerical classification. (ஆ.அக.).

[எண் + வகுப்பு.]

எண்வகைவிடை *en-vagai-vidai,* பெ. (n.) ***சுட்டு விடை, மறைவிடை, நேர்விடை, ஏவல்விடை, வினாவிடை, உற்றதுரைத்தல்விடை, உறுவதுகூறல் விடை, இனமொழிவிடை என எட்டுவகையான விடை.*** (நன்.386); eight forms of answering questions.

[எண் (எட்டு) + வகை + விடை.]

எத்தன் *ettan,* பெ. (n.) 1. ***ஏமாற்றுவோன்;*** he who is a cheat, impostor. 2. ***விரகுள்ளவன்;*** scheming, wily person, trickster. ''வினைப் பற்றறுக்கு மெத்தர்களோ பெறுவார்' (திருநூற்.4).

[இயை → ஏய் → ஏய்த்தல் → எத்தல் → எத்தன்.]

எத்தனம் *ettanam,* பெ. (n.) 1. ***முயற்சி;*** effort, attempt, exertion. 2. ***ஏற்பாடு;*** preparation, readiness. 3. ***கருவி.*** (வின்.); implement, instrument, utensil, tool.

[ஏந்து → ஏந்தல் → ஏந்தனம் → ஏத்தனம் → எத்தனம். (கொ.வ.).]

எத்தனி-த்தல் *ettani-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***முயலுதல்;*** to try, set about, attempt.

[ஏல் → ஏந்து = மேலெழும்பு, முயல், முன்னேறு. ஏந்து → ஏந்தல் → ஏத்தல் → எந்தன் → எத்தனி (கொ.வ.).]

எத்தனை *e-t-tanai,* கு.பெ.எ. (adj.) 1. ***எவ்வளவு;*** how many; how much, what measure, what degree. ''எத்தனை காலமும்'' (திவ்.பெரியாழ்.5,3,8). 2. ***பல;*** many. ''எத்தனை பகலும் பழுதுபோயொழிந்தன'' (திவ். பெரியதி.1,1,2).

ம. எத்தன, எத்ர; **இரு.** யெத்தனி; **க.** எனிது, எனித்து, எனிசு, எசுடு; **பட.** ஏசக; **கோத.** எந்தல், எந்திக்; **துட.** எத், எத்க்; **குரு.** யெசக; **குட.** எச்செ, எச்சகி; **து.** எது; **தெ.** எந்த; **கொலா.** எத்தெ; **நா.** என்கெல், எத்தெக்; **பர்.** எங்கொட், **கட்.** எங்கெர்; **கோண்.** பச்சோட்; **கூ.** எசெ; **குவி.** எசர; **மால்.** இகொன்.

[எ = வினாச்சொல். எத்துணை → எத்தனை.]

எத்தாப்பு *ettāppu,* பெ. (n.) ***மேல்ாடை*** (திவ்.திருவிருத். 12,அப்பு.அரும்.); vesture, garment. எத்தாப்பு. (நெல்லை.).

[ஏ → ஏத்து (மேல்) → எத்து + ஆப்பு - எத்தாப்பு = மேலிடுவது.]

எத்தி *etti,* பெ. (n.) ***ஏமாற்றுபவள்;*** she who is a cheat. ''இசையெழுப்பு மெத்திகள்.'' (திருப்பு.).

[ஏய்த்தல் → எத்தல் → எத்தி.]

எத்தித்தடி *ettittadi,* பெ. (n.) ***நீர் இறைக்கும் பாசன முள்ள நிலம்;*** wet land.

[ஏற்றம் → ஏத்தம் + தடி - ஏத்தத்தடி → எத்தித்தடி. தடி = நீர்கோத்த நிலம், நன்செய்.]

எத்து[1]-தல் *ettu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***ஏய்த்தல், ஏமாற்றல்;*** to inveigle, lure, cheat, seduce, defraud. "நேசித்தாரையு மெத்தி வடிப்புவர்" (திருப்பு.403).

[ஏய்த்தல் → எத்துதல்.]

எத்து[2] *ettu,* பெ. (n.) ***ஏமாற்று;*** inveigling, cheating, fraud seduction, deception. "எத்தோ நின்னன்புடைமை" (திருவாச.7,3).

[ஏய் → எய்த்து → எத்து.]

எத்துக்கள்ளி *ettu-k-kalli,* பெ. (n.) ***ஏமாற்றுபவள்;*** woman who inveigles. "பேச்சிலெத்துக்கள்ளி" (தனிப்பா.11,16,35).

[எத்து + கள்ளி.]

எத்தும் *ettum,* கு.வி.எ. (adv.) ***எவ்வகையாலும்;*** by all means. "எத்துந் தமதுரை தேறி நின்றேனை" (தஞ்சைவா.26).

[எனைத்தும் → எத்தும் (கொ.வ.).]

எத்துவாதம் *ettu-vādam,* பெ. (n.) 1. ***ஏமாற்றுப் பேச்சு*** (சங்.அக.); deceptive speech. 2. ***எதிர்ப்பேச்சு*** (வின்.); contradiction. 3. ***குதர்க்கப் பேச்சு;*** argument devoid of logic.

[எத்து + வாதம்.]

எத்துவாளி *ettu-v-āli,* பெ. (n.) ***ஏமாற்றுபவன்;*** cheat. (Tinn.).

[எத்து + ஆள் + இ.]

எதாகிலும் *edāgilum,* கு.வி.எ (adv.) ***ஏதாகிலும்;*** whatever may be, something or other.

[ஏது + ஆகிலும் - ஏதாகிலும் → எதாகிலும்.]

எதாச்சும் *edāccum,* கு.வி.எ. (adv.) ***என்னமாவது, ஏதாவது;*** whatever may be. "ஏதாச்சும் இருக்குமா சாப்பிட?" (வட்.வழக். சொல்லக.).

[ஏது + (ஆவது) ஆச்சும் (கொ.வ.).]

எதிர்[1]-தல் *edir-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***தோன்றுதல்;*** to appear. "எதிர்நலப் பூங்கொடி" (சீவக.2115). 2. ***நிகழ்தல்;*** to happen, befall. "இனி யெதிரா சன்மங்கள்" (அஷ்டப்.நூற்றெட்.காப்பு.3). 3. ***முன்னாதல்;*** to precede. "பனியெதிர் பருவமும்" (தொல்.பொருள்.7). 4. ***மலர்தல்*** (திவா.); to blossom. 5. ***மாறுபடுதல்;*** to be opposed, be at variance. "செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர் தேஎத்து" (புறநா.6,11). 6. ***எதிர்காலத்து வருதல்;*** to come to pass in future. "எதிர்வநல்ல வல்லவையடாது" (இரகு.குறைகூ.1). 7. ***தம்மிற் கூடுதல்;*** to join together. "போரெதிர்ந்தேற்றார்" (பரிபா.18,1). 8. ***அறம்செய்தல்;*** to be hospitable. "துறவோர்க் கெதிர்தலும்" (சிலப்.16,72). - 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***எதிர்த்தல்;*** to oppose, confront. "விண்ணுளோர் எதிர்ந்த போதும்" (பாரத.சூத.21). 2. ***பெறுதல்;*** to receive. "சென்றுபய னெதிர" (தொல்.பொருள்.91). 3. ***கொடுத்தல்;*** to give. "உலகெல்லா மெதிரும் பலியுண வாகவும்" (தேவா.1025,4). 4. ***சந்தித்தல்;*** to meet. "தானினி தெதிர்ந்த தானத் தருகே," (பெருங்.மகத.8,38). 5. ***பொருந்துதல்;*** to rest on, hover over, as clouds. "காரெதிரிய கடற்றானை," (பு.வெ.4,10). 6. ***ஏற்றுக்கொள்ளுதல்;*** to accept, submit to. "அடியடைந் தேவ லெதிராது" (பு.வெ.6,32).

ம. எதிருக; க. எதிரிசு; தெ. எதிரின்சு.

[அது → அதுல் → அதுர் → எதர் → எதிர்தல். அது → அதுக்குதல், அதக்குதல், அடக்குதல் என்பன தன்பாற் கைக்கொளல். பெறுதல், பொருளாதல் காண்க. அதுல்தல், அதர்தல் என்பன வழக்கிழந்தன. அதுர் → எதரி எனத் திரிந்தது.]

எதிர்[2]-த்தல் *edir-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***இகலித் தாக்குதல்;*** to encounter, oppose, withstand, resist. "இத்திறமாகிய படையோ டெப்படி நாஞ்சிற் படைகொண் டெதிர்ப்ப தென்றான்" (பாரத.பதினெட்.15). 2. ***தடுத்தல்;*** to prevent, hinder.

ம. எதிர்க்குக; க. இதிர், இதரு, இதுரு, எதரு, எதிர், எதுர்; கோத. எத்ய்ர்; து. எதுரு; தெ. எதுரு.

[உது → உதுல் → இதுல் → எதுல் → எதிர். எதிர் = நேர்படல், எதிரிடல், மோதுதல், போரிடுதல்.]

எதிர்[3] *edir,* பெ. (n.) 1. ***முன்னுள்ளது;*** that which is opposite, over against, in front, before. 2 ***கைம்மாறு;*** gratitude, return. "சூலையினுக் கெதிர்செய்குறை யென்கொல்" (பெரியபு.திருநாவுக்.73). 3. ***வருங்காலம்;*** future tense. "எதிரது தழீஇய வெச்சவும்மை". 4. ***இலக்கு;*** target, aim. "மற்றெதிர் பெறாமையின் வெளிபோகி" (இரகு.திக்குவி.169). - கு.வி.எ. (adv.) ***முன்;*** infront of "என்வில்வலிகண்டு போவென் றெதிர்வந்தான்" (திவ்.பெரியாழ்.3,9,2).

தெ., து. எதுரு; க. எதிர்.

[உது → உதுல் → இதுல் → எதுல் → எதுர் → எதிர். உதுல் = முன்னுள்ளது.]

எதிர்[4] *edir,* பெ. (n.) 1. ***முரண்;*** obstacle, that which is contrary, adverse, hostile. "எதிரெல்ல நின் வாய்ச்சொல்" (கலி.96). 2. ***போர்*** (பிங்.); battle, war. 3. ***எதிரிடையானது;*** rival. "காமக் கடற்கெதிர்த்து நிறையாம் வரம்பினி நிற்பதன்றால்" (தஞ்சைவா.14). 4. ***ஒப்பு;*** similitude. "உமக்காரெதி ரெம்பெருமான்" (தேவா.613,4).

தெ., து. எதுரு; க. எதிர், ம. எதிர்.

[உது → உதுல் → இதுல் → எதுல் → எதுர் → எதிர்.]

எதிர்க்கட்சி *eidr-k-katci,* பெ. (n.) *மாற்றுக்கட்சி;* rival party, opposite side.

ம. எதிர்க்கச்சி.

[எதிர் + கட்சி.]

எதிர்க்கடை *edir-k-kadai,* பெ. (n.) 1. *எதிர்ப்பு* (இ.வ.); opposition. 2. *எதிர் பாகம்;* opposite side. (சேரநா.) (செ.அக.).

ம. எதிர்கட.

[எதிர் + கடை. 'கடை' பெயரீறு.]

எதிர்க்கதவு *edir-k-kadavu,* பெ. (n.) *ஆடுகதவு* (பாண்டி.); folding door, double door. (செ.அக.).

[எதிர் + கதவு.]

எதிர்க்கரி *edir-k-kari,* பெ. (n.) 1. *மாறான சான்று* (வின்.); counter evidence. 2. *எதிர் வழக்காளனின் சான்று* (இ.வ.); defence witness. (செ.அக.).

[எதிர் + கரி.]

எதிர்க்களி-த்தல் *edir-k-kali-,* 4.செ.கு.வி. (v.i.) *எதிர்க் கெடு* பார்க்க; see *edir-k-kedu.*

[எதிர் + களி-த்தல்.]

எதிர்க்காற்று *edir-k-kāru,* பெ. (n.) *நேரெதிர் அடிக்குங் காற்று;* direct current of air moving through an inclosed space - draught. (செ.அக.).

[எதிர் + காற்று.]

எதிர்க்குறி *edir-k-kuri,* பெ. (n.) 1. *மாறுபாடான குறி;* contra-indication. 2. *தீக்குறி;* counter-symptom, bad or unfavourable symptom. (சா.அக.).

[எதிர் + குறி.]

எதிர்க்கெடு-த்தல் *edir-k-kedu-,* 4.செ.கு.வி. (v.i.) 1. *குமட்டுதல்;* to nauseate, turn the stomach. 2. *உண்ட ஊண் திரும்பி மேல் வருதல்;* to retch. (இ.வ.).

[எதிரக்கு → எதிர்க்கு + எடுத்தல்.]

எதிர்க்கை[1] *edir-k-kai,* பெ. (n.) *மேற்கூரையின் எதிர் மரம்* (வின்.); slanting timber forming a continuous line with the ridge and uniting in an angle formed by the slanting hip; rafters on either end of a hipped or bungalow roof.

[எதிர் + கை.]

எதிர்க்கை[2] *edir-k-kai,* பெ. (n.) *எதிர்த்து நிற்கை;* opposition.

[எதிர் → எதிர்க்கை. கை (தொ.பெ.ஈறு.).]

எதிர்க்கொத்தளம் *edir-k-kottalam,* பெ. (n.) *கொத்தளத் துக்கு முன்னுள்ள காப்புச் சுவர்;* protecting wall in front of the rampart. (pond.).

[எதிர் + கொத்தளம்.]

எதிர்கட்சி *edir-katci,* பெ. (n.) 1. *முன்பக்கம்;* front side. 2. *எதிர்வரிசை;* opposite line. 3. *குடியரசு அமைப் பில் ஆளுங்கட்சிக்கு எதிரான கட்சி;* opposite party formed against the ruling party in a democratic country.

[எதிர் + கட்சி.]

எதிர்கழறு-தல் *edir-kalaru-,* 7.செ.கு.வி. (v.i.) 1. *மாறுகூறுதல்;* to answer back. 2. *ஒத்தல்;* to resemble. "இடியெதிர்கழறும்" (பரிபா.2,37).

[எதிர் + கழறு.]

எதிர்காலம் *edir-kālam,* பெ. (n.) *வருங்காலம்* (திவா.); future.

[எதிர் + காலம்.]

எதிர்காலவுணர்ச்சி *edir-kāla-v-unarcci,* பெ. (n.) *பின் வருவதை யுணர்கை;* fore-knowledge.

[எதிர் + காலம் + உணர்ச்சி.]

எதிர்காற்று *edir-kāru,* பெ. (n.) *எதிர்த்தடிக்குங் காற்று;* contrary wind.

[எதிர் + காற்று.]

எதிர்குதிர் *edir-kudir,* பெ. (n.) *மறுதலை;* obverse. (redupl.of எதிர்) "எதிர்குதி ராகின் றதிர்ப்பு" (பரிபா.8-21).

[எதிர் + குதிர்.]

எதிர்கொண்டெடு-த்தல் *edirkondedu-,* 4.செ.குன் றாவி. (v.t.) **எதிரெடுத்தல்** பார்க்க; see *diredu-.* (சா.அக.).

[எதிர்கொண்டு + எடு-த்தல்.]

எதிர்கொள்(ளு)-தல் *edir-kol-,* 7.செ.குன்றாவி. (v.t.) 1. *வரவேற்றல்;* to advance or go towards a guest or great person to meet, welcome or receive him. "வேனில் விழவெதிர்கொள்ளும்" (கலித்.36) 2. *ஏற்றல், கொள்ளுதல்;* to accept. "எஞ்சா லெதிர் கொண்டு" (பு.வெ.9.32).

ம. எதிரேல்க்குக; தெ. எதிர்கொனு; க. எதிர்கொள்ளு.

[எதிர் + கொள்ளு.]

எதிர்கொள்பாடி *edirkolpādi,* பெ. (n.) *சோழ நாட்டிற் காவிரிக்கு வடகரையில் சிவன் கோயிலுள்ள இடம்;* name of a Siva shrine on northern bank of river Kāvēri.

[எதிர் + கொள் + பாடி.]

எதிர்கோள் *edir-kōl,* பெ. (n.) *எதிர்கொள்ளுகை;* ceremonious or complimentary greeting; welcoming, meeting and receiving. "அரசை யெதிர்கோ ளெண்ணி" (கம்பரா.திருவவ.59).

தெ. எதுர்கோலு.

[எதிர் + கோள்.]

எதிர்ச்சாட்சி *edir-c-cātci,* பெ. (n.) *எதிர்க்கரி* பார்க்க; see *edir-k-kari.*

[எதிர் + சாட்சி.]

எதிர்ச்சி *edircci,* பெ. (n.) *எதிர்க்கை;* act of opposing.

[எதிர் → எதிர்த்தல் → எதிர்ச்சி.]

எதிர்ச்சீட்டு *edir-c-cīttu,* பெ. (n.) *எதிரிடைமுறி;* counter document containing the corresponding obligations of the executant of it.

க. எதிர்சீட்டு.

[எதிர் + சீட்டு.]

எதிர்ச்சுவர் *edir-c-cuvar,* பெ. (n.) *முன்பக்கச்சுவர்;* face wall (C.E.M.).

[எதிர் + சுவர்.]

எதிர்ச்செட்டு *edir-c-cettu,* பெ. (n.) 1. *போட்டி வணிகம்* (வின்.); competition in trade. 2. *வாங்கி விற்கும் வணிகம்* (யாழ்ப்.); trading at second hand, buying and selling again directly at a small profit.

[எதிர் + செட்டு.]

எதிர்ச்செறி-த்தல் *edir-c-ceri-,* 2.செ.குன்றாவி. (v.t.) *வெள்ளத்திற்கு எதிராக அணை போடுதல்;* to dam up, as a flood. "பெருக்காற்றை எதிர்ச் செறிக்க மாட்டாதாப் போலே" (திவ்.திருநெடுந்.21,வ்யா,பக்.160).

[எதிர் + செறி-த்தல்.]

எதிர்சம்பாவனை *edir-cambāvanai,* பெ. (n.) *எதிர் மொய்* பார்க்க; see *edir moy.*

[எதிர் + சம்பாவனை.]

எதிர்செய்குறை *edir-šeykurai,* பெ. (n.) *கைம்மாறு;* recompense.

[எதிர் + செய் + குறை.]

எதிர்செலவு *edir-celavu,* பெ. (n.) *வரவேற்க முன்னெ முந்து செல்கை;* courteous advance to welcome anyone. "இருக்கை யெழலும் எதிர்செலவும்" (நாலடி.143).

[எதிர் + செலவு.]

எதிர்சோழகம் *edir-cōlagam,* பெ. (n.) *நேர் தெற்கிலி ருந்து வீசும் காற்று* (யாழ்ப்.); wind that blows directly from the south.

[எதிர் + சோழகம்.]

எதிர்த்தட்டு *edir-t-tattu,* பெ. (n.) 1. *எதிர்ப்பக்கத்துத் துலாத்தட்டு;* opposite scale-pan in a balance. "எழுகின்ற ஞாயிறொத்தான் குலதீப னெதிர்த்தட்டிலே" (தமிழ்நா.124). 2. *எதிரிடை;* that which is contrary, opposite. "தாரித்ரியமும் அதற்கு எதிர்த்தட்டான ஐஸ்வரியமும்." (ஈடு.6,3,1).

[எதிர் + தட்டு.]

எதிர்த்தலை *edir-t-talai,* பெ. (n.) *எதிரிடை;* opposite. "நட்பும் அதற்கு எதிர்த்தலையான பகையும்" (ஈடு.9,1,1).

ம. எதிர்த்தலை. (an enemy).

[எதிர் + தலை.]

எதிர்த்தாக்கு *edir-t-tākku,* பெ. (n.) *தற்காப்பின் பொருட்டுத்தாக்குகை;* counter attack in self-defence. (Pond)

[எதிர் + தாக்கு.]

எதிர்த்துத்தா-(தரு)-தல் *edirttu-t-tā-,* 15.செ.குன்றாவி. (v.t.) *ஒத்துக்கொடுத்தல்;* to compensate, make up for. தோற்றுப்படில் நாங்களெதிர்த்துத் தரக்கடவோம். (S.I.I.I.104).

[எதிர்த்து + தரு-தல்.]

எதிர்த்துப்பேசு-தல் *edirttu-p-pēšu-,* 5.செ.குன்றாவி. (v.t.) *மாறு செல்லுதல்* (Law.); to dispute, controvert, object, to plead against - 5. செ.கு.வி. (v.i.) *அடங்காமற் பேசுதல்;* to retort, speak disobediently.

[எதிர்த்து + பேசு.]

எதிர்ந்தோர் *edirndōr,* பெ. (n.) *பகைவர்* (திவா.); adversaries, opponents, combatants.

[எதிர் → எதிர்ந்தோர்.]

எதிர்நடை[1] *edir-nadai,* பெ. (n.) *மூலத்தின்படி;* counter part of a document இப்பிரதி எதிர்நடை பார்த்தெழுதினது. (செ.அக.).

[எதிர் + நடை.]

எதிர்நடை[2] *edir-nadai,* பெ. (n.) *மாறுபட்ட ஒழுக்கம்* (வின்.); acting perversely, taking an opposite course.

[எதிர் + நடை.]

எதிர்நடைக்கணக்கு *edir-nadai-k-kanakku,* பெ. (n.) *கூட்டாளிகளின் தனிக்கணக்கு* (வின்.); register or account kept separately by each partner in a joint concern in order that the account maintained by everyone of them may be examined by the other partners.

[எதிர்நடை + கணக்கு.]

எதிர்நிரனிறை *edir-niranirai,* பெ. (n.) *முறைமாறி வரும் நிரனிறை* (நன்.414,உரை.); reversed sequence, a syntactical arrangement of a series of predicates in an order which is the reverse of that in which their respective nominatives stand.

[எதிர் + நிரல் + நிரை.]

எதிர்நில்[1]-தல் *edirnil-,* 14.செ.கு.வி. (v.i.) 1. *மாறுபட்டு நிற்றல்* (வின்.); to be perverse, contumacious. 2. *முன்னிற்றல்;* to stand before. "காகமானவை... ஒரு கல்லின்முன் னெதிர் நிற்குமோ" (தாயு.எங்கு.6).

[எதிர் + நில்.]

எதிர்நில்[2]-தல் *edirnil-,* 14.செ.குன்றாவி. (v.t.) *எதிர்த்து நிற்றல்;* to resist, withstand, oppose.

[உது → இது → எதுல் → எதுர் → எதிர் + நில்.]

எதிர்நிலை[1] *edir-nilai,* பெ. (n.) ***இகலிநிற்கை*** (வின்.); resistance, opposition.

[எதிர் + நிலை. நிலை = நிற்றல்.]

எதிர்நிலை[2] *edir-nilai,* பெ. (n.) ***கண்ணாடி*** (சங்.அக.); mirror.

[எதிர் + நிலை. நிலை = நிலைகொண்டது.]

எதிர்நீச்சு *edir-nīccu,* பெ. (n.) 1. ***வெள்ளப்போக்கிற்கு எதிராக நீந்துகை;*** swimming against the current. 2. ***செயற்கரிய. செய்கை;*** accomplishing a very difficult task.

[எதிர் + நீச்சு.]

எதிர்நூல் *edir-nūl,* பெ. (n.) ***தன்கருத்தை நிலைநாட்டிப் பிறர்கருத்தை மறுக்கும் நூல்*** (இறை.1,பக்.12); refutatory work, one of four broad divisions of literary attempts; work containing fresh material and defending its own doctrines against those of others.

[எதிர் + நூல்.]

எதிர்நோக்கு-தல் *edirnōkku-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***நேரே பார்த்தல்;*** to face. 2. ***முன்பக்கம் பார்த்தல்;*** to look forward. 3. ***எதிர்பார்த்தல்;*** to expect; envisage.

ம. எதிர் நோக்குக.

[எதிர் + நோக்கு.]

எதிர்ப்படு[1]**-தல்** *edir-p-padu-,* 20.செ.கு.வி. (v.i.) ***முன் தோன்றுதல்;*** to appear. "ஈசனெதிர்ப்படு மாயிடிலே" (திருவாச.49,3) - 18.செ.குன்றாவி. (v.t.) ***சந்தித்தல்;*** to meet, encounter. "எதிர்ப்பட்டாற் பின்னை விடுமோ விறல்மீன்" (பாரத.பதினேழாம்.143).

ம. எதர்பெடுக; க. எதுருபீளு; து. எதுரு; தெ. எதுருபடு.

[எதிர் + படு.]

எதிர்ப்படு[2]**-தல்** *edir-p-padu-,* 18.செ.குன்றாவி. (v.t.) ***ஒப்பாதல்;*** to resemble. "பண்ணெதிர்ப்படுமொழிக்கு" (இரகு.இரகுவுற்.10).

[எதிர் + படு.]

எதிர்ப்பாடு *edir-p-pāḍu,* பெ. (n.) ***சந்திக்கை*** (ஐங்குறு. 275,உரை.); meeting, encounter, juxtaposition.

[எதிர் + (படு) பாடு.]

எதிர்ப்பாய்ச்சல் *edir-p-pāyccal,* பெ. (n.) 1. ***எதிரான நீரோட்டம்;*** counter-current. 2. ***எதிராகப் பாய்கை;*** leaping in contrary direction, reverse flow. (செ.அக.).

[எதிர் + பாய்ச்சல்.]

எதிர்ப்பாய்ஞ்சான் *edir-p-pāyñjān,* பெ. (n.) ***தண்ணீர் ஒட்டத்திற்கு எதிராகப் பாய்ந்தோடு மீன்;*** fish rushing or swimming against the current of water. (சா.அக.).

[எதிர் + (பாய்ந்தான்) பாஞ்சான் (கொ.வ.).]

எதிர்ப்பு[1] *edirppu,* பெ. (n.) ***குறி;*** omen portent, augery, foretoken.

[எதிர் → எதிர்ப்பு.]

எதிர்ப்பு[2] *edirppu,* பெ. (n.) 1. ***அலைப்பு;*** resistance. 2. ***இலக்கு;*** aim. 3. ***எதிர்மொழி;*** contradiction. 4. ***வருங்காலம்;*** future. 5. ***தடுப்பு;*** obstruction. (ஆ.அக.).

ம. எதிர்ப்பு; க. எதுர், எதிர், எதுரு; து. எதுரு; தெ. எதுரு.

[எதிர் → எதிர்ப்பு.]

எதிர்ப்பு[3] *edirppu,* பெ. (n.) ***வாங்கிய அளவே திருப்பிக் கொடுப்பது;*** exact return of things borrowed. "மாறெதிர்ப்பை பெறாஅமையின்" (புறநா.333,11).

[எதிர் → எதிர்ப்பு.]

எதிர்ப்பெண் *edirppeṇ,* பெ. (n.) ***ஒரு வீட்டிற்குப்பெண் கொடுத்து அங்கிருந்து தம் வீட்டிற்குப் பெண் எடுப்பது*** (கருநா.); exchange of brides between two families.

க. எதுருதெண்ணு.

[எதிர் + பெண்.]

எதிர்பார்-த்தல் *edir-pār-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஒன்றை நோக்கி யிருத்தல்;*** to expect, look forward to envisage. 2. ***வரவு பார்த்திருத்தல்;*** to await, the arrival, as one expected. 3. ***பிறருதவி நோக்குதல்;*** to look up to others for help. அவன் பிறர் கையை எதிர்பார்ப்பவன் (உ.வ.).

ம. எதிர்நோக்குக; க. எதுருநோடு.

[எதிர் + பார்.]

எதிர்பொழுது *edir-poḻudu,* பெ. (n.) 1. ***இனிவருங்காலம்;*** hereafter, time to come, future. 2. ***எதிர்காலம்;*** future tense. "ஐம்பாலெதிர்பொழுது" (நன்.144).

[எதிர் + பொழுது.]

எதிர்மறுப்பு *edir-maṟuppu,* பெ. (n.) ***முன்னொடு பின் முரணக் கூறுகை*** (யாழ்.அக.); contradictory statement.

ம. எதிர்மொழி.

[எதிர் + மறுப்பு.]

எதிர்மறை *edir-maṟai,* பெ. (n.) ***எதிர்மறுப்பு;*** negative. "எதிர்மறை மும்மையு மேற்கும்" (நன்.145).

[எதிர் + மறை.]

எதிர்மறையிடைநிலை *edir-maṟai-y-iḍainilai,* பெ. (n.) ***எதிர்மறைப் பொருளைக் காட்டும் அல், ஆ, இல் ஆகிய இடைநிலைகள்;*** (Gram.) negative sign, in the middle of a word.

[எதிர்மறை + இடை + நிலை.]

எதிர்மறையிலக்கணை *edir-maṟai-y-ilakkaṇai,* பெ. (n.) ***எதிர்மறைப் பொருளைக் குறிப்பால் உணர்த்துவது;***

irony, cynicism, parody, using language hinting a meaning contrary to the literal sense, abuse of terms.

[எதிர்மறை + இலக்கணை.]

எதிர்மறையும்மை *edir-maṟai-y-ummai,* பெ. (n.) ***எதிர்ம றைப் பொருள்தரும் 'உம்' இடைச்சொல்;*** negative part. 'um'.

[எதிர்மறை + உம்மை.]

எதிர்மறையெச்சம் *edirmaṟaiyeccam,* பெ. (n.) ***எதிர் மறுப்பைக் காட்டுமெச்சம்;*** adjective denoting negation. காணாத கண் (உ.வ.).

[எதிர்மறை + எச்சம்.]

எதிர்மறைவினை *edir-maṟai-viṉai,* பெ. (n.) ***உடன்பாட் டுக் கெதிராக மறுத்து வரும் வினை;*** negative verb. (எ.கா.) வந்திலன், செல்லான், காணலன்.

[எதிர்மறை + வினை.]

எதிர்மீன் *edir-mīṉ,* பெ. (n.) ***நீர்ப்பாய்ச்சலை எதிர்த்துச் செல்லும் மீன்;*** fish that swims against the current.

[எதிர் + மீன்.]

எதிர்முகம்[1] *edir-mugam,* பெ. (n.) 1. ***நேரெதிர்;*** confronting position, as face to face. 2. ***முன்னிலை*** (வின்.); presence, confrontation.

[எதிர் + முகம்.]

எதிர்முகம்[2] *edir-mugam,* பெ. (n.) ***மாறுபாடு*** (வின்.); opposition, polarity, reverse.

[எதிர் + முகம்.]

எதிர்முகவேற்றுமை *edir-muga vēṟṟumai,* பெ. (n.) ***விளி வேற்றுமை;*** vocative case. "ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை" (தொல்.சொல்74,சேனா.).

[எதிர் + முகம் + வேற்றுமை.]

எதிர்முழி *edir-muḻi,* கு.வி.எ. (adv.) ***நேருக்குநேராய்;*** (vul.) face to face.

[எதிர் + விழி. விழி → முழி (கொ.வ.).]

எதிர்முறி *edir-muṟi,* பெ. (n.) ***எதிர்ச்சீட்டு*** பார்க்க; see *edirccīṭṭu.*

[எதிர் + முறி.]

எதிர்மூச்சுப்போடுகை *edir-mūccu-p-pōḍugai,* பெ. (n.) ***எதிர்நின்று மூச்சு வாங்க நெற்குத்துகை;*** puffing, while husking. கூலியுங் கொடுத்து எதிர்மூச்சும் போட வேண் டுமா? (பழ.).

[எதிர் + மூச்சு + போடுகை.]

எதிர்மை *edirmai,* பெ. (n.) ***எதிர்காலத்தில் நிகழ்கை;*** happening in future. "அஃதெதிர்மை பொருளென" (பெருங்.நரவாண.1,119).

[எதிர் → எதிர்மை.]

எதிர்மொய் *edirmoy,* பெ. (n.) ***திருமணம் முதலிய காலங்களில் செய்யப்பட்ட சீர்க்கு மாற்றாகச் செய் யப்படும் அன்பளிப்பு;*** complimentary gift of courtesy to the brides party by those of the bridegroom or vice versa on marriage occasions in return for gifts received. (செ.அக.).

[எதிர் + மொய்.]

எதிர்மொழி *edir-moḻi,* பெ. (n.) 1. ***மறுமொழி*** (பிங்.); response, answer, reply. 2. ***மறுப்புரை;*** rejoinder, counter-argument, retaliation, rebuttal. "எதிர்மொழி யுண்டாமா கிற் சொல்லுவீரே" (பாரத.சூது.243).

ம. எதிர்மொழி; க. எதுருமாது.

[எதிர் + மொழி.]

எதிர்வட்டி *edir-vaṭṭi,* பெ. (n.) ***செலுத்தும் மூலத் தொகைக் கேற்பக் கழிக்கும் வட்டி*** (C.G.); counter interest, as on payments made before due date.

[எதிர் + வட்டி.]

எதிர்வனன் *edirvaṉaṉ,* பெ. (n.) ***ஏற்றுக்கொள்பவன்;*** recipient. "இன்பம் பெருக வெதிர்வனன் விரும்பி" (பெருங்.வத்தவ.10,11).

[எதிர் + வ் + அன் + அன். வ் - எகா.இ.நி. 'அன்' சாரியை. அன் (ஆ.பா.ஈறு).]

எதிர்வாதம் *edir-vādam,* பெ. (n.) 1. ***எதிர்வழக்காளியின் பேச்சு;*** reply, argument for the defence. 2. ***மாறுபடக் கூறுகை;*** objection. எதைச் சொன்னாலும் எதிர்வாதம் பண்ணுகிறான். (உ.வ.).

ம. எதிர்வாதம்.

[எதிர் + வாதம். வாள் = பேசுதல். வாள் → வாளம் → வாதம் (கொ.வ.).]

எதிர்வாதி *edir-vādi,* பெ. (n.) 1. ***எதிர் வழக்காளி;*** defendant, respondent, accused. 2. ***தன்பக்கத்துக்கே எதிராக வாதிப்பவன்*** (நன்.384, மயிலை.); he who pleads for the side opposite to one's own. 3. ***எதிர்க்கட்சி பேசுவோன்;*** opponent, one who attacks a thesis, antagonist, rival. அறிவினால் வரும் வினா, எதிர்வாதியா லும் ஆசிரியனாலும் வரும். (நன்.384, மயிலை.).

ம. எதிர்வாதி.

[எதிர் + வாதி. வாள் = பேசுதல். வாள் → வாளம் → வாதம் (கொ.வ.) - வாதி.]

எதிர்வாய் *edir-vāy,* பெ. (n.) ***ஏரியின் உள்ளக முன் வாய்;*** foreshore of a lake.

[எதிர் + வாய்.]

எதிர்வார்த்தை *edir-vārttai,* பெ. (n.) ***பகரம், விடை;*** reply, retort. சங்கத்தார்க்கு ஒருபோதும் எதிர்வார்த்தை சொல்லார்களே (தமிழ்றி.32).

ம. எதிர்வா.

[எதிர் + வார்த்தை. எதிர்மொழி பார்க்க; see edirmoḻi.]

எதிர்வழிக்கெண்டைப்பச்சை *edirvili-k-kendai-p-paccai,* பெ. (n.) *இருமீன்கள் ஒன்றையொன்று பார்ப்பது போற் குத்தும் பச்சைக்குறி;* tattoo mark like that of two carps facing each other.

[எதிர் + வழி + கெண்டை + பச்சை.]

எதிர்விற்பனை *edir-virpanai,* பெ. (n.) *போட்டி வாணிகம்;* competition in trade (Pond.).

[எதிர் + விற்பனை.]

எதிர்வினை *edir-vinai,* பெ. (n.) *எதிர்காலத்துச் செயல்;* future events. "கணியெனைக் கூறிய எதிர்வினை யெல்லா மெஞ்சா தெய்தி" (பெருங்.உஞ்சைக்.36,211). (செ.அக.).

[எதிர் + வினை.]

எதிர்வினை விலக்கு *edir-vinai-vilakku,* பெ. (n.) *அணிவகையுளொன்று; அஃது எதிர்கால இடையூற்றைக் காட்டி மறுப்பது;* figure of speech. (ஆ.அக.).

[எதிர் + வினை + விலக்கு.]

எதிர்வு *edirvu,* பெ. (n.) 1. *எதிர்ப்படுகை;* meeting, confronting. 2. *எதிர்காலம்* (தொல்.சொல்.202); future tense. 3. *நிகழ்ச்சி* (W.); happening, contingence.

[எதிர் → எதிர்வு.]

எதிர்வெட்டு *edir-vettu,* பெ. (n.) *மறுதலை;* opposition, contradiction, retaliation. அவன் எப்போதும் எதிர்வெட்டாய்ப் பேசுகிறான் (இ.வ.).

[எதிர் + வெட்டு.]

எதிர *edira,* இடை. (part.) *ஓர் உவமவுருபு* (தண்டி.33); adverbial particle of comparison.

[எதிர் → எதிர.]

எதிரடையோலை *edir-adai-y-ōlai,* பெ. (n.) *அடையோலை எழுதித் தருபவருக்குக் கொடுக்கும் சான்றுச் சீட்டு;* deed of authority given by the lessor to the lessee. 'நிலக்கூலிக்கும் விதை முதலுக்கும் எதிரடையோலை காட்டினபடியாலும்' (S.i.i.vii,385).

[எதிர் + அடை + ஓலை.]

எதிரதுதழீஇயவெச்சவும்மை *ediradu-taliya-veccavummai,* பெ. (n.) *எஞ்சிய செயலை விளக்கி யெதிர்காலத்தைத் தழுவி நிற்கு மும்மை;* adverbial particle of anticipatory reference. (ஆ.அக.).

[எதிர் + அது + தழுவிய (தழீஇய) + எச்ச + உம்மை.]

எதிரதுதழுவு-தல் *ediradu-taluvu-,* 5.செ.குன்றாவி. (v.t.) *வரக்கடவதனையுங் குறித்து நிற்றல்;* to bear anticipatory reference. "எதிரது தழீஇய வெச்சவும்மை" (நன்.).

[எதிர் + அது + தழுவு.]

எதிரதுபோற்றல் *ediradu-porral,* பெ. (n.) *முன்னில்லாதனவாயினும் தற்கால வழக்காயின் அவற்றைக் கொள்ளும் ஓர் உத்தி* (நன்.14); (Gram), adoption of modern usage. One of 32 utti.

[எதிர் + அது - எதிரது + போற்றல்.]

எதிரதுபோற்று-தல் *ediradu-porru-,* 5.செ.குன்றாவி. (v.t.) *எதிரதுதழுவு* பார்க்க; see *ediradu-taluvu-.*

[எதிர் + அது + போற்று.]

எதிரம்புகோ-த்தல் *edir-ambu-kō-,* 4.செ.கு.வி. (v.i.) *எதிர்த்துநிற்றல்* (குருபரம்.ஆறா.5); lit. to place the arrow against the bowstring, against a similar act of the opponent, to stand in opposition; to cross swords.

[எதிர் + அம்பு + கோ-த்தல்.]

எதிரல் *ediral,* பெ. (n.) *எதிர்த்தல்;* opposing. (ஆ.அக.).

[எதிர் + அல்.]

எதிரழற்சி *edir-alarci,* பெ. (n.) *எதிர்ப்புண்டாக்கும் மருந்து;* irritant medicine.

[எதிர் + அழற்சி.]

எதிரா *edirā,* பெ. (n.) *வரும் ஆண்டு;* next year. "எதிராக்குப் போவோம் அங்கே" (வட்.வழக். சொல்லக.).

[எதிர் + ஆண்டு - எதிராண்டு → எதிரா. (கொ.வ.).]

எதிராப்பு *edir-āppu,* பெ. (n.) *கழலாதபடி வைக்கும் ஆப்பு;* side wedge driven in to hold fast the main wedge.

[எதிர் + ஆப்பு.]

எதிராமாண்டு *edirām-āndu,* பெ. (n.) *எதிர்வரும் ஆண்டு* (S.i.i.93); next, succeeding year.

[எதிர் + ஆம் + ஆண்டு.]

எதிராள் *edirāl,* பெ. (n.) *எதிராளி* (சேரநா.); opponent, enemy.

ம. எதிராள்.

[எதிர் + ஆள்.]

எதிராளி *edir-āli,* பெ. (n.) 1. *பகைவன்;* enemy, adversary. "துர்க்குணமில்லா தவர்க் கெதிராளியேது." (குமரேச.80). 2. *எதிர்வழக்காளி;* defendant, accused. 3. *போட்டி போடுபவன்;* competitor.

ம. எதிராளி; க. எதுராள்; **கோத.** எத்ய்ர்; தெ. எதிரி.

[எதிர் + (ஆள்) ஆளி.]

எதிரி *ediri,* பெ. (n.) *எதிராளி* பார்க்க; see *edirāli.* "எதிரிசாபமுந்துணிந்துவிழவே" (பாரத.பத்தாம்.31).

க. எதுரி; தெ. எதிரி; ம. எதிரி; **கோத.** எத்ய்ர்.

[எதிர் → எதிரி.]

எதிரிடல் *ediridal,* பெ. (n.) *எதிரிடு-தல்* பார்க்க; see *ediridu-.*

[எதிர் + இடல்.]

எதிரிடு-தல் *edir-iḍu-,* 18.செ.குன்றாவி. (v.t.) 1. ***எதிர்ப்படுதல்;*** to meet, encounter. 2. ***எதிர்த்தல்;*** to oppose in battle. 3. ***மாறுபடுதல்;*** to be opposed; to be at variance. 'அனந்தர க்ஷணத்திலே எதிரிடா நிற்பார் கள்' (ஈடு.1,3,10).

ம. எதிரிடுக; க. எதுரிசு, எதுரிடு; தெ. எதிரின்சு.

[எதிர் + இடு.]

எதிரிடை[1] *edir-iḍai,* பெ. (n.) 1. ***எதிர்ச்செயல்;*** opposition, counter-action. 2. ***போட்டி;*** rivalry, competition. 3. ***சமமாயிருப்பது;*** that which is equal. அவனுக்கு எதிரிடையில்லை. (இ.வ.).

ம. எதிரிட; க. எதுரு சீட்டு.

[எதிர் + இடை.]

எதிரிடை[2] *edir-iḍai,* பெ. (n.) ***எதிரிடைச்சீட்டு*** பார்க்க, see *ediriḍaiccīṭṭu.*

[எதிர் + இடை.]

எதிரிடைகட்டு-தல் *edir-iḍai-kaṭṭu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***போட்டி போடுதல்;*** to vie with, compete with. 2. ***பகை கொள்ளுதல்*** (யாழ்ப்.); to oppose, resist, antagonize.

[எதிர் + இடை - எதிரிடை + கட்டு.]

எதிரிடைச்சீட்டு *edir-iḍai-c-cīṭṭu,* பெ. (n.) ***எதிர்ச்சீட்டு*** பார்க்க; see *edir-c-cīṭṭu.*

[எதிரிடை + சீட்டு.]

எதிரிடைமுறி *edir-iḍai-muṟi,* பெ. (n.) ***எதிரிடைச்சீட்டு*** பார்க்க; see *ediriḍaiccīṭṭu.*

[எதிரிடை + முறி.]

எதிரிலி *edir-ili,* பெ. (n.) ***எதிரில்லாதவன்;*** the unrivalled, usu. a title of kings. எதிரிலி சோழவேந்தன். (Insc.).

[எதிர் + இலி.]

எதிருக்கெடு-த்தல் *ediru-k-keḍu-,* 4.செ.கு.வி. (v.i.) ***எதிர்க்கெடு*** பார்க்க; see *edir-k-keḍu.*

[எதிருக்கு + எடு.]

எதிருத்தரம் *edir-uttaram,* பெ. (n.) ***மறுமொழி;*** *rejoinder, counter statement.*

[எதிர் + உத்தரம்.]

எதிருரை-த்தல் *edir-urai-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***எதிர்த்துப் பேசுதல்;*** to oppose, contradict, speak against. - 4.செ.கு.வி. (v.i.) ***பொருதற் குறுதியாய் எதிர்நிற்றல்;*** to take a firm; stand for making an attack. "சேனையுடன் மீண்டு மெதிருன்றாமல்" (பாரத.பதினேழாம்.163).

[எதிர் + உரை.]

எதிரெடு-த்தல் *edir-eḍu-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***வாயாலெடுத்தல்;*** to vomit. "குமட்டி யெதிரே யெடுக்கும்" (மீனாட்.பிள்ளை.காப்பு.6). 2. ***எதிர்க் கெடு-த்தல்*** பார்க்க; see *edirkkeḍu.*

[எதிர் + எடு.]

எதிரேவல் *edir-ēval,* பெ. (n.) 1. ***ஏவலையெடுக்கச் செய்யுந் தொழில்*** (வின்.); counteracting sorcery. 2. ***ஒருவன் செய்த ஏவலின் பொருட்டு மாறாக அவன் மீது ஏவுகை;*** retaliatory sorcery.

[எதிர் + ஏவல்.]

எதிரேற்றம் *edir-ēṟṟam,* பெ. (n.) ***வெள்ளப் பெருக்குக்கு எதிரேறிச் செல்லுகை;*** against the current. "எதிரேற் றங் கொண்ட பாடல்" (சேதுபு.திருநா.5).

[எதிர் + ஏற்றம்.]

எதிரேற்றல்[1] *edir-ēṟṟal,* பெ. (n.) ***எதிர்கொள்ளுகை;*** advancing towards a party to welcome them.

[எதிர் + ஏற்றல்.]

எதிரேற்றல்[2] *edir-ēṟṟal,* பெ. (n.) 1. ***எதிர்த்து நிற்கை;*** attacking, opposing, resisting. 2. ***பிறன்மேல் வருவதை முன்னின்று தானேற்கை;*** interposing and receiving on one's own person, as the weapons discharged against another by a foe.

[எதிர் + ஏற்றல்.]

எதிரேறு *edir-ēṟu,* பெ. (n.) ***வலிமை;*** strength, power. "எங்க ளெதிரேறழிய" (பெரியபு.திருநா.121).

[எதிர் + ஏறு.]

எதிரொலி[1]**-த்தல்** *edir-oli-,* 4.செ.கு.வி. (v.in.) ***மாறி யொலி செய்தல்;*** to echo, reverberate. "நீடுகுன் றெதிரொலிக்கவே" (பாரத.வேத்திர.10).

[எதிர் + ஒலி.]

எதிரொலி[2] *edir-oli,* பெ. (n.) ***மாறியொலித்தல்;*** echo, reverberation of sound. "இவனுமப் பொழு தெதிரொலி யென" (பாரத.பதின்மூ.88).

[எதிர் + ஒலி.]

எதிளை *edilai,* பெ. (n.) ***புளியமரம்*** (சங்.அக.); tamarind tree.

[எகின் → எகிள் → எதிள் → எதிளை.(கொ.வ.).]

எது *edu,* வினாபெ. (inter.pron.) ***யாது;*** which thing.

ம. எது; க. ஆவுது, எ,ஏ; கோத. எத்; துட. எத்; குட. எதி; து. ஒவு, வா; தெ. எதி, ஏதி; கொலா. எத்; நா. பர். ஏத், ஏதி; கட. ஏன; கோண். ஏம்; கூ. எசுத்; குர். என்த்ர, எக்தா; மால். இன்த்ரு; பிரா. அரா, அராத்; பட. ஏது, யாவது.

[உ → எ → ஏ → ஏல் → ஏன். ஏல் → ஏய் → ஏய்து → ஏய்ந்து → ஏந்து. எந்து → எது. (முடிநிலைத் திரிபு). ஒ.நோ. வேய் → வேய்ந்து → வேந்து. எந்து → என் → என்ன (அடிநிலைத் திரிபு) ஏய் - ஏய்ந்து - ஏய்ந்து - வேய்த்து. வேத்து → வாத் → வாட் (what) என மேலை-யாரியத்தில் திரிந்ததாகல் வேண்டும்.]

எதுக்களி-த்தல் *edukkaḷi-*, 4.செ.கு.வி. (v.i.) ***சாப்பிட்ட சோறு மீண்டும் சிறிது வாய்க்கு வருதல்;*** bringing back food from stomach to mouth. (வட்.வழக்.சொல்லக.)

[எது → எதுக்குளி → எதுக்களி.]

எதுகை *edugai*, பெ. (n.) 1. ***எதுகைத்தொடை*** பார்க்க; see *edugai-t-toḍai*. "இரண்டாம் .... எழுத்தொன்றி னெதுகை" (காரிகை,உறுப்.16). 2. ***பொருத்தம்.*** (வின்.); agreement, consonance.

ம. எதுக.

[எதிர்கை → எதுகை. (த.வ.50).]

எதுகைத்தொடை *edugai-t-toḍai*, பெ. (n.) ***செய்யுளின் வரிகளில் இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.*** (இலக்.வி.723); (Pros.) concatenation in which the second letters of the lines of a verse or of some feet of the same line are either the same or corresponding assonant letters, a kind of 'rhyming' one of five *toḍai*.

[எதுகை + தொடை.]

எதுகைப்பா *edugaippā*, பெ. (n.) ***தேரையர் செய்தவோர் தமிழ்நூல்;*** Tamil treatise on medicine compiled by Therayar, a great native physician. (சா.அக.).

[எதுகை + பா.]

எதுவடம் *edu-vaḍam*, பெ. (n.) ***எருதுகளை நுகத்தோடு பிணைக்கும் கயிறு, பூட்டாந்தும்பு.*** (Rd.); rope which fastens the yoke to the pole.

[எதிர்வடம் → எதுவடம் (கொ.வ.).]



எதுவடம்

எதோள் *edōḷ*, கு.வி.எ. (adv.) ***எவ்விடம்.*** (தொல். எழுத். 398. உரை.); where. எதோட்கொண்டான்.

[எதா → எதோ → எதோள் (வே.க.103).]

எதோளி *edōḷi*, கு.வி.எ. (adv.) ***எதோள்*** பார்க்க; see *edōḷ*. (தொல்.எழுத்.159,உரை.) எதோளிக்கொண்டான்.

[எதா → எதோ → எதோள் → எதோளி. (வே.க.103).]

எந்த *enda*, கு.வினா.எ. (inter.adj.) ***எத்தகு, என்ன;*** which, what. "எந்த வெந்த வெஞ்சாயகம்.... கொடுத்தார்" (பாரத.பதினெட்.30).

ம., க., து. எ; தெ. ஏ.

[எந்து → எந்த.]

எந்திரக்கிணறு *endira-k-kiṉaṟu*, பெ. (n.) ***நீரையிறைக்கும் பொறியையுடைய கிணறு;*** well that is provided with a contrivance for lifting water. "எந்திரக்கிணறு மிடுங்கற் குன்றமும்" (மணி.19,112).

[இயந்திரம் → எந்திரம் + கிணறு.]

எந்திரநாழிகை *endiranāḻigai*, பெ. (n.) ***ஒருவகை நீர்வீசுங் கருவி;*** machine which throws out water in sprays. "எந்திர நாழிகை யென்றிவை பிறவும்." (பெருங்.உஞ்சைக்.41,18).

[இயந்திரம் → எந்திரம் + நாழிகை.]

எந்திரப்பொருப்பு *endira-p-poruppu*, பெ. (n.) ***பல்வகைப் பொறிகளமைந்த செய்குன்று;*** artificial mound or hillock on which are mounted various kinds of machines. "எண்ணரும் பல்பொறி யெந்திரப் பொருப்பும்" (பெருங்.நரவாண.9,28).

[இயந்திரம் → எந்திரம் + பொருப்பு.]

எந்திரம் *endiram*, பெ. (n.) 1. ***எந்திரப் பொறி;*** machine. 2. ***கரும்பு ஆலை;*** sugar-cane press. "கரும்பெறிந்து கன்னுடைக்கு மெந்திரம்" (சீவக.1614). 3. ***செக்கு;*** oil-press. "எந்திரத்திற் கலந்ததிலம்" (ஞானவா.புசுண்.77). 4. ***தேர்ச்சக்கரம்;*** chariot wheel. "எந்திரத் தேரர் சூழ்ந்தார்" (கம்பரா.அட்ச.10). 5. ***குயவன் சக்கரம்;*** potter's wheel. "கட சக்கர ரெந்திரமெனச் சுழல்" (காஞ்சிப்பு.காப்பு). 6. ***மதிற்பொறி;*** engine or other machinery of war mounted over the battlements of a fort. "எந்திரப் படுபுழை" (புறநா.177,5). 7. ***தீக்கடைக்கோல்*** (வின்.); sticks for producing fire by drilling. 8. ***மந்திர சக்கரம்;*** mystical diagram, written on a palmyra leaf or drawn on metal and worn as (எந்திரம்) a charm or amulet. அவளுக்கு எந்திரமெழுதிக் கட்டினார்கள். (உ.வ.).

ம. எந்திரம்; க., து. யன்தர; தெ. யன்த்ரமு.

[இய = இயங்குதல். இய → இயங்கு → இயந்தி → இயந்திரம் → எந்திரம். இயந்திரம் பார்க்க; see iyandiram.]

எந்திரயெண்ணெய் *endirayeṇṇey*, பெ. (n.) 1. ***எள், வேர்க்கடலை போன்றவை களினின்று செக்கு முதலிய இயந்திரங்களைக் கொண்டெடுக்கும் நெய்மம்*** (தைலம்); oil in general, extracted from the oil seeds such as gingelly, ground nut etc. with the aid of oil presses, oil machines etc. 2. ***இயந்திரங்களின் உதவியைக்கொண்டு மூலிகைச் சரக்கு, மூலிகைச் சத்து முதலியவைகளினின்று வடிக்கும் மருந்தெண்ணெய்;*** (In medicine) medicated oils or ointments prepared from drugs or their essentials with the aid of oil machines. (சா.அக.).

[இயந்திரம் → எந்திரம் + எண்ணெய்.]

எந்திரவாவி *endira-vāvi,* பெ. (n.) ***இயந்திரத்தால் நீர் வரவும் போகவும் அமைக்கப்பட்ட நீர்நிலை;*** tank provided with machinery for filling and emptying water. "எந்திர வாவியி லிளைஞரு மகளிரும்... ஆடிய" (மணி.28,7).

[இயந்திரம் → எந்திரம் + வாவி.]

எந்திரவில் *endira-vil,* பெ. (n.) ***தானே எய்யும் விற் பொறி*** (சிலப்.15,207,உரை.); self-shooting bow, crossbow.

[இயந்திரம் → எந்திரம் + வில்.]

எந்திரவூசல் *endira-v-ūšal,* பெ. (n.) ***பிறராட்டாத நிலையிலும் தானேயாடும் பொறியமைந்த ஊசல்;*** swing that swings automatically.

[இயந்திரம் → எந்திரம் + ஊசல்.]

எந்திரவூர்தி *endira-v-ūrdi,* பெ. (n.) ***பொறியமைப்பால் தானே இயங்கும் இயங்கி;*** vehicle propelled by machinery. "எந்தரவூர்தி யியற்றுமி னென்றான்" (சீவக.234).

[இயந்திரம் → எந்திரம் + ஊர்தி.]

எந்திரவெழினி *endira-v-eḻini,* பெ. (n.) ***முறைப்படி எழவும் விழவுங்கூடிய திரை;*** curtain worked by machinery. "பூம்பட்டெந்திர வெழினி வீழ்த்தார்" (சீவக.740).

[இயந்திரம் → எந்திரம் + எழினி.]

எந்திரன் *endiran,* பெ. (n.) ***தேர்*** (யாழ்.அக.); car.

[இயந்திரம் → எந்திரன் (கொ.வ.).]

எந்திரி[1]-த்தல் *endiri-,* 4.செ.குன்றாவி. (v.i.) ***மந்திரச் சக்கரம் வரைதல்;*** to draw a mystical diagram. "எந்திரித்த விருக்கைதனில்" (கந்தபு.சிங்கமு.228).

[இயந்திரி → எந்திரி.]

எந்திரி *endiri,* பெ. (n.) ***தோல் அல்லது மரப்பாவையை ஆட்டுவிப்போன்;*** one who pulls the wires that move the puppets in a puppet-play; wire-puller. அரங்கினு ளாட்டுவிக்கு மெந்திரி யிழந்த பாவை யெனவும் (பிரபோத.38,7).

மறுவ. பொம்மலாட்டக்காரன், கில்லாடி.

[இயந்திரம் → எந்திரம் → எந்திரி.]

எந்து *endu,* கு.வி.எ. (adv.) 1. ***எப்படி;*** how. "செயலெலாம் வழிமற்றெந்தோ" (தணிகைப்பு.பிரம.4). 2. ***என்ன;*** what. "அதெந்துவே யென்றருளாயே" (திருவாச.29).

ம., க., தெ. எந்து.

[என்னது → எந்து (வே.க.105).]

உகரச் சுட்டடி திரவிடக் கிளை மொழிகளில் எது, ஏது, யாது, யாவது, எந்து, என்ன, எனப் பல் வகையாகத் திரிந்த பின் தமிழில் வழக்கொழிந்த எந்து என்னும் சொல், தமிழ்க்கிளை மொழி வழக்கில் என்னது → எந்து எனப் புதிதாகத் திரிந்த திரிபு எனப் பாவாணர் கருதினார்.

'எந்து' தமிழில் பெருகிய வழக்கன்று. உ - சுட்டுச் சொல்லடி காலவெள்ளத்தில் எகரச்சுட்டடியாக மாறி 'எது' என்னும் முடிநிலைத் திரிபாகவும் 'என்ன' என்னும் அடிநிலைத் திரிபாகவும் திரிந்தவகை எது என்னும் சொல்லின் கீழ் விளக்கப்பட்டுள்ளது.

எந்தை[1] *endai,* பெ. (n.) 1. ***என் தந்தை;*** my father, our father, also used courteously in addressing an elder. "எந்தை தந்தை" (திவ்.திருப்பல்.6). 2. ***என் தமையன்;*** my elder brother. "எந்தைக்குப் புகாவுய்த்துக் கொடுப்பதோ" (கலித்.108). 3. ***என் தலைவன்;*** my master, lord. "எந்தையொடு கிடந்தா ரெம் புன்றலைப் புதல்வர்" (புறநா.19,13).

[என் + அந்தை - என்னந்தை → எந்தை. ஒ.நோ. நும் + அந்தை → நும்மந்தை → நுந்தை. அத்தன் → அத்தை → அந்தை = அப்பன், தந்தை. தந்தையை அந்தை என விளிப்பது இடவழக்கு. இது மதிப்புரவு ஆண்பாற் பெயரீறாகப் பண்டுதொட்டே வழக்கூன்றியது. ஒ.நோ: கண்ணன் + அத்தன் - கண்ணத்தன் → கண்ணச்சன் எனச் சேரநாட்டிலும், கண்ணத்தன் → கண்ணந்தை எனத் தமிழகத்திலும் வழங்கும்.]

எந்தைபெயரன் *endai-peyaran,* பெ. (n.) ***என் தந்தை பெயர் பூண்ட என் மகன்;*** my son, who is named after my father, a term, used by a father to denote his son who usu. is named after the grandfather. "எந்தை பெயரனையாங் கொள்வேம்" (கலித்.81).

[எந்தை + பெயர் + அன்.]

எப்படி *e-p-paḍi,* கு.வி.எ. (adv.) ***எவ்வாறு;*** how, in what way or manner. "எப்படி யூரா மிலைக்கக் குருட்டா மிலைக்கும்" (திவ்.இயற்.திருவிருத்.94).

ம. எப்படி.

[எ + படி.]

எப்புறம் *eppuṟam,* கு.வி.எ. (adv.) ***எந்தப்புறம்;*** which side. (சேரநா.).

ம. எப்புறம்.

[எ + புறம்.]

எப்பேர்ப்பட்ட *ep-pēr-p-paṭṭa,* கு.பெ.எ. (adj.) ***எத்தகைய;*** of whatsoever kind. "எவ்வகையான மற்றும் எப்பேர்ப்பட்ட உபாதிகளும்' (S.1.1.i.104).

ம. எப்பேர்ப்பெட்ட.

[எ + (பெயர்) பேர் + பட்ட.]

எப்பொருட்குமிறையோன் *epporuṭkumiṟaiyōṉ,* பெ. (n.) 1. ***கொழுநன்;*** husband. 2. ***தலைவன்;*** leader. 3. ***மன்னன்;*** king. 4. ***கடவுள்;*** God.

[எ + பொருள் + கு + உம் + இறையோன்.]

எப்பொழுது *e-p-poḻutu,* கு.வி.எ. (adv.) ***எக்காலம்;*** when, at what time.

ம. எப்போழ், எப்போள், எப்பொழுது; க. எந்து; துட. எத்பொக்; கோத. எல்; குட. எக்க; து. ஏபொ, ஏப; தெ. எப்புடு, எபுடு; கொலா. எப்புட், எபுட்; நா. எகுட்; பர். எதொட், எத்தெல்; கட. எச்சேல், எசெல்; கோண். புப்போட், புச்கெ; கூ. எசெக; கொண். எசன்; குரு. எகாகெ; மால். இகொஸ்னோ; பட. ஏகுவ.

[எ + பொழுது.]

எப்பொழுதும் *e-p-poḻudum,* கு.வி.எ. (adv.) ***எந்நேரமும்;*** always, at all times. "யானெப்பொழுது முண்ணு மருந்து" (திருக்கோ.300).

ம. எப்பொழும்; தெ. யெப்படிகின்னி.

[எ + பொழுதும்.]

எப்போது *e-p-pōdu,* கு.வி.எ. (adv.) ***எப்பொழுது*** பார்க்க; see *eppoḻudu.*

[எ + (பொழுது) போது.]

எப்போதும் *e-p-pōdum,* கு.வி.எ. (adv.) ***எப்பொழுதும்*** பார்க்க; see *eppoḻudum.* "எப்போது மீதேசொல் லென்னெஞ்சே" (திவ்.இயற்.பெரியதிருவ.87).

ம. எப்போதும்.

[எ + பொழுது + உம். பொழுது → போது.]

எப்போதைக்கும் *e-p-pōdaikkum,* கு.வி.எ. (adv.) ***எப்பொழுதும்*** பார்க்க; see *eppoḻudum.*

[எ + (பொழுது) பொழுதைக்கும். பொழுது → போது.]

எப்போழ்து *e-p-pōḻdu,* கு.வி.எ. (adv.) ***எப்பொழுது*** பார்க்க; see *eppoḻudu.*

ம. எப்போள்.

[எ + (பொழுது) போழ்து.]

எம் *em,* சு.பெ. (pron.) ***'யாம்' என்பதன் வேற்றுமையடி;*** the oblique of first pers.pl.pron. "yām".

ம. எம்.

[ஏம் → எம். (சு.வி.88).]

எம்பர் *embar* பெ. (n.) ***எவ்விடம்;*** which place, where.

[எ → எம் → எம்பர். ஒ.நோ; இ. → இம்பர்.]

எம்பரும் *embar-um,* கு.வி.எ. (adv.) ***எவ்விடத்தும்;*** everywhere. "வெம்பர லழுவத் தெம்பரு மின்மையின்" (பெருங்.நரவாண.2,13).

[எம் → எம்பர் + உம்.]

எம்பி *embi,* பெ. (n.) ***என் தம்பி;*** my younger brother. "எம்பியை யீங்குப் பெற்றேன்" (சீவக.1760).

[என் + பின் - எம்பின் → எம்பி.]

எம்பிராட்டி *embirāṭṭi,* பெ. (n.) ***எங்கள் தலைவி;*** our lady. "எம்பிராட்டி திருவடிமேற் பொன்னஞ்சிலம்பில்" (திருவாச.திருவெம்.16).

ம. எம்பிராட்டி.

[எம் + (பெருமாட்டி) பிராட்டி.]

எம்பிரான் *embirāṉ,* பெ. (n.) 1. ***ஆண்டவன்;*** God. "எம்பிரானே யென்னை யாள்வாய்" (திவ்.பெரியதி. 10,3,2). 2. ***எங்கள் தலைவன்;*** our lord. (செ.அக.).

ம. எம்பிரான்.

[எம் + (பெருமான்) பிரான்.]

எம்பின் *empiṉ,* பெ. (n.) ***தம்பி;*** my younger brother.

[எம் + பின் - எம்பின் (எமக்குப் பின்னால் பிறந்தவன், தம்பி) இச்சொல்வழக்கிழந்தது. எம்பின் → எம்பி எனக் கடைக்குறைந்தது.]

எம்பு[1]**-தல்** *embu-,* 7.செ.கு.வி. (v.i.) ***மேலெழுதல் அல்லது துள்ளுதல்;*** to rise, spring up. ஓர் எம்பு எம்பினான் (கொ.வ.).

[எழும்பு → எம்பு (இடைக்குறை).]

எம்பு[2] *empu,* பெ. (n.) 1. ***எழும்புகை;*** rising. 2. ***நிமிர்த்துதல்;*** straightening

ம. எம்பேறு.

[எ → எம்பு (சு.வி.81).]

எம்புகம் *embugam* பெ. (n.) ***நிலக்கடம்பு*** பார்க்க; see *nila-k-kaḍambu.*

[எம்பு → எம்புகம்.]

எம்புட்டு *embuṭṭu,* பெ. (n.) ***எவ்வளவு;*** how much. எம்புட்டு திமிர் உனக்கு (வட்.வழ.சொல்லக.).

[எ + மட்டு - எம்மட்டு - எம்புட்டு (கொ.வ.). இக்கொச்சை வழக்கு விலக்கத்தக்கது.]

எம்பெருமாட்டி *emperumāṭṭi,* பெ. (n.) ***எங்கள் தலைவி;*** my leader (female). "எம்பெருமாட்டி யசோதாய் எழுந்திராய்" (திருப்பாவை.).

[எம் + பெருமாட்டி.]

எம்பெருமான் *em-perumāṉ,* பெ. (n.) 1. ***எம்பிரான்*** பார்க்க; see *empirāṉ.* "எம்பெருமானே யெம்மை யொளித்தியோ" (சீவக.294). 2. ***என் தலைவன்;*** my master, my lord. 3. ***கடவுள்;*** God.

ம. எம்பெருமான்.

[எம் + பெருமான்.]

எம்பெருமான்வெட்டு *emperumāṉ-veṭṭu,* பெ. (n.) ***பழைய நாணயவகை*** (பணவிடு.134); ancient coin.

[எம்பெருமான் + வெட்டு.]

எம்பெருமானார் *em-perumāṉār,* பெ. (n.) ***இராமாநுசர்;*** Rāmānujāchārya. "ஆளவந்தார்க் கன்பா மெம்பெருமானார்க்கு" (அஷ்டப்.ஊசல்.18).

[எம் + பெருமான் + ஆர்.]

எம்போகி *empōgi,* பெ. (n.) *ஏதிலி, புகலிலி, பிறநாட்டான்;* refugee, foreigner, destitute. "ஏழை எம்போகி இனிமே வாழ முடியாது" (வட்.வழ.சொல்லக.).

[ஏமம் + போக்கி - ஏமம்போக்கி → ஏம்போகி → எம்போகி. ஏமம்போகி = பாதுகாப்பு இழந்தவன்.]

எம்மட்டு *emmaṭṭu,* கு.வி.எ. (adv.) 1. *எவ்வளவு;* how much. 2. *எம்மாத்திரம்;* how far. (ஆ.அக.).

[எம் + மட்டு. மா = மாத்திரை. மா → மாத்து → மாட்டு - மட்டு = அளவு.]

எம்மனை *em-m-aṉai,* பெ. (n.) *எம் அன்னை, எம் தாய்;* our mother. "தீம்பாலூட்டு மெம்மனை வாராள்" (பெருங்.உஞ்சைக்.33,169).

[எம் + அன்னை - எம்மன்னை → எம்மனை.]

எம்மனோர் *em-m-aṉōr,* பெ. (n.) 1. *எம்மை யொத்தவர்;* those like ourselves, our party. "எம்மனோரிவட் பிறவலர்மாதோ" (புறநா.210). 2. *நாங்கள்;* we. "மம்மர் நெஞ்சத் தெம்மனோர்க் கொருதலை" (புறநா.53).

[எம் + அன்னோர். அன்னோர் → அனோர்.]

எம்மாத்திரம் *emmāttiram,* கு.வி.எ. (adv.) *எவ்வளவு;* how much.

[எம் + மாத்திரம்.]

எம்மாதிரி *emmādiri,* பெ. (n.) *எதுபோல்;* of which kind.

ம. எம்மாதிரி.

[எம் + (மாத்திரி) மாதிரி. மாதிரி = அளவினது, அளவால் ஒத்திருப்பது.]

எம்மான்[1] *em-māṉ,* பெ. (n.) *என் மகன்;* my son. "எம்மானே தோன்றினா யென்னை யொளித்தியோ" (சீவக.1801).

[எம் + மகன் - எம்மகன் → எம்மான்.]

எம்மான்[2] *em-māṉ,* பெ. (n.) 1. *எம் இறைவன்;* our lord. "எந்தையே யெம்மானே யென்றென் றேங்கி" (தாயு.ஆகார.6). 2. *எம் தந்தை;* our father. "எம்மா னெம்மனை யென்றனக் கெட்டனைச் சார்வாகார்" (தேவா.322,3).

ம. எம்மான்.

[எம் + பெருமான் - எம்பெருமான் → எம்பிரான் → எம்மான் (தொகுத்தல் திரிபு).]

எம்முன் *em-muṉ,* பெ. (n.) *என் தமையன்;* my elder brother. "எம்முன் யாண்டையான்" (கம்பரா. பள்ளி.89).

[என் + முன் - எம்முன்.]

எம்மை[1] *emmai,* பெ. (n.) 1. *எப்பிறப்பு;* which birth, in metempsychosis. "எம்மைக் கிதமாகவிஃ தெண்ணினை" (கம்பரா.சடாயுவுயிர்.99). 2. *எவ்வுலகம்;* what world. "எம்மை யுலகத்தும் யான்காணேன்" (நாலடி.132).

[எம் + ஐ. ஐ = வேற்றுமை உருபு.]

எம்மை[2] *em-m-ai,* பெ. (n.) 1. *எந்தலைவன்;* our lord, our master. "நிறையெம்மை" (அறநெறிச்.206). 2. *எங்களை;* us. (ஆ.அக.) (செ.அக.).

[எம் + ஐ. ஐ = தலைவன்.]

எம்மையும் *emmaiyum,* பெ. (n.) 1. *எங்களையும்;* including us. 2. *எப் பிறப்பும்;* all births.

[எம் + ஐ + உம்.]

எம்மையோர் *emmaiyōr,* பெ. (n.) *எம்மவர்;* our party, those connected with us. "எம்மையோ ரனைவரும்" (கம்பரா.சடாயுவுயிர்.48).

[எம் + அவர் - எம்மவர் → எம்மவோர் → எம்மையோர் (ஈற்றுத் திரிபு).]

எம்மோர் *emmōr,* பெ. (n.) *எம்முடையவர்;* my fellows, our friends.

[எம் + அவர் - எம்மவர் → எம்மோர்.]

எம்மோன் *emmōṉ,* பெ. (n.) *எம்முடைய தலைவன்;* our master. "எம்மோன்... ... குறவர் பெருமகன்," (புறநா.157).

ம. எம்மோன்.

[எம் + அவன் - எம்மவன் → எம்மோன்.]

எமகாதகன் *ema-kādagaṉ,* பெ. (n.) *பெருந்திறல் படைத்தவன்;* stalwart, astute man, scheming person, able even to kill yama.

[எமன் + காதகன். காதுதல் = பொருதல், சினத்தல். காதுகன் → காதகன்.]

எமதருமன் *emadarumaṉ,* பெ. (n.) *இயமன்;* Yama, in his office as judge of souls. "எமதருமனும் பகடுமேய்க் கியாய்" (தாயு.சிற்சு.10).

[எமன் + தருமன். Skt. dharma > த. தருமம்.]

எமர் *emar,* பெ. (n.) *எம்மவர், எமது சுற்றத்தார்;* our relatives; our friends. "எமரேழெழு பிறப்பும்" (திவ்.திருவாய்.2,7,1).

[எம் + அவர் - எம்மவர் → எமர்.]

எமரங்கள் *emaraṅgaḷ,* பெ. (n.) *எமர்* பார்க்க; see *emar.* "இற்பூட்டிப் போயினா ரெமரங்கள்." (திருவிளை. விருத்தகு.20).

[எமர் → எமரம் + கள்.]

எமரன் *emaraṉ,* பெ. (n.) *எமன்*[1] பார்க்க; see *emaṉ*[1] "எமர னாயி னிறைகொடுத் தகல்க" (பெருங்.உஞ் சைக்.37,201).

[இயமன் → எமன் + அரசன் - எமராசன் → எமரன்.]

எமராசன் *ema-rāšaṉ,* பெ. (n.) *எமன்*[2] பார்க்க; see *emaṉ.*

[எமன் + அரசன் - எமனரசன் → எமராசன்.]

எமன்[1] *emaṉ,* பெ. (n.) ***எம்மைச் சேர்ந்தவன்*** (நன்.275, மயிலை); he who is one of us; he who is for us.

[எம் + அவன் - எம்மவன் → எம்மன் → எமன்.]

எமன்[2] *emaṉ,* பெ. (n.) ***இறப்புக் கடவுள்:*** Yama, god of death.

ம. எமன்.

[இய → இயமன் → ஏமன் → எமன். இய = செலுத்துதல், கடவுதல், இயமன் = ஊழின் வண்ணம் செலுத்துபவன். உயிர்களைப் பற்றிச் செல்பவன்.]

எமி[1] *emi,* பெ. (n.) ***தனிமை;*** solitude. "எமியேந்துணிந்த வேமஞ்சா லருவினை" (குறிஞ்சிப்.32).

[எம் → எமி = யான் மட்டும் தனித்திருக்கும் நிலை. என் → எம் → எமி.]

எமி[2] *emi,* பெ. (n.) ***கூடியிருப்போன்*** (திவா.); one in company with others. "எமியை யிருந்தர சாள்வது கண்டவென் கண்க ளினைந்தழியத் தமியை யிருந்தானை" (தணிகைப்பு.சீபரி.563).

[அம் → அமி → எமி = கூடியிருத்தல். அம்முதல் = கூடுதல்.]

எமுனை *emuṉai,* பெ. (n.) ***யமுனை யாறு;*** river Jamna. "சாலுமயத் தெமுனை" (தணிகைப்பு.அகத்.489).

எய்[1]**-தல்** *ey-,* 1.செ.குன்றாவி. (v.t.) ***அம்பெய்தல்;*** to discharge arrows. "மின்னுங் கணையா லிவனெய்திட" (பாரத.சம்பவ.49).

ம. எய்யுக; க. ஏய், எசெ, இசு, எச்செ, எசு; கோத. எய், இய், இசிவ், இச்; துட. எவ்; து. எய்யுளி, ஈபுளி; தெ. ஏயு, எகுசு; பர். எய், எய்க்; கோண். எசுனா; குரு. இஸ்னா; மால். இன்கெ.

[இய் → எய் → எய-தல். (வே.க.52,53).]

எய[2] *ey,* பெ. (n.) ***முள்ளம்பன்றி;*** porcupine. "எய்ம்முள் ளன்ன பரூஉ மயிர்" (நற்.98).

ம., க. எய்; து. எயி; தெ. ஏது.

[எய் = முள், முள்ளுடைய பன்றி.]

எய்[3] *ey,* பெ. (n.) 1. ***அம்பு;*** arrow. "இவளாகத் தெய்யே றுண்டவாறெவன்" (திருவிளை.பழியஞ்.24). 2. ***வேடன்;*** hunter. 3. ***வேடர்குலம்;*** hunters' community.

[இல் → இய் → எய். எய் = முள், அம்பு, அம்பினையுடைய வேடன், வேடகுலம். இச்சொல் எய் → எயது → யது எனத்திரிந்து வடபுலத்து மன்னர் மரபைக் குறித்த சொல்லா யிற்று.]

எய்[4] *ey,* பெ. (n.) ***வறுமை;*** poverty. "எய்யுரையான்" (ஏலா.33).

[எள் = எளிமை, வறுமை. எள் → எய்.]

எய்[5]**-த்தல்** *ey-,* 1.செ.கு.வி. (v.i.) ***காலூன்றி நிற்கும்படி நீர் ஆழமில்லாதிருத்தல் ;*** to be within one's depth.

[எள் → எய். எள் = எளிமையாதல்.]

எய்[6]**-த்தல்** *ey-,* 1.செ.கு.வி. (v.i.) 1. ***இளைத்தல்;*** to grow weary by exertion; to fail on strength as in battle; to flag as from want of food. "எய்த்த மெய்யெ னெய்யே னாகி" (பொருந.68). 2. ***மெய் வருந்துதல்;*** to take pains, exert onself. "எய்யாமை யெல்லா வறமுந் தரும்" (குறள்.296). 3. குறைவுறுதல்; to be deficient. "எய்த் தெழு பிறையினை வளைவின் றாகநேர் வைத்துளதெ னின்" (இரகு.யாகப்.8). - 1.செ.குன்றாவி. (v.t.) ***அறி தல்;*** to know, understand. "நொந்தவென் றெய்த்தடிச் சிலம்பிரங்கும்." (சீவக.2683). 2. ***மெலிதல்;*** to grow weak and thin for want of food.

[இள் → இளை → எய் → எய்த்தல். (வே.க.21,53).]

எய்த *eyda,* கு.வி.எ. (adv.) 1. ***நன்குபொருந்த;*** carefully, well, adequately. "எனநினைத் தெய்த நோக்கி" (கம்பரா. உருக்கா.28). 2. ***நிரம்ப;*** very much, abundantly, profusely. "எய்த... தம்மைப் புகழ்தல்" (பழ.65).

[இய் → இயை → இயைத → எய்த.]

எய்து-தல் *eydu-,* 10.செ.கு.வி. (v.i.) 1. ***அணுகுதல்;*** to approach. "நெடியோ யெய்த வந்தனம்" (புறநா.10). 2. ***அடைதல்;*** to obtain, attain. "ஏமவைக லெய்தின்றா லுலகே" (குறுந்.கடவுள்.வாழ்த்து.). 3. ***சேர்தல்;*** to reach, as a place. "தூநிறக் கங்கையாள் சூழலெய்தினான்". (பாரத.குருகுல.34). 4. ***பணிதல்;*** reverse, surrender. "இளங்கொடியே யெய்தும்" (தஞ்சையா.386). 5. ***நீங்குதல்;*** to leave, depart. "எய்த லில்லாத் திருவின்" (தஞ்சைவா.386). - 10.செ.கு.வி. (v.i.) 1. ***பொருந்து தல்;*** to be adapted, be suitable. "காலத்தோடெய்த வுணர்ந்து செயல்" (குறள்.516). 2. ***நிகழ்தல், தேர்தல்;*** to happen, occur. "எட்டி குமர னெய்திய துரைப்போன்" (மணி.4,64). 3. ***உண்டாதல்;*** to appear, become, crop up. "மாசெனக் கெய்தவும்" (கம்பரா.சிறப்.6). 4. ***போதியதாதல்;*** to be sufficient, adequate. "சுனைவாய்ச் சிறுநீரை யெய்தாதென் றெண்ணி" (ஐந்.ஐம்.38).

ம. எய்துக; க. அய்து; துட. இத்; குட. எத்த; து. எத்தாவுணி, எத்தாடுனி; தெ. எயிது, எது; கொலா. எந்த்; பர். ஏத், ஏய், எயிபிப்; கோண். எனாவா; கூ. எப; குவி. எசலி.

[இய → எய் → எய்து → எய்துதல்.]

எய்ப்பன்றி *ey-p-paṉṟi,* பெ. (n.) ***முள்ளம்பன்றி;*** porcupine. எய்ப்பன்றி முதுகுபோலும் (பெரும்பாண்.88, உரை.).

தெ. எதுபந்தி; து. எலிபஞ்சி; ம. எய்பன்னி; க. ஏது கூந்தி; குட. எப்பந்தி; படை. இப்பந்தி.

[இல் → இய் → எய் + பன்றி. எய் = முள்.]

எய்ப்பாடி *eyppāḍi,* பெ. (n.) ***வேடரூர்;*** hunter's village.

[எய் + பாடி.]

எய்ப்பில்வைப்பு *eyppil-vaippu,* பெ. (n.) ***தான் தளர்ந் தும் பிறரைத் தாங்குவது*** (யாழ்.அக.); that which, though itself feeble, is a source of strength and support to other things.

[எய்ப்பில் + வைப்பு.]

எய்ப்பினில்'வைப்பு *eyppinil-vaippu,* பெ. (n.) ***எய்ப்பில் வைப்பு*** பார்க்க; see *eyppil-vaippu.* "நல்லடியார் மனத் தெய்ப்பினில் வைப்பை" (தேவா.818,2).

[எய்ப்பு + இன் + இல் + வைப்பு.]

எய்ப்பு *eyppu,* பெ. (n.) 1. ***இளைப்பு;*** weariness, languor. "எய்ப்பானார்க் கின்புறு தேனளித்து" (தேவா.189,3). 2. ***வறுமைக்காலம்;*** time of adversity. "எய்ப்பினில் வைப்பென்பது" (பழ.358). 3. ***தளர்ச்சி;*** weakness.

[எய் → எய்ப்பு.]

எய்ப்போத்து *ey-p-pōttu,* பெ. (n.) ***ஆண்முள்ளம்பன்றி;*** male porcupine. "கற்கந்தும் எய்ப்போத்தும் .... அனை யார்" (இறை.2,உரை,பக்.27).

[எய் + போத்து.]

எய்ம்மான் *ey-m-mān,* பெ. (n.) ***எய்ப்பன்றி;*** porcupine. "எயினர் தந்த வெய்ம்மா னெறிதசை" (புறநா.177,13).

[எய் + மான். மா = விலங்கு. 'ன்' சொல்லாக்க ஈறு.]

எய்யாமை *eyyāmai,* பெ. (n.) ***அறியாமை*** (தொல். சொல்.342); ignorance.

[இய் → எய் → எய்யாமை (வே.க.53).]

எயம் *eyam,* பெ. (n.) ***ஏலம்;*** cardamom. (சா.அக.).

[ஏலம் → ஏயம் → எயம் (கொ.வ.).]

எயில் *eyil,* பெ. (n.) 1. ***மதில்;*** fortress, wall, fortification. "திருந்தெயிற் குடபாற் சிறுபுழை போகி" (மணி.6,22). 2. ***ஊர், நகரம்*** (திவா.); town, city.

ம. எயில்.

[எய் + இல். எய்யும் ஏப்புழைகள் உள்ள இருப்பிடம். எய் → எய்தல். இல் = இருப்பிடம்.]

எயில்காத்தல் *eyil-kāttal,* பெ. (n.) ***அகத்தோன் உள்ளி ருந்து கோட்டையைக் காத்து நிற்றலைக் கூறும் புறத்துறை*** (தொல்.பொருள்.67,உரை.); theme which treats of the defence of a fortress by its owner. (செ.அக.).

[எயில் + காத்தல்.]

எயிற்றம்பு *eyiṟṟambu,* பெ. (n.) ***அலகம்பு;*** arrow tipped with a spear-head. "எயிற்றம்பு மூழ்கலின்" (சீவக.780).

[எயிறு + அம்பு.]

எயிற்றழற்சி *eyiṟṟaḻarci,* பெ. (n.) ***பல்லுக் கேற்படும் நோய்;*** inflammation of a tooth - Odontitis. (சா.அக.).

[எயிறு + அழற்சி.]

எயிற்றி *eyiṟṟi,* பெ. (n.) ***எயினக்குடிப் பெண்;*** woman of the Eyin caste. "கருங்க ணெயிற்றி" (புறநா.181).

[எயின் + தி - எயிற்றி.]

எயிற்றியர் *eyiṟṟiyar,* பெ. (n.) ***எயிற்றி*** பார்க்க; see *eyiṟṟi.*

எயிற்றுப்புண் *eyiṟṟuppuṇ,* பெ. (n.) ***பல்லீற்றி லுண்டா கும் புண்;*** sore of the gum as the result of an abscess or an ulcer - gum-boil. (சா.அக.).

[எயிறு + புண்.]

எயிறலை-த்தல் *eyiṟ-alai,* 4.செ.கு.வி. (v.i.) ***சினத்தாற் பல்லைக் கடித்தல்;*** to gnash the teeth in anger. "ஆவனகூறி னெயிறலைப்பான்" (நீதிநெறி.3).

[எயிறு + அலை.]

எயிறு *eyiṟu,* பெ. (n.) 1. ***பல்;*** tooth. "முல்லையலைக்கு மெயிற்றாய்" (நாலடி.287). 2. ***பல்லின் விளிம்பு*** (பிங்.); the gums. 3. ***யானை, காட்டுப் பன்றிகளின் வாய்க்கோடு;*** tusk of the elephant, or the wild hog. "கேழலா யிளையெனுந் திருவினை யேந்தி னானரோ.... ஓரெயிற்றினுள்" (கம்பரா.கிளை.119).

ம. எயிறு, எகிறு; பட. எமறு; தெ. இகறு, சிகுறு.

[எய் = குத்துதல், பிளத்தல், கடித்தல். எய் → எயிறு.]

எயிறுதின்(னு)-தல் *eyiṟu-tiṉ-,* 13.செ.கு.வி. (v.i.) ***வெகுளியால் பல்லைக் கடித்தல்;*** to gnash the teeth in anger. "எயிறுதின்று வைது" (பாரத.நிவாத.115).

[எயிறு + தின்.]

எயின் *eyiṉ,* பெ. (n.) ***வேடர்குலம்;*** hunting tribe of the desert tract. "எயினிடு கடனிது" (சிலப்.12.பா டல்.18, அணிமுடி).

[எய் → எய்நன் → எயினன் → எயின் = எயின் குடியினர். எயினர் → ஏனர் → ஏனாதியர் என ஆந்திரத்திலும், ஜெயின் என வடபுலத்திலும் குடிப்பெயர் திரிபுற்றனர் என்பர்.]

எயின்சேரி *eyiṉ-cēri,* பெ. (n.) ***வேட்டுவர் ஊர்;*** village inhabited by the hunting tribes. "எயின்சேரியினுள்ள மாதர்" (கந்தபு.வள்ளி.28).

[எயின் + சேரி.]

எயினச் சேரி *eyiṉa-c-cēri,* பெ. (n.) ***எயின்சேரி*** பார்க்க (நன்.212,விருத்.); see *eyiṉ-cēri.*

[எயின் + அ + சேரி.]

எயினன் *eyiṉaṉ,* பெ. (n.) ***வேடன்;*** hunter, inhabitant of the desert tract. "கொடுவிலெயினர் குறும்பில்" (பெரும்பாண்.129).

[எய் + நன் - எய்நன் → எயினன் (வே.க.53).]

எரங்காடு[1] *eraṅ-kāḍu,* பெ. (n.) ***பாழ்நிலம்*** (இ.வ.); barren land.

[எல் → எரு → எரி = எரிநிறம், சிவப்பு. எரி + அம் + காடு - எரங்காடு. எரி = செந்நிலப்பாங்கான மேட்டுக்கரம்பு.]

எரங்காடு² *eraṅ-kāḍu,* பெ. (n.) ***பருத்தி விளைதற்குரிய செழித்த புன்செய் நிலம்;*** fertile land of red loam soil, fertile black cotton soil.

[எல் → எரு + அம் - எருவம் = செந்நிலம். எருவம் + காடு (வே.க.60).]

எரல் *eral,* பெ. (n.) ***கடற்சிப்பி;*** sea-shell. (சா.அக.).

[ஈரல் → ஏரல் (பிளவுண்டது).]

எரி¹-தல் *eri-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***தீமூளல், சொலித்தல்;*** to flame, ignite. "எரியுந் தீயோடு" (திவ்.திருவாய்.3,6,5). 2. ***ஒளிர்தல்;*** to glow, shine. "எரியுஞ் செம்பொன் மணிமுடி" (சூளா.மந்தி.6). 3. ***எரிச்சலுண்டாதல்;*** to burn, as a sore, as fever, to smart; to suffer pain; to feel pangs, as the stomach from hunger. கண்ணெரிகின்றது (உ.வ.). 4. ***பொறாமை கொள்ளுதல்;*** to be envious, jealous. அவனைப் பார்த்து இவன் வயிறு எரிகிறான் (உ.வ.). 5. ***மனம் வருந்துதல்;*** to experience a painful emotion. அதைப் பார்க்கும்போது மனம் எரிகிறது. 6. ***சினம் கொள்ளுதல்;*** to be angry, indignant. எரிந்து விழாதே (உ.வ.). 7. ***முதிர்தல்;*** to become old. "எரிகின்ற மூப்பினாலும்" (கம்பரா.மருத்து.17). 8. ***மிகுதல்;*** to go on increasing.

ம. எரி; **க.** உரி; குட. எரி; **து.** எரி; தெ. ஏர்பு; **கோண்.** அர்சி, எரக (சுரம்); **கூ.** ஏர்ப.

[உல் → அல் → எல் → எரி. உல் = வெப்பம், சூடு, நெருப்பு. எரிதல் = தீ உண்டாதல், அழல் மண்டுதல்.]

எரி²-த்தல் *eri-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***தீயால் வெந்தழியச் செய்தல்;*** to burn, consume by fire, scorch. "புரமூன் றெரித்தவா" (திருவாச.13,6). 2. ***விளக்கு, பந்தம் முதலியன எரிதல்;*** to keep burning, as a lamp or torch. "வீட்டுக்கெரித்த விளக்கு" (தமிழ்நா.237). 3. ***மருந்து முதலியன புடமிடுதல்;*** to sublimate, calcine, as metals; to reduce to powder by fire for making medicine. எரிமருந்து (இ.வ.). 4. ***அழற்றுதல்;*** to inflame, as a sore; to cause to burn, as poison. அந்த மருந்து உடம்பை எரிக்கிறது. 5. ***செரிக்கச் செய்தல்;*** to digest. இந்த மருந்து உண்டதையெல்லாம் எரிக்கும். (உ.வ.).

தெ. எரியின்சு; **ம.** எரி; **க.** உரிசு.

[எல் → எரி → எரி-த்தல்.]

எரி³ *eri,* பெ. (n.) 1. ***ஒளிர்வழி;*** glowing light, brightness. "எரிகொள் செந்நாயிறு". (திவ்.இயற்.திருவிருத்.82). 2. ***நெருப்பு;*** fire. "எரியாற் சுடப்படினும்" (குறள்.896). 3. ***நெருப்புக்கடவுள்;*** agni, god of fire. "காவக மெரிக்கு நல்கிய.... சிலையினான்" (பாகவத.1,6,22). 4. ***அளறு*** (திவா.); hell. 5. ***மூன்றாம் நாண் மீன், ஆரல்*** (கார்த்திகை); third nakṣatra. "எரிசடை யெழில்வேழம்" (பரிபா.11,2). 6. ***ஏழாவது நாண் மீன், கழை*** (புனர்பூசம்.) (பிங்.); seventh nakṣatra. 7. ***பதினெட்டாவது நாண் மீன், தழல்*** (கேட்டை.) (பிங்.); 18th nakṣatra. 8. ***கந்தகம்;*** sulphur, brimstone. "பூதமெரியேல மிலவம்" (தைலவ.தைல.135). 9. ***விடையோரை*** (பரிபா.11,2,உரை.); taurus of the Zodiac.

ம., து. எரி.

[எல் → எரி (செல்வி.77, திசம்.178).]

எரி⁴ *eri,* பெ. (n.) 1. ***சிவப்புநிறம்;*** red colour. 2. ***சிவப்பு நிறமுள்ள பொருள்;*** anything red in colour.

[எல் → எரி.]

எரி⁵ *eri,* பெ. (n.) 1. ***வால் நாண்மீன் வகை*** (புறநா.395); comet. 2. ***கொடிவேலி*** (பச்.மூ.); Ceylon leadwort. 3. ***தீக்கடைகோல்;*** "சமிதையுடன் மேலெரிகொண்டு" (பெரியபு.சண்.27); fire-drill.

ம. எரி.

[எல் → எரி.]

எரிக்கொடி *eri-k-kodi,* பெ. (n.) ***நெருப்பின் கொழுந்து,*** flame of fire. "எரிக்கொடிக் கவைஇய செவ்வரை போல" (ஐங்குறு.353).

[எரி + கொடி.]

எரிகடுப்பு *erikaḍuppu,* பெ. (n.) ***எரிச்சலை யுண்டாக்குமோர் வகை வலி;*** pain marked by burning sensation; irritation.

[எரி + கடுப்பு.]

எரிகண் *erikaṇ* பெ. (n.) 1. ***நச்சுக்கண்;*** evil eye. 2. ***எரிச்சலை யுண்டாக்கு மோர் வகைக் கண்ணோய்;*** eye disease accompanied by burning sensation. 3. ***தீக்கண்;*** fiery eye. (of Siva). (சேரநா.).

ம. எரி கண்ணு; **க.** உரிகண்.

[எரி + கண்.]

எரிகதிர் *eri-kadir,* பெ. (n.) 1. ***கதிரவன்*** (திவா.); Sun. 2. ***செங்கதிர்;*** red rays of the Sun.

[எரி + கதிர்.]

எரிகரும்பு *eri-karumbu,* பெ. (n.) ***அடுப்புவிறகு;*** firewood, "எங்கள் மடத்துக் கெரிகரும்புகொள்வது" (தனிப்பா.1,76,149).

[எரி + கரும்பு.]

எரிகல் *erikal,* பெ. (n.) 1. ***கந்தகம்;*** brim stone. 2. ***எரியுந் தன்மையுள்ள ஒருவகைக்கல்;*** stone with exordinary qualities.

[எரி + கல்.]

எரிகள் *erikaḷ,* பெ. (n.) 1. ***எரிச்சல் உண்டாக்கும் கள், மிகவும் புளித்த கள்;*** fermented toddy.

ம. எரிகள்ளு.

[எரி + கள்.]

எரிகனல் *erikaṉal,* பெ. (n.) ***தீக்கனல்;*** glowing coal, burning splinter, fire brand. (சேரநா.).

ம. எரிகனல்; க. உரிகெண்டெ.

[எரி + கனல்.]

எரிகுஞ்சி *eri-kuñji,* பெ. (n.) ***செம்மயிர்*** (வின்.); red hair, of the colour of red flame.

[எரி[4] + குஞ்சி.]

எரிகுடல் *eri-kuḍal,* பெ. (n.) ***மிகுபசி*** (யாழ்ப்.) canine appetite, morbidly voracious appetite.

ம. எரிகுடல்.

[எரி + குடல்.]

எரிகுடலன் *eir-kuḍalaṉ,* பெ. (n.) ***மிக்க பசியையுடைய வன்*** (யாழ்ப்.); he who is always craving for food.

[எரி + குடல் + அன்.]

எரிகொள்ளி *eri-koḷḷi,* பெ. (n.) ***கடைக்கொள்ளி;*** firebrand. எரிகொள்ளி எரிந்துவீழவும் (புறநா.41, உரை.). (செ.அக.).

ம. எரிகொள்ளி.

எரிச்சல் *ericcal,* பெ. (n.) 1. ***எரிக்கை;*** burning, heating செத்தை எரிச்சலுக்குதவும் (உ.வ.). 2. ***அழற்சி;*** burning sensation. கண்ணெரிச்சல். 3. ***உறைப்பு*** (வின்.); acridity, pungency, as of some kind of fruits. 4. ***சினம்;*** anger, fury. அயோக்கியனைக் கண்டால் அவனுக்கு எரிச்சல் அதிகம். 5. ***பொறாமை;*** envy, jealousy. "மனத்தெரிச்ச லாலே" (இராம.நா.அயோத்.5). 7. ***பெருங்காயம்;*** asafoetida. 8. ***வேகை;*** boiling. 9. ***வெறுப்பு;*** disgust.

ம. எரிச்சல்; குட. எரிவி; தெ. ஏர்பு.

[எல் → எரி → எரிச்சல்]

எரிச்சற்படு-தல் *ericcaṟ-paḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***பொறாமைப்படுதல்;*** to be envious, jealous.

[எரிச்சல் + படு.]

எரிசினக்கொற்றவை *ericiṉa-k-koṟṟavai,* பெ. (n.) ***கடுஞ்சீற்றமுடைய காளி;*** Durga, goddess of rage.

[எரி + சினம் + கொற்றவை.]

எரிசினக் கொற்றவை என்னும் பெயரை வடமொழியாளர் ரௌத்ர துர்காதேவி என மொழி பெயர்த்துக் கொண்டனர்.

எரிசினம் *ericiṉam,* பெ. (n.) ***கடுஞ்சீற்றம்;*** rage, fury.

[எரி + சினம்.]

எரிசுடர் *eri-śuḍar,* பெ. (n.) 1. ***சொலிக்கும் நெருப்பு;*** fire which has burst out into flames. - கு.வி.எ. (adv.) ***மிக்கவொளி,*** immense illumination. "பருமணியெரி சுடர் பரப்பி" (கந்தபு.நகரழி.37). 3. ***விளக்கு;*** lamp.

[எரி + சுடர்.]

எரிசுரை *eriśurai,* பெ. (n.) ***சூடான சாராயம்;*** ardent spirit. (சா.அக.).

[எரி + சுரை.]

எரிதூவு-தல் *eri-tūvu-,* 5.செ.கு.வி. (v.i.) ***தீப்பற்றுதல்;*** to take fire. "ஒக்க முப்புர மோங்கெரி தூவ" (தேவா. 485,5). (செ.அக.).

[எரி + தூவு.]

எரிந்துவிழு-தல் *erindu-viḻu-,* 2.செ.கு.வி. (v.i.) 1. ***சீற்றம் காட்டுதல்;*** to wax hot and burst into a temper. 2. ***சினந்து பேசுதல்;*** to talk angrily, fall foul of. (செ.அக.).

[எரி → எரிந்து + விழு.]

எரிநகை *eri-nagai,* பெ. (n.) ***வெட்சிமலர்;*** name of the ixora flower. "எரிநகை யிடையிடு பிழைத்த நறுந்தார்" (பரிபா.13,59). (செ.அக.).

எரிநாள் *eri-nāḷ,* பெ. (n.) ***ஆரல் நாண்மீன்*** (கார்த்திகை நட்சத்திரம்). (பிங்.); third nakṣatra. (செ.அக.).

[எரி + நாள். நாள் = நாண்மீன்.]

எரிநோய் *eri-nōy,* பெ. (n.) ***ஆட்டுநோய்வகை*** (M.cm.D. (1887),249); contagious disease of sheep. (செ.அக.).

[எரி + நோய்.]

எரிப்பு *erippu,* பெ. (n.) 1. ***எரிக்கை;*** burning. 2. ***கார்ப்புச் சுவை;*** pungency. 3. ***பொறாமை;*** envy, jealousy. 4. ***நெஞ்செரிப்பு*** (w.); burning sensation in the throat. (செ.அக.).

[எரி → எரிப்பு.]

எரிப்புமா *erippu-mā,* பெ. (n.) ***உறைப்புள்ள ஒரு வகை மாம்பழம்*** (இ.வ.); a variety of mango that is pungent to the taste.

ம. எரிநாடன்.

[எரி → எரிப்பு + மா.]

எரிப்புறம் *eri-p-puṟam,* பெ. (n.) ***நிரயம்*** (வின்.); hell.

[எரி + புறம்.]

எரிப்பூ *eri-p-pū,* பெ. (n.) ***எரிபோலும் நிறமுள்ள பூ;*** flower that has the hue of fire. "எரிப்பூம் பழனம்" (புறநா.249).

[எரி + பூ.]

எரிபிடாரி *eri-piḍāri,* பெ. (n.) 1. ***கடுஞ்சினமுடைய காளி தெய்வம், கொற்றவை;*** enraged, furious female goddess. 2. ***எரிச்சலுடையவள்;*** peevish, fretful woman, spoken disparagingly.

[எரி + பிடாரி. பிடாரி = கொல்பவள்.]

எரிபுழுகு *eripuḻugu,* பெ. (n.) ***நறுமணப் பொருள்*** (சவ்வாது.); substance taken from the anal glands of the civet - cats, it is a perfume. (சா.அக.).

[எரி + புழுகு. இது இக்காலத்தில் புனுகு என வழங்கப்படுகிறது.]

எரிபுளி *eri-puḷi,* பெ. (n.) **கூட்டுக்கறிவகை** (இ.வ.); hot curry of which buttermilk is one of the incredients.

ம. எரிபுளி.

[எரி + புளி. உள் → புள் → புளி.]

எரிபொத்து-தல் *eri-pottu-,* 10.செ.கு.வி. (v.i.) *அழல் மூட்டுதல்;* to ignite, light a flame. "கனையெரி பொத்தி" (மணி.2,42).

[எரி + பொத்து. பொல் → பொள் → பொய் → பொய்த்து → பொத்து = அடித்தல், தேய்த்தல், கடைதல். எரிபொத்துதல் = தீ கடைதல், எரிமூட்டுதல்.]

எரிபொழுது *eri-poḻudu,* பெ. (n.) *செவ்வானப்பொழுது;* rosy sunset (w.).

[எரி + பொழுது. பொல் → பொழுது = ஒளியுள்ளது, இருள் விடிந்து புலரும் நேரம், ஒளி காணும் நேரம்.]

எரிபொறி *eri-poṟi,* பெ. (n.) 1. *தீப்பொறி;* spark of fire. 2. *மிகுந்த சூடு;* scorching heat. (சேரநா.).

ம. எரிபொரி.

[எரி + பொறி.]

எரிமணி *eri-maṇi,* பெ. (n.) *ஒளிர்வுள்ள மணி;* sparkling jewel, bright gem. (கூர்மபு.அட்டமூ.2).

[எரி + மணி.]

எரிமருந்தன் *eri-marundaṉ,* பெ. (n.) *வெடிமருந்து செய்பவன்;* manufacturer of gun powder. (Insc.). (செ.அக.).

[எரி + மருந்தன்.]

எரிமருந்து *eri-marundu,* பெ. (n.) 1. *புடமிட் டெடுத்த மருந்து;* calcined medicine. 2. *உறைப்பான மருந்து;* medicine pungent or corrosive. 3. *அடுப்பி லிட்டு எரித்த எண்ணெய் முதலிய மருந்துகள்;* medicated oils and medicines prepared by heating on an oven. 4. *செய்நஞ்சு;* poisons or poisonous compounds. 5. *உள்ளுக்குச் சாப்பிட அழற்சியையும் அல்லது வெளியிற் பூச எரிச்சலையும் உண்டாக்கும் மருந்து;* medicine causing inflammation when taken internally or burning sensation when applied externally. 6. *வெடிமருந்து;* gun powder. (சா.அக.).

[எரி + மருந்து.]

எரிமலர் *eri-malar,* பெ. (n.) 1. *முருக்குமலர்;* flower of the Indian Coral-tree. "எரிமலர்ப் பவளச் செவ்வாய்" (சீவக.662). 2. *செந்தாமரை;* red lotus. "செல்வ னெரிமலர்ச் சேவடியை" (சீவக.2741).

ம. எரிமலர்.

[எரி + மலர்.]

எரிமலை *eri-malai,* பெ. (n.) *கல்லும் மண்ணும் கலந்துருகிப் பொங்கித் தீப்பற்றி எரியும் மலை;* mountain with a burning hole in which stones and mud are converted into a molten state called lava and thrown out - volcano.

ம. எரிமலை.

[எரி + மலை.]

எரியம்பு *eriyambu,* பெ. (n.) *தீயுமிழும் அம்பு;* fiery arrow. (சேரநா.).

ம. எரியம்பு.

[எரி + அம்பு - எரியம்பு. இதனை வடமொழியாளர் அக்கினி யத்திரம் என்பர்.]

எரியல் *eriyal* பெ. (n.) 1. *எரிவு;* burning. 2. *ஒளிர்கை;* shining. 3. *எரிந்தது* (யாழ்ப்.); that which is burnt, as charred food at the bottom of a vessel in cooking.

[எரி → எரியல்.]

எரியாடி *eri-y-āḍi,* பெ. (n.) 1. *அழலை யேந்தியாடுபவ னாகிய சிவன்;* Śiva, who dances with flaming fire in hand. "எரியாடி தென்றில்லை" (திருக்கோ.127). 2. *வற்றல் மிளகு;* pepper. (சேரநா.).

ம. எரியாடி.

[எரி + ஆடி.]

எரியாணிவெயில் *eriyāṇiveyil,* பெ. (n.) *நெருப்புப் போல் மிகு சூடாக இருக்கும் வெயில்;* burning or scorching sunshine. (சேரநா.).

ம. எரியாணிவெயில்.

[எரியாணி + வெயில். எரியாணி = நெருப்பிலிட்ட இரும்பு ஆணி.]

எரியிடு-தல் *eri-yiḍu-,* 20.செ.கு.வி. (v.i.) 1. *எரியவைத் தல்;* to cause to burn. 2. *தீமூட்டுதல்;* to set fire.

[எரி + இடு.]

எரியீசல் *eriyīsal,* பெ. (n.) *ஒரு வகைச் சிறிய ஈ;* a kind of small fly. (சேரநா.).

ம. எரியீச்ச.

[எரி + ஈசல்.]

எரியூட்டு-தல் *eri-y-ūṭṭu-,* 5.செ.குன்றாவி. (v.t.) *தீக் கொளுத்துதல்;* to set fire to, இலங்கை யெரியூட்டு படலம் (கம்பரா.).

ம. எரியிக்குக.

[எரி + ஊட்டு-தல்.]

எரியெண்ணெய் *eriyeṇṇey,* பெ. (n.) 1. *அடுப்பி லிட்டு எரித்துக் காய்ச்சி வடித்த மருந்தெண்ணெய்;* medicated oil prepared by boiling oil on an oven. 2. *காய்ச்சிய எண்ணெய்;* heated oil. 3. *எரிச்சலை யுண்டாக்குமோர் மருந்தெண்ணெய்;* medicated oil causing irritation or burning sensation. 4. *கரண்டியிலிட் டுக் காய்ச்சிச் சோற்றிலே ஊற்றும் முக்கூட்டெண் ணெய்;* mixture of ghee, castor oil and sesame oil,

burnt in a ladle and poured on food. (செ.அக.) (சா.அக.).

ம. எரியெண்ண.

[எரி + எண்ணெய்.]

எரியோம்பு-தல் *eri-y-ōmbu-,* 7.செ.கு.வி. (v.i.) *தீவேள்வி செய்தல்;* to make offerings in the consecrated fire. "கற்றாங்கெரியோம்பி" (தேவா.1.1).

[எரி + ஓம்பு.]

எரியோன் *eriyōn,* பெ. (n.) *தீக்கடவுள்;* Agni the god of fire. "ஒள்ளெரியோனு மொளித்தான்" (கம்பரா.இலங் கையெரி.64).

[எரி → எரியன் → எரியோன்.]

எரிவந்தம் *erivandam,* பெ. (n.) 1. *எரிச்சல்;* burning sensation. 2. *எரிவு;* blistering heat. 3. *எரிச்சலை யுண்டாக்குமோர் நோய்;* any disease such as carbuncle, biliousness etc. accompanied by burning sensation. 4. *சினம்;* anger, wrath, rage. (செ.அக.) (சா.அக.).

[எரிவருதல் → எரிவா → எரிவந்தம்.]

எரிவனம் *eri-vanam,* பெ. (n.) *சுடுகாடு;* cremation ground. (திவா.).

[எரி + வனம்.]

எரிவிழி-த்தல் *eri-vili-,* 4.செ.குன்றாவி. (v.t.) *சினந்து பார்த்தல்;* to glare at fiercely with blazing eyes. "தானவனை..... அரியுருவமாகி யெரிவிழித்து" (திவ். இயற்.பெரியதிரும.100).

[எரி + விழி.]

எரிவிளக்குறு-த்தல் *eri-vilakkuru-,* 4.செ.குன்றாவி. (v.t.) *தலைவிளக் கெரித்துத் தண்டித்தல்;* to punish a condemned culprit by compelling him to go around the town with a burning lamp over his head. "எரிவிளக் குறுக்கு நம்மை" (சீவக.1162).

[எரி + விளக்கு + உறு.]

எரிவு *erivu,* பெ. (n.) 1. *எரிகை;* burning. 2. *உடற் சுடுதல்;* heat in the system; burning, as of the eyes, hands, feet, etc. 3. *பொறாமை;* envy, jealousy. "எரிவி னாற் சொன்னா ரேனும்" (தேவா.758,9). 4. *சினம்;* wrath. "இழந்தா னெரிவினா லீர்ந்து" (திவ்.பெரி யாழ்.1,2,4). 5. *அழற்சி;* inflammation. (சா.அக.).

ம. எரிவு; க. உரி; குட. எரிவி; து. எரி; தெ. எர்வு; பர். எரிப்; கோண். ஏரினானா; கூ. ஏர்ப.

[எரி → எரிவு.]

எரு *eru,* பெ. (n.) 1. *உரம்;* animal or vegetable manure. "பிடித்தெருவும் வேண்டாது" (குறள்.1037). 2. *எரு முட்டை* பார்க்க; see *erumuttai.* 3. *மலம்;* excrement. "எருவாய் கருவாய் தனிலே" (திருப்பு.774). 4. *எருது;* bull. (சா.அக.). 5. *சாணம்;* dung, as of a cow.

ம. எரு; க. எருவு; தெ. எருவு.

[இய → இயல் → எல் → எரு (வெளிப்படுவது).]

எருக்கங்கொழுக்கட்டை *erukkankolukkattai,* பெ. (n.) *பிசைந்த அரிசிமாவை மூன்று அங்குல நீளமாக அடைதட்டி, சருக்கரையும் திருகின தேங்காயும் வெந்த பருப்பும் கலந்து அல்லது பயற்றை மட்டும் அதனுள் வைத்து மடித்து அவித்த ஓர் வகைப் பலகாரம்;* a pastry or tart, backed in steam. The rice flour is doughed into a paste, pressed flat and then expanded in to a thin sheet about three inches in diametre. Baked dholl or other grains mixed with cocoanut and sugar is placed on it, covered and then steamed.

[எருக்கன் + கொழுக்கட்டை.]

எருக்கங்கோல் *erukkankōl,* பெ. (n.) *மருந்து அல்லது மருந்துச் சரக்குகளை வறுப்பதற்காகப் பயன்படுத் தும் எருக்கஞ்செடியின் கொம்பு;* a twig of the madar plant used for roasting medicine or other drugs. (சா.அக.).

[எருக்கன் + கோல்.]

எருக்கட்டு[1]-தல் *eru-k-kattu,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. *கிடைவைத்தல்;* to fold sheep, herd cattle for manure, keep cattle penned in a field that they might manure it. 2. *சாணஞ்சேர்த்தல்* (வின்.); to collect dung.

[எரு + கட்டு-தல்.]

எருக்கட்டு[2] *eru-k-kattu,* பெ. (n.) 1. *உரத்திற்காகக் கிடைவைக்கை;* folding of sheep and herding of cattle for manure. 2. *கிடைவைத்த கொல்லை;* land thus manured. 3. *எருக்களம்;* manure store, dung hill. (ஆ.அக.) (செ.அக.).

[எரு + கட்டு.]

எருக்கம் *erukkam,* பெ. (n.) *எருக்கு* பார்க்க; see *erukku.* (சா.அக.).

எருக்கம்பஞ்சு *erukkam-pañju,* பெ. (n.) *எருக்கங்காய் முற்றி வெடிப்பதனால் அதனின் றெழும்பிப் பறக் கும் பஞ்சு;* fine silky floss which surrounds the seeds of the madar plant. French cotton.

[எருக்கம் + பஞ்சு.]

எருக்கம்பால் *erukkampāl,* பெ. (n.) *எருக்கின் பால்; இது மருந்தாகப் பயன்படுகிறது;* milk of madar plant.

[எருக்கம் + பால்.]

எருக்கல் *erukkal,* தொ.பெ. (vbl.n.) 1. *கொல்லல்;* killing. 2. *வெட்டல்;* hewing or cutting. (சா.அக.).

[உல் → எல் → எருக்கு → எருக்கல்.]

எருக்கழித்துக்கொடு-த்தல் *eru-k-kalittu-k-kodu-,* 4.செ.கு.வி. (v.i.) *வைக்கோலில் சாணியிட்டுக்கொ டுத்து மாட்டு விற்பனையை உறுதிப்படுத்துதல்*

(இ.வ.); to confirm a contract for the sale of cattle, the vendor taking a small quantity of straw in hand, putting some cowdung on it and presenting it to the purchaser.

[எரு + கழித்து + கொடு.]

எருக்களம் *eru-k-kaḷam,* பெ. (n.) *எருவிடுமிடம்;* site set apart for a dung hill. (செ.அக.).

[எரு + களம்.]

எருக்கிலைமணி *erukkilai-maṇi,* பெ. (n.) *பரவமகளிர் அணியும் கழுத்தணி வகை;* necklace worn by Parava women. (செ.அக.).

[எருக்கு + இலை + மணி.]

எருக்கிலைமாலை *erukkilai-mālai,* பெ. (n.) *எருக்கிலைமணி* பார்க்க; see *erukkilaimaṇi.* (செ.அக.).

எருக்கு[1] *erukku,* பெ. (n.) *செடிவகை;* yarcum, madar, m.sh.calotropis gigantea. "எருக்கின் முகிழ்நோக்கும்" (தணிகைப்பு.களவு.274). (செல்வி.77,திச.178).

வ. அர்க்க: ம. எரிக்கு.

[எரு → எருக்கு.]

எருக்கு[2]**-தல்** *erukku,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. *கொல்லுதல்;* kill. (திவா.). 2. *வருத்துதல்;* to harass, trouble. "படிறெருக்கி" (கலித்.81). 3. *வெட்டுதல்;* to cut, hew. "பைம்புத லெருக்கி" (முல்லைப்.25). 4. *தாக்குதல்;* to beat. "வீதிதோ றெருக்கி... முரசறைந்த காலை" (சீவக.609). 5. *அடித்தல்;* to strike as a bush. "பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கி" (பெரும்பாண்.112). 6. *அழித்தல்;* to destroy. "நாடுகெட வெருக்கி" (பதிற்றுப்.83,7). 7. *சுமத்துதல்;* to lay a burden upon. (வின்.). 8. *தாக்கி ஒலியெழச் செய்தல்;* produce sound on a musical instrument of percussion. "இன்னிசை முரச மியமர மெருக்க" (பெருங்.நரவாண. 6,63).

[உல் → எல் → எரு → எருக்கு.]

எருக்கு[3] *erukku,* பெ. (n.) *துன்பம்;* harm. "தூதர்தம்முயிர்க் கெருக்கிடை யெய்தினு மெண்ணற் பாலரோ" (புரூரவ.போர்புரி.6).

[உல் → எல் → எரு → எருக்கு.]

எருக்கும்பி *erukkumbi,* பெ. (n.) *குப்பைமேடு;* dung-hill; mixen. (சா.அக.).

[எரு + கும்பி.]

எருக்குரல் *erukkural,* பெ. (n.) *தாக்குதலாலுண்டாகும் ஒலி;* sound produced by beating, as a drum. "இன்கட்பம்பை யெருக்குர லுறீஇ" (பெருங்.மகத.26,36).

[உல் → எல் → எருக்கு + குரல்.]

எருக்கொடு-த்தல் *eru-k-koḍu-,* 4.செ.கு.வி. (v.i.) *எருக்கழித்துக்கொடு* பார்க்க; see *erukkaḻittukkoḍu.* (இ.வ.).

[எரு + கொடு.]

எருகு-தல் *erugu-,* 7.செ.கு.வி. (v.i.) *மாடு கழிதல்;* to have loose motions, used with reference to cattle. மாடு எருகியிருக்கிறது. (இ.வ.).

ம. எருகுக; க. எரும்பு, எரு; தெ. எருகு; கொலா. எர்ங்கு; நா. எர்ங்கு; குரு. எர்கானா; மால். எர்கெ, எர்க்க்ரெ.

[எல் → எரு → எருகு.]

எருச்சாட்டி *eru-c-cāṭṭi,* பெ. (n.) *எருவிட்ட நிலம்;* land not manured during the present year, having been enriched previously. (யாழ்.அக.).

[எரு + சாட்டி. சாடு → சாட்டு → சாட்டி (இடப்பட்டது).]

எருச்சாம்பல் *eru-c-cāmbal,* பெ. (n.) *எருமுட்டைச் சாம்பல்;* ashes of cowdung fuel.

[எரு + சாம்பல்.]

எருத்தடி *eruttaḍi,* பெ. (n.) *ஈற்றயலடி;* (Pros.) penultimate line of a verse. "குட்ட மெருத்தடி யுடைத்து மாகும்." (தொல்.பொருள்.428).

[எருத்து + அடி. எரு → எருகுதல் = கழித்தல், நீங்குதல், போதல். எருகு → எருத்து = கழிந்த, நீங்கிய. எருத்தடி = ஈறு நீங்கிய, இறுதியடி நீங்கிய, ஈற்றயலடி.]

எருத்தம் *eruttam,* பெ. (n.) 1. *கழுத்து;* neck. "எருத்த மீடங்கோட்டி" (சீவக.1658). 2. *பிடர்;* nape, back of the neck. "யானை யெருத்தம் பொலிய" (நாலடி.3). 3. *தரவு* (வீரசோ.யாப்.11,உரை.) பார்க்க; see *taravu,* member of kali verse. 4. *ஈற்றயல்* (காரிகை.செய்.10, உரை.); penultimate.

ம. எருத்தம்; தெ. அற்று.

[ஏ → ஏர் → எருத்து → எருத்தம். ஏர் = உயர்தல். எருத்து = உயர்ந்து நிற்கும் பகுதி, கழுத்து, பிடரி.]

எருத்தன் *eruttaṉ,* பெ. (n.) *காளைபோல் வலியவன்;* man who is as strong as a bull. "மலையைக் கையா லெருத்தனா யெடுத்தவாறே" (தேவா.).

[எருத்து → எருத்தன்.]

எருத்து *eruttu,* பெ. (n.) *கழுத்து;* neck. "எருத்துவலிய...... இரலை" (கலித்.5). 2. *தரவு* (தொல்.பொருள்.444,உரை.) பார்க்க; see *taravu,* member of kali verse. 3. *ஈற்றயல்* (தொல்.பொருள்.428); penultimate. "எருத்தடி நைந்தும்".

ம. எருத்தம்; தெ. அர்கு.

[ஏ → ஏர் → எருத்து.]

எருத்துத்திமில் *eruttu-t-timil,* பெ. (n.) *மாட்டின் முசப்பு, மேற்புறம், மாட்டின் முன்னங்கால்களுக்கு மேல் இருக்கும் உருண்டை வடிவான கொண்டை;* hump of a bull.

[எருது + திமில்.]

எருத்துப்புரை *eruttu-p-purai,* பெ. (n.) *மாட்டுக் கொட்டில்.* (Tinn); ox-stall.

ம. எருத்தில்.

[எருது + புரை.]

எருத்துப்பூட்டு *eruttu-p-püttu,* பெ. (n.) *நல்லநாளில் முதலில் ஏர்பூட்டி உழுதல்* (யாழ்ப்.); first ploughing on an auspicious day.

[எருது + பூட்டு.]

எருத்துமாடு *eruttu-mādu,* பெ. (n.) 1. *எருது;* (நன்.183, உரை.); bull, ox. 2. *பொதிமாடு;* pack-bullock. (Loc.).

[எருது → எருத்து + மாடு.]

எருதடி-த்தல் *erudadi-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. *உழுதல்;* to plough. 2. *சூடடித்தல்;* to thrash out grain by marking cattle tread over the stalks.

[எருது + அடி.]

எருது[1] *erudu,* பெ. (n.) 1. *காளைமாடு;* bull, ox, steer. "நல்லெருது முயலும்" (பதிற்றுப்.27,13). 2. *விடையோரை;* Taurus, second sign of the zodiac. (சங்.அக.).

ம. எருது; க., பட. எத்து; கோத. எத்; துட. எசுத்; குட. எத்தி; து. எரு; தெ. எத்து; கொலா. எட்; நா. கெட்; குரு. அட்டோ.

[ஏர் (கலப்பை) → ஏர்து → எருது.]

எருது[2] *erudu,* பெ. (n.) *இறால்;* prawn.

[எரி → எரிது → எருது. எரி = செந்நிறம். எருது = செம்மீன், இறால்.]

எருதுகட்டி *erudu-katti,* பெ. (n.) *ஏறுதழுவுதலில் (சல்லிக்கட்டில்) எருதை மடக்குவோன்;* bull-fighting champion.

[எருது + கட்டி. கட்டி = அடக்கி யாள்பவன்.]

எருதுகட்டு *erudu-kattu,* பெ. (n.) *ஏறுதழுவுதல் போட்டி;* bull-fighting festival. (இ.வ.).

[எருது + கட்டி.]

எருதுப்பித்து *eruduppittu,* பெ. (n.) *எருதின் ஈரலிலுருவாகும் பித்தம்;* bitter fluid secreted by the liver of the ox - ox-gall.(சா.அக.).

[எருது + பித்து.]

எருதுமறி-த்தல் *erudu-mari-,* 2.செ.குன்றாவி. (v.t.) *எருதுபொலிதல்* (யாழ்ப்.); to cover a cow, as a bull. (யாழ்ப்.).

[எருது + மறி.]

எருதுரப்பல் *erudurappal,* பெ. (n.) 1. *எருதை அதட்டியோட்டுதல்;* driving cattles by making sound. 2. *எருதைப்போல் ஒலியிடல்;* making sound like ox.

[எருது + உரப்பல்.]

எருந்தி *erundi,* பெ. (n.) 1. *இப்பி* (மூ.அ.); a kind of small shell. 2. *சங்கு;* conch. 3. *ஒரு நறுமணச்செடி;* fragrant plant. Pavonia.

[இரி → இரிந்தி → எரிந்தி → எருந்தி.]

எருந்து[1] *erundu,* பெ. (n.) *உரல்;* mortar. (செ.அக.).

[இல் → எல் → எருந்து.]

எருந்து[2] *erundu,* பெ. (n.) *கிளிஞ்சில்;* bivalve shell fish, as mussels, oysters. "முத்தம்.... எருந்தின் வயிற்ற கத்தடக்கி" (சிறுபாண்.58).

ம. எருந்து.

[இரி → இரிந்து → இர்து → எருந்து.]

எருப்புழு *eruppulu,* பெ. (n.) *சாணிப் புழு;* muck-worm. (சா.அக.).

[எரு + புழு.]

எருப்போடு-தல் *eru-p-pōdu-,* 20.செ.கு.வி. (v.i.) 1. *உரமிடுதல்;* to manure land. 2. *மாடு சாணமிடுதல்;* to pass excrement.

[எரு + போடு.]

எருமணம்[1] *eru-manam,* பெ. (n.) *செங்குவளை;* red Indian water-lily, Nymphaea lotus rubra. (பிங்.).

[எருமணி → எருமணம்.]

எருமணம்[2] *erumanam,* பெ. (n.) *சாணிநாற்றம்;* smell of cow-dung. (சா.அக.).

[எரு + மணம்.]

எருமணி *erumani,* பெ. (n.) *செங்குவளை;* that which emits the smell of cow dung i.e. red Indian water lily. (சா.அக.).

[எரு + மணி. மணி = மணப்பது, மணம் வீசுவது.]

எருமன்றம் *eru-manram,* பெ. (n.) *மாடுகள் கூடுமிடம்;* open gathering place for cattle. "ஆயர்பாடியி லெருமன்றத்து" (சிலப்.17,உரைப்பாட்டு).

[எரு + மன்றம்.]

எருமாடு *erumādu,* பெ. (n.) *பிடரி, கழுத்தின் பின்பகுதி;* back of the neck. (சேரநா.).

ம. எருமாடு.

[எரு + மாடு. எரு = எருத்து (கழுத்து) மாடு = பக்கம்.]

எருமுட்டை *eru-muttai,* பெ. (n.) *வறட்டி;* dried cow-dung-cake used as fuel. "எருமுட்டை பிட்கினுதிர்ந்திடும்" (பட்டினத்.திருப்பா.பொது.51).

[எரு + முட்டை. முட்டு → முட்டை = உருண்டையானது.]

எருமை *erumai,* பெ. (n.) 1. *பால்தரும் விலங்கினங்களுள் ஒன்று;* buffalo. "குவிமுலை படர்மருப் பெருமை" (சீவக.2102). 2. *எருமை மறம்* பார்க்க; see *erumai maram* theme of unyielding resistance. "ஒருவனொருவனை யுடைபடை புக்குக் கூழைதாங்கிய வெருமையும்" (தொல்.பொருள்.72). 3. *எமன்;* Yama, who rides on a buffalo "எருமையிருந்தோட்டி யெள்ளீயுங் காளை" (பரிபா.8,86).

எக்காளம்



எருக்கு



எந்திரம் (திரிகைக்கல்)



எருமைச்சுறா

ம. எருமு; தெ. எனுமு; க., பட. எம்மெ; து. எர்மெ; *Skt.* Heramba.

[இர் → இரு → இருமை → எருமை. இரு = கருமை.]

எருமைக்கடா *erumai-k-kaḍā,* பெ. (n.) ***ஆணெருமை;*** he-buffalo.

[எருமை + கடா.]

எருமைக்கற்றாழை *erumai-k-kaṟṟāḻai,* பெ. (n.) *மலைக் கற்றாழை* பார்க்க; see *malai-k-kaṟṟāḻai.*

[எருமை + கற்றாழை.]

எருமைக்காஞ்சொறி *erumai-k-kāñjoṟi,* பெ. (n.) *பெருங்காஞ்சொறி* பார்க்க; see *peruṅkāñjoṟi.* climbing nettle-mercury. (மலை.).

[எருமை + காஞ்சொறி.]

எருமைக்காளை *erumai-k-kāḷai,* பெ. (n.) ***நெல்வகை*** (A.); a kind of paddy.

[எருமை + காளை.]

எருமைக்குழவி *erumai-k-kuḻavi,* பெ. (n.) ***எருமைக் கன்று;*** calf of buffalo. (தொல்.பொருள்.575).

[எருமை + குழவி.]

எருமைக் கொற்றான் *erumai-k-koṟṟāṉ,* பெ. (n.) ***கொடிவகை;*** parasitic leafless plant, S.cl., cassytha filiformis.

ம. எருமவள்ளி.

[எருமை + கொற்றான்.]

எருமைக்கோரை *erumaikkōrai,* பெ. (n.) ***எருமை தின்னுமோர் வகைப் பெருங்கோரை;*** large species of reed eaten by buffaloes - Saccherum spontaneum. (சா.அக.).

[எருமை + கோரை.]

எருமைச்சுறா *erumaiccuṟā,* பெ. (n.) ***பெரிய கருப்புச் சுறாமீன்;*** black shark - Carcharias menisorrah. (சா.அக.).

எருமைப்புல் *erumaippul,* பெ. (n.) ***ஒருவகைப் புல்;*** a kind of grass growing in rice fields. (சேரநா.).

ம. எருமப்புல்.

[எருமை + புல்.]

எருமைப்பொன் *erumai-p-poṉ,* பெ. (n.) ***வரிவகை*** (S.I.I.vi,155); tax. (செ.அக.).

[எருமை + பொன்.]

எருமைப்போத்து *erumai-p-pōttu,* பெ. (n.) ***எருமைக் கடா*** he-buffalo. (தொல்.பொருள்.596). (செ.அக.).

[எருமை + போத்து.]

எருமைமறம் *erumai-maṟam,* பெ. (n.) ***மறவன் ஒருவன் தன் படை முதுகிடவும் பகைவர் படையைத் தான் ஒருவனே அஞ்சாது எதிர்த்து நிற்கும் புறத்துறை*** (பு.வெ.7,13); theme of a hero's taking a firm and bold stand in the battlefield against very heavy odds, like an unyielding buffalo, even after his army had retreated and fled.

[எருமை + மறம் - எருமைமறம். அஞ்சாது தனித்து நின்று தாக்கும் எருமைபோன்ற நெஞ்சத் துணிவு எருமை மறம் எனப்பட்டது.]

எருமைமுல்லை *erumai-mullai,* பெ. (n.) ***முல்லைக் கொடிவகை;*** white-bracted jasmine, m. cl., jasminum rottlerianum. (செ.அக.).

[எருமை + முல்லை.]

எருமைமுல்லைத்தீவு *erumai-mullai-t-tīvu,* பெ. (n.) ***யாழ்ப்பாணத்தின் பழைய பெயர்*** (வின்.); ancient name of Jaffna, from the flower erumai-mullai found there.

[எருமை + முல்லை + தீவு.]

எருமைமுள் *erumaimuḷ,* பெ. (n.) ***வெள்ளை முள் வேல்;*** buffalo thorn. (சா.அக.).

[எருமை + முள்.]

எருமையின்றிசை *erumaiyiṉṟiśai,* பெ. (n.) ***தெற்குத் திசை;*** south, as being Yama's quarter. ''ஆகநனைந்தி டாவகை யெருமையின்றிசையி னீள்வடிவுற்று.'' (சேதுபு.சங்கதீ.10).

[எருமை + இன் + திசை. 'இன்' ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு.]

எருமைவெளியனார் *erumai-veḷiyaṉār,* பெ. (n.) ***குதிரைமறம் பாடிய கடைக்கழகப் புலவர்;*** poet of Sangam age.

[எருமைவெளி + அன் - எருமைவெளியன். எருமைவெளி என்னும் ஊரினராகலாம். மந்தைவெளி என்றும் ஊர்ப்பெயர் உள்ளதை ஒப்பு நோக்குக.]

எருவட்டி *eruvaṭṭi,* பெ. (n.) *எருவறட்டி* பார்க்க; see *eruvaṟaṭṭi.*

எருவடை-த்தல் *eru-vaḍai-,* 4.செ.கு.வி. (v.i.) ***எருவுக்காக ஆடுமாடுகளை அடையச் செய்தல்;*** to fold sheep, herd cattle for manure.

[எரு + அடை.]

எருவண்டு *eru-vaṇḍu,* பெ. (n.) ***வண்டுவகை;*** a kind of beetle (pond.).

[எரு + வண்டு.]

எருவறட்டி *eru-vaṟaṭṭi,* பெ. (n.) ***எருமுட்டை;*** cake of cowdung, used as fuel. (வின்.).

[எரு + வறட்டி - எருவறட்டி. வறள் → வறட்டி.]

எருவாரம் *eru-vāram,* பெ. (n.) ***எருவுரமிட்டதற்குக் கொடுக்குந் தவசப்பங்கு;*** share of the produce assigned to those who provide manure for the land.

[எரு + வாரம்.]

எருவு *eruvu,* பெ. (n.) *எரு* பார்க்க; see *eru.*

ம. எருவ; தெ. எருவு; க. எரும்பு.

[எரு → எருவு.]

எருவை *eruvai,* பெ. (n.) 1. *தலை வெளுத்து உடல் சிவந்திருக்கும் பருந்து;* a kind of kite, whose head is white and body brown. "விசும்பா டெருவை பசுந்தடி தடுப்ப" (புறநா.64,4). 2. *கழுகு;* eagle. 'எருவை குருதி பிணங்கவருந் தோற்றம்' (களவழி.20). 3. *குருதி* (திவா.); blood. 4. *பஞ்சாய்க் கோரை;* species of cyperus. "எருவை செருவிளை மணிப்பூங் கருவிளை" (குறிஞ்சிப்.63). 5. *கோரைக்கிழங்கு;* straight sedge tuber. "மட்பனை யெருவை தொட்டி" (தைலவ. தைல.94). 6. *கொருக்கச்சி;* European bamboo reed. (குறிஞ்சிப்.68,உரை.). 7. *செம்பு;* copper. "எருவை யுருக்கினாலன்ன குருதி" (கம்பரா.கும்பக.248).

ம. எருவ.

[உல் → எல் → எரு → எருவை. எருவை = சிவந்திருப்பது.]

எல்[1] *el,* பெ. (n.) 1. *நெருப்பு;* fire. 2. *கதிரவன்;* sun. "எற்படக் கண்போன் மலர்ந்த" (திருமுரு.74). 3. *ஒளி;* lusture, splendour, light. "எல்லே யிலக்கம்" (தொல்.சொல்.271). 4. *வெயில்* (பிங்.); sunshine. 5. *பகல்;* day time. "எல்லடிப் படுத்த கல்லாக் காட்சி" (புறநா.170). 6. *நாள்* (பிங்.); day of 24 hours. 7. *பெருமை;* vehemence, strength.

ம. எல்; தெ. எலமு; பர். நெந்றி; கோண். எததி, அததி (வெயிலின் வெப்பம்).

[உல் → எல்.]

எல்[2] *el,* பெ. (n.) 1. *கதிரவன் மறைவு;* sunset. 2. *இரவு;* night. "எல்லிற் கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல்" (நாலடி.8) - இடை. (int.) *இகழ்மொழி* (பிங்); ejaculation of contempt.

[இல் → எல்.]

எல்கை *elgai,* பெ. (n.) *எல்லை;* border, limit. எல்கை (கல்வெட்டு) "எல்கைகைவிட்டுக் கடக்கப்போன தனாலே." (கல்வெட்டு).

ம. எல்க.

[எல் → எல்லை = விளிம்பு, ஓரம், வரம்பு, வரப்பு. எல்லை கைவிட்டுச்சென்றான் என்னும் வழக்கு மீதூர்ந்த பகுதிகளில் எல்லைகை விட்டு - எல்கைவிட்டு எனத்திரிந்தது. அத்திரிபால் எல்லை + கை → எல்கை என மருவி வழங்கலாயிற்று.]

எல்ல *ella,* பெ. (n.) *எல்லா* பார்க்க; see *ellā* (தொல்.பொருள்.220,உரை.). (செ.அக.).

[எல்லா → எல்ல.]

எல்லப்பநாவலர் *ellappa-nāvalar,* பெ. (n.) *அருணாசல புராணம் முதலிய நூல்களை யியற்றிய புலவர்;* author of Arunācala-purāṇam and other works in Tamil. (செ.அக.).

[எல்லப்பன் + நாவலர்.]

எல்லம் *ellam,* பெ. (n.) *இஞ்சி;* ginger. (மலை.).

தெ. அல்லமு.

[அல்லம் → எல்லம்.]

எல்லம்மன் *ellamman,* பெ. (n.) *தீயவிளைவுகளின்போது மீனவர்களாலும் மற்றும் நச்சுப் பாம்பினால் கடிபடுபவராலும் வணங்கப்படும் ஒரு சிற்றூர்த் தெய் தெய்வம்* (இ.வ.); village goddess, invoked by fishermen when in danger and by anyone bitten by a poisonous serpent.

தெ. எல்லம்ம.

[எல் → எல்லை. எல்லையம்மன் → எல்லம்மன்.]

எல்லம்மா *ellammā,* பெ. (n.) *எல்லம்மன்* பார்க்க; see *ellammaṉ.*

[எல்லையம்மன் → எல்லம்மன் → எல்லம்மா.]

எல்லரி *ellari,* பெ. (n.) *பறைவகை;* a kind of drum. "கடிகவர் பொலிக்கும் வல்வா யெல்லரி" (மலை படு.10).

[ஒல் → எல் → எல்லரி.]

எல்லவரும் *ellavarum,* பெ. (n.) *எல்லாரும்;* all persons "நாமெல்லவரும்" (கந்தபு.தேவர்புலம்புறு.19).

தெ. எல்லரு; க. எல்லரு, எல்லவரு.

[எல்லை + அவர் - எல்லவர் + உம் + எல்லவரும். நாட் டெல்லை அல்லது ஊரெல்லைக்குட்பட்ட அனைவரும்.]

எல்லவன் *ellavan,* பெ. (n.) 1. *கதிரவன்;* sun. "எல்லவன் வீழுமுன்னம்" (பாரத.பதினெட்.119). 2. *திங்கள்;* moon. (அக.நி.).

ம. எல்லவன்.

[எல்[1] → எல்லவன்.]

எல்லா *ellā,* பெ. (n.) 1. *ஒரு விளிப்பெயர்;* here, you. (தொல்.பொருள்.220,உரை.). 2. *தோழி முன்னிலைப் பெயர்* (சூடா.2,42); word used in addressing a woman friend. "கடை மணியின் குரல் காண்பென் காண் எல்லா" (சிலப்.20,3).

ம., துட., பட. எல்லா; க., குட., தெ. எல்ல; கோத. எல், எலம்; பிரா. குல்; *Eng.* all.

[இல் - இளமைக் கருத்துவேர். இல் → எல் → எல்லா → எலா → எல்லா = தோழன், தோழி.]

ஆங்கில நண்பரைக் காணும்போது மகிழ்ச்சி விளியாக ஆளும் உறலோ (உறல்லோ) என்னுஞ்சொல், எல்லா என்னும் தென் சொல்லோடு தொடர்புடையதே.

hallo, halloa, int., n., and v.i. Int., calling attention or expr. surprise., informal greeting; (n.and v.i.) the cry 'hallo' var. of earlier Hollo, halloo, int. inciting dogs to the chase, calling attention or expressing surprise; (n.) the cry 'halloo' (perh.) var. of Hollo; (v.i. and t.) Cry 'hallooi'; exp. to doggs; urge on (dogs etc.) with shouts; shout (t. and i.) to attract attention.

hallow, v.t. and i. chase with shouts; incite with shouts; shout to incite dogs etc. (ME) halowen prok. f. *OF.* halloer, hello, n., and v.i. hallo. holla, int. calling attention of f.*F.* hola. hollo, int. calling attention; (n.) the cry 'hollo' (conn.w.) HOLLA. hallo, hollow, holla, holloa, v.i. and t. shout (i. and t.) call to hounds (as prec.) hullo, hulloa, int. used to call attention, express surprise or answer call. esp. on telephone, of. HALLO.

நூற்றுக்கணக்கான அடிப்படை ஆங்கிலச் சொற்கள், தென் சொல்லும் தென்சொற்றிரிபுமாயிருப்பதால். எல்லா என்னும் இருபாற் பொது விளிச்சொல் ஆங்கிலத்தில் வழங்கி வருதல் பற்றி ஐயுறுதற்கு எள்ளளவும் இடமில்லை. (செல்வி.78, சூன்.500,501).

எல்லாம் *ellām,* பெ. (n.) 1. ***முழுதும்*** (திருக்கோ.351, உரை.); whole. 2. ***அனைவர், அவை என்னும் பொருளிலும் வரும்;*** all, personal as well as impersonal. அவர்கள் எல்லாம் போனார்கள்; அவை எல்லாம் போயின. ''நல்லவை எல்லாம் தீயவாம்'' (குறள்.375).

ம. எல்லாம்; க. எல்லா; துட. யெலெ, யெல்லமதி; கோத. எல்ம்; படு. எல்லா; குட. எல்ல; து. எல்ல; தெ. எல்ல.

[எல்லவும் → எல்லாம். எல்லை + அவை - எல்லையவை → எல்லவை + உம் - எல்லவையும் → எல்லாம். எல்லவை = எல்லைக்குட்பட்ட அனைத்தும்.]

எல்லார் *ellār,* பெ. (n.) ***தேவர்;*** Devas of Hindu mythology. ''பனிவானத் தெல்லார் கண்ணும்'' (சீவக.364). (வே.க.58).

ம. எல்லார்.

[எல் → எல்லார். எல்லவரும் பார்க்க.]

எல்லாரும் *ellār-um,* பெ. (n.) ***யாவரும்;*** all persons. ''எல்லாரும் எல்லீரும் என்பவற்றும்மை'' (நன்.246).

ம. எல்லாரும், எல்லாவரும்; க. எல்லரும்; கோத. எலம்; குட. எல்ல; தெ. எல்லரு.

[எல்லவரும் → எல்லாரும்.]

எல்லாவோ *ellāvō,* பெ. (n.) ***தோழி;*** lady friend. ''எல்லாவோ காதலற் காண்கிலேன்'' (சிலப்.18,11-12).

[எல்லா → எல்லாவோ.]

எல்லி[1] *elli,* பெ. (n.) 1. ***கதிரவன்*** (பிங்.); sun. 2. ***பகல்;*** day time. ''இரவோ டெல்லியு மேத்துவார்'' (தேவா.344,8).

[உல் → எல் → எல்லி = அழலோன், கதிரவன்.]

எல்லி[2] *elli,* பெ. (n.) 1. ***இரவு;*** night. ''எல்லியிது காலையிது'' (சீவக.1877). 2. ***இருள்;*** darkness. ''நீரரை யெல்லி யியங்கன்மினே'' (இறை.30,உதா.217).

[இல் → இல்லி → எல்லி = இருள். இல்லி = கருமை, இருள்.]

எல்லிப்பகை *elli-p-pagai,* பெ. (n.) 1. ***கதிரவன்;*** sun, enemy of night. (சங்.அக.). 2. ***வெளிச்சம்;*** light as the enemy of darkness or the night.

[இல்லி → எல்லி + பகை. இல்லி = இரவு.]

எல்லிமனை *elli-manai,* பெ. (n.) ***தாமரை;*** lotus, fancied as the wife of the sun. ''பிரம்பெல்லிமனை முக்கருணை.'' (தைலவ.தைல.135).

[எல் → எல்லி (கதிரவன்) + மனை. மனை = மனைவி.]

எல்லியறிவன் *elli-y-arivan,* பெ. (n.) ***கோழிச்சேவல்;*** cock-which knows the watches of the night. (செ.அக.).

[எல்லி + அறிவன். அறிவன் = அறிபவன்.]

எல்லிருள் *el-l-irul,* பெ. (n.) ***இராவிருள்;*** darkness of night. 2. ***விடியற்காலத்திருள்;*** darkness preceding the dawn. ''எல்லிருள் விஞ்சையோதி'' (சீவக.1747).

மறுவ. நள்ளிருள், செறியிருள், குமரியிருள், பேரிருள்.

[எல் + இருள்.]

எல்லினான் *ellinān,* பெ. (n.) ***எல்லோன்*** பார்க்க; see *ellōn.* ''புயங்க முண்டுமிழ்ந்த வெல்லினா னென'' (கந்தபு.அக்கினி.223) (வே.க.58).

[எல்லி → எல்லினன் → எல்லினான்.]

எல்லீரும் *ellīr-um,* பெ. (n.) ***எல்லா நீங்களும்;*** you all. ''எல்லீரு மென்னும் பெயர்நிலைக் கிளவியும்'' (தொல்.சொல்.166). ''எல்லாரும் எல்லீரும்'' (நன்.246).

ம. எல்லீரும்; க. எல்லரும்.

[எல்லா + நீரும் - எல்லாநீரும் → எல்லீரும்.]

எல்லு-தல் *ellu-,* 13.செ.கு.வி. (v.i.) ***ஒளிமங்குதல்;*** to become dim as the sun. ''எல்லு மெல்லின்று ஞமலியு மிளைத்தன'' (குறுந்.179).

[இல் → எல்.]

எல்லெண் *el-l-en,* பெ. (n.) ***பன்னிரண்டு;*** number 12, representing the number of Ātittar. ''காட்டசைசத்தி யெல்லெண்'' (தைலவ.தைல.69).

*[எல் + எண். எல் = கதிரவன். பன்னிரு சூரியர்கள் இருப்பதாகக் கருதப்படும் தொன்ம வழக்கு பற்றுக்கோடாக **எல்லெண்** பன்னிரண்டு என்னும் எண்ணைக் குறித்தது. வடமொழியாளர் துவாதசசூரியர் என்பர்.]*

எல்லெனல் *el-lenal,* பெ. (n.) ***ஓர் ஒலிக்குறிப்பு*** (பிங்.); onom. expression.

[எல் + எனல்.]

எல்லே *ellē,* இடை. (int.) 1. ***தோழியை விளிக்கும் முன்னிலைச் சொல்;*** here you, used in addressing a woman-friend. ''எல்லே.....தோழி'' (திவ்.திருவாய்.5,3,5). 2. ***ஓர் வியப்பு விரக்கச் சொல்;*** exclamation of wonder or pity. ''ஏதிலே னரங்கற் கெல்லே'' (திவ்.திருமாலை.26). - கு.வி.எ. (adv.) 1. ***வெளியாக;*** openly, clearly. ''எல்லேமற் றெம்பெருமாற் கின்றிவளு மின்னாளோ'' (சீவக.2957). 2. ***வெளியே*** (சீவக.653, உரை.); outside.

[எல் → எல்லே.]

எல்லேம் *ellēm,* பெ. (n.) *எல்லேமும்* பார்க்க; see *ellēmum.*

எல்லேமும் *ellēm-um,* பெ. (n.) *எல்லா நாங்களும்;* we all, all of us.

[எல்லா + நாமும் - எல்லேமும்.]

எல்லேலெனல் *ellēl-enal,* பெ. (n.) *எல்லெனல்* பார்க்க (பிங்); see *ellenal.*

[எல் + எல் + எனல்.]

எல்லேளெனல் *ellēl-enal,* பெ. (n.) *எல்லேலெனல்* (திவா.) பார்க்க; see *ellēlenal.*

எல்லை[1] *ellai,* பெ. (n.) 1. *நடப்பட்ட எல்லைக்கல்;* stone fixed up to show the boundary limits. 2. *வரம்பு;* limit, border. "எல்லைக் கணின்றார்" (குறள்.306). 3. *அளவை* (திவா.); measure, extent. 4. *முடிவு;* end, goal, extremity, death. (கலித்.129,உரை.). 5. *கூப்பிடு தொலைவு;* distance within reach of voice. (திவா.). 6. *தறுவாய்;* specified time, period. "கூறிய வெல்லை யில்" (கம்பரா.வீபீட.97). 7. *இடம்;* place, spot, locality. "அதற்கடுத்த வெல்லை யாமீண்டு" (கந்தபு.ஏம கூட.30). 8. *ஐந்தாம் வேற்றுமைப் பொருள்களுள் ஒன்று;* ablative case. "எல்லையின்னு மதுவும் பெயர் கொளும்" (நன்.319).

ம. எல்ல; க. எல்லே; துட. எல்ய; து. எல்ல; தெ. எல்ல, எல்லே.

[இல் → எல் → எல்லை. இல் = குத்துதல், நடுதல்.]

எல்லை[2] *ellai,* பெ. (n.) 1. *கதிரவன்* (திவா.); sun. 2. *பகல்;* daytime. "எல்லையு மிரவுந்துயி றுறந்து" (கலித்.123). 3. *நாள்* (சூடா.); day of 24 hours.

[எல் → எல்லை.]

எல்லைக்கட்டு[1]**-தல்** *ellai-k-kattu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. *கட்டுப்படுத்துதல்;* to limit, restrain, circumscribe. 2. *வரையறுத்தல்;* to determine, decide. 3. *வழக்குத் தீர்த்தல்;* to settle matters of dispute.

[எல்லை + கட்டு.]

எல்லைக்கட்டு[2] *ellai-k-kattu,* பெ. (n.) 1. *வரம்பு;* boundary; demarcation. 2. *கட்டுப்பாடு;* restraint, circumscription.

ம. எல்லத்தல.

[எல்லை + கட்டு.]

எல்லைக்கட்டு[3] *ellai-k-kattu,* பெ. (n.) *வரிகட்டுதல், இறைக்கட்டுதல்* (யாழ்.அக.); payment of taxes. (செ.அக.).

[எல்லை + கட்டு.]

எல்லைக்கல் *ellai-k-kal,* பெ. (n.) *எல்லை யறிய நிறுத்துங் கல்;* stone fixed up to show the boundary limits. "எல்லைக்கல்லி னிறீஇ" (மீனாட்.பிள்ளைத்.38).

[எல்லை + கல்.]

எல்லைக்கறுப்பன் *ellai-k-karuppan,* பெ. (n.) ஒரு *ஊர்த் தேவதை;* village deity, who guards the boundary of the village.

ம. எல்லக்கல்லுசாமி.

[எல்லை + கருப்பன்.]

எல்லைக்கால் *ellai-k-kāl,* பெ. (n.) *எல்லைக் கல்* (யாழ்.அக.); boundary stone.

[எல்லை + கால். கால் = கம்பு, கல்.]

எல்லைக்காவல் *ellai-k-kāval,* பெ. (n.) *ஊரெல்லையிற் காக்கும் வயற்காவல்* (வின்.); watch-shed, to mark the division of one field from another.

[எல்லை + காவல்.]

எல்லைக்குறிப்பு *ellai-k-kurippu,* பெ. (n.) 1. *எல்லைய டையாளம்;* boundary-mark. 2. *வழியளவைக் காட் டும் குறி;* milestone, mile-post.

[எல்லை + குறிப்பு.]

எல்லைக்கெட்டநேரம் *ellai-k-kettanēram,* பெ. (n.) *ஒவ்வாத நேரம்;* unsuitable time. (ஆ.அக.).

[எல்லை + கெட்ட + நேரம்.]

எல்லைக்கேடு *ellai-k-kēdu,* பெ. (n.) 1. *சமயமொவ் வாமை;* unsuitableness in regard to time. 2. *இடமொவ் வாமை;* unsuitableness, inconvenience in regard to place.

[எல்லை + கேடு.]

எல்லைகட-த்தல் *ellai-kada-,* 3.செ.கு.வி. (v.i.) 1. *வரம்பு மீறுதல்;* to tresspass. 2. *நேர்மை தவறுதல், எல்லை மீறுதல்;* to exceed limits, transgress. 3. *அளவிறத்தல்;* to be beyond all measure.

[எல்லை + கட.]

எல்லைகுறி-த்தல் *ellai-kuri-,* 4.செ.கு.வி. (v.i.) *வரம் பேற்படுத்துதல்;* to mark limits, set boundaries.

[எல்லை + குறி.]

எல்லைத்தரிசு *ellai-t-tarisu,* பெ. (n.) *ஊரோரங்களி லுள்ள கரம்பு நிலம்* (C.G.); waste land, generally on the outskirts of a village.

[எல்லை + தரிசு.]

எல்லைத்தீ *ellai-t-tī,* பெ. (n.) *ஊழித்தீ;* fire that destroys all things at the close of an age.

[எல்லை + தீ.]

எல்லைப்படுத்து-தல் *ellai-p-paduttu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. *எல்லை கட்டுதல்;* to settle a boundary. 2. *முடிவுபடுத்துதல்* (வின்.); to settle matters, decide, finish, terminate.

[எல்லை + படுத்து.]

எல்லைப்பத்திரம் *ellai-p-pattiram,* பெ. (n.) ***எல்லைவ ழக்குத் தீர்த்தெழுதும் ஆவணம்*** (சங்.அக.); written agreement, setting forth the terms of settlement of a boundary dispute.

[எல்லை + பத்திரம்.]

எல்லைப்பிடாரி *ellai-p-piḍāri,* பெ. (n.) ***எல்லையம் மன்;*** female deity believed to preside over spots where roads meet. (வின்.).

[எல்லை + பிடாரி.]

எல்லைப்பூசல் *ellai-p-pūsal,* பெ. (n.) ***எல்லையைப் பற்றிய வழக்கு;*** boundary dispute. (செ.அக.).

[எல்லை + பூசல்.]

எல்லைப்பொருள் *ellai-p-poruḷ,* பெ. (n.) ***ஒரு பொருளி னது திசையளவைக் குறிப்பதற்கு எல்லையாய் நிற் கும் பொருள்*** (ஆ.அக.); object located to indicate extent and/or boundary.

[எல்லை + பொருள்.]

எல்லைமால் *ellai-māl,* பெ. (n.) ***நான்கெல்லை*** (C.G.); four boundaries of a piece of land.

[எல்லை + மால், மாத்தல் = அளத்தல். மா → மால் = அளவு.]

எல்லைமானம் *ellai-māṉam,* பெ. (n.) 1. ***எல்லை;*** boundary limit, circuit. (யாழ்.அக.). 2. ***அளவு;*** measure, extent.

[எல்லை + மானம். மாத்தல் = அளத்தல். மா → மால் → மான் + அம்.]

எல்லையம்மன் *ellaiyammaṉ,* பெ. (n.) ***ஊரெல்லையில் இருக்கும் காவல் தெய்வம்;*** guardian deity at the boundary of a village.

[எல்லை + அம்மன்.]

எல்லையோடல் *ellaiyōḍal,* பெ. (n.) ***எல்லையைச் சுற்றிவரல்;*** running through the boundary. (ஆ.அக.).

[எல்லை + ஓடல்.]

எல்லையோடி *ellai-y-ōḍi,* பெ. (n.) ***ஊர்த் தெய்வத்தின் கோயிலின் முன்னே சில வழிபாட்டுமுறைகளைச் செய்து பிறகு எல்லையைக்காட்டி வழக்கைத் தீர்ப் போன்.*** (இ.வ.); boundary runner, a village officer, whose testimony in case of boundary disputes is accepted by the disputants, when he shows the boundary line by running round it after having been solemnly sworn to discharge his duty as almost a divine arbitrator by being required to go through certain awe-inspiring ceremonies before the shrine of the village deity. (செ.அக.).

[எல்லை + ஓடி.]

எல்லையோடு-தல் *ellai-y-ōḍu-,* 5.செ.கு.வி. (v.i.) ***எல்லையைச் சுற்றிவருதல்*** (வின்.); to march around the bounds of a village or district, a religious ceremony performed by some of the Hindu sects.

[எல்லை + ஓடு.]

எல்லைவிருத்தி *ellai-virutti,* பெ. (n.) ***ஊரெல்லையைக் காக்கும் காவற்பணி.*** (Rd.M.331); office of protecting village boundaries, held hereditarily and carrying with it certain emoluments.

[எல்லை + விருத்தி.]

எல்லோ *ellō,* இடை. (int.) ***ஓர் வியப்பு,இரக்கச்சொல்;*** exclamation expressive of surprise or pity. (செல்வி.78, சூன்.497).

[எல்லா → எல்லோ.]

எல்லோமும் *ellōm-um,* பெ. (n.) ***எல்லாமும்*** பார்க்க; see *ellām-um.*

[எல்லாமும் → எல்லோமும்.]

எல்லோரும் *ellōrum,* பெ. (n.) ***அனைவரும்;*** all. (ஆ.அக.).

[எல்லாரும் → எல்லோரும்.]

எல்லோன்[1] *ellōṉ,* பெ. (n.) ***கதிரவன்*** (பின்.); sun.

[எல் → எல்லோன்.]

†**எல்லோன்**[2] *ellōṉ,* பெ. (n.) ***பன்னிரண்டு எனும் எண்ணிக்கை;*** dozen.

மறுவ. எல்லெண்.

[எல் → எல்லோன் (படைத். பாவாணர்).]

பன்னிரு சூரியர் உண்டு எனும் கருத்தின்படி சூரியனைக் குறிக்கும் எல் என்னும் சொல்லிலிருந்து பன்னிரண்டு என்னும் எண்ணை(dozen)க்குறிக்க எல்லோன் என்னும் சொல்லைப் பாவாணர் படைத்திட்டுக்கொண்டார்.

எல்வளி *el-vaḷi,* பெ. (n.) ***பெருங்காற்று;*** furious winds. "எல்வளியலைக்கும்" (அகநா.77).

[எல் + வளி.]

எல்வை *elvai,* பெ. (n.) ***எல்லை*** பார்க்க; see *ellai.* "அல்வழி நடக்குமெல்லை" (உபதேசகா.சிவபுண் ணிய.375).

[எல்கை → எல்வை.]

எல *ela,* பெ. (n.) ***அன்பொடு விளிக்குஞ்சொல்,*** கெழுதகைப் பொதுச் சொல்; word of endearment.

[எல் → எல.]

'எல' என்பதையும் இதன் திரிபான சில சொற்களையும் பற்றிக். கிற்றல் கன்னட அகரமுதலி பின்வருமாறு கூறுகின்றது.

க. எல (ela) - உடன்படுதலைக் குறிக்கும் ஓர் இடைச்சொல்.
க. எலகெ (elage) - பெண்டிரை விளிக்கும் சொல்.
க. எலவோ - வலிமிக்க வியப்பிடைச் சொல்.
க. எலா - நண்பரை அல்லது நெருங்கிப் பழகியவரை விளிக்குஞ்சொல்.

க. எலெ, - எலே - எலா..
க. எலெகெ (lege) - பழகிய பெண்டிரை விளிக்குஞ்சொல்.
க. எலோ, எலோ - எலா (செல்வி78,சூன்.497).

எலே என்பது ஆணையும் எலா என்பது பெண்ணையும் குறிக்க வழங்கிய கெழுதகைப் பொதுச்சொல்.

எலவோ *elavō,* இடை. (int.) ***மகிழ்ச்சி, துயரம், வியப்பு ஆகியவற்றைக் குறிக்கும் கெழுதகைப் பொதுச் சொல்;*** word of endearment expressing happiness, grief and surprise.

[எல்லா → எல → எலவோ.]

எல்லா, எலா, எலவோ என்னும் கெழுதகைப் பொதுச் சொற்கள் தமிழில் தொன்முதுகால முதலே வழக்கூன்றியவை. இருக்குவேத பாடலொன்றில் திராவிடர்களின் ஓலைச் சுவடிக ளுக்குப் பகைவர் தீயிட்டபோது எலவோ! எலவோ! என அவர்கள் வருந்தி அழுததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எலா *elā,* இடை. (int.) ***நண்பினரை விளிக்கும் ஒரு விளிப்பெயர்;*** here, you! used in addressing a person in a familiar and friendly manner. (தொல்.பொ.220. உரை.).

க. எலா.

[எல்லா → எலா.]

எலி[1] *eli,* பெ. (n.) 1. ***தவசம், கொட்டை, வேர் முதலியவற்றைக் கடிக்கும் தன்மையுள்ள சிறிய உடலமைப்புள்ள விலங்கு;*** rat, mus rattus, "எலிப் பகை நாக முயிர்ப்பக் கெடும்" (குறள்.763). 2. ***பெருச் சாளி;*** bandicoot. "வாரணத்தை....யெலியிழுத்துப் போகின்ற தென்." (தனிப்பா.1,32,61).

ம. எலி; க. எலி, இலி; குட. எலி; து. எலி, இலி; தெ. எலுக, எலிக; எரு. எணி; கோத. எய்ச்; துட. இல்ல; கொலா. எல்க; நா. எல்கு; பர். எல்; கட. சிலேல்; கூ. ஒட்ரி; குவி. ஒல்லலி; பிரா. கல்; கோண். அல்லிக, எல்லி; பட. இலி.

[இல் → இலி → எலி. இல் = குத்துதல், குடைதல்.]

எலிக்காதிலை *elikkādilai,* பெ. (n.) ***எலிக்காது*** பார்க்க; see *elikkādu.* (சா.அக.).

[எலி + காது + இலை.]

எலிக்காது *elikkādu,* பெ. (n.) ***எலிச்செவி போன்று வளரும் கிளைகளையுடைய ஓர் பயிர்*** (M.N.); plant whose leaves resemble rats, ears-Ipomaea reniformis.

[எலி + காது.]

எலிச்செவி *eliccevi,* பெ. (n.) ***எலிச்செவி போன்ற இலைகள் உள்ள ஒரு மருந்துச் செடி;*** plant Evolvulus emarginatus or Salvinia Cucullata.

ம. எலிச்செவி; க. இலிகிவி; து. எலிகெம்பி; தெ. எலிச்செவி, எலுகசெவி.

[எலி + செவி.]

எலிச்செவிக்கள்ளி *eliccevi-k-kalli,* பெ. (n.) ***கள்ளி வகை*** (தைலவ.தைல.125,உரை.); a kind of sedge.

ம. எலிச்செவியன்; க. இலிகிவி; து. ஏலிகெபி; தெ. எலிச் செவி.

[எலி + செவி + கள்ளி.]

எலித்திசை *eli-t-tišai,* பெ. (n.) (கணியம்) ***வடமேற்கு திசை*** (வின்.); North-west, opp. to pūṉai-t-tišai. (செ.அக.).

[எலி + திசை.]

எலித்துன் *eli-t-tuṉ,* பெ. (n.) ***எலிதோண்டிய பொந்து;*** hole made by rat. (செ.அக.).

[எலி + துன். துன்னுதல் = குடைதல், உழுதல், வளைதோண்டு தல். பொந்து செய்தல்.]

எலிப்பகை *eli-p-pagai,* பெ. (n.) 1. ***பூனை;*** cat. 2. ***எலியின் எதிர்ப்பாற்றல்;*** attacking capacity of the rat. "எலிப்பகை நாகம் உயிர்ப்பக்கெடும்" (குறள்.763).

[எலி + பகை.]

எலிப்பயல் *eli-p-payal,* பெ. (n.) ***சிறிய பையன்;*** little boy.

[எலி + (பையல்) பயல்.]

எலிப்பயறு *elippayaṟu,* பெ. (n.) 1. ***ஓர்வகைக் காட்டுப் பயறு;*** a wild variety of pulse - Gly cine triloba. 2. ***வயற்காடுகளில் முளைக்கும் வயற் பயறு;*** pulse found grown in fields and hedges and known as rat-pulse or rat-gram-phasecous trilobus. (சா.அக.).

[எலி + பயறு.]

எலிப்புலி *eli-p-puli,* பெ. (n.) ***பூனை;*** cat. "ஈப்புலியோ டெலிப்புலியாய் வடிவங் கொண்டு" (தனிப்பா. 1,86,169).

[எலி + புலி.]

எலிப்புற்று *elippuṟṟu,* பெ. (n.) ***எலிவளை;*** rat hole.

[எலி + புற்று.]

எலிப்பூழி *elippūḻi,* பெ. (n.) ***எலிவளையினின்று வெளியே தள்ளும் மண்;*** sand thrown out by a rat from a rat-hole. (சேரநா.).

ம. எலிப்பூழி.

[எலி + பூழி.]

எலிப்பொந்து *eli-p-pondu,* பெ. (n.). ***எலிவளை;*** rat-hole.

ம. எலிப்பளம்.

[எலி + பொந்து.]

எலிப்பொறி *eli-p-poṟi,* பெ. (n.) 1. ***எலியைப் பிடிக்கும் எந்திரம்;*** rat-trap. 2. ***எலிப்பிடுக்கன்*** பார்க்க; see *elippiḍukkaṉ.*

ம. எலிக்கணி, எலிப்பொறி.

[எலி + பொறி.]

ஐங்கனி

எலிக்காதிலை

மாதுளை

ஏலரிசிமணி

கொளுஞ்சி



ஏழிலைப்பாலை

நாரத்தை

எலுமிச்சை

தமரத்தை



எலிப்பொறி

எலி மருந்து *elimarundu,* பெ. (n.) ***எலியைக் கொல்வ தற்கிடு மருந்து;*** any medicine intended for killing rats. (சா.அக.).

[எலி + மருந்து.]

எலிமயிர்க்கம்பளம் *eli-mayir-k-kampaḷam,* பெ. (n.) ***எலிமயிரினாற் செய்யப்பட்ட கம்பளி*** (சீவக.2686, உரை.); blanket made of rats' fur.

[எலி + மயிர் + கம்பளம்.]

எலிமுள்ளு *elimuḷḷu,* பெ. (n.) ***இராவணன் மீசைப்புல்;*** water-pink, a seashore grass, spinifex squarrosus.

எலியளை *eli-y-aḷai,* பெ. (n.) ***எலிவளை*** (வின்.); rats' hole.

ம. எலியள.

[எலி + வளை - எலிவளை → எலியளை.]

எலியன் *eliyaṉ,* பெ. (n.) ***பொடியன்*** (இ.வ.); little boy.

[எலி → எலியன்.]

எலியாமணக்கு *eli-y-āmaṇakku,* பெ. (n.) ***காட்டா மணக்கு;*** (பதார்த்த.249); glauosus-leaved physic-nut.

ம. எலியாவணக்கு.

[எலி + ஆமணக்கு.]

எலியிடுக்கி *eli-y-iḍukki,* பெ. (n.) ***எலிபிடிக்கும் பொறி;*** rat-trap.

[எலி + இடுக்கி.]

எலியெலும்பன் *eli-y-elumbaṉ,* பெ. (n.) ***வலிமையில் லாதவன்;*** weak man, he who is as weak as a rat. "இல்லெலி யெலும்பனான சம்சாரி" (ஈடு.4,9,8).

[எலி + எலும்பு + அன்.]

எலியோடி *eli-y-ōḍi,* பெ. (n.) ***கூரையின் நடுமுகட்டிலே வைக்கும் உருட்டுமரம்*** (வின்.); thin timber on the top of a ceiling ridge-pole.

ம. எலியோடி.

[எலி + ஓடி.]

எலிவளை *eli-vaḷai,* பெ. (n.) ***எலிப்பொந்து*** பார்க்க; see *eli-p-pondu.*

எலிவாலரம் *elivālaram,* பெ. (n.) ***எலி வாலைப் போன்ற அரம்;*** instrument, rat's tail file. (சா.அக.)

[எலி + வால் + அரம்.]

எலிவெடி *eliveḍi,* பெ. (n.) ***வெடிவகை;*** a kind of rocket. (சேரநா.).

ம. எலிவெடி.

[எலி + வெடி.]

எலிவெள்ளை நஞ்சு *eliveḷḷainañju,* பெ. (n.) ***எலிகள் புணருங் காலத்தில் சிதறும் விள்ளு மாந்தர் உடம் பில் படுவதால் ஏற்படும் நஞ்சு*** (விஷம்); இதனால் புண், குளிர்காய்ச்சல், மயக்கம், போன்ற நோய்கள் உண்டாகும்; diseases due to the poisonous effects of the seminal fluid-(spilt during the coition of rats) coming in contact with the humanbody and the symtoms are - ulcers, swelling, ague, swoon, fever etc. (சா.அக.).

[எலி + வெள்ளை + நஞ்சு.]

எலினன் *eliṉaṉ,* பெ. (n.) ***கள்;*** toddy; (சா.அக.).

[எலு = பிஞ்சு. எலுவின் வடிநீர் எலுவெனப்பட்டது. எலு → எலுனன் → எலினன்.]

எலு[1] *elu,* பெ. (n.) ***கரடி*** (பிங்.); bear.

தெ. எலுகு.

[எல் = கருப்பு. எல் → எலு.]

எலு[2] *elu,* பெ. (n.) ***பிஞ்சு*** (பிங்.); green fruit that is just being formed from the blossom.

[இல் → இலு → எலு = பிஞ்சு.]

எலு[3] *elu,* பெ. (n.) ***தோழமை;*** (யாழ்.அக.); friendship.

[எல்லா → எலா → எலு.]

எலும்பன் *elumbaṉ,* பெ. (n.) ***எலும்புபோன்று மெலிந்த வன்;*** one who is almost a skeleton, emaciated man.

ம. எலும்பன்.

[எல் → எலு → எலும்பு + அன்.]

எலும்பி[1] *elumbi,* பெ. (n.) ***எலும்பு தோன்ற மெலிந்த வள்;*** emaciated woman.

[எலும்பு + இ.]

எலும்பிலி *elumbili,* பெ. (n.) 1. ***புழுமுதலிய எலும்பில் லாத உயிரிகள்;*** worm, or any creature that has no bones. 2. ***மரவகை*** (யாழ்.அக.); tree.

[எலும்பு + இலி. இல்லி → இலி.]

எலும்பு *elumbu,* பெ. (n.) ***உடம்பின் தோற்றம், உறுதிக்குக் காரணமான வன்மையான மரச்சட்டம்***

போன்ற பொருள்; bone. ''நரம்போ டெலும்பணிந்து'' (திருவாச.12,11).

ம. எலும்பு; த. எலு, எலும்பு, எழுவு; கோத. எல்ன்; துட. எலின்; குட. எலிம்பி; து. எலு; தெ. எம்மு, எம்கே, எமுக; பட. இலு.

[எல் = வெண்மை. எல் → எலு → எலுமு → எலும்பு.]

மேலையாரிய மொழிகளிலும் 'எல்' எனுஞ்சொல் வெண்மைப் பொருளில் வழங்கி வருகிறது.

எல்பு - *L* albus, white, *LL.* alba,
E alb, white vestment reaching to feet, worn by priests. *OE, ME* albe
E albata, white meta. *L.*albata, whitened. *Port* albino, white Negro
E albite, white or soda fieldspar.
E album, book of white sheets for insertion of autographs, photographs, etc.
E albumen, white of egg.
E albuminuria, presence of albumen in the urine.
E alburnum, recently formed white wood in exogamous, trees. (செல்வி.77,திச.177).

எலும்புக்கண் *elumbu-k-kaṇ,* பெ. (n.) ***எலும்பின் கண்ணறைகள்;*** bone-cells. (சா.அக.).

[எலும்பு + கண்.]

எலும்புக் கூடு *elumbu-k-kūḍu,* பெ. (n.) ***உடம்பினில் தசை நீங்கிய எலும்பின் கோப்பு;*** the hard or bony frame work of an animal separated from the flesh and fixed together in their natural position--skeleton. (சா.அக.).

[எலும்பு + கூடு.]

எலுமிச்சம்புல் *elumiccampul,* பெ. (n.) *ஓர்வகைப் புல்;* lemon grass - Andropagon schoenanthus. (சா.அக.).

[எலுமிச்சம் + புல்.]

எலுமிச்சை *elumiccai,* பெ. (n.) 1. *ஒரு மரம்;* sour lime, citrus medica acida. 2. *எலுமிச்சம்பழம்;* fruit of the sour-lime-tree. 3. *தித்திப்பெலுமிச்சை;* sweet lime. 4. ***எலுமிச்சை வகை;*** Bergamotte orange, citrus aurantium beggamia.

ம. எருமிச்சி நாரகம்; பட. இலிமிசிகெ; க. இலிமிஞ்சி; கோத. இல்மிச்; துட. இன்மிச்; *Skt.* laknea.

[எல் → எலு = பிஞ்சு, காய். எலு → எலுமு → எலுமுத்தெ → எலுமித்தெ → எலுமிச்செ. எலுமித்தது = காய்த்தன்மையுடைது. ஏனைய பழங்களைப் போல் பழம் எனும் நொய்த்த தன்மையடையாமலும் மேற்றோல் வாடாமலும் இருப்பது.]

எலுமிச்சை வகைகள்: 1. **பெரிய எலுமிச்சை;** large lime or giant lemon - Citrus medica limon - Citrus medica limonum (medico-limonum). 2. **கொடியெலுமிச்சை;** creeper lime-Citrus acida. 3. மலையெலுமிச்சை; mountain lime Citrus rutucea. 4. **தித்திப்பு எலுமிச்சை;** sweet lime-citrus media-lumia alias C.limetta. Used the orange. 5. **காட்டெலுமிச்சை;** Indian wild or bitter lime - Atalantia monophylla alias racemosa. 6. **பணிலா எலுமிச்சை;** musk or manilla lime, Triphasia trifoliata alias Limonia trijoliata. 7. **நாயெலுமிச்சை;** dog wood apple - limonia acidissima. 8. **ஆனையெலுமிச்சை;** title from its size. Same as sour lime in No.1. 9. **கோடையெலுமிச்சை;** Pondicherry lemon-Citra medica (typica). 10. **எருமை யெலுமிச்சை;** buffallo lime - same as No.12. 11. **பிள்ளையார் எலுமிச்சை அதாவது பெரிய எலுமிச்சை;** Ganapathi's lime, same as No.1. 12. **சம்பீர வெலுமிச்சை இதுவே கிச்சிலி;** loose jacket lime - Citrus anranti vum nobilis. (jambhiri) (சா.அக.).

எலுமிச்சை வெற்றிலை *elumiccai veṟṟilai,* பெ. (n.) *கற்பூர வெற்றிலை;* betel leaf with the fragrance of the lime fruit. (சா.அக.).

[எலுமிச்சை + வெற்றிலை.]

எலுவர் *eluvar,* பெ. (n.) ***தோழர்;*** men-friend. ''எலுவ! சிறாஅர் ஏமுறு நண்ப!'' (குறுந்.129).

[எலுவன் → எலுவ. எலு = பிஞ்சு, இளமை. எலுவ = இளையவனே.]

எலுவல் *eluval,* பெ. (n.) ***தோழன்;*** man friend. ''அரவெழுதிய கொடியுமுடையவ னெலுவலும்'' (பாரத.பதினாறாம்.28) (செ.அக.).

[எலுவன் → எலுவல். எலு = பிஞ்சு, இளமை. எலுவல் = இளமையன்.]

எலுவன் *eluvaṉ,* பெ. (n.) ***எலுவல்*** பார்க்க; see *eluval.* (செ.அக.).

[எலுவ → எலுவன்.]

எலுவி *eluvi,* பெ. (n.) ***தோழி.*** (தொல்.பொருள். 26,32,உரை.); lady companion.

[எலுவன் → எலுவி. எலு = பிஞ்சு, இளமை. எலுவி = இளமையள்.]

எலுவை *eluvai,* பெ. (n.) ***தோழி;*** lady companion. ''உனக்கெலுவை யாகுவதெ னெண்ணம்'' (பாரத.நாடு கரந்.33). (செல்வி.சூன்.78,பக்.497).

[எலுவன் → எலுவை. எலு = பிஞ்சு. இளமை. எலுவை = இளமையுடையளாய், இளமைக்குணமான அன்பும் ஆர்வமும், நட்பும் வளர்க்கும் தன்மையள்.]

எலே *elē,* இடை. (part). ***விளியிடைச்சொல்;*** vocative particle of endearment. எலே! இங்கே வாலே. (நெல்லை).

[எல்லா → எலே.]

எவ் *ev,* வி.சு.பெ. (inter.pron.) ***எவை;*** what, which things. எவ்வேந்தன்? (உ.வ.).

தெ. எவி; ம. எவ்.

[எ → எவ். எ - வினாக்குறிப்பு.]

எவ்வண்ணம் *evvaṇṇam,* பெ. (n.) ***எவ்வாறு, எப்படி;*** how, in which manner.

ம. எவ்வண்ணம்.

[எவ் + வண்ணம்.]

எவ்வது *evvadu,* கு.வி.எ. (adv.) 1. ***எவ்விதம்;*** How? in what manner. "எவ்வ துறைவ துலகம்" (குறள்.426). 2. ***யாதொருவாறு;*** whatsoever. (செ.அக.).

[எவ் + அது - எவ்வது.]

எவ்வநோய் *evvanōy,* பெ. (n.) ***தீராத நோய்;*** incurable disease.

[எவ்வம் + நோய்.]

எவ்வம்[1] *evvam,* பெ. (n.) 1. ***துன்பம்;*** affliction, distress "கூர்ந்தவெவ்வம்விட" (புறநா.393). 2. ***ஒன்றானுந் தீராத நோய்*** (குறள்.1241,உரை.); incurability, persistence, as of a disease. (குறள்.1241,உரை.). 3. ***இளிவரவு;*** inferiority, degradation, wretchedness. "இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்" (குறள்.223). 4. ***ஏய்த்தல்;*** deceitfulness, guile. "எவ்வ மாகவந் தெய்தி" (பெரியபு. திருநாவு.83). 5. ***வெறுப்பு;*** dislike, aversion. "எவ்வந் தீர்ந் திருந்தாள்" (சீவக.874) (செ.அக.). 6. ***குற்றம்;*** fault. (ஆ.அக.). 7. ***நாட்பட்ட நோய்;*** chronic illness. (சா.அக.).

[அவ்வு → எவ்வு → எவ்வம்.]

எவ்வம்[2] *evvam,* பெ. (n.) ***மானம்;*** self-respect. "என்க ணிடரினும் பெரிதா லெவ்வம்" (பு.வெ.11,பெண் பாற்.7).

[ஏ → ஏவம் → எவ்வம்.]

எவ்வரும் *evvar-um,* வி.சு.பெ. (inter.pron.) ***யாரும்;*** anyone. "ஆங்கவை யெவ்வரும் பெறுகிலர்" (கந்தபு.மா யையுப.14).

[எவரும் → எவ்வரும். வகரமெய் மிகைத் தோன்றல் திரிபு.]

எவ்வழி *evvaḻi,* வி.சு.பெ. (inter.pron.) 1. ***எந்த வழி;*** which way, wither. 2. ***எப்படி;*** how. "எவ்வழி நல்லவர் ஆடவர்" (புறநா.187).

ம. எவ்வழி.

[எவ் + வழி.]

எவ்வளவு *e-v-v-aḷavu,* கு.வி.எ. (adj.) ***எம்மட்டு;*** how much, how far, how long. கிணறு எவ்வளவு ஆழம்? எவ்வளவு நாளாகும்? (உ.வ.).

[எவ் + அளவு - எவ்வளவு.]

எவ்வாறு *e-v-v-āṟu,* கு.வி.எ. (adv.) ***எப்படி;*** in what manner, how? விழா எவ்வாறு நிகழ்ந்தது? (உ.வ.).

[எவ் + ஆறு - எவ்வாறு. ஆறு = வழி.]

எவ்வி *evvi,* பெ. (n.) ***வேளிர் குறுநில மன்னர்களு ளொருவனான வேள் எவ்வி;*** one of the chieftains of Tamil Nadu known as Vēḷ Evvi. (செ.அக.). "எவ்வி தொல்குடிப் படீஇயர்" (புறநா.202-14).

[எவ்வுதல் = எய்தல், எவ்வி = அம்பு எய்தலில் வல்லவன்.]

எவ்விடம் *evviḍam,* பெ. (n.) ***எந்தவிடம்;*** which place, where. (ஆ.அக.).

ம. எவ்விடம்; க. எல்லி; தெ. எக்கட; குரு. எக்கய்ய; மால். இகோ, இகடி, இக்; பிரா. அராடேக்.

[எவ் + இடம் - எவ்விடம்.]

எவ்வு[1]**-தல்** *evvu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***செலுத்துதல்;*** to discharge, as a missile or an arrow.

[ஏவு → எவ்வு.]

எவ்வு[2]**-தல்** *evvu-,* 7.செ.கு.வி. (v.i.) ***எழும்புதல்;*** to rise, spring up. "தீக்கணை மேருவைக் கால்வளைத் தெவ்வினான்" (கம்பரா.ஊர்தே.177).

[ஏவு - எவ்வு.]

எவ்வு[3]**-தல்** *evvu-,* 7.செ.கு.வி. (v.i.) ***துன்பமிழைத்தல்;*** to bother, to tease. "எவ்வுஞ் சிலையுடை" (திவ்.பெரி யாழ்.3,2,5).

[அவ்வு → எவ்வு.]

எவ்வெட்டு *e-v-v-eṭṭu,* பெ. (n.) ***தனித்தனி எட்டு;*** eight each.

ம. எவ்வெட்டு.

[எட்டு + எட்டு - எவ்வெட்டு.]

எட்டெட்டு, எண்ணெண் என்று அடுக்கிவரின் எட்டின் பெருக் கலாகிய எட்டு எனப் பொருள் தந்து பெருக்கற்பலனாகிய 64ஐக் குறிக்கும். எட்டு எட்டாகப் பகிர்ந்தளிக்கும் பொருளில் எவ்வெட்டு என மருவிப் புணர்ந்து கூட்டுச் சொல்லாகும்.

எவ்வெலாம் *e-v-v-elām,* பெ. (n.) ***உள்ளவெல்லாம்;*** whatever there be. "எவ்வெலாவண்டத் துறைதரு மருந் தும்" (கந்தபு.சூரனர.11).

[எல்லாம் + எல்லாம் - எல்லெல்லாம் → எவ்வெல்லாம் ஒ.நோ. எவ்வெட்டு.]

எவ்வெவர் *e-v-v-evar,* பெ. (n.) ***எவரெவர்;*** whosoever. "எவ்வெவர்க்கு மிறைவற்கு நல்கியே" (கந்தபு.திரு விளை.123).

[எவர் + எவர் - எவரெவர் → எவ்வெவர்.]

எவ்வெவை *e-v-v-evai,* பெ. (n.) ***எவையெவை;*** whatsoever things.

[எவை + எவை - எவையெவை → எவ்வெவை.]

எவ்வேழு *e-v-v-ēḻu,* பெ. (n.) ***தனித்தனி ஏழு;*** seven each.

[ஏழு + ஏழு - எவ்வேழு.]

ஏழேழு என்றடுக்கி வரின் அவற்றின் பெருக்கற்பலனாகிய 49ஐக் குறிக்கும். ஏழு ஏழாகப் பகிர்ந்தளிக்கும் பொருளில் எவ்வேழு-எவ்வேழ் என மருவிப் புணர்ந்து கூட்டுச் சொல்லா கும்.

எவ்வை[1] *evvai,* பெ. (n.) *கவலை;* care, anxiety. "எவ்வையின்னா வள்ளியம்மை கவ்வைமன தாகும்." (வள்ளி.கதை.ms.) (செ.அக.).

[அவ்வு → எவ்வு → எவ்வை.]

எவ்வை[2] *evvai,* பெ. (n.) *எம் தங்கை;* our younger sister. "எவ்வைக் கெவன்பெரி தளிக்கு மென்ப" (ஐங்குறு.89) (செ.அக.).

[எம் + அவ்வை - எம்மவ்வை → எவ்வை.]

எவன *evan,* க.வி.எ. (adv.) 1. *எவ்விடம்;* where. "எவன படர்ந்தனளென" (காஞ்சிப்பு.கழுவாய்.91). 2. *எப்படி;* how. ஒன்றுபலபோல நின்றியல் பெவனெனின் (ஞானா.56,35).

[எவ் + அன் - எவன. அன் = இடம்.]

எவர் *evar,* வி.சு.பெ. (inter.pron.) *யாவர்;* who. இங்கு வந்தார் எவர்? (உ.வ.).

ம. எவர்.

[ஏவர் → எவர் (வ.மொ.304).]

எவரும் *evar-um,* பெ. (n.) *யாரும்;* everyone, anyone. "இன்னோ ரெவருஞ் சிவனேயென் றிரங்க லோடும்" (கந்தபு.திருக்கல்.49).

[எவர் + உம்.]

எவள் *eval* வி.சு.பெ. (inter.pron.) *யாவள்;* what woman, which woman.

ம. எவள்; க. யாவளு, ஆவள்; கோத. எவள்; குட. எவ; தெ. ஏதி; கொலா. எத்; கூ. அனரி, அனை; குவி. அம்பயி, அம்பது; குரு. எக்தா; மால். இகிர், இகு; பட. எவ.

[ஏவல் → எவள் (வ.மொ.304).]

எவற்று *evarru,* வி.சு.பெ. (inter.pron.) *எது* (யாழ்.அக.); what, which.

ம. எவற்ற (எப்பொருள்); *E* what.

[எவன் + து - எவற்று.]

எவன்[1] *evan,* வி.சு.பெ. (inter.pron.) *யாவன்;* which man, suff. pers. masc. (வினாப்பெயர்).

ம. எவன்; க. ஆவம், யாவனு, ஆவெ; கோத. எவ்ன்; துட. எந்த்; குட. ஏவென்; து. ஏரு, ஏரணெ; தெ. எவடு, எவ்வடு; கொலா. எம்; கூ. அனென்க; குவி. அம்பசி; குரு. நே; மால். நெரெ; பிரா. தேர், தே; பட. எம.

[ஏவன் → எவன் (வ.மொ.304).]

எவன்[2] *evan,* வி.பெ. (inter.pron.) *யாது, யாவை;* what, used in both numbers. - கு.வி.எ. (adv.) 1. *எவ்வெண்ணம்;* how? in what manner? "அருளோனாவதை யெவனோ" (ஞானா.46,6). 2. *ஏன்;* why. - இடை. (part.) *வியப்பு இரக்கச்சொல்* (சூடா.); an exclamation of wonder or pity. "துப்பின் எவன் ஆவர்" (குறள்.1165).

[ஏவன் → எவன்.]

எவா அரிசி *evā ariśi,* பெ. (n.) *எவா தவசம்* (பார்லி); husked seed of barley called pearl barley - Hordeum decorticatum. (சா.அக.).

[ஐயவி → ஏவி → எவா + அரிசி. இது உருண்டையாயும், நடுவில் பிளப்புள்ளதாயுமிருக்கும்; ஐயவி அரிசி பார்க்க; see aiyaviyariśi.]

எவை *evai,* வி.சு.வி.பெ. (inter.pron.) *யாவை;* which things.

ம. எவ; து. யாவ, தாவ; கோத. எத்; துட. ஏனம்; குட. ஏவு, ஏதி; து. தாவ, தாதவ; தெ. ஏதி. ஏவி; கொலா. எத், எதவ்; கொண், ஏவ்; கூ. அனை; மால். இந்ர; பட. எவெ.

[ஏ + அவை = ஏவை → எவை.]

எழல்[1] *elal,* பெ. (n.) *துயரம்*[1] *(யாழ்.அக.);* grief.

ம. எழல், அழல்.

[அழல் → எழல்.]

எழல்[2] *elal,* பெ. (n.) 1. *கிளர்ச்சி;* enthusiasm, elation. "அமரை வேட்டுவந் தெழலுறு மனத்தினர்" (கம்பரா. கரன்வ.43). 2. *புறப்படுகை;* starting, departing. "சோதனை புரிவாரிற் றுண்ணென வெழலுற்றான்" (கந்தபு.தவங்கா.1). 3. *தோன்றுகை;* originating, emanating. "அங்கதிலையை வந்தெழலும்" (கந்தபு. திருநகர.72). (செ.அக.).

ம. எழல்; க. ஏழிகெ, ஏழ்கெ; து. எர் கெல், எழகெ; தெ. லேயுட.

[எழு + அல் - எழல்.]

எழவாங்கு-தல் *ela-vāngu-,* 7.செ.கு.வி. (v.i.) *தொலை விற்போதல்;* to go to a distance. "முகங்காட்டாதே எழவாங்கி யிருக்கை" (ஈடு.4,7,2).

[எழ + வாங்கு.]

எழாநிலை *elā-nilai,* பெ. (n.) *யானை கட்டுங் கூடம்;* stable for elephant. "எழாநிலை புகாஅ விளங்கடிசீற் றத்து... ... களிறு" (பெருங்.உஞ்சைக்.38,91).

[எழாத + நிலை - எழாநிலை.]

எழாயிரம் *elāyiram,* பெ. (n.) *7000 என்னும் எண்* (தொல்.எழுத்.391,உரை.); the number 7000.

[ஏழு + ஆயிரம் - ஏழாயிரம் → எழாயிரம்.]

எழால்[1] *elāl,* பெ. (n.) 1. *வல்லூறென்னும் பறவை;* a kind of bird. "குடுமி யெழாலொடு கொண்டு கிழக் கிழிய" (பதிற்றுப்.36,10). 2. *யாழெழுமின்னிசை;* musical notes of the yāl. "ஏழாலை யன்னசொ லேந்திழை மாதரார்" (கந்தபு.திருக்கல்.15). 3. *யாழ்;* stringed musical instrument known as yāl. "பயனுடை யெழாற் கோடியர் தலைவ" (பொருந.56). 4. *மக்கள் மிடற் றிசை;* human voice. "களம்படு மெழாலினோடு" (திருவிளை.தருமிக்கு.76). 5. *மயில்;* peacock. (செ.அக.).

[எழு → எழா → எழால். எழால் = உயரப் பறக்கும் பறவை. எழால் → எடாகை → டேகை என்பன கொச்சை வழக்கு. எழால் = எடுத்த குரலோசை. எழால் = உயரம் மிகுந்து எடுப்பான தோற்றமுடைய யானை.]

எழால்² *eḻāl*, பெ. (n.) ***மாட்டுக் கொட்டிலின் அடைப்புப் படல்;*** door of bars as of a cowshed. (சேரநா.).

ம. எழால்.

[எழு → எழுவு → எழா → எழால்.]

எழில்¹ *eḻil*, பெ. (n.) 1. ***ஒளி;*** brightness, lustre. 2. ***வண்ணம்*** (வின்.); colour, colouring, paint. 3. ***அழகு;*** beauty, comeliness, gracefulness. "எழுதெழி லம்பலம்" (பரிபா.18,28). 4. ***தோற்றப்பொலிவு;*** imposing appearance. "நுண்மாணுழைபுல மில்லா னெழினலம்" (குறள்.407).

[எல் = ஒளி. எல் → எழ் + இல் - எழில். 'இல்' சொல்லாக்க ஈறு.]

எழில்² *eḻil*, பெ. (n.) 1. ***இளமை*** (சூடா.); youth. (சூடா.). 2. ***பருமம்;*** bigness, bulkiness. "எழிற்கலை புலிப்பாற் பட்டென" (புறநா.23). 3. ***வலி*** (பிங்.); strength. 4. ***திறமை;*** ability. 5. ***உயர்ச்சி;*** height, loftiness, elevation. "பகட்டெழின் மார்பின்" (புறநா.13). 6. ***குறிப்பு;*** hint. எழிலறியாதவன் (வின்.). 7. ***வெல்லும் சொல்*** (சாதுரிய மொழி); witticism, epigram.

ம. எழில்; க., து. எட்ட; மால். ஏடு.

[எல் → எழு → எழில்.]

எழில்காட்டு-தல் *eḻil-kāṭṭu-*, 5.செ.கு.வி. (v.i.) ***குறிப்புக் காட்டுதல்*** (வின்.); to give an inkling, to hint.

[எழில் + காட்டு.]

எழில்சொல்லு-தல் *eḻil-collu-*, 8.செ.குன்றாவி. (v.t.) ***குறிப்பிற் சொல்லுதல்*** (வின்.); to hint by words, allude to. (செ.அக.).

[எழில் + சொல்லு.]

எழில்பிடி-த்தல் *eḻil-piḍi-*, 4.செ.குன்றாவி. (v.t.) ***நறுமணத்தால் கவரப்படுதல்*** (யாழ்.அக.); to be attracted by smell. (யாழ்.அக.). (செ.அக.).

[எழில் + பிடி.]

எழிலறிதல் *eḻilaṟidal*, தொ.பெ. (vbl.n.) ***குறிப்பறிதல்;*** having an inkling, knowing the hint. (ஆ.அக.).

[எழில் + அறிதல்.]

எழிலி *eḻili*, பெ. (n.) ***மேகம்;*** cloud. "எழிலி தானல்கா தாகி விடின்" (குறள்.17).

ம. எழிலி.

[எழு → எழுலி → எழிலி. எழு = மேலெழும்புதல். எழிலி = உயர எழும்பிச்செல்லும் மேகம்.]

எழிற்கை *eḻiṟ-kai*, பெ. (n.) ***ஆடலின்போது அழகுபெறக்காட்டும் கை;*** graceful gesture of the hand in dancing. "பிண்டியும் பிணையலு மெழிற்கையுந் தொழிற்கையும்" (சிலப்.3,18).

[எழில் + கை - எழிற்கை. பொலிவு தோன்றக் காட்டும் கை எழிற்கை எனப்பட்டது.]

எழினி¹ *eḻiṉi*, பெ. (n.) ***உறை;*** cover, case. "வீணை யொன்றினை ... எழினியை நீக்கி" (சீவக.716)

[இழு → எழு - எழினி.]

எழினி² *eḻiṉi*, பெ. (n.) ***கடைவள்ளல்கள் எழுவருள் ஒருவன்*** (புறநா.158); chief noted for philanthrophy, one of seven philanthrophists.

ம. எழினி.

[எழு → எழுனி → எழினி. எழு = உயர்ச்சி. எழினி = நெடியவன், உயர்ந்தவன், மேலோன்.]

எழுனி³ *eḻiṉi*, பெ. (n.) 1. ***எழுகை;*** rising. 2. ***இடுதிரை;*** curtain. "பொருமுகப் பளிங்கி னெழினி வீழ்த்து" (மணிமே.5:3).

L. elate, lofty; *E.* elate, to raise, elation, pride.

[எழு → எழுனி. எழு = எழுச்சி (சு.வி.76).]

எழு¹**-தல்** *eḻu-*, 2.செ.கு.வி. (v.i.) 1. ***எழுந்திருத்தல்;*** to rise, as from a seat or bed. 2. ***மேல் எழும்புதல்;*** to ascend, as a heavenly body; to rise by one's own power, as a bird; to ascend, by buoyancy, as a balloon. 3. ***தோன்றுதல்;*** to appear, arise, originate. "அமிழ்தெழுக்கடைமின்" (கம்பரா.அகலி.21). 4. ***புறப்படுதல்;*** to start, as from a dwelling. "எம்பெரு முதல்வ நீ யெழுதியால்" (கந்தபு.சரவண.4). 5. ***தொழிலுறுதல்;*** to function. "காலுமெழா" (திவ்.பெரியாழ்.5,3,5). 6. ***மனங்கிளர்தல்;*** to be excited, roused. "ஒள்வாட் டானை யுருத்தெழுந்தன்று" (பு.வெ.3,2). 7. ***மிகுதல்;*** to increase, swell. "எழு மரவக் கடற்றானையான்" (பு.வெ.7,6). 8. ***வளர்தல்;*** to grow, increase in stature, as a tree; to rise, as a building; to swell, as breasts. "எழுகிளை மகிழ்ந்து" (சீவக.330). 9. ***உயிர்பெற்றெழுதல்;*** to become resuscitated, return to life. "அந்நிலை யெழும்வகை யருள்செய் தானரோ" (கந்தபு.திருவிளை.78). 10. ***துயிலெழுதல்;*** to awake. "அரியின் இனமெழுந்தன" (கந்தபு.குமார.59). 11. ***பரவுதல்;*** to spread, as fame or rumour. "நாமத் தன்மை நன்கனம் படியெழ" (பரிபா.15,25). 12. ***தொடங்குதல்;*** begin, commence. "இன்னாமை வேண்டி னிரவெழுக" (நான்மணி.17).

ம. எழுக; க. எழ், ஏழ், ஏழு; கோத. எட்வி; துட. நட்; குட. ஏள்; து. எர்குனி; தெ. எக்குட, லேச்சு; கொலா. லெசு; நா. லேப்; மால். இலெ; பட. எல்லு.

[ஏ → ஏழ் → ஏழு → எழு - எழுதல். (சு.வி.76).]

எழு² *eḻu*, பெ. (n.) 1. ***தூண்*** (திவா.); column, pillar. 2. ***கதவை உள்வாயிற்படியிலே தடுக்கும் மரம்,*** (அஃது) ***கணையமரம்;*** cross-bar of wood set to a door. "ஊடெழுப் போக்கி" (பெருங்.உஞ்சைக்.49,3). 3. ***படைக்கலவகை*** (திவா.); weapon.

ம. எழு.

[ஏழ் → எழு.]

எழு³ *eḻu*, பெ. (n.) *எஃகு;* Steel. (சா.அக.)

[எழுகு → எழு.]

எழு⁴ *eḻu*, கு.பெ.எ. (adj.) *ஏழு;* numeral seven. "எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்" (குறள்,107)

[ஏழு → எழு. கூட்டுச் சொல்லின் முன்னுறுப்பாகும் நெடுமுதல் எண்ணுப்பெயர்கள் குறுமுதலாகும் என்னும் சொற்பிறப்பு நெறி முறைப்படி ஏழு → எழு எனக்குறுகியது.]

எழுக்காம்பு *eḻukkāmbu*, பெ. (n.) *உருக்குலக்கை;* pestle made of steel. (சா.அக.).

[எழு = எஃகு. எழு + காம்பு.]

எழுகடல் *eḻukaḍal*, பெ. (n.) *ஏழுகடல்* (கந்தபு.அண்ட கோச.20); seven concentric seas of the terrestrial sphere.

[ஏழு + கடல் - ஏழுகடல் → எழுகடல்.]

உப்புக்கடல், கருப்பஞ் சாற்றுக்கடல், கட்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், நன்னீர்க்கடல்.

எழுகளம்¹ *eḻu-kaḷam*, பெ. (n.) *ஆண்டு அறுவடை முடிவு;* conclusion of the annual harvest (தஞ்.).

[எழு + களம். எழுதல் = புறப்படுதல், பயன்பாடுநிறைவுற்று வெளியேறுதல்.]

எழுகளம்² *eḻu-kaḷam*, பெ. (n.) *போர்க்களம்;* battle-field. (ஈடு.).

[எழு = எழுதல், போருக்கு எழுதல். எழு + களம் - எழுகளம் (வினைத்தொகை).]

எழுகு *eḻuku*, பெ. (n.) *எஃகு, உருக்கு;* steel. (சா.அக.).

[எஃகு → எய்கு → எழுகு.]

எழுகுபொடி *eḻugupoḍi*, பெ. (n.) *எஃகுப்பொடி* பார்க்க; see *ekkuppoḍi*.

[எஃகு → எழுகு + பொடி. எஃகு → எய்கு → எழுகு எனத்திரிந்தது கொச்சைத் திரிபு.]

எழுகுவெட்டிரும்பு *eḻugu-veṭṭirumbu*, பெ. (n.) *எஃகு வெட்டிரும்பு* பார்க்க; see *ekkuveṭṭirumbu*.

[எஃகு → எய்கு → எழுகு + வெட்டு + இரும்பு.]

எழுகூற்றிருக்கை *eḻu-kūṟṟirukkai*, பெ. (n.) *ஒன்றுமுதல் ஏழுவரையும் எண்கள் முறையே ஒவ்வொன்றாக ஏறியும் இறங்கியும் வருமாறு கூறப்படும் மிறைக்கவி வகை.* (மாறன.297-299); verse in the composition of which the numerals one to seven occur first in the ascending order and then in the descending order.

[எழு + கூறு + இருக்கை.]

எழுச்சி¹ *eḻucci*, பெ. (n.) 1. *எழுகை;* rising, ascent, elevation. "தண்பிறை யெழுச்சிகண்ட சலநிதி யெனவே" (பாரத.சம்பவ.69). 2. *புறப்பாடு;* starting, as of an idol, in procession. "அரன தெழுச்சிக்கு" (கோயிற்பு.திருவிழா.41). 3. *பள்ளி யெழுச்சிப்பாட்டு;* song sung at dawn to rouse from sleep. "படரிருட் கழித் தெழுச்சி பாடுவார்கள்" (சேதுபு.முத்தீர்த்த.37). 4. *தோற்றம்;* origin, birth, appearance. "மீண்டெழுச்சி வியனிலத் தில்லையால்" (சேதுபு.சேதச.52). 5. *தொடக்கம்;* beginning. "இறுமுறை யெழுச்சியி னெய்துவதெல்லாம்" (சீவக.333). 6. *காதுநோய்வகை;* inflammation of the ear, otitis, esp., Meatus, auditorius, externus. 7. *எழுச்சிக் கண்நோய்* (வின்.) பார்க்க; see *eḻucci-k-kaṇṇōy*. 8. *முயற்சி;* effort, activity.

ம. எழிச்சி; க. எழிகெ, எழ்கெ; து. எர்கெ, எர்கெலு.

[எழு → எழுச்சி.]

எழுச்சி² *eḻucci*, பெ. (n.) *தோற்றப்பொலிவு;* physical charm.

[எழு → எழுச்சி.]

எழுச்சிக்கண்நோய் *eḻucci-k-kaṇṇōy*, பெ. (n.) *கண் கூச்ச முண்டாக்கும் நோய்.* (இங்.வை.362); inflammation of the eyes causing sensitiveness to light (செ.அக.).

[எழுச்சி + கண் + நோய்.]

எழுச்சிகொட்டு-தல் *eḻucci-koṭṭu-*, 5.செ.கு.வி. (v.i.) *புறப்பாட்டுக்குரிய இசைக் கருவிகளை முழக்குதல்;* to sound the appropriate musical instruments to herald the starting, as of an idol or a king in procession. "வருகிறாரென்று எழுச்சி கொட்டா திருக்க" (திவ்.திருநெடுந்.21,வியா.பக்.182).

[எழுச்சி + கொட்டு-தல்.]

எழுச்சிபாடுவான் *eḻucci-pāḍuvāṉ*, பெ. (n.) *திருப் பள்ளி யெழுச்சி பாடுவோன்;* one who sings at dawn to awaken a prince, or any great personage. "எழுச்சிபாடுவார்கள் பாடல்கேட்டு" (சேதுபு.முத்தீர்த்த.37).

[எழுச்சி + பாடு + ஆன்.]

எழுச்சிமுரசம் *eḻucci-murašam*, பெ. (n.) 1. *பள்ளியெழுச்சி முரசம்;* drum beaten at dawn to awaken a king or commandant or to rouse a garrison. 2. *புறப் பாட்டு முரசம்;* drum beaten just before the starting of the procession of an idol.

[எழுச்சி + முரசம்.]

எழுஞாயிறு *eḻu-ñāyiṟu*, பெ. (n.) 1. *ஞாயிறு புறப்பாடு;* rising sun. 2. *ஞாயிறு தோன்றும்போது உண்டாகி மறையும் வரையுமுள்ள தலைநோய்* (சீவரட்.); headache which begins at sunrise and continues till sunset (செ.அக.).

[எழு + ஞாயிறு.]

எழுத்தச்சன் *eḻuttaccaṉ*, பெ. (n.) *மலையாள மொழியின் எழுத்தை யுருவாக்கிய புலவர்;* poet who designed the script for Malayalam language.

[எழுத்து + அச்சன் - எழுத்தச்சன். அத்தன் → அச்சன்.]

எழுத்தச்சு *eḻuttaccu-*, பெ. (n.) *அச்சிட உதவும் எழுத்தமைந்த உரு* (இராட்.); letter-type.

எழுத்தடை-த்தல் *eḻuttaḍai-,* 4.செ.குன்றாவி. (v.t.) *மந்திரங்களின் எழுத்துகளை அவ்வவற்றிற்குரிய சக்கரங்களி னறைக்குட் பொருந்த எழுதுதல்;* to enclose the letters of a mantra or stanza within a diagram.

[எழுத்து + அடை.]

எழுத்ததிகாரம் *eḻuttadigāram,* பெ. (n.) (இலக்.) *எழுத்திலக்கணம் கூறும் பகுதி;* orthography. (செ.அக.).

[எழுத்து + அதிகாரம்.]

எழுத்தந்தாதி *eḻuttandādi,* பெ. (n.) *எழுத்தீறு தொடங்கி* பார்க்க; see *eḻuttīṟu-toḍaṅgi.*

எழுத்தம்மை *eḻuttammai,* பெ. (n.) *ஆசிரியை, எழுத்து கற்பிக்கும் பெண்;* woman-teacher. (சேரநா.).

ம. எழுத்தம்ம.

[எழுத்து + அம்மை - எழுத்தம்மை.]

எழுத்தலிசை *eḻuttal-išai,* பெ. (n.) *எழுத்தோசையாகாத இருமல், தும்மல் முதலியவை;* sounds not reducible to writing as a cough, sneeze, etc.; inarticulate sounds. "எழுத்த லிசையினை" (இலக்.வி.755).

[எழுத்து + அல் + இசை. எழுத்தலிசை. 'அல்' எ.ம.இ.நி.]

எழுத்தறிவு *eḻuttaṟivu,* பெ. (n.) *எழுதவும் படிக்கவும் பழகும் பயிற்சி* (வின்.); art of reading and writing.

[எழுத்து + அறிவு.]

எழுத்தன் *eḻuttaṉ,* பெ. (n.) *எழுதுபவன், எழுத்துக்காரன்;* writer, scribe. (சேரநா.).

ம. எழுத்தன்.

[எழுத்து + அன் - எழுத்தன்.]

எழுத்தாணி *eḻuttāṇi,* பெ. (n.) 1. *ஓலையிலெழுதுதற்குரிய இருப்பாணி;* stylus for writing on palmyra leaf. "அங்கூரெழுத்தாணி தன்கோடாக" (பாரத.தற்சிறப்புப்.1). 2. *எழுத்தாணி போன்ற பூவுள்ள ஒருவகைப் பூண்டு* (பதார்த்த.312); style plant, having a style-like flower.

ம. எழுத்தாணி.

[எழுத்து + ஆணி.]

எழுத்தாணிக்கள்ளன் *eḻuttāṇi-k-kaḷḷaṉ,* பெ. (n.) *கள்ளக் கணக்கு எழுதுவோன்;* one who fabricates accounts. "எழுத்தாணிக்கள்ளர் பிரட்டெல்லா முன்காரணமே" (சரவண.பணவிடு.160).

[எழுத்தாணி + கள்ளன்.]

எழுத்தாணிக்குருவி *eḻuttāṇi-k-kuruvi,* பெ. (n.) *மரங்கொத்திக் குருவி* (இ.வ.); wood-pecker.

[எழுத்தாணி + குருவி.]



எழுத்தாணிக்குருவி

எழுத்தாளன் *eḻuttāḷaṉ,* பெ. (n.) 1. *புலவன்;* scholar, savant. மதுரை எழுத்தாளன் சேந்தம்பூதனார் (குறுந்.90, குறிப்பு). 2. *எழுதுவோன்* (வின்.); writer, clerk. 3. *தமிழில் இலக்கியப் படைப்புகளை இயற்றுபவன்;* creative writer.

ம. எழுத்தாசானி.

[எழுத்து + ஆளன் - எழுத்தாளன் (மொழித்திறம் கைவரப் பெற்றதால் எழுத்தாளும் உரம் பெற்றவன்).]

எழுத்தானந்தம் *eḻuttāṉandam,* பெ. (n.) *பாடப்படுவோன் பெயரைச் சார்த்தி எழுத்தளபெழப் பாடுவதாகிய செய்யுட் குற்றம்* (யாப்.வி.96,பக்.518); (Pros.) use of aḷabeḍai in the name of a hero, believed to portend evil; a fault in versification.

[எழுத்து + ஆனந்தம் (குற்றம்).]

எழுத்திடு-தல் *eḻuttiḍu-,* 20.செ.கு.வி. (v.i.) *கைச்சாத்திடுதல்;* to put one's signature. "எழுத்திட்டுத் தாருங்கோள்" (ஈடு.5,10,4).

[எழுத்து + இடு.]

எழுத்தியல் *eḻuttiyal,* பெ. (n.) *எழுத்தினகத் திலக்கணத்தைக் கூறும் பகுதி;* section of orthography which treats about the sounds of speech, their classification etc.

[எழுத்து + இயல்.]

எழுத்திலக்கணம் *eḻuttilakkaṇam,* பெ. (n.) *எழுத்தின் இலக்கணம் கூறும் பகுதி;* section of the traditional grammar dealing with the alphabets. "எழுத்திலக்கணத் துச் சந்தியொடு" (தண்டி.114).

[எழுத்து + இலக்கணம்.]

எழுத்திலாவோசை *eḻuttilā-v-ōšai,* பெ. (n.) *எழுத்தலிசை* (திவா.) பார்க்க; see *eḻuttališai.*

[எழுத்து + இலா + ஓசை.]

எழுத்தின்கிழத்தி *eḻuttiṉ-kiḻatti,* பெ. (n.) ***கலைமகள்*** (பிங்.); Sarasvati the goddess of letters.

[எழுத்து + இன் + கிழத்தி.]

எழுத்தீறுதொடங்கி *eḻuttīṟu-toḍaṅgi,* பெ. (n.) ***செய்யுளில் ஓரடியின் ஈற்றெழுத்து அடுத்த அடியின் முதலெழுத்தாக வரத்தொடுப்பது*** (யாப்.வி.52); concatenation in the letter at the end of a line of verse begins the next line.

[எழுத்து + ஈறு + தொடங்கி. வடமொழியாளர் இதனை எழுத்தந்தாதி என்பர்.]

எழுத்து¹ *eḻuttu,* பெ. (n.) 1. ***ஓவியம்;*** painting, picture, drawing. ''இன்னபல பல வெழுத்து நிலை மண்டபம்'' (பரிபா.19,53). 2. ***ஓவிய வடிவில் எழுதப்பட்ட உருவெழுத்து;*** pictograph. 3. ***ஒருகோட்டு ஓவியமாக எழுதிச் சுருக்கப்பட்ட அசையெழுத்து;*** syllabic type of writing known as logo-syllabic and morpho-syllabic.

[இழு → இழுது → எழுது → எழுத்து. எழுதுதல் = ஓவியம் வரைதல். எழுத்து² பார்க்க; see eḻuttu.²]

எழுத்து² *eḻuttu,* பெ. (n.) 1. ***சொல்லின் அகவுறுப்பாகிய ஒலியனைக் கட்புலனாக வரைந்து காட்டும் வரிவடிவம்;*** letter, character representing phoneme or basic sound used in speech. ''எழுத்துப் பிரிந்திசைத்தல்'' (தொல்.சொல்.201). 2. ***மொழியின் வண்ண மாலைக்குரிய குறுங்கணக்கு எனப்படும் முதலெழுத்துகள் அல்லது நெடுங்கணக்கு எனப்படும் மொத்த எழுத்துகளின் வரிவடிவத் தொகுப்பு;*** alphabet, set of letters used in a language. ''எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி'' (தொல்.எழுத்.பாயி.5).

[இழு → எழு → எழுது → எழுத்து. எழுது - ஓவியம் வரைதல். இழு - கோடிழுத்தல். எழுத்து - படவெழுத்து, அசையெழுத்து, முதலெழுத்து போன்றன வரைதல்.]

எழுத்துகளை முத்திரைகளாகச் செய்து பதித்த காலத்தில் எழுது என்னும் சொல்லுக்கு அழுந்துதல், அழுத்துதல் பொருள்கள் தோன்றின. அழுந்துதல் - ''இருவர் நெற்றியு மெழுதின சிலகணை'' (பாரத.13,89) அழுத்துதல் - ''தொழுது தாளினைச் செய்யபஞ் செழுதினும்'' (பாரத.சம்பவ.8).

முந்து தமிழின் தொடக்கக் காலத்தில் படவெழுத்தும் (pictographic) அதனினின்றும் தலைக்கழகக் காலத்திய அசையெழுத்தும் (syllabic) அதனினின்றும் இரண்டாம் தமிழ்க்கழக இறுதிக்காலத்தில் முப்பது முதலெழுத்துகளாகிய மூலத்தமிழ் அகரநிரற்குறியீட்டு எழுத்துகளும் தோன்றியனவாகக் கொள்ளலாம்.

எழுத்துக்குள் உருவங்கள்:

உலகில் பேசப்படும் சற்றொப்ப 3000 மொழிகளுள் 198 மொழிகளே வரிவடிவங்கள் கொண்டுள்ளன. வரிவடிவங்கள் அனைத்தும் படவெழுத்துகளிலிருந்து உருவானவை. தமிழில் படவெழுத்துகள் இருந்தன என்பதற்கும், அவையே கருத்தெழுத்தாகவும் அசையெழுத்தாகவும் இன்றைய வரியெழுத்தாகவும் வளர்ந்தன என்பதற்கும், இலக்கணச் சான்றுகளும் கல்வெட்டுச் சான்றுகளும் கிடைத்துள்ளன.

எழுத்துகளையும் உருவங்களையும் புடைப்புச் சிற்ப வடிவில் செதுக்கி (பள்ளமும் மேடுமாக) எழுதுவதற்குப் பயன்பட்ட மாவுக்கல்லுக்கு 'எழுதுகல்' என்றே பழங்காலத்தில் பெயரிருந்தது. சிந்துவெளி முத்திரைகள் பெரும்பாலும் மாவுக்கல்லால் செய்யப்பட்டவை.

தமிழ், தொடக்க காலத்தில் சீனம் எகுபது மொழிகளைப் போல் படவெழுத்துகளில் எழுதப்பட்டது என்பதற்கு 'எழுத்து' என்னும் சொல்லே சான்றாகின்றது. 'எழுதுதல்' பழங்காலத்தில் ஓவியம் வரைதலையே குறித்தது.

'கடவுள் எழுதவோர் கல்தாராளெனின்' என்னும் சிலப்பதிகார வரியில்'எழுதுதல்' ஓவியம் வரைதலையே குறித்தது. ஓவியந்தீட்டிய மண்டபம் 'எழுத்துநிலை மண்டபம்' எனப்பட்டது. பாறை, சுவர், துணி ஆகியவற்றின் மீது ஓவியம் வரைந்த கோலெழுத்துக் காலம் முந்தியது. உருவங்களைச் செதுக்கியும் கீறியும் வரைந்த கண்ணெழுத்துக் காலம் பிந்தியது. சிந்துவெளி நாகரிக அழிபாடுகளில் கண்ணெழுத்துகள் கிடைக்கின்றன. ஓவிய உருவெழுத்துகள் கிடைக்கவில்லை. பன்னிரண்டு உருவங்கள் மட்டும் படவெழுத்து முறையின் எச்சங்களாகச் சிந்துவெளி எழுத்துகளில் நிலைத்துள்ளன. இதிலிருந்து சிந்துவெளி நாகரிகக் காலத்துக்கு முன்பே தமிழில் படவெழுத்து முறை தோன்றி நிலவியது என அறியலாம்.

படங்களாக வரையப்பட்ட உருவ வடிவங்களே பிற்காலத்தில் எழுத்து வடிவங்களாக மாறியுள்ளன. இதன் வண்ணம், உலகில் எம் மொழி எழுத்தாயினும் ஒவ்வோர் எழுத்தும் ஓர் உருவத்தின் படத்தை உள்ளடக்கியிருக்கிறது. அந்த உருவம் கண்ணுக்குப் புலப்படும் நிலைத்திணை, இயங்குதிணைப் பொருள்களில் ஒன்றாயிருக்கும். செமித்திய மொழியில் எழுத்துகளின் பெயர்கள் உயிரிகள் அல்லது பொருள்களின் பெயர்களாகவே அமைந்திருப்பது இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. அம்மொழியில் 'B' என்னும் வடிவம் வீட்டைக் குறிக்கும். வீட்டின் வடிவமாக அமைந்திருக்கும் எழுத்தும், வீடு (Beth beta) என்றே பெயரிடப்பட்டுள்ளது. கிரேக்கரும் செமித்தியரிடமிருந்து இதனைக் கடனாகப் பெற்றனர். இது மேலையாரிய மொழிகளில் 'பி' (B) எனக் குறுகியது. 'A' என்னும் ஆங்கிலவெழுத்து மாட்டின் தலையையும் கொம்பையும் குறிப்பது 'L' என்னும் ஒலிப்புக்குரிய 'எகுபதிய' எழுத்து முன்னாளில் 'படுத்திருக்கும் அரிமா' (Lion) வடிவமாக எழுதப்பட்டதும். எகுபதிய மொழியில் இதற்கு 'லியோ' என்று பெயர்.

பழந்தமிழிலும் எகுபதிய மொழியிலும் வல்லூறு (Falcon) வடிவமே அகர ஒலிப்பினைக் குறிப்பதாக இருந்தது. எகுபதிய மொழியில் இதற்கு 'ஆசோம்' என்று பெயர். எகுபதியர் 'நான்' எனப்பொருள்படும் சொல்லுக்கு மாந்தரின் இருகால் வடிவத்தைக் குறியீடாகக் குறித்தனர். சிந்துவெளி எழுத்து முறையில் இருகால் (ll) வடிவம் 'நான்' என்னும் பொருளிலிருந்து பிறகு 'ந' என்னும் ஓசைக்குரிய அசையெழுத்துக் குறியீடாகி விட்டது. பின்னாளில் அது ஐரோப்பிய மொழிகளில் l என்ற எழுத்தாக மாறிவிட்டது. எகுபதியர், பொனீசியர், கிரேக்கர் ஆகிய மூவரும் 'D' என்ற எழுத்தை வீட்டின் கதவு வடிவமாக எழுதினர். தேனைக்குறிக்கும் 'Honey' என்னும் சொல்லின் முன்னெழுத்தான 'H' முதலில் தேன் கூட்டின் வடிவமாகவும், பின்னர் 'H' என்றும் எழுதப்பட்டது.

'M' என்னும் எழுத்து தொடக்கக் காலத்தில் ஆந்தையின் தலைவடிவாக எழுதப்பட்டது. செமித்தியர், நீரின் அலை வடிவில் 'M' எழுத்தையும் மீன் வடிவத்தில் 'N' எழுத்தையும் எழுதினர். ஏனெனில் அம்மொழியில் 'மேம்' தண்ணீரையும், 'நூன்' மீனையும் குறித்தன. செமித்திய மொழியில் 'பே' வாய் எனப்பொருள்பட்டதால் 'P' எழுத்து வடிவம் வாயின் படமாக வரையப்பட்டது. பொனீசியர், எகுபதியர், கிரேக்கர் ஆகிய மூவரும் ஊசியின் துளை வடிவில் 'q' என்னும் எழுத்தை எழுதினர் 'U' என்பது இலத்தீன் மொழியின் 'V' சேர்ந்து 'W' ஆயிற்று. இது எகுபதிய மொழியில் 'பறவைக் குஞ்சின்' வடிவமாக எழுதப்பட்டது.

ஐரோப்பிய மொழிகள் கிரேக்கச் சொற்களைக் கடன் வாங்கிய பொழுது கிரேக்கத்தின் வாயிலாகச் செமித்திய எகுபதிய படவெழுத்துக்களின் சுருக்கமாகிய எழுத்தின் வரிவடிவங்கள் மேலையாரிய மொழிகளில் இடம்பெற்றன.

சீனர் இதுகாறும் படவெழுத்துகளைப் பின்பற்றுகின்றனர். உலகப்பெருமொழிகளில் உள்ள அடிப்படைச் சொற்களின் எண்ணிக்கையை விட, சீன மொழியில் சொற்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் படவெழுத்துகளின் எண்ணிக்கை மிகுதியாக இருக்கிறது. 40,000 படவெழுத்துகளைக் கொண்ட சீன மொழி, சிந்துவெளித் தமிழைப்போல் அசையெழுத்து நிலையை யெய்தாததால், வரியெழுத்தாக வளர முடியவில்லை. ஆயின், தமிழ் மொழி எழுத்து வடிவின் நான்கு நிலைகளையும் படிப்படியாக வளர்த்துக்கொண்டிருக்கிறது.

தமிழின் உருவெழுத்து நிலை:

தமிழின் அனைத்து ஒலிப்புகளுக்கும் கூடாகவிருந்த உருவங்கள் சிந்துவெளி எழுத்துகளால் புலனாகின்றன. சிந்துவெளி எழுத்தில் 12 உருவெழுத்துகள் உருவங்களையே தெளிவாகக் காட்டுகின்றன. ஏனையவை அவற்றுக்குரிய உரு வடிவமைப்பை உள்ளடக்கிய வரிவடிவங்களாக உள்ளன.

சிந்துவெளி எழுத்தில் அகரம் ஆணின் வடிவமாகவும், வல்லூறு என்னும் பறவை வடிவமாகவும் பிறகு வல்லூற்றின் இரு சிறகுகள் மட்டும் குறிப்பாகப் புலனாகும் வகையில் மேற்கோள் குறிபோன்றும் எழுதப்பட்டது. 'ஆகார' வடிவம் மாட்டின் தலையாகவும், 'இ' கரம் ஆந்தையின் வடிவமாகவும், ஈகாரம் வண்டு, ஈ, தேனீ ஆகியவற்றின் வடிவமாகவும் 'உகரம்' காக்கையின் வடிவமாகவும், தளிரின் வடிவமாகவும் எழுதப்பட்டன என்று கருத இடந்தருகின்றது. எகரம் கோழியின் வடிவமாகவும், ஏணியின் வடிவமாகவும் 'ஏகாரம்' மான் அல்லது அம்பின் வடிவமாகவும் 'ஐ' கையின் வடிவமாகவும் 'ஒகரம்' மயிலின் வடிவமாகவும் மயில் தோகையின் வடிவமாகவும் 'ஓகாரம்' யாழின் வடிவமாகவும் எழுதப்பட்டிருக்கலாம். ஐந்து குறில் எழுத்துகளும் ஐம்பறவைகளைக் (பஞ்சபட்சி) குறிப்பது உருவ எழுத்துகளைக் குறிப்பனவாகக் கருத இடந்தருகிறது.

தொன்முது தமிழில் 'க' கரம் கலயத்தின் வடிவமாகவும் 'சகரம்' சேல் மீனின் வடிவமாகவும் 'டகரம்' சதுர அல்லது நீள்சதுரத் துணியின் வடிவமாகவும் 'தகரம்' மழைத்தாரையின் வடிவமாகவும் ண, ன, ந, ஆகியன நாற்கால் விலங்கு, நான்கு கால்கள், நாய், நான் என்பவற்றின் குறியீடாகிய மாந்தனின் கால் அல்லது இருகோடுகள், தேன்கூடு போன்ற பலவடிவங்களாக இடந்தோறும் வேறுபடும் பாங்கினைக் கொண்டிருந்தன.

'பகரம்' கவித்து வைத்த மட்பாண்ட வடிவமாகவும் மகரம் மலை, மயில், ஆகியவற்றின் வடிவமாகவும் 'யகரம்' யா மரத்தின் வடிவமாகவும், 'லகரம்', 'செல்' (கறையான்) வடிவமாகவும் 'ழகரம்' தலைபருத்த புழுவின் வடிவமாகவும் 'ளகரம்' சுரடியின் (உளியம்) வடிவமாகவும், தோலால் செய்த நீர்ப்பையின் வடிவமாகவும் 'றகரம்' ஆற்றின் வடிவமாகவும் எழுதப்பட்டன என்பதற்கு வரலாற்றுப்படிமுறைக்கு ஒத்த உருத்திரிபுகள் சான்றாகின்றன. மேற்கண்ட உருவங்களைச் சிந்துவெளி எழுத்துகளுடன் ஒப்பிட்டுக் காண்போர்க்கு இவ்வுண்மை தெற்றெனப் புலப்படும்.

தமிழி (தமிழ்பிராமி) - தமிழ்ப் புலவர்களின் படைப்பு:

தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே தமிழ் எழுத்துகள் உயிரும் உடம்புமாக முப்பது என்று வரையறை செய்யப்பட்டன. இது யாரால் வரையறுக்கப்பட்டது, எக்காலத்தில் இது நிகழ்ந்தது, எங்கே முதன்முதல் செயற்பாடுற்றது என்னும் வினாக்களுக்கு விடைகாண்பது இன்றியமையாதது ஆகும்.

தொல்காப்பியர் தம் இலக்கண நூலை நூன்மரபு எனத் தொடங்கி மரபியலில் முடித்திருக்கிறார். ''என்மனார், என்மனார் புலவர்'' என்னும் கூற்றுகள் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளதால் தொல்காப்பியருக்கு வெகுகாலத்துக்கு முன்பே புலவர் பெருமக்கள் எழுத்துகளை உயிரெழுத்து மெய்யெழுத்து என வகைப்படுத்தியமை தெளிவாகிறது. தமிழ் எழுத்துகளைச் சீர்திருத்தி முப்பதாக்கியவர்கள் தமிழ்ப்புலவர்களே என்பதைத் தொல்காப்பியத்தால் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது.

தொல்காப்பியர் காலத்திய தமிழ் எழுத்துக்கு இக்காலத்தார் தமிழி என்று பெயரிட்டுள்ளனர்.

இதனை வடபுலத்தார் 'பிராமி' என்றனர்.

'பிரம்மம்' என்னும் சொல்லிலிருந்து 'பிராமி' என்னும் சொல் தோன்றியது. இதற்கு முதலாவது, தலைமையானது, அடிப்படையானது, மூலமானது, சிறந்தது என்று பொருள். பிரம முகூர்த்தம், பிரம குலம் (முதற்சாதி - பார்ப்பனச்சாதி), பிரமசரியம் (முதல் ஒழுகலாறு, பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சன்னியாசம் என்னும் நான்கு நிலைகளுள் முதல் ஆசிரமத்தைப் பின்பற்றுதல்) என்னும் சொற்களை நோக்குக.

பிராமி - முதலில் தோன்றிய எழுத்து என்பதே இதன் சரியான வேர்வழிப் பொருள். புலவர்களின் எழுத்து என்றிதனைக் கூறுவது வரலாற்றுப்பொருள். வரலாற்று ஆய்வாளரும் கல்வெட்டு வல்லுநருமான அறிஞர் பலர் Indian Paleography என்னும் நூலில் பிராமி என்பதற்குப் புலவர் எழுத்து என விளக்கம் தந்திருக்கின்றனர். இதிலிருந்து பிராமி எனப்படும் தமிழி எழுத்து தமிழ்க் கழகத்துப் புலவர்களால் புதிதாகத் திருத்தியமைக்கப்பட்டது எனத் தெரிகிறது. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியில் பிராமி என்பதற்கு சமற்கிருதத்திற்கு அமைக்கப்பட்ட எழுத்து எனத் தரப்பட்டுள்ள விளக்கம் முற்றிலும் தவறானது. சமற்கிருதம் எழுதப்படாத மொழி, அதை முதன் முதலில் எழுதத் தொடங்கியபோது தமிழ் மொழியினமைப்பை முற்றிலும் நோக்கி உயிரெழுத்து மெய்யெழுத்து என வகைப்படுத்திக் கொண்டனர். மேலையாரிய மொழிகளில் இத்தகைய வகைப்பாடு இல்லை.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகர் கல்வெட்டுகளில் காணப்பட்ட எழுத்துக்கு நாளடைவில், பிராமி எனப் பெயரிட்டனர். இது முற்றிலும் தமிழுக்குரிய எழுத்து வடிவம் என்று அவர்களுக்குத் தெரியாது. பிராமி எழுத்து தமிழ், பிராகிருதம், பாலி ஆகிய மூன்று மொழிகளை எழுதுவதற்கு அக்காலத்தில் பயன்பட்ட பொது எழுத்து எனினும் இது தமிழுக்கென்றே அமைந்த மூல வரிவடிவம். பிராமி எழுத்தில் அமைந்த கல்வெட்டுகள் அசோகர் காலத்துக்கும் முன்னதாகத் தமிழகத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

பட்டிப்புரோலு அழகர்மலை, கொங்கர் புளியங்குளம் போன்ற இடங்களில் கி.மு. நான்காம், ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த பிராமி கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவற்றிற்குத் 'தமிழி எழுத்துகள்' எனப்பெயரிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் கிடைத்துள்ள கல்வெட்டுகளில் மிகவும் பழமையானவை தமிழ்நாட்டில் கிடைத்துள்ள பிராமி கல்வெட்டுகளே. இந்தியா முழுமைக்கும் ஒரே எழுத்து வடிவமாகக் கையாளப்பட்டது, பிராமி ஒன்றே. அது தெற்கிலிருந்து வடக்குப் பகுதிகளுக்குப் பரவியுள்ளது என்று உறுதிப்படுகிறது. பாலி பிராகிருத மொழிகள் வேறு எழுத்து அமைத்துக் கொள்ளவில்லை. சமற்கிருத மொழியினரும் வேறு வழியின்றி இதனையே எழுத்து வடிவாகக்கொள்ள நேர்ந்தது. வருக்க எழுத்துக்களை மட்டும் புதிதாகச் சேர்த்துக் கொண்டனர்.

இந்தியா முழுவதும் ஒரே எழுத்து வடிவமாகத் திகழ்ந்த இந்த எழுத்துவடிவத்தை 'பிராமி' என்று சொல்லாமல், 'தமிழ் எழுத்து' என்று சொல்வதே முறையானது என்று தொல்பொருள் ஆய்வுத்துறையில் ஓய்வு பெற்ற அதிகாரியும் தொல்லெழுத்து ஆய்வில் வல்லுநருமான அறிஞர் சீனிவாசன் வெளிப்படத் தெரிவித்துள்ளார்.

கி.மு. முதலிரு நூற்றாண்டுகளில் வாழ்ந்த சாதவாகன அரசர்களுள் வசிட்டி மகன் சதகன்னி வெளியிட்ட இருமொழி நாணயத்தில் ஒரு பக்கத்தில் தமிழிலும் மறுபக்கத்தில் பிராகிருத மொழியிலும் அவன் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இருமொழிக்கும் பிராமி எழுத்து வடிவம் ஒன்றாகவே உள்ளது. மௌரிய மன்னர்களுக்கு முன்பு மகத நாடாண்ட நந்தர் வெளியிட்ட காசுகளில் சிந்துவெளி எழுத்துகளில் நந்தன் எனப்பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு அருகில் நடந்த அகழ்வாய்வில் பேராசிரியர் இந்திரபாலர் கண்டெடுத்த முத்திரையொன்றில் 'தீவு கோ' என்னும் பெயர் மேலே சிந்துவெளி எழுத்திலும் கீழே பிராமி எழுத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மூன்று சான்றுகளிலிருந்து சிந்துவெளி எழுத்துக்குப் பிறகு பிராமி தோன்றியது என்பதும் ஈழத்தில் இருவகை எழுத்தும் (பழைய சிந்துவெளி எழுத்தும் புதிய தமிழி [பிராமி] எழுத்தும்) ஒரே காலத்தில் புழக்கத்தில் இருந்தன என்பதும் வெளிப்படுகின்றன. சிந்துவெளி எழுத்திலிருந்து பிராமி எழுத்து வளர்ந்திருக்கிறது என்பதை அறிஞர் பலரும் ஒப்புக்கொள்கின்றனர்.

பழைய சிந்துவெளி எழுத்து முறை உருவெழுத்திலிருந்து சுருக்கப் பெற்ற அசையெழுத்து. இது பொதுமக்களே கண்டறிந்த எழுத்து. இதனைத் திருத்தியமைக்கும் எண்ணம் கற்றவர்களிடையில்தான் தோன்றமுடியும். அதனையும் கல்வியில் சிறந்த புலவர் குழுவே செய்திருக்க முடியும். பாலி பிராகிருத மொழிகள் தோன்றுவதற்கு முன் எழுத்து வடிவிலிருந்த ஒரே மொழி தமிழ், தமிழ்ச் சங்கம் மதுரையில் நன்கு இயங்கிய காலத்தில் தமிழ்ப்புலவர்களே தமிழின் எழுத்து வடிவத்தை முப்பதாகத் திருத்திப்படைத்தனர் என்பதற்குப் பின்வரும் தொல்காப்பிய நூற்பாக்கள் சான்றாகின்றன.

> ''மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்''
> (தொல்.எழுத்.15).
> ''எகர ஒகரத் தியற்கையும் அற்றே''
> (தொல்.எழுத்.14).

இந்நூற்பாக்களிலிருந்து முன்பு தலைமேல் புள்ளி பெறாத எழுத்துகளைத் திருத்தியமைத்த பின் புள்ளிபெறலாயின என்று அறிய முடிகிறது. தமிழி எழுத்துகளுக்குத் தாயான சிந்துவெளி அசையெழுத்துகளும் உருவெழுத்துகளும் புள்ளி பெறவில்லை.

சிந்துவெளி அசையெழுத்தில் மெய்யெழுத்துக்கு என்று தனிக் குறியீடு இல்லை. உயிர்மெய்யெழுத்துக்கான ஒரே குறியீடு மெய்யிரட்டித்த மெய்ம்மயக்கத்துக்கும், உயிர்மெய்க்கும், மெய்யெழுத்துக்கும் ஆக மூன்று ஒலிப்புகளுக்கும் பொதுவான அசையெழுத்தாக இருந்தது.

க், க, க்க - இம்மூன்றுக்கும் ஒரே குறியீடு சிந்துவெளி எழுத்தில் காணப்படுகிறது. இதுபோன்றவையே ஏனையவும்.

குறில் நெடிலை மாத்திரை அளவுகோலால் வேறுபடுத்தியதால் முக்குறில்களைத் துணைக்குறியீடு சேர்த்து நெடிலாக்கியது போல எகர ஒகரக்குறியீடுகளை வேறுபடுத்த முடியவில்லை. புதிதாக வகுத்த இலக்கணக் கட்டமைப்பின் வண்ணம் இ + அ - ஏ, உ + அ ஓ என இருவேறு குறில் இணைந்து தனி நெடில்களாகி அதன் பின்னர் அவற்றின் குறிலை எகர ஒகரக் குறில்களாக்கினர் என்னும் கருத்தின் வண்ணம் ஏகாரத்திற்கு 'இஅ' என இரண்டெழுத்தாக எழுதிக் காட்டாமல், 'ஏ' என ஒரே எழுத்தாக எழுதி அதன் தலைமேல் புள்ளியிட்டுக் குறிலாக்குவது (உயர்மெய் மேல் புள்ளியிட்டு $\frac{1}{2}$ மாத்திரை மெய்யெழுத்தாகக் குறைந்தது போல) எளிதாகத் தெரிந்தது.

எழுத்துகளுக்கு $\frac{1}{4}$ மாத்திரை முதல், இரு மாத்திரை வரை அளவு வகுத்த தமிழ்ப்புலவர்கள் இசைத்துறையில் வல்லவராய் இருந்திருத்தல் வேண்டும் என்பதும், பாடல்களுக்குத் தாளம் வகுத்துப் பண்ணமைக்கும் உத்திக்கு உதவும் பொருட்டே எழுத்துகளைக் குறில் நெடில் எனவும், குற்றியலுகரம், குற்றியலிகரம், மகரக் குறுக்கம் எனவும், வல்லினம், மெல்லினம், இடையினம் எனவும் பிரித்தனர் என்பதும் தெரிகிறது.

சிந்துவெளி அசையெழுத்திலிருந்துதான் தமிழ் எழுத்துகள் வடிவமைக்கப்பட்டன என்பதற்குச் சான்றாகத் தமிழ் எழுத்துகளின் வண்ண மாலையில் முதலெழுத்துகள் முப்பதுடன் 216 உயிர்மெய்யெழுத்துகளின் வடிவம் (எழுதும் வேறுபாடு கருதி) செயற்கைத் தேவையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

உயிர்மெய் எழுத்து உண்மையில் எழுத்து என்னும் பெயருக்குப் பொருத்தமானதன்று. உயிர்மெய் எழுத்தை **'அசையெழுத்து'** என்று சொல்ல வேண்டுமேயன்றி எழுத்து எனக் கூறுவது தவறு.

உயிரெழுத்து மெய்யெழுத்து ஆகிய இரண்டே எழுத்து எனப்படும்.

(1) உயிர் (அ,ஆ), மெய் (க்,ங்) - தமிழில் உள்ள முப்பது முதலெழுத்துகள் - Open syllable (வெளிப்படை எழுத்து) - Phoneme.

(2) உயிர்மெய் க,ங - அகத்திணைந்த அசையெழுத்து -Closed syllable.

(3) உயிர் மெய் - இல், உயிர்மெய் மெய் - கல்: புறத்திணைந்த அசையெழுத்து - Compound syllable.

மேற்காட்டப் பெற்ற மூவகை எழுத்தமைதிகளில் முதலாவ தொன்றே எழுத்து எனப்படுவது. இறுதியிரண்டும் செய்யு ளுக்கு உறுப்பாகும் அசைகள், இவற்றை அசையெழுத்து என்றே கூறுதல் வேண்டும். சிந்துவெளி முத்திரைகளில் பயின்றுள்ளவை அனைத்தும் அசையெழுத்துகளே. செய்யு ளுக்கு உறுப்பாகும் அசையெழுத்துகளிலிருந்து முதலெழுத்து களாக வடிவமைத்துள்ளவர்கள் தமிழ்ப் புலவர்களாதலின் தமிழி எழுத்து பிற்கால மக்களால் புலவர் எழுத்து (பிராமி) என்றழைக்கப்பட்டது. வடபுலத்தாரால் முதலில் தோன்றிய எழுத்து என அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழி எழுத்தினை அடிப்படையாகக் கொண்டு சமண முனிவர்களும், பௌத்தர்க ளும் பல்வேறு மொழிகளுக்குப் புதிதாக எழுத்துகளை மாற்றி யமைத்துக் கொடுத்தனர். தேவநாகரி எழுத்தும் இவ்வாறு தோன்றிய புதிய எழுத்தமைதிகளுள் ஒன்றாகும். உயிரெழுத்து வேறுபாடுகளைக் குறிக்கும் அடையாளங்கள் ஏறத்தாழ இந் திய மொழிகளில் ஒரு சீராக அமைந்திருப்பதே இதற்குச் சான்றாகும். தமிழில் அமைந்தவாறே உயிரெழுத்து வேறுபாட் டுக்குறிகள் இந்திய மொழிகளில் அமைந்துள்ளன என்பதைப் பின்வரும் சான்றுகளால் ஒப்பிட்டுத் தெளியலாம்.

1. ஆகார நெடிலுக்கு மெய்யெழுத்தின் வலப்பக்கம் கோடிழுத் தல்.
2. இகர ஒலிப்புக்கு மெய்யெழுத்தின் தலைமேல் வலமாகக் கோடிடல்.
3. உகர ஒலிப்புக்கு மெய்யெழுத்தின் கீழ் அல்லது கீழ் வலத்தில் கோடிடல்.
4. எகர ஒகர ஒலிப்புகளுக்கு மெய்யெழுத்தின் இடது மேலாக அல்லது மேற்புறத்து இடது சாய்வாகக் கோடிழுத்தல்.
5. ஐகார ஔகார வேறுபாடுகளை மெய்யெழுத்தின் இடப்பக் கத்தில் அல்லது மேற்புறத்தில் குறியீட்டுக்கோடுகளால் புலப்படுத்தல்.

மேற்கண்ட உயிரெழுத்து வேறுபாட்டு ஒலிப்புக்குறியீடுகள் மெய்யெழுத்துடன் சேர்த்தெழுதும் முறை, சிந்துவெளி எழுத் துக்காலம் முதற் சிறப்பாகத் தமிழிலும், குறிப்பாக அனைத்து இந்திய மொழிகளிலும் பின்பற்றப்பட்டு வந்திருப்பது புலனாகி றது.

''ஔகார இறுவாய்ப்
பன்னீரெழுத்தும் உயிரென மொழிப'' (தொல்.எழுத்.8)
''னகார இறுவாய்ப்
பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப'' (தொல்.எழுத்.9)

மேற்கண்ட நூற்பாக்களில் 'உயிரென மொழிப' 'மெய்யென மொழிப' எனக் கூறப்பட்டிருப்பதிலிருந்து உயிரென்றும், மெய்யென்றும் வேறுபடுத்தும் இயல்பு அதற்கு முன்பிருந்த சிந்துவெளிக்கால எழுத்தில் அறவே இல்லை என்று தெரிகிறது.

'மெய்யோடியையினும் உயிரியல் திரியா' (தொல்.எழுத்.10) என்று தொல்காப்பியர் கூறுகிறார். இக்கருத்து சிந்துவெளி எழுத்தில் பின்பற்றப்படவில்லை. அவர்கள் மெய்க்கும் உயிர் மெய்க்கும் மெய்ம் மயக்கத்துக்கும் ஒரே எழுத்து வடிவத்தை (அசையெழுத்து)க் கொண்டிருந்தனர். அதிலிருந்து தமிழ்ப் புலவர்கள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பு தமிழ் எழுத்தை உயிர், மெய், உயிர்மெய் எனப்பாகுபடுத்தியதை அறிய முடிகிறது.

தமிழில் முதலெழுத்துகளைச் சீரமைத்தவர்கள் தொல்காப்பியர் காலத்துக்குச் சற்று முந்தியவர்களாக இருந்திருந்தால் அவர்க ளுடைய பெயரைத் தொல்காப்பியர் குறித்திருப்பார். சிந்து வெளி எழுத்தின் இறுதிக்காலம் கி.மு.1750 எனக் கூறப்படுகி றது. தொல்காப்பியரின் காலம் கி.மு. 700. பிராகிருத மொழி வளர்ச்சியடைந்த காலம் கி.மு.1000. தொல்காப்பியர் குறிப்பி டும் வடசொல் என்பது பிராகிருதச் சொல்லே. இதில் பிராகி ருத வடிவமுற்றுத் தமிழில் புகுந்த சமற்கிருதச் சொல்லும் அடங்கும். எனவே கி.மு.1000க்கும் 1750க்கும் இடைப்பட்ட காலத்தில் சற்றொப்பக் கி.மு.1500 ஆண்டளவில் சிந்துவெளி அசையெழுத்திலிருந்து தமிழ் முதலெழுத்துகள் 'தமிழி' வடி வும் பெற்றன எனக் கருத முடிகிறது.

பிராமி எழுத்துக்குத் தமிழர்கள் முன்பே பெயர் வைத்திருந்தார் களா, என்பது அனைவரும் தொடுக்கும் வினா. சிந்துவெளி நாகரிகக் காலத்திலேயே தமிழ் எழுத்துக்குக் கண்ணெழுத்து (சிலம்பு.26:70) என்றும் கோலெழுத்து என்றும் பெயரிட்டிருந் தார்கள். எழுதப்படும் பரப்பில் கீறல் விழாமல் மையில் அல்லது வண்ணத்தில் தோய்த்து, தோல், துணி, ஆகியவற்றின் மீது எழுதுவது கோலெழுத்து, எழுதப்படும் பரப்பில் கீறல் அல்லது பள்ளம் விழுமாறு குழித்து எழுதுவது கண்ணெழுத்து. தமிழைத் தவிர அக்காலத்தில் உள்நாட்டில் வேறெழுத்து முறையின்மையின் இதற்குத் தமிழ் எழுத்து என்று பெயரிட நேரவில்லை. தமிழர்கள் பெயரிடாததால் பிறமொழியாளர் பிராமி எனப் பெயரிட்டு வழங்கினர். தமிழினத்தார்க்குத் தனித்த பெயரில்லாதபோது பிறர் நம்மைத் திராவிடர் என அழைத்தது போன்றது இது. தமிழில் பிறமொழிச் சொல் புகுந்தால் நம் வரலாறே நமக்கு ஐயம் விளைவிக்கும் என்ப தற்கு இது நல்ல சான்றாகும்.

உலகமுழுவதும் முதுபண்டைக் காலத்தில் நிலவிய தொல் லெழுத்துகளைத் (epigraph) தொல்லெழுத்தியலார் ஆறுவ கையாகப் பிரித்து ஆய்கின்றனர்.

1. **படவெழுத்துமுறை:** உருவப்படங்கள் அல்லது பொருள் களின் தெளிவான வெளிப்பாடு



படவெழுத்துமுறை

2. **கருத்தெழுத்து முறை:** பொருளைக் குறித்த உன்னிப்புகள் கருத்தியலுருக்கள் ஆகியவற்றைப் புலப்படுத்தல் - குறியீடு கள் வாயிலாக.
வியப்பு
பெரிய... பெரிய மலை
சிறிய... சிறிய ஆறு
(இரண்டு கால்கள்) நான்



கருத்தெழுத்து முறை

3. **ஒலிகொள்வடிவம்:** ஒலியின் வரைகோட்டுக் குறியீடுகள், இவை மரபு வழிப்பட்ட கருத்துருக்களிலிருந்து பொருள்க ளுக்கு மாற்றாக வழங்கப்பட்ட ஒலிக்குறியீடுகள்; இன் னொரு வகையில் கூறினால் ஓவிய ஒலியெழுத்துப் புதிர். (அ) மீன் - மீனவன் - அரசன், கொடியில் மீன் சின்னம் உடையவன்.

ஓவிய எழுத்துப் புதிர்: (ஆ) சிறப்பும் குறிப்புப் பொருளும் உடைய எழுத்தாக்கம் - புதிய முறையில் விளக்குதல்.



ஓவிய எழுத்துப் புதிர்

4. **சொற்குறியீடுகள்:** முழுச் சொற்களுக்குக் குறியீடுகள் அமைத்தல்.



சொற்குறியீடுகள்

5. **அசைநிலைக் குறியீடுகள்:** சொல்லின் அசைகளோ கூறு களோ குறியீடுகளாகக் காட்டப்பெறல்.



அசைநிலைக் குறியீடுகள்

6. **அகர நிரற் குறியீடுகள்:** சொல்லாக்கத்திற்கு அடிப்படை யான மூல ஒலியன்களைத் தனித்தனியாக எழுதிக் காட்டும் வரி வடிவம் அல்லது அடிப்படை எழுத்துகள். (உயிரெழுத் துகள், மெய்யெழுத்துகள்).



அகர நிரற் குறியீடுகள்

பிராமி என்னும் தமிழி எழுத்து நேர்கோடுகளால் ஆகியது. இதனைச் சற்று வளைத்து எழுதிய வடிவமே வட்டெழுத்தா யிற்று. கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் சமணமுனிவர்களால் இந்தியாவில் பதினெட்டு மொழிகளுக்கும் பதினெட்டு வகை எழுத்துகள் உருப்பெற்றிருந்ததைச் சமவயங்க சுத்த என்னும் சமணநூல் குறிப்பிடுகிறது. கல்வெட்டுகளைத் தொடக்கக் காலத்தில் பிராகிருத சமற்கிருத மொழிகளில் வெளியிட்ட பல்லவர் காலத்திலும் அதற்கடுத்த விசயநகர மன்னர் காலத்தி லும் கிரந்த எழுத்து தோன்றியது. வடசொற்களைத் தமிழில் கலந்து எழுதும் ஒரே நோக்கத்திற்காகக் கிரந்த எழுத்துகள் புகுத்தப்பட்டன, இவை தமிழ்நாட்டில் தோன்றிய எழுத்துக்க ளில் ஆந்திர சாதவாகனவரை யடுத்து ஆட்சிக்கு வந்த இக்குவாகு மன்னர்கள் நாகார்ச்சுனா அமராவதி போன்ற இடங்களில் முதன்முதல் கிரந்த எழுத்தைப் பயன்படுத்தியிருக் கின்றனர். கிரந்த எழுத்து என்பதற்கு நூலில் எழுதப்பட்ட எழுத்து என்று பெயர். இதனைத் தமிழ் மக்கள் பயன்படுத்த வில்லை.

யாப்பருங்கல உரையில் (இறுதி நூற்பா விளக்கத்தில்),

"உருவே உணர்வே ஒலியே தனிமையென
இருவகை எழுத்தும் ஈரிரண் டாகும்"

என்ற உரையாசிரியர் மேற்கோள் காட்டியிருக்கிறார்.

உருவெழுத்து:
காணப்பட்ட உருவம் எல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவில் ஓவியன் கைவினை போல
எழுதப் படுவது உருவெழுத் தாகும்.

உணர்வெழுத்து:
கொண்டவோர் குறியால் கொண்ட வதனை
உண்டென் றுணர்வது உணர்வெழுத்தாகும்.

ஒலியெழுத்து
இசைப்படு புள்ளின் எழாஅல் போலச்
செவிப்புல னாவது ஒலியெழுத் தாகும்

தன்மையெழுத்து
முதற்கா ரணமும் துணைக்கா ரணமும்
துணைக்கா ரணத்தொடு தொடரிய வுணர்வும்
அவற்றொடு புணர்ந்த வகத்தெழு வளியின்
மிடற்றுப் பிறந்திசைப்பது தன்மையெழுத்தே.

நிகண்டாசிரியர்களின் காலத்தில் இந்நால்வகை எழுத்துகள் வடிவு, பெயர், தன்மை, முடிவு எழுத்துகளாகவும் வகைப்படுத் தப்பட்டன.

யாப்பருங்கல விருத்தியுரையில் பதினைந்துவகை எழுத்துகள் குறிப்பிடப்படுகின்றன.

1. **ஆய எழுத்து:** அ,க,ச,ட,த,ப,ய வணிக முத்திரை எழுத்து, ஆயம் - வரிப்பணம்
2. **ஓரை எழுத்து:** அ,ச,ல,வ,ர,ங,ய
3. **நாளெழுத்து:** நளி (கார்த்திகை) முதலிய நாண்மீன் எழுத்துகள்.
4. **தன்மையெழுத்து:** பிறப்பியல்பு (சாதி) குறித்தல்.
5. **நீட்டொலி எழுத்து (தாபம்):** வேதம் ஓதுங்கால் நீட்டிப் படிக்கும் ஒலிக்குறியீடுகள்.
6. **உக்கிரவெழுத்து** (உச்சாடணம்): மந்திரக் குறியீடுகள்.
7. **முத்திறவெழுத்து:** சித்திரம் காருடம் முதலியன.
8. **நால்வகையெழுத்து:** பாகியல் முதலியன. (யானைப்பா கர் ஒலிப்புக் குறியீடு போல்வன)
9. **நாற்கதியெழுத்து:** புத்தேளிர், மாந்தர், அசுரர், நிரயர் (நரகர்) ஆகியோர்க்குரிய குறியீடுகள்.
10. **ஒளியெழுத்து:** கனிமம் (தாது) முதலிய மாழை (உலோ கம்) எழுத்து. பச்சிலை பிழிந்துவிட்ட பின் எழுத்தின் வடிவங்கள் தெளிவாகப் புலப்படும்.
11. **குறிப்பெழுத்து**[1] (சங்கேதம்): குறிப்பால் பொருள்தரு வன கலி முதலியனவும்.
12. **குறிப்பெழுத்து**[2]: குறிப்பால் பொருள்தரும் மாகூடையம் முதலியனவும்.
13. **பதின்மூன்றெழுத்து:** பார்ப்பன வழக்காகிய வடமொ ழிச் சிறப்பெழுத்துக் குறியீடுகள்.
14. **கட்டுரையெழுத்து:** அகரநிரல் எழுத்து, வண்ணமாலை எழுத்து.
15. **வடிவெழுத்து:** வச்சிர முதலியன.

பௌத்தர்களும் கந்தருவ எழுத்து, நாகர் எழுத்து, இயக்கர் எழுத்து, கின்னரர் எழுத்து, கருடர் எழுத்து என ஜவகை எழுத்துகளாகக்குறிப்பிடுகின்றனர். காலப்போக்கில் திரிந்தன வும் பண்டுதொட்டே காக்கப்பட்டவையுமான எழுத்துவகை மைகளை இவை காட்டுகின்றன எனலாம்.

எழுத்து[3] *eluttu,* பெ. (n.) 1. ***எழுதப்பட்ட குறிப்பு;*** written statement. உனக்குப் பணம் கொடுக்க முதலாளி எழுத்து வேண்டும். 2. ***தலையெழுத்து;*** fancied letters on the skull. "எழுத்தை யழுத்து மெழுத் தறியாரே" (திருமந்.2721). 3. ***எழுத்திலக்கணம் மொழியிலக்க ணம்;*** grammar. "எண்ணென்ப வேனை எழுத்தென்ப" (குறள்.392). 4. ***கல்வி;*** letter, science, learning. "எழுத் தெனு மிமையா வுள்ளக்கண் டிறந்திட்டான்" (இரகு.இர குவுற்.37). 5. ***கையெழுத்து;*** signature "சுந்தரமாற னென்றே மருவிய வெழுத்துமிட்டான்" (திருவா லவா.4,27). 6. ***ஆதாரச்சீட்டு;*** bond, written engagement. ஓர் எழுத்துமில்லாமல் பணங்கொடுத்தான். (உ.வ.). 8. ***பெயர்ப்பதிவு;*** entry, enrolment. 9. ***மடல்*** (கடிதம்); letter, written message. (அபி.சிந்.). 10. ***கையிலுள்ள கோடுகள், கைவரி*** (ரேகை); lines in the palm of the hand. "இலமென மலரா னெழுத்துடை யங்கையின்" (பெருங்.வத்தவ.10-107).

ம. எழுத்து; **கோத.** என்தி; குட. எளிதி.

[எழுது → எழுத்து. எழுத்து = எழுதப்படுவது. எழுத்துக் கலையினால் வளர்ந்த கல்வி, கல்விச் செல்வத்தை வழங்கும் மொழியின் கட்டமைப்புக்கான எழுத்திலக்கணம்.]

எழுத்துக்ககப்படு-தல் *eluttukkagappadu-,* 20.செ.கு.வி. (v.i.) ***தீயூழின் பயனை நுகரநேர்தல்;*** to suffer one's fate, as a widow; அவள் எழுத்துக்ககப்பட்டுக் கொண்டாள். (உ.வ.).

[எழுத்து + கு - எழுத்துக்கு + அகப்படு.]

எழுத்துக்காரன் *eluttu-k-kāran,* பெ. (n.) 1. ***நல்லெழுத் துடையோன்;*** chirographer, calligrapher. 2. ***எழுத்தா ளன்;*** writer, scribe, clerk, copyist, amanuensis. 3. ***சித்திரமெழுதுவோன்;*** painter, limner.

ம. எழுத்துக்காரன்.

[எழுத்து + காரன்.]

எழுத்துக்குத்து *eluttu-k-kuttu,* பெ. (n.) *எழுத்துமூலமா னசான்றுரைப்போர்;* written evidence, documentary proof. (Tinn.).

ம. எழுத்து குத்து.

[எழுத்து + குத்து]

எழுத்துக்குற்றம் *eluttu-k-kuṟṟam,* பெ. (n.) 1. *எழுத்தி லக்கணவழு;* orthographical error. 2. *நச்செழுத்துவரப் பாடுங் குற்றம்* (யாழ்.அக.); fault in versification due to the use of inauspicious letters.

[எழுத்து + குற்றம்.]

எழுத்துக்கூட்டு-தல் *eluttu-k-kūṭṭu-,* 5.செ.குன்றாவி. (v.t.) *எழுத்துகளைத் தனித்தனியே ஒலித்துச் சொல் லைக் கூறுதல்;* to spell, as a word; to pronounce in order the individual orthographical units of a word and then pronounce the word as completed, dist. fr. reading the word-unit straight off.

[எழுத்து + கூட்டு.]

எழுத்துச்சாரியை *eluttu-c-cāriyai,* பெ. (n.) 1. *எழுத்துக ளைச் சொல்லுகையிற் சேர்க்கப்படுகின்ற சாரியைச் சொற்கள்;* (Gram.) term used in designating a letter of the alphabet. கரம், காரம், கான். 2. *ஒரெழுத்தாயுள்ள சாரியை;* single letter functioning as euphonic augment. 'கலனே தூணி' (நன்.252,மயிலை.).

[எழுத்து + சாரியை.]

எழுத்துச்சிற்றாடை *eluttu-c-ciṟṟāḍai,* பெ. (n.) *சித்திர வேலைப்பாடமைந்த சிற்றாடை வகை* (திவ்.பெரி யாழ்.1,3,8,வ்யா.பக்.64,அரும்.); embroidered with pictures painted in it.

[எழுத்து + சிற்றாடை.]

எழுத்துச்சீலை *eluttu-c-cīlai,* பெ. (n.) *சித்திரந்தீட்டிய சீலை* (வின்.); chintz, clothe with pictures.

[எழுத்து + சீலை.]

எழுத்துச்சுருக்கம் *eluttu-c-curukkam,* பெ. (n.) *சொல்லி னெழுத்துச் சுருங்குவதற்காக இடையிற் சிறுகோ டிட்டு முதலிறுதி எழுத்துகளை யெழுதுகை* (யாழ். அக.); contraction of words or phrases by the use of hyphens or dots in place of the omitted letters in the middle as இ-ள், (இதன் பொருள்), எ-று (என்றவாறு).

[எழுத்து + சுருக்கம்.]

எழுத்துப்படி-தல் *eluttu-p-paḍi-,* 4.செ.கு.வி. (v.i.) *கையெழுத்து ஒரு நிலைப்படுதல்;* to become settled, as the hand-writing.

[எழுத்து + படி.]

எழுத்துப்பள்ளி *eluttuppaḷḷi,* பெ. (n.) *எழுத்து கற்பிற் கும் பள்ளி;* village-school. (சேரநா.).

ம. எழுத்து பள்ளி.

[எழுத்து + பள்ளி - எழுத்துப்பள்ளி.]

எழுத்துப்பானை *eluttu-p-pāṉai,* பெ. (n.) *பொங்கற் பானையோடு மாப்பிள்ளை வீட்டுக்குப் பெண்வீட் டார் அனுப்புஞ் சித்திரமெழுதிய பானை* (நாஞ்.); painted pot, usually sent by the bride's people to her father-in-law's house along with poṅgaṟpāṉai.

[எழுத்து + பானை - எழுத்துப் பானை. இதனைக் கோலப் பானை என்பர்.]

எழுத்துப்பிழை *eluttu-p-pilai,* பெ. (n.) *எழுத்துக் குற்றம்;* error in lettering, spelling mistake.

[எழுத்து + பிழை.]

எழுத்துப்புடைவை *eluttu-p-puḍavai,* பெ. (n.) *சித்திர மெழுதிய சேலை* (யாழ்.); printed saree, designed with pictures.

[எழுத்து + புடைவை.]

எழுத்துப்புள் *eluttuppuḷ,* பெ. (n.) *உயிரெழுத்துக்குரிய வாகக் கணியத்தில்* (சோதிடத்திற்.) *கூறப்படும் பற வைகள்;* birds representing vowels.

[எழுத்து + புள்.]

எழுத்துப்பெட்டி *eluttu-p-peṭṭi,* பெ. (n.) 1. *அஞ்சற் பெட்டி;* letter box; post box. 2. *எழுதியவைகளை வைக்கும் பெட்டி;* box for keeping letters, documents etc. in. (சேரநா.).

ம. எழுத்துபெட்டி.

[எழுத்து + பெட்டி.]

எழுத்துப்பேறு *eluttuppēṟu,* பெ. (n.) *சொற்புணர்ச்சியில் இடையில் தோன்றும் எழுத்து;* augment occurring in the middle of a word.

[எழுத்து + பேறு - எழுத்துப்பேறு. பெறு → பேறு.]

எழுத்துப்பொருத்தம் *eluttu-p-poruttam,* பெ. (n.) 1. (செய்யுள்) *ஒரு காப்பியத்தின் தொடக்கச் செய்யு ளின் முதன்மொழி ஒற்றெழுத்துட்பட மூன்றைந்து ஏழொன்பதென்னும் எழுத்துகளுள் ஏதேனும் ஒன் றைப் பெற்றுவருவதாகிய செய்யுண் முதன்மொழிப் பொருத்த வகை* (வெண்பாப்.முதன்.4,தலைப்பு); rule of propriety which enjoins that the word commencing a poem should consist of three, five, seven or nine letters including the mute consonants and not of four, six or eight, one of ten ceyyuṇ-mudaṉ-moli-p-poruttam. 2. *பிறந்த நாண்மீனுக்* (நட்சத்திரம்) *குரிய முதலெழுத் தில் தொடங்கப் பெயரிடுதல்* (வின்.); choosing such a name for a child, as begins with one of the letters ascribed in astrology to the nakṣatra under which the child was born.

[எழுத்து + பொருத்தம்.]

எழுத்துமறைவேளை *eluttu-maṟai-vēlai,* பெ. (n.) *மாலைப்போது;* dusk of the evening, which blurs written characters.

[எழுத்து + மறை + வேளை.]

எழுத்துமாலை e*luttumālai,* பெ. (n.) ***கா, காவி, காவிரி போன்று, ஒருபொருள் பயப்பதோர் சொற்கூறி அச் சொல்லோடு ஒரோ ரெழுத்தாகக் கூட்ட வேறு வேறு பொருள் பயக்கும் சித்திரப்பாடல்;*** verse composed with a play on words, a word by gradual addition of letters becoming different words with different meanings as in கம், நகம், கநகம், கோகநகம் or கா, காவி, காவிரி.

[எழுத்து + மாலை - எழுத்துமாலை. இதனை வடநூலார் எழுத்து வருத்தனம் என்பர்.]

எழுத்துவாங்கு-தல் *eluttu-vāṅgu-,* 7.செ.குன்றாவி. (v.i.) 1. ***அடிமையாதற்கு அறிகுறியாக ஆண்டான்பெயரை மார்பிலே யெழுதிக் கொள்ளுதல்;*** to imprint one's lord's name on one's breast, in token of becoming his slave. "தேவசாதியானது எழுத்து வாங்கும்படியாக வாயிற்று, தோளுந் தோண்மாலையுமாய் .... கடைந் தபடி" (ஈடு.1,3,11). 2. ***கையெழுத்து வாங்குதல்;*** to take one's signature or receipt.

[எழுத்து + வாங்கு.]

எழுத்துவாசனை *eluttu-vāšaṉai,* பெ. (n.) ***எழுத்தறிவு*** பார்க்க; see *eluttarivu.*

[எழுத்து + வாசனை.]

எழுத்துவெட்டுதல் *eluttu-veṭṭudal,* பெ. (n.) ***கல், ஏனம்*** (பாத்திரம்) ***முதலியவற்றில் எழுத்துச் செதுக்குகை.*** (C.E.M.); engraving letters in stone, metal plates, domestic utensils etc.

[எழுத்து + வெட்டு.]

எழுத்துவேலை *eluttu-vēlai,* பெ. (n.) 1. ***எழுதுதல்; பெயர்த்தெழுதுதல், படியெடுத்தல் ஆகிய வேலை;*** writing, transcribing, copying as an employment. 2. ***சீலைச்சித்திரத் தொழில்;*** chintz-painting.

[எழுத்து + வேலை.]

எழுத்தூசி *eluttūši,* பெ. (n.) ***எழுத்தாணி*** பார்க்க; see *eluttāṇi.* "மையெழுத் தூசியின்... எழுத்திட்டாள்" (சீவக.1769).

[எழுத்து + ஊசி.]

எழுத்தெண்ணிப்படி-த்தல் *eluttenni-p-padi-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***ஒன்றும்விடாது கற்றல்;*** to study a book so carefully as to obtain a thorough grasp of its contents. தொல்காப்பிய முதலிய நூல்களை எழுத் தெண்ணிப்படித்த சுவாமிநாத மூர்த்தியா! (இலக்.கொத். சரித்.பக்.4).

[எழுத்து + எண்ணி + படி.]

எழுதகம் *eludagam,* பெ. (n.) (கட்ட.) 1. ***சிற்பவேலை வகை;*** cornice work. 2. ***தூணினடிக்கல்;*** ornamental stone base for a pillar. (LOC.).

[எழுது → எழுதகம்.]

எழுதரு-தல் *eludaru-,* 8.செ.கு.வி. (v.i.) ***எழும்புதல்;*** to rise, stand.

[எழு + தரு.]

எழுதாக்கிளவி *eludā-k-kiḷavi,* பெ. (n.) ***திருமறை;*** The Vedas, as unwritten and handed down orally.

[எழுதாத + கிளவி - எழுதாக்கிளவி (எழுதாதசொல், எழுதாத மொழி.]

எழுதாமறை *eludāmaṟai,* பெ. (n.) ***எழுதாக்கிளவி*** பார்க்க; see *eludākkiḷavi.*

[எழுதாத + மறை.]

எழுதிக்கொடு-த்தல் *eludi-k-kodu-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***எழுத்து மூலமாகத் துணை செய்தல்*** (ஆதரவு கொடுத்தல்); to grant in writing, to write and deliver, as a voucher, an agreement a contract. "திருக்கண்களுக் காயிற்று அநந்யார்கமாக எழுதிக்கொடுத்தது" (ஈடு.7,3,3).

[எழுதி + கொடு.]

எழுதிக்கொள்(ளு)-தல் *eludi-k-koḷ-,* 7.செ.குன்றாவி. (v.t.) 1. ***பதிவு செய்தல்;*** to enrol. "புதிதாக வின்னமுநீ சிலசேனை யெடுத்தெழுதிக் கொள்கென்றான்" (திரு விளை.மெய்க்கா.5). 2. ***அடிமையாக்குதல்;*** to make one a bondslave by registration. "இவ்வொப்பனை யழகாலே எழுதிக்கொள்வது அனந்த வைநதேயாதி களை யாயிற்று" (ஈடு.2,3,9). 3. ***எழுத்து மூலமாக விண்ணப்பித்தல்;*** to make a written submission to, petition, a great person.

[எழுதி + கொள்.]

எழுதிவை-த்தல் *eludi-vai-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***பதிவு*** (சாசனம்) ***செய்துவைத்தல்;*** to register, write and keep for a memorandum, write and leave behind for the use of others, as a will.

[எழுதி + வை.]

எழுது[1]-தல் *eludu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***பூசுதல்;*** to gild. "செம்பொனா லெழுதி வேய்ந்த" (தேவா.6,8).

[இழு → எழு → எழுது.]

எழுது[2]-தல் *eludu-,* 10.செ.கு.வி. (v.i.) ***அமுந்திப் பதிதல்;*** to become indented by pressure. "இருவர் நெற்றியு மெழுதின சிலகணை" (பாரத.பதின்மூன்.89).

[இழு → எழு → எழுது.]

எழுது[3]-தல் *eludu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஓவியம் வரைதல்;*** to paint, draw. "எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோல்" (குறள்.1285). 2. ***பாவைமுதலியன செய்வித்தல்;*** to produce by art, to sculpture, as an image. 3. ***எழுத்துவரைதல்;*** to write. 4. ***இயற்றுதல்;*** to write as author, to compose. அவன் ஒரு நூல் எழுதியுள்ளான். 5. ***நெறியேற்படுத்தல்;*** to foreordain,

presdestine as Brahmā by writing on the head. "இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி விட்ட சிவனும்" (தனிப்பா.1,119,1).

ம. எழுதுக; கோத. எள்தி; குட. எளித்.

[இழு → எழு → எழுது.]

எழுதுகல் *eḻudukal,* பெ. (n.) ***பெயர்பொறித்த முத்திரை கள் செய்யப் பயன்பட்ட மாவுக்கல்;*** grey soft stone now used for making domestic utensils - potstone. but originally used for making seals by carving or scratching the surface inscribing proper names in ancient days since Indus civilisation.



எழுதுகல்

[எழுது + கல் - எழுதுகல் = எழுதுவதற்கு அல்லது முத்திரை பதிப்பதற்குப் பயன்பட்ட மாவுக்கல்.]

எழுதுகொடி *eḻudu-koḍi,* பெ. (n.) ***முலைமேல் எழுதுந் தொய்யில்;*** outline of creeping plant drawn in sandal paste on a woman's bosom, as an adornment. முலை மேலே எழுதுகொடியாக எழுதி (சீவக.850,உரை.).

[எழுது + கொடி - எழுதுகொடி = ஓவியமாக வரைந்த கொடி.]

எழுதுகோல் *eḻudu-kōl,* பெ. (n.) 1. ***ஓவியம் வரையும் கோல்*** (திவா.); painter's brush, pencil. 2. ***எழுத்து வரையுங்கோல்*** (பிரபுலிங்.துதி.16); writing reed.

ம. எழுத்து கோல்.

[எழுது + கோல்.]

எழுதுநாணல் *eḻudunāṇal,* பெ. (n.) ***சீவி மைதொட் டெழுதுவதற்குப் பயன்படுத்தப்படும் ஓர் வகை கொறுக்கை, நாணல்;*** pen grass or pen reed which grows to 6-10 ft. high and smooth and erect.

[எழுது + நாணல்.]

எழுதுபடம் *eḻudu-paḍam,* பெ. (n.) ***திரையோவியம்;*** picture, painting on a canvas, paper or board. (செ.அக.).

[எழுது + படம்.]

எழுதுபொருள் *eḻuduporuḷ,* பெ. (n.) ***எழுதுவதற்குப் பயன்படும் பொருள்கள்;*** writing-materials, stationery.

[எழுது + பொருள்.]

எழுதுவரிக்கோலம் *eḻudu-vari-k-kōlam,* பெ. (n.) ***மகளி ராகத்து எழுதுங் கோலம்*** (சிலப்.5,226,அரும்.); adornment of the breasts, as eḻudu-koḍi.

[எழுது + வரி + கோலம். எழுதுதல் = வரைதல், வண்ணம் பூசுதல். வரி = புனைவு, ஒப்பனை. வண்ணம் பூசி உடை அணிகல ஒப்பனை செய்த கோலம்.]

எழுதுவரிகோலம் *eḻudu-vari-kōlam,* பெ. (n.) ***எழுதுவ ரிக்கோலம்*** பார்க்க; see *eḻuduvarikkōlam.* "எழுதுவரி கோல முழுமெய்யு முறீஇ" (சிலப்.5,226).

[எழுது + வரி + கோலம்.]

எழுதுவோன் *eḻuduvōn,* பெ. (n.) ***எழுத்துக்காரன்*** பார்க்க; see *eḻuttukkāran.*

[எழுது → எழுதுபவன் → எழுதுவோன்.]

எழுந்தருள்(ளு)-தல் *eḻundaruḷ-,* 15.செ.கு.வி. (v.i.) 1. ***வருதல்;*** to come; arrive. "எங்குநின் றிவண்மற் றெழுந்தருளியது." (பாரத.நாடுகரந்.12). 2. ***புறப்படு தல்;*** to go forth, start. "வினதைமுன் பயந்த யானமீதெ ழுந்தருளி வந்து" (பாரத.குருகுல.30). 3. ***ஆவியுள்ளு றுத்தல்.*** (வின்.); to take abode, as a deity in an idol on consecration.

ம. எழுந்நருளுக.

[எழு → எழுந்து + அருள்.]

எழுந்தருள்படி *eḻundaruḷ-paḍi,* பெ. (n.) 1. ***கடவுள் புறப்பாடு*** (வின்.); procession of idols. 2. ***பெரியோர் வருகை*** (யாழ்ப்.); arrival of the great.

ம. எழுந்நருளத்து.

[எழு → எழுந்து → அருள் + படி.]

எழுந்தருளியிரு-த்தல் *eḻundaruḷi-y-iru-,* 3.செ.கு.வி. (v.i.) 1. ***குடிகொண்டருளுதல்;*** to take one's abode as God. 2. ***வீற்றிருத்தல்;*** to be seated, said to or of the great and exalted personages. இங்கு எழுந்தருளியி ருக்க.

[எழு → எழுந்து + அருளி + இரு.]

எழுந்தருளுந்திருமேனி *eḻundaruḷun-tirumēṉi,* பெ. (n.) ***எழுந்தருளுநாயகர்*** பார்க்க; see *eḻundaruḷunāyagar.* 'எழுந்தருளுந் திருமேனி திருவிழா எழுந்தருளப் புக்க வாறே. (S.I.I.ii,127).'

[எழு → எழுந்து + அருளும் + திருமேனி.]

எழுந்தருளுநாயகர் *eḻundaruḷu-nāyagar,* பெ. (n.) ***விழாத் திருமேனி*** (வின்.); festival idol of a temple carried about in processions.

[எழு → எழுந்து + அருளும் + நாயகர்.]

எழுந்திரு-த்தல் *eḻundiru,* 3.செ.கு.வி. (v.i.) ***எழுதல்;*** to rise from one's seat, to get up. "முனிவரெல்லாம் வந்தபோது மன்னவ னெழுந்திருந்து" (அரிச்.பு: விவா.37).

[எழு → எழுந்து + இரு.]

எழுந்திருப்பு *eḻundiruppu,* பெ. (n.) ***எழுந்து நிற்கை;*** rising from seat, getting up. "கால்வாய்த்தொழுவு சமய மெழுந்திருப்பு" (ஆசாரக்.63).

[எழுந்து + இருப்பு.]

எழுந்தேற்றம் *eḻundēṟṟam,* பெ. (n.) 1. ***இறுமாப்பு*** (வின்.); pride, arrogance. 2. ***துணிவு*** (வின்.); rashness, presumptuousness. 3. ***பலிபீடத்தில் நற்கருணை உயர்த்தப்படுகை*** (R.C.); exposition, as of the host and the chalice in mass. 4. ***கடவுள் புறப்பாடு;*** procession, as of an idol in a Hindu temple, or the carrying of the Eucharist or an image by Roman Catholics. (செ.அக.).

ம. எழுந்நேற்றம்

[எழுந்து + ஏற்றம்.]

எழுநகரம் *eḻu-nagaram,* பெ. (n.) ***இந்தியாவிலுள்ள ஏழு திருநகர்கள்;*** seven sacred cities of India. "புவிதன்னின் மேலவாய் வீடருள்கின்ற வெழு நகரத் துள்." (கந்தபு.திருநகரப்.75). (செ.அக.). காசி, காஞ்சி, அயோத்தி, மதுரை, அவந்தி, துவாரகை, மாயை.

[ஏழுநகரம் → எழுநகரம்.]

எழுநிலைமாடம் *eḻu-nilai-māḍam,* பெ. (n.) ***ஏழடுக்கு மாளிகை;*** palace seven stories high. "இன்னகிலாவி விம்மு மெழுநிலை மாடஞ்சேர்ந்தும்" (சீவக.2840). "எழுநிலை மாடத்து இடைநிலத்திருந்து" (சிலப்.பு கார்.2.13).

ம. எழுநிலமாடம்.

[ஏழுநிலை → எழுநிலை + மாடம்.]

எழுநூறு *eḻu-nūṟu,* பெ. (n.) ***ஏழுநூறுகள்;*** seven hundreds. (செ.அக.).

ம. எழுநூறு; **க.** ஏழ்நூறு, ஏழுநூறு, எள்நூறு; **குட.** என்நூரி; **தெ.** ஏடு நூறு, ஏடுநாடலு, ஏண்நூறு.

[ஏழு + நூறு - ஏழுநூறு → எழுநூறு.]

எழுப்பம் *eḻuppam,* பெ. (n.) 1. ***எழுகை;*** rising, getting up. 2. ***உயர்வு;*** growth, height, elevation. (செ.அக.).

[எழு → எழுப்பம்.]

எழுப்பல் *eḻuppal,* பெ. (n.) ***எழுப்புதல்;*** rousing or awakening from sleep; the act of awakening. (சா.அக.).

[எழுப்பு → எழுப்பல்.]

எழுப்பு[1]-தல் *eḻuppu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***எழும்பச் செய்தல்;*** to cause or help to rise; to erect, as a building. 2. ***துயிலெழுப்புதல்;*** to awake, rouse. "நாளை நானேயெழுப்புவ னென்றலும்" (திருவாச.7,6). 3. ***உயிர்பெற்றெழச் செய்தல்;*** to raise from the dead, resuscitate, restore of life. "மெய்க்குக னெழுப்புத லும்" (கந்தபு.திருவிளை.79). 4. ***ஊக்கமுண்டாக்குதல்;*** to excite, stimulate, inspire. 5. ***கலகமுதலியன மூட்டுதல்;*** to instigate, to inflame, as the passions. 6. ***ஓசையெழுப்புதல்;*** to raise, as the voice in speaking or singing; to call forth, as melody; from an instrument."சங்குக ளெழுப்பிய நாதம்" (பாரத.பதி னெட்.24).

[எழு → எழுப்பு.]

எழுப்பு[2] *eḻuppu,* பெ. (n.) ***எழுப்புகை*** (வின்.); rousing, waking.

[எழு → எழுப்பு.]

எழுப்பு[3] *eḻuppu,* பெ. (n.) ***மகிழ்ச்சி;*** zeal, enthusiasm (Poṇḍ.).

[எழு → எழுப்பு.]

எழுபது *eḻu-padu,* பெ. (n.) ***ஏழுபத்துகளையுடைய எண்ணிக்கை;*** seventy as seven tens. "எழுபது கோடி யுறும்" (குறள்.639).

ம. எழுபது; **க.** எப்பத்து, ஏழ்பத்து; **கோத.** எள்பத்; **குட.** எளுபதி; **து.** எள்ப, ஏள்ப, எர்ப; **தெ.** டெப்பதி, டெப்பை; **பட.** எளவத்து.

[ஏழு + பத்து - எழுபது.]

எழுபிறப்பு *eḻupiṟappu,* பெ. (n.) ***ஏழுவகையான பிறவி*** (பிங்.); seven kinds of births, in metempsychosis. தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, நிலைத்திணை (தாவரம்) என்பன எழுபிறப்புகளாகும். "எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்" (குறள்.107)

[ஏழு + பிறப்பு - ஏழுபிறப்பு → எழுபிறப்பு.]

எழுபோது *eḻu-pōdu,* பெ. (n.) ***கதிரவன் தோன்றும் நேரம்;*** time of sun rise. "பட்டபோ தெழுபோ தறியாள்" (திவ்.திருவாய்.2,4,9) (செ.அக.).

[எழு + போது. பொழுது → போது.]

எழும்பல் *eḻumbal,* பெ. (n.) ***நிலவளவை முதலியன பற்றிய கைக்குறிப்பேடு*** (யாழ்.அக.); hand-book of land-register. (செ.அக.).

[எழு → எழும்பல்.]

எழும்பு-தல் *eḻumbu-,* 7.செ.கு.வி. (v.i.) ***எழு*** பார்க்க; see *eḻu.*

ம. எழும்புக; **க.** எழ்பு; **கோத.** எட்வ; **துட.** ஓட்; **குட.** ஏள்; **து.** எர்கனி; **தெ.** லே, லேசு; **கூ.** டேஞ்ஜ; **பிரா.** தேகிங்.

[எழு → எழுப்பு. எழும்புதல்.]

எழுமதம்[1] *eḻu-madam,* பெ. (n.) ***நூலாசிரியருக்குரிய எழுவகைக் கொள்கை.*** (நன்.11); seven kinds of attitude of an author towards a certain subject. அவையே, உடன்படல், மறுத்தல், பிறர்தம் மதமேற் கொண்டு

களைவு, தாஅனாட்டித் தனாதுநிறுப்பு, இருவர்மாறுகோ ளொருதலை துணிவு, பிறர்நூற்குற்றங்காட்டல், பிறிதொ டுபடாஅன்றன் மதங்கொளல் ஆகியன. (நன்னூல்) (செ.அக.).

[ஏழு + மதம் - ஏழு மதம் → எழுமதம்.]

எழுமலை *e|u-malai,* பெ. (n.) ***கதிரவன் காலையில் தோன்றும் மலை;*** Eastern Mountain from behind which the sun is supposed to rise. "எழுமலை விழுமலை புடைமணியாக" (கல்லா.19) (செ.அக.).

ம. எழிமல.

[எழு + மலை.]

எழுமாழை *e|umā|ai,* பெ. (n.) ***தங்கம், வெள்ளி, தாமிரம், இரும்பு, ஈயம், பித்தளை*** (தாமிரமும் துத்த நாகமும் சேர்ந்தது), ***வெண்கலம்*** (தாமிரமும் தகரமும் சேர்ந்தது) ***போன்ற 'ஏழு மாழைகள்'*** (உலோகங்கள்); seven metals viz. the five ordinary metals such as gold, copper, iron and lead, together with the two mixed metals viz. bronze or bell metal (a mixture of copper and tin) and tarah (a mixture of copper and zinc). (சா.அக.).

[ஏழு + மாழை = ஏழுமாழை → எழுமாழை.]

எழுமீன் *e|u-mīṉ,* பெ. (n.) ***முதன்மையான ஏழு விண்மீன்கள்;*** seven principal stars of ursa major, Charle's Wain. "கைதொழு மரபி னெழுமீன்போல" (நற்.231). (செ.அக.).

ம. எழுமீன்.

[ஏழு + மீன் - ஏழு மீன் → எழுமீன்.]

எழுமுடி *e|u-muḍi,* பெ. (n.) ***வெல்லப்பட்ட ஏழரசர் முடியாற் செய்த சேரன்மாலை;*** Cēra's necklace fashioned out of the crowns of seven conquered kings. எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்து" (பதிற் றுப்.14,11) (செ.அக.).

ம. எழுமுடி.

[ஏழு + முடி - ஏழுமுடி → எழுமுடி.]

எழுமுரசு *e|u-murasu,* பெ. (n.) ***அரசனது செலவை யறிவிக்கும் முரசு;*** drum beaten to announce the starting of a king on a journey. "எழுக வான்பயண மென்றங் கெழுமுர சியம்புவித்தார்" (கோயிற்பு. இரணிய.116). (செ.அக.).

ம. எழுபற.

[எழு + முரசு.]

எழுமை[1] *e|umai,* பெ. (n.) ***உயர்ச்சி*** (திவா.); height.

ம. எழும; க. ஏழிகெ, ஏழ்கெ, ஏழ்விகெ; து. எர்கெ, எர்கெலு.

[ஏ → எல் → எழு → எழுமை.]

எழுமை[2] *e|umai,* பெ. (n.) 1. ***ஏழுமுறை பிறக்கும் பிறப்பு;*** seven successive births. "கல்வி யொருவற் கெழுமையு மேமாப்புடைத்து" (குறள்.398). 2. ***ஏழுவ கையான பிறப்பு;*** seven kinds of births in transmigration. "எழுமையுந் தான்புக் கழுந்து மளறு" (குறள்.835).

ம. எழும.

[ஏழு → எழு + மை.]

எழுவகையளவை *e|u-vagai-y-a|avai,* பெ. (n.) ***நிறுத்த ளத்தல், பெய்தளத்தல், சார்த்தியளத்தல், நீட்டியளத் தல், தெறித்தளத்தல், தேங்கமுகந்தளத்தல், எண்ணி யளத்தல் ஆகிய ஏழுவகையான அளவை முறைகள்*** (தொல்.எழுத்.7,உரை); seven ways of measuring. (செ.அக.).

[ஏழு + வகை + அளவை.]

எழுவாய்[1] *e|uvāy,* பெ. (n.) 1. ***தோற்றம்;*** beginning, origin, source. "எழுவா யிறுவா யிலாதன" (தேவா. 292,5). 2. ***முதல்;*** first. "எழுவாயுகத்தி லொரு சிலம்பி" (சீகாளத்.பு.சீகாள.1). 3. ***முதல் வேற்றுமை;*** nominative case. "எழுவாயுருபு திரிபில் பெயரே" (நன்.295). 4. ***கருத்தன்;*** (Gram.) subject. (செ.அக.).

[எழு + வாய் - எழுவாய் (தோன்றுதல்).]

எழுவாய்[2] *e|uvāi,* பெ. (n.) 1. ***கட்டியின் முகம்;*** point of an abscess. 2. ***கிளம்புமிடம்;*** place wherefrom anything rises. 3. ***சீழ் எழுமிடம்;*** the place from which the pus of an abscess approaches the surface. (சா.அக.).

[எழு + வாய்.]

எழுவாயெழுஞ்சனி *e|uvāy-e|uñjaṉi,* பெ. (n.) ***பத்தா வது நாண்மீன், கொடுநுகம்.*** (மகம்.) (திவா.); 10th nakṣatra (செ.அக.).

[எழுவாய் + எழும் + சனி.]

எழுவான் *e|uvāṉ,* பெ. (n.) ***கிழக்குத்திசை;*** The East as the place of sun rise opp to படுவான். எழுவான் தொடங்கிப் படுவான் மட்டும். (செ.அக.).

[எழு → எழுவான்.]

எழுவு-தல் *e|uvu,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***எழச்செய் தல்;*** to cause to rise, raise. "எழுவுஞ் சீப்பு" (சிலப்.15,215). 2. ***ஓசை யெழுப்புதல்;*** to produce or call forth sound. "எழுவும் முரசு" (சூளா.கலியாண. 248). 3. ***இசைக் கருவி யினின்று ஒலியெழச் செய்தல்;*** to produce musical note. சாத்தியா மெழூஉம் (சேனா.உரை).

[எழு → எழுவு. எழுவுதல்.]

எள்[1] *e|,* பெ. (n.) 1. ***எண்ணெய்தரும் சிறு கறுப்புநிற மற்றும் வெண்மை நிறமுமுடைய விதை வகை;*** sesame, a plant cultivated for the oil obtained from its seed, Sesamum Indicum. "எட்பகவன்ன சிறுமைத்தே" (குறள்.889). 2. ***எட்டு கடுகு விதைகளின் நீளமுள்ள தும் எள்ளளவு எனப்படுவதுமாகிய மிகச்சிறிய நீட்ட ளவு;*** small linear measure. 3. ***எட்டு கடுகுவிதைக ளின் எடையுடைய ஒரு சிற்றளவு*** (வின்.); a weight of 8 mustard seeds.

ம. எள்; க. எள், எள்ளு; கோத. எண்; குட. எள்ளி; து. எண்மெ; மறுவ. நூ, நுவல்.

எள்ளின் வகைகள்:

1. காரெள் (Black gingili)
2. சிவப்பெள் (Red gingili)
3. வெள்ளையெள் (White gingili)
4. காட்டெள் (wild gingili)
5. மயிலெள் (Peacock gingili)
6. பேயெள் (Bitter gingili)
7. காட்டுமயிலெள் (Wild peacock gingili)
8. மலையெள் (Hill gingili)
9. சிற்றெள் (Small variety gingili).

[இல் → இள் → எள்.]

இல் = குத்தல், பிளத்தல், வேர்ச்சொல். இள் → எள் = இருபகுப்பாக நடுவில் குழிந்து காணப்படும் எள்ளின் காய்; எட்காயின் உள் வித்து. எள் இயற்கையாக விளைந்த புன் செய்ப் பயிராதலின் முந்து தமிழ்ச் சொல்லாயிற்று, அளவுப் பெயருமாயிற்று.

எள்² *el,* பெ. (n.) ***இகழ்ச்சி;*** reproach, censure, condemnation. "எள்ளுநிய கருமம் நேர்ந்தா ளிவள்" (கம்பரா.நகர்நீ.109).

ம. எள்ளு; க. எள், எள்ளு; குட. எள்ளி; து. எண்மெ; தெ. தெலிக, நுவ்வுலு.

[இள் → எள்.]

எள்கு¹-தல் *elgu,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***இகழ்தல்;*** to despise, slight. "எள்கலின்றி... ஈசனைவழிபாடு செய் வாள்" (தேவா.1049,10). 2. ***அஞ்சுதல்;*** to fear. "எண்டிசை யோரு மெள்க" (சீவக.1749). 3. ***ஏய்த்தல்;*** to deceive. "ஓர் பாலகன்வந் தென்மகளை யெள்கி" (திவ்.பெரியாழ்.3,7,4).

[எள் → எள்கு. எள்ளுதல்.]

எள்கு²-தல் *elgu-,* 7.செ.கு.வி. (v.i.) 1. ***கூசுதல்;*** to be bashful, to hesitate. 'பழிவந்து மூடுமென்றெள்குதுமே' (திருக்கோ.92). 2. ***வருந்துதல்;*** to be in difficulty. "செங்களம் பற்றிநின் றெள்கு புன்மாலை" (திவ்.இயற். திருவிருத்.77).

[இல் → எல் → எள் → எள்கு.]

எள்நெய் *elney,* பெ. (n.) ***எள்ளிலிருந்து வடித்தெடுக் கும் நல்லெண்ணெய்;*** gingili oil. (சா.அக.).

தெ. நூனெ; ம. எள்ளெண்ண; க. எள்ளெண்ணெ.

[எள் + நெய்.]

எள்ள *ella,* இடை. (part.) ***ஓர் உவமவுருபு;*** adverbial word of comparison. "எள்ளவிழைய... பயனிலையுவ மம்" (தொல்.பொருள்.289). (வே.க.20).

[எள் → எள்ள.]

எள்ளல் *ellal,* பெ. (n.) ***இகழ்ச்சி, குறைவாய் மதிப்பி டல்;*** reproach, laughing to scorn. "எள்ளலிளமை பேதைமை மடனென்று... நகைநான்கென்ப" (தொல். பொருள்.252).

[எள் → எள்ளு → எள்ளல்.]

எள்ளளவு *ellalavu,* பெ. (n.) ***சிறிது, எள்ளின் அளவு;*** of the size of weight of a sesamum seed, very little.

மறுவ. எள்ளிடை, எள்கிடை, எட்பகவு;
ம. எள்ளளவு; க. எள்ளத்து.

[எள் + அளவு.]

எள்ளளவும் *el-l-alavum,* கு.வி.எ. (adv.) ***சிறிதளவும்;*** not even a little, not even as much as a sesamum seed. "யானெனுமகந்தைதா னெள்ளளவு மாறவிலை" (தாயு. ஆனந்த.9).

[எள் + அளவு + உம்.]

எள்ளற்பாடு *ellar-pādu,* பெ. (n.) ***இகழ்ச்சி;*** scorn, reproach. "எள்ளற்பா டுள்ளிட் டெல்லாம்" (சீவக. 2799).

[எள்ளல் + பாடு.]

எள்ளிடை *el-l-idai,* பெ. (n.) ***எள்விதையளவு;*** merest trifle.

ம. எள்ளிட.

[எள் + இடை. இடை = அளவு.]

எள்ளு¹-தல் *ellu-,* 6.செ.குன்றாவி. (v.t.) 1. ***இகழ்தல்;*** to ignore, disregard. "உருவுகண் டெள்ளாமை வேண்டும்" (குறள்.667). 2. ***இகழ்ந்து நகைத்தல்*** (திவா.); to ridicule, deride, laugh at. 3. ***ஒப்பாதல்;*** to be equal, similar. எழிலிவான மெள்ளினன் றருஉம். (தொல்.பொருள்.289,உரை).

ம. எள்ளுக.

[எள் → எள்ளு.]

எள்ளு²-தல் *ellu,* 6.செ.குன்றாவி. (v.t.) ***தள்ளுதல்*** (யாழ்.அக.); to omit, discard.

ம. எள்ளுக.

[இள் → எள் → எள்ளு.]

எள்ளுண்டை *ellundai,* பெ. (n.) ***எள்ளுருண்டை*** பார்க்க; see *ellurundai.*

ம. எள்ளுண்டை; க. எள்ளுண்டெ.

[எள்ளுருண்டை → எள்ளுண்டை.]

எள்ளுந்தண்ணீருமிறை-த்தல் *ellun-tannīrum-irai-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***நீத்தார்கடனிறுத்தல்;*** to offer water with sesame seeds on sacrificial grass to the spirits of the dead.

ம. எள்ளுநீர்.

[எள்ளும் + தண்ணீரும் + இறை.]

எள்ளுநர் *ellunar,* பெ. (n.) ***இகழ்பவர்;*** scorners, revilers. "எள்ளுநர்கள் சாய" (சீவக.847).

[என் → எள்ளு → எள்ளுநு + அர் - எள்ளுநர். பழங்காலத்தில் ஏவல் வினைகள் பொரு → பொருது → பொருநு எனவும் வழங்கியதால் பொருநு + அர் - பொருநர் எனத் திரிந்தமை ஒப்பு நோக்கற்பாலது.]

எள்ளுப்பிண்ணாக்கு *ellu-p-pinnākku*, பெ. (n.) ***எண்ணெயாடி எடுத்த எட்கோது;*** oil cake of pressed sesame.

ம. எண்ணின்பிண்ணாக்கு.

[எள்ளு + பிண்ணாக்கு. பிள் → பிண்டு = பிழிதல். பிண்டாக்கு → பிண்ணாக்கு.]

எள்ளுப்பு *elluppu*, பெ. (n.) ***எள்ளுச் செடியை எரித்து அதனின் றெடுத்த வுப்பு;*** salt extracted from the ash derived from burning the sesamum plant. (சா.அக.).

[எள் + உப்பு.]

எள்ளுப்பேத்தி *elluppētti*, பெ. (n.) ***மகன்வழிப் பிறந்த பேத்தி;*** great grand child, i.e. son's daughter.

[எள்ளு + பேத்தி - எள்ளுப்பேத்தி.]

இறந்தார்க்கு எள்ளும் நீரும் தெளிக்கும் உரிமை மகனுக்கும் மகன் வயிற்றுப் பிறந்த பிள்ளைகளுக்குமே உண்டு என்னும் மரபு தோன்றியபின் தோன்றிய சொல்லாட்சி இது. கொள்ளுப் பேத்தி என்பதன் எதிர்ச்சொல்.

எள்ளுப்பேரன் *elluppēran*, பெ. (n.) ***மகன்வழிப் பிறந்த பேரன்;*** great grand child, i.e. son's son.

[எள்ளு + பேரன் - எள்ளுப்பேரன்.]

இறந்தார்க்கு எள்ளும் நீரும் தெளிக்கும் உரிமை மகனுக்கும் மகன் வயிற்றுப் பிறந்த பிள்ளைகளுக்குமே உண்டு என்னும் மரபு தோன்றியபின் தோன்றிய சொல்லாட்சி இது. கொள்ளுப் பேரன் என்பதன் எதிர்ச்சொல்.

எள்ளுருண்டை *el-l-urundai*, பெ. (n.) ***எள்ளும் வெல்லமும் கலந்து செய்யப்படும் சிற்றுண்டி;*** pastry balls made of sesame and jaggery. ''இடியவலோ டெள்ளுருண்டை'' (பதினொ.கபி.மூத்.3).

[எள் + உருண்டை.]

எள்ளுரை *el-l-urai*, பெ. (n.) ***இகழ்ச்சியுரை;*** disrespectful, disparaging speech. ''இதுதக் கென்போர்க் கெள்ளுரையாயது.'' (மணி.18,10).

[எள் + உரை.]

எள்ளேறு *ellēru*, பெ. (n.) ***எள் விதைப்பு;*** sowing of sesame seeds.

ம. எள்ளேறு.

[எள் + ஏறு - எள்ளேறு. விதை எள்ளை உழுதநிலத்தில் ஏற்றுதல், எள் விதைத்தல்.]

எள்ளோரை *el-l-ōrai*, பெ. (n.) ***எள்ளிட்ட அரிசிப் பொங்கல்;*** cooked rice mixed with sesame powder.

[எள் + ஓரை - எள்ளோரை.]

எளி[1]-தல் *eli-*, 4.செ.கு.வி. (v.i.) ***எளிமையடைதல்;*** to become feeble, low spirited. ''பொருதிறல் வன்மைய திலனாயெளிந்தான்'' (கந்தபு.அக்கினிமுகா.90).

[இளி → எளி - எளிதல்.]

எளி[2]-த்தல் *eli-*, 2.செ.குன்றாவி. (v.t.) ***தாழ்த்திக் கூறுதல்;*** to cry down, disparage. ''எளித்த லேத்தல்'' (தொல்.பொருள்.207).

[இளி → எளி → எளித்தல்.]

எளிஞர் *eliñar*, பெ. (n.) ***எளியவர்;*** the destitute, the poor.

[எளி + அர் - எளியர் → எளிஞர்.]

எளிதரவு *elidaravu*, பெ. (n.) 1. ***தாழ்மை;*** lowness, humility. 2. ***ஏழ்மை;*** indigence, poverty.

[இளி → எளி → எளிதரவு.]

எளிதா(தரு)தல் *eli-dā-*, 15.செ.குன்றாவி. (v.t.) ***எளிமையாகத் தருதல்;*** to give easily. ''தாளையே தரமறிகிலாதெமக்கெளிதரு சிவப்பிரகாசற்கு'' (வைராக்.சத.2).

[எளி + தரு.]

எளிது *elidu*, பெ. (n.) 1. ***எளிமையானது*** (வள்ளுவமா.24); that which is easy of execution, or of acquisition. 2. ***தாழ்ந்தது;*** that which is low, despicable, trifling.

ம. எளுது; **கோத.** எள்; **துட.** எளவ்.

[இளி → எளி → எளிது.]

எளிமை *elimai*, பெ. (n.) 1. ***எளிமை;*** ease, facility, condition of being easy to effect, or to acquire. ''அவர்பாடிய வெளிமை'' (பெரியபு.திருநாவுக்.275). 2. ***தாழ்வு;*** despicableness, meanness, lowness of rank, or circumstances or character. ''இமையவர் தலைவனேயு மெளிமையி னேவல் செய்யும்'' (கம்பரா. சூர்ப்ப.42) 3. வறுமை; poverty. அவன் மிக்க எளிமையான நிலையி லிருக்கிறான். 4. ***வலியின்மை;*** weakness. ''எளியள் பெண்ணென் றிரங்காதே'' (கம்பரா.மிதிலைக்.68). 5. ***தளர்வு*** (பிங்); faintness, depression of spirit. 6. ***அடிமை நிலை*** (அக.நி.); slavery.

ம. எளிம; **க.** எளித; **துட.** ஏள்ய (ஏழை); **து.** எல்லி, எல்ய; **தெ.** எல்லிதமு.

[எளி + மை - எளிமை.]

எளிய *eliya*, கு.பெ.எ. (adj.) 1. ***தாழ்ந்த, பயன் இல்லாத, குறைந்த;*** low, small, insiginificant. எளிய விலை. 2. ***உதவியற்ற;*** unhelpful. 3. ***மெலிந்த;*** weak. 4. ***பணிந்த;*** humble.

ம. எளிய.

[எளி + அ - எளிய.]

எளியர் *eliyar*, பெ. (n.) ***எளியன்*** பார்க்க; see *eliyan*. (ஆ.அக.).

[எளி + அவர் - எளியவர் → எளியர்.]

எளியவன் *eḷiyavaṉ,* பெ. (n.) **எளியன்** பார்க்க; see *eḷiyaṉ.* "சிறுவிலை யெளியவ ருணவு சிந்திநோன்" (கம்பரா.பள்ளி.111).

ம. எளியவன்.

[எளி + அவன்.]

எளியன் *eḷiyaṉ,* பெ. (n.) 1. **வறியவன்** (திவா.); poor man. 2. **பண்பில் தாழ்ந்தவன்;** mean man. 3. **தாழ்ந்த குலத்தான்;** man of low caste. 4. **எளிதாய் அடையப்படுபவன்;** man of easy access. "காட்சிக் கெளியன்" (குறள்.386).

ம. எளியன்.

[எள் → எளி → எளியன் (வே.க.21).]

எளியார் *eḷiyār,* பெ. (n.) **வறியவர்;** poor men.

[எளியவர் → எளியார்.]

எளியான் *eḷiyāṉ,* பெ. (n.) **எளியன்** பார்க்க; see *eḷiyaṉ.*

ம. எளியான்.

எளியோன் *eḷiyōṉ,* பெ. (n.) **எளியன்** பார்க்க; see *eḷiyaṉ.*

ம. எளியோன்.

[எளியான் → எளியோன்.]

எளிவா(வரு)-தல் *eḷi-vā-,* 18.செ.கு.வி. (v.i.) **எளிமையாதல்;** to be easy of approach. "எளிவந்த எந்தைபிரான்" (திருவாச.6,15). 2. **எளிதில் கிடைத்தல்;** to be obtained easily. 3. **இழிவடைதல்;** to be low, undignified, abject. "இடுசோறு தின்றுயிர்சுமந்து தோளெளி வரும்படியிருந்த பாவியரும்" (பாரத.கிருட்.123).

[எளி + வரு.]

எளிவு *eḷivu,* பெ. (n.) **இயல்பு** (சௌலப்பியம்); unaffected ease, graceful simplicity, accessibility, approachableness. "உரலினோ டிணைந்திருந் தேங்கிய வெளிவே" (திவ்.திருவாய்.1,3,1).

[எளி → எளிவு.]

எளுமை *eḷumai,* பெ. (n.) **எளிமை** (தொல்.பொருள்.76, உரை.) பார்க்க; see *eḷimai.*

[எளிமை → எளுமை (கொ.வ.).]

எற்செய்வான் *eṟ-ceyvāṉ,* பெ. (n.) **பகலாக்கும் கதிரவன்;** sun, lit., day-maker. "எற்செய்வான் மறைந்தனனே" (சிலப்.7,40).

[எல் + செய்வான்.]

எற்சோறு[1] *eṟ-cōṟu,* பெ. (n.) **பழைய காலத்திலிருந்த ஒரு வரி;** ancient village cess. (S.I.I.i,103).

[எல் + சோறு - எற்சோறு. எல் → எல்லி (இரவு). இராச் சோறு வழங்க வாங்கப்பட்ட வரியாகலாம்.]

எற்சோறு[2] *eṟcōṟu,* பெ. (n.) **திருக்கோயில்களில் உச்சியம்போதில் அடியார் கட்களிக்கும் உணவு;** (S.I.I.viii.85); noon meal provided gratis in temple.

[எல் + சோறு. எல் = பகல்.]

எற்பாடு *eṟpāḍu,* பெ. (n.) 1. **பகல் 20 நாழிகைமுதல் 30 நாழிகை வரை, பிற்பகல்** (தொல்.பொருள்.8, உரை); period between 2 to 6 p.m., afternoon. 2. **காலைப்பொழுது;** sunrise, morning. (தொல்.விருத்.38).

[எல் + பாடு. படு - பாடு (மு.தி.தொ.பெ.).]

எற்புச்சட்டகம் *eṟpu-c-caṭṭagam,* பெ. (n.) **எலும்புக் கூட்டினாலாகிய உடல்;** cage made of bones. i.e. body. (இறை.1,உரை.9).

[எற்பு + சட்டகம்.]

எற்றம் *eṟṟam,* பெ. (n.) **மனத்துணிபு;** determination, decision. "எற்றமிலாட்டியென்னே முற்றா ளென்று" (கலித்.144).

[ஏற்று → ஏற்றம் → எற்றம்.]

எற்றல் *eṟṟal,* பெ. (n.) 1. **அறுத்தல்;** cutting. 2. **குத்தல்;** stabbing. 3. **கொல்லல்;** killing. 4. **வெட்டல்;** cutting asunder; hewing. 5. **அடித்தல்;** act of beating. (சா.அக.).

[எற்று → எற்றல்.]

எற்றற்கொட்டு *eṟṟaṟkoṭṭu,* பெ. (n.) **இறைமரக் கொட்டு;** basket used in well sweep.

[ஏற்றம் → ஏற்றல் → எற்றல் + கொட்டு.]

எற்றற்பட்டை *eṟṟaṟ-paṭṭai,* பெ. (n.) **இறைகூடை** (யாழ்ப்.); basket with which water is baled by four or six persons.

[ஏற்றல் + பட்டை - ஏற்றல்பட்டை → எற்றற்பட்டை.]

எற்றன்மரம் *eṟṟaṉ-maram,* பெ. (n.) **நீரிறைக்குங் கருவி வகை** (யாழ்ப்.); a kind of oblong trough with a long handle, supported by three posts used to bale water in irrigation.

[ஏற்றல் + மரம் - ஏற்றன்மரம் → எற்றன் மரம்.]

எற்றி-த்தல் *eṟṟi-,* 4.செ.கு.வி. (v.i.) **இரங்குதல்** (திவா.); to take pity, have compassion.

[எற்று → எற்றி.]

எற்று[1]-தல் *eṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. **அடித்தல்;** to strike, cuff, hit with the fist. "எற்றிய வயிற்றள்" (கம்பரா.மாரீசன்.63). 2. **உதைத்தல்;** to kick. 3. **மோதுதல்;** to butt, as an elephant, to dash against, as the waves of the sea. "எற்று தெண்டிரை" (தேவா. 92,2). 4. **எறிதல்;** to throw out, as water from a vessel. நீரெற்றும் மரம். 5. **வெட்டுதல்;** to cut, cleave, rend. "எற்றாமழுவும்" (கலித்.85). 6. **குத்துதல்** (திவா.); to pierce, stab. 7. **கொல்லுதல்** (திவா.); to kill. 8. **நீக்குதல்;** to cast away, get rid of. "எற்றுவமே பாச

மெலாம் யாம்" (சைவச.பாயி.7). 9. *நூல் தெறித் தல்;* to snap, as a carpenter's line for making a board. "எற்றுநூல்போன்று" (நைடத.சந்திரோ.33). 10. *எழுப்புதல்* (திவா.); to raise.

ம. எற்றுக.

[எறு → (எறி) → எற்று.]

எற்று²-தல் *eṟu-,* 5.செ.குன்றாவி. (v.t.) *எடுத்தல்;* to lift, take. "எற்றி வயவ ரெறிய நுதல்பிளந்து" (களவழி.23).

[எறு → எற்று.]

எற்று³-தல் *eṟu-,* 10.செ.கு.வி. (v.i.) 1. *நீங்குதல்;* to cease. "இடைக்கொட்கி னெற்றா விழுமந்தரும்" (குறள்.663). 2. *இரங்குதல்;* to feel compassion. "எற்றிய காதலினா லிசைத்தாள்." (தஞ்சைவா.224).

ம. எற்றுக.

[இல் → எல் → எறு → எற்று.]

எற்று⁴ *eṟu,* பெ. (n.) *உதைத்தல், அடித்தல், தள்ளுதல்;* kicking, hitting, pushing, attacking. பந்தைக் காலால் ஓர் எற்று எற்றினான். (உ.வ.).

ம. எற்று; க. ஏடு, எட்டு; கோத. எய்ரல்; துட. எர்ய; து. எட்டுனி; தெ. ஏடு.

[ஏறு + எற்று.]

எற்று⁵ *eṟu-,* வி.பெ. (inter.pron.) *எத்தன்மைத்து;* of what sort (is it)? tenseless finite verb of impers, sing. int. - இடை. (part.) *வியப்பு,இரக்கக் குறிப்பு;* exclamation of pity or wonder.

[எல் + து - எற்று.]

எற்றுண்(ணு)-தல் *eṟun-(ṇu),* 12.செ.கு.வி. (v.i.) *எறியப்படுதல்;* to be tossed about. இருவினை யெனுந்திரையி னெற்றுண்டு. (தாயு.தேசோ.2).

[எல் + து - எற்று + உண்.]

எற்றுநூல் *eṟu-nūl,* பெ. (n.) *மரமறுக்கப் போடும் நூல்;* carpenter's line for marking a board. "உயிர்போழ்தற் கெற்றுநூல்போன் றிருந்தது." (நைடத.சந்திரோ.33).

ம. எற்று நூல்.

[எற்று + நூல் - எற்றுநூல் (தெறிக்கும்நூல்). எற்றுதல் = கரி அல்லது மை தடவிய நூலைக் கோடு விழுவதற்காக மரத்தின் மேல் விசைத்துத் தெறித்தல்.]

எற்றுப்பணிக்கன் *eṟu-p-paṇikkaṉ,* பெ. (n.) *சலவைத் தொழிலாளி;* washerman. (சேரநா.).

ம. எற்றுபணிக்கன்.

[எற்று + பணிக்கன் - எற்றுப்பணிக்கன். எற்று = அடித்தல், துவைத்தல், பணிக்கன் = பணியாளன்.]

எற்றே *eṟē,* இடை. (int.) *எற்று³* பார்க்க; see *eṟu³* "கற்றவெலாம் எற்றே இவர்க்கு நாமென்று" (நீதிநெறிவி.).

[என் + து - எற்று + ஏ - எற்றே. ஏகாரம் வினாவிடைச்சொல்.]

எற்றை *eṟṟai,* வி.பெ. (inter.pron.) *என்று;* when. (யாழ்.அக.).

[என்று + ஐ = என்றை → எற்றை.]

எற்றைக்கும் *eṟṟaikkum,* கு.வி.எ. (adv.) *எப்பொழுதும், என்றென்றைக்கும்;* for all time, for ever. "எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும்" (திவ்.திருப்பா.29).

[என்று → என்றைக்கு + உம் - என்றைக்கும் → எற்றைக்கும்.]

எற்றோ *eṟō,* இடை. (int.) *எற்று³* பார்க்க; see *eṟu.³* "பெருநகையா பெற்றாளென்(று) எற்றோமற் றெற்றோ மற் றெற்று" (தனிப்பா.1,109,49).

[எற்று + ஓ - எற்றோ.]

எற்றோற்றம் *eṟōṟṟam,* பெ. (n.) *எழுஞாயிறு;* sunrise. (சா.அக.).

[எல் + தோற்றம் - எற்றோற்றம். எல் = ஞாயிறு, கதிரவன்.]

எறட்டு-தல் *eṟaṭṭu,* 5.செ.குன்றாவி. (v.t.) *வீசியிறைத்தல்;* to radiate, cast forth. "சந்திரனுடைய கிரணங்களானவை நெருப்பை யெறட்டிச்சுட" (திவ்.பெரியதி. 8,5,3,வ்யா.).

[இறை → இறட்டு → எறட்டு.]

எறவன் *eṟavaṉ,* பெ. (n.) *ஒருவகைநெல்;* a kind of paddy. (சேரநா.).

ம. எறவன்.

[எறவன் = எரங்காட்டில் விளையும் நெல்.]

எறி¹-தல் *eṟi-,* 2.செ.குன்றாவி. (v.t.) *வீசியெறிதல்;* throw, cast, fling, discharge, hurl. "கல்லெறிந் தன்ன" (நாலடி.66). 2. *வெட்டுதல்;* to hack, cut into pieces. "எறிந்து களம்படுத்த வேந்துவேள்" (புறநா.19,12). 3. *அறுத்தல்;* to chop, as mutton. "எறிக திற்றி" (பதிற் றுப்.18,2). 4. *முறித்தல்;* to shiver into pieces, smash. "கதவெறியாச் சிவந்துராஅய்" (புறநா.4,10). 5. *பறித் தல்;* to pick, as flowers. "எறியார் பூங்கொன்றையினோ டும்" (தேவா.189,5). 6. *அழித்தல்;* to destroy. "குறும்பெறிந்தன்று" (பு.வெ.1,8). 7. *அடித்தல்;* to beat, as a drum. "சிறுவரை நின்றே யெறிப பறையினை" (நாலடி.24). 8. *அறைதல்;* to drive, as a nail. "பொன்னெறிந்த நலங்கிளர் பலகையொடு" (புறநா.15). 9. *கொடுக்காற் கொட்டுதல்;* to sting, as a scorpion. "விடத்தே னெறிந்தா லேபோல" (திவ். நாய்ச்.3,6). 10. *ஒதுக்கிவிடுதல்;* to reject, brush aside, as advice. 11. *உண்ணாமல் நீக்கிவிடுதல்;* to leave uneaten, said of part of food. ஏன் சோற்றை யெறிகிறாய்? 12. *ஓட்டுதல்;* to drive off, scare away, as birds

from corn. "கிளியைச் செப்பேந்திள முலையா ளெறிசீ பர்ப்பதம்" (தேவா.1148,7). 13. *வெல்லுதல்;* to throw into the shade, outvie. "மின்னெறிசெஞ்சடைக் கூத்தப்பி ரான்" (திருக்கோ.49). 14. *கொள்ளையிடுதல்;* to rob, plunder, sack, pillage. 15. *பொழிதல்;* to shower, as rain. "நீர் கல்குறைபட வெறிந்து" (பரிபா.20,1). 16. *செறித்தல்;* to fasten as a ring on an elephant's tusk. "யானைவான்மருப் பெறிந்த வெண்கடை" (புறநா. 39,2). 17. *நுகர்வித்தல்;* to cause to experience. "எச்சத்துளாயினு மஃதெறியாது விடாதேகாண்" (கலித்.149). 18. *சீறுதல்;* displease irritate, insult. எறிசொல்லாகச் சொல்லுகிறான் (வின்.). 19. *தெறித்தல்;* to finger the string of a musical instrument as a Yāḻ. "குறுநரம் பெறிவுற்றெழுவு... யாழ்" (கம்பரா.சித்திர.28).

[எறு → எறி.]

எறி²-தல் *eṟi,* 4.செ.கு.வி. (v.i.) 1. *காற்று வீசுதல்;* to blow, as the wind. "ஊதை யெறிய வொசிபூங் கொடியொப்பார்" (கம்பரா.நகர்நீ.98). 2. *அலையெறிதல்;* to surge, as waves of the sea. "எறியு நேமிசூழுலகத்து" (கந்தபு.அவைபுகு.114). 3. *இரையைப் பாய்ந்தெடுத்தல்;* to pounce or dart upon, as a bird on its prey. "எறிபருந்துயவும்" (அகநா.81). 4. *உதைத்தல்;* to kick. கழுதை எறிகிறது.

ம. எறி; க. இரி; கோத. எய்ரல்; துட. ஈர்க்; தெ. ஏடு; கட. எய்; கோண். ஏரிசுதானா.

[எறு → எறி.]

எறி³-தல் *eṟi,* 2.செ.குன்றாவி. (v.t.) 1, *இடித்துரைத்தல்;* to rebuke. "தெவ்வர்போலத் தீதறவெறிந்தும்" (சீவக. 1895). 2. *தடவுதல்;* to stroke, pat. "தாய்தன் கையின்... குறங்கின் எறிய ... துஞ்சும்.... குழவி போல" (சீவக.930).

[எல் → எறு → எறி.]

எறி⁴ *eṟi,* பெ. (n.) 1. *வீச்சு;* throw, fling. ஓர் எறியில் விழச்செய்தான். 2. *உதை;* kick. 3. *அடிக்கை;* blowing as the wind. "சூறை மாருதத் தெறியது வளியின்" (திருவாச.3,11). 4. *குறிப்பாகச் சொல்லுகை;* hint, allusion, insinuation, innuendo. ஓர் எறி எறிந்து வைக்க வேண்டும். (யாழ்ப்.).

ம. எறி.

[எறு - எறி.]

எறி⁵-த்தல் *eṟi,* 4.செ.கு.வி. (v.i.) 1. *ஒளி வீசுதல்;* to shine, to glitter. "காட்டுக் கெறித்த நிலா" (தமிழ்நா.237). 2. *தைத்தல்;* to nail, fasten with nails, pin. "மாண்டவெறித்த படைபோல்" (கலித்.94). 3. *உறைத்தல்;* to irritate, suffocate, as smoke; to affect. "வாடுக... நின் கண்ணி... நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே" (புறநா.6). 4. *பரத்தல்;* to spread. "உணர்வுசென் றெறித்தலானும்" (சீவக.380).

ம. எறிக்குக.

[எல் → எறு → எறி. எல் = ஒளி, கதிரவன். இல் → எல் = குத்துதல்; தைத்தல், செறித்தல்.]

எறிகண் *eṟikaṇ,* பெ. (n.) *ஓரப்பார்வை;* side-glance, flirting glance. (சேரநா.).

ம. எறிகண்ணு.

[எறி + கண்.]

எறிகண்ணன் *eṟikaṇṇaṉ,* பெ. (n.) 1. *சினப்பவன்;* one who frowns, an angry man. 2. *உற்று நோக்குபவன்;* one who ogles, (சேரநா.).

ம. எறிகண்ணன்.

[எறி + கண்ணன்.]

எறிகால் *eṟi-kāl,* பெ. (n.) *மோதுங் காற்று;* violent wind.

[எறு → எறி + கால்.]

எறிகாலி *eṟi-kāli,* பெ. (n.) *உதைகால்மாடு, பால்கறக்கும் போது உதைக்கும் மாடு;* cow that kicks.

[உதை + காலி . கால் + இ - காலி = காலுடையது.]

எறிச்சலூர்மலாடனார் *eṟiccalūrmalāḍaṉār,* பெ. (n.) *கடைக்கழகக்காலப் புலவர்களு ளொருவர்;* bard of Sangam age.

[இறைச்சல் + ஊர் - இறைச்சலூர் → எறிச்சலூர் = மழைச்சாரல் மிகுந்த ஊர். மலை + நாடன் + ஆர். மலை நாடனார் → மலாடனார். மலைநாடு → மலாடு (மரூஉ).]

எறிப்பு *eṟippu,* பெ. (n.) 1. *ஒளிர்வு;* lustre, brightness, glitter. "எறிப்பொழிந்தாங் கருக்கன் சுருக்கி' (திருக்கோ.218). 2. *கடுவெயில்* (வின்.); hot sun.

ம. எறிப்பு.

[எல் → எரி → எறி → எறிப்பு.]

எறிபடு-தல் *eṟi-paḍu-,* 20.செ.கு.வி. (v.i.) *ஒதுக்கப்படுதல்;* to be rejected, cast off. எறிபட்ட பொருள்.

[எறி + படு (து.வி.).]

எறிபடை *eṟi-paḍai,* பெ. (n.) *வீசும் கொலைக்கருவி, கைவிடுபடை;* missile. "ஆன்றமை யெறிபடை யழுவத்து" (கம்பரா.கரன்வதை.52).

[எறி + படை. படை = படைக்கலம், கொலைக்கருவி.]

எறிபத்தநாயனார் *eṟi-patta-nāyaṉār,* பெ. (n.) *அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்* (பெரியபு.); canonized Saiva saint, one of 63.

[எறி + பத்தன் + நாயனார்.]

எறிபாவாடை *eṟi-pā-vāḍai,* பெ. (n.) *தெய்வங்களுக்கு முன்னும் பெரியோர் முன்னும் வீசும் பாவாடை விருது* (கோயிலொ.88); cloth waved before an idol or a great person, as an act of reverence.

[எறி + பாவாடை. பா + ஆடை - பாவாடை = விரித்த ஆடை.]

எறிமணி *eṟi-maṇi,* பெ. (n.) ***கொட்டி ஒலியெழுப்பும் வட்டத்தகட்டு வெண்கல இசைக்கருவி*** (பிங்); gong for striking the hours, also used in temples in daily worship.

[எறி + மணி.]

எறியாலம் *eṟiyālam,* பெ. (n.) ***எண்ணெய் எடுக்க உதவும் மீன் வகைகளுளொன்று;*** a kind of fish from which oil is extracted. (சா.அக.).

எறியீட்டி *eṟi-y-īṭṭi,* பெ. (n.) ***முனையில் கூர்மையான இரும்பாணியையுடைய நீளக்கம்பு;*** javelin, lance.

மறுவ. குந்தம்.

[எறி + ஈட்டி - எறியீட்டி.]

எறியுப்பு *eṟi-y-uppu,* பெ. (n.) ***கல்லுப்பு*** (மூ.அ.); rock-salt.

[எறி + உப்பு - எறியுப்பு = வெட்டியெடுக்கும் உப்பு.]

எறிவல்லயம் *eṟi-vallayam,* பெ. (n.) ***சுற்றிவீசி எறியும் கற்காலக்கருவி, வளைதடி*** (வின்); boomarang, that is hurled. opp to குத்துவல்லயம்.

[எறிவல்லயம் என்பது பழந்தமிழர் பயன்படுத்திய ஆத்திரேலிய பூமராங் வளைதடி போன்றது. எறி + வல்லயம் - எறிவல்லயம். வீசியெறிந்து கொல்லும் படைக்கலம் கைவிடுபடை எனப்படும். படைக் கலத்தைக் கையில் இறுகப் பற்றிய வாறே பகையைக் குத்திக் கொல்லும் படைக்கலம் குத்துவல்லயம் (கைவிடாப்படை) எனப்படும்.]

எறிவளையம் *eṟi-valaiyam,* பெ. (n.) ***சக்கரப்படை*** (வின்.); discus, used as a missile.

ம. எறிவளயம்.

[எறி + வளையம் - எறிவளையம். வடமொழியாளர் இதனைச் சக்கராயுதம் என்பர்.]

எறிவாள் *eṟivāḷ,* பெ. (n.) ***எறிந்து போரிட ஏந்தாக இருக்கும் கருவி;*** a kind of missile. (சேரநா.).

ம. எறிவாள்.

[எறி + வாள்.]



எறிவாள்

எறும்பி[1] *eṟumbi,* பெ. (n.) ***எறும்பு;*** ant. "எறும்பி யளையற் குறும்பல் சுனைய" (குறுந்.12).

ம. எறும்பு, உறும்பு; க. இறுபு, எறுப.

[எல் → எறு → எறும்பு → எறும்பி.]

எறும்பி[2] *eṟumbi,* பெ. (n.) ***யானை*** (திவா.); elephant.

[இறும்பு → எறும்பு → எறும்பி. இறும்பு = வலிமை.]

எறும்பு *eṟumbu,* பெ. (n.) ***நான்கு சிறகுகளை யுடைய புழுபூச்சியினப் பிரிவில் ஓயாது உழைப்பில் இருக்கும் ஓர் சிற்றுயிரி;*** ant, emmet. "எறும்புமூசா விறும்பூது மரபின்... பலி" (பதிற்றுப்.30,38).

ம. எறும்பு; க. இறும்பெ, இருவெ; குட. உருபீ; படீ. இறுப்பு.

[எல்→ எறு (தாக்குதல், கொட்டுதல், கடித்தல்) எறு → எறும்பு.]

எறும்புப் புற்று *eṟumbu-p-puṟṟu,* பெ. (n.) ***எறும்பி னிருப்பிடம்;*** ant-hill; habitation of ants. (சா.அக.).

[எறும்பு + புற்று.]

எறும்பு விழுங்கி *eṟumbu-viḻuṅgi,* பெ. (n.) ***எறும்பை விழுங்கும் ஒருயிரி;*** ant eater. (சா.அக.).

ம. எறும்பு தீனி.

[எறும்பு + விழுங்கி.]

எறுழ் *eṟuḻ,* பெ. (n.) 1. ***வலிமை;*** strength, might. "சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சி" (தொல்.சொல்.388, உரை.). 2. ***மரத்தண்டு.*** (தண்டாயுதம்) (பிங்); club. 3. ***தூண்*** (அக.நி.); pillar, post. 4. ***செந்நிறப் பூவுடைய குறிஞ்சிநிலத்து மரவகை;*** hill tree with red flowers. "காலெறுழொள்வீ" (ஐங்குறு.308).

ம. எறுள்.

[உறு → எறு → எறுழ். எறுழ் = வலிமை, திண்மை.]

எறுழ்வலி *eṟuḻ-vali,* பெ. (n.) 1. ***மிகுந்த வலிமை;*** great strength; "இரும்பினாற் பின்னியன்ன வெறுழ்வலி முழவுத் தோளார்" (சீவக.785). 2. ***மிக்க வலியுடையோன்;*** mighty hero. "எறுழ்வலி யுரைத்த மாற்றம்" (சீவக.1723).

[உறு → எறு → எறுழ் + வலி - எறுழ்வலி = எறுழ்மரத்தை போன்ற வலிமை.]

எறுழம் *eṟuḻam,* பெ. (n.) ***எறுழ்*** பார்க்க; see *eṟuḻ.* "எரிபுரை யெறுழம்" (குறிஞ்சிப்.66).

[எறுழ் → எறுழம். எறுழம் = எறுழ் மரம்.]

எறுழி *eṟuḻi,* பெ. (n.) ***பன்றி;*** pig. "காதெயிற் றெறுழிவேந் தன்" (திருவிளை.பன்றி.முலை.26).

[உறு → எறு → எறுழ் → எறுழி (தாக்கிக் கொல்லும் இயல்புடைய பன்றி).]

எறே *eṟē,* இடை. (part.) ***இறே*** பார்க்க; see *iṟē.*

[இறே → எறே.]

எறைக்கான் *eṟaikkāṉ,* பெ. (n.) ***துன்பம் நேரும் பொழுது தப்பி ஓட ஏதுவாக இருக்கும் எலிவளையி லுள்ள கள்ளவழி;*** escape place in a rat-hole.

[இறை → எறை + கால் - எறைக்கால் → எறைக்கான் (கொ.வ.) இறை = தங்குதற்கான பொந்து.]

என்^{1} *eṉ,* கு.வினாஎ.(inter.adv.) ***என்ன;*** Why, wherefore? நீ வந்ததென்? - இடை. (int.) ***ஓரிகழ்ச்சிக் குறிப்பு*** (பிங்); exclamation expressive of contempt. - இடை. (part.) ***எது அல்லது எதையெனப் பொருள்படும் இடைச்சொல்;*** particle having the force of whatever, whichever. ''என்னுடைய ரேனு மிலர்'' (குறள்.430).

ம. என்.

[எவன் → என்.] .

என்^{2} *en,* பெ. (n.) ***வெளிப்பட்ட தவசக் கதிர்;*** grown corn.

தெ. என்னு.

[எல் → என் = வெளிப்படுதல், மேலுயர்தல். பொதிதோகையி லிருந்து பூட்டையாய் வெளிப்பட்ட தவசக் கதிர்.]

என்^{3} *en,* பெ. (n.) 1. ***தன்மை ஒருமையின் வேற்றுமை யடி*** (நன்.331); oblique form of the 1st per. sing. pron. நான் or யான். 2. ***ஓர் அசை*** (யாப்.74,உரை.); expl ending in nilai-maṇḍila-āširiyappā.

ம. என்; **க.** என், என்று, யென், நன்; **கோத.** என்; **துட.** என்; **குட.** என்; **து.** என், என; **தெ.** நா, நன்; **கொலா.** அன்; **நா.** அன்; **பர்.** அன்; **கட.** அனு; **கோண்.** நா; **கூ.** நா; **குவி.** நா; **குரு.** எங்க; **மால்.** என்க; **பிரா.** கன்.

[நான் → நன் → அன் → என்.]

என்(னு)-தல் *en(nu)-,* 14.செ.குன்றாவி. (v.t.) ***என்று சொல்லுதல்;*** to say, utter, express. ''என்னா மரபின வெனக்கூறுதலும்'' (தொல்.சொல்.422).

க. அன்னு; **பட.** என்னு; **தெ.** அனு.

[அல் → எல் → என் → என்னு = நாக்கூட்டிக் குரலுயர்த்திப் பேசு. அல்லுதல் = பின்னுதல், முடைதல், பொருத்திப் பேசுதல்.]

என்கை *eṉgai,* பெ. (n.) ***என்று சொல்லுகை;*** saying that. ''அகிலமெல்லா மவனென்கை'' (கந்தபு.மேடு.26).

[என் → என்னுதல் = பேசுதல். என்னு + கை = என்னுகை → என்கை.]

என்ப^{1} *eṉba,* பெ. (n.) ***என்று சொல்வன;*** what are said to be; being said that. ''எண்ணென்ப வேனை யெழுத் தென்ப'' (குறள்.392).

[என் + ப - என்ப. என்பர் என்பதன் கடைக்குறை. 'அர்' பலர் பாலீறு. 'ப' பலர்பாலீறு என்பது பொருந்தாது.]

என்ப^{2} *eṉba,* இடை. (part.) ***அசைச்சொல்*** (தொல். சொல்.298,உரை.); expletive.

[என் + ப - என்ப. இசைநிறைக்கும் சொல்லாகவந்து அசைச் சொல்லாயிற்று.]

என்பது *eṉbadu,* இடை. (part.) 1. ***நன்றுரைத்தற்கண் ணும் இழித்தற்கண்ணும் வரும் அசைநிலை*** (தொல். சொல்.280,சேனா.); expletive word used to express either approval or disapproval of a statement. 2. ***சார்ந்து நின்று சொல்லின் பொருளை யுணர்த்தும் பிரிவில் அசைநிலை*** (தொல்.சொல்.282,உரை.); expletive word used as an adjunct and having more attributive force.

[என் + ப் + அது - என்பது. தொடரில் பொருள் நிறைக்கும் சொல்லசையாக வந்து அசைநிலை யாயிற்று.]

என்பவன் *eṉbavaṉ,* பெ. (n.) ***என்பான்*** பார்க்க; see *eṉbāṉ.*

[என் + ப் + அவன் - என்பவன்.]

என்பான் *eṉbāṉ,* பெ. (n.) 1. ***என்று சொல்பவன்;*** he who says. ''வள்ளுவ னென்பானோர் பேதை.'' (வள்ளுவமா.8). 2. ***என்று சொல்லப்படுபவன்;*** he who is said to be. ''இல்வாழ்வா னென்பான்'' (குறள்.41).

[என் + ப் + அவன் = என்பவன் → என்பான்.]

என்பி^{1}**-த்தல்** *eṉbi-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***சொல்லச் செய்தல்;*** to make one speak or prove, as a statement. அதை அவன் வாயினாலே என்பிப்பேன் (யாழ்ப்.).

தெ. அனிபிங்க.

[என் → என்பி = சொல்லச்செய், வெளிப்படுத்து.]

என்பி^{2}**-த்தல்** 4.செ.குன்றாவி. (v.t.) ***புகழ்பெறுதல்;*** to cause to be known; to proclaim. ''என் சொல்லால் யான்சொன்ன இன்கவி யென்பித்து'' (திவ்.திரு வாய்.7,9,2).

[என் → என்பி (சொல்லச் செய், புகழ்).]

என்பியல் *eṉbiyal,* பெ. (n.) ***எலும்பின் இயல்புகளைப் பற்றிக்கூறும் நூல்;*** that branch of science which treats of the nature of bones and bony tissues - Osteology. (சா.அக.).

[என்பு + இயல் - என்பியல்.]

என்பிலி *eṉbili,* பெ. (n.) ***புழு*** (நாமதீப.); worm devoid of bones. ''என்பிலதனைவெயில் போலக் காயுமே'' (குறள்.77).

[என்பு + இலி - என்பிலி. இல்லி → இலி (இல்லாதது).]

என்பு^{1} *eṉbu,* பெ. (n.) 1. ***எலும்பு;*** bone. ''என்பு நைந்துருகி'' (திருவாச.4,80). 2. ***உடம்பு;*** body. ''ஆரு யிர்க் கென்போ டியைந்த தொடர்பு.'' (குறள்.73).

ம. எலிம்பு, எலும்பு; **க.** எலும்பு; **குட.** எலிம்பி; **தெ.** எம்மு, எம்முக.

[எல் + பு - என்பு. 'பு' பண்புப் பெயரீறு.]

என்பு^{2} *eṉbu,* பெ. (n.) ***புல்*** (அக.நி.); grass.

என்பு^{3} *eṉbu,* பெ. (n.) ***புலி;*** tiger. (ஆ.அக.).

என்மனார் *eṉmaṉār,* பெ. (n.) ***என்று சொல்லுவார்;*** it is said so. ''கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்'' (இறைய-1).

[என் + மன் + ஆர் - என்மனார். என் = பேசுதல். மன் - அசைநிலை. 'ஆர்' பலர்பாலீறு.]

என்ற *enṟa,* இடை. (part.) ***ஓர் உவம வாய்பாடு;*** adjectival expression signifying comparison. வாயென்ற பவளம் (தொல்.பொருள்.286,உரை.).

[என் - என்ற (பெ.எ) எனக் கூறப்பட்ட என்னும் சொல்லாட்சி ஒத்த தன்மைக்காகி உவம வாய்பாட்டு இடைச் சொல்லா யிற்று.]

என்றவன்[1] *enṟavaṉ,* பெ. (n.) ***கதிரவன்;*** sun. "என்றவன் மதலையேவும்" (பாரத.பதினே.102).

[எல் → என்று → என்றூழ் + அவன்.என்றூழவன் → என்றவன். எல் = ஒளி. என்றூழ் = வெயில், பகல். தெ. எண்ட (வெயில்) என்றூழவன் → என்றவன் (கொ.வ.).]

என்றவன்[2] *enṟavaṉ,* பெ. (n.) ***என்று கூறியவன்;*** one who said so.

[என்ற + அவன் - என்றவன்.]

என்றா *enṟā,* இடை. (part.) ***ஓரெண்ணிடைச்சொல்;*** numerical connective particle. "ஒப்பிற் புகழிற் பழியி னென்றா" (தொல்.சொல்.73).

[என்று → என்றா (என்றாகின்ற).]

என்றால் *enṟāl,* இடை. (conj.) 1. ***என்று சொல்லின்;*** if (it is) said so. 2. ***ஆனால்*** (அப்படி); if (it is) so.

ம. என்னால்; க. எந்தரெ; தெ. ஐதெ; பட. எந்தலெ.

[என்று + ஆல்.]

என்றாலும் *enṟāl-um,* இடை. (conj.) 1. ***என்று சொன்னாலும்;*** though (it is said so). 2. ***ஆயினும்;*** though (it is so), notwithstanding. "உடலு நடுங்காநின்றா ரென்றா லும்" (கம்பரா.தைல.71).

ம. என்னாகிலும்; என்னாலும்.

[என்று + ஆல் + உம்.]

என்றிசினோர் *enṟiciṉōr,* பெ. (n.) 1. ***என்று சொன்னவர்;*** it is said so. 2. ***என்று சொல்வோர்;*** those would say so.

[என்று + இசின் + ஓர் - என்றிசினோர். 'இசின்' துணைவினையாகி இடவழக்கு வேறுபாடுகளால் இறப்பும் எதிர்வும் சுட்டி வருதலும் அசைநிலையாக வருதலும் உண்டு.]

என்றிய *enṟiya,* கு.வி.எ. (adv.) 1. ***எதற்காக*** (ஈடு.7,9,2); what for. 2. ***எப்படி;*** in what way, how, by what means. "என்றிய வென்னில்" (ஈடு.4,10,11).

[என்று → என்றிய.]

என்று[1] *enṟu,* இடை. (part.) 1. ***என்று சொல்லி;*** relative part. ending a quotation and connecting it with the following part of the sentence. 2. ***வினை, பெயர், குறிப்பு, இசை, பண்பு எண் என்ற பொருள் பற்றி வரும் இடைச்சொல்*** (தொல்.சொல்.261,உரை.நன். 424); in special or elliptical constructions, in which it is used as a connective part. (a) between verbs, as in "நரைவரு மென்றெண்ணி" (நாலடி.11). (b) between a noun and a pronoun, as in பாரியென் றொருவனுளன். (c) between an onom. word and verb, as in திடீரென்று வந்தான். (d) between an abstract noun and a verb, as in பச்சென்று பசந்தது. (e) between words defining things enumerated, as in நிலனென்று நீரென்று. (f) between an imitative sound and a verb, as in ஒல்லென் றொலித்தது. 3. ***ஒரு சொல்லசை;*** expletive. கலியாணத் துக்கென்று பணம் வைத்திருக்கிறேன்.

ம. என்னு; க. இந்து; பர். என், எத்த.

[என் → என்று.]

என்று[2] *enṟu,* பெ. (n.) ***எந்த நாள்;*** what day, when, what time. "இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னா து" (நாலடி.36).

ம. என்னு; க., பட. எந்து; கோத. எந்த்; துட. எத்வின்; குட. எக்க; து. ஏனி; தெ. எபுடு, எப்புடு, என்னடு; பர். எதாட், எத்தெல்; கட. எசெண்ட; கொண். எசன்; கூ. எசெக; குவி. எசெல்; குரு. எகாகெ.

[எ + ஞான்று - எஞ்ஞான்று → என்று . ஞான்று = பொழுது.]

என்றும் *enṟum,* பெ. (n.) ***என்றைக்கும்*** பார்க்க; see *enṟaikkum.* "என்றுந்தான் இவ்வகையே இடர் செய்கின் றீர்" (அப்-தேவா).

ம. என்னுகம்; க. எந்தும்.

[எஞ்ஞான்றும் → என்றும்.]

என்றுமின்மை *enṟumiṉmai,* பெ. (n.) ***ஒரு போதுமில்லாமையைத் தெரிவிக்கும் இன்மை*** (சி.சி.அளவை.1, மறைஞா); negation of an impossible thing as in the hare has horns. never existing.

[என்று + உம் + இன்மை.]

என்றூழ் *enṟūḻ,* பெ. (n.) 1. ***கதிரவன்;*** sun. "என்றூழ்மா மலை மறையும்" (குறுந்.215). 2. ***வெயில்;*** sunshine. "என்றூழ் நின்ற குன்றுகெழு நன்னாட்டு" (சிலப்.14, 121). 3. ***கோடைக் காலம்;*** summer. "என்றூழ் வாடுவ றல்போல" (புறநா.75). 4. ***காற்று*** (அக.நி.); wind.

[என்றூழ் = ஒளி, வெப்பம் மிகுந்த கதிரவன், பகல், வெயில். எல் + ஊழ் - எல்லூழ் → என்றூழ். எல் = ஒளி, கதிரவன். ஊழ்த்தல் = மிகுதல், அதிகரித்தல். 'ற்' எழுத்துப்பேறு.]

என்றைக்கு *enṟaikku,* கு.வி.எ. (adv.) ***எந்நாள்;*** what day, when. "அல்லலொழிவ தென்றைக்கு" (தாயு.பரா. 305).

க. யாவாக, ஆவாக; பட. ஏகுவ.

[என்று → என்றை + கு.]

என்றைக்கும் *enṟaikkum,* கு.வி.எ. (adv.) 1. ***எக்காலத்தும்;*** (with affirmative verb) for ever; always. 2. ***ஒரு நாளும்;*** (with negative verb) even a day. 3. ***ஒரு பொழுதும்;*** even once, at any time.

ம. என்னேக்கும்; க. எந்திகூ; பட. ஏகூ.

[என் → என்று → என்றை + கு + உம்.]

என்ன[1] *eṉṉa,* வி.பெ. (inter.pron.) 1. ***யாது?*** What. 2. ***என்ன பயன்;*** tenseless verb signifying what avail.

"என்ன போதித்தும் என்ன" (தாயு.தேசோ.7). 3. ***எத்தகைய;*** of what kind. (சு.வி.84).

ம. என்ன; க. எந்தா, என்ன; **கோத.** என; **துட.** இன்; **குட.** என்னதெ, என்தெ; **து.** எஞ்சி; தெ. ஏகி, ஏலாகி; **கொலா.** எண்டோவ்; பர். எத்னி; பட. ஏன.

[என் → என்ன.]

என்ன² *eṉṉa,* இடை. (part.) ***ஓர் உவம உருபு;*** sign of comparison. "அடித்தேரல ரென்ன வஞ்சுவ னின் னைய ரென்னின்" (திருக்கோ.216).

[அன்ன → என்ன.]

என்னணம் *eṉṉaṇam,* கு.வி.எ. (adv.) ***எவ்வகையாக;*** how, in what manner. "என்னணஞ் சென்றனள்" (திருக்கோ.231).

[என்ன + வண்ணம் - என்ன வண்ணம் → என்னணம்.]

என்னது *eṉṉadu,* சு.பெ. (pron.) ***எது;*** what. நீ என்னது சொல்கிறாய். (செ.அக.).

ம. என்னது.

[என் + அது = என்னது (எத்தகையது).]

என்னதும் *eṉṉadum,* கு.வி.எ. (adv.) ***சிறிதும்;*** even a little. "என்னதூஉம் கடிமரந் தடிதலோம்பு" (புறநா. 57).

[என் → எனை → எனைத்து → எனைத்து + உம் - எனைத்தும் → என்னதும்.]

என்னர்¹ *eṉṉar,* சு.பெ. (pron.) ***யாவர்;*** who?. "அருந்தொ டைச் சித்திர மதனை யென்னரே யளந்தறி பவர்." (இரகு.திக்கு.196).

[என் → என்னர்.]

என்னர்² *eṉṉar,* கு.வி.எ. (adv.) ***சிறிதும்;*** even a little. "என்னருங் கருதான்" (பெருங்.நரவான.2,41).

[என் → (எனை) → எனையல் → என்னல் → என்னர் + உம்.]

என்னவன்¹ *eṉṉavaṉ,* வினாசு.பெ. (inter.pron.). 1. ***யாவன்;*** who? 2. ***எப்படிப்பட்டவன்;*** what kind of a man. "நீத்தோ ரென்னவர் தங்கட்கேனும்" (கந்தபு. கிரவுஞ்.4).

[எவன் → என்னவன்.]

என்னவன்² *eṉ-ṉ-avaṉ,* பெ. (n.) ***எனக்குரியவன் எனக்குற்றவன்;*** one who is mine; my friend. "என்ன வன்ன கைப்பூண் மார்பகஞ் சேரக்கருது" (மறைசை.94).

[யான் → என் + அவன்.]

என்னன் *eṉṉaṉ,* பெ. (n.) ***என்னவன்¹*** பார்க்க; see *eṉṉavaṉ.* "என்ன னெவ்விடத்தன்" (இரகு.யாக.96). (வே.க.104).

[என்னவன் → என்னன்.]

என்னாங்கு *eṉ-ṉ-āṅgu,* கு.வி.எ. (adv.) ***என்னிடத்து;*** to me, let., to my place. "என்னாங்கு வாரா தோம்பினை" (கலித்.23).

[என் + ஆங்கு - என்னாங்கு.]

என்னுக்கு *eṉṉukku,* வி.எ. (adv.) ***எதற்கு;*** What for? "என்னுக் கின்னும் பெருக்கின்றதே" (திருக்கோ.121).

[ஏன் → என் → என்னு + கு.]

என்னுங்காட்டில் *eṉṉuṅ-kāṭṭil,* இடை. (conj.) ***என்ப் தைக்காட்டிலும்*** (ஈடு.); more than saying that.

[என் → என்னுதல் = சொல்லுதல். என்னும் + காட்டில் - என்னுங்காட்டில் (கொ.வ.) காண்கிலும் → காண்டிலும் → காட்டிலும் → காட்டில்.]

என்னும்¹ *eṉ-ṉ-um,* பெ. (n.) ***என்று சொல்லப்படுவது;*** thus called, known as, such, that. (சேரநா.).

ம. என்னும்.

[என் + உம் - என்னும் (கு.வினையா.பெ.).]

என்னும்² *eṉ-ṉ-um,* கு.வி.எ. (adv.) 1. ***யாவும்*** (குறள்.430,உரை.); all. 2. ***சிறிதும்;*** even a little. "என்னு மிமையாள்" (சீவக.1658).

[இல் → இல்லும் → இன்னும் → என்னும். இல் = சிறிது. எல் = எழுதல், உயர்தல், பெருகுதல், நிறைதல், எல்லாம்.]

என்னென்ன *eṉṉeṉṉa,* கு.வி.எ. (adv.) ***எதுயெது, எவையெவை;*** Whatever. உமக்கு என்னென்ன வேணும்?

தெ. ஏதைனா.

[என்ன + என்ன.]

என்னே *eṉṉē,* இடை. (int.) 1. ***என்ன;*** what? 2. ***ஓர் வியப்பு விரக்கக் குறிப்பு;*** what, an exclamation of pity, wonder or surprise. "என்னேயெனே கருணை விளையாட்டிருந்தவாறு" (தாயு.எங்குநிறை.2).

ம. என்னே; க. என்ட; தெ. எவிதி.

[என் + ஏ - என்னே. 'ஏ' வினா, வியப்பிடைச்சொல்.]

என்னை¹ *eṉṉai,* பெ. (n.) 1. ***என் தந்தை;*** my father; "என்னைக்குக் கலத்தொடு செல்வதோ" (கலித்.108). 2. ***என் தலைவன்;*** my master, my lord. "நிரையொடுவ ருஉ மென்னைக்கு" (புறநா.262). 3. ***என் தாய்;*** my mother. "நின்னெஞ்ச மென்னை நெஞ்சாகப் பெறின்" (கலித்.107).

[என் + ஐ - என்னை. என் = என்னுடைய. ஐ = தலைவன், தந்தை, தாய்.]

என்னை² *eṉṉai,* வி.பெ. (inter.pron.) ***என்ன¹*** பார்க்க; see *eṉṉa¹.*

ம. என்னே; க. என்னம், நன்னன்னு; **கோத.** என்னே; **து.** எனன்; தெ. நன்னு, நனு, நன்; நா. ஆனான்; கூ. நன்னு.

[என்னே → என்னை. 'ஐ' சொல்லாக்க ஈறு.]

என்னோ *eṉṉō,* இடை. (int.) ***என்னே*** பார்க்க; see *eṉṉē.*

ம. என்னோ.

[என்னே → என்னோ.]

என்னோரும் *eṉṉōrum,* பெ. (n.) 1. ***எத்தன்மையோரும்;*** persons of whatever kind. 2. ***எல்லாரும்;*** all persons. "என்னோருமறிய வெடுத்துரைத்தன்று" (பு.வெ. 9,6,கொளு.).

[என் → என்னர் (எத்தகையர்) → என்னோர் + உம்.]

என *eṉa,* இடை. (part.) 1. ***என்று***[1-2] பார்க்க; see *eṉṟu*[1-2]. (தொல்.சொல்.260). 2. ***ஓர் உவமவுருபு;*** a sign of comparison. புலியெனப் பாய்ந்தான். (உ.வ.).

ம. என.

[என் → என.]

எனது *eṉadu,* பெ. (n.) ***என்னுடையது;*** mine.

[என் + அது - எனது. 'அது' ஆறனுருபு.]

எனவ *eṉava,* பெ. (n.) ***என்னுடையவை;*** mine, elliptical equivalent to 'my' with a substantive supplied from the context. "எனவ கேண்மதி" (புறநா.35).

[என் + அவை - எனவை.]

எனவே *eṉavē,* இடை. (conj.) 1. ***அவ்வாறு சொன்னதால்;*** when it was so said; therefore. 2. ***போல; ஒன்றை ஒத்திருப்பது;*** just like.

ம. எனவெ, எனவே.

[என + ஏ - எனவே. 'ஏ' தேற்றேகாரம்.]

எனா *eṉā,* இடை. (part.) ***ஒரெண்ணிடைச்சொல்*** (நன்.428); connective of things enumerated as in நிலனெனா நீரெனா.

[என் → என்றா → எனா.]

எனாது *eṉādu,* பெ. (n.) ***எனது*** பார்க்க; see *eṉadu.*

[என் + அது - எனது → எனாது. அது → ஆது என நெடு முதலாகியது செய்யுள் திரிபு.]

எனில் *eṉil,* இடை. (conj.) ***என்று சொன்னால்;*** if it is said so.

[என் + இல் - எனில். 'இல்' இடப் பொருளில் வந்த பொருள் நிறைச் சொல்லீறு. எனில் = என்று கூறிய விடத்து.]

எனின் *eṉiṉ,* இடை. (conj.) 1. ***என்று சொல்லின்;*** if (it is) said so. 2. ***என்கையால்;*** in consideration of. "அவையவை முனிகுவமெனினே" (பொருந.107).

[என் + இல் - எனில் → எனின். இல் → இன் (திரிபு).]

எனினும் *eṉiṉum,* இடை. (conj.) 1. ***என்ற சொல்லினும்;*** even if (it is said so). 2. ***ஆனாலும்;*** even if (it is so); nevertheless. "யாவரே யெனினும்" (கந்தபு.அரசு.5).

[என் + இன் + உம்.]

எனும்[1] *eṉum,* கு.வி.எ. (adv.) ***சிறிதும்;*** even a little. "வழுவெனும் பாரேன்" (சிலப்.16,69).

[இன்னும் → என்னும் → எனும். இல் → இன் (சிறிது).]

எனும்[2] *eṉum,* கு.வி.எ. (adv.) ***என்கின்ற;*** known as, said as.

ம. எனும்.

[என் → என்னும் → எனும்.]

எனை[1] *eṉai,* கு.வி.எ. (adv.) ***என்ன, எந்த, எத்தகைய;*** what, why.

[என் → எனை.]

எனை[2] *eṉai,* கு.பெ.எ. (adj.) ***எல்லாம்;*** all. "சுட்டுணர் வெனப்படுவ, தெனைப் பொருளுண்மைகாண்டல்" (மணி.27,62) - கு.வி.எ. (adv.) ***எவ்வளவு;*** however much. "எனைப்பகை யுற்றாரும்" (குறள்.207).

[அல் → அனை → எனை.]

எனைத்து[1] *eṉaittu,* கு.வி.எ. (adv.) ***எனை***[2] பார்க்க; see *eṉai*[2]. "எனைத்துள கேட்பன துன்பம்" (கம்பரா. பள்ளி.60). "எனைத்து நினைப்பினும் காயார்" (குறள்.) (வே.க.105).

[அல் → அனை → அனைத்து.]

எனைத்து[2] *eṉaittu,* வி.பெ. (inter.pron.) ***எத்தன்மைத்து*** (யாழ்.அக.); of what kind?

[எ → என் → எனை → என்னைத்து.]

எனைத்துணை *eṉai-t-tuṇai,* வி.எ. (adv.) ***எவ்வளவு;*** how much. "எனைத்துணை" (குறள்.144).

[எனை + துணை - எனைத்துணை.]

எனைத்தும் *eṉaittum,* பெ. (n.) ***முழுதும்;*** all the whole. "சூர்கிளை யெனைத்தும் பொன்றும்" (கந்தபு.மேரு.78).

[அல் → எல் → என் → எனை → எனைத்து + உம்.]

எனைப்பல *eṉai-p-pala,* கு.பெ.எ. (adj.) ***எத்தனையோ பல;*** how many, very many. எனைப்பல தீர்த்தங்கட்கும் (திருவிளை.தீர்த்த.11).

[எல் → என் → எனை + பல.]

எனையதும் *eṉaiyadum,* கு.வி.எ. (adv.) ***சிறிதும்;*** even a little. "நினையாது கழிந்த வைக லெனைய தூஉம் வாழலென்" (அகநா.29).

[இல் → எல் → என் → எனை + அது + உம்.]

எனையவன் *eṉaiyavaṉ,* சு.பெ. (pron.) ***எனைவன்*** பார்க்க; see *eṉaivaṉ.*

எனையன் *eṉaiyaṉ,* சு.பெ. (pron.) ***எனைவன்*** பார்க்க; see *eṉaivaṉ.*

[எனையவன் → எனையன்.]

எனைவர் *eṉaivar,* சு.பெ. (pron.) ***யாவர்; எனைவராயினும்*** (பெருங்.வத்தவ.3,22); who ever; whatever persons.

[எனை + அவர்.]

எனைவன் *eṉaivaṉ,* சு.பெ. (pron.) ***யாவன்;*** who, what person.

தெ. எவர, எவரு.

[எனை + அவன் - எனையவன் → எனைவன்.]

ஏ

ஏ[1] *ē, **தமிழ் வண்ணமாலையில் எட்டாம் உயிரெழுத்து, முன்னண்ணக் குவியாச் செறிவு உயிர்நெடில்;*** eighth letter and vowel of the Tamil alphabet, the half-close front tense unrounded vowel in Tamil.

[இஅ → ஏ.]

அஇ → ஐ ஆகவும், அஉ → ஔ ஆகவும் இருகுறில் கூட்டுயிரொலி உயிர்நெடில்களாக உயிர்பெற்றதைப்போன்று, இஅ → ஏ எனவும் உஅ → ஓ எனவும் கூட்டுயிர் நெடில்கள் தோன்றின. ஒ.நோ. இய = செல். இய → ஏ (ஏகு) = செல். உவ = உவத்தல், மகிழ்வு. உவ → ஓ (ஓசை) மகிழ்வு. ஏ, ஓ என்னும் கூட்டுயிர்கள் இயல்பு வினையடிகளைத் தோற்று விப்பதில்லை. இயலுதல் - ஏலுதல் என்றவாறு 'ஏல்' திரிபு வினையடியாதலன்றி இயல்பு வினையடியாகாதென்க. ஒரு சார் ஒலிக்குறிப்பு நெட்டெழுத்தாகி ஆக்கச்சொல்லாதலே மிகுதியாம்.

ஏ[2] *ē*, பெ. (n.) 1. ***உயர்ச்சி;*** height, elevation. 2. ***மேனோக்குகை;*** looking upward. "கார்நினைந் தேத் தரு மயிற்குழாம்" (சீவக.87). 3. ***அடுக்கு*** (தொல். சொல்.305.உரை); pile, row, tier, series. 4. ***பெருக்கம்;*** increase, abundance, "ஏ பெற்றாகும்" (தொல்.சொல். 305). 5. ***இறுமாப்பு;*** pride, self-conceit, arrogance. "ஏக்கழுத்த நாணால்" (பரிபா.7,55). 6. ***உழையிசையின் எழுத்து*** (திவா.); letter of the 4th note of the gamut usu. denoted by ம.

ம., க. ஏ, எத்தர. *L, E* ex, *Gr.* ec, ex, exo. *Fr., Sp.* ex out (Pf. f.) up. out.

[உ → எ → ஏ.]

ஏ[3] *ē*, பெ. (n.) 1. ***எய்யுந்தொழில்;*** shooting, as an arrow. "ஏமாண்ட நெடும்புரிசை" (பு.வெ.5.5). 2. ***துன்பம்;*** suffering, affliction. 3. ***அம்பு;*** arrow. "ஏமுத லாய வெல்லாப் படைக்கலத் தொழிலுமுற்றி" (சீவக.370).

[எய் → ஏ.]

ஏ[4] *ē*, இடை. (part.) 1. ***பிரிநிலையேகாரம்;*** suffix having the force of (a) disjunction, as அவருள் அவனே சொன்னான்... வினாவேகாரம்; (b) interrogative as... நீயே கொண்டாய்; (c) எண்ணேகாரம்; copulative, as... நிலமே நீரே தீயே; (d) தேற்ற வேகாரம்; emphasis, as in அது மெய்யே; (e) ஈற்றசை யேகாரம்; terminative expletive, as சென்னைப் பட்டணத்திலே (இ.வ.). 2. ***இசைநிறை யேகாரம்*** (நன்.432); poetic expletive for completing the metre, as "ஏயே இவளொருத்தி பேடி".

ம., க. ஏ.

['ஏ' ஒலிக்குறிப்பு நெட்டெழுத்தாயினும் தொடராட்சியில் குறித்த பொருளை வெளிப்படவுணர்த்தும் இடைச்சொல்லாகப் பொருட்பாட்டுப்புடைபெயர்வு பெறுதலான் ஏகாரம் பல்வேறு பொருளுணர்த்துவதாயிற்று. பொருளுணர்த்தாத ஏகாரம் இசைநிறை, அசைநிலைகளாகும்.]

ஏ[5] *ē*, இடை. (int.) 1. ***ஒரு விளிக்குறிப்பு;*** exclamation inviting attention. "ஏயெம் பெருமான்" (தேவா.746,7). 2. ***ஓர் இகழ்ச்சிக் குறிப்பு;*** exclamation of contempt.

க., ம. ஏ.

[ஈ → ஏ, ஒலிக்குறிப்பு, உணர்வு வெளிப்பாட்டு இடைச்சொல் லாயிற்று.]

ஏ[6] *ē*, பெ. (n.) ***இரண்டு மாத்திரையளவுள்ள நேரம்;*** measure of time, two māttirais. "ஏ யெனும் மாத்திரத்து எற்றுகின்றிலன்" (கம்பரா.).

[ஏ - ஒலிக்குறிப்பாகி இரண்டு மாத்திரையளவைக்குறித்தது.]

ஏ[7] *ē*, பெ. (n.) ***கருப்பு;*** blackness.

[இல் → ஏ.]

ஏஎ *ēe*, பெ. (n.) 1. ***இரக்கக்குறிப்பு;*** exclamation of pity. "ஏஎ பாவம்" (சீவக.290). 2. ***வடமொழியாளரின் மறையாகிய சாமம்;*** Sama veda.

[ஏ - இரக்கத்தை மிகுவிக்கும் குறிப்புச்சொல் பிற்காலத்தில் மனத்தை நெகிழ்விக்கும் பண்ணோசை குறித்துச் சாம மறைக்கு ஆகுபெயராயிற்று.]

ஏஏ *ēē*, பெ. (n.) ***இகழ்ச்சிக் குறிப்பு;*** interjection denoting displeasure, disapproval, contempt.

[ஏ → ஏஏ: அடுக்கிவந்த ஒலிக்குறிப்பு உணர்வுவெளிப்பாட்டு இரட்டைக்கிளவியாயிற்று.]

ஏக்கப்பேர் *ēkkappēr*, பெ. (n.) ***புறப்பெயர்;*** bad name, nick name, infamy, ill-fame.(சேரநா.).

ம. ஏக்கப்பேறு.

[ஏக்கம் + பெயர் - ஏக்கப்பெயர் → ஏக்கப்பேர் = வருத்தம் மிகுவிக்கும் பெயர், இழிவுப்பெயர்.]

ஏக்கம் *ēkkam*, பெ. (n.) 1. ***விரும்பியது பெறாமையால் வரும் வருத்தம்;*** despondency, depression of spirits. "வானவ ரேக்கமுஞ் சிதைய" (கந்தபு.துணைவர் வரு.30). 2. ***அச்சம்;*** fear, fright, panic. "ஏக்கம் ... அமராபதிக்குஞ்செய் மதுராபுரி" (மீனாட்.பிள்ளைத்.77). 3. ***ஆசை;*** craving, eager, desire. 4. ***மனமயக்கம்;*** stupor caused by grief. 5. ***அதிர்ச்சி;*** trembling of the limbs, as in paralytic affections - trepidation.. 6. ***திடுக்கிடுதல்;*** sudden fear. 7. ***சோர்வு;*** languishing. 8. ***பசி;*** hunger. (சேரநா.).

ம. ஏக்கம்.

[ஏங்கு → ஏக்கம்.]

ஏக்கம்பிடி-த்தல் *ēkkam-piḍi-*, 4.செ.குன்றாவி. (v.i.) ***வருத்த மிகுதல்;*** to be in low spirits; to languish, used impers. மகன் செத்ததினாலே அவளுக்கு ஏக்கம்பிடித்தது (உ.வ.).

[ஏங்கு → ஏக்கம் + பிடி.]

ஏக்கழுத்தம் *ē-k-kaḻuttam,* பெ. (n.) 1. ***தலையெடுப்பு;*** superciliousness, strutting, lit., stretching the neck. "காதிரண்டு மில்லாதா னேக்கழுத்தஞ் செய்தலும்" (சிறுபஞ்.5). 2. ***இறுமாப்பு;*** arrogance, pride. 3. ***வீற்றிருக்கை*** (சூடா.); sitting majestically.

[ஏ + கழுத்தம். ஏ = உயர்வு. கழுத்து + அம் - கழுத்தம் (கழுத்து நிற்கும் நிலை).]

ஏக்கழுத்து *ē-k-kaḻuttu,* பெ. (n.) ***ஏக்கழுத்தம்*** பார்க்க; see *ē-k-kaḻuttam* "மோட்டுடைப்போர்வையோ டேக்கழுத்தம்." (ஆசாரக்.92).

[ஏ + கழுத்து. ஏ = உயர்வு, நிமிர்வு. ஏக்கழுத்து = நிமிர்ந்த கழுத்து, இறுமாப்பு.]

ஏக்கறவு *ēkkaṟavu,* பெ. (n.) ***விருப்பம்;*** desire, lust. "ஒருத்தி முலைக்கிடந்த வேக்கறவால்" (கம்பரா. மாயாசன.83).

[ஏங்கு+ உறு - ஏங்குறு → ஏக்குறு → ஏக்குறவு → ஏக்கறவு.]

ஏக்கறு[1]-தல் *ēkkaṟu-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***இளைத்து இடைதல்;*** to suffer from weariness, to languish... "கடைக்கணேக்கற" (சீவக.1622). 2. ***ஆசையால் தாழ்தல்;*** to bow before superiors, as one seeking some favour at their hands. "ஏக்கற்றுங் கற்றார்" (குறள்.395).

தெ. ஏகரு.

[ஏங்கு + உறு - ஏங்குறு → ஏக்குறு → ஏக்கறு. 'உறு' துணை வினை 'அறு' எனத் திரிவது கூட்டு வினைகளில் இயல்பு.]

ஏக்கறு[2]-தல் *ēkkaṟu,* 4.செ.குன்றாவி. (v.t.) ***விரும்புதல்;*** to desire. "மதியேக்கறூஉ மாசறு திருமுகத்து" (சிறுபாண்.157).

[ஏக்கறு[1] - ஏக்கறு[2].]

ஏக்கன் போக்கன் *ēkkaṉ-pōkkaṉ,* பெ. (n.) ***ஒன்றுக்குமுதவாதவன்*** (யாழ்ப்.); man of no consequence, worthless fellow.

[இயங்கு → இயக்கு. இயக்குபோக்கு (இணைமொழி) → ஈக்குபோக்கு → ஏக்குபோக்கு → ஏக்கன்போக்கன் - கண்டபடி திரிபவன். ஏக்கு → ஏக்கன். போக்கு → போக்கன்.]

ஏக்கிபோக்கி *ēkki-pōkki,* பெ. (n.) ***ஒன்றுக்குமுதவாதவள்*** (யாழ்ப்.); woman of no consequence.

[ஏக்கு → ஏக்கி. ஏக்கிபோக்கி (இணைமொழி).]

ஏக்கு *ēkku,* பெ. (n.) ***ஏக்கம்;*** desire, longing.

[ஏங்கு → ஏக்கு.]

ஏக்கெறி[1]-தல் *ēkkeṟi-,* 2.செ.கு.வி. (v.i.) ***கவலைநீங்குதல்;*** to cast away care, get rid of anxiety.

[ஏங்கு → ஏக்கு + அறு-. ஏக்கறு → ஏக்கறி → ஏக்கெறி.]

ஏக்கெறி[2]-தல் *ēkkeṟi,* 2.செ.கு.வி. (v.i.) ***அச்சமுறுதல்;*** to be frightened. "ஏக்கெறிந் துலகெங்கு மிரைத்திட" (இரகு.ஆற்று.3).

[ஏங்கு → ஏக்கு + உறு - ஏக்குறு → ஏக்கறு → ஏக்கெறு → ஏக்கெறி.]

ஏக்கை *ēkkai,* பெ. (n.) ***இகழ்ச்சி*** (சங்.அக.); contempt, abuse.

[ஏங்கு → ஏங்கை → ஏக்கை.]

ஏகப்பட்ட *ēga-p-paṭṭa,* கு.வி.எ. (adj.) 1. ***மிகுதியான;*** plenty; numerous. அவனிடம் ஏகப்பட்ட பணம் உள்ளது. 2. ***இகப்பட்ட*** பார்க்க; see *igappaṭṭa.*

[இகப்பட்ட → ஏகப்பட்ட. இகத்தல் = மிகுதல், பெரிதாதல்.]

ஏகல்[1] *ēgal,* பெ. (n.) ***உயரம்*** (யாழ்ப்.); height.

[ஏ → ஏகல்.]

ஏகல்[2] *ēgal,* பெ. (n.) ***நடத்தல்;*** walking.

[இய → ஏக → ஏகல்.]

ஏகாரம் *ēgāram,* பெ. (n.) ***'ஏ' என்னும் நெட்டுயிரெழுத்து;*** letter or sound 'ē'

ம. ஏகாரம்.

[ஏ + காரம் - ஏகாரம். 'காரம்' எழுத்துச் சாரியை.]

ஏகாலி *ēgāli,* பெ. (n.) ***சலவைத்தொழிலாளி;*** washerman.

[ஈரங்கொல்லி → ஈங்காலி → ஏகாலி.]

ஏகியன் *ēgiyaṉ,* பெ. (n.) ***தோழன்*** (யாழ்.அக.); friend.

[இகுளன் → இகியன் → ஏகியன் (கொ.வ.).]

ஏகு-தல் *ēgu-,* 7.செ.கு.வி. (v.i.) 1. ***போதல்;*** to go, pass. "தாய்த் தாய்க்கொண் டேகுமளித்திவ் வுலகு" (நாலடி.15). 2. ***நடத்தல்*** (பிங்.); to walk. 3. ***கழலுதல்;*** to become loose, to slip off. "நல்வளையேக" (பு.வெ.11, பெண்பாற்.12).

ம. ஏகுக; தெ. ஏகு.

[இய → ஏ → ஏகு.]

ஏகை *ēgai,* பெ. (n.) ***வயிரக் குற்றங்களு ளொன்று;*** streak, a fault in a diamond. "ஏகையுநீங்கி" (சிலப்.14,181).

[இல் → ஈல் → ஈகு → ஏகு → ஏகை.]

ஏங்கல் *ēṅgal,* பெ. (n.) 1. ***பேரொலி செய்தல்; ஆரவாரிக்கை;*** shout, clamour. "ஈட்டிய சமபல வீரரேங்கலால்" (இரகு.திக்குவி.251). 2. ***மயிற்குரல்*** (பிங்.); screaming, as of a peacock. 3. ***யாழ் நரம்பினோசை*** (பிங்.); sound, as of the strings of a lute. 4. ***அழுகை*** (பிங்.); weeping. 5. ***குழந்தைகட்கு வருங்காசநோய்;*** asthma in children.

ம. ஏங்ஙல்.

[ஏங்கு → ஏங்கல்.]

ஏங்கிப்போ-தல் *ēṅgi-p-pō-,* 8.செ.கு.வி. (v.i.) ***ஏக்கம் பிடித்தல்;*** to be in low spirits, to languish, used impers. தாயைப் பிரிந்ததனால் குழந்தை ஏங்கிப் போயிற்று. (உ.வ.).

[ஏங்கு → ஏங்கி + போ.]

ஏங்கு-தல் *ēṅgu-,* 7.செ.கு.வி. (v.i.) 1. ***ஒலித்தல்;*** to sound, as a lute; to roar; to scream, as a peacock. 2. ***இளைத்தல்;*** to pine, languish. "தாழ்ந்து தளர்ந் தேங்கி" (சீவக.2012). 3. ***மனம் வாடுதல்;*** to long for, yearn after. "மக்கட்கென்றேங்கி" (நாலடி.130). 4. ***அழுதல்*** (சூடா.); to weep, cry, wail, sob. 5. ***அஞ்சுதல்;*** to be in fear, to be panic-stricken. "நேர்லன் படையை நோக்கி யேங்கினர்" (கந்தபு.சூரபன்.வதை.50). 6. ***இரங்கல்;*** it is said of a devotee whose mind is always longing for God, as in ... "ஏங்குதே நெஞ்ச மையோ" (தாயுமான.). (செ.அக.).

க. ஏங்கு; **பட.** ஏங்கு; **ம.** ஏங்குக; **கோத.** ஏங்; **தெ.** ஏக்கு, வெக்கு; **பர்.** நேஞ்ஞ; **கேண்.** நேககானா; **கூ.** நேஞ்ச; **குரு.** நாக்னா; **மால்.** நகாயெ.

[ஏ → ஏங்கு → ஏங்கு-தல்.]

ஏங்குறல் *ēṅguṟal,* பெ. (n.) ***கவலையடைதல்;*** state of being sorrowful or thoughtful. (சா.அக.).

[ஏங்கு + உறல்.]

ஏச்சம் *ēccam,* பெ. (n.) ***ஒருங்கிணைதல், கூடியிருத் தல், தொடர்பு, கூட்டு*** (சேரநா.); connection, tie.

ம. ஏச்சம்.

[இயை → இயைத்து → இயைச்சு → ஏச்சு → ஏச்சம் (கொ.வ.).]

ஏச்சு *ēccu,* பெ. (n.) 1. ***வசவு;*** abuse, insult, calling names. 2. ***பழிப்பு;*** reproach. "எமர்கள் குடிக்கோ ரேச் சுக்கொ லாயிடுங் கொலோ" (திவ்.பெரியாழ்.3,8,2). 3. ***புறக்கணிப்பு;*** negligence. 4. ***புறங்கூறுதல்;*** backbiting.

ம. ஏச்சு; **தெ.** ஏசு.

[ஏ → ஏச்சு.]

ஏச்சுக்கட்டு-தல் *ēccu-k-kaṭṭu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***சேர்த்துக் கட்டுதல்; இணைத்துக்கட்டுதல்;*** tying together. (சேரநா.).

ம. ஏச்சுக்கெட்டு.

[இயை → இயைத்து → இயைச்சு → ஏச்சு + கட்டு.]

ஏச்சுக்கட்டை *ēccu-k-kaṭṭai,* பெ. (n.) ***மாட்டுவண் டியை நிறுத்தப் பயன்படுத்தும் கட்டை;*** a kind of device serving as a brake of a bullock-cart. (சேரநா.).

ம. ஏச்சக்கட்டை.

[இயைத்து → இயைச்சு → ஏச்சு + கட்டை.]

ஏச்சுக்காட்டு-தல் *ēccu-k-kāṭṭu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***பழிப்பைச் சுட்டிக் காட்டிப் பேசுதல்*** (இ.வ.); to reproach pointing to one's fault, twit.

[ஏ → ஏச்சு + காட்டு.]

ஏச்சுரை *ēccurai,* பெ. (n.) ***பழிப்புரை;*** opprobrium, calumny. "ஏதிலார் தாங்கூறு மேச்சுரையுங் கேட்டேங்கி" (சிலப்.29, அடித்தோழியரற்று).

[ஏ → ஏச்சு + உரை.]

ஏச்சோறு *ēccōṟu,* பெ. (n.) ***தண்டச்சோறு;*** food given grati.. "ஏச்சோறு பொங்கி யிட்டே" (ஆதியூரவதானி.3).

[எள்ளல் → எள் + சோறு - எச்சோறு → ஏச்சோறு.]

ஏசல் *ēcal,* பெ. (n.) 1. ***இகழ்கை;*** reproaching, abusing. "ஏசலொப்பன கோகிலப் பறவைகளிசைத்தல்" (கந்தபு. நாட்டு.44). 2. ***பழிமொழி*** (சூடா.); slander. 3. ***ஒருவ ரையொருவர் ஏசிக்கூறும் பாட்டு;*** poem or song in which each of two parties extols himself and depreciates the other. "சிந்து கலித்துறை ளேசல்" (திருப்பு.198).

ம. ஏச்சல் (குற்றம் சுமத்துதல்).

[ஏ → ஏத்து → ஏச்சு → ஏச்சல் → ஏசல். ஏத்து = பிறர்மீது பழி சுமத்து.]

ஏசறவு[1] *ēcaṟavu,* பெ. (n.) 1. ***விருப்பம், அன்பு;*** desire, longing. "தாமுற்ற வேசறவைத் தோழியர்முன் பேசுவார்" (பதினொ.ஆளு.திருவுலா.138). 2. ***போற்றி வழிபாடு;*** praise, adoration. "முனிசண்முகனை யேசறவு பேசிநின்று" (சிவதரு.பாயி.11).

[ஆசை + உறு - ஆசையுறு → ஆசுறு → ஏசறு → ஏசறவு (கொ.வ.).]

ஏசறவு[2] *ēcaṟavu,* பெ. (n.) 1. ***பழித்தல்;*** slander. 2. ***இழிவுபடுத்துதல்;*** reproaching. 3. ***துன்பம்; துயரம்;*** compunction, penitence, regret.

[ஏ → ஏத்து → ஏச்சு → ஏசு. ஏசு + உறு - ஏசுறு → ஏசறவு.]

ஏசறு[1]-தல் *ēcaṟu-,* 4.செ.கு.வி. (v.i.) ***ஆசைப்படுதல்;*** to long for desire, "வரைத்தோள் கூடுதற் கேசற்ற கொம் பினை" (பதினொ.ஆளு.திருவந்.45).

[ஆசை + உறு - ஆசையுறு → ஆசுறு → ஏசறு.]

ஏசறு[2]-தல் *ēcaṟu-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***பழித்தல்;*** to blame, reproach. "ஏசறு மூரவர் கவ்வை" (திவ்.திரு வாய்.5,3,1). 2. ***வருத்த முறுதல்;*** to be troubled, to feel sorry.

[ஏ → ஏத்து (பழிசுமத்து) → ஏச்சு → ஏசு + உறு - ஏசுறு → ஏசறு.]

ஏசி[1] *ēci,* பெ. (n.) ***இகழ்ச்சி*** (அக.நி.); contempt.

[எள் → ஏள் → ஏசு → ஏசி.]

ஏசி[2] *ēci,* பெ. (n.) ***கிளி;*** parrot. (அக.நி.).

குரு. எடெர்.

[விள் → எள் → ஏளி → ஏசி.]

ஏசிக்காட்டு-தல் *ēci-k-kāṭṭu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***ஏச்சுக் காட்டு*** பார்க்க; see *ēccukkāṭṭu.*

[ஏசி + காட்டு.]

ஏசு[1]-தல் *ēcu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***இகழ்தல்;*** to abuse, reproach, rail at, insult. "ஏசவெண்டலையிற் பலிகொள் வதி லாமையே" (தேவா.425,6).

தெ. ஏசு.

[எள் → ஏள் → ஏசு.]

ஏசு²-தல் *ēsu-*, 5.செ.குன்றாவி. (v.t.) ***செலுத்துதல்;*** to hurl, dart. "கொல்லம் பேசி" (தேவா.380.6).

[எய் → ஏ → ஏவு → ஏசு.]

ஏசு³ *ēsu*, பெ. (n.) ***இயேசு*** பார்க்க; see *iyēsu*. "ஏசுநாம மொன்றை நம்புவீர்" (கிறித்.).

[இயேசு → ஏசு.]

ஏசு⁴ *ēsu*, பெ. (n.) ***குற்றம்*** (திவா.); fault, blemish.

[மாசு → ஆசு → ஏசு (கொ.வ.).]

ஏட்சி¹ *ēṭci*, பெ. (n.) ***தோற்றம்;*** "ஏட்சிதொட் டெண்ண" (சினேந்.காண்டப்.3); rising of a heavenly body.

[எழுச்சி → ஏட்சி (கொ.வ.).]

ஏட்சி² *ēṭci*, பெ. (n.) ***உறுதி;*** stability, firmness. "ஏட்சியின் விளக்கிடு மென்றனிச் சித்தே" (அருட்பா.vi,அருட்பெருஞ்சோதியக).

[ஏல் + சி - ஏற்சி → ஏட்சி (கொ.வ.).]

ஏட்டன் *ēṭṭaṉ*, பெ. (n.) ***மேலோன்;*** virtuous man.

[ஏ → ஏட்டன். (மு.தா.77).]

ஏட்டிக்குப்போட்டி *ēṭṭikku-p-pōṭṭi*, பெ. (n.) ***நேருக்குமாறான செயல்*** (கொ.வ.); logomachic retort or tit for tat.

தெ. ஏடிகிபோடி.

[ஏண் → ஏட்டு → ஏட்டி + கு + போட்டி - ஏட்டிக்குப்போட்டி. ஏண் = நேரானது, செவ்விது.]

ஏட்டிற்கல்வி *ēṭṭiṟkalvi*, பெ. (n.) ***ஆசிரியர் இல்லாக் கல்வி;*** learning not by teacher, self-education.

[ஏடு + இல் - ஏடில் + கல்வி - ஏட்டிற்கல்வி (கொ.வ.) = நூலின் துணைமட்டும் கொண்டு அதில் உள்ளதைத் தனக்குப் புலப்பட்டவாறு விளங்கிக் கொள்ளும் படிப்பு. 'இல்' ஏழன் உருபு.]

ஏட்டுச்சுரைக்காய் *ēṭṭu-c-curai-k-kāy*, பெ. (n.) 1. ***பட்டறிவோடு கூடாத கல்வியறிவு;*** book-learning that is devoid of practical wisdom. "ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது" (பழ.). 2. ***பட்டறிவு இன்றி நூலறிவுமட்டு முள்ளவ-ன்-ள்;*** person with such book learning. அவனொரு ஏட்டுச்சுரைக்காய். அவனால் எதுவும் செய்து காட்ட முடியாது. (உ.வ.).

[ஏடு + சுரை + காய் - ஏட்டுச்சுரைக்காய் = ஏட்டில் வரையப் பட்ட சுரைக்காய் ஓவியம். ஏட்டுச் சுரைக்காய் - பிறிது பொருளுணர்த்திய குறிப்புத்தொடர்.]

ஏட்டுப்படிப்பு *ēṭṭu-p-paḍippu*, பெ. (n.) (உலக) ***பட்டறிவு இல்லாத கல்வி;*** book-learning without practical knowledge.

[ஏடு + படிப்பு - ஏட்டுப்படிப்பு = ஏட்டில் அல்லது நூலில் உள்ளவாறு படித்தறிந்த கல்வி.]

ஏட்டுப்பொறி *ēṭṭu-p-poṟi*, பெ. (n.) ***ஓலைச்சுவடியில் பதித்த முத்திரை;*** seal set on a letter written on palmyra leaf. "ஏட்டுப் பொறி நீக்கி மெல்லென விரித்து" (பெருங்.வத்தவ.10,109).

[ஏடு + பொறி - ஏட்டுப்பொறி.]

ஏட்டுவினை *ēṭṭu-viṉai*, பெ. (n.) ***ஓலையேட்டி லெழுதுந் தொழில்;*** occupation as writer on palmyra leaves. "ஏட்டு வினைக் கணக்கன்" (பெருங்.வத்தவ.10,95).

[ஏடு + வினை - ஏட்டுவினை.]

ஏட்டை¹ *ēṭṭai*, பெ. (n.) 1. ***வறுமை;*** poverty, necessitous state or condition. "ஏட்டைப் பருவத்து மிற்பிறந்தார் செய்வன" (நாலடி.358). 2. ***தளர்வு;*** weakness. 3. ***இளைப்பு;*** drooping, pining. "வெண்ணிணத்த செந்தடிக்கே யேட்டைப்பட்டு" (சீவக.1552).

[இள் → இட்டை → ஏட்டை.]

ஏட்டை² *ēṭṭai*, பெ. (n.) 1. ***இளமை;*** youthfulness. 2. ***இளங்கதிர்;*** young ears of corn.

[இள் → இட்டை → ஏட்டை.]

ஏட்டை³ *ēṭṭai*, பெ. (n.) ***விலங்கேற்றின் பெயர்*** (திவா.); male of animals, as of the buffalo.

[ஏறு → ஏற்றை → ஏட்டை (கொ.வ.).]

ஏட்டை⁴ *ēṭṭai*, பெ. (n.) ***விருப்பம்*** (பிங்.); intense desire.

[இள் → இட்டை → ஏட்டை (கொ.வ.).]

ஏட்டைப்படல் *ēṭṭai-p-paḍal*, பெ. (n.) ***இளைத்தல்;*** reduce in growing thin.

[ஏட்டை + படல்.]

ஏட்டைப்பருவம் *ēṭṭai-p-paruvam*, பெ. (n.) ***இளம் பருவம்;*** period of youth; youthhood. 2. ***தளர்ந்த பருவம்;*** helpless state.

[ஏட்டை + பருவம்.]

ஏட *ēḍa*, இடை. (part.) ***தோழனையும், தாழ்ந்தோனையும் விளிக்குஞ்சொல்;*** exclamation addressed familiarly to a friend or an inferior.

[ஏல → ஏழ → ஏட. எல்லா, எலா பார்க்க; see ellā, elā.]

கலந்த அன்பின் வெளிப்பாடு புலப்படுத்தும் எல்லா எலா என்னும் கெழுதகைப் பொதுச் சொற்கள் உலகவழக்கில் ஏட, ஏடா, அடா, அடே எனத்திரிந்தன. தோழனை விளித்த இதே சொல் பணியாளரையும் விளிக்கப் பயன்பட்டதால் பழந் தமிழர் பணியாளரை இழிவாக நடத்தவில்லை என அறியலாம்.

ஏடகணி *ēḍakaṇi*, பெ. (n.) ***ஓலையீர்க்கு*** (தைலவ. பாயி.20); rib of a palm leaf.

[ஏடு + அகணி - ஏட்டகணி → ஏடகணி. ஏடு = பனையோலை. அகணி = நடுவிலிருக்கும், ஈர்க்கு.]

ஏடகப்பை *ēḍagappai*, பெ. (n.) ***ஏடு அல்லது வண்டலை வழிக்கப் பயன்படுத்து மகப்பை;*** ladle used for removing the scum of liquids, skimmer. (சா.அக.).

[ஏடு + அகப்பை.]

ஏடகம்[1] *ēḍagam*, பெ. (n.) **மதுரைக்கருகிலுள்ள திருவேடகம் என்னும் ஒரு சிவத்தலம்;** Śiva shrine near Madurai.

[ஏடு + அகம்.]

சமணர்க்கும் சம்பந்தர்க்கும் இடையே நடந்த புனல்வாதத்தில் சம்பந்தர் விட்ட ஏடு வையை நீரில் எதிர்த்துச் சென்று அக்கரையை அடைந்த இடம் ஏடகம் எனப் பெயர் பெற்றது.

ஏடகம்[2] *ēḍagam*, பெ. (n.) **செம்மறியாட்டுக்கடா;** ram.

[மேழகம் → ஏழகம் → ஏடகம்.]

ஏடகம்[3] *ēḍagam*, பெ. (n.) 1. **பூ;** flower. "ஏடகக்குலஞ் சேருமைக் குழலொடு" (திருப்பு.730). 2. **தெங்கு** (திவா.); coconut-palm. 3. **பனை** (மலை.); palmyra-palm.

[ஏடு + அகம் - ஏடகம். ஏடு = இதழ்.]

ஏடகம்[4] *ēḍagam*, பெ. (n.) **ஒரு வகைத் துணி** (சூடா.); a kind of cloth.

[ஆடை → ஆடகம் → ஏடகம்.]

ஏடகம்[5] *ēḍagam*, பெ. (n.) **பலகை** (அக.நி.); plank.

[ஏடு + அகம்.]

ஏடணை *ēḍaṇai*, பெ. (n.) **ஆசை;** ardent desire. "ஏடணையு மேவலெழுவாயு முதனூலும்" (சிவதரு. சிவஞானயோ.112).

[ஈடணை → ஏடணை (கொ.வ.).]

ஏடல் *ēḍal*, பெ. (n.) 1. **உள்ளீடு;** inner content. 2. **கருத்து** (திவா.); meaning, intention, thought.

[ஏல் = எழுதல், தோன்றுதல். ஏல் → ஏள் → ஏளல் → ஏடல். ஏடல் = உள்ளே வளர்ந்து வடிவம் பெற்ற உள்ளீடு, வித்து, கருத்து.]

ஏடலகம் *ēḍalagam*, பெ. (n.) 1. **அதிமதுரம்** (மூ.அ.); liquorice-plant. 2. **குன்றி;** crab's-eye.

[ஏடல் + அகம் - ஏடலகம்.]

ஏடலர் *ēḍalar*, பெ. (n.) **தாமரைப் பூ;** lotus flower. (சேரநா.).

ம. ஏடலர்.

[ஏடு + அலர் - ஏடலர் = அகன்ற மலர்.]

ஏடன்[1] *ēḍaṉ*, பெ. (n.) 1. **ஏழை;** poorman. 2. **செவிடன்** (யாழ்.அக.); deaf man.

க. ஏட.

[ஏழை → ஏழன் → ஏடன்.]

ஏடன்[2] *ēḍaṉ*, பெ. (n.) **தோழன்** *(யாழ்.அக.); companion, friend.*

[ஏல → ஏள → ஏடன்.]

ஏடன்[3] *ēḍaṉ*, பெ. (n.) **தொழும்பன்;** slave "ஏடர்களை யெங்கு மாண்டுகொண்ட வியல்பறிவார்" (திருவாசக.43,4).

Skt. sēṣa.

[ஏட → ஏடன்.]

ஏடாகூடம் *ēḍākūḍam*, பெ. (n.) 1. **தாறுமாறு;** perverseness, contradiction, confusion. 2. **குழப்பம் உண்டாக்கும் நிலை;** trouble. 3. **அழிவு, சிக்கல்;** danger, risk, hazard. 4. **எதிர்ப்பு;** objection, opposition, calamity.

ம. எடாக்கூடம்; க. ஏடா கோட; தெ. ஏடாகோடமு.

[ஏண் → ஏடு → ஏடம். கோண் → கோடு → கோடம். ஏடம் + கோடம் - ஏடாகோடம் → ஏடாகூடம். 'ஏண்கோண்' என்னும் யாழ்ப்பாண வழக்கை ஒப்புநோக்குக.]

ஏடாசிரியன் *ēḍāśiriyaṉ*, பெ. (n.) **ஆசான்துணையின்றி ஏட்டின் உதவி கொண்டே கற்றோன்.** (யாழ்.அக.); one who has learnt from books and not from a teacher.

[ஏடு + ஆசிரியன்.]

ஏடார்மலர் *ēḍārmalar*, பெ. (n.) **தாமரைப்பூ;** lotus flower. (சேரநா.).

ம. ஏடார்மலர்.

[ஏடு + ஆர் + மலர்.]

ஏடி[1] *ēḍi*, பெ. (n.) **கடல்பன்றி;** porpoise, dolphin.

ம. ஏடி.

[ஏடு → ஏடி (அகன்ற வடிவினது).]

ஏடி[2] *ēḍi*, பெ. (n.) **தோழி போன்ற பெண்பாலாரை விளிக்கும் விளியிடைச்சொல்;** an exclamation addressed familiarly to a woman friend or to a woman of lower status than one who addresses her.

[ஏல → ஏழ → ஏடா → ஏடி.]

ஏடு[1] *ēḍu*, பெ. (n.) 1. **பூவிதழ்** (திவா.); petal. 2. **மலர்;** flower. "ஏடமர் பொழில்" (தேவா.249,11). 3. **கண்ணிமை** (அக.நி.); eyelid. 4. **பனையோலையிதழ்;** strip of palmyra leaf for writing. 5. **ஏட்டுப்புத்தகம்;** book of palymra leaves. 6. **புத்தகவிதழ்;** leaf of a book. "எழுதாத புத்தகத்தேட்டின்". (திருமந்.2885). 7. **வாழையிலைத் துண்டு;** section of a plantain leaf cut near the base, for use as a plate. 8. **பாலின் ஆடை;** cream. "பாலினேடுதேன்" (உத்தரா.சந்திரகே.71). 9. **உடம்பு;** body. "ஏடுநிலத்தி விடுவதன் முன்னம்" (திவ். திருப்பல்.4). 10. **மேன்மை;** greatness, excellence. "ஏடுடைய மேலுலகோடு" (தேவா.539,2). 11. **குற்றம்** (திவ்.பெரியதி.4,1,7,வியா.); fault, blemish. 12. **விஞ்சையருலகம்;** celestial world.

ம. ஏடு; க. ஏடு.

[ஏ → ஏடு. ஏ = உயரம், நீட்சி, அகலம். ஏடு = அகன்று நீண்ட ஓலை, இலை, பூவிதழ், பொத்தகம், பாலாடை.]

ஏடு[2] *ēḍu*, பெ. (n.) 1. **உலகம்** (அக.நி.); world. 2. **பாதத்தின் அடிப்பக்கம்** (திவா.Ms.); sole of foot.

[இடு → ஏடு.]

ஏடு கட்டல் *ēdu-kaṭṭal,* பெ. (n.) *ஏடு படர்தல்;* formation of a scum on the surface of any liquid. (சா.அக.).

[ஏடு + கட்டல்.]

ஏடுகம்[1] *ēdugam,* பெ. (n.) *கல்லறை* (யாழ்.அக.); grave.

[ஏடு → ஏடுகம். ஒருகா. பலகைக் கற்களால் அமைத்த புதைகுழி ஆகலாம்.]

ஏடுகம்[2] *ēdugam,* பெ. (n.) 1. *மலை;* mountain. 2. *குன்று;* hill.

[ஏ → ஏண் → ஏடு → ஏடுகம்.]

ஏடுக முருங்கை *ēduga-muruṅgai,* பெ. (n.) *மலை முருங்கை;* hill moringa - Hedysarum sennoides. (சா.அக.).

[ஏடுகம்[2] + முருங்கை.]

ஏடுகோ-த்தல் *ēdu-kō-,* 4.செ.கு.வி. (v.i.) *பனை யோலைகளினாலமைந்த பொத்தக விதழ்களைக் கயிற்றிற் கோத்தல்;* to string together the leaves of a palmyra leaf-book.

[ஏடு + (கோர்) கோ.]

ஏடுகோளாளன் *ēdu-kōḷāḷan,* பெ. (n.) *கணக்கன்;* accountant. "ஏடுகோளாள ரெனையரென்றெண்ணி" (பெருங்.உஞ்சைக்.37,153).

[ஏடு + (கொள்) கோள் + ஆளன்.]

ஏடுசேர்-த்தல் *ēdu-sēr-,* 4.செ.கு.வி. (v.i.) *பனைபோ லைகளை ஏடுகளாகச் சீவிப் பொத்தகமாக்குதல்;* to make up a book of the strips of palmyra leaves.

[ஏடு + சேர்.]

ஏடுதயிர் *ēdu-tayir,* பெ. (n.) *ஆடை நீக்காத தயிர்;* curd from which cream has not been removed. (சா.அக.).

[ஏடு + தயிர்.]

ஏடுதூக்கு-தல் *ēdu-tūkku-,* 5.செ.கு.வி. (v.i.) *ஆசிரியரி டம் ஏட்டை எடுத்துப் படித்தல்;* to take up and read a book of palmyra leaves, before one's teacher.

[ஏடு + தூக்கு.]

ஏடுபடர்தல் *ēdu-paḍardal,* பெ. (n.) *ஆடையுண்டாதல்;* formation of coating on the surface of some liquids. (சா.அக.).

[ஏடு + படர்.]

ஏடுபடு-தல் *ēdu-paḍu,* 20.செ.கு.வி. (v.i.) 1. *பாலில் ஆடையுண்டாதல்;* to form as cream. 2. *பாசிபடிதல்;* to spread, as moss over the surface of water.

[ஏடு + படு.]

ஏடுவாரு-தல் *ēdu-vāru-,* 7.செ.கு.வி. (v.i.) *பொத்தக ஏடுகளாக்குதற்குப் பனையோலைகளைச் சீவுதல்;* to pare palmyra leaves into uniform strips for being made up into a book.

[ஏடு + (வார்) வாரு. வகிர் → வார் → வாருதல் = பிளத்தல்; நறுக்குதல்.]

ஏடெழுது-தல் *ēḍeḻudu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. *எழுத்துக் கற்பிக்க முதலில் ஏடு எழுதித் தருதல்;* to write out the alphabet for a child on an auspicious day with appropriate ceremonies. 2. *புதுப்பொத்தகமெழுதத் தொடங்குதல்;* to write or begin to copy a book for learning.

[ஏடு + எழுது.]

ஏடை *ēḍai,* பெ. (n.). *ஆசை* (சூடா.); ardent desire, eager longing.

[ஈடு → ஈடை → ஏடை.]

ஏண்[1] *ēṇ,* பெ. (n.) 1. *உயர்ச்சி;* exaltation greatness, excellence. "ஏணிலேனிருந்தேன்" (திவ்.பெரியதி. 1,6,1). 2. *எல்லை* (திவ்.திருவாய்.2,8,8,பன்னீ.); boundary, limit. 3. *பெருமை;* praisworthiness worth. 4. *ஆணவப்பேச்சு;* haughty words. "ஏண்பல பகர்ந் தனை' (கந்தபு.அவைபுகு.153). 5. *செருக்கு;* pride.

[ஏ → ஏண்.]

ஏண்[2] *ēṇ,* பெ. (n.) 1. *திண்ணம்;* firmness, stability. "நெஞ்சத்தே ணிகந்து" (சீவக.770). 2. *வலிமை;* strength, energy. "ஏணிலான் சேவகமும்" (சிறுபஞ்.12).

[ஏ → ஏண்.]

ஏண்[3] *ēṇ,* பெ. (n.) *வளைவு;* crookedness, bend.

[இல் → இள் → ஈள் → ஏள் → ஏண்.]

ஏண்[4] *ēṇ,* பெ. (n.) *கருநிற மான்;* black deer having prominent large eyes. ஏணி, ஏணம், ஏணகம்.

மறுவ. நவ்வி; க., து. ஏடி; *Skt.* Harin.

[ஏ → ஏண்.]

ஏண்கோண் *ēṇ-kōṇ,* பெ. (n.) *ஒழுங்கின்மை;* unevenness, crookedness, inconsistency. ஏண்கோணான பேச்சு. (யாழ்ப்.).

[ஏ → ஏண் = செங்குத்து, நெட்டு, உயரம். கோள் → கோண் = வளைவு, சரிவு. ஏண் + கோண் = ஏண்கோண், மேடும் பள்ளமுமாய் இருத்தல், ஒழுங்கின்மை.]

ஏண்டன் *ēṇḍan,* பெ. (n.) *முட்டாள்;* ruffian, brute. (சேரநா.).

ம. ஏண்டன்.

[ஏ → ஏண் → ஏண்டு → ஏண்டன் = செருக்கினால் அறிவிழந்த வன்.]

ஏண்டாப்பு *ēṇḍāppu,* பெ. (n.) *இறுமாப்பு* (யாழ்ப்.); self-conceit, arrogance, pride.

[ஏ → ஏண் → ஏணாப்பு ('ஆப்பு' - சொல்லாக்க ஈறு). ஏண் = செருக்கு. ஏணாப்பு → ஏண்டாப்பு (இடைத்திரிபு).]

ஏணகம்[1] *ēṇagam*, பெ. (n.) ***கருப்பு நிறமான்;*** a species of black deer. (சா.அக.).

[ஏ → ஏண் → ஏணகம்.]

ஏணகம்[2] *ēṇagam*, பெ. (n.) ***ஒரு வகை மருந்துச் சரக்கு*** (நாமதீப.395); drug.

[ஏண் → ஏணகம்.]

ஏணம்[1] *ēṇam*, பெ. (n.) ***நிலைபேறு*** (பிங்.); firmness, stability.

ம. ஏணம்.

[ஏ → ஏண் → ஏணம்.]

ஏணம்[2] *ēṇam*, பெ. (n.) 1. ***அகன்ற கண்களையுடைய கருநிற மான்;*** black deer having prominent large eyes. 2. ***மான்தோல்*** (வின்.); deer skin.

[ஏ → ஏண் → ஏணம் (உயரமான அல்லது மேடான காட்டுப் பகுதிகளில் வாழ்வது. ஏணம் என்னும் தமிழ்ச் சொல் வடமொழியில் ஹரின் எனத் திரிந்தது).]

ஏணம்[3] *ēṇam*, பெ. (n.) 1. ***வலிமை;*** strength. 2. ***எலும்பு;*** bone. (செ.அக.).

[ஏண் → ஏணம்.]

ஏணம்[4] *ēṇam*, பெ. (n.) ***அழகு;*** beauty. (சேரநா.).

ம. ஏணம்.

[ஏண்[2] → ஏணம் = மானைப்போன்ற அழகு.]

ஏணல் *ēṇal*, பெ. (n.) ***வளைவு*** (யாழ்ப்.); curvature, bend.

[ஏணல் கோணல் என்பதன் குறுக்கம். இணைமொழியாக உள்ள கூட்டுச் சொற்களில் பின்சொல் மறைய முன்சொல் மட்டும் வழக்கூன்றுவது உண்டு.]

ஏணல்கோணல் *ēṇal-kōṇal*, பெ. (n.) ***ஒழுங்கின்மை*** (வின்.); unevenness, irregularity, crookedness.

*[ஏண் → ஏணல். கோண் → கோணல். **ஏண்கோண்** பார்க்க; see ēṇkōṇ.]*

ஏணாப்பு *ēṇāppu*, பெ. (n.) ***இறுமாப்பு.*** (யாழ்.அக.); haughtiness.

[ஏண் → ஆப்பு - ஏணாப்பு.]

ஏணி[1] *ēṇi*, பெ. (n.) 1. ***அடுக்கு;*** tier. "அண்டத்தேணியின் பரப்பும்"(கந்தபு.சூரன்வதை.485). 2. ***எண்;*** number. "ஏணிபோகிய கீழ்நிலைப் படலமும்" (ஞானா. 54,1). 3. ***ஏணி;*** ladder. "மண்டலத்தூ டேற்றிவைத் தேணிவாங்கி" (திவ்.பெரியாழ்.4,9,3). 4. ***எல்லை;*** limit, boundary. "நளியிரு முந்நீரேணியாக" (புறநா. 35,1). 5. ***நாடு*** (திவா.); country, territory.

ம., க., து. ஏணி; தெ. நிச்சேண. *Skt.* sreṇi; *PKT.* sēṇi.

[ஏண் → ஏணி (மு.தா.72).]

ஏணி[2] *ēṇi*, பெ. (n.) 1. ***மான்*** (சூடா.); deer, antelope. 2. ***மான்கன்று*** (திவா.); young deer, fawn.

ம. ஏணி.

[ஏண் → ஏணி.]

ஏணி[3] *ēṇi*, பெ. (n.) 1. ***குன்று;*** hill. 2. ***மலை;*** mountain. 3. ***செங்குத்தாக வளரும் மரம்;*** tall tree.

[ஏண் → ஏணி.]

ஏணிக்காணம் *ēṇikkāṇam*, பெ. (n.) ***ஏணி வைத்து மரமேறும் ஈழவர்க்குரிய வரி*** (S.I.I.ii.67); tax paid by toddy tappers.

ம. ஏணிக்காணம்.

[ஏணி + காணம். காணம் = காணத்தின் (கொள்ளின்) வடிவாகச் செய்யப்பட்ட பொற்காசு.]

ஏணிநிலை *ēṇinilai*, பெ. (n.) ***பகைவர் மதில் மீது ஏணி சார்த்துதல்;*** placing ladder on the side of the rampart of the enemy, literary convention describing a heroic tradition.

[ஏணி + நிலை.]

பகைவர் கோட்டையைக் கைப்பற்றியே தீருவோம் என்னும் மறவர் துணிவைக் காட்டும் புறத்துறை. "இட்டவீரக்கழலை உடைய கொடுவினையாளர் செறிந்து, செறியாதார் மண்ணின் ஏவறைகளை யுடைய மதிலிலே ஏணியைச் சார்த்தியது." (பு.வெ.).

ஏணிப்படிகால் *ēṇi-p-paḍi-kāl*, பெ. (n.) ***ஏணிப்படுகால்*** பார்க்க; see *ēṇi-p-paḍukāl.*

ஏணிப்படுகால் *ēṇi-p-paḍu-kāl*, பெ. (n.) ***மேகலை;*** woman's jewelled girdle. "ஏணிப்படுகா லிறுகிறுகத் தாளிடீஇ" (பரிபா.10,11).

[ஏணி + படு + கால் - ஏணிப்படுகால் = ஏழு அல்லது எட்டு வடங்களாகத் தொங்கல் அமைத்த இடையணிகலன்.]

ஏணிப்பந்தம் *ēṇi-p-pandam*, பெ. (n.) ***தோளிற் சுமக்கும் ஒருவகைத் தீவட்டி வரிசை;*** row of torches set in a beam and carried on men's shoulders in night processions.

[ஏணி + பந்தம்.]



ஏணிப்பந்தம்

ஏணிப்பழு *ēṇi-p-paḻu,* பெ. (n.) ***ஏணிப்படி*** (வின்.); step or rung of a ladder.

[ஏணி + பழு. பள் → பழு = கிடக்கைப்படி.]

ஏணிமயக்கம் *ēṇi-mayakkam,* பெ. (n.) ***கோட்டைக்கு உள்ளும் புறமுமுள்ளார் ஏணிமிசைநின்று போர்செய் தலைக் கூறும் புறத்துறை*** (தொல்.பொருள்.68,உரை); theme of the fighting of opposing parties climbing on ladders placed against the opposite sides of the wall of a fort.

[ஏணி + மயக்கம். மயக்கம் = கைகலத்தல், போர்.]

ஏணிமிசைமயக்கம் *ēṇi-misai-mayakkam,* பெ. (n.) ***ஏணிமயக்கம்*** பார்க்க (தொல்.பொருள்.68); see *ēṇima-yakkam.*

ஏனுக்குக்கோண் *ēṉukku-k-kōṇ,* பெ. (n.) ***எதிரிடை யான பேச்சு*** (யாழ்ப்.); thwarting, gainsaying, logomachic talk.

[ஏண் → ஏனுக்கு + கோண்.]

ஏணை[1] *ēṇai,* பெ. (n.) ***தொங்கும் தொட்டில், புடவைத் தொட்டில்;*** cloth-cradle hung from a cross piece or branch; children's hammock. "ஏணைநின் றெடுத்த கைப் பிள்ளை" (அருட்பா.vi.பற்றறுத்தல்.2).

மறுவ. தூளி.

[ஏல் → ஏள் → ஏண் → ஏணை. (வே.க.35).]

ஏணை[2] *ēṇai,* பெ. (n.) ***உறுதி நிலை;*** firmness, stability. "ஏணை பெற்றிட வெனக்கருள் புரிந்த" (அருட்பா. vi.அபயநி.1).

[ஏ → ஏண் → ஏணை.]

ஏணை[3] *ēṇai,* பெ. (n.) ***ஆடு*** (யாழ்.அக.); goat or sheep.

[ஏண்[4] → ஏணை = மானைப் போன்றிருக்கும் வரையாடுகளுள் ஓரினம்.]

ஏணைக்குக் கோணை *ēṇaikku-k-kōṇai,* பெ. (n.) ***ஏட்டிக்குப் போட்டி;*** contradiction merely for the sake of contradicting; tit for tat.

[ஏண் → ஏணை. கோண் → கோணை. ஏணை + கு + கோணை.]

ஏத்தம்வாழை *ēttam-vāḻai,* பெ. (n.) ***நேந்திரம் வாழை*** (நாஞ்.); a kind of banana popular in Kerala.

[ஏற்றம் → ஏத்தம் + வாழை.]

ஏத்தன் *ēttaṉ,* பெ. (n.) ***நேந்திர வாழை;*** a kind of plantain. (சேரநா.).

ம. ஏத்தன்.

[ஏற்றம் → ஏற்றன் → ஏத்தன்.]

ஏத்தனம் *ēttaṉam,* பெ. (n.) 1. ***கருவி;*** tool, instrument. 2. ***ஏனம்*** (பாத்திரம்); vessel, utensil.

ம. ஏத்தனம்.

ஏத்தாளன் *ēttāḷaṉ,* பெ. (n.) ***ஏத்தாளி*** (சிலப்.26,124, அரும்.) பார்க்க; see *ēttāḷi.*

[ஏத்து + ஆளன்.]

ஏத்தாளி *ēttāḷi,* பெ. (n.) ***புகழ்ந்து பாடுபவன்;*** panegyrist, bards, singers.

ம. ஏத்தாக்கள்.

[ஏத்து + ஆள் + இ - ஏத்தாளி. ஏத்துதல் = புகழ்தல்.]

ஏத்தியலாளன் *ēttiyal-āḷaṉ,* பெ. (n.) ***ஏத்தாளி*** பார்க்க (பெருங்.நரவாண.6,87); see *ēttāḷi.*

[ஏத்து + இயல் + ஆளன்.]

ஏத்து-தல் *ēttu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***வாழ்த்துதல்;*** to bless. "பகைதவ நூறு வாயென... ஏத்தினாள்" (சீவக.324). 2. ***புகழ்கை;*** praising, extolling. "இழிப்பு மெடுத்தேத்தும்" (நாலடி.163).

[ஏ → ஏத்து.]

ஏதண்டை *ēdaṇḍai,* பெ. (n.) 1. ***பலகைத்தூக்கு;*** shelf suspended by cords, rack for books. 2. ***நீர்த்துறையிற் கட்டிய பரண்;*** platform raised over a body of water, or at a ford for passengers waiting for a ferry. 3. ***கட்டடங்கட்ட உதவும் சாரம்;*** scaffold.

[ஏந்து → ஏந்தண்டை → ஏதண்டை.]

ஏதப்பாடு *ēda-p-pāḍu,* பெ. (n.) ***குற்றம் உண்டாகுகை;*** fault, defect. "இளிவென்னு மேதப்பா டஞ்சுபவர்" (குறள்.464).

[ஏதம் + பாடு. படு → பாடு.]

ஏதம்[1] *ēdam,* பெ. (n.) 1. ***துன்பம்*** (திவா.); suffering, affliction, distress. "ஏதம் படுபாக்கறிந்து" (குறள், 136). 2. ***குற்றம்*** (திவா.); fault, defect, blemish. 3. ***கேடு;*** calamity, ruin. "அரவும் உருமும் புலியும் யானையு மிவற்றது ஏதமுடைத்து" (இறை.18,உரை).

ம. ஏதம்.

[ஏறு → ஏறம் → ஏதம். ஏறு = குத்துதல், தாக்குதல், துன்புறுத்து தல், துன்பம்.]

ஏதம்[2] *ēdam,* பெ. (n.) 1. ***மான்;*** deer, a species of deer or antelope of black colour with beautiful eyes and short legs. 2. ***ஆடு;*** sheep.

ம. ஏதம்.

[ஏண் → ஏணம் → ஏதம் (கொ.வ.).]

ஏதர் *ēdar,* பெ. (n.) ***தீயோர்*** (வின்.); blameworthy persons, evil-minded people.

[ஏதம் → ஏதர்.]

ஏதல் *ēdal,* பெ. (n.) 1. ***போகை;*** going. 2. ***மரக்கலம்;*** vessel, ship.

[இய → ஏ → ஏகு → ஏகுதல் → ஏதல். இய = செல். நட.]

ஏதலன் *ēdalaṉ,* பெ. (n.) ***பகைவன்;*** foe, enemy. "ஏதல னின்னுயிரை வவ்வி" (திவ்.பெரியதி.1,7,4).

ம. ஏதலன்.

[எள்ளல் → ஏளல் → ஏதல் → ஏதலன் = எள்ளும் பகைவன்.]

ஏதலிடு-தல் *ēdāl-iḍu-,* 20.செ.கு.வி. (v.i.) 1. ***பொறாமையொடு பேசுதல்*** (வின்.); to speak with envy. 2. ***எள்ளி உரையாடுதல்;*** mocking.

[எள்ளல் → ஏளல் → ஏதல் + இடு.]

ஏதன் *ēdaṉ,* பெ. (n.) ***மூலகாரணன்;*** he who is the first cause. "ஏதனை யேதமிலா விமையோர் தொழும் தேவனை" (தேவா.471,3).

[ஏந்து → ஏது → ஏதன்.]

ஏதனம் *ēdaṉam,* பெ. (n.) ***மூச்சு விடுகை*** (யாழ்.அக.); breathing.

ம. ஏதனம்.

[ஏங்கு → ஏந்து → ஏந்தல் → ஏதல் → ஏதலம் → ஏதனம் (கொ.வ.).]

ஏதாகிலும் *ēdāgilum,* சு.பெ. (pron.) ***ஏதேனும்;*** something, whatever.

[ஏது + ஆகிலும்.]

ஏதாகுதல் *ēdāgudal,* சு.பெ. (pron.) ***ஏதாவது*** (யாழ்ப்.); something, whatever, ever so little.

[ஏது + ஆகுதல்.]

ஏதி[1] *ēdi,* பெ. (n.) 1. ***படைக்கலப் பொது;*** weapon. "மருப்பினுதி யேதிகொளுத்தி" (இரகு.திக்கு.35). 2. ***வாள்*** (திவா.); sword.

[எய் → எய்தி → ஏதி (கொ.வ.). எய்தி = எய்வது, கொல்லும் கருவி.]

ஏதி[2] *ēdi,* பெ. (n.) ***துண்டம்*** (பிங்.); piece, fragment.

[எய் → எய்தி → ஏதி = வெட்டியது, குத்தியது, துண்டாக்கியது.]

ஏதில் *ēdil,* பெ. (n.) ***அயல்;*** alien.

[ஏது + இல் - ஏதில் (ஏதும் இல்லாதது, உறவு கொள்ளாதது 'இல்' - எ.ம.இ.நி.).]

ஏதிலன் *ēdilaṉ,* பெ. (n.) ***பிறன், வேற்றவன்;*** *stranger, neutral, one who does not mingle in others' affairs.*

[ஏது + இல் + அன் - ஏதிலன் (ஏதும் இல்லாதவன், உறவும் பகையும் அற்றவன்) 'இல்' - எ.ம.இ.நி.]

ஏதிலார் *ēdilār,* பெ. (n.) 1. ***பிறர்*** (அன்னியர்); others, foreigners, strangers, those who do not mingle in others' affairs. "ஏதிலார் பக்கமாகி" (கந்தபு.தவங்காண்.22). 2. ***பகைவர்;*** foes, enemies. "ஏதிலவேதிலார் நூல்" (குறள்.440). 3. ***பரத்தையர்;*** prostitutes. "ஏதிலார்ப் புணர்ந்தமை" (கலித்.78). 4. ***வறுமையாளர்;*** poor men.

[ஏது + இல் + ஆர் - ஏதிலார் = ஏதுமற்றவர், எவ்வகை உறவும் இல்லாதவர். 'இல்' எ.ம.இ.நி.]

ஏதிலாள் *ēdilāḷ,* பெ. (n.) ***பிற பெண்;*** strange, unfamiliar woman. 2. ***மாற்றாள்;*** co-wife. "ஏதிலாள்வாய் நவையி னிற் காத்தியென்ன" (திருவிளை.வன்னியுங்.42).

[ஏது + இல் + ஆள் - ஏதிலாள் (ஏதும் இல்லாதவள், எவ்வகை நெருங்கிய உறவும் இல்லாதவள். 'இல்' - எ.ம.இ.நி.).]

ஏதிலாளன் *ēdil-āḷaṉ,* பெ. (n.) ***பிறன்*** (அன்னியன்); stranger. "ஏதிலாளற் கிழந்தனெ னெழிலே" (பு.வெ.11, பெண்பாற்.4).

[ஏது + (இல்லாளன்) இலாளன்.]

ஏதிலான் *ēdilāṉ,* பெ. (n.) ***வறியவன்*** (யாழ்.அக.); poor man.

ம. ஏதிலான் (பகைவன்).

[ஏது + இல் + ஆன் - ஏதிலான் (ஒன்று மற்றவன்). 'இல்' - எ.ம.இ.நி.]

ஏதின்மை *ēdiṉmai,* பெ. (n.) 1. ***அயன்மை;*** strangeness, foreignness. 2. ***பகைமை;*** enmity, hatred, alienation. "அறிவுடையா ரேதின்மை கோடி யுறும்" (குறள்.816).

[ஏது + இன்மை.]

ஏதீடு *ēdīḍu,* பெ. (n.) ***தோழி அறத்தோடு நிற்கையில், தலைவி, தலைவனை மணத்தற்கு அவன் செய்த உதவிகளைக் காரணமாக இட்டுரைக்கை,*** "ஏதீடுத லைப்பாடு" (தொல்.பொருள்.207); literary theme in which the lady companion of a heroine explains that the reasons for the choise of her man by her mistress are to be found in the risks he had taken to save her in times of imminent danger, and other tokens of his regard for her.

[ஏது + ஈடு. இடு → ஈடு. ஏது = காரணம்.]

ஏது[1] *ēdu,* பெ. (n.) 1. ***விளக்கம்;*** illustration. "ஏதுக்கள் காட்டி முடித்தா ளிணையில்ல நல்லாள்" (நீலகேசி. 423). 2. ***தொடர்பு;*** connection, relation. "புலிகொண்மார் நிறுத்த வலையுளோ ரேதில் குறுநரி பட்டற்றால்" (கலித்.65,25). 3. ***ஒரு கருமம் அல்லது முடிவு செய்யத் தூண்டுவது;*** stimulating one to act or decide.

Skt. hetu.

[ஏ → ஏது. (வே.க.54).]

ஏது[2] *ēdu,* பெ. (n.) ***ஏவுகை, தூண்டுகை, காரணம்;*** inciting, urging, cause,basis. "ஏது நிகழ்ச்சி யெதிர்த்துள தாதலின்" (மணி.3,4).

[ஏ → ஏவு → ஏது (வ.மொ.வ.98).]

ஏது[3] *ēdu,* 1. ***ஏது;*** which, what. உனக்கேது வேணும் (இ.வ.). 2.. ***ஏன்;*** why. அவன் உன்னையப்படிப் பேசவேண்டியதேது? (இ.வ.). 3. ***எங்கிருந்து, எப்படி;*** hence, how. அவனுக்குப் பணமேது? (உ.வ.).

ம. ஏது; **க.** யா, ஆ, எ, ஏ, யாவ, தாவ; **கோத.** ஏத்; **துட.** ஏத்; **குட.** ஏதி; **து.** தா, தானெ, சானெ; ஈதவு, வா, ஓவு; **தெ.** ஏதி, எதி, ஏத்தி; **கொலா.** ஏத், ஏத்வ்; **பர்.** ஏத்; **கூ.** அனெ, ஏகனெ; **கொண்.** எம்; **நா.** நா, நானெ; **குவி.** ஏன; **குரு.** எக்நா; **மால்.** இந்திர, இகிர், இகம்; **பிரா.** அரா, அராத்.

[ஏ → ஏது. ஏ = வினாச்சொல். "ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா" (தொல்.எழுத்.32). எது - சுட்டடியாகப் பிறந்தவினாச்சொல். ஏது - காரணங்கருதிய வினாச். சொல்.]

ஏது[4] *ēdu,* பெ. (n.) ***ஏதம்;*** fault, defect. "ஏதிலாக் கற்பம்" (கந்தபு.அவை.15).

[எய் → எய்தி → ஏதி → ஏது.]

ஏது[5] *ēdu,* பெ. (n.) 1. ***காரணம்;*** cause, origin, basis ultimate cause. "ஏதுவி னுணர்த்தலும்" (தொல்.பொருள்.168). 2. ***துணைக்காரணம்*** (திவா.); instrumental cause. 3. ***முதற்காரணம்*** (வின்.); primitive cause, or the material of which a thing is made. 4. ***செல்வம்;*** wealth. அவன் ஏதுவுள்ளவன் (யாழ்ப்.). 5. ***கருதளவை (அனுமான்) உறுப்புகளைந்தனுள் இரண்டாவது;*** (Log.) statement of reason, the second member of an Indian Syllogism; middle term. 6. ***காரண காரியங்களை ஒரு சேரக் கூறும் ஓர் அணி வகை*** (தண்டி.57); (rhet.) figure of speech which brings together cause and effect and which is sub-divided into Kārakam and Ñāpakam. 7. ***ஏதுநிகழ்ச்சி*** பார்க்க; see *ēdu-nigalcci.* "ஏது முதிர்ந்த திளங்கொடிக் காதலின்" (மணி.7,20). 8. ***பொருட்டு*** (நிமித்தம்); foreboding, foreshadowing, omen, augury.

[ஏந்து → ஏது.]

ஏதுஅணி *ēdu-aṇi,* பெ. (n.) ***யாதானும் ஒரு பொருட்டிற மிதனினிது நிகழ்ந்ததென்று காரணம் விதந்து சொல் லும் அணி*** (அபி.சிந்.); figure of speech.

[ஏது + அணி.]

ஏதுக்கருத்தன் *ēdu-k-karuttaṉ,* பெ. (n.) ***ஏவுதற்கருத் தன்*** (இறை.18,பக்.110); indirect agent.

[ஏது + கருத்தன்.]

ஏதுக்கருத்தா *ēdu-k-karuttā,* பெ. (n.) ***ஏதுக்கருத்தன்*** பார்க்க (தொல்.சொல்.248,உரை); see *ēdukkaruttaṉ.*

ஏதுங்கெட்டவன் *ēduṅ-keṭṭavaṉ,* பெ. (n.) ***பயனற்ற வன்;*** person of no worth whatever, a good for nothing fellow.

[ஏதுவும் → ஏதும் + கெட்டவன்.]

ஏதுநிகழ்ச்சி *ēdu-nigalcci,* பெ. (n.) ***கன்மங்களாகிய காரணங்கள் தத்தம் பயனைக் கொடுத்தற்குத் தோற் றுகை;*** events as the concomitant fruits of previous deeds. "ஏதுநிகழ்ச்சி யெதிர்த்துள தாதலின்" (மணி.3,4).

ஏதுப்பண்ணு-தல் *ēdu-p-paṇṇu-,* 15.செ.கு.வி. (v.i.) ***நாடியபொருள் கிடைத்தற்கு வகைசெய்தல்*** (உ.வ.); to endeavour to attain an end, to take steps to achieve one's aim.

[ஏந்து → ஏது + பண்ணு.]

ஏதுப்பார்-த்தல் *ēdu-p-pār-,* 4.செ.கு.வி. (v.i.) ***நேரம் பார்த்தல்*** (வின்.); to wait for a suitable opportunity.

[ஏந்து → ஏது + பார்.]

ஏதுப்போலி *ēdu-p-pōli,* பெ. (n.) ***ஏதுவுக்குரிய இலக்க ணமின்றி ஏதுப்போலத் தோன்றுவது*** (மணி.29,141); fallacy, fallacious middle term.

[ஏந்து → ஏது + போலி.]

ஏதும் *ēdum,* பெ. (n.) 1. ***சிறிதும்;*** even a little. "ஏதும் நீரிலா தழல்படு வெய்யகான்" (கந்தபு.சுரம்புகு.27). 2. ***எதுவும்;*** anything, everything without exception... கற்பகம் ஏதுந் தரும். 3. ***ஏதாவது;*** something. 4. ***எதுவாகிலும், எல்லாம்;*** whichever, whatever, whatsoever, all, any.

ம. ஏதும்.

[ஏது + உம் - ஏதுவும் → ஏதும்.]

ஏதுமலைவு *ēdu-malaivu,* பெ. (n.) ***செய்யுட் குற்றங்களு ளொன்று*** (யாப்.வி.525); defect in poetry.

[ஏது + மலைவு.]

ஏதுவின்முடித்தல் *ēduviṉ-muḍittal,* பெ. (n.) ***முன் காரணம் விளங்கப் பெறாத தொன்றைப் பின் கார ணத்தால் முடிவு செய்வதாகிய உத்தி*** (நன்.14); (Gram.) subsequent vindication of that which had not been justified previously, one of 32 utti.

[ஏது + இன் + முடித்தல்.]

ஏதேது *ēdēdu,* பெ. (n.) ***எதுவாயினும்;*** which all, whatsoever.

ம. ஏதேது.

[ஏது + ஏது - ஏதேது.]

ஏதேனும் *ēdēṉum,* பெ. (n.) ***ஏதாவது, குறைந்த வளவாவது;*** somewhat, a little of something, at least anything.

ம. ஏதேனும்.

[ஏது + ஆயினும் → ஏதாயினும் → ஏதேனும்.]

ஏதை *ēdai,* பெ. (n.) 1. ***வறிஞன்*** (யாழ்.அக.); poor man. 2. ***பேதை;*** innocent person; ignoramus.

[ஏழை → ஏதை.]

ஏந்தல்[1] *ēndal,* பெ. (n.) 1. ***மலை*** (அக.நி.); hill. 2. ***முதல்*** (அக.நி.); that which is first. 3. ***உதவி;*** assistance, helpfulness. அவனிருந்தது எவ்வளவோ ஏந்தலாயிருந்தது. 4. ***எளிதிற் செய்துமுடிக்குந் தன்மை;*** ease in accomplishment. அந்தக் காரியம் செய்வது எனக்கு ஏந்தலாயிருக்கிறது.

[ஏ → ஏல் → ஏத்து → ஏந்தல்.]

ஏந்தல்[2] *ēndal,* பெ. (n.) ***இளமை;*** youthfulness.

[இளந்தை → ஏந்தை → ஏந்தல்.]

ஏந்தல்[3] *ēndal,* பெ. (n.) 1. ***கையேந்துகை;*** stretching out the hands, as a beggar. 2. ***தாங்குகை;*** holding up, raising, supporting. 3. ***தேக்கம்*** (திவ்.திருச்சந்.6,

வியாக்.); wide shallow pool. 4. *ஆழமின்மை;* shallowness, as of a utensil. 5. *பயிர்செய்தற்காதாரமாக அமைக்கப்பட்ட ஏரி* (C.G.); irrigation tank in a flat country. 6. *ஏந்திசை* (காரிகை.செய்.1,உரை); rhythm in verse. 7. ***உயர்ச்சி;*** height, eminence. "ஏந்தற் பொற் றோளினாய்"(கம்பரா.சூர்ப்ப.54). 8. *பெருமை* (பிங்.); dignity, greatness. 9. *மேடு* (சூடா.); mound. 10. *பெருமையிற் சிறந்தோன்;* great man, noble. "ஏந்தல்காணா" (கந்தபு.தாரகன்வதை.76). 11. *அரசன்* (திவா.); king. 12. *உட்கிடைச் சிற்றூர்;* hamlet or big village. 13. *ஊதை நோய்* (இராசவைத்.); paralysis. 14. *ஊன்றி நடத்தல், முடம்;* staggering, lameness.

[ஏல் → ஏந்து.]

ஏந்தல்வண்ணம் *ēndal-vaṇṇam,* பெ. (n.) *விளக்கத்தின் பொருட்டும் வற்புறுத்துதற் பொருட்டும் மறித்துவரும் சொற்சீர்* (தொல்.பொருள்.543); (pros.) rhythm produced by repeating the same word for greater clearness and emphasis, as in. "வைகலும் வைகல் வரக்கண்டும்" (நாலடி.39).

[ஏ → ஏந்து → ஏந்தல் + வண்ணம்.]

ஏந்தானம் *ēndāṉam,* பெ. (n.) 1. *பொருளைத் தாங்குமாறு தொங்கும் தட்டுப்பலகை;* hanging shelf or rack, to set things on. 2. *தூக்குதற்கு ஏந்திய கை;* hands or arms extended forward or hooked with another's to carry a child, or a burden.

[ஏந்து + ஏனம் - ஏந்தேனம் → ஏந்தானம் (கொ.வ.).]

ஏந்தி *ēndi,* பெ. (n.) *தாங்குபவன்;* bearer, possessor, one enriched with, used in compounds, as புகழேந்தி.

[ஏந்து → ஏந்தி.]

ஏந்திக்கொள்(ளு)-தல் *ēndi-k-koḷ-,* 10.செ.குன்றாவி. (v.t.) 1. *கையாற் றூக்குதல்;* to lift by the hands. 2. *கையாற்றாங்குதல்;* to support by the hands. 3. *கைகொடுத்தல்;* to lend a hand.

[ஏந்தி + கொள்.]

ஏந்திசை *ēndišai,* பெ. (n.) *செய்யுளோசை வகை;* rhythm in verse.

[ஏந்து + இசை.]

ஏந்திசைச்செப்பல் *ēndišai-c-ceppal,* பெ. (n.) *வெண்சீர் வெண்டளையாற் பிறக்கும் ஓசை* (காரிகை. செய்.1,உரை); rhythm generally found in Venpa verse and produced by ... நேரசை following any காய்ச்சீர்.

[ஏந்து + இசை + செப்பல்.]

ஏந்திசைத்தூங்கல் *ēndišai-t-tūṅgal,* பெ. (n.) *ஒன்றிய வஞ்சித்தளையாற் பிறக்கும் ஓசை* (காரிகை.செய்.1, உரை); (pros.) rhythm found in kali verse and produced by நிரையசை following any கனிச்சீர்.

[ஏந்து + இசை+ தூங்கல்.]

ஏந்திசையகவல் *ēndišai-agaval,* பெ. (n.) *நேரொன்றாசிரியத் தளையாற் பிறக்கும் ஓசை* (காரிகை.செய்.1, உரை); rhythm found in agaval verse and produced by நேரசை following either of the மாச்சீர்.

[ஏந்து + இசை + அகவல்.]

ஏந்திரம்[1] *ēndiram,* பெ. (n.) 1. *மாவரைக்குந் திரிகை* (பிரபோத.11,34); hand-mill. 2. *கரும்பாலை;* sugar-cane press.

ம. ஏந்த்ரம்; *Skt.* yantra.

[இய → இயந்திரம் → ஏந்திரம்.]

ஏந்திரம்[2] *ēndiram,* பெ. (n.) *மாயக்கலை, கண்கட்டுக் கலை;* magic. "ஏந்திர நூழில் செய்யா" (சீவக.2283).

[இய → இயந்திரம் → ஏந்திரம் (செலுத்துதல், ஏவுதல்).]

ஏந்திரம்[3] *ēndiram,* பெ. (n.) 1. *மதிலுறுப்பு* (அக.நி.); bastion of a fortified wall. 2. *தேர்;* car, chariot.

[ஏ → ஏண் + திரம் - ஏந்திரம். 'திரம்' - சொல்லாக்க ஈறு.]

ஏந்திரவச்சு *ēndira-v-accu,* பெ. (n.) *திரிகையச்சு;* axis or upright shaft about which the upper stone of a hand mill is turned.

[இயந்திரம் → எந்திரம் + அச்சு - எந்திர அச்சு → ஏந்திர அச்சு.]

ஏந்திலை *ēndilai,* பெ. (n.) *வேல்;* spear, lance. "ஏந்திலை சுமந்து" (பரிபா.17,2).

[ஏ → ஏந்து (உயரம்). ஏந்து + இலை - ஏந்திலை (நெடிய இலை முகட்டுவேல்).]

ஏந்திழை *ēndiḻai,* பெ. (n.) 1. *அழகிய அணிகலன்;* beautiful ornament. "ஏந்திழையாட் டருகென்னும்" (பு.வெ.4,24). 2. *பெண்;* woman beautifully decked with jewels. "ஏந்திழை யிவளுக்கு" (திவ்.பெரியதி. 2,7,3).

ம. ஏந்திழ.

[ஏந்து = உயர்வு, சிறப்பு. ஏந்து + இழை - ஏந்திழை = சிறந்த அணிகலன் அணிந்தவள்.]

ஏந்து[1]-தல் *ēndu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. *உயரத்தூக்குதல்;* to lift. 2. *உயரத்தூக்கிப் பிடித்தல்;* to hold a thing after lifting it. 3. *கைநீட்டுதல்;* to stretch out the hands. நீ தர நான் ஏந்தி வாங்கினேன். 4. *கையிலெடுத்தல்;* to receive in the hands. நீரை ஏந்திப் பருகினான். 5. *தாங்குதல்;* to hold in the hands. "அங்குசபாச மேந்தி" (சூடா.). 7. *சுமத்தல்;* to support as a beam. உத்திரத்தைத் தூண் ஏந்தி நிற்கிறது.

[ஏ → ஏல் → ஏந்து.]

ஏந்து[2]-தல் *ēndu-,* 10.செ.கு.வி. (v.i.) 1. *ஓங்குதல்;* to rise high; to be elevated. "நிலனேந்திய விசும்பும்" (புறநா.2,2). 2. *சிறத்தல்;* to be eminent, excellent, exalted, of fine quality. "ஏந்தியகொள்கையார் சீறின்" (குறள்.899). 3. *மிகுதல்* (தொல்.பொருள்.543,உரை); to be abundant.

ம. ஏந்துக.

[ஏ → ஏண் → ஏந்து.]

ஏந்து³ *ēndu,* பெ. (n.) 1. ***வாய்ப்பானது, வாகு*** (வசதி); convenience. 2. ***காரணம்;*** reason.

[ஏ → ஏல் → ஏந்து.]

ஏந்து⁴ *ēndu,* பெ. (n.) ***முடம்;*** lameness.(சேரநா.).

ம. ஏந்து.

[ஏல் → ஏந்து (காலை ஏந்தி வைத்து நடத்தல்).]

ஏந்துகால் *ēndukāl,* பெ. (n.) ***முடக்கால்;*** lameness. (சேரநா.).

ம. ஏந்துகால்.

[ஏந்து + கால்.]

ஏந்துகுழந்தை *ēndu-kuḻandai,* பெ. (n.) ***கைக்குழந்தை;*** infant in arms.

[ஏந்து + குழந்தை - ஏந்து குழந்தை (வினைத்தொகை).]

ஏந்துகொம்பன் *ēndu-komban,* பெ. (n.) 1. ***வளைந்த கொம்பையுடைய யானை;*** elephant with curved tusks. 2. ***நிமிர்ந்து முன் வளைந்த கொம்புள்ள மாடு;*** ox with horns rising abruptly and projecting forward at the points.

[ஏந்து + கொம்பு + அன்.]

ஏந்துகொம்பு *ēndu-kombu,* பெ. (n.) 1. ***யானைக் கொம்பு;*** tusk of an elephant curved upward. 2. ***தாங்கு கொம்பு*** (வின்.); curved pole of the palanquin; pole for carrying a load.

[ஏந்து + கொம்பு.]

ஏந்துகொம்பு

ஏந்துமாந்து *ēndumāndu,* பெ. (n.) ***உதவி;*** help, assistance. (சேரநா.).

ம. ஏந்துமாந்து.

[ஏந்து → ஏந்துமாந்து (எதுகை குறித்த இணைமொழி).]

ஏந்தெழில் *ēndeḻil,* பெ. (n.) ***மிக்க அழகு;*** surpassing beauty. "பூங்குழைக் கமைந்த வேந்தெழின் மழைக் கண்." (நெடுநல்.38).

[ஏந்து + எழில். ஏந்து = உயர்ந்த, சிறந்த.]

ஏப்பம் *ēppam,* பெ. (n.) ***தேக்கெறிவு;*** eructation, belch. "நிணமுண் டேப்ப மிட்டு" (திருவிசை.கரு.பதி.10,6).

ம. ஏம்பல்.

[ஏ → ஏப்பம். (வே.க.35).]

ஏப்பம்பறி-தல் *ēppam-paṟi-,* 4.செ.கு.வி. (v.i.) ***ஏப்பம் விடு*** பார்க்க; see *ēppamviḍu.*

[ஏ → ஏப்பம் + பறி-.]

ஏப்பம்விடு-தல் *ēppam-viḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***தேக் கெறிதல்;*** to belch, to eject as of wind, from the mouth - eructate.

[ஏ → ஏப்பம் + விடு.]

ஏப்பமிடு-தல் *ēppam-iḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***ஏப்பம் விடு*** பார்க்க; see *ēppamviḍu.*

[ஏப்பம் + விடு - ஏப்பம்விடு → ஏப்பமிடு.]

ஏப்பமெடு-த்தல் *ēppam-eḍu-,* 4.செ.கு.வி. (v.i.) ***ஏப்பம் விடு*** பார்க்க; see *ēppamviḍu.*

[ஏப்பம் + எடு.]

ஏப்பாடு *ē-p-pāḍu,* பெ. (n.) ***அம்பு விழும் எல்லை*** (பெருங்.உஞ்சைக்.53,68); distance to which an arrow can fly.

[ஏ + பாடு. படு → பாடு. ஏ = அம்பு. பாடு = படுமிடம், விழும் இடம்.]

ஏப்பியன் *ēppiyan,* பெ. (n.) ***பேதை*** (கொ.வ.); simpletion fool.

[ஏ → ஏய்ப்பு + அன் - ஏய்ப்பியன் → ஏப்பியன். (எளிதில் ஏமாற்றப்படுபவன்).]

ஏப்பிராசி *ēppirāsi,* பெ. (n.) ***ஏப்பியன்*** பார்க்க; see *ēppiyan.*

க. ஏப்ராசி, எப்ராசி, எப்ரேசி; **து.** எபுளந்தெ; **தெ.** எப்பெராசி.

ஏப்புழை *ē-p-puḻai,* பெ. (n.) ***அம்பு எய்யக் கோட்டை மதிலில் அமைக்கப்பட்டிருக்கும் துளைமாடம்*** (சீவக.105,உரை); loop-hole in a fort-wall for discharging arrows through.

[ஏ + புழை - ஏப்புழை. ஏ = அம்பு. புழை = துளைமாடம்.]



ஏப்புழை

ஏப்பைசாப்பை *ēppai-šāppai,* பெ. (n.) ***பயனற்றது*** (உ.வ.); that which is useless.

[ஏ → ஏண் → ஏண்பு → ஏப்பு = (உயரம்). சாய் → சாய்ப்பு → சாப்பு (சாய்வு, சரிவு). ஏப்புசாப்பு = ஏற்றத்தாழ்வு, கோணல் மாணல், ஒழுங்கற்றது.]

ஏம்[1] *ēm,* பெ. (n.) 1. ***இன்பம்;*** pleasure,delight. "ஏமுற வினிதி னோம்பி" (கம்பரா.வீபீட.114). 2. ***காப்பு;*** guard. "எஞ்சிய பொருள்களை ஏமுறநாடி" (திருமுரு.97).

[ஏ → ஏம் (வ.மொ.வ.99).]

ஏம்[2] *ēm,* பெ. (n.) 1. ***குழப்பம், மயக்கம்;*** perplexity, distraction. "வேனிலத்த மென்னா தேமுற்று" (அகநா.69). 2. ***துன்பம்;*** affliction, suffering.

[ஏ[3] → ஏம்.]

ஏம்பல்[1] *ēmbal,* பெ. (n.) 1. ***ஆரவாரம்*** (பிங்.); bustle, uproar. 2. ***களிப்பு;*** pleasure. "ஏம்பலோ டுறையு மாயன்" (காஞ்சிப்பு.சலந்தரீ.17). 3. ***வருத்தம்;*** pain, physical or mental. "மத்திசைதாக்க வேம்பலுற்றனம்" (திருவிளை.பரிநரி.12).

ம. ஏம்பல்.

[ஏம் → ஏம்பு → ஏம்பல் (சு.வி.77).]

ஏம்பல்[2] *ēmbal,* பெ. (n.) ***உட்கிடைச் சிறுகுடி;*** hamlet attached to a village. நிலமும் ஏம்பல்களும் (S.1.1.viii.209).

[ஏ → ஏம்பல். ஊரார்க்குத் துணையாகப் பாதுகாப்பு தரும் நோக்கில் அருகில் தோன்றிய குடியிருப்பு.]

ஏம்பல்[3] *ēmbal,* பெ. (n.) ***ஏரிப்பாசனமாக அமைந்த நிலம்;*** land cultivated by irrigation from lake. 'குடிகாடு அரநிருவி ஏம்பலில் கடமையும்' 'கல்லாத்தான் ஏரிக் கீழை ஏம்பலின் தென்கடைக்கேய் ஏறப்போகவும்' (S.I.I-.VIII,410).

[ஏ → ஏம்பு → ஏம்பல் = உயர்த்திக்கட்டிய மதகு அல்லது ஏரிக்கரை.]

ஏம்பலி-த்தல் *ēmbali-,* 4.செ.கு.வி. (v.i.) ***அவாக் கொள்ளுதல்;*** to feel intense ardour, to long ardently. "நின்றாள் சரணென் றேம்பலிப்பார்கட்கு" (தேவா. 1040,8).

[ஏ → ஏப்பு → ஏம்பல் → ஏம்பலி.]

ஏம்பு[1]**-தல்** *ēmbu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***பெருகக்களிப்படைதல்;*** to rejoice, to be overjoyed. "மள்ள ரேம்பலோ டார்க்கு மோதை" (கந்தபு.ஆற்று.33).

[எழும்பு → ஏம்பு.]

ஏம்பு[2]**-தல்** *ēmbu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***வருந்துதல்;*** to suffer. "மத்திகை தாக்க வேம்பலுற்றனம்" (திருவிளை.பரிநரி.12). 2. ***மனங்கலங்குதல்;*** to be confused in mind.

[ஏ → ஏல் → ஏலல் = அசைதல், தொங்குதல், வருந்துதல், மனம்கலங்குதல். ஏல் → ஏம்பு.]

ஏமங்கோலா *ēman-gōla,* பெ. (n.) 1. ***மயில்மீன்;*** peacock fish, graj, Histiophorus unmaculatus. 2. ***ஒரு கடல் மீன்;*** sword fish, greyish, Histiphorus breviostris.

[ஏ → ஏமம் + கோலா. ஏமம் = உயரம், நீளம்.]

ஏமம்[1] *ēmam,* பெ. (n.) 1. ***கலக்கம்*** (பிங்.); perplexity. 2. ***உன்மத்தம்*** (திவா.); imbecility, madness, bewilderment. "ஏமுற்றவரினும்ஏழை" (குறள்:873).

[ஏ → ஏம் → ஏம்பல் → ஏமல் → ஏமம் = கவலை, கலக்கம், வருத்தம்.]

ஏமம்[2] *ēmam,* பெ. (n.) ***இடுதிரை*** (திவா.); curtain.

[ஏ → ஏமம் (உயர்த்துவது).]

ஏமம்[3] *ēmam,* பெ. (n.) 1. ***காப்பு, பாதுகாப்பு;*** safety. "ஏமப்பேரூர்" (தொல்.982). 2. ***இன்பம்*** (திவா.); delight, enjoyment, gratification. 3. ***களிப்பு*** (பிங்.); jollity, mirth. 4. ***காவல்;*** defence, protection, guard. "எல்லா வுயிர்க்கு மேம மாகிய" (புறநா.1,11). 5. ***பொருள் வைப்பு, நலக்குவை*** (சேமநிதி) (திவா.); hoarded treasure, welfare fund.

[ஏ = உயர்வு, உயர்த்தல், தூக்கல், காத்தல். ஏம் → ஏமம் (காவல்).]

ஏமம்[4] *ēmam,* பெ. (n.) ***திருநீறு*** (பிங்.); sacred ashes.

[ஈம் → ஏம் → ஏமம் (ஈமக்காட்டுச் சாம்பல்).]

ஏமம்[5] *ēmam,* பெ. (n.) ***இரவு;*** night; "புறங்காட்டி லேமந்தோறு மழலாடுமே" (தேவா.965,7).

[இரு → இருள் → இரும் → ஏம் → ஏமம் = இருள், இரவு.]

ஏமம்[6] *ēmam,* பெ. (n.) ***பொன்;*** gold; "ஏம மீத்த வியல்பினனாகி" (பெருங்.வத்தவ.1,28).

[எல் = ஒளி. எல் → ஏல் → ஏம் → ஏமம் = பொன்.]

ஏமம்[7] *ēmam,* பெ. (n.) 1. ***காவலையுடைய இடம்;*** guarded place. "எழின்மணி விளக்கி னேமம் போகி." (பெருங்.உஞ்ஞைக்.34,2). 2. ***வலிமை;*** strength. 3. ***மலை;*** mountain.

[ஏ → ஏம் → ஏமம்.]

ஏமமணல் *ēma-maṇal,* பெ. (n.) ***பொன்மணல்.***(மூ.அ.); alluvium.

[ஏமம் + மணல்.]

ஏம மலை *ēmamalai,* பெ. (n.) ***பொன் விளையும் மலை;*** mountain containing gold ore. (சா.அக.).

[ஏமம் + மலை.]

ஏமரு[1]**-தல்** *ēmaru-,* 2:செ.கு.வி. (v.i.) 1. ***காக்கப்படுதல்;*** to be protected, to be supported. "இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்" (குறள்.448). 2. ***களிப்புறுதல்;*** to rejoice, to be elated. "ஏமரு புவனமூன்றும்" (கந்தபு. மேரு.24).

[ஏம் + மருவு - ஏமருவு → ஏமரு. (கொ.வ.).]

ஏமரு[2]**-தல்** *ēmaru-,* 2.செ.கு.வி. (v.i.) ***திகைத்தல்*** (யாழ்.அக.); to be bewildered or perplexed.

[ஏம் → ஏமம் + அறு-தல் - ஏமறு-தல் → ஏமரு-தல் (கொ.வ.).]

ஏமல் *ēmal,* பெ. (n.) ***மனக்கலக்கம்.***(இ.வ.); confusion of mind.

ம. ஏமல்.

[ஏ → ஏம்பு → ஏம்பல் → ஏமல்.]

ஏமவெருமை *ēmaverumai,* பெ. (n.) ***மன்னர் குடைகள் தம்மில் தலைமயங்கிய வாட்போரில் தானெறிந்த வேல்;*** theme of unyeilding resistance. ஒ.நோ. எருமை மறம்.

[ஏமம் + எருமை.]

ஏமன் *ēmaṉ,* பெ. (n.) ***இயமன்*** (சங்.அக.); God of Death.

ம. எமன்.

[இயமன் → ஏமன்.]

ஏமா[1]**-தல்** *ēmā-,* 18.செ.கு.வி. (v.i.) 1. ***அரணாதல்;*** to be protected by, guarded by. "ஏமாப்ப முன்னே யயற்பகை தூண்டி விடுத்து" (பழ.306). 2. ***ஆசைப்படுதல்;*** to desire. "அருந்தேமாந்த நெஞ்சம்"(புறநா.101). 3. ***இன்புறுதல்;*** to be exhilarated, be overjoyed, be in an ecstasy; to experience the highest delight. "காமர் நெஞ்ச மேமாந் துவப்ப" (புறநா.198,8). 4. ***செருக்குறுதல்;*** to feel proud; to be highly elated. "இரங்கு நமக்கம்பலக் கூத்த னென்றென் றேமாந்திருப்பேனை" (திருவாச.21,7).

[ஏமம் + ஆர் - ஏமமார் → ஏமார் → ஏமா, (பாதுகாவல் பொருந்துதல், மகிழ்தல், மகிழ்ச்சியில் திளைத்தல், செருக்கடைதல்). ஏமார்ப்ப, ஏமார்ந்த என்பவை ஏமாப்ப, ஏமாந்த, என இடைக்குறைந்து வழக்கூன்றின. ஏமா என்பது வழுவினை. ஏமமார் என்பதே செவ்விய வினை. வழுவினைகளைக் குறைவினை (defective verb) என்பர்.]

ஏமா[2]**-த்தல்** *ēmā-,* 18.செ.கு.வி. (v.i.) ***கலக்கமுறுதல்;*** to be distressed. "புணர்ந்தோர் நெஞ்சேமாப்ப வின்றுயி றுறந்து" (மதுரைக்.575).

[ஏமம் + அறு - ஏமமறு → ஏமாறு → ஏமா. (பாதுகாப்பு அறுதல், துன்புறுதல், கலங்குதல்) ஏமா (குறைவினை - defective verb).]

ஏமா[3]**-த்தல்** *ēmā-,* 15.செ.குன்றாவி. (v.t.) ***உறுதிப்படுத்துதல்;*** to be certain. "கனவென மருண்ட வென்னெஞ் சேமாப்ப" (பொருந.98).

[ஏமம் + ஆர் - ஏமமார் → ஏமார் → ஏமா. (குறைவினை) ஆர்த்தல் = சேர்த்தல். ஏமம் = இன்பம், நலம், உறுதி.]

ஏமாந்துபோ-தல் *ēmāndu-pō-,* 8.செ.கு.வி. (v.i.) ***ஏமாறுதல்;*** to be disappointed. அவன் ஏமாந்து போனான். (உ.வ.).

ம. ஏமாறுக.

[ஏமம் + அறுதல் = ஏமாறுதல். ஏமாறு → ஏமாறி → ஏமாந்து + போ.]

ஏமாப்பு *ēmāppu,* பெ. (n.) 1. ***அரணாதல்;*** security, safeguard. "எழுமையு மேமாப்புடைத்து" (குறள்.126). 2. ***வலியாகை;*** support, stay, strength. "எச்சத்திற்கே மாப் புடைத்து" (குறள்.112). 3. ***இறுமாப்பு;*** hauteur, pride. "ஏமாப் பிரலை விலங்கலை" (ஞானா.43,25). 4. ***கருத்து*** (திவா.); object, intention, purpose.

[ஏமம் + ஆப்பு - ஏமாப்பு. 'ஆப்பு' சொல்லாக்க ஈறு.]

ஏமார்[1]**-தல்** *ēmār-,* 18.செ.கு.வி. (v.i.) ***மனங்கலங்குதல்;*** to be confused, bewildered. "ஏமார்ந் தனமெனச் சென்றுநா மறியின்" (நற்.49).

[ஏமம் + அறு-தல் - ஏமறு-தல் → ஏமாறு-தல் → ஏமார்-தல்.]

ஏமார்[2]**-த்தல்** *ēmār-,* 15.செ.குன்றாவி. (v.t.) ***வலுப்படுத்துதல்;*** to strengthen, establish firmly, make secure. "சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல்" (குறள்.660).

[ஏமம் + ஆர்-த்தல் + ஏமார்-த்தல்.]

ஏமாளி *ēmāḷi,* பெ. (n.) ***பேதை;*** simpleton, dunce, fool. "நெறியிலாத வேமாளி" (திருப்பு.530).

ம. ஏமாலி.

[ஏமம் + அறு - ஏமறு → ஏமாறு → ஏமாறி → ஏமாளி.]

ஏமாற்றம் *ēmāṟṟam,* பெ. (n.) 1. ***ஏய்க்கப்படுதல்;*** state of being defrauded, disappointment. 2. ***ஏய்ப்பு;*** deceit, fraud. 3. ***மனக்கலக்கம்;*** confusion of mind, perplexity. "ஏமாற்ற மென்னைத் தவிர்த்தாய்" (திவ்.பெரியாழ். 2,7,8).

ம. ஏமாற்றம்; **கோத.** ஏமான்; **தெ.** ஏமறு, ஏமாறு.

[ஏமம் + அறு - ஏமமறு → ஏமாறு → ஏமாற்றம்.]

ஏமாற்று¹-தல் *ēmāṟṟu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***ஏய்த்தல்;*** to hoodwink, disappoint, deceive. "மகனுத்தியினா லவரை யேமாற்ற" (இராமநா.உயுத்த.57).

ம. ஏமாற்றுக.

[ஏமாறு → ஏமாற்று.]

ஏமாற்று²-தல் *ēmāṟṟu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***ஏமஞ் செய்தல்;*** to defend, protect. "மாற்றே மாற்றலிலையே" (பரிபா.4,53).

[ஏமம் + ஆற்று - ஏமாற்று.]

ஏமாறு¹-தல் *ēmāṟu-,* 2.செ.கு.வி. (v.i.) ***அலமருதல்*** (யாழ்.அக.); to be confused, bewildered.

[ஏமம் + அறு-தல் - ஏமமறு-தல் → ஏமறு-தல் → ஏமாறு-தல்.]

ஏமாறு²-தல் *ēmāṟu-,* 2.செ.கு.வி. (v.i.) ***ஏய்க்கப்படுதல்;*** to be guiled; to be inveigled, defrauded. "மோக வலை யூடே யேமாறி" (திருப்பு.622).

[ஏமம் + அறு - ஏமமறு → ஏமாறு.]

ஏமிலாந்தி *ēmilāndi,* பெ. (n.) 1. ***திகைத்து நிற்பவன்*** (யாழ்ப்.); one who is despondent, confounded, disappointed. 2. ***மனமயக்கமுடையவன்;*** absent-minded, forgetful person.

[ஏம் +இல் - ஏமில் + (ஆழ்ந்தி) ஆந்தி.]

ஏமிலாந்து-தல் *ēmilāndu-,* 10.செ.கு.வி. (v.i.) 1. ***திகைத்து நிற்றல்;*** to despair, stand aghast. 2. ***மனந்தடுமாறுதல்;*** to stare about, not knowing what to do; to be in a fix; to be amazed.

[ஏம் + இல் - ஏமில் + (ஆழ்ந்து) ஆந்து.]

ஏமிலாப்பு *ēmilāppu,* பெ. (n.) ***மனத்தடுமாற்றம்*** (யாழ். அக.); confusion, bewilderment.

[ஏமிலாந்து → ஏமிலாப்பு.]

ஏமினி *ēmiṉi,* பெ. (n.) ***இடுதிரை.*** (அக.நி.); curtain.

[எழினி → ஏமினி (கொ.வ.).]

ஏமுறு¹-தல் *ēmuṟu-,* 13.செ.கு.வி. (v.i.) 1. ***மகிழ்வுறுதல்;*** to be delighted. "ஏமுறு விளையாட் டிறுதிக்கண்ணும்" (தொல்.பொருள்.147). 2. ***தன்மை திரிதல்;*** to be changed in nature or disposition. "ஏமுறு விரண்டு முளவென மொழிப" (தொல்.பொருள்.109). 3. ***காப்ப டைதல்;*** to be protected, saved. "எஞ்சிய பொருள் களை யேமுற நாடி" (திருமுருகு.97). 4. ***பொருத்தமுறு தல்;*** to be suited, be appropriate. "காமமும் பொருளு மேமுறத் தழுவி" (இலக்.வி.704).

[ஏம் + உறு.]

ஏமுறு²-தல் *ēmuṟu-,* 13.செ.கு.வி. (v.i.) 1. ***வருத்தமுறு தல்;*** to suffer, to be vexed. "ஏமுறுகிளவி" (தொல்.பொ ருள்.146). 2. ***பித்துறுதல்;*** to be mad, insane. "ஏமுற்ற வரினு மேழை" (குறள்.873). 3. ***மயக்கமுறுதல்;*** to be perplexed, bewildered. "ஏமுறு ஞாலந் தன்னிற் றோன்றி" (திருமுருக.163).

[ஏம் + உறு.]

ஏய்¹-தல் *ēy-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***பொருந்துதல்;*** to be suited. "ஏய்ந்த பேழ்வாய்" (திவ்.பெரியதி.1,7,3). 2. ***தகுதல்;*** to be fit. "தில்லையூரனுக்கின் றேயாப்பழி" (திருக்கோ.374).

[இயை → ஏய்.]

ஏய்²-தல் *ēy-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஒத்தல்;*** to be similar to. "சேலேய் கண்ணியரும்" (திவ்.திரு வாய்.5,1,8). 2. ***எதிர்ப்படுதல்;*** to meet. "போயினசின் னான் புனத்து மறையினா லேயினா ரின்றியினிது" (ஐந்.ஐம்.11).

[இயை → ஏய்.]

ஏய்³ *ēy,* இடை. (part.) ***மறுத்தற்கும் கூப்பிடுதற்கும் பயன்படுத்தும் இடைச்சொல்;*** interjection for negation and for calling attention.

[ஏ → ஏய் (ஒலிக்குறிப்பு).]

ஏய்⁴-த்தல் *ēy-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***பொருந்தச் சொல்லுதல்;*** to tell a seeming truth. "பொய்குறளை யேய்ப்பார்" (பழ.77). 2. ***ஒத்தல்;*** to resemble, to be like, be similar to. "அல்லிப் பாவை யாடுவனப் பேய்ப்ப" (புறநா.33,17). 3. ***வஞ்சித்தல்;*** to deceive cheat, defraud.

ம. ஏ.

[இயை → ஏய் → ஏய்த்தல்.]

ஏய்ப்ப *ēyppa,* இடை. (part.) ***ஓர் உவமவுருபு*** (தொல். பொருள்.290); adverbial word of comparison.

[இயை → இயைப்ப → ஏய்ப்ப.]

ஏய்ப்பிலேவட்டன் *ēyppilēvaṭṭaṉ,* பெ. (n.) ***மதிகேடன்*** (யாழ்.அக.); one who is easily duped; dupe; fool.

[எய்ப்பு → ஏய்ப்பு + இல் + ஏ + வட்டன்.]

ஏய்ப்பு *ēyppu,* பெ. (n.) ***ஏமாற்று;*** deceit, fraud.

[இயைப்பு → ஏய்ப்பு.]

ஏய்ப்புக்காட்டு-தல் *ēyppu-k-kāṭṭu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***ஏமாற்றம் செய்தல்;*** to dupe, circumvent, deceive, defraud.

[ஏய்ப்பு + காட்டு.]

ஏய்வு *ēyvu,* பெ. (n.) ***உவமை*** (திவா.); comparison, likeness, resemblance.

ம. ஏய்வு (இணைப்பு).

[இயைவு → ஏய்வு.]

ஏய¹ *ēya,* இடை. (part.) ***ஓர் உவமவுருபு*** (தண்டி.33); adverbial word of comparison.

[இயை → இயைய → ஏய.]

ஏய² *ēya-*, பெ.எ. (adj.) ***பொருந்திய, ஏற்புடைய;*** appropriate, suitable. "ஏயதன்மை இருவருந்தேர்ந் தரோ" (கந்தபு.அசுரேந்திரன்.மகேந்திரஞ்.47).

[இயைய → ஏய.]

ஏயம் *ēyam*, பெ. (n.) ***தள்ளத்தக்கது;*** that which deserves to be abandoned. "இது ஏயம், இது உபாதேயம்... என்று நிச்சயித்து" (சி.சி.258,சிவாக.).

[இய → ஏ = செல்லுதல், நீங்குதல், ஏ → ஏயம் = நீக்கத்தக்கது.]

ஏயர் *ēyar*, பெ. (n.) ***வடபுலத்து ஆயர்குடியின் கிளைமர பினர்;*** descendants of Hehaya, one of Yadhava races. "ஏயர்க்கென்று நிலத்தொடு தொடர்ந்த குலப்பகை" (பெருங்.வத்தவ.8,44).

[ஆயர் → ஏயர் (கொ.வ.).]

ஏயர்குலம் *ēyarkulam*, பெ. (n.) ***மிருகாவதியின் தந்தை குலம்*** (பெருங்.) (அபி.சிந்.); paternal lineage of Mrugavathi of Perungathai.

[ஆயர் → ஏயர் + குலம்.]

ஏயர்கோன்கலிக்காம நாயனார் *ēyar-koṉ-kalikkāma-nāyaṉār*, பெ. (n.) ***அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்*** (பெரியபு.); name of a canonized Śaiva Śaint.

[ஆயர் → ஏயர் (வடதமிழ்). ஏயர் + கோன் + கலி + காமன் + நாயனார்.]

ஏயான் *ēyāṉ*, பெ. (n.) ***ஒரு தொழிலைச் செய்யத்த காதவன்*** "மாவலியை யேயானிரப்ப" (திவ்.பெரியதி. 1,5,6); he who is too exalted to do an act.

[இயை + ஆ + அன் - இயையான் → ஏயான் (கொ.வ.).]

ஏயில் *ēyil*, பெ. (n.) ***இசை*** (ஈடு.4,6,2); song, music.

[ஏழில் → ஏயில் (கொ.வ.).]

ஏயெனல் *ē-y-eṉal*, பெ. (n.) ***ஒரு விரைவுக் குறிப்பு;*** onom, expr. of rapidity as uttering the sound "ஏயெனு மாத்திரத்து" (கம்பரா.பள்ளி.72).

[ஏய் + எனல்.]

ஏயே *ē-y-ē-*, இடை. (int.) ***இகழ்ச்சிக் குறிப்பு*** (திவா.); exclamation expressive of ridicule.

[ஏ + ஏ.]

ஏர்¹-தல் *ēr-*, 2.செ.கு.வி. (v.i.) ***எழுதல்;*** to rise. "பனிக்கடல் பருகி வலனேர்பு" (முல்லை.4).

[எல் → (எழு) → ஏர்.]

ஏர்²-தல் *ēr-*, 2.செ.குன்றாவி. (v.t.) ***ஒத்தல்;*** to be like, similar. "முத்தேர் முறுவலார்" (இனி.நாற்.2).

[எல் → (எழு) → ஏல் → ஏர்.]

ஏர்³ *ēr*, பெ. (n.) 1. ***கலப்பை;*** plough. "ஏரி னுழாஅ ருழவர்" (குறள்.14). 2. ***ஒரு கலப்பையும் ஓரிணைமா டும்;*** team of oxen and plough. "ஏருமிரண்டுளதாய்" (தமிழ்நா.60). 3. ***உழவுமாடு*** (சூடா.); yoke of oxen. 4. ***உழவு;*** ploughing, agriculture, as an occupation. "ஏரினு நன்றா லெருவிடுதல்" (குறள்.1038). 5. ***ஒரு நாளி லுழக்கூடிய நிலம்;*** as much land as can be ploughed in a day.

ம. ஏர்; க. ஏரு, ஆர்; கோத. ஏர்; துட. ஏர்; தெ. ஏரு; கொலா. சேர்; பர். இரெர்; கோண். சேர்; கூ. சேரு; குவி. கேரு; பிரா. அரே.*E* ear to plough, *A.S.* erian, *L.* aro, *Gr.* aroo-(rootar), to plough, *E* arable = that can be ploughed.

[இல் → ஈல் → ஈர் → ஏர் (மண்ணைப் பிளப்பது, மண்கட்டிகளை உடைத்து இழுத்துச் செல்வது).]

ஏர்⁴ *ēr*, பெ. (n.) 1. ***எழுச்சி;*** development, growth. "ஏரு மெழிலு மென்றா" (தொல்.பொருள்.247). 2. ***தோற்றப் பொலிவு;*** handsome appearance, bearing. "சீய மன்னானிளமையும் வனப்பு மேரும்" (சீவக. 1721). 3. ***அழகு;*** beauty. "கடனறிவார் முன்னின் நிரப்புமோரே ருடைத்து" (குறள்.1053). 4. ***நன்மை;*** goodness. "ஏரள்வில்லா வளவினர்" (திருக்கோ.308).

[ஏ → ஏர்.]

ஏர்⁵ *ēr*, பெ. (n.) ***நற்சீரகம்;*** cummin seed - cuminum cyminum. (சா.அக.).

[ஈர் → ஏர். ஏ → ஏர். ஏர் = நீட்சி.]

ஏர்க்கட்டு *ēr-k-kattu*, பெ. (n.) ***ஏர்ப்பூட்டு;*** first ploughing.

[ஏர் + கட்டு.]

ஏர்க்களம் *ēr-k-kaḷam*, பெ. (n.) ***நெற்களம்;*** threshing floor. "ஏர்க்களம் பாடும் பொருநரும் போர்க்களம் பாடும் பொருநரும்" (தொல்.பொருள்.91,உரை).

[ஏர் + களம்.]

ஏர்க்களவுருவகம் *ēr-k-kaḷa-vuruvagam*, பெ. (n.) ***போர்க்களத்தை ஏர்க்களமாக உருவகப்படுத்தும் புறத்துறை*** (புறநா.369); (Purap) literary theme of metaphorically describing the battle-field as a threshing floor.

[ஏர் + களம் + உருவகம்.]

ஏர்க்காடி *ēr-k-kādi*, பெ. (n.) ***ஏர்க்காணிக்கை, வரி வகை.*** (S.1.1.vi.155); tax.

[ஏர் + காணி. காணம் → காணி → காடி.]

ஏர்க்காணிக்கை *ēr-k-kāṇikkai*, பெ. (n.) ***ஏர்வரி*** (m.m.); plough tax.

[ஏர் + காணிக்கை.]

ஏர்க்கால *ēr-k-kāl*, பெ. (n.) 1. ***கலப்பை, வண்டியிவற் றின் நுகங் கொளுவும் உறுப்பு;*** shaft, as of a plough or of a carriage; thill. 2. ***ஆரக்கால்;*** spoke of a wheel.

ம. ஏர்க்கால்.

[ஏர் + கால்.]

ஏர்க்குளி *ērkkuḷi,* பெ. (n.) ***சீப்பு முதலியன செய்யவுத வும் மரவகை;*** (Nels.); white hard wood.

[ஈர் + கொளி - ஈர்க்கொளி → ஈர்க்குளி → ஏர்க்குளி (கொ.வ.).]

ஏர்க்குறிப்பு *ēr-k-kuṟippu,* பெ. (n.) ***ஏர்விடுதலைக் குறிக்கும் அன்றாடக் கணக்கு*** (M.M.); daily account of ploughs at work.

[ஏர் + குறிப்பு.]

ஏர்கட்டு-தல் *ēr-kaṭṭu-,* 5.செ.கு.வி. (v.i.) ***நிலத்தில் உழவுமாட்டைப் பூட்டி உழத் தொடங்குதல்;*** to yoke the plough. நல்ல அந்தியேர் கட்டுகிற நேரம். (உ.வ.).

[ஏர் + கட்டு.]

ஏர்ச்சீர் *ēr-c-cīr,* பெ. (n.) 1. ***உழவுத் தொழிலுக்குரிய கருவிகள்;*** implements or husbandry. ஏர்ச்சீரில்லாத வன். 2. ***வேளாண்மையால் வருஞ்செல்வம்*** (வின்.); wealth produced by husbandry.

ம. ஏருசீரு.

[ஏர் + சீர்.]

ஏர்த்தாயம் *ēr-t-tāyam,* பெ. (n.) ***பருவகாலத்து உழவு*** (வின்.); ploughing in season.

[ஏர் + தாயம்.]

ஏர்த்தொழில் *ērttoḻil,* பெ. (n.) ***உழவுத் தொழில்;*** husbandry, calling of a tiller.

[ஏர் + தொழில்.]

ஏர்த்தொழிலர் *ēr-t-toḻilar,* பெ. (n.) ***உழுதுண்போர்*** (திவா.); agriculturists, husbandmen, tiller.

[ஏர் + தொழில் + அர்.]

ஏர்நாழி *ēr-nāḻi,* பெ. (n.) ***கலப்பை யினோருறுப்பு*** (வின்.); small circular piece of wood with a hole in the centre to receive the cord, vaḍa-k-kayiṟu, by which polughmen can regulate the depth of a furrow.

[ஏர் + நாழி.]

ஏர்ப்ப *ērppa,* இடை. (part.) ***ஓர் உவமவுருபு*** (தொல்.பொருள்.286,உரை); adverbial word of comparison.

[ஏல் → ஏர் → ஏர்ப்ப.]

ஏர்ப்பண் *ēr-p-paṇ,* பெ. (n.) ***பூட்டாங்கயிறு*** (வின்.); ropes for attaching the oxen to the plough and the plough-beam to the yoke.

[ஏர் + பூண் - ஏர்ப்பூண் → ஏர்ப்பண் (கொ.வ.).]

ஏர்ப்பு *ērppu,* பெ. (n.) ***ஈர்ப்பு***[2] பார்க்க; see *īrppu*[2].

ஏர்ப்பூட்டு *ēr-p-pūṭṭu,* பெ. (n.) ***முதலுழவு;*** ploughing for the first time in the season on an auspicious day, begun with appropriate ceremonies.

[ஏர் + பூட்டு.]

ஏர்ப்பொன் *ēr-p-poṉ,* பெ. (n.) ***வரிவகை*** (S.1.1.vi.155); tax.

[ஏர் + பொன்.]

ஏர்பு *ērpu,* பெ. (n.) ***எழுச்சி*** (பிங்.); ascent, elevation rising of a heavenly body.

[ஏர் → ஏர்பு.]

ஏர்பூட்டு-தல் *ēr-pūṭṭu-,* 5.செ.கு.வி. (v.i.) ***ஏரில் மாடு கட்டுதல்;*** to yoke the oxen to the plough. "ஏர்பூட்டி னல்லது" (ஏரெழு.17).

[ஏர் + பூட்டு. பூண் (த.வி.) → பூட்டு (பி.வி.).]

ஏர்மங்கலம் *ēr-maṅgalam,* பெ. (n.) ***பொன்னேர்பூட்டிப் பாடும் மங்கலப் பாட்டு;*** ancient song of benediction sung at the commencement of ploughing. "ஏரொடு நின்றோ ரேர்மங்கலமும்" (சிலப்.10,135).

[ஏர் + மங்கலம்.]

ஏர்வாரம் *ēr-vāram,* பெ. (n.) 1. ***ஏருக்காகக் கொடுக்கும் விளைவுப் பங்கு*** (வின்.); share of produce allowed for the team and agricultural implements used in cultivating the land.

[ஏர் + வாரம்.]

ஏர *ēra,* இடை. (part.) ***ஓர் உவம உருபு*** (தொல். பொருள்.286,உரை); adverbial word of comparison.

[ஏல் → ஏல → ஏர.]

ஏரகம் *ēragam,* பெ. (n.) 1. ***திருவேரகம்;*** Udipi in S. Kanara, sacred to Skanda, one of the six paḍaiviḍu. "ஏரகத் துறைதலுமுரியன்" (திருமுரு.189). 2. ***சுவாமி மலை*** (Mod.); Swamimalai in the Tanjavūr Dist.

[ஏர் + அகம். - ஏரகம். ஏர் = அழகு.]

ஏரங்கம் *ēraṅgam,* பெ. (n.) ***மீன் வகை*** (சங்.அக.); a kind of fish.

ம. ஏரங்கம்.

[ஏர் → ஏரங்கம்.]



ஏரங்கம்

ஏரங்காடு *ēraṅ-gāḍu,* பெ. (n.) ***எரங்காடு*** பார்க்க (இ.வ.); see *eraṅgāḍu.*

[எரி → எர → ஏரங்காடு = செம்மண் பாங்கான நிலத்திலுள்ள காடு.]

ஏரடம் *ēradam,* பெ. (n.) ***இடி*** (சங்.அக.); thunder.

[ஏறு + இடி - ஏறிடி → ஏறிடம் → ஏறடம் → ஏரடம் (கொ.வ.).]

ஏரடி-த்தல் *ēr-adi-,* 4.செ.கு.வி. (v.i.) ***உழுதல்;*** to plough.

ம. ஏரடிக்குக.

[ஏர் + அடி.]

ஏரண்டப்புள் *ērandappul,* பெ. (n.) ***ஏரண்டம்***[2] பார்க்க; see *ērandam.*[2]

ஏரண்டம்[1] *ērandam,* பெ. (n.) 1. ***ஆமணக்கு*** (பிங்.); castor-plant. 2. ***ஆமணக்கிலிருந்து உண்டாகும் பொருள்கள்*** (தைலவ.தைல.9&54); products of the castor plant.

ம. ஏரண்டம்.

[எரி + அண்டம் - எரியண்டம் → ஏரண்டம். (செவ்வாமணக்கு).]

ஏரண்டம்[2] *ērandam,* பெ. (n.) ***கண்ட பேரண்டப் பறவை;*** two-headed bird. "ஏரண்ட வென்றிப் புள்ளுக் கிரையாவாய்" (வேதாரணி.தேவல.12).

ம. ஏரண்டம்.

[ஈர் + உண்டு - ஈருண்டு → ஈரண்டி → ஏரண்டி → ஏரண்டம் (நகத்தால் குத்தி அலகால் பிளந்து கொன்றுண்ணும் பறவை).]

ஏரண்டன் *ērandan,* பெ. (n.) ***ஓர் இயற் பெயர்;*** name of a person. ஏரண்டமுனிவர்.

ஏரணம்[1] *ēranam,* பெ. (n.) ***காரணங் காட்டி மெய்ப்பிக்கும் அறிவியல்;*** logic. "ஏரணங் காணென்ப ரெண்ணர்" (திருக்கோ.நூற்சிறப்.)

[ஏர் = நேர், பொருத்தம், செப்பம். ஏர் + அணம் - ஏரணம். 'அணம்' சொல்லாக்க ஈறு. ஏரணம் = நேரே பொருத்திக் காரணங்காட்டி உண்மைகளை உறுதிப்படுத்திச் சொல்லாடும் கலைத்திறன்.]

ஏரணம்[2] *ēranam,* பெ. (n.) ***மறைந்துபோன சொற்போர்*** (தருக்கம்) ***கலைநூல்;*** an extinct treatise in Tamil on logic. "ஏரணம் உருவம் ஓகம் இசைகணக்கு... அன்ன நூல் யாவும் வாரி, வாரணம் கொண்ட தந்தோ வழி வழிப் பெயரும் மாள." (தனிப்பா.).

[ஏர் → ஏரணம்.]

ஏரம்பம்[1] *ērambam,* பெ. (n.) 1. ***யானை*** (நாமதீப.); elephant. 2. ***வேளாண்மை;*** agriculture.

[ஏ → ஏர் → ஏரம்பம் (உயரமானது, உழவு).]

ஏரம்பம்[2] *ērambam,* பெ. (n.) ***ஒரு கணித நூல்*** (குறள்.392,உரை); treatise on mathematics.

[ஏர் → ஏரம்பம். கீழ்வாயிலக்கக் கணக்கிற்கு எதிரான மேல் வாயிலக்கக் கணக்கு, வடிவக் கணக்கு, வானநூல் கணக்கு போன்றவை பற்றிய நூலாகலாம்.]

ஏரத்தை *ērattai,* பெ. (n.) ***பேரரத்தை;*** greater galangal. (சா.அக.).

[ஏர் + அரத்தை.]

ஏரல் *ēral,* பெ. (n.) ***கிளிஞ்சில்*** (திவா.); mussel or other bivalve animal; snail. ஏரல் எழுத்துப் போல்வ தோர் விழுக்காடு (குறள்.பரி.உரை).

ம. ஏரல்.

[ஈர் → ஏர் → ஏரல்.]

ஏரா[1] *ērā,* பெ. (n.) ***கப்பலின் அடிப்பொருத்து மரம்*** (யாழ்ப்.); keel of a ship.

ம. ஏரா.

[ஆர் → ஏர் → ஏரா. ஆர் = பொருத்துதல்.]

ஏரா[2] *ērā,* பெ. (n.) ***ஏராக்கள்*** பார்க்க (யாழ்ப்.); see *ērākkal.*

ஏராக்கள் *ērākkal,* பெ. (n.) ***பனை மரத்துப் பாளையிலிருந்து இறக்கும் இனிய பனஞ்சாறு;*** sweet sap extracted from the spathe of the palmyra tree. (சா.அக.).

[எர் → ஏரா (கள்ளின் தன்மை நிரம்பாத) + கள்.]

ஏராண்மை *ērānmai,* பெ. (n.) ***உழவு*** (யாழ்ப்.); ploughing, tillage, agriculture.

[ஏர் + ஆண்மை.]

ஏராப்பலகை *ērā-p-palagai,* பெ. (n.) ***கப்பலின் அடிமரம்*** (யாழ்ப்.); keel of a ship.

[ஆர் → ஏர் → ஏரா + பலகை.]

ஏராமரம் *ērā-maram,* பெ. (n.) ***ஏராப்பலகை*** பார்க்க; see *ērappalagai.*

ஏராளட்டவணை *ēr-āl-attavanai,* பெ. (n.) ***ஏரையும் உழவுசெய்வோரையுங் காட்டும் குறிப்பு*** (m.m.); list of the ploughs and labourers in a village.

[ஏர் + ஆள் + அட்டவணை.]

ஏராளம் *ērālam,* பெ. (n.) ***மிகுதி;*** abundance, plenitude. "ஏராளமாக் கோலமெழுதிய தரைகளும்" (இராமநா. சுந்.3).

தெ. ஏராளமு, பேராளமு; க. ஏராள; து. ஏராள.

[ஏர் + ஆளம் - ஏராளம். ஏரை ஆள்வதால், வேளாண்மை செய்வதால் உண்டாகும் மிகுவிளைச்சல். ஒன்றுக்கு நூறாக விளைதல்.]

ஏராளர் *ēr-ālar,* பெ. (n.) 1. ***உழவர்;*** husbandmen, agriculturists, cultivators, ploughmen. 2. ***வீரர்;*** brave men, heroes. (சேரநா.).

ம. ஏராளன்.

[ஏர் + ஆள் + அர்.]

ஏரி *ēri,* பெ. (n.) 1. ***இயற்கையாகப் பள்ளத்தில் தேங்கிய பெரிய நீர்நிலை;*** lake. 2. ***செய்கரை நீர்நிலை;*** embanked lake. 3. ***பாசனத்திற்குப் பயன்படும் நீர் நிலை;*** reservoir for irrigation. 4. ***பக்கக்கரைகளைக் காப்பாகக் கொண்ட பெரிய நீர்நிலை;*** large tank, a lake with banks. "ஏரியாம் வண்ணமியற்று மிதுவல்

லால்'' (திவ்.இயற்.2,16). 5. *எருத்துத்திமில்;* hump of a bull. ஏரி நிமிர்ந்தா லிடையனையும் பாராது. (யாழ்ப்.). 6. *கொழுத்துள்ள பிடர்;* prominence on the nape of the neck, through corpulence. அவனுக்கு ஏரி முற்றிப் போயிற்று (வின்.). 7. *கழை* (புனர்பூசம்); star.

ம., க., குட., து. ஏரி.

[ஏ → ஏர் → ஏரி (உயர்ந்த கூரையை உடையது).]

ஏரிப்பட்டி *ēri-p-paṭṭi,* பெ. (n.) *ஏரியைக்காக்கும் பணிக் காகக் கொடுக்கப்படும் மானியம்* (S.1.1.III,225); endowment made for carrying out repairs to the tank.

[ஏரி + பட்டி.]

ஏரிப்பாய்ச்சல் *ēri-p-pāyccal,* பெ. (n.) *ஏரிநீர்ப்பாசனம்;* irrigation from a tank.

[ஏரி + பாய்ச்சல்.]

ஏரிப்பாய்ச்சி *ēri-p-pāycci,* பெ. (n.) *மீன்பிடி வரி.* (M.NA.D.1,287); fish rent.

[ஏரி + பாய்ச்சி. பாய்ச்சி = மீன்.]

ஏரிமேரை *ēri-mērai,* பெ. (n.) *ஏரி, மதகு, கலிங்கல் இவைகளின் புதுப்பிக்கும் செலவிற்காக ஒதுக்கப்ப டும் விளைச்சலின் பகுதி* (W.G); portion of the crop set apart to meet the expense of keeping the reservoir, watercourses etc. in good repair.

[ஏரி + மேரை. மேலி → மேரி → மேரை (மேலாக அல்லது கூடுதலாகத் தரப்படும் வரி, பங்கீடு).]

ஏரிவாரியத்தார் *ēri-vāriyattār,* பெ. (n.) *ஏரியை மேற்பார் வையிடும் குழுவினர்* (Insc.); local committee of ancient times which functioned as a supervising body over tanks and irrigation.

[ஏரி + வாரியம் + அத்து + ஆர். 'அத்து' - சாரியை.]

ஏரிவாரியம் *ēri-vāriyam,* பெ. (n.) *ஏரிவாரியத்தார்.* (I.M.P.NA.17) பார்க்க; see *ērivāriyattār.*

ஏரிவாளை *ēri-vāḷai,* பெ. (n.) *வாளைமீன்வகை;* fresh-water fish.



ஏரிவாளை

ஏரின்வாணர் *ērin-vāṇar,* பெ. (n.) *ஏரின்வாழ்நர்* பார்க்க (திவா.); see *ērinvāḻnar.*

ஏரின்வாழ்நர் *ērin-vāḻnar,* பெ. (n.) *உழவுத் தொழில் செய்து அதனால் வாழ்பவர்* (திவா.); agriculturists, as those who live by the plough.

[ஏர் + இன் + வாழ்நர். 'இன்' ஐந்தன் உருபு.]

ஏருழவர் *ēr-uḻavar,* பெ. (n.) *ஏர்கொண்டுழுபவர்;* plough tillers. ''வில்லே ருழவர் பகை கொளினும்'' (குறள்.872).

[ஏர் + உழவர்.]

ஏருழவு *ēr-uḻavu,* பெ. (n.) 1. *வேளாண்மை;* ploughing, tillage, agriculture. 2. *ஒரு நாளில் இரண்டேரைக் கொண்டு உழக்கூடிய நிலம்* (G.Sm.D.1,288); extent of land that can be ploughed by two pairs of the plough.

[ஏர் + உழவு.]

ஏரெழுபது *ēr-eḻupadu,* பெ. (n.) *ஏரைப்புகழ்ந்து கம்பர் பாடிய ஒரு நூல்;* poem by Kamban containing 70 stanzas in praise of the plough.

[ஏர் + எழுபது.]

ஏரோட்டு-தல் *ēr-ōṭṭu-,* 5.செ.குன்றாவி. (v.t.) *உழுதல்;* to plough.

[ஏர் + ஓட்டு-தல்.]

ஏரோர் *ērōr,* பெ. (n.) *உழுவோர்;* ploughmen. ''ஏரோர் களவழித் தேரோர் தோற்றிய'' (தொல்.பொருள்.76).

[ஏர் + ஆர் - ஏரார் → ஏரோர்.]

ஏல்¹(ற்)-த(ற)ல் *ēl-,* 14.செ.கு.வி. (v.i.) 1. *தகுதல்;* to be suitable convenient, just. ''ஏலா விடரொருவ ருற்றக்கால்'' (நாலடி.113). 2. *மாறுபடுதல்;* to change. ''ஏலாதான் பார்ப்பான்'' (நான்மணி.54).

[ஈல் → ஏல்.]

ஏல்²(ற்)-த(ற)ல் *ēl-,* 14.செ.கு.வி. (v.i.) 1. *துயிலெழு தல்;* to awake from sleep. ''நீ துஞ்சியேற்பினும்'' (கலித்.12). 2. *நிகழ்தல்;* to happen, occur. ''ஏற்றதை யுணர் கிலமென்று'' (பாரத.வாரணாவத.21). 3. *மிகு தல்;* to be excessive. to abound. ஏற்கக் கொடுத்தான்.

[எல் → ஏல்.]

ஏல்³(ற்)-த-(ற)-ல் *ēl-,* 9.செ.குன்றாவி. (v.t.) 1. *எதிர் கொள்ளுதல்* (சூடா.); to receive, welcome. 2. *ஒப்புக் கொள்ளுதல்;* to admit, accept, consent, concede; to embrace, adopt. ''செய்வெனென் றேன்றபின்'' (கம்பரா. கிளை.126). 3. *மேற்கொள்ளுதல்;* to undertake, enter upon, engage in, take charge of ''என்றேனடிமை'' (திவ்.இயற்.4,95). 4. *அன்புகூர்தல்;* to love. ''ஏற்ற துணைப் பிரிந்தார்'' (திணைமாலை.106). 5. *இரத்தல்;* to stretch out the hands in supplication; to beg, as alms.

[இல் → எல் → ஏல்.]

ஏல்[4](ற்)-த-(ற)-ல் *ēl-,* 9.செ.குன்றாவி. (v.t.) 1. ***எதிர்த்தல்;*** to oppose in battle, to encounter, as a foe. "ஏன்றடு விறற்களம் பாடி" (திருமுருகு.55). 2. ***சுமத்தல்;*** to bear, lift up, carry. "விறகேற்று விலைகூறி யதை" (அருட்பா.1,நெஞ்சறி.255). 3. ***ஒத்தல்*** (தண்டி.33); to be equal, similar.

க. ஏர் (போரில் எதிர்த்தல்); **து.** ஏர்சாவுண் (அடித்தல்).

[இல் → எல் → ஏல்.]

ஏல்[5] *ēl,* பெ. (n.) 1. ***பொருத்தம்;*** suitability, appropriateness; fitness. "மாலை யேலுடைத்தாக... அணிந்தும்" (திருவாச.2,114). 2. ***உணர்ச்சி;*** revival, esp. of one in swoon or in depressing grief. "ஏல்பெற்று... கண்ணாள் புலம்பா வெழுந்திருப்ப" (சீவக.1810).

ம. ஏல்.

[உல் → இல் → எல் → ஏல்.]

ஏல்[6] *ēl,* பெ. (n.) ***ஏரல்*** பார்க்க; see *ēral.*

ஏல்[7] *ēl,* இடை. (part.) ***எதிர்மறை யேவலொருமை ஈறு;*** neg. im. sing, ending, as in ஈவது விலக்கேல்.

[ஆ → ஆல் → ஏல்.]

ஏல்[8] *ēl,* வி.எ. (adv.) ***என்றால்;*** if, used as an ending in a conjunctional sense as in ... வந்தாயேல்.

[ஆல் → ஏல்.]

ஏல்[9] *ēl,* பெ. (n.) ***கிளிஞ்சில்;*** bivalve shell-fish. (சா.அக.).

[ஏரல் → ஏல்.]

ஏல்வை[1] *ēlvai,* பெ. (n.) ***காலம்;*** time, period, season, occasion. "அரசாள்கின்ற வேல்வை" (உத்தரரா.சம்பு வன்.6). 2. ***நாள்*** (சூடா.); day. 3. ***நீர்நிலை*** (பிங்.); tank; large expanse of water.

[எல் (பொழுது) → ஏல் → ஏல்வை.]

ஏல்வை[2] *ēlvai,* பெ. (n.) ***வரிவகை*** (S.1.1.v.96); a tax.

[ஏல்வை - நீர்நிலைக்காக வாங்கப்பட்ட வரியாகலாம்.]

ஏல *ēla,* கு.வி.எ. (adv.) 1. ***முன்னமே;*** already, beforehand. "பிரளயம் வருமென் றேலக் கோலி" (ஈடு.2,8,7). 2. ***மிக;*** liberally, vastly. "கல்வியேலவ மைந்த பெருமை பெற்றும்" (திருக்காளத்.4,3,8).

A.S. oer, *E* ere, before, *Goth.* air, soon, *E* early, from oer.

[ஏல் → ஏல (சு.வி.78).]

ஏலக்கம் *ēlakkam,* பெ. (n.) ***கடினவேலையின் பொழுது ஊக்குவிக்க எழுப்பும் ஒலி;*** cry to encourage one another in hard work.(சேரநா.).

ம. ஏலக்கம்.

[ஏல → ஏலக்கம். ஏல - கெழுதகைப் பொதுச் சொல்லாக வரும் விளி.]

ஏலக்காய் *ēla-k-kāy,* பெ. (n.) ***ஏலச்செடியின்காய்;*** cardamom.

க. ஏலக்கி, ஏளக்கி, யாலக்கி; **து.,** குட. ஏலக்கி; **தெ.** ஏலகி. *Guj.* ēlaci; *Beng.* ilāyaja; *Hin.* ilāyaci; *Mar.* elāci, ēlāci, *Skt* ēlikā.

[ஏலம் + காய். ஏ → ஏல் → ஏலம் (உயர்ந்த மணம் வீசுவது).]

ஏலக்கோலம் *ēla-k-kōlam,* பெ. (n.) ***அணியம்*** (யாழ். அக.); readiness, preparedness.

[ஏல் + கோலம் - ஏலக்கோலம்.]

ஏலங்கேள்(ட்)-த(ட)ல் *ēlaṅ-kēḷ-,* 12.செ.கு.வி. (v.i.) ***ஏலவிலையை ஏற்றி அல்லது குறைத்துக் கேட்டல்;*** to bid at an auction.

[ஏலம் + கேள்.]

ஏலச்சீட்டு *ēla-c-cīṭṭu,* பெ. (n.) ***ஏலங்கேட்டெடுக்குங் கூட்டுச் சீட்டு;*** periodical deposit of money, the net collections being auctioned away to the lowest bidder on each occasion.

[ஏலம் + சீட்டு.]

ஏலப்பாட்டு *ēla-p-pāṭṭu,* பெ. (n.) ***படகோட்டிகளின் பாட்டு*** (வின்.); boatmen's song in which the words ēlo, ēlēlō occur again and again.

[ஏல + பாட்டு - ஏலப்பாட்டு. ஏலேலோ என இசைத்தவாறு பாடும் பாட்டு.]

ஏலம்[1] *ēlam,* பெ. (n.) 1. ***செடிவகை;*** cardamom plant. 2. ***ஒரு மணப் பொருள்*** (திவா.); cardamom seeds. 3. ***மயிர்ச்சாந்து;*** unguent for perfuming the hair of women. "ஏலவார்குழலிமார்" (திருவாச.29).

ம. ஏலம் **க.** ஏலக்கி, யாலக்கி, யாலகி; குட. ஏலக்கி; **தெ.** ஏலக்கி, ஏல. *Mar.* ēlaci, vēlaci, vēladoḍa, *or.* eḷā, olāy.

[ஏ → ஏல் → ஏலம்.]

ஏலம்[2] *ēlam,* பெ. (n.) ***போட்டியிற் பலர்முன் ஏற்றும் விலை;*** auction.

ம., து., க. ஏலம்; **தெ.** ஏலமு, பாலமு, வேலமு. *Hin.* nīlām; *Mar.* līlām, lilām, *Port.* lēilām.

ஏலரிசி *ēlarisi,* பெ. (n.) ***ஏலவரிசி*** பார்க்க; see *ēla-v-arisi.*

[ஏலம் + அரிசி.]

ஏலரிசிமணி *ēlarisi-maṇi,* பெ. (n.) ***பரவ மகளிர் கழுத்தணிகளுளொன்று;*** a kind of necklace worn by parava women.

[ஏலம் + அரிசி + மணி.]

ஏலவரிசி *ēla-v-arisi,* பெ. (n.) ***ஏலக்காயின் உள்ளீடு*** (S.1.1.ii.121); cardamom seed.

க. ஏலக்கி.

[ஏல + அரிசி.]

ஏலவார்குழலியம்மை *ēlavārkuḻaliyammai,* பெ. (n.) ***திருக்காஞ்சியிற் கோயில் கொண்ட அம்மையார்;*** deity in Kanchipuram temple.

[ஏலம் + வார்குழலி + அம்மை.]

ஏலவே *ēla-v-ē,* கு.வி.எ. (adv.) ***ஏல[1]*** பார்க்க; see *ēla[1]*.

[ஏல + ஏ - ஏலவே.]

ஏலன் *ēlaṉ,* பெ. (n.) ***தினையரிசி;*** millet.

[இல் → எல் → ஏல் + அன் - ஏலன் = சிறியது. 'அன்' - ஒருமை குறித்த ஈறு.]

ஏலா *ēlā,* விளி. (int) 1. ***தோழன் தோழியை முன்னிலைப் படுத்துஞ் சொல்*** (பரிபா.8,69,கந்தபு.அசமுகிப்.12); exclamation of familiar address to a companion, whether man or woman. 2. ***மனைவியை விளிக்கும் கெழுதகைப் பொதுச்சொல்*** (கரூர்.வ.); word of endearment. ஏலா, இங்கே வா (இ.வ.).

க. எலா, லே; **தெ.** எலா.

[எல்லா → எலா → ஏலா.]

கணவன் மனைவி ஆகிய இருவரும் ஒருவரையொருவர் ஏற்றத்தாழ்வின்றி அன்பும் மதிப்பும் ஒருபடித்தரமாகப் புலப்படும் வகையில் எலா என அழைப்பது முந்து தமிழ்ப் பண்பாடு. அஃது இன்றும் நாட்டுப்புறங்களில் ஒதுக்கப்பட்டுப் புறக்கணிக்கப்பட்ட மக்களிடை மறையாமல் நின்று நிலவுகிறது. மேனாட்டார் ஒருவரையொருவர் Hallo என விளித்துக் கொள்வதை இதனொடு ஒப்பிடுக.

ஏலாதி *ēlādi,* பெ. (n.) (இலக்.) ***ஒவ்வொரு பாடலிலும் ஆறு நற்பண்புகளைக் கூறும் முறையில் நூறு பாடல்களினால் கணிமேதாவியார் என்னும் புலவரால் இயற்றப்பட்ட "ஏலாதி" என்னும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று;*** lit. cardamom and other ingredients', name of an ancient didactic work by Kaṉi-Mētāviyār, containing 100 stanzas and mentioning six virtues in each stanza, one of Padiṉ-eṉ-kīḻ-kaṇakku.

[ஏலம் + ஆதி.]

ஏலாதிகடுகம் *ēlādi-kaḍugam,* பெ. (n.) ***மருந்துவகை*** (யாழ்.அக.); a medicine.

[ஏலம் + ஆதி + கடுகம்.]

ஏலாப்பு *ēlāppu,* பெ. (n.) ***துன்பம்*** (யாழ்.அக.); distress.

மறுவ. பொல்லாப்பு; **ம.** ஏலாப்பு.

[இயலாப்பு → ஏலாப்பு.]

ஏலாப்புறம் *ēlāppuṟam,* பெ. (n.) ***வயலைச்சுற்றியுள்ள இடம்;*** place adjoining and around paddy-fields. (சேரநா.).

ம. ஏலாப்புறம்.

[எல்லைப்புறம் → ஏலாப்புறம் (கொ.வ.).]

ஏலாமுள் *ēlāmuḷ,* பெ. (n.) ***வேலியமைக்கப் பயன்படுத்தும் ஒருவகை முட்செடி;*** a species of thorny plant. (சேரநா.).

ம. ஏலாமுள்ளு.

[வேல் → வேலா + முள் - வேலாமுள் → ஏலாமுள் (கொ.வ.).]

ஏலாமை *ēlāmai,* பெ. (n.) 1. ***கூடாமை;*** inability, impossibility. 2. ***பொருந்தாமை;*** unsuitableness, incongruity, inconsistency. "பூதமுதலாய தத்துவங்களென வுரைத்தல் ஈண்டைக்கேலாமையறிக." (சி.போ. சிற்.1,1).

[இயலாமை → ஏலாமை.]

ஏலு[1]-தல் *ēlu-,* 13.செ.கு.வி. (v.i.) 1. ***நிகழ்தல்;*** to happen, occur. 2. ***பொருந்துதல்;*** to join, mingle. 3. ***செய்ய முடிதல்;*** to be possible. இது உன்னாற் செய்ய ஏலுமா.

ம. ஏலுக.

[இயல் → ஏல் → ஏலு-தல்.]

ஏலே *ēlē,* விளி. (int) 1. ***சிறுவனையும் இழிந்தோனையும் விளிக்குஞ் சொல்;*** exclamation or familiar address to inferior and young. ஏலே! என்னலே அது? (நெல்லை.). 2. ***பழங்குடி மக்கள் ஒருவரையொருவர் அன்பொடு விளிக்கும் கெழுதகைப் பொதுச் சொல்;*** word of endearment among Harijans and other most Backward Communities.

[ஏல் → ஏலா → ஏலே.]

ஏலேலசிங்கன் *ēlēlaśiṅgaṉ,* பெ. (n.) ***திருவள்ளுவநாயனார் காலத்தில், அப்பெருமானிடம் பேரன்பு பூண்டு ஒழுகி, தன் மகளை வள்ளுவருக்கு வாழ்க்கைத் துணையாகக் கொடுத்த ஒரு வேளாளப் பெருமகனார்;*** a vēḷāḷa chief, a contemporary of Tiruvalluvar fascinated by Tiruvalluvar's excellence and gave his daughter in marriage to him (Tiruvalluvar) as a token of respect.

[ஏலேலன் + சிங்கன். ஏலேலன் என்பது படகோட்டிக்கும் கப்பல் உடைமையாளனுக்கும் பண்டு தொட்டு வழங்கிய பெயராகலாம்.]

ஏலேலம் *ēlēlam,* விளி. (int.) ***ஏலேலோ[1]*** பார்க்க; see *ēlēlō.[1]*

ஏலேலோ[1] *ēlēlō,* விளி. (int.) ***படகு முதலியன தள்ளுவோர் பாடும் ஏலப்பாட்டில் வரும் ஒரு சொல்;*** onom. expression that occurs again and again in songs sung by boatmen or others while pulling or lifting together. 'மண்ணை நம்பி ஏலேலோ - மரமிருக்க - ஏலேலோ. மரத்தை நம்பி ஏலேலோ - கிளையிருக்க - ஏலேலோ."

[ஏலோ + ஏலோ - ஏலேலோ (ஒலிக் குறிப்பு).]

ஏலேலோ[2] *ēlēlō,* பெ. (n.) ***சோழமன்னனொருவனின் பெயர்;*** name of a Chola King. (செ.அக.).

ஏவங்கேள்[1](ட்)-த(ட)ல் *ēvaṅ-kēḷ-,* 12.செ.கு.வி. (v.i.) ***ஏவல் செய்தல்;*** to do as directed.

[ஏவல் → ஏவம் + கேள்.]

ஏவங்கேள்[2](ட்)-த(ட)ல் *ēvaṅ-kēḷ-,* 12.செ.கு.வி. (v.i.) 1. ***குற்றத்தைச் சுட்டிப் பேசிப் பழித்தல்*** (உ.வ.); to taunt a person specifying his faults. 2. ***இடைமறித்து வினவுதல்;*** to intermiddle when an injury is done. அரசன் செய்ததற்கு ஏவங்கேட்பவரார்? (வின்.).

[எவ்வம் → ஏவம் + கேள்.]

ஏவஞ்ச *ēvañja,* கு.வி.எ. (adv.) ***ஏறத்தாழ;*** so that, it being so. ஏவஞ்ச இந்தக்காரியம் முடியலாம். (Brah.).

[ஏற + எஞ்ச - ஏறஞ்ச → எவஞ்ச.]

ஏவதும் *ēvadum,* சு.பெ. (pron.) 1. ***ஒவ்வொன்றும்;*** everything. "செய்வினையேவது மெண்ணி லாதகடந் தொறும்" (கந்தபு.சுக்கிரனுப.36). 2. ***ஏதுவும்;*** whatsoever.

[ஏ + அதுவும் - ஏவதுவும் → ஏவதும்.]

ஏவம்[1] *ēvam,* பெ. (n.) ***குற்றம்;*** fault, blemish. "ஏவமிக்க சிந்தையோடு" (தேவா.2306).

[எவ்வம் → ஏவம்.]

ஏவம்[2] *ēvam,* கு.வி.எ. (adv.) ***இவ்விதம்;*** thus, exactly so.

ம. ஏவம்.

[இவ்வம் → ஏவம் (கொ.வ.).]

ஏவர் *ēvar,* வி.சு.பெ. (interr.pron.) ***எவர்;*** which persons, who.

ம. ஏவா.

[எவ் + அர் - எவர் → ஏவர்.]

ஏவல்[1] *ēval,* பெ. (n.) 1. ***தூண்டுகை;*** instigation, incitement. 2. ***ஓதுகை;*** recital. "ஏவலின் முதுமொழி" (பரிபா.13,40). 3. ***ஆணை*** (திவா.); command, order, authority. 4. ***பணிவிடை;*** service. "ஏவன் முற்றி" (அரிச்.பு.மயான.1). 5. ***ஏவலாள்;*** servant, attendant. "முனிவர்க் கேவலாய்" (தாயு.தேசோ.1). 6. ***தீய ஆவியை ஏவிவிடுகை;*** inciting a devil against an enemy by witchcraft. 7. ***ஏவல் வினைமுற்று*** (நன்.145); (gram) imperative finite verb. 8. ***வறுமை*** (சூடா.); poverty, want.

[ஏவு → ஏவல்.]

ஏவல்[2] *ēval,* பெ. (n.) ***பல்லிகொட்டுகை;*** propitious chirpings of a lizard.

[ஏவு → ஏவல்.]

ஏவல்கேள்(ட்)-த(ட)ல் *ēval-kēḷ-,* 12.செ.கு.வி. (v.i.) ***ஏவியபணி செய்தல்;*** to serve, obey orders, perform duties assigned; to wait upon, as an attendant.

[ஏவல் + கேள்.]

ஏவல்கொள்(ளு)-தல் *ēval-koḷ-,* 12.செ.கு.வி. (v.i.) ***வேலை வாங்குதல்;*** to get work done by others.

[ஏவல் + கொள்.]

ஏவல்சிலதியார் *ēval-śiladiyār,* பெ. (n.) ***சமையலறை ஏவற்பெண்டிர், மடைப்பள்ளியாரடியார்;*** kitchen maids.

[ஏவல் + சிலதி + ஆர். சிலதி = ஏவிய பணி செய்யும் சிற்றாள்.]

ஏவல்மேவல் *ēval-mēval,* பெ. (n.) ***கட்டளை*** (வின்.); commands.

[ஏவல்மேவல் (எதுகை குறித்த இணைமொழி).]

ஏவல்விடை *ēval-viḍai,* பெ. (n.) ***வினாவுக்கு விடையாக ஒரு ஏவல் இடுவது;*** answering a question by an imperative retort, as when asked, 'will you do this?' to say 'Do it yourself!' 'சாத்தா, இது செய்வாயோ?' என்ற வழி 'நீ செய்!' என்பது போன்ற விடை. (நன்.386, உரை).

[ஏவல் + விடை - ஏவல் விடை = ஏவலே விடையாக அமைவது.]

ஏவல்வினா *ēval-viṉā,* பெ. (n.) ***ஏவும் நோக்கத்தோடு கேட்கும் வினா*** (நன்.385); questioning with a view to give a command as 'Had you your dinner?' சாத்தா உண்டாயா?

[ஏவல் + வினா - ஏவல் வினா. "நீ உண்டாயா?" என்னும் வினா, "போய் உண்" என்னும் ஏவற்குறிப்பை உள்ளடக்கிய ஏவல் வினாவாயிற்று.]

ஏவல்வினை *ēval-viṉai,* பெ. (n.) 1. ***முன்னின்றாரை ஏவும் வினை;*** verb in the imperative mood. 2. ***மந்திரத் தொழில்;*** act of commanding a devil by witchcraft to do harm to a person.

[ஏவல் + வினை.]

ஏவலன் *ēvalaṉ,* பெ. (n.) ***பணிவிடை செய்வோன்;*** attendant, servant. "ஏவலர் தொழின்முறை யியற்ற" (கந்தபு.உரைபுனை.17).

ம. ஏவலன்.

[ஏவல் + அன் - ஏவலன்.]

ஏவலாள் *ēval-āḷ,* பெ. (n.) ***ஏவலன்*** பார்க்க; see *ēvalaṉ.*

[ஏவல் + ஆள்.]

ஏவள் *ēvaḷ,* பெ. (n.) ***எப்பெண்;*** which woman.

ம. ஏவள்.

[எவ் + அள் - எவள் → ஏவள்.]

ஏவற்சிலதி *ēvaṟ-śiladi,* பெ. (n.) ***குற்றேவல்புரியும் பெண்;*** maid servant of a household; kitchen-maid. "பூவிலை மடந்தைய ரேவற்சிலதியர்" (சிலப்.5,51).

[ஏவல் + சிலதி - ஏவற்சிலதி. சிலதி என்னும் சொல்லே ஏவற்பணி யாளைக் குறிக்கும். 'ஏவல்' மிகையான முன்னடை. சிலதி = குற்றேவல் செய்யச் செலுத்தும் பெண். செல் → செலவு + ஆளி - செலவாளி → செலவாதி → செலதி → சிலதி. செலவாதிபார்க்க; see śelavādi.]

ஏவற்பணி *ēvaṟ-paṇi,* பெ. (n.) ***ஏவியவேலை*** (வின்.); services commanded, often used as a compliment in epistolary writings and in polite conversation.

[ஏவல் + பணி - ஏவற்பணி.]

ஏவறவு *ēvaṟavu,* பெ. (n.) ***துன்பம், கவலை;*** sorrow, distress. (சேரநா.).

ம. ஏவறவு.

[ஏசறவு → ஏவறவு (கொ.வ.).]

ஏவறை[1] *ēvaṟai,* பெ. (n.) ***மறைந்து அம்பெய்தற்குரிய மதிலுறுப்பு*** (பு.வெ.6,5,உரை); retreat constructed in the battlement of a fort from where bowmen might shoot arrows against the enemy unobserved.

[ஏ + அறை - ஏவறை. ஏ = அம்பு.]

ஏவறை[2] *ēvaṟai,* பெ. (n.) ***ஏப்பம்*** (யாழ்ப்.); belching, eructation.

[ஏ + உறு - ஏவுறு → ஏவறை. ஏ = ஏப்பம்.]

ஏவன் *ēvaṉ,* வி.பெ. (pron.) ***யாவன்;*** who?

ம. ஏவன்; **க.** யாவன், தாவன்; **து.** எரு; **தெ.** எவ்வண்டு; பட. எம.

[எவன் → ஏவன்.]

ஏவிவிடல் *ēviviḍal,* தொ.பெ. (vbl.n.) ***ஏவிவிடு*** பார்க்க; see *ēviviḍu.*

ஏவு[1]**-தல்** *ēvu-,* 8.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஆணையிடுதல்;*** to command, order, direct. 2. ***தூண்டிவிடுதல்;*** to incite, prompt, urge, instigate, to conjure and set on, as a demon. 3. ***திருவருளால் தூண்டப்படுதல்;*** chr. to inspire, as God. ஆவியானவர் பவுலை யேவினார் (கிறித்.). 4. ***செலுத்துதல்*** (பிங்); to discharge, as an arrow, to throw, as a dart. 5. ***சொல்லுதல்;*** to speak, say. "ஏவா விருந்த வடிகள்" (சீவக.3036).

ம. ஏவுக; **க.** ஏக.

[எய் → ஏ → ஏவு.]

ஏவு[2] *ēvu,* பெ. (n.) ***உயரம்;*** height.

க. ஏ. *Ger.* heben. *A.S.* hebban, *E* heave, *Goth.* hefian, to lift. *E* heaven, *O.Ice.* hifinn. *A.S.* heofon, the air, the abode of the Deity. Lit. the 'heaved' or 'lifted up'.

[ஏ → ஏவு.]

ஏவு[3] *ēvu,* பெ. (n.) ***அம்பு;*** arrow. "மாறிலேவு பூட்டி" (கந்தபு.காமதக.66).

[எய் → ஏ → ஏவு.]

ஏவு[4] *ēvu,* பெ. (n.) ***துன்பம்;*** misery.

[எவ்வம் → (எவ்வு) ஏவு.]

ஏவுகணை *ēvukaṇai,* பெ. (n.) ***குறிதவறாமல் இலக்கைச் சென்று தாக்கும் படைக்கலம்;*** missile.

[ஏவு + கணை.]

ஏவுகாரன் *ēvukāraṉ,* பெ. (n.) ***எய்பவன், வில்லாளி;*** archer. (சேரநா.).

ம. ஏவுகாரன்.

[ஏவு + காரன்.]

ஏவுகை *ēvugai,* பெ. (n.) ***ஏவுதல்;*** inciting, driving.

ம. ஏவு.

[ஏ → ஏவு → ஏவுகை.]

ஏவுண்ணு-தல் *ēvuṇṇu-,* 12.செ.கு.வி. (v.i.) ***அம்பு தைத்தல்;*** to be injured by an arrow. "பகழியினே வுண்டு" (இறை.6,64).

[ஏ + உண் - ஏவுண் → ஏவுண்ணு. ஏ = அம்பு.]

ஏவுதற்கருத்தன் *ēvudaṟ-karuttaṉ,* பெ. (n.) (இலக்.) ***செய்விக்கும் வினைமுதல்;*** (gram.). indirect agent who causes a thing to be done, அரசன் கோயில் கட்டினான் (உ.வ.).

[ஏவுதல் + கருத்தன் - ஏவுதற்கருத்தன்.]

ஏவுவான் *ēvuvāṉ,* பெ. (n.) ***கட்டளையிடுபவன்*** (பிங்.); master, director.

[ஏவு + ஆன் - ஏவுவான்.]

ஏவூர்தி *ēvūrdi,* பெ. (n.) ***விண்ணில் செலுத்தும் ஊர்தி;*** vehicle which is sent through sky.

[ஏவு + ஊர்தி - ஏவூர்தி.]

ஏழ்[1] *ēḻ,* பெ. (n.) ***ஏழிலைப் பாலைமரம்*** (ஏழில்மரம்); seven leaved milk plant.

[ஏ → ஏழ் = உயர்ந்தமரம், நெடியமரம்.]

ஏழ்[2] *ēḻ,* பெ. (n.) ***ஏழு*** பார்க்க (தொல்.எழுத்.388); see *ēḻu.*

ஏழ்ச்சி *ēḻcci,* பெ. (n.) ***தோற்றம்;*** appearance, advent, manifestation. "ஏழ்ச்சிக் கேடின்றி" (திவ்.திருவாய்.3,24).

[எழு → ஏழ் → ஏழ்ச்சி.]

ஏழ் பிறப்பு *ēḻpiṟappu,* பெ. (n.) ***ஏழு பிறப்பு*** பார்க்க; see *ēḻupiṟappu.*

ஏழ்புழை *ēḻ-puḻai,* பெ. (n.) ***வேய்ங்குழல் வகை;*** reed pipe that has seven holes. "ஏழ்புழையைம் புழை யாழிசை கேழ்த்தன்ன" (பரிபா.8,22).

[ஏழு → ஏழ் + புழை. புழை = துளை.]

ஏழ்மை *ēḻ-mai,* பெ. (n.) ***ஏழு;*** seven. "ஏழ்மைப் பிறப்புக்குஞ் சேமம்." (திவ்.திருவாய்.4,69).

[ஏழு → ஏழ் + மை.]

ஏழ (ஏழா) *ēḻa,* விளி. (int.) ***பழங்குடியினர் தம் மனைவியை விளிக்குஞ்சொல்*** (நெல்லை); exclamation used by tribals to address or call attention to their wives.

[ஏல → ஏழ (→ ஏழா).]

ஏழகத்தார் *ēḻagattār,* பெ. (n.) ***படைவகுப்பாருள் ஒரு வகையார்;*** class of military men.

[ஏழகம் = மெய்ம்மறை (கவசம்). ஏழகம் + அத்து + ஆர் - ஏழகத்தார். "அத்து" - சாரியை. 'ஆர்' - ப.பா.ஈறு.]

ஏழகநிலை *ēḻaganilai,* பெ. (n.) ***ஏழகத்தகரினைப்போல் எழுச்சி கொண்ட மறவர் பண்பு*** (அபி.சிந்); literary theme, dealing with kings and chieftains. 'உயரும் புகழையுடைய ஞாலத்தில் இளமையைப் பாராதே அரசன் பூமி காவல் பூண்டு நிற்பினும் ஏழக நிலையேயாம்' (பு.வெ.பொதுவியல்).

[ஏழகம் + நிலை - ஏழகநிலை. ஏழகம் = ஆட்டுக்கிடா.]

ஏழகம் *ēḻagam,* பெ. (n.) 1. ***செம்மறியாடு;*** ram or ewe. 2. ***துருவாட்டேறு;*** ram of the species of sheep called Durvadu (துருவாடு), fleecy sheep. (சா.அக.).

[மேழகம் → ஏழகம்.]

ஏழடுக்குமீன் *ēḻaḍukku-mīn,* பெ. (n.) ***ஓரின மீன்;*** a kind of fish. (சேரநா.).

ம. ஏழடுக்கு மீன்.

[ஏழ் + அடுக்கு + மீன்.]

ஏழத்தனை *ēḻattaṉai,* பெ. (n.) ***ஏழுமடங்கு;*** seven times.

[ஏழு + அத்தனை.]

ஏழமை *ēḻamai,* பெ. (n.) ***ஏழைமை*** பார்க்க; see *ēḻaimai.*

ஏழரை *ēḻarai,* பெ. (n.) 1. ***ஏழும் அரையும்;*** seven and half. 2. ***ஏழரை நாழிகை உள்ள கால அளவு;*** 3 A.M. (at night) (சேரநா.).

ம. ஏழர.

[ஏழு + அரை.]

ஏழரைக்கோழி *ēḻarai-k-kōḻi,* பெ. (n.) ***ஏழரை வெளுப்பில் கூவும் கோழி*** (சேரநா.); cock crowing at 3 A.M.

ம. ஏழரக்கோழி.

[ஏழு + அரை + கோழி.]

ஏழரைச்செப்பு *ēḻarai-c-ceppu,* பெ. (n.) ***பொற்காசு வைக்கப் பயன்படுத்தும் ஏழரை இடங்கழி கொள்ளளவுள்ள செப்புப் பெட்டி;*** coper vessel which will contain seven and a half measures (paras or itangalis) for the safe-keeping of gold coins or the like. (சேரநா.).

ம. ஏழரச்செப்பு.

[ஏழு + அரை + செப்பு.]

ஏழரைநாட்டுச்சனி *ēḻarai-nāṭṭu-c-caṉi,* பெ. (n.) ***ஏழரையாண்டுக்காரி*** பார்க்க; see *ēḻarai-y-āṇḍu-k-kāri.*

[ஏழு + அரை + ஆண்டு - ஏழரையாண்டு → ஏழரையாட்டு → ஏழரைநாட்டு + சனி. ஆண்டு → ஆட்டு.]

ஏழரையாண்டுக்காரி *ēḻarai-y-āṇḍu-k-kāri,* பெ. (n.) ***நிலை வோரையிலிருந்து 12, 1, 2ஆம் இடங்களில் ஏழரையாண்டு வருத்தும் காரி*** (சனி). (வின்.); (Astrol.) Saturn in his malign influence for 7½ years when passing through the zodiacal sign of one's star at birth, the one previous and the one after.

ம. ஏழரஞ்சனி; க. ஏழரெயாடதசனி.

[ஏழு + அரை + ஆண்டு + காரி.]

ஏழாங்காப்பு *ēḻ-āṅ-kāppu,* பெ. (n.) ***குழந்தை பிறந்த ஏழாம் நாளில் செம்பிலும் வெள்ளியிலுமான நாணினால் புனைந்த ஒருவகைக் கால்கொலுசைக் காப்பாக அணிவிக்கும் நிகழ்ச்சி*** (இ.வ.); bracelets or anklets of a particular pattern, of copper and silver wire twisted together, put on the ankles of a baby on the seventh day after birth, as an amulet.

[ஏழு + ஆம் + காப்பு.]

ஏழாங்காய் விளையாட்டு *ēḻāṅgāy-viḷaiyāṭṭu,* பெ. (n.) ***பெண்கள் வீட்டிற்குள் விளையாடும் ஒருவகை விளையாட்டு*** (வின்.); indoor game played by girls.

மறுவ. ஈரி.

ம. ஏழாமுத்தின் விளையாட்டு.

[ஏழு + ஆம் + காய் + விளையாட்டு.]

ஏழாங்கால் *ēḻaṅ-kāl,* பெ. (n.) ***திருமணத்திற்கு ஏழுநாளின் முன்பு நடும் பந்தற்கால்*** (வின்.); auspicious first post, for erecting the marriage pavilion, planted seven days before the date of the wedding.

[ஏழு + ஆம் + கால்.]

ஏழிசை *ēḻ-isai,* பெ. (n.) ***குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு வகை நரம்பு இசையொலி*** (திவா.); seven notes of the diatonic scale.

[ஏழு → ஏழ் + இசை.]

ஏழிசையெழுத்துகள் *ēḻ-isai-y-eḻuttukaḷ,* பெ. (n.) ***ஏழிசைகளின் குறியீடாக வழங்கும் ஏழு நெட்டுயிர்*** (திவா.); seven long vowels of the alphabet significative of the seven notes of the diatonic scale. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ - என்பன.

[ஏழு → ஏழ் + இசை + எழுத்துகள்.]

ஏழிசைவாணர் *ēḻ-isai-vāṇar,* பெ. (n.) ***யாழோர்*** (கந்தருவர்); Gandharvas, noted for their superb music. "ஏழிசை வாணருஞ் சித்தரும்" (சேதுபு.விதூம.4).

[ஏழு → ஏழ் + இசை + வாணர்.]

ஏழியன் *ēḻiyaṉ,* பெ. (n.) ***நெற்கதிர்களைத் தாக்கும் சிறிய புழு;*** canker-worm, palmer-worm, letocorisa acuta, the ricesapper, an insect pest destructive to the growth of paddy.

ம. ஏழியன்.

[அழியன் → ஏழியன்.]

ஏழில்[1] *ḕḻil,* பெ. (n.) ***ஏழிலைப்பாலை*** (குறுந்.138, உரை.); seven-leaved milk-plant.

[ஏழ் + இலை - ஏழிலை → ஏழில்.]

ஏழில்[2] *ḕḻil,* பெ. (n.) ***இசை;*** music, as consisting of seven notes. "ஏழி லியம்ப வியம்பும் வெண்சங் கெங் கும்" (திருவாச.7,8).

[ஏ → ஏழ் → ஏழில் (எழும் இசை).]

ஏழில்[3] *ḕḻil,* பெ. (n.) ***நன்னன் என்னும் தலைவனது மலை;*** name of a hill which belonged to Nannan, an ancient chief of the Tamil country. "நன்ன னேழினெடு வரை" (அகநா.152).

ம. ஏழில்.

[ஏழு → ஏழில். (ஏழு குன்றங்களின் அடுக்கு).]

ஏழிலைக்கிழங்கு *ḕḻ-ilai-k-kiḻaṅgu,* பெ. (n.) ***மரவள்ளி;*** tapioca, whose leaves divide at the top into several forks.

மறுவ. மரவள்ளி, குச்சி, கப்பல்கிழங்கு, ஆழ்வள்ளிக்கிழங்கு; **ம.** ஏழிலைக்கிழங்கு.

[ஏழு + இலை + கிழங்கு.]

ஏழிலைப்பாலை *ḕḻ-ilai-p-pālai,* பெ. (n.) ***ஏழிலைகளைக் கொண்டதும் நெடுந்தொலைவு மணம் பரப்பும் பூக்களைக் கொண்டதுமான மரம்;*** seven leaved milk plant, m.tr. Alstonia Scholaries.

ம. ஏழிலம்பால.

[ஏழிலை + பாலை. முட்டுகள்தோறும் ஏழிலை கொண்டது.]

ஏழிலைம்பாலை *ḕḻ-ilai-m-pālai,* பெ. (n.) ***ஏழிலைப் பாலை*** பார்க்க; see *ḕḻ-ilai-p-pālai.* "பூத்த வேழிலைம் பாலையைப் பொடிப்பொடியாகத் தேய்த்த" (கம்பரா. வரை.6).

[ஏழிலை + பாலை - ஏழிலைப்பாலை → ஏழிலைம்பாலை (மெலித்தல்திரிபு).]

ஏழு *ḕḻu,* பெ. (n.) 1. ***ஏழு என்னும் எண்ணுப்பெயர், ஆறின் மேல் ஒன்று;*** number seven, one more than six. 2. ***'எ' என்னும் எண்ணுக்குறியீட்டுக்குரிய தமிழ் எண்ணுப்பெயர்;*** name of the seventh numerical symbol 'எ' in Tamil.

மறுவ. ஏழ் - (எழு பெயரடி; oblique).

ம. ஏழு; **க.** ஏழு, ஏளு; **தெ.** ஏடு, யேடு; **துத.** ஏல்; **து.** ஏள், ஏளு; **இரு.** ஏலு; **கை.** யல்; **எரு.** யெகு; **கோத.** யேயெ, ஏய்; **குரு.** யெல்லு; **துட.** ஏழ், ஒவ்; **குட.** ஏளி; **பட.** இய்யு; **கொலா.** எட், ஏட்; **கோண்.** ஏறுங்க், ஏனு, ஏழுங்க்; **குவி.** ஒத்கி; **கோல்.** இய; **சாந்.** ஏ, ஏா்; **குரி.** ஏய்கு; **பிராகு.** ஆப்த். *Turk.* yedi; *Sinh.* hathai; *Hung.* het; *Mag.* heb; *Gk.* epta.]

ஏழ் = ஏழிலைப் பாலைமரம். ஏழிலைகளின் பெயரால் தோன்றிய ஏழிசைப்பண்கள், ஏழு நரம்புகள் கட்டிய யாழுக்கும் பெயராய் அமைந்திருத்தலான், ஏழு பிரிவுகளாக அமைந்த ஏழிலைப்பாலை மரத்தின் இலையமைப்பே ஏழு என்னும் எண்ணுப்பெயர் தோன்றக் காரணமாயிற்று. ஏழு விண்மீன் கூட்டத்திற்கு இப்பொழுது கன்னியோரை (கன்யாராசி) எனப்பெயரிருப்பினும் பண்டைக் காலத்தில் ஏழ் → ஏழை என்னும் சொல்லே பெண்ணைக் குறிக்கும் சொல்லாகவும் பயின்றதால், ஏழிலைப்பாலை மரத்தின் இலையமைப் பால் தோன்றிய எண்ணுப்பெயர் விண்மீன் கூட்டத்துக் கன்னி யோரைக்கும் பழம்பெயராயிற்று.

ஏழ் → சேழ் → சேத், அடிநிலைத்திரிபுற்றவை.

Norw. sju; *Pol.* oeidem; *L.* septem; *G.* seiben; *GK.* sept; *Dut.* zoven; *Iri.* seacht; *Sp.* siete; *Fin.* seit; *Port.* sete, sett; *Czech.* sedm; *Esp.* sep; *Russ.* syem; *Rum.* sapte; *O.E.* seofen; E. seven; *Serbo.* sedam; *Goth.* sibeen; *It.* seck; *Swe.* bju; *Dan.* syu; *Basq.* zaspi; *Slav.* sedmi; *Serbo.* sedan; *F.* sept.

Heb. schivah; *Ar.* saab, sab, sabat; *Iraq.* sebat; *Georg.* shwidi; *Yid.* sibben; *Akkad.* siber; *Egy.* sfa, sph; *Copt.* saht; *Afri.* sewe, set; *Swahili.* seber, saba.

Jap. schi-chi; *Anna.* chet; *Siam.* chet; *Laos.* tset; *Indo-china.* chet, tsit.

Skt. sapta; *Hind., Sind., Urd., Mara., Guj., Beng., Ori.* sāt; *Punj., Kash.* sat, sath; *Ass.* sāt, hāt; *Nep.* sāt; *Pali.* satta; *Pkt.* satta; *Burm.* sari, saru.

ஏழு - டு - து - நு. *முடிநிலைத்திரிபுற்றவை.*

Circ. dley; *Mongol.* lebet, dotoghan; *Malay.* tujuk; *Tib* (sokpu) tolo; *Tib.* dun; *Nep.* dyun, dun, nush, nhe, nis, nuchi; Naga. tani, thene, tanet; *Siam.* tset, nwai, nwi.

ஏழு (ஐந்து + இரண்டு) கூட்டுச்சொல்லானவை.

உலக மொழிகளில் ஒன்று முதல் ஐந்துவரையிலான எண்ணுப் பெயர்களின் ஊடாட்டம் ஒரு சீரான போக்கை எய்தியுள்ளன. ஐந்துக்கு மேற்பட்ட எண்ணுப் பெயர்கள் அமெரிக்கப் பழங் குடி மக்களிடையிலும் பருமியப் பழங்குடி மக்களிடையிலும் அறிமுகப்படுத்தப்படாததால் அவர்கள் ஐந்தையும் இரண்டை யும் கூட்டி ஏழு எனப்பொருள் கொண்டனர்.

American-Aztec. shek- ume (5 + 2)
Khuan - nhach (5 + 2)
Khun-nith (5 + 2)

ஏழுசிக்காந்தம் *ḕḻūśi-k-kānadam,* பெ. (n.) ***ஒன்றிற்கீழ் ஒன்றாக ஏழுசிகளைப் பிடிக்கவல்ல ஓர்வகைக் காந்தம்;*** powerful magnet capable of attracting seven needles which hang one below the other. (சா.அக.).

[ஏழு → ஏழ் + ஊசி + காந்தம்.]

ஏழேழு *ḕḻēḻu,* பெ. (n.) ***ஏழில் ஏழு மடங்கு;*** seven times seven, forty-nine.

ம. ஏழேழு.

[ஏழு + ஏழு.]

ஏழை *ḕḻai,* பெ. (n.) 1. ***அறிவிலான்;*** foolish, silly person, one of weak intellect. 2. ***அறியாமை;*** ignorance, simplicity, harmlessness, mental weakness. "ஏழைத்தன்மை யோவில்லை தோழி" (கலித்.55,232). 3. ***பெண்;***

woman. "எருதேறி யேழை யுடனே" (தேவா.1171,2). 4. ***வறியவன்*** (சூடா.); indigent person, poor wretch, helpless fellow.

ம. ஏழ.

[எள் → ஏள் → ஏழ் → ஏழை.]

ஏழைக்குறும்பு *ēlai-k-kurumbu,* பெ. (n.) ***பேதை போலக் காட்டிச் செய்யும் குறும்பு;*** mischief perpetrated under an exterior cloak of innocence.

[ஏழை + குறும்பு.]

ஏழைத்தன்மை *ēlai-t-tanmai,* பெ. (n.) 1. ***அறியாமையாகிய பண்பு;*** state of ignorance. "ஏழைத்தன்மையோ வில்லை தோழி" (கலித்.55,23). 2. ***வறுமை நிலை;*** state of poverty.

[ஏழை + தன்மை.]

ஏழைமை *ēlaimai,* பெ. (n.) 1. ***அறியாமை*** (தொல். பொருள்.274); ignorance, simplicity, innocence. 2. ***வறுமை;*** poverty.

[எள் → ஏள் → ஏழை → ஏழைமை.]

ஏழைமைகாட்டு-தல் *ēlaimai-kāttu-,* 5.செ.கு.வி. (v.i.) ***கோழையாதல்*** (வின்.); to be timid, cowardly, effeminate.

[ஏழை → ஏழைமை + காட்டு.]

ஏழையாளன் *ēlai-y-āḷan,* பெ. (n.) ***வறியவன்;*** poor, miserable man. "பாம்பென வுயிர்க்கு மேழையாளனை" (தமிழ்நா.168).

ம. ஏழன்.

[ஏழை + ஆளன்.]

ஏழொத்து *ēl-ottu,* பெ. (n.) (இசை) ***தாளவகை,*** (திவ்.திருவாய்.2,6,பதிகத் தலைப்பு); (Mus.) variety of time-measure.

[ஏழு + ஒத்து. ஒற்று → ஒத்து.]

ஏளனம் *ēḷanam,* பெ. (n.) ***இகழ்ச்சி*** (சூடா.); mockery, jeer.

[எள் → ஏள் → ஏளனம். 'அனம்' - சொல்லாக்க ஈறு.]

ஏற்க *ērka,* கு.வி.எ. (adv.) ***ஏற்கவே*** பார்க்க (யாழ்ப்.); see *ērkavē.*

[ஏல் + க.]

ஏற்கநட-த்தல் *ērka-naḍa-,* 3.செ.கு.வி. (v.i.) ***ஒழுங்காய் நடத்தல்,*** (வின்.); to behave properly.

[ஏல் + க - ஏற்க + நட.]

ஏற்கவே *ērkavē,* கு.வி.எ. (adv.) ***முன்னமே;*** before hand, early, in good time. "ஆபத்து வந்தபோது நம்மைத் தேடித் திரியவொண்ணாதென்று ஏற்கவே கடலிடங் கொண்டவனை" (ஈடு.3,6,2).

[ஏற்க + ஏ.]

ஏற்குமட்கலம் *ērkumaṭ-kalam,* பெ. (n.) 1. ***கடிஞை;*** bowl. 2. ***ஐயமேற்கும் கலம்;*** bowl for receiving alms.

[ஏற்கும் + மண் + கலம்.]

ஏற்கெனவே *ērkenavē-,* கு.வி.எ. (adv.) ***ஏற்கவே*** பார்க்க; see *ērkavē.*

[ஆ (முன்பு) → ஏ → ஏல் → ஏற்கு (முன்பு) → ஏற்கனவே → ஏற்கெனவே.]

ஏற்கை *ērkai,* பெ. (n.) 1. ***இணங்குகை;*** consent, agree to. 2. ***வாங்குந் தன்மை;*** receiving capacity.

[ஏல் → ஏற்கு → ஏற்கை.]

ஏற்ப *ērpa,* இடை. (part.) ***ஓர் உவம உருபு*** (தண்டி.33); adverbial word of comparison. - கு.வி.எ. (adv.) ***தக்கபடி;*** in accordance with.

[ஏல் = பொருந்துதல். ஏல் → ஏற்ப.]

ஏற்படு-தல் *ērpaḍu-,* 20.செ.கு.வி. (v.i.) 1. ***உண்டாதல்;*** to come into existence; to become formed, to be produced or created. அந்த ஊர் அவனால் ஏற்பட்டது. 2. ***தலைப்படுதல்*** (யாழ்ப்.); to be engaged in; to enter upon, as a business. 3. ***உடன்படுதல்*** (யாழ்ப்.); to agree, consent, become a party to a contract.

ம. ஏர்ப்பெடுக; **க.** ஏர்படு; **கோத.** ஏர்பட்த; **து.** ஏர்படு, ஏபுண; **தெ.** ஏர்படு; **பர்.** ஏப் (அடைதல்); **கோண்.** ஏதானா (எடுத்தல்); **கூ.** ஏண்ப (வாங்குதல்).

[ஏல் = பொருந்துதல், பொருத்தல், எழுப்புதல், உண்டாக்குதல். ஏல் + படு - ஏற்படு. படுதல் = செய்தல். ஏற்படு = உண்டாகச் செய், உளதாக்கு.]

ஏற்படுத்து-தல் *ērpaḍuttu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***உண்டுபண்ணுதல்;*** to create, make, form, construct, establish. அவன் அந்த ஊரை ஏற்படுத்தினவன். 2. ***இணங்கச்செய்தல்*** (யாழ்ப்); to persuade, prevail upon, induce. 3. ***நிறுவுதல்;*** to find, as guilty or not guilty. அவனைக் குற்றவாளியென் றேற்படுத்தினார்கள் (பே.வ.). 4. ***அமர்த்துதல்;*** to ordain, appoint, assign, institute, put into office. அவனை அச்செயலுக்குத் தலைவனாக ஏற்படுத்தினார்கள். 5. ***அணியப்படுத்துதல்*** (வின்.); to prepare, arrange, get ready.

ம. ஏர்ப்பெடுத்துக; **க.** ஏர்படிசு; **தெ.** ஏர்பரட்சு.

[ஏல் = எழுப்பு, உண்டாக்கு, ஏல் + படு - ஏற்படு → ஏற்படுத்து.]

ஏற்பாடு[1] *ēr-pāḍu,* பெ. (n.) 1. ***ஒழுங்கு;*** arrangement, method, system, rule, established custom. அந்த ஏற்பாடு நன்றாயிருக்கிறது. 2. ***அமர்த்தம்;*** appointment to an office. அந்த வேலைக்கு அவனை ஏற்பாடு பண்ணினான். 3. ***உடன்படிக்கை;*** engagement, covenant. 4. ***கிறித்தவர் பழைய, புதிய விவிலிய நூலின் இருபகுதிகளான பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடுகளில் ஒன்று;*** testament, as the old and new testament in the Bible. (Chr).

ம. ஏர்ப்பாடு; க. ஏர்பாடு; கோத. ஏர்பட்த்; துட. ஏவர்; து. ஏர்பாடு; தெ. ஏர்பாடு.

[ஏற்படு → ஏற்பாடு.]

ஏற்பாடு[2] *ē̱r-pāḍu*, பெ. (n.) ***பொருத்தம்*** (யாழ்.அக.); fitness, appropriateness.

[இயல் → ஏல் + பாடு - ஏற்பாடு. படு → பாடு.]

ஏற்பி-த்தல் *ē̱rpi-*, 4.செ.குன்றாவி. (v.t.) ***ஒப்படைத்தல்*** (இ.வ.); to entrust.

ம. ஏல்பிக்குக.

[ஏல் → ஏற்பு → ஏற்பி.]

ஏற்பு *ē̱rpu*, பெ. (n.) 1. ***பொருத்தம்;*** appropriateness, fitness. "ஏற்புற வணிதலும்" (நம்பியகப்.125). 2. ***ஏற்றுக்கொள்கை, வரவேற்பு;*** acceptance, reception.

[ஏல் → ஏற்பு.]

ஏற்புழி *ē̱rpuḻi*, கு.வி.எ. (adv.) ***ஏற்குமிடத்து;*** at appropriate place. "அடைகளை ஏற்புழி யெங்கும் ஒட்டுக" (சிலப்.13,155,உரை).

[ஏற்பு + உழி.]

ஏற்புழிக்கோடல் *ē̱rpuḻi-k-kōḍal*, பெ. (n.) ***(இலக்.) பொருந்துமிடங்களில் கொள்ளுகையென்னும் உத்தி*** (நன்.227,விருத்.); (gram.) application of rules and definitions to cases where they might suitably apply, allowing of exceptions, one of 32 utti.

[ஏற்பு + உழி + கோடல். கொளல் → கோடல்.]

ஏற்புறவணிதல் *ē̱rpu̱ṟavaṇidal*, பெ. (n.) ***மணமகளை அழகுசெய்தல்;*** decorating a bride.

[ஏற்பு + உற + அணிதல்.]

ஏற்போன் *ē̱rpō̱ṉ*, பெ. (n.) ***இரவலன்*** (சூடா.); beggar, mendicant.

[ஏல் → ஏற்பான் → ஏற்போன்.]

ஏற்றக்கால் *ē̱ṟṟa-k-kāl*, பெ. (n.) ***துலாவைத் தாங்கும் கால்;*** frame for supporting a sweep or picottah for irrigation.

ம. ஏற்றக்கால்; க. ஏதகோலு.

[ஏற்றம் + கால்.]

ஏற்றக்குறைச்சல் *ē̱ṟṟa-k-kuṟaiccal*, பெ. (n.) 1. ***உயர்வு தாழ்வு;*** superiority and inferiority; highness and lowness; greatness and smallness. 2. ***ஒவ்வாமை*** (பே.வ.); disparity, difference, disagreement.

ம. ஏற்றக்குறச்சில்.

[ஏற்றம் + குறைச்சல். குறைத்தல் → குறைச்சல்.]

ஏற்றக்கோல் *ē̱ṟṟak-kōl*, பெ. (n.) ***துலாமரத்தில் நீரிறைக்கும் கழி;*** pole attached to a well sweep or picottah and supporting the bucket for drawing water.

க. ஏத கோலு; ம. ஏத்தக்கோல்.

[ஏற்றம் + கோல்.]

ஏற்றச்சால் *ē̱ṟṟac-cāl*, பெ. (n.) ***துலாக்கால்;*** bucket used for irrigation by picottah.

[ஏற்றம் + சால்.]

ஏற்றணை *ē̱ṟṟaṉai*, பெ. (n.) ***அரியணை;*** throne, supported by legs carved with the figure of the lion. "ஏற்றணையி னீங்கி" (கந்தபு.இரண்.சூரப.யுத்.29).

[ஏறு + அணை. ஏறு = அரிமா ஏறு.]

ஏற்றப்பட்டரை *ē̱ṟṟa-p-paṭṭarai*, பெ. (n.) ***ஏற்றமிட்டிறைக்குங் கிணற்றைச் சூழ்ந்த விளைநிலம்*** (இ.வ.); cultivable land surrounding a well from which water can be drawn by a sweep or picottah for purposes of irrigation.

[ஏற்றம் + பட்டரை. பட்டடை → பட்டரை.]

ஏற்றப்புவாரம் *ē̱ṟṟa-p-pu-vāram*, பெ. (n.) ***நீர்க்கூலி*** (W.G.); share of the produce, charge for watering lands.

[ஏற்றம் + அப்பு + வாரம். அப்பு = நீர்.]

ஏற்றபடி *ē̱ṟṟa-padi*, வி.எ. (adv.) 1. ***தக்கவாறு;*** as is fit, meet, becoming, proper. 2. ***விரும்பியவாறு*** (வின்.); as one likes; according to one's own pleasure.

[ஏல் → ஏற்ற + படி.]

ஏற்றம் *ē̱ṟṟam*, பெ. (n.) 1. ***மேல் ஏறுகை;*** mounting, as on a ladder, a horse, ascending. 2. ***மேடு;*** ascent, acclivity. 3. ***உயர்கை, கொடியேற்றம்;*** hoisting, as a flag, raising up. 4. ***நீர்ப்பெருக்கு;*** rising, as the flowing tide. "ஆணையாலே யேற்றந்தொடங்காக் கடலின்" (கம்பரா.நகர்நீ.141). 5. ***புகழ்*** (திவா.); praise, eulogy. 6. ***இடிமரம்;*** heavy wooden rammer set to a frame for pounding parched rice. 7. ***அதிகப்படி;*** increase, increment. "மேல் ஏற்றம் ஒரு நாளைக்கு மூன்று மாவாக" (S.I.I.ii,129). 8. ***மிகுதி;*** excess. "ஏற்றம் நெல்லுக்குறுணி எழுநாழியும்" (S.II.ii.705). 9. ***மேன்மை;*** distinction, superiority, exaltation, pre-eminence. "பத்தர்கட் கேற்ற நல்கினீர்" (தேவா.599,6). 10. ***நினைவு;*** remembrance. "ஏற்ற நினைவுந் துணிவுமாகும்" (தொல்.சொல்.337). 11. ***துணிவு;*** courage. ஏற்ற மிலாட்டியென் னேமுற்றாள் (தொல்.சொல்.337.உரை). 12. ***ஏற்ற மரம்;*** well sweep, picottah. "ஏற்றமிரண்டுள" (திருமந்.2873).

ம. ஏத்தம்; க. ஏத, யாத; தெ. ஏதமு.

[ஏறு → ஏற்று → ஏற்றம் (சு.வி.78).]

ஏற்றம்போடு-தல் *ē̱ṟṟam-pōḍu-*, 20.செ.கு.வி. (v.i.) 1. ***துலாமரம் அமைத்தல்;*** to set a well sweep or picottah. 2. ***தோப்புக்கரணம் போடுதல்;*** to punish or humble one's self by taking hold of the right ear with the left hand and the left ear with the right hand and then raise and lower the body many times in quick succession.

[ஏற்றம் + போடு.]



ஏற்றம்போடு-தல்

ஏற்றமடல் *ēṟṟa-maḍal,* பெ. (n.) ***துலாமரந் தாங்குங் கோல்*** (வின்.); fulcrum on which the well sweep or picottah is pivoted and which is attached to a pillar planted in the ground.

[ஏற்ற + மடல்.]

ஏற்றமரம் *ēṟṟamaram,* பெ. (n.) ***துலாமரம்;*** long lever or yard pivoted on an upright post in an irrigating machine as the well sweep or picottah.

[ஏற்றம் + மரம்.]

ஏற்றமொழி *ēṟṟa-moḻi,* பெ. (n.) ***புகழ்ச்சியுரை*** (திவா.); praise, eulogy.

[ஏற்ற + மொழி.]

ஏற்றரவு *ēṟṟaravu,* பெ. (n.) 1. ***அண்மைக் காலம்;*** near future. 2. ***முதல்;*** front, first in place or time. 3. ***அதிகம், மிகுதி;*** much, very many, excessive.

ம. ஏற்றரவு.

[ஏல் + தரவு - ஏற்றரவு.]

ஏற்றல்[1] *ēṟṟal,* பெ. (n.) ***ஒப்புக்கொள்ளுதல்;*** agreeing, accepting.

[ஏல் → ஏற்றல்.]

ஏற்றல்[2] *ēṟṟal,* பெ. (n.) ***எதிர்க்கை;*** disputation, polemics. "அறுவகைச் சமயமு மேற்றல்" (பெருங். உஞ்சைக்.36,243).

[ஏறு → ஏற்று → ஏற்றல். ஏறு = குத்துதல், தாக்குதல், எதிர்த்தல்.]

ஏற்றல்[3] *ēṟṟal,* பெ. (n.) ***ஊசி ஏற்றல்;*** thrusting a needle into the body for introducing a liquid medicine; to inject. (சா.அக.).

[ஏற்று → ஏற்றல்.]

ஏற்றவாறு *ēṟṟa-v-āṟu,* கு.வி.எ. (adv.) 1. ***ஏற்றபடி;*** suitably. 2. ***முறைப்படி;*** proportionately.

[ஏற்ற + ஆறு - ஏற்றவாறு.]

ஏற்றார் *ēṟṟār,* பெ. (n.) ***பகைவர்;*** foes, enemies. "ஏற்றார் மூதூரெழினகை யெரியின் வீழ்வித்து" (திருவாச. 3,158).

ம. ஏற்றார்.

[ஏற்றல்[2] + ஆர் - ஏற்றலார் → ஏற்றார்.]

ஏற்றாளி *ēṟṟāḷi,* பெ. (n.) ***எதிராளி;*** enemy, adversary. (சேரநா.).

ம. ஏற்றாளி.

[ஏற்றல்[2] + ஆளி - ஏற்றலாளி → ஏற்றாளி.]

ஏற்றாற்போல *ēṟṟāṟ-pōla,* கு.வி.எ. (adv.) ***ஏற்றபடி;*** appropriately, in accordance with.

[ஏல் → ஏற்றல். ஏற்றால் + போல்.]

ஏற்றான் *ēṟṟāṉ,* பெ. (n.) ***வகுப்புக்கு முதலில் வரும் மாணவன்*** (நெல்.); first boy to be present at school, on a day.

[ஏ → ஏற்று (உயரம், சிறப்பு) ஏற்று + அன் - ஏற்றன் → ஏற்றான்.]

ஏற்றியல் *ēṟṟiyal,* பெ. (n.) ***விடை*** (இடபு) ஓரை; Taurus, a sign of the Zodiac. "உருகெழு வெள்ளி வந்தேற்றியல் சேர" (பரிபா.11,4).

[ஏறு + இயல்.]

ஏற்றியிறக்கு-தல் *ēṟṟi-y-iṟakku-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***கண்ணேறு கழிக்குஞ் சடங்கு நிகழ்த்துதல்;*** to perform the ceremony of waving lights, etc., before a person to avert the evil eye.

[ஏற்று + இறக்கு.]

ஏற்றிலக்கை *ēṟṟilakkai,* பெ. (n.) ***அதிகச்சம்பளம்;*** high salary. "ஏற்றிலக்கை பெற்றுண்கிற மிடுக்கையுடைய" (ஈடு.7,4,5).

[ஏறு + இலக்கை.]

ஏற்றிவா-தல் (ஏற்றிவருதல்) *ēṟṟi-vā-,* 15.செ.குன்றாவி. (v.t.) ***கூடிவருதல்;*** to add. "தடிமூன்றினால் ஏற்றிவந்த நிலம்" (S.I.I.vi,11).

[ஏறு → ஏற்று → ஏற்றி + வா.]

ஏற்றிழிவு *ēṟṟiḻivu,* பெ. (n.) 1. ***பெருமை சிறுமை*** (தொல்.பொருள்.உரை); greatness and smallness. 2. ***மேடுபள்ளம்*** (இறை.18,உரை); hill and dale; mountain and valley; up and down, uneven surface.

ம. ஏற்றிறக்கம்.

[ஏறு → ஏற்று + இழிவு.]

ஏற்றிறக்கம் *ēṟṟiṟakkam,* பெ. (n.) 1. ***மேடும் பள்ளமும்;*** up and down spot, hill and dale. 2. ***ஏற்றலும் இறக்கலும்;*** increase and decrease, fluctuation in position or status. 3. ***ஏற்றுமதியும் இறக்குமதியும்;*** export and import.

4. ***கடலில் அலை ஏற்றமும் இறக்கமும்;*** ebb and flow of tide. (சேரநா.).

ம. ஏற்றிறக்கம்.

[ஏற்று + இறக்கம்.]

ஏற்று[1]-தல் *ēṟu-*, 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***தூக்குதல்;*** to lift up, raise, hoist உத்தரத்தை யேற்றினான். 2. ***மிகைப்படுத்துதல்; விலையை ஏற்றுதல்;*** to increase, as price. 3. ***சுமத்துதல்;*** to load as a cart or ship; to impose as a responsibility. 4. ***ஏறச் செய்தல்;*** to run over, as a wheel over a person. காலில் வண்டியை ஏற்றிவிட்டான். 5. ***அடுக்குதல்*** (திவா.); to pile up, stow away, pack. 6. ***மேம்படுத்துதல்;*** to eulogise, praise. "ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்" (தொல்.பொருள். 147). 7. ***குடியேற்றுதல்;*** to colonize, populate.கொண்டு வந்து ஏற்றின தளிச்சேரிப்பெண்டுகளுக்கும் (S.I.I.ii,261). 8. ***நிலைநிறுத்தல்;*** to found, establish 'நம் பெயரால் ஏற்றின வீரசோழன் திருமடை விளாகத்தில்' (S.I.I.iii,47). 9. ***உட்செலுத்துதல்;*** to put in, cause to enter, insert, to drive in, as a nail. நகத்தில் ஊசியை ஏற்றினான். 10. ***மேற்செலுத்துதல்;*** to ascribe, foist upon. தன் குற்றத்தை அவன் மேலேற்றினான். 11. ***ஏற்றுமதி செய்தல்;*** to export. 12. ***சுடர் கொளுவுதல்;*** to light, as a lamp. "விளக்கேற்றினேன்" (திவ்.இயற்.2,1). 13. ***நினைத்தல்;*** to think, consider. "கானலஞ் சேர்ப்பன் கொடுமை யேற்றி" (தொல்.சொல்.337). 14. ***துணிதல்*** (தொல்.சொல்.337); to decide. 15. ***படைத்தல்;*** to offer, as an oblation. "ஏற்றிக் கழித்த வெண்சோற்றையருந்தி" (காசிக.ஓங்காரவி.கி.11).

ம. ஏற்றுக; **து.** ஏராவுனி; **தெ.** ரெச்சு; **கொலா.** எத்; **நா.** எத்த்; **கூ.** எத; **குவி.** எதலி.

[ஏறு → ஏற்று.]

ஏற்று[2] *ēṟu*, பெ. (n.) ***மரத்தினாற் செய்த மேடை*** (யாழ்.அக.); wooden platform.

[ஏ → ஏல் → ஏற்று (உயரமானது).]

ஏற்று[3]-தல் *ēṟu-*, 5.செ.குன்றாவி. (v.t.) ***மெய்ப்பித்தல்;*** to establish by evidence, substantiate. "அடிமையென்ற வெவ்வுரை யெம்முன் னேற்ற வேண்டும்" (பெரியபு. தடுத்தாட்.55).

[ஏல் → ஏற்று.]

ஏற்றுக்குறி *ēṟu-k-kuṟi*, பெ. (n.) 1. ***ஆண்குறி;*** penis. 2. ***எருதின் இலச்சினை;*** symbol of an ox. (சா.அக.).

[ஏறு + குறி.]

ஏற்றுக்கொண்டுவா *ēṟu-k-koṇḍu-vā-*, 18.செ.கு.வி. (v.i.) ***ஒருவனைத் தாங்க வருதல்;*** to come forward to support another. அவனுக்கு ஏற்றுக் கொண்டு வந்தான். (உ.வ.).

[ஏல் → ஏற்று + கொண்டு + வா.]

ஏற்றுக்கொள்(ளு)-தல் *ēṟu-k-kol-*, 10.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஒத்துக்கொள்ளுதல்; இசைதல்;*** to receive, admit, accept, acknowledge. 2. ***மேற்கொள்ளுதல்;*** to undertake, engage in, take charge of.

[ஏல் → ஏற்று + கொள்.]

ஏற்றுத்தொழில் *ēṟu-t-tolil*, பெ. (n.) ***யானை முதலிய வற்றில் ஏறிநடத்துந் தொழில்*** (சீவக.1758,உரை); art of riding on elephants, horses, etc.

[ஏறு + தொழில்.]

ஏற்றுதுறை *ēṟu-turai*, பெ. (n.) ***சரக்கைக் கப்பலிலேற்றுந் துறைமுகம்*** (வின்.); place of export or embarkation.

[ஏறு → ஏற்று + துறை.]

ஏற்றுப்பனை *ēṟu-p-paṉai*, பெ. (n.) ***ஏற்றைப்பனை*** பார்க்க; see *ēṟṟai-p-paṉai*. "ஏற்றுப் பனையெல்லாம் நிறைந்த குலைகளாய்" (பெரியபு.திருஞான.980).

[ஏறு → (ஏற்றை) ஏற்று + பனை.]

ஏற்றுமண் *ēṟu-maṇ*, பெ. (n.) ***பிற இடங்களினின்று கொண்டு வந்து போட்டமண்;*** deposited soil. (சேரநா.).

ம. ஏற்றுமண்ணு.

[ஏறு → ஏற்று + மண்.]

ஏற்றுமதி *ēṟumadi*, பெ. (n.) 1. ***கப்பலிற் பண்டமேற்றுகை;*** export. 2. ***ஏற்றுமதிப் பண்டம்;*** exported cargo.

ம. ஏற்றுமதி; **க., தெ.** எகுமதி.

[ஏற்று + மதி. 'மதி' அளவு குறித்த சொல் முதனிலைப்பொருள் குறித்த ஈறாயிற்று.]

ஏற்றுமதிச்சீட்டு *ēṟumadi-c-cīṭṭu*, பெ. (n.) ***கப்பலிலுள்ள நாவாய்களின் பெயர், பயணியர் தொகை, சரக்குகளின் விளக்கம் முதலிய குறிப்புகள் அடங்கியுள்ள சீட்டு*** (M.Navi.123); manifest, cargo list and list of passengers.

[ஏற்றுமதி + சீட்டு.]

ஏற்றுமுதல் *ēṟu-mudal*, பெ. (n.) ***தோணி முதலியவற்றிலேற்றப்படுஞ் சரக்கு*** (சங்.அக.); cargo exported in boats, etc.

[ஏற்று + முதல்.]

ஏற்றெழு-தல் *ēṟelu-*, 2.செ.கு.வி. (v.i.) 1. ***மயக்குந்துயில்களினின்றும் எழுதல்;*** to rise after recovery of consciousness from a swoon, from sleep. "மெய்யறிந் தேற்றெழு வேனாயின்" (கலித்.37). 2. ***ஓங்கி யெழும்புதல்;*** to ascend, as a flame. "ஏற்றெழு வன்னிமேலினிது துஞ்சலாம்" (கந்தபு.விடைபெறு.31). 3. ***மேற்செல்லுதல்;*** to proceed against.

[ஏல் → ஏற்று + எழுதல்.]

ஏற்றை *ēṟṟai*, பெ. (n.) ***ஆற்றலோடு கூடிய ஆண்பால் விலங்கு*** (தொல்.பொருள்.604); male of any animal remarkable for physical strength.

[ஏறு → ஏற்றை.]

ஏற்றைப்பனை *ēṟṟai-p-paṉai*, பெ. (n.) ***ஆண் பனை;*** male palmyra "இடுகாட்டு ளேற்றைப்பனை" (நாலடி.96).

[ஏறு → ஏற்றை + பனை.]



ஏற்றைப்பனை

ஏற்றோற்றம் *ēṟṟōṟṟam*, பெ. (n.) ***காலை அல்லது உதய முதல் 10 நாழிகை வரை, பனைப்பொழுது;*** period from sun rise till 10 A.M. (சா.அக.).

[எல் + தோற்றம் - எற்றோற்றம் → ஏற்றோற்றம். எல் = கதிரவன்.]

ஏற *ēṟa*, கு.வி.எ. (adv.) 1. ***அதிகமாக;*** so as to exceed, more than. அரைப்படிக்கு ஏறக்கொடு. 2. ***உயர;*** on high, in the air, above. "அந்தரமாறா... ஏறப்பறக்கெனிற் பறந்திடும்" (சீவக.2156). 3. ***முழுவதும்;*** completely, entirely "என்னுடையிருளை யேறத்துரந்தும்" (திருவாச.2,6). 4. ***முற்பட;*** in advance, forward. "மானிடத்து ஏறச்செல்லு நிலைமையை விரும்பும்" (சீவக.1932, உரை).

[ஏறு → ஏற.]

ஏறக்கட்டித்தூக்கு-தல் *ēṟa-k-kaṭṭi-t-tūkku-*, 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***தொங்கும்படி உயரக் கட்டி வைத்தல்;*** to hang up. 2. ***தண்டனைக்காகத் தொங்கக் கட்டுதல்;*** to hang up by the hands in order to flog.

[ஏற + கட்டி + தூக்கு.]

ஏறக்கட்டு[1]-தல் *ēṟa-k-kaṭṭu-*, 5.செ.குன்றாவி. (v.t.) ***வலுப்படுத்துதல்*** (யாழ்.அக.); to strengthen by hands, etc.

[ஏற + கட்டு.]

ஏறக்கட்டு[2]-தல் *ēṟa-k-kaṭṭu-*, 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***உயரக்கட்டுதல்;*** to build up. 2. ***விலையேறுதற்காகச் சரக்கை விற்காமல் வைத்தல்;*** to put off selling so that price may rise. 3. ***மேகம் பெய்யாமற் கரத்தல்;*** to withhold or keep back, as clouds their showers. வானம் மழையேறக் கட்டிவிட்டது. 4. ***இறைந்த பொருள்க ளைக் குவித்தல்;*** to collect together scattered articles, as grain into a heap. 5. ***அடியோடு நிறுத்துதல்;*** to give up altogether, as a person his studies.

ம. ஏற வய்க்குக.

[ஏற + கட்டு.]

ஏறக்குறைய *ēṟa-k-kuṟaiya*, கு.வி.எ. (adv.) ***சற்றொப்ப*** (சுமார்); more or less, about.

ம. ஏறக்குறெ.

[ஏற + குறைய.]

ஏறக்குறையப்பேசு-தல் *ēṟa-k-kuṟaiya-p-pēsu-*, 5.செ.குன்றாவி. (v.t.) ***இகழ்ந்து கூறுதல்*** (இ.வ.); to vilify, abuse.

[ஏற + குறைய + பேசு.]

ஏறங்கோட்பறை *ēṟaṅ-kōṭ-paṟai*, பெ. (n.) ***ஏறுகோட் பறை*** பார்க்க; see *ēṟukōṭ-paṟai*.

[ஏறு + கோள் + பறை - ஏறங்கோட்பறை. 'அம்' சொல்லினிமை கருதி வந்த அசைநிலைச் சாரியை.]

ஏறங்கோள் *ēṟaṅ-gōḷ*, பெ. (n.) ***ஏறுகோட்பறை*** பார்க்க; see *ēṟukōṭpaṟai*. "ஏறங்கோண் முழங்க" (சீவக.489).

[ஏறு + கோள் - ஏறங்கோள். 'அம்' அசை நிலைச் சாரியை.]

ஏறச்சங்கு *ēṟa-c-caṅgu*, பெ. (n.) ***கோயிற்குக் கொடைய ளித்த பெரியோர், பல்லக்கு, சிவிகை முதலியவற்றில் ஏறும்போது மதிப்புரவு கருதி ஊதப்படும் சங்கு*** (இ.வ.); conch that is blown in honour of a chief or a liberal donor of a temple as he mounts his vehicle.

[ஏற + சங்கு.]

ஏறட்டுக்கொள்-தல் *ēṟaṭṭu-k-koḷ-*, 7.செ.குன்றாவி. (v.t.) ***உரிமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல்;*** to assume a responsible post. 'எப்பேற்பட்ட இறைகளும் நாங்களே ஏறட்டுக் கொண்டு இறுக்கக்கடவோம்' (S.I.I. VII-40).

[ஏற + அட்டுக்கொள் = மேற்கொள்தல்.]

ஏறடவு *ēṟaḍavu*, பெ. (n.) ***வரவு செலவுக் கணக்கு;*** accounts entry. (சேரநா.).

ம. ஏறடவு.

[ஏறு + (அடைவு) அடவு.]

ஏறடு-தல் *ēṟaḍu-*, 19.செ.குன்றாவி. (v.t.) 1. ***மேல் வைத்தல்;*** to place over. "கொம்பினிடத்தே யேறட்ட தம்கையிடத்தே" (முல்லைப்.34,உரை). 2. ***மேற்கொள்ளுதல்;*** to take upon one's self. இவை சுன்ன மென்பதொரு பெயரை யேறட்டுக் கொண்டு (சீவக.876,உரை).

[ஏற + அடு.]

ஏறத்தாழ *ēṟa-t-tāḻa*, கு.வி.எ. (adv.) ***ஏறக்குறைய*** பார்க்க; see *ēṟakkuṟaiya.*

[ஏற + தாழ.]

ஏறப்பற-த்தல் *ēṟa-p-paṟa-*, 3.செ.கு.வி. (v.i.) 1. ***உயரப் பறத்தல்;*** to fly on high "அந்தரமாறா... ஏறப்பறக்கெனில்" (சீவக.2156). 2. ***ஏலாதவற்றைச் செய்ய முயலுதல்;*** to attempt the impossible.

[ஏற + பற.]

ஏறப்போ[1]-தல் *ēṟa-p-pō-*, 8.செ.குன்றாவி. (v.t) ***குறித்துச் செல்லுதல்;*** to go towards, proceed in the direction of. ஊரேறப்போக (சீவக.1875,உரை).

[ஏற + போ.]

ஏறப்போ[2]-தல் *ēṟappō-*, 8.செ.கு.வி. (v.i.) ***குறுக்கிட்டுச் செல்லுதல்;*** to intersect. 'தேவரடியார் மத்தவாணச் சேரியேறப்போன தெருவுக்குக் கிழக்கும்' (S.I.I. iii-i, - 15).

[ஏற = மேலே, மீதாக, குறுக்காக. ஏற + போ.]

ஏறல் *ēṟal*, பெ. (n.) ***கிளிஞ்சில்;*** bivalve shell fish. (சா.அக.).

[இறல் → ஏறல் (பிளவுண்டது, கிளிஞ்சில்).]

ஏறவாங்கு[1]-தல் *ēṟa-vāṅgu-*, 7.செ.கு.வி. (v.i.) 1. ***விலகியிருத்தல்;*** to be aloof. "சர்வேசுரன்... ஏறவாங்கி நிற்குமாகில்" (ஈடு.). 2. ***சுளுக்குதல்*** (வின்.); to be drawn up, twisted, as the neck by cold.

[ஏற = உயர, பிறழ. ஏற + வாங்கு.]

ஏறவாங்கு[2]-தல் *ēṟa-vāṅgu-*, 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***முழுதும் விலைக்குப் பெறுதல்;*** to purchase outright. அவன் இந்தப் பண்டங்களை ஏறவாங்கிவிட்டான். 2. ***நயமாக வாங்குதல்;*** (வின்.); to buy cheaply.

[ஏற + வாங்கு. ஏற = மிகுதி.]

ஏறவிடு-தல் *ēṟa-viḍu-*, 18.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஏறும் படிச் செய்தல்;*** to make climb, to allow to ascend. ஏறவிட்டேணியை வாங்கினதுபோல. 2. ***மரக்கலத்தைக் கரைக்குத் தொலைவாக விடுதல்*** (வின்.); to keep off from the shore, as a vessel. 3. ***காற்றுமுகமாய்க் கப்பலை விடுதல்*** (வின்.); to sail along with the wind. 4. ***கரை சேர மரக்கலத்தை விடுதல்*** (வின்.); to turn towards the shore, as a vessel. 5. ***மேற்போக விடுதல்;*** to allow to spread, to circulate, as poison. நஞ்சு ஏறவிடக்கூடாது. (உ.வ.).

[ஏறு → ஏற + விடு.]

ஏறவிறங்கப்பார்-த்தல் *ēṟa-v-iṟaṅga-p-pār-*, 4.செ.குன்றாவி. (v.t.) ***கீழும் மேலும் பார்த்தல்;*** to stare at, survey from head to foot. அவன் என்னை ஏறவிறங்கப் பார்த்தான்.

[ஏற + இறங்க + பார்.]

ஏறாங்கடை *ēṟāṅgaḍai*, பெ. (n.) ***ஒவ்வாச்செயல்*** (வின்.); inconvenient engagement, unsuitable contrast.

ம. ஏறாங்கடை.

[ஏறு[7] + ஆம் + கடை - ஏறாங்கடை.]

ஏறாட்டம் *ēṟāṭṭam*, பெ. (n.) ***போட்டி;*** competition.

க. ஏறாட்ட.

[ஏறு + ஆட்டம். ஏறு = எதிர்ப்பு.]

ஏறாடி *ēṟāḍi*, பெ. (n.) ***காளைகளை மேய்ப்பவன்;*** cowherd. (சேரநா.).

ம. ஏறாடி.

[ஏறு + (ஆளி) ஆடி. ஏறு = காளை.]

ஏறாண்முல்லை *ēṟāṇ-mullai*, பெ. (n.) ***ஆண்மை மிகுந்த வீரக்குடியினொழுக்கத்தைப் புகழும் புறத்துறை*** (பு.வெ.8,22); (Puṟap.) literary theme of eulogising the traditional military renown of an eminent warrior lineage family.

[ஏறு + ஆண் + முல்லை.]

ஏறாந்தலை *ēṟān-talai*, பெ. (n.) ***ஏரியின் நீர்ப்பிடியிறுதி;*** outer catchment limits of the water of a tank.

[ஏறு + ஆம் + தலை.]

ஏறாப்பாடு *ēṟā-p-pāḍu*, பெ. (n.) ***வீட்டின் முற்றத்தைச் சுற்றியுள்ள இடம்;*** place adjoining the yard of a house. (சேரநா.).

ம. ஏறப்பாடு.

[இறை → இற → ஏற + பாடு - ஏறப்பாடு → ஏறாப்பாடு (கொ.வ.). இறை = இறைப்பு, இறைவாணம்.]

ஏறாப்பு *ēṟāppu*, பெ. (n.) ***மாராப்பு, ஏத்தாப்பு;*** apron, breast cloth of women. (சேரநா.).

ம. ஏறாப்பு.

[ஏறு + ஆப்பு. 'ஆப்பு' - சொல்லாக்க ஈறு.]

ஏறாமேடு *ēṟā-mēḍu*, பெ. (n.) 1. ***உயர்ந்த மேடு;*** high level which one cannot reach or to which water cannot rise. 2. ***செய்யமுடியாத செயல்;*** enterprise beyond one's power. 3. ***ஏறாங்கடை*** பார்க்க (வின்); see *ēṟāṅgaḍai.*

[ஏறு + ஆ + மேடு. 'ஆ' - எ.ம.இ.நி.]

ஏறாவழக்கு *ēṟā-vaḻakku,* பெ. (n.) ***அடா வழக்கு;*** unreasonable dispute. "ஏறாவழக்குத் தொடுக்கின்றார்" (அருட்பா.1,இங்கித.13).

[ஏலா + வழக்கு - ஏலா வழக்கு → ஏறாவழக்கு.]

ஏறாவேணி *ēṟā-vēṇi,* பெ. (n.) ***கோக்காலி;*** horizontal beam set against the wall and used as a shelf. "நிரம்பகல் பறியா வேறா வேணி" (பதிற்றுப்.43,33).

[ஏறு + ஆ + ஏணி.]

ஏறாளர் *ēṟāḷar,* பெ. (n.) ***படை வீரர்*** (திவா.); warriors, soldiers.

ம. ஏறாள், ஏறாளர்.

[ஏறு + ஆளர். ஏறு = அம்பு.]

ஏறான் *ēṟāṉ,* பெ. (n.) ***பள்ளிக்கூடத்துக்கு முதன்முதல் வருபவன்;*** first boy to be present at school.

[ஏறு + ஆன். ஏறு = சிறப்பு, தலைமை.]

ஏறிட்டுக்கொள்(ளு)-தல் *ēṟiṭṭu-k-koḷ-,* 10.செ.குன்றாவி. (v.t.) ***ஏற்றிக்கொள்ளுதல்;*** to accept or assume responsibility "என்னுடை இரட்சை உனக்கே பரமாக ஏறிட்டுக் கொள்ளவேணும்" (இரகசிய.338).

[ஏறிடு → ஏறிட்டு + கொள்.]

ஏறிட்டுப்பார்[1]-த்தல் *ēṟiṭṭu-p-pār-,* 4.செ.கு.வி. (v.i.) ***நிமிர்ந்து பார்த்தல்;*** to look up.

[ஏற + இட்டு + பார்.]

ஏறிட்டுப்பார்[2]-த்தல் *ēṟiṭṭu-p-pār-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***கவனித்தல்;*** to take notice of, care for. அவர் என்னை ஏறிட்டுப் பார்க்கவில்லை.

[ஏற + இட்டு + பார்.]

ஏறிடு[1]-தல் *ēṟiḍu-,* 18.செ.குன்றாவி. (v.t.) 1. ***குற்றம் சாட்டுதல்;*** to cast upon, to superimpose, as blame. 2. ***நாணேற்றுதல்;*** to bend, as a bow. ஏறிட்ட வில் (சீவக.657,உரை). 3. ***தூக்குதல்;*** to lift up. "கருமுகை மாலைபோலே எடுத்து ஏறிட்டுக் கொண்டு போனான்" (ஈடு.1,3,1). 4. ***உயர்த்துதல்;*** to raise. "தூசு நீக்கி யேறிட வார்த்தபோது" (கம்பரா.இந்திர.56). 5. ***புகப் பண்ணுதல்;*** to probe into, to cause to penetrate. பருவிற் சலாகையை யேறிட்டான் (வின்.).

ம. ஏறிடுக.

[ஏறு + இடு - ஏறிடு.]

ஏறிடு[2]-தல் *ēṟiḍu-,* 18.செ.குன்றாவி. (v.t.) ***கணக்கிலிடு தல்;*** to enter on the credit side of account. "வரும் மாடை நாட்டிலே ஏறிட்டுக் கொண்டு" (S.I.I.V,493).

ம. ஏறிடுக.

[ஏறு + இடு - ஏறிடு.]

ஏறியருளப்பண்ணு-தல் *ēṟi-y-aruḷa-p-paṇṇu-,* 12.செ.குன்றாவி. (v.t.) 1. ***நூல் எழுதுதல்;*** to transcribe on a palm leaf as the sacred books. "பட்டோலை பிடித்து ஏறியருளப் பண்ணிக்கொண்டு வருகையில்" (குருப ரம்.172,ஆறா.). 2. ***படிமம்*** (விக்கிரகம்) ***அமைத்தல்;*** to cast, as an idol or image. திருப்பள்ளிநாய்ச்சியார் முதலாகவுள்ள திருவுடம்புகளும் ஏறியருளப்பண்ணு வித்து (T.A.S.91).

[ஏறி + அருள + பண்ணு.]

ஏறு[1]-தல் *ēṟu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***உயர்தல்;*** to go up, as the eyebrows, in anger. "ஏறியு மிழிந்து மூளும் புருவங்கண் முரிய" (சீவக.2507). 2. ***மேலேறுதல்;*** to rise, ascend, as the heavenly bodies, to mount, climb. "குன்றேறி யொளிப்பினும்" (நாலடி.90). 3. ***முற்றுப் பெறுதல்;*** to terminate, end. "ஆண்டெலா மின்றொ டேறுமோ" (கம்பரா.கிளை.114). 4. ***மிகுதல்;*** to abound in number, weight or measure, to increase in price, quality. 5. ***பரவுதல்;*** to spread, to be diffused, as poison. நஞ்சேறுகிறது. 6. ***மருளுறல், தெய்வமேறப் பெறல்;*** tobecome possessed. "கடல் ஞாலத் தீசன்வந் தேறக்கொலோ" (திவ்.திருவாய்.5,6,1). 7. ***வளர்தல்;*** to grow. பயிரேறிவிட்டது. 8. ***உட்செல்லுதல்;*** to enter, to penetrate, to run into, as a thorn. அவன் சொன்னது மனத்திலேறவில்லை. 9. ***குடியேறுதல்;*** to settle, to be domiciled. திருக்கோயிலைச் சூழ்ந்த இடத்திலும் சன்னதியிலும் ஏறின பல குடிக்கும் (S.I.I.1.93). 10. ***ஏற்றிவைக்கப்படுதல்;*** to be laden, as cargo. மூட்டை கள் கப்பலில் ஏறின.

ம. ஏறுக; **க.** ஏறு; **கோத.** ஏர்; **துட.** ஓர்; **குட.** ஏர் (தலைக்கு உயர்த்து); **து.** ஏருனி; **தெ.** ரேகு; **கொலா.** லேப்; **நா.** லேப்; **குவி.** ரெனெய்.

[ஏ → ஏல் → ஏறு.]

ஏறு[2]-தல் *ēṟu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***கடத்தல்;*** to cross, pass over. "அருளாற் காவிரியை யேறி" (பெரியபு.திரு நாவு.303).

[ஏல் → ஏறு.]

ஏறு[3] *ēṟu-,* து.வி. (aux.v.) ***ஒரு துணை வினை;*** auxiliary verb as in நடந்தேறுதல்.

[ஏல் → ஏறு (மேற்செலல், வினைமுடித்தல்).]

ஏறு[4] *ēṟu,* பெ. (n.) 1. ***உயரம்;*** height "ஏறுடை வானந்தன்னுள்" (பெரியபு.கண்ணப்ப.6). 2. ***முதல் விண்மீன், இரலை*** (அச்சுவினி); 1st nakṣatra.

[ஏ → ஏல் → ஏறு. ஏ = உயர்ச்சி.]

ஏறு[5] *ēṟu,* பெ. (n.) 1. ***காளை*** (இடபம்); bull. "ஊர்தி வால்வெள் ளேறே" (புறநா.13). 2. ***விலங்குகளின் ஆண்;*** males of certain animals as, பன்றி, புல்வாய், உழை, கவரி, எருமை, மரை, பெற்றம் (தொல்.பொ ருள்.593.594). 3. ***துருவாடு*** (திவா.); male of the sheep. 4. ***சுறாவின் ஆண்*** (தொல்.பொருள்.595); male

shark. 5. ***சங்கின் ஆண்*** (பிங்.); male conch. 6. ***ஆண் பனை;*** male palmyra. 7. ***விடை ஓரை*** (இடப ராசி) (திவா.); Tauras, a sign of the Zodiac.

[ஏ → ஏறு.]

ஏறு[6] *ēṟu,* பெ. (n.) 1. ***எறிகை;*** throw "காயாத மரமீது கல்லேறு செல்லுமோ" (தாயு.சச்சி.8). 2. ***அடிக்கை;*** beating, as of a drum. "எடுத்தே றேய கடிப்புடை வியன்கண்" (பதிற்றுப்.41,23). 3. ***வாள், தேள்களின் எறிகை;*** stroke, as of a sword, sting, as of a scorpion "வாளேறு காணத் தேளேறு மாயுமா போலே" (ஈடு.3,9, பர). 4. ***பருந்தின் கவர்ச்சி;*** pouncing upon, as an eagle. "பருந்தி னேறுகுறித் தொரீஇ" (புறநா.43,5). 5. ***இடி;*** thunderbolt. "அதிர்குர லேறொடு" (புறநா. 160,3). 6. ***அழிக்கை;*** destroying "அவ்வெயில் ஏறு பெற் றுதிர்வனபோல்" (கலித்.2). 7. ***எறிந்ததனாலான வடு;*** scar. இஃதோ ரேறு (தொல்.சொல்.119,உரை).

[இல் → எல் → ஏ → ஏறு = குத்துதல், தாக்குதல், அழித்தல், பகைத்தல்.]

ஏறு[7] *ēṟu,* பெ. (n.) ***பகைமை;*** enmity.

[ஏறு[6] → ஏறு[7]. ஏறு = எதிர்ப்பு.]

ஏறு[8] *ēṟu,* பெ. (n.) ***மர வகை*** (அக.நி.); a kind of tree.

[ஏ → ஏறு.]

ஏறுக்குமாறு *ēṟukku-māṟu,* பெ. (n.) ***தாறுமாறு;*** improper, unruly behaviour, perverseness, contrariety.

[ஏறு + கு + மாறு.]

ஏறுகடை *ēṟu-kaḍai,* பெ. (n.) ***கடைசி முடிவு*** (வின்.); very end, extremity.

[ஏ → ஏறு + கடை.]

ஏறுகண் *ēṟu-kaṇ,* பெ. (n.) 1. ***பக்கப் பார்வை;*** glance. 2. ***சரிந்து பார்க்கும் பார்வை;*** side glance, ogle. (சேரநா.).

ம. ஏறுகண்ணு.

[ஏறு + கண்.]

ஏறுகாலி *ēṟu-kāli,* பெ. (n.) ***சிறிய கலப்பை;*** a kind of plough smaller than the ordinary one. (சேரநா.).

ம. ஏறுகாலி.

[ஏறு + காலி - ஏறுகாலி = ஆழமாக உழாமல் மேலோட்டமாக உழும் கலப்பை.]

ஏறுகோட்பறை *ēṟu-kōṭ-paṟai,* பெ. (n.) ***ஏறுதழுவுதற் குரிய முல்லைநிலப்பறை*** (இறை.1,பக்.18); drum, used in ēṟu-kōḷ (bull fight) tournaments in forest-pasture tracts.

[ஏறு + கோள் + பறை. ஏறு = காளை.]

ஏறுகோடல் *ēṟu-kōḍal,* பெ. (n.) ***காளையைத் தழுவி அடக்குதல்;*** subduing the bull as a sport. கைக்கிளை யுள் ஆசுரமாகிய ஏறுகோடல் (தொல்.பொருள்.53, உரை).

[ஏறு + கோடல். ஏறுகோள் பார்க்க; see ēṟu kōḷ.]

ஏறுகோள் *ēṟu-kōḷ,* பெ. (n.) ***ஆயர்குல வழக்கின்படி ஒரு பெண்ணை மணந்து கொள்வதற்காக அவள் வளர்த்த காளையைத் தழுவி அடக்குதல்*** (திருக்கோ. 136,உரை); capture of the bull at large as a proof of bravery, by a man seeking in marriage the hand of a woman, a custom among herdsmen in ancient times.

[ஏறு + கோள். ஏறு = காளை.]

முல்லைநிலக் குடியில் பெண் பிறந்தால் பெற்றோர் தம் தொழுவில் அன்று பிறந்த சேங்கன்றுகளைத் தம்மூட்டியாக விட்டு வளர்த்து அவ்வாறு வளர்ந்த ஒன்றைத் தழுவி அடக்கின வனுக்குப் பெண்ணைக் கொடுத்தல் மரபு. இது ஏறுகோள் எனப்படும்.

ஏறுங்கூறுமாய் *ēṟuṅ-kūṟum-āy,* வி.எ. (adv.) ***தாறுமா றாய்*** (இ.வ.); improperly, indecently.

[ஏறும் + கூறும் + ஆய். ஏறு = உயர்வு, செம்மை. கூறு = பிளவு, பிரிவு.]

ஏறுசலாகை *ēṟu-śalāgai,* பெ. (n.) ***கைம்மரம் கோக்கும் சட்டம்*** (யாழ்ப்.); large wooden peg passing through the ends of rafters in a building.

[ஏறு + சலாகை. சாலாக்கு → சலாகு → சலாகை (நீண்டது).]

ஏறுசாத்து *ēṟu-šāttu,* பெ. (n.) ***செட்டிமாருள் ஒருவகை யார்*** (S.I.I.vii,232); a sect of chetty caste. (lit.merchants dealing in export business).

[ஏறு + சாத்து - ஏறுசாத்து = பண்டைக் காலத்தில் ஏற்றுமதி வாணிகம் செய்து வந்த கடல் வாணிகப் பிரிவினர். இறக்குமதி வாணிகத்தில் ஈடுபட்டோர் இறங்கு சாத்து எனக் குறிக்கப்பட்ட னர். சார்த்து → சாத்து (குழுவாகச் சென்று வணிகம் செய்வோர்.]

ஏறுண்(ணு)-தல் *ēṟuṇ-,* 12.செ.கு.வி. (v.i.) 1. ***அறுக்கப் படுதல்;*** to be cut off. வாளுந் திகிரியு முதலியவற்றா லேறுண்ட தலை (தொல்.பொருள்.71,உரை). 2. ***அம்பு முதலியன தைத்தல்;*** to be pierced, transfixed "எய்யே றுண்டவாறு" (திருவிளை.பழியஞ்சி.24). 3. ***தள்ளப்ப டுதல்;*** to be thrown down. "பொறியினேறுண்டு... வீழ்ந்தான்" (சீவக.2183).

[ஏறு + உண்.]

ஏறுதழுவு-தல் *ēṟu-taḻuvu-,* 9.செ.கு.வி. (v.i.) ***ஆய்க்கு லக் காளையர் மணமுடிக்கும்பொருட்டு எருதினைத் தழுவிப் பிடித்தல்;*** capture a bull at large as proof of bravery in ēṟu-kōḷ contests, a custom among herdsmen in ancient times. அந்நிலத்தியல்பு பற்றி ஏறுதழுவி (தொல்.பொருள்.53,உரை).

[ஏறு + தழுவு. ஏறு = காளை.]

ஏறுநாகம் *ēṟu-nāgam,* பெ. (n.) ***மாட்டுச் சுழிவகை*** (பெரிய.மாட்.); a kind of circular mark on the head or body of cattle.

[ஏறு + நாகம்.]

ஏறுநீர் *ēṟu-nīr,* பெ. (n.) ***கடல் நீரின் ஏற்றம்;*** flow, flood - tide. "கட்கடற்கு ஏறுநீர் இழி நீருளவோ என்னில்" (தக்கயாகப்.122,உரை).

[ஏறு + நீர்.]

ஏறுநெற்றி *ēṟu-neṟṟi,* பெ. (n.) ***அகன்ற நெற்றி*** (இ.வ.); broad forehead.

[ஏறு + நெற்றி.]

ஏறுபடி[1] *ēṟu-padi,* பெ. (n.) 1. ***அதிகப் படித்தரம்.*** (வின்.); extra batta to a servant, extra allowance for expenditure in the temple. 2. ***தாழ்வாரம்*** *(யாழ்.அக.); sloping roof, verandah.*

[ஏறு + படி. ஏறு = மேன்மேலுயர்தல்.]

ஏறுபெட்டி *ēṟu-petti,* பெ. (n.) ***மரமேறிகள் கருவிகள் வைப்பதற்காக அரையிற் கட்டிக்கொள்ளும் பெட்டி*** (யாழ்ப்.); basket containing tools for tapping toddy which a toddy drawer carries about his waist while engaged in tree tapping.

[ஏறு + பெட்டி.]



ஏறுபெட்டி

ஏறுபொழுது *ēṟu-poḻudu,* பெ. (n.) ***முற்பகல்;*** forenoon, time of the sun's advancing towards the meridian.

[ஏறு + பொழுது.]

ஏறுமாடம் *ēṟu-mādam,* பெ. (n.) 1 ***மரத்தின் மீதமைந்த பரண்*** (இ.வ.); loft. 2. ***காட்டு விலங்குகளினின்று தப்பிக்க மரக்கிளையின்மீது அமைக்கப்பட்ட சிறு குடிசை;*** small cottage or hut constructed on the bifurcated branches of a tree as an asylum from wild animals. (in forests).

ம. ஏறுமாடம்.

[ஏறு + மாடம்.]

ஏறுமாநாட்டு நல்லியக்கோடன் *ēṟumānāttu-nalliya--k-kōdaṉ,* பெ. (n.) ***ஓவியர் குடியில் பிறந்த ஓய்மா நாட்டு நல்லியக்கோடனுக்குரிய ஒருபெயர்;*** surname of Ōymā nāttu Nalliyakkōdaṉ, Tamil chieftain of Sangam age.

[ஏறு + மா + நாட்டு + நல்லியன் + கோடன். ஏறுமா = பொலிகாளை.]

ஏறுமாறு *ēṟu-māṟu,* பெ. (n.) 1. ***முட்டுக்கட்டை;*** impediment to progress. 2. ***உண்மை நெறியினின்று மாறுதல்;*** deviation from the path of truth or justice. 3. ***குழப்பம்;*** disorder. 4. ***முரணியல்;*** contrary to nature. 5. ***வயிற்றிலேற்படும் குழப்பம்;*** disordered condition of the stomach. (சா.அக.). 6. ***தாறுமாறு;*** improper, unruly behaviour. "ஏறுமாறாக விருப்பாளே யாமாயின்" (தனிப்பா.1,95,24). 7. ***இகலுகை;*** competing, rivalling "ஏறுமாறேற்குமிக்குன்று" (பரிபா.18,6). (செ.அக.).

[ஏறு + மாறு.]

ஏறுமிராசி *ēṟumirāśi,* பெ. (n.) ***ஏறுமோரை*** பார்க்க; see *ēṟumōrai.*

[ஏறும் + இராசி.]

ஏறுமுகஅக்கமணி *ēṟu-muga-akkamaṇi,* பெ. (n.) ***உருத்திராக்க மணிகள் முறையே முகங்கள் அதிகம்பெறக் கோக்கப்படும் மாலை;*** garland of rudrākṣa beads in which the number of faces of the beads is in a progressively ascending scale.

[ஏறு + முகம் + அக்கமணி.]

ஏறுமுகக்கண்டிகை *ēṟu-muga-k-kaṇḍigai,* பெ. (n.) ***ஏறுமுகஅக்கமணி*** பார்க்க; see *ēṟu-muga-akkamaṇi.*

[ஏறு + முகம் + கண்டிகை.]

ஏறுமுகம்[1] *ēṟu-mugam,* பெ. (n.) ***வளருநிலை;*** waxing state, state of increase "என்றுன்ப மனைத்தும்... ஏறுமுகங்கொண்ட தல்லால்" (அருட்பா.5,தனித்திருத்.12). (செ.அக.).

[ஏறு + முகம்.]

ஏறுமுகம்[2] *ēṟu-mugam,* பெ. (n.) 1. ***சினமிகு முகம்;*** angry face. 2. ***மேனோக்கிய முகம்;*** anything facing upwards (சா.அக.).

[ஏறு + முகம்.]

ஏறுமோரை *ēṟu-mōrai,* பெ. (n.) ***கதிரவன் வடதிசைச் செலவிற்கு இடமாய், சுறவம் முதல் ஆடவை*** (மகர முதல் மிதுனம்) ***வரையுள்ள ஆறு ஓரைகள்*** (இருக்கை) (வின்.); six signs of the Zodiac through which the sun passes in its northern course, dist. fr. இறங்கு மோரை.

[ஏறும் + ஓரை.]

ஏறுவட்டம் *ēṟu-vaṭṭam,* பெ. (n.) 1. ***விண்மீன் முதலியன நாழிகையேறும் முறை;*** difference, less or more than 60 Indian hours in the passage of the moon through any of the nakṣatra; also the difference in the karanam and yokam as affected thereby. 2. ***பங்கின்அளவுக்கு அதிகமான நிலம் முதலியவை;*** excess above, or deficiency in, equal shares in the division of the inheritance of lands, etc.

[ஏறு + வட்டம்.]

ஏறுவாசி[1] *ēṟu-vāši,* பெ. (n.) 1. ***ஏற்றம்;*** increase, as of price. விலை ஏறுவாசியாயிருக்கிறது. 2. ***உத்தரம் சுவரில் செல்லுதற்கு வேண்டிய அளவு*** (இ.வ.); length of a groove in a wall into which is inserted the edge of a beam or rafter.

ம. ஏறுவாசி.

[ஏறு + வாசி. வாய் → வாயி → வாசி.]

ஏறுவாசி[2] *ēṟu-vāši,* பெ. (n.) ***ஒரு வரியிலுள்ள செங்கல் இணைப்புகள் அதன் மேல்வரியிலுள்ள செங்கல் இணைப்புகளுடன் சேராதபடி கட்டும் கட்டிட வேலை*** (உ.வ.); breaking of joints, in brickwork.

ம. ஏறுவாசி.

[ஏறு + வாசி. வாய் → வாயி → வாசி.]

ஏறுவாணம் *ēṟu-vāṇam,* பெ. (n.) ***வாணம்;*** a kind of fire-work. (சேரநா.).

ம. ஏறுவாணம்.

[ஏறு + வாணம்.]

ஏறுவால் *ēṟu-vāl,* பெ. (n.) ***நீண்ட வால்;*** long tail. பசு ஏறுவாலும் எருது கூழைவாலும் (வின்.).

[ஏறு + வால்.]

ஏறுவிடு-தல் *ēṟu-viḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***ஆயர் தம்மகளை மணம்புரியத் தக்கோர், தழுவிப் பிடிக்கும் பொருட்டு எருதுவிடுதல்;*** to set a bull at large to be captured, as a test of bravery, by a man who seeks the hand of a woman in marriage, a custom among herdsmen in ancient times.

[ஏறு + விடு.]

ஏறுவிடுத்தல் *ēṟu-viḍuttal,* பெ. (n.) ***முப்பத்திரண்டறங்களுட் பொலியெருதுகளை உதவும் அறச்செயல்*** (திவா.); charitable act of furnishing covering bulls, one of muppattiraṇḍaṟam.

[ஏறு + விடு.]

ஏறுவெயில் *ēṟu-veyil,* பெ. (n.) ***முற்பகல் வெயில்;*** increasing heat and sunshine, as the sun advances towards the meridian, dist. fr. இறங்குவெயில்.

[ஏறு + வெயில்.]

ஏறுழவன் *ēṟuḻavaṉ,* பெ. (n.) ***படை வீரன்*** (வின்.); warrior.

[ஏறு + உழவன். ஏறு = அம்பு.]

ஏறூர்ந்தோன் *ēṟūrndōṉ,* பெ. (n.) ***சிவன்*** (சூடா.); Śiva who rides on the bull.

[ஏறு + ஊர்ந்தோன்.]

ஏறெடு-த்தல் *ēṟeḍu-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***மேலெடுத்தல்;*** to lift up, as the head, eyes. (செ.அக.). 2. ***தலை நிமிர்தல்;*** to be in an upright or a perpendicular posture. 3. ***உயர்த்துதல்;*** to highten (சா.அக.).

[ஏறு + எடு.]

ஏன்[1] *ēṉ,* கு.வி.எ. (adv.) ***எதற்கு;*** why? what? wherefore? how? "அடுத்த வினையுளதாயி னிறையே னென்னில்" (சிவப்பிர.2,6).

ம. ஏன்; க. ஏன்; து. தானே; தெ. ஏமி; பட. ஏக.

[ஏ → ஏன். (வே.க.103).]

ஏன்[2] *ēṉ,* இடை. (part.) 1. ***தன்மை யொருமைப் பெயர்வினைகளில் வரும் ஈறு;*** first pers. sing. suffix (a) of a verb, as in வந்தேன்; (b) of a noun, as in அடியேன். 2. ***ஒழிதற் பொருளில் வரும் இடைச் சொல்*** (நன்.420,மயிலை.); particle of exclusion, as in ஏனோன்.

ம. ஏன்; க. ஆன், என், நான், யான்; கோத. ஆன்; துட. ஒன்; குட. நானி; து. யான், நேன்; தெ. ஏன், நேன்; கொலா. ஆன்; நா. ஆன்; பர். ஆன்; கட. ஆன்; கோண். அனா; கொன். நான்; கூ. ஆன்; குவி. நானு; குரு. ஏன்; மால். ஏன்; பிரா. ஈ.

[நான் → ஆன் → ஏன்.]

ஏன்[3] *ēṉ,* பெ. (n.) ***பன்றி;*** pig. "ஏனொருவ னாயெயிற்றில் தாங்கியதும்" (திவ்.இயற்.நான்.70).

[இல் → எல் → ஏல் → ஏன். இல் = கருமை. ஏன் = கருநிறப்பன்றி.]

ஏன்றுகொள்(ளு)[1]-தல் *ē<u>n</u>ṟu-koḷ-*, 7.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஏற்றுக்கொள்ளுதல்;*** to receive, accept, to entertain. "அடியேனையு மேன்றுகொணீ" (தேவா.323,6). 2. ***பிறனைத் தாங்குதல்;*** to defend, plead the cause of. அவனுக்காக ஏன்றுகொண்டு வருகிறான்.

[ஏல் → ஏன்று + கொள்.]

ஏன்றுகொள்(ளு)[2]-தல் *ē<u>n</u>ṟu-koḷ-*, 7.செ.குன்றாவி. (v.t.) ***எதிர்த்து நிற்றல்;*** to confront, oppose. "அபிமன்னு வையுங்கண்டு துரியோதனன் மகன்... ஏன்றுகொள்ள" (பாரதவெண்பா.795).

[ஏ → ஏல் → ஏன்று + கொள். ஏ = உயர்தல், எதிர்தல்.]

ஏன்றுகோள் *ē<u>n</u>ṟu-kōḷ*, பெ. (n.) ***ஆதரித்தல்;*** supporting, defending. "எனக்குறுப்பான ஏன்றுகோளையுடையனாய்" (திவ்.திருவாய்.2,7,6,பன்னீ.).

[ஏல் → ஏன்று + கோள். கொள் → கோள்.]

ஏன *ē<u>n</u>a*, சு.பெ. (pron.) ***பிற;*** others, the rest. "முதலாவேன" (தொல்.எழுத்து.66).

[ஏ = உயர்தல், மிகுதல், எஞ்சுதல். ஏ → ஏல் → ஏல → ஏன = எஞ்சியவை.]

ஏனப்படம் *ē<u>n</u>a-p-paḍam*, பெ. (n.) ***பன்றிமுகக் கேடகம்;*** shield in the shape of a boar's head "ஏனப்படமும் கிடுகின் படமும்" (சிலப்.14,172).

[ஏனம் + படம்.]

ஏனபானம் *ē<u>n</u>a-pā<u>n</u>am*, பெ. (n.) ***தட்டுமுட்டு;*** utensils, implements.

[ஏனம் + பானம். 'பானம்' எதுகை குறித்த இணைமொழி.]

ஏனம்[1] *ē<u>n</u>am*, பெ. (n.) ***வாய்ப்பு;*** opportunity, convenience, happiness. (சேரநா.).

ம. ஏனம்.

[ஏல் → ஏனம்.]

ஏனம்[2] *ē<u>n</u>am*, பெ. (n.) 1. ***கள் குடிப்பதற்கு ஓலையாலான கலம், ஓலைக்குடலை*** (திவா.); palm-leaf-vessel for drinking toddy from. 2. ***கலம்;*** utensil, vessel. 3. ***கருவி*** (வின்.); tool. 4. ***அணிகலன்*** (இ.வ.); jewel.

ம. ஏனம்.

[ஏல் → ஏனம் (ஏற்பது).]

ஏனம்[3] *ē<u>n</u>am*, பெ. (n.) 1. ***பன்றி;*** pig, wild hog. (தொல்.பொருள்.623). 2. ***தினையரிசி;*** millet.

[ஏனல் = கருமை. ஏனல் → ஏனம்.]

ஏனம்[4] *ē<u>n</u>am*, இடை. (part.) ***ஆய்தவெழுத்தின் சாரியை*** (தொல்.எழுத்து.134,உரை.); enumerative particle added to ஃ, as in அஃகேனம்.

[அன் → ஆன் → ஆனம் → ஏனம் (சாரியை).]

ஏனம்[5] *ē<u>n</u>am*, பெ. (n.) 1. ***கரிசு*** (பாவம்); sin, offence (சூடா.). 2. ***குற்றம்*** (யாழ்.அக.); fault.

[ஈனம் → ஏனம்.]

ஏனல் *ē<u>n</u>al*, பெ. (n.) 1. ***செந்தினை*** (திவா.); red millet. 2. ***கருந்தினை*** (சூடா.); black-millet. 3. ***தினைப் புனம்*** (பிங்.); millet field. 4. ***கதிர்*** (வின்.); ear of corn.

[இல் → எல் → ஏல் (கருமை). ஏலல் → ஏனல் = கருந்தினை. கருந்தினைக்குரிய பெயர் தினைகளுக்குரிய பொதுப்பெயராகிச் செந்தினையையும் தினைப்புனத்தையும் குறித்தது.]

ஏனவாயன் *ē<u>n</u>a-vāya<u>n</u>*, பெ. (n.) ***பேதை*** (இ.வ.); dolt, fool.

[ஈனம் → ஏனம். ஈனம் + வாயன் - ஈனவாயன் → ஏனவாயன்.]

ஏனாதி[1] *ē<u>n</u>ādi*, பெ. (n.) ***ஓர் இளகியம்*** (இலேகியம்) (வின்.); a kind of electuary.

[ஏலாதி → ஏனாதி.]

ஏனாதி[2] *ē<u>n</u>ādi*, பெ. (n.) 1. ***விற்படைத்தலைவன்;*** general of archery wing. 2. ***படைத்தலைவன்*** (பிங்.); general. 3. ***மறவன்*** (பிங்.); soldier, warrior. 4. ***அமைச்சர்;*** ancient title conferred by a king on his minister. "சோழிக வேனாதி தன்முக நோக்கி" (மணி.22,205).

ம. ஏனாதி; தெ. ஏனாதி.

[ஏ = அம்பு. ஏனன் = வில்லாளி. ஏனன் + அதி = ஏனதி → ஏனாதி = விற்படைத்தலைவன்.]

ஏனாதி[3] *ē<u>n</u>ādi*, பெ. (n.) 1. ***முடி திருத்தாளன்*** (பிங்.); barber. 2. ***சாணாரில் ஒரு வகுப்பு;*** division among shā<u>n</u>ārs. (Tj.).

தெ. ஏனாதி.

[ஏனன் + அதி - ஏனதி → ஏனாதி. ஏனாதி = விற்படைத் தலைவன். ஏனாதி[2] பார்க்க; see ē<u>n</u>ādi.[2]]

தோற்ற படைத் தலைவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டுப் பகைவர்க்கு மழித்தல் தொழில் செய்யும் பணிக்கும் பிற துணைப் பணிகளுக்கும் ஏவப்பட்டதால் தோன்றிய புதிய குலப்பெயர் களை இச்சொல் சுட்டுவதாயிற்று.

ஏனாதி[4] *ē<u>n</u>ādi*, பெ. (n.) ***வடார்க்காடு, நெல்லூர் மாவட்டங்களில் வாழும் ஒரு பழைய வகுப்பினர்*** (E.T.); primitive tribe in North Arcot and Nellore Districts.

தெ. யேனாதி.

[ஏ + அம்பு. ஏ → ஏனன் = வில்லாளி. ஏனாதி = வில்லாளி இனத்துத் தலைவன், விற்படைத் தலைவன்.]

ஏனாதிதிருக்கிள்ளி *ēṉāditiru-k-kiḷḷi,* பெ. (n.) ***கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனால் பாடப்பெற்றவன்; கொடையும், வீரமும் கொண்ட சிற்றரசன்,*** (அபி.சிந்.); chieftain, beneficient and heroic, being sung by the poet Kōṉāṭṭu eṟi-c-calūr māḍalaṉ Madurai-k-Kumaraṉ.

[ஏனாதி + திரு + கிள்ளி. ஏனாதி = விற்படைத்தலைவன். படைத் தலைவருள் ஒருவனாகவிருந்து சோழராட்சியில் சிற்றரசனாக மாறிய குறுநில மன்னனாகலாம்.]

ஏனாதிநாதநாயனார் *ēṉādi-nāda-nāyaṉār,* பெ. (n.) ***அறுபத்து மூவர் நாயன்மாருள் ஒருவர்.*** (பெரியபு.); canonized Šaiva Šaint, one of 63 (அபி.சிந்.).

*[ஏனாதி + நாதன் + நாயனார். **ஏனாதி** பார்க்க; see ēṉādi.]*

ஏனாதி மோதிரம் *ēṉādi-mōdiram,* பெ. (n.) ***ஏனாதிப் பட்டத்தார்க்கு அரசரளிக்கும் மோதிரம்.*** (சீவக.2569, உரை); ring being the insignia of the title of ēṉādi.

[ஏனாதி + மோதிரம்.]

ஏனும் *ēṉ-um,* இடை. (part.) ***என்றாலும்;*** an affix having the force of "even if", "தாமரை முதல்வற்கேனும்" (கந்தபு.காமதகன.83).

[ஆல் → ஏல் → ஏலும் → ஏனும்.]

ஏனென்றால் *ēṉ-eṉṟāl,* இடை. (conj.) ***எதற்காக என்றால்;*** because. நான் அப்படிச் சொல்வது ஏனென்றால். (உ.வ.).

[ஏன் + என்றால்.]

ஏனென்(னு)-தல் *ēṉ-eṉ-,* 14.செ.குன்றாவி. (v.t.) ***இடரில் உதவக் கேட்டறிதல்;*** to make kind enquiries in times of need with a view to offer help. அவரை ஏனென்று கேட்க ஆளில்லை (உ.வ.).

[ஏன் + என்.]

ஏனை[1] *ēṉai,* கு.வி.எ. (adj.) ***மற்றை*** ,(சூடா.); other, the rest.

[ஏல் → ஏல → ஏன → ஏனை.]

ஏனை[2] *ēṉai,* பெ. (n.) 1. ***மலங்கு மீன்,*** (திவா.); eel, anguilla. 2. ***ஓர் இசைவகை,*** (திவா.); musical note.

[ஏல் → ஏனை.]

ஏனைக்குமோனை *ēṉaikku-mōṉai,* பெ. (n.) ***ஏணைக்குக்கோணை*** பார்க்க; see *ēṉaikku-k-kōṉai.*

ஏனையவர் *ēṉaiyavar,* பெ. (n.) ***மற்றையோர்;*** others.

[ஏல் → ஏல → ஏன → ஏனை + அவர்.]

ஏனையுவமம் *ēṉai-y-uvamam,* பெ. (n.) ***வெளிப்படையுவமம்*** (தொல்.பொருள்.49); explicit comparison, dist. fr. உள்ளுறை யுவமம்.

[ஏனை + உவமம்.]

ஐ

ஐ[1] *ai*, ***தமிழ் வண்ண மாலையில் அகரமும் இகரமும் கூடிப்பிறந்த ஒன்பதாம் உயிர்நெடில்;*** ninth letter and vowel of the Tamil alphabet, diphthong of 'a' and 'i'. ''அகர இகரம் ஐகாரமாகும்.'' (தொல்.எழுத்.54).

ம., க., தெ. ஐ.

[அ + இ - அஇ → ஐ.]

'ஐ' என்பதே ஒப்பமுடிந்த வரிவடிவம் எனினும் தொன்முது காலத்தில் தமிழ்மொழி உருவெழுத்தாகவும் அசையெழுத்தாக வும் எழுதப்பட்டுவந்ததால், 'அஇ' என்னும் கூட்டுயிர் 'அய்' என மாற்றுக் கூட்டுயிர் வடிவம் பெற்றது. இதனை (அஇ), (அய்) என்னும் சிந்துவெளியில் கிடைத்த எழுத்துகளாலும் அறியலாம். ''அகரத்திம்பர் யகரப் புள்ளியும் ஐயென் நெடுஞ் சினை மெய்பெறத் தோன்றும்'' (தொல்.எழுத்.56) எனத் தொல்காப்பியர் நூற்பா இயற்றினார். ஆதலால் இது இலக்கண வழக்கன்று என்பதும் உலகியல் வழக்கை ஒருபுடை தழுவிய தன் நோக்கம் பண்டையோர் ஏட்டுச்சுவடிகளில் உள்ள எழுத் துப்பாங்கு பின்னையோர்க்குப் புலப்படுத்தற்கே என்பதும் அறிதல் வேண்டும்.

அசையெழுத்துக்காலத்தில் தமிழில் நெட்டுயிர் அனைத்தும் இருஉயிர்க்குறில்களின் இணைப்பெழுத்துகளாக எழுதப்பட் டன. எ-டு: அஅ → ஆ; இஇ → ஈ; உஉ → ஊ; எஎ → ஏ (அல்லது) இஅ → ஏ; அஇ → ஐ அல்லது அய் → ஐ; ஒஒ → ஓ அல்லது உஅ → ஓ; அஉ → ஔ அல்லது அவ் → ஔ. ஏகார ஐகார ஓகார ஔகாரங்களை ஈரெழுத்துக் குறில்களாக எழுதாமல் ஓரெழுத்து நெடிலாக எழுதும் முறையை இலக்கண வல்லுநர் புகுத்தியபோது பண்டைய ஈரெழுத்து நெடில்களுக்கு இலக்கண அமைதி கூறுவதற்கா கவே தொல்காப்பியர் அகரஇகரம் ஐகாரம் ஆகும் என்றார். நெட்டுயிர்களை ''ஈரள பிசைக்கும் நெட்டெழுத்தென்ப'' எனக் குறிப்பிடுவதும்; இருகுறில் இணைந்து நெட்டுயிர் வரிவடிவம் பெறும் என்னும் பண்டைய அசையெழுத்து நிலையைக் குறிப்பால் புலப்படுத்துவதாகும். **எழுத்து**[2] பார்க்க; see eḻuttu[2].

ஐ[2] *ai*, இடை. (part.) 1. (அ) ***வினைமுதற்பொருள் ஈறு;*** suff. of nouns formed from verbs to express, that which does an action as in பறவை. (ஆ) ***செயப்படு பொருள் ஈறு;*** that which is acted upon, as in தொடை (மாலை). (இ) ***கருவிப்பொருள் ஈறு*** (நன்.140,உரை); the instrument, as in பார்வை. 2. ***தொழிற் பெயர் ஈறு;*** suff. of verbal nouns, as in கொலை. 3. ***பண்புப்பெயர் ஈறு*** (நன்.140,உரை); suff. of abstract nouns, as in தொல்லை. 4. ***முன்னிலை யொருமை ஈறு*** (நன்.140, உரை); ending of 2nd pers. sing. verb, as in சென்றனை. 5. ***ஒரு சாரியை.*** (நன்.185,உரை); euphonic augment, as in பண்டைக்காலம். 6. ***முன்னிலைக் குறிப்பு வினை முற்று ஈறு;*** 2nd pers. appellative verb ending. அல்லை.

ம. ஐ, எ; **க.** அம், அன்னு, அன், அண்ண, ன்ன, ன; **து.** நு, ன; **தெ.** நுனி; **கோண்.** துன்; **கூ.** ஐ; **குரு.** இன்; **பிரா.** னெ, எ. *Guj.* ne; *Punj.* நு, நும். *Turk, Mong.* nī, ī; *Fin.* en, an.

[ஐ[3] → ஐ[2].]

ஐ[3] *ai*, இடை. (part.) ***இரண்டாம் வேற்றுமையுருபு*** (நன்.296); accusative case-ending. ''இரண்டாகுவதே, ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி'' (தொல். சொல்.71).

ம. எ; **க.** அன்னு; **தெ.** னி, இ.

[இ → ஐ. இ - அண்மைச்சுட்டு, கீழிறங்குதற் குறிப்புத் திரிபு வேர். அண்மைச்சுட்டு நெருங்குதல், ஒத்தல், இழிதல், உடைமை, ஆக்கப்பொருள்களையும், இழிதற்குறிப்பு அழித் தல், நீத்தல் குறிப்புப்பொருள்களையும் வினைமுதலுக்குச் சேர்க்கும். தெரிநிலை வினையும் குறிப்பு வினையும் வினை முதலுக்குச் செயப்படுபொருட்பாங்கைச் சேர்க்க 'ஐ' உருபு உதவுதலின் ''எவ்வழிவரினும் வினையே வினைக்குறிப்பு அவ்விரு முதலின் தோன்றும் அதுவே'' (தொல்.சொல்.71) எனத் தொல்காப்பியர் விளக்கிக் கூறினார். வினைப்பயனை எழுவாய்க்கு ஏற்றும் பொருட்பாங்கை 'ஐ' உருபு புலப்படுத்து கிறது என்பதே இதன் பொருள்.]

ஐ[4] *ai*, பெ. (n.) 1. ***வியப்பு;*** wonder, astonishment. ஐதே யம்ம யானே (தொல்.சொல்.385,உரை). 2. ***பெருமை;*** largeness. 3. ***உயர்வு;*** elevation, height.

[ஆ → ஆய் → அய் → ஐ.]

ஐ[5] *ai*, பெ. (n.) 1. ***மென்மை;*** slenderness. ''ஐதுவீ ழிகுபெயல்'' (சிறுபாண்.13). 2. ***அழகு;*** beauty. 3. ***நுண்மை;*** minuteness, subtleness. ''அணுத்தருந் தன்மையி லையோன்'' (திருவாச.3,45). 4. ***கூர்மை;*** sharpness.

[அள் → அய் → ஐ.]

ஐ[6] *ai*, பெ. (n.) 1. ***தந்தை;*** father. ''தன்னை சேவடித் தாமரை'' (சீகாளத்திபு.நான்முக.124). 2. ***தலைவன்;*** lord, master. ''என்னைமுன் நில்லன்மின்'' (குறள்.771). 3. ***கணவன்;*** husband. ''எனக்கு மாகா தென்னைக்கு முதவாது'' (குறுந்.27). 4. ***அரசன்***,(சூடா.); king. 5. ***ஆசான்*** (அக.நி.); guru, priest, teacher. 6. ***சிவன்;*** Śiva. 7. ***கொற்றவை;*** goddess Durga. 8. ***முதலாளி, ஆண்டை;*** boss. ''விடைதாரும் ஐயே'' (நந்தனார்).

ம. ஐ; **க.** ஐகன்; **தெ.** ஐவாரு.

[ஆ → ஆய் → அய் → ஐ. ஆ = முதன்மை, தலைமை.]

ஐ[7] *ai*, பெ. (n.) 1. ***சளி, கோழை;*** phlegm. ''ஐயினான் மிடறடைப் புண்டு'' (தேவா.812-7). 2. ***வெண்மை;*** white colour.

ம. ஐ.

[அள் → அய் → ஐ. (மு.தா.333).]

ஐ[8] *ai,* பெ. (n.) 1. ***கருமை;*** collyrium. 2. ***கடுகு;*** mustard. 3. ***கம்மாறு வெற்றிலை;*** dark green betal leaf. 4. ***தும்பை;*** bitter lucos.

[இல் → இய் → அய் → ஐ. இல் = கருமை.]

ஐ[9] *ai,* பெ. (n.) ***சருக்கரை;*** sugar. (சா.அக.).

[இக்கு → ஐக்கு → ஐ.]

ஐ[10] *ai,* பெ. (n.) ***பருந்து;*** kite.

[ஐ[4] → ஐ[10] (உயரப்பறப்பது).]

ஐ[11] *ai,* பெ. (n.) ***ஐந்து;*** five.

ம. ஐ.

[கை → ஐ (த.வ.146).]

கையிலுள்ள ஐந்து விரல்கள் ஐந்து எண்ணும் எண்ணுப்பெயர் தோன்றக்காரணமாயின. நாட்டுப்புறங்களில் இன்றும் பழங் களை எண்ணும்போது ஐந்தைந்தாக எடுத்துப்போட்டு ஒரு கை (5) இருகை (10) என எண்ணுதலைக் காணலாம்.

ஐக்ககம் *aikkagam,* பெ. (n.) ***வீட்டினுள் முற்பகுதியில் அமைந்த பெரிய அறை;*** drawing room. (சேரநா.).

ம. ஐக்ககம்.

[ஐ → ஐக்கு + அகம் - ஐக்ககம். ஐ[4] = உயர்வு. ஐக்கு = பெரிய.]

ஐக்கணச்சூலை *aikkaṇa-c-cūlai,* பெ. (n.) ***சளியால் குழந்தைகளுக்குக் காணும் ஓர்வகைக் கணச்சூலை;*** form of tabes in new born infants. (சா.அக.).

[ஐ + கணம் + சூலை.]

ஐக்குரம் *aikkuram,* பெ. (n.) ***கருப்பஞ்சாற்றாற் செய்யப் பட்ட கருந்தேன்*** (ஆ.அக.); honey made of sugarcane-juice.

[இக்கு = கரும்பு. இக்கு → ஐக்கு → ஐக்குரம்.]

ஐகாரக்குறுக்கம் *aigāra-k-kuṟukkam,* பெ. (n.) ***சார்பெ ழுத்துகளுள் இரண்டு மாத்திரை அளவினும் குறைந்து ஒலிக்கும் ஐகாரம்*** (நக்.95,உரை); letter 'ஐ' shortened which, except when it is treated as a distinct letter in the alphabet, never receives its full measure of two mattirai, one of ten cārpeḻuttu.

[ஐ + காரம் + குறுக்கம். காரம் - எழுத்துச்சாரியை.]

ஐகான் *ai-gāṉ,* பெ. (n.) ***ஐயென்னுமெழுத்து;*** the letter ஐ. "ஐகான் யவ்வழி" (நன்.124) (செ.அக.).

[ஐ + கான். கான் - சாரியை.]

ஐங்கணை *ai-ṅ-gaṇai,* பெ. (n.) ***காதற்கடவுளின் அம்புகள்;*** arrows of kāma, the god of sexual love tipped with five kinds of flower. "விரைமல ரைங்கணை" (மணி.5,5). (செ.அக.) "ஐங்கணை அரியத்தக்க புண் ணெல்லாம் எனக்கேயாக்கி" (கம்ப.).

ம. ஐங்கண, அய்கண; க. அய்கண (ஐந்து அம்புகளை உடையவன்).

[ஐ + கணை - ஐங்கணை. தாமரை, மாம்பூ, அசோகு, முல்லை, நீலோற்பலம் என்பன ஐந்து மலர்கள்.]

ஐங்கணைக்கிழவன் *ai-ṅ-kaṇai-k-kiḻavaṉ,* பெ. (n.) ***காமன்;*** Kāma, the god of sexual love who uses ai-ṅ-kaṇai. "ஐங்கணைக்கிழவன் காட்சியுண் மகிழ" (கல்லா.19,10). (செ.அக.).

[ஐந்து + கணை + கிழவன்.]

ஐங்கணையல்லல் *ai-ṅ-kaṇai-y-allal,* பெ. (n.) ***காம நோய்; ஐங்கணையவத்தை;*** effect produced by aiṅkaṇai.

[ஐந்து + கணை + அல்லல்.]

ஐங்கணைவில்லி *ai-ṅ-kaṇai-villi,* பெ. (n.) ***காமன்; ஐந்து வகை மலர்களை அம்பு முனையில் வைத்து எய்பவன்;*** Kāma, the god of sexual love, the archer who uses arrows tipped with five kinds of flowers. "ஐங்கணை வில்லித னாண்மை" (திவ்.பெரியதி. 9,5,7). (செ.அக.).

[ஐந்து + கணை + வில்லி.]

ஐங்கதி *ai-ṅ-gadi,* பெ. (n.) ***குதிரை நடை;*** five kinds of pace of the horse. "ஐங்கதி நடத்திக் காட்டி" (திரு விளை.மெய்க்கா.37). (செ.அக.).

[ஐந்து + கதி. (கது = கதுவுதல்) கது → கதி (நிலைமை).]

ஐங்கரற்கிளையோன் *ai-ṅ-garaṟ-kiḷaiyōṉ,* பெ. (n.) 1. ***முருகன்;*** Lord Muruga. 2. ***வீரபத்திரன்;*** Veerabadra.

[ஐந்து + கரன் + கு + இளையோன்.]

ஐங்கனி *aiṅgaṉi,* பெ. (n.) ***ஐந்து வகைப் பழங்கள்;*** the five kinds of fruits.

[ஐந்து + கனி.]

ஐங்காயக்கூறு *aiṅgāya-k-kūṟu,* பெ. (n.) ***ஐந்துவகை உசிலைச்*** (சம்பாரச்) ***சரக்கு;*** five constituent parts in the mixture of drug. (சா.அக.).

[ஐந்து + காயம் + கூறு.]

ஐங்காயம் *ai-ṅ-gāyam,* பெ. (n.) ***கடுகு, ஓமம், வெந்த யம், உள்ளி, பெருங்காயம் முதலிய ஐந்து உசிலைச் சரக்குகள்*** (தைலவ.தைல.135,வரி.111); five vegetable stimulants, viz., mustard, bishop-weed, fenugreek, garlic, asafoetida.

[ஐந்து + காயம். காள் → காளம் → காயம் = கார்ப்புச் சுவையுடையது.]

ஐங்குரவர் *ai-ṅ-kuravar,* பெ. (n.) ***மதித்துப் போற்றுதற் குரிய பெரியோர் ஐவர்;*** five elders entitled to respect viz., அரசன், ஆசிரியர், தாய், தந்தை, தமையன். "ஐங்குர வராணை மறுத்தலும்" (திரிகடு.97). (செ.அக.).

[ஐந்து + குரவர்.]

ஐங்குறுநூறு *aiṅguṟu-nūṟu,* பெ. (n.) ***எட்டுத்தொகையு ளொன்று, அகம் பற்றிய ஐந்நூறு அகவற் பாக்கள்***

ஐந்திணை வகுப்புக்கு ஏற்பப் புலத் துறை முற்றிய கூடலூர் கிழாரால் தொகுக்கப்பட்டது; the short five hundred, an ancient anthology of love-lyrics, containing 500 short agaval verses, one of eṭṭu-t-togai, compiled by kūḍalūr-kiḻār.

[ஐந்து + குறு - ஐங்குறு + நூறு.]

ஒவ்வொரு பகுதியும் முறையே ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் ஆகிய ஐவரால் இயற்றப்பட்டது.

ஐங்கூந்தல் *ai-ṅ-kūndal,* பெ. (n.) *ஐந்து வகையாக ஒப்பனை பெறும் கூந்தல்;* women's hair, as dressed in five modes. ''நாறைங் கூந்தலு நரைவிரா வுற்றன'' (மணி.22,130). (செ.அக.).

[ஐந்து + கூந்தல்.]

ஐங்கோலான் *ai-ṅ-kōlāṉ,* பெ. (n.) *ஐங்கணைக்கிழவன்* பார்க்க; see *aiṅgaṇai-k-kiḻavaṉ.* ''ஐங்கோலா னடத்துங் கொடுங்கோலை'' (பிரபோத.6,39). (செ.அக.).

[ஐந்து + கோல் + ஆன். கோல் = அம்பு, கணை.]

ஐச்செலவு *aiccelavu,* பெ. (n.) *கணவன் மனைவிக்குக் கொடுக்கும் படி;* subsistance allowance (given to one's wife) (சேரநா.).

ம. ஐச்செலவு.

[ஐ + செலவு - ஐஞ்செலவு → ஐச்செலவு. ஐஞ்செலவு பார்க்க; see aiñcelavu இது ஆகுபெயராய் உணவுச் செலவைக் குறித்தது.]

ஐசு *aisu,* பெ. (n.) *மல்லிகை;* jasmine bud. (சா.அக.).

[ஐ = அழகு, மணம். ஐ → ஐயு → ஐசு.]

ஐசுகைசா-தல் *aisu-gaisā-,* 19.செ.கு.வி. (v.i.) *மிகச் சிறிதாதல்;* to be exceedingly small or minute. ''ஐசுகைசான இருட்கொ ழுந்துகளை'' (திவ்.இயற்.திருவிருத்.69,வ்யா.பக்.361). (செ.அக.).

[ஐசு + கைசு + ஆதல். ஐசுகைசு - எதுகை குறித்து வந்த இணைமொழி. ஐ → ஐசு = சிறியது.]

ஐஞ்சந்தி *ai-ñ-jandi,* பெ. (n.) *ஐந்து தெருக்கள் கூடுமிடம்* (திருமுரு.225,உரை); junction of five streets. (சா.அக.).

[ஐந்து + சந்தி.]

ஐஞ்சிறப்பு *aiñjiṟappu,* பெ. (n.) *ஐந்து மங்கலப் பூசை;* ceremonies on the five auspicious occasions in the life of a tīrttaṅgara. ''ஐஞ்சிறப் பயருந் தேவர்'' (மேரு மந்.1,8).

[ஐந்து + சிறப்பு - ஐஞ்சிறப்பு.]

ஐஞ்செலவு *aiñcelavu,* பெ. (n.) *குழம்பு, கூட்டு போன்றவை செய்வதற்காகச் சேர்க்கப்படும் உசிலைப்* (மசாலா) *பொருள்கள்;* spices, condiments, curry-stuffs.

[ஐந்து + செலவு - ஐஞ்செலவு.]

ஐந்தறைப் பெட்டியில் (அஞ்சறைப் பெட்டியில்) உசிலைப் பொருள்களைச் சமையலறையில் வைத்திருக்கும் பழக்கம் இதனை வலியுறுத்தும். இக்காலத்தும் நாட்டுப்புறங்களில் இதனைச் சந்தைச் செலவு என்பர்.

ஐஞ் ஞூறு *ai-ñ-ñ-ūṟu,* பெ. (n.) *ஐந்நூறு* பார்க்க; see *ainnūṟu.*

[ஐந்நூறு → ஐஞ்ஞூறு.]

ஐஞ்ஞை[1] *aiññai,* பெ. (n.) *அறிவுகேடன்* (அக.நி); ignorant, foolish person. (சா.அக.).

[அழிஞன் → அஞ்ஞை → ஐஞ்ஞை.]

ஐஞ்ஞை[2] *aiññai,* பெ. (n.) *அழகு;* beauty. (சா.அக.).

[ஐ → ஐம்மை → ஐன்னை → ஐஞ்ஞை.]

ஐணம் *aiṇam,* பெ. (n.) *மான் தோல்* (Poṇḍ.); deer-skin. (செ.அக.).

[ஐ = அழகு. ஐ → ஐணம்.]

ஐதபயிர் *aida-payir,* பெ. (n.) *அடர்த்தியற்ற பயிர்* (வின்.); thin crop of growing corn. (செ.அக.).

[ஐ → ஐது = மெல்லிது, பரவலானது. ஐது + பயிர் = ஐது பயிர் → ஐதபயிர்.]

ஐதி *aidi,* பெ. (n.) *உலகுரையாகிய அளவை* (யாழ்.அக.); tradition, as an authority. (செ.அக.).

[ஐ → ஐது = உயர்வு, சிறப்பு, மேன்மை. ஐது → ஐதி.]

ஐது *aidu,* பெ. (n.) 1. *அழகுள்ளது;* that which is beautiful. ''பெற்றியு மைதென'' (மணி.10,2). 2. *அழகு;* beauty (கூர்மபு.தக்கனைச் சாத்.3). 3. *நுண்ணியது;* that which is minute, fine, subtle. ''ஐதமர் நுசுப்பினாள்'' (கலித்.52). 4. *மெல்லியது;* that which is thin, light, slender, soft. ''ஐதுவீ ழிகுபெயல்'' (சிறுபாண்.13). 5. *வியப்புடையது;* that which is wonderful. ''ஐதே யம்ம்'' (தொல்.சொல்.385,உரை). 6. *இளகிய தன்மை;* fluidity. ''சுண்ணம் ... நான நீரி னைதுபட் டொழுகி'' (சீவக.117). 7. *செறிவின்மை;* sparseness, standing near but not in contact. ''ஐதது நெல், அடர்ந்தது சுற்றம்'' (யாழ்ப்.). (செ.அக.).

[ஐ → ஐது (தமி.வ.279).]

ஐது அம்மை *aidu-ammai,* பெ. (n.) *அடர்த்தியாக இல்லாது காணப்படும் அம்மை;* form of small pox in which the pustules remain more or less distinct and separate.

[ஐது + அம்மை.]

ஐதுகன் *aidukaṉ,* பெ. (n.) *மறை* (வேத) *முறைகளை மறுத்துக் காரணமுறையான் வழக்காடுபவன்;* one who is a hētu-vādin and denies the authority of the vēdas. ''ஆரண நூல்வழிச் செவ்வை யழித்திடு மைதுகர்க்கோர் வாரணமாய்'' (ரஹஸ்ய.61). (செ.அக.).

[ஏது → ஐது → ஐதுகன்.]

ஐதுநொய்தாக *aidu-noydāga,* கு.வி.எ. (adv.) *மிகக் குறைவாக;* very little. "அனந்தன் பாலுங்கருடன்பாலு மைதுநொய்தாக வைத்து" (திவ்.பெரியாழ்.5,4,8). (செ.அக.).

[ஐது + நொய்து + ஆக.]

ஐந்தஃகல் *aindakkal,* பெ. (n.) *ஐம்புலன்களை ஒடுக்குதல்;* curtailing the five senses and restricting their activities to a limit. (சா.அக.).

[ஐந்து + அஃகல்.]

ஐந்தடக்கு-தல் *aindadakku-,* 7.செ.கு.வி. (v.i.) *ஐம்புலன்களையும் ஒடுக்குதல்;* to control the five senses. "ஆமைபோலைந்தடக்க லாற்றின்" (குறள்.126). (செ.அக.).

[ஐந்து + அடக்கு.]

ஐந்தமுதம் *aindamudam,* பெ. (n.) *சருக்கரை, தயிர், தேன், நெய், பால் இவைகளைக் கலந்து செய்த அமுதம்;* five nectars i.e., the five sweet substances viz., sugar, curd, honey, ghee and milk. (சா.அக.).

[ஐந்து + அமுதம் - ஐந்தமுதம்.]

ஐந்தரம்[1] *aindaram,* பெ. (n.) *பனை* (யாழ்.அக.); palmyra. (சா.அக.).

[ஐ = உயரம். ஐ → ஐந்து → ஐந்தரம்.]

ஐந்தரம்[2] *aindaram,* பெ. (n.) 1. *அழகுள்ளது;* that which is beautiful. 2. *செறிவின்மை;* sparseness.

[ஐ → ஐந்து → ஐந்தரம்.]

ஐந்தல் *aindal,* பெ. (n.) *அருள், இரக்கம்;* mercy, pity, sympathy. (சேரநா.).

ம. ஐந்தல்.

[ஐ → ஐந்தல். ஐ = மென்மை, இரக்கம்.]

ஐந்தவி-த்தல் *aindavi-,* 4.செ.கு.வி. (v.i.) ஐந்தடக்கு பார்க்க; see *aindadakku.* "ஐந்தவித்தா னாற்றல்" (குறள்.25).

[ஐந்து + அவி.]

ஐந்தறிவுயிர் *aindarivuyir,* பெ. (n.) *ஐயறிவுயிர்* (திவா.) பார்க்க; see *aiyarivuyir.*

[ஐந்து + அறி + உயிர்.]

ஐந்தனுருபு *aindan-urubu,* பெ. (n.) *ஐந்தாம் வேற்றுமையினுருபு;* case ending of the ablative, viz., இல் or இன் denoting separation, similitude, limit or means. (சா.அக.).

[ஐந்து + அன் + உருபு.]

ஐந்தாங்கல் *aindāṅgal,* பெ. (n.) *ஐந்து கற்களைக் கொண்டு விளையாடும் ஒரு வகை விளையாட்டு* (இ.வ.); forfeit game which consists in throwing five stones up into the air and catching them in various ways.

[ஐந்து + ஆம் + கல்.]

ஐந்தாங்கால் *aindāṅgāl,* பெ. (n.) *திருமணத்திற்கு ஐந்துநாள் முன்பு நடும் பந்தற்கால்* (வின்.); first auspicious post of the marriage pavilion planted on the fifth day before the date fixed for the marriage.

[ஐந்து + ஆம் + கால்.]

ஐந்திணை *ai-n-diṇai,* பெ. (n.) 1. *அன்புடைக்காமம்* (நம்பியகப்.4,உரை.); love between man and woman as manifested in five situations pertaining to the five tracts of land. 2. *குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நிலங்கள்* (திவா.); the five tracts of land "அன்பின் ஐந்திணைக் களவெனப்படுவது" (இறை.கள.நூற்பா.1).

[ஐந்து + திணை.]

ஐந்திணைச்செய்யுள் *ai-n-diṇai-c-ceyyuḷ,* பெ. (n.) *உரிப்பொருள் தோன்ற ஐந்திணையையுங் கூறும் சிற்றிலக்கியம்* (இலக்.வி.849); poem describing the ain-tiṇai, along with their characteristics. (சா.அக.).

[ஐந்து + திணை + செய்யுள்.]

ஐந்திணைத் தெய்வம் *ai-n-diṇai-t-teyvam,* பெ. (n.) *ஐந்து நிலங்கட்குமுரிய தெய்வம்: முருகன், கொற்றவை, திருமால், வேந்தன், வருணன் என்பவர்;* presiding deities of the five tracts of land viz. Murugaṉ, Koṟṟavai, Tirumāl, Vēndaṉ and Varuṇaṉ.

[ஐந்து + திணை + தெய்வம்.]

ஐந்திணையெழுபது *ai-n-diṇai-y-eḻupadu,* பெ. (n.) *பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் மூவாதியார் செய்த நூல்; எழுபது (14 x 5) பாடல்களைக் கொண்டது;* ancient love poem of 70 stanzas by Mūvādiyār, one of Patiṉeṉ-kīḻ-k-kaṇakku, (சா.அக.).

[ஐந்து + திணை + எழுபது.]

ஐந்திணையைம்பது *ai-n-diṇai-y-aimpadu,* பெ. (n.) *பதினெண்கீழ்க் கணக்குநூல்களுள் ஒன்று; மாறன் பொறையனார் இயற்றியது; 50 பாடல்களைக் கொண்டது;* ancient love poem of 50 stanzas by Māraṉ-poṟaiyaṉār, one of Padiṉeṉ-kīḻ-k-kaṇakku.

[ஐந்து + திணை + ஐம்பது.]

ஐந்திரம்[1] *aindiram,* பெ. (n.) 1. *தொல்காப்பியத்திற்கு முந்து நூலாக வழங்கி மறைந்த பண்டைத் தமிழிலக்கணம்;* an ancient treatise on Tamil grammar, being

the basic and source work for ancient extant Tamil grammar Tolkappiyam. ''ஐந்திரம் நிறைந்த தொல்காப்பி யன் எனத் தன்பெயர் தோற்றி'' (தொல்.எழுத்.பாயி.).

2. ***இந்திய மொழிகளுக்கு இலக்கணம் வகுக்க எடுத்துக்காட்டாக விளங்கியதும் பாணினியின் வட மொழியிலக்கணத்துக்குக் காலத்தால் மிகவும் தொன் மையானதுமாகிய முந்து தமிழ் இந்தியப் பொது இலக்கணநூல்;*** a pan Indian proto-Tamil grammar, which set an example for later grammarians in different languages in ancient India, many centuries prior to Pāṇiṉi's Sanskrit grammar.

க. ஐந்தரவியாகரண; **தெ.** ஐந்த்ரவியாகரணமு. *Pkt., Pali.,* aindra. *Nep. Tib.* aindra.

[ஐ = மேன்மை, உயர்வு. ஐ → ஐயன் → ஐந்தன் → ஐந்திரன் → ஐந்திரம். (ஒ.நோ.) புலம் → புலத்தன் → புலந்தன் → புலந்திரன்; மாந்தன் → மாந்தரன்.]

ஐந்திரனால் இயற்றப்பட்ட தமிழிலக்கணம் ஐந்திரம் எனப்பட் டது. ஐந்தன் என்னும் பெயர் இன்றும் துளுமொழியில் ஐத்து, ஐத்தப்ப என வழங்குகிறது. ஐந்தக்க, ஐத்தம்ம, ஐத்தை எனும் பெண்பாற்பெயர்களும் ஒப்புநோக்கத்தக்கன. 'ஐந்தரம்' ஒருவ கைப் பனைமரத்தையும் குறிப்பதால் பனையன் என்னும் பொருளிலும் இப்பெயர் வந்திருக்கலாம். தொல்காப்பியர் ஐந்திர இலக்கணத்தை நிறைவாகக் கற்றவராதலால் முந்து நூல் மரபு நன்கு பேணிக்காக்கப்பட்டுள்ளது. தொன்முதுகாலத்தில் முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை, இசைநுணுக்கம் போன்ற இசையிலக்கண நூல்களும் அகத்தியர் இயற்றியதாகக் கூறப்படும் அகத்தியம் என்னும் இயற்றமிழிலக்கணமும் மறைந்துபோன நிலையில் வரலாற்றுக்கெட்டிய அளவில் ஐந்தி ரமே தொன்முது தமிழ் நூலாக இந்திய நாடு முழுவதிலும் அறியப்பட்டுள்ளது. ஆரியர் வருகைக்கு முன்பு இந்தியப் பெருநிலம் முழுவதும் தமிழே பேச்சு மொழியாகவும் எழுத்து மொழியாகவும் நிலவியதற்கான சான்றுகள் அறிஞர் பெருமக் கள் பலராலும் நிறுவப்பட்டுள்ளன. பிராகிருத மொழிகளிலும் பாலி மொழியிலும் எகர ஒகரக் குறில் எழுத்துக்கள் இருந்தன. கௌதம புத்தர்தம் இளமைக்காலத்தில் கற்ற மொழிகளில் தமிழும் ஒன்று என்பதை லலிதவிசுத்தாரம் என்னும் நூலால் அறிகிறோம். சாரிபுத்தர் தம் 16 ஆம் அகவையில் ஐந்திரவிலக் கணம் கற்றார் என்று புத்த சாதகக் கதைகள் கூறுகின்றன. ஐந்திர இலக்கணம் கற்ற பெருமக்கள் கி.மு. ஆறாம் நூற் றாண்டு வரை இந்தியா முழுவதும் இருந்திருக்கிறார்கள் என்பதும் பாணினியின் காலத்தில் கங்கைச்சமவெளிப்பகுதி யில் ஐந்திரம் கற்பிக்கப்பட்டது என்பதும் தெரியவருகின்றன. பாணினி விந்தியமலைக்குத் தெற்கே எதனையும் குறிப்பிட வில்லை. கிழக்குத்திசையில் உச்சயினி முதல் பாடலிபுத்திரம் வரையிலுள்ள பகுதிகளில் ஐந்திர இலக்கணம் பிராகிருதம் பேசுவோராலும் பயிலப்படுதலால் அதனைக் கிழக்கிந்திய இலக்கணம் என்றும் அதனைப் பாணினி முழுமையாக ஏற்க வில்லை என்றும் கூறப்படுகிறது.

பண்டைய இந்திய இலக்கணத்தன்மை பற்றி ஆய்வுக்கட்டுரை எழுதி பம்பாய்ப் பல்கலைக்கழகத்தில் (1915) பொற்பதக்கம் பெற்ற வடமொழி ஆராய்ச்சியாளர் கிருட்டிணபெல்வால்கரின் பின்வரும் கூற்று இக்கருத்தை அரண் செய்வதாகும்.

Aindram:- Panini mentions this name except under the general appellation of "the easterners". an often quoted passage from the fourth taranga of the *Kathasarith Sagara* informs us that the school which Panini supplanted was known as Aindra school ... that technical terms used by the so called Aindra treatises are connected with one another and are, further, simpler and more primitive than those of Panini is quite evident; and on this ground it is not unlikely that they represent a school of grammanians prior to Panini's.

— Sripad krishna Belwalkar (1915), "Systmes of Sanskrit Grammar" University of Bombay (pp.10-11).

வடமொழியிலக்கணத்தினின்றும் முற்றிலும் வேறுபட்ட ஐந்திர இலக்கணம் தமிழ் மொழிக்கே உரியது என்பதை ஆராய்ச்சி வல்லுநர் பருனலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஐந்திரத்தைப் பிராகிருத மொழியில் மொழியாக்கம் செய்தவர் முதல் சாகடாயனர். அது பின்னர் இந்திரன் என்பவரால் வடமொழியிலும் ஆக்கம் பெற்றது. இவை மட்டுமன்றி சந்திர கோமினின் பௌத்த இலக்கணமும், பாலி மொழியில் இயற் றப்பட்ட சச்சாயனமும், திரவிட சங்கம் நிறுவிய சமண சாகடாயனராகிய தேவநந்தி பூச்சியபாதர் இயற்றிய சைனேந் திர இலக்கணமும் சாதவாகன மன்னர் காலத்தில் சருவவரும னால் இயற்றப்பட்ட கலாபவியாகரணம் எனப்படும் காதந்திர இலக்கணமும், ஐந்திர இலக்கணத்தை அடியொற்றி வடபுல மொழிகளுக்கு இலக்கணம் வகுக்க உதவின.

தென்னாட்டு ஐந்திர இலக்கணம் வடநாட்டிலும் கற்பிக்கப்பட்ட தைத் தாராநாதரும் யுவான்சுவாங்கும் குறிப்பிட்டுள்ளனர். வான்மீகி இராமாயணத்தில் (இராமா.உத்தர.36,43) அனுமன் ஐந்திர இலக்கணம் கற்றவனாகக் கூறப்பட்டிருக்கிறான். கி.பி. 10ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பழங்கன்னட இலக்கண நூலாகிய சப்தமணி தருப்பணம் ஐந்திரநெறியில் வந்த காதந் திர இலக்கணத்தை அடியொற்றி எழுதப்பட்டுள்ளது.

பாணினியின் இலக்கணத்தைத் திருத்தியும் ஒழுங்குபடுத்தியும் வார்த்திக உரையெழுதிய காத்தியாயனர் ஐந்திர இலக்கணம் கற்ற தென்னாட்டவர் என்றும் இவர் நந்தர்களொடு தொடர்பு கொண்டிருந்தார் என்றும் கதாசரித் சாகரம் என்னும் நூல் குறிப்பிடுகிறது. மராட்டிய மாநிலத்து வடமொழிப் பேராசிரி யர் வகாங்கர் தென்னாட்டிலிருந்தே இலக்கண அறிவு இந்தியா முழுவதும் பரவியுள்ளது என்றும் வடமொழிக்கு வளஞ்சேர்த்த பதஞ்சலி, யாசுகர், சாகடாயனர் போன்றோர் தென்னாட்டவர் கள் என்றும் குறிப்பிடுகிறார்.

''இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்'' என்று உரையாசிரி யர்கள் மேற்கோள்காட்டியிருப்பதும் ''கப்பத்து இந்திரன் விழு நூல்'' என்று சிலப்பதிகாரத்தில் கூறப்படுவதும் சைனேந்திர இலக்கணத்தைச் சுட்டியதேயன்றிப் பண்டைத்தமிழ் ஐந்தி ரத்தை நேரடியாகச் சுட்டியதன்று. பண்டைத்தமிழ் ஐந்திரத்தை அடியொற்றித் திபேத்திய மொழிக்கு உயிரும் மெய்யுமாக முப்பது முதலெழுத்துகள் அமைக்கப்பட்டிருந்தன என அறிகி றோம்.

தொல்காப்பியர் காலத்தில் வடவேங்கடம் தென்குமரியாகத் தமிழ் வழங்கும் எல்லை சுருங்கிவிட்டது. எனினும் ஐந்திர இலக்கணம் இந்தியப்பெருநிலம் முழுவதும் இலக்கண ஒளிக்க திர் வீசிப் புகழ்பெற்றிருந்தது என்பது நிறுவப்பட்டுள்ளது.

தமிழிலக்கணத்தை விரித்துக்கூறும் அடிப்படை வகைமைகள் தொன்று தொட்டுத் தமிழில் காக்கப்பட்டுவருவது போலவே ஐந்திரத்தை அடியொற்றி எழுதப்பட்ட வடபுல இலக்கணநூல்க ளிலும் கையாளப்பட்டுள்ளது.

தமிழிலக்கணம் சொற்களை, பெயர், வினை, இடை, உரி என நான்கு இயல்களாகப் பிரித்துக் கொள்வது போலவே ஐந்திர வழிவந்த காதந்திரம் போன்ற பிராகிருத இலக்கண நூல்க ளும் நாமம், ஆக்யாதம், நிபாதம், உபசர்கம் எனச் சொற்களை (பெயர், வினை, இடை, உரிச்சொற்களாக) வகைப்படுத்து கின்றன. வேற்றுமைகளை முதல்வேற்றுமை, இரண்டாம் வேற் றுமை என எண்ணிட்டு வரிசைப்படுத்திக்கூறுவது தமிழ்மரபு. இதனையே வடபுல மொழிகளின் இலக்கணநூல்கள் பின்பற் றின. பாணினியும் இந்த இலக்கணப்பாங்கையும் புணர்ச்சி இலக்கணத்தையும் ஐந்திரநெறியாரிட மிருந்து தெரிந்து கொண் டிருக்கிறார். ஐந்திர வழிவந்த தொல்காப்பியம் "எல்லாச்சொல் லும் பொருள்குறித்தனவே" என்று குறிப்பிடுகிறது. இதே கருத்தைக் கல்பசந்திர வியாகரணம் என்னும் காதந்திர இலக்க ணமும் சுட்டிக்காட்டி "பொருள்குறித்ததே சொல் என்று ஐந்திரம் கூறுகிறது". (அருத்த பதம் இத்தி ஐந்தராணாம்) என்று தெளிவாக மூலநூலாகிய ஐந்திரத்தின் பெயரைக் குறிப்பிடுகி றது. இதிலிருந்து இந்திய மொழிகளில் இலக்கணம் எழுதும் பாங்கு தமிழிலிருந்தே பிராகிருதம் உள்ளிட்ட வடபுல மொழி களுக்குப் பரவியது என்பதும் அதன்பிறகே சமற்கிருதத்துக்குத் தமிழிலக்கணத்தை அடியொற்றி உயிரெழுத்து மெய்யெழுத்து வகைப்படுத்துதல் தோன்றியது என்பதும் தெரிகின்றன.

எழுத்துகளை உயிரெழுத்து மெய்யெழுத்து என்று தனித்தனி யாக வகைப்படுத்துவதும், தோன்றல், திரிதல், கெடுதல் எனக் கூட்டுச்சொற்களின் இருசொற்களிடைப் புணர்ச்சி (சந்தி) இலக் கணம் கூறுவதும் மேலையாரிய மொழிகளில் காணப்படாததும் முற்றிலும் தேவைப்படாததுமான இலக்கண வகைமை. ஆயின் தமிழுக்கு அடிப்படையான இந்த இலக்கண அமைதிகள் சமற்கிருதத்துக்குத் தேவையில்லை என்பதறியாமல் பாணினி தமிழிலக்கணங்களின் கூறுகளையே தேவையின்றிச் சேர்த்துக் கொண்டிருப்பதால் தமிழிலக்கணத்தின் தொன்மையும் வட மொழியிலக்கணத்தின் பின்மையும் உணரப்படும்.

இலத்தீனில் ஐந்துவேற்றுமைகளும் கிரேக்கத்தில் ஆறுவேற்று மைகளும் இடம்பெற்றிருக்கும் நிலையில் சமற்கிருதத்தில் மட்டும் தமிழைப்போல் எட்டு வேற்றுமை இடம் பெற்றிருப்ப தும் இக்கருத்தை வலுப்படுத்துவதாகும்.

ஐந்திரம் முற்றிலும் தமிழிலக்கணம் என்பதை அறியாமல் இதனை வடமொழி இலக்கணங்களுள் ஒன்றாகச் சிலர் கருதி னர். பாணினி பழைய சமற்கிருத இலக்கண நூல்களுள் ஒன்றாக ஐந்திரத்தை எங்கும் குறிப்பிடவில்லை; மகாபாசியம் எழுதியவர்களும் குறிப்பிடவில்லை. பாணினியாத்ததைவிட ஐந்திரம் பன்மடங்கு பெரியது என்று மாபாரதத்தின் உரையாசி ரியரான தேவபோதர் குறிப்பிட்டிருக்கிறார். உலகமொழிகள் வேறெவற்றிலும் இல்லாத பொருளிலக்கணம் தமிழிலிருப்ப தால் ஐந்திரம் 25,600 நூற்பாக்களைக் கொண்டிருந்ததையும் சொல்லியிருக்கிறார்.

வடபுலமொழிகளில் ஐந்திர இலக்கணத்தை அடியொற்றி இலக் கணம் எழுதியவர்கள் அவ்வம் மொழிக்கு முதன்முதலாக வரிவடிவம் உண்டாக்கித் தந்து இலக்கணம் எழுதியவராவர். ஆதலின் தமிழிலக்கணத்தில் எழுத்திலக்கணம், சொல்லிலக்க ணப் பகுதிகளை மட்டும் வடபுல மொழிகளில் மொழியாக்கம் செய்தனர். வடபுலத்தில் புதிய மொழிகளின் அகப்பொருள் புறப்பொருள் தழுவிய இலக்கியங்கள் வெறும் நாட்டுப்பாடல் களாகவே நிலவியதால் பொருளிலக்கணம் வடபுலமொழிக ளுக்கு அக்காலத்தில் உடனடித் தேவையாக நிலவவில்லை.

ஐந்திரத்தைத் தழுவிய தொல்காப்பியர் எழுத்ததிகாரம், சொல் லதிகாரம், பொருளதிகாரம் என முப்பிரிவாக இலக்கணம் வகுத்திருக்கும் நிலையில் அதே ஐந்திரத்தைத் தழுவிய வடபு லத்து இலக்கண நூல்கள் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டும் இலக்கணம் கூறிப் பொருளதிகாரத்தைப்பற்றி ஒன்றும் கூறா மல் விட்டுவிட்டதற்கு இதுவே காரணமாகும்.

மராட்டிய மாநிலத்து வடமொழிப் பேராசிரியர் வகாங்கர் இந்திய மொழிகள் பலவும் எழுதப்பட்டு வந்தநிலையில், புதிதாகச் சமற்கிருதத்தை உண்டாக்கி எழுதத்தொடங்கிய போது அதற்கெனத் தனித்த வரிவடிவத்தை உண்டாக்கிக் கொள்ளவில்லையென்றும், அந்தந்தப் பகுதிகளில் வழங்கிய உள்நாட்டு மொழிக்குரிய எழுத்துக்களை சமற்கிருதம் எழுதப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்றும் நீண்ட வரலாற்றில் இன்று வரை சமற்கிருதத்துக்கு என்று தனித்த எழுத்து வடிவம் தோன்றியதே இல்லையென்றும் கூறுகிறார்.

வடபுலத்தில் இலக்கண அறிவு வளர்வதற்கு வெகுகாலத்திற்கு முன்பே தமிழகத்தில் பல்வகை இலக்கணங்கள் முழுமையாக வளர்ச்சி பெற்றிருந்தன. இதனைப் பருனல் பெருமகனாரும் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

"As I have shown elsewhere there are strong reasons for believing that the Tamil people had an independent system of writing in use before theirs was analysed by grammarians in the north.

— Dr. Burnell, The Andira School of Sanskrit Grammar. (p.20).

ஐந்திரத்தைவிடத் தொல்காப்பியம் நூற்பாக்களின் எண்ணிக் கையளவில் பத்திலொருபகுதியாகக் குறைந்துள்ளது. தொல் காப்பியர் பொருளதிகாரத்தில் இலக்கிய வகைமைகளுக்குரிய உரிப்பொருளை மட்டும் விரித்துரைத்து ஏனைய முதற்பொ ருள் கருப்பொருள்களைப் பற்றிய பொருளிலக்கணங்களைக் கூறாமல் விட்டுவிட்டார். ஐந்திரம் இவற்றையும் உள்ளடக்கிப் பெரிய நூலாக இயற்றப்பட்டிருக்கலாம்.

பாண்டிய நாடு பன்னிரண்டாண்டுகளாகத் தொடர்ந்து மழை பெறாமல் வறங்கூர்ந்தபோது மக்கள் பலரும் பல திசைகளில் குடிபெயர்ந்தனர் என்றும், மீண்டும் நாடுமலிய மழை பெய்து நாடு நாடாயினபோது, அரசன் நாலாப்புறமும் ஆட்போக்கித் தமிழ்நூல்களைக் கொணர்க என ஆணையிட்டும், எழுத்திலக் கண சொல்லிலக்கண நூல்கள் மட்டும் கிடைத்தன வென்றும் எப்பாடு பட்டும் பொருளிலக்கண நூல்களில் ஒன்றேனும் கிடைக்கவில்லை யென்றும் இறையனார் களவியல் நூல் கூறுகிறது. ஐந்திரகாலத்திற்குப்பின் முதற்பொருள் கருப்பொ ருள் நூல்கள் தனித்தனியாக எழுதப்பட்டன என்பதும், இறைய னார் களவியல் நூல் எழுதப்பட்ட காலத்தில் தொல்காப்பியம் இருந்தாலும் அதிலுள்ள உரிப்பொருள் தழுவிய பொருளதிகா ரத்தைப் பொருள் நூலாக அரசன் முழுதும் ஒப்பவில்லையென் பதும் உய்த்துணரலாம். ஐந்திரம் என்னும் பெயரில் ஒரு சிற்பநூல் இருந்ததும், இசைநூலைத் தொல்காப்பியர் நரம்பின் மறை என்று குறிப்பிடுவதும், மொழிமரபுக்கு அப்பாற்பட்ட பொருள் மரபு நூல்களின் பெருக்கத்தைச் சுட்டுவனவாம்.

ஐந்திரம்[2] *aindiram,* பெ. (n.) ***ஒரு கற்றச்சு மரத்தச்சு நூல், சிற்பநூல்;*** treatise on architecture in stone and wood carving (w.).

[ஐந்திரம்[1] → ஐந்திரம்[2]]

ஐந்திரநூல் இயற்றப்பட்ட காலத்திற்குப் பிறகு உரிப்பொருள் மட்டுமன்றி முதற்பொருள் கருப்பொருள் பற்றிய நூற்பிரிவுக ளின் கிளைநூலாக வளாநத கலைநூலாகலாம்.

ஐந்திரவிலக்கணம் *aindira-v-ilakkaṇam,* பெ. (n.) ***முந்து தமிழ் ஐந்திர இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு இந்திரவியாகரணம் என்னும் பெயரில் இயற்றப்பட்ட வடமொழி இலக்கணநூல்.*** (சில்ப.11-99,உரை.); Sanskrit grammar ascribed to Indra modelled after the ancient Tamil treatise

[ஐந்திரம் + இலக்கணம்.]

ஐந்து[1] *aindu,* பெ. (n.) 1. ***ஐந்து என்னும் எண்ணுப்பெயர், நான்கின்மேல் ஒன்று;*** number five. 2. ***'ரு' என்னும் எண்ணுக்குறியீட்டுக்குரிய தமிழ் எண்ணுப் பெயர்;*** name of the fifth numerical number 'ரு' in Tamil.

மறுவ. கை, கைந்து, ஐந்து, அஞ்சு, பாதம், பாஞ்சு, பஞ்ச.

ம. ஐந்து, அஞ்சு; **க.** ஐது; **து.** அய்ன்; குட. அஞ்சி; **தெ.** அயிது; கொலா. அய்த், அயித்; பட. அய்து; **கைக்.** அஞ்; கட. அயிது; எரு. அஞ்சு; **கோத.** அஞ்செ; குரும். அய்து; **இரு.** அய்ந்து.

Siam (karen). yai, yea; *Laos.* ha; *Mithan Naga.* aga; *Chinese.* (cauton) ng; *Mag.* ot; *Hung.* ot; *Tib.* ina; *Malay.* dima; *Anna.* n-an; *Viet.* n-an.

[கை → கைந்து → ஐந்து. கையிலுள்ள ஐந்து விரல்களின் அடிப்படையில் தோன்றிய எண்ணுப்பெயர் தொடக்கத்தில் கை - கைந்து என வழங்கிப் பின்னர் ஐந்து எனத் திரிந்தது. பாதத்தின் ஐந்து விரல்களை எண்ணிய மக்கள் கூட்டத்தினர் அதிலிருந்து penta - panch என்னும் சொற்களைத் திரித்துக் கொண்டனர். எனினும் அவற்றின் மூலமாகிய பாதம் என்ப தும் தமிழ்ச் சொல்லாகவே இருப்பது அறியத்தக்கது.]

கை (ஐந்து) முதல்வகை அடிநிலைத்திரிபுற்றவை.

Jap. go; *Amoy.* go; *Tib.* (gyarung) kung; *Tib* (horpa) gme; *Tib.* gna; *Nep.* gno, gna; *Burm.* nga; *Buta.* nga.

கை → கைந்து → கைன்க் → சைன்க்.

இரண்டாம் வகை அடிநிலைத்திரிபுற்றவை.

Georg. khouthi; *Heb.* Chamischah; *Ar.* kh-am-seh, chams; *Iraq.* kh-am-set; *O.Iri.* coic; *Iri.* cuif; *L.* quin-que; *F.* cinf; *Port.* cinco; *Sp.* cinco; *It.* cinque; *Rum.* cinci; *Esp.* kvin; *Thai.* har.

கை → கைந்து → ஐந்து

மூன்றாம் வகை அடிநிலைத்திரிபுற்றவை திரவிடமொழிகளில் பெருக வழங்குகின்றன. எனினும் இவற்றின் ஊடாட்டம் கிழக்காசிய மொழிகளிலும் அங்கேரி மொழியிலும் காணப்படு கிறது. இவை திரவிட இனச்சொற்பட்டியலில் முன்னர்த் தரப் பட்டுள்ளன.

ஐந்து - து முதல்வகை முடிநிலைத்திரிபுற்றவை.

O.Egy, dyw; *Copt.* tw; *Mangol.* tunnya; *Afri* (swahili). tano.

ஐந்து - து - உ - வு. இரண்டாம் வகை முடிநிலைத்திரிபுற்றவை.

Chine (mand) wu; *Korea.* oo; *Tib* (Gyami). wu, wuku; *Fin.* wusi.

ஐந்து - து - சு மூன்றாம் வகை முடிநிலைத்திரிபுற்றவை.

Afri. (somal) san; *Gondi.* seiung. *Gayeti.* seiyung.

பாதம் - பெண்தெ - பை (பாதத்திலுள்ள ஐந்து விரல்கள்)

முதல் வகை அடிநிலை முடிநிலைத் திரிபுற்றவை.

L. pente; *Poli.* pents; *Serbo.* pet; *O.sla.* peti; *Russ.* pyat; *Basq.* bost, bortz; *Czech.* pet; *Turk.* bes; *Gk.* ponti; *Nep-(Khaling).* bhong; *Nep(Tharu).* pacher *Naga.* pangu, pungu, banga; *Burm* (Kumi). pan; *Burm-*(kami) pangna. *Sinh.* phai, pahai.

பாதம் - பாஞ்சு - பஞ்ச - விசு

இரண்டாம் வகை அடிநிலை முடிநிலைத் திரிபுற்றவை.

Skt. panj. (vedic.pansa); *Sind.* punj; *Brah.* panj; *Kash.* panch, pamb; *Assa.* paach; *Mar., Arj., Ori., Beng.* paanch. *Nep.* panch; *Beng* (Kocch). panch; *Gond.* panchu; *Chentu.* panch; *Lith.* penk; *G.* funf; *Yid.* finef; *Swe., Dan., Norw.* fem; *O.E.* fiv; *E.* five; *Goth.* finf; *Dut.* visf; *Fin-*vishi, viden.

ஐந்தின் தொடக்க நிலைச்சொற்களான கை - கைந்து என்பவை தமிழில் வழக்கிழந்தன. கைவிரல்களின் அடிப்படையில் தோன்றிய ஐந்தைக்குறிக்கும் எண்ணுப்பெயர்களே போதும் என்ற நிலையில் பாதத்தின் விரல்களைக்குறித்த மற்றொரு எண்ணுப்பெயர் ஐந்தைக் குறிக்கத் தோன்றியது ஏன் என்று வினாவுவாரும் உளர். இருபது வரை எண்ணுவதற்காக இரு கைகளிலும் இரு பாதங்களிலும் உள்ள விரல்களை எண்ணு வது மரபாக இருந்தது. ஆதலால் இந்தைரோப்பிய மொழியில் நாளடைவில் பாதத்தையும் ஐந்தைக் குறிக்கும் எண்ணுப்பெய ராக்கிக் கொண்டனர். பாதத்தின் அடியாகத் தோன்றிய எண் ணுப்பெயர் அடிநிலை முடிநிலை ஆகிய இருவகைத் திரிபுக ளும் ஒருசேரப் பெற்றிருப்பதால் இச்சொல்லை வழங்கிய மக்கள் பிறமொழியாளரொடு பெருக ஊடாடியிருக்கின்றனர் எனத்தெரிகிறது.

கையின் அடியாகத் தோன்றிய எண்ணுப்பெயர் அடிநிலைத்தி ரிபுகளையும் பின்னர் முடிநிலைத்திரிபுகளையும் பெற்றிருப்ப தால் இச்சொல்லை வழங்கிய மக்கள் வாழையடி வாழையாக ஒரு குடும்பத்திலிருந்து பல்வேறு திசைகளில் சென்றவர்கள் எனத் தெரிகிறது. முடிநிலைத் திரிபுபெற்ற மொழிகள் ஆப்பி ரிக்கா, எகுபது, நட்டாசியம், கிழக்காசியா ஆகிய தொலைவி டங்களில் ஊடாட்டம் பெற்றிருப்பதால் ஐந்து என்னும் சொல் லும் அதற்கு மூலமான கை = கைந்து என்னும் சொற்களும் தோன்றிய காலம் ஞாலமுதன்மொழியின் தொடக்ககாலம் எனலாம். இவற்றைச் சிற்சில மொழிகள் தக்கவைத்துக்கொண் டிருப்பது உடன் கொண்ட சொல்வளமாகிய முன்னோர் சொற்காப்பைக் காட்டும் ஒரு சில தொன்முது சொற்களைத் தக்க வைத்துக்கொண்டிருப்பதால் விடுபட்ட சொல் வரலாற்றுத் தொடர்பைக் காண உதவுகிறது.

ஐந்து[2] *aindu,* பெ. (n.) ***நைந்துபோதல்;*** being worn out, unfit for use. இந்தத் துணி ஐந்து ஐந்தாகக் கிடக்கிறது (இ.வ.).

[நை → நைந்து → ஐந்து. நைதல் = பழையதாகித்தானே கிழிதல், பயனற்றுப்போதல்.]

ஐந்துகில் போர்ப்போர் *aintugil-pōr-p-pōr,* பெ. (n.) ***ஐந்து துணிகளைப் போர்த்துக் கொள்ளும் பௌத்தர்;*** Buddhists, as those who cover themselves with five clothes. "ஐந்துகில் போர்த்துழலு நீதர்" (தேவா.239,10). (செ.அக.).

[ஐந்து + துகில் + போர்ப்போர்.]

ஐந்து சுண்ணம் *aindu-śunnam,* பெ. (n.) 1. ***கடல் நுரை, கிளிஞ்சல், குக்குடம், வலம்புரி, வெள்ளைக் கல் முதலியவைகளை நீற்றிய சுண்ணங்கள்;*** calcium carbonates obtained by calcining sea-froth, bi-valve shell, egg-shell, conch (turning to the right) and lime stone. 2. ***நண்டு, நத்தை, சங்கு, வெடியுப்பு, கடல்நுரை ஆகிய இவ்வைந்தையும் தாளித்த சுண்ணாம்பு;*** lime (chunam) obtained by burning the following five substances viz., crab-shell, snail shell, conch, nitre and sea froth.

[ஐந்து + சுண்ணம்.]

ஐந்துண்டி *aindundi,* பெ. (n.) ***ஐந்துணவு*** (திவா.12,71) பார்க்க; see *aindunavu.*

[ஐந்து + உண்டி.]

ஐந்துணவு *aindunavu,* பெ. (n.) ***கடித்தல், நக்கல் பருகல், விழுங்கல், மெல்லல் முதலிய ஐந்து வகை யால் உண்ணுதற்குரிய உணவுப்பண்டம்*** (சூடா.); five kinds of food differentiated according to the manner of taking them viz., biting, licking, drinking, swallowing and munching. (செ.அக.).

[ஐந்து + உணவு.]

ஐந்துபல்நங்கூரம் *aindu-pal-nangūram,* பெ. (n.) ***நங்கூர வகை;*** graphnel anchor, having five flukes or prongs. (செ.அக.).

[ஐந்து + பல் + நங்கூரம். நாஞ்சில் கூர் → நாங்கூர் → நங்கூரம்.]



ஐந்து பல்நங்கூரம்

ஐந்துபா *aindu-pā,* பெ. (n.) ***வெண்பா, அகவல், கலி, வஞ்சி, மருட்பா யெனும் ஐ வகையான பாக்கள்*** (காரிகை); five varieties of verse. (செ.அக.).

[ஐந்து + பா.]

ஐந்தெழுத்து *aindeluttu,* பெ. (n.) ***நமசிவாய எனும் ஐந்தெழுத்து;*** five sacred syllables of saivites -Namaśivāya.

[ஐந்து + எழுத்து.]

ஐந்தை *aindai,* பெ. (n.) ***சிறுகடுகு;*** Indian mustard. "மறுமையை யைந்தை யனைத் தானுஞ்... சிந்தியார்" (நாலடி.329) (செ.அக.).

[ஐ = சிறியது. ஐ → ஐந்தை (சிறிய கடுகு).]

ஐந்தொகை[1] *aindogai,* பெ. (n.) ***வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத்தொகை என்பன;*** five compounds in Tamil Grammar. "ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி" (நன்னூல்-369).

[ஐந்து + தொகை.]

ஐந்தொகை[2] *aindogai,* பெ. (n.) ***விழுமுதல், வரவு, செலவு, இருப்பு, ஆதாயம் முதலிய ஐவகை விளக் கங் காட்டுங் கணக்கு*** (இ.வ.); balance sheet, containing five particulars. (செ.அக.).

[ஐந்து + தொகை.]

ஐந்தொழில் *aindolil,* பெ. (n.) ***ஐந்து தொழில்;*** five functions of God. "ஐந்தொழிற்கு மப்புறமாய்" (குமர.பிர.கந்தர்.5). (செ.அக.).

[ஐந்து + தொழில் - ஐந்தொழில். படைத்தல், காத்தல், அழித் தல், மறைத்தல், அருளல் என்பன.]

ஐந்தொழிலன் *aindolilan,* பெ. (n.) ***ஐந்து தொழிலையு டைய சிவன்;*** Śiva who performs five functions. (செ.அக.).

[ஐந்து + தொழிலன்.]

ஐந்நிலை *ainnilai,* பெ. (n.) ***உடம்பினுட்பட்ட ஆதன் பயன்துய்க்கும், நனவு, கனவு, உறக்கம்*** (சுழுத்தி) ***பேருறக்கம்*** (துரியம்), ***உயிர்ப்படக்கம்*** (துரியாதீதம்) ***என்ற ஐவகை நிலை*** (திருமந்.); five conditions or states of the embodied soul.

[ஐந்து + நிலை.]

ஐந்நூறு *ai-n-nūru,* பெ. (n.) ***ஐந்து நூறு;*** five hundred. (சா.அக.).

க. ஐநூறு, அய்நூறு, அயிநூறு; ம. அஞ்ஞூறு; கு. அஞ்ஞுபாரி; து. அய்நூரு; தெ. ஏநூறு; பட. ஐநூறு.

[ஐந்து + நூறு.]

ஐம்படைத்தாலி *ai-m-badai-t-tāli,* பெ. (n.) ***கழுத்திலே பிள்ளைகளணியும் ஐந்து படைக்கலன் உருவமைந்த அணி;*** gold pendant worn by children in a necklace bearing in relief of five weapons of Viṣṇu, as an amulet. "ஐம் படைத்தாலி... குறுநடைப் புதல்வர்க்கு" (மணி. 7,56). (அபி.சிந்.).

[ஐந்து + படை + தாலி. சங்கு, சக்கரம், வில், வாள், மறத்தண்டு (கதை) என்பவற்றின் உருப்பொறித்த தாலி.]

ஐம்படைப்பருவம் *ai-m-badai-p-paruvam,* பெ. (n.) ***ஐம்படைத்தாலியையணிதற்குரிய குழந்தைப்பருவம்;*** stage of childhood appropriate for wearing the aimbaḍai-t-tāli. "ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி" (S.I.I.ii,310). (செ.அக.).

[ஐந்து + படை - ஐம்படை + பருவம்.]

ஐம்பது *aimbadu,* பெ. (n.) ***ஐந்து பத்துகள் கொண்ட எண்;*** fifty, numeral fifty. (செ.அக.).

ம. ஐம்பது, அம்பத்து; **குட.** அயிம்பதி; **து.** ஐவ; **தெ.** என்பதி, யாபய், யாபை; **க.** அய்வத்து, அயிவத்து, ஐவத்து; **பட.** ஐவத்து; **துட.** என்பொத்; **இரு.** அம்படு; **கோத.** எய்வத், அய்வத்.

[ஐந்து + பத்து.]

ஐம்பருத்தி *aimbarutti,* பெ. (n.) ***ஐந்து வகைப் பருத்தி;*** five varities of cotton.

[ஐந்து + பருத்தி - ஐம்பருத்தி.]

ஐவகைப் பருத்திகள்: வெண்பருத்தி, செம்பருத்தி, உப்பம் பருத்தி, தாளிப்பருத்தி (கொடிப்பருத்தி), இலாடன் பருத்தி. போலிப் பருத்திகளைந்து:- பூப்பருத்தி, வேளப்பருத்தி, எருக் கம்பருத்தி, பேய்ப்பருத்தி, காட்டுப்பருத்தி.

ஐம்பால்[1] *ai-m-bāl,* பெ. (n.) ***ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்ற ஐந்து பால் பிரிவுகள்*** (தொல்.பொருள்.644); the five parts in which nouns and finite verbs are divided.

[ஐந்து + பால் - ஐம்பால்.]

ஐம்பால்[2] *ai-m-bāl,* பெ. (n.) ***ஐந்து வகையாக முடிக்கப்படும் மகளிர் கூந்தல்;*** woman's hair, from its being dressed in five modes. "வண்டினங்கள்... அம்பராவுங் கண்மடவாரைம்பாலணையும்" (திவ்.பெரியதி.7,5,3). (செ.அக.).

[ஐந்து + பால் - ஐம்பால். பால் = வகை. ஐம்பான்முடி பார்க்க; see aimpāṉmuḍi.]

ஐம்பான்முடி *ai-m-bāṉ-muḍi,* பெ. (n.) ***மகளிர் கூந்தலின், கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள்*** (திவா.) ***என்ற ஐவகை முடி;*** five modes of dressing woman's hair.

[ஐந்து + பால் + முடி - ஐம்பான்முடி.]

கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள் என்பனவற்றுள் முடி, சுருள் என்னும் இரண்டை அளகம் துஞ்சை எனக் குறிப்பிடுவதுண்டு. கொண்டை = பக்கங்களில் முடிவது. குழல் = சுருட்டி (முறுக்கி) முடிக்கப்படுவது. பனிச்சை = உச்சியில் கூராகக்கோபுரம் போல் முடிவது. அளகம் (முடி) = நெளிகூந் தல் ஒழுங்கு. துஞ்சை (சுருள்) = பின்னித்தொங்கவிட்ட பின்சடை.



ஐம்பான்முடி

ஐம்புலம் *ai-m-bulam,* பெ. (n.) ***ஐந்து உறுப்புகளுக்கும் உரிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து உணர்ச்சிகள்;*** sensations of the five sensory organs. "ஐம்புலனுமொண்டொடி கண்ணே யுள" (குறள்.1101). (செ.அக.).

[ஐந்து + புலம்.]

ஐம்புன்னை *aimpuṉṉai,* பெ. (n.) ***ஐந்து வகைப் புன்னை மரங்கள்;*** five kinds of poon tree.

[ஐந்து + புன்னை - ஐம்புன்னை.]

அவை: 1. புன்னை அல்லது புன்னாகம், 2. சுரபுன்னை; 3. காட்டுப்புன்னை; 4. சிறுபுன்னை, 5. மூவிலைப்புன்னை.

ஐம்பூதம் *ai-m-būdam,* பெ. (n.) ***இயற்கையின் ஐவகைப் பாகுபாடுகள்*** (மணி.27,89); five elements. (செ.அக.).

[ஐந்து + பூதம்.]

ஐம்பெருங்காப்பியம் *ai-m-peruṅkāppiyam,* பெ. (n.) ***சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐம்பெரும் இலக்கியங்கள்*** (நன்.387,மயிலை); the five great epics viz., Šīvaga Šintāmaṇi, Šilappadigāram, Maṇimēgalai, Vaḷayāpati and Kuṇḍalakēši. (செ.அக.).

[ஐந்து + பெரும் + காப்பியம்.]

ஐம்பெருங்குழு *ai-m-peruṅkuḻu,* பெ. (n.) ***அரசர்க்கு இன்றியமையாதவரான அமைச்சர், அந்தணர், படைத்தலைவர், தூதர், ஒற்றர் என்னும் ஐவகை அரசியற்றலைவர்;*** five chief officers of a king. "ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும்" (மணி.1,17). (செ.அக.).

[ஐந்து + பெரும் + குழு.]



ஒட்டாம்பாரை மீன்

ஐம்படைத்தாலி

ஐம்பான் முடி

1. பனிச்சை
2. கொண்டை
3. துஞ்சை
4. குழல்
5. அளகம்

ஐம்பெருங்குற்றம் *ai-m-perunkuṟṟam,* பெ. (n.) ***கொலை, பொய், களவு, கள்ளுண்ணுதல், சூது என்ற ஐவகைத் தீச்செயல்கள்;*** the five heinous sins. (செ.அக.).

[ஐந்து + பெரும் + குற்றம்.]

ஐம்பொறி *ai-m-poṟi,* பெ. (n.) ***மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்துறுப்புகள்*** (திவா.); five organs of sense viz., body, mouth, eye, nose and ear. (செ.அக.).

[ஐந்து + பொறி.]

ஐம்பொன் *ai-m-poṉ,* பெ. (n.) ***பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்ற ஐவகை மாழைகள்*** (வின்.); five chief metals, viz., gold, silver, copper, iron, aluminium.

ம. ஐம்பொன்னு.

[ஐந்து + பொன்.]

ஐம்மீன் *ai-m-mīṉ,* பெ. (n.) 1. ***கைம்மீன்*** (அத்தம்) (பிங்.); 13th nakṣatra, so called because of its five principal stars. 2. ***உருள்*** (ரோகிணி); fourth naksatra. (செ.அக.).

[ஐந்து + மீன்.]

ஐம்முகக்கணை *ai-m-muga-k-kaṇai,* பெ. (n.) ***ஐந்து முனைகளைக் கொண்ட ஒருவகை அம்பு*** (வின்.); arrow with five points.

[ஐந்து + முகம் + கணை.]

ஐம்முகன் *ai-m-mugaṉ,* பெ. (n.) ***ஐந்து முகங்களையுடைய சிவன்;*** Šiva, the five-faced. (செ.அக.).

ம. ஐம்முகன்.

[ஐந்து + முகன்.]

ஐம்மை *ai-m-mai,* பெ. (n.) 1. ***தகட்டு வடிவு*** (பிங்.); thinness and flatness, as of a plate. 2. ***நெருக்கம்*** (வின்.); closeness, crowdedness. (செ.அக.).

[ஐ → ஐம்மை.]

ஐய[1] *aiya,* கு.பெ.எ. (adj.) ***வியக்கத்தக்க;*** wonderful. "ஐயகோங்குறைத்தர" (கலித்.25).

[ஐ = பெருமை, வியப்பு. ஐ → ஐய.]

ஐய[2] *aiya,* கு.பெ.எ. (adj.) 1. ***நொய்ய;*** small, weak. "ஒரு தனக்குள்ள வைய படையையும்" (திருவாலவா.46,12). 2. ***அழகிய;*** beautiful.

[ஐ = நுண்மை, சிறுமை. ஐ → ஐய.]

ஐய[3] *aiya,* இடை. (int.) 1. ***வியப்புக்குறிப்பு;*** exclamation of wonder. "ஐய விண்ணதொ ரற்புத மாயையை" (திருவிளை.விடை.23). 2. ***இரக்கக்குறிப்பு;*** exclamation of pity, concern "ஆதுல ரானீ ரந்தோ வையவென் றமுது" (திருவிளை.மாமனாக.23) (செ.அக.).

[ஐ → ஐய.]

ஐயக்கடிஞை *aiya-k-kaḍiñai,* பெ. (n.) ***இரப்போர் கலம்;*** alms bowl."ஐயக் கடிஞை கையினேந்தி" (மணி.13,109) (செ.அக.).

[ஐயம் + கடிஞை. குடிகை → கடிகை → கடிஞை.]

ஐயக்காட்சி *aiya-k-kāṭci,* பெ. (n.) 1. ***தோன்றினதொரு பொருளை அதுவோ இதுவோ என்று இரண்டுறக் கருதுகை*** (சி.சி.அளவை.3,மறைஞா.); vision or perception too dim to decide whether a thing is this or that. 2. ***கண்மாயம்;*** illusion. (செ.அக.).

[ஐயம் + காட்சி - ஐயக்காட்சி.]

ஐயகோ *aiyagō,* இடை. (int.) ***இரக்கம், துயரம் ஆகிய வற்றை வுணர்த்துங் குறிப்பு;*** exclamation of pity, sorrow "ஐயகோ வென் றலம்வருவாள்" (வெங்கைக்கோ.246) (செ.அக.).

[ஐயன் → ஐயவோ → ஐயகோ.]

ஐயங்கார் *aiyaṅgār,* பெ. (n.) 1. ***திருமாலிய ஆசான்;*** learned Vaiṣṇava priest. 2. ***திருமாலிய வகுப்பாரின் பட்டப்பெயர்*** (T.A.S.i,145); title of Sri Vaiṣṇavas.

தெ. அய்யகாரு, ஐவாரு.

[ஐயன் + கார் - ஐயங்கார். அவர் → வார்> தெ. வாரு → காரு. ஐயர், ஐயனார், ஐயன்மார் என்பன தமிழ்வடிவங்கள். ஐயங்கார் என்பது தெலுங்கு வாயிலாக இராமானுசர் காலத்திற் குப்பின் தமிழில் புகுந்த திசைச்சொல்.]

ஐயங்கொள்(ளு)-தல் *aiyaṅkoḷ-,* 16.செ.கு.வி. (v.i.) ***நம்பிக்கை தளர்தல்;*** to have doubt, to lose faith.

[ஐயம் + கொள்.]

ஐயடிகள் *aiyaḍigaḷ,* பெ. (n.) 1. ***மதிக்கத்தக்க பெரியோர்க்கு வழங்கும் மதிப்புரவு உயர்மொழி;*** honorific title of respectable religious persons.2. ***சமணமுனிவர்;*** Jain Monk.

[ஐயம் = இரந்து உண்ணுதல். ஐயம் + அடிகள் - ஐயடிகள். ஐயம் ஏற்று உண்ணும் சமண முனிவர்.]

ஐயடிகள் காடவர் கோன்நாயனார் *aiyaḍigaḷ-kāḍava-r-kōṉṉāyaṉār,* பெ. (n.) ***அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்*** (பெரியபு.); ***பல்லவ குலத்து மன்னராக இருந்தவர்;*** canonized Šaiva saint, one of 63,author of the Kṣettira-t-tiru-veṇpā. and a Pallava Prince. (செ.அக.).

[ஐயடிகள் + காடவர் கோன் + நாயனார். ஐயடிகள் = முனிவர், சமணமுனிவர்க்குரிய மதிப்புரவு உயர்மொழி. காடவர் = பல்லவர்க் குரியபெயர். இவர் பல்லவ அரசர் குடியைச் சார்ந்தவரும் சமண முனிவராக இருந்து பின்னர், சிவனடியாராக மாறியவரும் ஆகிய நாயனார்.]

ஐயப்படு-தல் *aiya-p-paḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***ஐயங்கொள்*** பார்க்க; see *aiyaṅkoḷ.*

ஐயப்பாடு *aiya-p-pāḍu,* பெ. (n.) ***ஐயம்²*** பார்க்க; see *aiyam.²* "அறிந்தவை யையப்பா டில்லதே யொற்று" (குறள்.587). (செ.அக.).

[ஐயம் + பாடு. படு → பாடு.]

ஐயபூழி *aiya-pūḻi,* பெ. (n.) ***பருமணல்*** (யாழ்.அக.); grit, coarse sand (செ.அக.).

[ஐ → ஐய + பூழி. ஐ = பெரிய.]

ஐயம்¹ *aiyam,* பெ. (n.) 1. ***ஒரு பொருளை அதனின்று வேறுபட்ட பல பொருள்களாக உணர்தல்*** (தொல். பொருள்.260); doubt, uncertainty, suspense, scepticism. 2. ***அகப்பொருட்டுறைகளுள் ஒன்று*** (இறை.2,உரை.32); theme of doubt arising in one's mind as to whether a damsel seen is human or some other lovable object. (செ.அக.).

ம. ஐயம்.

[ஐ → ஐயம். ஐ = சிறுமை. ஐயம் = சிறுகுதல், ஒன்றைப் பற்றிய தெளிவு குறைவுபடுதல், நன்கு புலப்படாமை, தடுமாற்றம்.]

ஐயம்² *aiyam,* பெ. (n.) ***சிறுபொழுது*** (பிங்.); short duration of time (செ.அக.).

[ஐ = சிறுமை, ஐயம் = சிறியது; சிறுபொழுது.]

ஐயம்³ *aiyam,* பெ. (n.) ***உய்த்தறிதல்*** (பொதி.நி.); inference. (செ.அக.).

[ஐ = சிறுமை, ஐயம் = சிறியது, சிறிய பற்றுக்கோடு, நம்பிக்கைக் குரிய சிறு காரணம்.]

ஐயம்⁴ *aiyam,* பெ. (n.) 1. ***இரப்புணவு*** (பிச்சை); alms. "தாபதவேடத்தரையம் புகுவரால்" (திருவாச.17,9). 2. ***இரப்போர்கலம்;*** beggar's bowl.

[ஐயன் - சமண சமயம் பரவியபோது சமணத்துறவிக்குரிய மதிப்புரவுச் சொல் (ஒ.நோ.ஐயன் ஆரிதன்) ஐயன் → ஐயம் = சமணத்துறவிகளுக்கு இடும் உணவு. ஒ.நோ. ஐயன் + அடிகள் - ஐயடிகள் = ஐயமேற்றுண்ணும் அடிகள்.]

ஐயம்⁵ *aiyam,* பெ. (n.) ***மோர்*** (யாழ்.அக.); buttermilk. (செ.அக.).

[ஐ = மென்மை, இளக்கம், ஐ → ஐயம் = இளக்கமான அல்லது நீராளமான மோர்.]

ஐயம்பிடாரி *aiyam-piḍāri,* பெ. (n.) ***சிற்றூர்த் தெய்வம்*** (இ.வ.); female demon of the village. (செ.அக.).

[ஐயம் + பிடாரி = ஐயம்பிடாரி.]

ஐயம்புகு-தல் *aiyam-pugu-,* 21.செ.கு.வி. (v.i.) ***இரந் துண்ணுதல்;*** to ask alms, beg. "ஐயம் புகுவரா லன்னே யென்னும்" (திருவாச.17,9).

[ஐயம் + புகு.]

ஐயமறுத்தல் வினா *aiyam-aṟuttal-viṉā,* பெ. (n.) ***ஐயம் நீக்குதற்குக் கேட்கும் வினா*** (திவா.); question with a view to clearing a doubt. (செ.அக.).

[ஐயம் + அறுத்தல் + வினா.]

ஐயமுறல் *aiyamuṟal,* பெ. (n.) ***ஐயங்கொள்-தல்*** பார்க்க; see *aiyaṅkol.*

[ஐயம் + உறல்.]

ஐயர் *aiyar,* பெ. (n.) 1. ***பெரியோர்;*** men worthy of respect "ஐயரே யம்பலவ ரருளாலிப் பொழுதணைந் தோம்" (பெரியபு.திருநாளை.30). 2. ***முனிவர்;*** sages. 3. ***தேவர்*** (திவா.); celestials. 4. ***பார்ப்பார்*** (திவா.); brāhmans. "பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே" (பாரதியார்). 6. ***வீரசைவர் பட்டப்பெயர்;*** title of Lingāyats. விசாகப் பெருமாளையர். 7. ***கிறித்தவ விடை யூழியரின்*** (பாதிரிமார்) ***பட்டப்பெயர்;*** title of ordained ministers in the protestant churches. 8. ***மறவர்;*** warrior. 8. ***அரச மரபினர்*** (செ.அக.); member of royal family.

ம. ஐயன்; **க.** ஐகள்; **தெ.** ஐவாரு, ஐயவாரு. *Pāli.* ayya; *Skt.* ārya.

[ஐயன் → ஐயர்.]

ஐயவணி *aiya-v-aṇi,* பெ. (n.) ***உவமைப் பொருள்களின் ஒப்புமையினால் ஐயுறுவதுபோற் பேசும் அணி*** (அணியி.10); figure of speech in which close resemblance between two objects leads to one of them being spoken of as if it were mistaken for the other. (செ.அக.).

[ஐயம் + அணி - ஐயவணி.]

ஐயவி *aiyavi,* பெ. (n.) 1. ***வெண்சிறு கடுகு;*** white mustard. "ஐயவிப்புகைப்பவும்" (புறநா.98,15). 2. ***கடுகு*** (திவா.); Indian mustard. 3. ***ஒரு நிறை*** (தொல்.எழுத். 164); a weight. 4. ***கடுக்காய்*** (மலை.); chebulic myrobalan. 5. ***கதவிற்குக் காவலாகப் புறவாயிலிலே தூக்கப்படும் துலாமரம்;*** upright bar for the gate of a fort. "பூணாவையவி தூக்கிய" (பதிற்றுப்.16). 6. ***அம்புக ளின் கட்டு*** (பதிற்று.16,உரை); bundle of arrows. (செ.அக.).

ம. ஐயவி.

[ஐ = சிறுமை, ஐ → ஐயவி = சிறிய கடுகு, கடுகுபோல் கார்ப்புள்ள கடுக்காய். ஐ = உயர்வு. ஐயவி = துலாமரம். அம்புக் கூடு.]

ஐயவிக்காய் *aiyavikkāy,* பெ. (n.) ***கடுக்காய் என்பதற் குக் குழூஉக் குறி;*** secret name for gall-nut. (சா.அக.).

[ஐயவி + காய்.]

ஐயவித்துலாம் *aiyavi-t-tulām,* பெ. (n.) ***தலைகளைப் பிடித்துத் திருகும்படி அமைந்திருக்கும் ஒரு மதிற் பொறி*** (சீவக.102,உரை); machine set on the walls of a fort to operate as twisting heads. (செ.அக.).

[ஐ → ஐயவி = உயரம். ஐயவி + துலாம் - ஐயவித்துலாம் = உயர்த்திக்கட்டிய துலாம்.]

ஐயவினா *aiya-viṉā,* பெ. (n.) ***ஐயமறுத்தல் வினா*** (நன்.385,உரை) பார்க்க; see *aiyam-aṟuttal-viṉā.* (செ.அக.).

[ஐயம் + வினா.]

ஐயவுணர்வு *aiya-v-uṉarvu,* பெ. (n.) ***நிலையில்லா வறிவு*** (இறை.7,70); uncertain knowledge, dist. fr. துணிவுணர்வு (செ.அக.).

[ஐயம் + உணர்வு.]

ஐயவும்மை *aiya-v-ummai,* பெ. (n.) ***உம்***[1] பார்க்க; see *um*[1] (செ.அக.).

[ஐயம் + உம்மை.]

ஐயவுவமை *aiya-v-uvamai,* பெ. (n.) ***அணிவகை*** (வின்.); figure of speech. (செ.அக.).

[ஐயம் + உவமை.]

ஐயள் *ai-y-al,* பெ. (n.) ***வியக்கத்தக்கவள்;*** remarkable, wonderful woman. "ஐயள்" (ஐங்குறு.253).

[ஐ → ஐயள் (தமி.வ.280).]

ஐயறிவுயிர் *aiyari-vuyir,* பெ. (n.) ***ஐம்புலன்கள் வழியாய் அறிவடையுமுயிர்*** (நன்.449); being that acquires knowledge through five senses, as a beast or a man of low intellect. (செ.அக.)

[ஐந்து + அறிவு - ஐயறிவு + உயிர்.]

ஐயன்[1] *aiyaṉ,* பெ. (n.) 1. ***முனிவன்*** (பிங்.); sage. 2. ***ஆசான்*** (பிங்.); priest, teacher, preceptor. 3. ***அண்ணன்;*** brother. "முன்னின்று மொய்யவிந்தார் என் ஐயர்" (பு.வெ.8,22). 4. ***தந்தை*** (பிங்.); father. உங்கள் ஐயன் எங்கே? (கொங்.வ.). 5. ***உயர்ந்தோன்*** (கொ.வ.); superior person, man of dignity, of respectability. 6. ***தலைவன்;*** master. 7. ***அரசன்;*** king. 8. ***கடவுள்;*** god. (செ.அக.).

ம. ஐயன்; *Pāli,* ayya; *Skt.* ārya.

[ஐ → ஐயன். (தமி.வ.279).]

ஐயன் என்னும் சொல் ஐயா என்னும் விளிவடிவில் பாண்டி நாட்டு வெள்ளாளர், முதலியார் முதலிய பலகுலத்தாரும் தந்தையைக் குறிக்க ஆளும்' சொல்லாகும்.

ஐயன்பாத்தி *aiyaṉ-pātti,* பெ. (n.) ***ஐயனார் கோயில் மானியம்*** (புது.கல்.333); lands granted to an Aiyaṉār temple (செ.அக.).

[ஐயன் + பாத்தி. பகுதி → பாத்தி.]

ஐயன்பாழி *aiyaṉ-pāḻi,* பெ. (n.) ***அய்யனார் கோயில்;*** shrine of Aiyaṉār. "ஐயன்பாழியி லானை" (ஈடு.1,1,5) (செ.அக.).

[ஐ → ஐயன் + பாழி.]

ஐயன்மார் *aiyaṉmār,* பெ. (n.) ***தமையன்மார்*** (கலி.107); elder brothers. (சங்.இலக்.சொற்.).

[ஐ → ஐயன் + மார்.]

ஐயனாரிதனார் *aiyaṉāridaṉār,* பெ. (n.) ***புறப்பொருள் வெண்பாமாலையாசிரியர்;*** author of the pura-p-porul-veṉpā-mālai. (செ.அக.).

[ஐயன் + ஆரிதன் + ஆர் - ஐயனாரிதனார். ஐயன் = சமணமுனி வர்க்கு வழங்கிய மதிப்புரவு உயர்மொழி. அருகதன் → ஆரிதன். ஆர் - உயர்வுப் பன்மையீறு.]

ஐயா[1] *aiyā,* பெ. (n.) 1. ***மதிப்புரவு குறித்த விளிப்பெயர்;*** sir. 2. ***தலைவன்;*** master. அந்த ஐயா என்ன சொன்னார்? (கொ.வ.) (செ.அக.).

[ஐயன் → ஐயா (விளி) விளிப்பெயரை எழுவாயாக ஆள்வது முற்றிலும் வழு.]

ஐயாதிச்சிறுவெண்டேரையார் *aiyādi-c-ciruvenderaiyār,* பெ. (n.) ***"இருங்கடலுடுத்த" எனப் பெருங்காஞ்சி பாடியவர்;*** poet, author of Perunkāñji. (அபி.சிந்.);

[ஐயாதி + சிறு + வெண் + தேரையர். ஐயர் → ஐயார் → ஐயாரி → ஐயாதி. (கொ.வ.).]

ஐயாளம் *aiyāḷam,* பெ. (n.) ***அரிமா;*** lion. (செ.அக.).

ஐயாறு *ai-y-āṟu,* பெ. (n.) ***திருவையாறு*** (தேவா.); Tiruvaiyāṟu, a town in Tañjavur District with a Śiva shrine.

[ஐந்து + ஆறு - ஐந்தாறு → ஐயாறு. ஐந்து ஆறு பாய்வதால் ஐயாறு என்று பெயர்பெற்றது.]

ஐயிருவட்டம் *ai-y-iru-vaṭṭam,* பெ. (n.) ***கேடகம்;*** shield. "ஐயிருவட்டமொடு எஃகு" (திருமுருக.111). (செ.அக.).

[ஐ + இரு + வட்டம்.]

ஐயுணர்வு *ai-y-uṉarvu,* பெ. (n.) ***ஐம்புலவறிவு;*** knowledge from the five senses. "ஐயுணர்வெய்தியக் கண்ணும்" (குறள்.354). (செ.அக.).

[ஐந்து → ஐ + உணர்வு.]

ஐயுறவு *aiyuṟavu,* பெ. (n.) ***தெளிவின்மை;*** doubt, suspicion. "தெளிந்தான்கண் ஐயுறவும்" (குறள்.510). (செ.அக.).

[ஐயம் + உறவு - ஐயுறவு. உறு → உறவு.]

ஐயுறு-தல் *ai-y-uṟu-,* 17.செ.குன்றாவி. (v.t.) ***தெளிவுபெறாமை;*** to doubt or suspect. "ஐயுற்றெ ண்ணமுஞ் செயலும் வேறாய்" (பாரத.நிரைமீட்சி.128). (செ.அக.).

[ஐயம் + உறு.]

ஐயூர்முடவனார் *aiyūr-mudavaṉār,* பெ. (n.) ***பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியைப் பாடிய புலவர்;*** ancient poet.

[ஐயூர் + முடவன் + ஆர்.]

ஐயூர்மூலங்கிழார் *aiyūr-mūlaṅgiḻār,* பெ. (n.) ***கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதியைப் "புலவரை யிறந்த" என்று பாடிய புலவர்;*** Sangam poet.

[ஐயூர் + மூலம் + கிழார். ஐயூர் - இடப்பெயர். மூலங்கிழார் - பிறந்த நாண்மீன் காரணமாகப் பெற்ற பெயர்.]

ஐயெனல் *ai-y-eṉal,* பெ. (n.) 1. (அ) ***வியப்புக்குறிப்பு;*** uttering. "ஐ"! expressive of wonder. "ஐயென்றா ளாயர் மகள்" (சிலப்.17,எடுத்துக்காட்டு). (ஆ) ***வருத்தக்***

குறிப்பு; of distress or mental suffering. ''ஐயெனமேவிப் பூ நிலமிசை யிருக்கும்'' (சீவக.1025). (இ) ***உடன்படற் குறிப்பு;*** of assent. ''ஐயென மன்ன னேவ'' (சீவக. 907). 2. ***விரைவுக்குறிப்பு;*** onom. expression of haste, hurry. ''ஐயெனத்தோன்றுவர்'' (சீவக.1225). 3. ***அதட்டற்குறிப்பு*** (கொ.வ.); exclamation expressive of rebuke intended to frighten elephant, horse, bull, etc. (செ.அக.).

[ஐ + எனல் - ஐயெனல். 'ஐ' - ஒலிக்குறிப்பு இடைச்சொல்.]

ஐயே *aiyē,* பெ. (n.) 1. ***கீழ்மக்கள் தலைவனை விளிக்கும் ஒரு விளிப்பெயர்;*** a form of address used by low caste people towards their masters or persons of higher rank in the social scale. ''ஐயே நானுங் கொன்றவ னல்லேன்'' (திருவிளை.பழியஞ்சின.24). 2. ***ஒரு வியப்புக்குறிப்பு;*** an exclamation of wonder.

[ஐயன் → ஐயே (தமி.வ.280).]

ஐயை[1] *aiyai,* பெ. (n.) 1. ***மலைமகள்*** (பிங்.); Pārvati. 2. ***கொற்றவை*** (பிங்.); Durgā. 3. ***தவப்பெண்*** (சூடா.); female ascetic. 4. ***ஆசிரியன் மனைவி;*** wife of one's teacher. 5. ***தலைவி*** (திவா.); mistress. 6. ***மகள்*** (பிங்.); daughter. 7. ***தாய்;*** mother. (செ.அக.).

[ஐ → ஐயை.]

ஐயை[2] *aiyai,* பெ. (n.) 1. ***பெண்பால் இயற்பெயர்;*** fem.proper name. 2. ***மாதரியின் மகள்*** (சிலப்.); daughter of Madari. 3. ***தித்தனின் மகள்*** (அக.6); daughter of Tittan.

[ஐ → ஐயை.]

ஐயைந்து *ai-y-aindu,* பெ. (n.) ***இருபத்தைந்து;*** five fives. ''ஐயைந்து மறியாத மானிடரை வையம் சுமப்பது வம்பு'' (திருப்பா.தனியன்).

[ஐந்து + ஐந்து - ஐயைந்து.]

ஐயையோ *aiyaiyō,* இடை. (int.) ***ஐயோ இரக்கக்குறிப்பு;*** exclamation of pity, or grief. (செ.அக.).

தெ., க., ம., து. அய்யய்யோ.

[ஐயோ + ஐயோ - ஐயையோ.]

ஐயோ *aiyō,* இடை. (int.) 1. ***வியப்புக்குறிப்பு*** (சூடா.); exclamation of wonder. 2. ***இரக்கக்குறிப்பு*** (சீவக.2622, உரை); exclamation of pity, concern. 3. ***வருந்தற் குறிப்பு;*** exclamation expressive of poignant grief. ''ஐயோ விதற்கோ வருந்தவமுன் செய்தாயே'' (கந்தபு.அசுரேந்.7). (செ.அக.).

தெ., க., ம., து. அய்யோ

[ஐயன் → ஐயோ. (தமி.வ.280).]

ஐயோன் *aiyōn,* பெ. (n.) ***நுண்ணியன்;*** God, lit., a being of subtle essence. ''அணுத்தருந் தன்மையி லையோன்'' (திருவாச.3,45). (செ.அக.).

[ஐ → ஐயோன்.]

ஐராவணன் *airāvaṉaṉ,* பெ. (n.) 1. ***இராவணனின் மாமன்;*** uncle of Rāvaṇa. (சேரநா.). 2. ***இந்திரன்;*** Indra.

ஐரி *airi,* பெ. (n.) ***வைக்கோல் தூறு, படப்பை;*** haystack.

[வை + இரி - வையிரி → ஐயிரி → ஐரி.]

ஐரை *airai,* பெ. (n.) ***அயிரை*** பார்க்க; see *ayirai.*

ஐலை *ailai,* பெ. (n.) ***அயிலை*** பார்க்க; see *ayilai.*

ஐவகைத்தாயர் *ai-vagai-t-tāyar,* பெ. (n.) ***ஈன்றதாய், ஊட்டுந்தாய், சீராட்டுந்தாய், கைத்தாய், செவிலித் தாய் முதலிய ஐவகைத்தாயர்*** (பிங்.); five kinds of mothers. (செ.அக.).

[ஐந்து + வகை + தாயர்.]

ஐவகைமலடு *ai-vagai-maladu,* பெ. (n.) ***ஐந்து வகை மலட்டு நோய்கள்: ஆதி மலடு, காக மலடு, கதலி மலடு, கருப்பு மலடு, ஆண் மலடு*** (சா.அக.); five kinds of barrenness.

[ஐந்து + வகை - ஐவகை + மலடு.]

ஐவகைமன்றம் *ai-vagai-maṉṟam,* பெ. (n.) ***வெள்ளிடை, இலஞ்சி, நெடுங்கல், பூதசதுக்கம், பாவை என்னும் பெயர்களில் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த ஐந்து வகையான மன்றங்கள்;*** names of five city - squares in ancient Poompugār.

ஐவகைவினா *ai-vagai-viṉā,* பெ. (n.) ***அறியான் வினா, அறிவொப்புக் காண்டல் வினா, ஐய மறுத்தல் வினா, அவனறிவு தான்காண்டல் வினா, மெய்யவற்குக் காட்டல் வினா முதலிய ஐந்து வகை வினா*** (திவா.12,73); five kinds of questions. (செ.அக.).

[ஐந்து + வகை + வினா.]

ஐவண்ணம்[1] *ai-vaṇṇam,* பெ. (n.) ***வயிரக்கல்வகை*** (யாழ்.அக.); a kind of precious stone. (செ.அக.)

[ஐந்து + வண்ணம் - ஐவண்ணம்.]

ஐவண்ணம்[2] *ai-vaṇṇam,* பெ. (n.) ***மருதோன்றி*** (திருவிளை.மாணிக்கம்.40); henna. (செ.அக.).

மறுவ. அழகுவண்ணம், அழவணம்.

[ஐ + வண்ணம் - ஐவண்ணம். ஐ = அழகு.]

ஐவண்ணம்[3] *ai-vaṇṇam,* பெ. (n.) ***பரவமகளிர் கால் விரல்களில் அணியும் நகமூடி, சலங்கைமுன் தாங்கி, மயிலடி, இடைக்காற்பீலி, நகரைமீன் என்னும் ஐவகை விரலாழிகள்;*** five toe - rings worn by parava women. (செ.அக.).

[ஐந்து + வண்ணம் - ஐவண்ணம்.]

ஐவண்ணம்[4] *aivaṇṇam,* பெ. (n.) ***கொடுக்கப்பெற்ற நெல்லை உரலில் குற்றிய பின்னர் அரிசி, நொய், நொறுக்கு (குறுணை) உமி, தவிடு என்று ஐவகை யாகப் பிரித்து வைத்தல்;*** classifying husked rice into five kinds.

[ஐந்து → ஐ + வண்ணம். இங்கு வண்ணம் என்பது வகை.]

ஐவணம் *ai-vaṉam,* பெ. (n.) ***ஐவண்ணம்*** (வின்.) பார்க்க; see *ai-vaṉṉam.* (செ.அக.).

[ஐவண்ணம் → ஐவணம்.]

ஐவர் *ai-var,* பெ. (n.) 1. ***பாண்டவர்கள்;*** five Pāṇḍavās, "ஐவ ரென்றுல கேத்து மரசர்கள்" (கலித்.25). 2. ***ஐந்து பேர்;*** five persons. (செ.அக.). 3. ***ஐம்புலன்களை ஐவராகக் கூறும் குறிப்பு;*** personification of five sense organs as five persons. "ஐவரொடுங் கூடாமல்" (தாயு. பராபரக்.252).

ம. ஐவர்.

[ஐந்து → ஐ + அர் = ஐவர்.]

ஐவர்களி *aivarkaḷi,* பெ. (n.) ***கோலாட்டம்;*** a game of five in which they sing and dance in a ring, marking time with beats of short coloured sticks. (சேரநா.).

[ஐ → ஐவர் + களி.]

ஐவர்ணம் *ai-varṇam,* பெ. (n.) ***ஐவண்ணம்***[2] பார்க்க; see *ai-vaṉṉam*[2].

[ஐ + (வண்ணம்) வர்ணம்.]

ஐவளம் *ai-vaḷam,* பெ. (n.) ***மிளகு, அகில், கோட்டம், தக்கோலம்*** (வால் மிளகு) ***குங்குமம் என்னும் மலை வளம் ஐந்து. அரக்கு, இறலி, செந்தேன், மயிற்பீலி, நாவி என்பாரும் உளர்.*** (பரி.18,15) (சங்.இலக். சொற்.); five products of mountain forest.

[ஐந்து + வளம் - ஐவளம்.]

ஐவனம் *aivaṉam,* பெ. (n.) ***மலைநெல்;*** mountain paddy, wild rice, Oryza mutica. "ஐவனம் வித்தி" (புறநா. 159,17) (செ.அக.).

ம. ஐவனம்.

[ஐ = மென்மை, சன்னம், ஐ → ஐவனம் = சன்னமான மூங்கில் நெல்வகை.]

ஐவாய்க்கள்ளி *ai-vāykkaḷḷi,* பெ. (n.) ***மான்செவிக் கள்ளி;*** spiral-leafy milk-hedge. (சா.அக.).

[ஐவாய் மான் → ஐவாய் + கள்ளி. ஐவாய்க்கள்ளி = ஐவாய் மானின் செவி போன்ற கள்ளி.]

ஐவாய்மான் *ai-vāy-māṉ,* பெ. (n.) 1. ***அரிமா;*** lion. "கரிமருப்பு ஐவாய் மான்கை" (திருவிளை.மாணிக் கம்.54).

[ஐ + வாய் + மான் - ஐவாய் மான். ஐ = பெரிய. மா → மான் = விலங்கு.]

ஐவாய்மிருகம் *ai-vāy-mirugam,* பெ. (n.) ***ஐவாய் விலங்கு*** பார்க்க; see *ai-vāy-vilaṅgu.*

ஐவாய்விலங்கு *ai-vay-vilaṅgu,* பெ. (n.) ***கரடி;*** Indian black bear, melursus ursinus, so called from the prehensile power of his four feet and mouth.

ஐவி *aivi,* பெ. (n.) 1. ***சிறு கடுகு;*** small mustard. 2. ***கடுக்காய்;*** gall-nut. (சா.அக.).

[ஐயவி → ஐவி.]

ஐவிரல் *ai-viral,* பெ. (n.) 1. ***கைம்மீன்*** (அத்தம்); 13th nakṣatra, resembling the five fingers, hastha. (செ.அக.). 2. ***ஐந்து விரல் அளவு;*** five finger breadth.

ம. ஐவிரல்.

[ஐந்து + விரல்.]

ஐவிரலி *ai-virali,* பெ. (n.) 1. ***கொடி வகை*** (மூ.அ.); creeper bearing a red fruit (செ.அக.). 2. ***கடலாம ணக்கு;*** plant jatropha curcas.

ம. ஐவிரலிக்கோவ.

[ஐந்து + விரலி.]

ஐவிரலிச் சங்கு *ai-virali-c-caṅgu,* பெ. (n.) ***ஐந்து முட் பாய்ந்த சங்கு;*** conch with five spikes. (சா.அக.).

[ஐந்து + விரலி + சங்கு.]

ஐவிரை *aivirai,* பெ. (n.) ***ஐந்து வகை மணப்பொருள் கள்;*** five kinds of aromatic drugs viz. 1. ***கோட்டம்;*** a perfume. 2. ***துருக்கம்;*** the resin of olibenum tree. 3. ***தாரம்;*** fragrant wood of deodor tree. 4. ***அகில்;*** fragrant wood of agil tree. 5. ***சந்தனம்;*** sandal-wood. (சா.அக.).

[ஐந்து + விரை - ஐவிரை. விரை = நறுமணம்.]

ஐவேலி *aivēli,* பெ. (n.) 1. ***திருவாரூர்;*** Thiruvārūr. "ஐவேலியாந்திருவாரூர்" (திருவாரூர்க் கோவை). 2. ***ஐந்து வேலி நிலம்;*** five veli land.

[ஐந்து + வேலி - ஐவேலி.]

திருவாரூரில் கோயில், குளம், நந்தவனம் ஆகிய ஒவ்வொன் றும் ஐந்துவேலி நிலப்பரப்புடையது. (ஒரு வேலி = 20 மா. நூறு குழி = 1 மா.)

ஐன் *aiṉ,* பெ. (n.) 1. ***அழகு;*** beauty. 2. ***நேர்த்தி;*** fineness. இது ஐனான துணி (கொங்.க.). 3. ***சிறப்பு, மேன்மை;*** excellence. ஐனான தேன் (இருள.).

[ஐ → ஐன். ஐ = அழகு.]

ஐனவர் *aiṉavar,* பெ. (n.) ***சேரநாட்டு மலை வாழ்நர்;*** hill tribe in Kerala.

[ஐன் → ஐனவர்.]

ஐனூண் *aiṉūṇ,* பெ. (n.) ***மாப்பிள்ளைக்குச் செய்யும் சிறப்பு விருந்து;*** special feast given to the bridegroom. (சேரநா.).

ம. ஐனூண்.

[ஐ → ஐன் + ஊண் - ஐனூண்.]

ஒ

ஒ *o*, ***தமிழ் வண்ணமாலையில் பத்தாம் உயிரெழுத்தாகிய அரை அங்காப்பு இதழ்குவியாப் பின்னண்ணத் தாழ் உயிர்க்குறில்;*** tenth letter and vowel of the Tamil alphabet, the half-close back lax unrounded vowel in Tamil.

[உ → ஒ.]

உகரச்சுட்டு வேர்முதலானபோது வேரடித்திரிபுகளால் பெற்ற திரிபு வடிவமே ஒகரம். உகரவேர்முதற்பொருள்களை ஒகர வேர் முதல்களும் பெறும். ஆ, ஈ, ஊ எனும் நெடுஞ்சுட்டுகளே அஇஉ எனும் குறுஞ்சுட்டுகளானவாறுபோல ஏகார ஓகார நெடில்கள் எகர ஒகரங்களாகக் குறுகவில்லை. எகர ஒகரங்கள் ஏகார ஓகாரங்களாக நீட்சியும் பெறவில்லை. இவற்றின் குறில் நெடில் தோற்றங்கள் ஒன்றற்கொன்று தொடர்பற்றவை.

அசையெழுத்துக்காலத் தொன்முது தமிழில் இருஉயிர்க்குறில் இணைந்து நெட்டுயிர் வடிவம் பெற்றதால் ஏகார ஓகாரங்கள் இஅ-(ஏ) எனவும் உஅ-(ஓ) எனவும் எழுதப்பட்டன. ஈரெழுத்துக்கு ஒருவடிவம் தந்து நெடிலாக்கியபின் எகரஒகரக் குறிலெழுத்தை எழுதுவதற்குத் தனியெழுத்தைப் படைக்காமல் ஏகார ஓகார நெட்டெழுத்தின் மேல் மெய்யெழுத்தைப்போல் புள்ளி வைத்துக்குறிலாக்கினர். இதனாற்றான் தொல்காப்பியர்

''மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்'' (தொல். எழுத்து.15)
''எகர ஒகரத் தியற்கையு மற்றே'' (தொல்.எழுத்து.16)
என நூற்பா யாத்தார் என்க.

ஒ[1]-த்தல் *o-*, 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***போலுதல்;*** to resemble. ''உறுப்பொத்தல் மக்களொப்பன்றால்'' (குறள்.993). 2. ***சமமாதல்;*** to be equal. ஒத்தாருமிக்காருமில்லாதவர் (உ.வ.).

[உல் → ஒல் + தல் - ஒத்தல்.]

ஒ[2]-த்தல் *o-*, 4.செ.கு.வி. (v.i.) 1. ***தகுதியாதல்;*** to be suited; to be consistent with, to be appropriate. ''ஒப்பநாடியத்தக வொறுத்தி'' (புறநா.10,4). 2. ***இசைதல்;*** to be acceptable. அவனுக்கு ஒத்த செய்தி. 3. ***ஒழுக்கமுடையராதல்;*** to be of good character; to be well behaved. ''ஒப்பார் மற்றெனைவர்'' (சீவக.1543). 4. ***ஒற்றுமைப்படுதல்;*** to be harmonious, be in happy concord. 'எத்தால் வாழலாம்; ஒத்தால் வாழலாம். 5. ***இல்லாததொன்று இருந்தாற் போலுதல்;*** to appear as if it were. ''கமலபாதம் வந்தென் கண்ணினுள்ளன வொக்கின்றதே'' (திவ்.அமலனாதி.1). (செ.அக.).

ம. ஒக்குக; க. ஒர்பு, ஒப்பு; கோத. ஒப்; துட. உப்; குட. ஒ; து. ஒப்பியுனி; தெ. ஒப்பு; குரு. ஒக்னா.

[உல் → ஒல் + தல் - ஒத்தல். ஒல் → ஒத்து → ஒத்தல்.]

ஒ[3]-த்தல் *ŏ-*, 4.செ.கு.வி. (v.i.) ***விலகல்;*** to get aside.

[உல் → ஒல் + தல் - ஒத்தல்: ஒ.நோ. பொல் + தல் - பொத்தல், பொத்துதல்.]

ஒஃகல் *okal*, பெ. (n.) ***ஒதுங்கல்*** (ஆ.அக.); keeping away from.

[ஒல்கு → ஒஃகு → ஒஃகல்.]

ஒஃகு-தல் *okku-*, 7.செ.கு.வி. (v.i.) 1. ***பின்வாங்குதல்;*** to retreat, fall back. ''ஏற்ற தெவ்வருக்கொஃகினன்'' (கம்பரா.பள்ளிபடை.106). 2. ***குறைதல்*** (ஆ.அக.); to diminish. (செ.அக.).

[ஒல் → ஒல்கு → ஒஃகு.]

ஒக்க *okka*, கு.வி.எ. (adv.) 1. ***ஒருசேர;*** together; along with, in company with. ''ஒக்கத்தொழுகிற்றி ராகிற் கலியுக மொன்று மில்லையே'' (திவ்.திருவாய்.5,2,10). 2. ***மிகுதியாக;*** plentifully, bountifully, numerously. ஒக்கக் கிடக்கிறது. 3. ***சமமாக;*** equally. ''பக்கமும் பிடருமொக் கமுட்டிகள் படப்பட'' (பாரத.வேத்திரகீய.56). 4. ***ஒத்திருத்தல்;*** to be similar to. ''கொக்கொக்க கூம்பும் பருவத்து'' (குறள்.490). (செ.அக.).

ம. ஒக்க; குட. ஒக்க, ஒக்கசெ; தெ. ஒகட; பிரா. ஒக.

[ஒல் → ஒருங்கு → ஒருக்கு → ஒக்கு → ஒக்க.]

ஒக்கட்டு *okkaṭṭu*, பெ. (n.) ***மாதர் கழுத்திலணியும் பாசிமணிக் கோவை;*** small string of beads, worn round the neck by women. (செ.அக.).

[உள் + கட்டு - உட்கட்டு → ஒக்கட்டு.]

ஒக்கடி[1]-த்தல் *okkaḍi-*, 4.செ.கு.வி. (v.i.) ***தாளங்கொட்டுதல்*** (சீவக.156,உரை.); to keep time either with hands or with cymbals.

[ஒருங்கு → ஒருக்கு → ஒக்கு + அடி.]

ஒக்கடி[2]-த்தல் *okkaḍi-*, 4.செ.குன்றாவி. (v.t.) ***செப்பனிடுதல்;*** to repair, renovate. ''திருவாபரணங்கள் ஒடிந்தது ஒக்கடிக்கிறதும்'' (கோயிலொ.93). (செ.அக.).

[ஒருங்கு → ஒருக்கு. ஒருக்கு + அடி - ஒருக்கடி → ஒக்கடி.]

ஒக்கநோக்கு-தல் *okka-nōkku-*, 5.செ.குன்றாவி. (v.t.) ***சமமாகப் பார்த்தல்;*** to look at dispassionately; to treat impartially. ''ஒக்க நோக்கினரல்லவ ரதனிலை யுணரார்'' (கம்பரா.இரணிய.44). (செ.அக.).

[ஒல் → ஒக்க + நோக்கு.]

ஒக்கப் பண்ணு-தல் *okka-p-paṇṇu-*, 12.செ.குன்றாவி. (v.t.) ***செப்பனிடுதல்;*** to repair, renew. (செ.அக.).

[ஒருங்கு → ஒருக்கு → ஒருக்க → ஒக்க + பண்ணு.]

ஒக்கப்பாடு-தல் *okka-p-pāḍu-*, 5.செ.கு.வி. (v.i.) ***பிறன் கூற்றுக்கு ஒத்துக் கூறுதல்;*** lit., to sing in unison, to cross the t's and dot i's of another with a view to please him; to say ditto. (செ.அக.).

[ஒல் → ஒக்க + பாடு.]

ஒக்கம்¹ *okkam,* பெ. (n.) *ஓமம்* பார்க்க (மலை.); see *ōmam.* (செ.அக.)

ஒக்கம்² *okkam,* பெ. (n.) 1. ***ஊர்*** (பிங்.); village. 2. *அற்பம்* (அரு.நி.); trifle. 3. ***கரை*** (யாழ்.அக.); shore, bank. (செ.அக.).

[ஒக்கல் → ஒக்கம் (ஊர்.) ஒல்கு → ஒல்கம் → ஒக்கம் (சிறுமை). ஓரம் → ஓக்கம் → ஒக்கம் (கரை.).]

ஒக்கம்³ *okkam,* பெ. (n.) 1. ***அகலம்;*** breadth. 2. ***பொலிவு;*** grandeur. (செ.அக.).

[ஒக்கம் → ஒக்கம் (அகலம்).]

ஒக்கம்⁴ *okkam,* பெ. (n.) ***இடை, இடுப்பு;*** the waist, hip, loins. (சேரநா.).

ம. ஒக்கம்.

[உக்கு → ஒக்கம்.]

ஒக்கரை *okkarai,* பெ. (n.) ***விலா*** (நாமதீப.); side of the body. (செ.அக.).

[ஒக்கலை → ஒக்கரை.]

ஒக்கல்¹ *okkal,* பெ. (n.) 1. ***சுற்றத்தார்;*** relations, kinsfolk. "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்" (குறள்,43). 2. ***குடும்பம்;*** family. 3. ***குடியிருப்பு;*** settlement. (செ.அக.).

[ஒல் = ஒத்தல், பொருந்துதல், கூடுதல். ஒல் → ஒல்க → ஒல்கல் → ஒக்கல்.]

ஒக்கல்² *okkal,* பெ. (n.) ***காளைகளைக்கொண்டு பிணையடித்துத் தவசமணிகளைப் பிரிக்கச் செய்தல்;*** driving oxen to trample upon sheaves of corn for threshing. (சேரநா.).

ம. ஒக்கல்; க. ஒக்கலதன (வேளாண்மை).

[உல் → உக்கு → ஒக்கு → ஒக்கல்.]

ஒக்கல்³ *okkal,* பெ. (n.) ***ஒக்கலை*** பார்க்க; see *okkalai.* (செ.அக.).

ம. ஒக்கு.

[ஒல் → ஒல்கு → ஒல்கல் → ஒக்கல்.]

ஒக்கல் போற்றல் *okkal-pōṟṟal,* பெ. (n.) ***சுற்றத்தாரைப் போற்றுவதாகிய வேளாண்மாந்தரியல்பு*** (திவா.); supporting or maintaining one's relations, one of the qualities of the vēḷāḷas. (செ.அக.).

[ஒக்கல் + போற்றல்.]

ஒக்கலி¹-த்தல் *okkali-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***ஆவலங் கொட்டுதல்;*** to shout in joy, hulla-baloo, as a mark of triumph. "பேய்கள் கூடி யொன்றினை யொன்றடித்து ஒக்கலித்து" (பதினொ.திருவாலங்காட்டு மூத்த.1,11). 2. ***உறவினரோடு கலந்து பேசுதல்;*** to converse freely, hold friendly communion with one's relations. (W.).

[ஒக்கல் → ஒக்கலி.]

ஒக்கலி²-த்தல் *okkali-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***இனத்தாருடன் உறவாடுதல்;*** to encourage one's class or community maintain them, give them medical aid, etc. 2. ***ஒத்துப்போதல்;*** to become reconciled. (செ.அக.). 3. ***ஒப்பாதல்;*** to become equal.

[ஒக்கல் → ஒக்கலி. (வே.க.111) (மு.தா.215).]

ஒக்கலிடு-தல் *okkal-iḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***ஒக்கலி¹*** பார்க்க; see *okkali.¹* (செ.அக.).

[ஒக்கல் → ஒக்கலிடு. (சு.வி.66).]

ஒக்கலை *okkalai,* பெ. (n.) ***இடுப்பு;*** hip; side of the body. "ஒக்கலை வேண்டியழல்" (பழ.290). (செ.அக.).

[ஒல்கு → ஒக்கு → ஒக்கல் → ஒக்கலை. ஒல்கு = சுருங்கு, ஒடுங்கு. ஒக்கலை = ஒடுங்கிய இடுப்பு.]

ஒக்களித்தல் *okkaḷittal,* பெ. (n.) ***கக்கலுக்கு முந்திய வாயசைவு;*** inclination to vomit.

[ஒ → ஒக்களி. (மு.தா.6).]

ஒக்கிடு¹-தல் *okkiḍu-,* 18.செ.குன்றாவி. (v.t.) ***செப்பனிடுதல்;*** to repair. (செ.அக.).

[ஒக்கு + இடு.]

ஒக்கிடு²-தல் *okkiḍu-,* 18.செ.குன்றாவி. (v.t.) ***ஒழித்தல்;*** to ruin, to do away with. (செ.அக.).

[ஒக்கு + இடு.]

ஒக்கிலியன் *okkiliyaṉ,* பெ. (n.) ***தமிழ் நாட்டிற் குடியேறிய ஒரு மரபினர், கன்னட நாட்டார்;*** member of a caste of cultivators from the Kannada province who have settled in the districts of Madurai and Coimbatore. (செ.அக.).

ம. ஒக்கிலியன்; க. ஒக்கலிக; குட. ஒக்க (கூட்டுக் குடும்பம்); து. ஒக்கெலு.

[ஒக்கு² → ஒக்கல் → ஒக்கலியன் → ஒக்கிலியன். (உழவன்.).]

ஒக்கு¹-தல் *okku-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***கொப்புளித்தல்;*** to gargle. 2. ***பிறபட விடுதல்;*** to leave behind. (செ.அக.).

ம. ஒக்குக.

[உல் → ஒல் → ஒக்கு = பொங்குதல், மேற்படுதல், வழிதல்.]

ஒக்கு²-தல் *okku-,* 5.செ.குன்றாவி (v.t.) 1. ***உழுதல்;*** to till the land. 2. ***குத்துதல், கழித்தல்;*** to pierce, dig.

க., து. உக்கு, ஒக்கு.

[உல் → ஒல் → ஒக்கு = உட்செலுத்துதல், நிலத்தை ஏரால் உழுதல்.]

ஒக்கு³-தல் *okku-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***அதரி திரித்தல்; ஏர்க்களத்தில் பிணையடித்துக் கதிரினின்று தவசம் பிரித்தல்;*** to drive oxen to trample upon sheaves of corn for threshing. கம்பு ஒக்கினான் (இ.வ.).

[உரு → உக்கு → ஒக்கு = உருக்கச்செய்தல், உதிரச்செய்தல்.]

ஒக்கு[4]-தல் *okku-*, 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***சமப்படுத்துதல்;*** to equalize. 2. ***செப்பனிடுதல்;*** to set right, repair. 3. ***மூட்டுதல், தைத்தல்;*** to sew together two pieces of any material. (வின்.).

[உல் → ஒல் → ஒக்கு. உல் = பொருத்துதல்.]

ஒக்கூர்மாசாத்தனார் *okkūrmāšāttanār*, பெ. (n.) ***கடைக் கழகக்காலத் தமிழ்ப் புலவர்;*** poet of Sangam age.

[ஒக்கூர் + மா + சாத்தன் + ஆர். ஒக்கூர் = உழவரூர். மாசாத்தன் = தரைவழி வாணிகக்குழுவின் தலைவன். 'ஆர்' உயர்வுப்பன்மையீறு.]

ஒக்கூர்மாசாத்தியார் *okkūr-mäšāttiyār*, பெ. (n.) ***கடைக் கழகக் காலத் தமிழ்ப்புலவர்;*** poetess of sangam age.

[ஒக்கூர் + மா + சாத்தி + ஆர். ஒக்கூர் = உழவரூர். மாசாத்தி தரைவழிவாணிகக் குழுத்தலைவனாகிய மாசாத்தனின் மனைவி. 'ஆர்' - உயர்வுப் பன்மையீறு.]

ஒக்கை *okkai*, பெ. (n.) ***பாண்டிநாட்டிலுள்ள ஒக்கூரெனுமொரு நகரம்;*** an other name for Okkur of Pandiya kingdom.

[ஒக்கல் → ஒக்கை.]

ஒகரம் *ogaram*, பெ. (n.) 1. ***'ஒ' என்னும் உயிரெழுத்து;*** vowel 'ஒ' of Tamil alphabet. 2. ***ஓங்காரப்பறவை என்னும் மயில்*** (சூடா.); name of the peacock from the similarity of form 'ஒ'.

[ஒ + கரம் - ஒகரம். 'கரம்' - எழுத்துச்சாரியை.]

தொன்முது காலத்தில் தமிழ் உருவெழுத்தாக எழுதப்பட்ட போது ஒகரம் மயிலின் வடிவமாக எழுதப்பட்டது. ஒலியல் என்னும் தோகை வடிவமாகவும் வரையப்பட்டது. அதுவே அசையெழுத்துக்காலத்தில் எனவும் எனவும் எழுதப்பட்டு மயிலையும் தோகையையும் குறித்த ஒகர வரிவடிவாயின.

ஒச்சட்டை *occaṭṭai*, பெ. (n.) ***ஒஞ்சட்டை*** பார்க்க (செ.அக.); see *oñjaṭṭai*.

[உச்சட்டை → ஒச்சட்டை (வே.க.81).]

ஒச்சந்தம் *occandam*, பெ. (n.) ***உச்சந்தம்*** பார்க்க; see *uccandam*. (செ.அக.).

[உச்சந்தம் → ஒச்சந்தம் (வே.க.65).]

ஒச்சம்[1] *occam*, பெ. (n.) ***நாணம்*** (வின்.); bashfullness; shyness. (செ.அக.);

ம. ஒச்சம்; க. ஒச்சய; தெ. ஒச்செமு.

[உஞ்சு → ஒஞ்சு → ஒச்சு → ஒச்சம்.]

ஒச்சம்[2] *occam*, பெ. (n.) ***குற்றம், குறைவு;*** defect, deficiency. அவனுடைய வடிவத்தில் ஓர் ஒச்சமும் சொல்ல முடியாது. (செ.அக.).

தெ. ஒச்செமு.

[எச்சம் → ஒச்சம்.]

ஒச்சம்[3] *occam*, பெ. (n.) ***கவனித்தல்*** (யாழ்.அக.); listening with attention. (செ.அக.).

[உல் → உத்து → ஒத்து → ஒச்சு → ஒச்சம்.]

ஒச்சி[1] *occi*, பெ. (n.) ***ஒஞ்சி*** பார்க்க; see *oñji*. (செ.அக.).

ஒச்சி[2]-த்தல் *occi-*, 4.செ.கு.வி. (v.i.) ***ஒஞ்சி*** பார்க்க. (வின்.); see *oñji*. (செ.அக.).

ஒச்சியஞ் சொல்(லு)-தல் *occiyañ-jol-*, 13.செ.கு.வி. (v.i.) ***காமஇச்சையாய்ப் பேசுதல்*** (வின்.); to speak libidinously. (செ.அக.).

[ஒச்சியம் + சொல்.]

ஒச்சியம் *occiyam*, பெ. (n.) 1. ***கூச்சம்;*** bashfulness; shyness. 2. ***இனியமொழி;*** amorous speech, tender, loving words. 3. ***பழிப்பு;*** contempt. (செ.அக.).

[ஒச்சு → ஒச்சியம்.]

ஒச்சினி *occini*, பெ. (n.) ***கருவின் ஒன்பதாம் மாதம்*** (சங்.அக.); ninth month, as of pregnancy. (செ.அக.).

[ஒன்பது → ஒச்சு → ஒச்சினி.]

ஒச்சை[1] *occai*, பெ. (n.) ***உற்றுக் கேட்கை;*** listening attentively, as to a distant sound.

[உத்து → ஒத்து → ஒச்சு → ஒச்சை.]

ஒச்சை[2] *occai*, பெ. (n.) ***காந்தற்சோறு;*** charred food. (செ.அக.).

[உல் → உத்து → உச்சு → உச்சை → ஒச்சை.]

ஒச்சைக்கொடுத்துக்கேள்(ட்)-த(ட)ல் *occai-k-koduttu-k-kēl-*, 11.செ.குன்றாவி. (v.t.) ***உற்றுக்கேட்டல்;*** to listen attentively. ஒச்சைகொடுத்துக் கேட்காதே (வின்.) (செ.அக.).

[ஒச்சை + கொடுத்து + கேள்.]

ஒசத்தி *ośatti*, பெ. (n.) ***உயர்வு;*** greatness, excellence, superiority.

ம. ஒசத்தி.

*[உயர்த்தி → ஒசத்தி. (கொ.வ.) **உயர்த்தி** பார்க்க; **see** uyartti.]*

ஒசி[1]-த்தல் *oši-*, 2.செ.குன்றாவி. (v.t.) ***கொடுத்தல்*** (அக.நி.); to give. (செ.அக.).

[ஒல் → ஒய் → ஒயி → ஒசி.]

ஒசி[2]-த்தல் *oši-*, 2.செ.குன்றாவி. (v.t.) 1. ***முறித்தல்;*** to break, as a stick. "யானைபோர்க்கோ டொசித் தனவும்" (திவ்.இயற்.1,27). 2. ***அசைத்தல்;*** to move, shake, wave. (வின்.) (செ.அக.).

[ஒடி → ஒசி.]

ஒசி[3]-தல் *oši-*, 2.செ.கு.வி. (v.i.) 1. ***முறிதல்*** (பிங்.); to break, become broken, as a stick. 2. ***நுடங்குதல்;*** to bend under a weight, as the tender branch of a tree or the waist of a woman. "மாந்துண ரொசிய வேறி" (சூளா.இரத.44). 3. ***சாய்தல்;*** to lean, incline. "வாயருகு வந்தொசிந்து மறிய" (சீவக.595). 4. ***நாணுதல்;*** to be coy, bashful. "கண்ணரக்கி நோக்கா தொசிந்து" (சீவக. 2541). 5. ***வருந்துதல்;*** to suffer. "உருகு நுண்ணிடை

யொசியப் புல்லினாள்'' (சீவக.989). 6. **ஓய்தல்** (திவா.); to become tired or weary. (செ.அக.).

[ஒடி → ஒசி. (த.வ.72).]

ஒசிந்தநோக்கு *ośinda-nōkku*, பெ. (n.) ***ஒதுங்கிப் பார்க்கும் பார்வை;*** side-glance. ''உரையினர் பாட்டின ரொசிந்த நோக்கினர்'' (சிலப்.1,55). (செ.அக.).

[ஒசி → ஒசிந்த + நோக்கு.]

ஒசிப்பு *ośippu*, பெ. (n.) 1. ***முறிக்கை;*** act of breaking. 2. ***எலும்பு முறிதல்;*** breaking of a bone, fracture. (சா.அக.).

[ஒசி → ஒசிப்பு.]

ஒசியல் *ośiyal*, பெ. (n.) ***கிளை முறிக்கப்பட்ட மரம்;*** tree, a branch of which has been broken. ''நிலம்படாஅ நாருடை யொசியலற்றே'' (குறுந்.112) (செ.அக.).

[ஒசி + அல்.]

ஒசிவு *ośivu*, பெ. (n.) 1. ***அசைவு;*** waving. 2. ***முறிவு;*** breaking. (ஆ.அக.).

[ஒசி + உ.]

ஒஞ்சட்டை *oñjaṭṭai*, பெ. (n.) ***ஒல்லி;*** being tall and lean. (செ.அக.).

[உஞ்சட்டை → ஒஞ்சட்டை (வே.க.81).]

ஒஞ்சட்டையன் *oñjaṭṭaiyaṉ*, பெ. (n.) ***ஒல்லியானவன்;*** tall, lean man. (செ.அக.).

[ஒஞ்சட்டை + அன்.]

ஒஞ்சரி[1]-த்தல் *oñjari-*, 4.செ.குன்றாவி. (v.t.) ***கதவைச் சிறிது சாத்துதல்;*** to close the door slightly. 'மதனசுந்தரி கதவை யொஞ்சரி'. (செ.அக.).

[ஒஞ்சு → ஒஞ்சலி → ஒஞ்சரி.]

ஒஞ்சரி[2]-த்தல் *oñjari*, 4.செ.கு.வி. (v.i.) ***ஒருபக்கஞ் சார்தல்*** (வின்.); to go sideways. (செ.அக.).

ஒஞ்சரி[3]-த்தல் *oñjari*, 4.செ.கு.வி. (v.i.) ***ஒரு பக்கமாய்ச் சாய்தல்;*** to lie on one side. ''இடது கைப்புறமாய் ஒஞ்சரித்துச் சயனிக்க வேண்டும்'' (ஜீவப் பிரம்மைக்ய. பக்.634) (செ.அக.).

[ஒஞ்சு → ஒஞ்சலி → ஒஞ்சரி.]

ஒஞ்சரி தீர்ப்பு *oñjari-tīrppu*, பெ. (n.) ***ஒரு சார்பான தீர்ப்பு;*** partial; one-sided decision. (W.). (செ.அக.).

[ஒஞ்சரி + தீர்ப்பு.]

ஒஞ்சரி வழக்கு *oñjari-vaḻakku*, பெ. (n.) ***ஒஞ்சரி தீர்ப்பு*** பார்க்க; see *oñjari-tīrppu*. (செ.அக.).

[ஒஞ்சரி + வழக்கு.]

ஒஞ்சான் *oñjāṉ*, பெ. (n.) ***மீன்வகை;*** a kind of fish. ''கோளை யாள லொஞ்சான்'' (குருகூர்ப்.7) (செ.அக.).

ஒஞ்சி[1]-த்தல் *oñji-*, 4.செ.கு.வி. (v.i.) ***நாணுதல்;*** to feel abashed, to be shy. ஒஞ்சித்துச் சாப்பிடாமல் விட்டு விட்டான் (வின்.) (செ.அக.).

[ஒஞ்சு (த.வி.) → ஒஞ்சி (பி.வி.) (வே.க.83).]

ஒஞ்சி[2]-த்தல் *oñji-*, 4.செ.கு.வி. (v.i.) ***மனத்தை யடக்குதல்*** (யாழ்.அக.); to control one's mind.

[ஒஞ்சு (த.வி.) → ஒஞ்சி (பி.வி.).]

ஒஞ்சி[3] *oñji*, பெ. (n.) ***முலை;*** woman's breast. (nurs.) (செ.அக.).

[மொஞ்சி → ஒஞ்சி.]

ஒஞ்சியழற்சி *oñji-y-aḻaṟci*, பெ. (n.) ***முலைக்காம் பழற்சி;*** inflammation of the nipple - thelalsia. (செ.அக.).

[மொஞ்சி → ஒஞ்சி + அழற்சி. முலை → மொஞ்சி → ஒஞ்சி (கொ.வ.).]

ஒஞ்சிவலி *oñjivali*, பெ. (n.) ***முலைக்காம்பில் குத்தல்;*** pain in the region of the nipple - thelitis. (சா.அக.).

[ஒஞ்சி + வலி.]

ஒஞ்சு[1]-தல் *oñju-*, 5.செ.கு.வி. (v.i.) ***குறுகுதல், சுருங்குதல் ;*** to shorten, shrink.

[உல் → ஒல் → ஒங்கு → ஒஞ்சு.]

ஒஞ்சு[2]-தல் *oñju-*, 5.செ.கு.வி. (v.i.) ***அடங்குதல்;*** to subdue.

[உல் → ஒல் → ஒங்கு → ஒஞ்சு.]

ஒட்ட *oṭṭa*, கு.வி.எ. (adv.) 1. ***அடியோடே;*** completely, to the very end. வாலை யொட்ட அறுத்துவிட்டான். 2. ***நெருங்க;*** near to, intimately. 3. ***இறுக;*** closely, tightly. 'ஒட்டக்கட்டு'. 4. ***போல*** (தொல்.பொருள்.290); similar to, as. (செ.அக.).

[ஒடு → ஒட்டு + அ.]

ஒட்டக்காய் *oṭṭakkāy*, பெ. (n.) 1. ***ஆணின்விதை;*** testicle. 2. ***குதிரை ஒட்டக்காய், குதிரைப்பிடுக்கன் என்னும் மரம்;*** a tree.

க. உட்டகாய், வெட்டகாய்.

[உட்டை → ஒட்டை + காய் - ஒட்டைக்காய் → ஒட்டக்காய். உருண்டை → உண்டை → உட்டை.]

ஒட்டக்கூத்தர் *oṭṭa-k-kūttar*, பெ. (n.) ***பிற்காலச் சோழ ரவையில் விளங்கிய ஒரு பெரும்புலவர்;*** a great poet in the Cōla court, who flourished about the 12th c.

[ஒட்டு + கூத்தர் - ஒட்டுக் கூத்தர் → ஒட்டக்கூத்தர். ஒட்டு ஆணை, சூள், பந்தயம். பலர்முன் ஒட்டேற்று (சூளுரைத்துப்) பாடிவெல்லும் கூத்தன். புலவர், அரசரால் பெரிது மதிக்கப்பட்ட தால் உயர்வுப் பன்மையீறு 'அர்' சேர்ந்து கூத்தன் கூத்தர் ஆயிற்று. இவரியற்றியன, ஈட்டியெழுபது, மூவருலா, தக்கயா கப்பரணி, இராமாயண உத்தரகாண்டம். பிறர் பாதிமுடித்த செய்யுளை, ஒட்டப்பாடி முடிக்கும் திறமையால், ஒட்டக்கூத்தர் எனப்பட்டார் என்பது பொருந்துவதன்று. ஒட்டப்பாடும் திறன் பலர்க்கும் கைவந்த கலை. சூளுரைத்துப் பாடி முடிப்பதே அரிய திறன்.]

ஒட்டகக்கோழி *ottagakkōḻi*, பெ. (n.) ***நெருப்புக்கோழி;*** ostrich. (சேரநா.).

ம. ஒட்டகக்கோழி.

[ஒட்டகம் + கோழி.]



ஒட்டகக்கோழி

ஒட்டகப் பறவை *ottagapparavai*, பெ. (n.) ***கழுத்து நீண்ட பறவை. அதாவது கொக்கு, நெருப்புக்கோழி முதலியன;*** birds with long necks like crane, ostrich etc. (சா.அக.).

[ஒட்டகம் + பறவை.]

ஒட்டகப் பாரை *ottaga-p-pārai*, பெ. (n.) ***ஒட்டாம்பாரை மீன்;*** horse mackerel. (செ.அக.).

[ஒட்டகம் + பாரை.]

ஒட்டகம் *ottagam*, பெ. (n.) ***பாலைவனப் பயணத்திற்கு தவும் நீண்டநாள் உண்ணாதிருக்கும் ஒரு விலங்கு*** (தொல்.பொருள்.573); camel, camelus dromedarius. (செ.அக.).

ம. ஒட்டகா; கொர. வண்டி; கை. வாண்டி; க. ஒண்டெ; துட. வொட்டி; படை. வொட்ட; து. வொண்ட; தெ. ஒண்டெ; கோண். ஊட்டு; கொண். லோட்டி; கூ. ஒடெ; குரு. உண்ட; மால். உடே. *Pkt.* ottaga; *Pali.* ஒட்ட. *Skt.* uṣṭa.

[ஒட்டு → ஒட்டகம். ஒட்டு = பட்டினி, ஒட்டகம் = பட்டினி கிடக்கவல்ல விலங்கு.]

ஒட்டகை *ottagai*, பெ. (n.) ***ஒட்டகம்*** பார்க்க (திருநெல். பு.விட்டுணு.25); see *ottagam.* (செ.அக.).

[ஒட்டு → ஒட்டகம் → ஒட்டகை.]

ஒட்டங்காய்ப்புல் *ottan-gāy-p-pul*, பெ. (n.) ***ஆடையி லொட்டும் ஒருவகைப் புல்;*** a kind of grass with prickly seeds which stick to the clothes (J.). (செ.அக.).

[ஒட்டும் + காய் + புல்.]

ஒட்டங்கி *ottaṅgi*, பெ. (n.) ***உலையாணிக்கோல்*** (C.E.M.); tool of metal-workers; beak-iron.

[ஒட்டு → ஒட்டங்கி. ஒட்டுதல் = தொடுதல்.]

ஒட்டச்சி *ottacci*, பெ. (n.) ***ஒட்டர் குடிப்பெண்;*** woman of the ottan caste. (செ.அக.).

[ஒட்டரம் + அத்தி - ஒட்டரத்தி → ஒட்டத்தி → ஒட்டச்சி. ஒட்டரம் = ஒரிசா.]

ஒட்டடஞ்சாகுபடி *ottaṭañ-jāgupaḍi*, பெ. (n.) ***ஒட்டடை நெற்பயிர் உண்டாக்கற்குரிய வேளாண் முறை*** (G.Tj.D.1.95); method of cultivation in which the ottaḍai paddy is raised.

[ஒட்டன் + சாகுபடி. ஒட்டன் = ஒட்டடைநெல். ஆகுவழி → ஆகுவடி → சாகுவடி → சாகுபடி.]

ஒட்டடை[1] *ottaḍai*, பெ. (n.) 1. ***நூலாம்படை;*** spider's web and dust; cob-web. 2. ***சம்பாநெல் வகை;*** a variety of campā paddy cultivated in the Thanjavur district and maturing in eight months. (செ.அக.). 3. ***மெல்லிய சுட்டப்பம்;*** a thin rice cake. (சா.அக.).

[ஒட்டு + அடை. ஒட்டு = மெல்லியது.]

ஒட்டடை[2] *ottaḍai*, பெ. (n.) ***பொலிதூற்றி அளப்பதற்கு ஏந்தான நிலை;*** condition of being ready for measurement, as of harvested paddy. (Madu.) (செ.அக.).

[ஒட்டு + அடை - ஒட்டடை. ஒட்டு = பொட்டு, பதர். ஒட்டடை = ஒட்டும் பதரும் சேர்ந்தது.]

ஒட்டணி *ottaṇi*, பெ. (n.) ***உவமையால் பொருளைப் பெறவைக்கும் அணி*** (தண்டி.51); (Rhet.) figure of speech in which the idea of the subject matter is sought to be conveyed suggestively by the description of that which resembles it. (செ.அக.).

[ஒட்டு + அணி - ஒட்டணி. பிறிதுமொழிதல் அணி என்றும் சொல்லப்படும்.]

ஒட்டத்தி *ottatti*, பெ. (n.) ***ஒட்டுத்துத்தி*** பார்க்க (மலை.); see *ottuttutti.* (செ.அக.).

ஒட்டப்பம் *ottappam*, பெ. (n.) ***தோசை;*** pan-cake. (செ.அக.).

[ஒட்டு + அப்பம் - ஒட்டப்பம் → ஒட்டப்பம்.]

ஒட்டப்பிடி-த்தல் *ottappiḍi-*, 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***இழுத்துப்பிடித்தல்;*** to hold fast or tight, as the reins of a horse. 2. ***இழுத்துப் பிடித்தல்;*** to stretch hard as in measuring cloth. (W.). 3. ***வலுக்கட்டாயம் செய்தல், தொல்லை செய்தல்;*** to apply pressure to, to compel. (Loc.) (செ.அக.).

[ஒட்டு → ஒட்ட + பிடி.]

ஒட்டப்போடு-தல் *otta-p-pōḍu-*, 19.செ.குன்றாவி. (v.t.) 1. ***தன்னைத் தானே பட்டினி போடுதல்;*** to starve one's self. 2. ***பட்டினி கிடக்கச் செய்தல்;*** to make a patient fast to cure his disease; to put a person, on short commons for disciplinary purposes. (W.). (செ.அக.).

[ஒட்டு → ஒட்ட + போடு.]

ஒட்டம்[1] *ottam,* பெ. (n.) 1. ***பந்தயம்;*** wager, stake; "ஒட்டம் யாவுநீ கொடுக்க" (பாரத.சூது.172). 2. ***வெட்டளவு காட்ட வைக்குந் திடர்;*** conical mass of earth left out by pit or tank diggers to show the depth excavated (W.). (செ.அக.).

[ஒட்டு + அம் - ஒட்டம்.]

ஒட்டம்[2] *ottam,* பெ. (n.) *ஒட்டரம்* பார்க்க; see *ottaram.* (செ.அக.).

ஒட்டம்[3] *ottam,* பெ. (n.) ***ஒப்பந்தம்*** (புது.); agreement. (செ.அக.).

[ஒட்டு → ஒட்டம் (வே.க.110).]

ஒட்டம்[4] *ottam,* பெ. (n.) ***ஓடு*** (யாழ்.அக.); potsherd. (செ.அக.).

[ஓல் → ஓள் → ஓடு → ஒட்டம். ஓடு = ஓடியத்தக்கது.]

ஒட்டமொட்டு-தல் *ottam-ottu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***பந்தயம் போடுதல்;*** to wager. (செ.அக.).

[ஒட்டம் + ஒட்டு.]

ஒட்டர்[1] *ottar,* பெ. (n.) ***ஒட்டர நாட்டவர்*** (பாரத. முதற்போ.35); people of the Orissa country. (செ.அக.).

ம. ஒட்டர்; க. ஒட்ட; தெ. ஒட்டெவாடு.

[ஒட்டரம் (ஒரிசா) → ஒட்டர்.]

ஒட்டர்[2] *ottar,* பெ. (n.) ***நீரோடை, ஆறு முதலியவற்றின் குறுக்கே கல்லணை கட்டும் பணியாளர்;*** skilled labourers in constructing dam.

[ஒட்டு + அர் - ஒட்டர். ஒட்டு = அணை, கற்களால் கட்டும் நீர்த்தடுப்பு.]

ஒட்டர்[3] *ottar,* பெ. (n.) ***பகைவர்;*** foes.

[ஒட்டார் → ஒட்டர்.]

ஒட்டரம் *ottaram,* பெ. (n.) ***இன்றைய ஒரிசா மாநிலத்தின் பழைய தமிழ்ப்பெயர்;*** ancient Tamil name for Orissa. (செ.அக.).

[ஒட்டு → ஒட்டரம். ஒட்டு = சிறுகுன்று. ஒட்டரம் = குன்றுகள் நிறைந்த பகுதி. இனி, ஒட்டு (கல்லணை) கட்டும் பணியில் வல்ல ஒட்டர் வாழும் பகுதி என்னும் பொருளில் ஒட்டரம் எனப் பெயர் பெற்றிருக்கலாம்.]

ஒட்டல் *ottal,* பெ. (n.) 1. ***சேர்க்கை;*** adhesion, contact; attachment, conjunction. 2. ***உள்ளொடுங்குகை;*** shrinking, contracting. 'ஒட்டற்கவுள்' (கோயிற்பு.நடரா.30). 3. ***உடன்பாடு*** (திவா.); consent; assent. (செ.அக.).

ம. ஒட்டல்; க. ஒட்டெ; கோத. ஒட்; து. ஒட்டு; தெ. ஒட்டு; பர். ஒட்ப் (வெள்ளையடித்தல்).

[ஒட்டு + அல்.]

ஒட்டலரி *ottalari,* பெ. (n.) ***கல்லலரி;*** wild - oleander. (சா.அக.).

[ஒட்டு + அலரி.]

ஒட்டலன்[1] *ottalan,* பெ. (n.) 1. ***பகைவன்;*** lit, one who will not unite, foe, enemy. "ஒட்டலன்றொ டவுற்ற தண்டத்தின்" (கந்தபு.சிங்கமு.416) (செ.அக.). 2. ***மெலிந்தவன்;*** lean man. (ஆ.அக.).

ம. ஒட்டலன்.

[ஒட்டு + அல் + அன் - ஒட்டலன். 'அல்' - எ.ம.இ.நி.]

ஒட்டவிடு-தல் *otta-vidu-,* 18.செ.குன்றாவி. (v.t.) 1. ***சேரவிடுதல்;*** to let one join, permit access. 2. ***பொரவிடுதல்;*** to set up one against another, to bait, as in a cock-fight. (W.). (செ.அக.).

[ஒட்ட + விடு.]

ஒட்டற்காது *ottar-kādu,* பெ. (n.) 1. ***குறுகிய காது;*** short ears. (W.). 2. ***ஒட்டவைத்த காது;*** stretched ear-lobe shortened by surgical operation. (செ.அக.).

[ஒட்டல் + காது.]

ஒட்டற்பலா *ottarpalā,* பெ. (n.) ***ஒட்டப் பிலவு;*** devils nettle. (சா.அக.).

[ஒட்டல் + பலா.]

ஒட்டற்ற பொன் *ottarrapon,* பெ. (n.) 1. ***கலப்பில்லாத பொன்;*** unalloyed or refined gold. 2. ***மாற்றுயர்ந்த பொன்;*** pure gold.

[ஒட்டற்ற + பொன். ஒட்டு = கலப்பு.]

ஒட்டறை *ottarai,* பெ. (n.) 1. ***ஒட்டடை.1.*** பார்க்க; see *ottadai 1.* "அற்பவகி நஞ்சிவைகள் ... ஒட்டறை யாற் போம்" (பதார்த்த.1142). (செ.அக.).

[ஒட்டடை → ஒட்டறை (கொ.வ.).]

ஒட்டன்[1] *ottan,* பெ. (n.) ***ஒட்டர*** (ஒரிசா) ***நாட்டிலிருந்து வந்த பணியாளன் அல்லது தொழிலாளி;*** a worker or a labourer originally belongs to Orissa state. (செ.அக.)

ம. ஒட்டன்; தெ. ஒட்டெ வாடு; க. ஒட்ட.

[ஒட்டரம் → ஒட்டான் → ஒட்டன்.]

ஒட்டன்[2] *ottan,* பெ. (n.) ***நெல்வகை;*** variety of paddy cultivated in the Thanjavur district and maturing in six and a half months. (செ.அக.).

[ஒட்டு → ஒட்டன்.]

ஒட்டாக்கொற்றி *ottā-k-korri,* பெ. (n.) 1. ***கன்றை யணுக விடாத கறவைமாடு;*** cow that repels its calf. 2. ***அன்பில்லாத பெண்;*** woman unkind to her child or to her husband. (செ.அக.).

[ஒட்டாத → ஒட்டா + கொற்றி - ஒட்டாக்கொற்றி. கொற்றி = மாடு.]

ஒட்டாங்கிளிஞ்சில் *ottāngiliñjil,* பெ. (n.) 1. ***உடைந்த சிப்பி;*** broken oyster shell. 2. ***ஒருவகை மீன்;*** a kind of shell fish.

[ஓடு → ஒட்டாம் → ஒட்டாம் + கிளிஞ்சில்.]

ஒட்டாங்குச்சு *ottānguccu,* பெ. (n.) 1. ***ஒட்டாங் காய்ச்சில்*** பார்க்க; see *Ōttāngāyccil.* 2. ***மண்கல ஓடு;*** broken piece of a pot.

ஒட்டாங்கொடி *ottāngodi,* பெ. (n.) ***ஓடாங்கொடி*** பார்க்க; see *odāngodi.* (செ.அக.).

ஒட்டாநோய் *ottānōy,* பெ. (n.) ***தொற்றாநோய்கள்;*** disease which do no infect persons. (சா.அக.).

[ஒட்டாத + நோய்.]

ஒட்டாம் பாரை *ottām-pārai,* பெ. (n.) ***கடல்மீன் வகை;*** horse mackerel of olive colour. (செ.அக.).

[ஒட்டாம் + பாரை:]

ஒட்டார் *ottār,* பெ. (n.) ***பகைவர்;*** foes, those who will not unite. "ஒட்டார் சொலொல்லை யுணரப்படும்" (குறள்,826). "ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின்" (குறள்,967), (செ.அக.).

ம. ஒட்டார்.

[ஒண்டு → ஒட்டு → ஒட்டார். (வே.க.110).]

ஒட்டாரக் காரன் *ottāra-k-kāran,* பெ. (n.) ***பிடிவாதமுள் ளவன்;*** obstinate fellow; contumacious man. (செ.அக.).

[ஒட்டாரம் + காரன்.]

ஒட்டாரங்கட்டு-தல் *ottāran-kattu-,* 5.செ.கு.வி. (v.i.) ***பிடிவாதம் பண்ணுதல்;*** to be obstinate; to be perverse, head-strong. "ஒட்டாரங் கட்டி நம் பல்லக்குக் கொம்பை யொடித்தெறிந்த" (தனிப்பா.1,223,13) (செ.அக.).

[ஒட்டாரம் + கட்டு.]

ஒட்டாரம் *ottāram,* பெ. (n.) ***முற்கூறியதையொட்டியே இறுதிவரை மாறாது நிற்றல்*** (பிடிவாதம்); constanton principles; obstinacy; stubbornness; perversity. (Loc.). (செ.அக.).

ம. ஒட்டாரம்; தெ. ஒட்டாரமு.

[ஒட்டு → ஒட்டாரம்.]

ஒட்டாவுருவம் *ottā-v-uruvam,* பெ. (n.) ***கற்படிமம்*** (யாழ்.அக.); stone image, dist. fr. otturuvam. (செ.அக.).

[ஒட்டாத + உருவம்.]

ஒட்டி[1] *otti,* பெ. (n.) ***ஒரின மீன்*** (ஒட்டு மீன்); a kind of fish.

ம. ஒட்டி.

ஒட்டி[2] *otti,* பெ. (n.) ***ஒருவகை அப்பம்;*** a kind of cake.

குட., ம. ஒட்டி.

[ஒட்டு → ஒட்டி = ஒட்டில் ஒட்டியவாறு வேகும் அப்பம். இது எலாட்டி → ரொட்டி எனத் திரிந்த வடபுலத்திரிபு கடுங் கொச்சை வழக்கு.]

ஒட்டி[3] *otti,* பெ. (n.) 1. ***ஒட்டி நிற்கும் பொருள்;*** that which adheres to, coheres with. "ஒட்டி யவனுளனாகில் லான்" (சி.போ.2,1,1). 2. ***ஒட்டொட்டி*** பார்க்க; see *ottotti.* 3. ***ஒரு கடல் மீன்;*** a marine fish. (J.). (செ.அக.).

ம. ஒட்டி.

[ஒட்டு → ஒட்டி.]

ஒட்டிக்கிரட்டி *ottikkiratti,* பெ. (n.) ***ஒன்றுக்கு இரண்டு பங்கு;*** twice as much. (colloq.). (செ.அக.).

[ஒன்று → ஒற்றை → ஒட்டை → ஒட்டி + கு + இரட்டி.]

ஒட்டிக்கொடு-த்தல் *otti-k-kodu-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***உறுதி பண்ணித் தருதல்;*** to give an assurance; to solemnly promise, guarantee. "ஐங்கழஞ்சுபொன் மன்ற ஒட்டிக் கொடுத்தோம்" (S.I.I.iii.99) (செ.அக.).

[ஒட்டு → ஒட்டி + கொடு.]

ஒட்டிக்கொள்ளல் *ottikkollal,* பெ. (n.) 1. ***நோய் பற்றுதல். இது நோயாளியினின்று நேராகவும் அல்லது பிறிதொரு வழியாகவும் வந்துசேரும்;*** infection of disease by contact with a patient directly or transmitted through water, food or other means of conveyance indirectly. 2. ***ஒன்றோடொன்று மிகுதியாகப் பொருந்தல்;*** any abnormal joining of parts to each other - adhesion. (சா.அக.). "ஒட்டாரை ஒட்டிக்கொளல்" (குறள்.679).

[ஒட்டி + கொள்ளல்.]

ஒட்டி கக்குவான் *otti-kakkuvān,* பெ. (n.) ***ஒருவகைப் புல்*** (யாழ்.அக.); grass. (செ.அக.).

ஒட்டிடு-தல் *ottidu-,* 20.செ.கு.வி. (v.i.) 1. ***பந்தயம் போடுதல்;*** to lay a wager. 2. ***ஆணையிடுதல்;*** to take an oath. (செ.அக.).

[ஒட்டு + இடு.]

ஒட்டிதற் கடமை *otti-tar-kadami,* பெ. (n.) ***குடியான வன் கொடுக்குங் கடமைகளுளொன்று*** (T.A.S.iii.32); customary due payable by the cultivator. (செ.அக.).

[ஒட்டி + தன் + கடமை. ஒட்டி = உறுதி. கடமை = வரி. தான் செலுத்த வேண்டிய கட்டாயமான வரி.]

ஒட்டிப் பயறு *ottippayaru,* பெ. (n.) ***எலிப்பயறு*** (சா.அக.); a kind of pulse, leguminous plant.

[ஒட்டி + பயறு.]

ஒட்டிப்போ-தல் *otti-p-pō-,* 8.செ.கு.வி. (v.i.) 1. ***கூடப் போதல்*** (வின்.); to go along with. 2. ***வற்றுதல்;*** to become lean; to get emaciated, to shrink. 'கன்னம் ஒட்டிப் போயிருக்கிறது' (செ.அக.).

[ஒட்டி + போ-தல்.]

ஒட்டியம் *ottiyam,* பெ. (n.) 1. ***ஒரு நாடு;*** Orissa. 2. ***ஒட்டர மொழி;*** Oriya, the language of Orissa. 3. ***ஒருவகை மந்திர வித்தை;*** kind of witchcraft.

4. *மந்திர வித்தை யுணர்த்தும் நூல்;* treatise on witchcraft. (W.). (செ.அக.).

ம. ஒட்டியம்; க. ஒட்டி; தெ. ஒட்டெ.

[ஒட்டு → ஒட்டியம்.]

ஒட்டியர் *ottiyar,* பெ. (n.) **ஒட்டியன்** பார்க்க; see *ottiyan.*

ஒட்டியன் *ottiyan,* பெ. (n.) 1. *ஒட்டர நாட்டவன்* (பாரத.இராசசூய.134); native of Orissa. 2. *ஒட்டரநாட்டரசன்;* king of Orissa. "ஒட்டியன் போற் பெண்" (தமிழ்நா.223). (செ.அக.).

ம. ஒட்டியன்

ஒட்டியாக்கு-தல் *ottiyākku-,* 5.செ.குன்றாவி. (v.t.) *இணையாக்குதல்;* to equalize, to make equal.

[ஒட்டு → ஒட்டி + ஆக்கு-தல்.]

ஒட்டியாணம் *ottiyāṇam,* பெ. (n.) 1. *ஓகப்பட்டை* (திருமந்.818); girdle worn by yogis while in a sitting posture, so as to bind the waist and the doubled-up legs together. 2. *மாதர் இடையில் அணியும் அணியு ளொன்று;* gold or silver girdle or belt, an ornament worn by women round the waist "உடை தாரமு மொட்டி யாணமும்" (மீனாட்.பிள்ளைத்.ஊசல்.10) (செ.அக.).

ம. ஒட்டியாண், ஒட்டிஞாண்; க. ஒட்ட்யாண; து. ஒட்யாண்; தெ. ஒட்டாணமு; ஒட்யாண்டு.

*[உடு → ஒடு + நாண் - ஒட்டுநாண் (அரைஞாண்கயிறு) → ஒட்டியாண் + அம் - ஒட்டியாணம். **உடைநாண்** பார்க்க; see udaināṇ.]*

உடு = இடுப்பு. தெலுங்கிலும் கன்னடத்திலும் உடு → ஒடி எனத்திரியும். ஒடி = இடுப்பு. ஒடி → ஒட்டி → ஒட்டியாணம் எனத் திரிந்தது. இதன் பழந்தமிழ்ப் பெயர் உடு + நாண் - உடைநாண். அரை ஞாணைக் குறித்தசொல் மகளிர் இடையி லணியும் அணிகலனைத் தெலுங்கில் குறித்தது. ஓகநிலையிலம ரும் முனிவர், இடுப்பொடு மடித்த பாதங்களைச் சேர்த்துக்கட் டும் துணி அல்லது நூற்கயிறு உடைநாண் (ஒட்டியாணம்) எனப்பட்டது. பிற்காலத்தில் இது பூணூல் என்னும் பெயர் பெற்றது என்பது திருமந்திரம் 818ஆம் பாடலால் தெரியவருகி றது.

ஒட்டியாதேவி *ottiyā-dēvi,* பெ. (n.) **ஒட்டியக் காளி** பார்க்க (வின்.); see *ottiyakkāli.* (செ.அக.).

ஒட்டியான் *ottiyān,* பெ. (n.) *கையாள்;* attendant. "ஒட்டியானும் இல்லை புட்டிக் கடுப்பால் உளைந்தேன்" (வள்ளி.கதை.Ms.).

[ஒட்டு → ஒட்டியான்.]

ஒட்டியுப்பு *otti-y-uppu,* பெ. (n.) *வெடியுப்பு* (மூ.அ.); saltpetre. (செ.அக.).

[ஒட்டி + உப்பு.]

ஒட்டிரட்டி *ottiratti,* பெ. (n.) *ஒற்றைக் கிரட்டை;* double, twice as much. "இலங்கைப் போர்க் கொட்டிரட்டி கலிங்கப் போர்" (கலிங்.218,புது.) (செ.அக.).

[ஒன்று → ஒற்று + இரட்டி = ஒற்றிரட்டி → ஒட்டிரட்டி (கொ.வ.).]

ஒட்டின்மரம் *ottinmaram,* பெ. (n.) **ஓர் பூமரம். இதில் பூக்கள் பெரிதாயும் வெண்மையாயும், நறுமணமுள் ளதாயும் மூன்று பூக்களுடைய கொத்துக்கள் அமைந் ததாயு மிருக்கும். பிறிதொரு மரத்தை ஒட்டுவதனால் முளைத்த மரம்;** tree propagated by graiting. (சா.அக.).

[ஒட்டு + இன் + மரம்.]

ஒட்டினர் *ottinar,* பெ. (n.) *நண்பர் முதலியோர்* (வின்.); those who are attached together, friends, relations, adherents. (செ.அக.).

[ஒட்டு → ஒட்டினர்.]

ஒட்டு^{1}-தல் *ottu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. *ஒட்டவைத்தல்;* to stick, as with paste or gum, to glue on. இந்தத் தாளைப் புத்தகத்திலே ஒட்டு (உ.வ.). 2. *தடுத்தல்; அணைகட்டுதல்;* to obstruct, to construct a dam. 3. *சார்தல்;* to be take one's self to, as for support, for protection, to be near to. "திருவடியை யொட்டாத பாவித் தொழும்பரை" (திருவாச.10,7). 4. *பந்தயம் வைத்தல்;* to wager, stake. "மாதுதன்னை யொட்டி" (பாரத.சூது.182). 5. *துணிதல்;* to resolve, make up one's mind; decide. "காண்பதே கருமமாக வொட்டி" (சீவக.2143). 6. *தாக்குதல்;* to assail, attack, invade. "மாந்தருறை நிலத்தோ டொட்ட லரிது" (குறள்.499). 7. *படைத்தல்* (உரி.நி.); to create, make. 8. *கூட்டுதல்;* to enhance, raise, as the sale price of an article. விலையைச் சிறிதொட்டி வைத்தான். 9. *கிட்டுதல்;* to advance towards, come into close quarters with. "ஒட்டித் தன் கையைப் பற்றி யீர்த்ததும்" (திருவிளை.அங் கம்.23). 10. *இசைதல்* (சம்மதித்தல்); to acquiesce, brook, tolerate; "ஒட்டேனரசோடொழிப்பேன் மதுரையை" (சிலப்.21,37). 11. *அறுதியிடுதல்;* to undertake, bind oneself to do a thing. "யாதுமொழியாமலொட்டி ... முயல்கின்றார்" (சீவக.591). 12. *நட்பாக்குதல்;* to make friends with. "ஒட்டாரை யொட்டிக் கொளல்" (குறள்.679).

க., ம., து. ஒட்டு.

[அண் → அண்டு → ஒண்டு → ஒட்டு.]

ஒட்டு^{2}-தல் *ottu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. *ஒட்டிக் கொள்ளுதல்;* to dry to become parched up, as the tongue; "ப்ரஜை தாய் முலையையகலில் நாக்கு ஒட்டுமாபோலே" (ஈடு.1,3,9). 2. *வஞ்சினம் கூறல்* (சபதம் செய்தல்); to challenge, debate. "ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்" (மணிமே.1,60). 3. *உள்ளொடுங்குதல்;* to shrink, contract; ஒட்டிய வயிறு. 4. *பதுங்கி நிற்றல்;* to play the eaves-dropper; to lurk; to lie in ambush. 5. *பொருந்துதல்;* to be suitable, appropriate. "பருவத்தோ டொட்ட வொழுகல்" (குறள்.482) (செ.அக.).

ம. ஒட்டுக; க. ஒட்டு; கோத. ஒட்; து. ஒட்டுனி; தெ. ஒட்டு; பர். ஒட்ப்.

[ஒல் → ஒள் + து - ஒட்டு. அண் → அண்டு → ஒண்டு → ஒட்டு.]

ஒட்டு[3] *ottu,* பெ. (n.) 1. ***இணைக்கப்பட்டது;*** patch, piece struck or fastened on, whether of cloth, board or metal. 2. ***அணை;*** dam. ஆற்றில் ஒட்டு கட்டியிருக்கி றார்கள் (இ.வ.). 3. ***பறவை பிடிக்குங் கருவி;*** bird-lime. "ஒட்டில் பட்டகுருகு" (திருப்பு.1163). 4. ***நட்பு;*** union, friendship. அவனுக்கும் இவனுக்கும் ஒட்டு அதிகம். 5. ***சார்பு;*** connection, attachment, love, affection. "ஒட்டறப் பொருட்பறிப்பவர்க்கு" (திருப்பு.615). 6. ***ஒப்பு;*** comparison, resemblance. "ஒட்டுரைத்திவ் வுலகுன்னைப் புகழ்வெல்லாம்" (திவ்.திருவாய்.3,1,2). 7. ***படைவகுப்பு*** (திவா.); division of an army, battle array. 8. ***நற்சமயம்*** (வின்.); favourable opportunity.

க., ம., து. ஒட்டு.

[அண் → அண்டு → ஒண்டு → ஒட்டு.]

ஒட்டு[4] *ottu,* பெ. (n.) 1. ***பொட்டு, பதர்;*** husk. 2. ***சிறுமை*** (அற்பம்) (சூடா.); smallness, narrowness. 3. ***ஓரம்;*** border, edge. அந்தக் குழந்தை ஒட்டிலே இருக்கி றது. 3. ***கதிர்கொய்த தாள்*** (யாழ்ப்.); stubble.

[ஒட்டு = சேர்தல் , ஒட்டியிருத்தல், மேலோடு, உமி, பதர்.]

ஒட்டு[5] *ottu,* பெ. (n.) ***ஆணை;*** oath. "ஒட்டு வைத்தே னும் மேல்வாரீர்," (அருட்பா,vi,வர்க்கமாலை.89).

தெ. ஒட்டு.

[ஒட்டு[1] → ஒட்டு.[5]]

ஒட்டு[6] *ottu,* பெ. (n.) ***இகலாட்டம்*** (வின்.); rivalry, emulation.

[ஒல் → ஒற்று → ஒட்டு.]

ஒட்டு[7] *ottu,* பெ. (n.) ***ஒட்டணி*** பார்க்க (குறள்.475, உரை.); see *ottani.*

ஒட்டு[8] *ottu,* பெ. (n.) 1. ***மரப்பட்டை;*** bark of a tree. "ஒட்டு விட்டுலறிய பராரை" (கல்லா.6,25). 2. ***தவசக் காய்கனிகளின் மேல் இருக்கும் தோல்;*** upper skin or rind of grains, vegetables etc. 3. ***வேறுவகை மரக்கிளையுடன் ஒட்டவைத்துண்டாக்கிய செடி;*** graft. இந்தச் செடி ஒட்டு. 4. ***புல்லுருவி***(மலை.); species of loranthus.

[ஒட்டு[1] - ஒட்டு.[8]]

ஒட்டு[9] *ottu,* பெ. (n.) 1. ***மொத்தம், கூடுதல்;*** total. 2. ***விலை கூட்டுகை*** (வின்.); raising the bid, as at an auction.

[ஒட்டு[1] → ஒட்டு.[9]]

ஒட்டு[10] *ottu,* பெ. (n.) 1. ***சிறிய குன்று;*** hill. 2. ***செய்குன்று;*** artificial hill.

[ஒட்டு[1] → ஒட்டு.[10]]

ஒட்டுக்கடுக்கன் *ottu-k-kadukkan,* பெ. (n.) ***சிறு கடுக்கன் வகை*** (வின்.); small ear-ring sticking close to the ear. (செ.அக.).

தெ. ஒண்டு; **க., து.,** ஒண்டி.

[ஒட்டு + கடுக்கன்.]

ஒட்டுக்கண் *ottu-k-kan,* பெ. (n.) ***இமையொட்டு நோயுள்ள கண்*** (வின்.); eye disease with the lids adhering or sticking together on account of inflammation. (செ.அக.).

[ஒட்டு + கண்.]

ஒட்டுக் கண்ணாள் *ottukkannāl,* பெ. (n.) 1. ***பெரு வெண்டை;*** big variety of bendy or lady's fingers. 2. ***பீளைக்கண்ணி;*** sore-eyed woman. (சா.அக.).

[ஒட்டு + கண்ணாள்.]

ஒட்டுக் கணவாய் *ottu-k-kanavāy,* பெ. (n.) ***மீன்வகை;*** a species of cuttle fish, (செ.அக.).

[ஒட்டு + கணவாய்.]

ஒட்டுக் காந்தம் *ottukkāndam,* பெ. (n.) 1. ***இரும்பிற்குச் சத்துக் கொடுத்து மாற்றிய காந்தம்;*** any soft iron converted into a magnet by induced magnatism - artificial magnet. 2. ***பொதுவாகவே இரும்பைத் தன்னிடத்தே ஒட்டிக்கொள்ளச் செய்யும் காந்தம்;*** an ordinary magnet which naturally attracts iron. (சா.அக.).

[ஒட்டு + காந்தம்.]

ஒட்டுக்காய்ச்சல் *ottu-k-kāyccal,* பெ. (n.) 1. ***தொற்றுக் காய்ச்சல்*** (வின்.); contagious fever. 2. ***உடம்போடொட்டிய காய்ச்சல்;*** chronic, lowfever. (செ.அக.).

[ஒட்டு + காய்ச்சல்.]

ஒட்டுக்காயம் *ottu-k-kāyam,* பெ. (n.) ***பட்டினி கிடக்கை;*** complete starvation (Tinn.) (செ.அக.).

[ஒட்டு + காயம்.]

ஒட்டுக்கால் *ottukkāl,* பெ. (n.) 1. ***ஒடிந்து அல்லது முறிந்து போய்ப் பிறகு ஒட்டிய அல்லது பொருந்திய கால்;*** a broken or fractured leg which was set right afterwards. 2. ***பொய்க்கால்;*** false leg. (சா.அக.).

[ஒட்டு + கால்.]

ஒட்டுக்குஞ்சு *ottu-k-kuñju,* பெ. (n.) 1. ***சிறுகுஞ்சு*** (வின்.); very young bird, nestling. 2. ***பேன்குஞ்சு*** (யாழ்ப்.); young louse. (செ.அக.).

[ஒட்டு + குஞ்சு.]

ஒட்டுக்குடி *ottu-k-kudi,* பெ. (n.) ***பிறரிடத்திற் கூடிவாழுங் குடி*** (வின்.); co-tenancy in a house. (செ.அக.).

[ஒட்டு + குடி.]

ஒட்டுக்குடுமி *ottu-k-kudumi,* பெ. (n.) ***உச்சிச் சிறு குடுமி;*** tiny tuft or lock of hair on the crown of the head. (செ.அக.).

[ஒட்டு + குடுமி.]

ஒட்டுக்குருத்து *ottukkuruttu,* பெ. (n.) ***சந்துகளிலன்றி வேறு இடங்களிலு முண்டாகுங் குருத்துகள்;*** (in botany) buds coming out from other than natural places - adventitious - bud. (சா.அக.).

[ஒட்டு + குருத்து.]

ஒட்டியாணம்

ஒட்டுக் கணவாய்



ஒட்டு மீன்

ஒட்டுத் துத்தி

ஒட்டுக்கேள்(ட்)-த(ட)ல் *ottu-k-kēl-*, 11.செ.குன்றாவி. (v.t.). *ஒற்றுக் கேள்-தல்* பார்க்க; see *orukkēl-*. (செ.அக.).

[ஒட்டு + கேள்.]

ஒட்டுக்கை *ottu-k-kai*, பெ. (n.) *துண்டுக்கைமரம்* (C.E.M.); jack rafter. (செ.அக.).

[ஒட்டு + கை.]

ஒட்டுக்கொடு-த்தல் *ottu-k-kodu-*, 4.செ.கு.வி. (v.i.) 1. *அணுக இடங் கொடுத்தல்;* to allow access, to be accessible. 2. *கேட்டது கொடுத்தல்;* to comply with, yield to, grant to a request. (செ.அக.).

[ஒட்டு + கொடு.]

ஒட்டுச்சம்பா *ottu-c-cambā*, பெ. (n.) *நெல்வகை* (விவசா.1); a kind of paddy. (செ.அக.).

[ஒட்டு + சம்பா.]

ஒட்டுச்சல்லடம் *ottu-c-calladam*, பெ. (n.) *குறுங்காற் சட்டை;* short trousers, athletic drawers. (செ.அக.).

[ஒட்டு + சல்லடம்.]

ஒட்டுச்சுண்ணாம்பு *ottuccunnāmbu*, பெ. (n.) *நூற்றுக்கு 40 பங்கு களிமண் சேர்ந்த சுண்ணாம்பு* (கட்டட.சா.); hydralic cement.

[ஒட்டு + சுண்ணாம்பு.]

ஒட்டுச்செடி *ottu-c-cedi*, பெ. (n.) 1. *ஒட்டொட்டி* பார்க்க; see *ottotti*. 2. *ஒட்டுக்கட்டி உண்டாக்குஞ் செடி;* graft plant. (செ.அக.).

ம. ஒட்டுச்செடி.

[ஒட்டு + செடி.]

ஒட்டுச்சேர்வை *ottu-c-cērvai*, பெ. (n.) *புண் அல்லது கட்டிகளில் ஒட்டிக்கொள்ளும்படி யிடும் சீலை மருந்து;* adhesive plaster. (சா.அக.).

[ஒட்டு + சேர்வை.]

ஒட்டுஞாண் *ottuñān*, பெ. (n.) 1. *ஒட்டியாணம்;* girdle worn round the loins by women. 2. *அரைக்குப் புறத்தே தோன்றும் ஒரு வகைச் சொறி;* cuitaneous eruption on the loins. (சேரநா.).

ம. ஒட்டு ஞாண்.

[ஒட்டு + ஞாண்.]

ஒட்டுடந்தை *ottudandai*, பெ. (n.) 1. *சிறுதொடர்பு;* slight participation, a little connection, as in an act. 2. *தொலைவுறவு;* distant relationship.

[ஒட்டு + உடந்தை.]

ஒட்டுத்தரவு *ottuttaravu*, பெ. (n.) *சுற்றாணை, சுற்றுத்தரவு* (C.G.); circular (செ.அக.).

ம. ஒட்டுத்தரவு.

[ஒட்டு + தரவு.]

ஒட்டுத் திண்ணை *ottu-t-tinnai*, பெ. (n.) 1. *பெருந் திண்ணைக்குச் சார்பாகக் கீழ்ப்புறங் கட்டப்படும் சிறு திண்ணை;* raised masonry projection along side the pial. 2. *வாசலுக்கும் பக்கத்துச் சுவருக்கும் இடையிலுள்ள மிகச் சிறிய தெருத்திண்ணை;* narrow strip of raised projection or pial between the entrance door of a house and the side wall; narrow pial in an Indian dwelling house. "ஒட்டுத் திண்ணையிலே படுத்த கடைச் சிறியேன்" (அருட்பா,vi.அருள்விளக்க.45) (செ.அக.).

[ஒட்டு + திண்ணை.]

ஒட்டுத்துணி *ottu-t-tuni*, பெ. (n.) *ஒட்டிவைத்துத் தைக்கப்படும் துணித் துண்டு;* piece of cloth for patching. (செ.அக.).

[ஒட்டு + துணி.]

ஒட்டுத்துத்தி *ottu-t-tutti*, பெ. (n.) 1. *செடிவகை;* angle-leaved burr mallow. 2. *துத்திப் பூண்டு வகை* (மலை.); lobe-leaved burr mallow. (செ.அக.).

[ஒட்டு + துத்தி.]

ஒட்டுத்தையல் *ottu-t-taiyal*, பெ. (n.) *ஒட்டுத்துணியிட்டுத் தைக்குந் தையல்;* patching needle work. (செ.அக.).

[ஒட்டு +தையல்.]

ஒட்டு நத்தை *ottunattai*, பெ. (n.) *காலிலொட்டிக் கொண்டு துன்பத்தை யுண்டாக்கும் ஓர்வகை நத்தை* (சா.அக.); a kind of snail which gives trouble by sticking on legs.

ஒட்டுநர் *ottunar*, பெ. (n.) *நண்பர்* (திவா.); friends, adherents. (செ.அக.).

[ஒட்டு → ஒட்டுநர்.]

ஒட்டுநோய் *ottunōy*, பெ. (n.) *தொத்துநோய்;* infectious or contagious disease.

[ஒட்டு + நோய்.]

ஒட்டுப்பழம் *ottu-p-palam*, பெ. (n.) *ஒட்டுமரத்தின் பழம்;* graft fruit, esp. the mango. (செ.அக.).

[ஒட்டு + பழம்.]

ஒட்டுப்பற்று *ottu-p-parru*, பெ. (n.) 1. *அவாக்கட்டு* (ஆசாபாசம்); attachment, tie of affection, as to one's family. 'அவனுக்குக் குடும்பத்தில் ஒட்டுப் பற்றில்லை' (செ.அக.).

[ஒட்டு + பற்று.]

ஒட்டுப்பார்-த்தல் *ottu-p-pār-*, 4.செ.குன்றாவி. (v.t.) *உளவு பார்த்தல்;* to spy. (ஆ.அக.).

[ஒட்டு + பார்.]

ஒட்டுப்பிசின் *oṭṭu-p-pišin,* பெ. (n.) *பறவைகளைப் பிடிப்பதற்கு வைக்கப்படும் பிசின் தடவிய கண்ணி;* bird-lime. (இ.வ.) (செ.அக.).

[ஒட்டு + பிசின்.]

ஒட்டுப் பிரிமொழி *oṭṭu-p-piri-moḻi,* பெ. (n.) *செய்யுட் குற்றங்களுளொன்று* (யாப்.வி.525); (Rhet.) defect in poetry. (செ.அக.).

[ஒட்டு + பிரி + மொழி.]

ஒட்டுப்புண் *oṭṭuppuṇ,* பெ. (n.) 1. *தொட்டவுடன் ஒட்டுகின்ற புண்;* sticky sore as ulcer. 2. *தொத்துப் புண்;* infectious itch. 3. *தொற்றுச்சிலந்தி;* contagious ulcer. 4. *ஏற்கனவேயுள்ள புண்ணினருகே தொந்தத்தி னாலேற்படும் பல புண்கள்;* contiguous sores appearing near an original sore. (சா.அக.).

[ஒட்டு + புண்.]

ஒட்டுப்புதவம் *oṭṭu-p-pudavam,* பெ. (n.) *இரட்டைக் கதவு;* double door. "ஒட்டுப் புதவமொன்றுண்டு" (சிலப்.11,120) (செ.அக.).

[ஒட்டு + புதவம்.]

ஒட்டுப்புல் *oṭṭu-p-pul,* பெ. (n.) *புல்வகை (வின்.);* sticking-grass (செ.அக.).

[ஒட்டு + புல்.]

ஒட்டுப்புழு *oṭṭu-p-puḻu,* பெ. (n.) *புறாமுட்டி* பார்க்க; see *purāmuṭṭi.* parakeet-bur, a widespread weed. (L.). (செ.அக.).

[ஒட்டு + புழு.]

ஒட்டுப்பொறுக்கி *oṭṭupporukki,* பெ. (n.) *எச்சிற்பொ றுக்கி;* beggar who lives on leavings of food ஒட்டுப் பொறுக்கி நட்டுவக்காலி (நெல்லை.). (செ.அக.).

[ஒட்டு + பொறுக்கி.]

ஒட்டுப்பொறுக்கு-தல் *oṭṭu-p-porukku-,* 5.செ.குன் றாவி. (v.t.) *சிதறியவற்றைச்சேர்த்தல்;* to glean scattered remains, as of food; to scrape together. (செ.அக.).

[ஒட்டு + பொறுக்கு.]

ஒட்டுப்போடு-தல் *oṭṭu-p-pōḍu-,* 20.செ.கு.வி. (v.i.) 1. *துண்டு வைத்து இணைத்தல்;* to stick on, as a piece; to sew on, as a patch. 2. *சமயம் பார்த்தல்* (வின்.); to lie in wait; to bide one's time. (செ.அக.).

[ஒட்டு + போடு.]

ஒட்டுமயிர் *oṭṭu-mayir,* பெ. (n.) 1. *குடுமியுடன் கூடாத மயிர்;* hair clipped or new grown about the tuft on the head. 2. *வைத்துக் கட்டும் மயிர்;* false hair. (செ.அக.).

[ஒட்டு + மயிர்.]

ஒட்டுமருந்து *oṭṭumarundu,* பெ. (n.) 1. *ஒட்டவைக்கும் மருந்து;* plastic materials used in medicine, plaster. 2. *துணித்த சதைப் பாளங்களையும், முறித்த வெலும் புகளையும் பொருந்திக் கொள்ளும்படி தமிழ் மருத்து வத்தில் பயன்படும் சதையொட்டி, எலும்பொட்டி முதலிய மூலிகைகள்;* (in Tamil medicine) drugs that are used for purposes of curing incised wounds and for setting right the fractured bones. (சா.அக.).

[ஒட்டு + மருந்து.]

ஒட்டுமா *oṭṭumā,* பெ. (n.) 1. *ஓர்வகைத் தித்திப்பு மாங்காய்;* graft mango. 2. *ஒட்டவைத்து முளைத்த இனக் கலப்பான மாமரம்;* mango-tree propagated by grafting. (செ.அக.).

ம. ஒட்டுமாவு.

[ஒட்டு + மா.]

ஒட்டுமீன் *oṭṭumīṉ,* பெ. (n.) *ஒருவகை மீன்;* sucker fish. (சேரநா.).

ம. ஒட்டுமீன்.

[ஒட்டு + மீன்.]

ஒட்டுமேகம் *oṭṭumēgam,* பெ. (n.) *தொற்றுவதனாலும் அல்லது வேறுவகைத் தொடர்பினாலு முண்டாகும் மேகத் தொடர்பான நோய்;* a contagious syphilis or other venereal disease aquired by direct venereal contact. (சா.அக.).

[ஒட்டு + மேகம்.]

ஒட்டுமொத்தம் *oṭṭu-mottam,* பெ. (n.) *முழுமொத்தம்;* grand total. (செ.அக.).

[ஒட்டு + மொத்தம்.]

ஒட்டுரிமை *oṭṭurimai,* பெ. (n.) *ஒட்டுடந்தை²* பார்க்க (வின்.); see *oṭṭuṇḍai.²* (செ.அக.).

[ஒட்டு + உரிமை.]

ஒட்டுருவம் *oṭṭuruvam,* பெ. (n.) *மரப்பதுமை* (யாழ். அக.); wooden image, dist. fr. oṭṭū-v-uruvam. (செ.அக.).

[ஒட்டு + உருவம்.]

ஒட்டுரோகம் *oṭṭurōgam,* பெ. (n.) *ஒட்டுநோய்* பார்க்க; see *oṭṭunōy.*

ஒட்டுவட்டில் *oṭṭu-vaṭṭil,* பெ. (n.) *வழிபாட்டு வட்டில்* (S.I.I.ii,3.);small vessel for holding water, etc., placed before the idol in worship. (செ.அக.).

[ஒட்டு + வட்டில்.]

ஒட்டுவாரொட்டி *oṭṭuvār-oṭṭi,* பெ. (n.) *ஒட்டுநோய்* பார்க்க; see *oṭṭunōy.* (செ.அக.).

[ஒட்டுவார் + ஒட்டி. ஒட்டுவார் = ஒட்டுபவர், தொடுபவர்.]

ஒட்டுவிடு-தல் *ottu-vidu-,* 20.செ.கு.வி. (v.i.) 1. ***பொருத்து நீங்குதல்;*** to become loose, disjoined as boards that had been glued together. 2. ***பற்றுவிடுதல்;*** to cease to be a friend or kinsman; to become dissociated. (செ.அக.).

[ஒட்டு + விடு-தல்.]

ஒட்டுவித்தை *ottu-vittai,* பெ. (n.) ***இடத்தைவிட்டுப் பெயராதிருக்கச் செய்யும் வித்தை;*** magic art of rendering persons incapacitated to move and making them transfixed to the ground. (செ.அக.).

[ஒட்டு + வித்தை.]

ஒட்டுவியாதி *ottu-viyādi,* பெ. (n.) ***ஒட்டுநோய்*** பார்க்க; see *ottunōy.* (செ.அக.).

ஒட்டுவிரல் *ottuviral,* பெ. (n.) ***கைவிரல்கள் ஒன்றோ டொன்று ஒட்டியிருத்தல்;*** fingers united by folds of skins or of membrances-webfingers. (சா.அக.).

[ஒட்டு + விரல்.]

ஒட்டுவேகம் *ottuvēgam,* பெ. (n.) ***மூகைப் புல்;*** hare-grass. (சா.அக.).

[ஒட்டு + வேகம். ஊகம் → வேகம்.]

ஒட்டுவேர் *ottuvēr,* பெ. (n.) ***மரத்தண்டுகளிலுண்டா கும் வேர்;*** root that springs up from the stem of a tree to the surface of the earth. (சா.அக.).

[ஒட்டு + வேர்.]

ஒட்டுவேலை *ottu-vēlai,* பெ. (n.) 1. ***இணைக்கும் வேலை*** (வின்.); joining, sticking on, patching. 2. ***போலிவேலை;*** deceptive, dishonest work. 3. ***மச்சுப் பாவும் வேலை;*** terracing. (செ.அக.).

[ஒட்டு + வேலை.]

ஒட்டுவை-த்தல் *ottu-vai-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***பறவை களைப் பிடிக்க ஒட்டுப்பிசின் வைத்தல்;*** to set bird-lime in order to ensnare birds. 2. ***ஆணையிடுதல்;*** to swear, take an oath. 3. ***அகழ்தோண்டுதல்*** (R.); to dig trenches or moats round a city. (செ.அக.).

ம. ஒட்டுவய்க்குக.

[ஒட்டு + வை.]

ஒட்டுறவு *otturavu,* பெ. (n.) ***நெருங்கிய தொடர்பு;*** close relationship. (செ.அக.).

[ஒட்டு + உறவு.]

ஒட்டெறும்பு *otterumbu,* பெ. (n.) ***ஒருவகைக் கட்டெ றும்பு;*** stick ant. (சா.அக.).

[ஒட்டு + எறும்பு.]

ஒட்டை[1] *ottai,* பெ. (n.) 1. ***ஒட்டைச்சாண்*** பார்க்க; see *ottai-c-cān.* ''மன்னிய வொட்டை மாத்திரையாகி வயங்குவன்'' (திருக்காளத்.பு.6,18). 2. ***ஒத்த அகவை அல்லது உயரம்;*** equal age or height.

க., து., ஒத்தெ; ம. ஒட்டெ.

[ஒட்டு → ஒட்டை.]

ஒட்டை[2] *ottai,* பெ. (n.) ***ஒட்டகம்;*** camel. ''இலகெயி றொட்டைக் களம்'' (கோயிற்பு.நட.30) (செ.அக.)

க. ஒன்டெ. *Hind. ūnt.*

[ஒட்டம் → ஒட்டை.]

ஒட்டை[3] *ottai,* பெ. (n.) 1. ***ஒத்தஅளவு;*** equal. 2. ***விளையாட்டில் உதவுவோன்;*** helper in a game. (செ.அக.).

தெ. உட்டி.

[ஒட்டு + ஐ.]

ஒட்டைக்கழுத்து *ottaikkaluttu,* பெ. (n.) ***ஒட்டையைப் போல் நீண்ட கழுத்து;*** neck unusually long like the one of a camel. (சா.அக.).

[ஒட்டை + கழுத்து.]

ஒட்டைச்சாண் *ottai-c-cān,* பெ. (n.) ***பெருவிரல் முனையிலிருந்து சுட்டுவிரல் முனைவரைக்கும் உள்ள நீளம்;*** short span between the tips of the thumb and fore finger extended. கட்டைவிரல் நுனியி னின்று சிறுவிரல் நுனிவரை உள்ள அளவு சாண் ஆகும். அதனின்று அளவில் சிறியது, கட்டைவிரல் நுனியி னின்று சுட்டுவிரல் நுனிவரையிலான அளவு ஒட்டைச் சாண் எனப்பட்டது.

[ஒட்டை + சாண்.]

ஒட்டைத்திருக்கை *ottai-t-tirukkai,* பெ. (n.) ***திருக்கை மீன் வகை*** (R.); a kind of tirukkai fish. (செ.அக.).

[ஒட்டை + திருக்கை.]

ஒட்டொட்டி *ottotti,* பெ. (n.) ***ஒட்டங்காய்ப்புல்;*** a kind of grass with prickly seeds which stick to the clothes. (செ.அக.).

[ஒட்டு + ஒட்டி.]

ஒட்டோலக்கம் *ottōlakkam,* பெ. (n.) 1. ***பேரவை;*** great assembly. 2. ***ஆரவாரம்*** (வின்.); show, pomp, magnificence. (செ.அக.).

தெ. ஒட்டோலக்கமு; க. ஒட்டோலக.

[ஒல் → ஒலகம் → ஒலக்கம். ஒட்டு + ஒலக்கம் - ஒட்டோலக்கம். (வே.க.114) ஒலக்கம் பார்க்க; see ōlakkam.]

ஒட்டோலம் *ottōlam,* பெ. (n.) ***பெருந்தெள்ளுக்கொடி;*** giant-rattle. (செ.அக.).

[ஒட்டு + ஒலம்.]

ஒட்பம்[1] *otpam,* பெ. (n.) ***அறிவு;*** intelligence; prescience; wisdom. "கல்லாதா னொட்பம் கழியநன் றாயினும்" (குறள்.404) (செ.அக.).

[ஒள் + பு - ஒட்பு + அம் - ஒட்பம்.]

ஒட்பம்[2] *otpam,* பெ. (n.) 1. ***அழகு;*** beauty. 2. ***நன்மை;*** benefit. 3. ***மேன்மை;*** excellence. (செ.அக.).

[ஒள் → ஒளி. ஒள் + பு - ஒட்பு + அம்.]

ஒடி[1]**-தல்** *odi-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***முறிதல்;*** to break, as a stick, a branch, a rib; to break off, snap; "விலா வொடிந்து" (பாரத.வேத்திரகீய்.61). 2. ***கெடுதல்;*** to be broken in strength, ruined. "ஒடியாப் பருவத்து" (கலித்.93,25). 3. ***இடையறுதல்;*** to cease for a time, break off, discontinue, suspend. "ஒடியா முறையின் மடிவிலையாகி" (புறநா.29) (செ.அக.).

ம. ஒடியுக; க. ஒடி, உடி; கோத. ஒட்வ்; துட. வட்; குட. ஒடெ; து. ஒடியுனி, ஒடெயுனி; தெ. ஒடியு; கொலா. ஒட்; நா. நாட், நாக்; கட. ஒட்; கூ. ஒச, ஒக்ப்; பர். ஒட்; கோண். வோடானா.

[ஒடு → ஒடி.]

ஒடி[2]**-த்தல்** *odi-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***முறித்தல்;*** to break, short off; to snap, as a branch, a stick, to cause to fracture, as a limb of the body. "தோள்களைத் தமது கைகளாலொடித்தன ராமென" (கந்தபு. திக்குவிசய.110). 2. ***அழித்தல்;*** to destroy, devastate. "காள கூடமொடிக்கு முலகங்களை" (தேவா.614,10) (செ.அக.).

[ஒடு → ஒடி.]

ஒடி[3]**-த்தல்** *odi-,* 4.செ.கு.வி. (v.i.) ***ஒளிசெய்தல்;*** to sparkle, shine. "ஒடிக்கச் சுடர்கால் குருமணி" (வாயுசங். மகளிருற்.3) (செ.அக.).

[ஒள் → ஒளி → ஒடி.]

ஒடி[4] *odi,* பெ. (n.) 1. ***கவண்*** (யாழ்.அக.); brick-bat. 2. ***வலை;*** net. 3. ***மரத்துண்டு;*** log of a tree. 4. ***காட்டுப்புதல்;*** bush. (ஆ.அக.).

[ஒடு → ஒடி.]

ஒடிசல்[1] *odišal,* பெ. (n.) ***முறிந்தது;*** broken piece. (செ.அக.).

ம. ஒடிச்சில்; க. ஒடகு, ஒடக; துட. விட்ய; கோத. ஒட்; குட. ஒடவெ; து. ஒடக; தெ. ஒடு.

[ஒடி + அல் - ஒடியல் → ஒடிசல்.]

ஒடிசல்[2] *odišal,* பெ. (n.) ***ஒல்லியாயிருப்பவ-ன்-ள்;*** thin or slender person. (செ.அக.).

[ஒடி + அல் - ஒடியல் → ஒடிசல்.]

ஒடிசில் *odišil,* பெ. (n.) ***கவண்*** (பிங்.); brick-bat. (செ.அக.).

தெ. வடிசெல; ம. ஒடிசில்.

[ஒடி + சில் - ஒடிசில்.]

ஒடிசிறகு *odiširagu,* பெ. (n.) ***ஒரு சிறிய பறவை;*** a kind of bird. (சேரநா.).

ம. ஒடிசிறகு.

[ஒடி + சிறகு.]

ஒடிபு *odibu,* பெ. (n.) ***இடைமுறிகை;*** breaking off in the middle; leaving unfinished. "ஒடிபொன்று துறையன்றி முடிபொன்று துறையில்லை" (சேதுபு. பாலோ.10) (செ.அக.).

[ஒடி → ஒடிபு.]

ஒடியல் *odiyal,* பெ. (n.) 1. ***முறிகை*** (வின்.); breaking, fracturing. 2. ***பனங்கிழங்கின் காய்ந்த பிளவு*** (யாழ்ப்.); split tender palmyra roots dried and used as food. (செ.அக.).

[ஒடி → ஒடியல்.]

ஒடியல்மா *odiyal-mā,* பெ. (n.) ***பனங்கிழங்கின் மாவு*** (யாழ்ப்.); flour made of the palmyra root.

[ஒடியல் + (மாவு) மா.]

ஒடியல்வால் *odiyal-vāl,* பெ. (n.) ***காய்ந்த பனங்கிழங்கின் நுனி*** (வின்.); end of a dried palmyra root. ஒடியல் வா லொடிக்க (வின்.) (செ.அக.).

[ஒடியல் + வால்.]

ஒடியற்கிழங்கு *odiyarkilangu,* பெ. (n.) ***பனங்கிழங்கு;*** palmyra root. (சா.அக.).

[ஒடியல் + கிழங்கு.]

ஒடியற்படவு *odiyar-padavu,* பெ. (n.) ***பக்கம் அல்லது விளிம்பு முறிந்த தோணி*** (வின்.); boat broken on the gunwale or edge. (செ.அக.).

[ஒடியல் + (படகு) படவு.]

ஒடியன் *odiyan,* பெ. (n.) ***ஆமை;*** tortoise. (சா.அக.).

[ஒட்டியன் → ஒடியன்.]

ஒடியிடை *odiyidai,* பெ. (n.) ***ஒடுங்கிய இடுப்பு;*** narrow waist. (சா.அக.).

[ஒடி + இடை.]

ஒடியெறி-தல் *odi-y-eri-,* 2.செ.குன்றாவி. (v.t.) 1. ***காட்டுப் புதர்களை வெட்டி யெறிதல்;*** to cut down a forest thicket while hunting. "நெறியினை யொடியெறி கிற் பவரொத்து" (கலிங்.411,புது.). 2. ***மரக்கொம்பைப் பாதி குறைத்தல்;*** to snap or break, as a short branch that it might hang down within easy reach of the flock. "ஒடி யெறிந்தவர்வயின்" (கலித்.68). 3. ***குற்றுயிராக்குதல்;*** to beat within an inch of a person's life. "கண்ணழகாலேயாயிற்று இவரை ஒடியெறிந்தது" (ஈடு.3,4,2) (செ.அக.).

[ஒடி + எறி.]

ஒடிவான் *odivān,* பெ. (n.) ***அற்பன்;*** wretch. "இந்த ஒடிவான்களுக் கெல்லாம் நான் பயப்படுவேனா" (பிர தாப.விலா.104) (செ.அக.).

[ஒடி + ஆன்.]

ஒடிவு *odivu,* பெ. (n.) 1. ***முறிகை;*** breaking, fracturing. 2. ***கெடுகை;*** decaying, becoming damaged. "ஒடிவி லியமாதி சம்பத்தி யுள்ளோனாகி"(சூத.ஞானயோ.வானப் பிரத்த.3). 3. ***குறைவு;*** decreasing, diminution. "ஒடிவில் பொற்கிழி நல்கி" (திருவிளை.இரசவா.10). 4. ***அழித் தல்*** (சங்காரம்.); periodical annihilation, destruction of the universe. "முதல் கெடலொடிவிடை" (திவ். திருவாய்.1,3,3). 5. ***தவிர்வு;*** cessation. "ஒடி விலை வெறாயிரம்" (சீவக.76) (செ.அக.).

ம. ஒடிவு; க. ஒடக, ஒடெ; கோத. ஒட்; துட. விட்ய; குட. ஒடெவெ; து. ஒடகு; தெ. ஒடபி.

[ஒடி → ஒடிவு.]

ஒடு[1] *odu,* பெ. (n.) 1. ***நிலப்பாலை;*** round-leaved discous featherfoil. "ஒடுமரக் கிளவி" (தொல்.எழுத். 262). 2. ***முதுபுண்*** (சீவக.2881,உரை.); festering sore, spreading abscess. 3. ***ஒடுக்கட்டி*** பார்க்க; see *odukkatti.* (செ.அக.).

[ஒது → ஒடு.]

ஒடு[2] *odu,* இடை. (part.) 1. ***மூன்றாம் வேற்றுமை யுருபு*** (தொல்.சொல்.74); (Gram.) instr. ending. 2. ***எண்ணுப் பொருளில் வரும் இடைச்சொல்*** (நன்.428); connective particle. (செ.அக.).

ம. ஒடு; து. டு, ட; தெ. தோடு; க. ஒடம்; பட. ஒட; பிரா. துட், அட்.

[ஒல் → ஒள் → ஒடு.]

ஒடு[3] *odu,* பெ. (n.) ***வளைவு, நெளிவு;*** bend, bruise.

[உடு → ஒடு (மு.தா.266,சு.வி.69).]

ஒடுக்கட்டி *odu-k-katti,* பெ. (n.) ***அக்குட்புண்;*** boil in the armpit. (colloq.) (செ.அக.).

ம. ஒடிக்குரு; க. ஒடிசெ; து. ஒடி; தெ. ஒடிசெகட்ட, வடிசெகட்ட.

[ஒடு + கட்டி.]

ஒடுக்கத்தம்பிரான் *odukka-t-tambirān,* பெ. (n.) ***சிவனி யத் திருமடத்தின் அகப்பணி பார்க்குந் தம்பிரான்;*** ascetic who functions as a private secretary to the head of a Šaiva mutt. (Loc.) (செ.அக.).

[ஒடுக்கம் + தம்பிரான்.]

ஒடுக்கநாடி *odukkanādi,* பெ. (n.) ***தாக்குண்ட நாடி;*** oppressed pulse. (சா.அக.).

[ஒடுக்கம் + நாடி.]

ஒடுக்கம்[1] *odukkam,* பெ. (n.) 1. ***குறுக்கம்;*** narrowness; closeness. 2. ***அடக்கம்;*** self-restraint, self-control, self-mastery. "ஒடுக்கமு மற்றுள குணமும்" (ஞானவா.சி கித்.225). 3. ***சுருங்கை;*** reduction, contraction. "போந் திடை யொடுக்க முறலால்" (தாயு.சித்தர்கண.9). 4. ***பதுக்கம்;*** biding one's time. "ஊக்க முடையானொடுக் கம்" (குறள்.486). 5. ***தனிமையான இடம்;*** place of seclusion; retired sport. 6. ***மறைவிடம்;*** place of concealment. "கண்மாறாடவ ரொடுக்க மொற்றி" (மதுரைக். 642). 7. ***மெய்யறிவு நிலைக்காக*** (ஞானகிருத்தியங்க ளுக்காக) ***ஒடுங்கியிருக்கை;*** retreat, retirement for spiritual exercises. 8. ***ஒன்றிலடங்குகை;*** involution, as of the elements one into another, absorption, dissolution, disappearance, as of salt in water. "உமையோ விறைவர் பாகத் தொடுக்கம்" (தனிப்பா.i,112,56). 9. ***சிறிது சிறிதாகக் குறைந்தொடுங்குகை;*** gradual sinking, reduciton step by step, as of circumstances, of the powers of the body. 10. ***முடிவு;*** end, close, termination. "ஒடுக்கங் கூறார்... முழுதுணர்ந்தோரே" (சிலப்.1,18). 11. ***மந்தணம்*** (இரகசியம்); secret. (செ.அக.).

ம. ஒடுக்கம்.

[ஒடு → ஒடுக்கு + அம்.]

ஒடுக்கம்[2] *odukkam,* பெ. (n.) 1. ***புழுக்கம்;*** sultriness. 2. ***இடைஞ்சல்*** (யாழ்.அக.); trouble, distress. (செ.அக.).

[உடு → ஒடு → ஒடுக்கம்.]

ஒடுக்கம்[3] *odukkam,* பெ. (n.) ***வழிபாடு*** (யாழ்.அக.); worship. (செ.அக.).

[ஒடு → ஒடுக்கம்.]

ஒடுக்க மதிப்புரவு *odukka-madippuravu,* பெ. (n.) ***விழா முடிவில் கோயில் அதிகாரிக்குச் செய்யும் மதிப்புரவு;*** honours rendered at the close of a festival to the trustees of a temple. (Loc.) (செ.அக.).

ஒடுக்க வணக்கம் *odukka-vanakkam,* பெ. (n.) ***அடங்கி வழிபடுகை*** (வின்.); deferential behaviour, reverential submission. (செ.அக.).

[ஒடுக்கம் + வணக்கம்.]

ஒடுக்கிக்கட்டு-தல் *odukki-k-kattu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***நெருக்கிக் கட்டுதல்;*** to wrap closely; to bind tightly; to tuck up and fasten behind, as the skirts. 2. ***ஓலைப் பெட்டி முதலியவற்றின் விளிம்புகட்டுதல்*** (வின்.); to bind the hem, as of a palmyra-leaf basket or fan. 3. ***சிறுகக் கட்டுதல்;*** to build within a small extent of space. (செ.அக.).

[ஒடுக்கி + கட்டு.]

ஒடுக்கிடம் *odukkidam,* பெ. (n.) 1. ***மறைவிடம்;*** secret place. 2. ***மூலை;*** corner. 3. ***நெருக்கமானவிடம்;*** narrow place. (செ.அக.).

[ஒடுக்கு + இடம்.]

ஒடுக்கு[1]-தல் *oḍukku-*, 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***அடக்கு தல்;*** to subjugate; to bring down, as another's pride; to keep down, suppress, subdue. பகைவரை ஒடுக்கி விட்டான். 2. ***வருத்துதல்;*** to cause distress, as cold or dew. குளிர் மிகவும் ஒடுக்குகிறது. 3. ***ஒன்றச்*** (லயிக் கச்) ***செய்தல்;*** to dissolve, as the elements; to cause; to merge one in another; to cause to destroy as the world, at the close of an age. 4. ***செலவு முதலியன குறைத்தல்;*** to reduce or retrench, as expenses. 5. ***உடம்பு சிறுகுதல்;*** to grow thin or lean, as the body. 6. ***சுருக்குதல்;*** to thrust within a shorter compass; to epitomize. "ஒடுக்கி யொடுக்கிச் சொன்னாலும் ராமன் கீர்த்தி" (இராமநா.கிஷ்கிந்.3). 7. ***கருவூலத்தில் சேர்த் தல்;*** to remit or lay up, as in to a treasury; to deposit or garner, as in a storehouse. "தம் பண்டாரத்தி லடைவுற வொடுக்கி" (பெரியபு.குங்கிலிய.13). 8. ***கீழ்ப்படுத்து தல்;*** to restrain, subdue. "அடிக்குடில் ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்" (திருவாச.3,161). 9. ***திருடு தல்;*** to rob. 'நாணும் நிறையுமான ஒடுக்கு மாட்டைப் பாரித்துக் கொண்டு' (ஈடு.5;3,9) (செ.அக.).

ம. ஒடுக்குக; **க.** உரிகிடு; **தெ.** ஒடுக்கின்சு.

[ஒடுங்கு → ஒடுக்கு.]

ஒடுக்கு[2]-தல் *oḍukku-*, 5.செ.குன்றாவி. (v.t.) ***முடிவுபெ றச்செய்தல்;*** to close down, to terminate. (செ.அக.).

[ஒடு→ ஒடுக்கு.]

ஒடுக்கு[3] *oḍukku*, பெ. (n.) 1. ***அடக்கம்;*** contraction, compression. 2. ***இடுக்குமூலை*** (வின்.); corner, narrow strip of space. 3. ***ஒடுக்கமாயிருப்பது;*** that which is narrow, of little breadth. ஒடுக்குப் பாதை. 4. ***கலங்களின் அடுக்கு;*** dent or depression in a metal utensil. குடம் ஒடுக்கு விழுந்து போயிற்று. 5. ***தொடைச்சந்து;*** groin. (செ.அக.).

[ஒடு → ஒடுக்கு (வே.க.84).]

ஒடுக்கு[4] *oḍukku*, பெ. (n.) 1. ***உணவு*** (புது.கல்.); food. 2. ***பணஞ்செலுத்துகை;*** payment. (Nāṉ.) (செ.அக.).

[ஒடு → ஒடுக்கு.]

ஒடுக்குச்சீட்டு *oḍukku-c-cīṭṭu*, பெ. (n.) ***செலுத்திய வர்க்குக் கொடுக்கும் பற்றுச்சீட்டு*** (வின்.); receipt given by the recipient acknowledging the money paid. (செ.அக.).

[ஒடுக்கு + சீட்டு.]

ஒடுக்குத்துண்டு *oḍukku-t-tuṇḍu*, பெ. (n.) ***ஒடுக்குச் சீட்டு*** பார்க்க; see *oḍukku-c-cīṭṭu*. (செ.அக.).

ஒடுக்குப்படி *oḍukku-p-paḍi*, பெ. (n.) ***ஒரு பழையவரி;*** ancient tax. (Insc.) (செ.அக.).

[ஒடுக்கு + படி.]

ஒடுக்குமருந்து *oḍukkumarundu*, பெ. (n.) ***பருத்த உடம்பை யொடுக்கிப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்குக் கொள்ளும் மருந்து;*** medicine which reduces the body and brings it to the normal size. (சா.அக.).

[ஒடுக்கு + மருந்து.]

ஒடுக்குமாடு *oḍukku-māḍu*, பெ. (n.) ***கொள்ளைப் பொருள்;*** plundered property, booty. "ஒடுக்கு மாட் டைப் பாரித்துக் கொண்டு" (ஈடு.5,3,9) (செ.அக.).

[ஒடுக்கு + மாடு. மாடு = செல்வம்.]

ஒடுக்குவாகை *oḍukku-vāgai*, பெ. (n.) 1. ***வெண் வாகை;*** small leaved white sirissa - albizzia procera (alata). 2. ***பன்றிவாகை;*** bastard rose wood. (சா.அக.).

[ஒடுக்கு + வாகை.]

ஒடுக்குவாய் *oḍukku-vāy*, பெ. (n.) 1. ***கோணல்வாய்*** (வின்.); wry mouth; crooked mouth. 2. ***சிறுகிய வாய்;*** small mouth, as of a vessel. (செ.அக.).

[ஒடுக்கு + வாய்.]

ஒடுக்கெடு-த்தல் *oḍukkeḍu-*, 4.செ.குன்றாவி. (v.t.) ***நெளிவெடுத்தல்;*** to remove a dent, smooth out the dented surface of a metal utensil. (செ.அக.).

[ஒடுக்கு + எடு.]

ஒடுகு *oḍugu*, பெ. (n.) ***ஒடு[1]*** பார்க்க; see *oḍu[1]* (செ.அக.).

ஒடுங்க *ōḍuṅga*, இடை. (part.) ***உவமஉருபு*** (தொல்.பொ ருள்.290); adverbial word of comparison.

[ஒடு → ஒடுங்க. ஒடு = ஒட்டுதல், பொருந்துதல்.]

ஒடுங்கல்[1] *oḍuṅgal*, பெ. (n.) ***கட்டுப்பாடு, தடை;*** obstacle, impediment. (செ.அக.).

[ஒடு → ஒடுங்கு + அல்.]

ஒடுங்கல்[2] *oḍuṅgal*, பெ. (n.) 1. ***கீழ்ப்படிதல்;*** obeying. 2. ***சுருங்கல்;*** shrinking. 3. ***பதுங்கல்;*** hiding.

[ஒடு → ஒடுங்கு + அல்.]

ஒடுங்கி *oḍuṅgi*, பெ. (n.) ***தன் உறுப்புகளை உள்ளொடுக்கும் இயல்புள்ள ஆமை;*** lit. that which contracts, tortoise. "ஒடுங்கி யோடு" (பாலவா.306) (செ.அக.).

[ஒடு → ஒடுங்கி (வே.க.84).]

ஒடுங்கியோடு *oḍuṅgiyōḍu*, பெ. (n.) ***ஆமையோடு;*** tortoise shell. (சா.அக.).

[ஒடுங்கி + ஒடு.]

ஒடுங்கு-தல் *oḍuṅgu-*, 7.செ.கு.வி. (v.i.) 1. ***அடங்குதல்;*** to be restrained, as the senses or the desires; to calm down; to become tranquil. "என்னிதயமு மொடுங்க வில்லை" (தாயு.ஆனந்தமா.9) 2. ***குறைதல்;*** to become reduced; to grow less; "ஊனொடுங்க வீனொடுங்கும்". 3. ***சுருங்குதல்;*** to shrink, shrivel. 4. ***ஒதுங்குதல்;*** to respectfully slide on to one side, as when meeting a superior; to move to a side. "மேலையோன் புடைதனி லொடுங்கியே" (கந்தபு.தாரகன் வதை.164). 5. ***மறைந்திருத்தல்;*** to be concealed; hidden. "தொழுத கையுள்ளும் படையொடுங்கும்" (குறள். 828). 6. ***கீழ்ப்படிதல்;*** to be subservient. அவன் அவனிடத்து ஒடுங்கியிருக்கின்றான். 7. ***சோம்புதல்;*** to be lazy, inactive. "ஒடுங்கா வுள்ளத் தோம்பா வீகை" (புறநா.8,4). 8. ***குவிதல்;*** to close, as the petals of the lotus flower. "தாமரையின் நடம்போதொடுங்க" (திவ்.இயற்.திருவிருத்.76). 9. ***அமைதல்;*** to cease, as noise, bustle, to be quiet, silent. ஊர் ஒடுங்கிவிட்டது. 10. ***சோர்தல்;*** to be weary, exhausted, to sink. உடல் ஒடுங்கி விட்டது. 11. ***ஒன்றுதல்;*** to become dissolved, involved one within another, as the elements, worlds, till all is absorbed in the great infinite. காரியங்கள் காரணத்தில் ஒடுங்கும். 12. ***ஒளி மங்குதல்*** (வின்.); to grow dim, as light. (செ.அக.).

ம. ஒடுங்ஙுக; **க.** உடுகு, உடகு; **கோத.** ஒட்க்; **துட.** வீட்க்; **து.** ஒடுங்கெடு; **தெ.** உடுகு; **கொலா.** ஊட்ப்; **கூ.** யும்ப்; **குரு.** ஒடொக்னா; **மால்.** ஒட்கெ.

[ஒடு → ஒடுங்கு.]

ஒடுங்குமேனி *oḍuṅgumēni*, பெ. (n.) ***இளைக்கு முடம்பு;*** emaciated body. (சா.அக.).

[ஒடுங்கு + மேனி.]

ஒடுத்தங்கு-தல் *oḍu-t-taṅgu-*, 7.செ.கு.வி. (v.i.) ***புண்ணிற் சீழ்த்தங்குதல்*** (வின்.); to remain unremoved, as pus in a boil. (செ.அக.).

[ஒடு + தங்கு.]

ஒடுதடங்கல் *oḍudaḍaṅgal*, பெ. (n.) ***நெளிவு*** (வின்.); crook, bend, flexure. (செ.அக.).

[ஒடு + தடங்கல்.]

ஒடுதலாம் *oḍudalām*, பெ. (n.) ***புதினா;*** mint -menthagenus. (சா.அக.).

[ஒடு → ஒடுதல் → ஒடுதலை → ஒடுதலாம்.]

ஒடுநில்-தல் *oḍunil-*, 14.செ.குன்றாவி. (v.t.) ***பருவிற் சீழ்த் தங்கல்;*** to remain unremoved, as pus in a pimple.

[ஒடு + நில்.]

ஒடுப்பை *oḍuppai*, பெ. (n.) ***ஒடு[1]*** பார்க்க; see *oḍu[1]* (செ.அக.).

ஒடுவடக்கி *oḍu-v-vaḍakki*, பெ. (n.) 1. ***குப்பைமேனி;*** Indian acalypha. 2. ***திராய்*** (மலை.); a profusely branching prostrate herb. 3. ***பெருந்தும்பை*** (சித்.அக.); large species of white dead nettle. (செ.அக.).

[ஒடு + அடக்கி.]

ஒடுவன் *oḍuvan*, பெ. (n.) ***ஒடு[1]*** பார்க்க; see *oḍu[1]* (செ.அக.).

ஒடுவு *oḍuvu*, பெ. (n.) ***புண் புரை;*** sinus in a sore. (சா.அக.).

[ஒடு → ஒடுவு.]

ஒடுவெண்ணெய் *oḍu-v-enney*, பெ. (n.) ***புண்ணுக்கிடும் ஒருவகையெண்ணெய்*** (வின்.); oil applied to cure a boil or eruption. (செ.அக.).

[ஒடு + எண்ணெய்.]

ஒடுவை *oḍuvai*, பெ. (n.) ***ஒடு[1]*** பார்க்க; see *oḍu[1]*. "தான்றியு மொடுவையும் ... ஒடுங்கி" (மணிமே.6,80). (செ.அக.).

[ஒடு → ஒடுவை.]

ஒடுவைப்புண் *oḍuvaippuṇ*, பெ. (n.) ***மேல்வாயைப் பற்றி வரும் புண்;*** ulcer or a wound in the Palate. (சா.அக.).

[ஒடுவை + புண்.]

ஒடுளகம் *oḍuḷagam*, பெ. (n.) ***குடைவேல்;*** umbrella thorn, babool. (சா.அக.).

[ஒடுளம் + அகம்.]

ஒடை *oḍai*, பெ. (n.) ***உடை[5]*** பார்க்க; see *uḍai[5]* (செ.அக.).

ஒடைச்சி *oḍaicci*, பெ. (n.) ***ஒடு[1]***-1 (L.) பார்க்க; see *oḍu[1]-1.* (செ.அக.).

ஒண்டன் *oṇḍan*, பெ. (n.) ***நரி*** (பிங்.); jackal. (செ.அக.).

[ஒண்டு + அன்.]

ஒண்டி[1] *oṇḍi*, பெ. (n.) 1. ***தனிமையானது;*** that which is single. இந்த மாடு ஒண்டி. 2. ***துணையில்லாதவன்;*** solitary, single person; one who is all alone, without any companion. "ஒண்டியாய்த் தேர்விட்டு" (இராமநா. யுத்த.29) (செ.அக.).

க. ஒண்டி; **து.** ஒண்டி; **தெ.** ஒண்டி, ஒண்டரி; **குரு.** ஒண்டா; **பட.** ஒட்டி.

[ஒன்று → ஒன்றி → ஒண்டி (கொ.வ.).]

ஒண்டி[2] *oṇḍi*, பெ. (n.) ***ஊற்றாணி என்னும் கலப்பையுறுப்பு*** (பிங்.); spike that fastens the pole to the plough. (செ.அக.).

[ஊன்றி → ஒன்றி → ஒண்டி (கொ.வ.).]

ஒண்டிக்காரன் *ondi-k-kāran,* பெ. (n.) ***தனிமையான வன்;*** single person, lonely, companionless man. (செ.அக.).

தெ. ஒண்டிகாடு; க. ஒண்டிகார.

[ஒன்றி → ஒண்டி + காரன்.]

ஒண்டிக்குடி *ondi-k-kudi,* பெ. (n.) ***ஒண்டுக்குடி*** பார்க்க; see *ondukkudi.* (செ.அக.).

[ஒண்டு → ஒண்டி + குடி.]

ஒண்டிப்புலி *ondi-p-puli,* பெ. (n.) 1. ***கைக்கோளப் பிச்சைக்காரன்;*** beggar of the kaikkōḷar caste. 2. ***நோக்கனென்னும் மரபினன்;*** person of the Nōkkaṉ caste. (செ.அக.).

[ஒண்டி + புலி.]

ஒண்டிமூலி *ondimūli,* பெ. (n.) 1. ***ஒரு பூண்டு;*** plant. 2. ***தனியாக முளைக்கும் பூண்டு;*** solitary plant. (சா.அக.).

[ஒன்றி → ஒண்டி + மூலி.]

ஒண்டு-தல் *ondu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***மரம், சுவர் முதலியவற்றைச் சார்தல்;*** to lean or sit closely to a tree, wall etc. 2. ***ஒளிந்து கொள்ளுதல், மறைந்து கொள்ளுதல்;*** to hide.

ம. ஒண்டுக; க. ஒண்டு; தெ. ஒண்டு.

[அண் → ஒண் → ஒண்டு. (வே.க.110,மு.தா.214).]

ஒண்டுக்குடி *ondukkudi,* பெ. (n.) ***ஒட்டுக்குடித்தனம்;*** tenancy in a portion of a house. (செ.அக.).

[ஒண்டு + குடி.]

ஒண்டுக்கேள்-தல் *ondu-k-kēḷ-,* 12.செ.கு.வி. (v.i.) ***ஒற்றுக்கேட்டல்;*** to eavesdrop. (Loc.) (செ.அக.).

[ஒண்டு + கேள்.]

ஒண்டொடி *ondodi,* பெ. (n.) ***பெண்*** (வீரசோ.வேற் றுமை.3); lit, shining bracelet, fig., woman adorned with shining bracelets. "ஒண்டொடி கண்ணேயுள" (குறள்,1101)

[ஒள் → ஒண் + தொடி. (அன்மொழித்.தொகை.).]

ஒண்ணடி மண்ணடியாய் *oṉṉadi-maṉṉadiy-āy,* கு.வி.எ. (adv.) ***ஒன்றடி மன்றடியாய்*** பார்க்க; see *oṉṟadi maṉṟadiyāy.* (செ.அக.).

ஒண்ணல் *oṉṉal,* பெ. (n.) ***ஒன்றல்*** பார்க்க; see *oṉṟal.* (செ.அக.).

ஒண்ணார் *oṉṉār,* பெ. (n.) 1. ***பொருந்தார்;*** rival, adversaries. 2. ***பகைவர்;*** foes.

[ஒள் → ஒண்ணு → ஒண்ணார். (வே.க.109) ஒன்னார் எனவும் வழங்கும் (குறள்.264, காண்க.).]

ஒண்ணி *oṉṉi,* பெ. (n.) ***பொன்;*** gold. (சா.அக.).

[ஒள் → ஒள்ளி → ஒண்ணி. ஒள் = ஒளிர்தல்.]

ஒண்ணு-தல் *oṉṉu-,* 15.செ.கு.வி. (v.i.) 1. ***இயலுதல்;*** to be possible, feasible. "ஒண்ணுமோ வவர்தஞ் செய லோதவே" (கந்தபு.பாயி.15). 2. ***தக்கதாதல்;*** to be fit, proper. அப்படிச் செய்ய ஒண்ணாது. 3. ***பொருந்து தல்;*** to be united. (செ.அக.).

[ஒள் → ஒண்ணு. (வே.க.109).]

ஒண்ணுதல் *oṉṉudal,* பெ. (n.) ***ஒள்ளிய நெற்றியள், பெண்;*** lit., bright forehead, fig, woman, having a beautiful forehead. "உலகருள் காரணனொண்ணுதலோ டும்" (கந்தபு.தெய்வயானை.252). (செ.அக.).

ம. ஒன்னுதல்.

[ஒள் + நுதல் - ஒண்ணுதல் (அன்.தொ.).]

ஒண்ணுதலாள் *oṉṉudalāḷ,* பெ. (n.) ***ஒண்ணுதல்*** பார்க்க; see *oṉṉudal.* (சேரநா.).

ம. ஒண்ணுதலாள்.

[ஒண்ணுதல் + ஆள்.]

ஒண்மை *oṇmai,* பெ. (n.) 1. ***விளக்கம்;*** brilliancy, splendour, brightness. "ஒப்பின் மாநக ரொண்மை" (சீவக.535). 2. ***இயற்கையழகு;*** natural grace, beauty. "ஒண்மையு நிறையுமோங்கிய வொளியும்" (பொருங். உஞ்சைக்.34,151). 3. ***நன்மை*** (பிங்.); good, goodness, excellence. 4. ***நல்லறிவு;*** knowledge, clearness of understanding, wisdom. "ஒண்மை யுடையம் யாம்" (குறள்.844). 5. ***மிகுதி*** (திவா.); luxuriance, fullness, abundance. 6. ***ஒழுங்கு*** (சூடா.); order, regularity. (செ.அக.).

ம. ஒண்மை.

[உல் → உள் → ஒள் → ஒண்மை (செல்வி.77,திச.171).]

ஒத்தடம் *ottadam,* ***ஒற்றடம்*** பார்க்க; see *oṟṟadam.* (செ.அக.).

[ஒற்று → ஒத்து → ஒத்தடம். (சு.வி.66).]

ஒத்தது *ottadu,* பெ. (n.) 1. ***தகுதியானது;*** that which is commensurate with, fit, consistent. "ஒத்த தறிவா னுயிர் வாழ்வான்" (குறள்,214). 2. ***உலகத்தார் ஏற்றுக் கொண்டது;*** that which has the approval of the world. (செ.அக.). 3. ***நிகரானது அல்லது துல்லியமானது;*** that which equal to or suitable. 4. ***ஏற்றது அல்லது சரியானது;*** that which is proper.

ம. ஒத்தது.

[ஒல் → ஒத்து + அது.]

ஒத்தபடி *otta-padi,* கு.வி.எ. (adv.) ***ஏற்றவாறு;*** agreeably, suitably. (செ.அக.).

[ஒல் → ஒத்த + படி.]

ஒத்தமலங்கொட்டு-தல் *ottamalaṅkoṭṭu-,* 5.செ.கு.வி. (v.i.) ***இடக்குச் செய்தல்;*** to behave improperly, rudely, insolently. (செ.அக.).

ஒத்தல்[1] *ottal,* பெ. (n.) 1. ***கேள்வியால் தெளிந்தவற்றில் மனம் ஊன்றிநிற்கை*** (பிங்.); conduct or behaviour in strict conformity with one's own convictions or settled persuasion, one of kēḷvi. 2. ***நடு*** (திவா.); middle, centre. 3. ***பொருந்துதல்;*** uniting. 4. ***போலுதல்;*** resembling. "வில்லினை ஒத்த புருவம்" (பாரதியார்) (செ.அக.).

[உ → ஒ → ஒத்தல். (மு.தா.168.த.ம.4).]

ஒத்தவன் *ottavaṉ,* பெ. (n.) ***சமமானவன்;*** one who is equal.

ம. ஒத்தவன்.

[ஒல் → ஒத்து → ஒத்த + அவன்.]

ஒத்தறு-த்தல் *ottaṟu-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***தாள வரையறை செய்தல்*** (பிங்.); to measure time. (செ.அக.).

[ஒற்று → ஒத்து + அறு-த்தல்.]

ஒத்தன் *ottaṉ,* பெ. (n.) 1. ***ஒருவன்;*** someone. "எல்லாவி.்.தொத்தன்" (கலித்.61). 2. ***ஒருத்தன்*** பார்க்க; see *oruttaṉ.* (செ.அக.).

[ஒருத்தன் → ஒத்தன். (கொ.வ.).]

ஒத்தாங்கு *ottāṅgu,* கு.வி.எ. (adv.) ***ஒத்தபடி*** பார்க்க; see *ottapaḍi.* "ஒத்தாங் கொறுப்பது வேந்து" (குறள்,561). (செ.அக.).

ஒத்தாசை *ottāšai,* பெ. (n.) ***உதவி;*** aid, help, assistance. (colloq.) (செ.அக.).

ம. ஒத்தாச; க. ஒத்தாசெ; கொ. ஒதாச்; துட. விதொஸ்.

[உறு → உற்று → உற்றாயம் → ஒத்தாயம் → ஒத்தாசம் → ஒத்தாசை (கொ.வ.).]

ஒத்தாப்பு *ottāppu,* பெ. (n.) 1. ***மறைவு;*** slanting shed in a field or garden to screen from the sun or wind. 2. ***குடில்;*** small building with a sloping roof on three out of its four sides. (செ.அக.).

[ஒல் → ஒது → ஒத்து → ஒத்தாப்பு. 'ஆப்பு' சொல்லாக்க ஈறு.]

ஒத்தாழிசை *ottāḻ-išai,* பெ. (n.) ***கலிப்பாவின் வகை*** (தொல்.பொருள்.442); a kind of kali verse. (செ.அக.).

[ஒல் + தாழிசை - ஒத்தாழிசை.]

ஒத்தி[1] *otti,* பெ. (n.) ***ஒரு பெண்;*** one woman. "இ.்.தொத்தி யென் செய்தாள் கொல்." (கலித்.143) (செ.அக.).

[ஒருத்தி → ஒத்தி (கொ.வ.).]

ஒத்தி[2] *otti,* பெ. (n.) ***ஒற்றி***[2] பார்க்க; see *oṟṟi.*[2] (செ.அக.).

[ஒற்றி → ஒத்தி.]

ஒத்தி[3] *otti,* பெ. (n.) 1. ***பொருத்தம் பார்க்கும் பயிற்சி;*** experience of seeing proper occasion etc. 2. ***நிலத்தை ஒருவரிடம் பொருத்தி வைக்கும் அடைமானம்;*** mortgage. hypothecation. 3. ***ஒத்து வாங்குதல்;*** pledging.

[ஒத்து → ஒத்தி (சு.வி.66,67).]

ஒத்திகை *ottigai,* பெ. (n.) 1. ***ஒப்பு;*** resemblance, reciprocal adaptation. அதற்கும் இதற்கும் ஒத்திகை யிருக்கிறது. 2. ***நாடகத்தை முன் ஆடிப்பார்க்கை;*** rehearsal. 3. ***சரிபார்க்கை;*** to verify the correctness. எழுதின பிரதிகளை ஒத்திகை பார். 4. ***உதவி;*** assistance (W.). (செ.அக.).

[ஒத்து → ஒத்திகை. (வே.க.112).]

ஒத்திகை பண்ணு-தல் *ottigai-paṇṇu-,* 15.செ.கு.வி. (v.i.) ***மகிழச் செயல்;*** to amuse by amorous sports. "ஒருநாட் பகலிலெனை யொத்திகை பண்ணி" (தெய்வச்.விறலி.425) (செ.அக.).

[ஒத்திகை + பண்ணு.]

ஒத்திசை *ottišai,* பெ. (n.) ***இசையின்*** (இலயம்.) ***ஒன்றும் தன்மை;*** harmony in music, symphony, concert. (W.) rhythm. (செ.அக.).

[ஒத்து + இசை.]

ஒத்திடம் *ottiḍam,* பெ. (n.) ***ஒற்றடம்*** பார்க்க; see *oṟṟaḍam.* "கொங்கையை யொத்திடங் கொடுத்து" (தனிப்பா.). (செ.அக.).

[ஒற்றடம் → ஒத்தடம் → ஒத்திடம் (கொ.வ.).]

ஒத்திப்போடு-தல் *ottippōḍu-,* 19.செ.குன்றாவி. (v.t.) ***தவணை தள்ளி வைத்தல்;*** to adjourn, as a hearing, postpone. (செ.அக.).

[ஒத்தி + போடு.]

ஒத்தியம் *ottiyam,* பெ. (n.) ***நச்சு மூங்கில்;*** asiatic poison bulb. (சா.அக.).

[உல் → ஒல் → ஒத்தியம்.]

ஒத்திரு[1]**-த்தல்** *ottiru-,* 3.செ.கு.வி. (v.i.) ***இசைந்திருத்தல்;*** to live in harmony, concord, friendship. "ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்" (குறள்.) (செ.அக.).

[ஒத்து + இரு-த்தல்.]

ஒத்திரு[2]**-த்தல்** *ottiru-,* 3.செ.குன்றாவி. (v.t.) ***போன்றிருத்தல்;*** to be similar to. (செ.அக.).

[ஒத்து + இரு-த்தல்.]

ஒத்து[1]**-தல்** *ottu-,* 10.செ.கு.வி. (v.i.) 1. ***தாளம் போடுதல்;*** to keep time with cymbals or with the hands. "குணலைக் கொத்தின பாணி" (கோயிற்.நட.30). 2. ***தாக்குதல்;*** to strike against each other, butt against, bunt. "புயசயில மொன்றோ டொன் றொத்தினார்" (பாரத.வேத்திர.14). 3. ***ஒற்றுதல்;*** to forment. பூவைக் கண்ணில் ஒத்திக் கொண்டான். 4. ***தள்ளுதல்;*** to push. (செ.அக.).

ம. ஒத்துக; க. ஒத்து; குட. ஒத்த; து. ஒத்துனி; தெ. ஒத்து; குரு. ஒத்னா.

[உத்து → ஒத்து.]

ஒத்து²-தல் *ottu-,* 10.செ.கு.வி. (v.i.) ***விலகுதல், ஒத்தி நிற்றல்;*** to make room for, to take on to one side. (செ.அக.).

க., தெ. ஒத்து.

[ஒல் → ஒத்து.]

ஒத்து³ *ottu,* பெ. (n.) 1. ***தாளவொற்று;*** time in music for singing and dancing, keeping time for singing. "ஒத்தளந்து" (பரிபா.12,42). 2. ***நாதசுரத்துக்குச் சுருதி கூட்டும் ஓர் ஊது குழல்;*** a reed instrument conical in shape and enlarging downwards used for playing the drone note accompanying a näka-curam. "ஒத்தையூ துநரை யேய்க்கும்" (திருவாலவா.49,18). 3. ***கையணி வகை;*** thin bangle. **தெ.** ஒத்துலு. (செ.அக.).

ம. ஒத்து.

[ஒற்று → ஒத்து (வே.க.108).]

ஒத்துக்கொடு-த்தல் *ottu-k-kodu-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***பொறுப்பேற்றல்;*** to be answerable; to guarantee. 2. ***ஒப்புவிக்கப்பட்ட கணக்குகளுக்கு வகை சொல்லு தல்;*** to render an account for matters entrusted, as to an accountant. (செ.அக.).

[ஒத்து + கொடு.]

ஒத்துக்கொள்(ளு)¹-தல் *ottu-k-kol-,* 7.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஏற்றுக் கொள்ளுதல்*** (சம்மதித்தல்); to admit, concede. 2. ***பிழையை ஒப்புக் கொள்ளுதல்;*** to acknowledge one's mistake or confess one's guilt. தன் குற்றத்தை ஒத்துக்கொண்டான். 3. ***கணக்கிலேற்றுக் கொள்ளுதல்;*** to credit.

[ஒத்து + கொள்.]

ஒத்துக்கொள்(ளு)²-தல் *ottu-k-kol,* 2.செ.கு.வி. (v.i.) 1. ***இணங்குதல்;*** to agree, concur. அவர்கள் இருவரும் ஒத்துக்கொண்டு சாட்சி சொன்னார்கள். 2. ***ஏற்றதாதல்;*** to suit, to be adapted. தண்ணீர் ஒத்துக் கொள்ள வில்லை. (செ.அக.).

[ஒத்து + கொள்.]

ஒத்துநட-த்தல் *ottu-nada-,* 3.செ.கு.வி. (v.i.) 1. ***ஒரே வகையாய் நடத்தல்;*** to walk together at the same pace; to march, as soldiers. 2. ***இசைந்தொழுகுதல்;*** to act agreeably to the wishes of another, live in harmony. (செ.அக.).

[ஒத்து + நட.]

ஒத்துப்பாடு-தல் *ottu-p-pādu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***இசையப்பாடுதல்;*** to sing in concert, in unison. 2. ***பிறர் சொல்லுவன எல்லாவற்றையும் ஏற்று வழிமொ ழிதல்*** (ஆமோதித்தல்); to assent to everything said by another, always say ditto to another's words. (செ.அக.).

[ஒத்து + பாடு.]

ஒத்துப்பார்-த்தல் *ottu-p-pār-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***ஒப்பிட்டுப்பார்த்தல், சரிபார்த்தல்;*** to compare, collate, to verify the correctness எழுதியதை மூலப்படியோடு ஒத்துப் பார்க்கிறான். (செ.அக.).

ம. ஒத்து நோக்குக.

[ஒத்து + பார்.]

ஒத்துப்பிடி-த்தல் *ottu-p-pidi-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***குறிப்புச்செய்தியைக் காற்றுக்கருவி வாயிலாக ஊதி தொலைவிலுள்ளவனுக்குத் தெரிவித்தல்;*** to convey the hints by blowing pipes. 2. ***ஒத்தூதுதல்;*** to sound the keynote with the ottu or drone. (W.). 3. ***ஒருவர் கூறியதையே மற்றவரும் முழுமையாக ஏற்றுப் பேசு தல்;*** to be in total agreement with another. (செ.அக.).

[ஒத்து + பிடி.]

ஒத்துப்போடு-தல் *ottu-p-pōdu-,* 20.செ.கு.வி. (v.i.) ***தாளம் போடுதல்;*** to keep the time with cymbals as an accompaniment to singing or dancing. (செ.அக.).

[ஒத்து + போடு.]

ஒத்துவா(வரு)-தல் *ottu-vā-,* 18.செ.கு.வி. (v.i.) ***இணங்கி வருதல்;*** to come to an agreement; to become conformable. (செ.அக.).

ம. ஒத்துவரிக.

[ஒத்து + வா.]

ஒத்துவாழ்-தல் *ottu-vāl-,* 12.செ.கு.வி. (v.i.) ***மன மொத்து வாழ்தல்;*** to live in harmony as a family, relations, fellow-servants. (செ.அக.).

[ஒல் → ஒத்து + வாழ்.]

ஒத்துழை-த்தல் *ottulai-,* 4.செ.கு.வி. (v.i.) ***பலர்கூடி மனமொத்து வினைசெய்தல்;*** to co-operate; to work together. (செ.அக.).

ம. ஒத்துழய்க்குக.

[ஒத்து + உழை.]

ஒத்துழைக்கை *ottulaikkai,* பெ. (n.) ***கூடிவினை செய்கை;*** co-operation. working in union. (செ.அக.).

ம. ஒத்துழப்பு.

[ஒத்து + உழைக்கை.]

ஒத்துழைப்பு *ottulaippu,* பெ. (n.) ***ஒத்துழைக்கை*** பார்க்க; see *ottulaikkai.* (செ.அக.).

[ஒத்து + உழைப்பு.]

ஒத்துழையாதார் *ottulaiyādār,* பெ. (n.) ***பிறகொள்கை யாரோடு இணங்கி நடவாதவர்;*** non-co-operators, dissenters. (செ.அக.).

[ஒத்து + உழையாதார்.]

ஒத்துழையாமை *ottuḻaiyāmai,* பெ. (n.) ***பிறகொள்கை யோடு இணங்கி நடவாமை;*** non co-operation, dissent. (செ.அக.).

[ஒத்து + உழையாமை.]

ஒத்தெழுத்திடு-தல் *otteḻuttiḍu-,* 18.செ.குன்றாவி. (v.t.) ***யாவரும் மனமொத்துக் கையெழுத்திடுதல்;*** to sign in token of agreement. 'வினாப் போக்கி ஒத்தெழுத்திட் டுக் கொடுத்த பரிசாவது' (S.I.I.Vii,412). (செ.அக.).

[ஒத்து + எழுத்து + இடு-.]

ஒத்தை *ottai,* பெ. (n.) ***ஒற்றை*** பார்க்க (இ.வ.); see *oṟṟai.* (செ.அக.).

ஒத்தைநாடி *ottaināḍi,* பெ. (n.) ***ஒற்றைநாடி*** பார்க்க; see *oṟṟaināḍi* (சா.அக.).

[ஒற்றை → ஒத்தை + நாடி.]

ஒத்தைப்பூண்டு *ottaippūṇḍu,* பெ. (n.) ***ஒற்றைப் பூண்டு*** பார்க்க; see *oṟṟaippūṇḍu.* (சா.அக.).

ஒத்தையடிப்பாதை *ottaiyaḍippādai,* பெ. (n.) ***ஒற்றைய டிப்பாதை*** பார்க்க; see *oṟṟaiyaḍippādai.*

ஒதளை *odaḷai,* பெ. (n.) ***காசுக்கட்டி*** (m.m); downy foliaged cutch. (செ.அக.).

[உதள் → ஒதள் → ஒதளை.]

ஒதி *odi,* பெ. (n.) ***ஒருவகை மரம்;*** Indian ash tree. "ஓதியம் பணைபோல் விழுவர்" (பதினொ.ஆளு டைய.மும்.6) (செ.அக.).

[உதி → ஒதி. உதிமரம் எனத் தொல்காப்பியர் வழங்குவர். "ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே" (தொல்.எழுத்து.262).]

ஒதுக்கம்[1] *odukkam,* பெ. (n.) 1. ***தனிமை;*** retreat; privacy; seclusion, solitude. 2. ***நடை;*** walk, gait. "ஊழடி யொதுக் கத் துறுநோய்" (சிலப்.10,92). 3. ***பதுங்குகை;*** crouching, stooping. 4. ***பின்னிடுகை;*** retiring, receding, retreating, withdrawing (W.). 5. ***இருப்பிடம்;*** abode, habitation, dwelling place. "திணியிமிலேற்றினுக் கொதுக் கஞ் செல்வ நின்னிணைமலர்ச் சேவடி கொடுத்த" (சீவக.3100). 6. ***மறைவிடம்*** (சூடா.); hiding place. 7. ***மகளிர்பூப்பு;*** catamenia (W.). 8. ***தங்குமிடம், சாவடி;*** rest house. 9. ***ஓர் அமங்கல இசை*** (திருவாலவா.57,14, அரும்.); dirge. (செ.அக.).

ம. ஒதுக்கம்; **க.** ஒதகு; **தெ.** ஒதகு.

[ஒதுக்கு + அம்.]

ஒதுக்கம்[2] *odukkam,* பெ. (n.) (யாழ்.அக.) 1. ***தாழ்மை;*** humility. 2. ***ஒழுக்கம்;*** conduct. (செ.அக.).

[ஒதுக்கு + அம்.]

ஒதுக்கம்[3] *odukkam,* பெ. (n.) ***சேர்ந்து கிடத்தல்*** (சங்.இலக்.சொற்.); accumulation.

[ஒதுக்கு + அம்.]

ஒதுக்கல்[1] *odukkal,* பெ. (n.) ***எழுச்சி*** (சூடா.);rising, springing or sprouting forth.

ம. ஒதுக்கல்.

[உது → ஒது → ஒதுக்கல்.]

ஒதுக்கல்[2] *odukkal,* பெ. (n.) ***ஒரிக்கல்*** பார்க்க; see *orikkal.* (செ.அக.).

ஒதுக்கிடம் *odukkiḍam,* பெ. (n.) 1. ***ஒதுங்குமிடம்;*** place of retirement. "தண்சார லொதுக்கிடந் தந்து" (தஞ்சைவா.11). 2. ***தங்கும் விடுதி;*** temporary abode. (Loc.). 3. ***அண்டி வாழுமிடம்*** (பிங்.); shelter, refuge, inn. (செ.அக.).

ம. ஒதுக்கிடம் (இடைவழி).

[ஒதுக்கு + இடம்.]

ஒதுக்கிப்போடு-தல் *odukki-p-pōḍu-,* 19.செ.குன்றாவி. (v.t.) 1. ***தீர்த்து விடுதல்;*** to settle, close up. (W.). 2. ***இனத்தினின்று நீக்கி விடுதல்;*** to expel, as from caste. 3. ***கேள்வியைத்*** (விசாரணையைத்) ***தள்ளி வைத்தல்;*** to adjourn, as a hearing. 4. ***சொத்தை மறைத்துவிடுதல்;*** to conceal, as property. (Loc.) அவன் சொத்தையெல்லாம் ஒதுக்கிப் போட்டான். (செ.அக.).

[ஒதுக்கி + போடு.]

ஒதுக்கிரு-த்தல் *odukkiru-,* 13.செ.கு.வி. (v.i.) ***பிறர் வீட்டிற் குடியிருத்தல்*** (குறள்.340,பரி.உரை.); to be a tenant in another's house. (செ.அக.).

[ஒதுக்கு + இரு.]

ஒதுக்கு[1]-தல் *odukku-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஒதுங் கச் செய்தல்;*** to put on one side, as the hair; to cause to get out of the way, as cattle, in the road; to wash ashore, as floating or other bodies; to push into a corner, to cast to one side, to a hedge, as dry leaves. 2. ***பிணக்கை விலக்குதல்;*** to separate, as persons in a quarrel. சண்டையிடாமல் இருவரையும் ஒதுக்கினார்கள். 3. ***அணைத்துக்காத்தல்;*** to shelter, as a bird its young; to brood. (Loc.). கோழிதன் குஞ்சுகளைச் செட்டைகளுக்குள் ஒதுக்குகிறது'. 4. ***ஒரு புறமாய்ச் சேர்த்தல்;*** together on one side; to tuck up, as one's clothes while crossing a river. நீ ஆடையை யொதுக்கிக் கொண்டு நீரிலிறங்கு. 5. ***சொத்துக்களை மறைத்தல்;*** to place out of reach, remove by unfair means, secure for one's self clandestinely. சொத்துக்களை யெல்லாம் வழக்குக்காக ஒதுக்கி விட்டான். 6. ***விலக்கு தல்;*** to separate; to put away; to expel, as from caste. அவனைச் சாதியினின்று ஒதுக்கி யிருக்கிறார்கள். 7. ***தீர்த்தல்;*** to despatch, as a business (W.). வழக்கைத் தங்களுக்குள் ஒதுக்கிக் கொண்டார்கள். 8. ***கொல்லு தல்;*** to kill. ஆள்களை யொதுக்க (வின்.). 9. ***வறுமைக்குட் படுத்துதல்;*** to impoverish. (W.). (செ.அக.).

ம. ஒதுக்குக; **க.** உடுகிசு, உடகிசு; **தெ.** உடிகின்சு, டுங்சு; **கூ.** டுப்ப; **குரு.** ஒடொக்னா; **மால்.** ஒட்கெ.

[ஒதுங்கு → ஒதுக்கு.]

ஒதுக்கு[2] *odukku,* பெ. (n.) 1. ***விலகியிருப்பது;*** that which is apart, separate. 2. ***பிறர் வீட்டிற் குடியிருக்கை*** (குறள்.340,உரை.); living as a tenant in another's house. 3. ***புகலிடம்;*** refuge, shelter. "எவ்வொதுக் கெய்துவா யே" (இரகு.கடிமண.50). 4. ***மறைப்பு;*** screen, hiding place. 5. ***நடை;*** walking, gait. "தகைமெல் லொதுக்கின் ... விறலி" (புறநா.135,3). (செ.அக.).

[ஒதுங்கு → ஒதுக்கு.]

ஒதுக்குக்கடல் *odukku-k-kaḍal,* பெ. (n.) 1. ***குடாக்க டல்;*** bay, gulf. 2. ***இயற்கையிலமைந்த துறைமுகம்;*** natural harbour. (செ.அக.).

[ஒதுக்கு + கடல்.]

ஒதுக்குக்கல் *odukku-k-kal,* பெ. (n.) ***படிக்கல்;*** step-stone. (சேரநா.).

ம. ஒதுக்குகல்.

[ஒதுக்கு + கல்.]

ஒதுக்குக்குடி *odukku-k-kuḍi,* பெ. (n.) ***ஒட்டுக்குடி*** பார்க்க (வின்.); see *oṭṭukkuḍi.* (செ.அக.).

[ஒதுக்கு + குடி.]

ஒதுக்குப் பச்சை *odukku-p-paccai,* பெ. (n.) ***புழுங்க லில் வேகாத நெல்;*** paddy that is not well boiled and is adhering to the sides of the vessel. Loc. (செ.அக.).

[ஒதுக்கு + பச்சை.]

ஒதுக்குப் படல் *odukku-p-paḍal,* பெ. (n.) ***காற்றைத் தடுக்குங் கிடைப்படல்*** (வின்.); shed to screen cattle from the wind. (செ.அக.).

[ஒதுக்கு + படல்.]

ஒதுக்குப்பாடு *odukku-p-pāḍu,* பெ. (n.) ***மரவேலியுள்ள செய்கால் நிலம்*** (யாழ்ப்.); cultivable land enclosed by tree. (செ.அக.).

[ஒதுக்கு + பாடு.]

ஒதுக்குப்புறம் *odukku-p-puṟam,* பெ. (n.) 1. ***ஒதுங்கும் புறவிடம்;*** side of a building or a hedge or a tree, as affording shelter from wind and rain. 2. ***தனித்த இடம்;*** solitary place. (செ.அக.).

[ஒதுக்கு + புறம்.]

ஒதுக்குப்பொதுக்குப்பண்ணு-தல் *odukku-p-podukku-p-paṇṇu-,* 12.செ.குன்றாவி. (v.t.) 1. ***பண ஏமாற்றுச் செய்தல்;*** to embezzle. 2. ***சொத்தை மறைத்து வைத்தல்;*** to conceal property by omitting to insert it in the list or schedule, as of a person sued for debt. (செ.அக.).

[ஒதுக்குப்பொதுக்கு + பண்ணு. ஒதுக்குப் பொதுக்கு - எதுகை குறித்த இணைமொழி.]

ஒதுக்குமுளை *odukku-muḷai,* பெ. (n.) ***தேய்ந்த வெள் ளிக்காசு;*** small silver coin worn off by use. (செ.அக.).

[ஒதுக்கு + முளை. தேய்ந்ததால் ஒதுக்கத்தக்க காசு.]

ஒதுக்குவயல் *odukku-vayal,* பெ. (n.) ***வயலிற் கால் நடைகளைக் கட்டுமிடம்*** (வின்.); place set apart in a paddy field behind the lodging hut, for penning cattle.

[ஒதுக்கு + வயல்.]

ஒதுங்கு-தல் *oduṅgu-,* 7.செ.கு.வி. (v.i.) 1. ***விலகுதல்;*** to get out of the way, as to well. 2. ***கரையிற் சார்தல்;*** to drift ashore. 3. ***அடைக்கலம் புகுதல்;*** to seek refuge, take shelter. "நின்றளிக்கும் குடைநிழற்கீ ழுதினொதுங்கி" (கம்பரா.கையடை.8). 4. ***ஒடுங்குதல்*** (பிங்.); to step aside and bow as a mark of respect, before a superior. 5. ***நடத்தல்;*** to tread, step, walk. "கோல்காலாகக் குறும்பல வொதுங்கி" (புறநா.159,3). 6. ***பின்னடை தல்;*** to lag behind. "செந்தளி ரொதுங்க மிளிர்சீறடி" (கந்தபு.தெய்வயானை.232). 7. ***தீர்தல்;*** to be finished, settled, adjusted, completed. காரிய மொதுங்கிவிட்டது. 8. ***வறுமைப்படுதல்*** (யாழ்ப்.); to be impoverished; to be in want. 9. ***இறத்தல்*** (யாழ்ப்.); to die. ஆள் ஒதுங்கிப் போயிற்று (செ.அக.).

ம. ஒதுங்கு; **க.** ஒதுகு, ஒதகு; **து.** ஒதுங்க; **தெ.** ஒடுசு.

[ஒடுங்கு → ஒதுங்கு → ஒதுங்கு-தல் (வே.க.84).]

ஒதுங்குபுறம் *oduṅgu-puṟam,* பெ. (n.) ***புறம்போக்கு;*** uncultivated land. (Loc.) (செ.அக.).

ஒதுப்புறம் *odu-p-puṟam,* பெ. (n.) ***ஒதுக்குப்புறம்*** பார்க்க; see *odukku-p-puṟam.* (செ.அக.).

ஒப்ப *oppa,* இடை. (part.) ***உவம வாய்பாடுகளுள் ஒன்று*** (தொல்.பொருள்.291); adverbial word of comparison. "கற்பிளவோடு ஒப்பர் கயவர்" (நல்வழி).

[ஒ → ஒல் → ஒப்ப.]

ஒப்பக்கதிர் *oppa-k-kadir,* பெ. (n.) ***அணிகலனை மெருகிடுங் கருவி*** (வின்.); jeweller's polishing instrument. (செ.அக.).

[ஒப்பம் + கதிர்.]

ஒப்பங்கூறு *oppaṅ-kūṟu,* பெ. (n.) ***பங்கு ஓலை*** (பத்திரம்.) (C.G.); partition deed showing division of property. (செ.அக.).

மறுவ. பங்கோலை, பங்காவணம், (பங்குபத்திரம், பாகபத்தி ரம்).

[ஒப்பம் + கூறு. ஒப்பம் = செப்பம், ஒழுங்கு.]

ஒப்பங்கூறுச்சீட்டு *oppaṅ-kūṟuccīṭṭu,* பெ. (n.) ***ஒப்பங் கூறு*** பார்க்க (C.G.); see *oppaṅ-kūṟu.* (செ.அக.).

[ஒப்பம் + கூறு + சீட்டு.]

ஒப்பங்கொடு-த்தல் *oppaṅ-koḍu-,* 4.செ.கு.வி. (v.i.) ***கட்டளை கொடுத்தல்*** (யாழ்ப்.); to grant an order, issue a summons. (செ.அக.).

[ஒப்பம் + கொடு-த்தல்.]

ஒப்பச்செய்-தல் *oppa-c-cey-,* 1.செ.குன்றாவி (v.t.) ***ஒத்துக் கொள்ளச் செய்தல்;*** to cause to agree. (ஆ.அக.).

[ஒப்ப + செய்-தல்.]

ஒப்பசெப்பம் *oppa-šeppam,* பெ. (n.) ***சமம்*** (வின்.); levelness, as of ground. (செ.அக.).

[ஒப்பம் + செப்பம்.]

ஒப்படி[1] *oppaḍi,* பெ. (n.) 1. ***அறுவடை*** (உ.வ.): harvest. 2. ***ஒருவகைக் கூட்டுநிதி;*** (G.Tn.D.i.103); a kind of common good fund raised by proportionate contributions from all land owners. (செ.அக.).

தெ. ஒப்பிடி.

[ஒப்பு → ஒப்படி (வே.க.112).]

ஒப்படி[2] *oppaḍi,* பெ. (n.) ***தூய்மை; துப்புரவு;*** cleanliness, neatness. வீட்டை ஒப்படியாக வைத்துக் கொள் (இ.வ.).

[உவப்படி → ஒப்படி.]

ஒப்படி[3] *oppaḍi,* பெ. (n.) ***அணியமானது*** (m.m.); that which is ready. (செ.அக.).

[ஒப்பம் → ஒப்படி.]

ஒப்படிமிசுக்கு *oppaḍi-mišukku,* பெ. (n.) ***நில விளைச்சற் கணக்கு*** (இ.வ.); computation of the actual value of a crop. (செ.அக.).

[ஒப்படி + மிசுக்கு.]

ஒப்படியிருக்கை *oppaḍi-y-irukkai,* பெ. (n.) ***யாழ் மீட்டும் இருக்கை நிலை யொன்பதனுள் ஒன்று*** (சிலப்.8,25,உரை.); a posture, one of nine irukkai. (செ.அக.).

[ஒப்படி + இருக்கை.]

ஒப்படை[1]**-த்தல்** *oppaḍai-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஒப்புவித்தல்;*** to entrust, consign, deliver, give over to the charge of another. அவனிடத்தில் எல்லாப் பொறுப்பையும் ஒப்படைத்திருக்கிறான் (உ.வ.). 2. ***ஈடுகொடுத்தல்;*** to make amends. give satisfaction, furnish a security, compensate, indemnify. பணம் வாங்கத் தன் சொத்துக்களையெல்லாம் ஒப்படைத்தான். (உ.வ.). 3. ***பரிந்துரைசெய்தல்*** (வின்.); to recommend. (செ.அக.).

[ஒப்பு + அடை-த்தல்.]

ஒப்படை[2] *oppaḍai,* பெ. (n.) 1. ***ஒப்புக் கொடுக்கை;*** entrusting, surrender, commitment, delivery, pledging, giving charge. 2. ***ஒப்படைப்பு*** பார்க்க; see *oppaḍaippu.* (செ.அக.).

[ஒப்பு + அடை.]

ஒப்படைப்பு *oppaḍaippu,* பெ. (n.) ***முறைமன்ற ஆணையை நிறைவேற்றுகை;*** (Legal) delivery in execution court proceedings. (செ.அக.).

[ஒப்பு + (அடை) அடைப்பு.]

ஒப்பணி[1]**-தல்** *oppaṇi-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***ஒப்பனை செய்தல்;*** to decorate, embellish. "ஒப்பணிதலிற் சிவப்பாதல்" (திவ்.பெரியாழ்.3,6,8,வ்யா.பக்.690) (செ.அக.).

[ஒப்பு + அணி - ஒப்பணி.]

ஒப்பணி[2] *oppaṇi,* பெ. (n.) ***உவமையணி;*** (Rhet.) simile. (செ.அக.).

[ஒப்பு + அணி.]

ஒப்பந்தம்[1] *oppandam,* பெ. (n.) 1. ***உடன்படிக்கை;*** agreement, stipulation, contract. 2. ***கட்டுப்பாடு;*** unanimity; accord. ஊரெல்லாம் ஒப்பந்தமாயிருக்கிறது. 3. ***நடு*** (வின்.); middling quality, mediocrity. 4. ***சமன்;*** smoothness, evenness, levelness. ஒப்பந்தமான நிலம் (வின்.). (செ.அக.).

ம. ஒப்பந்தம்; க. ஒப்பந்த; து. ஒப்பந்த; தெ. ஒப்பந்தமு.

[ஒப்பு → ஒப்பந்தம். 'அந்தம்' - சொல்லாக்க ஈறு.]

ஒப்பந்தம்[2] *oppandam,* கு.வி.எ. (adv.) ***ஒப்பாக;*** similarly, equally. அவனுக்கு ஒப்பந்தம் நீ செய்ய வேண்டும். (இ.வ.) (செ.அக.).

[ஒப்பு + அந்தம் - ஒப்பந்தம். பெயர்ச்சொல் வினை யெச்சப் பொருள் தந்தது.]

ஒப்பந்தம்பண்ணு-தல் *oppandam-paṇṇu-,* 15.செ.கு.வி. (v.i.) 1. ***உடன்படிக்கை செய்தல்;*** to agree, to contract, covenant. 2. ***ஈடாகக் கொடுத்தல்*** (வின்.); to give as equivalent for. 3. ***சமம்பண்ணுதல்*** (வின்.); to level, smooth on. (செ.அக.).

[ஒப்பந்தம் + பண்ணு-.]

ஒப்பந்தமானகாணி *oppandam-āṉa-kāṇi,* பெ. (n.) ***வரியொழுங்கு செய்யப்பட்ட நிலம்*** (வின்.); land for which the tax or tithe has been commuted into a lump sum by agreement. (செ.அக.).

[ஒப்பந்தம் + ஆன + காணி.]

ஒப்பம்[1] *oppam,* பெ. (n.) 1. ***ஒப்பு*** (வின்.); parallel, comparison, resemblance. 2. ***ஒருதன்மை;*** unchangeability, oneness. "ஒப்பமா யிரண்டற்றொன்றாய்" (கைவல்ய தத்துவவி.28). 3. ***சமம்*** (வின்.); levelness. 4. ***மெருகு*** (புறநா.147,7,உரை.); gloss, polish. 5. ***ஒப்பனை*** (கலித்.117,1,உரை.); ornamentation, make-up. (செ.அக.).

ம. ஒப்பம்; க. ஒப்ப; கோத. ஒப்; துட. உப்; குட. ஒப்ப; து. ஒப்பி; தெ. ஒப்பு; பா். ஒபிப்; குரு. ஒக்னா.

[ஒப்பு → ஒப்பம்.]

ஒப்பம்[2] *oppam,* பெ. (n.) 1. ***கையொப்பம்;*** signature 2. ***கட்டளை*** (யாழ்ப்); writ, summons, citation, order

3. ***ஆணை ஓலை*** (அதிகார பத்திரம்) (யாழ்ப்); written grant of privileges or honours; sanad. (செ.அக.).

[ஒப்பு → ஒப்பம்.]

ஒப்பமிடு[1]-தல் *oppam-iḍu-,* 18.செ.குன்றாவி. (v.t.) 1. ***சமமாக்குதல்;*** to smoothen, level, make even. 2. ***மணி முதலியன துலக்குதல்*** (புறநா.147,7); to polish, as a gem. 3. ***ஒப்பனை செய்தல்*** (அலங்கரித்தல்); to ornament. பொன்னிலே நீலமணியை அழுத்திப்பேணி ஒப்பமிட்டாற் போன்ற (கலித்.117,உரை.) (செ.அக.).

ம. ஒப்பமிடுக.

[ஒப்பம் + இடு.]

ஒப்பமிடு[2]-தல் *oppam-iḍu-,* 18.செ.குன்றாவி. (v.t.) 1. ***கையொப்பமிடுதல்;*** to subscribe one's name to. 2. ***ஆணை ஓலை*** (அதிகார பத்திரங்) ***கொடுத்தல்;*** to grant a certificate of privileges or honours; to grant a diploma or sanad. (செ.அக.).

[ஒப்பம் + இடு.]

ஒப்பரக்காரன் *oppara-k-kāraṉ,* பெ. (n.) ***ஒப்புரவுக் காரன்*** பார்க்க; see *oppuravukkāraṉ.* (செ.அக.).

ஒப்பராவி *opparāvi,* பெ. (n.) ***துலாக்கோல் செய்வோன்*** (வின்.); one who makes balance. (செ.அக.).

[ஒப்பு + அராவி - ஒப்பராவி.]

ஒப்பராவு-தல் *opparāvu-,* 9.செ.கு.வி. (v.i.) ***துலை*** (தராசு) ***செய்தல்*** (வின்.); to make a balance.

[ஒப்பு + அராவு - ஒப்பராவு = ஒப்பாகத் துலைக்கோலை அராவிச் சமன்செய்தல்.]

ஒப்பளவை *oppaḷavai,* பெ. (n.) ***உவமையளவை*** (உபமானப்பிரமாணம்.) (சி.சி.அளவை.1); (Log.) analogy. (செ.அக.).

[ஒப்பு + அளவை.]

ஒப்பன் *oppaṉ,* பெ. (n.) ***மெருகிடப்பட்டது;*** that which has been burnished. "ஒப்பன் திருக்கைக் காறை... ஒப்பன் திருவடிக்காறை" (S.I.I.ii.7). (செ.அக.).

[ஒப்பு → ஒப்பன் (வே.க.112) ஒப்பு = செப்பம், அழகு.]

ஒப்பனை *oppaṉai,* பெ. (n.) 1. ***உவமை;*** simile, comparison. 2. ***சான்று*** (சாட்சியம்); proof, evidence. 3. ***மேற்கோள், எடுத்துக்காட்டு*** (திருட்டாந்தம்); instance, example, parallel. 4. ***போலி*** (பாவனை.) (வின்.); likeness, effigy. 5. ***சமம்;*** levelness, evenness (W.). 6. ***அழகு;*** adornment, decoration, beautification. "வடிவை யொப்பனை செய்தவாறு" (பாரத இந்திர.26). (செ.அக.).

ம. ஒப்பன.

[ஒ → ஒப்பு → ஒப்பனை. (வே.க.112).]

ஒப்பனை காட்டு-தல் *oppaṉai-kāṭṭu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***ஒப்புக் காட்டுதல்;*** to exhibit a likeness, by drawing a picture or by making a bust. 2. ***மேற்கோள் காட்டுதல்*** (வின்.); to adduce an illustration or parallel. (செ.அக.).

[ஒப்பனை + காட்டு.]

ஒப்பா-தல் *oppā-,* 6.செ.கு.வி. (v.i.) 1. ***உவமையாதல்;*** to be similar. 2. ***நேராதல்;*** to equal. (செ.அக.).

[ஒப்பு + ஆ(கு)தல் - ஒப்பாதல்.]

ஒப்பாக்கு-தல் *oppākku-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***இணையாக்குதல், சமனாக்குதல்;*** to make equal, level.

[ஒப்பு + ஆக்கு.]

ஒப்பாசாரக்காரன் *oppāšāra-k-kāraṉ,* பெ. (n.) 1. ***ஒப்புக்குப் பழக்கவழக்கங்களைக் கடைபிடிப்பவன்;*** one who conforms merely to external rites or usage. 2. ***மாயக்காரன்;*** hypocrite, dissembler.

[ஒப்பு + ஆசாரம் + காரன். Skt. ācāra.]

ஒப்பாசாரம் *oppāšāram,* பெ. (n.) 1. ***உடன்படிக்கை;*** agreement, covenant. அவனுக்கும் உனக்கும் ஒப்பாசார மென்ன? 2. ***ஒத்த ஒழுக்கம்;*** conformity, proper conduct. 3. ***ஏய்ப்பு*** (வின்.); hypocrisy. 4. ***கண்டுங் காணாதது போலிருக்கை*** (யாழ்ப்); winking at an act, connivance. 5. ***புறவொழுக்கம்;*** formal, external conduct. (செ.அக.).

[ஒப்பு + ஆசாரம் Skt. ācāra.]

ஒப்பாரி[1]-த்தல் *oppāri-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***ஒத்தல்;*** to resemble, look like. "பொன்னை யொப்பாரித்து" (தேவா.1200,10). (செ.அக.).

[ஒப்பு + ஆரி - ஒப்பாரி. ஆரி = பொருந்து, ஆரித்தல் = பொருத்தல், செய்தல்.]

ஒப்பாரி[2] *oppāri,* பெ. (n.) 1. ***ஒப்பு;*** equal. "அவரன்ன ஒப்பாரி" (குறள்,1071). 2. ***போலி;*** pretence, hoax, imposture. "நாளு மொப்பாரியாய்வந்த புத்துறவுக்கு நன்மை பலவே செய்குவார்" (அறப்.சத.30). (செ.அக.).

க. ஒப்பாரி; தெ. ஒப்பாரி.

[ஒ → ஒப்பு → ஒப்பாரி. (வே.க.112).]

ஒப்பாரி[3] *oppāri,* பெ. (n.) ***அழுகைப்பாட்டு;*** lamentation by women making doleful reference to the personal appearance and good qualities of the deceased. "மகனே யென்றொப்பாரி சொன்னாள்" (இராமநா.யுத்த.81). (செ.அக.).

ம. ஒப்பாரி.

[ஒப்பாரி = ஒப்புமையான பண்புகள்; உள்ளம் ஒத்த தன்மை, நெருங்கிய நல்லியல்புகளைச் சொல்லிப் புலம்புதல்.]

ஒப்பாரிக்காரன் *oppāri-k-kāraṉ,* பெ. (n.) ***இறந்தவனுக்கு ஒப்பாயிருத்தல் பற்றி நெருங்கிய உறவினனாக மதிக்கப்படுபவன்*** (வின்.); one regarded as a near relative because of his resemblance to a deceased member of the family.

[ஒப்பாரி = ஒத்த இயல்பு, ஒப்புமை. ஒப்பாரி + காரன்.]

ஒப்பாரிகொள்ளு-தல் *oppāri-koḷ-*, 7.செ.குன்றாவி. (v.t.) ***இறந்தவனுக்கு ஒப்பாயிருத்தல் பற்றி ஒருவனை நெருங்கிய உறவாகமதித்தல்*** (வின்.); to regard one as a near relation because of his resemblance to a deceased member of the family. (செ.அக.).

[ஒப்பாரி + கொள்.]

ஒப்பாரிச்சுவர் *oppāri-c-cuvar*, பெ. (n.) ***சம உயரத்தில் எழுப்பப்படும் சுவர்;*** walls raised at equal height. (கொங்.வ.).

[ஒப்பாரி + சுவர்.]

ஒப்பாரியிடு-தல் *oppāri-y-iḍu-*, 20.செ.கு.வி. (v.i.) ***இறந்தவரை நினைத்துப் புலம்பியழுதல்;*** to lament the death of a person making numerous reference to his or her personal appearance and excellent qualities. (செ.அக.).

[ஒப்பாரி + இடு.]

ஒப்பாரிவை-த்தல் *oppāri-vai-*, 4.செ.கு.வி. (v.i.) ***ஒப்பாரியிடுதல்*** பார்க்க; see *oppāriyiḍu*. (செ.அக.).

[ஒப்பாரி + வை.]

ஒப்பான் *oppāṉ*, பெ. (n.) ***ஒழுங்கான இயல்புடையவன்;*** man who walks in the path of rectitude. "ஈங்கிவ ரொப்பார் போல யாவையும் விட்டு" (திருவாலவா. 27,43) (செ.அக.).

[ஒப்பு + ஆன்.]

ஒப்பி¹-த்தல் *oppi-*, 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***உவமித்தல்;*** to liken, compare. "இத்துணையே ஒப்பிக்கப்பட்டது" (இறை.1,23). 2. ***விழுக்காடிடுதல்;*** to distribute in an equal measure among many. "பகழியொப்பித் துள்ளவா றூட்டினானே" (சீவக.798). 3. ***மெய்ப்பித்தல்;*** to prove, demonstrate. 4. ***ஒப்பனைசெய்தல்;*** to embellish; to adorn. "மரகதத்தைக் கடைந்தொப்பித்த தொத்தன" (அட்டப்.திருவேங்கடத்தந்.93). (செ.அக.).

[ஒப்பு → ஒப்பி-.]

ஒப்பி²-த்தல் *oppi-*, 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஒத்துக் கொள்ளச் செய்தல்;*** to cause to agree. 2. ***ஏற்கும்படிச் சேர்ப்பித்தல்;*** to deliver, surrender, handover, make over. 3. ***பாடத்தை மனனஞ்செய்து சொல்லுதல்;*** to recite by recalling to mind what has been learnt, as a lesson. (செ.அக.).

ம. ஒப்பிக்குக.

[ஒப்பு → ஒப்பி.]

ஒப்பிடு-தல் *oppiḍu-*, 18.செ.குன்றாவி. (v.t.) 1. ***உவமித்தல்;*** to liken. 2. ***ஒத்துப் பார்த்தல்;*** to compare with other copies, as manuscripts; to collate. (செ.அக.).

[ஒப்பு + இடு.]

ஒப்பித்துக்கொள்(ளு)-தல் *oppittu-k-koḷ-*, 7.செ.குன்றாவி. (v.t.) ***ஏற்றுக்கொள்ளுதல்*** (உ.வ.); to receive; to take charge of, as an office. (செ.அக.).

[ஒப்பி → ஒப்பித்து + கொள்.]

ஒப்பிதம் *oppidam*, பெ. (n.) 1. ***பொருத்தமாயிருக்கை;*** acceptability, propriety. 2. ***சமம்;*** smoothness, levelness. 3. ***நேர்மையாயிருக்கை;*** fairness, justice, equity. (செ.அக.).

தெ. ஒப்பிதமு.

[ஒப்பு → ஒப்பிதம். (வே.க.112).]

ஒப்பில்போலி *oppil-pōli*, பெ. (n.) ***ஒப்புமைப் பொருளைக் காட்டாத, போல் என்னும் இடைச்சொல்*** (தொல்.சொல்.280); the particle of comparison, pōl, used as a mere expletive without indicating any comparison as in அவன் இங்கு வந்தான் போலும் (உ.வ.) (செ.அக.).

[ஒப்பு + இல் + போலி.]

ஒப்பின்முடித்தல் *oppiṉ-muḍittal*, பெ. (n.) ***ஒன்றனதிலக்கணத்தை அதுபோன்ற வேறொன்றற்கும் முடிவு செய்தலாகிய உத்தி*** (நன்.14); (Gram.) application of a rule appertaining to one thing to other things also of a similar character, one of 32 utti. (செ.அக.).

[ஒப்பு + இன் + முடித்தல்.]

ஒப்பின்மை *oppiṉmai*, பெ. (n.) 1. ***நிகரின்மை;*** incomparableness, peerlessness, the quality of being unequalled or unparalleled. 2. ***வேறுபாடு;*** dissimilarity, variation. (செ.அக.).

[ஒப்பு + இன்மை.]

ஒப்பு¹-தல் *oppu-*, 5.செ.குன்றாவி. (v.t.) ***ஏற்றுக்கொள்ளுதல்*** (சம்மதித்தல்); to agree, accede to, assent, approve. (செ.அக.).

தெ., க. ஒப்பு; **து.** ஒப்பி.

[ஒல் → ஒப்பு.]

ஒப்பு² *oppu*, பெ. (n.) 1. ***போலுகை;*** likeness, similarity, resemblance. "உறுப்பொத்தன மக்களொப் பன்றால்" (குறள்.993). 2. ***அழகு;*** beauty, loveliness, grace. "ஒப்புடை யொருவனை யுருவழியிய" (தேவா.474,7). 3. ***கவனம்;*** attention, alertness. "ஒப்பொடு கேட்பமென் றுள்ளம் பற்றியே" (திருவாலவா.42,13). 4. ***ஒரு தன்மை;*** uniformity, oneness, consonance. 5. ***ஏற்புடையது;*** that which is fit, appropriate, proper. "தீர்த்த யாத்திரைக்குச் செல்கை யொப்பல" (திருக்காளத்.1,20). 6. ***உவமையளவை*** (சி.சி.அளவை.1); analogy. 7. ***உடன்பாடு;*** consent, approval. 8. ***ஒப்பாரி*** பார்க்க; see *oppāri*. (செ.அக.).

ம. ஒப்பு; **க.** ஒப்பு; **கோத.** ஒப்; **துட.** கொய்உபம் (கைஒப்பம்); **குட.** ஒப்பு; **குரு.** ஒக்னா; **து.** ஒம்பு; **தெ.** ஒப்பு.

[ஒல் → ஒப்பு.]

ஒப்பு³ *oppu*, பெ. (n.) ***கையெழுத்து;*** signature (tinn) (செ.அக.).

ம. ஒப்பு.

[ஒல் → ஒப்பு.]

ஒப்பு[4] *oppu,* பெ. (n.) *ஒத்தடம்* (இ.வ..); fomentation. (செ.அக.).

[ஒல் → ஒப்பு.]

ஒப்புக்கழு[1]**-தல்** *oppukkalu-,* 1.செ.கு.வி. (v.i.) *போலி யாக அழுதல்;* to lament the death of a person for the sake of convention.

[ஒப்பு + கு + அழு - ஒப்புக்கழு. 'கு' - நான்கன் உருபு.]

ஒப்புக்கழு[2]**-தல்** *oppukkalu-,* 1.செ.குன்றாவி. (v.t.) *மனமொவ்வாமற் செய்தல்;* to perform a task without putting one's heart into it, to do a thing reluctantly. (செ.அக.).

[ஒப்பு + கு + அழு - ஒப்புக்கழு. 'கு' - நான்கன் உருபு.]

ஒப்புக்கொடு-த்தல் *opp-k-kodu-,* 4.செ.குன்றாவி. (v.t.) *ஒப்புவித்தல்;* to deliver, hand over, make over. (செ.அக.).

[ஒப்பு + கொடு.]

ஒப்புக்கொப்பாரம் *oppukkoppāram,* பெ. (n.) *விருந்தினரைப் பேணுதல்* (இ.வ.); entertainment of guests, hospitality. (செ.அக.).

[ஒப்புக்கு + ஒப்பாரம் - ஒப்புக்கொப்பாரம். ஒப்புக்கு = விரும்பும் அளவுக்கு. ஒப்பாரம் = செம்மை, நிறைவு.]

ஒப்புக்கொள்(ளு)தல் *oppu-k-kol-,* 7.செ.குன்றாவி. (v.t.) 1. *ஏற்றுக் கொள்ளுதல்;* to take charge accept. அந்த வேலையை ஒப்புக்கொண்டான். 2. *மனத்துக்குப் பிடித்தல்;* to be agreeable to. அந்தக் கிழவிக்கு ஒன்றும் ஒப்புக்கொள்ள வில்லை (வின்.). 3. *ஒத்துக்கொள்ளுதல்;* to admit, confess. (செ.அக.).

தெ. ஒப்புகொனு.

[ஒப்பு + கொள்.]

ஒப்புகுத்து-தல் *oppukuttu-,* 5.செ.குன்றாவி. (v.t.) *கையொப்பம் இடுதல்;* to sign, to affix one's signature. (சேரநா.).

ம. ஒப்புகுத்துக.

[ஒப்பு + குத்து. குத்துதல் = இடுதல்.]

ஒப்புச்சரக்கு *oppu-c-carakku,* பெ. (n.) *அகப்படாச்சரக்கிற்கு மாற்றாகத் தேர்ந்தெடுக்கும் அக்குணம் வாய்ந்த வேறொரு போலிச்சரக்கு;* replacement of one drug or substance by another in place of a non-available drug-substitute. (சா.அக.).

[ஒப்பு + சரக்கு.]

ஒப்புதல்பற்றுச்சீட்டு *oppudal-parruccīttu,* , பெ. (n.) 1. *சொத்தை முறைமன்ற ஏலத்தில் எடுத்தற்குப் பற்றுச்சீட்டு;* (legal) delivery receipt for property purchased in court sale. 2. *அனுப்பியதைப் பெற்றுக் கொண்டதற்குத் திரும்பிவரும் அஞ்சல் பற்றுச்சீட்டு* (இ.வ.); postal acknowledgement receipt. (செ.அக.).

[ஒப்புதல் + பற்று + சீட்டு.]

ஒப்புதல்ரசீது *oppudal rasīdu,* பெ. (n.) *ஒப்புதல் பற்றுச் சீட்டு* பார்க்க; see *oppudal parruccīttu.* (செ.அக.).

ஒப்புப்பொருவு *oppu-p-poruvu,* பெ. (n.) *உவமப்பொரு* பார்க்க; see *uvama-p-poru.* (செ.அக.).

ஒப்புமுத்து *oppu-muttu,* பெ. (n.) *நல்லுருவமைந்த முத்து* (S.I.I.ii,143); well shaped pearl; pearl of a round, symmetrical shape. (செ.அக.).

[ஒப்பு + முத்து.]

ஒப்புமுறி *oppu-muri,* பெ. (n.) *ஒப்புக்கொண்டதைக் குறிக்குஞ் சீட்டு;* deed of consent. (Pudu.insc.) (செ.அக.).

ம. ஒப்புமுரி.

[ஒப்பு + முறி.]

ஒப்புமை *oppumai,* பெ. (n.) *சமம்;* likeness, resemblance, similarity. "ஒப்புமை தோன்றச் செப்புவதுவமை" (தண்டி.29). (செ.அக.).

[ஒப்பு → ஒப்புமை. 'மை' - பண்புப்பெயரீறு.]

ஒப்புமைக்கூட்டம் *oppumai-k-kūttam,* பெ. (n.) *புகழ்தலிலும் இகழ்தலிலும் ஒன்றை அதனினும் மிக்க வேறொன்றொடு உவமிக்கும் ஓரணி* (தண்டி.78); (Rhet.) bringing together several objects which have an attribute in common among them for comparison, figure of speech in which an object is compared with several other objects to render the comparision effective and telling.

[ஒப்புமை + கூட்டம்.]

ஒப்புமொழி *oppu-moli,* பெ. (n.) *உடன்படிக்கை* (வின்.); agreement, covenant. (செ.அக.).

[ஒப்பு + மொழி.]

ஒப்புரவறி-தல் *oppuravari-,* 2.செ.கு.வி. (v.i.) *உலக நடைக்கேற்ற பாங்குகளைத் தெரிதல்* (குறள். அதி.22); to know what is accepted by the world as proper, as in relation to gifts. (செ.அக.).

[ஒப்புரவு + அறி-தல்.]

ஒப்புரவா-தல் *oppuravā-,* 6.செ.கு.வி. (v.i.) *அமைவுறுதல்* (chr.); to be reconciled. (செ.அக.).

[ஒப்புரவு + ஆ(கு)தல் - ஒப்புரவாதல்.]

ஒப்புரவாக்கு-தல் *oppuravākku-,* 5.செ.குன்றாவி. (v.t.) *அமைவு செய்தல்* (விவிலி.2,கொரிந்.5,18); to reconcile. (செ.அக.).

[ஒப்புரவு + ஆக்கு.]

ஒப்புரவாயிரு-த்தல் *oppuravāy-iru-,* 3.செ.கு.வி. (v.i.) *நலமுடனிருத்தல்* (வின்.); to be fairly well in health or circumstances. (செ.அக.).

[ஒப்புரவு + ஆய் + இரு.]

ஒப்புரவு *oppuravu,* பெ. (n.) 1. ***ஒற்றுமை;*** agreement, union. 2. ***ஒத்துப்போகும் மெல்லியல்பு, சமன்;*** smoothness, levelness, evenness. 3. ***உலகப் பொது ஒழுகலாறு;*** custom, usage, duties enjoined by long established custom, caste rules. ''ஒப்புரவொழுகு'' (ஆத்திசூ.). 4. ***உலகநன்மை;*** philanthropy. ''ஒருயிர்க்கே யுடம்பளித்தா லொப்புரவிங் கென்னாகும்'' (பெருந்தொ.188). (செ.அக.).

ஒப்பு + ஊர் - ஒப்பூர் → ஒப்புரவு. (சு.வி.67).

ம. ஒப்புரவு.

[ஒப்பு → ஒப்புரவு.]

ஒப்புரவுக்காரன் *oppuravu-k-kāran,* பெ. (n.) 1. ***குல மகன்;*** clansman. 2. ***பங்காளி*** (இ.வ..); relative, he that has an equal share with others in inheritance; co-parcener. (செ.அக.).

[ஒப்புரவு + காரன்.]

ஒப்புவமை *oppuvamai,* பெ. (n.) ***அணிவகையு ளொன்று;*** ornament. (ஆ.அக.).

[ஒப்பு + உவமை.]

ஒப்புவி-த்தல் *oppuvi-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஏற்கும் படி சேர்த்தல்;*** to surrender, deliver, consign, hand over. ''அன்னைபால் வினையேனை யொப்புவித்து'' (தாயு.சச்சிதா.9). 2. ***மெய்ப்பித்தல்;*** to prove, demonstrate. 3. ***எடுத்துக்காட்டுத் தருதல்;*** to illustrate. 4. ***கடன்சாட்டுதல்*** (வின்.); to transfer, as a debt. (செ.அக.).

[ஒப்பு → ஒப்புவி.]

ஒப்பூண் *oppūṇ,* பெ. (n.) ***பிறருடன் ஒத்த பட்டறிவு;*** sharing pleasure along with others; experiencing a thing in common with others instead of solely by oneself. ''ஒப்பூண் உண்ணமாட்டாதே'' (ஸ்ரீவசன.83) (செ.அக.).

[ஒப்பு + ஊண் - ஒப்பூண். (குறிப்புப் பொருளாக ஒத்த பட்டறிவைக் குறித்தது.]

ஒப்போலை *oppōlai,* பெ. (n.) ***உடன்படிக்கைச் சீட்டு;*** deed of agreement, contract. ''ஒப்போலை எழுதிக் கொண்டு ... பிரவிருத்தியுறும் மகாசனங்கள்'' (சிவ சம.58). (செ.அக.).

ம. ஒப்போல.

[ஒப்பு + ஓலை.]

ஒப்போன் *oppōṉ,* பெ. (n.) ***ஒத்தவன்;*** one who is equal to.

ம. ஒப்போன்.

[ஒப்பான் → ஒப்போன்.]

ஒம்மல் *ommal,* பெ. (n.) ***ஊர்ப்பேச்சு;*** rumour. (Loc.) (செ.அக.).

[ஓம் → ஒம்மல்.]

ஒம்மெனல் *om-m-eṉal,* பெ. (n.) ***ஒலிக்குறிப்பு;*** onom. expr. of the sound of a ball that is tossed about. ''ஒம்மென்பந்தும்'' (பதினொ.திருவிடை.மும்.1, வரி.39) (செ.அக.).

[ஒம் + எனல். 'ஒம்' = ஒலிக்குறிப்பு இடைச்சொல்.]

ஒமை *omai,* பெ. (n.) ***மா*** (மலை.); mango. (செ.அக.).

[மா → மாம் → ஆம் → ஓம் → ஒமை.]

ஒய்[1]-தல் *oy-,* 2.செ.குன்றாவி. (v.t.) 1. ***பெய்தல், ஊற்றுதல்;*** to pour. 2. ***இடுதல்;*** to put, keep.

[உள் → ஒள் → ஒய்.]

ஒய்[2]-தல் *oy-,* 2.செ.குன்றாவி. (v.t.) 1. ***இழுத்தல்;*** to drag along, as flood. ''கன்றுகா லொய்யுங் கடுஞ்சுழி நீத்தம்'' (அகநா.68). 2. ***செலுத்துதல்;*** to launch, as a boat; to send forth. ''ஒய்யுநீர்வழிக்கரும்பினும்'' (பதிற்றுப்.87,4). 3. ***கொடுத்தல்;*** to give. ''வளராப் பார்ப்பிற் கல்கிரை யொய்யும்'' (நற்.356). 4. ***போக்கு தல்;*** to wipe out, efface. ''ஒய்யா வினைப்பய னுண்ணுங்காலை'' (சிலப்.14,33).

[உய் → ஒய்.]

ஒய்[3]-தல் *oy-,* 2.செ.கு.வி. (v.i.) 1. ***விட்டொதுங்குதல்;*** to be off, to go away from. ஒய்யெனத் தெழித்தாங்கு (சிலப்.15,48,உரை.). 2. ***தப்புதல்;*** to escape, get into safety. ''ஒடியொளித் தொய்யப்போவா னிலைகாண் மின்'' (பரிபா.20,39) (செ.அக.). 3. ***வளைதல்;*** to bend.

[உய் → ஓய் → ஒய்-தல். (வே.க.49).]

ஒய்[4]-தல் *oy-,* 2.செ.குன்றாவி. (v.t.) ***அடித்தல், தாக்கு தல்;*** to strike, attack.

க. ஒய்; பட. ஊய்.

[உல் → ஒல் → ஒய்.]

ஒய்[5] *oy,* இடை. (int.) ***யானையைப் பாகர் வையும் குறிப்பு மொழி*** (சிலப்.15,48,உரை.); hey! onom expr. used by mahouts to frighten an elephant. (செ.அக.).

[உய் → ஒய்.]

ஒய்யல் *oyyal,* பெ. (n.) 1. ***செலுத்துகை*** (பிங்.); forwarding. 2. ***கொடுக்கை;*** giving. (செ.அக.).

[உய் → ஒய் → ஒய்யல்.]

ஒய்யாரக்காரன் *oyyāra-k-kāran,* பெ. (n.) ***ஆரவார*** (ஆடம்பர) ***முள்ளவன்;*** fop, dandy. (செ.அக.).

க. ஒய்யாரகார; தெ. ஒய்யார காடு.

[ஒய் → ஒய்யாரம் + காரன்.]

ஒய்யாரக்கொண்டை *oyyāra-k-kondai,* பெ. (n.) ***அழ காக*** (அலங்காரமாக) ***முடிக்கும் மயிர்முடி;*** tuft of hair gracefully tied up. "ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூ வாம், உள்ளேயிருக்குமாம் ஈரும் பேனும்" (செ.அக.).

[ஒய்யாரம் + கொண்டை.]

ஒய்யாரநடை *oyyāra-nadai,* பெ. (n.) 1. ***அழகான நடை;*** graceful gait. 2. ***பிலுக்கு நடை;*** affected giat. (செ.அக.).

[ஒய்யாரம் + நடை.]

ஒய்யாரம் *oyyāram,* பெ. (n.) 1. ***மகிழ்வான நிலை;*** gracefulness of movement, elegant bearing. "ஒய்யார மாக நடந்து" (குற்றா.குற.16,3). 2. ***ஆரவாரம்*** (ஆடம் பரம்.) (வின்.); affection, foppery. (செ.அக.).

ம. ஒய்யாரம்; க. ஒய்யார; து. ஒய்யார; தெ. ஒய்யாரமு; *Skt.* upacāra..

[ஒய் → ஒய்யாரம்.]

ஒய்யென[1] *oy-y-ena,* கு.வி.எ. (adv.) ***விரைவாக;*** quickly. "ஒய்யென வாங்கே யெடுத்தனன்" (கலித்.37) (செ.அக.).

[ஒய் + என.]

ஒய்யென[2] *oy-y-ena,* கு.வி.எ. (adv.) ***மெல்ல;*** slowly. (செ.அக.).

குரு. அயா.

[ஒய் + என.]

ஒயில் *oyil* பெ. (n.) 1. ***ஒய்யாரம்;*** grace of form, posture or movement. "பிலுக்கிலே செயும் ஒயிலாலே" (திருப்பு.158). 2. ***ஒருவகைக் கூத்து*** (இ.வ.); dancing of persons on festival occasions by moving round and round in a circle to the accompaniment of a song, bowing to the ground and waving little towels or handkerchiefs. (செ.அக.).

தெ. கொயலு, ஒய்யாரமு; க. ஒய்யார.

[ஒய் + இல் - ஒயில் (வளைந்தாடும் ஆட்டம்).]

ஒயில்வண்டி *oyil-vandi,* பெ. (n.) ***மகிழ்வான பயணத் திற்கேற்ற வண்டி;*** carriage for a pleasant outing. "சீர முறுநோய்போம் ... ஒயில் வண்டி யேறுவார்க்கென் றோர்" (பதார்த்த.1455) (செ.அக.).

தெ. கொயலு புண்டி.

[ஒயில் + வண்டி.]

ஒயிற்கும்மி *oyir-kummi,* பெ. (n.) 1. ***ஒயிலாட்டத்துப் பாடும் பாட்டு:*** song sung in oyil. முருகர் ஒயிற்கும்மி. 2. ***ஒயில்***[2] பார்க்க; see *oyil*[2] (செ.அக.).

[ஒயில் + கும்மி.]

ஒயின்மரம் *oyinmaram,* பெ. (n.) ***தொழுமரம்;*** pillory, stacks. ஒயின்மரத்திலே மாட்டினான் (வின்.). (செ.அக.).

[உய் → ஒய் + இன் - ஒயின் + மரம் - ஒயின்மரம்.]

ஒரட்டுக்கை *orattu-k-kai,* பெ. (n.) ***இடக்கை*** (இ.வ.); left hand.

[உரட்டு → ஒரட்டு + கை.]

ஒரணை *oranai,* பெ. (n.) ***இரட்டை;*** pair. "திருக்கைக் காறை ஒரணை" (S.I.I.ii,226) (செ.அக.).

[ஓர் + இணை - ஓரிணை → ஒரணை.]

ஒராங்கு *orāngu,* கு.வி.எ. (adv.) ***ஓராங்கு*** பார்க்க; see *ōrāngu.* "மாந்த ரொராங்குக் கைசுமந்தலறும் பூசல்" (பதிற்றுப்.31,2) (செ.அக.).

ஒரால் *orāl,* பெ. (n.) ***நீங்குகை;*** withdrawing, receding. "வேந்தர் தாரழிந் தொராலின்" (பதிற்றுப்.23,17) (செ.அக.).

[ஒருவு → ஒருவல் → ஒரால்.]

ஒரானொரு *orān-oru,* கு.பெ.எ. (adj.) ***ஏதோ ஒன்று;*** a certain, some one at some point. "ஒரா னொருநாளில்" (குருபரம்.217,பன்னீ.) (செ.அக.).

[ஓர் → ஓரான் → ஓரானொரு.]

ஒரி-த்தல் *ori-,* 4.செ.கு.வி. (v.i.) ***ஒற்றுமையாயிருத்தல்*** (யாழ்.அக.); to be united, in harmony. (செ.அக.).

[ஓர் → ஒரி → ஒரி-த்தல். (வே.க.106).]

ஒரு[1] *oru,* கு.பெ.எ. (adj.) ***ஒன்று என்பதன் பெய ரெச்சம்;*** a or an; one, unique; special. ஒரு மகன். (செ.அக.).

ம. ஒரு; க. ஒர், ஓர்; கோத. ஒர்; துட. வீர்; குட. ஒரி, ஒர்; து. ஒர், ஒரு; தெ. ஒகட்டி, ஒண்டு; கோண். ஒர்; கொன். ஒர்; கூ. ரோ; குவி. ரோ; குரு. ஒர்; மால். ஒர்; பிரா. அசி.

[ஒன்று → ஓர் → ஒரு.]

ஒரு[2] *oru,* கு.பெ.எ. (adj.) ***ஒப்பற்ற, சிறந்த;*** excellent.

[ஒன்று → ஓர் → ஒருவு → ஒரு (ஒன்றே தனித்துச் சிறப்படை தல்).]

ஒரு[3] *oru,* பெ. (n.) ***செம்மறி*** (பிங்.); sheep.

[உரு → ஒரு = செம்மறி. (கொ.வ.).]

ஒருக்க *orukka,* கு.வி.எ. (adv.) 1. ***எப்பொழுதும்;*** ever, always. "காமமொருக்க வொருதன்மை நிற்குமோ" (பரிபா.6,72). 2. ***ஒவ்வொன்றுக்கும்;*** for each. வாக்குமூலத்துக்கு ஒருக்க ஓர் அடி அவனுக்குக் கொடுத்தான் (இ.வ.). 3. ***ஒருமுறை, ஒன்றுபோல்;*** once, like one. (செ.அக.).

[ஒருக்கு → ஒருக்க.]

ஒருக்கடி-த்தல் *orukkaḍi-*, 4.செ.கு.வி. (v.i.) ***ஒருக்களி-த்தல்*** பார்க்க; see *orukkaḷi-*. "ஒருக்கடித்தென்ன வொண்ணாதே" (திவ்.அமலனாதி.7,வ்யா.பக்.86) (செ.அக.).

[ஒருக்களி → ஒருக்கடி.]

ஒருக்கடு-த்தல் *orukkaḍu-*, 4.செ.குன்றாவி. (v.t.) ***சமமாக நினைத்தல்;*** to make no distinction, to consider equally. "திருக்கடித் தானமு மென்னுடைச் சிந்தையும், ஒருக்கடுத்து" (திவ்.திருவாய்.8,6,2). (செ.அக.).

[ஒருக்கு + அடு.]

ஒருக்கணி[1]-த்தல் *oru-k-kaṇi-*, 4.செ.கு.வி. (v.i.) ***ஒரு பக்கமாய்ச் சாய்தல்;*** to lie on one side. "ஒருக்கணித்தோ மல்லாந்தோ கண் வளர்ந்தருளுகிறது" (திவ். திருமாலை,23,வ்யா.81).

[ஒருக்களி → ஒருக்கணி.]

ஒருக்கணி[2]-த்தல் *orukkaṇi-*, 4.செ.குன்றாவி. (v.t.) ***ஒருச்சரித்தல்;*** to shut partially; to set slantingly; to put sidewise; to leave ajar, as a door. கதவை ஒருக்கணி (யாழ்ப்.). (செ.அக.).

[ஒருக்களி → ஒருக்கணி.]

ஒருக்கணிப்பு *orukkaṇippu*, பெ. (n.) ***ஒரு பக்கமாய்ச் சாய்கை*** (யாழ்ப்.); lying or leaning on one side. (J.). (செ.அக.).

[ஒருக்களி → ஒருக்கணி → ஒருக்கணிப்பு.]

ஒருக்கம் *orukkam*, பெ. (n.) 1. ***மனவொடுக்கம்;*** concentration of mind. "மனத்தை யொருக்கு மொருக்கத் தினுள்ளே" (பதினொ.திருவி.மும்.24). 2. ***ஒரு தன்மை;*** oneness, sameness. "ஒருக்கப் பெயரானு ரைக்கப்படும்" (காரிகை.ஒழிபி.6) (செ.அக.).

ம. ஒருக்கம்.

[ஒருக்கு → ஒருக்கம் (வே.க.106).]

ஒருக்கல்[1] *orukkal*, பெ. (n.) ***ஓர் அமங்கலப்பண்*** (ஓர் அபசுரம்.) (திருவாலவா.57,26); dirge, defective note in music. (செ.அக.).

[உருக்கல் → ஒருக்கல்.]

ஒருக்கல்[2] *orukkal*, பெ. (n.) ***அணியமாதல்;*** preparation, getting ready. (சேரநா.).

ம. ஒருக்கல்.

[ஒருக்கு → ஒருக்கல்.]

ஒருக்களி-த்தல் *orukkaḷi-*, 4.செ.கு.வி. (v.i.) ***ஒரு பக்கம் சாய்தல்;*** to lie on one side, to lean on one side. (செ.அக.).

[ஒருக்கு + உளி - ஒருக்குளி → ஒருக்களி.]

ஒருக்கால் *oru-k-kāl*, வி.எ. (adv.) ***ஒருகால்*** பார்க்க; see *orukāl*. "ஒருக்காலழிதோன்றியும்" (பாரத.பதின் மூன்.111) (செ.அக.).

[ஒருகால் + ஒருக்கால்.]

ஒருக்காளி *oru-k-kāḷi*, பெ. (n.) ***ஒரே கொட்டையுடைய பனம்பழம்;*** palmyra fruit having a single seed. (Tinn.) (செ.அக.).

[ஒரு + காழி - ஒருக்காழி → ஒருக்காளி. காழ் = கொட்டை. காழி = கொட்டையுடையது.]

ஒருக்கு-தல் *orukku-*, 7.செ.கு.வி. (v.i.) 1. ***ஒன்று சேர்த்தல்;*** to bring together; to gather. ஒருக்கின பண்டங்களைக் கொண்டு போகின்றமை (சீவக.60, உரை.). 2. ***அடக்குதல்;*** to subdue, control. "மனத்தை யொருக்கு மொருக்கத்தினுள்ளே" (பதினொ.திருவிடை. மும்.24). 3. ***அழித்தல்;*** to kill, slay. "இன்றொருக்கினே னித்தனை வீரரை" (கம்பரா.பிரமா.195) (செ.அக.).

ம. ஒருக்குக.

[ஒரு → ஒருக்கு → ஒருக்கு-தல் (வே.க.106).]

ஒருக்குத்து *orukkuttu*, பெ. (n.) ***ஒருபக்கத் தலைவலி, ஒற்றைத் தலைவலி;*** headache on one side, migraine.

ம. ஒரிச்செனி, ஒரிச்சென்னி.

[ஒருக்கு + குத்து - ஒருக்குக்குத்து → ஒருக்குத்து.]

ஒருகட்பகுவாய் *oru-kaṭ-pagu-vāy*, பெ. (n.) ***பறை வகை*** (பிங்.); a kind of drum with one large face for beating. (செ.அக.).

[ஒரு + கண் + பகு + வாய்.]

ஒருகட்பறை *oru-kaṭ-paṟai*, பெ. (n.) ***ஒருகட்பகுவாய்*** பார்க்க (பிங்.); see oru-kaṭ-pagu-vāy. (செ.அக.).

[ஒரு + கண் + பறை.]

ஒருகணக்கு *oru-kaṇakku*, பெ. (n.) 1. ***ஒரே முறை;*** uniform manner. ஒரு கணக்காய் நடந்து வருகிறது. 2. ***நாட்டுக்கோட்டைச் செட்டிமார் செய்யும் மூன்று ஆண்டுத் தொலை நாட்டு வாணிகம்*** (இ.வ.); a triennial trade carried on in a foreign country by an agent of a Nāṭṭukkōṭṭai Cheṭṭi. (செ.அக.).

[ஒரு + கணக்கு.]

ஒருகணை *orukaṇai*, பெ. (n.) ***ஒப்பற்ற அம்பு***. (சங். இலக்.சொற்.); unique arrow.

[ஒரு + கணை.]

ஒருகால் *oru-kāl*, வி.எ. (adv.) 1. ***ஒருமுறை.*** (திருவாலவா.நூல்வர.3); once. 2. ***ஒருவேளை;*** perhaps. ஒருகால் அது நடக்கலாம். 3. ***சிலவேளை;*** some times. "ஒரு காலுமையாளொர் பாகனுமாம்" (தேவா.405,1) "பொருளற்றார் பூப்பர் ஒருகால்" (குறள்.248).

ம. ஒரிக்கல்; க. ஒர்ம்மெ, ஒம்மெ; குட. ஒம்ம; து. ஒம்மமெ, ஒர; பர். ஒபொட்.

[ஒரு + கால். கால் = பொழுது, முறை.]

ஒருகாலில்நில்(ற்)-த(ற)ல் *orukālil-nil-*, 14.செ.கு.வி. (v.i.) ***உறுதியாயிருத்தல்;*** to be firmly resolved; to be unflinching, a simile from an ascetic standing resolutely as one leg while doing penance. அதை முடிக்க ஒரு காலில் நிற்கிறான். (செ.அக.).

[ஒரு + கால் + இல் + நில்.]

ஒருகாலும் *oru-kāl-um*, கு.வி.எ. (adv.) ***எந்தக் காலத்திலும்;*** at any time whatsoever, used with a negative, never. ஒருகாலும் நடவாது. (செ.அக.).

[ஒரு + கால் + உம்.]

ஒருகாலே *oru-kāl-ē*, கு.வி.எ. (adv.) ***ஒரேமுறையில்;*** at once, at one stroke. ஒருகாலேயெல்லாம் வாங்குக. (செ.அக.).

[ஒரு + கால் + ஏ.]

ஒருகிடை *oru-kiḍai*, பெ. (n.) 1. ***கிடந்தகிடை;*** being bedridden; state of being unable to move from bed. 2. ***ஒருபக்கமாய்ச் சாய்ந்து படுக்கை;*** lying on one side. ஒருகிடையாய்ப் படுத்துக் கிடக்கிறான். (செ.அக.).

[ஒரு + கிடை. ஒரு = ஒருபக்கம்.]

ஒருகுடி *oru-kuḍi*, பெ. (n.) ***பங்காளி*** (யாழ்.அக.); agnate. (செ.அக.).

[ஒரு + குடி.]

ஒருகுழையவன் *oru-kuḻaiyavaṉ*, பெ. (n.) ***பலராமன்;*** Balarāma, who wore a ring in only one of his ears. "ஒருகுழையவன் மார்பிலொண்டார்போ லொளிமிக" (கலித்.105,11). (செ.அக.).

[ஒரு + குழை + அவன்.]

ஒருகுழையொருவன் *orukuḻaiyoruvaṉ*, பெ. (n.) ***ஒரு குழையவன்*** (பரி.1.5) பார்க்க; see *orukuḻaiyavaṉ*.

[ஒரு + குழை + ஒருவன்.]

ஒருகுறி *oru-kuṟi*, கு.வி.எ. (adv.) ***ஒருமுறை;*** once. "ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பின்" (நன்.42) (செ.அக.).

[ஒரு + குறி.]

ஒருகூட்டு *oru-kūṭṭu*, பெ. (n.) ***ஒருசேர்க்கை;*** close union, compact. (செ.அக.).

[ஒரு + கூட்டு.]

ஒருகை[1] *orukai*, பெ. (n.) 1. ***கட்சியின் இணக்கம்;*** united party. 2. ***ஒருகட்சி;*** clique. (செ.அக.).

[ஒரு + கை - ஒருகை.]

ஒருகை[2] *orukai*, பெ. (n.) ***ஒரு ஆள்;*** one person. ஆட்டத்திற்கு ஒரு கை குறைகிறது. (உ.வ.).

[ஒரு + கை - ஒருகை. 'கை' - சினையாகுபெயராய் ஆளைக் குறித்தது.]

ஒருகைபரிமாறு-தல் *oru-kai-parimāṟu-*, 5.செ.கு.வி. (v.i.) 1. ***விருந்தினர் வரிசையில் ஒருபுறமாகப் பரிமாறுதல்;*** to serve food in one of two opposite rows at dinners. 2. ***ஒருமுறை பரிமாறுதல்*** (வின்.); to deal out one course at a feast. (செ.அக.).

[ஒரு + கை + பரிமாறு.]

ஒருகைபார்-த்தல் *oru-kai-pār-*, 4.செ.கு.வி. (v.i.) ***வெல்லமுயலுதல்;*** to make a determined effort to win. "உனக்காச்செனக் காச்சென்றொரு கை பாராமல்" (இராமநா.யுத்த.2) (செ.அக.).

[ஒரு + கை + பார்.]

ஒருகையாயிரு-த்தல் *oru-kai-y-āy-iru-*, 3.செ.கு.வி. (v.i.) ***எதிர்க்கட்சிக்குப் பகையாக ஒற்றுமையாயிருத்தல்;*** to join hands as against a common enemy. (செ.அக.).

[ஒரு + கை + ஆய் + இரு.]

ஒருகைவிளையாடு-தல் *oru-kai viḷaiyāḍu-*, செ.கு.வி. (v.i.) ***எல்லாருக்கும் ஒருமுறைவர ஆடுதல்*** (வின்.); to play one round of a game.

[ஒரு + கை + விளையாடு.]

ஒருகோலுடையார் *oru-kōl-uḍaiyār*, பெ. (n.) ***ஒருகோலுடைய துறவிகள்*** (ஏகதண்டி சந்நியாசிகள்.) (தொல். பொருள்.625,உரை.); a class of Brahman ascetics holding a single staff in hand. (செ.அக.).

[ஒரு + கோல் + உடையார்.]

ஒருங்கணையாக *oruṅganaiyāga*, வி.எ. (adv.) ***ஒரே நேரத்தில், அதே நேரத்தில்;*** simultaneously.

[ஒருங்கு + அணையாக.]

ஒருங்கவிடு-தல் *oruṅga-viḍu-*, 18.செ.குன்றாவி. (v.t.) ***பலவற்றை ஒன்றுசேர்த்தல்;*** to bring together, unite. "அவற்றை யொருங்கவிட்டு" (திவ்.திருநெடுந். 17,வ்யா.134) (செ.அக.).

[ஒருங்கு → ஒருங்க + விடு.]

ஒருங்கியலணி *oruṅgiyal-aṇi*, பெ. (n.) ***புணர்நிலையணி.*** (வீரசோ.அல.13); (Rhet.) figure of speech connecting different ideas together. (செ.அக.).

[ஒருங்கு + இயல் + அணி.]

ஒருங்கு[1]-தல் *oruṅgu-*, 7.செ.கு.வி. (v.i.) 1. ***ஒருபடியாதல்;*** to be concentrated; to have a singleness of aim of purpose. "நினதா ளொருங்கப் பிடித்து" (திவ்.திருவாய்.5,8,8). 2. ***ஒன்றுகூடுதல்;*** to join together. "மருத்து மிரும்புனற்கிறை வருமாகிச் செவ்விதி னொருங்கி" (கந்தபு.சூரனரசிரு.11). 3. ***ஒடுங்குதல்;*** to sink, decline, to become reduced. "உரமொருங்கி

யது... வாலியது மார்பு" (கம்பரா.யுத்த.மந்தி.90). 4. ***அழிதல்;*** to be ruined, to perish. "நமரெல்லோரு மொருங்கினர்" (பிரபோத.38,1).

க. ஒர்கூடு; ம. ஒருங்ஙு.

[ஒல் → ஒருங்கு → ஒருங்குதல். ஒடுங்கு → ஒருங்கு = அழிதல்.]

ஒருங்கு² *orungu,* கு.வி.எ. (adv.) 1. ***முழுதும்;*** altogether. "தூணிப்பதக்கென் றொருங் கொப்பக் கொண்டானாம்" (நாலடி.387). 2. ***ஒரேகாலத்தில்;*** simultaneously.

[ஒல் → ஒரு → ஒருங்கு.]

ஒருங்கு³ *orungu,* பெ. (n.) 1. ***முழுமை*** (திவா.); entirety, totality. 2. ***அடக்கம்*** (பிங்.); suppression, restraint. (செ.அக.).

[ஒல் → ஒரு → ஒருங்கு.]

ஒருங்கு⁴ *orungu,* பெ. (n.) ***அழிவு*** (யாழ்.அக.); destruction, ruin. (செ.அக.).

[ஒடுங்கு → ஒருங்கு.]

ஒருங்கே *orungē,* வி.எ. (adv.) 1. ***முழுதும்;*** thoroughly, fully. 2. ***ஒருசேர;*** to the fullest extent or measure. "நம்மே லொருங்கே பிறழ வைத்தார்" (திவ்.இயற்.திருவி ருத்.45) (செ.அக.).

[ஒருங்கு + ஏ.]

ஒருச்சரி¹-தல் *oru-c-cari,* 4.செ.கு.வி. (v.i.) ***ஒரு பக்க மாய்ச் சாய்தல்;*** to lean or one side.

[ஒரு + சரி.]

ஒருச்சரி²-த்தல் *oru-c-cari,* 4.செ.குன்றாவி. (v.t.) ***ஒரு பக்கமாய்ச் சாய்த்தல்;*** to shut partially, as a door. "கதவை ஒருச்சரித்து" (ஈடு.10,8,3).

[ஒரு + சரி.]

ஒருச்சாய்-த்தல் *oru-c-cāy-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***ஒருபக்கஞ் சாய்த்தல்;*** to tilt to one side, to shut partially, as a door. (செ.அக.).

[ஒரு + சாய்.]

ஒருச்சாய்வு *oru-c-cāyvu,* பெ. (n.) ***ஒருபுறமாகச் சாய்கை;*** leaning on one side. (செ.அக.).

[ஒரு + சாய்வு.]

ஒருசந்தி *oru-šandi,* பெ. (n.) ***ஒரு நாளைக்கு ஒருமுறை மட்டும் உணவு கொள்ளும் நோன்பு;*** vow of taking only one meal in a day. "நாயறி யாதொருசந்தி" (தண்டலை.23) (செ.அக.).

மறுவ. ஒருபொழுது.

[ஒரு + சந்தி - ஒருசந்தி. சாந்தி → சந்தி = விழா, நோன்பு.]

ஒருசாய்வு *oru-sāyvu,* பெ. (n.) 1. ***ஒருதலை, ஓரம்*** (பட்சபாதம்.); leaning to one side, partiality. - கு.வி.எ. (adv.) 1. ***ஒருமிக்க*** (யாழ்ப்.); altogether. 2. ***இடைவிடா மல்*** (வின்.); continuously. (செ.அக.).

[ஒரு + சாய்வு.]

ஒருசாயல் *oru-šāyal,* பெ. (n.) ***உருவொப்பு;*** likeness, having the same features, resemblance. இக்குழந்தை தந்தையோ டொருசாயலாக இருக்கிறது. (செ.அக.).

[ஒரு + சாயல் - ஒருசாயல் = ஒருமித்த வடிவமைப்பு.]

ஒருசார் *oru-šār,* பெ. (n.) 1. ***ஒருபக்கம்;*** one side. "ஒருசா ரருவியார்ப்ப" (புறநா.115,1). 2. ***ஒரு (கட்சி) சார்பு; one party.*** 3. ***ஒருதலை;*** partiality. (செ.அக.).

[ஒரு + சார்.]

ஒருசார்பு *oru-šārpu,* பெ. (n.) ***ஒருசார்*** பார்க்க; see *oru-šār.* (செ.அக.).

ஒருசாராசிரியர் *oru-šār-āširiyar,* பெ. (n.) ***ஆசிரியருள் ஒரு கொள்கையினர்;*** authors or commentators belonging to one particular school of thought. (செ.அக.).

[ஒரு + சார் + ஆசிரியர்.]

ஒருசாரார் *oru-sārār,* பெ. (n.) ***ஒரு பக்கத்தவர்;*** persons on one side; those belonging to one party. "அஞ்சின ரார்த்தா ரொருசாரார்" (காரிகை.செய்.6,உரை.). 2. ***சிலர்;*** some. (செ.அக.).

[ஒரு + சாரார்.]

ஒருசாலுழு-தல் *oru-šāl-uḻu-,* 1.செ.குன்றாவி. (v.t.) ***ஒருமுறை உழுதல்;*** to turn once with the plough. (செ.அக.).

[ஒரு + சால் + உழு.]

ஒருசாலைமாணாக்கர் *oru-sālai-māṇākkar,* பெ. (n.) ***ஒருபள்ளியிற் படித்த மாணாக்கர்*** (தொல்.பொ ருள்.666,உரை.பக்.653); pupils of the same school, schoolmates. (செ.அக.).

[ஒரு + சாலை + மாணாக்கர்.]

ஒருசிம்புப்புகையிலை *oru-šimbu-p-pugai-y-ilai,* பெ. (n.) ***புகையிலை நறுக்கு*** (யாழ்ப்.); small bit of tobacco, single leaf of tobacco. (செ.அக.).

[ஒரு + சிம்பு + புகையிலை.]

ஒருசிறிது *oru-siṟidu,* பெ. (n.) ***அற்பம்;*** a little. "உய்த்துணர்ந்திடு நீரரே யொருசிறிதுணர்வார்" (கந்த பு.சூரனமைச்.129) (செ.அக.).

[சிறு + து - சிறுது → சிறிது.]

ஒருசிறை *oru-šiṟai,* பெ. (n.) 1. ***ஒருபக்கம்;*** one side; "கோயி லொருசிறைத் தங்கி" (பொருந.90). 2. ***வேறி டம்*** (பிங்.); separate place. 3. ***ஒரு பகுதி;*** one part or portion. "இருவர் நூற்குமொருசிறை தொடங்கி" (நன்.8) (செ.அக.).

[ஒரு + சிறை.]

ஒருசிறைநிலை *oru-śirai-nilai,* பெ. (n.) ***சொல்லப்பட்ட பொருள் ஒருவழிநிற்கப் பாடலமைந்துள்ள முறை*** (இறை.56,உரை.பக்கம்.194); style of verse whose composition follows the sequence of the events narrated. (செ.அக.).

[ஒருசிறை + நிலை.]

ஒருசீரானவன் *oru-śīr-āṉavaṉ,* பெ. (n.) ***ஒரே தன்மையாக இருப்பவன்*** (வின்.); one who maintains a uniform character, he who has moderation of temper. (செ.அக.).

[ஒரு + சீர் + ஆனவன்.]

ஒருசுடர் *oruśuḍar,* பெ. (n.) ***கதிரவன்;*** sun.

[ஒரு + சுடர். ஒரு = ஒப்பற்ற, தனித் தன்மை வாய்ந்த.]

ஒருசேர *oru-śēra,* கு.வி.எ. (adv.) ***ஒருமிக்க;*** entirely, completely. (செ.அக.).

[ஒரு + சேர.]

ஒருசொல் *oru-śol,* பெ. (n.) 1. ***உறுதிச்சொல்;*** word of assurance. "அவர் சொல்லிய சொல்லொரு சொல்லன் றோ" (கம்பரா.குகப்.15). 2. ***பலசொல்லாயிருந்தும் ஒரு சொன்னீர்மைப்பட்டது*** (சீவக.190,உரை.); expression which while consisting of two or more words connotes but a single idea. (செ.அக.).

[ஒரு + சொல்.]

ஒருசொல்விழுக்காடு *oru-śol-viḻukkāḍu,* பெ. (n.) ***யாதொரு பொருளுமின்றித் தொடரியத்தில் வழங்கும் சொல்*** (சீவக.1886,உரை.); superfluous, expletive word in a sentance. (செ.அக.).

[ஒரு + சொல் + விழுக்காடு. விழுக்காடு = விழுதல், வழங்குதல்.]

ஒருசொற்பல்பொருள் *oru-soṟ-pal-poruḷ,* பெ. (n.) ***ஒரு சொல்லுக்குரிய பல பொருள்கள்*** (பிங்.); different meanings of the same word. (செ.அக.).

[ஒரு + சொல் + பல் + பொருள்.]

ஒருசொன்னீர்மை *oru-soṉṉīrmai,* பெ. (n.) ***சொற்கள் இணைந்து ஒரு பொருளே தருந்தன்மை*** (புறநா.206, உரை.); nature of the compound word which expressess a single idea. (செ.அக.).

[ஒரு + சொல் + நீர்மை.]

ஒருஞார் *oruñār,* பெ. (n.) ***பண்டைக்காலத்து வழங்கிய ஓர் அளவுப் பெயர்*** (தொல்.எழுத்.170,உரை.); ancient measure. (செ.அக.).

[ஒரு + ஞார்.]

ஒருஞான்று *oruñāṉṟu,* பெ. (n.) ***ஒருநாள்;*** one day. "ஒரு ஞான்று வந்தானை" (கலி.37-14) (சங்.இலக். சொற்.).

[ஒரு + ஞான்று.]

ஒருத்தல் *oruttal,* பெ. (n.) ***ஒருசார் விலங்கின் ஆண் பெயர்;*** male of certain animals, viz., புல்வாய், புலி, உழை, மரை, கவரி, கராம், யானை, பன்றி, எருமை. (தொல்.பொருள்.590,591,592) (செ.அக.).

[ஓர் → ஓரி → ஒரு-த்தல்.]

ஒருத்தலை *oru-t-talai,* பெ. (n.) ***ஒருபக்கம்;*** one side. "ஒருத்தலைப்பரத் தொருத்தலை பங்குவினூர்தி" (கம்பரா.அயோத்.மந்.66) (செ.அக.).

[ஒரு + தலை. தலை = பகுதி, பக்கம்.]

ஒருத்தலைநோவு *oru-t-talai-nōvu,* பெ. (n.) ***ஒற்றைத் தலைவலி*** பார்க்க; see *oṟṟai-t-talaivali.* "ஒருத்தலை நோவா முடம்பு சுரத்தால் வருத்தமாம்" (பண விடு.248). (செ.அக.).

[ஒரு + தலை + நோவு.]

ஒருத்தலையிடி *oru-t-talai-y-iḍi,* பெ. (n.) ***ஒற்றைத் தலைவலி*** பார்க்க; see *oṟṟaittalaivali.* (செ.அக.).

[ஒரு + தலை + இடி. தலை = பக்கம், பகுதி.]

ஒருத்தலைவலி *oru-t-talai-vali,* பெ. (n.) ***ஒற்றைத் தலைவலி*** பார்க்க; see *oṟṟaittalaivali.* (செ.அக.).

ம. ஒரிச்செனி, ஒருச்சென்னி.

[ஒரு + தலை + வலி. தலை = பக்கம், பகுதி.]

ஒருத்தளி-த்தல் *oruttaḷi-,* 4.செ.கு.வி. (v.i.) ***வயலிற் பயிர் முழுவதிலும் கதிர் பரிதல்*** (இ.வ.); to shoot simultaneously, as ears of corn in a field. (Loc.) (செ.அக.).

[ஒரு + தளிர் - ஒருத்தளிர் → ஒருத்தளி.]

ஒருத்தன் *oruttaṉ,* பெ. (n.) 1. ***ஒருவன்;*** a certain man. "வடமொழியிலே வல்லா னொருத்தன் வரவும்" (தாயு.சித்தர்.கண.10). 2. ***ஒப்பற்றவன்;*** unique being; incomparable one. "ஒருத்தனே யுன்னை யோல மிட்டலறி" (திருவாச.29,2) (செ.அக.).

ம. ஒருத்தன்; **பட.** ஒப்பு; **க.** ஒப்பு, ஒர்பு; **து.** ஒரி, ஒரியே; **குவி.** ருசி; **கூ.** ரொஅன்சு; **குருக்.** ஓர்த்; **மால்.** ஒர்தெ.

[ஒன்று → ஒள் → ஒரு → ஒருவு → ஒருவன் → ஒருத்தன் = பலரினும் மேம்பட்டு விலகித்தனித்து விளங்குபவன்.]

ஒருத்தி *orutti,* பெ. (n.) ***ஒருபெண்;*** a woman. "ஒருத்திமகனாய்ப் பிறந்து" (திவ்.திருப்பா.25) (செ.அக.).

ம. ஒருத்தி; **து.** ஒர்தி; **தெ.** ஒர்தி; **குரு.** ஒரொத்; **மால.** ஒர்தி; **குவி.** ஏராந்த, எரொந்தி; **க.** ஒர்வெ, ஒப்புபுளு, ஒப்புரதெ.

[ஒரு → ஒருத்தி.]

ஒருத்து *oruttu,* பெ. (n.) ***மனவொருமைப்பாடு;*** concentration of mind. "ஒன்று சொல்லி யொருத்தினி னிற்கி லாத வோரைவர்" (திவ்.திருவாய்.7,1,7) (செ.அக.).

[ஒரு → ஒருத்து (ஒருமிப்பு) (வே.க.106).]

ஒருதந்தை யீன்றமகள் *orudandai-y-īṉṟamagaḷ,* பெ. (n.) ***தந்தையின் மனைவியருள் ஒருத்திக்குப் பிறந்த மகள்;*** daughter of one of the wives of the father. "அந்துவற்கு ஒருதந்தை யீன்றமகள் பொறையின் பெருந்தேவி யீன்றமகன்" (பதிற்றுப்.7,பதிக.).

[ஒரு + தந்தை + ஈன்ற + மகள்.]

பதிற்றுப்பத்தில் செல்வக்கடுங்கோ வாழியாதனை அந்துவனுக் குப் பொறையன் பெருந்தேவியீன்ற மகன் எனக் குறிப்பிடும் போது, அவன் தாயை 'ஒரு தந்தை யீன்ற மகள்' என்று கபிலர் குறிப்பிடுகிறார். அந்துவனின் மாமனார் ஒரு தந்தை எனப்படு கிறார்.

இடையறாப் போர்களால் இளைஞர் எண்ணிலார் மடிதலின் மகளிர் எண்ணிக்கை மிகுந்த காலத்தில் ஒரு ஆண், பெண்கள் பலரை மணந்து கொள்ளும் வழக்கம் வளர்ந்தபோது, மனைவி யர் பலர்க்கும் பிறந்த குழந்தைகள் ஒரு தாய்ப்பிள்ளைகள் (உடன்வயிற்றுப் பிறந்தோர்) எனக் கூற முடியாத சூழல் உண்டானதால் **ஒருதந்தை மக்கள்** என வேறுபடுத்தி அழைக் கப்பட்டனர். இது ஐந்திணை மரபாகிய அன்புகெழு தமிழ் மரபுக்குரிய இல்லற வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட பெருந் திணை யொழுக்கம். இதனை வடநாட்டுமரபு என்பர். தயரத னுக்குப் பட்டத்தரசியர் மூவரின் வயிற்றுப் பிறந்த இராமன் முதலாயினோர் ஒரு தந்தை மக்கள். பாஞ்சாலி பாண்டவர்களா கிய கணவர் பலர்க்குப் பெற்ற பிள்ளைகள் ஒரு தாயீன்ற மக்கள். பல்கணவ மணம், பல் மனைவியர் மணம் பெருந்தி ணைக்குரிய ஒழுகலாறெனக் கடியப்பட்டவை.

பெண்களின் கற்புக்குத் தெய்வத்தன்மை யூட்டிப் பெருமைப்ப டுத்திய தமிழ்ப் பண்பாட்டில் பல்கணவர் மணம் உட்புகமுடிய வில்லை. ஆதலால் ஒரு தாயீன்ற மக்கள் என்னும் சொல்லாட்சி தோன்றவில்லை.

ஒருதமர்க்கலயம் *orudamar-k-kalayam,* பெ. (n.) ***அடி யில் ஒரே துளைறையிட்ட மண்குடுவை;*** small earthen pot with a whole at the bottom used in the manufacture of medicated oils. (சா.அக.).

[ஒரு + தமர் + கலயம். திவுள் → திவர் → திமர் → தமர் = திருகியிடப்பட்ட துளை.]

ஒருதரம் *oru-daram,* பெ. (n.) 1. ***ஒருதடவை;*** once. 2. ***ஒரே முறை*** (யாழ்ப்.); one and the same kind. (செ.அக.).

[ஒரு + தடம் - ஒருதடம் → ஒருதரம். தடம் = வழிமுறை, பாங்கு.]

ஒருதலை[1] *orudalai,* பெ. (n.) ***ஒரு சார்பு;*** one sidedness. "ஒருதலையா னின்னாது காமம்" (குறள்.1196).

[ஒரு + தலை. தலை = பக்கம், பகுதி.]

ஒருதலை[2] *orudalai,* பெ. (n.) ***உறுதி;*** positiveness, certainty, "ஒருதலை யுரிமை வேண்டியும்" (தொல்.பொ ருள்.225) ... "பாம்பாற் கோட்படுதல் ஒருதலை" (குறள்.890,பரி.உரைக்குறிப்பு) (செ.அக.).

[ஒரு + தலை. தலை = முடி, முடிவு.]

ஒருதலைக்காமம் *oru-dalai-k-kāmam,* பெ. (n.) ***ஒருபக் கமான காதல்;*** onesided love, unreciprocated love. "கைக்கிளை யுடையதொருதலைக் காமம்" (நம்பிய கப்.3) (செ.அக.).

[ஒருதலை + காமம்.]

ஒருதலைக்குழவி *orudalai-k-kuḻavi,* பெ. (n.) ***ஒரு பக்கம் தலைபோல் உருண்டையாயும் மற்றொரு பக்கம் கூர்மையாயும் அமைந்த குழவி;*** stone pestle shaped like a cone having a bulb at one point and a handle at the top. (செ.அக.).

[ஒருதலை[1] + குழவி. குழைவி → குழவி = குழையுமாறு அரைக்கப் பயன்படும் ஆட்டுகல்.]



ஒருதலைக்குழவி

ஒருதலைச்சாயல் *orudalai-c-cāyal,* பெ. (n.) 1. ***ஒருபு றம் கூருள்ள கத்தி;*** one edged knife. 2. ***தலை ஒருபுறமாகச் சாய்ந்திருத்தல்;*** inclination of the head to one side. (சா.அக.).

[ஒருதலை[1] + சாயல். சாள் → (சாண்) → சாய் → சாயல் = கூர்மை.]

ஒருதலைதுணிதல் *oru-dalai-duṇidal,* பெ. (n.) ***மாறுபா டான இரண்டு கொள்கைகளில் ஒன்றை ஏற்றலா கிய உத்தி*** (நன்.14); (gram.) decision, accepting either of two contrary opinions or views one of 32 utti. (செ.அக.).

[ஒரு + தலை[1] + துணிதல்.]

ஒருதலைநயன் *oru-dalai-nayaṉ,* பெ. (n.) ***ஒருதலை வழக்கு*** பார்க்க; see *oru-dalai-vaḻakku.* (செ.அக.).

[ஒருதலை[1] + நயன்.]

ஒருதலை நியாயம் *orudalainiyāyɛm,* பெ. (n.) ***ஒரு தலை நயன்*** பார்க்க; see *orudalai nayaṉ.*

ஒருதலைப்படு-தல் *oru-dalai-p-paḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***ஒரு முடிவு பெறுதல்;*** to come to a conclusion. "எத்துணை யுரைப்பினு மொருதலைப்படாது" (இறை.1,7) (செ.அக.).

[ஒருதலை[2] + படு.]

ஒருதலைப்பூண்டு *orudalai-p-pūṇḍu*, பெ. (n.) ***ஒரு தலை வெள்ளைப் பூண்டு;*** garlic with one clove or bulb. (சா.அக.).

[ஒருதலை[1] + பூண்டு.]

ஒருதலையன் *orudalaiyaṉ*, பெ. (n.) ***கொக்கு;*** stork. (சா.அக.).

ஒருதலையுள்ளுதல் *oru-dalai-y-uḷḷudal*, பெ. (n.) ***உளப் பாங்கு*** (அவத்தை) ***பத்தனுள் ஒன்றாகிய இடைவிடா நினைவு*** (நம்பியகப்.36,உரை.); (Akap) constant thought of the lover, a mood in love, one of ten kinds of 'aganilai' (avattai). (செ.அக.).

[ஒரு + தலை + உள்ளுதல்.]

ஒருதலை வழக்கு *oru-dalai-vaḻakku*, பெ. (n.) ***ஒருபக்க மான தீர்ப்பு;*** judgement showing partiality, one sided or biased description or statement; leaning to one side or party. (செ.அக.).

[ஒருதலை[1] + வழக்கு.]

ஒருதன்மை *oru-daṉmai*, பெ. (n.) 1. ***ஒரே முறை;*** being of one and the same kind. 2. ***ஒப்பற்ற தன்மை;*** incomparableness. 3. ***மாறாத்தன்மை;*** unchangeableness. (செ.அக.).

[ஒரு + தன்மை.]

ஒருதனி *oru-daṉi*, பெ. (n.) 1. ***ஒப்பில்லாத தனி*** (சீவக.280,உரை.); peerlessness, uniqueness. 2. ***தன் னந்தனி;*** quite alone, in absolute solitude. "ஒருதனி உழந்தவித்திருத்தகு மாமணி" (சிலம்பு) (செ.அக.).

[ஒரு + தனி.]

ஒருதனிநிலை *orudaṉinilai*, பெ. (n.) ***போரார வாரம் மிகுந்த படுகளத்தில் வெள்ளம் தள்ளாதபடி கல்லாற் கட்டினகரையைப் போலப் பெரும் படையை ஒரே வீரன் தடுத்த துணிவுநிலையைப் புலப்படுத்தும் புறத்துறை;*** literary theme describing one of the strategies of warfare where a soldier opposing and challenging a big army all alone.

[ஒருதனி + நிலை. ஒருதனி = யாருமற்ற தன்னந்தனிமை.]

தன்படையினர் புறமுதுகிட்டு ஓடுவது கண்டும் தானொருவனே பகைவரை எதிர்த்துப் போரிடும் எருமை மறத்தினும் இது வேறானது.

ஒருதாரை *oru-dārai*, பெ. (n.) 1. ***ஒருமுறை*** (ரீதி); one form, one method. அந்தநூல் ஒரு தாரையாய் நடந்து வருகிறது (இ.வ.). 2. ***ஒரு பக்கக் கூர்மை;*** sharp edge on one side. 'ஒரு தாரைக் கத்தி' (வின்.). 3. ***இடையீடில் லாத நீரொழுக்கு (வின்.);*** uninterrupted downpour of water. (Loc.) (இ.வ.). (செ.அக.).

[ஒரு + தாரை. தடம் → தரம் → தாரை.]

ஒருதாரைக்கத்தி *orudārai-k-katti*, பெ. (n.) ***ஒருபுறம் கூருள்ள கத்தி;*** a knife sharpened on one edge. (சா.அக.).

[ஒரு + தாரை + கத்தி.]

ஒருதிறம் *oru-diṟam*, பெ. (n.) ***ஒருகூறு;*** a part. "ஓர்வுற் றொரு திற மொல்காத நேர்கோல்" (கலித்.42,14).

[ஒரு + திறம்.]

ஒருதிறம்பற்று-தல் *oru-diṟam-paṟṟu-*, 5.செ.கு.வி. (v.i.) ***ஒரு பக்கமாக இருத்தல்;*** to range oneself on oneside. "அறங்கூ றவையத் துரைநூல் கோடி யொருதிறம் பற்றினும்" (சிலப்.5,136) (செ.அக.).

[ஒரு + திறம் + பற்று.]

ஒருதிறன் *oru-diṟaṉ*, பெ. (n.) ***ஒருபக்கம்;*** one side. "ஒய்பசிப் பிடியொடு ஒருதிறன் ஒடுங்க" (அக.91).

[ஒரு + (திறம்) திறன்.]

ஒருதுட்டெடை *orudutteḍai*, பெ. (n.) ***நான்கு காசெடை;*** weight equal to 1/3 of an anna or 1/48 of a rupee. (சா.அக.).

தெ. ஒகதுட்டு.

[ஒரு + துட்டு + எடை = ஒருதுட்டெடை. ஒரு உருபாய்க்கு 192 விடுகாசுகள் (தம்பிடிகள்) இருந்த காலத்தில் 4 விடுகாசுகள் ஒரு துட்டு எனப்பட்டது.]

ஒருதுவலி *oruduvali*, பெ. (n.) ***பண்டைக் காலத்து வழங்கிய ஓர் அளவுப் பெயர்*** (தொல்.எழுத்.170, உரை.); ancient measure. (செ.அக.).

[ஒரு + துவலி.]

ஒருநாள் *oru-nāḷ*, பெ. (n.) ***ஒருநாள்;*** one day, once. "ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்" (நல்வழி).

ம. ஒருந்நாள்.

[ஒரு + நாள்.]

ஒருநாளும் *oru-nāḷum*, வி.எ. (adv.) ***எப்பொழுதும்;*** at any time. (used in negative sense).

ம. ஒருநாளும்.

[ஒரு + நாள் + உம்.]

ஒருநாளைக்கொருநாள் *oru-nāḷaikkoru-nāḷ*, வி.எ. (adv.) ***நாள் செல்லச் செல்ல;*** day by day. (செ.அக.).

[ஒரு + நாள் + ஐ + கு + ஒரு + நாள்.]

ஒருநிலை *oru-nilai*, பெ. (n.) ***ஒன்றாகிய நிலை,*** (ஐக்கியம்); unity, harmonious state. (சேரநா.).

ம. ஒருநில.

ஒருநிலைப்பொய்கை *orunilai-p-poygai*, பெ. (n.) ***வற்றாத பொய்கை*** (பரி.8,15); never drying tank or hand. (சங்.இலக்.சொற்.).

[ஒரு + நிலை + பொய்கை.]

ஒருநிறத்தோற்றம் *oruniṟattōṟṟam,* பெ. (n.) ***எல்லா நிறமும் கண்ணுக்கு ஒரே நிறமாகக் காணப் படல்;*** colour blindness in which different colours are seen as one.

[ஒரு + நிறம் + தோற்றம்.]

ஒருநினைவு *oruniṉaivu,* பெ. (n.) 1. ***வேறொன்றையும் கருதாது ஒன்றையே சிந்தித்தல்;*** condition in which the mind is occupied by one idea to the exclusion of others - hyperprosexia. 2. ***ஒரே சிந்தை;*** (philo.) concentration of mind on one object. (சா.அக.).

[ஒரு¹ + நினைவு.]

ஒருநெறிப்படு-தல் *oru-neṟi-p-paḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***ஒருவழிப்படுதல்*** (தொல்.பொருள்.510); to stand together; to be placed together. (செ.அக.).

[ஒரு + நெறி + படு.]

ஒருநேரம் *oru-nēram,* பெ. (n.) 1. ***காலமல்லாத காலம், அகாலம்;*** unseasonable time. இவன் இரவு ஒரு நேரத்தில் என் வீட்டுக்கு வந்தான். (இ.வ.). 2. ***பாதிப்ப கல்;*** half-day. இன்றைக்கு ஒரு நேரப்பள்ளி (உ.வ.) (செ.அக.).

[ஒரு + நேரம்.]

ஒருப்படு-தல் *oru-p-paḍu-,* 20.செ.கு.வி. (v.i.) 1. ***ஒரு தன்மையாதல்*** (சி.சி.2,5,மறைஞா.); to become one, unite, coalesce. 2. ***ஒத்துக்கொள்ளுதல்*** (இறை.1, உரை.7); to consent, agree. 3. ***ஒருநினைவாதல்*** (வின்.); to have the mind fixed on one object, to be abstracted from outward objects. (W.). 4. ***துணிதல்;*** to venture, dare. "போக்கொருப்பட்டு நின்று" (தொல்.பொருள்.41, உரை.). 5. ***முயலுதல்;*** to attempt, try. "போகவேணு மென்றொருப்பட" (ஈடு.7,3,ப்ர.). 6. ***ஒன்றுகூடுதல்;*** to come together. "ஆட்பட்டீர் வந்தொருப்படுமின்" (திருவாச.45,1). 7. ***தோன்றுதல்;*** to appear. "ஒளியொ ளியுதயத் தொருப்படுகின்றது" (திருவாச.20,3) (செ.அக.).

[ஒரு + படு.]

ஒருப்படுத்து-தல் *oru-p-paḍuttu-,* 14.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஒன்று கூட்டுதல்;*** to bring together, reconcile. 2. ***வழிவிடுதல்;*** to bid adieu. "திருவணுக்கன் திருவாச லளவும் ஒருப்படுத்தி மீள" (ஈடு.7,3,ப்ர.). 3. ***முடிவு செய்தல்;*** to finish, settle. "ஒருப்படுத் தூர்க்கு மீள்வான்" (சீவக.505). 4. ***ஏற்றுக்கொள்ளச் செய்தல்;*** to bring to an agreement, cause to consent (இறை.6,65). (செ.அக.).

[ஒரு + படுத்து.]

ஒருப்பாடு¹ *oru-p-pāḍu,* பெ. (n.) 1. ***முயற்சி;*** endeavour, effort. "உங்களொருப்பாடு கண்டேனுக்கு" (ஈடு.6,1,8). 2. ***உடன்பாடு;*** consent. "சீரிதென்றொருப் பாடுற்றாள்" (கந்தபு.வள்ளி.163). 3. ***ஒருதன்மையாகை;*** unanimity, concord. "உலகெலா மொருப்பா டொன்றி" (கந்தபு. மேரு.18). 4. ***ஒன்றி நிற்கை;*** fixing the mind on a single aim, concentration of mind. "தன்னுள மொருப்பா டெய்த நிமலனை யுன்னி" (கந்தபு.மேரு.32). 5. ***மனத் திண்மை;*** resoluteness, constant. "கலயனார்த மொருப்பாடு கண்ட போதே" (பெரியபு.குங்கிலிய.28). (செ.அக.).

[ஒரு + பாடு. படு → பாடு. (மு.தி.தொ.பெ.).]

ஒருப்பாடு² *oruppāḍu,* பெ. (n.) 1. ***ஒருபக்கம், ஒருபாகத் தில்;*** on one side. 2. ***தாராளம், அதிகம், மிகுதி;*** great quantity, excess, ample. (சேரநா.).

ம. ஒருபாடு.

[ஒரு + பாடு. பாடு = பக்கம். பகுதி. ஒரு¹, ஒரு² பார்க்க; see oru,¹ oru.²]

ஒருப்பார்வை *oru-p-pārvai,* பெ. (n.) ***உற்றுப்பார்த்தல், விடாது பார்க்கும் பார்வை*** (யாழ்.அக.); intent gaze, attentive look. (செ.அக.):

[ஒரு + பார்வை.]

ஒருப்பிடி *oruppiḍi,* பெ. (n.) ***உறுதிப்பிடி;*** firm grasp.

[ஒரு + பிடி.]

ஒருப்பு *oruppu,* பெ. (n.) ***ஒருவந்தம்*** பார்க்க; see *oruvandam.* "ஒதினார்க்குமுணர்வொருப்பாயதே" (நீல கேசி.212) (செ.அக.).

[ஒரு → ஒருப்பு.]

ஒருப்புறவன் *oru-p-puṟavaṉ,* பெ. (n.) ***முத்துவகை*** (S.I.I.ii,206); a kind of pearl. (செ.அக.).

[ஒரு² + புறவன்.]

ஒருபக்கவாரம் *oru-pakka-vāram,* பெ. (n.) ***ஒருசார்பாகச் செய்தல், ஒருதலையாகச் செய்தல்*** (யாழ்.அக.); partiality. (செ.அக.).

[ஒருதலை¹ + வாரம்.]

ஒருபடம் *oru-paḍam,* பெ. (n.) ***இடுதிரை*** (திவா.); curtain. (செ.அக.).

[ஒருவு + படம் - ஒருவுபடம் → ஒருபடம். ஒருவு = நீங்கு, விலகு. படம் = துணி.]

ஒருபடி¹ *oru-paḍi,* பெ. (n.) 1. ***ஒருவகை;*** a kind. 2. ***ஒரே முறை;*** the same manner. "ஒருபடிப்பட்டிருக்கு மவனை" (ஈடு.6,8,4). - வி.எ. (adv.) ***ஒருவாறு;*** tolerably; in some degree, to some extent; with some difficulty. (செ.அக.).

ம. ஒருபடி.

[ஒரு + படி. படி = தன்மை, வகை.]

ஒருபடி² *oru-paḍi,* பெ. (n.) ***தாராளம், மிகுதி;*** plenty, a large quantity, a good many or good deal. (சேரநா.).

ம. ஒருபடி.

[ஒரு² + படி.]

ஒருபத்து *orupattu,* பெ. (n.) ***பத்து;*** ten. (சேரநா.).

ம. ஒருபது.

[ஒரு + பத்து.]

ஒருபடித்தாய்[1] *oru-paḍittāy,* கு.வி.எ. (adv.) 1. ***ஒரே முறையாய்;*** in the same way. "உள்ளும் புறம்பு மொருபடித்தாய்" (அருட்பா,1,நெஞ்சறி.621). 2. ***இருக்கவேண்டிய நிலைக்குச் சிறிது மாறுதலாய்;*** passably, tolerably. எனக்கு உடம்பு ஒரு படித்தாயிருக்கிறது. (செ.அக.).

[ஒரு + படித்து + ஆய்.]

ஒருபடித்தாய்[2] *oru-paḍittāy,* கு.வி.எ. (adv.) ***முயற்சியாய்*** (யாழ்.அக.); with effort. (செ.அக.).

[ஒருபடித்து + ஆய். ஒருபடித்து = ஒருசீராய், தொடர்ச்சியாய்.]

ஒருபடிப்பட *oru-paḍi-p-paḍa,* கு.வி.எ. (adv.) ***இடைவிடாமல்;*** uninterruptedly. "ஏழுநாள் ஒருபடிப்பட மலையைச் சுமந்து" (திவ்.பெரியாழ்.3,4,4,வ்யா.பக்.602) (செ.அக.).

[ஒரு + படி + பட.]

ஒருபது *oru-padu,* பெ. (n.) ***பத்து;*** ten. "தாய்தந்தைக் கொருபதாகு நாளுளதாம்" (கூர்மபு.உத்.22,5) (செ.அக.).

ம. ஒருபது.

[ஒரு + பத்து - ஒருபத்து → ஒருபது.]

ஒருபாட்டம் *oru-pāṭṭam,* பெ. (n.) ***ஒருபாறல் மழை;*** heavy downpour of rain once at a stretch. "ஒரு பாட்டம் மழைவிழுந்தாற்போலே" (ஈடு,4,5,2) (செ.அக.).

[ஒரு[1] + பாட்டம்.]

ஒருபாவொருபஃது *oru-pā-v-oru-pakdu,* பெ. (n.) ***அகவல், வெண்பா, கலித்துறை என்பவற்றுள் ஏதேனும் ஒருபாவிற் பத்துப்பாடல்களால் அமைக்கப்பட்ட ஒரு சிற்றிலக்கியம்;*** minor literature in anyone of the 3 kinds of versification. "அகவல் வெண்பாக் கலித்துறை அதுகொண்டு ஒருபா ஒருபஃது உறின்அப் பெயராம்" (இலக்.வி.823). (செ.அக.).

[ஒரு + பா + ஒரு + பஃது.]

ஒருபான் *oru-pāṉ,* பெ. (n.) ***ஒருபது*** (தொல்.எழுத்.199, உரை.) பார்க்க; see *orupadu.* (செ.அக.).

ம. ஒருபது.

[ஒரு + பான். பத்து → பதின் → பான். ஒ.நோ. இருபதின் → இருபான்.]

ஒருபிடி *oru-piḍi,* பெ. (n.) 1. ***கைப்பிடியளவு;*** a handful. "முடிவிலொரு பிடிசாம்பராய்" (பட்டினத்.திருப்பா.திருத்தில்லை.7). 2. ***உறுதி;*** firm determination, unshakeable resolve. 3. ***விடாப்பற்று;*** firm trust or dependence. 4. ***விடாப்பிடி*** (பிடிவாதம்); stubbornness, obstinacy. (செ.அக.).

[ஒரு[1] + பிடி.]

ஒருபுடை *oru-puḍai,* கு.பெ.எ. (adj.) ***சற்றொப்ப;*** partial, imperfect, approximate. ஒருபுடையுவமை. - கு.வி.எ. (adv.) ***ஒருபக்கமாய்;*** to one side. "ஒரு புடை பாம்பு கொளினும்" (நாலடி.148) (செ.அக.).

மறுவ. ஒருமருங்கு, ஒருசார், ஒருபக்கம்; ம. ஒருபாடு.

[ஒரு[1] + புடை.]

ஒருபுடையுவமை *oru-puḍai-y-uvamai,* பெ. (n.) ***முழுவதும் ஒப்பாகாமல் சில தன்மைகளில் மாத்திரம் ஒத்திருக்கும் உவமை;*** simile in which comparison applies only partially and not fuly, dist. fr. முற்றுவமை. "ஒருபுடையுவமையாதலன்றி முற்றுவமையாதல் செல்லாமையானும்" (சி.போ.சிற்.1,2,3) (செ.அக.).

[ஒரு[1] + புடை + உவமை.]

ஒருபுடையொப்புமை *oru-puḍai-y-oppumai,* பெ. (n.) ***ஒருபுடையுவமை*** பார்க்க; see *orupuḍaiyuvamai.* (செ.அக.).

[ஒரு[1] + புடை + ஒப்புமை.]

ஒரு பூ *oru-pū,* பெ. (n.) ***ஒருவிளைச்சல், ஒருபோகம்*** (S.I.I.ii.114); single crop. (செ.அக.).

ம. ஒரு பூ.

ஒருபொருட்கிளவி *oru-poruṭ-kiḷavi,* பெ. (n.) ***ஒரு பொருள் சுட்டும் பலசொல்*** (தொல்.சொல்.1,சேனா.); synonym. (செ.அக.).

[ஒரு + பொருள் + கிளவி.]

ஒருபொருட் பன்மொழி *oru-poruṭ-paṉ-moḻi,* பெ. (n.) 1. ***ஒரு பொருளைத் தரும் பல சொற்கள்;*** different words connoting the same thing. 2. ***மீமிசைச் சொல்*** (நன்.398); tautology for greater effect and emphasis. (செ.அக.).

[ஒரு + பொருள் + பன்மொழி.]

ஒருபொருண்மொழி *oru-poruṇ-moḻi,* பெ. (n.) ***செய்யுட் குற்றங்களுள் ஒன்று*** (யாப்.வி.525); defect in poetry. (செ.அக.).

[ஒரு + பொருள் + மொழி.]

ஒருபொருள் *oru-poruḷ,* பெ. (n.) ***கடவுள்*** (வின்.); god, the one reality. (செ.அக.).

[ஒரு[2] + பொருள்.]

ஒருபொழுது *oru-poḻudu,* பெ. (n.) 1. ***ஒருவேளை;*** a division of time. "ஒருபொழுதும் வாழ்வ தறியார்" (குறள்.). 2. ***ஒருவேளை மட்டும் உணவுகொள்ளும் தெய்வ வழிபாட்டு நோன்பு;*** vow of taking one meal in a day.

[ஒரு[1] + பொழுது. பொழுது = நேரம், வேளை.]

ஒருபோக்கன் *oru-pōkkaṉ,* பெ. (n.) ***வேறுபட்ட நடையுள்ளவன்;*** man whose behaviour is of a singular or peculiar nature. (செ.அக.).

[ஒரு[1] + போக்கு + அன்.]

ஒருபோக்காய்ப்போ-தல் *oru-pōkkāy-p-pō-,* 8.செ.கு.வி. (v.i.) ***திரும்பி வாராது போதல்;*** to be gone once and for ever never to return, an expression used in anger or cursing. (செ.அக.).

[ஒரு + போக்கு + ஆய் + போ-தல்.]

ஒரு போக்கு[1] *oru-pōkku,* பெ. (n.) 1. ***ஒருவகை;*** one kind. 2. ***ஒரே முறை;*** the same manner. 3. ***மாறான நடை;*** peculiar, singular conduct. அவனுடைய செய்கையெல்லாம் ஒருபோக்கு. (உ.வ.). (செ.அக.).

ம. ஒருப்போக்கு.

[ஒரு[1] + போக்கு - ஒருபோக்கு = ஒருவகை, முறை. ஒரு[2] + போக்கு - ஒருபோக்கு = மாறான நடை.]

ஒருபோகம் *oru-pōgam,* பெ. (n.) ***ஆண்டுக்கு ஒரு முறை விளைவு*** (R.T.); single crop. (செ.அக.).

ம. ஒருப்பூ.

[ஒரு + போகம். பூ → பூகம் → போகம்.]

ஒருபோகி *oru-pōgi,* பெ. (n.) ***ஒரே நிகழ்வு;*** the ever constant entity; that which remains the same without variation, as time divested of all phenomena, like day, night, etc. "காலத்தையடைய ஒருபோகியாக்கி" (ஈடு.9,3,10) (செ.அக.).

[ஒரு[1] + போகி. போக்கு → போகு → போகி.]

ஒருபோகு *oru-pōgu,* பெ. (n.) 1. ***ஒருபடித்தான நிலம்*** (தொல்.பொருள்.460,உரை.); land of uniform character, whether in regard to level or soil content. 2. ***ஒத்தாழிசைக் கலி வகையுளொன்று*** (தொல்.பொருள்.451,உரை.); a kind of verification. (செ.அக.).

[ஒரு[1] + போகு.]

ஒருபோது *oru-pōdu,* பெ. (n.) ***ஒருபொழுது*** பார்க்க; see *oru-poḻudu.* (செ.அக.).

[ஒரு[1] + (பொழுது) போது.]

ஒருமட்டம் *oru-maṭṭam,* பெ. (n.) ***ஒருமட்டு*** பார்க்க; see *oru maṭṭu.* (செ.அக.).

[ஒரு[1] + (மட்டு) மட்டம்.]

ஒருமட்டு *oru-maṭṭu,* பெ. (n.) ***ஒத்த அளவு;*** equality in size or measure - கு.வி.எ. (adv.) ***ஒருவாறு;*** in a way; to some extent. காரியம் ஒருமட்டு முடிந்தது (செ.அக.).

[ஒரு[1] + மட்டு.]

ஒருமடைசெய்-தல் *oru-maḍai-cey-,* 1.செ.குன்றாவி. (v.t.) ***ஒருமுகமாக்குதல்;*** lit., to bring many streams under one sluice, to conceive the various aspects of a thing together. பகவத்குணங்களை ஒருமடைசெய்து பூஜிக்கை. (திவ்.திருப்பா.12,வ்யா.130) (செ.அக.).

[ஒரு[1] + மடை + செய்.]

ஒருமனப்படு-தல் *oru-maṉa-p-paḍu-,* 20.செ.கு.வி. (v.i.) 1. ***ஒருமன மாதல்;*** to be unanimous. 2. ***மனத்தை ஒன்றிலே செலுத்துதல்;*** to concentrate the mind intensely upon an object; to be deeply engaged in the pursuit of one idea. (செ.அக.).

[ஒரு + மனம் + படு.]

ஒருமனப்பாடு *oru-maṉa-p-pāḍu-,* பெ. (n.) 1. ***மன விணக்கம்;*** unanimity, concord. 2. ***மனத்தை ஒன்றிற் செலுத்துகை;*** close or undivided application of mind to an object. 3. ***மனவடக்கம்;*** mental restraint. (செ.அக.).

[ஒரு + மனம் + பாடு. படு → பாடு.]

ஒருமனம் *oru-maṉam,* பெ. (n.) ***வேறொன்றும் நாடாத மனம்;*** mind without variation; unanimity, one mindedness. (சா.அக.).

ம. ஒருமனம்.

[ஒரு + மனம்.]

ஒருமா *oru-mā,* பெ. (n.) ***இருபதில் ஒருகூறாகிய பின்னவெண்*** (ப.); fraction 1/20. (செ.அக.).

ம. ஒருமா(வு).

[ஒரு + மா.]

ஒருமாதிரி *oru-mādiri,* பெ. (n.) ***ஒருவகை;*** a kind. - கு.பெ.எ. (adj.) ***குணம்வேறுபட்ட;*** singular, peculiar. அவன் ஒரு மாதிரி ஆள் (உ.வ.) (செ.அக.).

[ஒரு[1] + மாதிரி. மாத்திரி → மாதிரி. மா = அளத்தல், மாத்திரி = அளவு, அளவு வேறுபாடு.]

ஒருமாரை *orumārai,* பெ. (n.) ***ஒருமாவரை*** பார்க்க; see *orumāvarai.*

[ஒரு + மா + அரை - ஒருமாவரை → ஒருமாரை (மருஉ.).]

ஒருமாவரை *orumāvarai,* பெ. (n.) ***ஒருமாவும் அரைமாவுஞ் சேர்ந்த 3/40 என்னும் கீழ்வாயிலக்கம்*** (தொல். எழுத்.171,உரை.); mā and a half 1/20 + 1/40 - 3/40.

[ஒரு + மா + அரை.]

ஒருமி-த்தல் *orumi-,* 4.செ.கு.வி. (v.i.) ***ஒன்றுசேர்தல்;*** to be in unison, to unite. "காதலிருவர் கருத்தொருமித்து" (பெருந்தொ.221) (செ.அக.).

ம. ஒருமிக்குக; க. ஒம்மு, ஒக்கு; து. ஒம்மெபுனி, ஒக்காபினி, ஒர்குனி; தெ. ஒம்மு, ஒருமு.

[ஒருமு → ஒருமி.]

ஒருமிக்க *orumikka,* கு.வி.எ. (adv.) ***ஒருசேர;*** together. "மக்க ளொருமிக்கத் தொடர்ந்தும்" (திருப்பு.49) (செ.அக.).

[ஒருமு → ஒருமி → ஒருமிக்க.]

ஒருமிடறா-தல் *oru-midarā-,* 6.செ.கு.வி. (v.i.) 1. ***ஒரு குரலாதல்;*** to join in one voice. "இப்படியெல்லாரும் ஒருமிடறாயேத்தினாலும்" (ஈடு,4,3,10). 2. ***ஒரு சிந் தையாதல்;*** to be of one mind. "நீயென்னோ டொருமிட றான பின்பு" (ஈடு,1,10,4).

[ஒரு + மிடறு + ஆகு - ஒருமிடறாகு → ஒருமிடறாதல்.]

ஒருமிடறு *oru-midaru,* பெ. (n.) ***ஒருவாய்க்குள் அடங் கும் படி பருகுமளவு;*** one draught of liquid. இன்னும் ஒருமிடறு குடி (யாழ்ப்.) (செ.அக.).

[ஒரு[1] + மிடறு.]

ஒருமிப்பு *orumippu,* பெ. (n.) 1. ***ஒற்றுமைப்படுகை;*** union, harmony. 2. ***மனத்தை ஒன்றிற் செலுத்துகை;*** close or undivided attention to an object. "அப்பாலேபோ யொருமிப்பா யிருக்கையில்" (குற்றா.குற.103,2) (செ.அக.).

ம. ஒருமிப்பு; குட. ஒர்மெ; து. ஒம்முத; தெ. ஒரிம, ஒரிமிக.

[ஒருமு → ஒருமி → ஒருமிப்பு.]

ஒருமுகம் *oru-mugam,* பெ. (n.) 1. ***நேர்வழி;*** direct route, the same direction. ஒருமுகமாய்ப்போ. (உ.வ.). 2. ***ஒற்றுமை;*** union, harmony. ஒருமுகமாய்ப் பேசினார் கள் (உ.வ.). 3. ***ஒருகட்சி;*** same party. எல்லாரும் ஒருமுக மாயிருந்தார்கள். (வின்.) (செ.அக.).

[ஒரு[1] + முகம்.]

ஒருமுகமாய்ப்பேசு-தல் *oru-mugamāy-p-pēsu-,* 5.செ.கு.வி. (v.i.) ***பலர் ஒரு மனத்தராய்ப் பேசுதல்*** (வின்.); to speak with one voice. (செ.அக.).

[ஒரு + முகம் + ஆய் + பேசு.]

ஒருமுகவெழினி *oru-muga-v-elini,* பெ. (n.) ***ஒருபக்க மாக இழுக்கப்படும் திரைச்சீலை*** (சிலப்.3,109); stage screen drawn from one side. (செ.அக.).

[ஒரு + முகம் + எழினி.]

ஒருமுற்றிரட்டை *oru-murrirattai,* பெ. (n.) ***ஓரடி முற்றெதுகையாய் வருவது*** (யாப்.வி.51); verse in which all the feet in one line have the same edugai. (செ.அக.).

[ஒரு + முற்று + எதுகை.]

ஒருமுறைக் காய்ச்சல் *oru-murai-k-kāyccal,* பெ. (n.) 1. ***நாளொன்றில் ஒருமுறை வருங்காய்ச்சல்;*** attack of fever once in a day. 2. ***ஒருதடவை காய்ந்து பின்பு நின்றுபோகுங் காய்ச்சல்;*** only one attack of fever which never appears afterwards. 3. ***ஒரே தடவை காய வைத்தல்;*** drying only once. 4. ***ஒரே தடவை அடுப்பு மேலேற்றிக் காய்ச்சுதல்;*** boiling only once or at a stretch, as in the preparation of decoction or medicated oils. (சா.அக.).

[ஒரு + முறை + காய்ச்சல்.]

ஒருமூச்சாய் *oru-mūccāy,* கு.வி.எ. (adv.) ***ஒரே தொடர்ச் சியாய்;*** with sustained, continuous manner, at one stretch. ஒருமூச்சாய் வேலை செய்தான் (செ.அக.).

[ஒரு + மூச்சு + ஆய்.]

ஒருமை *orumai,* பெ. (n.) 1. ***ஒற்றுமை*** (பிங்.); oneness, union. 2. ***தனிமை;*** singleness, loneliness. "என்னொரு மையுங் கண்டுவத்தி" (கம்பரா.கிளை.30). 3. ***ஒரே தன்மை;*** unchangeableness. 4. ***ஒப்பற்ற தன்மை;*** peerlessness, uniqueness. "உண்மைபிறர்க் கறிவரிய வொருமையானும்" (சிவப்பிர.முதற்சூ.3,பக்.91). 5. ***ஒருமை எண் கூற்று;*** singular number. "ஒருமை எண்ணின் பொதுப்பிரி பாற்சொல், ஒருமைக்கல்லது எண்ணுமுறை நில்லாது." (தொல்.சொல்.44) 6. ***மன மொன்றுகை;*** concentration of mind "ஒருமையா லுன்னையுள்கி" (தேவா.478,4). 7. ***இறையுணர்வு*** (பிங்.); knowledge of God. 8. ***கருத்துரை முடிவு;*** decision, determination. "கொடுத்து நம் முயிரென வொருமை கூறினான்" (கம்பரா.மூலபல.177). 9. ***துறக் கம்*** (மோட்சம்); final emancipation. "எம்மொடா மொருமை யெய்துவான்" (தணிகைப்பு.நந்தியு.17). 10. ***மெய்ம்மை;*** truthfulness, veracity. "ஒருமையே மொழி யுநீரார்" (கம்பரா.அயோத்.மந்திர.9). 11. ***ஒருபிறப்பு;*** one birth in the round of births. "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி" (குறள்.398) (செ.அக.).

ம. ஒருமு; க. ஒரகெ; குட. ஒர்மெ; து. ஒம்முத (சேர்ப்பு), ஒக்கட (ஒருமை); தெ. ஒரிம, ஒரிமிக.

[ஒரு → ஒருமு → ஒருமை.]

ஒருமைப்படு-தல் *orumai-p-padu-,* 20.செ.கு.வி. (v.i.) 1. ***ஒற்றுமைப்படுதல்;*** to become united. 2. ***மனம் ஒருமுகப்படுதல்;*** to become concentrated. "சாஸ்திரங் களிற் சொல்லுகிறவழியே நெஞ்சு ஒருமைப் பட்டு" (ஈடு.10,4,10). (செ.அக.).

[ஒருமை + படு]

ஒருமைப்பாடு *orumai-p-pādu,* பெ. (n.) 1. ***ஒற்றுமைப்ப டுகை;*** being united. 2. ***ஒருமித்திருக்கை;*** combining to become a whole. நாட்டின் ஒருமைப்பாடு. (செ.அக.).

[ஒருமை + பாடு. படு → பாடு.]

ஒருமை பன்மை மயக்கம் *orumai-panmai-mayakkam,* பெ. (n.) ***சொற்றொடரில்*** (வாக்கியத்துள்) ***ஒருமை பன்மைகள் மயங்கி வழங்குகை*** (சீவக.2210,உரை.); use of the singular for the plural, or vice versa, as sanctioned by usage. (செ.அக.).

[ஒருமை + பன்மை + மயக்கம்.]

ஒருமைமகளிர் *orumai-magaḻir,* பெ. (n.) ***பிற ஆடவர் பாற் செல்லாத மனமுடைய மாதர்*** (குறள்.974. உரை.); chaste, faithful women. (செ.அக.).

[ஒருமை + மகளிர்.]

ஒருமொழி *oru-moḻi,* பெ. (n.) 1. ***ஆணை;*** royal command, the authoritative word of a king. ஒருமொழி வைத்துல காண்ட சேரலாதற்கு (சிலப்.வாழ்த்துக். உரைப்பாட்டு.). 2. ***பல சொற்களாய்ப் பிரிக்க முடியாத சொல்*** (நன்.259); simple word, dist. fr. (தொடர்மொழி. (செ.அக.). 3. ***ஒரு பொருளையே விளக்கி நிற்குஞ் சொல்*** (ஆ.அக.); word which has single meaning.

[ஒரு + மொழி.]

ஒருலாகை *orulāgai,* பெ. (n.) ***ஒருவகை*** (வின்.); a kind of, one sort.

தெ. லாகு.

[ஒரு + அலகு - ஒரு அலகு → ஒருலாகு → ஒருலாகை (கொ.வ.).]

ஒருவண்ணம் *oru-vaṇṇam,* கு.வி.எ. (adv.) ***ஒருவாறு;*** in some manner, to a certain extent, in some degree. "ஒருவண்ணந் துயர்நீங்கி" (கம்பரா. கையடை.12) (செ.அக.).

ம. ஒருவண்ணம்.

[ஒரு + வண்ணம்.]

ஒருவந்தம்[1] *oru-v-andam,* பெ. (n.) 1. ***ஒற்றுமை;*** similarity, agreement. 2. ***உறுதி;*** certainty, indubitableness. "ஒருவந்த மொல்லைக் கெடும்" (குறள்.563). 3. ***நிலைபேறு;*** firm footing, stability. "ஊக்க மொருவந்தங் கைத்துடையார்" (குறள்.593). 4. ***தொடர்பு*** (வின்.); connection, relation. (செ.அக.).

[ஒரு[1] + அந்தம். அந்துதல் = சேர்தல். ஒருவந்தம் = ஒன்றுபடல், ஒற்றுமை.]

ஒருவந்தம்[2] *oru-v-andam,* பெ.எ. (adj.) 1. ***ஒருசேர;*** all at a time. 2. ***முடிவாக, உறுதியாக;*** cetainly, undoubtedly. "ஒருவந்தம் ஒல்லைக் கெடும்" (குறள்).

[ஒரு + அந்தம் - ஒருவந்தம் (பெயரே பெயரெச்சமாயிற்று).]

ஒருவந்தம்[3] *oru-v-andam,* பெ. (n.) ***தனியிடம்*** (சூடா.); lonely place, place of retirement.

[ஒருவு + அந்தம். ஒருவுதல் = நீங்குதல், தனித்திருத்தல். 'அந்தம்' - பெயரீறு.]

ஒருவயிற்றோர் *oru-vayiṟṟōr,* பெ. (n.) ***உடன்பிறப்பாளர்*** (சகோதரர்); children of the same parents. "ஒரு வயிற்றோர் செய்கடனும்" (கந்தபு. சிங்கமு.471) (செ.அக.).

[ஒரு + வயிறு + ஓர்.]

ஒருவர் *oruvar,* பெ. (n.) ***உயர்சொற்கிளவி, ஒருவன் அல்லது ஒருத்தியைச் சிறப்பு கருதி உயர்வுப் பன்மையில் வழங்கும் பெயர்*** (நன்.289); a person, male or female indicated in plural as an honorific term. (செ.அக.)

[ஒரு[1] + அர் - ஒருவர். 'அர்' - உயர்வுப் பன்மையீறு.]

முறைப்படி, 'அர்' - பலர் பாலுக்குரிய ஈறு. "ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும் ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும் வழக்கினாகிய உயர்சொற் கிளவி இலக்கண மருங்கின் சொல் லாறல்ல" (தொல்.சொல்.27) என்று தொல்காப்பியர் கூறியிருக்கிறார். ஒருவனைப் பலர் பாலாகக் கூறுவது பொருளில் வறுமொழியாய் இலக்கண வழுவுடையதாயினும், பலராலும் போற்றப்படும் புகழும் பெருமையும் பெற்றவனை நன்கு மதிக்கும் நாகரிகம் கருதிப் பலர் பாலுக்குரிய 'அர்' ஈறு சேர்க்கப்பட்டது. ஒன்று பலவாகவோ ஒருவனைப் பலராகவே மாற்றும் பொருட்டாங்கு 'அர்' ஈற்றுக்கு இன்மையின் இதனை உயர்வுப் பன்மையீறு எனப் புதிய இலக்கண வகையீடு தந்து வழங்கினர். 'அ' - என்னும் பலவின் பாலீறும் பன்மையீறாதலின் அதனின்றும் வேறுபடுத்த 'அர்' உயர்வுப் பன்மையீறு எனப்பட்டது. ஒருவர் என்பதிலுள்ள 'அர்' ஈறு, பலர்பாலீறு அன்று எனவும் 'ஒருவன்' என்பதிலுள்ள அன் - அர் எனத் திரியாது எனவும் அறிதல் வேண்டும்.

ஒருவழித்தணத்தல் *oru-vaḻi-t-taṇattal,* பெ. (n.) ***அலரடங்குதற் பொருட்டுத் தலைமகன் சிலநாள் வேற்றிடத்துச் சென்று உறையும் அகத்துறை*** (திருக்கோ.181,அவ.); literary theme, in which the lover's temporary absence from the place of his lady - love to avoid all tittle-tittle about him, is depicted. (செ.அக.) (அபி.சிந்.).

[ஒரு + வழி + தணத்தல்.]

ஒருவழிப்படு-தல் *oru-vaḻi-p-paḍu-,* 20.செ.கு.வி. (v.i.) 1. ***ஒருமுகப்படுதல்;*** to concentrate. படிப்பில் மனம் ஒருவழிப்பட வேண்டும். (உ.வ.). 2. ***ஒன்று படுதல், ஒற்றுமையாதல்;*** to be united. மாறுபட்டவரெல்லாம் இப்போது ஒருவழிப்பட்டுவிட்டார்கள். (உ.வ.). (செ.அக.).

[ஒரு + வழி + படு.]

ஒருவழியுறுப்பு *oru-vaḻi-y-uṟuppu,* பெ. (n.) ***ஒருபகுதி*** (தொல்.சொல்.81); portion of the whole (செ.அக.).

[ஒரு + வழி + உறுப்பு.]

ஒருவன் *oruvaṉ,* பெ. (n.) 1. ***ஒருத்தன்;*** person of the male sex, man or demon. "குடிசெய்வ லென்னு மொருவற்கு" (குறள்.1023). 2. ***ஒப்பற்றவன்;*** the incomparable one. "ஒருவன் வயமானடித் தேர்வான் போல" (கலித்.37) (செ.அக.).

ம. ஒருவன்; க. ஓர்பு, ஒப்புனு, ஓர்வன், ஒம்பு; படை. ஒப்பு; குட. ஒப்பெ; து. ஒரி; தெ. ஒருடு, ஒகடு; கோண். ஓர்ன்; கூ. ரொான்அன்சு; குவி. ரோஓசி, ருசி; கொன். ஒரென்; நா. ஒக்கொ; கொலா. ஒக்கொன்; பர். ஒகுர்; கட. உகர்; மால். ஓர்னெ.

[ஒரு[1] + அன் - ஒருவன். ஒரு[2] + அன் - ஒருவன்.]

ஒருவாக்காக *oru-vākkāga,* கு.வி.எ. (adv.) 1. ***ஒரு வகையாக;*** in a peculiar way. 2. ***ஒரேபடியாக;*** in the same manner. "ஒருவாக்காகப் படுத்துக் கொண்டிருக்கை" (ஈடு.6,8,4,ஜீ). 3. ***ஒரேமுறையில்;*** once for all.

ஒருவாக்காகத் தொலைந்துபோனான். (இ.வ.). 4. ***ஒருசேர;*** all together, in toto, யாவரும் ஒருவாக்காகப் போய்விட்டார்கள். (செ.அக.).

[ஒரு + வாக்கு + ஆக.]

ஒருவாக்கு *oru-vākku,* பெ. (n.) 1. ***உறுதிமொழி;*** one word, truth, certainty, assurance. 2. ***ஒன்றுசேர்ந்து கூறுஞ் சொல்;*** united voice. (செ.அக.).

[ஒரு¹ + வாக்கு.]

ஒருவாமை *oruvāmai,* பெ. (n.) 1. ***பிறழாமை;*** unchangeableness. "ஒருவாமை வைத்தற்கு ஒள்ளியான் ஒருபுலவனால் உரைக்கப்படுவது" (இறை.1,12). 2. ***நீங்காமை;*** stability, invariability, permanence. (செ.அக.).

[ஒருவு + ஆ + மை. ஒருவுதல் = நீங்குதல்; 'ஆ' - எ.ம.இ.நி.]

ஒருவாய்கொள்ளல் *oru-vāy-kollal,* பெ. (n.) ***ஒரு தடவை வாய் கொள்ளுமளவு உட்கொள்ளல்;*** taking one mouthful. (சா.அக.).

[ஒரு¹ + வாய் + கொள்ளல்.]

ஒருவாய்க்கோதை *oru-vāy-k-kōdai,* பெ. (n.) ***ஒருகட் பறை;*** drum with one face in the shape of a marakkāl. "மரக்காலன்ன வொருவாய்க் கோதை" (கல்லா.8,27) (செ.அக.).

[ஒரு + வாய் + கோதை.]

ஒருவாய்ப்படு-தல் *oru-vāy-p-padu-,* 20.செ.கு.வி. (v.i.) ***ஒருகுரலாகப் பேசப்படுதல்;*** to be spoken of with one voice. (செ.அக.).

[ஒரு¹ + வாய் + படு.]

ஒருவாயுணவு *oru-vāyuṇavu,* பெ. (n.) ***ஒரு கவளம்;*** one morsel of food. (சா.அக.).

[ஒரு¹ + வாய் + உணவு.]

ஒருவாற்றான் *oru-v-āṟṟāṉ,* கு.வி.எ. (adv.) ***ஒருவாறு 1,2*** பார்க்க; see *oruvāṟu 1,2*.(செ.அக.).

[ஒரு + ஆறு + ஆன். ஆறு = வழி, வகை.]

ஒருவாறு *oru-v-āṟu,* கு.வி.எ. (adv.) 1. ***ஒருவகையாக;*** in a way; somehow. 2. ***ஓரளவாக;*** to a certain extent, in some degree. 3. ***ஒருசேர;*** entirely, altogether. "ஒருவா றொளியீண்டி நின்றால்" (பழ.201) (செ.அக.).

[ஒரு¹ + ஆறு - ஒருவாறு. ஆறு = வழி, வகை.]

ஒருவி *oruvi,* பெ. (n.) ***ஒருத்தி, ஒருபெண்;*** one woman.

ம. ஒருவி.

[ஒருவன் → ஒருவி. (இ.வ.).]

ஒருவிசை *oruvisai,* பெ. (n.) ***ஒருமுறை;*** once, at one time. (ஆ.அக.).

[ஒரு¹ + விசை. வீச்சு → வீசு → வீசை → விசை.]

ஒருவிதமா-தல் *oru-vidam-ā-,* 6.செ.கு.வி. (v.i.) 1. ***புதியவகையாதல்;*** to be peculiar. 2. ***வேறுபடுதல்;*** to be of a different kind or attitude. "பாங்கி யொருவித மாக நடந்தாள்" (அருட்பா,VI,தலைவி வருந்தல்.12, பக்.645). 3. ***கவனியாமை, மாறுபாடாக இருத்தல்;*** to be indifferent. இப்போது அவர் என்னிடம் ஒருவிதமாயிருக்கிறார். (செ.அக.).

[ஒரு + விதம் + ஆதல்.]

ஒருவியாழவட்டம் *oruviyāḻavaṭṭam,* பெ. (n.) ***வியாழன் ஞாயிற்றைச் சுற்றி வர ஆகும் 12 ஆண்டுக்காலம்;*** time taken by Jupiter to make one orbit around the sun. (ஆ.அக.).

[ஒரு¹ + வியாழன் + வட்டம்.]

ஒருவு¹-தல் *oruvu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***நீங்குதல், விடுதல்;*** to abandon, renounce. "ஒருவுக வொப்பிலார் நட்பு" (குறள்.800). 2. ***கடத்தல்;*** to cross, pass over. "இருவினை வேலை யொருவினைநீ" (திருநூற்.67). 3. ***ஒழிதல்;*** to be expected. "வேந்தனி னொரீஇய வேனோர்" (தொல்.பொருள்.32). 4. ***தப்புதல்;*** to escape. "பருந்தினேறு குறித்தொரீஇ" (புறநா.43,5) (செ.அக.).

[உருவு → ஒருவு → ஒருவுதல்.]

ஒருவு²-தல் *oruvu,* செ.கு.வி. (v.i.) ***ஒப்பாதல், ஒத்தல்;*** to resemble, equal. (பரிபா.3,32,பி-ம்.) (செ.அக.).

[ஒல் → ஒரு → ஒருவு.]

ஒருவு³ *oruvu,* பெ. (n.) ***செம்மறியாடு;*** sheep. (செ.அக.).

மறுவ. உரு, ஒரு, துரு.

[உரு → ஒரு → ஒருவு. துரு = செம்மறியாடு.]

ஒருவேளை *oru-vēḷai,* கு.வி.எ. (adv.) 1. ***ஒருமுறை;*** on one occasion, once. 2. ***ஒருகால்;*** perhaps. நான் ஒருவேளை அங்கே போகலாம். (செ.அக.).

ம. ஒருவேளை; க. ஒருவேளெ; தெ. ஒக்கவேட; பட. ஒந்துபேளெ.

[ஒரு¹ + வேளை.]

ஒருவை *oruvai,* பெ. (n.) 1. ***செம்மறியாடு;*** sheep. 2. ***ஓர் பூடு;*** a kind of shrub or plant. (சா.அக.).

[உரு → உருவை → ஒருவை. உரு → துரு = செம்மறியாடு, செந்நிறமுள்ள பூண்டும் அப்பெயர் பெற்றிருக்கலாம்.]

ஒரூஉ¹-தல் *orūu-,* 7.செ.கு.வி. (v.i.) 1. ***நீங்குதல்; விலகுதல்;*** to remove, separate. 2. ***ஓடுதல்;*** to run flee.

[ஒருவு → ஒரூஉ.]

ஒரூஉ^{2} *orūu,* பெ. (n.) 1. ***ஆற்றினின்றும் நீராடும் குளம் அல்லது ஊர்க்குளத்திற்கு நீர் கொணரும் கால்வாய்;*** channel through which water of a river runs through to the tank or swimming pool. 2. ***விளைநிலங்களுக்குப் பாயும் ஆற்று வாய்க்கால்;*** water channel brought to village from tank or river to feed the fields. 3. ***ஆற்று நீரால் நிரம்பும் குளம்;*** tank fed with river water. 4. ***வடிகால், இட்டாலி;*** drain or gutter to drain out sewage water in a town.

க. ஒரு, ஓரிமோரி; **குச்.** ஓரியோ.

[ஒருவு → ஒரூஉ.]

ஒரூஉ^{3} *orūu,* பெ. (n.) 1. ***இடைவிட்டிருப்பது, விலகியிருப்பது;*** keeping apart. 2. ***உருக்குலைவு, வடிவச் சிதைவு;*** deformation.

[ஒருவு → ஒரூஉ.]

ஒரூஉத்தனார் *orūuttanār,* பெ. (n.) ***ஒரு தமிழ்ப்புலவர்;*** poet of Sangam age. (அபி.சிந்.).

[ஒரூஉ^{2} → ஒரூஉத்தன் + ஆர் - ஒரூஉத்தனார். ஒரூஉ = ஆற்று நீர் பாயும் கால்வாய். ஒரூஉத்தன் = ஆற்றுநீர் பாயும் கால்வாயை மேற்பார்க்கும் பணியாளன், நீர்க்கட்டி. ஒரூஉத்தனார் = ஆற்றுக்கால்வாய்களை மேற்பார்க்கும் பணியிலிருந்த தமிழ்ப்புலவராகலாம். நாடெங்கும் வாழும் சிற்றூர் மக்களிடை இன்றும் நீருக்கட்டி என்னும் கால்வாய்ப் பணியாளர் உள்ளனர்.]

ஒரூஉத்தொடை *orūu-t-todai,* பெ. (n.) ***அளவடியுள் நடுவிருசீர் களொழிய முதற்சீர்க்கண்ணும் நான்காஞ் சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது*** (இலக்.வி.723); alliteration etc. in the first foot and the fourth of a line of verse. (செ.அக.).

[ஒரூஉ + தொடை.]

ஒரூஉவண்ணம் *orūu-vannam,* பெ. (n.) ***யாற்றொழுக்காகப் பொருள் கொண்டு செல்லும் சந்தம்*** (தொல். பொருள்.539); rhythm of verse effected by composing like the flow of a river. (செ.அக.).

[ஒரூஉ + வண்ணம். ஒரூஉ = ஓட்டம்.]

ஒரூஉவளபெடை *orūuvaḷabeḍai,* பெ. (n.) ***முதற்சீர்க் கண்ணு நான்காஞ் சீர்க்கண்ணு மளபெடை பயிலுவது;*** prolongation of vowel in verse. (ஆ.அக.).

[ஒரூஉ + அளபெடை. ஒரூஉ = விலகுதல்.]

ஒரூஉவியைபு *orūuviyeibu,* பெ. (n.) ***ஈற்றுச்சீரினும் முதற் சீரினுமியைபு வருவது;*** rhyming at the last line of a verse. (எ-டு) "நிழலே இனியத னயலது கடலே". (ஆ.அக.).

[ஒரூஉ + இயைபு. ஒரூஉ = விலகுதல்.]

ஒரூஉவெதுகை *orūuvedugai,* பெ. (n.) ***முதற்சீர்க்கண்ணும் நான்காஞ் சீர்க்கண்ணு மெதுகை வருதல்;*** appearance of 'edukai' in the first and fourth feet of a line in verse. (எ-டு) "மின்னவி ரொளிவடந் தாங்கி மன்னிய"

[ஒரூஉ + எதுகை.]

ஒரே *orē,* கு.பெ.எ. (adj.) ***ஒன்றேயான;*** only, the one. அவனுக்கு ஒரேமகன். (உ.வ.). 2. ***மற்றொரு தரத்தில் இல்லாதது;*** the same, not of a different kind. (சேரநா.).

ம. ஒரே; **க.** ஒந்தே; **தெ.** ஒகே.

[ஒரு + ஏ.]

ஒரோவழி *orō-vaḻi,* கு.வி.எ. (adv.) ***சிறுபான்மையாய்;*** sometimes in some places, smaller number or part. 'யாதானும் ஒரோவழி ஒருசாரார் மாட்டு ... நிகழும் ஒழுக்கத்தினை' (தொல்.பொருள்.3,உரை.) (செ.அக.).

[ஒரு + ஓ + வழி.]

ஒரோவொரு *orōvoru,* பெ. (n.) ***ஏதோவொரு;*** something, somebody.

[ஒரு + ஓ + ஒரு - ஒரோவொரு.]

ஒரோவொருவர் *orō-v-oruvar,* பெ. (n.) ***தனித்தனி ஒவ்வொருவர்;*** each person, individual. "ஒரோ வொருவர்க் கொல்காதோ ரொன்று படும்" (சிறு.பஞ்.27) (செ.அக.).

[ஒரு + ஓ + ஒருவர்.]

ஒரோவொன்று *orō-v-oṉṟu,* பெ. (n.) ***ஒவ்வொன்று;*** one in each. ஒரோவொன்றே அறமுந் துறக்கமும் பொருளும் பயத்தற் சிறப்பு நோக்கி (தொல்.பொருள்.25, உரை.) (செ.அக.).

[ஒரு + ஓ + ஒன்று.]

ஒல்^{1} *ol,* பெ. (n.) 1. ***முன்மை, முதன்மை;*** foremost. 2. ***தொன்மை;*** antiquity.

[உல் → ஒல்.]

ஒல்^{2} *ol,* பெ. (n.) ***முடிவிடம்*** (திவா.); limit, end. (செ.அக.).

[உல் → ஒல்.]

ஒல்^{3} *ol,* பெ. (n.) ***தொல்லை, துன்பம்;*** trouble, affliction.

[உல் → ஒல்.]

ஒல்^{4} *ol,* இடை. (part.) 1. ***ஒலிக்குறிப்பு இடைச்சொல்;*** expression of invitative sound. 2. ***விரைவு சுட்டும் ஒலிக்குறிப்பு;*** onom. expressing speed.

[ஓ → ஒல்.]

ஒல்^{5} *ol,* பெ. (n.) ***பொருத்தம்;*** suitability, fitness.

[உல் → ஒல்.]

ஒல்^{6} *ol,* பெ. (n.) ***மெலிவு, தளர்ச்சி;*** thinness.

[உல் → ஒல்.]

ஒல்[7] *ol*, பெ. (n.) 1. ***தழைவு, செழிப்பு;*** shooting forth, prosperity. 2. ***பொலிவு;*** attractiveness. 3. * ***அழகு;*** beauty.

[உல் → ஒல்.]

ஒல்கல் *olgal*, பெ. (n.) ***ஒல்கு-தல்*** பார்க்க; see *olgu-*.

ஒல்கு[1]**-தல்** *olgu-*, 7.செ.கு.வி. (v.i.) 1. ***தளர்தல்;*** to grow weak, or faint; to pine, to be disheartened. "ஒல்க லுள்ள மொடு" (புறநா.135, 8). 2. ***மெலிதல்;*** to become reduced, thin, slender; to be emaciated. "ஒல்கு தேவியை" (கந்தபு.காமதகன.61). 3. ***குழைதல்;*** to become soft, mellow. "ஒல்குதீம்பண்டம்" (*சீவக*.62). 4. ***நுடங்குதல்;*** to tremble as from weakness or from being over-burdened; to bend with trembling. "ஒல்கு ... நுண்மருங்குல்" (சிறுபாண்.135). 5. ***சுருங்குதல்;*** to shrink; to flinch. "ஒழுக்கத்தி னொல்காருரவோர்" (குறள்.136). 6. ***அசைதல்;*** to shake, move. "இயலின னொல்கினளாடு மடமகள்" (பதிற்றுப்.51,10). 7. ***ஒதுங் குதல்;*** to wave, move to a side. "பொன்னலங்கல் காலசைப்ப வொல்கி" (*சீவக*.595). 8. ***சாய்தல்;*** to incline. "நெடுந்தூ ணொல்கத் தீண்டி" (பட்டினப்.250). 9. ***நடத்தல்;*** to walk, tread. "நீலந்தழீஇத் தளர்பொல்கி" (கலித்.115,14). 10. ***வளைதல்;*** to become bent. "புள்ளொற்ற வொசிந் தொல்கி" (கலித்.77-5). 11. ***வறுமைப்படுதல்;*** to be impoverished. "ஒல்கிடத் துலப்பிலா வுணர்விலார்" (கலித்.25,20). 12. ***மேலேப டுதல்;*** to come in contact. "அசைவளி வந்தொல்க" (கலித்.126,12). 13. ***மனமடங்குதல்;*** to be self-controlled. "ஒல்காதார் வாய்விட் டுலம்புப" (நீதிநெறி.72). 14. ***கெடுதல்;*** to be injured, spoilt. "ஒல்கிய வெழில் வேழம்" (கலித்.8,4).

ம. ஒல்குக; தெ. ஒல்லாம் போவு.

[ஒல் → ஒல்கு.]

ஒல்கு[2]**-தல்** *olgu*, 5.செ.குன்றாவி. (v.t.) ***எதிர் கொள்ளு தல்;*** to receive, meet. "ஒல்கி ... மைந்தனைக் கொண்டு புக்கார்" (*சீவக*.472) (செ.அக.).

[உல் → ஒல்.]

ஒல்லட்டை *ollattai*, பெ. (n.) ***ஒல்லியானவன்*** (யாழ்ப்.); thin, slender person; one reduced by disease or age. (செ.அக.).

[உல் → ஒல் → ஒல்லட்டை. (வே.க.82).]

ஒல்லல் *ollal*, பெ. (n.) 1. ***இயலுகை*** (திவா.); being able, possible. 2. ***ஊடல் தீர்க்கை*** (சூடா.); reconciling after a love quarrel. (செ.அக.).

ம. ஒல்லல்.

[ஒல் + அல்.]

ஒல்லாங்கு *ollāṅgu*, கு.வி.எ. (adv.) ***பொருந்தும் வழி யால்;*** appropriately, in the proper way, befittingly. "ஒல்லாங்கியாமிரப்பவும்" (கலித்.3,11). (செ.அக.).

[ஒல் + ஆங்கு.]

ஒல்லாடி *ollāḍi*, பெ. (n.) ***ஒல்லட்டை*** பார்க்க; see *ollattai* (யாழ்ப்.) (செ.அக.).

ம. ஒல்லாடி.

[ஒல் + ஆடி.]

ஒல்லாதவர் *ollādavar*, பெ. (n.) ***பகைவர்;*** enemies. "ஒல்லாத வரிற் பொருதே சில வும்பர் வீழ" (கந்தபு. திருவிளை.60) (செ.அக.).

[ஒல் + ஆ - ஒல்லாத + அவர். 'ஆ' - எ.ம.இ.நி.]

ஒல்லாமை[1] *ollāmai*, பெ. (n.) 1. ***இயலாமை;*** inability. 2. ***இகழ்ச்சி*** (திவா.); contempt. 3. ***அவாவின்மை*** (திவா.); lack of desire. (செ.அக.).

[ஒல் + ஆ + மை - ஒல்லாமை. 'ஆ' - எ.ம.இ.நி.]

ஒல்லாமை[2] *ollāmai*, பெ. (n.) 1. ***பொருந்தாமை;*** unsuitability. 2. ***வெறுப்பு;*** disgust, loathsomeness.

[ஒல் + ஆ + மை - ஒல்லாமை. 'ஆ' - எ.ம.இ.நி.]

ஒல்லார் *ollār*, பெ. (n.) ***பகைவர்;*** foes, enemies. "ஒல்லார் நாண" (தொல்.பொருள்.76) (செ.அக.).

ம. ஒல்லார்.

[ஒல் → ஒல்லார்.]

ஒல்லி[1] *olli*, பெ. (n.) 1. ***மெலிந்தவன்;*** thin person. 2. ***மென்மை;*** thinness, slenderness. 3. ***ஒல்லித்தேங் காய்*** (யாழ்ப்.) பார்க்க; see *ollitteṅgāy*. 4. ***துடைப்பம்*** (வின்.); broom. (செ.அக.).

ம. ஒல்லி.

[ஒல் → ஒல்லி.]

ஒல்லி[2] *olli*, பெ. (n.) ***மேன்மை;*** excellence, eminence.

[ஒல் → ஒல்லி.]

ஒல்லிக்காய்ச்சி *olli-k-kāycci*, பெ. (n.) ***உள்ளீடில்லாத காயுள்ள தென்னை*** (யாழ்ப்.); coconut-palm that yields blighted fruit. (செ.அக.).

[ஒல்லி + காய்ச்சி.]

ஒல்லிட்டை *ollittai*, பெ. (n.) ***ஒல்லியானவன்;*** slender or thin person.

[ஒல்லட்டை → ஒல்லிட்டை.]

ஒல்லித்தேங்காய் *ollitteṅgāy*, பெ. (n.) ***உள்ளீடில்லாத தேங்காய்;*** blighted or empty coconut (ஆ.அக.).

ம. ஒல்லித் தேங்ங.

[ஒல்லி + தேங்காய்.]

ஒல்லிநாடி *ollināḍi*, பெ. (n.) ***ஒற்றை நாடி;*** thin or slender habit of the body, lank.

[ஒல்லி + நாடி.]

ஒல்லிமேய்-தல் *olli-mēy-*, 2.செ.கு.வி. (v.i.) ***தேங்காயில் உட்பசையறுதல்;*** to be empty, be blighted, as coconuts. ஒல்லிமேய்ந்த தேங்காய் (யாழ்ப்.) (செ.அக.).

[ஒல்லி + மேய்.]

ஒல்லியன் *olliyaṉ*, பெ. (n.) ***மெல்லியவன்;*** thin man. (செ.அக.).

[ஒல்லி + அன்.]

ஒல்லு¹-தல் *ollu-*, 8.செ.குன்றாவி. (v.t.) 1. ***இயலுதல்;*** to be able, possible, practicable. "ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே" (குறள்,673). 2. ***உடன்படுதல்;*** to agree. "பாசறை யல்லது நீயொல்லாயே" (புறநா.31,6). 3. ***தகுதல்;*** to be fit, suitable. "கங்குற்போதி லீங்கு வந்திடுவ தொல்லாது" (கந்தபு.வள்ளியம்.162). 4. ***பொருந்துதல்;*** to combine, unite, join. "கானத் தொல்லும் பேரழல்" (கந்தபு.ஆற்று.7). 5. ***நிகழ்தல்*** (வின்.); to occur, happen, take place. 6. ***ஒத்தல்;*** to resemble. 7. ***நிறைவேற்றல்;*** to effectuate. 8. ***பொறுத்தல்;*** to tolerate, endure. "ஒல்லுவ சொல்லாது" (பரிபா.12-65).

[உல் → ஒல்.]

ஒல்லு²-தல் *ollu-*, 8.செ.குன்றாவி. (v.t.) 1. ***குத்துதல்;*** to pierce. 2. ***ஓலைப்பெட்டி முதலியன பொத்துதல்*** (வின்.); to mend, as a net; to braid, as a basket. (செ.அக.).

ம. ஒல்லுக; க. ஒல்; கோத. லொந்; துட. வலொத்; து. ஒல்புனி; தெ. வலசு; கூ. ஒர்ப.

[உல் → ஒல்.]

ஒல்லுநர் *olunar*, பெ. (n.) ***நண்பர்*** (திவா.); friends; associates. (செ.அக.).

[ஒல் → ஒல்லுநர்.]

ஒல்லென *ol-l-eṉa*, கு.வி.எ. (adv.) 1. ***விரைய;*** quickly. "வல்வினை ... ஒல்லெனவொப்ப" (ஞானா.1,33). 2. ***வெளியாக*** (சீவக.737,உரை.); publicly, openly. (செ.அக.).

[ஒல் + என, ஒல் - ஒலிக்குறிப்பு.]

ஒல்லெனல் *ol-l-eṉal*, பெ. (n.) ***ஒலிக்குறிப்பு;*** onom. sounding by shepherds etc. in a certain way. "ஆயரொல் லென வொலிப்ப" (சீவக.438) (செ.அக.).

[ஒல் + எனல், ஒல் - ஒலிகுறிப்பு.]

ஒல்லே *ollē*, கு.வி.எ. (adv.) ***சுருக்காக, விரைவாக;*** quickly. "நங்கை யென்னொ டுரையாய் நனியொல்லே" (சீவக.898) (செ.அக.).

[ஒல் → ஒல்லே (வே.க.116).]

ஒல்லை¹ *ollai*, கு.வி.எ. (adv.) 1. ***விரைவாக*** (சூடா.); rapidly, quickly. 2. ***காலத்தாழ்வின்றி, உடனே;*** promptly. "ஒல்லைக்கெடும்" (குறள்,563). 3. ***சுருக்காய்*** (திவா.); in a little while. (செ.அக.).

ம. ஒல்ல.

[ஒல் → ஒல்லை.]

ஒல்லை² *ollai*, பெ. (n.) ***பழமை;*** antiquity, oldness. "ஒல்லை போற் கருங்காவியென" (இரகு.இரகு.3) (செ.அக.).

[உல் → ஒல் - ஒடுங்கற் கருத்துவேர், உள்ளொடுங்குதல் காலத்தால் தொன்மைப் படுதலையும் குறிக்கும். ஒல் → ஒல்லை. (பழங்காலம்) ஒ.நோ. ஒல் → தொல் → தொன்மை, தொல்லை.]

ஒல்லை³ *ollai*, பெ. (n.) ***தொந்தரவு*** (அக.நி.); trouble. (செ.அக.).

[ஒல் - உள்ளொடுங்கற் கருத்துவேர், உள்ளொடுங்கல், வறுமைப்படுதல், இலம்படுதல், துன்புறல். ஒல் → ஒல்லை (துன்பம்).]

ஒல்லையூர் *ollaiyūr*, பெ. (n.) ***கடைக்கழக வள்ளலின் ஊர்;*** a town of Tamil Cheiftain of Sangam age.

[ஒல்லை + ஊர் - ஒல்லையூர். ஒல்லை = பழமை, தொன்மை.]

ஒல்லையூர் கிழான் *ollaiyūr-kiḻāṉ*, பெ. (n.) ***தொடித்தலை விழுத்தண்டினாராற் பாடப்பட்ட பெருஞ்சாத்தனின் தந்தை;*** Sangam personage.

[ஒல்லையூர் + கிழான்.]

ஒல்லொல்லி *ollolli*, பெ. (n.) ***மிக்க வொல்லி;*** extreme thinness. (செ.அக.).

[ஒல் + ஒல்லி.]

ஒல்வழி *ol-vaḻi*, கு.வி.எ. (adv.) 1. ***பொருந்தியவிடத்து;*** in a suitable place. "ஒல்வழி யொற்றிடை மிகுதல்" (தொல்.எழுத்.114). 2. ***பொருந்தியகாலத்தில்;*** at the suitable time. (செ.அக.).

[ஒல் + வழி.]

ஒலி¹-தல் *oli-*, 4. செ.கு.வி. (v.i.) ***தழைத்தல்;*** to shoot forth; to be luxuriant; to prosper, thrive. "ஒலிந்த கூந்தல்" (பதிற்றுப்.31,24) (செ.அக.).

[உல் → ஒல் → ஒலி.]

ஒலி²-த்தல் *oli-*, 4.செ.குன்றாவி. (v.t.) ***ஒலி¹*** பார்க்க; see *oli¹* "கரும்பின் ஒலிக்குந்து" (புறநா.137,6).

[உல் → ஒல் → ஒலி.]

ஒலி³-த்தல் *oli-*, 4.செ.கு.வி. (v.i.) ***ஓசையெழுப்புதல்;*** to sound, as letter; to roar, as the ocean. "ஒலித்தக்கா லென்னாமுவரி" (குறள்,763).

[ஒல் → ஒலி.]

ஒலி[4]-த்தல் *oli-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***துப்புரவாக்குதல்;*** to remove, as dirt, to clean. "உதிர்துக ளுக்க நின்னாடை யொலிப்ப" (கலித்.81,31) (செ.அக.).

ம. ஒலி; க. உலி; கோத. ஒச்; குட. ஒலி; து. உரி; தெ. உலியு; குரு. ஒலொக்னா (புலம்புதல்); மால். ஒல்கெ (அமு.).

[ஒல் → ஒலி → ஒலித்தல். (வே.க.115).]

ஒலி[5] *oli,* பெ. (n.) 1. ***ஓசை*** (திவா.); sound, noise, roar, articulate sound. 2. ***இடி*** (பிங்.); thunder, thunderbolt. 3. ***காற்று*** (திவா.); wind. 4. ***சொல்;*** word, speech. "நின்னுருவமு மொலியு மாகாயத்துள" (பரிபா. 4,31). 5. ***பிறர்கேட்கச் செபிக்கை*** (சைவச.பொது. 151,உரை.); loud or audible recitation of a mantra. (செ.அக.).

[உல் → ஒல் → ஒலி (வே.க.116).]

ஒலிக்கல் *olikkal,* பெ. (n.) ***பல்;*** tooth as it helps in the pronunciation. (சா.அக.).

[ஒலி + கல்.]

ஒலிக்குறிப்பு *oli-k-kurippu,* பெ. (n.) ***குறிப்பிட்ட ஓசையைக் குறிக்கும் சொல்;*** symbol of a sound; as கலகலெனல். (செ.அக.).

[ஒலி + குறிப்பு.]

ஒலிசை *olišai,* பெ. (n.) ***மணமகனுக்கு மணமகள் சுற்றத்தார் திருமணத்தின் நான்காநாளிற் கொடுக்கும் வரிசை*** (வின்.); presents given by the near relations of the bride to the bridegroom on the fourth day of the marriage. (செ.அக.).

[ஒலி → ஒலிசை. (வே.க.116) ஒலி = செழிப்பு, தழைப்பு, மகிழ்ச்சி.]

ஒலிப்பு *olippu,* பெ. (n.) 1. ***பெருமொழி;*** sonorousness, roar. "சொன்மறை யொலிப்புடைமுனி" (இரகு.இரகுவற்.30) (செ.அக.). 2. ***ஒழுகல், ஒழுக்கு, ஊற்று, சிறிய அருவி;*** leak, flowing, a flow, a small stream or fountain. (சேரநா.).

[ஒலி → ஒலிப்பு.]

ஒலிமுகம் *oli-mugam,* பெ. (n.) ***ஒலிமுகவாயில்*** பார்க்க (செ.அக.); see *olimugavāyil.*

ஒலிமுகவாயில் *oli-muga-vāyil,* பெ. (n.) ***நகரம் அல்லது கோயிலின் முன்புறவாயில்*** (விவிலி.2,இரா.7,17); outer gate of a city, fort or temple, where the guard is stationed. (செ.அக.).

[ஒலி + முகம் + வாயில். ஒலி = ஆராய்ச்சிமணி. ஒலிமுகம் = தலைவாயில்.]

ஒலியல்[1] *oliyal,* பெ. (n.) 1. ***தழைக்கை;*** luxuriance. "ஒலியற்கண்ணிப் புலிகடிமாஅல்" (புறநா.201,15). 2. ***தளிர்*** (புறநா.202,10,உரை.); shoot, sprout. 3. ***மாலை;*** garland of flowers. "மல்லிகை யொலியல் சூடினார்" (சீவக.2682). 4. ***வளைவு மாலை;*** chaplet of flowers. "கண்ணி யொலியன்மாலையொடு பொலியச் சூடி" (புறநா.76,7). 5. ***ஈயோட்டுங் கருவி;*** fly whisk. "ஒலியலுங் கவரியும் புரள" (திருவிளை.நரிபரி.40) (செ.அக.).

[ஒலி + அல் - ஒலியல். 'அல்' - தொ.பெ.ஈறு.]

ஒலியல்[2] *oliyal,* பெ. (n.) 1. ***தழை;*** foliage, leafage. 2. ***தோல்*** (பிங்.); skin, hide. 3. ***ஆடை*** (பிங்.); cloth, garment.

ம. ஒலியல் (அரச உடை); தெ. ஒலியு; து. ஒலிலு, ஒல்லி; க. ஒல்லி (சிறுசெடி).

[ஒல் → ஒலி → ஒலியல்.]

ஒலியல்[3] *oliyal,* பெ. (n.) 1. ***தெரு*** (பிங்.); street. 2. ***ஆறு;*** river. "அவ்வொலியற் கொப்பாகுவதோ வுவராழியதே" (கந்தபு.காளிந்தி.6) (செ.அக.).

[ஒல் → ஒலி → ஒலியல்.]

ஒலியல்[4] *oliyal,* பெ. (n.) 1. ***நோய்*** (அக.நி.); illness. 2. ***தீ*** (யாழ்.அக.); fire. (செ.அக.).

[உல் → ஒல் → ஒலி → ஒலியல்.]

ஒலியல்[5] *oliyal* பெ. (n.) ***கடப்பமாலை*** (பரி.19,97); garland of kadappa flowers. (சங்.இலக்.சொற்.).

[ஒலி → ஒலியல்.]

ஒலியறிகுழல் *oliyarikulal,* பெ. (n.) ***நெஞ்சத்துடிப்பறியும் கருவி;*** instrument by which the cardiac sounds are heard - stethoscope. (சா.அக.).

[ஒலி + அறி + குழல்.]

ஒலியன்[1] *oliyan,* பெ. (n.) ***ஆடை*** (கோயிலொ.88); cloth. (செ.அக.).

[ஒலி → ஒலியன்.]

ஒலியன்[2] *oliyan,* பெ. (n.) ***ஒருமொழியில் அமைந்த அடிப்படைத் தனி ஒலி;*** a unit of significant sound in a given language phoneme.

[ஒலி + அன்.]

ஒலியெழுத்து *oli-y-eluttu,* பெ. (n.) ***ஒலிவடிவான எழுத்து*** (நன்.256,மயிலை.); articulate sound considered as a symbol of a certain state of consciousness, dist. fr. வடிவெழுத்து. (செ.அக.).

[ஒலி + எழுத்து.]

ஒலியொலியென்றொலி-த்தல் *oli-y-oli-y-enroli-,* 4.செ.கு.வி. (v.i.) ***மிக்கபயன் தருதல்;*** to yield abundantly. மரம் ஒலியொலியென் றொலிக்கிறது. (வின்.) (செ.அக.).

[ஒலி + ஒலி + என்று + ஒலித்தல்.]

ஒலிவடிவு *oli-vadivu,* பெ. (n.) ***எழுத்துக்குள்ள ஒலி வடிவம்.*** (நன்.89,விருத்.); the graphic-configuration of an articulate sound, dist fr. வரிவடிவு. (செ.அக.).

[ஒலி + வடிவு.]

ஒலிவல்ஈந்து *olival-īndu,* பெ. (n.) ***தழைத்த ஈத்தமரம்*** (நற்.2); a kind of tree. (சங்.இலக்.சொற்.).

[ஒலியல் + ஈந்து.]

ஒலிவிதை *olividai,* பெ. (n.) ***ஈரமான நிலத்தில் விதைத்தல்;*** sowing in wet field. (சேரநா.).

ம. ஒலிவித.

[ஒலி + விதை. ஒலி = நன்கு முளைக்கத்தக்க செழிப்பான ஈர நிலம்.]

ஒலுகு *olugu,* பெ. (n.) ***திண்டு*** (இ.வ.); bolster, cushion for the back of a chair. (செ.அக.).

[ஒலி → ஒலு → ஒலுகு.]

ஒலுங்கு *olungu,* பெ. (n.) ***பெருங்கொசுகு;*** big mosquito. (செ.அக.).

ம. ஒலுங்கு.

[உலங்கு → ஒலங்கு → ஒலுங்கு.]

ஒலோவு-தல் *olōvu-,* 7.செ.கு.வி. (v.i.) ***குறைவாதல்;*** to be wanting, deficient, lacking. "கீறுமுடை கோவண மிலாமைமி லொலோவிய தவத்தர்" (தேவா.413,10) (செ.அக.).

[ஒல் (ஒல்கு) → ஒலவு → ஒலாவு → ஒலோவு.]

ஒவ்வாப் பக்கம் *ovvā-p-pakkam,* பெ. (n.) ***ஏரணத்தில்*** (தருக்கம்) ***பொருந்தாத பக்கம்*** (வின்.); strained or forced comparison, incongruity. (செ.அக.).

[ஒவ்வு + ஆ + பக்கம்.]

ஒவ்வாமை[1] *ovvāmai,* பெ. (n.) 1. ***ஒப்பாகாமை;*** unlikeness, inequality. 2. ***இசையாமை;*** discord, disagreement. (செ.அக.). 3. ***தகுதிக்குறைவு*** (ஈனம்); being not equal to. 4. ***உண்மையல்லாமை;*** not true or right, not agreeable.

ம. ஒவ்வாத்து.

[ஒவ்வு + ஆ + மை.]

ஒவ்வாமை[2] *ovvāmai,* பெ. (n.) 1. ***இசையாமை, பொருந்தாமை;*** unsuitablity. 2. ***உடல் நலத்திற் கொவ்வாமை;*** allergy.

[ஒவ்வு + ஆ + மை.]

ஒவ்வான் *ovvāṉ,* பெ. (n.) ***ஒப்பாகாதவன்*** (கலி.104); peerless, uncomparable. (சங்.இலக்.சொற்.).

[ஒவ்வு + ஆ + ஆன். 'ஆ' - எ.ம.இ.நி. (புணர்ந்துகெட்டது).]

ஒவ்வு-தல் *ovvu-,* 5. செ.கு.வி. (v.i.) 1. ***பொருந்துதல்;*** to be congruous, consistent. "ஊகமனுபவம் வசனமூன் றுக்கு மொவ்வும்" (தாயு.எங்கு.3). 2. ***ஒத்திருத்தல்;*** to be like; to be similar. (செ.அக.).

ம. ஒவ்வு; க. ஒப்பு; கோத. ஒப்; குட. ஒ; து. ஒம்புனி; தெ. ஒவ்வு, ஒப்பு; குரு. ஒக்கனா.

[உல் → ஒல் → ஒவ் → ஒவ்வு.]

ஒவ்வுறு-தல் *ovvuṟu-,* 4.செ.கு.வி. (v.i.) ***ஒப்பாதல்;*** to agree; to be like, equal. "இதற்கொவ்வுறாதால்" (பாரத.) (செ.அக.).

ம. ஒவ்வுக.

[ஒவ்வு + உறு.]

ஒவ்வொன்று *ovvoṉṟu,* ப.பெ. (pron.) 1. ***ஒன்று மேனி;*** one each. 2. ***சில;*** one here and there. அந்த எண்களில் ஒவ்வொன்று விடப்பட்டிருக்கும் (செ.அக.).

[ஒன்று + ஒன்று.]

ஒவ்வோக்குழி *ovvō-k-kuḻi,* பெ. (n.) ***நிலத்திலே விரலால் சிறுவர் எழுதும் அரிக்குழி;*** depression made in the earth by repeatedly tracing with the finger in the same groove the outline of the letter ஓ when children begin to learn the letters of the alphabet. "பகவத் விஷயத்தில் ஒவ்வோக்குழியிடாதேயிருக்கிற உங்களுக்கு" (ஈடு,5,6,2) (செ.அக.).

[ஓ + ஓ + குழி - ஒவ்வோக்குழி. எழுதக் கற்பிக்கும் தொடக்கத்தில் ஓம் எழுதிய பின் தமிழ் நெடுங்கணக்கு கற்பிக்கும் வழக்கம் தழுவி ஒவ்வோக்குழி எனப்பட்டது.]

ஒவ்வோன் *ovvōṉ,* பெ. (n.) ***ஒப்பில்லாதவன்;*** one who has no equal. "யாருமொவ்வோன் ... உணர்தலுற் றான்" (பாரத.பதினெட்.111) (செ.அக.).

[ஒவ்வு + ஆ + ஆன் - ஒவ்வான் → ஒவ்வோன். 'ஆ' -எ.ம.இ.நி. (புணர்ந்து கெட்டது).]

ஒழி[1]**-தல்** *oḻi-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***தீர்தல்;*** to cease, desist, stop; to discontinue, to be finished, ended. "பொய்க்கோலஞ் செய்ய வொழியுமே" (நாலடி.43). 2. ***அழிதல்;*** to decline; to become extinct, annihilated. "ஒழிந்திடு மணுருபங்கள்" (சி.சி.1,11). 3. ***சாதல்;*** to die, perish. "ஈரைம்பதின்மரும் பொருது களத்தொழிய" (புறநா.2,15). 4. ***வெளிச்செல்லாது தங்குதல்;*** to remain. "அரசர் வாய்மொழி நம்பா லொழிகு வதாயின்" (சிலப்.26,11). 5. ***முடிவாதல்*** (தீர்மானமாதல்); to be settled, decided. "தமக்கொழிமரபின் ... நல்லறம்" (மணி.16,110). 6. ***தவிர்தல்;*** to be excepted. 7. ***விட்டு நீங்குதல்;*** to leave off, forbear. "இற்பிறப்பு நாணு மிடையொழிய" (பு.வெ.7,27). 8. ***வேலைசெய்யாது இருத்தல்;*** to be at leisure. ஒழிந்த வேளையில் வா. (உ.வ.). 9. ***வெறுமையாதல்;*** to be empty, unoccupied. இந்த வீடு ஒழிந்திருக்கிறது. (உ.வ.) - ஓர் துணை வினை; auxiliary verb. "கெடுத்தொழிந்தனை யென் னையு முன்னையும்" (கம்பரா.இரணியன்.24) (செ.அக.).

ம. ஒழி.

[ஒல் = உள்ளொடுங்கல், மறைதல், அழிதல். ஒல் → ஒள் → ஒளி → ஒழி.]

ஒழி[2]**-த்தல்** *oḻi-,* 2.செ.குன்றாவி. (v.t.) 1. ***முடித்தல்;*** to bring to an end, finish. எல்லாவேலையையும் ஒழித்துக் கொண்டு வா. 2. ***அழித்தல்;*** to ruin, destroy, kill. 3. ***நீக்குதல்;*** to put away, cast off, expel, dismiss, exclude. அவனை வீட்டைவிட்டு ஒழித்தேன். 4. ***தவிர்த்தல்;*** to except, avoid, omit. அதை யொழித்து மற்றெல்லாம் சரி. (உ.வ.). 5. ***வெறுமையாக்கல்;*** to clear out, empty, vacate. பெட்டியை ஒழித்தாயிற்றா? (உ.வ.). 6. ***ஒடுக்கு***

தல்; to contain. 7. **துறத்தல்; to renounce.** 8. *குறைத்தல்;* to reduce. 9. **போக்குதல்; to remove.** (செ.அக.).

ம. ஒழிக்குக; க. உழிசு, உழிபு; குட. ஒய்.

[உல் → ஒல் → ஒள் ⇢ ஒளி → ஒழி.]

ஒழி³ *oḻi,* பெ. (n.) *அரிக்கட்டு* (யாழ்.அக.); bundle of corn sheaves. (செ.அக.).

[அரி → அழி ⇢ ஒழி.]

ஒழிகடை *oḻi-kaḍai,* பெ. (n.) 1. **பெரும்பான்மை** *முடிந்த நிலை* (வின்.); state of being almost exhausted as stores, almost ended, nearly over. (செ.அக.). 2. **ஈறு;** termination.

[ஒல் → ஒல்லு → ஒலு → ஒழு → ஒழி + கடை.]

ஒழிச்சு-தல் *oḻiccu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. **போக்கு** *தல்;* to put an end to; to banish, remove. "பல்பிறவியை யொழிச்சுவன்" (பதினொ.ஆளு.திருக்கலம்.35). 2. *வெறுமையாக்கல்* (இ.வ.); to vacate. 3. **அழித்தல்** (இ.வ.); to destroy. (செ.அக.).

[ஒழி → ஒழித்து → ஒழிச்சு (கொ.வ.).]

ஒழித்துக்காட்டணி *oḻittu-k-kāṭṭaṇi,* பெ. (n.) *ஒருபொருளை ஓரிடத்தில்லையென மறுத்து மற்றோரிடத்துண்டென்று பொருத்திக் காட்டும் அணி* (அணியி. 53); (Rhet.) figure of speech which consists in denying the existence of a thing in a particular place by showing its existence elsewhere. (அபி.சிந்) (செ.அக.).

[ஒழித்து + காட்டு + அணி.]

ஒழிந்தவேளை *oḻinda-vēḷai,* பெ. (n.) **வேலையில்லாத** *காலம்;* leisure time. (செ.அக.).

[ஒழி → ஒழிந்த + வேளை.]

ஒழிந்தார் *oḻindār,* பெ. (n.) *மற்றவர்;* others, the rest. "ஒழிந்தாரைப் போற்றி" (நாலடி.49) (செ.அக.).

[ஒழி → ஒழிந்தார்.]

ஒழிப்பணி *oḻippaṇi,* பெ. (n.) *ஒன்றன் தன்மையை மறுத்து வேறொன்றன் தன்மையை ஏற்றிக்கூறும் அணி* (தண்டி.73); a figure of speech which denies to an object one of its own attributes and ascribes another which is foreign to it. (செ.அக.).

[ஒழிப்பு + அணி.]

ஒழிப்பு-தல் *oḻippu-,* 5.செ.குன்றாவி. (v.t.) **ஒழித்தல்;** to destroy, remove. "அவல மொழிப்பியவன் வயிற்றிசையா" (பெருங்.இலாவாண.9,229) (செ.அக.).

[ஒழி → ஒழிப்பு.]

ஒழிப்பு *oḻippu,* பெ. (n.) **விலக்கு;** exclusion, dismissal, expulsion. (செ.அக.).

[ஒழி → ஒழிப்பு.]

ஒழிபியல் *oḻipiyal,* பெ. (n.) **நூலின்கண் முன்னியல்களிற் சொல்லா தொழிந்தவற்றைக் கூறுமியல்** (நம்பியகப்.); residuary chapter of a work giving various items of information not mentioned in the several preceding chapters. (செ.அக.).

[ஒழி → ஒழிபு + இயல்.]

ஒழிபு *oḻibu,* பெ. (n.) 1. **எச்சம்;** remainder. 2. **ஒவ்வொன்றாகத்தள்ளி உரியதைத் தேரும் நெறி, தேர்நெறி;** law of selection by elimination. (செ.அக.).

[ஒழி → ஒழிபு.]

ஒழிய *oḻiya,* கு.வி.எ. (adv.) **தவிர;** except, save. "பாடியென் ... ... எந்தை பெம்மானை யொழியவே" (திவ்.திருவாய்.3,9,2). (செ.அக.).

[ஒழி → ஒழிய.]

ஒழியாவிளக்கம் *oḻiyā-viḷakkam,* பெ. (n.) **ஒழியாவிளக்கு** பார்க்க; see *oḻiyāviḷakku.* "மொழிபெயர் தேத்தோரொழியா விளக்கமும்" (சிலப்.6,143) (செ.அக.).

ஒழியாவிளக்கு *oḻiyā-viḷakku,* பெ. (n.) **விடிவிளக்கு** (சிலப்.6,143,உரை.); lamp that burns throughout the night. (செ.அக.).

[ஒழியாத → ஒழியா + விளக்கு.]

ஒழியிசை *oḻi-y-isai,* பெ. (n.) **ஒழிந்த பொருள்தருஞ் சொற்களைத் தருவது** (நன்.423); that which suggests an implied meaning. (செ.அக.).

[ஒழி + இசை.]

ஒழியிசையெச்சம் *oḻiyišai-y-eccam-,* பெ. (n.) **ஒழியிசை** பார்க்க; see *oḻiyišai.*

[ஒழி + இசை + எச்சம்.]

ஒழியிசையெஞ்சணி *oḻiyišai-y-eñjaṇi,* பெ. (n.) *ஒழியிசை* பார்க்க; see *oḻiyišai.* (ஆ.அக.).

[ஒழி + இசை + எஞ்சு + அணி.]

ஒழியிசை யேகாரம் *oḻiyišai-y-ēkāram-,* பெ. (n.) *ஒழி பொருளைக் காட்டும் 'ஏ' காரம். 'ē' which suggest an implied meaning.*

[ஒழியிசை + ஏகாரம்.]

ஒழிவி-த்தல் *oḻivi-,* 4.செ.குன்றாவி. (v.t.) *அழிவித்தல்;* to cause to destroy, annihilate. 2. *முடித்தல்;* to cause to terminate.

[ஒழி → ஒழிவி (பி.வி.).]

ஒழிவிலொடுக்கம் *oḻivil-oḍukkam,* பெ. (n.) *கண்ணுடைய வள்ளலார் செய்த ஒரு சிவனிய நூல்;* a Šaiva treatise by Kaṇṇuḍaiyavaḷḷalār, about 18th c. (செ.அக.).

[ஒழிவு + இல் + ஒடுக்கம் - ஒழிவிலொடுக்கம்.]

ஒழிவு¹ *oḻivu,* பெ. (n.) 1. **ஒழிகை;** ceasing, forsaking. 2. **முடிவு;** end, termination. "ஒழிவில்காலமெல்லா

முடனாய்மன்னி" (திவ்.திருவாய்.3,3,1). 3. ***பேரழிவு;*** final dissolution of the world. "பண்டப்பி லொழிவில்" (வேதா.சூ.139). 4. ***குறைவு*** (வின்.); want, defect, deficiency. 5. ***தேர்நெறி;*** law of selection by elimination. 6. ***மிச்சம்;*** residue. தீயின தொழிவு போலப் பின் வளர்ந்து கெடுக்கும். (குறள்.674.உரை.). 7. ***ஓய்வு;*** leisure எனக்கு ஓய்ச்சல் ஒழிவில்லாமல் வேலை யிருக்கி றது. (உ.வ.). 8. ***பற்றின்மை;*** non-attachment. "பிர விர்த்தி யொழிவோ டபயமச்சம்" (பிரயோத.27,81) (செ.அக.).

[ஒழி → ஒழிவு.]

ஒழுக்கம் *oḷukkam,* பெ. (n.) 1. ***நடை;*** conduct, behaviour, demeanour. நல்லொழுக்கந் தீயொழுக்கங்கள் (உ.வ.). 2. ***நல்லியல்பு, நன்னடை;*** good conduct, morality, virtue, decorum, "ஒழுக்க முயிரினு மோம்பப் படும்" (குறள்.131). 3. ***வகித்த கடமைகளினின்று வழுவாது நடக்கை;*** keeping the rules. (குறள்.உரைப் பாயிரம்). 4. ***உலகத்தோடொட்ட ஒழுகுகை*** (சி.சி.2,23,சிவஞா.); conduct in conformity with the world. 5. ***செல்லுகை;*** going, passing. 6. ***வழி*** (திவா.); way, method. 7. ***உயர்ச்சி*** (சூடா.); height, elevation. 8. ***குலம்*** (பிங்.); caste, tribe, family. (செ.அக.).

[ஒல்கு → ஒழுகு → ஒழுக்கு → ஒழுக்கம்.]

ஒழுக்கல்[1] *oḷukkal,* பெ. (n.) 1. ***நீர்கசிதல், ஊறுதல்;*** leaking, oozing. மழையால் வீட்டில் ஒழுக்க லுண்டு. 2. ***பொருந்துகை;*** applicability. "ஆயிருபண்பி னொழுக் கல்" (தொல்.எழுத்.112) (செ.அக.).

[ஒழுகு → ஒழுக்கு → ஒழுக்கல்.]

ஒழுக்கல்[2] *oḷukkal,* பெ. (n.) 1. ***வரிசையாக வைக்கை;*** arranging in a row. "ஓங்கிய கல்லுய்த் தொழுக்கல்" (பு.வெ.10,11,கொளு.). 2. ***வார்க்கை;*** pouring, as into the mouth. "இறுமுயிர்க்கு மாயுண் மருந்தொழுக்க நீதன் றால்" (நீதிநெறி.49) (செ.அக.).

[ஒழுகு → ஒழுக்கு → ஒழுக்கல்.]

ஒழுக்கல்[3] *oḷukkal,* பெ. (n.) ***எழுச்சி*** (யாழ்.அக.); rising, elevation. (செ.அக.).

[ஒழுக்கு → ஒழுக்கல்.]

ஒழுக்கவண்ணம் *oḷukka-vaṇṇam,* பெ. (n.) ***ஒழுக்கவ ணக்கம்*** பார்க்க; see *oḷukka-vaṇakkam.* (ஆ.அக.).

ஒழுக்க வணக்கம் *oḷukka-vaṇakkam,* பெ. (n.) ***நல்லொ ழுக்கம்*** (யாழ்.அக.); good conduct. (செ.அக.).

[ஒழுக்கு → ஒழுக்க + வணக்கம்.]

ஒழுக்கவி *oḷukkavi,* பெ. (n.) ***கோயிலில் நாடோறும் படைக்கும் சமைத்த உணவு*** (S.I.I.i,150); usual, daily offering of food in a temple. (செ.அக.).

ம. ஒழுக்கவி.

[ஒழுக்கு + அவி.]

ஒழுக்கறை *oḷukkaṟai,* பெ. (n.) ***உருக்கு*** (நாமதீப.); steel. (செ.அக.).

[ஒழுக்கு + அறை. 'அறை' - பெயரீறு. ஒழுக்கல் = உருக்கிவார்த் தல்.]

ஒழுக்கு[1]**-தல்** *oḷukku-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***மிதந்து போக விடுதல்;*** to cause to float along or flow down. பேராற்றிடை மிதவைப் பேழை யினிட்டு ஒழுக்கின இளங்குமரனும் (பாரத.வெண்.195,உரை.) (செ.அக.). 2. ***புடைத்தல்;*** to winnow. 3. ***ஊற்றுதல்;*** to pour. (சேரநா.).

[ஒழுகு + ஒழுக்கு.]

ஒழுக்கு[2]**-தல்** *oḷukku-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***வார்த் தல்;*** to cause to drop, drip. "ஒழுக்க வென்கணுக் கொருமருந்து" (தேவா.1110,1). 2. ***நடப்பித்தல்;*** to help to conduct. "ஆற்றினொழுக்கி" (குறள்,48). 3. ***நீள இழுத்தல்;*** to draw out, as gold thread. "அச்சிலுறுத்தி யன பொற்கம்பிறொழுக்கியன போலும்" (இரகு. தேனு.5) (செ.அக.).

[ஒழுகு → ஒழுக்கு.]

ஒழுக்கு[3] *oḷukku,* பெ. (n.) 1. ***பொள்ளல் வழியாக நீர் சொட்டுகை;*** leaking, dripping, as from a hole or crack. 2. ***நீரோட்டம்;*** flowing. "ஆற்றொழுக்கு" (நன்.19). 3. ***நடத்தை;*** conduct. "பொல்லா வொழுக் கும்" (திவ்.இயற்.திருவிருத்.1) (செ.அக.).

ம. ஒழுக்கு; க. ஒழுகு; து. உக்குனி; தெ. ஒலுக.

[ஒழுகு → ஒழுக்கு.]

ஒழுக்குநீர்ப்பாட்டம் *oḷukku-nīr-p-pāṭṭam,* பெ. (n.) ***ஆற்றுக்காற் பாசனவரி*** (கல்வெ.); tax on running water that is used for irrigation. opp to. நிலைநீர்ப்பாட்டம். (செ.அக.).

[ஒழுக்கு + நீர் + பாட்டம்.]

ஒழுக்குப்பீளை *oḷukku-p-pīḷai,* பெ. (n.) ***பீளையைப் பெருக்கும் கண்ணோய் வகை*** (தைலவ.தைல.57); blennorrhoea; acuta catarhal opthalmia. (செ.அக.).

[ஒழுக்கு + பீளை.]

ஒழுக்குமாற்று-தல் *oḷukku-māṟṟu-,* 5.செ.கு.வி. (v.i.) ***நீரொழுகும் ஓட்டையை அடைத்தல்*** (யாழ்ப்.); to stop a leak. (செ.அக.).

[ஒழுக்கு + மாற்று.]

ஒழுக்குவிழு-தல் *oḷukku-viḻu-,* 2.செ.கு.வி. (v.i.) 1. ***பொள்ளல் வழியாக நீர்சொட்டுதல்;*** to drop, as water from a leak; to leak. 2. ***நீர் ஒழுகும் படி பொள்ளலுண்டா தல்;*** to become leaky, as a roof. (செ.அக.).

[ஒழுக்கு + விழு.]

ஒழுக்கெறும்பு *oḻukkeṟumbu,* பெ. (n.) ***ஒன்றன்பின் னொன்றாய்த் தொடர்ந்து செல்லும் எறும்பு;*** ant that moves in a train. (செ.அக.).

[ஒழுங்கு → ஒழுக்கு + எறும்பு. ஒழுங்கு = வரிசை.]

ஒழுக்கை *oḻukkai,* பெ. (n.) ***சந்து;*** lane. ஒழுக்கை கிழக்கினின்றும் மேற்குநோக்கிப் போகிற செவ்வை (S.I.I.V.138) (செ.அக.).

[ஒல் = ஒடுங்குதல். ஒல் → ஒழு → ஒழுக்கை.]

ஒழுக *oḻuga,* கு.வி.எ. (adv.) ***மெதுவாக;*** slowly. ஒழுக வுயிரை வாங்காது (கலித்.58,உரை.) (செ.அக.).

[ஒல் → ஒல்கு → ஒள்கு → ஒழ்கு → ஒழுகு → ஒழுக.]

ஒழுகல்[1] *oḻugal,* பெ. (n.) 1. ***ஒழுக்கு;*** leaking, dripping, leak. 2. ***நீர் பாய்கை;*** flowing. 3. ***நீளம்*** (திவா.); length. 4. ***உயரம்*** (பிங்.); height. 5. ***திடுமென வெளிப்படல்;*** spurt.

க. ஒழ்கு; ம. ஒழுகல்.

[ஒழுகு + அல்.]

ஒழுகல்[2] *oḻugal,* பெ. (n.) 1. ***நடக்கை;*** conduct, behaviour. "அளவின்கணின் றொழுகலாற்றார்" (குறள். 286). 2. ***பரவுதல்;*** spreading. 3. ***நேராகச்செல்லல்;*** walking or going straight. 4. ***இடைப்பட்டதாதல்;*** being in middle. "உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" (குறள்,140).

[ஒழுகு + அல்.]

ஒழுகலாறு *oḻugalāṟu,* பெ. (n.) ***ஒழுக்க நெறி;*** the path of good conduct. "காமம் வெகுளி மயக்கமில்லாத ஒழுகலாற்றினை" (தொல்.பொருள்.75,உரை.) (செ.அக.).

[ஒழுகு → ஒழுகல் + ஆறு.]

ஒழுகிசை *oḻugisai,* பெ. (n.) ***வெறுத்திசையில்லாமல் செவிக்கினிய மெல்லிசையுடைமையாகிய தன்மை*** (தண்டி.19); kind of flowing rhythm, in which nothing discordant occurs. (செ.அக.).

[ஒழுகு + இசை. ஒழுகிசை வண்ணம் பார்க்க; see oḻugišaivaṇṇam.]

ஒழுகிசைச்செப்பல் *oḻugišai-c-ceppal,* பெ. (n.) ***இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளையிரண்டும் விரவிவந்த வெண்பாவினோசை*** (காரிகை.செய்.1, உரை.); rhythm noticeable in the species of venbā verse in which veṇ-cīrveṇḍaḷai comes in along with iyaṟ-cīr-veṇ-ḍaḷai. (செ.அக.).

[ஒழுகு + இசை + செப்பல்.]

ஒழுகிசையகவல் *oḻugišai-y-agaval,* பெ. (n.) ***நேரொன்றாசிரியத் தளையும் நிரையொன்றாசிரியத்தளையும் விரவி வந்த அகவ லோசை*** (காரிகை.செய்.1,உரை); rhythm noticeable in agaval verse when it contains both nēr-oṉṟāširiya-t-taḷai and nirai-y-oṉṟāširiya-t-taḷai. (செ.அக.).

[ஒழுகு + இசை + அகவல்.]

ஒழுகிப்போ-தல் *oḻugi-p-pō-,* 8.செ.கு.வி. (v.i.) 1. ***நீர்ப்பண்டஞ் சிந்தி விழுதல்;*** to spill. 2. ***மனங்கரைந் துருகுதல்;*** to brood over sorrow of disappointment, pine. இவளென்ன ஒழுகிப் போகிறாளே. (இ.வ.) (செ.அக.).

[ஒழுகு → ஒழுகி + போ.]

ஒழுகு[1]**-தல்** *oḻugu-,* 7.செ.கு.வி. (v.i.) 1. ***நீர்பாய்தல்;*** to flow, as a stream. "ஒழுகு தீம்புனல்" (நைடத நாட்டு.6). 2. ***நீர்ப்பண்டம் சொட்டுதல்;*** to leak, drop, as water, to fall by drops, trickle down. "அசும்பொழுகிய பொய்க்கூரை" (திருவாச.26,7). 3. ***நடத்தல்;*** to go, pass, walk. 4. ***முறைப்படி நடத்தல்;*** to act according to laws as the subject of a state. "வையங்காவலர் வழிமொழிந் தொழுக" (புறநா.8,1). 5. ***நேர்மைப் படுதல்;*** to be arranged in regular order. "ஒழுகுகொடி மருங்குல்" (தொல்.சொல்.317,உரை.). 6. ***நெடுமையா தல்;*** to be long or tall. மால்வரை யொழுகியவாழை (தொல்.சொல்.317,உரை.). 7. ***பரத்தல்;*** to spread out, extend, to be diffused. "மின்னொழுகு சாயல்" (சீவக. 494). 8. ***வளர்தல்;*** to grow. "ஒழுகு பொற்கொடிமூக்கும்" (சீவக.165). 9. ***மிகுதல்;*** to increase, become intense. "மன்னற்கொழுகு மன்பு கொண்டு" (உபதேசகா.சிவத் துரோ.173). 10. ***அமிழ்தல்;*** to sink. "இட்டதொள் றொழுகா வண்ணம்" (கம்பரா.வருணனை.84). 11. ***இளகுதல்;*** to melt. ஒழுகக் காய்ந்த இரும்பு (சிவப்பிர.4,1,பக்.385,உரை.) (செ.அக.).

க. ஒழ்கு. *E.* walk; *OE* wealcal; *OHG.* walckan; *MDU. MLG.* walken; *ON.* walka.

[உல் → ஒல் → ஒள் → ஒழ்கு → ஒழுகு.]

ஒழுகு[2] *oḻugu,* பெ. (n.) 1. ***நிலத்தின் வரலாறு குறிக்குங் கணக்கு;*** land record containing particulars of the ownership, etc., of lands. "நாடுபிடித்தார்க்கு ஒழுகைக் காட்டி" (திவ்.திருமலை.3,வ்யா.). 2. ***கோயிலின் வரலாறு கூறுவது;*** register of a temple giving an account of its properties, and its history. கோயிலொழுகு (செ.அக.).

[உள் → ஒள் → ஒழுகு. (வே.க.93).]

ஒழுகு[3] *oḻugu,* பெ. (n.) 1. ***வரிசை;*** row. 2. ***வண்டி;*** (யாழ்.அக.); cart, carriage.

[ஒழுகை → ஒழுகு (வரிசையாகச் செல்லும் வண்டிகளின் ஒழுங்கு).]

ஒழுகுகொண்டை *oḻugu-koṇḍai,* பெ. (n.) ***ஒருவகை மயிர்முடி*** (வின்.); coil of hair tied in a special way. (செ.அக.).

[ஒழுகு + கொண்டை.]

ஒழுகுசங்கிலி *oḻugu-saṅgili*, பெ. (n.) ***தொடர்சங்கிலி;*** a kind of chain. "தன்னோடொக்க ஒழுகு சங்கிலியிலே கட்டுண்டுழலுகின்ற க்ஷேத்ரக்ஞர் காலிலே விழப்பண்ணியும்" (ரஹஸ்ய.194) (செ.அக.).

[ஒழுகு + சங்கிலி.]

ஒழுகுநீட்சி *oḻugu-nīṭci*, பெ. (n.) ***நேராக நீண்டிருக்கை;*** being stretched out. "ஒழுகுநீட்சி யாலே கொடியென்னவுமாய்" (ஈடு.7,7,2) (செ.அக.).

[ஒழுகு + நீட்சி.]

ஒழுகுமாடம் *oḻugu-māḍam*, பெ. (n.) ***உடம்பு;*** the humanbody, as a house from which impurities flow out through nine excretory passages. "ஒழுகுமாடத்து ளொன்பது வாய்தலும்" (தேவா.338,7) (செ.அக.).

[ஒழுகு + மாடம் - ஒழுகுமாடம். உடம்பை ஓட்டை மாளிகையாகச் சொன்ன உருவகம்.]

ஒழுகுவண்ணம் *oḻugu-vaṇṇam*, பெ. (n.) ***ஒழுகிய லோசையாற் செல்லுஞ் சந்தம்*** (தொல். பொருள்.538); rhythm that flows evenly in a harmonious manner. (செ.அக.).

[ஒழுகு + வண்ணம்.]

ஒழுகை *oḻugai*, பெ. (n.) 1. ***சகடவொழுங்கு;*** train of carts. "பெருங்கயிற் றொழுகை" (பெரும்பாண்.63). 2. ***வண்டி;*** cart. "உமணர் உப்பொ யொழுகை யெண்ணுப மாதோ" (புறநா.116) (செ.அக.).

[ஒழுகு → ஒழுகை.]

ஒழுங்கரம் *oḻuṅgaram*, பெ. (n.) ***ஒருவகை அரம்*** (C.E.M.); parallel file. (செ.அக.).

[ஒழுங்கு + அரம் - ஒழுங்கரம் = ஒருசீரான அகலமுள்ள அரம்.]

ஒழுங்கல் *oḻuṅgal*, பெ. (n.) ***ஒழுங்காயிருத்தல்*** (வின்.); being right, correct, straight, orderly. (செ.அக.).

[ஒழுகு → ஒழுங்கு → ஒழுங்கல்.]

ஒழுங்கீனம் *oḻuṅgīṉam*, பெ. (n.) ***சீர்கேடு;*** disorder, confusion. (செ.அக.).

[ஒழுங்கு + ஈனம்.]

ஒழுங்கு[1]-தல் *oḻuṅgu-*, 5.செ.குன்றாவி. (v.t.) ***நேர்படுத்துதல்;*** to place in line, set in order. "ஒழுங்கி முன்னர்த் திருமுறை வகுத்த காலை" (திருவாலவா.38,19).

[ஒழுகு → ஒழுங்கு.]

ஒழுங்கு[2] *oḻuṅgu*, பெ. (n.) 1. ***வரிசை;*** row, rank, line, series, "சகடவொழுங்கு" (சிறுபாண்.55,உரை.). 2. ***நேர்மை;*** order, regularity. 3. ***முறை;*** rule of action, method, plan, model, system. 4. ***நன்னடை;*** good conduct, propriety, decorum. 5. ***முறை*** (விதி.); regulation, law, precept, canon. 6. ***அளவு முதலியன காட்டும் நில விளத்தக் கணக்கு*** (C.G.); register of the measurement and extent of fields and holdings. 7. ***நிலத்தீர்வைக் கணக்கு*** (C.G.); standard rate, for assessment of tax or for the price of grain. (செ.அக.).

ம. ஒழுங்கு; க. ஒய்யனெ (மெதுவாக). *L.* Longus, *E.* Long, *Ger.* land, *A.S.* lang.

[ஒழுக்கு → ஒழுங்கு (சு.வி.65).]

ஒழுங்குகட்டு-தல் *oḻuṅgu-kāṭṭu-*, 5.செ.கு.வி. (v.i.) ***நெறியேற்படுத்துதல்*** (வின்.); to make a regulation; to frame a law. (செ.அக.).

[ஒழுங்கு + கட்டு.]

ஒழுங்குபடுத்து-தல் *oḻuṅgu-paḍuttu-*, 5.செ.குன்றாவி. (v.t.) ***நேராக்குதல்;*** to set in order; to arrange, to regulate. (செ.அக.).

[ஒழுங்கு + படுத்து.]

ஒழுங்கு வழக்கு *oḻuṅgu-vaḻakku*, பெ. (n.) ***முதன்முறை தொடங்கும் வழக்கு;*** proceeding by way of original suit originated by a plaint as dist. fr. one originated by a petition, regular suit. (செ.அக.).

[ஒழுங்கு + வழக்கு.]

ஒழுங்கை *oḻuṅgai*, பெ. (n.) 1. ***இடுக்குவழி*** (யாழ்ப்.); lane, alley. 2. ***மண்டபநடைமுகப்பு;*** porch, portico. "ஆயிரக்கால் திருமண்டபத்தி னொழுங்கையில்" (கோயிலொ.1346) (செ.அக.). 3. ***நீண்ட இடைகழி;*** long side walk.

[ஒழுங்கு → ஒழுங்கை (வே.க.93).]

ஒள்[1] *oḷ*, பெ. (n.) 1. ***உட்செல்லுதல், நுழைதல்;*** penetrating, entering. 2. ***மறைதல், ஒளிந்து கொள்ளுதல்;*** hiding, concealing. (சு.வி.68).

[உள் → ஒள்.]

ஒள்[2] *oḷ*, பெ. (n.) 1. ***வெளிச்சம்;*** light. 2. ***அழகு;*** beauty. 3. ***வெண்மை;*** whiteness.

[உல் → உள் → ஒள்.]

ஒள்[3] *oḷ*, பெ. (n.) 1. ***கூர்மை;*** sharpness. 2. ***அறிவு;*** knowledge, intelligence.

[உல் → ஒல் → ஒள்.]

ஒள்[4] *oḷ*, பெ. (n.) 1. ***செறிவு;*** density. 2. ***மிகுதி, பெருக்கம்;*** excess, surplus.

ஒள்[5] *oḷ*, கு.பெ.எ. (adj.) 1. ***நல்ல;*** nice, good. 2. ***மேன்மை;*** nobility. 3. ***மிகுதியான;*** vast, enormous.

[ஒல் → ஒள்.]

ஒள்வாளமலை *oḷvāḷamalai*, பெ. (n.) ***உரம் பொருந்திய தோளினையுடைய வாள் வீரர் ஆர்க்கும் வீரக்கழலினையுடையானுடன் ஆடியது*** (பு.வெ.); literary theme pertaining to heroic verse.

[ஒள் + வாள் + அமலை - ஒள்வாளமலை. அமலை = ஆரவாரம், ஆடல்.]

ஒள்ளி *olli*, பெ. (n.) 1. ***செம்பொன்;*** red gold. 2. ***வெள்ளி*** (சுக்கிரன்); Sukra, Venus (செ.அக.).

[உள் → ஒள்[2] → ஒள்ளி (ஒளிர்வது).]

ஒள்ளிமை *ollimai*, பெ. (n.) ***அறிவின் ஒட்பம்;*** bright-intelligence. ஒருவனுக்கு ஒள்ளிமையாவது உலகத்தோடு பொருந்தினது. (குறள்.423,மணக்.) (செ.அக.).

[உள் → ஒள் → ஒள்ளி → ஒள்ளிமை.]

ஒள்ளிய *olliya*, பெ.எ. (adj.) 1. ***ஒளியுள்ள;*** bright, lustrous. 2. ***அறிவுமிக்க;*** intelligent, wise. 3. ***நல்ல;*** good. 4. ***அழகிய;*** beautiful.

[ஒள்[2] → ஒள்ளிய.]

ஒள்ளியர் *olliyar*, பெ. (n.) ***மாசற்றவர்;*** good people, noble men. "ஒளியார்முன் ஒள்ளியராதல்" (குறள்.714) (ஆ.அக.).

[ஒள்[5] → ஒள்ளி + அர்.]

ஒள்ளியன் *olliyan*, பெ. (n.) 1. ***அறிவுடையோன்;*** wise, intelligent man. "ஒளியார்முன் னொள்ளியராதல்" (குறள்.714). 2. ***நல்லவன்;*** gentleman. "சீவகன்வீணை வென்றா னொள்ளிய னென்று" (சீவக.741).

க. ஒள்ளித; பட. ஒள்ளியம.

[உள் → ஒள்[5] → ஒள்ளி + அன்.]

ஒள்ளியோன் *olliyōn*, பெ. (n.) 1. ***வெள்ளி*** (திவா.); planet Venus so called because it is apparently the brightest of the stars. (செ.அக.). 2. ***கதிரவன்;*** sun. 3. ***அறிவுடையோன்;*** wise intelligent man. (ஆ.அக.).

[ஒள்[5] → ஒள்ளி + (ஆன்) ஓன்.]

ஒள்ளொளி *ol-l-oli*, பெ. (n.) ***மிக்கவொளி*** (வின்.); brilliant light. (செ.அக.).

[ஒள்[4] + ஒளி.]

ஒளறி *olari*, பெ. (n.) ***உலரிமீன்;*** greenish river-fish. (செ.அக.).

[உலரி → ஒளறி (கொ.வ.).]

ஒளி[1] *oli*, பெ. (n.) 1. ***வெளிச்சம்*** (திவா.); light, brightness; splendour, brilliancy, lustre. 2. ***கதிரவன்*** (பிங்.); sun. 3. ***நிலா*** (பிங்.); moon. 4. ***விண்மீன்*** (திவா.); star. 5. ***தழல்நாண்மீன்*** (கேட்டை); 18th naksatra. 6. ***தீ;*** fire. 7. ***எரிக்குந் தன்மை;*** scorching. "வெஞ்சுடரொளியுநீ" (பரிபா.3,67). 8. ***மின்னல்*** (பிங்.); lightning. 9. ***வெயில்*** (பிங்.); sunshine. 10. ***விளக்கு;*** lamp, light. "உடையானாம் வேந்தர்க் கொளி" (குறள்.390). 11. ***கட்புலன்;*** sense of sight-, one of aim-pulam. "சுவையொளி" (குறள்.27). 12. ***கண்மணி*** (வின்.); apple of the eye. 13. ***பெருமை;*** conspicuousness, distinction, excellence. "நீற்றி னொளிதழைப்ப" (பெரியபு.திருஞான.1019). 14. ***புகழ்;*** fame; celebrity, renown. "ஒளியு மாற்றலு மோம்பா வீகையும்" (பு.வெ. 9,1). 15. ***செயற்கையழகு;*** artificial beauty. "ஒண்மையு நிறையு மோங்கிய வொளியும்" (பெருங்.உஞ்சைக்.34,151). 16. ***அரசனது கடவுட்டன்மை;*** divinity of king-ship. "மன்னவன்றன் னொளி ... வையகங்காக்கு மால்" (சீவக.248). 17. ***அறிவம்*** (ஞானம்); illumination of mind; wisdom. "தனையறிந்தோர்க் கொளியுருவாய்" (ஞானவா.தாசூர.6). 18. ***சொன்மாலை*** (பிங்.); eulogy in verse. (செ.அக.).

ம. ஒளி; க. உள்கு, ஒளி, ஒள, ஒளபு; **கோத.** ஒள்ய (நல்லது); **துட.** விள்ய (நல்லது); **குட.** பொளி; **து.** ஒலி, ஒளி; **தெ.** ஒளியு (தோன்று); பட. ஒள்ளிய (நல்ல).

[உல் → ஒள் → ஒளி.]

ஒளி[2]-தல் *oli-*, 4.செ.கு.வி. (v.i.) 1. ***மறைதல்;*** to hide, steal away, flee into concealment. "ஒளியாவெண்ணெ யுண்டா னென்று" (திவ்.பெரியதி.6,7,4). 2. ***தவிர்தல்;*** to fail. "ஒளியாது செல்வா ரென்றாய்" (திணை மாலை.86) (செ.அக.).

ம. ஒளியுக; க. உளி; **கோத.** ஒய்ள்; **குட.** ஒளி; **து.** ஒள (மந்தணம்); **தெ.** ஒலமு (தங்கிடம்); **குரு.** ஒல்தாநன்னா; பட. உணி.

[உள் → ஒள் → ஒளி. உள் → உள்கு = உட்சுருங்கு, உட்செல், மறைதல்.]

ஒளி[3]-த்தல் *oli-*, 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***மறைத்தல்;*** to hide, conceal, keep out of sight. "கன்றொளித் தகலவைத்த கறவையின்" (சீவக.371). 2. ***மனத்தில டக்குதல்;*** to keep in mind; to disguise. ஒளிக்காமற் சொல் (உ.வ.).

[உள் → ஒள்[1] → ஒளி.]

ஒளி[4]-த்தல் *oli-*, 4.செ.கு.வி. (v.i.) ***பதுங்குதல்;*** to lie, hide, conceal one's self, lurk unseen "மதி ... ஒளிக்குஞ் சடை மன்னவனே" (திருவாச.6,42) (செ.அக.).

ம. ஒளிக்குக; க. உளி; **கோத.** ஒய்ள்; **துட.** விள்ய; **குட.** ஒளி; **து.** ஒள (மந்தணம்); **தெ.** ஒளவு (மந்தணம்); பட. உணி.

*[உள் → ஒள் → ஒளி. **ஒள்[2]** பார்க்க; see ol[2].]*

ஒளி[5] *oli*, பெ. (n.) 1. ***மறைகை;*** hiding; withdrawing from view. "ஒளிகொள் காரண முன்னாதோரே" (ஞானா.29,13). 2. ***மறைவிடம்*** (பிங்.); lurking place, covert. 3. ***வேட்டைக்காரர் பதிவிருக்கு மறைப்பு;*** screen, a cover for a fowler. 4. ***பார்வை விலங்கு;*** decoy animal. ஒளிவைத்துப் பிடித்தான். (வின்.) (செ.அக.).

க. உளி.

[உள் → ஒள் → ஒளி.]

ஒளி[6] *oli*, பெ. (n.) ***பாடற்பயன்களுள் ஒன்று*** (சிலப். 3,16,உரை.); one of qualities of verse, one of pādar payangal. (செ.அக.).

[ஒள் → ஒளி.]

ஒளிச்சாயல் *oli-c-cāyal*, பெ. (n.) ***சாய்ந்து வீசும் ஒளி;*** the light which falls obliquely on a surface - oblique light (செ.அக.).

[ஒளி + சாயல். சாய்தல் → சாயல்.]

ஒளிச்சாயை *oli-c-cāyai*, பெ. (n.) ***உருவத்தின்போலி கையாலும்*** (பிரதிபிம்பத்தினாலும்) ***வளைவினாலும் ஏற்படும் ஒளிப்பரப்பு;*** light which has been scattered by reflection and refraction - diffused light. (சா.அக.).

[ஒளி + சாயை.]

ஒளித்துத்திரி-தல் *olittu-t-tiri-*, 2.செ.கு.வி. (v.i.) ***மறைந்துதிரிதல்*** (வின்.); to go about incognito, wander in concealment. (செ.அக.).

[ஒளித்து + திரி.]

ஒளித்துவிளையாடு-தல் *olittu-vilaiyādu-*, 5.செ.கு.வி. (v.i.) ***கண்பொத்தி விளையாடுதல்;*** to play hide and seek. (செ.அக.).

ம. ஒளிச்சு களிக்குக.

[ஒளி → ஒளித்து + விளையாடு.]

ஒளிநாடு *oli-nādu-*, பெ. (n.) ***பழந்தமிழகத்தில் செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த பன்னிரு நாடுகளுள் ஒன்று*** (தொல்.சொல்.400,உரை.); one of the 12 nādu lying on the outskirts of the Sen-Tamil-nādu in the ancient Tamil country. (செ.அக.).

[ஒளி[2] + நாடு.]

ஒளிநூல் *olinūl*, பெ. (n.) ***கண்ணொளியையும் பார்வையையும் பற்றிக் கூறும் நூல்;*** a science which treats of the nature and properties of light and vision - optics. (சா.அக.).

[ஒளி[2] + நூல்.]

ஒளிப்பாட்டம் *olippāttam*, பெ. (n.) ***ஏமாற்று;*** fraud, deceit. "இவர்களது ஒளிப்பாட்டம் நம்மனோர் அனைவரும் அறிவர்" (மதி.க.1.112) (செ.அக.).

[ஒளி[1] → ஒளிப்பு + ஆட்டம்.]

ஒளிப்பிடம் *olippidam*, பெ. (n.) ***மறைவிடம்*** (பிங்.); ambush; covert; hiding place. (செ.அக.).

ம. ஒளிப்பிடம்; க. உளி; தெ. ஓலமு; குரு. ஓலா.

[ஒளி[1] → ஒளிப்பு + இடம்.]

ஒளிப்பிழம்பு *olipilambu*, பெ. (n.) ***தீச்சுடர்த்திரள்;*** flame. (ஆ.அக.).

[ஒளி + பிழம்பு.]

ஒளிப்பு[1] *olippu*, பெ. (n.) 1. ***பதுங்கி மறைகை;*** absconding; slinking or stealing away. 2. ***மறைவு*** (வின்.); covert. (செ.அக.).

ம. ஒளிப்பு; க. உளி; து. ஒள; தெ. ஓலமு.

[ஒளி[1] → ஒளிப்பு.]

ஒளிப்பு[2] *olippu*, பெ. (n.) 1. ***ஒளிக்கை;*** hiding; concealing. 2. ***மனத்துள் அடக்குகை;*** keeping secret, as one's thoughts. 'ஒளிப்பு மறைப்புப் பண்ணாமற் சொல்' (வின்.) (செ.அக.).

[ஒளி[3] → ஒளிப்பு.]

ஒளிப்புடம் *oli-p-pudam*, பெ. (n.) ***வெயிலில் இட்டுச் செய்த மருந்துப் பொடி*** (மூ.அ.); calcination by exposure to the sun. (செ.அக.).

[ஒளி[1] + புடம்.]

ஒளிப்பொலி *oli-p-poli*, பெ. (n.) ***களத்தில் நீட்டமாகத் தூற்றிய நெற்குவியல்*** (இ.வ.); long heap of paddy on the threshing - floor. (செ.அக.).

[ஒருகா. ஒளி → ஒளி + பொலி. ஒளி = உயரம், நீளம்.]

ஒளிப்போர் *oli-p-pōr*, பெ. (n.) ***மறைந்து நின்று நடத்தும் போர்;*** guerilla warfare. (சேரநா.).

ம. ஒளிப்போர்.

[ஒளி + போர்.]

ஒளிமங்கு-தல் *oli-mangu-*, 9.செ.கு.வி. (v.i.) ***ஒளிகுறைதல்;*** to grow dim, as light, splendour, or lustre. (செ.அக.).

[ஒளி + மங்கு. மழுங்கு → மங்கு.]

ஒளிமங்கை *olimangai*, பெ. (n.) 1. ***ஒளியுள்ளமங்கை;*** beautiful woman. 2. ***வைப்பாட்டி;*** paramour (woman), concubine. (சேரநா.).

ம. ஒளிமங்க.

[ஒளி + மங்கை.]

ஒளிமணல் *olimanal*, பெ. (n.) 1. ***மாழை*** (உலோக) ***மணல்; sand mixed with iron.*** 2. ***கருமணல்;*** black sand. (சா.அக.).

[ஒளி + மணல்.]

ஒளிமயக்கம் *olimayakkam*, பெ. (n.) ***வெளிச்சத்தைப் பார்க்க முடியாத ஒர்வகைக் கண்ணோய்;*** eye disease due to abnormal intolerance of light-photophobia. (சா.அக.).

[ஒளி + மயக்கம்.]

ஒளிமரம் *oli-maram*, பெ. (n.) ***இருளில் ஒளிவிடும் மரம்;*** tree that is said to shine in the dark. "பொங் கொளிமரத்திற் சீர்சால் புள்ளினம் பொறையுயிர்த்து" (பிரபுலிங்.கோரக்கர்.19) (செ.அக.).

ம. ஒளிமரம்.

[ஒளி + மரம்.]

ஒளிமழுங்கு-தல் *oli-malungu-*, 9.செ.கு.வி. (v.i.) ***ஒளி குறைதல்;*** to grow dim, as light, splendour, or lustre. (செ.அக.).

[ஒளி + மழுங்கு.]

ஒளிமறைவு *oli-maraivu,* பெ. (n.) 1. ***ஒளித்துத்திரிகை;*** wandering in disguise. அவன் ஒளி மறைவாய்த்திரிகி றான் (உ.வ.). 2. ***கமுக்கம்;*** secrecy. இவனிடம் ஒளிமறைவு இல்லை (உ.வ.).

ம. ஒளிமர; க. உளி; தெ. ஒலமு.

[ஒளி + மறைவு - ஒளிமறைவு (ஒருபொருட் பன்மொழி).]

ஒளி மின்னல் *oliminnal,* பெ. (n.) 1. ***ஒளிர்வு;*** splendour. 2. ***திகழ்வொளி;*** the lighting (as a weapon of Indira) (சேரநா.).

ம. ஒளிமின்னல்.

[ஒளி + மின்னல் - ஒளிமின்னல்.]

ஒளியம்பு *oliyambu,* பெ. (n.) 1. ***மறைந்து நின்று எய்யும் அம்பு;*** arrow shot from ambush. 2. ***வெளிப்படாமல் தாக்குதல்;*** covert attack. (சேரநா.).

ம. ஒளியம்பு.

[ஒளி + அம்பு.]

ஒளியர் *oliyar,* பெ. (n.) ***ஒளிநாட்டிற் சிறந்துவிளங்கிய வேளாளர்;*** Vēlālas who were the dominant people, in Oli-nādu. "பல்லொளியர் பணி பொடுங்க" (பட்டினப்.274) (செ.அக.).

[ஒளி + அர் = ஒளியர்.]

ஒளியவன் *oliyavan,* பெ. (n.) ***கதிரவன்;*** sun, lit., the shining one. "உம்பர்நா டிறந்து வீழ்ந்த வொளியவன்" (கம்பரா.நாகபா.202) (செ.அக.).

[ஒளி + அவன்.]

ஒளியிரு-த்தல் *oli-y-iru-,* 2.செ.கு.வி. (v.i.) ***பதுங்கியி ருத்தல்;*** to lie in concealment, to lie in ambush, to lurk. "கிளிக்குலங்கள் ... ஒளி யிருந் தனுதினம் பயிலும்" (காஞ்சிப்பு.திருநாட்டு.41) (செ.அக.).

[ஒளி + இரு.]

ஒளியிழை *oliyilai,* பெ. (n.) 1. ***அணிகலன்;*** jewels, ornament. 2. ***அணிகலன் அணிந்த பெண்;*** lady since wearing jewels.

[ஒளி + இழை = ஒளியிழை.]

ஒளியுணர் வேற்றுமை *oli-y-unarvērrumai,* பெ. (n.) ***இரண்டு கண்களின் ஒளியுணர்ச்சியைப் பற்றிய வேறுபாடு;*** the difference between the two eyes in their sensitiveness to light-light difference. (சா.அக.).

[ஒளி + உணர் + வேற்றுமை.]

ஒளியுருவியகல் *oli-y-uruviya-kal,* பெ. (n.) ***வயிரக்கல்*** (வைடூரியம்) (வின்.); cat's-eye, a stone of value found in Ceylon. (செ.அக.).

[ஒளி + உருவிய + கல்.]

ஒளியுள்ளுருவம் *oliyulluruvam,* பெ. (n.) ***கண்ணாடியு ளுருவம்;*** image in mirror. (ஆ.அக.).

[ஒளி + உள் + உருவம்.]

ஒளியூடுருவல் *oliyūduruval,* பெ. (n.) ***வெளிச்சம் ஊடுருவிப் பாய்ந்து செல்லல்;*** light passing through an object, as through a glass - transmission of light. (சா.அக.).

[ஒளி + ஊடு + உருவல்.]

ஒளியோன் *oliyōn,* பெ. (n.) ***ஒளியவன்*** (பிங்.) பார்க்க; see *oliyavan.*

[ஒளி + ஆன் - ஒளியான் → ஒளியோன்.]

ஒளிர்[1]-தல் *olir-,* 2. செ.கு.வி. (v.i.) ***ஒளிசெய்தல்;*** to shine; to emit light; to be resplendent. "உள்ளத்து ளொளிர்கின்ற வொளியே" (திருவாச.37,5) (செ.அக.).

[ஒளி → ஒளிர்.]

ஒளிர்[2]-த்தல் *olir-,* 2. செ.குன்றாவி. (v.t.) ***ஒளிரச்செய் தல்;*** to shed light upon. "ஊனமின்மினியு நானீ தொளிர்ப்ப னென்று ரைத்தல் போலாம்" (விவேக. சூடா.பாயி.7) (செ.அக.).

[ஒளி + ஒளிர்.]

ஒளிர்முகம் *olir-mugam,* பெ. (n.) ***வயிரக்கல்*** (வின்.); diamond. (செ.அக.).

[ஒளிர் + முகம் - ஒளிர்முகம் = ஒளி வீசும் பக்கங்களைக் கொண்டது.]

ஒளிர்வா(வரு)-தல் *olir-vā-,* 18.செ.கு.வி. (v.i.) ***ஒளிர்*** பார்க்க; see *olir.* "கண்ணொளிர் வருஉங் கவின்சாபத்து" (புறநா.7,4).

[ஒளிர் + வா.]

ஒளிர்வு *olirvu,* பெ. (n.) ***வெளிச்சம்;*** brightness, radiance. 'அவருடைய முக வொளிர்வைப் பார்' (வின்.) (செ.அக.).

[ஒளி → ஒளிர் → ஒளிர்வு.]

ஒளிவட்டம் *oli-vattam,* பெ. (n.) 1. ***கண்ணாடி;*** mirror. "ஒளிவட்டத்துப் பாவையின்" (இரகு.குச.17). 2. ***ஆழிப்படை*** (சக்கராயுதம்) (பிங்.); discus. 3. ***தெய்வ உருவங்களின் தலையைச் சுற்றியுள்ள ஒளிவட்டம்*** (பிரபை.); halo of light. "சுற்று மொளிவட்டஞ் சூழ்ந்து சோதி பரந்து" (திவ்.பெரியாழ்.1,4,3). 4. ***நிலவு;*** moon. "ஊர்களோடுடன் முளைத்த வொளிவட்டத்து" (யாப்.வி.83,288) (செ.அக.).

[ஒளி + வட்டம்.]

ஒளிவடி-த்தல் *olivadi-,* 4.செ.கு.வி. (v.i.) ***மின்னுதல்*** (இ.வ.); to flash lightning. (செ.அக.).

[ஒளி → ஒளிவு + அடி-த்தல்.]

ஒளிவளவாய் *olivalavāy,* கு.வி.எ. (adv.) ***கமுக்கமாய்*** (இரகசியமாய்) (வின்.); privily. (செ.அக.).

[ஒளி → ஒளிவு + அளவாய்.]

ஒளிவிடம் *olividam,* பெ. (n.) ***மறைவிடம்;*** a hiding place, ambush.

ம. ஒளிவிடம்; க. உளி; கோத. ஒய்ன் (வேட்டைக்கான உயர்மரப்பரண்); தெ. ஓலமு; குரு. ஓலா.

[ஒளி + இடம்.]

ஒளிவிடு-தல் *oli-vidu-,* 20.செ.கு.வி. (v.i.) ***ஒளிர்*** (திவா.) பார்க்க; see *olir.* (செ.அக.).

[ஒளி + விடு.]

ஒளிவீச்சு *oliviccu,* பெ. (n.) ***ஒளி வீசுதல்;*** emitting rays of light. (சா.அக.).

[ஒளி + வீச்சு.]

ஒளிவீசு-தல் *oli-vīsu-,* 5.செ.கு.வி. (v.i.) ***ஒளிர்*** பார்க்க; see *olir.* (செ.அக.).

ஒளிவு[1] *olivu,* பெ. (n.) ***மறைவிடம்*** (வின்.); place of concealment. (செ.அக.).

ம. ஒளிவு; க. உளி, ஔவு, ஔகு; து. ஔ, ஔவு, ஔாவு; தெ. ஓலமு, ஔவு; குரு. ஓலா.

[ஒளி[1] → ஒளிவு.]

ஒளிவு[2] *olivu,* பெ. (n.) ***ஒளிர்வு*** (வின்.) பார்க்க; see *olirvu.* (செ.அக.)

ம. ஒளிவு.

[ஒளி[2] → ஒளிர் → ஒளிர்வு → ஒளிவு.]

ஒளிவை-த்தல் *oli-vai-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***கண்ணி வைத்தல்;*** to set a snare for animals or birds. 2. ***பார்வை விலங்கு வைத்தல்;*** to place a decoy. (செ.அக.).

[ஒளி[1] + வை.]

ஒளிவைத்துப் பார்[1]-த்தல் *olivaittu-p-pār-,* 4.செ.கு.வி. (v.i.) ***கண்ணிவைத்துக் காத்திருத்தல்*** (வின்.); to lie in wait for game after having set a snare. (செ.அக.).

[ஒளி[1] + வைத்து + பார்.]

ஒளிவைத்துப் பார்[2]-த்தல் *olivaittu-pār-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***உற்றுப்பார்த்தல்;*** to stare at a person. (செ.அக.).

[ஒளி[1] + வை.]

ஒளிவைத்துப் பார்[3]-த்தல் *oli-vaittu-p-pār,* 4.செ.குன்றாவி. (v.t.) ***கைசெறித்துவைத்துக் கூர்ந்து பார்த்தல்*** (யாழ்.அக.); to look intently, shading the eyes with the palm over the eyebrows. (செ.அக.).

[ஒளி[1] + வைத்து + பார்.]

ஒளிறு[1]-தல் *oliṟu-,* 2. செ.கு.வி. (v.i.) ***விளங்குதல்;*** to shine, glitter. "ஒளிறுவாண் மறவரும்" (மணிமே.1,68) (செ.அக.).

[ஒளி → ஒளிர் → ஒளிறு → ஒளிறு-தல். (வே.க.57,58).]

ஒளிறு[2] *oliṟu,* பெ. (n.) ***பேரொளி, அதிக வெளிச்சம்;*** splendour, light. "ஒளிற்றுறு கலன் மார்பெய்தி" (கந்தபு. அசமுகிநகர்.24) (செ.அக.).

[ஒளி[1] → ஒளிர் → ஒளிறு.]

ஒற்கம்[1] *oṟkam,* பெ. (n.) 1. ***வறுமை*** (தொல்.சொல்.360); poverty, indigence, destitution, want. 2. ***தளர்ச்சி;*** feebleness, weakness. "ஒற்கத்தி னூற்றாந் துணை" (குறள்,414). 3. ***குறைவு;*** deficiency, dearth. "ஒற்கமில்வளன்" (கந்தபு.மேரு.70). 4. ***அடக்கம்;*** diffidence, modesty. "ஒற்கமின் றூத்தைவா யங்காத்தல்" (நீதிநெறி.23) (செ.அக.).

[ஒல் → ஒல்கு → ஒற்கு → ஒற்கம்.]

ஒற்கம்[2] *oṟkam,* பெ. (n.) 1. ***பொறுமை*** (யாழ்.அக.); patience. 2. ***ஒடுக்கம்;*** restraint. (செ.அக.).

[ஒல் → ஒல்கு → ஒற்கு → ஒற்கம்.]

ஒற்கு-தல் *oṟku-,* 7. செ.கு.வி. (v.i.) 1. ***குறைதல்;*** to be deficient; to be wanting. "ஒற்காமரபிற் பொதியி லன்றியும்" (சிலப்.25,117). 2. ***தளர்தல்;*** to fall short, droop. "ஒற்காவுள்ளத் தொழியா னாதலின்" (மணிமே.15,18) (செ.அக.).

[ஒல் → ஒல்கு → ஒற்கு.]

ஒற்றடம் *oṟṟadam,* பெ. (n.) ***வெப்பம்பட ஒற்றுகை*** (உ.வ.); fomentation. (செ.அக.).

ம. ஒத்தல், ஒத்தணம்; க. ஒத்தல, ஒத்தட, ஒத்தன; குட. ஒத்த்; து. ஒத்துனி; தெ. ஒத்தடமு; பட. ஒத்தண.

[ஒற்று + அடம். 'அடம்' - சொல்லாக்க ஈறு.]

ஒற்றடிச்செருப்பு *oṟṟadi-c-ceruppu,* பெ. (n.) ***ஒற்றைத் தோலட்டை யாலமைந்த செருப்பு*** (வின்.); slippers, sandals. (செ.அக.).

[ஒற்றை + அடி - ஒற்றடி + செருப்பு.]

ஒற்றளபு *oṟṟalabu,* பெ. (n.) ***ஒற்றளபெடை*** பார்க்க; see *oṟṟalabedai.* (செ.அக.).

[ஒற்று + அளபு.]

ஒற்றளபெடை *oṟṟalapedai,* பெ. (n.) ***ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள், ஃ ஆகிய பதினோரு எழுத்துகளும் தமக்குரிய மாத்திரையின் மிக்கு ஒலிக்கை*** (நன்.92); lengthening the mutes ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள், ஃ after one or two short syllables for the sake of metre, as in கண்ண், இலங்ங்கு, the said consonant being doubled in writing, to indicate the prolongation, one of ten cārpeluttu. (செ.அக.).

[ஒற்று + அளபெடை - ஒற்றளபெடை = இனிய பண்ணோசைக் காகச் செய்யுளில் இரட்டித்து அல்லது பன்முறை அடுக்கிவரும் மெய்யெழுத்து நெட்டோசை. ஒற்று = மெய்யெழுத்து.]

ஒற்றறு-த்தல் *oṟṟaṟu-,* 4.செ.கு.வி. (v.i.) ***தாளத்தை அறுதியிடுதல்*** (திவா.); to keep time with the hands or with cymbals in singing. (செ.அக.).

[ஒற்று + அறு.]

ஒற்றன்[1] *oṟṟaṉ,* பெ. (n.) ***உளவு பார்ப்பவன், வேவுகாரன்;*** male spy. "ஒற்றனிவனென வுரைத்து" (மணிமே.26,27). "மற்றுமோர் ஒற்றினால் ஒற்றிக் கொளல்" (குறள்,588).

[ஒற்று + அன்.]

ஒற்றன்[2] *oṟṟaṉ,* பெ. (n.) ***தூதன்*** (யாழ்.அக.); messenger.

[ஒற்று + அன்.]

ஒற்றாடல் *oṟṟāḍal,* பெ. (n.) ***வேவுகாரரை விடுத்து வினை செய்கை*** (குறள்,59,அதி.); employing and directing spies.

[ஒற்று + ஆடல்.]

ஒற்றாள் *oṟṟāḷ,* பெ. (n.) ***வேவுகாரன்;*** spy. "ஒள்ளிய வொற்றாள் குணம்" (திரிகடு.85).

ம. ஒற்றாள்.

[ஒற்று + ஆள்.]

ஒற்றி[1]**-த்தல்** *oṟṟi-,* 4. செ.கு.வி. (v.i.) 1. ***ஒற்றுமைப்படுதல்;*** to be united with; to become one with. "அவற்றினான் ஆன்மா ஒற்றித்துக் காணினல்லது" (சி.போ.சிற்.5,1). 2. ***ஒற்றையாயிருத்தல்;*** to be odd, as numbers. "ஒற்றித் தொத்தலும் இரட்டித் தொத்தலும்" (சிலப்.3,152,அரும்.).

[ஒற்று → ஒற்றி → ஒற்றி-த்தல்.]

ஒற்றி[2] *oṟṟi,* பெ. (n.) 1. ***உடைமையை நுகரும் உரிமையுடன் கூடிய அடைமானம்*** (தொல்.சொல்.81, உரை.); mortgage with possession, as of land, trees, cattle, etc. 2. ***ஒற்றியூர்;*** place name, Oṟṟiyūr. "நானொற்றி யிருந்தே னென்றாரே" (அருட்பா.111,சல்லாபவி.5) (செ.அக.).

ம. ஒற்றி; க. ஒத்தெ; து. ஒத்து; தெ. ஒத்து.

[ஒன்று → ஒற்று → ஒற்றி.]

ஒற்றிக்கரணம் *oṟṟi-k-karaṇam,* பெ. (n.) ***ஒற்றிச் சீட்டு*** பார்க்க; see *oṟṟi-c-cīṭṭu.* (செ.அக.).

ம. ஒற்றிக்கரணம்.

[ஒற்றி + கரணம்.]

ஒற்றிக்கலம் *oṟṟi-k-kalam,* பெ. (n.) ***ஒற்றிச்சீட்டு*** பார்க்க; see *oṟṟi-c-cīṭṭu.* நிலத்த தொற்றிக்கலம் (தொல்.சொல்.81, உரை.).

[ஒற்றி + கலம்.]

ஒற்றிக்காணி *oṟṟi-k-kāṇi,* பெ. (n.) ***அடைமான நிலம்*** (உ.வ.); mortgaged land. (செ.அக.).

[ஒற்றி + காணி.]

ஒற்றிக்கொள்(ளு)-தல் *oṟṟi-k-koḷ-,* 10.செ.குன்றாவி. (v.t.) 1. ***உடலிற் படும்படி அழுத்துதல்;*** to press on one's body, get anything applied or impressed on one's person. "சக்கரப்பொறி யொற்றிக் கொண்டு" (திவ்.பெரி யாழ்.5,4,1). 2. ***வயப்படுத்திக் கொள்ளுதல்*** (வின்.); to take possession of, annex. (செ.அக.).

[ஒற்றி + கொள்.]

ஒற்றிச்சீட்டு *oṟṟi-c-cīṭṭu,* பெ. (n.) ***ஒற்றி ஆவணம்;*** usufructuary mortgage deed. (செ.அக.).

ம. ஒற்றிச்சீட்டு.

[ஒற்றி + சீட்டு.]

ஒற்றிடு-தல் *oṟṟiḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***ஒற்றடமிடுதல்*** (வின்.); to apply fomentation. (செ.அக.).

[ஒற்று + இடு.]

ஒற்றித்தவெண் *oṟṟittaveṇ,* பெ. (n.) ***ஒற்றைப் பட்ட கணக்கு;*** odd number. (ஆ.அக.).

[ஒன்றித்த → ஒற்றித்த + எண்.]

ஒற்றிநறுக்கு *oṟṟi-naṟukku,* பெ. (n.) ***பனையோலையில் எழுதிய அடைமான ஆவணம்*** (வின்.); mortgage deed, lease deed, written out on a palmyra - leaf. (செ.அக.).

[ஒற்றி + நறுக்கு.]

ஒற்றிப்பிரசாதம் *oṟṟi-p-pirašādam,* பெ. (n.) ***கோயிற்தேவுணா*** (பிரசாத) ***வகை;*** boiled rice, etc., offered to a deity. ஒற்றிப்பிரசாதம் குறுணியும் (S.I.I.i,85) (செ.அக.).

[ஒற்றி + பிரசாதம். பிரசாதம் = படையல்.]

ஒற்றிப்போ-தல் *oṟṟi-p-pō-,* 8.செ.கு.வி. (v.i.) ***விலகிச் செல்லுதல்;*** to go away from. (செ.அக.).

க., தெ. ஒத்து.

[ஒற்றி + போ.]

ஒற்றிப்போடு-தல் *oṟṟi-p-pōḍu-,* 19.செ.குன்றாவி. (v.t.) ***ஒத்திப்போடு*** பார்க்க; see *otti-p-pōḍu.* (செ.அக.).

[ஒதுக்கி → ஒத்தி → ஒற்றி + போடு.]

ஒற்றிமீட்டு-தல் *oṟṟimīṭṭu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***அடகு வைத்ததை மீட்டல்;*** to cause to redeem a mortgage.

[ஒற்றி + மீட்டு. மீள் (த.வி.) → மீட்டு (பி.வி.).]

ஒற்றிமீள்(ட்)-த(ட)ல் *oṟṟi-mīḷ-,* 16.செ.கு.வி. (v.i.) ***அடைமானந் திருப்புதல்;*** to redeem a mortgage. (செ.அக.).

[ஒற்றி + மீள்.]

ஒற்றியாட்சி *oṟṟi-y-āṭci,* பெ. (n.) ***அடைமான நிலப்பயன் நுகர்தல்;*** enjoying the usufructs of mortgaged property. (செ.அக.).

[ஒற்றி + ஆட்சி.]

ஒற்றியிரு-த்தல் *oṟṟi-y-iru-,* 2.செ.கு.வி. (v.i.) ***விலகி யிருத்தல்;*** to keep at a distance. "ஒற்றியிருமென்று ரைத்தேன்" (அருட்பா,111,சல்லாபவி.5) (செ.அக.).

[ஒதுங்கு → ஒத்து → ஒற்று → ஒற்றி + இரு.]

ஒற்றியூர் *oṟṟi-y-ūr,* பெ. (n.) ***திருவொற்றியூர்*** (தேவா.1103,1); ancient shrine of Śiva, a few miles to the north of Madras. (செ.அக.).

[ஒற்றி + ஊர் - ஒற்றியூர். (வடசென்னையிலுள்ள, பாடல் பெற்ற, சிவன்கோயில் கொண்ட இவ்வூர், ஒற்றியாகப் பெற்ற ஊராகலாம்).]

ஒற்றியூரன் *oṟṟiyūran,* பெ. (n.) 1. ***சிவன்;*** Śiva. 2. ***வல்லாளை வென்ற ஒரு செங்குந்த வீரன்;*** legendary hero. (ஆ.அக.).

[ஒற்றி + ஊர் + அன்.]

ஒற்றியெடு-த்தல் *oṟṟi-y-eḍu-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஒற்றி ஈரம்வாங்குதல்;*** to absorb moisture with a blotter, sponge, etc. 2. ***ஒற்றிப் படியெடுத்தல்;*** to take an impression or copy from. (செ.அக.).

[ஒற்றி + எடு.]

ஒற்றிவை[1]-த்தல் *oṟṟi-vai-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***அடைமானம் வைத்தல்;*** to mortgage, as land, as trees. "விற்றுக்கொ ளொற்றிவை யென்னினல்லால்" (திருவாச.6,18) (செ.அக.).

க. ஒத்தெயிடு.

[ஒற்றி + வை.]

ஒற்றிவை[2]-த்தல் *oṟṟi-vai-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***தொலைவில் வைத்தல்;*** to place out of the way. 2. ***தவணை தள்ளி வைத்தல்;*** to adjourn, as a hearing. to postpone. (செ.அக.).

தெ. ஒத்து.

[ஒதுங்கு → ஒத்து → ஒற்று → ஒற்றி + வை.]

ஒற்று[1]-தல் *oṟṟu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. ***ஒன்றிறப்படும்படிச் சேர்த்தல்;*** to bring into contact; to press, hug close. "வீணை ... மாத ரணி முலைத் தடத்தி னொற்றி" (சீவக.1746). 2. ***முத்திரையிடுதல்;*** to stamp, as a seal. "கொடுவரியொற்றி" (சிலப்.5,98). 3. ***உளவறிதல்;*** to spy out. "கண்மா றாடவ ரொடுக்க மொற்றி" (மதுரைக்.642). 4. ***தாளம் போடுதல்;*** to beat, as cymbals in keeping time. "காமரு தாளம் பெறுதற் கொற்றுவதுங் காட்டுவபோல்" (பெரியபு.திருஞான.46). 5. ***தீண்டுதல்;*** to touch. "கதவொற்றிப் புலம்பியா முலமர" (கலித்.8,2). 6. ***தழுவுதல்;*** to embrace. "சேஎச் செவிமுதற் கொண்டு பெயர்த் தொற றும்" (கலித்.103,51). 7. ***மறைதல்;*** to hide. 8. ***உய்த்துணர்தல்;*** to pry into. "உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவர்" (குறள்.927). 9. ***கட்டுதல்;*** to tie, fasten. "வலைவலி தொற்றினர்க்கு" (கல்லா.66,6). 10. ***தீர்மானித்தல்;*** to decide, to determine. "ஒன்று நினைந் தொற்றி" (அகநா.5,20) (செ.அக.).

ம. ஒற்றுக.

[ஒல் → ஒன்று → ஒற்று → ஒற்று-தல்.]

ஒற்று[2]-தல் *oṟṟu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***அடித்தல்;*** to strike. "வேணுக்கோலின் மிடைந்தவ ரொற்றலின்" (சீவக.634). 2. ***அமுக்குதல்;*** to press down, to press upon. "வெங்கணைசெவிட்டி நோக்கி, யொற்றுபு திருத்தி" (சீவக.2191). 3. ***தாக்குதல்;*** to attack. "பழனத்த புள்ளொற்ற வொசிந் தொல்கி" (கலித்.77,5) 4. ***எய்தல்;*** to shoot, as an arrow. "கோலொற்றக் குனிந்த வாறே" (சீவக.797).

[ஒல் → ஒற்று.]

ஒற்று[3]-தல் *oṟṟu,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***துடைத்தல்;*** to wipe away, as tears. "கொடியனாடன் கண்பொழி கலுழி யொற்றி" (சீவக.1397). 2. ***தள்ளுதல்;*** to push, as a door. "பாவையன்னா ளறிவுறா வகையி னொற்றி" (சீவக.1505). 3. ***வீழ்த்துதல்;*** to fell down. "புலிபார்த் தொற்றிய களிற்றிரை பிழைப்பின்" (புறநா.237,16). 4. ***வலித்தல்;*** to tug, to strain. 'எருதுகயிற்றை யொற்றி யிழுக்கின்றது' (வின்.).

[ஒல் → ஒற்று.]

ஒற்று[4]-தல் *oṟṟu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***மெய்யெழுத்தாய் நிற்றல்;*** to appear, as a pure consonant. "யரழவென்னு மூன்று மொற்ற" (தொல்.எழுத்.48). 2. ***தத்துதல்;*** to move by jerks to starts, as an animal when its forelegs are tied together. மாடு ஒற்றி யொற்றிப்போகிறது (யாழ்ப்.). 3. ***காற்று வீசுதல்;*** to blow, as wind. "கடிகாவிற் காலொற்ற வொல்கி" (கலித்.92,51). 4. ***ஒட்டிக்கொள்ளுதல்;*** to stick, to adhere. "தாளொற்றித் தப்பி வீழ்ந்தார்" (சீவக.2768). 5. ***ஒற்றடம் போடுதல்;*** to apply fomentation. 6. ***நினைதல்;*** to think. "வந்தது வளர்த்து வருவ தொற்றி" (சிலப்.3,65).

[ஒல் → ஒற்று.]

ஒற்று[5]-தல் *oṟṟu,* 5. செ.குன்றாவி. (v.t.) ***உடுத்தல்*** (யாழ்.அக.); to clothe. (செ.அக.).

[ஒல் → ஒற்று.]

ஒற்று[6] *oṟṟu,* பெ. (n.) 1. ***உடம்பு*** (அக.நி.); body. 2. ***ஒற்றன்*** (யாழ்.அக.) பார்க்க; see *oṟṟaṉ.* (செ.அக.).

[ஒல் → ஒற்று.]

ஒற்று[7] *oṟṟu,* பெ. (n.) 1. ***மெய்யெழுத்து*** (தொல். எழுத்.411); consonant 2. ***வேவு;*** espionage, spying. "ஒற்றி னாகிய வேயே" (தொல்.பொருள்.58). 3. ***வேவுசெல்வோன்;*** spy; secret agent. "ஒற்று முரை சான்ற நூலும்" (குறள்,581). 4. ***ஒற்றடம்;*** fomentation. 'ஒற்றுக் கொடுத்தால் வீக்கம் நீங்கும்'. 5. ***குழந்தை கையணிவகை;*** flat bracelet for a child. (தெ.ஒத்து). 6. ***ஒற்றுறுப்பு*** பார்க்க; see *oṟṟuṟuppu.* "ஒற்றுறுப்புடைமையில்" (சிலப்.13,108) (செ.அக.).

[ஒல் → ஒற்று.]

ஒற்று[8] *oṟu,* பெ. (n.) ***ஒற்றியிடும் பொட்டணி, மாவுத்துணிக் கட்டு*** (யாழ்.அக.); poultice. (செ.அக.).

[ஒல் → ஒற்று.]

ஒற்று[9]**-தல்** *oṟu-,* 5. செ.குன்றாவி. (v.i.) ***ஒத்து***[3] பார்க்க; see *ottu*[3]. (செ.அக.).

ஒற்றுக்கேள்(ட்)-த(ட)ல் *oṟu-k-kēḷ-,* 12.செ.கு.வி. (v.i.) ***பிறர் பேச்சை மறைந்து நின்று கேட்டல்;*** to play the eavesdropper. (செ.அக.).

[ஒல் → ஒற்று + கேள்.]

ஒற்றுகை *oṟugai,* பெ. (n.) 1. ***ஒற்றல்*** பார்க்க; see *oṟal.* 2. ***மருந்து தேய்த்தல்;*** embrocation. (சா.அக.).

[ஒற்று → ஒற்றுகை.]

ஒற்றுணர்ச்சி *oṟuṇarcci,* பெ. (n.) ***ஒற்றுமையுணர்வு;*** common feeling; seeing eye to eye; agreeing in sentiment. (செ.அக.).

[ஒல் → ஒன்று → ஒற்று + உணர்ச்சி.]

ஒற்றுப்பெயர்த்தல் *oṟu-p-peyarttal,* பெ. (n.) ***ஒருமொழியுந் தொடர்மொழியுமாக நின்று வெவ்வேறு பொருள் தருவதாகப் பாடப்படும் மிறைக் கவி*** (தண்டி..95,உரை.); verse composed in such a way as to admit of the words being interpreted by artful analysis to convey more than one meaning. (செ.அக.).

[ஒற்று + பெயர்த்தல்.]

ஒற்றுமை[1] *oṟumai,* பெ. (n.) 1. ***ஒன்றாயிருக்குந் தன்மை;*** union; agreement; concord; oneness. "ஒற் றுமை கொள்ளாதார் நட்பு" (நாலடி,237). 2. ***மனம் ஒருநிலைப்படுகை;*** application of the mind to one object; close attention concentration of thought. "ஒற் றுமை கொண்டு நோக்கு முள்ளத்து" (திருவாச.3,128). "ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு" (பாரதி யார்.).

[ஒல் → ஒன்று → ஒற்று → ஒற்றுமை.]

ஒற்றுமை[2] *oṟumai,* பெ. (n.) ***ஒற்றரின்தன்மை;*** qualities requisite in a spy. "ஒற்றுமையால் விண்ணாடர் பொருட் டிவண் மேவியுளான்" (கந்தபு.அக்கினிமு,வதை.7) (செ.அக.).

[ஒற்று = ஒற்றன். ஒற்று → ஒற்றுமை.]

ஒற்றுமை[3] *oṟumai,* பெ. (n.) 1. ***உரிமை;*** right. 2. ***குறிப்பு;*** indication. 3. ***தகுதி;*** fitness. 4. ***செல்வம்;*** wealth. (செ.அக.).

[ஒல் → ஒன்று → ஒற்று → ஒற்றுமை.]

ஒற்றுமைகோடல் *oṟumai-kōdal,* பெ. (n.) ***வேளாண் மாந்த ரியல் புகளு ளொன்று*** (திவா.); living in peace with others, characteristic of the Vēḷāḷas. (செ.அக.).

[ஒல் → ஒற்று → ஒற்றுமை + கோடல்.]

ஒற்றுமைநயம் *oṟumai-nayam,* பெ. (n.) 1. ***ஒற்றுமைத் தன்மை;*** intimate connection; opp. to. வேற்றுமைநயம். "ஒற்றுமை நயத்தினொன் றெனத் தோன்றினும்" (நன்.451). 2. ***காரணகாரியங்கள் ஒன்றாயிருக்கை*** (மணி.30,220); identity of cause and effect. (செ.அக.).

[ஒற்றுமை + நயம்.]

ஒற்றுவன் *oṟuvaṉ,* பெ. (n.) ***ஒற்றன்*** பார்க்க; see *oṟaṉ;* "ஐயன தொற்றுவன்" (கந்தபு.நகரழி.36) (செ.அக.).

ம. ஒற்றன்.

[ஒற்று → ஒற்றுபவன் → ஒற்றுவன்.]

ஒற்றுவி-த்தல் *oṟuvi-,* 1. பி.வி. (c.v.) ***ஒற்றுமூலமறி தல்;*** to keep oneself informed of events through spies or secret emissaries. ஒற்றி னானே ... ஒற்றுவித்து (குறள்,583,உரை.) (செ.அக.).

[ஒற்று → ஒற்றுவி. (பி.வி.).]

ஒற்றுறுப்பு *oṟuṟuppu,* பெ. (n.) ***செங்கோட்டியாழில் நரம்பினும் பத்தரினும் தாக்குவதோர் கருவி*** (சிலப்.13,108,அரும்.); piece in the yāḻ adjoining the strings and the belly, prob. fret. (செ.அக.).

[ஒற்று + உறுப்பு.]

ஒற்றெழுத்து *oṟeḻuttu,* பெ. (n.) ***மெய்யெழுத்து*** (திவா.); consonant. (செ.அக.).

[ஒற்று + எழுத்து.]

ஒற்றை *oṟai,* பெ. (n.) 1. ***ஒன்று*** (நன்.185,விருத்.); one; one of a pair. 2. ***ஒற்றைப்பட்ட எண்;*** odd number. "மறையோ ரொற்றைப்பட வரித்தூட்ட வேண்டும்" (மச்சபு.சபிண்டீ.27) "இரட்டைப்பட எண்ணியதில் ஒற் றைப்பட்டதம்மே" (குற்றா.குறவஞ்சி.). 3. ***தனிமை;*** singleness, soleness, uniqueness. அவன் ஒற்றை யாயி ருக்கிறான். 4. ***ஒப்பின்மை;*** incomparableness. "ஒற் றைச் சேவகனே" (திருவாச.36,10). 5. ***தனியேடு;*** loose leaf of a book. கீழே விழுந்த ஒற்றையை எடு. 6. ***ஒரு துளைக்கருவி;*** a kind of musical instrument. "முன்னொற்றை யிருசங்க முடனூத" (பாரத.நிரை மீட்சி.5) (செ.அக.).

க. ஒத்தெ; து. ஒத்தெ.

[ஒன்று → ஒன்றை → ஒற்றை.]

ஒற்றைக்கண் *oṟai-k-kaṇ,* பெ. (n.) 1. ***ஒருகண்;*** one eye or a single eye. 2. ***ஒருகண் பார்வை;*** strabismus. (சா.அக.).

[ஒற்று → ஒற்றை + கண்.]

ஒற்றைக் கண்ணன் *oṟai-k-kaṇṇaṉ,* பெ. (n.) 1. ***ஒரு கண் தெரிந்தவன்;*** one-eyed person. 2. ***வெள்ளி*** (சுக்கிரன்) (வின்.); Śukra, the priest of the asuras having only one eye. (செ.அக.).

[ஒற்றை + கண்ணன்.]

ஒற்றைக்கை *oṟṟai-k-kai,* பெ. (n.) *ஒருகையாற் காட்டற் குரிய முத்திரை* (அபிநயம்) (பாரத.பாவ.19); gesture with one hand. (செ.அக.).

[ஒற்றை + கை.]

ஒற்றைக்கொம்பன் *oṟṟai-k-komban,* பெ. (n.) 1. *ஒற்றைக் கொம்புள்ள யானை;* elephant with one tusk. 2. *பிள்ளையார்;* Piḷḷaiyār (Gaṇēśa) who has only one tusk. (செ.அக.).

[ஒற்றை + கொம்பன். உச்சிக் கொம்பன் பார்க்க.]

ஒற்றைச்சார் *oṟṟai-c-cār,* பெ. (n.) *இடையில் திறந்த இடமில்லாத வீடு* (யாழ்ப்.); house without an open space in the centre. (செ.அக.).

[ஒற்றை + சார்.]

ஒற்றைத்தலைவலி *oṟṟai-t-talai-vali,* பெ. (n.) *ஒற்றைத் தலைநோய்;* headache on one side. (செ.அக.).

[ஒற்றை + தலை + வலி.]

ஒற்றைத்தாலி *oṟṟai-t-tāli,* பெ. (n.) *தாலிமட்டுமான கழுத்தணி* (வின்.); marriage badge, without any other accompanying jewels, pendants, etc. (செ.அக.).

ம. ஒற்றத்தாலி.

[ஒற்றை + தாலி.]

ஒற்றைத்தாழ்ப்பூட்டு *oṟṟai-t-tāḻ-p-pūṭṭu,* பெ. (n.) *ஒற் றைத்தாழுள்ள பூட்டு* (வின்.); lock with a single bolt; single lock. (செ.அக.).

[ஒற்றை + தாழ் + பூட்டு.]



ஒற்றைத் தாழ்ப்பூட்டு

ஒற்றைத்துலா *oṟṟai-t-tulā,* பெ. (n.) *ஒற்றையேற்றம்* (வின்.); well-sweep made of one solid timber. (செ.அக.).

[ஒற்றை + துலா.]

ஒற்றைநாடி[1] *oṟṟai-nāḍi,* பெ. (n.) *ஒல்லியான உடம்பு;* lean or spare body. ஒற்றை நாடி மனிதன் (செ.அக.).

[ஒற்றை + நாடி.]

ஒற்றைநாடி[2] *oṟṟai-nāḍi,* பெ. (n.) *மாட்டுக்குற்றவகை* (பெரிய.மாட்.17); defect in cattle. (செ.அக.).

[ஒற்றை + நாடி.]

ஒற்றைநின்றாள் *oṟṟai-niṉṟāḷ,* பெ. (n.) *கைம்பெண்* (விதவை.); widow. "ஒற்றை நின்றாடுனை யூறுபடுத்து" (நீலகேசி.332) (செ.அக.).

[ஒற்றை + நின்றாள்.]

ஒற்றைநூல்வளைவு *oṟṟai-nūl-vaḷaivu,* பெ. (n.) *கட்டட வளைவு வகை;* (C.E.M.); segmental arch. (செ.அக.).

[ஒற்றை + நூல் + வளைவு.]



ஒற்றை நூல்வளைவு

ஒற்றைநூற்புடைவை *oṟṟai-nūṟ-puḍai-vai,* பெ. (n.) *தனியிழையாற் செய்த சீலை* (வின்.); single-threaded cloth. (செ.அக.).

[ஒற்றை + நூல் + புடைவை.]

ஒற்றைப்பட்டுமணி *oṟṟai-p-paṭṭu-maṇi,* பெ. (n.) *ஒற் றைவட மணி* (வின்.); necklace of single beads strung on silken string. (செ.அக.).

[ஒற்றை + பட்டு + மணி. பட்டு = மணிகோக்கும் பட்டு நூல்.]

ஒற்றைப்படவெண்ணு[1]**-தல்** *oṟṟai-p-paḍa-v-eṇṇu-,* 11.செ.கு.வி. (v.i.) *ஒற்றை யெண்களை மாத்திரம் எண்ணுதல்;* to enumerate only the odd number.

[ஒற்றை + பட + எண்ணு.]

ஒற்றைப்படவெண்ணு[2]**-தல்** *oṟṟai-p-paḍa-veṇṇu-,* 12.செ.குன்றாவி. (v.t.) *பண்டங்களை ஒவ்வொன்றாக எண்ணுதல்* (வின்.); to count things one by one. (செ.அக.).

[ஒற்றை + பட + எண்ணு.]

ஒற்றைப்படை *oṟṟai-p-paḍai,* பெ. (n.) *ஒற்றையான எண்* (உ.வ.); odd number. (செ.அக.).

[ஒற்றை + படை. படு → படை.]

ஒற்றைமுலைச்சி *oṟṟai-mulaicci,* பெ. (n.) *கண்ணகி, சிலப்பதிகாரத் தலைவி;* single-breasted goddess. Kaṇṇagi. (சேரநா.).

ம. ஒற்றமுலச்சி.

[ஒற்றை + (முலைத்தி) முலைச்சி.]

ஒற்றையடிப்பாதை *orrai-y-adi-p-pādai,* பெ. (n.) ***நடந்த காற்றடம்பட்டு அமைந்த வழி;*** foot-path. (செ.அக.).

[ஒற்றை + அடி + பாதை.]

ஒற்றையலகுசாகுபடி *orrai-y-alagu-ša-gupadi,* பெ. (n.) ***ஒற்றையாக நாற்றுகளை நட்டுப் பயிர்செய்கை;*** cultivation by transplanting single seedlings. (செ.அக.).

[ஒற்றை + அலகு + சாகுபடி.] .

ஒற்றையாள் *orrai-y-āḷ,* பெ. (n.) ***சுற்றத்தாரெவருமில்லாத தனியாள்;*** single person, one having no relations. (செ.அக.).

[ஒற்றை + ஆள்.]

ஒற்றையான் *orraiyān,* பெ. (n.) 1. ***கூட்டத்தினின்று பிரிந்து தனியாகத் திரியும் காட்டு யானை;*** rogue-elephant. 2. ***ஆண் பன்றி, காட்டுப்பன்றி;*** wild boar. 3. ***சுற்றத்தாரற்ற தனியாள்;*** sole member without a family. (சேரநா.).

ம. ஒற்றயான்.

[ஒற்றை + ஆன்.]

ஒற்றையிதழ்ப்பூ *orrai-y-idal-p-pū,* பெ. (n.) ***ஓரிதழுள்ள மலர்;*** monopetalous flower. (செ.அக.).

[ஒற்றை + இதழ் + பூ.]

ஒற்றையிரட்டை பிடிக்கை *orrai-y-irattai-pidikkai,* பெ. (n.) ***ஒருவகை விளையாட்டு;*** playing at odd and even. (செ.அக.).

[ஒற்றை + இரட்டை + பிடிக்கை.]

ஒற்றைவலி *orraivali,* பெ. (n.) ***ஒரு பக்கத்து வலி;*** neuralgia on one side only-hemialgia. (சா.அக.).

[ஒற்றை + வலி.]

ஒற்றைவலிப்பு *orraivalippu,* பெ. (n.) ***ஒரு பக்கத்து இழுப்பு;*** chorea or convulsion which affects only one side-hemichorea. (சா.அக.).

[ஒற்றை + வலிப்பு.]

ஒற்றைவலை *orrai valai,* பெ. (n.) ***ஒருவகைப் பெரிய வலை;*** a kind of fishing-net. (சேரநா.).

ம. ஒற்றவல.

[ஒற்றை + வலை.]

ஒற்றைவாய்க்கணக்கு *orrai-vāy-k-kanakku,* பெ. (n.) ***ஒரேவகையாய்த் தீரும் கணக்கு*** (வின்.); calculation made by a single operation, as by once adding, subtracting, multiplying, or dividing. (செ.அக.).

[ஒற்றை + வாய் + கணக்கு.]

ஒற்றைவாள் *orraivāḷ,* பெ. (n.) ***ஒருவகை வாள்;*** a kind of sword. (சேரநா.).

ம. ஒற்றவாள்.

[ஒற்றை + வாள்.]

ஒற்றொழிபாட்டு *orroli-pāttu,* பெ. (n.) ***மெய்யெழுத்தில்லாப்பாட்டு*** (சூடா.); verse, the words of which do not contain any pure consonants. (செ.அக.).

[ஒற்று + ஒழி + பாட்டு.]

ஒறு[1]-தல் *oru-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***குறைதல்;*** to be reduced, to diminish.

[ஒல் (ஒல்கு) = குறைதல் (த.வி.) ஒல் → ஒறு (குறைத்தல்) பி.வி. குறைவு. பிறவினை பெயருமாகும்.]

ஒறு[2]-த்தல் *oru-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. ***உறுப்புக் குறைத்துத் தண்டித்தல்;*** to punish, chastise by cutting the limbs. "ஒப்பநாடி யத்தகவொறுத்தி" (புறநா.10,4). 2. ***கடிதல்;*** to rebuke, reprove. "ஒறுப்ப வோவலை" (அகநா.342). 3. ***வெறுத்தல்*** (திவா.); to dislike, to be disgusted with. 4. ***இகழ்தல்;*** to deride, ridicule. "யாரே பிழைத்த தொறுக்கிற்பவர்" (குறள்,779). 5. ***அழித்தல்;*** to destroy. "ஒறுத்தானா மொன்னார் புரங்கண் மூன்றும்" (தேவா.407,11). 6. ***ஒடுக்குதல்;*** to suppress, as the desires, to restrain, as the senses; to mortify, as the body; to curb, as the appetite; to subdue, as the passions. 'சற்றும் வாயொறுக்கிறா னில்லை' (வின்.). 7. ***வருத்துதல்;*** to afflict, distress, cause pain to: "ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்" (குறள்.).

[ஒல் → (ஒல்கு) ஒடுங்குதல், ஒடுக்குதல், சுருக்குதல், குறைத்தல், அடித்தல், துன்புறுத்துதல். ஒல் → ஒறு = வருத்துதல், தண்டித்தல். ஒல் (த.வி.) → ஒறு (பி.வி.). ஒறுத்தல் உறுப்புக்குறைக்கும் தண்டனை.]

ஒறு[3]-த்தல் *oru,* 4.செ.கு.வி. (v.i.) ***குறைதல்*** (வின்.); to become scarce, scanty, as crops, as rain; to fail. 2. ***ஊனமாதல்;*** to be defective. ஒறுவாய். (செ.அக.).

[ஒல் → ஒறு.]

ஒறு[4]-த்தல் *oru-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***இவறுதல்;*** to be stingy, miserly. "நூறுபொன்னு முத்தார மென்றே னொறுப்பேனோ" (தெய்வச்.விறலி.295) (செ.அக.).

[ஒல் → ஒறு.]

ஒறு[5] *oru,* பெ. (n.) ***குறைவு;*** deficiency, shortage.

[ஒல் → ஒறு.]

ஒறுப்பு *oruppu,* பெ. (n.) 1. ***தண்டனை;*** chastisement, punishment. 2. ***கடிந்துபேசுகை;*** rebuke, reproof. 3. ***வெறுப்பு*** (வின்.); dislike, aversion, disgust. 4. ***அடக்குகை;*** bridling the passions, self-mortification, self-denial. 5. ***அருமை*** (வின்.) scarcity, dearness. 6. ***குறைவு*** (வின்.); privation, lack. (செ.அக.).

ம. ஒறுப்பு; தெ. ரோயு.

[ஒறு[2] → ஒறுப்பு.]

ஒறும்பு *orumbu,* பெ. (n.) ***வயல்களுக்கு வேண்டுமளவு குளத்தில் பாசன நீரில்லாமை;*** scarcity of water in the irrigation tank. (செ.அக.).

[ஒல் → ஒறு[1] → ஒறும்பு (குறைபடுதல்) ஒல் = சுருங்குதல். ஒறு = சுருக்கு, சுருக்கம், குறைவு.]

ஒறுவனை *oṟuvaṉai,* பெ. (n.) *குறைவு* (நாஞ்.); scarcity. (செ.அக.).

ம. ஒறுவன (பஞ்சம்).

[ஒல் → ஒறு¹ → ஒறுவு → ஒறுவனை. ஒறும்பு பார்க்க; see oṟumbu.]

ஒறுவாய் *oṟu-vāy,* பெ. (n.) 1. ***சிதைவடைந்த வாய்;*** mouth with congenital fissure of lips; sunken mouth. "பாதிநாக்கு முதடுகளிற் பாதியுந் தின்றொறுவாயேம்" (கலிங்.204). 2. ***ஒடிந்த விளிம்பு;*** broken edge of a pot. "ஒறுவாய்த்தலையிற் பலி" (தேவா.1125,6) (செ.அக.).

[ஒறு + வாய்.]

ஒறுவாய்ப்பல் *oṟu-vāy-p-pal,* பெ. (n.) ***சிதைவடைந்த பல்வரிசை;*** row of teeth with one of more gaps. (செ.அக.).

[ஒறு + வாய்ப்பல்.]

ஒறுவாய்ப்பானை *oṟu-vāy-p-pāṉai,* பெ. (n.) ***விளிம்பு சிதைந்த பானை;*** pot chipped along its mouth. (செ.அக.).

[ஒறு¹ + வாய் + பானை.]

ஒறுவாய்போ-தல் *oṟu-vāy-pō-,* 8.செ.கு.வி. (v.i.) 1. ***வாயொடிதல்;*** to be broken at the edge; to be chipped off. ஒறுவாய் போன பானையிலே (பெரும்பாண்.99, உரை). 2. ***குறைவடைதல்;*** to be defective. 'உம்மு டைய நாராயணத்தவமும் ஒருவாய்போய்' (அஷ்டாத ச.பக்.158) (செ.அக.).

[ஒறு + வாய் + போ.]

ஒறுவாயன் *oṟu-vāyaṉ,* பெ. (n.) ***உதடு சிதைந்த வாயுடையவன்*** (வின்.); harelipped man. (செ.அக.).

[ஒறு¹ + வாயன்.]

ஒறுவினை *oṟu-viṉai,* பெ. (n.) 1. ***தீராத் துன்பம்;*** unending trouble or difficulty. 2. ***நாட்பட்ட நோய்;*** long continuous illness. (செ.அக.).

[ஒறு² + வினை.]

ஒறுவு *oṟuvu,* பெ. (n.) ***வருத்தம்*** (சங்.அக.); trouble; distress. (செ.அக.).

ம. ஒறுவு.

[ஒறு² + ஒறுவு.]

ஒறுவுகலம் *oṟuvu-kalam,* பெ. (n.) ***ஒருவாய்ப்பானை*** பார்க்க; see *oṟu-vāy-p-pāṉai.* "ஒறுவுகலங்காடி" (சினேந்.175) (செ.அக.).

[ஒறு¹ → ஒறுவு + கலம்.]

ஒன்¹ *oṉ,* இடை. (part.) ***ஒருசாரியை*** (தொல்.எழுத்.180); expletive. (செ.அக.).

[அன் → ஒன்.]

ஒன்² *oṉ,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***பொருந்துதல்;*** to join. 2. ***ஒன்றுதல்;*** to unite.

[ஒல் → ஒன். (சு.வி.6).]

ஒன்பதினாயிரப்படி *oṉpadiṉ-āyira-p-paḍi,* பெ. (n.) ***திருவாய் மொழிக்கு நஞ்சீயர் செய்த விரிவுரை*** (வியாக்கியானம்); ***ஒன்பதினாயிரம் நூற்பாக்களைக்*** (கிரந்தங்களைக்) ***கொண்டது;*** name of a commentary by Naññīyar on the Tiruvāy-moḷi, consisting of 9000 granthas. (செ.அக.).

[ஒன்பது + இன் + ஆயிரம் + படி.]

ஒன்பது *oṉbadu,* பெ. (n.) 1. ***ஒன்று குறைந்த பத்து, எட்டின்மேல் ஒன்று;*** the number nine, i.e. one from ten or one before ten. ஒன்பது (தொல்.). 2. ***'கூ' என்னும் எண்ணுக்குறியீட்டுக்குரிய தமிழ் எண்ணுப்பெயர்;*** name of the ninth numerical symbol in Tamil.

மறுவ. ஒன்பஃது, ஒன்பான், தொண்டு, தொண், தொவ்; **ம.** ஒன்பது; **க.** ஒம்பத்து; **தெ.** தொம்மிதி; **து.** ஒர்ம்ப; **பட.** ஒம்பத்து; **கைக்.** வம்பெரு, வந்தி; **எரு.** ஒப்து; **இரு.** வெம்பது; **குட.** ஒயிம்பது; **கோத.** ஒன்பாத், ஒர்பாத்; **குற.** ஒம்லுதி; **துட.** வின் பொத், ஒன்பத்; **கோண்.** உண்மா, உண்ம, உண்மாக்; **கட.** தொம்மிதி.

[ஒன்று + பத்து - ஒன்பத்து → ஒன்பது. 'ஒன்று' ஈறுகுறைந்தது கடைக்குறை. பத்து → பது எனத்திரிந்தது இடைக்குறை. ஒன்று குறைந்த பத்து என்பதே மருஉமுடிபாகி ஒன்பது எனப் பேச்சுவழக்கில் ஈரசைச் சொல்லாகக் குறுகிற்று. இனி ஒன்பதுக் குமுன் பழந்தமிழில் வழங்கிய தொண்டு என்னும் ஒன்பதைக் குறித்த சொல்லும், பத்திலும் குறைவுற்றது என்னும் பொருளை வெளிப்படுத்தும் 'தொள்' (குறைபடுதல்) வினையினின்றே தோன்றியிருத்தலைத்'தொண்டு' என்னும் சொல்லை நோக்கி அறியலாம்.]

ஒன்பது தொண்டு என்னும் எண்ணுப் பெயர்கள் அடிநிலைத்தி ரிபுற்றும் முடிநிலைத்திரிபுற்றும் உலக மொழிகளில் வழங்கி வருகின்றன.

ஒன்பது கூட்டுச் சொல்லாகலான்; மூவசையும் மூவசைக்கு மேற்பட்டதுமான கூட்டுச்சொல் பேச்சுவழக்கில் ஓரசை அல் லது ஈரசை மருஉச் சொல்லாகத்திரியும் என்னும் சொற்பிறப்புப் பொதுநெறியின் வண்ணம் திரவிடம் தவிர்ந்த மொழிகளில் அடிநிலைத்திரிபினும் முடிநிலைத்திரிபினையே மிகுதியாகப் பெற்றுள்ளது. இதன் விளக்கத்தைச் சொற்பிறப்பு விதிமுறை களில் காண்க.

ஒன்பஃது, ஒன்பது, ஒன்பான் என மூவேறு இடவழக்குகளின் விளைவாகப் பல்வேறு கிளைமொழிகளில் ஊடாடிப்பின் வரும் நிலைகளில் இச்சொல் முடிநிலைத்திரிபுற்றுள்ளது. அடி நிலைத்திரிபு அருகிக் காணப்படுகிறது.

ஒன்பது ஒ(உ)-ஒ ஆ: அடிநிலைத்திரிபுற்றவை,

Mitun Naga. āku; santali. āre, ārě; *Georg.* utsgu.

ஒன்பஃது - ஒஃது - கொது: முதல்வகை முடிநிலைத்திரிபுற் றவை.

Chine. kiu, kau, chiu; *Nep.* (Gyamai). chyu; *Sikk.* kyot; *Thai.* kno; *Siam.* kau, kaut; *Laos.* kau, kew; *Anna.* kyin; *Shan.* kaut; *Burm.* ko; *Bali.* kutus; *Buta.* gu, *Tibd*-gu, guh; *Jap.* ku, ko, konotru;

Mag. ki-lene; *Mongol.* killien; *Mag. Hung.*, Kilenc; *Nep.* (serpa) Guh; (Murmi) Kuh.

ஒன்பது - பது - ப: இரண்டாம் வகை முடிநிலைத்திரிபுற்றவை.

Nep. (limbu). phangbh; (kiranti) phanghya; *Circ.* bughu; *O.Egy.* psj, pst; copt. psyt.

ஒன்பது - பது - து - தொ: மூன்றாம் வகை முடிநிலைத்திரிபுற்றவை.

Naga. thu, thaku, taku; *Burm.* (kunaj) takau; *Heb.* tischah; *Afri.* (swahili). ti-sa; *Ara.* tissa-ha; tisā; *Iraq.* tisa; *Turk.* do-kuz.

ஒன்பது - பது - து - சு: நான்காம் வகை முடிநிலைத்திரிபுற்றவை.

Chine. (Mand.) Chiu, jiu; *Jawa.* sanga, ngoho; *Malay.* sambitan.

தொண் (தொண்டு) - தெள: முதல்வகை அடிநிலைத்திரிபுற்றவை.

Te. tommidi; *Savara.* tinji; *Tib.* dugu, dgu; czech. devet; *Turk.* dokuz; *Russ.* dyeryat; *pol.* dziewiec; *Beng.* (Deoria chutia). dugu; (Garo) ju; *Serbo.* denet.

தொள் (தொண்டு) - தெள - நெள: இரண்டாம் வகை அடிநிலைத்திரிபுற்றவை.

L. navem; *G.* neutv; *OE.* nigon; *E.* nine; *GK.* ennea; *Iri.* naoi; *It. port.* nove; *F.* neuf; *Sp.* nuene; *Rum.* noua; *Dut.* negen; *Swed.* nio; *Dan, Norw.* ni; *Esp.* nau; *yid.* nein; *Goth.* nian; *African.* nege.

Brah. nul; *Sind.* nava; *Sinh.* nawa, nama; *Skt.* navan, nava; *Nep.* nou; nau; *Kola.* nau; *Pkt, Pali. Hind. Guj. Mar. Ori. Beng. Punj. Kosh. Ass. Urd.*, nav.

கூட்டுச்சொல்லாக வழங்குவன

ஒன்பது, தொள் (தொண்டு) என்னும் எண்ணுப்பெயர்களைப் பத்திலிருந்து ஒன்றைக்கழித்துக் கூட்டுச்சொல்லாகப் பழங்குடிமக்களுள் சிலர் வழங்கியபோது அவை மரூஉச் சொல்லாகக் குறுகாத நிலையில் இருசொல்புணர்ந்த நிலைத்த கூட்டுச்சொல் நிலையிலேயே நிலைத்துவிட்டன. ஒன்று முதல் ஐந்து வரையிலான எண்ணுப்பெயர்களும் பத்தினைக் குறித்த எண்ணுப்பெயரும் அவரவர் மொழிகளில் மிகவும் திரிபுற்ற பிறகு இந்தக் கூட்டுச்சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை பெருக வழங்கும் வணிக ஊடாட்டம் பெறாததால் மரூஉமுடிபு எய்தவில்லையெனலாம்.

பின்னிசு, பாசுக்கு, மலையம், இந்தோனேசிய மொழிகளில் இந்நிலை காணப்படுகிறது.

Finn. yk - dekson	(ஒன்று குறைந்த பத்து)
Basq. hed - etarsi	(ஒன்று குறைந்த பத்து)
Malay. sem - bilan	(ஒன்று குறைந்த பத்து)
Indsne. sem - bilan	(ஒன்று குறைந்த பத்து)

அமெரிக்கப்பழங்குடியினருள் ஒரு பிரிவினராகிய அகதெக்கு மக்களும் நகுவாத்திமக்களும் ஒன்பதை ஐந்தும் நான்கும் என்னும் கூட்டுச்சொல்லால் குறித்தனர். கிரேக்கரின் முன்னோர் எட்டும் ஒன்றும் என்னும் கூட்டுச் சொல்லால் ஒன்பதைக் குறித்தனர்.

Amer's	(aztec). shek-nowe	(ஐந்தும் நான்கும் 5 + 4)
	(Nahuati) chek-nawe	(ஐந்தும் நான்கும் 5 + 4)
Greek.	en + nea	(எட்டும் ஒன்றும் 8 + 1)

கிரேக்கமொழியில் எட்டுக்குரிய 'எண்' என்னும் பழந்தமிழ்ச் சொல்லே வழக்கூன்றியிருப்பதும் அமெரிக்கப் பழங்குடிமக்களின் மொழிகளில் ஐந்தைக் குறித்த பழந்தமிழ்ச் சொல்லாகிய 'கை' என்பதன் திரிபாகிய செய் (செக்) வழக்கூன்றியிருப்பதும் கூர்ந்து நோக்கத்தக்கது.

ஒன்று முதல் பத்து வரையிலான தமிழ் எண்ணுப்பெயர்கள் உலக மொழிகளில் வியக்கத்தக்க வகையில் ஊடாட்டம் பெற்றிருப்பது ஞால முதன்மொழிக் கொள்கைக்கு அரண்சேர்ப்பதாயுள்ளது.

ஒன்பதொத்து *onpadottu,* பெ. (n.) ***ஒருவகைத்தாளம்*** (திவ்.திருவாய்.); mode of beating time. (செ.அக.).

[ஒன்பது + ஒத்து.]

ஒன்பான் *onbān,* பெ. (n.) **ஒன்பது** பார்க்க; see *onbadu.* ''ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே'' (தொல். எழுத்.463) (செ.அக.).

[ஒன்பது → ஒன்பதின் → ஒன்பான். பதின் → பான்.]

ஒன்ற *onra,* இடை. (part.) ***ஓர் உவமைச் சொல்*** (தொல்.பொருள்.286); sign of comparison. (செ.அக.).

[ஒல் → ஒன்று → ஒன்ற.]

ஒன்றடிமன்றடி *onradi-manradi,* பெ. (n.) ***குழப்பம்;*** mixture of various things; topsy.turvydom; confusion; lack of order or system. (செ.அக.).

[ஒன்று + அடி - ஒன்றடி = ஒன்றாகக் குழப்புதல். ஒன்றடி மன்றடி - எதுகை குறித்த மரபு இணைமொழி.]

ஒன்றடிமன்றடியாய் *onradi-manradiyāy,* கு.வி.எ. (adv.) ***ஒருசேர;*** in toto, completely. (செ.அக.).

[ஒன்றடி + மன்றடி + ஆய்.]

ஒன்றரைக்கண்ணன் *onrarai-k-kannan,* பெ. (n.) ***ஒரு பக்கஞ் சரிந்த பார்வையன்;*** one who looks obliquely with half an eye shut; lit, man with an eye and a half; one who squints. ''ஒன்றரைக்கண்ணன் கண்டீர்'' (அப்பர்தேவா.).

[ஒன்று + ஆரை + கண்ணன் - ஒன்றாரைக் கண்ணன் → ஒன்றரைக் கண்ணன். ஆரை = ஆர்ந்த, சரிந்த.]

ஒன்றலர் *onralar,* பெ. (n.) ***பகைவர்*** (பிங்.); lit those who are not one with a person; foes; enemies. (செ.அக.).

[ஒன்று + அல் + அர். 'அல்' - எ.ம.இ.நி.]

ஒன்றறவாடம் *onrara-vādam,* பெ. (n.) ***ஒன்றுவிட்டொரு நாள்;*** alternate days. (செ.அக.).

[ஒன்று + அறு + வாடம்.]

ஒன்றறிசொல் *onrari-col,* பெ. (n.) ***ஒன்றன்பாற்சொல்;*** sign, of the impersonal class. (செ.அக.).

[ஒன்று + அறி + சொல்.]

ஒன்றன் கூட்டம் *onran-kūttam,* பெ. (n.) ***ஒரேபொருளின் கூட்டம்*** (நன்.300); collection of things of the same kind. (செ.அக.).

[ஒன்று + அன் + கூட்டம்.]

ஒன்றன்பால் *onran-pāl,* பெ. (n.) ***அஃறிணையொருமைப்பால்;*** sign. of the impersonal class. (செ.அக.).

[ஒன்று + அன் + பால்.]

ஒன்றனை யொன்றுபற்றுதல் *onranai-y-onru-parru-dal,* பெ. (n.) ***ஒருவகைக் குற்றம்*** (தொல்.சூ.விருத். பக்:50); fallacy of mutual dependence. (செ.அக.).

[ஒன்று + அன் + ஐ + ஒன்று + பற்றுதல்.]

ஒன்றா-தல் *onrā-,* 6.செ.கு.வி. (v.i.) 1. ***முதலதாதல்;*** to be first. "ஒன்றா வுயர்கொடி யொன்றின்று" (பரிபா.4,41). 2. ***ஒன்றுபடுதல்;*** coalesce. 3. ***ஒன்றனுள் ஒன்று நிலைப்படல்*** (லயமாதல்); to be amalgamated. 4. ***இணையின்றாதல்;*** to be without an equal. "ஒன்றாவுலகத்து" (குறள்.233) (செ.அக.).

[ஒன்று + ஆ(கு).]

ஒன்றாக *onrāga,* வி.எ. (adv.) ***உறுதியாக*** (குறள்.233, உரை.); certainly, surely, positively. "ஒன்றாக நல்லது கொல்லாமை" (குறள்.) (செ.அக.).

[ஒன்று + ஆக.]

ஒன்றாதவஞ்சித்தளை *onrāda-vañji-t-talai,* பெ. (n.) ***நிரையீற்றுரிச் சீர்முன் நேரசைவருந்தளை*** (இலக்.வி.718,உரை.); combination of two metrical feet, the first of which is a kani-c-cīr and the next a foot beginning with nēr-asai. (செ.அக.).

[ஒன்று + ஆ + த + வஞ்சி + தளை.]

ஒன்றாமை *onrāmai,* பெ. (n.) ***பகைமை;*** rivalry, enmity. "ஒன்றாமை யொன்றியார் கட்படின்" (குறள்,886) (செ.அக.).

[ஒன்று + ஆ + மை. 'ஒன்றாமை' = பொருந்தாமை, சேராமை. 'ஆ' - எ.ம.இ.நி.]

ஒன்றார் *onrār,* பெ. (n.) ***பகைவர்;*** foes, opponents. "ஒன்றார் மும்மதி லெய்தவன்" (தேவா.1062,8) (செ.அக.).

[ஒன்று + ஆ + ஆர் - ஒன்றார். 'ஆ' - எ.ம.இ.நி.]

ஒன்றாலொன்றும் *onrāl-onrum,* கு.வி.எ. (adv.) ***யாதொன்றினாலும்;*** by whatever means, at all, used with a negative. 'ஒன்றாலொன்றுங் குறைவில்லை' (வின்.) (செ.அக.).

[ஒன்றால் + ஒன்றும்.]

ஒன்றி[1]-த்தல் *onri-,* 5. செ.கு.வி. (v.i.) ***பொருந்துதல்;*** to unite, combine. 'ஒன்றித்து வாழவேண்டும்' (வின்.) (செ.அக.).

[ஒன்று → ஒன்றி.]

ஒன்றி[2] *onri,* பெ. (n.) 1. ***தனிமை;*** solitariness; singleness; loneliness. 2. ***தனித்த ஆள்;*** one who is alone; solitary person. (செ.அக.).

க. ஒண்ட்டி; தெ. ஒண்டு.

[ஒன்று → ஒன்றி.]

ஒன்றி[3] *onri,* பெ. (n.) ***மாணி*** (பிரம்சாரி); celibate. (செ.அக.).

[ஒன்று → ஒன்றி.]

ஒன்றிக்கட்டை *onrikkattai,* பெ. (n.) ***தனித்த ஆள்;*** single person, individual. (சா.அக.).

[ஒன்றி + கட்டை.]

ஒன்றிக்காரன் *onri-k-kāran,* பெ. (n.) ***மனைவியில்லாதவன்*** (வின்.); bachelor or widower. (செ.அக.).

[ஒன்றி + காரன் - ஒன்றிக்காரன்.]

ஒன்றிப்பு *onrippu,* பெ. (n.) ***ஒருமிப்பு;*** union; harmony; concord; unity. (செ.அக.).

[ஒன்றி → ஒன்றிப்பு.]

ஒன்றியவஞ்சித்தளை *onriya-vañji-t-talai,* பெ. (n.) ***நிரையீற்றுரிச் சீர்முன் நிரையசை வருந் தளை*** (இலக்.வி.718,உரை.); combination of two metrical feet, the first of which is a kani-c-cīr and the next a foot beginning with nirai-y-asai. (செ.அக.).

[ஒன்றிய + வஞ்சி + தளை.]

ஒன்றியார் *onriyār,* பெ. (n.) ***தன்னைச்சேர்ந்தவர்;*** friends; associates. "ஒன்றாமை யொன்றி யார்கட்படின்" (குறள்.886) (செ.அக.).

[ஒன்றி + அவர் - ஒன்றியவர் → ஒன்றியார்.]

ஒன்றியாள் *onri-y-āl,* பெ. (n.) ***ஒற்றையாள்;*** single person. (செ.அக.).

[ஒன்றி + ஆள்.]

ஒன்றிரண்டாய் அரைத்தல் *onrirandāy araittal,* பெ. (n.) ***பொடியாக்காமல் சிறிய துண்டுகளாகும்படி அரைத்தல்;*** grinding into several small rough granular pieces without making into a fine powder. (சா.அக.).

[ஒன்று + இரண்டு + ஆய் + அரைத்தல்.]

ஒன்றிரண்டு *onrirandu,* வி.எ. (adv.) ***மிகக்குறைவு;*** one or two, a few.

ம. ஒன்னுரண்டு.

[ஒன்று + இரண்டு - ஒன்றிரண்டு. எண்ணிக்கைக் குறைவு குறித்த குறிப்பு மொழி.]

ஒன்றிலொன்றின்மை *onrilonrinmai,* பெ. (n.) ***ஒன்றித்த பாங்கு இரண்டிலும் இன்மை*** (சி.சி.அளவை. மறைஞா.); mutual negation of identity of two things. (செ.அக.).

[ஒன்றில் + ஒன்று + இன்மை.]

ஒன்றினமுடித்த றன்னினமுடித்தல் *onrinamudit-tarannina-mudittal-,* பெ. (n.) ***ஒருபொருளைக் கூறி முடிக்கையில் அதற்கினமான பொருளையும் அங் குத்தானே கூறி முடிக்கையாகிய உத்தி*** (நன்.14); treating of some item of the subject matter of a treatise in such a way as to bring within its purview other items akin to it, one of 32 utti. (செ.அக.).

[ஒன்றினம் + முடித்தல் + தன்னினம் + முடித்தல்.]

ஒன்று¹-தல் *onru-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ***ஒன்றாய்ச் சேர்தல்;*** to unite; to coalesce; to grow together, as two trees; to become one. 2. ***ஏற்றுக்கொள்ளுதல்;*** to agree. 3. ***மனங்கலத்தல்;*** to be on intimate terms with. "நிரயங்கொள்பவரோ டொன்றாது" (புறநா.5,6). 4. ***ஒருமுகப்படுதல்;*** to set one's mind solely on an aim or object. "நன்புல னொன்றி நாதவென் றரற்றி" (திருவாச.4,82). 5. ***உவமையாதல்;*** to resemble; to be similar. வேயொன்றுதோ ளொருபால் (தொல்.பொருள்.286,உரை). (செ.அக.).

ம. ஒன்னுக; க., படை. ஒந்து; தெ. ஒனருஉ, ஒண்டு.

[ஒல் → ஒன் → ஒன்று.]

ஒன்று² *onru,* பெ. (n.) 1. ***ஒற்றைப்படை முதல் எண், இரண்டில் பாதி, மேல்வாயிலக்கத்தின் மிகச் சிறு முதல் எண்ணிக்கை;*** the first of the odd number and the lowest integer, half of two. "ஒன்றறிவதுவே உற்றறிவதுவே" (தொல்.பொருள்.மரபு.27). 2. ***'க' என்னும் எண்ணுக் குறியீட்டுக்குரிய தமிழ் எண்ணுப் பெயர்;*** name of the numerical symbol 'க' in Tamil.

ம. ஒன்னு; க. ஒந்து; தெ. ஒக, ஒக்க, ஒகட்டி, ஒண்டு; து. ஒன்சி; படை. ஒந்து; கோத. ஒத்; கொற. ஒண்ட்; இரு. வொந்து; கை. வனு, வண்ட; எரு. ஒண்டு; துட. வித்; குட. ஒந்தி; பர். ஒக்; கோண். உந்தீ, ஒண்ட், உண்டீ; கொலா. ஒக்கொத்; குரு. ஒண்டா, ஒன்; மால். ஒன்த், எண்ட், ஒண்ட்; பிரா. அசிட்.

[உல் → ஒல் → ஒன்று. ஒல்லுதல் = ஒன்றுசேர்தல். ஒன்றாகத் திரளுதல், ஒரேகட்டில் அல்லது அமைப்பில் உருப்பெறுதல், ஒரேபொருளாகக் காணப்படுதல் என்னும் கருத்துப் பொரு ளில் ஒன்றைக் குறித்தது.]

ஒன்று என்னும் சொல் தமிழில் எண்ணுப் பெயரெச்சமாகும் போது ஓர், ஒரு, ஒற்றை, ஒண்டி, ஒக்க, ஒக்கமை, ஒக்கி, ஒட்டை, ஒத்தெ, ஒல், ஒள் எனப்பல்வகை உலகவழக்குத்திரிபு கள் பெறும். இவற்றை அடிநிலைத்திரிபுகள் என்பர். பேச்சு வழக்கில் முடிநிலைத்திரிபு பெறுவது காலத்தால் பிற்பட்ட மொழிவளர் நிலைகளைச் சுட்டும். அதன்படி இச்சொல்லின் முதனிலை எழுத்தாகிய ஒகரம் மறைந்து அடுத்து எழுத்துக ளின் திரிபால் வளர்ந்த சொல்லாட்சிகள் முடிநிலைத்திரிபுகள் எனப்படும். இதன் மூலம் ஒன்று என்னும் மூலச்சொல் உலகமொழிகளில் அடிநிலைத்திரிபுகள் நிலவழிப்பரவலக் ளாக ஊடாடிய காலத்தையும் முடிநிலைத்திரிபுகளாக ஊடா டிய மொழிகளின் அல்லது மொழிபேசும் பகுதிகளின் வர லாற்று வழித்தடங்களையும் கண்டறியலாம்.

ஒன்று → ஒல் → ஒ - முதல்வகை அடிநிலைத்திரிபுற்றவை.

O. Egyp. we; *Chinese. Mand.* yi, i; *Tib.* (ayami) i, iku; *Manipuri.* ania.

ஒன்று → ஒள் - இரண்டாம் வகை அடிநிலைத்திரிபுற்றுவை

L. unus; *F.* un; *G.* ein; *Gk.* ĕna, en; *ON.* einn; *Dut.* cen; *Kore.* han; *It.* uno; *Portu.* um; *Sp.* uno; *OE.* ān; *E.* one; *Goth.* ains; *Afri.* ean; *Siam.* neen, nung; *Laos.* nung; *Rum.* un; *Swed.* en; *Dan.* ĕn; *Esp.* unu; *Yid.* ein.

ஒன்று → ஒரு → ஓர் - மூன்றாம் வகை அடிநிலைத்திரிபுற் றவை.

Afri-(Nubi.) wer; *Irag.* ferd; *Georg.* erthi; *Turk.* bir.

ஒன்று → ஒற்றை → ஒத்தை - நான்காம் வகை அடிநிலைத்தி ரிபுற்றவை.

Jap. hitotsu, hito; *Nawnsang Naga.* vanthe; *Uraon.* unta; *Russ.* adin, adyin; *Poli.* yedna, yednoo; *Serbo.* jedan; *Indone.* satu; *Jawa.* setu; *Malay.* satu; *Basq.* bot; *Vietn.* mot; *Copt.* vot; *Burm.* at.

ஒன்று → ஒக்க, ஒக - ஐந்தாம்வகை அடிநிலைத்திரிபுற்றவை.

Mag. Hung. egy; *O.Ar.* ughad, ahad; *Ar.* vaahid, wahid; *Iraq.* wrhid; *Mangol.* okan, niken; voka.

ஒன்று → ஏக், ஏக, கே, கெத், சே. - ஆறாம்வகை அடிநிலைத்திரிபுற்றவை.

Heb. ĕkad; *Basg.* ika; *Mag.* egy; *Fin.* yaksi; *O.Iri.* ahaon; *Pkt. Pali;* ĕka; *Skt.* ĕkam, ĕka; *Hin. Urd. Mar. Guj. Beng. Ass. Punj. Ori.* ĕk; *Nep.* ĕka, *Sinh.* ĕka; *Sik.* kat, chi; *Buta.* chi; *Sum.* ges; *Cauc.* aka; *Tib.* chik; *Afri-bank.* ika; *Moraco.* igat.

ஒன்று என்பதன் தொன்முது வடிவம் 'ஒல்' என்பதே. இது உலக மொழிகளில் மலைவாழ்மக்களிடை ஓரிரு மொழிகளில் மட்டும் எஞ்சியுள்ளது. வடகிழக்கு வங்காளத்தில் திமல் மொழியில் 'எலங்' என்றும், சையாம் இனமொழியான பொக் காரென் மொழியில் 'லுங்' என்றும் பருமிய தௌங்மொழியில் 'லௌங்' என்றும், சையாம் வாவோசு மொழிகளில் 'நுங்' என்றும், நேப்பாளக்கிளை மொழிகளான வயு, சௌராசிய் மொழிகளில் கசுர முன்னொட்டு பெற்று 'கொலு', 'கொலோ' என்றும் வழங்குகிறது.

ஒன்றைக் குறித்த 'ஒல்' என்னும் தொன்முது வடிவம் லகரம் நீங்கி 'ஒ' என நின்றும் ஒ → உ → இ எனத்திரிந்தும் ஒன்றைக் குறித்த நிலைகளைப் பழைய எகுபது மொழியிலும் திபெத்தி யக் கிளை மொழியிலும் இனமொழிக்குடும்பக் கிளைமொழி கள் அனைத்திலும் காணமுடிகிறது. இதனை முதனிலை அடிநி லைத்திரிபுகள் எனலாம்.

ஒல் → ஒன் எனத்திரிந்து ஒன்றைக் குறித்த காலத்திற்குரிய சொல்லாட்சி நிலைகளைத் தமிழிலும் ஐரோப்பிய மொழிகளி லும் காணமுடிகிறது. இதனை இரண்டாம் அடிநிலைத்திரிபுகள் எனலாம். ஒல் → ஒன் எனத்திரிந்த பின் அதன் வழிநிலைத் திரிபுடன் துகர ஈறு சேர்ந்து ஒல் + து = ஒன்று என முடிநிலைத்திரிபும் பெற்ற நிலையே பழந்தமிழிலும் திரவிட மொழிகளிலும் தெளிவாகக் காணப்படுகிறது.

ஒல் → ஒரு → ஓர் எனத்திரிந்து ஒன்றைக்குறித்த காலத்திற்குரிய சொல்லாட்சி நிலைகளை ஆப்பிரிக்க ஈராக்கிய சார்க்கிய துருக்கிய மொழிகளில் காணமுடிகிறது. இதனை மூன்றாம் அடிநிலைத்திரிபுகள் எனலாம். ஒரு ஓர் என்பன ஒன்று என்று

எண்ணுப்பெயரின் பெயரடியாக (oblique terms) தமிழில் வழங்கும். இந்தப் பெயரடிகளையே எண்ணுப்பெயராக ஏற்றுக்கொண்ட மொழிகள் மேற்றிசையில் வழக்கூன்றியவை.

இதைப் போன்றே ஒன்று → ஒற்றை, ஒத்தெ எனத்திரிந்து ஒன்றைக்குறித்த சொல்லாட்சிநிலைகளை சப்பானியத்திலும், தென்கிழக்காசிய மொழிகளிலும், சோவியத்து மொழிகளிலும், போலந்து செர்பியமொழிகளிலும் காணமுடிகிறது. இதனை நான்காம்வகை அடிநிலைத்திரிபுகள் எனலாம்

ஒன்று → ஒக்க → ஒக எனத்திரிந்து ஒன்றைக் குறித்த சொல்லாட்சிகளை அரேபிய, அங்கேரிய, மங்கோலிய மொழிகளில் காணமுடிகிறது. திரவிட மொழிகளில் தெலுங்கில் இச்சொல் இவ்வடிவத்தில் பெருக வழங்குகிறது. இதனை ஐந்தாம் வகை அடிநிலைத்திரிபுகள் எனலாம்.

ஒன்று → ஒக்க → ஏக் → கே → கெத் → சிக்சே எனத்திரிந்து ஒன்றைக் குறித்த சொல்லாட்சிகளை வடநாட்டு மொழிகளிலும் சமற்கிருதத்திலும் பூட்டான், சிக்கிம், மியான்மார் (பர்மா) திபேத்து, இந்தோனேசியா, மலாய், ஆப்பிரிக்க பண்டுமொழிகளிலும் காணமுடிகிறது. இதனை ஆறாம் வகை அடிநிலைத்திரிபுகள் எனலாம்.

ஒல் + ஒது - ஒன்று எனத்திரியாமல் ஒத்து எனவும் ப,ம,வ, முன்னெழுத்துப் பெற்றுப் பொத், மொத்து, வொத் எனவும் திரிந்து ஒன்றைக் குறித்த சொல்லாட்சிகளை பாசுக்கு, வியட்நாம், எகுபதிய சாப்திக்கு ஆகிய பல்வேறு திசைகளில் சிதறிய தனிநிலை மொழிகளில் காணமுடிகிறது. இதனை ஏழாம் வகை அடிநிலைத்திரிபுகள் எனலாம்.

உலகமொழிகளில் ஒன்று என்னும் எண்ணுப்பெயர் வழக்கூன்றிய இவ்வரலாறு அவ்விடம் மொழிகள் பிரிந்துசென்ற காலங்களை உணர்த்துவன எனக்கொள்ளலாம்.

ஒன்று[3] *oṉṟu,* பெ. (n.) 1. ***ஒற்றுமை;*** union. "வேந்தர் வேந்த நிதயமு மொன்றாய் நின்ற வியற்கையை" (பாரத.சூதுபோர்.7). 2. ***மதிப்பிற்குரிய பொருள்;*** object of consequence. "ஒன்றே செய்தலும் வேண்டும், ஒன்றும் நன்றே செய்தலும், நன்றும் இன்றே செய்தலும் வேண்டும்." 3. ***மதிப்புக்குரிய மாந்தன்;*** person worthy of regard. "ஒறுத்தாரை யொன்றாக வையாரே" (குறள்.155). 4. ***ஒப்பற்றது;*** that which in uncomparable. ஒன்றேயாக நிறைந்த இறைவன் (வ.வ.) 5. ***வீடுபேறு*** (திவா.); attaining salvation. 6. ***வாய்மை;*** truth. "ஒன்றுரைத்து" (கம்பரா.கிளை.24).

[ஒல் → ஒன் → ஒன்று.]

ஒன்று[4] *oṉṟu,* பெ. (n.) 1. ***சிறுநீர் கழித்தலுக்கு ஆகுபெயராய் வழங்கும் சொல்;*** enphemism for urination. ஒன்றுக்குப்போய்வா (உ.வ.). 2. ***விள்ளு (விந்து.);*** semen. "இரண்டடக்கார் ஒன்று பலகாலமும் விட்டிடார்" (திருவேங்.சத.74).

[ஒல் → ஒன் → ஒன்று.]

ஒன்று[5] *oṉṟu,* இடை. (conj.) ***அயற்படு பொருளைச் சுட்டும் இடைச்சொல்;*** or, else. ஒன்று தீவினையை விடு; ஒன்று அதன் பயனை நுகர் (உ.வ.).

[ஒல் → ஒன்று.]

ஒன்றுக்கிரு-த்தல் *oṉṟukkiru-,* 2.செ.கு.வி. (v.i.) ***சிறுநீர் கழித்தல்;*** to urinate. (செ.அக.).

[ஒன்று[2] + கு + இரு-த்தல்.]

ஒன்றுக்குப்போ-தல் *oṉṟukku-p-pō-,* 8.செ.கு.வி. (v.i.) ***ஒன்றுக்கிரு*** பார்க்க; see *oṉṟukkiru.*

[ஒன்று[2] + கு + போ.]

ஒன்றுக்குமற்றவன் *oṉṟukkum-aṟṟavaṉ,* பெ. (n.) ***பயனற்றவன்;*** good-for-nothing fellow, useless person. (செ.அக.).

[ஒன்றுக்கும்[2] + அற்றவன்.]

ஒன்றுக்கொன்று *oṉṟukkoṉṟu,* பெ. (n.) 1. ***ஒன்றோடொன்று;*** mutuality; one with another. ஒன்றுக்கொன்று தொடர்ச்சியாயிருக்கிறது (உ.வ.). 2. ***ஒன்றினொன்று;*** comparison of one thing with another. ஒன்றுக்கொன்று மேல். 3. ***ஏட்டிக்குப்போட்டி*** பார்க்க; see *ēṭṭikkuppōṭṭi.* நான் பேசினால் ஒன்றுக்கொன்று சொல்லுவேன் (உ.வ.). (செ.அக.).

[ஒன்று[2] + கு + ஒன்று.]

ஒன்றுகட்டு-தல் *oṉṟu-kaṭṭu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***சரிப்படுத்துதல்*** (யாழ்.அக.); to square up; to balance. (செ.அக.).

[ஒன்று[1] + கட்டு.]

ஒன்றுகுடி *oṉṟu-kuḍi,* பெ. (n.) ***ஒட்டுக்குடி*** (வின்.); family or person living in another's house or garden. (செ.அக.).

[ஒன்று[1] + குடி.]

ஒன்றுகூட்டு[1]-தல் *oṉṟu-kūṭṭu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஒன்றாய்ச் சேர்த்தல்;*** to gather together, collect. 2. ***ஒருமனதாக்குதல்;*** to bring about an agreement.

[ஒன்று[2] + கூட்டு.]

ஒன்றுகூட்டு[2] *oṉṟu-kūṭṭu,* பெ. (n.) ***ஒருசேர்க்கை*** (வின்.); concord; harmony; living on terms of friendship. (செ.அக.).

[ஒன்று[2] + கூட்டு.]

ஒன்றுகூட்டு[3] *oṉṟu-kūṭṭu,* பெ. (n.) ***கொண்டுகூட்டு*** (யாழ்.அக.); mode of construing a verse. (செ.அக.).

[ஒன்று[1] + கூட்டு.]

ஒன்றுகூடு-தல் *oṉṟu-kūḍu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***ஒன்றாய்ச் சேர்தல்;*** to meet one another; to gather in an assembly; to assemblo together. 2. ***ஒன்றுபடுதல்;*** to be united in harmony. (செ.அக.).

[ஒன்று[2] + கூடு.]

ஒன்றுகை *oṉṟugai,* பெ. (n.) ***இசைகை;*** fitting together. (செ.அக.).

[ஒன்று → ஒன்றுகை.]

ஒன்றுகொத்தையா-தல் *onru-kottai-y-ā-*, 6.செ.கு.வி. (v.i.) ***அரைகுறையாதல்;*** to be defective, incomplete. 'ஒன்றுகொத்தையாய்க் காரியஞ்செய்கிறான்' (கொ.வ.) (செ.அக.).

[ஒன்று² + கொத்தை + ஆ(கு).]

ஒன்றுநன் *onrunan*, பெ. (n.) ***நண்பன்*** (பிங்.); he who is at one with a person, friend. (செ.அக.).

[ஒன்று¹ → ஒன்றுநன்.]

ஒன்றுபடு¹-த்தல் *onru padu-*, 20.செ.கு.வி. (v.i.) ***ஒப்புரவாக்கல்;*** to bring about friendship. (ஆ.அக.).

[ஒன்று² + படுத்தல்.]

ஒன்றுபடு²-தல் *onru-padu-*, 20.செ.கு.வி. (v.i.) 1. ***ஒருதன்மையாதல்;*** to coalesce. "ஒன்றுபட்டு வழிமொழிய" (புறநா.17,4). 2. ***இணக்கமாதல்;*** to become reconciled; to make peace. இருபாலாரும் ஒன்றுபட்டார்கள் (செ.அக.).

[ஒன்று² + படு.]

ஒன்றுபாதி *onrupādi*, பெ. (n.) 1. ***பாதி*** (இ.வ.); a moiety, a half. 2. ***ஏறக்குறையப் பாதி*** (இ.வ.); roughly half. 3. ***நடுஇரவு;*** mid night. 4. ***சிலபல;*** some. (செ.அக.).

ம. ஒன்றுபகுதி.

[ஒன்று² + பாதி.]

ஒன்றும் *onrum*, பெ. (n.) ***சிறிதும்;*** anything, even onething. (used with negative predicates) ஒன்றும் செய்யவில்லை (உ.வ.).

ம. ஒன்னும்.

[ஒன்று + உம்.]

ஒன்றுமண்டடி *onru-mandadi*, பெ. (n.) ***ஒன்றடிமன்றடி*** பார்க்க; see *onradimanradi*. (யாழ்ப்.) (செ.அக.).

ஒன்றுமற்றவன் *onrum-arravan*, பெ. (n.) 1. ***ஏழை, வறியவன்*** (தரித்திரன்); destitute, poorman. (செ.அக.). 2. ***பயனற்றவன்;*** good for nothing fellow, useless person. (ஆ.அக.).

[ஒன்றும் + அற்றவன்.]

ஒன்றுமன்றடி *onru-manradi*, பெ. (n.) ***ஒன்றடிமன்றடி*** (யாழ்ப்.) பார்க்க; see *onradimanradi*. (செ.அக.).

ஒன்றுமொழி-தல் *onru-moli-*, 2.செ.கு.வி. (v.i.) ***வஞ்சினங்கூறுதல்;*** to declare with an oath. "இடியிசைமுரசமொடொன்று மொழிந்து" (பதிற்றுப்.66,4). (செ.அக.).

[ஒன்று² + மொழி-தல்.]

ஒன்றுமொழிகோசர் *onrumoli-kōsar*, பெ. (n.) ***சொன்ன சொல் தவறாத ஒற்றுமையுடைய கோசர்;*** Kosar, a community known for their integrity and truthfulness.

[ஒன்று + மொழி + கோசர்.]

ஒன்றுவிட்ட *onru-vitta*, கு.பெ.எ. (adj.) ***உறவு முறையில் ஒரு தலைமுறை விட்ட;*** one step removed, in relationship. அவன் எனக்கு ஒன்று விட்ட அண்ணன் (உ.வ.) (செ.அக.).

[ஒன்று + விட்ட.]

ஒன்றுவிடாமல் *onruvidāmal*, வி.எ. (adv.) ***முழுமையாக ஒன்றும் விடாமல்;*** not leaving out anything, everything included, entirely, fully.

ம. ஒன்னொழியாதெ.

[ஒன்று + விடாமல்.]

ஒன்றொழிபொதுச்சொல் *onroli-podu-c-col*, பெ. (n.) ***இருதிணையாண்பெண்ணுள் ஒன்றினையொழிக்கும் பொதுச் சொல்*** (நன்.269); term common to both genders, one of which is intended, the other being excluded by the context.

[ஒன்று + ஒழி + பொதுச்சொல்.]

ஒன்றோ *onrō*, இடை. (part.) 1. ***எண்ணிடைச்சொல்;*** not only, but also; connective between nouns and sometimes verbs. "பொய்படு மொன்றோ புனைபூணும்" (குறள்,836). 2. ***ஐயப்படு பொருள் தரும் இடைச்சொல்;*** either-or "ஏவலா னரச னொன்றோ விருபிறப்பாளன்" (சீவக.1682).

[ஒன்று + ஓ. ஒன்றோ. ஓகாரம் பிரிநிலை.]

ஒன்னப்பூ *onnap-pū*, பெ. (n.) ***காதணியுளொன்று*** (வின்.); an ear-ornament worn by women. (செ.அக.).

[உன்மை → ஒன்னம் + பூ - ஒன்னப்பூ.]

ஒன்னலன் *onnalan*, பெ. (n.) ***பகைவன்;*** enemy, foe. "ஒன்னலர் மணிமுடி யுரிஞ்சு தாளினான்" (நைடத.நகரப்.39) (செ.அக.).

[ஒன்று + அல + அன் - ஒன்றலன் → ஒன்னலன்.]

ஒன்னாதோர் *onnādōr*, பெ. (n.) ***பகைவர்;*** foes, enemies. "இன்னாய் பெருமநின் னொன்னா தோர்க்கே" (புறநா.94,5) (செ.அக.).

[ஒன்று + ஆ + த + அவர் - ஒன்றாதவர் → ஒன்றாதார் → ஒன்னாதார் → ஒன்னாதோர்.]

ஒன்னார் *onnār*, பெ. (n.) ***ஒன்னாதோர்*** பார்க்க see *onnādōr*. "தன்னொன்னார்" (நாலடி,129) "ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்" (குறள்.). (செ.அக.).

[ஒன்னாதார் → ஒன்னார்.]

ஒன்னான் *onnān*, பெ. (n.) ***பள்ளிக்கூடத்திற்கு ஏறானை யடுத்துவரும் பையன்;*** the boy who comes second to school and next to the first boy called *ērān*. (செ.அக.).

[ஒன் → ஒன்று + ஆன் - ஒன்றான் → ஒன்னான் = ஒன்றிவருபவன், ஒத்து வருபவன்.]

ஒன்னு¹-தல் *onnu-*, 12.செ.குன்றாவி. (v.t.) ***பொறுத்தல்;*** to endure. "ஒன்னா முனையோர்க் கொழிக வினித்துயில்" (பு.வெ.4,21) (செ.அக.).

[ஒல் → ஒன் → ஒன்னு.]

ஒன்னு²-தல் *onnu-*, 15.செ.கு.வி. (v.i.) ***பொருந்துதல்;*** to agree, to be friendly. "ஒன்னாப் பூட்கைச் சென்னியர் பெருமான்" (பதிற்று.85-3).

[ஒல் → ஒன் → ஒன்னு.]

ஓ

ஓ[1] *ō,* ***தமிழ் வண்ணமாலையில் பதினொன்றாம் உயிரெழுத்தாகிய அரையங்காப்பு இதழ்குவியா பின்னண்ணச் செறிவு உயிர்நெடில்;*** 11th letter and vowel of the alphabet the half-close back tense unrounded vowel in Tamil.

[உஅ → ஓ.]

அஇ → ஐ ஆகவும், அஉ → ஔ ஆகவும் இருகுறில் கூட்டுயிரொலி உயிர்நெடில்களாக உருப்பெற்றதைப்போன்று, இஅ → ஏ எனவும், உஅ → ஓ எனவும் கூட்டுயிர் நெடில்கள் தோன்றின. ஒ.நோ. இய = செல், இய → ஏ (ஏகு) = செல். உவ = உவத்தல், மகிழ்தல். உவ → ஓ (ஓகை) = மகிழ்வு.

ஏ, ஓ என்னும் கூட்டுயிர்கள் இயல்பு வினையடிகளைத் தோற்றுவிப்பதில்லை. இயலுதல் → ஏலுதல் என்றவாறு 'ஏல்' திரிபு வினையடியாதலன்றி இயல்பு வினையடி ஆகா தென்க. ஒருசார் ஒலிக்குறிப்பு நெட்டெழுத்தாகி ஆக்கச்சொல்லாதலே மிகுதியாம்.

ஓ[2] *ō,-* ***விளரியென்னும் இசையின் எழுத்து*** (திவா.); (mus.) symbol representing the sixth note of the gamut.

ஓ[3]-தல் *ō-,* 6.செ.கு.வி. (v.i.) 1. ***முளைத்தல்;*** to sprout. 2. ***தோன்றுதல்;*** to originate. 3. ***எழுதல்;*** to rise.

[உ → ஊ → ஓ.]

ஓ[4]-தல் *ō-,* 6.செ.கு.வி. (v.i.) 1. ***உயர்தல், ஓங்குதல்;*** to become high, rise, go up. 2. ***தொலைவு ஆதல்;*** to become distant.

[உ → ஊ → ஓ.]

ஓ[5]-தல் *ō-,* 6.செ.கு.வி. (v.i.) ***நீங்குதல், கடத்தல், விலகுதல்;*** to be removed, pass off, to keep away.

[ஒருவு → ஒரு → ஓ.]

ஓ[6]-தல் *ō-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***தடுத்தல்;*** to abstract.

[உல் → ஒல் → ஓ. உல் = குத்தல், தடுத்தல்.]

ஓ[7]-தல் *ō-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***விடுத்தல்;*** to leave, abandon.

[ஒரு(வு) → ஓ.]

ஓ[8] *ō,* பெ. (n.) ***தொலைவு;*** distance.

[ஊ → ஓ.]

ஓ[9] *ō,* பெ. (n.) ***ஒப்பு, பொருத்தம்;*** suitability, comparison, appropriateness, resemblance.

[உ → ஒ → ஓ (முதா.218).]

ஓ[10] *ō,* பெ. (n.) 1. ***சென்று தங்குகை;*** going and staying. ''ஓவற விமைக்கும் ... ஒளி'' (திருமுரு.3). 2. ***மதகுநீர் தாங்கும் பலகை*** (தொல்.எழுத்.180,உரை.); shutter or other means to stop the flow of water.

[உய் → ஒய் → ஓ.]

ஓ[11] *ō,* பெ. (n.) 1. ***முளை;*** sprout. 2. ***தோற்றம்;*** origin. 3. ***எழுதல்;*** rising.

E. origin, *fr.* origine, *L.* origo, originis, orior, to rise.

[உல் → ஒல் → ஓ.]

ஓ[12] *ō,* இடை. (int.) 1. ***உயர்விழிவுகளின் சிறப்புக் குறிப்பு*** (நன்.423); oh! expressing superiority or inferiority. ஓஒ பெரியன், ஓஒ கொடியன். 2. ***கழிவிரக்கக் குறிப்பு;*** also! ah! expressing bereavement. ''ஓஒ தமக்கோ ருறுதி யுணராரோ'' (நன்.423,விருத்.). 3. ***மகிழ்ச்சிக் குறிப்பு;*** ha! expressing joy. ''ஓ பெரிதுவர்ப் பக் கேட்டேன்'' (சீவக.905). 4. ***வியப்புக் குறிப்பு;*** oh! expressing wonder. ''முகந் திங்களோ காணீர்'' (சிலப்.7,பாடல்.11). 5. ***நினைவுக் குறிப்பு;*** o! expressing recollection. 'ஓ தெரிந்தது'. 6. ***அழைத்தற் குறிப்பு;*** halloa! calling attention. 'ஓ கண்ணா! 7. ***உரத்த ஓசையைக் குறிக்கும் எழுத்தொலி அல்லது ஒலிக்குறிப்பு;*** expression or prolonged 'ō' sound. 'ஓ வென வையகத் தோசையோ யுயர்ந்ததே'' (சீவக.1843).

ம., க. ஓ; தெ. ஓரே.

[ஊ → ஓ. (வே.க.112).]

ஓ[13] *ō,* இடை. (part.) 1. ***ஒழிபிசை, வினா, எதிர்மறை, தெரிநிலை, ஐயம் ஆகிய பொருள்களில் வரும் சொல்லீறு;*** ending of words signifying ellipsis of a counterpart, interrogation, negation, discrimination, distinctiveness, doubt. 2. ***அசைநிலை*** (நன்.423,விருத்.); expletive.

ம., க. ஓ.

[ஓ - ஒலிக்குறிப்பு, தொடராட்சி பொருளைக் குறிப்பால் புலப்படுத்தியது.]

ஓ[14]-த்தல் *ō-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***புணர்தல்*** (அக.நி.); lit., to be of one mind, transf., to copulate.

ம. ஒக்குக; க., குட. ஒள்.

[உ → உல் → ஒல் → ஒள் → ஓ.]

ஓஒ *ōo,* இடை. (int.) ***வியப்புக்குறிப்பு*** (பிங்.); oh! o! expressing wonder.

[ஓ + ஓ.]

ஓக்கம்[1] *ōkkam,* பெ. (n.) 1. ***உயரம்;*** height. 2. ***எழுச்சி;*** elevation. ''ஓக்கநீள் விசும்பு'' (சீவக.866). 3. ***பெருமை;*** increase, enlargement, bigness, largeness. ''சுருங்கிற்றி ரண்டடி யோக்கமிரட்டி'' (காரிகை.ஒழிபி.7).

[ஓங்கு → ஓக்கு → ஓக்கம் (சு.வி.61).]

ஓக்காளம் *ōkkāḷam,* பெ. (n.) ***கக்கலுக்கு முந்திய வாயசைவு;*** retching, heaving, involuntary effort of the stomach in nausea. 'உள்ளியை மோந்தால் எனக்கு ஓக்காளம் வரும்'. (உ.வ.).

ம. ஒக்கானம்; க. ஒகரி, ஒகாள, ஒகரிகெ, ஒகரிசுக, ஒகடிகெ; து. ஓங்கெ; தெ. ஒகர, ஒகிலி, ஒகரிதை, ஒகிலிதை.

[ஒக்களி → ஒக்காளம் (த.வ.53).]

ஓக்காளி-த்தல் *ōkkāḷi-*, 4.செ.கு.வி. (v.i.) ***வாய்க்குமட்டல்;*** to heave; to nauseate; to retch from sickness. - 4.செ.குன்றாவி. (v.t.) ***கக்கல்;*** to vomit. "குழந்தை பாலையெல்லாம் ஒக்காளித்து விட்டது".

ம. ஒக்காளிக்குக, ஒக்கானிக்குக; க. ஒகரிசு, ஒகளிசு, ஒக்கரிசு, ஒகடிசு; து. ஓங்கதெ; தெ. ஒகரின்சு.

[ஒக்களி → ஒக்காளி.]

ஓக்காளிப்பு *ōkkāḷippu*, பெ. (n.) ***குமட்டல்;*** retching, incipient sickness, squeamishness. காய்ச்சல் விட்டும் ஒக்காளிப்பு விடவில்லை.

ம. ஒக்காளம்; க. ஒகரி, ஒகான; து. ஓங்கதெ; தெ. ஒகர, ஒகிலி.

[ஒக்காளி → ஒக்காளப்பு.]

ஓக்கியம் *ōkkiyam*, பெ. (n.) ***ஏற்றது;*** that which is fit, appropriate. "உடலாக்குந் தன்மைக் கோக்கிய சக்தி யுண்டாய்" (சி.சி.2,48).

[ஒல் → ஒக்கு → ஒக்கியம் → ஓக்கியம். இச்சொல் வடமொழியில் யோக்கியம் எனத்திரிந்தது. வடநூலார் yogya - (from, 'Yug') - fit for the yoke எனப் பொருட்காரணம் கூறுதலின் உழுதலுக்கும் பொருத்துதலுக்கும் பொருத்தமின்றாதல் அறிக.]

ஓக்கு-தல் *ōkku-*, 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***உயர்த்துதல்;*** to raise, lift up. "ஓக்கிய வொள்வாள்" (நாலடி.,129). 2. ***எழும்பச் செய்தல்;*** to cause to rise. "வேலினோக்கிய விளக்குநிலையும்" (தொல்.பொருள்.90). 3. ***வரைந்து வைத்தல்;*** to set apart. "நினைப்பலி யோக்குவல்" (திருக்கோ.235). 4. ***தருதல்*** (திருக்கோ.235, உரை.); to give, bestow. 5. ***எறிதல்;*** to throw. "சந்தனத் தளிர் நன்மாலை யோக்கினார்" (சீவக.2661). 6. ***ஆக்குதல்;*** to make, produce. "ஓக்கினே வென்னையும்" (திவ்.இயற்.2,59). 7. ***கொடுத்தல்;*** to give.

[ஓ → ஓங்கு → ஓக்கு.]

ஓகணம் *ōgaṇam*, பெ. (n.) ***மூட்டைப்பூச்சி*** (யாழ்.அக.); bug.

[உகணை → ஒகணை → ஒகணம் → ஓகணம். உகணை → இகணை → திகணை எனத்திரிந்து திரவிட மொழிகளில் வழங்குகிறது. உகணை பார்க்க see ugaṇai.]

ஓகணி *ōgaṇi*, பெ. (n.) 1. ***பேன்;*** louse. 2. ***மூட்டைப் பூச்சி;*** bug. (சா.அக.).

[உகணி → உகணை → ஒகணை → ஒகணி → ஓகணி. உகணி பார்க்க; see ugaṇi.]

ஓகம்[1] *ōgam*, பெ. (n.) 1. ***வெள்ளம்*** (சூடா.); flood. 2. ***பெருங்கூட்டம்;*** crowd, multitude. "ஓகவெஞ் சேனையும்" (கம்பரா.அதிகாய.2).

[உகு → ஒகு → ஓகம்.]

ஓகம்[2] *ōgam*, பெ. (n.) 1. ***அடைக்கலம்;*** refuge. 2. ***அறிவுரை;*** counsel. 3. ***திரட்சி;*** condensation. 4. ***வீடு;*** house. (ஆ.அக.).

[உல் → ஒல் → ஒக்கு → ஓகம்.]

ஓகம்[3] *ōgam*, பெ. (n.) ***அடைக்கலங் குருவி;*** sparrow. (சா.அக.).

[புகம் → பொகம் → போகம் → ஓகம். புகலாங்குருவி பார்க்க; see pugalāṅkuruvi.]

ஓகாரம்[1] *ōgāram*, பெ. (n.) ***மயில்;*** letter used as a symbol for the peacock among the panca-paksi. "ஓகார பரியின்மிசை வருவாயோ" (திருப்பு.142).

[ஓம் → ஓங்காரம் → ஓகாரம்.]

தோகைவிரித்த மயிலின் வடிவு ஓகாரத்திற்கு ஒப்பான தென்றும், ஓங்காரப் பொருளான இறைவனின் ஊர்தியாதலின் அப்பெயர் பெற்றதென்றும் கூறுவது தொன்மம். தொன்முது காலத்தில் தமிழ்மொழி உருவெழுத்தாக (ஓவிய எழுத்தாக) எழுதப்பட்ட காலத்தில் மயிலின் வடிவமே ஓகார ஒலிப்பின் வரிவடிவமாக இருந்தது என்பதும் பின்னர் அசையெழுத்துக் காலத்தில் மயிலின் வடிவம் உருவெழுத்தினின்றும் சுருங்கி ஒருகோட்டோவியம் போல் அசையெழுத்துச் சுருக்கமாக மாறியதென்பதும் (Z - Z) அஃது பிராமி எனப்படும் முந்துதமிழ் எழுத்திலும் நிலைத்தது என்பதும் அறியத்தக்கது.

ஓகாரம்[2] *ōgāram*, பெ. (n.) ***'ஓம்' என்னும் மந்திரவெழுத்தின் சுருக்கம்;*** letter 'ō' representing 'ōm'.

[ஓம் → ஓ → ஓகாரம். 'காரம்' - எழுத்துச்சாரியை.]

ஓகாளம் *ōgāḷam*, பெ. (n.) ***ஓக்காளம்*** பார்க்க; see *ōkkāḷam*. "சூளையர்க ளோகாளஞ் செய்யாமுன்" (பதினொ.சேத்.13).

[ஒக்காளம் → ஓகாளம்.]

ஓகுலம் *ōgulam*, பெ. (n.) ***அப்பம்*** (யாழ்.அக.); sweet cake.

[உகுள் → உகுளம் → ஒகுளம் → ஓகுலம்.]

ஓகை[1] *ōgai*, பெ. (n.) ***ஆரவாரம்;*** loud noise, shouting. "பொருதோகை சுரராசபர மேற விடுகாளை" (தக்கயா கப்.5).

[ஓதை → ஓகை.]

ஓகை[2] *ōgai*, பெ. (n.) ***வருவது சொல்வது, விரிச்சி*** (அக.நி.); prediction, prognostication.

[ஓர்கை → ஓகை.]

ஓகை[3] *ōgai*, பெ. (n.) ***மகிழ்ச்சி;*** delight, joy. "ஓகையோ டிருத்தி" (பாரத.குருகுல.93).

[உவகை → ஓகை.]

ஓகோ *ōgō*, இடை. (int.) ***வியப்பு, மருட்கை, வெறுப்பு, இரக்கம், வருத்தம் ஆகிய உணர்வுகளைக் காட்டும்***

இடைச்சொல்; expressing wonder, surprise, concern, pity, regret. ''ஓகோ வுனைப்பிரிந்தார்'' (தாயு.பராப ரக்.30).

[ஓ + ஓ - ஓகோ.]

ஓகோதனி *ōgōdani,* பெ. (n.) ***ஓகணம்*** பார்க்க; see *ōganam.* (யாழ்.அக.).

[ஓகணம் → ஓகதனம் → ஓகோதணம் → ஓகோதனி.]

ஓங்கல்[1] *ōṅgal,* பெ. (n.) 1. ***உயர்ச்சி*** (திவா.); height, elevation. 2. ***எழுச்சி*** (பிங்.); rising. 3. ***மலை;*** mountain. ''ஓங்கலைத் தாங்க லூற்றான்'' (தேவா.589,10). 4. ***மேடு*** (பிங்); mound, elevation. 5. ***மலையுச்சி;*** mountain top. ''யாங்கு வல்லுநையோ வோங்கல் வெற்ப'' (ஐங்குறு.231). 6. ***தலைவன்*** (பிங்); chief, leader, superior, king. 7. ***வலியோன்*** (பிங்.); strong man. 8. ***வழித்தோன்றல்*** (பிங்.); descendant. 9. ***யானை*** (அக.நி.); elephant. 10. ***மழைத்துளியால் உயிர்வாழும் சாலகப்*** (சாதகம்) ***பறவை;*** bird said to subsist on rain drops. ''நீரிடும்பை புள்ளினு ளோங்க லறியும்'' (நான்மணி.97). 11. ***வாயாலெடுத்தல்*** (பிங்.); retching, heaving, vomiting.

ம. ஓங்கல்.

[ஓங்கு → ஓங்கல் (வே.க.34).]

ஓங்கல்[2] *ōṅgal,* பெ. (n.) 1. ***மரம்;*** tree. ''செருந்தியுஞ் செண்பக வோங்கலும்'' (சிலப்.13,153). 2. ***மூங்கில்*** (திவா.); bamboo. 3. ***மரக்கலம்*** (அக.நி.); boat, vessel.

[ஓங்கு → ஓங்கல். உயர்தல் பொருள் (தொழிலாகு பெயர்). மரத்தையும் மூங்கிலையும் மரத்தால் செய்த கப்பலையும் சுட்டியது.]

ஓங்கற்பிணி *ōṅgaṟpiṇi,* பெ. (n.) 1. ***ஆட்டிற்கு முள்ளந் தண்டில் காணுமோர் நோய்;*** disease of the sheep. 2. ***கடும்பிணி;*** disease which tends to increase day by day. 3. ***கக்கலோடு கூடிய நோய்;*** any disease accompanied by vomiting. 4. ***நாளுக்குநாள் இளைக்கச் செய்யும் நோய்;*** any disease marked by progressive wasting of the body. (சா.அக.).

[ஓங்கல் + பிணி.]

ஓங்கன் *ōṅgaṉ,* பெ. (n.) ***ஓமம்;*** bishop's weed. (சா.அக.).

[ஓமம் → ஓமன் → ஓங்கன் (கொ.வ.).]

ஓங்காரம் *ōṅ-gāram,* பெ. (n.) 1. ***நெட்டோசை;*** long sound. 2. ***மூலமந்திரம்*** (பிரணவம்); om, the mystic syllable. ''ஓங்காரத் துட்பொருளாய் நின்றான்'' (தேவா.320,10). 3. ***குழந்தையின் அழுகை;*** crying sound of the child. இந்தக் குழந்தை எப்பொழுதும் ஓங்காரம் வைத்துக் கொண்டிருக்கிறது. (உ.வ.).

[ஓம் + காரம்.]

'ஓம்' ஒலிப்புக்குரிய இறைவன் அண்டபேரண்டங்களாக விரிந்த வானப்பெருவளி இயங்கும் ஓசையின் வடிவம் என வும், ஊழ்கத்தில் (தியானம்) மூழ்குவோர் மனத்தெழும் ஓசையின் வடிவம் எனவும் விளக்கம் கூறுவர். ஆகாரம் ஏகாரம் என எழுத்தின் சாரியையாக வரும் காரச்சாரியை, ஓ (ஓம்) மூலமந்திர எழுத்தெனக் கொண்டதால் இதற்கும் சாரியையாயிற்று. 'ஓம்' என்பதன் உட்பொருளைத் தமிழ்க் கடவுள் முருகன் விவரித்துரைத்ததாகத் தொன்மம் கூறும். 'ஓம்' வடமொழியில் பிரணவமந்திரம் எனப்படும். ஓம் வரிவடிவ எழுத்தளவான் இரண்டாயினும் ஓசை வடிவில் ஈற்று மகரம் மெலிந்தொலித்து ஒரே நெட்டோசை விளைத்தலால் ஒரெ ழுத்து மந்திரமாகவே கருதப்படுகிறது.

எழுத்துகளுக்கு முதலான அகரமும் சொல்லின் வேர்களுக்கு மூலமான உகரமும் இணைந்து உலகப் பொருள்களின் தோற் றத்திற்குக் காரணமாகி உயர்தல் ஓங்குதல் எனும் பொருள்க ளுக்கு வித்தான (அ + உ) ஓகாரமாகி, உலகப் பொருள்களின் மறைவுக்கு ஒலிப்புக் குறியீடான மகரமெய்யுடன் சேர்ந்து 'ஓம்' வடிவம் பெற்றமையின் 'ஓம்' மூலமந்திரமாயிற்றென்றும் ஐந்தொழிலியக்கத் தொடர்ச்சி காட்டும் இனிய நெட்டோசை யாகி இறைவனின் கூத்தாடும் கோலத்தைக் குறித்தது என்றும் கூறுவர்.

ஓங்காரவுப்பு *ōṅgāravuppu,* பெ. (n.) 1. ***கல்லுப்பு;*** salt obtained from beds at the bottom of the sea, sea-salt. 2. ***நிலத்தில் தோண்டியெடுக்கும் பாறையுப்பு;*** earth, rock salt. (சா.அக.).

[ஓங்காரம் = வெண்மை. ஓங்காரம் + உப்பு. வாலறிவன் என அறிவும் வெண்மையாகக் கூறப்பட்டுள்ளது. ஓசையின் நிறம் வெண்மை என்பது சமணர்கொள்கை. வெண்மை நிறத்தில் அனைத்து நிறங்களும் அடக்கம். எரிநிறத்துச் சிவன் சாம்பல் பூசியவன்.]

ஓங்காரி[1]**-த்தல்** *ōṅgāri-,* 4.செ.கு.வி. (v.i.) ***ஓங்காரத்தை ஒலித்தல்;*** (வின்.); to recite the mystic syllable om.

[ஓம் + காரி.]

ஓங்காரி[2]**-த்தல்** *oṅgāri-,* 4.செ.கு.வி. (v.i.) ***ஒக்காளி*** பார்க்க; (j.); see *ōkkāḷi.*

[ஒக்காளி → ஒக்காரி → ஓங்காரி (கொ.வ.).]

ஓங்காளம் *ōṅgāḷam,* பெ. (n.) ***ஒக்காளம்*** பார்க்க (யாழ்ப்.); see *ōkkāḷam.*

ஓங்காளி-த்தல் *ōṅgāḷi-,* 4.செ.கு.வி. (v.i.) ***ஒக்காளி*** (யாழ்ப்.) பார்க்க; see *ōkkāḷi.*

ஓங்கிப்பார்-த்தல் *ōṅgi-p-pār-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***உன்னிப்பார்த்தல்*** (வின்.); to rise on tiptoe and catch sight.

[ஓங்கு → ஓங்கி + பார்.]

ஓங்கியடி-த்தல் *ōṅgi-y-aḍi-,* 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஓச்சித்தாக்குதல்;*** to raise the hand or a weapon and strike with a heavy blow. 2. ***பிறன்சொல்வது ஓங்காமல் மறுத்து மொழிதல்;*** to argue or affirm stoutly; to brush aside the opponent's arguments; to browbeat the opposite party.

[ஓங்கி + அடி.]

ஓங்கில் *ōṅgil,* பெ. (n.) ***மீன்வகை;*** tunny fish, **Dolphin** ஆழமறியும் ஓங்கில், மேளமறியும் அரவம்.

ம. ஓங்கிலாம (ஆமை வகை).

[ஒருகா. ஆழ் → ஆழ்ந்தி → ஆந்தி → ஆஞ்சில் → ஓஞ்சில் → ஓங்கில்.]

ஓங்கிவீடு *ōṅgi-vīḍu,* பெ. (n.) ***வாழ்ந்தவன் வீடு*** (இ.வ.); house in which a man lived and prospered.

[ஓங்கு → ஓங்கி + வீடு.]

ஓங்கிற்சுறா *ōṅgiṟ-cuṟā,* பெ. (n.) ***சுறாவகை*** *(வின்.); tunny-fish, which swims leaping.*

[ஓங்கில் + சுறா.]



ஓங்கிற்சுறா

ஓங்கு-தல் *ōṅgu-,* 7.செ.கு.வி. (v.i.) 1. ***உயர்தல்;*** to grow, rise high, as a tree; to ascend, as a flame; to be lofty, as a building or a mountain. "ஓங்கிய வெண்குடை" (இறை.14,95). 2. ***பரவுதல்;*** to spread, extend, expand. "அகில முற்றுமா யோங்கிய கால்களும்" (கந்தபு.திருவவதார.48). 3. ***வளர்தல்;*** to grow, as a child. "செறிந்தொர் செம்மலா யோங்குப" (கந்தபு.திருவவதார.75). 4. ***பெருமையுறுதல்;*** to be exalted, dignified. "ஓங்கு மெய்ப்பொருட்கு மேலா மோரெழுத்து" (கந்தபு. அயனைச் சிறைநீக்கு.42). 5. ***பெருகுதல்;*** to increase in wealth, in renown, in learning; to flourish. "ஓங்கொளியா யோங்கி" (தாயு.பராபர.6). 6. மேலேபறிதல்; to depart, as the spirit. "உயங்கினா ளோங்கிற் றுயிர்" (பு.வெ.4,13). 7. ***குமட்டுதல்;*** to heave, retch, vomit. - 5.செ.குன்றாவி. (v.t.) ***உயர்த்துதல்;*** to lift up, raise, as the arm or a weapon or a pestle. அடிக்கக் கையோங்கினான்.

ம. ஓங்பு; கோத. ஒக.

[ஊ → ஓ → ஓங்கு.]

ஓச்சம்[1] *ōccam,* பெ. (n.) ***உயர்வு;*** eminence. "வெவ்வரோச்சம் பெருக" (பதிற்றுப்.41,20).

[ஓ → ஓச்சம்.]

ஓச்சம்[2] *ōccam,* பெ. (n.) ***புகழ்*** (யாழ்ப்.); celebrity, renown. ஊரோச்சம், வீடுபட்டினி.

[ஓ → ஓச்சம்.]

ஓச்சம்[3] *ōccam,* பெ. (n.) ***குறைபாடு, குறை, குற்றம்;*** defect, shortcoming, error.

[ஒச்சம் → ஓச்சம்.]

ஓச்சர் *ōccar,* பெ. (n.) 1. ***கணக்காயர்;*** accountant. 2. ***பதினெண்குடி மக்களிலொருவர்;*** one of 18 categories of royal officials. (ஆ.அக.).

[உவச்சர் → ஓச்சர்.]

ஓச்சல்[1] *ōccal,* பெ. (n.) ***உயர்வு*** (பிங்.); height, elevation.

[ஓ → ஓச்சல்.]

ஓச்சல்[2] *ōccal,* பெ. (n.) ***அசதி;*** tiredness. உடம்பு ஓச்சலாயிருக்கிறது. (இ.வ.).

[ஓய்வு → ஓய்ச்சல் → ஓச்சல்.]

ஓச்சன்[1] *ōccaṉ,* பெ. (n.) ***காளிகோயிற்பூசகன்;*** priests in temples sacred to Pitāri and other village goddesses.

ம. ஓச்சன்.

[உவச்சன் → ஓச்சன்.]

ஓச்சன்[2] *ōccaṉ,* பெ. (n.) ***துயரக்குறிப்பு*** (யாழ்.அக.); sign of sorrow.

[ஓ → ஓச்சன். ஓ - துயரக்குறிப்பு இடைச்சொல்.]

ஓச்சன்கத்தி *ōccaṉ-katti,* பெ. (n.) ***பலியிடப் பயன்படுத்தும் வெட்டுவாள்*** (உ.வ.); large billhook for beheading animals in sacrifices.

[ஓச்சு → ஓச்சன் + கத்தி.]



ஓச்சன்கத்தி

ஓச்சி *ōcci,* பெ. (n.) ***விலங்குகளை விரட்டும் அல்லது துரத்தும் ஒலிக்குறிப்பு;*** onom. expression used to drive animals. அவள் நாயை ஓச்சி ஓச்சி என்று விரட்டினாள் (கொங்.வ.).

[ஓ → ஓச்சி.]

ஓச்சினி *ōccini,* பெ. (n.) ***ஒன்பதாம் மாதம்;*** ninth month, said of a pregnant woman. (சா.அக.).

[ஒன்பது → ஒன்பான் → ஒன்பானி → ஓச்சினி → ஓச்சினி.]

ஓச்சு-தல் *ōccu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***எறிதல்;*** to cast, throw, discharge, as a weapon. ''செழியன் செண்டெ டுத்துந்தியன் றோச்சலும்'' (காஞ்சிப்பு.நகர.67) (சூடா.). 2. ***உயர்த்துதல்;*** to raise in order to strike, as the arm, a weaon; to lift up in a threatening manner. ''கடிதோச்சி மெல்ல வெறிக'' (குறள்,562). 3. ***ஓட்டு தல்;*** to drive away, chase. வண்டோச்சி மருங்கணைதல். 4. ***செலுத்துதல்;*** to cause to go; to ride; to govern; to wield; to sway, as a sceptre. ''கோலோச்சு மாநில மன்னன்'' (குறள்,544). 5. ***பாய்ச்சுதல்;*** to insert, thrust into, stick in. ''ஒரு புனிற்றா போற்று மவன்மேன் மருப்போச்ச'' (பெரியபு.சண்டேச.17). 6. ***தூண்டிவிடு தல்*** (வின்.); to excite, spur on, incite.

ம. ஓச்சுக.

[ஓ → ஓச்சு.]

ஓச்சை *ōccai,* பெ. (n.) ***வறையல், வறுவல்*** (திவா.); fried food.

[உல் → உறு → உறுத்து → உத்து → உச்சு → ஓச்சு → ஓச்சை = வறுத்தது.]

ஓசம் *ōšam,* பெ. (n.) 1. ***ஒளி;*** light, effulgence, lustre. ''ஓசவன் றிகிரி யோச்சி'' (பாரத.இந்திரப்.39). 2. ***புகழ்*** (யாழ்.அக.); fame, honour, splendour.

[ஒள் → ஒளி → ஒசு → ஓசு → ஓசம் (கொ.வ.).]

ஓசரம் *ōšaram,* கு.வி.எ. (adv.) ***பொருட்டு;*** for the sake of, on account of. உனக்கோசரம் வந்தேன். (இ.வ.).

தெ. கோசரமு; க. ஓசகர.

[ஆக → ஆகல் → ஆதல் → ஆதரம் → ஆசரம் → ஓசரம் (கொ.வ.).]

ஓசரி *ošari,* பெ. (n.) 1. ***கேடு;*** misfortune, fatality. 2. ***புதுமை;*** wonder. இதென்ன ஓசரி.

[ஓ - வியப்பிடைச்சொல். ஓ → ஓச்சல் → ஓச்சரி → ஓசரி. ஓசரி = துன்பம், அழிவு, கேடு. துன்பம் வரக்கண்டு கூறும் வியப்பிடைச்சொல் துன்பத்தைக் குறிக்கும் பெயராயிற்று.]

ஓசழக்கு¹ *ōšaļakku,* பெ. (n.) ***எளிமை;*** easiness, facility. ''ஒருசிலாமாத்திரத்தை யெடுத்தாற்போலே ஓசழக்காகச் சொல்லுகிறான்'' (திவ்.திருநெடுந்.13,வ்யாக்).

[ஓடிசலாக்கு → ஓடிசலக்கு → ஓசழக்கு.]

ஓசழக்கு² *ōšaļakku,* பெ. (n.) ***அழகு;*** grace, comeliness. ''ஓசழக்காக மயிரை விரித்து'' (திவ்.திருமாலை. 33,வ்யா.பக்.110).

[ஓயில் + அழகு - ஓயிலழகு → ஓசழகு → ஓசழக்கு.]

ஓசன் *ōšaṉ,* பெ. (n.) 1. ***ஆசாரியன்*** (பிங்.); preceptor, teacher. 2. ***தெய்வத்தை ஏத்துபவன்;*** priest.

ம. ஓச்சன்; க. ஓசு; தெ. ஒச்சு.

[ஓ → ஓவன் → ஓயன் → ஓசன். ஓவர் = அரசனை உயர்த்திப் பாடும் ஏத்தாளர்.]

ஓசனி-த்தல் *ōšaṉi-,* 4.செ.கு.வி. (v.i.) ***பறவை சிறகடித் தல்;*** to flap the wings, as birds or as cocks in preparation for crowing. ''ஓசனிக்கின்ற வன்னம்'' (சீவக.2652).

[ஓசை → ஓசனி → ஓசனி-த்தல். (வே.க.115).]

ஓசனை *ōšaṉai,* பெ. (n.) ***நான்கு கூப்பிடு தொலைவு;*** a measure of distance = 4 kūppiḍu. ''இன்கருப்பூரமும்... ஓசனை கமழுமே'' (சீவக.1901).

[ஓ³ → ஓயல் → ஓசல் → ஓசனை.]

இச்சொல் வடமொழியில் யோசனையெனத் திரிந்தது. ஓ → ஓசனை = தொலைவு, ஓட்டுதல், சேர்தல் எனப்பொருள்படும். 'yuj,' என்னும் சொல்லிலிருந்து yojana தோன்றியதாகக் கூறுவது பொருந்தவில்லை. குதிரை அல்லது எருதுகளைப் பூட்டுதல் என்று மட்டும் பொருள் தரும் சொல் எவ்வளவு தொலைவு ஓடவேண்டும் என்பதற்கான அடிப்படையும் சொல்லின் புடை பெயர்ச்சி ஒழுங்கும் (semantic expansion) கருதாமல் வெறு மனே பொருள் புணர்த்திக் காட்டப்பட்டுள்ளது.

தமிழில் பண்டுதொட்டே நீட்டலளவுகளும் கீழ்வாயிலக்கங் களும் மிகச்செம்மையாகப் பேணப்பட்டதால் அளவைப்பெயர் கள் செப்பம் பெற்றுள்ளன. 5¹/₄. அடி நீளமுள்ள கோலால் 2000 தடவை அளக்கும் தொலைவு ஒரு குரலோசை அல்லது கூப்பிடு தொலைவாகும். நான்கு கூப்பிடு தொலைவு ஒரு ஓசனை அல்லது காவதம் எனப்படும். இது இக்காலத்திய 11 கி.மீ. தொலைவுக்குச் சற்றொப்பப் பொருத்தமானது. இத்தொ லைவு 7¹/₂. நாழிகை (3 மணி) நேரத்தில் மெதுவாகச் செல்லும் வண்டி அல்லது மென்னடையாளர் கடக்கக் கூடிய தொலைவு என்று கூறப்பட்டுள்ளது. நிறுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவை மூன்றையும் குறித்த 'கா' என்னும் சொல்லினடி யாகத் தோன்றிய காவதம் → காதம் என்னும் சொல்லும் ஓசனை என்னும் சொல்லும் இந்திய மொழிகளில் ஊடாடியுள் ளன.

ஓசி *ōši,* பெ. (n.) ***ஆசிரியன் மனைவி;*** wife of one's teacher. ***உவச்சி*** பார்க்க; see *uvacci.*

[உவச்சி → ஓசி (கொ.வ.).]

ஓசு¹ *ōšu,* பெ. (n.) ***வலிமை;*** bodily strength, vigour. ஓசுள மைந்தரோடுசாவி (செ.அக.).

[ஆசு → ஓசு.]

ஓசு² *ōšu,* பெ. (n.) ***புகழ், பெருமை*** (யாழ்.அக.); fame, celebrity.

[ஆசு → ஓசு.]

ஓசுநன்¹ *ōšunaṉ,* பெ. (n.) 1. ***பரவ இனத்தவன்;*** male of the parava caste. ''ஓசுநர் செறிந்த ஆன்மலி யிருக்கை யும்'' (சிலப்.5,27). 2. ***நாவாய்கன்*** (சிலப்.5,27, அரும்.); sailor.

[ஓச்சு → ஓச்சுநன் → ஓசுநன் (நாவாய் செலுத்துபவன், பாய்ம ரத்தை உயர்த்துபவன், பாய்களை உயர்த்துபவன்).]

ஓசுநன்² *ōšunaṉ,* பெ. (n.) ***எண்ணெய் வாணிகன்*** (சிலப்.5,27,உரை.); oil monger.

[உய் → ஓய் → ஓய்சு → ஓசு → ஓசுநன் (எண்ணெய் பிழிபவன்).]

ஓசை[1] *ōsai,* பெ. (n.) 1. ***ஒலி*** (நாலடி.332); sound. 2. ***மிடற்றொலி;*** vocal sound. 3. ***எழுத்தோசை;*** utterance, pronunciation. 4. ***செய்யுளோசை;*** rhythm of a verse. 5. ***புகழ்;*** fame, renown, reputation. "ஓசைகொண் மைந்தரோடுசாவி" (பாரத.வேத்.22). 6. ***பாம்பு;*** snake, by a pun on aravam. "ஓசையல்லா தணிபுனையா வுரவோன்" (கூர்மபு.வயிரவ.19). 7. ***கண்ணுக்குத் தெரியாதவரிடமிருந்து வரும் ஓசை;*** sound emanating from the invisible. "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" (அப்.தேவா.).

ம. ஒச; **கோத.** ஓச்.

[ஒல் → ஒதை → ஓசை. ஓசை = ஒலி. ஓசையைக் குறிக்கும் அரவம் என்னும் சொல்லுக்குரிய பாம்பு என்னும் வேற்றுப் பொருள் நகைச்சுவை குறித்த குழூஉக்குறியாக ஆளப்பட்டுள் ளது.]

ஓசை[2] *ōsai,* பெ. (n.) ***வாழை*** (அக.நி.); plantain.

[மூசை (வாழை) → மோசை → ஓசை.]

ஓசை[3] *ōsai,* பெ. (n.) 1. ***வெண்கலம்;*** bronze. 2. ***பிறவிநஞ்சு*** (மனோசிலை); bisulphuret of arsenic or red arsenic. (சா.அக.).

[உல் → ஒல் → ஒத்து → ஒச்சு → ஓசை. ஒல் = கலத்தல், மயக்கம்.]

ஓசைப்பணம் *ōsai-p-paṇam,* பெ. (n.) ***பழைய நாணய வகை*** (பணவிடு.142); ancient coin.

[ஓசை[3] + பணம். ஓசை = கலப்பு மாழை (உலோகம்).]

ஓசையுடைமை *ōsai-y-uḍaimai,* பெ. (n.) ***இன்னோசை யுடைமையாகிய ஒரு நூலழகு*** (நன்.13); (Pros.) rhythm, one of ten nūl-alagu.

[ஓசை + உடைமை.]

ஓசையுண்(ணு)-தல் *ōsai-y-uṇ-,* 12.செ.கு.வி. (v.i.) ***செய்யுளோசை இசைதல்*** (யாப்.வி.47); to have the proper rhythm, as a verse.

[ஓசை + உண்.]

ஓசையூட்டு-தல் *ōsai-y-ūṭṭu-,* 5.செ.கு.வி. (v.i.) ***செய்யு ளோசையை வாய்பாட்டால் அளந்தறிதல்*** (யாப்.வி.57); to examine the rhythm of a stanza by scanning the lines.

[ஓசை + ஊட்டு.]

ஓட்டக்காரன் *ōṭṭa-k-kāraṉ,* பெ. (n.) 1. ***அஞ்சற்காரன்;*** runner, mail runner, relay-man. 2. ***விரைந்து ஓடுபவன்;*** one who runs fastly.

ம. ஓட்டக்காரன்.

[ஓட்டம் + காரன்.]

ஓட்டங்காட்டு-தல் *ōṭṭaṅ-kāṭṭu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***முன்னோடிக் காட்டுதல்;*** to lead the way, precede, inducing others to follow. 2. ***ஓடுவதுபோல் நடித்தல்;*** to make a pretence of running.

[ஓட்டம் + காட்டு.]

ஓட்டச்சு *ōṭṭaccu,* பெ. (n.) ***பழையவரிவகை*** (S.I.I.V.96); ancient tax.

[ஓட்டு + அச்சு - ஓட்டச்சு = குயவர் செலுத்தியவரி.]

ஓட்டசாட்டம் *ōṭṭa-śāṭṭam,* பெ. (n.) ***ஆரவாரம்;*** hurry and bustle. (நெல்லை.).

[ஓட்டம் + சாட்டம் - ஓட்டசாட்டம் = நடையும் குதியுமாயப் பறந்துகட்டிக் கொண்டு செய்யும் பணி. ஓட்டசாட்டம் (எதுகை குறித்த இணைமொழி).]

ஓட்டடுக்குவீடு *ōṭṭaḍukku-vīḍu,* பெ. (n.) ***ஓடு வேய்ந்த மனை;*** tile-roofed house.

[ஓட்டு + அடுக்கு + வீடு.]

ஓட்டடை *ōṭṭaḍai,* பெ. (n.) ***ஓட்டப்பம்*** (வின்.); pancake.

ம. ஓட்டட.

[ஓட்டு + அடை.]

ஓட்டத்தி *ōṭṭatti,* பெ. (n.) ***ஓட்டுத்துத்தி*** பார்க்க; see *ōṭṭututti.*

[ஓட்டுத்துத்தி → ஓட்டத்தி.]

ஓட்டப்பம் *ōṭṭappam,* பெ. (n.) ***அப்பவகை;*** pancake. "ஓட்டப்பம் வீட்டைச் சுடவும்" (தண்டலை.65).

ம. ஓட்டப்பம்.

[ஓடு → ஓட்டு + அப்பம்.]

ஓட்டம்[1] *ōṭṭam,* பெ. (n.) 1. ***ஓடுகை*** (காஞ்சிப்பு. மணி.18); running, speeding, galloping. 2. ***பரிவு, வேகம்;*** speed, swiftness. வாசிப்பதில் ஏன் இவ்வளவு ஓட்டம்? 3. ***நீரோடுகை;*** current, flowing. 4. ***மாணிக்கங் களின்*** (இரத்தினங்களின்) நீரோட்டம்; brilliance, as in a gem. 5. ***தோல்வி*** (பிங்.); defeat, rout, retreat. 6. ***வருவாய்;*** income, means, resources. அவருக்கு முன் போற் செலவு செய்ய இப்போது ஓட்டமில்லை. 7. ***விலைமதிப்பு ஏறுகை;*** rising higher in price. 'நூறுவரா கனுக்குமேல் இந்த நகைக்கு ஓட்டமில்லை'. 8. ***மனஞ் செல்லுகை;*** quickness of mind. அவனுக்குப் படிப்பில் ஓட்டமில்லை.

ம. ஓட்டம்; **க.** ஓட, ஓடிகெ; **கோத.** ஓட்; **து.** ஓட; **தெ.** ஓட (அச்சம்), ஓடமி, ஓடமு (தோல்வி).

[ஓடு → ஓட்டம்.]

ஓட்டம்[2] *ōṭṭam,* பெ. (n.) 1. ***மேலுதடு*** (பிங்.); upper lip. 2. ***உதடு*** (திவா.); lip.

[உதடு → ஒடு → ஒட்டு → ஓட்டம் (கொ.வ.). இஃதோர் வடதமிழ்த் (பிராகிருதம்) திரிபு.]

ஓட்டம்தரு-தல் *ōṭṭamtaru-,* 18.செ.கு.வி. (v.i.) ***ஓடிவரு தல்;*** to come running. "ஓட்டந்து தன்னெதிர் தோற்றும் புனிற்றா" (தொல்.பொருள்.58,உரை).

[ஓட்டம் + தரு - ஓட்டந்தரு).]

இது, ஓட்டந்தரு → ஓட்டந்தா → ஓட்டந்து என இறந்தகால வினையெச்சமாகும். இதனை **ஓட்டரு** எனச் சென்னை அகர முதலி தலைப்புச் சொல்லாக்கியது புணர்மொழிவழு.

ஓட்டம்பிடி-த்தல் *ōṭṭam-piḍi-,* 4.செ.கு.வி. (v.i.) ***தப்பி யோடுதல்;*** to flee, run away.

[ஓட்டம்[1] + பிடி.]

ஓட்டமறு-தல் *oṭṭam-aṟu-,* 4.செ.கு.வி. (v.i.) ***ஓட்டறு*** பார்க்க; see *ōṭṭaṟu.*

[ஓட்டம் + அறு.]

ஓட்டமெடு-த்தல் *ōṭṭam-eḍu-,* 4.செ.கு.வி. (v.i.) ***ஓட்டம் பிடி*** பார்க்க; see *ōṭṭampiḍi.* "வாலி வெரீஇயின னோட்ட மெடுத்தான்" (காஞ்சிப்பு.மணி.18).

[ஓட்டம் + எடு.]

ஓட்டல் *ōṭṭal,* பெ. (n.) 1. ***உட்செலுத்தல்;*** to insert. 2. ***திணித்தல்;*** to thrust into, as a lint is thrust into a sinus. (சா.அக.).

[ஓட்டு → ஓட்டல்.]

ஓட்டவம் *ōṭṭavam,* பெ. (n.) ***பொறிக்காளான்;*** yellow mushroom. (சா.அக.).

[ஓட்டு → ஓட்டவம். ஓட்டு = துளை, புள்ளி, குற்றம்.]

ஓட்டறு-தல் *ōṭṭaṟu-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***உருக்கித் துப்புரவு செய்யாமல் இயற்கையிலே தூய்மை யுடையதாதல்;*** to be naturally pure without refining process. 'ஓட்டற்ற செம்பொன்போலே' (ஈடு.1,10,9). 2. ***உருக்கித் தூய்மை*** (சுத்தஞ்) ***செய்தல்;*** to purify by melting, as fine gold.

[ஓட்டு + அறு - ஓட்டறு. ஓட்டு = துளை, புள்ளி, குற்றம்.]

ஓட்டன்[1] *ōṭṭan,* பெ. (n.) ***நடந்து செல்லுந்தூதன்*** (சிலப்.8,9,உரை.); runner.

ம. ஓட்டன்; க. ஓட்டகார.

[ஓடு → ஓட்டன்.]

ஓட்டன்[2] *ōṭṭan,* பெ. (n.) ***பாட்டனுக்குப் பாட்டன்*** (பரவ.); great-great-grandfather. (parava.) 'பாட்டன், பாட்டனுக்கு மேல்பூட்டன்; பூட்டனுக்குமேல் ஓட்டன், ஓட்டனுக்குமேல் உறவில்லை' (பழ.).

[ஆ → ஓ (சேய்மைச்சுட்டு) ஓடு → ஓட்டன்.]

ஓட்டாங்கச்சி *ōṭṭāṅ-kacci,* பெ. (n.) ***சிரட்டை*** (இ.வ.); coconut shell.

[ஓடு - (தேங்காய் ஓடு) ஓடு → ஓட்டு + அம் + காய் + சில் - ஓட்டாங் காய்ச்சில் → ஓட்டாங்கச்சி.]

ஓட்டாங்கட்டி *ōṭṭāṅkaṭṭi,* பெ. (n.) ***உடைத்த ஓட்டுத் துண்டு*** (ஆ.அக.); broken piece of a tile.

[ஓடு - (ஓட்டு) + ஆம் + கட்டி.]

ஓட்டாங்கிளிஞ்சில் *ōṭṭāṅ-kiliñjil,* பெ. (n.) ***உடைந்த சிப்பி*** (வின்.); broken oyster-shell.

[ஓடு - (ஓட்டு) + ஆம் + கிளிஞ்சில் - ஓட்டாங்கிளிஞ்சில் (ஓடுபோன்றிருப்பது).]

ஓட்டாங்கிளிஞ்சில்[2] *ōṭṭāṅ-kiliñjil,* பெ. (n.) ***மீன்வகை*** (யாழ்.அக.); fish.

[ஓட்டாம் + கிளிஞ்சில்.]

ஓட்டாங்குச்சு *ōṭṭāṅ-kuccu,* பெ. (n.) 1. ***உடைந்த மட்கல வோடு;*** broken piece of a pot. 2. ***தேங்கா யோடு;*** cocoanut shell. (சா.அக.).

[ஓடு + ஆம் + குழிசி - ஓட்டாங்குழிசி → ஓட்டாங்குச்சு. குழிசி → குச்சு = பானைபோன்று காணப்படும் தேங்காய்ஓடு.]

ஓட்டாண்டி *ōṭṭāṇḍi,* பெ. (n.) ***பிச்சைக்காரன்;*** beggar, carrying about a potsherd or bowl in hand. "தமிழ்நாவலரை யோட்டாண்டி யாக்கி" (தனிப்பா.1,238,8).

[ஓடு → ஓட்டு + ஆண்டி - ஓட்டாண்டி (தெருவில் திருவோடு ஏந்தி இரப்பவன்).]

ஓட்டி[1] *ōṭṭi,* பெ. (n.) ***பாட்டிக்குப்பாட்டி*** (பரவ.); great-great-great mother (parava.).

[ஆ → ஓ (சேய்மைச்சுட்டு). ஓ → உயர்வு, தொலைவு. ஓ → ஓட்டி.ஓட்டன் (ஆ.பா.) - ஓட்டி (பெ.பா.).]

ஓட்டி[2] *ōṭṭi,* பெ. (n.) ***ஓட்டும் ஆள் அல்லது பொருள்;*** one who drives; that which drives; instrument of driving, as படகோட்டி, ஆளோட்டி, பேயோட்டி, ஈயோட்டி.

ம. ஓட்டி.

[ஓட்டு + இ - ஓட்டி. இகரம் முதனிலை ஈறாகும் போது செய்பவனையும் தொழிலைக் குறித்த ஈறாகும் போது செயப்படு பொருளையும் சுட்டும்.]

ஓட்டி[3] *ōṭṭi,* பெ. (n.) ***கோவைக்கனி;*** a kind of fruit. (ஆ.அக.).

ஓட்டி[4] *ōṭṭi,* பெ. (n.) ***ஓடு, கெட்டியானவெளி ஓடு;*** shell, hard outer shell. (சேரநா.).

ம. ஓட்டி.

[ஓடு → ஓட்டி.]

ஓட்டியம் *ōṭṭiyam,* பெ. (n.) ***குலைத்தபின் அழியும் வாழை;*** plantain tree which bears fruit but to perish. (சா.அக.).

[ஓட்டு + இயம். ஓட்டு = தோல்வி, மறைவு.]

ஓட்டியெறும்பு *ōṭṭi-yeṟumbu,* பெ. (n.) ***ஒருவகைக் கட்டெறும்பு;*** driver's ant, common in Africa. (சா.அக.).

[ஓட்டு → ஓட்டி + எறும்பு.]

ஓட்டிரம் *ōṭṭiram,* பெ. (n.) ***ஒரிசா மாநிலம்;*** Orissa state. ***ஓட்டரம்*** பார்க்க; *see* oṭṭaram.

ஓட்டு[1]-தல் *ōṭṭu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***செலுத்துதல்;*** to cause to run; to drive, propel; to steer, as a vessel. "நும்மூர்த் தெருவதனி லோட்டுவேன்" (கந்தபு. வள்ளி.136). 2. ***நீங்கச்செய்தல்;*** to drive away, put to flight, chase, expel, disperse, as ignorance, as darkness.

பேயை யோட்டிவிட்டான். 3. ***புகுத்துதல்;*** to pass in, insert. "உரைத்தது செவியிற் காய்ந்த நாராச மோட்டிய தென" (அரிச்.பு.மீட்சி.30). 4. ***அழித்தல்;*** to destroy. "அடுகள மார்ப்ப வமரோட்டி" (பு.வெ.9,5). 5. ***செய்து முடித்தல்;*** to finish, complete. "உரவு நல்லணை யோட்டிய ஆற்றமும்" (கம்பரா.ஒற்றுக்.40). 6. ***காலந் தாழ்த்தல்;*** to delay. "ஓட்டியுங் கோறு மன்றே" (சீவக.1741). 7. ***நூலால் இழையிடுதல்;*** to darn; to stitch a running stitch. ஓரிழை யோட்டிக் கொடு. 8. ***கட்டடத்துப் பூசிய சாந்தை வழவழுப்பாகக் கொத்துக்கரண்டி முதலியவற்றால் தேய்த்தல்*** (இ.வ.); to polish a plastered wall with a float. இந்தச் சுவரை நன்றாய் ஓட்ட வேண்டும் (இ.வ.).

ம. ஒட்டிக்குக.

[ஊடு → ஓடு → ஓட்டு.]

ஓட்டு[2] *ōṭṭu,* பெ. (n.) 1. ***ஓடுகை;*** running. "முன்னோட்டுக்கொண்டு ... போவாரே" (பழ.163). 2. ***கப்பலோட்டம்;*** sailing of a vessel. "சென்னைக்கு எத்தனை நாளோட்டிற் போகலாம்?" (வின்.). 3. ***செயலாக்கம்;*** course of conduct. அந்த ஓட்டு இங்கே செல்லாது. 4. ***நூலிழை யோட்டுகை;*** seam of cloth. ஓரோட்டு ஓட்டிக்கொடு.

[ஓடு → ஓட்டு.]

ஓட்டு[3] *ōṭṭu,* பெ. (n.) 1. ***தோல்வி;*** failure, defeat. 2. ***தோற்றோடுதல்;*** fleeing. "ஓட்டன்றோ வன்கண வர்க்கு" (குறள்,775).

[ஓடு → ஓட்டு) புறமுதுகிட்டு ஓடுதல், பகைவரால் துரத்தப்படுதல், தோல்வி).]

ஓட்டு[4] *ōṭṭu,* பெ. (n.) ***கடல் அலைக்கும் கரைக்கும் இடையே உள்ள நீரின் இழுப்பாற்றல்;*** current between the waves and the shore. (சேரநா.).

ம. ஓட்டு.

[ஓடு → ஓட்டு.]

ஓட்டு[5] *ōṭṭu,* பெ. (n.) 1. ***துளை;*** hole. 2. ***புள்ளி;*** dot. 3. ***குற்றம்;*** defect.

[உல் → ஒல் → ஒள் → ஓட்டு.]

ஓட்டு[6] *ōṭṭu,* பெ.எ. (adj.) 1. ***ஓடுவேய்தல்;*** pertaining to tiles. ஓட்டுக்கூரை (உ.வ.). 2. ***வெளி ஓடு உள்ளது;*** having or covered with a shell. ஓட்டுப்புளி (உ.வ.).

ம. ஓட்டு.

[ஓடு → ஓட்டு.]

ஓட்டு[7] *ōṭṭu,* பெ. (n.) ***வெண்கலம்;*** bell-metal.

[ஓடு → ஓட்டு (ஓட்டிலிட்டு உருக்கிவார்த்த வெண்கலம்).]

ஓட்டுக்கூரை *ōṭṭu-k-kūrai,* பெ. (n.) ***ஓடுவேய்ந்த முகடு*** (C.E.M.); tiled roof.

[ஓடு → ஓட்டு + கூரை.]

ஓட்டுக்கொடு-த்தல் *ōṭṭu-k-koḍu-,* 4.செ.கு.வி. (v.i.) ***ஓடிவிடுதல்;*** to run, disappear. "காலைவெய்யோற்கு முன் னோட்டுக் கொடுத்த கங்குற் குறும்பர்" (திவ். இயற்.திருவிருத்.93).

[ஓடு → ஓட்டு + கொடு.]

ஓட்டுகலம் *ōṭṭukalam,* பெ. (n.) ***வெண்கல ஏனம்;*** vessel of bell-metal. (சேரநா.).

ம. ஓட்டுகலம்.

[ஓட்டு + கலம்.]

ஓட்டுச்சாலர்வேலை *ōṭṭu-c-cālarvēlai,* பெ. (n.) ***ஓட்டினால் தேன்கூடு போன்றமைந்த வேலை*** (கட்டட.நா மக.17); honey-comb tile-work.

[ஓடு → ஓட்டு + சாலர் + வேலை - ஓட்டுச்சாலர் வேலை = ஓட்டினால் பலகணிபோல் செய்யப்பட்டது. ஓடு = கூரைவேயும் சுடுமண் ஓடு. சாளரம் → சாலர்.]

ஓட்டுத்தடுக்கு *ōṭṭu-t-taḍukku,* பெ. (n.) ***ஓட்டுக்கூரை;*** tiled roof.

[ஓடு → ஓட்டு + தடுக்கு.]

ஓட்டுத்துத்தி *ōṭṭu-t-tutti,* பெ. (n.) 1. ***துத்திச் செடி வகை;*** angleleaved Burr Mallow. 2. ***துத்திவகை*** (மலை.); lobe-leaved Burr Mallow.

[ஓட்டு + துத்தி.]

ஓட்டுப்பணிக்காரன் *ōṭṭuppaṇi-k-kāraṉ,* பெ. (n.) ***கன்னான்;*** brazier. (சேரநா.).

ம. ஓட்டுபணிக்காரன்.

[ஓட்டு[7] + பணி + காரன். ஓட்டு = ஓட்டிலிட்டு உருக்கி வார்க்கும் பணி.]

ஓட்டுப்பந்து *ōṭṭu-p-pantu,* பெ. (n.) ***விளையாடுபவர்கள் வட்டமாக அமர்ந்து பந்தை ஒருவர் மாற்றி ஒருவர் பின்னாகத் தள்ளிக் கொடுத்து ஆடும் ஒரு வகை விளையாட்டு;*** game in which the players sit in a circle and a ball is dropped behind one after another, like the drop of the handkerchief.

[ஓடு → ஓடடு + பந்து.]

ஓட்டுமீன் *ōṭṭu-mīṉ,* பெ. (n.) ***மீன்வகை;*** crustacean; shell-fish.

[ஓடு → ஓட்டு + மீன்.]

ஓட்டுமுத்து *ōṭṭu-muttu,* பெ. (n.) 1. ***சிப்பியில் ஒட்டிய முத்து*** (வின்.); pearl of inferior quality, found adhering to the oyster. 2. ***உள்வயிரமற்ற முத்து;*** pearl without lustre.

[ஓடு → ஓட்டு + முத்து.]

ஓட்டுவளை *ōṭṭu-vaḷai,* பெ. (n.) ***வெண்கலத்தால் ஆன கைவளையல்;*** bangle made of bell-metal. (சேரநா.).

ம. ஓட்டுவள.

[ஓட்டு[7] + வளை.]

ஓட்டுவீடு *ōttu-vīdu,* பெ. (n.) ***ஓடுவேய்ந்த வீடு;*** tiled house, dist. fr. மச்சுவீடு or கூரைவீடு.

[ஓடு → ஓட்டு + வீடு.]

ஓட்டுழக்கம் *ōttulakkam,* பெ. (n.) ***ஒருவகை படகு;*** a kind of boat.

ம. ஓட்டுழக்கம்.

[ஓட்டு + உழக்கம்.]

ஓட்டெடு-த்தல் *ōttedu-,* 4.செ.கு.வி. (v.i.) ***விரைந்தோடுதல்;*** to run, flee. "ஒப்ப வனைவரு மோட்டெடுத்தாரே" (திருமந்.154).

[ஓட்டு + எடு. ஓட்டு = ஓட்டம்.]

ஓட்டெழுத்து *ōtteluttu,* பெ. (n.) ***தலையெழுத்து;*** sutures on the skull, regarded as Brahma's writing of destiny. என்னோட்டெழுத்தோ. (பாரதவெண்.வாசுதேவன்றூ.16).

[ஓடு → ஓட்டு + எழுத்து.]

ஓட்டை[1] *ōttai,* பெ. (n.) 1. ***துளை;*** hole. "அருவிசலம் பாயுமோட்டை" (திருப்பு.321). 2. ***சிதைவு;*** crack in a vessel; flaw; leak; any cracked article, as a bell. இந்த ஏனம் ஓட்டையாய் விட்டது. 3. ***குற்றம்;*** defect.

ம. ஓட்ட; க. ஒடெ, ஓட்டே; கோத. ஓட்; துட. விட்ய; குட. டைவை; து. ஓட்டெ; தெ. ஓடி.

[உல் → ஒல் → ஒள் → ஓட்டை.]

ஓட்டை[2] *ōttai,* இடை. (part.) 1. ***ஒடுப்பொருளையுணர்த்தவரும் மூன்றாம் வேற்றுமை உருபு;*** an ending of the instrumental case having the force of together with. "பர்வத பரமாணுவோட்டை வாசிபோரும்" (திவ். திருப்பா.அவ) 2. ***உடனொத்த;*** with, used as adj. meaning equal with as. அவனுக்கு இவனோட்டை வயது.

[ஒடு → ஒட்டை → ஓட்டை.]

ஓட்டைக்கை *ōttai-k-kai,* பெ. (n.) ***பொருள்தங்காத கை*** (உ.வ.); lavish disposition, lit; a hand that retains nothing.

ம. ஓட்டக்கை.

[ஓட்டை + கை.]

ஓட்டைக்கையன் *ōttaikaiyan,* பெ. (n.) ***கையிலொன்றும் தங்காதவன்; கிடைத்ததை எல்லாம் செலவழிப்பவன்;*** spend thrift.

ம. ஓட்டக்கையன்.

[ஓட்டை + கையன்.]

ஓட்டைச்செவி *ōttai-c-cevi,* பெ. (n.) ***கேள்வி தங்காத செவி;*** ear that fails to retain what it hears. பாட்டு முரையும் பயிலாதனவிரண்டோட்டைச் செவியுமுள (தொல்.பொருள்.472,உரை.).

[ஓட்டை + செவி.]

ஓட்டைசாட்டை *ōttai-cāttai,* பெ. (n.) ***பயனற்றது*** (உ.வ.); that which is useless.

[ஓட்டை + சாட்டை - ஓட்டை சாட்டை (எதுகை குறித்த இணைமொழி).]

ஓட்டை நெஞ்சு *ōttai-neñju,* பெ. (n.) ***மறதியுள்ளமனம், அறைபோன மனம்;*** absent-mindedness, preoccupation. "ஓட்டை நெஞ்சினராயுழல்வார்களும்" (சீவுக. 642).

[ஓட்டை + நெஞ்சு.]

ஓட்டைப்பல் *ōttai-p-pal,* பெ. (n.) 1. ***குறைந்துள்ள பல்;*** row of teeth in which one or more are lacking. 2. ***மூளிப்பல்;*** broken tooth.

[ஓட்டை + பல்.]

ஓட்டைபோ-தல் *ōttai-pō-,* 8.செ.கு.வி. (v.i.) ***சிதைவுறுதல்;*** to become cracked, to go bad. "ஓட்டை போமறிவோடும்" (விநாயகபு.77.134).

[ஓட்டை + போ.]

ஓட்டைமனம் *ōttai-manam,* பெ. (n.) 1. ***ஒன்றுந் தங்காத மனம்;*** mind that has no retentive power. 2. ***இள நெஞ்சு;*** tender heart. "ஓட்டைமனவ னுரமிலி" (பரிபா.12,51).

[ஓட்டை + மனம்.]

ஓட்டைமுத்து *ōttaimuttu,* பெ. (n.) ***சிப்பியில் ஒட்டிய தாழ்ந்த முத்து;*** pearl of inferior quality found adhering to the oyster. (சா.அக.).

[ஓட்டு → ஓட்டை + முத்து.]

ஓட்டைமூக்கு *ōttaimūkku,* பெ. (n.) 1. ***சில்லி மூக்கு அதாவது அரத்தம் வடியும் மூக்கு;*** bleeding nose. 2. ***சளி ஒழுகும் மூக்கு;*** running nose. (சா.அக.).

[ஓட்டை + மூக்கு.]

ஓட்டையுடைசல் *ōttai-y-udaišal,* பெ. (n.) ***சிதைந்த பாண்டங்கள்*** (உ.வ.); cracked and broken utensils.

[ஓட்டை + உடைசல்.]

ஓட்டைவாயன் *ōttai-vāyan,* பெ. (n.) 1. ***கமுக்கங்களை*** (இரகசியங்களை) மறைக்கமாட்டாது வெளியிடுபவன்; one who cannot keep secrets. (செ.அக.). 2. ***உளறுவாயன்;*** one who talks indiscriminately.

[ஓட்டை + வாயன்.]

ஓட *ōda,* இடை. (part.) ***உவமையுருபு*** (தொல். பொருள்.290); particle of comparison. (செ.அக.).

[ஒடு → ஓட.]

ஓடக்காரன் *ōda-k-kāran,* பெ. (n.) 1. ***ஓடமோட்டி;*** boatman, ferryman. 2. ***பாய்பின்னும் ஒரு இனத்தான்*** (G.Tup.D.163); mat-weaver (செ.அக.).

[ஓடம் + காரன்.]

ஓடக்காளவாய் *ōḍa-k-kāḷavāy,* பெ. (n.) ***சுண்ணாம்புக் காளவாய் வகை;*** (Madr.); a kind of lime-kiln.

[ஓடம் + காளவாய். ஓடம் = நீண்டது, பெரியது.]

ஓடக்கோல் *ōḍa-k-kōl,* பெ. (n.) ***படகுதள்ளுங் கழி*** (சிலப்.13.176,உரை.); boatman's pole, oar.

[ஓடம் + கோல்.]

ஓடகம் *ōḍagam,* பெ. (n.) ***செங்கருங்காலி;*** cutch sundra.(சா.அக.).

ஓடதி[1] *ōḍadi,* பெ. (n.) ***பூங்கொடி;*** flowering creeper.

[அவ்வு → அவ்வுடம் → அவுடம் → அவுடதி → ஓடதி → ஓடதி (பற்றும் கொடி).]

ஓடதி[2] *ōḍadi,* பெ. (n.) 1. ***மருந்திற்குரிய பூடு முதலியவை;*** medicinal herb or drug. "ஓடதி நிரைத் தார்" (கம்பரா.அகலிகை.23). 2. ***ஆண்டில் ஒருமுறை காய்த்துப்பட்டுப்போகுஞ் செடி*** (மூ.அ.); annual plant.

[ஔடதம் → ஓடதம் → ஓடதி.]

ஓடதிநாதன் *ōḍadi-nādaṉ,* பெ. (n.) ***மூலிகைகளின் இறைவனான திங்கள்*** (வேதாரணி, வள்ளி.19); moon, lord of herbs.

[ஔடதம் → ஓடதம் → ஓடதி + நாதன்.]

ஓடதிபதி *ōḍadipadi,* பெ. (n.) ***நிலவு;*** moon. (ஆ.அக.).

[உடு → உடதி → ஒடுதி → ஓடதி + பதி. உடு = விண்மீன்.]

ஓடப்பாட்டு *ōḍa-p-pāṭṭu,* பெ. (n.) ***படகுப்பாட்டு;*** boatsong.

[ஓடம் + பாட்டு.]

ஓடம்[1] *ōḍam,* பெ. (n.) 1. ***தோணி*** (திவா.); boat, ferry-boat. 2. ***மிதவை*** (வின்.); raft, float, vessel of any kind. 3. ***கொடுநுகம்*** (மகநாள்) (இராசவைத்); tenth nakṣatra. 4. ***நெசவுநாடா*** (யாழ்.அக.); weavers, shuttle. 5. ***ஓடப்பாட்டு;*** song in the boatman's tune.

ம. ஓடட; க. ஓட; து. ஓட; தெ. ஓட; கோண். ஓட; பர். ஓட; பிரா. வேடி. *Mar.* hōḍi; *Guj.* hōḍi, *H.* hōiā; *Sinh.* oruva; *Skt.* Vēḍā, Vēḍī, hōḍa.

[ஓடு → ஓடம்.]

ஓடம்[2] *ōḍam,* பெ. (n.) ***சிறுமாரோடம், செங்கருங் காலி*** (மலை.); red catechu.

[மாரோடம் → ஓடம் (முன்னசை நீக்க மரூஉ).]

ஓடல்[1] *ōḍal,* பெ. (n.) ***அல்லல்*** (அக.நி.); affliction, distress.

[ஓடு → ஓடல் = அலைச்சல், துன்பம்.]

ஓடல்[2] *ōḍal,* பெ. (n.) ***ஆம் எனல்;*** expression of assent.

[ஒட்டல் → ஒட்டல் → ஓடல் = பொருந்தும் என்னும் குறிப்பு.]

ஓடல்[3] *ōḍal,* பெ. (n.) 1. ***குலைவு*** (பிங்.); trepidation, perturbation. 2. ***அச்சத்தினாலோடுகை;*** running away from fear. 3. ***கெடுகை;*** being defeated, destroyed.

ம. ஓடல்.

[ஓடு → ஓடல்.]

ஓடல்[4] *ōḍal,* பெ. (n.) ***யானைவடம் எனப்படும் ஒருவகை மரம்;*** elephant rope tree.

[ஓடு → ஓடல்.]

ஓடவிடு-தல் *ōḍa-viḍu-,* 18.செ.குன்றாவி. (v.t.) ***புடமிடுதல்;*** to refine, as gold. 'காய்ச்சி ஓடவிட்டுரைத்த பொன்' (ஈடு.).

[ஓடு → ஓட + விடு.]

ஓடவை-த்தல் *ōḍavai-,* 14.செ.குன்றாவி. (v.t.) 1. ***உறுதிசெய்தல்;*** to draw out, make certain. 'இப்புரு சார்த்தத்தை ஓடவைத்தார்' (ஈடு.). 2. ***ஓடவிடு*** பார்க்க; see *ōḍaviḍu.* உருக்கி ஓடவைத்த நல்லபொன்னிலே. (கலித்.117,உரை.).

[ஓடு[1] → ஓட + வை.]

ஓடன் *ōḍaṉ,* பெ. (n.) ***ஆமை*** (வின்.); tortoise from its having a shell.

[ஓடு[2] → ஓடன்.]

ஓடாச்சரக்கு *ōḍāccarakku,* பெ. (n.) ***நெருப்பிற்கு ஓடாத பொன், வெள்ளி முதலிய சரக்குகள்;*** gold silver etc. which cannot be volatilized or made to pass into vapour when heated. (சா.அக.).

[ஓடு[1] → ஓடா + சரக்கு.]

ஓடாணி *ōḍāṇi,* பெ. (n.) ***அணிகலன் முதலியவற்றில் மாட்டும் ஆணி*** (S.I.I.ii.18); sliding pin in a metal case, jewel, etc.

[ஓடு[1] + ஆணி.]

ஓடாமீன் *ōḍāmīṉ,* பெ. (n.) ***ஒருவகை மீன்;*** a kind of large fish. (சேரநா.).

ம. ஓடாமீன்.

[ஓடு → ஓடா + மீன்.]

ஓடாவி[1] *ōḍāvi,* பெ. (n.) 1. ***ஓவியம் வரைபவன்*** (யாழ்.அக.); painter. 2. ***பானையின்மீது வரைபவன் அல்லது எழுதுபவன்;*** one who writes or draws figures on the earthen pot.

[ஓடு + ஆள்வி - ஓடாள்வி → ஓடாவி. பானையின்மீது எழுதுபவன்.]

ஓடாவி[2] *ōḍāvi,* பெ. (n.) 1. ***மரக்கலஞ்செய்வோன்*** (வின்.); shipwright, boat builder. 2. ***தச்சன்;*** carpenter.

[ஒட்டாள்வி → ஒட்டாள்வி → ஓடாவி.]

ஓடி[1] *ōḍi*, பெ. (n.) ***ஒரு வகை நிலம்*** (செந்.13,172); tract of land.

[ஓடு² → ஓடி.]

ஓடி[2] *ōḍi*, பெ. (n.) 1. ***ஓடுபவன்;*** runner. 2. ***முன்னோடி;*** forerunner, harbinger.

ம. ஓடி.

[ஓடு → ஓடி.]

ஓடி[3] *ōḍi*, பெ. (n.) ***மலைநெல்*** (யாழ்.அக.); wild paddy.

[ஒட்டு → ஓட்டு → ஓட்டி → ஓடி. ஓட்டு = மலைமுகடு. ஓடி = மலைமுகட்டில் விளையும் நெல்.]

ஓடித்திரி-தல் *ōḍi-t-tiri-*, 2.செ.கு.வி. (v.i.) 1. ***அலைதல்;*** to run about. ''ஓடித்திரியும் யோகிகளும்'' (திவ்.திரு வாய்.8,8,9). 2. ***பெருமுயற்சி செய்தல்;*** to leave no stone unturned, to realize an object. அக்காரியத்தை முடிக்க அவன் ஓடித்திரிகிறான்.

[ஓடு¹ → ஓடி + திரி.]

ஓடிப்போ-தல் *ōḍi-p-pō-*, 8.செ.கு.வி. (v.i.) 1. ***ஓட்டமெடுத்தல்;*** to run away, to take to one's heels. 2. ***விட்டு நீங்குதல்;*** to vanish, cease.

[ஓடு¹ → ஓடி + போ.]

ஓடிமை *ōḍimai*, பெ. (n.) ***காட்டுநெல்;*** wild paddy. (ஆ.அக.).

[ஓடி³ → ஓடிமை.]

ஓடியாடிப்பார்-த்தல் *ōḍi-y-āḍi-p-pār-*, 4.செ.கு.வி. (v.i.) ***பெருமுயற்சி யெடுத்தல்;*** to exert oneself to the utmost. அவன் ஓர் வேலைக்காக ஓடியாடிப் பார்க்கிறான்.

[ஓடு¹ → ஓடி + ஆடி + பார்.]

ஓடியாடு-தல் *ōḍi-y-āḍu-*, 5.செ.கு.வி. (v.i.) ***ஓட்டமும் ஆட்டமுமாயிருத்தல்;*** to run about vigourously, as a lad. ''இளமையி லோடியாடு மியக்கத்தில்'' (பிர போத.6,26).

[ஓடு¹ → ஓடி + ஆடு.]

ஓடியுறை-தல் *ōḍi-y-uṟai-*, 2.செ.கு.வி. (v.i.) ***படிப்படியாய் இறுகுதல்;*** to congeal gradually. கசாயமெல்லாம் ஓடியுறைந்தது (வின்.).

[ஓடு¹ → ஓடி + உறை.]

ஓடிவிறை-த்தல் *ōḍi-viṟai-*, 4.செ.கு.வி. (v.i.) ***உடல்முழுதும் விறைத்தல்*** (வின்.); to suffer stiffness throughout the body.

[ஓடு¹ → ஓடி + விறை.]

ஓடிவெளி-த்தல் *ōḍi-veḷi-*, 4.செ.கு.வி. (v.i.) 1. ***வெளிவாங்குதல்;*** to be dispelled, as clouds, to clear. மழை ஓடி வெளித்துப் போயிற்று. 2. ***நன்கு வெளிப்படுதல்;*** to be discovered, as fraud or theft. அவர் வஞ்சகமெல்லாம் ஓடி வெளித்துப் போயிற்று.

[ஓடு¹ → ஓடி + வெளி.]

ஓடு[1]**-தல்** *ōḍu-*, 5.செ.கு.வி. (v.i.) 1. ***ஓட்டமாய்ச் செல்லுதல்;*** to run, flee away, pass quickly. ''கூற்றங் கொண் டோடும் பொழுது'' (நாலடி,120). 2. ***செல்லுதல்;*** to go, as a watch; to pass, as time; to sail. ''திரைகட லோடியும் திரவியந்தேடு'' (கொன்றைவே.). 3. ***மனம்பற்றுதல்;*** to operate, follow, as the mind. அவனுக்குப் படிப்பில் ஓட்டமில்லை. 4. ***நீளுதல்;*** to extend, go far. வழி மிக வோடுகிறது. 5. ***வருந்துதல்;*** to suffer, to be distressed. ''ஓடியதுணர்தலும்'' (சிறு பாண்.214). 6. ***நேரிடுதல்;*** to happen, occur. 'இவளுக் கோடுகிற நோவும்' (ஈடு.4,6,ப்ர.). 7. ***பிறக்கிடுதல்;*** to turn back, retreat; to be defeated. ''ஓடா வம்பலர்'' (பெரும்பாண்.76). 8. ***கழலுதல்;*** to come off, as a ring, bangle. ''ஓடுவளை திருத்தியும்'' (முல்லைப்.82). 9. ***பொருந்துதல்;*** to be endowed with. ''கூர்மையோ டம்பு'' (தேவா.533,3). 10. ***குலைதல்*** (பிங்.); to be dismantled. 11. ***எண்ணஞ் செல்லுதல்;*** to pass, as in the mind. ''திருவுள்ளத்தில் ஓடுகிறதறியாதே'' (திவ்.இ யற்.திருவிருத்.99,வ்யா.). 12. ***விரைதல்;*** to run away, to hasten. அவன் எதைச் செய்யத் தொடங்கினாலும் ஓடுகிறான். 13. ***பரத்தல்;*** to spread. ''குமுமிளை யோடெரிவேய'' (பு.வெ.6,30). 14. ***மதிப்புக்குரியதாதல்;*** to be worth, as a jewel. அந்த நகை நூறு ரூபாவுக்கு மேல் ஓடவில்லை. 15. ***தீர்மானிக்கப்படுதல்;*** to be determined, resolved. 'இதில் ஓடுகிறவிசயம் என்னென்னில்' (ஈடு.2,9,ப்ர.).

ம. ஓடு; கை. ஓடெ; கொர. ஓட; எரு. ஓடு; இரு. வோடு; க., பட. ஓடு; கோத. ஓட், வொடெ; குரு. வோடு; துட. வீட்; குட. ஓட்; து. ஓடுனி; தெ. ஒடு; கோண். சோடினா; குவி. கோதவி, கோதை.

[ஒல் → ஒல்லை (விரைவு), ஒல் → ஓல் → ஓள் → ஓடு.]

ஓடு[2]**-தல்** *ōḍu-*, 5.செ.கு.வி. (v.i.) 1. ***விலகல்;*** to disjoin. 2. ***நீர்முதலியவோடுதல்;*** to flow like water. 3. ***நீங்குதல்;*** to leave. 4. ***பிளத்தல்;*** split up. (ஆ.அக.).

[ஓ → ஓவுதல் = நீங்குல், விலகுதல். ஓ → ஓடு.]

ஓடு[3] *ōḍu*, இடை. (part.) ***மூன்றனுருபு*** (நன்னூல்.297); with, together-with, sign of the instrumental case.

ம. ஓடு; க. ஒட, ஒடனெ, ஒடம்; கோத. ஒட்; து. ஒடகு, ஒட; தெ. தோடு; பட. கோட.

[ஒடு → ஓடு.]

ஓடு[4] *ōḍu*, பெ. (n.) 1. ***ஆமைமுதலியவற்றினோடு;*** shell, as of a tortoise, of an egg. 2. ***பழம் முதலியவற்றின் தோடு;*** hard outer covering, as of a nut. ''ஓட்டி னொட்டாப் புளிம்பழம்'' (தனிகைப்பு.நந்தியு.149). 3. ***மண்ணின் ஓடு, உடைந்த மட்பாண்டம்;*** piece of broken earthen ware; potsherd. ''குடமுடைந்தா லவை யோடு'' (திருமந்.158). 4. ***மட்கலம்;*** earthen vessel. ''புத்தோடு தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு'' (நாலடி.139). 5. ***செங்கல்;*** brick. 'தளியெடுப்பதற்கு ஓடுசுடக்கொண்ட நிலம்' (s.I.I.i.150). 6. ***மண்டை***

யோடு; skull. "என்னோட்டெழுத்தோவிது" (பாரத வெண்.வாசுதேவன்றூ.16). 7. *இரப்போர் கலம்;* mendicant's bowl for receiving alms; as a potsherd. "நீசர் மனைதொறு மோட்டிரந்துழல்கை" (ஞானவா.முமுட்சு.15).

ம. ஒடு; க. ஒடு; கோத. ஒட்; துட. வீட்; து. ஒடு, ஒடிலு; தெ. ஒடுபில்லு; படீ. ஒடு.

[ஒட்டு → ஒடு → ஓடு.]

ஓடு[5] *ōḍu,* பெ. (n.) *கூரைவேயும் ஓடு;* country tiles. 2. *சீமையோடு அல்லது மங்களூர் ஓடு, தட்டை நெடுங்குறி யோடு;* Mangalore tiles.

[ஒட்டு → ஒடு → ஓடு.]

ஓடுகால் *ōḍu-kāl,* பெ. (n.) *நீரோடுங் கால்வாய்;* (புறநா.105,உரை.); water channel.

[ஓடு + கால். கால் = நீரோடும் கால்வாய்.]

ஓடுகாலன் *ōḍukālaṉ,* பெ. (n.) *நாடோடி;* vagabond.

[ஓடு[1] + காலன்.]

ஓடுகாலி *ōḍu-kāli,* பெ. (n.) *வீட்டில் தங்காதவன்;* one who is running away from home every now and then. 'ஓடுகாலி வீடு மறந்தான்'.

[ஓடு[1] + காலி.]

ஓடுதாவடி *ōḍu-tāvaḍi,* பெ. (n.) 1. *பரபரப்பில்* (அவசரங்களில்) *நேருங்குழப்பம்* (வின்.); bustle and confusion in preparing, as for a journey. 2. *ஓடித்திரிதல்;* to roam about. (செ.அக.).

[ஓடு + தாவடி.]

ஓடுதிருப்பு-தல் *ōḍu-tiruppu-,* 5.செ.கு.வி. (v.i.) *ஓடு மாற்றிப் புதுப்பித்தல்;* to turn tiles.

[ஓடு[4] + திருப்பு.]

ஓடுபடம் *ōḍu-paḍam,* பெ. (n.) *இடுதிரை* (திவா.); curtain.

[ஓடு[1] + படம்.]

ஓடுபந்தல் *ōḍu-pandal,* பெ. (n.) *நடைப்பந்தல்* (யாழ்ப்.); movable canopy supported on cords, etc.

[ஓடு[1] + பந்தல்.]

ஓடுபரப்பு-தல் *ōḍu-parappu-,* 5.செ.கு.வி. (v.i.) *ஓடு வேய்தல்;* to tile, cover with tiles.

[ஓடு[4] + பரப்பு.]

ஓடும்பிள்ளை *ōḍum-piḷḷai,* பெ. (n.) 1. *பழங்காலச் சிற்றூர்களில் செய்தி கொண்டு செல்பவன்;* messenger of ancient times. 2. *கீரிப்பிள்ளை;* mangoose.

[ஓடு[1] → ஓடும் + பிள்ளை.]

ஓடுமாற்று-தல் *ōḍu-māṟṟu-,* 5.செ.கு.வி. (v.i.) *ஓடு திருப்பு பார்க்க; see ōḍutiruppu.*

[ஓடு[4] + மாற்று.]

†**ஓடுவழி** *ōḍu-vaḻi,* பெ. (n.) *வானூர்தி தரையில் ஓடி இறங்கும் அல்லது ஏறும் வழி;* runway.

[ஓடு + வழி.]

ஓடை[1] *ōḍai,* பெ. (n.) 1. *நீரோடை* (பதார்த்த.32); large water course, channel for the conveyance of water, rivulet, dyke. 2. *குளம்;* tank, reservoir. "தோட்ட மில்லவ ளாத்தொழு வோடை" (திவ்.பெரியாழ்.5,1,5). 3. *அகழி* (திவா.); moat, ditch round a fortification. 4. *மலைவழி* (பிங்.); mountain path. 5. *சந்தனம் வைக்கும் மடல்;* vessel for holding sandal, etc. "மணிசெ யோடை நீரின் வெண்சாந்துபூசி" (சீவக.1147).

ம. ஒட; தெ. ஒடிக.

[ஓடு → ஓடை.]

ஓடை[2] *ōḍai,* பெ. (n.) 1. *நெற்றிப்பட்டம்* (பிங்.); metal plate or badge for the forehead, as an ornament. 2. *யானையின் நெற்றிப்பட்டம்;* frontlet for elephants. "யானை யோடைப் பொன்கொண்டு" (புறநா.126,1).

[ஊடு → ஊடை → ஓடை.]

ஓடை[3] *ōḍai,* பெ. (n.) 1. *குடைவேல்* பார்க்க; see *kuḍaivēl.* 2. *உலவைமரம்* (சூடா.); oval leaved wheel creeper. 3. *கிலுகிலுப்பை*பார்க்க (மலை.); see *gilugiluppai.* 4. *ஒருமரம்* (L.); longer internoded stout reed bamboo.

[உடை → ஒடை → ஓடை.]

ஓடை[4] *ōḍai,* பெ. (n.) *இருவாய் சால், தொம்பை, தவசம் கொட்டி வைக்கும் குதிராகப் பயன்படும் தாழி;* big vessel, silo for storing grain.

[ஓடு → ஓடை (நீண்டது, பெரியது).]

ஓடைக்கல் *ōḍai-k-kal,* பெ. (n.) *உறுதியில்லாத கருங்கல் வகை;* a kind of brittle stone. அச்சுவர் ஓடைக்கற்க ளாற் கட்டப்பெற்று (எங்களூர்.125).

[ஓடு[4] → ஓடை + கல்.]

ஓண்[1] *ōṇ,* பெ. (n.) 1. *ஓட்டம்;* running. 2. *நீட்சி;* length.

[ஓ → ஓண்.]

ஓண்[2] *ōṇ,* பெ. (n.) *உயர்வு, மேன்மை, பெருமை;* elegance, excellence.

[ஓ → ஓண் (ஒ.நோ. ஏ → ஏண்).]

ஓண்[3] *ōṇ,* பெ. (n.) *உயர்ச்சி;* height, elevation.

[ஓ → ஓண்.]

ஓணப்பிரான் *ōṇa-p-pirāṉ,* பெ. (n.) *திருமால்;* Visnu, 22nd nakṣatra being sacred to Him. "ஓணப்பிரானு மொளிர்மாமல ருத்தமனும்" (தேவா.643,10).

[ஓணம் + பிரான்.]

ஓணம்[1] *ōṇam,* பெ. (n.) ***ஆறு*** (பிங்.); river. "கங்கையாதி யோணநீராடல்" (சேதுபு.தோத்திர.48).

[ஊ → ஓ → ஓணம் = நெடுக ஓடிச் செல்லும் குறுகிய ஓடைநீர். ஒ.நோ. ஓதம் = மேலெழும்பும் சிறு திவலை.]

ஓணம்[2] *ōṇam,* பெ. (n.) ***முக்கோல்*** (திருவோணம்) (திவா.); (Tiruvōṇam) 22nd nakṣatra.

ம. ஓணம்.

[உல் → ஒல் → ஓ = நீளுதல், நீண்டுயர்தல். ஓ → ஓண் → ஓணம் = நீண்டுயர்ந்த கொடிபோன்ற விண்மீன் கூட்டம்.]

ஓணம்[3] *ōṇam,* பெ. (n.) ***நீராட்டு விழா;*** bathing festival in a river.

[ஓணம் = நீரோடை, நீராடல். இது ஓளம் - ஓலி என வடபுல மொழிகளில் திரிந்தது.]

ஓணவிழவு *ōṇa-viḻavu,* பெ. (n.) ***திருமாலின் திருநாள்;*** festival in honour of Viṣṇu. "ஓணவிழவி லொலியதிர" (திவ்.இயற்.4,41).

[ஓணம்[2] + விழவு.]

ஓணன் *ōṇaṉ,* பெ. (n.) ***வாணன், வாணனின் படைத் தலைவன்*** (அபி.சிந்.); commander of Vāṇa prince.

[ஓ = உயர்வு, மேன்மை, பெருமை. ஓ → ஓண் → ஓணன்.]

ஓணான் *ōṇāṉ,* பெ. (n.) 1. ***ஓந்தி;*** blood-sucker, a common agamoid lizard. 2. ***பச்சோந்தி;*** chameleon. "ஓணான் விழுந்தாலுமுண்டு பரிகாரம்" (தமிழ்நா.241).

ம. ஓணான்.

[ஓ → ஓண் = நீளம், உயர்ச்சி, அடிக்கடி தலைதூக்குதல். ஓண் + ஆன் - ஓணான்.]

ஓணி[1] *ōṇi,* பெ. (n.) ***வயலில் நீர் தேங்கவைக்க அல்லது வெளியேற்றப் பயன்படுத்தும் தோணி வடிவக் கருவி;*** boat-shaped wooden trough for bailing water to or from fields. (சேரநா.).

ம. ஓணி.

[ஓண் → ஓணி. ஓண் = நீட்சி, நீள்வடிவம்.]

ஓணி[2] *ōṇi,* பெ. (n.) ***நடைபாதை;*** foot-path.

ம. ஓணி; க., து. ஓணி (தெரு); குட. ஓணி (வீட்டிற்குச் செல்லும்வழி); தெ. ஓணி கட்டு (இருண்ட வழி).

[ஓண்[2] → ஓணி.]

ஓணி[3] *ōṇi,* பெ. (n.) 1. ***சிற்றோடை;*** brook. 2. ***சிற்றோடையை ஒட்டிச் செல்லும் ஒற்றைவழிப் பாதை;*** foot-path along a small stream.

[ஓண்[1] → ஓணி.]

ஒத்தி *ōtti,* பெ. (n.) 1. ***பச்சோந்தி*** (பிங்.); chameleon. 2. ***ஓந்தி*** (பிங்.); blood sucker.

[ஓந்தி → ஒத்தி.]

ஒத்திரநெல் *ōttiranel,* பெ. (n.) ***ஓதுவிக்கும் அல்லது ஓதும் தொழிலைத் தொடர்ந்து செய்தற்காகத் தரப் படும் நெல்;*** paddy given annually for educational or religious teaching and learning. "ஒத்திரநெல்லின் ஒகந்தூர் ஈத்து" (பதிற்றுப்.70,பதி.).

[ஓது → ஒத்து → ஒத்திரம் + நெல்.]

ஒத்திரம் *ōttiram,* பெ. (n.) 1. ***ஒத்து எனப்படும் மறைமொழிகளை அல்லது உயர்ந்த நூற்பகுதிகளை ஓதுதல்;*** chanting the sacred valuable scripture. "ஒத்திர நெல்லி னொகந்தூரீத்து" (பதிற்றுப்.70,பதி.). 2. ***ஓது விப்பு; ஓதச்செய்தல்;*** enabling to recite, making one to recite.

[ஓது → ஒத்து → ஒத்திரம் (மந்திரம் ஓதுதல்) (ஒ.நோ.) மோள் → மோத்து → மோத்திரம் → மூத்திரம்.]

ஒத்திரம் என்பதற்கு ஓமத்திற்குரிய பொருள் என்று பதிற்றுப் பத்து (70) பதிகத்திற்கு உரையாசிரியர் உரை வரைந்திருப்பது தவறு. உரையாசிரியர் பழந்தமிழரின் மலரிட்டு ஓதும் ஒத்திரங் களை உய்த்துணர மாட்டாது வேட்டபொருள்களைத் தீயி லிட்டு ஓதும் வேதமந்திரங்களை மனத்துட்கொண்டு உரைத்தி ருப்பது தென்னாடுடைய சிவவழிபாட்டின் தொன்மையுணரா மையே ஆகும்.

ஒத்திரி *ottiri,* பெ. (n.) ***ஓதுவிப்பவன்;*** one who makes others to recite.

[ஓது → ஒத்து → ஒத்திரம் → ஒத்திரி. பிறர் பின்தொடர்ந்து இசைக்கத் தான் முன்னிசைத்து ஓதுபவன் ஒத்திரி. ஓதத்தக்க விழுப்பொருள் ஒத்து எனப்பட்டது.]

இச்சொல் வடமொழியில் hotri எனத் திரிந்தது. hu என்னும் சொல்லே வேள்வியாசிரியனைக் குறித்ததென்றும் அதனின்றே hotri என்னும் சொல் பிறந்ததென்றும் வடமொழியாளர் கூறுவர். வேள்வியாசிரியனைக் குறித்ததற்கான சொல் வரலாறும் வழக் காறும் வடமொழியில் இல்லை. ஓது, ஒத்து, ஒத்திரம் என்னும் தமிழ்ச் சொற்கள் தமிழில் பண்டு தொட்டு வழங்கி வருபவை. சொல்லாலும் பொருளாலும் இவற்றின் சொற்பிறப்பு வளர்ச்சி செப்பம் வாய்ந்துள்ளது. வடமொழி வேதங்களுக்கு விரிவுரை எழுதிய பல்லோரும், வடமொழி இலக்கிய இலக்கண வளத்தை மிகுவித்த தொல்லோரும் பெரும்பான்மை பழந்தமி ழகத்தைச் சார்ந்தோராதலின் ஏராளமான தமிழ்ச் சொற்களை வடமொழியிற் புகுத்தியதன் விளைவாக இத்தகு சொற்கள் வடமொழியில் நெடுங்காலம் பயில்வன வாயின. ஓதும் தொழிலேற்ற புலவர் ஓதலாந்தையார் எனப்பெயர் பெற்றமை யும் அறிக. ஆந்தை எனப் பெயர் கொண்டோர் தமிழரே யன்றி வேறு எவ்வினத்தாரும் அல்லர். ஓதுதற்கென்றே திரும ணமான பிறகும் தமிழ் இளைஞர்கள் மனைவியைப் பிரிந்து செல்வர் என்னும் பண்டைத்தமிழ் வழக்கம் 'ஓதற்பிரிவு' என அகவாழ்க்கையில் இடம் பெற்றிருத்தலும், அரசர் முதல் மலை முகட்டில் வாழும் குறமகள் இளவெயினி வரைப்பட்ட அனை வர்க்கும் ஓதும் வாய்ப்பு கிட்டியிருந்ததும் ஓதும் தொழிலின் பெருக்கத்தை விரித்துக்காட்டுவனவாகும்.

திருக்கோயில்களில் இறைவனைப் போற்றிப்பாடுவோர் ஓதுவார் என்றே இன்றளவும் குறிப்பிடப்படுதல் காண்க. பெரிய கோயில் கல்வெட்டுகளில் பயின்றுள்ள 'ஆரியம்பாடுவார்' 'தமிழ்பாடுவார்' என்னும் சொல்லாட்சிகள் இறைவனை வழிபடும் மந்திரங்கள் தமிழில் தொன்று தொட்டு உள்ளன என்பதையும் வடபுலத்திலிருந்து ஆரியம் பாடும் பூசகர்கள் மிகப் பிற்காலத்தில் வந்தவர் என்பதையும் புலப்படுத்தும்.

ஒத்து[1] *ottu*, பெ. (n.) 1. ***ஓதுகை;*** reciting, uttering, as a mantra. ''அஞ்செழுத்து மோத்தொழிந்து'' (தேவா. 586,4). 2. ***வேதம்;*** the vēda. ''ஒத்துடை யந்தணர்க்கு'' (மணி.13,25). 3. ***இயல்;*** section or chapter of a book. ''இனமொழி கிளந்த வோத்தினானும்'' (தொல். பொருள்.480). 4. ***நெறி, கொள்கை*** (குறள்.3,பரி.); rule, principle.

[ஒது → ஒத்து.]

நாள்தோறும் ஓதத்தக்கது ஒத்து எனப்பட்டது. அது மந்திரமாகலாம், அறநூலாகலாம், இலக்கண இலக்கியம் ஆகலாம். தமிழக வேளாளருள் ஓதாளர் என்றே ஒரு பிரிவினர் தொன்று தொட்டு வாழ்ந்து வருதலை இன்றும் காணலாம். தமிழ் ஒத்துகள் பல்வகைப்பாங்கின என்பது இச்சொல் புலத்துறை பலவற்றினும் பொதுவாக ஆளப்படுதலால் அறியத்தகும்.

ஒத்து[2] *ōttu*, பெ. (n.) ***ஓரினமான மணிகளை வரிசையாகப் பதித்ததுபோல ஓரினமான பொருள்களை ஒரு வழிப்படச் சொல்வது*** (நன்.); classification of objects according to categories.

[ஒல் → ஒத்து → ஒத்து = ஒருபாங்காக ஒத்தியலும் பொருள்கள்.]

ஒத்தின்சாலை *ōttin-šālai*, பெ. (n.) ***நூல் கற்பிக்குமிடம்;*** place for teaching. ''ஒத்தின் சாலையு மொருங்குடனின்று'' (சிலப்.22,28).

[ஒத்து + இன் + சாலை.]

ஒத்துமுறைவைப்பு *ōttu-murai-vaippu*, பெ. (n.) ***இயல் முதலியவற்றை முறைப்படுத்தி யமைத்தலாகிய உத்திவகை*** (நன்.14); (gram.) arrangement in proper sequence of the chapters and sections of a work, one of 32 utti.

[ஒத்து[2] + முறை + வைப்பு.]

ஒத்துரைப்போர் *ōtturaippor*, பெ. (n.) 1. ***பொருத்தஞ் சொல்லுவோர்*** (ஆ.அக.); soothsayer. 2. ***நூல்ஓதுவோர்;*** those who recite scripture.

[ஒத்து[2] + உரைப்போர்.]

ஒத்துரைப்போன் *ōtturaippōn*, பெ. (n.) 1. ***ஆசிரியன்*** (பிங்.); teacher. 2. ***தமிழாசிரியன்;*** teacher of Tamil.

[ஒத்து[1] + உரைப்போன்.]

ஓதக்கால் *ōda-k-kāl*, பெ. (n.) ***ஆனைக்கால்;*** elephantiasis.

[ஊதம் → ஓதம் + கால்.]



ஓதக்கால்

ஓதக்காலி *ōdakkāli*, பெ. (n.) ***யானைக்காலையுடைய பெண்;*** woman with elephantiasis of the leg. (சா.அக.).

[ஓதம் + காலி.]

ஓதம்[1] *ōdam*, பெ. (n.) 1. ***கடல் அலை;*** wave, billow. ''கடலோதங் காலலைப்ப'' (திவ்.இயற்.1,16). 2. ***ஈரம்*** (பிங்.); moisture; dampness, as of a floor. 3. ***தண்ணீர்;*** water. 4. ***வெள்ளம்;*** flood, inundation, deluge. ''வழிசிதைய வூர்கின்ற வோதமே'' (சிலப்.7,35,பாடல்). 5. ***கடல்;*** sea. ''ஓதமலி நஞ்சுண்ட வுடையானே'' (திருவாச.38,3).

ம. ஓதம், ஓதன்; க., து. ஒத்தெ. ***Nor.*** vat; ***Rum.*** ud; ***Swed.*** vat; ***Dan.*** vad; ***L.*** unda; aoth. vato; ***Lit.*** wandy, ***Gr.*** hōtri; ***Os.*** water, ***Russ.*** vada; ***OHG.*** wazzar; ***OE.*** water, ***F.*** cau (ō), ***Pol.*** voda; ***Hung.*** viz; ***Fin.*** vesi.

[ஓலம் → ஓதம் = கடலலை.]

ஓதம் வடமொழியில் உதகம் ஆயிற்று; கடலும் உததி ஆயிற்று. வடமொழியாளர் செயற்கையாக ud - என்னும் வேரைக்காட்டி ஊறுதல், வெளிவருதல் என்னும் பொருளோடு தொடர்புபடுத்துவர். மேலையாரிய மொழிகளிலும் இனச்சொற்கள் இருப்பதால் இஃது வடசொல்லே என வலிந்துரைப்பர். மேலையாரிய மொழிகளில் இனச்சொல் கொண்டிருப்பது மட்டும் பாவாணர் கொள்கைப்படி இதனை ஆரியமொழிக் குடும்பத்தைச் சார்ந்த சொல் என நிறுவுதற்குப் போதிய சான்றாகாது. கடன்கொண்ட சொல்வளம் உடன் கொண்ட சொல்வளம் (carried vocabulary) என்னும் வகைமையில் இவை உடன் கொண்ட சொல்வளத்தை அதாவது மூலத்தாய் மொழியிடமிருந்து இயல்பாக நிலவழிப்பிரிந்த (geographical distribution) சொற்றொகுதியைச் சார்ந்தவையாதலின் மூலத்தாய் மொழியின் சொற்பிறப்புச் சூழலே முற்றிலும் ஏற்புடைத்து. கடலிடை வாழ்ந்த தமிழர் நீரின் அலையைக் குறித்த சொல்லே ஓதமாயிற்று.

வெப்ப நாடுகளிலிருந்தே மக்கள் பல்வேறு கால நிலைகளில் வடக்குநோக்கிக் குளிர் நாடுகளுக்குப் பரவியுள்ளனர் என்னும் மாந்தவியலார் கருத்தும் இக்கருத்தை அரண்செய்வதாகும்.

ஓதம்² *ōdam,* பெ. (n.) 1. ***ஒலி;*** noise, uproar. "ஓதநீர் வேலி" (பழ.398). 2. ***கடலின் நீர் பொங்குகை;*** flood tide.

[ஓ → ஓதம் = உயர்ந்துவரும் அலைநீர்.]

ஓதம்³ *ōdam,* பெ. (n.) ***வீக்கம்;*** swelling.

[ஓ → ஓதம்.]

ஓதம்⁴ *ōdam,* பெ. (n.) **ஓதனம்** பார்க்க; see *ōdaṉam.*

ஓதம்⁵ *ōdam,* பெ. (n.) ***பெருமை*** (அக.நி.); greatness.

[ஓ → ஓதம்.]

ஓதமேறு-தல் *ōdam-ēṟu,* 5.செ.கு.வி. (v.i.) ***ஈரமேறுதல்;*** to become damp.

[ஓதம் + ஏறு.]

ஓதல்¹ *ōdal,* பெ. (n.) 1. ***உரத்துப்படித்தல்;*** reading loudly. 2. ***கல்விபயிலுதல்*** (தொல்.பொருள்.25); learning. 3. ***ஓசையூட்டிப் பலமுறை சொல்லுதல்;*** reciting. 4. ***சொல்லுதல்;*** telling.

[ஓது → ஓதல்.]

ஓதல்² *ōdal,* பெ. (n.) ***ஓதும் தொழில்;*** profession of reciting.

ம. ஓதல்; க. ஓது; குட. ஒத்; துட. வீத்; குட. ஒத்; து. ஓதுனி (படி).

[ஓது → ஓதல்.]

ஓதலாந்தையார் *ōdal-āndaiyār,* பெ. (n.) ***எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றான ஐங்குறு நூற்றிற் பாலைப் பகுதியின் ஆசிரியர்;*** Sangam poet, author of Pālai in Ai-ṅ-kuṟu-nūṟu.

[ஓதல் + ஆந்தையார் - ஓதலாந்தையார் = ஓதாளர் தொழிலேற்ற ஆந்தையார். ஆதன் + அந்தை - ஆந்தை + ஆர்.]

ஓதவனம் *ōda-vaṉam,* பெ. (n.) ***கடல்;*** sea as a great flood. "அறையோதவனஞ்சூழ் புவி" (பாரத.அருச்சு னன்றீர்.2).

[ஓதம் → ஓதவனம்.]

ஓதளை *ōdaḷai,* பெ. (n.) 1. ***காசுக்கட்டி;*** downy-foliaged cutch. 2. ***ஒரு மரத்தின் பெயர்;*** black akasia.

[உதளை → ஓதளை.]

ஓதற்பிரிவு *ōdaṟ-pirivu-,* பெ. (n.) ***தலைவன் கல்விகற் றற்குத் தலைவியைப் பிரியும் பிரிவு*** (தொல்.பொருள்.25); separation of a hero from his beloved, when he goes abroad for studies.

[ஓதல் + பிரிவு.]

ஓதன்மை *ōdaṉmai,* பெ. (n.) 1. ***ஓதுதல்;*** chanting. 2. ***பாடல்;*** chant, song.

[ஓதல் + மை.]

ஓதனம்¹ *ōdaṉam,* பெ. (n.) 1. ***சோறு*** (திவா.); boiled rice. 2. ***உணவு*** (பிங்.); food.

[ஓதம் → ஓதனம் = நீரளாவிய கஞ்சி வடிவிலான உணவு.]

ஓதனம்² *ōdaṉam,* பெ. (n.) ***பெருமை*** (யாழ்.அக.); greatness.

[ஓதம் → ஓதனம்.]

ஓதாளர் *ōdāḷar,* பெ. (n.) ***ஆசிரியத் தொழில் கொண்ட வேளாள வகுப்பினர்;*** vellālās whose profession was teaching. உலகம் பாதி ஓதாளர் பாதி (பழ.) (கொங்.வ.).

[ஓது + ஆள் + அர் - ஓதாளர்.]

குறிப்பாக வேளாளருள் கல்வி கல்லாதார் இல்லையென்பதும் சரிபாதித் தொகையினர். கற்பிக்கும் ஆசிரியராயிருந்தனர் என்பதும் தொன்று தொட்டு நிலவும் செய்தி.

ஓதாளன் *ōdāḷaṉ,* பெ. (n.) 1. ***கல்வி புகட்டும் ஆசிரியன்;*** teacher. 2. ***கேள்வியறிவு புகட்டும் ஆசிரியன்;*** moral preacher (கொங்.வ.).

[ஓது + ஆளன்.]

ஓதி¹ *ōdi,* பெ. (n.) 1. ***அறிவு;*** knowledge, wisdom, spiritual perception. "எல்லா மோதியினுணர்ந்து கொண்டான்" (சீவக.951). 2. ***கல்வி*** (திவா.); learning, erudition. 3. ***நூல் படிப்பவ-ன்-ள்;*** learned person; one who recites the Vēda and Šāstras.

ம. ஓதி.

[ஓது → ஓதி.]

ஓதி² *ōdi,* பெ. (n.) **ஒந்தி** பார்க்க; see *ondi.*

க. ஓதி.

[ஒணான் → ஒந்தான் → ஒந்தி → ஓதி (மு.தா.302).]

ஓதி³ *ōdi,* பெ. (n.) ***மலை;*** mountain.

[ஓ → ஓதி.]

ஓதி⁴ *ōdi,* பெ. (n.) ***போர்;*** battle.

[உ → உத்து → உத்தி → ஒத்தி → ஓதி.]

ஓதி⁵ *ōdi,* பெ. (n.) 1. ***செறிவு*** (பிங்.); closeness, thickness, crowd. 2. ***கூந்தல்;*** woman's hair. "வாழைப்பூ வெனப் பொலிந்த வோதி" (சிறுபாண்.22). 3. **ஓதிமம்** பார்க்க; see *ōdimam.* "காந்தளங்கை யோதிகொங்கை" (வெங்கையு.272). 4. ***நெருங்கித் தாக்குகை*** (வின்.); close attack in battle.

[ஒல் → ஒது → ஒதி → ஓதி.]

ஓதி⁶ *ōdi,* பெ. (n.) ***ஓதுவித்தல்;*** making one recite, educate.

[ஓது → ஓதுவி → ஓதி. இது வடபுலமொழிகளில் போதி → போதித்தல் எனத்திரிந்தது.]

ஓதி⁷ *ōdi,* பெ. (n.) ***ஓதிமம்*** (அன்னம்.); swan.

ம. ஓதி.

[ஓ = வெள்ளை. ஓ → ஓதி.]

ஓதிமம் *ōdimam,* பெ. (n.) 1. ***அன்னம்;*** swan. "ஓதிம மொதுங்கக் கண்ட வுத்தமன்" (கம்பரா.சூர்ப்ப.5). 2. ***மலை;*** hill, mountain "மழைக்காக் கோட்டோதிம மெடுத்தார்" (அஷ்டப்.அழக.63).

ம. ஓதிமம்.

[1. ஓ → ஓதி → ஓதிமம். 2. ஓதி[3] → ஓதி.]

ஓதிமவிளக்கு *ōdima-viḷakku,* பெ. (n.) ***அன்னப்பறவை யுருவாகச் செய்யப் பெற்ற விளக்கு;*** swan-shaped pendent lamp. "யவன ரோதிமவிளக்கின்" (பெரும் பாண்.317).

[ஓதிமம் + விளக்கு.]

ஓதிமன் *ōdiman,* பெ. (n.) ***நான்முகன்;*** Brahma, who rides on a swan. "ஓதிமனை யோர்சிர மறச்செய்தது" (பிரபோத.26,26).

[ஓதிமம் → ஓதிமன்.]

ஓதியிடு-தல் *ōdi-y-iḍu-,* 18.செ.குன்றாவி. (v.t.) ***திரு மண முதலியவற்றில் வாழ்த்துக்களுடன் வழங்கப்ப டும் அன்பளிப்பு;*** to present gifts on occasions like marriage with blessings. (brah.)

[ஓதி + இடு.]

ஓதியிறை-த்தல் *ōdi-y-iṟai-,* 4.செ.கு.வி. (v.i.) ***மந்திரநீர் தெளித்தல்*** (வின்.); to sprinkle, as consecrated water.

[ஓதி + இறை.]

ஓதியுடை-த்தல் *ōdi-y-uḍai-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***மந்திரித்துத் தேங்கா யுடைத்தல்*** (வின்.); to break coconuts with mantras.

[ஓதி + உடை.]

ஓது-தல் *ōdu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***படித்தல்;*** to read, recite audibly in order to commit to memory. "ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும்" (குறள்.834). 2. ***சொல் லுதல்;*** to speak, say, declare. "ஓதரிய சுகர் போல" (தாயு.ஆகார.32). 3. ***வேதமோதுதல்;*** to recite the Vēda with the appropriate intonation. 4. ***மந்திரம், வழிபாடு முதலியன செய்தல்;*** to utter mantras, repeat prayers. 5. ***கமுக்கமாகக் கூறுதல்;*** to persuade clandestinely; to breathe out; to whisper, as communicating information. அவன் காதில் அடிக்கடி ஓதுகிறான். 6. ***பாடுதல்;*** to sing. "ஓதி ... ... களிச்சுரும் பரற்றும்" (சிறபாண்.22).

ம. ஓதுக; க., பட. ஓது; கோத. ஓத். துட. வீத்; குட. ஓத்; து. ஓதுனி; தெ. சதுவு.

[ஊது → ஓது → ஓதல்.]

ஓதும்பள்ளி *ōdum-paḷḷi,* பெ. (n.) ***பள்ளிக்கூடம்*** (திவா.); school.

[ஓது → ஓதும் + பள்ளி.]

ஓதுவார் *ōduvār,* பெ. (n.) ***திருக்கோயில்களிலும் மடங்களிலும் தேவாரமுதலிய அருட்பாக்களைப் பாடுஞ் சைவவேளாளர்;*** Śaiva Vēḷāḷas appointed to recite sacred Tamil hymns in Śaiva temples and monasteries.

[ஓது → ஓதுவார்.]

ஓதுவான் *ōduvāṉ,* பெ. (n.) 1. ***ஆசான்;*** teacher. 2. ***மாணாக்கன்;*** pupil.

[ஓது + ஆன்.]

ஓதுவி-த்தல் *ōduvi-,* 1 பி.வி. (c.v.) 1. ***சிறந்தநூல் முதலியன கற்பித்தல்;*** to teach the standard book and subject to others. "ஓதுவித்த தக்கணையா" (திவ். பெரியாழ்.4,8,1). 2. ***படிப்பித்தல்;*** to teach, instruct.

ம. ஓதிக்குக; க. ஓதிசு; து. ஓதாவுது.

[ஓது → ஓதுவி.]

ஓதை[1] ōdai, பெ. (n.) 1. ***பேரோசை*** (ஆரவாரம்) (திவா.); sound, noise, clamour, din. 2. ***எழுத்தொலி*** (பிங்.); sound of a letter.

[ஓ → ஓசை → ஓதை (சு.வி.99).]

ஓதை[2] *ōdai,* பெ. (n.) ***காற்று;*** wind. "ஓதை அலைத்தன தரையிற்றள்ளி" (கந்தபு.கடல்பாய்.8).

[ஊதை → ஓதை.]

ஓதை[3] *ōdai,* பெ. (n.) 1. ***மதில்*** (திவா.); surrounding wall, rampart. 2. ***மதிலின் ஆள்வாரி நிலம்*** (பிங்.); paved passage along the walls within a fortification. 3. ***மலை*** (யாழ்.அக.);mountain.

[ஓ → ஓதை.]

ஓதைவாரி *ōdai-vāri,* பெ. (n.) ***சிறகு*** (சங்.அக.); wing.

[ஊதை → ஓதை (காற்று) + வாரி.]

ஒந்தான் *ōndāṉ,* பெ. (n.) ***ஓணான்;*** blood sucker.

[ஓணான் → ஒந்தான்.]

ஒந்தி *ōndi,* பெ. (n.) ***ஓணான்*** (திவா.); blood-sucker, a common agamoid lizard.

ம. ஒந்து; க. ஓதி, கோசும்பெ; துட. ஓச்; குட. ஒந்தி; து. ஒந்தி; தெ. தொண்ட; மால். உதெ; பட. ஓசி.

[ஓணான் → ஒந்து → ஒந்தி.]

ஓநாய் *ōnāy,* பெ. (n.) ***கோநாய்*** (பழ.292,உரை.); Indian wolf.

ம. ஓநாய்.

[ஓ → பெரியது, அஞ்சத்தக்கது. ஓ + நாய்.]

ஒப்படியாள் *ōppaḍiyāḷ,* பெ. (n.) ***ஓர்ப்படியாள்*** (வின்.) பார்க்க; see *ōrppaḍiyāḷ.*

ஒப்படைச்சி *ōppaḍaicci,* பெ. (n.) ***ஓர்ப்படியாள்*** பார்க்க (இ.வ.); see *ōrppaḍiyāḷ.*

ஒப்பு-தல் *ōppu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஓட்டுதல்;*** to drive away; to cause to flee; to scare away, as birds. "கழனிப் படுபுள் ளோப்புநர்" (புறநா.29,13). 2. ***உயரவெடுத்தல்*** to raise. "கொடிக ளோப்புவும்" (சூளா.அரசி.144); (செ.அக.). 3. ***நீக்குதல்;*** to remove. "குருவி ஓப்பியும் கிளி கடிந்தும்" (சிலப்பதிகாரம்).

ம. ஒப்புக.

[ஓ → ஓப்பு.]

ஓபாதி *ōbādi*, பெ. (n.) ***பகுதி;*** portion. 'நம்மோபாதியா லுள்ள ரட்சணம்' (ஈடு.5,4,ப்ர.) இடை. (part.) ***உவமஉருபு;*** particle of comparison. "அவனைப்பெறுகையோ பாதி தேட்டமாம்படி" (ஈடு.5,4,ப்ர.).

க. ஓபாதி.

[ஒருபகுதி → ஓபாதி.]

ஓபு *ōpu*, பெ. (n.) ***கதவு*** (பிங்.); door.

[ஓ = மதகுப்பலகை. ஓ → ஓவு → ஓபு.]

ஓம்[1] *ōm*, பெ. (n.) ***பாதுகாத்தல், காப்பாற்றுதல்;*** protecting, guarding.

[ஓ → ஓம்.]

ஓம்[2] *ōm*, இடை. (part.) ***தன்மைப்பன்மையீறு*** (நன்.140); ending of the first pers. pl. வந்தாம் → வந்தோம்.

[ஆம் → ஓம்.]

ஓம்[3] *ōm*, பெ. (n.) ***மூலமந்திரம்;*** mystic syllable, preceding all the mantras of worship, writings, etc. "ஓமெனு மோரெழுத்து" (கம்பரா.இரணி.76).

[அ + உ - ஓ + ம் - ஓம்.]

மங்கல அடையாளமாகக் கருதப்படும் ஓம் இலச்சினை (Swastika) உலகமுழுவதும் பரவியுள்ளது. சிந்துவெளி முத்திரைகளில் பெருகக் காணப்படுகிறது. இது அந்தக் காலத்திய எழுத்துகளில் ஒன்றாக இருக்கலாம் என்னும் கருத்தினை திரு. கிருட்டிணா வேணுகோபால் என்பவர் (Mirror-Apr.1985) வெளியிட்டிருந்தார். இதனை உணராத பலர் மந்திரம், தாயத்து, தகட்டு ஏவலெழுத்து என்றெல்லாம் விரித்துரைக்கலாயினர். நான்கு கால் இலச்சினையென்று இங்கிலாந்திலும், தோர் கடவுளின் கையிலுள்ள படைக்கலம் என்று காண்டிநேவியாவிலும், உயிரளிக்கும் நீர் வடிவம் என்று சப்பானிலும், பெருங்கடலையும் தொடக்கமும் முடிவுமில்லாத பெருக்கத்தையும் குறித்தது என்று சீனத்திலும் மக்கள் நம்பினர். எல்லா நாடுகளிலும் இது நன்மையின் அடையாளமாகவே கருதப்பட்டது. எல்லாச் சமயங்களிலும் இது மங்கலச் சின்னமாகிவிட்டது. செருமானிய நாட்டில் இட்டலரும் இதனைப் பொறிக்கச் சொன்னதாகவும் இலச்சினை செய்தவர்கள் தவறுதலாக வல நோக்காமல் இடப்பக்கம் நோக்கிய சுழற்சியில் அமைத்துக்கெபத்திகா வடிவமாக்கி விட்டதாகவும். இது தீமையின் அடையாளம் என்று பிறகு தெரிந்ததாகவும் கூறுவர்.

சுவசுதிகாவின் உண்மையான ஒலிப்பு 'ஓம்' என்னும் தமிழ்ச் சொல்லே என்பது கண்டறியப்பட்டுள்ளது. 'ஓம்' என்னும் தமிழ்ச்சொல் (ஓம்பு) காப்பாற்று என்று பொருள்படுகிறது. சிந்துவெளியெழுத்தமைப்பின்படி 'ஓ' என்னும் நெடில் உயிரெழுத்தை ஒஒ என இரண்டு குறில் எழுத்துகளால் குறிப்பர். சிந்துவெளியெழுத்திலும் தமிழ் பிராமி எழுத்திலும் என்பதே ஒகரக்குறிலைக் குறிக்கும் எழுத்தாக இருந்தது. ஓகார நெடிலுக்கு இரண்டு ஒகரங்கள் அடுத்தடுத்து எழுதப்படும், கூட்டல் குறி + மகரத்தின் அடையாளம். ஆதலின் நடுவில் மகரமும் ஒகரம் ஒன்றையொன்று வெட்டுமாறு 卐 ஓம் என்னும் சொல் சிந்துவெளி மொழியில் எழுதப்பட்டுள்ளது.

இதனைப் பானைத் தொழிலாளர், அணிகலத் தொழிலாளர், ஏனங்கள் செய்வோர் கலைப்பணியாளர்கள் ஆகிய அனைத்துப் பிரிவினரும் பயன்படுத்தியிருக்கின்றனர். ஓம் என்று இதனைப் படித்தது முற்றிலும் சரி என்பதற்குச் சான்றாக மொகஞ்சதாரோவில் கிடைத்த (M.482) மற்றொரு முத்திரையும் சான்றாகிறது. இதில் 'ஓமன்' என்பவனின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. 'ஓம்' என்பதற்குரிய சுவசுதிகா இலச்சினையே அதிலும் சொல்லின் முதலசையாகவும், 'அன்' ஈற்றசையாகவும் காணப்படுகிறது.

ஓம்[4] *ōm*, கு.வி.எ. (adv.) ***ஆம் என்னும் உடன்பாட்டை உணர்த்துஞ் சொல்;*** yes, the expression of affirmation or of consent. "ஓமோ மெனவோங்கியதோர் சொல்" (திருவாலவா.38,4).

[ஆம் → ஓம்.]

ஓம்படு[1]-தல் *ōm-badu-*, 18.செ.குன்றாவி. (v.t.) ***உடன்படுதல்*** (யாழ்ப்.); to express assent; to consent.

[உடம் + படு - ஓம்படு.]

ஓம்படு[2]-த்தல் *ōmbadu-*, 4.செ.குன்றாவி. (v.t.) 1. ***பாதுகாக்குமாறு சேர்த்தல்;*** to protect. சிறைப்புறமாக வோம்படுத்தது (தொல்.பொருள்.114,உரை.). 2. ***ஒதுங்குதல்;*** to avoid. "படைத்தலைக் கொள்ளாமை யோம்படுத்த வுயர்வு" (பு.வெ.7,3,கொளு.). 3. ***உறுதிகூறுதல்;*** to confirm, to encourage. "பூம்பொழிற்புறங் காவலனை யோம்படுத்தற்கும்"

[ஓ = தடுத்தல், காத்தல். ஓ → ஓம் = தடுத்துநில், காப்பாற்று. ஓம் + படு - ஓம்படு = பாதுகாப்பு செய்தல்.]

ஓம்படை *ōmbaḍai*, பெ. (n.) 1. ***பாதுகாப்பு;*** protection, safeguard. "ஓம்படையுளப்பட" (தொல்.பொருள்.91). 2. ***பாதுகாக்குமிடம்;*** place of protection. "அறனோம்படையும்" (சிலப்.5,179,அரும்.). 3. ***சமயக்கருத்துகள் கற்பிக்குமிடம்*** (சிலப்.5,179,உரை.); place where religious instruction is imparted. 4. ***தீர்வு;*** remedy. "ஓம்படையொன்றுஞ் செப்பாள்" (சீவக.232). 5. ***மறவாமை;*** keeping in mind, retaining in memory. தலைவற் கோம்படை சாற்றல் (தஞ்சைவா.139,உரை.).

[ஓம்பு + அடை.]

ஓம்படைக்கிளவி *ōmbaḍai-k-kiḷavi*, பெ. (n.) 1. ***தலைவியைப் பாதுகாத்துக் கொள்ளெனத் தலைவற்குத் தோழிகூறுங் கூற்று*** (தொல்.பொருள்.114); (erot.) entrustment of the heroine to her lover by her companion for protection. 2. ***பெரியோர் பாதுகாவலாகச் சொல்லுஞ் சொல்;*** sage advice given by wise men.

[ஓம்படை + கிளவி.]

ஓம்பு[1]-தல் *ōmbu-*, 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***பாதுகாத்தல்;*** to protect, guard, defend, save. "குடிபுறங் காத்தோம்பி" (குறள்.549). 2. ***பேணுதல்;*** to preserve, to keep in mind, to cherish, nourish. "ஈற்றியாமை தன்பார்ப்போம்பவும்" (பொருந்.186). 3. ***தீதுவராமற் காத்தல்;*** to remove, separate, to keep off; to ward off as from evil. 4. ***பரிகரித்தல்;*** to dispel. "எளைத்துங்

குறுகுத லோம்பல்." (குறள்.820). 5. *வளர்த்தல்* (தேவா.1,1); to maintain, support; to cause to increase; to bring up, "கற்றாங் கெரி யோம்பி" (தேவா.1,1).

[ஓ → ஓம் → ஓம்பு.]

ஓம்பு²-தல் *ōmbu-,* 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***சீர்தூக்கு தல்;*** to consider, discriminate. "ஓம்பாவீகையும்" (பு.வெ.9,1). 2. ***மனத்தை யொருக்குதல்;*** to concentrate the mind. "தெரிந்தோம்பித் தேரினு மஃதே துணை" (குறள்,132). 3. ***இவறுதல்;*** to clutch or grasp tightly, as a miser. "பெற்றேமென் றோம்புத றேற்றாதவர்" (குறள்.626).

ம. ஓமன; து. ஓமன; தெ. ஒமு.

[ஓ → ஓம் → ஓம்பு. ஓம்புதல்.]

ஓம்பு³-தல் *ōmbu-,* 5.செ.குன்றாவி. (v.t.) ***உண்டாக்கு தல்*** (யாழ்.அக.); to create.

ஓமநீரம் *ōmanīram,* பெ. (n.) ***ஓமச்சாறு;*** essence of oman, (Bishop's weed).

[ஓமம் + சாறு.]

ஓமப்பொடி¹ *ōma-p-podi,* பெ. (n.) 1. ***தின்னும் பலகாரவகை;*** omam confectionery, fashioned like vermicelli. 2. ***ஓம மருந்து*** (வின்.); medicinal ōmam. powder

ம. ஓமப்பொடி; க. ஓமப்புடி; தெ. ஓமப்புடி.

[ஓமம் + பொடி.]

ஓமம்¹ *ōmam,* பெ. (n.) ***ஓர்வகைக் காரமான மருந்துச்செடி*** (மலை.); Bishop's weed, herbaceous plant.

ம. ஓமம்; க. ஓம, ஓமு, ஓவு, வாம, வோம, கோம; து. ஓம; தெ. ஓமமு.

[உம் → உமல் → உமறு = காரச்சுவை. உம் → ஓம் → ஓம் → ஓமம் = காரச்சுவையுடையது.]

ஓமம்² *ōmam,* பெ. (n.) ***வேள்வித்தீயில் நெய் முதலியன பெய்கை;*** offering an oblation to the gods by pouring ghee, etc. into the consecrated fire. "ஓமம் வேள்வி யுதவி தவஞ்செபம்" (சேதுபு.சேதுச.51).

[ஓம்பு → ஓமு → ஓமம். Skt. hōma.]

ஓமு = (ஓம்பு) நெய்யூற்றித் தீயை அணையாமல் காத்தல், தீவளர்த்தல், தீயைப்பேணுதல், தீயோம்புதல் என்றாயிற்று.

ஓமல்¹ *ōmal,* பெ. (n.) 1. ***ஊர்ப்பேச்சு;*** rumour, bruit. "ஊருக்கு ஓமல், வீட்டுக்கு வயிற்றெரிச்சல்". 2. ***புகழ்ச்சி;*** reputation.

[ஓ = உயர்தல், மிகுதல். ஓ → ஓம் → ஓமல்.]

ஓமல்² *ōmal,* பெ. (n.) 1. ***புகையெழுதல்;*** to rise as smoke. 2. ***பரவுதல்;*** spreading.

[ஓ → ஓமு → ஓமல்.]

ஓமலிப்பு *ōmalippu,* பெ. (n.) ***ஊர்ப்பேச்சுப்பரவுகை;*** spreading, as a rumour. "ஐயையோ ஊரெங்கு மிதுவோ ஓமலிப்பு" (சர்வ.கீர்த்.186).

[ஓமல் → ஓமலிப்பு.]

ஓமற்கோரை *ōmar-kōrai,* பெ. (n.) ***கோரைவகை;*** a kind of sedge.

[ஓமல் + கோரை.]

ஓமற-த்தல் *ō-mara-,* 4.செ.கு.வி. (v.i.) ***ஒழிவறுதல்;*** to be unceasing, incessant. "ஓமறந்து ... கண்ணும் படுகுவம்" (அகநா.11).

[ஓய்வு → ஓவு → ஓ + மற = ஓமற.]

ஓமாலிகை *ōmāligai,* பெ. (n.) ***நறும் புனலுக்குப் பயன்படும் 32 வகை பொருட்கள்*** (அவை: இலவங்கம், பச்சிலை, கச்சோலம், ஏலம், நாகணம், கோட்டம், நாகம், மதாவரிசி, தக்கோலம், நன்னாரி, வெண்கோட்டம், கத்தூரி, வேரி, இலாமிச்சம், கண்டில்வெண்ணெய், கடு, நெல்லி, தான்றி, துத்தம், வண்ணக்கச்சோலம், அரேணுகம், மாஞ்சி, சயிலேகம், புழுகு, புன்னைநறுந்தாது, புலியுகிர், சரளம், தமாலம், வகுளம், பதுமுகம், நுண்ணேலம், கொடுவேரி முதலியன) (சிலப்.6,77, வரை.); fragrant substances put in water used for drinking and bathing, of which those are 32.

[ஓமல்² → ஓமலிகை → ஓமாலிகை = மணம் பரவும் இயல்பினது.]

ஓமான் *ōman,* பெ. (n.) ***ஓந்தி*** பார்க்க (திவா.); see *ōndi.*

[ஓணான் → ஓமான் (கொ.வ.).]

ஓமிடி¹-தல் *ōmiḍi-,* 4.செ.கு.வி. (v.i.) ***கேடுறுதல்;*** to be ruined, destroyed, to perish. 'நீ ஓமிடிந்து போவாய்' (வின்.).

ம. ஓமிடிச்சல்.

[ஓம் + இடி - ஓமிடி. பாதுகாப்புக்கேடு. ஓம் = பாதுகாப்பு. இடி = இடிதல், கெடுதல்.]

ஓமிடி² *ōmiḍi,* இடை. (int.) ***ஓ, நாசம்*** (வின்.); O! ruin.

[ஓம்பு → ஓம் (பாதுகாப்பு) ஓம் + இடி = பாதுகாப்பு கெடுதல், அழிவு.]

ஓமை *ōmai* பெ. (n.) 1. ***உகா*** (பிங்.); uga tree. 2. ***மாமரம்;*** mango tree. "வெண்குன்றிப்பருப்போமைக் கொட்டை" (தைலவ.தைல.33).

ம. ஓம.

[ஓ = உயர்ச்சி. ஓ → ஓமை.]

ஓய்¹-தல் *ōy-,* 2.செ.கு.வி. (v.i.) 1. ***முடிவுறுதல்;*** to cease; to come to an end. மழை ஓய்ந்தது. 2. ***மாறுதல்;*** to change. "செய்வினை யோயற்க" (பரிபா.10,128). 3. ***முன்நிலை சுருங்குதல்*** (தொல்.சொல்.330); to diminish; to be reduced, to become small. 4. ***தளர்தல்;*** to become tired, weary, weak, infirm, as a limb of the body. கை ஓய்ந்து போயிற்று. 5. ***அழிதல்;*** to expire, perish. "ஊனையாளிருந் தோம்பு கின்றேன் கெடுவேனு யிரோ யாதே" (திருவாச.5,38). 6. ***இளைப்பாறுதல்;*** to rest. ஓய்ந்தவேளை (செ.அக.).

ம. ஒயுக.

[உய் → ஓய் → ஓய் = செல்லுதல், போதல், முடிதல்.]

ஓய்² *ōy,* இடை. (int.) ***ஒரு விளியுருபு*** (வீரசோ.வேற்றுமை.8); hallo! an int. used in calling attention. (ஆ.அக.).

ம. ஓய்; **தெ., க., து.** ஓயி.

[ஓ → ஓய்.]

ஓய்ச்சல் *ōyccal,* பெ. (n.) 1. ***ஓய்வு;*** ceasing, resting. 2. ***தளர்ச்சி;*** weariness, debility. கைகாலோய்ச்சல்.

[ஓய்¹ → ஓய்ச்சல்.]

ஓய்ச்சலொழிச்சலில்லாமை *ōyccal-oliccal-illāmai,* பெ. (n.) ***சிறிதும் ஒழிவில்லாமை*** (உ.வ.); utter lack of rest or breathing time.

[ஓய்ச்சல் + ஒழிச்சல் + இல்லாமை.]

ஓய்ச்சலொழிவு *ōyccal-olivu,* பெ. (n.) ***இளைப்பாறுகை*** (உ.வ.); rest, leisure.

[ஓய்ச்சல் + ஒழிவு.]

ஓய்மான் *ōymān,* பெ. (n.) ***குடிப்பெயர்;*** name of a dynasty.

[ஆய் →. ஓய் + (மகன்) மான். ஆய்க்குடியின் பிரிவினை ஓய்க்குடியினராகலாம்.]

ஓய்மான்வில்லியாதன் *ōymānvilliyādan,* பெ. (n.) ***நன்னாகனால் பாடப்பெற்றவன் இலங்கை என்னும் ஊருக்குத் தலைவன்;*** Sangam noble.

[ஓய்மான் + வில்லி + ஆதன்.]

ஆய் → ஓய் + மான். மகன் → மான். ஓய்மானுக்குரிய நாடு ஓய்மா நாடு எனப்பட்டது. ஆநிரைகளைக் காக்கும் ஆய்க்குடியின் வழிமரபினன் ஆகலாம். ஓய்மான் - குடிப்பெயர். வில்லி - தொழிற்பெயர். ஆதன் - இயற்பெயர்.

ஓய்மானல்லியக்கோடன் *ōymānalliyakkōdan,* பெ. (n.) ***நன்னாகனால் பாடப்பெற்ற மாவிலங்கையை ஆண்ட சிற்றரசன்;*** Sangam noble.

[ஓய்மான் + நல்லியன் + கோடன். ஓய்மான் பார்க்க; see ōymān.]

ஓய்மானல்லியாதன் *ōymānalliyādan,* பெ. (n.) ***புறத்திணை நன்னாகரால் பாடப்பெற்ற கொடையாளி;*** Sangam noble.

[ஓய்மான் + நல்லி + ஆதன். ஓய்மான் பார்க்க; see ōymān.]

ஓய்மானாடு *ōymānādu,* பெ. (n.) ***திண்டிவனத்தைச் சூழ்ந்த நாடு*** (S.I.I. III,201,12); small tract of country in Tamil-agam situated about Tindivanam.

[ஓய்மான் + நாடு.]

ஓய்வு¹ *ōyvu,* பெ. (n.) 1. ***ஒழிவு;*** cessation, ceasing, relinquishment, rest. 2. ***தளர்வு;*** weariness. 3. ***முடிவு;*** termination.

ம. ஓய்வு.

[உய் → ஓய் = செல்லுதல், போதல், முடிதல், களைத்தல், சோர்தல். ஓய் → ஓய் → ஓய்வு.]

ஓய்வு² *ōyvu,* பெ. (n.) 1. ***ஓரினப்பொருளை வரிசைபட வைப்பது*** (ஆ.அக.); serializing a class of objects. 2. ***நீட்சி;*** length. 3. ***எல்லை;*** border, limit.

[1. ஓரியைவு → ஓய்வு (கொ.வ.). 2. 3. ஓ → ஓய்வு. ஓ = நீட்சி.]

ஓய்வுகரை *ōyvu-karai,* பெ. (n.) ***அளவுமுடிவு*** (யாழ். அக.); limit.

[ஓய்வு² + கரை.]

ஓய்வுநாள் *ōyvu-nāl,* பெ. (n.) ***வேலை செய்யாது இளைப்பாறும் நாள்.*** (chr.); day of rest, Sabbath.

[ஓய் → ஓய்வு + நாள்.]

ஓய்வொழிச்சல் *ōyvoliccal,* பெ. (n.) ***ஓய்ச்சலொழிவு*** பார்க்க; see *ōyccalolivu.*

[ஓய்வு + ஒழிச்சல்.]

ஓயாமணி *ōyā-mani,* பெ. (n.) ***விடாதடிக்கு மணி*** (இ.வ.); temple bell kept ringing continuously.

[ஓய் + ஆ + மணி.]

ஓயாமாரி *ōyā-māri,* பெ. (n.) ***இடைவிடாமை*** (யாழ். அக.); continuity.

[ஓய் + ஆ + மாரி - ஓயாமாரி. 'ஆ' - எ.ம.இ.நி. மாரி = மழை. இடைவிடாத மழையைப் போன்ற இடைவிடாமை என்பது பொருள்.]

ஓர்¹-தல் *ōr-,* 2.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஆய்ந்தறிதல்;*** to consider attentively, examine, investigate. "ஓரும் வையத்தியற்கை" (சீவக.888). 2. ***அறிதல்;*** to know. (செ.அக.).

[ஒல் → ஓர் → ஓர் → ஓர்-தல் (வே.க.107).]

ஓர்²-த்தல் *ōr-,* 2.செ.குன்றாவி. (v.t.) 1. ***ஆராய்தல்;*** to consider. 2. ***தெரிந்தெடுத்தல்;*** to select, choose. "ஆயிரத் தோர்த்த விப்பத்தே" (திவ்.திருவாய்.1,2,1). 3. ***நினைத்தல்;*** to think, regard. "வேள்வியோர்க்கும்மே யொருமுகம்" (திருமுரு.96). 4. ***கூர்ந்து கேட்டல்;*** listen attentively. "புலிப்புகர்ப்போத்தோர்க்கும்" (புறநா.157.12).

ம. ஓர்.

[ஓர்-தல் → ஓர்-த்தல்.]

ஓர்³ *ōr-,* பெ.எ. (adj.) ***ஓர் அசைநிலை*** (சிலப்.2,37, உரை.); 'a', 'an', the form used before substantives beginning with vowels. ஓர் அரசன் - இடை. part. an expletive. (செ.அக.).

[ஒல் → ஒன்று → ஒரு → ஓர்.]

ஓர்க்கோலை *ōrkkōlai,* பெ. (n.) ***கடல்படு பொருட்களுள் ஒன்று;*** amber, one of the five kinds of kadal padu-tiraviyam. (products of the sea) அம்பர் என்றும் அழைக்கப்படும்.

[ஒருகா. ஓர்க்கு + ஓலை.]

ஓர்கட்புள் *ōrkaṭpuḷ,* பெ. (n.) ***காகம்;*** crow.

[ஓர் + கண் + புள்.]

ஓர்குடிமணாளன் *ōr-kuḍi-maṇāḷaṉ,* பெ. (n.) ***ஓர்குடியிற்கொண்டோன்*** பார்க்க; see *ōrkuḍiyiṟkoṇḍōṉ.*

ஓர்குடியிற்கொண்டோன் *ōr-kuḍiyiṟkoṇḍōṉ,* பெ. (n.) ***ஓர்ப்படியான்*** (சகலன்) (பிங்.); husband of the wife's sister.

[ஓர் + குடியில் + கொண்டோன்.]

ஓர்கை *ōrgai,* பெ. (n.) ***யானை;*** elephant. "ஓர்கை யுரியான்" (கடம்பர்.உலா.364).

[ஓர்கை = யானை. ஒருகை (தும்பிக்கை) உடைமையின் ஓர்கை எனப்பட்டது.]

ஓர்ச்சி[1] *ōrcci,* பெ. (n.) 1. ***ஆராய்ச்சி;*** investigation, research. 2. ***அறிவு;*** knowledge, wisdom. "ஓர்ச்சி யின்புருவர்கி" (வேதாரணி.வரன்.25). 3. ***உணர்ச்சி;*** consciousness, feeling. "ஓய்ந்த வோர்ச் சிவந் தெழுதலும்" (விநாயகபு.75,443). 4. ***சூழ்வுரை, அறிவுரை;*** consultation, rumination. (செ.அக.).

ம. ஓர்ச்சி (நினைவு).

[ஓர் → ஓர்ச்சி.]

ஓர்ச்சி[2]**-த்தல்** *ōrcci-,* 4.செ.கு.வி. (v.i.) ***நினைவூட்டுதல்;*** to cause, to remember, remind.

ம. ஓர்ப்பிக்குக.

[ஓர் → ஓர்ச்சி.]

ஓர்ப்படி *ōr-p-paḍi,* பெ. (n.) ***ஓர்ப்படியாள்*** பார்க்க; see *ōrppaḍiyāḷ.*

ஓர்ப்படியாள் *ōr-p-paḍiyāḷ,* பெ. (n.) ***கணவனுடன் பிறந்தான் மனைவி;*** wife of the husband's brother.

[ஓர் + படி + ஆள். படி = வாசல். ஒருவாசலுக்குள் மூத்தவளோடு வாழ்பவள்.]

ஓர்ப்பிலந்தை *ōrppilandai,* பெ. (n.) ***காட்டிலந்தை;*** wild jujube. (சா.அக.).

[ஓர்ப்பு + இலந்தை.]

ஓர்ப்பு[1] *ōrppu,* பெ. (n.) ***ஆய்ந்துணர்கை*** (இறை.2,29); investigation, research, careful consideration, one of the four kinds of āḍūu-k-kuṉam. 2. ***தெளிவு*** (திவா.); clear under-standing. 3. ***பொறை*** (திவா.); patience, forbearance.

ம. ஓர்ப்பு; தெ. ஓர்பு.

[ஓர்[2] → ஓர்ப்பு.]

ஓர்பு *ōrbu,* பெ. (n.) ***ஆராய்கை*** (சங்.அக.); consideration, reflection, research.

[ஓர் → ஓர்ப்பு → ஓர்பு.]

ஓர்மம் *ōrmam,* பெ. (n.) 1. ***மனத்திண்மை*** (யாழ்ப்.); fortitude, courage, bravery. 2. ***சிந்தனை;*** reflection. 3. ***ஓர்மை*** பார்க்க; see *ōrmai.*

[ஓர்மி → ஓர்மம் (வே.க.107).]

ஓர்மி-த்தல் *ōrmi-,* 4.செ.கு.வி. (v.i.) ***மனந்திடப்படுதல்*** (வின்.); to be courageous, daring, brave, valiant, adventurous.

ம. ஓர்மிக்குக (நினைவுபடுத்துதல்).

[ஓர் → ஓர்மி → ஓர்மி-த்தல் (வே.க.107).]

ஓர்மிப்பு *ōrmippu,* பெ. (n.) ***ஓர்மம்*** பார்க்க; see *ōrmam.* (ஆ.அக.).

[ஓர்மி → ஓர்மிப்பு.]

ஓர்மை *ōrmai,* பெ. (n.) 1. ***ஒற்றுமை;*** unity. 2. ***துணிவு;*** fortitude, bravery, intrepidity. 3. ***ஆரவாரம்*** (ஆடம்பரம்); pomp; parade, as of a festival.

[ஓர் → ஓர்மை (வே.க.107).]

ஓர்வம்[1] *ōrvam,* பெ. (n.) ***ஒருபாற் சார்கை;*** partiality. "ஓர்வமே செய்யுமுலோபமே" (ஏலா.61).

[ஓரம் → ஓர்வம்.]

ஓர்வம்[2] *ōrvam,* பெ. (n.) ***சுவர் கட்டும்பொழுது இரண்டு கற்கள் சேரும் இடம்;*** joining ends of two bricks (inlaying) (சேரநா.).

ம. ஓர்வ.

[ஓர் → ஓர்வம்.]

ஓர்விதைப்பூடு *ōrviḍaippūḍu,* பெ. (n.) ***ஒரே விதையையுடைய பூடு;*** plant having but a single seed-lobe. (சா.அக.).

[ஓர் + விதை + பூ.]

ஓர்வு *ōrvu,* பெ. (n.) ***ஓர்ப்பு*** பார்க்க; see *ōrppu.*

ஓரக்கட்டை *ōra-k-kaṭṭai,* பெ. (n.) 1. ***அணைத்துத்தாங்குங் கட்டை;*** (C.E.M.) abutment, support. 2. ***தேரைத் திசைமாற்றுவதற்காகச் சக்கரத்தின் அடியிலிருக்கும் சாய்வுக்கட்டை;*** block of wood placed under the wheels of the temple chariot to direct its course.

[ஓரம் + கட்டை.]

ஓரக்கண்ணன் *ōra-k-kaṇṇaṉ,* பெ. (n.) 1. ***சாய்ந்த பார்வையுடையவன்;*** squint-eyed man. 2. ***ஒருதலைச் சார்பானவன்;*** partisan; one who is biassed.

[ஓரம் + கண்ணன்.]

ஓரக்காரன் *ōra-k-kāraṉ,* பெ. (n.) ***ஓரக்கண்ணன், 2*** பார்க்க; see *ōrakkaṇṇaṉ, 2.*

[ஓரம் + காரன்.]

ஓரகத்தாள் *ōr-agattāḷ,* பெ. (n.) ***ஓரகத்தி*** பார்க்க; see *ōragtti.*

[ஒரு → ஓர் + அகம் + அத்து + ஆள்.]

ஓரகத்தி *ōr-agatti,* பெ. (n.) ***கணவனுடன் பிறந்தான் மனைவி;*** husband's brother's wife. (செ.அக.).

க. ஒரகித்தி.

[ஓர் + அகத்தி (அகம் + அத்தி). அகம் = வீடு.]

ஓரங்கல் *ōrangal,* பெ. (n.) ***தெலுங்கு நாட்டு வாரங்கல் நகரம்;*** ancient capital of Andhra, now called Warangal, so called because it was surrounded by a single stone wall. "உருத்தரா நின்னுடைய வோரங்கல் நாட்டில்" (தமிழ்நா.89).

தெ. ஓரங்கல்.

[ஓர் + அம் + கல் - ஓரங்கல். ஓரங்கல் = ஒற்றைக்கல்.]

ஓரசைச்சீர் *ōr-asai-c-cīr,* பெ. (n.) ***அசைச்சீர்*** பார்க்க; see *asai-c-cīr.*

[ஓர் + அசை + சீர்.]

ஓரட்டாங்கை *ōrattāṅ-gai,* பெ. (n.) ***இடக்கை*** (இ.வ.); left hand.

[ஒருஉதல் → நீக்குதல். ஒருவு → ஒருட்டு → ஒருட்டாம் + கை. நற்செயல்களுக்குப் பயன்படுத்தாமல் விலக்கும் இடக்கை.]

ஓரட்டும் *ōrattum,* பெ. (n.) ***எல்லாம்*** (p.); altogether.

[ஓர் → ஓரட்டும் (வே.க.107).]

ஓரடி *ōr-adi,* பெ. (n.) ***ஒருபோகம்*** single crop.

[ஓர் + அடி.]

ஓரடிக்கோரடி *ōr-adikkōr-adi,* கு.வி.எ. (adv.) ***அடிக்கடி;*** frequently. "அவனி யாளுகவென் றோரடிக்கோரடி புரிந்து" (பாரத.குரு.88).

[ஓர் + அடிக்கு + ஓர் + அடி.]

ஓரடிப்பதம் *ōr-adi-p-padam,* பெ. (n.) ***ஓரடித்தரவு அமைந்த இசைப்பாட்டு;*** musical composition or taru consisting of pallavi, anu-pallavi and one caranam.

[ஓர் + அடி + பதம்.]

ஓரடிமடக்கு *ōradimadakku,* பெ. (n.) ***நான்கடியுள்ளோரடியே மடங்கி வருவது;*** figure of speech (i.e.) pun appearing in one line of a stanza repeated four times.

[ஓர் + அடி + மடக்கு.]

ஓரடை *ōradai,* பெ. (n.) ***ஒரு சிற்றளவு*** (தொல்.எழுத்து. 170.உரை.); ancient small measure.

[ஓர் + எடை = ஓரெடை → ஓரடை (கொ.வ.).]

ஓரணை *ōranai,* பெ. (n.) 1. ***ஓர் இணை;*** *pair. (S.I.I. ii.16). 2.* ***வரிசை, ஒழுங்கு;*** line, queue.

க. ஓரண.

[ஓர் + இணை - ஓரிணை → ஓரணை.]

ஓரத்துப்பட்டை *ōrattu-p-pattai,* பெ. (n.) ***தட்டோட்டுக் கூரையில் ஓரத்திற்கட்டும் சுண்ணாம்புப்பட்டை*** (C.E.M.); side rafter of plaster on tiled roof.

[ஓரம் + அத்து + பட்டை.]

ஓரம்[1] *ōram,* பெ. (n.) 1. ***விளிம்பு;*** edge, border, margin, brim, brink. 2. ***ஒருதலைச்சார்பு;*** partiality in speaking, pleading. "மன்றோரஞ் சொன்னார் மனை" (நல் வழி.23). 3. ***பெண்குறி*** (யாழ்ப்.); pudenda muliebre. 4. ***ஒருபக்கம் பொருந்திய இடம், நெருங்கிய தன்மை;*** on one side, towards the edge.

ம. ஓரமி; **க.** பட., ஓர; **கோத.** ஓர்ய; **து.** ஓர; **தெ.** ஓர, ஓரமு. *L.* ōra.

[ஓர் → ஓரம் = ஒன்றின்பக்கம் (வே.க.107).]

ஓரம்[2] *ōram,* பெ. (n.) ***சலுகை*** (அக.நி.); help, aid, support.

ஓரம்பம் *ōrambam,* பெ. (n.) ***ஒரு கணிதநூல்*** (கணக்கதி.3); mathematical work.

[ஏரம்பம் → ஓரம்பம் (கொ.வ.).]

ஓரம்பேசல் *ōrampēsal,* பெ. (n.) ***ஒருபக்கஞ் சார்பாகப் பேசுதல்;*** biased statement. (ஆ.அக.).

ஓரம்போகியார் *ōram-pōgiyār,* பெ. (n.) ***ஐங்குறுநூற்றில் மருதப்பகுதியைப் பாடிய புலவர்;*** Sangam poet, author of Marudam in Ai-n-kuru-nūru.

[ஓரம் + போகி + ஆர். ஓரம்போகி என்பது ஊர்ப்பெயராகலாம்.]

ஓரங்கட்டு-தல் *ōraṅkattu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***ஓரமாகச் சேர்த்தல்;*** to gather to one side. 2. ***ஒரு ஓரமாகச் செல்லுதல்;*** to go along the edge. 3. ***வேண்டாதவரை ஒதுக்கிவைத்தல்;*** to avoid the unwanted.

[ஓரம் + கட்டு-தல்.]

ஓரம்வை-த்தல் *ōram-vai-,* 4.செ.கு.வி. (v.i.) ***ஆறும் புண்ணைச் சுற்றிச் தசை வளர்தல்;*** to form proud flesh around a healing wound. (செ.அக.).

[ஓரம் + வை.]

ஓரவஞ்சனை *ōra-vañjanai,* பெ. (n.) ***ஒருதலைச்சார்பாக ஏய்த்தல்;*** deceitful partiality. ***ஓரவாரம்*** பார்க்க; see *oravāram.*

[ஓரம் + வஞ்சனை.]

ஓரவாரம் *ōra-vāram,* பெ. (n.) ***ஒருபக்க சாய்வு;*** partiality. "வழக்கினிடை யோரவாரமு ரைத்தே" (அருட்பா.1, விண்ணப்பக்.309).

[ஓரம் + வாரம். வாரம் = சாய்வு.]

ஓரற்று *ōr-arru,* பெ. (n.) ***ஒரு தன்மையானது;*** thing of the same kind. "அதனோரற்றே" (தொல்.சொல்.136).

[ஓர் + அற்று.]

ஓரறிவுயிர் *ōr-arivuyir,* பெ. (n.) ***தொடுவுணர்வு ஒன்றேயுடைய புல் மரமுதலியன*** (நன்.444.உரை.); living organisms having only one sense of perception, as plants, supposed to have only the sense of touch.

[ஓர் + அறிவு + உயிர்.]

ஓரன்மை *ōr-anmai,* பெ. (n.) ***ஒருதன்மையல்லாமை;*** dissimilarity. "பிறப்போரன்மை யறிந்தனம்" (நற்.328).

[ஓர் + அல் + மை.]

ஓரா *ōrā*, பெ. (n.) 1. ***முள்ளுப்பலாச்சிமீன்;*** sea porcupine, light brown fish. 2. ***ஒருவகைக்கடல் மீன்;*** sea-fish, light brown. (செ.அக.).

[உல் → ஒல் → ஓர் → ஓரா.]



ஓரா

ஓராங்கு *ōr-āṅgu*, வி.எ. (adv.) 1. ***ஒரு சேர;*** united jointly. "இளமையுங் காமமு மோராங்குப் பெற்றார்" (கலித்.18). 2. ***ஒன்றுபோல;*** in the same manner, like wise. "நால்வேறு நனந்தலை யோராங்கு நந்த" (பதிற்றுப்.69,16). 3. ***இடைவிடாமல்;*** unintermittently, ceaselessly. "ஓராங்குப் படிதலுடைய ரீண்டே" (ஞானா.41,19).

[ஓர் → ஓராங்கு (வே.க.107).]

ஓராட்டு-தல் *ōrāṭṭu-*, 5.செ.குன்றாவி. (v.t.) 1. ***தாலாட்டு தல்*** (யாழ்ப்.); to lull, lullaby. 2. ***ஓலாட்டு-தல்*** பார்க்க; see *ōlāṭṭu-*.

[ஓலாட்டு → ஓராட்டு (கொ.வ.).]

ஓராட்டுப்பட்டோலை *ōrāṭṭu-p-paṭṭōlai*, பெ. (n.) ***ஆண்டுக்கணக்குப்பட்டியல், சதுர்ப்பட்டோலை;*** (p.) complete balance sheet.

[ஓர் + ஆட்டு + பட்டோலை. ஆண்டு → ஆட்டு.]

ஓராண்காணி *ōr-āṉ-kāṇi*, பெ. (n.) ***ஒருவனுக்கே உரிய நிலம்;*** estate under a single owner. "ஓராண்காணியா யரசாள" (இராமநா.உயுத்த.74).

[ஓர் + ஆள் + காணி.]

ஓராண்டு *ōrāṇḍu*, பெ. (n.) 1. ***ஓர் ஆண்டு;*** one year. 2. ***இறந்தார்க்கு ஓராண்டு முடிவில் செய்யும் நீர்க்கடன்;*** anniversary of death. (சேரநா.).

ம. ஓராண்டு.

[ஓர் + ஆண்டு.]

ஓராண்வழி *ōr-āṉ-vaḻi*, பெ. (n.) ***ஒரே தொடராய்வரும் மரபு வழி*** (பரம்பரை.); unbroken lineage from individual to individual. 'நம்மாசாரியர்கள் ... ஓராண்வழியாய்க் கொண்டு போந்த இத்தை' (ஈடு.6,10,4).

[ஓர் + ஆண் + வழி.]

ஓராம் *ōrām*, பெ.எ. (adj.) ***முதலாம்;*** first.

[ஓர் → ஓராம் (வே.க.107).]

ஓராயம் *ōr-āyam*, பெ. (n.) 1. ***சேர்க்கை;*** combination, union. "ஓராயமே யுலகம் படைத்தது" (திருமந்.407). 2. ***சாய்வு*** (வின்.); obliqueness, slant. 3. ***தோணியின் சாய்ந்த ஓர்புறம்*** (வின்.); the leeward or leaning side of a boat or other vessel. 4. ***இணைப்பு*** (வின்.); the close joining of two boards.

ம. ஓராயம்.

[ஓர் + ஆயம்.]

ஓராயிரம் *ōrāyiram*, பெ. (n.) 1. ***ஓர் ஆயிரம்;*** one thousand. 2. ***பன்முறை அல்லது எண்ணிறந்த தடவை எனப் பொருள்படுவதோர் குறிப்பு மொழி;*** expression denoting many times or on numerous occasions. அவனுக்கு நான் ஓராயிரம் சொன்னேன்; கேட்கவில்லை (உ.வ.).

ம. ஓராயிரம்.

[ஓர் + ஆயிரம்.]

ஓராவொட்டி *ōrāvoṭṭi*, பெ. (n.) ***மீன்வகை*** (யாழ்.அக.); a kind of fish.

[ஓரா → ஓராவொட்டி.]



ஓராவொட்டி

ஓரானொரு *ōrāṉ-oru*, பெ.எ. (adj.) ***ஏதாவது ஒரு;*** certain, someone. "ஓரானொருநாளில்" (குருபரம்.217, பன்னீ.).

[ஓர் → ஓராம் + ஒரு - ஓரானொரு (வே.க.107) ம் - ன் (திரிபு.) ஆகும் → ஆம் (உறுதிப் பொருள் தந்து சாரியையாயிற்று).]

ஓரி[1] *ōri*, பெ. (n.) 1. ***திருமணமாகாதவன்;*** celibate. 2. ***கணவனுடன் பிறந்தான் மனைவி;*** wife of the husband's brother. "ஓரிமகன் றனக்கு மோர் சரடு போட வேண்டும்" (ஆதியூரவ.5).

ம. ஓரி (பங்கு).

[1. ஓர் → ஓரி (தனித்திருப்பவன்). 2. ஓரகத்தி → ஓரி.]

ஓரி[2] *ōri,* பெ. (n.) ***தேன்முதிரும்போது தோன்றும் நீலநிறம்;*** dark blue colour of the matured honey. "அணிநிறவோரி பாய்தலின்" (புறநா.109,7).

[ஊரி → ஓரி.]

ஓரி[3] *ōri,* பெ. (n.) 1. ***வலிமை பொருந்தியது;*** that which is strong. 2. ***விலங்குகளின் ஆண்;*** male of animals. 3. ***காளை;*** ox. 4. ***முதுநரி;*** old jackal. 5. ***ஆண் குரங்கு;*** male lemur. 6. ***ஆண்களின் தலைமயிர்;*** man's hair. 7. ***குதிரையின் பிடரிமயிர்;*** mane. "ஓரி நுடங்க" (பொருள்.164).

க. ஓரி.

[உல் → ஒல் → ஓல் → ஓர் → ஓரி.]

ஓரி[4] *ōri,* பெ. (n.) 1. ***தமிழகப் பெருவள்ளல்களில் ஒருவன்;*** Sangam philanthrophist. 2. ***ஓரியின் குதிரைக் குரியபெயர்;*** name of horse owned by the Tamil chieftain Ōri. 3. ***ஒப்பற்றவன்;*** man of excellence.

[ஓரி[3] → ஓரி[4] சேரக்கிளை. மரபினர்க்கும் நாகருள் ஒரு சாரார்க் கும் 'ஓரி' குடிப்பெயராக விளங்கியதால் இதனைக் குடிப்பெ யர் என்றே குறிப்பிடலாம்.]

ஓரி[5] *ōri,* பெ. (n.) 1. ***உயரம்;*** height. 2. ***முதிர்வு;*** matured or ripened stage.

து. ஓரிகெ.

[உயர் → ஓர் → ஓரி.]

ஓரி[6] *ori,* பெ. (n.) ***நீரோடை, வாய்க்கால்களில் மேல் உயர்த்திக்கட்டிய பாலம்;*** bridge.

[ஊ → ஓ → ஓரி.]

ஓரிஆ *ōriā,* பெ. (n.) ***அடங்காத காளை;*** unmanageable ox.

க. ஓரை ஆவு, ஓரி.

[ஓரி + ஆ, ஆ = மாடு, காளை.]

ஓரிதலம் *oridalam,* பெ. (n.) ***சவுட்டு மண்;*** fuller's earth. (சா.அக.).

[உவர் → உவரி → ஓரி + தலம்.]

ஓரிதழ்த்தாமரை *ōr-idal-t-tāmarai,* பெ. (n.) ***ஒரு சிறு பூண்டு*** (பதார்த்த.318); pasture weed.

[ஓர் + இதழ் + தாமரை.]

ஓரிபிடி-த்தல் *ōripidi-,* 4.செ.கு.வி. (v.i.) 1. ***ஒட்டாரம் செய்தல், அடம்பிடித்தல்;*** to be obstinate. 2. ***ஓயாமல் அழுதல்;*** to weep continuously. 3. ***நச்சரித்தல்;*** to give trouble.

க. ஒரெ.

[ஓரி = காளை. ஓரி + பிடி - ஓரிபிடி. அடங்காத காளைபோல் தொல்லை தருதல்.]

ஓரிபூ-த்தல் *ōri-pū-,* 4.செ.கு.வி. (v.i.) ***தேடுவாரற்று அல்லது கேட்பாரற்றுக் கிடத்தல்*** (யாழ்.அக.); to lie unwanted or unsought for.

[ஓரி + பூத்தல். முதிர்ந்து நிறம்மாறி உண்பாரற்றுத் தானாகச் சிதையும் தேனடை போல் தேடுவாரற்றுக் கிடக்கும் நல்ல பொருளும் ஓரிபூத்தது எனக் குறிப்பிடுவது மரபு.]

ஓரியர் *ōriyar,* பெ. (n.) 1. ***குறிஞ்சிநிலத்தலைமக்களுள் சேரக்கிளைமரபினர்க்குரிய 'ஓரி' என்னும் குடிவழியி னர்;*** name of a clan among the Chera Dynasty. 2. பழந்தமிழ்க் கிளைமரபுகளுள் ஒன்றான நாகர்க்குரிய ***பெயர்;*** name of clan of the ancient Tamil known as Nāgās. (புறநா.175,உரை.).

[ஓரி + அர். ஓரி = குடிப்பெயர்.]

ஓரியாட்டம் *ōri-y-āttam,* பெ. (n.) ***ஓரியாடு-தல்*** பார்க்க; see *ōri-y-āḍu.*

[ஓரியாடு → ஓரியாட்டம்.]

ஓரியாடு-தல் *ōri-y-āḍu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***பிறர் தொடாத வண்ணம் நெடுநேரம் வலிமைகாட்டி நீருள் மூழ்கி விளையாடும் நீச்சல் விளையாட்டு;*** game of swimming. இவன் ஓரியாடுவதில் கெட்டிக்காரன் (திருச்சி.). 2. ***துணைக்கு எவரும் வராத நிலையில் ஒருவரே பெரும்பணியை நெடுநேரம் செய்தல்;*** to work all alone to finish a heavy task. அவள் ஒருத்தியே இவ்வளவு பெரிய கலியாணச் சமையல் வேலையில் ஓரியாடுகிறாள். யாராவது உதவி செய்யுங்கள். (உ.வ.).

[ஓரி = காளை. ஓரியாடுதல் = வலிமை வாய்ந்த காளை போல் ஒருவரே தனித்து நின்று திறமை காட்டுதல்.]

ஓரிலைத்தாமரை *ōr-ilai-t-tāmarai,* பெ. (n.) ***ஒரு சிறு பூண்டு*** (பதார்த்த.317); small plant.

[ஓர் + இலை + தாமரை.]

ஓரிலைத்துத்தி *ōr-ilai-t-tutti,* பெ. (n.) ***துத்திச்செடிவகை*** (வின்.); a species of Mallow.

[ஓர் + இலை + துத்தி.]

ஓரீற்றா *ōr-īrrā,* பெ. (n.) ***ஒருமுறையீன்ற மாடு;*** cow that has calved but once.

[ஓர் + ஈற்று + ஆ.]

ஓரு[1] *ōru,* பெ. (n.) ***நொடி*** (அக.நி.); instant, as the time measure of the snap of the finger.

[ஒல் → ஓர் → ஓர் → ஓரு.]

ஓரு[2] *ōru,* பெ. (n.) ***மணற்றிட்டு;*** heap of sand. 2. ***நீர்க்கால்களில், நீர்நிலைகள், கால்வாய்கள் ஆகிய வற்றின் அடியில் படியும் வண்டல்;*** sediment.

[ஊர் → ஓர் → ஓரு. ஓர் = உயரம்.]

ஓரும் *ōrum,* இடை. (part.) 1. ***எல்லாம்;*** all, altogether. 2. ***ஓர் அசைச்சொல்*** (குறள்.40); poetic expletive "செயற்பால தோரும் அறனே" (குறள்.40).

[ஓர் → ஓரும். ஓரும் என்னும் சொல் ஒன்றுபட்ட அனைத்தும் அல்லது எல்லாம் எனப்பொருள் தந்து, அதே பொருளில் சொல்லின் பின்னடையாகும் இடைச்சொல்லாயிற்று. செயற்பா லதோரும் என்பதற்குச் செயற்பாலதெல்லாம் என்று பொருள்.]

ஒருமம் *ōrumam,* பெ. (n.) 1. ***நீர்நிலை*** (அக.நி.); pool, sheet of water. 2. ***ஆற்றுக்கால்வாய்;*** channel from the river.

[வாலுகம் → வாருமம் → ஒருமம் (கொ.வ.) வாலுகம் = நீண்ட மணல்மேடுகளிடையிலமைந்த நீர்நிலை. ஒருவு → ஒருமம் → ஒருமம் = ஆற்றிலிருந்து விலக்கிக் கொணரும் நீர்க்கால்.]

ஒருயிர்ப்புள் *ōr-uyir-p-pul,* பெ. (n.) ***இருதலைப்புள்;*** fabulous bird having two heads. "ஒருயிர்ப் புள்ளி னிருதலையுள்ளொன்று போரெதிர்ந்தற்றால்" (கலித்.89).

[ஓர் + உயர் + புள்.]

ஒருள்ளிப்பூடு *ōr-ulli-p-pūḍu,* பெ. (n.) ***பலபல்லில்லாத உள்ளி*** (வின்.); solid root of garlic, not divided into cloves.

[ஓர் + உள்ளி + பூடு.]

ஒரெடை *ōreḍai,* பெ. (n.) ***ஓர் அளவை*** (தொல்.எழுத்து. 28,இளம்பூர.); ancient small measure.

[ஓர் + எடை.]

ஓரெலியீரெலி *ōr-eli-y-īr-eli,* பெ. (n.) ***பரவர் விளை யாட்டு வகை;*** game among paravas.

[ஓர் + எலி + ஈர் + எலி.]

ஓரெழுத்தினம் *ōr-eḻuttiṉam,* பெ. (n.) ***மிறைக்கவி வகை*** (பிங்.); a variety of metrical composition.

[ஓர் + எழுத்து + இனம்.]

ஓரெழுத் தீசன் *ōreḻuttīsaṉ,* பெ. (n.) ***ஈ;*** fly. (சா.அக.).

[ஓர் + எழுத்து + ஈசன். ஈ என்னும் பெயரில் ஈசன் பெயரிலுள்ள முதல் ஓரெழுத்து மட்டும் இருப்பதால் பெற்ற நகைச்சுவைக் குறிப்புப் பெயர்.]

ஓரெழுத்துமடக்கு *ōr-eḻuttu-maḍakku,* பெ. (n.) ***வந்த எழுத்தே மடக்கி வரும் சொல்லணி*** (தண்டி.94); (Rhet.) figure of orthography consisting in the consecutive repetition of the same letter in a verse, as in. நாநாநாதங்கூ டிசைநாடுந் தொழிலோவோ.

[ஓர் + எழுத்து + மடக்கு.]

ஓரெழுத்தொருமொழி *ōreḻuttorumoḻi,* பெ. (n.) ***ஓரெ ழுத்தே நின்று பொருள் தரும் சொல்;*** word comprising of a single letter.

[ஓர் + எழுத்து + ஒரு + மொழி.]

ஓரை[1] *ōrai,* பெ. (n.) 1. ***பெண்கள் கூட்டம்*** (பிங்.); concourse of women. 2. ***மகளிர் விளையாட்டு;*** woman's play. "ஓரையாயத் தொண்டொடி மகளிர்" (புறநா.176,1). 3. ***மகளிராடுங்களம்*** (திவா.); playground for woman. 4. ***கைபிணைந்தாடும் குரவைக் கூத்து;*** a kind of ancient dance with hands joined in a circle, the performers singing while dancing. (பிங்.).

[ஓர் → ஓரை (ஒருங்குற்ற கூட்டம்) ஓரு = மணற்றிட்டு. ஓரை = மணலில் ஆடும் விளையாட்டு.]

ஓரை[2] *ōrai,* பெ. (n.) 1. ***நாண்மீன்மண்டலம்;*** sign of the Zodiac. "ஓரையுநாளுந் துறந்த வொழுக்கம்" (தொல்.பொருள்.135). 2. ***ஒரு முழுத்தம்;*** division of time commencing with the rising of zodiacal sign. "மங்கலப் பெருங்கணி வகுத்த வோரையான்" (சீவக.2411). 3. ***நேரம்;*** time, occasion, period. "விடி வோரையி லெழுந்து" (குருபரம்.115,பன்னீ.). 4. ***இரண்டரை நாழிகை கொண்ட காலம்;*** an hour of 60 minutes. 5. ***விண்மீன் கூட்டம்;*** constellation.

[ஓர் → ஓரை = ஓரிடத்தில் சேர்ந்த திரள், கூட்டம். ஓர் → ஓரை. (மு.தா.170.ஒ.மொ.358).]

"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும் துறந்த ஒழுக்கம் கிழவோற்கில்லை" (தொல்.கள.44) ஓரை = கோள்நிலை, தீயகோள்நிலைக்கு ஆயிற்று. இலத்தீன் மொழியில் வழங்கிய பன்னிரு ஓரைப்பெயர்களும் தமிழ்ப் பெயர்களின் மொழிபெ யர்ப்பாகவே யிருக்கின்றன. i. Aries (ram) ii. Taurus (bull), iii. Gemini (twins), iv. Cancer (crab), v. Leo (lion) vi. Vergo (virgin), vii. Libra (balance) viii. Seorpin (scorpion), ix. Sagittarius (archer or bow), x. Capricorn (the goat - horned = shark), xi. Aguarius (water - bearer = pitcher), xii. Pisces (fish).

ஓரை[3] *ōrai,* பெ. (n.) ***புளிச்சாறு, எள் கலந்த சோறு வகை எள்ளோரை;*** boiled rice, general term used to indicate rice that is mixed up with other edibles such as tamarind, sesamum, cocoanut, etc.

தெ. ஒரெமு.

[உறை → ஓரை.]

ஓரை[4] *ōrai,* இடை. (part.) ***ஓர் இடைச்சொல்*** (பிங்.); connective particle.

[ஓர் → ஓரை. ஒ.நோ. ஒரும்.]

ஓரை[5] *ōrai,* பெ. (n.) ***கூகை வகை*** (வின்.); a kind of owl.

[ஓரி → ஓரை = முதிர்ந்தது, பெரியது.]

ஓரை[6] *ōrai,* பெ. (n.) ***அணிகலன்*** (அக.நி.); ornament.

[ஓலி → ஓரி → ஓரை.]

ஓரைப்பாவை *ōrai-p-pāvai,* பெ. (n.) ***மகளிர் விளை யாட்டுப் பாவை*** (கலித்.82,உரை.); doll used by girls in their plays.

[ஓரை + பாவை. ஓரை = மகளிர் கூடியாடும் விளையாட்டு.]

ஓரையயர்-தல் *ōrai-y-ayar-,*2.செ.கு.வி. (v.i.) ***ஓரைப்பா வையை வைத்து மகளிர் விளையாடுதல்;*** to play with dolls. "மடக்குறு மாக்களோடோரை யயரும்" (கலித்.82,9)

[ஓரை + அயர்.]

ஓரையாயம் *ōrai-y-āyam,* பெ. (n.) ***பொம்மைகளை வைத்து விளையாடும் பாவையாடல் மகளிர்குழு;*** a group of girls at play.

ஓரை + ஆயம்.]

ஓரொட்டு *ōr-oṭṭu,* கு.வி.எ. (adv.) 1. ***முழுதும்;*** altogether by the lump, wholesale. 2. ***சராசரியாக*** (வின்.); on an average, in general.

[ஓர் + ஒட்டு.]

ஓரொருதாளி *ōroruṭāḷi,* பெ. (n.) ***நெருஞ்சி;*** small caltrope. (சா.அக.).

[ஓர் → ஒரு + தாளி.]

ஓரொற்றுவாரம் *ōr-oṟṟu-vāram,* பெ. (n.) ***ஒரு மாத்திரை பெற்று வருஞ் செய்யுள்*** (சிலப்.3,136,உரை.); musical composition sung to a single beat, a variety of vāram.

[ஓர் + ஒற்று + வாரம்.]

ஓரொன்று *ōr-oṉṟu,* பெ. (n.) ***ஒவ்வொன்று*** (சிறு பஞ்.27); each one; one of each; one at a time; one for each.

ம. ஓரொன்று, ஓரொன்னு.

[ஓர் + ஒன்று.]

ஓரோடத்துக்கந்தரத்தனார் *ōrōḍattukkandarattaṉār,* பெ. (n.) ***கடைச் சங்க மருவிய புலவர்;*** Sangam poet. (அபி.சிந்.).

[உரகடம் → ஓரோடம் + அத்து + கந்தரத்தன் + ஆர்.]

ஓல்[1] *ōl,* பெ. (n.) 1. ***குத்துதல், அசைதல்;*** piercing, moving. 2. ***ஒலி;*** sound. "ஓலுறு பெருக்கின்" (இரகு.நகர.42). 3. ***தாலாட்டு;*** lullaby. "ஓலுடனாட்டப் பாலுட னுண்டு" (இறை.2,27). 4. ***ஓலம்;*** wailing. (செ.அக.).

[ஒல் → ஓல்.]

ஓல்[2] *ōl,* இடை. (part.) ***ஒரு விளியுருபு;*** vocative ending. "சாத்தாவோல்" (வீரசோ.வேற்றுமைப்.8,உரை.).

[ஓ → ஓல் (விளிக்குறிப்பு) இது இக்காலத்து ஓல் → ஓய் எனத்திரிந்தது.]

ஓல்[3] *ōl,* 14.செ.குன்றாவி. (v.t.) 1. ***குத்துதல்;*** to pierce. 2. ***துளையிடுதல்;*** to make hole. 3. ***புணர்தல்;*** to have intercourse.

[உல் → ஒல் → ஓல்.]

ஓலக்கஅரசர் *ōlakka-arasar,* பெ. (n.) 1. ***அரிச்சந்திரன்;*** Harischandra. 2. ***நளன்;*** Nala. 3. ***முசுகுந்தன்;*** Musugunda. 4. ***காத்தவீரியன்;*** Karthavīriya. 5. ***சிபி;*** Sibi. 6. ***பரதன்;*** Bharta. 7. ***இராமன்;*** Rama. 8. ***இரகு;*** Ragu. 9. ***யயாதி;*** Yayadi. 10. ***பகீரதன்;*** Bageeratha. 11. ***மாந்தாதா;*** Mandatha. 12. ***அனங்கன்;*** Ananga. 13. ***அரியணையில் வீற்றிருக்கும் அரசன்;*** king on the throne.

*[ஓலக்கம் + அரசர். **ஓலக்கம்** பார்க்க; see ōlakkam.]*

ஓலக்கங்கொடு-த்தல் *ōlakkaṅ-koḍu-,* 4.செ.கு.வி. (v.i.) ***அத்தாணியிலிருந்து காட்சிகொடுத்தல்;*** to grant an audience, as a king.

[ஓலக்கம் + கொடு.]

ஓலக்கச்சூளை *ōlakka-c-cūḷai,* பெ. (n.) ***அத்தாணியில் தொண்டு செய்யும் பணிப்பெண்டிர்;*** servants at the audience hall. "உந்திநின்றா ருன்ற னோலக்கச் சூளைகள்" (தேவா.1041,10).

க. ஓலகதசூளெ.

[ஓலக்கம் + சூளை. ஓலக்கம் = அரசனின் திருவோலக்க மண்டபம். சூளை = நெற்றியில் தலைவகிடு வழியாகச் சூளாமணி என்னும் முத்துப் பதித்த அணிகலன் சூடிய நாட்டியப்பெண். கூத்தர் குழுவைச் சார்ந்த விறலி.]

ஓலக்கம் *ōlakkam,* பெ. (n.) 1. ***அத்தாணிக்காட்சி;*** assembly of state, audience, royal presence, durbar. "நாளோலக்க மருள" (திவ்.திருப்பள்ளி.9). 2. ***அவைக் கூடம்;*** assembly hall. "அந்த வோலக்கந் தன்னி லருந்தவ முனிவ ரெல்லாம் வந்தனர்" (அரிச்.பு.வி வாக.37).

க. ஓலக; து. ஓலக; தெ. ஓலகமு.

[ஓலகம் → ஓலக்கம்.]

ஓலகம் = நாதசுரம் என்னும் விரிவாய் வங்கியம். இது மங்கல இன்னியமாகக் கருதப்படுகிறது. ஓலகம் முழங்க அரசனை வரவேற்கும் அத்தாணி மண்டபம் ஓலக்க மண்டபம் எனப்பட்டது. இன்றும் தெலுங்கு கருநாடக மாநிலங்களில் நாதசுரத்தை ஓலகம் என்றும் ஓலகம் இசைப்பவரை ஓலகத்தார் என்றும் அழைப்பதைக் காணலாம்.

ஓலக்கமண்டபம் *ōlakka-maṇḍabam,* பெ. (n.) ***அத்தாணி மண்டபம்;*** place of assembly, durbar hall, hall. "எம்பெருமா னோலக்க மண்டபத்துள்" (தாயு.எந்நாட். அருளியல்பு.10).

*[ஓலக்கம் + மண்டபம். **ஓலக்கம்** பார்க்க; see ōlakkam.]*

ஓலக்கமொழி *ōlakka-moḻi,* பெ. (n.) ***கூட்டத்திற் சொல்லப்படும் ஆரவாரச்செய்தி*** (ஈடு.); pompous speech in an assembly.

[ஓலக்கம் + மொழி.]

ஓலக்கவார்த்தை *ōlakka-vārttai,* பெ. (n.) ***ஓலக்கமொழி*** பார்க்க; see *ōlakka-moḻi.*

[ஓலக்கம் + வார்த்தை.]

ஓலம்[1] *ōlam,* பெ. (n.) 1. ***தொடர்ந்து எழுப்பப்படும் நெட்டோசை*** (பிங்.); sound, noise, roar. 2. ***அடைக்கலம் வேண்டுங் குறிப்பு மொழி;*** cry of lamentation, appeal, exclamation entreating succour. "ஞானநாயகனே யோலம்" (கந்தபு.சூர.வதை.460). 3. ***கடல்;*** (வின்.); sea.

ம. ஓலம்; க. ஓலெ; து. ஒரு; தெ. ஓல; குரு. ஓலொக்னா; மால். ஓல்கெ.

[ஓல் → ஓலம் (வே.க.113).]

ஓலம்படு-தல் *ōlampaḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***பிறரிடம் உதவி கேட்டு அழுது நின்று இரத்தல்;*** to beg weeping.

[ஓலம் + படு.]

ஒலம்போழ் *ōlam-pōḻ*, பெ. (n.) ***வகிர்ந்த ஒலை;*** split leaf of the palmyra prepared for writing. "ஒலம் போழிற் பொறித்து" (விநாயகபு.3,3).

[ஒலை → ஒலம் + போழ். போழ் = போழ்ந்தது, கிழிந்தது.]

ஒலமிடு-தல் *ōlam-iḍu,* 20.செ.கு.வி. (v.i.) 1. ***காப்பு வேண்டுதல்;*** to call for succour, cry for protection, appeal. "சிவனேசிவனேயென் றோலமிடினும்" (திரு வாச.7,5). 2. ***சத்தமிடுதல்;*** to make a noise. "ஒலமிட் டிரியல் போக" (ஞான.பாயி.6,24).

ம. ஒலமிடுக.

[ஒலம் + இடு.]

ஒலன் *ōlaṉ*, பெ. (n.) ***குழம்புக் கூட்டு வகை;*** a kind of vegetable dish. (செ.அக.).

ம. ஒலன்.

[ஒல் → ஒல் → ஒலன் (ஒன்று கூட்டியது).]

ஒலாட்டு-தல் *ōl-āṭṭu-*, 5.செ.கு.வி. (v.i.) ***தாலாட்டுதல்*** (யாழ்ப்.); to lull a child, sing a lullaby.

[ஒல் → ஒலாட்டு.]

ஒலாடு-தல் *ōlāḍu*, 5.செ.கு.வி. (v.i.) ***முன்பின்னாக அசைதல், தாலாட்டுதல்;*** to move back and forth, rocking the cradle.

க. ஒலாடு.

[ஒல் + ஆடு - ஒலாடு. ஒல் = அசைவு, ஓசை, (ஒலம்), ஒலாலம் பார்க்க; see ōlālam.]

ஒலாலம் *ōlālam*, பெ. (n.) ***தாலாட்டு;*** lullaby.

[ஒல் + ஆலம். ஒலம் = ஓசை. ஆலுதல் = சுற்றுதல், தொடர்தல். ஒலாலுதல் = ஒலாடுதல்.]

ஆலம், ஆரம் - சொல்லாக்க ஈறுகள். ஒலமிடல், இடையறாது ஓசை யெழுப்புதல், குழந்தையைத் தூங்கச்செய்ய தாய் எழுப் பும் தொடர்ந்த ஒலம் அல்லது ஓசை ஒலாலம் எனப்பட்டது. ஒலாலம் பிற இந்திய மொழிகளில் **லாலி** எனவும் மேலையா ரிய மொழிகளில் **lull, lullaby** எனவும் மருவிற்று. **lull** என்னும் ஆங்கிலச் சொல்லுக்குத் தொட்டிலாட்டுதல் (**to rock the cradle**) என்னும் பொருளிருத்தல் காண்க.

ஒலிடல் *ōliḍal*, பெ. (n.) ***ஊளையிடுதல்;*** to hawl.

[ஒல் + இடல்.]

ஒலிடு-தல் *ōl-iḍu-*, 20.செ.கு.வி. (v.i.) ***ஓசையிடுதல்;*** to make a noise. "பணைவித மோலிட" (பாரத.மணி மான்.20).

க. ஒலிசு.

[ஒல் + இடு.]

ஒலு-தல் *ōlu-*, 5.செ.கு.வி. (v.i.) ***முழங்குதல்;*** to make noise. "நத்தோலும் வாரியன்ன" (மான்விடு.102).

[ஒல் → ஒல் → ஒலு.]

ஒலுறு[1]-த்தல் *ōl-uṟu-*, 4.செ.கு.வி. (v.i.) 1. ***இன்னோசை யுண்டாக்குதல்;*** to emit a pleasant sound. "மணியருவி மருங்கோலுறுத்த" (இறை.2,42,உரை.). 2. ***தாலாட்டு தல்;*** to lull a child to sleep. 'அஃது ஒலுறுத்தலாற் றுயில் கொள்ளும்'. (கலித்.42,உரை.).

[ஒல் + உறு.]

ஒலுறு[2]-தல் *ōl-uṟu-*, 2.செ.கு.வி. (v.i.) ***ஒலிபொருந்து தல்;*** to be filled with sound; to resound. "ஒலுறுபெருக் கின்" (இரகு.நகர.42).

[ஒல் → ஒல் + உறு.]

ஒலை[1] *ōlai*, பெ. (n.) 1. ***பனை, தென்னை முதலியவற் றனோலை*** (தொல்.பொருள்.641); palm. leaf. 2. ***ஒலைமுடங்கல்;*** letter or any writing on a palmyra leaf; palmyra leaf on which something in written. 3. ***காதிலணியும் ஒலைச்சுருள்;*** rolled palm-leaf used as an ear ornament. 4. ***காதணி;*** ornament worn in the lobe of the ear, as of gold often set with precious stones. "பொன்செ யோலை யொருகாது" (தேவா.1180,10). 5. ***ஒலைக்குடை;*** umbrella made of palm-leaf. "உறை பனி கதிர்போற்று மோலையன்" (கந்தபு.தவங்.2).

ம. ஒல; க. ஒலெ; **கோத.** ஒல்; **துட.** ஒல்; **குல.** ஒலெ; **து.** ஒலெ.

[ஒல் = ஓசையிடுதல், ஒலியெழுப்புதல், அசைதல். ஒலாடு = அசைந்தாடு, ஒலம் = ஓசை. ஒலை = அசைந்து ஒலி எழுப்புவது.]

ஒலை[2] *ōlai*, பெ. (n.) ***பேய்முன்னை மரம்;*** charcoal-tree.

[ஒல் → ஒல் → ஒலை.]

ஒலைக்கண் *ōlai-k-kaṇ*, பெ. (n.) 1. ***ஒலைச்சட்டத்தில் விழுந்துள்ள பதிவு அல்லது கீறல்*** (வின்.); scallop or indentation of the palmyra-leaf. 2. ***ஒலைத் தளிர்;*** tender leaf of palm trees.

[ஒலை + கண்.]

ஒலைக்கணக்கர் *ōlai-k-kaṇakkar*, பெ. (n.) 1. ***பள்ளி யிற்படிப்போர்;*** learners at school. "ஒலைக்கணக்க ரொலியடங்கு புன்செக்கர்" (நாலடி.397). 2. ***புலவர்;*** scholar. (ஆ.அக.).

[ஒலை + கணக்கர்.]

ஒலைக்கணாட்டு *ōlaikkaṇāṭṭu*, பெ. (n.) ***ஒலைத்தளிர்;*** tender leaf of palm trees.

[ஒலைக்கண் → ஒலைக்கணாட்டு. 'ஆட்டு' சொல்லாக்க ஈறு.]

ஒலைக்கதவு *ōlai-k-kadavu*, பெ. (n.) ***ஒலையாலாகிய படல்;*** palm leaf screen, used as a door.

[ஒலை + கதவு.]

ஒலைக்காந்தல் *ōlai-k-kāndal*, பெ. (n.) ***ஒலையின் நெருப்புப் பொறி*** (வின்.); cinder of palm-leaf, as burning, floating flakes; dry pieces of palm leaf.

[ஒலை + காந்தல்.]

ஓலைக்காரன் *ōlai-k-kāraṉ,* பெ. (n.) ***செய்தியறிவிப்போன்;*** messanger.

ம. ஓலகார; க. ஒலெகார.

[ஓலை + காரன்.]

ஓலைக்கால் நண்டு *ōlaikkāl-naṇḍu,* பெ. (n.) ***ஒரு வகைக் கடல் நண்டு;*** a kind of sea-crab. (சா.அக.).

[ஓலை + கால் + நண்டு.]

ஓலைக்கிணாட்டு *ōlai-k-kiṇāṭṭu,* பெ. (n.) ***ஓலைச் சிறு துண்டு*** (யாழ்ப்.); chip or small piece of the palmyra leaf.

[ஓலை + கிணாட்டு. கிள் → கிள்ளாட்டு → கிண்ணாட்டு → கிணாட்டு.]

ஓலைக்கிளிஞ்சில் *ōlai-k-kiliñjil,* பெ. (n.) ***கிளிஞ்சில் வகை*** (வின்.); flat chank like a palm-leaf.

[ஓலை + கிளிஞ்சில்.]

ஓலைக்குடை *ōlai-k-kuḍai,* பெ. (n.) ***மழையைத் தாங்கும்படி ஓலையால் முடையப்பட்ட கூடு;*** palm-leaf hood used as an umbrella. "மறைப்புழி ஓலைபோல மறைக்குவன்" (குறள்.பரி.மேற்.).

ம. ஓலக்குட.

[ஓலை + குடை.]

ஓலைக்கூடு *ōlai-k-kūḍu,* பெ. (n.) ***ஓலைக்குடை*** (யாழ்.அக.); palm-leaf umbrella.

ம. ஓலக்குட.

[ஓலை + கூடு.]

ஓலைக்கூலம் *ōlai-k-kūlam,* பெ. (n.) ***எழுத்திடுவதற் குரியதாகப் பக்குவம் செய்யப் பெற்று விற்பனை செய்யும் பனையோலைக்குரிய வரி;*** tax for palm leaves prepared for writing.

[ஓலை + கூலம். ஓலை = பனையோலை. கூலம் = தவசமாகக் கொடுக்கப்படும் வரி.]

ஓலைக்கொடி *ōlai-k-koḍi,* பெ. (n.) ***பறக்கவிடும் ஓலைப்பட்டம்*** (யாழ்ப்.); kite made of palmyra leaf.

[ஓலை + கொடி.]

ஓலைக்கொம்பு *ōlai-k-kombu,* பெ. (n.) ***மாட்டுக்கொம் பின் குற்றவகை*** (மாட்டு.வா.); defect in the horns of cattle.

[ஓலை + கொம்பு.]

ஓலைக்கோள் *ōlai-k-kōḷ,* பெ. (n.) ***மடல் போக்குவரத்து*** (P.T.L.); correspondence, communication by letters.

[ஓலை + கோள்.]

ஓலைகிழி-த்தல் *ōlaikiḻi-,* 4.செ.குன்றாவி. (v.t.) ***இறக்கச் செய்தல்;*** to bring about the death. (சா.அக.).

[ஓலை + கிழி. ஓலை = ஓலையில் எழுதப்படும் கணக்கு.]

ஓலைகூறு-தல் *ōlai-kuṟu-,* 5.செ.கு.வி. (v.i.) ***திருமண வறிக்கை வெளியிடல்;*** to publish the banns, (chr.), notice in church of intended marriage.

[ஓலை + கூறு.]

ஓலைச்சக்கரம் *ōlai-c-cakkaram,* பெ. (n.) ***தாளிப்பனை;*** talipot. (சா.அக.).

[ஓலை + சக்கரம்.]

ஓலைச்சரம் *ōlai-c-caram,* பெ. (n.) ***ஓர் அணிகலன்;*** ornament.

[ஓலை + சரம்.]

ஓலைச்சிறகு *ōlai-c-ciṟagu,* பெ. (n.) ***பனையோலையின் பாதி*** (வின்.); the half of palmyraleaf.

[ஓலை + சிறகு.]

ஓலைச்சுருள் *ōlai-c-curuḷ,* பெ. (n.) ***ஓலைமடல்*** (கடிதம்) (வின்.); letter written on a palmyra leaf, rolled up and enclosed in a centirikkam.

ம. ஓலச்சுருள்.

[ஓலை + சுருள்.]

ஓலைச்சுவடி *ōlai-c-cuvaḍi,* பெ. (n.) 1. ***பனையோலையில் எழுதிக் கோத்துக் கட்டிய பொத்தகம்;*** manuscript on palmyra leaf. 2. ***மீன்வகை*** (மதி.க.11,39); a kind of fish.

[ஓலை + சுவடி. சுவடித்தல் = இணைத்தல், சேர்த்தல், கோத்துக் கட்டுதல்.]

ஓலைத்தூக்கு *ōlai-t-tūkku,* பெ. (n.) ***ஓலையில் எழுதப் பட்ட பாமடல்;*** note written on a palmyra leaf by a poet and addressed to a chief or a person of wealth, setting out his (poets) many attainments and praying to gifts. "மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினும்" (நன்.53).

[ஓலை + தூக்கு.]

ஓலைதீட்டல் *ōlaidīṭṭal,* பெ. (n.) ***திருமுகம் வரைதல்*** (ஆ.அக.); to write a letter on palmyra leaf.

[ஓலை + தீட்டல்.]

ஓலைதீட்டு-தல் *ōlai-tīṭṭu-,* 5.செ.கு.வி. (v.i.) ***ஓலையி லெழுதுதல்*** (வின்.); to write on palm leaf.

[ஓலை + தீட்டு. தீட்டுதல் = வரைதல், எழுதுதல். தொன்முது தமிழர் ஓவிய எழுத்தைக் கையாண்டதால், தீட்டுதல், வரைதல் எழுதுதல் என்பன ஓவியம் வரைதலைக் குறித்தன.]

ஓலைதீட்டும்படை *ōlai-tīṭṭum paḍai,* பெ. (n.) ***எழுத் தாணி*** (திவா.); style.

[ஓலை + தீட்டும் + படை. படை = கருவி, எழுத்தாணி.]

ஓலைநாயகம் *ōlai-nāyagam,* பெ. (n.) ***ஓலைநாயகன்*** பார்க்க; see *ōlaināyagaṉ.*

[ஓலை + (நாயகன்) நாயகம்.]

ஓலைநாயகன் *ōlai-nāyagan,* பெ. (n.) ***சோழருடைய தலைமைச் செயலாளன்*** (insc.); Chief Secretary in the time of the Chōlas.

[ஓலை + நாயகன். நயன் → நாயன் → நாயகன்.]

ஓலைநெல் *ōlai-nel,* பெ. (n.) ***நெல்வகை*** (A.); a kind of paddy.

[ஓலை + நெல். அகன்ற நெல்வகை.]

ஓலைப்பாசுரம் *ōlai-p-pācuram,* பெ. (n.) ***ஓலைப்பாயிரம்*** பார்க்க; see *ōlaippāyiram.* "வருக" என்னு மளவும் ஓலைப் பாசுரம்" (சீவக.2147,உரை.).

[ஓலை + (பாயிரம்) பாசுரம்.]

ஓலைப்பாம்பு *ōlai-p-pāmbu,* பெ. (n.) ***ஒருவகைப் பாம்பு;*** a kind of snake.

ம. ஓலப்பாம்பு, ஓலச்சுருளன்.

[ஓலை + பாம்பு. வயிறகன்ற பாம்பு.]

ஓலைப்பாயிரம் *ōlai-p-pāyiram,* பெ. (n.) ***மடலில் எழுதப்படும் செய்தி;*** communication written on palmyra leaf. ஓலைப்பாயிரமு முதலாயின வெல்லாங் கொச்சகமாதற்கு இழுக்கென்னையெனின்" (தொல். பொருள்.461,உரை.).

[ஓலை + பாயிரம். பயிர்தல் = அழைத்தல். பயிர் → பாயிரம்.]

ஓலைப்பால் *ōlaippāl,* பெ. (n.) ***பனங்கள்;*** palmyra toddy. (சா.அக.).

[ஓலை + பால்.]

ஓலைப்பிரண்டை *ōlaippirandai,* பெ. (n.) ***ஓர்வகைத் தட்டைப் பிரண்டை;*** a kind of flat adamant creeper of the species of vitex quadranger. laris. (சா.அக.).

[ஓலை + பிரண்டை.]

ஓலைப்பிள்ளை *ōlai-p-pillai,* பெ. (n.) ***ஓலையினாற் செய்த பொம்மை;*** (நாஞ்.); doll made of ōlai, dist. fr. cīlai-p-pillai. (சீலைப்பிள்ளை.).

[ஓலை + பிள்ளை.]

ஓலைப்புறம் *ōlai-p-puram,* பெ. (n.) ***கட்டளை;*** command, order. "ஓலைப்புறத்துச் செல்லாத நாடு". (குருபரம்.10,பன்னீ.).

[ஓலை + புறம். ஓலைப்புறம் = ஓலையின்புறத்தே எழுதப்பட்ட கட்டளை.]

ஓலைப்பூ *ōlai-p-pū,* பெ. (n.) ***தாழம்பூ;*** screwpine flower. "ஓலைப்பூவொ டுவகைமுத்துச் சோர." (திருப்பு.445).

[ஓலை + பூ.]

ஓலைபோக்கு-தல் *ōlai-pōkku-,* 7.செ.கு.வி. (v.i.) ***ஓலையிற் செய்தியெழுதி யனுப்புதல்*** (கம்பரா.கார் முக.66); to send a message written on a palmyra leaf.

[ஓலை + போக்கு.]

ஓலைமுகப்பாசுரம் *ōlai-muga-p-pāśuram,* பெ. (n.) ***மடலில்*** (கடிதம்) ***தொடக்கத்தெழுதும் வக்கணை*** (சிலப்.13,87,உரை.); prefatory address in a letter on a palmyra leaf.

[ஓலை + முகம் + பாசுரம். பாயிரம் → பாசுரம்.]

ஓலைமுத்திரை *ōlai muttirai,* பெ. (n.) ***ஓலைமுகப்பிலிடும் முத்திரை*** (வின்.); stamp imprinted on a palmyra-leaf document.

[ஓலை + முத்திரை.]

ஓலைமுரி *ōlai-muri,* பெ. (n.) ***ஓலையின் செப்பமின்மை*** (வின்.); unevenness of a palm-leaf.

[ஓலை + முரி.]

ஓலைமுறி *ōlai-muri,* பெ. (n.) ***ஓலைச்சீட்டு;*** memorandum on a palmyra leaf; chit.

[ஓலை + முறி. முறி = இளந்தளிர், இளமடல், இளம் பனையோலை.]

ஓலைமூங்கில் *ōlai-mūngil,* பெ. (n.) ***மூங்கில் வகை*** (யாழ்.அக.); a kind of flat bamboo.

[ஓலை + மூங்கில்.]

ஓலையாவணம் *ōlai-y-āvanam,* பெ. (n.) ***ஓலையில் எழுதிய பதிவுச் செய்தி;*** palm leaf document. (S.I.I.120).

[ஓலை + ஆவணம்.]

ஓலையாள் *ōlai-y-āl,* பெ. (n.) ***செய்திகொண்டு செல்பவன்*** (வின்.); messenger who carries letters written on a palmyra leaf.

[ஓலை + ஆள்.]

ஓலை யெழுத்தன் *ōlai-eluttan,* பெ. (n.) ***எழுத்தர்;*** scrivener, accountant. (சேரநா.).

ம. ஓலயெழுத்தன்.

[ஓலை + எழுத்தன்.]

ஓலையெழுத்து *ōlai-y-eluttu,* பெ. (n.) ***எழுத்தர்பணி;*** office of clerk (I.M.P.N.A.676).

[ஓலை + எழுத்து.]

ஓலையெழுது-தல் *ōlai-y-eludu,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***ஏடெழுதுதல்;*** to inscribe on a palmyra leaf. 2. ***கடிதம் அனுப்புதல்;*** to send a letter. (செ.அக.).

[ஓலை + எழுது.]

ஓலையெழுது-தல் *ōlai-y-eludu,* 5.செ.கு.வி. (v.i.) ***சீர்வரிசையை உறுதிப்படுத்தி சீட்டு எழுதுதல்*** (யாழ்.அக.); to write a deed of gift, as sridhana.

[ஓலை + எழுது.]

ஓலைவரையன் *ōlai-varaiyan,* பெ. (n.) ***புலி, கடுவாய்;*** tiger. (சேரநா.).

ம. ஓலவரயன்.

[ஓலை + வரையன். ஓலை = பட்டையானது. வரை = கோடு.]

ஓலைப் பாம்பு

ஓலைவாளை

ஓரிதழ் தாமரை

ஓலைவாலன்

ஓலைவாங்கு-தல் *ōlai-vāṅgu-,* 7.செ.கு.வி. (v.i.) ***இறப்புச் செய்தியை ஏற்றல்*** (வின்.); to die; lit., to receive the summons of death.

[ஓலை + வாங்கு.]

ஓலைவாசி-த்தல் *ōlai-vāsi-,* 4.செ.கு.வி. (v.i.) ***திருமண அறிக்கை வைத்தல்;*** to publish the banns. (Chr.).

[ஓலை + வாசி. வாயித்தல் → வாசித்தல்.]

ஓலைவார்-தல் *ōlai-vār-,* 2.செ.கு.வி. (v.i.) ***எழுதுவதற்கு உதவுமாறு ஓலைசீவுதல்;*** to trim a palmyra leaf for writing up on.

[ஓலை + வார். வார்தல் = மெல்லச்சீவுதல்.]

ஓலைவாரி *ōlai-vāri,* பெ. (n.) ***ஓலைசீவுங் கத்தி;*** knife used for trimming palmyra leaves.

[ஓலை + வாரி.]

ஓலைவாலன் *ōlai-vālaṉ,* பெ. (n.) ***மீன்வகை*** (பறாளை. பள்ளு.16); a kind of fish.

[ஓலை + வால் + அன்.]

ஓலைவாளை *ōlai-vāḷai,* பெ. (n.) 1. ***வாளைமீன் வகை;*** cutlas fish, silvery, Trichiurus savala. "ஓலை வாளைக்கருவா டுண்டக்கால்" (பதார்த்த.926). 2. ***சாவாளை மீன்;*** cutlas-fish, greyish, Trichiurus hanmela.

ம. ஒலமத்ச்யம்.

[ஓலை + வாளை.]

ஓலைவீடு *ōlai-vīḍu,* பெ. (n.) ***பனையோலையால் வேய்ந்த வீடு;*** house thatched over with palmyra leaves. தென்னை ஓலையால் வேய்ந்த வீடுமாம்.

[ஓலை + வீடு.]

ஓலைவெட்டுப்பனை *ōlai-veṭṭu-p-paṉai,* பெ. (n.) ***ஓலையைத் தவிர வேறு ஒரு பயனையுந் தராத பனைவகை*** (G.Tn.D.I.307); palmyra which has served no other purpose but that of providing leaves, one of the five idara-ayittam-paṉai.

[ஓலை + வெட்டு + பனை.]

ஓலைவேலி *ōlai-vēli,* பெ. (n.) ***பனையோலையாற் பின்னப்பட்ட வேலி*** (வின்.); hedge, plaited with palm leaves.

[ஓலை + வேலி.]

ஓலோலப்படு-தல் *ōlōla-p-paḍu-,* 20.செ.கு.வி. (v.i.) ***கண்ட இடத்தில் உதவிகேட்டுக் கிடைக்காமல் பெரிதும் துன்பப்படுதல்;*** to be driven from pillar to post.

[ஓலம் + ஓலம் - ஓலோலம் + படுதல். ஓலம்படுதல் = உதவிகேட்டு இரந்துநிற்றல். இச்சொல் இக்காலத்தில் லோலப்படுதல் எனத் திரிந்து விட்டது.]

ஓலோலமென்றலை-தல் *ōlōlameṉṟalai-,* 4.செ.கு.வி (v.i.) ***கண்ட இடத்தில் உதவிகேட்டு அலைதல்;*** to go from one resource to another seeking help.

[ஓலம் = புகலிடம் தேடும் இரக்கச்சொல். ஓலம், ஓலம் → ஓலோலம். இச்சொல் இக்காலத்தில் 'லோலோ என்றலைதல்' எனத் திரிந்துவிட்டது.]

ஓவம்[1] *ōvam,* பெ. (n.) ***ஓவியம்;*** picture, portrait. "ஓவத் தன்ன வுருகெழு நெடுநகர்" (பதிற்றுப்.88,28).

[ஒவ்வு → ஒவ்வம் → ஓவம் → ஓவியம்.]

ஓவம்[2] *ōvam,* பெ. (n.) ***உயரம்*** (யாழ்.அக.); height.

ம. ஓரம்.

[ஓ + அம் - ஓவம்.]

ஓவர் *ōvar,* பெ. (n.) 1. ***சித்திரகாரர்;*** painters, sculptors. 2. ***ஏத்தாளர்;*** bards, eulogists employed by princes to proclaim their titles and sing their praises. "ஓவரும் பாட" (சீவக.1844). 3. ***கம்மாளர்*** (சூடா.); smiths.

[ஓவம் → ஓவர்.]

ஓவல் *ōval,* பெ. (n.) ***வருந்தல்;*** suffering (சா.அக.).

[ஓ → ஓவு + அல் - ஓவல். ஓ - இரக்கம் குறித்த ஒலிக்குறிப்புச் சொல். ஓவல் = துயருறுதல்.]

ஓவா(வரு)-தல் *ōvā-,* 18.செ.கு.வி. (v.i.) ***ஒழிதல்*** (திருக்கோ.212,உரை.); to cease.

[ஓவு + வரு - ஓவரு → ஓவா. ஓ - தல் = நீங்குதல், ஒழிதல்.]

ஓவாப்பிணி *ōvāppiṇi,* பெ. (n.) ***தீராத நோய்;*** incurable disease. "உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்" (குறள்.734) (சா.அக.).

[ஓ + ஆ (எ.ம.இ.நி.) + பிணி.]

ஓவாமுயற்சி *ōvā-muyaṟci,* பெ. (n.) ***இடைவிடாமல் முயலுகையாகிய வேளாண்மாந்தரியல்பு*** (திவா.); perseverance, a characteristic of the Vēḷāḷas.

[ஓய்வு → ஓவு + ஆ + முயற்சி. 'ஆ' (எ.ம.இ.நி.).]

ஓவாமை *ōvāmai,* பெ. (n.) ***ஒழியாமை;*** unceasing effort. (ஆ.அக.).

[ஓ + ஆ + மை. 'ஆ' (எ.ம.இ.நி.).]

ஓவாய் *ō-vāy,* பெ. (n.) 1. ***பற்கள் போன வாய்;*** mouth lacking teeth. 2. ***மூளியான கலத்தின் வாய்;*** vessel with broken brim. (சா.அக.).

ம. ஓவாய்.

[ஒறு + வாய் - ஒறுவாய் → ஓவாய்.]

ஓவாய்ப்பல் *ō-vāy-p-pal,* பெ. (n.) ***ஒறுவாய்ப்பல்*** பார்க்க; see *oṟuvāyppal.*

[ஒறுவாய் → ஓவாய் + பல்.]

ஓவாய்ப்பானை *ō-vāy-p-pāṉai,* பெ. (n.) ***ஒறுவாய்ப் பானை*** பார்க்க; see *oṟuvāyppāṉai.*

[ஒறுவாய் → ஓவாய் + பானை.]

ஓவாயன் *ōvāyaṉ,* பெ. (n.) ***உதடுசிதைந்த வாயுள்ள வன்;*** harelipped man. "ஓவாயன் கண்ணறைய னானா லும்" (நெல்விடு.269).

ம. ஓவாயன்.

[ஒறு + வாயன் - ஒறுவாயன் → ஓவாயன்.]

ஓவி *ōvi,* பெ. (n.) ***சித்திரம்;*** picture, painting. "ஓவிநல் லார்" (திவ்.பெரியதி.2,8,7).

[ஓவம் → ஓவி.]

ஓவியகாயம் *ōviya-kāyam,* பெ. (n.) ***புலி;*** tiger, lit., picturesque body. "ஆவி செகுத்தன ரோவிய காயத் தினை யம்மா" (வரத.பாகவத.காரிந்தி.28).

[ஓவியம் + காயம். காயம் = உடம்பு.]

ஓவியநூல் *ōviya-nūl,* பெ. (n.) ***சித்திரநூல்*** (மணி.2,31); treatise on painting.

[ஓவியம் + நூல்.]

ஓவியப்பேச்சு *ōviya-p-pēccu,* பெ. (n.) ***இனிய பேச்சு;*** sweet speech.

[ஓவியம் + பேச்சு.]

ஓவியம் *ōviyam,* பெ. (n.) 1. ***சித்திரம்;*** picture, portrait. "கண்கவ ரோவியங் கண்டு" (மணி.3,131). 2. ***சித்தி ரத்தொழில்;*** art of painting. "ஓவியத்துறை கைபோய வொருவனை" (நைடத.அன்னத்தைக்கண்.6). 3. ***அழகு, ஓவியமான பேச்சு;*** beauty, fineness, elegance in speech. 4. ***படிமம்;*** statue, pupper. (W.).

ம. ஓவியம்.

[ஓ → ஓவியம். (முதா.218).]

ஓவியன் *ōviyaṉ,* பெ. (n.) 1. ***சித்திரமெழுதுவோன்;*** painter. "ஓவிய னுள்ளத் துள்ளியது வியப்போன்" (மணி.5,7). 2. ***படிமம் செய்பவன்*** (வின்.); sculptor who fashions images of idols.

ம. ஓவியர்.

[ஓவியம் → ஓவியன்.]

ஓவு[1] *ōvu,* பெ. (n.) ***கதவு;*** door. (ஆ.அக.).

[ஓ → ஓவு. ஓவு = நீக்கு, திற.]

ஓவு[2] *ōvu,* பெ. (n.) ***சித்திரம்;*** painting, picture. "ஓவுறழ் நெடுஞ்சுவர்" (பதிற்றுப்.68,17).

[ஒவ்வு → ஓவு.]

ஓவு[3]**-தல்** *ōvu-,* 7.செ.கு.வி. (v.i.) 1. ***நீங்குதல்;*** to remove, separate. "மலங்க ளெல்லா மோவின போது" (சி.சி.4,37). 2. ***முடிதல்;*** to cease, terminate, become extinct. "கூப்பீ டோவிற்று" (ஈடு.2,9,1). - 5.செ.குன் றாவி. (v.t.) ***நீக்குதல்;*** to shun, avoid, give up. "ஓ ஓதல் வேண்டும்" (குறள்.653).

ம. ஓவுக.

[ஒருவு → ஓவு. இனி, ஓவு-தல் ஓ-தல் எனத் தனிநெடு முதலாகியும் வினையடியாகும்.]

ஓவு[4] *ōvu,* பெ. (n.) ***ஒழிகை;*** separation, removal, cessation. "ஓவில்செல்வமும்" (கந்தபு.சுக்கிரனுப.46).

[ஒருவு → ஓவு.]

ஓவு[5]**-தல்** *ōvu-,* 7.செ.கு.வி. (v.i.) 1. ***இசைதல்;*** to consent. 2. ***வருந்தல்;*** to suffer. (ஆ.அக.).

[ஒவ்வு → ஓவு.]

ஓவென்றவெளி *ō-v-eṉṟa-veḷi,* பெ. (n.) ***பரந்த இடம்*** (யாழ்ப்.); broad, open space.

[ஓ + என்ற + வெளி.]

ஓவெனல்[1] *ō-v-eṉal,* பெ. (n.) ***ஓரொலிக்குறிப்பு;*** sounding ō. "ஓவென வையகத் தோசைபோ யுயர்ந்ததே" (சீவக.1843).

[ஓ + எனல்.]

ஓவெனல்[2] *ōveṉal,* பெ. (n.) ***முழுஇருட்டாதற் குறிப்பு;*** signifying absolute darkness. இருள் ஓவென்றிருந்தது (இராட்.).

[ஓ + எனல். 'ஓ' - அச்சக்குறிப்பு, இங்கு இருட்டைக் குறித்தது.]

ஓள்-தல் *ōḷ-,* 15.செ.கு.வி. (v.i.) ***ஆணும் பெண்ணும் கூடுதல், கலவுதல், புணர்தல்;*** to copulate.

க. ஓள்.

[ஒல் → ஓல் → ஓள்.]

ஓளி[1] *ōḷi,* பெ. (n.) 1. ***ஒழுங்கு;*** continuous line, row. "மாளிகையோளி" (கம்பரா.மிதி.22). 2. ***யானைக்கூ டம்*** (பிங்.); elephant stall. 3. ***மணமகளுக்குத்தரப்ப டும் சீர்வரிசை;*** matrimonial gift given to the bride.

க. ஓளி.

[ஒல் → ஓல் → ஓளி.]

ஓளி[2] *ōḷi,* பெ. (n.) ***யானை நீருண்ணுமிடம்;*** place where elephants drink water. "பரவையோளி வானேறு படநடாவி" (தக்கயாகப்.108).

க. ஓளி.

[ஓளி[1] - ஓளி.[2]]

ஓனம் *ōṉam,* இடை. (part.) ***எழுத்தின்சாரியை*** (தொல். எழுத்து.134,உரை.); euphonic particle added by children after sounding the long letters.

[ஏனம் → ஆனம் → ஓனம்.]

ஓனாய் *oṉāy,* பெ. (n.) ***ஓநாய்*** பார்க்க; see *ōnāy.*

ஔ

ஔ[1] *au,* **தமிழ் வண்ணமாலையில் பன்னிரண்டாம் உயிரெழுத்தாகிய அரையங்காப்பு இதழ்குவியா பின் னண்ணச் செறிவுக் கூட்டுயிர் நெடில்;** 12th letter and vowel of the Tamil alphabet, the half-close back tense unrounded compound vowel.

[அ + உ = (அஉ) - ஔ.]

பழங்காலத் தமிழ் நெடுங்கணக்கில் இருகுறில் தனி நெடிலா யிற்று. அம்முறைப்படி அகரஉகரம் ஔகாரமாயிற்று. ஔ பழங்காலத்தில் அஉ என்றே எழுதப்பட்டது. ஔகாரத்திற்கு அடையாளக் குறியீடாக ஒகரத்தின் அருகில் எழுதப்படும் ளகர வரிவடிவம் பாதி உயரம் உடையதாகச் சிறிது படுத்தி (ஔ) எழுத வேண்டும் என்பது மரபு. சம உயர எழுத்துகளாக எழுதினால் ஔவையாரை ஒ-ளவையார் (olavaiyar) எனப் பிற மொழியாளர் படிக்க நேரிடும்.

ஔ[2] *au,* பெ. (n.) ***விரைந்தோடும் வளர்ப்பு விலங்கு களை 'நில்' என்னும் நிறுத்தற்குறிப்பு ஏவல் வினை;*** expression to halt the cattle and other running animals.

[அவ் → அவு → அவி = கெடுதல், தவித்தல். அவு → ஔ.]

கட்டவிழ்ந்து ஓடும் மாட்டை 'ஔ ஔ' என்று கூறி நிறுத்துவது கொங்கு நாட்டு வழக்கு.

ஔ[3] *au,* பெ. (n.) ***தாரவிசையினெழுத்து*** (திவா.); (mus.) symbol representing the seventh note of the gamut, usu. ni. (செ.அக.).

[அஉ → ஔ இருமாத்திரை நெடில்.]

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்பன ச, ரி, க, ம, ப, த, நி என்பனவற்றுக்கு நிகரான ஏழிசைப் பண்ணொலிகளாகக் (சுரம்) கருதப்பட்டன. ஈற்று ஔகாரம் தாரத்தின் அடையாள எழுத்தாயிற்று.

ஔ[4] *au,* பெ. (n.) ***பெண்;*** woman.

தெ. அவ்வ; **க.** அவ்வ, அவ்வெ; **து.** அப்பெ; **இந்.** ஔரத்.

[அம்மை → அவ்வை → ஔ. இச்சொல் வடபுலமொழிகளில் ஔரத் எனத் திரிந்தது.]

மேலையாரிய மொழிகளில் வழங்கி வரும் முன்னொட்டு wo - ஔகாரத்தின் திரிபாகும். woman என்பதைப் பெண்மகன் என்னும் தொல்காப்பியர் கால வழக்கொடு ஒப்பு நோக்குக.

ஔ[5] *au,* பெ. (n.) 1. ***அழைத்தல், வியப்பு, தடை இவற்றைக் காட்டுமோர் குறிப்புச் சொல்;*** indicative of summoning, excitation or halting. 2. ***கடித்தல்;*** biting. (ஆ.அக.).

[ஆ → ஆவ் → ஔ (அழைத்தல்). ஓ → ஓவி → ஔ (வியப்பு).]

ஔகம் *augam,* பெ. (n.) ***நிறுத்தம், இடைப்பாடு*** (சிலப்.14,156,உரை.); repetition by a chorus of the leader's song in a dancing peformance. (செ.அக.).

[ஒருகா. ஔ - இடை நிறுத்தற்குறிப்பு இடைச்சொல். ஔகம் - நிறுத்தி மீண்டும் தொடங்குவது.]

ஔகாரக்குறுக்கம் *augāra-k-kuṟukkam,* பெ. (n.) ***தன் மாத்திரை யிற்குறுகிய ஔகாரம்*** (நன்.95); shortened 'au' as in மௌவல், one of ten cārpeḻuttu. (செ.அக.).

[ஔ + காரம் + குறுக்கம்.]

செய்யுளில் இடத்திற்கேற்பத் தன்னளவில் சுருங்காது பலுக்கப படும் ஔகாரம். இரு மாத்திரை யளவினின்றும் 1½ மாத்திரை யாகக் குறைந்தொலிக்கும்.

ஔகி *augi,* பெ. (n.) ***இடைப்பாட்டுக்கூத்தி;*** danseuse. (ஆ.அக.).

[ஔகம் → ஔகி.]

ஔசரம் *auśaram,* பெ. (n.) ***இரும்புக்கல்;*** iron stone. (சா.அக.).

[ஔ + சரம். ஔ = தடுத்தல், தாங்குதல்.]

ஔடதம் *auḍadam,* பெ. (n.) **ஔதம்** பார்க்க; see *audam.*

[ஔ = நிறுத்துதல், நீங்குதல். ஔதம் = நோய் நீக்கும் மருந்து. ஔதம் வடமொழியில் ஔஷதம் எனத்திரிந்தது.]

ஔடதமுறிப்பு *auḍadamuṟippu,* பெ. (n.) **ஔதமுறிப்பு** பார்க்க; see *audamuṟippu.*

ஔடதவாதி *auḍada-vādi,* பெ. (n.) ***மூலிகையிலிருந்து உயிர் தேன்றியதென்று கூறுவோன்*** (யாழ்.அக.); one who holds that life was created out of herbs. (செ.அக.).

ஔடதி *auḍadi,* பெ (n.) ***செடி, பூண்டு, காய்கள்;*** plants, herbs and vegetables. (சா.அக.).

ஔடவப்பண் *auḍavappaṇ,* பெ. (n.) ***ஐந்து இசை*** (சுரம்) ***மட்டும் பயன்படுத்தும் பண்*** (இராகம்); musical mode which moves up and down within fine notes of the scale; pentatonis. (செ.அக.).

[ஐ (ஐந்து) → ஐவம் → ஔவம் → ஔதம் → ஔடம் → ஔடவம் (ஐந்துவகை) + பண்.]

ஔடவம் *auḍavam,* பெ. (n.) ***ஔடவராகம்*** (சிலப். 13,106,உரை.) பார்க்க; see *auḍavarāgam.* (செ.அக.).

[ஔ → ஔடவம் = தாரத்தில் தொடங்கும் பெரும்பாலைப்பண் அல்லாத சிறுபாலைப் பண்களுள் ஒன்று.]

ஔடவராகம் *audava-rāgam,* பெ. (n.) ***ஔடவப்பண்*** பார்க்க; see *audavappaṉ.*

ஔடும்பரம் *auḍumparam,* பெ. (n.) ***அவுதும்பரம்*** பார்க்க; see *avudumparam.*

[அவ்வு → அவு + தும்பரம் - அவுதும்பரம் → உதும்பரம் - ஔடும்பரம். தும்பரம் = செந்நிறம். அவுதும்பரம் = செந்நிறம் பொருந்திய தாமிரம்.]

ஔதக் கூறு *audakkūṟu,* பெ. (n.) ***மூலிகை அல்லது மருந்துச் சரக்குகளின் தன்மை;*** nature of drugs or other medicines. (சா.அக.).

ஔதகம் *audagam,* பெ. (n.) 1. ***நீராளமான உணவு*** (உதகம்); liquid diet. 2. ***நீலமணி;*** blue diamond. (ஆ.அக.).

[1. உதகம் → ஔதகம் = நீராளமான உணவு, கஞ்சி. 2. நீரின் நிறமாகிய நீலமணிக்கல்.]

ஔதம் *audam,* பெ. (n.) ***மருந்து*** (சிலப்.14,170,அரும்.) medicine, medicament, drug, antidote.

[அவ்வு - (அவி) → ஔவுதல் = கெடுத்தல், நீக்குதல். ஔ = நிறுத்துதல், தடுத்தல், நீக்குதல், குணப்படுத்துதல் ஔ → ஔதம் = நோய் நீக்கும் மருந்து. ஔதம் வட மொழியில் ஔஷதம் எனத்திரிந்தது.]

ஔத முறிப்பு *audamuṟippu,* பெ. (n.) ***மருந்து வேகங் களை முறித்தல்;*** neutralising the action of drugs. (சா.அக.).

[ஔதம் + முறிப்பு.]

ஔவி-த்தல் *auvi-,* 4.செ.கு.வி. (v.i.) ***அவ்வி-த்தல்*** பார்க்க; see *avvi.* (செ.அக.).

[அவ்வி-த்தல் → ஔவி-த்தல்.]

ஔவியம் *auviyam,* பெ. (n.) ***மனக்கோட்டம், பொறாமை, ஏய்ப்பு;*** evil bent of mind, envy, depravity, deceit. (செ.அக.).

[அவ்வியம் → ஔவியம் (த.வ.110).]

ஔவு-தல் *auvu-,* 5.செ.கு.வி. (v.i.) 1. ***வாயாற்பற்றுதல்;*** to grasp, seize, take hold of, with the mouth. கன்று புல்லை யௌவித் தின்கிறது. 2. ***அழுந்தியெடுத்தல்;*** to graze; to rub off, as the skin, to burn, scald so as to excoriate. (செ.அக.).

[அவ்வு → வவ்வு → ஔவு.]

ஔவை *auvai,* பெ. (n.) 1. ***அவ்வை*** பார்க்க; see *avvai.* mother, matron, old woman. 2. ***ஆரியாங்கனை;*** female ascetic, especially used of the Jaina sect. "கூந்தலை யௌவை மார்கடாம் பணிவிலர் பறித்தனர்" (சீவக.2637). 3. ***ஔவையார்*** பார்க்க; see *auvaiyār.*

க., தெ. அவ்வ.

[அம்மை → அவ்வை → ஔவை (த.வ.110).]

ஔவை நோன்பு *auvai-nōṉbu,* பெ. (n.) ***செவ்வாய் நோன்பு;*** secret ceremony performed by some Vēḷāḷa women twice a year on a Tuesday, at midnight, when no males, even babes in arms, are allowed to be present. (செ.அக.)

[ஔவை + நோன்பு.]

ஔவையார் *auvaiyār,* பெ. (n.) ***பழைய பெண்புலவரு ளொருவர்*** (புறநா.); name of a famous poetess, author of many verses found in ancient classics and to whom are ascribed some later popular minor moral works also. (செ.அக.).

[ஔவை + ஆர். ஆர் = உயர்வுப் பன்மையீறு. ஈண்டு மதிப்புரவு குறித்தது.]

ஔவையோ *uvaiyō,* இடை. (int.) ***அம்மையோ;*** alas! expressing pity. "ஔவையோ வென்று போக" (சீவக. 1271) (செ.அக.).

[ஔவை + ஓ. 'ஓ' வியப்புக்குறிப்பு இடைச்சொல்.]

ஃ

ஃ *k, ஆய்தவெழுத்து; 13-ஆவது எழுத்து;* 13th letter of the Tamil alphabet occurring only after a short initial letter and before a hard consonant as அஃகம் and pronounced sometimes as a vowel and sometimes as a consonant. (செ.அக.).

மறுவ. ஆய்தம், அஃகேனம் முப்பாற்புள்ளி, தனிநிலை.

[புணர்மொழியில் ய,வ,ல,ள மெய்யீற்றுத்திரிபு.]

ஓரெழுத்தின் ஒலிப்பு, முதலெழுத்துகள் முப்பதிலும் இல்லாத பிறிதொரு வேறுபாட்டு ஒலிப்புத் திரிபாவது சார்பெழுத்து. குற்றியலுகரம் குற்றியலிகரம் ஆய்தம் எனும் மூன்றும் இத்திறத்தின.

ய்,வ்,ல்,ள் ஈற்றுச்சொற்கள் வல்லின வருமொழியொடு புணரும்போது பெறும் வேறுபாட்டு ஒலிப்புத்திரிபே ஆய்தமாகும். கல் + தீது - கஃறீது, முள் + தீது - முஃடீது. அவ் + கடிய - அஃகடிய. வெய் + கு - வெஃகு. ஆய்தம் இடையின எழுத்துக்களில் ஒலிப்புத்திரிபாயினும் இடையின எழுத்துகள் போன்று மொழியீறாகவில்லை. குற்றியலுகரம் ஒன்றே மொழியீறாகிறது.

ஆய்தவெழுத்து மொழிமுதலும் மொழியிறுதியும் ஆகாமையின் முதலெழுத்துகளுள் ஒன்றாகச்சேரவில்லை. மொழியிடை உயிரொலித்திரிபான குற்றியலிகரம் குற்றியலுகரம் போன்றவை மெய்யொடு புணர்ந்து உயிர்மெய்யாகின்றன. ஆயின் ஆய்தம் மெய்யோடு புணராமல் புணர்மொழியிடை மெய்யின் திரிபாகிய பிறிதொரு மெய்யாகவே நிற்றலின் புள்ளியின் (மெய்யின்) தன்மையுடையதாயிற்று.

மொழியிடைத் தோன்றும் புதிய ஒலிப்பே சார்பெழுத்தாகக் கொள்ளப்படுதலின் இது சார்பெழுத்தாயிற்று. குற்றுகரம் உகரத்தின் மெல்லோசையாதல்போல் இது ககரத்தின் நலிபோசையாதலின், தன்மையால் மெய்யெழுத்தை ஒத்திருந்தாலும் உயிரேறி உயிர்மெய்யாக இடந்தராமையிலும் உயிரளபெடை போன்று அளபெடுத்தலின் செய்கையால் உயிரெழுத்தை ஒத்திருக்கிறது. எனவே முழுமையாக உயிரெழுத்தும் ஆகாமல் மெய்யெழுத்தும் ஆகாமல் இடைநிற்றலின் தன்மையும் செய்கையும் நோக்கித் தமிழ் வண்ணமாலையில் உயிரெழுத்து வரிசையின் பின்னும் மெய்யெழுத்து வரிசையின் முன்னும் வைக்கப்பட்டது.

உயிரெழுத்தையும் மெய்யெழுத்தையும் அடுத்துவரும் வல்லினமெய், நகம், நங்கை என்றாற்போன்று நலிபோசை யுடையதாகும். அதுபோன்று ஆய்தமும் அடுத்துவரும் வல்லின மெய்யை நலிபோசையுடையதாக்கும். வல்லெழுத்து மெல்லெழுத்து உயிரெழுத்து ஆகிய முத்திறப்பாங்கும் உட்கொண்டிருத்தலின் முப்பாற்புள்ளி எனப்பட்டது. முதலெழுத்தின் வகைமையுள் எந்த இனத்திலும் சேராததால் தனிநிலை எனப்பட்டது.

சார்பெழுத்துகளில் குற்றியல்லுகரம் குற்றியலிகரங்களுக்குத் தனிவரிவடிவம் இல்லை. ஏனெனில் அவற்றின் பிறப்பிடமும் மாறவில்லை. ஒலிப்பண்பு மட்டும் மாறியுள்ளது. ஆயின். ஆய்தம் 'ல ள வ ய' மெய்களின் திரிபொலியெனினும், ககரம் பிறக்குமிடத்தையொட்டித் தன் பிறப்பிடத்தை மாற்றிக் கொள்கிறது. முதலெழுத்துகளில்லாத புதிய ஒலிப்பையும் பெற்றுக் கொள்கிறது. பிறப்பிடத்தையும் ஒலிப்பையும் ஒருசேர மாற்றிக்கொள்வதால் ஆய்தத்திற்கும் புதிய வரிவடிவம் படைத்திட்டுக்கொள்ள நேர்ந்தது.

> சார்ந்து வரினல்லது தமக்கியல் பிலவெனத்
> தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்
> தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி
> ஒத்த காட்சியில் தம்மியல் பியலும்
>
> (தொல்.எழுத்.101)

தொல்காப்பியரும் பிறப்பிடமும் ஒலிப்பு முயற்சியும் வேறுபடுவது கருதியே சார்பெழுத்துகளை வகைப்படுத்தியிருப்பதைமேற் கண்ட நூற்பா வலியுறுத்துகிறது.

ஒத்த காட்சி என்பதற்கு, ஒழிந்த ஆய்தம் தமக்குப் பொருந்தின நெஞ்சுவளியாற் பிறக்கும் என்றும் 'காட்சி என்றது நெஞ்சினை' யென்றும் நச்சினார்க்கினியர் கூறியிருப்பது அத்துணைப் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. ஒத்த காட்சி என்பதற்குத், ''தத்தம் முதலெழுத்துகளின் பிறப்பிடம் ஒலிப்பு ஆகியவற்றைச் சார்ந்து,'' எனப்பொருள் கொள்வதே நேரிது.

சொல்லுக்கு உறுப்பர்கிப் பொருள் புலப்படுத்தும் எழுத்தோசைகள் அனைத்துக்கும் எழுத்தாம் தன்மை தரவேண்டுதலின் சார்பெழுத்து என வகைப்படுத்த வேண்டுவதாயிற்று.

நகம், நங்கை என்னும் சொற்களில் ககரம் நலிந்து ஒலிக்கிறது. எனவே வல்லெழுத்துகளின் நலிபை ஏன் சார்பெழுத்துகளாக்கி வேறு பிரித்து ஓதவில்லை என வினவுவாருள்ர். தமிழில் முதலெழுத்துகள், பிறக்கும் இடத்தாலும் ஒலிக்கும் கால அளவாலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. சார்பெழுத்துகள் பிறக்கும் இடத்தாலும் ஒலிக்கும் முறையாலும் ஒன்றுபோல் தோன்றினும் மொழியிடைத் தோன்றிய மாற்றொலியன்களாதலின் (allophone) சார்பெழுத்துகளாயின. சார்பெழுத்துகளின் மாற்றொலிப்புகளால் சொல்லின் பொருள் வேறுபடுவதில்லை.

மேலையாரிய மொழிகளில் வல்லெழுத்துகளின் நலிபெழுத்துகள் pit, bit என்றாற்போன்று பொருள்வேறுபாட்டுக்கு அடிப்படையான முதலெழுத்துகளாக உள்ளன. தமிழில் வல்லின நலிபோசை சார்பெழுத்துகள்கள் முதலெழுத்துகள் வரிசையில் சேர்வதில்லை. சார்பெழுத்துகள் எல்லாம் புணர்மொழித்திரிபுகளாகும். நகம். நங்கை போன்றவற்றிலுள்ள வல்லின ககரத்தின் நலிபு புணர்மொழித்திரிபால் விளைந்த மாற்றொலியன்களல்ல. உயிரெழுத்தையும் மென்கணத்தையும் அடுத்து வரும் இடப்பாங்கால் பெற்ற மெலியோசையாதலின் சார்பெழுத்தாக வகைப்படுத்தப் படவில்லை.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

இரண்டாம் மடலம் - முதற்பாகம்

VOL. II - PART I

க. இராமகிருட்டிணன், இ.ஆ.ப.
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

முனைவர் இரா. மதிவாணன்
முதன்மைப்பதிப்பாசிரியர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு

2000

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

க்

க் *k*. தமிழ் நெடுங்கணக்கில் அடியண்ண எடுத்தொலிப்பு வல்லின முதல் மெய்யெழுத்து; the first consonant of the Tamil alphabet; velar, voiceless stop.

உயிரொடு புணராத தனித்தனி மெய்யெழுத்துகள், புறத்தே ஓசை புலப்பட ஒலித்தற்கரியனவாதலின், உயிரொடு புணர்த்து கூஙுச,ஞு என அவற்றை உயிர்மெய்களாக எழுதுவதும், ஓதுவதும் மரபாயிற்று. தனித்து ஒலிக்க நேரின் முன்னால் இகரம் சேர்த்து 'இக்' (இகரம் எழுதப்படுவதில்லை) என ஒலிப்பது மரபு. தனி மெய்யெழுத்துகளாக (*open syllable*) இவை எழுதப்படுவது முதலெழுத்துகளின் வரையறை நோக்கம் கருதியது. தமிழின் பண்டைய நெடுங்கணக்கு முறை அசையெழுத்து (*closed syllable*) அல்லது கூட்டெழுத்து வகைமையைச் சார்ந்தது. ஆதலால் நெடுங்கணக்கு பயிற்றிய தமிழிலக்கண ஆசிரியர் தம் மாணாக்கர்க்கு உயிர்மெய் எழுத்துகளை அசையெழுத்துகளாகப் பயிற்றி வந்துள்ளனர்.

இத்தகு தமிழிலக்கண மரபின் தாக்கம் வடபுலமொழிகளில் புகுந்ததால் 'கலம்' என்னும் சொல்லைக் 'கலம' என உயிர்மெய்யாக எழுதி வேண்டுமிடத்தில் வேண்டிய எழுத்தை மெய் யெழுத்தாகப் (கலம-கலம்) படிக்கும் இயல்பை அவர்கள் வளர்த்துக்கொண்டனர்.

இத்தகு குழப்பம் ஏற்படாமல் தவிர்க்க நம் முன்னோர் முன்னுணர்ந்து தமிழ் நெடுங்கணக்கைத் தெளிவும், திட்பமும் வாய்ந்ததாக ஆக்கும் பொருட்டு உயிர்மெய் வாய்பாட்டு நிரலின் ஈற்றில் புள்ளிபெற்ற மெய்யெழுத்துகளை இடம்பெறச் செய்துள்ளனர். இதன் நோக்கம் புள்ளிபெற்ற மெய்யெழுத்துகள் மொழி முதலில் வாரா என்பதையும், வல்லின மெய் யெழுத்துகள் புள்ளி பெற்ற வடிவில் சொல்லீறாக நில்லா என்பதையும் தெளிவுபடுத்துவதற்கே எனலாம்.

இடைக்காலத்தில் ஓலைச் சுவடிகளில் மெய்யெழுத்துகள் புள்ளியில்லாமல் எழுதப்பட்டன; எனினும் புள்ளிகளை உய்த்துணர்ந்து கொண்டு எளிதில் படித்தனர். இது தமிழின் தொன்மரபன்று; சமணத் தாக்கத்தால் ஊடாடிய புத்தாக்கம். குற்றியலுகரம் கூடப் புள்ளிபெறுவதைத் தெளிவாக வரையறுத்த மரபிலக்கண வல்லார் உயிர்மெய்க்கும், மெய்க்கும் வேறுபாடு காட்டாது இரார் என்பது ஒருதலை. "மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்" என்னும் தொல்காப்பிய நூற்பாவே இக் கருத்தை வலியுறுத்தும்.

ககரத்தின் வரிவடிவ வளர்ச்சி

.கி.பி. 3 ஆம் நூற்றாண்டு அரச்சலூர்க் கல்வெட்டில் தமிழி வரிவடிவமே உள்ளது. நடுவிலுள்ள நேர் கோட்டைப் பொறுத்தவரையில் இவ் வுருவம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு வரை மாறவில்லை. - - -

கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கூரம் செப்பேடுகளில், குறுக்குக் கோடு வளையத் தொடங்கியது. - - - 

தஞ்சாவூர் இராசராசேச்சுரத்துக் கல்வெட்டுகளில் கி.பி.1010ஆம் ஆண்டு, தலைக்கட்டு உருவாகத் தொடங்கியது. - - -

இராசேந்திர சோழன் காலத்திய திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் தலைக்கட்டிலிருந்து இடப்புறம் கீழ் நோக்கிய கோடு தோன்றத் தொடங்கியது. கி.பி. 11ஆம் நூற்றாண்டிற்கு முன்பும் பின்பும் இவ் வுருவமே நீடித்தது. - - -

மெல்லமெல்லத் தலைக் கட்டிலிருந்து இடப்புறம் இறங்கி வந்த கோடு, நடுவில் வளைந்த குறுக்குக் கோட்டைத் தொட்டுநின்றது. இந்தக் குறுக்குக் கோடு நன்றாக வளைந்து, நடு நேர் கோட்டுக்குச் சமமான அளவில் வந்து நின்றது. இந்த வடிவம் குன்றத்தூர் இராச நாராயண சம்புவராயன் கல்வெட்டில் (கி.பி. 1343) காணப்படுகின்றது. தெற்கில் அதே காலத்தில் இரண்டாம், மூன்றாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றது. - - -

நடுக்கோடு இறங்கி, வளைவின் இட முனையுடன் வளைந்து சேர்ந்து இன்றைய வடிவம் பெற்றது. விசயநகர அரசன் அச்சுத தேவராயனின் (கி.பி.1534) திருவரங்கக் கல்வெட்டிலும் இவ்வாறு காணப்படுகிறது. - - - க

க[1] *ka*. வல்லின உயிர்மெய்யெழுத்து; the compound of க் + அ, secondary vowel consonantal symbol *ka*.

[க் + அ - க]

ககரம் மெய்முன்னாகவும், உயிர்பின்னாகவும் ஒலிக்கப்படினும், மாத்திரையளவில் மெய்யின் ஒலிப்புக் கரந்து உயிரின் ஒலிப்பளவே ஒலிப்பளவாய், ஒரு மாத்திரைக் குறிலாய் ஒலிப்பது மரபு. நீரில் கரைந்த உப்பைப்போல ஒன்றில்ஒன்று கரையும் என்பதாம். நீர் சுவையையும், உப்பு பருவடிவையும் இழப்பதைப் போலக் ககரமெய் தன் ஒலிப்பளவையும், அகரஉயிர் தன் வரிவடிவத்தையும் இழத்தலாலும், ஒலிப்பளவினாலே மட்டும் ஒரெழுத்துத் தன்னைப் புலப்படுத்திக் கொள்வதாலும், அவ்வாறு ஒலிப்பளவைப் புலப்படுத்திக்கொள்ளும் உயிரெழுத்தை முன்னிலைப் படுத்தி உயிர்மெய்யெழுத்து என இலக்கண வல்லார் குறியீடு இட்டனர் என்க. மெய்யுயிரெழுத்து என வழங்காததும் இதன்பொருட்டே எனலாம்.

க² *ka*, ஒன்றென்னும் எண்ணின் குறியீடு; sign in Tamil numerals indicative of figure one.



ஒன்று என்னும் எண்ணின் சொற்பொருளாகிய ஒன்றித்தல், ஒன்றாகக் கட்டப்பட்டு அல்லது குடத்தில் பெய்யப்பட்டு இருக்கும் நிலையை உணர்த்தும் பட எழுத்தின் பண்டைய எழுத்து வடிவம். ககரப் படவெழுத்தின் வரலாற்று வழிவந்த ககர எழுத்து வடிவங்களும், ஒன்று எனும் எண்ணைக் குறிப்பனவாயின. எண் குறியீடுகள் பார்க்க; see *eṇ kuṟi-y-īḍugaḷ.*

க³ *ka*, ஏழிசைக் குறியீடுகளுள் மூன்றாவதாகிய 'கைக்கிளை'யின்(காந்தாரம்) எழுத்து; symbol representing the third note of the gamut.

க⁴ *ka*, இடை.(part.) ஒரு வியங்கோள் ஈறு (நன்.338); verb ending of the optative, as in வாழ்க. "வான்முகில் வழாது பெய்க" (கந்தபு.பாயிரம். வாழ்த்து,5).

ம. க

[காண் → கா → க.]

காண் என்னும் வினை போய்க்காண், இருந்துகாண் என்றாற் போன்று ஈற்று அசைநிலையாயிற்று. பின்னர் காண் → கா → க எனக் குறைந்து வழக்கூன்றியது. உண்கா, செல்கா என்பவை உண்க, செல்க என வியங்கோள் ஈறாயின. இன்றும் வட தருமபுரி மாவட்டத்து வேளாளரும், பழந்தமிழரும் இருகா (இருங்கள்), போகா (போங்கள்), என்னகா (என்ன) எனப் பேசுதலையும், தஞ்சைக் கிளை வழக்கில் வாங்காணும், போங்காணும் எனக் காண் துணைவினையை ஏவலீற்றுச் சொல்லசையாகப் புணர்த்திப் பேசுதலையும் காணலாம்.

க⁵ *ka*, பெ.(n.) 1. நான்முகன்; Brahma. "கவ்வென்ப தயன்பேர்" (காஞ்சிப்பு.தலவி.26). 2. திருமால்; Vishṇu. 3. காமன்; Kaman, God of love. 4. கதிரவன்; Sun. 5. நிலவு; Moon. 6. ஆதன்; soul.

க. க

ககரம் ஒன்று என்னும் எண்ணைக் குறித்த குறியீடாதலின் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களுள் முதற்றொழிலைச் செய்யும் நான்முகனை முதலாவது எண்ணாகிய ககரம் குறித்தது எனத் தொன்ம நூலார் உன்னிப்பாகக் கட்டுரைத்தனர். இது நாளடைவில் முதன்மை பெறத்தக்கனவாகக் கருதப்பட்டவற்றிற்கும் ஆளப்பட்டிருக்கலாம்.

ஆயின் முதுபண்டைக் காலத்திலிருந்து தாழி அல்லது மட்பாண்டத்தின்மீது அல்லது அடிமரம், குறுந்தறி போன்றவற்றின்மீது தாம் வழிபடும் தெய்வத்தின் குறி அல்லது உரு எழுதி வழிபடுவது மரபாதலின், ககரத்தின் வெவ்வேறு கால வரிவடிவக் குறியீடுகள் பல்வேறு தெய்வங்களைக் குறித்திருக்கலாம். இத்தகைய வழிபாட்டு முறை ஆரியர்க்கு இன்மையின் இக் குறியீட்டுக் கோலங்கள் தமிழரிடமிருந்தே ஏனையோரால் கடன் கொள்ளப் பட்டதாதல் வேண்டும்.

த. க > Skt. *ka.*

க⁶ *ka*, பெ.(n.) அழல்; fire. "நரகங்களிலே கவின்று" (புலியூரந்.7).

க. க

[காய்தல் = வேதல். காய் → கா → க = தீ.

த. க > Skt. *ka.*]

கஃகான் *kakkāṉ*, பெ.(n.) ககரவெழுத்து; the letter 'ka'.

[க + கான் - கஃகான். கான் - எழுத்துச்சாரியை. இது புணருங்கால் இடையே ஆய்தந் தோன்றியது (நன்.எழுத்து.17)].

கஃசு *kakšu*, பெ.(n.) காற்பலம் கொண்ட நிறையளவு; a measure of 1/4 palam. "தொடிப்புழுதி கஃசா வுணக்கின்" (குறள்,1037). 'சர்க்கரை இருபதின் பலமும் - கண்டசர்க்கரை முக்கஃசும்' (S.I.I.iii.2 (கல்.அக.)

க. கஃசு

[கால் + து - கால்து → கால்சு → கஃசு. கால் → கஃசு. த. கஃசு → Skt. karṣa (வ.மொ.வ.101.)]

5 மஞ்சாடி - ஒரு கழஞ்சு

2 கழஞ்சு - ஒரு கஃசு

4 கஃசு - ஒரு பலம் (ஒரு தொடி) (கணக்கதி.)

கஃறெனல் *kakṟeṉal*, பெ.(n.) கறுத்துள்ளமை காட்டும் குறிப்பு; an expression signifying blackness. 'கஃஃறென்னுங் கல்லதர் அத்தம்' (தொல். எழுத்து.40, நச்.உரை).

[கல் → கஃறு = கருமை, கருமைக்குறிப்பு. கஃறு + எனல். கல் = கருமை, இருள் (வ.மொ.வ.111)]

கக்கக்குழி *kakka-k-kuḻi*, பெ.(n.) கையும் தோளும் இணையுமிடத்துக் கீழ்ப்பகுதியில் அமைந்த குழி; armpit.

ம. கக்ஷ்குழி; க. கங்குழி, கங்குழு, கவுங்குழ், கொங்கழ், கொங்கழு, கொங்குழ்; து. கங்குள; தெ. கௌங்கிலி; பர். கவ்கொர், கவ்கொட்; பட. கக்குவ.

[கக்கம் + குழி. கக்கம் = அக்குள்.]

கக்கக்கெனல் *kakkak-k-eṉal*, பெ.(n.) 1. கோழிகள், குஞ்சுகளை அழைக்கும் ஒலிக்குறிப்பு. (வின்.); onom. expression of clucking, as fowls. 2. சிரித்தற் குறிப்பு; onom. expression meaning laughter. *"கக்கக்கென்றேதே நகைப்பார்" (பாஞ்.சப.II.53).*

[கெக்கெக்கெனல் → கக்கக்கெனல் (ஒலிக்குறிப்பு)]

கக்கக்கொடு-த்தல் *kakka-k-koḍu-*, 4 செ.குன்றாவி.(v.t.) 1. உணவை மிதமிஞ்சி யூட்டுதல் (வின்.); to pamper, feed to surfeit, used in reproach. 2. உட்கொண்ட பொருளைக் கக்கி வெளிப்படுத்த மாற்றுப்பொருளைப் புகட்டுதல்; to feed to stimulate vomiting.

[கக்கு → கக்க + கொடு-.]

கக்கசம் *kakkašam*, பெ.(n.) 1. களைப்பு; weariness. 2. கடுமை; hardness. 3. வயிறுமுட்ட உண்பது, வேகமாக ஓடுவது போன்றவற்றால் ஏற்படும் மூச்சுத்திணறல் (கருநா.); trouble (heavy breathing, etc.) arising from an overloaded stomach or resulting from running fast.

க. கக்கச

[கடும் + கட்டம் - கடுங்கட்டம் → கக்கட்டம் → கக்கத்தம் → கக்கச்சம் → கக்கசம் = மிகு வருத்தம் (தொ.வ). த. கக்கத்தம் > Skt. karkaša.]

கக்கட்டம் *kakkaṯṯam*, பெ.(n.) உரத்த குரற் சிரிப்பு; onom. expression signifying laugh.

[கக்கக் கக்க (ஒலிக்குறிப்படுக்கு)→ கக்கட்டம் = உரத்த குரற் சிரிப்பு. kakk, kakh, kakkh, khakkh என வடசொன் முதனிலை நால்வடிவில் உளது.]

மா.வி. அகரமுதலியில் இச் சிறப்புப் பொருள் குறிக்கப்பெறவில்லை; சென்னை அகரமுதலியில்தான் குறிக்கப்பட்டுள்ளது. (வ.மொ.வ.101).

த. கக்கட்டம் → Skt. kakkhaṭa.

கக்கட்டமிடு-தல் *kakkaṭṭam-iḍu-*, 20 செ.கு.வி.(v.i.) குதிரை கனைப்பதுபோல் இடையிட்டுச் சிரித்தல்; onom. expression meaning to laugh loudly, as horse-neigh. *கந்தன் கக்கட்டமிட்டுச் சிரித்தான் (யாழ்ப்.).*

[கெக்கலி → கெக்கட்டமிடு → கக்கட்டமிடு.]

கக்கடி *kakkaḍi*, பெ.(n.) துத்தி (நாமதீப.); wrinkle leaved evening mallow.

[கள் + கடி. கள் = நெருக்கம், சுருக்கம்.]

கக்கடை *kakkaḍai*, பெ.(n.) ஒருவகைக் குத்துவாள்; a kind of dagger.


கக்கடை

ம. கக்கட; க. கக்கடெ, கர்கடெ; Skt. karkaša.

[கை + கடி → கைக்கடி → கைக்கடை. கடிதல் = வெட்டுதல். கள் → கடு → கடி = வெட்டு, வெட்டும் கருவி, குத்தும் கருவி. கை = சிறிய. கைக்கடி = குத்துவாள்]

கக்கதண்டம் *kakka-taṇḍam*, பெ.(n.) அக்குளில் இடுக்கி நடக்குங் கழி; crutch. முறிந்த கால் சரியாகும்வரை கக்க தண்டம் வைத்துக் கொள் (உ.வ.).

கக்கதண்டம்

[அக்குள் → கக்குள் → கக்ஷம் + தண்டம். தண்டம் = கோல். தண்டு → தண்டம்.]

த. கக்கம் > Skt. kakṣa.

கக்கதாசம் *kakka-dāšam*, பெ.(n.) தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Dharmapuri district.

[கக்கன் + தாசன் - கக்கதாசன் → கக்கதாசம் (மகர மெய் ஈற்றுத் திரிபு) கக்கதாசன் என்பவனின் பெயரில் அமைந்த ஊராகலாம்.]

கக்கப்பாளம் *kakka-p-pāḷam,* பெ.(n.) துறவிகள் கக்கத்திடுக்குங் கலம் அல்லது மூட்டை (வின்.); vessel or bag carried under the arm by ascetics.

[கக்கம் + பாளம். பள்ளம் → பாளம் = உட்குழிவான ஏனம். ஒ.நோ. தாம்பாளம். கக்கம் = அக்குள்.]

இரப்போர் அக்குளில் இடுக்கி எடுத்துச்செல்லும் உண்கலமாகிய திருவோட்டையே இச் சொல் குறித்தது. இதனை மண்டையோடு எனப் பொருள்கொள்வது பொருந்தாது.

கக்கப்பை *kakka-p-pai,* பெ.(n.) துறவிகள் அக்குளில் கொண்டு செல்லும் மூட்டை, பை; bag carried under the arm by ascetics and mendicants.

[கக்கம் + பை. கக்கம் = அக்குள். முதலில் அக்குளில் இடுக்கி எடுத்துச் செல்லும் மூட்டை அல்லது சிறுபையைக் குறித்து, பின்னர்த் தோளில் தொங்கவிட்டுக் கொள்ளும் பையைக் குறித்தது.]

கக்கப்பொட்டணம் *kakka-p-poṭṭaṇam,* பெ.(n.) கக்கத்தில் இடுக்கிய துணிமூட்டை (வின்.); bundle of cloth carried under the arm.

[கக்கம் + பொட்டணம். கக்கம் = அக்குள். பொக்கணம் → பொட்டணம்.]

கக்கபிக்கவெனல் *kakka-pikka-v-eṉal,* பெ.(n.) 1. மனக்குழப்பத்தால் விழித்தற்குறிப்பு; blinking in confusion. 2. உளறுதற்குறிப்பு; blabbering or talking incoherently.

[கக்கபிக்க (ஒலிக்குறிப்பு) + எனல்.]

கக்கம்[1] *kakkam,* பெ.(n.) 1. அக்குள், கமுக்கூடு; armpit, axilla. *"கட்டிச் சுருட்டித்தங் கக்கத்தில் வைப்பர்" (பட்டினத். திருப்பா. பொது.30).* 2. மறைவிடம்; lurking place. 3. இடுப்பு; waist. குழந்தையைக் கக்கத்தில் வைத்துக்கொள் (உ.வ.).

மறுவ. கமுக்கட்டு, கம்முக்கட்டு, கம்மங்கூடு, கமுக்கூடு.

ம. கக்ழம்; **க.** கங்குழு, கங்குள், கவுங்குள்; **தெ.** சங்க, கௌங்குலி; **து.** கங்குள; **பட.** கக்குவ; **குவி.** கக.

[அக்குள் → கக்குள் → கக்கம் > Skt. kakṣa.]

கக்கம் என்னும் தமிழ்ச்சொல்லே வடமொழியில் கக்ஷ ஆயிற்று. கஷ் (தேய்), கச்(ஒலி) என்பனவற்றை வடவர் மூலமாகக் காட்டுவது பொருந்தாது. மறைவிடம் என்னும் பொருளில் இருக்கு வேதத்திலும், அக்குள் என்னும் பொருளில் அதர்வண வேதத்திலும் கக்ஷ என்னும் சொல் ஆளப்பெற்றிருப்பதாக மா.வி.அகரமுதலி கூறும் (வ.மொ.வ.102). மேலையாரிய மொழிகளில் இச் சொன்மூலம் இன்மையால் வடமொழியில் மூலம் காட்டுவது சிறிதும் பொருந்தாது.

கக்கம்[2] *kakkam,* பெ.(n.) எண்ணெயின் அடியில் தங்கும் கசடு, கசண்டு; dregs, lees, sediment of oil.

ம. கல்கம்

த. கக்கம் > Skt. kalka

[கரு = கருப்பு, கசடு. கரு → கருக்கு → கக்கு → கக்கம்.]

கக்கர் *kakkar,* பெ.(n.) ஒரு சிற்றூர்த் தெய்வம்; name of a village deity (மதுரை).

[கா = காத்தல். கா → காக்கன் → காக்கர் → கக்கர்.]

கக்கரி *kakkari,* பெ.(n.) முள்வெள்ளரி (சூடா.); kakri-melon.

ம. கக்கரி, கக்கிரி; **Pkt.** kakkḍia; **Ori.** kākuri; **H.** kakṛī; **Guj.** kākḍī; **Nep.** kākri; **Sinh.** kākira **Skt.** karkaṭī.

[கள் = முள். கள் + கு - கட்கு → கக்கு = முள். கக்கு + வெள்ளரி - கக்குவெள்ளரி → கக்கரி. வெள் + அரி- வெள்ளரி = வெண்மையான வித்துகளைக் கொண்ட காய்.]

கக்கரிகம் *kakkarigam,* பெ.(n.) **கக்கரி** பார்க்க; see *kakkari.*

[கக்கரி → கக்கரிகம்.]

கக்கரிபிக்கரி *kakkari-pikkari,* பெ.(n.) தெளிவின்றிப் பேசுதற் குறிப்பு; onom. expression signifying wishy-wishy talk.

க. கக்காபிக்கரி; **தெ.** கக்கரிபிக்கரி.

[கக்கரி + பிக்கரி - கக்கரிபிக்கரி (எதுகை மரபிணைச் சொல்).]

கக்கரியெண்ணெய் *kakkari-y-eṇṇey,* பெ.(n.) முள்வெள்ளரி விதையினின்று எடுக்கப்படும் எண்ணெய்; oil extracted from kakkari-melon seeds.

ம. கக்கரியெண்ண

[கக்கரி + எண்ணெய். கக்கரி = முள்வெள்ளரி]

கக்கரை *kakkarai,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thanjavur district.

[கை = சிறுமை, கை + கரை - கைக்கரை → கக்கரை சிறிய கரை.]

கக்கரைமண் *kakkarai-maṇ,* பெ.(n.) மண்தளக் கூரைகளின் மேற்றளத்தில் பரப்பும் மண்வகை (மதுரை.); a soil used for terrace floor of mudroofed buildings.

[களிக்கல் → கக்கல் → கக்கரை (மணல் கலந்த களிமண்) + மண்.]

கக்கல்[1] *kakkal,* பெ.(n.) 1. வாயாலெடுக்கை (பிங்.); vomiting. 2. கக்கிய பொருள்; vomit, anything cast out, as from the mouth.

ம. கக்கல்; **தெ.** கக்கு; **க.** கக்கு, கழ்க்கு; **குவி.** கக்வ; **கோத.** கக்கு; **துட.** கக்.

[கக்கு → கக்கல். கக்கு = வாயால் எடுக்கும்போது ஏற்படும் ஒலி குறிப்பால் அமைந்த வினைச்சொல்.]

கக்கல்[2] *kakkal,* பெ.(ṅ.) தெற்றிப்பேசுவோர் இடையில் எழுப்பும் ஒலிக்குறிப்பு; stammering.

ம. கக்கல்

[கக்கு → கக்கல். கக்கு அல்லது கக்கக்கு. ஒலிக்கத் தடையாகவுள்ள எழுத்துகளுக்கு முன் எழுப்பும் ஒலிக்குறிப்பு.]

கக்கல்[3] *kakkal,* தொ.பெ.(vbl.n.) 1. கழன்று வெளிவருதல்; coming out of one's position. கமலையின் சிறு கப்பி கக்கிக்கொண்டு விழுந்துவிட்டது (உ.வ.). 2. திருடுதல்; stealing.

ம. கக்குக; பட. கக்கலு.

[கள் = களைதல், நீங்குதல், வெளிவருதல், விலகுதல். கள் → கக்கு → கக்கல். 'அல்' (தொ.பெ.ஈறு).]

கக்கல்[4] *kakkal,* பெ.(n.) 1. இருமல்; cough. 2. கக்குவான் நோய்; chin - cough or whooping cough.

[கக்கு → கக்கல்.]

கக்கல்கரைசல் *kakkal-karaišal,* பெ.(n.) 1. கலங்கல் நீர்; muddy water, as that which flows at the beginning of a flood in a river. ஆற்றுவெள்ளம் கக்கலுங் கரைசலுமாய் ஒடுகிறது (உ.வ.). 2. நீர்த்த மலம்; liquidy excrement.

[கக்கல் + கரைசல்.]

கக்கல்கழிச்சல் *kakkal-kaḻiccal,* பெ.(n.) வாயாலெடுத்தலும் வயிற்றுப்போக்கும்; vomitting and diarrhoea.

[கக்கல் + கழிச்சல். கக்கல் = வாயாலெடுத்தல். கழிச்சல் = வயிற்றுப்போக்கு]

கக்கலாத்து *kakkalāttu,* பெ.(n.) கரப்பான் பூச்சி cockroach.

[கருக்கல் → கக்கல். கக்கல் = கரியது. அந்து ஆந்து → ஆத்து. கக்கல் + ஆத்து.]

கக்கலும்விக்கலுமாய் *kakkal-um-vikkal-um-āy,* கு.வி.எ.(adv.) கதிர் ஈன்றதும் ஈனாததுமாய்; just half shooting forth, as grain in the ear of corn. *நெல்லெல்லாம் கக்கலும் விக்கலுமாயிருக்கிறது (வின்.).*

[கக்கலும் + விக்கலும் + ஆய்.]

கக்கவை-த்தல் *kakka-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. வாயாலெடுக்கச்செய்தல்; to make vomit. 2. கடனை நெருக்கி வாங்குதல்; to press hard for the discharge of a debt; to dumb a debtor and force him to pay. அவன் தனக்குச் சேரவேண்டிய பாக்கியைக் கக்க வைத்தான் (உ.வ.). 3. கமுக்கச் செய்தியை மிரட்டிப் பெறுதல்; to extract secret information. காவலர் நெருக்கியதில் திருடன் உண்மையைக் கக்கிவிட்டான் (உ.வ.).

க. கக்கிசு; **து.** கக்காவுனி.

[கக்கல் + வை. 'வை' (து.வி.)]

கக்கழி *kakkaḻi,* பெ.(n.) குச்சி விளையாட்டிற்குப் பயன்படும் கழி; stick used for martial art.

[கைக்கழி → கக்கழி (கொ.வ.). கழி = பெரும்பான்மை மூங்கிற்கழி.]

கக்கள்ளூர் *kakkaḷḷūr,* பெ.(n.) இலால்குடி வட்டத்திலிருந்த பழைய ஊர்; an old place in Lalgudi taluk; *"திருத்தவத்துறை பெருமாநடிகளுக்கு கூவங்குடாங் சிங்கம் பொதுவந்தும் கக்கள்ளூர் எழினி அங்காரி நாரணியும் ஆக இருவரும்" (தெ.இ.கல்.தெ.19.கல்.270).*

[ஒருகா. கக்கன் + அள்ளூர் → கக்கனள்ளூர் கக்கள்ளூர்.]

கக்கன்[1] *kakkan,* பெ.(n.) 1. பெரியவன்; a great person. 2. வலிமை சான்றவன்; able bodied man.

[கருக்கன் → கக்கன். கரு = பெரிய, வலிமைசான்ற.]

கக்கன்[2] *kakkan,* பெ.(n.) 1. ஆண்பாற் பெயர்; proper name (masc.). 2. தலைவன்; lord, master.

[கா → காக்கன் → கக்கன். கா = பெருமை, பெரியவன், தலைவன்.]

கக்கன்[3] *kakkan,* பெ.(n.) கரிய நிறமுடையவன்; man of black complexion.

[கக்கு = கரிய நிறம். கக்கு + அன் (ஆ.பா.ஈறு)]

கக்கன்[4] *kakkan,* பெ.(n.) திக்கிப் பேசுபவன்; a stammerer (சேரநா.).

ம. கக்கன்

[கக்கு² + அன் (ஆ.பா.ஈறு)]

கக்கனூர் *kakkanūr,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram district.

[கக்கன் + ஊர் - கக்கனூர். கக்கன் பெயரில் அமைந்த ஊர்.]

கக்கா *kakkā,* பெ.(n.) 1. அழுக்கு; dirt. 2. மலம்; faeces.

[கள் + கு - கக்கு → கக்கா. கள் = நீங்கல், வெளிவரல்.]

கக்காட்சேரி *kakkāt-cēri,* பெ.(n.) கன்னியாக்குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanniyā-k-kumari district.

[கல் + காடு + சேரி - கற்காட்டுச்சேரி → கக்காட்சேரி (கொ.வ.).]

கக்காட்டூர் *kakkāṭṭūr,* பெ.(n.) கன்னியாக்குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanniyā-k-kumar district.

[கல் + காடு + ஊர் - கற்காட்டூர் → கக்காட்டூர்.]

கக்கார் *kakkār,* பெ.(n.) தித்திப்பு மாங்காய்; sweet mango (சா.அக.).

[கரு = பெரியது, நல்லது, இனியது. கருக்கல் → கருக்கர் → கருக்கார் → கக்கார்.]

கக்காரக்கோட்டை *kakkāra-k-kōṭṭai,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thanjavur district.

[கை + கரை - கைக்கரை → கக்கரை + கோட்டை - கக்கரைக்கோட்டை → கக்காரக்கோட்டை. கக்கரை பார்க்க; see kakkarai.]

கக்கி *kakki,* பெ.(n.) பெண்பாற்பெயர்; proper name (feminine).

படு. கக்கி (ஆண்பாற் பெயர்)

[கக்கு + இ - கக்கி. கக்கன் (ஆ.பா.) > கக்கி (பெ.பா.)]

இ - பெண்பால் ஈறாக வரும்போது பெண்பாற் பெயரையும், பண்புப்பெயர் ஈறாக வரும்போது ஆண்பாற் பெயர் உள்ளிட்ட அனைத்தையும் குறிக்கும். இவ் வடிப்படையில் இஃது, ஆண்பால் பெண்பாற் பெயர்களாகப் பிற திராவிட மொழிகளிலும், பெண்பாற் பெயராகத் தமிழிலும் வழக்கூன்றியுள்ளது.

கக்கிக்கொடு-த்தல் *kakki-k-kodu-,* 4 செ.குன்றாவி. (v.t.) பறவை தன் வாயிற் கொண்டதைத் தன் குஞ்சுகளுக்கு ஊட்டுதல்; to feed from its own mouth, as a bird to its young ones. காகம் தன் குஞ்சுக்குக் கக்கிக் கொடுக்கிறது (உ.வ.).

[கக்கு → கக்கி + கொடு.]

கக்கிசம் *kakkišam,* பெ.(n.) **கக்கசம்** பார்க்க: see *kakkašam.*

[கக்கசம் → கக்கிசம்.]

கக்கு[1]**-தல்** *kakku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. வாயா லெடுத்தல்; to vomit, spew from the stomach. 2. வெளிப்படுத்துதல்; to eject, as a snake its poison. *"புனல்பகுவாயிற் கக்க" (கம்பரா.யுத்த. இரணி.89).*

ம. கக்குக; குவி. கக்வி; க. கக்கு, கழ்க்கு; கோத. கக்; துட. கக்; குட. கக்க; து. கக்குனி; தெ. கக்கு, க்ராயு, க்ரக்கு; கோண். கக்கானா; பிரா. கழ்ங்க்; படு. கக்கு.

[கள் + கு - கக்கு (நீக்கு).]

கக்கு[2]**-தல்** *kakku-,* 5 செ.கு.வி.(v.i.) 1. ஆணி முதலியன பதியாமல் எதிரெழுதல் (வின்.); to skip with a rebound, fly back, recoil, as a nail. வயிர மேறிய மரத்தில் அடிக்கும் ஆணி கக்குகிறது (உ.வ.).

2. ஆறு முதலியன பெருக்கெடுத்தல்; to overflow, as a river. ஆற்றில் வெள்ளம் கக்கிப்பாய்கிறது (உ.வ.). 3. கதிரீனுதல் (வின்.); to shoot out as ears of corn. நெற்பயிர் கதிர் கக்கும் பருவம். 4. மருந்துச் சாறமிறங்குதல்; to yield the essence, as drugs put in boiling water. 5. தோலி லிருந்து எண்ணெய் முதலியன கசிதல்; to ooze out, as oil through the pores of the skin.

ம. கக்குக; க. கக்கு; து. கக்கு; பிரா. கழிழ்ங்; பட. கக்கு.

[கள் → கக்கு (கள் - நீக்கல் கருத்து வேர்) ஒ.நோ. வெள் → வெஃகு.]

கக்கு³-தல் *kakku-,* 5 செ.கு.வி.(v.i.) 1. திரிபு பெறல்; to change from the normal position. 2. விலகுதல்; withdraw. 3. திக்குதல்; stammering.

[கள் + கு - கக்கு.]

கக்கு⁴-தல் *kakku-,* 5 செ.கு.வி.(v.i.) இருமுதல்; to cough.

கோத. கக்கு; பட. கக்கு (இருமச் செய்யும் நெடி).

[கள் + கு - கஃகு → கக்கு. கஃகு - ஒலிக்குறிப்பு.]

கக்கு⁵ *kakku,* பெ.(n.) கக்குவான்; whooping cough. *"கக்கு களைவரு நீரடைப்பு" (திருப்பு.627).*

[கள் + கு - கஃகு → கக்கு.]

கக்கு⁶ *kakku,* பெ.(n.) கற்கண்டு; sugar candy.

[கற்கண்டு → கக்கண்டு → கக்கு (மரூஉ).]

கக்கு⁷ *kakku,* பெ(n.) பிஞ்சு, இளையது; young, tender.

ம. கக்கு
[கரு → கருக்கு → கக்கு = பிஞ்சு.]

கக்கு⁸ *kakku,* பெ.(n.) 1. கக்குவள்ளி, ஒருவகைக் கொடி; a kind of climber. 2. பறவைகளின் இரண்டாம் வயிறு; gizzard, second stomach of a bird (thick and muscular) (சேரநா.).

ம. கக்கு

[கள் + கு - கக்கு = சேர்தல், ஒட்டுதல், இணைதல்.]

கக்குலத்தை *kakkulattai,* பெ.(n.) அன்பு, மனவிரக்கம்; love, compassion.

க. ககுலதெ, ககுலாதெ; தெ. கக்குரிதி, கக்கூர்தி; ம. கக்கத.

[கக்கு = பிஞ்சு, இளமை, மென்மை (சேரநாட்டு வழக்கு). மென்மைப்பொருள், அன்பு, இரக்கப்பொருள்களில் புடைபெயர்ந்தது. கக்கு → கக்குல் → கக்குலிதம் → கக்குலத்தை (இ.வ.).]

கக்குவாய் *kakku-vāy,* பெ.(n.) கக்குவான் பார்க்க; see *kakkuvāṉ.*

[கக்குவான் → கக்குவாய்.]

கக்குவான் kakkuvāṉ, பெ.(n.) இருமலையும், மூச்சிரைப்பையும் உண்டாக்கும் நோய், கக்கிருமல் (பாலவா.1000); whooping cough.

மறுவ. கக்குவாய், கக்கிருமல்.

க. கக்கிசு; துட., கோத. கக்கச; து. கக்காவுனி.

[கக்கு → கக்குவான்.]

கக்குள் *kakkuḷ,* பெ.(n.) அக்குள், கமுக்கூடு; arm-pit, axilla.

க. கங்குளி; தெ. சங்க; து. கங்கள; பட. கக்குவ.

[அக்குள் → கக்குள். அக்குள் பார்க்க; see akkuḷ.]

கக்குளி-த்தல் *kakkuḷi-,* 4 செ.கு.வி.(v.i.) அக்குளில் விரலிட்டுக் கூச்சமுண்டாக்குதல்; to tickle.

மறுவ. கிச்சுக்கிச்சு மூட்டல்

க. கக்குளிசு; பட. கிலிகிருசு.

[அக்குள் → கக்குள் → கக்குளி. இகரம் ஏவலீறு.]

கக்குறம்பொத்தை *kakkuṟam-pottai,* பெ.(n.) கன்னியாக்குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kaṉṉiyā-k-kumari district.

[கான் + குறம் + பொற்றை - காக்குறம் பொற்றை → கக்குறம் பொத்தை, கான்குறம் = கானக்குன்றம். கான் = புதர்க்காடு. பொற்றை = பாறை, பாறைகளமைந்த பகுதி. பொற்றை → பொத்தை (திரிபு).]

கக்கோட்டுத்தலை *kakkōṭṭu-t-talai,* பெ.(n.) கன்னியாக்குமரி மாவட்டத்துக் கல்குளம் வட்டத்துச் சிற்றூர்; a village in Kal-kuḷam taluk in Kaṉṉiyā-k-kumari district.

[கல் + கோடு + தலை - கற்கோட்டுத் தலை → கக்கோட்டுத்தலை. கல்கோடு = கல்லால்கட்டிய ஏரிக்கரை. தலை = முகப்பிலுள்ளது. கற்கோட்டுத்தலை = கல்லால் அமைந்த ஏரிக்கரையின் முகப்பிலுள்ள ஊர்.]

கக்கோடு *kakkōḍu,* பெ.(n.) கன்னியாக்குமரி மாவட்டத்துக் கல்குளம் வட்டத்துச் சிற்றூர்; a village in Kal-kuḷam taluk in Kaṉṉiyā-k-kumari district.

[கல் + கோடு - கற்கோடு → கக்கோடு. கோடு = ஏரிக்கரை.]

ககரம் kagaram, பெ.(n.) ‘க’ என்னும் எழுத்து; the letter ‘ka’.

ம. ககாரம்

[க + கரம் - ககரம். கரம் - எழுத்துச்சாரியை. ‘க’ பார்க்க; see ‘ka’.]

ககாரம் *kagāram,* பெ.(n.) ககரவெழுத்து; the letter 'ka'.

[க + காரம் - ககாரம். காரம் - எழுத்துச்சாரியை.]

கரம், காரம், கான் என்னும் மூன்றும் பழந்தமிழ் எழுத்துச் சாரியைகள். இவற்றுள் கரம், கான் இரண்டும் நெட்டெழுத்திற்கு வாரா. ஆயின் கரம், காரம், கான் இம் மூன்றும் குற்றெழுத்துச் சாரியைகளாய் வரும் (தொல்.எழுத்து.137). கரம் குற்றெழுத்திற்கும் காரம் நெட்டெழுத்திற்கும் சொல்லும் வழக்கு அச் சாரியைகளில் அமைந்துள்ள குறில் நெடில் வடிவங்களால் ஏற்பட்டதென்க.

ககுத்து *kaguttu,* பெ.(n.) காளையின் திமில்; hump of the bull. *‘ஏற்றின் ககுத்தை முறித்தாய்’ (ஈடு.4,3:1).*

மறுவ. திமில், மோபுரம் (மீப்புறம்).

க. ககுத; ம. ககுத்து; Skt. kakuda; L. cacumen.

[கழுத்து → ககுத்து. த. கழுத்து > Skt. kakuda.]

எருத்தின் திமில் கழுத்தின் மீப்புறத்தைக் குறித்தது. இதற்குத் திமில் என்றும் மோபுரம் (மீப்புறம்) என்றும் பெயர் வழங்கக் காணலாம். கழுத்தின் பெயர் மீப்புறத்திற்கு ஆகி வந்தது. ககுத்து என்னும் கொச்சை வடிவம் பொருத்தமான தன்று.

ககுதி *kagudi,* பெ.(n.) முத்திரை குத்தின எருது; stamped bull.

[ககுத்து → ககுதி = திமிலின்மீதிடும் முத்திரை.]

கங்கடிக்காய் *kaṅgaḍi-k-kāy,* பெ.(n.) சிறு தும்மட்டிக் காய்; fowl's cucumber.

[கங்கு + அடி + காய்.]

கங்கடிகம் *kaṅgaḍigam,* பெ.(n.) குருந்தொட்டி எனும் மருந்துச் செடி; common balah.

[கங்கடி + அகம் - கங்கடிகம். கரு → கக்கு → கங்கு = கரியது, தீய்ந்தது, கசப்பானது. கங்கு → கங்கடி.]

கங்கண எடுப்பு *kaṅgaṇa-eḍuppu,* பெ.(n.) காப்பு நாண் நீக்கும் நிகழ்வு (சடங்கு); ceremony of removing the *kaṅgaṇam.*

[கங்கணம் + எடுப்பு.]

கங்கணங்கட்டு-தல் *kaṅgaṇaṅ-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. திருமணம் முதலிய நிகழ்வு (சடங்கு) களில் கையில் காப்புநாண் கட்டுதல்; to tie a cord round one's wrist at the commencement of a wedding ceremony etc. 2. ஒரு செயலை முடிக்க மூண்டு நிற்றல், உறுதி எடுத்தல்; to take a vow to accomplish something, to be pertinacious in the realization of the aim. *இந்த மாத இறுதிக்குள் கடனைத் திருப்பிக் கொடுத்துவிடுவேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டான்.*

க., து. கங்கணகட்டு

[கங்கணம் + கட்டு-.]

கங்கணத்தி *kaṅgaṇatti,* பெ.(n.) சிறு பறவை; myna.

ம. கங்ஙணத்தி

[குறுங்கழுத்தி → கங்கணத்தி.]



கங்கணத்தி

கங்கணம்[1] *kaṅgaṇam,* பெ.(n.) 1. மங்கல நிகழ்வுகளைச் செய்து முடிக்கும் பொருட்டு மணிக்கட்டில் கட்டப்படும் மஞ்சள் துண்டு அல்லது மஞ்சள் கயிறு; a sacred thread or string tied with a piece of turmeric (usually) around the right arm

or wrist (on auspicious occasions as a symbol of initiation to a specific ritual). கங்கணம் கட்டிய மாப்பிள்ளை வெளியூர் செல்லக்கூடாது (உ.வ.). 2. ஒரு செயலைச் செய்யும் பொருட்டு மனத்திற்கொள்ளும் உறுதிப்பாடு; determination of mind to do a particular job. *மாநிலத்தில் முதல் மாணவனாக வரவேண்டு மென்று கங்கணம் கட்டிக்கொண்டு படிக்கிறான்.* 3. ஒருவகைக் கைவளை; bangle, bracelet, wristlet. *"கங்கணம் பாடி" (திருவாச. 9:19).* 4. இறந்தார்க்குச் செய்யும் இறுதி நடப்பில் அவரது கால்வழியினர் கையில் கட்டும் மஞ்சள் கயிறு அல்லது துண்டு; *a turmeric tied string or yellow string tied on the hand of the dead person's son or sons at the time of the funeral rites.* தந்தையின் இறுதி நடப்புக்கு பிள்ளைகள் கங்கணம் கட்டிக் கொண்டனர். *5. தான் கொண்ட உறுதியை நிறைவேற்றுவதற்காக இடக்கை மணிக்கட்டில் கட்டிக்கொள்ளும் மஞ்சள் துண்டு அல்லது மஞ்சள் கயிறு; a turmeric piece tied string or yellow string tied on the left hand of the person who takes a vow or vengence.* இந்த மாத இறுதிக்குள் கடனைத் திருப்பிக் கொடுத்து விடவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டான்.

ம. கங்கணம்; க., து. கங்கண; தெ. கங்கணமு; எரு. கங்கடோ.

த. கங்கணம் > Skt. kaṅkaṇa, Nep. kaṅkan (a large iron bracelet worn by sādhus).

[குல் → குங்கு → கங்கு → கங்கணம் (வட்டமாகக் கட்டிய காப்பு) (சொ.ஆ.க.55).]

கங்கணமென்ற தென்சொல்லே வடசொற்கும் மூலமாகுமென்றும் இது கணகண என்ற ஒலிக் குறிப்படிப்படையில் உருவானதென்றும் கிற்றல் (kitte!) பெருமகனார் கூறுவார். ஆயின் கங்கு அடியினின்றே கங்கணம் தோன்றுவதன் பொருத்தத்தைக் காண்க. கங்கணம் ஒருவன் தன் பகைவனிடத்தில் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்று அதற்கு அடையாளமாகக் கட்டிக் கொள்ளும் காப்பு. அவ் வடிப்படையில் இது சூள் வகைகளுள் ஒன்றாகக் காட்டத்தக்கது. திருமணத்தில் ஆணுக்கு வலக்கை மணிக்கட்டிலும், பெண்ணிற்கு இடக்கை மணிக்கட்டிலும் கங்கணம் கட்டுவது மரபு. நீத்தார் நினைவுக் கடன் செய்யும் பொருட்டு மறைந்தாரது கால்வழியினர் கையில் கங்கணம் கட்டிக்கொள்வர். கோயில் திருவிழாவின் போதும் கங்கணம் கட்டுவது உண்டு. கங்கணமாகப் பெரும்பான்மை சிறு மஞ்சள் துண்டு அல்லது மஞ்சள் கயிறு பயன்படுத்துவது வழக்கு.

கங்கணம்² *kaṅgaṇam,* பெ.(n.) நீர்வாழ் பறவை வகை(வின்.); a kind of water fowl (சா.அக.).

தெ. கங்கணமு; க. கங்க.

[கொங்கு → கங்கு → கங்கணம் = வளைந்த மூக்குள்ள பறவை.]

கங்கணம்³ *kaṅgaṇam,* பெ.(n.) முடி; hair (த.சொ.அக.).

[கங்கு (கருமை) → கங்கணம்.]

கங்கணரேகை *kaṅgaṇa-rēgai,* பெ.(n.) **கங்கணவரை** பார்க்க; see *kaṅgaṇa-varai.*

ம. கங்கணரேக (கங்கணம் போன்று மணிக்கட்டில் அமைந்த வரை).

[கங்கணம் + ரேகை (வரிகை → ரேகை)- கங்கணரேகை. த. வரிகை (ரேகை) > Skt. rēkhā.]

கங்கணவரை *kaṅgaṇa-varai,* பெ.(n.) 1. மணிக் கட்டில் வளையல்போல் உள்ள கைவரி வகை; a kind of line below the palm (in the wrist) resembling a bracelet. 2. திருமண வாய்ப்பைக் காட்டுவதாகக் கருதப்படும் கைவரி; a line in the palm indicating marital opportunity.

[கங்கணம் + வரை. வரை = கோடு. கங்கணம் = கங்கணம் கட்டும் முன்கைப்பகுதி.]

கங்கணாரேந்தல் *kaṅgaṇār-ēndal,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanathapuram district.

[கங்கன் + ஆர் + ஏந்தல் - கங்கனாரேந்தல் → கங்கணாரேந்தல். கங்கன் என்பதன் ஆண்பாலீற்று னகரம் ணகரமாகத் திரிந்திருப்பது வழு. 'ஆர்' உ.பன்.ஈறு. ஏந்தல் = ஏரி, கங்கனார் ஏந்தல் = கங்கன் பெயரிலமைந்த ஏரி.]

கங்கணி *kaṅgaṇi,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; name of a village in Rāmanātapuram district.

[கண் + காணி - கண்காணி = மேற்பார்வையாளன், மேற்பார்வையாளன் பெயரிலமைந்த ஓர் ஊர். கண்காணி → கங்காணி → கங்கணி (மரூஉ).]

கங்கபத்திரம் *kaṅga-pattiram,* பெ.(n.) 1. பருந்தினிறகு; kite's feather. *"கங்கபத்திர நன்னீழல்" (இரகு. நாட்டுப்.59).* 2. அம்பு (திவா.); arrow winged with the feathers of a kite or heron.

க. கங்கபத்ர; ம. கங்கபத்ரம்.

[கொங்கு = பறவையின் வளைந்த அலகு, அலகுடைய பறவை. கொங்கு → கொங்க → கங்க + பத்திரம். வ. பத்ர > த. பத்திரம் = இலை, இறகு, இறகுசெருகிய அம்பு. கங்கம் = பருந்து.]

கங்கபாடி *kaṅga-pāḍi*, பெ.(n.) கங்கவரசர் ஆண்ட நாடு; name of the southern part of the Mysore province which was ruled over by the kings of the Ganga dynasty. *'வேங்கை நாடுங் கங்கபாடியும்' (S.I.I.i.94).*

[கங்கர் + பாடி.]

கங்கமரபினர் குவலாளபுரத்தைத் (கோலார்) தலைநகராகக் கொண்டு கங்க நாட்டை (கங்கபாடி) ஆண்டுவந்தனர். கங்கபாடி 96000 என்று கங்கர்களின் செப்பேடுகளில் குறிக்கப்பெற்றுள்ளது. கங்கபாடி என்பது இன்றைய கருநாடக மாநிலத்தின் தென்பகுதி.

கங்கம்[1] *kaṅgam*, பெ.(n.) 1. தீப்பொறி (வின்.); spark of fire. 2. கோளக நஞ்சு (மூ.அ.); a mineral poison.

ம. கங்கில்

[கங்கு = தீ. கங்கு + அம் = கங்கம்.]

கங்கம்[2] *kaṅgam*, பெ.(n.) 1. பருந்து; common kite. *"கங்கவிப்படா நிழலும்" (இரகு.மீட்சி.48).* 2. கழுகு (பிங்.); eagle.

க. கங்க; ம. கங்கம்.

[கொங்கு → கங்கு → கங்கம் (வளைந்த மூக்குடையது.)]

கங்கம்[3] *kaṅgam*, பெ.(n.) சீப்பு (பிங்.); comb.

க. கங்கத.

[கங்கு + அம் - கங்கம். கங்கு = முனை. த. கங்கம் > Skt. kaṅgata.]

கங்கம்[4] *kaṅgam*, பெ.(n.) கங்க அரசமரபினரால் ஆளப்பட்ட தமிழ்நாட்டை அடுத்துள்ள ஒரு நாடு; name of a territory adjoining the Tamil country and ruled over by the Kaṅgar. *கங்க மகதங் கடாரம் (நன்.272.மயிலை.).*

[கங்கை → கங்கம். கங்கபாடி பார்க்க; see kaṅga-pāḍi.]

கங்கம்[5] *kaṅgam*, பெ.(n.) பெருமரம் (யாழ்.அக.); tooth leaved tree of heaven.

[கங்கு = கருப்பு. கங்கு + அம் - கங்கம் = கரிய அடிப்பாகத்தைக் கொண்ட பெருமரம்.]

கங்கம்[6] *kaṅgam*, பெ.(n.) இறப்பு; death (சா.அக.).

[கங்கு = தீ, அனல், நெருப்பு. கங்கு + அம் - கங்கம் = தீப்பட்டு அழிவது போன்ற மறைவு, சாவு.]

கங்கபாளையம் *kaṅga-pāḷaiyam*, பெ.(n.) கோயம்புத்தூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Coimbatore district.

[கங்கன் + பாளையம் - கங்கன் பாளையம் → கங்கம்பாளையம். பாளையம் = படை தங்கிய இடம், பாடிவீடு. கங்கன் பெயரில் அமைந்த ஊர்.]

கங்கமநாய்க்கன்குப்பம் *kaṅgamanāy-k-kaṉ kuppam*, பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Cuddalore district.

[கங்கன் → கங்கமன் + நாயக்கன் + குப்பம் - கங்கமநாயக்கன் குப்பம். தற்போது கங்கணங்குப்பம் என்று வழங்குகிறது.]

கங்கர்[1] *kaṅgar*, பெ.(n.) கருநாடக மாநிலத்தின் குவலாளபுரம் (கோலார்), தலைக்காடு ஆகிய ஊர்களைத் தலைநகராகக் கொண்டு நாடாண்ட அரசமரபினர்; name of a dynasty of kings who formerly ruled over a portion of Karnataka territory with Kolar and Thalaikkadu as their capitals. *''பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்'' (சிலப்.25:157).*

[கங்கை → கங்கர். கங்கைப்பகுதியில் வாழ்ந்த தமிழ் வேளாளர்.]

கங்கமரபினர் பண்டைக்காலத்தில் கி.மு.7ஆம் நூற்றாண்டு வரை கங்கைப்பகுதியில் வாழ்ந்திருந்து பின்னர்த் தென்னாட்டில் பல மாநிலங்களில் குடியேறிக் கங்கமரபினர் என்னும் பெயர் பெற்றனர். தமிழகத்தில் குடியேறியோர் கங்கைக்குல வேளாளர் என்று அழைக்கப்பெற்றனர். கங்கமரபினரான சிற்றரசர் கடைக்கழகக் காலத்திலேயே மறத்திற் சிறந்து பெயர் பெற்றவராயிருந்தனர்.

"நன்ன னேற்றை நறும்பூ ணத்தி
துன்னருங் கடுந்திறற் கங்கன் கட்டி" (அகநா.44).

"பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்" (சிலப்.25:157) எனப் பழைய நூல்கள் கூறுதல் காண்க.

இக்கங்க மரபைச் சேர்ந்தவனே, 12ஆம் நூற்றாண்டில் மூன்றாங் குலோத்துங்க சோழன் காலத்தவனும், 'அமராபரணன்'

'ஸ்ரீமத் குவலாளபுரப் பரமேசுவரன்', 'கங்ககுலோற்பவன்' என்று தன் மெய்க்கீர்த்திகளில் பாராட்டப்பெறுபவனும், பவணந்தி முனிவரைக் கொண்டு நன்னூலை ஆக்குவித்தவனும் ஆகிய சீயகங்கன் என்பவன். (திரவிடத்தாய், பக்.58,59).

கங்கர்[2] *kaṅgar,* பெ.(n.) 1. புக்குவப்படாத சுக்கான்கல்; kankar limestone, an impure concretionary carbonate of lime. 2. பருக்கைக்கல்; gravel.

மறுவ. ஒடைக்கல், சுண்ணாம்புக்கல்.

க. கங்கரெ; ம. கங்கா; தெ. கங்கர; Skt. karkara (hard, firm); Pkt. Kakkara; Mar., Guj. kaṅkara; Beng. kaṅkāra; H. kaṅkār.

[கொங்கு = கூர், கூர்முனை. கொங்கு → கங்கு + அல் - கங்கல் → கங்கர். கங்கர் = கூர் முனை அல்லது விளிம்பு கொண்ட கல்வகை. சாம்பல் → சாம்பர் என்றாற் போன்று 'கங்கல் → கங்கர்' என ஈற்றுப் போலியாயிற்று.]

கங்கரம் *kaṅgaram,* பெ.(n.) மோர் (யாழ்.அக.); butter-milk.

[கங்கு → கங்கல் → கங்கலம் → கங்கரம் = மெலிவு, இளக்கம், இளக்கமான மோர். த. கங்கலம் > வ. கங்கரம்.]

கங்கல்[1] *kaṅgal,* பெ.(n.) துண்டுக்கயிறு; a short rope. தண்ணீர் மட்டம் இறங்கிவிட்டது; தாம்புக் கயிற்றுடன் ஒரு கங்கலைச் சேர்த்துக்கொள் (உ.வ.).

[கங்கு → கங்கல், கங்கு = ஓரம், விளிம்பு, சிறியது.]

மீன்பிடிவலையின் அடிப்பகுதி கடலடித்தரையில் படியாத நிலையில் கங்கல் சேர்த்து அவ் வலையைத் தரைவரை எட்டச்செய்வது நெல்லை மீனவர் வழக்கு.

மாட்டைக் கட்டி மேய்க்கும் பொழுது கயிற்றின் நீளத்தைத் தான் விரும்பும் எல்லைவரை எட்டச்செய்யக் கங்கல் இணைத்து மேயச்செய்வது வேளாளர் வழக்கு.

கிணற்றிலிருந்து நீரிறைக்கும் பொழுது நீர் இருக்கும் எல்லையைக் கயிறு எட்டாத நிலையில் அதனுடன் கங்கல் இணைத்து நீரிறைப்பது உலக வழக்கு. இதுபோல் பல்லாற்றானும் கயிற்றின் நீளத்தை நீட்டிக்கக் கங்கல் (துண்டுக் கயிறு) பயன்படுமாற்றைக் காண்க.

கங்கல்[2] *kaṅgal,* பெ.(n.) மாலை மயங்கிய இருள் அல்லது வைகறை; dusk or dawn.

[கங்குல் → கங்கல் = கருக்கல், இருட்டான விடியற்காலை.]

கங்கல்கருக்கல் *kaṅgal-karukkal,* பெ.(n.) எற்பாடும் வைகறையும்; dusk and dawn.

[கங்கல் + கருக்கல். கங்குல் → கங்கல் = மாலைப்பொழுது, இரவு. கருக்கல் = காலை இருள். கங்கல்கருக்கல் - எதுகைநோக்கி வந்த மரபிணைமொழி.]

கங்கலப்பம்பாளையம் *kaṅgalappam-pāḷaiyam,* பெ.(n.) கோயம்புத்தூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Coimbatore district.

[கங்கல் + அப்பன் + பாளையம். கங்கலப்பன் பாளையம் → கங்கலப்பம் பாளையம். 'அப்பன்' என்பதன் ஈற்று னகரம் மகரமாகத் திரிந்தது. கங்கல் ஊரினனாகிய கங்கலப்பனின் பெயரிலமைந்த ஊராகலாம்.]

கங்கலி *kaṅgali,* பெ.(n.) பருந்து வகை; a kind of kite (சா.அக.).

[கங்கு → கங்கல் → கங்கலி = சிறிய பருந்துவகை.]

கங்கலி

கங்கவரம் *kaṅgavaram,* பெ.(n.) விழுப்புரம் வட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram district.

[கங்கன் + புரம் - கங்கபுரம் → கங்கவரம். புரம் என்னும் இடப்பெயரீறு வரம் எனத் திரிந்தது.]

கங்கவள்ளி *kaṅgavaḷḷi,* பெ.(n.) சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் உள்ள ஊர்; a village in Attur taluk in Salem district.

[கங்கன் + பள்ளி - கங்கன்பள்ளி → கங்கன்அள்ளி →கங்கவள்ளி. த. பள்ளி > க. அள்ளி. பள்ளி = சிற்றூர்.]

கங்களன் *kaṅgaḷaṉ,* பெ.(n.) பார்வையிழந்தவன், குருடன் (கருநா.); blind man.

க. கங்கள

[கண் + (களை) கள + அன்.]

கங்கன்[1] *kaṅgaṉ*, பெ.(n.) சீயகங்கன் (நன். சிறப்புப். மயிலை.); a chief of the ancient Tamil country.

[கங்கம் → கங்கன் (கங்க நாட்டினன், கங்கமரபினன்).]

கங்கன்[2] *kaṅgaṉ*, பெ.(n.) சீர்பந்த செய்நஞ்சு; a mineral poison (சா.அக.).

[கங்கு → கங்கன் (தீப்போல் கொல்லும் தன்மையது).]

கங்கன்குளம் *kaṅgaṉ-kuḷam*, பெ.(n.) தூத்துக்குடி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tuttukkudi district.

[கங்கன் + குளம் - கங்கன்குளம். கங்கன் பெயரிலமைந்த சிற்றூர்.]

கங்கனூர் *kaṅgaṉūr*, பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharumapuri district.

[கங்கன் + ஊர் - கங்கனூர். கங்கன் பெயரிலமைந்த சிற்றூர்.]

கங்காணம் *kaṅgāṇam*, பெ.(n.) **கண்காணம்** பார்க்க; see *kaṇgāṇam*.

ம. கங்காணம்

[கண்காணம் → கங்காணம்.]

கங்காணி[1] *kaṅgāṇi*, பெ.(n.) 1. சிற்றூர் ஆட்சி அலுவலரின் பணியாளர்; the menial of the village administrator. 2. ஊரிலுள்ள விளைநிலங்களின் எல்லையறிந்தவன்; one who knows the topography of a village.

[கங்கு + காணி. கங்கு = எல்லை, ஓரம், விளிம்பு. காணி = மேற்பார்ப்பவன்.]

கங்காணி[2] *kaṅgāṇi*, பெ.(n.) **கண்காணி** பார்க்க; see *kaṇkāṇi*. *'திருமாகேசுவரக் கங்காணி' (S.I.I.iii.43).*

ம. கங்காணி

[கண் + காணி - கண்காணி → கங்காணி.]

கங்காபுரம்[1] *kaṅgā-puram*, பெ.(n.) **கங்கைகொண்ட சோழபுரம்** பார்க்க; see *kaṅgai-koṇḍa-cōḻa-puram*. *குளிர்பொழில்சூழ் கங்காபுர மாளிகை (தண்டி.95,14 உரை).*

[கங்கை + கொண்ட + சோழபுரம் - கங்கை கொண்ட சோழபுரம் → கங்காபுரம் (மரூஉ).]

கங்காபுரம்[2] *kaṅgā-puram*, பெ.(n.) ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டத்துச்சிற்றூர்; a village in Erode taluk in Erode district.

[கங்கன் + புரம் - கங்கன்புரம் → கங்காபுரம். கங்கன் பெயரிலமைந்த சிற்றூர்.]

கங்காமணியம்மாள் *kaṅgāmaṇi-y-ammāḷ*, பெ.(n.) மீனவர் வணங்கும் பெண்தெய்வம் (செங்கை மீனவ.); a Goddess worshipped by the fishermen.

[கங்கை + மணி + அம்மாள்.]

கங்காரு *kaṅgāru*, பெ.(n.) தாவிச்செல்வதற்கேதுவாய் நீண்ட பின்னங்கால்களையும் குட்டையான முன்னங்கால்களையும் உடைய, உருவில் பெரிய ஆத்திரேலியப் புல்லுண்ணி விலங்கு; a large Australian herbivorous marsupial (family Macropoclidal) with short forelimbs, very long hindlegs and great leaping power, kangaroo.

ம. கங்கரு

[காண்கு + அருது - காண்கருது → காண்கரு → கங்காரு எனத் திரிந்த திரிபாகலாம். இன்றும் கொங்கு நாட்டுப்புறவழக்கில் நான் பார்க்கவில்லை என்பதை நான் காங்கலெ எனக் குறிப்பிடுவதைக் கேட்கலாம்.]

கங்காரு

கங்காரு என்னும் சொல் ஆத்திரேலியப் பழங்குடிகளின் மொழியில் 'தெரியாது' எனப் பொருள்படும். அவர்கள் தமக்குத் தெரியாது எனச் சொல்லிய சொல்லையே இவ் விலங்குக்குப் பெயராகத் தவறுதலாகச் சூட்டியதால் அதுவே பெயராக நிலைபேறடைந்தது என்பர். ஆத்திரேலியப் பழங்குடிகளின் மொழிகள் தமிழொடு தொடர்புடையன என ஆய்வாளர் J.C. Prichard - 1847 and Cold well - 1856 பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுவிலேயே கண்டறிந்துள்ளனர்.

"All Australian oborigines are supposed to be descended from Dravidians who migrated about 15,000 years ago from India and Ceylon" - Doglas Lockwood. "We the Aborigines", Cassels, Australia, 1963.

"Only the Dravidian suggestion deserves to be taken at all seriously" [as regards the affinity of Australian Languages] - R.M.W. Dixon: "The Languages of Australia", Cambridge University Press, 1980.

கங்காள் *kaṅgāḷ,* பெ.(n.) மெலிவு, வலுவின்மை; weak, feeble.

க. கங்காடு

[கங்காளம் → கங்காள்.]

கங்காளம்[1] *kaṅgāḷam,* பெ.(n.) பித்தளை அல்லது வெண்கலத்தாலான ஏனம்; large metal vessel generally of brass or bronze for holding water etc.

ம. கங்ஙானம் (சமைக்கப் பயன்படுத்தும் ஏனம்); க. கங்காள; தெ. கங்காளமு.

[கொங்கு → கங்கு → கங்காளம் = வட்டமான பெரிய ஏனம்.]

கங்காளம்[2] *kaṅgāḷam,* பெ.(n.) 1. தசைகிழிந்த உடலின் எலும்புக்கூடு (திவா.); skeleton. 2. பிணம்; dead body.

ம. கங்காளம்

[கங்காளம்[1] → கங்காளம்[2]. கங்காளம் = பெரிய ஏனம். உடம்பை ஒரு மட்பாண்டத்திற்கு ஒப்பிடுதலின் உடலையும் எலும்பையும் குறித்தது. த. கங்காளம் > Skt. kaṅkāla (skeleton)]

கங்காளமாலி *kaṅgāḷa-māli,* பெ.(n.) எலும்புமாலை அணிந்த சிவன்; Śivā who wears garland of bones.

ம. கங்காளமாலி; *Skt. kaṅkālamālin*

[கங்காளம்[2] + மாலி. மாலையாகக் கொண்டவன் மாலி. 'இ' உடைமை ஈறு.]

கங்காளமூலி *kaṅgāḷa-mūli,* பெ.(n.) சிவகரந்தை (கரந்தையில் ஒருவகை); Ceylon toolsy.

[கங்காளன் + மூலி. மூலி = மூலிகை.]

கங்காளன்[1] *kaṅgāḷaṉ,* பெ.(n.) சிவன்; Śivā.

[கங்காளம்[2] → கங்காளன்.]

கங்காளன்[2] *kaṅgāḷaṉ,* பெ.(n.) துருசு; blue vitriol; copper - sulphate.

[கங்கு[2] → கங்காள் → கங்காளன்.]

கங்காளி[1] *kaṅgāḷi,* பெ.(n.) 1. மாகாளி (பிங்.); Kāḷi being the consort of Kaṅgāḷaṉ. 2. மலைமகள்; Pārvatī. *"மலைமாது கங்காளி" (மறைசை.17).*

ம. கங்காளி

[கங்காளன் → கங்காளி = எலும்பு மாலை அணிந்த (சிவன்) கங்காளன் மனைவி. த. கங்காளி > Skt. kaṅkāli.]

கங்காளி[2] *kaṅgāḷi,* பெ.(n.) 1. ஏழை; poor. 2. இரவலன்; miserable person, begger.

க. கங்காலி; தெ. கங்காளி; Skt. kaṅkāla (Sekeleton); Beng., Nep. kaṅgāl; Ori., Pkt. kaṅgāla; Persn. kangālah (whore monger, miser); U. kaṅgāḷ; Mar., H. kaṅgāli.

[அங்கம் = எலும்பு. அங்கம் → கங்கம் + ஆளி கங்காளி (எலும்புமாலை அணிந்தவன்). எலும்புமாலை அணிந்த சிவன். இரந்துண்பவன் என்னும் பொருளில் இச்சொல் இரவலனையும் ஏழையையும் குறித்தது.]

கங்கான் *kaṅgāṉ,* பெ.(n.) எலும்பும் தோலுமாய் மெலிந்தவன்; a skeleton like person.

[கங்காளம் (எலும்பு) → கங்காளன் → கங்கான்.]

கங்கில்[1] *kaṅgil,* பெ.(n.) 1. காளம் என்னுங் குழலிசைக் கருவியின் உறுப்புகளுளொன்று; a part of the trumpet. *'கங்கில் ஒன்றும் குழல் இரண்டும் மோதிரம் ஐஞ்சும் உடைய பொன்னின் காளங்கள்' (S.I.I.ii,5).* 2. விளக்குத்திரியின் கரிந்த பகுதி; burnt part of the wick in a lamp.

ம. கங்கில்

[கங்கு → கங்கில் = குழலில் தீச்சுட்ட பகுதி; காளத்தின் துளைப்பகுதி.]

கங்கில்[2] *kaṅgil,* பெ.(n.) மீன்பிடிவலை மிதக்க உதவும் மரக்கட்டைகளை வலையோடு சேர்த்துக் கட்டும் கயிறு; cord used for tieing pieces of wooden blocks in fishing nets (சேரநா.).

[கங்கல் → கங்கில். கங்கல் = துண்டுக்கயிறு.]

கங்கு[1] *kaṅgu,* பெ.(n.) 1. எல்லை (ஈடு,5.4;7); limit, border. *"எம்மோராக்கக் கங்குண்டே" (புறநா.396:25).* 2. வயல்வரப்பு; ridge to retain water in paddy fields.

"கங்குபயில் வயல்" (சேதுபு. திருநாட்.66). 3. வரப்பின் பக்கம் (திவா.); side of a bank or ridge. கசியும் நீரைத் தடுக்கக் கங்கு மண்ணை வெட்டிப்போடு (உ.வ). 4. அணை; dam. *"கங்குங் கரையுமறப் பெருகுகிற"* (திவ்.திருப்பா.8, வியா, 108). 5. வரிசை; row, regular order. *"கங்குகங்காய் முனைதரப் பொங்கி"* (இராமநா. ஆரணி.14). 6. பனைமட்டையின் அடிப்புறம் (யாழ்ப்.); base of palmyra stem. பனைமரத்தில் ஏறினால் கங்கு கையைக் கிழிக்கும் (உ.வ.).

ம. கங்கு; கோத. கக்.

[கள் = துண்டு, சிறிது. கள் → கங்கு = சிறிதாக, முனையாக இருக்கும் ஓரம், விளிம்பு.]

கங்கு[2] *kangu,* பெ.(n.) 1. தீப்பொறி, கனல்துண்டு; cinder, glowing coal. அடுப்புக்கங்கை முழுவதுமாய் அணைத்துவிடு (உ.வ.). 2. அம்மைநோய்; a kind of smallpox.

ம. கங்கில், கங்கல், கங்ஙில். (விளக்குத் திரியின் எரிந்த பகுதி.)

[காங்கு → கங்கு (வே.க.186).]

கங்கு[3] *kangu,* பெ.(n.) துண்டு; shred, piece. சீலை கங்குகங்காய்க் கிழிந்துபோயிற்று (உ.வ.).

[கள் → கங்கு. கள் = சிறியது, துண்டு.]

கங்கு[4] *kangu,* பெ.(n.) 1. கழுகு; eagle. *"நரிகள் கங்கு காகம்"* (திருப்பு.120). 2. பருந்து (சூடா.); kite.

[கொங்கு → கங்கு. கொங்கு = வளைந்த அலகு, வளைந்த அலகுடைய பறவை. த. கங்கு > Skt. kanka.]

கங்கு[5] *kangu,* பெ.(n.) 1. கருப்பு; black. 2. கருந்தினை(பிங்.); black Italian millet. 3. கருஞ் சோளம்; black jowar. மாட்டுக்குத் தீனியாகு மென்று கங்கு விதைத்துள்ளேன் (உ.வ.).

ம. கங்கு; க. கங்கள (குருடன்).

[கள் = கருப்பு. கள் → (கண்) → (கண்கு) → கங்கு = கருந்தினை (வே.க.124.) த. கங்கு > Skt. kangu.]

கங்கு[6] *kangu,* பெ.(n.) சினம், சீற்றம்; anger. சண்டைக்குப் பின்னும் கங்கு மனத்தில் பதிந்துள்ளது (உ.வ.).

க. கங்கு, கங்காரு, கங்காலு.

[காங்கை → காங்கு → கங்கு. காங்கை = அனல், வெப்பம், அனல்போன்ற சீற்றம்.]

கங்கு[7] *kangu,* பெ.(n.) 1. வரகு போன்றவற்றின் உமி; husk, as of millet. 2. கம்புபோன்ற பயிர்களின் கதிர்; ear of grain. கம்பு கங்கு விட்டுள்ளது (உ.வ.).

க. கங்கு, கங்கி; தெ. கங்கி (துவசக் கதிர்.).

[கொங்கு → கங்கு.]

கங்குக்கூடு *kangu-k-kūdu,* பெ.(n.) தச்சுக் கருவி வகை; carpenter's instrument.

மறுவ: வருவு (வரைவு).

[கங்கு + கூடு. கங்கு = கூரிய விளிம்பு. கங்குக்கூடு = கூரிய விளிம்புள்ள அலகு கொண்ட தச்சுக்கருவி. பலகையை இழைப்பதற்கும், குறைப்பதற்கும் தேவையான அளவைக் கோடிட்டுக் காட்டப் பயன்படும் கருவி.]



கங்குக் கூடு

கங்குகரை *kangu-karai,* பெ.(n.) 1. வரம்பு, எல்லை; bank, shore, limit. *"கங்குகரை காணாத கடலே"* (தாயுமான.1). 2. எண்ணிக்கை; number.

[கங்கு + கரை. கங்கு, கரை என்னும் இரு சொற்களும் ஒரு பொருளைக் குறித்து நின்ற இணைமொழி. கங்கு = நிலத்தின் எல்லை, வரம்பு. கரை = நீர்நிலையின் எல்லை, வரம்பு.]

கங்குட்டம் *kanguttam,* பெ.(n.) 1. ஒருவகைக் காவி. இது 64 கடைச் சரக்குகளுள் ஒன்று; a kind of Indian red earth. It forms one of the 64 bazaar drugs described in Tamil medicine. 2. மிருதாறுசிங்கு எனும் நஞ்சுவகை; a kind of poison from lead (சா.அக.).

[கங்கு = கருமை. கங்குள் → கங்குடு → கங்குட்டம்.]

கங்குணம் *kaṅguṇam,* பெ.(n.) நான்முகப் புல்; a kind of grass which has four edges.

[கங்கு = விளிம்பு, பக்கம். கங்கு → கங்குணம்.]

கங்குணி *kṅguṇi,* பெ.(n.) **கங்குளி** பார்க்க; see *kaṅguḷi.*

[கங்குளி → கங்குணி.]

கங்குநோய் *kaṅgu-nōy,* பெ.(n.) கொப்புளநோய் வகையில் ஒன்று (சீவரட்.144); small blisters on the skin, resembling grains of millet.

[காங்கு → கங்கு + நோய்.]

கங்குப்பலா *kaṅgu-p-palā,* பெ.(n.) காட்டுப் பலா; jungle jack (சா.அக.).

[காங்கு = வெப்பம், கானல். காங்கு → கங்கு + பலா.]

கங்குப்பனை *kaṅgu-p-paṉai,* பெ.(n.) 1. அடியிற் கருக்குச் சூழ்ந்த பனை (யாழ்ப்.); rough palmyra tree that is difficult to climb. 2. அடுக்குப்பனை; a species of palm tree. (சா.அக.)

[கங்கு¹ + பனை.]

கங்குமட்டை *kaṅgu-maṭṭai,* பெ.(n.) பனையின் அடிக்கருக்கு (வின்.); base of a palmyra leaf-stalk encircling the tree.

[கங்கு¹ + மட்டை.]

கங்குர் *kaṅgur,* பெ.(n.) தினை; millet (சா.அக.).

[கங்கு⁵ → கங்குர்.]

கங்குரு *kaṅguru,* பெ.(n.) கண்கட்டி; sty in the eye.

ம. கங்குரு

[கண் + குரு - கண்குரு → கங்குரு.]

கங்குல்¹ *kaṅgul,* பெ.(n.) 1. இரவு; night. *"நள்ளென் கங்குலும் வருமரோ" (நற்.145:10).* 2. இருட்டு; darkness. 3. தாழி (பரணி) நாண்மீன் (வின்.); the second star.

[கங்கு⁵ → கங்குல் = கரிய இரவு, இருட்டு.]

கங்குல்² *kaṅgul,* பெ.(n.) எல்லை (சங்.அக.); ridge, boundary.

[கங்கு¹ → கங்குல்.]

கங்குல்வாணர் *kaṅgul-vāṇar,* பெ.(n.) 1. இரவில் விலங்குகளை வேட்டையாடுவோர்; those who go for hunting during night hours. 2. இரவில் திரியும் அரக்கர்; Rakṣasās, as those who usually carry on their activities during the night time. *"கங்குல் வாணர்தங் கடனிறப்பதே" (பாரத.வேத்திர.11).*

[கங்குல்¹ + வாழ்நர். வாழ்நர் → வாணர்.]

கங்குல்விழிப்பு *kaṅgul-viḻippu,* பெ.(n.) 1. கூகை (யாழ்.அக.); rock horned-owl. 2. கோட்டான்; the small screech-owl (சா.அக.).

[கங்குல்¹ + விழிப்பு (= இரவில் விழித்திருப்பது).]

கங்குல்வெள்ளத்தார் *kaṅgul-veḷḷattār,* பெ.(n.) குறுந் தொகை 387ஆம் பாடல் ஆசிரியர்; author of verse 387 of *Kuṟundogai.*

[கங்குல் + வெள்ளத்தார். கங்குல்வெள்ளம் என்ற தொடரால் பெற்ற பெயர்.]

பிரிவிடை வருந்திய தலைவி, செயலறுதற்குரிய மாலைக் காலத்தையும் ஒருவாறு நீந்துவோம்; ஆயின் நீந்திக் கரைகாண இயலாததாக இரவு இருக்கிறது, என்று துன்பப்படுவதாக இரவை வெள்ளமாக உருவகப்படுத்திக் கங்குல்வெள்ளம் என்ற தொடரை நயம்படப் பெய்துள்ளார். கங்குல் = இரவு.

கங்குவடலி *kaṅgu-vaḍali,* பெ.(n.) அடிக்கருக்குள்ள மட்டைகள் சூழ்ந்த இளம் பனைமரம்; young palmyra with the dried leaves still adhering to its trunk (சா.அக.).

[கங்கு¹ + வடலி.]

கங்குழ் *kaṅguḻ,* பெ.(n.) கைக்குழி; the arm pit (கருநா.).

க. கங்குழ், கங்குழ, கங்குழு, கவுங்குழ், கொங்கழ், கொங்கழ; து. கங்குள; தெ. சங்கெ, சங்கிலி; பட. கக்குவ.

[அக்குள் → கக்குள் → கங்குள் → கங்குழ்.]

கங்குளி *kaṅguḷi,* பெ.(n.) சிறுவாலுளுவையரிசி; the seed of the spindle tree (சா.அக.).

[கங்கு → கங்குளி. கங்கு = கூர்மை.]

கங்குற்கிறை *kaṅguṟkiṟai,* பெ.(n.) 1. திங்கள் விரும்பி (சந்திரகாந்தி); moon flower. 2. திங்கள் (சா.அக.); the Moon.

[கங்குல்¹ + இறை (தலைவன்).]

கங்குற்சிறை *kaṅguṟ-ciṟai,* பெ.(n.) இராக்காவல் (வின்.); watch or guard kept during night.

[கங்குல்[1] + சிறை.]

கங்குனி *kaṅguṉi,* பெ.(n.) வாலுளுவை மரம்; intellect tree (சா.அக.).

[கங்குளி → கங்குனி.]

கங்குனிறம் *kaṅguṉiṟam,* பெ.(n.) கறுப்பு நிறம்; black colour.

[கங்குல் + நிறம். கங்கு → கங்குல் = கரிய இரவு, கருமை நிறம்.]

கங்கை *kaṅgai,* பெ.(n.) 1. நீர்; water. கங்கை தூவி (மேகம்) (யாழ்.அக.) 2. ஆற்றைக் குறிக்கும் பொதுப்பெயர்; river. *"உவரிமிசைக் கங்கைகள் வந்தெய்தும்" (கந்தபு.தாரக.37).* 3. பனிமலை (இமய மலை)யில் கங்கோத்திரி என்னுமிடத்தில் தோன்றி வங்கக்கடலில் கலக்கும் ஆறு; the river which orginates at Gangotri of Himalyan mountain and ends at Bay of Bengal, river Ganges. *"மன்பதை யெல்லாம் சென்றுணக் கங்கைக் கரைபொரு மலிநீர்" (புறநா.161:6).*

ம. கங்க; க. கங்கெ; **Skt., Nep.** gaṅgā.

[அம் = நீர். அம் → கம் + கை = கங்கை. கை - சொல்லாக்க ஈறு.]

நீரைக் குறித்த சிறப்புப் பெயர், ஆற்றுப் பொதுவிற்கும், வெள்ளம் பெருக்கெடுத்தோடும் ஆற்றுக்கும், கங்கைக்கும் ஆகிவந்துள்ளது.

ஒ.நோ. கம் = நீர். கம் + அம் - கம்மம் (நன்செய் உழவுத்தொழில்). கம் என்னும் நீரைக் குறித்த சொல் 'அம்' ஈறு பெற்று உழவுத்தொழிலைக் குறித்தது போல, இச் சொல் 'கை' ஈறு பெற்றுக் கம் + கை - கங்கை எனத் திரிந்து நீர்ப்பெருக்கான ஆற்றையும் நீர்நிலையையும் சுட்டியது.

கங்கை என்பதற்கு வடமொழியில் 'கம்' (gam) என்னும் வேர்ச்சொல்லைக் காட்டி, விரைந்து செல்வது (swift goer) என்று மானியர் வில்லியம்சு காரணம் காட்டியிருப்பது பொருந்தாது. எல்லா ஆறுகளும் விரைந்து செல்வனவே.

கங்கை என்பதற்கு நீர் என்னும் பொருளும் வடமொழியில் இல்லை. கங்கை தூவி (மேகம்), கங்கை சாற்றி (மணித்தக்காளி), கங்கைப்பாலிலை (கள்ளி) போன்ற சொற்களில் கங்கை, நீர் என்னும் பொருளில் ஆளப்பட்டிருத்தல் காண்க.]

கங்கைக்குளியல் *kaṅgai-k-kuḷiyal,* பெ.(n.) 1. கங்கையில் குளித்த பலனை அடைவதற்குச் செய்யும் கொடை; gift to obtain the spiritual benefit of a bath in the Ganges. 2. விளக்கணிவிழா (தீபாவளி)அன்று செய்யும் எண்ணெய்க் குளியல்; oil bath on the Deepavali day.

[கங்கை + குளியல்.]

கங்கைகுலம் *kaṅgai-kulam,* பெ.(n.) கங்கைச் சமவெளியிலிருந்து வந்து குடியேறியதாகக் கூறப்படும் வேளாளர்குலம்; the Vēlāla tribe, who claim to have migrated from the Gangetic region.

[கங்கை + குலம் - கங்கைகுலம். கங்கைச் சமவெளியிலிருந்து தென்னாடு நோக்கி வந்தவராகக் கங்கை குல வேளாளர் கருதப்படினும், தமிழ்நாட்டிலிருந்து வடநாடு முழுவதும் பரவி வாழ்ந்து காலப்போக்கில் தென்னகம் திரும்பிய ஒருசாரார் என்பதே இதன் பொருள்.]

கங்கைகொண்டசோழச்சேரி *kaṅgai-koṇḍa-cōḻaccēri,* பெ.(n.) இலால்குடி வட்டம் ஆலம்பாக்கம் அருகிலிருந்த ஒரூர்; a village near Alambakkam near Lalgudi. "ஸ்ரீ கங்கை கொண்ட சோழ சேரி சிறு கொட்டையூர் தத்தந்" (தெ.இ.கல்.தொ.26. கல்.769).

[கங்கை + கொண்ட + சோழன் + சேரி.]

கங்கைகொண்டசோழபுரம் *kaṅgai-koṇḍa-cōḻa-puram,* பெ.(n.) முதலாம் இராசேந்திர சோழன் காலத்திருந்து சோழமன்னர்களின் தலைநகராகத் திகழ்ந்ததும் உடையார்பாளையத்திலிருந்து பத்துக்கல் தொலைவிலமைந்ததுமான ஓர் ஊர்; capital of the Chola kings from the time of Rajendra-I, a town about ten miles from Uḍaiyār-pāḷaiyam.

[கங்கை + கொண்ட + சோழன் + புரம்.]

கங்கைப்பகுதியை வென்றதால் இராசேந்திர சோழனுக்குக் கங்கைகொண்ட சோழன் என்னும் சிறப்புப் பெயரமைந்தது. அவனால் நிறுவப்பட்ட கோநகரம் கங்கை கொண்ட சோழபுரம்.

கங்கைகொண்டசோழன் *kaṅgai-koṇḍa-cōḻaṉ,* பெ.(n.) முதலாம் இராசேந்திரசோழன் (கலிங்.223); Rajendra I, (1012-44) a Cōḻa king, who conquered the Gangetic region.

[கங்கை + கொண்ட + சோழன்.]

கங்கை வரை படையெடுத்து வென்றவனாதலின் இப் பெயர் பெற்றான். இவனைத் தென்னாட்டு நெப்போலியன் என்றும் வரலாற்று ஆசிரியர் சிறப்பித்துக் கூறுவர்.

கங்கைகொண்டான் *kaṅgai-koṇḍāṉ*, பெ.(n.) **கங்கைகொண்ட சோழபுரம்** பார்க்க; see *kaṅgai-koṇḍa-cōḻa-puram.*

[கங்கை கொண்ட சோழபுரம் → கங்கை கொண்டான்.]

கங்கைசாற்றி *kaṅgai-šāṟṟi*, பெ.(n.) மணித்தக்காளி (சா.அக.); black night shade.

[கங்கை + சாற்றி. கங்கை = நீர், நீராா்ந்த பழம்.]

கங்கைதூவி *kaṅgai-tūvi*, பெ.(n.) முகில் (யாழ்.அக.); cloud.

[அம் = நீர். அம் → கம். கம் + கை - கங்கை = நீர், நீர்த்திரள், வெள்ளம். கங்கை + தூவி. தூவு → தூவி.]

கங்கைப்பாலிலை *kaṅgai-p-pālilai*, பெ.(n.) சதுரக்கள்ளி; square spurge (சா.அக.).

[கங்கை + பாலிலை = வெண்ணிறப் பாலினைக் கொண்டது.]

கங்கைமகன் *kaṅgai-magaṉ*, பெ.(n.) 1. முருகன்; Murugan. 2. வீடுமன்; Bīṣmā.

மறுவ: கங்கை மைந்தன்.

[கங்கை + மகன். கங்கை = கங்கையாறு, கங்கைத்தேவி.]

கங்கைமாத்திரர் *kaṅgai-māttirar*, பெ.(n.) உத்தி பிரித்துச் சிறுவர் ஆடும் விளையாட்டில் ஒருசாரார்க்கு வழங்கிய பெயர் (தொல்.சொல்.165, சேனா.); name given to one of two groups in a boy's game of ancient times.

[கங்கை + மாத்திரர். மாத்திரம் → மாத்திரர். மாத்தல் = அளவிடுதல், திறமையுடையவராதல்.]

கங்கைமாத்திரர் = கங்கையை அளவிடுபவர். மக்களால் அளவிடற்கரிய கங்கையினையும் அளவிட்டறியும் ஆற்றலுடையார் என்பதை விளக்க, கங்கை மாத்திரர் என்றார் (சேனாவரையர்). இப் பெயர்கள் (பட்டிபுத்திரர், கங்கைமாத்திரர்) பண்டைக்காலத்துச் சிறார் விளையாடுங் காலத்துப் படைத்திட்டுக் கொண்ட பெயராம்.

இக்காலத்தும் பலர் குழுமித் தம்மிற் கூடி விளையாடல் குறித்த போழ்தத்து அம் மகாரில் இருவர் தலைவராக நிற்க ஏனையோர் இருவர் இருவராகப் பிரிந்து தனியிடஞ் சென்று தம்மிற் பெயர் புனைந்து தலைவர்களை யண்மிக் 'காற்றைக் கலசத்திலடைத்தவன் ஒருவன்', 'கடலைக் கையால் நீந்தினவன் ஒருவன்' இருவருள் நுமக்கு யாவன் வேண்டுமெனவும் 'வானத்தை வில்லாக வளைத்தவன் ஒருவன்' 'ஆற்று மணலைக் கயிறாகத் திரித்தவனொருவன்' இவருள் யாவன் நுமக்கு வேண்டுமெனவும் வினவுவர். அத் தலைவர்கள் இன்னின்னார் வேண்டுமென, அவர்கள் பகுதியிற் சேர்ந்து ஆடலியற்றுவர் என்க. ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'இளந்துணை மகார் தம்மிற் கூடி விளையாடல் குறித்த பொழுதைக்குப் படைத்திட்டுக் கொண்ட பெயர். அவை பட்டிபுத்திரர், கங்கைமாத்திரர்' என்றதனாலும் இது நன்கு விளங்கும். (பாவாணர். தொல்.சொல்.165, அடிக்குறிப்பு.).

கங்கைமீட்டான் *kaṅgai-mīṭṭāṉ*, பெ.(n.) தண்ணீர்விட்டான் கிழங்கு; water-root (சா.அக.).

[கங்கை + மீட்டான். கங்கை = தண்ணீர்.]

கங்கைமைந்தன் *kaṅgai-maindaṉ*, பெ.(n.) **கங்கைமகன்** பார்க்க; see *kaṅgai-magaṉ.*

[கங்கை + மைந்தன் (மகன்).]

கங்கையம்மன் *kaṅgai-y-ammaṉ*, பெ.(n.) சிற்றூர்ப் பெண்தெய்வம்; female village deity.

[கங்கை + அம்மன்.]

ஆற்றினைப் பெண்ணாக உருவகிக்கும் மரபினடிப்படையில் கங்கையம்மன் என்னும் தெய்வப் பெயர் உண்டாயிற்று.

கங்கையான் *kaṅgaiyāṉ*, பெ.(n.) கங்கையாற்றை முடியில் கொண்டவனாகக் கருதப்படும் சிவன்; Šivā, who is believed to be adorned with the river Ganga on his tuft.

[கங்கை + ஆன்.]

கங்கையோன் *kaṅgaiyōṉ*, பெ.(n.) துருசு; blue vitriol (சா.அக.).

[கங்கு² → கங்கை → கங்கையோன்.]

கங்கைவேணியன் *kaṅgai-vēṇiyaṉ*, பெ.(n.) சிவன்; Šivā.

[கங்கை + வேணியன். வேணி = சடை.]

கங்கொளி *kaṅgoḷi*, பெ.(n.) இருட்டில் ஒளிரும் மரம் (அசோகு); a tree shining in darkness, luminous tree (சா.அக.).

[கங்குல் + ஒளி - கங்குல்ஒளி → கங்கொளி. கங்குல் = இருள். கங்கொளி = இருளில் ஒளிர்வது.]

கங்கோலம் *kaṅgōlam*, பெ.(n.) வால்மிளகு; tail pepper (சா.அக.).

[கொங்கு + வாளம் → கொங்குவாளம் (வளைந்து நீண்டது) → கங்கோலம் (கொ.வ.)]

கங்கோலை *kaṅgōlai*, பெ.(n.) தென்னை மட்டையின் அடியோலை (தஞ்சை); short leaves on the stalk of a coconut leaf. கங்கோலை வாருகோல் நன்கு உழைக்கும்.

[கங்கு + ஓலை. கங்கு = விளிம்பு.]

கச்சக்கட்டைமரம் *kacca-k-kaṭṭai-maram*, பெ.(n.) சின்னாஞ்சிமரம்; crape myrtle.

[கச்சல் + கட்டை + மரம்.]

கச்சக்கடாய் *kacca-k-kaḍāy*, பெ.(n.) ஆமையோடு; the shell of a tortoise.

த. கச்சம் > Skt. kacchapaka (tortoise).

[கச்சம் + கடாய். கடாய் = வாயகன்ற மட்கலம். கச்சம் = ஆமை. கச்சம்[9] பார்க்க; see kaccam[9]]

கச்சக்கயிறு *kacca-k-kayiṟu*, பெ.(n.) 1. யானையின் கழுத்தில் கட்டும் பட்டைக் கயிறு; rope tied round the neck of an elephant. 2. யானையின் வயிற்றைச் சுற்றிக் கட்டும் கயிறு; elephant's girth (சேரநா.).

ம. கச்சக்கயறு

[கச்சு[2] + கயிறு.]

கச்சக்குமிட்டி *kacca-k-kumiṭṭi*, பெ.(n.) 1. தலை விரித்தான் செடி, ஒருவகைக் கொம்மட்டி; a kind of bitter plant. 2. பேய்க்கொம்மட்டி; wild gourd (சா.அக.).

[கச்சல்[1] + குமிட்டி. கொம்மட்டி → குமிட்டி.]

கச்சக்குறிஞ்சான் *kacca-k-kuṟiñjāṉ*, பெ.(n.) கசப்புக் குறிஞ்சான்; a plant (சா.அக.).

[கச்சல்[1] + குறிஞ்சான்.]

கச்சக்கோரை *kacca-k-kōrai*, பெ.(n.) உப்பங்கோரை; a sedge that grows only by the side of salt marshes (சா.அக.).

[கச்சல்[2] + கோரை. கச்சல் = சிறுமை, மென்மை.]

கச்சகம்[1] *kaccagam*, பெ.(n.) குரங்கு; monkey (சா.அக.).

ம. கச்சகம்

[கொள் = வளைவு. கொள் → கொச்சு → கொச்சகம் → கச்சகம் (முதுகு வளைந்த விலங்கு, குரங்கு).]

கச்சகம்[2] *kaccagam*, பெ.(n.) கொள்; horse-gram.

மறுவ. கொள்ளு, காணம், உருளி.

[கொள் = வளைவு. கொள் → கொச்சு → கொச்சகம் → கச்சகம் (வளைந்து காணப்படும் கொள்ளுக்காய்).]

கச்சகர் *kaccagar*, பெ.(n.) **கச்சகம்[2]** பார்க்க; see *kaccagam[2]*.

[கச்சகம் → கச்சகர்.]

கச்சங்கட்டு-தல் *kaccaṅ-kaṭṭu-*, 5 செ.கு.வி.(v.i.) **கச்சைக்கட்டு** பார்க்க; see *kaccai-k-kaṭṭu-*.

[கச்சை → கச்சம் + கட்டு.]

கச்சங்கம் *kaccaṅgam*, பெ.(n.) கச்சம், ஒப்பந்தம்; agreement, binding. "நாங்க ளெம்மிலிருந் தொட்டிய கச்சங்கம் நானுமவனு மறிதும்" (திவ். நாய்ச்.5:8).

[கச்சு = பிடிப்பு, கட்டுப்பாடு. கச்சு → கச்சங்கம்]

கச்சச்சாலி *kacca-c-cāli*, பெ.(n.) சிவப்பு நெல்; a kind of red paddy (சா.அக.).

[கச்சல் = சிறிய, இளைய. கச்சல் + சாலி (நெல்).]

கச்சச்செல்வம் *kacca-c-celvam*, பெ.(n.) கச்சமீனின் எலும்பு (வின்.); bone of the kaccam fish.

மறுவ. கச்சத்தினங்கம்

[கச்சம் + அத்து - கச்சத்து → கச்சச்சு. எல் = எலும்பு. எல் + அம் - எல்வம். கச்சச்சு + எல்வம் = கச்சமீனின் எலும்பு. 'அம்' பெருமைப்பொருட் பெயரீறு.]

கச்சட்டம் *kaccaṭṭam*, பெ.(n.) 1. உடைமடிப்பு; folds in the garment. 2. கோவணம்; loin-cloth.

ம. கச்சட்டம்; க. கச்சட்ட; தெ. கோசி; பட. கச்ச.

[கொள் + சு - கொட்சு → கட்சு → கச்சு (வளைத்துக் கட்டுவது). கச்சு + அட்டம் - கச்சட்டம். அட்டம் = குறுக்காக.]

கச்சடம்[1] *kaccaḍam,* பெ.(n.) கோவணம்; loin-cloth.

ம. கச்சடம்; Skt. kacchakka (கொசுவம்).

[கச்சட்டம் → கச்சடம்.]

கச்சடம்[2] *kaccaḍam,* பெ.(n.) நீர் பிப்பிலி; an aquatic plant supposed to be a variety of long-pepper.

[கச்சம் = நீர்கோத்த நிலம். கச்சம் → கச்சடம் = நீர்நிலத்துப் பயிரி.]

கச்சடம்[3] *kaccaḍam,* பெ.(n.) வண்டி; cart.

ம. கச்சடம்; தெ. கச்சடமு.

[சகடம் → கசடம் → கச்சடம். சகடம் = வண்டி. சகடம் என்னும் சொல்லைக் கச்சட எனப் பிறழப் பலுக்கிய அயன்மொழியாரால் திரிபுற்ற இச் சொல் மலையாளத்திலும் தெலுங்கிலும் வழக்கூன்றியது.]

கச்சடா *kaccaḍā,* பெ.(n.) 1. இழிவு; baseness, meanness, uselessness. 2. போக்கிரித்தன்மை; knavery. *அவனொரு கச்சடாப் பேர்வழி (உ.வ.).*

ம.,தெ.,க.,து. கச்சட; பட. கச; இந். கச்சரா; Skt. kaccara; Mar. kacarā; Nep. kacar.

[கழிசடை → கச்சடா (கொ.வ)]

கச்சடி *kaccaḍi,* பெ.(n.) கோவணம்; loin-cloth.

ம. கச்சடி

[கச்சடம்[1] → கச்சடி.]

கச்சண்டம் *kaccaṇḍam,* பெ.(n.) அலரி (சா.அக.); oleander.

[கச்ச(ம்) + அண்டம். கய் = கசப்பு; கய்ப்பு → கசப்பு. கய் → கச → கசம் → கச்சம்.]

கச்சணிமுலை *kaccaṇi-mulai,* பெ.(n.) முலைக்கச்சம் கட்டியுள்ள மார்பகம்; a woman's breast with a garment on, well-girded breast.

ம. கச்சணிமுல

[கச்சு + அணி + முலை]

கச்சத்தரம் *kaccattaram,* பெ.(n.) முரட்டுத்துணி; coarse cloth.

ம. கச்சத்தரம்

[கச்சம் + தரம்.]

கச்சத்தீவு *kaccattīvu,* பெ.(n.) இராமேசுவரத்திற்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையில் உள்ள சிறிய தீவு; an island located in between Rameswaram and Thalaimannar of Ceylon.

[கச்சம் + தீவு. கச்சம் = ஒருவகை ஆமை. கச்சம்[9] பார்க்க; see kaccam[9].]

இந்தியக் கடலெல்லையின் கிழக்கே இரண்டு கடற்கல் தொலைவில் உள்ளது. முன்னம் இராமநாதபுரம் அரசருக்கு உரிய இத் தீவு, கடலெல்லை வகுத்த போது இலங்கை எல்லைப் பகுதியில் அமைந்துவிட்டது.

கச்சத் தீவு

கச்சந்தி *kaccandi,* பெ.(n.) கோணிப்பை; gunny bag. *கச்சந்தி எடுத்துக் கால்மிதியாகப் போடு (கோவை).*

ம. கச்சத்தரம் (முரட்டுத்துணி)

[கச்ச(ம்) + அந்தி. கச்சம் = துணி, சணல் நாரினால் துணி போல் நெய்யப்பட்ட சாக்குப்பை. உம்முதல் = கூடுதல், பொருந்துதல், ஒன்றுசேர்தல். உம் → உந்து → அந்து → அந்தி = விளிம்பு ஒருசேரத் தைக்கப்பட்டது. கச்சந்தி = துணியின் விளிம்பைக் கூட்டி ஆக்கப்பட்டது, பை.]

கச்சந்தியவிழ்-த்தல் *kaccandi-y-aviḻ-,* 4. செ.குன்றாவி. (v.t.) பொய்மூட்டையவிழ்த்தல்; to spin a yarn, to utter falsehood, to untie the bag.

[கச்சந்தி + அவிழ். கச்சந்தி = கோணிப்பை, மூட்டை. பொய்யை மூட்டையிலுள்ள பொருளாக உருவகப்படுத்தி உரைக்கும் கூற்று. அவிழ்தல் (த.வி.) → அவிழ்த்தல் (பி.வி.). கச்சந்தியவிழ்த்தல் = பல பொய்களை அடுக்கிச் சொல்லுதல்.]

கச்சநாரத்தை *kacca-nārattai,* பெ.(n.) 1. இளநாரத்தை; unripe citron. 2. கசப்பு நாரத்தை; bitter citron (சா.அக.).

ம. கச்ச (கசப்பு); க. கசரெ (கசப்பு).

[கச்சல்² + நாரத்தை. கச்சல் = இளமை, பிஞ்சுக்காய். துவர்ப்புச்சுவை அல்லது கசப்புச் சுவையுடையதாய் இருக்கும். சில சொற்களுக்குக் 'கச்ச' அடையாய் வந்துள்ளது. மலையாளத்தில் கசப்பு எனப் பொருள்படும் 'கச்ச' என்பது 'கய்க்கு' (கைத்தல்) என்னும் வினையின் பெயரெச்ச வடிவாகும்.]

கச்சப்பட்டை *kacca-p-paṭṭai,* பெ.(n.) மெல்லிய இரும்புப்பட்டை (முகவை); a thin iron sheet.

[கச்சல்² + பட்டை.]

கச்சப்பணம் *kacca-p-paṇam,* பெ.(n.) பழைய திருவிதாங்கூரில் நிலவிய படைப்பயிற்சிப் பரிசுத் தொகை; presents given for military training (சேரநா.).

ம. கச்சப்பணம், கச்சாப் பணம்.

[கச்சு² + பணம் - கச்சுப்பணம் → கச்சப்பணம். கச்சு = இடையாடை, உடுப்புகள். படைமறவர்க்கு உடுப்புகளுக்காகத் தரப்பட்ட பணத்தைக் குறித்த சொல்லாகலாம்.]

கச்சம்¹ *kaccam,* பெ.(n.) நீர்நிலையின் கரை; bank of river, lake, etc. 2. கடற்கரை; sea-shore.

ம. கச்சம்; Skt. kaccha.

[கள் → கவ்வு → கச்சு (கடித்தாற்போல் இறுக்கிப்பிடிக்கும் பிடிப்பு, நீர் கசியாமலும் வழிந்தோடாமலும் தடுக்கும் கரை.) கச்சு + அம் - கச்சம் (கரை). 'அம்' சொல்லாக்க ஈறு. நீர்கசியும் ஏரிக்கரை சார்ந்த நிலமும் இப் பெயர் பெற்றது.]

கச்சம்² *kaccam,* பெ.(n.) 1. நீரால் அரிக்கப்படும் நிலப்பகுதி; land corroded by flow or wave of the river and sea. 2. நீர்கோத்த நிலம்; marshy land. 3. கடலுள் நீட்டி நிற்கும் தீவக்குறை; cape.

[கொச்சுதல் = மெல்லப் புடைத்தல், சிதறுதல், மண்ணை நீர் அரித்தல். கொச்சு → கச்சு → கச்சம். நீரால் அரிக்கப்படும் நிலப்பகுதி.]

கச்சம்³ *kaccam,* பெ.(n.) 1. அளவை (திவா.); standard of measure. 2. மரக்கால் (திவா.); a grain measure. 3. ஒரு பேரெண்; a certain very large number. *"களிறு பொற்றேர் நான்கரைக் கச்சமாகும்" (சீவக. 2219).*

[கச்சு⁷ + அம் - கச்சம். கச்சு = கரை, எல்லை, அளவு.]

கச்சம்⁴ *kaccam,* பெ.(n.) 1. ஒருவகைச் சிறுமீன் (மூ.அ.); a small kind of fish. 2. இறகு (பிங்.); wing, feather.

[கொச்சு → கச்சு = சிறிய, சிறிது. கச்சு + அம் - கச்சம்.]

கச்சம்⁵ *kaccam,* பெ.(n.) 1. ஒப்பந்தம்; agreement, binding. *"இவ்வெழுதின கச்சம் பிழைக்குமூராளன்" (தெ.கல்.தொ.7. க.171).* 2. கடன் (த.சொ.அக.); debt.

ம. கச்சம்; Pkt. kajja.

[கச்சு² = கடி, இறுக்கிப்பிடி, பிணைப்பு; கச்சு + அம் - கச்சம்.]

கச்சம்⁶ *kaccam,* பெ.(n.) ஒருவகை மூலிகை, (கடுகுரோகிணி) (தைலவ.); Christmas rose herb.

[கச்சு = கய்ப்பு, கசப்பு. ம. கச்ச (கசப்பு). . கச்சு + அம் - கச்சம்.]

கச்சம்⁷ *kaccam,* பெ.(n.) ஒருவகைச் செய்நஞ்சு (மூ.அ.); a mineral poison.

[காய்ச்சல் → கய்ச்சல் → கச்சல். கச்சல் → கச்சம் = காய்ச்சிய செய்நஞ்சு.]

கச்சம்⁸ *kaccam,* பெ.(n.) இடையாடையின் ஒரு முனையை ஒருங்குசேர்த்துக் கால்களுக்கிடையே விட்டு இடுப்பில் செருகிக் கட்டும் பாங்கு; a mode of wearing cloth, the one end of dhoti or saree is folded up from behind between the legs and tucked into the waist band.

ம., தெ. கச்ச; க., து., குட., பட. கச்செ; துட. கொச்; கோத. கச்வ்; Skt. kaccha; Pkt. kacca.

[கொள் → கொச்சு (சிறிது சிறிதாக வளைத்து மடித்தல்). கொச்சு → கச்சு → கச்சம். த. கச்சம் > Pkt. kacca > Skt. kaccha.]

கச்சம்⁹ *kaccam,* பெ.(n.) ஆமை; tortoise. *"கடல்புக்குழிக் கச்சமாகி" (கம்பரா. கடறாவு.42).*

ம. கச்சம்; க. கச்சப; Skt. kacchapa.

[கொள் → கொச்சு = வளைவு, வட்டம். கொச்சு → கச்சு → கச்சம் = வட்ட வடிவுள்ள ஆமை.]

கச்சம்¹⁰ *kaccam,* பெ.(n.) துணிவு; determination.

[கவ்வு → கச்சு(பிடிப்பு) → கச்சம். பிடிப்புக் கருத்துத் துணிவுப்பொருளில் புடைபெயர்ந்தது.]

கச்சம்¹¹ *kaccam,* பெ.(n.) 1. யானைக் கழுத்தில் கட்டப்படும் கயிறு (திவா.); rope tied round the neck of an elephant. 2. குதிரை அங்கவடி (பிங்.); stirrup.

ம. கச்சகயறு

[கட்டு → கச்சு → கச்சம்.]

கச்சம்[12] *kaccam,* பெ.(n.) மெய்புதையரணம் (கவசம்); armour.

[கவ்வு → கச்சு → கச்சம்.]

கச்சம்[13] *kaccam,* பெ.(n.) வார்; belt.

[கச்சு² → கச்சம் = கட்ட உதவுவது.]

கச்சம்[14] *kaccam,* பெ.(n.) 1. துணி; cloth. 2. முன்றானை (த.சொ.அக.); the outer end of a saree or cloth. 3. முலைக்கச்சு; bodice, stays for the breast (த.சொ.அ.).

[கச்சு² → கச்சம்.]

கச்சமுண்டு *kacca-muṇḍu,* பெ.(n.) முரட்டுத்துணி; a coarse cloth, waist-dress or upper garment (சேரநா.).

ம. கச்சமுண்டு

[கச்சம்¹⁴ + முண்டு.]

கச்சமுறி *kacca-muṟi,* பெ.(n.) வேட்டி, இடுப்பில் கட்டும் எட்டுமுழத் துணி; cloth worn around the waist (சேரநா.).

ம. கச்சமுறி

[கச்சு + முறி. மடி = துணி. மடி → மறி → முறி (கொ.வ.).]

கச்சரா *kaccarā,* பெ.(n.) **கழிசடை** பார்க்க; see *kaḻicaḍai.*

ம. கச்ர; கசபா. கசெ; து. கச்சடெ (இழிகுலத்தான்); Skt. kaccara (dirty, foul, spoiled by dirt)

[கழிசடை → கச்சடை → கச்சடா → கச்சரா (கொ.வ.).]

கச்சல்[1] *kaccal,* பெ.(n.) கசப்பு; bitterness. வாய் கச்சலாயிருக்கிறது (உ.வ.).

ம. கச்ச

[கயப்பு → கசப்பு → கச்சல்]

கச்சல்[2] *kaccal,* பெ.(n.) 1. இளம்பிஞ்சு; very tender, unripe or green fruit. 2. ஒல்லி; leanness. அவன் கச்சலாள் (உ.வ.). 3. சிறியது; that which is small. 4. மென்மை, இளமை; tenderness. 5. வாழைப்பிஞ்சு (வை.மூ.); tender plantain fruit.

க. கச்ச; து. கச்சா (பச்சை, பழுக்காத).

[கள் → கய் → கய → கயச்சல் → கச்சல். கய → இளமை, மென்மை, சிறுமை.]

கச்சல்[3] *kaccal,* பெ.(n.) 1. வெறுப்பு (த.சொ.அக.); hate. 2. இழிவு; low, mean. 3. பயன்படாதது; useless.

[கள் → கய் → கய → கயச்சல்(கசப்பு) → கச்சல்(வெறுப்பு).]

கச்சல்[4] *kaccal,* பெ.(n.) 1. தோன்றிய நிலையிலேயே உள்ளது; that which is remaining in the original state. 2. பக்குவம் செய்யப்படாதது; that which is not properly processed.

[கள் = இளமை. கள் → கய → கயச்சல் → கச்சல்.]

கச்சல்[5] *kaccal,* பெ.(n.) கருமை; blackness.

[கள் = கருமை. கள் → கய் → கய்ச்சல் → கச்சல்.]

கச்சல்[6] *kaccal,* பெ.(n.) வெளிர்நிறம்; light colour; pale.

[கச்சல் = பிஞ்சு, பசுமைநிறம், முதிராத இளமை, வெளிர்நிறம். கச்சல்² → கச்சல்⁶. இளம்பிஞ்சுகளின் வெளிர்நிறத்தை இச்சொல் குறிப்பதாயிற்று.]

கச்சல்[7] *kaccal,* பெ.(n.) சிறுமீன் (முகவை. மீனவ.); small fish.

மறுவ. குஞ்சுமீன், சென்னாக்குன்னி, கச்சலி.

[குஞ்சு → குச்சு → கொச்சு = சிறியது: கொச்சுப்பையன் = சிறுவன். ம. கொச்சு. கொச்சு → கொச்சன் = சிறுவன். (வே.கட்.149.) கொச்சு → கச்சு + அல் - கச்சல்.]

கச்சலம் *kaccalam,* பெ.(n.) 1. கண்ணிற்கிடும் மை; lamp black used as collyrium and applied to eye-lashes as decoration. 2. முகில்; cloud.

Skt. kajjala

[கச்சல்⁵ → கச்சலம்.]

கச்சலி *kaccali,* பெ.(n.) **கச்சல்⁷** பார்க்க; see *kaccal⁷.*

[கச்சல்⁷ → கச்சலி. கச்சல் = சிறியது. 'இ' உடைமைப் பொருள் ஈறு.]

கச்சலிமாத்திரை *kaccali-māttirai,* பெ.(n.) நான்முகமுனி (பிரமமுனி) மருத்துவத்தில் சொல்லியுள்ள ஒருவகை மாத்திரை; a medicinal pill prescribed in the work of Brahmamuni on medicine (சா.அக.).

[கச்சல்[1] → கச்சலி + மாத்திரை. கச்சல் = கய்ப்புச்சுவை, கசப்பு.]

கச்சலோடி *kaccalōḍi,* பெ(n.) வெள்ளை வெற்றிலை; white betel leaf.

மறுவ. கச்சோடி

[கச்சல் = வெளிர்நிறம். கச்சல் + ஓடி.]

கச்சவடக்காரன் *kaccavaḍa-k-kāraṉ,* பெ.(n.) வணிகன் (வின்.); merchant, trader.

மறுவ. கச்சவடன், வணிகன்.

ம. கச்சவடக்காரன்

[கச்சவடம் + காரன். கச்சவடம் = சிறு வணிகம், வணிகம்.]

கச்சவடக்காற்று *kaccavaḍa-k-kāṟṟu,* பெ.(n.) வணிகத்திற்கு ஏந்தான காற்று; trade-wind.

ம. கச்சவடக்காற்று

[கச்சவடம் + காற்று.]

கச்சவடம் = துணி வணிகம், நிலைப்பாடான வணிகம். நிலக்கோளத்தின் கிழக்குமுகச் சுற்றால் மேற்கு முகமாகத் திருப்பப்பட்ட வெப்பக்காற்று, நிலநடுக்கோட்டை நோக்கி வீசும் போது கச்சவடக்காற்றாம் (Chambers Dictionary). வணிகத்திற்கு ஏற்றதான காற்று, கச்சவடக்காற்று எனப் பெயர்பெற்று வணிகத்திற்கு ஏற்ற சூழலைக் குறித்து நின்றது.

கச்சவடப்பாடு *kaccavaḍa-p-pāḍu,* பெ.(n.) வணிகத் தொடர்புடைய செயல்; commercial transaction (சேரநா.).

ம. கச்சவடப்பாடு

[கச்சவடம் + பாடு. பாடு = உழைப்பு, தொழில். கச்சவடம்[2] பார்க்க; see kaccavaḍam[2] .]

கச்சவடம்[1] *kaccavaḍam,* பெ.(n.) 1. இடுப்பில் அணியும் ஆடை; cloth or clothes worn around waist. 2. உடுப்புகள்; dress. 3. துணிமணி; clothing.

[கச்சு = இடுப்பில் அணியும் துணி. கச்சு → கச்சம் + (படம்) வடம் - கச்சவடம். படம் = துணி. படம் → வடம். (ப → வ சொற்பலுக்கத் திரிபு) கச்சபடம் = (இருபெயரொட்டுப் பண்புத்தொகை.) இடுப்பில் அணியும் துணியைமட்டும் குறித்த கச்சம் என்னும் சொல் புதிய ஆடைகளையும் உடுப்புகளையும் குறிக்கும் பொதுப்பெயராயிற்று.]

கச்சவடம்[2] *kaccavaḍam,* பெ.(n.) 1. வணிகம்; *trading.* 2. துணிவணிகம்; *cloth trading.* பிச்சைக்கு மூத்தது கச்சவடம் (யாழ்ப்.).

ம. கச்சவடம்; Pkt. kaccavada; Skt. kaccatika.

[கச்சு + (படம்) வடம். கச்சுவடம் = இடையில் உடுக்கும் துணி முதலியவை. கச்சு = வட்டுடை, இடையில் அணியும் உடுப்பு வகைகள், துணி. படம் → வடம். ப → வ (சொற்பலுக்கத் திரிபு). துணியைக் குறித்த சொல் துணிவாணிகத்தையும் குறித்தது. கச்சவடம் = துணி விற்கும் கடை, அறுவை வாணிகம். இடுப்பில் அணியும் உடையை மட்டும் குறித்த இச் சொல் நாளடைவில் பொதுவாக உடுக்கும் எல்லா உடைகளையும், விற்பனைக்கு வரும் புதிய துணிகளையும் குறித்தது. மலையாள நாட்டில் மணமக்களுக்கு வழங்கும் புத்தாடையைச் சிரியன் கிறித்தவர் கச்சதழுகல் (கச்சம் தழுவல் = மகிழ்ந்து ஏற்றல்) என்று வழங்குதலைக் காணலாம்.]

கச்சவடம்[3] *kaccavaḍam,* பெ.(n.) குழப்புகை (இ.வ.); mixing up of things cause confusion.

[கச்சவடம் = சிறுவணிகம், வெவ்வேறு பொருள் வணிகம். காலத்திற்கேற்றவாறு அடிக்கடி வணிகப் பொருள்களை மாற்ற வேண்டிய சூழலின் போது அடுத்து எப்பொருளின் வணிகம் என்றறியா நிலைப்பாடற்ற தன்மையைக் குறிக்கும் முகத்தான் கச்சவடம் குழப்பத்தைக் குறித்து நின்றது.]

கச்சவடமுத்திரை *kaccavaḍa-muttirai,* பெ.(n.) வணிகக்குறியீடு; trade-mark.

ம. கச்சவடமுத்திரை

[கச்சவடம் + முத்திரை.]

கச்சவலை *kacca-valai,* பெ.(n.) ஒருவகை மீன்வலை; a kind of fishing net.

ம. கச்சவல

[கொச்சு → கச்சு = மடிப்பு. கச்சு + வலை - கச்சவலை = மடிப்புவலை.]

கச்சவாழை *kacca-vāḻai,* பெ.(n.) கற்றாழை; the plant aloe vera.

ம. கச்சவாழ; க. கத்தாழெ.

[கச்சு = மடிப்பு, அடுக்கு. கச்சு + வாழை.]

கச்சழி *kaccaḻi*, பெ.(n.) சிறப்பு விருது கைவளையம்; arm ring bestowed as award.

க. கச்சழி, கச்சளி.

[கச்சு + ஆழி - கச்சாழி → கச்சழி. கச்சு = செறிவு, இறுக்கம். ஆழி = வளையம்.]

கச்சளம் *kaccaḷam*, பெ.(n.) 1. கண்ணிடு மை (யாழ்.அக.); collyrium for the eyes. 2. கரிப்புகை (இ.வ); lamp black. 3. இருள் (பிங்.); darkness. 4. அரக்காம்பல்; red water-lily.

Skt., Mar. kajjala

[கள் → கச்சு + அளம் - கச்சளம். கள் = கருமை. அளம் - சொல்லாக்க ஈறு. கருமைப்பொருள், கருஞ்சிவப்பு ஆம்பலுக்குமாகி வந்துள்ளது.]

கச்சற்கருவாடு *kaccaṟ-karuvāḍu*, பெ.(n.) கச்சல் மீனின் உணங்கல்; kaccal fish salted and dried. *"கண்டாற் பசியெழும்பும் கச்சற் கருவாடு" (பதார்த்த.921).*

[கச்சல்⁷ + கருவாடு.]

கச்சற்கோரை *kaccaṟ-kōrai*, பெ.(n.) 1. நெய்தல் நிலத்துப் புல்வகை (வின்.); a sedge that grows near the sea-shore on saline ground (W.). 2. ஒருவகைக் கசப்புக் கோரைப்புல்; a kind of bitter kōray or sedge grass.

[கச்சல்¹ + கோரை.]

கச்சற்புல் *kaccaṟ-pul*, பெ.(n.) **கச்சற்கோரை** பார்க்க; *see kaccaṟ-kōrai.*

[கச்சல்¹ + புல்.]

கச்சன்¹ *kaccaṉ*, பெ.(n.) ஆமை (மூ.அக.); tortoise.

க. கச்சப; Skt. kaccapaka; Mar. Kacchapa.

[கச்சம்³ → கச்சன்.]

கச்சன்² *kaccaṉ*, பெ.(n.) காயாமரம்; ironwood tree.

[கச்சு⁵ → கச்சன். கச்சு = சிறியது. கச்சன் = சிறு வித்துகளைக் கொண்ட மரவகை.]

கச்சனம் *kaccaṉam*, பெ.(n.) திருவாரூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvarur district.

[கச்சல் + அம் - கச்சலம் → கச்சனம். கச்சல் = சிறியது. கச்சனம் = சிற்றூர்.]

கச்சனாவிளை *kaccaṉāviḷai*, பெ.(n.) தூத்துக்குடி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tuttukudi district.

[கச்சல் + அம் - கச்சலம் + விளை. கச்சலாவிளை - கச்சனாவிளை. கச்சல் = சிறியது. விளை = பனந்தோப்பு, காவற்காடு. கச்சனாவிளை = பனந்தோப்பு அல்லது காவற்காடு இருந்த இடத்தில் அமைந்த சிற்றூர்.]

கச்சா *kaccā*, பெ.(n.) 1. பயன்பாட்டிற்குகந்தவாறு தூய்மை செய்யப்படாதது; unrefined. கச்சாயெண்ணெய் (உ.வ.). 2. கரடானது; crude. கச்சாப்பருத்தி (உ.வ.). 3. தாழ்ந்தது, இழிந்தது; low, mean. இவன் ஒரு கச்சாப்பயல் (உ.வ.).

ம.,க. கச்சா; ஓ. காச்சா. Urdu. kaccha (crude); H. kanco, kacca; Guj. kăncu; Sind. kaco; Mar., Nep. kaccă;Beng. kanca.

[கச்சல்⁴ → கச்சா.]

துப்புரவு செய்யாததால் நேரடியாகப் பயன்கொள்ள இயலாத கனிம மூலப்பொருள்களும், ஆலைத் தொழில்களுக்கான இயற்கை மூலப்பொருள்களும் நாளடைவில் இச் சொல்லால் குறிக்கப்படலாயின. கச்சல் என வழங்குவதே செஞ்சொல்லாம்.

கச்சாக்கழி *kaccā-k-kaḻi*, பெ.(n.) கச்சாவலையில் உள்ள கைப்பிடிக் கழி (மீனவ.); small stick on both ends of a fishing net.

[கச்சல்² → கச்சா + கழி - கச்சாக்கழி. கச்சல் = சிறியது.]

இக் கொம்புகள் கட்டுமரத்தின் மிக அருகில் மேய்ந்து வரும் மீன்களைக் கீழேந்தி வலைக்க உதவும்.

கச்சாங்காற்று *kaccāṅ-kāṟṟu*, பெ.(n.) மேற்கிலிருந்து கிழக்குமுகமாய் வீசுங் காற்று (மீனவ.); west wind.

[கச்சான் + காற்று. கச்சான் = மேற்கு.]

கச்சாங்கொட்டை *kaccāṅ-koṭṭai*, பெ.(n.) நிலக்கடலை (யாழ்.அக.); groundnut.

[கச்சான் + கொட்டை. கச்சான் = மேற்கு.]

கச்சாங்கொட்டை = மேலைக்கடல் வழியாக இறக்குமதியான பயிரி (தாவரம்). மலையாளமொழியில் இதனைக் கப்பலண்டி - கப்பல் வழியாக வந்த அண்டி (கொட்டை) என வழங்குதலை ஒப்பிட்டு நோக்குக.

கச்சாங்கோடை *kaccāṅkōḍai,* பெ.(n.) தென்மேற்குப் பருவக்காற்று; south west wind.

[கச்சான் + கோடை. கச்சான் = மேற்கு. கோடை = கோடைக்காலக் காற்று.]

கச்சாங்கோரை *kaccāṅ-kōrai,* பெ.(n.) *கச்சற்கோரை* பார்க்க; *see kaccaṟ-kōrai.*

கச்சாச்சேர் *kaccā-c-cēr,* பெ.(n.) 8 பலம் கொண்ட ஒரு நிறை; a small measure of weight which made up of 8 palams.

[கச்சா + சேர். கஃசு = சிறிய நிறுத்தலளவை, காற்பலம். கஃசு → கச்சா. கச்சா + சேர். சேர் = அளவை, (சிறுமை முன்னொட்டு)]

கச்சாத்து[1] *kaccāttu,* பெ.(n.) 1. வரிபெற்றுக் கொண்டதற்கான பற்றுச்சீட்டு (ரசீது); tax receipt. '*காணி விலைப் பிரமாணக் கச்சாத்து*' (S.I.I.78). 2. ஒப்புகைச்சீட்டு; acknowledgement. நகையை அடைமானம் வைத்துக் கச்சாத்துப் பெற்றுவா (உ.வ). 3. வாடிக்கையாளருக்கு வணிகர் அனுப்பிய பொருள்களின் பட்டியல்; Invoice, list of goods sent by a tradesman to his customer.

ம. கச்சாத்து

[கை + சாத்து - கைச்சாத்து → கச்சாத்து (கொ.வ). **கைச்சாத்து** *பார்க்க; see kai-c-cāttu.*]

கச்சாத்து[2] *kaccāttu,* பெ.(n.) வணிகம்; marketing, business.

[கச்சு + சாத்து - கச்சுச்சாத்து → கச்சாத்து. சாத்து = வணிகக்கூட்டம், வணிகம். கச்சு = உடுப்புகள், துணிகள்.]

கச்சாத்து[3] *kaccāttu,* பெ.(n.) தொடர்பு, உறவு; contact, relationship. இவனுக்கும் அவனுக்கும் கச்சாத்துக் கிச்சாத்து இல்லாதபோது எதை வைத்துப்பேசுவது (உ.வ.).

[கைச்சாத்து → கச்சாத்து. கச்சாத்து = பற்றுச்சீட்டு, ஒப்புகை.]

வரி செலுத்துதல், பொருட்பட்டியல் அனுப்புதல், ஒப்புகையளித்தல் போன்றவற்றில் இருவழித் தொடர்பு இருப்பதைக் காண்க. இவ்வாறு கொடுக்கல் வாங்கல் தன்மை, தொடர்பு, உறவு எனப் பொருள்பட வழிகோலியது.

கச்சாந்தகரை *kaccāntagarai,* பெ.(n.) பவளமல்லிகை (யாழ்.அக.); night jasmine.

[கச்சான் + தகரை. தகரம் = மணப்பொருள், மணம் பரப்புவது. கொச்சு → கச்சு = சிறிய, சிறிது. கச்சு → கச்சான் = சிறிய பூவையுடையது.]

கச்சாப்பொருள் *kaccā-p-poruḷ,* பெ.(n.) மூலப்பொருள்; raw material.

[கச்சா + பொருள்.]

கச்சாயம்[1] *kaccāyam,* பெ.(n.) கடலுட் செல்லும் தரைப்பகுதி, நிலமுனை (யாழ்.அக.); cape.

[கச்சுதல் = நீரால் அரிக்கப்படுதல். மலையாள மொழியில் நீர்கோத்த நிலப்பகுதி கச்சம் எனப்படுதலை ஒப்பிடுக. கச்சு = நீரால் அரிக்கப்படும் நிலப்பகுதி, கடலுள் நீட்டிநிற்கும் தீவக்குறை. கச்சு → கச்சாயம்.]

கச்சாயம்[2] *kaccāyam,* பெ.(n.) ஒருவகைச் சிற்றுண்டி; a kind of sweet cake.

[கொச்சு → கச்சு → கச்சாயம்.]

கச்சாயி *kaccāyi,* பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish.

ம. கச்சாயி, கச்சாடி; Skt. kajjale.

[கச்சம்' = கரை, கடற்கரை. கச்சம் → கச்சா → கச்சாயி.]

கச்சாயெண்ணெய் *kaccā-y-eṇṇey,* பெ.(n.) தூய்மை செய்யப்படாத நில எண்ணெய்; crude oil.

[கச்சு → கச்சா + எண்ணெய். கச்சா பார்க்க; *see kaccā.*]

கச்சாரம்[1] *kaccāram,* பெ.(n.) 1. செப்பம், செறிவு, ஒழுங்கு; accuracy, compact. 2. சரியானஅளவு; correctness. 3. மிகப்பொருத்தம்; quite fitting.

[கவ்வு → கச்சு + ஆரம் - கச்சாரம் (பிடித்தமாக, செறிவாக அமைந்தது, பொருத்தமாக இருப்பது.) 'ஆரம்' சொல்லீறு. இச் சொல்லைக் கச்சிதம் என வழங்குவது பொருத்தமில்லாதது. 'இதம்' வடசொல்லாக்க ஈறு. அதனைத் தவிர்த்தல் வேண்டும். கச்சிதம் என்பதற்கு நிகரான தமிழ்ச்சொல் கச்சாரம்.]

கச்சாரம்[2] *kaccāram,* பெ.(n.) பாய்முடையுந் தொழில்; mat-making. *வண்ணாரம் துன்னாரம் மச்சிகமே கச்சாரம் (நீலகேசி,280, உரை).*

மறுவ. கச்சுக்குத்துதல்.

[கள் → கச்சு = பின்னுதல், முடைதல், பிணைத்தல். கச்சு + ஆரம் - கச்சாரம். 'ஆரம்' சொல்லீறு.]

கச்சால்[1] *kaccāl,* பெ.(n.) மீன் பிடிக்குங் கூடு (யாழ்ப்.); wicker basket for catching fish.

ம. கச்சால்; குரு. கச்ல.

[கை + சால் - கைச்சால் → கச்சால் = கைக்கூடை. (கொ.வ.)]

கச்சால்[2] *kaccāl,* பெ.(n.) சிறிய காலவாய்; a small channel for irrigation.

ம. கச்சால்

[கை + சால் - கைச்சால் → கச்சால். கால் (நீட்சி) → சால்.]

கச்சால்[3] *kaccāl,* பெ.(n.) நக்கவாரத் (நிக்கோபார்) தீவுகளுள் காணப்படும் ஒரு சிறுதீவு; one of the small islands in Nicobar Islands.

[கச்சம்[2] → கச்சல் → கச்சால்]

கச்சாலம் *kaccālam,* பெ.(n.) சுரநஞ்சு அல்லது காய்ச்சல் நஞ்சு; a kind of native arsenic (சா.அக).

[காய் → காய்ச்சல் → காய்ச்சலம் → கச்சாலம்.]

கச்சாலை[1] *kaccālai,* பெ.(n.) 1. வீட்டுக் கூரையின் வெளித்திண்ணை; raised pial at the entrance of a thatched front roof. 2. நெடுங்கூடம் அல்லது கொட்டாரத்தின் முன்திண்ணைத் தாழ்வாரம்; front verandah of a hall. 3. சிறிய இடம்; a small area. 4. பணிசெய்யும் அலுவலகம்; office. 5. பலர் கூடி உரையாடும் மன்றம்; an assembly.

ம. கச்சேரி; க. கசேரி; தெ. கச்சேரி; Mar.kacĕrī; H., U. kachhari; Pkt. kaccaari; Ar.,Beng. kācāri; Sinh. kacari; Persn. kacĕri; Skt. krityākāra.

[கை + சாலை - கைச்சாலை → கச்சாலை. கச்சால்[2] = சிறிய கால்வாய். ஒ.நோ. கை + சால் - கைச்சால் → கச்சால்[1] = மீன்பிடிக்கும் கூடு. கை = சிறிய. சாலை = ஒலை வேய்ந்த கூரை, இடம், பள்ளி, மன்றம். கச்சாலை = வீட்டுக் கூரையின்கீழுள்ள வெளித்திண்ணை.]

சாலை என்பது நீண்ட கொட்டகையைக் குறித்த சொல். நீண்ட கொட்டகையின் முன்திண்ணையில் தாழ்வாரம் இறக்கியிருந்தால் முன்திண்ணை நிழலிடம் கைச்சாலை எனப்படும். சிறிய சுவர் கைச்சுவர் எனப்படும். கை + சாலை - கைச்சாலை → கச்சாலை. இச் சொல் நாட்டுப்புறங்களில் மட்டும் வழங்கிய சொல். முன்திண்ணையில் அமர்ந்து ஊர்ப் பொதுச்செய்திகள் பேசுவதும் வழக்குகள் தீர்த்து வைப்பதும் திண்ணைப்பள்ளிக்கூடம் நடத்துவதும் பண்டுதொட்டு நடைபெற்று வந்த நிகழ்வுகள். ஆயின் இச் சொல் பொதுமக்கள் வாயிலாக இந்தியமொழிகள் அனைத்திலும் கச்சேரி என்று உருத்திரிந்து ஊடாடியுள்ளது. இச் சொல்லுக்குப் பிறமொழிகளில் வேர்மூலம் இல்லை. வடமொழியாளர் இதனைச் செயலாற்றும் இடம் என்னும் பொருளில் 'க்ருத்யாகார' என மொழிபெயர்த்துக் கொண்டனர்.

கச்சாலை[2] *kaccālai,* பெ.(n.) காஞ்சிபுரத்திலுள்ள சிவன் கோயில்களுள் ஒன்று; one of Šivā temples at Kāñjipuram. *கச்சிக் கச்சாலைக் கனி (தண்டி. 95,13 உரை).*

[காஞ்சி → கச்சி + ஆலை. கச்சு = சிறிய. ஆலை = ஆலயம், கோயில். காஞ்சி = காஞ்சிமரத்தின் பெயர் அவ்வூரின் பெயராயிற்று.]

கச்சாவலை *kaccā-valai,* பெ.(n.) இறால், நண்டு ஆகியவற்றைப் பிடிக்கப் பயன்படும் கூம்பு வடிவினதாகிய சிறிய வலை; a small conical shaped fishing net for fishing prawns, crabs, etc.

[கச்சல் = சிறியது. கச்சல்[2] → கச்சா + வலை.]

கச்சாவீடு *kaccā-vīḍu,* பெ.(n.) குறுங்காலிகமாக அமைக்கப்படும் வீடு; house built temporarily.

[கச்சல்[2] + வீடு - கச்சவீடு → கச்சாவீடு. கச்சல் = சிறியது. குறுங்காலிகமாகக் கட்டப்படும் சிறியவீடு 'கச்சாவீடு' எனப்பட்டது.]

கச்சான் *kaccāṉ,* பெ.(n.) 1. கடற்கரை; sea-shore. 2. மேற்குத்திசை; western direction. 3. மேல்காற்று, கோடைக்காற்று; west wind. 4. தென்மேற்குக் காற்று; south west wind. 5. சாரல்காற்று; a wind accompanied by drizzling.

ம. கச்சான்

[கச்சம்[1] → கச்சான். கச்சம் = கரை, கடற்கரை. கச்சம்[1] பார்க்க; see kaccam[1]. கிழக்குக் கடற்கரையிலுள்ள தமிழக மீனவர்கள் கடலிலிருந்து பார்க்கும்போது கடற்கரைப் பகுதியிலிருந்து வீசும் காற்று மேற்றிசைக் காற்றாகத் தெரிதலின் கரைக்காற்றைக் கச்சான் காற்று என்றனர். இதனால் கச்சான் என்னும் சொல் மேற்கு எனப் பொருள் தருவதாயிற்று.]

கச்சான்கிடத்தல் *kaccāṉ-kiḍattal,* தொ.பெ.(vbl.n.) கடற்பரப்பில் நெடுநேரமாய்த் தென்றல் வீசுதல் (மீனவ.); a western gentle breeze blowing for a long time.

[கச்சான் + கிடத்தல். கச்சான் = மேற்கு, மேற்கிலிருந்து வீசும் காற்று. இங்குத் தென்மேற்குக் காற்றையே குறித்தது.]

கச்சான்கோடை *kaccāṉ-kōḍai,* பெ.(n.) **கச்சாங் கோடை** பார்க்க; see *kaccāṅ-kōḍai.*

[கச்சான் + கோடை.]

கச்சான்தொவகரை *kaccāṉ-tovakarai,* பெ.(n.) மேற்கிலிருந்து கிழக்காய்ச் செல்லும் கரையோரத்துக் கடல்நீரோட்டம்; current of water flow along the seacoast from west to east.

[கச்சான் + (தூவு → தொவ) + கரை. கச்சான் = மேற்கு. தூவு = செலுத்தல், போதல், வீசுதல்.]

கச்சான்பிடி-த்தல் *kaccāṉ-piḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) கச்சான்காற்றை ஏற்குமாறு பாயோட்டம் செய்தல்; to adjust the sail of a boat towards west wind.

[கச்சான் + பிடி-.]

கச்சான்வலைப்பு *kaccāṉ-valaippu,* பெ.(n.) கடற்பரப்பின் மேற்குத் திசையில் மீன் வலைத்தல் (முகவை மீனவ.); fishing with net in the western direction.

[கச்சான் + வலைப்பு. வலை → வலைப்பு = வலையில் மீன்பிடித்தல்.]

கச்சானாள் *kaccāṉāḷ,* பெ.(n.) கோடைக்காலம் (செங்கை.மீனவ.); summer.

[கச்சான் + நாள்.]

கச்சானில்கூட்டு *kaccāṉilkūṭṭu,* பெ.(n.) மேலைக்காற்றும் தென்றலும் கலந்த காற்று; wind, gentle breeze.

[கச்சான் + இல் + கூட்டு. 'இல்' இடப்பொருள் உருபு.]

கச்சானீர் *kaccā-ṉīr,* பெ.(n.) **கச்சான் தொவகரை** பார்க்க; see *kaccāṉ-tovakarai.*

[கச்சான் + நீர்.]

கச்சி[1] *kacci,* பெ.(n.) காஞ்சிபுரம்; the city of Kāñjipuram. *"பூங்கொடி கச்சி மாநகர் புக்கதும்" (மணிமே.பதி.90).*

[காஞ்சி → கஞ்சி → கச்சி.]

கச்சி[2] *kacci,* பெ.(n.) வைக்கோற்போர்; hay, straw.

ம. கச்சி; Skt. kakṣa (உலர்ந்த புல்)

[கழி → கழிச்சு → கச்சு → கச்சி = தாளடித்து ஒதுக்கப்பட்டது.]

கச்சி[3] *kacci,* பெ.(n.) 1. கொட்டாங்கச்சி (வின்.); coconut shell. 2. உலர்ந்த பனங்கொட்டையின் பாதி, ஊமற்பிளவு (யாழ்.அக.); half of a dried palmyra nut.

[காய்ச்சு → கச்சு → கச்சி.]

கச்சி[4] *kacci,* பெ.(n.) 1. சீந்தில்; moon creeper. 2. வெண்காரவுள்ளி; white pungent onion. 3. சின்னி; acalpha shrub (சா.அக.).

[கச்சல் → கச்சி (சிறியது).]

கச்சி[5] *kacci,* பெ.(n.) 1. கணுக்காலெலும்பு; ankle bone. 2. மீன்வலைகளின் இணைப்பு வலை (தஞ்சை.மீனவ.); linking fishing net.

[கவ்வு → கச்சு → கச்சி.]

கச்சி[6] *kacci,* பெ.(n.) துடைப்பம்; broom.

ம. கச்சி

[குச்சி → கச்சி; குச்சி = தென்னை ஈர்க்குக் குச்சிகளால் செய்த விளக்குமாறு. தமிழ்நாட்டில் குச்சி என்றும் சேரநாட்டில் கச்சி என்றும் இச் சொல் வழங்கியுள்ளது.]

கச்சிக்கல் *kacci-k-al,* பெ.(n.) மணற்கல்; sand stone.

ம. கச்சிக்கல்லு

[கச்சு = சிறியது. கச்சு → கச்சி + கல்.]

கச்சிக்கலம்பகம் *kacci-k-kalambagam,* பெ.(n.) 1. பூண்டி அரங்கநாதர் இயற்றிய சிற்றிலக்கியம்; a treatise of kalambagam variety composed by Pūṇḍi Araṅganādar. 2. கச்சி ஞானப்பிரகாசர் இயற்றிய சிற்றிலக்கியம்; a kalambagam composed by Gnānapprakāšar.

[கச்சி + கலம்பகம். காஞ்சி → கஞ்சி → கச்சி. கலம்பகம் பார்க்க; see kalambagam.]

கச்சிக்கிழங்கு *kacci-k-kiḻaṅgu,* பெ.(n.) சின்னிக்கிழங்கு; root of acalpha (சா.அக.).

[கச்சி + கிழங்கு. கச்சி = சிறிது, சிறிய.]

கச்சிக்குழல் *kacci-k-kuḻal,* பெ.(n.) ஒருவகைக் கழுத்தணி; a kind of neck ornament.

மறுவ. நோன்பு முடி

ம. கச்சிக்குழல்

[கச்சு → கச்சி + குழல். கச்சு = கவ்வு, பிடிப்பு.]



கச்சிக்குழல்

கச்சிதம் *kaccidam,* பெ.(n.) *கச்சாரம்*[1] பார்க்க; see *kaccāram*[1].

தெ. கச்சிதமு; க. கச்சிதா; Pali. kaccita; Pkt. kacciya; H. kacith.

[கச்சு = இறுக்கமாகப் பிணைந்திருப்பது. கச்சு + இதம் - கச்சிதம்.]

கச்சாரம் எனின் முற்றுந் தமிழாம். 'இதம்' வடமொழிச் சொல்லீறு. ஒ.நோ. தத்திதம், இங்கிதம், தப்பிதம். இதம் என்னும் ஈறு தமிழாகாது. அதனை நீக்குதல் வேண்டும்.

கச்சிப்பள்ளி *kacci-p-paḷḷi* பெ(n.) சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டத்திலுள்ள தாசசமுத்திரத்தில் ஏரி அமைத்த தலைவரின் ஊர், சங்ககிரி - ஓமலூர் இடையே உள்ளது; the native place of a headman who had built a tank at Dasasamudram in Salem district,Omalur taluk, situated in between Omalur and Sankagiri. *"வடபூவானிய நாட்டுக் கச்சிப்பள்ளியில் காமிண்டன்"* (ஆவணம், 1991-6).

[கச்சி[1] + பள்ளி. காஞ்சிபுரம் பகுதியில் இருந்து சென்றவர்கள் வாழ்ந்த ஊராகலாம்.]

கச்சிப்பெருமாள் *kacci-p-perumāḷ,* பெ.(n.) பெரம்பலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Perambalur district.

[கச்சி + பெருமாள் - கச்சிப்பெருமாள் (இ.பெ.) - கச்சிப்பெருமாள் என்பவன் பெயரிலமைந்த ஊர்.]

கச்சிப்பெருமாள்நத்தம் *kacchi-p-perumāḷ nattam,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Cudalore district.

[கச்சி + பெருமாள் + நத்தம் - கச்சிப்பெருமாள் நத்தம். கச்சிப்பெருமாள் பெயரிலமைந்த குடியிருப்பு. நத்தம் = குடியிருப்பு அமைப்பதற்காக விடப்பட்ட நிலம்.]

கச்சிப்பேட்டு இளந்தச்சனார் *kacci-p-pēṭṭu-iḷandaccaṉār,* பெ.(n.) நற்றிணை 266ஆம் பாடலைப் பாடிய புலவர்; author of 266th verse of Naṟṟiṇai.

[காஞ்சி → கச்சி + பேடு + இளம் + தச்சன் + ஆர். பேடு = பொட்டல் நிலம்.]

கச்சிப்பேட்டுக்காஞ்சிக்கொற்றனார் *kacci-p-pēṭṭu-k-kāñji-k-koṟṟāṉār,* பெ.(n.) குறுந் தொகையில் 213, 216ஆம் பாடல்களைப் பாடிய கடைக்கழகப் புலவர்; author of verses 213 and 216th of *Kuṟuntogai.*

[கச்சிப்பேடு + காஞ்சிக்கொற்றனார்.]

கச்சிப்பேட்டுநன்னாகையார் *kacci-p-pēṭṭu naṉṉāgaiyār,* பெ.(n.) குறுந்தொகையில் 30, 172, 180, 192, 197, 287 ஆகிய ஆறு பாடல்களைப் பாடிய கடைக்கழகப் புலவர்; author of verses 30, 172, 180, 192, 197, 287th of *Kuṟuntogai.*

[கச்சிப்பேடு + நன்னாகையார்.]

கச்சிப்பேட்டுப்பெருந்தச்சனார் *kacci-p-pēṭṭu-p- peruntaccaṉār,* பெ.(n.) நற்றிணையில் 144, 273 ஆகிய பாடல்களைப் பாடிய கடைக்கழகப் புலவர்; author of verses 144 and 273rd of *Naṟṟiṇai.*

[கச்சிப்பேடு + பெருந்தச்சனார்.]

கச்சிப்பேடு *kacci-p-pēḍu,* பெ.(n.) காஞ்சிபுரத்தின் அருகில் உள்ள சிற்றூர்; a hamlet near Kanchipuram. *'கச்சிப்பேட்டுப் பெரிய திருக்கற்றளி' (S.I.I.i.113).*

[காஞ்சி → கச்சி + பேடு. போடு → பேடு = பொட்டல் நிலம்.]

கட்டாந்தரை, அல்லது போடான (பொட்டல்) நிலத்திலமைந்த ஊர், போடூர் என வழங்கப்படுதல் காண்க.

கச்சிமுற்றம் *kacci-muṟṟam,* பெ.(n.) காஞ்சிநகரத்தின் உள்ளெல்லைப் பகுதி; inner

boundary of Kanchipuram. *"கச்சி முற்றத்து நின்னுயிர் கடைகொள" (மணிமே.21:174).*

[கச்சி¹ + முற்றம். முற்றம் = நுழைவாயில், எல்லை.]

கச்சியப்பசிவாச்சாரியார் *kacci-y-appa-śivāccāriyār,* பெ.(n.) கந்தபுராண ஆசிரியர்; the author of Kandapurāṇam.

[காஞ்சி → கச்சி + அப்பன் + சிவ + ஆச்சாரியார்.]

கச்சியப்பமுனிவர் *kacci-y-appa-muṉivar,* பெ.(n.) தணிகைப்புராணம் முதலியவற்றின் ஆசிரியர்; the author of Taṇigai-p-purāṇam and other šaivite works, 18th c A.D.

[காஞ்சி → கச்சி + அப்பன் + முனிவர்.]

கச்சிராயநத்தம் *kaccirāya-nattam,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Cudalore district.

[கச்சி + அரையன் + நத்தம் - கச்சியரையன்நத்தம் - கச்சிராயன்நத்தம்.]

கச்சிராயபாளையம் *kaccirāya-pāḷayam,* பெ.(n.) விழுப்புர மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram district.

[கச்சி + அரையன் + பாளையம் - கச்சியரையன்பாளையம் → கச்சிராயன்பாளையம்.]

கச்சிராயன்பட்டி *kacci-rāyaṉ-paṭṭi,* பெ.(n.) மதுரை மாவட்டத்தில் உள்ள சிற்றூர்; a village in Madurai district.

[கச்சி + அரையன் + பட்டி - கச்சியரையன்பட்டி - கச்சிராயன்பட்டி. கச்சிராயன் பெயரிலமைந்த சிற்றூர்.]

கச்சில்¹ *kaccil,* பெ.(n.) பேரீச்சை; date (சா.அக.).

[காய்ச்சில் → கச்சில். காய்ச்சு → கச்சு = உலர்ந்தது. ம. கச்சில = உலர்ந்த இலை.]

கச்சில்² *kaccil,* பெ.(n.) ***கச்சி²*** பார்க்க; see *kacci².*

ம. கச்சில்

[கச்சி² → கச்சில்.]

கச்சிவம் *kaccivam,* பெ.(n.) பளிங்குக்கல்; marble (சா.அக.).

ம. கச்சி

[கச்சு → கச்சி → கச்சிவம். கச்சு = சிறிது, சிறிய.]

கச்சினி *kacciṉi,* பெ.(n.) தொடர் நிகழ்வில் முதல் மாதம்; the first month (சா.அக.).

[கச்சு → கச்சினி. கச்சு = இளமை, பிஞ்சு, தொடக்கம்]

கச்சினித்திங்கள் *kacciṉi-t-tiṅgaḷ,* பெ.(n.) ஒரு திங்கள் காலம்; one month period.

[கச்சினி + திங்கள். கச்சினி = முதல்.]

கச்சு¹-தல் *kaccu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கடித்தல்; to bite. 2. இணைத்தல்; to bind. 3. அரித்தல்; gnawing (சா.அக.). 4. இறுக்கிக் கட்டுதல்; to tie tightly.

க., பட., கச்சு; கொலா., பர். கச்ச; கட. கச்ச், கச்; மால். கீரசவெ; து. கச்சுனி; குவி. கசளி; கூ. கச்ச்.

[கடித்தல் → கச்சல் → கச்சு.]

கச்சு² *kaccu,* பெ.(n.) 1. இடையில் கட்டும் பட்டை, கச்சை; belt, girdle, sash, cummerbund. *"மள்ளர் . . . யாத்த பூங்கச்சு" (சீவக.16).* 2. கச்சைக்கயிறு; broad tape band. *"தாழ் கச்சிற் பிணிப்புண்டு" (சீவக.1748).* 3. ஆடைவகை; a kind of garment. *"கருங்கச்சு யாத்த" (அகநா.376:8).* 4. துணி; cloth.

ம. கச்சு; க. கச்செ, Vedic. kachchu.

[கட்டு → கச்சு = கட்ட உதவும் பட்டை, கயிற்றுத்துணி, இறுக்குகை, பிணைப்பு.]

கச்சு³ *kaccu,* பெ.(n.) முலைக்கச்சு; a kind of corset worn by women in ancient times. *"மார்பின் விரவுவரிக் கச்சின்" (பெரும்பாண்.70-71).*

ம. கச்சு; குரு. கச்சி; கசபா. கச்சு; Skt. kancuka.

[கவ்வு → கச்சு.]

கச்சு⁴ *kaccu,* பெ.(n.) கசப்புச்செடி; bitter plant (சா.அக.).

[கள் → கய் → கய → கயச்சு → கச்சு. கய = கசப்பு.]

கச்சு⁵ *kaccu,* பெ.(n.) 1. மா, பலா முதலிய பழங்களைச் சிறு துண்டுகளாக நறுக்கிச் செய்யும் உணவு வகை; fruit salad. 2. தக்காளி, வெள்ளரி முதலிய காய்களைச் சிறு துண்டுகளாக நறுக்கி உருவாக்கும் உணவுவகை; vegetable salad. 3. சிறிது; little.

[குஞ்சு → கொஞ்சு → கொஞ்சம் = சிறிது. கொஞ்சு → கொச்சு = சிறிது, சிறிய. கொச்சு → கச்சு (வே.க.150).]

கச்சு[6] *kaccu,* பெ.(n.) 1. நெருப்பு; fire. 2. மீன்; fish.

க., பட. கிச்சு.

[கிச்சு → கச்சு. கிச்சு = நெருப்பு. கிச்சு பார்க்க; see kiccu. இஃது திராவிடத் திரிபு.]

கச்சு[7] *kaccu,* பெ.(n.) 1. மடிப்பு; fold. 2. எல்லை; border. 3. கரை; bank. 4. அளவு; measure.

[கவ்வு → கச்சு.]

கச்சுக்கச்செனல் *kaccu-k-kaccenal,* பெ.(n.) ஓயாது பிதற்றுதற் குறிப்பு (யாழ்.அக.); onom. expr. of babbling interminably.

[கச்சு + கச்சு + எனல் - ஒலிக்குறிப்பு இடைச்சொல்.]

கச்சுக்கட்டில் *kaccu-k-kaṭṭil,* பெ.(n.) **கச்சைக்கட்டில்** பார்க்க; see *kaccai-k-kaṭṭil.*

[கச்சு[2] + கட்டில்.]

கச்சுக்கழி *kaccu-k-kaḻi,* பெ.(n.) கூரை அமைக்கப் பயன்படும் மரக்கழி வகைகளுள் ஒன்று; a stick used for roofing purpose.

[கச்சு[5] + கழி. கச்சு = சிறிய, சிறிது.]

கச்சுக்காய் *kaccu-k-kāy,* பெ.(n.) **கழற்சிக்காய்** பார்க்க; see *kaḻaṟci-k-kāy.*

[கழற்சிக்காய் → கச்சுக்காய்.]

கச்சுக்கெண்டை *kaccu-k-keṇḍai,* பெ.(n.) கருங்கெண்டை; bitter carp.

[கச்சு[4] + கெண்டை.]

கச்சுகம் *kaccugam,* பெ.(n.) மாமரம்; mango tree (சா.அக.).

ம. கச்சு (காய்ச்சிப் பதப்படுத்திய மாம்பழச்சாறு)

[கச்சு → கச்சுகம். கச்சு = சிறியது. சிறிய காய்களைக் காய்க்கும் மாமரம்.]

கச்சுகோரம் *kaccu-kōram,* பெ.(n.) ஏனத்தின்வகை; a kind of vessel. *'தயிர்ப் போனகம் அமுதுசெய்தருள இட்ட வெள்ளிக் கச்சுகோரம்' (S.I.I.V.272.).*

[கச்சோலம்[2] → கச்சுகோரம்.]

கச்சுப்பிச்சுப்படு-தல் *kaccu-p-piccu-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) கம்பலைப்படுதல்; meaningless uproar.

[கச்சு + பிச்சு + படு. கச்சுப்பிச்சு = எதுகை நோக்கிவந்த ஒலிக்குறிப்பு இணைச்சொல்.]

கச்சுப்பிச்செனல் *kaccu-p-piccenal,* பெ.(n.) தெளிவில்லாமல் பேசுதற்குறிப்பு. (வின்.); onom. expression signifying muttering, speaking indistinctly.

[கச்சு + பிச்சு + எனல். கச்சுப்பிச்சு - எதுகைநோக்கி வந்த ஒலிக்குறிப்பு இணைச்சொல்.]

கச்சுப்புல் *kaccu-p-pul,* பெ.(n.) ஒருவகைக் கசப்புப்புல்; a bitter variety of grass (சா.அக.).

[கயப்பு = கசப்பு. கயப்பு → கசப்பு → கச்சு + புல்.]

கச்சுப்பூடு *kaccu-p-pūḍu,* பெ.(n.) கசப்புப்பூடு; any bitter plant (சா.அக.).

[கச்சு[4] + பூடு.]

கச்சுமதி *kaccu-madi,* பெ.(n.) உடம்பில் பட்டால் தினவுண்டாக்கும் பூனைக்காலிச்செடி; cowhage plant (சா.அக.).

[கச்சு[6] + மதி.]

கச்சுரம்[1] *kaccuram,* பெ.(n.) 1. அசட்டுப்புண்; a scabby sore. 2. அரிப்பு; itching. 3. சொறியால் துன்புறல்; being affected by a skin disease.

[கச்சு[6] → கச்சுரம் = அரிப்பு, அரிப்பால் உண்டாகும் சொறி, புண்.]

கச்சுரம்[2] *kaccuram,* பெ.(n.) 1. கத்தூரி மஞ்சள்; Cochin turmeric. 2. கற்பூரக் கிச்சிலிக் கிழங்கு; camphor turmeric.

க. கச்சூர; Skt. karcura.

[கச்சல் = இளமை, மென்மை. கச்சல் → கச்சலம் → கச்சுரம் = மென்மையான மணமுடையது.]

கச்சுரி[1] *kaccuri,* பெ.(n.) 1. நெருப்பு (அக.நி.); fire.

[கிச்சு → கச்சு → கச்சுரி.]

கச்சுரி[2] *kaccuri,* பெ.(n.) ஒட்டொட்டிப்புல்; a kind of grass with prickly seeds which stick to the clothes.

[கச்சு[1]→கச்சுரி. கச்சு = பிணைதல், சேர்தல், ஒட்டுதல்.]

கச்சுரு *kaccuru,* பெ(n.) நெருப்பு; fire (சா.அக.).

[கச்சு[6] → கச்சுரு.]

கச்சுரை *kaccurai,* பெ.(n.) 1. பெருங்காஞ்சொறி; big nettle (சா.அக.).

[கச்சு[6] → கச்சுரை = உடம்பில்பட்டால் நெருப்புப் போல் எரியும் தன்மையுடைய இலைகளையுடையது.]

கச்சூர் *kaccūr,* பெ.(n.) செங்கல்பட்டு வட்டத்தைச் சேர்ந்த திருக்கச்சூர்; Thirukkachur of Chengalput taluk. *"களத்தூராக் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுக் கச்சூர்" (தெ.இ.கல்.தொ.26 கல்.284).*

[கச்சி + ஊர் - கச்சியூர் → கச்சூர்.]

கச்சூர்க்கட்டை *kaccūr-k-kaṭṭai,* பெ.(n.) 1. தண்டியப் பலகை (C.G.); perch. 2. பலகையைத் தாங்கச் சுவரிற் பதிக்கும் கட்டை; wooden prop fixed into a wall to support a shelf.

மறுவ. கச்சூரிக்கட்டை

[கச்சு[3] + உறு + கட்டை. கச்சு = கவ்வு (பிடித்து) நிற்றல்.]



கச்சூர்க் கட்டை

கச்சூரம் *kaccūram,* பெ.(n.) 1. கழற்சிக்கொடி; molucca-bean. 2. கழற்சிக்காய் (L.); bonduc-nut. *"கச்சூர முந்துங் கலைசையே" (கலைசைச்.23).* 3. சிறுகுறட்டைக்காய்; small corattay gourd.

[கழற்சி → கழச்சி → கச்சி → கச்சு → கச்சூரம்.]

கச்சேரி *kaccēri,* பெ.(n.) **கச்சாலை** பார்க்க; see *kaccālai.* என் வீட்டுக்காரரும் கச்சேரிக்குப் போனார் (உ.வ.).

[கச்சாலை → கச்சேரி.]

கச்சை[1] *kaccai,* பெ.(n.) 1. கயிறு (பிங்.); rope. 2. யானையின் கீழ்வயிற்றிற் கட்டும் கயிறு; elephant's girth. *"கச்சை யானை" (சிலப்.5:142).* 3. கட்ட உதவும் நாடாப்பட்டை; broad tape. 4. நாடாவாற் கட்டப்பட்ட பயணத் தூளி (kodai.); canvas chair for hill travel. 5. அரைக்கச்சு; girdle. *"மாசுணக் கச்சை பாடி" (திருவாச.9:19).* 6. பாதிரியார் அணியும் இடைவார்; cincture. 7. **கச்சம்[6]** பார்க்க; see *kaccam[6]*. 8. முழுமையான புதுத்துணி; whole piece of a new cloth. *"நீலக் கச்சைப் பூவா ராடை" (புறநா.274:1).* 9. வார்; belt. 10. மெய்புதையரணம் (கவசம்); armour.

ம. கச்ச; கோத. கச்வ்; துட. கொக்; து., க., குட., கச்செ; தெ., கச்ச; Skt. kaksya, kaccha. Pkt. kachcha.

[கட்டு → கச்சு → கச்சை = கட்ட உதவும் நாடாப்பட்டை. கச்சு → கச்சம்.]

கச்சை[2] *kaccai,* பெ.(n.) தழும்பு; scar.

[கள் (= கவ்வு) + சு - கச்சு → கச்சை.]

கச்சை[3] *kaccai,* பெ.(n.) கிண்கிணி; a tinkling ornament. *"கருடன் காலிற் கச்சை கட்டினதுபோல்" (பெண்மதிமாலை,115).*

ம. கச்சு (பூண்); தெ. கெச்ச; க. கெச்செ.

[கச்சு[5] → கச்சை. கச்சு = சிறிது.]

கச்சை[4] *kaccai,* பெ.(n.) 1. மேலாடை (நாநார்த்த.); upper garment. 2. கோவணம்; loin-cloth.

ம. கச்ச; க. கச்செ; து., குட. கச்செ; தெ. கச்ச; Skt. kacchu (below); Pali. kaccha.

[கச்சு[2] → கச்சை.]

கச்சை[5] *kaccai,* பெ.(n.) ஒப்பு (நாநார்த்த.); similarity.

[கச்சு[2] → கச்சம்[5] → கச்சை = ஒன்றைப்போலிருப்பது.]

கச்சைக்கட்டில் *kaççai-k-kaṭṭil,* பெ.(n.) நாடாக் கட்டில்; cot which is plaited with cloth or tapes. கச்சைக்கட்டில் படுப்பதற்கு இதமாயிருக்கும் (உ.வ.).

[கச்சை[1] + கட்டில். கச்சை = துணி, நாடா. கட்டு → கட்டில் (வ.மொ.வ.102)]

கச்சைக்கட்டை *kaccai-k-kaṭṭai,* பெ.(n.) 1. பேய்க் கடுக்காய்; a species of crape myrtle. 2. வெண் தேக்கு (L.); benteak.

மறுவ. சின்னாஞ்சி.

[கச்சல் = பிஞ்சு, பசுமைநிறம், முதிராத இளமை, வெளிர்நிறம். கச்சல்[2] → கச்சை + கட்டை.]

கச்சைக்கொடியோன் *kaccai-k-koḍiyōṉ,* பெ.(n.) யானையின் கீழ்வயிற்றிற் கட்டும் கயிற்றைக்

கொடியில் கொண்டோன், கன்னன்; Karna, whose banner bore the device of an elephant's rope. "கச்சைக் கொடியோன் மறைக்கொடியோன்" (நல்.பாரத.பதினெட்டாம். 144).

[கச்சை[1] + கொடியோன்.]

கச்சைகட்டு-தல் *kaccai-kaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. ஆடையை இறுகக் கட்டுதல்; to tuck up one's cloth, to gird up one's loins. 2. ஒன்றைச் செய்ய மூண்டு நிற்றல்; solemnly determine to do a thing. "வழித்தொண்டு செய்திடக் கச்சை கட்டிக்கொண்டே" (குற்றாலக்.). 3. வீண் சண்டைக்கு நிற்றல்; to be ready for a quarrel. இவன் அவனைத் தொலைத்துவிடுவதாகக் கச்சைகட்டு கிறான் (உ.வ.).

மறுவ. வரிந்து கட்டுதல்

க. கச்செயகட்டு

[கச்சு[2] → கச்சை + கட்டு.]

ஒரு செயலை முனைப்போடு செய்யும்போதும், சண்டையிடும் போதும் ஆடைகளை வரிந்து கட்டிக்கொள்வது இயல்பு; இச் செயற்பாடு பற்றியே கச்சைகட்டுதல் இப் பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

கச்சைப்பட்டை *kaccai-p-paṭṭai*, பெ.(n.) குடலண்ட ஊதையினால் குடல் நின்ற இடத்தினின்று நழுவியிருப்பதைப் பழையபடி நிலைநிறுத்துவதற்காக இழுத்துக் கட்டுமோர் வரிநாடாப் பட்டை (வின்.); an abdominal belt used formerly in cases of hernia for holding up the intestines in position.

மறுவ. கச்சுப்பட்டை

[கச்சு → கச்சை + பட்டை.]

கச்சைப்புறம் *kaccai-p-puṟam*, பெ.(n.) மகளிர் இடுப்பில் அணியும் பொன்னாலான தொடரி (சங்கலி); a kind of plaited gold chain, a girdle ornament of a woman.

ம. கச்சப்புறம்

[கச்சை[1] + புறம் - கச்சைப்புறம் = இடுப்புக்கு அருகில் (புறத்து) அணிவது.]

கச்சைபோடு-தல் *kaccai-pōḍu-*, 19 செ.குன்றாவி. (v.t.) கைம்பெண்ணுக்குப் புதுத்துணியளித்தல். (தூத்துக்.மீனவ.); to offer new cloths to a widow.

[கச்சை + போடு. கச்சு[2] → கச்சை = துணி, புதுத்துணி.]

கச்சையுளுவை *kaccai-y-uḷuvai*, பெ.(n.) உண்பதற் கொவ்வா உளுவைமீன் (முகவை.மீனவ.); the unedible uḷuvai fish.

[கச்சை + உளுவை. கச்சு[4] → கச்சை. கள் → கய் → கய → கயச்சு → கச்சு. கய = கசப்பு.]

கச்சோடி *kaccōḍi*, பெ.(n.) வெள்ளை வெற்றிலை; the white betel leaf.

[கச்சல்[6] + ஓடி - கச்சலோடி → கச்சோடி. கச்சல் = வெளிர்நிறம். கச்சோடி = வெளிர்நிறம் பாய்ந்த வெற்றிலை.]

கச்சோடு *kaccōḍu*, பெ.(n.) காரமும் மென்மையுமில்லாத கருப்புநிறமான ஒருவகை மட்ட வெற்றிலை; an inferior kind of black betel-leaf devoid of tenderness and pungency (சா.அக.).

[கச்சல் + ஓடு - கச்சோடு. கச்சோடு = கருநிறம் பாய்ந்த வெற்றிலை. கள் = கருமை. கள் → கய் → கச்சல் = கருமை. ஓடு = கருநிறம் ஓடியது, கருமை படர்ந்தது. ஓடு - தொழிலாகுபெயர்.]

கச்சோணி *kaccōṇi*, பெ.(n.) வெற்றிலையோடு சேரும் நறுமணப்பொருள்வகை (மூ.அக.); compound of spices used with betel.

[கச்சோலம்[1] = நறுமணப்பொருள். கச்சோலம் → கச்சோணம் → கச்சோணி.]

கச்சோதம் *kaccōdam*, பெ.(n.) 1. மின்மினி; glow-worm, firefly. "சிறுகொள்ளி தன்னை... கச்சோதமென்று கருதி" (கந்தபு.அவைபு.43). 2. சுழல் வண்டு; an insect found whirling in water (சா.அக.).

[கிச்சு = நெருப்பு. கிச்சு → கிச்சுதம் → கிச்சோதம் → கச்சோதம் (கொ.வ.).]

கச்சோரம் *kaccōram*, பெ.(n.) **கச்சோலம்[1] 1,2** பார்க்க; *see kaccōlam[1]. 1,2.*

ம. கச்சோரம்

[கச்சு + ஊரம் - கச்சூரம் → கச்சோரம். கச்சல்[2] → கச்சு = இளமை, மென்மை.]

கச்சோலம்[1] *kaccōlam*, பெ.(n.) 1. பூலாங்கிழங்கு (தைலவ.தைல.39); long zedoary. 2. கிச்சிலிக் கிழங்கு (தைலவ.தைல.21); spiked garland-flower. 3. மாஞ்சில் (மூ.அக.); spikenard. 4. ஒருவகை நறுமணப்பொருள் (சிலப்.6.77, உரை.); a kind of aromatic substance. 5. ஏலக்காய்த்தோல் (வின்.); husk of cardamom. 6. சாதிக்காய்த்தோல்; the rind of nutmeg (சா.அக.).

ம. கச்சோலம்

[கச்சோரம் → கச்சோலம்.]

கச்சோலம்² *kaccōlam,* பெ.(n.) 1. சிறிய ஏனம்; small metal vessel for holding rice, sandal paste, etc. 2. வட்டவடிவில் பிடியுடன் மெருகிட்டுப் பளபளப்பாக அமைக்கப்பட்ட வெண்பொன்னாலான வழிபாட்டுக் கலங்களுள் ஒன்று; one of the worshipping vessels, circular in shape, made of silver. *(S.I.I.ii,91).*

மறுவ. கச்சோளம், கச்சட்டி.

[கச்சு + ஒலம். கச்சு⁵ = சிறியது.]

கச-த்தல் *kaša-,* 3 செ.கு.வி.(v.i.) 1. கைத்தல்; to taste bitter. *வேப்பங்காய் கசக்கும், வேப்பம் பழம் இனிக்கும் (உ.வ.).* 2. வெறுப்படைதல்; to be embittered, as the mind, to be disgusted, alienated.

ம. கசய்க்குக

[கள் → கய் → கய → கச. கய = கசப்பு.]

கசக்கம் *kašakkam,* பெ.(n.) சுணக்கம் (யாழ்.அக.); delay.

[கசகு = பின்வாங்கு, தயங்கு. கசகு → கசக்கம்.]

கசக்கல் *kašakkal,* பெ.(n.) கசங்கச்செய்கை; rubbing, crushing, bruising.

[கசக்கு → கசக்கல்.]

கசக்கால் *kaša-k-kāl,* பெ.(n.) ஊற்றுக்காலோரம் கசிவு நீருக்காகத் தோண்டப்படும் வாய்க்கால்; spring channel, channel dug out in beds of deep sand in a river to tap the underflow of water.

[கயம் + கால் - கயக்கால் → கசக்கால். கயம் = நீர்நிலை.]

கசக்கிப்பிழி-தல் *kašakki-p-piḻi-,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. துவைத்து நீர் பிழிதல்; to wring out, as wet clothes. ஆடையைக் கசக்கிப் பிழி (உ.வ.). 2. நெருக்கிவருத்துதல்; to trouble a person, to harass, oppress. அவனைக் கசக்கிப் பிழி (உ.வ.). 3. பச்சிலையை இரண்டு உள்ளங்கைகளுக்கு மிடையில் வைத்துக் கசக்கிச் சாறு எடுத்தல்; wringing or squeezing out as is being done to get juice from herbs, placing them between the palms. *முருங்கைக் கீரையைக் கசக்கிப் பிழிந்து சாறுண்டால் மாந்தம் போகும்* (சா.அக.).

[கசக்கு² → கசக்கி + பிழி (து.வி.)]

கசக்கு¹-தல் *kašakku-,* 5 செ.குன்றா்வி.(v.t.) 1. கசங்கச்செய்தல் (வின்.); to rub; to bruise between the fingers or hands; to squeeze, as a lemon; to crumple, as paper; to mash, as fruits. எலுமிச்சையைக் கசக்கிக் கொடு (உ.வ.). 2. ஆடையைக் கும்முதல்; to roll gently and wash, as linen. *'கந்தை யானாலும் கசக்கிக் கட்டு'* (பழ.). 3. நெருக்குதல்; to harass, nag, bring under discipline. வங்கி மேலாளர் கசக்குதலால் கடன் தண்டல் அதிகரித்துள்ளது (உ.வ.).

ம. கசக்குக, கயக்குக; குரு. கச்னா, கச்சச்.

[கள் → கய → கச → கசக்கு. கள் = கூடுதல், நெருங்குதல், நெருக்குதல்.]

கசக்கு² *kašakku,* தொ.பெ.(vbl.n.) கசங்கச் செய்கை; squeezing, bruising. அவன் எனக்கு ஒரு கசக்குக்குக் காணமாட்டான் (உ.வ.).

[கசங்கு → கசக்கு.]

கசக்குப்புகையிலை *kašakku-p-pugai-y-ilai,* பெ.(n.) புகைப்பதற்காகப் பதமாக்கப்பட்ட ஒருவகைப் புகையிலை (யாழ்ப்.); tobacco prepared in a certain way for smoking.

[கசக்கு¹ + புகை + இலை.]

கசக்குமுப்பு *kašakkum-uppu,* பெ.(n.) கசப்புச் சுவையும் தீமணமும் கொண்ட ஒருவகையுப்பு; a species of salt with a bad smell and bitterness (சா.அக.).

[கசக்கும் + உப்பு. கச → கசக்கும் (செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்). உம் = ஐம்பால் மூவிடங்களில் வரும் இறப்பல்லாக் கால பெயரெச்ச ஈறு.]

கசகச-த்தல் *kaša-kaša-,* 4 செ.கு.வி.(v.i.) 1. இறுக்கத்தால் அல்லது புழுக்கத்தால் உடல் வியர்த்தல்; to feel uneasy from clamminess due to perspiration on account of heat or sultriness. உடம்பெல்லாம் கசகசத்துப் போயிற்று (உ.வ.). 2. ஒழுங்கற்று ஒலித்தல் (வின்.); to sound rattle, as the crumpling of fine paper to rustle. கூட்டம் தொடங்கும் முன் உறுப்பினர்கள் கசகச வென்று பேசிக்கொண்டனர் (உ.வ.).

[கச → கசகச → கசகச-த்தல்.]

கசகசப்பு *kaśakaśappu,* பெ.(n.) 1. கசப்பு; bitterness. 2. வெறுப்பு; aversion, hatred.

ம. கசகசப்பு

[கச + கச - கசகச → கசகசப்பு.]

கசகச்வெனல் *kaśa-kaśa-v-eṉal,* பெ.(n.) 1. ஒலிக்குறிப்பு; onom. expression signifying rustling, gurgling. நேற்று முழுதும் கசகசவெனத் தூறலாக இருந்தது. 2. வியர்வையால் பிசுபிசுப்பாக உணர்தல்; feel sticky with sweat. உடம்பு கசகசக்கிறது (உ.வ.). 3. செழிப்புக்குறிப்பு; affluence, prosperity. அவருக்கு இப்போது கசகசவென்று நடக்கிற காலம் (வின்.).

[கச + கச + எனல்.]

கசகசா *kaśakaśā,* பெ.(n.) 1. கசகசாச்செடி; poppy plant. 2. கசகசாச் செடியின் விதை; seed of the white poppy plant (சா.அக.).

க. கசகசெ, கசகசி; Ar.,Mar. khaskhas.

[கச்சு = சிறிது, சிறிய. கச்சு → கச. கய் → கச = மென்மை, இளமை, வெளிர்நிறம். கச + கச - கசகசா = சிறியதும் வெண்மையாயுள்ளதுமான விதை, அவ் விதையைத் தரும் செடி. இவ் விதையினின்று பால்வரும்; எண்ணெயும் எடுக்கலாம். கசகசாவெண்ணெய் மருந்திற்குப் பயன்படும்.]

கசகசாச் செடி

கசகசாநெய் *kaśa kaśā-ney,* பெ.(n.) கசகசா வினின்று எடுக்கும் எண்ணெய்; the oil extracted from the poppy seeds.

[கசகசா + நெய்.]

கசகசாநெய் உணவு சமைக்கவும் விளக்கெரிக்கவும் பயன்படும். உறக்கத்தைத் தூண்டும் இயல்புள்ள இந் நெய் ஓவிய வேலைகளுக்கும் பயன்படுகிறது.

கசகபாலி *kaśakabāli,* பெ.(n.) கிளிமுருக்கு; red bean tree (சா.அக.).

[கள் → கய → கயக → கசக (மென்மை) + பாலி. பால் = பற்றுதல், காத்தல், வளர்த்தல். பாலி = முளைக்கவிட்ட குற்றிளந்தவச நாற்று. மிக்கிளமையின் வெளிர்பச்சை நிறம் கிளிமுருக்கின் நிறத்திற்கு ஆகி வந்தது.]

கசகம்[1] *kaśagam,* பெ.(n.) வெள்ளரி; cucumber.

[கள் = மென்மை, இளமை, பிஞ்சு. கள் → கய → கச → கசகம்.]

கசகம்[2] *kaśagam,* பெ.(n.) கருங்கொள்; black horsegram.

[கள் = கருமை. கள் → கச → கசகம்.]

கசகம்[3] *kaśagam,* பெ.(n.) ஒருவகைக் காளான்; a species of mushroom.

[கள் = திரட்சி. கள் → கச → கசகம்.]

கசகரணி *kaśa-karaṇi,* பெ.(n.) 1. வெருகஞ்செடி (தைலவ.தைல.38); 2.வெருகங்கிழங்கிலிருந்து இறக்கும் எண்ணெய்; an oil extracted from the root of the plant arum macrorizon (சா.அக.).

[கள் = திரட்சி. கள் → கய → கச → கசம் + கரணி. கரணி = மருந்து, திரட்சியான கிழங்கிலிருந்து இறக்கிய எண்ணெய்.]

கசகு[1]**-தல்** *kaśagu-,* 9 செ.கு.வி.(v.i.) 1. பின்வாங்குதல்; to be unwilling, reluctant. 2. நழுவுதல்; to skid, slip. 3. ஐயத்தாற்றளர்தல்; to have misgivings; to show hesitancy.

[கலங்கல் → கயங்கல் → கசங்கல் → கசகல் → கசகு (கொ.வ.). கலங்கல் கருத்தினின்றும் தயங்கல் கருத்து முகிழ்த்தது.]

கசகு[2]**-தல்** *kaśagu-,* 9 செ.கு.வி. (v.i.) பண்டமாற்று முதலியவற்றில் சிறு ஆதாயம் கருதிச் சொல்லாடுதல்; to bargain.

[கழல் → கயல் → கசல் → கசகு. கழல்தல் = உரையாடுதல், பேசுதல்.]

கசங்கம் *kaśaṅgam,* பெ.(n.) மரவகை (பீநாறி) (மலை.); fetid tree.

[கசங்கு → கசங்கம்.]

கசங்கு[1]-தல் *kašaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. குழைதல்; to be squeezed, crumpled, rubbed, as a leaf. 2. தொடுவதால் மெல்லிய பொருள் தன் நிலை கெடுதல்; to lose freshness, as a flower that has been much handled. மலர்கள் கசங்கிவிட்டன (உ.வ.). 3. வேலையினால் இளைத்தல் (வின்.); to be exhausted, worn out by labour; to become wearied, as by walking too much. பணிச்சுமையால் கசங்கிவிட்டான் (உ.வ.). 4. மனம் நோதல்; to be displeased, hurt in mind. அவனுடைய மனம் கசங்கிப் போயிற்று (உ.வ.).

ம. கசங்க; குரு. கச்னா.

[குழை → குழ → கழ → கச → கசங்கு-.]

கசங்கு[2] *kašaṅgu,* பெ.(n.) 1. பேரீச்சை மரம் (மூ.அக.); wild date-palm. 2. ஓலை கழித்த ஈச்சமட்டை (வின்.); stalk, as of the date-leaf. 3. நார்; fibre.

[கள் = முள். கள் → கயங்கு → கசங்கு.]

கசங்குக்கூடை *kašaṅgu-k-kūḍai,* பெ.(n.) ஈச்சங்கூடை; wicker basket.

[கசங்கு[2] + கூடை.]

கசங்குத்தட்டு *kašaṅgu-t-taṭṭu,* பெ.(n.) கசங்குகொண்டு முடையப்பட்ட தட்டு; wicker basket made of palm-leaf stalk.

மறுவ. தட்டு, தட்டுக்கூடை.

[கசங்கு[2] + தட்டு.]

ஒ.நோ: சோளத்தட்டு → சோளத்தட்டை.

கசட்டம்புல் *kašaṭṭam-pul,* பெ.(n.) சுக்குநாறிப்புல்; ginger grass (சா.அக.).

[கசள் → கசடு + அம் → கசட்டம் + புல். கசள் = இளமை, மென்மை.]

கசட்டை *kašaṭṭai,* பெ.(n.) 1. துவர்ப்பு (யாழ்ப்.); astringency, as of unripe fruit. 2. இளமை; youth-hood (சா.அக.).

[கள் → கசள் → கச → கசட்டை. கசள் = இளமை, மென்மை.]

கசட்டைத்தயிர் *kašaṭṭai-t-tayir,* பெ.(n.) ஆடை எடுத்த தயிர் (யாழ்ப்.); curd from which the butter has been removed.

[கள் = திரண்டது. கள் → கய → கச → கசட்டை + தயிர்.]

கசட்டைப்பிஞ்சு *kašaṭṭai-p-piñju,* பெ.(n.) 1. கசப்புப்பிஞ்சு அல்லது இளங்காய்; bitter and tender fruit. 2. துவர்ப்புப்பிஞ்சு; tender astringent fruit. 3. இளம்பிஞ்சு; tender and young fruit. 4. பழுக்காத காய்; an unripe fruit (சா.அக.).

[கசட்டை + பிஞ்சு.]

கசடர் *kašaḍar,* பெ.(n.) கீழ்மக்கள் (இ.நூ.அக.); mean and unscrupulous persons.

[கசடு[1] + அர் (ப.பா.ஈறு) - கசடர்.]

கசடறு-த்தல் *kašaḍaṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. அழுக்குப் போக்கல்; to remove filth. 2. தூய்மை செய்தல்; to clean, as of metal from rust. 3. மனத்தின் மாசுபோக்கல்; to get rid of the impurities of the mind (சா.அக.).

[கசடு[1] + அறு.]

கசடறுக்கும்மண் *kašaḍaṟukkum-maṇ,* பெ.(n.) உழமண்; dhoby's earth which removes dirt from clothes.

[கசடு[1] + அறுக்கும் + மண்.]

கசடன் *kašaḍaṉ,* பெ.(n.) குற்றமுள்ளவன்; he who is low-minded, wicked. பணத்திற்காக எதையும் செய்யும் கசடன்.

ம. கசடன்

[கசடு[1] + அன் (ஆ.பா.ஈறு) - கசடன்.]

கசடு[1] *kašaḍu,* பெ.(n.) 1. குற்றம்; blemish, fault, defect, imperfection. *"கற்க கசடற"* *(குறள்,391).* 2. அழுக்கு (பிங்.); uncleanliness, dirtiness. *"ஐயமறாஅர் கசடீண்டு காட்சி"* *(புறநா.214:2.).* 3. ஐயம்(பிங்.); doubt. 4. அடிமண்டி; dregs, lees. நெய்யுருக்கினால் கசடிருக்கும் (உ.வ.). 5. கழிவு; waste, impurities. ஆலைக்கசடு (உ.வ.).

க. கசட, கசடா, கசரா, கச்சட; ம. கசடு; தெ. கசடு; து. கசவு; கசாவு; துட. கொசவ்; குரு. கச்சர்; மா. கசெ; பட. கச. Skt. kaccacra; H. kacra; Pali. kacaḍu ; Mar. kacara; Pkt. sakada.

[கசள்² → கசண்டு → கசடு (திரு.தமி.மர.739.) கசடு மண்டி போன்ற குற்றம் (சொல்.கட்.42)].

கசடு² *kašaḍu,* பெ.(n.) 1. குறைவு (யாழ்.அக.); deficiency. 2. ஈளைநோய்; consumption. 3. தழும்பு, வடு; scar. *"கைக்கச டிருந்தவென் கண்ணகன் தடாரி" (பொருந.70).* 4. சளி; phlegm.

[கசள்² → கசடு.]

கசடு³ *kašaḍu,* பெ.(n.) மயிர்; hair.

[கள் = கருமை. கள் → கய → கயல் → கசள் → கசடு.]

கசடு⁴-தல் *kašaḍu-,* 5 செ.கு.வி.(v.i.) கசகு²-தல் பார்க்க; *see kašagu²-.*

கசண்டு *kašaṇḍu,* பெ.(n.) 1. அடிமண்டி, வண்டல்; dregs, lees (சா.அக.). 2. குற்றம்; blemish. 3. அழுக்கு; uncleanliness, fault, defect, imperfection, dirtiness. 4. வடு; scar.

க. கசடு; தெ. கசி; து. கசண்டு.

[கசள்² → கசண்டு.]

கசப்பகத்தி *kašapagatti,* பெ.(n.) பேயகத்தி; bitter fig or wild fig (சா.அக.).

[கசப்பு + அகத்தி.]

கசப்பி¹ *kašappi,* பெ.(n.) 1. வேம்பு (மலை.); margosa. 2. வல்லாரை (மலை.); Indian pennywort, herb.3. காசித்தும்பைப்பூ (சங்.அக.); white dead nettle flower. 4. பேய்ப்பீர்க்கு; bitter gourd. 5. சிறுவாலுளுவை; small variety of spindle tree. 6. கருங்காலி; ebony tree. 7. பொன்னூமத்தை; datura plant bearing yellow flowers (சா.அக.).

[கசப்பு → கசப்பி.]

கசப்பி² *kašappi,* பெ.(n.) மயிலின் தலைக் கொண்டை; peacock fan fern, like a miniature palm.

[கசள்² → கசப்பி.]

கசப்பு *kašappu,* பெ.(n.) 1. அறுசுவைகளுளொன்று; one of the elementary sensations of taste, bitterness. 2. வெறுப்பு; disgust, aversion. உடன் பிறந்தார்களுக் குள் கசப்பு மண்டிக் கிடந்தது (உ.வ.). 3. கக்கல்கழிச்சல் (வாந்திபேதி); cholera. அவன் ஒரேயடியாய்க் கசப்படித்துக் கிடக்கிறான் (உ.வ.).

ம. கசப்பு, கய்பு; க. கய், கயி, கய்யி, கய்பு, கய்பெ; தெ. கசு; கை. கயிபெ, கைபெல்; இரு. கேசபெ; எரு. கய்ச்சு; கோத. கய்; குட. கய்; கோண். கேகசே, கைத்தானா; பர். கேபி; மா. க்வசெ; பட. கைமெ.நு கோண். (அடிலா). கைய்ய.

இமயமலை சார்ந்த மொழிகள்:

Gyar. kuchchek; **Takpa.** khakbo; **Thochu.** khak; **Tibet (col)** khako; **Serpa.** khakti; **Sunwar.** kaso; **Magar.** khacho; **Newar.** khaiyu; **Limbu.** kckhikpa; **Kiranti.** khakho; **Rung.** kha - kwa; **Chhing.** khak'no; **Achher.** khik'do; **Aling.** khak; **Yakha.** khika; **Chouras.** khacho; **Kulung.** khike; **Thulung.** khepa; **Bahing.** kaba; **Lohor.** khik'ka; **Lambich.** khik'yukha; **Balali.** kheukup; **Sangpang.** khiki; **Dumi.** khepa; **Khaling.** khapa; **Dungmali.** khaki; **Pahri.** khakhadha; **Bhram.** kyakhai; **Vayu.** khachin; **Kusunda.** katuk; **Lepcha (sikkim).** krimbo; **Bhutani.** khako; **Bodo.** gakha; **Dhimal.** khakha; **Kocch.** kaduva; **Kachari.** goka; **Mithan Naga.** kha; **Tableung Naga.** kha; **Khari Naga.** kha; **Sibsagar Miri.** kodak; **Deoria chutia.** kai; **Singpho.** kha; **Angami Naga.** (k = ch) chasi; **Burmese(Lit).** kha; **Burmese (Lit).** kha; **Burmese (Col).** kha; **Khyeng V.** khau-show; **Kami.** kha; **Talain v Mon.** ka- taw; **Sgau-Karen.** kah; **Pwo - Karen.** khah; **Toungh - thu.** khu; **Shan.** khon; **Siamese.** khom; **Ahom.** khum; **Khamti.** khom; **Laos.** khom.

[கைப்பு → கய்ப்பு → கசப்பு.]

கசப்புச் சுவையைக் குறிக்கக் காடு, புனம், பேய் ஆகிய சொற்கள் அடைகளாய் வந்துள்ளன. (எ-டு. காட்டுக்கொள், புன முருங்கை, பேய்ப்பீர்க்கு). காட்டில் விளைவன மிகு உரத்தினால் கொழுத்துக் கசப்புச் சுவையுடன் இருக்கும். அதனால் கசப்புக்கு இச் சொற்கள் (காடு, புனம்) அடைகளாய் வந்துள்ளன.

கசப்புக்கசகசா *kašappu-k-kašakašā*, பெ.(n.) கருப்புக் கசகசா; black poppy (சா.அக.).

[கசப்பு + கசகசா.]

கசப்புக்காய் *kašappu-k-kāy*, பெ.(n.) பேய்ச்சுரைக் காய்; bitter bottle-gourd (சா.அக.).

[கசப்பு + காய்.]

கசப்புக்கிச்சிலி *kašappu-k-kiccili*, பெ.(n.) தஞ்சாவூர் நாரத்தை; Thanjavur bitter orange (சா.அக.).

ம. கைப்பநாரங்க

[கசப்பு + கிச்சிலி.]

கசப்புக்கெண்டை *kašappu-k-keṇḍai*, பெ.(n.) கருங்கெண்டை மீன்; bitter carp.

ம. கய்பு

[கசப்பு + கெண்டை.]

கசப்புக்கையான் *kašappu-k-kaiyāṉ*, பெ.(n.) கசப்புக்கரிசலை; a bitter variety of eclipse plant (சா.அக.).

[கசப்பு + கையான் (இலையுடையது).]

கசப்புக்கொடிச்சி *kašappu-k-koḍicci*, பெ.(n.) செந்திராய்; a red variety of Indian chick weed (சா.அக.).

[கயப்பு → கசப்பு + கொடிச்சி.]

கசப்புக்கொழுமிச்சை *kašappu-k-koḻumiccai*, பெ.(n.) காட்டுக் கொழுமிச்சை; bitter citron (சா.அக.).

[கசப்பு + கொழுமிச்சை.]

கசப்புக்கொள் *kašappu-k-koḷ*, பெ.(n.) பேய்க்கொள்; jungle horse-gram.

[கசப்பு + கொள்.]

கசப்புச்சுரிஞ்சான் *kašappu-c-curiñjāṉ*, பெ.(n.) வயிற்றுப்போக்கை உண்டாக்கும் ஒருவகைக் கசப்பு மூலிகைவேர்; a bitter Unani drug; mercury's finger.

[கசப்பு + சுரிஞ்சான். சுரிஞ்சான் = ஒருவகைப் பழுப்புநிறக் கிழங்கு. கசப்புச்சுரிஞ்சான் உட்கொள்ளத் தரப்படுவதில்லை.]

கசப்புச்சுரை *kašappu-c-curai*, பெ.(n.) பேய்ச்சுரை; bitter bottle-gourd.

மறுவ. கசப்புக்காய்

[கசப்பு + சுரை.]

கசப்புத்திரு *kašappu-t-tiru*, பெ.(n.) சிவதை வேர்; the root of Indian jalap (சா.அக.).

[கசப்பு + திரு. தூறு → துறு → திறு → திரு.]

கசப்புத்துவரை *kašappu-t-tuvarai*, பெ.(n.) பேய்த்துவரை; bitter pigeon pea, wild pigeon pea (சா.அக.).

[கசப்பு + துவரை.]

கசப்புநீர் *kašappu-nīr*, பெ.(n.) கறியுப்பு எடுத்தபின் நின்ற கைப்பு நீர்; the residual water after crystallisation of sodium chloride (சா.அக.).

[கசப்பு + நீர்.]

கசப்புப்பசலை *kašappu-p-pašalai*, பெ.(n.) கசப்புச்சுவையுடைய ஒருவகைப் பசலைக்கீரை; a bitter species of spinach.

மறுவ. தரைப்பசலை.

[கசப்பு + பசலை.]

மலைப்பாங்கான இடங்களில் வளருகின்ற இப் பசலையால் இதளியம் (பாதரசம்) மணியாகும்; சாதிலிங்கம் பொடியாகும்; நாகம் செந்தூரமாகும்; பொன்னுக்கு மாற்றேறும் என்பர்.

கசப்புப்பாலை *kašappu-p-pālai*, பெ.(n.) பேய்ப்பாலை; a bitter plant (சா.அக.).

[கசப்பு + பாலை.]

கசப்புப்பீர்க்கு *kašappu-p-pīrkku*, பெ.(n.) பேய்ப்பீர்க்கு; wild-luffa (சா.அக.).

[கசப்பு + பீர்க்கு.]

கசப்புப்பீவேல் *kašappu-p-pīvēl*, பெ.(n.) கசப்பான பீவேல மரம்; a bitter variety of fetid memosa (சா.அக.).

[கசப்பு + பீவேல்.]

கசப்புப்புகையிலை *kašappu-p-pugaiyilai*, பெ.(n.) **கைப்புப் புகையிலை;** bitter tobacco (சா.அக.).

[கசப்பு + புகையிலை.]

கசப்புப்போளம் *kašappu-p-pōḷam,* பெ.(n.) கரியபோளம்; black myrrh, hepatic aloe.

[கசப்பு + போளம்.]

மலைக் கற்றாழையின் சாற்றை உறையவைத்துப் பதப்படுத்தி அணியமாக்கிய ஒரு கருப்புக் கூட்டு மருந்து (சா.அக.).

வகைகள்: அரபிப் போளம்; இந்துப்போளம்; பாரசீகப் போளம்.

கசப்புமாஞ்சகி *kašappu-māñjagi,* பெ.(n.) கசப்புக்கும்மட்டி; bitter apple (சா.அக.).

மறுவ. பேய்க்கும்மட்டி

[கசப்பு + மாஞ்சகி.]

கசப்புமுருங்கை *kašappu-muruṅgai,* பெ.(n.) கசப்புச்சுவையுடைய முருங்கை; bitter drumstick (சா.அக.).

[கசப்பு + முருங்கை.]

கசப்புவாதுமை *kašappu-vādumai,* பெ.(n.) கசப்பு வாதுமைமரம்; bitter almond tree.

[கசப்பு + வாதுமை.]

கசப்புவெட்பாலை *kašappu-veṭpālai,* பெ.(n.) குடசப்பாலை; conessi bark.

[கசப்பு + வெள் + பாலை. வெட்பாலை = வெண்மையான பூக்கள் உள்ள பாலை. இதன் அரிசி கசப்பு வெட்பாலையரிசி.]

கசப்புவெள்ளரி *kašappu-veḷḷari,* பெ.(n.) காட்டு வெள்ளரி; bitter cucumber.

[கசப்பு + வெள்ளரி.]

கசப்புவேர் *kašappu-vēr,* பெ.(n.) சிவப்பு உரோகிணிச் செடியின் வேர்; bitter root of red rōkiṇi (சா.அக.).

[கசப்பு + வேர்.]

கசப்பூலிகம் *kašappūligam,* பெ.(n.) மிதிபாகல்; prostrate creeper, a small variety of bitter gourd (சா.அக.).

ம. கசில்லகம்; Skt. kacillaka.

[கசப்பு + ஊலிகம்.]

கசப்பெலுமிச்சை *kašappelumiccai,* பெ.(n.) காட்டெலுமிச்சை; jungle lime (சா.அக.).

[கசப்பு + எலுமிச்சை.]

கசப்பைந்து *kašappaindu,* பெ.(n.) நொச்சி, வேம்பு, கண்டங்கத்தரி, சீந்தில், பேய்ப்புடல் ஆகிய ஐந்து கசப்பு மருந்துப்பூடுகள்; the five bitter drug plants viz., common gendarussa, margosa tree, prickly night shade, moon-creeper, wild snake-gourd (சா.அக.).

[கசப்பு + ஐந்து.]

கசபுசல் *kašapušal,* பெ.(n.) கமுக்கம் ஒன்றைப்பற்றிய ஊர்ப்பேச்சு; gossip about a secret, tittle-tattle. *ஊரில் அதைப்பற்றிக் கசபுசலாயிருக் கிறது (உ.வ.).*

[கசமுச (ஒலிக்குறிப்பு) → கசபுச → கசபுசல். ஒலிக்குறிப்பு அடிப்படையாக வந்த கமுக்கப் பொருள், ஊர்ப்பேச்சைக் குறித்தது.]

கசபுடம் *kašapuḍam,* பெ.(n.) நூறு எருமுட்டையை வைத்தெரிக்கும் புடம்; a fire prepared with one hundred cakes of dried cowdung for calcining medicines.

[கள் (கூடுதல்) → கய → கச → கசம் + புடம் - கசபுடம்.]

ஆயிரம் எருமுட்டை என்ற வழக்குமுண்டு.

கசம்[1] *kašam,* பெ.(n.) 1. காரிருள்; dense darkness. 2. குற்றம்; fault. 3. துன்பம்; distress.

[கள் (கருமை) → கய → கயம் → கசம். கள் = இருள் (வேக.125).]

'இருட்டுக் கசம்' என்பது நெல்லை வழக்கு.

கசம்[2] *kašam,* பெ.(n.) ஆழ்கடல்; deep sea.

[கள் → கயம் → கசம். கயம் = ஆழம்.]

கசம்[3] *kašam,* பெ.(n.) தாமரை (மூ.அ.); lotus.

[கயம் → கசம் = நீரில் உள்ளது.]

கசம்[4] *kašam,* பெ.(n.) 1. இரும்பு; iron. 2. கனிமம்; mineral.

[கசம்[1] → கசம்[4].]

கசம்பி *kašambi*, பெ.(n.) கருவண்டு; black beetle (சா.அக.).

[கசம்¹ → கசம்பி. கசம் = கருமை.]

கசமாதுகம் *kašamādugam*, பெ.(n.) ஊமத்தை; datura, thorn apple (சா.அக.).

மறுவ. கசமாது, கசமேடு.

[கசம் (கசப்பு) + (மத்தம்) மாதுகம். மத்தம் = கலக்கம், மயக்கம்.]

கசமீன் *kašamīn*, பெ.(n.) ஆழ்கடலில் மேயும் மீன் (முகவை.மீனவ.); a kind of sea fish.

[கயம் → கசம் + மீன் - கசமீன். கயம் = ஆழ்ந்த நீர்நிலை.]

கசமுச *kaša-muša*, பெ.(n.) 1. தாறுமாறு தன்மையைக் குறிக்கும் ஓர் ஒலிக்குறிப்புச் சொல்; onom. expression signifying disorderliness. 2. குழப்பம், தீங்கு போன்றவற்றைக் குறிக்கும் ஒலிக் குறிப்புச் சொல்; onom. expression signifying bewilderment, perplexity. 3. வெளிப்படையாக இல்லாதது; வெற்றுரை; gossip. *தலைவரைப் பற்றி நிறையக் கசமுசாப் பேச்சுகள் வந்துவிட்டன* (உ.வ.).

மறுவ. கசமுசா.

ம. கசசி; பட. க்சபிச, கசபுச.

[கச + முச - எதுகை மரபிணைச்சொல்.]

கசமுசவெனல் *kaša-muša-v-enal*, பெ.(n.) கசமுச பார்க்க; see *kaša-muša*.

[கச + முச + எனல்.]

கசர்¹ *kašar*, பெ.(n.) 1. இளநீர் முதலியவற்றின் துவர்; astringency of tender coconut water etc. 2. ஒரு மருந்து வகை; a kind of drug. 3. துவர்ப்பு; astringency in general.

[கள் → கய → கச → கசர் = கசப்பு, துவர்ப்பு.]

கசர்² *kašar*, பெ.(n.) 1. மிகுதி; excess. 2. குறைவு; shortage.

[கசிதல் = மிகுதல், மிகுந்து வெளியேறுவதால் நேரும் குறைவு. கசி → கசிர் → கசர்.]

கசர்³ *kašar*, பெ.(n.) சிவப்புக்கல்லின் குற்றவகை; flaw in a ruby.

[கள் → கய → கச (கருமை, குற்றம், சேறு, கறை) → கசர்.]

கசர்⁴ *kašar*, பெ.(n.) வணிகன் பகர்ந்த விலைக்கும், கொள்வோன் கொடுத்த தொகைக்கும் இடைப்பட்ட எச்சத்தொகை; the extra amount obtained by bargaining.

[கசி → கசர் = இடையில் எஞ்சியது, ஈவுத்தொகை.]

கசர்⁵ *kašar*, பெ.(n.) சேறு; mud.

மறுவ. சகதி

க. கெசறு

[கள் → கய → கச → கசர். கள் = இளமை. கசர் = இளகிய சேறு.]

கசர்ப்பாக்கு *kašar-p-pākku*, பெ.(n.) துவர்ப்பு மிகுந்த பாக்கு (யாழ்ப்.); highly astringent arecanut.

[கள் → கய → கயர் → கசர் + பாக்கு. கள் = இளமை.]

கசர்பிடி-த்தல் *kašar-pidi-*, 4 செ.கு.வி.(v.i.) கறைபடுதல்; to be soiled with juice of a vegetable.

[கசர் = சேறு, கறை. கசர் + பிடி.]

கசரி *kašari*, பெ.(n.) துவையல் (நாமதீப.); a kind of strong relish prepared by adding paste of chilli to coconut, ginger, curry or similar things.

[கசம்² → கசரி (நீர்த்தது, நீரொடு சேர்ந்தது).]

கசரை *kašarai*, பெ.(n.) காலே யரைக்காற் பலம் (S.I.I.ii,127.); a measure in weight = 1½ கஃசு.

[கஃசு + அரை → கஃசரை → கசரை.]

கசலி *kašali*, பெ.(n.) மீன்வகை (நாமதீப.); a kind of fish.

[கச்சல்⁷ → கச்சலி → கசலி.]

கசலை¹ *kašalai*, பெ.(n.) துன்பம் (யாழ்.அக.); trouble.

[கசி⁴ → கசல் → கசலை.]

கசலை² *kašalai*, பெ.(n.) கெண்டைமீன்; a small variety of keṇḍai fish.

[கச்சல்⁷ → கசல் → கசலை. கச்சல் = சிறியது.]

கசவம் *kašavam*, பெ.(n.) கடுகு (மலை.); Indian mustard.

[கயம் → கயவம் → கசவம். கயம் = கருமை.]

கசவர் *kašavar*, பெ.(n.) தமிழ்நாட்டின் நீலமலை மாவட்டத்திலும் கருநாடக மாநிலத்தின் தென்பகுதியிலும் வாழும் திராவிடப் பழங்குடியினர்; a Dravidian tribe who inhabit the Nilgiri district of Tamilnadu and Southern part of Karnataka state.

[கச → கசவு → கசவர்.]

கசவாளி *kaša-v-āḷi*, பெ.(n.) **கயவாளி** பார்க்க; see *kaya-v-āḷi*.

[கயவன் → கயவாளி → கசவாளி.]

கசவிருள் *kaša-v-iruḷ*, பெ.(n.) பேரிருள் (வின்.); pitch darkness.

[கயம் + இருள் - கயவிருள் → கசவிருள். கயம் = ஆழம், நிறைவு, செறிவு. காரிருளை இருட்டுக்கசம் என்பது நெல்லை வழக்கு (வே.க.127).]

கசவு *kašavu*, பெ.(n.) 1. நார்ச் செடிவகை; a fibrous plant. 2. வைக்கோல்; hay. 3. மஞ்சள் நிறம்; yellow.

மறுவ. கசா (கசவு → கசா).

தெ. கசவு; க. கச.

[காலுதல் = நீளுதல். கால் → காய் → காசு → கசு → கச → கசவு.]

கசள்[1] *kašaḷ*, பெ.(n.) 1. இளமை; youth-hood. 2. மென்மை; tenderness.

[கள் → கய → கச → கசள். கள் = இளமை.].

கசள்[2] *kašaḷ*, பெ.(n.) 1. முதிராமை, செப்பமுறாமை; not matured, not refined. 2. குறையுடைமை, குற்றம்; blemish, defect. 3. கருமை; blackness. 4. மயிர்; hair.

க. கசரு

[கள் (கருமை, இழிவு) → கய → கயள் → கசள்.]

கசளி *kašaḷi*, பெ.(n.) சிறு கெண்டைமீன்; a small fresh water fish, barbus.

க. கெசளி

[குல் → குழ → குத → கத → கதலி → கசலி → கசளி (வே.க.147). குல் - தோன்றற் கருத்து வேர். இம் மீனைக் கெண்டைக் கசளி என்றும் அழைப்பர்.]

கசறு[1] *kašaṟu*, பெ.(n.) மாணிக்கத் (புட்பராகம்) தன்மைகளுளொன்று (மதி.களஞ்.2:47.); a quality in (puṣparagam) gems.

[கசம் = இருள், குற்றம். கசம் → கச → கசர் → கசறு.]

கசறு[2] *kašaṟu*, பெ.(n.) சிக்கல்; tangle, complication.

[கள் → கச → கசறு. கள் = கூடுதல், நெருங்குதல்.]

கசனை[1] *kašaṉai*, பெ.(n.) 1. ஈரம்; dampness, moisture, as round a well. *வீடு கசனைகொண்டு விட்டது (உ.வ.).* 2. உப்புப்பற்று; impregnation, as with salt. 3. பற்று; attachment, love. *"மாதர்கள் கசனையை விடுவது" (திருப்பு.143).*

[கசி → கசினை → கசனை. கசி = ஈரம், பசை, பற்று.]

கசனை[2] *kašaṉai*, பெ.(n.) சூட்டுக்குறி (யாழ்ப்.); mark with which cattle are branded.

[கசம் = இருள், கருமை. கசம் → கச → கசனை.]

கசனை[3] *kašaṉai*, பெ.(n.) செம்மண்; red earth, red ochre (சா.அக.).

[கசி = மஞ்சள், மஞ்சள் கலந்த செம்மை. கசி → கசிரி = செம்புளிச்சை. கசி → கசினை → கசனை.]

கசா *kašā*, பெ.(n.) **கசவு** பார்க்க; see *kašavu* (சா.அக.).

[கசவு → கசா.]

கசாகு *kašāgu*, பெ.(n.) பாம்பு; a snake (சா.அக.).

[கசகு → கசாகு. கசகுதல் = பின்வாங்குதல், அசைதல், நகர்தல், நழுவிச்செல்லல்.]

கசாகூளம் *kašā-kūḷam*, பெ.(n.) 1. தாறுமாறு; confusion. 2. குப்பை; garbage, refuse. 3. கடைப் பட்டோர்; dregs of society, scum, offscourings. 4. பலஇனக் கலப்பு; hybrid.

[கழி → கசி → கசம் + கூளம் - கசகூளம் → கசாகூளம். கூளம் = குப்பைக்குவியல்.]

கசாடு *kašāḍu,* பெ.(n.) வலையில் பிடிபடும் உண்பதற்கொவ்வா உயிரிகள் (இராமநா. மீனவ.); unedible fish varieties found in net.

[கசடு¹ → கசாடு.]

கசாது *kašātu,* பெ.(n.) 1. ***கைச்சாத்து*** பார்க்க; see *kai-c-cāttu.* 2. திருமணப்பதிவு; registration of marriage. *கசாது எழுதிக் கலியாணம் பண்ணியாயிற்று* (உ.வ.).

[கைச்சாத்து → கச்சாத்து → கசாது.]

கசாமுசாபண்ணு-தல் *kašā-mušā-paṇṇu-,* 5 செ.குன்றாவி.(v.t.) தாறுமாறாகச் செய்தல்; to make improper.

[கசாமுசா + பண்ணு.]

கசாரிப்பட்டி *kašāri-p-paṭṭi-,* பெ.(n.) அசாம் மாநிலத்தில் உள்ள ஊர்ப்பெயர்; a Tamil name of a village in Assam state.

[கசவர் → கசவரன் + பட்டி - கசவரன்பட்டி → கசவாரிப்பட்டி → கசாரிப்பட்டி.]

கசாலை¹ *kašālai,* பெ.(n.) 1. கோக்காலி; shelf, bracket. 2. சுவர்மேல் ஆரல் (நெல்லை); protective covering on a wall.

[கச்சல் + ஆலை - கச்சாலை (சிறியவிடம், சிறிய கூடம்) → கசாலை. கச்சல் = பிஞ்சு, இளமை, சிறிய.]

கசாலை² *kašālai,* பெ.(n.) சமையற்கூடம்; kitchen.

[கச்சல் + ஆலை - கச்சாலை → கசாலை. கச்சல் = சிறிய. ஆலை = இடம். கச்சாலை = சிற்றிடம்; சமையற்கூடம்.]

கசி¹-தல் *kaši-,* 4 செ.கு.வி.(v.i.) 1. ஈரங்கசிதல்; to ooze out as moisture from a wall; to spread as humidity around a water body. சென்ற மழையில் மேற்றிசைச் சுவர் முழுவதும் கசிந்தது (உ.வ.). 2. நுண்துளை வழியாக வளி முதலியன வெளியேறுதல்; to leak as gases through pores. நச்சுக்காற்றுக் கசிந்தால் உயிருக்கு ஏதம் ஏற்படும் (உ.வ.). 3. ஊறுதல்; water coming out from sand bed. ஆற்றுப்படுகையில் பல கசிவு வாய்க்கால்கள் தோன்றுவதுண்டு (உ.வ.). 4. வியர்த்தல்; to perspire as the hands and feet. கடும் உழைப்பால் வியர்வை கசிந்தது (உ.வ.). 5. குருதி, கண்ணீர், சீழ் முதலியன அரும்பி ஒழுகுதல்; to dribble as of blood, tears, pus etc. கடிவாயிலிருந்து குருதி கசிந்துகொண்டிருக்கிறது (உ.வ.). 6. அழுதல் (திவா.); to weep. 7. உப்பு, வெல்லம் முதலியன இளகுதல்; to melt as of salt, jaggery etc. மழைச்சாரலால் உப்புக் கசிந்துவிட்டது (உ.வ.). 8. மனம் நெகிழ்தல்; to relent as the heart in pity. *"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" (தேவா.3,307:1).* 9. கவலைப்படுதல் (நாநார்த்த.); to be distressed, troubled.

க. கசி; **கசபா.** கசி.

[கள் → கழி → கயி → கசி.]

கசி² *kaši,* பெ.(n.) 1. மஞ்சள்; turmeric. 2. மஞ்சள் நிறம்; yellow. 3. சிவப்பு; red.

[கசவு → கசி.]

கசிகசிப்பு *kaši-kašippu,* பெ.(n.) 1. கசிவு. (வின்.); being damp, dank, moist to the touch. 2. **கசகசப்பு;** perspiration (சா.அக.).

[கசி + கசி + பு - கசிகசிப்பு. கசிகசி - அடுக்குத் தொடர். பு - சொ.ஆ.ஈறு.]

கசிதம்¹ *kašidam,* பெ.(n.) 1. **கச்சிதம்** பார்க்க; see *kaccidam.* 2. பதிக்கை; setting, mounting with precious stones, inlaying.

மறுவ. கச்சிதம், கச்சாரம்.

[கச்சிதம் → கசிதம்.]

கசிதம்² *kašidam,* பெ.(n.) எண்ணெய், தைலம், இளகியம் இவற்றைக் கிண்டுவதற்குப் பயன்படுத்தும் சிறிய துடுப்பு (சா.அக.); a small ladle used for stirring medicinal oils and electuaries in their preparation.

[கழிதம் → கசிதம்.]

கசிந்து *kašindu,* பெ.(n.) பொன்; gold (சா.அக.).

[கசி → கசிந்து. கசம் → கசி = வெளிறிய மஞ்சள் நிறம்; மஞ்சள் நிறம்; அந்நிறமுடைய பொன்.]

கசிப்பு *kašippu,* பெ.(n.) கள்ளச்சாறாயம் (யாழ்ப்.); illicit liquor.

[கசி → கசிப்பு]

ஆவியாக்கிக் குளிர வைக்கும் முறையில் காய்ச்சப்படும் சாறாயம். இது சாறாயவகை அனைத்திற்கும் பொதுப்பெயராயினும் இடவழக்காகக் கள்ளச் சாறாயத்தைக் குறித்தது.

கசியம் *kašiyam,* பெ.(n.) கள்; toddy (சா.அக.).

[கசிதல் = வடிதல். கசி → கசியம். ஒ.நோ. கழி → கழியம் (தின்பண்டம்).]

பனைமரத்தில் கட்டிய முட்டியில் (சிறிய சட்டி) சிறிது சிறிதாகக் கசிந்து ஒழுகும் இயல்புபற்றி இப் பெயர் பெற்றது.

கசிர் *kašir,* பெ.(n.) ஏலச்சீட்டில் சீட்டை ஏலம் விட்டுக் கிடைக்கும் ஆதாயப் பணத்தில் உறுப்பினர்களுக்குக் கிடைக்கும் பங்குத் தொகை; dividend. *இம்மாதச் சீட்டில் அதிகமாகக் கசிர் கிடைத்தது (உ.வ.).*

மறுவ. கசர்

[கழி → கசி → கசிர்.]

கசிரடி-த்தல் *kašir-aḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) கசிவு ஏற்படுதல்; to seep; ooze.

மறுவ. கசரடித்தல்.

[கசி → கசிர் → கசிரடி-.]

கசிரம் *kaširam,* பெ.(n.) 1. கடம்பு; cadamba tree. 2. வாலுளுவை; spindle tree (சா.அக.).

[கசி → கசிரம். கசி = மஞ்சள் நிறம்.]

கசிரி *kaširi,* பெ.(n.) செம்புளிச்சை; red cedar (சா.அக.).

[கசி → கசிரி. கசி = மஞ்சள், மஞ்சள் கலந்த சிவப்பு.]

கசிவகத்துண்மை *kašivagattuṇmai,* பெ.(n.) இரக்கம், பரிவு, முதலிய வேளாண்மாந்தரியல்புகளுள் ஒன்று (திவா.); kind-heartedness, one of the characteristics of the Vēḷāḷās.

[கசிவு + அகத்து + உண்மை. கசி → கசிவு = மனத்தில் சுரக்கும் பரிவுணர்வு.]

கசிவறல் *kašivaṟal,* தொ.பெ.(vbl.n.) கசிவு நீங்குதல்; stop oozing; getting rid of moisture (சா.அக.).

[கசிவு + அறல். அறு → அறல். அல் - தொ.பெ.ஈறு.]

கசிவிறு-த்தல் *kašiviṟu,* 4 செ.குன்றாவி.(v.t.) கசிந்த நீரை இறுத்துக் கொள்ளல்; collecting the water oozing out (சா.அக.).

[கசிவு + இறு. இறுத்தல் = வடித்தல்.]

கசிவு[1] *kašivu,* பெ.(n.) 1. ஊறுகை; ooze, discharge. *மடையைக் கசிவில்லாமல் கட்டு (உ.வ.).* 2. ஈரம்; moisture as of land, dampness. அடுத்த வயலில் நீர்நிற்பதால் இந்த வயலில் கசிவு ஏற்பட்டுள்ளது (உ.வ.). 3. சிறிய ஒழுக்கு; leak. தண்ணீர்த் தொட்டியில் கசிவு உள்ளது (உ.வ.). 4. அடைக்கப்பட்ட குடுவை போன்றவற்றினின்று வளி முதலியன வெளியேறுகை; leak of gas from a container. *நச்சுக் காற்றுக் கசிவால் பலர் இறந்தனர் (உ.வ.).* 5. மின்கடத்தலில் ஏற்படும் மின்னிழப்பு; energy loss in conduction. 6.வியர்வை; perspiration. *"பசிதினத் திரங்கிய கசிவுடை யாக்கை" (புறநா.160:4).*

[கசி[1] → கசிவு.]

கசிவு[2] *kašivu,* பெ.(n.) 1. மனநெகிழ்வு; to relent as the heart in pity. *"கசிவுறு மனத்தி னேனும்" (துணிகைப்பு.அவையடக்.2).* 2. வருத்தம்; distress; pain. *"கசிவெனும் கடலை நீந்தி" (சீவக.1132).* 3. இரக்கம்; pity. *"கண்பொறி போகிய கசிவொடு உரனழிந்து" (புறநா.161:13).* 4. உவகையால் உண்டாகும் அழுகை (சூடா.); weeping. *"மூதிற் பெண்டிர் கசிந்தழ" (புறநா.19:15).*

[கசி[1] → கசிவு.]

மனநெகிழ்வானது வருத்தம், இரக்கம், அழுகை ஆகியவற்றிற்குக் காரணியமாய் அமைதல்போல் இன்பத்திற்கும் காரணியமாய் நிற்பதை ஓர்ந்துகொள்க.

கசு *kašu,* பெ.(n.) காற்பலம்; measure of weight = 1/4 பலம். *'அமுது செய்யச் சர்க்கரை முக்கசும்' (S.I.I.ii,127).*

[கஃசு (காற்பலம்) → கசு. கஃசு பார்க்க; see kakkšu.]

கசுகசு-த்தல் *kašu-kašu-,* 4 செ.கு.வி.(v.i.) ஈரமாயிருத்தல், கசிவாயிருத்தல் (இ.நூ.அக.); to form moisture, to be sticky or adhesive.

[கசு + கசு - கசுக்க. கசகச-த்தல் பார்க்க; see kaša-kaša-.]

கசுகசுப்பு *kašu-kašuppu,* பெ.(n.) ஒட்டீரம், உள்ளீரம் (யாழ்.அக.); being moist, sticky or adhesive.

[கசு + கசுப்பு - கசுகசுப்பு.]

கசுகுசு-த்தல் *kašu-kušu-,* 4 செ.கு.வி.(v.i.) கமுக்கமாய்ப் பேசுதல்; to tell in secret, to reveal a secret.

[கசு + குசு - கசுகுசு - ஒலிக்குறிப்பு. இரட்டைக்கிளவி குசுகுசு பார்க்க; see kušu-kušu.]

கசுகுசெனல் *kašu-kušenal,* பெ.(n.) காதுக்குள் மெதுவாய்ப் பேசுங் குறிப்பு; whispering into the ear. *"கசுகுசெனவே சொலசுகை யென்னடி" (மதுரகவி.).*

பட. குசுகுசு

[கசு + குசு + எனல்.]

கசுபிசு-த்தல் *kašu-pišu-,* 4 செ.கு.வி.(v.i.) ஒட்டீரமாக்கி இளகவைத்தல் (இ.நூ.அக.); to be sticky.

[கசு + பிசு-.]

கசுபிசுக்கை *kašu-pišukkai,* பெ.(n.) பிசுபிசுக்கை; being sticky, adhesive so as to stick to the hands or feet.

ம. கசு

[கசு + பிசுக்கை.]

கசுமாலம் *kašumālam,* பெ.(n.) **கழிமாலம்** பார்க்க; see *kaḻimālam.*

[கழிமாலம் → கசுமாலம் (கொ.வ.).]

கசுமாலர் *kašumālar,* பெ.(n.) தூய்மையற்றவர்; dirty slovenly persons. *"பேயமு தூணிடு கசுமாலர்" (திருப்பு.644).*

[கழிமாலம் → கசுமாலம் → கசுமாலர். அர் - ப.பா.ஈறு.]

கசுமாலி *kašumāli,* பெ.(n.) 1. தூய்மையற்றவள்; slut, dirty woman. 2. சண்டைக்காரி (வின்.); termagant.

[கழிமாலம் → கசுமாலம் → கசுமாலி. 'இ'-பெ.பா.ஈறு.]

கசுவுநார் *kašuvu-nār,* பெ.(n.) கசவுச் செடியின் நார் (வின்.); fibre of the plant kaša.

[கசவு + நார். கசவுநார் → கசுவுநார்.]

கசை¹ *kašai,* பெ.(n.) 1. நீண்ட கயிறு; long rope. 2. சாட்டையாகப் பயன்படுத்தும் வீச்சுக்கயிறு; horse whip, whip. *"கசையால் வீசியுடல் போழ்ந்தார்" (சிவரக. கத்தரிப்பூ.37).* 3. நீண்ட மென்கம்பி; rod, as an instrument of correction. *"உபாத்தியாயன் கையிற் கசைகண்டு" (திவ். திருமாலை.11.வியா).*

ம. கச; க. கசெ; Skt. kašā.

[கசவு → கசை = கசவுச் செடியின் நாரால் செய்த கயிறு அல்லது சாட்டை.]

கசை² *kašai,* பெ.(n.) மயிர்மாட்டி; hair ornament fastened by a hook from the top of the ear to the back of the head.

[கழி → கசி → கசை (நீளமானது).]

கசை³ *kašai,* பெ.(n.) சித்திரவேலை; decorative work. கசைவேலைக்கு நாளும் கூலியும் மிகுதியாகும் (உ.வ.).

[கசை² → கசை³. கசை = நார், மென்கம்பி. கை வேலைப்பாட்டுடன் செய்யும் பணிக்கு நீண்ட மென்கம்பி அடிப்படை. அக் கம்பி பொன்னாயிருப்பது சிறப்பு. இதுபற்றியே கசை பொன்னையும், பொன்கம்பியையும், அக் கம்பியால் செய்யும் கைவேலையையும் குறிப்பதாயிற்று.]

கசை⁴ *kašai,* பெ.(n.) 1. மெய்புதையரணம் (கவசம்); coat of mail. 2. பசை (வின்.); cement, paste.

[கச்சம்¹² → கச்சை → கசை = ஒட்டிக்கொள்வது; மேலுறைக் காப்பாக இருப்பது.]

கசை⁵ *kašai,* பெ.(n.) கடிவாளம் (சம்.அக.Ms.); horse's bit.

[கழி → கசி → கசை (நீளமான கயிற்றுடன் கூடிய கடிவாளம்).]

கசைமுறுக்கி *kašai-muṟukki,* பெ.(n.) தட்டான்குறடு (வின்.); goldsmith's pincers.

[கசை¹ + முறுக்கி. கசை = நீண்ட கம்பி. முறுக்கி = முறுக்கப் பயன்படுவது.]

கசையடி *kašai-y-aḍi,* பெ.(n.) கசையால் தரப்படும் தண்டனை; whiplash as punishment. கள்ளனுக்குக் கசையடி கொடுத்தா னரசன் *(நன்.விருத்.298).*

[கசை + அடி. கசை = விளார், கயிற்று விளார் (சவுக்கு). அடு = கொல்லுதல், வருத்துதல். அடு → அடி. அடித்தல் = புடைத்தல், வருத்துதல், கொல்லுதல்.]

கசைவளையல் *kašai-vaḷaiyal,* பெ.(n.) பொற்கம்பி வளை (வின்.); bracelets made of braided gold wire.

[கசை¹ + வளையல்.]

கசைவேலை *kašai-vēlai,* பெ.(n.) பொற்கம்பி வேலை (வின்.); braiding with gold wire.

[கசை¹ + வேலை.]

கசைவைத்தபுடவை *kašai-vaitta-puḍavai,* பெ.(n.) பொன்னிழைக்கரைச்சீலை (வின்.); gold fringed cloth.

[கசை¹ + வைத்த + புடவை.]

கஞ்சக்கருவி *kañja-k-karuvi,* பெ.(n.) ஐவகை இசைக்கருவிகளுள் ஒன்றான வெண்கலத்தால் செய்யப்பட்ட தாளக்கருவி (பிங்.); musical instruments made up of bell-metal, as cymbals, one of five musical instruments.

[கஞ்சம் + கருவி. கஞ்சம் = வெண்கலம்.]

ஐவகை இசைக் கருவிகள்: 1. தோற்கருவி, 2. துளைக்கருவி, 3. நரம்புக்கருவி, 4. மிடற்றுக்கருவி, 5. கஞ்சக்கருவி.

கஞ்சகம்¹ *kañjagam,* பெ.(n.) **கறிவேம்பு** பார்க்க; see *kaṟi-vēmbu.* *"கஞ்சக நறுமுறி அளைஇ" (பெரும்பாண்.308).*

[கள் (கருமை) → கச்சு → கஞ்சு → கஞ்சுகம் → கஞ்சகம்]

கஞ்சகம்² *kañjagam,* பெ.(n.) 1. கச்சின் தலைப்பு (பிங்.); outer end of a warrior's girdle. 2. முன்றானை; free end of the saree.

[கச்சு² → கஞ்சு → கஞ்சகம்.]

கஞ்சகம்³ *kañjagam,* பெ.(n.) கண்ணிலிடும் மருந்துவகை; an eye-balm.

[கள் = கருமை. கள் → கச்சு → கஞ்சு → கஞ்சகம்]

கஞ்சகன் *kañjagaṉ,* பெ.(n.) கண்ணன்; Kaṇṇaṉ.

[கள் → கச்சு → கஞ்சு → கஞ்சுகம் → கஞ்சகன் = கருநிறத்தவன்.]

கஞ்சகாரன் *kañja-kāraṉ,* பெ.(n.) வெண்கலக் கன்னான்; brazier. *"கஞ்ச காரரும் செம்பு செய்குநரும்" (சிலப்.5:28).*

Skt. kānsyakāra

[கன் → கஞ்சு → கஞ்சகாரன். ஒ.நோ. பன் → பஞ்சு.]

கஞ்சங்குடுக்கை *kañjaṅ-kuḍukkai,* பெ.(n.) புகைகுடிகலம்; Indian pipe for smoking bhang, the bowl of which is made of coconut shell.

[கஞ்சம்² + குடுக்கை. கஞ்சம் = கஞ்சா. குடுக்கை = கலம்.]

கஞ்சங்குல்லை *kañjaṅ-kullai,* பெ.(n.) **கஞ்சாங் கோரை¹** பார்க்க; see *kañjāṅ-kōrai¹.* (சா.அக.).

மறுவ. கஞ்சாங்கொல்லை.

[கஞ்சம்³ + குல்லை - கஞ்சங்குல்லை.]

கஞ்சங்குலை *kañjaṅ-kulai,* பெ.(n.) கஞ்சாவின் வேர்; the root of the ganjah plant (சா.அக.).

[கஞ்சம்² + குலை.]

கஞ்சண்ணாமண்டபம் *kañjaṇṇā-maṇḍapam,* பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஒரூர்; a village in Pudukkottai district.

[கஞ்சண்ணன் + மண்டபம் - கஞ்சண்ணன்மண்டபம் → கஞ்சண்ணாமண்டபம். இயற்பெயரீறு விளியீறாகத் திரிந்திருப்பது வழு.]

கஞ்சத்தகடு *kañja-t-tagaḍu,* பெ.(n.) 1. ஒருவகைப் பளபளப்புத் தகடு (வின்.); tinsel used for decoration purposes. 2. வெண்கலத்தகடு; bell-metal sheet.

[கஞ்சம்⁴ + தகடு. கஞ்சம் = வெண்கலம்.]

கஞ்சத்தனம் *kañja-t-taṉam,* பெ.(n.) செல்வம் சேர்க்கும் முகத்தான், இன்றியமையாத செலவைக் கூடத் தவிர்த்து வாழும் பண்பு; niggardliness. சிக்கனமாக இருக்கலாம்; ஆனால் கஞ்சத்தனமாக இருக்கக் கூடாது (உ.வ.).

U. cañjūs

[கஞ்சம்⁵ + தனம்.]

கஞ்சத்தொழில் *kañja-t-toḻil,* பெ.(n.) வெண்கலத் தொழில்; bell-metal work. *"செம்பின் செய்நவும் கஞ்சத் தொழிலவும்" (சிலப்.14:174).*

[கஞ்சம்⁴ + தொழில்.]

கஞ்சநன் *kañjanaṉ,* பெ.(n.) காமன் (மன்மதன்); god of love (த.சொ.அக.).

[மன்மதன் கருநிறமுடையவனாகக் கருதப்படுதலின், கள் = கருமை. கள் → கஞ்சு → கஞ்சநன்.]

கஞ்சம்[1] *kañjam,* பெ.(n.) ஒருவகை அப்பம் (திவா.); a kind of pastry.

[காய்ச்சு → கச்சு → கஞ்சு → கஞ்சம்.]

கஞ்சம்[2] *kañjam,* பெ.(n.) கஞ்சா; Indian hemp.

ம. கஞ்சாவு

[கள் = கருப்பு, தீமையானது. கள் →களஞ்சம் → கஞ்சம்.]

கஞ்சம்[3] *kañjam,* பெ.(n.) துளசி (மூ.அக.); sacred basil.

[கள் = திரட்சி, மணமுடையது. கள் → கஞ்சா → கஞ்சம்.]

கஞ்சம்[4] *kañjam,* பெ.(n.) 1. வெண்கலம் (திவா.); bell-metal. 2. கைத்தாளம் (திவா.); cymbal. 3. நீர் அருந்தும் கலம்; goblet, drinking vessel.

மறுவ. வெண்கலம்.

க. கஞ்சு, கஞ்ச; Skt. Kānsya

[கன் → கஞ்சு → கஞ்சம். கன் = செம்பு.]

செம்பும் தகரமும் கலந்து கன்னுத்தொழிலாளரால் (கன்னார்) செய்யப்பட்ட கலப்பு மாழையான வெண்கலம் கஞ்சம் எனப்பட்டது.

கஞ்சம்[5] *kañjam,* பெ.(n.) ஏய்ப்பு, ஏமாற்று (வஞ்சனை) (பிங்.); deception, villainy.

[கள் = கருமை; தீமை. கள் → கச்சு → கஞ்சு → கஞ்சம்.]

கஞ்சம்[6] *kañjam,* பெ.(n.) 1. நீர்; water. *"கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட"* (மணிமே.பதி.10). 2. தாமரை (திவா.); lotus. *"கஞ்சங் கலங்குவன"* (நள.சுயம்.15).

[அம் → கம் (நீர்) → கஞ்சு → கஞ்சும் → கஞ்சம். கஞ்சவேட்கை = நீர்வேட்கை.]

கஞ்சம்[7] *kañjam,* பெ.(n.) 32 வகைச் செய்நஞ்சு களுள் ஒன்று; one of the 32 kinds of native arsenic.

[கள் = கரியது, தீமைதரத்தக்கது. கள் → கஞ்சு → கஞ்சம்.]

கஞ்சம்[8] *kañjam,* பெ.(n.) இவறன்மை; miserliness.

[காய் = காய்தல், உலர்தல். காய் → காய்ச்சல் → காய்ஞ்சல் → காஞ்சம் → கஞ்சம் (இரக்கம் என்னும் ஈரப்பசை இன்மை.)]

கஞ்சம்[9] *kañjam,* பெ.(n.) **கஞ்சகம்[3]** பார்க்க; see *kañjagam*[3].

[கஞ்சகம்[3] → கஞ்சம்[9].]

கஞ்சரி *kañjari,* பெ.(n.) சிறுமுரசு; a kind of tabor (மாம்பழக்.தனிச்செய்.25).

மறுவ. பணவை.

[கச்சு[5] → கஞ்சு → கஞ்சரி.]

கஞ்சல்[1] *kañjal,* பெ.(n.) தாழ்ந்த தரமான பொருள் (யாழ்.அக.); article of poor quality.

[கழி → கழிச்சல் → கச்சல் → கஞ்சல்.]

கஞ்சல்[2] *kañjal,* பெ.(n.) 1. கூளம்; sweepings, rubbish heap. 2. குப்பை; refuse, litter.

ம. கஞ்சல்; க. கச, கசவு; தெ. கசவு; து. கசவு, கச; பட.கச.

[கழி → கழிச்சல் → கச்சல் → கஞ்சல்.]

ஒரு நீர்ப்பொருட்கலத்தில் கசண்டு அடியில் தங்கிச் செறிவதனாலும், கழிபொருளான குப்பையிற் பலவகைப் பொருள் கலப்பதாலும், செறிதல் அல்லது கலத்தற் கருத்தினின்று, கழிபொருள் கருத்துத் தோன்றிற்று (வே.க.141).

கஞ்சவதைப்பரணி *kañja-vadai-p-paraṇi,* பெ.(n.) கம்சனின் போர்பற்றிக் கூறும் பரணிநூல்; a paraṇi on extermination of Kamšā (by lord Krishna).

[கஞ்சன்[3] + வதை + பரணி.]

கஞ்சவாதம் *kañja-vādam,* பெ.(n.) நொண்டி நடக்கச் செய்யும் ஊதை நோய் (சீவரட்.); a kind of rheumatism that causes lameness.

[கஞ்சன்¹ → கஞ்சம் + வாதம். Skt. வாதம்.]

கஞ்சன்¹ *kañjan,* பெ.(n.) 1. நொண்டி; lame man. 2. குறளன் (சூடா.); dwarf, who walks with an awkward slouch.

[கஞ்சல் - கஞ்சன்.]

கஞ்சன்² *kañjan,* பெ.(n.) தாமரையில் பிறந்த நான்முகன்; Brahma, who was born in a lotus.

[கஞ்சம்⁶ → கஞ்சன், கஞ்சம் = தாமரை, நீர்.]

கஞ்சன்³ *kañjan,* பெ.(n.) 1. ஏய்ப்பவன்; deceiver. 2. கம்சன்; Kamšā. *"கஞ்சன் வஞ்சம் கடத்தற் காக அஞ்சன வண்ணன் ஆடிய ஆடலுள்" (சிலப்.6:46).*

[கள் → கஞ்சு → கஞ்சன் = கரியவன்; கரவுள்ளவன்.]

த. கஞ்சன் Skt. Kamšā.

கஞ்சன்⁴ *kañjan,* பெ.(n.) 1. இவறன் (உலோபி); miser.

[கஞ்சம்⁴ → கஞ்சன்.]

கஞ்சன்அம்மானை *kañjan-ammānai,* பெ.(n.) கம்சனைப்பற்றி அம்மானை என்னும் சிற்றிலக்கிய வகையால் செய்யப்பட்ட நூல்; a minor rabandham, a kind of folk song in Tamil on Kamšā.

[கஞ்சன்³ + அம்மானை.]

கஞ்சனம்¹ *kañjanam,* பெ.(n.) 1. கைத்தாளம் (வின்.); cymbals. 2. கண்ணாடி (திவா.); mirror.

[கஞ்சம்⁴ → கஞ்சனம். பண்டு பளபளப்பாக்கப்பட்ட வெண்கலம் முகம் பார்க்கப் பயன்பட்டது.]

கஞ்சனம்² *kañjanam,* பெ.(n.) 1. கரிக்குருவி (பிங்.); king-crow. 2. வலியன் (பிங்.); pied wagtail.

[கல் → கள் - கருமைக் கருத்துவேர். கள் → கச்சு → கஞ்சு → கஞ்சனம்.]

கஞ்சனை¹ *kañjanai,* பெ.(n.) கண்ணாடி; mirror. *"திருமுன் கஞ்சனை பிடிப்பவர்" (அரிச்பு.விவாக.123).*

[கஞ்சனம்¹ → கஞ்சனை.]

கஞ்சனை² *kañjanai,* பெ.(n.) புகைக்கலம்; censer. *"கருமணி முகடு வேய்ந்த கஞ்சனை" (சீவக.2140).*

[கஞ்சம்⁴ → கஞ்சனம் → கஞ்சனை (வெண்கலத்தால் செய்யப்பட்ட நறுமணப் புகைக்கலம்).]

கஞ்சா *kañjā,* பெ.(n.) 1. செடிவகை; Indian hemp. 2. பூங்கஞ்சா; the dried flowering tops of the cultivated female plants of Indian hemp.

கஞ்சாசெடி

மறுவ. அனுவல்லிப் பூடு, கஞ்சங்குல்லை.

ம. கஞ்சாவு; க. கஞ்சா, கஞ்சி; தெ. கஞ்சாயி, Skt. ganja, ganjika.

[களஞ்சம் → கஞ்சம்² → கஞ்சா.]

கஞ்சாக்குடுக்கை *kañjā-k-kuḍukkai,* பெ.(n.) கஞ்சங் குடுக்கை பார்க்க; see *kañjaṅ-kuḍukkai.*

மறுவ. சிலும்பி.

ம. கஞ்சாவு, கடுக்க.

[கஞ்சம்² → கஞ்சா + குடுக்கை.]

கஞ்சாக்கெளுத்தி *kañjā-k-keḷutti,* பெ.(n.) கடல்மீன்வகை; a sea fish.

[கஞ்சம்⁴ → கஞ்சா + கெளுத்தி. கஞ்சம் = வெண்கலம், பழுப்புநிறம்.]


கஞ்சாக்கெளுத்தி

கஞ்சாங்குப்பம் *kañjāṅkuppam,* பெ.(n.) திருவண்ணாமலை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvannamalai district

[கஞ்சம் + குப்பம் - கஞ்சங்குப்பம் → கஞ்சாங்குப்பம். கஞ்சம் = கஞ்சம் புல் சார்ந்த நிலம். குப்பம் = சிறிய குடியிருப்பு.]

கஞ்சாங்கொல்லை *kañjāṅ-kollai,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Cudalore district.

[கஞ்சம் + கொல்லை - கஞ்சங்கொல்லை → கஞ்சாங்கொல்லை = கஞ்சம்புல்லடர்ந்த நிலம், அந் நிலம் சார்ந்த ஊர்.]

கஞ்சாங்கொற்றி[1] *kañjāṅ-koṟṟi,* பெ.(n.) பெருமையில்லாதவன் (வின்.); worthless person.

[கஞ்சல் → கஞ்சம் + கொற்றி. கஞ்சம் = கருமை, தீமை. கொற்றி = பதுமை.]

கஞ்சாங்கொற்றி[2] *kañjāṅ-koṟṟi,* பெ.(n.) 1. கனமற்றது; weightless. 2. பாலற்றது; genderless. 3. பிச்சிப்பேய்; evil spirit.

[காய்ந்த → காஞ்ச → கஞ்சா + கொற்றி.]

கஞ்சாங்கோரை

கஞ்சாங்கோரை *kañjāṅ-kōrai,* பெ.(n.) 1. நாய்த்துளசி (பதார்த்த.298); white-basil. 2. திருநீற்றுப்பச்சை; sweet basil.

[கஞ்சம்[3] + கோரை - கஞ்சங்கோரை → கஞ்சாங்கோரை.]

கஞ்சாரி *kañjāri,* பெ.(n.) கண்ணன்; Lord Kaṇṇaṉ (த.சொ.அக.).

[கள் → கச்சு → கஞ்சு → கஞ்சம் (கருமை) → கஞ்சாரி.]

கஞ்சாறர் *kañjāṟar,* பெ.(n.) மானக்கஞ்சாற நாயனார்; one of the sixty three Šaiva Šaints who lived at Kañjāṟu. *"சென்று அவரும் கஞ்சாறர் மணமிசைந்தபடி செப்ப" (பெரியபு. மானக்கஞ்.18:1).*

[கஞ்சாறு = ஊர்ப்பெயர். கஞ்சாறு + அர் - கஞ்சாறர். அர் - உயர்வுப் பன்மையீறு. மானக்கஞ்சாறர் பார்க்க; see *māṉa-k-kañjāṟar.*]

கஞ்சாறன் *kañjāṟaṉ,* பெ.(n.) பாபநாசம் வட்டம் ஆடுதுறையில் குகை வெட்டிக்கொடுத்தவர்; one who had caused a cave in Aduthurai of Papanasam taluk. *"இக்குகை செய்வித்தாந் கஞ்சாறன் திருநட்டப்பெருமாளான வந்தொண்டர்" (தெ.இ.கல்.தெ.23 கல்.369).*

[கஞ்சாறு + அன்.]

கஞ்சி[1] *kañji,* பெ.(n.) 1. நீர்ப்பதமான, குழைந்த சோற்றுணவு; canjee, rice gruel. 2. சோற்று வடி நீர்; water in which rice has been boiled and drained off after the rice has been cooked. *"சோறு வாக்கிய கொழுங்கஞ்சி யாறுபோலப் பரந்தொழுகி" (பட்டினப்.44,45).* 3. கஞ்சிப்பசை; starch, used by washerman. *"கஞ்சி தேய்ப்புண்டு அகில் கமழும் பூந்துகில்" (கந்தபு.பாட்டுப்.50.).* 4. நீராய்க் கரைத்த உணவு; liquid food. *"வாயிலட்டிய கஞ்சியும் மீண்டே கடைவழி வாரக் கண்ட மடைப்ப." (திவ்.பெரியாழ்.4.5:5).* 5. நீர் கலந்த உணவு; gruel prepared from cereals. 'கஞ்சி கண்ட இடம் கயிலாயம்; சோறு கண்ட இடம் சொர்க்கம்' (பழ.).

மறுவ. அன்னப்பால் (வன்னப்பால்).

ம. கஞ்ஞி, கஞ்சி; க., து., பட., தெ., குட., குரு., கொர., உராலி. கஞ்சி; கோத. கச்நிஹ்ர்; துட. கொச்; த. கஞ்சி; > Skt. kanjika; Pali. khajjata; E. conjee.

[கழி + நீர் → கழிநி → கஞ்ஞி → கஞ்சி. கஞ்சி = நீராளமான உணவு.]

வடமொழியில் மூலமில்லை. புளித்த கஞ்சி என்பதும் பொருந்தாது. இளம்பதத்தைக் குறிக்கும் கஞ்சி என்னும் சொல், இளமையைக் குறிக்கும் குஞ்சு (குஞ்சி) என்னும் சொல்லொடு தொடர்புடையது. (வ.மொ.வ.102).

கஞ்சி[2] *kañji,* பெ.(n.) காஞ்சிபுரம்; the city of *Kanchipuram. "கஞ்சி குடியென்றான்" (தனிப்பா.தி.1, 39:76).*

மறுவ. காஞ்சி, காஞ்சிபுரம், கச்சி.

[காஞ்சி → கஞ்சி. வஞ்சி மரங்களால் பெயர் பெற்ற வஞ்சிமாநகரம் போன்று, காஞ்சி மரங்களால் பெயர் பெற்றது காஞ்சி.]

கஞ்சிக்கலம் *kañji-k-kalam,* பெ.(n.) 1. கஞ்சி ஊற்றிவைக்கும் ஏனம்; pot to keep kañji.

2. பருவமடைதல் (சேரநா.); a girl at her first menstruation.

ம. கஞ்ஞிக்கலம்

[கஞ்சி¹ + கலம் - கஞ்சிக்கலம்.]

முதற்பூப்பின்போது, தனியே இருத்திக் கஞ்சிக்கலத்தில் உணவு படைத்தல் தொடர்புபற்றிக் கஞ்சிக்கலம் என்னும் சொல், முதல் பூப்பையும் குறிக்கலாயிற்று. இவ் வழக்குச் சேரநாட்டிலும் உள்ளதை மலையாள அகரமுதலி குறித்துள்ளது.

கஞ்சிக்காடி *kañji-k-kāḍi,* பெ.(n.) கஞ்சியிலிருந்து செய்யப்படும் காடி; vinegar produced from the fermentation of kañji.

[கஞ்சி¹ + காடி. கள் (புளிப்பு) → காளி → காடி.]

கஞ்சிகாய்ச்சு¹-தல் *kañji-kāyccu-,* 5 செ.குன்றாவி.(v.t.) உணவு சமைத்தல்; to prepare food, as gruel, slop or boiled rice. இன்றைக்கு எங்களூர் மாரியம்மன் கோயிலில் கஞ்சிகாய்ச்சி ஊற்றுகிறார்கள் (உ.வ.).

[கஞ்சி¹ + காய்ச்சு-.]

கஞ்சிகாய்ச்சு²-தல் *kañji-kāyccu-,* 5 செ.கு.வி.(v.i.) பலர் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு ஒருவரை அளவுக்கதிகமாக நகையாடுதல்; to make fun of; tease excessively. அந்தச் சின்னப்பையனை ஏன் இப்படிக் கஞ்சி காய்ச்சுகிறீர்கள்? (உ.வ.)

[கஞ்சி¹ + காய்ச்சு. குழையும்படி சூடேற்றிக் காய்ச்சுதல், மனம் வருந்தும்படி வருத்துதல்.]

கஞ்சிக்கூடை *kañji-k-kūḍai,* பெ.(n.) சோற்றுக்கஞ்சி வடிக்கும் கூடை; colander by which kañji is strained off.

ம. கஞ்ஞியாற்றி

[கஞ்சி¹ + கூடை.]

கஞ்சிகை¹ *kañjigai,* பெ.(n.) 1. குதிரைபூட்டிய தேர் (பிங்.); carriage or chariot drawn by horses. 2. சிவிகை (சூடா.); palanquin.

[கள் → கவ்வு → கச்சு → கச்சிகை → கஞ்சிகை (பூட்டப்பட்டது, பொருத்தப்பட்டது).]

கஞ்சிகை² *kañjigai,* பெ.(n.) 1. ஆடை (சூடா.); garment, cloth. 2. உருவுதிரை; curtain. *"கஞ்சிகை வையம்" (சீவக.858).*

[கொய்து → கொய்துவம் → கொய்சுகம் → கொஞ்சுகம் → கஞ்சுகம் → கஞ்சிகை. கொய்சகம் → கொசுவம் (கொ.வ.).]

கஞ்சிகொடு¹-த்தல் *kañji-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) மீன்பிடி வலைக்குக் கஞ்சியிடுதல்; to apply starch to the fishing net. வலைக்குக் கஞ்சி கொடுத்துக் காய வை (உ.வ.).

மறுவ. கஞ்சிவை-த்தல்.

[கஞ்சி¹ + கொடு.]

கஞ்சிகொடு²-த்தல் *kañji-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஏழைகளுக்கு உணவளித்தல் (கஞ்சி); to feed the poor. வள்ளலார் மன்றத்தில் நாள்தோறும் கஞ்சிகொடுக்கப்படுகிறது (உ.வ.). 2. முதியோர் நோயாளி ஆகியோருக்கு உணவளித்தல்; to feed aged and ailing patients.

[கஞ்சி + கொடு.]

கஞ்சித்தண்ணீர் *kañji-t-taṇṇīr,* பெ.(n.) 1. வடிகஞ்சி; kañji, water drawn off from boiled rice. 2. நீர்கலந்த உணவு; term for food in general as applied by the poorer classes; liquid food.

ம. கஞ்ஞிவெள்ளம்; பட. கஞ்சி நீரு; கோத. கச்நிர்

[கஞ்சி¹ + தண்ணீர்.]

கஞ்சித்தண்ணீர்குடி-த்தல் *kañji-t-taṇṇīr-kuḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) இறுதிச்சடங்கினை முடித்தபின் கஞ்சிநீர் கொடுத்தல்; to feed conjee water after a funeral ceremony.

[கஞ்சி¹ + தண்ணீர் + குடி-.]

கஞ்சித்தெளிவு *kañji-t-teḷivu,* பெ.(n.) இறுத்த கஞ்சி; water strained from rice after it has been well cooked, used as a light diet.

மறுவ. அன்னப்பால்.

ம. கஞ்ஞித்தெளி

[கஞ்சி¹ + தெளிவு.]

கஞ்சித்தொட்டி *kañji-t-toṭṭi,* பெ.(n.) ஏழைகளுக்குக் கஞ்சி வழங்குமிடம்; place where gruel is given free to the poor. வறட்சிக்காலத்தில்

கஞ்சித்தொட்டி வைத்து ஏழைகளுக்குக் கஞ்சி ஊற்றப்படும் (உ.வ.).

[கஞ்சி' + தொட்டி.]

கஞ்சித்தொந்தி *kañji-t-tondi,* பெ.(n.) செல்வத்தினாற் பெருத்த வயிறு; potbelly, as due to luxurious living. *கள்ளுத் தொந்தியா, கஞ்சித் தொந்தியா ? (குஞ்சை).*

[கஞ்சி' + தொந்தி (இளகிய தொந்தி).]

கஞ்சிப்பசை *kañji-p-pašai,* பெ.(n.) கஞ்சிப்பற்று (வின்.); starch. கஞ்சிப்பசை போட்ட துணியைத் தேய்த்து உடுத்துதல் நல்லது (உ.வ.).

ம. கஞ்ஞிப் பச

[கஞ்சி' + பசை.]

கஞ்சிப்புரம் *kañji-p-puram,* பெ.(n.) ஏழைகளுக்கு இலவயமாகக் கஞ்சி ஊற்றுமிடம்; a charity-home where kañji (rice gruel) is supplied to the poor *(சேரநா.).*

ம. கஞ்சிபுர

[கஞ்சி + புரை - கஞ்சிப்புரை → கஞ்சிப்புரம். புரை = சிறிய அறை.]

கஞ்சிப்பொழுது *kañji-p-poḻudu,* பெ.(n.) பணியாளர் கஞ்சி அல்லது உணவு உட்கொள்ளும் வேளை; உச்சிவேளை; midday, from its being the time when the labourer, takes his kañji or food.

[கஞ்சி' + பொழுது.]

கஞ்சிபோடு-தல் *kañji-pōḍu-,* 19 செ.குன்றாவி.(v.t.) நூற்பாவு, துணி ஆகியவற்றுக்குக் கஞ்சிப்பசையூட்டுதல்; to apply starch to warp and cloths. கஞ்சிபோட்ட பாவே தறிநெய்யப் பயன்படும் (உ.வ.).

மறுவ. கஞ்சியூட்டுதல்

[கஞ்சி' + போடு.]

கஞ்சிமாரியாயி *kañji-māri-y-āyi,* பெ.(n.) ஒருவகை வெப்புக் கொப்புள நோய்; a skin disease characterised by eruption of vesicles or pustules in different parts of the body.

[கஞ்சி + மாரி + ஆயி. மாரியம்மனுக்குக் கஞ்சி ஊற்றுவதால் நோய் தணியும் என நாட்டுப்புற மக்களால் கருதப்படும் அம்மைநோய் வகை.]

கஞ்சியாடை *kañji-y-āḍai,* பெ.(n.) கஞ்சியின் மேற்பகுதியில் படியும் ஏடு; cream of gruel.

[கஞ்சி + ஆடை.]

கஞ்சியிடு-தல் *kañji-y-iḍu-,* 18 செ.குன்றாவி.(v.t.) கஞ்சிபோடு-தல் பார்க்க; see *kañji-pōḍu-.*

[கஞ்சி' + இடு-.]

கஞ்சியில்வடி-த்தல் *kañji-y-il-vaḍi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. மிக்க இவறன்மையாயிருத்தல்; to show extreme stinginess. 2. சிறியதைப் பெரிதாக்கிப் பேசுதல்; to magnify very insignificant things out of all proportion to their importance, to strain at a gnat.

[கஞ்சி + இல் + வடி. கஞ்சியில்வடித்தல் = வெறுங் கஞ்சி வடித்துக் கஞ்சியையே உணவாக விருந்தினர்க்குத் தரும் வறுமைநிலை. பிறரோடு பேசும்பொழுது மனமிளகப் பேசி இசையச் செய்தல். அதற்காகச் சிறியதையும் பெரிதாக இட்டுக்கட்டிப் பேசி மகிழ்த்துதல்.]

கஞ்சிரா *kañjirā,* பெ.(n.) கஞ்சுறை பார்க்க; see *kañjuṟai.*

மறுவ. கஞ்சிலி, கஞ்சுறை.

[கஞ்சு + உறை - கஞ்சுறை → கஞ்சிரா. கஞ்சு = வெண்கல உருள்வட்டை.]



கஞ்சிரா

கஞ்சிலி *kañjili,* பெ.(n.) கஞ்சுறை பார்க்க; see *kañjuṟai.*

[கஞ்சுறை → கஞ்சிரி → கஞ்சிலி (கொ.வ.).]

கஞ்சிவடிச்சான் *kañji-vaḍiccāṉ,* பெ.(n.) கும்பாதிரி மரம்; gum lac tree.

[கஞ்சி + வடித்தான் (வடிச்சான்).]

கஞ்சிவாய் *kañji-vāy,* பெ.(n.) நாகப்பட்டினம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Nagappattinam district.

[கஞ்சி + வாயில் - கஞ்சிவாயில் → கஞ்சிவாய்.]

கஞ்சிவார்-த்தல் kañji-vār-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. உணவளித்தல்; to feed, as with kañji. 2. காப்பாற்றுதல்; to maintain, support. *அந்தச் செல்வர்தாம் இவருக்கு இப்போது கஞ்சிவார்த்து வருகிறார்.*

ம. கஞ்ஞிகழிக்குக

[கஞ்சி + வார்-.]

கஞ்சிவை-த்தல் *kañji-vai-*, 4 செ.குன்றாவி.(v.t.) *கஞ்சிகொடு-த்தல்* பார்க்க; see *kañji-koḍu-*.

[கஞ்சி[1] + வை-.].

கஞ்சீயம் *kañjīyam*, பெ.(n.) வெண்கலம் (யாழ்.அக.); bell-metal.

[கஞ்சம்[4] → கஞ்சீயம்.]

கஞ்சு[1] *kañju*, பெ.(n.) கம்சன்; Kamšan, *"முன்கஞ்சைக் கடந்தானை" (திவ்.இயற்.3:34).*

[கஞ்சன்[3] → கஞ்சு.]

கஞ்சு[2] *kañju*, பெ.(n.) 1. இடையுடுப்பு, இடையாடை; waist cloth or clothe. 2. ஆடை, உடுப்பு; dress. 3. மேலாடை, சட்டை, மெய்ப்பை; upper garment.

[கச்சு[2] → கஞ்சு.]

கஞ்சு[3] *kañju*, பெ.(n.) வெண்கலம்; bell-metal.

க. கன்சு; பட. கச்சு; Skt. Kānsya

[கஞ்சம்[4] → கஞ்சு.]

கஞ்சுகம்[1] *kañjugam*, பெ.(n.) 1. அதிமதுரம்; liquorice plant. *"கஞ்சுகம் வாய்த்த கவளந்தன் கைக்கொண்ட குஞ்சரம் வென்ற கொலைவேழம்" (பு.வெ.12, வென்றிப்.45).* 2. சிலந்திக்கோரை (மூ.அக.); nutgrass.

[அம் → கம் = நீர். கம் → கஞ்சு = நீர்ஊறச்செய்வது. கஞ்சு → கஞ்சுகம்.]

கஞ்சுகம்[2] *kañjugam*, பெ.(n.) 1. சட்டை; tunic, jacket and stitched clothe. *"கஞ்சுக முதல்வர்" (சிலப்.26:138).* 2. பாம்புச்சட்டை (வின்.); slough, excoriated skin of a snake.

[கொய்து + அம் → கொய்துவம் → கொய்சுகம் → கொஞ்சுகம் → கஞ்சுகம். கொய்தல் = மடித்து உடுத்துதல். கஞ்சுகம் = மடித்துடுக்கப்படும் ஆடை.]

கஞ்சுகன்[1] *kañjugaṉ*, பெ.(n.) 1. ஆடையணிந்தவன்; one who wears a tunic or jacket. *"ஞான கஞ்சுக னகரியை யெங்ஙனே நாம் வியப்பது மன்னோ" (பாரத.சூதுப்போர்.56).* 2. சிறப்புஆடை அணிந்த அமைச்சர்; king's chief minister, in ancient times, so called because he wore a distinguishing jacket. *"காவலற் றொழுது கஞ்சுக னுரைப்போன்" (மணிமே.25:11).*

[கஞ்சுகம்[2] → கஞ்சுகன்.]

கஞ்சுகன்[2] *kañjugaṉ*, பெ.(n.) மெய்க்காப்பாளன் (யாழ்.அக.); body-guard.

[கஞ்சுகம்[2] → கஞ்சுகன். கஞ்சுகன் = தைத்த ஆடை அணிந்தவன். மடித்துடுக்கும் ஆடையைக் குறிக்கும் கஞ்சுகம் என்னும் சொல், தைத்துடுத்த ஆடையையும் குறிப்பதாயிற்று.]

கஞ்சுகி[1] *kañjugi*, பெ.(n.) 1. மெய்க்காப்பாளன் (சூடா.); the body-guard of a king, wearing a jacket. 2. பாம்பு; snake. *"உரத்த கஞ்சுகி முடிநெறு நெறுவென" (திருப்பு.6).*

[கஞ்சுகன்[2] → கஞ்சுகி.]

கஞ்சுகி[2] *kañjugi*, பெ.(n.) 1. சட்டை; jacket. 2. திரைச்சீலை; curtain.

[கச்சு[2] → கஞ்சு → கஞ்சுகம் → கஞ்சுகி.]

கஞ்சுள் *kañjuḷ*, பெ.(n.) ஈரமுள்ளது; that which has dampness.

[அம் → கம் = நீர். கம் → கஞ்சு → கஞ்சுள்.]

கஞ்சுளி *kañjuḷi*, பெ.(n.) 1. சட்டை (திவா.); jacket. 2. துறவியின் பொக்கணம் (வின்.); wallet of a religious mendicant.

[கஞ்சுகம்[2] + உளி - கஞ்சுகவுளி → கஞ்சுளி. உளி - சொல்லாக்க ஈறு.]

கஞ்சுளியன் *kañjuḷiyaṉ*, பெ.(n.) அங்காளம்மையை வணங்குபவன் (m.m.); votary of Aṅgāḷammaṉ.

[கஞ்சுளி + அன். நெடுங்குப்பாயம் அணிந்தவன். தோள் முதல் பாதம்வரை நீளங்கி அணிந்தவனைப் பாவாடைராயன் (பாவாடை அரையன்) எனக் கூறுவதுண்டு. காளி பெண்தெய்வ மாதலின், பூசகனும் பெண் தெய்வத்திற்குரிய உடை உடுப்பது மரபாயிற்று.]

கஞ்சுறை *kañjuṟai,* பெ.(n.) சிறு கைப்பறை வகை; small tambourine with bells.

மறுவ. கஞ்சிரா, கஞ்சிலி.

[கஞ்சு + உறை - கஞ்சுறை. கஞ்சு = வெண்கல உருள்வட்டை.]

கஞ்சூழ் *kañjūḻ,* பெ.(n.) பேரீந்து (பச்.மூ.); date palm.

[கஞ்சுள் - கஞ்சூள் - கஞ்சூழ்.]

கஞ்சை *kañjai,* பெ.(n.) சாறாயம் வடிக்குமிடம் (இ.நூ.அக.); arrack distilling place.

[கஞ்சி[1] → கஞ்சை. கஞ்சி வடிநீராதலின் செயலொப்புமை கருதி, இப் பெயர் பெற்றது.]

கஞல்[1](லு)-தல் *kañal-,* 13 செ.கு.வி.(v.i.) 1. நெருங்குதல்; to be close, crowded, to be densely packed. *"புதுமலர் கஞல" (புறநா.147:8).* 2. சிறிதாதல்; to wear out, to attenuate. 3. சினத்தல் (திவா.); to become enraged. 4. செறிதல்; crowded. *"துவரப் புலர்ந்து தூமலர் கஞலித் தகரம் நாறும் தண்ணறுங் கதுப்பிற் புதுமண மகடூஉ" (அகநா.141:12-13).*

[குள் → குய் → குஞல் → கஞல்.]

கஞல்[2](லு)-தல் *kañal-,* 13 செ.கு.வி.(v.i.) 1. எழுதல் (பிங்.); to rise, ascend. 2. சிறப்புறுதல் (திவா.); to flourish, prosper. 3. மிகுதியாதல், ஊறுதல் (திவா.); to abound. 4. விளங்குதல்; to be prominent; to shine forth. *"நூல் கஞலு மார்பன்" (கம்பரா. அய்யோத்தியா.கைகேசி.99).*

[குள் → குய் → குஞல் → கஞல் → (கஞலு).]

கஞற்று-தல் *kañaṟṟu-,* 8 செ.குன்றாவி.(v.t.) 1. நிரப்புதல்; to fill, cause to be filled. *"தீர்த்தமும் ... கஞற்றினார்" (திருவானைக்.அகிலா.73).* 2. செய்தல்; to do, perform. *"பூசனை கஞற்றி" (தணிகைப்பு. அகத்.257).*

[குள் → குய் → குஞல் → கஞல். கஞல் (த.வி.) → கஞற்று (பி.வி.).]

கஞறம் *kañaṟam,* பெ.(n.) 1. கள் (சது.); toddy. 2. நொதிக்கவைத்த நீர்மம்; fermented liquor.

[கஞறம் = கள்ளூறி வழிந்து நிரம்புதல். கனல் → கஞல் → கஞறம்.]

கஞன்றல் *kañanṟal,* பெ.(n.) 1. எழுச்சி; rising. 2. நெருக்கம்; closeness. *"நீர்நீவிக் கஞன்றபூக் கமழுங்கால், நின்மார்பின் தார்நாற்றம் என" (கலித்.126:10-11).*

[கஞல்[1] → கஞன்றல்.]

கட்கட்டி *kaṭ-kaṭṭi,* பெ.(n.) **கண்கட்டி** பார்க்க; see *kaṇ-kaṭṭi.*

மறுவ. கண்கட்டி, கங்கட்டி.

ம. கங்கோட்டி; க. கண்ணுகுடிகெ, கண்ணுசட்டி.

[கண் + கட்டி - கண்கட்டி → கட்கட்டி (வழு).]

கண்கட்டி என்பதே மரபு. கட்கட்டி எனின் வழுவாம். கண்கட்டி - உருபும் பயனும் உடன் தொக்கதொகை. மட்பாண்டம், கட்செவி என்றாற்போன்று, பிற வேற்றுமை அல்வழிப் புணர்ச்சிகளில், பொருள் சிறவாமை காண்க.

கட்கடாசன்னல் *kaṭkaḍā-šaṉṉal,* பெ.(n.) நான்கு பிரிவுகள் உடைய காலதர் (சன்னல்); a window with four divisions of framework.

[கண் + கண் - கட்கண் = கண்ணுக்குள் கண், அதாவது பலகணிக்குள், பலகணிப் பிரிவுகள் எனப் பொருள்பட்டது. கண் + கண் - கட்கண் + சன்னல் → கட்கண்சன்னல் → கட்கணாசன்னல் → கட்கடாசன்னல் (கொ.வ.).]

கட்கண்[1] *kaṭ-kaṇ,* பெ.(n.) ஊனக்கண்; the physical eye. *"கட்கண்ணாற் காணாத அவ்வுருவை நெஞ்சமென்னும் உட்கண்ணால் காணு முணர்ந்து" (திவ். இயற். பெரியதிருவந்.28.).*

[கண் + கண் - கட்கண் = கண்ணாகிய கண்.]

கட்கண்[2] *kaṭ-kaṇ,* வி.எ.(adv.) அங்கங்கே; at all points, throughout. *"கவைபடு நெஞ்சங் கட்கண் அகைய" (அகநா.339:8).*

[கண் + கண் (அங்கங்கே.)]

கட்கண்டு *kaṭ-kaṇḍu,* பெ.(n.) கண்ணிமையில் ஏற்படும் கட்டி; sty, small tumour in the eye.

[கண் + கண்டு - கட்கண்டு. கண்டு = கட்டி.]

கட்கம்[1] *katkam*, பெ.(n.) 1. வாள் (திவா.); sword. 2. கல்யானையின் (காண்டாமிருகம்) கொம்பு; horn of rhinoceros. *"கட்க நுனித்த கடைக்கட் டிண்ணுகம்" (பெருங்.உஞ்சைக்.38:338).*

[கள் + கு → கட்கு + அம். கட்கு = திரட்சி, திரண்டுருண்டது.]



கட்கம்

கட்கம்[2] *katkam*, பெ.(n.) **கக்கம்**[1] பார்க்க; see *kakkam*[1]. *"கதிர்மணி கட்கத்துத் தெறிப்ப" (பெருங்.உஞ்சைக்.38:333).*

[த. கக்கம் > வ. கட்கம் (மறைவான இடம்).]

கட்காஞ்சி *kat-kāñji*, பெ.(n.) அரசன் வீரர்க்குக் குடிக்க மதுவளிக்கும் புறத்துறை (பு.வெ.4:21); a puram theme of a king's entertaining his troops with toddy before leading them to a campaign.

[கள் + காஞ்சி - கட்காஞ்சி. காஞ்சி = நிலையாமையைக் குறித்த புறத்துறை.]

கட்கிலி *katkili*, பெ.(n.) கண்ணுக்குப் புலப்படாதவன்; one who is invisible; God as the unseen providence. *"கட்கிலீ யுன்னைக் காணுமா றருளாய்" (திவ். திருவாய்.7.2:3).*

[கண் + கு → கட்கு + இலி. இலி = இல்லாதவன், புலனாகாதவன்.]

கட்குடியர் *kat-kudiyar*, பெ.(n.) கள்முதலிய மது அருந்துவோர்; those who drink toddy; drunkards.

[கள் + குடியர்.]

கட்குத்திக்கள்வன் *kat-kutti-k-kalvan*, பெ.(n.) விழித்திருக்கும் போதே ஏமாற்றுபவன்; very skilful deceiver; one who is able to hoodwink, or throw dust into the eyes of even a wide-awake person. *"ஏறுபோல் வைகற் பதின்மரைக் காமுற்றுச் செல்வாயோர் கட்குத்திக் கள்வனை நீயெவன் செய்தி" (கலித்.108:48-50).*

[கண் + குத்தி + கள்வன். விழித்திருக்கும் போதே கண்குத்த வருபவனைப் போல், அஞ்சாது தீமை செய்யும் திறஞ்சான்ற கொடியவனை, இது குறித்துநின்றது.]

கட்கு-தல் *katku-*, 5 செ.குன்றாவி.(v.t.) களைதல்; weed out. *"சிறுமா ணெய்த லாம்பலொடு கட்கும் மலங்குமிளிர் செறு" (புறநா.61:2).*

[கள் + கு - கட்கு (களையத்தக்கது).]

கட்குரு *katkuru*, பெ.(n.) கண்ணில் தோன்றும் பரு; sty (சேரநா).

ம. கங்குரு

[கண் + குரு. குரு = கட்டி.]

கட்குவளை *kat-kuvalai*, பெ.(n.) கண்ணின் குழி; the bony cavity in which the eye is situated.

[கண் + குவளை.]

கட்குறுவை *katkuruvai*, பெ.(n.) தஞ்சை, நெல்லை மாவட்டங்களில் பயிராவதும், இரண்டு அல்லது மூன்று மாதங்களில் விளைவதுமான கல்லுக்குறுவை நெல்; a short-crop paddy of 2 or 3 months yielding a hard round rice, common in Thanjavur and Tirunelveli districts (சா.அக.).

[கண் + குறுவை - கண்குறுவை → கட்குறுவை. கண் = திரண்ட, பருமனான நெல்.]

கட்கேள்வி *katkēlvi*, பெ.(n.) பாம்பு; snake. *"கட்கேள்விக் கவைநாவின்" (புறநா.382:12).*

மறுவ. கட்செவி.

[கண் + கேள்வி - கட்கேள்வி. கண்ணால் கேட்பது, செவியில்லாதது.]

கட்சி[1] *katci*, பெ.(n.) 1. மரமடர்ந்த காடு; forest, jungle. *"மணிவரைக் கட்சி மடமயில் ஆலும் நம் மலர்ந்த வள்ளியங் கானக்கிழ வோனே" (ஐங்குறு.250).* 2. புகலிடம்; refuge. *"வெட்சிக் கானத்து வேட்டுவ ராட்டக் கட்சி காணாக் கடமா நல்லேறு" (புறநா.202:1).* 3. மக்கள் துயிலிடம் (திவா.); sleeping place. 4. பறவைக்கூடு (பிங்.); bird's nest.

"புள்ளுடன் கமழ்பூம் பொதும்பர்க் கட்சி" (நற்.117:3-4).

[கள் → களம் = பலர் கூடுமிடம். கள் → (கள்சி) → கட்சி. கள் = செறிதல், திரளுதல், கூடுதல், ஒன்றுசேர்தல். த. கட்சி > Skt. kakṣa.]

கட்சி² *kaṭci*, பெ.(n.) 1. பலர் சேர்ந்து நிற்கும் பிரிவு, பகுதி; faction, party. அவன் ஒரு கட்சியிலும் சேராதவன் (உ.வ.). 2. பலர் தாமாக ஒன்றுகூடி அமைத்துக்கொண்ட தனிக்குழு; group organised by voluntary participation. திருவிழா தொடர்பாக இவ்வூர் இரண்டு கட்சியாக நிற்கிறது (உ.வ.). 3. குடியாட்சி முறையில் பங்கேற்கும் அரசியல் குழு; political party. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட கட்சியே அரசு அமைக்கும் (உ.வ.). 4. குறிப்பிட்ட கொள்கையைச் சார்ந்தவர்களின் குழு; people of same principle. பகுத்தறிவு அடிப்படையில் பிறந்த கட்சி திராவிடர் கழகம் (உ.வ.). 5. சேர்க்கை; union. "எற்படு பொழுதி னினந்தலை மயங்கிக் கட்சி காணாக் கடமா நல்லேறு" (புறநா.157:9-10). 6. போர்க்களம்; battlefield. *'கட்சியும் கரந்தையும் பாழ்பட' (சிலப்.12,உரைப்.23).*

ம. கக்ழி; பட. கச்சி; Skt. kakṣya.

[கள் → கள்சி → கட்சி (சேருமிடம், ஒரு பிரிவு).]

கட்சி³ *kaṭci*, பெ.(n.) 1. உடம்பு; body. 2. பங்கு; share. 3. வழி; way (யாழ்.அக.).

[கள் → (கள்சி) → கட்சி = ஒன்றுகூடியது, உடம்பு, ஒருமித்த பங்கு, ஓரிடத்தில் கூடும் வழி.]

கட்சிக்காரன் *kaṭci-k-kāraṉ*, பெ.(n.) 1. ஏதேனும் ஓர் அரசியல் கட்சியைச் சார்ந்தவன்; member of a political party. 2. வழக்காளி; a party in a suit. கட்சிக்காரன் தன் வழக்குரைஞரிடம் எதையும் மறைக்கக் கூடாது (உ.வ.). 3. வழக்காளன் அல்லது எதிராளி; plaintiff or defendant in a case.

பட. கச்சிக்காரு; Skt. kakṣin.

[கட்சி + காரன். காரன் - சொல்லாக்க ஈறு.]

கட்சிகட்டு-தல் *kaṭci-kaṭṭu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. ஒன்றன்பொருட்டு முரணி நிற்றல்; to oppose for a reason. அவரைத் தலைவராக்கக் கூடாதென்று இவர் கட்சிகட்டினார் (உ.வ.). 2. ஒரு தரப்பை ஆதரித்தல்; குறிப்பிட்ட தரப்புக்கு எதிரான நிலை எடுத்தல்; to support a team, take sides. அவன் யாருக்கு எதிராகக் கட்சிகட்டுகிறான் என்றே தெரியவில்லை (உ.வ.).

[கட்சி + கட்டு-.]

கட்சிகை *kaṭcigai*, பெ.(n.) காட்டுச்சீயக்காய்; soap-pod (சா.அக.).

[காடு + சிகை(க்காய்) - காட்டுச்சிகை → கட்சிகை (கொ.வ.)].

கட்சிதாவு-தல் *kaṭci-tāvu-*, 5 செ.குன்றாவி.(v.t.) ஓர் அணியிலிருந்து வேறோர் அணிக்கு மாறுதல்; to switch over from one party to another. பதவிக்காகக் கட்சிதாவக்கூடாது (உ.வ.).

[கட்சி + தாவு].

கட்சிமா *kaṭcimā*, பெ.(n) நிலவேம்பு; ground neem (சா.அக.).

[கட்சி = காடு. கட்சி + மா].

கட்சிமாறி *kaṭci-māṟi*, பெ.(n.) நிலைமாறுபவன்; fickle-minded person, unstable, unreliable man, turn-coat.

[கட்சி² + மாறி.]

கட்சியாடு-தல் *kaṭci-y-āḍu-*, 5 செ.குன்றாவி.(v.t.) அணிசேர்த்துக்கொண்டு வழக்காடுதல்; argue in a partisan manner. எதற்கெடுத்தாலும் கட்சியாடுவதே இவன் பிழைப்பாய்ப் போயிற்று (உ.வ.).

[கட்சி + ஆடு-.]

கட்சியார் *kaṭciyār*, பெ.(n.) 1. வழக்குடை ஒரு பிரிவினர்; members of a faction. 2. அரசியல் கட்சி ஒன்றினைச் சேர்ந்தவர், கட்சிக்காரர்; members of a political party.

[கட்சி + ஆர் (ப.பா.ஈறு).]

கட்சுரா *kaṭ-curā*, பெ.(n.) பூனைக் காஞ்சொறி; common cowitch plant.

[கள்(முள்) + சுரா.]

கட்சுறா *kaṭ-šuṟā*, பெ.(n.) முதுகில் சிறு கல்லுடன் கூடிய சுறாவகை; a species of shark spotted or studded with small stones on its back.

மறுவ. கட்ட சுறா

[கல் + சுறா - கற்சுறா → கட்சுறா.]



கட் சுறா

கட்செவி[1] *kaṭ-cevi*, பெ.(n.) கண்ணையே செவியாகப் பயன்படுத்தும் பாம்பு; snake, its eyes, in folk belief, serving as the sensory organ of sight as well as of hearing. *"மலைமுழையிற் கட்செவி" (கம்பரா. யுத்த. படைத்தலை.42).*

[கண் + செவி.]

கட்செவி[2] *kaṭ-cevi*, ஒன்பதாவது உடுவான கவ்வை விண்மீன் *(ஆயிலியம்.);* the ninth nakṣatra. *"மங்கட்செவி யொண்பூரம்" (இலக்.வி.793).*

[கண் + செவி - கட்செவி. பாம்பின்தோற்றம் போன்ற விண்மீன்.]

கட்டக்கசப்பு *kaṭṭa-k-kašappu*, பெ.(n.) கடுங்கசப்பு (இ.வ.); extreme bitterness of taste.

[கடு → கட்ட + கசப்பு.]

கட்டக்கல் *kaṭṭakkal*, பெ.(n.) மீன்வலையிற் கட்டப்படும் பெருங்கல் (மீனவ.); stone used to be tied.

[கட்டை + கல் - கட்டைக்கல் → கட்டக்கல்.]

கட்டக்கால் *kaṭṭa-k-kāl*, பெ.(n.) *கட்டைக்கால்*[2] பார்க்க; see *kaṭṭai-k-kāl.*

கட்டக்கீச்சான் *kaṭṭa-k-kīccāṉ*, பெ.(n.) பத்துவிரலம் நீளம்வரை வளர்வதும் வெள்ளிநிற முடையதுமான கடல்மீன் வகை; a sea fish, silvery with lateral bands, attaining at least 10 inches in length.

[கடு → கட்டம் + கீச்சான் - கட்டக்கீச்சான் = உடம்பில் கட்டுக்கட்டாக வரி உள்ள கடல்மீன்.]

கட்டக்குடி *kaṭṭa-k-kuḍi*, பெ.(n.) வறுமையில் வாடும் குடும்பம் (ஈடு, 2.2:3); poverty stricken family.

[கடு → கட்டம் (துன்பம்) + குடி.]

கட்டக்கோல் *kaṭṭa-k-kōl*, பெ.(n.) **கட்டிக்கோல்** பார்க்க; see *kaṭṭi-k-kōl.*

ம. கட்டக்கோல்

[கட்டிக்கோல் → கட்டக்கோல்.]

கட்டகம் *kaṭṭagam*, பெ.(n.) 1. சித்திரவேலைப்பாடு; artistic design. *"பத்தி பயின்ற கட்டகக் கம்மத்து" (பெருங்.உஞ்சைக்.38:146).* 2. காந்தக்கல்; magnet. *"நலமலி கட்டகம்" (ஞானா.55:13).* 3. மரம் அல்லது இரும்புக்கோப்புத் திரள், கட்டுமானம்; structure.

[கள் → கட்டு → கட்டகம் (வே.க.136). கள் = திரளல், ஒன்றுசேர்தல் ஒ.நோ: பெட்டி = பெட்டகம்.]

கட்டகன் *kaṭṭagaṉ*, பெ.(n.) 1. வெட்டுபவன், கொல்பவன்; one who cuts or kills. 2. புலால் விற்பவன்; butcher.

க. கடக

[கள் → கடி → கட்ட → கட்டகன்.]

கட்டகு *kaṭṭagu*, பெ.(n.) ஒருவகை வெள்ளை அல்லது சிவப்பு மண்,/ களிமண்; a sort of white or reddish earth or clay.

க. கடக; Skt. khatika.

[கட்டகம் → கட்டகு (வடிவமைக்கத் தக்கது).]

கட்டங்கட்டு-தல் *kaṭṭaṅ-kaṭṭu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. செய்தியின் முதன்மை கருதி அதனை நான்கு பக்கமும் கோடுகள் இட்டு வெளியிடுதல்; to publish news within a box as of box news. இந்தச் செய்தி கட்டங் கட்டி வெளியிடப்படும் (உ.வ.). 2. ஓர் அரசியல் கட்சியில்

விரைவில் விலக்கப்பட விருக்கும் ஒருவரைக் குறித்தல்; one who is likely to be expelled soon from a political party. தலைவர் அவரைக் கட்டங் கட்டிவிட்டார் (உ.வ.).

[கட்டம் + கட்டு-.]

கட்டங்கம்[1] *kaṭṭaṅgam,* பெ.(n.) 1. சிவனுடைய மழுப்படை; battle-axe of Šivā. *"சுத்திய பொக்கணத் தென்பணி கட்டங்கஞ்சூழ்" (திருக்கோ.242). 2.* கடும் போர்; a severe battle.

மறுவ. கட்டங்கு (யாழ்ப்.)

க. கட்டங்க

[கடு → கட்டு + அங்கம் - கட்டங்கம் = வெட்டுவாள், மழுப்படை, போர்வாளால் செய்யும் போர்.]

கட்டங்கம்[2] *kaṭṭaṅgam,* பெ.(n.) காளையின் கழுத்தில் கட்டப்படுங் கயிறு; string tied on the neck of oxen.

ம. கட்டங்ஙம்

[கட்டு + அக்கம் - கட்டக்கம் → கட்டங்கம். அக்கம் = கயிறு.]

கட்டங்கன் *kaṭṭaṅgaṉ,* பெ.(n.) மழுப்படை கொண்டவன் (சிவன்); Šivā who carries a battle-axe. *"காபாலி கட்டங்கன்" (தேவா.769:5).*

[கட்டங்கம்' → கட்டங்கன்.]

கட்டசீவி *kaṭṭa-šīvi,* பெ.(n.) 1. ஆயக்காரன்; toll keeper. 2. துறை காவற்காரன்; guard of dock.

[கட்டம் + (சேவி)சீவி. கட்டம் = நீர்த்துறை. சேவி = பணியாள்.]

கட்டசுறா *kaṭṭa-šuṟa,* பெ.(n.) கட்சுறா பார்க்க; see *kaṭ-šuṟa.*

[கட்சுறா → கட்டசுறா.]

கட்டட ஒலிக்கட்டு *kaṭṭaḍa-oli-k-kaṭṭu,* பெ.(n.) கட்டடத்தின் சுவரில் எப்பகுதியில் தட்டினாலும் அவ் வோசை எல்லாச் சுவர்களிலும் எதிரொலிக்கும் கட்டட அமைப்பு வகை; a special technic in building construction, in which even a slight knock at the wall will echo in all the walls simultaneously.

[கட்டடம் + ஒலி + கட்டு.]

ஒலிக்கட்டு = ஒலிக்கட்டமைதி. தகடூர் அதியமான் அரண்மனை கட்டட ஒலிக்கட்டுடன் கட்டப்பட்டிருந்ததாகவும், இந் நுட்பம் அறிந்த பகைவர் அதன் வீழ்ச்சிக்கு ஏற்ற சூழ்ச்சி செய்தனர் எனவும், நாட்டுப்புறக்கதை கூறுகிறது.

கட்டடக்கலை *kaṭṭaḍa-k-kalai,* பெ.(n.) கட்டட வடிவமைப்பு இலக்கணம்; building architecture.

[கட்டடம் + கலை.]

கட்டடக்கலைஞர் *kaṭṭaḍa-k-kalaiñar,* பெ.(n.) 1. கட்டடக்கலை வல்லுநர்; an architect and designer of a building. 2. சிற்பி; the sculptor. *கல்லில் கலைநயம் காண்பதில் இடைக்காலக் கட்டடக் கலைஞர் சிறந்து விளங்கினர் (உ.வ.).*

[கட்டடம் + கலை + ஞ் + அர் - கட்டடக் கலைஞர், ஞ்- பெயரிடைநிலை. 'அர்' - ப.பா.ஈறு.]

கட்டடங்க *kaṭṭaḍaṅga,* வி.எ.(adv.) முழுதும்; wholly, entirely. *'கட்டடங்க இவனையே சொல்லுகையாலே' (ஈடு.3,4:6).*

[கட்டு + அடங்கு - கட்டடங்கு → கட்டடங்க = முழுதும்.]

கட்டடத்தைச்சதுரி-த்தல் *kaṭṭaḍattai-chaduri-,* 4 செ.கு.வி.(v.i.) 1. வீடமைக்கும் போது நான்கு மூலைகளும், மூலைமட்டத்திற்குச் சரியாக உள்ளவாறு அமைத்தல்; to check whether the corners of all walls correspond to set square. 2. வரைபடத்திலுள்ளதைத் தரையில் குறித்தல்; to transfer the layout to ground.

[கட்டடம் + ஐ + சதுரி. சட்டம் → சடம் → சடல் → சதர் → சதுர் → சதுரி.]

கட்டடம் *kaṭṭaḍam,* பெ.(n.) 1. வீடு முதலிய கட்டடம்; building. 2. மண் அல்லது கற்களால் செய்யும் பணி; any earth or stone work. 3. புத்தகக் கட்டடம்; binding of a book. இந்த அச்சுப்புத்தகத்தின் கட்டடம் அழகாயிருக்கிறது(உ.வ.). 4. பொன்னின் உம்மிசத்திற் கற்பதித்துச் செய்யும் வேலைப்பாடு; setting of a jewel, encasement. 5. அமைப்பு; structure.

ம. கெட்டு, கெட்டக; க. கட்டண, கட்டணெ; பட. கட்டட; தெ. கட்டட; து. கட்டண, கட்டல்மெ.

[கட்டு → கட்டடம் (வேக.136). கட்டடம் - தொழிற்பெயர்; கட்டிடம் - இடப்பெயர். கட்டடம், கட்டிடம் இவற்றுக்கிடையே, பொருள் ஒற்றுமை இருப்பது போலத் தோன்றினாலும், இரண்டும் வெவ்வேறு பொருள் அடிப்படையில் தோன்றியனவாகும்.]

கட்டடமேளக்கட்டு *kaṭṭaḍa-mēḷa-k-kaṭṭu,* பெ.(n.) கட்டட அமைப்புவகையுள் ஒன்று; one of the building plan varieties.

[கட்டடம் + மேளம் + கட்டு.]

இவ்வகைக் கட்டடத்தில் இசைநிகழ்ச்சிகள் நடைபெற்றால், அதன் ஒலி கட்டடத்தின் எல்லாப் பக்கமும் பரவி எதிரொலியில்லாமல், மன்றம் முழுமையும் ஒருசீராகக் கேட்கும் தன்மையது. கட்டடத்தின் சுவரமைப்பு ஒலியை உள்வாங்கிக் கொள்ளும் என்பதாம்.

கட்டடவி *kaṭṭaḍavi*, பெ.(n.) அடர்ந்த காடு; a thick, impervious jungle.

க. கட்டடவி

[கட்டு[12] + அடவி. அடவி = காடு.]

கட்டடி[1]-த்தல் *kaṭṭaḍi-*, 4 செ.குன்றா.வி.(v.t.) அரிந்த நெற்கதிர்களை அடித்தல்; to thresh or beat out the grain from the sheaves of paddy.

[கட்டு + அடி. கட்டு = நெற்கட்டு.]

கட்டடி[2] *kaṭṭaḍi*, பெ.(n.) 1. கட்டடத்தின் அடிப்பரப்பு; plinth area. 2. கட்டட அடிமட்டம்; plinth level.

[கட்டு[10] + அடி.]

கட்டணகம் *kaṭṭaṇagam*, பெ.(n.) கட்டணங்கம் பார்க்க; see *kaṭṭaṇaṅgam*.

க. கட்டணக

[கட்டு[11] + அணகம். அணங்கம் → அணகம். அணங்கம் = இலக்கணம்.]

கட்டணங்கம் *kaṭṭaṇaṅgam*, பெ.(n.) 1. உடற்கூற்றுக்குரிய இலக்கணங்களோடு அமைந்த உடல்; a well built body. 2. மிக்க வலிமை; great strength.

[கட்டு[10] + அணங்கம்.]

கட்டணம்[1] *kaṭṭaṇam*, பெ.(n.) கட்டடம்; building. *பிறர் புகுதற்கரிய மாளிகைக் கட்டணம் என்றவாறு (பதிற்றுப்.64:7, உரை).*

ம. கெட்டு, கெட்டக; து. கட்டண, கட்டல்மெ.

[கட்டு[10] = கல்லடுக்கிக் கட்டுகை. கட்டு + அணம். அணம் - சொ.ஆ.ஈறு. ஒ.நோ. பொட்டணம்.]

கட்டணம்[2] *kaṭṭaṇam*, பெ.(n.) 1. தோளில் சுமந்துசெல்லும் ஏணை, தோளி; doolie, litter. *"ஆழ்வானை ஒரு கட்டணத்திலே எழுந்தருள் வித்துக் கொண்டு" (குருபரம்.385.பன்னீ.).* 2. பாடை; bier, coffin. *"இட்டபொறி தப்பிப் பிணங்கொண்டதின் சிலர்கள் கட்டணமெடுத்துச் சுமந்தும்" (திருப்பு.58).* 3. கட்டில்; cot.

ம. கட்டணம்; க. கட்டண, கட்டோண, கட்டணெ.

[கட்டு[10] + அணம்.]

கட்டணம்[3] *kaṭṭaṇam*, பெ.(n.) நுகர்வு, நுழைவு, உழைப்பு ஆகியவற்றிற்கான செலுத்தும்தொகை; fare, charges, fee, dues. மின்கட்டணம், திரைப்படக்கட்டணம், தேர்வுக் கட்டணம்.

[கட்டு[5] + அணம். கட்டு = செலுத்து.]

கட்டணியர் *kaṭṭaṇiyar*, பெ.(n.) மிக அழகான பெண்கள்; very beautiful women (கருநா.).

க. கட்டணியர்

[கட்டு + அணி + அர். கடு → கட்டு = மிகுதி. அணி = அழகு. அர் - பலர்பாலீறு.]

கட்டத்தாரி *kaṭṭa-t-tāri*, பெ.(n.) வெள்ளைப் பூண்டு; garlic.

[கடு → கட்ட + (தாரம்) ;தாரி. கடுத்தல் = உறைத்தல்.]

கட்டதரம் *kaṭṭa-daram*, பெ.(n.) மிகக்கொடியது; that which is very agonising, hard to bear. *"கட்டதரங் கட்டதரம்" (சிவதரு. சுவர்க்கநரக.174).*

[கடு → கட்டம் + தரம். கடு = கடுமை, கொடுமை.]

கட்டப்பாரை *kaṭṭa-p-pārai* பெ.(n.) சேவற்கோழியின் பின்னங்காலில் முள்போல் இருக்கும் விரல்;the spur on the heel of a cock.

[கள்(முள்) → கடு → கட்டம் + பாரை - கட்டப்பாரை]

கட்டப்பொருள் *kaṭṭa-p-poruḷ*, பெ.(n.) பயனற்ற செய்தி; useless matter, far-fetched and hence unacceptable sense. *"கட்டப் பொருளை மறைப்பொருளென்று" (திவ்.இராமானுச.93).*

[கட்டை → கட்ட + பொருள். கட்டை = குட்டை, குறைவானது பயனற்றது.]

கட்டம்[1] *kaṭṭam*, பெ.(n.) 1. நான்கு பக்கங்களும் சமமாகவும் நான்கு மூலைகளிலும் செங்கோணமாகவும் உள்ள வடிவ கணிதத்தின் ஓர் உருவம்; a geometrical figure having four equal sides and four right angles. 2. தள ஒடு, சதுரங்கம், தாயக்கட்டம், கைக்குட்டை போன்று ஏறத்தாழச் சரியாகவுள்ள சதுரவடிவப் பொருள்கள், இடம், வடிவம் போன்றன; an object, piece, space, figure

of approximately that shape, eg. paving stone, space on chess board, a kerchief. 3. கவறாட்டத்தில் வரைந்துள்ள அறைகள் (பெருங். மகத.14:56); square, chequered space as in a chess-board. 4. ஓர் எல்லைக்கு உட்பட்ட வடிவம்; a form that has its own limit.

ம. கட்டம்

[கள் → கடு → கட்டு → கட்டம். கள் = திரளல், நாற்புறமும் வந்து மொய்த்தல், சதுரமாதல், சதுரம்.]

கட்டம்[2] *kaṭṭam,* பெ.(n.) 1. நிகழ்வின் ஒரு குறிப்பிட்ட நிலை; a stage, phase of a programme. *நிகழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் மீளாய்வு செய்தல் வேண்டும்* (உ.வ.). 2. குறிப்பிட்ட நேரம். particular time. *அந்த நாடகத்தின் உச்ச கட்டம் மிக விறுவிறுப்பாக இருந்தது* (உ.வ.). 3. கதை நிகழ்நிலை; particular stage in the narration or recital of a story. இந்த நாடகத்தில் வள்ளித்திருமணக் கட்டம் சிறப்பாக இருக்கும் (உ.வ.).

[கள் → கட்டு + அம் - கட்டம்.]

கட்டம்[3] *kaṭṭam,* பெ.(n.) 1. கடுமை, வருத்தம்; hardship, difficulty, body pain. *"கட்டமே காதல்" (திவ்.திருவாய்.7.2:4).* 2. பீழை (பீடை); affliction, misfortune. *"கட்டங் கழிக்குங் கலைசையே" (கலைசைச்.31).* 3. மலம்; excrement; dung. *"நாய்க்கட்ட மெடுத்தும்" (பதினோ. திருவிடை.28).*

க., பட. கட்ட; Nep. Kaṣṭa

[கள் → கடு → கட்டம். கள் = நெருக்கம், துன்பம், வெறுப்பு, இழிவு, இழப்பு. கடு → கடுமை = வன்மை, வருத்தம், செயற்கருமை. கடு → கட்டம். ஒ.நோ. அடு → அட்டம், கொடு → கொட்டம், அறு → அற்றம், செறு → செற்றம். த. கட்டம் > Skt. kaṣṭa.]

கட்டம் என்பதற்கு வடமொழியில் வேர் மூலமில்லை (வ.மொ.வ.273). கஷ் என்பதன் இறந்தகால வினையெச்சமாயிருக்கலா மென்றும் மா.வி.அ. கூறும். கஷ்- (தேய், சுறண்டு, சேதப்படுத்து, கொல், அழி) சொன்மூலங்களுக்கும், வடமொழி வேர்மூலம் இல்லை. வேட்டியை வேஷ்டி எனத் திரித்துக்கொண்டது போலக் கட்டம் என்னும் தூய தென்சொல்லைக் கஷ்டம் என வடமொழியாளர் திரித்துக்கொண்டனர்.

கட்டம்[4] *kaṭṭam,* பெ.(n.) காடு (திவா.); forest, jungle.

[கள் → கடு → கட்டம் = துன்பம் தரும் இடம்.]

கட்டம்[5] *kaṭṭam,* பெ.(n.) 1. நீராடுதுறை; bathing ghat or landing stairs for bathers on the sides of a river or tank. 2. துறைமுகம் (யாழ்ப்.); harbour.

[கள் → கட்டு → கட்டம் = நான்கு பக்க எல்லையைக் கொண்ட வரைவு; ஒழுங்கான படிக்கட்டுப்பகுதி, நீர்த்துறை, கட்டப்பட்ட வரப்பு அல்லது படிகள், இறங்குதுறைப் படிகள்.]

கட்டம்[6] *kaṭṭam,* பெ.(n.) 1. திண்மை, வன்மை; strength, 2.மோவாய்க்கட்டை (பிங்.); chin.

மவ. தாடை.

க., பட. கட்ட; தெ. கட்டமு.

[கள் → கட்டு → கட்டம் = சதுரம், ஒழுங்கு, ஒழுங்கான மோவாய்.]

கட்டம்[7] *kaṭṭam,* பெ.(n.) தாடி; beard about the chin.

தெ. கட்டமு; கொலா. நா. கட்டம்; பர். கட்டொம்; கோண். கட்டொ, கட்டொகா; கொண். காடம்கு; து. கட்ட.

[கள் → கட்டு → கட்டம் = மோவாய்க்கட்டை, மோவாய்க்கட்டையில் வளரும் மயிர்.]

கட்டம்[8] *kaṭṭam,* பெ.(n.) ஏலரிசி; cardamom seed.

[கடு - கட்டம்]

கட்டம்பலம் *kaṭṭam-balam,* பெ.(n.) வரி தண்டும் பணியிடம்; office of collecting revenue in a zamindary.

[கட்டு[5] + அம்பலம். வரி கட்டும் பொதுவிடம். கட்டு = செலுத்துதல். அம்பலம் = வளாகம்.]

கட்டமுது *kaṭṭamudu,* பெ.(n.) கட்டுச்சோறு (பதார்த்த. 1410); boiled rice bundled up as provision for a journey.

மறுவ. கட்டுச்சோறு.

[கட்டு[1] + அமுது.]

கட்டமை *kaṭṭamai,* பெ.(n.) கட்டுப்பாடு; social rules,strict rules. ''கட்டமை ஒழுக்கத்து'' (தொல்.பொருள்.புறத்.21).

[கட்டு[11] → கட்டமை.]

கட்டமைப்பாளர் *kaṭṭamaippāḷar,* பெ.(n.) கட்டட அமைப்பை வரையறை செய்பவர்; architect.

[கட்டமைப்பு + ஆளர்.]

கட்டமைப்பு *kaṭṭamaippu,* பெ.(n.) 1. அமைப்புமுறை; structure, construction. *இதன் கட்டமைப்பு நன்றாக உள்ளது* (உ.வ.). 2. பொத்தகம் கட்டடம் செய்யும்முறை; book binding. *இந்தப் பொத்தகத்தின் கட்டமைப்புச் சரியில்லை* (உ.வ.).

[கட்டு[10] + அமைப்பு.]

கட்டர் *kaṭṭar,* பெ.(n.) இன்னலுறுவோர்; unfortunate people, people destined to suffer. *"கட்டராய் நின்று நீங்கள் காலத்தைக் கழிக்க வேண்டா"* (தேவா.389:2).

[கடு → கட்டம் → கட்டர். கட்டம் = துன்பம், இன்னல்.]

கட்டரிதாரம் *kaṭṭaridāram,* பெ.(n.) கட்டியான அரிதாரம் (வின்.); orpiment or arsenic crystal.

[கள் → கட்டு + அரிதாரம். கட்டு = திரண்டது. அரி = மஞ்சள். தாரம் = சரக்கு.]

கட்டல்[1] *kaṭṭal,* பெ.(n.) 1. திருடுதல்; theft robbery,plundering. *''கட்போ ருளரெனின்''* (சிலப்.5:115). 2. பறித்தல்; plucking off, pulling out. 3. களைபறித்தல் (குறள்,1039,உரை); weeding.

[கள் + தல் - கட்டல். (வே.க.129.) கள் = களைதல், நீக்குதல், விலக்குதல், பிடுங்குதல் அல் - (தொ.பெ.ஈறு).)]

கட்டல்[2] *kaṭṭal,* பெ.(n.) ஒகநிலை; yoga. *"கைநிமிர்த்தல் காணிமிர்த்தல் கட்டல்"* (தத்துவர்.108).

[கள் → கட்டு = பிணைத்தல், இணைத்தல். கட்டு + அல் (தொ.பெ.ஈறு) - கட்டல் = ஒருமுகப்படுத்துதல்.]

கட்டல்[3] *kaṭṭal,* பெ.(n.) 1. கட்டுண்ட நிலை; the state of being bound. 2. அகப்பட்ட நிலை; the state of being tied or surrounded.

க. கட்டல், கட்டலு.

[கட்டு + அல்.]

கட்டவிழ்-தல் *kaṭṭaviḻ-,* 2 செ.கு.வி.(v.i) 1. முடிச்சு அவிழ்தல்; to loosen the knot. 2. முறுக்கு நெகிழ்தல்; to loosen as the petals of a flower. *''கட்டவிழ் கண்ணி வேய்ந்து''* (திருவிளை. உக்கிர.வேல்வளை.42). 3. ஒற்றுமை நீக்குதல்; become disunited.

பட. கட்டகி

[கட்டு[10] + அவிழ்.]

கட்டவிழ்த்துவிடு-தல் *kaṭṭaviḻttu-viḍu-,* 18 செ.குன்றாவி.(v.t.) கட்டுப்பாட்டைத் தளர்த்திவிடுதல்; to loose the control. ஊர்வலத்தில் ஒழுங்கின்மையைக் கட்டவிழ்த்து விட்டதால் வன்முறை நிகழ்ந்தது (உ.வ.).

[கட்டு[11] + அவிழ்த்து + விடு-]

கட்டழகன் *kaṭṭaḻagaṉ,* பெ.(n.) 1. உடற்பயிற்சி செய்து உடலைக் கட்டாக வைத்திருப்பவன்; எடுப்பான தோற்றமுடையவன்; one who has a well built physique. 2. அழகிய ஆண்மகன்; handsome man. *அவன் நல்ல கட்டழகன்* (உ.வ.).

[கட்டு[10] + அழகன்.]

கட்டழகி *kaṭṭaḻagi,* பெ.(n.) பேரழகுள்ளவள்; very beautiful woman. *"காணத் தெவிட்டாத கட்டழகி"* (பணவிடு.355).

[கடு → கட்டு + அழகி. கடு = மிகுதி.]

கட்டழகு *kaṭṭaḻagu,* பெ.(n.) பேரழகு. (கந்தபு.வள்ளி.182); great beauty.

மறுவ. ஏர், வனப்பு, எழில், யாணர், மாமை, கேழ், தோட்டி, கவின், ஒப்பு, மஞ்சு, பொற்பு, அணி, சொக்கு, அயில், தகை, தொட்டிமை, மணி, பொலம், செவ்வி, வனப்பு.

[கடு (மிகுதி) → கட்டு + அழகு.]

கட்டழல் *kaṭṭaḻal,* பெ.(n.) பெருநெருப்பு; raging fire. *"கட்டழ லீமத்து"* (மணிமே.21:12).

[கடு → கட்டு + அழல். கடு = மிகுதி.]

கட்டழி[1]-தல் *kaṭṭaḻi-,* 4 செ.கு.வி.(v.i.) கட்டுக்குலைதல்; to lose vigour; to become shattered, as in health. *"சரீரங் கட்டழிந்து"* (ஈடு.6.1:4).

[கட்டு[10] + அழி-]

கட்டழி[2]-த்தல் *kaṭṭaḻi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. நிலைகெடுத்தல்; to ruin, degrade; to cause humiliation. *''இலங்கை கட்டழித்தவன்''* (திவ்.திருச்சந்.54). 2. காவலைச் சிதைத்தல்; to deprive of protection. *"கடிமதிலுங் கட்டழித்த"* (சீவக.1245). 3. கற்பைக் குலைத்தல்; to seduce.

[கட்டு[11] + அழி-]

கட்டளவு *kaṭṭaḷavu,* பெ.(n.) கட்டியளக்கும் அளவு; measurement by heaping up, dist. fr. level measuring.

[கட்டு[1] + அளவு.]

கட்டளை[1] *kaṭṭaḷai,* பெ.(n.) 1. அளவு (பிங்.); standard of measurement. *“கடவரவ் வருடக் கட்டளைக் கிறுதி” (திருவிளை. இந்திரன்முடி.23).* 2. உருவங்கள் வார்க்கும்கருவி (வின்.); matrix in which any thing is cast; mould. தெரிவைமாருக்கோர் கட்டளை யெனச் செய்த திருவே (வின்.). 3. செங்கல்லச்சு; mould for making bricks. *“கட்டளை கோடித் திரியிற் கருதிய இட்டிகையுங் கோடும்” (அறநெறி. 37).* 4. ஒன்றைப்போல்



கட்டளை

அமைக்கப்பட்ட உருவம்; portrait, image, statue. *“தீட்டிரும் பலகையிற் றிருத்தித் தேவர் காட்டி வைத்ததோர் கட்டளை போல” (பெருங். உஞ்சைக். 33:112).* 5. உவமை; similitude, likeness, resemblance. 6. ஒழுங்கு; regularity, order; rule. *‘வேதம் கட்டளைப்பட்டது அவ் வூரிலுள்ளார் கைக்கொண்ட பின்பாயிற்று’ (ஈடு.6.5:8).* 7. வாயிற் கால்; door-frame, door-case.

ம. கட்டள

[கள்→கட்டு → கட்டம் = நான்குபக்கங்கள் கொண்ட வரைவு. கட்டு → கட்டளை = நான்கு பக்கங்கள் இணைந்த கட்டம்; வாசற்கால், செங்கல் அச்சு, அளவு, ஒழுங்கு, உருவம், உருவொப்புமை].

கட்டளை[2] *kaṭṭaḷai,* பெ.(n.) 1. நிறைகோல்; balance, scales weighing apparatus. கட்டளைகொண்டு இதை நிறுத்துப்பார்(உ.வ.). 2. நிறையறி கல்; standard weight. 3. உரைகல்; touchstone. *“சால்பிற்குக் கட்டளை யாதெனின்” (குறள், 986).* 4. தரம்; grade,rank. *“கட்டளை வலிப்ப நின்தானை உதவி” (பதிற்றுப்.81:17).* 5. துலை ஓரை (திவா.); Libra, a sign of the zodiac.

[கள் → கட்டு → கட்டளை = அளவு, உருவொப்புமை. கட்டளை[1] → கட்டளை[2] = அளவிடவுதவும் நிறைகோல், தரத்தை அளவிடவுதவும் கல்.]

கட்டளை[3] *kaṭṭaḷai,* பெ.(n.) 1. முறைமை; way, method, manner. *“நமக்கின்றி தன்றோ கயலைப் பொருத கண்ணாண்மேலும் வாழ்விக்குங் கட்டளையே” (தஞ்சைவா. 333).* 2. எல்லை; limit. ‘கழுத்தே கட்டளையாக நீரை முகந்து’ (ஈடு 5.6:8). 3. கட்டுப்பாடு (ஈடு, அடைய. அரும்.); community law; code of laws regulating the conduct of individual members of a caste or community. 4. ஆண்டவன் கட்டளை; God's will. அனைத்தும் அவன் கட்டளைப்படி நடக்கும்(உ.வ.). 5. ஊழ்வினை; destiny, fate. *“கட்டளைப் படிமையில் பிழையாது” (சீவக. 2752).* 6. ஆணை, உத்தரவு; order, command; precept; direction, decree for execution; injunction, warrant. உச்சமுறைமன்ற நடுவரின் கட்டளையை நிறைவேற்றியே ஆக வேண்டும்(உ.வ.). 7. மெய்ம்மம் (தத்துவம்) உணர்த்தும் நூல்; treatise which presents within a small compass the fundamental principles of a religion. வேதாந்தக் கட்டளை.

[கள் → கட்டு → கட்டளை = ஒழுங்கு, கட்டுப்பாடு, ஆணை.]

கட்டளை[4] *kaṭṭaḷai,* பெ.(n.) 1. அரண்காவல்; protection by fortification. *“கட்டளைப் பட்டலங்கை யென்கை” (திவ். திருநெடுந்.20.வியா.154).* 2. மேற்பூணி, கவித்தி (சேணம்); saddle, harness and other equipments for a horse. *“கட்டளைப் புரவி சூழ்ந்து கால்புடை காப்ப வேவி” (சீவக.767).*

[கள் → கட்டு → கட்டளை.]

கட்டளை[5] *kaṭṭaḷai,* பெ.(n.) 1. ஒரே வாய்க்கால் வழியாக நீர்பாயும் சமநிலமான வயற்பரப்பு; a field on same level which is capable of irrigation by a single channel. 2. நிறைவு (அக.நி.); fullness.

[கள் → கட்டு → கட்டளை = அளவு, ஒழுங்கு.]

கட்டளை[6] *kaṭṭaḷai,* பெ.(n.) 1.கோயில் சிறப்பு நடைமுறைக்காக உண்டாக்கும் அறம்; endowment for some special services in a temple. திருமுழுக்குக்கட்டளை. 2. இறைபயணத் தார்க்கு உணவளிக்க உண்டாக்கும் அறம்; provision for the free feeding of pilgrims.

[கள் → கட்டு → கட்டளை.]

கட்டளை[7] *kaṭṭaḷai,* பெ. (n.) நீர் அதிகம் கலக்காத மோர்; thick buttermilk (without an admixture of water).

க. கட்டளெ

[கட்டு+அளை. கட்டு = கெட்டியானது. அளை = தயிர், தயிரைக் குறித்த சொல் கிளைமொழி வழக்கில் மோரைக் குறிப்பதாயிற்று.]

கட்டளை[8] *kaṭṭaḷai,* பெ. (n.) ஊர்ப்பெயர்; name of a village.

[கட்டு + அளை → அளவு → அளை. கட்டு - முறை, ஒழுங்கு, எல்லை, பகுதி.]

சோழநாட்டுத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் வழிபாடு நடத்தும் ஏழு படிநிலைப் பூசனைகளை நிறைவேற்றும் பொருட்டுப் பணிக்கப்பட்ட ஊர்கள். இவை முதலாம் கட்டளை, இரண்டாம் கட்டளை என்பன போன்று ஏழு ஊர்ப்பெயர்களாக அமைந்துள்ளன.

கட்டளை[9] *kaṭṭaḷai* பெ. (n.) 1. முதன்மை; first. 2. சிறப்பு; speciality. *"கட்டளை யானையும் மத்தக உவாவும் வையப் புறத்தொடு கைபுனைந் தியற்றி"* (பெருங்.42:30).

[கட்டு → கட்டளை.]

கட்டளைக்கல் *kaṭṭaḷai-k-kal,* பெ.(n.) 1. பொன் உரைகல்; touchstone. *"தத்தங் கருமமே கட்டளைக் கல்" (குறள்,505).* 2. படிக்கல் (வின்.); standard weight.

ம. கட்டள

[கட்டளை[2] + கல். கட்டளைக்கல் - செப்பத்தை வரையறுக்கும் கல்.]

கட்டளைக்கலி *kaṭṭaḷai-k-kali,* பெ.(n.) கலம்பகக் கலிப்பாப் போன்று அல்லாமல் எல்லா வடிகளும் ஒற்று நீங்க எழுத்தொத்துவருங் கலிப்பா (யாப்.வி.95, 470); a kali verse with equal number of letters excluding consonants in each line opp. to kalambakakkali.

[கட்டளை + கலி. கட்டளை - ஒழுங்கு, செப்பம்.]

கட்டளைக்கலித்துறை *kaṭṭaḷai-k-kali-t-tuṟai,* பெ.(n.) பாவினத்துள் கலித்துறை வகை: a kind of kali-t-tuṟai verse.

[கட்டளை + கலித்துறை.]

ஐந்தாஞ்சீர் மட்டும் கருவிளங்காய் அல்லது கூவிளங்காய் வர வெண்டளை வழுவாது முடியும் நெடிலடிகள் நான்குடைத்தாகி வந்து இறுதி ஏகாரத்தால் முடிவது. நேரசையில் தொடங்கும் அடியாயின் ஒற்றுநீங்க 16 எழுத்துகளும், நிரையசையில் தொடங்கும் அடியாயின் ஒற்றுநீங்க 17 எழுத்துகளும் வருமாறு நான்கடிக் கலித்துறையாக அமையும் பாவகை. ஒரே சீரான கட்டுக்கோப்பு உடைமையின் கட்டளைக் கலித்துறை எனப்பட்டது.

நூற்பா:
"கலித்துறை நெடிலடி நான்கொத் தவற்றுள்
இடைநேர் வெண்சீ ரியற்சீர் முதனான்கு
இடைநிரை வெண்சீ ரிறுதிச்சீர் மோனையாய்க்
கடையே கொண்டிறுங் கட்டளைக் கலித்துறை"
(தொன்.வி.241.)

எ.டு.
"சுந்தாரம் பாடிக் களித்தாடும் வண்டினங் காமுறுபூஞ்
சந்தார நாறு நிழற்சோலைக் காவலூர் தங்கியவா
ளிந்தாரம் பூண்ட திருவடி கண்டேத்த வெவ்வுயிரும்
வந்தாரக் காண்பேனோ வானலங் கொண்டாரா
வையகமே"
[தொன்.வி.241. மேற்.]

கட்டளைக்கலிப்பா *kaṭṭaḷai-k-kali-p-pā,* பெ.(n.) கலிப்பா இனத்திலொன்று (தொன்.வி.236); a species of Kali verse.

[கட்டளை (ஒழுங்கு) + கலிப்பா.]

கட்டளைக்கலிப்பா முதலாஞ்சீரும், ஐந்தாஞ்சீரும் தேமா அல்லது புளிமாவாகவும் மற்றைய ஆறுசீரும் பெரும்பான்மையுங் கூவிள மாகவும் முடியும் எண்சீரடி நான்குடையதாய் வருவது; நேரசையை முதற்கொண்டுவரும் பாதியடிக்கு அலகுபெறு மெழுத்துப் பதினொன்றெனவும் நிரையசையை முதற்கொண்டுவரும் பாதியடிக்கு எழுத்துப் பன்னிரண்டெனவுங் கொள்ளப்படும்.

நூற்பா:
"கட்டளைக் கலிப்பாக் காட்டும் காலை
ஒருமாக் கூவிளம் ஒருமூன்று இயைய
நேர்பதி னொன்று நிரை பன்னீர் எழுத்து ஆய்
நடந்துஅடி பாதியாய் நான்குஅடி ஒத்தவாய்
வருவது இன்று வழங்கு நெறியே"
(தொன்.வி. 236.)

கட்டளைக்கால் *kaṭṭaḷai-k-kāl,* பெ. (n.) வாசற்காலில் நேராக நிறுத்தப்படும் பக்கச்சாத்து; the vertical beam at either end of a door-frame.

ம. கட்டிளக்கால்

[கட்டளை + கால். கட்டளை - ஒழுங்கு, நேர்.]

கட்டளைக்குரு *kaṭṭaḷai-k-kuru,* பெ. (n.) ***கட்டளைத் தம்பிரான்*** பார்க்க; see *kaṭṭaḷai-t-thambirāṉ.*

[கட்டளை[3] + குரு.] த. குரு > Skt : guru

கட்டளைக்கூட்டம் *kaṭṭaḷai-k-kūṭṭam,* பெ.(n.) குறிப்பிட்ட நோக்கத்தின் பேரில் நடக்கும் ஊர்க் கூட்டம்; special meeting. '*ஊரிலே கூட்டங்களிலே சேரவும், பிரித்துக் கட்டளைக்கூட்டம் என்று செய்யக் கடவதல்லாததாகவும்*' (S.I.I.Vol.6. Insc.58).

[கட்டளை[3] + கூட்டம்.]

கட்டளைக்கொடி *kaṭṭaḷai-k-koḍi,* பெ.(n.) கவிழ் தும்பை; stooping tumbai (சா.அக.).

[கட்டளை + கொடி.]

கட்டளைக்கொடு-த்தல் *kaṭṭaḷai-k-koḍu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. அனுமதியளித்தல்; to give permission 2. சிறப்புரிமையளித்தல்; to grant privileges. 3. பற்றாணை கொடுத்தல் (வின்.); to issue warrant.

[கட்டளை³ + கொடு.]

கட்டளைக்கோல் *kaṭṭaḷai-k-kōl,* பெ.(n.) நெறிமுறை (யாழ்.அக.); regulation, enactment, edict, statute.

மறுவ. கட்டளைச் சட்டம்

[கட்டளை³ + கோல்.]

கட்டளைகேள்(ட்)-த(ட)ல் *kaṭṭaḷai-kēḷ-,* 12 செ.குன்றாவி.(v.t.) முறைமன்றத் தீர்ப்பை நிறைவேற்ற அனுமதி கேட்டல்; to request for the execution of a decree.

[கட்டளை³ + கேள்-.]

கட்டளைச்சட்டம்¹ *kaṭṭaḷai-c-caṭṭam,* பெ.(n.) ***கட்டளைக்கோல்*** பார்க்க; see *kaṭṭaḷai-k-kōl.*

[கட்டளை³ + சட்டம்.]

கட்டளைச்சட்டம்² *kaṭṭaḷai-c-caṭṭam,* பெ.(n.) அரசின் சட்டதிட்டங்கள். (சி.சி. VI. திருவிளங்.); law, rules of Government.

[கட்டளை³ + சட்டம்.]

கட்டளைச்சட்டம்³ *kaṭṭaḷai-c-caṭṭam,* பெ.(n.) அளவு அல்லது நிறைபற்றிய நெறிகள்; rules of measure or weight (சா.அக.).

[கட்டளை¹ + சட்டம்.]

கட்டளைச்சாமி *kaṭṭaḷai-c-cāmi,* பெ.(n.) ***கட்டளைத் தம்பிரான்*** பார்க்க; see *kaṭṭaḷai-t-tambirāṉ.*

[கட்டளை³ + சாமி.]

கட்டளைச்சுவடி *kaṭṭaḷai-c-cuvaḍi,* பெ.(n.) வழிக் குறிப்புகள் தரும் புத்தகம்; directory.

[கட்டளை ³+ சுவடி.]

கட்டளைச்செலவு *kaṭṭaḷai-c-celavu,* பெ.(n.) ஆண்டுக் கணக்கு முடிக்கும் சிற்றூர்க் கணக்கர் கட்குக் கொடுக்கப்படும் செலவுத்தொகை; allowance paid to village karnams as compensation for expenses incurred by them in connection with the preparation of the annual accounts.

[கட்டளை⁶ + செலவு.]

கட்டளைசொல்(லு)-தல் *kaṭṭalai-col-,* 8 செ.குன்றாவி. (v.t.) ஆணை அறிவிப்புச் செய்தல் (வின்.); to give or publish an order.

[கட்டளை³ + சொல்-.]

கட்டளைத்தம்பிரான் *kaṭṭaḷai-t-tambirāṉ,* பெ.(n.) சிவனிய மடத்தைச் சார்ந்த கோயில்களை மேற்பார்க்க மடத்தின் தலைவராய் அமர்த்தப்பட்ட சிவத் துறவி; ascetic appointed by the chief of Saiva mutt to supervise and administer the temples belonging to the mutt.

[கட்டளை³ + தம்பிரான். தம்பெருமான் → தம்பிரான்.]

கட்டளைநிறைவேற்று-தல் *kaṭṭaḷai-niṟaivēṟṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) முறைமன்ற ஆணையை நிறைவேற்றுதல்; to execute the order or decree of a court.

[கட்டளை³ + நிறைவேற்று-.]

கட்டளைப்படி *kaṭṭaḷai-p- paḍi,* பெ.(n.) நிலைப்படியின் குறுக்குச்சட்டம்; the horizontal beam at either end of a door frame.

ம. கட்டளப்படி

[கட்டளை¹ + படி.]

கட்டளைப்படிவா(ரு)-தல் *kaṭṭaḷai-p-paḍi-varu-,* 8 செ.கு.வி.(v.i.) ஆணைப்படி வருதல்; to come according to order.

[கட்டளை³ + படி + வரு-.]

கட்டளைப்பதம் *kaṭṭaḷai-p-padam,* பெ.(n.) கப்பற் கலைச்சொல். (மாலுமிசா.97); technical terms of ship.

[கட்டளை¹ + பதம். பதம் = சொல்.]

கட்டளைப்பாம்பு *kaṭṭaḷai-p-pāmbu,* பெ.(n.) ஒருவகைப் பாம்பு; a species of snake (சா.அக.).

[கட்டளை¹ + பாம்பு.]

கட்டளைபிடித்துவார்(ரு)—தல் *kaṭṭaḷai-piḍitt(u)-vāru-,* 5 செ.குன்றாவி. (v.t.) சுவடி சேர்ப்பதற்காக ஒலையை வாரி ஒழுங்குபடுத்துதல் (யாழ்ப்.); to pare and trim palmyra leaves for making a book.

[கட்டளை¹ + பிடித்து + வாரு—.]

கட்டளைபுதையனேரி *kaṭṭaḷai-pudaiyaṉēri,* பெ.(n.) திருநெல்வேலி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thirunelveli district.

[கட்டளை + புதையன் + ஏரி. அறபபயன் கருதி கட்டளையாக அமைந்த புதையனேரிஉசிற்றூர்.]

கட்டளைபோடு—தல் *kaṭṭaḷai-pōḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) ***கட்டளையிடு—தல்*** பார்க்க; see *kaṭṭaḷai-y-iḍu-.*

[கட்டளை³ + போடு—.]

கட்டளைமிச்சம் *kaṭṭaḷai-miccam,* பெ.(n.) வரையறுத்து வழங்கப்பட்டதில் மீதம் பிடித்தல்; savings from sanctioned expenditure.

ம. கட்டளமிச்சம்

[கட்டளை³ + மிச்சம். மீதி → மீதம் → மிச்சம்.]

கட்டளைமீறு—தல் *kaṭṭaḷai-mīṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ஆணையை மீறுதல் (வின்.); to break or violate an order.

[கட்டளை³+ மீறு—.]

கட்டளையடி *kaṭṭaḷai-y-aḍi,* பெ.(n.) எழுத்துக் கணக்கில் அமைந்த செய்யுளடி (தொல்.பொருள். 337, உரை); a line in a poem whose length is determined by the number of letters.

[கட்டளை¹ + அடி.]

எ.டு.

"செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெ தறிந்த சினவாழி" [யாப்.வி.மேற்.15]. இது பதினாறு எழுத்துகளால் ஆகிய கட்டளையடி யாகும்.

கட்டளையாசிரியம் *kaṭṭaḷai-y-āsiriyam,* பெ.(n.) எல்லாவடிகளும் ஒற்றுநீங்க எழுத்தொத்து வரும் அகவல்; a variety of agaval verse in which every line has the same number of syllables, excluding consonants.

[கட்டளை¹ + ஆசிரியம்.]

எ.டு.

"மேனமக் கருளும் வியனருங் கலமே
மேலக விசும்பின் விழவொடும் வருமே
மேருவரை யன்ன விழுக்குணத் தவமே
மேவதன் றிறநனி மிக்கதென் மனமே"

(யாப்.வி.52 மேற்.)

இது 13 எழுத்துகளாலான கட்டளையாசிரியம்.

கட்டளையிடு—தல் *kaṭṭaḷai-y-iḍu-,* 20 செ. குன்றாவி. (v.t.) 1. பணித்தல்; order, command, direct, prescribe. `*சர்வ மானியமாகக் கட்டளையிட்டு*' (S.I.I. V 452A10.) 2. வழங்குதல்; to bestow. 3. முடிவாக உரைத்தல்; utter a decision. *நமக்கீசனிட்ட கட்டளை இதுதான் (உ.வ.).*

[கட்டளை³ + இடு—.]

கட்டளைவஞ்சி *kaṭṭaḷai-vañji,* பெ.(n.) எல்லா வடிகளும் ஒற்றுநீங்க எழுத்தொத்துவரும் வஞ்சிப்பா; the vañji verse in which each line has the same number of syllables.

[கட்டளை¹ + வஞ்சி.]

எ.டு.

"உரிமை யின்கண் இன்மையால்
அரிமதர் மழைக்கண்ணாள்
செருமதிசெய் தீமையால்
பெருமகொன்ற என்பவே"

(யாப். வி.15 மேற்.)

இதில் எல்லாவடிகளும் ஒற்று நீங்க எட்டு எட்டு எழுத்துகளால் ஆகியதால் இது கட்டளை வஞ்சி.

கட்டளைவலி—த்தல் *kaṭṭaḷai-vali-,* 4 செ.குன்றாவி. (v.t.) அவரவர் தரத்தை வரையறுத்தல்; to assign rank or grade as of an office. *"கட்டளை வலிப்ப நின்தானை யுதவி" (பதிற்றுப்.81: 17).*

[கட்டளை³ + வலி. வலித்தல் - சொல்லுதல்; உடன்படுதல்; வரையறை செய்தல்.]

கட்டளைவெண்பா *kaṭṭaḷai-veṇbā,* பெ.(n.) ஈற்றடி ஒழித்து ஏனையடிகள் எழுத்து ஒத்து வரும் வெண்பா (யாப்.வி. ஒழிபி.95 497.); veñbā verse having equal number of letters in all lines other than last line.

[கட்டளை¹ + வெண்பா.]

எ.டு.
"நடைக்குதிரை ஏறி நறுந்தார் வழுதி
அடைப்பையா! கோறா எனலும் – அடைப்பையான்
கொள்ளச் சிறுகோல் கொடுத்தான் தலைபெறினும்
எள்ளாதி யாங்காண் டலை"

(யாப்.வி.9. மேற்.)

கட்டன் *kaṭṭaṉ,* பெ.எ.(adj.) 1. நச்சுத்தன்மை பொருந்திய; slightly poisonous. 2. காட்டம் மிகுந்த; extremely strong, undiluted. 3. விறைப்பான; hard. 4. பழுக்காத, பச்சை; raw, unripe.

ம. கட்டன்

[கடு (கட்டு) + அன் – கட்டன். கடு = நஞ்சு, கடுமை நிறைந்த, பக்குவப்படாத.]

கட்டனன் *kaṭṭaṉaṉ,* பெ.(n.) குள்ளன்; dwarf. (கழக).

[குட்டன் → கட்டன் → கட்டனன். குட்டன் = குள்ளன், குட்டையானவன்.]

கட்டனை *kaṭṭaṉai,* பெ.(n.) தரையிறுகத் திமிசு போடுகை; tamping, ramming down. கட்டனை போட்ட பிறகுதான், தரை வழிக்கவேண்டும்.

க. கட்டனெ.

[கொட்டு → கொட்டல் → கொட்டனை → கட்டனை. ஒருகா. கட்டு(உறுதி) → கட்டனை – சுத்தியால் புளி நசுக்குதலைக் கொட்டனம் போடுதல் என்பர்.]

கட்டனைமரம் *kaṭṭāṉai-maram,* பெ.(n.) திமிசுக் கட்டை; wooden tamper, rammer.

[கொட்டனை → கட்டனை + மரம்.]



கட்டனை மரம்

கட்டா *kaṭṭā,* பெ.(n.) 20 விரலம் நீளம் வளர்வதும் இளங்கருப்பு நிறமுடையதுமான கடல்மீன் வகை; sea fish, soft dorsal black, attaining atleast 20 inches in length.

ம. கட்டா, கட்டாவு.

[கடு → கட்டா.]

கட்டாக்கயிறு *kaṭṭā-k-kayiṟu,* பெ. (n.) கல் முடியப் பெறும் வலைக்கயிறு (செங்கை. மீனவ.); a fishing net with small stones tied.

[கட்டு + கயிறு – கட்டுக்கயிறு → கட்டாக்கயிறு (கொவ.).]

கட்டாக்காலி *kaṭṭā-k-kāli,* பெ.(n.) ஒருவருக்கும் உரியதல்லாத, கட்டி வளர்க்கப்படாத, தெருவில் அலையும் மாடு; stray cattle. தெருவில் அலையும் கட்டாக்காலிகளைப் பிடித்துப் பட்டியிலடை(உ.வ.). 2. பட்டிமாடு (வின்.); ox or cow suffered to roam at large, or that is not put into the stall by night.

[கட்டாத + காலி.]

கட்டாக்குட்டி *kaṭṭa-k-kuṭṭi,* பெ.(n.) அறை கலன்கள், தட்டுமுட்டுப் பொருள்கள்; loose things, chattels, movables, household stuff.

ம. கட்டாக்குட்டி

[கட்டு + குட்டி – கட்டுகுட்டி → கட்டாக்குட்டி. சின்னி + குன்னி – சின்னிகுன்னி → சென்னாக்குன்னி எனவும்; நட்டு + முட்டி – நட்டாமுட்டி எனவும் திரியும் திரிபுகளை ஒப்பு நோக்குக. வீட்டுப் பொருள்கள் கட்டாகத் திரட்டி வைக்கப் பட்டனவாகவும் சிதறிக் கிடப்பனவாகவும் பொதுப்படக் காணப்படுதலின் அவை கட்டுகுட்டி எனக் கிளைமொழி வழக்காகக் கூறப்படுவதுண்டு.]

கட்டாகட்டி *kaṭṭā-kaṭṭi,* பெ.(n.) விடாத்தன்மை; stubbornness. கட்டாகட்டியாயிருந்து வேலையை முடிக்க வேண்டும். (இ.வ.)

[கட்டுதல் = காத்தல். ஒ.நோ. தன்னக்கட்டி = தன்னலம் பேணுபவன். கட்டி = கட்டிக்காத்தல், யாருக்கும் எதுவும் விட்டுத் தராமை. கட்டி + கட்டி – கட்டாகட்டி (ஒரு பொருள்மேல் ஈரடுக்காய் வந்த அடுக்குச் சொல்). ஒ.நோ. முட்டி + முட்டி – முட்டாமுட்டி. (முழங்கையோடு முழங்கையும் முழங்காலோடு முழங்காலும் மோதிச் செய்யும் மற்போர் வகை).]

கட்டாகட்டிமை *kaṭṭa-kaṭṭimai,* பெ.(n.) 1. ஈயாமை; extreme miserliness. 2. மிக்க கட்டுப்பாடு (யாழ்.அக.); excessive restraint.

மறுவ. கட்டுரி

[கட்டு - சிக்கனம், பிடிப்பு. கட்டாக வாழ்தல் - ஈயாமல் வாழ்தல். கட்டு + கட்டு – கட்டுகட்டு → கட்டாகட்டு + மை – கட்டாகட்டிமை. 'மை' பண்புப் பெயரீறு. கட்டு என்பதன் ஈற்றுகரம் பண்புப் பெயரீறு ஏற்கும் போது இகரமாகத் திரிந்தது. முட்டி + முட்டி முட்டாமுட்டி எனத் திரிதலை ஒப்பு நோக்குக.]

கட்டாகட்டிமையான் *kaṭṭā-kaṭṭimaiyāṉ*, பெ.(n.) மிகுந்த கட்டுப்பாடுள்ள அல்லது வலிவுள்ள மாந்தன்; a man of a very strong built body, a robust man.

[கட்டாகட்டிமை + ஆன்.]

கட்டாங்கள் *kaṭṭāṅgaḷ*, பெ.(n.) புளித்த கள்; fermented toddy.

ம. கட்டாங்கள்ளு

[கடு - உறைப்பு. கடு + ஆம் – கட்டாம் + கள் – கட்டாங்கள் - உறைப்பு மிகுந்த கள். உறைப்பு இங்குப் புளிப்பு மிகுதியைக் குறித்தது.]

கட்டாஞ்சி *kaṭṭāñji*, பெ.(n.) 1. முள்வேல மரம் (வின்.); entire leaved staff-tree. 2. முள்வேல வகை; thorny staff-tree.3. சிறுவாலுளுவை; climbing staff plant. (சா.அக.)

[கள் → கட்டு → கட்டாஞ்சி. கள் - முள்.]

கட்டாட்டம் *kaṭṭāṭṭam*, பெ.(n.) பல்லாங்குழியாட்டத்துள் ஒருவகை; a kind of game, in pallāṅ-kuḻi.

[கட்டு + ஆட்டம்.]

கட்டாடி[1] *kaṭṭāḍi*, பெ.(n.) குறிசொல்வோன்; fortuneteller.

[கட்டு +ஆடி – கட்டாடி. (வே.க. 136) கட்டு - கட்டுரைத்தல், வருவது கூறல், எதிர்கால நிகழ்ச்சிகளை உன்னித்துக் கூறுதல்.]

கட்டாடி[2] *kaṭṭāḍi*, பெ.(n.) 1. வண்ணத்தன், வண்ணான்; washerman. 2. வண்ணாரத் தலைவன்; head of washermen.

மறுவ. வண்ணான், அரசவன், ஏகாலி, சலவையாளன், ஈரங்கொல்லி, வண்ணத்தன், துவையன், வெளுத்தாடன், சாக்கலன், அலுக்கன்.

[கட்டாடி[1] → கட்டாடி[2].]

குறிசொல்வோனே துணிவெளுப்பவனாகவும் இருந்ததால் பெற்ற பெயர். மருத்துவம் செய்பவனே முகம்மழிப் பவனாகவும் இருந்ததால் மருத்துவன் எனப் பெயர் பெற்றமை நோக்குக.

கட்டாடிச்சி *kaṭṭāḍicci*, பெ.(n.) குறிசொல்பவள்; fem. of *kaṭṭāḍi*

[கட்டு + ஆடிச்சி. கட்டு - குறி சொல்லுதல். ஆடி (ஆ.பா.) → ஆடிச்சி (பெ.பா.).]

கட்டாடியார் *kaṭṭāḍiyār*, பெ.(n.) கோயிற் பூசகன்; temple priest.

[கட்டு + ஆடி + ஆர் – கட்டாடியார்.]

கட்டாண்மை *kaṭṭāṇmai*, பெ.(n.) 1. பெருவீரம், பேராண்மை; manliness, great prowess. *"கை வருபல் படைக்குமொரு வீரரொவ்வாக் கட்டாண்மை யரசே". (பாரத. பதினேழாம். 18)* 2. மிகுந்த ஆண்தன்மை; great potent power.

[கடு - மிகுதி. கடு → கட்டு + ஆண்மை – கட்டாண்மை - பேராண்மை.]

கட்டாணி[1] *kaṭṭāṇi*, பெ.(n.) 1. ஈயாதவன்; miser. 2. பேராசைக்காரன்; avaricious man. 3. இழிந்தவன்; wicked man, vagabond.

தெ. கட்டாணி

[கடு → கட்டு + ஆளி – கட்டாளி → கட்டாணி. கட்டு - கட்டுப்பாடு, இறுக்கம், ஈயாமை.]

கட்டாணி[2] *kaṭṭāṇi*, பெ.(n.) 1. காதணி முதலிய வற்றின் கடைப் பூட்டாணி; pin or screw for fastening a woman's ear-ring. *"கட்டாணி முதலானவை... ஒக்கடிக்கிறதும்" (கோயிலொ.93).* 2. சிறு பொன் மணிகளுடன் உருவாக்கப்பட்ட கழுத்தணி; a necklace of five or seven strings of gold beads, each having a gold coin in the middle.

[கடை → கட்டு + ஆணி.]

கட்டாணி[3] *kaṭṭāṇi*, பெ. (n.) 1. திறமைசாலி; very capable man. 2. வலியவன்; strong well-built man.

க. கட்டாணி

[கட்டு - உறுதி, ஆற்றல். கட்டு + ஆளி – கட்டாளி → கட்டாணி.]

கட்டாணி[4] *kaṭṭāṇi*, பெ.(n.) 1. அழகு; beautiful. 2. இனிமை; sweetness. *"கட்டாணி முத்தம்*

இனிக்கும் என்றாள்" (பாரதிதாசன்.) 3. பேரழகு, மண் போன்றவற்றின் முதல் தரம்; exquisite, great excellency, first class, as soil. 4. ஆணிமுத்து, முத்துப் போன்றவற்றின் அழகு அல்லது விலையுயர்ந்த நிலை; the state of being very fine or costly, as pearls. "கட்டாணி முத்தே" (நாட்டுப்புறப்.).

[கட்டு (செப்பம், ஒழுங்கு) + ஆணி. ஆணி – சொல்லாக்க ஈறு.]

கட்டாணி[5] *kaṭṭāṇi,* பெ.(n.) ***கட்டாவணி*** பார்க்க; see *kaṭṭāvaṇi* (வின்.).

[கட்டாவணி–கட்டாணி.]

கட்டாணித்தனம் *kaṭṭāṇi-t-taṉam,* பெ.(n.) இவறன்மை, ஈயாத்தன்மை (கஞ்சத்தனம்); stinginess. *கட்டாணித்தனமாய்க் கலியாணம் செய்தான்(உ.வ.).*

[கட்டாணி + தனம்.]

கட்டாத்தி *kaṭṭāti,* பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Pudukkottai district.

[கொடு (வளைவு)→கொட்டு + ஆத்தி-கொட்டாத்தி (வளைந்த ஆத்திமரத்து ஊர்) → கட்டாத்தி.]

கட்டாதனம் *kaṭṭātaṉam,* பெ.(n.) ***கட்டிருக்கை*** பார்க்க; see *kaṭṭirukkai.*

[கட்டு + ஆதனம். வ. ஆசன > ஆதனம். கட்டிருக்கை எனின் முற்றுந்தமிழாம்.]

கட்டாந்தரை *kaṭṭān-tarai,* பெ.(n.) 1. வறண்டிறுகிய நிலம்; dryland, hard barren soil. *"கட்டாந்தரை யட்டையைப் போல" (இராமநா. அயோத்.17).* 2. வெறுந்தரை; floor.

மறுவ. வெட்டாந்தரை

ம. கட்டாந்தர

[குட்டு → கட்டு + ஆம் + தரை – கட்டாந்தரை = வெற்றுநிலம் (மு.தா.99,100).]

கட்டாப்பாறை *kaṭṭā-p-pāṟai,* பெ.(n.) சிறிய பாறைமீன் (செங்கைமீனவ.); a kind of small fish.

[கட்டை + பாறை – கட்டைப்பாறை → கட்டாப்பாறை. கட்டை = குட்டை, சிறியது.]



கட்டாப் பாறை

கட்டாப்பு *kaṭṭāppu,* பெ.(n.) 1. வேலியடைத்த நிலம் (வின்.); fenced ground, enclosed field. 2. செய்மானம், கட்டுவிப்பு; build up. 3. செய்வித்த வடிவமைப்பு; set up. 4. காவல் நிலம்; guarded land. 5. பொத்தகக் கட்டுமானம்; book binding.

[கட்டு + ஆப்பு. (ஆப்பு – சொல்லாக்க ஈறு.) கட்டு → கட்டாப்பு (வே.க. 136).]

கட்டாம்பாரை *kaṭṭām-pārai,* பெ.(n.) 28 விரலம் வளரக்கூடிய, குதிரை வடிவப் பச்சைநிறமுடைய கடல்மீன் வகை; horsemackerel, greenish, attaining 28 inches in length.

[குட்டாம் → கட்டாம் + பாரை.]

கட்டாம்புளி *kaṭṭām-puḷi,* பெ.(n.) நெல்லை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thirunelvēli district.

[கொடு → கொட்டு + அம் + புளி – கொட்டம்புளி→ கட்டாம்புளி. (வளைந்து கவிந்த புளியமரம், புளியமரத்தூர்)]

கட்டாமரம் *kaṭṭā-maram,* பெ.(n.) சிறு கட்டுமரம் (நெல்லை. மீனவ.); small catamaran.

[கட்டு மரம் → கட்டாமரம்.]

ஒன்றிற்கு மேற்பட்ட மரங்களைப் பிணைத்து அமைப்பது கட்டுமரம். அவ்வாறு கட்டாமல் ஒரே மரத்தால் ஆனது கட்டாமரமாகலாம்.

கட்டாயக்காத்திருப்பு *kaṭṭāya-k-kāttiruppu,* பெ.(n.) ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாற்றப்படும்போதோ நீண்ட விடுப்பிலிருந்து திரும்பும்போதோ பணியேற்கக் காத்திருத்தல்; interim period of compulsory waiting.

[கட்டாயம் + காத்திருப்பு.]

கட்டாயம்[1] *kaṭṭāyam,* பெ.(n.) 1. பண்டைய வரிகளில் ஒன்று (i.m.p. cg.1095); an ancient tax. 2. குறித்த பருவங்களில் உறுதியாகச் செலுத்தி ஆகவேண்டிய வரி(S.I.I.Vol.5, 257.); the tax that must be paid.

[கட்டு + ஆயம். ஆயம் = தீர்வை, வரி. கட்டாயம் = கட்டியே தீரவேண்டிய வரி வகை.]

கட்டாயம்[2] *kaṭṭāyam,* பெ.(n.) 1. வலக்காரம், வன்முறை; force. முடியாது என்று எவ்வளவோ மறுத்தும் கட்டாயமாகக் கையொப்பம் வாங்கி விட்டான் (உ.வ.). 2. கட்டுப்பாடு; compulsion, constraint. விரும்பாத விழாவிற்கு வருமாறு கட்டாயப்படுத்தாதே (உ.வ.). 3. உறுதி; certain. இன்று கட்டாயமாகத் தொல்காப்பியக் கூட்டத்திற்குச் செல்வேன் (உ.வ.).

ம. கட்டாயம்; **க.** கட்டாய; **தெ.** கட்டாயமு.

[கட்டு → கட்டாயம் (வே.க. 136).]

கட்டவேண்டிய ஆயம் கட்டாயம். கட்டுதல் = செலுத்துதல்; ஆயம் = வரி. வரி கட்டுவது பொதுவாக மக்கள் விரும்பாததும் தவறாது செய்ய வேண்டுவதுமான செயல். வரி கட்டுவது போன்ற கண்டிப்பு கட்டாயம் [சொ.ஆ.க.14].

கட்டாயம்[3] *kaṭṭāyam,* பெ.(n.) குறுக்காகச் செங்கல்லை அடுக்கும் வகை; piling up bricks breadthwise, opp. to நெட்டாயம்.



கட்டாயம்

ம. கட்டாயம்

[குத்து → குட்டு → கட்டு + ஆயம் – கட்டாயம். ஆயம் = தொகுதி, வரிசை.]

கட்டாயம்பண்ணு-தல் *kaṭṭāyam-paṇṇu-,* 11 செ.கு.வி.(v.i.) ஒரு செயலைச் செய்யுமாறு வற்புறுத்துதல் (வின்.); to compel, force.

[கட்டாயம் + பண்ணு-.]

கட்டாயவரி *kaṭṭāya-vari,* பெ.(n.) ***கட்டாயம்***[3] பார்க்க; see *kaṭṭāyam.*

[கட்டாயம் + வரி.]

கட்டாரங்குளம் *kaṭṭāraṅkuḷam,* பெ.(n.) தூத்துக்குடி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tūttukuḍi district.

[கொட்டாரன் → கட்டாரன் + குளம் – கட்டாரங்குளம்.]

கட்டாரம் *kaṭṭāram,* பெ.(n.) உடைவாள், குத்துவாள். (யாழ்.அக.); poniard.

மறுவ. கட்டாரி

ம. கட்டார

[கள் → கடு → கட்டு + ஆரி – கட்டாரி → கட்டாரம். ஆரி – சொல்லாக்க ஈறு. கடு = வெட்டு. கட்டாரி பார்க்க. see kaṭṭāri.]

கட்டாரி[1] *kaṭṭāri,* பெ. (n.) 1. குத்துவாள்; hilted dagger. *"கட்டாரிவருங் கலைசையே" (கலைசைச். 83).* 2. சூலம்; trident of šivā. *"கட்டாரி யேந்திய காளத்தி நாதர்" (தனிப்பா. 160, 399).* 3 எழுத்தாணிப்பூண்டு (மலை.); style plant.



கட்டாரி

ம. கட்டாரி; **க.** கடாரி; **தெ.** கடாரி.

[கடு (வெட்டு) + ஆரி – கட்டாரி. 'ஆரி' சொல்லாக்க ஈறு.]

கட்டாரி[2] *kaṭṭāri,* பெ.(n.) ஒருவகை மர ஏனம்; a kind of wooden vessel.

ம. கட்டாரி

[குடம்→கடம்→கடாய்→ கடாரி→கட்டாரி. 'ஆரி' – சொல்லாக்க ஈறு.]

கட்டாரிக்குத்துணி *kaṭṭāri-k-kuttuṇi,* பெ.(n.) வாள்வடிவில் கருங்கோடுகளமைந்த பட்டுத்துணி; a kind of silk with black stripes resembling daggers.

[கட்டாரி + குத்து + உணி. உண்ணி → உணி - உண்டது, பெற்றது, கட்டாரியின் வடிவம் குத்தப்பெற்றது.]

கட்டாரிக்கையொலி *kaṭṭāri-k-kai-y-oli,* பெ.(n.) ***கட்டாரிக்குத்துணி*** பார்க்க; see *kaṭṭāri-k-kuttuṇi.*

[கட்டாரி+கையொல.]

கட்டாரிப்பாம்பு *kaṭṭāri-p-pāmbu,* பெ.(n.) கோலா வலையிற்படும் பாம்பு வகை; a kind of sea snake (தஞ்சை மீனவ.).

[கட்டாரி + பாம்பு. கட்டாரி - குத்துவாள், குத்துவாள் போன்ற பாம்பு.]

கட்டாலங்குளம் *kaṭṭālangkuḷam,* பெ.(n.) தூத்துக்குடி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tūttukkuḍi dt.

[கொடு → கொட்டு + ஆலம் + குளம் – கெட்டாலங்குளம்→ கட்டாலங்குளம். கொட்டாலம் - வளைந்து கவிந்த ஆலமரம்.]

கட்டாவணி *kaṭṭāvaṇi,* பெ.(n.) கதிர் அறுப்பு (p.); reaping.

மறுவ. கட்டாணி, கட்டாவு.

[கள் → கடு → கட்டு + அணி. → (கடு - வெட்டு, அறு.) கட்டுவணி → கட்டாவணி.]

கட்டாவு *kaṭṭāvu,* பெ.(n.) ***கட்டாவணி*** பார்க்க; see *kaṭṭāvaṇi.*

[கட்டாவணி → கட்டாவு.]

கட்டாள் *kaṭṭāḷ,* பெ.(n.) 1. வலிமையுடைய ஆள்; a strong valiant man. 2. அடியாள்; hooligan hired for beating enemies.

க. கட்டாள், கட்டாளு.

[கட்டு + ஆள். கட்டு - உடற்கட்டு, வலிமை.]

கட்டாள்தனம் *kaṭṭāḷ-taṉam,* பெ.(n.) மிக்க வலிமை; great stateliness, great valour.

க. கட்டாள்தன

[கட்டாள் + தனம். 'தனம்' – சொ.ஆ.ஈறு.]

கட்டான் *kaṭṭāṉ,* பெ.(n.) 1. ஆட்டத்திற்கென்று வகுத்த இடம்; chequered square on board for games. 2. கோடிட்டமைத்த அறைகளுக்குள் காய் வைத்தாடும் ஒருவகை விளையாட்டு; a game played on a chequered board.

[கள் → கடு → கட்டம் → காட்டாம்→கட்டான். கட்டம் - சதுரம்.]

கட்டானக்கால் *kaṭṭaṉa-kāl,* பெ.(n.) கருவண்டு; black beetle.

[கட்டு + ஆன + கால். - குட்டையான கால்களையுடைய வண்டு.]

கட்டி[1] *kaṭṭi,* பெ.(n.) 1. இறுகின பொருள்; உறைந்த பொருள்; cold, lump, concretion; anything hardened; coagulated. மண்ணாங்கட்டி, பனிக்கட்டி. 2.கருப்புக்கட்டி; jaggery, coarse palm-sugar. *"கட்டியின் அரிசியும் புழுக்கும் காணமும் புட்டில் வாய்ச் செறித்தனர்" (சீவக. 1938).* 3. கற்கண்டு (பிங்.); sugar candy. *"சாறடு கட்டி எள்ளுச் சாமை கொள் இறுங்கு தோரை" (திருவிளை. திருநாட்டு. 29).* 4. சிலந்திப்புண்; boil, abscess, tumour. *'துக்கத்தைச் சொல்லி ஆற்ற வேண்டும்; கட்டியைக் கீறி ஆற்ற வேண்டும்' (பழ.).* 5. சுரக்கட்டி; enlarged spleen. 6. கருப்பிண்டம் (வின்.); foetus. 7. கனிமம்; ore. 8. பொன்; gold; bar of gold. *"அழல்வினை யமைந்த நிழல்விடு கட்டி" (பதிற்றுப். 81 : 16).* 9. வளையல் செய்யும் அரக்கு; stick of lac made of ant-hill earth and resin melted and drawn out for making bangles. 10. 25 பலம் கொண்ட நிறையளவு; a measure of weight 25 palams. 11. துண்டு; bar, cake. சவர்க்காரக்கட்டி, சுண்ணக்கட்டி. 12. கனசதுரம்; cube. 13. எலும்பு; bone. 14. திரண்ட மாத்திரளை; moulded flour. கட்டிமாவிளக்கேற்றிக் காணிக்கை செலுத்தினர் (உ.வ.).

ம. கட்டி; க. கட்டெ; தெ. கட்ட; கோத. கட்ய; குட. கட்டிமோரி (கட்டித்தயிர்); து. கட்டி; பட.கட்டி

[குள் → கள் → கட்டு → கட்டி. (மு.தா. 244) கள் - திரளல், பெருகுதல், உருண்டையாதல், உருண்டு கட்டியாதல், திரண்டுபெருகுதலால் தோற்றப் பொலிவு பெறுதல்.]

பரு, கொப்புளம், ஊமைவீக்கம், கழலை, பிளவை, அரையாப்பு, நெறிக் கட்டு, ஈரல்நோய், கண்டமாலை போன்றவை அனைத்தையும் 'கட்டி' என்றே அழைத்தல் பெருவழக்கு.

கட்டி[2] *katti* பெ.(n.) அகமகிழ்ச்சி (திவா.); inward delight.

[கள் → கட்டு - நிறைவு, மகிழ்வு. கள் - திரண்டது.]

கட்டி[3] *katti* பெ.(n.) புள்வகை, கரிக்குருவி; a kind of bird. *'கட்டி' இடமானால் வெட்டி அரசாளலாம் (பழ.).*

[கட்டு = குறி செல்லுதல், வருங்காலத்தைக் கணித்துக் கூறுதல்; புள்நிமித்தம். கட்டு → கட்டி -கட்டு அல்லது குறியைக் குறிப்பால் உணர்த்தும் பறவை]

கட்டி[4] *katti* பெ.(n.) பாடை (யாழ்.அக.); bier.

[கட்டில் → கட்டி. 'ல்' ஈறுகெட்டது. இலக்கிய வழக்கில் 'கால்கழி கட்டில்' எனக் குறிக்கப்படுதல் ஒப்புநோக்கத் தக்கது.]

கட்டி[5] *katti* பெ.(n.) 1. திறமை ; ability, competence. 2. மனஉறுதி; strong will.

ம. கெட்டி; க. கட்டி (திறமை); து., தெ. கட்டி; குட. கெட்டிகெ (கெட்டிக்காரன்)

[கட்டு → கட்டி.]

கட்டி[6] *katti* பெ.(n.) கடைக்கழகக் காலக் குறுநில மன்னன்; local chieftain of Sangam period. *"குல்லைக் கண்ணி வடுகர் முனையது பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்" (குறுந். 11).*

[கட்டி[5] → கட்டி[6].]

கட்டிக்கசடு *katti-k-kašadu,* பெ.(n.) வண்டல்; sediment. 2. கட்டியின் மாசு; matter from an abscess (சா.அக.).

[கட்டி + கசடு.]

கட்டிக்கற்காரை *katti-k-kar-kārai* பெ.(n.) உரிய விழுக்காட்டில் சுதைமாவு (சிமிட்டி), மணலுடன் ஒன்றரை விரலளவுள்ள சல்லி கலந்து இரும்பிடை யில்லாமல் வார்க்கும் கற்காரை; mass concrete, with 1½" size jelly, sand and cement in the designed proportion without reinforcement rods.

[கட்டி + கல் + காரை.]

கட்டிக்கா-த்தல் *katti-k-kā-,* 11 செ.குன்றாவி.(v.t.) கவனித்துப் பாதுகாத்தல்; to guard with care, to pay the utmost attention possible. 2. விடாது காத்தல்; to serve unremittingly. *"அவர் மனதறிந்து கட்டிக்காத் திருப்பதே" (திருவேங்.சத.52).*

[கட்டி + கா-. கட்டி - மனத்தில் உறுதியாய் இருத்தல்.]

கட்டிக்காப்பு *katti-k-kāppu,* பெ.(n.) உட்டுளை யில்லாமல் முழுமையாகப் பொன்னால் செய்யப்பட்ட காப்பு; solid (gold) bangle.

ம. கட்டிக்காப்பு; தெ. கெட்டிக்காப்பு

[கட்டி + காப்பு.]

கட்டிக்கார் *katti-k-kār,* பெ. (n.) கார்நெல் வகை (A); a kind of 'kār' paddy.

[கட்டி + கார். கரு → கார். கருமையைக் குறித்த 'கார்' கறுப்பாயிருக்கும் முகிலையும், அம்முகிலால் பெய்யும் மழையையும், அம் மழை பெய்யும் பருவத்தையும் அப் பருவத்தில் விளையும் நெல்லையும் குறிப்பதாயிற்று. கார்நெல்லென்றும் காரரிசியென்றும், 'கார்' அடையாய் வருவதுமுண்டு.]

கட்டிக்காரன் *katti-k-kāran,* பெ.(n.) வல்லாளன், திறமைசாலி; clever, active man.

ம. கட்டிக்காரன்; க. கட்டிக; துட. கொட்யகொர்ன்; குட. கெட்டிகெ; து. கட்டிகெ; தெ. கட்டிவாடு; பட. கட்டிகார.

[கட்டி[5] + காரன்.]

கட்டிக்காலா *katti-k-kālā,* பெ.(n.) பொன்னிறமான ஏழரை விரலம் வளரக்கூடிய கடல்மீன் வகை; robaut, golden fish, attaining 7½ inch in length.

ம. கட்டிக்காலா

[கட்டி[1] + காலா. காலா - மீன்வகை.]

கட்டிக்கொடு-த்தல் *katti-k-kodu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1.பெண்ணுக்குத் திருமணம் செய்தல்; to give a girl in marriage. 2. மிகவும் உதவுதல்; to help liberally; to pay handsomely. 3. ஈடுசெய்தல்; to make good, as loses, compensate. 4. சோறு முதலிய வற்றைப் பயணத்திற்காக கட்டித்தருதல்; to pack food for travel. *'கட்டிக்கொடுத்த சோறும் சொல்லிக் கொடுத்த சொல்லும் எதுவரைக்கும்?' (பழ.).*

[கள் + து – கட்டு → கட்டி + கொடு- (து.வி.). கள் பிணைத்தல், சேர்த்தல். கட்டுதல் - சேர்த்துப் பிணைத்தல்.]

கட்டிக்கொண்டழு–தல் *katti-k-kondalu-*, 1 செ. குன்றாவி.(v.t.) பயனில்லை எனத் தெரிந்தும் தொடர்ந்து ஈடுபட நேர்தல்; to exert continuously, knowing the negative result.

[கட்டி + கொண்டு + அழு-.]

இழவு வீட்டில், பிணத்தைச் சுற்றி நின்று ஒருவரையொருவர் கட்டிப் பிடித்து அழுவது இயல்பு. இங்கு அழுவோர் அனைவருக்கும் இறந்தோர் மீண்டெழார் என்பது தெரிந்தும் ஒப்புக்காக அழுவது போல், பயனளிக்காத ஒன்றைத் தொடர்ந்து செய்வதையும் இது குறிப்பதாயிற்று.

கட்டிக்கொள்(ளு)[1]–தல் *katti-k-kol* –, 7 செ. குன்றாவி.(v.t.) 1. தழுவுதல்; to hug; embrace. இறுகக் கட்டிக்கொண்டு கண்ணீருடன் வழியனுப்பினான்(உ.வ.). 2. மணம் செய்துகொள்ளுதல்; to marry. முறைப்பெண்ணைக் கட்டிக்கொள்ள இவனுக்கு விருப்பமில்லை(உ.வ.). 3. பற்றுதல்; to cling to. அவ்வேலையைக் கட்டிக்கொண்டு இன்னலுறு கிறான்(உ.வ.). 4. வயமாக்குதல்; to bring within one's power or influence; to bring round; conciliate. அவன் தன் பக்கமாக இருக்கும்படி எல்லாரையும் கட்டிக்கொண்டான்(உ.வ.). 5. ஏற்றுக் கொள்ளுதல்; to lay up; accumulate, as virtuous deeds to store up; as sins for future retribution. அந்தப் புண்ணியத்தை அவன் கட்டிக் கொண்டான் (உ.வ.). 6. பறித்தல்; to seize, acquire, annexe, take unjustly. அவன் அனைத் தையும் கட்டிக்கொண்டு போனதால் இவன் ஏதிலியானான்(உ.வ.).

தெ. கட்டுகொனு

[கள் → கட்டு → கட்டி + கொள்-.]

கட்டிக்கொள்(ளு)[2]–தல் *katti-k-kol-*, 7 செ.குன்றாவி. (v.t.) உடுத்தல்; to tie around as a garment.

[கள் → கட்டு → கட்டி கொள்-. கள் = சேர், இணை.]

கட்டிக்கொள்(ளு)[3]–தல் *katti-k-kol*, 7 செ.குன்றாவி. (v.t.) மருந்தியலில் ஒரு சரக்கை மற்றொரு சரக்கு, கட்டிக்கொள்ளுதல்; to bind a drug by another.

[கட்டி + கொள்–. கள் → கட்டு → கட்டி = மூடுதல், தடுத்தல், அடக்குதல்.]

கட்டிக்கோல் *katti-k-kōl*, பெ.(n.) உழுதபின் மண்கட்டிகளைத் தட்டி உடைக்கப் பயன்படுத்தும் வேளாண் கருவி; an agricultural implement for breaking the clods after ploughing.

மறுவ. கட்டக்கோல்

ம. கட்டக்கோல், கட்டக்கொட்டுவடி, கட்டமுட்டி.

[கட்டி + கோல் – கட்டிக்கோல் = மண்கட்டிகளை உடைக்கும் கோல்.]

நன்செய் நிலத்தை உழுதபின் நிற்கும் கட்டிகளைத் தட்டிச் சமமாக்கப் பலகையையும், புன்செய் நிலத்தை உழுதபின் நிற்கும் கட்டிகளைத் தட்டிச் சமமாக்கக் கோல்களையும் பயன் படுத்துவதுண்டு.

கட்டிச்சம்பா *katti-c-cambā*, பெ.(n.) நான்கு திங்களில் பயிராகும் சம்பா நெல்வகை; a kind of paddy maturing in four months.

ம. கட்டிச்சம்பாவு

[கள் → கடு → கட்டி + சம்பா. கள் → கட்டி = திரட்சி.]

கட்டிச்சவுக்காரம் *katti-c-cavukkāram*, பெ.(n.) 1. சவுக்காரக்கட்டி; lump of fuller's earth found naturally in the soil. 2. நாட்டுச்சவுக்காரக்கட்டி; soap cake (சா.அக.).

[கட்டி + சவுக்காரம். சவுள் → சவர் + காரம் – சவர்க்காரம் → சவுக்காரம் (உவர் மண், அளமண்). உவர்மண் துணிவெளுக்கப் பயன்படுத்தப்பட்டதை ஒப்பு நோக்குக.]

கட்டிச்சி *katticci*, பெ.(n.) வாணாள் நீட்சிக்குச் சித்தர் பயன்படுத்தியதாக அறியப்படும் மருந்து, செந்திராய்; a drug with high potency said to be used by Siddhars for promoting longevity (சா.அக.).

[கட்டு + கட்டுச்சி – கட்டிச்சி.]

கட்டிச்சுருட்டு–தல் *katti-c-curuttu-*, 6 செ.குன்றாவி. (v.t.) 1. பொருளைச் சுருட்டிக் கட்டுதல்; to pack up one's goods. *"முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாங் கட்டிச் சுருட்டிக் கக்கத்தில் வைப்பர் கருத்தில் வையார்"* (பட்டினத்.பொது.30). 2. திருடிய பொருளைத் திரட்டுதல்; to pack up stolen goods before running away; to carry of plunder, as a thief. 3. செய்தொழிலை நிறுத்துதல்; to stop one's activities. உன் கடையைக் கட்டிச்சுருட்டு (உ.வ.).

[கட்டு → கட்டி + சுருட்டு–.]

கட்டிச்சோறு *katti-c-cōru*, பெ.(n.) குழைந்து, ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டிருக்கும் பச்சரிசிச்

சோறு; a cake of cooked rice (from rice not boiled in the husk).

ம. கட்டிச்சோறு, கட்டச்சோறு.

[கள் → கட்டு → கட்டி + சோறு. கள் = சேர்தல், பிணைதல்.]

கட்டிச்சுரம் *katti-c-ch-šuram,* பெ.(n.) 1. குருக்களை எழுப்பும் சுரம் அல்லது குருக்களினாலேற்படும் சுரம்; an eruptive fever and also the eruation which characterises such a fever. 2. கட்டியினுடைய வேகத்தால் காணும் காய்ச்சல்; fever arising from acute abscess. (சா.அக.)

[கட்டி + சுரம். சுரம் = காய்ச்சல்.]

கட்டிடம்[1] *kattidam,* பெ.(n.) வீடு கட்டும் இடம், மனை; building site, plot.

[கட்டு + இடம் – கட்டிடம் (கட்டுகின்ற இடம்). கட்டிடத்தைக் கட்டடம் எனப் பொருள் கொள்வது தவறு.]

கட்டிடம்[2] *kattidam,* பெ.(n.) 1. ***கட்டடம்*** பார்க்க; see *kattadam.*

[கட்டடம் → கட்டிடம். கட்டிடம் என்பது மலையாளத்தின் வழித் தமிழில் புகுந்த இடவழக்கு (பொருட்குற்றமுள்ள கொச்சை வழக்கு).]

கட்டடப்படுவது கட்டடம். ஒற்றப்படுவது ஒற்றடம். கட்டப்பட்டது கட்டடமாதலால் கட்டிடம் என வழங்குவது தவறு. தமிழும் மலையாளமும் தவிர்ந்த திரவிட மொழிகளில் வீட்டைக் கட்டடம் என்று வழங்குதல் காண்க.

கட்டித்தங்கம் *katti-tangam,* பெ.(n.) ***கட்டிப்பொன்*** பார்க்க; see *katti-p-pon.*

[கட்டி + தங்கம்.]

கட்டித்தயிர் *katti-t-tayir,* பெ.(n.) கட்டியாக இறுகிய தயிர், கடைந்து உடைக்கப்படாத தயிர்; unchurned curd.

ம. கட்டத்தைரு; க. கட்டுமொசரு.

[கட்டி + தயிர்.]

கட்டித்தரம் *katti-t-aram,* பெ.(n.) முரட்டுத்துணி; thick cloth.

ம. கட்டித்தரம்.

[கட்டி + தரம். த. திரம் > வ. தரம்.]

கட்டிதட்டு[1]**–தல்** *katti-tattu-,* 5 செ.கு.வி.(v.i.) ***கட்டிப்பிடி***[1]***–த்தல்*** பார்க்க;see *katti-p-pidi-*[1].

[கட்டி + தட்டு-. தட்டு = படுதல், மோதுதல், சேர்தல்.]

கட்டிதட்டு[2]**–தல்** *katti-tattu-,* 5 செ.குன்றாவி.(v.t.) கட்டிகளை உடைத்தல்; to break clods.

[கட்டி + தட்டு-.]

கட்டிநாயக்கன்தொட்டி *katti-nāyakkan-totti,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharumapuri district.

[கட்டி + நாயக்கன் + தொட்டி. தொட்டி = மாட்டுப்பட்டி. த. தொழுவம் > க. தொட்டி > த. தொட்டி.]

கட்டிப்பால் *katti-p-pāl,* பெ.(n.) 1. (இனிப்புச்சுவை சேர்த்துச் சற்று) கெட்டியாக்கப்பட்ட பால்; condensed milk. 2.நீர் கலவாத பால்; pure milk.

[கட்டி + பால்.]

கட்டிப்பிடி–த்தல் *katti-p-pidi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. இறுகத் தழுவுதல்; to hug, embrace. 2. குளிர்சுரம் முதலிய நோய்களினாலும், அன்பு அச்சம், காமம் முதலிய மனவேறுபாடுகளினாலும் தனக்குத்தானே இறுகத் தழுவுதல்; grasp or seize by himself indelirium etc. 3. செலவை மிகச் சுருக்குதல்; to practice severe economy.

ம. கெட்டிப்பிடிக்குக; Thai. kord.

[கட்டு → கட்டி + பிடி-.]

கட்டிப்பு *katti-p-pu,* பெ. (n.) ஏமாற்றம்; deceit, fraud.

ம. கட்டிப்பு

[கள் → கடு → கட்டு → கட்டி + பு.]

கட்டிப்புகு–தல் *katti-p-pugu-,* 21 செ.கு.வி.(v.i.) கைம்பெண் மறுமணம் செய்துகொள்ளுதல் (இராட்.); to be remarried, attributed to be a remarrying widow.

[கட்டி + புகு-. கட்டி = தாலிகட்டிக்கொண்டு.]

கட்டிப்புரள்–தல் *kaṭṭi-p-puraḷ-*, 12 செ.கு.வி.(v.i.) ஒருவரை ஒருவர் வலிமையாகப் பிடித்துக்கொண்டு உருளுதல்; to roll over, one holding the other as in a fight. அவர்கள் கட்டிப்புரண்டு சண்டையிட்டார்கள் (உ.வ.).

[கட்டி + புரள்.]

கட்டிப்புகுந்தவள் *kaṭṭi-p-pugundavaḷ*, பெ.(n.) மறுமணம் செய்துகொண்டவள் (வின்.); woman who has remarried after the death of her husband.

[கட்டி + புகுந்தவள்.]

கட்டிப்புழுக்கு *kaṭṭi-p-puḻukku*, பெ.(n.) அவரைப் பருப்பை வேக வைத்து வெல்லம் சேர்த்துக் கடைந்த இனிப்புத் துவையல் உருண்டை; a slightly boiled confection containing Egyptian bean mixed with jaggery. *"கட்டிப் புழுக்கிற் கொங்கர்கோவே" (பதிற்றுப். 90: 25).*

[கட்டி + புழுக்கு. கட்டி = வெல்லக்கட்டி. புழுக்கு = வேகவைத்து வெல்லம் சேர்த்துக் கடைந்த அவரைத் துவையல்.]

பதிற்றுப்பத்து உரையாசிரியர் அவரை முதலியவற்றின் விதைகளை இடித்துப் பெற்ற மாவோடு சர்க்கரையைக் கலந்தமைத்த உணவு என்று விளக்கம் தந்திருப்பது தவறு.

கட்டிப்பூண்டி *kaṭṭi-p-pūṇḍi*, பெ.(n.) திருவண்ணாமலை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvannamalai district.

[கட்டி + பூண்டி– கட்டிப் பூண்டி. பூண்டி = ஏரி. கட்டி என்பவன் பெயரிலமைந்த ஏரியைச் சார்ந்த ஊர்.]

கட்டிப்பேசு–தல் *kaṭṭi-p-pēsu-*, 8 செ.குன்றாவி.(v.t.) மிகைப்படுத்திப் புனைந்து பேசுதல்; to fabricate, exaggerate, overstate.

ம. கெட்டிப்பறக

[கட்டி + பேசு.]

கட்டிப்பொன் *kaṭṭi-p-poṉ*, பெ.(n.) அணிகலனாகச் செய்யப் படாமற் கட்டியாயிருக்கும் பொன் (திவ். திருப்பா.3,வியா.); gold in lump, opp. to பணிப்பொன்.

[கட்டி + பொன்.]

கட்டிப்போடு–தல் *kaṭṭi-p-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) ***கட்டிவை–த்தல்*** பார்க்க; see *kaṭṭi-vai-*.

[கட்டி + போடு.]

கட்டிபிடி[1]–த்தல் *kaṭṭi-piḍi-*, 4 செ.கு.வி.(v.i.) கூழ், உப்புமா, களி முதலிய உணவுப் பொருள் ஆக்கும் போது சரியாகக் கிண்டி விடாததால் கட்டிகட்டியாக நின்றுவிடுதல்; to form into a lump while preparing porridge - like eatable (சா.அக.).

[கட்டி + பிடி.]

கட்டிபிடி[2]–த்தல் *kaṭṭi-piḍi-*, 4 செ.கு.வி.(v.i.) வெல்லம் பிடித்தல்; to give a shape of balls as of jaggery. *இன்று எத்தனை கொப்பரைப் பாகினைக் கட்டிபிடித்தீர்?*

[கள் + கட்டி + பிடி. கட்டி = திரண்டது, உறைந்தது.]

கட்டிபுடை–த்தல் *kaṭṭi-puḍai-*, 4 செ.கு.வி.(v.i.) கட்டி வீங்குதல்; protrusion or swelling of an abscess. (சா.அக.).

[கட்டி + புடை.]

கட்டிமாங்கோடு *kaṭṭi-māṅgōḍu*, பெ.(n.) கன்னியாக்குமரி மாவட்டத்துக் கல்குளம் வட்டத்துச் சிற்றூர்; a village in Kalkulam Taluk in Kaniyakumari district.

[கட்டி + மா + கோடு – கட்டிமாங்கோடு = கட்டி என்பவன் பெயரிலமைந்த மாமரத்து ஏரி, அதனைச் சார்ந்த ஊர். கோடு = ஏரிகரை, ஏரி.]

கட்டிமாலை *kaṭṭi-mālai*, பெ.(n.) மாலை வகை; (T.A.S. iii, 225); a kind of garland.

[கட்டி + மாலை. கட்டி = திரண்டது.]

கட்டிமுட்டி[1] *kaṭṭi-muṭṭi*, பெ.(n.) சிறியதும் பெரியதுமான கட்டிகள் (வின்.); clots, loose mould in a newly ploughed clayey soil; large and small loose bundles in a bag.

மறுவ. கட்டியும் கசடும்; கட்டியுங்கரளையும்.

[கட்டி + முட்டி. கட்டி = திரட்சி. முட்டி = முட்டைபோன்று உருண்டது.]

கட்டிமுட்டி[2] *kaṭṭi-muṭṭi*, பெ.(n.) கஞ்சி, மருந்தெண்ணெய் (தைலம்), சுவைக்குடிநீர் முதலியவற்றைக் காய்ச்சும்போது பதம் தவறுவதால் அவை குழம்பாகத் திரளாமல், சிறுகட்டிகளாகவும், நீர்மமாகவும் அமையும் பதம்; the stage at which the intended solution of conjee, medicated oil, syrup and other liquids, instead of thickening evenly, are converted into small irregular masses, while boiling as a result of the imperfect process adopted during their preparation.

[கட்டி + முட்டி.]

கட்டிமுதலிகள் *katti-mudaligal,* பெ.(n.) கொங்கு நாட்டுக் குறுநில மன்னர்கள்; a chieftains of Kongu country. *'மங்கை வரோதயன் கட்டிமுதலி ஒன்றே'(இளமீசர் கோயில் கல்வெட்டு).*

[கட்டி + முதலிகள்.]

கோவை மாவட்டம் பவானி வட்டத்தில் உள்ள அமரகுந்தி என்னும் ஊரைத் தலைநகராக கொண்டு ஆண்டவர்கள். பவானி, திருச் செங்கோடு, தாரமங்கலம் போன்ற இடங்களில் கோயில் கட்டியுள்ளனர். தொடக்கத்தில் வாடாமாலை, வண்ணத்தடுக்கு இவர்களின் அரசு சின்னமாக இருந்தன. இவற்றுடன் வில், வேங்கை, இணைக்கயல் முதலியவற்றைச் சேர்த்துக் கொண்டனர். தாரமங்கலத்தில் உள்ள அம்மன் குளம் இவர்களின் கட்டட கலைக்குச் சான்று. கீழே சதுரமாயும், அதற்கும் மேலே எண்கோணமாயும் அதற்கடுத்து வட்டவடிவாமாயும் அமைந்தது அம்மன் குளம்.



கட்டிமுதலிகள் அரச இலச்சினை

கட்டிமூதண்டம் *katti-mūtandam,* பெ.(n.) கொடுக் காய்ப்புளி; malabar tamarind (சா.அக.).

[கட்டி + மூதண்டம். கள் → கட்டி = திரண்டது. மூதண்டம் = முகடு, வளைந்தது. முள் நிறைந்த இம் மரத்தின் காய்கள் கொடுக்குப்போல் வளைந்து காணப்படும்.]

கட்டிமேய்—த்தல் *katti-mēy-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கால்நடைகளை ஓரிடத்தில் மேயச் செய்தல்; to take out cattle for pasture. 2. அடக்கி நடத்துதல்; to set limits to, prescribe bounds for. *'நரகங்களும் கட்டிமேய்க்கை தவிர்ந்து கோப்புக் குலைந்தது' (ஈடு. 52:1).*

[கட்டி + மேய்–.]

கட்டிமை *kattimai,* பெ.(n.) 1. இவறன்மை; miserliness. 2. கட்டுப்பாடு (யாழ்.அக.); agreement, compact.

[கட்டு → கட்டிமை. கட்டு = இறுக்கம், சுருக்கம்.]

கட்டியக்காரன் ஆசிரமம் *kattiya-k-kāran-āsiramam,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டச் சிற்றூர்; a village in Ramanathapuram dt.

[கட்டியக்காரன் + ஆசிரமம் – கட்டியக்காரன் ஆசிரமம்.]

கட்டியக்காரன் *kattiya-k-kāran,* பெ.(n.) ***கட்டியங்காரன்*** பார்க்க; see *kattiyaṅ-kāran.*

கட்டியக்கோல் *kattiya-k-kōl,* பெ.(n.) கட்டியங் காரன் கையில் வைத்திருக்கும் ஒரு பக்கம் வளைந்த இருப்புக்கோல் (கோவை.); an iron stick bent on one end which is usually held in the right hand of *kattiyaṅkāran.*

[கட்டியம் + கோல்.]

கட்டியங்காரன்[1] *kattiyaṅ-kāran,* பெ.(n.) 1. முன் னுரைப் போன்; panegyrist, herald. 2. கூத்தில் வரும் கோமாளி; buffoon. *"கதமில் கட்டியங்காரர் பல்லோர்" (சேதுபு.விதூம.5).*

மறுவ. கட்டியக்காரன்

ம. கட்டியக்காரன்

[கட்டியம் + காரன் – கட்டியங்காரன்.]

அரசன் அரண்மனைக்கு வெளியே நகரிலும் நாட்டிலும் செல்லும்போதெல்லாம் அவனுடைய பரிவாரத்திற்கு முன் சென்று, அவன் வருகையைக் கூறி மக்களை வழியினின்றும் விலக்கு பவனுக்குக் கட்டியங்காரன் என்று பெயர் [பழந்தமிழாட்சி, 30.].

கட்டியங்காரன்[2] *kattiyaṅ-kāran,* பெ.(n.) சீவக சிந்தாமணியின் காப்பியத் தலைவன் சீவகனின் தந்தை சச்சந்தனிடம் அமைச்சனா யிருந்து சூழ்ச்சி யால் அரசனைக் கொன்று அரியணை ஏறியவனும், இறுதியில் சீவகனால் கொலையுண்ட வனுமாகிய கட்டியங்காரன்; name of the prime minister of king Caccantan, who treacherously killed his master and usurped his throne but who was subsequently slain by Caccantan's son šivagan, the hero of Šivaga-cintāmaṇi.

[கட்டியம் + காரன்.]

கட்டியங்கூறு—தல் *kattiya-ṅ-kūru-,* 7 செ.குன்றாவி. (v.t.) 1. மரபுவழிப் பெருமை கூறுதல்; to recite a panegyric. *"கட்டியங் கூறுஞ்சீர்க் கலைசையே" (கலைசைச்.45).* 2. வருகைபற்றிய முன்னறிவிப்புச்

செய்தல்; to announce the arrival of somebody or something. தவளையின் கத்தல் பெய்யும் மழைக்குக் கட்டியங் கூறுவது போலிருந்தது(உ.வ.).

[கட்டு → கட்டியம் + கூறுதல். கட்டியம் = கட்டுரைத்தல், முறைப்பட எடுத்துரைத்தல். அரசர், திருமடத்துத் தலைவர் உலாவரும்பொழுது கட்டியம் கூறுதல் பழந்தமிழ் மரபு. இறைவன் திருவீதியுலா வருதலைத் திருச்சின்னம் மூலம் ஒலியெழுப்பி அறிவித்தலுமுண்டு.]

கட்டியசொல் *kaṭṭiya-šol,* பெ.(n.) பொருளில்லாமற் படைத்துக்கொண்ட தொடர்மொழி (பிர.விவே.19, உரை); coined compound word that refers to something which never exists, as முயற்கோடு.

[கட்டு → கட்டிய (பெ.எ.) + சொல். வலிந்து கட்டி எடுத்துரைக்கும் சொல்.]

கட்டியடி-த்தல் *kaṭṭi-y-aḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. தண்டனையாகக் கட்டிவைத் தடித்தல்; flog a person after binding him with a post. அவன் திருடியதற்காகக் கட்டியடிக்கப்பட்டான்(உ.வ.). 2. மாட்டை ஏரில் அல்லது வண்டியில் பூட்டி ஓட்டுதல்; to yoke the bulls to the plough for ploughing, or in a cart.

[கட்டி + அடி.]

கட்டியடுப்பு[1] *kaṭṭi-y-aḍuppu,* பெ.(n.) மண்கட்டியாலான அடுப்பு; rectangular earthen oven in two parts, like the figure made by two brackets.

[கட்டி + அடுப்பு.]

கட்டியடுப்பு : நடுவில் ஆசாக, அம்மிக்குழவியை வைத்துக் களிமண்ணால் மூடிச் சற்று இறுகியதும் அம்மிக்குழவியை எடுத்துவிட்டு இரண்டாக அறுத்துக் குமிழ் வைத்துச் செய்யப்படும் பிறைக்குறி அடைப்புப் போன்ற அடுப்பு வகை [தஞ்சை].



கட்டியடுப்பு[2]

கட்டியடுப்பு[2] *kaṭṭi-y-aḍuppu,* பெ.(n.) கிளையடுப்பு பார்க்க; see *kiḷai-aḍuppu.*

[கட்டி + அடுப்பு.]

கட்டியப்பம் *kaṭṭi-y-appam,* பெ.(n.) அரிசியை இடித்து அதில் தேங்காய்த் துருவல், உப்பு முதலியவற்றைச் சேர்த்து உருட்டி ஆவியில் வேகவைக்கும் ஒருவகைத் தின்பண்டம்; a kind of cake baked by steam, with the ingredients of rice, scraped coconut, salt etc.

ம. கட்டியப்பம்

[கட்டி + அப்பம்.]

கட்டியம் *kaṭṭiyam,* பெ.(n.) 1. வேந்தர், தெய்வம் முதலியோரைக் குறித்துக் கூறும் புகழ்த்தொடர்; panegyric sung before a king; praises chanted before an idol. *"இருடியோர்கள் கட்டியம் பாட" (திருப்பு.730).* 2. கூத்துவகை (யாழ்.அக.); a kind of dancing. 3. சிற்றிலக்கிய வகையுளொன்று (சிற்றிலக். அக.); a kind of prabantham.

ம. கட்டியம்

[கட்டு + இயம் - கட்டியம். கட்டியம் = கட்டுரைத்தல், முறைப்பட எடுத்துரைத்தல், புகழ்ந்துரைத்தல். கட்டு = செறிவு, ஒழுங்குமுறை. இயம் - சொல்லாக்க ஈறு. ஒ.நோ. கறுவியம் = தீராப்பகை.]

கட்டியர் *kaṭṭiyar,* பெ.(n.) தமிழ்நாட்டின் மேற்பால் ஆட்சிபுரிந்த ஒருசார் சிற்றரச வகுப்பினர்; a clan of the royal dynasty which ruled over the western part of Tamil Nadu. *"பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்" (சிலப். 25: 157).*

[கட்டி → கட்டியர். கட்டு = திரட்சி, கும்பல், குழு.]

கட்டியரக்கு *kaṭṭi-y-arakku,* பெ.(n.) அவலரக்கை உருக்கிக் கட்டியாகத் திரட்டிய அரக்கு; seed-lac melted into a mass (சா.அக.).

[கட்டி + அரக்கு.]

கட்டியரிதாரம் *kaṭṭi-y-aritāram,* பெ.(n.) கட்டியாக உள்ள முகஅழகு பூச்சுப்பொடி; orpiment in lumps (சா.அக.).

[கட்டி + அரிதாரம்.]

கட்டியள-த்தல் *kaṭṭi-y-aḷa-,* 3 செ.குன்றாவி.(v.t.) கூடுதலாகத் தவசம் வருமாறு படிக்குமேல் விரலை

வைத்து அளத்தல்; to measure the grains by keeping the fingers or palm over and above the actual measurement; fraudulent measurement. *"கனக்கும் சிறப்பமையக் கட்டியளப்பார் கங்காணப் படிபண்ணைக் காரனார் முன்னே" (முக்கூடற். 139).*

[கட்டி + அள.]

கட்டியன் *kaṭṭiyaṉ,* பெ.(n.) **கட்டியக்காரன்** பார்க்க see *kaṭṭiya-k-kāraṉ. "கட்டியரை நோக்கி ... சேனாபதி களுக்குஞ் சொல்லுமென்றான்" (கூளப்ப.41).*

ம. கட்டியன். (கூத்தில் வரும் கோமாளி, கேளிக்கைக் காரன், வேடிக்கைக்காரன்.)

[கட்டு → கட்டியம் → கட்டியன்.]

கட்டியாக்கு–தல் *kaṭṭi-y-ākku-,* 5.செ.குன்றாவி.(v.t.) 1. உறையச் செய்தல்; to solidify or to condense. 2. தோய்த்தல்; to curdle as is done to milk. 3. கட்டி யாகச் செய்தல்; to make into a lump. (சா.அக.).

[கட்டி + ஆக்கு → ஆகு.]

கட்டியாகு–தல் *katti-y-āku-,* 6 செ.கு.வி.(v.i.) இறுகுதல்; hardening.

[கட்டி + ஆகு.]

ஒரு நீர்மம் முழுமையாக இறுகுதல் கட்டி யாதலாகும். சிறு சிறு பகுதிகளாக இறுகுதல் கட்டி தட்டுதலாகும். கட்டிதட்டுதல் கட்டிபடுதல் என்றும் குறிக்கப்படும்.

கட்டியாரம்[1] *kaṭṭi-y-āram,* பெ.(n.) 1. செறிவு (யாழ் அக.); denseness. 2. கடுமை; hardness (த.சொ.அ).

[கள் = செறிவு, நெருக்கம், கட்டி + ஆரம். ஆரம் = சொ.ஆ.ஈறு. ஒ.நோ. ஓட்டாரம்.]

கட்டியாரம்[2] *kaṭṭi-y-āram,* பெ.(n.) நெருங்கத் தொடுத்த பூமாலை; thickly woven garland of flowers.

[கட்டி + ஆரம். ஆரம் = பூமாலை. கள் → கட்டு → கட்டி = நெருக்கித் தொடுத்தது.]

கட்டியாள்(ளு)–தல் *kaṭṭi-y-āḷu-,* 16 செ.குன்றாவி. (v.t.) அடக்கியாளுதல்; to rule. ஆட்சியில் இல்லாத போதும் கட்சியைப் பல்லாண்டு கட்டியாண்ட பெருமை அவருக்குண்டு (உ.வ.).

[கட்டி + ஆள்.]

கட்டியிழு–த்தல் *kaṭṭi-y-iḻu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1.பழுதுபட்ட படகு, வண்டி முதலியவற்றை இழுத்தல்; to toe. 2. பெரிய பொருள்களைக் கட்டியிழுத்தல்; to pull heavy weight. 3. கடமையை வலிந்து ஏற்றுக் கொள்ளுதல்; to take up a responsibility voluntarily. தந்தை இறந்தபின் இவன்தான் அக் குடும்பத் தைக் கட்டியிழுத்து வருகிறான் (உ.வ.).

[கட்டி + இழு.]

கட்டியிளி *kaṭṭi-y-iḷi,* பெ.(n.) திண்ணமான தோலுடைய கடலுயிரி (செங்கை மீனவ.); thick skined sea creature.

[கட்டி + இளி. இளி = இழிந்தது, தீமை தரும் உயிரி.]

கட்டியுங்கசடும் *kaṭṭiyuṅ-gaśaḍum,* பெ.(n.) ***கட்டி முட்டி***[2] பார்க்க; see *kaṭṭi-muṭṭi* (சா.அக.).

[கட்டி + உம் + கசடு + உம்.]

கட்டியுங்கரளையும் *kaṭṭiyuṅkaraḷaiyum,* பெ.(n.) **கட்டிமுட்டி** பார்க்க; see *kaṭṭi-muṭṭi* (சா.அக.).

[கட்டி + உம் + கரளை + உம்.]

கட்டியுடை[1]–த்தல் *kaṭṭi-y-uḍai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கட்டியை உடைத்தல்; to break clods. *வயலில் கட்டியுடைக்கச் சிலர் தேவை.* 2. உடலிற் றோன்றும் கட்டிகளையுடைத்தல்; to remove as of abscess.

[கட்டி + உடை.]

கட்டியுடை[2]–தல் *kaṭṭi-y-uḍai-,* 2. செ.கு.வி.(v.i.) புண் கட்டி வாய் திறத்தல்; to open as of an abscess. *காலிலிருந்த கட்டியுடைந்ததால் வலி குறைந்தது (உ.வ.).* 2. கட்டியாகத் திரண்டு பிறகு உடைதல்; to become a clod and then break (சா.அக.).

[கட்டி + உடை.]

கட்டியெரு *kaṭṭi-y-eru,* பெ.(n.) கட்டியாகிய சாணி (குமரேச.சத.37.); animal manure.

[கட்டி + எரு.]

கட்டியெழும்பு–தல் *kaṭṭi-y-eḻumbu-,* 5 செ.கு.வி. (v.i.) புண்கட்டி புடைகொண்டு மேற்கிளம்பல்; to grow as point of an abscess (சா.அக.).

[கட்டி + எழும்பு.]

கட்டிருக்கை *kaṭṭirukkai* பெ.(n.) ஓகநிலை வகை; a kind of yogic posture.

[கட்டு + இருக்கை.]

கட்டில்[1] *kaṭṭil,* பெ.(n.) 1. கால் கோத்த நீளிருக்கை, துயிலணை (மஞ்சம்); cot, bedstead, couch, sofa. *"பல்வினைப் பவளப் பாய்காற் பசுமணி யிழிகை வம்பார் நல்லகில் விம்மு கட்டில்" (சீவக. 558). 'ஒட்டினால் தொட்டிலும் கொள்ளும் ஒட்டாவிட்டால் கட்டிலும் கொள்ளாது' (பழ.).* 2. அரியணை; throne. *"கட்டில் வீறுபெற்று மறந்த மன்னன்போல" (குறுந். 225).*

ம. கட்டில்; **கோத.** கட்ள்; குட. கட்டி; **தெ.** கட்லி; **கோண்.** கடுல், கட்டுல்; **குவி.** கதெலி, குதெலி; **பர்.** கடெய; **கூ.** கடெ; **குரு.** கடீ; **மா.** கடெ, கடி; **பிரா.** கட்.

Skt. katvā, khaṭṭi (abier) H., **Nep.** khaṭiyā; **Ori.** khaṭiā; **E.** Cot.; **Port.** katal; **Mal.** katil.

த. கட்டில் > **Skt.** katvā.

[கட்டு + இல் – கட்டில் : கட்டப்பட்டது. 'இல்' சொல்லாக்க ஈறு.]

கட்டில் என்பது இருக்கை. அரசனது கட்டில் 'அரசு கட்டில்' என்றும் 'அரசிருக்கை' என்றும் அழைக்கப்பெறும். அதன் கால்கள் அரி [சிங்க] வடிவாய் அமைத்திருந்ததனால், அதற்கு அரியணை [சிங்காசனம்] என்றும் பெயர். தலைநகரிலும் பிற பாடிவீடுகளிலும் அரசனுக்கு அரியணையுண்டு. தலைநகரில், அரசன் அரசு வீற்றிருக்கும் ஓலக்க மண்டபத்திலும், (Durbar Hall) அமைச்சரொடு சூழும் சூழ்வினை மண்டபத்திலும், அறங்கூறும் மன்றத்திலும் ஒவ்வோர் அரியணை இருக்கும்.

அரியணைகட்குச் சிறப்புப்பெயரிட்டு வழங்குவது மரபு. சடாவர்மன் குலசேகர பாண்டியனுக்கு மதுரையில் 'மழவராயன்', 'கலிங்கராயன்', 'முனையதரையன்' என மூன்று அரியணைகளும், விக்கிரமபாண்டியனுக்கு மதுரையில் 'முனையதரையன்' என்னும் அரியணையும், இராசேந்திரனுக்கு 'மலையதரையன்' என்னும் அரியணையும் இருந்தன. [பாவாணர்: பழந்தமிழாட்சி, பக். 22, 23].

அரசனுடைய படைக்கலங்களை வைப்பதற்கும் முரசினை வைப்பதற்கும் கட்டில்கள் உண்டு. அது படைக்கலக்கட்டில் எனப்பெறும். [பழந்தமிழாட்சி , 50].

கட்டில்[2] *kaṭṭil,* பெ.(n.) பாடை; bier. *"கட்டிலேற்றிக் கைதொழூஉ" (ஞானா. 6).*

[கட்டு + இல்.]

கட்டில்நாடா *kaṭṭil-nāḍā,* பெ.(n.) கச்சுக்கட்டிலுக்குரிய அகன்ற நூலிழைப் பட்டை; broad tape for cots.

[கட்டில் + நாடா.]

கட்டிலெய்து–தல் *kaṭṭil-eydu-,* 10 செ.கு.வி.(v.i.) அரியணை ஏறுதல்; to ascend the throne. *'பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாற் பிணியிருந்த யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை வலிதிற்போய்க் கட்டிலெய் தினானைக் குறுங்கோழியூர் கிழார் பாடியது' (புறநா.17, உரைத்தலைப்பு).*

[கட்டில் + எய்து. கட்டில் : அரசுக் கட்டில், அரியணை.]

கட்டிலேறு[1]**–தல்** *kaṭṭilēṟu-,* 5 செ.கு.வி.(v.i.) அரசுப் பொறுப்பேற்றல்; to ascend the throne. *இவர் கட்டி லேறினார் என்பது தொழிலிற் பிரிந்த பெண்மொழி மிகுசொல் (தொல். சொல். 50, சேனா.உரை).*

[கட்டில் + ஏறு–.]

கட்டிலேறு[2]**–தல்** *kaṭṭilēṟu-* 5 செ.கு.வி.(v.i.) மணவறைக் கட்டிலிற் பள்ளிகொள்ளுதல்; to consummate a marriage. *"வணங்கப்பட்ட சின்னுதற் பதுமா பதியொடு கட்டி லேறினனாற் கருதியது முடித்தென்" (பெருங் . மகத. 22:285).*

[கட்டில் + ஏறு–.]

கட்டிவயல் *kaṭṭi-vayal,* பெ.(n.) கும்பகோணம் வட்டம் திருவிடைமருதூர் அருகில் உள்ள ஓரூர்; a village near Thiruvidaimarudur in Kumbakonam taluk. *'பாண்டி நாட்டு முத்தூற்றுக் கூற்றத்துக் கட்டிவயல்' (S.I.I. 23:266).*

[கட்டி + வயல். கட்டி என்பவனின் பெயரிலமைந்த ஊர்.]

கட்டிவராகன் *kaṭṭi-varāgaṉ,* பெ.(n.) ஒரு பழைய நாணயம்; a gold coin, the varāgaṉ. *"கட்டிலோ மெத்தையோ கட்டிவராகனோ" (குற்றா.குற. 72 : 22).*

ம. கட்டி வராகன்

[கட்டி[1] + வராகன். கட்டி : பொன். வராகம் : பன்றி. வராகம் → வராகன். பன்றி இலச்சினை பொறிக்கப்பட்ட நாணயம்.]

கட்டிவளர்-த்தல் *kaṭṭi-vaḷar-*, 4 செ.கு.வி. (v.i.) பாதுகாத்து முன்னேறச்செய்தல்; to nurture. *மூவேந்தரும் தமிழைக் கட்டிவளர்த்தனர்.*

[கட்டி + வளர்-.]

கட்டிவா(வரு)-தல் *kaṭṭi-vā-*, 18 செ.கு.வி. (v.i.) போதியதாதல்; to be enough; to be affordable. வாங்குகிற சம்பளம் வீட்டுச் செலவுக்குக் கட்டிவர வில்லை (உ.வ.). 2. வருவாய் மிக வருதல்; to be profitable, as a transaction. 3. கட்டுபடியாதல்; be reasonable. நீங்கள் கேட்கும் விலை எனக்குக் கட்டி வராது (உ.வ.).

[கட்டு → கட்டி + வா-.]

கட்டிவாங்கிக்கொள்(ளு)-தல் *kaṭṭi-vāṅgi-k-koḷ-*, 10 செ.குன்றாவி.(v.t.) அரையாப்புக் கட்டியாகிய பால்வினை நோய்க்கு ஆளாதல்; to contact a venereal bubo. *கண்டவளிடம் போனதால் கட்டி வாங்கிக் கொண்டான்.*

*[கட்டி + வாங்கி + கொள்-. கொள் (து.வி.) = கட்டி, இங்கு அரையாப்புக்கட்டியைக் குறித்து நின்றது. வாங்கிக் கொள்தலாவது இந் நோய் உள்ளோரிடம் கூடுவதால் தாமே பெறுவதாகும். அரையாப்புக்கட்டி தொடை இடுக்கில் அல்லது கவட்டியில் நெறிகள் பெருத்துக் கட்டியைப்போற் காணும் ஒருவகைப் புண்நோய். **அரையாப்பு** பார்க்க; see arai-y-āppu.]*

கட்டிவிடு[1]-தல் *kaṭṭi-viḍu-*, 18 செ.குன்றாவி.(v.t.) 1. கட்டடம் முதலியன கட்டுதல்; to build up. 2. ஒன்றாகச் சேர்த்துக் கட்டுதல்; to tie up. 3. சிப்பங் கட்டுதல்; to bundle up.

[கட்டி + விடு-.]

கட்டிவிடு[2]-தல் *kaṭṭi-viḍu-*, 17 செ.குன்றாவி. (v.t.) செலுத்துதல்; to pay up. *தேர்வுக்கட்டணத்தை நாளைக்குள் கட்டிவிடு (உ.வ.).*

[கட்டி + விடு-.]

கட்டிவிடு[3]-தல் *kaṭṭi-viḍu-*, 18 செ.குன்றாவி.(v.t.) 1. விலக்கி வைத்தல்; to out caste; to deprive a person of the service of village servants. ஊர்ப்பஞ்சாயத்தை மதியாதவன் வீட்டிற்கு ஊர்ப் பணியாளர்கள் செல்ல வேண்டாவெனக் கட்டிவிட்டார்கள்(உ.வ.). 2. ஒன்றின் செயற்றிறனை அடக்குதல்; to control one's vigouressness. அவன் மேல் ஏவிவிட்ட ஆவியைக் கட்டிவிடச்சொல் (உ.வ.).

[கட்டி + விடு-.]

கட்டிவிடு[4]-தல் *kaṭṭi-viḍu-*, 18 செ.குன்றாவி.(v.t.) பொய்க் குறளையுண்டாக்குதல்; to spread a false rumour. *அவனையும் அவளையும் இணைத்துக் கதை கட்டிவிட்டார்கள் (உ.வ.).*

மறுவ. குறளை பேசுதல்

[கட்டி + விடு-.]

கட்டிவிழு[1]-தல் *kaṭṭi-viḻu-*, 2 செ.கு.வி.(v.i.) கருவழிந்து விழுதல் (வின்.); to suffer a miscarriage.

[கட்டி + விழு-.]

கட்டிவிழு[2]-தல் *kaṭṭi-viḻu-*, 2 செ.கு.வி.(v.i.) வயிற்றில் கட்டியுண்டாதல்; to be enlarged as the spleen.

[கட்டி + விழு-. இங்கு விழுதலாவது தோன்றுதலாகும்.]

கட்டிவெள்ளி *kaṭṭi-veḷḷi*, பெ.(n.) மாசு நீக்கிய வெள்ளி; refined silver; pure silver (சா.அக.).

[கட்டி + வெள்ளி.]

கட்டிவை[1]-த்தல் *kaṭṭi-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) பிணைத்து வைத்தல்; to tie. 2. வரம்புக்குள் அடக்கி வைத்தல்; to bind within a limit.

[கட்டி+ வை-.]

கட்டிவை[2]-த்தல் *kaṭṭi-vai-*, 4 செ.குன்றாவி.(v.t.) ***கட்டிக்கொடு-த்தல்*** பார்க்க; see *kaṭṭi-k-koḍu-*.

[கட்டி + வை-.]

கட்டிழைக்கச்சை *kaṭṭiḻai-k-kaccai*, பெ.(n.) ஆடை விளிம்பில் இணைக்கப்படும் இழைக்கச்சை; galloon.

[கட்டு + இழை + கச்சை.]

கட்டிளம் *kaṭṭiḷam*, பெ.எ.(adj.) இளமை நிறைந்த தன்மை; youthful. *கட்டிளங்காளை, கட்டிளம் பெண் (உ.வ.).*

[கட்டு + இளம்.]

கட்டிளமை *kaṭṭiḷamai*, பெ.(n.) இளமைப்பருவம்; vigorous, virile youth.

[கட்டு + இளமை. கட்டு = திரட்சி, மிகுதி.]

கட்டினலிங்கம் *kaṭṭiṉaliṅgam,* பெ.(n.) மூலிகைகளைக் கொண்டாவது காரச் சரக்குகளைக் கொண்டாவது கட்டிய மருந்து; vermilion consolidated with the aid of drugs or acids and salts, consolidated vermilion (சா.அக.).

[கட்டின+லிங்கம் (கட்டி).]

கட்டினலிங்கம் இருவகைப்படும். மருத்துவத்திற்காகப் பயன்படுத்த வேண்டி அணியம் செய்ததை அரைக்கட்டு இலிங்கமென்றும், நெருப்பிற்கு ஓடாதபடி கட்டியதை ஊதைக்குப் பயன்படுத்தும் முழுக்கட்டு இலிங்கமென்றும் கூறுவர்.

கட்டினவள் *kaṭṭiṉavaḷ,* பெ.(n.) திருமணவுறவால் ஓர் ஆணுடன் வாழும் உரிமை பெற்றவள்; a woman who is having right to live with a man by marriage, wife. கட்டினவளைக் கைவிடல் முறையோ?(உ.வ.).

மறுவ. இல்லவள், இல்லாள், கற்பினாள், கிழத்தி, குடும்பினி, தடை, துணைவி, நாயகி, மணவாட்டி, மனைவி, மனையாட்டி, வாழ்க்கைத்துணை, விருத்தம்.

[கட்டு + இன் + அவள். தாலி கட்டிக்கொண்டவள்.]

கட்டினவன் *kaṭṭiṉavaṉ,* பெ.(n.) திருமணவுறவால் ஒரு பெண்ணுடன் வாழும் உரிமை பெற்றவன்; a man who is having right to live with a woman by marriage, husband கட்டினவனே கைவிட்டால், காப்பார் யாரோ? (உ.வ.).

மறுவ. உரியோன், கணவன், கேள்வன், கொண்கன், கொழுநன், தலைவன், துணைவன், மணவாளன், வல்லவன்.

ம. கெட்டியவன்

[கட்டு + இன் + அவன். (தாலி கட்டியவன்).]

கட்டீறு *kaṭṭīṟu,* பெ.(n.) ஒரு சொல்லுடன் சேர்ந்தே வரும் தன்மையுடைய சொல்லுறுப்பு; bound morpheme.

[கட்டு + ஈறு.]

வேற்றுமை உருபுகள், எண்ணும்மை, தேற்றேகாரம் போன்றன சொல்லுடன் இணைந்துமட்டும் வரும் தன்மையன. இவையனைத்தும் முன்னர் முழுச் சொற்களாய் இருந்து காலவோட்டத்தில் சுருங்கி ஈறு நிலையில் நின்றுள்ளன என்க. பலவிடங்களில் இவற்றின் முந்தைய தன்மைகளை அறியவியலாத அளவிற்கு இவை மாற்றம் பெற்று நிற்கின்றன.

கட்டு[1]–தல் *kaṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. பிணைத்தல்; to tie, to bind, fasten, shackle; *"நாரினாற் கட்டி" (நாலடி.153).* 2. அமைத்தல்; to build; construct, erect. *'திருமணம் செய்து பார்; வீட்டைக் கட்டிப்பார்' (பழ.).* 3. பதித்தல்; to fix. அட்டிகைக்குக் கல்கட்டிக் கொடு(உ.வ.). 4. தோற்றுவித்தல்; to establish as a theory. *"கட்டிய மெய்ந்நிலை காணா வெகுளியும்" (திரிகடு. 65).* 5. தழுவுதல்; to hug, embrace. *"கால்கள் கால்களோடு கட்டவும்" (பாரத. வேத். 60).* 6. தாலிபூட்டி மணத்தல்; to marry. அத்தைமகளை இவன் கட்டிக்கொள்வான்(உ.வ.). 7. இறுகச் செய்தல்; to harden, condense, consolidate. *"கட்டுச்சரக் கெல்லாம்" (பணவிடு. 226).*

தெ., க. கட்டு; **ம.** கெட்டு; **கோத.** கட்; **து., கொர.** கட்டி; **குட.** கேட்; **கொலா.** கட்; **நா., கோண்.** கட்ட்; **பர்.**கட்ட், கட், கட.

Egypt. q-d; **Hung.** kōto; **Ost.** kattem; **Syr.** kuta; **Fin.** keitt; **Lap.** kareto; **Sl.** kuda.

[கள் → கட்டு → கட்டு-.]

கட்டு[2]–தல் *kaṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. பேணுதல்; to support; sustain. *'நான் என்னுடம்பைக் கட்டிக்கொண்டு கிடக்கவோ' (ஈடு. 4.8:9).* 2. வெல்லுதல்; to win, checkmate, overcome. 3. அடக்குதல்; to control. இவன் ஆவியைக் கட்டுவதில் வல்லவன்(உ.வ.). 4. ஒரு வரம்பிற்குள் அடக்கிவைத்தல்; to thrust into a limited space. அனைத்துத் தட்டுமுட்டுச் சாமான்களையும் இந்தப் பெட்டியிலேயே கட்டிவை (உ.வ.).

[கள் → கட்டு.]

கட்டு[3]–தல் *kaṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. சூடுதல்; to tie on, adorn with. *"கட்டுதிர் கோதை" (கல்லா.10).* 2. உடுத்தல்; to wear, to be dressed in, to put on as clothes. *"கட்டப் புடவையின்றி" (பணவிடு. 160).*

[கள்→ கட்டு.]

கட்டு[4]–தல் *kaṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1.தடைசெய்தல்; to bind by spells, magic. *"கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்" (தாயு.தேசோ.8).* 2. மூடுதல்; to shut up, close up. நேரமாகிவிட்டது கடையைக் கட்டு (உ.வ.). 3. விலக்குதல்; to make aloof, remove. பஞ்சாயத்திற்குக் கட்டுப்படாததால் ஊர்ப் பணியாளர்களைக் கட்டிவிட்டார்கள் (உ.வ.).

[குள் → குட்டு → கட்டு → கட்டுதல் = தடுத்தல், வழியிற் குறுக்காகச் செல்லுதல். *"காடை கட்டினால் பாடை கட்டும்"* என்பது பழமொழி *(மு.தா.93)].*

கட்டு⁵–தல் *kattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. செலுத்துதல்; to remit; pay up. தேர்வுக்கட்டணம் கட்டியாயிற்று (உ.வ.). 2. பொருள் சேர்த்தல்; to acquire. *'இவர் கவிபாடிக் கட்டின யானை' (ஈடு. 3.9:1).* 3. மொத்தமாகச் சேர்த்தல்; to store, gather, together. நெல் கிடைக்கும்போது வாங்கிக்கட்டு (உ.வ.). 4. தேக்குதல்; to fill, as a tank with water. *ஓடைநீரைக் குளத்தில் கட்டு (உ.வ.).* 5. சோறு கட்டிக் கொடுத்தல்; to prepare packed meals for tour etc. 6. அயலூருக்குப் பண்டம் அனுப்புதல்; to export. 7. சுற்றுதல்; to wander. உலகத்தைக் கட்டி வந்தவன்(உ.வ.).

[கள் → கட்டு-.]

கட்டு⁶–தல் *kattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) செய்யுள் இயற்றுதல்; to compose, as verse. கவிஞன் கட்டிய பாட்டு (உ.வ.). 2. பொய்யாகப் புனைதல்; to fabricate; contrive, invent. *"பறிதலையவர்கள் கட்டிய மொழி" (தேவா. 553:10).*

[கள் → கட்டு-.]

கட்டு⁷–தல் *kattu,* 5 செ.கு.வி.(v.i.) 1. குறி சொல்லுதல்; foretell; to prophecy. 2. கெட்ட குறியாதல்; to be a bad omen, to portend misfortune. கட்டுகொடை கட்டிற்று (உ.வ.).

[கள் → கட்டு-.]

கட்டு⁸–தல் *kattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. பிடுங்குதல்; to pluck, to pull off. *"அடாத வான்களைக் கட்டினர்" (கந்தபு. திருநாட்டு.15).*

[கள் → கட்டு-.]

கட்டு⁹–தல் *kattu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. இறுகுதல்; to harden, consolidate, form, as concretions; to congeal, coagulate. நெறி கட்டிற்று (உ.வ.). 2. தொண்டை கட்டுதல்; to be congested, as the throat in acute pharyngitis. 3. புண்கட்டி திரளுதல்; to swell, as a boil, or a tumour. 4. முகில் மூடுதல்; to overspread as clouds. மேகங் கட்டியிருக்கிறது (உ.வ.). 5. செலவோடு வரவு பொருந்துதல்; to be worth while, just paying. இந்த விலைக்கு விற்றால் கட்டும் (உ.வ.). 6. இணையாதல்; to compare with, to be equal to. அதற்கு இது கட்டாது (உ.வ.). 7. கையை மடக்கிவைத்தல்; fold. கையைக் கட்டிக்கொண்டு நின்றான் (உ.வ.). 8. பிணைத்தல், பூட்டுதல்; yoke. வண்டி கட்டிக்கொண்டு ஊருக்குப் போனான் (உ.வ.).

[கள் → கட்டு → கட்டு–தல்.]

கட்டு¹⁰ *kattu,* பெ.(n.) 1. பிணைப்பு; tie, band, fastening, ligature. *"கட்டவிழ்தார் வாட்கலியன்" (அட்ட நூற்றெட்.காப்பு).* 2. கட்டடம்; building, structure. எங்கள் மனையில் கட்டுவேலை நடக்கிறது (உ.வ.). 3. மூட்டை; bundle, packet, pack, bale. *'கட்டோடு போனால் கனத்தோடு வரலாம்' (பழ.).* 4. முறைமன்றத்தில் கட்சிக்காரருடைய வழக்கேடுகளின் தொகுதி; bundle of paper pertaining to a case, as of a client. இந்தத் தாளைக் கட்டில் சேர்த்துவிடு (உ.வ.). 5. உறுதி; strength; firmness, certainty. *"கட்டுடைச் செல்வக் காப்புடைத் தாக" (மணிமே. 20:8).* 6. உடற்கட்டு; robust build, strong constitution. *"கட்டுடைச் சூருடல்" (கல்லா. 8:4).* 7. அணைக்கட்டு; dam, ridge, causeway. வெள்ளம் பெருகியதால் கட்டு உடைந்தது (உ.வ.). 8. புண்கட்டி; abscess, boil, tumour. 9. அஞ்சற்கட்டு; postal bag. கட்டு வந்துவிட்டதா (உ.வ.). 10. அஞ்சல்; post. கட்டு எடுத்தாயிற்றா?(உ.வ.).

ம. கெட்டு

[கள் → கடு → கட்டு = இணைத்தல், சேர்த்தல்.]

கட்டு¹¹ *kattu,* பெ.(n.) 1. கட்டுப்பாடு; bounds, regulation of society, community law. அவன் கட்டுக்கு அடங்காத கயவாளி (உ.வ.). 2. ஆணை; commandment. *"கட்டுடைக் காவலிற் காமர் கன்னியே", (சீவக.98).* 3. கற்பிக்கை (கல்லா.8.உரை); direction, instruction. 4. உறவின் கட்டு; social relationship, family affinity. கட்டும் கனமுமாயிருந்தால் எல்லோரும் வருவர் (உ.வ.). 5. திருமணம்; marriage. அவனுக்கு ஒரு கட்டுப் போடாதவரை அடங்க மாட்டான் (உ.வ.). 6. பற்று, பாசம்; bond, tie, attachment. *"கட்டறுத்துனை ஆண்டு கண்ணார நீறு இட்ட அன்பரொடு"* (திரு வாச.5:49). 7. மதிப்புரவு; decorum. *"கற்புடையாட்டி இழந்தது கட்டே" (திவ்.திருவாய். 6.6:10).* 8. காவல்; guard, sentry, watch, patrol. *"மதுவனத்தைக் கட்டழித்திட்டது" (கம்பரா. திருவடி.18).* 9. அரண்; fortification, protection, defence. *"கட்டவை மூன்றும் எரித்த பிரான்" (தேவா. 386:7).* 10. வண்டிச் சக்கர

வட்டையின் மேலிருக்கும் இரும்புப்பட்டை; steel tyre of a cart wheel. வண்டிக்குக் கட்டுவிடக் கன்னார் கூலி மிக அதிகம் (உ.வ.). 11. மலைப்பக்கம்; side of a mountain. 12. வளைப்பு; surrounding, encirclement, forcing into a corner as in chess. *"தெறுகட்டழிய" (திருக்கோ.313).*

[கள் → கடு → கட்டு.]

கட்டு[12] *kaṭṭu,* பெ.(n.) 1. கரை; bank, shore. 2. வகுப்பு; class, section. *"கட்டமை நீதி தன்மேல்" (சீவக.1145).* 3. மிகுதி (திருக்கோ.303 உரை); abundance, plenty. 4. முழுமை; whole, entire. *'ஆசரித்த தெய்வ மெல்லாம் கட்டோடே மாண்டது' (பழ.).* 5. கிளை; branch.

கோண். கட்டா; **கொர.** கணட்ட; **குற.** கட்டு; **கசபா.** கட்டி; **Mar.** kattha.

[கள் → கடு → கட்டு.]

கட்டு[13] *kaṭṭu,* பெ.(n.) 1. நிகழ்வதைச் சொல்லும் குறி; divination, foretelling events. *"கட்டினும் கழங்கினும்" (தொல்.பொருள்.115).* 2. பொய்யுரை; fabrication, false-hood, invention. *"கருமங் கட்டளையென்றால் கட்டதோ" (கம்பரா. கிட். அரசி.16).* 3. அச்சம்; fear. *"கழிகட் டிரவின் வரல்" (திருக்கோ. 255).*

[கள் → கடு → கட்டு.]

கட்டு[14] *kaṭṭu,* பெ.(n.) தளம், வீட்டின் பகுதி; apartment in a house. சமையற்கட்டுத் தூய்மையாக இருக்கவேண்டும்.

[கள் → கட்டு = கட்டப்பட்ட இடம்.]

உட்கட்டு, சமையற்கட்டு, சுற்றுக்கட்டு, தாழ்வாரக்கட்டு, நடைக்கட்டு, முதல்கட்டு, இரண்டாம் கட்டு ஆகிய சொற்களில் 'கட்டு' பின்னொட்டாய் அமைந்து முறையே வீட்டின் உட்பகுதி, சமையலறை, சுற்றுப்புறம், தாழ்வாரப்பகுதி, நடைபாதை, முதல்பகுதி, இரண்டாம் பகுதி ஆகியவற்றைக் குறிக்கின்றது. 'படிக்கட்டு' போன்றும் வரும்.

கட்டு[15] *kaṭṭu,* பெ.(n.) வடிதெளிவு; filtered liquid, a decoction. *"பயறு வடித்த கட்டை... சட்டியிலே ஊற்றுவாள்" (எங்களூர், 129).*

[கள் → கண்டு → கட்டு = கசண்டு நீங்கிய தெளிநீர்.]

கட்டு[16] *kaṭṭu,* பெ.அ.(adj.) நிறைவான, உறுதியான வடிவம்; (firm and solid) build. கட்டுடல், கட்டழகி (உ.வ.).

[கள் → கடு → கட்டு.]

கட்டு[17] *kaṭṭu,* து.வி. (aux.v.) முதல்வினைச் செயலை முடுக்கிவிடும் வகையில் நிற்கும் துணை வினை; an auxiliary verb modifying the action expressed by the main verb.

[கள் → கட்டு.]

'கட்டு' துணை வினையாய் நின்று பல்வேறு வினைகளை உருவாக்குகிறது.

எ.டு.

அணைகட்டு [தற்காத்தல்], கங்கணம் கட்டு [உறுதி எடுத்தல், சண்டைக்கு நிற்றல்], கதை கட்டு [பொய்ச்செய்தி கிளப்புதல்], கால்கட்டு [திருமணம்].

கட்டு[18] *kaṭṭu,* பெ.(n.) அடக்கவிலை; cost price. இந்த விலைக்கு விற்றால் எனக்குக் கட்டாது (உ.வ.).

F. cout; **Sp.** coste; **It.** costo; **Port.** custo; **G.** kosten; **Du.** kosten; **Swed.** kostnad; **Pol.** koszt; **Ser.croa.** koštati; **Hung.** koltseg; **Finn.** hinta; **Esp.** kosto; **Gk.** kos'tos; **Yid.** kosten.

[கட்டுதல் = பொருந்திவருதல், அடக்கவிலையாதல்.]

கட்டுக்கட்டு¹–தல் *kaṭṭu-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. மூட்டை முதலியன கட்டுதல்; to tie up a bundle or packet. 2. அறுத்த நெல் அரிகளைக் கட்டுகளாகக் கட்டுதல்; bundling harvested paddy for thrashing. 3. மருந்து வைத்துக் கட்டுதல்; to bandage, as a boil after applying medicine.

[கட்டு + கட்டு.]

கட்டுக்கட்டு²–தல் *kaṭṭu-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பொய்யாகப் புனைந்துரைத்தல்; to fabricate, invent, utter a canard. கட்டுக்கட்டி விடுவதே இவனது வழக்கம் (உ.வ.).

[கட்டு + கட்டு (து.வி.).]

கட்டுக்கட்டு³–தல் *kaṭṭu-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) குமுகாயத்தால் புறக்கணிக்கப்படுதல்; to be separated by the society. *ஒழுக்கக்கேடனுக்குப் பிறர் உதவக் கூடாதென்று ஊர்க்கூட்டத்தில் கட்டுக்கட்டிவிட்டனர் (கோவை.).*

[கட்டு + கட்டு –.]

கட்டுக்கடங்கு–தல் *kaṭṭu-k-kaḍaṅgu-*, 9 செ.கு.வி. (v.i.) ஒரு வரம்புக்குட்படுதல்; come into bound, limit.

[கட்டு + கு + அடங்கு.]

கட்டுக்கட[1]–த்தல் *kaṭṭu-k-kaḍa-*, 3 செ.குன்றாவி. (v.t.) வரம்பு மீறுதல்; to transgress, exceed the limits pass beyond bounds, violate established rules, disregard positive injunctions. உன் குறும்புத்தனம் கட்டுக்கடந்து போச்சு (உ.வ.).

[கட்டு + கட . கட்டு = ஒழுங்கு, கட்டுப்பாடு.]

கட்டுக்கட[2]–த்தல் *kaṭṭu-k-kaḍa-*, 3 செ.குன்றாவி. (v.t.) மந்திரத்தால் பாம்பு, விலங்கு முதலியவற்றின் வாயைக் கட்ட முயலும்போது அவை மந்திர ஆற்றலுக்கு அடங்காமல் மீறுதல்; to transgress the limits or bounds of mantric power, while one is trying to bind mouths of snakes, wild animals etc.

[கட்டு + கட–. கட்டு = கட்டுப்பாடு.]

கட்டுக்கடுக்கன் *kaṭṭu-k-kaḍukkaṉ*, பெ.(n.) மணி பதித்த கடுக்கன் (யாழ்ப்.); ear-ring set with gems.

[கட்டு + கடுக்கன். கட்டுதல் = சேர்த்தல், பிணைத்தல், பதித்தல்.]

கட்டுக்கடுகு *kaṭṭu-k-kaḍugu*, பெ.(n.) நாய்க்கடுகு; dog-mustard (சா.அக.).

[கள் (கருமை, இருள்) → கட்டு + கடுகு.]

கட்டுக்கடை *kaṭṭu-k-kaḍai*, பெ.(n.) 1. எதிர் காலத்தில் பயன்படுத்துவதற்காகச் சேர்த்து வைக்கை; the act of preserving for future use. 2. சேர்த்து வைக்கப் பட்டது; that which is stored up for further use (சா.அக.).

[கட்டு + கடை.]

கட்டுக்கடைநீர் *kaṭṭu-k-kaḍai-nīr*, பெ.(n.) பயன்படுத்துவதற்காக வெளிவிடாதபடி தடுத்து வைத்த நீர்; water collected and kept for use (சா.அக.).

[கட்டு + கடை + நீர்.]

கட்டுக்கதை *kaṭṭu-k-kadai*, பெ. (n.) 1. புனைந்துரை; fable, fiction. கட்டுக்கதை சொல்வதில் கைதேர்ந்தவன் (உ.வ.). 2. பொய்யான செய்தி; concocted tale. அவன் கூறும் செய்தி வெறுங்கட்டுக் கதை (உ.வ.).

க. கட்டுகதெ

[கட்டு + கதை. கட்டு = புனைவு.]

கட்டுக்கம்பி *kaṭṭu-k-kambi*, பெ. (n.) இணைத்துக் கட்டப் பயன்படும் கம்பி; binding wire. கட்டட வேலைக்கு இரண்டு கல்லெடை (கிலோ) கட்டுக் கம்பி வாங்கிவா (உ.வ.).

[கட்டு + கம்பி. கட்டு = இணை, சேர்.]

கட்டுக்கயிறு[1] *kaṭṭu-k-kayiṟu*, பெ. (n.) கூந்தலிற் கட்டி முடிக்கப் பயன்படுத்தும் பின்னல், சவுரி; false hair, a number of plaited hair threads knotted at one end used by women to supplement natural tuft.

[கட்டு + கயிறு.]

கட்டுக்கயிறு[2] *kaṭṭu-k-kayiṟu*, பெ. (n.) 1. கட்டு மரத்தைக் கட்டுதற்குரிய வலுவான செயற்கை யிழையாலான கயிறு (தஞ்சை. மீனவ.); strong rope which is used to tie catamaran. 2. பொருள்களைக் கட்டுவதற்குப் பயன்படும் நார்க் கயிறு; rope used to bundle up things.

[கட்டு + கயிறு.]

கட்டுக்கரணை *kaṭṭu-k-karaṇai*, பெ.(n.) கட்டுமான வேலைகளில் கொத்தனார் பயன்படுத்தும் கைப் பிடியுள்ள இரும்புக் கரண்டி; trowel.

மறுவ: கொல்லுரு, கொத்துக்கரண்டி. சவட்டுக் கரண்டி.



கட்டுக்கரணை

[கட்டு + கரணை.]

முழுக்கரணை, முக்கால் கரணை, அரைக் கரணை, கால்கரணை, அரைக்கால் கரணை என்றவாறு ஐந்து அளவுகளில் கரணை அமையும்.

கட்டுக்கரப்பான் *kaṭṭu-k-karappāṉ*, பெ.(n.) குழந்தைக்களுக்குண்டாகும் ஒருவகைச் சொறி புண் (வின்.); a kind of eruption with itching affecting children.

[கட்டு + கரப்பான்.]

கட்டுக்கரை *kattu-k-karai*, பெ. (n.) 1. சரக்கிறக்குந் துறை; pier. 2. செயற்கைக் கரை; artificial bund.

[கட்டு + கரை. கரை = செயற்கையாக அமைக்கப்பட்ட இறங்குதுறை.]

கட்டுக்கலவை *kattu-k-kalavai*, பெ. (n.) மணல், சுதைநீர் சுதைமா (சிமெண்டு), 'சுண்ணாம்பு' போன்ற கட்டுமானப் பொருள்கள் குறித்த அளவில் கலந்த கலவை; mortar, a mixer of cement, lime, sand, etc., in the designated proportion.

[கட்டு + கலவை.]

கட்டுக்கலியாணம் *kattu-k-kaliyāṇam*, பெ. (n.) 1. தாலி கட்டும் திருமணம் (யாழ்ப்.); wedding, marriage ceremony, in which the bridegroom ties the tāli around the bride's neck. 2. மணப்பெண்ணும் உறவினர்களும் எதிர்பாராத நேரத்தில், பெண்ணின் கழுத்தில், தாலி கட்டச் செய்யும் திருமணம்; marriage, tying of tāli in the neck of a young girl at an unexpected time.

மறுவ. கட்டுத்தாலி

[கட்டு + கலியாணம்.]

கட்டுக்கழுத்தி *kattu-k-kaḻutti*, பெ.(n.) 1. மணமாகிக் கணவனுடன் வாழும் பெண், வாழ்வரசி; married woman, living with her husband and who, there fore, wears a tāli around her neck. 2. மனைவி; wedded wife. *'கைப்பொருளற்றால் கட்டுக்கழுத்தியும் பாராள்' (பழ.).*

மறுவ. வாழ்வரசி

[கட்டு + கழுத்தி.]

கட்டுக்காரன் *kattu-k-kāraṉ*, பெ.(n.) குறி சொல்லுவோன் (யாழ்ப்.); one who foretells future events; soothsayer.

[கட்டு + காரன். கட்டு = கட்டியுரைக்கை.]

கட்டுக்காலி[1] பெ.(n.) *kattu-k-kāli*, கொண்டிமாடு; stray cattle.

[கட்டு + காலி. காலி - கால்நடை, மாடு.]

கட்டி வைக்காமல் எங்கும் திரியும் பட்டிமாடு கட்டாக்காலியாம். கட்டுப்பாட்டிற்கு அடங்காததைக் கொம்புக்கும் காலுக்கும், அல்லது கால்களுக்கிடையே அல்லது கழுத்தில் கட்டை யைக் கட்டி வைப்பது கட்டுக் காலியாம். இவ் வியல்பு பற்றியே எதிர்மறைப் பொருளனவாகிய இவ்விரு சொற்களும் ஒரு பொருள் குறித்து நின்றமை காண்க.

கட்டுக்காலி[2] *kattu-k-kāli*, பெ.(n.) மணமான பின்னும் பொறுப்பின்றித் திரிபவன்–ள்; a married man - woman roaming without minding their responsibility. கட்டுக்காலியின் பேச்சைக் கருத்தில் கொள்ள வேண்டா (உ.வ.).

[கட்டு + காலி.]

கட்டுக்காலி[3] *kattu-k-kāli*, பெ.(n.) ஒரே குழந்தை பெற்றெடுத்தவள்; a woman who has borne birth to only one child.

ம. கட்டுக்காலி

[கட்டு + காலி. கால் = வழி, மரபு, குழந்தைச் செல்வம். வழிமரபு கட்டுற்ற நிலையினள்.]

கட்டுக்காவல் *kattu-k-kāval*, பெ.(n.) கடுங்காவல்; strict guard, close custody, great care.

[கட்டு + காவல். கடு → கட்டு (கடுமை).]

கட்டுக்காடை *kattu-k-kāḍai*, பெ.(n.) 1. பாற்குருவி; Indian roller, larger blue bird. 2. சிரல், நீர்ப்பறவை வகை. (வின்.); king fisher; a kind of water-bird resembling the roller that preys on fish. *'கட்டுக் காடை இடமானால் குட்டிச்சுவரும் பொன்னாகும்' (பழ.).*

[கட்டு + காடை.]



கட்டுக் காடை

கட்டுக்கிடை *kattu-k-kiḍai*, பெ.(n.) 1. நாட்பட்ட சரக்கு; old stock. *"கட்டுக் கிடையாமென் கன்ம வித்திலே" (மதுரைப்பதிற்.38).* 2. ஓடாது தேங்கிய நீர்;

stagnant water. போக்கிற்கு வழி இல்லாததால் மழைநீர் கட்டுக்கிடையாய் நிற்கிறது (உ.வ.).

[கட்டு + கிடை. கட்டு = கட்டுப்பட்ட நிலை, தேக்கமுற்ற நிலை. கிடை = கிடப்பு, நிலைமை.]

கட்டுக்குட்டு *kaṭṭu-k-kuṭṭu,* பெ.(n.) உடற்கட்டு; robust build; strong sturdy constitution.

[கட்டு + குட்டு – கட்டுக்குட்டு. கட்டு = கட்டான உடலமைப்பு. குட்டு = இளமை. கட்டுக்குட்டு = கட்டிளமைத் தோற்றம் தரும் உடல்வாகு.]

கட்டுக்குத்தகை *kaṭṭu-k-kuttagai,* பெ.(n.) 1. நீட்டித்து விடும் மொத்த குத்தகை; a long-term lease of land; fixed rent; rent collected in a lump sum; joint tenancy. 2. பெற்றுக்கொண்ட தொகைக்காக நிலத்தைக் குறித்த காலத்துக்குத் தொகை கொடுத்தவனுடைய துய்ப்பில் விட்டு வைத்தல்; tenure by which land is mortgaged stipulating that the principal and interest be set off against enjoyment of the proceeds of the land for a specified period. 3. தோணிக்குத்தகை (வின்.); contract for a full *tōṇi* without reference to the number of trips or weight of cargo.

மறுவ. ஒற்றிக்கு வைத்தல், போக்கியம்.

[கட்டு + குத்தகை. கட்டு = திரட்சி, மொத்தம்.]

கட்டுக்குலை-தல் *kaṭṭu-k-kulai-,* 17 செ.கு.வி.(v.i.) 1. அவிழ்தல்; to become loose. ஏற்றி இறக்கும் பொழுது கட்டுக்குலையாமல் பார்த்துக்கொள் (உ.வ.). 2. ஒற்றுமை கெடுதல்; to be disassociated. தலைவர் சரியில்லாததால் கட்சி கட்டுக் குலைந்து விட்டது(உ.வ.). 3. நிலைகெடுதல்; to be deranged, upset. வணிக நட்டத்தினால் கட்டுக் குலைந்து விட்டான்(உ.வ.). 4. மனம் குழைதல்; to loose one's heart, become melted, softened. அக் கதையைக் கேட்டு நான் கட்டுக்குலைந்து போனேன்(உ.வ.). 5. சினத்தல்; to show signs of anger.

[கட்டு + குலை-.]

கட்டுக்கூட்டு *kaṭṭu-k-kūṭṭu,* பெ.(n.) 1. *கட்டுக்கதை* பார்க்க; see *kaṭṭu-k-kadai.* 2. மாற்றியெழுதப் பட்டது; special code for the communication of secret correspondence, cipher. 3. ஒன்றாய்க் கூடுதல்; congregate.

[கட்டு + கூட்டு.]

கட்டுக்கூடை *kaṭṭu-k-kūḍai,* பெ.(n.) 1. வாய்ப்பகுதி எளிதில் பிரிந்திடா வண்ணம் பனை நாரால் கட்டப்பெறுங் கூடை; a basket made of palm fibre with stronger neck. நெற்குவியலைக் கட்டுக் கூடையால் அள்ளிக் கொட்டு (உ.வ.). 2. எளிதாய்ச் சுமப்பதற்கு ஏதுவாய் கழிகள் பிணைத்த கூடை; a basket which is fitted with small poles on both sides to carry easily. சோறு வடிக்கக் கட்டுக்கூடை கொண்டுவா (உ.வ.).

[கட்டு + கூடை.]

கட்டுக்கூலி *kaṭṭu-k-kūli,* பெ.(n.) 1. ஒழுங்குபடுத்தப் பட்ட கூலி; regulated wages. 2. சரக்குந்துகளில் பொருள்களை ஏற்றியபின் கயிற்றால் கட்டுதற்காகக் கொடுக்கப்படும் கூலி; wage for tying loads. 3. தாளிகளைக் கட்டும் கூலி; wages for bundling the paddi stacks, hay etc.

[கட்டு + கூலி.]

கட்டுக்கேள்(ட்)-த(ட)ல் *kaṭṭu-k-kēḷ-,* 11 செ.குன்றாவி. (v.t.) குறிகேட்டல். (வின்.); to consult a diviner.

[கட்டு + கேள்-. கட்டு = கட்டியுரைத்தல்.]

கட்டுக்கொடி *kaṭṭu-k-koḍi,* பெ.(n.) 1. ஆடு மாடுகளை வரிசையாகக் கட்டும் கயிறு (வின்.); rope stretched along the ground to which cattle and goats are tethered by the neck in a row at night. 2. புல் முதலிய வற்றைக் கட்டப் பயன்படும் கொடிவகை. (மூ.அ.); a kind of creeper; used for tying bundles of grass etc. சுமை கட்டுவதற்குக் கட்டுக்கொடி யொன்றைத் தேடி அறுத்துவா (உ.வ.).

[கட்டு + கொடி.]

கட்டுக்கொதி-த்தல் *kaṭṭu-k-kodi-,* 4 செ.கு.வி. (v.i.) புண் கட்டி, சீழ் நிறைந்து குத்துதல் (யாழ்ப்.); to give throbbing pain, as a boil when pus collects.

[கட்டு + கொதி-.]

கட்டுக்கோப்பு[1] *kaṭṭu-k-kōppu,* பெ.(n.). 1. கட்டகம், கட்டடம் (வின்.); structure, building. 2. மேற்கூரை; roof of a house; super structure. 3. காப்புடையது; that which is guarded. 4. கட்டுப்பாட்டோடு கூடிய தன்மை, உறுதியான பிணைப்பு; being well knit or well disciplined; solidarity. கட்டுக்கோப்பான கட்சியை எவராலும் குலைக்க முடியாது (உ.வ.).

5. ஒற்றுமை; unity, association. தொழிலாளர் சங்கம் கட்டுக் கோப்பாக உள்ளது (உ.வ.).

[கட்டு + கோப்பு.]

கட்டுக்கோப்பு[2] *kattu-k-kōppu,* பெ.(n.) உயர்வு நவிற்சி, புனைந்துரை (வின்.); concoction, exaggeration.

[கட்டு + கோப்பு.]

கட்டுக்கோரைப்பாசி *kattu-k-kōrai-p-pāši,* பெ.(n.) கடலடிப் பாசி வகையு ளொன்று (நெல்லை. மீனவ.); a kind of moss under sea.

[கட்டு + கோரை + பாசி.]

கட்டுங்காவலுமா–தல் *kattun-kāvalumā-,* 6 செ.கு.வி. (v.i.) பெருங்காவலுடையதாதல்; to be carefully watched, strictly guarded. *"கட்டுங் காவலுமா யிருக்கிற வாசலிலே" (திவ். திருப்பா.10. வியா.)*

[கட்டும் +காவலும் + ஆ.]

கட்டுங்கூலி *katturig-kūli,* பெ. (n.) ஏற்புடையதான கூலி; acceptable wages. கட்டுங்கூலி கிடைத்தால் எந்தப் பணியையும் செய்துவிடலாம் (உ.வ.).

[கட்டுக்கூலி → கட்டுங்கூலி.]

கட்டுச்சரக்கு[1] *kattu-c-carakku,* பெ.(n.) 1. மொத்த மாக விற்கப்படும் பண்டம்; goods sold wholesale. 2. நாட்பட்ட சரக்கு; old stock of goods.

[கட்டு + சரக்கு.]

கட்டுச்சரக்கு[2] *kattu-c-carakku,* பெ.(n.) தமிழ் மருத்துவத்தின்படி மூலிகைகளைக் கொண்டு, நெருப்பிற்கு ஓடாதபடி எரித்தோ, ஊதியோ, புடமிட்டோ கட்டிய சரக்குகள்; minerals or substances which are consolidated with the aid of acids, alkalies and compounds of salt by burning, heating or calcining according to the process laid down in the Tamil Alchemical works. (சா.அக.).

[கட்டு + சரக்கு. கட்டு = பிணை, சேர்.]

இதளியம், கந்தகம், 64 வகைப் நஞ்சுகள், வெடியுப்பு, சோற்றுப்பு, நவச்சாரம், வெண்காரம், பொரிகாரம் முதலியன கட்டுச் சரக்குகளாம்.

கட்டுச்சாட்சி *kattu-c-cātci,* பெ.(n.) ***கட்டுச் சான்று*** பார்க்க; see *kattu-c-cāṟu.*

[கட்டு + சாட்சி. **Skt.** sakshi > *சாட்சி.]*

கட்டுச்சாதம் *kattu-c-cādam,* பெ.(n.) ***கட்டுச்சோறு*** பார்க்க; see *kattu-c-cōṟu.*

[கட்டு + சாதம். தெ. சாதமு > த. சாதம்.]

கட்டுச்சாரை *kattu-c-cārai,* பெ.(n.) மருளூமத்தை; confusion creeper (சா.அக.).

மறுவ. திகைப்பூண்டு

[கட்டு + சாரை.]

கட்டுச்சாரையான் *kattu-c-cāraiyāṉ,* பெ.(n.) ***கட்டுச்சாரை*** பார்க்க; see *kattu-c-cārai* (சா.அக.).

[கட்டு + சாரை + ஆன்.]

கட்டுச்சான்று *kattu-c-cāṉṟu,* பெ.(n.) பொய்ச் சான்று; false witness.

[கட்டு + சான்று.]

கட்டுச்சி *kattucci,* பெ.(n.) உச்சிவேளை; noon-day. *"கட்டுச்சி தீபனமாம்" (பதார்த்த. 1446).*

[கட்டு + உச்சி. கடு → கட்டு = மிகுதி. ஒ.நோ. கட்டுப்பு, கட்டழகு.]

கட்டுச்சூலை[1] *kattu-c-cūlai,* பெ.(n.) 1. குதிரை நோய் வகை. (அசுவசா. 51); a disease of the horse. 2. தீராத வயிற்றுவலி; acute stomach pain.

[கல் → சூல் → சூலை. சுல் = எரித்தல், குத்துதல். கட்டு + சூலை. சூலை = குத்துதற்போல் வலியை உண்டாக்கும் நோய்.]

கட்டுச்சூலை[2] *kattu-c-cūlai,* பெ. (n.) சூலைக்கட்டு, ஊதப்பிடிப்பினால் ஏற்படும் நோய்; a form of gout arising from the severe inflammation of the joints of the limbs or by attack of acute arthritis-Articular gout.

[கட்டு + சூலை. கட்டுச்சூலை = கை, கால் மூட்டுகளில் பிடிப்பு ஏற்பட்டுக் குத்துவதைப்போல் பொறுக்க முடியாத வலியை உண்டாக்கும் நோய்.]

கட்டுச்செட்டு *kattu-c-cettu,* பெ.(n.) சிக்கனம்; thrift. *செலவு கட்டுச்செட்டாக இருக்கட்டும்.*

[கட்டு + செட்டு. செட்டு = சிக்கனம். எதுகை நோக்கி வந்த மரபிணை மொழி.]

கட்டுச்செம்பு *kaṭṭu-c-cembu,* பெ.(n.) களிம்பற்ற செம்பு; copper free from verdigris. (சா.அக.)

[கட்டு + செம்பு.]

கட்டுச்சொல் *kaṭṭu-c-col,* பெ.(n.) 1. குறி கூறுதல்; sooth-saying, fore telling. 2. பொய்; lie. 3.பேயாட்டக் கூற்று; devil's telling.

[கட்டு + சொல். கட்டு - புனைந்துரை, பொய்யுரை.]

கட்டுச்சொல்(லு)—தல் *kaṭṭu-c-col-,* 13 செ.கு.வி. (v.i.) குறிகூறுதல்; to divine, to foretell.

[கட்டு + சொல்(லு)-.]

கட்டுச்சோறு *kaṭṭu-c-cōṟu,*பெ.(n.) வழிநடைக்காகக் கட்டி எடுத்துச் செல்லும் உணவு; packed meals for a trip or journey. *'கட்டுச்சோறும் கற்ற வித்தையும் கைவிட்டுப் போகாது'. (பழ.)*

மறுவ. பொதிச்சோறு

க. கட்டன்ன

[கட்டு + சோறு.]

கட்டுடல் *kaṭṭuḍal,* பெ.(n.) அமைவான உடல்; well built physique. உடற்பயிற்சியே கட்டுடலுக்கு வழி (உ.வ.).

[கள் → கட்டு - திரண்டது. கட்டு + உடல்.]

கட்டுடை[1]—தல் *kaṭṭuḍai-,* 2 செ.கு.வி.(v.i.) 1. நோய், மூப்பு ஆகியவற்றால் உடல் தளர்வுறுதல்; to suffer a breakdown in constitution. 2. பூ முறுக்கவிழ்தல்; to blossom, open the petals. 3. கொப்புளம் உடைதல்; to open, as of a boil. 4. நெறிமுறை (விதி) அல்லது உறுதியினின்று தளர்வுறுதல்; to violate a rule or fail to keep a promise. 5. கட்டமைப்புச் சிதைவுறுதல்; to be dissolved as of an association, committee etc.

க. கட்டொடெ

[கட்டு + உடை-. உடைதல் - சிதைதல், மலர்தல், குறைதல், தளர்தல்.]

கட்டுடை[2]—த்தல் *kaṭṭuḍai-,* 2 செ.குன்றாவி.(v.t.) 1. அஞ்சல் (மடல்) கட்டிய பையை உடைத்தல். (வின்.); to break the seal, as of a letter bag. 2. கருத்தை வெளிப்படுத்துதல்; to reveal one's mind. 3. கரையுடைத்தல்(வின்.); to make a breach of banks in a channel. 4. மந்திரத்தினால் உடம்பு தளர்ச்சி அடையும்படி செய்தல்; to cause breakdown of constitution through sorcery. 5. கட்டி, புண் இவை உடையும்படி செய்தல்; to cause boils and abcessess to open (சா.அக.)

[கட்டு + உடை-.]

கட்டுண்(ணு)[1]—தல் *kaṭṭuṇ(ṇu)-,* 12 செ.கு.வி.(v.i.) கை, கால் பிணிக்கப்படல்; to be bound, hand and foot (சா.அக.).

[கட்டு + உண்(ணு)-.]

கட்டுண்(ணு)[2]—தல் *kaṭṭuṇ(ṇu)-,* 12 செ.கு.வி.(v.i.) 1. கட்டுப்படல், நெருப்புக்கு ஓடாதபடி கட்டிப்போதல்; to become consolidated, so as not to pass off into vapour or flame, as the case may be, when exposed to fire (சா.அக.).

[கட்டு + உண்(ணு)-. உண் - செயப்பாட்டு வினைப்பொருளுணர்த்தும் விகுதி.]

கட்டுண்(ணு)[3]—தல் *kaṭṭuṇ(ṇu)-,* 2 செ.குன்றாவி. (v.t.) கட்டுச்சோற்றை உண்ணல்; to eat packet meals.

[கட்டு + உண்(ணு)-. கட்டு - கட்டுச்சோறு.]

கட்டுண்கை *kaṭṭuṇgai,* பெ.(n.) கட்டுப்படுகை; submitting, yielding. *"கலக்கியகை யசோதையார் கடை கயிற்றாற் கட்டுண்கை" (சிலப்.17: முன்னிலைப் பரவல்.1)*

[கட்டு + உண் + கை. கை – தொ. பெ. ஈறு.]

கட்டுண்டுகிட—த்தல் *kaṭṭuṇḍu-kiḍa-,* 3 செ.கு.வி. (v.i.) கொள்கை, ஆணை முதலியவற்றிற்கு அடங்கி நடத்தல்; to obey orders, to follow a principle strictly.

மறுவ. கட்டுண்டிரு

து. கட்டொணுநி

[கட்டு + உண்டு + கிட (து.வி.)-.]

கட்டுண்ணி *kaṭṭuṇṇi,* பெ.(n.) 1. கட்டப்பட்டவன். (வின்.); a person who suffers himself to be bound. 2. சூலைக்கட்டினால் வருந்துபவன்; one who suffers from arthritis. 3. மனைவிக்குக் கட்டுப்பட்ட அல்லது அடங்கிய கணவன்; a husband controlled or restricted by his wife. *ஊருக்குத் தலைவன் வீட்டுக்குக் கட்டுண்ணி (பழ.).*

[கட்டு + உண்ணி. உண்ணி = உள்ளவன். உண் + இ – உண்ணி . இ = வினை முதல். ஈறு.]

கட்டுத்தரையன் *kaṭṭu-t-taraiyaṉ,* பெ.(n.) சிறுவர் விளையாட்டு வகை. (எங்களூர், 89); a kind of children's game.

[கட்டு + தரையன்.]

கட்டுத்தறி[1] *kaṭṭu-t-taṟi,* பெ.(n.) 1. யானை முதலியன கட்டுங்கம்பம்; post for tying elephants, bulls etc. 2. தொழுவம், கால்நடைகளை இரவில் கட்டி வைக்கும் கொட்டகை; place where the cattle are allowed to rest at night. 3. மரக்கலத்தின் மேல்தளத்தில் உள்ள கம்பம்; bollard (க.ப.அக.). 4. நெசவுத்தறி; weavers loom; *'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்'. (பழ.)*

தெ. கட்டுகுஞ்செ, கட்டுகொய்ய.

[கட்டு + தறி. கட்டும் தறியுள்ள தொழுவம்.]

கட்டுத்தாலி[1] *kaṭṭu-t-tāli,* பெ.(n.) மறுமணம் செய்து கொள்ளும் பெண் அணியும் தாலி; a tāli worn on remarriage of a lady.

ம. கெட்டுதாலி

[கட்டு + தாலி.]

கட்டுத்தாலி[2] *kaṭṭu-t-tāli,* பெ.(n.) மறவருக்குள் வழங்கும் ஒருவகைத் தாலி; a kind of tāli among maravars.

ம. கெட்டுதாலி

[கட்டு + தாலி.]

கட்டுத்திரள்(ளு)-தல் *kaṭṭu-t-tiraḷḷu-,* 16 செ.கு.வி. (v.i.) புண் பழுத்தல் (வின்.); to gather to a head, as a boil.

[கட்டு + திரள்(ளு)–. திரளுதல் = உருண்டையாதல், மிகக் கூடுதல், வீங்குதல்.]

கட்டுத்தூண் *kaṭṭu-t-tūṇ,* பெ.(n.) நான்கு மூலை களையுடையதும் (சதுரமானது), நடுப்பகுதி எட்டுப் பட்டைகளையுடையதுமான தூண்; a pillar which is of squarely in shape at bottom and octagonal above.

[கட்டு + தூண்.]

கட்டுத்தேர் *kaṭṭu-t-tēr,* பெ.(n.) குறிப்பிட்ட திருவிழாவிற்காக, ஆண்டுதோறும் புதிதாகச் செய்து, தெய்வத் திருமேனியை அமர்த்தி, ஆடவர் தோளில் சுமந்து செல்லுமாறு அமைக்கப்பட்ட தேர்; car built temporarily for an occasion, and lifted by sturdy persons.

[கட்டு + தேர்.]

கொங்குநாட்டில் பனஞ்சட்டத்தால் செய்த கட்டுத்தேர்கள் வழக்கிலுள்ளன.

கட்டுத்தையல் *kaṭṭu-t-taiyal,* பெ.(n.) அழுத்தமான தையல்; a kind of firm sewing.

[கட்டு + தையல்.]

கட்டுத்தொகை *kaṭṭu-t-togai,* பெ.(n.) மொத்தத் தொகை; grand total in accounts.

[கட்டு + தொகை.]

கட்டுத்தோணி *kaṭṭu-t-tōṇi,* பெ.(n.) கடற்கரை யருகில் ஆழமில்லா நீரிற் செல்லவிடும் ஒருவகைப் படகு; surf boat, boat of which the seams are sewn together.

ம. கெட்டுதோணி

[கட்டு + தோணி.]

கட்டுதாலி *kaṭṭu-tāli,* பெ.(n.) மறுமணம்; remarriage. கட்டுதாலியா கொட்டுமேளமா (உ.வ.).

[கட்டு + தாலி.]

கட்டுப்படகு *kaṭṭu-p-paḍagu,* பெ.(n.) ***கட்டுத் தோணி*** பார்க்க; see *kaṭṭu-t-tōṇi.*

[கட்டு + படகு.]

கட்டுப்படாமை *kaṭṭu-p-paḍāmai,* பெ.(n.) 1. எளிதில் வயப்படாமை; not easily restricted or controlled. 2. திரளாமை; not easily solidified or condensed.

[கட்டு + படு + ஆ (எதிர்மறை ஒட்டு) + மை.]

கட்டுப்படு[1]**-த்தல்** *kaṭṭu-p-paḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. கட்டுவிச்சிபாற் குறிகேட்டல்; to consult omens, signs, as through a female soothsayer. *"கட்டுப்படுத்திரே லாரானு மெய்ப்படுவன்" (திவ். இயற். சிறிய திரு ம. 19).* 2. பிடித்தல், கட்டுதல்; to bind, to tie, to fetter, as culprits. 3. ஒழுங்கு படுத் துதல்; to make a regulation, to order, to discipline.

மறுவ. கட்டுப்படுத்தி

[கட்டு + படு .]

கட்டுப்படு[2]–தல் *kaṭṭu-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. கட்டுக்குள் அடங்குதல்; to yield, to submit; to be influenced by; to become bound, as by a compact or engagement. ஆசிரியர் ஆணைக்கு மாண வர்கள் கட்டுப்படுவர் (உ.வ.). 2. தடைப்படுதல்; to be constipated, to be obstructed, as blood, as fluid in the system. 3. கட்டப்படுதல்; to be worn, to be tied.

ம. கெட்டுபெடுக; தெ. கட்டுபடு; க. கட்டும்படு, கட்டுபடு, கட்டுவடு.

[கட்டு + படு . கட்டு - வரம்பு. படுதல் - அமைதல்.]

கட்டுப்பவளம் *kaṭṭu-p-pavaḷam,* பெ.(n.) பவளத்தாலான கையணி; coral wristlet. *"கட்டுப் பவளங் கனகவளை பொற்கடகம்". (கூளப்ப. காதல். 136).*

[கட்டு + பவளம்.]

கட்டுப்பழம் *kaṭṭ(u)uppākku,* பெ.(n.) கட்டிப் பாதுகாக்கப்பட்ட கனி; fruit protected by being packed up in a bag or case just before ripening.

[கட்டு + பழம்.]

கட்டுப்பனை *kaṭṭu-p-paṉai,* பெ.(n.) ***கட்டுப்பாளை*** பார்க்க; see *kaṭṭu-p-pāḷai.*

[கட்டு + பனை.]

கட்டுப்பாக்கு *kaṭṭu-p-pākku,* பெ.(n.) வாய்ச்சூடு படத் துணியாலிடும் ஒற்றடம்; fomentation with a small roll of cloth previously warmed by blowing on it with the mouth. கண்வலிக்குக் கட்டுப்பாக்குக் கொடுக்கிறது வழக்கம் (உ.வ.).

[கட்டு + உப்பாக்கு – கட்டுப்பாக்கு (கட்டிய துணி முடிச்சாயால் வாய் வெதுப்பு ஏற்றுதல்.) உருப்புவெப்பம் → உப்பு + ஆக்கு – உப்பாக்கு - வெப்பம், வேது. 'ஆக்கு' ஆக்கம் எனப் பொருள்படும் முதனிலைத் தொழிற்பெயர்.]

கட்டுப்பாட்டறை *kaṭṭu-p-pāṭṭaṟai,* பெ.(n.) ஒரு துறை அல்லது நிறுவனத்தின் செய்தித்தொடர்பு பணிகளை மேற்கொள்ளும் இடம்; control room. வானூர்தி நிலையக் கட்டுப்பாட்டு அறையில் குண்டு வைத்திருப்பதாக மிரட்டினார்கள் (உ.வ.).

[கட்டுப்பாடு + அறை.]

கட்டுப்பாட்டாளர் *kaṭṭuppāṭṭāḷar,* பெ.(n.) செயலொழுங்குபடுத்துபவர்; controller.

[கட்டுப்பாடு + ஆளர்.]

கட்டுப்பாட்டுரிமை *kaṭṭu-p-pāṭṭurimai,* பெ.(n.) கட்டுப்படுத்தும் உரிமை; right of control.

[கட்டுப்பாடு + உரிமை.]

கட்டுப்பாடு[1] *kaṭṭu-p-pāḍu,* பெ.(n.) 1. பொதுநல ஏற்பாடு; compact, social bond, community law. 2. கட்சி. (வின்.); league, party, faction, confederacy. 3. வரையறை; restriction.

ம. கெட்டுபாடு; க.,தெ.,து.கட்டுபாடு.

[கட்டுப்படு → கட்டுப்பாடு.]

கட்டுப்பாடு[2] *kaṭṭu-p-pāḍu,* பெ.(n.) ***கட்டுப்பொய்*** பார்க்க; see *kaṭṭu-p-poy.*

கட்டுப்பாடுபண்ணு–தல் *kaṭṭu-p-pāḍu-paṇṇu-,* 11 செ.கு.வி. (v.i.) வரையறை செய்தல்; to bind, put a restraint upon.

[கட்டுப்பாடு + பண்ணு .]

கட்டுப்பாம்பு *kaṭṭu-p-pāmbu,* பெ.(n.) ஒருவகை நல்ல பாம்பு; a fierce species of cobra.

க. கட்டு காவு

[கட்டு + பாம்பு.]

கட்டுப்பாளை *kaṭṭu-p-pāḷai,* பெ.(n.) பதநீருக்கென்று பாளைசீவிக் கட்டப்பட்ட ஆண்பனை. (G.Tn.D.222); male palmyra which is tapped for its juice.

[கட்டு + பாளை.]

கட்டுப்பானை *kaṭṭu-p-pāṉai,* பெ.(n.) பானையாற் கட்டப்பட்ட மிதவை. (வின்.); float or raft, constructed on inverted pots.

[கட்டு + பானை – கட்டுப்பானை.]

கட்டுப்பிரியன் *kaṭṭu-p-piriyaṉ,* பெ.(n.) உடம்பிலும் நெற்றியிலும் புள்ளிகளையுடைய ஒரு கடல்மீன் வகை; a kind of sea fish which is having dots on its forehead and body.

[கட்டு + பிரியன். புரியன் → பிரியன்.]

இது கபில நிறமுடையது. இதன் புள்ளிகள் நீல வண்ணத்திலிருக்கும். 15 விரலம் நீளமுடையது.

கட்டுப்பு[1] *kaṭṭuppu,* பெ.(n.) மிகுதியாக உவர்ப்பாகியிருப்பது; excessive saltiness.

க. கட்டுப்பு.

[கட்டு + உப்பு. கடு = மிகுதி. கடு → கட்டு.]

கட்டுப்பு[2] *kaṭṭuppu,* பெ.(n.) நெருப்புக்கு ஓடாதபடி கட்டிய உப்பு; consolidated with the aid of nitre, alum, salt ammoniac, sea water, etc., used in due proportions.

[கட்டு + உப்பு.]

பொதுவாக உப்பை வெடியுப்பு, சீனம், நவச்சாரம், கடல்நீர் முதலானவற்றைக் கொண்டு கட்டலாம் என்பர். அது கசிவு நீங்கிக் கெட்டியாக ஆகும். அதற்குப் பல சிறந்த குணங்களுண்டு. பாம்பைப் போல் சட்டைபோக்கிக் கொள்ளலாம். சடத்தை வயிரம் போலாக்கி நெடுங்காலமிருக்கலாம். ஓகத்தில் அது மூச்சாடவொட்டாது; தூக்கமிராது; உடம்பில் வியர்வை உண்டாகாது. 'உப்பைக் கட்டியவன் உலோகத்தைக் கட்டுவான்'. (பழ.) (சா.அக.)

கட்டுப்புணை *kaṭṭu-p-puṇai,* பெ.(n.) ***கட்டுமரம்*** பார்க்க; see *kaṭṭu-maram.*

[கட்டு + புணை.]

கட்டுப்புரியம் *kaṭṭu-p-puriyam,* பெ.(n.) தேசிக் கூத்துக்குரிய கால் வகை (சிலப்.3 அடியார்க்கு நல்லார் உரை); a posture of the legs in dancing.

[கட்டு + புரியம்.]

கட்டுப்புனை *kaṭṭu-p-puṉai,* பெ.(n.) கட்டுமரம் (சிலப். 13:179. அரும்.); catamaran.

[கட்டு + புனை.]

கட்டுப்பூட்டு *kaṭṭu-p-pūṭṭu,* பெ.(n.) அணிகலன் (யாழ்ப்.); ornament, jewel.

[கட்டு + பூட்டு. பூண் → பூட்டு.]

கட்டுப்பெட்டி *kaṭṭu-p-peṭṭi,* பெ.(n.) 1. பிரம்பு ஓலை, மூங்கிற்பற்றை முதலியவற்றால் முடைந்த பெட்டி; stiff basket braided with rattan, or palmyra leaf or bamboo splits. 2. பழைய வழக்கங்களைவிட்டுப் புதிய வழக்கங்களைக் கைக்கொள்ளாதவர் (இ.வ.); old fashioned ways; impervious to modern manners, out of place in fashionable society. இன்னும் இவர் கட்டுப்பெட்டியாகத்தான் வாழ்கின்றார்(உ.வ.)

[கட்டு + பெட்டி.]

கட்டுப்பேச்சு *kaṭṭu-p-pēccu,* பெ.(n.) 1. பொய்யாகக் கற்பித்த சொல்; fabricated story, ingenious statement fictiously made up, concoction. 2. அடக்கமான பேச்சு; un restrained speech.

[கட்டு + பேச்சு.]

கட்டுப்பொய் *kaṭṭu-p-poy,* பெ.(n.) வேண்டுமென்றே பொய்யாகக் கூறுஞ் செய்தி (இ.வ.); fib, concoction.

[கட்டு + பொய்.]

கட்டுப்போடு[1]**-தல்** *kaṭṭu-p-pōḍu-,* 19 செ. குன்றாவி. (v.t.) ***கட்டுக்கட்டு-தல்*** பார்க்க; see *kaṭṭu-k-aṭṭu-,*

[கட்டு + போடு-.]

கட்டுப்போடு[2]**-தல்** *kaṭṭu-p-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) வண்டிச் சக்கரத்திற்கு இரும்புப்பட்டை மாட்டுதல்; to fix iron plate around wooden wheel of cart.

[கட்டு + போடு.]

கட்டுபடி *kaṭṭu-paḍi,* பெ.(n.) 1. போதுமான அளவு; just sufficient. அரிசி இந்த விலைக்கு விற்றால்தான் கட்டுபடியாகும் (உ.வ.). 2. மறுமணம்; remarriage. அந்தக் கைம்பெண்ணை இவனுக்குக் கட்டுபடி செய்தார்கள் (இ.வ.).

க. கட்டப்பணெ

[கட்டுபடு → கட்டுபடி. கட்டுதல் = மிகுதல், நிறைதல், போதியதாதல். செல்லுபடி, அத்துபடி, கட்டுபடி போன்றவற்றில் 'படி' என்பது பெயரீறு. படி = தன்மை. செல்லுபடி = செல்லும் தன்மை. கட்டுபடி = கட்டும் (போதியதாகும்) தன்மை. 'கட்டுபடி' கூட்டுச்சொல்லன்று. சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலியில் இடையில் வல்லெழுத்து மிகுத்து கட்டுப்படி என குறித்திருத்தல் தவறு.]

கட்டுபடியாகு-தல் *kaṭṭu-paḍi-y-āgu-*, 7 செ.கு.வி. (v.i.) 1. போதியதாய் இருத்தல்; to be enough. சம்பளம் எனக்குக் கட்டுபடியாகவில்லை (உ.வ.). 2. ஈடுகொடுத்தல்; to meet adequately. சம்பளத்தில் பாதி கொடுத்தால்தான் செலவுக்குக் கட்டு படி யாகும் (உ.வ.).

மறுவ. கட்டு படியாதல்

[கட்டு + படி + ஆகு-.]

கட்டுபடியினாம் *kaṭṭuppaḍi-y-inām*, பெ.(n.) குறைந்த தீர்வைக்குட்பட்ட நிலம்; land held at favourable quit-rent.

[கட்டுபடி + இனாம். U. inām > த. இனாம் (கொடை).]

கட்டுமசது *kaṭṭu-mašatu*, பெ.(n.) *கட்டுமட்டு* பார்க்க; see *kaṭṭu-maṭṭu*.

[கட்டு + மசது. மட்டு → மசது.]

கட்டுமட்டு *kaṭṭu-maṭṭu*, பெ.(n.) 1. அளவாய்ச் செலவிடுகை (யாழ்ப்.); economy, frugality, thrift. 2. ஒத்த தன்மை (யாழ்ப்.); unanimity, oneness of feeling. 3. சொல்லடக்கம் (யாழ்ப்.); taciturnity. 4. ஆற்றல், திறமை; ability, கட்டுமட்டாய்ப் பேசு (உ.வ.). 5. நல்ல உடற்கட்டு; robust build of body, strong, hardy, constitution.

மறுவ. கட்டுகிட்டு, கட்டுமுட்டு.

க. கட்டுமசது; **Mar.** katamast, kathamast.

[கட்டு + மட்டு. கட்டுமட்டு என்பது வடபுலத்தில் கட்டு மஸ்து எனத் திரிந்தது. மஸ்து உருதுச்சொல்லாகத் தோற்றமளிப்பினும் அது 'மட்டு' என்பதன் திரிபே. கட்டுமட்டு - எதுகை குறித்த மரபிணைச் சொல் .]

கட்டுமண் *kaṭṭu-maṇ*, பெ.(n.) ஏனம் வார்க்கும் மண்கரு; earthe n mould for casting metal vessels, crucible.

[கட்டு + மண். கட்டமைந்த மண்வார்ப்பு.]

கட்டுமரம் *kaṭṭu-maram*, பெ.(n.) 1. மீன் பிடிப்பதற் காக மரங்களாற் பிணைக்கப்பட்ட மிதவை; catamaran, used for deep sea fishing; raft made of logs of wood lashed or joined together. 2. கூத்தாண்டை என்ற பாரதக்கதைபற்றிய விழாக் கொண்டாட்டத்தில், அரவானைப் பலியாகக் கொணர்ந்து கட்டும் மரம்; post to which is bound Aravāṉ to be offered as a sacrifice in the festival of kūttaṇḍai held to commemorate certain incidents in the Mahabharata.

ம. கெட்டுமரம், கட்டுமரம், கட்டமரம்; க. கட்டுமர; தெ. கட்டுமரமு, கட்டுமாநு; **E.** catamaran.

[கட்டு + மரம். 'இரு கடையும் வளைந்த மரக்கட்டு, கட்டுமரம்' (சொல்.ஆ.க.41).]

கட்டுமருந்து *kaṭṭu-marundu*, பெ.(n.) 1. கக்கல் (வாந்தி) கழிச்சல் (வயிற்றுப்போக்கு), அரத்த, பெரும்பாடு முதலிய போக்குகளை நிறுத்தும் மருந்து; medicine that can arrest vomitting, or purging, hemorrhage, excess discharge at menstruation etc - astringents. 2. காயம், புண் முதலியவற்றுக்குக் கட்டுவதற்கு முன் இடும் மருந்து; medicines applied externally for healing a wound, injury, ulcer, sore etc.3. தமிழ் மருத்துவ முறைப்படி வீரம், பூரம், இலிங்கம் முதலியவற்றைக் கட்டி, நோய்களுக்குத் தேன், முலைப்பால், மூலிகைச்சாறு முதலியவற்றில் இழைத்துக் கொடுக்கும் மருந்து; pills of corrosive sublimate, meriate of mercury, vermiltion etc., consolidated (partially) as per rules of Tamil Medicine and prescribed by vaithyans as internal remedies after macerating in honey, breastmilk, juice of green herbs etc., (சா.அக.).

[கட்டு + மருந்து.]

கட்டுமலை *kaṭṭu-malai*, பெ.(n.) செய்குன்று; artificial hillock, decorative-mound raised in a garden.

[கட்டு + மலை. கட்டுதல் - செய்தல்.]

கட்டுமா *kaṭṭu-mā*, பெ.(n.) ஒட்டுமா; grafted mango tree. *"கட்டுமாவின் றீங்கனியே". (திருப்போ.சந். பெருங்கழி.1,7).*

[கட்டு + மா.]

கட்டுமாக்களி *kaṭṭu-mākkaḷi*, பெ.(n.) கட்டிகளுக்கு வைத்துக் கட்டப் பயன்படும் மாவுக்களி; a soft composition of baked flour applied to abscesses - poultice. (சா.அக.)

[கட்டு + மா(வு) + களி.]

கட்டுமாத்திரை *kaṭṭu-māttirai* பெ.(n.) 1. இறுகச் சேர்க்கப்பட்ட மருந்துக்கட்டு; a crystallized pill made of various medicinal ingredients. 2. வயிற்றுப்போக்கை நிறுத்தும் குளிகை; a medicinal pill administered to bind loose bowels.

[கட்டு + மாத்திரை.]

கட்டுமாந்தம் *kaṭṭu-māndam,* பெ.(n.) மலச் சிக்கலால் குழந்தைகட்கு வரும் நோய்வகை. (பாலவா. 38.); a disease of children caused by constipation.

[கட்டு + மாந்தம்.]

கட்டுமாமரம் *kaṭṭu-māmaram,* பெ.(n.) ஒட்டுமா மரவகை; a kind of mango tree.

[கட்டு + மாமரம்.]

கட்டுமாலை *kaṭṭu-mālai* பெ.(n.) கோயில் கோபுர (விமான) உச்சியில் அமையும் ஒருறுப்பு; a part of the top of a "gopuram".

[கட்டு + மாலை.]

கட்டுமாறு *kaṭṭumāṟu,* பெ.(n.) 1. துடைப்பம்; broom. 2. தடியில் கட்டிய துடைப்பம் (மட்ட.அக.); wooden-broom.

[கட்டு + மாறு.]

கட்டுமானக்கோயில் *kaṭṭu-māṉa-k-kōyil,* பெ.(n.) கல், செங்கல், முதலியவற்றால் கட்டப்படும் கோயில்; constructed temple.

[கட்டு + மானம் + கோயில்.]

குடைவரை போன்று ஒரு கல்லில் குடையாமல், செங்கல், கருங்கல் கொண்டு அடுக்கிக் கட்டப்படும் கோயில்.

கட்டுமானம்[1] *kaṭṭumāṉam,* பெ.(n.) 1. கட்டடம் கட்டுதல்; construction of buildings. இது செங்கல் கட்டுமானம்; கருங்கல் கட்டுமானம் அன்று (உ.வ.). 2. நாவாய் முதலியன கட்டுதல்; fabrication as of boat, ship etc. இவன் கப்பல் கட்டுமானப் பணியில் பணியாற்றுகிறான்(உ.வ.). 3. கணிப்பொறி வடிவமைத்தல்; design and fabcriation of computers; சப்பான் நாட்டுக் கட்டுமானக் கணிப்பொறிகள் தரம் வாய்ந்தவை(உ.வ.). 4. நகைகளில் மணி பதிக்கும் வேலை; setting of precious stones, as in jewels.

[கட்டு + மானம். 'மானம்' தொ.பெ.ஈறு.]

கட்டுமானம்[2] *kaṭṭu-māṉam,* பெ.(n.) ஆக்கப் பொருள் அல்லது விற்பனைப் பொருளின் அடக்கவிலை; cost of produce of salable material.

[கட்டு + மானம்.]

கட்டுமானியம் *kaṭṭu-māṉiyam,* பெ.(n.) ஏரி அமைத்தற்காக அளிக்கப்படும் மானியம்; grant given for construction of a lake.

க. கட்டுமான்ய

[கட்டு + மானியம். Skt. mānya > த. மானியம்.]

கட்டுமுக்கை *kaṭṭu-mu-k-kai,* பெ.(n.) மூன்று நெற்கட்டுகளை வரியாகச் செலுத்தும் கோயிற்குரிய கடமை வகை (M.E.R.1916, p.152); a levy payable to temple in the form of three bundles of paddy sheaf.

[கட்டு + முக்கை. முக்கை - மூன்று. கட்டுமுக்கை - கட்டுகள் மூன்று. ஒற்றை, இரட்டை, முக்கை என்பது மரபு.]

அரிமுக்கையினின்றும் வேறுபடுத்திக் காட்டுவதற்காகப் பெரிய நெற்கட்டு மூன்று, கட்டுமுக்கை எனப்பட்டது. கட்டு என்பது கயிற்றால் கட்டப்பட்ட நெற்கட்டு.

கட்டுமுகனை *kaṭṭu-mugaṉai,* பெ.(n.) 1. அதிகாரம்; authority. 2. மேலாண்மை; management, direction, supervision, superintendence. 3. கண்டிப்பு, strictness, rigour. 4. தடை; exclusion, debarring. 5. அடக்கம்; restraint, restriction, check. 6. சிக்கனம்; economy, frugality, thrift.

[கட்டு + முகனை. முகம் → முகனை எனத் திரிந்தது இடவழக்குத் திரிபு. முகம் - தோற்றம், வெளிப்பாடு. கட்டுமுகம் - கண்டிப்பின் வெளிப்பாடு.]

கட்டுமுட்டு *kaṭṭu-muṭṭu,* பெ.(n.) 1. அமைதி; quietness, good behaviour with reference to children. 2. உடற்கட்டு; strong physique. 3. ***கட்டுமட்டு*** பார்க்க; see *kaṭṭu-maṭṭu*-5.

[கட்டு + (மட்டு→) முட்டு.]

கட்டுமுடி *kattu-mudi,* பெ.(n.) 1. பின்னிமுடிந்த கூந்தல்; a knot of braided hair (கருநா.). 2. இடுமுடி (சவுரி); attached hair, false hair. 3. அடர்த்தியான முடி; thickly irown hair.

க. கட்டுமுடி

[கட்டு + முடி.]

கட்டுமுள் *kattu-mul,* பெ.(n.) 1. சேவற் காலின் பின் பக்க நகம்; the heel or spur of a cock. 2. வேலி வரிசைபிடிக்க இரண்டு பக்கமும் குறுக்காக வைத்துக் கட்டப்படும் முள்; thorn poles used to keep both sides of a fence intact.

[கட்டு + முள்.]

கட்டுமுளை *kattu-mulai,* பெ.(n.) 1. கொளுவி வகை (C.E.M); riveted hook. 2. கடலோரத்தில் மரக் கலத்தை நிறுத்திட ஏதுவான சிறிய மரக்கொம்பு (செங்கை. மீனவ.); peg used to tie boats at the shore.

[கட்டு + முளை. முளை - குறுந்தறி.]

கட்டுமுறி-த்தல் *kattu-muri-,* 4. செ.குன்றாவி. (v.t.) கட்டுடைத்தல், கட்டுப்பாடு மீறுதல்; to go beyond the rules.

[கட்டு + முறி-.]

கட்டுமுறை *kattu-murai,* பெ.(n.) ஒடுஞ் சரக்குகளை நெருப்பிற்கோடாதபடி செய்யச் சித்தர்களின் ஊதை (வாத) நூல்களிற் சொல்லியுள்ள வழிகள்; the several methods or processes laid down in the šiddhar's works on Alchemy for consolidating or fixing substances which pass off as flames or into vapour in fire or when exposed to heat. (சா.அக.).

[கட்டு + முறை.]

கட்டுமை *kattumai,* பெ.(n.) கட்டுப்பாடு (யாழ்.அக.); social rules, caste rules.

[கட்டு → கட்டுமை. ஒ.நோ ஒன்று → ஒற்றுமை. கட்டுமை → கட்டமை. கட்டுமை - கட்டுப்பாடு அல்லது ஒருங்கிணைப்பு கட்டமைவு.]

கட்டுருபன் *katturūban,* பெ.(n.) தனித்து நின்று பொருள்தரும் தன்மை இன்றிப் பிறவற்றோடு இணைந்து வரும் உருபன்; bound morpheme.

[கட்டு + உருபன்.]

ஓர் ஒலியனோ (phoneme) ஒன்றுக்கு மேற்பட்ட ஒலியன்களோ இணைந்து ஒரு பொருளை உணர்த்துமாயின் அதனை உருபன் என்பர், இன்றைய மொழிநூலார். தனித்து நிற்கவல்ல உருபன்கள் தனியுருபன் (free morpheme) என்றும், தனித்து நிற்க இயலாதவை கட்டுருபன் (bound morpheme) என்றும் கருதப்படும். மரபிலக்கண முறைப்படி இடைநிலை, ஈறு முதலியவை கட்டுருபன்களாகும்.

கட்டுரை[1]-த்தல் *katturai-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. உறுதியாகச் சொல்லுதல்; to speak with assurance, say with certainty. *"அக்குடிலையின் பயனினைத் தென்றே கட்டுரைத்திலன்" (கந்தபு. அயனைச் சிறைபு.14).* 2. தெளிவாகச் சொல்லுதல் (திவ். திருவாய். 3.1:1); to say clearly; express distinctly.

[கட்டு + உரை - கட்டுரை-. கட்டு - உறுதி, செறிவு. கட்டுரைத்தல் - உறுதி மொழிதல். கட்டுரை - இரண்டன் தொகை.]

கட்டுரை[2] *katturai,* பெ.(n.) 1. உறுதிச்சொல்; a vowal, solemn declaration. *"கட்டுரை விரித்துங் கற்றவை பகர்ந்தும் பட்டவை துடைக்கும் பயங்கெழு மொழியினள்" (மணிமே.23:5).* 2. பொருள் பொதிந்த சொல்; pithy, sententious expression. *"கோட்டமில் கட்டுரை கேட்டனன்" (சிலப். பதி.54).* 3. பழமொழி; proverb. *"உற்றலாற் கயவர் தேறா ரென்னுங் கட்டுரை" (தேவா.523: 8).*

[கட்டு + உரை. கட்டு - உறுதி, செறிவு. கட்டுரை - கட்டாக, செறிவாக, உறுதிப்பட உரைப்பது.]

கட்டுநிட்டு, கட்டுப்பாடு, கட்டி நிற்றல் போன்றவற்றில் கட்டு என்னும் சொல் உறுதிப்பாட்டைக் குறித்தமை காண்க. உறுதியாகிய உரை கட்டுரை என்றும், கட்டி உரைக்கும் அல்லது புனைந்துரைக்கும் உரை கட்டு + உரை - கட்டுரை என்றும் ஒரே வடிவு கொண்டாலும் முன்னது பெயரும் பெயருமாகிய பண்புத்தொகை; பின்னது ஏவல் வினையும் பெயருமாகிய வினைத்தொகை என வேறுபாடறிக. ஒ.நோ. கட்டுக் கதை, கட்டுகதை.

கட்டுரை[3] *katturai,* பெ.(n.) குறிப்பிட்ட தலைப்பில் எழுதப்படும் குறுகிய பொருள் விளக்கம்;- eassy, shart price of writing on a given subject. தமிழாசிரியர் பொங்கல் விழாவைக் குறித்த கட்டுரை எழுதச் சொன்னார் (உ.வ.).

[கட்டு + தொகுப்பு கட்டு + உரை – கட்டுரை (பண்புத் தொகை).]

கட்டுரை[4] *katturai,* பெ.(n.) 1. புனைந்துரை; figurative language, magnifying or deprecating. *"பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டி" (கலித். 14).* 2. பொய்; falsehood, fabrication. *"மிண்டர் கட்டிய கட்டுரை" (தேவா. 1033-10).*

[கட்டு + உரை-கட்டுரை (வினைத்தொகை). கட்டுதல் - இட்டுக் கட்டிப் பேசுதல்.]

கட்டுரைச்சுவை *katturai-c-cuvai,* பெ.(n.) இலக்கிய வுரைநடைச் சுவை; stylistic beauty of prose *'தோற்றந் தாமே வினையொடு வருமே'* என்பதில் *'தாமே'* என்பது கட்டுரைச் சுவைப்பட நின்றது *(தொல்.சொல்.10,சேனா.).*

[கட்டுரை + சுவை. கட்டுரை - பேச்சின் செறிவு.]

கட்டுரைப்போட்டி *katturai-p-pōtti,* பெ.(n.) கட்டுரை வரைதிறன் காண நடத்தும் போட்டி; essay competition.

[கட்டுரை + போட்டி.]

கட்டுரைப்போலி *katturai-p-pōli,* பெ.(n.) உரை நடையின் ஒருவகை; a kind of prose. *கத்தியமாவது கட்டுரைப்போலியும் செய்யுட் போலியும் என இரண்டு வகைப்படும் (வீரசோ. யாப்பு.6, உரை).*

[கட்டுரை + போலி.]

கட்டுரையாளர் *katturai-y-ālar,* பெ.(n.) ஆய்வுரை படைப்பாளர்; essayist.

[கட்டுரை + ஆளர்.]

கட்டுவடம் *kattu-vadam,* பெ.(n.) 1. கழுத்தணி வகை (கலித்.96,உரை); necklace of beads. 2. காலணி வகை; *an anklet. "கட்டுவடக் கழலினர்" (பரிபா.12:24).*

[கட்டு + வடம். கட்டுவடம் (வினைத்தொகை). கட்டுதல் - தொடுத்தல், கோத்தல். வட்டம் → வடம் - வட்டவடிவாகத் தொடுக்கப்பட்டது.]

கட்டுவம் *kattuvam,* பெ.(n.) 1. கட்டப்பட்டது; that which is bound. 2. பெண்கள் காலின் நான்காம் விரலில் அணியும் காலாழி (யாழ்ப்.); ring worn on their fourth toe by women.

மறுவ. விரலாழி (யாழ்ப்.)

ம. கட்டுவம்

[கட்டு + அம் – கட்டுவம். நடிப்பது (நட்டம் → நாட்டியம்) நட்டுவம் எனத் திரிந்து நாட்டியம் ஆடுதலைக் குறித்தது. இதுபோன்று கட்டுவது → கட்டுவம் எனத் திரிந்து பிறவினைப் பொருளில் கட்டுவிக்கப்பட்ட கால்விரலணியைக் குறித்தது. காலில் அணிவிக்கும் சடங்கை முதலில் குறித்துப் பின்னர் விரலணியைச் சுட்டியது.]

கட்டுவலை *kattu-valai* பெ.(n.) 1. இருபக்கமும் திறந்த வாயுள்ளதும் அதில் குறுகிய வாய்ப் பக்கத்தைக் கயிற்றால் கட்டி விரிந்த வாய்ப்பக்கத்தை ஆற்றில் வீசுவதுமான வலை வகை; a fishing net open at both ends one of which is narrower being tied when in use and the mouth distended by hoop or pegs when set in a stream. 2. பெருவலையின் முதன்மைக் கூறுகளில் ஒன்றானதும் தலை வலையையும் சிறு வலையையும் இணைப்பதுமான வலை (தஞ்சை மீனவ.); a part of the net which connects the main net and the small net.

க. கட்டெவலெ, கட்டபலே

[கட்டு + வலை.]

கட்டுவளையம் *kattu-valaiyam,* பெ.(n.) நீளக்கம்பிகளுக்கு ஒழுங்கும் வலிமையும் தருவதற் காகக் கட்டப்படும் வளையம்; rings which connect straight rods to get shape and strength.

[கட்டு + வளையம்.]

கட்டுவன் *kattuvan* பெ.(n.) ஆண்பால் இயற்பெயர்; masculine proper name.

ம. கட்டுவன்

[கட்டு + வ் + அன் – கட்டுவன். கட்டு - உறுதி, வலிமை ஒ.நோ. கட்டுடல்.]

கட்டுவாங்கம்[1] *kaṭṭuvāṅgam,* பெ.(n.) 1. மழு; battle axe. *"கட்டுவாங்கங் கபாலங் கைக்கொண்டிலர்" (தேவா.1210:7).* 2. தடி (யாழ்.அக.); mace, club. 3. ஓகிகள் வைத்திருக்கும் தண்டு (த.சொ.அக.); arm stand for yogis. 4. தடுக்கும் போர்க்கருவி;resisting weapon.

மறுவ. கட்டங்கம், கட்டங்கு

[கடு → கட்டு + வாங்கம். கடு = வெட்டு. வாங்கம் = வளைவுக் கருவி.]



கட்டுவாங்கம் [ஓகியரின் கைத்தண்டு]

கட்டுவாங்கம்[2] *kaṭṭuvāṅgam,* பெ.(n.) ஒருவகை எண்ணெய். (தைலவ. தைல.51); a kind of medicinal oil.

[கட்டுவம் + அங்கம். கட்டுவம் = பலவற்றோடு சேரக் காய்ச்சியது, திரட்டாக்கியது. அங்கம் = வகை, வகைகளுள் ஒன்று. ஒ. நோ: நட்டுவம் → நட்டுவாங்கம்.]

கட்டுவாங்கன் *kaṭṭuvāṅgaṉ,* பெ.(n.) மழுவைப் படைக்கலமாகக் கொண்ட சிவன்; Śiva, one of whose weapon is a battle-axe.

[கட்டுவாங்கம்' → கட்டுவாங்கன்.]

கட்டுவாதி *kaṭṭuvāti,* பெ.(n.) நெருப்பிற்கு ஓடும் சரக்குகளை ஓடாமற் கட்டி இதளிய மாற்றம் (இரசவாதம்) செய்பவன்; an alchemist who is skilled in the art of fixing volatile bodies for purposes of transmutation (சா.அக.).

[கட்டு + (வா) வாதி. ஆள் → ஆளி → வாளி → வாதி. கட்டாளி எனின் செந்தமிழாம்.]

கட்டுவாய்வலை *kaṭṭu-vāy-valai,* பெ.(n.) மணி வலையின் கீழ்ப்பகுதி. (தஞ்சை மீனவ.); lower part of the fishing net known as manivalai.

[கட்டுவாய் + வலை (விளிம்பில் கட்டுமுடிச்சுகள் உள்ள வலை.]

கட்டுவாயில் *kaṭṭu-vāyil,* பெ.(n.) மேல் வளைவு இட்டு அமைக்கப்பட்ட வாயில்; arched door-way, portal.

மறுவ: தோரணவாயில்

[கட்டு + வாயில். கட்டு = மேற்கட்டு.]

கட்டுவி-த்தல் *kaṭṭuvi-,* பி.வி.(caus.) ஏற்பாடு செய்வித்தல்; to arrange. *"காவலன்நான் நிபந்தங்கள் கட்டுவித்தே" (திருத்தொண்டர் புராணசார.31).*

[கட்டு → கட்டுவி-.]

கட்டுவிச்சி *kaṭṭu-vicci,* பெ.(n.) குறிசொல்பவள்; female sooth sayer. *"அதுகேட்டுக் காரார் குழற்கொண்டை கட்டுவிச்சி கட்டேறி" (திவ். இயற். சிறிய . ம.20.) .*

மறுவ. கட்டுவித்தி

[கட்டுவித்தி → கட்டுவிச்சி.]

கட்டுப்பார்க்கும் வழக்கம் நற். 288, அகநா.98, குறிஞ்சிப் 7. பெருங் 37:235, திவ். சிறிய திருமடல். 20:2; திவ். திருவாய் 4.6:3. மீனாட்சியம்மை குறம் 26 ஆகியவற்றில் குறிப்பிடப் பட்டுள்ளது. கட்டு = குறி சொல்லுதல்.

கட்டுவிட்டுப்பாய்-தல் *kaṭṭu-viṭṭu-p-pāy-,* 2 செ.கு.வி.(v.i.) உடைப்பு உண்டாகும்படிப் பெருகுதல் (வின்.); to burst out and flow, as a flood by breaching an embankment.

[கட்டு + விட்டு + பாய்.]

கட்டுவிடு-தல் *kaṭṭu-viḍu-,* 2 செ.கு.வி.(v.i.) 1. கட்டவிழ்தல்; தளர்தல்; to be loosened; untied. 2. உடல் வலுவிழத்தல்; to be weakenod, as a body. 3. முதுமூப்புக் காலத்தில் மூட்டுகள் தளர்தல்; to relax; as the joints and muscles at old age (வின்.). 4. வண்டிச்சக்கரத்து வட்டையின் இரும்புப் பட்டையை மாற்றுதல்; to change the iron tyre of bullock carts.

[கட்டு + விடு. கட்டு = இறுக்கம், செறிவு, திண்மை. விடுதல் = குறைவுபடுதல்.]

கட்டுவித்தி *kaṭṭuvitti,* பெ.(n.) குறிசொல்பவள்; female sooth sayer.

[கட்டுவம் + அத்து + இ. – கட்டுவத்தி → கட்டுவித்தி. கட்டு → கட்டுவம் - கட்டுரைத்தல், குறி சொல்லுதல். அத்து – சாரியை, 'இ' பெண்பாலீறு.]

கட்டுவிரியன் *kaṭṭu-viriyaṉ,* பெ.(n.) விரியின் பாம்பு வகை (M.M.); a snake with rings on its body.

[கட்டு + வரியன் – கட்டுவரியன் → கட்டுவிரியன். கட்டு - வரிவரியான தோற்றம்.]



கட்டு விரியன்

கட்டுவினா *kaṭṭu-viṉā,* பெ.(n.) பெருக்கற் கணக்கு வகை; a kind of multiflication.

[கட்டு + வினா.]

கட்டுவேலை *kaṭṭu-vēlai,* பெ.(n.) 1. கட்டடம் கட்டும் தொழில்; construction work, masonry work. 2. கம்பி கட்டும் தொழில்; bar binding work.

[கட்டு + வேலை. கட்டு - பிணை, சேர்.]

கருங்கல், செங்கல் போன்றவற்றைப் பயன்படுத்திக் கட்டடம் உருவாக்குவதால் பெற்ற இப்பெயர் கட்டடம் கட்டக் கம்பிகளைப் பிணைத்துத்தரும் தொழிலையும் குறிப்பதாயிற்று.

கட்டுவேலைக்காரர் *kaṭṭu-vēlai-k-kārar,* பெ.(n.) கட்டடம் கட்டுபவர்; கம்பி கட்டுபவர்; mason or bar binder.

[கட்டு + வேலை + காரர்.]

கட்டுவை *kaṭṭuvai,* பெ.(n.) 1. கட்டில்; cot. *"கட்டுவை யதனையு முதவினார்" (சிவதரு. சுவர்க்க. நரகவி.9).* 2. செம்பு; copper.

[கட்டு + வை – கட்டுவை (கயிற்றால் கட்டப்பட்ட கட்டில்). வை - தங்குமிடம், இருக்குமிடம். வை – முதனிலைத் தொழிற்பெயர், தொழிலாகுபெயராய்த் தங்குமிடத்தைக் குறித்தது. கல் போன்றவற்றையும் இறுகப்பிணைக்கும் தன்மை பற்றியே செம்பிற்கும் கட்டுவை பெயராயிற்று.]

கட்டுறவி *kaṭṭuṟavi,* பெ.(n.) இறகுள்ள கட்டெறும்பு; ant. *"கட்டுறவி தேள்பணி கருங்குளவி பூரம்" (அரிச்சந்.பு.நகர்நீ. 39).*

க. கட்டிறும்பெ, கட்டிறுவெ, கட்டிருவே, கட்டிருவெ; பட. கட்டிருப்பு

[கட்டு + (இறுவு) → இறுவி – கட்டிறவி → கட்டுறவி. இல் (குத்துதல்) → இறுவி.]

கட்டுறுதி *kaṭṭuṟuti,* பெ.(n.) வலிமை; strong.

[கட்டு + உறுதி.]

கட்டூண் *kaṭṭūṇ,* பெ.(n.) களவு செய்து உண்கை; living by plunder. *"கட்டூண் மாக்கள்" (சிலப். 16:169).*

[கள் + து – கட்டு + ஊண். ஊண் - உணவு. கட்டு - களவு.]

கட்டூண்மாக்கள் *kaṭṭūṇ-mākkaḷ,* பெ.(n.) திருட்டுத் தொழிலால் உடல் வளர்ப்போர்; person who is living upon- robbery. *"கட்டூண் மாக்கள் கடந்தரு மெனவாங்கு" (சிலப். 12:19).*

[கள் (களவு) → கட்டு + உண் + மாக்கள்.]

கட்டூர் *kaṭṭūr,* பெ.(n.) படைவீடு; military camp. *"ஆரிறை யஞ்சா வெருவரு கட்டூர்" (பதிற்.82:2). "புகழ்சால் சிறப்பிற் காதலி புலம்பத் துறந்து வந் தனையே யருந்தொழிற் கட்டூர்" (ஐங்குறு. 445).*

மறுவ. பாடி, பாசறை

[கட்டு + ஊர். கட்டுதல் - செய்தல். இடைக்காலப் பயன்பாட்டுக்காகக் கட்டுவிக்கப்பட்ட போர்மறவர் குடியிருப்பு.]

கட்டெலி *kaṭṭeli,* பெ.(n.) கடித்தால் இறப்புண் டாக்கும் எலிவகை (வின்.); a rat, the bite of which is said to be fatal.

[கள் → கடு + எலி. கடு - நஞ்சு.]

கட்டெழில் *kaṭṭeḻil,* பெ. (n.) பேரழகு ; great beauty. *"கட்டெழில் சேர்ந்த வட்டணைப் பலகை" (பெருங். உஞ். 42:63,64).*

மறுவ. கட்டழகு

[கட்டு + எழில். கட்டு - மிகுதி.]

கட்டெறும்பு *kaṭṭeṟumbu,* பெ.(n.) பெரிய கறுப்பெறும்பு; large black ant. *கழுதை தேய்ந்து கட்டெறும்பு*

ஆனது (பழ.). "கன்றுக ளோடச் செவியில் கட்டெறும்பு பிடித்திட்டால்". (திவ். பெரியாழ். 2,4:2)

ம. கட்டுறும்பு; **க.** கட்டிருவெ, கட்டிறும்பெ; **பட.** கட்டிருப்பு; **தெ.** கட்டெசீம.

[கள் → கட்டு + எறும்பு. கள் = கருமை.]

கட்டேறு–தல் *kaṭṭēṟu-,* 5 செ.கு.வி.(v.i.) வெறியாடல்; to become possessed by a spirit. *"கட்டுவிச்சி கட்டேறி". (திவ். இயற். சிறிய திரும. 20)*

[கட்டு + ஏறு – கட்டேறு–. கட்டுதல் = கட்டுரைத்தல், தானாக ஒன்று இட்டுரைத்தல். ஏறுதல் = அத்தன்மை எய்தப்பெறுதல்.]

கட்டை[1] *kaṭṭai,* பெ.(n.) 1. குட்டையான கற்றை போன்ற வேர். (சொ.ஆ.க.65); short and bushy root. 2. நெல், சோளம், கரும்பு முதலியவற்றில் அறுவடை செய்தது போகத் தரையில் உள்ள எஞ்சிய பகுதி ; stalks of paddy, jowar, sugarcane etc,after harvest on the field. கட்டை குத்திக்கொள்ளாமல் பார்த்து உழு (உ.வ.).

[குள் → குட்டு → குட்டை → கட்டை.]

கட்டை[2] *kaṭṭai,* பெ.(n.) திண்ணை; pial.

க. கட்டெ

[கட்டு→ கட்டை (கட்டப்பட்ட திண்ணை).]

கட்டை[3] *kaṭṭai,* பெ.(n.) 1. காய்ந்த கொம்பும் கவையுமாகிய விறகு. (சூடா.); firewood. 2. ஈம விறகு; funeral pyre. *"நடுக்கட்டையிலே கிடத்துமட்டும்"* (தனிப்பா.1 : 195:10). 3. குற்றி; block, small stump, piece of timber. 4. கடாவுமுளை (வின்.); stake. 5. கடலுள் வலையிருக்கு மிடம் காட்டும் குற்றி; wooden float of a big sea-fishing net. 6. உடல்; body. கட்டையிருக்கையிற் சிதம்பரம் போய் காண வேண்டும் (உ.வ.). 7. உயிரற்ற உடல் (மூ.அக.) corpse. 8. செம்புக் கட்டை(இ.வ.); copper core. 9. ஒரு கல் தொலைவு (யாழ்ப்.); one mile distance.

ம. கெட்டு, கட்டை; **க.,தெ., குட., பட.** கட்டெ, கட்ட; **து.** கெட்ட; **கொலா.** கட்டா; **நா., பர்.** கட்ட; **கோண்.** கட்டா.

Skt. kaṭa (corpse); **Nep.** kaṭ(wood); **Aust.** kaṭṭe (digging stick)

த. கட்டை> **வ.** காஷ் ட.

[கள் → கட்டு → கட்டை (வ. மொ.வ. 102). கள் = திரட்சி. கட்டை = திரண்டது.]

உயிர் நீங்கியபின் உடல், கட்டைபோலக் கிடந்து மண்ணோடு மண்ணாய்ப் போவது கட்டை. [சொ.ஆ.க. 30].

கட்டை[4] *kaṭṭai* பெ.(n.) 1. அணை; dam. 2. கைப்பிடிச் சுவர்; small, parapet,wall. 3. திண்ணையுடன் சேரக்கட்டிய சாயவணை; a structure in the shape of a pillow constructed along with a pial in an Indian dwelling house. 4. ஒரு கல் தொலைவு (யாழ்ப்.); one mile distance.

[கட்டு → கட்டை = கட்டப்பட்டது.]

கல் [மைல்] கணக்கைக் குறிக்க மரக்கட்டை நடுவது யாழ்ப்பாண வழக்கு. அதனாற்றான் கட்டை அங்கு ஒரு கல் [மைல்] தொலைவைக் குறித்து நின்றது.

கட்டை[5] *kaṭṭai,* பெ.(n.) குறிஞ்சிமலர்; kuṟinji.

பட. கட்டெ, கட்டெ சொப்பு; **இரு.** கட்டெ, கட்டெ; **கோத., து.** கட்.

[கட்டு → கட்டை.]

பன்னிரு ஆண்டுவரை பூக்காது வெறுமனே கட்டைபோல் இருத்தலால் கட்டை என வழக்கெய்தியது. குறிஞ்சி, பண்பாட்டு அடிப்படையில் வியப்புமிக்க செடி. அதன் நீலநிற மலர் நீலமலை (blue mountain) எனப் பெயரமைவிற்குக் காரணமாயிற்று. பழந்தமிழில் இச் செடி, திருமணத்திற்கு முன் இருபாலார்க்கும் இடையே ஏற்படும் அன்பையும் அது நிகழ்விடமான மலையையும் குறித்து நின்றது. [கமில் சுவலபில். திராவிட மொழியியல் ஓர் –அறிமுகம் . ப.69.].

கட்டை[6] *kaṭṭai,* பெ.(n.) 1. உயரக்குறைவு; shortness of stature. *ஆள் கட்டையானவன்.* 2. மதிப்புக் குறைவு; defect, imperfection; lowness, as of price; inferiority. விலைக்கட்டை(உ.வ.). 3. தேய்ந்தது; that which is short, low, dwarfish; that which is diminished or worn out by use, as a broom - stick. கட்டைத் துடைப்பம் (உ.வ.). 4. பற்றாதது; deficiency in length or in breadth, insufficiency. *அகலக்*

கட்டை. 5. ஓசைக்குறைவு; lowness of sound. கட்டைக்குரல் (சாரீரம்). 6. திப்பி (வின்.); refuse or residum,of the grains after pounding and sifting. 7. மயிர்க்கட்டை; roughness of the beard after shaving hair stump. கட்டையை தட்டுகிறது நன்றாக மழி (உ.வ.). 8. கழற்சிக்காய் ஆட்டத்தின் முதற்றொகை; the first count in a game of jack tones. கட்டை விழாமல் காய்களைப் போடு(உ.வ.). 9. ஒருவகை இசைக் குற்றம் (திருவாலவா.57: 26.); flatting, as a defect in singing.

ம. கட்டை; **கசபா., கோண்(அடிலா).** கட்டே; **Ar.** qasir; **Heb.** katsar; **F.** court; **Sp.,It.** corto; **Port.** curto; **Rum.** scurt; **G.** kurz; **Du.,Swed.,Dan.,Norw.** kort; **Pol.** krotki; **Cz.** kracky; **Ser.croa.** kratak; **Turk.** kisa; **Russ.** karothi; **Yid.** kurts; **Gk.** kondos'.

[முனை மழுங்கின பொருளும் மேன்மேலும் முனை தேயும் பொருளும் குட்டையாகும். குறைதலும் குட்டையாதலே. குள் → குள்ளம், குள்→ குள்ளை. குள் → குள்ளல். குள் → குட்டை → கட்டை (மு.தா.107).]

இதன் மூலத்தை அறியாது, மரக்கட்டை விறகுகட்டை, செப்புக் கட்டை, முதலியவற்றின் தடிப்பத்தைக் குறிக்கும் 'கட்டை' யென்னும் சொல்லோடு இணைத்துள்ளது சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலி [பாவாணர்,வே.க.152].

கட்டை[7] *kaṭṭai,* பெ.(n.) மத்தளத்தின் மரத்தாலான பகுதி (கலைமகள். XII, 399); the wooden portion of a mattaḷam.

[கள் → கட்டு → கட்டை - திரண்ட மரத்துண்டு, திரண்ட விறகு. வடமொழியில் திரட்சி என்னும் சிறப்புப் பொருளில்லை. (வ.மொ.வ.102.).]

கட்டைக்கயிறு *kaṭṭai-k-kayiṟu,* பெ.(n.) வலையில் மிதப்புக் கட்டை பிணைத்தற்குரிய சிறு கயிறு (தஞ்சை மீனவ.); cord used for tying pieces of wooden blocks to fishing nets.

ம. கங்கிலி

[கட்டை + கயிறு.]

கட்டைக்கரி *kaṭṭai-k-kari,* பெ.(n.) மரக்கட்டையைக் காற்றுப்படாமல் எரித்து உண்டாக்கும் கரி; charcoal. கும்மட்டி அடுப்பிற்குக் கட்டைக்கரி வாங்கிவா(உ.வ.).

மறுவ. அடுப்புக்கரி

ம. கட்டக்கரி

[கட்டை + கரி.]

மரக்கட்டைகளை அடுக்கி, மண்பூச்சுப் பூசித் தீயூட்டி, காற்றுப்புகாமல் மூட்டமிட்டுக் உருவாக்குவது கட்டைக்கரி.

கட்டைக்கருத்து *kaṭṭai-k-karuttu,* பெ.(n.) மந்தக் கருத்து; obtuse notion.

[கட்டை[6] + கருத்து.]

கட்டைக்கரும்பு *kaṭṭai-k-karumbu,* பெ.(n.) கரும்பை அறுவடை செய்தபின் மண்ணில் புதைந்திருக்கும் வேர்க்கரும்பினின்று வளரும் கரும்பு; succeeding growth of cane raised from a portion of stalk which is replanted. கட்டைக்கரும்பானதால் வயலில் பயிர்ச்செலவு குறைவு (உ.வ.).

[கட்டை + கரும்பு.]

பெரும்பாலும் முதற்போக விளைபயனி லிருந்து இதன் விளைபலன் சற்றே குறைவாக இருக்கும்.

கட்டைக்கழுத்தன் *kaṭṭai-k-kaḻuttaṉ,* பெ.(n.) மரவட்டை; wood louse (சா.அக.).

[கட்டை[6] + கழுத்தன்.]

கட்டைக்கற்றாளை *kaṭṭai-k-kaṟṟāḷai,* பெ.(n.) நெல்வகை; a kind of coarse paddy.

[கட்டை[6] + கற்றாளை.]

கட்டைக்காணம் *kaṭṭai-k-kāṇam,* பெ. (n.) நிலவுடைமையாளருக்குக் குத்தகைக்காரர் தரும் அன்பளிப்பு; a complimentary present made by a tenant or lease-holder to the proprietor of an estate.

ம. கட்டக்காணம்

[கட்டை + காணம். காணம். - பொன், பொற்காசு, பொருள். கட்டைக்காணம் - சிறுபொருள்.]

கட்டைக்காப்பு *kaṭṭai-k-kāppu,* பெ.(n.) உள்ளே செப்புக் கட்டையும் மேலே பொற்றகடுமாக அமைத்த காப்பு (இ.வ.); bangles of copper encased in gold.

[கட்டை[3] + காப்பு.]

கட்டைக்காரன் *kaṭṭai-k-kāraṉ,* பெ.(n.) கள்ளிச் செடி; prickly pear.

ம. கட்டகாரன்

[கட்டை + காரன்.]

கட்டைக்காரை *kaṭṭai-k-kārai,* பெ.(n.) முட்செடி வகை (நாஞ்.); a thorny shrub.

[கட்டை + காரை. காரை = காட்டுச்செடிவகை.]

கட்டைக்கால்[1] *kaṭṭai-k-kāl,* பெ.(n.) 1. வயல் அல்லது ஆற்றுப் பக்கத்திலுள்ள தாழ்ந்த நிலம்; low land adjoining rice-field or river.

ம. கட்டக்கால்; க. கட்டெ (அணை).

[குட்டை → கட்டை + கால்.]

கட்டைக்கால்[2] *kaṭṭai-k-kāl,* பெ.(n.) 1. ஊனமுற்ற காலுக்குப் பொருத்தப்படும் செயற்கைக் கால்; artificial leg for deformed leg. கட்டைக்கால் பொருத்தி இருந்தும் வேகமாக நடக்கிறான்(உ.வ.). 2. குறுகிய தடித்த கால்; a deformed leg appearing short and stout. 3. பொய்க்கால் குதிரை; dummy horse.

[கட்டை + கால் – கட்டைக்கால் = குட்டையான காலுள்ளது.]

கட்டைக்கால்[3] *kaṭṭai-k-kāl,* பெ.(n.) கூரையைத் தாங்க உத்தரத்தின்மேல் வைக்கும் சிறுகால் (இ.வ.); short upright prop over the beam in a roof. கட்டைக் காலை உத்தரத்தில் நிறுத்து (உ.வ.).

[கட்டை[3] + கால்.]

கட்டைக்காலி *kaṭṭai-k-kāli,* பெ.(n.) 1. குறுகிய காலுள்ளவன்–ள்–து; short legged man, woman or animal. 2. கரடி; bear. 3. பன்றி; pig.

[குட்டை → கட்டை[6] + காலி.]

கட்டைக்கீச்சான் *kaṭṭai-k-kiccaṉ,* பெ.(n.) ***கட்டக்கீச்சான்*** பார்க்க see *kaṭṭa-k-kiccaṉ.*

[கட்டை + கீச்சான்.]

கட்டைக்குத்துவீடு *kaṭṭai-k-kuttu-viḍu,* பெ.(n.) உத்தரம், விட்டம் ஆகிய கட்டைகள் அமைத்து மேற்றளம் போட்ட வீடு; house terraced with timber rafters.

[கட்டை + குத்து + வீடு.]

கட்டைக்குரல் *kaṭṭai-k-kural,* பெ.(n.) 1. தடித்த குரல்; harsh, grating voice. 2. கம்மிய குரல் (யாழ்ப்.); weak, low voice. 3. மந்தக் குரல்; short and dull voice due to some disorder of the larynx (சா.அக.).

[குட்டை → கட்டை + குரல். குட்டை = குறைந்தது, கம்மியது, மந்தமானது.]

கட்டைக்குருகில் *kaṭṭai-k-kurugil,* பெ.(n.) ஒரு வகைச் சிறிய பறவை; a kind of small bird.

ம. கட்டக்குரிகில்

[கட்டை + குருகில். குருகு → இல். 'இல்' சிறுமை, குறுமைப்பொருள் பின்னொட்டு. குருகு பறவையினப் பொதுப்பெயர்.]

கட்டைக்குருத்து *kaṭṭai-k-kuruttu,* பெ.(n.) வாழையின் ஈற்றிலை (யாழ்ப்.); last tender leaf of a plantain which envelopes the sheath or blossom and shoots out a little before it.

ம. கட்டக்குருந்நு

[குட்டை → கட்டை + குருத்து.]

கட்டைக்கெளுத்தி *kaṭṭai-k-keḷutti,* பெ.(n.) ஆற்றில் வாழ்வதும், 18 விரலம் வரை வளர்வதுமாகிய வெள்ளைக் கெளிற்றுமீன் வகை; a river fish, silvery, attaining 18 inches in length.

[குட்டை → கட்டை + கெளுத்தி. கெளிறு → கெளிற்றி → கெளுத்தி.]

கட்டைக்கை *kaṭṭai-k-kai,* பெ.(n.) மீன்வலையின் முனை; the rear edge of a kind of fishing net.

ம. கட்டக்கை

[குட்டை → கட்டை + கை.]

கட்டைக்கொக்கான் *kaṭṭai-k-kokkāṉ,* பெ.(n.) ஏழு கற்களை ஒவ்வொன்றாக மேலே எறிந்து, கையால் பிடித்து விளையாடும் மகளிர் விளையாட்டு வகை (யாழ்ப்.); a kind of indoor game of women in which one takes seven pebbles in a hand and tosses these singly and in combination marking score for each successful tossing.

மறுவ. ஏழாங்கல், கொக்கான், கட்டைவைக்கை.

[குட்டை → கட்டை + கொக்கான்.]

ஏழு கற்களை வைத்து விளையாடுவது சேரநாட்டு வழக்கு. ஐந்து கற்களை வைத்து விளையாடுவதும் உண்டு. இதனை ஐந்தாங்கல் [அஞ்சாங்கல்] என்பர்.

கட்டைக்கொம்பன் *kaṭṭai-k-kombaṉ,* பெ.(n.) தலையில் கொம்புள்ள ஒருவகை மீன்; a hammer headed shark.

ம. கட்டக்கொம்பன்

[கட்டை + கொம்பன்.]



கட்டைக்கொம்பன்

கட்டைகட்டு – தல் *kaṭṭai-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. கொண்டி மாட்டுக்குத் தடி கட்டுதல்; to suspend a piece of wood from the neck of an unruly cow so that the block may act as a drag and thus prevent the animal from straying away. 2. மணம் புரிவித்து இணைத்து வைத்தல் (இ.வ.); lit., to bind or yoke, fig., to unite a person in marriage that he may there after be obliged to lead a steady life.

[கட்டை + கட்டு–. கட்டைகட்டுதல் = தன் விருப்பம் போல் அலையாமலிருக்கத் தடைபோடுதல்.]

கட்டைச்சகடு *kaṭṭai-c-cagaḍu,* பெ.(n.) ***கட்டை வண்டி*** பார்க்க; see *kaṭṭai-vaṇḍi.*

[கட்டை + சகடு.]

கட்டைச்சம்பா *kaṭṭai-c-cambā,* பெ.(n.) ***கட்டையன்***[2] பார்க்க; see *kaṭṭaiyaṉ.*

[கட்டை + சம்பா.]

கட்டைச்சாரீரம் *kaṭṭai-c-cārīram,* பெ.(n.) ***கட்டைக்குரல்*** பார்க்க; see *kaṭṭai-k-kural.*

Skt. sārīra > த.சாரீரம்.

[கட்டை+ சாரீரம்.]

கட்டைச்சி *kaṭṭaicci,* பெ.(n.) குள்ளமான பெண் (யாழ்ப்.); short woman.

ம. கட்டச்சி

[குட்டை → கட்டை → கட்டைச்சி.]

கட்டைச்சுவர் *kaṭṭai-c-cuvar,* பெ.(n.) 1. சிறு சுவர்; low wall. 2. கைப்பிடிச் சுவர்; balustrade; parapet wall.

[குட்டை → கட்டை + சுவர்.]

கட்டைச்சுறா *kaṭṭai-c-cuṟā,* பெ.(n.) ***கட்சுறா*** பார்க்க; see *kaṭ-cuṟā.*

[கட்டை + சுறா.]

கட்டைச்செம்பாளை *kaṭṭai-c-cembāḷai,* பெ.(n.) பெருநெல்வகை (தஞ்சை.); a kind of coarse paddy.

[கட்டை + செம்பாளை. செம்பாளை = சிவப்பு நிற அரிசியைத் தரும் நெல்வகை.]

கட்டைச்செம்பு *kaṭṭai-c-cembu,* பெ.(n.) தரமற்ற செம்பு; inferior or impure copper.

[கட்டை + செம்பு.]

கட்டைத்தடி *kaṭṭai-t-taḍi,* பெ.(n.) செங்கல் வடிவமைக்கப் பயன்படும் சட்டம்; a wooden mould for making bricks.

மறுவ. கட்டளை

ம. கட்டத்தடி

[கட்டை + தடி.]

கட்டைத்தூக்கு *kaṭṭai-t-tūkku,* பெ.(n.)சுவர் எழுப்பும்பொழுது பயன்படுத்தும் நூல்குண்டு; plumb-line.

மறுவ. தூக்குக் குண்டு

ம. கட்டத்தூக்கு

[கட்டை + தூக்கு. கட்டை = மரக்கட்டை.]

கட்டைத்தூண் *kaṭṭai-t-tūṇ,* பெ.(n.) தாழ்வாரத்தைத் தாங்கும் சிறிய தூண்; wooden pillar of veranda.

[குட்டை → கட்டை + தூண்.]

கட்டைத்தொட்டி *kaṭṭai-t-toṭṭi,* பெ.(n.) விறகு விற்கும் கிடங்கு; firewood depot.

[கட்டை + தொட்டி. கட்டை = விறகு. தொட்டி = நாற்புறமும் அடைப்புள்ள இடைநிலப் பகுதி. ஒ.நோ. தொட்டிவீடு, ஆட்டுத்தொட்டி.]

கட்டைதட்டல் *kaṭṭai-taṭṭal,* பெ. (n.) விரியன் பாம்பு கடித்தல் (நெல்லை); bite of viper snake.

[கட்டை + தட்டல். கட்டை = கட்டுவிரியன். தட்டல் = தாக்குதல், முட்டுதல், கடித்தல்.]

கட்டைப்பஞ்சாயத்து *kaṭṭai-p-pañjāyattu,* பெ.(n.) சிற்றூர், பேரூர்களில் அடிதடி, வன்முறைகளில் வல்லவர்கள் மரத்தடியில் அல்லது பொதுவிடத்தில் கூடிச் சமன் செய்து சீர்தூக்காமல் யாரேனும் ஒருவர்க்கே சார்பாக முறையல்லாது தீர்ப்பு வழங்குதல்; kangaroo court held by local toughs often with political backing.

U. panjayattu > த. பஞ்சாயத்து

[கட்டை + பஞ்சாயத்து. கட்டை = மரக்கட்டை.]

கட்டைப்படகு *kaṭṭai-p-paḍagu,* பெ.(n.) சிறிய படகு (இராம. மீனவ.); small boat.

[குட்டை → கட்டை + படகு.]

கட்டைப்பயிர் *kaṭṭai-p-payir,* பெ.(n.) முதிர்ந்த பயிர்; full grown plant (சா.அக.).

[குட்டை → கட்டை + பயிர்.]

கட்டைப்பயிர்வெற்றிலை *kaṭṭai-p-payir-veṟṟilai,* பெ.(n.) முதிர்ந்த காலினின்று கிள்ளிய வெற்றிலை (இ.வ.); betal plucked from a full-grown betal vine.

[கட்டை + பயிர் + வெற்றிலை. கட்டை = முதிர்வு.]

கட்டைப்பருத்தி *kaṭṭai-p-parutti,* பெ.(n.) முன்பருவத் தாளில் வளர்ந்த பருத்திச்செடி; cotton grown on the previous season's stubble.

[கட்டை + பருத்தி.]

கட்டைப்பொலி *kaṭṭai-p-poli,* பெ.(n.) தூற்றாத சூட்டடிநெல்; paddy before the chaff is blown away.

[கட்டை + பொலி.]

கட்டைப்பொன் *kaṭṭai-p-poṉ* பெ.(n.) தரம் குறைந்த பொன்; inferior gold.

மறுவ. கட்டைத் தங்கம்

[கட்டை + பொன். கட்டை = குறைந்த, தரமற்ற.]

கட்டைபறி-த்தல் *kaṭṭai-paṟi-,* 4 செ.குன்றாவி.(v.t.) வேரடிகளை நிலத்தினின்று தோண்டிக் களைதல்; to remove roots. *'காடுவெட்டிக் கட்டைபறித்து' (S.I.I. V-i,470).*

[கட்டை + பறி-.]

கட்டைபுரட்டு-தல் *kaṭṭai-puraṭṭu-* 5 செ.குன்றாவி. (v.t.) 1. *கட்டைபறி-த்தல்* பார்க்க; see *kaṭṭai-pa-ṟi* கரும்புக் கொல்லையைக் கட்டை புரட்டினால்தான் நடவு நடமுடியும்(உ.வ.). 2. மீன் வலையிலுள்ள மிதப்புக்கட்டைகள் உலருமாறு திருப்பிப் போடுதல்; to turn the floats of the fishing net to get it dried fully.

[கட்டை + புரட்டு. புரட்டு = கீழ்மேலாகத் திருப்புதல், வேருடன் களைதல்.]

கட்டைபோடு[1]-தல் *kaṭṭai-poḍu-,* 20 செ.குன்றாவி. (v.i.) முட்டுக்கட்டை போடுதல்; to thwart, obstruct. *தேரைக் கட்டை போட்டு நிறுத்து.* 2. தடை செய்தல்; to hinder, prevent.

[கட்டை + போடு-. கட்டை = மரக்கட்டை.]

கட்டைபோடு[2]-தல் *kaṭṭai-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. மயக்கமடைதல்; to faint or swoon from any cause. 2. சாதல்; to die. நலமாக இருந்தவர் கட்டையைப் போட்டு விட்டார் (உ.வ.).

[கட்டை + போடு. கட்டை = மரக்கட்டை போன்ற (உயிர்பிரிந்த) உடல்.]

கட்டைபோடு[3]-தல் *kaṭṭai-pōḍu-,* 20 செ.குன்றாவி. (v.i.) திண்டுக்கட்டை (திமிசு) யால் இடித்துத் தரையைக் கெட்டிப்படுத்துதல்; to tamp loose earth to consolidate the subgrade for road.புதிய வீட்டுத்தரைக்குக் கட்டை போடுகிறார்கள் (உ.வ.).

[கட்டை + போடு-.]

கட்டைமட்டம் *kaṭṭai-maṭṭam,* பெ.(n.) மேற்கூரை அமையும் சுவரின் மேல்மட்டம்; the upper part of a wall on which the roof rests.

[கட்டை + மட்டம். கட்டை = சுவர்.]

கட்டைமண் *kaṭṭai-maṇ*, பெ.(n.) சிறு மண்சுவர்; small mud-wall. *'நீ கட்டை மண்ணாய்ப் போவாய்'. (நெல்லை.)*

[கட்டை + மண். மண் - மண்ணாலாகி சுவர்.]

கட்டைமண்குட்டிச்சுவர் *kaṭṭai-maṇ-kuṭṭi-c-cuvar*, பெ.(n.) மேற்கூரையின்றிச் பழுதடைந்து நிறைவுறாமல் நிற்குஞ் சுவர்; roofless ruined small mud-wall.

[கட்டை + மண் + குட்டிச்சுவர். கட்டைமண் - கட்டைச்சுவர், சிறுசுவர். குட்டிச்சுவர் - இடிந்த சிறுசுவர், பாழ்மனை.]

கட்டைமாடு *kaṭṭai-māḍu*, பெ.(n.) கொம்பு மழித்த காளை; hornless bull.

மறுவ. மொட்டை மாடு

[குட்டை → கட்டை + மாடு. கட்டை - தேய்ந்த,குறைந்த.]

கட்டைமுடி *kaṭṭai-muḍi*, பெ.(n.) கூரையின் அடிப்பாகத்தில் பரப்பி வேய்வதற்காகக் கம்பந்தட்டின் அல்லது புற்கட்டின் நுனிப்பகுதி வெட்டப்பட்ட சிறு கட்டு; top chopped plants of kambu or maize sprsad as plants for bottom layer of roof.

[கட்டை + முடி.]

கட்டைமுறுக்கி *kaṭṭai-muṟukki*, பெ.(n.) கயிறு திரிக்கப் பயன்படும் துளையிட்ட கட்டை; holed drilled wooden planks with holes used in twisting ropes.

ம. கட்டமுறுக்கி

[கட்டை + முறுக்கி.]

கட்டையஞ்சீலா *kaṭṭai-yañjīlā*, பெ.(n.) சீலா வகையைச் சேர்ந்த மீன் (இராம. மீனவ.); a kind of šīlā fish.

[கட்டை + அம் + சீலா.]

கட்டையடி[1]-த்தல் *kaṭṭai-y-aḍi-*, 4 செ.குன்றாவி. (v.i.) 1. முளை அடித்தல்; to drive a wooden peg into the ground to hold an animal. 2. பலாக்காய் பழுப்ப தற்காக வேப்பமுளையை ஆப்பாக அடித்தல் (வின்.); to drive a wooden wedge into a plucked jack-fruit to ripen it. 3. கால்மிதியால் கெட்டிப் படுத்தப்பட்ட உப்பளத் தளத்தைக் கனமான மரக்கட்டை கொண்டு அடித்து இறுகும்படிச் செய்தல்; to ram,beat the loose floor of salt pan to solidify.

[கட்டை + அடி-.]

கட்டையடி[2]-த்தல் *kaṭṭai-y-aḍi-*, 4 செ.கு.வி.(v.i.) காலிற் கட்டை இடறுதல்; to hurt one's foot against a stump.

[கட்டை + அடி-.]

கட்டையரி *kaṭṭai-y-ari*, பெ.(n.) மூங்கிலரிசி; bamboo seed.

ம. கட்டயரி

[கட்டை + அரி. கட்டை - தடிப்பு. அரி - அரிசி.]

கட்டையவிழ்[1]-த்தல் *kaṭṭai-y-aviḻ-*, 4 செ.குன்றாவி. (v.i.) பொய் கூறத் தொடங்குதல்; to begin to spin a yarn; to commence uttering false stories.

[கட்டு → கட்டை + அவிழ்-. கட்டு - மூட்டை.]

கட்டையவிழ்[2]-த்தல் *kaṭṭai-y-aviḻ*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. சோற்று மூட்டையை அவிழ்த்தல்; to open the food packet. 2. கமுக்கச்செய்தியினை வெளிப்படுத்தல்; to expose secret matters. 3. கட்டுப்பாட்டைத் தளரவிடுதல்; to loose as of control. வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது (உ.வ.).

[கட்டை + அவிழ்-.]

கட்டையன்[1] *kaṭṭaiyaṉ*, பெ.(n.) குள்ளன்; short person. கட்டையன் வந்தானா?(உ.வ.).

ம. கட்டயன்; குற. கட்டயா.

[குட்டை → கட்டை + அன்.]

கட்டையன்[2] *kaṭṭaiyaṉ*, பெ.(n.) சம்பா நெல்வகை; a kind of samba paddy. *"மட்டுப் படாத குறுவைக் கிளையான் கட்டையன்" (நெல்விடு.180).*

ம. கட்டயன்

மறுவ. கட்டைச்சம்பா

[குட்டை → கட்டை → கட்டையன்.]

கட்டையாடு *kaṭṭai-y-āḍu,* பெ.(n.) பள்ளையாடு; a species of dwarf goat.

[குட்டை → கட்டை + ஆடு.]

கட்டையிலடி-த்தல் *kaṭṭai-y-il-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) தண்டனையாக இருகைகளுக்கும் தலைக்கும் தனித்தனி துளையுள்ள கட்டையில் ஒருவனை மாட்டுதல் (இ.வ.); to be put in stocks.

[கட்டையில் + அடி-.]

கட்டையிலேகிட-த்தல் *kaṭṭaiyilē-iḍa-,* 3 செ.கு.வி. (v.i.) இறத்தல்; to suffer death. *கட்டையிலே கிடக்குமட்டும் கவலைதானே (சா.அக.).*

[கட்டையில் + கிட-. கட்டை - பாடை.]

கட்டையிலை *kaṭṭai-y-ilai,* பெ.(n.) ஏடாக நறுக்கிய அடி வாழையிலை (இ.வ.); portion of the plantain leaf cut across near the stem, for use as a plate.

[குட்டை → கட்டை + இலை.]

கட்டையிழைப்புளி *kaṭṭai-y-iḻaippuḷi,* பெ.(n.) மரத்தை இழைப்பதற்குரியத் தச்சுக்கருவிகளில் சிறியது; small smoothing plane.

[கட்டை + இழைப்பு + உளி.]

கட்டைவண்டி *kaṭṭai-vaṇḍi,* பெ.(n.) 1. சுமை ஏற்றும் மாட்டுவண்டி; a bullock-cart.. 2. வில் இல்லாத வண்டி; springless country cart.

மறுவ. கட்டைச்சகடு

ம. கட்டவண்டி; பட. கட்டெ புண்டி.

[கட்டை + வண்டி. கட்டை - மரக்கட்டை.]



கட்டை வண்டி

கட்டைவலை *kaṭṭai-valai,* பெ.(n.) மிதப்புக் கட்டைகள் பிணைத்துக் கட்டப்பட்டட மீன்பிடி வலை (தஞ்சை மீனவ.); a fishing net with the floating wooden blocks tied in proper places.

[கட்டை + வலை. கட்டை - மிதப்புக்கட்டை.]

கட்டைவலை² *kaṭṭai-valai,* பெ.(n.) சிறுவலை (தஞ்சை மீனவ.); small fishing net.

[கட்டை (குட்டை, சிறிய) + வலை.]

கட்டைவாக்கு *kaṭṭai-vākku,* பெ.(n.) ஒன்பான் மணிகளின் மங்கலொளி; dimness in gems.

[கட்டை + வாக்கு. வாகு → வாக்கு - பக்கம். குட்டை → கட்டை - குறைவு, மங்கல். கட்டைவாக்கு - பளபளப்பு மழுங்கிய பக்கம்.]

கட்டைவிரல் *kaṭṭai-viral,* பெ.(n.) 1. கைப் பெருவிரல்; thumb. 2. கால்பெருவிரல்; great toe.

மறுவ. பெருவிரல்

[கட்டை +விரல். விரி → விரல்.]



கட்டை விரல்

கட்டைவிழு-தல் *kaṭṭai-viḻu-,* 2 செ.கு.வி.(v.i.) வடிவுபெறாத கருச்சிதைந்து விழுதல்; to suffer abortion of unformed foetus.

[கட்டை + விழு-. கட்டை - உயிரற்ற உடல்.]

கட்டைவிளக்குமாறு *kaṭṭai-viḷakkumāṟu,* பெ.(n.) தேய்ந்து போன துடைப்பம்; short or worn out broom.

[குட்டை → கட்டை + விளக்குமாறு.]

கட்டைவெள்ளி *kaṭṭai-veḷḷi,* பெ.(n.) மட்டவெள்ளி; inferior or impure silver.

[கட்டை + வெள்ளி. கட்டை - சிறியது, தாழ்ந்தது தரக்குறைவானது.]

கட்டைவெள்ளை *kaṭṭai-veḷḷai,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[கட்டை + வெள்ளை. கட்டை - தடிப்பு.]

கட்டைவைக்கை *kaṭṭai-vaikkai,* பெ.(n.) 1. கொக்கான் விளையாட்டு (யாழ்ப்.); collecting the pebbles in a game of jackstones, a kindergarten game with cubes(J). 2. ஈற்றெழுத்துச் செய்யுள் பாடுதலில் வெல்லுகை; winning in the game of composing poems with particular last letters.

[கட்டை + வைக்கை. கட்டைவைத்தல் - திறன்காட்டுதல் பொருளில் விரிந்தது.]

கட்டைவைத்தல் *kaṭṭai-vaittal,* தொ.பெ(vbl.n.) சிறுவரின் குச்சி விளையாட்டு; a kind of children's game.

மறுவ. கிள்ளான் வைத்தல், கிச்சு கிச்சுத்தம்பலம்.

[கட்டை + வைத்தல். - மணலுள் சிறு குச்சி அல்லது மரச் சிம்பு ஒளிய வைத்து இருகைவிரல் எதிரெதிர் பிணைத்துக் குச்சி அகப்படுமா எனக் குறிப்பிட்ட இடத்தை உட்கவிந்த கையால் மூடிக் கிண்டிப்பார்த்தல்.]

கட்டோசை *kaṭṭōšai,* பெ.(n.) பேரொலி; loud report tremendous noise.

[கடு → கட்டு + ஓசை. கட்டு - செறிவு, மிகுதி.]

கட்டோடு *kaṭṭōḍu,* வி.அ. (adv.) முழுவதும்; utterly, absolutely, used with words implying negative sense.

மறுவ. கூண்டோடு

[கட்டு + ஒடு. கட்டு - முழுவதும்.]

கட்டோர் *kaṭṭōr,* பெ.(n.) கள்ளர் (பிங்.); thieves, robbers.

[கள் → கடு → கட்டோர். ஒ.நோ. தள் → தடு→தட்டோர் (தடுத்தோர், அணைகட்டியோர்) எனத் திரிந்தாற்போன்று கள் → கடு → கட்டோர் எனத் திரிந்ததாகல் வேண்டும். களவாடுதல் பொருளில் வழங்கிய 'கடு' வினைச்சொல் பண்டே வழக்கற்றது.]

கட்படாம் *kaṭ-paḍām,* பெ.(n.) யானையின் முகத்தணியும் அழகுதுணி; ornamental fillet or frontlet for blindfolding an elephant. *"கடா அக் களிற்றின்மேல் கட்படாம்"* (குறள்: 1087).

[கண் + படாம். படாம் - துணி.]

கட்பலம் *kaṭpalam,* பெ.(n.) 1. தேக்கு (மலை.); teak. 2. தான்றி (மலை.); belleric myrobalan.

[கள் + பலம். கள் - திரட்சி, வலிமை.]

கட்பலா *kaṭpalā,* பெ.(n.) காட்டுப் பலா; jungle jack (சா.அக.).

[காட்டுப்பலா → கட்பலா.]

கட்பவர் *kaṭpavar,* பெ.(n.) களைபவர்; cutter, remover. *"வரிவரால் பிறழ்வயற் குவளை கட்பவர்" (சீவக.1249).*

[கள் + ப் + அவர் – கட்பவர். வெட்டுவோர், களைபறிப்பவர், திருடுவோர். 'ப்' எதிர்கால இடைநிலை.]

கட்பனி *kaṭpaṉi,* பெ.(n.) கண்ணீர்த்துளி; tear drop.

[கண் + பனி.]

கட்பு *kaṭpu,* பெ.(n.) 1. களைபறிக்கை; weeding. *"கரும்பின் எந்திரம் கட்பி னோதை" (மதுரைக். 258).* 2. திருட்டு; theft.

தெ. கலுபு

[கள் + பு – கட்பு. பு. சொல்லாக்க ஈறு. கள்-நீக்கு, வெட்டு. கட்பு - நீக்குதல், பறித்தல்.]

கட்புலம் *kaṭ-pulam,* பெ.(n.) 1. பார்வை; sight, vision. *"கடவுட் கோலங் கட்புலம் புக்கபின்" (சிலப்.30:2).* 2. கண் என்னும் பொறி; sense of sight.

[கண் + புலம்.]

கட்புலன் *kaṭ-pulaṉ,* பெ.(n.) கண்; eye. *"கட்புலன் கதுவா துயர்ந்து பின்னே வருங்காண்" (நைடத. அன்னத்தைத் தூது.38).*

[கண் + புலன். புலம் → புலன்.]

கட்போன் *kaṭpōṉ,* பெ.(n.) திருட்டுத் தொழில் செய்பவன்; thief. *"கட்போ ருளரெனிற் கடுப்ப" (சிலப். 5:115).*

[கள் + பு – கட்பு + (ஆன்) ஒன்.]

கட—த்தல் *kaḍa-,* 3 செ.கு.வி.(v.i.) 1. கடந்து போதல். to pass through; to traverse, cross, as a river, a

country. *"கடக்கருங் கானத்து"* (நாலடி. 398). 2. தாவுதல் (திவா.); to jump over, step over. 3. மேற்படுதல்; to exceed, excel, surpass, transcend. *"கரும்பையும் கடந்த சொல்லாள்" (கம்பரா. கிட்கிந்தா. நாடவிட்.36).* 4. மீறுதல்; to transgress, disobey, contravene, violate, as a rule, a command, a custom. *"கவராக் கேள்வியோர் கடவா ராகலின்" (மணிமே.1:10).* 5. அளத்தல்; to measure. *"இருநிலங் கடந்த திருமறு மார்பின் முந்நீர் வண்ணன் பிறங்கடை" (பெரும்பாண்.29).* 6. நீங்குதல்; to keep clear of, get away from, escape from, as the world, the sea of births. *"நேசத்தால் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை, ஆண்டானே" (திருவா.5:24).* 7. நேரே பொருதல்; to openly resist. "சிலம்பிற் சிலம்பிசை ஒவாது ஒன்னார்க் கடந்தட்டான் கேழிருங் குன்று *(பரிபா.15:45).* 8. வெல்லுதல்; to win, overcome, conquer, vanquish. *"பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர் ஆராச் செருவின் ஐவர் போல" (பெரும்பாண்.416,17.)* 9. அழித்தல்; to destroy. *"வெப்புடைய வரண்கடந்து துப்புறுவர்" (புறநா.11:8).*

ம. கடக்க; **தெ.** கடட்சு; **கோத.** கர்வ்; **துட.** கட்; **பட.** கடெ; **து.** கடபுனி; **Russ:** kod.

[கள் → கட. கள் = வெட்டு, பிரி, நீக்கு.]

கடக்கம்[1] *kaḍakkam,* பெ.(n.) பேரரசன் இராசேந்திரன் வென்ற இடங்களில் ஒன்று; a place conquered by Rajendran-I. *"நண்ணற் கருமுரண் மண்ணை கடக்கமும்" (மெய்க்கீர்த்தி).*

கடக்கம்[2] *kaḍakkam,* பெ.(n.) நாகப்பட்டினம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Nagappattinam district.

[கடகம் → கடக்கம். கடகம்=வளையம், வட்டம், வட்டாரம், எல்லை வகுக்கப்பட்ட தனியூர்.]

கருநாடகத்தில் கடக்கம் என்ற ஊர் கடக் என்று குறுகியுள்ளது. பேச்சுவழக்கில் கதக் என்றும் அழைக்கப்படுகிறது.

கடக்கல் *kaḍakkal,* தொ.பெ.(vbl.n.) கடந்து போதல்; to pass through. *"கண்டவர் கடக்க லாற்றா" (சீவக. 1047).*

[கட → கடக்க + அல். அல் – தொ. பெ. ஈறு.]

கடக்கை[1] *kaḍakkai,* பெ.(n.) இசைக்கருவி வகை; a kind of musical instrument. *"இடக்கை கடக்கை மணிக்காளம்"(சேக்கிழார் பு. 73).*

[குடம் → கடம் + கை.]

கடக்கை[2] *kaḍakkai,* பெ.(n.) ஒன்றுபட்ட சேர்க்கை நிலம்; adjacent pieces of land. *'இந்நிலம் ஒருமா வரையம், இதனோடேய் விலை கொண்டுடைய பதினைந்து குழியும் ஆக இவ்விரண்டு கடக்கை நிலத்தாலும்' (கல்வெட்டு).*

[கட → கடக்கை. கட=மீறுதல், அதிகமாதல், ஒருங்கே இருத்தல்.]

கடக்கோட்டி *kaḍakkōṭṭi,* பெ.(n.) 1. தும்பை; bitter-lucas. 2. கவிழ்தும்பை; stooping plant (சா.அக.).

[கடைக்கோடி → கடக்கோடி → கடக்கோட்டி .]

கடகக்குடி *kaḍagakkuḍi,* பெ.(n.) திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Tiruvarur district.

*[கடகம் + குடி – கடகக்குடி. **கடகம்** பார்க்க; see kaḍagam.]*

கடகக்கை *kaḍaga-k-kai*, பெ.(n.) சிற்பங்களின் கை அமைப்பு முறைகளில் ஒன்று; a hand and finger position in sculpture works.

[கடகம் + கை. கடகம் = நண்டு.]

கடகக்கை என்பது பெருவிரல் நுனியுஞ் சுட்டு விரல் நுனியும் பொருந்த வளைந்து நக நுனியைப் பொருத்தி நிற்ப மற்றைய மூன்று விரல்களும் நிமிர்ந்து நிற்கும். கைகளில் கயிறு (பாசம்), அங்குசம், தண்டம், அம்பு போன்ற கருவிகள் பிடிக்க

ஏற்ற நிலை. புறத்தோற்றம் நண்டின் வடிவில் உள்ளதால் கடகக்கை என்றாயிற்று.



கடகக்கை

கடகட—த்தல் *kaḍa-kaḍa-*, 3 செ.கு.வி.(v.i.) 1. நெகிழ் வடைதல்; to become loose, as teeth. பல்லெல்லாங் கடகடத்துப் போயிற்று(உ.வ.). 2. ஆட்டங்கொடுத்தல்; to rattle, as a pin in a Jewel. கொலுசுத் திருகாணி கடகடத்திருக்கிறது (உ.வ.).

பட. கடகட

[கட + கட.]

கடகடப்பு *kaḍa-kaḍappu*, பெ.(n.) ஒலியோடு அசைகை; clatter, rattling, rumbling, clicking.

[கட + கடப்பு.]

கடகடப்பை *kaḍakaḍappai*, பெ.(n.) வயிற்றிரைச்சல்; rumbling noise in the stomach (சா.அக.).

[கடகட → கடகடப்பை.]

கடகடவெனல் *kaḍakaḍa-v-eṉal*, பெ.(n.) 1. ஒலிக் குறிப்பு (திவா.); clattering, rattling, rumbling, clicking. 2. விரைவுக்குறிப்பு; sounding rapidly, expr. signifying rapidity. கடகடவென்று பாடம் ஒப்பித்தான்(உ.வ.).

க. கடகடிசு

[கடகட + எனல். கடகட – ஈரடுக்கு ஒலிக்குறிப்பு.]

கடகண்டு *kaḍa-kaṇḍu*, பெ.(n.) ஒரு பழைய நாடக நூல் (தொல்.பொருள். 492 உரை); an ancient treatise on dancing.

[கட + கண்டு.]

கடகத்தண்டு *kaḍaka-t-taṇḍu*, பெ.(n.) பல்லக்கு (சிவிகை) (சிலப்.14: 126, உரை); palanquin.

[கடகம் + தண்டு. கடகம் = ஓலை, ஓலைப்பெட்டி. ஓலைப்பெட்டி வடிவிலமைந்த மூடாப்புக் கொண்டதும் தூக்குதற்கான தண்டோடு இணைந்ததுமான பல்லக்கு.]

கடகத்தூர் *kaḍagattūr*, பெ.(n.) தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Dharmapuri district.

[கடகம் + அத்து + ஊர் – கடகத்தூர், கடகம்- தன்னாட்சி பெற்ற தனியூர்.]

மராட்டியத்தில் முற்காலத்தில் தானிய கடகம், மண்ணிக் கடகம் போன்ற ஊர்கள் இருந்தன. இங்குப் பல போர்கள் நடந்துள்ளன. மண்ணிக்கடகம் இன்று 'மான்கெட்' என்று திரிந்துள்ளது.

கடகநல்லூர் *kaḍaga-nallūr*, பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Thiruvallur district.

[கடகம் + நல்லூர் – கடகநல்லூர். கடகம்- தன்னாட்சி பெற்ற தனியூர்.]

கடகநாதன் *kaḍaga-nāḍaṉ*, பெ.(n.) படைத்தலைவன்; chief of army. *"கடக நாதனுட னணிந்து திருந்தனன்" (பாரத. இரண்டாம்.6).*

[கடகம் + நாதன். கடகம் = படை.]

கடகம்[1] *kaḍagam*, பெ.(n.) 1. பனைமரத்தின் அகணியால் முடையப்பட்ட பெரிய பெட்டி (புறநா.33 உரை); large tray made of upper rind of the palmyra frond. 2. கெண்டி (வின்.); vessel with a kind of spout. 3. பாய்; straw-mat.

ம. கடவம்

[குள் → குண் → குணம் → குடம் = வளைவு, உருண்ட கலம், சக்கரக்குறடு. குடந்தம் = வளைவு, வணக்கம். குடக்கு → குடக்கி = வளைவானது. (குடகம்) → கடகம் = வட்டமான பெரு நார்ப்பெட்டி (வமொ.வ.6).]

கடகம்[2] *kaḍagam*, பெ.(n.) 1. கங்கணம்; bracelet, armlet. *"கடகம் செறிந்த கையை"* (மணிமே.6:114). 2. வளையல்; bangles. 3. அரைஞாண்; a girdle or zone 4. கேடயம் (திவா.); shield. 5. வட்டம் (பிங்.); circle, ring wheel. 6. பெருவிரலுஞ் சுட்டுவிரலும் வளைந்து ஒன்றோடொன்று உகிர் கவ்வ மற்றை மூன்று விரல்களும் நிமிர்ந்துநிற்கும் இணையா வினைக்கை (சிலப்.3:18, உரை.); (natya) a gesture with one hand in which the tips of the thumb and of the forefinger are joined together and the other three fingers are held upright. 7. படை (பிங்.); army. *"கடக நாதனுட னணிந்து நின்றனன் களத்திலே"*

(பாரத. இரண்டாம். 6). 8. படைவீடு (அக.நி.); cantonment, military camp. 9. மதில் (பிங்.); fortified wall. 10. மதில் சூழ்ந்த ஒட்டரநாட்டுத் தலைநகர் (தமிழ்நா. 223.); Cuttack, the capital of Orissa. 11. மலை; mountain (சா.அக.). 12. மலைப்பக்கம் (பிங்.); mountainside, ridge of a hill. 13. பள்ளத் தாக்கு; a valley. 14. ஓர் ஆறு (பிங்.); a river. 15. தலை நகரம்; a royal capital or metropolis. 16. வாழ்விடம், வீடு; a house or dwelling. 17. தேற்றாங்கொட்டை; water cleaning nut. 18. கண்ணாடி ஏனம்; glass tray. (சா.அக.).

ம. கடகம்; **க.** கடக; **Skt.** kataka.

[குடா = வளைவு. குடங்குதல் = வளைதல். குடந்தம் = வணக்கம். குட → குடம் → (குடகம்) → கடகம் = வளையல், தோள்வளை, வட்டம், வட்டமான பெருநார்ப்பெட்டி, நகர் சூழ்ந்தமதில், மதில் சூழ்ந்த ஒட்டர நாட்டுத் தலைநகர் (வ.மொ.வ. 102,103).]

கடகம்[3] *kaḍagam,* பெ. (n.) 1. கடக ஓரை (பிங்.); cancer, a sign of the zodiac. 2. நண்டு; crab. 3. நான்காம் மாதம் (ஆடி); the fourth Tamil month.

ம. கடகம்; **Skt.** kataka; **Malay.** ketam.

[குட → குடம் → (குடகம்) → கடகம் = வளைந்தது, வட்டமானது, நண்டு.]

கடகம்[4] *kaḍagam,* பெ.(n.) 1. யானைத்திரள் (பிங்.); troop of elephants. *"கடக முள்வயிற் காட்டிய கூடங்கள்" (தணிகைப்பு. 32.)* 2. ஓர் எண் (பிங்.); a number.

[கள் → கடகு → கடகம். கள் = திரட்சி, குழு, கூட்டம், மந்தை.]

கடகம்[5] *kaḍagam,* பெ.(n.) குள்ளநரி; a jackal.

ம. கடகம்.

[குடகம் → கடகம் = வளைவு, சூழ்ச்சி, ஏமாற்றுந்திறன்.]

கடகம்[6] *kaḍagam,* பெ.(n.) 1. பூவாது காய்க்கும் மரம்; any tree yielding fruits without apparent flowers. 2. அத்திமரம்; a fig tree (சா.அக.).

[குடகம் → கடகம். கடகம் = உட்துளையுள்ளது.]

கடகம்[7] *kaḍagam,* பெ.(n.) திருவாரூர் மாவட்டத்தில் உள்ள சிற்றூர்; a village in Tiruvarur district.

[குடகம் → கடகம் = வளையம், வட்டம், வட்டாரம், எல்லை வகுக்கப்பட்ட தனியூர், தன்னாட்சி வழங்கப்பட்ட ஊர்.]

கடகம்[8] *kaḍagam,* பெ.(n.) தன்னாட்சி பெற்ற தனியூர்; self governed town or village

மறுவ. தனியூர்

[கடகம் = வளையம், வட்டம், வட்டாரம், எல்லை, எல்லை வகுக்கப்பட்ட தனியூர், தன்னாட்சி வழங்கப்பட்ட ஊர்.]

கடகல் *kaḍakal,* பெ.(n.) கடவைப் புல்; a kind of grass growing in water-logged areas.

ம. கடகல், கடவப்புல்லு.

[கடம் → கடவம் → கடகம் → கடகல். கடம் = பாலை.]

கடகவிணைக்கை *kaḍaga-viṇaikkai,* பெ.(n.) இரண்டு கையும் கடகமாய் மணிக்கட்டுக்கு ஏற இயைந்து நிற்கும் இணைக்கை (சிலப். 3:18 உரை); a gesture in dancing in which the wrists of both the hands in kadagam gusture are brought close together.

[கடகம் + இணை + கை.]

கடகன் *kaḍagaṉ,* பெ.(n.) 1. செயலைக் கூட்டி வைப்பவன்; தேர்ந்தவன் (திவ். திருப்பா.அவ. ப. 18); agent, commissioner, middleman, 2. வல்லவன்; a well-versed, proficient person. *அவன் எல்லாச் செயல்களிலும் கடகன்.* 3. மணமுடிப்போன்; match maker; negotiator of matrimonial alliances.

*[கடத்தல் = மிஞ்சுதல், தேர்தல், வெல்லுதல். கட → கடகன் = கடந்தவன், தேர்ந்தவன். த. கடகம் > **Skt.** ghaṭaka. (வ.மொ.வ.103).]*

கடகால் *kaḍakāl,* பெ.(n.) நீரிறைக்கும் வாளி; நீர்ச்சால் (இராம.); bucket, cylindrical bucket.

[கடையால் → கடகால்.]

கடகி *kaḍagi,* பெ.(n.) மனை; house.

[கடகம்[2] → கடகி.]

கடகிகம் *kaḍagigam,* பெ.(n.) பெருந்தும்பை; a big variety toombay. (சா.அக.).

[கடகு → கடகிகம்.]

கடகு *kaḍgu,* பெ.(n.) 1. கேடகம் (சீவக.2218, உரை); shield. 2. காப்ப-வன்-வள்-து; protector. *"அவனைக் கடகாகக் கொண்டு" (ஸ்ரீவசன.245).*

[கடகம் → கடகு. கடகம் = வளைவு, வட்டம்.]

கடங்கனேரி *kaḍaṅganēri*, பெ.(n.) திருநெல்வேலி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thirunelveli district.

[கடங்கன் + ஏரி – கடங்கனேரி. கடங்கன் என்பவன் பெயரிலமைந்த சிற்றூர்.]

கடசம் *kaḍašam*, பெ.(n.) கங்கணம்; bracelet, wristlet.

[கடகம் → கடசம்.]

கடசியம் *kaḍašiyam*, பெ.(n.) சிறிய துலைத்தட்டு; pan of a small balance.

[கடகம் → கடசியம். கடகம் = அளவு.]

கடத்தல்[1] *kaḍattal*, தொ.பெ.(vbl.n.) 1. பொருள்களை ஓரிடத்தினின்று மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்லல்; ferrying, carrying across. 2. திருட்டுத் தனமாகப் பொருள்களைக் கொண்டு செல்லல்; smuggling. 3. ஆளைக் கடத்துதல்; kid-napping. 4. தாண்டுதல்; passing. *"அண்டமுங் கடந்தான்"* (கந்தபு.நகர.87). 5. நடத்தல்; walk. 6. வெல்லுதல்; winning. *"வடமீனுக் கடக்கும்" (திருக்கோ. 305).*

ம. கடத்தல்

[கட → கடத்தல்.]

கடத்தல்[2] *kaḍattal*, பெ.(n.) ஒரோசையான தன்மை நீங்கிப் பலவோசையாக வரும் இசைக்குற்றம் (திருவாலவா.57:26); defect in singing, flaw of changing from one note to many.

[கட → கடத்தல்.]

கடத்தல்காரன் *kaḍattal-kāraṉ*, பெ.(n.) 1. திருட்டுத்தனமாகப் பொருள்களைக் கொண்டு செல்பவன்; smuggler. 2. ஆளைக் கடத்துபவன் kid-napper. 3. சுமை தூக்குபவன்; porter.

[கடத்தல் + காரன்.]

கடத்தி[1] *kaḍatti*, பெ.(n.) மின்சாரம், வெப்பம் போன்றன ஒரு முனையிலிருந்து மறுமுனைக் குச்செல்லப் பயன்படும் ஊடகம்; conductor, that which transmits electricity to heat etc. from one end to the another end by contact. செம்பு ஓர் எளிதில் கடத்தி (உ.வ.).

[கட → கடத்து → கடத்தி.]

கடத்தி[2] *kaḍati*, பெ.(n.) கடமை, புள்ளியில்லாத மான் வகை; a spotless deer.

[கடம் → கடத்தி. கடம் = காடு. கடத்தி = காட்டில் வாழ்வது. பாலைக்காடுகளில் வாழ்வது.]

கடத்திமுட்டம் *kaḍatti-muṭṭam*, பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village belongs to Dharmapuri district.

[கடம் +அத்து + முட்டம் – கடத்திமுட்டம் > கூடகடத்தி முட்லு.]

கடம் = பாலைநிலம், வறண்ட புன்செய்நிலம். முட்டம் = ஈடுகட்டித்தரப்பட்ட உழுநிலம், அந்நிலம் சார்ந்த ஊர்.

கடத்து[1]**–தல்** *kaḍattu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. செலுத்துதல்; to cause to go; to drive. 2. கடப்பித்தல்; to transport, carry across. *"அடியார் பவக்கடலைக் கடத்துமணியை" (திருப்போ. சந்த பிள்ளைக் காப்பு.6.)* 3. காலம் போக்குதல்; to pass, as time. இளமையில் கல்லாமல் நாளைக் கடத்தி விட்டான் (உ.வ.). 4. குழப்புதல்; to do carelessly, as work; to dawdle. அவன் வேலையைக் கடத்துகிறான் (உ.வ.). 5. வானூர்தி முதலிய வற்றை அச்சுறுத்திக், கொண்டு செல்லுதல்; hijack. 6. தடைசெய்யப்பட்ட பொருள்களை–ஆள்களை இசைவின்றிக் கொண்டு போதல்; kidnap, smuggle. போதைப் பொருள்களைக் கடத்துதல் சட்ட மீறலாகும் (உ.வ.). 7. விலக்குதல்; to remove.

க. கடெகாயிசு; ம. கடத்துக; தெ. கடபு, கடுபு; து. கடபாவுனி; கோத., துட. கட்த்; பட. கடுசு. கசபா. கய்த்தி.

[கட → கடத்து-.]

கடத்து[2] *kaḍattu*, பெ.(n.) தோணி; boat.

ம. கடத்து; க. கட (படகு.)

[கட → கடத்து.]

கடத்துக்கூலி *kaḍattu-k-kūli*, பெ.(n.) தோணி அல்லது படகு செலுத்தக் கொடுக்கும் கூலி; ferriage.

[கடத்து +கூலி.]

கடத்துத்தோணி *kaḍattu-t-tōṇi*, பெ.(n.) படகு; a ferry boat.

மறுவ. கடத்து

ம. கடத்துதோணி.

[கடத்து + தோணி.]

கடத்துரு *kaḍat-turu,* பெ.(n.) 1. கத்தூரிமான்; musk deer. 2. மான்மணத்தி (கத்தூரி) என்னும் நறுமணப்பொருள்; secretion from the navel of muskdeer.

[கடம் + அத்து + துரு → கடத்துரு. கடம் = பாலைநிலம், வெற்றுநிலம். துரு = செம்மறியாடு. கடத்துரு = செம்மறியாடுபோன்ற காட்டுமான். கடத்துரு → கத்துரு → கத்தூரி (kasturi) எனத் திரிந்தது.]

கடத்தூர் *kaḍattūr,* பெ.(n.) கோயம்புத்தூர் மாவட்டத்துச் சிற்றூர்; village name in Coimbatore district.

[கடம் +அத்து + ஊர் –கடத்தூர். கடம் = பாலைநிலம், வறட்சி மிகுந்த நிலப்பகுதி.ஈரோடு, தருமபுரிமாவட்டத்திலும் இவ்வூர் உள்ளது.]

கடதீபம் *kaḍa-tībam,* பெ.(n.) பூசையின்போது பயன்படுத்தும் 16 வகைப் பூசைக் கருவிகளுள் ஒன்று; குடவிளக்கு; lamp fixed on a brass pot and waved before an idol during puja time, which is one of the 16 items.

[குடம் + தீபம் – குடதீபம் → கடதீபம். (கொ.வ.)]

கடந்த *kaḍanda,* பெ.எ.(adj.) கழிந்த; past, last. கடந்த கால வாழ்க்கையை எண்ணி நடந்துகொள் (உ.வ.).

[கட → கடந்த (இ.கா.பெ.எ).]

கடந்தகாலம் *kaḍanda-kālam,* பெ.(n.) இறந்த காலம்; past period.

[கடந்த (இ.கா.பெ.எ) + காலம்.]

கடந்தவன் *kaḍandavaṉ,* பெ.(n.) 1. எல்லையைக் கடந்தவன்; one who transgresses a limit. 2. **கடவுள்** பார்க்க; see *kaḍavuḷ.*

[கட → கடந்தவன்.]

கடந்தவெண்ணம் *kaḍanda-v-eṇṇam,* பெ.(n.) முதிர்ச்சியான எண்ணம்; mature thought.

[கடந்த + எண்ணம்.]

கடந்தேறு–தல் *kaḍandēṟu-,* 10 செ.கு.வி.(v.i.) 1. கடந்துபோதல்; to pass through, traverse. *"இருதா ளளவெனக் கடந்தேறும்" (கம்பரா. யுத்த. இராணிய. 3).* 2. இடையூறு கடத்தல் (வின்.); to be saved; to overcome obstactles; to get over difficulties. 3. நற்பேறு அடைதல் (வின்.); to rise to a higher plane as in spiritualism.

[கடந்து + ஏறு-.]

கடந்தை[1] *kaḍantai,* பெ.(n.) 1. பெருந்தேனீ; a kind of bee. 2. குளவிவகை; a kind of wasp.

ம. கடன்னல், கடந்த; **க.** கடந்துறு, கடந்துறுதெ; **தெ.** கடுதுறு, கணுதுறு, கடகு, கணகு; **துட.** கொட்டத்; **குட.** கடந்தி; **து.** கணசட புரி; **கொலா.** தாந்தில் பொத்தே; **கோண்.** கந்தேல்; **குவி.** க்ராந்தி; **Skt.** kanaba; **Pkt.** gandalli; **Mar.**gadil.

[கடு → கடந்தை.]

கடந்தை[2] *kaḍandai,* பெ.(n.) திருப்பெண்ணாகடம்; name of a village Thiruppenakadam. *"கடந்தைநகர் வணிகர்" (திருத்தொண்டர் புராணசார.49).* *[கடம் → கடந்தை.]*

கடப்படி *kaḍa-p-paḍi,* பெ.(n.) வாயில் (யாழ்ப்.); door way.

[கடவு + படி – கடவுப்படி → கடப்படி.]

கடப்படு–தல் *kaḍa-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) நிறைவேறுதல் (ரகஸ்ய.782); to be accomplished.

[கடு = மிகுதி, நிறைவு. கடு → கட + படு–].

கடப்பந்தாங்கல் *kaṭappantāṅgal,* பெ.(n.) திருவண்ணாமலை, திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள சிற்றூர்; village name in Thiruvannamalai district and Thiruvallur district.

[கடப்பன் + தங்கல் – கடப்பந்தாங்கல்.]

கடப்பநந்தல் *kaṭappanantal,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram district.

[கடப்பன் + ஏந்தல்–கடப்பனேந்தல்→ கடப்பநந்தல் (கொ.வ.) ஏந்தல் = ஏரி, ஏரியைச் சார்ந்த ஊர்.]

கடப்பநெல் *kaḍappa-nel,* பெ.(n.) 1. மூன்று மாதத்தில் விளையும் கருங்குறுவை நெல் (யாழ்ப்.); a kind of

dark paddy, maturing in three months. 2. நான்கு மாதத்தில் விளையும் குறுவை நெல் வகை (G.D.94); a species of kuruvai paddy, maturing in four months.

மறுவ. கடப்பு

[கடு → கடுப்பு → கடப்பு + நெல் – கடப்பநெல். கடுப்பு = விரைவு, குறுகிய காலத்தில் விளைவது. கருங்குறுவை நெல்லை ஒகப்பயிற்சியில் சித்தர்கள் பத்திய உணவாகக் கொள்வர்.]

கடப்பமரம் *kaḍappa-maram,* பெ.(n.) **கடம்பம்** பார்க்க; see *kaḍambam.*

[கடம்பு + மரம் – கடம்பமரம் → கடப்பமரம்.]

கடப்பளி *kaḍappaḷi,* பெ.(n.) 1. ஒழுக்கமில்லாதவன்; knave. 2. ஈகையில்லாதவன்; miser, close-fisted person.

[கடன் → கடப்பு + (அழி) அளி.]

கடப்பாக்கம் *kaḍappākkam,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanchipuram district.

[கடப்பன் + பாக்கம் – கடப்பன்பாக்கம் → கடப்பாக்கம்.]

கடப்பாட்டாளன் *kaḍappāṭṭāḷaṉ,* பெ.(n.) 1. கடமையறிந்து அதனைச் செய்பவன்; he who does what he knows to be his duty. 2. கொடை யாளி; public benefactor. *இவை மூன்று பாட்டானும் கடப்பாட்டாளனுடைய பொருள் பயன்படுமாறு கூறப்பட்டது (குறள்,217 உரை).*

[கடப்பாடு + ஆளன்– கடப்பாட்டாளன்.]

கடப்பாட்டுப்பத்திரம் *kaḍappāṭṭu-p-pattiram,* பெ.(n.) உறுதிமொழி ஆவணம்; recognisance.

[கடப்பாடு + பத்திரம்.]

கடப்பாடு *kaḍappāḍu,* பெ.(n.) 1. கடமை; duty, obligation. *"கைத்திருத் தொண்டுசெய் கடப்பாட்டினார்" (பெரியபு. திருக்கூட்.5).* 2. முறைமை; established custom, order, usage. *"கடப்பா டறிந்த புணரிய லான்" (தொல். எழுத்து.37).* 3. கொடை; gift. *"நாளும் பெருவிருப்பா னண்ணுங் கடப்பாட்டில்" (பெரியபு. ஏனாதி.4).* 4. ஒப்புரவு; liberality, munificence, *"கைம்மாறு வேண்டா கடப்பாடு" (குறள், 211.).* 5. தகுதி; capacity. 6. நடை; conduct, behaviour, 7. நேர்மை; honesty.

ம. கடப்பாடு

[கடன் + (படு) பாடு.]

ஒருவன் கடமையாகச் செய்யவேண்டிய பல வினைகளுள் அறமும் ஒன்றாகும். உயர்திணையைச் சார்ந்த காரணத்தினாலும், உலகம் கடவுளைத் தலைமையாகக் கொண்ட ஒரு மாபெருங் குடும்பம் என்னுங் கருத்தினாலும், ஒவ்வொருவனும் பிறர்க்கு, அவருள்ளும், சிறப்பாக, ஏழை எளியவர்க்குத் தன்னால் இயன்றவரை உதவியும் நன்மையும் செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்தற்குக் கடப்பாடு என்று பெயர். "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட் டென்னாற்றுங் கொல்லோ வுலகு" (குறள்,211.) என்றார் திருவள்ளுவர். கடப்பாடு என்னும் சொல்லின் முதற்பொருள் கடன் என்பதே. ஒவ்வொருவரும் அறஞ்செய்ய வேண்டுவது கடன் என்னும் கருத்தினால், அச் சொல்லுக்கு ஒப்புரவொழுகல் (உபகாரஞ் செய்தல்) என்பது வழிப்பொருளாய்த் தோன்றிற்று. (வே.க. 106.)

கடப்பாரை *kaḍa-p-pārai,* பெ.(n.) நீண்டதும், வலிவானதும் ஒரு முனை கூர்மையுடையதுமான இரும்புக்கம்பி; crow bar.

ம. கட்பார; தெ. கட்டபாரா.

[கடுதல் = வெட்டுதல். பார் → பாரை = நீண்டது. கடு → கட + பாரை – கடப்பாரை. கட்டப்பாரை, கட்டைப்பாரை என்பன வழூ; விலக்கத் தக்கன.]

கடப்பான் *kaḍappāṉ,* பெ.(n.) நண்டு வகை (நெல்லை); a kind of crab.

[குடப்பு → கடப்பு → கடப்பான் = வளைந்த கால் உடையது.]

கடப்பு[1] *kaḍappu,* பெ.(n.) 1. கடக்கை; passing. *"விற்க டப்பரும் விறலி ராகவன்" (சேதுபு.தேதுவ.6);* 2. விலங்குகள் செல்லவியலாமல் மாந்தர் மட்டுஞ் செல்லுதற்கு அமைக்கப்படும் இடுக்குமர வழி முதலியன (வின்.); wicket or narrow passage in a lane, wall or hedge for the use of people only but

not for cattle. 3. மிகுதியானது; that which is abundant; large quantity. *"கவ்வையிற் கடப்பன்றோ". (கலித்.66:18).*

ம. கடப்பு; **க.** கடகல்; **தெ.** கடபு.

[கட → கடப்பு. கட = செல், போ. செல்லுதல் = மேற்பட்டுச் செல்லுதல், மிகுதல்.]

கடப்பு[2] *kaḍdapu,* பெ.(n.) வெற்றி; victory. *"பாடுவன் மன்னாற் பகைவரைக் கடப்பே" (புறநா.53).*

[கட → கடப்பு = யாவரினும் மேம்பட்டு நின்றதால் பெற்ற வெற்றி.]

கடப்புக்கால்[1] *kaḍappu-k-kāl,* பெ.(n.) 1. வளைந்த கால் (யாழ்ப்.); bandy legs. 2. ஊனமுள்ள கால்; club-foot. 3. தொழுவம் முதலியவற்றில் மாடுகள் புகாமல் தடுப்பதற்கு உழலையிழுத்துப் போடும்படி துளை யிட்டு நிறுத்தியிருக்கும் மரம் (இ.வ.); wooden posts with holes in them for cross-bars, fixed at the entrance of cattle sheds.

[குடப்பு (வளைவு) → கடப்பு + கால்.]

கடப்பூவிச்சி *kaḍa-ppūvicci,* பெ.(n.) 1. கருநொச்சி; black notchi. 2. நீலநொச்சி; purple notchi (சா.அக.).

[கள் → கரு + பூவிச்சி – கடுப்பூவிச்சி → கடப்பூவிச்சி]

கடப்பேரி *kaṭappēri,* பெ.(n.) காஞ்சிபுரம், வேலூர் மாவட்டத்துச் சிற்றூர்; village names in Kanchipuram and Vellur district.

[கடம்பு + ஏரி – கடம்பேரி → கடப்பேரி. கடம்பு மரத்தைச் சார்ந்த ஏரி, ஏரியைச் சார்ந்த ஊர்.]

கடப்பேரிக்குப்பம் *kaṭappēri-k-kupam,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Viluppuram district.

[கடம்பு + ஏரி + குப்பம் – கடம்பேரிகுப்பம் → கடப்பேரிக்குப்பம்.]

கடப்பைக்கல் *kaḍappai-k-kal,* பெ.(n.) கடப்பைப் பகுதியில் கிடைக்கும் ஒருவகைக் கறுப்புக் கற்பலகை; Cuddapah-slab.

[கடப்பை + கல்]

கூறைநாட்டில் நெய்யப்பட்ட புடைவையைக் "கூறைப்புடைவை" என்றாற் போன்று ஆந்திர மாநிலத்துக் கடப்பை மாவட்டத்தில் இருந்து கொணரப்பட்ட கல் கடப்பைக்கல் எனப்பட்டது.

கடப்பைமரம் *kaḍappai-maram* பெ.(n.) சிறு மூங்கில் வகை; Chinese dwarf bamboo.

[குடப்பு → கடப்பு → கடப்பை + மரம்.]

கடபடமெனல் *kaḍa-paḍam-eṉal,* பெ.(n.) ஒலிமாய்மாலத்தால் மருட்டிப் பேசுதற்குறிப்பு; onom. expr. used to signify metaphysical Jargon, the high sounding verbiage generally indulged in by dialecticians to confound people. *"கற்றதுங் கேட்டதுந்தானே யேதுக்காகக் கடபடமென் றுருட்டுதற்கோ" (தாயு. நின்றநிலை.3).*

[கடபடம் + எனல்.]

கடபடாவெனல் *kaḍapaḍā-v-eṉal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; rattling sound.

[கடபட + எனல்.]

கடபம் *kaḍapam,* பெ.(n.) கெண்டி (நாமதீப.); a kind of vessel with nozzle.

[குடம் → கடம் → கடபம் (கொ.வ.).]

கடம்[1] *kaḍam,* பெ.(n.) 1. கடன்; debt. *"கடமுண்டு வாழாமை"* (இனி.நாற்.11). 2.இறைக்கடன் (தொல். பொருள்.150); homage due to god; religious obligation. 3. கடமை, முறைமை (சூடா.); duty,proper conduct. *"காரிகை நின் பண்கடமென் மொழி யாரப் பருக வருகவின்னே" (திருக்கோ.220).* 4. நயன் (நீதி) (சூடா.); right Justice.

ம. கடம்; **க., து.** கட.

[கடு → கடன் → கடம். கடு = விரைவு, விரைந்து செய்தல். கடன் = விரைந்து செய்யத்தக்க பணி. கடமை என்னும் சொல்லும் விரைந்து கட்டாயம் செய்ய வேண்டிய பணியைக் குறித்தமை காண்க. நிலன் → நிலம் எனத் திரிந்தவாறு. கடன் → கடம் என ஈறு திரிபுற்ற ஈற்றுப்போலி.]

கடம்[2] *kaḍam,* பெ.(n.) 1. காடு; forest. *"கடத்திடைக் கணவனை யிழந்த" (பு.வெ.10.சிறப்பி.1).* 2. மலை; mountain. 3. பாலைநிலத்து வழி; hard dfficult path in a barren tract. "கடம்பல கிடந்த காடுடன் கழிந்து" (சிலப்.11:90). 4. சுடுகாடு (சூடா.); cremation ground. 5. தோட்டம்; garden.

[கடு → கடம். கடு = கடுமையானது. 'அம்' பருமை (அகற்சி) குறித்த சொல்லாக்க ஈறு.]

கடம்[3] *kadam,* பெ.(n.) கரிசு; sin. *"கடமுண்டார் கல்லாதவர்" (திவ்.இயற். 4:52).*

[கடை → கட → கடம்.]

கடம்[4] *kaḍam,* பெ.(n.) 1. யானைக் கதுப்பு (பிங்.); elephant's temple, from which a secretion flows. 2. யானை மதம்; rut flow of a must elephant. *"கடக்களிறு" (திருவாச.3:155.); "முட்ட வெங்கடங்கள் பாய்ந்து முகிலென முழங்கி" (பெரியபு. எறிபத்.51).*

[கதுப்பு → கதம் → கடம் = கன்னம்.]

கடம்[5] *kaḍam,* பெ.(n.) கயிறு (பிங்.); rope.

[கள் → களம் → கடம். கள் = கட்டுதல், இணைத்தல்.]

கடம்[6] *kaḍam,* பெ.(n.) 1. குடம்; water, vessel. *"மலயந் தன்னிற் கடமுனி சேரலோடும்" (கந்தபு. திருக்கல். 65).* 2. கும்பவோரை; sign of Aquarius in the Zodiac. 3. குடமுழுவு (சூடா.); hand drum played on at both ends. 4. பதக்கு (முகத்தலளவை.) (தைலவ. தைல.); dry cubic measure of two kuṟuṇi. 5. உடம்பு (பிங்.); body, human or other. *"ஒழிந்த வாவி கடமுற" (ஞான. வைராக்.39).*

த. குடம் > வ. கடம்

[குடம் → கடம்.]

மட்பாண்டமே அளக்கும் கருவியாகவும் இருந்ததால் இருகுறுணி அளவு கொள்ளும் மட்பாண்டம் பதக்கு எனப்பட்டது. அழியும் உடம்பு மட்பாண்டம் போன்றதாதலின் [குடம்] கடம் எனப்பட்டது.

கடம்

கடம்[7] *kaḍam,* பெ.(n.) 1. யானைக் கூட்டம் (பிங்.); herd of elephants. 2. நிலக்கடலை; groundnut. 3. கோழை; coward.

[கள் → கடு → கடம். கள் = கூடுதல், திரளுதல்.]

கடம்[8] *kaḍam* பெ.(n.) மலைச்சாரல் (பிங்.); mountain side. *"பெருங்கட மலைக்குலம்" (பாரத.சூது. 104).*

[தடம் → கடம். தடம் = மலை.]

கடம்[9] *kaḍam,* பெ.(n.) மரமஞ்சள்; tree turmeric. *"அரத்தை யொலிகட மதுரங்காயந்... சீராறும்". (தைல. தைலவ.18).*

[கடு (வலிமை) → கடம் = வலிமை சான்ற மரம்.]

கடம்[10] *kaḍam,* பெ.(n.) 1. சினம்; anger. 2. ஒரு மந்திரம்; a mantric spell.

[கதம் → கடம்.]

கடம்பக்காடு *kaḍamba-k-kāḍu,* பெ.(n.) 1. கடம்ப மரம் நிறைந்த காடு; a forest of *kadamba* trees. 2. மதுரை; city of Madurai.

[கடம்பு + காடு – கடம்புக்காடு (கொ.வ.).]

மதுரையைச் சுற்றி கடம்பமரம் இருந்ததாகத் தொன்மங்கள் குறிக்கின்றன. அதனாற்றான் மதுரைக்குக் கடம்பக்காடு [வனம்] என்று பெயராயிற்று.

கடம்பக்குடி *kaḍamba-k-kuḍi,* பெ.(n.) இராமநாதபுர மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanathapuram district.

[கடம்பு + குடி – கடம்புக்குடி → கடம்பக்குடி. கடம்பு = கடம்புமரம். அம்மரத்தைச் சார்ந்த ஊர்.]

கடம்பக்கூனன் *kaḍamba-k-kūṉaṉ,* பெ.(n.) ஆமை; tortoise.

மறுவ. கடம்பக்கூனி, கடம்பக்கூனை.

[குடம் → கடம் → கடம்பம் + கூனன்.]

கடம்படு[1]**–தல்** *kaḍam-paḍu-,* 18 செ.குன்றாவி.(v.t.) நேர்ந்துகொள்ளுதல்; to devote, as fruits etc. to the temple, in pursuance of a vow. *"கருவயிறு றுகெனக் கடம்படு வோரும்" (பரிபா. 8:106).*

[கடன் → கடம் + படு.]

கடம்படு[2]**–தல்** *kaḍam-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) சினமடைதல் (சிலப்.29,காவற்பெண்டுசொல்.); to be angry, to grow indignant.

[கதம் → கடம் + படு .]

கடம்பந்துறை *kaḍamabandurai,* பெ.(n.) 1. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள தேவாரப் பாடல் பெற்ற ஊர்; name of a village in

Tiruchirappalli district having been sung in Devaram. *"வண்ணநன்மலரான் பலதேவரும் கண்ணனும் அறியான் கடம்பந்துறை" (தேவா. அப்பர். 132–4).*

[கடம்பு + துறை.]

கடம்பமரங்கள் நிறைந்த நீர்த்துறை அமைந்ததால் பெற்ற பெயர். இன்று, குழித்தலை என்று இவ்வூர் அழைக்கப்படுகிறது.

கடம்பப்பெருந்தேவி *kaḍamba-p-perundēvi,* பெ.(n.) திருக்கோவலூர் வட்டத்தில் சென்னகுணம் என்ற ஊரில் கி.பி. 7ஆம் நூற்றாண்டளவில் ஏரி அமைக்க உதவிய பெருமகள்; lady who donated to form a tank in Chennakunam in Thirukkovalur Taluk during 7th Century. *"ஸ்ரீ கடம்பப் பெருந்தேவி செய்பித்த தூம்பு" (ஆவணம், ப. 158).*

[கடம்பர் + பெருந்தேவி.]

கடம்பர் வடகருநாடாகப் பகுதியை ஆண்டவர். பல்லவ மன்னர்களோடு மணத் தொடர்பு கொண்டிருந்தனர்.

கடம்பம்[1] *kaḍambam,* பெ.(n.) 1. மரவகை (மூ.அ.); common cadamba. *"திணிநிலைக் கடம்பின் திரளரை வளைஇய". (குறிஞ்சிப்.176).* 2. வெண்கடம்பு; see-side Indian oak.

மறுவ. கடம்பு

ம. கடம்பு; **க.** கடம்ப; **தெ.** கடாமி, கடிமி.

[கடம்பு → கடம்பம் (வன்மையான மரம்).]

த. கடம்பம் > **Skt.** kadamba.

அம்மீறு பெற்ற வடிவே ஈறுகெட்டு வடமொழியிலுள்ளது. அதோடு, கடம்பம் என்னும் மரப் பெயரும் கதம்பம் என்னும் கலவைப் பெயரும் ஒன்றாக மயக்கப்பட்டுள்ளன. [வ.மொ.வ. 10].

வகைகள் : கடம்பு, நீர்க்கடம்பு, வெண்கடம்பு, மஞ்சட்கடம்பு.

கடம்பு மரக்கிளை

கடம்பம்[2] *kaḍambam,* பெ.(n.) 1. அம்பு; arrow. 2. கீரைத்தண்டு; stalk of greens. 3. வாலுளுவை; a spindle tree.

[கட → கடம்பு → கடம்பம். கட = செல். கடம்பு = நீட்சி.]

கடம்பர்[1] *kaḍambar,* பெ.(n.) கடம்புமரத்தைக் காவல் மரமாகக் கொண்டிருந்தவர்கள்; chieftain who choose Kadamba as their guardian tree.

[கடம்பு + அர். கடம்பு → கடம்பர்.]

சிலர், பயன்படா மரஞ்செடி கொடிகளையும் ஒவ்வொரு காரணம்பற்றித் தெய்வத்தன்மை யுடையனவாகக் கருதி அவற்றை அணிந்தும் வழிபட்டும் வந்திருக்கின்றனர். கடம்பர் என்னும் வகுப்பார் கடப்ப மரத்தைக் கடிமரமாகக் கொண்டிருந்தனர். ஆப்பிரிக்க, அமெரிக்கப் பழங்குடி மக்கட்கும் இத்தகைய கொள்கையுண்டு. சைவர் அக்கமணியையும் [உருத்திராக் கத்தையும்] மாலியர் [வைணவர்] துளசியையும், பௌத்தர் அரசையும், சமணர் அசோகையும் தெய்வத்தன்மை யுடையன வாகக் கருதுவதும் இத்தகையதே. [சொ.ஆ.க.19]

கடம்பர்[2] *kaḍambar,* பெ.(n.) 1. குறும்பர்; Kurumbar. (community). 2. கடம்பு எனும் தோற்கருவி இசைப்பவர்; a community who have `Kadambu' musical instrument.

[கடம் + கடம்பர்.]

கடம்பர்கோவில் *kaḍampar-kovil,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanchipuram district.

[கடம்பு + அர் + கோவில் – கடம்பர்கோவில். கடம்பு = கடம்பு மரம். கடம்பர் = கடம்பு மரத்தைக் காவல் மரமாகக் கொண்ட மரபினர்.]

கடம்பர்வாழ்கரை *kaḍampar-vāḻ-karai,* பெ.(n.) நாகைப்பட்டின மாவட்டத்துச் சிற்றூர்; a village in Nagappatinam district.

[கடம்பு + அர் + வாழ் + கரை.]

கடம்பரை *kaḍambari,* பெ.(n.) கடுகுச்சிவலை (கடுகு ரோகிணி) என்னும் பூண்டு; Christmas rose, herb.

மறுவ. கடுசிவதை, கருரோகிணி, கடுகு ரோகிணி.

[கடம் + கடம்பு + ஆரை–கடம்பாரை → கடம்பரை. ஆரை = கீரைவகை.]

கடம்பவனசமுத்திரம் *kaḍamba-vaṉa-samuddiram,* பெ.(n.) இராமநாதபுர மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanathapuram distict.

[கடம்பு + வனம் + சமுத்திரம்– கடம்பவனசமுத்திரம்.]

கடம்பவனத்துச் சமுத்திரன் பெயரிலமைந்த ஊர். கடல் வாணிகம் செய்யும் வணிகனுக்குரிய கடலன் என்னும் தமிழ்ப் பெயரின் வடமொழியாக்கமாகிய சமுத்திரன் என்பது சமுத்திரம் எனத் திரிந்தது. கடலன் பெயரிலமைந்த ஊர் கடலன்குடி → கடலங்குடி என வழங்குவதை ஒப்பு நோக்குக.

கடம்பன்[1] *kaḍambaṉ,* பெ.(n.) 1. கடம்பமாலை அணிந்த முருகக்கடவுள் (மணிமே.4:49); Skanda, wearing a garland of kadambam flowers. *"செம்பொற் கடம்பன் செவ்வேளும்". (சிந்தா.1664)* 2. கடம்பு எனும் தோற்கருவியை இசைக்கும் ஒரு பழைய குடி; an ancient caste. *"துடியன் பாணன் பறையன் கடம்பனெ ன்றிந்நான் கல்லது குடியு மில்லை". (புறநா.335:7,8)*

ம. கடம்பன்

[1. கடம்பு → கடம்பன் = கடம்பின் மலரை அணிந்தவன். 2. கடம்பு = தோற்கருவி. கடம்பு + அன் – கடம்பன் = கடம்பு எனும் தோற்கருவி இசைப்பவன்.]

கடம்பு எனும் தோற்கருவி நீலமலை பழங்குடியினரிடமும் உள்ளது.

கடம்பன்[2] *kaḍambaṉ,* பெ. (n.) முரடன்; unruly person.

[கடம்பு + அன்–கடம்பன் = கடம்ப மரம் போன்ற வலிமையானவன்.]

கடம்பன்குறிச்சி *kaḍambaṉ-kuṟicci,* பெ.(n.) கரூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Karur district.

[கடம்பு+ அன் + குறிச்சி.]

கடம்பன்மாறன் *kaḍambaṉ-māṟaṉ,* பெ.(n.) இலால்குடி (திருத்தவத்துறை), மணற்கால் கோயிலில் அணையா விளக்கெரிய நன்கொடை வழங்கிய மாற்றுக்கள்வி என்பவளின் தந்தை; father of Māṟṟukkaḷvi who made donations for perpetual lamp in the temple of Manarkal at Lalkudi. *"இடையாற்று நாட்டு சபையோம் நல்லிமங்கலத்துக் கோயிலான் கடம்பன்மாறன் மகள் மாற்றுக்கள்வி வைத்த பொன்" (தெ.இ.கல்.தொ.19 கல்.71).*

[கடம்பன் + மாறன். கடம்பனின் மகன் மாறன்.]

கடம்பன்வயல் *kaḍambaṉ-vayal,* பெ.(n.) திருப்பேரையூர்க் கோயிலுக்குக் வரியில்லா நிலமாக வழங்கப்பட்ட வயலின் பெயர்; the name of a field donated to the temple of Peraiyur as tax free land. *"குடி னீங்காத் தேவதானமாகக் கொண்ட கடம்பன் வயலுக்குப் பெருநான் கெல்லை" (தெ.இ.கல்.தொ.23 கல்.163 கி.பி. 1289–90).*

[கடம்பன் + வயல்.]

கடம்பாடி *kaḍam-pāḍi,* பெ.(n.) மதுரை; Madurai.

[கடம்பு + அடி – கடம்படி → கடம்பாடி.]

கடம்பாளம் *kaḍam-pāḷam,* பெ.(n.) மிதவை போன்ற அடையாளக் கருவியை நிலைநிறுத்தும் நங்கூரக் கயிறு; buoy anchor rope. (க.ப.அக.)

[கடு → கட → கடம்பு + ஆளம். கடம்பு = நீட்சி. ஆளம்– சொ.ஆ.ஈறு.]

கடம்பானை *kaḍambāṉai,* பெ.(n.) ஒருவகைக் கடல் மீன்; a two-gilled cuttle fish.

இது கணவாய் மீன் வகையைச் சார்ந்தது. இதற்கு இரண்டு மூச்சுறுப்புகளும் எட்டுக் கைகளும் உண்டு.

கடம்பி[1] *kaḍambi,* பெ.(n.) கெட்டவள்; lewd woman. *"நீசரோடு மிணங்கு கடம்பிகள்" (திருப்பு.67.).*

[கெடு → கெடம்பி → கடம்பி.]

கடம்பி[2] *kaḍambi,* பெ.(n.) கடம்பவினத்தார்; kadamba clan.

[கடம்பு → கடம்பி.]

கடம்பு[1] *kaḍambu,* பெ.(n.) 1. பழங்காலத் தமிழினத் தாருள் ஒவ்வொரு குடியினரும் தமக்கு உரியதாக

உரிமையாக்கி வழிபட்டு வந்த காவல் மரவகைகளுள் ஒன்று; one of guardian trees specially worshipped by each of the different clans among the ancient Tamil Nadu. 2. ஒரு காட்டுமரம்; common cadamba tree.

கடம்பின் வகைகள்.

1. நீலக்கடம்பு, 2. கடற்கடம்பு, 3. நீர்க்கடம்பு, 4. மஞ்சட்கடம்பு, 5. விசாலக்கடம்பு, 6. செங்கடம்பு, 7. சீனக்கடம்பு, 8. நீபக்கடம்பு, 9. வெண்கடம்பு, 10. நிலக்கடம்பு, 11. முட்கடம்பு அல்லது முள்ளுக்கடம்பு, 12. சிறுகடம்பு, 13. பூதக்கடம்பு, 14. நாய்க்கடம்பு, 15. நெய்க்கடம்பு, 16. பட்டைக்கடம்பு, 17. பெருங்கடம்பு, 18. மல்லிகைக் கடம்பு, 19. அக்கமணி (உருத்திராக்க)க் கடம்பு.

[கடு → கடம்பு.]

கடம்பு[2] *kaḍambu,* பெ. (n.) தீங்கு; evil, mishap, misfortune. *"வித்தாரமும் கடம்பும் வேண்டா" (பட்டினத். பொது).* 2. ஒரு காட்டுமரம்; common cadamba tree.

[கடு → கடும்பு → கடம்பு.]

கடம்பு[3] *kaḍambu,* பெ.(n.) 1. காடு; forest. *'வடவெல்லை கரடி கும்பல் கடம்புக்குத் தெற்கு' (திருவேங். கல்வெ. 2.பக்.18).* 2. மலைச்சாரல் கறட்டு நிலம்; dryland of mountain slope.

[கடு → கடம்பு. கடம் = பாலைநிலம்.]

கடம்பு[4] *kaḍambu,* பெ.(n.) அறுபது நாளில் விளைவதும் ஓகிகள் விரும்பி உண்பதுமான கருங்குறுவை நெல்; a black paddy with red rice inside, reaped in 60 days, yogic diet.

[கள் → கடு → கடம்பு.]

கடம்பு[5] *kaḍambu,* பெ.(n.) பிள்ளை பிறந்தவுடன் சுரக்கும் பால், சீம்பால்; the first milk of a woman after confinement.

[கடு → கடும்பு → கடம்பு. கடு = விரைவு, ஈன்றணிமை.]

கடம்புநெல் *kaḍambu-nel,* பெ.(n.) கருங்குறுவை நெல்; a black paddy with red rice inside.

[கடம்பு + நெல். கடம்பு = தடிப்பு.]

கடம்புப்பால் *kaḍambu-p-pāl,* பெ.(n.) சீம்பால்; the first milk of woman after confinement.

[கடம்பு + பால்.]

கடம்பூர் *kaḍambūr,* பெ.(n.) சோழ நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற ஊர்; name of a village of Cōḻa country having been sung in Thēvaram. *"காவிரி கொன்றை கலந்த கண் ணுதலான் கடம்பூர்" (தேவா. 204:5).*

[கடம்பு + ஊர். முருகனுக்கு விருப்பமானது எனக் கருதப்படும் கடம்ப மரங்கள் நிறைந்த தன்மையால் பெற்ற பெயர். அப்பராலும், சம்பந்தராலும் பாடல் பெற்ற தஞ்சை மாவட்ட ஊர். இன்று மேலைக் கடம்பூர் என வழங்கப்படுகிறது.]

கடம்பூரணி *kaḍamburaṇi,* பெ.(n.) இராமநாதபுர மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanathapuram district.

[கடம்பு + ஊருணி—கடம்பூருணி→கடம்பூரணி. ஊருணி = கேணி, குளம்.]

கடம்பூராயப்பட்டி *kaḍampu-rāya-p-paṭṭi,* பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Pudukkottai district.

[கடம்பு + அரையன் + பட்டி— கடம்பரையன்பட்டி → கடம்பராயன்பட்டி. கடம்பு = கடம்பமரம்.]

கடம்பூலிகம் *kaḍampūligam,* பெ.(n.) ஒட்டுப்புல்; a plant growing in light sandy soil with bristles which cling to clothes.

[கடம்பு + ஊலிகம்.]

கடம்பை[1] *kaḍambai,* பெ.(n.) 1. குளவிவகை (இ.வ.); a kind of hornet. 2. காட்டுப்பசு; wild cow.

ம. கடன்னல், கடுன்னல்; **க.** கடஞ்ச, கடச, கனச; **து.** கணசத; **குட.** கடந்தி; **தெ.** கடச்சு, கணசு.

[கடு → கடம் → கடம்பை.]

கடம்பை[2] *kaḍambai,* பெ. (n.) தென்னை நார் (இ.வ.); coconut fibre.

[கட → கடம் - கயிறு. கடம் → கடம்பை.]

கடம்பொடுவாழ்வு *kaḍambodu-vāḻvu,* பெ.(n.) திருநெல்வேலி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thirunelveli district.

[கடம்பு + ஒடு + வாழ்வு = கடம்பொடுவாழ்வு. கடம்பு = முருகனுக்குரிய கடம்பு மரம். கடம்பொடு வாழ்வு என்பது முருகனொடு வாழ்வு எனப் பொருள் படுவதோர் மரபுச்சொல் லாட்சி. செந்தில் வாழ்வே என முருகனைக் குறிப்பிடுதலை ஒப்பு நோக்குக.]

கடம்போடு—தல் *kaḍam-pōḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) நெட்டுருப்பண்ணுதல்; to cram unintelligently; to learn a lesson by rote rather than by heart.

மறுவ. மனனம் செய்தல், மனப்பாடஞ் செய்தல், நெட்டுருப் போடுதல்.

[கடம் + போடு. குடம் → கடம்.]

பொருளறியாமல் மனப்பாடம் செய்தல். கடம் [குடம்] முழக்கும் இரைச்சலைப்போல் சொற்பொருளுணராத குருட்டாம் போக்கு மனப்பாடம் என்று பொருள்.

கடமக்கோடு *kaḍamkkōḍu*, பெ.(n.) குமரி மாவட்டத்து விளவங்கோடு வட்டத்துச் சிற்றூர்; a village in Vilavangodu Taluk in Kanyakumari district.

[கடம்பன் + கோடு – கடம்பன் கோடு → கடம்பங்கோடு → கடமக்கோடு. கோடு = ஏரிகரை, ஏரி, ஏரியைச் சார்ந்த ஊர்.]

கடமனை *kaḍa-maṉai*, பெ.(n.) தேர் அல்லது வண்டியின் முன்னுறுப்பு (பெருங். உஞ்சைக்.36:33); the front part of an ancient cart or car.

[கடை → கட + மனை.]

கடமலை *kaḍa-malai*, பெ.(n.) களிறு; the male elephant. *"கலிங்க மிரியக் கடமலை நடாத்தி" (விக்கிரம சோழன் மெய்க்கீர்த்தி).*

[கடம் + மலை. கடம் = மதநீர். மலை = மலைபோன்ற யானை.]

கடமலைக்குன்று *kaḍamalai-k-kuṉṟu*, பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari district.

[கடமலை + குன்று. கடமலை = யானை. கடமலைக்குன்று = யானைக் குன்று.]

கடமலைப்புத்தூர் *kaḍamalai-p-puttūr*, பெ.(n.) மதுராந்தகம் வட்டத்தில் பெருங்கற்காலச் சின்னங்கள் பெருமளவில் காணப்படும் ஊர்; a place in Maduranthagam Taluk, where megalithic remains are seen on a large scale.

[கடம் + மலை + புத்தூர்.]

அலெக்சாந்தர் ரீ என்பவர் இங்கு ஆய்வு செய்தார். மூன்று கால்களும் மேல்பக்கம் மூன்று வாயும் கொண்ட சிவப்புத் தாழி [சாடி] இங்குக் கிடைத்தது.

கடமா[1] *kaḍamā*, பெ.(n.) காட்டுஆ (காட்டுப்பசு); bison, wild cow. *"கடமா தொலைச்சிய கானுறை வேங்கை" (நாலடி.300).*

மறுவ. கடம்பை, கடத்தி, ஆமா.

ம. கடமா(வு)

[கடம் + (ஆன்→) ஆ. கடம் = காடு.]

கடமா[2] *kaḍamā*, பெ.(n.) மதயானை; must elephant. *"கடமா முகத்தினாற்கு" (தேவா.1047:9.).*

[கடம் + மா. கடம் = மதநீர்.]

கடமாதம் *kaḍa-mādam*, பெ.(n.) கும்ப (மாசி) மாதம். the 11th Tamil month, corresponding to February, March so called as the Sun is then in Kumbam or Katagam the sign of acquarius. *"கடமாதங் கம்பப் பிரானை" (கம்பரந்.87).*

[குடம் → கடம் + மாதம். குடம் = கும்ப ஓரை.]

கடமாரி *kaḍa-māri*, பெ.(n.) சிறுபுள்ளடி என்னும் மூலிகை (நாமதீப.); scabrous ovate unifoliate tick-trefoil (சா.அக.).

[கடம் + மூலி – கடமூலி . கடமாலி → கடமாரி (கொ.வ.).]

கடமாவடி *kaḍamā-vaḍi*, பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Pudukkottai dt.

[காட்டு → கட்டு + மா + அடி – கட்டுமாவடி → கடமாவடி. மாவடி = மாமரத்தைச் சார்ந்த நிலம்.]

கடமான் *kaḍa-māṉ*, பெ.(n.) 1. நீண்டு கிளைத்த கொம்புகளையுடைய கடமை என்னும் மான்வகை; elk. 2. காட்டா (காட்டுப்பசு); bison, wild cow. *"அடற்கடமான்... பாலும்" (தஞ்சைவா.320). "தேனோடு கடமான் பாலும்" (கந்தபு. வள்ளிய.76).*

மறுவ. கடமை

ம. கடமான்; **க.** கடவெ, கடவ, கடபு, கடபெ, கடவு, கடக; **குட.** கடமெ; **து.** கடம; **தெ.** கடுசு, கடதி, கணதி; **கொலா.** கடக; **குரு.** காட்சா; **பிரா.** கசம்; **கோல:** கடசு.

[கடம் + மான். கடம் = வன்கரம்பு, காட்டுநிலம்.]

கடமான்

கடமி *kaḍami*, பெ.(n.) செங்கடம்பு; small Indian oak (சா.அக.).

[கடம்பு → கடம்பி → கடமி.]

கடமுடெனல் *kaḍa-muḍeṉal*, பெ.(n.) ஒலிக்குறிப்பு; rattling, as the bowels.

[கடமுட + எனல். கடமுட – ஒலிக்குறிப்பு இணைமொழி.]

கடமுறி *kaḍamuṟi*, பெ.(n.) ***கடன்முறி*** பார்க்க; see *kaḍaṉ-muṟi*.

ம. கடமுறி

[கடன் + முறி – கடமுறி. முறி = ஓலையில் எழுதிய பற்றுச்சீட்டு, சீட்டு.]

கடமுனி *kaḍa-muṉi*, பெ.(n.) அகத்தியர்; the sage Agastya, said to have been born in a pot. *"மலயந் தன்னிற் கடமுனி சேறலொடும்" (கந்தபு. திருக்கல்.65).*

[குடம் = மேற்கு. குடம் + முனி – குடமுனி – கடமுனி (கொ.வ.).]

மேற்குமலையில் வாழ்ந்த (குட) முனிவரைக் குடத்தில் பிறந்த முனிவராகத் திரித்துக் கூறுவது தவறு.

கடமை[1] *kaḍamai*, பெ.(n.) 1. கடப்பாடு; duty, obligation. 2. கடன்; debt. 3. தகுதி; ability. 4. முறைமை; right, propriety.

[கடம்' → கடமை.]

கடமை[2] *kaḍamai*, பெ.(n.) குடியிறை, அரசு ஊர் நிலங்களை அளந்து, அதன் விளைவிற்கேற்ப உரிமையாளரிடம் பெறும் வரி வகை (கல்.); tax assessment tribute, toll. *"ஆறிலொன்று கொற்றவர் கடமை கொள்ள" (திருவிளை. நாட்டுப்.28).*

ம. கடம; **கசபா.** கடமெ.

[கடன் → கடமை = கொடுக்கக் கடமைப்பட்டுள்ள வரிப்பணமும் கடமை ஆயிற்று.]

கடமை[3] *kaḍamai*, பெ.(n.) 1. பெண் ஆடு (தொல். பொருள்.619); ewe. 2. காட்டு ஆன் (காட்டுப்பசு) (யாழ்.அக.); wild cow. *"தடமரை கடமை யாதி... மேவிய விலங்கு" (கந்தபு.மார்க்.4.)*

ம. கடமான்.

[குள் → குள → கள → கட → கடமை குள் = இளமை, மென்மை, பெண்மை.]

கடமை[4] *kaḍamai*, பெ.(n.) ***கடமான்*** பார்க்க; see *kaḍa-māṉ*.

[கடம் → கடமை (கடத்தில் வாழ்வது).]

கடமைக்கால் *kaḍamai-k-kāl*, பெ.(n.) வரிக்குரிய தவசங்களை அளந்துகொள்வதற்கு அரசு ஏற்படுத்திய அளவு மரக்கால்; authorized measure of capacity.

[கடமை + கால். கடமை = வரி. கால் = முகத்தல் அளவை கருவி, மரக்கால்.]

கடமைக்கொடுமுளூர் *kaḍamai-k-koḍumuḷur,* பெ.(n.) திருநெல்வேலி வட்டம் சுத்துமல்லி அருகிலுள்ள ஊர்;a village in Thirunelvelli Taluk near Suthumalli. *"கடமைற் கொடுமுளூரான உத்தம பாண்டியநல்லூர்" (தெ.இ.கல்.தொ.26 கல். 480).*

[கடமைக்கோடு + முள்ளூர்—கடமைக் கோடுமுள்ளூர் → கடமைக்கொடுமுளூர்.]

கடமைச்செலவு *kaḍamai-c-celavu,* பெ.(n.) ஒரு பணிக்கு ஆகும் செலவு; expenditure for particular work.

[கடமை + செலவு.]

கடமைத்தட்டு *kaḍamai-t-taṭṭu,* பெ.(n.) வரி செலுத்துவதில் சுணக்கம் அல்லது கட்டுப்பாடு (S.I.I.vol.8.insc.303); shortages in paying taxes.

[கடமை + தட்டு.]

கடமைப்படு—தல் *kaḍamai-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. நன்றியுடன் இருத்தல்; be indebted to. உங்கள் உதவிக்கு நான் கடமைப் பட்டுள்ளேன் (உ.வ.). 2. பொறுப்புடன் இருத்தல்; be obliged to. உங்கள் கட்டளையை ஏற்கக் கடமைப்பட்டுள்ளேன் (உ.வ.).

[கடமை + படு. படு – து.வி.]

கடமைப்பற்று *kaḍamai-p-paṟṟu,* பெ.(n.) மேல் வாரத்தைத் தலைவர்க்குப் பணமாகச் செலுத்தும் சிற்றூர் (i.m.p.tp.250); village paying the share of the produce to the government or landlord in coin and not in kind.

[கடமை + பற்று. பற்று = சிற்றூர்.]

நிலவரி தீர்வை என்றும், வாரம் என்றும் இருவகை யாயிருந்தது. இவற்றுள் முன்னது ஒரு குறிப்பிட்ட அளவும், பின்னது கண்டு முதலில் ஒரு பகுதியுமாகும். தீர்வைக் குரிய நிலம் தீர்வைப்பற்று என்றும், வாரத்திற்குரிய நிலம் வாரப்பற்று என்றும், வாரத்தைப் பணமாகச் செலுத்தும் நிலம் கடமைப்பற்று என்றும் கூறப்பட்டன (பழந்தமி.75).

கடமையில்தட்டிறை *kaḍamayil-taṭṭiṟai,* பெ.(n.) கடமை செலுத்துவதற்கு தவறிய காலத்தில் அரசு நேரடியாக வாங்கும் இறைமுறை; direct collection of taxes by govt. from the defaulters (கல்.அக.).

[கடமை + இல் + தட்டு + இறை.]

கடமையிறு—த்தல் *kaḍamai-y-iṟu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஆயம், வரி அல்லது தீர்வை செலுத்துதல்; to pay tax, toll etc. *'இவ்வூர் கடமையிறுக்குங்கொல்' (S.I.I.Vol.5.Part-I Insc.431.)* 2. வரியினை அறுதியிடுதல் (S.I.I.Vol.5. Insc.30 S.No.8.) ; to fix the tax.

[கடமை + இறு.]

கடயம் *kaḍayam,* பெ.(n.) கடகம் (இ.வ.); bracelet.

[கழல் → கழலம் → கழயம் → கடயம்.]

கடயல் *kaḍayal,* பெ.(n.) குமரி மாவட்டத்துச் விளவங்கோடு வட்டத்துச் சிற்றூர்; a village in Vilavangode Taluk in Kanyakumari dt.

[கடல் + அயல் – கடலயல் → கடயல் = கடலடுத்த சிற்றூர்.]

கடரி *kaḍari,* பெ.(n.) மரமஞ்சள் (மலை.); tree turmeric.

[கடம் → கடரி.]

கடல்[1]—தல் *kaḍal-,* 13 செ.கு.வி.(v.i.) அகலுதல், விரிதல்; to expand, to extend.

தெ. கடலு

[கட → கடல்(பரவுதல்).]

கடல்[2] *kaḍal,* பெ.(n.) உலகில் பெரும்பான்மை நிலப் பரப்பைச் சூழ்ந்துள்ள பரந்துபட்ட உவர்நீர்ப் பரப்பு; expanse of salt water that covers most of earth's surface. "நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும்" (குறள்,17) 'கடல் வற்றிக் கருவாடு தின்னலாம் என்று குடல் வற்றிச் செத்ததாம் கொக்கு' (பழ.).

மறுவ. அத்தி, அளக்கர், ஆர்கலி, ஆழி, பெருநீர், வாரம், வாரிதி, வாரி, பரவை, புணரி, கார்கோள், ஓதம், உவரி, குரவை, அழுவம், தெண்டிரை, நரலை, நீர், நீராழி, திரை, அரலை, பெருவெள்ளம், தோயம், வீரை, முந்நீர், தொன்னீர், உப்பு, உந்தி, அரி, வேலை.

ம. கடல்; **க., து.** கடல், கடலு; **தெ.** கடலி; **குட.** கட.

[கட → கடல். கட = செல்லுதல், போதல், அகலுதல். கடல் = அகன்றது, பரந்தது. பரு → பர → பரல் எனப் பெயராதல் போல கட → கடல் பெயராயிற்று. 'ல்' சொல்லாக்க ஈறு. தெலுங்கில் கடல் என்னும் வினைச்சொல் அகலுதல், விரிதல் பொருளுடையது. 'கடலிகடலி' என்னும் சொல் தெலுங்கில் அகன்றகன்று எனப் பொருள் படுதலை ஒப்பு நோக்குக.]

கடல்[3] *kaḍal,* பெ.(n.) 1. மிகுதி; abundance. **அண்ணாவின் பேச்சைக் கேட்க மக்கள் அலை கடலெனத் திரண்டனர்.** 2. நூறு கோடி கோடி என்னும் பேரெண் (வெள்ளம்); the large number of hundred crores of crore. 3. குன்று விண்மீன் (சதயநாள்); the 24th nakṣatra, so called from Varuna the sea-god being the deity of the constellation.

[கட = செல், போ, அகல். கடல் = அகன்றது, பரந்தது. மிகுந்தது, மிகுதி, பெரிது, மதிக்கத்தக்கது என்னும் பொருளில் சதயம் எனப்படும் குன்று நாண்மீனைக் குறித்தது.]

கடல்[4] *kaḍal,* பெ.(n.) அலை; wave.

தெ. கடல்.

[கட → கடல். அடுத்தடுத்துச் செல்வது, அடுத்தடுத்துப் பாய்வது.]

கடல்[5] *kaḍal,* பெ.(n.) பெற்றம், ஆன் (அக.நி.); cow.

[கட → கடல். அகற்சி, அகன்ற மடியுடையது, பெரிய மடியுடைய பெற்றம்.]

கடல்[6] *kaḍal,* பெ.(n.) கட்டியாக உள்ளது, கல், பாறை (கருநா.); that which is firm, a stone, a rock.

க. கடல்

[கடு → கட → கடல். கடு = கடுமை.]

கடல்கட்டி *kaḍal-kaṭṭi,* பெ.(n.) 1. கடலாளிகளை மந்திரத்தால் ஏதங்களிலிருந்து காப்பவன்; one who saves the divers by conjuration. 2. செம்படவன்; fisherman.

ம. கடல்க்கெட்டி

[கடல் + கட்டி - கடல்கட்டி. (இரண்டன் தொகை). கட்டி = கட்டுபவன்.]

மந்திர வலிமையால் கட்டிக்காப்பவன். மந்திரவலிமையால் கொடிய விலங்குகள் தாக்காதவண்ணம் அவற்றின் வாயைக் கட்டும் மந்திரக்காரனை இச் சொல் குறித்தது.

கடல்கட்டு-தல் *kaḍal-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. மந்திரத்தால் வலையில் மீன் விழாதபடி செய்தல்; (நாஞ்.); to prevent, the fish from being caught in the net by sorcery. 2. மந்திரத்தால் புயல் முதலியன கடலில் வீசாதபடி செய்தல் (இ.வ.); to prevent, the tempest by sorcery.

[கடல் + கட்டு - கடல்கட்டு. (இரண்டன் தொகை).]

கடல் கட்டுதல் என்பது மீனவரிடை நிலவும் பழைய நம்பிக்கை.

கடல்கல் *kaḍal-kal,* பெ.(n.) கடற்பயணத் தொலைவுக்குரிய நீட்டல் அளவை, 6080 அடித் தொலைவு; a nautical mile.

மறுவ. கடல்மைல்

*[கடல் + கல் - கடல்கல். இஃது அன்மொழித் தொகையாகிய அல்வழிப் புணர்ச்சியாதலின் லகரம் றகர மெய்யாகத் திரியவில்லை என்க. **கடல்மைல்** பார்க்க; see kadal-mile.]*

கடல்கலக்கி *kaḍal-kalakki,* பெ.(n.) பேய்முசுட்டை, மருந்துக்குப் பயன்படும் பாலைக் கொடிவகை; elephant creeper.

மறுவ. சமுத்திரப்பாலை, கடலக்கம், கடலடக்கி.

கடல்கால் *kaḍal-kāl*, பெ.(n.) **கடற்கால்** பார்க்க; see *kaḍaṟ-kāl*.

[கடல் + கால்.]

கடல்குச்சி *kaḍal-kucci*, பெ.(n.) **கடற்குச்சி** பார்க்க; see *kaḍaṟ-kucci*.

[கடல் + குச்சி.]

கடல்குதிரை *kaḍal-kudirai*, பெ.(n.) **கடற்குதிரை** பார்க்க; see *kaḍaṟ-kudirai*.

[கடல் + குதிரை.]

கடல்கூம்பு *kaḍal-kūmbu*, பெ.(n.) **கடற்கூம்பு** பார்க்க; see *kaḍaṟ-kūmbu*.

[கடல் + கூம்பு.]

கடல்கெலித்தல் *kaḍal-kelittal*, தொ.பெ.(vbl.n.) இரவுப் பொழுதில் கடல்நீர் பளபளத்துக் காணுதல் (நெல்லை மீனவ.); glittering of the sea water at night.

[கடல் + கெலித்தல்.]

கடல்கொடி *kaḍal-koḍi*, பெ.(n.) **கடற்கொடி** பார்க்க; see *kaḍaṟ-koḍi* (சா.அக.).

[கடல் + கொடி.]

கடல்கொள்(ளு)-தல் *kaḍal-koḷ(ḷu)-*, 10 செ.குன்றாவி.(v.t.) கடற்பெருக்கத்தால் நிலப்பகுதி கடலுள் மூழ்கல்; to deluge. *"குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள"* **(சிலப்.11:20).**

[கடல் + கொள்(ளு).]

கடல்கோ-த்தல் *kaḍal-kō-*, 4 செ.கு.வி.(v.i.) **கடல் சோர்-தல்** பார்க்க; see *kaḍal-šōr-*.

[கடல் + கோ. கோத்தல் = கூடுதல், பெருகுதல்.]

கடல்கோள் *kaḍal-kōḷ*, பெ.(n.) **கடற்கோள்** பார்க்க; see *kaḍaṟ-koḷ*.

[கடல் + கோள்.]

கடல்சம்பு *kaḍal-cambu*, பெ.(n.) பத்தியத்திற்குதவும் ஒரு வகைக் கடல் நத்தை; a kind of sea snail; this is useful in diet for patients (சா.அக.).

[கடல் + சம்பு. சம்பு = நத்தை. (சா.அக)]

கடல்சிரை *kaḍal-širai*, பெ.(n.) கொட்டையிலந்தை; seed jujube.

[கடல் + சிரை.]

கடல்சுரப்பு *kaḍal-šurappu*, பெ.(n.) **கடற்கொந்தளிப்பு** பார்க்க; see *kaḍaṟ-kondaḷippu*.

[கடல் + சுரப்பு.]

கடல்சோர்-தல் *kaḍal-šōr-*, 2 செ.கு.வி.(v.i.) கடல் பொங்கி எழுந்து எங்கும் பெருகுதல் **(ஈடு, 4,5:9.)**; to rage and swell as the sea.

[கடல் + சோர்.]

கடல்திட்டு *kaḍal-tiṭṭu*, பெ.(n.) **கடற்றிட்டு** பார்க்க; see *kaḍaṟṟiṭṭu*.

[கடல் + திட்டு.]

கடல்தேங்காய் *kaḍal-tēṅgāy*, பெ.(n.) **கடற்றேங்காய்** பார்க்க; *kaḍaṟṟēṅgāy* (சா.அக.).

[கடல் + தேங்காய்.]

கடல்நச்சுயிரி *kaḍal-naccuyiri*, பெ.(n.) கடல்வாழ் உயிரிகளுக்கும் மாந்தர்களுக்கும் கேடு விளைவிக்கும் கடலுயிரி; sea-poisonous animal.

[கடல் + நச்சுயிரி.]

வகைகள்: 1. ஒற்றைப்புரையன் (ஒருசெல்) உயிரினங்கள் 2. குழியுடலிகள் 3. செல்லிமீன்கள் 4. மெல்லுடலிகள்.

கடல்நண்டு *kaḍal-naṇḍu*, பெ.(n.) 1. கடலில் வாழும் நண்டு; sea - crab. 2. ஓர் அரிய கடல் மூலிகை; a sea herbal. **(சா.அக.)**

[கடல் + நண்டு. பெரிய நண்டு; நண்டு வடிவிலான மூலிகை.]

கடல்நாக்கு *kaḍal-nākku*, பெ.(n.) **கணவாய்**[2] பார்க்க; see *kaṇavāy*[2].

ம. கடல்நாக்கு; க. கடலநாலகே.

[கடல் + நாக்கு.]

கடல்நாய் *kaḍal-nāy,* பெ.(n.) கடல்வாழ் விலங்கு; seal.

மறுவ. நீர் நாய்

ம., க. கடல் நாய்.

[கடல் + நாய்.]


கடல்நாய்

கடல்நீறு *kaḍal-nīṟu* , பெ.(n.) கடல் சிப்பிகளின் சாம்பல்; lime got by burning sea shells.

ம. கடல்நூறு

[கடல் + நீறு. நூறு → நீறு.]

கடல்நுரை *kaḍal-nūṟai,* பெ.(n.) 1. கடலலையில் உண்டாகும் நுரை; foam of the sea. 2. கணவாய் மீனெலும்பு; cuttle fish bone.

ம. கடல்நுர; து. கடல்நுரை.

[கடல் + நுரை.]

கடல்நூல் *kaḍal-nūl,* பெ.(n.) கடலின் தன்மைகளை விளக்கும் நூல்; a book about Oceanography.

[கடல் + நூல்.]

கடல்படுபொருள் *kaḍal-paḍu-poruḷ,* பெ.(n.) கடற்படுபொருள் பார்க்க; see *kaḍaṟ-paḍu-poruḷ.*

[கடல் + படு + பொருள்.]

கடல்மகள் *kaḍal-magaḷ,* பெ.(n.) கடற்பிறந்தாள் பார்க்க; see *kaḍaṟ-piṟandāḷ.*

ம. கடல்மகள்

[கடல் + மகள்.]

கடல்மங்கலம் *kaḍal-magalam,* பெ.(n.) காஞ்சிபுர மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanchipuram district.

ம. கடல்மகள்

[கடலன் + மங்கலம் - கடலன்மங்கலம் - கடல்மங்கலம். கடலன் = கடல்வாணிகன். மங்கலம் = நன்கொடையாக அளிக்கப்பட்ட ஊர்.]

கடல்மங்கை *kaḍal-maṅgai,* பெ.(n.) கடற்பிறந்தாள் பார்க்க (சேரநா.); see *kaḍaṟ-piṟandāḷ.*

ம. கடல்மங்க

[கடல் + மங்கை.]

கடல்மட்டம் *kaḍal-maṭṭam,* பெ.(n.) நிலப்பரப்பின் உயரத்தையும் நீர்ப்பரப்பின் ஆழத்தையும் கணக்கிட உருவாக்கிக் கொண்ட பொது அளவு; mean sea level.

[கடல் + மட்டம்.]

கடல்மது *kaḍal-madu,* பெ.(n.) கடலுப்பு பார்க்க; see *kaḍal-uppu.*

[கடல் + மது.]

கடல்மல்லை *kaḍal-mallai,* பெ.(n.) சென்னைக்குத் தெற்கே கடலோரம் அமைந்துள்ள மாமல்லபுரத்தின் முன்னைப் பெயர்; the old name of Māmallapuram situated on the shore south of Chennai.

மறுவ. மகாபலிபுரம், மாமல்லபுரம், மல்லை.

[கடல் + மல்லை. மாமல்லன் பெயரிலமைந்த ஊர்.]

பெரிப்ளூசு ஆப் எரித்ரியன் சீ என்ற நூலிலும் தாலமியின் பயண நூலிலும் குறிப்பிடப்படும் பழைய துறைமுகம். ஏழாம் நூற்றாண்டுத் திருமங்கையாழ்வாரின் பாடல்களில் 'கடல்மல்லை' என்று குறிக்கப்படுகிறது. பல்லவர்களின் குடைவரைக் கோயில்களாலும் ஒற்றைக் கற்றளிகளாலும் உலகப் புகழ் பெற்றது. ஒன்றிய நாடுகள் பேரவை 'உலகவரலாற்றுச் சின்னங்கள்' பட்டியலில் இதனைச்சேர்த்துப் பெருமைப்படுத்தியுள்ளது.

கடல்மாது *kaḍal-mādu,* பெ.(n.) கடற்கன்னி பார்க்க; see *kaḍaṟ-kaṉṉi.*

ம. கடல்மாது

[கடல் + மாது.]

கடல்மீன் *kaḍal-mīṉ*, பெ.(n.) கடலில் வாழும் மீன்; sea fish. 'கடல் மீனுக்கு நுளையான் இட்டது சட்டம்' (பழ.).

[கடல் + மீன்.]

கடல்முதலை *kaḍal-mudalai*, பெ.(n.) கடலில் வாழும் முதலை; sea crocodile.

[கடல் + முதலை.]



கடல் முதலை

கடல்முயல் *kaḍal-muyal*, பெ.(n.) ஓடில்லாத நத்தை (க.ப.அக.); a kind of snail.

[கடல் + முயல்.]

கடல்முள்ளி *kaḍal-muḷḷi*, பெ.(n.) 1. தாழைச்செடி; fragrant screw-pine. 2. கடற்பழவகை (சமுத்திரப்பழவகை); Andamāṉ Indian oak. 3. ஒருவகைக் கத்தரி; Indian night shade.

[கடல் + முள்ளி.]

கடல்முறைக்காசு *kaḍal-muṟai-k-kāšu*, பெ.(n.) கரைவலை வளைப்பில் மீனவர் அடையும் அல்லது பெறும் காசு (தஞ்சை மீனவ.); cash given to fisherman while executing 'drag-net' for catching fish.

[கடல் + முறை + காசு.]

கடல்முனை *kaḍal-muṉai*, பெ.(n.) கடல்முடிவிடம்; cape. (க.ப.அக.)

[கடல் + முனை.]

கடல்மைல் *kaḍal-mail*, பெ.(n.) கடலில் கலஞ்செலுத்துவோர் கலஞ்செல்லும் தொலைவை அளவிடும் நீட்டல் அளவு; nautical mile, the distance on the surface of the earth subtended by one minute at the centre of the earth.

[கடல் + மைல். E. mile. > த. மைல். மைல் = ஒரு கல் தொலைவு. கடல்கல் பார்க்க; see *kaḍal kal.*]

உலக உருண்டையின் மேற்பரப்பு நிலநூலாரால் 360 பாகை நெடுங்கோடு (நெட்டாங்கு - longtitude) களாகவும், 180 பாகை அகலக்கோடு (அகலாங்கு - latitude)களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. கடல்நூலார் நெடுங்கோடு பாகை ஒவ்வொன்றையும் 60 கீழ்ப்பாகை (கலை) களாகப் பிரித்து ஒரு கீழ்ப்பாகை (கலை - minute) கோணத் தொலைவுக்குக் கடல்கல் (கடல்மைல் - nautical mile) எனப் பெயரிட்டனர். இத் தொலைவு உலகின் சுற்றளவில் 1/21600 பங்கு அல்லது 6080 அடி என்பர். 1.150779 நிலக்கல் (land mile) அல்லது 1.852 கி.மீ. தொலைவுக்கு நிகரானது.

கடல்யாத்திரை *kaḍal-yāttirai*, பெ.(n.) கடற்செலவு பார்க்க; see *kaḍaṟ-celavu*.

ம. கடலோட்டம்

[கடல் + யாத்திரை.]

கடல்யானை[1] *kaḍal-yāṉai*, பெ.(n.) யானையைப்போல் நீண்ட துதிக்கையுடைய கடல் உயிரி; elephant-seal.

[கடல் + யானை.]

இவ் வுயிரிகள் இந்துமாக் கடலில் வாழ்கின்றன (அபி.சிந்.).

கடல்யானை[2] *kaḍal-yāṉai*, பெ.(n.) திமிங்கிலம்; whale.

ம. கடல்ஆன.

[கடல் + யானை.]

கடல்வண்டு *kaḍal-vaṇḍu*, பெ.(n.) ஒருவகைக் குடை வண்டு (யாழ்.அக.); a kind of perforating beetle.

[கடல்[1] + வண்டு.]

கடல்வண்ணத்துப்பூச்சி *kaḍal-vaṇṇattu-p-pūcci*, பெ.(n.) திமிங்கிலத்தின் உணவாகும் ஒருவகைக் கடலுயிரி; sea butterfly.

[கடல் + வண்ணம் + அத்து + பூச்சி. அத்து - சாரியை].

கடல்வண்ணன் *kaḍal-vaṇṇaṉ*, பெ.(n.) 1. திருமால்; an epithet of Viṣṇu or Kriṣṇaṉ. 2. ஐயனார் (சூடா.); Aiyaṉār, a village deity. "பூவுளானு மப்பொருகடல் வண்ணனும்" (தேவா.திருக்கேதீச். திருஞா.9.)

ம. கடல்வர்ணன்.

[கடல் + வண்ணன்.]

கடல்வண்ணனை *kaḍal-vaṇṇaṉai*, பெ.(n.) பெருங்காப்பிய வுறுப்புகளுளொன்று; a discription of the ocean being one of the ingredients of the epic.

[கடல் + வண்ணனை.]

கடல்வரால் *kaḍal-virāl*, பெ.(n.) நாலடி நீளம் வளரக்கூடியதும் பழுப்புநிறமுடையதுமான பெரிய கடல்மீன் வகை; a sea fish olivaceous brown, attaining more than 4 ft. in length.

[கடல் + வரால்.]

கடல்வாணிகம் *kaḍal-vāṇigam*, பெ.(n.) கடல் கடந்து செய்யும் வாணிகம்; trade by sea.

[கடல் + வாணிகம்.]

கடல்வாத்து *kaḍal-vāttu*, பெ.(n.) மீன்வகை; eider.

ம. கடல்வாத்து. (penguin)

[கடல் + வாத்து.]

கடல்வாய்க்கால் *kaḍal-vāykkāl*, பெ.(n.) கடற்கழி பார்க்க; see *kaḍaṟ-kaḻi*.

[கடல் + வாய்க்கால்.]

கடல்வாயில் *kaḍal-vāyil*, பெ.(n.) தஞ்சை மாவட்டம் திருச்சோற்றுத்துறை அருகில் இருந்த ஒரூர்; a place near Tiruchchotturai in Tanjore district. *"பொய்கை நாட்டு மிய்ப்பிலாற்று கடல்வாயில் கிழான் திருவடி பூதி"* (தெ.இ.கல்.தொ.19.கல்.36).

மறுவ. கடற்புறம், கடற்கரை, கடல்முகம்.

[கடல் + வாயில் - கடல்வாயில் = கடலோரத்து ஊர்.]

கடல்விசிறி *kaḍal-viširi*, பெ.(n.) விசிறிபோல் முகப்புள்ள ஒருவகைப் பவழப்புற்று; sea-fan.

[கடல் + விசிறி.]



கடல் விசிறி

கடல்விராஞ்சி *kaḍal-virāñji*, பெ.(n.) ஒருவகைக் கடற் பாசி; a kind of sea shrub.

[கடல் + விராஞ்சி.]

கடல்விளக்கு *kaḍal-viḷakku*, பெ.(n.) ஒருவகைக் கடல் மீன் (சேரநா.); a kind of marine fish.

ம. கடல்விளக்கு

[கடல் + விளக்கு.]

கடல்விளையமுதம் *kaḍal-viḷai-y-amudam*, பெ.(n.) கடலுப்பு; salt, being a valuable product of the sea. "கடல்விளை யமுதங் கண்ட பொழுதின்" (சீவக. 805).

[கடல் + விளை + அமுதம்.]

கடல்வெள்ளரிக்காய் *kaḍal-veḷḷari-k-kāy*, பெ.(n.) கடலட்டை[1] பார்க்க; *kaḍal-aṭṭai*[1]. (க.ப.அக.)

[கடல் + வெள்ளரி + காய்.]



கடல் வெள்ளரிக்காய்

கடல்வேட்டம் *kaḍal-vēṭṭam*, பெ.(n.) கடலிலே மீன் பிடித்தல்; fishing in sea. *"பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லாது"* (பட்டினப்.93).

[கடல் + வேட்டம் (வேட்டை).]

கடல்வைப்பு *kaḍal-vaippu*, பெ.(n.) கடல் வடிந்த பிறகு தெரியும் தரைப்பகுதி, முழுவடை; land formed by the receding of the sea.

மறுவ. கடல் முழுவடை.

ம. கடல் வய்ப்பு.

[கடல் + வைப்பு. வைப்பு = மூழ்கடிக்காமல் கடல் வைத்துவிட்டுப்போன நிலப்பகுதி; விட்டுவைத்த நிலப்பகுதி. வைத்தல் = இருத்துதல், இருத்திக் கொள்ளுதல். நீர் வடிந்த நிலப்பகுதியை முழுவடை என்றும் கூறுவர்.]

கடலகப்பெரும்படைத்தலைவன் *kaḍalaga-p-perumpaḍai-t-talaivan,* பெ.(n.) கடலில் நிலையாகத் தங்கிய பெருங்கப்பற்படையின் தலைவன்; Admiral, Commander-in-chief of Navy stationed at the mid-sea with a standing army skilled in marine warfare. "வேள் மருகன்மகன் கடலகப் பெரும்படைத் தலைவன் எங்குமான்'' (ஆவணம் 1991: பக்.68-69-பூலாங்குறிச்சிக் கல்வெட்டு).

[கடல் + அகம் + பெரும் + படை + தலைவன் = கடலகப் பெரும்படைத் தலைவன்.]

அயல் நாட்டுக் கடற்போர்களிலும் தம் நாட்டோரக் கடற் போர்களிலும் வரலாற்றுக் கால நெடுகிலும் தொடர்ந்து ஈடுபட நேர்ந்ததால், தமிழ் வேந்தர்கள் நிலைத்த கடற்படையை நடுக்கடலில் நிறுத்தியிருந்தனர் என்பதற்கு அறுதியிட்ட உறுதியான சான்றாக முகவை (இராமநாதபுரம்) மாவட்டப் பூலாங்குறிச்சி கல்வெட்டு அமைந்துள்ளது.

கடலகப் பெரும் படைத்தலைமைப் பொறுப்பேற்றிருந்த வேள் மருகன் மகனாகிய எங்குமான் (கோச்சேந்தன் கூற்றன் 192 ஆம் ஆண்டில்) ஒல்லையூர்க் கூற்றத்து வேள்துர் பச்செறிச்சில் மலைமுகட்டில் தேவகுலம் (நீத்தார் கோயில்-பள்ளிப்படை) கட்டினான் என்று கூறப்படுகிறது. இது களப்பிரர்க்குப் பிற்பட்ட பாண்டியர் காலத்துக் கல்வெட்டாகலாம்.

கடலகம் *kaḍal-agam,* பெ.(n.) 1. நிலம் (யாழ்.அக.); earth. 2. ஆமணக்கு; castor. 3. ஊர்க்குருவி; a sparrow. 4. நாயுருவி; Indian burr.

[கடல் + அகம் - கடலகம். கடலுதல் + விரிதல்.]

அகன்றநிலம், அகன்றஇலை கொண்ட ஆமணக்கு, பருத்தகுருவி, படர்ந்தசெடி ஆகியவற்றைக் குறிப்பால் உணர்த்தியது.

கடலகழாய்வு *kaḍal-agaḻ-āyvu,* பெ.(n.) கடலுள் அமிழ்ந்தவற்றை ஆராயும் முறை; method to conduct archaeological research on the ocean floor.

[கடல் + அகழ் + ஆய்வு.]

தரையில் அகழ்ந்து, புதைந்துள்ள பொருள்களை ஆராய்வது போன்று கடலுள் ஆழ்ந்தவற்றை ஆராய்தல்.

கடலஞ்சுகம் *kaḍal-añjugam,* பெ.(n.) தருப்பைப்புல்; a sacrificial grass.

[கடல் = அகன்ற. கடல் + அஞ்சுகம்.]

கடலட்டை[1] *kaḍal-aṭṭai,* பெ.(n.) வெள்ளரிக்காய் போன்ற உடலமைப்போடு கடற்பகுதியில் வாழும் அட்டை வகை; a kind of sea leech, in the shape of a cucumber.

ம. கடலட்ட.

[கடல் + அட்டை.]



கடலட்டை

கடலட்டை[2] *kaḍal-aṭṭai,* பெ.(n.) பந்து போன்ற உடலமைப்புடையதும் கடலடிப் பாறைப் பகுதிகளில் வாழ்வதுமான முட்டோலித் தொகுதிசார் விலங்கு; sea urchin - an animal having a ball shaped and thorny body which is dewelling in deep sea, rocky places (அறி.கள.).

ம. கடலட்ட

[கடல் + அட்டை.]

கடலடம்பு *kaḍal-aḍambu,* பெ.(n.) கடற்கரையில் வளரும் ஒருவகைச் செடி; a species of sea-side potato (சா.அக.).

[கடல் + அடம்பு.]

கடலடி[1] *kaḍal-aḍi,* பெ.(n.) கடலின் அடிப்படுகை; senthic, sea bottom. (க.ப.அக.)

[கடல் + அடி.]

கடலடி[2] *kaḍalaḍi,* பெ.(n.) கருவாமரம்; cinnamon tree.

[கடுவல் + அடி - கடுவலடி → கடலடி.]

கடலடிக்குன்று *kaḍal-aḍi-k-kuṉṟu,* பெ.(n.) கடலின் கீழுள்ள பாறை; submarine ridge. (க.ப.அக.)

[கடல் + அடி + குன்று.]

கடலத்தி *kaḍal-atti,* பெ.(n.) காரைச்செடி; common honey thorn. (சா.அக.)

[கடல் = கட்டி; முள்முருடு. கடல்[6] + அத்தி.]

கடலப்பம் *kaḍal-appam,* பெ.(n.) கடலடி மணலில் புதைந்து வாழும் முட்டோலிவகை விலங்கு; cake urchin (அறி.கள.).

[கடல் + அப்பம். அப்பம் = வட்டமானது, வட்டமான உடலையுடைய விலங்கு.]



கடலப்பம்

கடலம் *kaḍalam,* பெ.(n.) ஆமணக்கு; castor plant (சா.அக.).

[கடல் = அகன்றது. கடல் → கடலம் = அகன்ற இலையுடை ஆமணக்கு.]

கடலம்மை *kaḍal-ammai,* பெ.(n.) கடல் தாய், கடல்; sea considered as a mother, sea. (க.ப.அக.)

ம. கடலம்மை

[கடல் + அம்மை.]

கடலமிழ்து *kaḍal-amiḻdu,* பெ.(n.) கடல்விளையமுதம் பார்க்க; see *kaḍal-viḷai-y-amudam.*

[கடல் + அமிழ்து.]

கடலமுதம் *kaḍal-amudam,* பெ.(n.) கடலுப்பு பார்க்க; see *kaḍal-uppu.*

[கடல் + அமுதம்.]

கடலர் *kaḍalar,* பெ.(n.) நெய்தல்நில மக்கள் (திவா.); fishermen, inhabitants of marine tract.

[கடல் + அர்.]

கடலரிமா *kaḍal-arimā,* பெ.(n.) கடலில் வாழும் பாலூட்டி இன விலங்கு; sea lion.

[கடல் + அரிமா. அரிமா போன்ற தோற்றமுடைய விலங்கு.]



கடலரிமா

கடலல்லி *kaḍal-alli,* பெ.(n.) கடலடிப்பாறையில் வாழ்வதும் (அல்லி)மலர் போன்ற அமைப்புடைய உயிரி; sea-lilly.

[கடல் + அல்லி. அல்லிமலர் போன்ற அமைப்புடை உயிரி.]



கடலல்லி

கடலலை *kaḍal-alai,* பெ.(n.) கடல் பரப்பின்மேல் காற்று வீசும்போது கடல் நீரில் ஏற்படும் அசைவுகள்; wave of the sea.

[கடல் + அலை.]

கடலழிஞ்சில் *kaḍal-aḻiñjil,* பெ.(n.) அழிஞ்சில் மரவகை (மூ.அ.); a species of alangium.

[கடல் + அழிஞ்சில்.]

கடலறைவோடல் *kaḍal-aṟai-vōḍal,* தொ.பெ.(vbl.n.) எரிகல் விண்ணிலிருந்து வீழ்தல்; meteor falling down from the sky.

[கடல் + அறை + ஓடல். அறை = அற்று. அறைஓடல் = அற்று ஓடுதல், இருக்கும் இடத்திலிருந்து நிலைகெட்டு வீழ்தல்.]

பரதவர் விண்மீன்களை வெள்ளி என்பர். வானிலிருந்து எரிகல் விழுவதை அறைவோடல் என்பர். பரதவர்கள் கடலிலிருந்து இந்நிகழ்வைப் பார்ப்பதால் கடலறைவோடல் என்றனர். பரதவர்கள் வெள்ளியை அரும்வெள்ளி, கடப்பவெள்ளி, கூட்டுவெள்ளி, சோற்றுவெள்ளி, விடிவெள்ளி எனப் பல பெயர்களால் அழைப்பர். விழும் விண்மீனை இருப்பிட அடிப்படையில் கூட்டு வெள்ளி அறைஓடுதல், விடிவெள்ளி அறைஓடுதல் என்று அழைப்பர். விண்மீன் அறைஓடினால் புயல், காற்று கொந்தளிப்பு ஏற்படும் என்று நம்பினர். (க.ப.அக.)

கடலன் *kaḍal-aṉ,* பெ.(n.) 1. நெய்தல் நிலத்தவன்; fisherman, inhabitants of marine regions. 2. கடற்பயணம் செய்வோன்; sea farer. 3. கடல் வாணிகம் செய்வோன்; a trader by sea.

[கடல் + அன். 'அன்' ஆ.பா. ஈறு.]

கடலாடி[1] *kaḍal-āḍi,* பெ.(n.) நாயுருவி (மலை.); a plant growing in hedges and thickets.

ம. கடலாடி

[குடில் + அடி - குடிலடி → கடலடி → கடலாடி.]

கடலாடி[2] *kaḍal-āḍi,* பெ.(n.) இராமநாதபுர மாவட்டக் கடற்கரையூர்; sea shore village in Rāmanāda puram district.

[கடல் + அடி - கடலடி → கடலாடி.]

நீர்த்துறைக்கு நீரடி என்னும் வழக்கு உள்ளது. அதுபோன்றே கடற்றுறை என்ற பொருளில் கடலடி என்று வழங்கிக் 'கடலாடி' என மருவி இருக்கலாம்.

கடலாடு-தல் *kaḍal-āḍu-,* 5 செ.கு.வி.(v.i.) கடலில் நீராடுதல்; to bathe in the sea. (கடலாடுகாதை - சிலம்பு.) (சா.அக.)

ம. கடலாடுக; தெ. கடலாடு (கடற்பயணம்)

[கடல் + ஆடு.]

கடலாத்தி *kaḍal-ātti,* பெ.(n.) 1. வெடங்குருணி, ஒருவகை ஆத்தி; stag's horn trumpet flower. 2. பசலாத்தி; spathe trumpet tree (சா.அக.).

[கடல் + ஆத்தி.]

கடலாமணக்கு *kaḍal-āmaṇakku,* பெ.(n.) **காட்டாமணக்கு** (மலை.); common physic nut.

ம. கடலாவணக்கு

[கடல் + ஆமணக்கு.]

கடலாமை *kaḍal-āmai,* பெ.(n.) கடலில் வாழும் ஆமைவகை (தேவா.1218-5); a kind of marine turtle.

ம. கடலாம

[கடல் + ஆமை.]

வகைகள்: அழுங்காமை, ஏழுவரியாமை, சிற்றாமை, பச்சையாமை, பெருந்தலையாமை.

கடலாரம் *kaḍal-āram,* பெ.(n.) கடல் முத்துமாலை; a garland of pearls collected from the oyster. *"கோவா மலையாரம் கோத்த கடலாரம்"* *(சிலப்.17:உள்வரி.1).*

[கடல் + ஆரம்.]

கடலாரை *kaḍalārai,* பெ.(n.) காட்டாரை; wild sorrel of the Marsilea genus (சா.அக.).

[கடல் + ஆரை.]

கடலாளி *kaḍal-āḷi,* பெ.(n.) 1. கடற்பரப்பிலேயே தம் வாழ்நாளின் பெரும்பகுதியைச் செலவிடுவோர்; a sailor, mariner. 2. கடலை ஆளும் மாந்தர், மீனவர்; fisher men.

ம. கடலாளி

[கடல் + ஆளி.]

கடலானை *kaḍal-āṉai,* பெ.(n.) *கடல்யானை*[2] பார்க்க; *see kaḍal-y-āṉai*[2].

ம. கடலாந

[கடல் + ஆனை.]

கடலி *kaḍali,* பெ.(n.) 1. பூமருது; bloodwood tree. 2. மூக்கறட்டை; spreading hogweed. 3. அடம்பு; sea-flower. 4. சீனப்பூ; China minde. 5. பூங்காலா மீன்; golden carp (சா.அக.).

[கடல் → கடலி. கடல்வழிக் கொண்டு வந்தவை.]

கடலிச்சி *kaḍal-icci,* பெ.(n.) சீனக் கற்பூரமரம்; camphor tree of China (சா.அக.).

[கடல் + இச்சி.]

கடலிடுக்கு *kaḍal-iḍukku,* பெ.(n.) இருபெரும் நீர்ப்பகுதிகளை இணைக்கும் குறுகலான நீரிணைப்பு; a strait.

ம. கடலிடுக்கு; **க.** கடல்காலுவெ, கடலுகாலுவெ.

[கடல் + இடுக்கு.]

கடலிதயம் *kaḍal-idayam,* பெ.(n.) கடலடித் தரையில் மண்ணில் புதைந்து வாழ்வதும் மாந்த இதயத்தையொத்த வடிவுடையதும் முட்டோலி வகையுமான கடலுயிரி; heart urchin. (அறி.கள.)

[கடல் + இதயம். இதயம் போன்ற அமைப்புடைய விலங்கு.]

கடலிமுகை *kaḍali-mugai,* பெ.(n.) கடலிப் பூவா மரம்; sea-flower wood (சா.அக.).

[கடலி + முகை.]

கடலியல் *kaḍal-iyal,* பெ.(n.) கடல்வாழ் உயிர்கள், கடல்படு பொருள்கள் பற்றிய ஆய்வியற்றுறை; oceanography.

[கடல் + இயல்.]

கடலிறக்கம் *kaḍal-iṟakkam,* பெ.(n.) அலைவாய் நீர் இறக்கம்; low tide.

[கடல் + இறக்கம்.]

கடலிறஞ்சி *kaḍal-iṟañji,* பெ.(n.) கடற்கரை மரவகை. (பதார்த்த.901); seaside-plum.

[கடல் + இறஞ்சி.]

கடலிறாஞ்சி *kaḍāl-iṟāñji,* பெ.(n.) கடலிறஞ்சி பார்க்க; see *kaḍāl-iṟañji.*

[கடலிறஞ்சி → கடலிறாஞ்சி.]

கடலிறைவன் *kaḍal-iṟaivaṉ,* பெ.(n.) வாரணன் (உபதேசகா.உருத்திராக்க.245); Varunan, the god of the sea.

[கடல் + இறைவன்].

கடலு-தல் *kaḍalu-,* 5 செ.கு.வி.(v.i.) அகலுதல், பரவுதல்; to expand, to get enlarged.

தெ. கடலு

[கடல் → கடலு. கடல்[1]-தல் பார்க்க; see kaḍal[1]-.]

கடலுடும்பு *kaḍal-uḍumbu,* பெ.(n.) ஒருவகைக் கடல்மீன் (வின்.); a kind of sea-fish.

ம. கடலுடும்பு

[கடல் + உடும்பு.]

கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி *kaḍaluṇ-māynda-ilamperuvaḻudi,* பெ.(n.) கடலில் உயிர்நீத்த பாண்டியன்; a Pāṇḍiaṉ king who attained watery grave in the sea.

[கடல் + உள் + மாய்ந்த + இளம் + பெரு + வழுதி.]

பாண்டிய அரசமரபினரான இவர் இளமையில் கற்பவை கசடறக்கற்று, அக் கல்விக்குத் தக ஒழுகும் மேம்பாடுடையவர். ‘உண்டாலம்ம’ எனத் தொடங்கும், புகழ்மிக்க புறநானூற்றுப் பாடலைப் பாடியவர். கலமூர்ந்து செல்கையில் கடும் புயற்காலத்தில் கலங்கவிழ்ந்து மாண்டார். அதனால் அவரைச் சான்றோர் கடலுண் மாய்ந்த இளம்பெரும் வழுதி என்று குறித்தனர்.

கடலுப்பு *kaḍal-uppu,* பெ.(n.) கறியுப்பு; sea-salt. “கர்ப்பூரம் போலக் கடலுப் பி[illegible]தாலும்” (நீதிவெண்.33).

ம. கடலுப்பு

[கடல் + உப்பு.]

கடலுராய்ஞ்சி *kaḍal-urāyñji,* பெ.(n.) கடற்பறவை வகை (வின்.); a kind of sea-bird.

[கடல் + உராய்ஞ்சி. கடல் மட்டத்தில் தாழப் பறக்கும் பறவை.]

கடலுல்லம் *kaḍal-ullam,* பெ.(n.) கடலில் வாழும் உல்லமீன்வகை (வின்.); a kind of hilsa fish in sea.

[கடல் + உல்லம்.]

கடலுளி *kaḍaluḷi,* பெ.(n.) கருவண்டு; black beetle (சா.அக.).

[கடல் + உளி - கடலுளி.]

கடலுளுவை *kaḍal-uḷuvai,* பெ.(n.) 1. கப்பலோட்டி மீன்; sucker-fish. 2. ஓர் உளுவை; sea - mud - fish distinguished from river fish.

[கடல் + உளுவை.]

கடலூசிமீன் *kaḍal-ūši-mīṉ,* பெ.(n.) கடலில் வசிக்கும் ஊசி மீன்; the garfish (சா.அக.).

[கடல் + ஊசி + மீன்.]

கடலூர்[1] *kaḍalūr,* பெ.(n.) சோழ மண்டலக் கடற்கரையில் அமைந்துள்ள கடலூர் மாவட்டத்தின் தலைநகரம்; a well known sea-side city, capital of Cuddalore district, situated on the Coromondal coast.

மறுவ. திருப்பாதிரிப்புலியூர்

[கூடல் + ஊர் - கூடலூர் → கடலூர். இந் நகரின் முந்துபெயர் கூடலூர். இப் பெயர் மருவிக் கடலூர் என்றாயிற்று. இன்றும் இந் நகரத்தின் ஒரு பகுதி கடலூர் பழைய நகரம் என்றும், கூடலூர் என்றும் வழங்கப்படுவது இதனை அரண் செய்வதைப் போலுள்ளது. கடற்கரையில் அமைந்ததால் கடலூர் என்று வழங்குதலும் பொருத்தமுடையதாயிற்று.]

கடலூர்[2] *kaḍalūr,* பெ.(n.) காஞ்சிபுரம் வட்டத்து ஊர்; a village in Kanchipuram district.

[கடலன் + ஊர் - கடலனூர் → கடலூர்.]

கடலெடு-த்தல் *kaḍal-eḍu-,* 4 செ.கு.வி.(v.i.) கடல் பொங்குதல் (வின்.); to overflow or encroach, as the sea.

ம. கடலெடுக்குக

[கடல் + எடு.]

கடலெடுப்பு *kaḍal-eḍuppu,* பெ.(n.) கடலரிப்பு (சேரநா.); sea erosion.

ம. கடலெடுப்பு

[கடல் + எடுப்பு.]

கடலெண்ணெய் *kaḍal-eṇṇey,* பெ.(n.) கடலை யெண்ணெய் பார்க்க; see *kaḍalai-y-eṇṇey.*

[கடலையெண்ணெய் → கடலெண்ணெய் (கொ.வ.).]

கடலெல்லை *kaḍal-ellai,* பெ.(n.) உலகம்; the earth, so called because it has the sea as its limit or boundary. *"வெண்குடை யின்னிழல்... கடலெல்லை நிழற்றலால்" (சீவக. 2580).*

[கடல் + எல்லை.]

கடலெலி *kaḍal-eli,* பெ.(n.) கடல்மீன்வகை (வின்.); a kind of sea - fish.

[கடல் + எலி.]

கடலெள் *kaḍel-el,* பெ.(n.) எள்வகை (வின்.); a variety of gingelly seed.

[கடல் + எள். கடல் வழியாக இறக்குமதியான எள்.]

கடலேடி *kaḍal-ēḍi,* பெ.(n.) கொழுமீன், கடற்பன்றி (சேரநா.); porpoise sea-pig.

[கடல் + ஏடி. ஏடி = கடல் பன்றி.]

கடலேத்தம் *kaḍal-ēttam,* பெ.(n.) கடலேற்றம் பார்க்க; see *kaḍal-ērṟam.*

[கடல் + (ஏற்றம்) ஏத்தம்.]

கடலேலகம் *kaḍal-ēlagam,* பெ.(n.) காரெள்; black gingelly seed (சா.அக.).

[கடல் + (எள்) → ஏலகம். (கொ.வ.).]

கடலேற்றம் *kaḍal-ērṟam,* பெ.(n.) அலைவாய் நீரேற்றம்; high tide. (சேரநா.)

ம. கடலேற்றம்

[கடல் + ஏற்றம்.]

கடலைக்கட்டி *kaḍalai-k-kaṭṭi,* பெ.(n.) உடம்பு முழுவதும் கடலையைப் போல் கொப்புளங்களை யெழுப்பித் துன்புறுத்துமோர் நோய்; a disease of the skin devloping blisters of about the size of, lentil seeds (சா.அக.).

Skt. vasūrikai

[கடலை + கட்டி.]

கடலைக்கம்பி *kaḍalai-k-kambi,* பெ.(n.) ஆடையின் ஒருவகைக்கரை; narrow border for clothings, resembling *kadalai.*

[கடலை + கம்பி.]

கடலைக்காடி *kaḍalai-k-kāḍi,* பெ.(n.) கடலைப்புளிப்பு பார்க்க; see *kaḍalai-p-puḷippu* (சா.அக.).

[கடலை + காடி.]

கடலைக்காய் *kaḍalai-k-kāy,* பெ.(n.) நிலக்கடலை; ground nut, peanut.

மறுவ. வேர்க்கடலை, மணிலாக்கொட்டை.

க. கடலெகாயி; ம. கடலயிக்கா; உரா. கடலெகாயி.

[கடலை + காய்.]

கடலைக்கொட்டை *kaḍalai-k-koṭṭai,* பெ.(n.) கடலைக்காய் பார்க்க; see *kaḍalai-k-kāy.*

[கடலை + கொட்டை.]

கடலைச்சுண்டல் *kaḍalai-c-cuṇḍal,* பெ.(n.) ஊற வைத்த கடலையை வேகவைத்துத் தாளித்த உண்பண்டம்; a preparation of bengal gram, pea etc.

ம. கடலச்சுண்டல்

[கடலை + சுண்டல்.]

கடலைப்பட்டாணி *kaḍalai-p-paṭṭāṇi,* பெ.(n.) 1. பட்டாணிக்கடலை (இ.வ.); pea nut. 2. புடைவை வகை (பஞ்ச. திருமுக.1162); a kind of saree.

[கடலை + பட்டாணி. பட்டாணிக் கடலையைப் போல் கரையிட்ட புடைவை வகை.]

கடலைப்பணியாரம் *kaḍalai-p-paṇiyāram,* பெ.(n.) 1. திருமணக்காலத்தில் மணமகனுக்குக் கொடுக்க நீளுருண்டை வடிவில் கடலை முதலியவற்றைச் சருக்கரைப்பாகோடு சேர்த்து செய்யப்படும் தின்பண்டம்; cone shaped confection of Bengal gram etc., presented in a wedding to the bride - groom. 2. கடலைமாவாலான பணியாரவகை (நெல்லை); a confection made of Bengal gram flour. 3. கடலை உருண்டை; a ball or cake of fried ground nut and sugar (சா.அக.).

மறுவ. பருப்புத்தேங்காய்

[கடலை + பணியாரம்.]

கடலைப்பயறு *kaḍalai-p-payaṟu,* பெ.(n.) கடலையின் மேல்தோல் நீக்கிய பருப்பு (இ.வ.); halved grams.

[கடலை + பயறு.]

பயறு என்னும் சொல் பருப்பு என்னும் பொதுப்பொருளில் வருவது அருகி வழங்கும் இடவழக்கு. அளவில் சிறிய வித்துப் பயறு ஆகும். (எ.டு.) நரிப்பயறு, பாசிப்பயறு. கொட்டையினின்று உடைத்தெடுப்பது பருப்பு. பெரும்பாலும் பருப்பு சற்றுப் பருத்த தொலி, தோடு அல்லது ஓடு கொண்டதாய் இருக்கும்.

கடலைப்பருப்பு *kaḍalai-p-paruppu,* பெ.(n.) உடைத்த கொண்டைக்கடலை; broken Bengal - gram.

ம. கடலுண்டி; க. கடலெ பேளெ; படு. கள்ளெபே

[கடலை + பருப்பு.]

கடலைப்புளிப்பு *kaḍalai-p-puḷippu,* பெ.(n.) கடலைச் செடியின் மேல்படியும் பனிநீர் எடுத்துச் செய்யப்படும் காடிவகை (இங்.வை.77); vinegar made by collecting the dew drops of water on Bengal-gram leaves.

[கடலை + புளிப்பு.]

கடலைமணி *kaḍalai-maṇi,* பெ.(n.) கடலைவித்துப் போலும் பொன்மணிகளாலான கழுத்தணிவகை; a kind of necklace with beads resembling Bengal - gram pulse.

[கடலை + மணி.]

கடலையிடல் *kaḍalai-y-iḍal,* பெ.(n.) கடலை முதலிய தவச வகைகளை உடைக்கை; breaking of grains (சா.அக.).

[கடலை + இடல்.]

கடலையுருண்டை *kaḍalai -y-uruṇḍai,* கடலையுடன் இனிப்புப்பாகைக் கலந்து உருண்டையாக்கிய தின்பண்டம்; a ball shaped sweets made up of grams.

[கடலை + உருண்டை.]

கடலையெண்ணெய் *kaḍalai-y-eṇṇey,* பெ(n.) வேர்க்கடலையினின்று எடுக்கப்படும் எண்ணெய்; oil extracted from groundnut.

[கடலை + எண்ணெய்.]

கடலொச்சு *kaḍal-occu,* பெ.(n.) ஒருவகைக் கடல் விலங்கு (சேரநா.); a sea-snail.

ம. கடலொச்சு

[கடல் + ஒச்சு. கடலில் வாழும் ஒருவகை விலங்கு.]

கடலொடுக்கம் *kaḍal-oḍukkam,* பெ(n.) கடலில் ஆரவாரம் எழாதிருக்கும் நிலை (நெல்லை மீனவ.); roarless sea.

[கடல் + ஒடுக்கம்.]

கடலோசை *kaḍal-ōšai,* பெ.(n.) பொருளற்ற வெற்றோசை; empty noise, as the roar of the sea; senseless jumble of words balderdash. *"கடலோசை யாகாதபடி" (திவ். (திருநெடுந்.21, வியா.)*

ம. கடலோசை

[கடல் + ஓசை.]

கடலோட்டம் *kaḍal-ōṭṭam,* பெ.(n.) கடற்பயணம் (சேரநா.); sea voyage, navigation.

ம. கடலோட்டம்; க. கடலோட.

[கடல் + ஓட்டம். ஓட்டம் = செலவு, பயணம்.]

கடலோட்டு-தல் *kaḍal-ōṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) கப்பலோட்டுதல்; to sail a ship (க.ப.அக).

[கடல் + ஓட்டு-.]

கடலோடி *kaḍal-ōḍi,* பெ.(n.) 1.மீகாமன், கலம் செலுத்துவோன்; mariner. 2. கடலில் செல்பவன் (சிலப்.2:2,அரும்.); seafarer. 3. கடற்செலவுக்குரிய ஒருவகைப்படகு (சேரநா.); a kind of boat. 4. கடல் வாணிகன்; sea merchant. 5. பரதவர்; fishermen.

ம. கடலோடி

[கடல் + ஓடி.]

கடலோடு-தல் *kaḍal-ōḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. கடலில் பயணம் செய்தல்; to go on a voyage. *"திரைகட லோடியுந் திரவியந் தேடு" (கொன்றைவே.39).* 2. நீரோட்டத்தின் விரைவு (செங்கை, மீனவ.); fast current.

ம. கடலோடுக

[கடல் + ஓடு.]

கடலோரம் *kaḍal-ōram,* பெ.(n.) கடற்கரையையொட்டியுள்ள நிலப்பகுதி, நெய்தல்நிலம்; coastal area, seashore, beach, maritime tract.

ம. கடலோரம்

[கடல் + ஓரம்.]

கடவஞ்சி *kaḍa-vañji,* பெ.(n.) பொருள்களை வைக்கும்படி அமைக்குஞ் சட்டமிட்ட கால்களுள்ள திறப்படுக்கு; a large wooden rack on four or more legs for keeping household utensils etc.

[குடம் → கடம் + வஞ்சி. மஞ்சம் → மஞ்சி → வஞ்சி.]

கடவட்டி *kaḍavaṭṭi,* கடவாய்ப்பட்டி பார்க்க (சேரநா.); see *kaḍavāy-p-paṭṭi.*

ம. கடவட்டி

[குடம் → கடம் + வாய் + (புட்டி) → வட்டி.]

கடவத்தடி *kaḍava-t-taḍi,* பெ.(n.) 1. ஏணிப்படி; a stile, ladder. 2. வாய்க்காலைக் கடப்பதற்காக அதன் கரைகளுக்கிடையே ஏந்தான வகையில் இடப்படும் மரத்துண்டு; a wooden bar placed across a canal, stream for crossing over.

க. கட, கடகு, கடவு, கடுவு; து. கடபு, கடவு.

[கடவு + தடி.]

கடவது *kaḍavadu,* வினையா.பெ.(vbl.n) செய்ய வேண்டியது; that which should be done, duty. *"காவன் மன்னருங் கடிகையுங் கடவது நிறைத்தார்" (சீவக.2367).*

ம. கடவது. (எ.டு.) வாழக்கடவது, சாகக்கடவது.

[கட + (வ்) + அது.]

கட என்னும் வினைப்பகுதி இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாய் அமைந்து வாழ்த்திலும் இழிப்பிலும் பயன்படும் துணைவினையாய் நிற்கும்.

கடவப்புரசு *kaḍava-p-purasu,* பெ.(n.) முதிரைமரம்; east Indian satin-wood.

[கடவம் + புரசு.]

கடவம்பாக்கம் *kaḍavam-bakkam,* பெ.(n.) விழுப்புரமாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram district.

[கடவு + அம் + பாக்கம் - கடவம்பாக்கம். கடவு = வாயில், வழி, நெடுஞ்சாலை. கடவம்பாக்கம் = பழங்காலத்து நெடுஞ்சாலை அருகில் இருந்த சிற்றூர்.]

கடவர் *kaḍavar,* பெ.(n.) உரிமையாளர், உரிமை பூண்டவர்; one who has rights, heir. *'கடவரன்றி விற்று விலையாவணஞ்செய்து'* (S.I.I.Vol.19 insc.211. S.No.19,16.)

[கடன் → கடம் + அர் - கடமர் → கடவர்.]

கடவல் *kaḍaval,* பெ.(n.) 1. ஒரு வகைப் பெரிய புல் (சேரநா.); the lemon-grass. 2. கடம்பமரம் (கருநா.); common cadamba.

ம. கடவல்; க. கடவல், கடவல, கடவால, கடலா.

[கடவு → கடவல்.]

கடவழி *kaḍa-vaḻi,* பெ.(n.) வேலி முதலியவற்றைக் கடக்கும் குறுக்குவழி (சேரநா.); a stile.

ம. கடவழி

[கடவு → கட + வழி.]

கடவன்[1] *kaḍavaṉ,* பெ.(n.) 1. கடமைப்பட்டவன்; one who is under obligation. *"கடவன் பாரி கைவண் மையே"* (புறநா. 106). 2. தலைவன்; master, lord. *'ஒருவன் ஒரு கிருகத்துக்குக் கடவனாயிருக்கும்'* (ஈடு,1.1:5).

ம. கடவன், கடவியன்.

[கடன் → கடவன்.]

கடவன்[2] *kaḍavaṉ,* பெ.(n.) 1. கடன் கொடுத்தவன், creditor. *"தொடுத்த கடவர்க்கு"* (புறநா.327).

[கடன் + அவன் - கடனவன் → கடவன்.]

கடவனாள் *kaḍavaṉāḷ,* பெ.(n.) சென்ற நாள்; yesterday. (இ.நூ.அக.)

ம. கடவியன்

[கடவு + நாள்.]

கடவாகோட்டை *kaḍava-kōṭṭai,* பெ.(n.) இது புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Pudukkottai district.

[கடவு + கோட்டை - கடவுக்கோட்டை → கடவக்கோட்டை → கடவாகோட்டை. கடவு = வாயில், வழி, நெடுஞ்சாலை.]

கடவாச்சியம் *kaḍa-vācciyam,* பெ.(n.) இசைக்கருவியாகப் பயன்படுத்தும் மட்குடம் (பரத. பாவ.23.); earthen pot used as a musical instrument of percussion.

[குடம் → கடம் + (வாத்தியம்) வாச்சியம்.]

கடவாச்சேரி *kaḍavāc-chēri,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a small village in Cuddalore district.

[கடவு + சேரி - கடவுச்சேரி - கடவச்சேரி - கடவாச்சேரி. கடவு = வாயில், வழி, நெடுஞ்சாலை.]

கடவாய் *kaḍavāy,* **கடைவாய்** பார்க்க; see *kaḍai-vāy.*

ம. கடவா

[கடைவாய் → கடவாய் (கொ.வ).]

கடவாய்ப்பட்டி *kaḍa-vāy-p-paṭṭi,* பெ.(n.) பனை அகணிகளால் முடையப்பட்ட அகன்ற வாயையுடைய கூடை; basket made up of palmyra-stems (நெல்லை.)

மறுவ. கடைவாய்ப்பெட்டி

ம. கடவட்டி

[குடம் → கடம் + வாய் + (புட்டி) → பட்டி.]

கடவாய்ப்பல் *kaḍavāy-p-pal,* பெ.(n.) **கடைவாய்ப் பல்** பார்க்க; see *kaḍaivāy-p-pal.*

[கடைவாய்ப்பல் → கடவாய்ப்பல்.]

கடவார் *kaḍavār,* பெ.(n.) 1. பணிசெய்பவர்; work men. *'அடுத்தமுறை கடவாரின்றிப் பொழி'. (S.I.I.Vol.2 insc.65.S.No.4).* 2. உரிமை உடையவர்; one who has right. 'அவ்வவர்க்கு அடுத்தமுறை கடவார் அந்நெல்லுப்பெற்று' (S.I.I.Vol.2 insc.65 S.No.3.)

[கட + (வ்) + ஆர். கட = கடமை.]

கடவாரம் *kaḍa-vāram,* பெ.(n.) 1. கடற்கரை; sea-shore. 2. கப்பலில் சரக்கு ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் ஏற்றாற்போல் அமைக்கப்பட்ட மேடை (சேரநா.); wharf, guay.

ம. கடவாரம்

[கடல் + வாரம். வாரம் = நீர்க்கரை.]

கடவான்[1] *kaḍavāṉ,* பெ.(n.) 1. வயல் பரப்பில் கழிவுநீர் அல்லது மிகுதியான நீர் அதனை ஒட்டியுள்ள வயலுக்குச் செல்லுதற்கு வெட்டப்பட்ட நீர்மடை. (யாழ்ப்.); channel cut through the ridge of a paddy field to let the surplus water drain or for allowing water to run on to the adjoining field.

க. கடகு

[கடவு → கடவான்.]

கடவி *kaḍavi,* பெ.(n.) 1. தணக்கு (சித்.அக.); whirl-nut tree. 2. மரமஞ்சள்; tree turmeric.

[கடம் → கடவ → கடவி.]

கடவிழி *kaḍaviḻi*, பெ.(n.) கலைமான்; sambar, the Indian elk (சா.அக.).

[கட + விழி - கடவிழி = பெரிய விழியுடைய மான்.]

கடவிறங்கு-தல் *kaḍaviṟaṅgu-*, 5 செ.கு.வி.(v.i.) கால்கழுவுதல் (சோநா.); to wash after defecating.

ம. கடவிறங்ஙுக

[கடவு + இறங்கு. கடவு = நீர்த்துறை.]

கடவு[1]-தல் *kaḍavu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. செலுத்துதல்; to cause to go; to ride, drive, as animal or vehicle. *"ஆனந்த மாக் கடவி" (திருவாச. 35:4).* 2. விரைவுபடுத்துதல்; to speed up. 3. முடுக்குதல்; to urge. *"விரைபரி கடவி" (பு.வெ, 1:8).* 4. ஒட்டுதல்; to drive as animals. 5. படைக்கலன் செலுத்துதல் (வின்.); to despatch, to discharge, as a missile. 6. உசாவுதல்; to enquire. *"யான்தற் கடவின்" (குறுந்.276).*

ம. கடவுக; **க.** கடயிசு; **கோத.** கட்த; **து.** கடபாபுளி; **கே.** கடப்பு; **குரு.** கற்னான; மால. கட்டத்ரே.

[கட → கடவு.]

கடவு[2] *kaḍavu*, பெ.(n.) 1. கடந்து செல்லும் வழி; way. 2. படகு; boat. 3. பக்கம்; direction. *எந்தக் கடவிலிருந்து வருகிறாய்? (இ.வ.).* 4. நீர்த்துறை; port. 5. சந்து, முடுக்கு; lane.

ம. கடவு; **க.** கட; **து.** கடபு.

[கட → கடவு.]

கடவு[3] *kaḍavu*, பெ.(n.) 1. எருமைக்கடா; male buffalo. *"முதுகடவு கடவி" (அழகர்கலம்.33).* 2. ஆட்டுக்கடா; male goat or sheep.

க.,பட. கோண; ம. கூள; **து.** கோண, கோணே; **தெ.** கோணே.

[கடு → கடவு.]

கடவுக்காரன் *kaḍavu-k-kāraṉ*, பெ.(n.) படகோட்டி; boat-man (கருநா.).

க. கடவுகார

[கடவு + காரன். காரன் - செய்பவனைக் குறித்த பெயரீறு.]

கடவுச்சீட்டு *kaḍavu-c-cīṭṭu*, பெ.(n.) வெளிநாடு களுக்குச் செல்ல வழங்கப்படும் நுழைவுச்சீட்டு; pass port.

[கடவு + சீட்டு.]

கடவுட்கணிகை *kaḍavuṭ-kaṇigai*, பெ.(n.) வானவருலக ஆடற் கலைமகள்; dancing girl of the celestial world. *"கடவுட்கணிகை காதலஞ் சிறுவர்" (மணிமே.13:95).*

[கடவுள் + கணிகை.]

கடவுட்சடை *kaḍavuṭ-caḍai*, பெ.(n.) வரிக்கூத்து வகை (சிலப்.3:13 உரை); a kind of masquerade dance.

[கடவுள் + சடை.]

கடவுட்டீ *kaḍavuṭṭī*, பெ.(n.) ஊழித்தீ; submarine fire. *"கடவுட் டீயா லடலை செய்து" (பிரமோத்.12:4).*

[கடவுள் + தீ.]

கடவுட்பணி[1] *kaḍvuṭ-paṇi*, பெ.(n.) இறைத்தொண்டு; service to God.

[கடவுள் + பணி.]

கடவுட்பணி[2] *kaḍvuṭ-paṇi*, பெ.(n.) 1. பாம்பணை (ஆதிசேடன்); Ādišēṣa. 2. சிவன் அணிந்துள்ள பாம்பு; ornamental snake around the neck of Šivā.

[கடவுள் + பணி. பணி = பாம்பு.]

கடவுட்பள்ளி *kaḍavuṭ-paḷḷi*, பெ.(n.) பௌத்தர் கோயில்; Buddhist temple. *"சிறந்துபுறங் காக்குங் கடவுட்பள்ளி" (மதுரைக்.467).*

[கடவுள் + பள்ளி.]

கடவுட்பொறையாட்டி *kaḍavuṭ-poṟai-y-āṭṭi*, பெ.(n.) தேவராட்டி (பெரியபு.கண்.65); woman having oracular powers under divine inspiration.

[கடவுள் + பொறை + ஆட்டி - கடவுட்பொறையாட்டி. பொறு → பொறை (சுமத்தல்). கடவுள் மெய் நிறைந்து (தன்மேல் ஏறப்பெற்று) சுமந்தாடியவாறு அருள்வாக்கு கூறும் பெண்.]

கடவுண்மங்கலம் *kaḍvuṇ-maṅgalam,* பெ.(n.) தெய்வம் எழுந்தருளச் செய்தல்; ceremony of consecration of a new idol in a temple. *"கடவுண் மங்கலஞ் செய்கென வேவலின்" (சிலப். 28:233).*

மறுவ. சாந்தி

[கடவுள் + மங்கலம்.]

கடவுண்மண்டிலம் *kaḍavuṇ-maṇḍilam,* பெ.(n.) கடவுளாகக் கருதப்படும் ஞாயிறு; Sun-God who manifests himself in the form of *a sphere. "கடவுள் மண்டிலங் காரிருள் சீப்ப" (மணிமே.22:1).*

[கடவுள் + மண்டிலம். மண்டலம் → மண்டிலம்.]

கடவுண்மணி *kaḍavuṇ-maṇi,* பெ.(n.) 1. தெய்வமணி (திவா.); celestial gem. 2. *அக்கமணி* பார்க்க; see *akka-maṇi.*

[கடவுள் + மணி.]

கடவுண்மாமுனிவர் *kaḍavuṇ-mā-muṇivar,* பெ.(n.) திருவாதவூரடிகள் புராணத்தின் ஆசிரியர்; author of ***Tiruvādavūr-aḍigaḷ-purāṇam.***

[கடவுள் + மா + முனிவர்.]

கடவுணதி *kaḍavuṇadi,* பெ.(n.) தெய்வத்தன்மை வாய்ந்ததாகக் கருதப்படும் கங்கையாறு (அமுதா.பிள்.காப்பு.6); the river Ganges which according to Hindu mythology is said to have a divine origin.

[கடவுள் + நதி.]

கடவுணீலி *kaḍavuṇīli,* பெ.(n.) காளி; Kāḷi, the Goddess of black complexion.

[கடவுள் + நீலி. நீலி = காளிக்குக் கருநிறத்தால் அமைந்த பெயர்.]

கடவுநர்[1] *kaḍavunar,* பெ.(n.) செலுத்துவோர்; those who conduct, lead or manage. *"கடும்பரி கடவுநர்" (சிலப்.5:54).*

[கட → கடவு + நர்.]

கடவுநர்[2] *kaḍavunar,* பெ.(n.) வினவுவோர்; questioner.

[கடாவு + நர் - கடாவுநர் → கடவுநர்.]

கடவுள் *kaḍavuḷ,* பெ(n.) 1. மனம், மெய், மொழி இவற்றைக் கடந்து நிற்கும் பரம்பொருள். God, who transcends body speech and mind. *"ஈன்றாளோ டெண்ணக் கடவுளுமில்" (நான்மணிக்.57).* 2. வானவன்; celestial Being. *"கடவுள ரதனை நோக்கி" (கந்தபு. தாரக.59.).* 3. முனிவன்; sage. *"தொன்முது கடவுட்பின்னர் மேய" (மதுரைக்.41).* 4. குரவன் (குரு) (பிங்.); Guru, spiritual preceptor. 5. நன்மை; goodness, auspiciousness. *"கடிமண மியற்றினார் கடவு ணாளினால்" (சீவக.1490).* 6. தெய்வத்தன்மை; divine nature. *"கடவுட் கடிஞையொடு" (மணிமே. 15:57).*

மறுவ. பகவன், இறைவன், முதற்பொருள், இயவுள், தெய்வம் (தேவு), ஆண்டவன், வாலறிவன், அறவாழி அந்தணன்.

ம. கடவுள் க. கடவுள்.

H.,U. khuda; G. gott; O.S.,O.E.,Du.,E. god; Swed., Dan., Norw. gud; Yid. got; M.E.,A.S. god; Icel. gudh; Goth. guth; M.H.G.,O.H.G. got; O.N. gudh.

[கடவு → கடவுள் (இயக்குபவன், செலுத்துபவன்). ஒ.நோ. இயவு → இயவுள்.]

கடவுள் என்னும் பெயர், மனமொழி மெய்களையும் எல்லாவற்றையுங் கடந்த முழுமுதற்கடவுளையே குறிக்க எழுந்த சொல்லென்பது அதன் பகுதியாலேயே விளங்கும் (சொ.ஆ.க.87).

மாந்தன் இயற்றமுடியாத இயற்கையை இயற்றிய ஒரு தலைவன் இருத்தல் வேண்டுமென்றும் அவன் எல்லாவற்றையுங் கடந்தவன் என்றும் கண்டு அல்லது கொண்டு அவனைக் கடவுள் என்றனர், முதற்றமிழர்.

கடவுள் என்னும் பெயர்க்கு எல்லாவற்றையும் இயக்குபவன் அல்லது செலுத்துபவன் என்றும் பொருளுரைக்கலாம். கடவுதல் - செலுத்துதல் (சொ.ஆ.க.31). ஒ.நோ. த. கடவுள் > E. god.

அச்சத்தினாலும் அன்பினாலும் தொழப்பட்ட தெய்வ வழிபாடு கடவுள் கொள்கையாயிற்று. "அஞ்சியாகிலும் அன்பு பட்டாகிலும் நெஞ்சமே நீ நினை" என்னும் தேவாரப் பாடலை நோக்குக. நன்மை சேர்க்கும் ஆற்றலை அன்பினாலும் தம்மால் எதிர்க்க முடியாத தீமை தரும் ஆற்றல்களை (நாகவணக்கம் போன்றவை) அச்சத்தினாலும் தொழுதனர். அச்சத்தினால் வணங்கியவை சிறு தெய்வங்களாகவும் அன்பினால் வணங்கியவை பெருந்தெய்வங்களாகவும் ஆயின.

ஆரியர்களின் வேதநெறி போற்றிப்பாடல்கள் பல்வேறு துன்பங்களிலிருந்து தம்மைக்காக்குமாறு வேண்டிய அச்சவழிபாடாகும். பிறவிப்பிணி நீக்கும் பேரின்ப வீட்டுலகம் நல்கும் முதற்பொருளை

அடைவதற்காக அனைத்துயிர்க்கும் அன்பு காட்டும் தமிழர் நெறி, சித்தர் நெறி எனவும் சிவனிய நெறி எனவும் அறியப்பட்ட அன்பு வழிபாடாகும்.

இறைவனைக் குறித்த தமிழ்ச்சொற்கள் இறைவனுக்குரிய எண்குணங்களைக் குறிப்பிடுவனவாக அமைந்துள்ளன.

பகவன்: அணுவுக்குள் அணுவாக எல்லாவற்றிலும் நிறைந்து தன்வயத்தனாய் இருப்பவன்.

தேவன்: (தெய்வம்) தீச்சுடர் போல் ஒளிவடிவான மாசு மறுவற்ற தூய உடம்பினன்.

இயவுள்: ஒப்புயர்வற்ற இயற்கை உணர்வினன். இயவு = வழி, பாதை. இயவன் = தன் போக்கில் இயங்குபவன்.

வாலறிவன்: எல்லாம் அறியும் முற்றுணர்வினன் (பற்றற்றான்), முற்றுணர்வால் பற்றற்றவன்.

கடவுள்: என்றும் நின்று நிலைத்து எல்லாவற்றையும் இயக்குபவன். (கடவுதல் = செலுத்துதல், இயக்குதல்.) தொடர்ந்து இயக்குதலே, நின்று நிலைத்த தன்மையைச் சுட்டும்.

அறவாழி அந்தணன்: பேரருள் உடையவன். அருளே அறத்தின் திறவுகோல். ஆதலால் அறக்கடல் என்பது அருட்கடலே.

முதற்பொருள்: எல்லாம் வல்லதான முடிவிலா ஆற்றலுடையவன்.

ஆண்டவன்: உயிர்களுக்குக் காவலனாகி ஏமவைகல் தரும் திறத்தால் வரம்பிலாத இன்பம் நல்கும் ஆளுமை நிறைந்தவன்.

சமய நோக்கில் கடவுளை எண்குணத்தானாக உருவகப்படுத்தினாலும் தொல்காப்பியர் அறிவியல் நோக்கில் முதற்பொருள் என்றார். எல்லாக் கருப்பொருள்களும் தோன்றுதற்கு நிலைக்களமாகிய காலமும் இடமும் முதற்பொருளாதலின் அதுவே இறைவன் என்னும் உருவகச் சொல்லுக்கும் இயல் வரையறை யாகும். மணிவாசகரும், "போற்றி என் வாழ்முதலாகிய பொருளே" என்றார். இக் கருத்து இறைப்பற்றாளரும் இறை மறுப்பாளரும் ஒப்ப முடிந்த ஒன்றாகும்.

அறிவியல் அறிஞர் ஐன்சுடீனும் ஒரு பொருளின் (நீள அகல உயரம்) கனத்தோடு காலத்தையும் சேர்த்தே கணக்கிட வேண்டும் என்றார். தொல்காப்பியம் எல்லாப் பொருள்களும் உயிர்களும் தோன்றுதற்கு அடிப்படையான முதற்பொருளை, "காலமும் இடமும் முதற்பொருள் என்ப" (தொல்.பொருள்.மரபி.) என விளக்கியிருத்தல் ஒப்புநோக்கத் தக்கது. தமிழர் சமயக் கோட்பாடு அறிவியல் தழுவியது என்பதைக் கடவுளைக் குறித்த முதற்பொருள் சொல்லாட்சி நிறுவுகிறது.

கடவுள்காப்பு *kaḍavuḷ-kāppu*, பெ.(n.) **கடவுள் வணக்கம்** பார்க்க; see *kaḍavuḷ-vaṇakkam.*

[கடவுள் + காப்பு.]

கடவுள்நெறி *kaḍavuḷ-neṟi*, பெ.(n.) இறையுணர்வு கொண்டொழுகும் ஒழுகலாறு; theological path.

[கடவுள் + நெறி.]

ஊர்பேர் குணங்குறியற்று, மனமொழி மெய்களைக் கடந்து எங்கும் நிறைந்திருத்தல், எல்லாம் அறிந்திருத்தல், எல்லாம் வல்லதாதல், என்றுமுண்மை, அருள் வடிவுடைமை, இன்பநிலை நிற்றல், ஒப்புயர்வின்மை, மாசுமறுவின்மை ஆகிய எண் குணங்களையுடையதாய் எல்லாவுலகங் களையும் படைத்துக் காத்தழித்து வரும் ஒரு பரம்பொருளுண்டென்று நம்பி, அதனை வழிபடுவதே கடவுள் நெறியாம். இது சித்தமதம் எனவும் படும் (பண்.நா.ப.86).

கடவுள்நெறிகள் *kaḍavuḷ-neṟigaḷ*, பெ.(n.) இறையுணர்வு கொண்டொழுகும் வெவ்வேறு ஒழுகலாறுகள்; different paths of theology.

[கடவுள் + நெறிகள்.]

கடவுள்வணக்கம் *kaḍavuḷ-vaṇakkam*, பெ.(n.) 1. தெய்வத்தைத் தாழ்ந்து பணிந்து வணங்குதல்; praying the God, prayer, to make humble petition (with submission) with devoutness. 2. நூல் அல்லது நூற்பகுதியின் முதலிற் கூறும் தெய்வவாழ்த்து; invocation to the deity either at the commencement of a treatise or at the beginning of each part or section of the same. 3. விழாத் தொடக்கத்தில் பாடும் பாடல்.; invocation song of a function.

மறுவ. கடவுள் வாழ்த்து, கடவுட் காப்பு, இறை வாழ்த்து, கடவுள் வழிபாடு, காப்புச் செய்யுள்.

[கடவுள் + வணக்கம்.]

கடவுள் வணக்கம் என்பது கடவுள் முன் தாழ்ந்து பணிவதைக் குறிக்கும். "தலையே நீ வணங்காய்" என்னும் அப்பர் தேவாரமும் "பணிக நும் தலையே முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே" என்னும் புறப்பாடலையும் ஒப்பு நோக்குக.

கடவுள்வழிபாடு *kaḍavuḷ-vaḻipāḍu,* பெ.(n.) குழுவாக நின்று கடவுளைப் பரவுதல், போற்றுதல்; to praise the God, worship.

[கடவுள் + வழிபாடு. வழிபடு → வழிபாடு.]

வழிபடுதல் என்பது கடவுள் நெறியைப் பின்பற்றுதலைக் குறிக்கும். "பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார்" என்று வள்ளுவர் கூறுவது காண்க. அது ஒவ்வொரு சமயத்தார்க்கும் வேறுபட்ட வழிமுறைகளையும், நெறிமுறைகளையும் கொண்டதாயினும் ஒவ்வொரு சமய நம்பிக்கைக் கூட்டத்தாரும் தமக்கென ஒரு தலைமை வழிபாட்டுநெறி வகுத்துக்கொண்டு ஒன்றுபட்டு இயங்க வழிவகுத்தது. கடவுள் வழிபாடு தன் பொருள் இழந்து கடவுளைப் போற்றி வணங்குகின்ற கடவுள் வாழ்த்துப் பொருளில் மட்டும் ஆளப்படுகின்றது. தேவாரக் காலத்தில் வழிபாடு என்பது கூட்டுவழிபாட்டையே குறித்தது. "கூடிநின் அடியார்..." என்னும் திருவாசகக் கருத்தை நோக்குக.

கடவுள்வாழ்த்து *kaḍavuḷ-vāḻttu,* பெ.(n.) 1. கடவுளை வேண்டிப் போற்றுதல்; to pray God requesting to fulfil desires or to relieve from sufferings. 2. தெய்வத்தைப் போற்றுதல்; praising the God. 3. தான் வழிபடு கடவுளையாதல், எடுத்துக் கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல் (குறள் உரை); invoking personal deity or deity relevant to the subject concerned. 4. முக்கடவுளருள் ஒருவரை வேந்தன் உயர்த்திச் சொல்லும் துறை (பு.வெ.9:3); theme of the king's praising one of the Hindu trinity as superior to the other two.

மறுவ. கடவுள் வணக்கம், இறை வாழ்த்து, கடவுள் காப்பு, கடவுள் வழிபாடு, காப்புச் செய்யுள்.

[கடவுள் + வாழ்த்து.]

அரசன் தொழும் கடவுள் என்னாது (யாவரேனும்) கடவுளை வாழ்த்துதல் பாடாண் திணையாம் என்பது ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தாகும்.

கடவுளொடு உறவுகோல் நட்டு உணர்வுகயிற்றால் இணைப்புண்டு அன்பொடு குறையிரந்து வேண்டும் வேண்டுகோள்களே வாழ்த்தாக மலர்தலின் கடவுள் வாழ்த்து எனப் பெயர் பெற்றது. வாழ் (வாழ் - த.வி.) வாழ்த்து (வாழச் செய்தல்) வாழ்த்துதல் போற்றுதலைக் குறிப்பினும் நன்றி யறிதலை (நன்றிசெலுத்துதலை) முதன்மைக் கருத்தாகக் கொண்டது. செய்ந்நன்றியறிதல் நெஞ்சத்தின் அன்பு வாயிலைத் திறக்கும் ஆற்றலுடையது. செருக்கும் சினமும் சிறுமையும் போக்கி நற்பண்பு வளர வழிவகுப்பது என முன்னையோர் கருதினர்.

கடவுள்வேள்வி *kaḍavuḷ-vēḷvi,* பெ.(n.) தேவர் பொருட்டு ஓமத்தீயிற் செய்யும் ஐவகை வேள்விகளுள் ஒன்று (பிங்.); sacrifice to deities performed in the consecrated fire, one of ***aivagai-vēḷvi.***

[கடவுள் + வேள்வி.]

கடவுள் வேள்வி, நான்முகன் (படைப்புக் கடவுள்) வேள்வி, பூதவேள்வி, மாந்தவேள்வி, தென்புலத்தார் வேள்வி ஆகியன ஐவகை வேள்விகளாகும்.

தீவளர்க்கும் வேள்விகள் ஆரியர்க்கே உரியனவாதலின் தமிழ் மரபுக்கு ஒவ்வாதன.

கடவுளர் *kaḍavuḷar,* பெ.(n.) 1. வானவர்; celestial Being. 2. தேவர்; Devas. 3. செலுத்துவோர்; those who lead.

[கடவுள் + அர்.]

கடவுளரிடன் *kaḍavuḷar-iḍaṉ,* பெ.(n.) கோயிலுக்குரிய இறையிலி நிலம் (சீவக. 2373); temple lands that are rent-free.

[கடவுளர் + இடன். இடம் → இடன்.]

கடவுளா *kaḍavuḷā,* பெ.(n.) சிறு சிறு முட்களுடைய, அளவில் பெரிய ஊளாமீன் (நெல்லை மீனவ.); sea Uḷāfish bigger in size.

[கள் (முள்) → கடு → கட + உளா.]

கடவுளாளர் *kaḍavuḷ-āḷar,* பெ.(n.) கடவுளர் பார்க்க; see *kaḍavuḷar.* *"கரந்துரு வெய்திய கடவுளாளரும்" (மணிமே.1:15).*

[கடவுள் + ஆள் + அர்.]

கடவுளெழுது-தல் *kaḍavuḷ-eḻudu-,* 10 செ.கு.வி. (v.i.) தெய்வ வடிவை ஓவியமாக வரைதல் (நிருமித்தல்); to draw an idol. *"கடவுளெழுதவோர் கற்றாரா னெனின்" (சிலப். 25:130.)*

[கடவுள் + எழுது.]

கடவூர் *kaḍavūr,* பெ.(n.) மதுரை மாவட்ட சிற்றூர்; a village in Madurai district.

[கடவு + ஊர் - கடவூர். கடவு = வாயில், வழி, நெடுஞ்சாலை. கடவூர் = பழங்காலத்து நெடுஞ்சாலை அருகில் இருந்த ஊர்.]

கடவை[1] *kaḍavai,* பெ.(n.) 1. கடக்கை (யாழ்ப்.); leaping, jumping, passing over. 2. வழி; way. 3. தலைவாயில் (வின்.); door-way having a raised sill to be stepped over. 4. ஏணி (திவா.); ladder. 5. வேலித் திறப்பில் தாண்டிச் செல்லக் கூடிய தடை மரம் (யாழ்ப்.); break or opening in a fence with some obstruction at the bottom. 6, கவரிருக்கு மரம் (பிங்.); turnstile. 7. பாசறை (பிங்); military camp. 8. குற்றம் (பிங்); fault, defect, crime.

மறுவ. கடவுமரம்

ம. கடவ; க. கட்கல்; து. கடபு; துட. கட்ப்.

[கட → கடவை.]

கவர்த்த வழியும், கருத்து வேறுபாட்டிற்குரிய நிலையும் குறையீடு, குற்றம் எனப் பொருள்பட்டன.

கடவை[2] *kaḍa-vai,* பெ.(n.) தணக்கு (மலை.); whirling-nut.

[கட + கடவை.]

காற்றில் பறக்கும் இலை வித்துகளால் பெற்ற பெயர்.

கடவைப்படு-தல் *kaḍavai-p-paḍu,* 20 செ.கு.வி.(v.i.) 1. நீங்குதல்; to go off, depart. 2. காணமற் போதல்; to disappear, as property by stealth.

[கடவை + படு.]

கடற்கட்டை *kaḍaṟ-kaṭṭai,* பெ.(n.) கடலின் தொலைவை அளக்கப் பயன்படும் நீட்டலளவு. nautical mile.

[கடல் + கட்டை.]

கடல்மைல் பார்க்க; see *kaḍal mile.*

கட்டை என்பது யாழ்ப்பாணத்தில் ஒருகல் தொலைவைக் குறிக்குஞ் சொல்.

கடற்கடம்பர் *kaḍaṟ-kaḍambar,* பெ.(n.) கடற்கொள்ளையில் ஈடுபட்ட கடம்ப மரபினர்; pirates of Kadamba clan.

[கடல் + கடம்பர்.]

கடற்கடம்பு *kaḍaṟ-kaḍambu,* பெ.(n.) கடற் கரையிலுள்ள கடம்பமரம் (சிலப். 28:135); seaside Indian oak.

[கடல் + கடம்பு.]

கடற்கம்பி *kaḍaṟ-kambi,* பெ.(n.) தொலைத்தொடர்புக் காகக் கடலடியில் இடப்படும் கம்பி; cable laid under sea for the purpose of communication.

[கடல் + கம்பி.]

கடற்கரண்டி *kaḍaṟ-karaṇḍi,* பெ.(n.) கடற்கரையில் முளைக்கும் ஒருவகைச் செடி (நெல்லை மீனவ.); a plant grown on sea-shore.

[கடல் + கரண்டி.]

கடற்கலம் *kaḍaṟ-kalam,* பெ.(n.) மீன்பிடி தொழிலுக்குப் பயன்படுத்தும் வலை, படகு முதலியன; fishing equipments.

[கடல் + கலம்.]

கடற்கழி *kaḍaṟ-kaḻi,* பெ.(n.) கடலினின்று மணல் திட்டுகளால் பிரிக்கப்பட்ட உப்புநீர்த் தேக்கம் (நெல்லை மீனவ.); firth, lagoon.

[கடல் + கழி.]

கடற்கழுகு *kaḍaṟ-kaḻugu,* பெ.(n.) பறவைவகை (பரண்டி.); a kind of sea-bird.

[கடல் + கழுகு.]

கடற்கள்ளன் *kaḍaṟ-kaḷḷaṉ,* பெ.(n.) ***கடற்கொள்ளைக் காரன்*** பார்க்க; see *kaḍaṟ-koḷḷai-k-kāraṉ.*

க. கடல்கள்ள, கடலுள்ள; ம. கடல்க் கள்ளன்.

[கடல் + கள்ளன்.]

கடற்கன்னி *kaḍaṟ-kaṉṉi,* பெ.(n.) 1. மேற்பகுதி பெண்ணுருக் கொண்டும் அடிப்பகுதி மீனுருக் கொண்டும் கடலில் வாழ்வதாகக் கருதப்படும் உயிரி; sea nymph. 2 கடல்மீன் வகை; a kind of sea fish. 3. திருமகள்; daughter of the sea, Lakṣmi.

தெ. கடலிகூத்துரு

[கடல் + கன்னி.]

கடற்காக்கை *kaḍaṟ-kākkai,* பெ.(n.) 1. கடலில் வாழும் காக்கை; sea-crow, sea-gull. 2. கடலிறஞ்சிமரம்; seaside-plum. 3. கழுத்தில் பழுப்பு நிறமுள்ள ஒருவகைக் காகம்; species of crow with grey neck (சேரநா.).

ம. கடல்க்காக்கை

[கடல் + காக்கை.]



கடற்காக்கை

கடற்காடை *kaḍaṟ-kāḍai,* பெ(n.) காடை இனத்தைச் சார்ந்த ஒருவகைக் கடற்பறவை; a curlew-stint or pigmy sand piper.

ம. கடல்காட

[கடல் + காடை.]

கடற்காய் *kaḍaṟ-kāy,* பெ.(n.) சிப்பி; oyster. (சேரநா.)

ம. கடக்கா

[கடல் + காய்.]

கடற்கால் *kaḍaṟ-kāl,* பெ.(n.) இருபெரும் நீர்நிலை அல்லது கடல்களை இணைக்கும் குறுகி நீண்ட கடல்நீர் இடைகழி; strait, narrow passage of water connecting two seas or large bodies of water.

[கடல் + கால். கால் = நீண்ட கால்வாய் போன்றது.]

கடற்காளான் *kaḍaṟ-kāḷāṉ,* பெ.(n.) கடற்பஞ்சு; sponge.

[கடல் + காளான்.]

கடற்காற்று *kaḍaṟ-kāṟṟu,* பெ.(n.) கடலினின்று நிலத்திற்கு வீசுங்காற்று; sea-breeze, dist.fr. தரைக்காற்று.

ம. கடல் காற்று.

[கடல் + காற்று.]

கடற்காற்று உடலுக்கு நல்லூரம் தரும்; ஆனால் மூலிகைகளுக்கு இக் காற்றுப் பயன் தராது என்பர்.

கடற்கிளி *kaḍaṟ-kiḷi,* பெ.(n.) ஒருவகைக் கடற் பறவை; small puffin, a kind of sea bird.

ம. கடல்க்கிளி.

[கடல் + கிளி.]

கடற் கிளி

கடற்குச்சி *kaḍaṟ-kucci,* பெ.(n.) கரும்பலகையில் எழுதுவதற்குப் பயன்படும் குச்சி வடிவிலான கடற் பொருள் (நெல்லை மீனவ.); a part of marine vegetation used to write on black board.

[கடல் + குச்சி.]

கடற்குதிரை[1] *kaḍaṟ-kudirai,* பெ.(n.) 1. மேற்பகுதி குதிரையைப் போலவும், கீழ்ப்பகுதி மீனைப் போலவுமுள்ளவோர் விலங்கு; a fabulous animal partly horse and partly fish; avalrus or morse. 2. கடலில் வாழும் குதிரையைப் போன்ற சிறுமீன்; sea-horse; the name of a small fish having the

head and foreparts horse-like in form - Hippocampus guttalatus. 3. கடற்பாம்பு; whip-fish or pipe-fish. (சா.அக.)

மறுவ. நீர்க்குதிரை

ம. கடல்க்குதிரை; க. கடல்குதிரை.

[கடல் + குதிரை.]



கடற் குதிரை

கடற்குதிரை² *kaḍaṟ-kudirai,* பெ.(n.) 1. தோணி; boat (மட்.அக.).

[கடல் + குதிரை.]

கடற்குரவை *kaḍaṟ-kuravai,* பெ.(n.) ஒருவகைக் குரவை மீன் (இராம மீனவ.); a kind of ***'kuravai'*** fish.

[கடல் + குரவை.]

கடற்குருவி¹ *kaḍaṟ-kuruvi,* பெ.(n.) 1. கல்லுப்பு, கடலில் தானாய் வளரும் உப்பு (மூ.அ.); rock salt; salt found in lumps on beds of rocks at the bottom of the sea owing to evaporation of sea-water. 2. சோற்றுப்பு; common salt (சா.அக).

[கடல் + குருவி. குரு → குருவி. குருத்தல் = தோன்றுதல்.]

கடற்குருவி² *kaḍaṟ-kuruvi,* பெ.(n.) 1. கடற்கரையோரங்களில் வாழும் குருவி; squat sparrow.

[கடல் + குருவி.]

கடற்கூம்பு *kaḍaṟkūmbu,* பெ.(n.) **கடற்கழி** பார்க்க; see *kaḍaṟ-kal̠i.*

[கடல் + கூம்பு.]

கடற்கொஞ்சி *kaḍaṟ-koñji,* பெ.(n.) சீமைக் கொஞ்சி (மூ.அ.); Chinese box.

[கடல் + கொஞ்சி. கொளுஞ்சி → கொஞ்சி.]

கடற்கொடி *kaḍaṟ-koḍi,* பெ.(n.) 1. தும்பை (மலை.); a bitter medicinal herb. 2. கடற்றாமரை; sea-creeper, sea-lotus.

[கடல் + கொடி.]

கடற்கொடிச்சி *kaḍaṟ-koḍicci,* பெ.(n.) **கடற்கொடி** பார்க்க; see *kaḍaṟ-koḍi.*

[கடல் + (கொடி) கொடிச்சி.]

கடற்கொடித்தூமம் *kaḍaṟ-koḍi-t-tūmam,* பெ.(n.) **கடவி** (சித்.அக.) பார்க்க; see *kaḍavi.*

[கடல் + கொடி + தூமம்.]

கடற்கொந்தளிப்பு *kaḍaṟ-kondaḷippu,* பெ.(n.) காற்றழுத்தத் தாழியின்போதும், காருவா, வெள்ளுவா நாளின்போதும் கடற்பரப்புப் பொங்கியெழும் நிலை; rough, tumultuous, due to the low pressure and in the days of new moon and full moon days.

[கடல் + கொந்தளிப்பு.]

கடற்கொழுப்பை *kaḍaṟ-kol̠uppai,* பெ.(n.) எழுத்தாணி வடிவப்பூவையுடைய கடல் மணற்பரப்பின்மீது படர்ந்து வளரும் ஒருவகைச் செடி (M.M.); style plant.

ம. கடல்கொழுப்ப

[கடல் + கொழுப்பை.]

கடற்கொள்(ளு)-தல் *kaḍaṟ-koḷ(ḷu)-,* 10 செ. குன்றாவி.(v.t.) **கடல்கொள்(ளு)-தல்** பார்க்க; see *kaḍal-koḷ(ḷu)-.*

[கடல் + கொள்(ளு).]

கடற்கொள்ளை *kaḍaṟ-koḷḷai,* பெ.(n.) கப்பற் கொள்ளை; piracy.

ம. கடல்கொள்ள

[கடல் + கொள்ளை.]

கடற்கொள்ளைக்காரன் *kaḍaṟ-koḷḷai-k-kāraṉ,* பெ.(n.) கப்பற் பயணிகளை வழிமறித்துக் கொள்ளை யடிப்பவன்; pirate.

[கடல் + கொள்ளை + காரன்.]

கடற்கோ *kaḍaṟ-kō,* பெ.(n.) வாரணன்; Vāraṇaṉ, the god of or lord of the sea. "அன்னவன் கடற்கோ வணங்கி யேத்துற" *(உபதேசகா. உருத்திராக்க.230.)*

[கடல் + கோ. கோல் → கோன் → கோ.]

கடற்கோடி *kaḍaṟkōḍi,* பெ.(n.) **கடலோடி** பார்க்க; see *kaḍal-ōḍi.*

ம. கடல்கோட்டி

[கடல் + கோட்டி. கோட்டி = குழு. கூட்டு → கூட்டி → கோட்டி. கடற்கோடி = கடல் வாணிகக் குழுவைச் சார்ந்தவன்.]

கடற்கோடு *kaḍaṟ-kōḍu,* பெ.(n.) 1. கடற்கரை; sea-coast. "மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்" (நாலடி.263). 2. கடல் நத்தை; sea-snail. 3. கடற்சங்கு; conch found in the sea (சா.அக.).

ம. கடக்கோடி, கடற்கோடு.

[கடல் + கோடு. கோடு = கரை.]

கடற்கோரை *kaḍaṟ-kōrai,* பெ.(n.) கடல் நீர்ப்பயிர்; agar (க.ப.அக.).

[கடல் + கோரை.]

கடற்கோழி *kaḍaṟ-kōḻi,* பெ.(n.) கடலில் வாழும் கோழியைப் போன்ற பறவை; a kind of bird resembling the fowl as the grey plover (சா.அக.).

[கடல் + கோழி.]

கடற்கோள் *kaḍaṟ-kōḷ,* பெ.(n.) கடற்பெருக்கத்தால் நிலப்பகுதிகளுக்கு ஏற்படும் பேரழிவு; great deluge. "கருவி வானங் கடற்கோண் மறப்பவும்" (பொருந.236.)

[கடல் + கோள்.]

பண்டைத் தமிழிலக்கியத்திற் சொல்லப்பட்டுள்ள கடற்கோள்கள் மொத்தம் நான்கு. அவற்றுள், முதலது தலைக்கழக இருக்கையாகிய தென்மதுரையைக் கொண்டது; இரண்டாவது "நாகநன்னாடு நானூறுயோசனை" கொண்டது (மணிமே.9:21); மூன்றாவது நான்காவது காவிரிப்பூம்பட்டினத்தையும் குமரியாற்றையுங் கொண்டது. குமரி என்பது குமரிக் கண்டத்தின் தென்கோடி யடுத்திருந்த ஒரு பெருமலைத் தொடர்க்கும், அதன் வடகோடியடுத்துக் குமரி முனைக்குச் சற்றுத் தெற்கிலிருந்த காவிரி போலும் பேராற்றிற்கும் பொதுப்பெயராம். காவிரிப்பூம்பட்டினம் முழுகிய பின்பும் குமரியாறிருப்பதுபோல் கபாடபுரம் முழுகியபின்பும் குமரியாறிருந்தமை "வடவேங்கடந் தென்குமரி" என்னும் தொல்காப்பியச் சிறப்புப் பாயிர அடியாலும்,

"தெனாஅ துருகெழு குமரியின் தெற்கும்", "குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி" என்னும் புறப்பாட்டடிகளாலும் (6,67) அறியப்படும் (தமி.வ.10).

கடற்சரக்கு *kaḍaṟ-carakku,* பெ.(n.) கடலின் வழியாக வந்த பொருள்; goods imported through sea. (சேரநா.)

ம. கடல்சரக்கு

[கடல் + சரக்கு.]

கடற்சார்பு *kaḍaṟ-cārbu,* பெ.(n.) நெய்தல் நிலப்பகுதி; land adjoining the sea, maritime tract.

[கடல் + சார்பு.]

கடற்சாரை *kaḍaṟ-cārai,* பெ.(n.) கடலில் வாழும் ஒருவகை சாரைப்பாம்பு; sea snake.

[கடல் + சாரை.]

கடற்சிங்கம் *kaḍaṟ-šiṅgam,* பெ.(n.) **கடலரிமா** பார்க்க; see *kaḍal-arimā.*

[கடல் + சிங்கம்.]

கடற்சில் *kaḍaṟ-cil,* பெ.(n.) கடல்மரக்கொட்டை (வின்.); flat, round seeds of a sea plant.

[கடல் + சில்.]

கடற்சிலந்தி *kaḍaṟ-cilandi,* பெ.(n.) கடலின் அலையிடப் பகுதியிலிருந்து ஆழ்கடல் பகுதி வரை காணப்படும் சிலந்திபோன்ற பூச்சி; sea-spider.

[கடல் + சிலந்தி.]



கடற்சிலந்தி

கடற்செலவு *kaḍar̲-celavu,* பெ.(n.) கடற்பயணம், கடல் வழிப்பயணம்; voyage.

[கடல் + செலவு. செல் - செலவு.]

தமிழினம் கடற்பயணத்தைத் தரைப்பயணம் போலவே கருதி வாழ்ந்த நெஞ்சுரம் மிக்க இனம். தென் கிழக்காசிய நாடுகள் பலவற்றிற்குப் பலகலம் செலுத்திய பிற்காலச் சோழப் பெருவேந்தர்க்கு ஆயிரமாண்டுகட்கு முற்பட்ட கடைக்கழகப் பெருவேந்தர்கள் "நளியிருமுந்நீர் நாவாயோட்டியும் உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கமோட்டியும்" வாழ்ந்தனர். anchor, catamaran, navy. முதலான 'கடல் தொடர்புடைய ஆங்கிலச் சொற்கள் நங்கூரம், கட்டுமரம், நாவாய் என்ற செந்தமிழ்ச் சொன் மூலத்தினவேயாம்.

கடற்சேதம் *kaḍar̲-cēdam,* பெ.(n.) **கப்பலழிவு** பார்க்க; (வின்.); see *kappalal̲ivu.*

த. சேதம் > **Skt.** cheda. செது → செற்று → செத்து → சிதை → சேதம்.)

[கடல் + சேதம்.]

கடற்சேர்ப்பன் *kaḍar̲-cērppan̲,* பெ.(n.) நெய்தல் நிலத் தலைவன்; chief or overlord of maritime tract. *"தில்லைச்சூழ் கடற்சேர்ப்பர்" (திருக்கோ.277).*

[கடல் + சேர்ப்பவன்.]

கடற்சேனை *kaḍar̲-cēn̲ai,* பெ.(n.) பாம்பு போன்ற ஒருவகைக் கடல்மீன் (வின்.); a sea-eel.

[ஒருகால், கடல்சேடன் → கடல்சேனன் → கடல்சேனை.]

கடற்சொறி *kaḍar̲-sor̲i,* பெ.(n.) கடலில் சிவப்பாக மிதக்குமோர் பொருள்; a red substance found floating on the sea.

[கடல் + சொறி.]

கடற்பக்கி *kaḍar̲-pakki,* பெ.(n.) **கடற்பறவை** பார்க்க; see *kaḍar̲-par̲avai.*

*[கடல் + (பட்சி) பக்கி. பக்கி > **Skt.** பட்சி.]*

கடற்பச்சை *kaḍar̲-paccai,* பெ.(n.) **கடற்பாலை** பார்க்க; see *kaḍar-pālai.*

[கடல் + பச்சை.]

கடற்பசு *kaḍar̲-pašu,* பெ.(n.) **கடற்பெற்றம்** பார்க்க; see *kaḍar̲-per̲r̲am.*

ம. கடல்ப்பசு

[கடல் + பசு.]

கடற்பஞ்சு *kaḍar̲-pañju,* பெ.(n.) **கடற்காளான்** பார்க்க; see *kaḍar̲-kālān̲.*

[கடல் + பஞ்சு.]

கடற்படப்பை *kaḍar̲-paḍappai,* பெ.(n.) கடற்கரையைச் சார்ந்த பகுதி; maritime. *'கடற்படப்பை ஒற்றி மூதூருகந்தருளி' (S.I.I. Vol.12 insc.93).*

[கடல் + படப்பை.]

கடற்படுகை *kaḍar̲-paḍugai,* பெ.(n.) கடலடிப் படுகை; sea bed.

[கடல் + படுகை.]

கடற்படுபொருள் *kaḍar̲-paḍu-porul,* பெ.(n.) கடலில் தோன்றும் முதன்மையன பொருள்களான ஓர்க்கோலை, சங்கம், பவளம், முத்து, உப்பு போன்றவை; products of the sea.

[கடல் + படு + பொருள்.]

கடற்படுவளம் *kaḍar̲-paḍu-valam,* பெ.(n.) **கடற்படுபொருள்** பார்க்க; see *kaḍar̲-paḍu-porul.*

[கடல் + படு + வளம்.]

கடற்படை *kaḍar̲-paḍai,* பெ.(n.) கப்பற்படை (இறை.39, உதா.செய்.241); naval force, navy.

ம. கடல்ப்பட்டாளம்

[கடல் + படை.]

மூவேந்தரிடத்துத் தொன்றுதொட்டுக் கலப்படை (கப்பற்படை) யிருந்துவந்தது. சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் செய்த கடற்போரைப் பற்றிப் புறச்செய்யுள் (12) கூறுவதையும், கி.பி. 10 ஆம் நூற்றாண்டுகளிலிருந்தே முதலாம் இராசராச சோழன், ஈழத்தையும், 'முந்நீர்ப் பழந்தீவு' பன்னீராயிரத்தையும் (Maldive Islands.) கலப்படை கொண்டு வென்று, சேரநாட்டுக் 'காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய' தையும், அவன் மகன் இராசேந்திரன் நக்கவரம், (Nicobar) மலையம், (Malaya) சுமதுரை (Sumatra) முதலியவற்றை வென்றதையும் நோக்குக. (பழந்தமி.45,46).

கடற்பயணம் *kaḍaṟ-payaṇam*, பெ.(n.) **கடற்செலவு** பார்க்க; see *kaḍaṟ-celavu.*

மறுவ. தொலைப்பயணம்; கப்பற் பயணம்.

[கடல் + பயணம்.]

கடற்பறவை *kaḍaṟ-paṟavai*, பெ.(n.) நீள்மூக்குடைய கடற்பறவை வகை; tern.

ம. கடல் மீவல்

[கடல் + பறவை.]

கடற்பன்றி *kaḍaṟ-paṉṟi*, பெ.(n.) பெருமீன்வகை. (மூ.அ.); porpoise.

ம. கடப்பள்ளி; து. கடல்பஞ்சு.

[கடல் + பன்றி.]



கடற்பன்றி

கடற்பாசி *kaḍaṟ-pāši*, பெ.(n.) 1. ஒருவகைக் காளான் (மூ.அ.); celon moss. 2. **கடற்பூடு** பார்க்க. (M.M.); see *kaḍaṟ-pūḍu.*

ம. கடப்பாயல், கடல்பாசி.

[கடல் + பாசி.]

கடற்பாம்பு *kaḍaṟ-pāmbu*, பெ.(n.) 1. கடலில் வாழும் ஐந்தடி நீளமுள்ள ஒருவகை நச்சுப்பாம்பு; sea Bungar, venomous snake, attaining five ft. in length. 2. ஆறடி நீளமுள்ள கடற் பாம்புவகை; chital, venomous sea snake greenish, 6 ft. in length. 3. கடலில் வாழும் 12 அடி நீளமுள்ள நச்சுப்பாம்பு வகை; a venomous sea-snake with elevated and compressed tail, attaining 12ft. in length.

ம. கடற்பாம்பு

[கடல் + பாம்பு.]



கடற்பாம்பு

கடற்பாய் *kaḍaṟ-pāy*, பெ.(n.) மரக்கலத்தைக் கடலில் இயக்குதற்குரிய பாய் (மீனவ.); sail of a catamaran.

[கடல் + பாய்.]

கடற்பாய்ச்சி *kaḍaṟ-pāycci*, பெ.(n.) கடலில் கப்பல் செலுத்துவோன் (கல்வெட்டு); sailor, mariner.

மறுவ. மீகான்.

[கடல் + பாய்ச்சி.]

கடற்பாலை *kaḍaṟ-pālai*, பெ.(n.) வட்டத்திருப்பி என்னும் கொடி (மலை.); elephant creeper.

ம. கடல்ப்பால

[கடல் + பாலை.]

கடற்பாறை[1] *kaḍaṟ-pāṟai*, பெ.(n.) 1. கடலோரத்தில் காணப்படும் பாறைகள்; reefs. 2. பவழ உயிரிணங்கள் வாழும் பாறை; coral reef.

மறுவ. பவழப்பாறை

[கடல் + பாறை.]

முகவை (இராமநாதபுரம்) மாவட்டக் கடற்பகுதியில் உள்ள நல்ல தண்ணீர்த்தீவு, உப்புத்தீவு, தலையாரித் தீவு, வெள்ளித்தீவு, முள்ளித்தீவு, முயல்தீவு, மண்ணளித்தீவு, குருசடைத்தீவு, கச்சத்தீவு ஆகிய தீவுகளைச் சுற்றியும், கடலோரத்திலும் இப் பாறைகள் உண்டாகின்றன. தெளிந்த நீராறுகள் வந்து சேரா இடமாகவும், படிவங்கள் சேரா இடமாகவும் இருப்பின் இப்படிப்பட்ட கடற் பாறைகள் உருவாகும் (க.ப.அக.).

கடற்பாறை[2] *kaḍar̲-pār̲ai-*, பெ.(n.) ஒருவகை மீனின் பெயர்; a kind of sea - fish.

[கடல் + பாறை - கடற்பாறை. கடற்பாறைகளிடையில் வாழும் மீன் வகையாதலின் இப் பெயர் பெற்றது.]

கடற்பிணா *kaḍar̲-piṇā*, பெ.(n.) நெய்தனிலப்பெண் (திவா.); woman of the tribe living in the maritime tract.

[கடல் + பிணா. பெண் → பிணவு → பிணா.]

கடற்பிறந்தகோதை *kaḍar̲-pir̲anda-kōdai*, பெ.(n.) கடற்பிறந்தாள் (சூடா.) பார்க்க; see *kaḍar̲-pir̲andāḷ*.

[கடல் + பிறந்த + கோதை.]

கடற்பிறந்தாள் *kaḍar̲-pir̲andāḷ*, பெ.(n.) திருமகள் (பிங்.); Laksmi, goddess of wealth, who sprang from the sea of milk when that sea was churned.

[கடல் + பிறந்தாள். திருமகள் திருப்பாற்கடலில் பிறந்தாள் என்பது தொன்மக் கதை.]

கடற்புலி *kaḍar̲-puli*, பெ.(n.) கடல்வாழ் உயிரினம், சுறாமீன்; sea - tiger, shark.

[கடல் + புலி.]

கடற்புற்று *kaḍar̲-pur̲r̲u*, பெ.(n.) பவளம் (சேரநா.); coral.

ம. கடல்ப்புற்று

[கடல் + புற்று.]

கடற்புறம் *kaḍar̲-pur̲am*, பெ.(n.) 1.ஆறுகள் கடலுடன் கூடுமுகத்துள்ள மணலடைப்பு; unopened bar of a river; sand-bank that totally closes many Indian river mouth during the dry weather. 2. கடற் கரை; beach.

ம. கடல்ப்புறம் (கடற்கரை)

[கடல் + புறம்.]

கடற்புறா *kaḍar̲-pur̲ā*, பெ.(n.) கடலில் பறந்தும் நடந்தும் வாழும் ஒருவகைப் புறா; petrel.

ம. கடப்றாவு.

[கடல் + புறா.]



கடற்புறா

கடற்பூ *kaḍar̲-pū*, பெ.(n.) செம்மருது; blood wood.

ம. கடல்ப்பூ.

[கடல் + பூ.]

கடற்பூடு *kaḍar̲-pūḍu*, பெ.(n.) ஒருவகைப் பூடு; marine algae collectively; Malay agaragar, sea-weed.

ம. கடல்ச்சண்டி

[கடல் + பூடு.]

கடற்பெருக்கு *kaḍar̲-perukku*, பெ.(n.) கடலின் நீரேற்றம்; high tide.

[கடல் + பெருக்கு.]

கடற்பெற்றம் *kaḍar̲-per̲r̲am*, பெ.(n.) 1. கடற்குதிரை வகையுனுள் ஒன்று; a kind of sea - horse. 2. தழையுண்ணும் கடல்வாழ் பாலூட்டி வகை; dugong.

[கடல் + பெற்றம்.]

8 முதல் 12 அடி நீளம் உடையதும் கடற்பூண்டுகளைத் தின்று வாழ்வதுமாகிய ஒரு சிறிய திமிங்கிலம் (க.ப.அக.).



கடற்பெற்றம்

கடற்பேய் *kaḍar-pēy*, பெ.(n.) அச்சந்தரும் வகையில் உருவமும் பற்களும் கொண்ட மீன்வகை; a sea fish of whose teeth and shape are of dreadful look (க.ப.அக.).

[கடல் + பேய்.]

கடற்றாமரை[1] *kaḍarṟāmarai*, பெ.(n.) பெருந்தாமரை (சித்.அக.); a kind of lotus.

[கடல் + தாமரை.]

கடற்றாமரை[2] *kaḍarṟāmarai*, பெ.(n.) ஒருவகைக்கடல் மீன்; a kind of sea-fish. (சா.அக.)

[கடல் + தாமரை.]

கடற்றாரா *kaḍarṟārā*, பெ.(n.) கடற்பறவை; sea-bird.

[கடல் + தாரா.]

கடற்றாழை *kaḍarṟāḻai*, பெ.(n.) 1. கொந்தாழை (மூ.அ.); sea-weed. 2. வாட்டாழை; a sea plant yielding an edible fruit.

[கடல் + தாழை.]

கடற்றிட்டு *kaḍarṟiṭṭu*, பெ.(n.) கடலின் நடுவிலுள்ள சிறு நிலப்பகுதி; island.

[கடல் + திட்டு.]

கடற்றிரை *kaḍarṟirai*, பெ.(n.) கடலலை பார்க்க; see *kaḍalalai*.

மறுவ. அலை, அறல், தரங்கம், புணரி ஓதம், பெருங்கலி, கல்லோலம்.

[கடல் + திரை.]

கடற்றீ *kaḍarṟī*, பெ.(n.) கடல் நுரை (மூ.அ.); froth of the sea.

[கடல் + தீ. - கடற்றீ. தீயின் சுடர் போன்ற தோற்றம் தந்தமையின் பெற்ற பெயராகலாம்.]

கடற்றுயின்றோன் *kaḍarṟuyiṉṟōṉ*, பெ.(n.) கடலில் அறிதுயிலமர்ந்த திருமால் (திவா.); Viṣṇu, who accg. to Hindu mythology, is sleeping a conscious kind of sleep on the sea.

[கடல் + துயின்றோன்.]

கடற்றுறை *kaḍarṟuṟai*, பெ.(n.) துறைமுகம்; harbour.

ம. கடல்த்துரா

[கடல் + துறை.]

கடற்றுறைத்தொழில் *kaḍar-ṟuṟai-t-toḻil*, பெ.(n.) கடல் துறையில் செய்யும் தொழில்; occupations at sea port.

[கடல் + துறை + தொழில்.]

மீன் விலை கூறுதல், வலைப்பூரை பொத்துதல், கட்டுமரம் கட்டுதல், முத்துச்சிப்பி விலைகூறுதல் ஆகியன கடல்துறையில் செய்யப்படும் தொழில்களாம்.

கடற்றெங்கு *kaḍarṟeṅgu*, பெ.(n.) தென்னை வகை; double coconut, l.tr. native only on the Seychelles.

மறுவ. இரட்டைத்தேங்காய்

ம. கடத்தேங்ஙா; க. கடல் தெங்கு.

[கடல் + தெங்கு.]

ஒரு காயுள் இரண்டு விதையுள்ள தேங்காய். உயரமாக வளரும் இத் தென்னை கடலகத் தீவுகளில் காணப்படுகிறது.

ஒரு பக்கம் வளைந்தும் ஒரு பக்கம் சப்பையாகவும் இருமுனையும் கூராகவும் இரு தேங்காய் ஒட்டியிருப்பது போலவும் மேற்றோலி கறுத்தும் உள்ள இக் காய் நஞ்சுமுறிக்கும் தன்மையது என்பர்.


கடற்றெங்கு

கடற்றெய்வம் *kaḍaṟṟeyvam,* பெ.(n.) வாரணன்; Varuṇā, the god of the sea. *"கடற்றெய்வம் காட்டிக் காட்டி" (சிலப். 7:5).*

[கடல் + தெய்வம்.]

கடற்றேங்காய் *kaḍaṟṟēṅgāy,* பெ.(n.) கடலின் வழியாய்ப் படகின்மேலேற்றிக் கொண்டு வந்து இறக்குமதியாகும் தேங்காய்; coconuts brought by boats over the sea, sea-coconuts.

ம. கடல்த்தேங்கா

[கடல் + தேங்காய்.]

கடற்றொழில் *kaḍaṟṟoḻil,* பெ.(n.) மீன்பிடிதொழில்; sea fishing.

[கடல் + தொழில்.]

கடறு *kaḍaṟu,* பெ.(n.) 1. காடு; forest, jungle. *"கானவர் கடறுகூட் டுண்ணும்" (பெரும்பாண்.116).* 2. அருநெறி (பிங்.); hard or difficult path. 3. பாலை நிலம்; desert tract. *"இன்னாக் கடறிதிப் போழ்தே கடந்து" (திருக்கோ.217).* 4. மலைச்சாரல்; mountains slope. *"கடறுமணி கிளர" (புறநா.202:3).*

[கடு → கடம் → கடன் → கடறு. கடு = கடுமை, துன்பம்.]

கடன் *kaḍaṉ,* பெ.(n.) 1. கடமை; duty, obligation. *"நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே" (புறநா.312:4).* 2. கடனாகப் பெற்ற பணம்; loan amount. *"இன்னா கடனுடையார் காணப் புகல்" (இன்.நாற்.12).* 3. இரவற் பொருள்; borrowed article. 4. இயல்பு; nature, natural attribute. *"கடனென்ப நல்லவை யெல்லாம்" (குறள், 981.).* 5. முறைமை; order, manner, plan, system. *"எழுத்துக்கடனிலவே" (தொல். எழுத்து.142).* 6. மரபுவழிச் செயல்கள்; observance like the daily ablutions and other devotional exercises enjoined by religion. *"அந்தி அந்தணர் அருங்கட னிறுக்கும்" (புறநா.2:22).* 7. விருந்தோம்பல்; hospitality. *"அருங்கடன் முறையினாற்றி" (கம்பரா.பால.மிதி.93).* 8. அளவை (திவா.); measure, definite, quantity. 9. மரக்கால் (தைலவ.); a dry measure. 10. குடியிறை (திவா.); tribute, tax. 11. காரணியம்; cause. *"உணர்வியா னல்லவான கடனிய தென்னின்"* (சி.சி.4,27). 12. மானம்; honour. *"கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார்" (குறள்,1053).*

மறுவ. கைமாற்று, பற்று.

ம. கடம்; க.,து. கட; பட. கடனு; Malay. hutan.

[கட = இயங்கு, செல், செய், ஒழுங்குறுத்து. கட → கடன் = செய்யத்தக்கது, செலுத்தத்தக்கது.]

கடமைப் பொருளிலிருந்து முறைமை, இயல்பு, மரபுவழிச் செயல்கள், விருந்தோம்பல், காரணம், மானம், அளவை, மரக்கால் பொருள்களும், பின்னர் வரிசெலுத்துதலும், குடிமக்கள் கடமையாதலின் குடியிறைப்பொருளிலும், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்தல் கடமையாதலின் கடன் வாங்குதல் பொருளிலும் இச் சொல் வழங்கலாயிற்று. "கடன் வாங்கிச் செலவு செய்தவனும் மரம் ஏறிக் கைவிட்டவனும் சரி"

'கடன் இல்லாத கஞ்சி கால்வயிறு', 'கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்குகிறது', 'கடனோடு கடன் கந்தகப் பொடி காற்பணம்', 'போகாமல் கெட்டது உறவு; கேட்காமல் கெட்டது கடன்', 'சிறியோர் செய்த பிழையைப் பெரியோர் பொறுப்பது கடன்' என்னும் பழமொழிகளை நோக்குக.

கடன் உடன் *kaḍaṉ-uḍaṉ,* பெ.(n.) கடன் முதலிய வற்றைக் குறிக்கும் இணைச்சொல்; word pair signifying loan etc. கடனோ உடனோ வாங்கித் திருமணத்தைச் செய்தான் (உ.வ.). கடன் உடன் பட்டுக் கடமையைச் செய்தல் நன்று (உ.வ.). கடனோ உடனோ வாங்கிக் கட்டடம் கட்டினான் (உ.வ.).

[கடன் + உடன். எதுகை நோக்கி வந்த மரபிணைமொழி.]

கடன்கட்டாப்பேசு-தல் *kaḍaṉ-kaṭṭā-p-pēšu,* 7 செ.கு.வி.(v.i.) கடுமையாகப் பேசுதல் (வின்.); to speak rudely or uncivilly.

[கடன் + கட்டு + ஆய் + பேசு.]

கடன்கட்டு *kaḍaṉ-kaṭṭu,* பெ.(n.) 1. கடனாகக் கொடுக்கை; credit in account. கடன்கட்டு வணிகம் அந்தக் கடையில் இல்லை (உவ.). 2. மனம் நிறைவில்லாத செய்கை (வின்); doing a thing for the sake of formality but not heartily.

[கடன் + கட்டு.]

கடன்கழி-த்தல் *kaḍaṉ-kaḻi-,* 4 செ.கு.வி(v.i.) 1. கடமையைச் செய்தல்; to perform a duty, as repaying a kindness. "செஞ்சோற்றுக் கடன் கழித்தேன்" (பாரத. பதினேழாம்.248) 2. சமயச் செய்கைக்குரிய செயல்களைச் செய்தல்; to perform the rites enjoined by religion. 3. மனமின்றிச் செய்தல் (வின்.); to do a service for another out of mere compliment and not heartily.

[கடன் + கழி.]

கடன்காரன்[1] *kaḍaṉ-kāraṉ,* பெ.(n.) 1. கடன் பட்டவன்; debtor. அவன் வெகுநாளைக் கடன்காரன். 2. கடன் கொடுத்தவன்; payee. *"வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ள" (தனிப்பா.i 275:17).*

ம. கடக்காரன்; பட. கடனுகார.

[கடன் + காரன்.]

கடன்காரன்[2] *kaḍaṉ-kāraṉ,* பெ.(n.) 1. முதிராச் சாவடைந்தவன்; man or boy who attain a premature death. 2. பெற்றோர் இருக்கத் திடீரென இறந்தவன் (இ.வ.): he who dies a premature death leaving his parents to survive him.

[கடன் + காரன்]

பிறப்பே முன்வினைக் கடனாகக் கருதப் பட்டதனால் முதிராக்கால இறப்பு (அகால மரணம்) கடனை அடைப்பதற்கு முன் சென்றதாகிறது. அதனாற்றான் கடன் காரனென அழைக்க இடமளிக்கிறது.

கடன்காரன்[3] *kaḍaṉ-kāraṉ,* பெ.(n.) மேற்பார்வை யிருந்தால் மட்டும் ஊழியஞ் செய்பவன் (யாழ்.அக.); eye-servant.

[கடன் + காரன்.]

கடன்காரி *kaḍaṉ-kāri,* பெ.(n.) 1. முதிராச் சாவடைந்தவள்; woman or girl who died a premature death. 2. தண்டச் செலவுக்குக் காரணமானவள்; woman who causes useless expenditure.

[கடன் + காரி.]

கடன்கேள்(ட்)-த(ட)ல் *kaḍaṉ-kēḷ-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. கடன் கொடுக்கும்படி கேட்டல்; to ask for a loan. 2. கொடுத்த கடனைக் கேட்டல்; to demand the return of a loan.

[கடன் + கேள்.]

கடன்கொடு-த்தல் *kaḍaṉ-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. பின்னர்த் திருப்பித்தரவேண்டும் என்ற கட்டளையின் பேரில் பணம் கொடுத்தல்; to lend some money and other things. 2. ஒரு மொழியின் வழக்காறுகள் பிறமொழிக்குச் செல்லுதல்; usages of one language supplied to another language.

து. கடகொர்பினி; க. கடங்கொடு.

[கடன் + கொடு.]

கடன்கொள்(ளு)-தல் *kaḍaṉ-koḷ(ḷu)-,* 7 செ.குன்றாவி. (v.t.) கடன்பெறுதல்; to get loan, borrow. அடுத்தடுத்து வழங்கும் மொழிகள் தம்முள் ஒன்றினொன்று கடன் கொள்ளும் (உ.வ.).

து. கடதெப்புளி; க. கடகொள்.

[கடன் + கொள்.]

கடன்கோடல் *kaḍaṉ-kōḍal,* பெ.(n.) பணத்தைக் கடனாகக் கொள்ளும் வழிவகை (குறள், உரைப்பாயிரம்); borrowing money, one of 18 vivakārapatam.

[கடன் + கோடல்.]

கடன்சீட்டு *kaḍaṉ-cīṭṭu,* பெ.(n.) கடன் வாங்கியதற்கான ஆவணம்; bond of debt.

ம. கடமுறி.

[கடன் + சீட்டு.]

கடன்செய்-தல் *kaḍaṉ-sey-,* 4 செ.குன்றாவி.(v.t.) இறந்தோர்க்கு நூல்களில் சொல்லியவண்ணம் செயல்களை (சடங்கு)ச் செய்தல்; to perform obsequies as per śāsthra.

[கடன் + செய்]

கடன்தணிப்பு *kaḍaṉ-taṇippu,* பெ.(n.) கடனைத் தள்ளுபடி செய்தல்; ,right off a debt.

[கடன் + தணிப்பு.]

கடன்திருநாள் *kaḍaṉ-tiru-nāḷ*, பெ.(n.) நேர்த்திக்கடன் நிறைவேற்றுதற்குரிய திருவிழா (வின்.); day of religions observances.

ம. கடநாள்

[கடன் + திருநாள். கடன் = நேர்த்திக்கடன்.]

கடன்திருப்பு-தல் *kaḍaṉ-tiruppu-*, 5 செ.குன்றாவி. (v.t.) வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்தல்; to pay back the loan completely.

[கடன் + திருப்பு.]

கடன்பட்டவன் *kaḍaṉ-paṭṭavaṉ*, பெ.(n.) 1. கடமை ஆற்றுதற்கு உரியவன்; one who is under obligation. 2. கடனாளி; a debtor.

ம. கடவியன், கடப்பெட்டவன்.

[கடன் + பட்டவன்.]

கடன்பட்டார் *kaḍaṉ-paṭṭār*, பெ.(n.) **கடன்பட்டவன்** பார்க்க; see *kaḍaṉ-paṭṭavaṉ*. *'கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான்'* (பழ.).

ம. கப்புக்காரன்

[கடன் + பட்டார்.]

கடன்படு-தல் *kaḍaṉ-paḍu-*, 20 செ.கு.வி.(v.i.) 1. கடனுக்குள்ளாதல்; to become indebted. *"தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்"* (திரிகடு.12). 2. செய்த உதவிக்குக் கைம்மாறு செய்யும் உணர்வில் இருத்தல்; to feel a debt of gratitude to some one.

ம. கடப்பெருக; து. கடதெப்புனி.

[கடன் + படு.]

கடன்பத்திரம் *kaḍaṉ-pattiram*, பெ.(n.) **கடன்சீட்டு** பார்க்க; see *kaḍaṉ-cīṭṭu*.

மறுவ. கடன் ஒலை, கடன்சீட்டு.

ம. கடப்பத்ரம்

[கடன் + பத்திரம். வ. பத்ர > த. பத்திரம்.]

கடன்பற்று[1]-தல் *kaḍaṉ-paṟṟu-*, 5 செ.கு.வி.(v.i.) கொடுத்த கடனை வாங்கிக் கொள்ளுதல்; to recover a debt.

[கடன் + பற்று. பற்றல் = கைக்கொளல், பெற்றுக்கொளல்.]

கடன்பற்று[2] *kaḍaṉ-paṟṟu*, பெ.(n.) கடனாகப் பெற்ற பொருள்; anything received as a loan.

[கடன் + பற்று. பற்றல் = பெறல்.]

கடன்பெறு-தல் *kaḍaṉ-peṟu-*, 5 செ.குன்றாவி.(v.t.) **கடன்வாங்கு-தல்** பார்க்க; see *kaḍaṉ-vāṅgu-*.

க. கடம்படெ

[கடன் + பெறு.]

கடன்மரம் *kaḍaṉ-maram*, பெ.(n.) மரக்கலம்; wooden sailing craft. *"கடன்மரங் கவிழ்ந்தெனக் கலங்கி"* (நற்.30).

[கடல் + மரம்.]

கடன்மல்லை *kaḍaṉ-mallai*, பெ.(n.) **கடல்மல்லை** பார்க்க; see *kaḍal-mallai*. *"கள்வா கடன்மல்லைக் கிடந்த கரும்பே"* (திவ்.பெரியதி.7.1:4).

[கடல் + மல்லை.]

கடன்மலைநாடு *kaḍaṉ-malai-nāḍu*, பெ.(n.) சேரநாட்டில் குட (மேற்குத் தொடர்ச்சி) மலைக்கு மேற்கிலிருந்த நாடு; region on the werstern side of western ghats of Kerala state.

[கடல் + மலை + நாடு. கடலுக்கும் மலைக்கும் இடைப்பட்ட நாடு.]

கடன்மலை நாட்டின் வடபாகம் குட்டம், குடம், துளுவம், கொங்கணம் என்னும் பல பகுதிகளைக் கொண்டிருந்தது (பழ.த.ப.4).

கடன்மீட்டு-தல் *kaḍaṉ-mīṭṭu-*, 5 செ.குன்றாவி.(v.t.) கடனைத் திரும்பப் பெறுதல்; to get back the debt. "பண்டாரத்தில் கடன்வகையில் நூற்றன்பது கோட்டை நெல்லுக்கடன் மீட்டிக் கொண்டு" (திருவாங். Vol.6. Part II insc.123. S.No.26).

[கடன் + மீட்டு. மீள் (த.வி) → மீட்டு (பி.வி).]

கடன்முரசோன் *kaḍaṉ-muraśōṉ*, பெ.(n.) கடலை முரசாகக் கொண்டவன், காமன் (பிங்.); Kāmaṉ who is reputed to use the sea as his drum.

[கடல் + முரசோன்.]

கடன்முள்ளி *kaḍaṉ-muḷḷi*, பெ.(n.) **கடல்முள்ளி** (புறநா.24,உ.வே.சா.உரை) பார்க்க; see *kaḍal-muḷḷi*.

[கடல் + முள்ளி.]

கடன்முறி *kaḍaṉ-muṟi,* பெ.(n.) கடன்சீட்டு பார்க்க; see *kaḍaṉ- ciṭṭu.*

ம. கடமுறி

[கடன் + முறி.]

கடன்முறை *kaḍaṉ-muṟai,* பெ.(n.) பெரியோருக்குச் செய்யும் தொண்டு; duty of showing courtesy to elders. *"கடன்முறைகள் யாவு மீந்து" (கம்பரா.பால. திருவ.62).*

[கடன் + முறை. கடன் = கடமை. முறை = செய்முறை.]

கடன்முறைகழி-த்தல் *kaḍaṉmuṟai-kaḻi-,* 4 செ.கு.வி.(v.i.) பெரியோருக்குத்தொண்டு செய்தல்; to serve elders.

[கடன் + முறை + கழி.]

கடன்மூர்த்தி *kaḍaṉ-mūrtti,* பெ.(n.) அருகன்; Arhat.

[கடன் + மூர்த்தி.]

கடன்மை *kaḍaṉmai,* பெ.(n.) 1. தன்மை; condition, circumstance. *"களவிய லரக்கன் பின்னே - தோன்றிய கடன்மை தீர" (கம்பரா.யுத்த.விபீட.145).* 2. முறை; rotation.

[கடன் + மை.]

கடன்வாங்கிக்கழி-த்தல் *kaḍaṉ-vāṅgi-k-kaḻi-,* 4 செ.குன்றாவி.(v.t.) கழித்தலில் கழிக்கப்படும் எண் கழிக்கும் எண்ணைக் காட்டிலும் பெரியதாக இருக்கும் பொழுது அதற்கு அடுத்த இடமதிப்பி லிருந்து ஓர் எண்ணைக் கடன் வாங்குதல்; to deduct by borrowing method.

[கடன் + வாங்கி + கழி.]

கடன்வாங்கு-தல் *kaḍaṉ-vāṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. பிறரிடமிருந்து வட்டிக்குப் பணம் பெறுதல்; to borrow money, contract a debt. *'கடன்வாங்கிக் கடன்கொடுத்தவனும் செத்தான், மரமேறிக் கைவிட்டவனும் செத்தான்' (பழ.).* 2. ஒரு மொழியினின்று இன்னொரு மொழி சொல்லையும் இலக்கணக் கூறுகளையும் கடன் வாங்குதல்; to borrow words and other grammatical elements from other languages. 3. கணிதத்தில் ஓர் இட மதிப்பிலிருந்து ஓர் எண்ணைக் கடன் வாங்குதல்; to borrow from next decimal number, in deduction.

[கடன் + வாங்கு.]

கடனடை-த்தல் *kaḍaṉ-aḍai-,* 4 செ.குன்றாவி.(v.t.) வாங்கின கடனைத் திருப்பித் தருதல்; to discharge, pay off a debt.

[கடன் + அடை.]

கடனண்டு *kaḍaṉaṇḍu,* பெ.(n.) கடலில் வாழும் நண்டுவகை (பதார்த்த.944); sea crab.

[கடல் + நண்டு.]

கடனம்[1] *kaḍaṉam,* பெ.(n.) தாழ்வாரம் (யாழ்.அக.); verandah.

[கட + அனம் - கடனம் = கடந்து செல்லும் இடைகழி அல்லது தாழ்வாரப் பகுதி. அனம் - சொல்லாக்க ஈறு.]

கடனம்[2] *kaḍaṉam,* பெ.(n.) முயற்சி (யாழ்.அக.); effort.

[கடலுதல் = செல்லுதல், அகலுதல், விரிவுபடுத்துதல், முன்னேற்றுதல், முயலுதல். கடலு → கடலம் → கடனம்.]

கடனவயல் *kaḍaṉa-vayal,* பெ.(n.) திருவாரூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvarur district.

[கடலன் + வயல் - கடலன்வயல் → கடலவயல் → கடனவயல். கடலன் = கடல் வாணிகன்.]

கடனாக்கு *kaḍaṉākku,* பெ.(n.) 1. பவளத்திட்டு; coral rock. 2. சிவப்புச் சோற்றுக்கற்றாழை; curacoa aloes.

[கடல் + நாக்கு - கடனாக்கு. முதலில் பவளப் பாறையையும், நிறஒப்புமையால் சிவப்புச் சோற்றுக் கற்றாழையையும் குறித்தது.]

கடனாக்குமீன் *kaḍaṉākku-mīṉ.* பெ.(n.) 16 விரலம் வளர்வதும் கரும்பழுப்பு நிறமுடையதுமான எருமை நாக்கு வடிவிலமைந்த கடல் மீன்; flat fish, brownish or purplish black, attaining at least 16 inch in length.

ம. கடநாக்கு

[கடல் + நாக்கு + மீன்.]

கடனாதாயம் *kaḍaṉādāyam,* பெ.(n.) ஊர் வேலைக்காரருக்கும், அறப்பணிக்கும் கொடுப்பதற்காக நிலக்கிழார் குத்தகைப் பணத்தோடு வாங்கும் தொகை (R.T.); income received by the landholder as part of rent, to be disbursed later. to the village servants and to charities.

[கடன் + ஆதாயம் (வருவாய்).]

கடனாய் *kaḍaṉāy,* பெ.(n.) நீர்நாய் (வின்.); sea otter.

மறுவ. மீனாய் (மீன்நாய்)

[கடல் + நாய்.]

கடனாளி *kaḍaṉ-āḷi,* பெ.(n.) 1. கடன்பெற்றவன்; debtor. 2. நன்றிக்கடன் பட்டவன்; one who is under an obligation to do a thing.

[கடன் + ஆளி.]

கடனிவாரணம் *kaḍaṉivāraṇam,* பெ.(n.) ***கடன் தணிப்பு*** பார்க்க (வின்.); see *kaḍaṉ- taṇippu.*

[கடன் + நிவாரணம்.]

கடனிறவண்ணன் *kaḍaṉiṟa-vaṇṇaṉ,* பெ.(n.) ***கடல்வண்ணன்*** பார்க்க; see *kaḍal-vaṇṇaṉ.*

[கடல் + நிறம் + வண்ணன்.]

கடனிறு-த்தல் *kaḍaṉ-iṟu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கடனைத் திருப்பிக் கொடுத்தல்; to clear off a debt. 2. கடமை செய்தல்; to discharge an obligation, perform a duty. *"தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்" (புறநா.9).*

[கடன் + இறு.]

கடனுதவுபேர் *kaḍaṉ-udavu-pēr,* பெ.(n.) கடன் கொடுத்தவர் (குமரேச.சத.23); one who provides debt.

[கடன் + உதவு + பேர்.]

கடனுரை *kaḍaṉurai,* பெ.(n.) 1. ஒருவகைக் கடல்மீன் ஓடு (மூ.அ.); cuttle fish bone, shell of sepia. 2. ஒருவகைப் பணிகாரம் (வின்.); a kind of pastry.

ம. கடநாக்கு

[கடல் + நுரை.]

கடனெடு-த்தல் *kaḍaṉ-eḍu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கடன் வாங்குதல்; to borrow. 2. பழி கூறுதல்; to slandar.

[கடன் + எடு.]

கடனை *kaḍaṉai,* பெ.(n.) இறுகிய சவ்வு; hardening of tissue in the body, sclerois.

[கடு → கடுனை → கடனை. கடு = கடுமை, இறுக்கம்.]

கடா[1]-தல் *kaḍā-,* 5 செ.குன்றாவி.(v.t.) வினாதல்; to inquire, question. *"ஈங்குளவோ வென்னக் கடாதலும்" (காஞ்சிப்பு. திருநகர.58).*

[கட → கடவு → கடாவு → கடா = செலுத்தல், வினாவைச் செலுத்துதல், வினாதல்.]

கடா[2] *kaḍā,* பெ.(n.) வினா; interogation, question. *"கடாவிடை" (ஞான.63:10).*

[கடாவு → கடா.]

கடா[3] *kaḍā,* பெ.(n.) 1. வெள்ளாடு, செம்மறியாடு இவற்றின் ஆண் (பிங்.); male of sheep or goat. 2. ஆட்டின் பொது (திவா.); sheep. 3. ஆண் விலங்கு; male animal. *'உள்ளூர் மருகனும் உழுகிற கடாவும் சரி' (பழ.).* 4. ஆண் எருமை; he - buffalo *"பட்டிக்கடா வில்வரு மந்தகா" (கந்தரல.64).*

மறுவ. கடாய், கடவி, கடமா.

ம. கடா, கிடா, கிடாவு; **க.** கடசு (ஈனாப்பெற்றம்); **கோத.** கடச்; **துட.** கர் (கன்றுகளின் தொழுவம்); குட. குடிசு; **தெ.** கிரேபு (கன்று); **கோண்.** காரா (இளம் எருமை); **கொண்.** க்ராலு (கன்று); **கூ.** க்ராடு, ட்ராடு, காரொ, (எருமை); **குவி.** டாலு, தாலு. (கன்று); குரு. கரா (இளம் ஆண்எருமை); **கூரி.** (இளம் பெண்எருமை); **பிரா.** கராச் (எருது); **கை.** கடெ; **பட.** கடசு; (ஈனாப்பெற்றம்) Skt. kataha (a young female buffalo whose horns are just appearing, goat).

Ar. gidye; Du. geit; **Swed.** get; **Dan.** ged; **Norw.** geit; **Cz.,Pol.** Koza; **Ser.Croa.** Koza; **Hung.** kecske; **Turk.** keci; **Russ.** Kaza; **Gk.** katsi-ka; **Yid.** koze; **E.** goat.

[குள் → கள் → கடு → கடா = வலிமை மிக்க ஆண் விலங்கு. கடு = திண்மை, வலிமை. (மு.தா.241)]

கடா[4] *kaḍā,* பெ.(n.) 1. சருக்கரை காய்ச்சும் ஏனம்; shallow iron boiler for boiling sugar. 2. பருமை; largeness. *"கடாஅ உருவொடு" (குறள்,585).*

[கடு = மிகுதி, பருமை. கடு → கடா = பெரிய வட்டமான ஏனம். ஒ.நோ. கடாநாரத்தை = பெருநாரத்தை.]

கடா[5] *kaḍā*, பெ.(n.) மதநீர் பெருகுவதால் உண்டாகும் வெறியுணர்வு; rage due to excess must. *"கடாஅ யானைக் கலிமான்" (புறநா.141).*

[கடாம் → கடா.]

கடா[6] *kaḍā*, பெ.எ.(adj.) பெரிய; big, large.

[குரு = பருமை. குரு → குரை = பருமை. குரு → கரு → கருமை = பருமை. குள் → கள் → கடு → கடா = பருமையானது. (எ.டு.) கடாநாரத்தை = பெரியநாரத்தை (மூதா.214, 215).]

கடாக்கண் *kaḍā-k-kaṇ*, பெ.(n.) பெரிய கண்; big eye. *'செத்தவன் கண் கடாக்கண் இருந்தவன் கண் இல்லிக்கண்' (பழ.).*

[கடா[6] + கண்.]

கடாக்களிறு *kaḍā-k-kaḷiṟu*, பெ.(n.) மதயானை; must elephant. *"கடாஅக் களிற்றின்மேற் கட்படாம்" (குறள்,1087).*

[கடம் → கடாம் → கடா + களிறு. கடம் = மதநீர்.]

கடாக்கன்று *kaḍā-k-kaṉṟu*, பெ.(n.) ஆண் எருமைக்கன்று (வின்.); young he-buffalo.

குருக். கட்

[கடு → கடா + கன்று.]

கடாக்குட்டி *kaḍā-k-kuṭṭi*, பெ.(n.) ஆட்டுக்குட்டி (வின்.); lamb or kid.

[கடா[3] + குட்டி.]

கடாகம் *kaḍāgam*, பெ.(n.) 1.பெருவெளிக்கோளகை (பிங்.); sphere, globe. 2. வட்டமான கொப்பரை (சூடா.); brass boiler with rings for handles.

[கடு → கடகம் → கடாகம். கடகம் = பெரியது, வட்டமானது, வட்டமான கொப்பரை, பெருவெளிக் கோளகை.]

த. கடாகம் > Skt. kadaha. (வ.மொ.வ.103)

கடாகு *kaḍāgu*, பெ.(n.) பறவை; bird.

[கடாவு = கடந்து செல்லுதல். கடாவு → கடாகு.]

கடாசு-தல் *kaḍāšu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. ஆணி, ஆப்பு முதலியன அடித்தல்; to drive, as a wedge, a nail. 2. எறிதல்; to throw, fling.

[கடவு → கடாவு → கடாசு.]

கடாட்சம் *kaḍāṭcam*, பெ.(n.) **கடைக்கண்** பார்க்க; see *kaḍai-k-kaṇ*.

[கடை + அட்சம் - கடாட்சம். வ. அக்ஷ > த. அட்சம்.]

கடாத்தன்மை *kaḍā-t-taṉmai*, பெ.(n.) 1. சுறுசுறுப் பின்மை; indolence, laziness, sloth. 2. திருத்தமின்மை (வின்.); unmannerliness, clownishness. 3. கீழ்ப்படி யாமை (வின்.); stubbornness, disobedience. கடாத்தனமாகச் சுற்றாதே (உ.வ.).

[கடா + தன்மை. கடா = விலங்கினுள் ஆண், எருமைக் கடா.]

கடாம்[1] *kaḍām*, பெ.(n.) 1. யானையின் மதம்படு துளை (கலித்.63:3 உரை); orifice in an elephant's temple, from which must flows. 2. யானை மதநீர்; secretion of a must elephant. *"கமழ்கடாஅத்து யானை" (புறநா.3:8).*

[கடு → கடம் → கடாம். கடாம் = மிகுதியாகப் பெருகும் மதநீர்.]

கடாம்[2] *kaḍām*, பெ.(n.) **மலைபடுகடாம்** பார்க்க; see *malai-paḍu-kaḍām*. *"முருகு. . . கடாத்தொடும் பத்து" (பத்துப்பாட்டு,முகவுரை,ப.5).*

[மலைபடுகடாம் → கடாம். மலைபடுகடாம் நூலின் சுருக்கப்பெயர்.]

கடாம்பெய்-தல் *kaḍām-pey-*, 1 செ.கு.வி.(v.i.) மதஞ் சொரிதல்; to exude secretion, said of a must elephant. *"நாகங் கடாம்பெய்து" (சீவக. 981.)*

[கடாம் + பெய்.]

கடாமுடா *kaḍā-muḍā*, பெ.(n.) ஒலிக்குறிப்பு, பெருத்த ஒலி; with a rumbling or rubbing noise. பூனை பானைகளைக் கடாமுடா என உருட்டிற்று.

க. கடாவணே

[கடா[6] + முடா.]

கடாய் *kaḍāy*, பெ.(n.) 1. பொரிக்குஞ் சட்டி (இ.வ.); frying pan; a large round boiler of copper, bell-metal or iron. 2. கொப்பரை (P.T.L.); a kind of vessel.

மறுவ. வாணலி, சீனிச்சட்டி, இருப்புச்சட்டி, எண்ணெய்ச்சட்டி, பொரிக்குஞ்சட்டி.

க. கடாயி, கடாய; **குட.** கடாய; **பர்.** கடா (பானை); **து.** கடாயி.

H. kadhai, kadahi, kaḍhaiyā; Mar. kaḍhai; Pkt. kadāha; Skt. katāha.

[கடா⁴ → கடாய்.]

கடாய்க்கன்று *kaḍāy-k-kaṉṟu,* பெ.(n.) காளைக்கன்று; (யாப்.வி.3); bull-calf.

[கடா + இ - கடாய் + கன்று - கடாக்கன்று. கடா என்னும் சொல் கடாத்தன்மையுள்ளது என்னும் பொருளைத் தருதற்காக ஒன்றன்பால் இகர ஈறு பெற்றுக் கடா + இ - கடாய் எனத் திரிந்தது. ஒ.நோ. நாஇ → நாய்.]

கடாய்க்கோல் *kaḍāy-k-kōl,* பெ.(n.) கட்டுமரம், தோணி ஆகியவற்றின் பின் பகுதியிலிருந்து குத்திக் கலத்தை முன்னோக்கிச் செலுத்தும் கோல்; an oar like stick used to push farward catamaran and boat (க.ப.அக.).

[கடவு → கடாவு → கடாய் + கோல்.]

கடாயம்¹ *kaḍāyam,* பெ.(n.) கருக்கு நீர் (தைலவ.); decoction.

மறுவ. கசாயம்.

[கடு + ஆயம். கடுமையான (காரப்பு) பொருள்களால் ஆகியது. த. கடாயம் > Skt. kaṣaya. ஒ.நோ. கட்டம் > Skt. kaṣṭa. வேட்டி > Skt. vēṣṭi.]

கடாயம்² *kaḍāyam,* பெ.(n.) துவர்ப்பு (நாமதீப.); astringency.

[கடு = விரைப்பு, துவர்ப்பு. கடு → கடாயம்.]

கடாரங்காய் *kaḍāra-ṅ-kāy,* பெ.(n.) கடாரநாரத்தை பார்க்க; see *kaḍāra-nārattai.*

[கடாரம் + காய். கடாரம் = வடமலேயா.]

கடாரங்கொண்டான் *kaḍāraṅkoṇḍāṉ,* பெ.(n.) 1. முதலாம் இராசேந்திர சோழனின் சிறப்புப் பெயர்களிலொன்று; one of the titles of king Rajendra-I. 2. கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகிலுள்ள ஓர் ஊர்ப்பெயர்; name of a village near *Gaṅgaikoṇḍa Col̤apuram.*

[கடாரம் + கொண்டான். மலேய நாட்டின் கடாரப் பகுதியை வெற்றி கொண்டதால் பெற்ற சிறப்புப் பெயர். இச் சிறப்புப் பெயரே இராசேந்திர சோழனின் நினைவைப் போற்றும் ஊர்ப்பெயருமாயிற்று.]

கடாரநாரத்தை *kaḍāra-nārattai,* பெ.(n.) நாரத்தை வகை (மலை.); seville orange.

மறுவ. கடாநாரத்தை

[கடாரம் + நாரத்தை. கடார (வடமலேயா)த்திலிருந்து கொண்டு வரப்பட்ட நாரத்தை.]

கடாரம்¹ *kaḍāram,* பெ.(n.) கொப்பரை (பிங்.); brass or copper boiler, cauldron.

ம. கடாரம்; க. கடார; பர். கடா; Skt. kataha.

[கடு → கடா → கடாரம்.]

கடாரம்² *kaḍāram,* பெ.(n.) வடமலேயம்; North Malay. *'தொடுகடற் காவற் கடுமுரட் கடாரமும்'* (S.I.I.ii, 107).

[கடு → கடா → கடாரம். பரப்பில் பெரிய வடமலேசியப் பகுதியின் பெயர்.]

கடாரம், சாவகம், சீனம் என்பவை முற்காலக் கொடுந்தமிழ் நாடுகளைச் சேர்ந்தவையல்ல. தமிழொழிந்த பதினேழ் நிலங்களில் பல முற்காலக் கொடுந்தமிழ் நாடுகளாயிருந்தமையின், கொடுந்தமிழ் நாடல்லாத பிறவற்றையுஞ் சேர்த்துக் கூறிவிட்டார் பவணந்தியார் (பாவாணர்,திராவிடத்தாய்,முன்.ப.14) தற்காலத்தில் கடாரம் என்பது வடமலேசியாவில் 'கெடா' மாநிலத்தில் உள்ளது. தமிழரின் கடல் வணிகத்திற்கும் கடல் ஆதிக்கத்திற்கும் சான்று பகர்வனவாகப் பல இடிபாடுகளும் சிதைவுகளும் உள்ளன. உலகில் கடற்படை கொண்டு வெகுதொலைவு படையெடுத்து வென்ற இராசராச சோழனின் திறனையும், இராசேந்திர சோழனின் வெற்றியையும் வெகுவாகப் பாராட்டுகிறார் முன்னாள் தலைமை அமைச்சர் பண்டித சவகர்லால் நேரு. இராசேந்திர சோழனை இந்திய நெப்போலியன் என்பர்.

கடாரி *kaḍāri,* பெ.(n.) 1. ஈனாத இளம்பெற்றம் (பசு); heifer, young cow that has not calved. 2. பெண்எருமை, நாகு; she-buffalo.

க.,து., பட. கடசு; குட. கடிசி; கூ. க்ரை.

[கடு → கடா → கடாரி = பருத்து வளர்ந்தது. ஆர் சாரியை, 'இ' ஒன்றன்பாலீறு. இங்கு விலங்கினுள் பெண்மை சுட்டியது.]

Skt. gradi, a young steer, a lazy ox; gali, a strong but lazy bull. It is not impossible that the two terms are connected with D. Kaḍašu, or kaḍi, or gaṭṭi, or gaṇḍā. (K.K.E.D. - XX).

வடமொழியில் ஆண்பாற் சொல்லாகவே ஆளப்பட்டிருத்தலின் விலங்கினுள் பெண்பாலைச் சுட்டிய செந்தமிழாட்சியினும் வடமொழி மூலம் முற்றிலும் வேறுபட்டது.

கடாரிக்கன்று *kaḍāri-k-kaṉṟu*, பெ.(n.) ஆவின் பெண்கன்று; cow-calf.

[கடாரி + கன்று.]

கடாரை *kaḍārai*, பெ.(n.) *கடாரநாரத்தை*(மலை) பார்க்க; see *kaḍāra-nārattai.*

[கடாரம்² → கடாரை.]

கடாவடி *kaḍā-v-aḍi*, பெ.(n.) களத்தில் கடாக்களைவிட்டுப் பிணையடிக்கை (வின்.); treading out grain by buffaloes or bulls.

[கடா + அடி. கடா = எருது. அடி = அடித்தல்.]

கடாவிடு¹-தல் *kaḍā-viḍu-*, 20 செ.கு.வி.(v.i.) பிணை யடித்தல் (பதிற்றுப்.62:15,உரை); to thresh out grain with buffaloes or bulls after beating the sheaves upon the threshing floor.

[கடா → விடு.]

கடாவிடு²-தல் *kaḍā-viḍu-*, 20 செ.கு.வி.(v.i.) விலங்குகளைச் சினையாக்குதல்; to impregnate. அதிரான கடாரிக்குக் கடாவிட ஆயத்தம் செய்.

[கடா → விடு.]

கடாவு¹-தல் *kaḍāvu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. ஏவுதல்; to discharge, as missiles; to propel. *"கடாயின கொண்டொல்கும் வல்லி"* (திவ்.இயற்.திருவிருந்.6). 2. செலுத்துதல்; to ride, as an animal; to dirive, as a car. *"தேர்கடாவி"* (தேவா.839, 3). 3. ஆணி முதலியன அறைதல்; to drive in, as a nail, a peg, a wedge; to nail on; to join by nail as boards. *"கவியாப்பைக் கடாவுவனே" (தனிப்பா.171.24)* 4. குட்டுதல்; to buffet, cuff. *"வேதன் பொற் சிரமீது கடாவி" (திருப்பு.164).* 5. வினாவுதல் (திவா.); to interrogate, question. 6. தூண்டுதல்; to urge, impel, influence. இயற்கை யன்பினானும்... செயற்கை யன்பினானும் கடாவப்பட்டு (திருக்கோ.11, உரை).

மறுவ. கடாவல்

ம. கடாவுக; க. கடாயிசு; தெ. கடவு; து. கடபாவுனி.

[கடவு¹ → கடாவு.]

கடாவு² *kaḍāvu*, பெ.(n.) செலுத்துகை; emitting. *"காலை ஞாயிற்றுக் கதிர்கடா வுறுப்ப"* (சிறுபாண்.10).

[கடவு¹ → கடாவு.]

கடாவுவட்டி *kaḍāvu-vaṭṭi*, பெ.(n.) வட்டிக்கு வட்டி; compound interest.

ம. கடாவு வட்டி

[கடாவு + வட்டி. கடாவுதல் = அகல்தல், விரிதல், வளர்தல், பெருகுதல்.]

கடாவெட்டி *kaḍā-veṭṭi*, பெ.(n.) 1 புலால் வெட்டுங் கத்தி (வின்.); butcher's knife, cleaver. 2. ஆட்டுக்கடா முதலியன வெட்டுபவன்; butcher, slaughterer.

[கடா³ + வெட்டி.]

கடாவெட்டு *kaḍā-veṭṭu*, பெ.(n.) சிற்றூர்த் தெய்வங்களுக்கு நேர்த்திக் கடனாக ஆண் விலங்கைக் கொன்று பூசையிடல் (இ.வ.); killing a male animals in front of the village deities is a sacrificial ceremony to mark the fulfilment of a desire.

[கடா³ + வெட்டு.]

கடான் *kaḍāṉ*, பெ.(n.) *கடா* பார்க்க; see *kaḍā*.

[கடா → கடான்.]

கடி¹-த்தல் *kaḍi-*, 4 செ.குன்றாவி.(v.t.) 1. பல்லாற் கடித்தல்; to bite with teeth. *"கடித்த வாயிலே" (திருவாச.41:37).* 2. பற்களை இடுக்கி நெரித்தல்; to clench teeth. பல்லைக் கடித்துக் கொண்டு கையை ஒங்கினான். 3. உண்பதற்காகக் கடித்தல், கறித்தல்; to bite off, as a piece of bread. *'கடித்தவாய் துடைத்தாற் போல்' (பழ.).* 4. மெல்லுதல்; to chew. கடித்துண்ணுதல் உடலுக்கு நல்லது (உ.வ.). 5. பாம்பு முதலியன தீண்டுதல்; to bite, as snake. *'காலைச் சுற்றின பாம்பு கடிக்காமல் விடாது' (பழ.).* 6. கொடுக்கால் கொட்டுதல்; to sting, as of scorpion. 7. பூச்சிகடித்தல்; to puncture as of mosquito. கொசுக்கடி தொல்லை தாளவில்லை. 8. சிறுபூச்சி அரித்தல்; to gnaw, gnash. புத்தகத்தைப் பூச்சி கடித்துவிட்டது (உ.வ.). 9. தேனீப் போன்றவை கொட்டுதல்; to smart as of bee. குளவி கடித்தால் தடிக்கும் (உ.வ.). 10. துண்டித்தல்; to cut off. *"கடித்துக் கரும்பினை" (நாலடி.156).* 11. வடுப்படுத்துதல்; to pinch, hurt. *"பயமின்றி யீங்குக் கடித்தது நன்றே" (கலித்.96:30).* 12. செத்தி எடுத்தல்; to chip as a plank. 13. குழித்தல்; to dig as a well ditch, etc.

ம. கடிக்குக; க. கடி; தெ. கரசு, கரன்சு; து. கடெபினி, கடெயுனி, கடெவுனி; கோத. கயிட், கட்ச்; தூட. கொட்ய, கொட்ச்; குட. கடி; கொலா. கச்ச்; பர். கட்; கட. கச்; கோண். கச்கானா, கசானா; கூ. கசி, கச; குவி. கசலி; குரு. கச்னா; மா. கக்வே; பிரா. கட்ட்; பட. கச்சு.

[கள் → கடு → கடி. (வ.மொ.வ.103).]

கடி > வ. காத் (khad).

கடி[2]-த்தல் *kaḍi,* 4 செ.கு.வி.(v.i.) 1. கமழ்தல்; to waft an aroma; to emit fragrance. *"துழாய்க் கடிக்கும்" (அஷ்டப்.திருவரங்கத்தந்.43).* 2. நிறைவேறுதல்; to be successful. *"கடிக்கும் பணியறமெல்லாம்" (அஷ்டப்.திருவரங்கத்தந்.43).*

[கடு → கடி.]

கடி[3]-த்தல் *kaḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கவ்வுதல்; to gorge, to cram in to mouth, to seize with a mouth. 2. இறுகப்பிடித்தல்; to hold. 3. ஒன்றாக இணைத்தல்; to join. 4. விடாது பற்றுதல்; to clutch. 5. வயிறு வலித்தல்; to be painful as of stomach. 6. கயிறு முதலியன இறுகப்பிடித்தல்; to be tight. அரைநாண் இடுப்பிற் கடித்துக் கொண்டிருக்கிறது.

[கள் → கடு → கடி.]

கடி[4]-த்தல் *kaḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. மிகுதல்; to be excess. 2. காரத்தன்மையாதல்; to be pungent.

[கடு → கடி.]

கடி[5]-த்தல் *kaḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. பிறர் கேளா வண்ணம் காதோடு சொல்லுதல்; to say something in the ear without being audiable to other. அவன் ஏதோ காதைக் கடிக்கிறான், என்னவென்று பார் (உ.வ.)

[கடு → கடி.]

கடி[6]-தல் *kaḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. விலக்குதல்; to exclude, discard, reject renounce, disapprove. "கொடிது கடிந்து கோற்றிருத்தி" (புறநா.17:5). 2. ஒட்டுதல்; to scare away drive off, as birds. *"கலாஅற் கிளிகடியும்" (நாலடி, 283).* 3. ஒழித்தல்; to get rid off. *"குடிபுறங்காத்தோம்பிக் குற்றங் கடிதல் வடுவன்று வேந்தன் தொழில்" (குறள்,549).* 4. அரிதல்; to cut away. *"தங்கை மூக்கினைக் கடிந்துநின்றான்"* (கம்பரா.ஆரண்ய.மாரீச.83). 5. அழித்தல்; to destroy. "செற்றவனை யினிக்கடியுந் திற மெவ்வாறு" (பெரியபு. *திருநாவுக்.108).*

ம. கடியுக (முள்ளிலிருந்து மூங்கிலை விலக்குதல்); க. கடி; து. கடி, கட்; குரு. கட்நா; மால். கடெ; தெ. கடி(கவளம்), கடி கண்டலு(துண்டுகள்).

[கள் → கடு → கடி.]

கடி[7]-தல் *kaḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. குற்றஞ் செய்தவனைச் சினந்து கண்டித்தல்; to rebuke. *"குற்றங்கண் டெனைநீ கடியவம் போதமுன் கண்ட துண்டோ" (மருதூரந்.56).* 2. அடக்குதல்; to restrain, subdue, as the senses; to overmaster, overpower. *"ஐம்புலன் கடிந்து நின்றே"* (அறிவானந்த சித்தியார் : வின்.).

[கடு → கடி.]

கடி[8] *kaḍi,* பெ.(n.) 1. புதுமை; newness, modernness.. *"கடிமலர்ப் பிண்டி" (சீவக.2739).* 2. நறுமணம்; scent, odour, fragrance. *"கடிசுனைக் கவினிய காந்தள்" (கலித்.45).* 3. திருமணம்; wedding. *"கன்னிக் காவலுங் கடியிற் காவலும்" (மணிமே.18:98).* 4. இன்பம் (பிங்.); delight, gratification, pleasure. 5. பூசை; worship homage. *"வேலன் கடிமரம்" (பரிபா.17:3).*

ம. கடி; Skt. kaḍu.

[கள் → கடு → கடி.]

கடி[9] *kaḍi,* பெ.(n.) 1. பல்லாற் கடிக்கை; biting. நாய்க்கடிக்கு மருந்து. 2. கடித்த வடு; mark or scar of bite. 3. நச்சுக்கடி; poisoning as the result of bites or stings. 4. ஊறுகாய்; pickle. *"மாங்காய் நறுங்கடி" (கலித்.109).* 5. அரைக்கடி; gall, abrasion, being the result of great tightness or rubbing of apparel. 6. மேகப்படை; ringworm. இடுப்பிற் கடி வந்திருக்கிறது. 7. கடித்து உண்ணக்கூடிய சிறு தின்பண்டம், நொறுவல் (சேரநா.); crisp edibles, snacks.

ம. கடி; கோத. கய்ா; க. கடித, கடத, காடு; குட. கடி; தெ. காடு; பிரா. கட; Mal. git, Thai. kad;

த. கடி > Skt. khad.

[கடு → கடி.]

கடி[10] *kaḍi*, பெ.(n.) நீக்கம் (பிங்.); removal, rejection.

[கடு → கடி.]

கடி[11] *kaḍi*, பெ.(n.) 1. மிகுதி; abundance, copiousness, plantifulness. *"கடிமுர சியம்பக் கொட்டி" (சீவக.440)*. 2. விரைவு; speed, swiftness. *"எம்மம்பு கடிவிடுதும்" (புறநா.9:5)*. 3. விளக்கம்; brightness; transparency. *"அருங்கடிப் பெருங்காலை" (புறநா.166:24)*. 4. தேற்றம் (நேமி. சொல்.58.); certainty assurance. 5. சிறப்பு; beauty, excellence. *"அருங்கடி மாமலை தழீஇ" (மதுரைக். 301)*. 6. ஓசை; sound, sonorousness. கடிமுரசு (நன்.457,உரை).

[கடு → கடி.]

கடி[12] *kaḍi*, பெ.(n.) 1. அச்சம்; fear. *"அருங்கடி வேலன்" (மதுரைக்.611)*. 2. வியப்பு (சூடா.); wonder, astonishment. 3. ஐயம் (தொல்.சொல்.384, உரை); doubt. 4. பேய்; devil, evil spirit. *"கடிவழங் காரிடை" (மணிமே.6:49)*.

[கள் → கடு → கடி.]

கடி[13] *kaḍi*, பெ.(n.) காலம் (பிங்.); time.

[கழிகை → கடிகை → கடி.]

கடி[14] *kaḍi*, பெ.(n.) 1. கூர்மை (திவா.); sharpness, keenness. 2. கரிப்பு; pungency. *'கடிமிளகு தின்ற கல்லா மந்தி' (தொல்.சொல்.384, உரை)*.

[கள் → கடு → கடி.]

கடி[15] *kaḍi*, பெ.(n.) 1. சிறு கொடி (வின்.); small creeper.

[கொடி → கடி (கொ.வ.).]

கடி[16] *kaḍi*, பெ.(n.) காவல்; protection, safeguard, defence. *"கடியுடை வியனகரவ்வே" (புறநா. 95:3)*.

[கள் → கடு → கடி.]

கடி[17] *kaḍi*, பெ.(n.) 1. கடித்தலால் ஏற்படும் காயம்; wound caused by bite. 2. நொறுக்குத் தீனி; something bitten off, a mouth ful. 3. தோல் நோய்; skin disease.

ம. கடி; **க.** கடித, கடக, காடு; **கோத.** கய்ட், கய்ட்ள்; துட. கொட்ய (கீறுவதற்கு விரும்புதல்); **தெ.** காடு; **பிரா.** கட்.

[கள் → கடு → கடி. கள்ளுதல் = நெருங்குதல், நெருக்குதல், இறுக்குதல், நறுக்குதல்.]

கடி[18] *kaḍi*, பெ.(n.) 1. துண்டு; piece. 2. குறுந்தடி; drumstick. *"கடிப்புடை யதிரும் போர்ப்புறு முரசம்" (பதிற்றுப்.84:1)*.

[கழி → கடி.]

கடி[19] *kaḍi*, பெ.(n.) பெருமை; greatness. 2. பருமை, பெரியது; large, big.

[கடு → கடி.]

கடி[20] *kaḍi*, பெ.(n.) 1. இடுப்பு; waist. *"கடிக்கீழ் தொடிற் கைகழுவுக" (சைவச.பொது.220)*. 2. நடுப்பகுதி; middle.

ம. கடி, கடிக.

[கடை → கடி.]

முதுகின் முடிவு இடுப்பாதலின் கடை எனப்பெற்றது. இடுப்பின் பின்கீழ்ப்பகுதி மடிமுதுகு எனப்படுவதையும் ஒப்பு நோக்குக.

கடி[21] *kaḍi*, பெ.(n.) இரப்போர் கலம்; beggar's bowl. *'கைவளை பலியொடுங் கடியுட் சோர்ந்தவால்' (வின்.)*.

க. கடி, கடிகை.

[குடம் → கடம் → கடி. கடி = வட்டமானது.]

கடி[22] *kaḍi*, பெ.(n.) பூந்தோட்டம்; flower garden.

[கள் → கடு → கடி.]

கடிக்குளம் *kaḍi-k-kuḷam*, பெ.(n.) தஞ்சைமாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Tanjore district. *"கடிகொள் பூம்பொழில் சூழ் தரு கடிக்குளத்துறையும்" (தேவா.சம்பந்.240-1)*.

மறுவ. கற்பகனார் கோயில், கற்பகனார் குளம்.

[கடி + குளம் - கடிகுளம் = மணம்கொண்ட குளம்.]

கடிக்கூறு *kaḍi-k-kūṟu*, பெ.(n.) கழித்தற்குரிய பகுதி; the part to be deducted. *"அதிலே செம்பாதி கடிக்கூறாகப் பாழாய் நித்ரையாலே கழியும்" (திவ். திருமாலை, 3.வியா.ப.21)*.

[கடி + கூறு.]

கடிக்கை *kaḍikkai,* பெ.(n.) கருக்குவாய்ச்சி மரம்; jagged jujube.

[கள் → கடு → கடி → கடிக்கை.]

கடிகண்டு *kaḍi-kaṇḍu,* பெ.(n.) பூனைக்காலிச்செடி (மலை.); cowhage.

[கடி + கண்டு.]

கடிகா¹ *kaḍi-kā,* பெ.(n.) காவலோடு கூடிய சோலை; gaurded grove. *''கடிகாவிற் பூச்சூடினன்'' (புறநா.239:2).*

[கடி + கா. கடி = காவல்.]

கடிகா² *kaḍi-kā,* பெ.(n.) பெரும்பொழில், பரந்த சோலை; a big or vast park of flowery gardens. *“கடிகாவிற் காலொற்ற வொல்கி” (கலித்.92:51).*

[கடி + கா. கடி = பெரியது, பரந்தது.]

கடிகாரச்சங்கிலி *kaḍi-kāra-c-caṅgili,* பெ.(n.) 1. கைக்கடிகாரத்தில் மாட்டியுள்ள தொடரி (சங்கிலி); watch chain. 2. ஒருவகைக் கழுத்தணி; gold chain, necklace worn by woman in one or more strands, resembling a watch chain.

[கடிகாரம் + சங்கிலி.]

கடிகாரம் *kaḍigāram,* பெ.(n.) காலங்காட்டும் கருவி, நேரங்காட்டுங்கருவி (Mod.); clock, watch, time piece. *காலங்காட்ட அவனுக்கில்லை கைக்கடிகாரம் (உ.வ.).*

மறுவ. கடியாரம்

ம. கடியாள்; **தெ.** கடியாரம்; **க.** களிகெ (kliga); **பட.** கடிகார.

Mar. ghadyāl; **U., H.** ghady; **Guj.** ghadiāl; **Ori.** ghari; **W.** cloc.

[கடிகை + ஆரம் - கடிகையாரம் → கடிகாரம். கடிகை → கழிகை. ஒ.நோ. வட்டு + ஆரம் - வட்டாரம். கொட்டு + ஆரம் - கொட்டாரம். 'ஆரம்' (சொ.ஆ.ஈறு.) (வே.க.158).]

பழங்காலத்தில் காலம் அறிதற்குப் பயன்படுத்திய கருவி நீர்க்கடிகை எனப்பட்டது. கடிகை = சிறிய மட்பானை, நீர்க்கலம், நாழிகைவட்டில். கடீயந்திர, கடிகா யந்திர என்னும் வடசொற் புணர்ப்பினின்று கடிகாரம் என்னும் தென் சொல் வந்ததன்று (வ.மொ.வ.103).

கடிகாரவிசிறி *kaḍigāra-viśiṟi,* பெ.(n.) சேலைவகை; a kind of saree.

[கடிகாரம் + விசிறி.]

கடிகாவன்கள்ளான் *kaḍikāvan-kaḷḷan,* பெ.(n.) அரிஞ்சய சோழரின் வேளக்காரப் படைவீரன்; a member of the bodyguards of the Arinjaya Chola, with a title Viracōla. *'வீரசோழத் தெரிஞ்ச கைக்கோளரில் கடிகாவன் கள்ளான்' (தெ.இ.கல்.தொ.19.கல்.8).*

[கடிகாவல் → கடிகாவலன் → கடிகாவன் + கள்ளான். கடிகாவல் = விழிப்பான காவற்பணி, மெய்க்காப்பாளன் பணி, பெரும்பணி. 'கள்ளான்' இயற்பெயர்.]

கடிகுரங்கு *kaḍi-kuraṅgu,* பெ.(n.) குரங்கின் உருவினதாகி, நெருங்குவோரைக் கடிக்கும் மதிற்பொறி; an ancient catapultic military engine of the shape of monkey mounted on the ramparts of a fort for seizing and biting hostile troops approaching the fort. *“கடிகுரங்கும் விற்பொறியும்” (பு.வெ.6:112).*

[கடி³ + குரங்கு.]

கடிகை¹ *kaḍigai,* பெ.(n.) 1. துண்டம்; piece cut off. *“கரும்பெறி கடிகையோடு . . . கவளங் கொள்ளா” (சீவக.1076).* 2. காம்பு; handle; hilt, as of spear. *“தாளுடைக் கடிகை” (அகநா.35:3).* 3. குத்துக்கோல் *(சிலப்.14:173);* pike-staff. 4. கதவிடுதாழ் (பிங்.); bolt, sliding catch. 5. கேடகம் (சிலப்.4:173,அரும்); shield. 6. திரைச்சீலை (சிலப்.14:173,அரும்); curtain.

ம. கடிக; **தெ.,க.** கடி; **து.** கடி, கடி;

[கள் → கடு → கடி → கடிகை. கடி = வெட்டுதல். கடிகை = வெட்டப்பட்ட துண்டு, காம்பு, குத்துக்கோல், தாள், கேடயம்.]

கடிகை² *kaḍigai,* பெ.(n.) 1. நாழிகை வட்டில்; clepsydra, ancient clock worked by flow of water; hour-glass. 2. நாழிகை (24 நிமையம்); Indian hour of 24 minutes. 3. தகுந்த சமயம் (திவா.); opportunity; conjuncture of circumstances. 4. நிமித்திகன், மங்கல நேரம் குறிப்பவன்; astrologer who fixes the auspicious time for ceremonies etc. *“குறிக்கும் கணியர் கண்ண னாரொடு கடிகையும் வருகென” (சீவக.2362).* 5. மங்கலப் பாடகன்; bard

whose function it is to invoke prosperity unto his patron on special occations. "காவன் மன்னருங் கடிகையுங் கடவது நிறைத்தார்" (சீவக.2367).

[குள் → குண்டு = குழி, ஆழம். குண்டு → குண்டான் = குழிந்த அல்லது குண்டான கலம். குண்டான் → குண்டா. குண்டு → குண்டிகை → குடிகை → குடுக்கை → குடுவை. குடிகை = நீர்க்கலம் (கமண்டலம்). குடிகை → கடிகை = நீர்க்கலம்; நாழிகைவட்டில், நாழிகை, மங்கல நாழிகை குறிக்கும் கணியன், மங்கலப் பாடகன் (வ.மொ.வ.103).]

கடிகை > Skt. ghaṭa, ghaṭī, ghatikā.

கடிகை[3] *kaḍigai,* பெ.(n.) சோளங்கிபுரம் என்றழைக் கப்படும் ஊரின் பழைய பெயர் (திவ்.பெரியதி.8.9:4); ancient name of the modern town of Sholinghur, where there is a shrine dedicated to Viṣṇu.

[கழல் (கழறு) → கழகம் (கலந்துரையாடுமிடம், பேசுமிடம், ஊர் மன்றம், பள்ளி, கல்லூரி, விளையாடுமிடம், பலர் கூடுமிடம் அல்லது மன்றமிருந்த ஊர்). கழகம் → கடகம் → கடிகம் → கடிகை.]

கடிகை[4] *kaḍigai,* பெ.(n.) விரைவு (திவா.); swiftness, rapidity.

கடிகை > வ. கட, கடீ கடிகா. (gh,t); H. kaḍiga.

[கடு → கடி → கடிகை. கடு = விரைவு]

கடிகை[5] *kaḍigai,* பெ.(n.) 1. கெண்டி; drinking vessel with a spout. 2. உண்கலம்; plate from which food is eaten. 3. மட்பானை (கருநா.); pot.

க. கடிகெ; Skt. ghata.

[கடம் → கடிகை.]

கடிகை[6] *kaḍigai,* பெ.(n.) கட்டுவடம்; necklace. "நீலமணிக் கடிகை" (கலித்.96).

[கண்டிகை → கடிகை (வேர்.க.150). கடிப்பாக அல்லது சற்று இறுக்கமாகக் கழுத்தில் அணியப்படுதலின் கடிகை எனப்பட்டது. அட்டிகை என்பது இப் பொருளினிதே.]

கடிகை[7] *kaḍigai,* பெ.(n.) 1. தோள்வளை; epaulette, an ancient ornament for men's shoulders. "கடிகைவா ளார மின்ன" (சீவக.2808). 2. காப்பு; bracelet, a piece of string which one ties round his wrist as token of the fulfilment of a vow. "வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து" (நெடுநல்.142).

[கடகம் → கடிகை.]

கடிகை[8] *kaḍigai,* பெ.(n.) அரையாப்பு (மூ.அ.); bubo in the groin.

ம. கடி

[கடி → கடிகை. கடி = இடுப்பு.]

கடிகை[9] *kaḍigai,* பெ.(n.) ஊரவை (i.m.p.cg.129); village assembly.

[குடி = குலம், கூட்டம். குடி → குடிகை → கடிகை = சிறுகூட்டம், ஊரவை. இங்குக் கை என்பது சிறுமைப்பொருட் பின்னொட்டு. வடவர் காட்டும் ghaṭ என்னும் மூலம் தொடர்பற்ற பல்வேறு பொருள் கொண்ட சொல். கூடுதல் என்னும் பொருளில் அது குட என்னும் தென்சொற் றிரிபாகும். குல் → குள் → குழு → குழ → குட → குடம் = திரட்சி. குடத்தல் = கூட்டுதல், திரளுதல் (வ.மொ.வ.104).]

கடிகை[10] *kaḍigai,* பெ.(n.) உயர்கல்வி நிலையம் (S.I.I.Vol.III. Part. II); institute of higher education.

[கழல் (கழறு) → கழகம் = கலந்துரையாடுமிடம், மன்றம், கற்குமிடம். கழகம் → கடகம் → கடிகம் → கடிகை.]

கடிகை[11] *kaḍigai,* பெ.(n.) செங்கற்பட்டு மாவட்டத்தில் பொய்யாமொழி மங்கலத்தில் இருந்த ஒரு தமிழ்க்கழகம் (சங்கம்); a Tamil Saṅgam at *Poyyāmoḻi Maṅgalam* in Chengalpattu district (அபி.சிந்.).

[கழகம் → கடகம் → கடிகம் → கடிகை.]

கழகம் என்னும் தமிழ்ச்சொல் பிராகிருதம் என்னும் வடதமிழில் கடகம் எனத் திரிந்து பின் வடமொழிக்குச் சென்று இருமடித் திரிபாகிக் கடிகா எனத் திரிந்து மீண்டும் தமிழில் கடிகை என வழக்கூன்றியது. இது சிறப்பாகத் தமிழ் மன்றத்தையும், தமிழ்க்கல்வி கற்பிக்கும் பள்ளியையும் பள்ளிக்கூடம் உள்ள ஊரையும் குறிப்பதாயிற்று.

கடிகைக்கோல் *kaḍigai-k-kōl,* பெ.(n.) ஒருவகை அளவுகோல்; a kind of measuring rod. 'கடிகைக்கோல் அளந்து' (S.I.I.iv.81).

[கடிகை + கோல். கடிகை = ஊரவை. கடிகைக்கோல் = ஊரவையினரின் ஒப்புதல் பெற்ற அளவுகோல்.]

கடிகைமாக்கள் *kaḍigai-mākkaḷ,* பெ.(n.) மங்கலப் பாடகர்; panegyrists who sing songs on special occasions invoking prosperity unto their patrons. "கடிகை மாக்கள் வைகறைப் புகழ" (இரகு.அயனெழு.139).

மறுவ. எட்டர், பெருநம்பிகள், வந்திகள், கற்றோர், கவிகள், வண்டர், மெய்கற்றோர், நாவலர், பாவலர், பலகலை வல்லோர், கடிகையர் (ஆ.நிக.).

[கடிகை + மாக்கள். கடிகை = ஊரவை.]

கடிகைமாராயன் *kaḍigai-mārāyaṉ,* பெ.(n.) 1. தலைமை இசைக்காரன் (சாஸனத்.197); head musician. 2. கண்காணிப்பாளர்; supervisor. 3. கல்விச் சாலைத் தலைவன் (S.I.I. Vol. 2:2 insc. 25); principal.

[கடிகை + மாராயன் (பெருமை கருதி வழங்கப்படும் பட்டம்).]

கடிகைமுத்துப்புலவர் *kaḍigai-muttu-p-pulavar,* பெ.(n.) திருநெல்வேலி மாவட்டம் எட்டையபுரத்து வேங்கடேச ரெட்டப்ப பூபதியின் அரசவைப் புலவராய் இருந்து அந்தச் சிற்றரசன் மீது பல பாடல்களைப் பாடிய புலவர்; court poet of Veṅkatēša Rettappa Būpati Ettayapuram, Tirunelveli district (அபி.சிந்.).

[கடிகை + முத்துப்புலவர். கடிகை = தமிழ் மன்றம்.]

கடிகையர் *kaḍigaiyar,* பெ.(n.) **கடிகையார்**[1] பார்க்க; see *kaḍigaiyār*[1]. *"கடிகையர் கவிதை யோதை" (கம்பரா.பால.எழுச்சி.79).*

[கடிகை + ஆர் - கடிகையார் → கடிகையர்.]

கடிகையார் *kaḍigaiyār,* பெ.(n.) 1. அரசனுக்குச் சென்ற நாழிகை அறிந்து சொல்லும் நாழிகைக் கணக்கர்; time keeper who sings appropriate songs to notify the periods of the day in the royal court. 2. பறை மூலம் அரசாணையை அறிவிப்போர்; one who announces the orders of the king by beating the drums. *'திருக்கொடியேற்று நாளன்று திருப்பறை யறைவு கேட்பிக்குங் கடிகையார் ஐவர்க்கு' (S.I.I.ii.125).* 3. கடிகை என்னும் பள்ளியைச் சார்ந்தவர் (சாசனச்சொல் அக.Vol-iii. part-ii); the school of court bards.

[கடிகை + ஆர்.]

கடிகையாரம் *kadigai-y-āram,* பெ.(n.) 1. கைக்கடிகை; wrist watch. 2. கடியாரம் (பாண்டி.); clock.

தெ. கடியாரமு

[கடிகை + ஆரம் - கடிகையாரம். கடிகை = நேரம் காட்டும் கருவி. ஆரம் = வட்டத் தொடரி (சங்கிலி). கைக்கடிகை (wrist watch) = கையில் கட்டப்படுதலால் பெற்ற பெயர்.]

கடிகைவெண்பா *kaḍigai-veṇbā,* பெ.(n.) அரசர், கடவுளர் முதலியோரது அருஞ் செயல்கள் ஒரு கடிகைப்பொழுதில் நடந்தனவாகக் கூறும் 32 நேரிசை வெண்பாவாலான சிற்றிலக்கியம் (தொன்.வி.283. உரை); poem consisting of 32 stanzas in *nēriša - veṇpā* metre, recounting the noble deeds of kings or of gods as if they were performed within one nāḻigai time.

[குடிகை → கடிகை + வெண்பா.]

கடிகைவேளாளர் *kaḍigai-vēlāḷar,* பெ.(n.) வேளாளருள் மக்களைக் காக்கும் பொறுப்பேற்ற ஒரு பிரிவினர்; a caste among *Vēlālar* community.

[கடிகை + வேளாளர். கடிகை = காவல், காவலமைந்த இடம், ஊர்.]

கடிகொள்[1]**(ளு)-தல்** *kaḍi-koḷ(ḷu)-,* 7 செ. குன்றாவி.(v.t.) விளக்குதல்; to open to view, make vivid. *"தண்கதிர் மதியந் தான்கடிகொள்ள" (சிலப்.28:46.).*

[கடி + கொள். கடி = விளக்கம்.]

கடிகொள்[2]**(ளு)-தல்** *kaḍi-koḷ(ḷu)-,* 7 செ. குன்றாவி.(v.t.) காத்துக் கொள்ளுதல்; protect or care for self. *"தம்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொல் எம்நெஞ்சத் தோவா வரல்" (குறள்,1205).*

[கடி + கொள். கடி = காவல்.]

கடிகோல் *kaḍi-kōl,* பெ.(n.) 1. பறவை ஒட்டுங் கழி; stick that is brandished to scare away birds that prey upon ripening corn. 2 நாய்க்கழுத்திற் கட்டுந் தடி (வின்.); rod tied to the neck of a dog and fastened elsewhere to keep it from mischief. 3. கடப்பாரை; a crow-bar.

ம. கடிகோல்

[கடி + கோல்.]

கடிச்சவன் *kaḍiccavaṉ,* பெ.(n.) ஈயாதவன்; sordid, wretch, skinflint. வீட்டுச் சொந்தக்காரன் கடிச்சவன் ஆதலால் வீட்டைப் பழுதுபார்க்கமாட்டான் (உ.வ.).

[கடுத்தவன் → கடித்தவன் → கடிச்சவன்.]

கடிச்சவாய்தடிச்சான் *kaḍicca-vāy-taḍiccāṉ,* பெ.(n.) காஞ்சொறி என்னும் பூடுவகை; climbing nettle (சா.அக.).

கடிச்சவாய்துடைச்சான் *kaḍicca-vāy-tuḍaiccāṉ,* பெ.(n.) 1. எருக்கு; maddar. 2. காஞ்சொறி; climbing nettle (சா.அக.).

[கடித்த → கடிச்ச + வாய் + (துடைத்தான்) துடைச்சான்.]

கடிச்சான் *kaḍiccāṉ,* பெ.(n.) பனங்கொட்டையிலுள்ள கட்டித் தகண் (நெல்லை); hard pulp inside a sprouting palmyra nut.

[கடுத்தான் → கடிச்சான்.]

கடிச்சை[1] *kaḍiccai,* பெ.(n.) 1. ஒரு செடி (மூ.அ.); a shrub. 2. மரவகை; downy-leaved Faise Kamela.

க. கடிச; தெ. கடிசெ.

[கடுத்தை → கடிச்சை.]

கடிச்சை[2] *kaḍiccai,* பெ.(n.) கடலில் வாழ்வதும் 16 விரலம் வரை வளர்வதும் பழுப்புநிறமும் பக்கங்களில் கறுப்புப் பட்டைகளும் கொண்ட மீன்வகை; a sea-fish, greyish, with black blotches on its sides, attaining 16 in. in length.

[கடுத்தை → கடிச்சை.]

கடிச்சை[3] *kaḍiccai,* பெ.(n.) ஈயாத்தனம் (வின்.); niggardliness.

[கடு → கடுத்தை → கடித்தை → கடிச்சை.]

கடிச்சைக்காரன் *kaḍiccai-k-kāraṉ,* பெ.(n.) ஈயாதவன் (வின்.); niggard, penurious man.

[கடிச்சை → கடிச்சைக்காரன்.]

கடிசரி *kaḍišari,* பெ.(n.) தேசிக் கூத்துக்குரிய அடவு வகைகளுள் ஒன்று (சிலப்.3:16. உரை); one of the postures of the feet in the *dēši* dance.

[கடி + சரி. கடி = விரைவு. சார் → சாரி → சரி, வரிசை, முறை.]

கடிசு *kaḍišu,* பெ.(n.) 1. கடுமை; asperity, severity. 2. நிமிர்வு (வின்.); being too perpendicular, too little bent, as a hoe or adze to the handle, ploughshare to the shaft opp. to தணிசு.

தெ. கடிசு; க. கடிதை.

[கடு → கடுத்து → கடுசு → கடிசு.]

கடிசூத்திரம் *kaḍi-šūttiram,* பெ.(n.) **கடிஞாண்**[1] பார்க்க; see *kaḍiñāṇ*[1]. *"மணிக்கடிசூத்திரம் வீக்கி" (கம்பரா.யுத்த.இராவணன் தேரேறு.5).*

க. கறதாபே (நடுப்பட்டி), கடிபந்தே; ம. கடிபந்தம்.

*[கடி + சூத்திரம். **Skt.** šūtrā > த. சூத்திரம். கடி = இடை, இடுப்பு. சூத்திரம் = கயிறு.]*

கடிசை *kaḍišai,* பெ.(n.) பாய்மரந்தாங்கி (சங்.அக.); plank that supports the mast of a boat.

[கடு → கடி → கடிசை.]

கடிஞாண்[1] *kaḍi-ñaṇ,* பெ.(n.) அரைஞாண் கயிறு; a waist cord or waist - chain.

மறுவ. அரைஞாண்

[கடி + ஞாண். கடி = இடை, இடுப்பு. ஞாண் = கயிறு.]

கடிஞாண்[2] *kaḍi-ñāṇ,* பெ.(n.) கடிவாளம் (சேரநா.); a bride, bit.

ம. கடிஞ்ஞாண்

[கடி = கடித்தல், வாயால் பற்றுதல். கடி + ஞாண்.]

கடிஞை[1] *kaḍiñai,* பெ.(n.) 1. இரப்போர் (பிச்சை) கலம்; begging bowl. *"பிச்சையேற்ற பெய்வளை கடிஞையின்" (மணிமே.பதி.63).* 2. மட்கலம் (பிங்.); earthern vessel.

[கடம் → கடி → கடிஞை.]

கடிஞை[2] *kaḍiñai,* பெ.(n.) கவறாடும் (சூதாடும்) காய் அல்லது பொருள்; dice.

[கடு → கடி → கடிஞை. (பிடித்தாடும் இயல்பால் பெற்ற பெயர்.]

கடித்தகம் *kaḍittagam,* பெ.(n.) தற்காப்பிற்கியன்ற கிடுகுபடைக்கலன் (கேடயம்); shield. *"கடித்தகப் பூம்படை கைவயி னடக்கிக் காவல்" (பெருங். உஞ்சை.53:140).*

[கடி[16] → கடித்தகம்.]

கடித்திரம் *kaḍittiram,* பெ.(n.) மேகலை; an ornament worn by woman.

ம. கடிதீரம்

[கடி[20] → கடித்திரம்.]

கடிதடம் *kaḍi-taḍam,* பெ.(n.) 1. அரை (இடுப்பு) (திவா.); waist. 2. பெண்குறி (சூடா.); pudendum muliebre.

ம. கடித்தடம்

[கடி + தடம். கடி = இடுப்பு. கடிதடம் = இடுப்பு, இடுப்பைச் சார்ந்த பகுதி.]

கடிதம் *kaḍidam,* பெ.(n.) 1. மடல் எழுதவேனும் பூவேலைப்பாடு அல்லது ஓவியம் (சித்திரம்) வரையவேனும் பயன்பட்ட பசைக்கூழ் தடவிய சீலை; canvas on which paste is applied before writing, painting or drawing upon. *“நெய்த்தகூழ் வருடக் கடிதமே யெனவும்” (வேதா.சூ.43).* 2. தாள்; paper. 3. மடல்; letter. 4. பிசின் (மூ.அ.); gum.

ம. கடிதம்; **க.** கடித, கடத; **து.** கடத; **தெ.** கடிதமு; Mal. kertas; Thai. kradad.

[கடி → கடிது → கடிதம். கடிது = திண்ணமானது, தடிப்பானது.]

பசை சேர்த்த தடிப்பான துணி கடிதம் எனப்பட்டது. ஓவியம் வரைதற்குப் பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட பசை தடவிய துணியை அரசர் முதலியோர் திருமுகம் (மடல்) எழுதவும் பயன்படுத்தியதால் நாளடைவில் வெறும் மடலை மட்டும் குறிக்கும் சொல்லாக இது வளர்தற்கு இடமாயிற்று.

கடிதல் *kaḍidal,* பெ.(n.) ஒரு தப்பிசை (திருவாலவா.57:26); a discordant note.

[கள் → கடு → கடி → கடிதல். கடிதல் = நீக்குதல், நீக்கத்தக்கது.]

கடிது[1] *kaḍidu,* பெ.(n.) 1. கடியது, கடுமையானது; that which is difficult, hard, arduous. *“தீயினுங் கடிதவர் சாயலிற் கனலுநோய்” (கலித்.137:22).* 2. விரைவு; quickness. *“காலத் தீப்பெய ருருத்திரன் வந்தனன் கடிதில்” (கந்தபு.கணங்கள்.4).*

க. கடிது; **தெ.** கடிதி; **து.** கடு, கட்தீ.

[கடி → கடிது.]

கடிது[2] *kaḍidu,* வி.எ.(adv.) 1. விரைவாய்; speedily, quickly. *“கைசென்று தாங்குங் கடிது” (சிவப். பிரபந். நன்.31).* 2. மிக; exceedingly, very greatly, to a great degree. *“உடையான்றாள் சேர்தல் கடிதினிதே” (இனி.நாற்.1).*

[கடி → கடிது.]

கடிந்தமன் *kaḍindamaṉ,* பெ.(n.) குயவன் (த.சொ. அக.); potter.

[கடி → கடிந்தமன்.]

கடிந்தான் *kaḍindāṉ,* பெ.(n.) 1. காமம் வெகுளி மயக்கம் மூன்றையும் ஒழித்தவன் (கோ.த.கை); he who discarded three undeservable things. *“மாணாக்கன் கற்பனைத்து மூன்றுங் கடிந்தான்” (சிறுபஞ்.29).* 2. முனிவன் (திவா.); he who has renounced the world recluse.

மறுவ. கடிந்தோன்

[கடி = விலக்குதல். கடி → கடிந்தான்.]

கடிந்தீவார் *kaḍin-dīvār,* பெ.(n.) வெறுப்பார் (கழக.அக.); one who dislikes. *“கனற்றிநீ செய்வது கடிந்தீவார் இல்வழி” (கலித்.73:10).*

[கடிந்து + ஈவார்.]

கடிந்தீவார் என்பது வினையெச்சத் தொடரன்று. போதருவார் என்பதில் தருவார் என்னும் துணைவினை போதலைச் செய்வார் என முதல்வினைப் பொருளே சுட்டி நின்றது போலக் கடிந்தீவார் என்பதில் ‘ஈவார்’ செய்வார் என்னும் பொதுப்பொருள் தந்து முதல்வினைக்குத் துணை வினையாயிற்று.

கடிந்துகொள்(ளு)-தல் *kaḍindu-koḷ(ḷu)-,* 6 செ.கு.வி.(v.i.) சினங்கொள்ளுதல்; to get angry with someone. தமிழைப் பிழைபடப் பேசினால் பாவாணர் கடிந்து கொள்வார்.

[கடி → கடிந்து + கொள்.]

கடிநகர் *kaḍi-nagar,* பெ.(n.) 1. காவல்மிகுந்த நகரம், தலைநகரம்; fortified town, guarded city, capital city. *“காஞ்சனபுரக் கடிநக ருள்ளேன்” (மணிமே.17:22)* 2. மணவீடு; marriage house. *“கடிநகர் புனைந்து கடவுட் பேணி” (அகநா.136:6).*

[கடி + நகர்.]

தலைநகர்கள், அவற்றின் பெருமை பற்றிப் பேரூர் அல்லது மாநகர் என்றும், ஆரவாரம் பற்றிக் “கல்லென் பேரூர்” என்றும், பழமையான வெற்றியுடைமை பற்றிப் “பழவிறன் மூதூர்” என்றும் காவல் மிகுதி பற்றிக் “கடிநகர்” என்றும் புலவராற் சிறப்பித்துக் கூறப்பெறும் (பழந்தமி.ப.13).

கடிநாய் *kaḍi-nāy,* பெ.(n.) கடிக்கும்நாய்; vicious, snappish dog. *“கடிநா யெனச்சீறி” (அறப்.சத.21).*

ம. கடியன்பட்டி

[கடி + நாய்.]

கடிநிலை *kaḍi-nilai,* பெ.(n.) நீக்கும் நிலை; inadmissibility, unacceptability. *“திணைமயக்

குறுதலுங் கடிநிலை இலவே" (தொல்.பொருள். அகத்.12).

[கடி + நிலை. கடி = நீக்குதல்.]

கடிப்பகை *kaḍi-p-pagai,* பெ.(n.) 1.வேம்பு; neem tree. "*அரவாய்க் கடிப்பகை*" (மணிமே.7:73). 2. வெண்கடுகு; white mustard, so called from its being used in exorcising devils. "*கடிப்பகை யனைத்தும் . . . அரலைதீர வுறீஇ*" (மலைபடு.22). 3. கடுகு (மலை.); mustard.

[கடி + பகை. பேய்முதலிய தீய ஆவிகளின் பகையை நீக்குந் தன்மை வாய்ந்தவனவாகக் கருதப்படுவதால் வேம்பும், வெண்கடுகும், கடுகும் கடிப்பகை என வழங்கலாயிற்று.]

கடிப்பம்[1] *kaḍippam,* பெ.(n.) 1. காதணி (பிங்.); ear ornament. 2. அணிகலச்செப்பு (திவா.); jewel casket.

[கடி → கடிப்பம் = மேல்மூடி செறிவாகப் பொருந்துவது.]

கடிப்பம்[2] *kaḍippam,* பெ.(n.) கெண்டி; drinking vessel with a spout. "*குலமணி கடிப்பத் தங்கள்*" (இரகு.குறைகூறு.3).

ம. கடிப்பம்

[கடி → கடிப்பம்.]

கடிப்பான் *kaḍippāṉ,* பெ.(n.) **கடுப்பான்** பார்க்க; see *kaḍuppāṉ.*

[கடி → கடிப்பான்.]

கடிப்பிடுகோல் *kaḍippiḍu-kōl,* பெ.(n.) முரசறை கோல் (கழக.அக.); drumstick.

[கடிப்பு → கடிப்பிடுகோல். கடிப்பு = பறையடிக்கும் கோல்.]

கடிப்பிணை *kaḍi-p-piṇai,* பெ.(n.) ஒருவகைக் காதணி (சீவக.488, உரை); a kind of a pair of ear-rings.

[கடிப்பு + இணை. கடிப்பு = செறிவு, செறிந்த காதணி. இணை = இரண்டு.]

இக்காலத்துப் பாண்டி நாட்டுப் பழ நாகரிக மகளிர்போல், அக்காலத்தில் எல்லாத் தமிழப் பெண்டிரும் காது வளர்த்திருந்தனர். காது வளர்க்கும் போது அணிவது குதம்பையும், வளர்த்த பின் அணிவது குழையும் கடிப்பிணையுமாகும். குதம்பை இன்று குணுக்கு என வழங்குகின்றது (பண்.நா.ப.54).

கடிப்பு[1] *kaḍippu,* பெ.(n.) 1. பறையடிக்கும் குறுந்தடி; drumstick. "*நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்தீர்*" (மணிமே.25:51). 2. படைக்கலன் வகை; a kind of weapon. "*வாய்செறித்திட்ட மாக்கடிப் பிதுவே*" (கல்லா.6). 3. துருத்தியின் கைப்பிடி; handle of the bellows. "*கடிப்புவா ரங்குலி கொளீஇய கை*" (சீவக.2830).

[கடி[16] → கடிப்பு.]

கடிப்பு[2] *kaḍippu,* பெ.(n.) சுமிழ்; tambourine bells. "*கடிப்புடல் விசித்த சல்லரி*" (கல்லா.8).

[கடி = ஓசை. கடி[11] → கடிப்பு.]

கடிப்பு[3] *kaḍippu,* பெ.(n.) காதணி; ear ornament. "*காதிற் கடிப்பிட்டு*" (திவ்.பெரியதி.10.8:1).

ம. கடிம்பு

[கடிப்பிணை → கடிப்பு.]

கடிப்பு[4] *kaḍippu,* பெ.(n.) ஆமை; (பிங்.); tortoise.

[கடு → கடி → கடிப்பு.]

கடிப்பு[5] *kaḍippu,* பெ.(n.) கடிபட்ட தழும்பு; scar left by a bite.

ம. கடிப்பு

[கடி[9] → கடிப்பு.]

கடிப்பேறு *kaḍi-p-pēṟu,* பெ.(n.) முரசினைக்கோலால் அடிக்கை; drum beat. '*கடிப்பேற்றினால் முரசுசார்வாக ஒலி பிறந்தாற்போல*' (நீலகேசி. 509.உரை).

[கடி[11] + பேறு.]

கடிப்பை *kaḍippai,* பெ.(n.) **கடிப்பகை-2** பார்க்க; see *kaḍi-p-pagai-2.*

[கடி + பகை - கடிப்பகை → கடிப்பை.]

கடிபிடி *kaḍi-piḍi,* பெ.(n.) சண்டை; quarrel, affray.

ம. கடிபிடி; க. கடபட, கடபடே, கடிபடி; து. கடிப்பிடி; Mar. khatpat.

[கடி[7] + பிடி.]

கடிமரம் *kaḍi-maram,* பெ.(n.) பகைவர் நெருங்காதபடி வளர்த்துக் காக்கப்படும் காவன்மரம்; tree planted and well guarded as a symbol of sovereign power or dominion in ancient times. *"கடிமரத்தாற் களிறணைத்து" (பதிற்றுப்.33:3).*

[கடி + மரம். கடி = காவல்.]

கடிமரமாவது ஒவ்வோர் அரச குடியினராலும் அவரவர் குடியொடு தொடர்புள்ளதாகவும் தெய்வத்தன்மை யுள்ளதாகவுங் கருதப்பட்டு, கொடியும் முத்திரையும் போலத் தன்ஆள்குடிச் சின்னமாகக் கொண்டு, பகைவர் வெட்டாதவாறும் அவர் யானையை அதிற் கட்டாதவாறும் காத்துத் தொன்றுதொட்டுப் பேணப்பட்டுவரும் ஏதேனுமொரு வகையான காவல் மரம். அது தலைமையரசர்க்கும் சிற்றரசர்க்கும் பொதுவாகும். பாண்டிநாட்டிலிருந்த பழையன் என்னும் குறுநிலமன்னன், ஒரு வேம்பைக் காவல்மரமாக வளர்த்து வந்தான். செங்குட்டுவனின் பகைவருள் ஒருவன் கடப்பமரத்தைக் காவல்மரமாகக் கொண்டிருந்தான்.

கடிமரம், சில அரசரால் தலைநகரில் மட்டும் தனிமரமாகவும், சிலரால் ஊர்தொறும் தனிமரமாகவும், சிலரால் சோலைதொறும் தனிமரமாகவும் வளர்க்கப்பட்டதாகத் தெரிகிறது (பழந்தமி.ப.24,25).

கடிமனை *kaḍi-maṉai,* பெ.(n.) காவலமைந்த குடியிருப்பு; fortified place. *"காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று" (பு.வெ.4:61).*

[கடி[16] + மனை.]

கடிமாடம் *kaḍi-māḍam,* பெ.(n.) காவலமைந்த கன்னிமாடம்; guarded residence for maidens. *"கடிமாட மடைந்த வாறும்" (சீவக.13).*

[கடி[16] + மாடம்.]

கடிமாலை *kaḍi-mālai,* பெ.(n.) 1. அரைஞாண்; a zone. 2. ஒட்டியாணம் (சேரநா.); a girdle.

ம. கடிமாலிக

[கடி = இடை, இடுப்பு. கடி + மாலை.]

கடிமிளை *kaḍi-miḷai,* பெ.(n.) காவற்காடு; gaurded forest.

க. மிளே (காடு)

[கடி + மிளை. மிடைதல் = செறிதல், நிறைதல், மிகுதல், மரமடர்ந்த காடு. மிடை → மிளை.]

கடிமுரசம் *kaḍi-murašam,* பெ.(n.) காவல் முரசம்; royal drum, a symbol of sovereign authority, in ancient times. *"இடிமுரசம் தானை இகலரிய எங்கோன் கடிமுரசங் காலைசெய" (பு.வெ.9:202.)*

[கடி + முரசம். முரசு + அம் - முரசம். 'அம்' பெ.பொ.ஈறு.]

கடிமூலம் *kaḍi-mūlam,* பெ.(n.) முள்ளங்கி (சங்அக.); radish.

க. மூலங்கி, மூலக (முள்ளங்கி).

[கடி[18] + மூலம். மூலம் = கிழங்கு.]

கடிய[1] *kaḍiya,* வி.எ.(adv.) விரைவில்; quickly. கடிய வா (உ.வ.).

[கடி + அ. 'அ' வி.எ.ஈறு.]

கடிய[2] *kaḍiya,* பெ.எ.(adj.) 1. கட்டியான; that which is difficult, hard. கடியபொருளைக் கடிக்காதே (உ.வ.). 2. காரமான; pungent.

ம. கடிய; க. கடது; தெ. கடிதி.

[கடி + அ. 'அ' பெ.எ.ஈறு.]

கடியடு *kaḍiyaḍu,* பெ.(n.) சிற்றரத்தை; lesser galangal.

[கடியன் → கடியடு.]

கடியந்திரம் *kaḍi-yandiram,* பெ.(n.) ஏற்ற மரம் (யாழ்.அக.); picottah.

[கடி + எந்திரம். கடி = விரைவு. நீரேற்றத்தின் விரைவைக்குறித்து அடையானது.]

கடியநெடுவேட்டுவன் *kaḍiya-neḍu-vēṭṭuvaṉ,* பெ.(n.) பெருந்தலைச்சாத்தனாராற் பாடப்பட்ட ஒரு வேடர் தலைவன்; name of a chief of hunters, sung by *Peruntalai-c-cāttaṉār.*

[கடிய + நெடு + வேட்டுவன் (விரைந்து அம்பெய்யும் ஆற்றலன்).]

கடியர் *kaḍiyar,* பெ.(n.) கொடியவர் (கழக.அக.); cruel person.

[கடு[8] → கடி + அர்.]

கடியல்[1] *kaḍiyal,* பெ.(n.) பாய்மரத்தை அல்லது பிறவற்றைக் கயிற்றால் இணைத்துக் கட்டுவதற்கு ஏந்தாகப் பொருந்திய தோணியின் குறுக்குமரம் (யாழ்ப்.); beam set across a small sailing boat so

as to extend to either side of the vessel, in order that a temporary stay for the mast or any other rope. might be attached thereto.

மறுவ. கடியை

ம. கடிப்பூட்டு

[கடி[20] + அல். கடி = நடுவு, நடுப்பகுதி. கடியல் = தோணியின் நடுவிலிடும் குறுக்குமரம்.]

கடியல்² *kaḍiyal*, தொ.பெ.(vbl.n.) விலக்குதல், நீக்குதல்; neglecting, rejecting. "அவ்வழக்கு உண்மையின் கடிய லாகா கடனறிந் தோர்க்கே" (தொல்.பொருள்.மரபு.69).

[கடி + அல். 'அல்' தொ.பெ.ஈறு.]

கடியலூர் *kaḍiyalūr*, பெ.(n.) கடியலூர் உருத்திரங் கண்ணனார் வாழ்ந்த ஊர்; a place in which Šaṅgam poet *Kaḍiyalūr Uruddiraṅg-kaṇṇanār* lived.

[கடி → கடியல் + ஊர் - கடியலூர். கடி = நடுவு, நடுப்பகுதி.]

கடியலூருருத்திரங்கண்ணன் *kaḍiyalūr-uruttiraṅ-kaṇṇaṉ*, பெ.(n.) பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை என்னும் நூல்களை இயற்றிய கடைக்கழகப் புலவர்; a poet who wrote the poems, *Perumpāṇ-āṟṟu-p-paḍai* and *Paṭṭina-p-pālai*, in praise of *Colaṉ Karikālaṉ*.

[கடியலூர் + உருத்திரன் + கண்ணன். கடியலூர் = நடுவிலிருக்கும் ஊர்.]

கடியவன் *kaḍiyavaṉ*, பெ.(n.) **கடியன்** பார்க்க (சேரநா.); see *kaḍiyaṉ*.

ம. கடியவன்

[கடு → கடி + அவன்.]

கடியறை *kaḍiyaṟai*, பெ.(n.) மணவறை; decorated place in a house to seat the bride and the bridegroom at a wedding. "கடியறை மருங்கி னின்ற மைந்தனை" (சீவக.2059).

[கடி + அறை. கடி = நறுமணம், திருமணம்.]

கடியன் *kaḍiyaṉ*, பெ.(n.) 1. கொடுங்கோலன்; tyrant. "இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்தன் உறைகடுகி ஒல்லைக் கெடும்" (குறள்,564.) 2. கொடுமைக்காரன்; cruel hearted man. 3. துன்புறுத்தி மகிழ்பவன்; sadist. 4. இரக்கமற்றவன்; inhuman.

ம. கடியவன்

[கடு[8] → கடி + அன் - கடியன். கடு = கடுமை, கொடுமை.]

கடியாரத்தோடு *kaḍiyāra-t-tōḍu*, பெ.(n.) காதணி வகை; large ear ring with stones set in gold, the decorated form of kammal.

[கடிகாரம் → கடியாரம் + தோடு.]

கடியாரவட்டிகை *kaḍiyāra-v-aṭṭigai*, பெ.(n.) பொன்னாலான மகளிர் கழுத்தணி வகை, அட்டிகை வகை; a kind of woman's necklace made of gold wire.

[கடிகாரம் → கடியாரம் + அட்டிகை.]

கடியாரேந்தல் *kaḍiyār-ēndal*, பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Šivagaṅgai* district.

[கடிகையார் + ஏந்தல் - கடிகையாரேந்தல் → கடியாரேந்தல். ஏந்தல் = ஏரி, ஏரியைச் சார்ந்த ஊர். கடிகை = ஊரவை.]

கடியிரத்தம் *kaḍi-y-irattam*, பெ.(n.) மூக்கிரட்டை (மலை.); spreading hogweed.

[கடி + இரத்தம்.]

கடியிருக்கை *kaḍi-y-irukkai*, பெ.(n.) திருமணக்கூடம்; wedding pavilion. "அருங்கடி யிருக்கையு ளமர நல்கினான்" (கந்தபு.வரைபுனை.19).

[கடி[8] + இருக்கை.]

கடிவட்டு *kaḍi-vaṭṭu*, பெ.(n.) வட்டுடை; cloth tied round the waist and reaching down the knee, or up to the knee.

[கடி[18] + வட்டு. வள் → வட்டு.]

கடிவாய் *kaḍi-vāy*, பெ.(n.) கடித்த இடம்; bite, lips of a wound caused by a bite. கடிவாயில் மருந்துவை (உ.வ.).

ம. கடிவாய்

[கடி[9] + வாய்.]

கடிவால் *kaḍivāl,* பெ.(n.) கும்மட்டிக்காய்; bitter apple (சா.அக.).

[கடி[15] → கடிவால்.]

கடிவாலுவன் *kaḍi-vāluvaṉ,* பெ.(n.) சமைப்போன்; cook. *"நெறியறிந்த கடிவாலுவன்" (மதுரைக்.36).*

[கடி[9] + வாலுவன்.]

கடிவாள் *kaḍivāḷ,* பெ.(n.) கடிவாளம் (சம்.அக.Ms.); horse's bit, bridle.

[கடி[9] + வாள்.]

கடிவாளப்புண் *kaḍivāḷa-p-puṇ,* பெ.(n.) **1.** குதிரை நோய்களுளொன்று; a kind of horse disease. **2.** வாயின் இருபக்கங்களிலும் ஏற்படும் புண்; skin affection on the corners of the mouth.

[கடிவாளம் + புண்.]

கடிவாள இறுக்கத்தால் குதிரைவாயின் இருபுறங்களிலும் உண்டாகும் புண்போன்று மாந்தர் கடைவாயில் உண்டாகும் புண்ணுக்கும் இப் பெயர் வழங்கலாயிற்று.

கடிவாளம் *kaḍi-vāḷam,* பெ.(n.) குதிரைவாயில் பொருத்தப்படும் இரும்புத்தொடரி (சங்கிலி) இழுகயிறு அல்லது வார் (திவா.); horse bit, bridle. *'பரிக்கு இடும் கடிவாளத்தை நரிக்கு இடுவதா' (பழ.).*

ம. கடிவாளம், கடிஞாண், கடிஞாணம், கடிவாறு; **க.** கடியண, கடியாண, கடிவாண; **தெ.** கள்ளியமு, கள்ளெமு, கள்யமு; **து.** கட்யன, கடிவாண; **கோத.** கட்வாளம்; **துட.** கடொணம்; **கோண்.** கரியார்.

[கடி[9] + வாளம். பாளம் → வாளம் = வார்ப்பிரும்பு, வார்ப்பிரும்புத்தொடரி (சங்கிலி).]

கடிவாளம்வெட்டல் *kaḍivāḷam-veṭṭal,* பெ.(n.) கடிவாள வாரைத் தளர்த்தி யிழுத்துவிடுகை (வின்.); slackening and pulling, jerking the reins of a horse.

[கடிவாளம் + வெட்டல்.]

கடிவாளவார் *kaḍivāḷa-vār,* பெ.(n.) குதிரையின் வாயுடன் பொருத்தப்பட்டுக் குதிரையைச் செலுத்துவோன் கையில் பிடிக்கும் கயிறு (வின்.); bridle reins.

[கடிவாளம் + வார்.]

கடிவாறு *kaḍi-vāṟu,* பெ.(n.) **கடிவாளம்** பார்க்க; see *kaḍi-vāḷam.*

[கடிவாளவார் → கடிவார் → கடிவாறு (கொ.வ.).]

கடிவி-த்தல் *kaḍivi,* 4 செ.குன்றாவி.(v.t.) நீக்கிவிடுமாறு ஆணையிடுதல்; to order to reject. *"கலிங்கர்மன் வீரவாமேகனைக் கடக்களிற்றோடும் அகப்படக் கதிர்முடி கடிவித்து" (க.க.சொ.அக.).*

[கடி + வி. 'வி' பி.வி.ஈறு.]

கடிவு *kaḍivu,* பெ.(n.) **கடிவுகம்** பார்க்க; see *kaḍivugam.*

[கடி[20] → கடிவு.]

கடிவுகம் *kaḍivugam,* பெ.(n.) இடுப்பின்கீழ் வரும் வீக்கம்; a swelling below the hip (சா.அக.).

[கடி[20] + ஊதம் - கடிவூதம் → கடிவூகம் → கடிவுகம். ஊதை → ஊதம்.]

கடிவேல் *kaḍi-vēl,* பெ.(n.) வேலமரவகை; sweet scented babul.

[கடி[8] + வேல்.]

கடிவை *kaḍivai,* பெ.(n.) **கடிறு** பார்க்க; see *kaḍiṟu.*

கடிறு *kaḍiṟu,* பெ.(n.) யானை; elephant. *"கடிறு பலதிரி கானதரிடை" (திவ்.பெரியாழ்.3.2:6).*

[களிறு → கடிறு (கொ.வ.).]

கடினப்படு-த்தல் *kaḍiṉa-p-paḍu-,* 18 செ. குன்றாவி.(v.t.) இறுகச் செய்தல், கெட்டிப்படுத்துதல்; to consolidate, to harden.

[கடும்ம் → கடினம் + படு. படு (த.வி.) → படுத்து (பி.வி.).]

கடினப்புல் *kaḍiṉa-p-pul,* பெ.(n.) கடும்புல் பார்க்க; see *kaḍum-pul* (சா.அக.).

[கடினம் + புல்.]

கடினப்புற்று *kaḍiṉa-p-puṟṟu,* பெ.(n.) **கடும்புற்று** பார்க்க; see *kaḍum-puṟṟu.*

[கடி → கடினம் + புற்று.]

கடினபலம் *kaḍiṉa-palam,* பெ.(n.) **கடுங்கனி** பார்க்க; see *kaḍuṅ-kaṉi* (சா.அக.).

*[கடினம் + பலம். பழம் → பலம்.]

கடினம் *kaḍiṉam,* பெ.(n.) 1. வன்மை, உறுதி; hardness, firmness. 2. கொடுமை (திவா.); severity, cruelty, harshness, rigorousness. 3. துன்பம், இடர்ப்பாடு; difficulty. 4. மென்மையின்மை; roughness, ruggedness.

த. கடுமம் > Skt. kaṭiṉa.

H.kadin; **Heb.** karra; **Nub.** ko-ger; **G.** hart; **Du.** hard; **Swed.** hard; **Yid.** hart; **Afrik.** hard; **Norw.** hard; **Jap.** katai; **Dan.** hard; **Chin.** kunnan; **W.** caled; **Ori.** kaṣte.

[கடு → கடுமம் → கடுனம் → கடினம். கடினம் என்பது வடதமிழ் (pkt) உலக வழக்குத் திரிபு. வடமொழியிலும் கடன் சொல்லாய் வழங்குகிறது.]

கடு¹-த்தல் *kaḍu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. நோவெடுத்தல், பூச்சிக்கடி முள் தைப்பு போன்றவற்றால் உடலில் குத்துவலி உண்டாதல்; to throb and pain, as from a sting, a venomous bite, a prick or toothache. *"நுணிங்கிக் கடுத்தலுந் தணிதலும் இன்றே" (குறுந்.136).* 2. உளைதல் (மூட்டுவலி, வயிற்றுளைச்சல், நடப்பதால் உண்டாகும் சோர்வு, சுமப்பதால் ஏற்படும் களைப்பு போன்றன); to ache, as from rheumatism, colic or dysentery; to pain, as the leg from walking, the head from carrying a load, the arm from writing. *"புணரிக ணீந்தி நீந்திக் கைமிணை கடுத்து" (பிரமோத்.4:53).* 3. உறைத்தல்; to be too highly seasoned, pungent, as curry. உணவில் உப்புக்கடுத்தால் சுவை கெடும் (உ.வ.). 4. மிகுதல்; to be full; to pervade. *"நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம்" (குறள்,706).*

ம. கடுக்க; **க.,தெ.,து.,கொண்.** கடு; குட. கடிட; **கொலா.** கெடெட்; **நா.** கறு (கசப்பு, புளிப்பு); **கோண்.** கடி; **கூ.** கடிநோமொழி (கடுங்காய்ச்சல்).

த. கடு > Skt. kaṭ.

[கள் → கடு (வே.க.187). கள் = முள். கள்ளி = முட்செடி. கடு = முள் குத்துவதால் ஏற்படும் வலி, கார்ப்பு, கைப்பு, மிகுதி, வெம்மை, கொடுமை. கடு → கடி = கூர்மை, மிகுதி, கார்ப்பு.]

வடமொழியில் மூலமில்லை. க்ருத் (வெட்டு) என்னும் வடசொல் கட்டு (வெட்டு) என்னும் தென்சொற் றிரிபாதலின், மூலமாகாது (வ.மொ.வ.104).

கடு²-த்தல் *kaḍu-,* 4 செ.கு.வி.(v.i.) விரைந்தோடுதல்; to move swiftly, run fast. *"காலென கடுக்கும் கவின்பெறுதேரும்" (மதுரைக்.388).*

[(உடு) → (ஒடு) → ஓடு. ஓடுதல் = விரைந்து செல்லுதல். குடு → குடுகுடு (வி.கு.). குடுகுடு வென்று ஓடுகிறான் என்னும் வழக்கைக் காண்க. குடுகுடுத்தான் = விரைவாளன் (அவசரக்காரன்). குடு → கடு. கடுத்தல் = விரைதல். விரைந்தோடுதல். கடும்பா = விரைந்து பாடும் பா. கடுநடை = வேகநடை (முதா.57).]

கடு³-த்தல் *kaḍu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. சினத்தல்; to be angry, indignant wrath. *"மங்கையைக் கடுத்து" (அரிச்சந்.நகர்நீ.110).* 2. வெறுத்தல்; to dislike, detest, abhor. *"பொன்பெய ருடையோன் தன்பெயர் கடுப்ப" (கல்லா.5).* 3. ஐயுறுதல்; to doubt. *"நெஞ்சு நடுக்குறக் கேட்டுங் கடுத்தும்" (கலித்.24)* 4. ஒத்தல்; to resemble. *"அவிரறல் கடுக்கு மம்மென் குவையிருங் கூந்தல்" (புறநா.25:13).*

[கள் → கடு.]

கடு⁴-தல் *kaḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1 வெட்டுதல்; to cut. 2. களை எடுத்தல்; to weed. *"கண்ணீலக் கடைசியர்கள் கடுங்களையிற் பிழைத்தொதுங்கி" (பெரியபு.மானக்கஞ்.2).*

[கள் → கடு.]

கடு⁵ *kaḍu-,* பெ.(n.) 1. கைப்பு; bitterness. 2. கார்ப்பு; pungency. 3. வெறுப்பு; dislike. *"கடுநேர் கடுமொழியும்" (நீதிவெண்.22).* 4. துவர்ப்பு; astringency.

[கள் → கடு.]

சமற்கிருத அகரமுதலியில் மோனியர் வில்லியம்சு 'கடு' என்னும் சொல் முற்றிலும் தமிழிலிருந்து கடன் கொள்ளப்பட்ட சொல் என்றறியாமல் க்ருத் என்னும் மூலத்திலிருந்து பிறந்திருக்கலாம் என்று கருதினார். க்ருத் என்னும் வடசொன் மூலம், செய்தலையே குறிக்கும். கடு என்னும் உரிச்சொல் தமிழில் விரிந்த வேர்மூலப் பொருட்பாட்டுப் புடைபெயர்ச்சியுடையது என்பதை அவர் அறியார். செய்தற்பொருளில் வழக்கூன்றும் சொல் வினைச்சொல்லாக நீடித்தலன்றி உரிச்சொல் தன்மை எய்துவதில்லை.

கடு - sharp pungent, fierce etc. Cl. (P.455.) He does not doubt that the origin of this words is 'D'. He campares kaḍi., kaḍugu, Cf also kḍu etc. kay, etc., kasar, kataz etc. Sk. khara (khašu) sharp pungent acid, etc. are propably also related to these 'D' terms (K.K.E.D. XXXIX).

கடு⁶ *kaḍu,* பெ.(n.) 1. பாம்பு; snake. 2. முதலை; crocodile. 3. நஞ்சு; poison. 4. நச்சுக்கடி;

poisonous bite. *“காரிகை மதியோடுற்ற காலையிற் கடுவினீற்றில” (சேதுபு.இராமணருள்.17).*

[கல் → கள் → கடு. கல் = கருமை, நஞ்சு.]

கடு[7] *kaḍu,* பெ.(n.) 1. முள்ளி (மலை.); Indian nightshade. 2. மாவிலங்கு; mund berried cuspidate leaved lingam tree. 3. முள்; thron. *“வெள்ளிலிற் பாய்ந்து மந்திவியன் கடுவுளைப்ப மீழ்வ” (கந்தபு.வள்.12).* 4. கடுக்காய்; chebulic myrobalan. “கடுக்கலித் தெழுந்த கண்ணகன் சிலம்பில்” (மலைபடு.14).

[கள் → கடு. கள் → முள்.]

கடு[8] *kaḍu,* பெ.(n.) 1. கடுமை; hard. 2. கூர்மை; sharpness. 3. விரைவு; speed.

[கள் → கடு.]

கடு[9] *kaḍu,* பெ.எ.(adj.) 1. மிகுதி; excess. *“அல்கிரை யாகிக் கடுநவைப் படீஇயரோ” (குறுந்.107).*

[கள் → கடு.]

கடு[10] *kaḍu-,* வி.எ.(adv.) விரைந்து; speedy. *“வெந்திறற் கடுவளி பொங்கர்ப் போந்தென” (குறுந்.39).*

ம. கடு

[கள் → கடு.]

கடு[11] *kaḍu,* பெ.(n.) குறித்த காலம்; term, period. சொன்ன கடு தவறாமல் திரும்பிவா (உ.வ.).

ம. கடு, கெடு; க. கடு, கடுவு; து.,பட. கடு.

[கள் → கடு. கள் = கூடுதல், திரட்சி, தொகுதி, குறிப்பிட்ட காலவரம்பு. இதனைக் ‘கெடு’ எனத் திரித்து வழங்குவது வழுவமைதி. இது இலக்கண மருங்கின் சொல்லாறு அன்று.]

கடுக்கம் *kaḍukkam,* பெ.(n.) விரைவு; celerity, speed. *“கருமக் கடுக்க மொருமையி னாடி” (பெருங். இலாவன.17:9).*

[கடு → கடுகு → கடுக்கம் (மு.தா.62).]

கடுக்கம்பாளையம் *kaḍukkam-pāḷaiyam,* பெ.(n.) ஈரோடு மாவட்டத்துச் சிற்றூர்; a village in Erode district.

[கடுக்கன் + பாளையம் - கடுக்கன்பாளையம் → கடுக்கம்பாளையம். னகர ஈறு மகர ஈறாகத் திரிந்தது.]

கடுக்கரை *kaḍukkarai,* பெ.(n.) கன்னியாகுமரி மாவட்டத்துத் தோவாளை வட்டத்துச் சிற்றூர்; a village in *Tōvāḷai* taluk in *Kaṉyā-kumari* district.

[கடுக்கன் + கரை - கடுக்கங்கரை → கடுக்கரை.]

கடுக்கல் *kaḍukkal,* தொ.பெ.(vbl.n.) கடுக்குதல், உளைதல்; boring pain.

[கடு → கடுக்கல்.]

கடுக்கல்லூர் *kaḍukkallūr,* பெ.(n.) காஞ்சிபுர மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanchipuram district.

[கடுக்கன் + நல்லூர் - கடுக்கனல்லூர் - கடுக்கல்லூர்.]

கடுக்களா *kaḍu-k-kaḷā,* பெ.(n.) எட்டி; nux vomica tree. (சா.அக.)

[கடு + களா. களை → களா.]

கடுக்கன்[1] *kaḍukkaṉ,* பெ.(n.) ஆடவர் காதணி; ear ring for men. *“காதுப்பொ னார்ந்த கடுக்கன்” (திருமந்.1424).*

ம. கடுக்கன்; **கோத.** கட்க்; குட. கடிக.

[கடி → கடு → கடுக்கன். கடித்தல் = பொருத்துதல், பிடிப்பாக இருத்தல்.]

கடுக்கன்

கடுக்கன்[2] *kaḍukkaṉ,* பெ.(n.) 1. குப்பைமேனி; rubbish plant. 2. ஒட்டுப்புல்; sticking grass (சா.அக.).

[கடுக்கன்[1] → கடுக்கன்[2].]

கடுக்காசா *kaḍu-k-kāšā,* பெ.(n.) பழுப்பு நிறமான சுவையில்லாத மீன் (செங்கை மீனவ.); a kind of grey coloured and testeless fish.

[கடு + கச்சல் - கடுக்கச்சல் → கடுக்காசா.]

கடுக்காய்[1] *kaḍu-k-kāy,* பெ.(n.) **1.** திரிபலையென்னும் முக்காய்களுள் ஒன்று; gall-nut, one of the tiri palai. **2.** கடுமரம்; chebulic myrobalan.

ம. கடுக்க, கடுக்கா, கடுகாய்; **தெ.** கரக, கரகாய; **துட.** கொட்கோய்; **கோண்.** கர்காக, ககா; **பர்.** கர்க; **குவி.** கர்க; **கூ.** கட்ரு காஉ (கார்ப்புச்சுவையுள்ள ஒரு பழம்).

[கடு + காய். கடு = கசப்பு. நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய் ஆகிய முக்காய்களும் தமிழ் மருத்துவரால் திரிபலை எனப்பட்டன.]

கடுக்காய்[2] *kaḍu-k-kāy,* பெ.(n.) நுங்கின் முற்றிய பதம்; முற்றிய பனங்காய்; the hardened stage of the kernal of palm-fruit. கடுக்காய் வேண்டாம், இளங்காய் நுங்கு கொடு (உ.வ.).

[கடு + காய். கடுத்தல் = முற்றுதல்.]

கடுக்காய்க்கற்பம் *kaḍukkāy-k-kaṟpam,* பெ.(n.) கடுக்காயிலிருந்து உண்டாக்கும் ஒருவகை மூலிகை மருந்து; a kind of medicine prepared with a potent black gall-nut grown on the Himlayas,.

[கடுக்காய் + கற்பம்.]

கடுக்காய்கொடு-த்தல் *kaḍukkāy-k-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) ஏமாற்றிவிடுதல்; to deceive, cheat, gull, hoax, to give one the slip.

[கடுக்காய் + கொடு. நுங்கின் முதிர்ந்த காய் (உட்பருப்பு) கடுமைப்படுதலால் கடுக்காய் எனப்பட்டது. இளம் நுங்கினை வழலைப் பதத்தில் தராமல் கடுக்காய்ப் பதத்தில் தந்து ஏமாற்றி விற்பதைக் கடுக்காய் கொடுத்தல் என்பர். நாளடைவில் ஏமாற்றுதல் என்னும் பொதுப் பொருளில் வழக்கூன்றியது.]

கடுக்காய்ச்சாயம் *kaḍukkāy-c-cāyam,* பெ.(n.) கடுக்காய் நீர் தோய்த்து ஊட்டிய சாயம்; gall-nut dye.

[கடுக்காய் + சாயம்.]

கடுக்காய்ச்சிப்பி *kaḍukkāy-c-cippi,* பெ.(n.) குளத்தில் வளரும் ஒருவகைச் சிப்பி; a kind of shell found in tanks (சா.அக.).

[கடுக்காய் + சிப்பி.]

கடுக்காய்த்தலையன் *kaḍukkāy-t-talaiyaṉ,* பெ.(n.) **1.** சிறியதலையுடைய ஒருவகைப் பாம்பு (மூ.அ.); a kind of snake with a small head. **2.** சிறியதலையையுடைய ஆள் அல்லது காளை (யாழ்ப்.); man or bull with a small round head.

[கடுக்காய் + தலையன்.]

கடுக்காய்த்துவர்ப்பு *kaḍukkāy-t-tuvarppu,* பெ.(n.) கடுக்காயினின்று இறக்கும் வடிநீரைப் போன்றதொரு துவர்ப்புச் சுவையையுடைய ஊட்டச் சத்து; an astringent acid obtained from nut galls.

[கடுக்காய் + துவர்ப்பு.]

கடுக்காய்நண்டு *kaḍukkāy-naṇḍu,* பெ.(n.) சிறு நண்டுவகை; a kind of small crab of the size of a gall-nut.

[கடுக்காய் + நண்டு.]

கடுக்காய்நீர் *kaḍukkāy-nīr,* பெ.(n.) கடுக்காய் ஊறிய நீர்; gall-nut soaked water.

[கடுக்காய் + நீர். சிற்ப வேலைகளில் பிடிப்பு விசைக்காக சுண்ணாம்பு, மணல் கலந்த காரையோடு கடுக்காய்நீர் கலப்பர். மச்சு வீட்டிற்கு மேற்றளம் கட்டும்போது சுண்ணாம்புச் சுருக்கியில் பதநீருடன் கடுக்காய் நீரும் கலப்பதுண்டு (சுண்ணாம்புச் சுருக்கி = சுண்ணாம்பும் செங்கல்லும் கலந்த கலவை.]

கடுக்காய்ப்பூ *kaḍukkāy-p-pū,* பெ.(n.) கடுக்காய் மரத்தின் பட்டை அல்லது இலைகளின் மேல் பூச்சிமுட்டைகளினால் ஏற்படும் புடைப்பு; curious gall-like excrescences on leaves, or barks of the gall-nut tree.

[கடுக்காய் + பூ.]

கடுக்காய் பூ

கடுக்காவயல் *kaḍukkā-vayal,* பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Šivagaṅgai district.

[கடுக்காய் + வயல் - கடுக்காய்வயல் → கடுக்காவயல். (கடுக்காய் மரத்தைச் சார்ந்த வயல்).]

கடுக்கிரந்தி *kaḍukkirandi,* பெ.(n.) **1.** இஞ்சி (யாழ்.அக.); ginger. **2.** சுக்கு; dried ginger. **3.** திப்பிலி மூலம்; the root of long-peper.

[கடு + கிரந்தி.]

கடுக்கு[1]-தல் *kaḍukku-,* 5. செ.குன்றாவி.(v.t.) 1. மேற்பூசுதல்; to gild. *'செம்பின்மேல் பொன் கடுக்கின குடம்' (S.I.I.ii,245).* 2. சுளித்தல்; to twist, as the face; to sneer, turn up one's nose at. முகத்தைக் கடுக்காதே. 3. ஒதுக்குதல்; to draw up, as one's bracelets. *"கையில் வளையைக் கடுக்கி" (திவ்.திருப்பா.18,வியா.172).*

[கடு → கடுக்கு.]

கடுக்கு[2]-தல் *kaḍukku-,* 5 செ.கு.வி.(v.i.) சினக்குறி காட்டுதல்; to show signs of indignation. *"ராமதூத னானென்று கடுக்கி" (இராமநா.உயுத்.62).*

[கடுகு → கடுக்கு.]

கடுக்கு[3]-தல் *kaḍukku-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நச்சுயிரிகளின் கடியினாலும் முள்ளின் குத்தலினாலும் கடிவாய் வலித்தல்; to throb with pain due to venomous insect bite or pricking of thorn. 2. நரம்புத்தளர்வாலும், கடுங்குளிராலும் இசிவு ஏற்படுதல்; to ache due to severe cold and weakness of nerves (சா.அக.).

[கடு → கடுக்கு.]

கடுக்குமிழ் *kaḍukkumil̲-,* பெ.(n.) நிலக்குமிழமரம்; small cashmere tree (சா.அக.).

[கடு + குமிழ்.]

கடுக்கென்(னு)-தல் *kaḍukken̲(n̲u)-,* 11 செ.கு.வி.(v.i.) 1 வளருதல்; to grow up, grow in stature. அவன் கடுக்கென்ன நாட்செல்லும் (யாழ்ப்.). 2. மிகுதல் (வின்.); to increase in wealth or in learning, used sarcastically.

[கடு → கடுக்கு + என்.]

கடுக்கென்றவன் *kaḍukken̲r̲avan̲,* பெ.(n.) இளமை கடந்தவன் (யாழ்ப்.); grown-up-man.

[கடுக்கு + என்றவன். கடுக்கு = முதிர்ச்சி.]

கடுக்கென *kaḍukken̲a,* வி.எ.(adv.) விரைவாக; quickly.

ம. கடுகனெ; க. கட, கடது, கடிது. குட. கடிப.

[கடுக்கு + என.]

கடுக்கெனல் *kaḍukken̲al,* பெ.(n.) கடுமைக் குறிப்பு; being hasty, passionate, peppery. *"கடுக்கெனச் சொல்வற்றாம்" (நாலடி.348).* 2. வன்மையாயிருத்தல்; being strict, adamant.

[கடு → கடுக்கு + எனல். கடுக்கு - ஒலிக்குறிப்பு இடைச்சொல். ஒ.நோ. துணுக்கெனல், திடுக்கெனல்.]

கடுக்கை[1] *kaḍukkai,* பெ.(n.) 1. கொன்றை; Indian laburnum. *"கடுக்கைமலர் மாற்றி வேப்பமலர் சூடி" (கல்லா.2).* 2. மருது (மலை.); saj. 3. கடுக்காய்; gall-nut.

க. கக்கெ, கக்கி; து. சுக்கை.

[கடி (மணம்கமழ்தல்) → கடு → கடுக்கை.]

கடுக்கை[2] *kaḍukkai,* பெ.(n.) குறும்புச்செயல் (சேஷ்டை); naughtiness, mischief.

[கடு → கடுக்கை.]

கடுக்கைக்கண்ணியன் *kaḍukkai-k-kaṉṉiyan̲,* பெ.(n.) சிவன்; Śiva.

[கடுக்கை + கண்ணியன்.]

கடுக்கொடி *koḍu-k-koḍi,* பெ.(n.) 1. கொடிவகை; (L.); leathery ovate-leaved moon seed. 2. கசப்புக்கொடி; bitter creeper. 3. நஞ்சுக்கொடி; naval cord. 4. நச்சுக்கொடி; a poisonous creeper (சா.அக.).

[கடு + கொடி.]

கடுக *kaḍuga,* வி.எ.(adv.) விரைந்து; quickly. *"மாரி கடிகொளக் காவலர் கடுக" (ஐங்குறு.29:1).*

மறுவ. சுருக்கா

[கடு → கடுக. கடு = விரைவு.]

கடுகடு-த்தல் *kaḍu-kaḍu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. சினக் குறிப்புக் காட்டுதல்; to show signs of anger, as by sour looks, harsh words, etc. *"முகங்கடு கடுத்தான்" (பிரபோத.11:46).* 2. விறுவிறுப்போடு வலித்தல்; to throb, as from the sting of a scorpion. தேள் கொட்டினால் கடுகடுவென்று இருக்கும். 3. உறைத்தல் (வின்.); to be too highly seasoned. கறி கடுகடுத்துப் போயிற்று.

தெ. கடகடா சூலிபடு (சினப்படுதல்)

[கடு → கடுகடு.]

கடுகடுப்பு[1] *kaḍu-kaḍuppu,* பெ.(n.) சினக்குறிப்பு; sign of hot temper, sternness, austerity, displeasure of countenance.

[கடு + கடுப்பு.]

கடுகடுப்பு[2] *kaḍu-kaḍuppu,* பெ.(n.) குத்துவலி; throbbing pain.

[கடு + கடுப்பு.]

கடுகடுப்பு[3] *kaḍu-kaḍuppu,* பெ.(n.) மிக்க உறைப்பு (வின்.); excessive seasoning.

[கடு + கடுப்பு.]

கடுகத்தி *kaḍukatti,* பெ.(n.) 1. மான்மணத்தி (கத்தூரி) மணமுடைய எலும்பு; a fragrant bone. 2. பேயத்தி; bitter fig (சா.அக.).

[கடு → கடுகு + அத்தி.]

கடுகதி *kaḍu-kadi,* பெ.(n.) விரைவு (யாழ்ப்.); high speed.

[கடு + கதி.]

கடுகந்தம் *kaḍukandam,* பெ.(n.) 1. இஞ்சிக்கிழங்கு; ginger-root. 2. வெள்ளைப்பூண்டு; garlic (சா.அக.).

[கடு + கந்தம். கந்தம் = வேர்.]

கடுகம்[1] *kaḍugam,* பெ.(n.) 1. கார்ப்பு (திவா.); pungency. 2 .திரிகடுகங்களுள் ஒன்று; any one of the three special spices used in medicine viz, சுக்கு, மிளகு, திப்பிலி. 3. திரிகடுகம் என்னும் நூல்; a didactic poem. *"முப்பால் கடுகங் கோவை" (தனிப்பா.).* 4. கடுகுச்சிவலை (கடுகுரோகிணி); Christmas rose.

[கடுகு → கடுகம். ஒ.நோ. உலகு → உலகம், குமுது → குமுதம், நஞ்சு → நஞ்சம் (செல்வி. 78, பிப். பக்.283).]

கடுகம் > வ. கடுக (katuka) உகரவீற்றுப் பொருட் பெயர்ச் சொற்கள் எல்லாம் பெருமைப் பொருள் கருதாவிடத்தும் அம்மீறு பெறுவது இயல்பு.

கடுகம்[2] *kaḍugam,* பெ.(n.) 1. குடம்; vessel, pot. 2. விரற்செறி; ring.

[கடு → கடுகு → கடுகம்.]

கடுகம்மை *kaḍugammai,* பெ.(n.) காய்ச்சலடித்த மூன்றாம் நாளில் தலையில் கடுகைப்போல் குருக்கள் தோன்றிப் பிறகு உடம்பில் பரவி, வலி, தொண்டைக்கம்மல், கழிச்சல் முதலிய குணங்களைக் காட்டும் ஓர்வகை அம்மை நோய்; a kind of measles appearing on the third day of fever with eruptions of the size of mustard seed, on the head which thence spreads over the body. It is marked by bodily pain, sore throat, purging etc., (சா.அக.).

[கடுகு + அம்மை.]

கடுகர் *kaḍukar,* பெ.(n.) **கடுக்காய்** பார்க்க; see *kaḍu-k-kāi* (சா.அக.).

[கடு → கடுகர்.]

கடுகரஞ்சம் *kaḍugarañjam,* பெ.(n.) கழற்கொடி; bonduc creeper (சா.அக.).

[கடு + கரஞ்சம்.]

கடுகல் *kaḍugal,* பெ.(n.) விரைவு; quickness.

[கடுகு + அல் 'அல்' தொ.பெ.ஈறு.]

கடுகன் *kaḍugaṉ,* பெ.(n.) ஆண்பால் இயற்பெயர்; proper name of a male.

[கடு → கடுகு → கடுகன். 'அன்' ஆ.பா.ஈறு.]

கடுகனூர் *kaḍugaṉūr,* பெ.(n.) வடார்க்காடு மாவட்டத்துச் சிற்றூர்; a village in North Arcot district.

[கடுகன் + ஊர். கடுகன் - இயற்பெயர்.]

கடுகாரம் *kaḍu-gāram,* பெ.(n.) 1. கடுகுச்சிவலை (கடுகுரோகிணி); Christmas rose. 2. சாதிபத்திரி; the mace or pulp of myristica fragrance (சா.அக.).

[கடு + காரம்.]

கடுகாலாத்தி *kaḍugālātti,* பெ.(n.) கடுகினாற் சுற்றும் ஆலாத்தி (யாழ்ப்.); mustard seeds waved before a newly married couple or others, and then cast into fire to dispel the effects of the evil eye.

[கடுகு + (ஆலத்தி) → ஆலாத்தி.]

கடுகாலி *kaḍu-gāli,* பெ.(n.) குன்றிமணி; red bead vine (சா.அக.).

[கடு + கால். கால் → காலி. கால் = விதை, வித்து. காழ் → கால் (வித்து).]

கடுகாளன் *kaḍugāḷaṉ,* பெ.(n.) இழிந்தவன் (கருநா.); a wickedman.

க. கடுகாள

கடுகாற்சுரை *kaḍu-gāṟšurai,* பெ.(n.) பேய்ச்சுரை; bitter-bottle guard (சா.அக.).

[கடுகால் + சுரை.]

கடுகி *kaḍugi,* பெ.(n.) **சுண்டை** (தைலவ.) பார்க்க; see *šuṇḍai.*

[கடு → கடுகி.]

கடுகு[1]-தல் *kaḍugu-,* 9 செ.கு.வி.(v.i.) 1. விரைதல்; to move fast; to blow hard, as wind. *"கால்விசை கடுகக் கடல்கலக் குறுதலின்" (மணிமே.14:80).* 2. மிகுதல்; to increase. *"பசி கடுகுதலும்" (இறை.1:6).*

ம. கடுகுக; க. கடு (விரைவு); குட. கடிப (விரைவு).

[கடு → கடுகு (வே.க.18).]

கடுகு செடி

கடுகு[2] *kaḍugu,* பெ.(n.) 1. கறுப்பு நிறமுள்ள தாளிப்பிற்குப் பயன்படும் கூலம் (பதார்த்த.1039); Indian mustard. *'கடுகு சிறுத்தாலும் காரம் போகாது' (பழ.).* 2. குன்றி (மலை.); crab's eye. 3. எண்ணெய்க் கசடு; lees of oil.

ம., பட. கடுகு, கட்க்; துட. கொட்க்; குட. கடு. **Cz.** horcice; **Ser.** croa, gorushica; **Turk., Ar.** hardal; **Swahili.** karadali.

Kaṭuka, kaṭu, sharp, pungent, fierce; assumed Šanṣkrit derivation kaṭ, to go. The corresponding Dravidian words is in Tamil kaḍ-u, the root meaning of which appears to be 'excessive'. Dr. Buhler derives kaṭu. from kṛit, to cut, and thinks kaṭu stands for kartu. The word kaṭu is deeply rooted in Sanskrit, and is a priori unlikely to have been borrowed from the Dravidian tongues; and yet it can scarcely be doubted, I think, that its origin is Dravidian. Not only are the direct derivatives of this word more numerous in Tamil than in Sanskrit, but collateral themes and meanings are also very abundant, whereas in Sanskrit no correlative root exists. kaḍ-u, Tam, to be sharp, is one of a cluster of roots which are united together by a family resembalance. Some of those are kaḍ-u-gu, to make haste; kaḍ-i, to cut, to reprove; kaḍ-i (with another formative), to bite; kaṟi, probably identical with kaḍi, curry; kaḍu-kaḍu (a mimetic word), to appear angry; kāḍu, and also kaḍam, kaḍaṟu, a forest. Moreover, the Sanskrit kaṭuka, pungent, appears to have been derived from the Tamil kaḍugu; mustard. Nouns formed from verbal themes in this manner, by suffixing the formative ku, pronounced gu, are exceedingly abundant in Tamil. (C.G.D.F.L.P. 568, 569)

[கள் = கடுப்பு. கள் → கடு → கடுகு = காரமுள்ள பொருள். த. கடுகு > Skt. katuka. அம்மீறு பெற்ற வடிவே ஈறுகெட்டு வடமொழியிலுள்ளது (வ.மொ.வ.104).]

கடுகு[3] *kaḍugu,* பெ.(n.) 1. முற்றி உலர்ந்த நிலை; stages of ripened and dried. 2. நன்கு முற்றி காய்ந்தகாய்; fully dried seed.

க. கடுகு

[கள் → கடு → கடுகு.]

கடுகு[4] *kaḍugu,* பெ.(n.) பழங்கால நீட்டலளவையுள் ஒன்று; one of the linear measure of olden times. எட்டு நுண்மணல் ஒரு கடுகு என்பதாம் (ஒ.மொ.138.)

[கடு → கடுகு.]

கடுகு[5]-தல் *kaḍugu-,* 9 செ.கு.வி.(v.i.) குறைதல்; to diminish, grow short. *"உறைகடுகி ஒல்லைக் கெடும்" (குறள்,564).*

[கெடு → கடு → கடுகி.]

கடுகுக்கட்டி *kaḍugu-k-katti,* பெ.(n.) கடுகுபோன்ற சிறுகொப்புளம் (சீவரட்.); minute pustule on the skin, as small as a mustard seed.

[கடுகு + கட்டி.]

கடுகுக்களி *kaḍugu-k-kaḷi,* பெ.(n.) கடுகை அரைத்துக் களியாகக் கிண்டிச் செய்யும் கட்டு மருந்து; mustard poultice (சா.அக.).

*[கடுகு + களி.]

கடுகுக்காய் *kaḍugu-k-kāy,* பெ.(n.) கடுகு கலந்த ஒருவகை ஊறுகாய்; a kind of pickle in which mustard is added to it with other ingredients (சா.அக.).

[கடுகு + காய்.]

கடுகுச்சிவலை *kaḍugu-c-civalai,* பெ.(n.) ஒருவகை மூலிகை; a kind of herb, Christmas rose.

[கடுகு + சிவலை. சிவலை = சிவந்தது.]

கடுகுச்சோறு *kaḍugu-c-cōṟu,* பெ.(n.) நெய்யுங் கடுகும் கலந்த அரிசிச் சோறு (வின்.); special preparation of boiled rice mixed with mustard seed and ghee.

[கடுகு + சோறு.]

கடுகுடு-த்தல் *kaḍuguḍu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. தெளிவின்றிப் பேசுதல்; to gabble, rattle in speaking, to speak rapidly and indistinctly. 2. சினந்து பேசுதல்; to speak angrily.

[கடுகடு → கடுகுடு.]

கடுகுடுத்தான் *kaḍuguḍuttāṉ,* பெ.(n.) துடிதுடிப்புள்ளவன் (யாழ்ப்.); fidgety person; restless man.

[கடுகடுத்தான் → கடுகுடுத்தான்.]

கடுகுதிரள்(ளு)-தல் *kaḍugu-diraḷ(ḷu)-,* 13 செ.கு.வி.(v.i.) காய்ச்சும்போது எண்ணெய்க்கடுகு கூடுதல் (வின்.); to form as a concretion when boiling oil.

[கடுகு + திரள்.]

கடுகுநெய் *kaḍugu-ney,* பெ.(n.) கடுகெண்ணெய் (பதார்த்த.165); oil extracted from mustard seeds.

ம. கடுகெண்ண

[கடுகு + நெய்.]

கடுகுப்பட்டு *kaḍugu-p-paṭṭu,* பெ.(n.) காஞ்சிபுர மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanchipuram district.

[கடுகு + பற்று - கடுகுப்பற்று → கடுகுப்பட்டு. கடுகுப்பற்று = கடுகு விளைந்த நிலம்.]

கடுகுப்பற்று *kaḍugu-p-paṟṟu,* பெ.(n.) கடுகை அரைத்து வீக்கம் வலி முதலியவைகளுக்குப் போடும் பற்று; a coating of the mustard paste used generally in swelling, pain etc. (சா.அக.)

[கடுகு + பற்று.]

கடுகுபதம் *kaḍugu-padam,* பெ.(n.) மருந்தெண்ணெய் கடுகைப்போல் திரளும் பதம்; a stage in the preparation of medicinal oil, one of *marundeṇṇey-padam* (சா.அக.).

[கடுகு + பதம்.]

கடுகுமணி *kaḍugu-maṇi,* பெ.(n.) 1. வெண்கடுகு; white mustard. 2. கழுத்தணிவகை; a kind of necklace of small gold beads.

[கடுகு + மணி.]

கடுகுமாங்காய் *kaḍugu-māṅkāy,* பெ.(n.) மாங்காய் ஊறுகாய் வகை (ஆவக்காய்); a kind of mango pickle, containing mustard in its composition.

ம. கடுகுமாங்ங

[கடுகு[3] + மாங்காய்.]

கடுகுரோகிணி *kaḍugu-rōgiṇi,* பெ.(n.) கடுகுச்சிவலை பார்க்க; see *kaḍugu-c-civalai.*

கடுகெண்ணெய் *kaḍugeṇṇey,* பெ.(n.) கடுகுநெய் பார்க்க; see *kaḍugu-ney.*

ம. கடுகெண்ண

[கடுகு + எண்ணெய்.]

கடுகென *kaḍugeṉa,* வி.எ.(adv.) விரைவாக; swiftly, quickly.

ம. கடுகெ

[கடு → கடுக்க → கடுகு + என.]

கடுகை *kaḍugai,* பெ.(n.) கடுகுச்சிவலை (கடுகுரோகிணி) (தைலவ. தைல.2); Christmas rose.

[கடுகு → கடுகை.]

கடுகோரை *kaḍukōrai,* பெ.(n.) கடுகுச்சோறு பார்க்க; see *kaḍugu-c-cōṟu.*

[கடுகு + ஓரை. உறை (உணவு) → ஒரை → ஓரை. ஒ.நோ. புளியோரை, எள்ளோரை.]

கடுகோல் *kaḍu-kōl,* பெ.(n.) பாகற்கொடி; balsam - pear, climber.

மறுவ. காவல்லி, கூலம் (சா.அக.).

[கடு + கோல்.]

கடுங்கசப்பு *kaḍuṅ-kaśappu,* பெ.(n.) மிகு கசப்பு; strong bitterness.

து. கடுகைபெ

[கடும் + கசப்பு.]

கடுங்கண்[1] *kaḍu-ṅ-kaṇ,* பெ.(n.) 1. தறுகண்மை; bravery. 2. கொடுமை; cruelty. "கடுங்கணுழுவையடி போல வாழை" (கலித்.43:24).

[கடும் + கண். கடு = கொடுமை. கண் = திரட்சி, செறிவு. கடுங்கண் = கொடுமை மிகுதி, தீய குணங்களின் செறிவு. கள் → கண். திரட்சிப் பொருள் தந்து பண்புப் பெயர்களுக்கு ஈறாயிற்று. அலக்கண், இடுக்கண், இன்கண் போன்ற சொற்களை ஒப்பிடுக.]

கடுங்கண்[2] *kaḍu-ṅ-kaṇ,* பெ.(n.) ஒலைச் சட்டத்தில் விழுந்துள்ள பதிவு அல்லது கீறல்; scratch or impression on a palm leaf mat.

[கடும் + கண். கண் = குழி, பள்ளம், கீறல்.]

கடுங்கணாளன் *kaḍu-ṅ-kaṇ-āḷaṉ,* பெ.(n.) கொடியவன்; cruel, savage, barbarous man.

[கடும் + கண் + ஆளன்.]

கடுங்கதிர் *kaḍu-ṅ-kadir,* பெ.(n.) கதிரவன்; Sun. "கடுங்கதிர் திருகிய வேய்பயில் பிறங்கல்" (அகநா.17).

[கடும் + கதிர்.]

கடுங்கருத்து *kaḍu-ṅ-karuttu,* பெ.(n.) நேரே பொருளைத் தாராத கருத்து; abstruse, far-fetched idea or meaning.

[கடும் + கருத்து.]

கடு, காரம் முதலியன மிக்கிருத்தலைக் காட்டுமோர் அடை. இங்கு மறைபொருள் உட்கருத்தாய் இருப்பதால், 'கடு' மறைபொருளுக்கு ஆளப்பட்டுள்ளது.

கடுங்கழிச்சல் *kaḍu-ṅ-kaḻiccal,* பெ.(n.) களைப்பை உண்டாக்கும் மிகு கழிச்சல்; purgative acting with violence so as to cause fatigue.

[கடும் + கழிச்சல்.]

கடுங்கள் *kaḍu-ṅ-kaḷ,* பெ.(n.) அழன்றகள்; toddy.

[கடும் + கள்.]

கடுங்காடி *kaḍu-ṅ-kāḍi,* பெ.(n.) மிகவும் புளித்த கள்; fermented toddy.

[கடும் + காடி. காடி = புளித்த கள்.]

கடுங்காந்தி *kaḍu-ṅ-kāndi,* பெ.(n.) 1. வைப்புச் செய்நஞ்சு; prepared arsenic. 2. வெள்ளைச் செய்நஞ்சு; white arsenic (சா.அக.).

[கடும் + காந்தி (எரிதல், அழித்தல்).]

கடுங்காப்பு *kaḍu-ṅ-kāppu,* பெ.(n.) கடுங்காவல் பார்க்க; see *kaḍu-ṅ-kāval.*

க. கடுகாபு (கருநா.)

கடுங்காய்[1] *kaḍu-ṅ-kāy,* பெ.(n.) 1. பழுக்காத பச்சைக்காய் (வின்.); unripe fruit. 2. துவர்ப்புக்காய்; astringent fruit. 3. முதிர்ந்த காய்; full grown fruit.

க. கடுகாயி

[கடும் + காய்.]

கடுங்காய்[2] *kaḍu-ṅ-kāy,* பெ.(n.) சாதிக்காய் (யாழ்.அக.); nutmeg.

[கடும் + காய்.]

கடுங்காய்ச்சல் *kaḍu-ṅ-kāyccal,* பெ.(n.) 1. மிகுதியான காய்ச்சல்; high fever. 2. அதிகமாகக் காய்கை; being over-heated as in the fire; being dried or scorched as in the Sun. 3. நச்சுக் காய்ச்சல்; malarial fever (சா.அக.).

க. கடுகாய்பு

[கடும் + காய்ச்சல்.]

கடுங்காய்நுங்கு *kaḍu-ṅ-kāy-nuṅgu,* பெ.(n.) முதிர்ந்த நுங்கு (யாழ்ப்.); palmyra fruit, the kernel or pulp of which is too far advanced to be eatable

மறுவ. கடுக்காய்நூங்கு.

[கடும் + காய் + நூங்கு.]

கடுங்காரக்குகை *kaḍu-ṅ-kāra-k-kugai,* பெ.(n.) காரமான பொருள்களைக் கொண்டு செய்த குடுவை; a crucible made out of substance highly acrid to stand the test of great fire or high temperature. ஒ.நோ. ஐந்து சுண்ணக் குகை (சா.அக.).

[கடுங்காரம் + குகை (குடுவை).]

கடுங்காரக்கூர்மன் *kaḍu-ṅ-kāra-k-kūrmaṉ,* பெ.(n.) அமுரியுப்பு; salt extracted from urine, uric salt (சா.அக.).

[கடுங்காரம் + கூர்மன். கூர்மன் = விரைந்து பயன் தருவது.]

கடுங்காரச்சத்து *kaḍu-ṅ-kāra-c-cattu,* பெ.(n.) 1. பூண்டெரித்த சாம்பலின் சத்து; the popular name for a vegetable alkali potash soda etc. in an impure state procured from the ashes of plants. 2. கொடிய காரச்சத்து; caustic potash or caustic soda (சா.அக.).

[கடும் + காரம் + சத்து.]

கடுங்காரச்சுண்ணம் *kaḍu-ṅ-kāra-c-cuṇṇam,* பெ.(n.) **கடுஞ்சுண்ணம்** பார்க்க; see *kaḍu-ñ-juṇṇam* (சா.அக.).

[கடும் + காரம் + சுண்ணம்.]

கடுங்காரச்செயநீர் *kaḍu-ṅ-kāra-c-ceyanīr,* பெ.(n.) காரமான உப்புகளைக் கொண்டு இராப் பனியில் வைத்துச் செய்த ஊதைக்குதவும் ஒரு காரமான நீர்; a strong acrid preparation of a liquid obtained from the mixture of pungent salts by exposing it to night dew. This plays an important part in alchemy (சா.அக.).

[கடும் + காரம் + செயநீர்.]

கடுங்காரநீர் *kaḍu-ṅ-kāra-nīr,* பெ.(n.) 1. முட்டை வெண்கரு; the albumen of an egg. 2. பூ நீர்; efflorescent salt obtained from the soil of fuller's earth.

[கடும் + காரம் + நீர்.]

கடுங்காரம்[1] *kaḍu-ṅ-kāram,* பெ.(n.) ஒருவகை எரிமருந்து; powerful caustic.

[கடும் + காரம்.]

கடுங்காரம்[2] *kaḍu-ṅ-kāram,* பெ.(n.) மிக்க உறைப்பு; severe pungency.

[கடும் + காரம்.]

கடுங்காரம்[3] *kaḍu-ṅ-kāram,* பெ.(n.) சாதிபத்திரி; mace.

[கடும் + காரம்.]

கடுங்காரவுப்பு *kaḍu-ṅ-kāra-v-uppu,* பெ.(n.) எரியுப்பு; caustic soda or caustic potash.

[கடும் + காரம் + உப்பு.]

கடுங்காரி *kaḍu-ṅ-kāri,* பெ.(n.) தேவையற்ற தசைவளர்ச்சியைத் தடுக்கும் மருந்து; a medicine which reduces the unnecessary growth of flesh.

[கடும் + காரி (காரம் → காரி).]

கடுங்கால்[1] *kaḍu-ṅ-kāl,* பெ.(n.) பெருங்காற்று; cyclone. *"கடுங்கால் மாரி கல்லே பொழிய" (திவ்.பெரியதி.6.10:8).*

[கடும் + கால்.]

கடுங்கால்[2] *kaḍu-ṅ-kāl,* பெ.(n.) **1.** வீங்கிய கால்; swollen leg. **2.** கடிய உழைப்பால் முரட்டுத்தன்மை யுற்றகால்; the leg which became hard due to over exertion. **3.** யானைக்கால்; elephantiasis (சா.அக.).

[கடும் + கால்.]

கடுங்காலம்[1] *kaḍu-ṅ-kālam,* பெ.(n.) 1. இன்னற்காலம்; hard times. 2. வற்கடக் காலம் (வின்.); hard season, as drought, scarcity, famine.

[கடும் + காலம்.]

கடுங்காலம்[2] *kaḍu-ṅ-kālam,* பெ.(n.) வெப்பமான காலம் (வின்.); hot season.

[கடும் + காலம்.]

கடுங்காவல் *kaḍu-ṅ-kāval,* பெ.(n.) வன்சிறை; rigorous imprisonment, opp. to வெறுங்காவல்.

க. கடுகாவல்

[கடும் + காவல்.]

கடுங்குகை *kaḍu-ṅ-kugai,* பெ.(n.) கடுங்காரக் குகை பார்க்க; see *kaḍu-ṅ-kāra-k-kugai.*

[கடுங்காரகுகை → கடுங்குகை.]

கடுங்குட்டத்தாளி *kaḍu-ṅ-kuṭṭa-t-tāḷi,* பெ.(n.) மிளகு தக்காளி; *pepper takkāḷi.*

மறுவ. மிளகுதக்காளி

[கடும் + குட்டம் + தாளி (குட்டம் = சிறியது).]

கடுங்குடி *kaḍu-ṅ-kuḍi,* பெ.(n.) அளவுக்குமிஞ்சிய குடிப் பழக்கம்; excessive drinking.

[கடும் + குடி.]

கடுங்குரல் *kaḍu-ṅ-kural,* பெ.(n.) கடிய ஒலி; harsh noise. *"கடுங்குரல் பம்பை"* (நற்.212:5).

க. கடுதனி

[கடும் + குரல்.]

கடுங்கூர்மை[1] *kaḍu-ṅ-kūrmai,* பெ.(n.) அறக்கூர்மை; extreme sharpness.

[கடும் + கூர்மை.]

கடுங்கூர்மை[2] *kaḍu-ṅ-kūrmai,* பெ.(n.) 1. சிறுநீருப்பு; uric salt. 2. கடலுப்பு; sea salt. 3. கந்தகவுப்பு; black salt. 4. வளையலுப்பு; glass gall; medicinel salt (சா.அக.).

[கடும் + கூர்மை (உறைப்பு).]

கடுங்கொட்டை[1] *kaḍu-ṅ-koṭṭai,* பெ.(n.) காட்டுமாங் கொட்டை; nut of wild mango.

மறுவ. கானல்மா

[கடும் + கொட்டை. கடும் = வலுத்த, கெட்டியான.]

கடுங்கொட்டை[2] *kaḍu-ṅ-koṭṭai,* பெ.(n.) எட்டிக் கொட்டை; nut of strycnine tree (சா.அக.).

[கடும் + கொட்டை. கடும் = கசப்பு.]

கடுங்கோடை *kaḍu-ṅ-kōḍai,* பெ.(n.) முதுவேனில்; hottest season.

க. கடுவேசிகெ, கடுபேசிகெ (மிகுவெயில்); கு. கடுபைசாக.

[கடும் + கோடை.]

கடுங்கோபம் *kaḍu-ṅ-kōbam,* பெ.(n.) கடுஞ்சீற்றம் பார்க்க; see *kaḍu-ñ-cīṟṟam.*

க. கடுகோப, கடுகோப; து. கடுகோபு.

[கடும் + கோபம்.]

கடுங்கோள் *kaḍu-ṅ-kōḷ,* பெ.(n.) ஆதித்தர்; Ādityas. *"கடுங்கோள்க ளீராறு நாணக் கலித்தே"* (தக்கயாகப்.542).

[கடும் + கோள் - கடுங்கோள். கடும் = வெப்பக்கடுமை.]

கடுங்கோன் *kaḍu-ṅ-kōṉ,* பெ.(n.) தலைக்கழகத்தின் இறுதியிலிருந்த பாண்டிய வேந்தன்; a Pandya king who patronized the talai-k-kaḻagam at its close. *'காய்சின வழுதி முதல் கடுங்கோன் ஈறாக'* (இறை.1 உரை).

[கடும் + கோன்.]

கடுச்சதம் *kaḍu-c-cadam,* பெ.(n.) 1. ஆண்டு முழுதும் பூக்கும் மருந்துச்செடி; a medicinal shrub which gives flowers through out the year. 2. நந்தியாவட்டம்; Indian rose bay.

[கடு + சதம். சதம் = எப்பொழுதும்.]

ஆண்டு முழுவதும் பூக்கும் தன்மையால் சதம் எனப்பட்டது. இப் பயிரியின் வேர், தண்டு, இலை, பூ அனைத்தும் நோய் தீர்க்கும் தன்மை கருதிக் கடு அடையானது.

கடுசரம் *kaḍu-šaram,* பெ.(n.) கடுகுச்சிவலை பார்க்க (மலை.); see *kaḍugu-c-civaḷai.*

கடுசித்தாழை *kaḍu-ši-t-tāḻai,* பெ.(n.) பைந்தாழை (அன்னாசி)ப் பழம்; pine apple.

[கடு + சித்தாழை. சிறு + தாழை - சிற்றாழை → சித்தாழை.]

கடுஞ்சளி *kaḍu-ñ-caḷi,* பெ.(n.) கட்டியான சளி; phlegm. (சா.அக.)

[கடும் + சளி.]

கடுஞ்சாதனை *kaḍu-ñ-cādaṉai,* பெ.(n.) 1. விடாப்பிடி; perseverance. 2. ஒட்டாரம் (பிடிவாதம்); obstinacy. 3. அரும்பாடுபட்டு பெற்ற வெற்றி; accomplishment after difficult effort.

மறுவ. அருஞ்செயல், அருவினை.

[கடும் + சாதனை. சாதனை = அருவினை, கடுஞ்செயல்.]

கடுஞ்சாரம் *kaḍu-ñ-cāram,* பெ.(n.) 1. கடுமையான சாரம்; concentrated solution. 2. கொடிய சாரம் அல்லது நவச்சாரம்; a strong salt. 3. கொடிய அமிலம்; strong acid (சா.அக.).

[கடும் + சாரம்.]

கடுஞ்சினநிலம் *kaḍu-ñ-ciṉa-nilam,* பெ.(n.) உழமண் நிலம் (மூ.அ.); alkaline earth.

[கடும் + சினம் + நிலம்.]

கடுஞ்சீதளத்தி *kaḍu-ñ-cīdaḷatti,* பெ.(n.) பொன்னாங்கண்ணி; a vegetable green (சா.அக.).

[கடும் + சீதளம் + அத்தி.]

கடுஞ்சீற்றம் *kaḍu-ñ-cīṟṟam,* பெ.(n.) மிகுசினம்; violent anger, wrath.

க. கடுகோப்ப

[கடும் + சீற்றம்.]

கடுஞ்சுண்ணக்காரம் *kaḍu-ñ-cuṇṇa-k- kāram,* பெ.(n.) மிகக் கொடிய சுண்ணத்தின் காரம்; a strong stinging property of calcined salt; any alkaline salt of high potency (சா.அக.).

[கடும் + சுண்ணம் + காரம்.]

கடுஞ்சுண்ணத்தி *kaḍu-ñ-cuṇṇatti,* பெ.(n.) சீனக்காரம் (வின்.); alum.

[கடும் + சுண்ணத்தி.]

கடுஞ்சுண்ணம் *kaḍu-ñ-cuṇṇam,* பெ.(n.) 1. காரமான சுண்ணம்; powerful alkaline compound. 2. உலோகங்களை உருக்கவும், ஊதை நோய்க்கு வேண்டிய பெரிய மருந்துகளைப் பற்பமும் செந்தூரமும் ஆக்குவதற்கும், பெருந்தீயினுக்கும் அசையாது பழுதுறா வண்ணம் குகை செய்வதற்கும் பயன்படுத்தும் கல்லுப்பு, தாளகம், கற்சுண்ணம், பூநீறு, சீனக்காரம் ஆகிய இவை சேர்ந்த சுண்ணம்; severe acrid compound.

[கடும் + சுண்ணம்.]

கடுஞ்சுரம் *kaḍu-ñ-curam,* பெ.(n.) கொடிய காய்ச்சல்; a virulent type of fever (சா.அக.).

க. கடுஞ்சர்

[கடும் + சுரம்.]

கடுஞ்சூடு *kaḍu-ñ-cūḍu,* பெ.(n.) 1. மிகக் கொடுமையான சூடு; severe or fierce heat. 2. அதிகச் சூடு; over heat (சா.அக.).

[கடும் + சூடு.]

கடுஞ்சூல் *kaḍu-ñ-cūl,* பெ.(n.) 1. தலைச்சூல்; first pregnancy. 2. முதலில் பிறக்கும் குழந்தை; first born baby. *"நின்னயந் துறைவி கடுஞ்சூற் சிறுவன்" (ஐங்குறு.381).* 3. முதிர்ந்த கருப்பம்; advance pregnancy. *"இரைவேட்டுக் கடுஞ்சூல் வயவொடு கான லெய்தாது" (நற்.263).* 4. சிறந்த சூல்; choice pregnancy. *"கடும்புடைக் கடுஞ்சூல் நங்குடிக் குதவி" (நற்.370).* 5. முதன்மழை; opening shower of the rainy season. *"கடுஞ்சூல் மாமழை".*

ம. கடிஞ்நூல் (முதலில் பிறந்த மாந்தன் அல்லது விலங்கு), கடும்பிள்ள (முதலில் பிறந்த குழந்தை); துட. கரேச; து. கடிரு.

[கடும் + சூல். சுல் → சூல்.]

தலைப்பேறு கடுமையாகவும் மருட்சி தருவதாகவும் இருப்பதால் கடுஞ்சூல் எனப்பட்டது.

கடுஞ்செட்டு *kaḍu-ñ-ceṭṭu,* பெ.(n.) 1. மிக்க சிக்கனம்; extreme niggardliness. 2. அல்முறை வணிகம் (வின்.); unfair traffic, trading at an exorbitant profit. 3. கடும்பற்றுள்ளம்; stinginess. *'கடுஞ்செட்டுக் கண்ணைக் கெடுக்கும்' (பழ.).*

[கடும் + செட்டு.]

கடுஞ்சொல் *kaḍu-ñ-col,* பெ.(n.) கொடிய சொல்; harsh words, offensive language, one of four kinds of foul words. *"கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின்" (குறள்,566).*

[கடும் + சொல்.]

கடுஞ்சொல்லன் *kaḍu-ñ- collaṉ,* பெ.(n.) வன் சொலாளன்; one who utters harsh words.

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்" (குறள், 386).

[கடும் + சொல்லன்.]

கடுஞ்சொறி *kaḍ-ñ-coṟi,* பெ.(n.) ஒருவகைத் தோல்நோய்; a kind of skin disease.

[கடும் + சொறி.]

வீட்டு விலங்குகளிடமிருந்து பரவும் ஒருவகை நோய்; உடலின் தோல் தடித்துச் சுரசுரப்புப் பெற்ற நோயானதால் இப் பெயர் பெற்றது (சா.அக.).

கடுத்தது *kaḍuttadu,* பெ.(n.) மிக்கது; that which over flows. "நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" (குறள்,706).

[கடுத்த + அது - கடுத்தது (குறிப்பு வினையாலணையும் பெயர்).]

கடுத்தம்[1] *kaḍuttam,* பெ.(n.) 1. அழுத்தம்; closeness, tightness, compactness of cloth. 2. ஈயாத்தனம்; stinginess, close-fistedness. 3. நோய் முதலியன அழுந்தப் பற்றுகை; deep-seatedness, as of a disease or of a wound.

க. கடுதெ

[கடு → கடுத்தம்.]

கடுத்தம்[2] *kaḍuttam,* பெ.(n.) கடுமை; harshness. கடுத்தமானபேச்சு (உ.வ.).

[கடு → கடுத்தம்.]

கடுத்தம்[3] *kaḍuttam,* பெ.(n.) அட்டைக்கடுதாள்; card board. கடுத்தமிடுதல் (பாண்டி.).

[கடு → கடுத்தம்.]

கடுத்தம்[4] *kaḍuttam,* பெ.(n.) முகமதியருடைய சீர்வரிசை உடன்படிக்கை (யாழ்.அக.); deed of settlement of dowry among, Mohammadans.

[கடு → கடுத்தம்.]

கடுத்தல் *kaḍuttal,* பெ.(n.) கடுத்தவாயெறும்பு; an ant. 2. மீன்வகை (வின்.); a kind of fish.

[கடு → கடுத்தல்.]

கடுத்தலூசி *kaḍuttal-ūśi,* பெ.(n.) **கல்லுளி** பார்க்க; see *kalluḷi.*

[கடுத்தல் + ஊசி.]

கடுத்தலை *kaḍu-t-talai,* பெ.(n.) வாள் (திவா.); sword.

ம. கடத்தல

[கடு + தலை. கடு = வெட்டு.]

கடுத்தவாயெறும்பு *kaḍutta-vāy-eṟumbu,* பெ.(n.) கட்டெறும்பு (வின்.); a large black ant.

[கடுத்த + வாய் + எறும்பு.]

கடுத்தானெறும்பு *kaḍuttāṉ-eṟumbu,* பெ.(n.) **கடுத்தவாயெறும்பு** பார்க்க; see *kaḍutta-vāy-eṟumbu.*

[கடுத்தான் + எறும்பு.]

கடுத்தி *kaḍutti,* பெ.(n.) தேள்கொடுக்கி; scorpian plant (சா.அக.).

[கடு → கடுத்தி (எரிச்சல் தருவது).]

கடுத்திரயம் *kaḍu-t-tirayam,* பெ.(n.) முக்கடுகம் (திரிகடுகு); medicinal stuff, numbering three (சா.அக.).

[கடு + திரயம் (மூன்று).]

வ. த்ரயம் > **த.** திரயம்.

கடுத்திறங்கல் *kaḍuttiṟaṅgal,* பெ.(n.) வலி உறுத்து வந்து பின்னடைதல்; pain subsiding after irritation (சா.அக.).

[கடுத்து + இறங்கல் (குறைதல்).]

கடுத்திறவாலி *kaḍu-t-tiṟavāli,* பெ.(n.) இறக்கை முளைத்த எறும்புவகை (நெல்லை); a species of winged ant.

[கடு → கடுத்தி + இறவாளி. இறகு + ஆளி - இறகாளி → இறவாளி (கொ.வ.).]

கடுத்துவாய் *kaḍuttu-vāy,* பெ.(n.) 1. எறும்பு (நாமதீப.); ant. 2. **கடுத்தானெறும்பு** பார்க்க; see *kaḍuttāṉ-eṟumbu.*

[கடு → கடுத்து + வாய். கடித்தவிடத்தில் கடுகடுக்கும் கொட்டுவாய் உள்ள எறும்பு.]

கடுத்தேறு *kaḍuttēṟu,* பெ.(n.) குளவி (இ.வ.); wasp.

[கடு → கடுத்து + ஏறு - கடுத்தேறு(எரிச்சல் மிகுவது).]

கடுதலம் *kaḍutalam,* பெ.(n.) முள்வெள்ளரி; prickly melon (சா.அக.).

[கள் (முள்) → கடு + (தலை) தலம்.]

கடுதலைமுடிச்சு *kaḍu-talai-muḍiccu,* பெ.(n.) கெடுசெயல்; treacherous act (யாழ்ப்.).

[கடு + தலை + முடிச்சு.]

கடுதலைவிற்பூட்டு *kaḍu-talai-viṟpūṭṭu,* பெ.(n.) வழுவாத பூட்டான சொல்; an oath.

[கடு + தலை + வில் + பூட்டு.]

கடுதித்தம் *kaḍu-tittam,* பெ.(n.) பேய்ப்புடல்; wild snake-gourd.

[கடு + தித்தம்.]

கடுதித்தா *kaḍu-tittā,* பெ.(n.) வெண்கடுகு; white mustard (சா.அக.).

[கடு + (நுல் → தில் → திலம் → தித்தம் →) தித்தா.]

கடுதும்பி *kaḍu-tumbi,* பெ.(n.) பேய்ச்சுரை; wild melon.

மறுவ. கடுத்தும்பை

[கடு + (தூம்பி →) தும்பி.]

கடுதுரத்தி *kaḍu-turatti,* பெ.(n.) அம்மான்பட்சரிசி; raw rice plant (சா.அக.).

[கடு + துரத்தி.]

இது குளிர்க்கழிச்சல் (சீதபேதி) நோய்க்குப் பயன்படுதலால் இப் பெயர் பெற்றது.

கடுதைலம் *kaḍu-tailam,* பெ.(n.) வெண்கடுகு; white mustard (சா.அக.).

[கடு + தைலம். (திலம் → தைலம்).]

கடுந்தணல்நிலம் *kaḍun-taṇal-nilam,* பெ.(n.) உழமண்நிலம்; soil of fuller's earth.

[கடும் + தணல் + நிலம்.]

கடுந்தணற்கார்த்தி *kaḍun-taṇar-kārti,* பெ.(n.) நாயுருவி; Indian burr.

[கடும் + தணல் + கார்த்தி (காத்து + இ - காத்தி → கார்த்தி. கொ.வ.). இது நெருப்பைத் தாக்கிச் சுடாதிருக்கும்படிச் செய்வதால் இப் பெயர் பெற்றது.]

கடுந்தரை *kaḍun-tarai,* பெ.(n.) வன்னிலம்; hard soil.

[கடும் + தரை.]

கடுந்தவம் *kaḍun-davam,* பெ.(n.) நோன்பு; act of austerity.

க. கடுநேம

[கடும் + தவம்.]

கடுந்தழற்பூமி *kaḍun-taḻar-pūmi,* பெ.(n.) **கடுந்தணல் நிலம்** பார்க்க; see *kaḍun-taṇal-nilam.*

[கடும் + தழல் + பூமி.]

கடுந்தாகம் *kaḍun-tāgam,* பெ.(n.) மிக்க தாகம்; extreme or intense thirst (சா.அக.).

[கடும் + தாகம். தவ்வு → தாவு → தாவம் → தாகம்.]

கடுந்தாம் *kaḍuntām,* பெ.(n.) **கடுந்தாகம்** பார்க்க; see *kaḍun-tāgam.* *"கடுந்தாம் பதிபாங்குக் கைதெறப் பட்டு" (கலித்.12:5).*

க. கடுநீரடக

[கடும் + (தாவம்) தாம்.]

கடுந்தாளி *kaḍun-tāḷi,* பெ.(n.) 1. வெண்தாளி; a white variety of *tāḷi.* 2. வெள்ளைப் பூத் தாளி; false tragacanth (சா.அக.).

[கடும் + தாளி.]

கடுந்தி *kaḍundi,* பெ.(n.) **கடுந்தணற்கார்த்தி** பார்க்க; *see kaḍun-taṇar-kārti.*

[கடு → கடுந்தி.]

கடுந்திரு-த்தல் *kaḍundiru-,* 4 செ.கு.வி.(v.i.) முகங்கடுத்துக் கடுப்பாதல் (இ.வ.); to show anger in one's countenance.

[கடு → கடுந்து (வி.எ.) + இரு.]

கடுந்திலாலவணம் *kaḍun-tilā-lavaṇam,* பெ.(n.) எள்ளுப்பு; salt obtained from sesame seed.

[கடும் + திலம் + லவணம். த. நுல் → தில் > Skt. திலம் = எள், லவணம் = உப்பு.]

கடுந்தீ *kaḍun-tī,* பெ.(n.) 1. மிகு நெருப்பு; wild fire. *"ஊர்தலைக் கொண்டு கனலுங் கடுந்தீயுள் நீர்பெய்தக் காலே சினந்தணியும்" (கலித்.144:59).* 2. மிகுவெப்பம்; extreme heat.

க. கடுகிச்சு

[கடும் + தீ.]

கடுந்துடி *kaḍun-tuḍi,* பெ.(n.) 1. ஒருவகை இசைக்கருவி; a musical instrument, tamaruka. *"கணைத்தொடை நாணுங் கடுந்துடி யார்ப்பின்" (கலித்.15:4).* 2. சிறார் விளையாட்டுகளுளொன்று; a game of children. 3. எறியக்கூடிய ஆய்தம் (சேரநா.); a kind of missile.

ம. கடுந்துடி

[கடும் + துடி.]

கடுந்துன்பம் *kaḍun-tunbam,* பெ.(n.) பெருந்துன்பம்; deep sorrow.

து. கடுதுக்கதெ

[கடும் + துன்பம்.]

கடுந்தூக்கம் *kaḍun-tūkkam,* பெ.(n.) ஆழ்ந்த உறக்கம்; deep sleep (சா.அக.).

[கடும் + தூக்கம்.]

கடுந்தேறு *kaḍun-tēṟu,* பெ.(n.) குளவிவகை; wasp. *"கடுந்தேறு றுகிளை" (பதிற்றுப்.71).*

க. கடந்தேறு

[கடும் + தேறு.]

கடுந்தொழில் *kaḍun-toḻil,* பெ.(n.) கரவினால் (வஞ்சத்தால்) செய்யும் கொடுந்தொழில்; wicked deed. *"காய்சின அவுணர் கடுந்தொழில் பொறாஅன்" (சிலப்.6:58).*

[கடும் + தொழில்.]

கடுந்தோய்ச்சல் *kaḍun-tōyccal,* பெ.(n.) படைக்கலன்களை உலையில் மிகுந்த சூடேற்றி முனையை மட்டும் நீரில் நனைத்தல் (வின்.); over-tempering as of a weapon.

மறுவ. துவச்சல்

க. கடுசூர்ப்பு

[கடும் + தோய்ச்சல் (தோய்க்கை). இதனால் மிகுந்த கெட்டிமுனை கிடைக்கும்.]

கடுந்தோயல் *kaḍun-tōyal,* பெ.(n.) **கடுந்தோய்ச்சல்** பார்க்க; see *kaḍun-tōyccal.*

[கடும் + தோயல்.]

கடுநகை *kaḍu-nagai,* பெ.(n.) 1. பெருஞ்சிரிப்பு; guffe.. 2. எள்ளல்பற்றிய நகை ; laughter of scorn, sarcastic laugh. *"கண்டனை யாகெனக் கடுநகை யெய்தி" (மணிமே.16:91).*

[கடு + நகை.]

கடுநட்பு *kaḍu-naṭpu,* பெ.(n.) மிக்க நட்பு; too close intimacy or friendship. *'கடுநட்புப் பகைகாட்டும்' (சீவக.909,உரை).*

க. கடுநண்

[கடு + நட்பு.]

கடுநடை *kaḍu-naḍai,* பெ.(n) 1. விரைந்த நடை; fast walk. *"கடுநடை யானை கன்றொடு வருந்த" (நற்.105:4).* 2. வருத்தத்தை யுண்டாக்கும் நடை (வின்.); tiresome walk, long tramp. 3. கடிய மொழிநடை; difficult style in writing.

[கடு + நடை.]

கடுநிம்பம் *kaḍu-nimbam,* பெ.(n.) **நிலவேம்பு** பார்க்க; see *nila-vēmbu.*

[கடு + நிம்பம்.]

கடுநிலம் *kaḍu-nilam,* பெ.(n.) கரம்பு நிலம் (சேரநா.); sterile land.

ம. கடுநிலம்

[கடு + நிலம்.]

கடுநீர் *kaḍu-nīr*, பெ.(n.) 1. காட்டம் மிகுந்த உப்புநீர்; concentrated salty water. 2. விரைந்து ஓடும் நீர்; water current.

[கடு + நீர்.]

கடுநெருப்பு *kaḍu-neruppu*, பெ.(n.) பெருந்தீ (வின்.); bonfire; wild-fire.

[கடு + நெருப்பு.]

கடுநெறி *kaḍu-neṟi*, பெ.(n.) 1. இடர்ப்பாடுடைய தடம்; path beset with hindrances. *"ஆண்டலை வழங்குங் கானுணங்கு கடுநெறி" (பதிற்.25:8).* 2. சான்றோரல்லாத பிறரால் ஒழுக வியலாத வாழ்க்கை; life style, which is very difficult for ordinary people.

[கடு + நெறி.]

கடுநோய் *kaḍu-nōy*, பெ.(n.) உளைமாந்தை என்னும் உள்நோய் (வின்.); internal abscess. 2. நாட்பட்ட நோய்; chronic disease.

க. கடுநோவு (பெருந்துன்பம்)

[கடு + நோய்.]

கடுநோவு *kaḍu-nōvu*, பெ.(n.) சாத்துயர் (மரண வேதனை); death agony.

[கடு + வேதனை.]

கடுநோன்பு *kaḍu-nōṉbu*, பெ.(n.) நீரும் பருகா நோன்பு; fast practiced without taking even water.

து. கடுவுபவாச

[கடு + நோன்பு.]

கடுப்ப *kaḍuppa*, இடை.(part.). ஓர் உவமவுருபு (தொல்.பொருள்.290); a particle of comparison.

[கடு → கடுப்ப. கடு = பொருந்துதல், ஒத்திருத்தல்.]

கடுப்படக்கி *kaḍu-p-paḍakki*, பெ.(n.) உடல்சூட்டைத் தணிக்கும் வெதுப்படக்கி எனும் மூலிகை; a kind of herb which reduces the internal heat.

மறுவ. எருமுட்டைப்பீநாறி, பேய் மிரட்டி.

[கடுப்பு + அடக்கி.]

கோடையில் வளரும் மிகுந்த நாற்றமுடைய இச் செடி மிகுதியான உடல் வெப்பத்தைத் தணிப்பதால் இப் பெயர் பெற்றது.

கடுப்படி[1] *kaḍu-p-paḍi*, பெ.(n.) 1. மனஉளைச்சல்; mental agony. 2. ஆரவாரம்; hubbub.

[கடு = விரைவு. கடு → கடுப்பு + அடி.]

கடுப்படி[2]**-த்தல்** *kaḍu-p-paḍi-*, 4 செ.குன்றாவி.(v.t.) *கடுப்புண்டாக்கு-தல்* பார்க்க; see *kaḍu-p-puṇḍākku-*.

[கடுப்பு + அடி.]

கடுப்பான் *kaḍu-p-pāṉ*, பெ.(n.) உறைப்பானதொரு கறி; strong flavoured side dish, curry. கடுப்பான் இல்லாமல் எப்படிச் சாப்பிடுவது (இ.வ.).

[கடு → கடுப்பான்.]

கடுப்பிஞ்சு *kaḍu-p-piñju*, பெ.(n.) 1. கடுக்காய்ப் பிஞ்சு; unripe fruit. 2. கசப்புப்பிஞ்சு; bitter tender fruit (சா.அக.).

[கடு + பிஞ்சு.]

கடுப்பிறக்கு-தல் *kaḍu-p-piṟakku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. செருக்கை அகற்றல்; to reduce arrogance; conceit. 2. சீற்றத்தைத் தணித்தல்; to reduce anger.

[கடுப்பு + இறக்கு.]

கடுப்பு[1] *kaḍuppu*, பெ.(n.) 1. உறுதி; firmness. 2. கடுவினை, கடுமை; intensity, severity, saturation. 3. வன்திறம்; harshness, hardness.

து. கட்பு, கட்ப.

[கடு → கடுப்பு.]

கடுப்பு[2] *kaḍuppu*, பெ.(n.) 1. தேள்கொட்டினாற் போன்று வலி மிகுவிக்கும் உறைப்புணர்வு; throbbing pain. *"கடுப்புடைப் பறவைச் சாதியன்ன" (பெரும்பான்.229).* 2. நோவு; aching. *'முலைக் கடுப்பாலே தரையிற் பீச்சுவாரைப் போலே' (ஈடு.1.1:1). 'காலுக்குக் கடுப்பே தவிரக் கண்டபயன் ஏதுமில்லை' (பழ.).*

ம. கடுப்பு

[கடு → கடுப்பு.]

கடுப்பு[3] *kaḍuppu*, பெ.(n.) 1. விரைவு; speed. "காற்கடுப் பன்ன கடுஞ்செலல் இவுளி" (அகநா.224:5). 2. மிகுதி; excessive.

து. கடுப்பு, கடுப்ப.

[கடு → கடுப்பு.]

கடுப்பு[4] *kaḍuppu*, பெ.(n.) ஒப்பு (திவா.); comparing.

[கடு → கடுப்ப → கடுப்பு.]

கடுப்பு[5] *kaḍuppu*, பெ.(n.) 1. முகஞ்சுளிக்கை; twitching the face, to indicate either displeasure or anger. 2. வெகுளி; anger. "கடுநவை யணங்குங் கடுப்பும் நல்கலும்" (பரிபா.4:49).

[கடு → கடுப்பு.]

கடுப்பு[6] *kaḍuppu*, பெ.(n.) கருவூமத்தை (மலை.); purple stramony.

[கரு → கடு → கடுப்பு.]

கடுப்பு[7] *kaḍuppu*, பெ.(n.) செருக்கு; haughtiness, arrogance, self-conceit pride. *அவன் கடுப்பை இறக்கி விட்டான் (வின்.).*

து. கட்பு, கட்ப.

[கடு → கடுப்பு.]

கடுப்பு[8] *kaḍuppu*, பெ.(n.) 1. மிக்க வலிமை; great valour. 2. வன்கண்மை; bravery; fortitude. 3. உணர்ச்சித் துடிப்பு; force, vehmence.

து. கட்பு, கட்ப.

[கடு → கடுப்பு.]

கடுப்பு[9] *kaḍuppu*, பெ.(n.) கொண்டைவலையிற் கட்டுங் கோல்; pole attached to the fishing net, *koṇḍai-valai*.

[கள் → கடு → கடுப்பு = பிடிப்பாயிருப்பது.]

கடுப்பு[10] *kaḍuppu*, பெ.(n.) கடுக்காய் வேர் (வை.மூ.); root of gall-nut.

[கடு → கடுப்பு.]

கடுப்பு[11] *kaḍuppu*, பெ.(n.) மிகு உறைப்பு; pungency.

[கடு → கடுப்பு. கடு = உறைப்பு.]

கடுப்புக்கழி *kaḍuppu-k-kaḻi*, பெ.(n.) குழிவலையின் வாய்ப்புறத்தில் கட்டப்பட்டிருக்குங் கழி; stick tied at the mouth of fishing net known as *kuḻi-valai.*

[கடுப்பு + கழி. கடுப்பு = வலிமை.]

கடுப்புக்கழிச்சல் *kaḍuppu-k-kaḻiccal*, பெ.(n.) வயிற்றுப்போக்கு (வின்.); dysentery attended with gripping pain.

[கடுப்பு + கழிச்சல். கடுப்பு = வலி, எரிச்சல்.]

கடுப்புச்சூடு *kaḍuppu-c-cūḍu*, பெ.(n.) எருத்திற்கு விதையடித்த பின் இடும் சூடு (வின்.); cauterizing oxen after castrating, as a counter operation to promote healing.

[கடுப்பு + சூடு - கடுப்புச்சூடு = செருக்கு அடக்கும் சூடு.]

கடுப்புண்டாக்கு-தல் *kaḍuppuṇḍākku-*, 5 செ. குன்றாவி.(v.t.) 1. தினவை யுண்டாக்குதல்; causing an itching or stinging sensation. 2. பெண்ணின்பால் விருப்பு யுண்டாக்குதல்; to promote or excite passion in a female as per methods contemplated in the erotic science. 3. சினமூட்டல்; to excite anger. 4. எரிவுண்டாக்கல்; causing burning sensation (சா.அக.).

[கடுப்பு + உண்டாக்கு.]

கடுப்புமரம் *kaḍuppu-maram*, பெ.(n.) எள் முதலியன ஆட்டும் ஆலை (யாழ்ப்.); a kind of oil press.

[கடுப்பு + மரம் - கடுப்புமரம் = வலிய மரம். கடுப்பு = வன்மை.]

கடுப்புரசு *kaḍu-p-purašu*, பெ.(n.) வெள்ளைப்புரசு (L.); lilac silky laburnum.

[கடுப்பு + புரசு. கடுப்பு = வன்மை.]

கடுப்பூ *kaḍu-p-pū*, பெ.(n.) கடுக்காய்வேர்; the root of the gall-nut tree (சா.அக.).

[கடு + பூ. கடு = உறைப்பு.]

கடுப்பூமத்தை *kaḍuppūmattai*, பெ.(n.) கருப்பு ஊமத்தை; black datura (சா.அக.).

[கடு → கடுப்பு + ஊமத்தை.]

கடுப்பெடு[1]-த்தல் *kaḍuppeḍu-,* 4 செ.கு.வி.(.v.i.) நோவுண்டாதல்; to feel pain.

[கடுப்பு + எடு.]

கடுப்பெடு[2]-த்தல் *kaḍuppeḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) செருக்கடக்குதல்; to put down a person`s pride.

[கடுப்பு + எடு.]

கடுப்பை *kaḍuppai,* பெ.(n.) வெண்கடுகு (மலை.); white mustard.

[கடிப்பகை → கடிப்பை → கடுப்பை.]

கடுபங்கம் *kaḍupaṅgam,* பெ.(n.) சுக்கு; dried ginger (சா.அக.).

[கடுப்பு + அங்கம். கடுப்பு = உறைப்பு.]

கடுபடி *kaḍupaḍi,* பெ.(n.) ஆரவாரம்; hubbub, confusion, commotion, tumult, bustle, agitation.

U. gadpadi

[கடுப்பு + அடி - கடுப்படி → கடுபடி.]

கடுபத்திரம் *kaḍu-pattiram,* பெ.(n.) சுக்கு (தைலவ.); dried ginger.

[கடு + பத்திரம்.]

கடுபலம் *kaḍu-palam,* பெ.(n.) **கடும்பலம்** பார்க்க; see *kaḍum-palam.*

Pkt. kaṭuāpala (one) having bitter fruit.

[கடு (கசப்பு) + பலம்.]

கடுபாகம் *kaḍupāgam,* பெ.(n.) 1. செரிமான காலத்தில் நெஞ்சுக்கரிப்பு ஏற்படும் நிலைமை; a stage producing acrid humours in digestion. 2. எண்ணெய் காய்ச்சும்பொழுது கடுத் திரளும் பாகம்; a degree of progression in the preparation of medicated oil, in which the oil is separated from its ingredients. 3. நச்சுப்பாகம்; poisoning (சா.அக.).

[கடு + பாகம். கடு = உறைப்பு நஞ்சு.]

கடுபுடுகொள்ளு *kaḍupuḍu-koḻḻu,* பெ.(n.) காட்டுக் கொள்ளு; jungle horse-gram (சா.அக.).

[காடு + படு - காடுபடு → கடுபுடு + கொள்ளு.]

கடும் *kaḍum,* கு.பெ.எ.(adj.) 1. மிகுதியாக, அதிகமாக; extreme. 2. வலுத்த; intense, fierce, vehement. *“கடுங்கண்ண கொல்களிற்றால்” (புறநா.14).* 3. மிகவும் கடினமாக; harsh, stringent. *‘கடும்நட்பு கண்ணுக்குப் பொல்லாப்பு’ (பழ.).*

து. கடுமுட்டு, கர்முட்டு; Pkt. kaṭuya.

[கடு → கடும்.]

கடும்பகடு *kaḍumpagaḍu,* பெ.(n.) வல்விலங்கு; ferocious animal.

[கடும் + பகடு.]

பகடு = விலங்குகளில் ஆண் வன்மைமிக்கதாயிருப்பதால் வல்விலங்கினைக் குறிப்பதாயிற்று.

கடும்பகல் *kaḍum-pagal,* பெ.(n.) 1. கடுமையாக வெப்பமுள்ள உச்சியம்பொழுது (தொல்.சொல்.383, உரை); noonday, being the time of intense heat. *“கல்லாக் குறள கடும்பகல் வந்தெம்மை” (கலித்.94:14)* 2. பட்டப்பகல்; broad day.

ம. கடும்பகல்

[கடும் + பகல்.]

கடும்பகை *kaḍum-pagai,* பெ.(n.) மிகு பகை; வன்மம் மீதூர்ந்த பகை; bitter enmity.

ம. கடும்பக; க. கடுவகெ.

[கடும் + பகை.]

கடும்பச்சை *kaḍum-paccai,* பெ.(n.) நாகப்பச்சைக்கல் (வின்.); a kind of green precious stone.

[கடும் + பச்சை.]

கடும்பசி *kaḍum-paśi,* பெ.(n.) மிக்க பசி; extreme hunger, ravenous appetite. *“கடும்பசி கலக்கிய விடும்பை” (புறநா.230:9).*

[கடும் + பசி.]

கடும்பட்டம் *kaḍumpaṭṭam,* பெ.(n.) கன்னி (புரட்டாசி) மாதத்தில் ஒன்று முதல் பத்து நாள்களில் விதைக்கும் பருவம்; specific period of sowing during the first ten days of *puraṭṭāši.*

மறுவ. முதற் பட்டம்

[கடு = விரைவு. கடு → கடும் + பட்டம்.]

கடும்பத்தியம் *kaḍu-m-pattiyam,* பெ.(n.) உப்புப் புளி முதலியன சேர்க்காமல் உண்ணும் பத்தியம்; rigid diet, strict diet, as for eg. a milk diet eschewing salt, tamarind and chillies.

[கடு → கடும் + பத்தியம். பதம் → பத்தியம்.]

கடும்பர் *kaḍumbar,* பெ.(n.) தூக்கத்தில் உளறுதல்; muttering in sleep (துளுநா.).

து. கடும்பர்

[கடு → கடும்பர்.]

கடும்பலம் *kaḍum-palam,* பெ.(n.) 1. இஞ்சி; ginger. 2. கருணைக்கிழங்கு; yam.

[கடு + பலம். கடு = உறைப்பு.]

இஞ்சியின் உறைப்புத் தன்மை, கருணையின் காறல் தன்மை ஆகியவை நோக்கிக் 'கடு' அடையாயிற்று.

கடும்பற்றுள்ளம் *kaḍum-paṟṟuḷḷam,* பெ.(n.) இவறன்மை (குறள்,44 அதிகார விளக்கம், பரி. உரை); miserliness.

[கடும் + பற்று + உள்ளம்.]

வேந்தனும் தன்கண் நிகழாவண்ணம் கடியத்தகும் குற்றங்கள் ஆறு அவை - காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் (பற்று = பொருளின்மேலுள்ள ஆசை) என்பன என்று பரிமேலழகர் சுட்டிக்காட்டுகிறார்.

கடும்பால் *kaḍum-pāl,* பெ.(n.) 1. சீம்பால், ஈன்றணிமைப்பால்; beestings. 2. எருக்கம்பால்; the milky juice of caltrope (சா.அக.).

[கடு + பால்.]

கடும்பிட்டலை *kaḍum-piṭṭalai,* பெ.(n.) பொரித்த குழம்பு (இ.வ.); a kind of liquid curry for seasoning food.

[கடும் + பிட்டலை.]

கடும்பிடி *kaḍum-piḍi,* பெ.(n.) ஒட்டாரம், (பிடிவாதம்), விட்டுக் கொடுக்காமை; obstinacy, stubbornness (சேரநா.).

ம. கடும்பிடி

[கடும் + பிடி.]

கடும்பிணி *kaḍum-piṇi,* பெ.(n.) 1. எளிதில் தீராத நோய்; a disease not easily curable. 2. கடுமையான நோய்; serious illness (சா.அக.).

[கடும் + பிணி.]

கடும்பிரி *kaḍum-piri,* பெ.(n) சிக்கல்; wrong twist, over twisting (சேரநா.).

ம. கடும்பாரி

[கடும் + பிரி.]

கடும்பு[1] *kaḍumbu,* பெ.(n.) சுற்றம்; relations. *"கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது" (புறநா.68:2).*

[குடும்பு → கடும்பு (சு.வி.72).]

கடும்பு[2] *kaḍmbu,* பெ.(n) 1. சும்மாடு (வின்.); pad of straw placed over the head, used in carrying a load. 2. துடைப்பக்குற்றி; the stump of a broom (சேர.நா.).

ம. கடும்பு

[கடு → கடும்பு.]

கடும்பு[3] *kaḍumbu,* பெ.(n.) **கடும்புப்பால்** பார்க்க; see *kaḍumbu-p-pāl.*

[கள் (செறிவு, திரட்சி) → கடு → கடும்பு.]

கடும்பு[4] *kaḍumbu,* பெ.(n.) வயிறு; stomach.

தெ. கடுப்பு

[கடு (மிகுதி, பெருக்கம், பெரிது) → கடும்பு.]

கடும்பு[5] *kaḍumbu,* பெ.(n.) 1. கூட்டம்; gathering, multitude. *"மீனினங்கள் ஓர்கடும்பாய்" (பாகவத.9, இக்குவாகு.6).* 2. பாத்தி; the raised seed-bed (in rice field) (சேரநா.).

[கடு (மிகுதி, பெருக்கம்) → கடும்பு.]

கடும்பு[6] *kaḍumbu,* பெ.(n.) கொழுக்கட்டை; a bolus like preparation of rice flour (சேரநா.).

ம. கடும்பு; க. கடுபு.

[கடு (செறிவு, திரட்சி) → கடும்பு.]

கடும்புப்பால் *kaḍumpu-p-pāl,* பெ.(n.) 1. ஈன்றணிமைப்பால், சீம்பால்; first milk drawn immediately after calving. 2. காய்ச்சித் திரட்டிய சீம்பால்; beestings boiled into a paste.

[கடு (செறிவு, திரட்சி) → கடும்பு + பால். கடும்பு = திரள், கட்டி.]

கடும்புல் *kaḍum-pul,* பெ.(n.) ஒருவகைப்புல்; a kind of hard or rough grass (சா.அக.).

[கடும் + புல்.]

கடும்புளிப்பு *kaḍum-puḷippu,* பெ.(n.) மிகுபுளிப்பு; excessive sour (சா.அக.).

[கடும் + புளிப்பு.]

கடும்புற்று *kaḍum-puṟṟu,* பெ.(n.) 1. கெட்டியான புற்றுப்புண்; a hard or indurated sore-chancre. 2. கெட்டியான சொறிப்புண்; a hard cancerous tumour (சா.அக.).

[கடும் + புற்று.]

கடும்புனல் *kaḍum-puṉal,* பெ.(n.) 1. விரைந்தோடும் நீர்; fast flowing water. *"கடும்புனன் மலிந்த காவிரி" (அகநா.62:9).* 2. கடல்; sea, from its abundance of water. *"காமக் கடும்புன னீந்திக் கரைகாணேன்" (குறள்,1167).*

[கடும் + புனல்.]

கடும்பெயல் *kaḍum-peyal,* பெ.(n.) பெருமழை; torrential rain. *"கடும்பெயல் பொழியும் கலிகெழு வானே" (நற்.387:11).*

[கடு → கடும் + பெயல்.]

கடும்பேதி *kaḍumpēti,* பெ.(n.) கடும்கழிச்சல் பார்க்க; see *kaḍum-kaḻical.*

[கடும் + பேதி.]

கடும்பை *kaḍumbai,* பெ.(n.) கடுப்பை பார்க்க; see *kaḍuppai.*

[கடிப்பகை → கடிப்பை → கடுப்பை → கடும்பை.]

கடும்போக்கு *kaḍumpōkku,* பெ.(n.) கடிய நடைமுறை; extremism.

[கடு → கடும் + போக்கு.]

கடும்வெயில் *kaḍum-veyil,* பெ.(n.) கதிரவனின் மிகு வெப்பம்; scorching heat of the sun (சா.அக.).

[கடு → கடும் + (வெய்யில்) வெயில்.]

கடுமம் *kaḍumam,* பெ.(n.) கடுமை; hardness, difficulty.

H.,U. kaḍin; **Ori.** kaste; **Jap.** katai; **Ar.** gamid; **Heb.** karra; **Chin.** kunnan; **G.** hart; **Du.** hard; **Dan.,Swed.** hard; **Norw.** hard; **Yid.** hart; **W.** caled; **O.E.** heard; **Gk.** kratys; **Nubian.** ko-ger; **Afrik.** hard.

[கடு → கடுமம். ஒ.நோ. கரு → கருமம். இச்சொல் வடமொழியில் கடினம் எனத்திரிந்தது.]

கடுமரம் *kaḍu-maram,* பெ.(n.) 1. கடுக்காய்மரம் (திவா.); chebulic myrobalan. 2. எட்டி (மலை.); strychnine tree.

[கடு (உறைப்பு, கசப்பு) + மரம்.]

கடுமலை *kaḍu-malai,* பெ.(n.) காரீயமலை (மூ.அ.); graphite mountain.

[கரு → கடு + மலை.]

கடுமழை *kaḍu-maḻai,* பெ.(n.) பெருமழை; heavy rain.

[கடு (மிகுதி) + மழை.]

கடுமறம் *kaḍu-maṟam,* பெ.(n.) பீடார்ந்த நெஞ்சுரம்; strong will; bold attempt. *'உறுவலியுங் கடுமறமுங் காரணமாகத் துணிசெயல் நாடிச் சேணெடுந் தொலைவு சென்றுவாழும் இளைஞருமுளர்' (மு.தா.முன்.ப.23).*

[கடு (செறிவு) + மறம்.]

கடுமன் *kaḍumaṉ,* பெ.(n.) 1. கொடுமை (யாழ்.அக.); cruelty. 2. கல்மனம் கொண்டவன், தீயவன்; a hard-hearted man, wicked man.

ம. கடுமன்

[கடு → கடும் → கடுமன்.]

கடுமா[1] *kaḍumā*, பெ.(n.) 1. குதிரை; horse. "கடுமா கடவுவோருங் களிறுமேல் கொள்வோரும்" (பரிபா.12:28).

[கடு (விரைவு) + மா. கடிய நடையுடைய தாகலின் கடுமா எனப்பட்டது.]

கடுமா[2] *kaḍumā*, பெ.(n.) 1. வல்விலங்கு; ferocious animal. "கடுமா வழங்குதல் அறிந்தும்" (நற்.257:9). 2. புலி; tiger.

[கடு + மா.]

அரிமா (சிங்கம்), வரிமா (புலி), கைம்மா (யானை), கரடி போன்றவற்றின் வன்மை கருதி அவை கடுமா எனப்பட்டன.

கடுமாங்காய் *kaḍu-māṅgāy*, பெ.(n.) மாங்காய் ஊறுகாய்; a kind of mango pickles.

ம. கடுகுமாங்ங, கடுமாங்ங.

[கடு + மாங்காய்.]

கடுமான்[1] *kaḍumāṉ*, பெ.(n.) சேரர் குடிப்பெயர்களுள் ஒன்று; one of the name of the kings of Chera clan.

[கடு → கடுவன் + மகன் - கடுவன் மகன் → கடுவன்மான் → கடுமான். ஒ.நோ. வெளி → வெளியன். கடுவன் - இயற்பெயர்.]

கடுமான்[2] *kaḍu-māṉ*, பெ.(n.) அரிமா; lion. "கடுமான் கிழ்ந்த கடமலை" (கல்லா.67:16).

[கடு + மான். மா → மான் = விலங்கு.]

கடுமான்கோதை *kaḍumāṉ-kōdai*, பெ.(n.) சேரமான் குட்டுவன் கோதை; a Cera king.

[கடுமான் + கோதை.]

கடுமான் சேரர் குடிப்பெயர்களுள் ஒன்று.

கடுமானம் *kaḍu-māṉam*, பெ.(n.) அணிகலன்களில் விலையுர்ந்த கற்களை இறுகப்பிடிக்க அடியில் வைக்கும் உலோகமாழைத் தகடு; a foil put under a precious stone set in an ornament (சேரநா.).

ம. கடுமானம்

[கடு + மானம். மானம் = அளவு, தன்மை.]

கடுமீன் *kaḍu-mīṉ*, பெ.(n.) சுறா முதலியன; ferocious fish, shark. "கடுமீன் கலிப்பினும்" (அகநா.52).

ம. கடிமீன்

[கடு + மீன்.]

கடுமுட்டு[1] *kaḍu-muṭṭu*, பெ.(n.) 1. இறுகப் பொருந்திய பொருத்து; tight joint. ஏர்த்தடியைக் கடுமுட்டாகக் கலப்பையில் செருகிவிட்டார்கள் (உ.வ.). 2. பெருத்த இடர்ப்பாடு; great trouble. அவர் கடுமுட்டில் மாட்டிக் கொண்டார் (உ.வ.).

[கடு + முட்டு = மோதுதல். மோதிப் பொருத்தல் மோதிச் சிதறல்.]

கடுமுட்டு[2] *kaḍu-muṭṭu*, பெ.(n.) பெருந்தட்டுப்பாடு கிட்டாமை, முடை; severe scarcity. இங்கு எதுவும் கிடைப்பதில்லை, கடுமுட்டாக இருக்கிறது (உ.வ.).

[கடு + முட்டு. முட்டு = மட்டு, போதாமை.]

கடுமுடு-த்தல் *kaḍumuḍu-*, 4 செ.கு.வி.(v.i.) விரைதல்; to move quickly, to hurry.

[கடு + முடு. முடுக்கு → முடு.]

கடுமுடுக்கு *kaḍu-muḍukku*, பெ.(n.) 1. விரைந்த நடக்கை; hastening, speeding. 2. முடுக்கான அதிகாரம்; oppression, rigour, as by petty arrogant officers dressed in brief authority 'கடுமுடுக்குச் சேவகமாம் கம்பரிசிச் சம்பளமாம்' (பழ.)

[கடு + முடுக்கு.]

கடுமுடெனல் *kaḍu-muḍeṉal*, இடை. (part.) ஓர் ஒலிக்குறிப்பு; rumbling, as the bowels; crackling sound as that produced when biting hard, dry things. நாய் எலும்பைக் கடுமுடென்று கடிக்கிறது (உ.வ.).

தெ. கடகட; க. கடகுட; து.,பட. கடகட.

[கடு + முடு + எனல்.]

கடுமுடை[1] *kaḍu-muḍai*, பெ.(n.) பெருந் தட்டுப்பாடு பணமுடை; severe scarcity. விழாச் செலவுக்குப் பணம் கடுமுடையாய் இருக்கிறது (உ.வ.).

[கடு + முடை.]

கடுமுடை[2] *kaḍu-muḍai,* பெ.(n.) புலால்; flesh. *"புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை" (அகநா. 3:9).*

மறுவ. கவுச்சு

[கடு + முடை. முடை = நாற்றம் ஆகுபெயராய்ப் புலாலைக் குறித்தது.]

கடுமுரண் *kaḍu-muraṇ,* பெ.(n.) மிகுவலிமை; great valour. *"கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சி" (புறநா.37:10).*

ம. கடுமூலம்; க. கடுகலிதன.

[கடு + முரண்.]

கடுமுள்[1] *kaḍu-muḷ,* பெ.(n.) 1. போர்க்கருவி (திவா.); weapon used in warfare.

[கடு + முள்.]

கடுமுள்[2] *kaḍu-muḷ,* பெ.(n.) கண்டங்கத்தரி (மலை.); a prickly plant with diffuse branches.

[கடு + முள். கடு = மிகுதி.]

கடுமுறவு *kaḍum-uṟavu,* பெ.(n.) நெருங்கிய உறவு; intimate relationship. 'கடுமுறவு கண்ணைக்குத்தும்' (பழ.).

[கடும் + உறவு. கடும் = மிகுதி, நெருக்கம்.]

கடுமுனை *kaḍu-muṉai,* பெ.(n.) போர்க்களம்; battle field. "நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி கடுமுனை யலைத்த கொடுவி லாடவர்" (அகநா. 372:9,10).

[கடு + முனை. கடு = வீரம், மறத்தன்மை. முனை = மறத்தன்மையர் வீறார்ப்புடன் முனைந்து செல்லுமிடம், போர்க் களம்.]

கடுமூர்க்கம் *kaḍu-mūrkkam,* பெ.(n.) மிகுசினம்; anger.

த. மூர்க்கம் > Skt. mūrga.

[கடு + மூர்க்கம். முறுக்கு → முறுக்கம் → மூர்க்கம்.]

கடுமூலம் *kaḍu-mūlam,* பெ.(n.) திப்பிலி வேர்; the root of long pepper (சேரநா.).

ம. கடுமூலம்; த. கடுமூலம்; Skt. kaṭumūla.

[கடு + மூலம். கடு = காரம்.]

கடுமை *kaḍumai,* பெ.(n.) 1. கொடுமை (சூடா.); severity, harshness, cruelty, hard-heartedness. *"தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரங் கண்ணீர் நனைக்குங் கடுமைய" (கலித்.6:5).* 2. கண்டிப்பு (இ.வ.); rigour, strictness, sternness. 3. வன்மை; vehemence, ferocity, furiousness. 4. விரைவு; rapidity, speed. *"கடுவர லருவிக் கடும்புனல் கொழித்த" (மணிமே.17:25).* 5. கடினம் (வின்.); hardness, tenacity, firmness, roughness, ruggedness. 6. மிகுதி (ஐங்குறு.335.அரும்.); excessiveness, intensity, immoderateness, vastness. *"பனிக் கடுமையின் நனிபெரிது அழுங்கி (நற்.281:9).* 7. சினம் (சிலப்.5:55.உரை); anger, wrath. 8. வெம்மை (கலித்.12:5.உரை); heat. 9. வலிமை (வின்.); strength, sturdiness.

ம. கடும, கடுப்பம்; து. கட்ட்; குரு. கர்கா; மா. க்யர்கெ; பிரா. கரேன்; க. கடுமெ.

Skt. kharma (virility, strength); H. kaḍōradā.

[கடு → கடுமை.]

கடுமொட்டு *kaḍu-moṭṭu,* பெ.(n.) இளம்அரும்பு; tender bud. *"கடுமொட்டாயிருந்தால் தேன் உத்பந்நமாகிற வளவாகையாலே" (திவ்.திருநெடுந்.29, வியா.ப.226).*

[கடு + மொட்டு.]

அரும்பு, பூ, மலர், வீ, செம்மல் என்பன பூவின் நிலைகள். அரும்பு, மொட்டு, முகை என்பன ஒருபொருட் பன்மொழி. சிறிதாயும் கூராயுமிருப்பது அரும்பு (மல்லி, முல்லை போன்றன). பெரிதாயும் மொட்டையாயுமிருப்பது மொட்டு (அடுக்குமல்லி). பெரிதாயிருக்கும் அரும்பு முகை (தாமரை). அரும்பின் இளமையைக் குறிக்கக் கடு அடையானது.

கடுமொடெனல் *kaḍu-modeṉal,* இடை.(part.) *கடுமுடெனல்* பார்க்க; see *kaḍu-muḍeṉal.*

[கடுமுடு → கடுமொடு + எனல்.]

கடுமொலியெக்காளம் *kaḍum-oli-y-ekkāḷam,* பெ.(n.) எக்காளவகை (பாண்டி.); a kind of clarion.

[கடும் + ஒலி + எக்காளம். எக்காளம் = எழுச்சியூட்டும் உரத்த ஒலி. அதை உண்டாக்கும் கருவி. கடும் - மிகுதிப் பொருள் முன்னொட்டு.]

கடுமொழி *kaḍu-moḻi,* பெ.(n.) 1. கடுஞ்சொல் பார்க்க; see *kaḍuñcol.* "கடுமொழியுங் கையிகந்த

தண்டமும்" (குறள்,567). 2. வீரவுரை; courageous declaration.

க. கடுநுடி

[கடு + மொழி.]

கடுரம் *kaḍuram,* பெ.(n.) நீர்மோர் (யாழ்.அக.); butter - milk with water.

ம. கடுரம்

[கழலம் → கழரம் → கடரம் → கடுரம்.]

கடுரவம் *kaḍuravam,* பெ.(n.) தவளை; frog (சா.அக.).

[கடு + அரவம் - கடுரவம்.]

கடுரவி *kaḍu-ravi,* பெ.(n.) 1 கடுமையான வெயில்; scorching sun. 2. சித்திரை மாதத்து வெயில்; April sun (சா.அக.).

[கடு + இரவி - கடுரவி.]

கடுலன் *kaḍulaṉ,* பெ.(n.) கூனன்; hump backed man.

[குடுவல்(வளைவு) → குடுவலன் → கடுவலன் → கடுலன்(கொ.வ).]

கடுவங்கம் *kaḍu-vaṅgam,* பெ.(n.) 1. இஞ்சி (மலை.); ginger. 2. வெள்வங்கம்; tin (சா.அக.).

[கடு + வங்கம்.]

கடுவட்டி *kaḍu-vaṭṭi,* பெ.(n.) மிகுவட்டி; exorbitant rate of interest.

[கடு + வட்டி.]

கடுவந்தையார் *kaḍuvantaiyār,* பெ.(n.) போரில் இறந்த விற்சிதை என்பானின் தந்தை; father of Viṟcitai, who died in war (செங்கம் நடுகற்கள்).

[கடுவன் + அந்தை + ஆர். கடுவன் - இயற்பெயர். அந்தை மதிப்புரவுப் பெயரீறு. ஆதன் + அந்தை - ஆதந்தை. ஆந்தை பார்க்க; see āndai. ஆர் உயர்வுப் பன்மையீறு; ஈறடுக்கி வந்தது.]

விற்சிதை என்பவன் தன் தலைவனுக்காகப் போரிட்டு உயிர் நீத்த வீரன்.

கடுவயக்குன்றம் *kaḍu-vaya-k-kuṉṟam,* பெ.(n.) இரும்புக்கனிமம் உள்ள மலை; a hill or mountain containing iron ore (சா.அக.).

[கடு + அயம் (இரும்பு) + குன்றம்.]

கடுவரல் *kaḍu-varal,* பெ.(n.) விரைந்து வருகை; hastening, running fast. *"கடுவர லருவி" (மணிமே. 17:25).*

க. கடுபரவு

[கடு + வரல்.]

கடுவரை *kaḍu-varai,* பெ.(n.) செந்தூக்கான மலை; precipitous mountain. *"கடுவரை நீரிற் கடுத்துவர" (பு.வெ.11).*

[கடு + வரை.]

கடுவல் *kaḍuval,* பெ.(n.) 1. வன்னிலம் (வின்.); ground hardened by sunshine after rain. 2. கடுங்காற்று; heavy gale, hurricane.

[கடு → கடுவு + அல். 'அல்' தொ.பெ.ஈறு.]

கடுவழி *kaḍu-vaḻi,* பெ.(n.) முள்ளும் கல்லும் பெருகி நெடுந்தொலைவாகிய கடுமையான பாதை (குமரேச.சத.30); rough path with stone and thorn.

[கடு + வழி.]

கடுவன்[1] *kaḍuvaṉ,* பெ.(n.) 1. தலைவன், மாவீரன்; a courageous man. 2. அறிவாளி; clever man. 3. செல்வன்; a rich man (துளுநா.).

து. கடுவெ

[கடு + அன்.]

கடுவன்[2] *kaḍuvaṉ,* பெ.(n.) 1. வலிமை மிக்க ஆண் விலங்கு; male animal. 2. ஆண் குரங்கு; he monkey. *"கடுவனும் அறியும் அக் கொடியோனையே" (குறுந்.26).* 3. ஆண் பூனை; tom-cat.

ம. கடுவன்; க. கடவ; கோத். கட்வன்; மால. கட; பெர். கடோ; தெ. கோத்தி; குட., துடவ. கொடன்; கொலா(சிங்.) கடி; சந்தாலி. கடி; கை. க்வொடி; கோண். கொஜு; பட. கோத்தி.

Asian: - Indon. kutjing; Ar. qit; Heb. chat-ul; Jap. neko.

European: - Pol. kot; Russ. koshka; Cz. kocka; Ser.croa. Macka; Hung. macska; G. katze, kut; Du.,Dan.

kat; **Ice.** kottr; **ME.** catt, catte; **OE.**,E.cat; **AS.** car; **Norw.** katt; **Yid.** kats; **Afrik.** kat; **L.L.** cattus; **L.** catta; **Gk.** ga'ta; **It.** gatto; **F.** chat; **Sp.,Port.** gato; **W.** cath; **Ir.** cathu; **Gael.** cat; **Turk.** kędi; **Finn.** kissa, katti; **O.H.G.** kazza; **M.H.G.** kartze; **O.Ir.** cat; **O.Slav.** koṭuka, kotel'a; **Swed.** katt; **Pol.** kot; **Finn.** kissa; **Esp.** kato; **Lith.** kate.

African:- Nubi. kadis.

[கடு + அன்.]

கடுவன்³ *kaḍuvaṉ*, பெ.(n.) ஆண்பால் இயற்பெயர்; a proper name of the males. கடுவன் இளவெயினனார் கடைக்கழகப் புலவருள் ஒருவர்.

[கடு + அன் - கடுவன் (உடல் வலிமை சான்றவன்.]

கடுவன்⁴ *kaḍuvaṉ*, பெ.(n.) இடையிற் படரும் படை; eruption on the waist.

[கடு + அன்.]

கடுவன்⁵ *kaḍuvaṉ*, பெ.(n.) மாவிலங்கை; round berried cuspidate-leaved Singam tree.

[கடு + அன்.]

இம் மரத்தின் வன்மைகருதிக் கடுவன் எனப்பட்டது.

கடுவன்⁶ *kaḍuvaṉ*, பெ.(n.) மற்போரில் வல்லவன், மல்லன்; boxer.

[கடு → கடுவன்.]

கடுவன்⁷ *kaḍuvaṉ*, பெ.(n.) 1. கொடியவன்; wicked man. 2. கொடுமை; cruelty.

ம. கடுமன்

[கடு + வ் + அன்.]

கடுவன்⁸ *kaḍuvaṉ*, பெ.(n.) சத்துணவுக் குறைவினால் ஏற்படும் காற்கடுவன் நோய்; a kind of skin disease which affects the leg between knee and ankle due to the malnutrition.

[கடு → கடுவன்.]

கடுவன்கரப்பன் *kaḍuvaṉ-karappaṉ*, பெ.(n.) **கடுவான்கரப்பான்** பார்க்க; see *kaḍuvāṉ-karappāṉ*.

[கடுவன் + கரப்பன்.]

கடுவன்குருவி *kaḍuvaṉ-kuruvi*, பெ.(n.) ஆண்குருவி; male sparrow.

[கடுவன் + குருவி.]

கடுவன்பன்றி *kaḍuvaṉ-paṉṟi*, பெ.(n.) ஆண்பன்றி; boar.

ம. கடுவன் (பன்றி, பூனை ஆகியவற்றின் ஆண்.)

[கடுவன் (ஆண்) + பன்றி.]

கடுவன்பூனை *kaḍuvaṉ-pūṉai*, பெ.(n.) ஆண்பூனை; tom-cat.

[கடுவன் + பூனை.]

கடுவன்முசல் *kaḍuvaṉ-mušal*, பெ.(n.) **கடுவன்முயல்** பார்க்க; see *kaḍuvaṉ-muyal*.

[கடுவன்முயல் → கடுவன்முசல் (கொ.வ).]

கடுவன்முயல் *kaḍuvaṉ-muyal*, பெ.(n.) ஆண்முயல் (வின்.); buck hare.

[கடுவன் + முயல். கடுவன் = ஆண்.]

கடுவனிளமள்ளனார் *kaḍuvaṉ-iḷa-maḷḷaṉār*, பெ.(n.) கடைக்கழகப் புலவர்களில் ஒருவர் (நற்.150); a poet of last Šangam age.

[கடுவன் + இள + மள்ளனார். கடுவன் = மற்போரில் வல்லவன். மள்ளன் = செழியன்.]

கடுவனிளவெயினனார் *kaḍuvaṉ-iḷa-v-veyiṉaṉār*, பெ.(n.) கடைக்கழகப் புலவர்களில் ஒருவர் (பரிபா.3,4,5); a poet of the last Šangam age.

[கடுவன் + இள + எயினன் + ஆர். குறிஞ்சி நிலத்து எயினக்குடியினர்.]

கடுவா *kaḍuvā*, பெ.(n.) கண்களை மஞ்சணிறமாக்கும் குதிரைநோய் (அசுவசா.88); a disease of the horse in which its eyes grow yellow (சா.அக.).

[கடுவு → கடுவா.]

கடுவாக்கு *kaḍu-vākku*, பெ.(n.) கொடுஞ்சொல்; hard word, unkind word, cruel word (சேரநா.).

ம. கடுவாக்கு

[கடு + வாக்கு.]

கடுவாகம் *kaḍuvāgam,* பெ.(n.) புறாமுட்டை; the egg of a dove (சா.அக).

[கடுவு + அகம் - கடுவகம் → கடுவாகம்.]

கடுவாய்[1] *kaḍu-vāy,* பெ.(n.) 1. கழுதைப்புலி; hyena. *"செங்கை வெங்கடுவாய்" (இரகு.தசரதன் சாப.62).* 2. கொடூரமான வலியவன்; a violent, cruel person. 3. கொடுவாய் மீன்வகை; a kind of *koduva* fish (சேரநா).

ம. கடுவ (வரிப்புலி); து. கடுவாயி (ஒருவகை மீன்.); கொலா. டுவா; கூய். டுவ்வு (புலி) H. bāg.

[கடு + வாய் - கடுவாய்.]

கோடிய வாயுடைய கொடுவாய் மீனைக் கடுவாய் மீன் என வழங்குவது கொச்சை வழக்கு.

கடுவாய்[2] *kaḍuvāy,* பெ.(n.) **கடுவாய்ப்பறை** பார்க்க; see *kaḍu-vāy-p-paṟai. "கடுவா யிரட்ட வளைவிம்ம" (நந்திக்.6).*

[கடு + வாய் - கடுவாய் (உரத்த ஒசை எழுப்புவது).]

கடுவாய்[3] *kaḍu-vāy,* பெ.(n.) காவிரியின் கிளையாறு; name of a branch of the river Kāveri in Tanjore district. *''கடுவாய் மலிநீர்க் குடவாயில்'' (தேவா.762-11).*

[கடு + வாய். கடு = விரைவு. வாய் = வழி. கடுவாய் = விரைந்து ஓடிவரும் நீர்ப்பெருக்கு.]

கடுவாய்[4] *kaḍuvāy,* பெ.(n.) நாய்; dog (சா.அக.).

[கடு + வாய்.]

கடுவாய்[5] *kaḍu-vāy,* பெ.(n.) நாய்த்துளசி; hoary basil (சா.அக.).

[கடு → கடுவை → கடுவாய்]

கடுவாய்ப்பறை *kaḍu-vāy-p-paṟai,* பெ.(n.) ஒருவகை போர்ப்பறை; a kind of drum producing a big volume of sound. *"கடல்போன் முழங்குங் குறற்கடுவாய்ப் பறையுடைப் பல்லவர்கோன்" (திவ். பெரியதி.2.9:9).*

[கடு + வாய் + பறை.]

அகன்ற வாயுடைமையின் இப்பெயர் பெற்றது.

கடுவாயன்[1] *kaḍuvāyaṉ,* பெ.(n.) 1. சினத்தால் எரிந்து விழும் இயல்பினன்: one who bawls out in anger (கொ.வ.). 2. கழுதை; ass.

க. கடுநுடிகார

[கடுவாய் + அன்.]

வன்சொல் உடைமையால் சினப்பவனையும், வல்லோசை உடைமையால் கழுதையையும் கடுவாய் குறித்தது. 'அன்' ஒன்.பா.ஈறு.

கடுவாயன்[2] *kaḍu-vāyaṉ,* பெ.(n.) நஞ்சுடைய பாம்பு; poisonous snake.

[கடு + வாயன். கடு = நஞ்சு.]

கடுவாயெறும்பு *kaḍu-vāy-eṟumbu,* பெ.(n.) ஒருவகைக் கருப்பு எறும்பு; a kind of black-ant.

[கடுவாய் + எறும்பு.]

கடுவாய் = கடுக்கும் படியாகக் கடிக்கும் இயல்புடைய வாய். கடித்த இடத்தில் குருதி வருதலும் உண்டு (சா.அக.).

கடுவான் *kaḍuvāṉ,* பெ.(n.) **கடுவான்கரப்பான்** பார்க்க; see *kaḍuvāṉ-karappāṉ.*

[கடு → கடுவான்.]

கடுவான்கரப்பான் *kaḍuvāṉ-karappāṉ,* பெ.(n.) குழந்தைகளின் முழந்தாளுக்குங் காற்பரட்டுக்கும் இடையில்வரும் கரப்பான்நோய் (வின்.); eruption between the knee and ankle, in children.

[கடு → கடுவான் + கரப்பான். கரை = குறைதல், இளைத்தல். கரப்பான் பார்க்க; see karappāṉ.]

கடுவிரைவு *kaḍu-viraivu,* **கடுவேகம்** பார்க்க; see *kaḍu-vēgam.*

[கடு + விரைவு.]

கடுவிலி *kaḍuvili,* பெ.(n.) கடுகுச்சிவலை (கடுகுரோகணி); black hellebore (சா.அக.).

[கடு + இல் + இ - கடுவிலி. இலி = இல்லாதது.]

கடுவிலை *kaḍu-vilai,* பெ.(n.) மிகுவிலை; exorbitant price.

*[கடு + விலை.]

கடுவினை *kaḍu-viṉai,* பெ.(n.) தீவினை; evil destiny. *"கடுவினை களையலாகும்" (திவ்.திருவாய். 10.2:8).*

க. கடுவோன, கடுபோன (மிக்கவலி, பிள்ளைப்பேற்று வலி).

[கடு + வினை.]

கடுவு[1] *kaḍuvu,* பெ.(n.) **1.** வன்மை, உறுதி; hardness, strength. **2.** உறுதியான காலவரம்பு; agreed time limit.

மறுவ. கெடுவு, கெடு.

க. கெடுவு (காலவரம்பு)

[கடு (வன்மை, உறுதி) → கடுவு.]

கடுவு[2] *kaḍuvu,* பெ.(n.) பாழ்நிலங்களில் முளைக்கும் வேளை; a herb which grows wildly on waste lands.

[கடு → கடுவு.]

வண்ணத்திலும் வடிவத்திலும் கடுகை ஒத்திருப்பதால் இப்பெயர் இதற்காயிற்று. இது நல்லவேளை நாய் வேளை என்று இருவகைப்படும். நல்ல வேளையின் ஊறுகாய் பித்தத்திற்கு மருந்தாம். நாய் என்னும் சொல் பயன்பாட்டிற்கு அதிகம் உதவாத செடிகளுக்கு வந்தது. ஒ.நோ. நாய்த்துளசி.

கடுவெப்பம் *kaḍuveppam,* பெ.(n.) மிக்க சூடு; excessive heat.

து. கடுசிகெ

[கடு + வெப்பம்.]

கடுவெயில் *kaḍu-veyil,* பெ.(n.) மிக்க வெயில்; scorching sun. *"கடுவெயில் திருகிய வேனில் வெங்காட்டு" (அக.நா.353:10).*

க. கடுவிசிலு, கடுவிசில், கடுபிசிலு.

[கடு + வெயில்.]

கடுவெயிலுலர்-த்தல் *kaḍu-veyil-ular-,* 4 செ.குன்றாவி.(v.t.) மருந்துப் பொருள்களைக் கொடிய வெயிலில் காய வைத்தல்; exposing any medicinal preparation to the scorching sun (சா.அக.).

[கடு + வெயில் + உலர்.]

கடுவெளி *kaḍu-veḷi,* பெ.(n.) **1.** நிழலற்ற வெளியிடம்; dry, extensive plain, treeless waste. *"கானலை நீரென் றெண்ணிக் கடுவெளி" (விவேக.சிந்.).* **2.** வானம்; ethereal sky. *"கடுவெளியோ டோரைந்து மானார்". (தேவா.44-7).*

[கடு + வெளி.]

கடுவெளிச்சித்தர் *kaḍuveḷi-c-cittar,* பெ.(n.) 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a poet of 15th century.

[கடுவெளி + சித்தர்.]

கடுவெளிநாற்பது *kaḍuveḷi-nāṟpadu,* பெ.(n.) கடுவெளிச் சித்தரால் இயற்றப்பட்ட சிற்றிலக்கியம்; a version written by *Kaḍuveḷi-c-cittar.*

[கடுவெளி + நாற்பது.]

கடுவேக்காடு *kaḍu-vēkkāḍu,* பெ.(n.) **1.** கடுஞ்சூடு; intense heat. **2.** மிகுதியாக எரிதல்; burning with intense heat. **3.** அதிகமாக வேகவைத்தல்; boiling excessively (சா.அக.).

[கடு + வேக்காடு.]

கடுவேகம் *kaḍu-vēgam,* பெ.(n.) மிகு விரைவு; super fast.

க. கடுபேக

[கடு + வேகம்.]

கடுவேகன் *kaḍu-vēgaṉ,* பெ.(n.) நீலச் செய்நஞ்சு; a prepared arsenic (சா.அக.).

[கடு + (வேகம்) வேகன்.]

கடுவேகி *kaḍu-vēgi,* பெ.(n.) சோர செய்நஞ்சு; a kind of prepared arsenic (சா.அக.).

[கடு + (வேகம்) வேகி.]

கடுவேட்கை *kaḍu-vēṭgai,* பெ.(n.) மிகுந்த நாவறட்சி; extreme thirst.

[கடு + வேட்கை. வேள் + கை - வேட்கை.]

கடுவேலை *kaḍu-vēlai,* பெ.(n.) கடற்பாசி; sea weed or sea - moss (சா.அக.).

[கடு + (வேளை) வேலை.]

கடுவேலைக்கந்தரம் *kaḍu-vēlai-k-kandaram,* பெ.(n.) *கடுவேலை* பார்க்க; see *kaḍu-vēlai* (சா.அக.).

[கடு + (வேளை) வேலை + கந்தரம்.]

கடுவேனில் *kaḍu-vēṉil,* பெ.(n.) கடுங்கோடை பார்க்க; see *kaḍuṅkōḍai. "கல்காயுங் கடுவேனிலொடு" (மதுரைக்.106).*

[கடு + வேனில்.]

கடுவை[1] *kaḍuvai,* பெ.(n.) 1. பறவை வகை (பிங்.); a kind of bird. 2. செம்பு; copper (சா.அக.).

[கடு → கடுவை.]

கடுவை[2] *kaḍuvai,* பெ.(n.) 1. தலைவன்; hero. 2. துணிவுள்ளவன்; courageous man. 3.அறிவாளி; clever man (துளுநா.).

து. கடுவெ

[கடு → கடுவை.]

கடூகம் *kaḍūgam,* பெ.(n.) நத்தைச்சூரி (நாமதீப.); bristly button weed.

[கடு → கடூகம்.]

கடூரம் *kaḍūram,* பெ.(n.) கொடுமை; cruelty.

[கடு + அரவம் - கடுரவம் → கடூரம் = கூச்சல், குழப்பம், கொடுமை.]

கடூரி[1] *kaḍūri,* பெ.(n.) 1. சதுரக்கள்ளி; square spurge. 2. முருங்கை; drumstick tree.

[கடு + ஊரி.]

கடூரி[2] *kaḍūri,* பெ.(n.) ஒருவகைத் தோல்நோய்; a kind of skin disease.

[கள் → கடு (முள்) + ஊரி - கடூரி. நோயாளியின் தோல் முள் முளைத்தது போன்றிருப்பதால் இப்பெயர் பெற்றது.]

கடூழியச்சிறை *kaḍūḻiya-c-ciṟai,* பெ.(n.) கடுங்காவல் (யாழ்ப்.); rigorous imprisonment.

[கடு + ஊழியம் + சிறை.]

கடேந்திரநாதர் *kaḍēndiranādar,* பெ.(n.) ஒரு சித்தர்; a šiddar.

[கடு + இந்திரநாதர்.]

கடை[1]-தல் *kaḍai-,* 2 செ.குன்றாவி.(v.t.) 1 கெட்டி நீர்மப் பொருளில் மத்துப் போன்றவற்றைக் கொண்டு சுழலச் செய்தல்; to churn. *"நெய்கடை பாலின் பயன்யாதும் இன்றாகி" (கலித்.110:17)* 2. மரம், இரும்புப் போன்றவற்றை குடைதல்; to turn in lathe. *"கடைந்த மணிச் செப்பென வீங்கு" (கூர்மபு.தக்கன்வே.52).* 3. மசித்தல்; to mash to a pulp. 4. அரைத்தல்; to grind.

ம. கடயுக; **க.** கடெ, கடி; **கோத.** கட்வ்; **துட.** கட், கற்த்; **குட.** கடெ; **து.** கடெயுனி, கடெவுனி; **மா.** கட்யெ; **கூ.** கட்ச; Skt. khaja (stirring, churning).

[குடை → கடை.]

கடை-[2]தல் *kaḍai-,* 2 செ.கு.வி.(v.i.) மிகச் செய்தல், பெருகுதல்; to increase, as the passion of love *"காதலாற் கடைகின்றது காமமே" (சீவக.1308).*

[கடு → கடை (கடைதல்).]

கடை[3]-தல் *kaḍai-,* 2 செ.கு.வி.(v.i.) 1. அரித்தல்; to trickle. *"கடையுங் கட்குரல்" (சீவக.1202).* 2. தொண்டையில் ஏற்பட்ட சளியினால் கடைவது போன்ற ஒலியுண்டாதல்; to rattle and wheeze, as the throat from accumulation of phlegm. தொண்டையிற் கோழை கடைகிறது (இ.வ.).

[குடை + கடை.]

கடை[4] *kaḍai,* பெ.(n.) 1. இறுதி; end, termination. *"வான் இகுபு சொரிந்த வயங்கு பெயற் கடைநாள்" (நற்.142:1).* 2. முடிபு; conclusion. *"நீர் நிலந்தீவளி விசும் போடைந்தும் அளந்து கடையறியினும்" (பதிற்று.24:15).* 3. எல்லை; outskirt, boundary. *"கடையழிய நீண்டகன்ற கண்ணாளை" (பரிபா.11:46).* 4. வாயில்; threshold. *"மடவோர் காட்சி நாணிக் கடையுடைத்து (சிறுபாண்.138).* 5. தலைவாயில்; entrance. *"அடையா வாயிலவன் அருங்கடை குறுகி" (சிறுபாண்.206).* 6. நுனி; edge. *"கயிறு கடையாத்த கடுநடை எறி உளி" (நற்.388:3).* 7. முனை; tip. *"வெண்கடைச்*

சிறுகோலகவன் மகளிர்" (குறுந்.298:6). 8. முன்றில்; courtyard of a house. *“ஆசில் வியன் கடைச் செந்நெல்” (குறுந்.277:1).* 9. பின்; back. *“வில்லிற்கடை மகரமேவ” (பரிபா.11:7).* 10. இறப்பு; death. *“கையாறு கடைக்கூட்டக் களிக்குறாஉம்'' (கலித்.31:7).* 11. வரையறை; limit. 12. இறுதிநிலை; at last, position of last. 13. கடைக்கோடி; aside. 14. இடம்; place, side, direction. *“வெரூஉதுங் காணுங் கடை” (கலித். 87:2).* 15. கீழ்மை; lowness, worst. *“கடையாய்க் கிடந்த வடியேற்கு” (திருவாச.1:60).* 16. தாழ்ந்தோன்; low, mean person, stupid fellow. *''கல்லாத சொல்லுங் கடையெல்லாம்” (நாலடி.255).*

ம. கட; **க.** கட, கட; **தெ.** கட.

Aram. harooyo.

[குல் → குள் → குடு → கடு → கடை.]

ஒன்று இன்னொன்றை முட்டும் முனை அதன் கடையாதலால், முட்டற்கருத்தில் கடைமைக் கருத்துத் தோன்றிற்று. பக்கம் நோக்கியதும் மேனோக்கியதும் எனக் கடை இருவகை. பக்கம் நோக்கியது முனை அல்லது கடை. மேனோக்கியது உச்சி. தலை என்பது இவ்விரண்டிற்கும் பொதுக் கருத்தையும் அடிப்படையாய்க் கொண்டவை யென்றறிக

முட்டுங்கடை ஒரு பொருளின் முடிவிடமாய் அல்லது எல்லையாயிருப்பதால், முட்டற்கருத்தில் எல்லைக் கருத்துத் தோன்றிற்று (மு.தா.95).

Skt. khaṭakkikā, khaḍakkikkā, a side door; a private or back door, a small or venetian door or window. These curious words are probably identical with Tbhs. kitaki etc (=Mhr., H. khiḍaki); if not, Dravidian kaṭa, kaḍa, side and kada, a door, might, though very diffidently, be compared. [K.K.Ed.XL]

கடை[5] *kaḍai,* பெ.(n.) 1. கதவு; entrance, gate, outer gateway. *''மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து” (சிறுபாண்.138).* 2. அங்காடி (பிங்.); shop, bazaar, market.

க. கட; **ம.** கட.

Skt. ghatta (landing - place); **Chin.** dain; **Indon.** kado; **Mal.** kedai; **Swahili.** duka.

[கட → கடை (தமி.வ.138).]

பண்டு பகற்கடையை நாளங்காடியென்றும் மாலைக்கடையை அல்லங்காடி யென்றும் வழங்கினர்.

கடை[6] *kaḍai,* பெ.(n.) காம்பு; handle, hilt. *“கருங்கடை யெஃகம்” (மலைபடு.490).*

[கட → கடை.]

கடை[7] *kaḍai,* இடை.(part.) 1. ஏழனுருபு (நன்.302); locative case marker. *“செம்புனல் ஊருடனாடுங் கடை” (பரி.5:15).* 2. ஒரு முன்னொட்டு; verbal prefix. *“கடைகெட்ட” (திருப்பு.831).* 3. ஒரு வினையெச்ச ஈறு; termination of a verbal participle. *“ஈத லியையாக் கடை” (குறள்,230).* 4. சொல்லிறுதி; termination suffix of a word.

[கட → கடை.]

கடை[8] *kaḍai,* பெ.(n.) சோர்வு (அக.நி.); tiredness.

[களை → கடை.]

கடை[9] *kaḍai,* பெ.(n.) 1. வழி (யாழ்.அக.); way. 2. பெண்குறி (யாழ்.அக.); pudendum muliebre.

[கட → கடை = கடைவாயில், வழி, வழித்துளை.]

கடைக்கட்டு *kaḍai-k-kaṭṭu,* பெ.(n.) முடிப்பு; knot.

[கடை + கட்டு.]

கடைக்கண் *kaḍai-k-kaṇ,* பெ.(n.) 1. கண்ணின் கடை; the outer corner of the eye. 2. கடைக்கண் பார்வை; a glance, side long look. 3. அருள்நோக்கு; graceful look. 4. கரும்பு போன்றவற்றின் நுனிப்பகுதி; end, tip, as of a sugarcane stalk. *“கரும்பின் கடைக்கண் ணனையம்” (நாலடி.390).*

ம. கடக்கண்ணு, கடமிழி; **க.** கடெகண்; **தெ.** கடகன்னு; **து.** கடெகண்ணு; படை. கடைகண்ணு.

[கடை + கண்.]

கடைக்கண்பார்வை *kaḍai-k-kaṇ-pārvai,* பெ.(n.) 1. அன்புக் குறிப்போடு சாய்த்து நோக்குகை; significant sidelook, oblique glance. 2. அருள் நோக்கம்; benign look.

க. கடெநோட; **ம.** கடக்கண்ணேறு.

[கடை + கண் + பார்வை.]

கடைக்கல் *kaḍaikkal,* பெ.(n.) கட்டடச்சுவரின் அடிப்பகுதியில் வைக்கும் கல்; foundation stone.

[கடை + கல்.]

கடைக்கயிறு *kaḍai-k-kayiṟu,* பெ.(n.) பாய்ப் பருமலுக்கும் கடையா மரத்திற்கும் இணைப்புடைய கயிறு (செங்கை மீனவ.); rope used to join the sail and base.

[கடை + கயிறு. கடை = கடையாமரம், அடிமரம்.]

கடைக்கவர் *kaḍai-k-kavar,* பெ.(n.) பல்; tooth.

[கடை + கவர் (கவர்ந்தபல்).]

கடைக்கணி-த்தல் *kaḍai-k-kaṇi,* 4 செ.கு.வி. (v.i.) 1. அருள் நோக்கு நோக்குதல்; to cast a benignant glance at, to look favourably upon. *"கருவெந்து வீழக் கடைக் கணித்து" (திருவாச.11:5).* 2. கடைக்கண்ணாற் பார்த்தல்; to look athwart; to look by the corner of the eye; to ogle. *"கருமலர்க் கூந்த லொருத்தி தன்னைக் கடைக்கணித்து" (திவ். பெருமாள். 6:3).*

க. கடெகணிசு

[கடைக்கண் → கடைக்கணி.]

கடைக்கணோக்கம் *kaḍai-k-kaṇōkkam,* பெ.(n.) ***கடைக்கண்பார்வை*** பார்க்க; see *kaḍai-k-kaṇ-pārvai.*

[கடை + கண் + நோக்கம்.]

கடைக்கருவி *kaḍai-k-karuvi,* பெ.(n.) உடுக்கை யென்னும் இசைக் கருவி (சிலப். 3:27, உரை); a drum that has the shape of an hour-glass.

[கடை (கடைசல்) + கருவி. கடைக்கருவி = கடைசல் செய்து அமைத்த கருவி.]

கடைக்கழகம் *kaḍai-k-kaḻagam,* பெ.(n.) பாண்டியர்களால் தமிழ் வளர்க்க நிறுவப்பட்ட மூன்று தமிழ்க்கழகங்களுள் மதுரையில் கூட்டிய மூன்றாவது தமிழ்க்கழகம் (இறை.பாயி.ப.6); the last sangam, the third of the three ancient Tamil Academies, it is said to have flourished in Madurai.

[கடை + கழகம்.]

கடைக்கழகம் தொடர்பாக இறையனார் களவியல் கூறுவது:

கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறு மேதாவி யாரும், சேந்தம்பூதனாரும், அறிவுடை யரனாரும், பெருங்குன்றூர்கிழாரும், இளந்திரு மாறனும், மதுரை ஆசிரியர் நல்லந்துவனாரும், மதுரை மருதனிளநாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் என இத் தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுஞ்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புற நானூறும், ஐங்குறு நூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என்று இத் தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும் என்ப. அவர் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்க மிரீஇயினார் கடல்கொள்ளப் பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் மூவர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தரமதுரை என்ப [இறை.பாயி.ப.6].

கடைக்கழகநூல்கள் *kaḍai-k-kaḻaga-nūlgaḷ,* பெ.(n.) கடைக்கழக (சங்க) காலத்தில் இயற்றப்பட்ட நூல்கள்; the treatises of sangam age.

[கடைக்கழகம் + நூல்கள்.]

பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் ஆகிய பதினெண் மேற்கணக்கு நூல்கள் கடைக் கழக நூல்களாகும். கழகமருவிய காலத்து எழுந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் கடைக்கழக நூல்களாகவே கருதப்படுகின்றன. கடைக்கழகப் புலவர் எண்ணிக்கை 473. அவர்களால் பாடப்பட்ட பாடல்களின் எண்ணிக்கை 2381.

கடைக்கனல் *kaḍai-k-kaṉal,* பெ.(n.) ஊழித்தீ; final deluge of fire; fire which destroys everything at the end of the world. *"கட்கடைக் கடைக்கனலும்" (மீனாட்.பிள்ளைத்.காப்பு.).*

[கடை + கனல் – கடைக்கனல். கடை = ஊழிக்கால இறுதி. கனல் = தீ.]

கடைக்காட்சி *kaḍai-k-kāṭci*, பெ.(n.) கண்காணிப்பு (S.I.I.iii,372); supervision.

[கடை + காட்சி – கடைக்காட்சி = கடைக்கண் பார்வை.]

கடைக்காண்(ணு)–தல் *kaḍai-k-kāṇ(ṇu)-*, 12 செ.கு.வி. (v.i.) 1. மேற்பார்த்தல்; to supervise. 'பெருமக்கள் இத் தர்மங் கடைக்காண்பதாகவும்' (S.I.I.iii,21). 2. இறுதியைப்பார்த்தல்; to see the end (கருநா.).

க. கடெகாண், கடெகாணு.

[கடை + காண். கடை = இறுதி. கடைக்காணுதல் = இறுதிவரை செப்பம் பார்த்தல்.]

கடைக்காண்பார் *kaḍai-k-kāṇbār*, பெ.(n.) கண்காணிப்பவர்; superviser. *'இத் தர்மம் ஆசந்ரகாலமும், முட்டாமை ஊட்டுவிப்பதாக இப்பெரு மக்களே கடைக்காண்பாரானார்'* (S.I.I.Vol.12.part-I, insc.104).

[கடை + காண்.]

கடைக்காப்பு *kaḍai-k-kāppu*, பெ.(n.) பதிகத்தின் இறுதி முத்திரைப்பாட்டு; last verse which is an invocation song in the poem known as padigam. *"திருப்பதிக நிறைவித்துத் திருக்கடைக் காப்பு சாத்தி" (பெரியபு.திருஞான.80).*

[கடை + காப்பு.]

கடைக்காரன் *kaḍai-k-kāraṉ*, பெ.(n.) கடைக் குரியவன்; bazar-keeper, shop-keeper.

ம. கடக்காரன்

[கடை + காரன்.]

கடைக்கால்[1] *kaḍai-k-kāl*, பெ.(n.) 1. வயலுக்குத் தொலைவிலுள்ள வாய்க்கால்; channel that is far away from a field. 2. கட்டடச் சுவரின் அடிப்பகுதி, அடிமானம்; foundation. 3. மிகத் தாழ்ந்த கீழிடம்; lowest place. *"கடைக்கா றலைக்கண்ண தாகி" (நாலடி.368).* 4. ஊழிக்காற்று (மீனாட்.பிள்ளைத். காப்பு.); destructive wind that prevails at the end of the world. 5. வழியின் ஓரங்களில் நீர் ஓடுவதால் ஏற்படும் தாழ்வான பகுதி; a gutter (சேரநா.).

ம. கடய்க்கால்; **க.** கடெகால் (காலின் கடை)

[கடை + கால்.]

கடைக்கால்[2] *kaḍai-k-kāl*, பெ.(n.) வருங்காலம்; future time. *"கடைக்கால் . . . செங்கோல் செலீஇயினான்" (பழ.239).*

[கடை + கால்.]

கடைக்கால்சக்கை *kaḍai-k-kāl-šakkai*, பெ.(n.) கடைக்கால்குழியில் போட்டு நிரப்பப்படும் சல்லிக் கற்கள். small stones used as the filler in foundation.

[கடை + கால் + சக்கை.]

கடைக்கால்வரிசை *kaḍai-k-kāl-varišai*, பெ.(n.) கடைக்காலை அடுத்து அமையும் முதல் வரிசைச் சுவர் (செங்கை); the first line of bricks on the foundation.

[கடை + கால் + வரிசை.]

கடைக்காலம் *kaḍai-k-kālam*, பெ.(n.) 1.இறுதிக் காலம்; final period. 2. ஊழிக்காலம்; period of final deluge.

[கடை + காலம்.]

கடைக்குடர் *kaḍai-k-kuḍar*, பெ.(n.) கடைக்குடல் பார்க்க; see *kaḍai-k-kudal.*

[கடைக்குடல் → கடைக்குடர்.]

கடைக்குட்டி *kaḍai-k-kuṭṭi*, பெ.(n.) 1. ஒரு வீட்டில் கடைசியாகப் பிறந்த பிள்ளை; the last born child in a family. 2. கடைசியாகப் பொரித்த குஞ்சு; the chik which last chips the shell. 3. ஒரே ஈற்றில் இறுதியாகப் பிறக்கும் குட்டி; last born in a litter.

மறுவ. கடைச்சான்

தெ. கடதொட்டு; **க.** கடெகுட்டு; **ம.** கடக்குட்டி; **து.** கடெகஞ்சி (கடைசி கன்று).

கடைக்குட்டி, பிள்ளைக்குட்டி, கன்று கயந்தலை என்னும் வழக்குகள் போன்றன இருதிணைப் பொதுவாய் இருவகை வழக்கிலும் வழங்கி வருதலான், முதற்காலத்தில் எல்லாச் சொற்களும் திணை வேறுபாடின்றி எண் வேறுபாட்டோடு மட்டும் வழங்கி வந்தன என்பதும், மக்கட்கும் விலங்குகட்கும் பெரும் வேறுபாடில்லையென்பதும் அறியப்படும் [சொ.ஆ.க.19].

கடைக்குடல் *kaḍai-k-kuḍal,* பெ.(n.) கீழ்க்குடல், பெருங்குடலிருந்து எருவாய் வரையிலுமுள்ளது; the lower or the distal part of the large intestine extending from the colon to the anus (சா.அக.).

[கடை + குடல்.]

கடைக்குறை *kaḍai-k-kuṟai,* பெ.(n.) சொல்லினிறுதி குறைந்து வருஞ் செய்யுள் வகை (நன்.156,உரை); apocope; poetical style which consists in the shortening of a word by elision of one or more letters in the end.

[கடை + குறை – கடைக்குறை.]

"ஒரு மொழி மூவழிக் குறைதலும் உரித்தே" என்ற நன்னூல் நூற்பாவிற்கேற்ப தனிச் சொல் முதல் இடை கடை என முந்நிலைகளிலும் குறைந்து வருவது செய்யுள் திரிபு.

முதற் குறை : தாமரை – மரை; இடைக்குறை : ஓந்தி – ஓதி. கடைக்குறை : நீலம் – நீல்.

கடைக்கூட்டப்பெறு–தல் *kaḍai-k-kuṭṭa-p-peṟu-,* 18 செ.குன்றாவி.(v.t.) முழுவதுமாகப் பெறுதல்; to receive the entire thing. 'இது முட்டில் பன்மாயெசவரரே கடைக் கூற்றப் பெற்றார்'. (S.I.I.Vol.14. insc.20-3.)

[கடை + கூட்ட + பெறு.]

கடைக்கூட்டம் *kaḍai-k-kūṭṭam,* பெ.(n.) முழுவதும் கொடுத்தல்; to give the whole. *'இப்பொலியூட்டுப் பொன் கடைக்கூட்ட வந்தார்க்கு நிசதி இரண்டு சோறு குடுப்போமானோம்'* (S.I.I.Vol.12,Part-1 insc.91-19).

[கடை + கூட்டம்.]

கடைக்கூட்டல் *kaḍai-k-kūṭṭal,* பெ.(n.) பழக்கத்தில் கொண்டு வந்து சேர்த்தல்; to bring to practice.

[கடை + கூட்டல்.]

கடைக்கூட்டன் *kaḍai-k-kūṭṭaṉ,* பெ.(n.) செயலாளன்; one who is capable of managing affairs on behalf of other people; a highly capable agent. *"அழகன் இதற்குக் கடைக்கூட்டனாகவுங் கடவன்" (திவ். திருப்பா.1,வியா.18).*

[கடை + கூட்டன்.]

கடைக்கூட்டு[1]–தல் *kaḍai-k-kūṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. செய்து முடித்தல்; to effect, carry out, as a plan programme. *"செலவு கடைக்கூட்டுதிராயின்" (பொருந.175).* 2. செய்வினைப் பயனை ஒரு வழிப்படுத்தல்; to bring to a head as the karma of previous births. *"மூதைவினை கடைக்கூட்ட" (சிலப்.9:78)* 3. பொருளீட்டுதல்; to acquire, gather, secure. *'அற்றைக்கன்று பொருள் கடைக்கூட்டற்கு' (குறள்,1060,உரை)* 4. இறுதி யடைவித்தல்; to cause death. *"காமநோய் கடைக்கூட்ட வாழுநாள்" (கலித்.99).* 5. நடைமுறைக்குக் கொண்டுவந்து சேர்த்தல்; to bring to practice (சா.அக.).

[கடை + கூட்டு.]

கடைக்கூட்டு[2] *kaḍai-k-kūṭṭu,* பெ.(n.) இறக்கும் காலம்; time of death. *"உயிர்காக்கக் கடவீரென் கடைக்கூட்டால்" (கம்பரா.யுத்த.கும்ப.355).*

[கடை + கூட்டு.]

கடைக்கூட்டு[3] *kaḍai-k-kūṭṭu,* பெ.(n.) மேலாண்மை, ஆளுவம்; management. கடைக்கூட்டுச் சேவகப் பெருமாள் (M.E.R.598 of 16) (சம்.அக.Ms.).

[கடை + கூட்டு.]

கடைக்கூட்டுத்தானத்தார் *kaḍai-k-kūṭṭu-t-tāṉattār,* பெ.(n.) கோயிலதிகாரிகள் (S.I.I.Vol.V, 512); temple authorities.

[கடைக்கூட்டு + தானத்தார்.]

கடைக்கூட்டிலக்கை *kaḍai-k-kūṭṭilakkai,* பெ.(n.) 1. ஒரு பழைய வரி (S.I.I.Vol.ii.115); an ancient tax. 2. பொதுவிடத்தைப் பயன் கொள்ளுவோர் ஆண்டு தோறும் செலுத்தும் இடவரி (S.I.I. Vol.V,part-I,411); annual rent for using particular public place for building. 3. ஆளுவ (நிர்வாக)ப் பணியாளர் வாழுமிடம்; administrative officers' residence.

[கடை + கூட்டு + இலக்கை.]

கடைக்கூடு–தல் *kaḍai-k-kūḍu-,* 5 செ.கு.வி.(v.i.) இசைதல்; to agree. *"இரவலன் கடைக்கூடின்று" (பு.வெ.9:24,கொளு).*

[கடை + கூடு.]

கடைக்கூழை *kaḍai-k-kūḻai,* பெ.(n.) 1. செய்யுளில் அளவடியுள் முதற்சீரொழிந்த மூன்று சீர்க்கண்ணும் வரும் தொடைவகை (யா.கா.ஒழிபி.5); a species of

toṭai occuring in every foot except the first in a line of four feet. 2. படையின் பின்னணி; rear division of an army. *"கடைக்கூழையிலே வாரா நின்றான்" (ஈடு.4.4:9).*

[கடை + கூழை.]

கடைக்கூழைமுரண் *kaḍai-k-kūḻai-muraṇ,* பெ.(n.) செய்யுளில் ஓரடியின் முதற்சீர் ஒழித்து ஏனைய சீர்க்கண் முரணி வருவது; oxymoron occuring in other feet in contrast to the first foot.

[கடை + கூழை + முரண்.]

(எ.டு.) "காவியங் கருங்கட் செவ்வாய் பைந்தொடி" இது முதற்சீரொழிந்த மூன்று சீரும் மறுதலைப்படத் தொடுத்தமையால் கடைக்கூழை மு ரண் எனப்பட்டது.

கடைக்கூழைமோனை *kaḍai-k-kūḻai-mōṉai,* பெ.(n.) செய்யுளில் முதற்சீர் அல்லாத ஏனைய சீர்களில் மோனை வருவது; alliteration occurring in all the feet except the first foot. *"சீறடிச் சிலம்பு சிலம்பொடு சிலம்ப" (யாப்.வி. ப.160).*

[கடை + கூழை + மோனை.]

கடைக்கூழையளபெடை *kaḍai-k-kūḻai-y-aḷabaḍai,* பெ.(n.) செய்யுளில் முதற்சீர் ஒழிந்த ஏனைய சீர்கள் அளபெடுத்து வருவது; elongation occurring in all the feet except the first foot. *"விரிமலர் மராஅம் கராஅம் விராஅம்" (யாப்.வி.ப.161).*

[கடை + கூழை + அளபெடை.]

கடைக்கூழையியைபு *kaḍaikūḻaiyiyaibu,* பெ.(n.) செய்யுளில் கடைச்சீர் ஒழித்து ஏனைய சீர்கள் இயைந்து வருவது; concord occurring in all the feet except the last. *"குயிலும் பாலும் ஆம்பலும் மொழியே" (யாப்.வி.ப.161).*

[கடை + கூழை + இயைபு.]

கடைக்கூழையெதுகை *kaḍai-k-kūḻai-y-edugai,* பெ.(n.) செய்யுளில் முதற்சீர் ஒழித்து யேனைய சீர்களில் எதுகை வருவது; consonance occurring in all the feet except the first foot. *"வான்கதிர் வடமலி தடமுலை மடவரல்" (யாப்.வி.ப.160).*

[கடை + கூழை + எதுகை.]

கடைக்கொம்பு[1] *kaḍai-k-kombu,* பெ.(n.) விலங்கின் அடிக்கொம்பு (வின்.); stump of horn.

[கடை + கொம்பு.]

கடைக்கொம்பு[2] *kaḍai-k-kombu,* பெ.(n.) ஏரியின் கோடியிலுள்ள கரை; the edge of tank-bund. *"கீழ்க்கடைக்கொம்பு மேல மறுகாலுடைக்குதே" (குருகூர்ப்.31).*

[கடை + கொம்பு.]

கடைக்கொள்[1](ளு)-தல் *kaḍai-k-koḷ(ḷu)-,* 7 செ.குன்றாவி.(v.t.) 1. இறுதிவரைக் கொண்டிருத் தல்; to hold up to the end. 2. உறுதியாகக் கொள்ளுதல்; to have a determined will. *"கடைக்கொண் டிருமின் றிருக்குறிப்பை" (திருவாச.45:4).* 3. பின் செல்லுதல்; to follow. 4. சேர்த்தல்; to join together, collect. *"விறன்மறவரைக் கடைக் கொண்டு" (பு.வெ.2:6).*

[கடை + கொள்.]

கடைக்கொள்[2](ளு)-தல் *kaḍai-k-koḷ(ḷu)-,* 16 செ.கு.வி.(v.i.) முடிவுபெறுதல்; to be finished, to come to an end. *"ஆடலுங்கோலமு மணியுங் கடைக்கொள" (சிலப்.6:74).*

[கடை + கொள்.]

கடைக்கொள்ளி *kaḍai-k-koḷḷi,* பெ.(n.) 1. கடைசியாக எரியும் கொள்ளி; last firebrand. 2. பெரும்பகுதி எரிந்து இறுதி (முனை)யில் எரியுங் கொள்ளிக்கட்டை; a burning firebrand of which major portion has been consumed. *"குறத்திமாட்டிய வறற்கடைக்கொள்ளி" (புறநா.108).* 2. ஈமத்தீ; the funeral pyre.

ம. கடக்கொள்ளி

[கடை + கொள்ளி.]

கடைக்கோடி *kaḍai-k-kōḍi,* பெ.(n.) 1. அறக்கடைசி; the very last, utmost limit. *அவன் கடைக்கோடியில் நின்றிருக்கிறான்.* 2. கடைசியாகப் பிறந்த பிள்ளை; the last child (சா.அக.). *கந்தன் தான் இவர்கள் வீட்டில் கடைக்கோடி (இ.வ.).*

பட. கடெகோடி

[கடை + கோடி.]

கடைக்கோள் *kaḍai-k-kōḷ,* பெ.(n.) 1. முடிவு பெறுகை; state of being concluded, finished.

ished. *"காமஞ் சான்ற கடைக்கோட் காலை" (தொல். பொருள்.கற்பி.51).* 2. தீதாகக் கருதுதல்; regarding a thing as an evil.

[கடை + கோள்.]

கடைகட்டு—தல் *kaḍai-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கடையை மூடுதல்; to shut up shop. 2. கோயில் வெளி மூடுதல்; to close the outer door of a temple. 3. செயலை நிறுத்திவிடுதல்; to terminate, discontinue a work, used depreciatingly. *"அடா கடைகட்டடா" (இராமநா.கிட்.8).*

மறுவ. ஏறக்கட்டு

[கடை + கட்டு.]

கடைகண்ணி *kaḍai-kaṇṇi,* பெ.(n.) 1. கடை; shop. *கடைகண்ணிக்குப் போய்வர வேண்டும் (உ.வ.).* 2. கடைத்தெரு; bazaar. *கடைகண்ணியில் திரியாதே (உ.வ.).*

[கடை + கண்ணி. `கண்ணி' மீமிசை மோனைச் சொல். முதற்சொல் பொருள் சுட்டிய மரபிணை மொழி.]

கடைகணி—த்தல் *kaḍai-kaṇi-,* 4 செ.குன்றாவி.(v.t.) ஒதுக்குதல் (கருநா.); to neglect.

க. கடைகணிசு

[கடை + கணி.]

கடைகயிறு *kaḍai-kayiṟu,* பெ.(n.) தயிர்கடையும் மத்தினைச் சுழலச் செய்யும் கயிறு; cord used for turning a churn-staff. *"யசோதையார் கடை கயிற்றாற் கட்டுண்கை" (சிலப்.17,முன்னிலைப்.1).*

ம. கடகயறு; **க.** கடெகண்ணி.

[கடை + கயிறு (வி.தொ.).]

கடைகல் *kaḍai-kal,* பெ.(n.) மரநங்கூரத்திற்குரிய கல் (மீனவ.); stone anchor.

[கடை + கல்.]

கடைகழிமகளிர் *kaḍai-kaḻi-magaḷir,* பெ.(n.) பொதுமகளிர் (சிலப்.14:71); prostitutes, lit. those who immodestly step out their doors.

மறுவ. பொதுப்பெண்டிர்

[கடை + கழி + மகளிர். வெளியில் எவ்விடத்தும் செல்லும் விலை மகளிர்.]

கடைகாண்(ணு)—தல் *kaḍai-kāṇ(ṇu)-,* 13 செ.குன்றாவி.(v.t.) 1. இறுதிவரை பார்த்தல்; to see upto end. 2. முழுவதுமாகப் பார்த்தல்; to see or study thoroughly.

[கடை + காண்.]

கடைகாப்பாளர் *kaḍai-kāppāḷar,* பெ.(n.) ***கடைகாப்பாளன்*** பார்க்க; see *kaḍai-kāppāḷaṉ.*

[கடை + காப்பு + ஆள் + ஆர். 'ஆர்' உ.பா.ஈறு. கடை = வாயில். காப்பு = காவல்.]

கடைகாப்பாளன் *kaḍai-kāppāḷaṉ,* பெ.(n.) 1. வாயில்காப்போன் (திவா.); gate keeper. 2. நாட்டு எல்லைகாப்போன்; one who guards the border.

மறுவ. கடைகாவலன்

[கடை + காப்பாளன்.]

பண்டை அரசர்க்கு உதவியாக இருந்த எண்பேராயத்தின் ஒரு பிரிவினராகிய கடைகாப்பாளர், நாடு காவல் அதிகாரிகளாவர்.

கடைகால்[1] *kaḍai-kāl,* பெ.(n.) பால்கறக்கும் மூங்கிற்குழல் ஏனம்; bamboo tube, used as pail for milking.

[குடைகால் → கடை கால்.]

கடைகால்[2] *kaḍai-kāl,* பெ.(n.) 1. அணிகலக் கொக்கியின் ஓர் உறுப்பு (யாழ்.அக); a part in the clasp of an ornament. 2. அடிமானத்திற்குத் தோண்டும் குழி; foundation ditch. 3. கட்டடச் சுவரின் அடிப்பகுதி; foundation of building. 4. காலின் முனை (சேரநா.); the toe.

மறுவ. அடித்தளம், அடிக்கால்.

க. கடகால்

[குடைகால் → கடைகால்.]

கடைகாலம் *kaḍai-kālam,* இறுதிக்காலம்; the last period of one's life in the world.

க. கடெகாலம்

[கடை + காலம்.]

கடைகாவலன் *kaḍai-kāvalaṉ,* பெ.(n.) வாயில் காப்போன்; gate keeper. *"கண்டு கடை காவலர்கள் கழற" (சீவக. 2012).*

மறுவ. கடைகாப்பாளன்

[கடை + காவலன்.]

கடைகூடு-தல் *kaḍai-kūḍu-,* 5 செ.கு.வி.(v.i.) கைகூடுதல், எடுத்த செயலில் வெற்றி பெறல்; to meet with success; to be successful. *'கடை கூடாதிருக்கும் பொருள் யாவதும் இல்லை' (சிலப்.11:159,உரை).*

[கடை + கூடு.]

கடைகெட்டமரம் *kaḍai-keṭṭa-maram,* பெ.(n.) கற்றேக்கு மரம்; racemed fish bone tree (சா.அக.).

[கடைகெட்ட - உதவாத. கடைகெட்ட + மரம்.]

கடைகெட்டவன் *kaḍai-keṭṭavaṉ,* பெ.(n.) கீழ்மகன்; low person.

[கடைகெட்ட - பயன்படாத, உதவாத. கடைகெட்ட + அவன்.]

கடைகெடு-தல் *kaḍai-keḍu-,* 20 செ.கு.வி.(v.i.) மிக இழிவடைதல்; to reach the stage of grovelling wretchedness. *'கடைகெட்ட மூளிக்குக் கோபம் கொண்டாட்டம்' (பழ.).*

[கடை + கெடு. கடை - இறுதி, முடிவு. கடைகெடல் - இறுதியாக முழுமையாகக் கெட்டுப்போதல்.]

கடைகேடு *kaḍai-kēḍu,* பெ.(n.) மிகு இழிவு; destitution, wretched condition.

[கடை + கேடு. கடை - இழிவு.]

கடைகொள்(ளு)-தல் *kaḍai-koḷ(ḷu)-,* 15 செ.கு.வி. (v.i.) முடிவுபெறுதல்; to be finished, to come to an end. *"கடவுட் பீடிகைப் பூப்பலி கடைகொள" (மணிமே.7:121).*

[கடை + கொள்.]

கடைகோல் *kaḍai-kōl,* பெ.(n.) 1. கடைந்து தீயுண்டாக்கும் கோல் (வின்.); stick used for producing fire by friction. 2. மத்து; churning rod. 3. பருத்தியைப் பிரித்தெடுக்கும் கருவி; a stick used for carding cotton.

மறுவ. ஞெலிகோல், தீக்கடைகோல்.

ம. கடகோல்; **க.** கடெகோல்.

[கடை + கோல். கடை - கடைதல்.]

கடைச்சங்கம் *kaḍai-c-caṅgam,* பெ.(n.) ***கடைக்கழகம்*** பார்க்க; see *kaḍai-k-kaḻagam.*

[கடை + சங்கம். Skt. šaṅga. > த. சங்கம். கடை - இறுதி.]

கடைச்சரக்கு *kaḍai-c-carakku,* பெ.(n.) கடையில் விற்கப்படும் மூலிகை மருந்துச் சரக்கு; collection of medicinal seeds, herbals and roots sold in the bazaar.

[கடை + சரக்கு.]

கடைச்சரக்கு 64 : அதிமதுரம், அதிவிடயம், அரக்கு, அரத்தை, ஏலக்காய், ஓமம், கடுக்காய், கடுக்காய்ப்பூ, கடுகு, கடுகுச்சிவலை (கடுகு ரோகிணி), கருங்கொடிவேலி, கருஞ்சீரகம், கருப்புக்காய், கற்கடகசிங்கி, காட்டுச்சதகுப்பை, கார்போகவரிசி, கிச்சிலிக்கிழங்கு, கிராம்பு, குங்கிலியம், குங்குமப்பூ, குந்திரிக்கம், கூகைநீறு, கொத்துமல்லி, கொருக்கைப்புளி, கோட்டம், கோரோசனை, சடாமாஞ்சில், சதகுப்பை, சந்தனக்கட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, சித்திரமூலம், சிறுதேக்கு, சிறுநாகப்பூ, சிறுவாலுளுவை, சீரகம், சுக்கு, செஞ்சந்தனம், செவ்வாலம் (அ) நேர்வாளம், செவ்வியம், சேங்கொட்டை, தமாலபத்திரி, தாளிசபத்திரி, தான்றிக்காய், திப்பிலி, திப்பிலிமூலம், தூணிப்பிசின், நிலாவிதை, நெல்லிக்காய், பாக்கு, புளி, பெருங்காயம், மஞ்சள், மஞ்சிட்டி, மரமஞ்சள், மான்மணத்தி (கஸ்தூரி), மிளகு, மெழுகு, யானைத்திப்பிலி, வசம்பு, வாய்விளங்கம், வாலுளுவை, வெண்கடுகு, வெந்தயம் (சா.அக.).

கடைச்சரி *kaḍai-c-cari,* பெ.(n.) முன்கையின் வளை; (ஈடு,2.5:6); the lowest bracelet on the fore-arm.

[கடை + சரி - கடைச்சரி. செறி → சரி.]

கடைச்சல் *kaḍaiccal,* பெ.(n.) 1. மரம் முதலியவற்றைக் கடைகை; turning on a lathe or a brazier's wheel. *கட்டிலுக்கு கடைச்சல் கால் போடு (உ.வ.).* 2. எந்திரக் கடைசல்; turning work. 3. கடையப்பட்ட பொருள்; that which is turned on a lathe. *கடைக்குச்சென்று கடைச்சல் வாங்கிவா (உ.வ.).*

ம. கடச்சில்; **க.** கடெசலு.

[கடை → கடையல் → கடைச்சல். 'அல்' தொ.பொறு.]

கடைச்சல்மரம் *kaḍaiccal-maram,* பெ.(n.) ***கடைச்சற்பட்டை*** பார்க்க; see *kaḍaiccaṟ-paṭṭai.* *கடைச்சல் மரத்தால் செய்த கட்டில் கண்ணிற் கழகு.*

[கடை → கடைச்சல் + மரம்.]

கடைச்சலுளி *kaḍaiccal-uḷi,* பெ.(n.) கடையுங் கருவி (வின்.); chisel of turner or wood - engraver.

ம. கடைச்சலுளி

[கடைச்சல் + உளி.]

கடைச்சற்காரன் *kaḍaiccaṟ-kāraṉ,* பெ.(n.) கடைச்சல்வேலை செய்வோன் (வின்.); turner.

[கடைச்சல் + காரன்.]

கடைச்சற்பட்டை *kaḍaiccaṟ-paṭṭai,* பெ.(n.) 1. கடைச்சலுளியின் சுற்றுக்கட்டை (C.E.M.); turner's lathe.

[கடைச்சல் + பட்டை.]

கடைச்சன் *kaḍaiccaṉ,* பெ.(n.) கடைசிப்பிள்ளை; (வின்.); youngest child.

[கடை → கடையன் → கடைச்சன்.]

கடைச்சாப்பாடு *kaḍai-c-cāppāḍu,* பெ.(n.) உண்டிச்சாலை உணவு; meal prepared in hotel or mess.

[கடை + சாப்பாடு.]

கடைச்சான் *kaḍaiccāṉ,* பெ.(n.) ***கடைச்சன்*** பார்க்க; see *kaḍaiccaṉ.*

மறுவ. கடைக்குட்டி

[கடைச்சன் → கடைச்சான்.]

கடைச்சி[1] *kaḍaicci,* பெ.(n.) வயலில் வேலை செய்தற்குரிய மருதநிலப்பெண் (திவா.); woman of the agricultural tract who works in the field.

ம. கடச்சி

[கடையர் = களைபறிப்போர், வயல் பணியாளர்களை → கடை → கடையன் → கடைச்சி என்பது வழக்கம்.]

கடைச்சி[2] *kaḍaicci,* பெ.(n.) 1. நெட்டி (மலை.); sola, pithy stemmed tropical swamp plant. 2. ஈழத்தலரி; cemetry flower (சா.அக.).

ம. கடச்சி

[கிடைச்சி (இளமை, மென்மை) → கடைச்சி.]

கடைச்சி[3] *kaḍaicci,* பெ.(n.) கடைசியாகப் பிறந்த பெண் (யாழ்.அக.); the youngest girl of a family.

[கடை → கடைச்சி.]

கடைச்சித்தாழை *kaḍaicci-t-tāḻai,* பெ.(n.) பைந்தாழை; pine-apple.

மறுவ. பறங்கித் தாழை (யாழ்ப்)

[கிடைச்சி → கடைச்சி + தாழை.]

கடைச்செலவு *kaḍai-c-celavu,* பெ.(n.) 1. வீட்டுக்கு வேண்டிய நுகர்வு (மளிகை)ப் பொருள்; groceries. *கடைச்செலவிற்குக் காசில்லை (உ.வ.)* 2. கடையில் வாங்கும் பொருள்களுக்கு ஆன செலவு; expenses incurred in buying groceries and sundries from bazaar.

[கடை + செலவு.]

கடைசல் *kaḍaišal,* பெ.(n.) 1. **கடைச்சல்** பார்க்க; see *kaḍaiccal.* 2. மெருகிடுகை; polishing, enamelling.

H. karāt.

[கடை → கடைசல்.]

கடைசல்பிடி-த்தல் *kaḍaišal-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) மரம் முதலியவற்றைக் கடையும் வேலை செய்தல்; to turn in a lathe.

[கடைசல் + பிடி 'பிடி' து.வி.]

கடைச்சீப்பு *kaḍai-c-cīppu,* பெ.(n.) வாழைக் குலையின் கடைசிச்சீப்பு; last comb of a plantain bunch opp. to முன் சீப்பு (சேரநா.).

ம. கடச்சீப்பு

[கடை + சீப்பு.]

கடைசற்பட்டறை *kaḍaišaṟ-paṭṭarai,* பெ.(n.) கடைசல் வேலை செய்யுஞ் சாலை; turner's shop.

[கடைசல் + பட்டறை.]

கடைசன் *kaḍaišaṉ,* பெ.(n.) ***கடையன்***[1] பார்க்க; see *kaḍaiyaṉ*[1].

[களையன் → கடைசன்.]

கடைசார்[1] *kaḍai-šār,* பெ.(n.) 1. தொழில்; business, transaction.

[கடை + சார்.]

கடைசார்பான வணிகத் தொழில் முயற்சி.

கடைசார்[2] *kaḍai-šār,* பெ.(n.) புழைக்கடை; backyard of house.

[கடை + சார் – கடைசார். கடை = இறுதி, வீட்டின் பின்புறம். சார் = சார்ந்தது.]

கடைசாரம் *kaḍai-šāram,* பெ.(n.) செயல்முடிவு; completion of a business.

ம. கடசாரம்

[கடை + சாரம்.]

கடைசாரி *kaḍai-šāri,* பெ.(n.) கற்பென்னும் திண்மையிழந்தவள்; immoral woman; drab.

[கடை + சாரி. கடை = இழிவு. சாரி = சார்ந்தவள். சார் + இ (உடைமை குறித்த ஈறு) ஒ.நோ. அவிசாரி (இழி வழக்கு).]

கடைசால் *kaḍai-šāl,* பெ.(n.) கப்பலின் பின்பக்கம் (யாழ்ப்.); stern of a vessel.

[கடை + சால். சால் = நீட்சி, நீண்டஇருப்பிடம், இடம்.]

கடைசாலொதுக்கு-தல் *kaḍai-šāl-odukku-,* 7 செ.கு.வி.(v.i.) கைவேலையை முடித்தல் (வின்.); to finish the business in hand.

[கடை + சால் + ஒதுக்கு.]

கடைசி[1] *kaḍaiši,* பெ.(n.) முடிவு; termination, conclustion, resolution. *அமைச்சரின் சொற்பொழிவைக்கடைசி வரைக் கேட்டு மகிழ்ந்தேன்.*

ம. கடசி; **க.,குட.,து.,பட.** கடே; **பர்.**கட; **தெ.** கடெபல; **துட.**கட்ச்; **எருக்.** கடக்கோட்டு; **Mar.** kaṭee, kaḍa.

[குடு → (கடு) → கடை → கடைசி (மு.தா.96).]

கடைசி[2] *kaḍaiši,* பெ.(n.) மருதநிலப்பணிப்பெண் (உழத்தி); a maid servant in the farm. *"கரியவாய் நெடியகட் கடைசி மங்கையர்" (சீவக.1249).*

[கடைச்சி → கடைசி (மு.தா.103).]

கடைசிப்பந்தி *kaḍaiši-p-pandi,* பெ.(n.) **கடைப்பந்தி** பார்க்க; see *kaḍai-p-pandi.*

பட. கடைஅத்தே

[கடைசி + பந்தி.]

கடைசியர் *kaḍaišiyar,* பெ.(n.) மருதநிலப் பெண்கள்; women of agricultural tract.

மறுவ. உழத்தியர்

[கடைசி + அர் – கடைசியர். 'அர்' பலர் பாலீறு.]

கடைசெறி *kaḍai-šeṟi,* பெ.(n.) கைவிரலணி (சிலப்.6:97, உரை); finger ornaments; ring.

[கடை + செறி. ஒ.நோ. தோட்செறி, காற்செறி.]

கடைசோரி *kaḍai-šōri,* பெ.(n.) அப்பக்கடை; (சங்.அக.); stall for selling appam.

[கடை + சோரி. தொழில் → தோலி → சோலி (joli) → சோரி.]

கடைஞ்சன் *kaḍaiñcaṉ,* பெ.(n.) **கடைஞன்** பார்க்க; see *kaḍaiñaṉ. "வேந்தனாம் புலைக்கடைஞ்சன்" (ஞானவா.காதி.16).*

[கடையன் → கடைஞன் → கடைஞ்சன் (கொ.வ.).]

கடைஞ்சாணி *kaḍaiñcāṇi,* பெ.(n.) கடைசியானது; that which is last or remotest. கடைஞ்சாணி வயல் (நெல்லை).

மறுவ. கடைக்கோடி

[கடை + சாணி. சேண் → சாண் → சாணி.]

கடைஞன் *kaḍaiñaṉ,* பெ.(n.) 1. மருதநிலத்தவன் (திவா.); man of the labouring caste in an agricultural tract. 2. இழிந்தோன்; low person, *"இப்படித்தாகிய கடைஞ ரிருப்பினின்" (பெரியபு. திருநாளை.11).* 3. குணக்கேடன்; man of mean character.

[களை → களைஞன் → கடைஞன்.]

களைஞன் = நிலத்தில் களை எடுக்கும் தொழிலாளி.

கடையன், கடைஞன் என்னும் பெயர்கள் இழிவுசுட்டியனவல்ல; செய்யும் தொழில் சுட்டியவை. கடையர் மன்னரால் மதிக்கப்பட்டுச் சிறப்புப் பட்டங்களும் பெற்றமையின் பட்டங்கட்டி, நீட்டரசன் என்றும் அழைக்கப்பட்டனர். தென்னகக் குலம், குக்குலம் தொடர்பாக ஆய்ந்த எட்கார் தரசுடன் இக்குலத்தினர் வேட்டுவர், சாணாரினும் உயர்ந்தவராக வாழ்ந்ததைக் குறிப்பிடுகிறார். எனவே குலத்தால் கடைப்பட்டவர் எனக் கூறப்படுவது முறையன்று. கடைஞர் [கடையர்] வயலில் களை பறிக்கும் உழவுத்தொழில் சார்பினர் என்பது, "கொண்டைக் கூழைத் தண்டழைக் கடைசியர் சிறுமா நெய்தல் ஆம்பலொடு கட்கும் மலங்குமிளிர் செறுவின்" .... [புறநா. 61:1,3.] என்னும் புறப் பாடலாலும் போதரும். சொற்பிறப்பு அறியாததால் நேர்ந்த பிழைபாடு குறிப்பிட்ட தொழிலாளரைத் தாழ்வாகக் கருத இடந் தந்து விட்டது.

கடைத்தடம் *kaḍai-t-taḍam,* பெ.(n.) வாயில் (வின்); gate way.

[கடை + தடம் – கடைத்தடம். கடை = கடைவாயில். தடம் = அகன்ற வழி.]

கடைத்தரம் *kaḍai-t-taram,* பெ.(n.) கீழ்த்தரம்; lowest grade; worst of its kind.

[கடை + தரம். கடை = இழிவு. 'தரம்' சொ.ஆ.ஈறு. ஒ.நோ. நிலைத்தரம், படித்தரம், செந்தரம்.]

கடைத்தலை *kaḍai-t-talai,* பெ.(n.) ***கடைத்தலைவாயில்*** பார்க்க; see *kaḍai-t-talai-vayil.* *"கடைத்தலை சீய்க்கப் பெற்றாற் கடுவினை களையலாமே" (திவ்.திருவாய்.10.2:7).*

[கடை + தலை.]

கடைத்தலைவாயில் *kaḍai-t-talai-vāyil,* பெ.(n.) புறத்தலை வாயில் (யாழ்ப்); outer gate, outer court.

[கடை + தலை + வாயில்.]

கடைத்திண்ணை *kaḍai-t-tiṉṉai,* பெ.(n.) அங்காடியின் வெளித் திண்ணை (சேரநா.); the outer veranda of a shop.

[கடை + திண்ணை.]

கடைத்தும் *kaḍaittum,* இடை. (part.) ஒரு வினையெச்ச ஈறு; even, when or where, although, used as an adverbial suffix. *"பல நல்ல கற்றக்கடைத்தும் மனநல்லர் ஆகுதல் மாணார்க் கரிது." (குறள்,823).*

[கடை → கடைத்தும்.]

கடைத்தெரு *kaḍai-t-teru,* பெ.(n.) அங்காடிகள் அமைந்த தெரு; a street having shops, market street, bazaar road.

[கடை + தெரு.]

கடைத்தேற்றம் *kaḍai-t-tēṟṟam,* பெ.(n.) ஈடேறுகை; rescue, deliverance, salvation.

[கடை + தேற்றம்.]

கடைத்தேற்று–தல் *kaḍai-t-tēṟṟu-,* 5 செ.கு.வி.(v.i.) ஈடேற்றுதல்; save, redeem. *இந்தஇக்கட்டிலிருந்து நீதான் கடைத்தேற்ற வேண்டும் (கிரியா.).*

[கடை + தேற்று.]

கடைத்தேறு–தல் *kaḍai-t-tēṟu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. ஈடேறுதல்; to be saved, to be rescued, to pull through difficulties. 2. நிறைவடைதல்; to be fullfilled (கரு.நா.). 3. வீடுபேறடைதல். attaining paradise.

தெ. கடதெரு

[கடை + தேறு – கடைத்தேறு. கடை = இறுதி, முழுமை. கடைத்தேற்றல் = முழுமையாகத் தோன்றுதல்.]

கடைத்தொழில்[1] *kaḍai-t-toḻil,* பெ.(n.) பொன்மாலையாகச் செய்யப்படும் அணிகலன்களில் இரு தலைப்பிலும் அமைக்கப்பெறும் சுரை வேலைப் பாடு; ornamental work. *"நெல்லிக்காய் முத்து நூறும் கடைத்தொழில் இரண்டும் இவை கோத்த நூலும் உள்பட"* (S.I.I. Vol.8, insc.121).

[கடை + தொழில் - கடைத்தொழில். கடை = இறுதி, எல்லை, விளிம்பு.]

கடைத்தொழில்[2] *kaḍai-t-toḻil,* பெ.(n.) பதக்கத்தின் உறுப்பு; a part of a pendant. பதக்க மாலை (1) னால் நாயககண்டம் (9) அருகுகண்டம் (6) கடைத்தொழில் (2) (S.I.I.viii. 53).

[கடை + தொழில்.]

கடைத்தொழில்[3] *kaḍai-t-toḻil,* பெ.(n.) கடைசல் வேலை (தெ.இ.கோ.சா.Vol.iii.Part-II); fret.

[கடை + தொழில் – கடைத்தொழில். கடை → கடைசல்.]

கடைத்தொழில்[4] *kaḍai-t-tol̤il,* பெ.(n.) ஏதமிகுந்த, நலக்கேடான பணிகள்; hazardous occupations.

[கடை + தொழில்.]

முத்துக் குளித்தல் சுண்ணாம்பு சுடுதல் போன்றன. ஏதமிகுந்ததும் நலக்கேடானது மாதலால் கடைத்தொழில் எனப்பட்டன.

கடைதலை *kaḍai-talai,* பெ.(n.) முடிவும் முதலும்; end and beginning.

[கடை + தலை.]

கடைதலைப்பாடம் *kaḍai-talai-p-pāḍam,* பெ.(n.) தலைகீழாகப் பாடம் பண்ணுதல்; reciting a lesson perfectly in any order.

மறுவ. நெட்டுரு, மனப்பாடம், கரதலைப்பாடம் (கொ.வ.).

[கடை + தலை + பாடம். முடிவிலிருந்து முதல்வரை தலைகீழாக மனப்பாடம் செய்யும் திறன்.]

கடைதலைப்பார்-த்தல் *kaḍai-talai-p-pār-,* 4 செ.கு.வி.(v.i.) 1. ஆராய்ந்து அறிதல்; thorough investigation. 2. உச்சி முதல் உள்ளங்கால் வரைக்கும் ஆராய்தல்; thorough examination of the body (சா.அக.).

[கடை + தலை + பார்.]

கடைதலைப்பூட்டு *kaḍai-talai-p-pūṭṭu,* பெ.(n.) பூட்டுவிற் பொருள்கோள்; a poetical construction in which the last nominal gets connected with the first word to disclose proper meaning.

[கடை + தலை + பூட்டு]

பாட்டின் இறுதிச் சொல் முதற் சொல்லோடு இயைந்து பொருள்கொள்ள இடந்தருவது. இதில் கடையும் தலையும் இயைந்து பொருள் தருவதால் கடைதலைப்பூட்டு என வழங்கலாயிற்று.

எ.டு. "திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்துபடிற் பெரிதாம் ஏதம் – உறந்தையர்கோன்
தண்ணார மார்பின் தமிழ்நர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு" (முத்தொள்.85)

கடைதலைவிற்பூட்டு *kaḍai-talai-viṟpūṭṭu,* பெ.(n.) **கடைதலைப்பூட்டு** பார்க்க; see *kaḍai-talai-p-puṭṭu.*

[கடை + தலை + வில் + பூட்டு.]

கடைதிறப்பு *kaḍai-tiṟappu,* பெ.(n.) 1. கதவு திறக்கை; opening a door. *"கந்தங் கமழுங் குழல்கடை திறவாய்" (திருவா.18:3).* 2. போர்முடித்துத் திரும்பும் போர்வீரனை வாழ்த்தி வெற்றியைப் போற்றுவதான பரணி இலக்கியத்தின் உறுப்புகளுள் ஒன்று; a part in *Paraṇi* literature which praises the eulogy of the warrior returning home in triumph. *"கடவுள் வாழ்த்துக் கடைதிறைப் புரைத்தல்"(இலக்.வி.839).*

[கடை + திறப்பு. கடை = வாயிற் கதவு.கடை திறப்பு = வாயில் திறத்தல்]

போர்வயிற் பிரிவு முடிந்து காலம் தாழ்த்தித் திரும்பிய தலைவனிடம் ஊடிய தலைவி, கதவடைத்திருப்பாள். போர்ச் சிறப்பைத் தலைவன் பாடக்கேட்டு மகிழ்ந்து கதவைத் திறப்பதாகக் கற்பனை கொண்டு பாடப்பட்டதால் இப்பகுதி கடைதிறப்பு எனப் பெயர் பெற்றது. மகளிரின் தன்மைகள் அழகுறக் கூறி விளிக்கும் திறம் சிறப்புடைத்து.

கடைதுடிப்பு *kaḍai-tuḍippu,* பெ.(n.) செய்யுளினீற்றடி சிறந்து நிற்கை; sonority of the last line of a stanza. *"சீர்தளை விகற்பம் பொருந்திநன்னீ தியாய் கடைதுடிப்பாய்" (திருவேங்.சத.56).*

[கடை + துடிப்பு.]

கடைநன் *kaḍainaṉ,* பெ.(n.) கடைசல் வேலை செய்வோன்; turner. *"கோடுபோழ் கடைநரும் திருமணி குயினரும்" (மதுரைக்.511).*

[கடை + நன்.]

கடைநாள் *kaḍai-nāḷ,* பெ.(n.) 1. கடைசிநாள்; the last day. *"கார்தளி பொழிந்த வார்பெயற் கடை நாள்" (அகநா.139:5).* 2. இறக்கும் நாள்; the last day of one's life. *"கடைநா ளிதுவென் றறிந்தாரு மில்லை" (கலித்.12).* 3. ஊழிக்காலம்; the last day of the world. 4. தொழுபஃறி(ரேவதி) நாண்மீன்; the 27th naksatrā, from its being the last asterism.

[கடை + நாள். கடை = கடைசி.]

கடைநிலை[1] *kaḍai-nilai,* பெ.(n.) 1. புறவாயில்; outer-gate. 2. முடிவு; end. *"கால்கோள் விழவின் கடைநிலைசாற்றி" (சிலப்.5:144).* 3. இறுதி (விகுதி) (வின்.); ending. 4. சான்றோர் தம்வரவினைத் தலைவற்குணர்த்துமாறு வாயிலின்ின்று கடை காவலர்க்குக் கூறுதலாகிய புறத்துறை; theme of the poet who comes from a long distance resting awhile, to remove the discomforts of his tiresome journey, at the outer-gate of the residence of a patron or chief, while sending in the gate-keeper

to announce his (poets) arrival to the chief. *"சேய்வரல் வருத்தம் வீட வாயில் காவலர்க் குரைத்த கடைநிலையானும்" (தொல்.பொருள்.90).* 5. ஒரு சிற்றிலக்கியம் (தொல்.பொருள்.90); poem on the *kaḍai-nilai* theme.

[கடை + நிலை.]

கடைநிலை[2] *kaḍai-nilai,* பெ.(n.) இறுதி; last grade.

[கடை + நிலை.]

கடைநிலைக்கேடு *kaḍai-nilai-k-kēḍu,* பெ.(n.) சொல்லின் இறுதி நிலை கெடுதல்; loss of final letter or endings.

[கடை + நிலை + கேடு.]

கடைநிலைத்தீவகம் *kaḍai-nilai-t-tīvagam,* பெ.(n.) பாட்டின் இறுதிக்கண் நிற்கும் சொல்லானது பல விடங்களிலும் சென்று பொருள் விளக்கும் தீவக அணி வகை (தண்டி.38, உரை); figure of speech in which a word that is used at the end of a verse throws light upon, and is therefore considered to, be understood in, the other parts of the same.

[கடை + நிலை + தீவகம்.]

"துறவுளவாச் சான்றோ ரிளிவரவுந் தூய
பிறவுளவா வூன்று வாவூணும் – பறைகறங்கக்
கொண்டா னிருப்பக் கொடுங்குழையா டெய்வமு
முண்டாக வைக்கற்பாற் றன்று"
(தண்டி மேற்கோள் பாடல்)

இதில் "கடைநிலை வைக்கற்பாற் றன்று" என்பது இளிவரவு முதலியவற்றோடு சென்றியைந்து பொருள் கொண்டமையான் கடை நிலைத் தீவகம்.

கடைநிலையெழுத்து *kaḍai-nilai-y-eḻuttu,* பெ.(n.) சொல்லின் ஈற்றெழுத்து (வின்.); final letter of a word.

[கடை + நிலை + எழுத்து.]

கடைநீர்[1] *kaḍai-nīr,* பெ.(n.) கடைசியாகவுள்ள நிலத்திற்குப் பாய்ச்சுந் தண்ணீர் (S.I.I.iii, 287); water taken to a field which is to be irrigated last, opp. to *talai-nir.*

[கடை + நீர்.]

கடைநீர்[2] *kaḍai-nīr,* பெ.(n.) 1. இறுதிக் காலத்தில் கடைக்கண்ணில் ஒழுகும் நீர்; last tears. 2. கடைசியாகச் சேரும் நீர்; the fluid collected at the end in the process of distillation (சா.அக.).

[கடை + நீர்.]

கடைநோய் *kaḍai-nōy,* பெ.(n.) மூப்பியல் நோய்; the senile disease.

[கடை + நோய்.]

கடைநோட்டம் *kaḍai -nōṭṭam,* பெ.(n.) 1. ஓரக்கண்ணால் நோக்கல்; side glance. 2. இறுதியாகப் பார்த்தல்; last sight.

க. கடெநோட

[கடை + நோட்டம்.]

கடைப்படி *kaḍai-p-paḍi,* பெ.(n.) மிகச்சிறிய எடை அலகு; lowest unit of mass.

[கடை + படி.]

கடைப்படு-தல் *kaḍai-p-paḍu-,* 18 செ.கு.வி.(v.i.) 1. இழிவாதல்; to be inferior, to be lowest in quality or estimation, to sink into insignificance. *"காணிற் கடைப்பட்டான் என்றிகழார்" (நாலடி.136).* 2. நிறைவேறுதல்; to be fulfilled, accomplished. *"கன்றா நினைப்பது கடைப்படுதன் முன்னே" (இரகு. அயனு.38).*

க. காடவடு, கடெபடு; **தெ.** கடிபோவு (வழிதல்).

[கடை + படு.]

கடைப்படுதானம் *kaḍai-p-paḍu-tāṉam,* பெ.(n.) கைம்மாறு கருதும் கொடை; charity with a motive, such as that which is given for the sake of a return or through force considered as a very inferior kind of benevolence.

[கடை + படு + தானம். கடை - இழிவு. கொடு → கொடை.]

தலை, இடை, கடை என மூவகைக் கொடையுள் கேட்காமல் தருவது தலைக் கொடை; கேட்டுத் தருவது இடைக்கொடை; அச்சம் காரணமாகத் தருவது கடைக்கொடையாம். அரசனுக்கும் வலியவர்க்கும் தீங்கு விளைவிப் போருக்கும் அச்சம் காரணமாக வழங்கும் கொடையின் இழிவைக் கருதி கடைக்கொடை என்றனர். இதை வடநூலார் "பயதத்தம்" என்பர்.

கடைப்பல் *kaḍai-p-pal,* பெ.(n.) கடைசியாக முளைக்கும் பல்; the last molar tooth on either side of each jaw (சா.அக).

[கடை + பல்.]

கடைப்பலகை[1] *kaḍai-p-palagai,* பெ.(n.) அணிகலன்களின் முனைகளை இணைக்கும் தகடு; hook which joins the two ends of an ornament.

[கடை + பலகை.]

அணிகலன்களின் கடைக்கொக்கி தட்டையாக இருப்பதால் பலகை எனப்பட்டது.

கடைப்பலகை[2] *kaḍai-p-palagai,* பெ.(n.) கட்டு மரத்தின் இறுதியில் அமைந்த திசை திருப்பும் பலகை. rudder, helm.

[கடை + பலகை.]

கடைப்பலகை[3] *kaḍai-p-palagai,* பெ.(n.) கடையை மூடும் பலகை; separated wooden planks which are used to close petty shops.

[கடை + பலகை.]

சிறு கடைகளை அடைப்பதற்கு நெடுக்கு வாட்டில் கதவு நிலையின் மேற்சரத்திலும் கீழ்ச்சரத்திலும் பலகை நகரும் பாங்கில் குடைந்த குழிவுகளில் பொருத்தும் நெடும் பலகைகள். இக் கதவுப் பலகைகளுக்கு நெட்டிரும்புப் பட்டையை இடையாகக் கொண்டிகளில் மாட்டிப் பூட்டுவர்.

கடைபரப்பு-தல் *kaḍai-parappu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கடையில் பொருள்களைப் பரப்பி வைத்தல் (வின்.); to display of goods in a shop. 2. ஒரு செயல் செய்யும்பொழுது அது பார்ப்பவர்களுக்குப் பெரிதாகத் தோன்றுமாறு பலவற்றையும் பரப்பி வைத்தல்; to make a show; to exhibit one's work in an attractive manner with intent more or less to deceive.

[கடை + பரப்பு. கடை = அங்காடி.]

கடைப்பாட்டம் *kaḍai-p-pāṭṭam,* பெ.(n.) 1.விளைச்சல் ஆண்டின் இறுதிப் பருவம்; last season for cultivation. 2. ஒருவகை வரி; a kind of tax. *"இறை நீக்கி நின்ற கடைப்பாட்டத்தால் வந்த கடமை" (தெ.கல்.தொ.8.கல்.288).*

[கடை + பாட்டம். பாட்டம் = பருவகால விளைவு.]

கடைப்பாடு[1] *kaḍai-p-pāḍu,* பெ.(n.) தீர்மானம்; determination.

[கடை + பாடு. படு → பாடு. இறுதியாக வரவுபெற்றது, முடிவு செய்யப்பெற்றது.]

கடைப்பாடு[2] *kaḍai-p-pāḍu,* பெ.(n.)இழிவு; inferiority.

[கடை + பாடு. படு → பாடு. கடை = இழிவு. பகுதிப்பொருள் ஈறு. ஒ.நோ. செயற்பாடு.]

கடைப்பாடு[3] *kaḍai-p-pāḍu,* பெ.(n.) இறுதியாய் வலையிற் கிடைக்கப்பெற்ற மீன் (தஞ்சை); fish obtained last in the net.

[கடை + (படு) பாடு. படுதல் = வலையிற் படுதல்.]

கடைப்பான்மை *kaḍai-p-pāṉmai,* பெ.(n.) இழிதன்மை; inferior kind, lowest class or grade. *"பண்ணாள் மறுத்துப் புரிதல் கடைப்பான்மையதே" (கந்தபு. காமதகன.45).*

[கடை + பான்மை.]

கடைப்பிடி[1]**-த்தல்** *kaḍai-p-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. உறுதியாகப் பற்றுதல்; to hold firmly to the end; to have an unwavering faith in. *"நன்மை கடைப்பிடி" (ஆ.சூ.).* 2. தெளிவுறவறிதல்; to ascertain clearly, know certainly, understand correctly *"அற்றதறிந்து கடைப்பிடித்து மாறல்ல துய்க்க" (குறள்,944).* 3. மறவாதிருத்தல்; to remember, bear in mind; to be grateful for as benefits. *"மற்றதன் கள்ளங் கடைப்பிடித்த னன்று" (நாலடி.20).* 4. சேர்த்து வைத்தல்; to accumulate, provide. *'வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை யறிந்து கடைப்பிடித்தலும்' (குறள்,51,உரை).* 5. மேற்கொள்ளுதல்; observe (mourning, etc.) *தலைவருக்கு இன்று துக்கநாள் கடைப்பிடிக்கப் படுகிறது (உ.வ.).*

[கடை + பிடி – கடைப்பிடி. (இறுதிவரை பின்பற்றி வருதல், அதில் தளராமை).]

கடைப்பிடி[2] *kaḍai-p-piḍi,* பெ.(n.) 1. உறுதி; determination, resolve. *"அரச ருள்ளும் அறங்கடைப் பிடித்த செங்கோல்" (அகநா.338:3).* 2. தேற்றம் (திவா.); certainty, established truth. 3. கொண்முடிபு (சித்தாந்தம்); doctrine, truth firmly believed in as necessary to salvation. *"நின் கடைப்பிடி யியம்பு" (மணிமே.27:4).* 4. பற்று; attachment predilection. *"இலக்கின்மேற் கடைப்பிடியோ விடப மலை யுவந்தனையே"*

(அழகர்கலம்.1). 5. ஆடவர்க்குரிய அறிவு; one of the four kinds of traits for men. 6. அறிந்தபடி நடத்தல்; to follow as (we) learnt. *கற்றதைக் கடைப்பிடி (உ.வ.).*

[கடை + பிடி.]

ஆணுக்குரிய நாற்குணங்களுள் கொண்ட பொருளை மறவாமையாகிய 'கடைப்பிடி' ஒன்றாகும். மற்ற மூன்று அறிவு, நிறை, ஓர்ப்பு என்பனவாகும்.

கடைப்பிடிப்பு *kaḍai-p-piḍippu,* பெ.(n.) இறுதிவரை பின்பற்றுகை; to be followed till the end.

[கடை + பிடிப்பு. கடை → கடைசி = இறுதிவரை.]

கடைப்பிறப்பு *kaḍai-p-piṟappu,* பெ.(n.) கீழ்ப்பிறப்பு; low birth.

[கடை + பிறப்பு. கடை = கீழ்.]

கடைப்புணர்முரண் *kaḍai-p-puṇar-muraṉ,* பெ.(n.) **கடைமுரண்** பார்க்க; see *kaḍai-muraṉ.*

[கடை + புணர் + முரண்.]

கடைப்புணர்வு *kaḍai-p-puṇarvu,* பெ.(n.) அணிகலன்களின் கொக்கி (வின்.); clasp, hasp.

[கடை + புணர்வு. கடை = கடைசி.]

கடைப்புத்தி *kaḍai-p-putti,* பெ.(n.) 1. முட்டாள்தனம்; stupidity. 2. பின்னறிவு; after thought, as folly.

[கடை + புத்தி.]

வ. புத்தி > **த.** அறிவு.

கடைப்புளி *kaḍai-p-puḷi,* பெ.(n.) செயலை முடிக்கும் துணிவு, தேற்றம், மறவாமை; capacity to complete an action.

கடைப்பூ *kaḍai-p-pū,* பெ.(n.) நிலத்தின் கடைசிப் போகம் (S.11.Vol.II.117); last crop.

[கடை + பூ.]

கடைப்பூட்டு *kaḍai-p-pūṭṭu,* பெ.(n.) **கடைப்புணர்வு** பார்க்க (வின்.); see *kaḍai-p-puṇarvu.*

[கடை + பூட்டு.]

கடைப்பூண் *kaḍai-p-pūṇ,* பெ.(n.) 1. அணிகலனின் மூட்டுவாய் (நாமதீப.); clasp of ornaments. 2. உலக்கையின் முனையில் பொருத்தப்படும் மாழை (உலோகம்) வளையம்; ferrul.

[கடை + பூண். கடை = நுனி.]

கடைப்போக்குநிலம் *kaḍai-p-pōkku-nilam,* பெ.(n.) ஏரிப்பாய்ச்சலுக்குத் தொலைவிலுள்ள நிலம்; land at the far end of the irrigation channel, opp. to உள்ளடி நிலம்.

[கடை + போக்கு + நிலம்.]

கடைப்போலி *kaḍai-p-pōli,* பெ.(n.) சொல்லிறுதியில் ஓர் எழுத்திற்கு மாற்றாக அமையும் மற்றோர் எழுத்து; variant form of letter or syllable occuring at end of the words.

[கடை + போலி.]

பொருள் மாற்றம் ஏற்படுத்தாமல் ஒரு சொல்லின் இறுதியில் நிற்கும் ஓர் எழுத்துக்கு மாற்றாக மற்றோர் எழுத்து அமைவது கடைப்போலியாகும். [எ.டு] சாம்பல் – சாம்பர், பந்தல் – பந்தர்.

கடைபொறுக்கி *kaḍai-poṟukki,* பெ.(n.) எச்சிற் பொறுக்கி (நாஞ்.); one who lives by pcking up leavings of food.

[கடை + பொறுக்கி.]

கடைபோ–தல் *kaḍai-pō-,* 8 செ.கு.வி (v.i.) 1. முற்றுப்பெறுதல்; to end, terminate, conclude, be fulfilled. *"யாஅர் கடைபோகச் செல்வ முய்த்தார்" (நாலடி.119).* 2. நிலைநிற்றல்; to endure to the end. *"வனப்பும் பொலிவுங் கடைபோகா" (சூளா.அரசி. 337).*

[கடை + போ.]

கடைபோடு[1]–தல் *kaḍai-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. வணிகந் தொடங்குதல்; to set up a shop. 2. திருவிழா போன்ற சிறப்புக் காலங்களில் தற்காலிகக் கடை அமைத்தல் to set up a temporary shop.

மறுவ. கடைவைத்தல்

[கடை + போடு.]

கடைபோடு[2]–தல் *kaḍai-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) வம்பளத்தல்; to indulge in useless talk.

[கடை + போடு.]

கடைமடக்கு *kaḍai-maḍakku,* பெ.(n.) நான்கடி ஈற்றிலும் ஒரே சொல் மடங்கி வரும் சொல்லணிவகை (தண்டி.94 உரை); a mode of constructing verse in which words apparently similar in sound but different in meaning are repeated at the end of each line.

[கடை + மடக்கு.]

எ.டு. *"சொன்ன நாளிது கரும்பிமி ரிதழிபொன் கால*
மின்னு வாள்விட வில்வளைத் தூன்றிய கால
இன்ன கார்முகி லினமிருண் டெழுதரு கால
மன்னர் வாரலர் தான் வரு மயின் மருங்கால"
(தண்டி. 95,உரை மேற்.)

மடக்கு – [யமகம்] – வந்த சொல்லே வந்து வேறுபொருளைத் தருவது.

கடைமடை *kaḍai-maḍai,* பெ.(n.) 1. கடைசி மதகு (சீவக.1614, உரை); the last sluice of a tank, opp. to *talaimadai.* 2. கடைசியாகயுள்ள வயலிற் பாயுங் கால்வாய் (இ.வ.); the opening of a channel into the last field irrigated by it. *'தலைமடையாலே நீர்பாயவும் கடைமடையாலே விழவும்' (தெ.கல். தொ.23 கல்.490).* 3. வாய்காலில் நீர் கடைசியாகப் பாயும் நிலம் (இ.வ.); land at the far end of an irrigation channel.

[கடை + மடை.]

கடைமணி[1] *kaḍai-maṇi,* பெ.(n.) 1. ஆராய்ச்சி மணி; bell hung outside the gate of the King's palace so that any one who had a grievance to be redressed might pull and ring to obtain the kings audience. *"வாயிற்கடைமணி நடுநா நடுங்க" (சிலப்.20:53).* 2. வேல் முதலியவற்றின் அடிப்பகுதி; handle of a spear. *"எஃகங்... கடைமணி காண்வரத் தோன்றி" (களவழி.19).* 3. பரவ மகளிர் கையணி வகை bracelet of Parava women. 4. காளையின் கழுத்தில் கட்டும் மணி (சேரநா.); bell tied to the neck of a bullock. 5. தாலியுடன் சேர்த்தணியும் மணி; bead attached to the *tali.* *"கட்டின தாலிக்குக் கடைமணி யில்லாதது போய்" (பஞ்ச.திருமுக.1332).*

ம. கடமணி

[கடை + மணி.]

மணியை ஒலித்துத் தனக்குற்ற ஏதத்தை வேந்தனின் ஆராய்ச்சிக்கு [விசாரணைக்கு]க் கொணர்ந்தமையால் ஆராய்ச்சிமணி எனப்பட்டது. இது தலைவாயிலில் இருந்தமையால் கடைமணி எனப்பட்டது.

கடைமணி[2] *kaḍai-maṇi,* பெ.(n.) கண்மணிக்கடை; edge of the eye ball. *"ஆவின்கடை மணி யுகுநீர் (சிலப்.20:54).*

[கடை + மணி.]

கடைமரம் *kaḍai-maram,* பெ.(n.) 1. கடைசற்பட்டை (வின்.); turning lathe. 2. வெண்கல ஏனம் செய்வோர் மண்ணைக் கொண்டு உருவாக்கும் கரு அமைப்பிற்குப் பயன்படுத்தும் தடி (சேரநா.); turning pole, a kind of wooden lathe used by braziers for shaping earthen crucibles.

ம. கடமரம்

[கடை + மரம்.]

கடைமருந்து *kaḍai-marundhu,* பெ.(n.) 1. ***கடைச் சரக்கு*** பார்க்க; see *kaḍai-c-carakku.* 2. கடையில் விற்கும் ஆயத்த மருந்து; prepared or ready made medicine sold in the bazaar. 3. கடையில் விற்கும் பசுமூலி; green herbs sold in bazaars. (சா.அக.)

[கடை + மருந்து.]

கடைமாணாக்கர் *kaḍai-māṇākkar,* பெ.(n.) கற்கும் திறனில் மூன்றாம் நிலை மாணாக்கர்; the last of the three grades of students. *"அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்" (நன்.38).*

[கடை + மாணாக்கர். கடை = கடைசி.]

கடைமீன் *kaḍai-mīṉ,* பெ.(n.) இருபத்தேழாவது நாண்மீன் (தொழுபஃறி–ரேவதி); the 27th naksatra from its being the last of the asterisms.

[கடை + மீன். கடை = கடைசி.]

கடைமுகம்[1] *kaḍai-mugam,* பெ.(n.) 1. தலைவாயில்; gateway, entrance. *"ஆங்கட் கதுமென கடவுட் டோன்றிக் கடைமுகங் குறுக" (சீவக.1124).* 2. துலை

(ஐப்பசி) மாதத்து இறுதிநாள்; last day of the month *Aippa śi*.

[கடை + முகம்.]

கடைமுதல் *kaḍai-mudal*, பெ.(n.) ஒரு பாடலின் இறுதிச் சொல் அல்லது எழுத்து அடுத்த பாடலின் முதற் சொல்லாக அல்லது எழுத்தாக வரும் பாடல்வகை (அந்தாதி); poem in which the last letter syllable or foot of the last line of one stanza is identical with the first letter, syllable or foot of the succeeding stanza, the sequence being kept on between the last and the first stanza of the poem as well.

மறுவ. ஈறுதொடங்கி

[கடை + முதல்.]

கடைமுரண் *kaḍai-muraṉ*, பெ.(n.) அடிதோறும் இறுதிச் சீர்க்கண் சொல்லினும் பொருளினும் மறுதலைப்படத் தொகுக்குந் தொடை (யாப்.வி.39); a mode of constructing verse in which the last foot of each line contains words conveying opposite meanings.

[கடை + முரண்.]

எ.டு. *"கயல் மலைப் பன்ன கண்ணிணை **கரிதே;***
*தடமுலைத் தவழும் தனிவடம் **வெளிதே;***
*நூலினும் நுண்ணிடை **சிறிதே;***
*ஆடமைத் தோளிக் கல்குலோ **பெரிதே**" (யா.கா.40 மேற்.).*

கடைமுழுக்கு *kaḍai-muḻukku*, பெ.(n.) துலை (ஐப்பசி) மாதத்துக் கடைநாளன்று மயிலாடுதுறையி லோடுங் காவிரியில் நீராடுகை (இ.வ.); bathing in the cauvery at Mailadudurai, on the last day of the month Tulai (Appaci).

[கடை + முழுக்கு.]

கடைமுள்ளந்தண்டு *kaḍai-muḷḷantaṇḍu*, பெ.(n.) முதுகின் முள்ளந்தண்டின் கீழ்ப்பகுதி; the last portion of the spinal column, comprising the five vertebrae (சா.அக.).

[கடை + முள் + அம் + தண்டு – கடைமுள்ளந்தண்டு. 'அம்' சாரியை.]

கடைமுள்ளெலும்பு *kaḍai-muḷḷelumbu*, பெ.(n.) முதுகின் வரிசையில் கடைசியாக உள்ள எலும்பு; the lowest and the last part of the terminal vertebrae at the sacrum (சா.அக.).

[கடை + முள் + எலும்பு.]

கடைமுளை *kaḍai-muḷai*, பெ.(n.) நுகத்தடியின் இரு முனைகளிலும் இடப்படும் குச்சி; wooden pin at either either end of a yoke.

[கடை + முளை.]



கடைமுளை

கடைமுறி-தல் *kaḍai-muṟi-*, 4 செ.கு.வி(v.i.) வணிகத்தொழிலழிதல்; to fail in business.

[கடை + முறி. கடை = வணிகம்.]

கடைமுறை[1] *kaḍai-muṟai*, பெ.(n.) இழிந்த நிலை; meanest condition. *"கடைமுறை வாழ்க்கையும் போம்" (திவ்.திருவாய்.9.1:9).*

[கடை + முறை.]

கடைமுறை[2] *kaḍai-muṟai*, பெ.(n.) முடிவில்; at last *"கடைமுறை தான்சாந் துயரம் தரும்" (குறள்,792).*

[கடை + முறை.]

கடைமை *kaḍaimai*, பெ.(n.) கீழ்மை; meanest condition. *"கையாற் கடைமைத் தலைநின்றான்" (பெரியபு.சண்டேசுர.50).*

க. கடமெ, கடிமெ; **து.** கடமெ; **தெ.** கடம.

[கடை → கடைமை.]

கடைமோர் *kaḍai-mōr*, பெ.(n.) கட்டித்தயிரைக் கடைந்தபின் நீராளமாக நிற்கும் மோர்; churned butter milk.

துட. கற்மொற்

[கடை + மோர். கடை = கடைதல்.]

கடைமோனை *kaḍai-mōṉai,* பெ.(n.) அடிதோறும் கடைச்சீரின் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுக்கும் மோனைத் தொடை (யாப்.வி.39); a mode of constructing verse in which the initial letters of the last foot of each line are the same or assonant.

[கடை + மோனை. கடை = கடைசி.]

எ.டு. "வளரிளங் கொங்கை வான்கெழு **மருப்பே;**
பொறிவண் டோதியிற் பாடுமா **மருளே**
வாணுதல் ஒண்மதி **மருட்டும்**
மாயோன் இவளென் நோய்தணி **மருந்தே**"

கடையக்குடி *kaḍaiyakkuḍi,* பெ.(n.) திருத்தவத் துறை (இலால்குடி) வட்டத்துத் திருநெடுங்களம் கோயிலுக்கு கி.பி.15ஆம் நூற்றாண்டில் வழங்கப் பட்ட ஊர்; a village donated to Thirunedungalam temple in Lalgudi taluk during 15th century A.D. *'பாண்டி குலாசனி வாளநாட்டு வடகவிநாட்டு கடையக்குடியை கம்பரச நல்லூர் என்று கட்டி' (தெ.இ.கல்.தொ.26.கல்.724).*

[கடையன் + குடி.]

கடையடைக்காய் *kaḍai-aḍai-k-kāy,* பெ.(n.) ஒரு பழைய வரி (S.I.I.Vol.ii 521); an ancient tax.

[கடை + அடைக்காய்.]

கடையடைப்பு *kaḍai-y-aḍaippu,* பெ.(n.) பொதுக் காரணங் கருதிக் கடைத்தெரு முழுதும் மூடுகை; total closure of business, shops for a common purpose.

[கடை + அடைப்பு.]

கடையண்ணம் *kaḍai-y-aṇṇam,* பெ.(n.) அண்ணத் தின் உட்பகுதி; velum.

[கடை + அண்ணம்.]

மேற்பல் வரிசையை அடுத்த பகுதியை நுனியண்ணம் என்றும், அதற்கடுத்த பகுதியை இடையண்ணம் என்றும் அதற்கடுத்த பகுதியைக் கடையண்ணம் இற்றை மொழியியலார் பிரிப்பர். இலக்கணங்கள் இதற்கு நேர்மாறாக குரல்வளைப் பகுதியிலிருந்து முதல் அண்ணம், இடையண்ணம், நுனியண்ணம் எனக் கணக்கிடுகின்றன. இதே போல் நுனிநா, இடைநா, கடைநா, என நாக்கின் நுனியிலிருந்து இன்றைய மொழியியல் பெயரிடுகின்றது. ஆனால் இலக்கணங்கள் உள்பகுதியிலிருந்து முதல்நா, இடைநா, நுனிநா எனப் பெயரிடுகின்றன.

கடையண்ணவொலி *kaḍai-y-aṇṇa-v-oli,* பெ.(n.) நாமுதலும் அண்ணமுதலும் பொருந்தப் பிறக்கும் ஒலி; velar sound. *"ககார ஙகாரம் முதல்நா அண்ணம்" (தொல்.எழுத்து.பிறப்.7).*

[கடை + அண்ணம் + ஒலி.]

கடையந்தரம் *kaḍai-y-andaram,* பெ.(n.) **கடை யாந்தரம்** பார்க்க see *kaḍai-y-āndaram.*

[கடை + அந்தரம். கடை = இறுதி.]

கடையம்[1] *kaḍaiyam,* பெ.(n.) பதினோராடல்களுள் ஒன்றான, இந்திரை (இந்திராணி) உழத்தியர் வடிவுகொண்டு ஆடிய கூத்து; a drama acted by Indrani in the garb of a female farm-hand. *"அயிராணி மடந்தை யாடிய கடையமும்" (சிலப்.6:63).*

[கடை → கடையம் (அழித்தலைக் குறிக்கும் ஆடல் வகை).]

கடையம்[2] *kaḍai-yam,* பெ.(n.) நெல்லை மாவட்டம் தென்காசி வட்டத்தில் அமைந்த ஓர் ஊர்; a village in Thirunelveli district.

[கடை → கடையம்.]

கடையயல் *kaḍai-y-ayal,* பெ.(n.) ஈற்றயல்; penultimate.

[கடை → கடையயல்.]

கடையர்[1] *kaḍaiyar,* பெ.(n.) 1. வேளாளரில் ஒருவகையினம் (பழ.தமி.109); a subdivision among velala community. 2. மருதநிலத் தொழிலாளர்; agricultural labourer. *"உழவர் உழத்தியர் கடையர் கடைச்சியர்" (நம்பியகப்.23).*

ம. கடவன், கடசன்.

[களை → களைஞர் → கடைஞர் → கடையர். கடைஞர் = களைபறிப்போர். நிலத்தில் களை பறித்தல் போன்ற வேளாண்மைத் தொழிலாளரை இச்சொல் குறிப்பினும் பொதுவாக உழவுத்தொழில் பூண்டோருக்கே உரிய பெயராம். இவர்களைத் தாழ்ந்தோர் என்றும் இழிந்தோர் என்றும் பிற அகரமுதலிகளில் குறிப்பிட்டிருப்பது தவறு.]

கடையர்[2] *kaḍaiyar,* பெ.(n.) 1. பள்ளரில் சுண்ணாம்பு சுடுதலும், முத்துக்குளித்தலும் ஆகிய தொழில்களை செய்யும் வகுப்பார் (வின்.); name of a subdivision of pallars, who are lime-burners and divers for pearls. 2. இழிந்தோர்; mean fellows. *"கடையரே கல்லா தவர்" (குறள்,395).*

[கடை → கடையர்.]

கடையர்[3] *kaḍaiyar,* பெ.(n.) வாயில் காப்போர் (பெருங்.உஞ்சை.32:84); gate-keepers.

[கடை → கடையர். கடை = வாயில். கடையர் = வாயில்காப்போர்.]

கடையல் *kaḍaiyal,* பெ.(n.) 1. கடைகை; turning in a lathe. 2. கடையும் வேலை; turner's work. 3. அலைக்கை; agitating, shaking, churning. *"காமக்கடலைக் கடையலுற்றான்" (சீவக.2030).*

மறுவ. கடைச்சல்

ம. கடச்சல்; **க.** கடெசலு, கடசலு; **து.** கட்சில், கடிசில்.

[கடை → கடையல். கடை = கடைதல்.]

கடையவாடல் *kaḍaiya-vāḍal,* பெ.(n.) இந்திரை (இந்திராணி) யாடல்; dance of Indrani.

[கடையம் + ஆடல்.]

***கடையம்**[1] பார்க்க;* see *kaḍaiyam*[1].

கடையழி[1]**-தல்** *kaḍai-y-aḻi-,* 2 செ.கு.வி.(v.i.) தேய்தல் (யாழ்.அக.); to diminish by degrees.

[கடை + அழி. கடை = நுனி.]

கடையழி[2]**-தல்** *kaḍai-y-aḻi-,* 2 செ.கு.வி.(v.i.) 1. வருந்துதல்; suffer, to be afflicted with a painful lingering disease (சா.அக.). 2. மதிப்பிழத்தல்; to lose respectabilites. கணவனை இழந்ததில் கடையழிந்து போனேன் (நெல்லை.)

[கடை + அழி.]

கருவியின் முனை தேய்வதுபோல உடலுறுப்புத் தேய்வதால் வருத்தமுண்டாதல்.

கடையழி[3]**-தல்** *kaḍai-y-aḻi-,* 2 செ.கு.வி.(v.i.) 1. வறுமையுறுதல்; to be distressed with poverty. 2. கேடுறுதல்; to degenerate.

[கடை + அழி.]

கடையளபெடை *kaḍai-y-aḷabeḍai,* பெ.(n.) செய்யுளில் அடியின் இறுதிக்கண் அளபெடுத்து வருவது (யாப்.வி.ப.163); elongation of syllable in the end of a line.

[கடை + அளபெடை. கடை = இறுதி. அளபெடை = உயிரளபெடை.]

எ.டு. *"தொடுகடற் றுறைதுறை திரிதரும் **சுறா அ;***
*கருங்கழி கலந்து கலிதரும் **கரா அ;***
*மறிதிரை மகரமும் **வழா அ***
*எறிநீர்ச் சேர்ப்ப! இந் நெறிவரத் **தகா அ**"*

கடையன்[1] *kaḍaiyaṉ,* பெ.(n.) 1. சுண்ணாம்பு சுடுதலும் முத்துக் குளித்தலும் செய்யும் பரதவப் பிரிவினன் (க.ப.அக.); fisher fold who engage in coral fishing and lime-kiln work. 2. உழவுத்தொழிலாளன்; agricultural labour.

[களை → களைஞன் → கடைஞன் → கடையன்.]

பிற அகரமுதலிகளில் கடும் உடலுழைப்புத் தொழில்களில் ஈடுபட்டவர்களை தாழ்ந்தவர்களாகக் கருதி நால்வருணக் கோட்பாட்டில் நாலாம் பிரிவாகக் குறித்து இழிவுபடுத்தியிருப்பது மிகவும் கேடானது. உழைப்பவர்களை உயர்வாகக் கருதுவதே தமிழ் மரபு. 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி என்றார் திருவள்ளுவர்'.

கடையன்[2] *kaḍaiyaṉ,* பெ.(n.) இழிந்த பண்புடையவன்; a mean fellow.

[கடை (இழிவு) → கடையன்.]

கடையன்பு *kaḍai-y-aṉbu,* பெ.(n.) தலைவனைக் கூடிய காலத்து நிலையழிகையான அன்பு; inferior kind of conjugal love of a woman only during sexual union.

[கடை + அன்பு.]

தலைவனைப் பார்த்தபோதும், அவர்தம் பெயரைக் கேட்டபோதும் நிலையழிதலே அன்பு பூண்ட தலைவியின் உயர் பண்பாகும். அஃதின்மையின் கடையன்பு எனப்பட்டது.

கடையனல் *kaḍai-y-aṉal,* பெ.(n.) ஊழித்தீ (பிங்.); deluge of fire.

க. கடெகிர்சு

[கடை + அனல். கடை = இறுதி.]

கடையா *kaḍaiyā,* பெ.(n.) **கடையால்** பார்க்க; see *kaḍaiyāl. "கடையாவின் கழிகோற்கைச் சறையினார்" (திவ்.திருவாய்.4.8:4).*

[கடையால் → கடையா. கடையால் = மூங்கிற்குழாய்.]

கடையாகுமோனை *kaḍai-y-āgu-mōṉai,* பெ.(n.) இனத்தானும், மாத்திரையானும், பிறவற்றானும் வரத் தொடுப்பது (யாப்.வி.37,உரை); a variety of initial mōṉai.

[கடை + ஆகு + மோனை.]

(எ.டு.) *"பகலே பல்பூங்கானற் கிள்ளை ஒப்பியும்*
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇ".

இனத்தான் வந்த கடையாகு மோனை.

கடையாகெதுகை *kaḍai-y-āgedugai,* பெ.(n.) இனத்தானும், மாத்திரையானும், பிறவற்றானும் வரத்தொடுப்பது (யாப்.வி.37,உரை); a variety of initial edugai.

[கடை + ஆகு + எதுகை.]

எ.டு. *"ஆவின் இடையர் விதையழிப்பர்; அவ்விதையைக்*
காமினோ என்றாற் கதம்படுவர்; – நாமினிப்
பொல்லா தெனினமப் பூந்தோட்ட வாழ்நருங்
கொள்ளாரா நஞ்சொற் குணம்."

இது பிறவற்றான் வந்த கடையாகு எதுகை.

கடையாட்டம்[1] *kaḍai-y-āṭṭam,* பெ.(n.) 1. வருத்தம்; lingering in disease, acute pain. 2. உலைவு; vexation, teasing trouble, annoyance, as mean work.

[கடை + ஆட்டம்.]

கடையாட்டம்[2] *kaḍai-y-āṭṭam,* பெ.(n.) கடைசி விளையாட்டு; last play in a game. கடையாட்டத்தி லாவது வெற்றி பெற முயல்க (உ.வ.).

[கடை + ஆட்டம்.]

கடையாட்டம்[3] *kaḍai-y-āṭṭam,* பெ.(n.) இறக்கும் நேரத்தில் அடையும் துன்பம்; the agony at the time of death (சா.அக.).

[கடை + ஆட்டம்.]

கடையாணி[1] *kaḍai-y-āṇi,* பெ.(n.) 1. அச்சாணி (C.G.); linchpin. 2. பூட்டாணி (வின்.); pin used to keep a tenon in a mortice.

க. கடாணி; **தெ.** கடசீல; **து.** கடாணி, கடெயாணி.

[கடை + ஆணி.]

கடையாணி[2] *kaḍaiyāṇi,* பெ.(n.) ஆணிப்பொன்; pure gold.

க. கடெயாணி, கடியாணி; **தெ.** கடானி.

[கட்டு + ஆணி – கட்டாணி → கடையாணி. கட்டு = திரட்சி.]

கடையாணி[3] *kaḍai-y-āṇi,* பெ.(n.) குதிரைக் கடிவாளம் (கருநா.); bridle.

க. கடாணி; **கசபா.** கடேனி.

[கடியாணி → கடையாணி.]

கடையாந்தரம் *kaḍai-y-ān-taram,* பெ.(n.) கடைசி (வின்.); the very last stage, extremity.

[கடை + ஆம் + தரம் – கடையாந்தரம். 'தரன்' 'தரம்' பெயரீறுகள். ஒ.நோ. மன் + தரம் – மந்தரம் → மந்தரன் → மாந்தரன்.]

கடையாமரப்பண்ணை *kaḍai-yā-marap-paṇṇai,* பெ.(n.) கட்டுமரத்தின் அகலமான கடைப்பகுதி (செங்கை மீனவ.); the broader end of catamaran.

[கடையா + மரம் + பண்ணை. (விரிவு, அகற்சி).]

கடையாயம் *kaḍai-y-āyam,* பெ.(n.) அங்காடி களுக்கு இடப்பட்ட வரி; a tax levied on shops.

ம. கடயாயம்

[கடை + ஆயம். ஆயம் = வரி.]

கடையால் *kaḍaiyāl,* பெ.(n.) பால்கறக்கும் மூங்கிற் குழாய்க்கலம் (வின்.); bamboo bottle. 2. ஒருவகைப் பால் ஏனம் (சேரநா.); a kind of milk-can. 3. நீரிறைக்கும் ஏனம்; a vessel made of wood, used for drawing water.

ம. கடயால்; **பட.** ஒணெ.

[கழை → கழையல் → கடையல் → கடையால். கழை = மூங்கில். கடையால் = மூங்கிற் குழாய், முகக்கும் ஏனம்.]



கடையால்

கடையிணைத்தொடை *kaḍai-y-iṇai-t-toḍai,* பெ.(n.) மோனை முதலியவை அடிகளின் ஈற்றிரண்டு சீர்களில் வரத்தொடுக்கும் தொடை (யா.கா.5, உரை.); a kind of verse in which the last two feet of a line have *mōṉai* and other features.

[கடை + இணை + தொடை.]

கடையிணைமுரண் *kaḍai-yiṇai-muraṉ,* பெ.(n.) ஒரடியின் கடையிரு சீர்க்கண்ணும் முரணி வருவது; a mode of versification where the final feet are in opposite meaning.

[கடை + இணை + முரண்.]

எ.டு. *"மீன்தேர்ந்து வருந்திய **கருங்கால் வெண்குருகு***
*தேனார் ஞாழல் **விரிசினைக் குழூஉம்***
*தண்ணந் துறைவன் **தவிர்ப்பவுந் தவிரான்***
*தேரோ **காணலங் காண்டும்***
*பீரோர் வண்ணமுஞ் **சிறுநுதல் பெரிதே**" (யா.கா.40 மேற்)*

கடையிணையளபெடை *kaḍai-y-iṇai-aḷabeḍai,* பெ.(n.) ஒரடியின் கடையிருசீர்க்கண்ணும் அளபெடை வருவது; elongation of syllable in last two feet.

[கடை + இணை + அளபெடை.]

எ.டு. *"மெல்லிணர் நறும்பூ **விடாஅள் தொடாஅள்**"*
(யாப்.வி.39 மேற்.)

கடையிணையியைபு *kaḍai-y-iṇai-y-iyaibu,* பெ.(n.) ஒரடியின் முதலிரு சீர்க்கண்ணும் இயைபு வருவது; mode of versification where the first two feet one with concord meaning.

[கடை + இணை + இயைபு.]

எ.டு. *"புயலும் போலும் பூங்குழற் பிழம்பே" (யாப்.வி.39.மேற்.)*

கடையிணையெதுகை *kaḍai-y-iṇai-y-edugai,* பெ.(n.) ஒரடியின் கடையிரு சீர்க்கண்ணும் எதுகை வருவது; consonance in the last two feet.

[கடை + இணை + எதுகை.]

எ.டு. *"வஞ்சியங் கொடியின் வணங்கிய நுணங்கிடை"*
(யாப்.வி.39.மேற்.)

கடையியைபு *kaḍai-y-iyaibu,* பெ.(n.) அடிதோறும் முதற்சீர்க் கடைஒத்து வந்தமையால், கடைஇயைபு (யா.வி.39); a mode of versification where the first feet concord.

எ.டு. *"**அளவறியான்** நட்டவன் கேண்மையே கீழ்நீர்த்*
தறியறியான் பாய்ந்தாடி அற்று" (யாப்.வி.39.மேற்.)

கடையில்நரம்பு *kaḍaiyil-narambu,* பெ.(n.) ஈற்றெலும்பு; terminal bone.

கடையெலும்பு பார்க்க; see *kaḍai-elumbu.*

கடையிலக்கம் *kaḍai-y-ilakkam,* பெ.(n.) கணக்கின் முடிவு; final figures arrived at in an account or computation. *"பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிட லாகும்" (பெரியபு.சேக்.51).*

[கடை + இலக்கம். கடை = இறுதி.]

கடையிலாக்காட்சி *kaḍai-y-ilā-k-kāṭci,* பெ.(n.) அருகன் எண் குணங்களுள் எல்லையில்லாது யாவற்றையும் காணும் குணம் (சீவக.2847); boundless vision, omniscience, one of eight attributes of Arugaṉ (*Arugaṉ-eṉ-kuṇam*).

[கடை + இலாத + காட்சி. இலாத → இலா (ஈ.கெ.எ.மபெ.எ.).]

கடையிலாவறிவு *kaḍai-y-ilā-v-aṟivu,* பெ.(n.) அருகன் எண் குணங்களுள் முடிவில்லா அறிவுடைமை (சீவக.2847); boundless knowledge, omniscience one of *Arugaṉ-eṉ-kuṇam.*

[கடை + இலாத + அறிவு. இலாத → இலா (ஈ.கெ.எ.மபெ.எ.).]

கடையிலாவின்பம் *kaḍai-y-ilā-v-iṉbiam,* பெ.(n.) அருகன் எண் குணங்களுள் முடிவில்லா இன்ப முடைமை (பிங்.); boundless bliss, one of *Arugaṉ-eṉ-kuṇam.*

[கடை + இலாத + இன்பம். இலாத → இலா (ஈ.கெ.எ.மபெ.எ).]

கடையிலாவீறு *kaḍai-y-ilā-vīṟu,* பெ.(n.) அருகன் எண் குணங்களுள் எல்லையில்லா ஆற்றலுடைமை (பிங்.); boundless strength, omnipotence, one of *Arugaṉ-eṉ-kuṇam.*

மறுவ. கடையிலாவீரியம்

[கடை + இலாத + வீறு. இலாத → இலா (ஈ.கெ.எ.ம.பெ.எ).]

கடையிறை *kaḍai-y-iṟai,* பெ.(n.) 1. பழைய வரிவகை (S.I.I.Vol.i.87); an ancient tax. 2. இறுதித் தவணை வரி; final instalment of tax (கல்.கலை.அக.).

ம. கடயிற

[கடை + இறை.]

கடையீடு[1] *kaḍai-y-īḍu,* பெ.(n.) கடைத்தரமான நிலம் (C.G.); land of the poorest quality.

ம. கடயீடு

[கடை + ஈடு. கடை = தாழ்வு.]

கடையீடு[2] *kaḍai-y-īḍu,* பெ.(n.) கீழதிகாரியின் ஆணை; order issued by a subordinate officer. *'திருமுக மறுத்தவன் கடையீட்டுக்குக் கேட்கப் புகுகிறானே' (ஈடு,1.4:4).*

[கடை + ஈடு. கடை = கீழ், கீழதிகாரி. ஈடு = இட்டது, ஆணை.]

கடையீடு[3] *kaḍai-y-īḍu,* பெ.(n.) முடிவான அரசாணை; the final order of a king, as in making grants. *'உடையார் கடையீடும் வந்தமையில்' (S.I.I. Vol.V. 312).*

[கடை + ஈடு. கடை = இறுதி. ஈடு = ஆணை.]

கடையீற்று *kaḍai-y-īṟṟu,* பெ.(n.) கடைசியாக ஈன்ற கன்று; the last calf, opp. to தலையீற்று.

க.,து. கடெகுஞ்சி

[கடை + ஈற்று.]

கடையுகம் *kaḍai-y-ugam,* பெ.(n.) **கடையூழி** பார்க்க; see *kaḍai-ūḻi*

க. கடெகால

[கடை + உகம்.]

கடையுண்ணல் *kaḍai-y-uṇṇal,* பெ.(n.) வருத்தப் படல்; feeling sorry.

[கடை + உண்ணல். கடை = இழிவு, துன்பம்.]

கடையுணி *kaḍai-y-uṇi,* பெ.(n.) கீழ்மக–ன்–ள் (யாழ்ப்.); mean or worthless person, eating leavings or anything he or she can pick up.

[கடை + உணி. உண்ணி → உணி.]

கடையுவா *kaḍai-y-uvā,* பெ.(n.) காருவா (கம்பரா. மீட்சி.139); new moon.

[கடை + உவா – கடையுவா. உவா = நிலவு. கடை = கடைசி.]

கடையுற *kaḍai-y-uṟa,* வி.எ.(adv.) முழுவதும்; entirely, completely. *"புனல் கடையுறக் குடித்தலின்" (கம்பரா.வருணனை.28).*

[கடை + உற.]

கடையுறுநோக்கு *kaḍai-y-uṟu-nōkku,* பெ.(n.) இறுதியாகத் தோன்றும் மெய்யுணர்வு; the final realization of truth (சா.அக.).

[கடை + உறு + நோக்கு.]

கடையூழி *kaḍai-y-ūḻi,* பெ.(n.) கடைசி ஊழி (தொல். பொருள்.70 உரை); Kaliyuga, as the last aeon.

[கடை + ஊழி. ஊழி = ஊழிக்காலம்.]

கடையூறு *kaḍai-y-ūṟu,* பெ.(n.) செயல் முடிவில் நீக்க முடியாதபடி வரும் தடை; insurmountable difficulty. *'இதுக்கு வந்த கடையூறும் இடையூறும் நீக்கி' (கல்வெட்டு)*

[கடை + ஊறு.]

கடையெதுகை *kaḍai-y-edugai,* பெ.(n.) அடிதோறும் கடைச்சீர்க்கண் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது (யாப்.வி.39); consonance of second letter of last feet.

[கடை + எதுகை.]

*"சுரிதரு மென்குழல் மேலும் மாலைகள் **சூட்டினீர்;***
*புரிமணி மேகலை யாளை ஆரமும் **பூட்டினீர்;***
*அரிதவழ் வேனெடுங் கண்களும் அஞ்சனம் **ஊட்டினீர்***
*வரிவளை பெய்திளை யாளை நுண்ணிடை **வாட்டினீர்**"*
(யாப்.வி.39.மேற்.)

கடையெலும்பு *kaḍai-y-elumbu,* பெ.(n.) 1. ஈற்றெலும்பு; the terminal bone. 2. பசையற்ற எலும்பு; marrowless bone (சா.அக.).

[கடை + எலும்பு.]

கடையெழுஞ்சனி *kaḍai-y-eḻuñ-caṉi*, பெ.(n.) பன்னிரண்டாம் நாண்மீனாகிய மானேறு (உத்தரம்) (பிங்.); the 12th naksatra being the last naksatra of the fifth sign of the Zodiac in which Saturn is said to be very malignant.

[கடை + எழும் + சனி.]

கடையெழுத்து *kaḍai-y-eḻuttu-*, பெ.(n.) கையொப்பம்; subscription, signature. *"கடையெழுத் தோலைக் கணக்குவரி காட்டி" (பெருங்.உஞ்ஞைக்.32:70).*

[கடை + எழுத்து. கடையெழுத்து = கடைசியில் எழுதுவது, கையொப்பம்.]

கடையேடு *kaḍai-y-ēḍu*, பெ.(n.) சாவுச்சீட்டு; death warrant. *"யமராசன் விட்ட கடையேடு வந்தென் செயுமே" (கந்தரலங்.87).*

[கடை + ஏடு – கடையேடு (வாழ்நாள் இறுதி அறிவிக்கும் ஏடு).]

கடையேழுவள்ளல்கள் *kaḍai-y-ēḻu-vaḷḷalgaḷ*, பெ.(n.) கடைக்கழகக் காலத்தில் வள்ளல்களாகச் சிறந்து விளங்கிய குறுநில மன்னர் எழுவர்; seven well known philanthropists of Šangam age.

மறுவ. கடைவள்ளல்கள்

[கடை + ஏழு + வள்ளல் + கள்.]

பாரி, எழினி, நள்ளி, ஆய், காரி, ஓரி, பேகன் ஆகிய எழுவர் கடையேழு வள்ளல்களாவர். கடையேழு என்ற தொடரை வைத்து முதலேழு, இடையேழு, வள்ளல்கள் இருந்ததாகக் குறிப்பிடுவர். ஆயின் அப்பெயர்களுள் பெரும்பான்மை [முதல் ஏழு: சகரன், காரி, விராடன், நிருதி, துந்துமாரி, நளன், செம்பியன்; இடை ஏழு: அக்குரன், சந்திமான், அந்திமான், சிசுபாலன், வக்கிரன், கன்னன், சந்தன்] தமிழ்ப்பெயர் அல்ல. கடையேழு என்பது இங்குக் கடைக்கழக காலத்தைக் குறிக்குமேயன்றி கடை [கடைசி] என்ற பொருள் பொருந்தாமை காண்க.

கடையைக்கட்டு–தல் *kaḍyai-k-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) ***கடைகட்டு–தல்*** பார்க்க; see *kaḍai-kaṭṭu-.*

[கடை + ஐ + கட்டு.]

கடையொடுக்கு–தல் *kaḍai-y-oḍukku-*, 7 செ.கு.வி. (v.i.) வணிகத்தைச் சுருக்குதல்; to limit the scope of commercial transactions. 2. வணிகத்தை நிறுத்திவிடுதல்; to wind up business.

[கடை + ஒடுக்கு.]

கடைவயிறு *kaḍai-vayiṟu*, பெ.(n.) அடிவயிறு; abdomen.

ம. கடவயிறு

[கடை + வயிறு.]

கடைவரி *kaḍai-vari*, பெ.(n.) கடைக்காரர் செலுத்தும் வரி; tax levied on shops.

ம. கடவரி

[கடை + வரி.]

கடைவழி *kaḍai-vaḻi*, பெ.(n.) சாவின்பின் உயிர் செல்லும் வழி; the path beyond the grave referring to life after death. *"காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே" (பட்டினத்.பொது.10).*

[கடை + வழி.]

கடைவள்ளல்கள் *kaḍai-vaḷḷalgaḷ*, பெ.(n.) ***கடையேழு வள்ளல்கள்*** பார்க்க; see *kaḍai-y-ēḻu-vaḷḷalgaḷ.*

[கடை + வள்ளல்கள். கடை = கடைக்கழகம்.]

கடைவளர்–தல் *kaḍai-vaḷar-*, 4 செ.கு.வி.(v.i.) ஈனுங் காலத்து விலங்கின் பெண்குறி விரிதல் (வின்.); to dilate, as the genitals of an animal before yeaning.

[கடை + வளர்.]

கடைவாசல் *kaḍai-vāsal*, பெ.(n.) 1. ***கடைவாயில்*** பார்க்க; see *kaḍai-vāyil.* 2. கடைத்தெரு; market. கடைவாசலுக்குச் சென்றுவரக் காசில்லை (உ.வ.).

ம. கடவா

[கடை + (வாயில்) வாசல்.]

கடைவாய் *kaḍai-vāy*, பெ.(n.) 1. வாயின் கடை; corner of the mouth. *"உண்கள் வார் கடைவாய்மள்ளர்" (கம்பரா.நாட்டு.10).* 2. கடைவாய்ப் பற்களுக்கு அருகில் உள்ள இடம்; region in the mouth near molar teeth. *புகையிலையைக் கடைவாயில் அடக்கிக் கொண்டார் (உ.வ.)*

ம. கடவாயி; துட. கட்பொய்

[கடை + வாய்.]

கடைவாய்க்கஞ்சி *kaḍai-vāy-k-kañji*, பெ.(n.) கடைவாயிலொழுகும் உமிழ்நீர்; the saliva flowing out through the corner of the mouth.

ம. கடவாக்கஞ்சி

[கடை + வாய் + கஞ்சி.]

கடைவாய்நக்கி *kaḍai-vāy-nakki,* பெ.(n.) ஈயாதவன்; unyielding miser. lit, one who licks the corners of one's mouth.

[கடை + வாய் + நக்கி.]

கடைவாயிலொழுகும் உணவின் எச்சமும் வீணாக்காமல் விழுங்கிக் கொள்ளும் கடும் இவறன் என்பது குறிப்பு.

கடைவாய்ப்பட்டி *kaḍai-vāi-p-paṭṭi,* பெ.(n.) பனை அகணியால் முடையப்பட்ட சிறுகூடை; small basket made up of upper rind of stem of palmyrah frond.

[கடை + வாய் + பட்டி.]

கடைவாய்ப்பல் *kaḍai-vāy-p-pal,* பெ.(n.) பாலூட்டிகளின் வாயின் கடைப்பகுதியில் அமைந்த பல்; grinding teeth, back teeth, molar.

க. கடெவல்லு; ம. கடபல்.

[கடை + வாய் + பல். கடைவாய் = வாயறையின் உட்பகுதி. கடை = கடைசி.]

கடைவாய்வழி–தல் *kaḍai-vāy-vaḻi-,* 2 செ.கு.வி.(v.i.) கடைவாயிலிருந்து எச்சில் தானே ஒழுகுதல்; to drivel at the corners of the mouth.

[கடை + வாய் + வழி. கடைவாய் = உதட்டின் கடை.]

கடைவாயில் *kaḍai-vāyil,* பெ.(n.) புறவாயில்; back entrance '...கழக்கடை வாயில் நின்று கிழக்கு நோக்கி' (S.I.I.Vol.xix. insc.48.S.No.14).

[கடை + வாயில்.]

கடைவாயொழுக்கு *kaḍai-vāy-oḻukku,* பெ.(n.) **கடைவாய்வழி–தல்** பார்க்க; see *kaḍai-vāi-vaḻi-.*

[கடை + வாய் + ஒழுக்கு.]

கடைவிரி[1]–த்தல் *kaḍai-viri-,* 4 செ.கு.வி.(v.i.) 1. வணிகப் பொருள்களைப் பரப்புதல்; to spread out goods in a shop for sale. *"கடைவிரித்தேன் கொள்வாரில்லை" (அருட்பா.).* 2. பலர்முன் தன் ஆற்றலைச் சொல்லுதல்; to brag, swagger about one's own abilities.

ம. கடவிரிக்குக

[கடை + விரி.]

கடைவிரி[2]–த்தல் *kaḍai-viri,* 4 செ.கு.வி.(v.i.) 1. வெளிக்குச் செல்லுதல்; to give off stool. 2. பதுங்கியிருத்தல்; to lie in ambush (as hunters) (சேரநா.)

ம. கடவிரிக்குக

[கடை + விரி.]

கடைவீதி *kaḍai-vīdi,* பெ.(n.) ***கடைத்தெரு*** பார்க்க; see *kaḍai-t-teru.*

[கடை + வீதி.]

கடைவு *kaḍaivu,* பெ.(n.) கடைதல்; fret.

[கடை → கடைவு.]

கடோரன் *kaḍōraṉ,* பெ.(n.) கடுமையானவன்; tyrant.

[கடு → கடூரன் → கடோரன் (கொ.வ.).]

கண்[1] *kaṇ,* பெ.(n.) 1. கருமணி கொண்ட பார்வையுறுப்பு, விழி; the organ of sight in man and vertebrate animals, eye. *"கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை" (தொல்.எழுத்து.நுன்.7).* 2. முன்னிலை, முன்னால்; front. *"கண்ணின் றிரப்பவர்" (குறள்,1055).* 3. கண்ணோட்டம், அருள்; kindness, benignity, graciousness, as expressed by the eye. *"கண்ணின்று பெயர்ப்பினும்" (தொல். பொருள்.கற்பி.9).* 4. பார்வை; sight. 5. பீலிக்கண்; star of a peacock's tail. *"ஆயிரங் கண்ணுடையாய்க்கு" (கம்பரா.பம்மை.27).* 6. தேங்காய், பனங்காய்களின் கண்; one of the three basal pores or marks on the shell (endocarp) of a coconut or palmyra shell. 7. முரசு முதலியவற்றில் அடிக்குமிடம்; centre of a drum head where it is rapped. *"கண்மகிழ்ந்து துடிவிம்ம" (பு.வெ.2:8 கொளு).* 8. ஊற்றுக்கண்; a fountain or spring. 9. விரல் நகரத்திற்கும் விரல் தசைக்கும் இடைப்பட்ட சிறு இடம்; the small open place between a finger-nail and flesh under it. 10. முலைக்கண்; nipple, teat. 11. புண்ணின் கண்; core of a boil. 12. சல்லடை, பலகணி போன்றவற்றில் உள்ள சிறுதுளை; perforation, small openings. 13. வலைக்கண்; mesh of a net etc. 14. வித்துகளில் முளை வரும் பகுதி; a node, sprout, seed-bud.

ம.,பட.,கோத. கன், கண்ணு; **க.** கண், கணு, கண்ணு; **தெ.**கனு, கன்னு; **கை.** காண், கன்ன; **இரு.** கண்ணு; **எர.** கன்; **மா.** க்வன்; **பிரா.** கன்; **கட.** கண்; **துட.** கண்ணு, கொண்; **குரு., கசபா.** கண்ணு; **குட.** கண்ணு, கண்ணி; **கோண்.** கான், கண், கன்; **கொலா.** கண்ண, கன்; **நா.** கன், கன்ன; **பர்.** கன்; **கூ.** கன்னு; **குவி.** கன்னு; **து.** கண், கண்ணு; **கோண்.(கோயா).** கண்டு; **கோண்.(அடிலா).** காற்; **கொர.** கண்ணி.

Chin. kuan, ngan, yan; **Comb.** odiya. ngan; **Khasi.** kahnat; **Pkt.** ankan; **Vedic.** ank, aksh; **Mar.** kaad-khen. **Gk.** auge; **O.E.** auye; **G.** auge; **E.** eye; **Turk.** goz; **Nil.Abys.** kanne-me, kanno-no, kan-ken; **Warrgauy.** gayga (eyes).

[கள் (கருமை) → கண் : கருமணி கொண்ட பார்வையுறுப்பு ஒ.நோ. உள் →உண், நள் →நண், பெள் →பெண்.]

கண் எல்லாப் பொருள்களொடும் பார்வையாற் கலப்பதாலும் கருமையாயிருப் பதனாலும், உடம்பிற்கு விளக்கமாயிருப்பதனாலும், இருகடையும் கூர்மையாயிருப்பத னாலும், மேற்கூறிய நாற்பொருளும் அதன் பெயருக்குப் பொருந்துமேனும், ஒருவர் பார்த்த மட்டில் தெளிவாகப் புலனாவது கண்ணின் கருவிழியேயாதலாலும், சில சிற்றுயிர்கட்கும், பறவைகட்கும் கருவிழியேயன்றி வெள் விழியின்மையாலும் கருமைக் கருத்தே 'கண்' என்னும் சொல்லின் பொருட் கரணியமாகும். பெண்களின் கண்ணிற்கு உவமையாகக் கருங்குவளை மலரைச் சிறப்பாகக் குறித்தலையும் நோக்குக.

கண்ணுதல் = அகக்கண்ணாற் காணுதல், கண் → கண்ணு. **கணித்தல்** = கண்ணாற் பார்த்தல். **கடைக் கணித்தல்** = 1. கடைக் கண்ணாற் பார்த்தல். "கருமலர்க் கூந்தலொருத்தி தன்னைக் கடைக்கணித்து" [திவ்.பெருமாள்.6:3]. 2. அருள் நோக்கு நோக்குதல். "கரு வெந்து வீழ்க் கடைக் கணித்து" [திருவாச.11:5]. **சிறக்கணித்தல்** = 1. கண்ணைச் சுருக்கிப் பார்த்தல். 2. கடைக்கண்ணாற் பார்த்தல்.

புறக்கணித்தல் = 1. கவனியாதிருத்தல் [பொருட்படுத் தாதிருத்தல்] 2. அவமதித்தல். அளவிடுதலைக் குறிக்கும் கணித்தற் சொல்லும் கண்ணாற் காணுதலைக் குறிக்கும் கணித்தற் சொல்லும் வெவ்வேறென அறிக. [செல்வி. 78. சிலை 243,244].

மனத்தின் உணர்வுகளைக் காட்டும் கருவியாகிய கண் மன வெழுச்சிகளைக் காட்டும் பல சொற்களுக்கு அடியாய் அமைகிறது. [எ.டு.] இன்கண், தறுகண், உறுகண், புன்கண், அலக்கண், இடுக்கண், பழங்கண், வன்கண்.

மனத்திற்கும் புறவுலகத்திற்குமிடையே யானத் தொடர்பு பெரும்பாலும் கண்வழியே நடைபெறுவதால் மனநெகிழ்வையும் பிறவற்றையும் காட்டும் சொற்களில் 'கண்' அடியாய் அமையும் என்க. [எ.டு.] கண்ணோட்டம், கடைக்கண். மக்கள் வழக்கில் எள்ளற் பொருட்டு முட்டைக்கண், பூசைக்கண், நொள்ளைக்கண், ஒன்றரைக்கண் [ஒண்ட்ரெகண்] பொட்டைக்கண், என வகைப் படுத்தலும் உண்டு.

மருத்துவ நோக்கில் "சாம்பசிவம் பிள்ளை மருத்துவ அகரமுதலி" கண்களைக் கருடக்கண், காக்கைக்கண், முண்டைக்கண், ஆந்தைக்கண், யானைக்கண், பூனைக்கண், மீன்கண், ஒரக்கண், செங்கண், அல்லது அரத்தக் கண், மயிர்கண், மாட்டுக்கண், மைக்கண், சாக்கண் அல்லது பஞ்சடைந்த கண், சாயல்கண், மஞ்சட்கண், குண்டு மணிக்கண், குருட்டுக்கண், இராக்கண், அழிகண், ஒற்றைக்கண், முக்கண், கூச்சக்கண், கூர்மைக்கண், ஊனக்கண், மயக்குங்கண், ஒட்டுக்கண், மாலைக் கண், பகற்கண், புளித்தகண், இளித்தற்கண், கொள்ளிக்கண், உள்ளங்கண், விரிகண், சுழற்கண், சுற்றுக் கண், பறவைக்கண், சுருங்குக் கண், கடைக்கண், புகைச்சற்கண், பூக்கண், பீளைக்கண், இருட்கண், கீழ்க்கண், திறந்தகண், சிமிட்டுக்கண், நிலைக் குத்தற்கண், பொய்க்கண், பிரிகண், சுழிகண் அல்லது உள் வளைந்த கண், நாலுகண், இழிகண் என்று 51 வகையாகப் பிரித்துள்ளது.

" . . . . Welsh, (**ceniaw,** to see; English **ken**, view, power or reach of vision to kan, to know by sight. In Webster's `English Dictionary' **kanna** was said to be "an eye" in Sanskrit; where as it is exclusively a Dravidian word. This error may be compared with Klaproth's representing **kuraṭa,** a blind, as a Sanskrit word; instead of referring it to the Dravidian languages to which alone it belongs. There is a curious word in Sanskrit, kāna, one - eyed which seems to have some Dravidian relationship. It becomes in bengali, kānā, blind, which in form at least, is identical with the Dravidian negative kānā, that sees not. Possibly the Dravidian kāṇ, to see, kaṇṇu, to consider may have some ulterior connection with the Gothic **kunn-an**, to know: Greek gnō-nai; Sans. ñā; Latin gna (gnarus); old High German **chann**. The different shades of meaning which are attributed in greek to **gnō-nai**, and eide-nai, seem to corroborate this supposition; for the latter is represented as

meaning to know by reflection, to know absolutely, whereas the former means to perceive, to mark, and may therefore have an ulterior connection with the Dravidian root" (C.G.D.F.L.P.591)

கண்[2] *kaṉ,* பெ.(n.) 1. திரட்சி; well grown or bulky object. 2. உருண்டை; round object. 3. மரக்கணு; joint in bamboo or sugarcane, connection between a bough or flower and its stem. 4. மூங்கில் (திவா.); bamboo. 5. வித்து; seed. *"நாதமாஞ் சத்தியதன் கண்ணாம்" (சி.போ.9.3:3).*

[குல் → குள் → கள் → கண்.]

கண்[3] *kaṉ,* பெ.(n.) 1. துளை; aperture, orifice. *"கால்வாய்த் தலையின் கண்கள்" (பாரத.முதற்.72);* சல்லடைக்கண், வலைக்கண் (உ.வ.). 2. பகடைக் காயின் பக்கத்துளை அல்லது வரி; bore or line on the sides of the dice.

தெ. கன்னமு; **ம., து., க.** கண்.

[குல் → குள் → கள் → கண்.]

கண்[4] *kaṉ,* பெ.(n.) பற்றுக்கோடு; protection, support. *"கண்ணன் கண்ணல்ல தில்லையோர் கண்ணே" (திவ்.திருவாய்.2.2:1).*

[கண் = பார்வை, பார்க்கும் ஆசை, பற்று.]

கண்[5] *kaṉ,* பெ.(n.) பாயின் நெட்டிழையாகிய நூல் (G.Tn.D.1.220); longitudinal threads used for the warp of a mat.

[கண் = துளை, இடைவெளி, இடைவெளி யடுத்த நூல்.]

கண்[6] *kaṉ,* பெ.(n.) 1. இடம்; place, site. *"ஈர்ங்கண்மா ஞாலம்" (குறள்,1058).* 2. உடம்பு; body. *"பொன்கட் பச்சை" (பரிபா.3:82).* 3. மேற்பரப்பிடம் (சொ.ஆ.க.48); high level ground.

[கண் = துளை, பெரிய துளை, விடுபட்ட இடைப்பரப்பு, பரந்த இடம், பருமை, பருமையான பொருள்.]

கண்[7] *kaṉ,* பெ.(n.) 1. பெருமை (திவா.); greatness. 2. அறிவு; knowledge, wisdom. "கள்ளொற்றிக் கண சாய்பவர்" (குறள்,927). 3. உணர்த்துவது; that which reveals. *"சொன்ன சிவன் கண்ணா" (சி.போ.5.2:1).*

[கண் = இடம், பருமை, பெருமை.]

கண்[8] *kaṉ,* பெ.(n.) 1. வெளிச்சம்; lightness. விளக்கு கண் சிமிட்டுகிறது (உ.வ.). 2. ஒளி; light. நிலவு கண் விரிந்தது (இ.வ.).

[கண், காணும் திறனால் ஒளிக்கு ஆகி வந்தது.]

கண்[9] *kaṉ,* பெ.(n.) 1. அழகு; beauty. 2. செல்வம்; wealth.

[கண் = கண்போல் அழகியது, சிறந்தது.]

கண்[10] *kaṉ,* பெ.(n.) 1. ஒன்றின்மேல் வைக்கும் விருப்பம்; liking. கண்ணாகப் போற்றுவான். 2. இன்றியமையாத பொருள்; the most important object, etc. இதைக் கண்ணாகக் கருதுக.

ம. கண்

[கண் = கண்ணுறக் காணும் வேட்கை.]

கண்[11] *kaṉ,* பெ.(n.) கருமை; black.

[கள் → கண்.]

கண்[12] *kaṉ,* பெ.(n.) முளை; sprout. அவரை விதை நேற்றுக் கண் விட்டது (உ.வ.); *அக்குள் கட்டி மருந்திட்ட பின் கண்ணுடைந்தது (உ.வ.).*

து. கண்

[குள் → கள் → கண் (முளை).]

கண்[13] *kaṉ,* பெ.(n.) சிறுமை, சிறியது; small, that which is small. *"கண்ணஞ்சா வேலாள் முகத்த களிறு" (குறள்,500).*

[குள் (சிறியது) → கள் → கண். சிறிய சுள்ளி விறகைக் கண்விறகு என்றும் சிறிய விரலைக் கண்விரல் என்றும் கூறுவர்.]

கண்[14] *kaṉ,* பெ.(n.) 1. அதிகார இடம், பதவி; rank in a state (சேரநா.). 2. கண்காணிப்பு; keeping an eye.

ம. கண்

[குள் → கள் → கண்.]

கண்[15] *kaṉ,* இடை.(part.) 1. ஏழனுருபு (நன்.302.); ending of the locative. 2. ஓர் அசை நிலை; an expletive. *"மீன் கண்ணற்று" (புறநா.109: 10).*

[கண் = இடம். இடப்பொருளில் வந்த ஏழாம் வேற்றுமை சொல்லுருபு. காண் → கண் (அசைநிலை).]

கண்[16] *kaṇ,* இடை.(part.) பண்புப் பெயரீறு; abstract noun ending. அலக்கண், இடுக்கண், புண்கண்.

[கள் → கண். திரட்சி கருத்து வினையியைபுக் கருத்துக்கு அரணாயிற்று.]

கண்கட்டி[1] *kaṇ-kaṭṭi,* பெ.(n.) 1. கண்ணிலுண்டாகும் பரு; sty on the eye lid.

ம.,க. கண்குரு; **தெ.** கனுகுருபு; **து.** கண்ணுகளுவெ; **பட.** கண்ணுகட்டி.

[கண் + கட்டி.]

கண்கட்டி[2] *kaṇ-kaṭṭi,* பெ.(n.) கண்ணைக்கட்டிக் கொண்டு பிறரைத் தொட முயலும் சிறுவர் விளையாட்டு; a children's game blind-folding the eyes with a cloth and trying to touch others.

மறுவ. கண்ணாம்பொத்தி

தெ. கன்னுகட்டு

[கண் + கட்டி – கண்கட்டி = கண்ணைத் துணியால் கட்டிக் கொள்ளுதல்.]

கண்கட்டிவித்தை *kaṇ-kaṭṭi-vittai,* பெ.(n.) ***கண்கட்டுக்கலை*** பார்க்க; see *kaṇ-kaṭṭu-k-kalai.*

மறுவ. கண்கட்டுவித்தை

து.,தெ. கன்னுகட்டுவித்ய

[கண்கட்டு → கண்கட்டி + வித்தை.]

கண்கட்டு[1]**–தல்** *kaṇ-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கண்ணைக்கட்டி விடுதல்; to blind–fold. 2. மந்திரத்தால் கண்ணை மறைத்தல்; to blind the eyes by magic. *"ஈதென்ன கண்கட்டு மாயம்" (இராமநா.ஆரணிய.28).* 3. வஞ்சித்தல்; to deceive.

ம. கண்கெட்டுக; **க.,பட.** கண்கட்டு, கண்ணுகட்டு. **து.** கண்ணுகட்டுநி.

[கண் + கட்டு.]

கண்கட்டு[2] *kaṇ-kaṭṭu,* பெ.(n.) கண்ணைப் பொத்துகை; blindfolding, blindman's buff. *'கண்ணைக் கட்டிக் காட்டிற் விட்டார் போல்' (பழ.).*

து. கண்ணுகட்டு

[கண் + கட்டு.]

கண்கட்டுக்கலை *kaṇ-kaṭṭu-k-kalai,* பெ.(n.) மாயத்தால் கண்ணை கட்டும் கலை; to blind the eyes by magic.

[கண் + கட்டு + கலை.]

கண்கட்டுவித்தை *kaṇ-kaṭṭu-vittai,* பெ.(n.) ***கண்கட்டுக்கலை*** பார்க்க; see *kaṇ-kaṭṭu-k-kalai. "கண்கட்டு வித்தைகளும் காட்டி" (குற்றா.குற.116:1).*

[கண்கட்டு + வித்தை.]

கண்கடி *kaṇ-kaḍi,* பெ.(n.) 1. கண்ணில் ஏற்படும் அரிப்பு; itching sensation in the eyes. 2. பொறாமை; jealousy, envy (சேரநா).

ம. கண்கடி; **தெ.** கனுகட்டு.

[கண் + கடி.]

கண்கடை *kaṇ-kaḍai,* பெ.(n.) ***கடைக்கண்*** பார்க்க; see *kaḍai-k-kaṇ.*

[கண் + கடை.]

கண்கண்டதெய்வம் *kaṇ-kaṇḍa-teyvam,* பெ.(n.) நேரருள் இறைவன்; God whose presence is easily manifest. *"உன்போற் கண்கண்ட தெய்வமுளதோ" (குமர.பிர.சகலகலா.10).* 2. தெய்வத்திற்கு ஒப்பானவர்; man of divine quality.

[கண்கண்ட + தெய்வம். கண்கண்ட = நேரில் தோன்றுகின்ற.]

கண்கண்ணாடி *kaṇ-kaṇṇaḍi,* பெ.(n.) பார்வைக் குறையுடையோர் அணியும் ஆடி; eye-glass, spectacle.

மறுவ. மூக்குக்கண்ணாடி

க. கண்ண டக்க

[கண் + கண்ணாடி.]

கண்கண்ணி *kaṇ-kaṇṇi,* பெ.(n.) குறுங்கண்ணி; small garland; coronal.

[கண் + கண்ணி. கண் = சிறிது.]

கண்கயில் *kaṇ-kayil,* பெ.(n.) உடைத்த தேங்காயின் மேல்மூடி (யாழ்ப்.); top piece of a coconut shell with the kernel. அடிக்கயில் (யாழ்ப்).

மறுவ. கண்சொட்டை, கண்மூடி.

[கண் + கயில். கயில் = தேங்காயின் பகுதி.]

கணகா-ததல்[1] *kaṉ-kari-*, 4 செ.குன்றாவி.(v.t.) கண்ணில் எரிச்சல் உண்டாதல்; to feel irritation in the eye.

[கண் + கரி.]

கண்கரி-த்தல்[2] *kaṉ-kari*, 4 செ.கு.வி.(v.i.) பரிவுணர்வை வெளிப்படுத்துதல்; to express sense of pity. *`கண்ணுக்குக் கரித்தவர்களும் மண்ணுக்குப் பிறந்தவர்களும் வேண்டும்' (பழ.).*

து. கண்கர; **க.** கநிகர.

[கண் + கரி – கண் கரி = கண்செய்தல், கண்ணோடுதல், மனமிரங்கல்.]

கண்கரித்தல் *kaṉ-karittal*, பெ.(n.) பொறாமை (உ.வ.); envy.

[கண் + கரித்தல்.]

கண்கருப்பு *kaṇkaruppu*, பெ.(n.) உடம்பின் சூட்டி னால் கண்ணில் ஏற்படும் வலி; irritation in the eye due to excessive heat of the body. (சா.அக.)

[கண் + கருப்பு. கடு → கடுப்பு → கருப்பு.]

கண்கல-த்தல் *kaṉ-kala-*, 3 செ.கு.வி.(v.i.) ஒருவரையொருவர் பார்த்தல்; to look at each other, to exchange glances. 2. எதிர்ப்படுதல்; to come in sight. *"கண்கலக்கப் பூத்த கற்பக மொத்தது" (சீவக.2545).*

க. கண்காண், கண்ணுகாண்.

[கண் + கல.]

கண்கலக்கம் *kaṉ-kalakkam*, பெ.(n.) கண்ணுறு துன்பம்; affliction in the eyes. 2. வருத்தம்; distress. *"பாவிபடுங் கண்கலக்கம் பார்த்துமிரங் காதிருத்தல்" (தாயு.பராபரக்.261).*

[கண் + கலக்கம்.]

கண்கலங்கு-தல் *kaṉ-kalaṅgu-*, 7 செ.கு.வி.(v.i.) தூசி முதலியன விழுதலால் கண்கலக்கமடைதல்; to be dimmed, as the eyes from dust, tears, etc. *"தண்ணிமையைக் கண்டிருக்க மாட்டாமற் கண்கலங்கு மாறன்" (திவ்.திருவாய். நூற்.39).*

[கண் + கலங்கு.]

கண்கலவி *kaṉ-kalavi*, பெ.(.n.) காதற்குறிப்போடு முதன்முறை தலைவனுந் தலைவியுங் காண்கை; first meeting of eyes signifying union of hearts, exchange of amorous glances between lovers for the first time. *"தைவயோகத்தாலே இருவர்க்குங் கண்கலவி யுண்டாய்" (ஈடு,5.3 பிர.).*

[கண் + கலவி.]

கண்கவர்-தல் *kaṉ-kavar*, 2 செ.கு.வி.(v.i.) பிறர் பார்வையை ஈர்த்தல்; to fascinate, attract.

[கண் + கவர்.]

கண்கலிழ்-தல் *kaṉ-kaliḻ-*, 2 செ.கு.வி.(v.i) **கண்கலங்கு-தல்** பார்க்க; see *kaṉ-kalaṅgu-* *"மெய்ம்மலி யுவகையின் எழுதரு கண்கலிழ் உகுபனி அரக்குவோர் தேற்றாம்" (குறுந்.398).*

[கண் + (கலுழ்) கலிழ்.]

கண்கழுவு-தல் *kaṉ-kaḻuvu*, 7 செ.கு.வி.(v.i.) 1. கண்களைக் கழுவுதல்; to wash eyes. 2. இளம்பயிர்க்கு நீர் பாய்ச்சுதல்; to water young plants or newly sown seeds.

[கண் + கழுவு.]

கண்களவுகொள்(ளு)-தல் *kaṉ-kaḷavu-koḷ(ḷu)-*, 7 செ.குன்றாவி.(v.t.) தான் பிறனைப் பார்ப்பதை அவன் காணாதவாறு அவனைக் களவாகப் பார்த்தல்; to stealthily gaze at one without being seen by that one. *"கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கம் காமத்தில்" (குறள்,1092).*

[கண் + களவு + கொள்.]

கண்கனல்(லு)-தல் *kaṉ-kaṉal(lu)-*, 13 செ.கு.வி.(v.i.) கண்சிவத்தல்; to be inflamed, as the eyes with anger. *"கண்கனன்று வேலை விறல்வெய்யோ னோக்குதலும்" (பு.வெ.6:23).*

[கண் + கனல்.]

கண்காசம் *kaṉ-kāšam*, பெ.(n.) **கண்புரை** பார்க்க; see *kaṉ-purai.*

[கண் + காசம்.]

கண்காட்சி *kaṉ-kāṭci*, பெ.(n.) 1.பார்வையிற்படும் காட்சி; view at sight. 2. பார்த்து உணர்ந்து பயன்பெறும் வகையிலமைந்த பொருட்காட்சி; exhibition, fair, show. சென்னைத்தீவுத்திடலில் கண்காட்சி நடைபெறும் (உ.வ.).

[கண் + காட்சி.]

கண்காட்சிச்சாலை *kaṇ-kāṭci-c-cālai,* பெ.(n.) அரும்பொருட்காட்சி யரங்கம்; museum, place where an exhibition is held. சென்னைக் கண்காட்சிச் சாலை சிறப்பாயிருக்கிறது (உ.வ.).

[கண் + காட்சி + சாலை.]

கண்காட்டி[1] *kaṇ-kāṭṭi,* பெ.(n.) அழகுள்ளவன் (திவ்.பெரியதி.8.6:3.வியா.); one who looks handsome or beautiful.

[கண் + காட்டி.]

கண்காட்டி[2] *kaṇ-kāṭṭi,* பெ.(n.) கண்காணிப்பாளர், நிருவாகி (திவ்.பெரியதி.1.2:9 வியா.ப.84); master, superintendent.

[கண் + காட்டி.]

கண்காட்டிவிடு-தல் *kaṇ-kāṭṭi-viḍu-,* 18 செ. குன்றாவி.(v.t.) பார்வைக் குறிப்பால் ஏவி விடுதல்; to instigate with a wink, set on with a significant look. *"என்மேற் கண்காட்டி விட்ட" (குற்றா. குற. 116.2.)*

[கண் + காட்டி + விடு.]

கண்காட்டு-தல் *kaṇ-kāṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) கண்சிமிட்டிக் குறிப்புணர்த்தல்; hint one's intention by wink. *"காமனையுங் கண்காட்டி" (தமிழ்நா.90).*

ம. கண்காணிக்கு

[கண் + காட்டு.]

கண்காட்டுவான் *kaṇ-kāṭṭuvāṉ,* பெ.(n.) 1. குருடர் களுக்கு வழிகாட்டுவோன் (S.I.I.VIII,381); one who leads the blind. 2. வழிகாட்டுவோன்; one who guide. 3. ***கடைக்கண்*** பார்க்க see *kaḍai-k-kaṇ.*

[கண் + காட்டுவோன்.]

கண்காண்-தல் *kaṇ-kāṇ-,* 16 செ.குன்றாவி(v.t.) விழியால் உணர்தல்; to perceive with the eyes (in opposition to மனம்காண்) (கருநா.).

க. கண்காண்; **தெ.** கனுகோனு, கனுங்கோனு.

[கண் + காண்.]

கண்காண்கை *kaṇ-kāṇgai,* பெ.(n.) 1. விழியால் பார்க்கை; looking. 2. வழிகாட்டுகை; showing path, guidance. (கருநா.)

க. கண்காணிகெ

[கண் + காண்கை. 'கை' பண்.பெ.ஈறு.]

கண்காணக்காரன் *kaṇ-kāṇa-k-kāraṉ,* பெ.(n.) ***கண்காணச் சேவகன்*** பார்க்க; see *kaṇ-kāṇa-c-cēvagaṉ.*

[கண்காணம் + காரன்.]

கண்காணச்சேவகன் *kaṇ-kāṇa-c-cēvagaṉ,* பெ.(n.) காவற்காரன் (வின்.); watchman.

[காண்கானம் + சேவகன்.]

கண்காணம் *kaṇ-kāṇam,* பெ.(n.) 1. மேற்பார்வை (திருவாலவா.நாட்டுச்.4); supervision. 2. பயிர்க் காவல் (R.F.); watch kept over fields or produce on behalf of the landlord. 3. கதிரறுக்கக் கொடுக்கும் ஆணை (R.F.); permission granted by landlord to his tenant to harvest his crop. 4. ஒப்படி மேற்பார்வைச் சம்பளம் (இ.வ.); fee paid in kind for watching the sheaves of grain.

[கண் + காண் + அம் – கண் காணம் (நேரிற் பார்த்தல்).]

கண்காணாதோடல் *kaṇ-kāṇā-d-ōḍal,* பெ.(n.) மறுபடியும் நோய்திரும்பாது முற்றிலும் குணமாதல்; curing of diseases radically without a recurrence or relaps (சா.அக.).

[கண் + காணாது + ஓடல்.]

கண்காணி[1]**-த்தல்** *kaṇ-kāṇi-,* 4 செ.குன்றாவி.(v.t.) மேலாய்வுசெய்தல் (கல்வெட்டு); to oversee, supervise, superintend.

ம. கண்காணிக்குக; **தெ.** கனிபெட்டு.

[கண்காணம் → கண்காணி : நேரிற் கண்ணாரக் கண்டு ஆய்பவர் (செல்வி.78,சிலை 245).]

கண்காணி[2] *kaṇ-kāṇi,* பெ.(n.) மேற்பார்வையாளன்; supervisor. *"பண்டாரம் பல்கணக்குக் கண்காணி பாத்தில்லார்" (சிறுபஞ்.38).* 2. விளையுள் பணி அலுவலர்; inspector of crops, measurer of grain on a village establishment. 3. கூலியாட்களை மேற்பார்ப்போன்; supervisor of coolies. கூலியாள் கூட்டத்திற்குக் கண்காணி வேண்டும் (உ.வ.). 4. மேற்பார்வை (T.A.S.i.163); supervision.

5. கண்காணியர்; (Chr.) Bishop. 6. ஆட்சேர்க்கும் பணியைச் செய்பவர், முகவர்; agent.

மறுவ. கங்காணி (கொ.வ.)

ம. கண்காணி

[கண் காணம் → கண்காணி (செல்வி.78. சிலை 245).]

கண்காணி[3] *kaṇ-kāṇi,* பெ.(n.) மேற்பார்வை யிடுதற்குரிய பழைய வரி (S.I.I.1,91); an ancient tax in kind, for supervision.

[கண் + காணி.]

கண்காணிக்கணக்கர்முதல் *kaṇkāṇi-k-kaṇakkar-mudal,* பெ.(n.) பழைய வரிவகை (S.I.I.VI,33); an ancient tax.

[கண்காணி + கணக்கர் + முதல்.]

கண்காணிக்கை *kaṇ-kāṇikkai,* பெ.(n.) ***கண்காண்கை*** பார்க்க; see *kaṇ-kāṇgai.*

[கண்காணி → கண்காணிக்கை.]

கண்காணிநாயகம் *kaṇ-kāṇi-nāyagam,* பெ.(n.) மேற்பார்வைப் பணித்தலைவர்; office of head -over-seer. *"ஸ்ரீராஜராஜீசுவர முடையார்க்கு ஸ்ரீகாரியக் கண்காணிநாயகஞ் செய்கின்ற"* (S.I.I.II.149).

[கண்காணி + நாயகம்.]

கண்காணிப்பாளர் *kaṇ-kāṇi-p-pāḷar,* பெ.(n.) அலுவல் நடைமுறைகளைக் கவனிக்கும் பொறுப்புடைய அலுவலர்; superintendent. உதவியாளராய் இருந்த அவர், கண்காணிப்பாளராய் பதவியுயர்வு பெற்றார்.

[கண் + காணிப்பு + ஆளர்.]

கண்காணிப்பு *kaṇ-kāṇippu,* பெ.(n.) மேற்பார்த்தல்; supervision.

[கண் + காணிப்பு.]

கண்காணிப்பூ *kaṇ-ṇ-kāṇi-p-pū,* பெ.(n.) கண்ணில் விழும்பூ; leucoma.

[கண்ணாணி + பூ. கண்ணாணி - கருவிழி. கண் + ஆழி – கண்ணாழி → கண்ணாளி → கண்ணாணி.]

கண்காணியார் *kaṇ-kāṇiyār,* பெ.(n.) கிறித்துவ மன்றங்களை மேற்பார்க்கும் குரவர் (Chr.) Christain Bishop.

[கண்காணி + ஆர் – கண்காணியார் (செல்வி.78, சிலை 246).]

கண்காந்தல் *kaṇ-kāntal,* பெ.(n.) கண்ணெரிவு; burning sensation in the eyes.

[கண் + காந்தல்.]

கண்காரன்[1] *kaṇ-kāraṉ,* பெ.(n.) குறிசொல்லுவோன் முன்னிருந்து, வினாவிய செய்தியைக் கண்டுபிடிக்க மையைப் பார்ப்பவன் (வின்.); he who sits before a conjuror looking at the magical paint without winking, to make discoveries.

[கண் + காரன்.]

கண்காரன்[2] *kaṇ-kāraṉ,* பெ.(n.) 1. மேற்பார்ப்போன்; supervisor. *"கரைதுறைக ளேழிலுள்ள கண்கார ரெல்லாம்" (நெல்விடு.221).* 2. நோட்டக்காரன்; one who assays coins, etc., shroff. *"கண்காரச் செட்டிகள் பால வட்டமறக் காட்டி மதிப்பிடுவீர்" (பஞ்ச.திருமுக.1421).* 3. குறிப்பறியத் தக்கவன் (யாழ்.அக.); shrewd person.

[கண் + காரன். காரன் - பெயரீறு ஒ.நோ. கடன்காரன், வேலைக்காரன்.]

கண்கிடங்கில்விழல் *kaṇ-kiḍaṅgil-viḻal,* பெ.(n.) செரிமானமில்லாத கழிச்சல், கக்கல் முதலிய நோய்களினால் கண், ஆழப் பதிதல்; sinking of the eyes as with in a hole, observed in cases of diarrhoea, cholera etc. (சா.அக.)

[கண் + கிடங்கில் + விழல்.]

கண்கிறங்கு–தல் *kaṇ-kiṟaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) ***கண்சுழலு–தல்*** பார்க்க; see *kaṇ-šuḻalu.*

பட. கண்எரெ (தர)

[கண் + கிறங்கு. கிறங்குதல் - மிகச் சோர்தல்; செயல்குன்றுதல்.]

கண்குத்தவிடல் *kaṇ-kutta-viḍal,* பெ.(n.) 1. விழி நிலை கொள்ளுதல்; eye becoming fixed penetrating or pin-prick pain experienced in the eye, this is said to arise from the derangement of vayu in the system. 2. கண்ணைக் குத்தல்; to prick the eye with something (சா.அக.).

[கண் + குத்த + விடல்.]

கண்குத்திக்கள்வன் *kaṇ-kutti-kaḷvaṉ,* பெ.(n.) விழித்திருக்கத் திருடுபவன்; one who steals some-

thing evenwhile it is being watched. *"வைகற் பதின்மரைக் காமுற்றுச் செல்வாயோர் கட்குத்திக் கள்வனை" (கலித்.108:48).*

[கண் + குத்தி + கள்வன். கண்குத்துதல் = நன்கு விழித்திருத்தல். கண்குத்திக் கள்வன் என்பது இகழுரை.]

கண்குத்திப்பாம்பு *kaṇkutti-p-pāmbu,* பெ.(n.) 1. பச்சைப்பாம்பு (பிங்.); whip-snake, green. 2. ஒருவகைப் பாம்பு (m.m.); pit-viper, arboreal snake.

ம. கண்கொத்தி

[கண் + குத்தி + பாம்பு.]



கண்குத்திப்பாம்பு

கண்குத்து *kaṇkuttu,* பெ.(n.) கண்ணோய் வகை; a kind of eye disease.

[கண் + குத்து.]

கண்குந்தம் *kaṇ-kundam,* பெ.(n.) கருவிழியின் நடுவேயுள்ள கண்மணியின்மேல் அழற்சியினால் பருவைப் போன்ற சிலந்தியுண்டாகிப் புடைத்துக் காணும் ஒரு கண்ணோய்; a tubercle causing the protrusion of the cornea due to inflammation of the central part of the retina. (சா.அக.)

[கண் + குந்தம். குந்தம் = குறைபாடு, நோய்.]

கண்குரு *kaṇ-kuru,* பெ.(n.) கண்ணிமையிலுண்டாகும் சிறுகட்டி; boil on eyelid, sty.

ம.,க.கண்குரு; தெ.கணுகுருபு.

[கண் + குரு. குரு = சிறு, சிறு கட்டி. ஒ.நோ. வேர்க்குரு.]

கண்குவளை *kaṇ-kuvaḷai,* பெ.(n.) ***கண்குழி*** பார்க்க; see *kaṇ-kuḻi.*

[கண் + குவளை.]

கண்குழி[1] *kaṇ-kuḻi,* பெ.(n.) கண்கூடு; eye-socket.

ம. கண்குழி. து. கண்ணகுரி, கண்ணகூடு.

[கண் + குழி.]

கண்குழி[2]**–தல்** *kaṇ-kuḻi-,* 2 செ.கு.வி.(v.i.) விழி உள்ளடங்குதல்; sinking of the eyes, by disease, by emaciation or by nature.

[கண் + குழி.]

கண்குழிவு *kaṇ-kuḻivu,* பெ.(n.) எளிமை; poverty, destitution. *`தன்னிற் காட்டிலும் கண்குழிவுடையார்' (ஈடு,3.3:1).*

[கண் + குழிவு.]

கண்குளிர்–தல் *kaṇ-kuḷir-,* 2 செ.கு.வி (v.i.) பார்த்து மகிழ்தல்; to be refreshed by looking at a pleasing object.

க. கண்தணிவு; து. கண்ணு தப்பாபுநி.

[கண் + குளிர்.]

கண்குளிர்ச்சி *kaṇ-kuḷircci,* பெ.(n.) கண்களிப்பு; gratification of the eye.

[கண்குளிர் → கண்குளிர்ச்சி.]

கண்குறிப்பு *kaṇ-kuṟippu,* பெ.(n.) கண்சாடை; hint conveyed by the eye.

[கண் + குறிப்பு.]

கண்குறை–த்தல் *kaṇ-kuṟai-,* 4 செ.குன்றாவி.(v.t.) கண்ணைப் பறித்திடுதல் (தொல்.பொ.258,உரை); to put out one's eyes; to gouge out the eyes.

[கண் + குறை.]

கண்கூச்சம் *kaṇ-kūccam,* பெ.(n.) மிகுந்த ஒளியாற் கண்கூசுகை; dazzling of the eyes by strong light.

[கண் + கூச்சம்.]

கண்கூசு–தல் *kaṇ-kūśu-,* 5 செ.கு.வி.(v.i.) பேரொளியால் கண்ணொடுங்குதல்; get pricks in the eye due to glare.

க. கண்ணுகுக்கிசு; து. கண்ணு கந்துநி.

[கண் + கூசு.]

கண்கூடு[1]–தல் *kaṇ-kuḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. ஒன்று கூடுதல்; to join, come together. *"பொருந்திய வுலகினும் புகழ்கண் கூடிய" (சிவக. 327)* 2. நெருங்குதல்; to be crowded together. "கண் கூடியிருக்கை" *(பொருந.15).*

[கண் + கூடு.]

கண்கூடு[2] *kaṇ-kūḍu,* பெ.(n.) ***கண்குழி*** பார்க்க; see *kaṇkuḻi.*

க. கண்ணிந கூடு, கண்ணுகுதுரு.

[கண் + கூடு.]

கண்கூடு[3] *kaṇ-kūḍu,* பெ.(n.) 1. ***கண்குழி*** பார்க்க (இங்.வைத்.8); see *kaṇ-kuḻi.* 2. தோற்றப்பாடு; that which is evident to actual vision. *"கண் கூடல்லது கருத்தள வழியும்" (மணிமே.27:274).* 3. காட்சித் துறை (சிலப்.8:77 உரை); first view of the heroine by the hero or vice versa. 4. மிகவும் தெளிவு, வெளிப்படை; plain, obvious.

[கண் + கூடு.]

கண்கூடுவரி *kaṇ-kūḍu-vari,* பெ.(n.) ஒருவர் கூட்டவன்றித் தலைவன் தலைவியர் தாமே சந்திக்கும் நிலைமையை நடித்துக் காட்டும் நடிப்பு (சிலப்.8:77 உரை); a dramatic play which expresses the first meeting of lovers.

[கண் + கூடு + வரி. கண் கூடுதல் = ஒருவரையொருவர் நேரிற் காணுதல்.]

கண்கூர்மை *kaṇ-kūrmai,* பெ.(n.) பார்வை நுட்பம்; acuteness of eye-sight.

[கண் + கூர்மை. கூர்மை = கூரியநோக்கு.]

கண்கூலி[1] *kaṇ-kūli,* பெ.(n.) இழந்த பொருளைக் கண்டுபிடிக்கக் கொடுக்கும் அன்பளிப்பு (வின்.); present for finding a lost article (சேரநா.).

ம. கண் கூலி

[காண் → கண் + கூலி. கண் = கண்டுபிடித்தல்.]

கண்கூலி[2] *kaṇ-kūli,* பெ.(n.) சேர்ப்புச் சீட்டு நடத்துவதற்கான ஊதியம்; allowances given to the manager of a chit fund.

[கண் + கூலி. கண் = கண்காணிப்பு.]

கண்கூலி[3] *kaṇ-kūli,* பெ.(n.) பழைய வரிவகை (S.I.I.Vol.iv,122); a kind of an ancient tax.

[கண் + கூலி.]

கண்கெடச்செய்–தல் *kaṇ-keḍa-cey-,* 1 செ.குன்றாவி. (v.t.) 1. பார்வையை அழித்தல்; to cause the lose of one's sight. 2. அறிவழித்தல்; to cause the lose of one's wits. 3. அறிந்து தீமை செய்தல்; to cause evil which one knows to be wrong.

[கண் + கெட + செய்தல். கண்கெட = நேரிற் கண்டும் அறியாமை மீதூரல்.]

கண்கெடப்பேசு–தல் *kaṇ-keḍa-p-pēsu-,* 7 செ.கு.வி.(v.i.) 1. அறிந்ததை மறைத்துப் புறம்பேசுதல்; to falsify the evidence of one's own in delivering testimony. 2. பிறரது அறிவழியப் பேசுதல்; to brain wash.

[கண் + கெட + பேசு. கண் = கண்டது, பார்த்தது, அறிந்தது.]

கண்கெடு–தல் *kaṇ-keḍu-,* 20 செ.கு.வி(v.i.) 1. பார்வையழிதல்; to lose one's sight. 2. அறிவழிதல்; to lose one's wits.

[கண் + கெடு.]

கண்கொட்டு–தல் *kaṇ-koṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) கண்ணிமைத்தல்; to wink.

தெ. கனுகீடு

[கண் + கொட்டு. கொட்டு – அடி, சேர், ஒட்டு.]

கண்கொடுத்தவன் *kaṇ-koḍuttavaṉ,* பெ.(n.) 1. கண்கொடை (கண்தானம்) செய்தவன்; eye-donor. 2. இறைவன், படைத்தவன்; God. 3. ஆசிரியர்; teacher.

பட. கண்ணுகொட்டம

[கண் + கொடுத்தவன். கண் = ஊனக்கண், உயிர், அறிவு.]

கண்கொதி *kaṇ-kodi,* பெ.(n.) ***கண்ணாறு*** பார்க்க; (யாழ்ப்.) see *kaṇṇāṟu.*

[கண் + கொதி.]

கண்கொதிப்பு *kaṇ-kotippu,* பெ.(n.) கண்ணுக்கு ஏற்படும் அழற்சி; inflammation of the eye.

[கண் + கொதிப்பு.]

கண்கொழுப்பு *kaṇ-koḷuppu,* பெ.(n.) செருக்கும், தானெனும் இறுமாப்பும் கொண்ட நோக்கு; the sight which expresses conceit, or ego.

[கண் + கொழுப்பு.]

கண்கொள்–(ளு)–தல் *kaṇ-koḷ(ḷu)-,* 16 செ.கு.வி. (v.i.) முற்றிலும் பார்த்தல்; look at as a whole. 2. கண்ணைக் கவர்தல்; to attract the eyes.

[கண் + கொள்.]

கண்கொள்ளாக்காட்சி *kaṇ-koḷḷā-kāṭci,* பெ.(n.) வியத்தகு தோற்றம்; a rare and wonderful scene.

[கண் + கொள்ளாத + காட்சி. கொள்ளாத → கொள்ளா (ஈ.கெ.எ.ம.பெ.எ.).]

கண்சவ்வு *kaṇ-ṡavvu,* பெ.(n.) விழியோரத்தசை; conjunctiva.

[கண் + சவ்வு.]

கண்சா–தல் *kaṇcā-,* 19 செ.கு.வி.(v.i.) கண்ணொளி மங்குதல்; to decline as of eye sight.

[கண் + சா. சாதல் = வலிவிழத்தல்.]

கண்சாடை *kaṇ-ṡāḍai,* பெ.(n.) கண்ணாற் காட்டும் குறிப்பு; instigating by wink.

மறுவ. கண்குறி. கண்ணடி

க. கண்சாடெ; **தெ.** கனுசன்ன; **பட.** கண்ணுசாடெ.

[கண் + சாடை.]

மக்களின் பேச்சில் வெளிப்படை [மொழித் தொடர்பான நிகழ்வுகள்] குறிப்பு [மொழித் தொடர்பற்ற நிகழ்வுகள்] ஆகியன இருக்கும் கருத்தை வெளிப்படுத்துவதற்கு மொழித் தொடர்பான நிகழ்வுகள் மிகுதியாகப் பயன்படும் என்றாலும் மொழித் தொடர்பற்ற நிகழ்வுகளால் வெளிப்படுத்தும் கருத்துகளும் உண்டு. இவை கண்ணிமைத்தல், தலை யசைத்தல், கையசைத்தல், புன்னகை பூத்தல் போன்ற உடல் உறுப்புகளால் வெளிப்படுத் துவன வாக அமையும். இதை ஆங்கிலத்தில் body language என்பர். இவற்றுள் கண்ணால் காட்டும் குறிப்புகள் அகலத்திறத்தல், முறைத்துப் பார்த்தல், ஓரக்கண்ணால் பார்த்தல் முழுவதுமாக மூடுதல், கண் கொட்டுதல் போன்று பல வகையில் அமையும்.

கண்சாத்து–தல் *kaṇ-ṡāttu,* 5 செ.குன்றாவி.(v.t.) அன்பொடு நோக்குதல்; to look upon with love. *"கயலுருவ நெடுங்கண் சாத்தாய்" (காஞ்சிப்பு. கழுவத.204).*

[கண் + சாத்து. சார்த்து → சாத்து.]

கண்சாய்–தல் *kaṇ-ṡāy-,* 2 செ.கு.வி. (v.i.) 1. அறிவு தளர்தல்; to lose one's wits. *"கள்ளொற்றி கண்சாய் பவர்" (குறள்,927).* 2. அன்பு குறைதல்; to grow cold in love.

[கண் + சாய்.]

கண்சாய்ப்பு *kaṇ-ṡāyppu,* பெ.(n.) 1. வெறுப்பான பார்வை (வின்.); side-look which expresses displeasure. 2. இசைவுப்பார்வை (வின்.); connivance. 3. குறிப்பாகக் காட்டும் இரக்கம் (வின்.); favour shown by a wink. 4. ***கண்ணூறு*** பார்க்க; see *kaṇṇūṟu.*

[கண் + சாய்ப்பு.]

கண்சாய்வு *kaṇ-ṡāyvu,* பெ.(n.) சாய்ந்த பார்வை; oblique look; side-look (சா.அக.).

[கண் + சாய்வு.]

கண்சிம்புளி–த்தல் *kaṇ-ṡimbuḷi-,* 4 செ.கு.வி (v.i.) கண்கூசுதல் (தொல்.பொருள்.292,உரை); to shrink from light, to be sensitive to light, as the eye.

[கண் + சிம்புளி. சிம்பு → சிம்புளி = துள்ளுதல், அசைதல்.]

கண்சிமிட்டி *kaṇ-ṡimiṭṭi,* பெ.(n.) எப்பொழுதும் ஓயாது கண்ணிமைக்கும் இயல்புள்ளவன்–ள்; one who is habituated to winking.

து. கண்முச்செலே; **பட.** கண்ணுமுச்சி.

[கண் + சிமிட்டி.]

கண்சிமிட்டு-தல் *kaṇ-šimiṭṭu-*, 5 செ.கு.வி (v.i.) 1. கண் இமைத்தல்; to wink, as the eye. *"கண்சிமிட்டா நோக்கும்" (ஒழிவி.யோகக்.4).* 2. கண்சாடை செய்தல்; to make a signal with the eye. *"கண்சிமிட்டில் பேசி மாதர்கள்" (திருப்பு.574).*

க. கண்சிமிடு. கண்சிவிடு.

[கண் + சிமிட்டு. சிமிழ்த்து → சிமிட்டு.]

கண்சிரட்டை *kaṇ-širaṭṭai*, பெ.(n.) முக்கண்ணுள்ள கொட்டாங்கச்சி (வின்.); top half a coconut shell, having three 'eyes' or depressions, dist. for அடிச்சிரட்டை.

ம. கண்ணஞ்சிரட்ட

[கண் + சிரட்டை.]

கண்சிவ[1]-த்தல் *kaṇ-šiva-*, 3 செ.கு.வி.(v.i.) நோய்முதலியவற்றாற் கண் செந்நிறமடைதல்; செம்மைநிறை மடைதல்; to redden, as the eyes from disease or other causes.

[கண் + சிவ.]

கண்சிவ[2]-த்தல் *kaṇ-šiva-*, 3 செ.குன்றாவி.(v.t.) சினத்தல்; to redden the eye as a result of anger. *"கறுவொடு மயங்கிக் கண்சிவந்தன்று" (பு.வெ.12. பெண்பாற்.11 கொளு).*

[கண் + சிவ.]

கண்சுருட்டு[1]-தல் *kaṇ-šuruttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) அழகு முதலியவற்றால் ஈர்த்தல் (வின்.); to entice, bewitch, captivate, fascinate by uncommon beauty or by lustre.

[கண் + சுருட்டு.]

கண்சுருட்டு[2]-தல் *kaṇ-šuruṭṭu*, 5 செ.கு.வி.(v.i.) கண்ணுறங்குதல்; to sleep; doze.

[கண் + சுருட்டு.]

கண்சுருள்(ளு)-தல் *kaṇ-šurul(lu)-*, 10 செ. குன்றாவி.(v.t.) கண்ணிமை மடங்குதல்; the folding of the eye lids (சா.அக.).

[கண் + சுருள்.]

கண்சுழல்(லு)-தல் *kaṇ-šuḷal(lu)-*, 13 செ.கு.வி.(v.i) விழிகள் மயங்குதல்; to be dazed, as from a blow, sudden light, dizziness or wonder. *"பாலாழி நீ கிடக்கும் பண்பையாம் கேட்டேயும்... கண்சுழலும்" (திவ்.இயற்.பெரியதிருவ.34).*

[கண் + சுழல்.]

கண்செம்மு-தல் *kaṇ-šemmu-*, 9 செ.கு.வி.(v.i.) கண்பொங்குதல் (வின்); to be inflamed, as the eyes.

து. கண்ணுஅர்லுநி

[கண் + செம்மு. செறுமுதல் → செம்முதல். செறுமு = வெளிப்படுத்துதல், வெளித்தள்ளுதல், பிளை முதலியன வெளித்தள்ளுதல்.]

கண்செருகு-தல் *kaṇ-šerugu-*, 9 செ.கு.வி. (v.i.) விழிகள் உள்வாங்குதல்; to roll up the eyes, as in a swoon, a fit or at death.

து. கண்பாருனி; ம. கண்மரிச்சல்.

[கண் + செருகு. செருகு = உட்செல்லுதல், உள்ளடங்குதல்.]

கண்செறியிடு[1]-தல் *kaṇ-šeṟi-y-iḍu-*, 20 செ.கு.வி. (v.i.) பார்வையால் முழுமையும் அகப்படுத்துதல்; to enclose within itself; to envelope. *"ஆகாசத்தைக் கண்செறியிட்டாற் போலே யிருக்கை" (ஈடு,5.9:1).*

[கண் + செறி + இடு. கண் = இடம். செறியிடல் = அகப்படுத்தல்.]

கண்சைகை *kaṇ-šeikai*, பெ.(n.) ***கண்சாடை*** பார்க்க; see *kaṇ-šaḍai*.

[கண் + (செய்கை) சைகை.]

கண்சொக்கு-தல் *kaṇ-šokku-*, 5 செ.கு.வி.(v.i.) 1. தூக்கம் முதலியவற்றால் கண் மயங்குதல்; to become sleepy. வயிறார உண்டதனால் கண்சொக்கியது (உ.வ.). 2. மனங்கவர் பேரழகால் கண் மயங்குதல்; to be over whelmed by dazzling beauty. அவளழகில் கண் சொக்கிப் போனேன் (உ.வ.). 3. கூடற்காலத்து உணர்ச்சி மிகுதியால் கண்மயங்குதல்; eyes getting wearied owing to the sensation experienced in sexual act.

[கண் + சொக்கு.]

கண்டக்கரப்பன் *kaṇḍa-k-karapaṉ,* பெ.(n.) கரகரப்பு புகைச்சல் முதலியன உண்டாக்கும் ஒருவகைத் தொண்டை நோய். (வின்.); disease of the throat, causing irritation, hoarseness.

[கண்டம் + கரப்பன். கண்டம் = தொண்டை. கரு – கரப்பன். மேடு, திட்டு, தடிப்பு, புடைப்பு.]

கண்டக்கருவி *kaṇḍa-k-karuvi,* பெ.(n.) மிடற்றுக்கருவி (சூடா.); larynx, cavity in throat containing vocal cords, considered as a musical instrument.

[கண்டம் + கருவி. கண்டம் = தொண்டை, மிடறு.]

கண்டக்கல் *kaṇḍa-k-kal,* பெ.(n.) நில அளவையிற் பெரும்பிரிவுக் கல்; main survey stone.

[கண்டம் + கல். கண்டம் = பிரிவு, பகுதி.]

நில அளவையின் போது நிலத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவின் மூலையிலும் நடப்படும் பெருங்கல்.

கண்டக்காறை *kaṇḍa-k-kāṟai,* பெ.(n.) ஒருவகைக் கழுத்தணி; a kind of neck ornament.

[கண்டம் + காறை. காறை = பெண்களும் குழந்தைகளும் கழுத்தில் அணிந்து கொள்ளும் ஒருவகையணி.]

கண்டகசங்கம் *kaṇḍagaśaṅgam,* பெ.(n.) முட்சங்கு (வின்.); mistletoe berry thorn.

[கண்டகம் + சங்கம். கண்டகம் = முள்.]

கண்டகட்டு *kaṇḍa-kaṭṭu,* பெ.(n.) சித்திரப் பாவகை (யாப்.வி.51); a kind of fanciful poem.

[கண்டம் + கட்டு.]

கண்டகத்தூணம் *kaṇḍaka-t-thūṇam,* பெ.(n.) கதிரவன் நின்ற விண்மீன் முதல் குருகு (மூலம்) விண்மீன் வரை எண்ணி அவ் வெண்ணோடு செவ்வாய் நின்ற விண்மீன் முதல் குருகு (மூலம்) விண்மீன் வரை எண்ணி வரும் எண்ணைக் கூட்டித் அத்தொகையை குருகு (மூலம்) விண்மீன் முதல் எண்ணி வந்த விண்மீன் (விதான.குணாகுண.37); (Astrol.) the particular naksatra which when counted from Mulam gives the number which is the sum of the numbers obtained of count up to Mulam from the naksatras in which Sun and Mars respectively stand on a particular day.

[குண்டகம் → கண்டகம் + தூணம்.]

கண்டகத்தூணம் = வட்டத்தூண், வட்டச் சுழல், கணக்கீடு.

கண்டகம்[1] *kaṇḍagam,* பெ.(n.) மரவைரம் (வின்.); heart, core, of the tree.

[கண்டு → கண்டகம் = காழ்ப்பு, திரட்சி.]

கண்டகம்[2] *kaṇḍagam,* பெ.(n.) 1. முள்; thorn. *"இளங்கண்டகம் விடநாகத்தின் நாவொக்கும்" (இறை.41:172).* 2. நீர்முள்ளி; white long flowered nail dye. *"கண்டகங்காள் முண்டகங்காள்" (தேவா.268–2).* 3. காடு (பிங்.) forest, jungle. 4. உடைவாள் (திவா.); dirk or short sword worn in the girdle. வீரன் இடையில் கண்டகம் தொங்குகிறது (உ.வ.). 5. வாள் (சூடா.); sword. 6. கொடுமை; cruelty, hard-heartedness. *"கண்டகப்பழிப் பதகரை" (உபதேசகா. சிவபுண்.289).*

த. கண்டகம் > **Skt.** kantaka

[கள் → கண்டு → கண்டகம் = முள், நீர்முள்ளி, உடைவாள், வாள். ஒ.நோ. முள் → முண்டு. முண்டகம் = முள், முள்ளி, முள்தூறு, தாழை, கருக்குவாய்ச்சி.]

கண்டகம்[3] *kaṇḍagam,* பெ.(n.) 1. விளைநிலத்தின் பரப்பளவு *(I.M.P.Sm.100)*; a measure of agricultural land. *ஒரு கண்டகம் நிலம் இல்லாதவன் (இ.வ.).* 2. ஒரு முகத்தல் அளவை, மரக்கால்; a cubic measure. *பத்துக் கண்டகம் நெல் விளைந்தது (இ.வ.).*

க. கண்டக; பட. கண்டுக (ஓர் அளவு).

[கண்டு → கண்டகம் → கண்டு = திரட்சி. கண்டகம் = குறிப்பிட்ட அளவு, பழைய பட்டணம் படியால் 120 பட்டணம்படி அளவுள்ள தவசம். 3 பட்டணம் படி = 1 வள்ளம். 40 வள்ளம் = 1 கண்டகம்.]

கண்டகம்[4] *kaṇḍagam,* பெ.(n.) புளகம் (யாழ்.அக.); horripilation. 2. கம்மாலை (யாழ்.அக.); smithy. 3. தடை (யாழ்.அக.); obstacle.

[கண்டு → கண்டகம்.]

கண்டகம்[5] *kaṇḍagam,* பெ.(n.) மை (அஞ்சனம்) (சித்.அக.); collyrium, black pigment.

[கள் → கண் → கண்டு → கண்டகம்.]

கண்டகவிதைப்பாடு *kaṇḍaga-vidaippāḍu,* பெ.(n.) ஒரு கண்டகம் அளவுள்ள தவசத்தை விதைத்தற் குரிய 5 குறுக்கை (ஏக்கர்) பரப்பளவுள்ள நிலம்; land measuring approximately five acres enabling the to sow a unit measure of *kaṇḍagam* (120 Madras measure.)

[கண்டகம் + விதைப்பாடு. இதனைக் கண்டக விரைப்பாடு என்றும், கந்தக விரைப்பாடு என்றும் பிற அகரமுதலிகள் குறித்திருப்பது முற்றிலும் வழுவாம்.]

கண்டகன் *kaṇḍagaṉ*, பெ.(n.) 1. கொடியோன்; cruel, harsh, unfeeling man. *"கன்னமே கொடு போயின கண்டகர்" (இரகு.யாக.42).* 2. பகைவன்; enemy. 3. அரக்கன்; demon. 4. இரக்கமற்றவன்; unsympathetic person.

[கள் → கண்டு → கண்டகன். கள் = முள். கண்டகன் = முள்ளன், பிறர்க்குத் தீங்கு விளைப்பவன்.]

கண்டகாந்தாரம் *kaṇḍakāntāram*, பெ.(n.) பண்வகை (திவா.); a musical mode.

[கண்டம் + காந்தாரம். கண்டம் = துண்டு, பகுதி, கிளை. காந்தாரப்பண்ணின் சிறுகிளைப்பண் ஆகலாம்.]

கண்டகாரம் *kaṇḍa-kāram*, பெ.(n.) 1. கண்டங்கத்தரி; yellow berried night shade. 2. முள்ளிலவு; thorny silk cotton. 3. கோடரி; axe.

[கண்டம் (முள்) + காரம்.]

கண்டகாரிகை *kaṇḍakārigai*, பெ.(n.) 1. கண்டங்கத்தரி; yellow berried night shade.

[கண்டம் + காரிகை.]

கண்டகி[1] *kaṇḍagi*, பெ.(n.) தீயவள் *"முதுகண்டகி யிவளா மசமுகி"* (கந்தபு.அசமுகிப்.14); cruel, harsh, hard - hearted woman.

[கள் → கண்டு → கண்டகி. கள் = முள். கண்டகி = முட்செடி, முட்செடி போன்று துன்பம் விளைப்பவள்.]

கண்டகி[2] *kaṇḍagi*, பெ.(n.) 1. தாழை; fragrant Screw-Pine. *"வெம்மினது கண்ட வியன் கண்டகி யெனவும்" (கந்தபு.தேவர்புல.20).* 2. ஒருவகை மூங்கில்; a variety of bamboo. 3. இலந்தை (இலக்.அக.); jujube-tree. 4. கருங்காலி; ebony tree. 5. சதுரக்கள்ளி; red quadrangular spurge.

ம. கண்டகி; வ. கண்டகி, கண்டகின்.

[கள் → கண்டு → கண்டகி (வ.மொ.வ.105).]

கண்டகி[3] *kaṇḍagi*, பெ.(n.) 1. முதுகெலும்பு; vertebra.

[கள் → கண்டு → கண்டகி.]

கண்டகிக்கல் *kaṇḍagi-k-kal*, பெ.(n.) வடபுல ஆறுகளில் கிடைக்கும் ஒருவகைக் கல்; a kind of stone found in certain rivers of Nothern India.

[கண்டகி + கல், கண்டகி = கண்டகி ஆறு. காசிக்கருகிலுள்ள கண்டகி என்னும் ஆற்றில் கிடைப்பதால் இப் பெயர் பெற்றது. மாலியர் (வைணவர்) வழிபாட்டுக்குத் திருமேனி செய்ய இக் கல் பயன்பட்டதாகத் தெரிகிறது.]

கண்டகுச்சம் *kaṇḍakuccam*, பெ.(n.) தொண்டையில் உண்டாகும் ஒருவகை நோய்; a kind of throat disease.

[கண்டம் + குச்சம். கண்டம் = தொண்டை. குற்றம் → குத்தம் → குச்சம் (குறைபாடு, நோய்).]

கண்டகுட்டி *kaṇḍa-kuṭṭy*, பெ.(n.) சதைப்பற்றுள்ள ஒருவகை மீன்; *a kind of fleshy fish.*

[கண்டம் + குட்டி. கண்டம் = திரட்சி, திரண்ட தசை.]

கண்டகுரண்டம் *kaṇḍa-kuraṇḍam*, பெ.(n.) நீலச்செம்முள்ளி; crested purple nail-dye (சா.அக).

[கண்டம் + குரண்டம். கண்டம் = கழுத்து. குரு → குரண்டம் = சிவந்தது.]

கண்டகோடரி *kaṇḍa-kōḍari*, பெ.(n.) ஒருவகைப் படைக்கலன் (பரசு); a kind of weapon, battle axe.

ம. கண்டகோடாலி

[கண்டம் + கோடரி. கோடு + அரி – கோடரி.]

கண்டகோடாலி *kaṇḍa-kōḍāli*, பெ.(n.) 1. ***கண்டகோடரி*** பார்க்க; see *kaṇḍa-kōḍari*. *"பாவவெங் கானகந் தனக்கே... கண்ட கோடாலியே யாகுவர்" (சிவரக.பூசாயோக.8).* 2. துறவிகளுள் ஒருசாரார் தோளில் தாங்கிச் செல்லும் கைக்கோடரி; hatchet carried on the shoulder by a class of ascetics.

ம. கண்டகோடாலி; Skt. khandaka.

[கண்டம் + கோடாலி. கோடு + அரி – கோடரி → கோடலி → கோடாலி. கண்டம் = வன்மை, வலியது.]

கண்டகோபாலன்மாடை *kaṇḍa-kōbalan-māḍai*, பெ.(n.) பழைய நாணயவகை; an ancient coin, issued by the chief, Vijaya-gaṇḍagōpāla.

[கண்டம் கோபாலன் + மாடை.]

கண்டங்கத்தரி *kaṇḍaṅkattari*, பெ.(n.) மருத்துவ குணமுள்ள படர் முட்செடி; a highly thorny medicinal plant.

மறுவ. முள்கொடிச்சி, பொன்னிரத்தி, கண்டங்காரி கண்டங்காலி.

[கண்டு → கண்டம் + கத்தரி.]

கண்டம் = முள். இச் செடியின் அனைத்துப் பகுதிகளிலும் முட்கள் நிறைந்திருக்கும் பொன் நிறமுடையது.

கண்டங்கத்திரி

கண்டங்கருவழலை *kaṇḍaṅkaruvaḻalai,* பெ.(n.) ஒருவகைப் பாம்பு; a kind of snake.

மறுவ. கண்டங்கருவில

[கண்டம் + கரு + வழலை.]

கண்டம் = துண்டம். உடம்பில் இடையிடையே வெண்ணிற வளைவுகள் அமைந்து கண்டம் கண்டமாகக் காட்சியளிக்கும் வழலைப் பாம்பு.

கண்டங்காலி *kaṇḍaṅkāli,* பெ.(n.) **கண்டங்கத்தரி** பார்க்க; see *kaṇḍaṅkattari.* 'கண்டங்காலி யிடவும் அமையும்' (ஈடு,1.6:1).

[கண்டம் + (கத்தரி → கத்தலி) காலி. கள் = முள். கள் + து – கத்து → கத்தல் → கத்தலி = முள்ளுடையது.]

கண்டங்கி[1] *kaṇḍaṅgi,* பெ.(n.) உருவிற் பெரிய கருங்குரங்கு; a large black monkey, the Madras langur.

[கண்டம் (பெரியது) → கண்டங்கி.]

கண்டங்கி[2] *kaṇḍaṅgi,* பெ.(n.) உருப்பெருத்த கடல் மீன்; a kind of sea fish. *கண்டங்கி மீன்பிடிச்சு கமகமவெனக் குழம்பு வைத்து (உ.வ.).*

[கண்டம் = திரட்சி, தடிப்பு. கண்டம் → கண்டங்கி.]

கண்டங்கி[3] *kaṇḍaṅgi,* பெ.(n.) **கண்டாங்கி** பார்க்க; see *kaṇḍāṅgi.* *"கண்டங்கிக்காரி கடைக்கண்" (தனிப்பா.ii,37:88).*

ம. கண்டங்கிகறுப்புகள்

[கண்டாங்கி → கண்டங்கி.]

கண்டங்கிப்பாறை *kaṇḍaṅgi-p-pāṟai,* பெ.(n.) ஒருவகைப் பாறை மீன் (தஞ்சை மீனவ.); a kind of sea fish.

[கண்டங்கி + பாறை.]

கடலடிப் பாறை இடுக்குகளில் வாழ்வதால் பாறை என வழங்கப்பட்டது.



கண்டங்கிப்பாறை

கண்டங்கோல் *kaṇḍaṅ-gōl,* பெ.(n.) நாலுகோல் நீளமுள்ள ஒரு பெரிய அளவுகோல்; a linear measure of four kōls (சேரநா.).

ம. கண்டங்கோல்

[கண்டம் + கோல்.]

கண்டச்சங்கு *kaṇḍa-c-caṅgu,* பெ.(n.) முட்சங்கு; a kind of thorned conch.

[கண்டு = முள். கண்டு + சங்கு – கண்டச்சங்கு.]

கண்டச்சுருதி *kaṇḍa-c-curuti,* பெ.(n.) குரல்; musical, vocal sound.

[கண்டம் + சுருதி.]

கண்டசரம் *kaṇḍašaram,* பெ.(n.) **கண்டமாலை** பார்க்க; see *kaṇḍa-mālai.* *"முத்தின் சால்வுறு கண்டசரம்" (கந்தபு. அவைபுகு.34).*

ம. கண்டஞாண்; தெ. நானு (ஒருவகைக் கழுத்தணி).

[கண்டம் + சாம். கண்டம் = கழுத்து. சரம் = சரப்பளி, மாலை.]

கண்டசருக்கரை *kaṇḍa-carukkarai*, பெ.(n.) கட்டிச் சருக்கரை; candied sugar. *"சேர்ப்பாலுங் கண்ட சர்க்கரையும்" (ஈடு,9.3:7).*

மறுவ. கண்டு சருக்கரை

க. கண்ட சக்கரெ; **ம.** கண்டச்சர்க்கர; **Skt.** khandksarkara.

[கண்டம் + சருக்கரை. கண்டம் = கட்டி.]

கண்டசருக்கரைத்தேறு *kaṇḍa-carukkarai-t-tēṟu*, பெ.(n.) கற்கண்டுக் கட்டி (சீவக.2703); lump of sugar-candy.

[கண்டம் + சருக்கரை + தேறு.]

கண்டசாதி *kaṇḍa-šādi*, பெ.(n.) தாள வகை யைந்தனுள் ஒன்று. (பாரத.தாள.47,உரை); a subdivision of time measure, one of five 'šādi' in music.

[கண்டம் (ஜதி → சதி) + சாதி.]

கண்டசாலிகம் *kaṇḍa-šāligam*, பெ.(n.) கழுத்தில் வரும்நோய், கழுத்துக்கழலை; an acute infections disease in throat.

[கண்டம் + சாலிகம்.]

கண்டசித்தர் *kaṇḍa-šiddar*, பெ.(n.) சித்தர்களுக் குள் நல்ல பட்டறிவு வாய்த்தவர்; the most cultured in the school of Šiddhars (சா.அக.).

[கண்டம் + சித்தர். கண்டம் = பருமை, பெருமை.]

கண்டசித்தி *kaṇḍa-šitti*, பெ.(n.) அரசன் உள்ளத் திலுள்ள கிளர்ச்சிமிக்க கருத்தைப்பற்றி, அரி கண்டம் பூண்டு பாடும் பாடல் (பழ.தமி.119); ability to compose verses according to instruction given at the moment.

[அரிகண்டம் → கண்டம் + சித்தி. சித்தி = குறிப்பிட்ட வண்ணம் பாடாவிட்டால் கழுத்தை அறுத்துக்கொண்டு சாவதாக ஒப்புக்கொண்டு கழுத்தில் வாள் கட்டித் தொங்க விட்ட நிலையில் பாடும் பாட்டு.]

கண்டசுண்டி *kaṇḍašuṇḍi*, பெ.(n.) ஒருவகைத் தொண்டை வீக்கம்; a swelling of the tonsils (சா.அக.).

[கண்டம் (தொண்டை) + சுண்டி (வீக்கம்).]

கண்டசூலை *kaṇḍa-šūlai*, பெ.(n.) கழுத்து நோய் வகை; a glandular disease of the neck.

[கண்டம் + சூலை.]

கண்டடை-தல் *kaṇḍaḍai-*, 3 செ.கு.வி.(v.i.) பெறுதல்; to get; find; *'தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்'* என்பது ஏசுநாதரின் மொழி.

[கண்டு + அடை.]

கண்டணை *kaṇḍaṇai*, பெ.(n.) உடன்படிக்கையை நிறைவேற்றல்; execution of an accord, treaty, capitulation (கருநா.).

க. கண்டணெ

[கொண்டு + அணை – கொண்டணை → கண்டணை.]

கண்டத்திட்டு *kaṇḍa-t-tiṭṭu*, பெ.(n.) பெருநிலப்பகுதி; continental shelf.

[கண்டம் + திட்டு.]

கண்டத்திரை *kaṇḍa-t-tirai*, பெ.(n.) பல்வண்ணத் திரை; curtain made of multi coloured material. *"பட்டியன்ற கண்டத்திரை வளைத்து" (சீவக.647).*

க. கண்டவட, கண்டபட; **தெ.** கண்டவட.

Skt. kandapata

[கண்டம் + திரை.]

கண்டத்துவாரவுளி *kaṇḍa-t-tuvāra-vuḷi*, பெ.(n.) ***கண்டத்துளையுளி*** பார்க்க; see *kaṇḍa-t-tuḷai-yuḷi.*

கண்டத்துளையுளி *kaṇḍa-t-tuḷai-y-uḷi*, பெ.(n.) பச்சைப்பாம்பின் தலைபோல நீண்ட முனையுள்ள கல் உளி (கம்.வழ.); a long chisel used to make holes.

[கண்டம் + துளை +உளி.]

கண்டத்தூய்மை *kaṇḍa-t-tūymai*, பெ.(n.) 1. தொண்டையிலுள்ள கோழையை வெளிப்படுத்த ஓகிகள் பின்பற்றும் முறை; a process of cleaning the throat adopted by a practising yogi for freeing it from plematic obstructions. 2. முகம் கழுவும்

போது தொண்டையைத் தூய்மையாக்கல்; cleaning the throat, ordinarily when washing the face.

[கண்டம் + தூய்மை.]

கண்டதசபந்தம் *kaṇḍa-taša-pandam,* பெ.(n.) ஏரி குளம் முதலியவை வெட்டியதற்கு ஈடாக கொடுக்கப் படும் நிலம் (C.G.); land given as compensation for the construction of a tank, well or channel.

[கண்டம் + தசம் + பந்தம். தோயம் = நிலம். தோயம் = நீர். தோயம் → தயம் → தசம். (கொ.வ.). பந்தம் = கட்டுதல், தசபந்தம் = நீர்க்கட்டு, ஏரி, நீர்நிலை.]

கண்டதலம் *kaṇḍadalam,* பெ.(n.) தாழம்பூ அல்லது தாழை; fragrant screw-pine (சா.அக.).

[கண்டல் + தாலம் – கண்டல்தாலம் → கண்டதலம் (கொ.வ.). கண்டல் = முள்தாழை.]

கண்டதிப்பிலி *kaṇḍa-tippili,* பெ.(n.) கொடிவகை (மலை.); long pepper.

[கண்டு + திப்பிலி – கண்டதிப்பிலி.]

கண்டது *kaṇḍadu,* பெ.(n.) 1. காணப்பட்ட பொருள்; that which has been seen. *“கண்டதெல்லாம் பகை” (திவ்.இயற்.திருவிருத்.35,அரும்.).* 2. தொடர்பற்ற செய்தி; irrelevant matter. *‘கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்’ (பழ.).*

ம., பட. கண்டது

[கண்ட + அது – கண்டது.(அஃறிணையொருமை வினையாலணையும் பெயர்.]

கண்டதுகடையது *kaṇḍadu- kaḍaiyadu,* பெ.(n.) இழிவான பண்டங்கள்; waste and worthless stuff or trash.

[கண்டது + கடையது (மரபிணைமொழி).]

கண்டதுங்கடியதும் *kaṇḍaduṅ-kaḍiyadum,* பெ.(n.) நல்லதும் கெட்டதும் (திவ்.இயற்.திருவிருத்.2,அரும்.); everything, including the good and the bad. *கண்டதும் கடியதும் உண்பது உடலுக்கு ஆகாது. (உ.வ.).*

ம. கண்டகடச்சாணி

[கண்டதும் + கடியதும்.]

கண்டதுண்டம் *kaṇḍa-tuṇḍam,* பெ.(n.) பல பகுதிகள்; many pieces. *“சுரிகையாற் கண்ட துண்டங்க ளாக்கியே” (குற்றா.தல.கவுற்சன.49).*

ம. கண்டம்துண்டம்

[கண்டம் + துண்டம் (மரபிணைமொழி).]

கண்டதுண்டமாக்கு–தல் *kaṇḍa-tuṇḍam-ākku-,* 5 செ.குன்றாவி.(v.t.) துண்டுதுண்டாக்குதல்; to break in to pieces. போர்வாளை எடுத்துக் கண்ட துண்ட மாக்கு (உ.வ.).

[கண்டம் + துண்டம் + ஆக்கு.]

கண்டந்திற–த்தல் *kaṇḍan-tira-,* 3 செ.கு.வி.(v.i.) 1. குரல் நன்றாக வெளிவருதல்; to become clear or shrill, as the voice. 2. கூக்குரலிடுதல் ; to make a loud cry.

[கண்டம் + திற.]

கண்டந்துண்டமாக *kaṇḍan-tuṇḍamāga,* வி.எ.(adv.) துண்டுதுண்டாக; into pieces. சினம்வந்தால் கண்டந்துண்டமாக்கிவிடுவேன் (உ.வ.).

[கண்டம் + துண்டம் + ஆக.ஆகு + அ(வி.எ.ஈறு) → ஆக.]

கண்டநாண் *kaṇḍa-nāṇ,* பெ.(n.) கழுத்தணி வகை (S.I.I.Vol.ii,192); a kind of necklace.

ம. கண்டஞாண்; தெ. நானு.

[கண்டம் + நாண். கண்டம் = கழுத்து.]

கண்டநாளம் *kaṇḍa-nāḷam,* பெ.(n.) 1. தொண்டைக்குழி (வின்.); gullet, throat. 2. கழுத்துப்பகுதி களில் ஓடும் குருதிக் குழாய்கள்; the veins of neck side.

[கண்டம் + நாளம்.]

கண்டநேரம் *kaṇḍa-nēram,* பெ.(n.) நேரவொழுங்கு இல்லாமல் இருப்பது; being irregular in keeping time. கண்ட நேரத்தில் தூங்காதே (உ.வ.).

[கண்ட (நினைத்த) + நேரம்.]

கண்டப்படை[1] *kaṇḍa-p-paḍai,* பெ.(n.) உத்தரத்தைத் தாங்கும் பட்டைவடிவ மரத்துண்டு; piece of wood which is placed on a pillar to rest the beam.

தென்சதுரத்து உத்திரத்தின் கீழ்க் கண்டப் படையில்' (S.I.I. Vol.ii.87).

[கண்டம் + படை. கண்டம் = வரையறுத்தப்பகுதி.]

கண்டப்படை² *kaṇḍa-p-paḍai,* பெ.(n.) கோயிற் கட்டட உண்ணாழிகை அடிப்பட்டறையின் கழுத்துப்பகுதி (கம்.வழ.); pertuberant lintel top portion in sanctum sanctorum of a temple.

[கண்டம் + படை.]

கண்டப்பனி *kaṇḍa-p-paṉi,* பெ.(n.) கொடும்பனி; heavy dew. கண்டப்பனி கால்நடைகளுக் கொவ்வாது (உ.வ.).

பட. *கெண்ட அனி*

[கண்டம் + பனி. கண்டம் = மிகுதி.]

கண்டப்புற்று *kaṇḍa-p-puṟṟu,* பெ.(n.) தொண்டைப் புண்வகை; a kind of throat cancer.

[கண்டம் + புற்று.]

கண்டபடி¹ *kaṇḍa-paḍi,* வி.எ.(adv.) 1. ஒழுங்கில்லாமல்; indiscriminately. கண்டபடி நடப்பவன் தறுதலையாவான் (உ.வ.). 2. அளவில்லாமல்; beyond the limit. கண்டபடி உண்டு வயிற்றைக் கெடுத்துக்கொண்டான் (உ.வ.). 3. குழப்பமாக; confused, out of order. கண்டபடி பேசிக் காரியத்தைக் கெடுத்துவிட்டான் (உ.வ.).

ம. கண்டமானம்; **து.** கண்டாபட்டெ.

[கண்ட + படி.]

கண்டபடி² *kaṇḍa-paḍi,* வி.எ.(adv.) பார்த்ததுபோல்; as you have seen. மருத்துவக் குறிப்பில் கண்டபடி மருந்து கொடுத்தேன் (உ.வ.).

[கண்ட + படி.]

கண்டபடி³ *kaṇḍa-paḍi,* வி.எ.(adv.) 1.சரியற்ற, காரணமற்ற; unreasonable, improper. 2. தோன்றிய வாறு; as actually seen. 3. எண்ணப்படி; at random. கண்டபடி பேசுகிறான் (உ.வ.).

து. கண்டாபட்டெ

[கண்ட + படி.]

கண்டபதம் *kaṇḍa-padam,* பெ.(n.) 1. மண்ணுளிப் பாம்பு; earthworm. *"குண்டபதமீளு மோக்காள மையமும்போம் கண்டபத மென்னுங்கால்"* (பதார்த்த. குண.1231).

[கண்டம் + பாதம் – கண்டபாதம் → கண்டபதம். கண்டம் = வளையம் வளையமாக.]

கண்டபலம் *kaṇḍa-palam,* பெ.(n.) இலவு(சித்.அக.); silk-cotton tree.

[கண்டு(முள்) → கண்ட + பலம்.]

கண்டபலி *kaṇḍa-pali,* பெ.(n.) மரத்தின் அகக்காழ்; the middle hardest portion of a tree.

[கண்டம் + பலி. பொலி → பலி.]

கண்டபாடம் *kaṇḍa-pāḍam,* பெ.(n.) நெட்டுருப் பண்ணப்பட்டது; that which has been learnt by rote. அவனுக்குத் தொல்காப்பியம் முழுதும் கண்டபாடம் (உ.வ.).

[கண்டம் (தொண்டை) + பாடம்.]

கண்டபாடலி *kaṇḍa-pāḍali,* பெ.(n.) பாதிரி; trumpet flower tree (சா. அக.).

[கண்டம் + பாடலி. கண்டம் = முள். பாதிரி → பாடலி.]

கண்டபாதி *kaṇḍa-pādi,* பெ.(n.) சரிபாதி; equal share. *கண்டபாதி வேண்டுமென்று கையேந்தி நின்றான் (இ.வ.).*

[கண்டதில் + பாதி – கண்டபாதி.]

கண்டபித்தம் *kaṇḍa-pittam,* பெ.(n.) பித்தத்தா லெழுந்த ஒருவகைத் தொண்டை நோய்; a throat disease due to the deranged condition of bile in the system (சா.அக.).

[கண்டம் + பித்தம்.]

கண்டபீடம் *kaṇḍa-pīḍam,* பெ.(n.) தொண்டைக் குத்தல்; a sharp or acute pain in the throat. (சா.அக.)

[கண்டம் + (பீழை → பீடை →) பீடம். கண்டம் = தொண்டை. பீழை = நோய்.]

கண்டபேரண்டம் *kaṇḍa-pēraṇḍam,* பெ.(n.) யானையையும் தூக்கிச் செல்லவல்ல இருதலைப் பறவை (சீகாளத்.பு.தென்கை.63); fabulous two-

headed mythical bird, which can hold even elephants in its beak and claws.

[கண்டம் = பெரியது. கண்டம் + (பெரு) பேர் + அண்டம். அண்டம் = முட்டையுட் பிறந்த பறவை.]

கண்டம்[1] *kaṇḍam,* பெ.(n.) 1. கள்ளி (மலை.); spurgewort. 2. குன்றிவேர் (மூ.அ); crab's-eye root. 3. சாதிலிங்கம் (மூ.அ); vermilion.

[கள் → கண்டு → கண்டம் (முள்ளுடையது)]

கண்டம்[2] *kaṇḍam,* பெ.(n.) 1. தொண்டை; throat. *"காராருங் கண்டனை" (தேவா.1071,1).* 2. கழுத்து; neck. கண்டக்குளியல் (உ.வ.). 3. குரல்; voice, vocal sound. *"குழலொடு கண்டங்கொள" (மணிமே.19:83).* 4. யானைக் கழுத்திடு கயிறு (பிங்.); elephant's neck rope.

[கண்டு → கண்டம் (தொண்டை).]

கண்டம்[3] *kaṇḍam,* பெ.(n.) 1. துண்டம்; piece, fragment. *"செந்தயிர் கண்டம்" (கம்பரா.நாட்டுப்.19).* 2. பகுதி; section, part. 3. நடுவிடம் (கேந்திரம்) (astrol.); the rising fourth seventh, and tenth signs. *"பொன்னவன் கண்டத் துறினும் அமுதெனப் போற்றுவரே"(விதான. குணாகுண.25).* 4. நிலத்தின் பெரும்பிரிவு; continent (geography). 5. வயல்வரப்பு (இ.வ.); small ridges between paddy fields. 6. நெற்கண்டம்; heap of the winnowed paddy. கடாவிட்டுத் தூற்றிக் கண்டத்தில் அளந்துவா (உ.வ.).

[கண்டு + அம் - கண்டம். கண்டு = துண்டு, கட்டி, சருக்கரைக்கட்டி, நூற்பந்து. கண்டு[redacted]கண்டம் = துண்டு, மாநிலப் பிரிவு. ஒ.நோ. துண்டு – துண்டம். கண்டு – கண்டிகை = நிலப்பிரிவு. உப்புக்கண்டம், கண்டங்கண்டமாய் நறுக்குதல் என்பன உலகவழக்கு. அம் என்பது இங்கு பெருமைப்பொருள் பின்னொட்டு.]

கண்டம்[5] *kaṇḍam,* பெ.(n.) பல்வண்ணத்திரை; multicoloured curtain.

[கண்டு → கண்டம்.]

கண்டம்[6] *kaṇḍam,* பெ.(n.) 1. வெல்லம்; jaggery. 2. கண்டசருக்கரை; a kind of sugar.

[கண்டு → கண்டம்.]

கண்டம்[7] *kaṇḍam,* பெ.(n.) 1. முள்; thorn. 2. எழுத்தாணி; iron style for working on palmyra leaves. 3. வாள்; sword.

தெ. கண்ட; **Palli.** kantako.

[கள் = முள். கள் → கள்ளி. ஒ.நோ. முள் → முள்ளி. கள் → கண்டு = கண்டங்கத்தரி (முட்கத்தரி). கண்டு → கண்டம் = கள்ளி, கண்டங்கத்தரி, எழுத்தாணி, வாள். வடமொழியில் இதற்கு மூலமில்லை.]

த. கண்டம் > **Skt.** kant. (வ. மொ.வ.105.)

கண்டம்[8] *kaṇḍam,* பெ.(n.) 1. தசை, புலால்; a lump or piece of flesh or pulp. 2. பொதிமூட்டை; bundle luggage.

க., தெ. கண்ட

[கண்டு → கண்டம் (திரட்சி.)]

கண்டம்[9] *kaṇḍam,* பெ.(n.) கோயில் முகமண்டபப் பகுதி (S.I.I.v,236); frontal portion of the temple.

[கண்டு → கண்டம்.]

கண்டம்[10] *kaṇḍam,* பெ.(n.) கண்டங்கத்தரி (சங்.அக.); *kaṇḍankattari,* a thorny plant.

[கண்டு (முள்) → கண்டம் + கத்திரி.]

கண்டம்[11] *kaṇḍam,* பெ.(n.) 1. ஒக மிருபத்தேழனு ளொன்று; a division of time, one of 27 yogas. 2. இடருறுகாலம்; critical period.

தெ. கண்டமு; **க.** கண்ட.

[கண்டு (முடிச்சு, கருமை) → கண்டம்.]

கண்டம்[12] *kaṇḍam,* 1. மணி (வின்.); bell. 2. மெய்புதை அரணம் (கவசம்) (திவா.); coat of mail.

க. தெ. கண்ட

[கண்டு → கண்டம் (கழுத்து,) கழுத்தில் கட்டும் மணி. கழுத்தின் கீழாக அணியும் அரண உடை.]

த. கண்டம் >**Skt.** ghanta.

கண்டம்பயறு *kaṇḍam-payaṟu,* பெ.(n.) காராமணி (இ.வ.); cholee-bean.

[கண்டம் (சிறுமை) + பயறு.]

கண்டமட்டும் *kaṇḍa-maṭṭum,* வி.எ.(adv.) மிகுதியாய்; excessively. காசில்லாமல் கிடைத்தால் கண்டமட்டும் உண்ணுவதா (உ.வ.).

க. கண்டாபட்டி

[கண்ட + மட்டும்.]

கண்டமண்டலம்[1] *kaṇḍa-maṇḍalam,* பெ.(n.) குறைவட்டம் (யாழ்.அக.); segment of a circle.

[கண்டம் (துண்டு) + மண்டலம். மண்டலம் = வட்டம்.]

கண்டமண்டலம்[2] *kaṇḍa-maṇḍalam,* பெ.(n.) கழுத்துப்பாகம்; neck.

[கண்டம் + மண்டலம் (பகுதி)]

கண்டமணி *kaṇḍa-maṇi,* பெ.(n.) 1. கழுத்திலுள்ள முருண்டு; thyroid cartilage (சா.அக.). 2. ***கண்டாமணி*** பார்க்க; see *kaṇḍā-maṇi.*

[கண்டம் + மணி.]

கண்டமரம் *kaṇḍa-maram,* பெ.(n.) கடற்கரைப் பகுதியில் காணப்படும் ஒருவகை மரம்; a kind of tree seen on seashore.

[கண்டு → கண்டல் + மரம். கண்டல் = முள்தாழை.]

கண்டமாலை[1] *kaṇḍa-mālai,* பெ.(n.) கழுத்தைச் சுற்றி உண்டாகும் புண் (சிவதரு.சுவர்க்க.தரகசே.30); scrofula, tubercular glands in the neck.

[கண்டம் + மாலை.]

கண்டமாலை[2] *kaṇḍa-mālai,* பெ.(n.) கழுத்தணி வகை; a kind of necklace. *"கண்டமாலை தன்னை வெட்டிப்பிடித்தது".(திருவிளை. கல்லானை.17).*

ம. கண்டமால

[கண்டம் + மாலை.]

கண்டமாலை[3] *kanda-mālai,* பெ.(n.) கோபுர உச்சிப்பகுதி; a part of the turret of a temple.

[கண்டம் + மாலை.]

கண்டமுட்டு *kaṇḍa-muṭṭu,* பெ.(n.) ***கண்டுமுட்டு*** பார்க்க; see *kaṇḍu-muṭṭu.*

[கண்டு + முட்டு.]

கண்டமூங்கில் *kaṇḍa-mūṅgil,* பெ.(n.) மூங்கில் வகைகளுளொன்று; a kind of bamboo tree.

[கண்டம் + மூங்கில்.]

மூங்கில் கணுவுடையது. அழிக்கக் கணுவுடைய மூங்கில் கண்ட மூங்கில் எனப்பட்டது.

கண்டமூலம் *kaṇḍa-mūlam,* பெ.(n.) கழுத்தின் அடிப்பாகம்; deepest part of the throat.

[கண்டம்' + மூலம் (அடிப்பகுதி).]

கண்டமேனி *kaṇḍa-mēṉi,* பெ.(n.) முன்பின் ஆராயாமல் செய்யும் செய்கை; unrestrained act. *ஆத்திரத்தில் கண்டமேனிக்குப் பேசிவிட்டான் (இ.வ.).*

[காண் → கண் → கண்ட + மேனி.]

கண்டயம் *kaṇḍayam,* பெ.(n.) ***கண்டையம்*** பார்க்க; see *kaṇḍaiyam. "திருவா சிகையுந் திகழ்கண் டயமும்" (திருவாரூ.370).*

[கண்டை + அம் – கண்டையம் → கண்டயம்.]

கண்டர் *kaṇḍar,* பெ.(n.) 1. துரிசு (மூ.அ.); blue vitriol. 2. வலிமை; strength. 3. சோழர் குடிப்பெயர்; a clan name of the *Chōḻa* dynasty.

[கண்டு → கண்டர். கண்டு = கட்டியான கனிமம், திண்மை, வலிமை.]

கண்டர்கோடரி *kaṇḍār-kōḍari,* பெ.(n.) மீனை வெட்டும் கத்தி; a kind of knife to cut the fishes.

[கண் = சிறியது. கண்டம் = துண்டம். கண்டம் → கண்டர் + கோடரி.]

கண்டரம்வை—த்தல் *kaṇḍaram-vai-,* 4 செ. குன்றாவி.(v.t.) அறுக்குமிடத்தை அரத்தைக் கொண்டு அடையாள மிடுதல்; to make mark by file.

[கண்டு + அரம் + வை.]

கண்டராதித்தர் *kaṇḍar-ādittar,* பெ.(n.) புலமை நிரம்பிய சோழ மன்னன்; a Chōḻa king and Tamil poet.

[கண்டர் + ஆதித்தர். கண்டர் = சோழர் குடிப்பெயர்.]

பன்னிரு திருமுறையுள், ஒன்பதாம் திருமுறையாகிய, திருவிசைப்பாவை அருளிய ஒன்பதின்மருள் ஐந்தாமவர்; முதற்பராந்தக சோழனின் இரண்டாவது மகன். காலம் கி.பி.955—957. "சிவஞான கண்டராதித்தர்" என்னும் சிறப்புப் பெயர் உடையவர்.

கண்டரிப்புண் *kaṇḍari-p-puṇ*, பெ.(n.) தொண்டைக்குள் ஏற்படும் அரிபுண்; phagedemic ulcer with erosions inside the throat.

[கண்டம் (சிறியது) + அரி + புண்.]

கண்டருளப்பண்ணு-தல் *kaṇḍaruḷa-p-paṇṇu-*, 5 செ.குன்றாவி.(v.t) கடவுளுக்குப் படைத்தல் (மாலியம்); to present offering before the almighty.

[கண்டு + அருள + பண்ணு.]

கண்டருளு-தல் *kaṇḍaruḷu-*, 5 செ.கு.வி.(v.i.) உருவாக்குதல்; to create. *"நாடெங்குஞ் சோற்று மலை கண்டருளி தென்னவன் வந்தபடி பணிய" (S.I.I. Vol.17 Insc.135,S.No.6).*

[கண்டு + அருளு.]

கண்டரை *kaṇḍarai*, பெ.(n.) இதயத்தின் மேற்புறத்திலுள்ள இடப்பெருந் தமனி; aorta, the great artery issuing from the left ventricle of the heart.

[கண்டு → கண்டரை.]

கண்டல்[1] *kaṇḍal*, பெ.(n.) 1. சதுப்பு நிலத்தில் வளரும் சிறுமரம்; mangrove. 2. வெண்கண்டல்; white mangrove. 3. பூக்கண்டல்; dichotomous mangrove. 4. தாழை; fragrant screw-pine. *"கண்டல் திரை யலைக்குங் கானல்" (நாலடி.194).* 5. முள்ளி (சூடா.); Indian nightshade. 6. நீர்முள்ளி (மலை.); white long-flowered nail dye. 7. முள்ளிக்கீரை; prickly tree. 8. பேய்க்கண்டல் மரம்; a small tree, fire fly tree (சா.அக.).

ம. கண்டல்; **குட.** கண்டெ (ஆணிவேர்); **து.** காண்டேலு (உப்பு நீருக்கு அருகில் வளரும் ஒருவகை மரம்); **தெ.** கட்ட (வேர்.); **க.** கட்டே, கெட்டெ; **கொலா.** கட்ட; **குவி.** கிட்ட; **Sinh.** *kaḍol* (Mangrove).

[கண்டு → கண்டல். (வே.க.174.). கண்டு = முள். கண்டல் = முள்ளுடையது.]

கண்டல்[2] *kaṇḍal*, பெ.(n.) செம்பழுப்பு நிறமுடையதும் 12 விரலம் வளர்வதுமான கடல் மீன்வகை; a kind of sea fish pale coloured attaining 12 inch. in length.

[கண்டு → கண்டல்.]

கண்டல் கரைசல் *kaṇḍal-karaišal*, பெ.(n.) கட்டியும் குழம்பும்; solid and semi-solid. *கண்டலும் கரைசலுமாய்க் கழிச்சல் போகிறது (சா.அக.).*

[கண்டல் (கட்டி) + கரைசல்.]

கண்டலம் *kaṇḍalam*, பெ.(n.) 1. முள்ளி (மூ.அ.); Indian nightshade. 2. கருவேல்; black babul.

[கண்டல் → கண்டலம் (வே.க.174).]

கண்டலி *kaṇḍali*, பெ.(n.) நீர்முள்ளி; water-thorn (சா.அக.).

[கண்டல் → கண்டலி. கண்டல் = முள்.]

கண்டவர் *kaṇḍavar*, பெ.(n.) 1. ***கண்டோர்*** பார்க்க; see *kaṇḍōr*.

[கண்ட + அவர்.]

கண்டவல்லி *kaṇḍavalli*, பெ.(n.) சீயற்காய்; soapnut.

[கண்டல் + வல்லி. கண்டல் = முடிச்சு.]

கண்டவலை *kaṇḍa-valai*, பெ.(n.) சிறு துண்டுகளால் சேர்த்துப் பின்னப்பட்ட வலை; a net composed of different pieces (கருநா.).

ம. கண்டவல; **க.** கண்டவலெ, கண்டபுலெ.

[கண்டம் + வலை. கண்டம் = சிறுதுண்டு.]

கண்டவளையம் *kaṇḍa-vaḷaiyam*, பெ.(n.) குற்றவாளியின் கழுத்தில் மாட்டும் இருப்புவளையம் (பாண்டி); a kind of iron ring put a round the neck of a culprit.

[கண்டம் + வளையம். கண்டம் = தொண்டை, கழுத்து.]

கண்டவன் *kaṇḍavaṉ*, பெ.(n.) 1. வெளியார், பழக்கமற்றவர்; person who has no concern. கண்டவனெல்லாம் இதைப்பற்றிப் பேசலாமா?(உ.வ.). 2. ஒரு பொருளையோ நிகழ்ச்சியையோ கண்டவன்; one who has seen, an eye-witness. 3. தொடர்பில்லாதவன்; a man not invited; கலியாணத்திற்குக் கண்டவன் எல்லாம் வரமாட்டான் (உ.வ.).

ம. கண்டவன்; **க.** கண்டவனு; **கோத.** கண்டோன்; **குட.** கண்டவென்; **பட.** கண்டம.

[கண்ட + அவன் – கண்டவன்.]

கண்டவிடம் *kaṇḍa-v-iḍam*, பெ.(n.) 1.பார்த்த இடம்; a place which is seen. 2. இடம்; any place.

ம. கண்டடம்

[கண்ட + இடம்.]

கண்டழிவு *kaṇḍaḷivu,* பெ.(n.) எதிர்பாராத செலவு. (S.I.I.Vol.iii,271); unforeseen expenses.

[கண்ட + அழிவு. அழிவு = செலவு, வீணடிப்பு.]

கண்டற்குயம் *kaṇḍaṟ-kuyam,* பெ.(n.) தழுதாழை விழுது (தைலவ.); aerial roots of the screw-pine.

[கண்டல் + குயம். குயம் = அரிவாள், அரிவாள் போன்ற விழுது.]

கண்டறி—தல் *kaṇḍaṟi,* 2 செ.கு.வி. (v.i.) பட்டறிதல்; to learn by experience. *'கண்டறிந்த நாயுமல்ல களமறிந்த கொப்பறையுமல்ல' (பழ.)*

[கண்டு + அறி.]

கண்டறை *kaṇḍaṟai,* பெ.(n.) 1. கற்புழை (திவா.) ; cavern in a rock. 2. சிறுபாலம்; a culvert. (சேரநா.) 3. மலைக்குகை; cave.

ம. கண்டற

[கண்டு (கல்) + அறை.]

கண்டறைவை—த்தல் *kaṇḍaṟai-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) மரத்தில் வெட்டுமிடத்தை வரையறை செய்தல் (இ.வ.); to mark the portion to be cut in timber.

[கண்டு + அறை + வைத்தல். அறு → அறை = அறுப்புக்குரிய இடம்.]

கண்டன்[1] *kaṇḍaṉ,* பெ.(n.) 1. தலைவன்; master. 2. வீரன்; warrior. *"தெவ்வர் புரமெரி கண்டரி" (கோயிற்பு.நடராச.26).* 2. கணவன் (பிங்.); husband. 4. சோழர்குலப் பட்டப் பெயர்; title of Chola kings. *"கண்டன் வேங்கை யெந்நாட்டு மெழுதி". (பாரத. பாஞ்.20).* 5 மாந்தன்; man.

க., பட. கண்ட; **ம.** கண்டன்; **கோத.** கண்ட(ஆண்); **துட.** கொட்ண்; **குட.** கண்டெ(பூனையல்லாப் பிற விலங்குகளில் ஆண்); **து.** கண்டணி, கண்டாணி; **தெ.** கண்டு (விலங்குகளின் ஆண்.).

Port. gente; **Skt.** ganda, gandira.

[கண்டு + அன் – கண்டன். கண்டு = திரட்சி, வன்மை.]

கண்டன்[2] *kaṇḍaṉ,* பெ.(n.) கொடியோன்; cruel man. *"கண்ட மானபடி கண்வடக் கண்டன்" (கம்பரா. யுத்த. நாகபாச.69).*

ம. கண்டன் (தீங்குவிளைவிக்கும் சிறுதெய்வம்)

[கண்டு → கண்டன் = வலிமை வாய்ந்த ஆண், கொடியவன்.]

கண்டன் வாளராயன் *kaṇḍaṉ-vāḷarayaṉ,* பெ.(n.) திருக்கோவலூர் வட்டம் ஆலூர் ஏரியில் தூம்பு வைத்துக் கொடுத்த வள்ளல்; a donor, who constructed a sluice in tne tank at Alur in Thiruk kovalur taluk. *"பாவடங்குடையார் மகந் கண்டந் வாளறாயந் செய்பிச்ச தூம்பு. (தமிழில் ஆவணம். ப.156).*

[கண்டன் + வாள் + அரையன் – கண்டன் வாளரையன். வாளறாயன் என்றிருப்பது எழுத்துப் பிழை.]

கண்டனம் *kaṇḍaṉam,* பெ.(n.) பிறர் கொள்கையையோ கூற்றையோ கண்டித்தல்; censure, confutation, refutation.

H. kandan

[கண்டி + அனம் –கண்டனம்(மு.தா.101).]

த. கண்டனம் > **Skt.** khandana. 'அனம்' சொல்லாக்க ஈறு. *கண்டி = துண்டி. ஓ.நோ.முண்டி → முண்டனம்.*

கண்டனை *kaṇḍaṉai,* பெ.(n.) 1. கண்டித்தல் (இராட்.); chastening. 2. ஏற்றுக்கொள்ளாமை; to refrain from acceptance. 3. தள்ளுதல்; to reject, remove.

[கண்டு → கண்டனை = வெட்டித்தள்ளுதல், ஒதுக்குதல்.]

கண்டனைக்காரன் *kaṇḍaṉai-k-kāraṉ,* பெ.(n.) நூல் முதலியவற்றிற் குற்றங்காண்பவன்(பாண்டி.); cansor, adverse critic.

[கண்டனை + காரன்.]

கண்டா *kaṇḍā,* பெ.(n.) வாரியின் வளையப்பகுதி; water surging area. (நெல்லை. மீனவ.).

[குண்டா → கண்டா.]

கண்டாஏனம் *kaṇḍā-ēṉam* பெ.(n.) கோயில் மணியைப்போல் கவிழ்ந்துள்ள மூடும் ஏனம்; the vessel resembling a temple-bell.

தெ. கண்டா (பூசைமணி.)

[கண்டா + ஏனம் – கண்டாஏனம் = பூசை மணி போன்ற ஏனம்.]

கண்டாகண்டன் *kaṇḍā-kaṇḍaṉ,* பெ.(n.) சிவனடியார்; a Śivā devotee.

[கண்டன் + கண்டன். நீலமணிமிடற்றுக் கண்டத்தை யுடைய சிவனைக் கண்டவராகக் கருதப்படும் சிவனடியார்.]

கண்டாங்கி *kaṇḍāṅgi,* பெ.(n.) கட்டம் போட்ட நூற்சேலை; a kind of chequered cotton saree. *"கண்டாங்கிக் காரி கடைக்கண்" (தனிப்பா, ii 37, 38).*

மறுவ. கண்டாங்கி

[கண் + தாங்கி. கண்டம் = துண்டு, கட்டம், சிறு கட்டங்கள் நிறைந்த புடைவை]

கண்டாஞ்சி *kaṇḍāñci,* பெ.(n.) 1. மரவகை; entire-leaved staff-tree. 2. குடைவேல்; buffalo thorn cutch.

[கண்டாங்கி → கண்டாஞ்சி.]

கண்டாஞ்சூலி *kaṇḍāñ-cūli,* பெ.(n.) ஒருவகை முள்ளி; prickly nail dye (சா.அக.).

[கண்டம் + சூலி – கண்டாஞ்சூலி.]

கண்டாடி *kaṇḍāḍi,* பெ.(n.) ஒருவகை வலை; a kind of net (சேரநா.)

ம. கண்டாடி

[கண்டு + ஆடி.]

கண்டாணி *kaṇḍāṇi,* பெ.(n.) செருமானின் ஊசி (இ.வ.); awl.

[கண்டம் (முள்முனை) + ஆணி.]

கண்டாந்த நாழிகை *kaṇḍānda-nāḻigai,* பெ.(n.) இரலை (அசுவினி), கொடுநுகம் (மகம்),குருகு (மூலம்) முதலான விண்மீன்களின் முதற் பாதத்தினின்று முறையே கவ்வை (ஆயில்யம்), தழல் (கேட்டை), தொழுபஃறி (இரேவதி) முதலிய விண்மீன்களின் நான்காம் பாதமுடிய பிறப்பு ஒரை (இலக்கினம்) செல்வதற்கான நாழிகை (சோதிட. சிந்.56); time taken by the lakknam to pass from the first quarter of *aśuviṇi, magam or mūlam* to the end of the fourth quarter of *āyiliyam, kēṭṭai or rēvadi* respectively.

[கண்டம் + அந்தம் + நாழிகை.]

கண்டாமணி *kaṇḍā-maṇi,* பெ.(n.) 1. பெரிய மணி; large bell. *"சேமக்கலம் ....கண்டாமணி யதனொடு மடிப்ப".(பிரபோத.11:41)* 2. யானைக் கழுத்திற் கட்டும் மணி (வின்.); bell tied to the neck of an elephant. 3. வீரக்கழல்; tinkling ankle rings worn by distinguished warriors.

மறுவ. காண்டாமணி

[குண்டு + மணி – குண்டுமணி → குண்டாமணி → கண்டாமணி.]

கண்டாய் *kaṇḍāy,* இடை.(part.) ஒரு முன்னிலை அசைச்சொல் (திருக்கோ.114, உரை); expletive of the 2nd pers.,something like 'you see'. *"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" (தேவா.).*

ம. கண்டாயோ(பார்த்தாயோ)

[காண் → கண்டு (இ.வி.எ) + ஆய் – கண்டாய். உரையாடுங்கால் "நீ இதனைக்கண்டாயா" என்னும் பொருளில் உரையசையாகப் புணர்க்கப்படும் முன்னிலை அசைச்சொல்.]

கண்டாயம் *kaṇḍāyam,* பெ.(n.) வழி (யாழ்ப்.); opening, outlet, avenue, passage.

[கண் → கண்டை. கண்=சிறுமை,சிறியது. கண்டை → கண்டையம் → கண்டயம் → கண்டாயம். கண்டை = சிறுவழி, சிறுதுளை, சிறு இடைவெளி.]

கண்டார் *kaṇḍār,* பெ.(n.) 1. பார்த்தவர்; person who sees. 2. தொடர்பில்லாதவர்; person not concerned, stranger. *"கண்டார்கள் கையேற்கு மாறே" (பிரபோத.27: 44).*

[கண்டவர் → கண்டார்.]

கண்டாரம் *kaṇḍāram,* பெ.(n.) ஒருவர் ஒருவரோடு மோதும் நேரடிப் போர்; a quarrel among two heroes.

[கண்டர் → கண்டாரம். கண்டர் = வீரர். 'ஆரம்' சொ.ஆ. ஈறு. முதனிலைச்சொல்லின் தன்மை யுணர்த்தி நின்றது.]

கண்டாரவம் *kaṇḍā-ravam,* பெ.(n.) 1. மணியோசை; sound of a bell. 2. ஓர் இசை(வின்.); a musical mode. 3. கிலுகிலுப்பை; large rattle (சா. அக.).

[தெ. கண்டா + அரவம். அரவம் = ஓசை.]

கண்டால்[1] *kaṇḍāl,* இடை. (conj.) அன்றி; except. *அதற்காகப் போனேனே கண்டால் வேறெதற்கும் இல்லை (இ.வ.).*

மறுவ. கண்டி

[தெ. கண்ட்டே > த. கண்டால்.]

கண்டால்[2] *kaṇḍāl,* இடை (part.) ஓர் அசைச்சொல்; an expletive. *உன்னைக் கண்டால் கேட்டேனா? (நெல்லை).*

[காண் → காண்டு → காண்டால் → கண்டால் (அசைநிலையாய் வந்த வறுமொழி).]

கண்டாலி[1] *kaṇḍāli,* பெ.(n.) வெள்ளெருக்கு; white madar plant (சா.அக.).

[கண்டு + ஆலி. ஆலி = வெண்மை.]

கண்டாலி[2] *kaṇḍāli,* பெ.(n.) வெள்ளறுகு (சங்.அக.); white species of harialli grass.

[கண்டல் → கண்டாலி. கண்டல் = திரட்சி, திரண்ட தூறுடையது.]

கண்டாவளி *kaṇḍāvaḷi,* பெ.(n.) ***கண்டமாலை***[2] பார்க்க; see *kaṇḍa-mālai.* *"கண்டாவளியைக் களிறுண்டது" (திருவிளை. கல்லானை.18).*

[கண்டம் + ஆவளி – கண்டாவளி. கண்டம் = கழுத்து. ஆவளி = மாலை.]

கண்டாவிழிதம் *kaṇḍāviḻidam,* பெ.(n.) தொண்டை உறுத்தலைப் போக்கும் மருந்து; medicine that relieves the trouble of the throat (சா.அக.).

[கண்டம் + அவிழ்தம். கண்டம் = தொண்டை, அவிழ்தம் = நோய்தணிப்பது, நீக்குவது.]

கண்டாளம்[1] *kaṇḍāḷam,* பெ.(n.) 1. பொதி; pack-saddle. 2. எருத்தின் மேலிடும் பொதி (வின்.); wallet placed on a bullock.

க. கண்டலெ; **தெ.** கண்டலெமு; **Mar.** kantali.

[கண்டம் (திரட்சி பொதி) → கண்டாளம். ஆளம். தொ.பெசறு.]

கண்டாளம்[2] *kaṇḍāḷam,* பெ.(n.) ஒட்டகம்; camel.

[கண்டம் + ஆளம். கண்டம் = பொதி. கண்டம் சுமப்பதால் கண்டாளம்.]

கண்டாளம்[3] *kaṇḍāḷam,* பெ.(n.) போர்; battle, war.

மறுவ. கண்டாலம்

[கண்டர் → கண்டாரம் → கண்டாலம் → கண்டாளம் (கொ.வ).]

கண்டாளவெருது *kaṇḍāḷa-v-erudu,* பெ.(n.) பொதிமாடு (வின்.); pack-bullock.

க. கண்டாளவெருது

[கண்டாளம் (பொதி) + எருது.]

கண்டானுமுண்டானும் *kaṇḍāṉumuṇḍāṉum,* பெ.(n.) வீட்டுத் தட்டுமுட்டுகள்; household utensils. *கண்டானு முண்டானும் இத்தனை எதற்கு? (இ.வ.).*

தெ. கண்டே (கரண்டி)

[கரண்டி → கராண்டான் → கண்டான். (கொ.வ.). மொள்ளு → மொண்டல் → மொண்டான் முண்டான்(அகப்பை). கண்டான் முண்டான் = கரண்டியும் அகப்பையும்.]

கண்டி[1]**–த்தல்** *kaṇḍi,* 4 செ.கு.வி.(v.i.) 1. குற்றஞ் செய்தவன் திருந்துமாறு கடிந்து கூறுதல்; to reprove, censure. *குழந்தையைத் தண்டிப்பதை விடக் கண்டிப்பதே மேல்.* 2. துண்டித்தல் (தி.வா.); to chop mince, slash out into pieces. கரும்பைக் கண்டித்துக் கொடு (உ.வ.) 3. பகிர்தல் (வின்.); to divide. காணி நிலத்தைக் கண்டிப்ப தெப்படி (உ.வ.) 4. பருத்தல்; to grow fat. *ஆள் நன்றாய்க் கண்டித்திருக்கிறான் (இ.வ.)* 5. வரையறைப் படுத்துதல்; to prescribe *பேசும் போதே கண்டித்துப் பேசிவிடு* 6. முடிவுகட்டிப் பேசுதல் (வின்); to have a precoeived talk. வீட்டிற்கு வரமாட்டாயா? கண்டித் துச்சொல் (உ.வ.). 7. நோயைத் தணித்தல்; to cure as of adisease. இம்மருந்தை முறையாய் உண்டால் அந்நோயைக் கண்டிக்கும் (உ.வ.).

த. கண்டி > **Skt.** khant.

[கண்டு → கண்டி. ஒ.நோ. துண்டு → துண்டி. கண்டித்தல் = துண்டு துண்டாக வெட்டுதல், வெட்டுவதுபோற் கடிந்து கூறுதல், முகத்தை முறித்தல், வெட்டிப் பேசுதல் என்னும் கண்டி – கடி → கடிதல் = கழறுதல். வழக்குகளை நோக்குக கண்டி → கண்டிப்பு (வ.மொ.வ.105).]

கண்டித்தலின் வகைமைகள் :

தெழித்தல் - விலங்குகளை அதட்டி ஓட்டுதல். அதட்டுதல் - மக்களை உரத்த குரலால் அல்லது சில அசைவுகளால் கடிதல். கடிதல் - குற்றஞ் செய்தவனைச் சீறுதல், எச்சரித்தல் - குற்றஞ் செய்தவன் திருந்துமாறு அச்சுறுத்தல்; கழறுதல் - மென்மையாகக் கண்டித்தல். (சொ. ஆ.க.54).

கண்டி[2] *kaṇḍi,* பெ. (n.) 1.கழுத்தணி வகை; neck ornament. 2.அக்கமாலை; necklace of rudrakssa beads. *"கண்டியிற் பட்ட கழுத்துடையீர்" (தேவா. 586,6).*

ம. கண்டி

[கண்டு (முள், மொட்டு) – கண்டி. (வேக. 158,174).]

கண்டி[3] *kaṇḍi,* பெ. (n.) அடைத்து மீன்பிடிக்கும் வலைப்பு வகை (யாழ்ப்.); a kind of portable hurdle used by fishermen for catching fish in shallow waters.

ம. கண்டாடி (ஒருவகை வலை)

[கண்டு + இ – கண்டி.]

கண்டி[4] *kaṇḍi,* பெ.(n.) கள்; toddy *அவன் கண்டியடிப்பவன் (நாஞ்.).*

[கள் – கண்டி(இ.வ.).]

கண்டி[5] *kaṇḍi,* பெ.(n.) ***கண்டியூர்*** பார்க்க; see *kaṇḍiyūr "பூமன் சிரங்கண்டி" (தனிப்பா.)*

மறுவ. கண்டிகம்

[கண்டியன் → கண்டி.]

கண்டி[6] *kaṇḍi,* பெ.(n.) 1. 500 கல்லன் (பவுண்டு) எடையுள்ள பார மென்னும் நிறையளவு; candy, a weight stated to be roughly equivalent to 500 lbs. 2. 500 கல்லன் (பவுண்டு.) தவசம் விளையத்தக்க. எழுபத்தைந்து ஏக்கருள்ள நிலவளவு; a unit of land, as much as will produce a candy of grain, approximately 75 acres. 3. நான்கு கலம் தவசம் கொள்ளும் முகத்தலளவு; a unit of capacity. 360 படி = 4 கலம்.

ம.,தெ.,க.,து.கண்டி; **Mar.** khandil.

[கண்டு→ கண்டி. (வே.க.158,174.)]

குண்டி = உருண்ட புட்டம். குண்டு → கண்டு = நூற்பந்து. (குண்டகம்) கண்டகம் = வட்டமான மரக்கால். கண்டு → கண்டி = ஒருகலம், ஓர் அளவு. (வட.வர.6.)

கண்டி[7] *kaṇḍi,* பெ. (n.) சிறுகீரை (மலை.); a species of amaranthus campestris.

மறுவ. கண்டிகை, கண்டிலை

ம. கண்டி

[கண்டு → கண்டி – கண்டு = துண்டு, சிறிது.]

கண்டி[8] *kaṇḍi,* பெ.(n.) இலங்கையின் பழைய தலைநகர்களுள் ஒன்று; Kandy, one of the ancient capital cities of Ceylon.

[குண்டி → கண்டி (நுழைவாயில், பெருவாயில்)]

கண்டி[9] *kaṇḍi,* பெ.(n.) 1. துளை, ஒட்டை, இடை வெளி; a gap in a hedge or fence, breach in a wall. கதவை மூடும்முன் கண்டியை அடை(உ.வ.). 2. இடைவழி, சந்து; a lane, narrow path. கண்டிவழியே காற்று வருகிறது(உ.வ.). 3. நுழைவாயில்; an entrance, a gateway. கண்டியில் நமது காவலனுண்டா(உ.வ.). 4. வயலின் வரப்பில் உள்ள நீர் செல்லும் வழி; a gap or breaeth in the ridge of rice field. கண்டிவாய்க்கால் வழியாக வடித்துவிடு(உ.வ.). 5. கணவாய்; a mountain pass. 6. துளையை அடைக்கும் அடைப்பு; that which is put to cover a breach or gap (சேரநா.).

ம. கண்டி; **க.** கண்டி, கிண்டி,; கோத, கண்ட்ப; **குட.** கண்டி; **து.** கண்டி,; **தெ.** கண்டி, கண்டிக; **பிரா.** கண்ட.

Skt. khand (உடை,பிரி,அழி)

[குண்டி (குழிவினது) → கண்டி.]

கண்டி[10] *kaṇḍi,* பெ. (n.) 1. துண்டு; piece (நெல்லை.) 2. கட்டட வேலையில் கட்டுவதற்கு ஏதுவாக இருக்க விடும் சிறு இடைவெளி; space for breaking joints.

க. கண்டிகெ

[கண்டு → கண்டி.]

கண்டி[11] *kaṇḍi,* பெ. (n.) 1.தோட்டம்; garden. 2. குழு, கூட்டம்; group.

ம. கண்டி

[கண்டு (திரட்சி, தொகுதி) → கண்டி.]

கண்டி[12] *kaṇḍi,* பெ. (n.) மலைப்பாதையிலுள்ள கடை; shop on mountain pass.

பட. கண்டி

[கண்டி = நுழைவாயில், கணவாய்]

கண்டி[13] *kaṇḍi,* பெ. (n.) ஒதுக்கிய நிலப்பகுதி; portion of land alloted for some purpose.

Eng. country; **Turk.** kent (a city).

[கண்டு – கண்டி.]

கண்டி[14] *kaṇḍi,* பெ. (n.) கணு; node. *"கண்டி நுண்கோல் கொண்டுகளம் வாழ்த்தும்" (பதிற். 43-27.)*

[கண்டு → கண்டி (கணு). ஒ.நோ. முண்டு → முண்டி (பி.வி.) உண்ணப்படுவது உண்டி என்றும், கொள்ளப்படுவது கொண்டியென்றும் வருவது போல கண் கண்ணாக – கணுக்கணுவாகக் கண்டிக்கப்படுவது கண்டி என வந்தது (கண்டித்தல் = துண்டித்தல்).).]

கண்டி[15] *kaṇḍi,* பெ. (n.) 1. எருமைக்கடா; buffalo bull. *"எருமையுள் ஆணினை கண்டி என்றலும்" (தொல். பொருள்.623).* 2. மந்தை (இ.வ.); flock, herd. 3. ***கண்டிக்கல்*** பார்க்க; see *kaṇḍi-k-kal.*

க., பட. கோண; **ம.** கூன (எருமையின் கடாக்கன்று); **தெ.** கோடெ; **Skt.**gone; **Pali.** gono; **Pkt.** gona.

[கண்டு = திரட்சி, பருமை, கூட்டம். கண்டு → கண்டி = பருமையும் வலிமையும் மிக்க ஆண் எருமை.]

கண்டிக்கல் *kaṇḍi-k-kal,* பெ. (n.) 1. கல் கட்டுமானத்தில் இசைமாற்றுவதற்காக (இடைவெளி நிரப்புவதற்காக) முதற்கல்லை அடுத்து இடப்படும் உடைத்த கல்; broken stones used as spacer stones to break joints.2. உடைத்த செங்கற்கள்;small siged links used for buildings this walle.

[கண்டு → கண்டி + கல்.]

கண்டிகம் *kaṇḍigam,* பெ. (n.) கடலை (நாமதீப.); bengal gram.

[கண்டு → கண்டிகம்.]

கண்டிகை[1] *kaṇḍigai,* பெ. (n.) ஒருவகைப் பறை (பிங்.); a kind of drum.

[கண்டு → கண்டிகை (வே.க.158,174.).]

கண்டிகை[2] *kaṇḍigai,* பெ.(n.) 1. துண்டு; piece 2. பாகம்; division (கருநா.).

க. கண்டிகெ

[கண்டி – கண்டிகை.]

கண்டிகை[3] *kaṇḍigai,* பெ.(n.) 1. கழுத்தணி (பிங்.); necklace. *"பல்பல கண்டிகைத் தார்மணி பூண்ட" (கலித்.96:14).* 2. அக்கமாலை (பிங்.); necklace of rudraksa beads (வ. கண்டிகா.) 3. பதக்கம் திவா.); breast plate of gold set with precious stones. 4. வாகுவலயம். (குடா.); armlet, bracelet. 5. அணிகலன் செப்பு (பிங்.); jewel casket. 6.மாணிக்க வளை (சிலப்.6,89. உரை); ruby bracelet

ம. கண்டி; **க.** கண்டி; Skt. kaṇṭikā

[கண்டி[9] → கண்டிகை.]

தோலிலே மூன்று நிரையாகப் பல நிறத்து மணியை வைத்துத் தைத்துக் கழுத்திற் கட்டுவது கண்டிகை. பதக்கம், வளையல் போன்றவற்றின் கண்டியில் கற்களைப் பதித்து உருவாக்கியமையால் கண்டிகை எனப்பட்டது.

குண்டி = உருண்ட பிட்டம். குண்டு – கண்டு = நூற்பந்து. (குண்டகம்) – கண்டகம் = வட்டமான மரக்கால். கண்டி = ஒருகலம், ஓர் அளவு.கண்டி – கண்டிகை = பதக்கம், தோட்கடகம் (வட.வர.6)

கண்டிகை[4] *kaṇḍigai,* பெ.(n.) நிலப்பிரிவு (வின்.); division of a field. ***கண்டி*** பார்க்க see *kaṇḍi.*

ம. கண்டம்; **து.** கண்ட (வயல்).

[கண்டி → கண்டிகை.]

கண்டிகை[5] *kaṇḍigai,* பெ.(n.) அக்குள் கைக்குழி; arm- pit (சா.அக.).

[கண்டு → கண்டிகை. கண்டு = சேர்ப்பு, பொருத்து, அக்குள் பொருத்து.]

கண்டிகை[6] *kaṇḍigai,* பெ.(n.) சிறுகீரை; a species of amaranth. *"கண்டிகை யாவரேனும் நத்தியே யுண்பாரானால்" (நீதிசாரம்.83).*

[கண்டு → கண்டிகை.]

கண்டிடங்கடத்தி *kaṇḍiḍaṅ-kaḍatti,* பெ.(n.) சமயத்துக்குத் தகுந்தபடி பேசுகிறவன் (நாஞ்.); one who is shifty in speech.

[கண்டு + இடம் + கடத்தி.]

கண்டிடு–தல் *kaṇḍiḍu-,* 20 செ.கு.வி.(v.i.) நூலைக் கதிரிற் சுற்றுதல் (வின்.); to wind thread on a spindle.

[கண்டு + இடு] 'இடு' (து.வி.)]

கண்டிடைத் தூக்கல் *kaṇḍiḍai-t-tūkkal,* பெ.(n.) ***கண்டி*** பார்க்க; see *kaṇḍi.*

[கண்டு + எடை + தூக்கல் – கண்டெடைத் தூக்கல் – கண்டிடைத் தூக்கல் (கொ.வ.).]

கண்டிதக்காரன் *kaṇḍida-k-kāraṉ,* பெ.(n.) கடுஞ்சினத்தன் (பாண்டி.); irascible person.

க. கண்டிதம்

த. கண்டிதம் > Skt. khandita.

[கண்டி → கண்டிதம் - கண்டிப்பு.]

கண்டிப்பானவன் *kaṇḍippāṉavaṉ,* பெ.(n.) சொல்லுறுதியுள்ளவன்; a man of his word. *கொள்கையில் கண்டிப்பானவனைக் காண்பதரிது (உ.வ.).*

க. கண்டிதவாதி

[கண்டிப்பு + ஆனவன்.]

கண்டிப்பு[1] *kaṇḍippu,* பெ.(n.) 1. கடிந்துகொள்கை; reproof, rebuke. தவற்றைக் கண்டிப்பவரே ஆசிரியர் (உ.வ.). 2. வரையறை; strictness, exactness, precision. உடன்படிக்கையில் கண்டிப்பான வழிமுறை களைக் குறிப்பிட வேண்டும் (உ.வ.) 3. உறுதி (வின்.); certainly, assurance. 4. துண்டிப்பு. (வின்.); cutting, sundering. பழகியோரிடம் தீக்குணங்களைக் காணுங்கால் அவர் தொடர்பைக் கண்டிப்பதே சாலச்சிறந்தது (உ.வ.). 5. அழிவு; damage, as done by a falling tree. 6. கடுமையான அதிகாரம்; firm control. அவள் அம்மாவின் கண்டிப்பில் வளர்ந்தவள்(உ.வ.).

ம. கண்டிப்பு; க. கண்டித; உரா. கண்டீச.

[கண்டித்தல் - வெட்டுதல், வரையறுத்தல். கண்டி → கண்டிப்பு - வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்றாற் போல் தெளிவாக வரையறுத்துத் துணிந்து கூறும் கூற்று.]

கண்டிப்பு[2] *kaṇḍippu,* பெ. (n.) வீக்கம்; swelling (சா.அக.).

[கண்டு → கண்டி → கண்டிப்பு.]

கண்டிப்புப்பண்ணு–தல் *kaṇḍippu-p-paṇṇu-,* 12 செ.குன்றாவி.(v.t.) திட்டம் செய்தல்; to impose strict discipline. கண்டிப்புப் பண்ணினால் கரை சேருவான் (உ.வ.).

[கண்டிப்பு + பண்ணு.]

கண்டிபிடி–த்தல் *kaṇḍi-piḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) மேற்றளத்தைக் கண்டிக் கல்லாற் குத்தி மூடுதல்; to cover the upper floor of a house with terrace bricks.

[கண்டி + பிடி.]

கண்டிமுத்திரை *kaṇḍi-muttirai,* பெ.(n.) முத்திரை வகை (சைவாது.வி.19.); a kind of seal.

[கண்டி + முத்திரை.]

கண்டியடி–த்தல் *kaṇḍi-y-aḍi-,* 4.செ.குன்றாவி.(v.t.) கட்குடித்தல் (நாஞ்.); to drink spiritous liquour.

[கள் → கண்டி + அடி–]

கண்டியத்தேவர் *kaṇḍiya-t-tēvar,* பெ.(n.) ஓமலூர் வட்டம் தீவட்டிப்பட்டி அருகிலுள்ள கைலாயமுடையார் திருக்கோயிலுக்குச் சதிர்நெல்லி என்னும் ஊரை இறையிலி நிலமாக வழங்கியோருள் ஒருவர்; one of the chief men who donated the village Cadirnelli as tax free gift to Kailāyamudāyar temple at Thivatti Patti in Omalur taluk. *"முகைநாட்டுப் பொன்னார் கூடலில் சீகைலாய முடையனாயற்கு கண்டியத் தேவரும் வண்ணாவுடையாரும்" (ஆவணம், 1991:5).*

[கண்டியன் + தேவர்.]

கண்டியர் *kaṇḍiyar,* பெ.(n.) பாணர், bards, lyrist (அக.நி.).

[கண்டி → கண்டியர். கண்டி - கூட்டம், குழு, கண்டி→ கண்டியர் - குழுவாகப் பாடிச் செல்லும் பாணர்.]

கண்டியூர்[1] *kaṇḍiy-ūr,* பெ.(n.) 1.தஞ்சை மாவட்டத் திலமைந்த சிவபெருமானின் எட்டுத் திருக் கோயில்களுள் ஒன்றுள்ள ஊர். (தேவா.); name of a town with a Siva shrine, in the Taṉjavūr district. 2. மாலியக்(வைணவ)கோயில் அமைந்த அவ்வூரின் ஒரு பகுதி. *(திவ். திருக்குறுந்.19);* another part of the above town noted for its Višnū shrine.

[கண்டி - வீரன், மறவன். கண்டி + ஊர்.]

கண்டியூர்[2] *kaṇḍiy-ūr,* பெ.(n.) சேர்நாட்டு ஊர்ப்பெயர்; a place name in Kerala.

[கண்டி - ஒதுக்கப்பட்ட நிலப்பகுதி. அவ்விடத்து குடியிருப்புகள் அமைந்தமையால் இப் பெயர் பெற்றது.]

ம. கண்டியூர். நடுத் திருவாங்கூர்ப் பகுதியில் மாவேலிக் கரைக்கு அருகிலுள்ள ஓரிடத்தின் பெயர். இஃது ஓடநாடு (காயம்குளம்) அரசின் தலைநகரமாகவும் விளங்கியுள்ளது.

கண்டிராயபணம் *kaṇḍirāya-paṇam,* பெ.(n.) மைசூர் அரசில் கண்டீரவ நரச அரசன் வெளியிட்ட ஒருவகை நாணயம் (G.Sm. D.1.i.290); a coin issued by Kantirava Narassa Raja of Mysore, 17th C.

[கண்டீரன் + அரையன் + பணம் – கண்டீர அரையன் பணம் → கண்டிராயபணம் (மரூஉ.).]

கண்டிரு—த்தல் *kaṇḍiru-,* 2 செ.கு.வி.(v.i.) 1. தோன்றியிருத்தல்; to set in, being; அவனுக்குக் காய்ச்சல் கண்டிருக்கிறது (உ.வ.). 2. குறிக்கப்படுதல்; to be noted down. புத்தகத்தில் அந்தக்கணக்குக் கண்டிருக் கிறதா?(உ.வ.).

[காண் → கண்டு + இரு.]

கண்டில் *kaṇḍil,* பெ.(n.) 1. இருபத்தெட்டுத் துலாங் கொண்ட ஒரு எடையளவு; a unit of measure of weight equal to 28 tulām.2. திரட்சி; round. 3. முடிச்சு; round in shape resdue nodule.

க. கண்டி; **தெ.** கண்டி.

[கண்டி – கண்டில்.]

கண்டில்வெண்ணெய் *kaṇḍil-veṇṇey,* பெ.(n.) 1. பெருஞ்சீரகம் (கம்பரா.ஆற்றுப்.13.2); Chinese anise. 2. குறிஞ்சி நிலத்துள்ள ஒரு மரம்; a tree in the mountain tract. 3. குங்கிலிய வெண்ணெய்; ointment prepared from bdellium. 4. யானைக் கன்றின் மலம்; the faces of an elephant cub (சா.அக.).

[கண்டி → கண்டில் + வெண்ணெய்.]

கண்டிலைப்பாலை *kaṇḍilai-p-pālai,* பெ.(n.) ஒரு காட்டலரி; wax flower, dog-bane (சா.அக.).

[கண்டு + இலை + பாலை.]

கண்டினி *kaṇḍiṉi* பெ.(n.) முண்டினி மரம்; a tree which has more thorns.

[கள் → கண்டு → கண்டி→ கண்டினி.]

கண்டீர் *kaṇḍīr,* இடை. (part.) ஒரு முன்னிலையசை; expletive which expresses the mea.

[காண் → காண்டிர் → கண்டீர்.]

கண்டீரம் *kaṇḍīram,*பெ.(n.) 1. சதுரக்கள்ளி; square-spurge. 2. செவ்வியம்; the root of black pepper plant. 3. ஒருவகை அவரை; a kind of kidney bean (சா.அக.)

மறுவ. கண்டீரவம், கண்டீரவன்.

[கண்டு + ஈரம்.]

கண்டீரவம் *kaṇḍīravam,* பெ.(n.) 1. அரிமா (சிங்கம்); lion. 2. புலி; tiger.

[கண்டி → கண்டிரம் → கண்டீரவம்.]

கண்டீரன் *kaṇḍīraṉ.* பெ.(n.) ஆண்பால் இயற்பெயர்; proper name of male.

[கண்டன் → கண்டிரன் → கண்டீரன். கண்டன் → உடல் வலிமை சான்ற ஆண்மகன். ஒ.நோ. அண்டன் → அண்டிரன். மாந்தன் → மாந்தரன்.]

கண்டீரே *kaṇḍīrē,* இடை. (part.) கண்டீர் பார்க்க; see *kaṇḍīr. "கண்டீ ரென்றா கேட்டீ ரென்றா" (தொல். சொல்.425).*

[கண்டீர் → கண்டீரே; அசைநிலையாய் வந்த முன்னிலை வினைமுற்று.]

கண்டீரை *kaṇḍīrai,* பெ.(n.) செவ்வியம் (தைலவ. தைல.82); the root of black pepper plant (சா.அக.).

[கண்டீரம் → கண்டீரை.]

கண்டு[1] *kaṇḍu,* பெ.(n.) 1. கட்டி (தைலவ.தைல.99); clod, lump. 2. கழலைக்கட்டி; wen. 3. ஓர் அணிகலவுரு; bead or something like a pendant in an ornament for the neck. *'புல்லிகைக் கண்ட நாண் ஒன்றிற் கட்டின கண்டுஒன்றும்'* (S.I.I.ii, 429).

[குண்டு → கண்டு, குண்டு - திரட்சி.]

கண்டு[2] *kaṇḍu,* பெ.(n.) 1.நூற்பந்து; ball of thread. இரண்டு நூற்கண்டு போதும் (உ.வ.). 2. நெசவாளரின் பாவில் ஊடே செல்லும் ஊடைக் குச்சியில் சுற்றப் பட்டுள்ள நூல் கண்டு; a roll of thread on a small stock or straw which is put into the weaver's shuttle.

மறுவ. கண்டுநூல்

க. *கண்டு, கண்டிகெ;* **துட.** *கொடி (மூங்கிலின் இழை);* **தெ.** *கண்டெ, கண்டிய.*

[குண்டு → கண்டு (வே.க.158.).]

கண்டு[3] *kaṇḍu,* பெ.(n.) முள்ளுள்ள கண்டங்கத்தரி. (மலை.); a prickly plant with diffuse branches.

[கள் →கண்டு. (வே.க.158.).]

கண்டு[4] *kaṇḍu,* பெ.(n.) 1. கற்கண்டு; sugarcandy, rock candy. *"வாயூறு கண்டெனவும்" (தாயு. சித்தர்க.8.)* 2. கருப்பங்கட்டி; a ball of jaggery

(சா.அக.).

ம. கண்டு. தெ. கண்டு. Skt. khanda.

[கள் → கண்டு (திரட்சி).]

கண்டு[5] *kaṇḍu*, பெ.(n.) அக்கி (இ.வ.); herpes.

[கள் → கண்டு, (சிறுமுள் போன்ற சின்னஞ்சிறு பரு.]

கண்டு[6] *kaṇḍu*, பெ.(n.) பாத்தி; garden bed.

[கள் → கண்டு (துண்டு, பகுதி, பாத்தி, வயல்).]

கண்டு[7] *kaṇḍu*, பெ.(n.) 1. வயல். (w.g.); field. 2. திருத்தப்பட்ட விளைநிலம்; cultivated land.

[கண்டு = (துண்டு, சிறியது, பகுதி.)]

கண்டு[8] *kaṇḍu*, பெ.(n.) முடிச்சு, கணு; nodule.

[கள் → கண்டு.]

கண்டு[9] *kaṇḍu*, பெ.(n.) பந்து; ball.

தெ. கண்டெ; ம. கண்டி; க; து. செண்டு.

[குண்டு → கண்டு.]

கண்டு[10] *kaṇḍu*, பெ.(n.) கண்டுபாரங்கிச்செடி; knot plant (சா.அக.).

[கள் → திரட்சி, முடிச்சு, கள் → கண்டு.]

கண்டு[11] *kaṇḍu*, பெ.(n.) காஞ்சொறி; nettle plant (சா.அக.)

[கள் → முள் → கள் → கண்டு.]

கண்டு[12] *kaṇḍu*, பெ.(n.) 1. ஆமையோடு; tortoise shell 2. எலும்பு; bone. (சா.அக.).

[கள் = கட்டி. கள் → கண்டு.]

கண்டு[13] *kaṇḍu*, பெ.(n.) 1. மண்புழு; earthworm 2. புழு; worm (சா.அக.).

[கிண்டு → கண்டு.]

கண்டுக்கி *kaṇḍukki*, பெ.(n.) கருப்பு வாகை; fragrant acacia (சா.அக.).

[கண்டு + உக்கி.]

கண்டுகட்டல் *kaṇḍu-kaṭṭal*, பெ.(n.) முடிச்சு முடிச்சாக எழும்பும் கட்டி; a nodular swelling (சா.அக.).

[கண்டு + கட்டு–தல். கண்டு = முடிச்சு.]

கண்டுகட்டுகை *kaṇḍu-kaṭṭugai*, பெ.(n.) சொத்துகளைப் பறிமுதல் செய்தல் (நாஞ்.); (legal) attachment of properties.

ம. கண்டுகெட்டுக.

[கண்டு + கட்டுகை. கண்டு = தொகுதி, முழுமை.]

கண்டுகத்தரி *kaṇḍukattari*, பெ.(n.) காய்க்கும் தன்மையற்ற கத்தரி; brinijal plant which yields nothing (சா.அக.).

மறுவ. குருட்டுக்கத்தரி, ஈனாக்கத்தரி.

[கண்டு + கத்தரி.]

கண்டுகம்[1] *kaṇḍugam*, பெ.(n.) மஞ்சிட்டி (சிறுமரவகை); arnotto

[கண்டு → கண்டுகம்.]

கண்டுகம்[2] *kaṇḍugam*, பெ.(n.) இருபது குளகம் கொண்ட அளவு; a measure of capacity, twenty kūḷagas (கருநா.).

க., பட. கண்டுக.

[கள் → கண்டு → கண்டகம் → கண்டுகம். 120 பட்டணம்படி அல்லது 40 வள்ளம் கொண்ட முகத்தல் அளவு.]

கண்டுகரி *kaṇḍu-kari*, பெ.(n.) பூனைக்காலி; cowage plant (சா.அக.).

மறுவ. கண்டுரா, கண்டுரை, கண்டுதி.

[கண்டு + கரி.]

கண்டுகழி[1]–த்தல் *kaṇḍu-kaḻi*, செ.குன்றாவி.(v.t.) சலிப்புண்டாகுமளவும் நுகர்ந்து கழித்தல்; to enjoy to satiety.

[கண்டு + கழி–.]

கண்டுகழி[2]–த்தல் *kaṇḍukaḻi-*, 4 செ.கு.வி.(v.i.) சமையற்காரர்களுக்கு உணவுப்பண்டங்களோடு புழங்கிக்கொண்டிருந்தமையால் ஏற்படும் பசிமந்தம்; to lose one's appetite from having too much to do with food, as cooks.

[கண்டு + கழி–]

கண்டுகழி[3]–த்தல் *kaṇḍukaḻi-*, 4 செ.குன்றாவி.(v.t.) கட்டியை அறுத்தெடுத்தல்; remove a tumour.

[கண்டு + கழி–தல். கண்டு = கட்டி.]

கண்டுகளி–த்தல் *kaṇḍukaḷi,* செ.கு.வி.(v.i.) ஒன்றைக்கண்டு மனநிறைவடைதல், மகிழ்தல்; to enjoy to one's satisfaction. அருங்காட்சியகப் பொருள்களை மாணவர்கள் கண்டு களித்தனர். (உ.வ.).

[கண்டு + களி–]

கண்டுகாண்(ணு)–தல் *kaṇḍu-kāṇ-,* 16 செ.குன்றாவி. (v.t.) கவனமாய்ப் பார்த்தல்; to look at a thing attentively."*குவளை .... நின்கண் ணொக்குமேற் கண்டுகாண்." (திருக்கோ.162)*

[கண்டு + காண்.]

கண்டுகாணு–தல் *kaṇḍu-kāṇu-,* 16 செ.குன்றாவி. (v.t.) கழலைக் கட்டி தோன்றுதல்; the formation of a tumour (சா.அக.).

[கண்டு + காணுதல். கண்டு = கட்டி.]

கண்டுகுணம்பாடி *kaṇḍukuṇam-pāḍi,* பெ.(n.) முகமன் பேசுவோன்; flatterer. இவன் கண்டுகுணம் பாடி என்பது தெரியாததா? (உ.வ.).

[கண்டு – குணம் + பாடி.]

கண்டுகொள்ளாமலிரு–த்தல் *kaṇḍu-koḷḷāma-liru-,* 12 செ.கு.வி.(v.i.) தெரிந்தும் தெரியாததுபோல் இருத்தல்; to take no notice of.செய்யும் தவறு களைக் கண்டுகொள்ளாமலிருக்க முடியுமா? (உ.வ.).

[கண்டுகொள் + ஆ + மல் + இரு.]

கண்டுங்காணாமை *kaṇḍuṅ-kāṇāmai,* பெ.(n.) 1. பார்த்தும் பாராதது போலிருக்கை; pretending not to have seen whil actually having seen.அவர் என்னைக் கண்டுகொள்ளாமல் போய்விட்டார் (உ.வ.). 2. கண்ணாற் கண்டும் கருத்துணர இயலாமை (விவிலி.மார்க்.4, 12); seeing with one's eyes and yet failing to observe. அவளுக்கு இந்த மாப்பிள்ளை பிடிக்கவில்லை என்பது கண்டுங்காணாமையால் இப்படி நேர்ந்துவிட்டது (உ.வ.). 3. கவனிப்பின்மை; overlooking, as if not seeing.அண்ணனின் கண்டுங் காணாமை காரணமாகத் தம்பியின் முன்னேற்றம் தடைப்பட்டது(உ.வ.). 4. போதியதும் போதாது மாகுதல்; state of being at once sufficient and in-sufficient; apparent insufficiency.

[கண்டும் + காணாமை. இலக்கிய வழக்கில் இதனை நோக்கல் நோக்கம் என்பர்.]

கண்டுசோளம் *kaṇḍucōḷam,* பெ.(n.) வெள்ளைச் சோளம்; Indian millet or great millet (சா.அக.).

[கண்டு + சோளம். கண்டு = திரட்சி. கண்டுச்சோளம் = முட்டைச்சோளம், உருண்டைச்சோளம்.]

கண்டுசருக்கரை[1] *kaṇḍu-sarukkarai,* பெ.(n.) நுகர்தற்குரிய ஒருவகை மணப்பொருள் (சிலப்.4: 35, உரை.); an imported white fragrant substance used as incense.

[கண்டு + சருக்கரை.]

கண்டுசாடை *kaṇḍu-šāḍai,* பெ.(n.) **கண்சாடை** பார்க்க; see *kaṇšāḍai.*

[கண்டு + சாடை.]

கண்டுசாய்ப்பு *kaṇḍu-šāyppu,* பெ.(n.) **கண்சாடை** பார்க்க; see *kaṇšāḍai.*

[கண்டு + சாய்ப்பு.]

கண்டுசெய்–தல் *kaṇḍu-sey-,* 1 செ.குன்றாவி. (v.t.) போலித்தல், பின்பற்றுதல், போலச்செய்தல்(வின்.); to imitate an action.

[கண்டு + செய்–.]

கண்டுத்துத்தி *kaṇḍu-t-tutti,* பெ.(n.) ஒரிலைத் துத்தி. (வின்.); a species of mallow, side acumi-nate.

[கண்டு + துத்தி.]

கண்டுபாரங்கி *kandu-pāraṅgi,* பெ.(n.) 1. சிறு தேக்கு; beetle killer. (பதார்த்த.980). 2. சிறுமரம்; (ட.) Indian lotus croton.

ம. கண்டுபரங்கி; **க., தெ.** கண்டுபாரங்கி.

[கண்டு + பாரங்கி. பரு → பரங்கி → பாரங்கி. பாரங்கி = வடிவில் பருத்தது.]

கண்டுபாவி–த்தல் *kaṇḍu-pāvi-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஒன்றைப் பின்பற்றிச் செய்தல்; to imitate an action."*பலாயனற் கண்டு பாவித்தாங்கு" (பாரத. நிரைமீட். 21).*

Skt. bhavi > **த.** பாவி.

[கண்டு + பாவி]

கண்டுபிடி–த்தல் *kaṇḍupiḍi-,* 4 செ.குன்றா.வி.(v.t.) 1. ஆய்ந்து கண்டறிதல்; to find out. 2. புதிதாகக்

கண்டுபிடித்தல்; to discover. எடிசன் மின் விளக்கைக் கண்டுபிடித்தார்(உ.வ.). 3. தேடிக் கண்டு பிடித்தல்; to search and find. காவலர் திருடனைக் கண்டுபிடித்தனர்(உ.வ.). 4. உண்டாக்குதல்; to invert. மார்க்கோனி வானொலியைக் கண்டுபிடித்தார் (உ.வ.).

ம. கண்டு பிடிக்குக; க., பட. கண்டுகிடி

[கண்டு + பிடி. கண்டுபிடி = பருப்பொருளைக் கண்டுபிடித்தல். கண்டறிதல் = நுண்பொருள் செய்திகளைக் கண்டறிதல்.]

இரண்டு சொற்கள் சேர்ந்து ஒருசொல் நீர்மைத்தாகி வேறொரு சொல் தம்மிடையே வர இடந்தராததாய் நிற்கும் வினையடிகள் கூட்டு வினையடிகளாகும்.

பெயர், செய்தென் எச்சம், செயவென் எச்சம், குறிப்பு வினை, இடைச்சொல் போன்றவற்றுடன் துணை வினைகள் சேர்ந்து கூட்டு வினையடிகள் உருவாகின்றன. இங்குச் செய்தென் எச்சம் துணைவினை யடியுடன் இணைந்து கூட்டு வினையடி உருவாக்கியுள்ளது.

கண்டுபிடிப்பு *kaṇḍupiḍippu,* பெ.(n.) 1. புதிய உருவாக்கம்; invention. ரேடியம் மேடம் கியூரியின் கண்டுபிடிப்பு (உ.வ.). 2. நுட்பம் காணல்; discovery. அவரது கண்டுபிடிப்பு அரிய முயற்சி (உ.வ.).

[கண்டு + பிடிப்பு.]

கண்டுபேசு-தல் *kaṇḍu-pēsu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நேரிற்சென்று உரையாடுதல்; to talk in person. *"கண்டுபேசக் கவையுமிருக்கிறது; முகத்தில் முழிக்க வெட்கமும் இருக்கிறது".(பழ.)*

[கண்டு + பேசுதல்.]

கண்டுமுட்டு *kaṇḍu-muṭṭu,* பெ.(n.) 1. வேதியரைக் கண்டால் தீட்டுப்படுவதாகச் சமணர் மேற்கொள்ளும் வழக்கம்; pollution by sight term applied to a fast observed by Jains when they happen to see Vēdic Hindus. *"மதுரையிற் சைவ வேதியர் தாம் மேவ லாலின்று கண்டுமுட்டியா மென்று" (பெரியபு. திருஞான. 683).* 2. நேரிற்காணல்; to look in person.

ம. *கண்டுமுட்டு;*

[கண்டு + முட்டு – கண்டுமுட்டு =கண்டு தீட்டுப்படுதல். முட்டுதல் = எதிர்படுதல் தாக்குதல், தீங்காதல்.]

கண்டமுட்டு, கேட்டமுட்டு, தொட்டமுட்டு எனவும் முட்டில் மூன்று வகை கூறுவர்.

கண்டுமுதல் *kaṇḍu-mudal,* பெ.(n.) கதிரடித்துத் திரட்டிய தவசக்குவியல்; actual produce of a field when the harvest has been reaped and threshed. *கம்பு ஐந்து மூட்டை கண்டுமுதல் ஆனது (உ.வ.).*

[கண்டு + முதல். கண்டு = திரட்சி, மொத்தம், முழுமை. கண்டுமுதல் = முழுமையான வருவாய் ஆதல்.]

கண்டுமுதல்பண்ணு-தல் *kaṇḍu-mudal-paṇṇu-,* 12 செ.குன்ற.வி.(v.t.) முழுவதும் ஒப்படி செய்து குவித்தல்; to collect net produce.

[கண்டு + முதல் + பண்ணு. கண்டு = மொத்தம். மொத்த முதல் பண்ணுதல் என்பது துப்புரவு செய்த மொத்த தவசக்குவியலைக் குறித்தது.]

கண்டுமூலம்[1] *kaṇḍu-mūlam,* பெ.(n.) 1. சிறுதேக்கு (மலை.); beetle-killer. 2. திப்பிலி (யாழ்.அக.); long pepper. 3. திப்பிலி வேர்; root of long pepper (சா.அக.).

[கண்டு + மூலம்.]

கண்டுயில்(லு)-தல் *kaṇḍuyil-,* 13 செ.கு.வி.(v.i.) 1. சிறுதூக்கம் கொள்ளுதல்; to nap. *"மாசுணங் கண்டுயில்" (நீதிநெறி.34).* 2. பார்வை மங்குதல்; to grow dim, as of sight. *"கண்துயின்று முன்றிற் போகா முதிர்வினள்" (புறநா.159. 4).*

[கண்டு + துயில்.]

கண்டுயிலிடம் *kaṇḍuyiliḍam,* பெ.(n.) உறங்குமிடம்; dormitary, bed room.

மறுவ. *உறையுள், அமளி, சேக்கை, சட்டகம், சேர்விடம், பள்ளி, பட்டம், பாழி, பாயல், கிடக்கை, ஆய்வை, கண்படை.*

[கண் + துயில் + இடம்.]

கண்டுரம் *kaṇḍuram,* பெ.(n.) 1. தினவெடுத்தல்; itching. 2. சொறிதல்; scratching. 3. ஒரு நாணல்; a species of reed. 4. பாகற்காய்; bitter gourd (சா.அக.).

[கண்டு (முள்) → கண்டுரம்.]

கண்டுராய் *kaṇḍurāy* பெ.(n.) வயலினின்று தண்ணீர் வெளியேறும் சிறு வாய்க்கால்; a sluice or small channel in a paddy-field (சேரநா.).

ம. கண்டுராயி

[கண் + திறவு + வாய் கண்திறவுவாய் – கண்டிறாய் → கண்டிராய். (கொ.வ.).]

கண்டுருவு *kaṇḍuruvu*, பெ.(n.) அச்சுரு; a mould.

தெ. கண்டருவு

[கண்டு (திரண்டது) + உருவு.]

கண்டுவகை *kaṇḍuvagai*, பெ.(n.) கற்கண்டின் வகை; a kind of sugar candy.

[கண்டு + வகை.]

கண்டுவழிபடு–தல் *kaṇḍu-vaḻipaḍu-*, 4 செ.குன்றாவி.(v.t.) நேரில் வணங்குதல்; to pay one's respect to, as great personage.

மறுவ. கண்டுதரிசித்தல்

[கண்டு + வழிபடு.]

கண்டுழவு *kaṇḍuḻavu*, பெ.(n.) அரசனுடைய சொந்த நிலம் (S.I.I.v.322); private lands of a king.

ம. கண்டுழவு.

[கண்டு = தொகுதி, திரட்டு, நன்கு திருத்திய விளைநிலம். கண்டு + உழவு – கண்டுழவு = மிகச் செப்பமான நிலத்து வேளாண்மை.]

கண்டூதி *kaṇḍūdi*, பெ.(n.) 1. தினவு; itching, tingling. *"கண்டூதி யாற்றாறு" (கந்தபு. முதனாட்.188.).* 2. காஞ்சொறி (திவா.); climbing nettle. 3. காமவேட்கை; sexual desire, chiefly of a woman (சா.அக.).

[கண்டு = திரட்சி, பெருக்கம், மிகுதி. ஊர்தல் = தினவெடுத்தல். கண்டு + (ஊர் → ஊரி) ஊதி. ஊரி → ஊதி (ஈற்றுத்திரிபு).]

கண்டூயம்[1] *kaṇḍūyam*, பெ.(n.) கால்நடைகள் உராய்ந்து கொள்ள நடப்பட்ட மரத்துண்டு; stake for cattle to rub themselves against.

[கண்டு (திரண்ட மரத்துண்டு) + (ஊதம்) → ஊயம்.]

கண்டூயம்[2] *kaṇḍūyam*, பெ.(n.) **கண்டூதி**[1] பார்க்க; see *kaṇḍūdi*[1]. *"விலங்கு தத்தம் மெய்யகண்டூயம் யாவும் போவது கருதி" (கந்தபு.மார்க்கண்.4.).*

[கண்டு + (ஊதம்) – ஊயம்.]

கண்டூரம்[1] *kaṇḍūram*, பெ.(n.) 1. காஞ்சொறி (திவா.); climbing nettle. 2. பூனைக்காலி (மலை.); cowhage.

[கண்டு + (ஊர்) ஊரம். ஊர்தல் → நமைச்சல் உண்டாதல், அரித்தல்.]

கண்டூரம்[2] *kaṇḍūram*, பெ.(n.) வன்மையான கலப்பு மருந்து.(வின்.); strong compound medicine.

[கண்டு + (ஊதம்) → ஊரம். – கண்டூரம்.]

கண்டெடு–த்தல் *kaṇḍeḍu-*, 18 செ. குன்றாவி.(v.t.) 1. பார்த்து எடுத்துக்கொள்ளுதல்; to happen upon, as a thing of value and pick it up. 2. தற்செயலாக எடுத்தல்; to pick up something by chance. இந்தப் பையை வழியில் கண்டெடுத்தேன் (உ.வ.).

[கண்டு + எடு.]

கண்டெடுத்தான் *kaṇḍeḍuttāṉ*, பெ.(n.) ஆண்பாற் குறித்த காரணப்பெயர் (இ.வ.); a proper name denoting masculine gender.கண்டெடுத்தானுக்குத் தாய் யாரோ தந்தை யாரோ (உ.வ.).

மறுவ. *தொட்டில் குழந்தை, ஏதிலிக்குழந்தை, காட்டுப்பிள்ளை.*

[கண்டு + எடுத்தான் – கண்டெடுத்தான் = பெற்றோரால் கைவிடப்பட்டுக் கிடந்த இடத்திலிருந்து கண்டெடுத்த காரணத்தால் பெற்ற பெயர்.]

கண்டெழுத்து[1] *kaṇḍeḻuttu*, பெ.(n.) அரசின் நிலத்தீர்வை ஏற்பாடு (நாஞ்.); land revenue settlement.

[கண்டு + எழுத்து. கண்டு = திருத்தப்பட்ட விளைநிலம்.]

கண்டெழுத்து[2] *kaṇḍeḻuttu*, பெ.(n.) பார்த்து எழுதுதல்; copying (சேரநா.).

ம. கண்டெழுத்து.

[கண்டு + எழுத்து.]

கண்டெழுத்துப் பிள்ளை *kaṇḍeḻuttu-p-piḷḷai*, பெ.(n.) நிலம் முதலியவற்றை அளக்கும் ஆள்; a surveyor.

ம. கண்டெழுத்து பிள்ள

[கண்டு +(எழுது) எழுத்து + பிள்ளை. கண்டு திருத்தப்பட்ட விளைநிலம்.]

கண்டேணி *kaṇḍēṇi,* பெ.(n.) சிறிய ஏணி, கை ஏணி; a short ladder (சேரநா.).

ம. கண்டேணி

[கண்டு = கணு, மூங்கிற்கணு. கண்டு + ஏணி (மூங்கிற்கணுவில் குறுக்குச்சட்டம் கோத்த ஏணி).]

கண்டேறு *kaṇḍēṟu,* பெ.(n.) ஒருவகைப் பந்தாட்டம்; a kind of ball-game (சேரநா.).

ம. கண்டேறு

[கண்டு + ஏறு. கண்டு = திரட்சி, பந்து. ஏறு = எறிந்து விளையாடல்.]

கண்டை[1] *kaṇḍai,* இடை. (part.) ஓர் அசைநிலை (தொல்.சொல்.426); an expletive.

[காண் → கண்டாய் → கண்டை.]

கண்டை[2] *kaṇḍai,* பெ.(n.) நெசவுத்தாறு; reel of weaver's shuttle.

[கண்டு → கண்டை.]

கண்டை[3] *kaṇḍai,* பெ.(n.) 1. சிறுதுகில் (பிங்.); small cloth for wear. ஒள்ளிழை gold or silver lace.

தெ. கண்டுவா; **கொலா.** கண்ட்வா(துணி); **நா.** கண்ட, கண்ட்வா(துணி); **பர்.** கண்ட; **கட.** கர்ண்ட; **குவி.** கந்தா.

Ori. khandna(shawl)

[கண்டு → கண்டை.]

கண்டை[4] *kaṇḍai,* பெ.(n.) 1. வட்டமான அல்லது திரண்ட பெருமணி (திவா.); bell, large bell. 2. தோற் கருவி வகை.(பிங்.); a drum. 3. வீரக்கழல்; warrior's ankle rings or bells.

தெ. கண்ட

த. கண்டை > **Skt.** ghanta.

[குண்டு – குண்டலம் = வட்டம், வளையம். குண்டு → குண்டை = உருண்டு திரண்டது. குண்டை → கண்டை.]

கண்டைக்கடுவன் *kaṇḍai-k-kaḍuvaṉ,* பெ.(n.) ***கெண்டைக் கடுவன்*** பார்க்க; see *keṇḍai-k-kaḍuvaṉ.*

[கெண்டை → கண்டை + கடுவன்.]

கண்டைப்பாய் *kaṇḍaippāy,* இடை.(int.) பார்க்க; see *behold. "இப்போர் புறஞ்சாய்ந்து கண்டைப்பாய்" (கலித். 89.13).*

[காண் – கண்டாய் – கண்டை – கண்டைப்பாய் (பி.வி.)]

கண்டையம் *kaṇḍaiyam,* பெ.(n.) ***கண்டை***[4] பார்க்க; see *kaṇḍai.*

[கண்டை → கண்டையம்.]

கண்டைவேட்டி *kaṇḍai-vēṭṭi,* பெ.(n.) ஒள்ளிழைத் துணி; cloth with lace border.

[கண்டு – கண்டை + வேட்டி. கண்டை → முடிச்சு, விளிம்பு.]

கண்டொழிவொற்றி *kaṇḍoḻivoṟṟi,* பெ.(n.) ஒருவகை நில ஒற்றிமுறை; a kind of land mortgage (சேரநா.).

ம. கண்டொழிவொற்றி

[கண்டு (வயல்) + ஒழிவு + ஒற்றி.]

கண்டொளி–த்தல் *kaṇḍtoḷi-,* 4 செ.கு.வி.(v.i.) ஒளித்து விளையாடுதல் (இ.வ.); to play the game of hide and seek.

[கண்டு + ஒளித்தல். ஒளித்தல் = தன்னை மறைத்தல்.]

கண்டொளி–தல் *kaṇḍoḷi-,* 4 செ.கு.வி.(v.i.) ஒளிந்து விளையாடுதல்; to play blind man's buff.

[கண்டு + ஒளி.]

கண்டோங்கிப்பிலால் *kaṇṭōṅgippilāl,* பெ.(n.) பெரிய கடல்மீன் வகையுள் ஒன்று (முகவை. மீனவ.); a kind of big sea fish.

[கண்டு (மொத்தம், கூட்டம்) + உண்கு + இரும்பிலால்.]

இப்பெருமீன் இரைவேண்டிய விடத்துக் கடலிற் பசையுள்ளதோர் உமிழ்நீரை உமிழ அதனை இரையென்றெண்ணிச் சிறுமீன் கூட்டம் உண்ண வரும்போது இம் மீன் விழுங்கிவிடும்.

கண்டோட்டி *kaṇḍōṭṭi,* பெ.(n.) வயலில் நீரைத் திருப்பும் ஆள்; one who regulates water for irrigation.

ம. கண்டோட்டி

[கண்டு + ஒட்டி. கண்டு = வரப்பு(திருத்திய வயல், பாத்தி)]

கண்டோட்டு *kaṇḍōṭṭu,* பெ.(n.) தண்ணீர்த் தட்டான போது முறைப்படி நீர் பாய்ச்சுகை (Tinn); regulation of water for irrigation during periods of scarcity.

[கண் + ஓட்டு. கண்டு = திருத்திய வரப்பு அமைந்த வயல்.]

கண்டோதி *kaṇḍōtti,* பெ.(n.) வெளிப்படையான சொல் (ஈடு, 4, 1,9 ஜீ); unambiguous, plain word or statement.

[கண்ட + உத்தி – கண்டுத்தி → கண்டோத்தி. இதனைக் கண்டோக்தி என்பது வழு.]

கண்டோர் *kaṇḍōr,* பெ.(n.) 1. **கண்டோன்** பார்க்க; see *kaṇḍōṉ* *"மலர்த்தார் மார்ப நின்றோட் கண்டோர் பலர்தில்". (அகநா. 82:14).* 2. செய்தோர்; doer *"தீமை கண்டோர் திறத்தும் பெரியோர் தாமறிந்து உணர்க" (நற். 116:1).*

[கண்ட + ஓர் (ஐவர்) – கண்டோர்.]

கண்டோர்கூற்று *kaṇḍōrkūṟṟu,* பெ.(n.) ஓர் அகப்பொருள் துறை; a conventional theme in ham poetry.

[கண்டோர் + கூற்று.]

கண்டோலம் *kaṇḍōlam,* பெ.(n.) பெருங்கூடை; a big basket.

[கண்டு = திரட்சி, பெரியது, ஓலம் = ஓலைக்கூடை கண்டு + ஓலம் - கண்டோலம்.]

கண்டோன் *kaṇḍōṉ,* பெ.(n.) 1. பார்த்தோன்; one who has seen, a spectator, onlooker, beholder. 2. பிற ஆள்; a stranger.

ம. கண்டோன்; **க.** கண்டோனு; **தெ.** கன்னவாடு.

[கண்டவன் → கண்டான் → கண்டோன்.]

கண்டௌடதம் *kaṇḍouḍadam,* பெ.(n.) மிக்க இசிவு மிகுந்த காலத்துக் கொடுக்கும் ஒருவகைக் கட்டுமருந்து; strong compound medicine, applied to the tongue in lock-jaw.

[கண்டு + ஔடதம். கண்டு = திரட்சி.]

கண்ண *kaṇṇa,* கு.வி.எ.(adv.) விரைவாக; speedily, quickly. *கடைக்குப்போய்க் கண்ணவா (சென்னை.வ.).*

தெ. க்ரன்னை, க்ரன்ன.

[கள் = திரட்சி, நெருக்கம், முடுக்கம், விரைவு, கள்→ கண்→ கண்ண.]

கண்ணகப்பை *kaṇ-ṇ-agappai,* பெ.(n.) 1. தேங்காய்ச்சிரட்டையாற் செய்த அகப்பை (இ.வ.); a kind of ladle, made of coconut shell. 2. துளை யோடு கூடிய இரும்புச் சட்டுவம்; perforated ladle made of iron.mod.

ம. கண்ணாப்ப

[கண்(துளை) + அகப்பை.]

கண்ணகற்று-தல் *kaṇ-ṇ-akaṟṟu-,* 10 செ.கு.வி.(v.i.) 1. துயில் நீங்கி விழித்தல்; to wake up, as opening one's eyes. *"அர்த்தராத்திரியில் கண்ணகற்றி... நினைந்தருளு மெல்லைக்கண்". (பாரத.வெண்.154, உரை).* 2. பார்வை மாற்றுதல்; to change the sight.

[கண் + அகற்று-]

கண்ணகன் *kaṇṇagaṉ,* பெ.(n.) ஓர் ஆண்பால் இயற்பெயர்; a proper name of male ; ***கண்ணகி*** பார்க்க; see *kaṇṇagi.*

[கண் + அகம் – கண்ணகம் → கண்ணகன்.]

கண்ணகனார் *kaṇṇagaṉār,* பெ.(n.) கடைக் கழகக் காலப் புலவருள் ஒருவர்; one of Tamil poets in Sangam/age.

[கண்ணகன் + ஆர் (உயர்வுப்பன்மையீறு).]

கண்ணகி *kaṇṇagi,* பெ.(n.) 1. சிலப்பதிகார கதைத் தலைவி; name of the heroine in Silappatigāram. 2. கடையெழு வள்ளல்களுள் ஒருவனான பேகன் என்பானுடைய புலமை வாய்ந்த மனைவி (புறநா.143); a poetess, the wife of Pēgaṉ, an ancient chief of the Tamil country who was famed for his munificence.

ம. கண்ணகி

[கண் + அகம் → கண்ணகம் – கண்ணகன் (ஆண்பாற்பெயர்) – கண்ணகி (பெண்பாற்பெயர்)கண்ணகம் = கண். கண்ணகி- கண்போன்றவள்.]

மண்ணகம் – மண் என்றும் விண்ணகம் விண் என்றும் பொருள்படுதலைக் காணலாம்.

விண்ணகம் – விண்ணாகிய இடம், மண்ணகம் – மண்ணாகிய – இடம் என்றும் இருபெயரொட்டுப் பண்புத் தொகையாயின. கண்ணகம் என்னும் சொல் கண்ணாகிய இடம்

அல்லது கண்ணாகிய சிறப்புப் புலன் என இருபெயரெட்டுப் பண்புத்தொகையாகிப் பாலீறு பெற்றது. கண்ணே, கண்மணியே எனக்கெழு தகைமைப் புலப்படுத்தும் பெயர்ச் சொல்லாகிக் கண்ணகன் என ஆண்பாற் பெயராகவும், கண்ணகி எனப் பெண்பாற் பெயராகவும் வழங்கலாயின. இனி கண்ணகனைக் கண்ணகத்தான், கண்ணகி – கண்ணகத்தாள் எனவும் பொருள்பட்டுக் கண்போற் போற்றப்படுதலைக் குறித்தது எனக் கூறுவது பொருந்துவதன்று. ஏனெனில், கண்ணகத்தான், கண்ணகத்தாள் என்பன குறிப்பு வினைமுற்றும் குறிப்பு வினையாலணையும் பெயரும் ஆதலன்றிப் இயற் பெயராமாறு இல்லை.

கண்ணகித்தோற்றம் *kaṇṇagi-t-tōṟṟam,* பெ.(n.) கண்ணகியைப்பற்றிக் கூறும் சேரநாட்டு நாட்டுப் பாடல்; a ballad on Kaṇṇagi (சேரநா.).

ம. கண்ணகித்தோற்றம்

[கண்ணகி + தோற்றம். தோற்றம் = வரலாறு, வரலாற்றுக்கதை.]

கண்ணங்குடி *kaṇṇaṅguḍi,* பெ.(n.) ஓர் ஊர்ப்பெயர்; name of a village.

[கண்ணன் + குடி.]

கண்ணங்குத்து *kaṇṇaṅguttu,* பெ.(n.) தென்னங் கீற்றுகளில் புள்ளிபோல் உண்டாகும் ஒருவகை நோய்; a kind of disease affecting the leaves of coconut palms, leaf-blight (சேரநா.).

ம. கண்ணங்குத்து.

[கண் + அம் + குத்து. கண்ணம் = இடம், இடப்பரப்பு. குத்து = நோய்]

கண்ணங்கூத்தனார் *kaṇṇaṅ-kūttaṉār,* பெ.(n.) கார்நாற்பது என்னும் நூலையியற்றிய ஆசிரியர், Kūttan, the son of Kaṇṇaṉ, name of the author of Kār-nāṟpadu.

[கண்ணன் + கூத்தன் (கண்ணன் மகன் கூத்தன்).]

கண்ணங்கோடி *kaṇṇaṅkōḍi,* பெ.(n.) ஒருவகை மீன்; a kind of shark (சேரநா.).

ம. கண்ணங்கோடி

[கண் + அம் + கோடி.]

கண்ணச்சன் *kaṇṇaccaṉ,* பெ.(n.) **கண்ணத்தன்** பார்க்க; see *kaṇṇattaṉ.*

ம. கண்ணச்சன்

[கண் + (அத்தன்)அச்சன்.]

கண்ணசாரம் *kaṇṇa-šāram,* பெ.(n.) 1. கலைமான்; spotted antelope. 2 சதுரக்கள்ளி; square spurge. 3. நூக்கமரம்; sissoo wood.

[கண் = அகலம், அகற்சி. கண் + அ + சாரம். சாலம்– சாரம் நீட்டுமரம் – நீண்டது. நீண்டகொம்பு.]

கண்ணஞ்சிரட்டை *kaṇṇañjcraṭṭai,* பெ.(n.) தேங்காய்ச்சிரட்டையின் கண்ணுள்ள பாகம்; the upper half of a coconut shell having the three 'eyes' on it.

ம. கண்ணஞ்சிரட்ட

[கண் + அம் + சிரட்டை. கண் = துளை. அம் – சொற்சாரியை.]

கண்ணஞ்சு *kaṉ-ṇ-añju-,* 10 செ.கு.வி.(v.i.) 1. கண் கூசுதல்; to dazzle as of the eye. 2. கண்மூடி அச்சத்தைப் புலப்படுத்துதல்; to quake through fear. *"கடாஅக் களிற்றினுங் கண்ணஞ்சா வேற்றை". (கலித்.101:36).* 3. மென்மையான அச்சம் கொள்ளுதல்; to fear lightly.

[கண் + அஞ்சு.]

கண்ணஞ்சேந்தனார் *kaṇṇañ-cēndaṉār,* பெ.(n.) கடைக்கழகம் (சங்கம்) மருவிய காலத்துப் புலவர்களுள் ஒருவர்; one of poets belonging to post-Sangam age.

[கண்ணன் + சேந்தன் + ஆர் (உ.ப.ஈறு).]

கண்ணஞ்சேறு *kaṇṇañ-cēṟu,* பெ.(n.) கடலடிச்சேறு (செங்கை மீனவ.); mole at the sea bed.

[கண் + அம் + சேறு. கண் = இடம். தரை. 'அம்' சொற்சாரியை.]

கண்ணடி[1]–த்தல் *kaṉ-ṇ-aḍi-,* 4. செ.கு.வி.(v.i.) கண்ணாற் குறிப்புக் காட்டல், கண்சாடை செய்தல்; to instigate, to encourage by winking at.

மறுவ. கண்ணசைத்தல்

து. கண் ஒத்துநி

[கண் + அடி.]

கண்ணடி[2] *kaṇṇaḍi,* பெ.(n.) ***கண்ணூறு*** பார்க்க; see *kaṇṇūṟu. கல்லடிபட்டாலும் கண்ணடி படக் கூடாது (பழ.).*

[கண் + அடி.]

கண்ணடி[3] *kaṇ-ṇ-aḍi,* பெ.(n.) கண்ணாடி பார்க்க; see *kaṇṇāḍi. பரந்தொளி யுமிழும் பைம்பொற் கண்ணடி (சீவக.629).*

ம. கடக்காரன்; **பட.** கண்ணடி; **து.** கண்ணடி,கன்னடி; **குட.**கன்னடி; **க.** கனடக, கனடி, கன்னடி; **துட.** கொணொடி.

[கண் + ஆடி – கண்ணாடி → கண்ணடி(கொ.வ.)]

கண்ணடுங்கு-தல் *kaṇṇaḍuṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) இமை படபடத்தல்; to shake, tremble as of the eye.

[கண் + நடுங்கு.]

கண்ணடை-தல்[1] *kaṇ-ṇ-aḍai-,* செ.கு.வி. (v.t.) 1. துளை அடைபடுதல்; to be blocked up, as a hole. இடியப்பக்குழல் கண்ணடைந்து போயிற்று (உ.வ.). 2. பயிரின் குருத்துக் கண்ணடைதல்; to cease shooting, as the head of a plant. 3. திரிந்து கேடுறுதல்; to be spoiled, as milk when kept too long. *கண்டைந்த பால் (வின்.).*

[கண் + அடை.]

கண்ணடை[2]**-தல்** *kaṇṇ-aḍai-,* 2 செ.கு.வி.(v.i.) 1. கண் பஞ்சடைந்து போதல் ஒரு சாக்குறி; to dim the eyes as symptom of death. 2.கண் நேர் கொள்ளுதல்; to close the eyelid (சா.அக.).

[கண் + அடை.]

கண்ணடை[3]**-த்தல்** *kaṇ-ṇ-aḍai-,* 7 செ.குன்றாவி. (v.t.) 1. துளையடைத்தல்; to be choked; to be stopped up, as the orifice of a spring.ஊற்று முழுதும் கண்ணடைத்துக் கொண்டது (உ.வ.). 2. வழியடைத்தல்; to be blocked up, closed, as a way. *"பெருவழி அறுகையு நெருஞ்சியு மடர்ந்து கண்ணடைத் தாங்கு" (மணி 12:60).* 3. உறங்குதல்; to close the eyes and sleep. 4. இறந்தவரின் திறந்த கண்ணை மூடுதல்; closing the eyes of dead body.

[கண் + அடை.]

கண்ணடைப்புள்ளி *kaṇṇaḍai-p-puḷḷi,* பெ.(n.) 1. மாட்டின் கண்ணருகே உள்ள புள்ளி; a speck near the corner of the eye. 2. புள்ளியுள்ள மாடு; a cow having a speck near the eye.

ம. கண்ணடப்புள்ளி

[கண் + அண்டை + புள்ளி. அண்டை = அடை. அருகில்.]

கண்ணப்பநாயனார் *kaṇṇappa-nāyaṉār,* பெ. (n.) தம் கண்ணைப் பிடுங்கிச் சிவனுடைய கண்ணுக்கு மாற்றாக வைத்து முத்திபெற்ற சிவத்தொண்டராகிய அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவர் (பெரியபு.); one among the sixty three canonized šaiva saints, who from his intense love to šiva gouged out his own eyes to engraft them on to him.

ம. கண்ணப்பசித்தர்

[கண் + அப்பன். (அப்பியவன்) கண்ணப்பன் + நாயனார்.]

கண்ணம்மா *kaṇṇammā,* பெ.(n.) 1. பெண்ணுக்கிடும் பெயர்; a name given to a female child. "சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா" (பாரதி) 2.தாய்வழிப் பாட்டி; a grandmother (சேரநா.) ***கண்ணம்மாள்*** பார்க்க; see *kaṇṇammāl.*

ம. கண்ணம்ம

[கண் + அம்மா(ள்). (கண் போன்று சிறந்தவள்).]

கண்ணம்மாள் என்பதே செவ்விய வழக்கு. கண்ணம்மா என்பது விளியாதலின் இயற்பெயராக எழுவாய்த் தன்மை எய்தாது. இதனை வழுவமைதியாக உலக வழக்கில் வழங்கினும் இலக்கண வழக்கிற்கு ஏற்புடைத்தன்று. இவ்வாறு பெயரிடுதலைத் தவிர்த்தல் வேண்டும்.

கண்ணம்மாள் *kaṇṇammāl,* பெ.(n.) பெண்பால் இயற்பெயர்; proper name of a female.

[கண் + அம்மாள். கண் = பெரிய, சிறந்த.]

கண்ணமங்கை *kaṇṇa-maṅgai,* பெ.(n.) மாலியர் களால் 108 திருப்பதிகள் என்று போற்றப்படுவன வற்றுள் ஒன்று; one of the 108 sacred shrines of the Vaišhnarrites.

[கண்ணன் + மங்கை.]

கண்ணமரம் *kaṇ-ṇ-amaram,* பெ.(n.) கண்சூட்டு நோய்; granular opthalmia, conjunctivitis.

[கண் + அமரம்.]

கன்னமுது *kaṇṇamudu,* பெ.(n.) கன்னல் (பாயாசம்); payasam milk porridge.

[கண் + அமுது. கண்ணை + அமுது – கண்ணமுது. கண்ணை = தேனடை. இனிப்புத் தேனடைபோல் தித்திக்கும் இனிய உண்டி. "அரிசியும் பிற இன்சுவைப் பொருள்களும் கலந்து அட்ட பாற்கன்னல் (பாயசம்)".]

கண்ணமைப்பு *kaṇ-ṇ-amaippu,* பெ.(n.) தமிழ் மருத்துவ நூலின்படி கண் முழுவதும் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட அமைப்பு; structure of the eye.

[கண் + அமைப்பு.]

கருவிழி, வெள்விழி, இமை, கடைக்கண் போன்றனவற்றைக் கண்ணின் அமைப்பு என்பர்.

கண்ணய்யன் *kaṇṇayyaṇ,* பெ.(n.) பாட்டன், தந்தையின் தந்தை; a grandfather (சேரநா.).

மறுவ. கண்ணப்பச்சி

ம. கண்ணய்ய; **தெ.** கன்னய்ய

[கண் = பருமை, பெருமை, அகற்சி, உயர்ச்சி. கண் + ஐயன் கண்ணையன் – கண்ணய்யன்.]

கண்ணய–த்தல் *kaṇ-ṇaya-,* 3 செ.குன்றாவி.(v.t.) விரும்புதல் (திருக்கோ.109, துரை); to desire greatly.

[கண் + நயத்தல். நயத்தல் விரும்புதல்.]

கண்ணயர்–தல் *kaṇ-ṇ-ayar,* 3 செ.கு.வி.(v.i.) உறக்க நிலையை அடைதல்; to be heavy with sleep, as the eyes.

[கண் + அயர்.]

கண்ணராவி *kaṇ-ṇ-arāvi,* பெ.(n.) 1. பார்வைக்கு வெறுப்பானது; that which is unpleasant for sight. காயப்பட்ட கோலத்தைக் காணக் கண்ணரா வியாய் இருந்தது (உ.வ.). 2. துயரம்; sorrow. வாழ்ந்த குடும்பம் வறுமையில் இருப்பதைக்காணக் கண்ணராவியாய் இருக்கிறது (உ.வ.). 3. எதிர்பாராத துன்பம்; *misfortune.*

ம. கண்ணராவுக (வருத்தத்திற்குள்ளாதல்)

[கண் + அராவு. அராவி = கண்ணால் பார்த்துப் பொறுக்கமாட்டாத துன்பம்.]

கண்ணரி¹–த்தல் *kaṇ-ṇ-ari-,* 4 செ.கு.வி.(v.i.) கண் இமையை அரிக்கும் நோய்; an itching eye disease.

[கண் + அரி.]

கண்ணரி²–தல் *kaṇ-ṇ-ari-,* 2 செ.குன்றாவி.(v.t.) நீக்குதல் ; to desist, cease, as from doing a duty. *"கடங்கண்ணரிந்த கையராகி" (பெருங். உஞ்சைக். 33, 47).*

[கண் + அரி.]

கண்ணரி³ *kaṇṇari,* பெ.(n.) வெள்விழியில் அமைந்த செவ்வரி; streak of the eye.

[கண் + அரி. அரி = வரி.]

கண்ணரிசி *kaṇ-ṇ-ariśi,* பெ.(n.) நொய்யரிசி; broken rice.

ம. கண்ணரி

[கண் + அரிசி. கண் = சிறுமை.]

கண்ணரிப்பு *kaṇ-ṇ-arippu,* பெ.(n.) கண்ணில் ஏற்படும் நமைச்சல்; slight irritation of the eye.

[கண் + அரிப்பு.]

கண்ணருகு–தல் *kaṇ-ṇ-arugu-,* 9 செ.கு.வி.(v.i.) 1. கண்ணை இடுக்குதல். (*சீவக.3124.உரை*); to twitch the eye. 2. கண்ணுறுத்தல்; irritation of the eye.

[கண் + அருகு. அருகு = சேர்தல், நெருங்குதல்.]

கண்ணருவல் *kaṇ-ṇ-aruval,* பெ.(n.) 1. கண் கரித்தல்; the burning sensation. 2. கண் இமை கெடல்; a trophy of the eyelids. 3. ***கண்ணருகு-தல்*** பார்க்க; see kannarugu-,.

[கண் + அருவல்.]

கண்ணரை *kaṇṇarai,* பெ.(n.) 1. குறைந்த பார்வை partial eyesight. *கண்ணரையால் பார்க்கிறாள் (உ.வ.).* 2. கண் பகுதி; a part of the eyes (சா.அக.)

[கண் + அரை.]

கண்ணலர் *kaṇṇalar,* பெ.(n.) ***கண்ணீர்*** பார்க்க; see *kaṇ-ṇīr* (கோழி.கோ.286).

[கண் + அலர்.]

கண்ணலை *kaṇ-ṇ-alai,* பெ.(n.) கப்பற்குறுக்கு பாதையில் கட்டும் பாய்க்கயிறு; rope used to tie yard-arm in a vessel.

[கண் + ஆலை = கண்ணாலை → கண்ணலை. ஆலை = சுற்றிக் கட்டும் கயிறு.]

கண்ணவர் *kaṇṇavar,* பெ.(n.) அமைச்சர்; minister. adviser to the king. *"கடன் அறி காரியக் கண்ணவர்" (பரிபா.19.23).*

[கண் + அவர் – கண்ணவர் = பற்றுக்கோடமைந்த தம் மக்களைக் கண்போல் காக்கும் அரசருக்கும் கண் போன்றவர்.]

கண்ணவி–தல் *kaṉ-ṇ-avi,* 2 செ.கு.வி.(v.i.) பார்வை கெடுதல்; to lose the vision.

[கண் + அவி.]

கண்ணவேணி *kaṇṇa-vēṇi,* பெ.(n.) கிருட்டிணை ஆறு (திருவிளை. தலவி.11); a name of the river Krišṇā.

[கண்ண + வேணி. கண் = கருமை. வேள் → வேளி → வேணி = அரசி, பெண்ணரசி.]

கண்ணழகன் குறுகை *kaṉ-ṇ-aḻagaṉkuṟugai,* பெ.(n.) குறுவை நெல்; a kind of paddy (சேரநா.).

ம. கண்ணழகன் குறுக.

[கண் + அழகன் + குறுகை.]

கண்ணழகு *kaṇṇaḻagu,* பெ.(n.) உடற்கூற்று அமைப்பின்படி கண்ணின் அமைப்பினால் ஏற்பட்ட அழகு; the structural beauty of the eyes as described in physiognomy (சா.அக.).

[கண் + அழகு. கண் = திரட்சி.]

கண்ணழகுக்கொடி *kaṉ-ṇ-aḻagu-k-koḍi,* பெ.(n.) கேந்திர வள்ளிக் கொடி; a creeper of the dioscorea genus.

[கண் + அழகு + கொடி.]

கண்ணழல் *kaṉ-ṇ-aḻal,* பெ.(n.) கண் எரிச்சல்; inflammation of the eye.

[கண் + அழல்.]

கண்ணழற்சி *kaṉ-ṇ-aḻaṟci,* பெ.(n.) 1. கண்ணெரிவு; burning sensation of the eyes. 2. பொறாமை (வின்.); envy.

[கண் + அழற்சி.]

கண்ணழி¹–த்தல் *kaṉ-ṇ-aḻi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. சொல்லுக்குச் சொல் பொருள் கூறுதல்; to dissect the words of a poem and interpret the same, word by word.

[கண் + அழி, கண் = கட்டு, தளை.]

கண்ணழி²–த்தல் *kaṉ-ṇ-aḻi-,* 4 செ.குன்றா.வி.(v.t.) 1. கண் பார்வையைக் கெடுத்தல்; to spoil or injure the sight. 2. கண் முழுவதும் கெடுத்துவிடுதல்; total destruction of the eye.

மறுவ. கண்ணழிவு

த. கண்ணழி

[கண் + அழி.]

கண்ணழித்துரை *kaṉ-ṇ-aḻitturai,* பெ.(n.) சொற்பொருள்; paraphase of a verse, word by word. *"கண்ணழித்துரைபற்றிச் சூத்திரத்துக்குச் சொற்பொருள் கூறும்" (சி.போ.1. சிற்.பக்.12.).*

[கண் + அழித்து + உரை. கண் = கட்டு, சேர்ப்பு, தளை.]

கண்ணழிவு¹ *kaṉ-ṇ-aḻivu,* பெ.(n.) வகையுளி செய்து சொற்பொருள் கூறுகை; interpreting a verse, word by word. *"பாடங் கண்ணழிவு தாரண மென்றிவை" (தொல். எழுத்.சிறப்புப்.உரை).*

[கண் + அழிவு.]

கண்ணழிவு² *kaṉ-ṇ-aḻivu,* பெ.(n.) 1. குறைவு; defect, flaw, imperfection. *"விபூதித்வயத்துக்குங் கண்ணழிவு சொல்லாநின்றீர்" (திவ்.திருமாலை, 3, வ்யா.).* 2. தாழ்ச்சி; delay. *அத் தலையாலே பெறுமிடத்தில் ஒரு கண்ணழி வின்றிக்கே யிருந்தது (ஈடு.7,6:7).*

ம. கண்ணழிவு

[கண் + அழிவு. கண் = இடம். இடத்தாற் பெற்ற தகுதி. கண்ணழிவு = தகுதிக்குறைவு.]

கண்ணழுக்கு *kaṇṇaḻukku,* பெ.(n.) கண்பீளை; rheum.

[கண் + அழுக்கு]

கண்ணழுத்தங்கோல் *kaṉ-ṇ-aḻuttaṅ-kōl,* பெ.(n.) 1. சித்திரமெழுதும் கோல்; the painter's brush, pencil. *"சோமே லிருந்தொரு கோறாவெனிற் ..... கண்ணழுத்தங்கோல் கொடுத்தலும்". (சி.சி. அளவை.1.மறை).* 2. ஈரமட்பாண்டத்தைச்சுடுமுன் எழுத்து பொறிக்க உதவும் நாணற்குச்சி; a style madke of reed to inscribe letters on the clay pot before being burnt.

[கண் + அழுத்தும் + கோல். கண் = துளை, பள்ளம்.]

கண்ணளத்தை *kaṇ-ṇ-aḷattai,* பெ.(n.) கண்ணாற் காணுகின்ற தொலைவு; the distance which the eye can see.

க. கண்ணளதெ; ம. கண்ணுவெட்டத்து.

[கண் + அளத்தை. அளவு → அளத்தை. காண் → கண்.]

கண்ணளவு[1] *kaṇ-ṇ-aḷavu,* பெ.(n.) 1. கண்திட்டம்; visual estimate,an estimation of things made by mere a rough calculation.

மறுவ. கண்மதிப்பு

க. கண்ணுஅதெ; து. கண்ணந்தாசி.

[கண் + அளவு (மதிப்பீடு).]

கண்ணளவு[2] *kaṇ-ṇ-aḷavu,* பெ.(n.) வலைக் கண்ணின் அளவு (மீனவ.) ; sieve of the fishing net.

[கண் + அளவு. கண் = துளை.]

கண்ணளவு[3] *kaṇ-ṇ-aḷavu,* பெ.(n.) பார்ப்பதற்கு ஏற்றது, தகுதி வாய்ந்தது.; that which is proper to see.

க. கண்ணளவு

[கண் + அளவு. காண் = கண்.]

கண்ணளி *kaṇ-ṇ-aḷi,* பெ.(n.) கண்ணாற் செய்யும் அருள்; grace bestowed by the look.*"கண்ணளி காண்மின்" (கல்லா 10, 13).*

[கண் + அளி.]

கண்ணறல் *kaṇ-ṇ-aṟal,* பெ.(n.) நீங்கல்; move away.

[கண் (இடம்) + அறல் (நீங்க)]

கண்ணறி-தல் *kaṇ-ṇ-aṟi-,* 2 செ.கு.வி.(v.i.) 1. கண்ணால் பார்த்தல்; to be able to see. 2. கண்ணால் கண்ட பின் மனத்திலிருத்தல்; to recognise, understand. 3. சூழலறிதல்; to know the surroundings. 4. அறிவுடன் செயற்படுதல்; to act with wisdom (கருநா.).

ம. கண்ணறியுக; க. கண்ணறி.

[கண் + அறிதல்.]

கண்ணறு[1]-தல் *kaṇ-ṇ-aṟu-,* 4 செ.கு.வி.(v.i.) நீங்குதல்; to depart.*"நெடுநாணுங் கண்ணற" (கம்பரா.மிதிலைக்.45).*

[கண் + அறு. கண் = இடம். அறு = விட்டுப் பெயர்தல்.]

கண்ணறு[2]-தல் *kaṇ-ṇ-aṟu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கண்ணோட்டமாறுதல்; to be wanting in kindness, courtesy, compassion. 2. நட்புக்குலைதல்; to cease to be friendly. *"தம்முன்னே கண்ணற்றார் கமழ் சுண்ணத்தினென்பவே". (சீவக.878).*

[கண் + அறு. கண் = அன்பு நோக்கம், அன்புப் பார்வை]

கண்ணறை *kaṇ-ṇ-aṟai,* பெ.(n.) 1. பார்வையின்மை; blindness.*"கண்ணறையன்".(தேவா.678,9).* 2. பார்வையற்றவன்; blind person.*"கணணறை மன்னன்" (பாரத.நான்காம்.41.).* 3. வன் னெஞ்சு(வின்.); pitilessness, hard-heartedness. 4. துளை (யாழ்ப்); hole, crevice, chink, orifice. 5. வலை முதலியவற்றின் கண்(வின்.); mesh of a net, interstice in rattan work. 6. தேன்கூடு முதலியவற்றின் அறை (வின்.); cell in a honeycomb,in a white ant's nest. 7. அச்சுருவின் குழி (இ.வ.); cavity in a moulding, fluting, groove. 8. கண்ணின் குழி; the socket or orbit of the eye. 9. திசுக்களில் காணப்படும் துளை; the small protoplasmic holes in a tissue-cell. 10. நுரையீரலின் காற்றறை; air cell in the lungs (சாஅக.).

ம. கண்ணற

[கண் + அறை. கண்ணறை = அகன்ற அறை பிரிக்கப்பட்ட இடம்.]

கண்ணறைத்தசை *kaṇ-ṇ-aṟai-t-tasai,* பெ.(n) உடலிற் சிறு அறைகளாக அமைந்த தசை; cellular tissue. mod.

[கண் + அறை + தசை. தடி = தசை.]

கண்ணறையன் *kaṇ-ṇ-aṟaiyaṉ,* பெ.(n) 1. பார்வையில்லாதவன்; blind man.*"கண்ணறையன் கொடும் பாட னென்றுரைக்க வேண்டா" (தேவா.678,9).* 2.வன்னெஞ்சன்; hard hearted person. கண்ணறைய னென்று பலரா லிகழப்பட்டான் (உ.வ.).

ம. கண்ணறயன்

[கண் + (அறு) அறை + அன்.]

கண்ணறையுருவம் *kaṇ-ṇ-aṟaiyuruvam,* பெ.(n.) சல்லடைக்கண் போன்ற வடிவம்; a form with small apertures like those of a sieve (சா.அக.).

[கண் + அறை + உருவம்.]

கண்ணன்[1] *kaṇṇaṉ,* பெ.(n.) 1. கண்ணுடையவன்; one who has eyes. 2. பெரிய கண்ணுள்ளவன்; one

with large eyes. 3. கண்ணூறு உள்ளவன்; one with an evil-eye (சேரநா.).

ம. கண்ணன்

[கண் + அன்.]

கண்ணன்² *kaṇṇaṉ,* பெ.(n.) 1. கரியவன்; Krisna. *"கண்ணன்வரக் காணேனடி, கவலை மெத்தக் கொண்டேனடி" (தனிப்பா.)* 2. திருமால் (திவா.); Viṣṇu.

மறுவ. மால், பெருமாள், நெடியோன்.

ம. கண்ணன். **Skt.**Krishna; **Pkt., Pali.** kanha; **H.** kanhaiya.

[கள்ளன் → கண்ணன். கள் = கருமை. கள் → கண் → கண்ணன்.]

கண்ணன் பிறக்குமுன்பே, கிருஷ்ண என்னும் சொல் கறுப்பு என்னும் பொருளில் இருக்கு வேதத்தில் வழங்கிற்று. கிருஷ்ண பக்ஷ [கரும்பக்கம்], கிருஷ்ண ஸர்ப்ப [கரும்பாம்பு] என்னும் பெயர்களை நோக்குக. கிருஷ்ண என்னும் சொற்கு வேதமொழியில் வேரில்லை; தமிழிலேயே உள்ளது.

கள்→கரு→கருள் = 1.கருமை. 'கருள்தரு கண்டத்து ....கைலையார். [தேவா.337.4] 2.இருள்[பிங்.] 3. குற்றம். 'கருள்தீர்வலியால்' [சேதுபு.முத்தீர்த்.] கருள்= கருஷ். ளகர மெய்மீறு வேதமொழியில் ஷகர மெய்மீறாகத் திரியும். சுள் – சுஷ் (to dry), உள்–உஷ்(to burn) 'ரு' இடைச்செருகல் ஓ.நோ. கத்[தி] –க்ருத். [பண். நா.ப.83.]

கண்ணன்³ *kaṇṇaṉ,* பெ.(n.) 1. கையாந்தகரை, கரிசலாங்கண்ணி (சா.அக.); a plant growing in wet places. 2. ஒருவகைச் செய்நஞ்சு; a kind of mineral poison.

[கள் → கண் → கண்ணன்.]

கண்ணன்பறவை *kaṇṇaṉ-paṟavai,* பெ.(n) கலுழன்; a brahmin kite.

[கண்ணன்(திருமால்) + பறவை.]

கண்ணன்மூலி *kaṇṇaṉ-mūli,* பெ.(n.) துளசி; holy basil. 2. கையாந்தகரை; eclipse plant.

[கண்ணன் + மூலி.]

கண்ணனூர் *kaṇṇaṉūr,* பெ.(n.) கி.பி.13ஆம் நூற்றாண்டில் போசள அரசகுலத்தின் தலைநகர மாக இருந்ததும் இலால்குடி வட்டத்தில் சமயபுரம் அருகிலுள்ளதுமான ஊர்; capital of Hoysala dynasty during 13th century and located near Samayapuram in the Lalgudi taluk.

[கண்ணன் + ஊர்.]

கண்ணா¹-தல் *kaṇṇā-,* 6 செ.கு.வி.(v.i.) 1. கருத்துவைத்தல்; to be intently bent upon, mindful. *"கருமமே கண்ணாயினார்". (நீதிநெறி.53).* 2. அருமையாதல்; to be as precious as the eye. என் கண்ணான குழந்தை (உ.வ.).

[கண் + ஆதல்.]

கண்ணா² *kaṇṇā,* பெ.(n.) குழந்தைகளை விளிக்கும் கெழுதகைப் பொதுச்சொல்; word of endearment, preferably when addressed to children.

[கண்ணன் → கண்ணா.]

கண்ணா³ *kaṇṇā,* பெ.(n.) 1. திப்பிலி (மலை.); long pepper. 2. சிறுமரவகை(l.); recenned lance-leaved digitate Ivy, heptapleurum racemosum. 3. ஆலந்தைக் கொடி; lance-leaved digitate Ivy.

மறுவ. கண்ணிடம், திப்பிலி.

[கள் → (கருமை) கண் → கண்ணா (கொ.வ.).]

கண்ணாஞ்சுழலை *kaṇṇāñ-cuḻalai,* பெ.(n.) கண் சுழற்றுதல்.; rolling the eyes about. *"கண்ணாஞ் சுழலையிட்டு அதிசங்கை பண்ணுங்காட்டில்" (ஈடு.8,1,4.).*

[கண் + ஆம் + சுழலை. 'ஆம்' – சாரியை.]

கண்ணாட்டி¹ *kaṇ-ṇ-āṭṭi,* பெ.(n.) காதலி; she who is regarded with the greatest affection, woman greatly beloved, a term of endearment. lit., apple of the eye. *"கண்ணாட்டி போனவழி" (இராமநா. ஆரணி.26).*

ம. கண்ணாட்டி

[கண் + ஆள் + தி – கண்ணாட்டி = கண்ணைப்போல் அன்புக்குரியவள்.]

கண்ணாட்டி² *kaṇṇāṭṭi,* பெ.(n.) மார்பெலும்பு; the chest bone; thorax.

[கண் + அட்டி → கண்ணட்டி → கண்ணாட்டி. கண் = அகற்சி மார்பு. அட்டி = எலும்பு.]

கண்ணாடி[1] *kaṉ-ṉ-āḍi,* பெ.(n.) 1. உருவம் காட்டும் மெருகாக்கப்பட்ட பொன் அல்லது மாழைத்தகடு; mirror made of burnished gold or of any polished metal. 2. கண்ணாடியாலான பொருள்; glass things. *புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு? (பழ.)* 3. முகம் பார்க்கும் கண்ணாடி; looking glass. 4. மூக்குக் கண்ணாடி (கொ.வ.); spectacles. 5. தென்னங்கன்றின் குருத்தோலை; the shoot of a young coconut-palm (சேரநா.).

ம. கண்ணாடி; **க.** கன்னடி; **து., குட.** கன்னடி, கண்ணடி; **தெ.** கன்னடி; **துட.**கொணொடி; **பட.**கண்ணாடி; **உரா.**கண்ணாடி; **Sinh.** kannadi.

[காண் + ஆடி – காணாடி → கண்ணாடி. ஆழி → ஆடி = வட்டத்தகடு, வட்டமான கண்ணாடி.]

கண்ணாடி[2] *kaṉ-ṉāḍi,* பெ.(n.) மின்மினி (பச்.மூ.); glow-worm.

[கண் + ஆடி. கண் = பார்வை, வெளிச்சம். ஆடு – ஆடி = புறந்தள்ளல், வெளித்தோற்றம்.]

கண்ணாடிக்கதவு *kaṇṇāḍi-k-kadavu,* பெ.(n.) கண்ணாடியிட்டமைத்த கதவு. (c.e.m.); glazed door.

[கண்ணாடி + கதவு.]

கண்ணாடிக்கயிறு *kaṇṇāḍi-k-kayiṟu,* பெ.(n.) கட்டுமரத்தில் பாயையும் மூங்கிலையும் இணைக்கும் கயிறு; a rope or cable which binds the sail and bamboo in catamaran (சேரநா.).

ம. கண்ணாடிக்கயிறு

[கண்ணாடி + கயிறு – கண்ணாடிக்கயிறு. கண்ணாடி = வட்டம். சுற்றிக்கட்டும் கயிறு.]

கண்ணாடிக்கல் *kaṇṇāḍi-k-kal,* பெ.(n.) நிலவளவையில் நடப்பட்ட கல்; survey stone (சேரநா.).

ம. கண்ணாடிக்கல்லு

[கண்ணாடி + கல் – கண்ணாடிக்கல் = வட்ட முகட்டுக்கல். கண்ணாடி = வட்டம்.]

கண்ணாடிக்கள்ளி *kaṇṇāḍi-k-kaḷḷi,* பெ.(n.) கள்ளிவகை. (இ.வ.); a kind of spurge.

[கண்ணாடி + கள்ளி.]

கண்ணாடிக்கூத்தன் *kaṇṇāḍi-k-kūttaṉ,* பெ.(n.) நெல்வகை (குருகூர்ப்.37); a kind of paddy.

[கண்ணாடி + கூத்தன்.]

கண்ணாடிக்கெண்டை *kaṇṇāḍi-k-keṇḍai,* பெ.(n.) பளபளத்த செவுளுடைய கெண்டை மீன்; kind of fresh water fish.

மறுவ. கண்ணாடி மீன்

[கண்ணாடி + கெண்டை. கண்ணாடி பளபளப்பு.]



கண்ணாடிக்கெண்டை

கண்ணாடிச்சால் *kaṇṇāḍi-c-cāl,* பெ.(n.) எதிருங் குறுக்குமாக உழும் உழவில் நடுவில் விடப்படும் திடர் (வின்.); blank spaces or balks left between the furrows, in cross ploughing.

மறுவ. உழவடை

[கண்ணாடி + சால் – கண்ணாடிச்சால் = வட்டச்சால், வட்டத்திடர். கண்ணாடி = வட்டம்.]

கண்ணாடிச்சுவர் *kaṇṇāḍi-c-cuvar,* பெ.(n.) அடுப்பையடுத்த சிறுசுவர் (வின்.); small wall raised to screen the oven in a room.

[கண்ணாடி + சுவர் – கண்ணாடி= வட்டம்,வளைவு. சுவல் → சுவர்.]

கண்ணாடித்திடம் *kaṇṇāḍitiḍam,* பெ.(n.) இடை, இடுப்பு; the hip and loins, hip - bone.(சேரநா.).

ம. கண்ணாடித்தடம்

[கண்ணாடி + தடம். கண்ணாடி = வட்டம், வளைவு.]

கண்ணாடித்திண்ணை *kaṇṇāḍi-t-tiṇṇai,* பெ.(n.) கண்ணாடி போல் தேய்த்துப் பளபளப்பூட்டிய முன்றிலில் அமைந்த சிறுதிண்ணை; a narrow verandah around the main verandah (சேரநா.).

ம. கண்ணாடித் திண்ண

[கண்ணாடி + திண்ணை. கண்ணாடி = வட்டவடிவு.]

கண்ணாடிப்பலகை *kaṇṇāḍi-p-palagai,* பெ.(n.) 1. பார்ப்பதற்கேற்பக் கதவிலுள்ள துளையை மூடும் சிறு பலகை; a piece of blank covering the peep-hole of a door. கண்ணாடிப்பலகையைத் திறந்து நிற்பது யாரென்று சொல் (உ.வ.). 2. வாசற்காலின் தலை முகப்பில் பொருத்தப்படும் சிறு பலகை; a plank fixed on the top face of a door frame. வீட்டுத் திறவை (சாவியை)க் கண்ணாடிப்பலகையில் வைத்து விட்டுப்போ (உ.வ.).

ம. கண்ணாடிப்பலக

[கண்ணாடி + பலகை.]

கண்ணாடிப்புடைவை *kaṇṇāḍi-p-puḍaivai,* பெ.(n.) 1. ஒருவகை மெல்லிய ஆடை (வின்.); a kind of thin sari. கண்ணாடிப்புடவை காட்டுகிறாள் அழகை யெல்லாம் (உ.வ.). 2. மெல்லிய தரமற்ற புடவை; a thin inferior kind of sari. எனக்கு இந்தக் கண்ணாடிப் புடைவையைக் கொடுக்கலாமா?(உ.வ.).

[கண்ணாடி + புடவை. காணாடி → கண்ணாடி.]

கண்ணாடிப்புறம் *kaṇṇāḍi-p-puṟam,* பெ.(n.) கால்நடைகளின் பின்பகுதி; buttock of cattle (சேரநா.).

ம. கண்ணாடிப்புறம்

[கண்ணாடி + புறம். கண்ணாடி = வட்டம், வளைவு, சரிவு]

கண்ணாடிமணி *kaṇṇāḍi-maṇi,* பெ.(n.) வெண் கலத்தாலான மணி; a bell made of bronze.

[கண்ணாடி + மணி.]

வெண்கலத்தையே ஆடியாக பயன்படுத்தி வந்தமையால் இப்பெயர் வந்தது.

கண்ணாடியிலை *kaṇṇāḍi-y-illai,* பெ.(n.) 1. வாழை யின் ஈற்றிலை (இ.வ.); last leaf of a plantain at the time of bringing forth a stem with flowers. 2. சுந்தரி மரம் (l.); sunder-tree.

[கண்ணாடி + இலை.]

வாழைமரம் குலை ஈனுமுன் வெளிவரும் இலை கண்ணாடி போன்று மென்மையும் வழவழப்பும் கொண்டிருத்தலால் கண்ணாடி இலை எனப்பட்டதாம். சுந்தரிமரத்தின் இலையும் இத்தன்மை பெற்றமையால் இம் மரத்திற்கும் இலைக்கும் கண்ணாடி இலையென வழங்கப் பட்டதைக் காண்க.

கண்ணாடியிழை *kaṇṇāḍi-y-iḻai,* பெ.(n.) 1. மிக உயர்ந்த இழை; yarn of very fine texture (சேரநா.). 2. கண்ணாடி நுண்ணிழை; fiber glass.

ம. கண்ணாடியிழ

[கண்ணாடி + இழை.]

கண்ணாடிவலை *kaṇṇāḍivalai,* பெ.(n.) உறிகட்டு வதற்குப் பயன்படுத்தும் வலை; a net for suspending earthen vessels (துளுநா.).

து. கண்ணடிபல

[கண்ணாடி + வலை. கண்ணாடி = வட்டம்.]

கண்ணாடிவளையல் *kaṇṇāḍi-vaḷaiyal,* பெ.(n.) 1. கண்ணாடித்துண்டுகள் பதித்த வளையல்; a bracelet of lac in which small bits of a mirror are set (கருநா.) 2. கண்ணாடியாலான வளையல்; a glass bangle.

க. கண்ணாடி பளெ; து. கண்ணடிபளெ; பட. கண்ணாடி பே

[கண்ணாடி + வளையல்.]

கண்ணாடிவிசிறி *kaṇṇāḍi-viśiṟi,* பெ.(n.) நிலை யின்மேல் அமைக்கும் விசிறி வடிவமான கண்ணாடி யடைப்பு (c.e.m.); fan light, fan-shaped window over a door.

[கண்ணாடி + விசிறி.]

கண்ணாடிவிரியன் *kaṇṇāḍi-viriyaṉ,* பெ.(n.) விரியன் பாம்பு வகை; a kind of snake - viriyaṉ.

மறுவ. கண்ணாடிப் புடையன்

ம. கண்ணாடி விரியன், கண்ணாரம்; க. கன்னடி காவு

[கண்ணாடி + விரியன்.]



கண்ணாடிவிரியன்

கண்ணாணி[1] *kaṉ-ṉ-āṇi,* பெ.(n.) கருவிழி; pupil of the eye. *"கண்ணாணியாகவிறே காண்பது"* (ஈடு,4,7,4).

து., க. கண்ணாலி; **ம.** கண்ணாணி.

[கண் + ஆழி – கண்ணாழி – கண்ணாளி. → கண்ணாணி, ஆழி = வட்டமான விழி.]

கண்ணாணி[2] *kaṉ-ṉāṇi,* பெ.(n.) எருவாய், குதம்; anus. *"விண்டுமுறை பாயுருக் கண்ணாணி யாகும்". (உடலறிவி.5.).*

[கண் + ஆழி – கண்ணாழி → கண்ணாணி. கண் = துளை. ஆழி = வட்டம்.]

கண்ணாணி[3] *kaṉ-ṉ-āṇi,* பெ.(n.) உரையாணி; touch-needle. *"கண்ணாணி யாகக் கண்டு தந்த பொன்னுக்கு"* (பாடு.78,2).

[காண் + ஆணி – காணாணி → கண்ணாணி. கண் = கூர்மை. பொன்னின் மாற்றை உரைத்தறிய உதவும் ஆணி.]

கண்ணாணை *kaṉ-ṉāṇai,* பெ.(n.) இருகண்ணில் கையை ஒற்றி இடும் சூளுரை; oath taken upon one's own eyes. கண்ணாணை யாகச் சொல்கிறேன் (உ.வ.).

[கண் + ஆணை.]

கண்ணாதல் *kaṇṇādal,* பெ.(n.) கருத்தாயிருத்தல்; கருத்துவைத்தல்; to concentrate.(நீதிநெறி.23).

[கண் + ஆதல்.]

கண்ணாம்பட்டை *kaṇṇām-paṭṭai,* பெ.(n.) **கண்ணிமை** பார்க்க; see *kaṇṇimai* (நெல்லை.).

[கண் + ஆம் + பட்டை. அம் – சாரியை. அம் → ஆம் (நீட்டல் திரிபு).]

கண்ணாம்பூச்சி[1] *kaṇṇā-mpūcci,* பெ.(n.) மின்மினிப்பூச்சி; glow worm.

[கண் → ஒளி, வெளிச்சம். கண் + அம் + பூச்சி (சிற்றுயிர்.)]

கண்ணாம்பூச்சி[2] *kaṇṇām-pūcci,* பெ.(n.) பொய்த் தோற்றம், கண்மயக்கம்; false appearence to the eye (சா.அக.).

[கண் + ஆம் + பூச்சி. மின்மினி ஒலி போன்ற பொய்த்தோற்றம்.]

கண்ணாம்பூச்சிபற–த்தல் *kaṇṇām-pūcci-paṟa-,* 3 செ.கு.வி.(v.i.) கண்ணுக்கு மின்மினி பறப்பது போல் தோன்றுதல் (இ.வ.); to be dazzled, as the eyes from glare; to swim, as the eyes from weakness or from defective vision.

மறுவ. கண்ணாம்பூச்சியாடுதல்

[கண் + ஆம் + பூச்சி + பற–. அம் சாரியை, அம் – ஆம் → நீட்டல் திரிபு.]

கண்ணாம்பூச்சியாடு–தல் *kaṉ-ṉ-ām-pūcci-y-āḍu-,* 5 செ.கு.வி.(v.i.) ***கண்ணாம்பூச்சிபற–*** பார்க்க; see *kaṉ-ṉ-am-pūcci-paṟa-.*

[கண் + ஆம் + பூச்சி + ஆடு.]

கண்ணாம்பொத்தி *kaṇṇam-potti,* பெ.(n.) கண்ணைத் துணியால் மறைத்துக்கட்டிக் குழந்தைகள் விளையாடும் விளையாட்டுவகை; game of blindman's buff.

மறுவ. கண்ணாம்பூச்சியாட்டம்

ம. கண்ணாம்பொத்தி, கண்ணாம்பூச்சி–; **க.** கண்ணுமுச்சாட, கண்முச்சலெ, கண்ணாமூச்சி; **தெ.** கணுமூசிகந்தலு.

[கண் + ஆம் + பொத்தி.]

கண்ணாமடை *kaṇṇā-maḍai,* பெ.(n.) சுவையான உணவு; tasty food. *"இருக்கண்ணா மடைக்கு அரிசி இருநாழியும்" (S.I.I.Vol.3.Insc.2).*

[கண்ணமுது + மடை – கண்ணாமடை]

கண்ணாமண்டை *kaṇṇā-maṇḍai,* பெ.(n.) 1. கண் மேலுள்ள எலும்பு (வின்.); frontal bone. 2. கன்னப் பொட்டு; the forehead or the temple.

[கண் + ஆம் + மண்டை.]

கண்ணாமிண்டை *kaṇṇā-miṇḍai,* பெ.(n.) கண்விழி (இ.வ.); eyeball.

[கண் + (அம்) ஆம் + இண்டை (உருண்டை).]

கண்ணாமூய்ச்சி *kaṇṇā-mūycci,* பெ.(n.) ***கண்ணாம்பொத்தி*** பார்க்க(யாழ்ப்); see *kaṇṇām-potti.*

[கண் + அம் + மூய்ச்சி. (மூய்தல்-மூடுதல்.]

கண்ணாய்ப்பார்-த்தல் *kaṇṇāy-p-pār-,* 4 செ.குவி. (v.t.) 1. கருத்தூன்றிப் பார்த்தல்; to look with care. 2. நல்ல முறையில் கவனித்துக் கொள்ளுதல்; to look after with affection. கட்டிக் கொண்டு வந்தவளைக் கண்ணாய்ப் பார்த்துக் கொள் (உ.வ.).

[கண் + ஆய் + பார்.]

கண்ணாயம் *kaṇ-ṇ-āyam,* பெ.(n.) 1. சிறந்த ஆடை; fine cloth. 2. சிறிய துளை; small hole. 3. மென்மையானது; thinness (சேரநா.).

ம. கண்ணாயம்

[கண் + ஆயம்.]

கண்ணாயிரம் *kaṇ-ṇ-ayiram,* பெ.(n.) 1. கடவுள்; god. 2. மக்கட் பெயர்; a given name for a male.

ம. கண்ணாய வேந்தன்

[கண் + ஆயிரம். கடவுள் எல்லாவற்றையும் காண்பவர் என்னும் கருத்தில் ஆயிரம் கண்ணுடைவன் என்பது உலக வழக்கு. மாரியம்மனையும் ஆயிரம் கண்ணுடையாள் என்பர்.]

இச் சொல் இந்திரனைக் குறித்து வழங்குவது ஆரியரால் புகுத்தப்பட்ட தொல்கதையை அடிப்படையாகக் கொண்டது.ஆதலின் தமிழ் மரபன்று.

கண்ணாயிரு-த்தல் *kaṇṇāyiru-,* 2 செ.கு.வி.(v.i.) 1. விழிப்பாயிருத்தல்; to be watchful, vigilant, closely attentive; to look steadfastly. 2 . அருமையாய் இருத்தல்; to be dear, precious. 3. உன்னிப்பாயிருத்தல்; to look keen (சா.அக.).

[கண் + ஆய் + இருத்தல்.]

கண்ணார் *kaṇṇār,* பெ.(n.) பகைவர்; enemies, foes. *"கண்ணார் மதிக்கும் கவிராச சிங்கம்." (தமிழ் நா.240).*

ம. கண்ணார்

[கண்ணு +ஆ + ஆர். கண்ணார், கண்ணுதல் = சேர்தல், நெருங்குதல். கண்ணார் = சேராத பகைவர். ஆ எ.ம. இ.நி.]

கண்ணார்வி-த்தல் *kaṇṇārvi-,* 4 செ.கு.வி.(v.i) கண்ணுக்கு இன்பமூட்டுதல்; to please the eyes.*"பெருங்கோயில் பலவுங் கட்டிக் கண்ணார் வித்து" (திருத்.பு.சா.73).*

[கண் + ஆர்வி.]

கண்ணார *kaṇṇāra,* வி.எ.(adv.) 1. கண்கூடாக; with (one's) own eye, directly. *"தமிழர் பெருமானைக் கண்ணாரக் காணக் கதவு" (முத்தொள்..).* 2. கண்ணால் பார்க்கக்கூடிய அளவு முழுவதுமாக; eyeful, as much as the eye can take in at once. *"கண்ணாரக் கண்டோர் கருப்பொருள் காணா மலருள்" (தாயு.பராபரக். 2).* 3 . இன்புற; pleasant by.

து., க. கண்ணாரெ; **பட.** கண்ணார.

[கண் + ஆர.]

கண்ணாரக்காண்(ணு)-தல் *kaṇṇāra-k-kāṇ-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கண் கூடாகப் பார்த்தல்; to see with one's own eyes. *"தொழுவதும் சூழ்வதும் செய்தொல்லை மாலைக் கண்ணாரக் கண்டு கழிவ தோர் காதலுற் றார்க்கும்" (திவ்.இயற்.திருவிரு.97.).* 2. ஆசைதீரப்பார்த்தல்; to have a full view to one's complete satisfaction. *"கண்ணாரக் கண்டோர்" (தாயு.பராபரக்.2).*

க. கண்ணாரெ நோடு.

[கண் + ஆர + காண்.]

கண்ணால்பார்-த்தல் *kaṇṇāl-pār-,* 4 செ.கு.வி. (v.i.) நேரடியாகப் பார்த்தல், to see (with one's own eyes). அவன் வெட்டியதை என் கண்ணால் பார்த்தேன் (உ.வ.).

[கண்ணால் + பார்-. பொதுவாக ஐயத்தை நீக்குவதற்கு நேரில் பார்த்தேன் என்பதைக் கண்ணால் பார்த்தேன் என்பர்.]

கண்ணாலக்காணம் *kaṇṇāla-k-kāṇam,* பெ.(n.) திருமணத்தின் பொருட்டுச் செலுத்தும் ஒரு பழைய வரி. (i.m.p. cd. 563); ancient tax on marriage.

[கலியாணம் → கண்ணாலம் + காணம் (கொ.வ.).]

கண்ணாலம் *kaṇṇālam,* பெ.(n.) **கலியாணம்** பார்க்க; see *kaliyāṇam.*

[கலியாணம் → கண்ணாலம் (கொ.வ.).]

கண்ணாலமுருங்கை *kaṇṇāla-muruṅgai,* பெ.(n.) **கலியாணமுருங்கை** பார்க்க; see *kaliyāṇa muruṅgai.*

[கலியாணம் → கண்ணாலம் + முருங்கை.]

கண்ணாலமூடி *kaṇṇāla-mūḍi,* பெ.(n.) கஞ்சி வடிப்பதற்குப் பயன்படும் துளைகள் உள்ள தட்டு; a plate with holes (used to filter boiled rice).

து. கண்ணரே

[கண் + ஆலம் + மூடி. கண் = துளை.]

ஒநோ., கண் உள்ள மூடி கண்ணாலமூடி

கண்ணாலவாய் *kaṇṇāla-vāy,* பெ.(n.) வாய்க்காலி லிருந்து நீர் பிரிந்து செல்லும் வழி; branch channel. "..... கண்ணாலவாய் கீழ்தலைவில்லி வாய்க்குத் தெற்கு நிலம்" (S.I.I. Vol.19.Insc.141.S.No. 40-43).

[கண் + ஆலம் + வாய்.]

கண் = சிறு, சிறிது. ஆலம் = நீர். கண்ணால வாய் = நீர் சிறிதாகப் பெருக்கெடுக்கும் கால்வாய்.

கண்ணாள்[1] *kaṇṇāḷ,* பெ. (n.) அறிவுத்தெய்வமாகப் போற்றப்படுகிற கலைமகள் (பிங்.); Saraswati the goddess of learning, wisdom.

[கண் + ஆள். கண் = பெருமை, சிறப்பு.]

கண்ணாள்[2] *kaṇṇāḷ,* பெ.(n.) கண்ணாட்டி (யாழ்.அக.); beloved woman.

[கண் + ஆள் + தி – கண்ணாட்டி 'ஆள்' (பெ.பா.ஈறு).]

கண்ணாளர்[1] *kaṇṇāḷar,* பெ.(n.) 1. கம்மாளர்; smith. 2. ஓவியர்; artist.

[கண் + ஆளர். கண் = துளைத்தல், பொறித்தல், செதுக்கல்.]

கண்ணாளர்[2] *kaṇṇāḷar,* பெ.(n.) 1. நண்பர்; friends. 2. தலைவன்; chief.

[கண் + ஆள் + அர். கண் = உயர்வு, சிறப்பு.]

கண்ணாளன் *kaṇṇāḷaṉ,* பெ.(n.) 1. கணவன்; husband. *காக்கனுக்கும் போக்கனுக்கும் பூத்தனையோ புன்னை, கண்ணாளன் வருந்தனையும் பொறுக் கலையோ புன்னை (பழ.)* 2. நாயகன்; lover, used as a term of endearment. *"மதுமலரின் கண்ணாளா" (திவ். பெரியதி 8.10.4).* 3. அன்பன்; affectionate friend. *"கண்ணாளன் கண்ணமங்கை நகராளன்" (திவ்.பெரியதி.11.6.7).* 4. மேற்பார்வை யாளன்; a supervisor.

ம. கண்ணாளன், கண்ணாளி.

[கண் + ஆள் + அன்.]

கணவன் மனைவியர் இருவரும் ஒருவர்க்கொருவர் கண்போற் சிறந்தவராதலின் கண்ணாளன், கண்ணாட்டி எனவுங் கூறப்படுவர்.

கண்ணாளன்[2] *kaṇṇāḷaṉ,* பெ.(n.) 1. ஓவியன் (யாழ்.அக.); painter, artist. 2. கம்மாளன்; smith.

[கண் + ஆளன். கண்ணுதல் = பொறித்தல், வரைதல்.]

கண்ணாளி *kaṇṇāḷi,* பெ.(n.) கண்ணாளன், அன்புக்குரியவன்; a dear one (சேரநா.).

ம. கண்ணாளி

[கண் + ஆளி.]

கண்ணாற்சுடு–தல் *kaṇṇāṟ-cuḍu-,* 18 செ.கு.வி. (v.t.) ***கண்ணேறு*** பார்க்க; see *kaṇṇēṟu.*

[கண் + ஆல் + சுடு–.]

கண்ணாறு[1] *kaṇṇāṟu,* பெ.(n.) 1. பேராற்றினின்று நீர் செல்ல வெட்டப்படும் பாசன வாய்க்கால். (பழ.தமி.110.); irrigation water-course leading to a paddy field. 2. சிற்றோடை; a stream issuing from a sluice. 3. நன்செய்ப் பிரிவு (G.tn.D.i.285); block or division of wet lands. 4. சிறுபாலம் (இ.வ.); culvert. 5. சிற்றாறு; rivulet.

ம. கண்ணாறு

[கண் + ஆறு. கண் = சிறு.குள் → (கள்) → கண் = சிறியது.]

கண்ணாறு[2] *kaṇṇāṟu,* பெ.(n.) சிறுதுளை; small hole or opening. "மகதநாட்டுச் சித்திரவறைக் கண்ணாறு போல" (நீலகேசி.272,உரை).

ம. கண்ணாயம்.

[கண் + ஆறு. கண் = சிறிய. ஆறு = வழி, புறப்பாதை, உட்டுளை.]

கண்ணாறுதடி *kaṇṇāṟu-taḍi,* பெ.(n.) வாய்க்காலை யொட்டி அமைந்த வழி; foot path adjacent to any channel. "கோட்டாறு வள்ளையறை கண்ணாறு தடி." (S.I.I.Vol.6. Part II.Insc,97,S.No.4.).

[கண்ணாறு + தடி. தடம் → தடி (வளைந்து செல்லும் ஒற்றையடிப் பாதை).]

கண்ணி[1] *kaṇṇi,* பெ.(n.) 1. தலையிற்சூடும் பூமாலை; wreath worn on the head, chaplet. *"கண்ணியுந் தாரு மெண்ணின ராண்டே" (தொல்.பொருள். 634).* 2. இவ்விரு பூவாக இடைவிட்டுத் தொடுத்த மாலை; garland having pairs of flowers with small interval. *"புன்னை மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்" (புறநா. 24:8.)* 3. போர்மறவர் சூடும்

பூமாலை; flower garland used as military badge. *"சுரும்பார் கண்ணிப் பெரும்புகன் மறவர்" (மதுரைக்.596).* 4. பூங்கொத்து; bunch of flowers. 5. அணிகலன்களின் இணைப்பு வளையம்; ring hook of a ornament.

ம. கண்ணி; **க.** கண்ணி, கணி (முடிச்சு); **கோத.** கய்ண். **து.** கண்ணி; **தெ.** கன்னெ; **குட.** கெணி.

[கண் → கண்ணி. (சொ.ஆ.க).]

பூவை நெருங்கத் தொடுத்தாக்கிய தொடையல் அல்லது மாலைக்கும், இடைமிட்டுக் கட்டிய சரம் அல்லது கண்ணிக்கும் நிகழும் வேற்றுமை பெரிது. பூவின் நெருக்கம் நெருக்கமின்மை யென்பவற்றோடு அவை தொடுக்கப்படுந் தன்மையிலும் வேற்றுமை யுள்ளது. கண்ணி போன்ற முடிச்சினுட் பூவின் காம்பைச் செருகி இறுக்கி முடிப்பது கண்ணி; மாலையோ, பூவின் காம்புகளை ஒரு நாரடியோடு சேர்த்துப் பிணைத்து நெருங்கத் தொடுக்கப்படுவது.

கண்ணியென்னுஞ் சொல் 'கண்' என்னும் இடப் பொருண்மை சுட்டும் இடைச் சொல்லடியாகப் பிறந்த பெயராகவும் எடுத்துக் கொள்ளலாம்.

"கண்ணார் கண்ணிக் கலிமான் வளவ" [புறநா.93:2.] என்னும் அடிக்கு 'கண்ணுக்கு அழகு செய்வ' தெனப் பண்டையுரையாசிரியர் தந்த பொருள் பிற்காலத்துப் புகுந்த பொருளுரையேயாம். [சில தமிழ்ச்சொல்லாராய்ச்சி. ப.3].

கண்ணி[2] *kaṉṉi,* பெ.(n.) 1. அரும்பு; bud. *"கண்ணி வாய்விடுங் காலையில்" (உப தேசகா.சிவ. புண்.308.)* 2. கொழுந்து; sprout, shoot, tender leaf

[கள் (இளமை) → கண் → கண்ணி.]

கண்ணி[3] *kaṉṉi,* பெ.(n.) 1. பறவை பிடிக்கும் சுருக்குக் கயிறு; snare, noose. "பறவை சிக்க .... காட்டிற் கண்ணி வைப்போர்" (தாயு.மாதரைப் பழித்தல்.2). 2. வலை, வலைக்கண்; net, mesh. *"கண்ணியுட் பட்டதோர் கலையின்" (கந்தபு. மாயைப் 317).* 3. கால் நடைகளின் கழுத்தில் கட்டும் கயிறு; noose of a rope for cattle`s neck. 4. முடிச்சு; knot; tie; *"கண்ணிநுண் சிறு தாம்பினால்" (திவ்.கண்ணி நுண்.1).* 5. கயிறு; rope;

மறுவ: தாமணி

தெ. கன்னெ; **ம.,க.,து.,**பட. கண்ணி; **உரா.** கண்ணி

[கள் (கட்டுதல்) → கண் → கண்ணி.]

கண்ணி[4] *kaṉṉi,* பெ.(n.) 1. கலிவெண்பா முதலியவற்றில் இரண்டிர ண்டாய் வரும் உறுப்பு; the distichous part of Kali-veṇbā. *"மூதுலாக் கண்ணிதோறும்" (சங்கர.உலா).* 2. ஒருவகை இசைப்பாட்டு; a kind of musical lyric.

[கள் (சேர்தல்) – கண் – கண்ணி.]

கண்ணி[5] *kaṉṉi,* பெ.(n.) 1. கிளைவாய்க்கால்; branch channel. கண்ணிவாய்க்காலில் நீர் வழிந்தோடு கிறது (உ.வ.). 2. ஆற்றங்கரை; river-bank. கண்ணியை வெட்டிக் கழனி சேர்க்காதே (உ.வ.). 3. உப்பங்கழி; salt pan.

[கள் (சேர்தல்) → கண் → கண்ணி.]

கண்ணி[6] *kaṉṉi,* பெ.(n.) பக்க அடுப்பு; side oven. பாலைக் கண்ணியில் வைத்து காய்ச்சு (உ.வ.).

[கள் → கண் → கண்ணி. கள் = சேர்தல், அடுத்திருத்தல்.]

கண்ணி[7] *kaṉṉi,* பெ.(n.) 1. ***கரிசலாங்கண்ணி*** பார்க்க; (தைலவ. தைல.103); see *kariśalāṅgaṉṉi.* 2. ***பொன்னாங்கண்ணி*** பார்க்க; see *poṉṉāṅgaṉṉi.* 3. அழு கண்ணி மரம்; Indian weeping water. 4. தொழுகண்ணிச் செடி; hedyssrum. 5. காடைக் கண்ணிச் செடி; Indian oats.

[கண் + இ. கண்ணி என முடியும் செடிகளும் மரங்களும் சொற் சுருக்கத்தால் கண்ணி என்றே குறிக்கப்பட்டுள்ளன.]

கண்ணி[8] *kaṉṉi,* பெ.(n.) கண்ணுள்ளவள்; having eye.

ம. கண்ணி

[கண் + இ.]

கண்ணிக்கயிறு[1] *kaṉṉi-k-kayiṟu,* பெ.(n.) 1. நெய் வாரது விழுதுக்கயிறு (வின்.); thread of linen wound on the two beams of a weaver's loom, which the reed moves up and down.

[கண்ணி + கயிறு. கண்ணுதல் = நெருங்குதல், சேர்தல் (இருபெயரொட்டுப் பண்புத்தொகை.).]

கண்ணிக்கயிறு[2] *kaṉṉi-k-kayiṟu,* பெ.(n.) 1. பூட்டாங்கயிறு (எங்களூர்,91.); string by which a bullock is fastened to the yoke. 2. முடிகளை யுடைய கயிறு; knotted rope.

க. கண்ணி

[கண்ணி + கயிறு.]

கண்ணிக்கால் *kaṇṇi-k-kāl,* பெ.(n.) கிளைவாய்க் கால்; branch channel.

மறுவ. கண்ணாறு

[கண்ணி + கால்.]

கண்ணிக்குறடு *kaṇṇi-k-kuṟadu,* பெ.(n.) சிறிய பற்றுக்குறடு; small forceps. கண்ணிக்குறட்டால் கம்பியை முறுக்கு (உ.வ.).

ம. கண்ணிக்கொறடு

[கண்ணி + குறடு. கண் → கண்ணி = சிறிய, சிறிது.]

கண்ணிக்கொடி *kaṇṇi-k-koḍi,* பெ.(n.) ***கருங்காக்கணம்*** பார்க்க (மூ.அக.); see *karuṅkākkaṇam.*

[கண்ணி + கொடி.]

கண்ணிகட்டு[1]–தல் *kaṇṇi-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) அரும்புகொள்ளுதல்; to bud.

[கண்ணி + கட்டு–.]

கண்ணிகட்டு[2]–தல் *kaṇṇikaṭṭu,* 5 செ.குன்றாவி.(v.t.) வலைகட்டுதல்; to set a snare, a net.

[கண்ணி + கட்டு–.]

கண்ணிகண்ணு–தல் *kaṇṇi-kaṇṇu-,* 5 செ.கு.வி.(v.i.) சூடிய போர்அடையாளப் பூவிற்கேற்ப வினை செய்யக் கருதுதல்; to act according to the donned symbolic flower, in ancient Tamil mode of war. *"கண்ணி கண்ணிய வயவர் பெருமகன்" (பதிற்றுப்.58:8).*

[கண்ணி + கண்ணு.]

கண்ணிகம் *kaṇṇigam,* பெ.(n.) மணித்தக்காளி (மலை.); black night-shade.

[கண்ணி → கண்ணிகம்.]

கண்ணிகுடி *kaṇṇikuḍi,* பெ.(n.) சிறப்பான குடி; a famous clan. "கோயில் படாரற்குக் கீழிரணிய முட்டத்து கண்ணி குடிச்(சொ)லமை" (S.I.I.Vol.14. Insc. 49. SN.66).

[கண் – கண்ணி + குடி. கண்ணி = கண்போல் சிறந்த.]

கண்ணிகுத்து–தல் *kaṇṇi-kuttu-,* 10 செ.கு.வி. (v.i.) சுருக்குக்கயிறு வைத்தல்; to set a noose *"கண்ணிகுத்தி வலை தொடுத்து" (தணிகைப்பு. அகத்.439).*

[கண்ணி + குத்து–.]

கண்ணிகை *kaṇṇigai,* பெ.(n.) 1. தாமரைப் பொகுட்டு; pericarp of the lotus. 2. பூவரும்பு (யாழ்.அக.); flower bud.

த.கண்ணிகை **>Skt;** karnika.

[குள் → கள் → கண் (முளை) → கண்ணிகை. 'கை' சிறுமைப் பொருள் சொல்லீறு. த. கண்ணிகை > வ. கர்ணிகா. வடமொழிச்சொல்லான கர்ணிகா தமிழில் கண்ணிகை ஆயிற்று எனக் கூறுவது பொருந்தாது. இச் சொல்லின் வேரும் ஈறும் முற்றும் தமிழாய் இருத்தல் காண்க. வடமொழியில் இச் சொல்லுக்கு வேரும் ஈறும் உய்த்துரைக்கப்பட்டவை]

கண்ணிச்சாறு *kaṇṇi-c-cāṟu,* பெ.(n.) கண்ணிச் செடிவகைகளின் சாறு; juice of eclipse or sessile plants.

[கண்ணி + சாறு.]

கண்ணிட்டுக்காணம் *kaṇ-ṇ-iṭṭu-k-kāṇam,* பெ.(n.) பழைய வரிவகைகளி லொன்று. (S.I.I.ii.352); a kind of an ancient tax.

மறுவ. கண்ணோட்டுக்காணம்

[கண் + இடு + காணம்–கண்ணிடுகாணம்→ கண்ணிட்டுக்காணம் (கிளைவாய்க்கா லமைப்பிற்காக இடப்பட்ட வரி) கண்ணிட்டுக்காணம் (கொ.வ.).]

கண்ணிடிவிழு–தல் *kaṇṇiḍi-viḻu,* செ.கு.வி.(v.i.) கண் உள்வாங்குதல்; to sink as of the eye.

[கண் + இடிவிழு. இடிவிழுதல் = இடிந்துவிழுதல், பள்ளமாதல்.]

கண்ணிடுக்கு–தல் *kaṇ-ṇ-iḍukku-,* 5 செ.கு.வி.(v.i.) தூக்கமயக்கமாயிருத்தல்; to be half asleep, to be drowsy.

[கண் + இடுக்கு.]

கண்ணிடுகாணம் *kaṇ-ṇ-iḍu-kāṇam,* பெ.(n.) காட்டுக்கொள்ளு; jungle horse-gram.

[கண் + இடு + காணம். காணம் = கொள்(ளு). நாட்டு மருத்துவர் இதன் பொடியைக் கண்ணிலிடுவர் என்பதால் பெற்ற பெயர்.] (சா.அக.)

கண்ணிடு[1]–தல் *kaṇ-ṇ-iḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. கண்ணால் பார்த்தல்; to set an eye on, to aim. 2. இரக்க உணர்வுடன் நோக்குதல்; to look upon with gracious favour. 3. கண்ணூறு தரும் வகையில் பார்த்தல்; to cast an evil eye (சேரநா.). 4. (ஒன்றை) விரும்புதல், மனம் வைத்தல்; to like. 5. விழிப்புடனிருத்தல், காவலிருத்தல்; to be cautious, to guard.

மறுவ. கண்வைத்தல்

ம. கண்ணிடுக; **க.** கண்ணிடு; **தெ.** கன்னுந்த்சு.

[கண் + இடு–.]

கண்ணிடு[2]–தல் *kaṇṇiḍuḍal-,* செ.கு.வி.(v.i.) மைதீட்டுதல்; apple collyrium. அவள் கண்ணிட்டுக் காத்திருந்தாள் (உ.வ.).

[கண் + இடு.]

கண்ணிடுமருந்து *kaṇṇiḍu-marundu,* பெ.(n.) 1. கண்ணில் துளித்துளியாக விடும் மருந்து; a fluid preparation to be dropped into the eyes, eye drops. 2. கண்ணுக்கிடும் கலிக்கம்; an ointment used as an external application to the eye-lids etc. (சா.அக.).

[கண் + இடு + மருந்து.]

கண்ணிடை *kaṇ-ṇ-iḍai,* பெ.(n.) வலைக்கண் உள்ளீடு; sieve of a net.

[கண் + இடை.]

கண்ணிணை *kaṇ-ṇ-iṇai,* பெ.(n.) 1. இருகண்கள்; both the eyes. 2. ஒருவர் கண்களோடு ஒருவர் கண்கள்; eye to eye *"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்" (குறள், 1100).*

ம. கண்ணிண; **தெ.** கனுகவ, கன்தவ.

[கண் + இணை.]

கண்ணிநடு–தல் *kaṇṇi-naḍu-,* 20 செ.கு.வி. (v.t.) கண்ணி வைத்தல் (வின்.); to set a snare.

[கண்ணி + நடு–.]

கண்ணிநார் *kaṇṇi-nār* பெ.(n.) தென்னோலையின் அடிக்காம்பிலிருந்து விளிம்பிலிருந்து சீவியெடுக்கும் நார்; the thread like marginal fibre of the leaflet of the cocoanut-palm.

ம. கண்ணி நாரு

[கண்ணி + நார்.]

கண்ணிநுண்சிறுத்தாம்பு *kaṇṇi-nuṇ-ciṟu-t-tāmbu,* பெ.(n.) ஆழ்வார்களுள் ஒருவரான மதுரகவி யாழ்வார் அருளிச்செய்த பாடலின் தொடக்கம்; a poem commencing with this phrase sung by Madurakaviaḻvār, one of the Vaiṣṇāva saints.

[கண்ணி + நுண் + சிறுத்தாம்பு. கண்ணிநுண்சிறுத்தாம்பு எனத் தொடங்குதலால் பெற்ற பெயர்.]

கண்ணிப்பலகை *kaṇṇi-p-palagai,* பெ.(n.) மீன் பிடிக்குங் கருவி; mesh-board (கட.பர.க.சொ.அக.).

[கண்ணி + பலகை. கண்ணு = வலை.]

கண்ணிப்பாறை *kaṇṇi-p-pāṟai,* பெ.(n.) ஓரடி நீளம் வளரக்கூடியதும், நீலப்பச்சை நிறமுடையதுமான குதிரைவடிவக் கடல்வாழ் மீன்; horse mackerel bluish green attaining atleast one foot in length (சா.அக.).

[கண்ணி + பாறை (பாறைமீன்வகை.)]

கண்ணிப்பாறை

கண்ணிமாங்காய் *kaṇṇi-māṅgāy,* பெ.(n.) மாவடு; small and tender mangoes.

ம. கண்ணிமாங்ங

[கண்ணி + மாங்காய். கண்ணி = சிறியது.]

கண்ணிமை[1] *kaṇ-ṇ-imai,* பெ.(n.) 1. கண்ணிதழ்; eye lid. 2. கண்பீலி; eye lashes.

மறுவ. கண்ணிதம், கண்ணிரப்பை.

ம. கண்ணிம; **க.** கண்ணிமெ.; **பட.** கண்ணிமெ. **து.** கண்ணிம், கண்ணபாமெ.

கண்ணிமை[2] *kaṇṇimai* பெ.(n.) 1. ஒருமாத்திரைக் கால அளவு; measure of time which equals an eye-wink. *"கண்ணிமை நொடியென" (தொல்.எழுத்.7).*

மறுவ. இமைப்பொழுது

[கண் + இமை.]

கண்ணிமைப்பதற்கு ஆகும் நேரம் கண்ணிமை எனப்படும். கண்ணிமை அல்லது கைநொடிப் பொழுதினை இலக்கணிகர் மாத்திரை என்பர். ஆயின் இற்றை அறிவியலார் கண்ணிமைக்கும் நேரம், கை நொடிக்கும் நேரத்தினும் குறைவானது என்பர்.

கண்ணிமை[3]**–த்தல்** *kaṇ-ṇ-imai-,* 4 செ.கு.வி.(v.t.) இமைகொட்டுதல்; to wink. *"கண்ணிமைத்தலான்" (நள.சுயம்வர.153).*

தெ. கனுகீடு

[கண் + இமை.]

கண்ணிமைக்கழலை *kaṇ-ṇ-imai-k-kaḻalai,* பெ.(n.) ***கண்கட்டி*** பார்க்க. see *kaṇ-kaṭṭi.*

[கண் + இமை +கழலை.]

கண்ணிமைக்கோளம் *kaṇṇimai-k-kōḷam,* பெ.(n.) ***கண்கட்டி*** பார்க்க see *kaṇ-kaṭṭi.*

[கண் + இமை + கோளம். கோளம் = கட்டி.]

கண்ணிமைதிற–த்தல் *kaṇ-ṇ-imai-tiṟa-,* 2 செ.கு.வி. (v.i.) பரக்கவிழித்தல்; to open the eyes wide.

[கண் + இமை + திற.]

கண்ணிமைதுடித்தல் *kaṇ-ṇ-imai-tuḍi-,* 4 செ.கு.வி. (v.t.) ***கண்துடித்தல்*** பார்க்க; see *kaṇ-tuḍi-.*

கண்ணிமைப்பசபசப்பு *kaṇ-ṇ-imai-p-paśa-paśappu,* பெ.(n.) கண்ணிமையின் அரிப்பு; itching of the eyelids.

[கண் + இமை + பச + பசப்பு.]

கண்ணிமையார் *kaṇ-ṇ-imaiyār,* பெ.(n.) கண்ணிமைக்காதவர், தேவர்; gods, who never wink their eyes. *"கண்ணிமையார் விழித்தேயிருந்தறங்கள் வௌவ" (சீவக.248).*

[கண் + இமை + ஆ + அர் ('ஆ' எம.).]

கண்ணிமைவிழு–தல் *kaṇ-ṇ-imai-viḻu-,* 2 செ.கு.வி. (v.i.) நோயினால் இமை தொங்குதல்; dangle the upper eyelid by paralysis.

[கண்ணிமை + விழு–.]

கண்ணியக்கம் *kaṇ-ṇ-iyakkam,* பெ.(n.) விழியசைவு; movement of the eye.

[கண் + இயக்கம்.]

கண்ணியம்[1] *kaṇṇiyam,* பெ.(n.) சால்புடைமை, excellence, nobility.

Skt. gaṇya

[கண் → கண்ணியம் .]

கண்ணியம்[2] *kaṇṇiyam,* பெ.(n.) மரமஞ்சள்; tree turmeric.

[கண் → கண்ணியம்.]

கண்ணியல் *kaṇṇiyal,* பெ.(n.) கண்மருத்துவத் துறை; opthalmology.

[கண் → இயல்.]

கண்ணியவான் *kaṇṇiyavāṉ,* பெ.(n.) சால்புடை யோன்; excelleancy.

த. கண்ணியம் >**Skt.** gaṇya.

[கண் → கண்ணியம் → கண்ணியவான். ஒ.நோ. புண்ணியம் → புண்ணியவான்.]

கண்ணிரங்கு–தல் *kaṇ-ṇ-iraṅgu-,* 9 செ.கு.வி. (v.i.) 1. ஒலித்தல்; to sound. *"மின்னிருங் கலாபம் வீங்கி மிளிர்ந்துகண் ணிரங்க வெம்பித்" (சீவக.1985).* 2. அருள்செய்தல்; to pity; to have compassion.

[கண் + இரங்கு.]

கண்ணிருட்டு–தல் *kaṇṇruṭṭu-,* 5 செ.கு.வி.(v.t.) பார்வை மங்குதல்; to get dimness as of the eye sight.

[கண் + இருட்டு. இருள் → இருட்டு.]

கண்ணிரு–த்தல் *kaṇṇiru,* 3 செ.கு.வி.(v.i.) ***கண் வை–த்தல்***[1] பார்க்க; see *kaṇ-vaiṭ-.*

[கண் + இரு.]

கண்ணில்(ற்)–த(ற)ல் *kaṉ-nil-*, 14 செ.கு.வி.(v.i.) எதிர்நிற்றல்; to stand before one's eyes. *"கண்ணின்று கண்ணறச் சொல்லினும்" (குறள்,184).*

எரு. கண்ரெப்பெ; **கொர.** கன்னுப்பு.

[கண் + நில்-.]

கண்ணில்படு–தல் *kaṇṇil-paḍu*, 20 செ.கு.வி.(v.i.) 1. மற்றவர் பார்வைக்கு உள்ளாதல்; to fall under one's sight. ஒளிந்துபோக நினைத்தேன் கண்ணில் பட்டுவிட்டேன் (உ.வ.). 2. வெளியாதல்; to come to light. மறைத்து வைத்தது அவன் கண்ணில் பட்டு விட்டது. (உ.வ.).

க. கண்படு; **தெ.** கனுபடு; **பட.** கண்ணுகபடு.

[கண்ணில்+ படு.]

கண்ணிலகு–தல் *kaṇṇilaku-*, செ.கு.வி.(v.i.) கண் துலங்குதல்; lustire of the eye.

[கண் + இலகு. இலங்குதல் – இலகுதல்.]

கண்ணிலன் *kaṉ-ṇ-ilaṉ*, பெ.(n.) 1. பார்வை இல்லாதவன்; blind man. 2. இரக்கமில்லாதவன்; merciless man. *"கடுஞ்சொல்லன் கண்ணில னாயின்" (குறள்,566).*

மறுவ. கண்ணிலான்.

[கண் + இலன்.]

கண்ணிலி[1] *kaṉ-ṇ-ili*, 1. கண்ணில்லாதவன்; blind person. *"கண்ணிலி குமர வெம்பி" (பாரத.பதின் மூன்.91).*

தெ. கண்ணிதி; **க.** கண்ணிலி.

[கண் + இலி.]

கண்ணிலி[2] *kaṇṇili*, பெ.(n.) எறும்பு (யாழ்.அக.); ant.

[கண் + (இல்லி) இலி.]

கண்ணிவலை *kaṇṇi-valai*, பெ.(n.) கயிற்றால் பின்னப் பட்ட வலை; net knitted by rope (கருநா.).

க. கண்ணிவலெ.

[கண்ணி + வலை. கண்ணி = கயிறு.]

கண்ணிவாய்க்கால் *kaṇṇi-vāykkāl*, பெ.(n.) கிளை வாய்க்கால் (இ.வ.); branch channel.

[கண்ணி = சிறிய கிளை. கண்ணி + வாய்க்கால்.]

கண்ணிவிரல் *kaṇṇi-viral*, பெ.(n.) சிறிய விரல்; little finger.

[கண்ணி = சிறிய. கண்ணி + விரல்.]

கண்ணிவெடி *kaṇṇi-veḍi*, பெ.(n.) 1. சிறுவெடி; small crackers. 2. துளையிட்டு வைத்து வெடிக்கும் வெடி; land mine.

[கண்ணி + வெடி.]

கண்ணில் படாத வகையில் நிலத்தின் அல்லது நீரின் அடியில் வைக்கப்பட்டு, ஊர்தி அல்லது ஆள் அதனைக் கடக்கும்போது வெடிக்கக் கூடிய அல்லது தொலைவிலிருந்து வெடிக்கச் செய்யக் கூடிய குண்டு வகை.

கண்ணிவெற்றிலை *kaṇṇi-veṟṟilai*, பெ.(n.) சிறு வெற்றிலை; betel leaf of smaller size.

[கண்ணி = சிறிய, கண்ணி + வெற்றிலை.]

கண்ணிறுக்கம் *kaṉ-ṇ-iṟukkam*, பெ.(n.) நடுவிழி அல்லது கண்ணிமையின் வீக்கத்தால் கண்ணிற்கு ஏற்படும் இறுக்கம்; the pressure or the constricting force experienced due to swelling of eye-ball or eye-lids.

[கண் + இறுக்கம்.]

கண்ணீட்டுக்காணம் *kaṇṇīṭṭu-k-kāṇam*, பெ.(n.) தமிழ்வேந்தரின் அரசு துறைகளில் மேற்பார்வை அதிகாரிகளுக்குத் தரப்பட்ட காணிக்கைப்பணம்; an allowance given to the supervisors of government departments during period of Tamil kings.

[கண் + இடு + காணம் – கண்ணிடுகாணம் → கண்ணீட்டுக்காணம். கண்ணிடுதல் = மேற்பார்வை செய்தல். இடு → ஈடு (மு.தி.தொ.பெ.). காணம் = பழங்காலப் பொற்காசு. இதனைக் கண்ணீட்டுக்காணம் என்றும் கண்ணோட்டுக்காணம் என்றும் வழங்குவது வழுவாம்.]

கண்ணீர்[1] *kaṇṇīr*, பெ.(n.) விழிக்கோளத்துக்கு ஈரத் தன்மையைத் தந்து தூய்மையாக்குவதும் துன்பம், உணர்ச்சிவயப்படுதல், இருமல் போன்ற நிலைகளால் வெளிப்படுவதுமாகிய தூய உவர்நீர்; tears. *"தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரங் கண்ணீர் நனைக்குங் கடுமைய காடு" (கலித்.65).*

ம. கண்ணீர்; **க.** கண்ணீர்; **தெ.** கன்னீரு; **து.** கண்ணநீர்; **கோண். (கோயா).** கண்டேர்; **பர்.** கன்னீர்; **கட.** கனீர்; **கோண்.** கானேர்; **கூ.** கன்ச்ர; **குவி.** கன்த்ரு; **மால்.** க்வனமு; **பிரா.** கரீங்க்; **பட.** கண்ணீரு. **உரா.** கண்ணநீரு;

Finn. kēlyb; **Hung.** konniy; **Sum.** er; **Comp., Finn.** Kōnyu.

[கண் + நீர்.]

கண்ணீர்[2] *kaṉṉīr,* பெ.(n.) கள்ளாகிய நீர்; toddy. *"கண்ணீர் கொண்டு காலுற நடுங்கல்" (சிலப். 13:188).*

[கள் + நீர். ஒ.நோ. தெள் + நீர் – தெண்ணீர்.]

கண்ணீர்க்குடை *kaṉṉīr-k-kuḍai.* பெ.(n.) மூக்கிரட்டை (வித்.அக.); spreading hogweed.

மறுவ. கண்ணீர் நடுக்குறை

[கண்ணீர் + குடை.]

கண்ணீர்கலங்கு–தல் *kaṉṉīr-kalaṅgu-,* செ.கு.வி. (v.i.) ***கண்கலங்குதல்*** பார்க்க; see *kaṉ-kalaṅgu.*

[கண்ணீர் + கலங்கு–.]

கண்ணீர்ச்சுரப்பி *kaṉṉīr curappi,* பெ.(n.) கண்ணீரைச் சுரக்கும் உறுப்பு; a gland which secretes tears.

மறுவ. கண்ணீர்க்கோளம்.

[கண்ணீர் + சுரப்பி.]

கண்ணீர் சொரி–தல் *kaṉṉīr-cori-,* 2 செ.கு.வி.(v.i.) அழுதல்; to shed tears. துக்கம் தாளாமல் கண்ணீர் சொரிந்தான் (உ.வ.).

பட. கண்ணீர்ஜோரு

[கண்ணீர் + சொரி–.]

கண்ணீர்த்தாரை *kaṉṉīr-t-tārai,* பெ.(n.) ***கண்மழை*** பார்க்க; see *kaṉ-maḻai.*

[கண்ணீர் + தாரை.]

கண்ணீர் துடை–த்தல் *kaṉṉīr-tuḍai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கண்ணீரை நீக்குதல்; to wipe the tears. அழுகின்ற குழந்தையின் கண்ணீரைத் துடை (உ.வ.). 2. ஆறுதல் கூறுதல்; to console. மக்களின் கண்ணீரைத் துடைக்க அரசு ஆவன செய்யும் (உ.வ.).

து. கண்ணீர் நச்சுநி; பட. கண்ணீரதொடெ.

[கண்ணீர் + துடை –.]

கண்ணீர்ப்புகை *kaṉṉīr-p-pugai,* பெ.(n.) கண்ணீரை வரவழைக்கும் ஒருவகைப் புகை; tear gas.

ம. கண்ணீர்வாதகம்

[கண்ணீர் + புகை.]

பிற புகைகளைக் காட்டிலும் மிகுதியாகக் கண்ணீர் வரவழைக்கும் வல்லமை நோக்கிக் கண்ணீர்ப்புகை எனப்பட்டது.

கண்ணீர்முட்டல் *kaṉṉīr-muṭṭal,* பெ.(n.) கண்ணீர் வழியச் செய்யும் ஒருவகை நோய்; an eye disease caused by increased fluid-pressure within the eyeball, glaucoma.

[கண் + நீர் + முட்டல்.]

கண்ணீர்மை *kaṉṉīrmai,* பெ.(n.) கண்ணின் இயல்பு; nature of the eye.

[கண் + நீர்மை.]

கண்ணீர்விடு–தல் *kaṉṉīr-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. கண்ணீர் சிந்துதல்; shed tears. 2. துன்பப்படுதல்; to grieve, feel sad.

க. கண்ணீரிடு; பட. கண்ணீராக்கு; து. கண்ணீர் ஒப்புநி.

[கண்ணீர் + விடு–.]

கண்ணீரம் *kaṉṉīram* பெ.(n.) கண்ணிற்கு இடும் மை; collyrium for the eyes (சா.அக.).

[கண் + ஈரம்.]

கண்ணீரருகல் *kaṉṉīr-arugal,* பெ.(n.) தொடர்ந்து கண்ணீர் வழியச் செய்யும் ஒருவகை நோய்; an eye disease which causes to shed tears continously.

மறுவ. : கண்ணீரொழுக்கு

கண்ணீராக்கி *kaṉṉīr-ākki,* பெ.(n.) பச்சைக் கருப்பூரம் (வின்.); crude camphor.

[கண்ணீர் + ஆக்கி.]

கண்ணீரும் கம்பலையுமாய் *kaṉṉīrum-kampalai-yumāy,* வி.எ.(adv.) பெருந்துன்பத்தில் கண்ணீருடன் புலம்பலும் சேர்ந்தது; tearful, grief stricken. கணவனை இழந்தவள் கண்ணீரும் கம்பலையுமாய் இருந்தாள்(உ.வ.).

[கண்ணீர் + உம் + கம்பலை + உம் + ஆய். 'உம்' எண்ணும்மை.]

கண்ணு[1]–தல் *kaṉṉu-,* 12 செ.குன்றாவி.(v.t.) 1. கருதுதல்; to propose, think, consider. *"கண்ணிய துணார்*

தலும்" (மணி. 2:25). 2. பொருந்துதல்; to be attached to, fastened to. *"புடைகண்ணிய வொளிராழியின்" (இரகு.யாக.17).*

[குள் → கள் → கண் = சேர்தல், சேர்த்தல், செய்தல். கள் → கண் – கண்ணு –. (செல்வி.78சிலை.244.) கண்ணுதல் = செய்தல். செய்தல் வினை கருதும் வினைக்குப் பொருள் தாவியது.]

கண்ணு²–தல் *kaṇṇu-,* 2 செ.குன்றாவி. (v.t.) பார்த்தல்; to see (நாமதீப.).

[குள் → கள் → கண் → கண்ணு = சேர்தல், சேர்த்தல். செய்தல். செய்தல் வினை நினைத்தல் வினைக்கும், நினைத்தல் வினை பார்த்தல் வினைக்கும் பொருள் தாவின.]

கண்ணுக்கணிமூலி *kaṇṇu-k-kaṇimūli,* பெ.(n.) பொன்னாங்கண்ணி; an edible plant (சா.அக.).

[கண்ணுக்கு + அணி + மூலி (மூலம்.)]

கண்ணுக்கினியான் *kaṇṇukkiṉiyāṉ,* பெ.(n.) 1. பொன்னாங்கண்ணி; an ediple plant growing in wet place. 2. கையாந்தகரை; a plant growing in wet places.

[கண்ணுக்கு + இனியான்.]

இவ்வகைக் கீரைகள் உண்பதால் கண்ணுக்கு நலன் பயக்கும் என்னும் மருத்துவக் கருத்தின் அடிப்படையில் இவ்வாறு அழைக்கப்பட்டிருக்கலாம்.

கண்ணுக்குக்கண்ணா–தல் *kaṇṇukku-k-kaṇṇa-,* 6 செ.கு.வி.(v.i.) மிகவும் போற்றுதல்; to be very dear, precious, as the eye. அவளைக் கண்ணுக்குக் கண்ணாய்க் காப்பாற்ற வேண்டும் (உ.வ.).

[கண்ணுக்கு + கண்ணா–.]

கண்ணுக்குத்தை–த்தல் *kaṇṇukku-t-tai-,* 4 செ.கு.வி.(v.i.) கண்கவரப்படுதல் (வின்.); to attract the eyes

[கண்ணுக்கு + தை–.]

கண்ணுக்குப்படு–தல் *kaṇṇukku-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) பார்வையில் படுதல்; to come to view, to happen to see.

து. கண்ணக் பூருநி; பட. கண்ணுக படு.

[கண்ணுக்கு + படு.]

கண்ணுக்குறங்கு–தல் *kaṇṇukkuṟaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) விழிப்புநிலை உறக்கம், அறிவு அல்லது உணர்ச்சி குன்றாது தூங்கும் தூக்கம், அறிதுயல்; a semi-conscious sleep. குழந்தை கண்ணுக்குறங்கிறது (நெல்லை.).

[கண்ணுக்கு + உறங்கு.]

கண்ணை நோக்கினால் உறங்குவது போன்ற தோற்றம் தரும் அறிதுயில் நிலை கண்ணுக்குறக்கம் என வழங்கலாயிற்று.

கண்ணுக்கேற்றாள் *kaṇṇu-k-kēṟṟāḷ,* பெ.(n.) கொடி நெல்லி; gooseberry creeper (சா.அக.).

[கண்ணுக்கு + ஏற்றாள்.]

கண்ணுங்கருத்துமாய் *kaṇṇuṅ-karuttumāy,* (வி.எ.) (adv.) சிதறவிடாமல் கருத்தூன்றிப் பேணுதல்; with full attention, concentration. அகரமுதலிப் பணியைக் கண்ணுங்கருத்துமாய்ச் செய்ய வேண்டும் (உ.வ.).

[கண்ணும் + கருத்துமாய்.]

கண்ணுடை–தல் *kaṇṇuḍai-,* 2 செ.கு.வி.(v.i.) முளைக் குருத்து, தவசம் போன்றவற்றின் முளைப் பகுதி வெளி வருதல்; to germinate as of grain.

[கண் + உடை.]

கண்ணுடைமூலி *kaṇṇuḍai-mūli,* பெ.(n.) வெப்ப நிலத்தில் வளரும் செடி; a plant that grows only in hot and dry places.

[கண்ணுடை + மூலி.]

கண்ணுடையம்மை பள்ளு *kaṇṇuḍai-y-ammai-paḷḷu,* பெ.(n.) 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முத்துக் குட்டிப் புலவரால் இயற்றப்பட்ட சிற்றிலக்கியம்; a Pallu literature of 18th century by MuthuKutty Pulavar.

[கண்ணுடை + அம்மை + பள்ளு.]

கண்ணுடையவள்ளலார் *kaṇṇuḍaiya-vaḷḷalār,* பெ.(n.) ஒழிவிலொடுக்க நூலாசிரியர்; name of the author of oḻivil-oḍukkam, a śaivite philosophical work of the 15th cir.

[கண் + உடைய + வள்ளலார்.]

கண்ணுதல் *kaṇṇudal,* பெ.(n.) 1. நெற்றிக்கண்; forehead having an eye. *"கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப் பண்ணவன்" (கந்தபு.கடவுள்.8)* 2. சிவன்; šiva, who has an eye in his forehead. *"எம்மண்ணல் கண்ணுதல் பாத நண்ணி" (திருவாச.35:1).*

[கண் + நுதல். நுதல் = நெற்றி. நுதற்கண் என்பது கண்ணுதல் என முன் பின்னாக மாறியது – இலக்கணப்போலி.]

கண்ணுதலான் *kaṇṇutalāṉ,* பெ.(n.) 1. நெற்றிக் கண்ணுடைய சிவன்; God šiva (சா.அக.).

[கண் + நுதல் + ஆன்.]

கண்ணுதன்மலை *kaṇṇudan-malai,* பெ.(n.) கைலாயமலை (பிங்.); mount Kailasa, the abode of šiva.

[கண் + நுதல் + மலை.]

கண்ணுந்தல் *kaṇṇundal,* பெ.(n.) 1. விழிக்கோளம் வெளித்தள்ளுதலாகிய பிணி; protrusion of the eye.

[கண் + உந்தல்.]

கண்ணுமை *kaṇṇumai,* பெ.(n.) காட்சி; vision, sight. *"கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமை யானும்" (தொல்.பொருள்.76).*

[கண் → கண்ணுமை: கண்ணியது, கண்டது.]

கண்ணுயிர்–த்தல் *kaṇ-ṇ-uyir,* 3 செ.கு.வி.(v.i.) உறங்கி எழுதல்; to wake-up.

[கண் + உயிர்.]

கண்ணுரி–த்தல் *kaṇ-ṇuri-,* 4 செ.குன்றாவி.(v.t.) கண்புரை நீக்குதல்; to remove cataract.

[கண் + உரி.]

கண்ணுரு *kaṇ-ṇ-uru,* பெ.(n.) கண்ணின் உருவம்; structure of the eye.

[கண் + உரு.]

கண்ணுருளு–தல் *kaṇ-ṇ-uruḷu-,* 7 செ.கு.வி.(v.i.) 1. அச்ச மூட்டுதல்; to frightenen, threat. கண்ணுருட்டலைப் பார்த்துக் குழந்தை கதறி அழுதது (உ.வ.). 2. கண்ணை உருளச் செய்தல்; to roll the eye. கண்ணிலிட்ட மருந்து பரவுவதற்காகக் கண்ணுருளச்செய் (உ.வ.).

ம. கண்ணுருட்டு

[கண் + உருளு–.]

கண்ணுலைமூடி *kaṇ-ṇ-ulai-mūḍi,* பெ.(n.) வடிதட்டு (சிப்பல்) (வின்.); rice-strainer; colander.

மறுவ. கண்ணாலமூடி (கொ.வ.)

[கண் + உலை + மூடி. கண் = துளை.]

கண்ணுவம் *kaṇṇuvam,* பெ.(n.) நுண்கலைத் தொழில் (வின்.); artisanship.

[கண் → கண்ணு → கண்ணுவம்.]

கண்ணுவலிப்பூ *kaṇṇu-vali-p-pū,* பெ.(n.) கலப்பைக் கிழங்குக் கொடியின் பூ; ňovember flower plant.

மறுவ: காந்தட்பூ

[கண் + வலி + பூ.]

கண்ணோயால் கண் சிவந்து காணப்படுவது போல் இதன் பூ மிகச் சிவந்திருப்பதால் இப் பெயர் பெற்றது.

கண்ணுழற்சி *kaṇ-ṇ-uḻaṟci,* பெ.(n.) **கண்சுழற்சி** பார்க்க (சா.அக.); see *kancuḻaṟci.*

[கண் + உழற்சி.]

கண்ணுள்[1] *kaṇṇuḷ,* பெ.(n.) 1. நுட்பத்தொழில்; skilled labour. 2. தொழில்திறன்; workmanship. 3. கூத்து (திவா.); acting. dance. 4. அரும்புத்தொழில்; fine, delicate workmanship in jewellery. *"பலவுறு கண்ணுட் சிலகோ லவிர்தொடி" (கலித்.85;7).*

[கள் → கண் + உள் – கண்ணுள். உள் – தொ.பெ.ஈறு. ஒ.நோ. இயவுள், கழுவுள்.]

கள் = கூடுதல், சேர்தல், சேர்த்தல், செய்தல். கூர்ந்து செய்யும் நுட்பத்தொழில் ஒன்றைச் செய்யுமுன் மனக்கண்ணால் வடிவமைத்துச் செய்யப்புகுதலின் கண்ணுதல் என்னும் வினை சிறப்பாகச் சிற்பம், ஓவியம், கூத்து போன்ற நுண்கலைத் தொழில்களையே குறிக்கும். கண்ணுள் = மனக்கண்ணால் கருதி மதிப்பிட்டுச் செய்யும் பணி.

கண்ணுள்[2] *kaṇṇuḷ,* பெ.(n.) கண்ணின் உட்பக்கத் தசை; inner skin of the eye (சா.அக.).

[கண் + உள் – கண்ணுள்.]

கண்ணுள்வினைஞன் *kaṇṇuḷ-viṉaiñaṉ,* பெ.(n.) 1. ஓவியன்; painter, artist. *"கண்ணுள் வினைஞரும் மண்ணீட் டாளரும்" (சிலப்.5:30.).* 2. கம்மாளன். (சூடா.); artisan.

[கண்ணுள் + வினைஞன். கண்ணுள் = மனக்கண்ணால் வடிவமைத்துப் புதிதாக ஒன்றைச் செய்யுந் தொழில்.]

கண்ணுள் பார்க்க; see *kaṇṇuḷ.*

கண்ணுளர் *kaṇṇuḷar,* பெ.(n.) கூத்தர்; bards. *"கலம்பெறு கண்ணுள ரொக்கல் தலைவ" (மலைபடு.50).*

*[கண்ணுள் + அர் – கண்ணுளர். **கண்ணுள்** பார்க்க; see kaṇṇuḷ.]*

கண்ணுளன்[1] *kaṇṇuḷaṉ,* பெ.(n.) கூத்தன்; dancer.

[கள் → கண் = கூடுதல், சேர்தல். கண்ணுதல் = கூர்ந்து செய்தல். கள் → கண் + உள் (தொ.பெ.ஈறு.) + அன் (ஆ.பா.ஈறு.) கண்ணுளன் = புதிதாக ஒன்றைப் படைக்கும் அல்லது திறம்படச் செய்யும் தொழில் திறமையுள்ளவன். கூர்ந்து செய்யும் நுட்பத்தொழிலன்.]

கண்ணுளன்[2] *kaṇṇuḷaṉ,* பெ(n.) கம்மியன், கண்ணுள் வினைஞன்; smith.

[கண் → கண்ணுள், கண்ணுதல் = செய்தல். கண்ணுள் + அன் – கண்ணுளன்.]

கண்ணுளாளன் *kaṇṇuḷ-āḷaṉ,* பெ.(n.) 1. கூத்தன்; actor, dancer, masquerader.

[கண்ணுள் + ஆளன். கண்ணுளாளன் = கூர்ந்து செய்யும் நுட்பத் தொழிலன்.]

கண்ணுளைவு *kaṉ-ṉ-uḷaivu,* பெ.(n.) கண்ணழற்சி; inflammation of the eye.

[கண் + உளைவு.]

கண்ணுறக்கம் *kaṉ-ṉ-uṟakkam,* பெ.(n.) துயில் (சூடா.12:10); dozing, slumber, sleep.

[கண் + உறக்கம்.]

கண்ணுறங்கு–தல் *kaṉ-ṉ-uṟaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) கண்மூடித் தூங்குதல்; go to sleep.

[கண் + உறங்கு.]

கண்ணுறு–த்தல் *kaṇṇuṟu-,* 4 செ.கு.வி.(v.i.) கண்ணுருட்டல்; to roll the eyes.

[கண் + உறு–.]

கண்ணுறு–தல் *kaṉ-ṉ-uṟu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. பார்த்தல்; to see, view, look at. *"கற்கனியக் கனி கின்ற துயரானைக் கண்ணுற்றான்" (கம்பரா.குகப்.29).* 2. எதிர்ப்படுதல்; to meet, to come upon by chance. *"கொய்ம்மலர்த் தாரினானைக் கண்ணுறு" (சீவக. 1214).* 3. கிட்டுதல்; to approach, reach. *"வெட்சி யாரைக் கண்ணுற்று" (பு.வெ.2:4,கொளு).*

[கண் + உறு.]

கண்ணுறு[2]**–தல்** *kaṉ-ṉ-uṟu-,* 4 செ.கு.வி.(v.i.) இயலு தல்; to be possible. *"ஒரு கருத்தனின்றி யவை கண்ணுறா" (பிரபோத.39:221).*

[கண் + உறு–.]

பெயருடன் துணைவினை இணைந்து கூட்டுவினை உருவாகியுள்ளது.

கண்ணுறுத்து–தல் *kaṉ-ṉ-uṟuttu-,* 10 செ.கு.வி.(v.i.) 1. கண்ணோதல்; to smart, as the eyes. 2. பொறாமை உண்டாதல்; to be envious.

மறுவ. கண்ணையுறுத்துதல்

[கண் + உறுத்து–.]

நோயாலும், தூசு முதலியன கண்ணில் படுவதாலும் ஏற்படும் உறுத்தல் வேறு; பொருளின் கவர்ச்சியாலுண் டான பொறாமையால் ஏற்படும் உறுத்தல் வேறு.

கண்ணுறை[1] *kaṉ-ṉ-uṟai,* பெ.(n.) மேலிடுவது, மேலீடு; that which is placed over.

[கண் + உறை. கண் = இடம். உறை = ஓரிடத்திற் பொருந்தியது, இட்டது, இடுவது.

ஒ.நோ. கையுறை (காணிக்கை), வாயுறை (உணவு, மருந்து), செவியுறை (காதுமருந்து, அறிவுரை) (வேர்.கட்.41).]

கண்ணுறை[2] *kaṉ-ṉ-uṟai,* பெ.(n.) 1. கறி; curry; relish. *"வெண்சோற்றுக் கண்ணுறை யாக" (புறநா.61:5).* 2. உகிலை (மசாலை); curry-stuff. *"அடகின் கண்ணுறை யாக" (புறநா.140:4).*

[கண் + உறை. கண் = இடம். உறை = இடத்தக்கது.]

கண்ணுறை[3] *kaṉ-ṉ-uṟai,* பெ.(n.) 1. கண்ணாற் கண்டஞ்சும் அச்சம்; fear at the mere sight of a thing; fright. *"மத்திகைக் கண்ணுறை யாக" (கலித்.96:12).* 2. கண்ணோய் தீர்க்கும் மருந்து; a medicine effective in treating eye disease (சா.அக.).

ம. கண்ணுருட்டு

[கண் + உறை. உறை = 1. உறுத்தல், துயர். 2. இடத்தக்க மருந்து.]

கண்ணூடு *kaṉ-ṉ-ūḍu,* பெ.(n.) கூர்ந்து நோக்குதல்; attention. *"மட்டை முதலான சாமான்களைக் கண்ணூடாய்ப் பார்த்திருந்து" (மதி.க.11.189).*

க. கண்ணூறு

[கண் + ஊடு.]

கண்ணூமை *kaṉ-ṉ-ūmai,* பெ.(n.) கண்ணில் யாதொரு குற்றமும் காணப்படாமலே ஏற்படும் குருட்டுத் தன்மை; the loss of vision or blindness without apparent lesion of the eye (சா.அக.).

[கண் + ஊமை.]

கண்ணூர்–தல் *kaṇṇūr-,* செ.கு.வி.(v.i.) ***கண்ணிடுதல்*** பார்க்க; see *kaṇṇiḍu-* (கருநா.)

க. கண்ணூறு.

[கண் + ஊர்.]

கண்ணூல் *kaṇṇūl,* பெ.(n.) 1. கண்நோய்களைப் பற்றிக் கூறும் நூல்; the science which treats of diseases of the eyes. 2. அகத்தியர் செய்த கண் நெறி (நயனவிதி.); an ophthalmic science compiled by Agastya siddha (சா.அக.).

[கண் + நூல்.]

கண்ணூறு[1] *kaṉ-ṉ-ūṟu,* பெ.(n.) கண்நோய்; sore eyes, opthalmia.

க. கண்ணூறு, கண்ணேறு

[கண் + ஊறு.]

கண்ணூறு[2] *kaṉ-ṉ-ūṟu,* பெ.(n.) தீய பார்வையால் கேடுநேர்தல்; evil eye, blight of the eyes causing sickness or misfortune. *"அந்திநின்று கண்ணூறழித்தா ளணிநீ றளித்தே" (தணிகைப்பு. களவு.329).*

ம., க. கண்ணேறு

[கண் + ஊறு. ஊறு = தீங்கு.]

கண்ணூறுகழி–த்தல் *kaṇṇūṟukaḻi-,* 4 செ.குன்றாவி. (v.t.) கண்ணூறு கழியச் செய்யப்படும் சடங்கு; to perform certain rituals toward of evil eye. இவனுக்குக் கண்ணூறு கழித்தால் நோய் தீரக்கூடும் (உ.வ.).

மறுவ. கண்ணேறு கழித்தல்

[கண்ணூறு + கழி–.]

கண்ணெச்சில் *kaṉ-ṉ-eccil,* பெ.(n.) ***கண்ணூறு*** பார்க்க; see *kaṉ-ṉ-ūṟu கண்ணெச்சிற் படாமைக்குக் கரிபூசுகிறார் (ஈடு,5:1,2.).*

க. கண்ணெஞ்சல், கண்ணெஞ்சலு.

[கண் + எச்சில்.]

கண்ணெடுத்துப்பார்–த்தல் *kaṉ-ṉ-eḍuttu-p-pār-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கவனித்துப் பார்த்தல்; to lift up one's eyes and see; to look intently at a thing. 2. அருள்செய்தல்; to look with favour, as a superior.

க. கண்ணெத்து.

[கண் + எடுத்து + பார்.]

கண்ணெடுப்பு *kaṉ-ṉ-eḍuppu,* பெ.(n.) கடைக் கண்ணில் உண்டாகும் வீக்கம். (*சீவரட்.269.*); swelling at the corner of the eye.

க. கண்ணொத்து

[கண் + எடுப்பு.]

கண்ணெரி[1]**–த்தல்** *kaṉ-ṉ-eri,* 4 செ.கு.வி.(v.i.) (நோயினால்) கண்குவளையை நெரிப்பது போல உணருதல்; to affect (disease) the socket of the eye, attended with pain.

[கண் + நெரி.]

கண்ணெரி[2]**–த்தல்** *kaṇṇeri,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கண்ணெரியச் செய்தல்; to cause or induce burn-

ing sensation in the eyes. 2. கண்ணில் வளரும் கெட்ட தசையைக் காரப்பொருள் கொண்டு கரைத்தல்; to remove the morbid tissue in the eye by applying corossive medicine.

[கண் + எரி.]

கண்ணெரி[3]–தல் *kaṇ-ṇ-eri-,* 2 செ.கு.வி.(v.i.) கண்ணில் எரிச்சல் உண்டாதல் ; to have burning sensation in the eyes (சா.அக.).

க. கண்ணுரி; **து.** கண்ணுஅர்லுநி.

[க்ண் + எரி.]

கண்ணெரிச்சல் *kaṇ-ṇ-ericcal,* பெ.(n.) கண்ணில் உண்டாகும் கரித்தல் உணர்வு; burning sensation of the eye. தூக்கமின்மையால் கண்ணெரிச்சலாக இருக்கிறது (உ.வ.).

[கண் + எரிச்சல்.]

கண்ணெழுத்தாளன் *kaṇ-ṇ-erluttāḷan,* பெ.(n.) வேந்தனது திருமுகங்களை வரைவோன் (சிலப்.26,170.); writer of letters for the king.

*[கண் + எழுத்தாளன். கண் = துளை, பள்ளம் கீறல். **கண்ணெழுத்து** பார்க்க; see kaṇ-ṇ-eḷuttu.]*

கண்ணெழுத்தாளர் *kaṇ-ṇ-eḷuttāḷar,* பெ(n.) 1. உருவங்களை அல்லது எழுத்துகளை எழுதும் பரப்பில் கீறியும் செதுக்கியும் பொறிக்கும் எழுத்துப் பணியாளர்; the scribe who uses to write by engraving. 2. திருமந்திர ஓலை எழுதுவோர்; writer of letters for king. *"கண்ணெழுத்தாளர் காவல் வேந்தன்" (சிலப்.26:170).*

[கண்ணெழுத்து + ஆளர்.]

கண்ணெழுத்து *kaṇ-ṇ-eḷuttu,* பெ.(n.) 1. எழுதும் பரப்பில் பள்ளம் விழுமாறு கீறியோ செதுக்கியோ எழுதும் பழங்கால எழுத்துமுறை; method of writing on palm leaf or on any hard surface by making scratches or deepening with chisel. *"கண்ணெழுத் துப் படுத்தன கைபுனை சகடமும் " (சிலப். 26:136).*

[கண் = துளை, பள்ளம். கண் + எழுத்து.]

தாள், துணி போன்றவற்றில் மையால் எழுதிய எழுத்து கோலெழுத்து, ஓலைச்சுவடியில் எழுதிய எழுத்து கண்ணெழுத்து, எனப்பட்டது.

கண்ணெழுது–தல் *kaṇ-ṇ-eḷudu-,* 5 செ.கு.வி.(v.i.) கண்ணுக்குமை எழுதுதல்; to anoint the eye with collyrium.

[கண் + எழுது.]

கண்ணெறி[1] *kaṇ-ṇ-eṟi,* பெ.(n.) 1. ***கண்ணூறு*** பார்க்க; see *kaṇ-ṇ-ūṟu. "கல்லெறிக்குத் தப்பினாலும் கண்ணெறிக்குத் தப்பமுடியாது" (பழ).* 2.தோற் கருவிகளை இசைக்கை; skilful playing on the drum. *"தண்ணுமைக் கருவிக் கண்ணெறி தெரிவோர்." (மணிமே.19:82).* 3.கண்ணில் வெள்விழியில் தோன்றும் புண்; corneal ulcer.

[கண் + எறி. எறி = தாக்கு, நோய், புண்.]

கண்ணெறி[2]–தல் *kaṇ-ṇ-eṟi-,* 2 செ.கு.வி.(v.i.) கடைக் கண்ணாற் பார்த்தல்; to glance out of the corner of the eye. 2. விரும்புதல்; to like.

ம. கண்ணிடுக; **பட.,க.** கண்ணிடு; **தெ.** கன்னுந்த்ன்சு.

[கண் + எறி.]

கண்ணே *kaṇṇē,* பெ.(n.) அன்பின் விளிச்சொல்; a word of endearment.

து. கண்ணோசி, கண்ணுமெ.

[கண் + ஏ – கண்ணே. ஏ–விளியிடைச்சொல்.]

கண்ணேணி *kaṇ-ṇ-ēṇi,* பெ.(n.) கணுக்களிலே அடிவைத்து ஏறிச்செல்லும்படி யமைத்துள்ள மூங்கில் ஏணி (புறநா.105.உரை.); a single bamboo pole used as a ladder.

[கண் + ஏணி. கண் = மூங்கிற்கணு.]

கண்ணேறு[1] *kaṇ-ṇ-ēṟu,* பெ.(n.) ***கண்ணூறு*** பார்க்க; see *kaṇ-ṇ-ūṟu "கண்ணேறெலா மின்றறத் துடைப்பாம்" (அரிசமய.பதுமை.140).*

[கண்ணூறு → கண்ணேறு (கொ.வ.).]

கண்ணேறு[2] *kaṉ-ṉ-ēṟu,* பெ.(n.) 1. கண்ணூறு படத்தக்க அழகு; beauty that evokes the evil eye. *"வெண்ணி றெழுதிய கண்ணேறும்" (சேக்கிழார்பு. 92).* 2. பக்கப்பார்வை; a side-glance, a glance (சேரநா.).

ம. கண்ணேறு

[கண் + ஏறு. ஏறு - தாக்கம், அம்புபட்டாற் போன்ற தீங்கு. அத் தீங்கு உண்டாக்கத்தக்க அழகு.]

கண்ணை *kaṉṉai,* பெ.(n.) 1. கட்டி, திரட்சி; hard substance. 2. தேனடை; honey comb.

[கள் → கண் → கண்ணை (திரட்சி).]

கண்ணைக்கசக்கு[1]**-தல்** *kaṉṉai-k-kaśakku-,* 5 செ.குன்றாவி.(v.t.) கண்ணைத் தேய்த்தல்; to rub the eyes. தூசு விழுந்ததும் கண்ணைக் கசக்கி விடாதே (உ.வ.).

[கண் + ஐ + கசக்கு.]

கண்ணைக்கசக்கு[2]**-தல்** *kaṉṉai-k-kaśakku-,* செ.கு.வி.(v.i.) வருத்தப்படுதல்; to be sorrowful. சின்ன செய்திக்குக்கூடக் கண்ணைக் கசக்குகிறான் (உ.வ.).

மறுவ. கண்ணம் பிசைதல்

[கண் + ஐ + கசக்கு.]

கண்ணைக்கசக்கு[3]**-தல்** *kaṉṉai-k-kaśakku,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. தேனடையைப் பிழிதல்; to squeeze the honey-comb. 2. கட்டியை நசுக்குதல்; to crush the boils.

[கண்ணை + கசக்கு.]

கண்ணைக்கவர்-தல் *kaṉṉai-k-kavar-,* 2 செ.குன்றாவி. (v.t.) ***கண்கவர்தல்*** பார்க்க; see *kaṉ-kavar-,* உதகை மலர்க்காட்சி கண்ணைக்கவரும் பேரழகு (உ.வ.).

[கண் + ஐ + கவர்.]

கண்ணைக்காட்டு-தல் *kaṉṉai-k-kāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***கண்காட்டு-தல்*** பார்க்க; see *kaṉ-kāṭṭu-.* *"கண்ணைக் காட்டி அழைத்தால் வாராதவள், கையைப் பிடித்து அழைத்தால் வருவாளா?" (பழ.).*

[கண்ணை + காட்டு-.]

கண்ணைப்பறி-த்தல் *kaṉṉai-p-paṟi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கண்பார்வையைக் கவர்தல்; to attract the eyes, as a beautiful thing etc. குழந்தையின் அழகு கண்ணைப்பறிக்கிறது (உ.வ.). 2. கண்களைக் கூசச் செய்தல்; dazzle the eyes, blind. வெளிச்சம் கண்ணைப் பறிக்குது (உ.வ.).

[கண் + ஐ + பறி.]

கண்ணைமூடு-தல் *kaṉṉai-mūḍu-,* 5 செ.குன்றாவி. (v.i.) ***கண்மூடு-தல்*** பார்க்க; see *kaṉ-mūḍu-.*

[கண் + ஐ + மூடு.]

கண்ணொட்டு-தல் *kaṉ-ṉ-oṭṭu-,* 5 செ.கு.வி.(v.t.) கண் தூக்கநிலையடைதல்; to be heavy with sleep, எனக்குக் கண்ணொட்டிக்கொண்டு வருகிறது (வின்.).

[கண் + ஒட்டு.]

கண்ணொடி[1] *kaṉṉoḍi,* பெ.(n.) இமைப்பொழுது; the time of winking.கண்ணொடிப் பொழுதும் கடமை மறவேன் (உ.வ.).

[கண் + நொடி.]

கண்ணொடி[2]**-த்தல்** *kaṉṉoḍi-,* செ.கு.வி.(v.i.) கண்ணால் பேசுதல்; to express certain feelings through winking.

[கண் + நொடி-.]

கண்ணொடு *kaṉ-ṉ-oḍu,* பெ.(n.) கண்நோய்வகை. (பரராச.1,208.); an eye-disease.

[கண் + ஒடு (ஒடுங்கு.)]

கண்ணொடையாட்டி *kaṉṉoḍai-y-āṭṭi-,* பெ.(n.) கள்விற்பவள்; toddy seller (female) *"காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்" (சிலப்.5:24.).*

[கள் + நொடை + ஆட்டி.]

நொடை = கடன், தவணை அடிப்படையில் செலுத்தத்தக்க கடன். விலைப்பணத்தை உறுதியாகத் திருப்பித்தருவான் என்னும் நம்பிக்கையால் கடனாக விற்பது நொடுத்தல், நொடை எனப்படும்.

கண்ணொத்து[1] *kaṉ-ottu,* பெ.(n.) 1. பேரெழில்; appearing to be beautiful, agreeable. 2. கண்ணைப் பறிக்கும் தன்மையது; appealing to the eye.

து. கண்பத்து

[கண் + (ஒற்று) – ஒத்து → கண்ணொற்று – கண்ணொத்து : கண்ணில் ஒற்றிக் கொள்ளும்படியான அழகு.]

கண்ணொத்து[2] *kaṉṉottu,* பெ.(n.) கண்நோய்; swelling at the corner of the eye (கருநா.) ***கண்தொற்று*** பார்க்க; see *kaṉ-toṟṟu.*

க. கண்ணொத்து

[கண் + தொற்று – கண்தொற்று → கண்ணொற்று → கண்ணொத்து (கொ.வ.). கண்ணோய் அருகிலிருந்து காண்பவனுக்கும் தொற்றிக்கொள்ளும் என்னும் கருத்தில் தோன்றிய சொல்.]

கண்ணொளி *kaṉ-ṉ-oḷi,* பெ.(n.) பார்வை; lustre of the eyes. கண்ணொளி மழுங்கியது (உ.வ.).

க. கண்பௌகு, கம்பௌகு.

[கண் + ஒளி.]

கண்ணோக்கம் *kaṉṉōkkam,* பெ.(n.) பார்வை; sight (சா.அக.)

[கண் + நோக்கம்.]

கண்ணோக்காடு *kaṉṉōkkāḍu,* பெ.(n.) 1. ***கண்ணோய்*** பார்க்க; see *kaṉṉōy,* pain in the eye. 2. கண் ஊதை (கண்வாதம்); neuralgic pain in the eye. (சா.அக.)

[கண் + நோக்காடு. நோ → நோக்காடு, ஒ.நோ.சா → சாக்காடு, வே → வேக்காடு.]

கண்ணோக்கு[1]–தல் *kaṉṉōkku-,* 5 செ.கு.வி.(v.t.) 1. பார்த்தல்; to look at, see. 2. அருளோடு பார்த்தல்; to look with grace.

[கண் + நோக்கு.]

கண்ணோக்கு[2] *kaṉṉōkku,* பெ.(n.) முதன் முறையாக இழவு வீட்டிற்குச் செல்லல்; the first visit to a moaning house (சேரநா.).

ம. கண்ணோக்கு.

[கண் + நோக்கு.]

கண்ணோக்கு[3] *kaṉṉōkku,* பெ.(n.) 1. பார்வை; gaze, glance, look. 2. அருட்பார்வை; favour, grace. *"கண்ணோக் கரும்பா" (நீதிநெறி.37).*

ம. கண்ணோக்கம்.

[கண் + நோக்கு.]

கண்ணோட்டம் *kaṉ-ṉōṭṭam,* பெ.(n.) 1. கண் பார்வை; vision, look (கலைசைச்.97). 2. கனிவுள்ளம்; regard, blindness, glow of kind feeling towards a friend etc. *"கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை" (குறள்,571).* 3. தன்னோடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்க மாட்டாமை (குறள், பரி.அதி.முன்.); not denying due to intimacy. 4. பார்வையிடுகை; discerning by the eye, close examination, careful scruting. இவர் கண்ணோட்டத்திலேயே அளவிடும் வல்லமை உடையவர் (உ.வ.). 5. கடைக்கண் பார்வை; a skant look; looking obliquely towards one corner of the eye, graceful look. முதலாளியின் கடைக்கண் பார்வை கிடைக்குமாறு நடந்துகொள் (உ.வ.). 6. சுழிமுனை நோக்கு (ஒகநெறி); in yoga philosophy, looking at the space between the eye-brow, concentration (சா.அக.).

[கண் + நோட்டம்.]

கண்ணோடு[1]-தல் *kaṇṇōḍu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. விரும்பிய பொருளின்மேற் பார்வைசெல்லுதல்; to run out as the eyes on a desired object. அவனுக்கு அங்கே கண்ணோடுகிறது (உ.வ.). 2. இரங்குதல்; to be kind; benignant, gracious, indulgent, sympathetic, tender. "கூற்றுக்கண் ணோடிய வெருவரு பறந்தலை" (புறநா.19). 3. கனிவுடன் இருத்தல்; to be loving, compassion. "கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்கு" (குறள்,578).

[கண் + ஒடு.]

கண்ணோடு[2]-தல் *kaṇṇōḍu-*, 5 செ.குன்றாவி.(v.t.) மேற்பார்வையிடுதல்; to supervise. 'உடையவன் கண்ணோடாப் பயிர் உடனே அழியும்' (பழ.).

[கண் + ஒடு. கண் = பார்வை. ஒடு = செலுத்து.]

கண்ணோடை *kaṇṇōḍai*, பெ(n.) கண்ணீர்த் தாரை; lacrimal duct.

[கண் + ஒடு → ஒடை. கண்ணோடு கண்ணீர்வழிதலைக் குறித்தது.]

கண்ணோய் *kaṇṇōy*, பெ(n.) கண்ணுக்கு உண்டாகும் பிணி; eye-disease.

[கண் + நோய். நோய் - அகக்கரணியத்தாலும் புறக்கரணியத்தாலும் உடலுக்குண்டாகும் வருத்தம்.]

கண்ணோய்க்காரம் *kaṇṇōy-k-kāram*, பெ.(n.) கண்நோய்க்கான மருந்து (இ.வ.); stimulant applications in affections of the eye.

[கண் + நோய் + காரம்.]

கண்ணோரம் *kaṇṇōram* பெ.(n) கண்ணின் ஓரம்; the edge of the eye.

மறுவ: கடைக்கண், விழியோரம்.

க. கண்ணோரெ, கண்கொனெ.

[கண் + ஓரம்.]

கண்ணோவு *kaṇṇōvu*, பெ.(n) கண்ணுக்குண்டாகும் வலி; sore eyes, ophthalmia, conjunctis.

ம. கண்நோவு; க. கண்ணுநோவு; து. கண்ணுபேநெ; பட. கண்ணுநோ.

[கண் + நோவு. நோ → நோவு. நோ = வலி.]

கண்ணோவுப்பூண்டு *kaṇṇōvu-p-pūṇḍu*, பெ.(n.) செங்காந்தள்; red species of the glory - lilly.

[கண்ணோவு + பூண்டு.]

கண்தசை *kaṇ-tašai*, பெ.(n.) கண்ணில் வளரும் தசை; unwanted growth of tissue in eye.

[கண் + தசை.]

கண்தப்பு-தல் *kaṇtappu-*, 5 செ.கு.வி.(v.i.) பார்வைக்குத் தப்புதல்; to escape from eye sight.

து. கண்தப்புனி; ம. கண்ணதப்பு.

[கண் + தப்பு.]

கண்திட்டம் *kaṇ-tiṭṭam*, பெ.(n.) பார்வையால் செய்யும் மதிப்பீடு; estimation by sight. இவர் கண் திட்டமாய்க் கணக்கிடுவதில் வல்லவர் (உ.வ.).

[கண் + திட்டம்.]

கண்திட்டி *kaṇ-tiṭṭi*, பெ.(n.) **கண்ணூறு** பார்க்க; see *kaṇ-ṇūṟu*.

து. கண்ணதிட்டி; Skt. dristi; த. திட்டி.

[கண் + திட்டி.]

கண்திரை[1] *kaṇ-tirai*, பெ.(n.) கண்ணோய்க்காலத்தில் வெளிச்சம் தூசு முதலியன படாதபடி கண்ணுக்கிடும் திரை; screen for the eyes to protect them from light and dust.

[கண் + திரை.]

கண்திரை[2] *kaṇ-tirai*, பெ.(n.) 1. அகவை முதிர்ச்சியால் கண்களிலேற்படும் சுருக்கம்; contraction of the eyes due to old age.

[கண் + திரை. திரை = அலை. அலை போன்றிருக்கும் சுருக்கம்.]

கண்தி(டி)ற[1]-த்தல் *kaṇ-tiṟa-*, 3 செ.குன்றாவி.(v.t.) 1. சிலை முதலியவற்றிற்குக் கண்விழி வரைதல் அல்லது செதுக்குதல்; to chisel or paint the eyes of an idol or a picture. 2. குடிப்பதற்கேற்ப இளநீரின்

கண்ணைத் திறத்தல்; to cut open eyes; sip off the tender coconut.

[கண் + திற.]

கண்தி(டி)ற²-த்தல் *kaṇ-tiṟa-*, 3 செ.கு.வி.(v.i.) 1. பிறந்த குட்டிகள் விழியைத் திறத்தல்; to open eyes, as a kitten. 2. அறிவு உண்டாக்குதல்; to illumine the mind, to impart instruction,as opening the eyes of a disciple's mind. பொதுநலத் தொண்டரின் வருகையால் இவ் வூரார்க்குக் கண் திறந்தது (உ.வ.). 3. கல்வி கற்பித்தல்; to educate, instruct. *இவர்தாம் எனக்குக் கல்விக்கண் திறந்த* ஆசான் (உ.வ.). 4. இரக்கம் காட்டுதல்; to show mercy. இந்த ஏழையைக் கண்திறந்து பார்க்க மாட்டீரோ (உ.வ.). 5. வானம் வெளியாதல்; to clear, as sky free from clouds and with the sun shining. இன்றைக்காவது வானம் கண்திறக்குமா? (உ.வ). 6. அருள் செய்தல்; to be gracious. தெய்வம் கண் திறக்க வேண்டும் (உ.வ.) 7. அறிவு உண்டாதல்; to be enlightened in mind. அவரது நட்புக்குப் பிறகுதான் எனக்குக் கண்திறந்தது (உ.வ).

ம. கண்துறக்குக; பட. கண்தரே; து. கண்ணபுளாபுநி

[கண் + திற.]

கண்தினவு *kaṇtiṉavu*, பெ.(n.) கண் சிவந்து அரிப்பும் உறுத்தலும் உண்டாகி நீர்வடிந்து எரிச்சல் தூக்கமின்மை முதலிய தன்மைகளைக் காட்டும் கண்ணோய்; a disease of the eye characterised by inflammation itching irritation, liquid discharge burning sensation, sleeplessness etc (சா.அக).

[கண் + தினவு.]

கண்துஞ்சு-தல் *kaṇ-tuñju*, செ.கு.வி.(v.i.) 1. தூங்குதல். 2. விழிப்புணர்வு இல்லாமல் இருத்தல்; to be not alert or vigilant. செயல் முடியும் வரை கண்துஞ்சார் (உ.வ.).

[கண் + துஞ்சு.]

கண்துடி-த்தல் *kaṇ-tuḍi-*, 4 செ.கு.வி.(v.i.) இமை படபடத்தல்; to throb as the eye,confront with an omen.

து. கண்ணுஅதுருதி

[கண் + துடி.]

பெண்களுக்கு இடக்கண் துடிப்பதும் ஆண்களுக்கு வலக்கண் துடிப்பதும் நன்னிமித்தம் (சகுனம்). பிறழ்ந்து துடிப்பது தீநிமித்தம் எனக் கருதப்படுகிறது

கண்துடைப்பு *kaṇ-tuḍaippu*, பெ.(n.) 1. செயலைச் செய்யாமல் செய்ததாகக் காட்டும் பேச்சு; eye wash; mere pretentious concealment. 2. போலியான ஆதரவு; false support.

[கண் + துடைப்பு.]

கண்துயில்-தல் *kaṇ-tuyil*, 13 செ.கு.வி.(v.i.) **கண்டுயி(லு)-தல்** பார்க்க; see *kaṇḍuyilu-*.

[கண் + துயில்.]

கண்துயிலிடம் *kaṇ-tuyiliḍam*, பெ.(n.) கண்டுயிலிடம் பார்க்க; see *kaṇṭuyiliḍam*.

[கண் + துயில் + இடம்.]

கண்தெறி-த்தல் *kaṇ-teṟi-*, 4 செ.கு.வி.(v.i.) 1. மிகு வெளிச்சத்தாற் கண்ணொளி மழுங்குதல்; to be dazed, as the eyes by very strong light. *மின்னலடித்தது கண்தெறித்தது* (உ.வ.). 2. பேரழகைக் காண விழிகொள்ளல்; to get eye full as of seeing great beauty. கண்தெறிக்கும் பேரழகைக் கண்டேன் (உ.வ.).

[கண் + தெறி.]

கண்நடு-தல் *kaṇ-naḍu-*, 20 செ.கு.வி.(v.i.) 1. விழியசையாமல் ஓரிடத்தில் பார்வை நிற்றல்; eyes to become motionless, by looking intently. 2. சாக்குறி; a symptom of death. கண் நட்டு விட்டது, இனி பிழைப்பது அரிது (உ.வ.).

ம. கண்நடுக

[கண் + நடு.]

கண்நிலைகுத்து-தல் *kaṇ-nilai-kuttu-*, 5 செ.கு.வி.(v.i.) **கண்நடு-தல்** பார்க்க; see *kaṇ-naḍu-*

[கண் + நிலை + குத்துதல்.]

கண்நிறை-தல் *kaṇ-niṟai-*, 2 செ.கு.வி.(v.i.) 1. முழுமன நிறைவடைதல்; to satisfy totally. 2. கண்ணீர் நிரம்புதல்; to be filled with tears. கண்டவுடன் கலக்கமுற்றுக் கண்ணிறைந்து நாத்தழுதழுத்தது

(உ.வ.). 3. இரக்கவுணர்வு காட்டுதல்; to be full of pity. 4. விழியால் காணக்கூடிய அளவு முழுமையும் பார்த்தல்; to see as much an eye can take it.

ம. கண்நிறையுக; க. கண்தும்பு.

[கண் + நிறை.]

கண்நோவு *kaṇ-nōvu*, பெ.(n.) **கண்ணோவு** பார்க்க; see *kaṇṇōvu*.

[கண் + நோவு.]

கண்பகிர்-தல் *kaṇ-pagir-*, 2 செ.கு.வி.(v.i.) **கண்வெடிப்பு** பார்க்க; see *kaṇ-veḍippu*.

[கண் + பகிர்.]

கண்பச-த்தல் *kaṇ-paša-*, 3 செ.கு.வி.(v.i.) காதல் உணர்வால் கண்ணில் வெளிப்படும் பொலிவுக் குறைபாடு; to lose lustre, complexion, or colour due to love sickness. *"அரிமத ருண்கண் பசப்ப நோய்செய்யும்" (கலித்.82:20).*

[கண் + பசத்தல் = பசலை (பரத்தல்).]

பசலை காதல் உணர்வால் ஏற்படும் நோய்க்குறி. இந் நோயுற்றவள் உடல் மெலிவதும், மெய்ந்நிறம் மாறுவதும் கண்ணும் நுதலும் ஒளிகுன்றுதலும் உண்டென்பதனைக் "கண்ணும் தோளும் தண்நறும் கதுப்பும் பழநலம் இழந்து பசலை பாய" (நற்.210) என்னும் நற்றிணை இலக்கிய வரிகளில் காண்க.

கண்பட்டசட்டி *kaṇ-paṭṭa-caṭṭi*, பெ.(n.) ஒட்டைகள் அமைந்த சட்டி; a pot with holes in it (சா. அக.).

[கண் + (படு) → பட்ட + சட்டி. கண் = துளை.]

கண்பட்டை *kaṇ-paṭṭai*, பெ.(n.) 1. கண்புருவம்; eye lash. 2. குதிரைக்கண்ணுக்குக் கட்டும் பட்டை; an eye flap as of a horse.

ம. கண்பட்ட; க. கண்பட்டெ.

[கண் + பட்டை.]

கண்படு[1]-த்தல் *kaṇ-paḍu-*, 4 செ.குன்றாவி.(v.t.) பதிக்கப்பட்டிருத்தல்; to be set, as gems in jewels. *"காசுகண் படுக்கு மாடம்" (நைடத.சுயம்வர.157).*

[கண் + படு.]

கண்படு[2]-தல் *kaṇ-paḍu-*. 20 செ.கு.வி.(v.i.) 1. உறக்கம் கொள்ளுதல்; to sleep. *"அன்னங் கண்படு தண்பணை" (நைடத.நாட்டுப்.2).* 2. பரவுதல்; to spread over a surface. *"வயலும் புன்செய்யுங் கண்பட வேர்பூட்டி" (பு.வெ.12,வென்றிப்.4).* 3. கண்ணோடுதல்; to be in favour of, partial to. *"கண்பட் டாழ்ந்து நெகிழ்ந்து" (சிறுபஞ்.78).* 4. கண்ணூறுபடுதல்; to be affected by the evil eye. என்பிள்ளைக்கு யார் கண்பட்டதோ? (உ.வ.).

க. கண்படு

[கண் + படு. படு = தொடல், ஏற்படுதல், சாய்தல், தூங்குதல்.]

கண்படை[1] *kaṇ-paḍai*, பெ.(n.) 1. உறக்கம்; sleep. *"மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது" (முல்லைப்.67).* 2. மாந்தர் துயிலிடம் (சூடா.); bed, bedroom.

மறுவ. கண்பாடு, உறக்கம், தூக்கம், தூக்காடு, துயில், கண்வளர்தல், கண்பொலி.

[கண் + படை. படு → படை (தொ.பெ.).]

கண்படை[2]-த்தல் *kaṇ-paḍai-*, 4 செ.குன்றாவி.(v.t.) பார்வையடைதல்; to have sight (கருநா).

க. கண்படெ

[கண் + படை.]

கண்படைநிலை *kaṇ-paḍai-nilai*, பெ.(n.) 1. உறக்கம்; sleep. *"வேந்தன் கண்படைநிலை மலிந்தன்று" (பு.வெ.8.29.கொளு).* 2. மன்னனைத் துயில்கொள்ள வேண்டும் புறத்துறைகளுளொன்று; (Purap.) theme of the court physicians, ministers and other attendants of a king sitting in audience humbly suggesting to his majesty that it is time for him to go to bed. 3. சிற்றிலக்கிய வகைகளிலொன்று; name of the poem containing *kaṇpaḍainilai* theme.

[கண் + படை + நிலை. படு → படை = படுதல், உறங்குதல். கண் உறக்கம் வரும்நிலை எனப் பொருள்படும். மன்னர் இனிது உறங்குதற்கு அதற்குரியதாகத் தெரிந்தெடுக்கப்பட்ட பண்ணும் அப் பண் சுமந்த பாடலும் இப் பெயர்பெற்றுள்ளன.]

ஒ.நோ. துயிலெடைநிலை

அவையிலுள்ள மருத்துவர், அமைச்சர், பிற உதவியாளர்கள் போன்றோர், இரவில் நெடுநேரம்

அவையிலிருக்கும் அரசனைத் துயில் கொள்ளக் கருதிக் கூறும் புறத்துறை கண்படைநிலையாகும்.

கண்பரி-தல் *kaṇ-pari-*, 2 செ.கு.வி.(v.i.) மூட்டறுதல்; to break at the joints. *"கானிமிர்த்தாற் கண்பரிப வல்லியோ" (பெருந்தொ.516).*

[கண் + பரி. கண் = கணு, மூட்டு. பரிதல் = பிரிதல், அறுதல், முறிதல்.]

கண்பரிகாரம் *kaṇ-parigāram,* கண்மருத்துவம் (வின்.); medical treatment of the eyes; profession of an oculist.

[கண் + பரிகாரம்; பரிகரித்தல் பரிகாரமாயிற்று. பரிதல் = நீங்குதல். 'பரிகரித்தல்' நீங்கச் செய்தல் பரிகாரமாயிற்று.]

கண்பரிகாரி *kaṇ-parikāri,* பெ.(n.) கண்மருத்துவன் (வின்.); eye-doctor, oculist.

[கண் + பரிகாரி.]

கண்பரை *kaṇ-parai,* பெ.(n.) **கண்புரை** பார்க்க; see *kaṇ-purai.*

க. கண்பரெ

[கண் + பரை.]

கண்பறை-தல் *kaṇ-paṟai-*, 2 செ.கு.வி.(v.i.) கண்ணொளி குறைதல் (சம்.அக.Ms.); to have dimmed vision.

[கண் + பறை. பறு → பறை. பறுதலும் பறிதலும் குறைபடுதல் குறைதல் தாழ்தல் கண் எனப் பொருள் படுதலான் கண்பறை பார்வைக்குறைவைக் குறிக்கும் சொல்லாயிற்று.]

கண்பனி[1]-த்தல் *kaṇ-paṉi-*, 4 செ.கு.வி.(v.i) கண்ணீர் தளும்புதல்; to be tearful. *"நெஞ்சுருகிக் கண்பனிப்ப" (திவ்.திருநெடுந்.12).*

[கண் + பனி. பனித்தல் = நடுக்குதல். பனிதல் = நடுங்குதல், பிலிற்றல். தளும்புதல்.]

கண்பனி[2] *kaṇ-paṉi,* பெ.(n.) கண்ணீர்; tears (கருநா.).

க. கண்பனி; **து.** கம்பனி.

[கண் + பனி. பனிதல் = பிலிற்றல். பனி - வானிலிருந்து மேகங்கள் பிலிற்றும் நுண்திவலை (பனி) எனப்பட்டது. பல் → பன் = நெருங்கல், செறிதல், செறிந்து வீழ்தல்.]

கண்பாடு[1] *kaṇ-pāḍu,* பெ.(n.) உறக்கம்; sleep. *"நிரப்பினுள் யாதொன்றும் கண்பா டரிது" (குறள், 1049).*

மறுவ. கண்படை, துயில், உறக்கம், தூக்கம், தூக்காடு.

[கண் + பாடு. படு → பாடு (முதன்னிலை திரிந்த தொழிற்பெயர்).]

கண்பாடு[2] *kaṇ-pāḍu,* பெ.(n.) பார்வை; range of vision, eye-shot.

ம. கண்பாடு; **தெ.** கநுகலி.

[கண் + பாடு. காண் → கண். படு → பாடு.]

கண்பாய்ச்சல்[1] *kaṇ-pāyccal,* பெ.(n.) 1. பார்வை (வின்.); glance, look. 2. கண்ணூறு; evil eyes. *அவரது கண்பாய்ச்சலிலிருந்து தப்ப முடியவில்லை (உ.வ).*

க. கண்பச

[கண் + பாய்ச்சல். பாய் → பாய்ச்சல். பாய்ச்சல் = பரவுதல்.]

கண்பார்-த்தல் *kaṇ-pār-*, 4 செ.கு.வி.(v.i.) 1. மனநெகிழ்வுடன் பார்த்தல்; to look upon graciously, compassionately. *"கண்பார்க்க வேண்டுமென்று கையெடுத்துக் கும்பிட்டாள்" (பாஞ்சாலிசப.65-15).* 2. தேர்ந்து தெளிதல் (வின்.); to become clear after examination.

து. கண்ண்‌ பார்மல்புனி, கண்ண்பாடுனி.

[கண் + பார். கண்பார்த்தல் = இரங்குதல், மனம் வைத்தல், கனிவுகாட்டுதல், தெளிவுபெறல், தெரிவு செயல்.]

கண்பார்வை *kaṇ-pārvai,* பெ.(n.) 1. பார்க்கும் ஆற்றல்; eye sight. 2. மேற்பார்வை; supervision. 3. மதிப்பீடு; estimate from personal examination.

து. கண்ணசோரிகெ

[கண் + பார்வை.]

கண்பாவை *kaṇpāvai*, பெ.(n.) கருவிழி; pupil of the eye.

மறுவ. கண்பாப்பா; **தெ.** கநுபாப.

[கண் + பாவை.]

கண்பிசை-தல் *kaṇ-pišai-*, 2 செ.குன்றாவி.(v.t.) **கண்ணைக்கசக்குதல்** பார்க்க; see *kaṇṇai-k-kašakku-*. *"கண்பிசைந் தொருசே யின்னுங் கலுழினும்" (பிரபுலிங்.கைலாச.5).*

கண்பிடி *kaṇ-piḍi*, பெ.(n.) 1. ஒரு காம்பிற் பெருங்காயோடு கூடியுள்ள சிறுகாய்கள் (யாழ்ப்.); small jack fruit, small bunch of palmyra fruits, fruits attached to a larger fruit. 2. இளங்காய்; tender fruit (சா.அக.).

[கண் + பிடி. கண் = சிறியது, சிறிய காய்கள்.]

காய்கள் காம்புடன் பிடிப்புக் கொண்டிருத்தலால் கண்பிடி எனப்பட்டது.

கண்பிணி *kaṇpiṇi*, பெ.(n.) **கண்ணோய்** பார்க்க; see *kaṇṇōy*.

[கண் + பிணி.]

கண்பிதுங்குதல் *kaṇ-pitungu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. விழிக்கோளம் வெளிவருதல்; to protrude, bulge as of eyes. *ஒரே அடியில் கண்பிதுங்கிவிடும் (உ.வ.).* 2. வேலை மிகுதியால் துன்பம் மேலிடுதல்; to be fatigued due to heavy work. *இந்த வேலை கண் பிதுங்கச் செய்கிறது (உ.வ.).*

[கண் + பிதுங்குதல். பிதுங்குதல் = உள்ளீடு வெளிக்கிளம்புதல், அத்தகைய தாங்க முடியாத துன்பம்.]

கண்பீலி[1] *kaṇ-pīli*, பெ.(n.) 1. கால்விரலின் அணிவகை; a kind of ornament worn on toes (சேரநா.).

ம. கண்பீலி

[கண் + பீலி.]

கண்பீலி[2] *kaṇ-pīli*, பெ.(n.) **கண்மயிர்** பார்க்க; see *kaṇ-mayir*.

[கண் + பீலி.]

கண்பீளை *kaṇ-pīḷai*, பெ.(n.) உடற்சூட்டினால் கண்ணிலுண்டாகும் அழுக்கு; rheum, viscid discharge from the eye, the morbid secretions of the eye.

ம. கண்பீள; **க.** கண்புழுங்கு; **து.** கண்ணமாலு; **பட.** கண்கீடு.

[கண் + பீளை.]

கண்பீளைச்செடி *kaṇ-pīḷai-c-ceḍi*, பெ.(n.) பெரும்பூம்பாதிரி; long leaved trumpet plant (சா.அக.).

[கண் + பீளை + செடி.]

கண்பு *kaṇbu*, பெ.(n.) சம்பங்கோரை; elephant grass. *"செருந்தியொடு கண்பமன் றூர்தர" (மதுரைக்.172).*

[கண் → கண்பு.]

கண்புகை *kaṇ-pugai*, பெ.(n) காலிலுள்ள நுண்ணிய இடங்களுள் ஒன்று; a mortal spot in the sole (சேரநா.).

ம. கண்புக.

[கண் + புகை - கண்புகை. கண் = கணு. ஒருகா. முகை → புகை.]

கண்புகைச்சல் *kaṇ-pugaiccal*, பெ.(n.) 1. கண்ணோய் வகை; a disease of the eye. 2. கண்மங்கல் (வின்.); dimness of sight from age or disease.

[கண் + புகைச்சல்.]

கண்புணராமை *kaṇ-punarāmai*, பெ.(n.) ஏரணமுறை யளவைகளுளொன்று (Logic), அஃதாவது சிலவற்றைக் கண்டவற்றின் பெயரறியாதிருத்தல்; one of the syllogisms.

[கண் + புணராமை. புணராமை = பொருந்தாமை. கண்புணராமை கண்டும் அதன் பெயரறியாதிருத்தல்]

கண்புதை[1]**-த்தல்** *kaṇ-pudai-*, 4 செ.கு.வி.(v.i.) 1. **கண்பொத்து-தல்** பார்க்க; see *kaṇpottu-*. *"வைவேற் கண்புதைத்து" (திருக்கோ.43).*

[கண் + புதை.]

கண்புதை[2]**-தல்** *kaṇ-pudai-*, 2 செ.கு.வி.(v.i.) 1. அறிவு கெடுதல்; to weaken, as understanding. *"கண்புதைந்த மாந்தர்" (நல்வழி,28).* 2. மறைத்தல், மூடப்பட்டு மறைதல்; to lie covered and hidden.

"பாருருவும் பார்வளைத்த நீருருவுங் கண்புதையக் காருருவன் நிமிர்ந்த கால்" (திவ்.இயற்.பெரிய திருவ.21).

[கண் + புதை.]

கண்புதை[3]**-தல்** *kaṇ-pudai-*, 2 செ.கு.வி.(v.i.) கண் உள்ளுக்கு ஆழ்தல், the sinking of the eye. நாட்பட்ட நோயினால் கண்புதைந்து கிடக்கிறார் (உ.வ.).

[கண் + புதை.]

கண்புதையல் *kaṇ-pudaiyal*, பெ.(n.) **கண்ணாம் பொத்தி** பார்க்க; see *kaṇṇāmpotti*. "**கண்புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே**" (தேசிகப்.2:46).

[கண் + புதையல். புதையல் = புதைத்தல், விழி மூடுதல்]

கண்புரை *kaṇ-purai*, பெ.(n.) கண்ணில் வளரும் படலம் (இ.வ.); cataract.

க. கண்பரெ, கண்பொரெல்; து. கண்ணபரெ.

[கண் + புரை.]

கண்புழு *kaṇpuḻu*, பெ.(n.) கண்ணிமையில் தோன்றும் நுண்புழுவகை; a kind of micro worm on the edges of the eye lid.

[கண் + புழு.]

கண்புழுவெட்டு *kaṇ-puḻuveṭṭu*, பெ.(n.) இமையில் நுண்புழுக்களால் உண்டாகும் அழற்சி; inflammation on the edges of the eye lid due to the micro worm.

[கண் + புழு + வெட்டு.]

கண்புள்ளி *kaṇ-pulli*, பெ.(n) **கண்பூ** பார்க்க; see *kaṇ-pū*.

[கண் + புள்ளி.]

கண்புளிச்சை *kaṇ-puḷiccai*, பெ.(n) **கண்பீளை** பார்க்க; see *kaṇ-pīḷai*.

[கண் + புளிச்சை.]

கண்புனல் *kaṇ-puṉal*, பெ.(n) கண்ணீர்; tears (சேரநா.).

ம. கண்புனல்; க. கண்பனிவழெ.

[கண் + புனல்.]

கண்பூ[1]**-த்தல்** *kaṇpū-*, 4 செ.கு.வி.(v.i.) வறுமையால் கண் ஒளி குன்றுதல்; dimness of eyes due to penury. பட்டினியால் கண் பூத்தது (உ.வ.).

து. கண்ணு

[கண் + பூத்தல். பூத்தல் = பஞ்சடைதல். கண்பூத்தல் = கண்ணகல விரித்து நோக்குதலால் உண்டாகும் சோர்வு]

கண்பூ[2] *kaṇ-pū*, பெ.(n.) கருவிழியில் ஏற்படும் வெண்புள்ளி நோய்; opacity of the cornea, eye-spot.

ம., க., து. கண்பூ.

[கண் + பூ. பூ-பூப்போன்ற வெண்படலம் படர்ந்து ஒளிமங்குதல்]

கண்பூர்-தல் *kaṇ-pūr-*, 2 செ.கு.வி.(v.i.) கண்நிறைவு கொள்ளுதல் (யாழ்.அக.); to be satiated with seeing.

[கண் + பூர்.]

கண்பூளை *kaṇ-pūḷai*, பெ.(n.) சிறுபூளைப்பூடு weed (M.M.)

மறுவ. கண்ணுபூளை (கொ.வ.)

[கண் + பூளை. கண் = சிறிது.]

கண்பெறு-தல் *kaṇ-peṟu-*, 20 செ.கு.வி.(v.i.) 1. பார்வையடைதல்; to regain the power of sight. "கண்பெற்ற வாண்முகமோ " (நள.கலிநீங்.92). 2. அருணோக்கிற்கு இலக்காதல்; to come under one's gracious favour, as from a superior. "ஆயிழாய் நின் கண்பெறினல்லால்" (கலித்.88,8).

க. கண்பெறு

[கண் + பெறுதல். கண் = பார்வை. சினைப்பெயர் தொழிலுக்கு ஆகிவந்தது.]

கண்பொங்கு-தல் *kaṇ-poṅgu-*, 7 செ.கு.வி.(v.i.) வெம்மையின் காரணமாகக் கண்கள் சிவந்து பீளைதள்ளுதல்; to suffer from an eye disease which discharges rheum due to heat.

[கண் + பொங்கு.]

கண்பொத்திக்குட்டல் *kaṇ-potti-k-kuṭṭal*, பெ.(n.) **கண்பொத்து-தல்** பார்க்க; see *kaṇ-pottu-*.

[கண் + பொத்தி + குட்டல்.]

கண்பொத்து-தல் *kaṇ-pottu*, 5 செ.குன்றாவி.(v.t.) கண்மூடி விளையாடுதல்; to blindfold, in the game of blindmans buff. அவள் கண்பொத்தி விளையாடும் பருவம் (உ.வ.).

ம. கண்பொத்தான்களி (கண்ணாம்பூச்சி விளையாட்டு)

[கண் + பொத்து.]

கண்பொலி–தல் *kaṇ-poli-,* 2 செ.கு.வி.(v.i.) ***1. கண்வளர்–தல்,*** பார்க்க; see *kaṇ-vaḷar-.* ***2. கண்மலர்–தல்*** பார்க்க; see *kaṇ-malar-.*

ம. கண்பொலியுக

[கண் + பொலி. பொலி = வளர், செழி, பெருகு, மலர்.]

கண்பொறிதட்டு–தல் *kaṇ-poṟi-taṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. விழி கலங்குதல்; to agitate, as the eyes. விழுந்த அறையில் கண்பொறி தட்டியது (உ.வ.). 2. கண்ணொளி மழுங்குதல்; to be dazzled, light.

[கண் + பொறி + தட்டுதல்.]

கண்பொன்று–தல் *kaṇ-poṉṟu-,* 5 செ.கு.வி.(v.i.) அகவை, நோய், களைப்பு போன்றவற்றால் கண்பார்வை குறைதல்; to have the power of vision diminished or dimmed, by age, by disease of the eyes, by eye strain etc.

[கண் + பொன்று. பொன்றுதல் – பார்வை குறைதல்.]

கண்போடு–தல் *kaṇ-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. விருப்புடன் நோக்குதல்(வின்.); to cast wishful looks on 2. பார்வையால் தீங்கு விளைவித்தல்; to cast the evil eye.

ம. கண்ணிடுக; க. கண்ணிடு; தெ. கன்னுத்ன்சு; து. கண்ணுகாகுநி பட. கண்ணாகு.

[கண் + போடு.]

கண்போரு *kaṇ-pōru,* பெ.(n.) விழிப்பின்மை; carelessness, oversight. பார்க்க ***கண்பொன்று–தல்;*** see *kanponru-*

ம. கண்போரு

[கண் + போரு. பொன்று – போறு – போரு.]

கண்போளம் *kaṇ-pōḷam,* பெ.(n.) ***கண்ணிமை*** பார்க்க; see *kaṇṇimai.*

ம.கண்போளம்.

[கண் + (போழம்)–போளம் = பிரியும் தன்மையுள்ள கண்ணிமை.]

கண்மங்கு–தல் *kaṇ-maṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) கண்ணொளி குறைதல்; to diminish as the eye sight. பசியால் கண்மங்குகிறது (உ.வ.).

து. கண்ணு அட்டட்டாபுநி, கண்ணு அட்டாபுநி.

[கண் + மங்கு.]

கண்மங்குலம் *kaṇ-maṅkulam,* பெ.(n.). 1. பார்வை மங்குகை; dimness of eyesight. 2. வெள்ளெழுத்து; long sight.

க. கண்ணுமஞ்சு

[கண் + மங்குலம். மங்கு – மங்குலம். "அம்" பெயரீறு.]

கண்மட்டம் *kaṇ-maṭṭam,* பெ.(n.) ***கண்திட்டம்*** பார்க்க; see *kaṇ-thiṭṭam.* கண்மட்டம் பார்த்துக் கற்சுவர் எழுப்பு (உ.வ.).

ம. கண்மட்டம்

[கண் + மட்டம். மட்டு – மட்டம் = அளவு.]

கண்மட்டு *kaṇ-maṭṭu,* பெ.(n.) ***கண்திட்டம்*** பார்க்க; see *kanntiṭṭam.* கலிங்கின் அளவை கண்மட்டில் சொல் (உ.வ.)

[கண் + மட்டு. மட்டு = அளவு]

கண்மடல் *kaṇ-maḍal,* பெ.(n.) கண் இமை; eyelid.

[கண் + மடல். மடல் = இதழ், ஏடு, கண்ணிமை.]

கண்மடை *kaṇ-maḍai,* பெ.(n.) 1. நீர் செல்லுதற்கான சிறிய வாய்க்கால்; small channel for flowing water. 2. நீரை நிறுத்துதற்கான தடுப்பு; blocking plank in a channel. கண்மடையைத் திறந்தால்தான் வாய்க்காலில் நீர் வரும் (உ.வ.).

[கண் + மடை, துளை]

கண்மண்டை *kaṇ-maṇḍai,* பெ.(n.) கண்ணெலும்புக்கூடு (வின்.); bones forming the eye-socket.

[கண் + மண்டை.]

கண்மண்தெரியாமல் *kaṇ-maṇ-teriyāmal,* வி.எ. (adv) கட்டுப்பாடு இல்லாமல்; reckless கண்மண் தெரியாமல் வண்டியை ஓட்டிக் கெடுத்துவிட்டான் (உ.வ.).

[கண்மண் + தெரியாமல் – கண்மண் தெரியாமல் =

கண்ணாரக்காணாமல். கண்மண் என்பது எதுகைகுறித்த மரபிணைச்சொல். கண் என்றே பொருள் தரும்.]

கண்மணி[1] *kaṇ-maṇi,* பெ.(n.) கண்ணின் கருமணி; pupil of the eye.*"கண்மணி குளிர்ப்பக் கண்டேன்" (சிலப்.11,55).*

ம,க. கண்மணி; **தெ.** கனுகுட்டு; **பட.** கண்மணி; **து.** கண்ணமணி.

[கண் + மணி. மணி = கண்ணின் பாவை.]

கண்மணி[2] *kaṇmaṇi,*பெ.(n.) அக்கமணி; rudraksa bead. *"வெண்பொடி கண்மணி திகழ மெய்யணிந்து". (திருவானைக். திருமால்.13)*

[கள் + மணி = கண்மணி = முட்போற் கூர்முனையுள்ள உருத்திராக்கம். முண்மணியென்றும் பெயர் பெறும்.]

"முண்மணிகள் காய்க்குமரம் முப்பதுடனெட்டே" என்று விருத்தாசலப் புராணம் [உருத் திராக்.4] கூறுதல் காண்க. பலாக்காயின் மேற்காணப் படும் முனைகளும் முள்ளென்று பெயர் பெற்றிருத் தலை நோக்குக. ஆரியர் தென்னாடு வருமுன்னரே சிவநெறிகுமரிநாட்டில் தோன்றிய தொன்மத மாதலால், அதை ஆரியப்படுத்திய வடவர் கண்மணி யென்னுங் கூட்டுச் சொல்லின் பொருளைப் பிறழவுணர்ந்து அதற்கேற்ப, முள்ளுள்ள தென்றே பொருள்படும் அக்கம் [அக்கு – முள், முள்ளுள்ள உருத்திராக்கம்] என்னும் சொல்லை அக்ஷ என்று திரித்து, உருத்திரன் கண்ணீரில் தோன்றிய தென்று முப்புர எரிப்புக் கதை யொன்றுங் கட்டி விட்டனர்.[வேர்ச்.கட்.173]

கண்மதியம் *kaṇ-madiyam,* பெ.(n.) பார்வையால் செய்யும் தோராய மதிப்பு; rough estimate, made at sight (யாழ்.அக.).

ம. கண்மதி

[கண் + மதியம். மதி – மதியம் = மதிப்பு.]

கண்மயக்கம்[1] *kaṇmayakkam,*பெ.(n.) 1. உறக்கம்; sleepiness. காலை ஏழுமணியாகியும் கண்மயக்கம் தீரவில்லையா? (உ.வ.). 2. சிற்றுறக்கம்; nap. படித்துக் கொண்டிருக்கும் பொழுது கண்மயக்கம் ஏற்பட்டுவிட்டது (உ.வ.).

[கண் + மயக்கம்.]

கண்மயக்கம்[2] *kaṇmayakkam,*பெ.(n.) அலைச் சலால் கண்மயங்கிக் காணப்படும் நிலை; drowsiness. காலைவெயிலில் கண்மயக்கம் அடைந்தான் (உ.வ.).

ம. கண்மயக்கம்; **து.**கண்மயமய; **க.** கண்மப்பு.

[கண் + மயக்கம்.]

கண்மயக்கு–, *kaṇ-mayakku,*பெ.(n.) 1. கண்களால் ஈர்த்தல்; bewitching, captivating with the eyes. 2. மாயத்தோற்றம்; illusion; hallucination

[கண் + மயக்கு.]

கண்மயக்குக் கலை *kaṇ mayakku-k- kalai,* பெ. (n.) 1. தந்திரக்கலை; magic.கழைக்கூத்தாடி கண் மயக்குக் கலையில் கைதேர்ந்துள்ளான்(உ.வ.). 2. தன் வயமிழப்பு; hypnotism.

[கண் + மயக்கு+ கலை.]

கண்மயக்கு வித்தை *kaṇmayakkuvittai,*பெ.(n.) சூழ்ச்சி வித்தை; illusion created by magic. 2. கண் மயங்கும் படிச் செய்யும் வித்தை; hypnotism. (சா.அக.)

[கண் + மயக்கு + வித்தை.]

கண்மயம் *kaṇ-mayam,*பெ.(n.). 1. அருள்; mercy, kindness, humanity, compassion. *"களித்த கண் மயமில்லவர்" (உபதேசகா. உருத்திராக்.106).* 2. கண்ணைப்போல் பாதுகாக்கப்படுவது; as dear as the eye (சேரா.).

ம.கண்மயம்

[கண் + மயம்]

கண்மயிர் *kaṇ-mayir,*பெ.(n.) இமையிலுள்ள முடி (வின்.); eyelash.

ம. கண்பீலி; **பட.** கண்மயிலு.

[கண் + மயிர்.]

கண்மருட்சி *kaṉ-maruṭci*,பெ.(n.) 1. பார்வை மயக்கம்; pervession of the vision. 2. கண்ணால் மயக்குகை; fascinating or bewitching by the e ye.

[கண் + மருட்சி. மருள் + சி – மருட்சி. சி – பெயராக்க ஈறு.]

கண்மருட்டு *kaṉ-maruṭṭu* பெ.(n.) ***கண்மருட்சி*** பார்க்க; see *kanmarutci*

[கண் + மருட்டு. மருள் – மருட்டு.]

கண்மருத்துவம் *kaṉ-maruttuvam*,பெ.(n.) கண்ணோய்களுக்கு செய்யும் மருத்துவம்; eye treatment.

[கண் + மருத்துவம்.]

கண்மருத்துவமனை *kaṉ-maruttuva-maṉai*, பெ.(n.) கண்மருத்துவம் செய்யும் மருத்துவமனை; eye hospital.

[கண் + மருத்துவம் + மனை.]

கண்மருத்துவர் *kaṉmaruttuvar*,பெ. (n.) கண்ணோய்களுக்கு மருத்துவம் செய்யும் வல்லுநர்; eye specialist,eye doctor.

[கண் + மருத்துவர்.]

கண்மருந்து *kaṉ-marundu*,பெ.(n.) 1. கண்ணோய்க்குப் போடும் மருந்து; medicines for eye diseases 2. கண்மை; collyrium, used for the eye-lids.

க. கண்ணுபட்டு

[கண் + மருந்து.]

கண்மலர்[1]–த்தல் *kaṉ-malar-*, 4 செ.கு.வி.(v.i.) ஆர்வம் ததும்ப நோக்குதல்; to see with eagerness. "*மார்புறவே தழீஇயினா னவள் கண்மலர்த்தாள்*" (சீவக .228)

[கண் + மலர்.]

கண்மலர்[2]–தல் *kaṉ-malar-*,2. செ.கு.வி(v.i.) விழித்தல்; to open wide.

க. கண்மலர், கண்மலரு.

[கண் + மலர். மலர்தல் - விரிதல் பரத்தல், விளங்குதல். பூவிரிதல் போன்று கண்திறத்தல் கண்மலர்தலாயிற்று.]

கண்மலர்[3] *kaṉ-malar*, பெ.(n.) 1. மலர்போன்ற கண்; the eye regarded as aflower (metaphor). "*கருவிளை கண்மலர் போல் பூத்தன*" *(கார்.9.1).* 2. கடவுள் திருமேனிகட்கு அணிவிக்கும் செயற்கை விழிமலர்; an ornament resembling the eye made of gold or silver and put on an idol.

ம,க. கண்மலர்

[கண் + மலர் உருவகம்.]

கண்மழை *kaṉ-maḻai*, பெ.(n.) கண்ணீர்வெள்ளம்; profuse tears. "*மண்ணவர் கண்மழை பொழிந்தார்*". (பெரியபு.மனுநீதி.45.)

[கண் + மழை.]

கண்மறிக்காட்டு–தல் *kaṉ-maṟi-k-kāṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) கண்ணால் குறிப்புக் காட்டுதல் (வின்.); to hint by the eye.

[கண் + மறி + காட்டுதல். மறி – மறித்தல், சிமிட்டுதல், அடையாளம்]

கண்மறு *kaṉmaṟu*, பெ.(n.) 1. குறைபாடுடைய கண்; defect is eye. 2. கண்ணழுக்கு; rheum. 3. கண்புரை; cataract.

[கண் + மறு.]

கண்மறை–தல் *kaṉmaṟai-*,2 செ.கு.வி.(v.i.) இறத்தல்; to die. என் கண் மறைவதற்குள் பேரனைக்காட்டிவிடு (உ.வ.).

[கண் + மறை.]

கண்மறைப்பு *kaṉ-maṟaippu*,பெ.(n.) 1. கண்ணை மறைக்க இடும் திரை; eye screen. புரைநீக்கிய பின் சில நாட்களுக்குக் கண்மறைப்பு இடல் வேண்டும் (உ.வ.). 2. கண்புரை; cataract.

[கண் + மறைப்பு. (மறை – மறைப்பு)]

கண்மாசு *kaṉmāssu*, பெ.(n.) கண்ணழுக்கு; rhemu.

[கண் + மாசு.]

கண்மாய் *kaṉmāy*, பெ.(n.) ***கண்வாய்*** பார்க்க; see *kaṉvāy*

[கண் + (வாய்) மாய்.]

கண்மாய்க்கிழங்கு *kaṇ - -māikiḻaṅgu*,பெ.(n.) கண்மாய்க்கொட்டி பார்க்க; see *kaṇmaikoṭṭi*

[கண்மாய் + கிழங்கு.]

கண்மாய்க்கொட்டி *kaṇmāy-k-koṭṭi*,கொட்டிக் கிழங்கு; a bulbous roots, Indian water lilly.

[கண்மாய் + கொட்டி.]

கண்மாயம் *kaṇ-māyam*,பெ.(n.) 1.கண் கட்டு ஆட்டம் (கண்கட்டு வித்தை); ocular deception by magic, illusion visual trick. *"கண்டும் கண்டிலே னென்ன கண் மாயமே"* (திருவாச. 5.42.). 2. பார்வை யால் ஈர்த்தல்; enticing, fascination. 3. குறிப்புப் பார்வை; a furtive glance.

ம. கண்மாயம்; க. கண்மாய.

[கண் + மாயம்.]

கண்மாயம்[2] *kaṇ-māyam*,பெ.(n.) 1. கண்ணூறு விளைவு, evil eye, causing diseases or misfortune. *"வேற்கண்ணிக் கென்ன கண் மாயம் கலந்தது"* (மதுரை. கோ. 98). 2. பொய்க்காட்சி; an imaginary or illusive appearance. 3. உருவெளித்தோற்றம்; optical illusion. 4. நோயினால் ஏற்படும் பொய்த் தோற்றம்; a false vision resulting from a disease (சா.அக).

[கண் + மாயம்.]

கண்மாறு—தல் *kaṇ-māṟu*,7 செ.கு.வி.(v.i.) 1. தோன்றி உடனே மறைதல்; disappearing immediately after appearance.*"கண்மாறாடவர்"*. 2. நிலை கெடுதல்; to be humbled down from a high position; to be humbled. *"நலனே .... கண்மா றின்றே"* (குறுந்.125). 3. நட்பாயிருந்து பகையாதல்; to be indifferent to, to neglect. *"கொண்டுகண் மாறல் கொடுமையிற்றுவ்வாது" (முதுமொழி).*

[கண்+ மாறு.]

கண்மிச்சில் *kaṇ-micoil*, பெ.(n.) ***கண்ணூறு*** பார்க்க; see *kaṇṇūṟu*. போக்கும் பொருளாற் கண்மிச்சில் போக்கி.

[கண் + மிச்சில். மிச்சில் - எச்சில்.]

கண்மின்னு—தல் *kaṇ-minnu-*,11 செ.கு.வி. (v.i.) ***கண்பொறிதட்டு (வின்.)*** பார்க்க ; see *kaṇ-poṟitaṭṭu*

[கண் + மின்னு.]

கண்முகப்பு *kaṇ-mugappu*,பெ.(n.) நேரெதிர் பார்வைப்படுமிடம்; space to which the power of vision extends. *"நங்கண்முகப்பேமாவேறிச் செல்கின்ற மன்னவரும்" (திவ்.இயற். 2 : 69).*

[கண் + முகப்பு.]

கண்முகிழ்[1]—த்தல் *kaṇ-mugiḻ-*,4. செ.கு.வி.(v.i.) 1. கண்மூடுதல்; to shut the eyes.*"திசையானை கண்கள் முகிழா வொடுங்க" (கம்பரா. நாகபா. 244.).* 2. தூங்குதல்; to goto sleep.

[கண் + முகிழ்.]

கண்முகிழ்[2] *kaṇ-mukiḻ*,பெ.(n.) இமை; eye lid. *"கண்முகிழ் திறந்தால்" (வெங்கைக்கோ.218).*

[கண் + முகிழ்.]

கண்முனை *kaṇmuṉai*, பெ.(n.) 1. கடைக்கண்; the outer corner of the eye. 2. பார்வை படுமிடம்; space to which the power of vision extends

ம. கண்முன; க. கண்கடெ, கங்டெ

[கண் + முனை.]

கண்மூக்கி *kaṇ-mūkki*,பெ.(n.) எறும்பு (நாமதீப.); ant.

[கண் + மூக்கி. மூக்கு → மூக்கி கண்ணையே மூக்காய்ப் பயன்படுத்துவது. ஒ.நோ கட்செவி]

கண்மூடி[1] *kaṇ-mūḍi*, பெ.(n.) 1. குருடு (யாழ். அக.); blind person. கண்மூடிக்குக் கைக்கோல் கொடு (உ.வ.); 2. தூக்க மருந்து; a drug inducing sleep narcotic

[கண் + மூடி.]

கண்மூடி[2] *kaṇmūḍi*,பெ.(n.) 1. ஆராயாது செய்பவன் one who lacks foresight. 2. பிறர் சொல் கேளாதவன் one who turns a deaf ear to other's advice. 3. அறிவிலி; one who lacks mental perception. 4. கவனமில்லாதவன்; lit., one who has his eyes shut, fig., one who is lacking in mental perception, discernment or foresight; inconsiderate, heedless, reckless person.

து. கண்ணு முச்சொல; பட. கண்ணு முச்சி.

[கண் + மூடு + இ.]

கண்மூடித்தனம் *kaṉ-mūḍi-t-taṉam*, பெ.(n.) மூடப் பழக்கவழக்கங்கள் stupid habits. கண் மூடித் தனமாய் நடந்து கொள்ளாதே (உ.வ.).

[கண் + மூடி + தனம்.]

கண்மூடு-தல் *kaṉ-mūḍu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. இமை குவித்தல். to close the eyelids *"கண்மூடி மௌனியாகி"* (தாயு. சச்சிதா. 5). 2. தூங்குதல் ; to sleep 3. சாதல்; to die, an euphemism

[கண் + மூடு.]

க. கண்முச்சு கண்ணுமுச்சு; து. கண்ணாட; பட. கண்முச்சு.

மக்கள் பிறப்பு கண்விழிப்பும், இறப்பு கண்ணடைப்பும் போன்றது. வாழ்க்கை முழுவதும் ஒருபகல் நடவடிக்கை போன்றதே. பெற்றோர் தம் பிள்ளைகளைத் தம் கண்ணுள்ள போதே கரையேற்ற வேண்டுமென்று சொல்வது வழக்கம். பகல் முடிந்து இரவு வந்தபின் கண்மூடித் தூங்குவது போல, வாழ்க்கை முடிந்தபோதும் மக்கள் தம் கண்மூடி அழியாத் துயில் கொள்வர் [சொல். கட் 9.].

கண்மூலம் *kaṉmūlam*, பெ.(n.) கண்ணோய் வகை; an affliction in the eye.

[கண் + மூலம்.]

கண்மை[1] *kaṉ-mai*, பெ.(n.) கண்ணுக்கிடும் மை; collyrium.

ம. கண்மசி; பட. கண்மை.

[கண் + மை.]

கண்மை[2] *kaṉ-mai*, பெ.(n.) 1. கண்ணோட்டம் (பிங்.); gracious look, favour, sympathy, kindliness. 2. காட்சி; view, scenery. *"கண்மையிந்நகர்" (கம்பரா. ஒற்றுக்.51).*

ஒ.நோ-பெண்மை

[கண் + மை மை.-பெயரீறு.]

கண்ரெப்பை *kaṉ-reppai*, பெ (n.) ***கண்ணிறப்பை*** பார்க்க; see *kaṉṉiṟappai*.

க. கண்ணுரெப்பெ; தெ. கனுரெப்பெ

[கண் + இறப்பை. கண்ணிறப்பை – கண்ரெப்பை (கொ.வ.).]

கண்வட்டக்கள்ளன் *kaṉvaṭṭa-kaḷḷaṉ*, பெ.(n.) கள்ளநாணய மடிப்பவன், (ஈடு. 1, 9, 8, ஜீ); counterfeiter of coins.

[கண் + வட்டம் + கள்ளன். கண்வட்டம் - நாணயம் துளைப்பொற்காசு.]

கண்வட்டம்[1] *kaṉ-vaṭṭam*, பெ.(n.) 1. பார்வைக்குட் பட்ட இடம்; space circle to which the power of vision extends. *"தங்கள் கண்வட்டத்திலே உண்டுடுத்துத்திரிகிற" (ஈடு 3, 5, 2).*

[கண் + வட்டம்.]

கண்வட்டம்[2] *kaṉvaṭṭam*, பெ.(n.) 1. துளையிட்ட பொற்காசு; a gold coin with a hole 2. நாணயச்சாலை; mint. கண்வட்டக்கள்ளன் (ஈடு)

ம.கண்வட்டம். க.கண் பொல

[கண் + வட்டம்.]

கண்வரி *kaṉ-vari*, பெ.(n.) வெள்விழியின் செவ்வரி (வின்.); red streaks in the white of the eye.

[கண் + வரி.]

கண்வருத்தம் *kaṉvarutam*, பெ.(n) கண்நோய்; eye disease (யாழ்ப்.)

[கண் + வருத்தம்.]

கண்வலி *kaṉ-vali*, பெ.(n.) ***கண்ணோவு*** பார்க்க; see *kaṉ-ṉōvu*. அவன்கண்வலியால் அவதியுறுகிறான் (உ.வ.).

க. கண்ணுரி

[கண் + வலி.]

கண்வலிப்பூ[1] *kaṉ-vali-p-pū*, பெ.(n.) நந்தியாவட்டை; east indian rosebay.

[கண் + வலி+பூ.]

கண்வலிப்பூ[2] *kaṉvali-p-pū*, பெ.(n.) காந்தட் பூ malabar glory lily.

[கண் + வலி + பூ. வலி - ஈர்த்தல், கண்ணை ஈர்க்கும் வண்ணத்தில் அமைந்துள்ளமையால் காந்தளும் கண்வலிப்பூ எனப்பட்டது.]

கண்வலிபோக்கி *kaṉvalipōkki*, பெ.(n.) நந்தியா வட்டைப்பூ; East Indian rose bay.

[கண் + வலி + போக்கி. போக்கு –போக்கி இ = வினை முதல் குறித்து வந்தது நந்தியாவட்டைப்பூ கண்வலிக்கு மருந்தாய் அமைவதால் இப்பெயர் பெற்றது.]

கண்வழுக்கு–தல் *kaṇ-vaḻukku*, 7 செ.கு.வி. (v.i.) கண்கூசுதல்; to be dazzled. as the eye. *"கண்வழுக்கு சுடர்மாலை" (கூர்மபு. திருக்கல்.18.)*

[கண் + வழுக்கு.]

கண்வளர்[1]–த்தல் *kaṇvaḷar-*,5 செ.கு.வி. (v.i.) வலை பின்னுதல் to knit a net.

மறுவ. வலைக் கோலுதல், வலை வளர்த்தல் (மீனவ.).

[கண் + வளர்த்தல்.]

கண்வளர்[2]–தல் *kaṇ-vaḷar-*,4 செ.கு.வி. (v.i.) 1. தூங்குதல் to sleep *"இளந்தளிர் மேற் கண்வளர்ந்த வீசன்தன்னை"* (திவ். பெரியதி. 2, 10,1.) 2. குவிதல்;to close, as the petals of a flower *"கருங்குவளை கண்வளருங் கழனி"* (தேவா. 621, 1.).

[கண் + வளர்.]

கண்வளையம் *kaṇ-vaḷaiyam*,பெ.(n.) மத்தளத்தின் கண்ணைச் சுற்றியுள்ள வட்டம். (பரத. ஒழிபி.12. உரை.); dark ring around the beaten centre of a drum-head.

[கண் + வளையம்.]

கண்வளையமிடு–தல் *kaṇvaḷayamiḍu-*, 20 செ.கு.வி. (vi) கண்புதைவால் தோற்சுருக்கம் உண்டாதல். to develop shirinking around the eye. கண்வளைய மிட்டுள்ளது (உ.வ.).

[கண் + வளையம் + இடல்.]

கண்வாங்கு[1]–தல் *kaṇ-vāṅgu-*, 7 செ.கு.வி. (V.i.) கண்ணைக் கவர்தல் to attract attention; to be inviting *"காந்தள் கடிகமழுங் கண்வாங் கிருஞ்சிலம்பில்" (கலித். 39, 15).*

[கண் + வாங்கு.]

கண்வாங்கு[2]–தல் *kaṇvāṅgu*, 5 செ.குன்றா.வி. (v.t.) 1. நோக்கம் ஒழிதல்; to withdraw attention; to cease to take notice. (v.t.) 2. தூர்வை எடுத்தல்; to clean out a well, *"இதொரு பழங்கிணறு கண்வாங்கிறதென்" (ஈடு. 6, 8, 1.)*

[கண் + வாங்கு.]

கண்வாட்டி *kaṇvāṭṭi*,பெ.(n.) மனைவி (யாழ். அக.); wife.

[கண்ணாட்டி – கண்வாட்டி (கொ.வ.).]

கண்வாய் *kaṇvāy*, பெ.(n.) நீர்த்தேக்கம்; tank.

[கண் + வாய். கண் – சிறுவாய்க்கால். -வாய் – வாயில்.]

சிறு வாய்க்கால் வழியாக நீர் நிரம்பும் நீர்த்தேக்கம். இதை, கம்மாய் என்பதும் கண்மாய் என்பதும் கொச்சைவழக்கு.

கண்வாரு–தல் *kaṇ-vāru-*, 5 செ.குன்றாவி (v.t.) ***கண்வாங்கு*** பார்க்க; see *kaṇvāṅgu*. *"பழங்கிணறு கண்வாருகிறதென்"* (திவ். திருமாலை. 36. வ்யா.120.)

[கண் + வார் (வாரு).]

கண்வாளன்[1] *kaṇvāḷaṉ*, பெ.(n.) ***கம்மாளன்*** பார்க்க (யாழ். அக.); see *kammāḷaṉ*.

[கம்மாளன் – கண்வாளன். (கொ.வ)]

கண்வாளன்[2] *kaṇvāḷaṉ*, பெ.(n.) ***கண்ணாளன்*** பார்க்க; (யாழ். அக.); see *kaṇṇāḷaṉ*.

[கண் + ஆளன் – கண்ணாளன் – கண்வாளன் (கொ.வ.).]

கண்சட்டி *kaṇcaṭṭi*, பெ.(n.) துளைவைத்துச் செய்த சட்டி; a pot made wi th holes perforated in it.

மறுவ. பொத்தல்சட்டி-கண் + சட்டி

கண்விட்டசட்டி *kaṇviṭṭacaṭṭi*, பெ.(n.) ஒட்டைச்சட்டி; broken pot .

[கண் + விட்ட + சட்டி, கண்விடல் – துளைபடல். உடைதல்.]

கண்விட்டாடல் *kaṇviṭṭāḍal*, தெ.பெ. (vbl.n.) மாழை உருகும் போது ஒளிவிடல்; a term, denoting the state of complete fusion of metals etc; shining with brilliance as metals do when heated to a higher temparature after fusion (சா. அக.).

[கண் + விட்டு + ஆடல்.]

கண்விடு[1]–த்தல் *kaṇ-viḍu-*,18 செ.குன்றாவி (v.t.) 1. விழித்துப்பார்த்தல்; to open the eyes. *"கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன"* (சிறுபாண். 205). 2. ***கண்திற[1]*** பார்க்க; see *kaṇḍiṟa*. *"கவ்வியற் நோக்கினாற் கண்விடுத்து" (சீவக. 180.).*

க. கண்பிடு, கண்ணுபிடு.

[கண் + விடு.]

கண்விடு²-தல் *kaṉ-viḍu-*,20 செ.கு.வி. (v.i.) 1. ஊசி முதலியவற்றின் காது ஒடிதல் (வின்.); to break, as the eye of a needle. 2. வெண்ணெய் திரளுதல், (வின்.). to form, as butter while churning. 3. வெள்ளிமுதலியன உருகுதல் (யாழ். அக.); to melt, as silver 4. துளையுண்டாதல்; to form, as opening. in an ulcer. புடைவை கண்விட்டுப் போயிற்று (உ.வ.).

[கண் + விடு.]

கண்விடு³–தல் *kaṉviḍu-*, 7 செ.குன்றாவி. (v.t.) அறுந்த வலையைச் செப்பம் செய்தல்; to reknit a net.

[கண் + விடு.]

கண்விதிர்ப்பு *kaṉvidirppu,* பெ.(n.) கண்நடுக்கம்; throb in the eyes;

[கண் + விதிர்ப்பு.]

கண்விடுதூம்பு *kaṉ-viḍu-tūmbu,*பெ.(n.) தோற் கருவிவகை (சிலப். 3,27, உரை); kind of drum.

[கண் + விடு + தூம்பு.]

கண்விதுப்பழி–தல் *kaṉ-vituppaḻi-*, 2 செ.கு.வி.(v.i.) காணும் வேட்கை யால் வருந்துதல்; (erot.) to blur, as the eyes of a maiden eagerly longing to see her lover; to be distressed in mind as a consequence of such wistful gazing; *"கண் விழுதுபழிதல்" (குறள் அதி. 118).*

[கண் + விதுப்பு + அழி. விதுப்பு = வேட்கை. அழிதல் = வருந்துதல். கண்]

கண்விதுப்பு *kaṉ-vituppu,* பெ.(n.) காணும் வேட்கைமிகுதல், கண்கள் காண்டற்கு விரைகை; (குறள். அதி.118). longing of the eyes to see.

[கண் + விதுப்பு. (வேட்கை).]

கண்விழி¹–த்தல் *kaṉ-viḻi-*, 4 செ.கு.வி. (v.i.)1. கண் திறத்தல்; to open the eyes. 2. தூங்காதிருத்தல்; to keep awake. சிவராத் திரியில் கண்விழிக்க வேண்டும் (உ.வ.). 3. உறக்கம் நீங்குதல்; to awake from sleep. *"துயில்கண் விழித்தோன்றோளிற் காணான்".* (சிலப். 16,195). 4. தோன்றுதல்; to dawn, appear. *"கதிர்க்கடவுள் கண்விழித்த காலை"* (சீவக.1943), 5. வாடினபயிர் மீண்டுஞ்செழித்தல் (வின்.); to revive as withered plants after watering.

தெ. கனுவிச்சு; து. கண்ணுபே புனி.

[கண் + விழி.]

கண்விழி² *kaṉ-viḻi,* பெ.(n.) 1. கண்மணி; pupil of the eye. 2. கண்; the eye.

ம. கண்மிழி; தெ. கனுபாப

[கண் + விழி.]

கண்விழிப்பு *kaṉ-viḻippu,*பெ.(n.) 1.விழித்திருக்கை; wakefulness. *"இந்த சிவனிராவுக்கு கண்விழிப்புண்டா?" (உ.வ.)* 2. எச்சரிக்கை; watchfulness, caution.

[கண் + விழிப்பு.]

கண்விழுந்த சட்டி¹ *kaṉviḻundacaṭṭi,* பெ.(n.) ***கண்சட்டி*** பார்க்க, see *kaṉcaṭṭi.*

[கண் + விழுந்த + சட்டி.]

கண்விளக்கம் *kaṉviḷakkam,*பெ.(n.) பார்வைத் தெளிவு; clear vision.

[கண் + விளக்கம்.]

கண்விளி–த்தல் *kaṉ-viḷi-*,4 செ.குன்றாவி. (v.t.) அழைத்தல்; to summon, invite. *"கூற்றுக் கண்விளிக்கும் குருதி வேட்கை" (மணி. 1, 30.);*

[கண் + விளி – கண்விளி = கண்ணாற் குறிப்பு காட்டி அழைத்தல் நாளடைவில் பொதுவாக அழைத்தற்குறிய சொல்லாயிற்று.]

கண்விளிம்பு *kaṉ-viḷimbu,*பெ.(n.) இமை (நாமதீப.); eye-lid.

[கண் + விளிம்பு.]

கண்விறகு *kaṉ-viṟagu,* பெ.(n.) சிறுவிறகு (தஞ்சை); twigs.

[குள்(கள்) → கண் = சிறியது. கண்+விறகு. (முதல்தாய்மொழி 128.)]

கண்வினை *kaṉviṉai,* பெ.(n.) நுண்கலைத் தொழில் நுட்பத் தொழில் ; artistic work

மறுவ. கண்ணுத்தொழில், கண்ணுள்

[கண்+வினை. கண்=சிறிய, நுண்ணிய.]

கண்வினைஞன் *kaṉviṉaiñaṉ*, பெ.(n.) ***கண் வினையாளன்*** பார்க்க; see *kaṉ-viṉai-y-āḷaṉ*

[கண் + வினைஞன். குள் → கள் → கண் = சிறிய, நுண்ணிய கண்வினை = நுட்பத்தொழில். தஞ்சைமாவட்டத்தார் சிறுவிறகைக் கண்விறகு என்பர். நுட்பமான செய்திறனை 'கண்ணுள் வினை' என்பர்.]

கண்வினையாளன் *kaṉ-vinai-y-āḷaṉ*, பெ.(n.) கம்மாளன் (வின்.); smith, artisan.

[கண்வினை + ஆளன். கண்வினை = கண்ணுள்பணி, நுட்பத் தொழில்.]

கண்வெளி—த்தல் *kaṉ-veḷi-*,4 செ.கு.வி.(v.i.) நோய் நீங்கிப்பார்வை தெளிவாதல் (வின்.); to have the power of vision restored after disease.

[கண் + வெளித்தல்.]

கண்வெறிப்பு *kaṉ-veṟippu*, பெ.(n.) அச்சத்தாலோ, வியப்பினாலோ கண்மருளுதல் (சீவக.2397, உரை); staring, as from fear or wonder.

[கண் + வெறிப்பு.]

கண்வேக்காடு *kaṉvēkkāḍu*,பெ.(n.) கண்சூடு; inflammation of the eyes (சா. அக.).

[கண் + வேக்காடு.]

கண்வேற்றுமை *kaṉvēṟṟumai*, பெ.(n.) ஏழாம் வேற்றுமை; locative case

[கண் + வேற்றுமை.]

'கண்' ஏழாம் வேற்றுமை உருபாகும். உருபின் பெயரால் வேற்றுமையைக் குறிப்பதை,

''அவைதாம் பெயர் ஐ ஒடு கு
இன் அது கண் விளி என்னும் ஈற்ற''

என்னும் தொல்காப்பிய [தொல். சொல். 65] நூற்பாவால் அறியலாம். வீட்டின்கண், ஊரின் கண் என வருவனவெல்லாம் கண்வேற்றுமையாம்.

கண்வைத்தியசாலை *kaṉ-vaittiya-šālai*,பெ.(n.) ***கண்மருத்துவமனை*** பார்க்க; see *kaṉmaruttuva maṉai.*

[கண் + வ.வைத்தியம்+சாலை.]

கண்வைத்தியம் *kaṉ-vaittiyam*,பெ.(n.) ***கண் மருத்துவம்*** பார்க்க; see *kaṉ-maruttuvam.*

ம. கண்ணுவைத்ய

[கண் + வைத்தியம்.]

கண்வை[1]—த்தல் *kaṉvai-*,4 செ.கு.வி.(v.i.) 1. அருள் செய்தல், to be benignant, gracious, kind. *"கண் வைத்தமரரை யோம்பிய கந்தன்"* (தணிகைப்4. சீவரி. 65), 2. பார்த்தல்; to see. *"திசையில் கண் வைக்குந் தொறும்" (கம்பரா. பிணி. 44.)*, 3. பெறுதற்கு ஆசை வைத்தல்; to look wishfully, to gaze upon amourously அவன் அதனிடத்துக் கண் வைத்திருக்கிறான் (உ.வ.).

க., பட. கண்ணு பீ; ம. கண்ணு வைக்குக.

[கண் + வை.]

கண்வை[2]—த்தல் *kaṉvai-*, 4 செ.கு.வி.(v.i.) கண்காணித்தல், நோட்டமிடுதல்: to keep an eye, watch. அவன் போக்குச்சரியில்லை, அவன் மேல் ஒரு கண்வை (உ.வ.).

தெ. கனிபெட்டு, கனுபெட்டு.

[கண் + வை. காண் – கண்.]

கண்வை[3]—த்தல் *kaṉvai*, 4 செ.குன்றாவி.(v.t.) மாற்றுக்கண் பொருத்துதல்; to fix an alternative eye.

[கண் + வை.]

கண்வை[4]—த்தல் *kaṉvai*, 4 செ.கு.வி.(v.i.) கண்ணூறு படுதல்; to cast the evil eye. அவன் கண்வைத்தால் அழிவு (உ.வ.).

ம. கண்ண வைக்குக; க., பட. கண்ணுபீ.

[கண் + வை. கண்—பார்வை, அழுக்காறுடன் பார்த்தல்.]

கண்வை[5]—த்தல் *kaṉvai-*,4 செ.கு.வி(v.i.) புண்ணில் துளை விழுதல்; to form as an opening in an ulcer.

[கண் + வை. கண்—துளை.]

கண—த்தல் *kaṇa-*, 4 செ.குன்றாவி.(v.i.) 1. கூடுதல்; to come together, 2. பொருந்துதல்; to agree, consent. 3. ஒத்தல்; to be similer; குரங்கு கணக்க ஒடுகிறான் (நெல்லை வழக்கு)

[கள் → களம் (கூட்டம்) → கணம், கூட்டு = ஒப்புமை.]

மடங்கல் கூட்டற எழுந்து எரி வெகுளியான் [கம்பரா. யுத்த.அதிகாய 1.] கெழுது என்பது ஓர்

உவமையுருபு [தொல்.பொருள் 286 உரை] குழு–கெழு–கேழ் = ஒப்பு. "கேழே வரையு மில்லோன் [திருக்கோவை 269]. கொள்ளுதல்=ஒத்தல். "வண்டினம் யாழ் கொண்ட கொளை" [பரிபா. 11:125]. இனம் இனத்தோடே வெள்ளாடு தன்னோடே என்னும் முறைமை பற்றிக் கூடுதற்கருத்தில் ஒப்புமைக் கருத்தும் பிறந்தது [வேர்ச். கட். 140.].

கணக்கக்காணி *kaṇakka-k-kāṇi*, பெ.(n.) ஊர்க் கணக்கருக்கு விடும் மானிய நிலம் (S.I.I,78); land granted as inam to village karnams.

[கணக்கன் + காணி.]

கணக்கதிகாரம் *kaṇakkādigāram*, பெ.(n.) காரியார் இயற்றிய ஒரு கணக்குநூல்; a treatise on arithmetic by kāriyār.

[கணக்கு + அதிகாரம்.]

கணக்கப்பண்டாரி *kaṇakkapaṇḍāri*, பெ.(n.) கணக்கிடும் கருவூல அதிகாரி; accountant. இவை கணக்கப்பண்டாரி வேளாண் குணபாலன் எழுத்து (S.I.I.Vol.14 Insc 74 S.No.5.).

[கணக்கு + பண்டாரி, பண்டாரம் – பண்டாரி. பண்டாரம் = வைப்பறை, கருவூலம்.]

கணக்கப்பிள்ளை *kaṇakka-p-piḷḷai*, பெ.(n.) ***கணக்குப் பிள்ளை*** பார்க்க; *kaṇakkup-p-iḷḷai.*

ம. கணக்கப்பிள்ள

த. கணக்கப்பிள்ளை > E con[illegible]icopoly.

[கணக்கு + அ + பிள்ளை.]

கணக்கப்பேறு *kaṇakka-p-pēṟu*, பெ.(n.) 1. கணக்கர் செலுத்து வரி; tax paid by kaṇakkar. 2. பொருளாகப் பெறும் வரி; a tax in kind (S.I.I.iv.195).

[கணக்கன் + பேறு → பெறு → பேறு.]

வரியாகச் செலுத்தப்படுவது விளை பொருளான நெல்லாக இருந் தால் நெல்லாயம் கணக்கப்பேறு எனப்பட்டது.

கணக்கம்பாளையம் *kaṇakkampāḷaiyam*, பெ.(n.) கோவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Coimbatore district.

[கணக்கன் + பாளையம் – கணக்கம் பாளையம்.]

கணக்கமேரை *kaṇakka-mērai*, பெ.(n.) ஊர் கணக்கனுக்குச் சம்பளத்துக்கு ஈடாகக் கொடுக்கும் தவசம் (W.G.); fee in grain, given to the village accountant.

[கணக்கன் + மேரை.]

கரணத்தானுக்குச் சம்பளம், ஒரு நாளைக்கு ஒரு நாழி நெல்லும், அதனோடு ஓராண்டிற்கு ஏழு கழஞ்சு பொன்னும் இரு கூறையுமாகும். அவனுக்குக் கொடுக்கப்படும் நெல் கணக்கமேரை எனப்படும் [பழ.தமி.ப. 41].

கணக்கர் *kaṇakkar*, பெ.(n.) ***கணக்கன்***[1] பார்க்க; see *kaṇakkaṉ.*

[கணக்கு + அர்.]

கணக்கல்மேடு *kaṇakkalmēḍu*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Viluppuram district.

[குண + கல் + மேடு – குணக்கல் மேடு → கணக்கல் மேடு → குணக்கல் = கீழ்க்கல்.]

கணக்கவரி *kaṇkkavari*, பெ.(n.) கணக்கனுக்காகக் கொடுக்கப்படும் பொருள்; tax levied for kanakkan; பாடகாவில் கண்காணி கணக்கவரி (S.I.I. Vol.1. insc.64, S.No.12-13).

[கணக்கன் + வரி.]

கணக்கழிவு *kaṇakkaḻivu*, பெ.(n.) முறைகேடு; injustice. *"கையர்செயுங் கணக்கழிவு" (திருவையா. பு. சைவச்.9).*

[கணக்கு + அழிவு. இங்கு கணக்கு என்னும் சொல் ஒழுங்கு முறைமை, நேர்மை எனப் பொருள்பட்டது.]

கணக்கன் *kaṇakkaṉ*, பெ.(n.) 1. கணக்கெழுதுவோன் (திருவாலவா.30,22); accountant, book-keeper 2.ஊர்கணக் கெழுதுவோன்; village accountant. 3. ஓர் இனம் (இலக்.வி.52, உரை); a certain caste. 4. கணக்கில் வல்லவன் (வின்.); arithmetician. 5. அறிவியல், சமயம், கோட்பாடு ஆகியவற்றில் வல்லவன்; one who is well versed in the philosophy of religion, or any science. *"சமயக் கணக்கர்" (மணி.27:2).* 6. அறிவன் (புதன்) கோள் (திவா.); the planet Mercury. *`கணக்கன் கணக்கு அறிவான்; தன் கணக்கைத் தானறியான்' (பழ.).* 7. ஆசிரியன்; teacher.

ம. கணக்கன்

[கள் → கள → கண → கனக்கன்.]

கள்ளுதல் = கூடுதல், பொருந்துதல், ஒத்தல். கள்ள=போல. "கள்ளக் கடுப்ப ஆங்கவை எனாஅ" [தொல்.1232] கள் →கள →கண. கணத்தல் = கூடுதல், ஒத்தல். கள் →களம் = கூட்டம், அவை. களம் → கணம் = கூட்டம். கணவன் = மனைவியோடு கூடுபவன். கண → கணக்கு = கூட்டு, மொத்த அளவு. கணக்கு என்னுஞ்சொல், முதன்முதற் கூட்டற் கணக்கையே குறித்தது. 'அதற்குக் கணக்கில்லை, கணக்கு வழக்கில்லாமல், ,அது கணக்கன்று' என்பனவற்றில் கணக்கு என்பது அளவு அல்லது கூட்டு என்றே பொருள் படுதல் காண்க. கணக்க = போல. 'குரங்கு கணக்க ஓடுகிறான்' என்னும் உலக வழக்கை நோக்குக. அந்தக்கணக்கில் [கணக்காய்] = அதைப்போல. கணக்கு →கணக்கன் = கணக்குப் பார்ப்பவன், கணக்குத் தொழிற்குலத்தான். வடவர்காட்டும் gan என்னும் மூலம் இதற்குரி யதன்று [வ.மொ.வ. 106].

த. கணக்கன்>**Skt.** gaṇika.

கணக்கன்காடு *kaṇakkaṉ-kāḍu*, பெ.(n.) புதுக் கோட்டை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Pudukkottai district.

[கணக்கன் + காடு. காடு - காடழித்துச் செய்த நிலம்.]

கணக்கன்குப்பம் *kaṇakkaṉ-kuppam*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Viluppuram district.

[கணக்கன் + குப்பம்.]

கணக்கன்கோடாலி *kaṇakkaṉ-kōḍāli*, பெ.(n.) கணக்கில் வல்லவன் (நாஞ்); expert in accounts.

[கணக்கன் + கோடாலி.]

கணக்காக்கு-தல் *kaṇakkākku-*, 5 செ.குன்றாவி. (v.t.) ***கணக்குபோடு-தல்*** பார்க்க; see *kaṇakkupōḍu.*

ம. கணக்காக்கு. பட. கணக்காக்கு

[கணக்கு + ஆக்கு.]

கணக்காக *kaṇakkāga*, கு.வி.எ. (adv.) 1.(கால) அளவில்; (time) together. பேருந்துக்கு மணிக் கணக்காகக் காத்திருந்தேன் (உ.வ). 2. சரியான; exactly. கணக்காக ஒரு மணிக்குச் சாப்பிட்டு விடுவான் (உ.வ). 3. (ஒன்றின்) தன்மையில்; after the manner of,so,like. முனிவர் கணக்காக முடிவளர்க் கிறான் (உ.வ.).

மறுவ. கணக்காய்

[கணக்கு + ஆக. ஆகு + அ(வி.எ.ஈறு)– ஆக.]

கணக்காய் *kaṇakkāy*, கு.வி.எ.(adv) ***கணக்காக*** பார்க்க; see *kaṇakkāga.*

[கணக்கு + ஆய்.]

கணக்காய்இரு[1]-த்தல் *kaṇakkāy-iru*, 3 செ.கு.வி. (v.i.) திட்டமிட்டுச்செய்தல்; to be with calculative. கணக்காய் இருந்து கச்சிதமாய்ப்பிழை (உ.வ).

[கணக்கு + ஆய் + இரு.]

கணக்காய்இரு[2]-த்தல் *kaṇakkāy-iru*, 3 செ.கு.வி. (v.i.) திட்டமிட்டுச்செய்தல்; to be with calculative. கணக்காய் இருந்து கச்சிதமாய்ப்பிழை (உ.வ).

[கணக்கு + ஆய் + இரு.]

கணக்காய்ச்சல் *kaṇa-k-kāyccal*, பெ.(n.) ***கணைச் சூடு*** பார்க்க; see *kaṇai-c-cūḍu.*

[கணை + காய்ச்சல்.]

கணக்காய்வாளர் *kaṇakkāyvāḷar*, பெ.(n.) கணக்கைச் சரிபார்க்கும் அதிகாரி; auditor.

[கணக்கு + ஆய்வாளர்.]

கணக்காயர் *kaṇakkāyar*, பெ.(n.) 1. பயிற்று விப்போர்; teachers, instructors. *"கணக்காயர் பாடத்தாற் பெற்றதாம் பேதையோர் சூத்திரம்" (நாலடி.314).* 2. ***கணக்கன்*** பார்க்க; see *kaṇakkaṉ;* ***கணக்காயன்*** பார்க்க; see *kaṇak-k-āyaṉ.*

[கணக்கு + ஐயர். ஐயர்– ஆயர்.]

கணக்காயன் *kaṇakkāyaṉ*, பெ.(n.) 1. ஆசிரியன்; teacher. 2. புலவர்; poet.

[கணக்கு + ஐயன்(ஆயன்). கணக்கு - தமிழ் நெடுங்கணக்கு(தமிழ் எழுத்துகள் 247). கணக்காயன் - தமிழ் எழுத்து கற்பிக்கும் ஆசிரியன்.]

ஆசிரியன்மார் பழங்காலத்தில் புலவராக இருந்தமை யால் இச்சொல் புலவரையும் குறித்தது.

கணக்கான *kaṇakkāṉa*, பெ.எ.(adj.) குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட; in the number of. நூற்றுக் கணக்கான பேர் அங்குக் குழுமி யிருந்தனர் (உ.வ.).

[கணக்கு + ஆன.]

கணக்கிடு-தல் *kaṇakkiḍu-,* 17 செ.குன்றாவி. (v.t.) 1.அளவிடுதல்; to measure. இவ்வறையின் நீளத்தைக் கணக்கிடு (உ.வ.). 2. எண்ணுதல்; to reckon, to count. "அச்சிட்டப்படிவங்களைக் கணக்கிடு (உ.வ.). 3. மதிப்பிடுதல்; to estimate. அவன் நடத்தையைக் கணக்கிட்டு உறவு கொள் (உ.வ.). 4. கணக்குப்பார்த்தல்; calculate the accounts. நான் தரவேண்டியதைக் கணக்கிட்டுச் சொல் (உ.வ.).

[கணக்கு + இடு.]

கணக்கியல் *kaṇakkiyal,* பெ.(n.) வணிகவியல் சார்ந்த கணக்குப்பாடம்; accountancy.

[கணக்கு + இயல்.]

கணக்கில்லாமல் *kaṇakkillāmal,* பெ.எ.(adj.) அதிகப்படியான, மிகுதியான; immensely, exceedingly, very much.

ம. கணக்கா; **பட.** கணக்கில்லாதெ.

[கணக்கு + இல்லாமல்.]

கணக்கிலக்கை *kaṇakkilakkai,* பெ.(n.) வரிவகை; a tax (S.I.I. v136).

[கணக்கு + இலக்கை.]

கணக்கிலெடு-த்தல் *kaṇakkileḍu -,* 4 செ.குன்றாவி. (v.t.) பொருட்டாகக்கொள்ளுதல், மனங் கொள்ளுதல்; to take into account, to consider.குடிகாரன் பேச்சைக் கணக்கிலெடுக் கலாமா? (உ.வ.).

ம. கணக்கிலெடுக்கு **க., பட.** கணக்குக எத்து.

[கணக்கு + இல் + எடு.]

கணக்கீடு *kaṇakkīḍu,*பெ.(n.) மதிப்பீடு; valuation equation.துயர்துடைப்பு நிதியை மாவட்ட வாரியாக கணக்கீடு செய்து வழங்கவும் (உ.வ.).

[கணக்கு + ஈடு.]

கணக்கு[1] *kaṇakku,* பெ.(n.) 1. எண்; number. *"எண்ணெழுத்திகழேல்" (ஆத்திசூடி).* 2. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய கணித முறைகள்; the four simple rules of arithmetic viz. adding, deducting, multiplying and subtracting. 3.அளவு; limit, count.*"கணக்கிலாத் திருக்கோலம்" (திருவாச.30,4.).* 4. வரவு – செலவுக்குறிப்பு; account book, ledger.*"காவலர் கணக்காய் வகையின் வருந்தி"* (குறுந்.261) 5. கணக்கியல்; mathmatics. 6. திட்டம்; plan proposal. அவன் போட்ட கணக் கொன்று, இவன் போட்ட கணக்கொன்று, இரண்டுமே தவறானவை (உ.வ.).

ம. கணக்கு; **க.** கணிகெ.

E. calculaton **L.**calculatio **Skt.** ganaka

[குள் – (கூடுதல், சேர்தல்) கள் – கண் – கணக்கு.]

கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்னும் நால்வகைக் கணக்குள், முதலாவது தோன்றியது கூட்டற் கணக்கே. கூடு–கூட்டல். கணத்தல் = கூடுதல். கண – கணக்கு = கூட்டு, கூட்டுத்தொகை, மொத்த அளவு, அளவு, வரம்பு, கூட்டற்கணக்கு, கணக்கு. [வேர்ச்.கட். 141]. கணக்கு என்னுஞ்சொல் முதன்முதற் கூட்டற் கணக்கையே குறித்தது. அதற்குக் கணக்கில்லை, கணக்கு வழக் கில்லாமல், அது கணக்கன்று, என்பவற்றில் கணக்கு என்பது அளவு அல்லது கூட்டு என்றே பொருள் படுதல் காண்க [வ.மொ.வ.106].

வடவர் காட்டும் gan என்னும் மூலம் இதற்குரிய தன்று. "எண்ணும் எழுத்தும் கண் ணெத்தகும்" என்னும் வழக்கில் வரும் எண் கணக்கைக் குறிப்பதாகும். இதுவே முந்தியது. பழந்தமிழர் கணக்கு முறை சிற்றிலக்கம், கீழ் வாயிலக்கம், போன்றவற்றை உள்ளடக்கியது. ஒன்று, இரண்டு போன்ற எண்ணுப் பெயர்களும், முக்கால், அரைக்கால், மா,முந்திரி, இருமா, மாகாணி, கீழரை போன்ற கீழ்வாயிலக்க [பின்ன]ச் சொற்களும் மக்களிடையே பெருவழக்கெய்தி இருந்தன.

பண்டமாற்றுக்கும், நிலம் அளப்பதற்கும், தவசம் வாங்கவும், எஞ்சியதைப் பாதுகாக்கவும், படைவீரர்கள் அணிவகுக்கவும் கணக்கறிவு மிகவும் இன்றியமையாதது. மேற்குறிப்பிட்ட துறைகளில் பழந்தமிழர் சிறந்திருந்தமை அவர்களது கணக் கறிவைப் பறை சாற்றுவதாக அமைகிறது.

கூட்டல், கழித்தல், பெருக்கல், பங்கிடல், அடுக்கு [வருக்கம்], அடுக்கு மூலம் [வருக்க மூலம்] கணம் [ஓர் எண்ணை அதனாலேயே இரண்டு முறை பெருக்கல்] கணமூலம் (cube root) ஆகியவற்றை உள்ளடக்கிய எண்கணித [அட்டகணிதம்] த்தை பெரும்பாலும் மனக்கணக்கு முறையிலேயே பயின் றனர்.

கணக்கு[2] *kaṇakku,* பெ.(n.) 1. முறைமை; order sequence. *"அசித்தையும் இவனையும் காட்டுகிற*

கணக்கிலே" (ஈடு. 3–4.ப்ர). 2. ஒழுங்கான ஏற்பாடு; orderly arrangement, system. அவனது செயல் யாவும் கணக்காக இருக்கும் (உ.வ.). 3. வகை; manner, way. *"புகுவதெக்கணக்கம்மா"* (இரகு.திக்கு.163) 4. தொகை; sum. இத்திங்களின் மளிகைச் செலவின் கணக்கென்ன? (உ.வ.). 5. முடிவு; result, consequence, event 6. சாக்கு; pretext. திருமணத்திற்கு வந்த கணக்கிலே பெண்ணைப் பார்த்துச் சென்றான்(உ.வ.).

[கள் – கண் – கணக்கு.]

கணக்கு[3] *kaṇakku*, பெ.(n.) 1. எழுத்து; letter,writting *"இங்கு நின்றும் நெடுங்கணக்கு முறைமை"* (தொல்.எழுத்து94 உரை) 2. நூல்; literature. மேற்கணக்கும் கீழ்க்கணக்கும் சங்கம் மருவிய காலத்தவை (உ.வ.).

[கள் – கண் – கண்ணு (குழித்தல், எழுத்துப்பொறித்தல்)– கணக்கு. கண்ணெழுத்து, கண்ணழுத்தங்கோல் என்னும் சொல்லாட்சிகளை நோக்குக.]

கணக்கு[4] *kaṇakku*, பெ.(n.) 1. வழக்கு; litigation. *"இக்கணக்கிப் படிக்கார் வெல்லுவார்" (திருவாலவா 41.28).* 2. சூழ்ச்சி; strategem, artifrice, expedient. *"கதுமென வேக விடுத்தது நல்ல கணக்கன்றோ" (பிரபோத.24.25)* 3. செயல்; thing, affair, circumstance. எல்லாம் கணக்காய் முடித்திட்டான் (உ.வ.).

[கள் (சேர்தல், கூட்டுதல்) – கண்ட, (செய்தல்) கணக்கு.]

கணக்குகாட்டு–தல் *kaṇakku-kāṭṭu*, 5 செ.கு.வி. (v.i.) கணக்கொப்புவித்தல்; to render account.

[கணக்கு + காட்டு.]

கணக்குசுமத்து–தல் *kaṇakku-c-cumattu-*, 5 செ.குன்றாவி. (v.t.) ***கணக்கேற்றுதல்*** பார்க்க; see *kaṇakkēṟṟuthal*.

[கணக்கு + சுமத்து.]

கணக்குச்சுருணை *kaṇakku-c-curuṇai*, பெ.(n.) கணக்கோலைக்கற்றை; roll or file of acounts on palmyra leaves,

[கணக்கு + சுருணை.]

கணக்குச்சுருள் *kaṇakku-c-curuḷ*, பெ.(n.) ***கணக்குச்சுருணை*** பார்க்க; see *kaṇakku-c-curuṇai*.

[கணக்கு + சுருள்.]

கணக்குசொல்(லு)–தல் *kaṇakku-cul-*, 13 செ.கு.வி. (v.i.) கணக்கு விளத்தம் சொல்லுதல்; to give details of receipts and disbursements.

ம. கணக்கு பரயுக.

[கணக்கு + சொல்.]

கணக்குதீர்[1]–த்தல் *kaṇakku-tir-*, 4 செ.கு.வி.(v.t.) 1. ஒருமனதாய் அறுதியிட்டு நீக்கி விடுதல்; to dismis totally. கணக்கைத்தீர்த்தல்; to settle account. அவனிடம் நேர்மையில்லை; கணக்கைத் தீர்த்துவிடு (உ.வ.). 2. கொல்லுதல்; to slay, kill. எதிர்த்தவனைக் கணக்குத்தீர்த்துவிட்டான் (உ.வ.).

பட. கணக்கிதிதெ

[கணக்கு + தீர்.]

கணக்குதீர்[2]–தல் *kaṇakku-tir-*, 4.செ.கு.வி.(v.i.) 1. கணக்கு முடிதல்; to be closed, as an account. அந்தக் கடையிலிருந்த கணக்குதீர்ந்தது (உ.வ.). 2. வழக்குமுடிதல்; to be made, as a settlement அவனுக்கும் எனக்கும் இருந்த கணக்கு தீர்ந்தது (உ.வ).

ம. கணக்குதீர்க்குக; பட. கணக்கதிருசு.

[கணக்கு + தீர்.]

கணக்குப்படி *kaṇakku-p-paḍi*, வி.எ.(adv.) வரையறுக்கப்பட்டாங்கு; prescribed limit or formula

[கணக்கு + படி.]

கணக்குப் பதிவியல் *kaṇakku-p-padiviyal*, பெ.(n.) ***கணக்கியல்*** பார்க்க; see *kanakkiyal*

[கணக்கு + பதிவு + இயல்.]

கணக்குபார்[1]–த்தல் *kaṇakku-pār-*, 4. செ.குன்றாவி (v.i.) 1. எண்ணிக்கணக்கிடுதல்; to reckon, calculate. கணக்குப் பார்த்து வை, நாளை பணம் தருகிறேன் (உ.வ.). 2. கருதுதல்; to consider to think. எதையும் கணக்குப் பார்த்துச் செயற்படு (உ.வ.).

ம. கணக்காக்குக; பட.கணக்குநோடு.

[கணக்கு + பார்.]

கணக்குப்பார்[2]–த்தல் *kaṇakku-p-pār*, 4 செ.குன்றாவி. (v.t.) கணக்கு சரிபார்த்தல்; to audit, accounts.

[கணக்கு + பார்.]

கணக்குப்பிள்ளை *kaṇakku-p-piḷḷai,* பெ.(n.) 1. ஊர்க்கணக்கு எழுதுபவர்; village karnam. 2.காசாளர்; cashier. 3. நிறுவனக்கணக்கர்; bursar 4. எழுத்தர்; writer. 5. முகவர்; agent. 6. கப்பல் எழுத்தர்; shipping clerk. 7. பணம் தண்டுநர்; bill collector. 8. திண்ணைப்பள்ளி ஆசிரியர்; village teacher.

[கணக்கு + பிள்ளை.]

கணக்கு, கணக்கன் என்பனவே சாலும். பிள்ளை என்பது இடைக்காலச் சேர்ப்பு. அரண்மனைக் கணக்கெழுதுபவனுக்குத் திருமுகக் கணக்கு என்றும் பெயர் [பழந்தமிழாட்சி.30].

கணக்குப்பிள்ளை வலசை *kaṇakku-p-piḷḷai valasai,* பெ.(n.) நெல்லை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thirunelveli district.

[கணக்கு + பிள்ளை + வலசை – கணக்குப்பிள்ளை வலசை.]

கணக்குபூட்டு–தல் *kaṇakku-p-pūṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) கணக்கைப் பேரேட்டுக்குக் கொண்டு வருதல் (இ.வ); to post up accounts into the ledger.

மறுவ. கணக்குச் சுமத்துதல், கணக்கேற்றுதல்.

[கணக்கு + பூட்டுதல்.]

கணக்குப்போடு–தல் *kaṇakkuppōḍu,* செ.குன்றாவி.(v.t.) 1. எண்ணுதல், கருதுதல்; to consider, think. 2. கணக்குக் கூட்டுதல்; to estimate, enumerate, regard.

க. கணகிக; **ம.** கணக்காக்குக; **பட.** கணக்காக்கு.

[கணக்கு + போடு.]

கணக்குமானியம் *kaṇakku-māṇiyam,* பெ.(n.) கணக்கனுக்குக் கொடுக்கும் இறையிலி நிலம்; land granted rent-free to the village accountant for his services, a service in am.

[கணக்கு + மானியம்.]

கணக்குருவம் *kaṇakkuruvam,*பெ.(n.) அறுதியிட்ட கணக்குக் குறிப்பு(w.g.); written memorandum of an adjusted account.

[கணக்கு + உருவம்.]

கணக்குவழக்கு *kaṇakku-vaḻakku,* பெ.(n.) 1. முறைமை; justice, order, regulation. *"அடியேன் கண்கொள்வதே கணக்குவழக்காகில்" (தேவா.1110 4)* 2. அளவு; limit,bound *"கணக்கு வழக்கைக் கடந்தவடி" (தேவா.969,3)* 3. பணி; accounts, pecuniary affairs. அவனுடைய கணக்குவழக்கு எப்படி இருக்கிறது? (உ.வ). 4. கொடுக்கல் வாங்கல்; money dealings. எனக்கும் அவனுக்கும் கணக்கு வழக்குண்டு (உ.வ).

கணக்கு வாய் பாடு *kaṇakku-vāy-pāḍu-,*பெ. (n.) orthematical table.

[கணக்கு + வாய் பாடு.]

கணக்குவாரியம் *kaṇakku-vāriyam,* பெ.(n.) ஊரவையின் வரவு செலவுகளை மேற்பார்க்கும் குழு; supervising board on income and expenditure. *"காவிரிப்பாக்கமாகிய அவநிநாராயண சதுர்வேதி மங்கலத்துள் இவ்வாட்டை ஸம்வத்சரவாரிய பெருமக்களும், கணக்கு வாரியப் பெருமக்களும் உள்ளிட்ட மஹாசபை" (தெ.கல்.தொ.3.3:கல்.156)*

[கணக்கு + வாரியம்.]

கணக்குவிடு[1]–தல் *kaṇakku-viḍu,*18 செ.குன்றாவி. (v.t.) 1. எண்ணிக்கைத் தவறுதல்; to miss a link in counting. 2. தொடர்பற்றுப்போதல்; to cut as a relationship.

[கணக்கு + விடு.]

கணக்குவிடு[2]–தல் *kaṇakkuviḍu-,*செ.கு.வி. (v.t.) கதைவிடுதல்; to concoct, fabricate.(யாழ்ப்)

[கணக்கு + விடு.]

கணக்குவை–த்தல் *kaṇakkuvai,*4 செ.குன்றாவி (v.t.). 1. ***கணக்கிடுதல்*** பார்க்க; see *kaṇakkiḍu.* 2. கடன் கணக்கு வைத்துக் கொள்ளுதல்; have a credit account.

[கணக்கு + வை.]

கணக்கெடு–த்தல் *kaṇakkeḍu,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. எண்ணுதல்; to count. மந்தையிலுள்ள மாடுகளை கணக்கெடுத்துவா (உ.வ). 2. மக்கள் தொகை கணக்கெடுத்தல்; to enumerate. வாக்காளர் பட்டியல் கணக்கெடுத்தல் பணி முடிந்த பின்னார்த் தேர்தல் நடத்தப்படும் (உ.வ).

[கணக்கு + எடு.]

கணக்கெடுப்பவர் *kaṇakkeḍuppavar,*பெ.(n.) மக்கள்தொகை போன்ற கணக்குகளைத் தொகுப்பவர்; enumerator.

[கணக்கு + எடுப்பவர்.]

கணக்கெடுப்பு *kaṇakkeḍuppu,* தொ.பெ.(vbl.n.) மக்கள் தொகை முதலியவற்றை கணக்கிடுதல்; enumeration. வாக்காளர் பட்டியல் கணக்கெடுப்பு நிறைவடைந்து விட்டது (உ.வ.).

[கணக்கு + எடுப்பு.]

கணக்கேற்று-தல் *kaṇakkēṟṟu-,*4 செ.கு.வி.(v.t.) 1. கணக்குப்பதிதல்; to charge into an account. நாள்தோறும் வரவு செலவினைக் கணக்கேற்று (உ.வ).

[கணக்கு + ஏற்று.]

கணக்கொதுக்கு-தல் *kaṇakotukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கணக்குத்தீர்த்தல்; to settle an account. 2. கெடுத்தல்; to ruin, reduce to poverty.

[கணக்கு + ஒதுக்கு.]

கணக்கொப்பி-த்தல் *kaṇakkoppi-,* 4 செ.குன்றாவி (v.t.) ***கணக்கொப்புவி*** பார்க்க; see *kaṇakkoppuvi-*

[கணக்கு + ஒப்பி.]

கணக்கொப்பிவி-த்தல் *kaṇakkōppuvi-,*4 பி.வி. (caus.) கணக்குகளைப் பிறர் ஒப்புக் கொள்ள வழங்குதல்; to render account.

[கணக்கு + ஒப்பு + வி. 'வி' பி.வி.ஈறு.]

கணக்கோலை *kaṇakkōlai,* பெ.(n.) 1. கணக்கெழுதப் பெற்ற ஏடு; palmyra leaf on which accounts are written. 2. கணக்கெழுதற்கேற்ற ஓலை (வின்.); indented palmyra leaves useful for writing accounts.

ம. கணக்கோல

[கணக்கு + ஓலை.]

கணகண¹-த்தல் *kaṇakaṇa-,* 4.செ.கு.வி.(v.i.) ஒளித்தல்; to sound, rattle, jingle, tinkle. *"மேரு திருக்குளம்பிற் கணகணப்ப" (திவ்.பெரியதி.).*

[கண + கண (இரட்டைக்கிளவி).]

க. கணகணசு, கணகண; **து.** கணிலு, கணங்பு; **தெ.** கணகண; பட. கணானு (உரையாடு). **Pali**; gența. **Turk**.chan.

கணகண²-த்தல் *kaṇa-kaṇa-,*4.செ.கு,வி.(v.i.) உடம்பு சூடுறதல்; to be hot as of the body. காலையிலிருந்து உடம்பு கணகணக்கிறது (உ.வ.).

[குண் → கண் → கண. கணகண-த்தல் (வே.க.187).]

கணகணப்பு *kaṇa-kaṇappu,*பெ.(n.) இயல்பிற்கு மீறிய உடற்காங்கை; temperature of the body slightly more than normal. காய்ச்சலால் உடல் கணகணப்பாக இருக்கிறது (உ.வ.).

க. கணகணி; **Mar.** kanakana.

[கண + கணப்பு.] ஒலிக்குறிப்பின் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல்.]

கணகணெனல் *kaṇa-kaṇ-eṉal,*பெ.(n.) 1. ஒலிக் குறிப்பு; thintinnabulati on. *"உடைமணி கணகணென" (திவ். பெரியாழ்.1,7,7).* 2. மிக்கெரிதற் குறிப்பு; burning fiercely, as fire with a hollow roar. 3. உடம்புச் சூட்டுக் குறிப்பு; feeling feverish.

[கண + கண + எனல். கணகண - ஒலிக்குறிப்பு இரட்டைக் கிளவி.]

கணகம் *kaṇagam,* பெ.(n.) 27 தேர் யானைகளும், 81 குதிரைகளும், 135 காலாட்களுமுள்ள படைப்பிரிவு (பிங்.); division of an army consisting of 27 chariots and elephants, 81 horses and 135 footmen.

[கணம்-கணகம்-கணம் : கூட்டம்,திரள். (வே.க.135).]

கணகன் *kaṇagaṉ,*பெ.(n.) 1.கணக்கன்; accountant இவ்வூர்க் கணகன் பஞ்சநதி குமணன் (S.I.I.iii.88). 2. கணியன்; astrologer.

ம. கணக்கன்

[கணக்கன் - கணகன்]

கணகாட்டு *kaṇa-kāṭṭu,*பெ.(n.) தொல்லை; trouble (ம. அக).

[கணகம் + ஆட்டு - கணகாட்டு : போராட்டம், தொல்லை.]

கணங்கம் *kaṇaṅgam,* பெ. (n.) சுண்ணாம்பு; lime.

[கணம் - கணங்கம்.]

கணச்சூடு *kaṉaccūḍu*, பெ.(n.) ***கணைச்சூடு*** பார்க்க; see *kaṉaiccūḍu*.

[கணைச்சூடு – கணச்சூடு]

கணட்டி *kaṉaṭṭi*, பெ.(n.) குறிப்பிட்ட அளவுடைய வயல் (ம.அக); wet land, field.

[கள் – களத்தி – கணட்டு.]

கணத்தார் *kaṉattār*, பெ. (n.) ஊரவை மேலாளர்கள் (S.M.P.TJ.569); managers of village affairs.

ம. கணத்தார்.

[கணம் + அத்து + ஆர். அத்து–சாரியை. ஆர்(பபா.ஈறு)]

கணத்தாளி *kaṉatāḷi*,பெ.(n.) கூந்தற்பனை; talipot-palm.

[கணம் + தாளி. தாளி = பனை]

கணத்தி *kaṉatti*, பெ.(n.) 1. ஒருவகை வைப்பரிதாரம். (மூ.அ.); a kind prepared arsenic. 2. செங்கடம்பு; small Indian oak. 3. கணைச்சூட் டைத் தணிக்கும் மருந்து; medicine which decsreases the heat of the body.

[கண+கணத்தி.]

கணதரன் *kaṉa-daraṉ*, பெ.(n.) அருகன்; Arhat, *"கணதர ரேறுசெந் தாமரைகாண்" (திருநூற்.59)*

[கணம் + தரன். கணம் = கூட்டம், குழு.]

கணந்துள் *kaṉanduḷ*,பெ.(n.) கூட்டமாக வாழும் பறவை; a kind of bird. *"இருங்கோட் டஞ்சிறை நெடுக்காற் கணந்துள்" (குறுந்.350).*

[கணம் – கணந்துள் (வேக.135).]



கணந்துள்

கணநாதநாயனார் *kaṉa-nāda-nāyaṉār*,பெ.(n.) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர். (பெரியபு); one among the 63 canonized Saiva saints.

[கணம் + நாதன் + நாயனார்.]

கணநாதன் *kaṉa-nādaṉ*,பெ.(n.) 1. சிவகணத் தலைவன்; chief of Siva's hosts. நடந்தெதிர்ந்த கணநாதரை யெல்லாம் (கந்தபு.தாரக.123) 2. பிள்ளையார்; ganesa. 3. ***கணநாத நாயனார்*** பார்க்க; see *kananadanayanar*. *"கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்" (தேவா.737,6).*

[கணம் + நாதன்.]

கணப்படுப்பு *kaṉa-p-paḍuppu*,பெ.(n.) கரியடுப்பு; coal oven.

மறுவ. குமுட்டி, கரியடுப்பு

[கணப்பு + அடுப்பு]

கணப்பறை[1] *kaṉa-p-aṟai*, பெ.(n.) வெப்ப அறை; hot room

[கணப்பு + அறை.]

கணப்பறை[2] *kaṉa-p-paṟai*,பெ.(n.) தோற்கருவி வகை; a kind of drum (சிலப்.3,27 உரை). *"திமிலை குடமுழாத்தக்கை கணப்பறை"*

ம. கணப்பற.

[கணை + பறை.]

கணப்பாண்டு[1] *kaṉappāṇḍu*, பெ.(n.) குழந்தைகட்கு ஏற்படும் ஒருவகை குருதி சோகை; a childrens' deseases as of anaemia.

[கணை + பாண்டு. கணை = குழந்தைநோய்.]

கணப்பாண்டு[2] *kaṉa-p-pāṇḍu*,பெ.(n.) 1. குளிர் காயுங்கனல்; fire kindled give warmth to one feels cold. குளிர் அதிகமாக இருப்பதால் கணப்படுப்புப் போடு (உ.வ.). 2. ***கணப்புச்சட்டி*** பார்க்க; see *kaṉappu-c-caṭṭi*

[கணப்பு + பாண்டு.]

கணப்பு[2] *kaṉappu*, பெ.(n.) உடற்காங்க்கை, கணகணப்பு, சூடு (யாழ்.அக.); warmth

[கள் – கள – கண. கணப்பு (செல்வி78.சிலை242]

கணப்பு காட்டு–தல் *kaṇappu-k-kāṭṭu*,5 செ.குன்றாவி. (v.t.) சூடுண்டாக்குதல்; to heat, to make hot.

[கணப்பு + காட்டு.]

கணப்புச்சட்டி *kaṇappu-c-caṭṭi*, பெ. (n.) 1. நெருப்புச் சட்டி; fire-pot 2. குளிர்காய்தற்குரிய தீப்பெய் கலம்; fire kindled earthen vessel. In which fire is kept to provide heat against cold weather.

மறுவ. கும்பிடுசட்டி

[கணப்பு + சட்டி.]

குள்→குண்→குண்பு→கும்பு. ஓ.நோ: சண்பு →சம்பு, கொண்பு→கொம்பு. கும்புதல் = சமைக்கும் உணவு தீய்ந்து போதல், கும்பல் = கும்பல் நாற்றம். கும்பி வீசுகிறது என்னும் வழக்கை நோக்குக. கும்பு→கும்பி = –தழல், 2. சுடுசாம்பல் எரி நரகம் "கும்பி கும்மு நரகர்கள்" [திவ். திருவாசம். 3; 7;8] வடமொழியிலுள்ள கும்பீ என்னுஞ்சொல், கும்பத்தையன்றி நரகத்தைக் குறிக்காது. ஆதலால் கலத்திற் சமைத்தல் அல்லது கலத்தைச்சுடுதல் என்று பொருள் படும் 'கும்பீபாக' என்ற தொடர்ச்சொல்லை கும்பி [நரகம்] என்னும் சொற்கு மூலமாகச் செ.அக. காட்டியிருப்பது தவறு.தீயோர்க்குத் தீயுழி [நரகம்]. கலஞ்சுடு சுள்ளையும் சுடுகலமும் போன்றிருக்கிறதாம்!

கும்பியிடுசட்டி = கும்பிடுசட்டி 1. கணப்புச் சட்டி 2. தட்டார் நெருப்புச் சட்டி. தெ. கும்பட்டி, க. கும்பட்டெ. கணப்பு = 1. எரிதல், 2. சுடுதல். கணகணவென்று எரிகிறது என்பது உலக வழக்கு கண → கணப்பு = குளிர்காயும் தீ. கணைப்புசட்டி = குளிர் காயும் நெருப்புச் சட்டி (வே.க. 186-187).



கணப்புச்சட்டி

கணப்புல் *kaṇappul*, பெ.(n.) ஒருவகைப்புல்; a kind of grass.

[கண + புல். கண = திரட்சி.]

கணப்பூண்டு *kaṇa-p-pūṇḍu*, பெ.(n.) மருந்துச் செடிவகை. (பதார்த்த.550.); a medicinal plant.

மறுவ. சின்னம்மான் பச்சரிசி

ம. கணப்பூடு, கணப்பூட்டு.

[கணம் + புல்]

கணச்சூட்டைத் தணிக்கும் தன்மைடையது.

கணப்பெருமக்கள் *kaṇa-p-peru-makkaḷ*, பெ.(n.) பழங்கால ஊரவை மேலாளர்கள்; managers of village affairs in ancient times. *"அரசாணைப்படி ஊரை ஆள்வதற்கு ஊர்மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவையினர், கணப்பெருமக்கள்" (பழ.தமி.31).*

மறுவ. வாரியப்பெருமக்கள், கணவாரியப்பெருமக்கள்.

[கணம் + பெருமக்கள்.]

கணப்பொருத்தம் *kaṇa-p-poruttam*, பெ.(n.) 1. செய்யுள் முதன்மொழிப் பொருத்த வகைகளுள் ஒன்று; rule of propriety which lays down that the first word in a poem shall be one of *nir-k-kanam*, one of the ten *ceyyunmutan-moli-p-poruttam*. (வெண்பாப். முதன்.20.) 2. திருமணப் பொருத்தங் களுள் ஒன்று.(சோதிட. சிந். 195); (Astrol) correspondence between the horoscopes of the prospective bride and bride-groom in respect of the three kanams, viz,dēva-kanam, irāṭcata-kanam, mānta-kanam, one of ten kaliyāṇa-p-poruttam.

[கணம் + பொருத்தம்.]

கணப்பொழுது *kaṇa-p-poḻudi*, பெ.(n.) நொடிப் பொழுது; instant, moment of time. கணப்பொழுதில் கடைக்குச் சென்று வா (உ.வ.).

[கணம் + பொழுது. கணம் = நொடி.]

கணபங்கம் *kaṇa-paṅgam*, பெ.(n.) **கண அழிவு** பார்க்க; see *kaṇaaḻivu*. *"புத்தி கணபங்கமெனப் புத்திகெட்டபுத்தனுரை" (சிவப்.பிரபந்.சிவஞா. நெஞ்சு 210.).*

*[கணம் + பங்கம். **Skt.**banga>பங்கம்.]*

கணபங்கவாதி *kaṇa-paṅga-vati*, பெ.(n.) 1. உலகம் நொடிதோறும் தோன்றியழியும் என்று வழக்கிடு பவன்; (சி.போ.பா.அவை.); one who asserts that the universe incessantly appearing every instant and

is also is rapidly dissolving. ***கணஅழிவாளி*** பார்க்க; see *kanaalivali.*

*[கணம் + பங்கம்+வாதி. **Skt.**bangavadi>த.பங்க.]*

கணபதி *kaṇa-padi,* பெ.(n.) 1. பிள்ளையார் *"கச்சியின் விகடசக்ரக்கணபதிக்கு" (கந்தபு.காப்பு);* Ganēsa, who is the chief of Siva's hosts. 2. நூற்றெட்டு சிற்றிலக்கியங்களுள் ஒன்று; name of a citrilakiyam.

[கணம் + பதி.]

கணபர் *kaṇabar,*பெ.(n.) சிவகணத் தலைவர்; chief attendant, as guardians of their hosts. *"கணபர்கள் வானோரொடு"(கோயிற்பு.திருவிழா.47).*

[கணம் + அர் : கணமர் – கணபர்.]

கணபிச்சை *kaṇa-piccai,*பெ.(n.) இல்வாழ்வோன் எடுக்கும் அரிசிப்பிச்சை. (சைவச.பொது.257,உரை) rice gleaned by an householder, as alms from door to door.

[கணம் : சிறிது, சிறிதுநேரம் இரப்பவன்.]

கணம்[1] *kaṇam,* பெ.(n.) 1. திரட்சி; sphericity; globularity. *"கணங்குழை நல்லவர்" (கலித்.71.19).* 2. வட்டம்; circle.

[கள் – களம் – கணம்.கணம் – கூட்டம்.]

பல பொருள்கள் ஒன்றாகச் சேரின் திரட்சியுண்டாகு மாதலால், கூடுதற் கருத்தில் திரட்சிக் கருத்து தோன்றும். குள்→ களம்பு = விலங்குகளின் திரண்ட காலுகிர். குழு → குழை = திரண்ட காதணி குழு→கழு→ கழுகு = பெரும்பறவை குல் →குண்டு →கண்டு = கட்டி, நூற்றிரளை. கண்டு → கண்டம் = பெரிய துண்டு. கணைக்கால் = திரண்ட கெண்டைக்கால். கணை = திரண்டபிடி. கணையம் = திரண்ட எழு. குறடு = திண்ணை. குண்டை [காளை] குண்டாந்தடி, குண்டடியன் [ஆண்சிவிங்கி], குண்டுக்கழுதை என் பனவும் திரட்சி பற்றியனவே [வே.க. பக். 143].

கணம்[2] *kaṇam,*பெ.(n.) 1. மக்கட்கூட்டம்; group of people. 2. பொருட்தொகுதி; collection of articles. 3. இனவகுப்பு; class. 4. இனமரபுக்குழு; tribe. 5.கிளைமரபு, தனிக்குழு; clan.6.மந்தை; flock. 7. விலங்குக்கூட்டம்; herd. 8. தொடர் நிகழ்வு; series. 9.திரண்டோர் ; concourse of people 10. குழு; company. 11. ஒருங்குகூடுதல்; assembly.

*[கள் – களம் – கணம். த. கணம்>**Skt**. gaṅa. **கணக்கன்** பார்க்க; see kanakkan]*

கணம்[3] *kaṇam,* பெ.(n.) 1. பதினெண்கணம்; celestial hosts. 2. பதினெட்டு எண்ணும் எண் (தைலவ.); the number 18. 3. பேய்; devil, demon.(பிங்). 4.**கணகம்** பார்க்க; see *kana* (விதான. கடிமண.4) 5. **கணப்பொருத்தம்** பார்க்க; see *kana-p-poruttan.*

[கள்–களம்–கணம்]

கணம்[4] *kaṇam,*பெ.(n.) 1. நொடிப்பொழுது; moment of time shortest duration of time. *"வெகுளி கணமேயுங் காத்தலத்து" (குறள்.29.).* 2. வாய்ப்பான நேரம்; appropriate time, opportune moment, occasion. அதை, அக்கணத்தில் முடிப்பதே நன்று (உ.வ). 3. மீச்சிறியது; minute. 4. நீர்த்துளி; a drop of water (சா.அக).

[கண் – கணம். 'கண்' இடப்பொருளொடு நேரப்பொருளையும் குறித்து வந்தது. 'அம்' சொல்லாக்க ஈறு.]

கணம்[5] *kaṇam,* பெ.(n.) 1. திப்பிலி; (பிங்.) long pepper. 2. மிளகு; pepper.

[கள் → கண் → கணம் → (கரியது).]

கணம்[6] *kaṇam,*பெ.(n.) குழந்தை நோய் வகை; child's disease.

[குண் → கண் →கண →கணம் (வேர்ச். கட் 187).]

கணம்[7] *kaṇam,* பெ.(n.) ஒருவகைக் கணக்கு மொழி; set in set theory of new mathematics.

[கள் → கண் → கணம்.]

கணம்[8] *kaṇam,*பெ.(n.) ஒருவகைப் புல்; species of grass.

[கண →கணம்.]

கணம்புல் *kaṇampul,* பெ.(n.) **கணைப்புல்** பார்க்க; see *kaṇaippul. "ஆயமுயற்சியி[illegible]லரிந்த கணம்புல்லுக் கொடுவந்து" (பெரியபு.கணம்புல்.5).*

ம. கணப்புல்லு.

[கணைப்புல் → கணம்புல்.]

கணம்புல்ல நாயனார் *kaṇam-pulla-nāyaṉār,*பெ.(n.) அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவர்; a canonized saiva saint *one of 63. "கலை நிலவாரடி பரவும் கணம் புல்லர்"(பெரியபு.திருத்தொண்டர்–51).*

[கணம்புல்லர் + நாயனார் → அர் – ஆண்பாலிறு. இவர் கணம் புல்லைக் கொண்டு விளக்கெரித்து வீடுபேறடைந்ததாகத் திருத்தொண்டர் மாக்கதை கூறும்.]

கணமாந்தம் *kaṇa-māndam*, பெ.(n.) காய்ச்சலோடு கூடிய மாந்தநோய்(வின்.); one of eight mantam arising out of fever and disordered bowels.

[கணம் + மாந்தம்.]

கணமூலம்[1] *kaṇamūlam*, பெ.(n.) சூட்டினால் உண்டாகும் மூலநோய்; piles.

[கணை – கணம் + மூலம், கணை = சூடு.]

கணமூலம்[2] *kaṇamūlam*, பெ.(n.) திப்பிலி வேர்; root of long pepper.

[கணம்[5] + மூலம். மூலம் = வேர்.]

கணமூலி *kaṇamūli*, பெ.(n.) திப்பிலி; long pepper.

[கணமூலம் – கணமூலி.]

கணமொழி *kaṇa-moḻi*, பெ.(n.) கூட்டத்தாரைக் குறிக்கும் சொல் (பேரகத்.139); word denoting a group.

[கணம் + மொழி. முழு → மொழு → மொழி = கூட்டத்தார். கணம் = வாரியம்.]

கணவம் *kaṇavam*, பெ.(n.) அரசமரம்; pipal tree. *"சாகை கணிறைபணைக் கணவம்." (அரிசமய.பரமபத.2)*

ம. கணவம்

[கணம் = கணவம். கணம் = திரட்சி.]

கணவர்[1] *kaṇavar*, பெ.(n.) கூட்டத்தார்; members of a group or assemblage. *"பூதகணவர்" (கந்தபு.திருக்கயி.8).*

[கணம் = கணவர். 'அர்' பன்மையீறு.]

கணவர்[2] *kaṇavar*, பெ.(n.) ***கணவன்*** பார்க்க; see kanavan.

[கணவன் – கணவர். அர்–உயர்வுப்பன்மை ஈறு.]

கணவலர் *kaṇa-valar*, பெ.(n.) அலரி; sweet oleander. *"கள்ளார்துழாயுங்கணவலரும்" (திவ்.பெரியதி.11,7,6).*

க. கணகலு

[கணம் +அலர். கணம் = கொத்து. கணவலர் – கொத்தானமலர்.]

கணவன்[1] *kaṇavaṉ*, பெ.(n.) மண உறவால் ஒருத்தி யுடன் வாழும் உரிமை பெற்றவன்; a man joined to a woman by marriage, husband. *"எங்கணவ ரெந்தோண் மேற் சேர்ந்தெழினும்."(நாலடி. 385)*

மறுவ. கொழுநன், கொள்நன், கட்டினவன், கண்டன், வீட்டுக்காரன், கேள்வன், மணவாளன், உரிமையோன், துணைவன், அகமுடையான், கொண்கன்.

ம. கணவன்; **க;** பட. தண்ட; **கோத.** கண்ட் (ஆண்) குட. கண்டெ (ஆண்) **து.** கண்டுசு, கண்டனி, கண்டன்யெ, **தெ.** தண்டு (வீரம், விலங்குகளின் ஆண்).

[கள்தல் = கூடுதல், பொருந்துதல், ஒத்தல். கள் →கள → கண. கணத்தல் = கூடுதல்,ஒத்தல். கள்→களம் = கூட்டம்,அவை. களம் → கணம் = கூட்டம். கணம் → கணவன் = மனைவியொடு கூடுபவன் (வ. வர. 166).]

கணவன்[2] *kaṇavaṉ*, பெ.(n.) தலைவன், அதியன் (யாழ்.அக); leader, chief.

[கணம்(கூட்டம்) + அன் – கணவன் – கூட்டத்தார் தலைவன்]

கணவன்[3] *kaṇavaṉ*, பெ.(n.) ஒருவகை இதளியச் செய் நஞ்சு (சூத பாடாணம்); a kind of mercurial poison. (சா. அக)

[கள் – கண் + கணம் + அன் – கணவன் (கூட்டி செய்யப்பட்டது)]

கணவாட்டி *kaṇavāṭṭi*, பெ.(n.) கணவாள இனப்பெண் (நன்.276, மயிலை); woman of the kanavalam caste.

[கணவாள் + த் + இ – கணவாட்டி.]

கணவாய்[1] *kaṇavāy*, பெ. (n.) இரண்டு மலை களுக்கிடையேயுள்ள பிளவு.(பிங்.); defile between hills; mountain pass, ravine ghat. தென்மேற்குப் பருவக்காற்று பாலக்காட்டுக் கணவாய் வழியாக வருவதால் கோவை குளிர்ச்சியாயிருக்கிறது (உ.வ.).

ம. கணவா; **க.** கணவெ, கணிவெ, கணமெ, கனுவெ; குட. கனுவென் (சமவெளிப்பகுதி); **தெ.** கனும, கனம; **து.** கணிமெ.

[கணம் + வாய் = கணவாய். இருமலைகள் கூடும் இடத்திலுள்ள வழி.]

கணவாய்[2] *kaṇavāy*, பெ. (n.) தொல்லையுறுங்கால் கருப்பு நீர்மத்தை வெளிப்படுத்தும் சிப்பிவகை (யாழ்ப்); cuttlefish, which sheds black liguid when it comes under hardship.

ம. கணவ; க. கணப.

[கணவாய் = மலைகளின் இடைவழி, பாறையிடுக்கு, கடற்பாறை இடுக்கில் வாழும் இயல்பால் இஃது கணவாய் எனப்பட்டது.]

கணவாய்ச் சுறா *kaṇavāy-c-cuṟā*, பெ.(n.) சுறாமீன் வகை (நெல்லை. மீனவ.); a kind of shark fish.

[கணவாய் = நீண்டவாய். கணவாய் + சுறா.]

கணவாய்ப்பாறை *kaṇavāy-p-pāṟai*, பெ. (n.) கணவாய் மீன் மேயு மொருபாறை (தஞ்சை.மீனவ.); a kind of rock where the cuttlefish graze.

[கணவாய் + பாறை.]

கணவாய்ப்பூச்சிக்கூடு *kaṇavay-p-pūcci-kūḍu*, பெ.(n.) ஒருவகைச்சிப்பி; a chephalopod (சா.அக).

[கணவாய் + பூச்சி + கூடு.]

கணவாய்மை *kaṇavāymai*, பெ.(n.) ஒருவகைச் சிப்பியின் கருநீர்(வின்.); black liquid found in the shell of a cuttlefish, sometimes used for ink.

[கணவாய் + மை. மை = கருமை கருநீர்.]

கணவாய்விளக்கு *kaṇavāy-viḷakku*, பெ.(n.) கடல் விளக்கு; sea lamp.

[கணவாய் + விளக்கு.]

கணவாரியப்பெருமக்கள் *kaṇa-vāriya-p-perumakkaḷ*, பெ. (n.) **கணப்பெருமக்கள்** பார்க்க; see *kaṇa-p-perumakkaḷ*. "... *கோயிற் கணவாரியப் பெருமக்களோமே ..." (S.I.I.Vol.13. Insc.274. Sn.17.).*

[கண்வாரியம் + பெருமக்கள்.]

கணவாளம் *kaṇavāḷam*, பெ.(n.) ஒரு பழைய குலம்; an ancient caste. "*கணவாள குலத்தின் செட்டிப் பிள்ளையப்பன் (பெருந்தொ.1349.).*

[கணம்(கூட்டம்) + ஆளம் கணம் = கூட்டம், ஒற்றுமை ஆளம் – ஆளுந்தன்மை கணவாளம் = கூடிவாழும் ஒற்றுமையைப் பேணிக்காக்கும் கூட்டத்தார்]

கணவாளன் *kaṇavāḷaṉ*, பெ.(n.) கணவாள இனத்தான் (இலக்.வி.52,உரை); man of the kanavalam caste.

[கணவாளள் + அன்]

கணவி *kaṇavi*, பெ.(n.) மனைவி; wife.

கணவன்(ஆ.பா.) – கணவி(பெ.பா). 'இ'.பெ.பா.ஈறு (கோவலன்கர்ணகதை.)

[கணம் = கூட்டம், குழு கணம் → கணவி (குடும்பத்தலைவி).]

கணவிரம் *kaṇaviram*, பெ.(n.) **கணவீரம்** பார்க்க; see *kaṇavīram*. *"கணவீரமாலை" (மணிமே. 3,104.).*

[கணம் + விரி – கணவிதி.]

கணவிரி *kaṇaviri*, பெ.(n.) **கணவிரம்** பார்க்க; see *kaṇaviram*. *"கணவிரிமாலையிற்கட்டிய திரள்புயன்" (மணிமே.மலர்வன.104).*

[கணம் = கொத்து. கணம் + விரி. கணவிரி கொத்தாக விரியும் தன்மையது.]

கணவிருமல் *kaṇa-v-irumal*, பெ.(n.) கணநோயினால் ஏற்படும் இருமல்; cough owing to.

[கணம் + இருமல்.]

கணவீரம் *kaṇavīram*, பெ.(n.) செவ்வலரி; red oleander. *"பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை" (திருமுரு.236.).*

ம. கணவீர; தெ. கன்னெரு, கன்னெரு, கென்னேரு, கெண்டெனெ; **Mar.** kanera; **Skt.**karavira; **H.**kanera; **Pkt.**kane, kanvira.

[கணம் + விரி – கணவிரி. கணவீரம்.]

மணமிகுந்த இச்செடியின் வேர் நச்சுத்தன்மை வாய்ந்தது. இதன் இலையை இலக்கியத்தில் ஈட்டிக்கு ஒப்புமைப்படுத்துவர்.

கணவுமூலி *kaṇavumūli*, பெ.(n.) நச்சுமூங்கில்; poisionous bamboo.

[கணவு + மூலி.]

கணவெட்டை *kaṇaveṭṭai,* பெ.(n.) வெப்ப நோய்வகை; the whites due to heat. *"அணத்தடர் வெண்மையும் கணவெட்டையும்." (தைல.தைலவ.110)*

[கணம் + வெட்டை. கணம் = சூடு.]

கணவெதுப்பு *kaṇaveduppu,* பெ.(n.) **கணச்சூடு** பார்க்க; see *kaṇaccūḍu.*

[கணம் + வெதுப்பு.]

கணன்[1] *kaṇaṉ,* பெ.(n.) திருடன் (சைவசு.பொது. 248); thief, rogue.

[கள்ளன் கணன் → களன் → கணன்.]

கணன்[2] *kaṇaṉ,* பெ.(n.) கூட்டம், தொகுதி; collection, aggregation, whole series. *"கணனடங்கக் கற்றானு மில்" (சிறுபஞ்.31.).*

[கணம் – கணன்.(வே.க.135.)]

கணனம் *kaṇaṉam,* பெ.(n.) 1. கோள்களின் இயக்கத்தைக் கணிக்கை; (astro.) calculation of the movement of planets etc. 2. எண்ணல்; counting.

[கண் → கணம் + அன் + அம் – கணனம்]

கணனை *kaṇaṉai,* பெ.(n.) எண்; number. *"பரிசங் கணனை பரிமாணம்." (பிரபோத. 42.2)*

[கண் – அன் + ஐ - கணனை. கண்ணுதல் = கணித்தல், 'அன்' சாரியை, 'ஐ' – ஒன்றன்பாலீறு.]

கணா *kaṇā,* பெ.(n.). 1. திப்பிலி. (சங்.அக.); long pepper. 2. சீரகம்; cummin seed (சா.அக).

[கள் → கண. கணம்(திரள்) → கணவுள் → கணா(மருஉ).]

கணாதமதம் *kaṇada-madam,* பெ.(n.) சிறப்பு (வைசேடிக) மதம்; the vaisesika branch of the n yāya system of philosophy founded by kaṇātan.

[கணாதன் + மதம்.]

கணாதர் *kaṇādar,* பெ.(n.) ஏரணத்தர்(தர்க்கிகர்); logicians. *"ஆய்ந்த கணாதர்கள்"(திருக்காளத். பு.5, 41).*

[கணம் = கூட்டம்.குழு,மன்று. கணம் + ஆதர். ஆதர் = தலைவர்.]

கணாதன் *kaṇādaṉ,* பெ.(n.) சிறப்பு(வைசேடிக) மதஆசிரியனான முனிவன்; name of the founder of the vaisēsika system of Indian philosophy. *"அக்கபாதன் கணாதன் சைமினி." (மணிமே2,7,82)*

[கணம் + ஆதன். கணம் = கூட்டம். ஆதன் = தலைவன்]

கணாதி *kaṇādi,* பெ.(n.) வெண்சீரகச்செடி; white cummin plant.

[கணம் (தொகுதி) + ஆதி.]

கணாமூலம் *kaṇā-mūlam,* பெ.(n.) திப்பிலிவேர். (தைலவ.தைல.82); long pepper root.

[கணம் + மூலம் – கணாமூலம்.]

கணார்கணாரெனல் *kaṇar-kāṇar-eṉal,* பெ.(n.)ஓர் ஒலிக்குறிப்பு.(திவ்.பெரியாழ்.1,7,7 வியா.பக்.149.); onom. expr. of tintinnabulation.கொல்லன் பட்டறையிலிருந்து கணார் கணாரென ஒலி வருகிறது (உ.வ.).

[கணார் + கணார் + எனல். கணார்கணார் – ஒலிக்குறிப்பு இடைச்சொல்.]

கணாரிடல் *kaṇar-iḍal,* பெ.(n.) மணியொலித்தல், வெண்கலப்பேரோலி, எதிரொலி போன்றவற்றைக் குறிக்கும் ஒலிக்குறிப்பு; ringing, as of a bell; sonorous pealing; clanging, as sounding brass; echoing, as rock.

[கணார் + இடல். இடு – இடல் இடு – து. வி. 'கணார்' ஒலிக்குறிப்பு இடைச்சொல்.]

கணி[1]**-த்தல்** *kaṇi-,* 4 செ.குன்றாவி(v.t.) 1. கணக்கிட்டுக் கண்டுபிடித்தல்; to compute, reckon, calculate, count. 2. அளவிடுதல்; to estimate, conjecture, surmise. *"கணித்த நாள்களேழ்" (சீவக.2518.).* 3. மதித்தல்; to esteem, honour, respect. அவன் என்னைக்கணிக்கவில்லை. (இ.வ.) 4. படித்தல்; to study. *"கணியாது முழுதுணர்ந்த" (சூளா. இரத. 64.)* 5. தோற்று வித்தல்; to create. *"மலரின் மேலான் கணித்த வுலகு." (பிரமோத் 21,53.)* 6. நெஞ்சாரப் போற்றுதல்; to repeat mentally in worship as mantram. *"திருவஞ்செழுத்து அவ்விதிப்படியறிந்து கணிக்கப் படும்" (சி.போ.பா.).* 7. கருதுதல்; to see,to consider(கருநா.).

க. கணிசு; **து.** கணி > **Skt.** gan.

Sinha.ganinne; **Portu.** contar, clmin, giri.

[கண் – கணி. கணித்தல் = புறக்கண்ணாற் காணுதல். அகக்கண்ணாற் காணுதல். மதித்தல், அளவிடுதல், கணக்கிட்டு வகுத்தல். கடைக்கணித்தல், சிறக்கணித்தல், புறக்கணித்தல் என்பன புறக்கண்ணாற் காண்டலைக் குறித்தல் காண்க (வ.மொ.வ.106).]

கணி[2] *kaṇi,*பெ.(n.) மருதநிலம். (பிங்.); agricultural tract.

[களி – கணி. களிமண் பரந்த நிலப்பகுதி.]

கணி[3] *kaṇi,* பெ.(n.) 1.நூல் வல்லவன்; learned man; one who is well versed in some branch of knowledge. *"கணிபுகழ் காளை" (சீவக.722).* 2. ஓவிய மெழுதுவோன்; painter *"நற்கணி நேமித் தெழுதாச் சித்திரம்." (திருப்பு.597)* 3. கணியன்; astrologer. *"விளைவெல்லாங் கண்ணியுரைப்பான் கணி" (பு.வெ.8,20).* 4. கலை; science; any branch of knowledge.*"பெருகுங் கணியிற் கணி" (சீவக. 1062.).*

[குணி கணி. (மு.தா.223)]

த.கணி >**Skt.** gani

கணி, கணிகன், கணியன், கணிவன் என்னும் வடிவங்கள் வடமொழியிலில்லை.

கணி[4] *kaṇi,*பெ.(n.) 1.வேங்கைமரம்; East Indian kino.*"ஒள்ளிணர் கணியின் கொம்பருலவியே." (கந்தபு.12)* 2. சண்பகம் (அரு.நி.); champak tree. 3. மூங்கில்; bamboo. 4. மிளகரணை; prickly scopolia. 5.கையாந்தகரை; eclipse plant.(சா.அக)

[கணம் – கணி (திரட்சி, கொத்து, தொகுதி.]

கணி[5] *kaṇi,* பெ.(n.) கல்; stone.

க.கணி

[கணம் – கணி. திரண்டகல், உருண்ட பாறை]

கணி[6] *kaṇi,* பெ.(n.) ஒரு இனம்; a sect or subcaste.

[கணம் – கணி.]

கணி[7] *kaṇi,* பெ.(n.) அணிகலன் (நாமதீப); ornament.

[கணம் (திரட்சி) – கணி.]

கணி[8] *kaṇi,* பெ.(n.) சந்தனக் குழம்பு; sandal paste

[களி – கணி.]

கணிக்காரத்தி *kaṇi-k-kāratti,*பெ.(n.) ***கணிக் காரிகை*** பார்க்க; see *kaṇaikārigai.*

க. கணிகார்த்தி

[கணி + கார்த்தி.]

கணிக்காரம் *kaṇi-k-kāram,*பெ.(n.) கோங்கு; red cotton tree. *"கணிகாரங் கொட்டுங்கொல்" (கலித். 143.5).*

[கணி → கணிகாரம். உன்னமரம் போல் நிமித்தம் பார்க்க உதவும் மரம். கணி = நிமித்தம்.]

கணிக்காரன் *kaṇi-k-kāraṉ,*பெ.(n.) குறி சொல் வோன்; fortune teller.

க. கணிகார

[கணி + காரன்.]

கணிக்காரி *kaṇi-k-kāri,*பெ.(n.) ***கணிக்காரிகை*** பார்க்க; see *kaṇi-k-kārigai* (தொல்.பொருள்.60, உரை).

[கணி (கணியம்) + காரி.]

கணிக்காரிகை *kaṇi-k-kārigai,* பெ.(n.) குறி சொல்பவள் (தொல். பொருள் (10, உரை, பழைய பதிப்பு.); female fortune teller.

க. கணிகார்த்தி

[கணி (கணியம்) + காரிகை (வெண்.).]

கணிக்கூறு *kaṇikkūṟu,*பெ.(n.) நுண்ணிய பிரிவு; minute portion.*"கணிக்கூற்றொடு நீர்பெறுவதாக வும்" (S.I.I.vol14 insc.17. S.No.14.).*

[கணி + கூறு.]

கணிகம்[1] *kaṇigam,* பெ.(n.) 1. நூறுகோடி.(வின்.); one thousand milliions. 2. பத்தாயிரங்கோடி; ten thousand crore.

[கள் (திராட்சி)–கணி – கணிசைகம்.]

கணிகம்[2] *kaṇigam,*பெ.(n.) 1. குறுகிய காலம்; moment, short duration of time.*"காலங்கணிகமெனுங்*

குறுநிகழ்ச்சியும்" (மணி.27,191) 2. கணப் பொழுது இருக்கக்கூடியது; that which is momentary, transient. 3. தற்காலிக வழிபாட்டிற்காக மண் முதலிய வற்றாற் செய்யப்பெறும் இலிங்கம். (சைவச. பொது. 555, உரை.); Temporary lingam made of earth, rice or any material, for occational worship.

[கணம்¹ → கணிவம் → கணிகம்]

கணிகவாதி *kaṇiga-vādi*, பெ.(n.) கணந்தொறும் ஒவ்வொன்றும் மாறக் கூடியது என்னும் கொள்கை யாளன். (கணபங்கவாதி); one who holds that the world undergoes transformation every instant. (phil.)

[கணிவம் → கணிகம் →வாதி.]

கணிகவெற்பு *kaṇiga-veṟpu*,பெ.(n.) திருத்தணிகை மலை; the hill of Tiru-t-tani, in Thiruvallur district."*கணிகமே பரிந்து கருத்துமுற்று வாற் கணிகவெற்பு." (தணிகை. வீராட. 121.)*

[கணிகம் + வெற்பு. கணிகம் = வேங்கை.]

கணிகன் *kaṇigaṉ*, பெ.(n.) கணியன்; astrologer. *"கணிகரிம மைந்தன் வைகிற் காவல னிறக்கு மென்ன"(காசிக. வீரேசன்.11).*

மறுவ. கணியன், கணிச்சன்

***Skt.** ganaka.*

[கணியன்→ கணிகன் வ – க,திரிபு.]

கணிகாகுளம் *kaṇikā kuḷam*, பெ.(n.) குமரி மாவட்டத்து சிற்றூர்; a village in Kanniyakumari district.

[கணியன் + கா + குளம் – கணியன்காகுளம் → கணிகாகுளம். காகுளம் = தோட்டக்குளம்.]

கணிகை¹ *kaṇikai*,பெ.(n.) தாளங்கதி தருபவள்; dancer who dances according to time measure. 2. பொதுமகள்; harlot courtesan, prostitute. *கணிகையொருத்தி கைத்தூணல்க."(மணிமே.166.6)*

Skt. ganika

[கண் = கருது, மதி, அள. கண்+ இயம் = கண்ணியம்(மதிப்பு). கண் – கணி = to calculate. கணி + கை = கணிகை, தாளங்கணித்தாடும் கூத்தி(ஒப்.மொழி.135).]

கணிகை² *kaṇigai*,பெ.(n.) ஊசிமுல்லை; eared jasmine. *"கணிகைதுன் றளப்பில் கோங்கு"(இரகு – இந்தும.14).*

[கணம் → (கூட்டம், திரட்சி, கொத்து). கணம் → கணி → கணிகை = கொத்தாய் மலர்வது.]

கணிச்சன் *kaṇiccaṉ*, பெ.(n.) **கணியன்** பார்க்க; see *kaṇiyaṉ*. *"ஒலை நாயகன் சிக்கருக்கன் கணிச்சன் நான் சோழ மூவேந்த வேளான்" (S.I.I.vol.19.insl 92).*

[கணியன் – கணிச்சன்.]

கணிச்சி¹ *kaṇicci*, பெ.(n.) 1. மழு; battle-axe. *"மாற்றருங் கணிச்சி மணிமிடற்றோன்"(புறநா.56,2).* 2. குந்தாலி; a kind of pick-axe. *"கணிச்சிகளிற் கயம்பட நன்கிடித்து" (சீவக.592).* 3. யானைத் தோட்டி(பிங்.); goad for urging the elephant. 4. உளி (திவா.); chisel. 5. கோடரி.(பிங்.); axe, hotchet. 6. இலைமூக்கரி கத்தி (பிங்.); knife for cutting the stalk of the betel.

ம.கணிச்சி

Swed; kniv. **Guj;** hanjar; **E.**knife; **OE.**chif.

[குள் → குணி → குணிச்சி → கணிச்சி. குத்துவது, வெட்டுவது]

கணிச்சி² *kaṇicci*, பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharumapuri district.

[கணி → கணித்தி → கணிச்சி. கணி சொல்பவன், குறிசொல்பவன் பெயரிலமைந்த ஊர்.]

கணிச்சியோன் *kaṇicciyōṉ*,பெ.(n.) மழுவேந்தி யாகிய சிவன்; Siva,who holds the battle axe in his hand.*"சீரருங்கணிச்சியோன் சினவலின்." (கலித்.2,6)*

[கணிச்சி + ஆன் – கணிச்சியான் – கணிச்சியோன். ஆன் – ஓன்(திரிபு)]

கணிச்சிலந்தி *kaṇu-c-cilanthi,* பெ.(n.) உடற்சந்துகளிலுண்டாகும் சிலந்தி நோய்(வின்.); veneral ulcer affecting the joints in the body.

[கணு + சிலந்தி.]

கணிசக்காரன் *kaṇiśa-k-kāraṉ,* பெ.(n.) மதிப்புடையவன்; esteemable person.

க. கணிகாரா.

[கணியம் – கணிசம் + காரன்.]

கணிசம்[1] *kaṇisam,* பெ.(n.) 1. மதிப்பு; estimating, guessing, rough calculation. *"கைக்கணிசமாகத் தூக்கிப் பார்த்தான்."* 2. மேம்பாடு; honour, dignity, respectability, worth, weight of character. *"கண் கணிசமாய்ச் சொல்லுவாள்" (பழ.).* 3. அளவு; measure, weight in the hand, size, bulk, in a limited sense. *"ஒரு பாக்குக் கணிசம் அபின்" (வின்.)*

ம. கணிசம்; **க.** கணிச; **தெ.** கணிச.

[கண் → கணி. கணித்தல் = அளவிடுதல், மதித்தல். கணி – கணிதம் = கணிப்பு, பல்வகைக் கணக்கு. கணிதம் → கணிசம் = மதிப்பு(உத்தேசம்). கணிசம் என்னும் வடிவம் வடமொழியில் இல்லை. "குழம்பிற்குக் கணிசமாய் உப்புப்போடு." என்னும் வழக்கை நோக்குக (வ.மொ.வர.107).]

கணிசம்[2] *kaṇisam,* பெ.(n.) அதிகம் (யாழ்.அக.); excess.

[கணம் = கூட்டம், மிகுதி. கணம் – கணி – கணிசம். (கொ.வ.)]

கணிசம்[3] *kaṇisam,* பெ.(n.) ஒலி; voice. *"பெருமாளை யேத்தி வசமாக்கிக் கணிசங் கொண்டு" (ஈடு.6,93).*

[கண் → கணீர் → கணி → கணிசம்.]

கணிசம்பார்[1]**–த்தல்** *kaṇisam-pār-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. மதிப்பிடுதல்; to estimate, value, appraise. 2. கையால் நிறையறிதல் (வின்.); to estimate roughly the weight of an article by taking it inthe hand. 3. தகுதியறிதல்; to discriminate in respect of caste, or of rank; to examine worth.

[கண் – கண்ணியம் – கணியம் – கணிசம் + பார்.]

கணிசம்பார்[2]**–த்தல்** *kaṇisam-pār-,* செ.கு.வி.(v.i.) தன்மானம் காத்தல்; to be zealous of one's own dignity.

[கண்ணியம் – கணியம் – கணிசம் + பார்.]

கணிசமரம் *kaṇisa-maram,* பெ.(n.) வலையைக் கண்காணித்தற் குரிய சிறிய கட்டுமரம் (தஞ்சை மீனவ); a small kattumaram which is used to watch fishing net.

[கணியம் – கணிசம் + மரம்.]

கணிசமாக *kaniśamāga,* வி.எ. (adv.) குறிப்பிடத் தகுந்தபடியாக; considerably, fairly. இவ்வாண்டு வரிவிதிப்புக் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது (உ.வ.).

[கணியம் → கணிசம் + ஆக.]

கணிசி–த்தல் *kaṇicit-,* செ.கு.வி.(v.i.) 1. சிந்தித்தல்; to meditate; to contemplate. 2. உய்த்துணர்தல்; to discern (சா.அக.)

[த. கணி> க.கணிக> த.கணிசி–த்தல்.]

கணித்தி *kaṇitti,* பெ.(n.) ***கணிக்காரிகை*** பார்க்க; see *kaṇik-k-ārigai.*

க. கணிதி, கணதி.

[கணி+த் + இ = கணித்தி. 'த்' எழுத்துப்பேறு, 'த' சாரியை, 'இ' பெண்பாலீறு.]

கணித்தொழில் *kaṇittolil,* பெ.(n.) நிமித்தங்கூறும் தொழில்; astrology. *"கொடுச்சிமார்க்குக் கணித் தொழில் புரியும் வேங்கை" (இராமா. வரைக்.33).*

[கணியம் + தொழில்.]

கணிததீபிகை *kaṇidadībigai,* பெ.(n.) ஒரு கணித நூல்; treatise of mathematics.

[கணி → கணிதம் + தீபிகை.]

கணிதம் *kaṇidam,* பெ. (n.) 1. கணக்குவகை. (பிங்.); methods of arithmetical calculation, process of computation, of which eight are mentioned. *கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், வருக்கம், வருக்கமூலம், கணம், கணமூலம் ஆகியவை எண் கணிதம்.* 2. கணித நூல்; arithmetic, mathematics. 3. கணியம்; astrology including astronomy. (தொல். பொருள்.25, உரை). 4. கணிக்கப்பட்டது; that which is predicted by astronomy or prognosticated by astrology. 5. அளவு; measure, limit. *"கணித மில்புகழ்" (சேதுபு.கந்தமா.86).*

Skt. ganita; **H.**Kganit.

[கண் - கருது, மதி, அள, எண்ணு. கண் → கணி + த் + அம் – கணிதம். 'த்' எழுத்துப்பேறு. 'அம்' சொல்லாக்க ஈறு.]

கண் + இயம் = கண்ணியம்[மதிப்பு]. கண் → கணி = to calculate. கணி + கை = கணிகை [தாளங்கணித் தாடும் கூத்தி] கணி + அன் = கணியன் [சோதிடன்] கண் + அக்கு = கணக்கு. அக்கு என்பது ஓர் ஈறு. எ.கா, இலக்கு, விலக்கு, கணி → குணி = அளவிடு கண், கணி என்னும் தென்சொற்களையே gan, gani என உரப்பியொலித்த வடசொல்லாக்கக் காட்டுவர். கண்ணுதல் என்னுஞ்சொல், அகக் கண்ணின் தொழிலைக் குறித்தலால் வடமொழி வடிவங்கள் தென் சொற்களின் திரிபே என்பது தெற்றன விளங்கும். "கண் படை கண்ணிய கபிலை" "கண்ணிய" என்று தொல் காப்பியத்திலேயே வருதல் காண்க.[ஒப். மொழி. 135.]

கணிதரத்தினம் *kaṇita-rattiṉam,*பெ.(n.) ஒரு தமிழ்க் கணித நூல் (கணக்கதி.பாயி); name of a mathematical work in Tamil.

[கணிதம் + ரத்தினம்.]

கணிதன்[1] *kaṇidaṉ,*1. கணியன்; astronomer, astrologer. *"கணிதர் சொற்ற வோரையில்" (நைடத. அரசா.9).* 2. கணக்கறிவோன் (வின்.); arith matician,mathematician. 3. கணக்கு எழுதுவோன் (வின்.); accountant.

து. கணியெ

[கணி → கணியன் → கணிதன்]

கணிதன்[2] *kaṇidaṉ,* பகைவன் (யாழ்.அக.); enemy.

[கள் - நீங்கு. கள் → கணி → கணிதன்]

கணிப்பான் *kaṇippāṉ,*பெ.(n.) கணக்கிடும் கருவி; calculator.

[கணிப்பு + ஆன்]

கணிப்பு *kaṇippu,*பெ.(n.) 1. அளவிடுகை; computing, counting.*"வெம்படை கணிப்பில் கொண்ட" (கந்தபு.முதனாட்.42)* 2. போற்றுதல்; esteeming honouring, reverencing, venerating.*"நமைக் -கணிப்பிலன்" (சேதுபு.இலக்.9).* 3. மதிப்பிடுகை; estimating, appraising. விளைச்சல் பற்றிய உனது கணிப்புத் தவறாகிவிட்டது (உ.வ.). 4. முன்னறிவிப்பு; forecast, prediction. வானிலை ஆய்வாளர்களின் கணிப்புப்படி இவ்வாண்டு நல்லமழை பெய்யும் (உ.வ).

[கணி + கணிப்பு.]

கணிப்பொறி *kaṇippoṟi,* பெ.(n.) கொடுக்கப்படும் செய்திகளைத் தன்னுள் பதிந்து தொகுத்தும் பகுத்தும் கணித்தும் காட்டி அச்சீடு செய்யும் வினைத்திட்டம் வாய்ந்த மின்னணுக்கருவி; computer.

மறுவ. கணிணி, கணிப்பி.

[கணி + பொறி.]

எண்ணிலக்கக் கணிப்பொறி, ஒப்புமைக்கணிப் பொறி, கலப்பினக் கணிப்பொறி என்பன கணிப் பொறியின் வகைகள். இவற்றுள் நடைமுறையில் நன்கு செயற்படுவது எண்ணிலக்கக் கணிப்பொறியே [அறிவியல் அகராதி].

கணிமுற்றூட்டு *kaṇi-muṟṟūṭṭu,*பெ.(n.) கணி யனுக்குக் கொடுக்கும் மானியம் (S.I.I.ii,43); land granted as inam to an astrology.

[கணி + முற்றூட்டு.]

கணிமேதாவியார் *kaṇi-mēdāvi-yār,*பெ.(n.) ஏலாதி, திணைமாலை நூற்றைம்பது என்ற நூல் களின் ஆசிரியர்; name of the author of Elādi and Tiṇai-mālai-nūṟṟaimbadu.

[கணி + மேதாவி + ஆர்]

கணியநூல் *kaṇiyanūl,*பெ.(n.) நிமித்திக நூல்; treatise on astrology.

[கணியம் +நூல்.]

இன்று தமிழ்நாட்டில் வழங்கும் கணிய [சோதிட] நூல், குமரி நாட்டிலேயே தமிழரால் முற்றும் அறியப்பட்டுவிட்டது. அதை வழிவழி கையாண்டு வந்த வள்ளுவரைத் தீண்டாதவரென்று தாழ்த்தி, ஆரியர் பெரும்பாலும் தமக்கே அந் நூலாட்சியை உரிமையாக்கிக் கொண்டனர்.

எழுகோள்களும் இருபத்தேழு நாண்மீகளும் ஓர் ஆண்டு வட்டத்தையமைக்கும் பன்னிரு திங்கட் குரிய பன்னீரோரைகளும், தமிழர் கண்டவையே. இன்று உலகம் முழுவதும் வழங்கிவரும் எழுகோட் பெயர்களைக் கொண்ட ஏழுநாட் கிழமையமைப்பு, தமிழரதே. ஆரியர் வந்தபின் அறிவன்[புதன்],

காரி[சனி] என்னும் இரு கிழமைப் பெயர்கள் வழக்கு வீழ்த்தப்பட்டதால், பண்டைத்தமிழர் ஐங்கோளே அறிந்திருந்தனர் என்று கால்டுவெலார் பிறழ்ந் துணரவும், அதனால் உலகம் முழுவதும் தமிழ் நாகரிகத்தைத் தாழ்வாகக் கருதவும், நேர்ந்துவிட்டது.

பன்னீரோரைப் பெயர்களுள் மிதுன, சிம்ம, விருச்சிக, தநு, மகர என்னும் ஐந்தே மொழி பெயர்ப்பாகும். ஏனையவையெல்லாம் எழுத்துப் பெயர்ப்பே.

குமரிக் கண்டத்தில் பன்னீரோரைப் பெயர் களே பன்னிரு மாதப்பெயர்களாய் வழங்கி வந்தன. ஆரியர் வந்த பின் அவை நாட்பெயர்களாக மாற்றப்பட்டு விட்டன [வ.மொ. வ. 272].

கணியம்[1] *kaṇiyam*, பெ.(n.) 1. குறிசொல்லுதல்; fore telling the future. 2.விண்ணில் கோள்களின் இருப்புக்கும் மாந்த வாழ்க்கை நடப்புக்கும் உள்ளதாகக் கருதப்படும் தொடர்பைக் கூறும் பிறப்பியம் (ஜாதகம்) சார்ந்த கணிப்புமுறை; study of supposed planetary influence on human affairs.

[கணி + அம் – கணியம்.]

கணியன், கணியான் எனப்படுவோர் தொன்று தொட்டு கணியக் கலையில் வல்லுநராய் இருந்தமை தமிழர் வரலாறு காட்டும் உண்மை.

கணியம்[2] *kaṇiyam*, பெ.(n.) 1. தொகை; quantity. 2.மிகுதி; excessive.

[கள் = கூடுதல், மிகுதல். கள் → கணி → கணியம்.]

கணியன்[1] *kaṇiyaṉ*, பெ.(n.) நிமித்திகன்; astrologer. 2. குறிசொல்பவன்; fortune teller, fore teller.

மறுவ. கணியான், கணி.

[கணி + அன் – கணியன்.]

இன்னின்ன குறிப்புகள் அல்லது அறிகுறிகளால் இன்னின்ன நலந்தீங்குகள் நேரும் எனக் கணித்து, வருவது முன்னுரைக்கும் தொழிலினன் ஆதலின் பெற்ற பெயர்.

கணியன்[2] *kaṇiyaṉ*, பெ.(n.) கடலில் மீன் பிடித்தற்காக மலை, மற்றும் உடுக்களை அடையாளக் குறியாக வைத்துப் போடப்படும் பெரிய வலைகளை அறியும் திறனுடையான் (சங்.நூல்.மீன்); one who is skilled in locating big nets laid in the sea estimating location by sighting stars and hills.

[கணி வன் → கணியன்.]

கணியன் பூங்குன்றனார் *kaṇiyaṉ-pūṅkuṉṟaṉār*, பெ.(n.) கடைக்கழகப்புலவர்; Sangam poet.

[கணி – கணியன் + பூங்குன்றன் + ஆர்.]

இவர் பூங்குன்றம் என்னும் ஊரில் பிறந்தமையால் இவ்வாறழைக்கப்பட்டார். இவ்வூர் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மகிபாலன் பட்டியே என்பதை அவ்வூர்க்கோவில் கல்வெட்டு களால் அறியலாம். யாதுமூரே யாவருங் கேளிர் என்னும் புகழ்மிக்க புறநானூற்றுப் பாடலைப் பாடியவர்.

கணியாம்பூண்டி *kaṇiyāmpūṇḍi*, பெ.(n.) கோயம்புத் தூர் மாவட்டத்தில் தொல் அகழ்வாய்வில் பழங்கற் காலச் சின்னங்கள் கிடைத்த சிற்றூர்; a village in Coimbatore district where megalithic materials were found in archaeological excavations.

[கணியன் + பூண்டி – கணியன் பூண்டி → கணியான் பூண்டி → கணியாம் பூண்டி. அன் → ஆன் → ஆம் – புணர்ச்சித்திரிபு.]

கணியாமூர் *kaṇiyāmūr*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Viluppuram district.

[கணியன் + ஆமூர் = கணியனாமூர் → கணியாமூர். ஆவூர் → ஆமூர்.)]

கணியான்[1] *kaṇiyāṉ*, பெ.(n.) ஒரு பழங்குடி இனத்தான் (G.Tn.d.227); man of a backward tribe, noted for his skill in magic and his knowledge of astrology.

மறுவ. கணி

க. கணிய

[கணியன் → கணியான்.]

கணியான்[2] *kaṇiyāṉ*, பெ.(n.) கூத்தாடி (யாழ்.அக.); dancer, actor.

[கணி + ஆன் = கணியான். காலங்கணித்துத் தாளத்திற்கேற்ப நாட்டியமாடுபவன். ஒநோ. கணிகை.]

கணியான்விளை *kaṉiyāṉ viḷai,* பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanniyakumari district.

[கணியன் + விளை – கணியன்விளை → கணியான்விளை. விளை = பனந்தோப்பு.]

கணிலெனல் *kaṉil-eṉal,* பெ.(n.) ***கணீரெனல்*** பார்க்க; see *kaṉireṉal* *"கவின்மணி கணிலென்னும்" (கம்பரா.மூலபல.228).*

[கணில் + எனல். கணில் = ஒலிக்குறிப்பு இடைச்சொல்.]

கணிவம் *kaṉivam,* பெ.(n.) விண்ணிலுள்ள நாண்மீன்கள், கோள்கள் ஆகியவற்றின் தொகுதி, இருப்புநிலை, நிலைப்பு ஆற்றல் ஆகியன குறித்துக் கணித்தறிந்த வானநூல் அறிவியல்; astronomy, the scientific study of celestial bodies.

[கணி → கணிவு + அம் – கணிவம்.]

வான நூல் வல்லுநனை "தொல் கேள்விக் கணிவன்" எனப் புறப்பொருள் வெண்பா மாலை [8. கொளு.வ.] குறிப்பிடுதல் காண்க.

கணிவன் *kaṉivaṉ,* பெ.(n.) வானநூல் கணிப்பில் வல்லுநன்; astronomer. *"தொல்கேள்விக் கணிவன்." (பு.வெ.8, கொளு, 20).*

[கணி → கணிவு (கணிப்பு) + அன். கணிவன். கணியன் கணிவன் என்னும் சொல்லாட்சிகள் தலையன் தலைவன் என்றாற் போன்று சுட்டும் பொருளால் வேறுபடுவனவாம். கணி → கணிக்கும் தொழில். கணிவு → கணிக்கும் தொழில்திறமை. கணிவன் → கணிக்கும் தொழில் வல்லுநன். கணி என்னும் சொல் நிமித்தக்கணிப்புக்கும் வானநூல் கணிப்புக்கும் பொதுச் சொல்லாயினும் கணிவன் வானநூல்வல்லுநனையே குறிக்கும். கணியன் நிமித்திகனையே குறிக்கும்.]

கணிவன் = காலக்கூறுகளை உணர்பவன், காலம், மாத்திரை, முதலாக நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், திங்கள், பெரும் பொழுது, அயநம், யாண்டு, ஊழி எனப் பலவகைப்படும், இவற்றையும் ஞாயிறு முதலிய கோணிலைகளையுங் கணித்தறிவான் கணி என்க.

கணிவன்முல்லை *kaṉivaṉ-mullai,* பெ.(n.) காலக் கணிதனுடைய திறத்தைப் புகழ்ந்து கூறும் புறத்துறை(பு.வெ.8,20); theme of praising the fame of the skilled astrologer.

[கணிவன் + முல்லை. முல்லை = சிறப்பியல்பு.]

முல்லை → இயல்பு, மிகுதி, வெற்றி. இயல்பாகப் பெற்ற வெற்றி முல்லை. பொருது பெற்ற வெற்றி வாகை.

கணினி *kaṉiṉi,* பெ.(n.) ***கணிப்பொறி*** பார்க்க; see *kaṉi-p-poṟi.*

கணீர்கணீரெனல் *kaṉir-kaṉireṉal,* பெ.(n.) ஒலிக் குறிப்பு; ono. expr. signifying ringing of a bell.

[கணீர் + கணீர் + எனல். கணீர்கணீர் = ஈரடுக்கு ஒலிக்குறிப்பு.]

கணீரிடு-தல் *kaṉiriḍu-,* 20 செ.கு.வி.(v.i.) வெண் கலம் போன்ற ஒலித்தல்; to sound as of the brass.

[கணீர் + இடு.]

கணீரெனல் *kaṉir-eṉal,* பெ.(n.) மணியோசை, வெண்கல ஏனத்தைத்தட்டுவதால் எழும் ஒலி. ஓங்கிய குரலில் பேசுவது, தெளிவாகப் பேசுதல் போன்றவற்றைக் குறிக்கும் ஒலிக்குறிப்பு; ringing, as of a bell, clanging as sounding brass; speaking audibly and clearly with a metallic ringing of voice.

[கணீர் + எனல்.]

கணு *kaṉu,* பெ.(n.) 1. கரும்பு, மூங்கில் முதலிய வற்றின் துண்டுப் பகுதிகள் சேரும் இணைப்பு; joint of a bamboo, cane, etc. ஆளுக் கொரு கணு கரும்பு வெட்டித் தா (உ.வ.). 2. தண்டில் இலை தளிர்க்கக் கூடிய இடமாகவும், இறுக்கமுடைய தாகவும் சற்றுப் பருத்தும் காணப்படும் பகுதி; node, hard swelling point at which leaves spring from stem. கணுவாய் இருப்பதால் பிளக்கக் கடினமாய் இருக்கிறது (உ.வ.). 3. உறுப்புப் பொருத்து: **knuckle;** joint of the spine, vertebra. கணுவுக்குக் கணு வலிக் கிறது (உ.வ.). 4. எலும்புக் கணு (வின்); tubercle of a bone 5. மூங்கில் (மலை); bamboo. 6. உடம்பிலேற் படும் நரம்பு முடிச்சுகள்; nodules. 7. கணுக்கால்; ankle.

க. கண; **தெ.** கணுபு.

[கண்ணுதல் = பொருத்துதல். கண் → கணு = பொருத்து, பொருத்தில் தோன்றும் புடைப்பு.]



கணு

கணுக்காரி *kaṇu-k-kāri*,பெ.(n.) ***உசில்*** பார்க்க; see *usil.*

[கணு + காரி.]

கணுக்கால் *kaṇu-k-kāl*,பெ.(n.) பாதமும் கெண்டைக் காலின் கீழ்ப்பகுதியும் இணையுமிடம்; காற்பரடு; ankle. *ஆற்றிலே கணுக்கால் தண்ணீரிலும் அஞ்சி நடக்கவேண்டும்.(பழ).*

ம. கணங்கால், கணங்கழல்; க. கணகால்; பட. துணகாலு.

[கணு + கால்.]

கணுக்கால்ஊதம் *kaṇukkāl-ūdam*,பெ.(n.) கணுக் காலிலும் விரற் சந்துகளிலும் பரவி வலி உண்டாக் கும் ஒரு ஊதை நோய்; a kind of arthiritis affecting the ankle and the parts between the toes.

[கணுக்கால் + ஊதம்]

கணுக்கால் சூலை *kaṇukāl-cūlai*, பெ.(n.) கணுக்காலில் ஏற்படும் ஒருவகைக் குத்தல் நோய்; an acute or excruciating pain in the ankle.

[கணுக்கால் + சூலை.]

கணுக்காலுறை *kaṇukkāluṟai*,பெ.(n.) காலுறை வகை (பாண்டி); garters,

[கணுக்கால் + உறை.]

கணுக்காலெலும்பு *kaṇu-k-kāl-elumbu*,பெ.(n.) பாதத்தில் பிதுங்கி நிற்கும் எலும்பு; ankle-bone upon which the tibia rests (சா.அக.).

[கணுக்கால் + எலும்பு.]

கணுக்கை *kaṇu-k-kai*,பெ.(n.) மணிக்கட்டு (இ.வ,); wrist.

[கணு + கை.]

கணுச்சூலை *kaṇu-c-cūlai*,பெ.(n.) எலும்பின் பொருத்துகளி லேற்படும் ஒரு குத்தல்நோய்; an acute pain in the joints.

[கணு + சூலை.]

கணுப்பாலை *kaṇu-p-pālai*, பெ.(n.) 1. கரியபாலை; obtuse-leaved ape flower. 2. ஏழிலைப்பாலை; seven-leaved milky plant. (சா.அக)

[கணு + பாலை. பாலை – பாலுடையது.]

கணுமருது *kaṇu-marudu*, பெ.(n.) மருது மரவகை; a hard - wood tree (செ.அக.).

[கணு + மருது.]

கணுமாந்தம் *kaṇu-māndam*,பெ.(n.) நகச்சுற்று. (m.l.); whitlow.

[கணு + மாந்தம்.]

கணுவட்டு *kaṇu-vaṭṭu*,பெ.(n.) சிறுவாழைக்குலை. (யாழ்); small bunch of plantains.

[கணு + வட்டு.வட்டு – திரட்சி, ஒன்றாதல்.]

கணுவவரை *kaṇu-v-avarai*, பெ.(n.) கணுக்களிற் காய்க்கும் அவரை வகை.(வின்.); a kind of pulse that bears fruit in its boughs also.

[கணு + அவரை.]

கணுவாதம் *kaṇuvādam*,பெ.(n.) ***கணுவூதம்*** பார்க்க; see *kaṇvūdam*(சா. அக)

[கணு + வாதம்]

கணுவிரல் *kaṇ-viral*,பெ.(n.) விரற்கணு; knuckle.

[கணு + விரல்.]

கணுவூதம் *kaṇuvūdam*, பெ.(n.) மூட்டுகளைத் தாக்கி வீக்கம், வலி முதலியனவற்றை உண்டாக்கும் ஊதை நோய்; an inflammatory disease which affects joints (சா.அக).

[கணு + ஊதம். ஊதை – ஊதம்.]

கணுவை *kaṇuvai*, பெ.(n.) ஒருவகைத் தோற்கருவி; a kind of drum. *"கணுவை யூமை சகடை யோ டார்த்த வன்றே." (கம்பரா.பிமாத்.5.)*

[கணு – கணுவை.]

கணை[1] *kaṇai*, பெ.(n.) 1. திரட்சி; cylindrical or globular shape. *"கடு விசைக் கணைக்கோல்" (மலைபடு.380).* 2. செக்குரலின் அடிப்பாகம்; cylindrical wood of an oil press. *"செக்கின் கணை போன்றினிச் சென்றுருள்" (நீலகேசி,407)*

[கண் – கணை(திரட்சி, திரண்டு பருத்த பகுதி).]

ம. கண; க. கணெ, கணி; பட. கணெ(தொழுவத்தின் வாயிலை அடைக்கும் பலகை)

கணை[2] *kaṇai*,பெ.(n.) 1. அம்பு; arrow. *"கணை கொடிது" (குறள்.279).* 2. அம்பினலகு; arrow head.*"கணைக்கோ லெய்யுங் குனிசிலை" (சீவக.90).* 3. பதினோராவது விண்மீன் (பிங்.); the 11th naksatra. 4. மண்வெட்டி, குந்தாலி போன்ற வற்றிப் போடும் மரத்தாலான பிடி; wooden handle of a hoe, of a spade, or of other tool. 5. சிவிகை யின் வளை கொம்பு; curved pole of a palanquin. *"சிவிகைக் கணை"* 6. ***கணைக்கால்*** பார்க்க; see *kaṇai-k-kāl.* 7. ***கணைய மரம்*** பார்க்க; see *kaṇaiya-maram.* 8. கரும்பு (மலை.); sugar-cane. 9. மூங்கில்(நாமதீப.); bamboo.

க. கணெ; **ம.** கண; **து.** கணெ, கனெ. **கோண்.** தணீ; பர். கணய(ஈட்டி); **கோத.** கண்கெய்த் (அரிவாள்); **துட.** கண்கோத்ய் (பிணத்துடன்) எரிக்கப்படும் உடைவாள் வடிவக்கத்தி); **கொண்.** கண்சி(மண்வாரி) ; **Skt., Pali**. kanaya (a kind of lance).

[கண் – கணை திரட்சி (திரண்ட அலகுடையது).]

கணை[3] *kaṇai*, பெ.(n.) 1. ***கணைச்சூடு*** பார்க்க; see *kaṇai-c-cūḍu.* 2. கால்நடை நோய்வகை (இ.வ.); a cattle disease.*"அயநாக மேனியடி கணைகை" (இராசவைத்.101).*

[கண → கணை.]

கணை[4] *kaṇai*,பெ.(n.) திப்பிலி (தைலவ.); long-pepper.

ம. கண; **க.** கண, கணெ; **Skt.** kaṇa.

[கணம் → கணை.]

கணைக்கட்டு *kaṇai-k-kaṭṭu*,பெ.(n.) அம்புக்கட்டு (திவா.); bundle of arrows.

[கணை + கட்டு.]

கணைக்காடு *kaṇai-kāḍu*, பெ.(n.) துன்பம் .(j.m);distress.

[கணை + காடு. கணைக்காடு – மிகுந்த துன்பம். கணை = திரட்சி, மிகுதி. கடு – காடு. கடுத்தல் – வலித்தல், துன்பம்.]

கணைக்காய்ச்சல் *kaṇaik-d-kāy-c-cal*,பெ.(n.) ***கணக்காய்ச்சல்*** பார்க்க; see *kaṇa-k-kāyccal.*

[கணை + காய்ச்சல்.]

கணைக்கால் *kaṇai-k-kāl*,பெ.(n.) 1. முழங்காலுக்கும் பரட்டுக்கும்(பாதத்துக்கும்) இடையிலுள்ள உறுப்பு; the skin, forepart of the leg between the knee and the ankle. *"பூங்கணைக்காற் கொரு பரிசுதான் பொரும்" (கம்பரா.உருக்கா.43).* 2. திரண்ட நாளம்; main stem of a flower, as of a lotus. *"கணைக் காலலர்கூம்பி" (கலித்.119,5).*

ம. கணங்கால்; **க.** கணகால், கணகாலு, கணெகால்; **பட.** தணகாலு.

[கணை + கால். கணை = திரட்சி.]

கணைக்கை *kaṇai-k-kai*,பெ.(n.) முழங்கையிலிருந்து மணிக்கட்டுவரையிலுள்ள கை (இ.வ.); arm, ante-brachium.

ம. கணங்கை; **க.** கணிகை; **பட.** தணகை.

[கணை + கை. கணை = திரட்சி, வலிமை, நீண்டது.]

கணைக்கொம்பன் *kaṇai-k-kombaṉ*,பெ.(n.) கட்டைக்கொம்புள்ள எருது (வின்.); ox with stunted horns.

[கணை + கொம்பன். கணை = திரட்சி.]

கணைச்சுரம் *kaṇai-c-curam,* பெ.(n.) ***கணக்காய்ச்சல்*** பார்க்க (சா.அக.); see *kaṇa-k-kāyccal.*

[கணை + சுரம்.]

கணைச்சூடு *kaṇai-c-cūḍu,*பெ.(n.) 1. குழந்தை நோய் வகை; disease of children, tabes mesenterica. 2. மூலச்சூடு; piles.

[கணை + சூடு. கண – கணை – உடம்பு காங்கை.]

கணைத்தலை *kaṇaittalai*, பெ.(n.) நெற்றிக்கும் காதுக்கும் இடையேயான தட்டையான பாகம்; temple.

ம. கணதலெ

[கணை + தலை.]

கணைநாண் *kaṇai-nāṇ*,பெ.(n.) அம்பு ஏவும் விசைகள்; bowstring.

[கணை + நாண். ஞாண் – நாண்.]

கணைப்புல் *kaṇai-p-pul*,பெ.(n.) 1. ஒட்டுப்புல் (வின்); sticking grass. 2. காளான்; mushroom.

ம. கணப்புல்லு; **க.** கணிகெ; **தெ.** கனுபு கெட்டி.

[கணை + புல்.]

கணைப்பூடு *kaṇai-p-pūḍu*,பெ.(n.) திருவாலிப்பூடு, என்னும் செவ்வாமணக்கு; red castor plant.(சா.அக)

[கணை + (பூண்டு) பூடு.]

கணைபாரி–த்தல் *kaṇai-pāri-*,4 செ.குன்றாவி(v.t.) அம்புஎய்தல்; to shoot an arrow.

[கணை + பாரி. பாரித்தல் – பரவுதல்,விடுதல்.]

கணைமார்க்கம் *kaṇaimārgam*, பெ.(n.) ***கணைவோட்டம்*** பார்க்க; see *kaṇaivōṭṭam*.

[கணை + மார்க்கம்.]

கணைமூங்கில் *kaṇai-mūṅgil*,பெ.(n.) பொன்னாங் கண்ணி (இ.வ.); a p lant growing in damp places.

[கணை + மூங்கில்.]

கணையக்கோளம் *kaṇaya-k-kōḷam*,பெ.(n.) ஆண்களின் சிறுநீர்ப்பைக்கும் நீர்த் தாரைக்கும் நடுவே சுற்றியுள்ள கோளம்; a gland sourrounding the neck of the bladder and the urethra in the male (சா.அக).

[கணையம் +கோளம்.]

கணையநீர் *kaṇayanīr*,பெ.(n.)கணையத்தில் சுரக்கும் நீர்; a thick transparent fluid secreted by the panereas (சா.அக).

[கணையம் + நீர்.]

கணையம்[1] *kaṇaiyam*, பெ.(n.) இரைப்பைக்குப் கீழ் இடது பக்கம் அமைந்தள்ளதும். உணவைச் செரிக்கச் செய்யும் ஒருவித நீர்மத்தைச் சுரப்பதுமான உறுப்பு; panereas..

[கணை + அம்.]

கணையம்[2] *kaṇaiyam*,பெ.(n.) 1.மறத்தண்டு, தண்டாயுதம்; club, used as a weapon. *"அம்பொடு கணையம் வித்தி" (சீவக.757).* 2. வளைதடி; curved club. *"தண்டமாலங் கணையங் குலிசாயுத மாதியாக"(கந்தபு.தாரக.157).* 3. யானைக் கட்டுத்தறி (சீவக.81, உரை); post to, which an elephant is tied. 4. காவற்காடு (பிங்.); jungle growth specially formed to serve as a protective barrier to a fort. 5. கோட்டை; fort. *"அஞ்சுவர்களோ கணையத்துக் குள்ளேயிருப்பர்" (ஈடு,5,4,7).* 6. ***கணையமரம்*** பார்க்க; see *kanaiyamaram*, *"அவன் களிறுதாம் கணையமரத்தால் தடுக்கப்பட்ட கதவைப் பொருது" (புறநா.97,உரை).* 7. போர் (பிங்.); war.8. இசைக் கருவிவகை; a kind of drum, *"கடிபடுகரடி கை, கணை யஞ்சல்லிகை" (கந்தபு.கயமுகனு.214)*

மறுவ. எழு, பரிகம்.

ம. கணயம்; **க.** கணெய, கணய; **தெ.** கணய.

H. kanaiya.

[கணை + அம். கணை = திரட்சி, செரிவு]

கணையம்[3] *kaṇaiyam*, பெ.(n.) பொன் (யாழ்.அக); gold.

[கணை + அம் – கணையம். கணை – திரட்சி,கட்டி, கட்டிப்பொன்.]

கணையமரம் *kaṇaiya-maram*,பெ.(n.) 1. கோட்டை மதிற்கதவுக்குத் தடையாகக் குறுக்கேயிடும் எழுமரம் (புறநா.98,உரை); cross bar of wood set behind the doors of a fortress. 2.குறுக்குமரம்; cross-bar, toll bar, wooden bar, set to bar an entrance.3. யானையைக் கட்டும் தூண்; a post to which an elephant is tethered.

மறுவ. நுகம்.

ம. கணயமரம், கணயாரல்.

கணையர் *kaṇaiyar*, பெ.(n.) வில்லாளர்; those who have arrows, archers. *"கணையர் இணையர் கைபுனை கவணர்" (நற்.108.4).*

ம. கணயன்

[கணை + அர்.]

கணையல் *kaṇaiyal*,பெ.(n.) சிரித்தல்; laughing. *"இலங்கெயின் மூன்று மெரியுண்ணக் கணையல் செய்தான்."(தேவா.திருக்கழுக்.4.திருஞா)*

[கணை + அல்.]

கணையன் *kaṇaiyaṉ*,பெ.(n.) ***கணையர்*** பார்க்க; see *kaṇaiyar*.

ம. கணயன்

[கணை + அன். கணை = அம்பு.]

கணையாகன்னி *kaṇaiyākaṉṉi*,பெ.(n.) 1. வாடா மல்லிகை; ever lasting jasmine. 2. வளைந்த தடி; a curved club. (த.அக)

[கணை + ஆம் + கன்னி.]

கணையாரல் *kaṇaiyāral*,பெ.(n.) ஒருவகை மூங்கில்; a kind of bamboo.

ம. கணயாரல்.

[கணை + ஆரல். கணை = திரட்சி.]

கணையாழி *kaṇai-āḻi*, பெ.(n.) 1. முத்திரை விரலாழி (மோதிரம்); finger ring, signet ring. 2. கால்விரலில் அணியும் ஒருவகை அணிகலன்; a kind of foot - ornament.

ம. கணையாழி.

[கணை + ஆழி – கணையாழி = உருட்டு மோதிரம். கணை = திரட்சி. ஆழி = வட்டம்.]

கணையாழி மோதிரம் *kaṇai-āḻi-mōdiram*,பெ.(n.) ***கணையாழி*** பார்க்க(வின்.); see *kaṇaiyāḻi*.

[கணை + ஆழி + மோதிரம்.]

கணையுலக்கை *kaṇai-ulakkai*, பெ.(n.) பூணில்லா உலக்கை.(சா.அக)

[கணை + (திரட்சி) + உலக்கை.]

கணையெண்ணெய்[1] *kaṇai-y-eṇṇey*, பெ.(n.) செக்கில் எண்ணெய் எடுக்கும் போது உலக்கையின் கீழ்த்தங்கும் வடியெண்ணெய்; oil extracted from the wooden roller of an oil press.(சேரநா.)

ம. கணயெண்ண.

[கணை + எண்ணெய்.]

கணையெண்ணெய்[2] *kaṇai-y-eṇṇai*, பெ.(n.) கண நோய்க்குத் தரும் மருந்து எண்ணெய்; herbal in edible oil for tabes mesenteric.

[கண – கணை + எண்ணெய்.]

கணையோட்டம் *kaṇai-y-ōṭṭam*,பெ.(n.) குதிரையின் நேரோட்டம் (திருவாலவா.28,58.); a pace of the horse, resembling the straight course of an arrow.

[கணை + ஓட்டம். கணை = அம்பு.]

கணைவெட்டை *kaṇai-veṭṭai*, பெ.(n.) ஒரு வகை வெட்டை நோய். (m.l.); tuberculosis in the mesenteric glands.

[கணை + வெட்டை.]

கத்தக்கதி–த்தல் *katta-k-kadi-*, 4.செ.கு.வி.(v.i.) நிரம்பமிகுதல்; to increase vastly, grow immensely. கத்தக் கதித்துக் கிடந்த பெருஞ்செல்வம் (திங். பெரியாழ். 1,9,3.)

[கட்டு – கத்து + கதி – கத்தக்கதி = அளவுக்குமீறுதல், கட்டுக்குமேம்படல்.]

கத்தக்காம்பு *katta-k-kāmbu*, பெ.(n.) தாம்பூலத் தோடு வாயிலிடும் ஒரு பண்டம்; extract prepared from the leaves and young shoots of a malay shrub. used in mastication with betel.

[கற்றை – கத்தை + காம்பு.]

கத்தசம் *kattaśam*,பெ.(n.) சாணம்; the cowdung.

[கழித்து – கத்து – கத்தசம்.]

கத்தபம் *kattabam*, பெ.(n.) 1.கழுதை; ass. *"கத்தபத்தின் பாற்குக்கரிய கிரந்தியறும்" (பதார்த்தகுண. 108)* 2. கழுதைப்புலி; a hyaena (சேரநா.)

ம. கத்தப்புலி; **Skt.** gardaba.

[கழுதை . வ. கர்த்தபம் த. கத்தபம்.]

கத்தம்[1] *kattam*,பெ.(n.) சாணச்சேறு; mire, dung, sloppy mud of a cow-house.

[கழித்தம் – கத்தம்.]

கத்தம்[2] *kattam*, பெ.(n.) 1. பொல்லாங்கு; evil *"கத்தமேவும் பிரகிருதி"(சி.சி.பர.பக்.381).* 2. கதை (யாழ்.அக.); tale.

ம. கத்தம்

[கடுத்தம் – கத்தம்.]

கத்தம்[3] *kattam*, பெ.(n.) தோள்(புயம்); arm, shoulder (யாழ்.அக.).

[குந்து – குத்து – கத்து – கத்தம்.]

கத்தரி[1]**–த்தல்** *kattari-*,4. செ.குன்றாவி (v.t.) 1. சிறிது சிறிதாய் வெட்டியறுத்தல்; to cut with scissors, clip, snip, shear. 2. புழு வரித்தல்; to gnaw, nibble off, as insects, as vermin. செடியை எலி கத்தரித்து விட்டது (உ.வ.). 3. அறுத்தல்; to cut away, to chop off. *"தலைபத்துங் கத்தரிக்க வெய்தபுன்." (கந்தரலங்.22)* 4. நட்பப் பிரித்தல்; to

separate from, break away from friendship. அவன் தொடர்பைக் கத்தரித்துக் கொள் (உ.வ.).

க. கத்தரிக; **தெ.** கத்திரிஞ்சு, கத்தரில்லு; து. கத்தெரியுனி. கத்தெருனி.

[கள் – கடு – கட்டு – கத்து – கத்தலி – கத்தரி.]

கத்துதல் = வெட்டுதல். இவ்வினை பிற்காலத்து வழக்கற்றது. கத்து – கத்தி = அறுக்கும் அல்லது வெட்டுங் கருவி. ஒ.நோ; கொத்து-கொத்தி. வெட்டு – வெட்டி. கத்து + அரி = கத்தரி. கத்தரித்தல் = வெட்டி நறுக்குதல். அரிதல் = சிறிதாய் நறுக்குதல். அரித்தல் = அராவித் தேய்த்தல். "கதக்குக் கதக்கென்று வெட்டுதல்" என்பது உலக வழக்கு. [வ.மொ.வ.107.]

த. கத்தரி>**Skt.** karttari.

கத்தரி²–த்தல் *kattari-*, 4செ.கு.வி.(v.i.) 1. நெருப்பு ஒழுங்காய்ப் பற்றாமல் இடைவிடுதல்; to flash, as priming powder, to go out, as a match or a lighted bamboo. 2. கவராதல்; to divide, fork, as a path, to branch off. *"கழி கத்தரித்துப் போகிறது."* 3. மாறுபடுதல்; to change, alter, as fortune. "ஆ கூழ்க் கத்தரித்துப் போயிற்று" (உ.வ.).

[கத்துதல் – வெட்டுதல். கத்து + அரி = கத்தரி.]

கத்தரி *kattari*, பெ.(n.) வேனிற்காலத்துக் கடுங்கோடையில் மிகவும் வெப்பமான மேழ (சித்திரை)த் திங்கள் 23 முதல் விடை (வைகாசி)த் திங்கள் 7ம் நாள் வரைப்பட்ட காலம்; period of the greatest heat in summer, usually the fortnight from 23rd chitirai to 7th vaikasi. "இவ்வாண்டு கத்தரி மிகவும் கடுமையாயிருக்கிறது" (உ.வ).

[கத்திரி – கத்தரி.]

கத்தரிக்கட்டு *kattari-k-kaṭṭu*, பெ.(n.) கத்தரிக் கோல் போல வீட்டுமுகட்டுக்கைகளின்ச் சேர்க்கை. (இ.வ.); scissorwise coupling of rafters.

[கத்திரி + கட்டு – கத்தரிக்கட்டு.]

கத்தரிக்கரப்பான் *kattari-k-karappāṉ*, பெ.(n.) கரப்பான் வகை; a kind of eruption.

[கத்திரி + கரப்பான்.]

கத்தரிக்காய் *kattari-k-kāy*, பெ.(n.) ***கத்தரி*** பார்க்க; see *kattari*.

[கத்தரி + காய்.]

கத்தரிக்காய் வகைகள்:

1. முட்டைக்கத்தரி - egg plant. 2. கொத்துக் கத்தரி -west indian turkey-berry. 3. நித்தக் கத்தரி - brinjal. 4. நீலக்கத்தரி - purple brinjal. 5. காரல் கத்தரி அல்லது காருகத்தரி - jew's apple. 6. முள்ளுக்கத்தரி - prickly brinjal. 7. கொடிக்கத்தரி - creeper brinjal. 8. காட்டுக் கத்தரி - wild brinjal. 9. செங்கத்தரி - red brinjal. 10. சிறுகத்தரி - small brinjal. 11. பந்தற் கத்தரி - moon flower brinjal. 12. கண்டங்கத்தரி - yellow -berried night-shade. 13. குத்துக் கண்டங்கத்தரி - another species yellow berried night shade. 14. ஆகாயக் கத்தரி - rose mallow. 15. கார்க் கத்தரி - jew's apple (சா.அக).

கத்தரிக்குண்டான் *kattari-k-kuṇḍāṉ*, பெ.(n.) 1. வெள்ளரி; field melon. 2.முலாம்பழம்; musk-melon.

[கத்தரி + க்கு + உண்டான்]

வெள்ளரியும், முலாம்பழமும் உடற்சூட்டைத் தணிக்கு மென்பதால் கடுங்கோடையான கத்தரிக்கு இதன் பயன் பாட்டை நோக்கி இப்பெயர் உண்டாயிற்றெனக.

கத்தரிகை¹ *kattari-kai*, பெ.(n.) கத்தரித்தல்; cutting.

[கத்தரி + கை.]

கத்தரிகை² *kattari-kai*, பெ.(n.) 1. கத்தரிக்கோல்; scissors, *"மயி ரரிதற்கொரு கத்தரிகை தருகென" (பெருங்.வத்தவ 14,7).* 2. இணையா வினைக்கை வகை; gesture with one hand in which the forefinger and the middle finger are held together and pointed upward, while the thumb and the ring finger remain bent, the little finger being kept stretched (சிலப். 3,18. உரை.).

Pkt. kattiyā

[கத்தரி கத்தரி + கை. கை – சிறுமைப் பொருள் பின்னொட்டு.]

நாட்டியக் கையமைப்பில் ஆள்காட்டி விரலும் நடுவிரலும் இணைந்து மேனோக்க பெருவிரலும் மோதிரவிரலும் வளைந்துநிற்கும் நளிநய [அபிநய]ப் பங்கு இணையாவினைக்கை எனப்படும்.

கத்தரிகைக்கால் *kattarikai-k-kāl*, பெ.(n.) 1. கத்தரிக் கோலின் அலகு; shanks of scissors. 2. கத்தரி போற்பிணைத்த கால்; beams or poles crossed and

placed on the ground for supporting a weight. 3. நாற்காலி முதலியவற்றின் மடக்குக் கால்; legs of a camp-table or camp-chair.

[கத்திரிகை + கால்.]

கத்தரிகைக்கை *kattarigai-k-kai,* பெ.(n.) ***கத்தரிகை*** பார்க்க; see *kattari-kai.*

மறுவ. இணையா வினைக்கை

[கத்திரிகை கத்தரிகை + கை.]

கத்தரிகைப்பூட்டு *kattarikai-p-pūṭṭu,* பெ.(n.) ***கத்தரிக்கட்டு*** பார்க்க; see *kattari-k-kaṭṭu.*

[கத்தரிகை + பூட்டு.]

கத்தரிநத்தம் *kattarinattam,* பெ.(n.) ஊர்ப்பெயர்; name of a village.

[கத்தரி + நத்தம்.]

கத்தரிக்காய் விளையும் அடிப் படையில் அமைந்த ஊர்ப் பெயராகும்.

கத்தரிநாயகம் *kattari-nāyagam,* பெ.(n.) பெருஞ் சீரகம் அல்லது யானைச்சீரகம்.(சா.அக); chinese anise.

[கத்தரி + நாயகம் – மெலிந்து நீண்ட நீட்சி குறித்த பெயர்.]

கத்தரிபாண்டு *kattari-pāṇḍu,* பெ.(n.) கட்டடக் கலைச் சொல்; architectural technical word.

[கத்தரி + பாண்டு.]

கற் கட்டடச் சுவரில் ஆறடி அல்லது எட்டடிக்கு ஒரு பாண்டுக்கல் போடப்படும். சுவரில் அகலம் அதிகமானால் இரண்டு பாண்டுக்கற்கள் கத்தரிபோல் போடப்படுவதால் பெற்றபெயர்.

கத்தரிப்பிடி *kattari-p-piḍi,* பெ.(n.) 1. கத்தரிக் கோலின் பிடி; handle of scissors. 2. மற்போரில் எதிராளியைத் தாக்கும் பிடி வகை; a mode of wrestling.

[கத்தரி – கத்தரி + பிடி.]

கத்தரிப்புழு *kattari-p-puḻu,* பெ.(n.) 1. கத்தரிச் செடியிலுண்டாகும் புழுவகை; small worm or insect found in the brinjal. 2. அரிக்கும் புழு; a burrowing parasite.

[கத்தரி + புழு.]

கத்தரிப்பூட்டு *kattari-p-pūṭṭu,* பெ.(n.) 1. கத்தரியைப் போல் மரக்கொம்புகளைக் கட்டுதல்; sticks tied in form of shears. 2. கத்தரிப் பிடியைப் போன்றிருக்குமாறு முடிதல்; a mode of head-dress.

ம. கத்திரிப்பூட்டு

[கத்திரி – கத்தரி + பூட்டு.]

கத்தரிமணியன் *kattari-maṇiyaṉ,* பெ.(n.) 1. எலிவகை.(வின்.); a kind of poisonous rat. 2. பாம்புவகை (யாழ்.அக); a kind of snake.

[கத்திரி – கத்திரி + மணியன்.]

கத்தரிமூக்குப்பறவை *kattarimūkku-p-paṟavai,* பெ.(n.) நீண்ட இறக்கைகளும் வாத்து போன்ற உடலமைப்பும் வலிய அலகையும் உடைய கடற்பறவை வகை; a sea bird having.

[கத்தரி + மூக்கு + பறவை.]

கத்தரியம் *kattariyam,* பெ.(n.) ஆடு தின்னாப் பாலை; worm killer.

[கத்தரி + அம்.]

கத்தரிவிரியன் *kattari-viriyaṉ,* பெ.(n.) கண்ணாடி விரியன்; russell's viper.

[கத்திரி – கத்தரி + விரியன்.]

கத்தரிவேலை *kattari-vēlai,* பெ.(n.) ***கத்தரிக்கட்டு*** (இ.வ.) பார்க்க; see *kattari-k-kaṭṭu.*

[கத்தரி + வேலை.]

கத்தரை *kattarai,* பெ.(n.) கொடிவழி(கோத்திரம்) (யாழ்ப்); family, race.

வ. கோத்திரம்>த. கத்தரை.

கத்தல் *kattal,* பெ.(n.) 1.உரத்த குரல் பேச்சு; loud talk; shout 2. அலறல்; loud ery; shriek.குழந்தை *"வீல்"*என்றுகத்தியது (உ.வ.). 3. உரத்த ஒலி; noise.

[கழல் – (கழறு – கழல் + து – கழத்து – கத்து.]

கத்தல்காலி *kattalkāli,* பெ.(n.) கசப்புச் சுவையுள்ள புகையிலை; inferior kind of tobacco.

ம. கத்தல் காலி

[கச்சல் (கசப்பு) – கத்தல் + காலி.]

கால் = துளை. புகையிலையைத் துளை யிட்டுப் பதப்படுத்துவர். அவ்வாறு இடப்படும் துளையே புகையிலைக்குப் பெயராயமைந்தது.

கத்தலாச்சிக்குருவி *kattalāccikkuruvi,* பெ.(n.) செம்மஞ்சள் நிறமும் இறக்கையில் வெள்ளைப் பட்டையும் உடைய பறவை; dittas.

[கத்தலைச்சி + குருவி]

கத்தலை[1] *kattalai,* பெ.(n.) இருள்; darkness.

க. கத்தலெ, கத்தலு, கழ்தலெ, கர்தலெ, கள்தலெ. **பட.,து.** கத்தலெ.

[கல் = கருமை. கல் → கழ் → கழ்த்தல் → கத்தல் → கத்தலை]

கத்தலை[2] *kattalai,* பெ.(n.) தலையில் சிறு கல்லுடைய கடல்மீன் வகை; a genus of sea fish, sciaena.

[கல் + தலை – கற்றலை → கத்தலை.]

கத்தலை மீன் வகை: 1. கருங்கத்தலை - black sciaena. 2. சாம்பற் கத்தலை - gray sciacena. 3. துருக்கத்தலை - rusly sciacena. 4. வரிக்கத்தலை - striped sciacena. 5. வெள்ளைக் கத்தலை - white sciacena. 6. குறுங்கத்தலை - small sciacena. 7. ஆனைக்கத்தலை - elephant sciacena.

கத்தன் *kattan,* பெ.(n.) 1. செய்பவன்; agent, doer, maker, author. 2. கடவுள் (புலியூரந்.32.); god. 3. கிறித்துவ மதப் பூசகன்; a christian priest (சேரநா.).

ம. கத்தன்

த. கருத்தன் > **Skt.** karta.

[கரு = செய். கரு → கருத்தன்.]

கத்தனம்[1] *kattanam,* பெ.(n.) கவசம்; jacket, tunic, coat of mail *"கத்தனங் கடிது பூண்டார்" (இரகு. மீட்சிப்.7).*

தெ. கத்தளமு; **க.** கத்தள.

[கட்டு → கத்து → கத்தணம்.]

கத்தனம்[2] *kattanam,* பெ.(n.) கத்தரித்தல்; to cut with scissors.

[கள் = வெட்டு. கள் → கட்டு → கத்து. (கொ.வ.)]

கத்தாக்கு *kattākku,* பெ.(n.) கூத்தில் அணியும் உடை; கூத்துடுப்பு. (ம.அக.); dancers dress.

[கூத்து + ஆக்கு – கூத்தாக்கு → கூத்தாக்கு 'ஆக்கு' சொல்லாக்க ஈறு.]

கத்தாமார் *kattāmār,* பெ.(n.) ***கற்றாழைச்சாறு*** பார்க்க; see *kaṟṟāḻai-c-cāṟu* (சா.அக).

[கற்றாழை → கத்தாழை + சாறு– கத்தாமார் (கொ.வ.).]

கத்தாழம்பட்டு *kattāḻampaṭṭu,* பெ.(n.) வேலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Velur district.

[கற்றாழை + பற்று – கற்றாழைப் பற்று → கத்தாழைப்பட்டு → கத்தாழம்பட்டு.]

கத்தாழம்பால் *kattāḻamāl,* பெ.(n.) ***கற்றாழைச்சாறு*** பார்க்க; see *karraḻai-c-cāṟu* (சா.அக).

[கற்றாழை → கத்தாழை + அம் + பால்.]

கத்தாழை[1] *kattaḻai,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kadalur district.

[கற்றாழை + கத்தாழை.]

கத்தாழை[2] *kattāḻai,* பெ.(n.) ***கற்றாழை*** பார்க்க; see *kaṟṟaḻai* (சா.அக).

க. கத்தாளெ; **பட.** கத்தாளெ.

[கல் + தாழை – கற்றாழை. கல் = திண்மை.]

கத்தாளம்பட்டி *kattalampaṭṭi,* பெ.(n.) தூத்துக்குடி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tuttukkudi district.

[கற்றாழை + பட்டி.]

கத்தாளை[1] *kattāḷai,* பெ.(n.) மேட்டுப்பாங்கான நிலத்தில் விளையும் நெல்வகை (w.g.); a kind of paddy, growing on high ground.

மறுவ. குத்தாளை

[கற்றாழை → கத்தாளை. புன்செய் மேட்டுநிலத்தில் கற்றாழை இயல்பாய் வளர்வது போல் வளரத்தக்க ஒப்புமை கருதி பெற்ற பெயர்]

கத்தாளை[2] *kattāḷai,* பெ.(n.) ஒருவகைக் கடல் மீன்; a kind of sea fish (அறி.கள.).

மறுவ. முரசொலி மீன்

[கல் + தலை – கற்றலை → கத்தாளை.]



கத்தாளை மீன்

கத்தி *katti,* பெ.(n.) 1. பிடிபொருத்திய நெடும்பட்டை வடிவக் கூர்மையுடைய வெட்டுக் கருவி; knife. கத்தியைத் தீட்டாதே(புத்தி) மதியைத் தீட்டு (உ.வ). 2. மழிப்புக் கத்தி(சவரக்கத்தி); razer. கத்தியால் தலையை மழித்துக் கொண்டான் (உ.வ.). 3. அறுவைக் கத்தி ; lancet, கொதி நீரில் போட்ட கத்தியையே மருத்துவத்திற்குப் பயன்படுத்த வேண்டும் (உ.வ.). 4. வாள்; sward. கத்திச்சண்டைக் காட்சிகள் நிறைந்த படம் (உ.வ.). 5. குறுவாள்; dagger. காவலாளி இடுப்பில் கத்தி இருக்கும் (உ.வ.). 6. குத்துவாள்; short scimiter. கத்திக்குத்துக் காயம் எளிதில் ஆறாது (உ.வ.). 7. அரிவாள்; sickle. மரமேறி இடுப்புக் கத்தியுடன் மரத்திலேறினார் (உ.வ.). 8. கொடுவாள், வளைந்த பட்டாக்கத்தி; scimitar.மரத்தைக் கத்தியால் வெட்டினான் (உ.வ.). 9. மடக்குக்கத்தி; pen knife. கத்தியால் கரிமுனையைச் சீவு (உ.வ.). 10. வெட்டுங்கருவி; cutting instrument.விதைப்புல் வெட்ட கத்தியை வாங்கி வா (உ.வ.). 11. கப்பியிடிக்க உதவும் கட்டைக்கத்தி; rammer. 12. அட்டைக்கத்தி; sword mode of card board.

ம., க., தெ., கு., பட. கத்தி; **து.** கத்தி, கத்தெ; **கோத.**கத்ய்; **கூ.**கசேரு; **பிரா.** கத்தார். **கச.** கட்டி; **கொர.** கத்தெ; **Hind.**katti.

[கள் = வெட்டுதல். கள் → கட்டு → கத்து → கத்தி.]

kad-i, to cut, to rend, to reprove; katti, a knife, a sword comp. **Sa.** krit, to cut, but especially the **E.** cut; **Norman-French**. cotu; **Welsh.** cateia, to cut; **Lat.** caed-o. **Perpsian** and **Ossete**. kard, a knife, and probably also the Dravidian katti, a knife, kattiri, scissors, is **Sans**. a derivative of krit (C.G.D.F.L. 591).

கத்திகட்டிச்சேவல் *katti-kaṭṭi-c-cēval,*பெ.(n.) கால்களிற் கத்திகட்டிச் சண்டைக்கு விடப்படுஞ் சேவல்; fighting cock, having knives with sharp blades fastened to its spurs.

[கத்தி + கட்டி + சேவல்]

கத்திக்கப்பல் *kattik-kappal,*பெ.(n.) கீழ்ப்புறம் கத்தி முனை போன்ற பகுதியைக் கொண்ட தாளால் செய்த சிறுவர் விளையாட்டுக் கப்பல்; a children`s play paper - boat with a sharp edge at the bottom.

[கத்தி + கப்பல்.]

கத்திக்காணம் *katti-k-kāṇam,* பெ.(n.) படைக்களன்; tax on weapons like swords, knives etc.*"கூலமுந்தரகுங் கத்திக்காணமும்" (S.I.I.i.151).*

ம. கத்திக்காணம்

[கத்தி + காணம். காணம் = வரி.]

கத்திக்காய் *katti-k-kāy,* பெ.(n.) கத்தி போலுள்ள காய்; knife-shaped fruit of horse-gram etc.

ம. கத்திக்கா

[கத்தி + காய்.]

கத்திக்காயம் *katti-k-kāyam,*பெ.(n.) கத்தி வெட்டியதால் ஏற்பட்ட புண்; injury or wound caused by stabbing, cutting etc., with a knife (சா.அக.).

[கத்தி + காயம்.]

கத்திக்காரன் *katti-k-kāraṉ,* பெ.(n.) கள் இறக்குபவன்; a toddy-drawer. ஒரு மரக்கள்ளிற்குக் கத்திக்காரனிடம் சொல்லி வை (உ.வ.).

ம. கத்திக்காரன்

[கத்தி + காரன் – கத்திக்காரன். கத்தி = பாளையறுவாள்]

கத்திக்குத்து *katti-k-kuttu,*பெ.(n.) 1. கத்தியால் குத்துவது; stabbing with a knife. கண்டபடி பேசினால் கத்திக்குத்து விழும் (உ.வ.). 2. கத்தி குத்துவதால் ஏற்பட்ட காயம்; stabbing wound. கத்திக்குத்து ஆறுவதற்குப் பலநாளாகும் (உ.வ.).

ம. கத்திக்குத்து

[கத்தி + குத்து.]

-குழாய் *katti-k-kuḷāy,* பெ.(n.) விலங்குகட்கு மருந்தூட்டும் குழாய்; bamboo or other tube for administering medicine to animals.

[குத்தி + குழாய் – குத்திக்குழாய் → கத்திக்குழாய்.]

கத்திக்கூடு *katti-k-kūḍu,* பெ.(n.) 1. கத்தியை வைக்கும் உறை; a case for keeping a sword. கத்திக்கூட்டுக்குள் கத்தியை வை (உ.வ.). 2. கத்தியை வைக்கும் கூடை; the case which holds the toddy-knife. கத்திக்கூடில்லாமல் கள்ளிறக்கச் செல்லாதே (உ.வ.).

ம. கத்திக்கூடு

[கத்தி + கூடு.]

கத்திக்கோரை *katti-k-kōrai,* பெ.(n.) பெருங்கோரை; a kind of sedge. (சா.அக)

[கத்தி + கோரை – கத்திக்கோரை (கத்திபோல் நீண்ட கோரை).]

கத்திகட்டி *katti-kaṭṭi,* பெ.(n.) 1. போர்வீரன்; warrior, carrying a sword. 2. கத்திகட்டியாடுபவன்–ள்; sword dancer, man or woman.

[கத்தி + கட்டி.]

கத்திகட்டு–தல் *katti-k-kāttu-,* 5 செ.கு.வி. (v.i.) கம்பலைப்படுதல்; to quarrel toomuch.

[கத்தி + கட்டு.]

கத்திகை[1] *kattikai,* பெ.(n.) 1. பலவகைப்பூக்களால் தொடுத்த மாலை; a kind of garland, made up of variety of flowers. *"செங்கழுநீ ராயிதழ்க் கத்திகை" (சிலப்.8,47).* 2. குருக்கத்தி; common delight of the woods. *"கத்திகைக் கண்ணி நெற்றி" (சீவக. 971.).* 3. கருக்குவாய்ச்சி அல்லது கருக்கு வாலிமரம் (சா.அக); jagged jujube. 4. படர்கொடி; spreading creeper (சா.அக.).

[கொத்து – கத்து – கத்துகை – கத்திகை.]

கத்திகை[2] *kattikai,* பெ.(n.) சிறிதுகிற்கொடி, பதாகை(திவா.); banner, streamer, small flag.

[கட்டு – கத்து + கை – கத்துகை – கத்திகை = வெட்டப்பட்ட துணி.]

கத்திகையன் *katti-kaiyaṉ,* பெ. (n.) கள் இறக்குபவன்; a toddy - drawer (சேரநா.).

ம. கத்திக்கையன்

[கத்தி + கையன். கத்தி = பாளையறுவாள். பாளை சீவுதற்காகக் கையில் பாளையறுவாள் வைத்திருத்தலால் கள் இறக்குவோனை இச்சொல் குறித்தது.]

கத்திதீட்டு–தல் *katti-tiṭṭu-,* 5 செ.கு.வி(v.i.) 1. வெட்டுங்கருவிகளைக் கூர்மைப்படுத்துதல்; to gring or sharpen cutting tools. கத்தியைத்தீட்டாதே வுந்தன் அறிவை (புத்தியை)த் தீட்டு(உ.வ.). 2. பகைத்தல்; to be at daggers drawn; to be on hostile terms. 3. தீங்கிழைக்க நேரம்பார்த்தல்; to bide one's time seeking opportunities to injure. அவனைக் கவிழ்க்க இவன் கத்தி தீட்டுகிறான்(உ.வ.).

மறுவ. சாணைப்பிடி

க. கத்திஇரி

[கத்தி + தீட்டு.]

கத்திதீட்டுவான் *kattitiṭṭuvāṉ,* பெ.(n.) ***கத்திதீட்டு வோன்*** பார்க்க ; see *katti-tiṭṭuvōṉ,*

[கத்தி + தீட்டுவான். தீட்டுவோன் – தீட்டுவான்.]

கத்திதீட்டுவோன் *katti-tiṭṭuvōṉ,* பெ.(n.) வெட்டுங் கருவிகளைக் கூர்மைப்படுத்தும் தொழிலாளி; knife-grinder, an itinerant grinder or sharpener of knives, scissors and cutting instruments.

மறுவ. சாணைபிடிப்போன்

[கத்தி + தீட்டுவான்.]

கத்திநுணா *katti-nuṇā,* பெ.(n.) நிலவேம்பு (மலை.); creat.

[கத்தி + நுணா. கத்தி = கத்தி போன்ற இலையுள்ளது.]

கத்திப்பணம் *katti-p-paṇam,* பெ.(n.) கள்ளிறக்குவதற்கு போடப்பட்ட ஒரு வரி; a tax for toddy-drawing (சேரநா.).

ம. கத்திப்பணம்

[கத்தி + பணம்.]

கத்திப்பிட்டல் *kattippiṭṭal,* பெ.(n.) ***கத்திக்கூடு*** பார்க்க; see *katti-k-kūḍu.*

ம. கத்திப்பிட்டல்

[கத்தி + பிட்டல். கத்திப்பிட்டல். புட்டி – புட்டில் பிட்டல் (கொ.வ).]

கத்திபோடு—தல் *kattipōḍu*, 4செ.குன்றாவி(v.t.) 1. அறுவை மருத்துவம் செய்தல்; to treat by surgery. 2. கத்தியிட்டறுத்தல்; to use surgical knife for curing physical illness. 3. மழித்தல்; to shave.

[கத்தி + போடு.]

கத்திமீன் *katti-mīṉ*, பெ.(n.) ஒருவகைமீன்; a kind of fish.

[கத்தி +மீன்.]



கத்திமீன்

கத்தியம் *kattiyam*, பெ.(n.) நல்லாடைவகை. (திவா.);a kind of cloth of superior quality.

Pkt. katta; **U.** kātna.

[கத்தி – கத்தியம்.]

கத்தியம்பு *kattiyambu*, பெ.(n.) இருபக்கமும் முனையுள்ள வாள்; double-edged sword.

ம. கத்தியம்பு.

[கத்தி + அம்பு.]

கத்தியரம் *kattiy-aram*, பெ.(n) ஒருவகை அரம்; a kind of file.

ம.கத்தியரம்

[கத்தி + அரம்.]

கத்தியவாடு *kattiyavāḍu*, பெ.(n.) வேலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Velur dt.

[கத்தியன் + பாடி – கத்தியன்பாடி – கத்தியவாடு.]

கத்தியன் *kattiyaṉ*, பெ.(n.) போர்வீரன்; warrior.

Pkt. kathrian

[கத்தி – கத்தியன்.]

கத்தியாள் *kattiyāḷ*, பெ.(n.) வெட்டுபவன்; a chopper (சேரநா.).

ம. கத்தியாள்

[கத்தி + ஆள்.]

கத்தியெழுத்தாணி *katti-yeḻuttāṇi*, பெ.(n.) கத்தியுடன் இணைந்துள்ள எழுத்தாணி; an iron style fixed to a knife (formerly used for writing on palm leaves).

ம. கத்தியெழுத்தாணி

[கத்தி + எழுத்தாணி.]

கத்திரி[1]–த்தல் *kattiri*, செ.குன்றாவி.(v.t.) ***கத்தரி–த்தல்*** பார்க்க; see *kattari-*.

[கத்தரி – கத்திரி (கொ.வ.).]

கத்தரி – கத்திரி, 'கத்தரி' என்ற சொல்லிலுள்ள இறுதி இகரத்தின் தாக்கத்தால் அதற்கு முன்னுள்ள தகரத்துடன் இகரம் சேர்ந்து கத்திரி என மாற்றியொலிக்க இடம் தந்தது.

கத்திரி[2] *kattiri*, பெ.(n.) **கத்தரி** பார்க்க; see *kattari*.

ம. கத்திரி; **க.** காச்சீ கிட.

[கத்தரி – கத்திரி(இ.வ.). கத்தரிக்காயைக் கத்திரிக்காய் என்பது வழுவாம்.]

கத்திரி[3] *kattiri*, பெ.(n.) 1. நன்மையில்லாத நாள் (விதான குணா.குண.48); an inauspicious day. 2. ***கத்தரிவிரியன்*** பார்க்க; see *kattari-viriyaṉ*. 3. தலைவிரிபறை (பிங்.); a kind of drum.

[கத்தரி– கத்திரி. வெட்டிக் கூராக்கும் கத்தரிக்கோல் போல் நலன்களைச் சிதைத்துத் தீங்கு பயக்கும் என்று கருதப்பட்ட நாள்.]

கத்திரி[4] *kattiri*, பெ.(n.) ***கத்தரி[5]*** பார்க்க; see *kattari[5]*.

[கத்தரி – கத்திரி.]

கத்திரி[5] *kattiri*, பெ.(n.) தமிழ்நாட்டிலுள்ள சௌராட்டிரர் பேசும் மொழி. (G. Madu.D ï4); dialect of Gujarati and the spoken language o f the Saurastras in Tamil Nadu.

[கத்தியவார் – கத்தியவாரி – கத்திரி. குச்சரநாட்டுக் கத்தியவார் பகுதியில் பேசப்பட்ட கிளைமொழி.]

கத்திரி[6] *kattiri,* பெ.(n.) செடி வெட்டுங் கத்தரி; pruring knife.

[கத்தரி – கத்திரி]

கத்திரிக்கள்ளன் *kattiri-k-kaḷḷaṉ,* பெ.(n.) முடிச்சவிழ்ப்பவன், முடிச்சுமாறி (இ.வ.); a pick-pocket.

க. கத்தரிகள்ள

[கத்திரி + கள்ளன்.]

கத்திரிக்கை[1] *kattirikkai,* பெ.(n.) நாட்டியத்தில் கத்தரிக்கோல் தவசக் கதிர் போன்றவற்றைக் குறிக்க இருகை சுட்டுவிரல்கள் நீட்டி மற்றவிரல் களை மடக்கிக் காட்டும் அடையாளம்; இணைக்கை நளிநய(அவிநய) வகை.(பரத.பாவ.64); (natya) gesture with both hands in which the fore-fingers of either hand are stretched out together whilst the rest are kept bent to represent a pair of scissors, ear of corn, etc.

[கத்தரி – கத்திரி + கை.]

கத்திரிக்கை[2] *kattiri-k-kai,* பெ.(n.) மயிரெறி கருவி; scissors.

[கத்தரி – கத்திரிக்கை.]

கத்திரிக்கோல் *kattiri-k-kōl,* பெ.(n.) இரண்டு சம நீள மாழைப்பட்டைகளைக் குறுக்கில் ஒன்றன்மேல் ஒன்றாக வைத்திணைத்து அவற்றின் கூர்மையான உள் அலகுகளால் துணி முதலியவற்றை வெட்டப் பயன்படுத்துங் கருவி; scissors, shears, snuffers.

[கத்தரி – கத்திரி +கோல். கத்தரிக்கோல் பார்க்க; see kattari-k-kōl.]

கத்திரிக்கைப்பூட்டு *kattiri-k-kai-pūṭṭu,* பெ.(n.) ஒருவகைப் பூட்டு; a kind of lock.

[கத்தரி – கத்திரி + கை + பூட்டு.]

கத்திரிகம் *kattirigam,* பெ(n.) கால்மாறிநிற்கை. (தத்துவப்.109, உரை); (Saiva) standing posture with legs crossed.

[கத்தரி – கத்திரி – கத்திரிகம். கத்தரி போல் கால் மாறி நிற்றல்.]

கத்திரிகை[1] *kattirigai,* பெ.(n.) தலைவிரிபறை; a kind of drum. *"கத்திரிகை துத்திரி....கருவித்திர ளலம்ப."* *(தேவா.837,5).*

[கத்தரி – கத்திரி + கை.]

கத்திரிகை[2] *kattirigai,* பெ.(n.) திரிபதாகையின் முடங்கிய அணிவிரல் புறைத்ததாகிய நடுவிரலைச் சுட்டு விரலோடு பொருந்த நிமிர்ப்பது. (சிலப்பு.3; 18உரை); a danceing posture with fingers crossed. *"படக நெடுங்கத்திரிகை" (கோயிற்பு. 39).*

[கத்தரி – கத்தரி +கை.]

கத்திரிசரம் *kattiri-saram,* பெ.(n.) கைமரங்களை இணைக்கும் குறுக்குமரம்; rafer.

[கத்தரி – கத்திரி +சரம்.]

கத்திரிசால் *kattirisāl,* பெ.(n.) மெழுகுவத்தி நின்று முழுதும் எரிதற்கு தாங்கலான கருவி; candle-stick.

[கத்தரி – கத்திரி + சால்.]

கத்திரிநாயகன் *kattiri-nāyagaṉ,* பெ.(n.) **கத்தரிநாயகம்** பார்க்க; see *kattari-nāyagam.*

[கத்தரி – கத்திரி + நாயகம்.]

கத்திரிநோய் *kattiri-nōy,* பெ.(n.) 1. ஒருவகை இடுப்பு நோய்; a cutting pain in the hip. 2. கத்திரிப்பது போல் உண்டாகும் வலி; a severe cutting pain in general. 3. மகப்பேற்று நோய்; dilating pains of labour (சா.அக).

[கத்தரி – கத்திரி + நோய்.]

கத்திரிபாவல் *kattri-pāval,* பெ.(n.) **கத்திரிபாவிலி** பார்க்க; see *kattiri-pāvili. "கத்திரிபாவல் செவிபுனையா" (தனிப்பா. ii, 250,590)*

[கத்திரி + பாவல்.]

கத்திரிபாவிலி *kattri-pāvili,* பெ.(n.) மகளிர் காதணி வகை; an ornament for the ear, made of gold and gems worn by women near the top of each ear.

ம.கத்திரிபாவல்

க. கத்தரிபாவுலி; **தெ.** கத்தெரபாவிலி.

[கத்தரி → கத்திரி + பாவலி. பாவலி - பரவலான தட்டை அணி.]

கத்திரிமணியன் *kattiri-maṇiyaṉ*, பெ.(n.) ***கத்தரி மணியன் (வின்.)*** பார்க்க ; see *kattari-maṇiyaṉ*.

[கத்திரி → கத்திரி + மணியன்.]

கத்தரிமல் *kattirimal*, பெ.(n.) கைமரங்களை இணைக்கும் குறுக்கு மரம் (நெல்லை); rafter.

[கத்தரி → கத்திரி + (மால்)மல்]

கத்திரிமாறு-தல் *kattirimāṟu-*, செ.கு.வி(v.i.) கத்தரியைப்போல் ஓரிடத்தில் சேர்ந்து இருபக்கமும் மாறி இருத்தல்; to converge two sides at a place where they cross each other, as two blades of a scissors.

[கத்திரி + மாறு.]

கத்திரியன் *kattiriyaṉ*, பெ.(n.) இரண்டாம் இனத்தான்; kṣatriya, man of the warrior caste, the second of the four castes. *"கத்திரியர்கான்"(திவ்.பெரியாழ்.1,9,6)*

[கத்தியன் →கத்திகாரன் →கத்திரியன் த. கத்தியன் >Skt. ksatria.]

கத்திரிவிரியன் *kattiri-viriyan*, பெ.(n.) ***கத்தரி விரியன்*** பார்க்க; *kattari-viriyan*.

[கத்திரி + விரியன்.]

கத்திரிவெயில் *kattiriveyil*, பெ.(n.) மேழத் (சித்திரை) திங்கள் இறுதி ஏழுநாள்களிலும் விடைத்(வைகாசி) திங்கள் முதல் ஏழு நாள்களிலும் அடிக்கும் கடுமையான வெயில்; highly tormenting hotdays of last seven days of cittirai month and first seven days of vaigasi month.

[கத்தரி → கத்திரி + வெயில்.]

கத்திரிவேலை *kattiri-vēlai*, பெ.(n.) ***கத்திரிக் கட்டு*** பார்க்க; see *kattēri-kaṭṭu*.

[கத்திரி + வேலை]

கத்திரு *kattiru*, பெ.(n.) கருத்தன்; agent, doer, maker, creator. *"நுவல்கத்திருவோடு போத்திருவே" (வேதா.கு.37)*

[கரு →கருத்தன் →கருத்தர் →கத்திரு (கொ.வ.).]

கத்திவாக்கம் *kattivākkam*, பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanchipuram district.

[கத்தரி → கத்தி + பாக்கம்– கத்திரிப்பாக்கம் → கத்திவாக்கம்.]

கத்திவால் *kattivāl*, பெ.(n.) கத்திபோல் வால் உள்ள ஒரு மீன்; a kind of fish.

[கத்தி + வால்.]



கத்திவால்மீன்

கத்திவாள் *katti-vāḷ*, பெ.(n.) 1. வளைவாள்.(வின்.); scimitar. 2. வெட்டுக்கத்தி; a chopper.

ம. கத்திவாள், கத்தியாள்.

[கத்தி + வாள்.]

கத்திவாளி அம்பு *kattivāḷi-ambu*, பெ.(n.) வாள் வடிவினதான அம்பு; an arrow shaped sword, a semicirlular arrow.

தெ. கத்திவாலி அம்மு

கத்திவீச்சு *katti-viccu*, பெ.(n.) கத்தியாட்டம்; sword dance.

க. கத்திவரசெ

[கத்தி + வீச்சு.]

கத்திவீசுதல் *katti-visu-*, 5. செ.கு.வி.(v.i.) வாள்வீசி விளையாடுதல், to brandish a sword, perform sword exercises or sword dance.

[கத்தி + வீசு.]

கத்திவெட்டு *katti-veṭṭu*, பெ.(n.) கத்தி வெட்டினால் ஏற்பட்ட காயம்; a cut with a knife.

தெ. கத்திவாடு

[கத்தி + வெட்டு.]

கத்து[1]–தல் *kattu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. காக்கை கரைதல், மயில் அகவுதல், குயில் கூவுதல், கோழி, கவுதாரி போன்றன கொக்கரித்தல், நாய் குரைத்தல், நரி ஊளையிடுதல், யானை பிளிறல், அரிமா உரப்புதல், வரிமா உறுமுதல், குதிரை கனைத்தல், வண்டு முரலுதல், மாடு, கழுதை, தவளை, பூனை போன்றவை கத்துதல்; to caw as a crow, to screch as a peacock, to coo as a cuckoo , to chuck as a partridge and cock, to yelp as a puppy, to howl as a bear, to trumpt as an elephant, to roar as a lion, to growl as a tiger, to neigh as a horse, to hum as a bee, to croak as a frog, to maa as a cow, to browl as a donkey, to mew as a cat. 2. குரலெழுப்பிச் சொல்லுதல்; to scream.தன் கருத்தை வலியுறுத்த கத்திப் பேசினான் (உ.வ.). 3.கூவுதல்; to bowl, cry.கூப்பிடு தொலைவில் உள்ளவனையும் கத்தி அழைக்க இயலாதவன் (உ.வ.). 4. இரைச்சலிடுதல்; to make continued noise. வகுப்பறையில் மாணவர்கள் கத்திக் கொண்டுள்ளனர் (உ.வ.). 5. அழுதல்; cry. பாலுக்காக குழந்தை கத்திக் கொண்டிருக்கிறது (உ.வ.). 6. பிதற்றுதல்; to babble, jabber, chatter talk in vain.*"பேதையோராய்க் கத்திடு மான் மாக்கள்" (சி.சி.பா.பாயி.8).* 7. முழங்குதல்; to roar as the sea .*"கத்துகடல் சூழ் நாகை"(தனிப்பா.i.31.58).*

ம. கத்துக; **க.** கத்து.

[கழல்(கழறு) → கழல் + து – கழத்து → கத்து.]

கத்து[2]–தல் *kattu,* 5 செ.கு.வி.(v.i.) 1. எரிதல்; to burn, kindle, burn with flame.2. பசியால் வயிற்றெரிச்சல் உண்டாதல்; to pinch, to feel a burning sensation in the stomach due to hunger.

ம. கத்துக; **க,பட.** கத்து; **கோத.**கத்; **துட.**கொத்; **குட.**கத்த்; **து.** கத்துணி; **தெ.**கத்து.

[கனல் + து – கனற்று → கனத்து → கத்து.]

கத்து[3]–தல் *kattu,* 5 செ.குன்றாவி.(v.t.) வெட்டுதல்; to cut.

[கள் → கத்து.இவ்வினை பிற்காலத்து வழக்கற்றது.]

இருதிணை யுயிரிகளும் இயல்பாகக் கத்துவதைக் குறிக்கும் வினைச்சொற்கள், ஒலித்தல், கூப்பிடுதல் என்னும் இருபொருட்கும் ஏற்கும்.

கத்துதல் – ஒலித்தல், கூப்பிடுதல்

கரைதல் – " "

கூவுதல் – " "

விளித்தல் " "

அழைத்தல் – கத்துதல், கூப்பிடுதல். இவற்றுள் கரை அழை என்னும் சொற்கள் அழுதலையுங்குறிக்கும் [மு.தா.6.].

கத்து[4]–தல் *kattu,* 5 செ.குன்றாவி.(v.t.) ஓதுதல்; to recite, read.*"பொய்நூல் கத்திக் குவித்த பல்புத்தகத்தீர்" (அஷ்டம், திருவேங்கடத்தந்.33).*

[கழல்(கழறு) + து – கழத்து → கத்து.]

கத்து[5] *kattu,* பெ.(n.) 1. அழைக்கை; crying, bawling, calling. 2. பிதற்றுகை; chattering, idle talking, babbling.*"அச்சமயக் கத்தினார்" (அஷ்டப். திருவேங்கடமா.59).*

[கழல் (கழறு) + து – கழத்து → கத்து.]

கத்து[6] *kattu,*பெ.(n.) எழுத்துப்பதிவு.(c.g.); letter, writing, entry in a book.

க. கத்து; **Ar.**khatt.

[கொத்து→கெத்து → கத்து = வெட்டி அல்லது செதுக்கிப் பொறிக்கும் எழுத்துக் கல்வெட்டு]

கத்து[7] *kattu,*பெ.(n.) உடற்பொருத்து. (நாமதீப.); joints of the body.

[கள் → கழு → கழுத்து → கத்து.]

கத்து[8] *kattu,* பெ.(n.) சடைவு, களைப்பு(நாமதீப.); weariness.

[கனத்து → கத்து (வெப்பமிகுதியால் உண்டாகும் சோர்வு]

கத்தூரிச்சேறு *kattūri-c-cēṟu,* பெ.(n.) நறுமணத்திற்காகப் பயன்படுத்தும் கத்தூரிக் குழம்பு; a jellied musk preparation in perfumery(சா.அக).

[கடத்துரு → கத்தூரி + சேறு.]

கத்தூரிநாமம் *kattūri-nāmam,* பெ.(n.) கத்தூரியால் திருமேனியின் ஊர்வத்துவமாக திருமால் நெற்றி யிலிடுங் குறி; vertical streak of musk, painted in the middle of the forehead of the idol of Viṣṇu, as

in the shrine in Srirangam. *"சீரிதாளழுது கத்தூரிநாமமும்" (அஷ்டப் திருவரங்க கலம்.).*

[கத்தூரி + நாமம்]

கத்தூரிநாரத்தை *kattūri-nārattai,* பெ.(n.) நாரத்தை வகை. (யாழ்.அக); a fragrant kind of orange.

[கத்தூரி + நாரத்தை]

கத்தூரிநாவி *kattūri-nāvi,* பெ.(n.) கத்தூரிமான் (யாழ்.அக); musk deer.

[கத்தூரி + நாவி. நவ்வி – நாவி.]

கத்தூரிநாறி *kattūri-nāṟi,* பெ.(n.) கத்தூரி மணமுடைய ஒரு மரம்; a tree with the small of musk (சா.அக).

[கத்தூரி + நாறி]

கத்தூரிப்பட்டை *kattūri-p-paṭṭai,* பெ.(n.) கத்தூரி மணமுள்ள அலரிப்பூச்செடிகளை; musk scented oleander.

மறுவ. கத்தூரி அலரி

[கத்தூரி + பட்டை.]

கத்தூரிப்பிழம்பு *kattūri-p-piḻambu,* பெ.(n.) கத்தூரியை முதன்மையாகக் கொண்டு வழக்கும் அமிலம்; an acid extracted from a mixture with musk as a chief ingredient (சா.அக.).

[கத்தூரி +பிழம்பு.]

கத்தூரிப்பிள்ளை *kattūri-p-piḷḷai,* பெ.(n.) ***கத்தூரி நாவி*** பார்க்க **(யாழ்.அக.);** see *katturi-navi.*

[கத்தூரி + பிள்ளை.]

கத்தூரிப்பூ *kattūri-p-pū,* பெ.(n.) கத்தூரி மணமுள்ள அலரிப்பூ; musk scented oleander flower.

[கத்தூரி + பூ.]

கத்தூரிப்பூடு *kattūri-p-pūḍu,* பெ.(n.) கத்தூரி மணமுள்ள பூண்டு வகை; a genus of malvaceous plants(சா.அக).

[கத்தூரி + பூடு.]

கத்தூரிப்பூனை *kattūri-p-pūṉai,* பெ.(n.) 1. சவ்வாதுப் பூனை; large civeticat. 2. புனுகுப் பூனை; civet cat (சா.அக.).

[கத்தூரி + பூனை.]

கத்தூரிப்பொட்டு *kattūri-p-poṭṭu,* பெ.(n.) நெற்றியிலிடும் குறி; mark of musk on the forehead.

[கத்தூரி + பொட்டு.]

கத்தூரிமஞ்சள் *kattūri-mañjal,* பெ.(n.) மஞ்சள் வகை; long and round zedoary shrub.

[கத்தூரி + மஞ்சள்]

கத்தூரி மல்லிகை *kattūri-malligai,* பெ.(n.) கத்தூரி மணமுடைய மல்லிகைமலர்; musk jasmine (சா.அக.).

[கத்தூரி + மல்லிகை.]

கத்தூரிமான் *kattūri-māṉ,* பெ.(n.) கத்தூரி உண்டாகும் மான்வகை(யாழ்.அக.); musk-deer.

[கத்தூரி + மான்.]

கத்தூரிவாணன் *kattūri-vāṇaṉ,* பெ.(n.) ஒரு நெல் வகை; a kind of paddy *"கத்தூரிவாணன் கடைக் கழுத்தன்" (முக்கூடற்பள்ளு.).*

[கத்தூரி + வாணன்.]

கத்தூரி வைப்பு *kattūri-vaippu,* பெ.(n.) செயற்கைக் கத்தூரி; prepared musk.

[கத்தூரி + வைப்பு.]

கல்மதம் அல்லது உறைந்து காய்ந்த அரத்தத்தை மீன் அம்பர் எண்ணெயோடு இரண்டறக் கலந்து வெடியுப்பு அமிலத்தைச் சேர்த்துப் பிறகு தண்ணீர் விட்டு அலம்பி எடுத்தால் கத்தூரியைப் போல் நறுமணம் வீசும் [சா.அக].

கத்தை *kattai,* பெ.(n.) ***கழுதை*** பார்க்க; see kaḻudai.

ம. கழுத; **க.** கத்தெ, கழ்தெ, கர்தெ, கள்தெ; **து;** குட; பட. கத்தெ; **தெ.** காடித; **கை.** கெதி; **குற.** கதி; துட. கத்ய், க்வத்தெ; **கோண்.** காயத்; **கூ.**தொடொ; **நா.** காட்தி; **கொலா.** கத்தி, காட்தி; **பர்.** காரத்,கதெ; **குரு.** கத்ய. **மால்.** கதகொள்தி.

[கழுதை →கழ்தை → கத்தை.]

கத்தோயம் *kattōyam,* பெ.(n.) கள்; toddy.

[கள் + தோயம் – கட்டோயம் → கத்தோயம் தோயம் = நீர்மம், நீராளமான பொருள்.]

கதகத–த்தல் *kadakada-,* 4 செ.கு.வி(v.i.) 1. நடுங்கு தல்; to tremble. 2.வெப்பமாதல்; a smart heat, warm. வெந்நீர் கதகதப்பாக இருக்கிறது (உ.வ.).

க. கதகதிக, கதக்கதிக.

[கதழ் → கத + கத.]

கதகதப்பு *kadakadapu,* பெ.(n.) 1. வெம்மை; heat. "கதகதென் றெலியுதே காமாக்கினி"(இராமநா. ஆரணி.) 2. வெதுவெதுப்பு; warm மழைக்காலத்தில் கூரைவீடு கதகதப்பாக இருக்கும் (உ.வ.).

[கத + கத – கதகத → கதகதப்பு.]

கதகதெனல் *kada-kadenal,* பெ.(n.) 1. வெப்பமாதற் குறிப்பு; being hot from fever or from the closeness of a crowded room. *"கதகததென் றெரியுதெ காமாக்கினி" (இராமநா. ஆரணி. 8).* 2. குளிரில்லாமல் இதமாயிருத்தல்; to feel warm. மழைக் காலத்தில் கூரைவீடு கதகதவென இருக்கும் (உ.வ.). 3. கொதித்தல், வடிதல், பீச்சிடுதல் போன்ற வற்றைக் குறிக்கும் ஒலிக்குறிப்பு; sound produced in boiling , as a liquid; in flowing as water from a sluice; in gushing, as blood from the artery.

[கத + கத + எனல்.]

கதகம் *kadagam,* பெ.(n.) தேற்றாங்கொட்டை; clearing nut. *"பின்னையுளதோ கதகமலாற் பெருநீர் தெளித்தற்கு" (பிரபுலிங்.ஆரோகண.51).*

[கதுவு → கதுவம் → கதுகம் → கதகம்.]

கதண்டு *kadandu,* பெ.(n.) காட்டுக் கருவண்டு. (வின்.); wild black beetle (சா.அக).

[கருவண்டு → கதண்டு.]

கதண்டுக்கல் *kadandukkal,* பெ.(n.) கதண்டின் தலையில் உள்ள ஒருவகைக்கல்; a stone supposed to be on the head of a beetle.

மறுவ. கானத்தும்பி, வாகைப் புதைச்சி, புதையற் குடியிருப்பு

[கதண்டு + கல்.]

இக்கல் மந்திர ஆற்றல் பொருந்தியதாகக் கருதப்படுகிறது.

கதண்டுத்தேன் *kadandut-tēn* பெ.(n.) கருவண்டுத் தேன்; honey collected by wild black beetle (சா.அக).

[கருவண்டு + வாணன்.]

கதம்[1] *kadam,* பெ. (n.) சினம்; anger. *"கானுறை வாழ்க்கை கதநாய்வேட் டுவன்" (புறநா.33).* 2. வற்கடம்; famine, scarcity. கதம் பிறந்தது (வின்.) 3. வரம்பு; snake. 4. வலிமை; strength. 5. விரைவு; speed. பெருங்கதத் திருநதி (கல்லா. 56.23).

ம.கதம்; **க.,கொலா.** கதி; **து.**காவுட(சண்டை, போர்).

[குதம் → கதம் (வே.க.142.)]

கதம்[3] *kadam,* பெ. (n.) அரத்தக்கதிப்பு; deranged condition of blood.

[குல் → குதம் → கதம்.]

கதம்பம்[1] *kadampam,* பெ.(n.) கானங்கோழி (வின்.); bald coot.

[கது → கதும்பு → கதும்பம். குட்டையான வாலுடைய கானக்கோழி]

கதம்பம்[2] *kadambam,* பெ.(n.) 1. பலவகைப் பூக்களாலும், பச்சிலைகளாலும் வேர்களாலுந் தொடுக்கப்பட்ட மாலை; garland made of different kinds of fragrant flowers, leaves and fibrous roots. 2. அவை(அரு.நி.); assembly. 3. மாட்டுமந்தை (யாழ்.அக.); herd of cows. 4. ***கத்திகை***[1] பார்க்க, see *kattigai.*

ம. கதம்பன்மால

[கல → கலம்பு → கலம்பம் → கதம்பம் = பல்வேறு வகை மலர்கள் கலந்த மாலை. ல –ச. போலித்திரிபு, ஒ.நோ. சலங்கை சதங்கை. வடவர் காட்டும் கத் என்னும் மூலம் கல்லென்னும் தென்சொல். வேர்த்திரிபே. (வ.மொ.வ.107)]

த. கதம்பம்> **Skt.** kadamba.

கதம்பம்[3] *kadambam,* பெ.(n.) 1. ***கடம்பம்***[1]**,** பார்க்க (திவா);see kadambam[1]. 2. வெண்கடம்பு; seaside Indian oak. *"சுரும்பணி கதம்பநாற்றி"* 3. சிறுமரம்; a species of roudeletia wort. 4. கூட்டம்; multitude, assemblage, collection, herd. 5. கலப்புணவு (இ.வ.); mixure of food offered in a temple, as boiled rice mixed with curry, relishes and vegetables. 6. மணப்பொடிக் கலவை.(வின்.); fragrant powder used as a perfume on festive occasion.

[கல → கலம்பம் → கதம்பம்.]

கதம்பம்[4] *kadambam*, பெ. (n.) முகில் (பிங்.); cloud.

[கல → கலம்பம் → கதம்பம். கல → கலத்தல் – திரளுதல்.]

கதம்பம்[5] *kadambam*, பெ. (n.) 1. மஞ்சள்; turmeric. 2. கம்புத்தவசம்; spiked-millet. 3. கடுகுசெடி; mustard plant.

[கடு → கட → கடம்பம் → கதம்பம்.]

கதம்பம்[6] *kadambam*, பெ. (n.) 1. சோறு, குழம்பு, கறி ஆகியன சேர்ந்த கலப்புணவு; mixture of food consisting of boiled rice, sauce and vegetable curry. 2. பல்வேறு நறுமணப் பூக்களைக் கலந்து தொடுத்த பூச்சரம்; garland of several fragrant flowers. 3. பல விலங்குகள் அல்லது பொருள்கள் சேர்ந்த கூட்டம்; a general term for collection of things or animals.

[கல → கலம்பம் → கதம்பம்.]

கதம்பம்[7] *kadambam*, பெ.(n.) காட்டுக் கோழி; wood or rail hen.

[கல → கலம்பம் → கதம்பம் (பல நிறங் கொண்டது.)]

கதம்பமாக்கு–தல் *kadambam-ākku-*, 5 செ.குன்றாவி (v.t.) கலக்குதல்; to mix, jumble.

[கதம்பம் + ஆக்கு.]

கதம்பமுகுள நியாயம் *kadamba-mugla-niyāyam*, பெ.(n.) **கதம்பமொட்டு முறைமை** பார்க்க; see *kadamba-moṭṭu-muṟaimai.*

[கதம்பம் + முகுளம் + நியாயம். முகுள நியாயம் என்னும் வடசொல் தமிழில் மொட்டு முறைமை எனப்படும்.]

கதம்பமொட்டு முறைமை *kadamba-moṭṭu-muṟaimai*, பெ. (n.) சிறப்பு (வைசேடிக) முறைமையில் ஒலி உறுப்பிலிருந்து வெவ்வேறு சிற்றொலிகளும் பேரொலிகளும் செவிக்கு ஒருங்கே எட்டுவதை விளக்க மழை பெய்யுங்காலத்துக் கதம்ப மொட்டுகள் ஒரே காலத்தில் பூப்பதை உவமைகாட்டிச் செயற் பாடுகள் ஒருங்கு தோன்றுகின்றன எனக் காட்டும் நெறி (சி.சி. 2.61 சிவாக்.); The illustration of the kadamba buds shooting upon all sides simultaneously, which is used in the Vaisedika and Nyaya systems to explain how different series of sounds from the same sounding body are transmitted simultaneously to the ears of hearers at equidistant points on all sides, usually contrasted with vicitaraṅkanyāya, the illustration of larger and smaller waves in the same context.

[கதம்பம் + மொட்டு + முறைமை.]

கதம்பவுணவு *kadamba-v-uṇavu*, பெ. (n.) நறுமணப் பொருள்கள் சேர்த்து ஆக்கிய சோறு (புலவு); food highly flavoured with spices (சா.அக.).

[கல → கலம்பம் → கதம்பம் + உணவு, உ.சிலை (மசாலா) கலந்த உணவு.]

கதம்பாரி *kadambāri*, பெ. (n.) தேற்றாங்கொட்டை (மலை); clearing nut.

[கடு → கடம்பு → கதம்பு + ஆரி – கதம்பாரி.]

கதம்பு[1] *kadambu*, பெ. (n.) கதம்பம்; a fragrant powder (சா.அக.).

[கதம்பம் → கதம்பு. 'அம்' ஈறு கெட்டது.]

கதம்பு[2] *kadambu*, பெ.(n.) **கடம்பம்** பார்க்க; see *kadambam.*

[கடம்பு → கதம்பு.]

கதம்பை *kadambai*, பெ.(n.) 1. தேங்காய் மட்டை அல்லது நார், கதம்பைக் கயிறு; coconut husk or fibre that covers the nut, rope made up of a coconut fibre. 2. புல்வகை. (வின்.); a kind of grass. 3. எழுதுதற்கு வார்ந்த பனையோலையிற் கழிக்கப்பட்ட பகுதி (யாழ்ப்.); ends and bits of palmyra leaves cut for writing. 4. வைக்கோல்; hay. 5. புல்லின் தாள்; the stalk of grass.

ம. கதம்ப.

[கோது → கோதும்பு → கதம்பு → கதம்பை.]

*கோது : காய், நெற்று, தாள், வித்து, தவசம் ஆகியவற்றைப் போர்த்துள்ள புறத்தீடு. **கோது** பார்க்க; see kōdu]*

கதம்பைக்கயிறு *kadambai-k-kayiṟu*, பெ.(n.) தேங்காய் மட்டை நாராலான கயிறு; rope made up of the fibre of coconut husk.

[கதம்பை + கயிறு. கதம்பை பார்க்க.]

கதம்பைக்குழி *kadambai-k-kuḻi*, பெ.(n.) தேங்காய் மட்டை நாரைப் போடும் குழி; a pit for putting coconut husks.

ம. கதம்பக்குழி

[கதம்பை + குழி. கதம்பை பார்க்க.]

கதம்பைப்புல் *katambai-p-pul,* பெ.(n.) புல்வகை (வின்.); a kind of bearded grass with twisted awns.

[கதம்பை + புல்.]

கதம்பையுப்பு *kadambai-y-uppu,* பெ.(n.) கதம்பைப் புல்லை எரிப்பதால் கிடைக்கும் உப்பு; salt obtain by burning the kadamhai pul (சா.அக.).

[கதம்பை + உப்பு.]

கதரம் *kadaram,* பெ.(n.) யானைத்துறட்டி; elephant-goad.

[கதழ் → கதல் → கதலும் → கதரம்.]

கதரி *kadari,* பெ.(n.) புல்லூரி; a parasitic plant (சா.அக.).

[கது → கதல் → கதரி. கது - விளைதல், பரவுதல்.]

கதரோகம் *kadarōgam,* பெ.(n.) ***கதநோய்*** பார்க்க; see *kada-nōy.*

[கதம் + ரோகம்.]

கதல்(லு)—தல் *kadal-,* 5 செ.கு.வி.(v.i.) 1. அசைதல் (யாழ்.அக.); to move (செ.அக.). 2. நடுங்குதல், அஞ்சுதல்; to tremble, fear. 3. இருக்கும் இடத்தை விட்டுச் சரிதல்; to slip, to go away (கருநா.).

க. கதலு; **தெ.** கதலு; **ம.** கதர்து; **து.** கதலு, கதெலு; **பார்.** கத்ல்.

[கதழ் → கதல்.]

கதலம் *kadalam,* பெ.(n.) வாழை (மலை.); plaintain.

[கதலி → கதலம்.]

கதலமெதலவொட்டு—தல் *kadala-medala-voṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) அசைய இடங்கொடுத்தல்; to allow to move about. இவனைக் கதலமெதல வொட்டாமற் பிடித்துக்கொண்டான் (வின்.).

[கதல் + மெதல (ஒலிக்குறிப்பு) + ஒட்டு.]

கதலல் *kadalal,* பெ.(n.) அசைதல்; moving, shaking.

க. கதலு.

[கதழ் → கதழல் → கதலல்.]

கதலாடு—தல் *kadalāḍu,* 5 செ.கு.வி.(v.i.) அசைதல், தள்ளாடுதல்; to move about, to be unsteady, to shake.

க. கதலாடு

[கதழ் + ஆடு - கதழாடு → கதலாடு. கதழ்தல் - அசைதல்.]

கதலி[1] *kadali,* பெ.(n.) 1. வாழை; plantain tree. *"நெட்டிலைப் பைங்கதலி" (திருக்காள.பு.தாருகா.15).* 2. ***கதலி வாழை*** பார்க்க; see *kadali-vāḻai.* 3. துகிற்கொடி; banner, flag, pennon. *"கானெடுந் தேருயர் கதலியும்" (கம்பரா. முதற்போர். 104).* 4. பறக்கவிடுங் காற்றாடி; a big paper kite. *"ஆகாய முற்ற கதலிக்கு" (கம்பரா. கடறாவு. 85).*

ம., க. கதளி; **தெ.** கதனி, கதளமு.

த. கதலி. > **Skt.** kadali; **H., U.** kela; **Pali.** kadali; **Ori.** kadali; **Mar.** keelevi; **Sinh.** kehel gedi.

மகளிர் கொண்டையாக முடிந்த கூந்தல் முடிபோன்ற தோற்றமுடைய வாழைக்குலை கதலி எனப்பட்டது.

கதலி = சிறுவாழைப்பழம். கதலி → கசலி = மீன்குஞ்சு. இச் சொல் குதலை என்பதனொடு தொடர்புடையது. மிக இனிக்கும் சிறுவாழைப்பழவகை தேங்கதலி எனப் பெறும்.

வடசொல் சிறுமை என்னும் சிறப்புப் பொருளிழந்து, பொதுவாய் எல்லா வாழைப்பழ வகைகளையுங் குறிக்கும். [வ.மொ.வ. 107]

கதலி[2] *kadali,* பெ.(n.) தேற்றாங்கொட்டை (பிங்.); clearing-nut.

[கடலி (அகற்றுவது) → கதலி]

கதலிக்கட்டை *kadali-k-kaṭṭai,* பெ.(n.) வாழை மரத்தின் அடியும் வேரும்; the root and stem of the plantain tree.

[கதலி + கட்டை.]

கதலிகை *kadaligai,* பெ.(n.) 1. ***கதலி***[1] பார்க்க; see *kadali "கதலிகைக் கானம்" (சீவக. 2212).* 2. துகிற் கொடி; banner, flag. *"கதலிகைக் கொடியும் காழூன்று விலோதமும்" (மணிமே. 1:52).* 3. ஓர் அணிகல உறுப்பு; a part of the girdle. *"திருப்பட்டிகைக் கதலிகை"* (S.I.I. ii. 144).

[கதலி – கதலிகை.]

கதலிகை தங்கனை *kadaligai-taṅgaṉai,* பெ.(n.) இடைப்பட்டிகையிலும், தோள்களிலும் அணியப் பெறுவதற்குரியதாகக் குஞ்சம் போன்ற அமைப்பில் மணிகளாலும் முத்துகளாலும் அரும்பிடப் பெறும் அணிகலன்; pendant adorned with jewels and pearls which were worn on shoulders and as girdles.

[கதலிகை + தொங்கனை → தங்கனை. கதலி = வாழை. வாழைப்பூ, மொட்டுப் போன்ற தொங்கல் அணி.]

கதலிச்சி *kadalicci,* பெ.(n.) கருப்பூரம் (மூ.அக.); gum camphor.`

[கதழி = கசிவு நீர்மம், பசை. கதழி → கதலி → கதலிச்சி]

கதலித்தேன் *kadali-t-tēṉ,* பெ.(n.) தேன்வாழைப் பழத்தினின்று வடியும் இனிப்புச் சுவையுள்ள நீர்மம்; honey-like sweet fluid oozing from one variety of banana fruit.

[கதலி + தேன்.]

கதலிநோய் *kadali-nōy,* பெ.(n.) தலைமுடி உதிரும் நோய்; the disease which cause to remove hair.

[கதலி + நோய்.]

கதலிப்பூ[1] *kadali-p-pū,* பெ.(n.) 1. வாழைப்பூ; the flower of the plantain tree. 2. நெஞ்சாங்குலை; the heart 3. குண்டலி; the seat of the vital power in the human system (சா.அக.).

[கதலி + பூ.]

[நெஞ்சாங்குலையும் குண்டலியும் வாழைப்பூ வடிவின என்ற அடிப்படையில் இவ் விரண்டிற்கும் இப் பெயர் பொருந்தியது.]

கதலிப்பூ[2] *kadali-p-pū,* பெ.(n.) பச்சைக் கற்பூரம். (மூ.அக.); preparation of campor.

[கதலிச்சிப் பூ → கதலிப்பூ.]

கதலிப்பூ வெட்டு-தல் *kadali-p-pū-veṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) வாயில் நிலையில் வாழைப்பூ போன்று மரவேலை செய்தல்; to engrave a form of plantain fruit on the front door frame.

[கதலிப்பூ + வெட்டு.]

கதலிபாகம் *kadali-pāgam,* பெ.(n.) வாழைப்பழத்தை உரித்துச் சுவைப்பது போன்ற எளிய முயற்சியிலேயே செய்யுட் சுவையுணரும் பாங்குடைய செய்யுளமைதி; one of the three levels of of understandability of pāgam easy, felicitious style of poetry, delicious as plantain fruit.

[கதலி + பாகம். பாங்கு → பாகு → பாகம்.]

செய்யுட் பாகங்கள் மூன்றாவன திராட்சை பாகம் (திராட்சா பாகம்), கதலி பாகம், தேங்காய் பாகம் (நாளிகேரப் பாகம்).

வாழைப்பழத்தின் இன்சுவை போன்றதோர் பாட்டமைதிச் சுவை கதலிபாகம் எனப்பட்டது. இச் சொல் வடமொழியில் கதலீபாகம் எனத் திரிந்தது.

கதலிமணம் *kadali-maṇam,* பெ.(n.) வாழையை மணப்பெண்ணாகக் கருதி மணம் புரியும் சடங்கு; performing marriage ceremony considering plantain tree as a bride (C and T.47).

[கதலி + மணம்.]

மூத்தவனிருக்க இளையவனுக்கு மணமுடிக்க நேரும் பொழுது, வாழையை மணப்பெண்ணாகக் கருதி, மூத்தவனை வாழைக்கு நாணணியச் செய்தலாகிய சடங்கு; ஒருவனுக்கு மறுமணம் இருப்பதாக அவனது பிறப்பியம் (சாதகம்) கூறுமாயின் அவனுக்கும் இத்தகைய சடங்கினைச் செய்தலுண்டு.

கதலிமலடி *kadali-malaḍi,* பெ.(n.) ***கதலிமலடு*** பார்க்க; see *kadali-malaḍu.*

மறுவ. ஒற்றை மலடி

[கதலி + மலடி. கதலி = வாழைவகை.]

கதலிமலடு *kadali-malaḍu,* பெ.(n.) ஒரே முறை ஈன்றவள்; woman who gives birth to but one child. (சீவரட். 205).

[கதலி + மலடு. கதலியைப் போல் ஒருமுறை மட்டுமே ஈன்றவள்.]

கதலிமூலம் *kadali-mūlam,* பெ.(n.) வாழைக்கிழங்கு; the bulbous root at the bottom of the plantain tree.

[கதலி + மூலம்.]

கதலிவஞ்சி *kadali-vañji,* பெ.(n.) நவரை வாழை வகை; a species of plantain tree.

[கதலி + வஞ்சி. கதலி = வாழை. வஞ்சி = குடை. ஒருகால் குடை போன்றமைப்புடைய வாழையாகலாம்.]

கதலிவாணன் *kadali-vāṇaṉ,* பெ.(n.) நெல்வகை (A.); a kind of paddy.

[கதலி + வாணன்.]

கதலிவாழை[1] *kadali-vāḻai,* பெ.(n.) சிறுவாழைவகை; very small species of plantain-tree. *"கறியுமா மிள கொடு கதலியு முந்தி" (தேவா. திருத்துருத்தி. 4–93).*

[கதலி + வாழை.]

கதலிவாழை[2] *kadalivāḻai,* பெ.(n.) சிறுகாய் வாழை (மொந்தன் வாழைக்கு எதிரானது); plantain or banana tree.

[கதலி + வாழை.]

கதலி விவாகம் *kadali-vivāgam,* பெ.(n.) ***கதலி மணம்*** பார்க்க; see *kadali-maṇam.*

[கதலி + மணம்.]

கதலை *kadalai,* பெ.(n.) கூட்டம்; கும்பல்; a mass, a multitude (கருநா.).

க. கதலெ

[கதுவுதல் = நெருங்குதல், குவிதல். கது → கதலை.]

கதவடிக்காரர் *kadavadi-k-kārar,* பெ.(n.) மொண்டிப்பிச்சைக்காரர் (வின்.); a group, members of which have royal permission to ask for alms.

[கதவு + அடி + காரர் – கதவடிக்காரர் = கதவு தட்டி உணவு இரக்கும் பிச்சைக்காரர்.]

கதவடைப்பு *kadhavaḍaippu,* பெ.(n.) தொழிற் சாலையில் வேலை செய்ய உரிமையாளர் அனுமதி மறுத்தல்; lockout.

[கதவு + அடைப்பு.]

தொழிலாளர் சிக்கல் தீரும் வரை தொழிற் சாலையை உரிமையாளர் மூடுதல் கதவடைப்பாம்.

கதவம் *kadavam,* பெ.(n.) ***கதவு*** பார்க்க; see *kadavu. "பொறிவாசல் போர்க்கதவஞ் சாத்தி" (திவ். இயற். 1, 4).*

[கதவு → கதவம் (தமி.வர.138)]

கதவனம்பட்டி *kadavaṉampaṭṭi,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharumapuri district.

[கதவன் + பட்டி – கதவன்பட்டி – கதவனம்பட்டி.]

கதவு[1] *kadavu,* பெ. (n.) 1. கோட்டை, கோயில், மனை, அறை போன்றவற்றின் நுழைவாயில்களை மூடித் திறக்கும் தடுப்பு; a sliding barrier for closing entrance of fort, temple, house, room etc., door. கள்ளனை உள்ளே வைத்துக் கதவைச் சாத்தினாற் போல் (பழ.). 2. காப்பறை, பேழை போன்றவற்றின் கதவு; door of safe, almirah etc. 3. ஊர்திகளின் கதவு; door of vehicle. 4. பலகணியின் கதவு; door of window. 5. மதகு கதவு; sluice. 6. தொழுவம், குடிசை போன்றவற்றை மூடும் பலகை; leaf of a door.

ம. கதவு, கதகு; **க.** கதவு, கத, கதகு; **கொர.** கடு; **தெ.** கவனு, கவகு (வெளிவாசல்)

[கடவு → கதவு. (தமி.வ. 138). கடவு = கடந்து செல்லும் வழி, வாயில். வாயிலைக் குறித்த சொல் வாயிலைச் சாத்தும் கதவைக் குறித்தது. கடவு → கதவு (இடைத்திரிபு).]

கதவு[2] *kadavu,* பெ.(n.) காவல் (திவா.); guard.

[கதவு = தடுப்பு, பொருட்பெயர் அதன் தொழிலுக்கு ஆகி வந்தது.]

கதவு[3]**–தல்** *kadavu-,* செ.குன்றாவி.(v.t.) 1. சினம் கொள்ளுதல்; to be angry with; to be displeased with; to quarrel with. *"கதவிக் கதஞ்சிறந்த கஞ்சன்" (திவ். இயற். 2, 89).* 2. பொங்குதல்; to heave. 3. துடித்தல்; to pant.

ம. கதய்க்குக.

[கதம் → கதவு (வே.க.182).]

கதவு[4]**–தல்** *kadavu-,* செ.கு.வி.(v.i.) விரைதல்; to fasten.

[கடவு → கதவு.]

கதவு[2] *kadav,* பெ.(n.) சினம்; anger, wrath. *"அவன் யானை மருப்பினுங் கதவலால்" (கலித். 57;19).*

[கதம் → கதவு (வே. க. 182)]

கதவுக்கம்பை *kadavu-k-kambai,* பெ.(n.) கதவின் முன் பகுதியில் உள்ள மரப்பட்டை; a small wooden plank at the front side of a door.

[கதவு + கம்பை.]

கதவுக்குடுமி *kadavu-k-kuḍumi,* பெ.(n.) கதவு தாங்குங் கொடுங்கை; projecting pivots at either end of a door on which it swings, in place of hinges.

[கதவு + குடுமி.]

கதவுக் கைப்பிடி *kadavu-k-kai-p-piḍi,* பெ.(n.) கதவை முன்னும் பின்னும் இயக்கப் பயன்படும் கைப்பிடி; handle of a door.

[கதவு + கைப்பிடி.] (கட்.தச்.தொ.வ.)

கதவுக்கொண்டி *kadavu-k-koṇḍi,* பெ.(n.) நிலையில் கதவு இயங்கப் பயன்படும் இரும்புக் கருவி. (மது.வ.); hinge.

[கதவு + கொண்டி.]

கதவுச்சட்டம் *kadavu-c-caṭṭam,* பெ.(n.) ***கதவுக் கம்பை*** பார்க்க; see *kadavu-k-kambai.*

[கதவு + சட்டம்.] (கட்.தச்.தொ.வ.)

கதவு திற–த்தல் *kadavu-tiṟa-,* 2 செ.குன்றாவி.(v.t.) 1. வீடு முதலியவற்றின் கதவைத் திறத்தல்; to open door as of house etc. 2. தொடர்பு, நட்பு, உறவு ஆகியன கொள்ள விரும்புதல்;to like to resume contact, friendship, relation. தொழிலாளர் பேச்சு வார்த்தைக்காக அரசின் கதவு திறந்திருக்கிறது என்று அமைச்சர் கூறினார் (உ.வ.). 3. திருக்கோயில் விழா தொடங்குதல்; commencement of the temple festival.

[கதவு + திற–.]

கதவுநிலை *kadavu-nilai,* பெ.(n.) வாசற்கால்; threshold, doorsill.

[கதவு + நிலை.]

கதவுமட்டம் *kadavu-maṭṭam,* பெ(n.) கதவு நிலையளவு வரையிலான சுவரினது மட்டம் (உயரம்) (கோவை); level of wall upto door frame.

[கதவு + மட்டம்.]

கதழ்[1]–தல் *kadaḻ,-* 2 செ.குன்றாவி.(v.t.) 2. அசைதல்; to move. 2. பிளத்தல்; to cleave, cut into to; *"கனக னாகிய கடுந்திறலோ னெஞ்சு கதழ்ந்த" (பாகவத 1. மாயவ. 31).*

க. கதழ்

[கட – கத – கதழ்.]

கதழ்[2]–தல் *kadaḻ-,* 2 செ.கு.வி.(v.i.) 1. விரைதல்; to be hasty, impetuous; to run swiftly. *"கதழெரி சூழ்ந்தாங்கு" (கலித். 25:4). 2. வெப்பமாதல்;* to be furious; to rage, as fire. *"இந்தனங் கதழ விட்டு" (கந்தபு. மாயையுட்.19).* 3. மிகுதல்; to abound. *"கதழொளி" (சீவக.1749).* 4. சினத்தல்; to be angry with, displeased with.

க. கதடு, கதரு, கரடு; **து.** கதலு, கதெலு; **தெ.** கதலு; **பர்.** கத்லெ.

[கத → கதழ் → கதழ்தல் (வே.க. 182).]

கதழ்[3] *kadaḻ,* பெ.(n.) 1. ஏவல்; *"கதழ்சினந் தலைக் கொண் டானே" (கூர்மபு.அந்தகா.82)* 2. வேகம்; speed. *"கதழெரிச் செக்கர் பேழ்வாய்" (நைடத – சுயம். 25).*

[கது → கதழ்.]

கதழ்வு *kadaḻvu,* பெ.(n.) 1. அசைவு; movement 2. விரைவு (திவா.); haste, speed, impetuosity. 3. வெப்பம்; fury, heat, vehemence. 4. மிகுதி (திவா.); abundance. 5. பெருமை (திவா.); greatness. 6. ஒப்பு (வின்.); likeness, comparison, contrast, rivalry. 7. நீளம் (அரு.நி.); length (செ.அக.).

ம. கதய்க்குக (விரைதல்.)

[கதழ் → கதழ்வு. (வே.க. 182. குது → குதுகுது → குதுகுதுப்பு = விரைவு. குது → கது – கதும் (வி.கு.). கது → கதழ் → கதழ்வு = விரைவு. 'கதழ்வும் துனைவும் விரைவின் பொருள' (தொல்.உரி. 17.) (மு தா. 58.).]

கதழ்வுறு–தல் *kadaḻ-v-uṟu-,* 4 செ.கு.வி.(v.i.) அச்சத்தாற் கலங்கிக் கூச்சலிடுதல்; to shriek or raise a violent cry out of sudden fright or terror. *"வேழங் கதழ்வுற் றாங்கு" (பெரும்பாண். 259.).*

க. கதுபுகொள்

[கதழ் + உறு–.]

கதளகம் *kadaḷagam,* பெ.(n.) ***கதலி*** பார்க்க; see *kadali.*

[கதள் + அகம் – கதளகம். கதலி → கதளி → கதள.]

கதறு–தல் *kadaṟu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. உரக்க அழுதல்; to cry aloud from pain or grief, to shriek; to scream, as a child. *"கதறி யோலமிட" (தேவா. 68, 9).* 2. விலங்கு முதலியன கத்துதல்; to bellow, as a cow for its calf; to roar, yell, as a beast. *"கானேறு கரிகதற வுரித்தார் போலும்" (தேவா. 596,1).*

ம. கதறுக; **க.** கதறு; **தெ.** கதுமு, கத்திங்க; **து.** கத்தல.

[கதல் – கதறு.]

கதனம்[1] *kadaṉam*, பெ. (n.) 1. கடுமை (திவா.); vehemence. 2. கலக்கம் (பிங்.); confusion; disorder; disturbance.

[கது → கதனம். இச் சொல் வடதமிழ் வழக்கு.]

கதனம்[2] *kadaṉam*, பெ.(n.) குதிரையின் நடைவகை (அரு.நி.); a pace of horse.

[கது → கதி → கதனம். கதி = விரைவு, பரிப்பு (வேகம்.)]

கதனம்[3] *kadaṉam*, பெ.(n.) போர் (யாழ்.அக.); battle.

[கது → கதனம். கதுவுதல் = பற்றுதல். மோதுதல், தாக்குதல்.]

கதாசிரியன் *kadāširiyaṉ*, பெ.(n.) **கதையாசிரியன்** பார்க்க; see *kadai-y-āširiyaṉ*.

[கதை → கதா (வடமொழித்திரிவு) + ஆசிரியர்.]

கதாநாயகன் *kadā-nāyagaṉ*, பெ.(n.) **கதைத் தலைவன்** பார்க்க; see *kadai-t-talaivaṉ*.

[கதை → கதா + நாயகன்.]

கதாநாயகி *kadā-nāyaki*, பெ.(n.) **கதைத் தலைவி** பார்க்க; see *kadai-t-talaivi*.

[கதை → கதா + நாயகி.]

கதாய் *kadāy*, பெ.(n.) கந்தல் (யாழ்.அக.); rag.

[கோது → கது → கதாய், (பயன்படாத கழிசடைப் பொருள்).]

கதாவு-தல் *kadāvu-*, 5. செ.கு.வி.(v.i.) செல்லுதல்; to pass, move. *"கதாவுகின்ற கிராமியமாங் கருமச் சழக்கில்" (ஞானவா. நிருவா.11).*

ம. கதாவுக

[கடவு → கடாவு→ கதாவு.]

கதி[1]**-த்தல்** *kadi-*[1], 4 செ.குன்றா.வி.(v.t.) சொல்லுதல்; to tell, direct. *"கண்ணனுக் குதவென கதித்தான்" (பாரத. இராசசூ.112).*

[கழல் → கழறு. கழல் → கதல் → கதை = கதைத்தல், பேசுதல் → கதை → கதி. (பேசு)]

கதி[2]**-த்தல்** *kadi-*, 2 செ.கு.வி.(v.i.) 1. விரைதல்; to hasten, move rapidly. *"அரியேறு கதித்தது பாய்வதுபோல்" (கம்பரா.பஞ்சசே. 56).* 2. நடத்தல் (வின்.); to go, move proceed. 3. எழுதல் (பிங்.); to rise, to be high, to grow high; to start. 4. நற்கதி யடைதல்; to attain final bliss. *"கதிப்பவ ரில்லை யாகும்". (சி.சி.1, 46, சிவஞா.)* 5. பருத்தல்; to become large, to grow big. *"கதித்தெழுந்த தனம்". (தஞ்சைவா. 235).* 6. மிகுதல்; to abound. *"மல்கதிக்க" (இரகு. நகரப். 74).* 7. ஒலித்தல்; to sound.

க. கதெ; தெ. கதி.

[கது → கதி. கதித்தல் = விரைதல் (முதா.58) ஒ.நோ.. கதழ்தல் = அசைதல், நடத்தல்.]

கதி[3]**-த்தல்** *kadi-*, 4 செ.குன்றாவி. (v.t.) சினம் கொள்ளுதல்; to be angry with. *"கதியாதி யொள்ளிழாய்" (கலித். 83).*

[கொதி → கதி.]

கதி[5] *kadi*, பெ.(n.) 1. நடை; movement. 2. இயக்கம்; motion. 3. விரைவு; swiftness, rapiditly. *"கதிகெழு களிறு" (கந்தபு.திக்.35).* 4. குதிரை நடை; pace of a horse. *"ஈரிரு கதியு முண்டாங் குலப்பரி யினங்கள்" (திருவாத. திருப்பெரு. 114).*

[கது → கதி. கதித்தல் = விரைதல். கதி = விரைவு வேகம்.]

கதி[6] *kadi*, பெ.(n.) 1. வழி; way, path. *"கதிநடந் திளைத்த செங்கமலம் பற்றுவோம்" (செவ்வந்திப்பு. தாயான. 25)* 2. புகலிடம்; refuge. *"எனக்கினிக் கதியென் சொல்லாய்" (திவ். திருமாலை.30).* 3. அமர ருலகு; heaven, final beatitude, deliverance from further births, absorption into the deity. *"காதலும் வெறுப்பு நீங்கிக் கதிவிழைந் திருக்கின்றோம்" (குற்றா.தல. திருமால். 60).* 4. நிலை; state, condition. அவன் கதி என்ன வாயிற்று? (உ.வ.) 5. உயிர்கள், தேவகதி, மக்கட்கதி, விலங்குகதி நரககதி என நான்கு நிலைகளாக எடுக்கும் பிறப்பு (சீவக. 374. உரை.); (Jaina) stages of existence, of which there are four. 6. ஆற்றல்; ability, means, கொடுக்கக் கதியில்லை (உ.வ.).

[கது → கதி.]

கதி[7] *kadi*, பெ.(n.) 1. பற்றுக்கோடு; support. 2. நிலைமை, இயல்பு; nature, quality, character; *"யானை முழக்கங் கேட்ட கதியிற்றே" (பரிபா. 8:17).* 3. ஆகூழ் (வின்.); luck, fortune. 4. படலம் (பிரபுலிங்.) section, chapter. 5. மெய்யியலின் (தத்துவம்) அடிப் படைக் கோட்பாடுகள்; true principles or elementary properties according to šankhya philosophy. *"முதலிரு பத்தைந் தாங்கதி" (பிரபுலிங்*

துதி.13). 6. கருவி; means, instrument. *"உலகிற் றிரியுங் கரும கதியாய்" (திவ். திருவாய். 6,9,7).*

[கது → கதுவுதல் = பற்றுதல். கது → கதி = பற்றுக்கோடு, தாங்குதல் உற்ற துணை.]

கதி[8] *kadi,* பெ.(n.) 1. நேர்; straight. 2. செம்மை, செப்பம்; correct. 3. ஒழுங்கு; regularity.

மரா; சிந். சீதே; Turkh. kader.

[குத்து → குது குது கதி.]

கதி–த்தல் *kadi,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கடத்தல் (வின்.); to exceed in quality; to out weigh to be superior to; to out do, outstrip, out match. 2. அறிதல்; to know, understand, *"தாதை கதித்துரைத்த மொழி" (காஞ்சிப்பு, திருநெறிக். 42).*

[கது → கதி = அசைதல், நடத்தல், கடத்தல், அறியாமை நிலையைக் கடத்துதல், அறிதல்.]

கதிக்க *kadikka,* கு.வி.எ.(adv.) 1. நேராக; straight, directly. நீ கதிக்கப் போனால் அந்த இடத்தை அடையலாம் (நெல்லை). 2. கனமாக; thickly. கதிக்க நெற்றிக்கு இட்டுக்கொண்டான் (இ.வ.).

[கதி → கதிக்க (வே.க. 177).]

கதிக்கும்பச்சை *kadikkum-paccai,* பெ.(n.) நாகப் பச்சைக்கல் (வின்.); a kind of emarald.

[கதி = நேர், செப்பம். கதி → கதிக்கும்.]

கதிக்கை *kadikkai,* பெ.(n.) **கருக்குவாய்ச்சி** பார்க்க (வின்.) ; see *karukuvāycci.*

[கதி → கதிக்கை.]

கதிகலக்கு–தல் *kadi-kalakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. நிலைகுலைய வைத்தல்; to shake up badly, to make one upset. 2. அச்சமும் கலக்கமும் தோன்றச் செய்தல்; to create panic.

[கதிகலங்கு (த.வி.) → கதிகலக்கு (பி.வி.)]

கதிகலங்கு–தல் *kadi-kalaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நிலைகுலைதல்; to be badly shaken up, be upset. 2. அச்சமும் கலக்கமும் தோன்றுதல்; to be paniced.

[கதி + கலங்கு–.]

கதித்தவிலை *kaditta-vilai,* பெ.(n.) 1. அதிக விலை; high price. 2. முறையற்ற விலை; exorbitant price.

[கதித்த (பெ.எ.) + விலை.]

கதித்துவரு–தல் *kadittu-varu-,* 18 செ.கு.வி.(v.i.) மிகுதியாக உண்டாதல்; to be in excess, said of the increase of any one of the humours in the system (சா.அக.).

[கதித்து + வா (வரு–).]

கதித்துவாங்கு–தல் *kadittu-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.t.) அளவு, பண்பு ஆகியன மிகுந்து பின் குறைதல் அல்லது தணிதல்; to become excess in quantity or quality and then diminished (சா.அக.).

[கதித்து + வாங்கு–.]

கதிதம் *kadidam,* பெ.(n.) உரைக்கப்பட்டது; that which has been narrated or described. *"கதித்த மகபாதகந் தன்னில்" (சிவதரு. பாவ. 102).*

[கதை → கதைத்த → கதித்த → கதிதம்.]

கதிப்பு[1] *kadippu,* பெ.(n.) கூர்மை; sharpness. கெளுத்தியின் முள் கதிப்பா யுள்ளது (நெல்லை மீனவ.).

[கதி → கதிப்பு.]

கதிப்பு[2] *kadippu,* பெ.(n.) இறுகல்; thickness. *"கதிப்பையுடைத்தான வண்டல்கள்" (திவ். திருவாய். 6,1,5, பன்னீ.).*

[கடி → கதி → கதிப்பு.]

கதிப்பொருத்தம் *kadi-p-poruttam-,* பெ.(n.) செய்யுண் முதன்மொழிப் பொருத்தங்கள் பத்தனு ளொன்று (Poet); one of ten ceyyuṇ mutaṉ-moḻi-p-poruttam.

[கதி = நிலை . கதி + பொருத்தம்.]

செய்யுண் முதன்மொழிப் பொருத்தங்கள் பத்தாவன: 1. மங்கலப் பொருத்தம், 2. சொற் பொருத்தம், 3. எழுத்துப் பொருத்தம், 4. தானப் பொருத்தம், 5. பாற் பொருத்தம், 6. உண்டிப் பொருத்தம், 7. வருணப் பொருத்தம், 8. நாட்டுப் பொருத்தம், 9. கதிப் பொருத்தம், 10. கணப் பொருத்தம். இவற்றுள் கதிப்பொருத்தம் நான்கு வகையாகும்.

அவை, 1. அ இ உ எ க ச ட த ப - தெய்வ கதி.

2. ஆ ஈ ஊ ஏ ங ஞ ண ந ம - மக்கட் கதி. 3. ஒ ஓ ய ர ல ழ ற - விலங்கு கதி. 4. ஐ ஔ வ ள ன - நரக கதி (வெண்பாப். முதன். 18).

கதிமாறல் *kadi-māṟal,* பெ.(n.) 1. பிறவி மாறல்; change of birth. 2. ஆதன் அடையும் மாற்றம்; the changes undergone by the soul (சா.அக.).

[கதி = பிறப்பு. கதி + மாறல்.]

கதிமை[1] *kadimai,* பெ.(n.) கூர்மை; sharpness.

[கதீ → கதிமை.]

கதிமை[2] *kadimai,* பெ.(n.) பருமை; largeness, greatness.

[கது → கதி → கதிமை.]

கதியற்றவன் *kadi-y-aṟṟavaṉ,* பெ.(n.) ஆதரவற்ற வறியோன்; destitute, impoverished man.

[கதி + அற்றவன்.]

கதியால் *kadiyāl,* பெ.(n.) வேலியில் நாட்டுங் கிளை; stakes for hedging.

[கதி = நேர். கதி → கதியல் → கதியால் (நேராக நடப்படுவது.) அல் – ஆல் (ஈற்றுத்திரிபு).]

கதிர்[1]**–த்தல்** *kadir-,* 4 செ.கு.வி.(v.i.) 1. ஒளிர்தல்; to shine; glow. *"கதிர்த்த நகைமன்னும்" (திருக்கோ. 396).* 2. வெளிப்படுதல்; to become manifest. வாய்மை கதிர்ப்பச் சென்ற (கம்பரந். 1.) 3. மிகுதல்; to abound, increase. கதிர்த்த கற்பினார். 4. இறுமாத்தல் (யாழ். அக.); to be conceited, puffed up.

ம. கதிர்க்குக; **க.** கதிரு; **தெ.** கதுரு.

[கதி → கதிர். → கதிர்த்தல்.]

கதிர்[2]**–த்தல்** *kadir-,* 4 செ.கு.வி.(v.i.) கூர்த்தல் (யாழ்.அக.); to be sharp (செ.அக.).

[கதி – கதிர்.]

கதிர்[3]**–த்தல்** *kadir-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கதிர் தோன்றுதல்; to appear ear of grain; சோளம் கதிர்த்தது (இ.வ.). கன்னித்தன்மையடைதல்; to attain the stage of puberty.

[கதி → கதிர் → கதிர்த்தல்.]

கதிர்[4] *kadir,* பெ.(n.) 1. நேராகச் செல்லும் ஒளியிழை (கிரணம்); ray of light, beam, gleam. *"தண்கதிர் மதியம்" (புறநா. 6:27).* 2. ஒளி (திவா.); light. 3. வெயில்; sunlight. *"உறைபனி கதிர்போற்று மோலையன்" (கந்தபு. தவங். 2).* 4. கதிர்வீசும் இருவெண்சுடர் (ஞாயிறும் திங்களும்); sun and moon. *"கதிர்விலகிச் சூழும்" (சேதுபு. முத்தீர். 5).* 5. ஆண்டு (விதான.); year.

[குத்து → குது → கதி → கதிர்.]

கதித்தல் = நேராதல், நேர்கிழக்காகச் செல்லுதலைக் கிழக்கே கதிக்கச் செல்லுதல் என்பர் நெல்லை நாட்டார். கதி → கதிர் = வளையாமல் செல்லும் ஒளியிழை [மு.தா. 111].

கதிர்[5] *kadir,* பெ.(n.) 1. ஆரக்கால் (வின்.); spoke of a wheel; radius of a circle. 2. ஆரக்கால் போல் நெடுகக் கிளைக்கும் கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர்; ear of grain, spear of grass. *"நெல்லுமிடை பசுங்கதிரும்" (கம்பரா. நாட்டுப். 7).* 3. நூல்நூற்கும் கருவி; spinner's spindle. *"கதிரே மதியாக" (நன். 24).* 4. தட்டார் கருவிவகை; goldsmith's pin, spike.

ம. கதிர், கதிரு; **க.** கதிர், கதரு, கதிரு; **து.** கதிரு, கதுரு, கதிர்; **பிரா.** கதீம்; **குட.** கதீ.

[குதிர் → கதிர் (வே.க. 176). கதிர் = கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர். நெல், தினை முதலியவற்றின் கதிரை, அலகு அல்லது குரல் என்பர் (சொல். கட் 63).]

கதிர்[6] *kadir,* பெ.(n.) 1. நீண்ட நிலப்பகுதி; a land division of a lengthy area. 2. நீண்ட தீவு; a long island.

[குதிர் → கதிர். கதிர்த்தல் → நீளுதல், நேராகச் செல்லுதல்.]

கதிர்[7] *kadir,* பெ.(n.) 1. ஊர்ப்பெயர்; name a place. 2. குச்சர மாநிலத்தில் சிந்துவெளி நாகரிகம் நிலவிய ஊர்ப்பகுதி; a place name in Gujarat, an Indus Valley Civilisation site area.

[கதிர்[5] → கதிர்[6]. கதிர்காமம், கதிர்ப்பட்டி எனும் ஊர்ப் பெயர்களைக் காண்க.]

கதிர்[8] *kadir,* பெ.(n.) 1. செருமான் ஊசி (புதுவை); year. 2. துளை (சங். அக.); hole.

[குத்து → குது → கதி → கதிர்.]

கதிர்[9] *kadir,* பெ.(n.) கயிறு திரிக்க அல்லது முறுக்கேற்றப் பயன்படும், *'தக்களி' யை ஒத்த சிறு கருவி (செங். மீனவ.);* rope making device.

[கதிர் = ஆரக்கால் கொண்ட சக்கரம்.]

கதிர்[10] *kadiri,* பெ.(n.) நாயுருவி. (நாமதீப.); a plant (செ.அக.).

[குது → கது கதிர்.]

கதிர்க்கட்டில் *kadir-k-kāṭṭil,* பெ.(n.) நல்ல வேலைப் பாடுகளுடன் அமைந்த கட்டில்; a cot of superior workmanship (சேரநா.).

ம. கதிர்க்கட்டில்

[கதிர் + கட்டில். கதிர் = தினைக்கதிர் போன்ற பூவேலைப்பாடு.]

கதிர்க்கட்டு *kadir-k-kaṭṭu,* பெ.(n.) அரிக்கட்டு; sheaf.

[கதிர் + கட்டு.]



கதிர்க்கட்டு

கதிர்க்கடவுள் *kadir-k-kaḍavul,* பெ.(n.) பகலவன், கதிரவன்; the sun as the radiant deity. *"கனை கதிர்க் கடவுள்" (சீவக. 1943).*

[கதிர் + கடவுள்.]

கதிர்க்கம்பி *kadir-k-kambi,* பெ.(n.) ***கதிர்க்கோல்*** பார்க்க; see *kadir-k-kōl.*

[கதிர் + கம்பி.]

கதிர்க்காணம் *kadir-k-kāṇam,* பெ.(n.) பழைய வரி வகை (S.I.I. ii. 352); an ancient tax paid in sheaves of corn.

ம. கதிர்க்காணம்

[கதிர் + காணம்.]

கதிர்க்காம்பு *kadir-k-kāmbu,* பெ.(n.) பயிர்க்கதிரின் தாள் (வின்.); stem of grain-heads.

[கதிர் + காம்பு.]

கதிர்க்குஞ்சம் *kadir-k-kuñjam,* பெ.(n.) கதிர்க் கற்றை (யாழ்ப்.); bunch of ears of corn to adorn a house, first fruit.

[கதிர் + குஞ்சம்.]

கதிர்க்குடலை *kadir-k-kuḍalai,* பெ.(n.) மணிபிடியாத கதிர் (வின்.); corn with ears in the process of formation.

[கதிர் + குடலை.]

கதிர்க்குருவி *kadir-k-kuruvi,* பெ.(n.) ஒரு சிறிய பறவை; the ashy wren warbler (சேரநா.).

ம. கதிர்க்கருவி

[கதிர் + குருவி.]

கதிர்க் குருவி வகைகள்:

1. அகன்றவால் கதிர்க்குருவி, 2. நாணல் கதிர்க்குருவி, 3. இலைக் கதிர்க்குருவி, 4. வெண் தொண்டைக் கதிர்க்குருவி, 5. பெரிய நாணல் கதிர்க்குருவி.

கதிர்க்குலை *kadir-k-kulai,* பெ.(n.) பயிர்க்கதிர்; ear of grain.

ம. கதிர்க்குல

[கதிர் + குலை.]

கதிர்க்கோல் *kadir-k-kōl,* பெ.(n.) 1. நூல்நூற்குங் கருவி; spindle. 2. தட்டார் கருவிவகை; goldsmith's pin, spike.

[கதிர் + கோல்.]

கதிர்காமம் *kadir-kāmam,* பெ.(n.) இலங்கையின் தென்பகுதியிலுள்ள ஒரு முருகன் திருக்கோயில்; name of a Skanda shrine in South Ceylon. *"தென் கதிர்காமப் பெருமாள்" (தமிழ்நா. 145).*

[கதிர் = தோற்றம், விளங்கித் தோன்றுதல். நீரிடைத் தோன்றும் நிலப்பகுதியும் கோவில்களிடை விளங்கித் தோன்றும்

முருகன் கோயிலும் சிறப்புக் கருதி கதிர் எனப்படுதல் மரபு. கம்மம் (சிற்றூர்) → காமம்.]

கதிர்குளி–த்தல் *kadir-kuḷi-*, 4 செ.கு.வி.(v.i.) 1. கோயிலில் கடவுளுக்கு மணவிழா முடிந்த நான்காம் நாள் அம்மன் நீராடுதல் (நெல்லை); to bathe the image of a goddess ceremoniously on the fourth day of the marriage in the annual festival. 2. திருமணத்தில் மங்கல நாண் பூட்டுவதற்குச் சற்று முன் மணமகள் நீராடல் (நாஞ்.); to have a ceremonial bath as the bride, just before wearing ṡhāli. (செ.அக.)

[கதிர்த்தல் : கன்னிமையடைதல், முதன்மைச் செயலாதல். கதிர் குளித்தல் : முதன்மைச் செயலாக நிறைவுறுத்தல்.]

கதிர்ச்சாலேகம் *kadir-c-cālēgam*, பெ.(n.) கம்பி களாலான சாளரம்; window with bars. *"கதிர்ச்சா லேகமுங் கந்துங் கதிர்ப்ப" (பெருங். உஞ்சைக். 40, 10).*

[கதிர் + வ. சாலேகம்.]

கதிர்ச்சிலை *kadir-c-cilai*, பெ.(n.) கதிரவன்கல் (சூரியகாந்தம்); sunstone. *"கதிர்ச்சிலையில் ..... பரிதியினா லழல்வரல்போல்" (வேதா. சூ. 81).*

[கதிர் + சிலை.]

கதிர்செய்–தல் *kadir-cey-*, 1 செ.கு.வி.(v.i.) ஒளி விடுதல்; to emit rays, as the sun. *"கதிர்செய் மாமணி" (சீவக. 197).*

[கதிர் + செய்.]

கதிர்த்தவசம் *kadir-t-tavašam*, பெ.(n.) கதிரில் தோன்றும் தவசம்; grains obtained from ear of corn.

[கதிர் + தவசம்.]

கதிர்த்தாக்கம் *kadir-t-tākkam*, பெ.(n.) கதிர் முதிர்ந்து சாய்கை (வின்.); bending of the stalks under the weight of grain as the corn ripens.

[கதிர் + தாக்கம்.]

கதிர்த்தானியம் *kadir-t-tāṉiyam*, பெ.(n.) ***கதிர்த் தவசம்*** பார்க்க; see *kadir-t-tavašam*.

[கதிர் + தானியம்.]

கதிர்நாவாய்ப்பூச்சி *kadir-nāvāy-p-pūcci*, பெ.(n.) நெற்பயிரை அழிக்கும் ஒருவகைப் பூச்சி; earhead bug.

[கதிர் + நாவாய் + பூச்சி.]

கதிர்நாள் *kadir-nal*, பெ.(n.) மானேறுநாண்மீன் (உத்தரம்) (திவா.); the 12th nakšatra, whose presiding deity is the Sun.

[கதிர் + நாள்.]

கதிர்நேசமருவம் *kadir-nēša-maruvam*, பெ.(n.) கஞ்சாங்கோரை; hoary basil. (சா.அக.)

[கதிர் + நேசம் + மருவம்.]

கதிர்ப்பகை *kadir-p-pagai*, பெ.(n.) 1. ஞாயிற்றுக்கும் திங்களுக்கும் நட்பல்லாததாகக் கருதப்படும் செங்கோள், கருங்கோள் (இராகு, கேது கோள்கள்); Rāgu and Kētu, the ascending and descending nodes regarded as planets, and considered as being deadly inimical to the sun and the moon. 2. ஞாயிறு ஒளியில் சுருங்கும் அல்லி (மலை.); water-lily, which shrinks in sunlight. 3. குவளை (மலை.); blue lotus.

[கதிர் + பகை.]

கதிர்ப்பச்சை *kadir-p-paccai*, பெ.(n.) ஒருவகை நறுமணச்செடி (இ.வ.); a fragrant plant (செ.அக.).

[கதிர் + பச்சை.]

கதிர்ப்பயிர் *kadir-p-payir*, பெ.(n.) இளங்கதிர்த் தவசம்; grain just earing.

[கதிர் + பயிர்.]

கதிர்ப்பாரி *kadir-p-pāri*, பெ.(n.) தாமரை (மலை.); lit., wife of the Sun, the lotus flower so called because it blossoms in his presence.

[கதிர் + பாரி. பாரித்தல் : மலர்தல்]

கதிர்ப்பாளை *kadir-p-pāḷai*, பெ.(n.) ஆண்பனையின் பாளை (சங்.அக.); sheath of the flower of the male palmyra.

[கதிர் + பாளை.]

கதிர்ப்பு[1] *kadirppu*, பெ.(n.) ஒளிர்ப்பு (வெளிச்சம்); radiance, brightness, brilliance. *"காட்சியங் கதிர்ப்பு" (சூளா. இரத. 86).*

[கதிர் → கதிர்ப்பு.]

கதிர்ப்பு[2] *kadirppu*, பெ.(n.) பாக்கு, பனை முதலியவைகளின் குலைப்பகுதி; bunch of fruits, part of the blossoms of palm trees.

ம. கதிப்பு.; து. கதுப்பு.

[கதிர் → கதிர்ப்பு.]

கதிர்ப்புல் *kadir-p-pul,* பெ.(n.) கதிர்விடும் புல் (வின்.); grass which bears ears.

[கதிர் + புல்.]

கதிர்ப்புளி *kadir-p-puḷi,* பெ.(n.) குழந்தைகட்கு மெலிவுண்டாக்கும் நோயை நீக்கப் பயன்படுத்தும் முக்கவர் சூட்டுக் கோல்; a three-pronged iron instrument used in branding across the breasts of children for curing them of atrophy.

ம. கதிர்ப்புளி.

[கதிர்ப்பு + உளி.]

கதிர்ப்போர் *kadir-p-pōr,* பெ.(n.) கதிர்க்குவியல். (வின்.); stack of grain, rick of corn.

[கதிர் + போர். பொல் → பொரு (நெருங்கு) → போர் (குவியல்).]

கதிர்பொறுக்கு-தல் *kadir-poṟukku-,*5 செ.குன்றாவி.(v.t.) கம்பு, கேழ்வரகு போன்றவற்றின் கதிர்களை அறுத்தல் (இ.வ.); to cut off the heads of dry crops like millet, ragi, etc.

[கதிர் + பொறுக்கு.]

கதிர்மகன் *kadir-magaṉ,* பெ.(n.) 1. ஞாயிற்றின் மகனாகக் கருதப்படும் எமன் (சங். அக.); supposed to be the son of Sun-God. 2. காரி (சனி) (திவா.); saturn. 3. சுக்கிரீவன் (கம்பரா.); Sugriva. 4. கன்னன் (திவா.); Karṇa, a hero of the Mahābhārata.

[கதிர் + மகன்.]

கதிர்மடங்கல் *kadir-madaṅgal,* பெ.(n.) அறுவடை முடியும் பருவம் (w.g.); ending of the harvest season.

[கதிர் + மடங்கல்.]

மடங்கல் – இறுதி, முடிவு எனினும், ஈண்டுச் செயல் இடையறவு படுவதையே குறித்து நின்றது.

கதிர்மண்டபம் *kadir-maṇḍabam,* பெ.(n.), கதிர்களைக் கொண்டு ஒப்பனை செய்யப்பட்ட மணவ(நாஞ்.); The dias which is decorated with ear of corns for performance of marriage rites.

[கதிர் + மண்டபம்.]

கதிர்க்கற்றைகளைக் கட்டி மணமண்டபம் அமைப்பது வேளாண் மரபின் அல்லது உழவர் குடியின் செழுமையையும் மங்கலத்தன்மையும் குறித்தல் காண்க. இதனால் திருமணங்கள் இன்றளவும் அறுவடைக் காலங்களில் (தை) பெரும்பாலும் நடத்தப்பெறுகின்றன.

கதிர்மணி *kadir-maṇi,* பெ.(n.) **கதிர்முத்து** பார்க்க; see *kadir-muttu* (கல்.அக.).

ம. கதிர்மணி

[கதிர் + மணி.]

கதிர்மம் *kadirmam,* பெ.(n.) 1. ஒளி; shining. 2. கூர்மை; sharpness.

ம. கதிர்மம்; க. கதரு, கதுரு.

[கதிர் → கதிர்மம்.]

கதிர்மான் *kadirmāṉ,* பெ.(n.) ஓரின மான்; a kind of deer.

ம. கதிருமான்

[கதிர் + மான்.]

கதிர்முகம் *kadir-mugam,* பெ.(n.) பிறைத்திங்கள்; crescent moon (அப்.1 - 302).

[கதிர் + முகம்.]

கதிர்முத்து *kadir-muttu,* பெ.(n.) ஆணிமுத்து; superior pearl. *"தொகுகதிர் முத்துத் தொடைக விழ்பு மழுக" (பரிபா. 6: 16)* 2. கட்டி முத்து; solid pearl.

ம. கதிர்மணி,

[கதிர் + முத்து.]

மூக்காரல் *kadir-mūkkāral,* பெ.(n.) மூக்கு ..மாகவும் கூர்மையாகவும் இருக்கும் ஒருவகை மீன்; a kind of fish with has long and sharp nose.

[கதிர் + மூக்கு+ ஆரல்.]

கதிர்மூக்காரல்

கதிர்வட்டம் *kadir-vaṭṭam,* பெ.(n.) கதிரவன்; lit, radiant sphere, applied to the sun. *"ஓடு கதிர்வட்டமென" (சீவக. 281).*

[கதிர் + வட்டம்.]

கதிர்வனை *kadir-vaṉai,* பெ.(n.) மொச்சைக்காய்; country bean (சா.அக.).

[கதிர்வு + அனை – கதிர்வனை.]

கதிர்வாங்கு–தல் *kadir-vāṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) கதிரீனுதல்; to shoot out ears, of grain. பயிர் கதிர்வாங்கி விட்டது.

க. கதிருகடெ

[கதிர் + வாங்கு.]

கதிர்வால் *kadir-vāl,* பெ.(n.) பயிர்க்கதிரின் நுனி (வின்.); awn or bristle of grain.

[கதிர் + வால்.]

கதிர்விட்டெறி[1]–த்தல் *kadirvitteṟi-,* 4 செ.குன்றாவி (v.t.) கதிர்விட்டிலங்குதல்; to shootout ears of grains.

[கதிர் + விட்டு + எறி.]

கதிர்விட்டெறி[2]–த்தல் *kadir-vitteṟi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஒளிவிடுதல்; to radiant, lusture. 2. செல்வம் பொலிந்து விளங்குதல்; to augument as of wealth.

[கதிர் + விட்டு + எறி–.]

கதிர்விடு[1]–தல் *kadir.viḍu-,* 17 செ.கு.வி.(v.i.) ஒளிவிடுதல்; to emit light rays. *"கதிர்விடு திருமணி" (சீவக. 28. 50).*

[கதிர் + விடு.]

கதிர்விடு[2]–தல் *kadir-viḍu-,* 17 செ.கு.வி.(v.t.) ***கதிர் வாங்குதல்*** பார்க்க; see *kadir-vāṅgutal.*

க. கதிரேறு

[கதிர் + விடு–.]

கதிர்வீச்சு[1] *kadir-vīccu,* பெ.(n.) வெப்பத்தினால் உண்டாகும் ஒருவகைக் காய்ச்சல்; thermic fever (சா.அக.).

[கதிர் + வீச்சு.]

கதிர்வீச்சு[2] *kadir-vīccu,* பெ.(n.) ***கதிரியக்கம்*** பார்க்க; see *kadir-iyakkam.*

[கதிர் + வீச்சு.]

கதிர்வீசு–தல் *kadir-vēšu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. ***கதிர்வாங்கு–தல்*** பார்க்க; see *kadir-vāṅgu-.*

[கதிர் + வீசு–.]

கதிர்வேல் *kadirvēl,* பெ.(n.) ஒளிபொருந்திய வேல்; shining lance.

ம. கதிர்வேல்.

[கதிர் + வேல்.]

கதிரடி–த்தல் *kadir-aḍi-,* 4 செ.கு.வி.(v.i.) நெல்லின் கதிர்களை ஒன்றாகச் சேர்த்துத் தரையிலடித்து மணிகளைச் சிதறப் போரடித்தல்; to beat or treat out grain.

[கதிர் + அடி–.]

கதிரநல்லூர், *kadiranallur,* பெ.(n.) நாமக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Namakkal dt.

[கதிரன் + நல்லூர்.]

கதிரம்[1] *kadiram,* பெ.(n.) 1. அம்பு. (பிங்.); arrow. 2. காசுக்கட்டி (வின்.); downy foliaged cutch.

ம. கதிரம்.

[கதிர் → கதிரம்.]

கதிரம்[2] *kadiram,* பெ.(n.) **கருங்காலி** பார்க்க; see *karuṅgāli.*

[கதிர் → கதிரம்.]

கதிரம்[3] *kadiram,* பெ.(n.) அழகு; beauty, radiance.

ம. கதிரம்.

[கதிர் → ஒளி, வெயில். கதிர் → கதிரம்.]

கதிரம்[4] *kadiram,* பெ.(n.) உப்பிட்டு உணக்கிய தசைத்துண்டு; a slice of flesh.

ம. கதிரம்

மூவேந்தருள் சோழர் கதிரவனைத் தங்குல முதல்வனாகக் கூறி வந்தனர். குணபுலமாகிய சோழநாடு கதிரவர் எழுந் திசையிலிருந்ததால் சோழர் தம்மைக் கதிரவன் வழியினராகக் கூறிக் கொண்டதாகத் தெரிகின்றது [பழந்தமிழாட்சி. ப. 19].

கதிரரிவாள் *kadir-arivāḷ,* பெ.(n.) கதிரறுக்கும் அரிவாள்; garden knife.

[கதிர் + அரிவாள்.]



கதிரரிவாள்

கதிரவன் *kadiravaṉ,* பெ.(n.) ஞாயிறு; Sun, as emitting rays of light. *"கதிரவன் குணதிசைச் சிகரம் வந் தணைந்தான்" (திவ். திருப்பள்ளி - 1).*

மறுவ. பகலவன், வெய்யோன், இருள்வலி, சூரியன், சுடரவன், உதையன், ஆதவன், எல்லை, பனிப்பகை, பரிதி, செங்கதிர், அலரி வெஞ்சுடர், வேந்தன், ஆயிரங்கதிரோன், அழலவன், என்றூழ், கனலி, சான்றோன், அருக்கன், தேரோன், எல்லோன், கனலி, கனலோன், ஒளியோன், பகல், வெய்யிலோன், வெய்யோன், பொழுது, எல்லி, விண்மணி, சுடரோன்.

ம. கதிரவன்

[கதி → கதிர் → வளையாமற் செல்லும் ஒளியிழை. கதிர் → கதிரவன் (மு.தா. 119).]

கதிரவன் புதல்வி *kadiravaṉ-pudalvi,* பெ.(n.) ஞாயிற்றின் மகளாகக் கருதப்படும் யமுனை; suposed to be the dauther of the Sun God.

[கதிரவன் + புதல்வி.]

கதிரறு-த்தல் *kadir-aṟu-,* 4.செ.குன்றா.வி(v.t.) நெல், தினை முதலியவற்றின் தாளையறுத்தல்; to reap stalk of paddy, millet etc.

[கதிர் + அறு-.]

கதிராந்தலை *kadir-ān-dalai,* பெ.(n.) நெல்லின் முற்றிய கதிர்ப்பருவம்; (Rd.) matured stage of paddy on the stalk.

[கதிர் + ஆம் + தலை.]

கதிராமங்கலம் *kadirāmaṅgalam,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஓரூர்; a village in Tanjavur district.

[கதிரன் + மங்கலம் – கதிரன்மங்கலம்–கதிராமங்கலம்.]

கதிராவிமுகம் *kadirāvi-mugam,* பெ.(n.) 1. ஞாயிற்றுக் கோள்மறை (சூரியகிரகணம்); solar eclipse.

[கதிர் + அவி + முகம் = கதிரொடுங்குமுகம். கதிரவிமுகம் → கதிராவிமுகம் = ஒளி மறைக்கும் பகுதி, ஒளிகுன்றிய பகுதி.]

கதிரியக்கம் *kadir-iyakkam,* பெ.(n.) சில தனிமங் களின் அணுக்களைப் பிளக்கும் பொழுது வெளிப் படும் ஆற்றல்; raidiation.

[கதிர் + இயக்கம்.]

கதிரீன்(னு)-தல் *kadir-īṉ-,* 13 செ.கு.வி.(v.i.) **கதிர் வாங்கு** பார்க்க; see *kadir-vāṅgu.*

க. கதலொடெ

[கதிர் + ஈனு.]

கதிரெடுப்பு *kadir-eḍuppu,* பெ.(n.) கதிர்க்கட்டைக் களத்துக்குக் கொண்டு போதல் (இ.வ.); taking the bundles of sheaves to the threshing floor.

[கதிர் + எடுப்பு.]

கதிரெழுதுகள் *kadir-eḻu-tukaḷ,* பெ.(n.) ஞாயிற்றின் ஒளிக்கற்றையில் தோன்றும் துகள் *"கதிரெழு துக*

ளெண்மூன்று கசாக்கிரகந் தானாகும்" (கந்தவு 4. அண்டகோ); dust in a sunbeam.

[கதிர் + எழு + துகள்.]

மயிரின் அரைப்பாகத்தின் 24ல் ஒரு பகுதி கதிரெழுதுகளாகும்.

கதிரை[1] *kadirai,* பெ.(n.) ***கதிர்காமம்*** பார்க்க; see *kadir-kāmam.*

[கதிர்காமம் → கதிரை (மரூஉ மொழி).]

கதிரை[2] *kadirai,* பெ.(n.) நாற்காலி (யாழ்ப்.); chair.

[கதிர் - ஆரக்கால், கால். கதிர் → கதிரை.]

கதிரோலை *kadir-ōlai,* பெ.(n.) முடையாத ஓலை; unbraided palm leaf.

ம. கதிரோல

[கதிர் + ஓலை.]

கதிரோன் *kadirōṉ,* பெ.(n.) ***கதிரவன்*** பார்க்க; see *kadiravaṉ.*

[கதிரவன் → கதிரான் → கதிரோன்.]

கது *kadu,* பெ.(n.) 1. வடு; cicatrice, scar. *"கதுவா யெஃகின்" (பதிற்றுப். 45: 4).* 2. மலைப்பிளப்பு; mountain clef. *"கதுப்புகுந் துறங்குபு கழுதுஞ் சோர்ந்தவே" (சூளா. கல்யா. 234).*

[கதுவு → கது.]

கதுக்கு[1]**–தல்** *kadukku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. பெருந்தீனி கொள்ளுதல் (இ.வ.); to gorge, glut, swallow greedily. 2. அதக்குதல்; to cram in the mouth, as betel, as a monkey, its food.

[அதுக்கு → கதுக்கு.]

கதுக்கு[2] *kadukku,* பெ.(n.) இராட்டினத்தில் நூலைப் பற்றும் உறுப்பு (சங்.அக.); the clip that holds the thread of a reeling machine.

[கது(வு) → கது → கதுக்கு.]

கதுக்கெனவீழ்–தல் *kadukkena-vīḻ-,* 4 செ.கு.வி. (v.i.) துண்டாக வெளிப்பட்டு வீழ்தல்; to fall out in a lump as the phlegm does when coughed out.

[கதுக்கு + என + வீழ்-.]

கதுகொது–த்தல் *kadukodu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கொதித்தல்; to boil. 2. தளபளவென்று கொதித்தல்; to agitate as of a liquor in boiling.

[குது → குதுத்தல் → குதுகுதுத்தல் → கதுகொதுத்தல். ஒலிக்குறிப்படைப்படியில் உருவான வினை.]

கதுப்பு[1] *kaduppu,* பெ.(n.) 1. கன்னச் சதை; cheek, side of the face. *"தும்பி தொடர்கதுப்ப" (பரிபா.19: 30).* 2. தலைமயிர்; human hair, locks of hair. *"கதுப்பின் குரலூத" (பரிபா. 10: 120).* 3. பழத்தின் நடுவேயுள்ள கொட்டையை நீக்கி அறுத்த துண்டம்; fleshy part of a fruit on each side of the seed in the centre. மாம்பழம் நறுக்குகையில் ஆளுக்கு நான்கு கதுப்புகள் கிடைத்தன (இ.வ.).

[கது(வு) - பற்றுதல். கது → கதுப்பு - பற்றியிருப்பது.]

கதுப்பு[2] *kaduppu,* பெ.(n.) ஆநிரை; herd of cattle.

[கதுவுதல் - பற்றுதல், ஒன்றோடொன்று பிணைந் திருத்தல் (மந்தை). கதுவு → கதுப்பு.]

கதுப்பு[3] *kaduppu,* பெ.(n.) மஞ்சள் (அரு.நி.); turmeric (செ.அக.).

[கதிர் → கதிர்ப்பு → கதிப்பு → கதுப்பு.]

கதுப்பு[4] *kaduppu,* பெ.(n.) யானை மதம்; rut of elephant.

[கடி → கதி → கதிப்பு → கதுப்பு மிகுதியாகப் பெருகுவது.]

கதுப்புத்துடுப்புமீன் *kaduppu-t-tuḍuppu mīṉ,* பெ.(n.) கடல்வாழ் மீன்வகை; a kind of see fish.

[கதுப்பு + துடுப்பு + மீன்.]



கதுப்புத் துடுப்பு மீன்

கதுப்புளி *kaduppuḷi*, பெ.(n.) ***கதிர்ப்புளி*** பார்க்க; see *kadirppuḷi*.

ம. கதிர்ப்புளி

[கதிர்ப்புளி → கதுப்புளி.]

கதுப்புளிக்கோல் *kaduppuḷi-k-kōl*, பெ.(n.) ***கதிர்ப் புளி*** பார்க்க; see *kadirppuḷi*.

[கதிர்ப்பு → கதுப்புளி + கோல்.]

கதுமு–தல் *kadumu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. ஒட்டாரம் பிடித்தல், பிடிவாதஞ் செய்தல் (வின்.); to be obstinate, perverse, self-willed. 2. கடிந்துகொள்ளுதல் (த.மொ.அக.); to reprove, rebuke, chide.

[கதுவு → கதுமு–.]

கதுமெனல் *kadum-eṉal*, பெ.(n.) விரைவுக்குறிப்பு; expression denoting quickness. *"கதுமெனக் கரைந்து" (பொருந. 101).*

பட. கதமன

[கதும் + எனல்.]

கதுமை *kadumai*, பெ.(n.) ***கதிமை*** பார்க்க; see *kadimai*.

[கதிமை → கதுமை.]

கதுவல் *kaduval*, பெ.(n.) பற்றுதல்; catch; to seize. *"கட்புலன் கதுவல் செல்லா" (நைடத. அன்னத்தைக் கண்–2).*

[கதுவு + அல். அல் = தொ.பெ.ஈ.]

கதுவாய் *kaduvāy*, பெ.(n.) 1. வடுப்படுகை (திவா.); being scarred. 2. குறைகை; diminishing, decreasing, *"கதுவாய்பட நீர்முகந் தேறி" (திவ். பெரியாழ். 3,5,4).* 3. மேற்கதுவாய், கீழ்க்கதுவாய் தொடை வேறுபாடு (இலக். வி. 723); (pros. mōṉai, of two kinds. 4. முரிந்தவாய்; wry mouth (சுந்.415).

[கது + வாய் – கதுவாய். கது = பற்று, வெட்டு.]

கதுவாய்ப்படு–தல் *kaduvāy-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) வடுப்படுதல்; to be scarred.

[கதுவாய் + படு–. படு = து.வி.]

கதுவாலி[1] *kadu-vāli*, பெ.(n.) கவுதாரி (இ.வ.); Indian pastridge.

மறுவ. கவுதாரி

H.kabuthar

[கது + வாலி. கது = குட்டையான. கதுவாலி = குட்டையான, வாலுடையது.]

கதுவாலி[2] *kaduvāli*, பெ.(n.) ஒருவகை மரம்; Ceylon tea.

[கருவாலி → கதுவாலி.]

கதுவாலிப்புடம் *kaduvāli-p-puḍam*, பெ.(n.) கவுதாரி அளவாக மூன்று எருவிட்டெரிக்கும் மருந்துப்புடம்; measure determining the strength of fire in the calcination or reduction of metals with three dry dung cakes.

[கதுவாலி + புடம்.]

கதுவு[1]**–தல்** *kaduvu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. நார் முதலியன வரிந்து இழுத்தல் (யாழ்.அக.); to tighten, as strands, etc. (செ.அக.). 2. அழுத்துதல்; to press. 3. இறுக்கிப்பிடித்தல்; to seize or hold firmly. 4. தொல்லை தருதல்; to distress, to trouble. 5. ஒட்டாரத்துடன் (பிடிவாதத்துடன்) ஊக்குதல்; to urge with vehemence (கருநா.). 6. கல்வுதல்; to grosp.

க. கதுபு; **தெ.** கதுமு.

[குது → கது → கதுவு.]

கதுவு[2]**–தல்** *kaduvu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. பற்றுதல்; to seize, catch, grasp, lay hold of. *"கராவதன் காலினைக் கதுவ" (திவ். பெரியதி. 2,3,9).* 2. கைப் பற்றுதல் (யாழ்ப்.); to take more than a proper share of, encroach upon. 3. செதுக்குதல் (வின்.); to pare, share off, slice off, whittle, strip off, as fibres from a nut; to chisel.

க. கதுபு, கதுகு, கதும்பு, கதுபு; **தெ.** கதுமு; **து.** கதிபு.

[குது → கது → கதுவு. கதுவுதல் (மு.தா.210.).]

கதுவு[3]**–தல்** *kadavu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. கலங்குதல்; to be troubled perturbed. 2. எதிரொளித்தல்; to be reflected as in a mirror; *"தற்படிக மணிக்கதுவு மறிவொளி" (வேதா.சூ.107).*

[கது → கதுவு.]

கதேர்த்தவி *kadhērtavi*, பெ.(n.) மாதவிலக்கு நின்ற பெண்; a woman past her courses or past child bearing (சா.அக.).

[கதுவு + தவிர்.]

கதை *kadai*, பெ.(n.) 1. உரையாடல் (யாழ்ப்.); talk, conversation. ***கதைத்தல்*** பார்க்க; see *kadai-*.

2. செய்தியைச் சுவைபடச் சொல்லுதல்; story. இவர் இனிமையாகக் கதை சொல்வதில் வல்லவர் (உ.வ.). 3. நடந்ததை எடுத்துரைத்தல்; narration. விடுதலைப் போர்க் கதையைச் சொல்லும் பெரியோர் இன்று முளர் (உ.வ.). 4. நொடிச்செய்தி; anecdote. பழந்தமிழ் வரலாற்றை ஆங்காங்கே கதை சொல்லி விளக்கி னார் (உ.வ.). 5. இயலாததையும் பொருந்தக்கூறல்; talk tale. மணலைக்கயிறாகத் திரித்ததாகக் கதை கூறுகிறான் (உ.வ.). 6. எதிராடலுக்கான பொருள்; subject of conversation. இன்றைய பொழுதை வீணடிக்க இவனுக்கு கதை கிடைத்துவிட்டது (உ.வ.). 7. வாழ்க்கை; life அவர் கதை முடிந்து ஆறு திங்களாகி விட்டது(உ.வ.). 8. பெரிய வரலாறு; long story; கருமாயம் பேசிற் கதை" (திவ்.இயற். நான்மு 3.1). 9. தொல்பழங்கதை, (இதிகாசம்), தொன்மங்கள் (புராணங்கள்); epic, and legend. 10. பெருங்கதை (சிலப். உரைப்பாயிரம் ப.9); Perunkatai, the story of Udayanan. 11. பொய்ப் பொருள் புணர்த்துக் கூறுவது; fabrication, fallshood, lie. *"கதையெனக் கருதல் செய்யான், செய்யெனத் தானுங் கொண்டான்" (சீவக. 2144).* 12. புத்தார்வமிக்க காதல் கதை; rom ance. புதுவகைக் காதல் கதைகள் அதிகமாக வெளிவந்துள்ளன. 13. கட்டுக்கதை; Table, apolo gue, fiction. 14. செய்தி; message, communication. 15. விதம்; manner; *"கக்கல் வந்திட மிடற்றினை யொடுக்குமக் கதைபோல்" (அரிச்.பு.சூழ்வி.100).*

தெ. கதா; **து.** கதெ; **பட.** கதெ (பாட்டு); **க.** கதெ; **Skt.** katha; **Ori.** kadha; **H.** kadha, kahani; **Pali.** kadh; **Guj.** kahani; **Indon.** kata.

த. கதை > **Skt.** katha

[கழல் (கழறு) → கதல் → கதைத்தல் → கதை.]

கதைக்கரு *kadai-k-karu,* பெ.(n.) புதினம், சிறுகதை, நாடகம், காப்பியம், கதைப்பாடல் ஆகியவற்றில் தொடர்புடைய நிகழ்ச்சிகளின் அமைப்பு; plot in novels, short stories, drama, epic, story-poems - etc.

[கதை + கரு.]

கதைக்களி *kadai-k-kaḷi,* பெ.(n.) கேரளத்தின் நாட்டியக் கலைகளுள் ஒன்று; a classical dramatic art of Kerala.

ம. கதகளி

[கதை + களி – கதைக்களி.]

மலையாளத்தில் சிறப்பெய்தியுள்ள ஒரு நாட்டியக் கலை. களி– விளையாட்டு, ஆடல். கதையை ஆட்டத்தில் காட்டும் கதைபொதி ஆடல் கதைக்களியாகும். இவ் வாட்டத்தில் பயன்படுத்தும் கதையினை ஆட்டகதா [ஆட்டத்திற்குரிய கதை] என்பர். பல கதைகளும் இலக்கியங்களும் இதற்காக உருவாகியுள்ளன.

கதைகட்டு[1]–தல் *kadai-kaṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) பொய்ச்செய்தி கிளப்புதல் (வின்.); to concoct a slander.

[கதை + கட்டு–.]

கதையைப் போல் பொய்யைப் புனைந்து சொல்வதன் அடிப்படையில் பொய்த்தூற்றுப் பொருளில் இச் சொல் ஆளப்பட்டது.

கதைகட்டு[2]–தல் *kadai-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கதை உருவாக்குதல்; to fabricate a story, construct a fable, romance or other fiction. 2. நாடகக் கதையின் நிகழ்ச்சிக்கூறு உருவாக்குதல்; to form the plot of a story of drama.

[கதை + கட்டு–.]

கதைகந்தலா(கு)–தல் *kadai-kandalāgu-,* 5செ.கு.வி.(v.t.) 1. குட்டு வெளிப்படுதல்; secrets being known widely *"cat out of the bag".* பொய் சொல்லுகிறாய் என்று உன் கதை கந்தலாகுமோ? (உ.வ.). 2. அவலம்; affliction. உன் நடைமுறையை மாற்றிக்கொள்ள வில்லையென்றால் வருங் காலத்தில் உன் கதை கந்தலாகிவிடும் (உ.வ.).

ம. கதகேடு

[கதை + கந்தல். கந்தல் → நைந்துபோதல்.]

கதை–த்தல் *kadai-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. சொல்லுதல். (திவா.); to tell, narrate, say. 2. சிறப்பித்துச் சொல்லுதல்; to speak weii of; to praise. *"கதையுந் திருமொழியாய் நின்ற திருமாலே" (திவ். இயற். 2, 64).*

ம. கதிக்குக; **குவி.** கதஆ, கதங்ஆ; **Pkt.** kattha; **H.** kahana.

[கழல் (கழறு) → கதல் → கதை.]

கதைகாரன் *kadai-kāraṉ,* பெ.(n.) 1. வீண் பேச்சுக் காரன்; talkative person, babbler. 2. கதைசொல்லு வோன்; story teller, narrator. 3. கதை எழுதுபவன்; story-writer. 4. தந்திரமுள்ளவன் (Madr.); trickster, clever man.

க. கதெகார, கதிக; ம. கதாகாரன், கதிகன்; **Skt.** kathika.

[கதை + காரன்.]

கதைகாவி *kadai-kāvi,* பெ.(n.) குறளை கூறுவோன் (யாழ்ப்.); tablebearer.

[கதை + காவி. (காவுதல் = சுமத்தல். காவு → காவி. காவி = காவிச் (சுமந்து) செல்பவன்.]

கதைகேள்(ட்)—தல் *kadai-kēḷ-,* 3.செ.கு.வி.(v.i.) கதை கேட்டல்; to hear a story.

க. கதெகேள்

[கதை + கேள்-.]

கதைச்சாரம் *kadai-c-cāram,* பெ.(n.) 1. கதைச் சுருக்கம்; purport of a story. 2. கதையால் தெரிவிக்கும் நீதி; the moral of a story.

ம. கதாஸாரம்; க. கதாசார; **Skt.** kathā - šāra.

[கதை + சாரம்.]

கதைசொல்(லு)—தல் *kadai-col-,* 13 செ.கு.வி.(v.i.) 1. கதைகூறுதல்; to relate or narrate stories. ஒரு கதை சொல்லவேண்டும். 2. அலப்புதல். (வின்.); to tattle, babble. 3. சிறு குழந்தை சிரித்து விளையாடுதல்; to show signs of intelligence by smiles, as an infant. குழந்தை கதை சொல்லுகிறதா? (வின்.).

க. கதெவேழ்

[கதை + சொல்.]

கதைத்தலைவன் *kadai-t-talaivaṉ,* பெ.(n.) கதையின் தலைவனாக இருப்பவன்; hero of a story, or of a poem.

ம. கதாநாயகன்; **Skt.** kathānāyak.

[கதை + தலைவன்.]

நல்லெண்ணம், நற்செய்கை, நற்பண்பு, நல்லொழுக்கம், அறிவுக்கூர்மை, வன்மை ஆகிய எல்லாம் நிறைந்த சால்புடையவனையே கதைக்குத் தலைவனாக்குவது பண்டையோர் மரபு. மக்களைப் பண்படுத்தும் குறிக்கோள் நிறைவுற இது வழி வகுத்தது.

கதைத்தலைவி *kadai-t-talaivi,* பெ.(n.) கதையின் தலைவியாக இருப்பவள்; heroine of a story or of a poem.

[கதை + தலைவி.]

கதைத்திருப்பம் *kadai-t-tiruppam,* பெ.(n.) கதையின் திருப்புமுனை; turning point of a story.

[கதை + திருப்பம்.]

கதைதிரும்பு—தல் *kadai-dirumbu-,* 5 செ.கு.வி.(v.i.) நிகழ்வுகள் தம் வழியினின்று திரும்புதல்; to turn an event of its course.

[கதை + திரும்பு-.]

கதைதீர்—தல் *kadai-tir-,* 4 செ.கு.வி.(v.i.) இறத்தல்; to die, to end. அவன் கதை தீர்ந்தது (உ.வ.).

ம. கததீருக

[கதை + தீர்-.]

கதைநாயகன் *kadai-nāyagaṉ,* பெ.(n.) ***கதைத் தலைவன்*** பார்க்க; see *kadai-t-talaivaṉ.*

[கதை + நாயகன். நாயன் → நாயகன். வ. நாயக > த. நாயகன் (நேர்மையான சான்றோன்.).]

கதைப்பாட்டு *kadai-p-pāṭṭu,* பெ.(n.) ***கதைப்பாடல்*** பார்க்க; see *kadai-p-pāḍal.*

[கதை + பாட்டு.]

கதைப்பாடல்[1] *kadai-p-pāḍal,* பெ.(n.) கதையினைத் தழுவிய பாடல்; story-poem. தெய்வம் அல்லது ஒரு தலைவனின் வரலாற்றைப் பாட்டுவடிவில் கூறும் நாட்டுப்புற இலக்கியம்; folk epic-poem; folk ballad.

[கதை + பாடல்.]

கதைப்பாடல்[2] *kadai-p-pāḍal,* பெ.(n.) கதையைப் பாடல் வடிவில் கூறுவது; ballad.

[கதை + பாடல்.]

நாட்டுப்புற மக்களின் கூட்டு முயற்சியால் வாய்மொழி இலக்கியமாக இசைக்கருவிகளின் துணைகொண்டு பாடப்படும் புகழ்மிக்க கதை பொதி பாடல் திரட்டு.

கதைப்புணர்ச்சி *kadai-p-puṇarcci,* பெ.(n.) கிளைக் கதைகளைப் பெருங்கதையுடன் இணைக்கும் இணைப்பு; connection of a story or narrative, in its several parts, thread of a narrative.

[கதை + புணர்ச்சி.]

கதைப்பொருள் *kaḍai-p-poruḷ,* பெ.(n.) ஒரு கதையிலிருந்து பெறப்படும் பொதுக்கருத்து; theme of a story, novel etc.

[கதை + பொருள்.]

கதைபடி–த்தல் *kaḍai-paḍi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. முறைப்படித் தொன்மம் படித்தல்; to read sacred stories according to rule. 2. பொய் கூறுதல்; to spin out falsehood.

[கதை + படி–.]

கதைபண்ணு–தல் *kaḍai-paṇṇu-,* 12 செ.கு.வி. (v.i.) 1. கதைப்பாட்டுரைத்தல். (கதாகாலட்சேபம்); to rehearse or narrate Purāṇic stories with musical accompaniments. 2. கட்டிப்பேசுதல்; to talk nonsense, indulge in idle prattle, spin a long yarn. "தாயிடம் அப்படி எல்லாம் கதைபண்ணாதே". 3. தெரிந்தும் தெரியாததுபோல் பேசுதல்; to feign ignorance, dissemble.

[கதை + பண்ணு–.]

கதைபிடுங்கு–தல் *kaḍai-piḍuṅgu-,* 7 செ.குன்றாவி. (v.i.) பிறரிடமிருந்து கமுக்கம் வெளிவரும்படிச் செய்தல்; to pump out information by cajolery, elicit a secret by coaxing words; to fish out a matter. "கதைவிட்டுக் கதைபிடுங்குவதில் அவன் கெட்டிக்காரன்" (யாழ்ப்.); 2. பேசிக் காரியமறிதல்; to known secrecy by idle talk. காவலர்கள் கதைபிடுங்குவதில் கெட்டிக்காரர்கள்.

[கதை + பிடுங்கு–.]

கதைமாறு–தல் *kaḍai-māṟu-,* 5 செ.கு.வி.(v.i.) பொருள் பலபடப் பேசுதல். (வின்.); to prevaricate, quibble.

[கதை + மாறு–.]

கதைமுடி–த்தல் *kaḍai-muḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) கொல்லுதல்; to kill. பாண்டியன் நெடுஞ்செழியன் கோவலன் கதையை முடித்துவிட்டான் (உ.வ.).

ம. கதகழிக்குக, கததீர்க்குக.

[கதை + முடித்தல் (பி.வி.).]

கதைமுடி–தல் *kaḍai-muḍi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கதை முடிதல்; to close a story. அடுத்த இதழோடு இக்கதை முடிகிறது (உ.வ.). 2. இறத்தல்; to die.

ம. கத கழியுக

[கதை + முடி–.]

கதையள–த்தல் *kaḍai-yaḷa-,* 3 செ.கு.வி.(v.i.) 1. பொய் பேசுதல்; to talk non-sense, indulge in idles prattle. அவன் உண்மையைச் சொல்லாமல் கதையளக்கிறான். 2. தேவைக்கதிகமாக நீட்டிப் பேசுதல்; to spin a long yarn. கதையளக்காமல் சுருக்கமாகச் சொல் (உ.வ.).

[கதை + அள–. கதைவிடு பார்க்க.]

கதையறி–தல் *kaḍai-y-aṟi-,* 2 செ.கு.வி.(v.i.) உளவறிதல் (வின்.); to spy out, as an enemy, to watch in disguise the movements of an enemy.

[கதை + அறி–.]

கதையாசிரியன் *kaḍai-y-āśriyaṉ,* பெ.(n.) கதை எழுதும் எழுத்தாளன்; story writer.

[கதை + ஆசிரியன் → கதையாசிரியன். இதனை வடமொழி ஒலிப்பாக்கிக் கதாசிரியன் என வழங்குதல் வழுவாம்.]

கதையுண்டாக்கு–தல் *kaḍai-y-uṇḍākku-,* 7 செ.கு.வி. (v.i.) 1. கதைகட்டுதல்; to fabricate a story. கதை கட்டிப் பேசியும் காரியம் முடியவில்லை. 2. பொய்யான செய்திகளைப் பரவச்செய்தல்; to spread a rumour. சிலை, பால் குடிப்பதாகக் கதையுண்டாக்கி விட்டனர் (உ.வ.).

[கதை + உண்டாக்கு–.]

கதையெடு–த்தல் *kaḍai-y-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. தேவையில்லாமல் முரணாகப் பேசுதல்; to raise unnecessary arguments. 2. செய்தி தொடங்குதல் (வின்.); to introduce a subject.

[கதை + ஏடு.]

கதைவளர்–த்தல் *kaḍai-vaḷar-,* 4 செ.கு.வி.(v.i.) பேச்சை விரித்தல் (வின்.); to prolong a story or a conversation.

[கதை + வளர்–.]

கதைவிடு–தல் *kaḍai-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. பொய்ப்பேச்சு எழுப்புதல்; to tell a false story for some sinister end. எல்லோரிடத்தும் கதை விட்டுக் கொண்டலைகிறான் (உ.வ.). 2. மறைபொருள் (இரகசியம்) வெளியே வரும்படி சூழ்ச்சியாய் (தந்திரமாய்) சொல்லாடல்; to tell something pleasing to one in order to put him in good humour and

fish out secrets from him. கதைவிட்டுக் கக்கச் செய்தான்(உ.வ.). 3. நம்பமுடியாத அளவில் கூறுதல்; to spin a yarn. எனக்குத் தெரியும், கதைவிடாதே (உ.வ.).

மறுவ. கயிறுதிரித்தல்,சரடு விடல், கரடி விடல், அளத்தல்.

[கதை + விடு-.]

எளிய செய்தியை அல்லது நிகழ்ச்சியைக் கற்பனையால் விரித்துக் கூறுவது கதையாகும். சொல்லாததைச் சொன்னதாகவும் நிகழாததை நிகழ்ந்ததாகவும் கூறுவது கதை விடுதலாகும்.

கந்தக்கினி *kandakkiṉi,* பெ.(n.) கெட்ட நாற்றத்தைப் போக்கும் பொருள்; a substance which has the power of destroying fetid smell (சா.அக.).

[கந்தம் + அக்கினி.]

கந்தக்குடிச்சி *kanda-k-kuḍichi,* பெ.(n.) ஒருவகைக் காட்டுக்கொடி; a kind of moonseed - creeper.

[கந்தகம் + குடிச்சி (சா.அக.) கொடிச்சி → குடிச்சி (கொ.வ.).]

கந்தகஅமிலம் *kandaga-amilam,* பெ.(n.) கந்த-கத்தை மூலக்கூறாகக் கொண்ட அமிலம்; Sulphuric acid (H_2SO_4).

[கந்தகம் + அமிலம்.]

கந்த இளகியம் *kandaga-iḷagiyam,* பெ.(n.) பதங்கித்த கந்தகத்தோடு மற்ற பொருள்களையும் சேர்த்துச் செய்யும் ஒருவகை இளகியம்; an electuary prepared from sublimed sulphur mixed with other ingredients (சா.அக.).

[கந்தகம் + இளகியம்.]

கந்தகக்கலப்பியம் *kandaga-k-kalappiyam,* பெ.(n.) கந்தகத்தோடு சேர்ந்துள்ள காரீயம்; native sulphide of lead.

[கந்தகம் + கலப்பு + ஈயம்.]

கந்தகக்களிம்பு *kandaga-k-kaḷimbu,* பெ.(n.) கந்தகம், இதளியம், செய்நஞ்சு, மெழுகு முதலியவை களாலான களிம்பு; ointment prepared with sulphur, mercury, organic, wax, etc (சா.அக.).

[கந்தகம் + களிம்பு.]

இது புண், புரைகளுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

கந்தகச்சிந்தூரம் *kandaga-c-cindūram,* பெ.(n.) கந்தகச் செந்நீறு (வின்.); calcined brimstone.

[கந்தகம் + சிந்தூரம்.]

கந்தகச் சுண்ணம் *kandaga-c-cuṇṇam,* பெ.(n.) 1. நெருப்பிற்கு ஓடாதபடி கட்டிய கந்தகத்துடன் பிற சரக்குகள் சேர்த்து அரைத்துப் புடமிட்டெடுத்த சுண்ணம்; a compound prepared by consolidating calcinated sulphur added with other drugs. 2. கந்தகம் கலந்த சுண்ணாம்பு; sulphurated lime.

[கந்தகம் + சுண்ணாம்பு]

இவ்விரு வகைகளில் முன்னையது சித்த மருத்துவ முறைப்படியும், பின்னையது ஆங்கில மருத்துவ முறைப்படியும் உருவாக்குவனவாம் [சா.அக.].

கந்தகச் சுரங்கம் *kandaka-c-curaṅgam,* பெ.(n.) கந்தகப் படிமங்களை வெட்டி எடுக்குமிடம்; mines of sulphuric ore.

[கந்தகம் + சுரங்கம்.]

கந்தகச் செந்தூரம் *kandaga-c-cendūram,* பெ.(n.) ***கந்தகச் சிந்தூரம்*** பார்க்க (சா.அக.); see *kandaga-c-cindūram.*

[கந்தகம் + செந்தூரம்.]

கந்தகத்துகள் *kandaga-t-tugaḷ,* பெ.(n.) கந்தகத் தனிமத்தின் தூள்; powdered sulphur.

மறுவ. கந்தகப்பொடி

[கந்தகம் + துகள்.]

கந்தகத்தைலம் *kandaga-t-tailam,* பெ.(n.) கந்தகக் கலப்புள்ள எண்ணெய்; sulphur oil.

[கந்தகம் + தைலம்.]

இவ்வெண்ணெயைச் சொறிக்கு மருந்தாக இடுவர்.

கந்தகநீறு *kandaga-nīṟu,* பெ.(n.) கந்தகப்பொடி; calcinated sulphur.

[கந்தகம் + நீறு.]

கந்தகப்பாகு *kandaga-p-pāgu,* பெ.(n.) கந்தகத்தை உருக்கிக் குளிர்நீரில் கலப்பதால் உண்டாகும் சவ்வு

போன்ற கந்தகம்; a tough elastic material which is obtained when sulphur is poured into cold water (சா.அக.).

[கந்தகம் + பாகு.]

கந்தகப்புகை *kandaga-p-pugai* பெ.(n.) சொறி, சிரங்கு, புண் முதலிய தோல்நோய்களுக்குக் கந்தகத்தை எரியவிட்டுக் காட்டும் புகை; fumigation of sulphur (சா.அக.).

[கந்தகம் + புகை.]

கந்தகப்பூ *kandaga-p-pū,* பெ.(n.) மருந்துச் சரக்குவகை; flowers of sulphur.

[கந்தகம் + பூ.]

கந்தகபூமி *kandaga-būmi,* பெ.(n.) 1. கந்தகத்தன்மை மிகுந்துள்ள நிலம்; soil containing sulphur. 2. வெப்பமிகு பூமி; torri area with hot climatic condition of soil.

Skt. bhumi > **த.** பூமி

[காந்து → காந்துகம் → கந்தகம் + பூமி.]

கந்தகம் *kandagam,* பெ(n.) எளிதில் தீப்பற்றக் கூடியதும், மஞ்சள்நிற முடையதும், மூன்று வேற்றுருக்கள் கொண்டதும், குறைந்த உருகுநிலையுடையதுமான தனிமம்; sulphur (S).

Mar. gandhak; **H.** kandak.

[காந்து → காந்தகம் → கந்தகம். காந்துதல் → எரிதல்.]

இது படிகம் (தூள்), நீள்வடிவ படிகம், கூழ் என மூன்றுருக்களையுடையது.

கந்தகமலை *kandaga-malai,* பெ.(n.) ***கந்தகச்சுரங்கம்*** பார்க்க (வின்.); see *kandaka-c-curaṅgam.*

[கந்தகம் + மலை.]

கந்தகமுறிவு *kandaga-murivu,* பெ.(n.) கந்தகப் பண்பை மாற்றுதல்; changing or neutralising the effects of sulphur.

[கந்தகம் + முறிவு.]

கந்தகவிரும்பு *kandaga-virumbu,* பெ.(n.) கந்தகம் கலந்த இரும்புத்தாது; Iron ore (pyrites) with sulphur (சா.அக.).

[கந்தகம் + இரும்பு.]

கந்தகவுப்பு *kandaga-uppu,* பெ.(n.) கந்தக மணமுள்ள உப்பு, கடுங்கூர்மையுப்பு (வின்.); black salt (சா.அக.).

[கந்தகம் + உப்பு.]

கந்தசட்டி *kandaśaṭṭi,* பெ.(n.) ***கந்தன் அறுமி*** பார்க்க; see *kandan-aṟumi.*

Skt. shasti > சட்டி (ஆறாம் நாள்).

[கந்தன் + சட்டி.]

கந்தசாலி *kanda-śāli,* பெ.(n.) மணமுள்ள ஒருவகைச் சிறந்த செந்நெல்; a superior kind of paddy with a sweet smell. *"கந்தசாலியின் கழிபெரு வித்தோர்" (மணிமே. 10:46).*

[கந்தம்[2] + சாலி. சாலி = நெல்வகை.]

கந்தடி-த்தல் *kandaḍi-,* 4 செ.கு.வி.(v.i.) சூடு மிதித்தபின் கதிர்த்தாளைக் கோல்கொண்டடித்தல். (வின்.); to thresh, beat out straw after it has been trodden over.

[கந்து + அடித்தல்.]

கந்தடை-த்தல் *kandaḍai-,* 4 செ.கு.வி.(v.i.) களத்தைச் சுற்றி வைக்கோலால் வேலிகட்டுதல் (வின்.); to form an enclosure with straw around the threshing floor.

[கந்து[2] + அடை-.]

கந்ததைலம் *kanda-tailam,* பெ.(n.) 1. நறுமணப் பொருள்களைக் கொண்டு செய்யப்பட்ட எண்ணெய்; a medicated oil prepared with fragrant substances. 2. சந்தனாதி (எண்ணெய்); medicated oil prepared with sandalwood as the chief ingredient.

[கந்தம் + வ. தைலம்.]

கந்தநாகுலி *kanda-nākuli,* பெ.(n.) 1. மிளகு (மலை.); black pepper. 2. செவ்வியம்; black pepper plant creeper. 3. மாசிபத்திரி; Indian absinth (சா.அக.).
[கந்தம் + நாகுலி.]

கந்தப்பட்டி *kanda-p-paṭṭi,* பெ.(n.) குறுக்குச்சட்டம்; braces. *"கதவுகால் கந்தப்பட்டி" (மேருமந். 1163).*

[கந்தம் + பட்டி.]

கந்தப்பார்-த்தல் *kanda-p-pār-t-tal,* தொ.பெ. (vbl.n.) தேவையில்லாதவற்றை நீக்குதல் (ம.அக.); to remove unnecessary things.

[கந்தம் + பார்.]

[கல் → கண் = வெளிவரல், பிறத்தல், நீக்குதல். கன் → கந்து → கந்தம்.]

கந்தப்பொடி *kanda-p-poḍi,* பெ.(n.) மணப்பொடி; fragrant; scented powder. *"சந்தடி சாக்கிலே கந்தப்பொடி காற்பணம்" (பழ.).*

[காந்து = பரவு. காந்து → கந்து → கந்தம் + பொடி.]

கந்தப்பொடிக்கோலம் *kanda-p-poḍi-k-kōlam,* பெ.(n.) மணப்பொடி தூவிச் செல்லும் திருமண ஊர்வலம் (இ.வ.); marriage procession in which scented powder is freely strewn over each other among the processionists.

[கந்தம் + பொடி + கோலம். ஊர்வலம் → ஊர்கோலம் (கொ.வ.).]

கந்தப்பொடித்திருவிழா *kanda-p-poḍi-t-tiruviḻā,* பெ.(n.) இறைத்திருமேனி மீதும் அதை வணங்கு பவர்கள் மீதும் நறுமணப்பொடி தூவும் ஒரு திருவிழா (இ.வ.); festival, a prominent feature of which is the strewing of sweet-scented powder upon the idol, as well as on the worshippers.

[காந்துதல் = பரவுதல். காந்து → கந்து → கந்தம் + பொடி + திருவிழா]

கந்தப்பொடியுற்சவம் *kanda-p-poḍi-y-uṟcavam,* பெ.(n.) ***கந்தப்பொடித்திருவிழா*** பார்க்க; see *kanda-p-poḍi-t-tiruviḻā.*

[கந்தம் + பொடி + வ. உற்சவம்.]

கந்தபத்தம் *kanda-pattam,* பெ.(n.) புனுகு சம்பா நெல் (இ.வ.); a superior kind of paddy having a fragrant smell.

[கந்தம் + பதம் – கந்தபதம் → கந்தபத்தம். (கந்தம் = நறுமணம். பதம் = நெல்.).]

கந்தபரணி *kanda-paraṇi,* பெ.(n.) ஏழிலைப் பாலை; seven-leaved form tree (சா.அக.).

[கந்தம் + பரணி + (இலை).]

கந்தபாகம் *kanda-pāgam,* பெ.(n.) எண்ணெய்க்கு நறுமணமூட்டும் முறை; the process of subjecting an oil to a further process of rendering it more fragrant (சா.அக.).

[கந்தம் + பாகம்.]

கந்தபாடாணம் *kanda-pāḍāṇam,* பெ.(n.)1. கந்தகம்; ordinary sulphur. 2. கந்தகம் சேர்ந்த செய்நஞ்சு; any poisonous compound of sulphur (சா.அக.).

*[கந்தகம் + பாடாணம். **Skt.** pāsāṇa. > த. பாடாணம்.]*

கந்தபுராணம் *kanda-purāṇam,* பெ.(n.) கச்சியப்ப சிவாசாரியாரியார் வடமொழி கந்தபுராணத்தில் சிவ ரகசிய காண்டத்து முதலாறு காண்டங்களைத் தமிழில் பாடிய, முருகக்கடவுளின் திருவையும் புகழையும் ஆற்றலையும் போற்றும் பெருநூல்; name of the Tamil poetic version by Kacciyappa šivacariyār of the first six Kandas of the šiva-rahasya Khanda of the Kanda purana relating the story of kanda.

[கந்து = பற்றுக்கோடு. கந்து→கந்தன் கந்தன் + வ. புராண > த. புராணம்.]

கந்தம்[1] *kandam,* பெ.(n.) 1. மணம்; scent, odour, fragrance. *"கந்தமா மலர்" (திவ். பெரியதி 3,5,6).* 2. இலவங்கம், ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம் முதலியவற்றாலான முகமணப்பொருள் (பிங்.); perfumery, spices, of which five are mentioned, viz., clove, cardamom, camphor, nutmeg, cubeb. 3. வசம்பு (மலை.); sweet flag. 4. வெள்ளைப் பூண்டு (மலை.); garlic. 5. நறுமணவேர்; fragrant root.

த.கந்தம்; **Skt.** gandha.

[காந்து → கந்து → கந்தம்.]

கந்தம்[2] *kandam,* பெ.(n.) அன்பு (அரு.நி.); love.

[காந்து = மணம் வீசுதல், உணர்ச்சி வெளிப்பாடு. காந்து → கந்தம்.]

கந்தம்[3] *kandam,* பெ.(n.) 1. கிழங்கு (திவா.); esculent root. *"கந்தமும் பிறவு மாக விலை பொலி கலத்தி விட்டு" (கந்தபு. வள்ளி. 208).* 2. கருணைக் கிழங்கு (திவா.); a tuberous rooted herb. 3. வெள்ளைப் பூண்டு (பாலவா. 379); garlic.

[கள் = திரட்சி. கள் → கந்து → கந்தம்.]

கந்தம்[4] *kandam,* பெ.(n.) 1. சந்தனமரம் (வின்.); sandal wood. 2. சந்தனக்குழம்பு; sandal-wood paste.

ம. கந்தம்; **க.** கந்த; **தெ.** கந்தமு; **பிரா.** கந்த; **நேபா., இந்.** கந்த.

[காந்து → கந்து → கந்தம். காந்து = பரவு, மணம் பரவு.]

கந்தம்[5] *kandam,* பெ.(n.) 1. தொகுதி; aggregate. 2. கூட்டம்; crowd. *"கந்தமொடுயிர் படுகண பங்கம் மெண" (கந்தபு. கடவுள்வா. 23).* 3. ஐந்து வகைக் கட்டு (பஞ்சகந்தம்); the five constituent elements of being. *"ஐந்துவகைக் கந்தத் தமைதி யாகி" (மணிமே. 30, 33).* 4. அணுத்திரள்; collection of atoms or minute particles. 5. மஞ்சு (மேகம்); cloud. 6. வீக்கம்; swelling.

[கள் = திரட்சி. கள் → கந்து → கந்தம்.]

கந்தம்[6] *kandam,* பெ.(n.) 1. பங்கு; part, portion. 2. வகுத்தல் (சூடா.); division. 3. ஐம்புலன்கள் (அக.நி.); organ of sense.

[கந்து = பற்று, பற்றுக்கோடு.]

கந்தம்[7] *kandam,* பெ.(n.) 1. தூண்; pillar "கலிகெழு கடவுள் கந்தங் கைவிட" (புறநா.52). 2. உடம்பு; body. 3. கழுத்தடி (அக.நி.); nape of neck. *"அவளைக் கந்த மேற்கொடு நன்றெனப் போய களிறு" (கந்தபு. விடைபெறு.9).* 4. முருங்கை; moringa tree. 5. கற்றாழை; aloe.

[கந்து → கந்தம் → கந்து = பற்றுக்கோடு, தூண்.]

கந்தம்[8] *kandam,* பெ.(n.) 1. வெடியுப்பிற்குப் பயன் படும் கனிமம் (கந்தகம்); sulphur. 2. வெள்ளைப் போளம்; white myrrh. 3. ஒருவகைச் செய்நஞ்சு; a kind of mineral poison. 4. இதள் (பாதரசம்); mercury. கந்தங் கஃசிட்டு (தைலவ.தைல. 70).

[கந்தகம் → கந்தம். காந்து → காந்தகம் → கந்தகம் காந்துதல் = எரிதல்.]

கந்தம்[9] *kandam,* பெ.(n.) விலங்குகளின் கரு; the foetus of beasts.

ம., க. கந்து; **து.** கஞ்சி; **குரு.** கத்த், கதா.

[கல் → கன் (பிறத்தல், தோன்றுதல்) → கந்து → கந்தம்.]

கந்தம்[10] *kandam,* பெ.(n.) 1. பெண்ணின் பிறப்புறுப்பு; vagina. 2. பிறப்புறுப்புப் பகுதியில் வளரும் மயிர்; pubic hair.

ம. கந்து; **துட.** கொத்.

Skt. kanda (clitoris); **Nep.** kanda (the belt which supports the loin (cloth).

[கல் → கன் → கந்து → கந்தம்.]

கந்தம்மை *kandammai,* பெ.(n.) பெண்குழந்தை; female child. அந்தக் கந்தம்மாவை என்னிடம் கொடு (உ.வ.).

க. கந்தம்ம

[கந்தன் (ஆ.பா.) → கந்தம்மை (பெ.பா.)]

கந்தமூலபலம் *kanda-mūla-palam,* பெ.(n.) மணமுடைய இலை, கிழங்கு, வேர், கனிகள்; leaves, esculent roots and fruits, which are the foods of sages.

[கந்தம் + மூலம் + பலம். கந்தம் = வேர். மூலம் = அடிப்படை. பலம் = பயன்.]

கந்தமூலம் *kanda-mūlam,* பெ.(n.) கிழங்கு; root.

[கந்தம் + மூலம். கந்து → கந்தம்.]

கந்தர் *kandar,* பெ.(n.) **கந்தன்** பார்க்க; see *kandaṉ* *"கந்தர் கலிவெண்பா".*

[கந்து + அன் – கந்தன் → கந்தர். ஆர் – அர், மதிப்புரவு குறித்த உயர்வுப் பன்மையீறு.]

கந்தர்ப்பநகரம் *kandarppa-nagaram,* பெ.(n.) **கந்தருவநகரம்** பார்க்க; see *kandaruva nagaram.* *"கந்தர்ப்ப நகர மெங்கணுந் தெரியும்" (கம்பரா. காட்சி. 45).*

[கந்தருவர் → கந்தர்ப்பர் + நகரம்.]

கந்தர்ப்பமகளிர் *kandarppa-magaḷir,* பெ.(n.) கந்தருவ மகளிர்; celestial woman. *"கந்தர்ப்ப மகளி ராடும்" (கம்பரா. ஊர்தேடு. 104).*

[கந்தருவர் →கந்தர்ப்பர் + மகளிர்.]

கந்தர்ப்பர் *kandarppar,* பெ.(n.) **கந்தருவர்** பார்க்க; see *kandaruvar.* *"கந்தர்ப்ப ரியக்கர் சித்தர்" (கம்பரா. இராவணன் கோ. 38).*

[கந்தருவர் → கந்தர்ப்பர்.]

கந்தர்ப்பன் *kandarppaṉ,* பெ.(n.) காமன், மன்மதன் (திவா.); appellation for Manmatan, the god of love.

[கந்து → கந்தம் → கந்தர்ப்பன். கந்தம் = அன்பு. அன்பால் பிணைப்பவன்.]

கந்தர்பச்சை *kandar-paccai,* பெ.(n.) பச்சைக் கருப் பூரம்; crude camphor (சா.அக.).

[கந்தர் + பச்சை. கந்தம் → கந்தர்.]

கந்தரகோளம் *kandara-kōḷam,* பெ.(n.) ***கந்தல் கூளம்*** பார்க்க; (உ.வ.); *kandal-kūḷam.*

தெ. கந்ரகோளமு

[கந்தல் + கூளம் – கந்தல்கூளம் → கந்தரகோளம்.]

கந்தரந்தாதி *kandar-andādi,* பெ.(n.) அருணகிரி நாதர் முருகக்கடவுள்மேல் இயற்றிய 100 பாடல்களைக் கொண்ட ஈறு தொடங்கி (அந்தாதி) நூல்; a poem of 100 stanzas of andadi type in praise of kanda by Aruṇakiri-nādar.

[கந்தர் + அந்தாதி.]

கந்தரம்[1] *kandaram,* பெ.(n.) 1. புனமுருங்கை (மலை.); three-leaved Indigo. 2. கடற்பாசி; sponge.

[கந்து → கந்தரம்.]

கந்தரம்[2] *kandaram,* பெ.(n.) 1. கனிம நஞ்சுகளுள் ஒன்று; a mineral poison. 2. தீமுறுகற் செய்நஞ்சு; a prepared arsenic.

[கந்தகம் → கந்தம் + கந்தரம்.]

கந்தரம்[3] *kandaram,* பெ.(n.) 1. கழுத்து; neck. *"பிருகுடி நாப்பண்ணொரு பெருங்கந்தரம்" (ஞானா. 9.10).* 2. காலிலோடும் நரம்புக் கால்வாய்கள்; nerve tracks of the leg (சா.அக.).

[கந்து → கந்தம் → கந்தரம். கந்து : தூண்.]

கந்தரம்[4] *kandaram,* பெ.(n.) 1. முகில்; cloud *"நந்தனங் கந்தரஞ்சேர் புலியூரனை" (புலியூ. 8).* 2. மலைக்குகை; mountain cave. *"கந்தரத் தினிலிருள்" (சிவப். பிரபஞ். சோனகை. 15).*

[கந்து → கந்தம் → கந்தரம்.]

கந்தரம்[5] *kandaram,* பெ.(n.) அழகு (அரு.நி.); beauty.

[காந்து : ஒளிவீச்சு, அழகு. காந்து → காந்தரம் → கந்தரம்.]

கந்தரமுட்டி *kandara-mutti,* பெ.(n.) நேரே அம்பெய்தற்கு விற்பிடிக்கை (சீவக. 1680 உரை.); method of holding the bow for shooting in such a way as to bring the right hand very near to one's neck.

[கழுந்து → கந்து + (ஆர) அர + முட்டி.]

கந்தரலங்காரம் *kandar-alaṅgāram,* பெ.(n.) அருணகிரிநாதர் இயற்றிய நூல்களுள் ஒன்று; a poem of 100 stanzas on Skanda by Aruna-giri-nādar.

[கந்தர் + அலங்காரம்.]

கந்தருப்பன் *kandaruppaṉ,* பெ.(n.) காமன்; the god of love (சா.அக.).

[கந்தரம் : அழகு. கந்தரப்பன் → கந்தருப்பன்.]

கந்தருவநகரம் *kandaruva-nagaram,* பெ.(n.) வானத்தில் தோன்றிமறையும் மேகவடிவாய்க் கருதப்பட்ட நகரம்; clouds, sometimes imagined to be the city of the Gandarvās in the sky. *"இவ்வுலகங் கந்தருவ நகரமும் புன்கனவும் போலாம்" (பிரபோத. 43, 5.).*

[கந்தருவர் + நகரம்.]

கந்தருவநூல் *kandaruva-nūl,* பெ.(n.) இசைநூல்; science of music. *"கந்தருவ நூலின்கண்ணும் ஒரு சீரிற் சுருங்கின வாரா" (தொல். பொருள். 457, உரை.).*

[கந்தருவம் + நூல்.]

கந்தருவம்[1] *kandaruvam,* பெ.(n.) 1. யாழ்; harp. 2. குயில்; cuckoo bird. ***கந்துருவம்*** பார்க்க; see *kanduruvam.*

[கந்துருவம் → கந்தருவம்.]

கந்தருவம்[2] *kandaruvam,* பெ.(n.) 1. கந்தருவ இனம்; the Gandarvas. *"கந்தருவ மற்றுள்ள பிற பயந்தாள்." (கம்பரா. சடாயுகாண்.26).*

[கந்துரு → கந்துருவம் → கந்தருவம்.]

கந்தருவம்[3] *kandaruvam,* பெ.(n.) குதிரை (திவா.); horse. 2.இரவு பதினைந்து முழுத்தங்களுள் ஐந்தாவது (விதான. குணாகண. 73, உரை); the fifth of the 15 divisions of the night.

[கந்து → கந்தருவம்.]

கந்தருவம்[4] *kandaruvam,* பெ.(n.) காலைப் பொழுது; morning.

[கந்தரு → கந்தருவம் → கந்தருவம். கந்தரு → யாழ். இரவு முடிந்த வைகறைப் பொழுது இனிய பண்களுக்குரிய காலமாதலின் இப் பெயர் பெற்றிருக்கலாம்.]

கந்தருவம்[5] *kandaruvam,* பெ.(n.) 1. இசை; music, harmony, song. *"சாமவேத கந்தருவம் விரும்புமே"*

(தேவா. 964.1). 2. **கந்தருவ மணம்** (தொல். பொருள். 92. உரை) பார்க்க; see *kandaruva-maṇam.*

[கந்துரு → கந்துருவம் → கந்தருவம்.]

கந்தருவமணம் *kandaruva-maṇam,* பெ.(n.) தலைவனுந் தலைவியுந் தாமே எதிர்ப்பட்டுக் கூடுங் கூட்டம்; a form of marriage which proceeds entirely from mutual love and which has no ritual whatever, as common among Gandarvās.

[கந்தருவம் + மணம்.]

கந்தருவர் *kandaruvar,* பெ.(n.) பதினெண்கணத்துள் ஒரு தொகுதியார் (திவா.); Gandharvas, a celestial group of singers, one of patinen-kanam. *"வாவுகிந்நரருவணர் கந்தருவர்" (கந்தபு. திருநகர - 34.).* **கந்தருவம்** பார்க்க; see *Kandaruvam.*

[கந்தருவம் → கந்தருவர்.]

கந்தருவவேதம் *kandaruva-vēdam,* பெ.(n.) இசைநூல்; science of music.

[கந்தருவம் + வேதம். **Skt** - veda = த. வேதம்.]

கந்தருவன் *kandaruvaṉ,* பெ.(n.) குயில்; the Indian cuckoo (சா.அக.).

[கந்தருவம் → கந்தருவன் இசைக்குரலோசையுடையது.]

கந்தல்[1] *kandal,* பெ.(n.) 1. துண்டுதுண்டாக இருப்பது, கந்தை; rags, tatters. 2. ஒழுக்கக்கேடு. (திவா.); loss of moral character. *"நந்தனங் கந்தலென்பார்" (புலியூரந்.8).* 3. அறியாமையால் விளையும் குற்றம்; fault, blemish due to ignorance. *"கந்தல் கழிந்தால்". (ஸ்ரீவசன. 239).*

து. கப்பட, கப்படி, கப்படெ.

[கிழி → கிழிந்தல் → கிந்தல் → கந்தல்.]

கந்தல்[2] *kandal,* பெ.(n.) மண்ணாற் செய்த சிறு வட்டில்; a small earthern vessel.

மறுவ. கன்னல்

க. கந்தல்

[குல் → கல் (தோண்டுதல், பள்ளம்) → கன் → கன்னல் → கந்தல் (உட்குழிந்த ஏனம்).]

கந்தல்[3] *kandal,* பெ.(n.) 1. முளை; a sprout. 2. மென்மை; softness.

க. கந்தல்

[கன் (ஈனுதல், பிறத்தல்) → கந்து → கந்தல்.]

கந்தல்[4] *kandal,* பெ.(n.) தீ எரியும்போது பறக்கும் தூசி; (ம.அக.); dust from the burning fire.

[காந்து → காந்தல் → கந்தல்.]

கந்தல்கூளம் *kandalkuḷam,* பெ.(n.) தாறுமாறு; confusion; disdrder.

[கந்தல்+ கூளம்.]

கந்தலம்[1] *kandalam,* பெ.(n.) 1. இனிய ஓசை; melodious sound. 2. இன்னிசை; music.

க. கந்தல்

[கந்தல்[3] → கந்தலம் (மெல்லோசை, மெல்லிசை).]

கன் → கந்து → கந்தல் = பயிர்களின் மெல்லிய முளை. கந்தலம் = மெல்லிய முளையைக் குறித்த சொல், மெல்லிய இனிய ஓசையையும் குறிப்பதாயிற்று. இச்சொல்லே கந்தரம், கந்தருவம் எனத் திரிந்து இன்னிசை எழுப்பும் யாழைக்குறித்தது. கந்தருவவித்தை என்பதும் இசைக்கலையைக் குறித்தது.

கந்தலம்[2] *kandalam,* பெ.(n.) 1. கதிர்; rays. 2. மூளை; brain.

[கதிர்தலம் → கந்தலம்.]

கந்தவகம் *kandavagam,* பெ.(n.) 1. மோப்பம்; smelling scent. 2. மூக்கு (வின்.); nose. 3. காற்று; air (சா.அக.).

[கந்தம் = சந்தனம், நறுமணம். கந்தம் → கந்தவகம் → மணம் பரவுதல், மணத்தை உணரும் மூக்கு; மணம் பரவும் காற்று.]

கந்தவடி *kanda-vaḍi,* பெ.(n.) நறுமண எண்ணெய், (யாழ். அக.); fragrant oil.

[கந்தம் + வடி (நறுமணம் கூட்டி வடித்தது).]

கந்தவனப்பொய்கை *kanthavaṉappoygai,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்;a village in Ramanathapuram district.

[கந்தன் + வனம் + பொய்கை–கந்தவனப்பொய்கை.]

கந்தவிண்ணனார் *kanda-viṇṇaṉār,* பெ.(n.) வாண கோவரையர் மருமக்களுள் ஒருவர்; one of the son-in-laws of vānakōvaraiar. *"வாணகோ அரைசரு*

மருமக்கள் கந்தவிண்ணனார் மேல்மருத்திச் சென்ற ஞான்று" (தநா.தொ. 1971/63. கிபி ஏழாம் நூற்றாண்டு; முதலாம் மகேந்திர வருமனின் 33 ஆம் ஆண்டு செங்கம் நடுகற்கள்.).

[கந்தன் + விண்ணன் + ஆர். 'ஆர்' உயர்வுப் பன்மையீறு.]

கந்தவுத்தி *kanda-v-utti,* பெ.(n.) நறுமணப்பொருள்; perfumes, spices. *"கந்த வுத்தியி னாற்செறித்தரைப் போர்" (மணிமே.28:15).*

[கந்தம் + உத்தி.]

கந்தவெற்பு *kanda-verpu,* பெ.(n.) முருகப்பெருமான் எழுந்தருளியிருந்த மலை (கந்தபு.); a hill abode of lord Muruga.

[கந்தன் + வெற்பு.]

கந்தழி *kandaḻi,* பெ.(n.) 1. பரம்பொருள்; Supreme Being, Divine Essence. *"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற...... மூன்றும்" (தொல். பொருள். 88).* 2. கண்ணன் வாணனது சோ நகரத்தை அழித் ததைக் கூறும் புறத்துறை (பு.வெ. 9,40); (Puṟap.) theme of celebrating the destruction of Bāṇa's fortress by Krisna. 3. முடிவில்லாதது; infinite.

[கந்து → பற்றுக்கோடு, கந்தழி = பற்றுக் கோடில்லாதது கண்ணபிரான் வாணனுடைய 'சோ' என்னும் மதிலை (கந்தை) அழித்த வீரத்தைக் கந்தழி என்ற சொல்லால் குறிப்பிடுவதுண்டு.]

கந்தளம்[1] *kandaḷam,* பெ.(n.) மெய்க்காப்பு உடை (கவசம்); armour for the body, coat of mail.

தெ. கத்தளமு

[கந்து → கந்தளம். கந்து = பற்றுக்கோடு, காப்பு. கந்திளம் + திறலர் + கந்தளந்திறலர் → கந்தளேந்திறலர்.]

கந்தளம்[2] *kandaḷam,* பெ.(n.) பொன்; gold.

[காந்து → கந்து → கந்தளம். காந்து = ஒளிர்தல்.]

கந்தளம்[3] *kandaḷam,* பெ.(n.) போர்; battle.

[காந்து = சினத்தல். காந்து → கந்து → கந்தளம்.]

கந்தளம்[4] *kandaḷam,* பெ.(n.) கதுப்பு (கன்னம்); check.

[கன் → கந்து = பற்றி இருத்தல். கந்து → கந்தளம்.]

கந்தளம்[5] *kandaḷam,* பெ.(n.) தளிர்; shot, sprout.

[கன் → கந்து → கந்தளம்.]

கந்தறுத்தல் *kandaṟuttal,* தொ.பெ.(vol.ii.) பேரழிவை யேற்படுத்தல் (ம.அக.); ruin.

[கந்து = பற்றுக்கோடு. கந்து + அறுத்தல்.]

கந்தன்[1] *kandaṉ,* பெ.(n.) குழந்தை; child. அது ஒரு மாசத்துப் பச்சைக்கந்தன், மெதுவாக எடு (உ.வ.).

மறுவ. மகவு, மழவு, குழந்தை, பிள்ளை, முன்னி, பசலை, முளகு.

ம. கந்த; **க.** கந்த; **தெ.** கந்து, கந்துவு; **குரு.** கத்த்; **மால்.** கதே.

[குல் → கல் → கன் (ஈனுதல்) → கந்தன் (ஈன்றெடுத்த குழந்தை).]

கந்தன் என்பது குழந்தையைக் குறித்த பழந்தமிழ்ச் சொல், வடதிரவிட மொழிகளிலும் பரவிய தொன்மையுடையது. குழந்தைப் பொருள் சுட்டிய சொல்லே முருகனையும் குறித்த 'கந்தன்' எனப் பொருள்பட்டு விரிவு பெற்றது.

கந்தன்[2] *kandaṉ,* பெ.(n.) 1. சிவபெருமானின் இளைய மகன் (முருகன்); Skanda, the youngest son of siva. *"கந்தனே நமது மாதைக் கவர்ந்தனன்". (கந்தபு.வள். 1.194).* 2. பற்றுக்கோடானவன்; sole supporter.

[கந்து + அன் – கந்தன் = பற்றுக்கோடானவன், பாதுகாப்பு அளிப்பவன்.]

த. கந்தன் > **Skt.** Skanda.

முருகனுருவம் பொறித்த தூண்களை அம்பலங்களில் நிறுத்தியதால் அவனுக்குக் கந்தன் என்னும் பெயரும் தோன்றியது என்பர். கந்து = தூண். கந்தம் = தூணம் [பெருந்தூண்.]

"கலிகெழு கடவுள் கந்தங் கைவிடப்
பலிகண் மாறிய பாழ்படு பொதியில்" (புறம். 52)

கற்றூண்களில் தெய்வ உருவம் பொறிப்பதை, "கந்திற்பாவை" என்னும் மணிமேகலைச் சொல் லாலும் [21] அறியலாம் [த.ம. 30].

கந்தன்[3] *kandaṉ,* பெ.(n.) ஐம்பொறிகளை வெற்றி கண்டவர்; அருகன்; Arhat, who has conquered the sense. *"கந்தனி பள்ளிக் கடவுளர்க் கெல்லாம்" (சிலப்.11,5).*

[கந்தன் → கந்தன்². தமிழ்க்கடவுளைக் காத்தற் கடவுளாகக் கருதியதால் அருக சமயத்திற்கு மதம் மாறிய காலத்தில் அருகனையும் இப் பெயரிட்டே அழைத்தனர்.]

கந்தன் அறுமி *kadan-arumi,* பெ.(n.) முருகக்கடவுள் சூரபதுமனை வென்றதைக் குறித்து, துலைமாதத்து வளர்பிறையில் ஆறாம் நாள் நடத்தப்படும் திருநாள்; Kandar sasti, a festival ending on the sixth day of the bright fortnight in the month of Aippaši, which is held in commemorration of skanda's victory over the ašurašurapatuman.

[கந்தன் + அறுமி – கந்தன் அறுமி. அறுமி = ஆறாம் நாள். வடமொழியாளர் இதன் skanda sasti என்பர்.]

கந்தன்சிறுகரண்டி *kandan-širu-karandi,* பெ.(n.) முட்டைக் கரண்டி; an oval-shaped spoon (சா.அக.).

[கந்தன் + சிறுகரண்டி. கந்தன் = குழந்தை.]

கந்தன்பாட்டு *kandan-pattu,* பெ.(n.) ஒருவகை வரிக்கூத்து (சிலப். 3:13,உரை); a kind of masquerade dance.

[கந்தன் + பாட்டு. கந்தன் = முருகன்.]

கந்தனுப்பு *kandanuppu,* பெ.(n.) **கந்தகவுப்பு**பார்க்க; see *kandaka-v-uppu.*

[கந்தகவுப்பு → கந்தனுப்பு.]

கந்தாசாரம் *kandā-šāram,* பெ.(n.) காற்பாகம் மேல்வாரத்தாரருக்கும் முக்காற்பாகம் குடிகட்குமாக ஒழுங்கு செய்து இருவரும் சமபாகமாக வரி செலுத்தும்படி விடும் குத்தகை (G.sm.D.i, 242); lease in which the lessor receives one-fourth, and the lessee three-fourths, of the produce, each party paying half the kist.

ம. கந்தாசாரம்.

[கந்தாயம் + ஆசாரம் – கந்தாயாசாரம் → கந்தாசாரம். கந்தாயம் = நிலவரி. **வ.** ஆசாரம் = ஒழுங்குமுறை.]

கந்தாட்டத்தலை *kandāttat-talai,* பெ.(n.) முன்னும் பின்னும் மாறிமாறிப் பார்க்கும் தலை நளிநயம் (பரத. பாவ. 76); (Natya) a gesture in dancing consisting in turning the head alternately, so as to be able to see forward and backward.

[கந்து + ஆட்டம் + தலை. இதனைக் கந்தான சிரம் என்பர். கந்து + (ஆலை) ஆனை + சிரம். கந்து = பந்து. ஆலை = சுற்றுதல், வீசுதல்.]

முன்னும் பின்னும் பந்து வீசுதல் போல் தலையை முன்னும் பின்னும் ஆட்டுதல்.

கந்தாடை *kandadai,* பெ.(n.) ஒரு பார்ப்பனக் குடி; name of a family of Brahamins. "வாதூல கோத்திரத்து .... கந்தாடை வாசுதேவச் சதுர்வேதி" (S.I.I. ii. 526).

[கந்தாடி → கந்தாடை (ஒருகா. இடப்பெயரால் அமைந்த குடிப்பெயராகலாம்.)]

கந்தாதி இளகியம் *kandādi-ilakiyam,* பெ.(n.) திப்பிலிமூலம், பேரரத்தை, சித்திரமூலம், சுக்கு, சிறுதேக்கு ஆகிய சரக்குகளை முதன்மையாகக் கொண்டு மற்றச் சரக்குகளையும் சேர்த்துச் செய்யுமோர் வகை இளகியம்; a kind of electuary prepared with the root of piper longum, greater galamgal, leadwort, dried ginger and fire brand teak as chief ingridients although mixed with other bazaar a rungs.

[கந்து + ஆதி + இளகியம். கந்தம் + ஆதி + இளகியம். கந்தம் = கிழங்கு.]

கந்தாயம் *kandāyam,* பெ.(n.) 1. ஆண்டில் மூன்றிலொரு பாகம்; astrological period for four months. 2. தவணை; instalment. 'இப்பொன் பத்தும் மூன்று கந்தாயமாகத் தரக்கடவராகவும்' (S.I.I.i.104) 3. தவணைப்படி செலுத்தும் வரி (C.G.); assessment, kist paid in cash in a lump sum or by instalments. 4. வருவாய்த் துறையின் வருமானம் (C.G.) ; revenue income from lands either in kind or in money. 5. அறுவடைக்காலம் (வின்.); harvest season. புரட்டாசி முப்பதும் ஒரு கந்தாயம் (பழ.).

ம. கந்தாயம்; **க., து.** கந்தாய; **தெ.** கந்தாயமு; **பட.** கந்திய; **Skt.** kandāya.

[கந்து = துண்டு, பகுதி, தவணை. ஆயம் = வரி. கந்து + ஆயம் – கந்தாயம் = தவணை முறையில் வாங்கப்படும் வரி.]

கந்தார்த்தம் *kandārttam,* பெ.(n.) ஓர் இசைப்பாட்டு; a kind of poem set to music.

[கந்தருவம் → கந்தருத்தம் → கந்தார்த்தம் (கொ.வ.)]

கந்தாரம்[1] *kandāram,* பெ.(n.) மது; a kind of intoxicating liquor. "தெளிப்ப விளைந்த தீங்கந் தாரம்". "கந்தார வீணைக்களி" (இராமா. கடறா. 75) (த.மொ.அக.).

[காந்தாரம் → கந்தாரம். காந்து = எரிதல்.]

கந்தாரம்[2] *kandāram,* பெ.(n.) ஒரு பண்; a musical mode. *"கந்தாரஞ் செய்து களிவண்டு முரன்று பாட"* (சீவன. 1959).

[கந்து → கந்தாலி. கந்து + ஆரம் – கந்தாரம். கந்து = நறுமணம், இனிமை. ஆர்தல் = நிறைதல். கந்தாரம் = செவிக்கினிமை நிறைவிக்கும் பண். இப் பண் காந்தாரம் எனத் திரிந்தது.]

கந்தாலி *kantāli,* பெ.(n.) கச்சோலம் (நாமதீப.); long zedoary.

[கந்து → கந்தாலி]

கந்தானசிரம் *kandāṉaširam,* பெ.(n.) ***கந்தாட்டத் தலை*** பார்க்க; see *kandāṭṭa-t-talai.*

[கந்து + ஆனை + சிரம்.]

கந்தி[1]**–த்தல்** *kandi-,* 4 செ.கு.வி.(v.i.) மணத்தல்; to waft fragrant smell. *"தாதகித்தார் கந்தித்த மார்பன்" (குலோத். கோ. 291).*

[காந்து → கந்து → கந்தி.]

கந்தி[2] *kandi,* பெ.(n.) 1. நறுமணப்பொருள்; spices, a romatics. ''குங்கும மேனையகந்திகள் கூட்டி'' (கந்தபு. அவைபுகு. 31); 2. கமுகு; areca palm. *"கந்திகள் ... பாளை விரித்து" (கந்தபு. யுத்தமுதனாட். 38).*

க. கந்து; **தெ.** கந்தி; **பர்.** கொ்தி.

[காந்து → கந்து → கந்தி.]

கந்தி[3] *kandi,* பெ.(n.) சமணப் பெண்துறவி, (ஆரியாங் கனை); female ascetic among the Jains. *"கறந்த பா லனைய கந்தி" (சீவக. 2649).*

க. கந்தி

[கந்தி = பற்றுக்கோடானவள்.]

கந்தி[4] *kandi,* பெ.(n.) 1. கந்தகம் (மூ.அக.); sulphur. 2. முப்பத்திரண்டு செய்நஞ்சுகளுள் ஒன்றான செய் நஞ்சு (கந்தக பாடாணம்) (மூ.அக.); a mineral poison, one of 32).

[கந்தகம் → கந்தி.]

கந்தி[5] *kandi,* பெ.(n.) துவரை (இராசவைத்.); dhal.

தெ. கந்து, கந்தி.

[கருந்தொலி → கருந்து → கந்து → கந்தி.]

கந்தி[6] *kandi,* பெ.(n.) பச்சைக்கல் (மரகதம்) (சங். அக.); emerald.

[காந்து → காந்தி → கந்தி. காந்து = ஒளிர்தல்.]

கந்தி[7] *kandi,* பெ.(n.) பெருங்காயம் (நாமதீப.); asofoetida.

[காந்து → கந்து → கந்தி. காந்து = மணம்.]

கந்திக்காய் *kandi-k-kāy,* பெ.(n.) பாக்கு; areca nut.

[கந்தி + காய். துவரை போன்ற நிறமுடையது.]

கந்திக்கிழங்கு *kandi-k-kiḻaṅgu,* பெ.(n.) 1. கிட்டிக் கிழங்கு; root of acalycha. 2. நறுமணக் கிழங்கு; a fragrant bulbous root (சா.அக.).

[காந்து → கந்து + கிழங்கு – கந்திக்கிழங்கு.]

கந்திகை *kandigai,* பெ.(n.) சிறுதேக்கு; beetle-killer. *"புழுப்பகை கந்திகை" (தைல. தைலவ. 66).*

[கந்தம் → கந்திகை. கந்தம் = கிழங்கு.]

கந்தியுப்பு *kandi-y-uppu,* பெ.(n.) ***கந்தகவுப்பு*** பார்க்க; (பதார்த்த. 1100.); see *kandaga-v-uppu.*

[கந்தி + உப்பு.]

கந்திருவர் *kandiruvar,* பெ.(n.) ***கந்தருவர்*** பார்க்க; see *kandaruvar. "கந்திருவ ரங்காரித் தின்னிசை பாட" (அஷ்டப். திருவரங்கத்தந். 1).*

[கந்தருவர் → கந்திருவர் (கொ.வ.).]

கந்திலம் *kandilam,* பெ.(n.) 1. முருங்கை வகை (சங்.அக.); a kind of horse - radish tree. 2. தூது வளை; three-lobed night shade (சா.அக.).

[கந்து → கந்திலம்]

கந்திலி *kandili,* பெ.(n.) வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்துச் சிற்றூர்; a village in Tirupattur taluk in Vellur dt.

[கந்து + இலி –கந்திலி. கந்தழி என்பது போன்று கந்தலி கடவுளைக் குறித்த பெயர்.]

கந்திற்பாவை *kandiṟ-pāvai,* பெ.(n.) புகார், காஞ்சி ஆகிய நகரங்களிலே கம்பங்களில் புடைப்புச் சிறப்பு வடிவாயமைந்த பெண்தெய்வம். (மணிமே. 28: 185); a female deity whose figure was carved in the columns in the ancient cities of Kaviri-p-pum-pattiṉam and Kanugipuram.

[கந்து + இல் + பாவை. கந்து → தூண். தூணில் அமைந்ததால் இப் பாவை இவ்வாறு பெயர் பெற்றது.]

கந்து–தல் *kandu-,* 10 செ.கு.வி.(v.i.) 1. கெடுதல். (வின்.); to be injured, spoiled, ruined. 2. நாணுதல். (இ.வ.); to fell shy.

[குன்று → குந்து → கந்து.]

கந்து[1] *kandu,* பெ.(n.) மாடுபிணைக்குந் தும்பு. (யாழ்ப்.); rope for tying oxen together by the neck.

[கும் → கம் → கந்து (வடமொ.வர.73).]

கந்து[2] *kandu,* பெ.(n.) 1. நெற்களத்தைச் சுற்றி வைக்கப்படும் வைக்கோல் வரம்பு; heap of straw enclosing the threshing floor. 2. நெற்களத்திற் பொலிப்புறத்தடையும் பதர்; heap of chaff which gathers outside the threshing floor. 3. அறுகு; harialli grass.

[கொங்கு → கங்கு → கந்து (பதர், கூளம்).]

கந்து[3] *kandu,* பெ.(n.) 1. திரண்ட தூண்; post, pillar. *"கந்துமா மணித்திரள் கடைந்து" (சீவக. 155).* 2. யானைகட்டுந் தறி.; post to tie an elephant to. *"கந்திற் பிணிப்பர் களிற்றை" (நான்மணி.12).* 3. ஆதீண்டு குற்றி; post for cows to rub against, an ancient charity. 4. தெய்வமுறையுந் தறி; post representing a deity which is worshipped. *"வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியில்" (பட்டினப். 249).* 5. பற்றுக்கோடு; staff, crutch, support. *"காதன்மை கந்தா" (குறள். 507).* 6. உடற்சந்து (திவா.); a joint in the body. 7. பண்டியுளிரும்பு (திவா.); axle-tree. (தென்மொழி. பெப். 65).

க. கந்து; **து.** கந்த.

[கம் → கந்து.]

கந்து[4] *kandu,* பெ.(n.) நறுமணம்; fragrant smell.

[காந்து → கந்து. காந்துதல் = பரவுதல்.]

கந்து[5] *kandu,* பெ.(n.) குதிரையின் முழுப்பாய்ச்சல். (பு.வெ.12, ஒழிபு. 13); full gallop, as of a horse.

[கது → கந்து (விரைவு).]

கந்து[6] *kandu,* பெ.(n.) 1. கிழங்கு; esculent or bulbous root. 2. கட்டி; hard substance.

க. கந்த

[கன் (ஈனுதல்) → கந்து (வேரில் தோற்றம்கொண்டது, திரண்டது.]

கந்து[7] *kandu,* பெ.(n.) புடவையின் நிறம் பிறங்கும் சாயக்கப்பு (இ.வ.); bright colour of dye in a cloth.

[காந்து → கந்து.]

கந்து[8] *kandu,* பெ.(n.) 1. கழுத்தடி; nape of neck. 2. வண்டி; cart.

[கழுந்து → கந்து.]

கந்து[9] *kandu,* பெ.(n.) தோள்பட்டை, தோள்; shoulder.

க. கந்த

[கந்து = பற்றுக்கோடு, சுமப்பதற்கு இடனாகிய தோள்.]

கந்து[10] *kandu,* பெ.(n.) தவணை; instalment. கந்து வட்டிக்குக் கடன் வாங்காதே (உ.வ.).

[கம் → கந்து (துண்டு, சிறுபகுதி).]

கந்துகட்டு–தல் *kandu-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. காய்கறிகளை வேக வைக்கும் போது நீரில் அவை ஒதுங்கி மிதத்தல்; to float or recede to a side of the pot in boiling, as curry stuffs. 2. களத்தைச்சுற்றி வைக்கோல் சேர்தல்; to settle in a heap around the threshing floor, as bits of straw.

[கங்கு + கட்டு. கங்கு = ஓரம், விளிம்பு.]

கந்துகம்[1] *kandugam,* பெ.(n.) பந்து; ball for play. *"கந்துகக் கருத்தும்" (மணிமே. 2;22).*

Pali. genduka; **த.** கந்துகம்> **Skt.** Kanduka.

[கள் → கண்டு (நூற்பந்து). கந்து கந்தகம். கும் → கம் → கந்து → கந்துகம் என்றுமாம். (வ.மொ.வ.108).]

கந்துகம்[2] *kadugam,* பெ.(n.) 1. குதிரை. (திவா.); horse. *"கந்துகஞ்சிரிக்குமோதை" (திருவிளை. தண்ணீர். 19).* 2. குறுநிலமன்னர் ஏறுங்குதிரை. (திவா.); riding horse of a petty chief.

[கது → கந்து (விரைவு) → கந்துகம்.]

கந்துகம்[3] *kandugam,* பெ.(n.) தான்றிமரம்; devil's abode tree (சா.அக.).

[கந்து → கந்துகம்.]

கந்துகவரி *kanduga-vari,* பெ.(n.) மகளிர் பந்தாடும் போது பாடும் பாடல் (சிலப். 29); song sung by girls while playing with balls.

[கந்துகம்[1]+வரி. கந்துகம் = பந்து. வரி = காமங்கண்ணிய இசைப்பாட்டு.]

கந்துகளம் *kandu-kaḷam,* பெ.(n.) நெல்லும் பதருங் கலந்த களம் (வின்.); threshing floor with a layer of chaff mixed with a few grains, the remains left after paddy has been trodden on and removed.

[கந்து + களம்.]

கந்துகன் *kandugaṉ,* பெ.(n.) தான்றி (மலை.); belleric myrobalan.

[கந்து → கந்துகன்.]

கந்துடை-த்தல் *kanduḍai-,* 4 செ.குன்றாவி. (v.t.) மாட்டின் தும்பை அவிழ்த்தல் (யாழ்ப்.); to untie the noose of the string tied to an ox's neck.

[கந்து[1] + உடை-.]

கந்துமங்கல் *kandu-maṅgal,* பெ.(n.) துணியின் சாயம் ஓரிடத்திற் கப்பும், ஓரிடத்தில் மங்கலுமாயிருத் தல்; (இ.வ.); brightness as well as paleness of dye in patches in the colour of a cloth.

[கந்து[2] + மங்கல்.]

கந்துமாறிக்கட்டு-தல் *kandu-māṟi-k-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) ***கந்துமாறு*** பார்க்க; see *kandu-māṟu.* 2. வேறோரிடத்திலிருந்து கடன் வாங்கிக் கடனை அடைத்தல், புரட்டுதல்; to scheme, as in trying to pay one's debts by borrowing from others.

[கந்து[2] + மாறி + கட்டு-.]

கந்துமாறு-தல் *kandu-māṟu-,* 5 செ.கு.வி.(v.i.) நுகத்திற் பூட்டியுள்ள மாடுகளை வலமிடம் மாற்றிக் கட்டுதல் (யாழ்ப்.); to transfer an ox from one side of the yoke to the other.

[கந்து + மாறு. கந்து = ஓரம், விளிம்பு, எல்லை.]

கந்துமுரி-த்தல் *kandu-muri-,* 4 செ.கு.வி.(v.i.) 1. போரடிக்கும் களத்தினின்று வெளியே எருது நெறிகடந்து செல்லுதல்; to turn out of the course, break the bounds, as of an ox from treading grain. 2. களத்திலிருந்து நுழைவாயில் வழியல்லாமல் வெளியேறுதல்; to break out as men from the threshing floor otherwise than through the entrance. கந்து முரித்துப் போட்டுப் போகிறான். (யாழ்ப்.).

களத்தினின்று நெறிகடந்து செல்லுதல் போகவூழ் [துரதிஷ்டம்] எனக் கருதப்படுகிறது. இஃது எருது, மக்கள் ஆகிய இருவருக்கும் பொருந்தும்.

[கந்து + முரி-. கந்து + எல்லை.]

கந்துமுறி *kandu-muṟi,* பெ.(n.) பதர்; chaff (ம.அக.).

[கந்து + முறி.]

கந்துரு *kanduru,* பெ.(n.) யாழ்; harp.

[கள் → கந்து = கட்டுதல், பிணைத்தல். கந்து → கந்துள் → கந்துல் → கந்துரு = யாழில், இழுத்துக் கட்டப்பட்ட நரம்புகள் ஒ.நோ. இயவு → இயவுள். கடவு → கடவுள்.]

கந்துருவம்[1] *kanduruvam,* பெ.(n.) யாழ்; harp. **கந்துரு** பார்க்க; see *kanduru.*

[கந்துரு → கந்துருவம்.]

கந்துருவம்[2] *kanduruvam,* பெ.(n.) 1. இசை; music.

[கந்துரு (யாழ்.) → கந்துருவம் (யாழில் எழுப்பப்படும் ஏழிசை.)]

கந்துருவர் *kanduruvar,* பெ.(n.) பழந்தமிழகத்தில் யாழ் மீட்டும் இசைவல்லோர், கந்தருவர்; experts in music preferably in a play in yāḷ (harp) of ancient Tamilnadu.

[கந்துரு → யாழ். கந்துரு + அர் – கந்துருவர். இச் சொல் கந்தருவர் எனத் திரிந்தது.]

கந்துவட்டி *kandu-vaṭṭi,* பெ.(n.) 1. பிடிப்புவட்டி, கடன் தொகைக்கு முன்கூட்டியே வாங்கும் வட்டி (இ.வ.); discount. 2. மிக அதிக வட்டி; exorbitant rate of interest. 3. தவணை வட்டி; instalment interest.

[கந்து + வட்டி.]

கந்துவான் *kanduvāṉ,* பெ.(n.) மாடுபிணைக்குங் கயிறு (யாழ்ப்.); rope for tying oxen together.

[கும் → கம் → கந்து = உடற்சந்து (திவா.), மாடு பிணைக்குந் தும்பு. கந்து → கந்துவான்.]

கந்துள் *kanduḷ,* பெ.(n.) கரி; charcoal. *"செந்தீ.... கந்துள் சிந்தி" (சூளா. இரத. 46).*

[கள் → கந்து → கந்துள்.]

கந்துளம் *kandulam,* பெ.(n.) பெருச்சாளி (R.) bandicoot.

[கந்துள் (கருமை) → கந்துளம்.]

கந்தை[1] *kandai,* பெ.(n.) 1. கிழிந்த துணி; rag, tatters, torn or patched garment. *'ஆடையுங் கந்தையே' (பெரிய. திருக்கூட்.) கந்தையானாலும் கசக்கிக் கட்டு; கூழானாலும் குளித்துக் குடி (பழ.)* 2. சிறு துகில் (பிங்.); small cloth.

ம. கந்த; **க.** கன்தெ; **தெ.** கன்த.

த. கந்தை > **Skt.** kantā

[கத்து → கந்து → கந்தல் → கந்தை (வ.மொ.வ. 108.).]

கந்தை[2] *kandai,* பெ.(n.) கரணைக் கிழங்கு. (மலை.); a tuberous rooted herb.

[கள் = திரட்சி. கள் → கந்து → கந்தம் = கிழங்கு. கந்தம் → கந்தை.]

கந்தைபுரை—தல் *kandai-purai-,* 2 செ.கு.வி.(v.t.) கிழிந்த துணிகளைத் தைத்தல் (வின்.); to mend old clothes.

[கந்தை + புரை—.]

கந்தையன் *kandaiyan,* பெ.(n.) **கந்தன்** பார்க்க; see *kandan.*

[கன் (ஈனுதல்) → கந்து → கந்தன் → கந்தையன்.]

கப்பக்காடி *kappa-k-kādi,* பெ.(n.) படகினுஞ் சற்றே பெரிய வடிவுடைய மூன்று அல்லது நான்கு பாய் கட்டிக் கடலில் விரைவாய்ச் செல்லும் கலம்; ship having three or four sailings and bigger than a ordinary boat (மீ.தொ.வ.).

[கப்பல் + காடி – கப்பல்காடி → கப்பக்காடி.]

கப்பக்காரி *kappa-k-kāri,* பெ.(n.) ஒழுக்கங் கெட்டவள்; a prostitute (சேரநா.).

ம. கப்பக்காரி.

[கப்பை + காரி – கப்பைக்காரி → கப்பக்காரி.]

கப்பக்கிழங்கு *kappa-k-kilangu,* பெ.(n.) கப்பற்செடியின் கிழங்கு; the edible root of tapioca.

மறுவ. ஆழ்வள்ளி, மரவள்ளி, சவ்வாரிக்கட்டை, குச்சிக்கிழங்கு, ஏழிலைக் கிழங்கு.

ம. கப்பக்கிழங்ங

[கப்பல் + கிழங்கு. போர்ச்சுகீசியர்களால் கப்பலில் கொண்டு வந்து நடப்பட்ட கிழங்கு.]

கப்பக்கிழங்கு[2] *kappa-k-kilangu,* பெ.(n.) சருக்கரை வள்ளிக்கிழங்கு; sweet potato, ipomoca batatas.

மறுவ. கொடிவள்ளி, சக்கரைவள்ளி.

ம. கப்பக்கிழங்ங

[கப்பு + கிழங்கு. கப்பை → கவர்படுதன்மை. கப்பை – கப்பு.]

கப்பக்கோழி *kappa-k-kōli,* பெ.(n.) பெரிதாக வளரும் ஒருவகைக் கோழியினம்; a variety of imported domestic fowl (சேரநா.).

ம. கப்பக்கோழி

[கப்பல் + கோழி. கப்பல் வழியாகப் பிற நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட கோழி.]

கப்பங்கட்டு—தல் *kappan-kattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) திறைகொடுத்தல். to pay tribute, as a petty king to his suzerain.

[கப்பம் + கட்டு—.]

கப்பங்காய் *kappangāy,* பெ.(n.) ஓமக்காய், பப்பாளிக்காய்; papaya fruit (சேரநா.).

ம. கப்பங்ங

[கப்பல் +காய்.]

கப்பங்கொள்—தல் *kappan-gol-,* 10 செ.குன்றாவி (v.t.) திறை கொள்ளுதல்; to take tribute as a suzerain from a petty king (கருநா.).

க. கப்பங்கொள்

[கப்பம் + கொள்—.]

கப்பச்சு *kappaccu,* பெ.(n.) கம்மாளர் கருவியுள் ஒன்று (யாழ்.அக.); a blacksmith's tool.

[கப்பு + அச்சு. கப்பு = கவர்கொம்பு, சிறுகொம்பு.]

கப்படகம் *kappadagam,* பெ.(n.) தங்கரளி; a species of oleander probably of a golden colour (சா.அக.).

[கப்பு → கப்படகம். கப்பு = கவர்ச்சி.]

கப்படம் *kappaḍam,* பெ.(n.) 1. கந்தற்சீலை; clothing in rags, tatters. *"தேவசாதி கப்படங் கட்டிக் கொண்டு செல்ல" (ஈடு. 6,4,5)* 2. இடையாடை; cloth for wear. *"அரையிற் கூட்டுமக் கப்படம்" (பதினொ. நம்பியாண். திருத்தொண். 80).*

ம. கப்படம்; க. கப்பட.

[கவ்வு → கப்பு → கப்படம்.]

கப்படா *kappaḍā,* பெ.(n.) அரை (யாழ்.அக.); waist.

[கப்பு → கப்படா.]

கப்படி *kappaḍi,* பெ.(n.) கொடுக்கு; sting. *"கப்படியாற் கொட்டினாற் றேளின் குணமறிவார்" (பஞ்ச. திருமுக. 1654).*

[கப்பு + அடி.]

கப்படிமரம் *kappaḍi-maram,* பெ.(n.) வேரிலிருந்து கிளைகள் கொண்ட மரவகை (வின்.); a kind of tree with branches from the root.

[கொப்பு → கப்பு + அடி + மரம்.]

கப்பணம்[2] *kappaṇam,* பெ.(n.) 1. ஒரு கழுத்தணி (வின்.); a kind of necklace; gold collar. 2. அரிகண்டம் (வின்.); iron collar for the neck worn by religious mendicants. 3. காப்புநாண். (இ.வ.); saffron cord around the wrist worn, as an amulet or as preliminary to the performance of a ceremony. 4. கொச்சைக் கயிறு (இ.வ.); fibre rope.

[காப்பு → கப்பு. கப்பு + அணம் (சொல்லாக்க ஈறு) – கப்பணம்.]

கப்பம்[1] *kappam,* பெ.(n.) 1. வேந்தனுக்குச் செலுத்தும் திறை (திவா.); tribute, as paid by an inferior prince to his suzerain. 2. தொழில்வரி; professional tax.

ம. கப்பம்; க., து., பட. கப்ப; தெ. கப்பமு.

[கப்பு → கப்பம். (மூட்டையாகக் கட்டிய திறைப்பணம்). கள் → கவ் → கவ்வு → கப்பு. (மூடுதல்)]

தெலுங்கு மொழியில் கப்பு என்னும் சொல் மூடுதல் பொருளில் வழங்கி வருகிறது. கப்படம் = கூரை வீடு போர்த்துதற்குரிய வைக்கோல், கஞ்சம்புல், சோளத்தட்டு, தென்னங்கீற்று, பனை மடல், போன்ற போர்வடைப் பொருள்கள். கப்பம் என்னும் சொல் அரசனுக்காகத் திரட்டப்பட்ட பல்வகைத் திறைப் பொருள்களை (தவசமாகவும் பணமாகவும் நகையாகவும்) மூட்டையாகக் கட்டிய பொதியைக் குறித்தது. கப்பம் = பொதி மூட்டை.

கப்பம்[2] *kappam,* பெ.(n.) **கற்பம்**[2] பார்க்க; see *kaṟpam. "கப்பத் திந்திரன் காட்டிய நூலின்" (சிலப். 11: 154).*

Pkt. kappa

[கற்பம் → கப்பம்.]

கப்பம்[3] *kappam,* பெ.(n.) பொன் அல்லது வெள்ளியால் ஆன கைக்கடகம்; a ring of gold or silver-wire for the wrist worn as an ornament (கருநா.).

க. கப்ப

[காப்பு → கப்பம்.]

கப்பம்[4] *kappam,* பெ.(n.) வாலுளுவை; intellect tree (சா.அக.).

[கப்பு → கப்பம்.]

கப்பம்[5] *kappam,* பெ.(n.) 1. கைவேல். (திவா.); javelin. *"கப்பணப் படையும் பாசமும்" (இராமா. கரன். 351).* 2. ஆனை நெருஞ்சிமுள்போல இரும்பால் பண்ணிய கருவி; small caltrop. *"கப்பணஞ் சிதறினான்" (சீவக. 285). "எரிமுத்தலை கப்பணம் எற்பயில் கோல்" (பெரியபு. புகழ்ச்.260).*

[கொம்பு → கொப்பு → கப்பு → கப்பணம்.]

கப்பம்பட்டி *kappampatti,* பெ.(n.) கரூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Karur Dt.

[கலப்பன் → கப்பன் + பட்டி – கப்பன்பட்டி → கப்பம்பட்டி.]

கப்பரை *kapparai,* பெ.(n.) 1. இரப்போர் ஏனம், பிச்சைக்கலம்; bowl of a begger or mendicant. *"கப்பரை கைக்கொள வைப்பவா"* 2. மட்கலம்; earthern vessel. *"கப்பரைதனிலுணவாகா"* (காசிக. இல்லறங். 35). 3. திருநீற்றுக்கலம் (சங்.அக.); vessel for keeping sacred ashes in temples. 4. கிடாரம் (யாழ்.அக.); brass vessel. 1. பழைய பொன்னனே பொன்னன் பழைய கப்பரையே கப்பரை. (பழ.). 2. கண்டறிந்த நாயு மில்லை. கனமறிந்த கப்பரையுமில்லை. (பழ.)

ம. கப்பர; க. கப்பர, கப்பரி, கபரி, கப்பரெ; தெ. கப்பெர. து. கப்பர்.

Pkt. khappara

[கொப்பரை → கப்பரை.]

த. கப்பரை > Skt. karparam

[கப்புதல் (குழிவிழுதல்) கப்பு → கப்பரை உட்குழிந்த ஏனம்.]

கப்பல் *kappal,* பெ.(n.) **1.** பல கிளைகளைக் கொண்ட பாய்மரமுள்ள மரக்கலம்; ship, sailing vessel. *"கப்பல் பிழைத்துக் கரைகாணும்." (ஒழிவி.சந்நிதி.22.)* 2. பொறிகளாலோ பாய்மரத்தின் உதவியாலோ இயங்கும் அளவில் பெரிய கடல்வழிக் கலம்; a large sea going vessel using engines or sails, ship. **3.** மாந்தரையும் பொருள்களையும் ஏற்றிச் செல்வதற் கான நீர்வழிப் போக்குவரத்துக் கலம்; ship. *"கப்பல் பிழைத்துக் கரைகாணும்" (ஒழிவி. சந்நிதி. 22).*

ம., து. கப்பல்; **க., பட.** கப்பலு; **தெ.** கப்பலி.

[கள் → கய் → கவ். கப்பு → கப்பம் (பள்ளம், குழி). கப்பல் = உட்குழிந்த மரக்கலம். கள் = வெட்டுதல் (ஒ.நோ. களை கட்டதனொடு நேர் – குறள்). கய் → கயம் (குழிந்த நீர்நிலை, கவ் → கவிகை (குழிந்த குடை.) க. கப்பு = தோண்டு, குழியாக்கு, கப்பல் = குழி, யானை வீழ்த்தும் குழி. கப்பல் வீழ்தல் = குழிவிழுதல். கப்பல் → கப்பரை = இரப்போர் உண்கலம்.]

கப்பல் என்னும் சொல் உட்குழிந்த மரக்கலம் என்னும் பொருளில் தோன்றிப் பண்டுதொட்டே உலகமொழிகளில் பெருமளவு பரவியிருப்பது குறிப்பிடத்தக்கது.

kapp-al, a ship, a vessel, probably a verbal noun from kapp-u. Tel. to cover over; derivative Telugu noun kapp-u, a covering, the verb is not found in Canarese or Tamil, but the canarase noun kapp-u, a subterraneous room, a pit -fall for catching elephants (covered over with branches of trees and grass), and the Tamil noun kappal, a ship, properly a decked vessel, in contradistinction to padugu, an open vessel, are evidently identical in origin with the Telugu verb and noun. The Malay word for 'ship' is kapal; but this has probably been borrowed direct from Tamil, and forms one of a small class of Malay words which have sprung from a Dravidian origin, and which were introduced into Eastern Archipelago; either by means of the Klings (kalingas) who settled there in primitive times, or by means of the Arab traders, whose first settlements with East were on the Malabar Coast, where the Malayalam, the oldest daughter of the Tamil is spoken. The following Sythian words for 'ship' appear to be analogous to the Tamil, and have certainly not been borrowed from it; Vogul kap or kaba: Samoiede kebe; Jenesei kep; Yerkerian kaf; Ostiak chap, sea also the analogis adduced under the word kebi, a cave (C.G.D.F.L. pp. 615-616).

கப்பல்சிந்து *kappalsindu,* பெ.(n.) கப்பலில் பாடக் கூடிய சிந்து வகைப்பாட்டு; a kind of sindu verse usually sung while travelling in the ship.

[கப்பல் + சிந்து.]

கப்பல்நூல் *kappal-nūl,* பெ.(n.) நாவாய் நூல்; science of navigation.

[கப்பல் + நூல் தோணி, கப்பல் ஆகியன கட்டும் கலை.]

கப்பல்படை *kappalpaḍai,* பெ.(n.) ***கப்பற்படை*** பார்க்க; see *kapparpaḍai.*

[கப்பல் + படை.]

கப்பல்பாட்டு *kappal-paṭṭu,* பெ.(n.) ***கப்பற்பாட்டு*** பார்க்க; see *kapparpāṭṭu.*

[கப்பல் + பாட்டு.]

கப்பல்மிளகு *kappal-miḷagu,* பெ.(n.) மிளகாய் (இ.வ.); chilli.

ம. கப்பல் முளகு

[கப்பல் + மிளகு.]

கப்பல் வழங்கினோன் *kappal-vaḻanginōṉ,* பெ.(n.) ***கப்பலாதி*** பார்க்க; see *kappalādi.*

[கப்பல் + வழங்கினோன். கப்பல்வழி வந்த பொருள்.]

கப்பல்வள்ளி *kappal-vaḷḷi,* பெ.(n.) கிழங்குவகை (இ.வ.); a variety of the alligator yarn.

[கப்பல் + வள்ளி.]

கப்பல்வாணம் *kappal-vāṇam,* பெ.(n.) வாணவகை; (யாழ்.அக.); a kind of rocket.

[கப்பல் + வாணம்.]

கப்பல்வாழை *kappal-vāḻai,* பெ.(n.) ஒருவகை வாழை (இரசதாளி (யாழ்ப்.); red costate-leaved banana.

[கப்பல் + வாழை.]

கப்பல்வீழ்–தல் *kappal-vīḻ,* செ.கு.வி.(v.i.) குழி விழுதல், பள்ளம் உண்டாதல்; to get deepened, to make a hole.

க. கப்பல் பீள்

[கப்பல் (குழி) + வீழ்-.]

கப்பல்வெள்ளி *kappal-veḷḷi*, பெ.(n.) இரவு 8 மணி முதல் பின்னிரவு 3 மணி வரை கப்பல் வடிவில் தோன்றும் விண்மீன் (நெல்லை மீனவ.); a group of stars which resemble a ship and visible during 8 p.m. to 3 a.m.

[கப்பல் + வெள்ளி.] (மீ.தொ.வ.)

கப்பல்வேடன் *kappal-vēḍaṉ*, பெ.(n.) ஒருவகைப் பெரிய மீன்; a kind of big fish (மீ.தொ.வ.).

[கப்பல் + வேடன்.]

கப்பல்வை¹-த்தல் *kappal-vai*, 4 செ.கு.வி.(v.i.) மரக்கலம் வாடகைக்கு அமர்த்தல் (வின்.); to engage a ship.

[கப்பல் + வை.]

கப்பல்வை²-த்தல் *kappal-vai*, 4 செ.கு.வி.(v.i.) துறைமுகத்தில் நங்கூரமிட்டு மரக்கலத்தினை நிறுத்துதல்; to anchor a ship.

[கப்பல் + வை-.] (மீ.தொ.வ.)

கப்பலடி *kappal-aḍi*, பெ.(n.) துறைமுகம்; port. (மீ.தொ.வ.).

[கப்பல் + அடி.]

கப்பலண்டி *kappal-aṇḍi*, பெ.(n.) 1. நிலக்கடலை விதை; groundnut. 2. முந்திரிக்கொட்டை; cashewnut (சேரநா.).

ம. கப்பலண்டி

[கப்பல் + அண்டி. ஆண்டு - முளை. ஆண்டு → அண்டி. கப்பல் வழிவந்த அண்டி கப்பலண்டி.]

அண்டி - முளை, விதை.

கப்பலரி *kappalari*, பெ.(n.) கருமை கலந்த பழுப்பு வண்ண அலரி; a dark brownish oleander.

[கப்பு + அலரி. கப்பு - கருமை.]

கப்பலரிப்பால் *kappalari-p-pāl*, பெ.(n.) கப்பலரிச் செடியினின்று வடியும் பால்; the milky juice of a species of oleander (சா.அக.).

[கப்பலரி + பால்.]

இப்பாலை, துரிசுக்குத் தடவிப் புடமிடத் தூளாகும்.

கப்பலேற்று-தல் *kappal-ēṟṟu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கப்பற் பயணிகளை வழியனுப்புதல்; to send off a person in a dock yard. இன்று அவரைக் கப்பலேற்ற வேண்டும் (உ.வ.). 2. கப்பலில் சரக்கை ஏற்றுதல்; to embark to a ship. அந்தமானுக்குப் போக வேண்டிய காய்கறிகளைக் கப்பலேற்றவேண்டும் (உ.வ.). 3. நாடு கடத்துதல்; to deport. தீவிரவாதிகளைக் கப்பலேற்று மாறு தீர்ப்பளித்தார் (உ.வ.).

[கப்பல் + ஏற்று-.]

கப்பலேற்று²-தல் *kappal-ēṟṟu-*,[5] செ.குன்றாவி.(v.t.) மானக்கேடு உண்டாக்குதல்; to put some one to shame. அவன் மானத்தைக் கப்பலேற்றாமல் விடமாட்டேன் (உ.வ.).

[கப்பல் + ஏற்று. குற்றங்குறைகளைச் செய்தலைக் குறித்து நின்றது.]

கப்பலேறு¹-தல் *kappal-ēṟu-*,[5] செ.கு.வி.(v.i.) கடற்பயணம் மேற்கொள்ளல்; to sail by ship. அந்தமான் செல்லக் கப்பலேறினான் (உ.வ.).

[கப்பல் + ஏறு-.]

கப்பலேறு²-தல் *kappal-ēṟu*,[5] செ.கு.வி.(v.i.) மானக்கேடு உண்டாதல்; to be got ashame. நேற்றைய நிகழ்வில் அவனுடைய மானம் கப்பலேறி விட்டது (உ.வ.).

[கப்பல் + ஏறு.]

கப்பலோட்டம் *kappal-ōṭṭam*, பெ.(n.) ***கப்பலோட்டு*** பார்க்க; see *kappal-ōṭṭu*.

ம. கப்பலோட்டம்

[கப்பல் + ஓட்டம்.]

கப்பலோட்டி *kappal-ōṭṭi*, பெ.(n.) 1. கப்பலின் வேலையாள்; sailor, seaman. 2. மீகாமன், மாலுமி; captain of the ship, chief sailor.

[கப்பல் + ஓட்டி-.]

கப்பலோட்டி² *kappal-otti*, பெ.(n. ஒருவகை மீன்; a kind of fish.

[கப்பல் + ஓட்டி-.]

கப்பலோட்டு[1]–தல் *kappal-ōṭṭu-*, 5. செ.குன்றாவி. (v.t.) மரக்கலஞ் செலுத்துதல்; to sail a ship, steer a vessel.

[கப்பல் + ஓட்டு.]

கப்பலோட்டு[2] *kappal-ōṭṭu*, பெ.(n.) கப்பலின் ஓட்டம்; sailing of a ship, navigation.

[கப்பல் + ஓட்டு.]

கப்பலோடு–தல் *kappal-ōḍu-*, 5.செ.கு.வி.(v.i.) 1. நாவாய் செல்லுதல்; to sail, as a ship. 2. கடல் வணிகம் செய்தல்; to carry on trade by sea. கப்பலோடிப் பட்ட கடன்.

[கப்பல் +ஓடு–.]

கப்பளாங்கரை *kappaḷaṅkarai*, பெ.(n.) கோவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Coimbatore dt.

[கப்பல் + அன்– கப்பலன் + கரை – கப்பலங்கரை. கப்பலாங்கரை →கப்பளாங்கரை ல–ளகரத்திரிபு இடவழக்கு.]

கப்பளாம்பாடி *kappaḷāmbāḍi*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram dt.

[கப்பல் +அன்+பாடி –கப்பலம்பாடி → கப்பலாம்பாடி → கப்பளாம்பாடி. ல–ளகரத்திரிபு இடவழக்கு.]

கப்பற்கடலை *kappaṟ-kaḍalai*, பெ.(n.) 1. பட்டாணிக் கடலை; seed of the garden-pea. 2. பெருங்கடலை; a large species of bengal gram (சா.அக.).

[கப்பல் + கடலை.]

கப்பற்கடுக்காய் *kappaṟ-k-kaḍukkāy*, பெ.(n.) பெருங்கடுக்காய்; a large species of gallnut, obtained from foreigrn countries (சா.அக.).

[கப்பல் + கடுக்காய்.]

கப்பற்கதலி *kappaṟ-kadali*, பெ.(n.) வாழைவகை; an exotic plantain.

[கப்பல் + கதலி.]

கப்பற்கலை *kappaṟ-kalai*, பெ.(n.) கப்பல் கட்டும் நுணுக்கம்; art of ship-building.

[கப்பல் + கலை.]

கப்பற்கன்மணி *kappaṟ-kaṉ-maṇi*, பெ.(n.) பரவமகளி ரணியும் கழுத்தணிவகை; a necklace worn by Parava women.

[கப்பல் + கல் + மணி.]

கப்பற்காய் *kappaṟ-kāy*, பெ.(n.) இலங்கைத் தீவினின்று வருந் தேங்காய் (Mod.); coconut imported from Ceylon.

[கப்பல் + காய்.]

கப்பற்காரன் *kappaṟ-kāraṉ*, பெ.(n.) 1. கப்பற்றலைவன்; master of a ship, ship-holder. முன்னேரங் கப்பற் காரன், பின்னேரம் பிச்சைக்காரன். 2. கப்பலில் வேலை செய்வோன்; mariner, shipman.

ம. கப்பல்க்காரன்

[கப்பல் + காரன்.]

கப்பற்கால் *kappaṟ-kāl*, பெ.(n.) படகு (நாஞ்.); boat.

[கப்பல் + கால்.]

கால் = கப்பலின் கால் போன்றது. படகு, தோணி கப்பலிலிருந்து சரக்கு இறக்கிக் கரைசேர்க்கும் படகுகள்.

கப்பற்கூடம் *kappaṟ-kūḍam*, பெ.(n.) கப்பல் கட்டும் அல்லது பழுதுபார்க்கும் இடம்; shipyard; dock.

[கப்பல் + கூடம்.]

கப்பற்கொள்ளை *kappaṟ-koḷḷai*, பெ.(n.) ***கடற் கொள்ளை*** பார்க்க; see *kaḍaṟ-koḷḷai*.

[கப்பல் + கொள்ளை.]

கப்பற்கொள்ளைக்காரன் *kappaṟ-k-koḷḷaikkāraṉ*, பெ.(n.) ***கடற்கொள்ளைக்காரன்*** பார்க்க; see *kadaṟ-koḷḷaikāraṉ*.

கப்பற்கோவை *kappaṟ-kōvai*, பெ.(n.) கப்பலூர்த் தலைவனான கருமாணிக்கன்மேற் பாடப்பட்ட ஒரு கோவைநூல்; name of a kovai poem in praise of the patron, Karumāṇikkaṉ of Kappalūr.

[கப்பலூர் → கப்பல். + கோவை.]

கப்பற்சண்டை *kappaṟ-caṇḍai*, பெ.(n.) ***கப்பற்போர்*** பார்க்க; see *kappaṟ-pōr*.

[கப்பல் + சண்டை.]

கப்பற்சாத்திரம் *kappaṟ-cāttiram*, பெ.(n.) ***கப்பல் நூல்*** பார்க்க; see *kappal-nūl*.

[கப்பல் + சாத்திரம்.]

கப்பற்சால் *kappaṟ-cāl*, பெ.(n.) கடலில் கப்பல் போகும் வழி; a navigation channal (சேரநா.).

ம. கப்பல்ச்சால்

[கப்பல் + சால்.]

கப்பற்சேதம் *kappaṟ-cēdam,* பெ.(n.) மரக்கலத்தின் அழிவு; shipwreck.

ம. கப்பல்ச்சேதம்

[கப்பல் + சேதம்.]

கப்பற்படை *kappaṟ-paḍai,* பெ.(n.) 1. கடற்படை; naval force; battleships. 2. கப்பலுக்குரிய பொருள் (வின்.); whatever belongs to a ship, as cordage, etc.

ம. கப்பல்ப்பட

[கப்பல் + படை.]

கப்பற்பாட்டு *kappaṟ-pāṭṭu,* பெ.(n.) 1. கப்பற்காரர் பாடும் ஓடப்பாடல்; mariners' song. 2. ஒரு நூல்; name of a book.

ம. கப்பல்ப்பாட்டு

[கப்பல் + பாட்டு.]

கப்பற்பாய் *kappaṟ-pāy,* பெ.(n.) கப்பலிற் காற்றை முகப்பதற்காகச் சீலையாலமைந்த பாய்; sail made of canvas.

ம. கப்பல்ப்பாயு

[கப்பல் + பாய்.]

கப்பற்போர் *kappaṟ-pōr,* பெ.(n.) கப்பலிலிருந்து புரியும் சண்டை; naval warfare.

[கப்பல் + போர்.]

கப்பற்றுரைச்சி *kappaṟṟuraicci,* பெ.(n.) சாதிக்காய்; nutmeg (சா.அக.).

[கப்பல் + துரைச்சி. துரை → துரைச்சி = துரையின் மனைவி போல் பெருமைக்குரியது.]

கப்பற்றுறை *kappaṟṟuṟai,* பெ.(n.) கப்பல் வரும் அல்லது புறப்படும் துறைமுகம்; sea port.

[கப்பல் + துறை.]

கப்பறை[1] *kappaṟai,* பெ.(n.) தாய விளையாட்டில் ஒரு கணக்கு (வின்.); blank in the play of dice.

[கப்பு + அறை. கப்பு = கருங்கோடு.]

கப்பறை[2] *kappaṟai,* பெ.(n.) ***கப்பரை*** பார்க்க; see *kapparai.*

[கப்பரை → கப்பறை.]

கப்பாங்கொட்டை *kappaṅ-koṭṭai,* பெ.(n.) தவளை (இ.வ.); frog. கப்பாங்கொட்டை கத்தினால் கப்பலா முழுகிப்போய் விடும் (பழ.).

[கப்பை + கால் + கொட்டை – கப்பைக்கால்கொட்டை → கப்பாங்கொட்டை. கப்பை → வளைந்த, கொட்டை = பருத்த கொட்டை போன்று உப்பி இருப்பது.]

கப்பாசு *kappāšu,* பெ.(n.) ஒப்படி (சுத்தம்) பண்ணாத பருத்தி (G.Tn.D.1, 161.); raw cotton.

[காய் + பருத்தி – காய்ப்பருத்தி → காப்பருத்தி → கப்பாத்தி → கப்பாசு (கொ.வ.) வடதமிழ் எனப்படும் பிராகிருதமொழிக் காலத்தில் கப்பாசு என திரிந்த இச் சொல் வடபுல மொழிகள் அனைத்திலும் பருத்தியைக் குறிக்கும் பொதுச் சொல்லாயிற்று.]

கப்பாளம் *kappāḷam,* பெ.(n.) 1. தலையோடு; skull. 2. இரப்போர்கலம்; begger's bowl.

க. கப்பாள (கன்னம்).

[கன்னம் + புலம் – கன்னப்புலம் → கப்பளம். கப்பளம்> Skt. kapala.]

இருபால் கன்னத்திற்கு மேற்பட்ட மண்டையோடு பொதுவாகக் கன்னப்புலம் எனக் குறிப்பிடப்பட்டதால் நாளடைவில் இச் சொல் மண்டையோட்டைக் குறிப்பதாயிற்று.

கப்பி[1]**–த்தல்** *kappi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கவர்படுதல்; to fork, as a branch. *"கப்பித்த காலையுடைய ஞெண்டினது" (பெரும்பாண். 208, உரை).* 2. பெருத்தல்; to grow in size. *"அரும்பிக் கப்பித்த தனத்தந்திரி." (திருப்பு. 412).* 3. முகையரும்பல்; to bud.

ம. கப்பு; க. கப்பு; து. கப்பு (கிளை)

[கவர்ப்பி → கவர்ப்பித்தல் → கப்பித்தல்.]

கப்பி[2] *kappi,* பெ.(n.) 1. தெள்ளிநீக்கிய நொய்; grits in flour comminuted imperfectly; coarse grits; grain half-ground. "கப்பி கடவதாக் காலைத் தன் வாய்ப்பெயினும்" (நாலடி. 341). 2. பருமணலும் சிறிய கற்களும் கலந்த சரளைமண், சல்லி (உ.வ.); gravel road-metal concrete of brick, dust and broken pieces of brick used for foundations or flooring. 3. தேவையில்லையென்று கழித்து நீக்கியது;

neglected and removed as rubbish. கலமாவு இடித்தவள் பாவி, கப்பி இடித்தவள் புண்ணியவதி (பழ.).

ம. கப்பி

[கழி → கழிப்பு → கழிப்பி → கப்பி.]

கப்பி[3] *kappi*, பெ.(n.) 1. கயிறிழுக்குங் கருவி; pulley. 2. நெய்தற்கருவியுளொன்று; (weav.) block and wheel in a loom.

ம. கப்பி; **க.** கபலி; **தெ.** கபிலி; **Ar.** gabb.

கப்பி[4] *kappi*, பெ.(n.) பொய்யுரை; lie, barefaced falsehood.

U. gappi

[கய → கயப்பு → கப்பு → கப்பி.]

கப்பி[5] *kappi*, பெ.(n.) 1. தவசம் (யாழ்.அக.); grain. 2. தவிடு; husk of paddy grain. கப்பி என்றால் வாய் திறக்கும், கடிவாளம் என்றால் வாய் மூடிக் கொள்ளும் (பழ.).

[கவ்வு → கப்பு → கப்பி. (பற்றிக்கொண்டிருக்கும் தவசமணி அல்லது தவிடு).]

கப்பி[6] *kappi*, பெ.(n.) மரக்கிளையில் தங்கும் குரங்கு; monkey. *“கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப” (தொல். 1512) (வ.மொ.வ. 279).*

[கப்பு → கப்பி. கப்பு = மரக்கிளை. கப்பி = மரக்கிளையில் தங்குவது. வடமொழியாளர் கம்ப் என்று மூலங்காட்டுவது பொருந்தாது.) (=நடுங்கு) மொ.வ. 279.]

த. கப்பி > Skt. kapi

கப்பி[7] *kappi*, பெ.(n.) வெள்ளைக் கிலுகிலுப்பை; white crotoloria (சா.அக.).

[சிப்பி → கப்பி. சிப்பி = சுட்டால் சுண்ணாம்பாகும் சிப்பி வகை.]

கப்பி[8] *kappi* பெ.(n.) கழிசடை; that which is rejected after filteration. இச் சுண்ணாம்பில் கப்பி மிகுதியாய் உள்ளது (உ.வ.).

[கழி → கழிப்பு → கப்பி.]

கப்பிகொள்(ளு)–தல் *kappi-koḷḷ(u)-*, செ.கு.வி. (v.i.) இசிப்பு முதலில் நோய் பற்றிக்கொள்ளல்; to be attached as by delirium, apaplexy etc.

[கவ்வு → கப்பு → கப்பி → கொள்–.]

கப்பிட்டி *kappiṭṭi*, பெ.(n.) கருப்பட்டி வகை; a kind of sirissa tree named (சா.அக.).

[கரும்புல் + அட்டி – கருப்பட்டி (கொ.வ.)]

வெல்லம் போன்ற இனிப்புச் சுவையால் பெற்ற பெயராம்.

கப்பிப்பிஞ்சு *kappi-p-piñju*, பெ.(n.) 1. இளம்பிஞ்சு; very tender fruit. 2. அகாலத்தில் தோன்றிய பிஞ்சு (யாழ்ப்.); tender fruit out of season.

[காய்ப்பு + பிஞ்சு → காய்ப்புப்பிஞ்சு → கப்பிப்பிஞ்சு.]

கப்பிப்பூ *kappi-p-pū*, பெ.(n.) உரிய காலத்தில் ஒரு சேர இலுப்பைப்பூ விழுகை (யாழ்ப்.); fall of the iluppāipp in due season, dist. fr . பந்தர்ப்பூ, பாவாடைப்பூ and கலியாணப்பூ.

[கப்பி + பூ.]

கப்பியம் *kappiyam*, பெ.(n.) உண்ணத்தக்கது; that which is ordained as edible. *“கப்பியந் தின்றலே” (நீலகேசி. 319, உரை).*

[கவ்வு → கப்பு → கப்பியம்.]

கப்பிர் *kappir*, பெ.(n.) கருவம்; pride, haughtiness. கப்பிர்பிடித்து அலைகிறான் (இ.வ.).

[கவ்வு → கப்பு → கப்பிர்.]

கப்பிலக்குறிஞ்ச்சி *kapilakkuriccy*, பெ.(n.) நாமக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Namakkal district.

[கபிலன் + குறிச்சி – கபிலக்குறிச்சி. குறிச்சி = மலைநிலத்துச் சிற்றூர்.]

கப்பு[1]**–தல்** *kappu-*, செ.கு.வி.(v.t.) 1. தோண்டுதல்; to dig. 2. குழி செய்தல்; to make a hole.

[கள் → கவ் → கப்பு.]

கப்பு[2]**–தல்** *kappu-*, 5 செ.கு.வி.(v.t.) 1. மூடிக் கொள்ளுதல்; to overspread, as cloud. *“நற்பொற் சரத்தினொளி கப்பத்தெருக்களளவும்” (தனிப்பா. 11, 195, 471).* 2. கொள்ளுமளவு வாயிலிட்டு வேகமாக விழுங்குதல்; கவளங்கவளமாக விழுங்குதல். to gorge, cram into the mouth. *“அவல்பொரி கப்பிய கரிமுகன்” (திருப்பு. விநாயகர். 1).* 3. பிறர் பொருளை ஒளித்துக்கொள்ளுதல்; to steal. 4. உரையாடலின் போது களைத்தல்; to be hoarse (சேரநா.).

ம. கம்முக; **க.** கப, கம்பு, கபப்பு; **குட.** கம்பம்; **து.** கப்புனி; **தெ.** கமுசு; **கூய்.** கப்ப; **குரு.** கப்னா; **பட.** தப்பு; **குவி.** கப்.

Pali. kabala; **Skt.** kavala.

[கவ்வு → கப்பு → கப்புதல். (மு.தா. 13)]

கப்பு[3] *kappu,* பெ.(n.) 1. கவர்கொம்பு. (பிங்.); forked branch. 2. கிளை; branch, bough. *"கப்பங் கொடுக் குங்கலைசையே" (கலைசை.95).* 3. பிளவு; cleavage, cleft. *"கப்புடை நாவி னாகர்" (கம்பரா. எதிர்.2).* 4. சிறுதூண், (யாழ்ப்.); small pillar, post. 5. தோள்; shoulder. *"கப்பா லாயர்கள் காவிற் கொணர்ந்த" (திவ். பெரியாழ். 3,1,5.).* 6. பற்றுக்கோடு; support, refuge. *"இரட்யரட்சகபாவம் தன்கப்பிலே கிடக்கும்" (ஸ்ரீவசன. 244).* 7. கவர்ச்சி; that which draws unto itself. *"கப்பின்றா மீசன் கழல்" (சி.போ. 11,5,வெண்.).*

[கவை → கவர் → கவர்ப்பு → கப்பு.]

ஒரு மரத்தில், ஒரே அடியினின்று பல கவைகளும், அக் கவைகளினின்று பல கிளைகளும், அக் கிளைகளினின்று பல கொம்புகளும், அக் கொம்புகளினின்று பல கப்புகளும், அக் கப்புகளினின்று பல வளார்களும் தோன்றுகின்றன. பாவாணர் → ஒப்பியன் மொழிநூல். ப. 24.

கப்பு[4] *kappu,* பெ.(n.) 1. கறுப்புநிறம்; blackness, darkness. 2. சாயத்தின் அழுத்தம்; fastness of colour of the dye used for dyeing cloth. 3. செஞ்சாய வகை (G.Tj.D.1,121); a kind of red tint. 4. மயிர்க்கு ஊட்டுஞ் சாயம் (வின்.); hair-dye.

க. கர்ப்பு, கப்பு, கழ்பு; **ப,தெ.** கப்பு.

[கருப்பு → கப்பு.]

கப்பு[5] *kappu,* பெ.(n.) வீண்பேச்சு (உ.வ.); idle or vain talk.

U. gap

[கவிழ்ப்பு → கப்பு (பொய், புரட்டு - பேசுதல்).]

கப்பு[6] *kappu,* பெ.(n.) கமுக்கம் (இ.வ.); privacy; secrecy.

[காப்பு → கப்பு.]

கப்பு[7] *kappu,* பெ.(n.) உயரம் (நாமதீப.); height.

[உகப்பு → கப்பு.]

கப்பு[8] *kappu,* பெ.(n.) 1. மூடி; a covering, a cover, 2. தவசங்களின் மேற்றோல்; the husk of grain. 3. கொழுப்பு; fat.

க., தெ. கப்பு.

[கவ்வு → கப்பு.]

கப்புக்கால் *kappu-k-kāl,* பெ.(n.) 1. வளைகால்; bandy legs. 2. முட்டுக்கால்; support, prop.

[கப்பு[3] + கால்.]

கப்புக்கால் பூச்செடி *kappu-k-kāl-p-pūceḍi,* பெ.(n.) ஒருவகைப் பூச்செடி; the moorman's flower shurb (சா.அக.).

[கப்பு + கால் + பூ + செடி.]

கப்புக்காலன் *kappu-k-kālaṉ,* பெ.(n.) 1. வளைந்த காலை உடையவன்; a bandy legged man. 2. குறுங் காலை உடையவன்; one who is having short legs.

[கப்பு + கால் + அன்.]

கப்புக்காவடிப்பூ *kappu-k-kāvaḍi-pū,* பெ.(n.) செவ்வலரிச்செடி; oleander plant.

மறுவ. சுடுகாட்டுப்பூ

[கப்பு + காவடிப்பூ.]

(பிணக்குழியின் மீது அலரிச் செடியை நடுவதால் நாய்நரி அண்டாது என்பது நம்பிக்கை.)

கப்புக்குனையறு-த்தல் *kappu-k-kuṉai-y-aṟu-,* 4 செ.குன்றாவி.(v.t.) இழையோட்டுதல் (வின்.); to render a piece of coloured cloth perfect by substituting proper threads for such as are unfit.

[கப்பு[3] + குனையறு-.]

கப்புகனார் *kappugaṉār,* பெ.(n.) கோவில் பூசகர்; temple priest.

கப்புச்சாயம் *kappu-c-cāyam,* பெ.(n.) மயிர்க்கிடும் சாயம்; a dye for the hair (சா.அக.).

[கறுப்பு → கப்பு + சாயம்.]

கப்புச்சிப்பெனல் *kappu-c-cippeṉal,* பெ.(n.) பேச்சின்றி அடங்குகைக் குறிப்பு; phrase signifying the keeping of perfect silence.

[கப்பு→ சிப்பு + எனல். எதுகை நோக்கிய மரபிணைக் குறிப்பு.]

கப்புத்தோள் *kappu-t-tōḷ,* பெ.(n.) காவுதோள்; வலத்தோளும் இடத்தோளுமாக மாறிக் காவுகை

(யாழ்.அக.); bearing on the right and left shoulder alternately.

[காவு → கப்பு + தோள்.]

கப்புமஞ்சள் *kappu-mañjal,* பெ.(n.) கொச்சியிலிருந்து கிடைக்கும் ஒருவகை உயர்ந்த மஞ்சள் (வின்.); a superiof kind of turmeric from Cochin.

[கப்பு[2] + மஞ்சள்.]

கப்புரம் *kappuram,* பெ.(n.) **கருப்பூரம்** பார்க்க; see *karuppūram.* *"கப்புரப் பசுந்திரை" (சீவக. 197).*

Pkt. kappura; **Skt.** karpūra.

கப்புவலை *kappu-valai,* பெ.(n.) வலைவகை (இ.வ.); a kind of fishing net.

[கப்பு + வலை.]

கப்புவிடு[2]–தல் *kappu-vidu-,* 20 செ.கு.வி.(v.i.) புரட்டுப்பேசுதல்; to lie, utter falsehood.

[கவிழ்ப்பு → கப்பு + விடு.]

கப்புறுக்காய் *kappuru-k-kāy,* பெ.(n.) சீயக்காய்; soap-nut (சா.அக.).

[கருப்பு → கப்பு (அழுக்கு). கப்பு + (அறு) உறு + காய்.]

கப்பூர் *kappūr,* பெ.(n.) நாகப்பட்டினம் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள சிற்றூர்; a village in Nagapattinam dt.

[கருப்பு→கப்பு + ஊர்– கப்பூர்.]

கப்பை *kappai,* பெ.(n.) **கப்பாங்கொட்டை** பார்க்க; see kappāṅgoṭṭai

[கப்பாங்கொட்டை → கப்பை (மரூஉ.)]

க.,து., பட., குட.கப்பெ; **தெ.,குவி.** கப்ப; **கோத.** கெபக்; **துட.** கொபின்; **கொண்.** கபொகி; **Sinh.** gamba.

கப்பைக்கால் *kappai-k-kāl,* பெ.(n.) ஒருபக்கமாக வளைந்த கால்; bandy legs.

[கப்பை + கால்.]

கப்பைக்காலன் *kappai-k-kālan,* பெ.(n.) தொட்டிக் காலன்; bow-legged man.

[கப்பு[2] + காலன்.]

கப்பொட்டி *kappoṭṭi,* பெ.(n.) **கப்பிட்டி** பார்க்க; see *kappaṭṭi*

[கருப்பட்டி → கப்பொட்டி.]

கபகபவெனல் *kaba-kapa-v-enal,* பெ.(n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு; the sound of gurgling, as produced by water when poured out of a vessel with a narrow mouth. 2. பசி முதலியவற்றால் வயிறெரிகைக் குறிப்பு; burning sensation in the abdomen from hunger or from strong passion.

[கபகப + எனல். 'கபகப' ஒலிக்குறிப்பு.]

கபட்டுநாக்கு *kabaṭṭu-nākku,* பெ.(n.) **கவட்டுநாக்கு** பார்க்க; see *kavaṭṭu-nākku.*

[கபட்டு + நாக்கு. கவட்டு → கபட்டு.]

கபட்டுப்படிக்கல் *kabaṭṭu-p-paḍi-k-kal,* பெ.(n.) **கவட்டுப் படிக்கல்** பார்க்க; see *kavaṭṭu-p-paḍi-k-kal.*

[கவட்டு → கபட்டு.]

கபடக்காரன் *kabaḍa-k-kāran,* பெ.(n.) **கவடுக்காரன்** பார்க்க; see *kavaḍu-k-āran.*

[கபடம் + காரன்.]

கபடதாரி *kabaḍa-dāri,* பெ.(n.) **கவடன்** பார்க்க; see *kavaḍān.* கபடதாரிகளின் வேடத்தைக் கலைக்க வேண்டும்.

[கபடம் + தாரி. கவடம் → கபடம்.]

கபடநாடகம் *kabaḍanāḍagam,* பெ.(n.) **கவட நாடகம்** பார்க்க; see *kavaḍa-nāḍagam.* *"கபட நாடகத்தை மெய்யென்று நம்பி" (அருட்பா.1 நெஞ்சளி. 528).*

[கபடம் + நாடகம். கவடம் → கபடம்.]

கபடம் *kabaḍam,* பெ.(n.) **கவடம்** பார்க்க; see *kavaḍam.*

H. kapaṭ; **Skt.** kapaṭa.

[கவை → கவடு → கவடம் → கபடம்.]

கபடவித்தை *kabaḍa-vittai,* பெ.(n.) **கவடக்கலை** பார்க்க; see *kavaḍa-k-kalai*

[கவடம் → கபடம் + வித்தை.]

கபடவைத்தியன் *kabaḍavaittiyan,* பெ.(n.) **கவட மருத்துவன்** பார்க்க; see *kavaḍa-maruthuvan*

[கபடம் + வைத்தியன்.]

கபடி[1] *kabaḍi,* பெ.(n.) **கவடி** பார்க்க; see *kavaḍi* (திருப்பு.109).

[கவறு → கவடு → கவடி → கபடி.]

கபடி[2] *kabaḍi,* பெ.(n.) விளையாட்டு வகை; a kind of game.

[கபடிகபடி → கபடி.]

ஏழு பேர் கொண்ட ஓர் அணியிலிருந்து ஒருவர் விடாமல் 'கபடி, கபடி' என்று கூறிக் கொண்டு எதிர் அணியிரைத் தொட்டுத் திரும்பி



கபடி

வரும் ஒருவகை விளையாட்டு.

கபடு *kabaḍu,* பெ.(n.) ***கவடு*** பார்க்க; see *kavaḍu.*

[கவடு → கபடு.]

கபத்தம் *kabattam,* பெ.(n.) துளசி; holy basil. (சா.அக.).

[கார்ப்பு→ கப்பு→கபத்தம்.]

கபந்தலைவலி *kaban-talaivali,* பெ.(n.) உடம்பு முழுவதும் வலித்து, குத் தல், கக்கல், காது நமைச்சல் முதலிய குணங்களைக் காட்டுமோர் தலைவலி.

[கள்→ கப்பு + தலைவலி.]

கபாடபுரம் *kabāḍa-puram,* பெ.(n.) தமிழாய்தற்காக இரண்டாம் தமிழகக் கழகம் அமைத்த பாண்டிய மன்னர்களின் தலைநகராயிருந்த ஊர். (இறை.1, உரை.); the ancient Pandyan capital which was the seat of the second Tamil academy.

[கவாடம் + புரம் – கவாடபுரம் → கபாடபுரம். கவாடம் = கதவு, கோட்டை.]

கபாடம்[1] *kabāḍam,* பெ.(n.) கதவு; door *"அறிவென் கபாடச் செந்தாள்" (ஞானா. 34, 3).* 2. காவல் (வின்.); guard, defence, protection.

Skt. kapāṭa; **Turk.** kapi.

[காவடம் → கவாடம் → கபாடம்.]

கபாடம்[2] *kabāḍam,* பெ.(n.) பொதி. (C.G.); beasts burden, as wood.

[காவு → காவடம் → கவாடம் → கபாடம்.]

கபால் *kabāl,* பெ.(n.) ***கபாலம்*** பார்க்க; see *kabālam.* கைவத்த வனிகபாலி மிசை. (திவ். திருச்சந்.42).

Tib. gwah

[கபாலம் → கபால்.]

கபாலக்கரப்பான் *kabāla-k-karappāṉ,* பெ.(n.) தலையில் வருங் கரப்பான்; scald head, tinea, porrigo, especially of children.

[கன்னப்புலம் → கபாலம் + கரப்பன்.]

கபாலக்காரன் *kabāla-k-kāraṉ,* பெ.(n.) ***கபாலக்கரப்பான்*** பார்க்க; see *kabāla-k-kara-p-pāṉ.*

[கபாலம் + காரன்.]

கபாலக்குத்து *kabala-k-kuttu,* பெ.(n.) கடுந்தலை வலி (இங்.வை.217); severe headache, acute meningitis cephalalgia.

[கபாலம் + குத்து.]

[சில நேரங்களில் கபாலக்குத்து பார்வை இழக்கச் செய்யும்.]

கபாலச்சூலை *kabāla-c-cūlai,* பெ.(n.) ***கபாலக்குத்து*** பார்க்க (இங். வை. 217); see *kabāla-k-kuttu.*

[கபாலம் + சூலை.]

கபாலம்[1] *kabālam,* பெ.(n.) ***கப்பாளம்*** பார்க்க; see *kappāḷam.*

[கட்பாளம் → கபாலம்.]

கபாலம்[2] *kabālam,* பெ.(n.) ***கபாலக்கரப்பான்*** பார்க்க; see *kabāla-k-karappāṉ.*

கபாலம்[3] *kabālam,* பெ.(n.) ***கபாலக்குத்து*** பார்க்க; see *kabāla-k-kuttu.*

[கப்பாளம் → கபாலம்.]

கபாலமூர்த்தி *kabāla-mūrtti,* பெ.(n.) ***கபாலதரன்*** பார்க்க (திவா.); see *kabāla-daraṉ.*

[கபாலம் + மூர்த்தி.]

கபாலமோட்சம் *kabāla-mōtcam,* பெ.(n.) 1.தலை யோடு கூடுடைந்து உயிர்செல்கை (இ.வ.); deliverance of the soul, in the case of a yogi, from the body through the bursting out of the skull. 2. மண்டையை யுடைக்கை (உ.வ.); breaking the head.

[கன்னப்புலம் → கபாலம் + வ. மோட்சம்.]

Skt. kapalamokša

கபாலவிடி *kabāla-viḍi,* பெ.(n.) ***கபாலக்குத்து*** பார்க்க; see *kabāla-k-kuttu.*

[கபாலம் + இடி. கபாலம் → மண்டையோடு, தலை. இடி → குத்துதல், வலித்தல். கபாலவிடி = மண்டை (தலை) யிடித்தல், வலித்தல்.]

கபாலி *kabāli,* பெ.(n.) 1. சிவன்; Lord Siva. 2. பதினோரு உருத்திரருள் ஒருவர். (திவா.); name of the rudra, one of ēkāta caruttirar. 3. வைரவன் (பிங்.); Bhairava. 4. உமை (யாழ்.அக.) parvadi.

[கன்னப்புலம் → கப்பாளம் → கபாலம். காபலம் → கபாலி. மண்டை யோட்டை மாலையாக உடையவன்.]

கபாலி *kabāli,* பெ.(n.) காபாலிக நோன்பினான சைவ சமயத்தான்; name of a certain šaiva sect of the left hand order, members of which carry about their person human skulls in the form of garlands and also eat and drink from them. *"கம்பக் கபாலிகாண்" (திவ். பெரியாழ். 2,8,9).*

[கபாலம் → கபாலி. கபாலம்' பார்க்க.]

கபி[1] *kapi,* பெ.(n.) குரங்கின் ஒருவகை; ape.

[கப்பு →கிளை. கப்பி →மரக்கிளையில் தங்கும் குரங்கு. கப்பி →கப. "கேடுவாழ் குரங்கும் குட்டி கூறுப" (தொல். 1512.).]

வடமொழியார் காட்டும் கம்ப் [நடுங்கு] என்பது மூலமாகாது [வ.மொ.வ. 279].

த. கபி > **Skt.** kapi.

மாந்தர்க்கு முற்பட்டவையாகக் கொள்ளப் படும் முசு (lemur), வானரம் (monkey), கபி (ape), மாந்தற்போலி (anthropoid) என்னும் நால்வகைக் குரங்கும் குமரிக்கண்டத்திற்கே யுரியன... கபிக்கும் நிமிர்ந்த குரங்குமாந்தனுக்கும் (pithecanthropos erectun) இடைப்பட்டது மாந்தற்போலி... கபிகள் மாந்தற்போலிக்கு நெருக்கமாயிருப்பது பற்றி அவற்றை மாந்தற் போலிக் கடா (anthropoid ape) என அழைப்பர் [மு.தா. முன்னுரை.].

கபி[2] *kabi,* பெ.(n.) ***கப்பி***[2] (வின்.) பார்க்க; see *kappi*

[கப்பி → கபி.]

கபிஞ்சலம் *kabiñjalam,* பெ.(n.) 1. காடை (பிங்.); rain quail, turuix taigoor. 2. காடைவகை (வின்.); francolin partridge, francolinus vulgaris. 3. ஆந்தை (யாழ்.அக.); owl.

[கப்பு→கப்பிஞ்சல் →கபிஞ்சலம்.]

கபித்தம்[1] *kabittam,* பெ.(n.) (பிங்.); சுட்டுவிரல் நுனியும் பெருவிரல் நுனியும் உகிர்நுனை கவ்வ ஒழிந்த மூன்று விரலும் மெல்லெனப் பிடிக்கும் இணையா வினைக்கை (சிலப். 3, 182 உரை.); (Natya). a gesture with one hand in which the tips of the thumb closely and of the forefingers are closely joined while the other three fingers are held loose, one of 33 iṇaiya-viṉai-k-kai.

[கபோதம்→கபித்தம்.]

கபித்தம்[2] *kabittam,* பெ.(n.) 1. கொட்டிக்கிழங்கு (தைலவ.); a plant that yields an odoriferous medicinal oil. 2. விளாமரம்; wood apple tree.

[குவி → கவி → கவித்தம் → கபித்தம்.]

கபிலப்பொடி *kabila-p-poḍi,* பெ.(n.) மரவகை (L.) kamela dye, scariet croton.

[கவி → கபி → கபித்தம்.]

கபிலபுரம் *kabila-puram,* பெ.(n.) கலிங்க நாட்டிலுள்ள ஓர் ஊர்; a village in Kalinga country.

[கபிலம் + புரம்.]

கபிலம் *kabilam,* பெ.(n.) 1. புகர்நிறம் (திவா.); tawny, dim colour; dinginess, dustiness, brown. 2. காபிலம் (வின்.); name of secondary purana. 3. கபிலப்பொடி பார்க்க; see kabila-ppodi. 4. கரிக்குருவி (பிங்.); king-crow.

[கபில் → கபிலம்.]

[காவி → கபி → கவில் → கபில் → கபிலம்.]

கபிலமதம் *kabila-madam,* பெ.(n.) கபிலரால் தொடங்கப்பெற்ற சாங்கிய மதம்; Sānkhya system of philosophy, founder by Kabila.

[கபிலம் + மதம்.]

கபிலர் *kabilar,* பெ.(n.) கடைக்கழகக் காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்; a Tamil poet of third Sangam period. ***கபிலன்*** பார்க்க; see *kabilaṉ.*

[கவிர்→கவிரம்→கபிலம் = காவிநிறம். கபிலம் →கபிலர் (காவி நிறமுடையவர்).]

கபிலரகவல் *kabilar-agaval,* பெ.(n.) கி.பி. 9ஆம் நூற்றாண்டில் 138 அடிகளுடைய ஆசிரியப் பாவாலான, ஆசிரியர் பெயர் அறியப்படாத ஒரு நூல்; a booklet in veṇba metre containing 138 lines composed by an unknown author in the 9th century A.D.

[கபிலர் + அகவல்.]

கபிலவெலி *kabila-veli,* பெ.(n.) கபில நிறமுடைய ஒருவகை எலி; a kind of rat.

[கபிலம் + எலி.]

கபிலன் *kabilaṉ,* பெ.(n.) 1.குறிஞ்சிப்பாட்டு, குறிஞ்சிக்கலி முதலியவற்றின் ஆசிரியரான கடைக்கழகப் புலவர்; Kabilan a poet of the age of the third sangam, author of Kuṟiñci-p-pāṭṭu Kuṟiñci-k-kali and other poems. *"பொய்யா நாவிற் கபிலன்" (புறநா. 174:10).* 2. ஒரு முனிவர்; Kabilan the founder, or rather the earliest known exponent of the Saṅkhya system of philosophy. *"கபிலனக்கபாதன் கணாதன் சைமினி" (மணிமே. 27;81).* 3. கபிலரகவல் பாடிய பிற்காலப் புலவர்; a later poet, author of Kabilar Agaval.

[கவிர் → கவிரம் → கபிரம் → கபிலம் = காவிநிறம். கபிலம் → கபிலன் (கவிர நிறமுடையவன்).]

த. கவிர>**skt.** kabila

கபிலாசிலந்தி *kabilā-cilandi,* பெ.(n.) ஒருவகைச் சிலந்தி (இ.நூ.த.பெ.அக.); a kind of spider.

[கபிலை + சிலந்தி.]

கபிலை[1] *kabilai,* பெ.(n.) எருதுகளைக்கட்டி நீரிறைக்கும் ஏற்றம்; a contrivance for drawing water from wells. ***கமலை[2]*** பார்க்க; see *kamalai[2]*.

ம.கப்பி; **க.**கபிலெ, கபலி, கபலெ, கப்பலி, கவிலெ; **தெ.**கபிலெ; **Ar.**qubb.

[கமலை → கபிலை.]

கபிலை[2] *kabilai,* பெ.(n.) 1. புகர்நிறம் (c.g.); tawny, brown, or swarthy colour. 2. குரால் நிற ஆன் *"கபிலையொடு குடநாட்டோரூ ரீத்து" (பதிற்றுப். 60, பதி);* dim coloured cow. 3. தெய்வஆன் (சூடா.); cow of the Heaven. 4. தென்கீழ்த்திசைப் பெண்யானை; name of the female elephant of the South-East quarter, being the mate of Puntarikam.

த.கபிலை > **skt.** kapila

[கவிர் → கவிரம் → கபிலம்.]

கபிலையம்பதி *kabilaiyampadi,* பெ.(n.) 1. கபிலநகர்; Kapila city. 2.கபிலவசுது (புத்தர் பிறந்த ஊர்); birth place of Buddha *"கரவரும் பெருமைக் கபிலையம் பதியின்" (மணிமே. 26:44).*

[கவிர் → கவிரம் → கபிலம் → கபிலை.]

கபுக்குக் கபுக்கெனல் *kabukku-k-kabukkeṉal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom. sounding impetuously, sound of gurgling water.

பட.,க. கபகப.

[கபுக்கு + கபுக்கு + எனல்.]

கபோதகத்தலை *kabōtaka-t-talai* கொடுங்கை– யைத்தாங்கும் பலகை (நெடுநல்.48. உரை); wooden support under a cornice or other projection.

[கரும் புறா → கரும்புதா → கபோதா + கபோதகம் + தலை.]

மேற்பாரத்தைத் தூணுக்கு மாற்றுகிற உறுப்பாய தாங்கு பலகையைச் சிற்ப வேலைப்பாட்டுடன் அமைப்பது உண்டு. புறாவின் தலையைப் போல் அமையும் தன்மையை நோக்கி வீட்டின் வெளிப்புறம் நீண்டு வளைந்துள்ள கொடுங்கைப் பலகையைக் கபோதம் எனக்குறித்தனர்.

கபோதகநியாயம் *kabōdaga niyāyam,* பெ.(n.) ***கரும்புறாநயன்*** பார்க்க; see *karumpuṟānayaṉ. "கபோதக நியாயமே கடுப்ப" (பூவாளூர்ப்.).*

*[கரும்புறா → கபோதகம் > **வ.** கபோதகம் வ.நியாய > **த.** நியாயம்.]*

கபோதம் பார்க்க

கபோதகம்[1] *kapōdagam,* பெ.(n.) 1.கரும்புறா; black dove (திவா.). 2. புறா (திவா.); dove. 3. வீட்டின் கொடுங்கை; overhanging projections of a house. *"பதலைக் கபோதகக் கொளமாட நெற்றி" (திவ்.பெரியதி.3,8,2).*

H. kabutar, kabutār; **Pkt.** kabōt; **Skt.** kapota.

[கரும்புறா→கரும்புதா → கபோதம்.]

***த.** கரும்புறா (கரும்புதா)* > **Skt.** kapota. *இத்தமிழ்ச் சொல் வட இந்திய மொழிகளிலும் கபுதார், கபுத்தர், கபோத்தர் எனப் பலவாறாகத் திரிந்துள்ளது.*

கபோதகம்[2] *kapōdagam,* பெ.(n.) 1.பெருவிரல் விட்டு நிமிர மற்றை நான்கு விரல்களும் ஒட்டி நிமிரும் இணையாவினைக்கை; (Natya) a gesture with one hand in which all the fingers but the thumb is kept as far away as possible, one of 33 iṇaiyā-viṉai-k-kai. *"காணுங்காலைக் கபோத மென்பது பேணிய பதாகையிற் பெருவிரல் விட்டு*

மென்பது பேணிய பதாகையிற் பெருவிரல் விட்டு நிமிரும்" (சிலப்.3:18.உரை.). 2. இரண்டு கைகளையும் கபோதகக் கையாகக் காட்டும் இணைக்கை (Natya) a gesture with both hands in which they are joined in Kapotam pose. *"கருதுங்காலைக் கபோத விணைக்கை யிருகையும் கபோதமிசைந்து நிற்பதுவே" (சிலப் 3:18 உரை.).*

[த. கரும்புறா → கரும்புதா > **Skt.** *kapōta]*

கபோதி *kapōdi,* பெ.(n.) ***கண்போகி*** பார்க்க; see *kaṇpōgi.* 1. கண்தெரியாதவன்; blind person. 2. பண்பில்லாதவன்; characterless person. 3. ஒன்றுக்கும் உதவாதவன்; worthless chap.

க. கபோதி, கபோசி; **தெ.** கபோதி.

[கண்+போகி – கண்போகி → கபோகி → கபோதி (கொ.வ.).]

கபோலம் *kabōlam,* பெ.(n.) கன்னம்; cheek ***கப்பலம்*** பார்க்க; *see kappalam. "அந்நாயகன் கபோலத் திட்ட கையுகிர்க்குறியும்" (திருவிளை. இரச.30.).*

க. கபோல, கப்பால.

[கப்பல் = பள்ளம். கப்பல் → கப்பலம் → கப்போலம் = குழிவான கன்னம்.]

கம்[1] *kam,* பெ.(n.) நீர்; water.

[அம் → கம் (தண்ணீர்).]

கம்[2] *kam,* பெ.(n.) 1.வெண்மை (பிங்.); whiteness. 2.ஆடு (அக.நி.); goat, sheep.

[அம் → கம் = தண்ணீர், நீரின் நுரை, வெண்மை வெள்ளாடு.]

கம்[3] *kam,* பெ.(n.) 1. தலை (திவா.); head. 2. மண்டை யோடு; skull. *"காதுவேலன்ன கண்ணார் கம்கை நீர் சுமந்தது ஏதுக்கோமின்" (திருவிளை.).* 3. முகில் (சூடா.); cloud. 4. வீட்டின்பம்; final bliss. *"கம்மெனும் பெருவீட்டின்ப நுகர்விக்கும் காட்சி யானும்" (காஞ்சிப்பு. திருவேகம்ப.49).*

[உம் → அம் → கம். உம் = மேல், உயரம், உயரத்திலிருப்பது.]

த. கம் > **Skt.** ka.

கம்[4] *kam,* பெ.(n.) 1. தொழில்; act, operation, employment. *"கம்மு முருமென் கிளவியும்" (தொல். எழுத்து.328.).* 2. கம்மியர் தொழில்; (நன்.223,விருத்.); smith's work (செ.அக.).

[கரு → கருத்தல் = செய்தல். கரு → கருமம் → கம்மம் → கம் = தொழில்.]

கம்[5] *kam,* பெ.(n.) நறுமணம்; fragrance. ***கமகமத்தல்*** பார்க்க; see *kamakama-,*

தெ. கம்பு; **க.** கம்பு; **கொலா.** கம்.

[கம் → கமம் = நிறைதல், பரவுதல். கம் = பரவும் நறுமணம்.]

கம்[6] *kam,* பெ.(n.) 1.காற்று; air, wind. 2.உயிர்; soul.

[அம் → கம் (நிறைதல், பரவுதல், வீசுதல், இயங்குதல்.) கமம் = நிறைதல்.]

கம்[7] *kam,* இடை, (part) கூட, உடன் also, and, with.

[கும் → கம். கும் = கூடுதல்.]

கூடுதலைக் குறிக்கும் கும் என்னும் வினைச் சொல், உ–அ திரிபு முறைப்படி, கம் என்று திரியவுஞ் செய்யும்.

"கமம்நிறைந் தியலும்" [தொல்.சொல். உரி.57]

நிறைதல் = நிரம்புதல், மிகுதல், கூடுதல்.

cum என்னும் இலத்தீன அடிச்சொல்லும் முன்னொட்டாகும் போது com என்று திரிந்து, வருஞ்சொல் முதலெழுத்திற்கேற்ப con, col, cor என்று ஈறுமாறும். சில எழுத்துகள் முன் co என்று ஈறு கெடவுஞ் செய்யும். ஆங்கிலத்திலும் இவ்வாறே மாறும்.

இங்ஙனம் இலத்தீனத்தில் கும்–கொம் என்றும், ஆங்கிலத்திற் கம் என்றும் திரியும் முன்னொட்டு, கிரேக்கத்தில் ஸும் (sum) என்றும் ஸிம் (sym) என்றும், சமற்கிருதத்தில் ஸம் (sum) என்றும் திரியும். கிரேக்க முன்னொட்டும், இலத்தீன முன்னொட்டுப் போற் பின்வரும் எழுத்திற்கேற்ப, சின் (syn), சில(syl) என்றும், திரியும் சமற்கிருத முன்னொட்டு ஈறுகெட்டு ஸ (sa) என்றும் நிற்கும்.

இவற்றிற்கெல்லாம், கூட [உடன்] என்பதே பொருள்.

கூட என்பதற்கு நேரான கும்மல் என்னும் தென்சொல்லே, முன்னெட்டாகிக் கும் என்று

குறுகியும், கும்→ கொம் → கம்; கும் → ஸூம்; ஸூம் ஸம் என்று திரிந்தும், ஆரிய மொழிகளில் வழங்கும் அதன் முதன்மெய், ஐரோப்பாவின் வடமேற்குப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலும் இயல்பாகவும் அதன் தென் கிழக்குப் பகுதியிலும் இந்தியாவிலும் ஸகரமாகத் திரிந்தும், வழங்குகிறது.

கம்பக்கட்டை *kamba-k-kaṭṭai,* பெ(n.) தாங்குசாரக் கட்டை; temporary wall erected for supporting an arch under construction (கொ.வ.).

[கம்பு = கழி, கோல். கம்பு + அம் + கட்டை = கம்பங்கட்டை → கம்பக்கட்டை.]

கம்பக்கணை *kamba-k-kaṇai,* பெ.(n.) வல்லாளன், திறனாளன் (யாழ்.அக.); a person of strong will.

[கம்பம் + கணை – கம்பக்கணை. கம்பத்தில் குறிப்பிட்ட இலக்குப் புள்ளியில் தவறாது கணை (அம்பு) எய்யும் திறமையாளனைக் குறித்த சொல். நாளடைவில் மனவுறுதி கொண்டவனைக் குறித்தது.]

கம்பக்காய்ச்சல் *kamba-k-kāyccal,* பெ.(n.) ஒருவகை நடுக்கக் காய்ச்சல்; a kind of fever (சா.அக.).

கம்பம் = அசைவு, நடுக்கம்.

[கம்பம் + காய்ச்சல்.]

கம்பக்காரன் *kamba-k-kāraṉ,* பெ.(n.) மனநிலை குன்றியவன், கிறுக்கன்; a madman.

ம. கம்பக்காரன்

[கம்பம் = அசைவு, நடுக்கம். கம்பம் + காரன்.]

கம்பக்காலம் *kamba-k-kālam,* பெ.(n.) பனிக்காலம்; the cool dewy season.

ம. கம்பனம்

[கம் = நீர். கம், கம்பம் + காலம்.]

கம்பக்கூத்தாடி *kamba-k-kūttāḍi,* பெ(n.) கழைக் கூத்தாடி; pole dancer.

ம. கம்பக்கூத்தாடி

[கம்பம் + கூத்தாடி – கம்பக்கூத்தாடி. நட்டுவைத்த கம்பத்தில் அல்லது மூங்கிற்கழையில் ஏறிக் கூத்தாடுபவன்.]

கம்பக்கூத்து *kamba-k-kūttu,* பெ.(n.) கழைக்கூத்து; pole-dancing, acrobatic performance (செ.அக.).

மறுவ. தொம்பன் ஆட்டம்

ம. கம்பக்களி, கம்பக்கூத்து.

[கம்பம் + கூத்து – கம்பக்கூத்து. கம்பத்தில் ஏறி ஆடிக்காட்டும் பொழுதுபோக்கு, உடலாற்றல் விளையாட்டுக் கலை.]

கம்பங்கஞ்சி *kambaṅ-kañji,* பெ.(n.)கம்பரிசிக்கஞ்சி; gruel prepared from bulrush millet from. *'காணாது கண்ட கம்பங்கூழைச் சிந்தாது குடியடி சில்லிமூக்கி'* (பழ.).

[கம்பு + அம் + கஞ்சி. 'அம்' சாரியை.]

கம்பங்களி *kambaṅ-kaḷi,* பெ.(n.) கம்புமாவாற் சமைத்த களி; porridge made of the flour of bulrush millet.

[கம்பு + அம் + களி – கம்பங்களி. 'அம்' சாரியை.]

கம்பங்கூழ் *kambaṇkūḻ,* பெ.(n.) கம்பரிசியினின்று சமைத்த கூழ்; pudding prepared from spiked millet (சா.அக.).

[கம்பு + அம் + கூழ். 'அம்' சாரியை.]

கம்பங்கொளுத்து-தல் *kambaṇ-koḷuttu,* 5.செ.குன்றாவி.(v.t.) கம்பவாணத்துக்கு நெருப்பு வைத்தல் (இ.வ.); to ignite fire-works fastened to a post.

[கம்பம் + கொளுத்து.]

கம்பங்கோரை *kambaṇkōrai,* பெ.(n.) ஒருவகைக் கோரைப்புல்; a kind of Korai grass (சா.அக.).

[கம்பு + அம் + கோரை.]

கம்பசூத்திரம் *kamba-śūttiram,* பெ.(n.)1.கம்பங்கள் இடையில் கயிறு கட்டி அதன்மேலேறி நடந்தும், ஓடியும், ஆடியும் காட்டும் அருஞ்செயல்கள்; daring feats of an acrobat on the rope. 2.அருஞ்செயல் கள்; rare deeds.

*[கம்பம் + சூத்திரம். **Skt.** சூத்ர = கயிறு. கழைக் கூத்தரின் கம்பக்கயிறு, கம்பசூத்திரம் எனப்பட்டது. கழையாடல் எனின் முற்றுந் தமிழாம். **கழையாடல்** பார்க்க; see kaḻai-yāḍal.]*

கம்பசூத்திரம் என்னும் சொல்லுக்குச் சென்னை அகரமுதலியில் 'கம்பர் இராமா யணத்தில் அமைத்த உய்த்துணர் பொருள் தரும்

அருங்கவி' எனப்பொருள் கூறியிருப்பது பொருந்துவதன்று. உய்த்துணரப் பாடுவது எல்லாப் புலவர்க்கும் பொதுவானது. கயிற்றின் மேல் நடப்பதைப் போல், பல்வேறு இக்கட்டுகளிடையே செயலாற்றுவதைக் கம்பசூத்திரம் என்று கூறுவது உலக வழக்கு.

கம்பசேவை *kamba-šēvai,* பெ.(n.) கம்பத்தில் திருவிளக்கு ஏற்றிச் செய்யும் பூசை (தஞ்சை.); a festival in which an oil lamp mounted on a stand, is worshipped.

பட. கம்புவ (கூட்டுணவு).

[கம்பம் + சேவை – கம்பசேவை. செய் → செய்வு → சேவை.]

வடித்த சோற்றை மலைபோல் குவித்து அதன் நடுவில் நாமமிட்ட விளக்குக் கம்பத்தை நட்டு, பெருமாளாகக் கருதி வணங்கியபின் அவ்வுணவைப் பிறவெஞ்சணங்களோடு அனைவரும் உண்ண வழங்கப்படுவது.

கம்பஞ்சம்பா *kambañ-cambā,* பெ.(n.) சம்பா நெல்வகை; a kind of paddy resembling bulrush millet.

[கம்பு + அம் + சம்பா – கம்பஞ் சம்பா. 'அம்' சாரியை. இது வடிவத்தில் கம்பைப்போன்ற உருளரிசி நெல்வகை; நறுமணமிக்கது.]

கம்பஞ்சோறு *kambañcōṟu,* பெ.(n.) கம்பரிசிச் சோறு; cooked millet (சா.அக.).

[கம்பு + அம் + சோறு. 'அம்' சாரியை]

கம்பட்டக்காரன் *kambaṭṭa-k-kāraṉ,* பெ.(n.) நாணயம் செய்வோன் (வின்.); coiner.

க. கம்மடி; **கோத.** கம்மட்ட *(இ.பெ.).*

[கம் → கம்பட்டம் + காரன் – கம்பட்டக்காரன்.]

கம் = கொல்லுத்தொழில். கம்முத்தொழில் செய்வோன் கம்மாளன் என்றும் கம்பட்டன் என்றும் அழைக்கப்படுவது மரபு.

கம்பட்டக்கூடம் *kambatta-k-kūḍam,* பெ.(n.) நாணயச்சாலை (வின்.); mint.

[கம்பட்டம் + கூடம் – கம்பட்டக்கூடம்.]

கம்பட்டசாலை *kambaṭṭa-šālai,* பெ.(n.) ***கம்பட்டக் கூடம்*** பார்க்க; see *kambaṭṭa-k-kūḍam.*

[கம்பட்டம் + சாலை.]

கம்பட்டம் *kambaṭṭam,* பெ.(n.) 1. நாணயம் (வின்.); coinage, coin. 2.அச்சு; a mint (சேரநா.) (ச.அக.). ***கம்*** பார்க்க; see *Kam.*

ம. கம்மிட்டம், கம்மட்டம்; **க., கோத.** கம்மட.

[கம் → கம்பட்டம்.]

கம்பட்டமடி-த்தல் *kambaṭṭa maḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) காசடித்தல் (இ.நூ.த.பெ.அக.); to mint money.

[கம் → கம்பட்டம் + அடித்தல். கம்மம் = கருமான் தொழில், இரும்பு போன்ற மாழைத்தொழில். கம்மம் → கம்மடம் → கம்பட்டம்.]

கம்பட்டமுளை *kambaṭṭa-muḷai,* பெ.(n.) நாணய முத்திரை (வின்.); die, coining stamp.

[கம்பட்டம் + முளை – கம்பட்டமுளை. முளை = கரு, மூலவடிவம்.]

கம்படி *kambaḍi,* பெ.(n.) ஊர்ப்புறத்துக் கம்பு விளைவிக்கும் நிலம்; கம்பங்கொல்லை (G.Tn.D.i. 159.); plot of land on the out skirts of a village set apart for growing bulrush millet.

ஒ.நோ. மலையடி

[கம்பு + அடி – கம்படி. அடி = அடிவாரம், தாழ்வான நிலம்.]

கம்பத்தக்காரன் *kambatta-k-kāraṉ,* பெ.(n.) நிலவுடைமையாளன்; one who owns, landed property. ஏழூர்க் கம்பத்தக்காரன் (இ.வ.).

தெ. கம்மதமு (பண்ணை).

[கம் → கம்பத்தம் + காரன் – கம்பத்தக்காரன். கம்பத்தம் = உழவுத்தொழில். உழவுத்தொழில் செய்பவனைக் கமக்காரன் என்பது ஈழத்து வழக்கு.]

கம்பத்தம் *kambattam,* பெ.(n.) 1.சொந்த வேளாண்மை; agriculture, cultivation by the owner with his own stock. 2. வேளாண்நிலம்; agricultural land.

தெ. கம்மதமு

[கம் → கம்மம் → கம்மத்தம் → கம்பத்தம். அம் → கம் = நீர். நீரைக்குறித்த சொல் நன்செய்ப்பயிர் செய்யும் வேளாண்மையைக் குறித்தது.]

கம்பத்தன் *kambattaṉ,* பெ.(n.) இராவணன்; Erāvaṇan, the king of Ceylon.

[கம்பத்தன் = பெருநிலக்கிழார், தலைவன், அரசன்]

கம்பத்திளையனார் *kambattiḷaiyaṉār,* பெ.(n.) முருகன்; Lord Murugaṉ.

[கம்பம் + அத்து + இளையனார். இளையனார் = இளையவன், முருகன்.]

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் குளத்தருகேயுள்ள சிறு கல்மண்டபத் தூணில் வடிக்கப்பட்டுள்ள முருகனின் வடிவம்.

கந்து = தூண், பற்றுக்கோடு. கந்து = கந்தன் = தூணிற்பொறிக்கப்பட்டவன் அல்லது பற்றுக் கோடானவன், முருகன்.

கம்பதாளி *kambatāḷi,* பெ.(n.) ஒருவகை மன நரம்பியல் நோய்; a kind of hysteria due to menstrual disorder; *"சூலைநோய் கம்பதாளி குன்மமும்" (தேவா. 995.4).*

[ஒருகா. கம்பு + அதளி – கம்பதளி → கம்பதாளி = கம்பினால் குத்துவது போன்ற வலிமிகுக்கும் நோய். அதளி = குழப்பம், வலி.]

கம்பதியக்கம் *kambadiyakkam,* பெ.(n.) ஒருவகை மனநோய்; a variety of acute insanity (சா.அக.).

[கம் → கம்மம் → கம்பம் (நடுக்கம்) + தியக்கம் (கலக்கம்).]

கம்பந்தட்டு *kambantaṭṭu,* பெ.(n.) **கம்பந்தட்டை** பார்க்க; see *kambantaṭṭai.*

[கம்பு + அம் + தட்டு. 'அம்' சாரியை.]

கம்பந்தட்டை *kambantaṭṭai,* பெ.(n.) கம்பங்கதிரின் தாள்; straw of the bulrush millet.

[கம்பு+அம்+தட்டை – கம்பந்தட்டை. 'அம்' சாரியை. தாள்→ தாட்டு → தாட்டை → தட்டை.]

கம்பந்தாளி *kamban-tāḷi,* பெ.(n.) தாளிக்கொடி வகை (யாழ்.அக.); convolvulus.

[கம்பு + அம் + தாளி – கம்பந்தாளி.]

கம்பந்திராய் *kambantirāy,* பெ.(n.) ஒருவகைத் திராய்ச்செடி; a species of bitter grass plant (சா.அக).

[கம்பம் + திராய், திராய் = செடிவகை.]

கம்பநாட்டாழ்வான் *kamba-nāṭṭāḻvāṉ,* பெ.(n.) கம்பன்; poet Kamban, spoken of as a devotee of Visṅu. *"ஆதித்தன் கம்பநாட்டாழ்வான் கவி" (கம்பரா. தனி.1.).*

[கம்பநாடு + ஆழ்வான். கம்பனைக் கம்பநாடன் என்றழைப்பதுண்டு. 'ஆழ்வான்' மதிப்புரவு கருதிய அடைமொழி.]

கம்பநாடன் *kamba-nāḍaṉ,* பெ.(n.) கம்பன்; Kamban so called because he lived probably in Kamba-nādu. *"கம்பநாடன் சொன்ன மும்மணிக் கோவை" (தமிழ்நா.102.).*

[கம்பநாடு + அன் – கம்பநாடன்.]

கம்பனும் கம்பனின் முன்னோரும் வாழ்ந்த சோழநாட்டுப் பகுதி கம்பநாடு என்றழைக் கப்பட்டதால் பெற்ற பெயர். நாடு என்னும் பிரிவு சோழர் காலத்தில் கூற்றம் என்னும் மாவட்டப் பிரிவின் உட்பிரிவு. இன்றைய வட்டம் (taluk) என்னும் நிலப்பிரிவுக்கு ஒப்பானது. காவிரிக்குத் தென்கரையில் கம்பநாடும் வடகரையில் கரகநாடும் இருந்ததாகக் கூறப் படுவது செவிவழிச் செய்தி. *கம்பநாடு* பார்க்க; see *kambanāḍu.*

கம்பநாடு *kamba-nāḍu,* பெ.(n.) சோணாட்டைச் சார்ந்த குறுநிலப் பகுதி; a taluk in Cōla-nāḍu. *"கமபநாடுடைய வள்ளல் கவிச்சக்ரவர்த்தி" (கம்பரா. தனி.6.) (செ.அக.).*

ம. கம்பநாடு

[கம்பம் + நாடு – கம்பநாடு.]

காவிரிக்குத் தென்கரையில் கம்பநாடும் வடகரையில் கரகநாடும் இருந்ததாக நிலவும் செவிவழிச் செய்தி பிற்காலத்தில் மாரியம்மன் விழாவாக மாறிய அம்மன் வழிபாட்டிலும் இடம்

செவ்வாய்க்கிழமையன்று அம்மன் கோவிலில் 15 நாளுக்கு முன்பே நடப்பட்ட முத்தலை வெட் பாலைக்கம்பத்திற்குப் பலிதந்து பொங்கல் இட்டுப்பூசை செய்து பாடிவிழாக்கோள் எடுப்பது கம்பநாட்டு வழக்கம். கம்பம் நடாமல் கரகம் எனப்படும் தீச்சட்டி சுமந்து வேப்பிலை எடுத்து ஆடிக்கொண்டுவந்து தீமிதிப்பது கரகநாட்டார் வழக்கம்.

முத்தலை வெட்பாலைக் கம்பம் நடும் வழக்கமுடையவர்கள் வாழ்ந்த ஊர்ப்பகுதி கம்பநாடு எனப்பட்டது. இவர்கள் தீமிதிக்காமல் விழாப்பறையறைந்து கம்பம் நட்ட நாள்முதல் கம்பத்திற்குப் பலியிடும் 15ஆம் நாள்வரை அதனைச் சுற்றி ஒயிலாட்டம் ஆடுவர்.

கம்பபாணம் *kamba-bāṇam,* பெ.(n.) **கம்பவாணம்** பார்க்க; see *kamba-vāṇam.*

[கம்பவாணம் → கம்பபாணம்.]

கம்பம்[1] *kambam,* பெ.(n.) 1. அடிமரம்; stump of a tree. தெருக்கம்பத்தில் மாட்டைக் கட்டக் கூடாது (உ.வ). 2. தூண்(திவா.); post, pillar.3. விளக்குத் தண்டு; lamp-stand, candle stick. 4. கழைக் கூத்திற்குப் பயன்படும் கொம்பு; pole used by rope-dancers. 5.வெடிகளை வெடிக்கப் பயன்படும் தூண்; a post erected for fireworks.

ம.கம்பம்; **க.**கம்ப; **து.**கம்ப; **தெ.**கம்ப; **பட.**கம்பு.

Skt. stambha; **Pkt.** khambha.

[கொம்பு → கம்பு → கம்பம் = பெருமரத்தூண். 'அம்' பெருமைப் பொருட் பின்னொட்டு.]

வடமொழியில் "ஸ்தம்ப்" = ஊன்று, நில் தாங்கு, ஸ்தம்ப = ஊன்றிய [மரம் அல்லது கல் அல்லது செங்கல்] தூண் எனக் கூறப்படினும் அச்சொல் "ஸ்கம்ப்" என்பதன் திரியாயிருக்கலாம் என மானியர் வில்லியம்சு அகரமுதலி கூறுகிறது.

வடமொழியில் 'stambha' ஐரோப்பிய மொழிகளில் stump எனும் சொல் காலால் மிதித்தல் அல்லது அழுத்துதலைக் குறிப்பிடுகிறது. தமிழில் உள்ள "கம்பு" நீட்சிப்பொருள் குறித்தது. கட்டடக் கலை பண்டைத் தமிழரிடை மலர்ந்த காலம் சிந்துவெளி நாகரிகத்திற்கும் முந்தையது. கி.மு. 1000 வரை யிலும் கூட ஆரியர் கட்டடக்கலை அறியாதவர் களாயிருந்தனர். ஆதலின் "ஸ்தம்ப்" என்பது தூணைக் குறிக்கும் சொல்லாக வழக் கூன்றி யிருக்க வாய்ப்பில்லை. தமிழ் கம்பு → கம்பம் சொல்லே வடமொழி 'ஸ்தம்ப' சொல்லுக்கு மூலமாகும்.

கம்பம்[2] *kambam,* பெ.(n.) 1. அசைவு; vibration, shaking, motion. *"கம்ப மில்லாக் கழிபெருஞ் செல்வர்" (மணிமே.17:63).* 2. நடுக்கம்; tremor, tremulousness, quaking, *"கம்பஞ்செய் பிரிவு நீங்கி"* (சீவக.1737.).

து. கம்ப; **ம.** கம்பம்; **Skt.** kamba; **Indon.** gempa bumi; **Mal.** gempa.

[கம் = நீர், நீரலை, அலைவு. கம் → கம்பம் = நீரலைபோன்று அசையும் நடுக்கம், அலைவு.]

கம்பு என்னும் சொல்லும் நீர் எனப்பொருள் படும். சேக்கிழார் இப்பொருளில் இச்சொல்லை ஆண்டுள்ளார்.

த. கம்பம் > **Skt.** kamba

கம்பம்[3] *kambam,* பெ.(n.) கச்சியேகாம்பரர் கோயில்; the Śiva shrine at Kanchipuram. *"கண்ணுதற் பரமற்கிடங் கம்பமே" (தேவா.1035.1.).*

[ஏகம்பம் → கம்பம். (முதற்குறை)]

கம்பம்[4] *kambam,* பெ.(n.) தாலம்பம், வெள்ளை சாலாங்கம் கற்பரி முதலிய வைப்பு நஞ்சுகள் (மூ.அ.); mineral poisons.

[கம் → கம்பம் = நடுங்கச்செய்வது, சாவிப்பது.]

த. கம்பம் > **Skt.** kamba (to tremble)

கம்பம்[5] *kambam,* பெ.(n.) பாய்மரம் (யாழ்.அக.); mast.

[கொம்பு → கம்பு → கம்பம்.]

கம்பம்[6] *kambam,* பெ.(n.) சிற்றூரின் பெயர்; a village name.

Pkt.,Pali. kammam; **H.** gām; **Port.**campo; **Mal.** kampung.

[கம் → (நீர்) கம்மம் → கம்பம். கம்பம்=வயல் சார்ந்த ஊர்.]

கம்பம்[7] *kambam,* பெ.(n.) 1. பேய்ப்புல்; a kind of wild grass. 2. அரிசிப்புல்; a kind of grass. 3. வாலுளவை மரம்; intelect tree (சா.அக).

[கம் → கம்பம் = அசைவு, நடுக்கம், அச்சம் தரத்தக்கது.]

கம்பம்[8] *kambam,* பெ.(n.) வேளாண்மை; agriculture.

[கம்மம் → கம்பம்.]

கம்பம்[9] *kambam,* பெ.(n.) சுருளிமலை அருகில் உள்ள வேளாண் வளமிக்க ஊர்; a municipal town near suruḷimalai town famous for agriculturel.

[கம்பம் → கம்மம் → கம்பம். கம்மம் = வேளாண்மை.]

கம்பம்[10] *kambam,* பெ.(n.) வழலை; a universal salt used in alchemy.

[கம் → கம்பம்.]

கம்பம்புல் *kambam-pul,* பெ.(n.) புல்வகை (வின்.); செந்தினை; stalk grass, bulrush millet.

ம. கம்பம்

[கம்பு + அம் + புல் – கம்பம்புல். 'அம்' சாரியை.]

கம்பம்பொரி *kambampori,* பெ.(n.) பொரித்தகம்பு; fried millet (சா.அக).

[கம்பு + அம் + பொரி. 'அம்' சாரியை]

கம்பர் *kambar,* பெ.(n.) **கம்பன்** பார்க்க; see *Kambaṉ* *"கம்பர் கொள்ளும் துணை" (பெரியபு.87.).*

[கம்பன் → கம்பர். 'அர்' உயர்வுப் பன்மையீறு.]

கம்பர்மேடு *kambarmēḍu,* பெ.(n.) கம்பர் பிறந்த ஊரான தேரழுந்தூரில் உள்ள மேட்டுப்பகுதி; a mound at Therazhundur, the birth place of the poet Kambar.

[கம்பர் + மேடு.]

கம்பர் மேட்டில் செய்த அகழ்வாராய்ச்சியில் பெருங்கற்காலச் சின்னங்களும், இடைக்காலச் சின்னங்களும் கிடைத்துள்ளன. சீன எழுத்து கொண்ட வெண்கலமணியும் சீனச் செப்புக் காசுகளும் கிடைத்துள்ளன. மணியில் உள்ள "பீனாஸ்" என்ற சீனச்சொல் "அமைதி" என்ற பொருள் கொண்டது.

கம்பரசம் பேட்டை *kambarasam pēṭṭai,* பெ.(n.) திருச்சி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruchy district.

த.பட்டி> E. pet >த.பேட்டை

[கம்பம் + அரசன் + பேட்டை– கம்பரசன் பேட்டை → கம்பரசம் பேட்டை. கம்பம் = வயல் சார்ந்த ஊர்.]

கம்பராசபுரம் *kambarāsapuram,* பெ.(n.) காஞ்சி புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanchi puram district.

[கம்பம் + அரசன் + புரம்–கம்பரசன் புரம் → கம்பராசபுரம். கம்பம் = வயல் சார்ந்த ஊர்.]

கம்பராமாயணம் *kambarāmāyaṇam,* பெ.(n.) கம்பரியற்றிய இராமன் கதைக் காப்பியம்; the story of Rama written in Tamil by the poet Kambar.

[கம்பர் + இராமாயணம்.]

இடைக்காலத் தமிழிலக்கியத்துள் நிலைத்த சிறப்புகள் பலவற்றைக் கொண்டதும், தொன் மக்கதையை அடிப்படையாகக் கொண்டதும், கம்பரால் யாக்கப்பட்டதுமான இப்பேரி லக்கியம் வால்மீகியின் காப்பியத்தை முதல் நூலாகக் கொண்டு அமைந்த வழிநூலாகும்; என்றாலும் முதல் நூற்றன்மைகள் பலவற்றைத் தமிழ் மரபு, பண்பாட்டிற்கேற்ப அமைத்து ஆறு காண்டங் களையும் பத்தாயிரம் பாடல்களையும் பெற்று விளங்கும் பேரிலக்கியம். உலகப்புகழ் பெற்ற இலக்கியங்களுள் ஒன்றாகும்.

கம்பரிசி *kambariši,* பெ.(n.) கம்புத் தவசம்; husked grain of bulrush millet.

ம. கம்பப்பயறு (ஒருவகைத்தவசம்).

[கம்பு + அரிசி – கம்பரிசி.]

கம்பல்[1] *kambal,* பெ.(n.) ஆடை; garment, clothing. *"தறைந்த தலையுந் தன் கம்பலும்" (கலித்.65:6.).*

[கம் = நீர். கம்→ கம்பல் = ஈரத்துணி.]

கம்பல்[2] *kambal,* பெ.(n.) பேரொலி (பெருங். இலா வாண. 2: 138); roar, noise.

[கும்→ கம் → கம்பல்→ கம்பலை = திரண்டெழும் பேரோசை. முழங்கும் பேரோசை எழுப்பும் சங்கும், கம்பு அல்லது கம்பம் என வழங்கியது. ஐந்திர விடமொழிகளுள் ஒன்றான மராத்தியில் கம்பு எனுஞ்சொல் ஊதுசங்கைக் குறிக்கும். கண்ணீரும் கம்பலையுமாய் என்னும் வழக்கை ஒப்புநோக்குக.]

கம்பல்[3] *kambal,* பெ.(n.) மீன் பிடிப்பதற்கு ஏதுவாகச் சிறுகுச்சிகளையும், மரத்து இலைகளையும் கொண்டு ஆற்றின் குறுக்கே எழுப்பப்படும் தடை; a small barrage of twigs and leaves of trees put up across a canal for fishing.

ம. கம்பல்

[கம்பு→ கம்பல்.]

கம்பலம்[1] *kambalam,* பெ.(n.) கம்பளிப்போர்வை (பிங்.); woollen blanket, rug. *"கம்பலத்தன்ன" (நற். 24.).* 2.செம்மணிக் கம்பளம்; carpet. *"செய்ய கம்பலம் விரித்தென" (சீகாளத்.பு.நான்முக.108).* 3. மேற்கட்டி; canopy, tester. *"மேகக் கம்பல நிழற்கீழ் வைகுங் கடவுளர்" (இரகு. குசன 66.).*

[கரும் + படம் = கரும்படம் → கம்படம் → கம்பளம் → கம்பலம். கம்பளத்தைக் கம்பலம் எனக்குறிப்பது வழுவாம்.]

கம்பலம்[2] *kambalam,* பெ.(n.) ***கம்பலை**[1]* பார்க்க; see *kambalai*[1]. *"கம்பலம் பொலிவெய்த" (சீவக.56.).*

[கம்பலை → கம்பலம்.]

கம்பலி *kambali,* பெ.(n.) பறைவகை; a kind of drum. *"கம்பலி யுறுமை தக்கை"(கம்பரா.பிரமாத். 5.).*

[கம்பலை → கம்பலி.]

கம்பலை[1] *kambalai,* பெ.(n.) 1. ஒலி; sound, noise, clamour, roar. *"வம்பமாக்கள் கம்பலை மூதூர்" (மணிமே.3:126).* 2. யாழோசை (திவா.); sound of a lute. 3. மருதநிலம் (திவா.); agricultural tract. 4. யானையின் பிளிறல்; trumpeting of an elephant. *"களிறு விளிப்படுத்த கம்பலை வெரீஇ" (அகநா.165:2).* 5. பறவைகள் பேரிரைச்சல்; noise of the birds. *"வம்பப் புள்ளின் கம்பலை" (அகநா.181:9).* 6. அலர்மொழி; the idle talk in a village about any two lovers. *"கல் என் கம்பலை செய்து அகன்றோர்" (அகநா.227:22).* 7. ஓசை; sound. *"எங்கோ னிருந்த கம்பலை மூதூர்" (புறநா.51:1).* 8. சுழலோசை; roar. *"சுழற்கம்பலை" (புறநா.120:20).*

[கும் → கம் → கம்பல் → கம்பலை = திரண்டெழும் பேரோசை, யாழ்கள் பல இயைந்து எழுப்பத்தக்க இன்னோசை, இசை முழக்கம் அல்லும் பகலும் அறாத மருதநிலம்.]

கம்பலை[2] *kambalai,* பெ.(n.) 1. நடுக்கம் (சூடா.); trembling:fuivering, quaking. *"கண்ணீருங் கம்பலையுமாகி" (தாயு.நினைவொன்று.9).* 2. அச்சம் (பிங்.); fear, dread. 3.துன்பம் (திவா.); distress, suffering. 4.சச்சரவு (வின்.); uproar, tumult, quarrelling.

த. கம்பல் > **Skt.** kampa.

[கம் → கம்பல் → கம்பலை. கம்பல் = நடுக்கம்.]

கம்பலை[1]**–த்தல்** *kambalai-,* 4.செ.கு.வி.(v.i.) பேரொலிசெய்தல்; to roar, shout. *"கம்பலைத்தெழு காமுறு காளையர்"(தேவா.3,4.).*

து. கம்பியுனி (நடுங்குமாறு செய்).

[கம்பல் → கம்பலை.]

கம்பலைகட்டு–தல் *kambalai-kattu-,* 5 செ.கு.வி. (v.i.) ***கம்பலைப்படு-*** பார்க்க; see *kambalai-p-padu.*

[கம்பலை + கட்டு]

கம்பலைப்படு–தல் *kambalai-p-padu-,*20 செ.கு.வி (v.i.) சச்சரவு செய்தல்; to quarrel, raise a tumult.

[கம்பலை + படு.]

கம்பலைமாரி *kambalai-māri,* பெ.(n.) 1.வேடர் வணங்கும் ஒரு பெண் தெய்வம்; female demor worshipped especially by hunters. 2.சீற்றங் கொண்டவள்; termagant, Kirago (செ.அக.).

[கம்பலை + மாரி. கம்பலை = ஆரவாரம், போர், போருக்கம், சினம், மாரி = பெண் தெய்வம்.]

கம்பவம் *kambavam,* பெ.(n.) மாந்த உடம்புகளிலும், அணியும்துணிகளிலும் காணும் நுண்ணுயிரி, சீலைப்பேன்; a parasitic insect found upon man and his clothes (சா.அக.).

[கம் = நீர், வியர்வை. கம் → கம்பு →கம்பவம்.]

கம்பவலை *kamba-valai,* பெ.(n.) ஒருவகைப் பெரிய வலை; a kind of large fishing net (சேரநா.).

ம. கம்பாவல, கம்பவல.

[கம்பம் + வலை.]

கம்பவாணம் *kamba-vānam,* பெ.(n.) நீண்ட கம்பத்தில் இணைத்துக் கொளுத்தப்படும் வாணம் (கொ.வ.); fireworks shot from a tall post .

[கம்பம்' + வாணம். வாணம் = நீட்சி.]

கம்பவாதம் *kamba-vādam,* பெ.(n.) ***கம்பவூத*** பார்க்க; see kamba-vūdam.

[கம்பம்' + ஊதம்.]

கம்பவிளக்கு *kambavilakku,* பெ.(n.) பல அடுக்குத் தட்டுகள் அமைந்த வெண்கலக் குத்துவிளக்கு;

large brass lamp with several oil pans one above the other (சேரநா.).

மறுவ. ஆயிரம் விளக்கு; அடுக்கு தீபம்.

ம. கம்பவிளக்கு

[கம்பம் + விளக்கு.]

கம்பவூதை *kambavūdai,* பெ.(n.) நடுக்கும் ஊதை நோய்; shaking palsy.

[கம்பம் + ஊதை. கம்பம் = நடுக்கம்.]

கம்பளத்தாயி *kambaḷattāyi,* பெ.(n.) தொட்டியர் வணங்கும் ஒரு பெண் தெய்வம் (இ.வ.); female deity worshipped by the toṭṭiya caste (செ.அக.).

[கம்பளம் + அத்து + ஆயி – கம்பளத்தாயி. கம்பளம் = ஆந்திர மாநிலத்துப்பகுதி. 'அத்து' சாரியை. ஆயி = பெண்தெய்வம்.]

கம்பளத்தான் *kambaḷattāṉ,* பெ.(n.) 1.தொட்டிய இனத்தவன் (E.T.); man of the toṭṭiya caste. 2. குடு குடுப்பாண்டி (இ.வ.); a soothsaying beggar in a motley attire playing on a taborine.

க. கம்பளக்கார (கூலியாள்).

[கம்பளம் + அத்து + ஆன் – கம்பளத்தான். 'கம்பளம்' இடப்பெயர். 'அத்து' சாரியை. 'ஆன்' ஆண்பாலீறு.]

கம்பளம்[1] *kambaḷam,* பெ.(n.) 1. விலங்கினங்களின் மேல்படர்ந்திருக்கும் இழை; fleece of sheeps, goats, yaks etc. 2. கம்பளிப்போர்வை; woollen shawl, blanket. 3. செம்படாம் (திவா.); red cloth. 4. மயிர்ப்படாத்தாலாகிய தரைவிரிப்பு; wollen rug to be spread on the floor. *"இந்திரன் பாண்டு கம்பளந் துளக்கியது" (மணிமே.14:29.).* 5. தொட்டிய இனத்தினர்; the toṭṭiya caste. *"கம்பள வல்லக்கர் குலன்" (தனிப்பா.1, 339,51).* 6. செம்மறிக்கடா (சூடா.); ram of the fleecy kind. 7. மயிர் அடர்ந்த ஒரு மான்; a species with thick hair (சா.அக.).

ம. கம்பளம்; **க.** கம்பல; **தெ.** கம்பளமு.

த. கம்பளம் > **Skt**.kambala.

[கரும் + படம் – கரும்படம் → கம்படளம் → கம்பளம் = கருமை நிறமுடையது.]

Skt. kambala, a blanket, a cumley (very often a black colour). Its Tbh. is said to be kambaḷi, Gt. (p.520) is quite right in saying that kambala is composed of D.kar, black, and paṭa, cloth (that may appear as paḍa in D.) cf. The kuṟuba term kerimbaḍa (i.e. D. kari and paḍa=paṭa), a cumley. Kambaḷi, is no doubt, originally was karbaḷi (i.e. kar - paḷi), black cloth (K.K.E.D. xxxii).

கம்பளம்[2] *kambaḷam,* பெ.(n.) பரங்கிக்காய்; சருக்கரைப்பூசணி; squash gourd.

[கும்பளம் → கம்பளம்.]

கம்பளர்[1] *kambaḷar,* பெ.(n.) மருதநிலமக்கள் (திவா.); inhabitants of the agricultural tract.

[கம் = நீர், வேளாண்மை, நன்செய் நிலம். கம் → கம்பளம் → கம்பளர்.]

கம்பளர்[2] *kambḷar,* பெ.(n.) தொட்டிய இனத்தார்; men of the toṭṭiy a caste.

மறுவ. கம்பள நாயக்கர், கம்பளத்தான்.

[கம் → கம்பு + அளர் – கம்பளர் = நன்செய், உழவுத்தொழில் மேற்கொண்ட உழவரினத்தார்.]

கம்பளர் காம்பிலிச் சீமையினின்று வந்தவராவர் [சொ.ஆ.க.25].

கம்பளவு *kambaḷavu,* பெ.(n.) குறிப்பிட்ட அளவுடைய கம்பினைக் (கோல்) கொண்டு அளக்கும் நிலவளவை; measuring a plot of land with a rod.

ம. கம்பளவு

[கம்பு + அளவு.]

கம்பளி[1] *kambaḷi,* பெ.(n.) 1. மயிர்ப்படாம்; coarse, woollen blanket, woollen stuffs, hair cloth. *'கம்பளி மூட்டை என்று கரடி மூட்டையை அவிழ்த்தானாம்' (பழ.).* 2. தாறுமாறு (கொ.வ.); confusion, disorder. 3. ***கம்பளிச்செடி*** (மூ.அ.) பார்க்க; see kambaḷi-c-ceḍi.

தெ. கம்பிளி; **க.** கம்பளி, கம்பழி; **ம.** கம்பளி; **து.** கம்பொளி; பட. கம்பிளி.

Skt. kambala; **Mar.** kambeli.

[கரும் + படம் – கரும்படம். கரும்படம் → கம்படம் → கம்பளம் → கம்பளி.]

கம்பளி² *kambaḷi,* பெ.(n.) 1.ஒருவகை ஆடு (யாழ்.அக.); a kind of sheep. 2. ஒருவகைக் கரடி; a kind of woolly bear.

து. கம்பொளி

[கரும் + படம் – கரும்படம் → கம்படம் → கம்பளம் → கம்பளி. கம்பளி ஆடை நெய்தலுக்குத் தேவையான கம்பளி இழைதரும் விலங்கு.]

கம்பளிக்கயிறு *kambaḷi-k-kayiṟu,* பெ.(n.) கண்ணேறு படாமலிருக்க வீட்டின்முன் பிற பொருள் களுடன் கட்டப்படும் கயிறு; woollen rope (with certain articles) displayed before door of house to avert evil eye.

[கம்பளி + கயிறு.]

கம்பளிக்கொண்டான்¹ *kambaḷi-k-koṇḍāṉ* பெ.(n.) 1.கம்பளிப்பூச்சி; cater-piller, 2.குளப்பாலை; coorg milk plant. 3. முசுமுசுக்கை; bristly brigony (சா.அக.).

[கம்பளி + கொண்டான்.]

கம்பளிக்கொண்டான்² *kambaḷi-k-koṇḍāṉ,* பெ.(n.) ***கம்பளிச்செடி*** பார்க்க; see *kambaḷi-c-ceḍi.*

[கம்பளி + கொண்டான்]

கம்பளிச்சட்டைமுனி *kambaḷi-c-caṭṭaimuṉi,* பெ.(n.) ஒருமுனிவர்; a saint.

[கம்பளி + சட்டை + முனி.]

சிங்களத்தில் பிறந்து, தஞ்சை மாவட்டச் சீர்காழியில் முத்தியடைந்த சித்தர்; இவர் ஊத மருத்துவம், ஓகஅறிவு நூல்களையும் வைத்திய நிகண்டையும் பாடியுள்ளார். கைலாசச் சட்டைமுனி, சட்டைநாதர் என்னும் பெயர்களும் இவருக்குண்டு.

கம்பளிச்செடி *kambaḷi-c-ceḍi,* பெ.(n.) ***முசுக் கொட்டை*** (மூ.அ.) பார்க்க; see *musu-koṭṭai.*

க. கம்பளிகிட; ம. கம்பளிச்செடி.

[கம்பளி + செடி = கம்பளிப் புழுக்கள் விரும்பித்தின்னும் செடியாதலின் பெற்றபெயர்.]

கம்பளித்துணி *kambaḷi-t-tuṇi,* பெ.(n.) கம்பளியால் நெய்த துணி; woollen shawl.

[கம்பளி + துணி.]

கம்பளிப்பழம் *kambaḷi-p-paḻam,* பெ.(n.) முசுக் கொட்டைப்பழம்; mulberry fruit (சா.அக.).

[கம்பளி + பழம்.]

கம்பளிப்பிசின் *kambaḷi-p-pišiṉ,* பெ.(n.) சிறு மரவகை (m.m.); white Emetic nut.

[கம்பளி + பிசின் .]

கம்பளிப்புழு *kambaḷi-p-puḻu,* பெ.(n.) உடலில் மயிருள்ள ஒரு வகைப் புழு (வின்.); hairy caterpillar (செ.அக).

ம.கம்பளிப்புழு; க.கம்பளிதழு; து.கம்பொளிபுரி; தெ.கம்பளிபுருகு.

[கம்பளி + புழு.]

கம்பளிப்பூச்சி *kambaḷi-p-pūcci,* பெ.(n.) ***கம்பளிப்புழு*** பார்க்க; see *kambaḷi-p-puḻu.*

கம்பளிப்பூச்சி

[கம்பளி + பூச்சி.]

கம்பளிப்பூச்சிக்கடி *kambaḷi-p-pūcci-k-kaḍi,* பெ.(n.) கம்பளிப்பூச்சிக் கடியினாலேற்பட்ட ஒருவகை அரிப்பு நோய்; a variety of such skin itching disease caused by a species of caterpillar (சா.அக.).

[கம்பளி + பூச்சி கடி.]

கம்பளிப்பூச்சிச்செடி *kambaḷi-p-pūcci-c-ceḍi,* பெ.(n.) ***கம்பளிச்செடி*** பார்க்க; see *kambaḷi-c-ceḍi* (செ.அக.).

[கம்பளி + பூச்சி + செடி.]

கம்பளிப்பூச்சி செடி

கம்பளிப்பேச்சு *kambaḷi-p-pēccu,* பெ.(n.) 1.வீண் பேச்சு (கொ.வ.); idle talk, vain talk. 2.குடும்ப வழக்குகளில் இருதரப்பாரும் நடுநிலை மக்களுடன் கம்பளியில் அமர்ந்து விரிவாகப்பேசி நன்முடிவு காணல்; detailed discussion held over a carpet among the two parties of a family brawl along with common people. *"கம்பளி பேசினால்தான் தகராறு தீரும்" (கோவை.).*

[கம்பளி + பேச்சு – சிவப்புநிறக் கம்பளியில் உட்கார்ந்து கொண்டு பேசுவது செல்வர் குடும்பத்து வழக்கமாக, முதுபண்டைக்காலச் சிற்றூர்களிலும் பழங்குடிமக்கள் குடியிருப்புகளிலும் நிலவியது.ஒ.நோ: திண்ணைப்பேச்சு.]

கம்பளியாடு *kambaḷi-y-āḍu,* பெ.(n.) குறும்பாடு (வின்.); a kind of fleecy sheep.

[கம்பளி + ஆடு.]

கம்பளியாடை *kambaḷi-y-āḍai,* பெ.(n.) கம்பளி இழையால் நெய்தஆடை; woollen cloth.

[கம்பளி + ஆடை.]

கம்பளியிழை *kambaḷi-yiḻai,* பெ.(n.) விலங்கினங் களின் மேல் படர்ந்திருக்கும் மயிரிழை; the fleece of sheep, goats, yaks, etc.

[கம்பளி + இழை.]

கம்பற்று *kambaṟṟu,* பெ.(n.) கப்பலில் விழும் ஓட்டை (யாழ்.அக.); leakage in a ship.

[கம் + பற்று. கம் = நீர்.]

கம்பன்[1] *kambaṉ,* பெ.(n.) தமிழில் இராமாயணம் இயற்றிய பெரும்புலவர்; an eminent poet, author of the Ramayana, 12th c. *"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" (பாரதி).*

ம. கம்பன்

[கம்பன் → கம்பம் என்னும் கம்பநாட்டு பகுதியினன். காவிரியின் ஒருசார் தென்கரைப்பகுதி அக்காலத்தில் கம்பநாடு எனப்பட்டது.]

கையில் கம்பு வைத்திருந்தவன் கம்பன் என்றும் கம்பங்காடு காவல் காத்தவன் கம்பன் என்றும் கூறும் காரணங்கள் ஏற்புடையனவல்ல. கம்பனை 'கம்பநாட்டாழ்வான், கம்பநாடன், என்றே புலவர் பலரும் குறிப்பிட்டுள்ளனர். சேரனை வஞ்சியான் என்றும் சோழனைக் கோழியான் என்றும் ஊர்ப்பெயரால் அழைப்பது போல் கம்பனையும் அவன்முன்னோர் ஊர்ப் பெயரால் அழைத்தனர் என்பதே பொருந்துவதாம்.

கம்பன்[2] *kambaṉ,* பெ.(n.) காஞ்சிபுரத்துச் சிவன் (ஏகம்பன்); Šiva who is worshipped at Kanchipuram. *"கம்பனிலங்கு சரணே" (தேவா.103, 80).*

[ஏகம்பன் → கம்பன்.]

கம்பன்[3] *kambaṉ,* பெ.(n.) கந்திற்பாவை; deity, as a bas relief.

[கம்பம் → கம்பன் = மரத்தூணில் உருவம் எழுதி அல்லது செதுக்கி எழுந்தருளுவித்த தெய்வம். கம்பத்தில் அல்லது மரத்தறியில் முன்னுரு வடித்த தெய்வ வடிவ வெளிப்பாடுகள் (bas relief); கந்திற்பாவை என்றும் கூறப்படும்.]

கம்பனம் *kambaṉam,* பெ.(n.) 1. அசைவு; motion, vibration, shaking. 2.நடுக்கம்; quaking, trembling with fear. *"கம்பனமெய்தி" (காஞ்சிப்பு. தழுவக்.)* 3. மழைக்காலம்; the cool or dewy season.

ம. கம்பனம்

த. கம்பல் > **Skt.** Kampana.

[கம்பல் → கம்பனம்.]

கம்பாகம்[1] *kambāgam,* பெ.(n.) கப்பற்கயிறு (வின்.); ship's cable, stong rope (செ.அக.).

ம.கம்பாய்

[கம் + பாகம். கம் = நீர். பாகம் = இரண்டு கையும் பக்கவாட்டில் நீட்டிய நீட்டல் அளவு, கடலில் ஆழம்பார்க்கும் நெடுங்கயிறு. பகு → பகம் → பாகம் (பிரிவு).]

கம்பாகம்[2] *kambāgam,* பெ.(n.) காற்று; wind.

ம.கம்பாகம்

[கம் → கம்ப → கம்பம் = அசைவு, அசைவுண்டாக்கும் காற்று. கம் + பாகம். பாங்கு → பாகு → பாகம் (தன்மை).]

கம்பாயம் *kambāyam,* பெ.(n.) முகம்மதியர் உடுக்கும் இடுப்புத்துணி; tartan waist cloth, in chequered designs worn by Mohammadans in the Straits and in Ceylon. 2. கைத்தறித் துணி; handloom cloth.

U. cabāy

ம.கம்பாயம்; **து.** கம்பயி, கம்பாயி.

[கம்பு → கம்பாயம். கம்பு அல்லது குச்சியைப் போன்று நெடுங்கோடுகள் குறுக்கிட்ட மூட்டுத்தையல் வேட்டி. இதனைச் சாரம் (கைலி) என்றும் கூறுவர். சதுரம் → சாரம்.]

கம்பாரி *kambāri,* பெ.(n.) குமிழஞ்செடி; a kind of thorny tree.

[கும்→ கம் + பாலி – கம்பாலி → கம்பாரி. பாலி = முளைத்தல், தோன்றுதல்.]

கம்பாலை *kambālai,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒர் ஊர்; a place in Dharmapuri district.

[கரும்பு + ஆலை– கரும்பாலை→கம்பாலை.]

கம்பான் *kambāṉ,* பெ.(n.) **கம்பாகம்**[1] (வின்.) பார்க்க; see *kambāgam*[1].

[கம் →கம்பு + ஆன்.]

கம்பி[1]**–த்தல்** *kambi-,* 4 செ.கு.வி. (v.i.) 1.அசைதல்; to toss, shake. *"கம்பித் தலையெறி நீர்" (கம்பரா. பரசுராமப்.8.).* 2. நடுங்குதல்; to tremble, quake. *"அழுதுடல் கம்பித்து" (திருவாச.4:61).* 3. முழங்குதல்; to roar, sound. *"அதிரக்கம்பிக்குந் தெய்வ முரசுடையான்" (காளத்.உலா.540).*

[கம் → கம்பம் → கம்பித்தல். கம் = நீர், நீரின் அலைவு, அசைவு, நடுக்கம். **த.**கம்பித்தல் > **skt.** kamba.*]*

கம்பி[2]**–த்தல்** *kambi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1.அசைத்தல்; to shake, vibrate. *"செவ்விய செங்கையுஞ் சிரமுங் கம்பியா" (பிரபோத.23:12).* 2. நடுங்கச்செய்தல்; to cause to tremble; to frighten. *"இவனைக் கம்பித்தனை யென்னைகொல் காரணமே" (உபதேசகா. சிவநாம.48.).*

[கம் → கம்பம் → கம்பித்தல். கம்பித்தல்[1] → கம்பித்தல்[2]]

கம்பி[3] *kambi,* பெ.(n.) 1. பொன், இரும்பு முதலியவற்றின் கம்பி; wire of gold, silver, iron or other metal. *"கம்மியர்.. கம்பி வாங்கு மச்சென" (இரகு.திக்கு. 189.).* 2. கம்பிபோல் பருமனற்ற மாழைத்தடி; a metal bar, rod. 3. காதணி வகை; a kind of ear-ring. கம்பி இருபதினால் பொன் அறுகழஞ்சே குன்றி (S.I.I.ii.19,73.). 4.கடிவாளம்; bit of a horse's bridle. *"கம்பியுங் கயிறுங் கரத்தேந்தி" (பாரத. நாடு.21).* 5. ஆடையின் ஓரச்சிறு கரை; narrow stripe, a long border of cloth. கம்பிக்கரைவேட்டி (இ.வ.). 6. சித்திரவேலை வகை (வின்.); narrow moulding in carpenter's or mason's work. 7. காசு (வின்.); money. 8. நீண்டகொம்பு; joist, beam, slender post. இந்தக்கம்பி பந்தற்காலுக்கு உதவும் (இ.வ.).

ம., க., பட., து.கம்பி; **தெ.** கம்மி.

[கொம்பு → கம்பு → கம்பி = மரக்கிளையின் சிறுவளார் போன்று மெலிந்து நீண்டது.]

கம்பி[4] *kambi,* பெ.(n.) 1.வெடியுப்பு (மூ.அ.); saltpetre. 2. இலவண வைப்பு நஞ்சு (வின்.); a mineral poison.

க.கம்பி (உப்பு வரி)

[கம்பலை = பேரோசை, வெடித்தல், தகர்த்தல், கம்பல் → கம்பி.]

கம்பி[5] *kambi,* பெ.(n.) 1.ஒருவகைமரம்; carey's myrtle bloom. 2. கம்பளிப்பிசின் (M.N.A.D. i. 29.); dikmali gum-plant.

[கம்பு → கம்பி. வடிவும் தன்மையும் நோக்கிய பெயர்]

கம்பி[6] *kambi,* பெ.(n.) வெறிச்சி (அன்) (நாமிதீப.); opium.

[கம் → கம்பி = அசைவு, நடுக்கத்தைத் தருவது]

கம்பி[7] *kambi,* பெ.(n.) தொலைவரி (நாஞ்.); telegram.

ம.கம்பி

[கம்பி = கம்பிவழியாக அனுப்பப்படும் தொலைவரிச் செய்தி.]

கம்பி[8] *kambi,* பெ.(n.) தண்டவாளம்; railway line.

ம., க., து. கம்பி.

[கம்பி[4] → கம்பி. கம்பு = கழை, கழை போன்ற நெட்டிரும்புப் பாளம்.)]

கம்பிக்கடுக்கன் *kambi-k-kaḍu-k-kaṉ,* கடுக்கன் (வின்.); ear ring formed of a wire of metal.

[கம்பி + கடுக்கன்.]

கம்பிக்கடுக்கன்

கம்பிக்கரை *kambi-k-karai,* பெ.(n.) ஆடையின் ஓரச்சிறுகரை; narrow strip along the border of a cloth.

ம.கம்பிக்கர

[கம்பி + கரை.]

கம்பிக்கவணி *kambi-k-kavaṇi,* பெ.(n.) இரும்புக் கம்பிகளால் பின்னிய வலை;wire gauze (சா.அக).

[கம்பி + (கவளி) கவணி = பின்னல்.]

கம்பிக்காடிக்காரம் *kambi-k-kāḍi-k-kāram,* பெ.(n.) கம்பி கம்பியாக இருக்கும் ஒரு செயற்கைக் காடிக்காரம்; an artificially prepared silver nitrate which assumes the form of long crystals (சா.அக.).

[கம்பி + காடி + காரம்.]

கம்பிக்காரன் *kambi-k-kāraṉ,* பெ.(n.) 1. தட்டார்; goldsmith. 2.காசுக்காரன் (வின்.); moneyed man.

[கம்பி + காரன் – கம்பிக்காரன். அணிகலன் செய்வோர் முதலில் கம்பியாக நீட்டிய மாழையைத் துண்டாக நறுக்கி அணிகலன் வடித்தலின் பெற்றபெயர்.]

கம்பிக்குறடு *kambi-k-kuṟaḍu,* பெ.(n.) கம்மியக் கருவி (மதுரை.); smith's instrument

[கம்பி + குறடு – கம்பிக்குறடு. கம்பியாக நீட்டும் பணிக்கு உதவும் அடிமணை மாழை.]

கம்பிக்குறி *kambi-k-kuṟi,* பெ.(n.) **கம்பிக்கரை** (வின்.) பார்க்க; see *kambi-k-karai.*

[கம்பி + குறி.]

கம்பிக்கொடி *kambi-k-koḍi,* பெ.(n.) பூசணிக் கொடியைப் போன்ற கொடி; a turning plant resembling that of the pumpkin creeper.

[கம்பி + கொடி.]

கம்பிகட்டு-தல் *kambi-kaṭṭu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1.ஆடைக்குச் சாயக்கரையிடுதல்; to form or make the border of a cloth, as a dyer. 2. அழகுச் சுதை வேலை செய்தல்; to make a narrow moulding. 3.கம்பியால் குடைபோன்று அணிகலன்கட்கு முத்து முதலியவை கட்டுதல்; to fasten with wire, as a jewel, an umbrella,

[கம்பி + கட்டு.]

கம்பிகட்டுவேலை *kambi-kaṭṭu-vēlai,* பெ.(n.) வலுவூட்டிய கற்காரைத்தளம், தூண் முதலியன அமைப்பதற்காக இரும்புக் கம்பிகளை இணைத்துப் பிணைக்கும் வேலை; centering work.

[கம்பி + கட்டு + வேலை.]

கம்பிகை *kambigai,* பெ.(n.) இசைக்கருவி வகையுளொன்று (சங்.அக.); a kind of musical instrument.

[கம்பல் → கம்பிகை (ஓசையெழுப்புவது).]

கம்பிச்சட்டம் *kambi-c-caṭṭam,* பெ.(n.) 1.மின்சாரக் கம்பியைப் பதிக்கும் மரச்சட்டம்; cleat. 2. கம்பியச்சு (இ.வ.); perforated iron plate, used by smiths for drawing wires.

[கம்பி + சட்டம்.]

கம்பிச்சம்பா *kambi-c-cambā,* பெ.(n.) நெல்வகை (இ.வ.); a kind of paddy.

[கம்பி + சம்பா.]

கம்பிச்சரவீணை *kambi-c-cara-vīṇai* பெ(n.) கருவண்டு; black beetle (சா.அக.).

[கம்பி + சரம் + வீணை (நரம்புக்கருவி போன்று ஓசை எழுப்பும் வண்டு).]

கம்பிச்சு *kambiccu,* பெ.(n.) **கம்பியச்சு** (இ.வ.) பார்க்க; see *kambi-y-accu.*

[கம்பி + அச்சு = கம்பியச்சு → கம்பிச்சு (கொ.வ.).]

கம்பிச்சேலை *kambi-c-cēlai,* பெ.(n.) கம்பிக் கரையிடப்பெற்ற சேலை (வின்.); woman's cloth with small striped border.

க.கம்பிசீரெ

[கம்பி + சேலை.]

கம்பிச்சோமன் *kambi-c-cōmaṉ,* பெ.(n.) கம்பிக் கரையுள்ள வேட்டி; man's cloth with a thin striped border.

[கம்பி + சோமன். தூ = வெண்மை. தூ = தூம் → தூமம் → சூமம் → சோமம் → சோமன் = வெண்ணிற வேட்டி, வேட்டியைச் சோமம் என்பது கொங்குநாட்டு வழக்கு.]

கம்பிதம் *kambidam,* பெ.(n.) 1. நடுக்கம்; fuivering, quivering trembling, shaking. *"கம்பிதமும் கண்ணீரும் வரக்கவற்சி யுறும் போதில்" (திருவாத. 4. மண்சுமந்த.56).* 2. அலுக்கம் (கமகம்) பத்தனுள் ஒன்று (பாரத.இராக.24.); tremola, a trill one of ten kamagam.

[கம் → கம்பலை = நடுக்கம், அசைவு. கம் → கம்பி → கம்பிதம். இதம் 'சொல்லாக்க ஈறு'.]

கம்பிதை-த்தல் *kambi tai-* , 4 செ.குன்றாவி.(v.t.) தாள் போன்றவற்றைக் கம்பியால் கட்டடம் செய்தல்; to staple.

[கம்பி + தை-]

கம்பிநாடி *kambināḍi,* பெ.(n.) ஒடுக்கத்தில் சிறிய அளவாக ஓடும் நாடித்துடிப்பு; a small tense pulse (சா.அக.).

[கம்பி + நாடி.]

கம்பிநீட்டு-தல் *kambi-nīṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) திருட்டு முதலிய செயல்களால் தலைமறைவாதல்; to run away, go off slily, steal away, take to one's heels. திருடன் அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு கம்பி நீட்டிவிட்டான் (உ.வ.).

து.கம்பிநீடுனி; **க.**கம்பிகீளிசு.

[கம்பி + நீட்டுதல். கம்பியின் நீளும் இயல்பு, மெல்லநழுவி ஓடிவிடும் செயலைக்குறிப்பாகப் புலப்படுத்திய்து. (மரபுத்தொடர்).]

கம்பிப்பிசின் *kambi-p-pisiṉ,* பெ.(n.) ஒருவகை மரப்பிசின் (வின்.); dikmali gum.

[கம்பி + பிசின்.]

கம்பிமணி *kambi-maṇi,* பெ.(n.) கழுத்தணி வகையு ளொன்று (வின்.); a kind of wire necklace (ச.அக.).

[கம்பி + மணி.]

கம்பிமத்தாப்பு *kambi-mattāppu,* பெ.(n.) பூக்களைப் போல் தீப்பொறிகள் சிதறும் வெடி (பட்டாசு) வகை; a kind of sparkler.

[கம்பி + மத்தாப்பு.]



கம்பி மத்தாப்பு

கம்பியச்சு *kambi-y-accu,* பெ(n.) கம்பி இழுப்பதற்காகக் கம்மியரால் பயன்படுத்தப்படும் இரும்புக்கருவி; perforated iron plate used by goldsmiths and silversmiths for drawing out wire.

ம., க. கம்பியச்சு; **தெ.** கம்மச்சு; **து.** கம்பெசி, கம்பெச்சி.

[கம்பி + அச்சு.]

கம்பியடி—த்தல் *kambiyaḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) ***கம்பிதை—த்தல்*** பார்க்க; see *kambi-tai-.*

[கம்பி + அடி.]

கம்பியில்லாத்தொலைவரி *kambi-y-illā-t-tolaivari,* பெ.(n.) கம்பி இணைப்பு இல்லாமல் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செய்தியை மின்காந்த அலைகளாக மாற்றி அனுப்பப்பயன்படும் கருவி; wireless telegraph.

[கம்பி + இல்லா + தொலைவரி.]

கம்பியில்லாத்தந்தி *kambi-y-illā-t-tandi,* பெ.(n.) ***கம்பியில்லா தொலைவரி*** பார்க்க; see *kambi-y-illā-t-tolaivari.*

கம்பியிழு—த்தல் *kambi-y-iḻu-,* 4 செ.குன்றாவி.(v.t.) பொற்கம்பி முதலியன நீளச்செய்தல் (உ.வ.); to draw out wire.

[கம்பி + இழு.]

கம்பியுப்பு *kambi-y-uppu,* பெ.(n.) வெடியுப்பு (வின்.); a superior kind of saltpetre in bars or pieces.

[கம்பி + உப்பு.]

கம்பியெண்ணு—தல் *kambi-yeṉṉu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சிறைத்தண்டனை பெறுதல்; to undergo imprisonment. திருடியதால் இன்று கம்பி யெண்ணுகிறான் (உ.வ.).

[கம்பி + எண்ணு.]

இரும்புக் கம்பிகளால் அடைக்கப்பட்டி—ருக்கும் சிறையமைப்பு நிலையில், செய்த குற்றத்திற்குத் தண்டனையாகச் சிறைப்படுபவர் அக்கம்பிகளை எண்ணிக்கொண்டு காலம் கடத்த வேண்டும் என்னும் நகையாட்டுக் குறிப்பில் வழங்கிவரும் சொல்லாட்சி.

கம்பில்[1] *kambil,* பெ.(n.) 1. கம்பளிப்பிசின்; dikmali gum-plant. 2. பெருங்கம்பில்மரம்; broad-leaved Gardenia.

மறுவ. கம்பிழ்

[கம்பி → கம்பில்.]

கம்பில்[2] *kambil,* பெ.(n.) அப்பம் (அக.நி.); sweet cake.

[கம் → கம்பில் (நீராவியில் வெந்தது) கம் = நீர்.]

கம்பில்லம் *kambillam,* பெ.(n.) 1. சௌராட்டிர தேயத்தில் சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்—படும் செங்கற் பொடியைப் போன்ற, மலமிளக்கியாகப் பயன்படும் பொருள்; a red mineral substance like, brick dust obtained from the mines in Sourastra. 2.ஒரு குருவி; a kind of sparrow (சா.அக.).

[கம்பு → கம்பில் (இளக்கம்) → கம்பில்லம்]

கம்பிலி[1] *kambili,* பெ.(n.) ***கம்பி***[3] பார்க்க; see *kambi*[3].

[கம்பில் → கம்பிலி.]

கம்பிலி[2] *kambili,* பெ.(n.) வடநாட்டிலுள்ள ஓரூர்; a city in north-India. *"கம்பிலிச் சயத்தம்ப நட்டதும்" (கலிங்.190.புதுப்.).*

[கம்பில் → கம்பிலி. கம்பில் = ஒருவகை மரத்தின் பெயர். மரத்தின் பெயரால் பெற்றபெயர் ஒ.நோ: ஆர்க்காடு, கடம்பவனம்.]

கம்பிலியம் *kambiliyam,* பெ.(n.) ஒருவகைச்சாயம்; a kind of dye.

[கம்பில்' → கம்பிலியம் → கம்பில் மரத்திலிருந்து செய்யப்பட்டது.]

கம்பிலியம்பட்டி *kambiliyampaṭṭi,* பெ.(n.) ஈரோடு மாவட்டத்துச் சிற்றூர்; a village in Erode district.

[கம்பளி + அன் + பட்டி – கம்பளியன்பட்டி → கம்பிலியம் பட்டி (கொ.வ.).]

கம்பிவாங்கு—தல் *kambi-vāṅgu-,* 7 செ.கு.வி.(v.i.) ***கம்பிநீட்டு—,*** பார்க்க; see *kambi-nīṭṭu-.*

[கம்பி + வாங்கு.]

கம்பிவிளக்கு *kambi-viḷakku,* பெ.(n.) மின்விளக்கு; electric light.

[கம்பி + விளக்கு. மின் விளக்கினுள் கம்பிபோன்ற மாழை எரிவதால் பெற்ற பெயர்.]

கம்பிவிறிசு *kambi-viṟišu,* பெ.(n.) கம்பி கம்பியாகத் தீப்பொறியும் ஒருவகை வாணம் (வின்.); fire-works which shoot forth in pencils of light.

[கம்பி + (விரிசு) விறிசு.]

கம்பிவேட்டி *kambi-vēṭṭi,* பெ.(n.) கம்பிக்கரையுள்ள வேட்டி; man's cloth with a thin striped border.

க.கம்பிபஞ்செ

[கம்பி + வேட்டி.]

கம்பு¹ *kambu,* பெ.(n.) 1.கட்டுத்தறி; post for tying elephants, stake. *"கம்பமருங் கரியுரியன்" (தேவா.1092,4.).* 2.கழி; pole, rod, stick. *"வெந்தற்ற கிருகத்திலே ஒரு கம்பாயினுங் கிடைக்குமோ" (ஈடு, 4,1, ப்ர.).* 3. மரக்கொம்பு (திவா.); branch of a tree. 4.கொடிசெடிகளின் சிறுதண்டு; slender twig of a climber, or shrub. *"அளியின மல்லிகைப்பூங் கம்பு" (வெங்கைக்கோ.191.).* 5. தச்சுமுழம் எனப்படும் 2 3/4 அடி நீளமுள்ள அளவுகோல்; a pole (linear measure) of 33 inches known as taccu-muḻam.

ம.கம்பம்; **தெ.** கம்பமு; **து.,பட.** கம்பு.

Pkt.khambha; **Skt.**stambha.

[கொம்பு→ கம்பு. (வே.க.168) கம்பைக் கொம்பு என்பது வடார்க்காடு வழக்கு(மு.தா.28)]

கம்பு² *kambu,* பெ.(n.) 1.கம்புத்தவசம்; bulrush millet. *"கம்பு குளிர்ச் சியென...சொல்லுவர்" (பதார்த்த. 829).* 2. செந்தினை (பிங்.); Italian millet.

மறுவ. ஏனல், கவலை, புல்.

தெ.,க. கம்பு; **ம.** கம்பச்சோளம்; **Skt.**kambū.

[கொம்பு → கம்பு = கோல். கோல் போன்று ஒரே தண்டாக வளரும் புல்லினம்.]

கம்பு³ *kambu,* பெ.(n.) நீர்; water.

[கம் = நீர். கம் → கம்பு.]

கம்பு⁴ *kambu,* பெ.(n.) 1. சங்கு; conch. *"கம்புக்குழை யானே" (சிவராத்.சாலிகோ. 27).* 2. உட்காதின் ஒரு பகுதி; the conic cavity of the internal ear. 3. கழுத்து; neck. 4. ஆகூழைக் குறிக்கும் கழுத்தின் மூன்றுவரி; the three lines or marks in the neck indicating good fortune. 5.குழாய் எலும்பு; tubular bone. 6. உடம்பின் நாளம்; tubular vessel in the body.

து.கம்பு; **Skt.** kambu.

[கம்பு = மூங்கில். மூங்கில் போன்ற மென்மையும் வடிவமைப்பும் கொண்ட சங்கு, கழுத்து, எலும்பு ஆகியவற்றைக் குறித்தது.]

கம்பு⁵ *kambu,* பெ.(n.) விலாமிச்சிவேர்; fragrant root of a grass.

[கம் → கம்பு. கம் = நறுமணம், மணம் வீசும் வேர், கிழங்கு]

கம்புக்கட்டு *kambu-k-kaṭṭu,* பெ.(n.) மூங்கில் தடிகளின் தொகுப்பு; bundle of bamboo sticks.

[கம்பு (மூங்கில்) + கட்டு.]

கம்புக்கழி *kambu-k-kaḻi,* பெ(n.) மூங்கிற்கழி; bamboo pole.

[காம்பு → கம்பு + கழி. காம்பு = மூங்கில்]

கம்புக்கள்ளி *kambu-k-kaḷḷi,* பெ.(n.) 1. இலையில்லாது கொம்பைப் போற்காணும் கொம்பு கள்ளி; twig spurge. 2.திருகுகள்ளி; spiral spurge.

[கம்பு + கள்ளி. கள் = முள், கள் → கள்ளி.]

கம்புக்காடு *kambu-k-kāḍu,* பெ.(n.) மூங்கில் தோப்பு; bamboo field.

[கம்பு + காடு. காம்பு → கம்பு = மூங்கில்]

கம்புக்குச்சி *kambu-k-kucchi,* பெ.(n.) மூங்கிற் குச்சி; bamboo stick.

[காம்பு → கம்பு + குச்சி. காம்பு = மூங்கில்.]

கம்புக்கூடு *kambu-k-kūḍu,* பெ.(n.) அக்குள் (நெல்லை.); arm pit.

மறுவ. கக்கம், அக்குள், கைக்குழி, கமுக்கட்டு.

[கம்பு + கூடு.]

கம்புக்கூடை *kambu-k-kūḍai,* பெ.(n.) மூங்கிற் சிம்பால் வேய்ந்த கூடை; bamboo basket.

[காம்பு →கம்பு + கூடை.]

கம்புக்கெளுத்தி *kambu-k-keḷutti,* பெ.(n.) நன்னீரில் வாழ்வதும் ஆறடி வரை வளர்வதும் ஆகிய மீன்வகை; a fresh water fish, bluish, attaining six ft. in length.

[கம்பு + கெளுத்தி.]

கம்புக்கொங்கை *kambu-k-koṅgai,* பெ.(n.) தவசம் நீக்கப்பட்ட கம்பங்கதிரின் கோதுக்கட்டை; cob of the bulrush millet after the grain has been removed.

[கம்பு + கொங்கை. கொங்கு → கொங்கை. கொங்கு = கோது, தவசமணி நீங்கிய கோதுக் கட்டை]

கம்புகட்டி *kambu-kaṭṭi,* பெ.(n.) ஏரிநீர் பாய்ச்சுவோன்; one who irrigates. *"கடல்வருணன் கம்புகட்டி" (சேக்கிழார். பு.4.) (செ.அக.).*

[கம் → கம்பு = நீர். கம்பு + கட்டி. கம்புகட்டி = நீர்கட்டுபவன்.]

கம்புகட்டு-தல் *kambu-kaṭṭu,* 5 செ.குன்றாவி. (v.t.) படித்தபின் சுவடியைக் கட்டுதல் (இ.வ.); to close a book after reading.

[கம்பு + கட்டு. கம்பு = சுவடியின் இருமருங்கிலும் வைத்துக்கட்டும் மூங்கிற்பிளாச்சு.]

கம்புகம் *kambugam,* பெ.(n.) வெறிச்சி (அபின்) (தைலவ. தைல.94.); opium.

[கம் → கம்பு, கம் = அசைவு, நடுக்கம். கம்பு → கம்பகம்]

கம்புச்சண்டை *kambu-c-caṇḍai,* பெ.(n.) சிலம்பம்; art of fencing.

[கம்பு + சண்டை.]

கம்புத்தடி *kambu-t-taḍi,* பெ.(n.) நீண்ட மூங்கில் தடி; lengthy bamboo stick.

[காம்பு → கம்பு + தடி.]

கம்புதை-த்தல் *kambu-tai-,* 4. செ.குன்றாவி.(v.t.) கதவு முதலியவற்றிற் சட்டமடித்தல்; to nail a beading or border on a door or the edge of a box.

[கம்பு + தை. கம்பு = கோல், கோல்போன்று நீண்ட மரச்சட்டம்]

கம்புப்பட்டு *kambu-p-paṭṭu,* பெ.(n.) *திருவண்ணாமலை மாவட்டத்துச் சிற்றூர்;* a village in Thiruvannamalai district.

[கம்பு + பற்று-கம்புப்பற்று → கம்புப்பட்டு. பற்று = விளைநிலம்.]

கம்புலம் *kambulam,* பெ.(n.) வயலில் விடும் எருதுப் பந்தயம்; a bullock race in a rice-field (துளுநா).

து. கம்பல, கம்புள.

[கம்பலை → கம்புலம். (கொ.வ.)]

சிலப்பதிகாரத்தில் ஏரோர் கம்பலை என்று இப்பந்தயம் குறிக்கப்படுகிறது. ***ஏரோர் கம்பலை*** பார்க்க; see ērōrkamblai.

கம்புள்[1] *kambuḷ,* பெ.(n.) 1. ஒருவகை நீர்ப்பறவை; a kind of water fowl; *"கம்புட் சேவ லின்றுயி லிரிய" (மதுரைக்.254.)* 2. வானம்பாடி (சூடா.); Indian sky-lark.

[கம் + புள் - கம்புள் = நீர்ப்பறவை. கம் = நீர். புள் = பறவை. மழைக்காலத்தில் வருவதால் வானம்பாடியும் கம்புள் எனப்பட்டது]


கம்புள்

கம்புள்[2] *kambuḷ,* பெ.(n.) சங்கு; conch. *"பழனக் கம்புள்" (ஐங்.90).*

[கம்பு → கம்புள். கம்பு = நீர். கம்புள் = நீருள் இருப்பது.]

கம்பூர் *kambūr,* பெ.(n.) மதுரை, விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள சிற்றூர்; a village in Madurai and Viluppuram dt.

[கம்பு + ஊர்-கம்பூர். கம்பு = புன்செய்த்தவச வகை.]

கம்பை[1] *kambai,* பெ.(n.) 1.கதவு முதலியவற்றின் சட்டம் (இ.வ.); ledge, frame of a door, etc. 2. ஏட்டுச்சுவடிச் சட்டம்; slips of wood forming the binding of a book made up of palm leaves. *"சுவடியுங்கயிறுங் கம்பையும்" (பிரபோத.11,8).* 3. அதிகாரவரம்பு; jurisdiction (வின்.).

ம. கம்ப

[கம்பு → கம்பை = மரக்கொம்பைப் பிளந்து செய்த மரச்சட்டம், ஒழுங்கு, வரம்பு.]

கம்பை[2] *kambai,* பெ.(n.) 1.**கம்பைமரம்** பார்க்க; see *kambai maram.* 2. சிறுகீரை; pig's green. 3. ஒரு வகை மல்லி; cape jasmine.

[கம் → கம்பை]

கம்பை[3] *kambai,* பெ.(n.) காஞ்சிபுரத்திலுள்ள ஒரு ஆறு; a river near Kanchipuram. *"கம்பை சூழ்தரு காஞ்சியந்திருநகர் கண்டான்" (கந்தபு. வழிநடை.9.).*

[கம் → கம்பு → கம்பை. கம் = நீர்.]

கம்பைக்கல் *kambai-k-kal,* பெ.(n.) படிகவகையு ளொன்று; cambay pebble, a kind of opal found in Cambay (சா.அக.).

[கம்பை + கல்.]

கம்பைநல்லூர் *kambainallūr,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharumapuri dt.

[கம்பம் + ஐயன் – கம்பையன் + நல்லூர் – கம்பை நல்லூர் (கொ.வ.). கம்பம் = வயல் சார்ந்த ஊர்.]

கம்பைமரம் *kambai-maram,* பெ.(n.) கடற் களாப் பாலை; broad leaved gardenia (செ.அக.).

[கம்பை + மரம்.]

கம்போசம் *kambōsam,* பெ.(n.) ஒருவகைச் சங்கு; a species of conch (சா.அக.).

[ஒருகா. கம்போசம் → காம்போச நாட்டையடுத்த கடற்புறத்துச் சங்கு ஆகலாம்.]

கம்போத்தம் *kambōttam,* பெ.(n.) குவளை (சங்.அக.); blue nelumbo.

[கம் + பொத்தம் – கம்பொத்தம் → கம்போத்தம். பொத்தம் = நீரில் பொத்தி, பொருந்தியிருப்பது.]

கம்மக்குடம் *kamma-k-kudam,* பெ.(n.) கம்மியர் செய்த குடம் (நன்.222.மயிலை.); pot made by a smith.

[கரு → கருமம் → கம்மம் + குடம்.]

கம்மக்கை *kamma-k-kai,* பெ.(n.) 1.நெருக்கடி வேலை (யாழ்ப்.); pressure of work. 2. கடுமையான பணி; difficult work.

[கம்மம் + கை. கருமம் → கம்மம் = தொடர்ந்து செய்யும் வேளாண்மைப் பணி.]

கம்மகாரர் *kammakārar,* பெ.(n.) கப்ப லோட்டிகள்; sailors, mariners. *"கம்மகாரர் கொண்டாடும்படி நன்றாக ஓடிற்று" (சீவக.501, உரை.).*

[கருமம் + காரர் – கருமகாரர் → கம்மகாரர் = குறிப்பிட்ட பணிக்குரியவர். காரர் = செய்பவர். கரும்காரர் = வேலை செய்பவர் (இரண்டன் தொகையாதலின் வல்லெழுத்து மிகாதாயிற்று).]

கம்மஞ்செய்மக்கள் *kammañcey-makkaḷ,* பெ.(n.) கைத்தொழிலாளர்; craftsmen (இ.நூ.த.பெ.அக).

[கருமம் → கம்மம் + செய் + மக்கள்.]

கம்மட்டம் *kammaṭṭam,* பெ.(n.) **கம்பட்டம்** பார்க்க; see *kambaṭṭam.*

[கம்பட்டம் → கம்மட்டம்.]

கம்மன்தாங்கல் *kammaṉtāṅgal,* பெ.(n.) திருவண்ணா மலை விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள சிற்றூர்; a village in Thiruvanamalai and Viluppuram dt.

[கம்மம் → கம்மன்+தாங்கல்– கம்மன் தாங்கல். தாங்கல் = ஏரி.]

கம்மணாட்டி *kammaṇāṭṭi,* பெ.(n.) கையாலாகாதவன், திறமையில்லாதவன்; a usless person, misfit.

மறுவ. கம்மாளாமட்டி

[கருமம் → கம்மம் + ஆளா + மட்டி – கம்மாளாமட்டி → கம்மணாட்டி (கொ.வ) = செயல்திறமையில்லாத பேதை.]

கம்மத்தம் *kammattam,* பெ.(n.) 1. வேளாண் பண்ணை; zamindar's or Inamdar's land which he cultivates with his own labourers. 2. மனைவியின் செலவுப் பயன்பாட்டிற்காக விடப்படும் ஊர் (m.m.249.); grant of a village for a wife's pocket expenses.

தெ.கமத, கம்மத; **க.**கமத, கம்மத, கம்மத்த.

[கம் → கம்மத்தம் = நன்செய்நிலம்.]

கம்மந்தூர் *kammandūr,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Viluppuram dt.

[கம்மன் + ஆந்தன் + ஊர்–கம்மாந்தனூர்→ கம்மந்தூர்.]

கம்மம்[1] *kammam*, பெ.(n.) முதற்றொழிலாகிய பயிர்த்தொழில்; agriculture.

தெ. கம்மமு; **குவி.** கம(வேலை).

[கருமம் → கம்மம் (வ.மொ.வ.274).]

கம்மம்[2] *kammam*, பெ.(n.) கம்மியர் தொழில்; smith's work. *"கம்மஞ்செய் மாக்கள்" (நாலடி. 393.).*

ம. கம்மம்

Skt. karman; **Pkt.** kamma; **Pali.** kammaro (a black-smith, a smith.).

[கரு → கருமம் → கம்மம். கருத்தல் = செய்தல்.]

கம்மம்[3] *kammam*, பெ.(n.) ஊர் (கிராமம்), சிற்றூர்; village.

[கம் + அம் – கம்மம். கம் = நீர். கம்மம் = நீர் சார்ந்த நன்செய் நிலத்துச் சிற்றூர்.]

கம்மம்[4] *kammam*, பெ.(n.) தொழில்; occupation. *"சென்றுமட்கலஞ்செய் கம்மி" (பாரத. திரௌபதி 64.).*

[கருமம் → கம்மம். (வ.மொ.வ.274.).]

கம்மல்[1] *kammal*, பெ.(n.) 1.குரலடைப்பு; hoarseness, sore throat. 2.மங்கல்; dimness, as of gem, of a lamp, of glass, of spectacles. 3.மந்தாரம்; cloudiness, haziness. 4.குறைவு; defect, deficiency, as in growth; fall in price. பயிர் கம்மலாய்ப் போயிற்று (வின்.).

க.கம்மல், (குரலடைப்பு, இருமல்).

H., Guj., Mar. kam (deficiency).

[செறுமுதல் → செம்முதல் → கெம்முதல் → கெம்மல் → கம்மல் = வழியடைத்தல், தடுத்தல், குறைவுபடுத்துதல், ஒளிகுன்றச்செய்தல்.]

கம்மல்[2] *kammal*, பெ.(n.) மகளிர் காதணிவகை; a kind of ear-ring worn by women in the lobe of the ear.

தெ. கம்மர்; **கொலா.**கம்ம.

[கமலம் → கம்மலம் → கம்மல் (தாமரைமலர் போல் சிவப்புக்கல் பதித்த காதணி (தோடு).]

முற்காலத்தில் ஆடவரும் அணிகலன் அணிவது பெருவழக்கு. வணிகர் காதிற் குண்டலமும் தோளில் [புயத்தில்] கடகமும், மார்பில் மணிக் கண்டிகையும் அணிந்திருந்தனர். பிறவகுப்பார் காதிற் கடுக்கனும், கையிற் காப்பும் அணிந்திருந்தனர். கடுக்கனைப் பின்பற்றியே பிற்காலக் கமலம் [கம்மல்] என்னும் மகளிர் காதணி எழுந்தது. [பண்.நா.ப.54.].

கம்மல்[3] *kammal*, பெ.(n.) மாசு; dirt (த.மொ.அக).

[கம்→கம்மல், கம் = குறைவு, மாசு. அல் (தொ.பெ.ஈறு).]

கம்மவார் *kammavār*, பெ.(n.) தெலுங்கு மொழி பேசும் உழவருள் ஒரு பிரிவினர்; a Telugu agricultural caste.

தெ. கம்மவாரு; **க.** கம்மே.

[கம்மம் + ஆள் – கம்மவாள் → கம்மவார் → கம்மவாரு. கம்மம் = நன்செய் உழவுத்தொழில், தெலுங்குநாட்டில் வாழும் தமிழ்க்குடி உழவனின் குடிப்பெயர். (வ.மொ.வ.274)]

கம்மற்குரல் *kammaṟkural*, பெ.(n.) 1.குறைந்த குரலோசை, dull voice. 2.குரலடைப்பு; hoarse voice (சா.அக.).

[கம்மல் + குரல்.]

கம்மற்பூண்டு *kammaṟpūṇḍu*, பெ.(n.) தொண்டைச் சளி; mucous in the throat (சா.அக.).

[கம்மல் + பூண்டு.]

கம்மா *kammā*, பெ.(n.) ***கண்மாய்*** பார்க்க; see *kaṇmāy*.

[கண்மாய் → கம்மாய் → கம்மா (கொ.வ.). கண் + வாய்.]

கம்மாக்காரர் *kammā-k-kārar*, பெ.(n.) மீனவர்; fishermen.

[கண்மாய் + காரர் – கண்மாய்க்காரர் → கம்மாக்காரர். கண்மாய் = ஏரி. கண்மாய் காவலுக்கு மீனவரை அமர்த்துவது பழந்தமிழ் நாட்டுவழக்கு.]

கம்மாட்டி *kammāṭṭi*, பெ.(n.) ***கம்மாளத்தி*** பார்க்க (வீரசோ. தத்தி5. உரை); see *kammāḷatti*.

[கம்மாளன் → கம்மாட்டி = கம்மியனின் மனைவி.]

கம்மாணன் *kammāṇaṉ,* பெ.(n.) **கம்மாளன்** பார்க்க; see *kammāḷaṉ.* பறைச்சேரியும் கம்மாணச் சேரியும் (s.I.I.ii.43.).

[கம்மாளன் → கம்மாணன் (கொ.வ.).]

கம்மாபுரம் *kammāpuram,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Cudalore dt.

[கண்மாய்–கம்மாய் + புரம் – கம்மாய்புரம்→கம்மாபுரம் (கொ.வ.).]

கம்மாய் *kammāy,* பெ.(n.) **கண்வாய்** பார்க்க; see *kaṇvāy.*

[கண் + வாய் – கண்வாய் → கண்மாய் → கம்மாய். கம் = தண்ணீர்.]

கம்மார்வெற்றிலை *kammār-veṟṟilai,* பெ.(n.) கறுப்பு வெற்றிலை; a kind of betel-leaf which is dark-coloured and pungent.

[கரு + மார் – கரும்மார் → கம்மார். கம்மார் + வெற்றிலை. மார் = அகற்சி. அகன்ற வெற்றிலையாதலின் இப்பெயர்பெற்றது.]

கம்மால்[1] *kammāl,* பெ.(n.) பித்தளை வேலை செய்யுமிடம்; brazier's forge.

[கம் = கம்மியன். ஆலை = இடம்; கம் + ஆலை – கம்மாலை→கம்மால் = கம்மியன் வேலை செய்யும் உலைக்களம்]

கம்மால்[2] *kammāl,* பெ.(n.) ஏமாற்றுதல்; cheating.

[கம் + ஆலை – கம்மாலை → கம்மால் = கம்மியனின் பித்தளை வேலை. இரண்டு மாழைகளைக்கலந்து புதியமாழையாகிய பித்தளை செய்வதால் வியத்தகு புதுமை செய்தல், மாயம் செய்தல், ஏமாற்றுதல் என்னும் பொருளிலும் இச்சொல் புடை பெயர் நீத்தது. இது கமால் செய்தல் எனவும் வழங்கிவருகிறது.]

கம்மால்செய்–தல் *kammālśey-,* 1. செ.கு.வி.(v.i.) ஏமாற்றுதல்; to cheat. **கம்மால்[2]** பார்க்க; see *kammāl[2].*

[கம்மால்[2] + செய்.]

கம்மால்வேலை *kammālvēlai,* பெ.(n.) ஏமாற்று வேலை; cheating.

[கம்மால்[2] + வேலை.]

கம்மாலை[1] *kammālai,* பெ.(n.) கம்மியனின் உலைக் களம்; blacksmith's forge.

[கம் + ஆலை – கம்மாலை = கம்மியனின் உலைக்களம். கம் = கம்மியன், ஆலை = இடம்.]

கம்மாலை[2] *kammālai,* பெ.(n.) எருதுகளைக் கொண்டு கிணற்று நீரை இறைக்கும் ஏற்றம்; water lift consisting of a large hemispherical leather or iron bucket worked with bullocks.

[கம் + ஆலை.]

கால்வாய் நீரிறைக்க இறைபெட்டி (இறைகூடை) உழனி (ஓணி) முதலிய கருவிகளும், கிணற்று நீரிறைக்க ஏற்றம், கம்மாலை என்னும் பொறிகளும் தோன்றின. அம் = நீர். அம் – கம் = நீர். ஆலுதல் = ஆடுதல், சுற்றுதல். ஆல் – ஆலை = சுற்றி வரும்பொறி. செக்காலை, கரும்பாலை முதலிய வற்றை நோக்குக. இன்றும் திருக்கோவிலூர்க்கும் வில்லிபுரத்திற்கும் இடைப்பட்ட ஊர்களிற் சுற்றுக் கவலையாடுதல் காண்க. கம்மாலை – கமலை – கவலை. ஏற்றம் கையால் இயக்கப்படுவது. அது கைத்துலா, ஆலேறுந்துலா என இருவகை. கம்மாலை எருது பூட்டி இயக்கப்படுவது (தமிழ்.வரலாறு.45.).

கமலையேற்றத்தைக் கபிலையேற்றம் என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகர முதலி குறித்திருப்பது தவறாகும். கபிலை என்பது குரால் என்னும் ஆவகை. ஆவைக்கட்டி நீரிறைப்பது வழக்கமன்று.

கம்மாளச்சி *kammāḷacci,* பெ.(n.) **கம்மாளத்தி** பார்க்க; see kammāḷatti.

[கம்மாளத்தி → கம்மாளச்சி.]

கம்மாளத்தி *kammāḷatti,* பெ.(n.) கம்மாளக்குடியைச் சார்ந்த பெண்; woman of Kammāḷaṉ family.

[கம் + ஆள் + அத்தி = கம்மாளத்தி. கம் = கம்முத்தொழில், கம்மியர் பணி.]

கம்மாளப்பட்டி *kamāḷappaṭṭi,* பெ.(n.) கோவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Coimbatore dt.

[கம்மாளன்+பட்டி – கம்மாளன் பட்டி → கம்மாளப்பட்டி.]

கம்மாளம்பூண்டி *kammāḷampūṇḍi*, பெ.(n.) காஞ்சி புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanchipuram district.

[கம்மாளன்+பூண்டி – கம்மாளன்பூண்டி → கம்மாளம் பூண்டி. பூண்டி = ஏரி.]

கம்மாளன் *kammāḷaṉ*, பெ.(n.) பொன்வேலை முதலான தொழில் செய்வோன்; smith, mechanic, artisan, of five communities viz, taṭṭāṉ, kaṉṉāṉ, ciṟpaṉ, taccaṉ, kollaṉ.

தெ.கம்மரமு; **து.**கம்மாரெ (கொல்லன்).

Skt. kārmāra; Pkt., Pali. kammāra.

[கருமம் → கம்மம் + ஆளன் – கம்மாளன் = பணிசெய்பவன்.]

பொற்பணி செய்பவனைத் தட்டான் என்றும் செம்புக்கொட்டியைக் கன்னான் என்றும், கற்பணி மட்பணி சுதைப்பணி செய்பவனைச் சிற்பன் என்றும், இரும்பு வடிப்பவனைக் கொல்லன் என்றும் மரப்பணி செய்பவனைத் தச்சன் என்றும் இவரனைவரையும் ஐவகைக் கம்மியர் என்றும் குறிப்பிடுவது மரபு. கருமகாரர் என்பது பண்டைக்கால வழக்கு.

கம்மாளாமட்டி *kammāḷāmaṭṭi*, பெ.(n.) செயல் திறமையில்லாத பேதை; misfit, a good for nothing person.

மறுவ. கம்மணாட்டி

[கருமம் → கம்மம் (வேலை) + ஆளா + மட்டி – கம்மாளாமட்டி. மட்டி = மடையன், பேதை.]

கம்மி[1] *kammi*, பெ.(n.) தொழிலாளி; lobourer, workman. *"மட்கலஞ்செய் கம்மி" (பாரத. திரௌ.64.).*

[கருமம் → கம்மம் → கம்மி.]

கம்மி[2] *kammi*, பெ.(n.) ***கம்மாளன்*** பார்க்க; see *kammāḷaṉ (த.ம.47).*

[கருமம் → கருமி → கம்மி.]

கம்மி[3] *kammi*, பெ.(n.) குறைவு; deficiency, deficit, scantiness. ***கம்மல்***[1] பார்க்க; see *kammal*[1].

ம., க., பட., கோண்(அடிலா). கம்மி.

Guj., Mar. kami.

[கம்மல் → கம்மி. கம்மல் = குறைதல்.]

கம்மிடு–தல் *kammiḍu-*, 20 செ.கு.வி.(v.t.) மணம் பரவுதல்; to emit fragrance.

க. கம்மேறு

[கம் + இடு.]

கம்மிபண்ணு–தல் *kammi-paṇṇu-*, 12 செ.குன்றாவி. (v.t.) அளவைக்குறைத்தல்; to reduce.

பட. கம்மிமாடு

[கம்மல் = குறைதல். கம்மல் → கம்மி + பண்ணு.]

கம்மியநூல் *kammiya-nūl*, பெ.(n.) சிற்பநூல்; science of architecture. *"எயிலகழிக்கிடங்கு கம்மிய நூற்றொல்வரம் பெல்லைகண்டு" (திருவிளை. திரு நகரங்.38.).*

[கருமம் → கம்மம் → கம்மியம் + நூல்.]

கம்மியம் *kammiyam*, பெ.(n.) 1.கைத்தொழில்; handicraft work, labour (வின்.); 2. கம்மாளத் தொழில்; smith's work.

[கருமம் → கம்மம் → கம்மியம்.]

கம்மியர் *kammiyar*, பெ.(n.) ***கம்மியன்*** பார்க்க; see *kammiyaṉ.*

[கம்மியன் → கம்மியர்.]

கம்மியன் *kammiyaṉ*, பெ.(n.) 1.தொழிலாளி; servant, labourer. *"கம்மிய ரூர்வர்களிறு" (சீவக. 495.).* 2. கம்மாளன் (திவா.); smith, artisan. 3.நெய்பவன்; weaver. *"கம்மியர் குழீஇ" (மதுரைக்.521).*

ம. கம்மியன்; **தெ.** கம்ம, கம்மவாரு.

Skt. karmmin

*[கருமம் → கம்மம் → கம்மியன். த. கம்மியன்>***skt.*** karmin.]*

கம்மியன்கணக்கு *kammiyaṉkaṇakku*, பெ.(n.) கோயில் தொழிலாளர் கணக்குகளைப் பார்ப்பவன்; an accountant in charge of temple servants (கல்.அக.).

ம. கம்மியன் கணக்கு

[கம்மியன் + கணக்கு.]

கம்மு[1]—தல் *kammu-,* 5 செ.கு.வி. (v.i.) 1.குரல்குன்றி மாறுபடுதல்; to become hoarse, to be rough, jarring, as a wind instrument. *"மென்குரல் கம்மாமே" (குமர.பிர.முத்துக்.18).* 2. ஒளிகுறைதல் (இ.வ.); to be overcast, cloudy, gloomy, dark.

ம. கம்முக; **க.** கம்மு; **Mar.**kammi.

[செறுமு → செம்மு → கெம்மு → கம்மு → கம்முதல்.]

கம்மு[2]—தல் *kammu-,* 5. செ.குன்றாவி.(v.t.) மூடுதல் (யாழ்.அக.); to cover. ***கம்மல்[1]*** பார்க்க; see *kammal.*

[செறுமு → செம்மு → கெம்மு → கம்முதல் = அடைத்தல், மூடுதல்.]

கம்முருட்டு *kammuruṭṭu,* பெ.(n.) ஏமாற்றுதல்; deceiving, treachery.

ம. கம்முருட்டு

[கம் + உருட்டு. கம் = மறைவு, ஒளிவு. உருட்டு = புரட்டு, ஏமாற்று.]

கம்மூகாரி *kammūkāri,* பெ.(n.) மந்தாரை; purple mountain ebony.

[கும் → கம் → கம்மு = மணம் பரவுதல். கம்மு + காரி.]

கம்மெனல்[1] *kam-m-eṉal,* பெ.(n.) 1.தெளிவின்றி ஒலித்தற்குறிப்பு (இ.வ.); term signifying indistinct sound. 2. ஓசையடங்கற் குறிப்பு; being calm, still, silent. *"கானமுங் கம்மென்றன்றே" (நற்.154.).*

[கம்மல் → கம்மெனல்.]

கம்மெனல்[2] *kam-m-eṉal,* பெ.(n.) 1. மணங்கமழ்தற் குறிப்பு; emitting of fragrance. *"ஒருங்குபிணி யவிழக் காடே கம்மென்றன்றே" (அகநா.23:4).* 2. விரைவுக் குறிப்பு; hastening. *"கம்மென வம்பு விரித்தன்ன பொங்குமணற் கான் யாற்றுப் படுசினை தாழ்ந்த பயிலிண ரெக்கர்" (அகநா.11:7).*

க.கம்ம, கம்பு, கம்மு; **து.**கம்மென, கம்யன; **தெ.**கம்பு; **கொலா.**கம்; **நா.**கப்; **பட.** தமலு; **கோத.** கமன்; **H.**gamak.

[கும்மல் → கம்மல் → கம்மெனல். கும்மல் = பெருகுதல், பரவுதல், விரைதல்.]

கம்மை *kammai,* பெ.(n.) சிறுகீரை (மலை.); a green ciṟukīrai.

[கம் = நறுமணம். கம் → கம்மை.]

கம—த்தல் *kama-,* 3 செ.கு.வி. (v.i.) நிறைதல்; to be full, to occupy fully. *"கமந்த மாதிரக் காவலர்" (கம்பரா.மிதிலைக்.132.).*

[கும் → கம் → கமத்தல். கும் = நிறைதல், திரளுதல்.]

கமக்கட்டு *kamakkaṭṭu* பெ.(n.) அக்குள்; arm-pit (சா.அக.).

[கும் → கம் + அ + கட்டு – கமக்கட்டு. 'அ' சொற்சாரியை. கமக்கட்டு = சேரும் இணைப்பு.]

கமக்காரன் *kama-k-kāraṉ,* பெ.(n.) உழவன் (யாழ்ப்.); cultivator, farmer.

[கம் → கம்மம் = நன்செய் உழவுத்தொழில். கம்மம் + காரன் – கம்மக்காரன் → கமக்காரன்.]

கமகம—த்தல் *kama-kama-,* 4 செ.கு.வி.(v.i.) மிகமணத்தல்; to be very fragrant. பூக்கடைக்குப் போனால் மணம் கமகமக்கும் (உ.வ.).

க., பட. தமகம; **தெ.** குமகும.

[கம் → கம + கம – கமகம. கும் → கம் = நிறைதல், பெருகுதல், பரவுதல்.]

கமகன் *kamagaṉ,* பெ.(n.) ஆசிரியன்; teacher. *"நிறைமதியாற் கல்வியானீள் கலைகள் கல்லா தறையுமவன் கமகனாகும்" (வெண்பாப்.செய்.49.).*

[கம் = பரவுதல், நிறைதல். கம் → கமகன் = அறிவு நிறைந்தவன், ஆசிரியன்.]

கமங்கட்டு—தல் *kamaṅ-kaṭṭu-,* 5. செ.குன்றாவி. (v.t.) உரிமைநிலத்தில் வேளாண்மை செய்தல் (யாழ்ப்.); to cultivate one's own farm.

[கம்மம் → கமம் + கட்டுதல்.]

கமங்களம் *kamaṅgaḷam,* பெ.(n.) நாயுருவி; Indian burr (சா.அக).

[கமம் = நிறைதல், பரவுதல். கமம் + களம்.]

கமஞ்சூல் *kamañ-cūl,* பெ.(n.) முகில்; cloud, full of moisture. *"முகடுகந்து ஏறி நிரைத்து நிறைகொண்ட கமஞ்சூல் மாமழை" (நற்.89.).*

[கம் + அம் + சூல். கம் = நீர். 'அம்' சாரியை. சூல் = நிறைதல். கமஞ்சூல் = நீர்கொண்ட மேகம்.]

கமட்டுக்கள்ளன் *kamṭṭu-k-kaḻḻaṉ,* பெ.(n.) **கமுக் கட்டுக்கள்ளன்** பார்க்க; see *kamu-k-kaṭṭu-k-kaḻḻaṉ* (சா.அக).

[கமுக்கட்டுக்கள்ளன் → கமட்டுக்கள்ளன்.]

கமடத்தரு *kamaḍa-t-taru,* பெ.(n.) சீவதாரு என்னும் மரம் (யாழ்.அக.); cīva-taru, a tree.

மறுவ. ஒமைமரம்

[கமடம் + தரு – கமடத்தரு. கமடம் : ஆமை. ஒமை மரத்தை ஆமை மரம் என்று கூறும் கொச்சை வழக்கினடியாகத் தோன்றிய வடமெ ாழிச்சொல்லாகலாம்.]

கமடத்தோடு *kamaḍa-t-tōḍu,* பெ.(n.) ஆமையோடு; tortoise shell.

[கமடம் + அத்து + ஓடு. 'அத்து' சாரியை]

கமடப்பொடி *kamaḍa-p-poḍi,* பெ.(n.) ஆமை ஒட்டுப்பொடி; calcinated powder obtained from turtle shell.

[கமடம் + பொடி.]

கமடம்[1] *kamaḍam,* பெ.(n.) ஆமை; turtle; tortoise *"அவனுறு கமடமீத்தயங்கிய காப்பினை" (கந்தபு. ததீசியுத்.28.).*

[கும் : கூட்டுதல், அடங்கல். கும் : கும → குமடம் : உறுப்புகளை அடக்கிக் கொள்வது, ஆமை.]

கமடம்[2] *kamaḍam,* பெ.(n.) ***கமண்டலம்*** பார்க்க; see *kamaṇḍalam.*

[கமண்டலம் → கமடம் (கொ.வ.).]

கமடற்பம் *kamaḍaṟpam,* பெ.(n.) **கமடப்பொடி** பார்க்க; see *kamaḍa-p-poḍi.*

[கமடம் + பற்பம்.]

கமடி *kamaḍi,* பெ.(n.) பெண்ணாமை; the female turtle (சா.அக).

[கமடம் → கமடி. 'இ' பெ.பா.ஈறு.]

கமண்டலம் *kamaṇḍalam,* பெ.(n.) துறவியர் கையிலேந்தும் நீர்க்கடிகை, (வளைந்த கைப்பிடியுடைய மூக்குச் செம்பு); a vessel for holding water used by ascetics. *"தண்டொடு பிடித்த தாழ் கமண்டலத்து" (குறுந்.156:3.).*

ம. கமண்டலம்; **க.** கமண்டல; **தெ.** கமண்டலு.

Skt., Pali., Mar., Guj., Nep. kamaṇḍalu.

[கரம் + மண்டலம் – கரமண்டலம் → கமண்டலம் : கையிலெடுத்துச் செல்லும் மண் ஏனம். கரு → கரம் (கை).]

கமண்டலத்தைக் கமண்டலு என்பது தெலுங்குச்சொல். கம்பர் கமண்டலத்தைக் கமண்டலு எனப்பாடியிருப்பது கொச்சை வழக்காகிய திசைச்சொல்லாட்சி. "கமண்டலுவி னன்னீர்" [கம்பரா.அகத்.48.]. இதனை, செ.அக. தலைப்புச் சொல்லாகத்தந்திருப்பதும் தவறு. மராத்தி சொற்பிறப்பு அகர முதலியில் இச்சொல்லுக்குச் சுரைக்குடுவை எனப் பொருள் தந்திருப்பதும் ஏற்புடையதன்று.

கமண்டலம்

கமண்டலமுருந்து *kamaṇḍalamurundu,* பெ.(n.) குரல்வளையின் இரண்டு முக்கோண முருந்துகள்; the two ditcher shaped cartilages of the back of the larynx (சா.அக.).

[கமண்டலம் + முருந்து.]

கமண்டலவிளநீர் *kamaṇḍala-v-iḷa-nīr,* பெ.(n.) ஒரு கமண்டலமளவு நீர்தரக்கூடிய இளநீர் வகை (வின்.); large and tender coconut containing enough water to fill a kamaṇḍalam.

[கமண்டலம் + இளநீர்.]

கமத்தொழில் *kama-t-toḻil,* பெ.(n.) பயிர்த்தொழில், வேளாண்மை (யாழ்ப்.); tillage, cultivation.

*[கம் → கமம் + தொழில் – கமத்தொழில். நன்செய்

நிலத்து வேளாண்மை.]

கமதாயம் *kama-tāyam,* பெ.(n.) நிலவாகை (நாமதீப.); senna.

[ஒருகா. கம் → கமம் + தாயம் – கம்மத்தாயம் → கமதாயம் (கொ.வ.).]

கமம்[1] *kamam,* பெ.(n.) நிறைவு; fullness, entirely. *"கமம் நிறைந்தியலும்" (தொல்.சொல்.உரி.57.)*

[கும் → கம் → கமம். கும் = நிறைதல்.]

கமம்[2] *kamam,* பெ.(n.) 1.வேளாண்மை; cultivation, agriculture. 2.வயல்; field, farm. 3. நுழைவாயில்; entrance.

[கம் = நீர். கம் + அம் – கமம் = நீர்பாயும் நிலம், நீர்நிலை, அகழிவாயில், நன்செய்ப்பயிர் விளைவிக்கும் வேளாண்மை.]

கமம்[3] *kamam,* பெ.(n.) வெட்பாலை; dystantry rosebery (சா.அக.). ***கமல்**[1]* பார்க்க; see *kamal.*

[கம் → கமம்.]

கமம்புலம் *kamam-pulam,* பெ.(n.) நிலமும் புலமும், நன்செயும் புன்செயும் (யாழ்ப்.); lands and fields.

[கமம் + புலம். கமம் = நன்செய். புலம் = புன்செய்.]

கமர்[1]**–தல்** *kamar-,* 2 செ.கு.வி.(v.i.) எண்ணெய் போன்றவற்றைக் காய்ச்சும்பொழுது முடைநாற்றம் வீசுதல்; to spread disagreable smell of oil etc.

மறுவ. கமரு

[குமிழ் → குமுல் → கமல் → கமர்]

கமர்[2] *kamar,* பெ.(n.) நிலப்பிளப்பு (திவா.); crack, chasm, cleft in the ground caused by drought. *"கமர்பயில் வெஞ்சுரத்து" (தேவா. திருநன்னிலை.9.).*

[கவல் → கவர் → கமர் (கொ.வ.) கவல் = பிளவு, பிரிவு, உடைப்பு.]

கமரகம் *kamaragam,* பெ.(n.) தமரத்தை; carambola tree (சா.அக.).

[கமர் + அகம் .]

கமரி *kamari,* பெ.(n.) 1. பிளவுகளில் முளைக்கும் புல்; grass growing in crevices. 2.மான்; deer (சா.அக).

[கவர் → கமர் → கமர்.]

கமரிப்புல் *kamari-p-pul,* பெ.(n.) புல்வகையுளொன்று; cleft grass.

ம. கவரப்புல்லு

[கமர் = பிளவு. கமர் → கமரி + புல்.]

கமரு[1]**–தல்** *kamaru-,* 2 செ.கு.வி.(v.i.) அழுதல்; to weep (இ.வ.).

க. குமுலு

[குமுழ் → குமுல் → கமுல் → கமலு → கமருதல் = மனம் விம்மிப் பொங்குதல், அழுதல்.]

கமரு[2]**–தல்** *kamaru-,* 2 செ.கு.வி.(v.i.) தொண்டை கரகரத்தல்; to feel irritation in the throat.

[கமல் → கமர் = சளியால் தொண்டை ஈரமுற்றிருத்தல்.]

கமரோட்டம் *kamaröṭṭam,* பெ.(n.) பிளவுபட்ட உதடு; hare-lip (சா.அக.).

[கமர் + (ஒட்டம்) கமரொட்டம் – கமரோட்டம். ஒட்டம் = உதடு.]

கமல்[1] *kamal,* பெ.(n.) 1.வெட்பாலை (மூ.அ.) ivory-tree. 2.குடசப்பாலை; a twining plant known as twining swallow wort (சா.அக.).

மறுவ. கொடிப்பாலை

[கம் + அல் – கமல் = கடுங்கோடையிலும் மரப்பட்டையில் ஈரங்காத்து உலராது நிற்கும் மரம். கம் = நீர்.]

கமல்[2] *kamal,* பெ.(n.) ***கமலம்**[1]* பார்க்க; see *kamalam.*

[கம் + அல். 'அல்' சொல்லாக்க ஈறு. கம்-நீர். கமல் = நீரில் வளரும் செடி.]

கமலக்கண்ணன் *kamala-k-kaṇṇaṉ,* பெ.(n.) திருமால் (திவா.); Visnu, the lotus-eyed.

[கமலம் + கண்ணன் – கமலக்கண்ணன்.]

கமலக்கருவி *kamala-k-karuvi,* பெ.(n.) 1.கொப்பூழின் கீழிருக்கும் உறுப்பு; organ below the navel. 2.***மணிபூரகம்*** பார்க்க; see *maṇipūragam.*

[கமலம் + கருவி.]

கமலக்குளிகை *kamala-k-kuḷigai*, பெ.(n.) எழுவகை இதளியக் குளிகைகளில் ஒன்று; one of the seven varieties of animated mercurial pills (சா.அக.).

[கமலம் + குளிகை.]

கமலகோசிகம் *kamala-kōšigam*, பெ.(n.) கைகுவித்து ஐந்துவிரலும் அகலவிரித்துக் காட்டும் தாமரையிதழ் என்னும் இணையாவினைக்கை (சிலப் 3,18.உரை.); a gesture with one hand in which the fingers are so held as to appear like the calyx of a lotus, one of 33. *iṇaiyā-r-viṉaikkai* (செ.அக.). ***தாமரைக்கை*** பார்க்க; see *tāmarai-k-kai.*

[கமலம் + கோசிகம். skt.kosiga>த. கோசிகம். இதனைத்தாமரைக்கை அல்லது கமலக்கை என்று கூறுவர்.]

கமலத்தீ *kamala-t-tī*, பெ.(n.) இரண்டு விரல் கனமுள்ள விறகால் சிற்றளவாக எரிக்கும் தீ; a fine of moderate heat obtained by burning a fuel of two fingers thickness (சா.அக.).

[கமலம் + தீ.]

கமலத்தேவி *kamala-t-tēvi*, பெ.(n.) திருமகள் Lakshmi, whose abode is the pink lotus. *"கமலத் தேவியென்றே யையஞ் சென்றதன்றே" (திருக்கோ.41.).*

[கமலம் + தேவி.]

கமலநாட்டியம் *kamala-nāṭṭiyam*, பெ.(n.) கூத்து வகையுளொன்று, வட்டக்கூத்து (யாழ்.அக.); a kind of dance; circular dance.

[கமலம் + நாட்டியம் – கமலநாட்டியம்.]

கமலபிண்டம் *kamalapiṇḍam*, பெ.(n.) கருப்பையில் வளரும் தாமரை மொக்கையொத்த பிண்டம்; a foetus in the uterus which has developed to a stage resembling in shape and size of lotus bud (சா.அக).

[கமலம் + பிண்டம்.]

கமலம்[1] *kamalam*, பெ.(n.) 1.தாமரை (திவா.); lotus. 2.நீர் (திவா.); water. *"வண்ணவொண் கமலஞ் செய்யமுளரியை" (கந்தபு.திருவ.91).* 3. தாமரைப்பூ வடிவிலான தட்டு ; circular salver, like a full blown lotus. 4. பட்டைத்தீட்டிய வட்டக்கோணமுக வயிரம்; circular faceted diamond. 5. பேரெண்; large number.

ம. கமலம்; **க.** கமல; **தெ.**கமலமு; **H.** kamal; **Skt., Pali.** kamalam.

[கம் = நீர். கம் + அல் + அம் – கமலம் = நீரில் வளரும் பூங்கொடியாகிய தாமரை. 'அல்' சொல்லாக்க ஈறு. 'அம்' துணையீறு.]

கம் என்பது நீரைக் குறிக்கும் செந்தமிழ்ச் சொல். கமம் = நன்செய் நிலம். ஆதலால் கமலம் தூய தமிழ்ச் சொல்லாகும். இதனை வடசொல்லாகக் கூறுவோர் இதற்கு விரும்பத்தக்கது என்னும் சொல்மூலம் காட்டுவர். அதுவும் கம்→ கமம் = நிறைதல், பெருகுதல், உவத்தல், ஆசைமேலிடுதல் என்னும் தமிழ் வேர்ச்சொல்லடி விரிவேயாம். அம்→அமல் [நெருக்கம்] என்றாற் போன்று, கம் → கமல் [கமலம்] என்று நிறைவையும் ஒடுக்கத்தையும் குறித்தபோது எண்ணிக்கையில் மிகுந்த பேரெண்ணுக்குப் பெயராயிற்று.

கமலம்[2] *kamalam*, பெ.(n.) செந்நிற ஆடை, செம்படாம் (அக.நி.); scarlet-cloth.

[கமலம் = தாமரைப்பூ. செந்நிற ஒப்புமையால் செந்நிறத் துணியைக் குறித்தது.]

கமலம்[3] *kamalam*, பெ.(n.) ஆமை; tortoise.

[கமடம் → கமலம்.]

கமலம்[4] *kamalam*, பெ.(n.) 1.திருவாய்ச்சி; aura 2.உடம்பின் (மூலநிலை) ஆதாரம்; the mystic nerve centre in the human body.

[கமல் → கமலம் = தாமரைப்பூ, தாமரைப்பூவையொத்த வட்டவடிவ ஒளிச்சுற்று, தாமரை வடிவினதான மூலநிலை.]

கமலம்[5] *kamalam*, பெ.(n.) 1. பித்தளை; brass. 2. வெண்கலம்; bronze.

[ஒரு கா. கமல்→ கமலம் = தாமரை. தாமரை நிறத்தைப் பெற்றிருப்பதால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.]

கமலம்[6] *kamalam*, பெ.(n.) அடுக்கிய கோடிகளில் தாமரை என்னும் எண்ணுப்பெயர். *"நான்கு அடுக்கிய கோடி" (கோடி[4]);* number crore[4] generally known as thamarai. *"கையில் கமலமும் வெள்ளமும் நுதலிய" (பரிபா.2, 14).* ***அடுக்கிய கோடி*** பார்க்க; see *aḍukkiyakōḍi.*

[தாமரை → கமலம் (மறுபெயர்).]

பழந்தமிழ் எண்ணுப் பெயர்களுள் பேரெண்களைக் குறிக்கும் போது, அடுக்கிய கோடிகள்

அவற்றுக்குரிய தனிப்பெயர்களால் வழங்கப்பெறும்.

எண்	பெயர்	இடமானம்	(தானம்)
1	கோடி	கோடி	8 (100 00 000)
2	கோடி²	கும்பம்	15
3	கோடி³	நெய்தல்	22
4	கோடி⁴	தாமரை	29
5	கோடி⁵	குவளை	36
6	கோடி⁶	ஆம்பல்	43
7	கோடி⁷	வெள்ளம்	50
8	கோடி⁸	ஊழி	57

கமலமுனி *kamalamuṉi,* பெ.(n.) பதினெண் சித்தர் களுள் ஒருவர்; Kamalamuṉi, who is considered to be one of eighteen of the Siddars school of thought.

[கமலம் + முனி.]

கமலரேகை *kamalarēgai,* பெ.(n.) ***கமலவரி*** பார்க்க; see *kamalavari.*

[கமலம் + ரேகை.]

கமலவரி *kamalavari,* பெ.(n.) உள்ளங்கையில் உள்ள கைவரி வகை; certain lines on the palm of the hand.

[கமலம் + வரி.]

கமலவூர்தி *kamal-v-ūrdi,* பெ.(n.) தாமரையை ஊர்தியாகவுடைய அருகக்கடவுள் (திவா.); arhat, who rides on a lotus.

[கமலம் + ஊர்தி.]

கமலவைப்பு *kamala-vaippu,* பெ.(n.) தாமரையுள்ள நீர்நிலை; lotus tank or pool. *"வண்டினமே நீர்... வாழ்க மலவைப்பில்" (மாறன். 261. 652, உதா.).*

[கமலம் + வைப்பு. வைப்பு = நிலப்பகுதி, இடம்.]

கமலன் *kamalaṉ,* பெ.(n.) நான்முகன்; brahma, the lotus-born. *"மலர்செழுங் கமலத்துதித்தலாற் கமலனெனப் பெயர்மருவி" (கூர்மபு.8.).*

[கமலம் → கமலன்.]

கமலா *kamalā,* பெ.(n.) 1. கிச்சிலி வகை; loose-jacket, sylhet orange. 2. ஒருவகை நாரை; a kind of Indian crane. 3. சிறுநீர்ப்பை; urine bladder. 4. ஒரு மருந்து; a medicament. 5. ஒருவகைமான்; a kind of deer. 6. அல்லித்தாமரை; nymphaea lotus (சா.அக.).

கமலாக்கினி *kamalākkiṉi,* பெ.(n.) ***கமலத்தீ*** பார்க்க; see *kamalat-tī.*

[கமலம் + அக்கினி.]

கமலாசனம் *kamalāšaṉam,* பெ.(n.) ***தாமரை இருக்கை*** பார்க்க; see *tāmarai irukkai.*

[கமலம் +ஆசனம்.]

Skt. āsana> த.ஆசனம்.

கமலாப்பழம் *kamalā-p-paḻam,* பெ.(n.) இனிப்புக் கிச்சிலி; sweet orange.

[கமலம் + பழம். கமலம் = சிவப்பு.]

கமலாப்பொடி *kamalā-p-poḍi,* பெ.(n.) குரங்கு மஞ்சள் நாரி; kamala powder.

[கமலம் + பொடி – கமலப்பொடி → கமலாப்பொடி.]

கமலாபுரம் *kamalāpuram,* பெ.(n.) திருவாரூர், தூத்துக்குடி, சேலம், கரூர் மாவட்டங்களில் உள்ள சிற்றூர்கள்; a Villages in Karur, Tiruvarūr, Tūtukkudi district.

[கமலன் + புரம் – கமலன்புரம்→கமலபுரம்→கமலாபுரம்.]

கமலாலயப்புராணம் *kamalā-laya-p-purāṇam,* பெ.(n.) 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மறை ஞான சம்பந்தராலியற்றப்பட்ட தொன்மநூல்; a puramic composition *Maṟaiñāṉašambandar* of 16th C.

[கமலாலயம் + புராணம்.]

கமலாலயம் *kamalā-layam,* பெ.(n.) திருவாரூர்; Tiruvarur, a town sacred to siva-, in Tiruvarūr dt. *"முந்துசீர்க் கமலாலயத்து" (கந்தபு. தெய்வயா.61.).*

[கமலம் + ஆலயம் – கமலாலயம். ஆலையம் = ஆலயம் (திருச்சுற்று மதில்களைக் கொண்ட கோவில்.]

கமலி *kamali,* பெ.(n.) **குங்குமப்பாடாணம்** (மூ.அ.) பார்க்க; see *kuṅguma-p-pāḍāṇam,* a prepared arsenic.

[கமலம் → கமலி.]

கமலிகம் *kamaligam,* பெ.(n.) சிறுதாமரை; small lotus (சா.அக.).

[கமலம் → கமலி → கமலிகை → கமலிகம். `கை' சிறுமைப் பொருள் பின்னொட்டு.]

கமலிப்பட்டு *kamali-p-paṭṭu,* பெ.(n.) பட்டாடைவகை (சங்.அக.); a kind of silk-cloth.

[கமலம் → கமலி + பட்டு – கமலிப்பட்டு.]

கமலை[1] *kamalai,* பெ.(n.) 1.திருமகள்; Lakshmi. *"கமலை நோக்கும்" (கம்பரா.பாயி.பயன்.1).* 2. திருவாரூர் (திவா.); Tiruvarūr. *"கைந்நாகமிசை யூர்ந்து கமலையெனும் பதியடைந்தான்" (கந்தபு.120).*

[கமலம் → கமலை.]

கமலை[2] *kamalai,* பெ.(n.) பறிஇணைத்துக் கிணற்று நீரிறைக்கும் காளையேற்றம்; water-lift, consisting of a large hemispherical leather or iron bucket, worked with bullocks, a contrivance for drawing water from wells. *"முகட்டுக் கமலை வட்டத்தில்" (முக்கூடற்.46.).*

க.கவலெ; **ம.** கமல; **தெ.** கபில.

[அம் : நீர். அம்→கம்→கம்மாலை→ கமலை(வே.க.74.).]

காளை ஏற்றத்தைக் கமலை என்பது பாண்டி நாட்டு வழக்கு. கவலை என்பது சோழ, கொங்கு நாட்டு வழக்கு.

கன்னடத்திலும், தெலுங்கிலும் வகரம் பகரமாகத் திரிவதால் அதைத் துணைக்கொண்டு கவலையைக் கபிலை என்று திரித்து, அச்சொல்லை வடசொல் என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி குறிப்பது பொருந்துவதன்று. 'கபிலை' என்பது குரால் [புகர்நிற ஆன்]. ஆவைக் கட்டி நீரிறைக்கும் வழக்கம் தமிழகத்தில் இல்லை. கவலை என்னும் தென்சொல்லை வடசொல்லாக்கவே கபிலை என்னும் திரிசொல்லை ஆண்டுள்ளனர். கம் என்பதும் தென்சொல்லே [வே.க.74].

கமலைவண்டி *kamalaivaṇḍi,* பெ.(n.) கமலை ஏற்றத்தின் மேலுள்ள உருளை; pulley (உ.வ.).

[கமலை + வண்டி.]

கமவாரம் *kamavāram,* பெ.(n.) உழவுக்கருவி களுக்காக விளைச்சலில் வாங்கும் பங்கு (யாழ்ப்.); share of the produce of land given in return for agriculturual implements loaned for cultivation.

[கமம் + வாரம் – கமவாரம். கமம் : நன்செய்நிலம். வாரம் : வருவாய், பங்கு. (வருவது வாரம்).]

கமழ்[1]**—தல்** *kamal-,* 2.செ.கு.வி.(v.i.) நறுமணம் வீசுதல்; too emit fragrance. *"தேங்கமழ் நாற்றம்" (நாலடி. 199.).* 2. தோன்றுதல்; to appear. *"மணங்கமழ் மாதரை மண்ணியன்ன" (பொருந.19.)* 3. பரத்தல்; to spread. *"வியலிடங் கமழ விவணிசையுடை யோர்க்கு" (புறநா.50;13.).*

ம. கமிழுக; **க.** கமரு (நெடி); **தெ.** கம்பு (நறுமணம்); **பட.** கமலு (நறுமணம்).

[கம் → கமழ் → கமழ்தல். கம் : நிறைதல், பெருகுதல், பரவுதல், மணம் பரப்புதல்.]

கமழ்[2] *kamal* பெ(n.) 1.மருது; marudah tree. 2.நறுமணம்; sweet smell (சா.அக.).

[கம் → கமழ். கமழ் : மணமுள்ளது.]

கமழ்ப்புல் *kamal-p-pul,* பெ.(n.) ஒருவகை நறுமணப் புல்; a fragrant grass (சா.அக.).

[கமழ் + புல். கமழ் : மணம்.]

கமழுகம் *kamaḷugam,* பெ.(n.) மருது; murdah tree (சா.அக.).

[கமழ் + உகம். இகம் → உகம்.]

கமறு—தல் *kamaṟu-,* 5 செ.கு.வி.(v.i.) 1.மிக வொலித்தல்; to roar as thunder. *"முகிலுங் கமற" (திருப்பு. 750.).* 2. மிக அழுதல் (வின்.); to weep bitterly, cry very loud. 3. மிக வேகுதல்; to be excessively heated, to become dry and hard. *"கடல்தீவுகள் கமற வெந்தழல் வேல்விடு சேவக" (திருப்பு. 784.).* 4. நெடியுண்டாதல்; to feel a pungent sensation as that produced by chillies on the fire; மிளகாய் கமறுகிறது (கொ.வ.).

ம. கமக்குக; **க.** கமரிசு; **பட.** கமரு(நெடி).

[கம் → கமல் → கமறு → கமறுதல் = பெருகுதல், பரவுதல், மிகுதல்.]

கமனகுளிகை *kamaṉa-kuḷigai,* பெ.(n.) வான் வழியே நினைத்தவுடன் செல்லுதற்குரியதாகக் கருதப்பட்ட சித்தர்குளிகை (வின்.); magical mercury pill, reputed to give a person the power of freely travelling through space.

[கமனம் + குளிகை. கம் → கமனம் = பரவுதல், செல்லுதல்.]

கமனி[1]–த்தல் *kamaṉi-,* 4 செ.கு.வி. (v.i.) செல்லுதல் (யாழ்.அக.); to go, pass swiftly.

[கம் → கமனம் → கமனித்தல். கம் = பரவுதல், செல்லுதல்.]

கமனி[2] *kamaṉi,* பெ.(n.) காற்றுமண்டலத்தில் செல்லும் ஆற்றலுடையவன்; one who flies in the aerial region (சா.அக.).

[கம் → கமனம் → கமனி. 'இ' உடைமை குறித்த ஈறு.]

கமார் *kamār,* பெ.(n.) ***கமர்[2]*** (வின்.) பார்க்க; see *kamar[2]*.

[கமர்[2] → கமார்.]

கமாரக்காரர் *kamāra-k-kārar,* பெ.(n.) தம் தலைவனுக்கு அடங்காத பரவர் வகுப்பினர்; (G.Tn.D.i.123.); a division among the fisherman caste who impugn the authority of their caste leader.

[கமாரம் + காரன் – கமாரக்காரன். கமர் → கமார் → கமாரம் = வெடிப்பு, வெடிக்கும் ஓசை இங்கு எதிர்ப்புணர்வைச் சுட்டியது.]

கமாரிடு–தல் *kamār-iḍu-,* 20.செ.கு.வி.(v.i.) மெதுவாய் ஓசை எழுப்புதல், ஒலிசெய்தல்; to cry softly, utter a faint sound. அங்கே ஒருவருங் கமாரிடக் கூடாது (வின்.).

[கமர் → கமார் + இடு – கமாரிடு. கமார் = வெடிப்பு, வெடிக்கும் அல்லது பொரிக்கும் ஓசை.]

கமாரெனல் *kamār-eṉal,* பெ.(n.) மெதுவான ஒலிக்குறிப்பு (வின்.); onoam.,expr. crying softly, uttering a faint sound.

[கம் → கமார் + எனல் – கமாரெனல். 'கமார்' ஒலிக்குறிப்பு.]

கமால்செய்–தல் *kamālšey-,* 1 செ.குன்றாவி. (v.t.) ***கம்மால் செய்–தல்*** பார்க்க; see *kammālšey.*

[கம்மால் – கமால் + செய்.]

கமி[1]–த்தல் *kami,* 4 செ.கு.வி. (v.i.) நடத்தல் (பிங்.); to walk.

[கம் (அசைதல்,நகர்தல்) → கமி.]

கமி[2]–த்தல் *kami-,* 4 செ.குன்றா.வி.(v.t.) 1. தாங்குதல்; to support. *"கமித்துநின்றிடு களையெலாம்" (சேதுபு.மங்கல.64.)* 2. பொறுத்தல்; to bear with, endure, forgive, pardon. *"எங்க ளறியாமையாதி கமி" (தேவா. 1184,7.).*

த.கமி. >**Skt.** ksami.

[காவு → கவு → கமு → கமி (கொ.வ.) → கமித்தல் = சுமத்தல், பொறுத்தல், தாங்குதல்.]

கமி[3] *kami,* பெ.(n.) மிளகு (மலை.); black pepper.

[கருமிளகு → கமி (கொ.வ.).]

கமிகை *kamigai,* பெ.(n.) கடிவாளம்; bridle.

[கமி → கமிகை. கமி = சுமத்தல், பொறுத்தல, தாங்குதல், தாங்கி நிறுத்துதல்.]

கமிச்சு *kamiccu,* பெ.(n.) ***கம்பியச்சு*** (இ.வ.) பார்க்க; see *kambi-y-accu.*

[கம்பியச்சு → கமிச்சு (கொ.வ.).]

கமிழுகம் *kamiḻugam,* பெ.(n.) 1. முள்ளம்பன்றிக் கொம்பு; the long erectile spine of a porcupine (சா.அக). 2. முள்ளம்பன்றி; porcuine.

[கம் = பரவுதல், பரப்புதல். கம் → கமி → கமிழ் + உகம் –கமிழுகம் = முள்ளைப்பரப்பக்கூடியது.]

கமுக்கக்காரன் *kamukka-k-kāraṉ,* பெ.(n.) அடக்கமுள்ளவன்; reserved, reticent man.

[கமுக்கம் + காரன் = கமுக்கக்காரன்.]

கமுக்கட்டு *kamu-k-kaṭṭu,* பெ.(n.) அக்குள் (பிங்.); armpit.

[கம் → கம்மு + கட்டு – கம்முக்கட்டு → கமுக்கட்டு. கம்முதல் = அடக்கிக்கொள்ளுதல். கமுக்கட்டு = ஏதேனும் பொருளை அடக்கி வைத்துக்கொள்ளும் இடம்.]

கமுக்கட்டுக்கள்ளன் *kamu-k-kaṭṭu-k-kaḷḷaṉ,* பெ.(n.) அக்குளில் உண்டாகும் ஒரு கட்டி; an abscess arising in the arm-pit,

[கமுக்கட்டு + கள்ளன்.]

கமுக்கம் *kamukkam,* பெ.(n.) மறைபொருள், மந்தணம்; secret. கை மூடிக்கொண்டிருந்தால் கமுக்கம், திறந்தால் வெட்டவெளி (உ.வ.).

ம. கமுக்கம்; **கோண்.** கம்மெகெ.

[கும் → குமு → குமுக்கு → கமுக்கு → கமுக்கம்.]

கமுக்குக்கமுக்கெனல் *kamukku-k-kamukkeṉal,* பெ.(n.) மந்தணத்தைக் காட்டும் ஒலிக்குறிப்புச் சொல்; onom. expr. signifying confidential matter.

[கமுக்கு + கமுக்கு + எனல். ஈரடுக்கொலிக் குறிப்பு]

கமுகக்குடி *kamuga-k-kuḍi,* பெ.(n.) திருவாரூர் மாவட்டத்தைச் சார்ந்த சிற்றூர்; a village inTiruvarūr district.

[கமுகு + குடி– கமுகக்குடி. கமுகு = பாக்கு.]

கமுகங்காய் *kamugaṅkāy,* பெ.(n.) பாக்கு; arecanut.

[கமுகு + அம் + காய். `அம்' சாரியை.]

கமுகந்தொலி *kamugantoli,* பெ.(n.) பாக்கின் மீதுள்ள தோல்; the outer covering of an arecanut.

[கமுகு + அம் + தொலி.]

கமுகம்பிள்ளை *kamugampiḷḷai,* பெ.(n.) பாக்கு மரக்கன்று; the young areca.

[கமுகு + அம் + பிள்ளை. 'அம்' சாரியை.]

கமுகம்பூச்சம்பா *kamugam-pūccambā,* பெ.(n.) கமுகம்பூவின் மணமுடைய சம்பாநெல்வகை; a kind of paddy, having the odour of areca flowers.

[கமுகம் + பூ + சம்பா – கமுகம் பூச்சம்பா.].

கமுகமடல் *kamuga-maḍal,* பெ.(n.) பாக்குமரத்தின் இளமடல்; the pinnate leaves of areca tree.

து. கங்கொலி

[கமுகம் + மடல்.]

கமுகமுத்தம் *kamugamuttam,* பெ.(n.) ***கமுகமுத்து*** பார்க்க; see *kamugamuttu.*

[கமுகமுத்து → கமுகமுத்தம் .]

கமுகமுத்து *kamugamuttu,* பெ.(n.) பாக்கு; arecanut.

[கமுகு + அம் + முத்து. 'அம்' சாரியை.]

கமுகவலிச்சல் *kamugavaliccal,* பெ.(n.) ***கமுகஞ் சலாகை*** பார்க்க; see *kamugañcalāgai.*

[கமுகம் + வலிச்சல். வலி → வலிச்சல் = வரிச்சை.]

கமுகாஞ்சலாகை *kamugāñ-calāgai,* பெ.(n.) கட்டுதற்குகந்த பாக்குமரத்துவரிச்சல் (வின்.); areca laths.

[கமுகு + அம் + சலாகை – கமுகஞ்சலாகை.]

கமுகு *kamugu,* பெ.(n.) 1.பாக்குமரம்; betel-nut palm tree, areca-nut tree. *"காய்க்குலைக் கமுகும்" (மணிமே.1,46.)* 2.பாக்கு; arecanut. *"கைக்காய்த்தால் கமுகுகாய்க்கும்" (பழ.).*

மறுவ. பாக்கு, பூகம், பூக்கம், கந்தி, அடைக்காய்மரம்.

ம. கமுகு, கவுங்நு, கமுங்நு, கமுங்கு; **க.**கவுங்கு, கங்கு; **து.**கங்கு, கங்நு.

Skt. kramuka; **Pali.** kamuko.

[கம் → கமு → கமுகு (சுவையுடையது). கம் = மணம், சுவை.]

கமுகுக்குலை *kamugku-k-kulai,* பெ.(n.) பாக்குக்குலை, a bunch of arecanut (சா.அக).

[கமுகு + குலை.]

கமுகை *kamugai,* பெ.(n.) *கமுகு* பார்க்க (சா.அக.); see *kamugu.*

[கமுகு → கமுகை.]

கமுனை *kamuṉai,* பெ.(n.) மாதுளை; pomegranate.

[கம் → கமுனை. கம் = நீர்; கமுனை = நீர், சாறு நிறைந்த முத்துகளையுடையது.]

கமை[1]–த்தல் *kamai-,* 4.செ.குன்றாவி.(v.t.) *கமி[3]* பார்க்க; see *kami[3]*. *"அடியேன் பிழைத்தேனாயினும் நீ கமைக்க வேண்டும்" (விநாயகபு. 33.13.).*

[கமி[3] → கமை.]

கமை[2]–தல் *kamai-,* 4 செ.கு.வி.(v.i.) நிரம்புதல்; to be full. *"கமையாக் காதல்" (சங்கற்ப.2.).*

[கம் → கமை. கம் = பரவுதல், நிறைதல்]

கமை[3] *kamai,* பெ.(n.) 1.பொறுமை; patience, forbearance, lenity, endurance. *"கமையினை யுடையராகி" (தேவா. 1104.5).* வம்பு தும்பு பண்ணாமல் கமையாக இருந்துகொள் (இ.வ.). 2. அழகு; beauty (த.மொ.அக.).

[கம் → கமை. கம் = பரவுதல், நிறைதல். கமை = பொறை, அழகு.]

கமை[4] *kamai,* பெ.(n.) மலை; mountain. *"கமையாகி நின்ற கனலே போற்றி" (தேவா. 1160.8).*

[உம் → கம் (உயரம், மலை) → கமை.]

கமை[5] *kamai,* பெ.(n.) கரும்பு; sugarcane (சா.அக).

[கம் → கமை. கம் = இனிமை, சுவை, மணம்]

கமைப்பு *kamaippu,* பெ.(n.) பொறுமை; endurance. *"கமைப்புறு நாண்முதற் காப்பு நீங்கினார்" (திருவிளை. வளை.28.).*

[கம் → கமை → கமைப்பு.]

கய[1]–த்தல் *kaya-,* 3 செ.கு.வி.(v.i.) கசத்தல்; to be bitter.

ம. கைக்க, கசக்க; **க.** கய், கயி,கய்மி; **கோத.** கச்; **துட.** கொய்; குட. கய்; **மா.** காசெ; **பட.** கயி.

[கள் → கய.]

கய[2]–த்தல் *kaya-,* 3 செ.குன்றாவி.(v.t.) வெறுத்தல்; to abhor, loathe, detest. *"கயந்து நவின்றீரே" (சிவதரு. சுவர்க்கநரக.188.).*

[கள் → கய.]

கய[3] *kaya,* கு.பெ.எ.(adj.) 1.பெரிய; great. *"தேடுங் கயமா முகனைச் செருவில் சாடும்" (கந்தரனுபூ–1).* 2. மெல்லிய; tender, smooth, delicate. கயந்தலை மடப்பிடி (தொல்.சொல்.322.உரை.) .

[கரு → கய.]

கயக்கம் *kayakkam,* பெ.(n.) 1.வாட்டம்; strain, stress. *"புதல்வனைப் பயந்த புனிறுதீர் கயக்கந் தீர்வினை மகளிர்" (மணிமே. 7,75.).* 2. இடையீடு; intermission, interruption. *"கயக்கமி றுயிற்சிக் கும்பகருணெனக் கண்ணிற் கண்டான்" (கம்பரா. ஊர்தேடு.121.).* 3.கலக்கம்; confusion, perturbed condition. "கவ்விய வெஃகிநின்ற கயக்கமி னிலைமை நோக்கி" (சீவக.395.) .

[கய → கயங்கு → கயங்கம் → கயக்கம்.]

கயக்கால் *kayakkāl,* பெ.(n.) ஊற்றுக்கால்; channel issuing from a spring; river channel. *"ஐம்பூண்டிக் கயக்காலுக்கு வடக்கும்" (S.I.I.i.87).*

மறுவ. ஊற்றுக்கால்

[கய → கயம் + கால். கயம் = நீர்நிலை.]

கயக்கு[1]–தல் *kayakku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கசங்கச்செய்தல்; to squeeze in the hand, rub, bruise, mash. 2. கலக்குதல்; to disarrange, throw into confusion. *"கயக் கருங் கடற்றானை" (பு.வெ.9,35.கொளு.).*

[கல் → கல → கய → கயக்கு.]

கயக்கு[2] *kayakku,* பெ.(n.) 1.சோர்வு (திவா.); weariness, exhaustion. 2.மனக்கலக்கம்; confusion of mind, doubt, perplexity. *"கயக்கறு மாக்கள் கடிந்தனர்" (மணிமே. 16,85.).*

[கல் → கய → கயக்கு.]

கயங்கு—தல் *kayaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1.கசங்குதல்; to be squeezed in the hand, bruised, mashed, to shrivel. *"கயங்கி வாடாதே" (அருட்பா,vi, திருவருட் பேறு, 10, பக்.565.).* 2. சோர்தல்; to be tired, exhausted, to droop. *"கயங்கா நிலையும்" (அருட்பா. திருவருள்.203.).* 3. கலங்குதல்; to be disturbed, as in mind. *"கயங்கு நெஞ்ச" (திருக்காளத். பு. 4,5.).*

[கல் → கல → கய → கயங்கு.]

கயச்சோளம் *kaya-c-cōḷam,* பெ.(n.) ஆற்றுப் படுகைச் சோளம்; maize cultivated in river beds (சா.அக.).

[கயம் + சோளம். கயம் = நீர்நிலை.]

கயத்தார் *kayattār,* பெ.(n.) தூத்துக்குடி மாவட்டத் துச் சிற்றூர்; a village in Tūttukkudi dt.

*[கயம் + அத்து + ஊர். கயத்தூர்–கயத்தார் (கொ.வ.). கயம் = குளம். 'அத்து' சாரியை. **கயத்தூர்** பார்க்க;* see *kayattur.]*

கயத்தாற்றரசன் உலா *kayattāṟṟaraśaṉ-ulā,* பெ.(n.) 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அந்தகக் கவி வீரராகவரால் இயற்றப்பட்ட சிற்றிலக்கிய நூல்; a poetical work by Andagak Kavi Vīrarāgavar of 17th c.

[கயத்தாறு + அரசன் + உலா.]

கயத்தாறு *kayattāṟu,* பெ.(n.) தூத்துக்குடி மாவட்டத் திலுள்ள ஓரூர்; name of a village in Tūttukkudi dt.

[கயம் + அத்து + ஆறு. கயம் = நீர்நிலை. 'அத்து' சாரியை.]

இந்திய விடுதலைப் போராட்ட மறவன் கட்டபொம்மன் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்ட ஊர்.

கயத்தி *kayatti,* பெ.(n.) 1.கீழ்மகள்; base, unworthy woman.2.கொடியவள்;cruel-woman. *"அரங்கின்மே லிவளைத் தந்த தாய்கொலோகயத்தி" (சீவக.678.).*

[கய + அத்தி. அத்தி (பெ.பா.ஈறு). கய → கயம் = கீழ்மை[illegible]]

கயத்தூர் *kayacttūr,* பெ.(n) திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஓரூர்; a village in Tuticorin and Tiruvarur district.

[கயம் + அத்து + ஊர் – கயத்தூர். கயம் = குளம். 'அத்து' சாரியை.]

கயத்தூர்க்கிழார் *kayattūrkkiḻār,* பெ.(n.) கடைக்கழகக் காலப் புலவருள் ஒருவர். குறுந். 354 ஆம் பாடலைப் பாடியவர், one of the poets of the Sangam period.

[கயத்தூர் + கிழார்.]

கயந்தலை[1] *kayandalai,* பெ.(n.) குழந்தையின் மெல்லிய தலை; soft head, as of a child. *"முக்காழ் கயந்தலைத் தாழ" (கலித். 86,2.2. குழந்தை (நாஞ்); child. 3.யானைக்கன்று (பிங்.);* young elephant, having a tender head. *"துடியடிக் கயந்தலைக் கலக்கிய சின்னீரை" (கலித்.11.).*

[குள் → கள் → கய → கயம் + தலை – கயந்தலை. சிறுபிள்ளைகளைக் கன்று கயந்தலை யென்பது பாண்டி நாட்டு வழக்கு.]

கயந்தலை[2] *kayandalai,* பெ.(n.) மனத்துயர் (யாழ்.அக.); sorrow, grief.

[கயம் + தலை – கயந்தலை. கயம் = கலக்கம். 'தலை பெயரீறு.]

கயந்தலை[3] *kayandalai,* பெ.(n.) யானையறுகு; elephant grass.

[கயம் + தலை. கயம் = மென்மை.]

கயப்பங்கொட்டை *kayappaṅkoṭṭai,* பெ.(n.) எட்டியின நச்சுச்செடி விதை; Saint Ignatius bean

[கயப்பு + அம் + கொட்டை.]

கயப்பாக்கம் *kayappākkam,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanchipuram district.

[கயம்+ பாக்கம்=கயப்பாக்கம். கயம்=குளம். பாக்கம் நெய்தல் நிலத்திலுள்ள சிற்றூர்.]

கயப்பினை *kaya-p-pinai,* பெ.(n.) வங்கமணல்; sand mixed with lead,lead ore (சா.அக).

மறுவ. ஈயமணல்

கயப்பு *kayappu,* பெ.(n.) கசப்பு, கைப்பு; bitterness. *"வாய் கயப்புறா" (கம்பரா. மந்தரை.63.).*

ம. கைப்பு; **க.** கய்பு, கய்ப; **து.** கைபெ, கயிபெ, கைபெலு; **தெ.** கச (பிஞ்சுக்காய்); **கொலா.** செந்த்; **கட.** கேம்புர்; **கொண்.** கெககெ.

Pali. kasāya, kasāva-kasaṭa.

[கள் → கய + கயப்பு.]

கயப்பூ *kaya-p-pū,* பெ.(n.) நீர்ப்பூ; aquatic flower. *"கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற்கூம்புவாரை" (நாலடி, 215.).*

[கயம் + பூ – கயப்பூ. கயம் = நீர்நிலை.]

கயம்[1] *kayam,* பெ.(n.) 1.பெருமை (பிங்.); greatness, superiority, eminence. *"வெங்கயகடகரி வேந்தன்" (பாரத. குருகுல–51).*

[கள் = கூடுதல். கள → கய→கயம்.]

கயம்[2] *kayam,* பெ.(n.) 1.மென்மை (பிங்.); tenderness, softness, smoothness. *"கயவென் கிளவி மென்மையுஞ் செய்யும்" (தொல்.உரி.24).* 2.இளமை (திவா.); youthfulness.

[கள்→ (நெருங்கல், இளகல், மென்மை.) கய → கயம்]

கயம்[3] *kayam,* பெ.(n.) 1.கீழ்மை; inferiority, baseness, meanness. *"கயம்பெருகிற் பாவம் பெரிது" (நான்மணி.92.).* 2. கீழ்மக்கள்; the mean, the wicked, the vicious. *"இரும்பிற் பிணிப்பர் கயத்தை" (நான்ம ணி.12.).*

ம. கயம்; **க.** கெய்த, கெய்மெ.

[குள் → கள் → கய்→கயம் (மு.தா.295, 297).]

கயம்[4] *kayam,* பெ.(n.) கரிக்குருவி; black sparrow. *"கோக்கயம்" (திருவாலவா. 60,13.).*

[கள் → கய → கயம்(கருநிறம்) (வே.க.125).]

கயம்[5] *kayam,* பெ.(n.) 1.நீர் (பிங்.); water. 2.ஆழமான குளம்; tank, lake. *"துணிகயந் துகள்பட" (மணிமே.24:84.).* 3. கடல்; sea. "கயங்கரத்துறை யரக் கரை" (உபதேசகா.விபூதி.201.). 4.ஆழம்; depth. *"கயங்கொள் கடலின் முன் சேதுக்கண்ட முறையின் கதையீதால்"* (சேது. சேதுவந்.42.). 5. அகழி (யாழ்.அக); moat. 6. கழிமுகம்; estuary.

ம. கயம்; **து.** கய.

[குள் → கள் → கய → கயம்.]

கயம்[6] *kayam,* பெ.(n.)1.யானை; elephant. *"கயந்தனைக் கொன்று" (திருவாச.9,18.).* 2.யானைக் கன்று; calf of an elephant. *"கோளி பங்கயம் மூழ்கக் குளிர் கயம்" (இரரமா. வரைக்.62)*

[கள் → கய → கயம் = கரியது, கரிய யானை.]

த. கயம்> **Skt.** gaja.

கயம்[7] *kayam,* பெ.(n.) 1.தேய்வு; decay, wane, diminution. *"பயந்த தீவினை பின்னுவா மதியெனப் பாரிற் – கயந்தருங்கொலாம்" (திருச்செந்.பு செந்தூர்வை. 11).* 2. குறைபாடு (சூடா.); deficiency, defect. 3. கேடு(சூடா.); loss, destruction, ruin.

[கள் = நெருங்கல், தேய்தல், குறைபடல். கள் → கய → கயம்.]

கயம்[8] *kayam,* பெ.(n.) அகில் (சங்.அக.); eaglewood.

[கள் → கயம்.]

கயம்[9] *kayam,* பெ.(n.) ஊர்ப் பெயர்களுக்கு முன் அடையாக அல்லது பின் அடையாக வரும் பெயர்ச் சொல்; noun used as prefix or suffix of place names. எ.டு. கயத்தாறு, ஆலங்காயம் (ஆலங்கயம்).

[கய → கயம். (குளம், நீர்நிலை).]

கயமலர் *kaya-malar,* பெ.(n.) பெரியமலர்; big flower.

[கயம் + மலர். கயம் = பெரியது.]

கயமனார் *kayamaṉār,* பெ.(n.) அகம், புறம், குறுந்தொகை, நற்றிணை ஆகிய நூல்களிற் பல பாடல்கள் பாடியுள்ள கடைக்கழகப் புலவருள் ஒருவர்; a poet of Sangam age whose contribution of

poems are in Aganānuru, Puranānuru, Kurunthogai, Narrinai etc.,

[கயம் = யானை. வாகு = வலிமைதோள். கய(ம்) + வாகு.] கரியவன், யானை போன்றவன். கயமன் + ஆர். (உயர்வுப்பன்மையீறு)]

கயமுகன் *kaya-mugan,* பெ.(n.) 1. யானைமுகத் தோன் (விநாயகர்) (சூடா); Gaṇēsā, the elephant-headed. 2.யானைமுகனாற் கொல்லப்பட்ட ஓர் அரக்கன் (விநாயகபு.); an asura slain by Gaṇēsā.

[கயம் + முகன்.]

கயமுனி *kayamuni,* பெ.(n.) யானைக்கன்று; young elephant. *"பொய்பொரு கயமுனி முயங்கு கை கடுப்ப" (மலைபடு.107.).*

[கயம் + முனி – கயமுனி. கயம் = கரிய யானை. முனி = கன்று.]

கயர் *kayar,* பெ.(n.) 1.துவர்ப்பு; astringency. 2. உறைப்புண்டாக்கும் துவர் உள்ள பொருள்; astringent matter, as juices that taint metals, linen, skin. 3. தேங்காயின் கண்ணுள்ளபகுதி; soft, spongy top of a coconut.

[காழ் → காள் → கள் → கய → கயர்.]

கயர்ப்பாக்கு *kayar-p-pākku,* பெ.(n.) துவர்மிக்க பாக்கு (யாழ்ப்.); highly astringent areca-nut.

[கய → கயர் + பாக்கு – கயர்ப்பாக்கு.]

கயர்ப்பு *kayarppu,* பெ.(n.) துவர்ப்புச் சுவை; astringency.

[கயர் + பு – கயர்ப்பு.]

கயர்ப்புச்சரக்கு *kayarppu-c-carakku* பெ.(n.) துவர்ப்புச் சரக்கு; a drug that arrests discharges (சா.அக.).

[கயர்ப்பு + சரக்கு.]

கயல் *kayal,* பெ.(n.) கெண்டை மீன்; carp, a tank fish. *"கயலெனக் கருதிய வுண்கண்" (ஐங்குறு.36.).*

ம. கயல்; **தெ.** சேப; **கொலா.** கயெ; **நா.**கய்யெ; **பர்.**கெய்; **Skt.** kaivarta, kevarta (fisherman); **Pkt.** kavaṭṭa.

[கயவு (கழிமுகம்) → கயவல் → கயல்.]

கயவஞ்சி *kaya-vañji,* பெ.(n.) கருமி (யாழ்ப்.); niggard, stingy person.

[கயவன் → கயவஞ்சி .]

கயவர் *kayavar,* பெ.(n.) கீழ்மக்கள்; unworthy person. *"கயவரைக் கையிகழ்ந்து வாழ்தல்" (திரிகடு.77). "மக்களே போல்வர் கயவர்" (குறள், 1071).*

[கய + அர் – கயவர்.]

கயவரி *kaya-vari,* பெ.(n.) கழிமுகம் (நாமதீப.); river-mouth.

[குள் → கள் → கய → கயம் + வரி. கயவரி. வாரி → வரி.]

கயவளாகம் *kaya-vaḷāgam,* பெ.(n.) கீழுலகம் (யாழ்.அக.); the nether world.

[குள் → கள் → கய + வளாகம் – கயவளாகம். கயம் = பள்ளம், தாழ்வு, ஆழம்.]

கயவன்[1] *kayavan,* பெ.(n.) 1.கீழ்மகன்; base unworthy person. *"கல்லாக் கயவன்" (மணிமே. 23,94.).* 2. கொடியவன்; cruel man. *"கண்ணிசூட்டி யவர்கொலோ கயவர் சொல்லீர்" (சீவக.678.).* 3. ஏமாற்றுபவன்; deceiver. கயவன் நல்லவனாக நடித்து ஏமாற்றிவிட்டான் (உ.வ.).

[கய + வ் + அன்.]

கயவன்[2] *kayavan,* பெ.(n.) 1.கரியவன்; the black man. 2. கரியநிறத்துத் தெய்வம்; name of a village deity of few communities.

[கள் → கய + வ் + அன் – கயவன்.]

கயவாகு *kayavāgu,* பெ.(n.) சேரன் செங்குட்டு வனுக்குச் சமகாலச் சிங்கள அரசன்; Sinhala king contemporary of Cēran Senguṭṭuvan. *"கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்" (சிலப். வரந்தரு.160).*

[கயம் = யானை. வாகு = வலிமை. கய(ம்) + வாகு.]

Skt. gajabagu

கயவாசம் *kayavāšam,* பெ.(n.) பெருங்காஞ்சொறி; climbing nettle.

[கயம் + வாசம். கயம் = யானை, பெரியது.]

கயவாய்[1] *kayavāy,* பெ.(n.) 1.கழிமுகம்; estuary *"கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்" (சிலப். இந்திர.9).*

[கயம் + வாய் – கயவாய்.]

கயவாய்[2] *kayavāy,* பெ.(n.) பெரியவாய்; wide open, bigmouth. *"கயவாய் வேங்காய்" (அக.நா.221–11).*

[கயம் + வாய் . கயம் = யானை, பெரியது.]

கயவாய்[3] *kaya-vāy* பெ.(n.) 1.***கரிக்குருவி*** பார்க்க; see *kari-k-kuruvi, "தேற்றமில் கயவாயாகிச் செனித்தலால்" (திருவிளை.கரிக்.3.).* 2. எருமை (பிங்.); buffalo.

[கள் → கய + வாய் – கயவாய் = கரிய வாயுடையது.]

கயவாளி[1] *kayavāḷi,* பெ.(n.) ***கயவன்*** பார்க்க; see *kayavaṉ.*

[கய + ஆளி – கயவாளி.]

கயவாளி[2] *kayavāḷi,* பெ.(n.) 1.உண்மைக்குப் புறம்பானவன்; dishonest person. 2.பேராசைக்காரன்; extortioner. 3. தகுதியிழந்தவன்(அயோக்கியன்); unscrupulous fellow.

[கய(ம்) + ஆளி – கயவாளி.]

கயவு[1] *kayavu,* பெ.(n.) ***கயம்***[1,2] பார்க்க (திவா.); see *kayam*[1,2].

[கயம் → கயவு.]

கயவு[2] *kayavu,* பெ.(n.) 1.மென்மை; tenderness. 2.களவு (பிங்.); theft, pilfering, larceny.

[கள் → கய → கயவு.]

கயவு[3] *kayavu,* பெ.(n.) 1.கழிமுகம் (யாழ்.அக.); river-mouth. 2.உயரம்; height. 3. ஆழம்; depth.

மறுவ. கயம்

[கள் → கய → கயவு.]

கயவு[4] *kayavu,* பெ.(n.) ***கரிக்குருவி*** (பிங்.); black sparrow.

[கள் → கய → கயம் → கயவு (வே.க.125).]

கயவுவாய் *kayavu-vāy,* பெ.(n.) பெரியவாய்; wide open. *"கயவுவாய் வெல்லிபந் துளைத்து மள்ளர் விட்ட வாளி" (திருவிளை.45–18).*

[கயவு + வாய்.]

கயற்கண்ணிமாலை[1] *kayaṟ-kaṇṇi-mālai,* பெ.(n.) 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சரவணப் பெருமாள் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்ட நூல்; a treatise by Saravana Perumal Kavirayar of 19th c.

[கயல் + கண்ணி + மாலை.]

கயற்கூடு *kayaṟ-kūḍu,* பெ.(n.) இணைக்கயல்; pair of kayal fish.

[கயல் + கூடு. (கூடு = இணை.).]

கயற்கெண்டை *kayaṟ-keṇḍai,* பெ.(n.) கருங் கெண்டை மீன்வகை (வின்.); a kind of keṇḍai fish.

[கயல் + கெண்டை – கயற்கெண்டை (கருங்கெண்டை).]

கயறி *kayaṟi,* பெ.(n.) ஒருவகைத் தென்னை; a kind of coconut tree (ம.அக).

[கய → கயறி (பெரியது,உயரமானது.).]

கயறு–தல் *kayaṟu-,* 5 செ.கு.வி.(v.i.) மேலே ஏறுதல்; to climb, ascend, mount. 2. நுழைதல்; to get in, instruded, enter. 3. முன்னேறுதல்; to advance, to go ahead. 4.பெருகுதல்; to increase. 5.பரவுதல்; to spread (சேரநா.).

ம. கயறுக; **தெ.** கசரு.

[கள் → கய (நெருங்குதல், பெருகுதல், பரவுதல் பொருளில் வளர்ந்த இச்சொல் முன்னேறுதல், மேலேறுதல் பொருள்களில் புடை பெயர்ந்தது.]

கயா *kayā,* பெ.(n.) இழப்பு; loss.

[கள் = களை. கள் → கயா.]

கயாதரம் *kayā-daram,* பெ.(n.) இராமேசுவரத்தைச் சேர்ந்த கயாதரர் கலித்துறைப் பாடல்களாக இயற்றிய நிகண்டு; a glossary in Kalitturaiverse, compiled by Kayadarar of Rameswaram (செ.அக.).

[கயாதரன் → கயாதரம்.]

கயிங்கரியம் *kayiṅgariyam,* பெ.(n.) ஏவற்றொழில்; service,office of a servant. *"வாசாகயிங்கரிய மன்றி" (தாயு.பரிபூரண.1).*

[கை + காரியம் – கைக்காரியம் → கயிங்கரியம் (கொ.வ.).]

கைக்காரியம் பார்க்க; see *kaikkāriyam.*

கயிப்பு *kayippu,* பெ.(n.) மயக்குறு பொருள்; intoxication (சா.அக.).

[கய(கயக்கம்) → கயப்பு → கயிப்பு (கொ.வ.).]

கயிர் *kayir,* பெ.(n.) தவறு; fault,mistake.

[கயம் + கயல் → கயர் → கயிர்.]

கயிரிகம் *kayirigam,* பெ.(n.) காவிக்கல் (சூடா.); red ochre, red chalk.

[கள் → கய = கருமை. கய → கயிர் + இகம்.]

கயிரை *kayirai,* பெ.(n.) சுற்றம் (அக.நி.); relation.

[கம் → கமில் → கயில் → கயிரை.]

கயில்[1] *kayil,* பெ.(n.) 1.பூண் கடைப்புணர்வு, அணிகளின் இணைப்புப் பகுதி (திவா.); clasp of a necklace. *"கயில் கலந்திருண்டு தாழ்ந்த கருங்குழல்" (சூளா. சுயம்.112).* 2.பிடர்; nape of the neck.

[கும் → கம் → கய் → கயல். கும் = சேர்தல், இணைதல்.]

கயில்[2] *kayil,* பெ.(n.) தேங்காயிற் பாதி (யாழ்ப்.); half of a coconut.

[கும் → கம் → கய் → கயில். கும் = சேர்தல், ஒட்டுதல், ஒட்டியிருத்தல்.]

கயில்[3] *kayil,* பெ.(n.) உச்சி, முகடு; crest.

[கள் = முள், கூர்மை. கள் → கய் → கயில்.]

கயிலகம் *kayilagam,* பெ.(n.) காட்டவரைக் கொடி; wild-bean creeper (சா.அக.).

[கயம் → கயில் + அகம். கயம் = பெரியது.]

கயிலாயம் *kayilāyam,* பெ.(n.) சிவன் உறைவதாகக் கருதப்படும் பனிமலைப்பகுதி; place in Himalayas, supposed to be the abode of lord Śiva. *"முற்று மொளி பெற்ற கயிலாய மலையே" (தேவா.1156.2).*

Skt kailasa

கயிலாயன் *kayilāyan,* பெ.(n.) சிவன் (வின்.); Śiva, lord of Kailasa (செ.அக.).

[கயிலாயம் → கயிலாயன்.]

கயிலாயன்உத்தி *kayilāyanutti,* பெ.(n.) கும்பகோணம் வட்டம், திருவிசலூர்க் கோயிலுக்கு அணையா விளக்கு எரிப்பதற்காக 15 கழஞ்சு பொன்கொடுத்த பெருமாட்டி; lady who donated 15 kalanju of gold for burning perpetual lamp in Thiruvisalur koil in, Kumbakonam taluk. *"இவ்வூர் அறுவைவாணிகன் எழுவன் பிடவன் மணவாட்டி கயிலாயன் உத்தி நொந்தாவிளக்கு எரிப்பதற்கு" (தெ.இ.கல். 23 கல் 23).*

[கயிலாயம் → கயிலாயன் + உத்தி. உத்தன் (ஆ.பா.) → உத்தி (பெ.பா.பெ.).]

கயிலை *kayilai,* பெ.(n.) ***கயிலாயம்*** பார்க்க; see *kayilāyam "கயிலை மலையானோ" (தேவா.1159).*

[கயிலாயம் → கயிலை (மரூஉ).]

கயிலைச்சித்தனார் *kayilai-c-cittaṉār,* பெ.(n.) இதளியமுறைகளை இயற்றிய ஒரு சித்தர்; one of the school of Siddhars who compiled works on alchemy (சா.அக.).

[கயிலை + சித்தன் + ஆர்.]

கயிலைமலை *kayilai-malai,* பெ.(n.) ***கயிலாயம்*** பார்க்க; see *kayilāyam "கயிலை மலையானே" (தேவா.1159).*

[கயிலை + மலை.]

கயிலையாளி *kayilai-y-āḷi,* பெ.(n.) சிவன்; siva lord of Kailasa.

[கயிலை + ஆளி – கயிலையாளி.]

கயிற்கடை *kayir-kaḍai,* பெ.(n.) கொக்குவாய்; curved extremity of a hook. *“கயிற்கடை ஒழுகிய” (சிலப்.கடலாடு. 101.).*

[கள் → கய் → கயில் + கடை – கயிற்கடை. கள் = முள், கூர்மை.]

கயிற்றம்பா *kayiṟṟambā,* பெ.(n.) கரைவலை எனப்பெறும் வலையின் முன்கூறா யமைந்த கயிற்றை இழுக்கும் பொழுது மீனவர் பாடும் பாடல்; a kind of fishermen's song.

[கயிறு + அம்பா. அம் + பாவை – அம்பாவை → அம்பா.]

கயிற்றரவு *kayiṟṟaravu,* பெ.(n.) பழுதையிற் றோன்றும் பாம்புணர்வு; illusion of mistaking a rope for a snake. *“கயிற்றர விப்பி வெள்ளி” (சித்.சிகா.23,5.).*

[கயிறு + அரவு.]

கயிற்றளவு *kayiṟṟaḷavu,* பெ.(n.) 88 அடி நீள அளவு; a linear measure of 88 feet.

[கயிறு + அளவு – கயிற்றளவு.]

கயிற்றளவு என்பது எட்டுத்தண்டம் அல்லது 88 அடி கொண்ட ஓர் அளவாம்.

1	விரல்	–	1 3/8 விரலம் (அங்குலம்)	
6	விரல்	–	ஒரு சாண்	(8¼ விரலம்)
2	சாண்	–	ஒரு முழம்	(16½ விரலம்)
2	முழம்	–	ஒரு தச்சுமுழம்	(33 விரலம்)
4	தச்சுமுழம்	–	ஒரு கோல்(தண்டம்)	(11 அடி)
8	கோல்(தண்டம்)	–	ஒரு கயிறு	(88 அடி)

கயிற்றுக்கொடி *kayeṟṟukkoḍi,* பெ.(n.) துணி உலர்த்துவதற்குக் கட்டிய கயிறு; cloth-line.

[கயிறு + கொடி.]

கயிற்றுக்கோல் *kayiṟṟu-k-kōl,* பெ.(n.) காய்கறி முதலியன நிறுக்கும் ஒருவகை நிறைகோல் (வின்.); a kind of balance in which vegetables are generally weighed, similar to the Danish steel-yard.

[கயிறு + கோல்.]

கயிற்றுக்கோலாட்டம் *kayiṟṟu-k-kōlāṭṭam,* பெ.(n.) பின்னற்கோலாட்ட விளையாட்டு (வின்.); playing with strings and sticks so that a weft of lace is formed there by.

[கயிறு + கோல் + ஆட்டம்.]

கயிற்றுப்பாய் *kayiṟṟu-p-pāy,* பெ.(n.) கதம்பைக் கயிற்றால் பின்னப்பட்ட பாய் (நாஞ்.); coir mat.

[கயிறு + பாய்.]

கயிற்றுப்பொருத்தம் *kayiṟṟu-p-poruttam,* பெ.(n.) திருமணப்பொருத் தங்களுள் ஒன்றான தாலிக் கயிற்று (இரச்சு)ப் பொருத்தம்; a felicitous agreement in the naksatras as of the bridegroom and the bride necessary for the assumption of the marriage badge (விதான. கடிமண.4).

[கயிறு + பொருத்தம்.]

கயிற்றுமணிவலை *kayiṟṟu-maṇi-valai,* பெ.(n.) உப்பங்கழியில் விரித்தற்குரியதோர் வலை; a kind of net which is designed to be spread in saltpan.

[கயிறு + மணி + வலை.]

கயிற்றுமரம் *kayiṟṟu-maram,* பெ.(n.) சிறுகட்டுமரம் (நெல்லை.மீனவ); small catamaran (மீன்பிடி. தொழி.).

[கயிறு + மரம்.]

கயிற்றுமீன் *kayiṟṟu-mīṉ,* பெ.(n.) தூண்டிலிற் பிடிபடும் மீன் (குமரி.மீனவ.); the fish which is caught in a net.

[கயிறு + மீன்]

கயிற்றுவழி *kayiṟṟu-vaḻi,* பெ.(n.) கயிறுகள் மூலமாகப் பொருள்களையோ, மக்களையோ ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்ப உதவும் வழி; ropeway.

[கயிறு + வழி]

கயிற்றுவிரியன் *kayiṟṟu-viriyaṉ,* பெ.(n.) விரியன் பாம்பு வகை; (m.m.); rope-viper.

[கயிறு + விரியன்]

கயிற்றேணி *kayiṟṟēṇi,* பெ.(n.) நூலேணி (வின்.); rope-ladder.

[கயிறு + ஏணி – கயிற்றேணி.]

கயிறடி–த்தல் *kayiṟaḍi-,* 4.செ.கு.வி.(v.i.) 1.அறுக்கும் மரங்களுக்கு நூல் வைத்துக் காவி முதலியவற்றால் குறிதட்டுதல்; to mark lines with thread soaked in colour, on timber that has to be sawn, as in carpentry. 2. தரைப்பூச்சிற்குப் பின் கயிற்றால் கோடு தட்டுதல்; to make chequered lines after floor finish, with rope.

[கயிறு + அடி – கயிறடி.]

கயிறறுந்தவாள் *kayiṟṟundavāḷ,* பெ.(n.) சோம்பித் திரிபவன் (யாழ்ப்.); vagrant, vagabond, stroller, one who wanders about aimlessly as a boat that is drifting on account of the rope that had secured it to ship having snapped.

[கயிறு + அறுந்த + ஆள் – கயிறறுந்தவாள்.]

கயிறு[1] *kayiṟu,* பெ.(n.) 1.தாம்பு, நூல், கட்டுகயிறு; rope, cord, string, twine, cable. *"திருவினைத் தீராமை யார்க்கும் கயிறு" (குறள், 482.).* 2. மங்கலநாண்; thread of the marriage badge. *"கயிறுநீத்து விதவையாய்" (உபதேசகா.சிவபுண். 186.).* 3. அறிவியல், அறநூல்; science, treatise. *"யாத்த சிற்பக்கயிற்றின் வாழ்நரும்" (பெருங்.வத்தவ. 2.51.).* 4. வானநூல் கணிக்குங்காலத்தமைந்த கோள்நிலை; zodiacal sign rising at the moment when a person just consults the astrologer. மணலைக் கயிறாய்த் திரிக்கிறது, வானத்தை வில்லாய் வளைக்கிறது (உ.வ.).

ம. கயறு; **கோத.** கீர்நாண்: **குட.** கேரி; **தெ.** சேரு.

[கள் → கய் → கயில் → கயிறு. கள் ஃ கட்டுதல், பிணைத்தல்.]

த. கயிறு>**E.** coir.

கயிறு[2] *kayiṟu,* பெ.(n.) தமிழ்நாட்டில் வழங்கிய 88 அடி நீளமுள்ள நீட்டல் அளவு; a linear measurement, measuring 88 feet in ancient Tamilnadu.

[கள் → கய் → கயில் → கயிறு. அளக்கைத் துறையில் பயன்படுத்தும் சங்கிலி போன்ற அளவு. அளக்கைச் சங்கிலி 66 அடி; பொறியாளர் சங்கிலி 100 அடி; கயிறு 88 அடி.]

கயிறுகட்டிவிடு–தல் *kayiṟu-kaṭṭi-viḍu-,* 20.செ.கு.வி. (v.i.) பொய்ச்செய்தியுண்டாக்கிப் பரப்புதல்; to noise abroad false news; to spread a false rumour.

[கயிறு + கட்டி + விடு – கயிறுகட்டிவிடுதல். காற்றில் பட்டம் பறக்க விடுவோர் கயிறுள்ள மட்டும் உயர உயரப் பறக்க விடுவது போலப் பிறரைத் தம்மாலான மட்டும் தூற்றுதல் கயிறுகட்டி விடுதல் எனப்பட்டது.]

கயிறுகட்டு[1]**–தல்** *kayiṟukaṭṭu-,* 5 செ.கு.வி (v.i.) 1. இல்லாததை உண்டாக்கிச் சொல்லுதல் (கொ.வ.); to invent a story, spin a yarn. இல்லாத செய்திகளைக் கயிறு கட்டி விட்டு வேடிக்கைப் பார்க்கிறான் (உ.வ.). 2. நாட்கழித்தல் (வின்.); to put off from day to day. கொடுத்த கடனைத் திருப்பித்தர கயிறு கட்டுகிறான் (உ.வ.). 3. பாசாங்கு செய்தல் (வின்.); to show a pretended consent, as a seller to one who offers a low price. கேட்ட விலைக்குத் தருவதாகக் கயிறுகட்டி ஏமாறச்செய்தான் (உ.வ.). 4. ஒருவனைக் கொண்டு மற்றொருவனை வஞ்சித்தல் (வின்.); to cheat a person using another person. ***கயிறுகட்டிவிடுதல்*** பார்க்க.

[கயிறு + கட்டு.]

கயிறுகட்டு[2]**–தல்** *kayiṟukaṭṭu,* 5 செ.குன்றாவி.(v.t.) இசுலாமிய மதச்சடங்கில் சிறார்களுக்குக் கயிறு கட்டுதல்; to tie a black thread in Muslim's religious ritual (பாண்டி.).

[கயிறு + கட்டு.]

கயிறுகுத்து–தல் *kayiṟu-kuttu-,* 5 செ.குன்றாவி. (v.i.) அறுந்த கயிற்றை இணைத்தல் (செங்கை மீனவ.); to tie a broken rope.

[கயிறு + குத்து. குத்துதல் ஃ தைத்தல்.]

கயிறுசாத்து–தல் *kayiṟu-cāttu-,* 10.செ.கு.வி.(v.i.) நிமித்தம் பார்க்குங்கால், இராமாயணம் தேவாரம் போன்ற நூலினுட் கயிறிடுதல்; to pass a string between the leaves of a sacred book in order to divine by it.

[கயிறு + சாத்து.]

கயிறுசாம்பு–தல் *kayiṟu-šāmbu-,* 5. செ.கு.வி.(v.i.) வலைக்கயிற்றை வள்ளம் அல்லது எந்திரப்படகில் இழுத்துக் கட்டுதல் (கட. பர. க. சொ.புக); to tie the rope of fishing net to the main vessel.

[கயிறு + சாம்பு → சாம்புதல் = இழுத்தல்.]

கயிறு சிக்குப்படு–தல் *kayiṟu-cikku-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) தொந்தரவு படுதல் (வின்.); to be embroiled, to disagree, quarrel, get into a tangle (செ.அக.).

[கயிறு + சிக்கு + படு.]

கயிறுசெய்–தல் *kayeṟušey-,* 15 செ.கு.வி.(v.t.) கண்ணுக்கிடும் வகையில் மருந்துப் பசையை நீளமாகச் செய்தல்; to prepare medicinal long pill as to apply to the eye.

[கயிறு + செய், கயிறு = நீட்டம்.]

கயிறுடை[1]–த்தல் *kayiṟuḍai,* 4 செ.குன்றாவி.(v.t.) கயிற்றின் முறுக்கைப் பிரித்தல்; to untwist, as of a cord or rope.

[கயிறு + உடை. உடை = பிரிதல்.]

கயிறுடை[2]–தல் *kayiṟuḍai-,* 3 செ.கு.வி.(v.i.) கயிற்றின் முறுக்குப் பிரிதல்; to be untwisted as of a cord or rope. கயிறு உடையாமலிருக்க முனையில் முடிச்சுப்போடு (உ.வ.).

[கயிறு + உடை.]

கயிறுதடி *kayiṟu-taḍi,* பெ.(n.) ஒரு நெசவுக் கருவி; a weaving instrument.

[கயிறு + தடி.]

கயிறுதிரி–த்தல் *kayiṟu-tiri-,* 4 செ.கு.வி.(v.i.) கயிறு முறுக்குதல்; to twist or twine, cord, rope. 2. கட்டியுரைத்தல்; to invent a story, spin a yarn. மணலைக் கயிறாய்த் திரிப்பதுபோல (உ.வ.).

[கயிறு + திரி. திரித்தல் = முறுக்குதல், முறுக்கிநீட்டுதல்.]

கயிறு திரிப்போர் தாம் வேண்டுமளவுக்கு நீளமாகத் திரித்துக்கொள்வது போல ஒரு செய்தியைத் தம் விருப்பப்படி மாற்றி, இல்லாததும் நடவாததுமாகிய பொய்ச்செய்திகளையும் சேர்த்துச் சிறிதைப் பெரிதாக்கிச் சொல்வது கயிறு திரித்தல் எனப்பட்டது.

கயிறுபிடித்தறி–தல் *kayiṟu-piḍi-t-taṟi,* 2.செ.கு.வி (v.i.) கட்டடமுதலியவற்றுக்காகக் கயிறு பிடித்து நேர்மையறிதல்; to measure, sound or test by the plumb-line, to adjust erections to a vertical line by means of the plummet.

[கயிறு + பிடித்து + அறிதல்.]

கயிறுபோடு[1]–தல் *kayiṟu-pōḍu-,* 20 செ.கு.வி (v.i.) 1. கயிறுதிரித்தல் (இ.வ.); to twist a rope. 2. ***கயிறுசாத்து–***. பார்க்க; see *kayiṟu-cāttu.*

[கறு + போடு.]

கயிறுபோடு[2]–தல் *kayiṟu-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) அச்சத்தினாலேற்பட்ட குற்றங்களை விலக்க வேண்டி, மந்திரக்காரன் மந்திரித்துக் கழுத்தில் அல்லது கையில் மந்திரக் கயிறு கட்டுதல்; tying a magic or talismanic string either in the neck or on the wrist by a magician as a cure against shock from, fear, fever and other morbified, diathesis (சா.அக.).

கயிறுபோடு[3]–தல் *kayiṟu-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) தாலி அணிவித்தல்; to tie a *"Thali"*.

[கயிறு + போடு.]

கயிறுமாலைப்படு–த்தல் *kayiṟu-mālai-p-paḍu-,* 18 செ.கு.வி.(v.i.) வருத்தப்படுத்துதல் (யாழ்.அக.); to vex.

[கயிறு + மாலை + படு–.]

கயிறுமாறு–தல் *kayiṟu-māṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கால்நடைகளின் விற்பனையை உறுதிப்படுத்த அவற்றின் கயிறு மாற்றிக்கொள்ளுதல்; to exchange and give cord-strings of a newly bought animal, as a cattle, by new tethering in confirmation of purchase. *"பரிகள் என்பாலின்று கயிறுமாறி நின்ன வாக் கொள்ளு நீரால்" (திருவிளை. நரிபரி.83.).*

[கயிறு + மாறு.]

கயிறுமாற்று-தல் *kayiṟumāṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கால்நடை விற்பனையில் வாங்குவோன் கயிற்றை மாற்றுதல்; to replace the cord-strings in cattle purchase.

[கயிறு + மாற்று. மாறு (தழுவி) → மாற்று (பி.வி)]

கால்நடைகளைக் கட்டியுள்ள கயிற்றுடன் விற்றால் தன் கால்நடை வழி மரபு அற்றுப்போகும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் விற்பவன் பழைய கயிற்றை எடுத்துக் கொள்வதுண்டு. வாங்குவோன் புதுக்கயிற்றுடன் கால்நடையை ஓட்டிச் செல்வான். இவ்வாறு கயிறு மாற்றுவதனால் இச்சொல் விற்பனையின் உறுதிப் –பாட்டைக் குறித்து நின்றது. வாலினின்று முடியைப் பிடுங்கி வருவதும் இந்நம்பிக்கை அடிப்படையில் அமைதலைக் காண்க.

கயிறுமுறுக்கு-தல் *kayiṟu-muṟukku-,* 5 செ.கு.வி. (v.i.) ***கயிறுதிரித்தல்*** பார்க்க; see *kayiṟutirittal.*

[கயிறு + முறுக்கு.]

கயிறுருவிவிடு-தல் *kayiṟuruvi-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. எருது முதலியவற்றை மோதலுக்காக வெளியிற் செல்லுமாறு அவிழ்த்து விடுதல்; to untether, as a bull in jalli-k-kattu. 2. தூண்டி விடுதல்; to unleash and urge, as a hound. *"மற்றிவளைக் காவார் கயிறுரீஇ விட்டார்" (திணை மாலை.47.).*

[கயிறு + உருவி + விடு.]

கயிறுவிடு-தல் *kayiṟu-viḍu-,* 20 செ.கு.வி(v.i.) ***கயிறுகட்டிவிடுதல்*** பார்க்க; see *kayiṟukaṭṭi viḍu-,*

[கயிறு + விடு.]

கயிறுவெட்டுப்புண் *kayiṟuveṭṭu-p-puṇ,* பெ.(n.) கயிற்றினால் வடுவுண்ட புண்; abrasion caused by the grating of a rope (சா.அக.).

[கயிறு + வெட்டு + புண்]

கயினி[1] *kayiṉi,* பெ.(n.) கைம்மீன் (அத்தநாள்) (பிங்.); the 13th naksatra, supposed to resemble the hand in shape.

[கை → கைனி → கயினி (கொ.வ.).]

கயினி[2] *kayiṉi,* பெ.(n.) கைம்பெண்; widow *"கயினிவரிற் கண்ணுற்று" (இரகு.இந்து.27.).*

[கை → கைனி → கயினி (கொ.வ.) 'கை' ஒருமையும் சிறுமையும் குறித்த முதனிலை; இங்குத் தனிமையுற்ற கைம்பெண்ணைக் குறித்தது. கை + இல் – கையில் → கயில் → கயிலி → கயினி. இல் → இல்லி → இலி → இனி = இல்லாள், மனைவி. கைம்மை = தனிமை. கைனி = தனித்திருக்கும் இல்லாள்.]

கர[1]-த்தல் *kara-,* 3 செ.குன்றாவி.(v.t.) 1. மறைத்தல்; to conceal, hide, disguise. *"தன்னு ளடக்கிக் கரக்கினும்" (புறநா.1,8.).* 2.கவர்தல்; to steal, pilfer. *"கழுத்தின தெழிலைச் சங்கங் கரந்தன" (கந்தபு. மாயை.48.).* 3. கொடாதிருத்தல் (பிங்); to withhold; to refuse to give.4. முதற்காரணத் தோடு ஒடுக்குதல்; அழித்தல்; to destroy, to reduce to primal elements. *"காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" (திருவாச. 7,12.).*

[கள் → கள → கர.]

கர[2]-த்தல் *kara-,* 3.செ.கு.வி.(v.i.) 1. சேர்தல், அடைதல்; to join, to unite with. *"பதுக்கையு மிருங்கதி கரக்கும்" (உபதேசகா. சிவபுராண.42.).*

[கள் → கள → கர.]

கர[3]-த்தல் *kara-,* 3 செ.கு.வி.(v.i.) 1. மறைதல்; to hide, abscond, lie hidden, keep one's self out of sight. *"கரந்துறை கணக்கு" (மணிமே. 226.).* 2.கெடுதல்; to be injured, ruined. *"புரங்கரப்ப" (திருக்கோ.213.)*

[கள் → கர. (வே.சொ.க.20).]

கரக்கோயில் *kara-k-kōyil,* பெ.(n.) வட்டமான விமான அமைப்புடைய கற்கோயில்; a stone - temple having a round shaped vimāna. *"திரைக்கும் தண்புனல் சூழ் கரக்கோயில்" (தேவா. அப்பர்.134:11).*

[கரகம் + கோயில் – கரக்கோயில். "திருக்கடம்பூர் கோயில் இவ்வகைத்து. கரகம் = மட்குடத்தைக் கவிழ்த்து வைத்தாற்போன்ற முகடு அல்லது மேற்கூண்டுடைய கோயில் கரக் கோயில் எனப்பட்டது.]

கரகத்திக் கோட்டை *karakatti-k-kōṭṭai,* பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Pudukkōṭṭai dt.

[குறு+அத்தி–குறுவத்தி → கரகத்தி+கோட்டை– கரகத்திக்கோட்டை (கொ.வ.).]

கரகம்[1] *karagam,* பெ.(n.) 1.கமண்டலம்; ewer, pitcher, water-vessel with a spout. *"நூலே கரகம் முக்கோல் மனையே" (தொல். பொருள். 625.).* 2.ஆலங்கட்டி (பிங்.); hailstone. 3. நீர்த்துளி (பிங்.); drop of water. 4. நீர் (பிங்.); water. 5. கங்கை (பிங்.); Ganges.

க.கரக; **ம.**கரகம்.

த. கரகம் > **Skt.** karaka;

[கலம் → கலயம் → கரகம் = கமண்டலம்.]

கரகம்[2] *karagam,* பெ.(n.) 1. தாதுமாதுளை (சங்.அக.); a kind of pomegranate.2. பூண்டுகளின் பொதுப் பெயர்; a common name of many plants. 3. மலையத்தி; wild fig. 2. பளாசம்; Indian coral tree.

க. கரக; **ம.** கரகம்.

[கலம் = மட்கலம். கலம் → கலயம் → கரசம் → கரகம் (மட்பாண்டம்).]

கரகம்[3] *karagam,* பெ.(n.) 1. தேங்காய்க் குடுக்கை; coconut shell. 2. உண்கலம்; plate for eating.

[கலயம் → கரயம் → கரசம் → கரகம்.]

கரகம்[4] *karagam,* பெ.(n.) நேர்த்திக்கடன் செலுத்துவதற்கு வேப்பிலை மாலையணிவித்துத் தலையில் சுமந்து வரும் நீருள்ள சிறுகுடம் போன்ற கலம்; a pot with water and neem leaves carried on the head by way of due to vow. 2. ஏழடுக்குக்கலம்; seven vessels which are kept one above one; a special pot for religious rituals.

[கலம் → கலயம் → கரசம் → கரகம்.]

கரகம்[5] *karagam,* பெ.(n.) ஒருவகைப்பறவை; a kind of bird.

ம. கரகம்

[ஒருகா. கரை(தல்)→கரவம் → கரகம்.]

கரகம்[6] *karagam,* பெ.(n.) நகத்தால் கீறிய வடு; abrasion or injury caused by scratching from a finger nail.

[கரள் → கரளம் → கரகம்]

கரகமாடு-தல் *karagam-āḍu,* 5 செ.கு.வி.(v.i.) கடவுளர்க்கு வேண்டுதலின் பொருட்டுப் பூங்குடமெடுத்து ஆடுதல்; to carry about in procession a decorated water-pot and dance with it on the head, in fulfilment of a vow.

ம. கரகமாடு

[கரகம் (குடம்) + ஆடு. நீர் எடுத்துச்செல்ல உதவிய சிறிய மட்குடத்தையும், கடவுளர்க்கு நீர்சுமந்து செல்லும் நோன்புக் குடத்தையும், நோன்புக்காகச் சுமந்து செல்லும் தீச்சட்டியையும், விழாக்காலங்களில் தலையில் சுமந்து ஆடும் ஒப்பனைக் குடத்தையும் குறித்தது.]

கரகம் ஆடுதல்

கரகமெடு-த்தல் *karagam-eḍu-,* 4 செ.கு.வி.(v.i.) ***கரகமாடு*** பார்க்க; see *karagam-āḍu-.*

[கரகம் + எடு-]

கரகர[1]**-த்தல்** *karakara-,* 4.செ.கு.வி.(v.i.) 1. உறுத்தல்; to feel irritation, as from sand or grit in the eye. மணல் கண்ணிலே கரகரக்கிறது (உ.வ.). 2. சீதளம் முதலியவற்றால் தொண்டையில் அரிப்புண்டாதல்; to feel irritation in the throat, to experience a predisposition to cough; to be hoarse. 3. கடித்தற்குக் கரகரப்பாதல்; to be crisp in the mouth, as fried cake.

ம. கரகரக்குக; **க., து.** கரகர; **தெ., பட.** கரகர.

[கரகர = ஒலிக்குறிப்பு.]

கரகர[2]**-த்தல்** *karakara-,* 4.செ.குன்றாவி.(v.t.) 1.விடாமல் வேண்டுதல்; to importune. 2. அலைக்கழித்தல்; to tease, harass.

க. கரகரிக, கரகரக.

[கரகர ஒலிக்குறிப்பு. தொடர்ந்து தரும் தொல்லையைக் குறித்தது.]

கரகரணம் *kara-karaṇam,* பெ.(n.) கையினாற் காட்டும் முத்திரை; gesticulation by hand in dancing.

[கர(ம்) + கரணம்.]

கரகரப்பு *kara-karappu,* பெ.(n.) 1.தொண்டை அரிப்பு; irritation in the throat. 2. குரல் தடித்திருக்கை (வின்.); hoarseness or heaviness of voice. 3. ஓயாது வேண்டுகை (வின்.); importunity. 4. அலைக்கழிப்பு (வின்.); teasing, harassing. 5. உள்ளத்தில் தோன்றும் கடுகடுப்பு; irritation of mind.

ம. கரகரப்பு; **க.**கரகர, கரகரி, கரகரெ, கரெகரெ; **தெ.** கரகர, கரகரி; **து.** கரகர.

[கரகர → கரகரப்பு. கரகர = ஒலிக்குறிப்பு.]

கரகரப்புப்பாகம் *karakarappu-p-pāgam,* பெ.(n.) அகப்பையால் முகந்தமாத்திரத்தில் மணல்வடிவ முண்டாகும் நிலையிலுள்ள எண்ணெய் (தைல) பக்குவம். (தைலவ. பாயி.43.); a particular state or consistency of medicinal oil, in which it becomes granulated the moment it is taken up in a ladle.

[கரகரப்பு + பாகம்.]

கரகரெனல்[1] *karakareṉal,* பெ.(n.) 1.தொண்டை அரித்தற்குறிப்பு; being irritated in the throat. 2. வருத்துதற் குறிப்பு; teasing, carping. கரகரென் றரிக்கிறான் (உ.வ.). 3. கடிப்பதற்குக் கரகரப்பா யிருத்தற் குறிப்பு; being crisp in the mouth. முறுக்குக் கரகரென்று இருக்கிறது (உ.வ.).

[கரகர → கரகரெனல்.]

கரகரெனல்[2] *karakareṉal,* பெ.(n.) வலுவந்த மாயிழுத்த லொலிக்குறிப்பு; onom, expr. of dragging violently. *"பாஞ்சாலி கூந்தலினைக் கையினாற் பற்றிக் கரகரெனத் தானிழுத்தான்" (பாரதி. பாஞ்சாலி).*

[கரகர + எனல்.]

கரகை *karagai,* பெ.(n.) 1.ஆலங்கட்டி; hailstone. 2. மழை; rain (சா.அக.).

[கர → கரகை]

கரங்கம்[1] *karaṅgam,* பெ.(n.) உடம்பினெலும்பு; any bone in the body (சா.அக.).

[கர + அங்கம் = உடலுள் மறைந்திருக்கும் எலும்பு.]

கரங்கம்[2] *karaṅgam,* பெ.(n.) ஒருவகைக் கரும்பு; a kind of sugarcane.

[கரு → கரம் → கரங்கம்.]

கரச்சி *karacci,* பெ.(n.) ***கடிச்சைமீன்*** பார்க்க; see *kaḍiccai-mīṉ.*

[கடிச்சை → கரச்சி.]

கரசம்[1] *karasam,* பெ.(n.) தொட்டாற் சுருங்கி போன்ற செடிவகை; a sensitive plant whose flower shrinks when smelled (சா.அக.).

[கர → கரசம். கரத்தல் = ஒளித்தல், மறைத்தல் சுருங்கல்.]

கரசம்[2] *karasam,* பெ.(n.) கூரிய நுனியுடையதாய்க் கைவடிவாகச் செய்யப்பட்ட இரும்புப்படைக்கலம். (சுக்கிரதி.331.); a sharp pointed steel weapon shaped like an arm.

[கரம் → கரசம்.]

கரசல்[1] *karašal,* பெ.(n.) மருத்துவநூல்; a medical work. தேரையர் கரசல்(வின்.).

[ஒருகா. கரைசல் → கரசல்.]

கரசல்[2] *karasal,* பெ.(n.) புன்செய் (யாழ்.அக.); dry land.

[கரம்பு → கரிசல் → கரசல்.]

கரசீரகம் *karasīrakam,* பெ.(n.) இளநீர்; water of the tender coconut (சா.அக.).

[கரசு + ஈரகம். கரு → கரசு = இளமை.]

கரசை[1] *karašai,* பெ.(n.) கரணம் பதினொன்றனுள் ஒன்று (விதான. பஞ்சாங்க. 29, உரை.); a division of time, one of eleven karaṇam.

க. கரசெ.; **Skt.** gara.

[கரம் → கரசை. கரம் = கை.]

கரசை² *karašai,* பெ.(n.) நானூறு மரக்கால்கொண்ட ஓரளவு; cubic measure for grain, 400 marakkal or 9256¼ rāttal.

தெ. கரிசெ; **க.** கரசெ.

[கரு → கர → கரசை. கரு = பெரியது.]

கரஞ்சகம் *karañcagam,* பெ.(n.) ***கரஞ்சம்*** பார்க்க (சூடா.); see *karañjam.*

[கரு → கரஞ்சம் → கரஞ்சகம்.]

கரஞ்சகம்² *karañjakam* , பெ.(n.) 1.புங்கமரம்; the Punka tree 2. பெருமரம்; large bastard poon.

[கரு = பெரிய, கரு → கர → கரம் → கரஞ்ச → கரஞ்சகம்.]

கரஞ்சம்³ *karañcham,* பெ.(n.) புன்கு (தைலவ. தைல.73.); Indian beach.

[கரு → கருஞ்சம் → கரஞ்சம்.]

கரட்டாடு *karaṭṭādu,* பெ.(n.) குரைக்கும் மான்வகை; barking deer.

மறுவ: பழுவெலும்புமுகமான் (rib faced deer.)

[காடு + ஆடு. இவற்றின் ஒலி நாய் குரைப்பது போலக் கேட்பதால் இப்பெயர் பெற்றது.]



கரட்டாடுகள்

கரட்டான் *karaṭṭāṉ,* பெ.(n.) ***கரட்டோந்தி*** பார்க்க; see *karaṭṭōndi.*

[காடு → கரட்டான்.]

கரட்டி *karaṭṭi,* பெ.(n.) காய்ந்த சுண்ணாம்பு; dry lime (ம.அக.).

[கரள் → கரட்டி.]

கரட்டு *karaṭṭu,* பெ.(n.) நெஞ்சிலுண்டாகும் ஓர் ஒலி; an abnormal noise in the lungs.

[கர → கரட்டு.]

கரட்டுஊதை *karaṭṭu-ūdai,* பெ.(n.) உடம்பின் மூட்டெலும்புகளில் கரடுகட்டி அசைக்க முடியாமற் செய்யுமோர் ஊதை நோய்; knotty formations in the bone of the joints of the body, rendering motion impossible (சா.அக.).

[கரடு + ஊதை.]

கரட்டுக்கந்தகம் *karaṭṭu-k-kandagam,* பெ.(n.) முரடான கந்தகம்; crude or rough sulphur (சா.அக.).

[கரடு + கந்தகம்.]

கரட்டுக்கரட்டெனல் *karaṭṭu-k-karaṭṭeṉal,* பெ.(n.) கரகரப்பைக் காட்டும் ஓர் ஒலிக்குறிப்பு (வின்.); onom-expr. signifying hoarseness.

[கரட்டு + கரட்டு + எனல்.]

கரட்டுக்கல் *karaṭṭukkal,* பெ.(n.) செப்பனிடப்பெறாத முருட்டுக்கல்; unpolished rough stone.

[கரடு' + கல்.]

கரட்டுத்தரை *karaṭṭu-t-tarai,* பெ.(n.) 1.மேடு பள்ளமான நிலம்; rugged, uneven ground. 2. கரிசல் நிலம் (இ.வ.); hard, clayey soil.

[கரடு + தரை – கரட்டுத்தரை.]

கரட்டுத்தாளகம் *karaṭṭu-t-tāḷagam,* பெ.(n.) ***கரட்டரிதாரம்*** பார்க்க; see *karaṭṭari-tāram.*

[கரடு + தாளகம்.]

கரட்டுநிலம் *karaṭṭu-nilam,* பெ.(n.) வன்தரை; hard land.

[கரட்டு + நிலம்.]

கரட்டுப்பபடி *karattu-p-padi* பெ.(n.) திருந்தாப்படி; rough copy

[கர → கரட்டு + படி.]

கரட்டுவாதம்[1] *karattu-vādam,* பெ.(n.) ***கரட்டு ஊதை*** பார்க்க; see *karattu-ūdai.*

[கரடு + வாதம்.]

கரட்டுவாதம்[2] *karattu-vādam,* பெ.(n.) கழலை; wen (pond.)

[கரட்டு + வாதம். ஊதை = வாதம்.]

கரட்டுவாதம்[3] *karattu-vādam,* பெ.(n.) பயனற்ற முரட்டுச் சொற்போர்; abstinate perverse argument.

[கரள் → கரடு + வாதம் – கரட்டுவாதம். வாள் = பேசுதல். வாள் → வாளம் → வாதம்.]

கரட்டுவிரியன் *karattu-viriyan,* பெ.(n.) செந்நிறமுள்ள விரியன் பாம்புவகை (m.m.); blood viper, reddish in colour.

[கரடு + விரியன் – கரட்டுவிரியன்.]

கரட்டை *karattai,* பெ.(n.) ஓணான்; blood-sucker.

[கரடு → கரட்டை(மு.தா.122). கரட்டை = கரட்டுத் தோலுள்ள ஓணான்.]

கரட்டோணான் *karattōṇāṉ,* பெ.(n.) கரட்டோந்தி பார்க்க; see karattōndi.

[கரடு + ஓணான் – கரட்டோணான்.]

கரட்டோணான்பிச்சு *karattōṇāṉ-piccu,* பெ.(n.) சொரசொரப்புள்ள ஓணானின் பித்தப்பை; the bile duct of the rough lizard used in magic (சா.அக.).

[கரடு + ஓணான் + பிச்சு.]

கரட்டோந்தி *karattōndi,* பெ.(n.) ஓணான் வகை; blood-sucker.

[கரடு + ஒந்தி – கரட்டோந்தி.]

கரடகம்[1] *karaḍagam,* பெ.(n.) ஏய்ப்பு (வஞ்சம்); deceit, fraud (வின்.).

[கரள் → கரடு → கரடகம்.]

கரடகம்[2] *karaḍagam,* பெ.(n.) 1.நண்டு; crab. 2. நரி; jaikal(சா.அக.).

ம. கரகடம்

[கர→கரள்→ கரடு. கரத்தல் = மறைந்து கொள்ளுதல்.]

கரடகம்பம் *karaḍa-kambam,* பெ.(n.) ***கரடகம்*** (வின்.) பார்க்க; see *karḍagam.*

[கரடகம் → கரடகம்பு→கரடகம்பம்.]

கரடகன் *karaḍagaṉ,* பெ.(n.) 1. ஏய்ப்பவன், ஏமாற்றுபவன்; crafty, cunning person. 2. பஞ்சதந்திரக் கதைகளில் இடம் பெற்ற நரியின் பெயர்; name of a crafty fox in Panca-tandiram.

Skt. Karataka

[கரள் → கரடம் → கரடகம் → கரடகன்.]

கரடம் *karaḍam,* பெ.(n.) 1. காக்கை (பிங்.); crow. 2. யானை மதம்பாய் சுவடு (திவா.); trace of 'must' on an elephant's cheek. 3. யானைக் கவுளினின்றும் மதம் பாயுந் துளை; aperture in an elephant's temple from which 'must' flows out. *"யானையின் கொடிறுவாய் கரடம தடைத்தல் கூடுமே" (இரகு. திக்கு.120).*

Skt. karata

[கரு →கருள் →கரள்→ கரடம்.]

கரடன் *karaḍaṉ* பெ.(n.) எலிவகை (வின்.); a kind of rat.

[கரு → கருள் → கரள் → கரடன்.]

கரடா *karaḍā,* பெ.(n.) முரட்டுத்தன்மையுள்ள சுரசுரப்பான தாள், மட்டித்தாள்; coarse country paper. 2. சுரசுரப்பான முரட்டுத்துணி; coarse cloth.

[குர் → (குர) → கர → கரகர → கரகரப்பு = தொண்டையில் சுரசுரத்தல் போன்ற உணர்ச்சி. கர → கார் → காறு. காறுதல் = கரகரத்தல். கர → கரண் → கரணை = சுரசுரப்பான கிழங்கு. கரண் → கரடு → கரடா = சுரசுரப்பான தாள் (மு.தா. 122).]

கரடா என்னும் சொல் ஏனை இந்திய மொழிகளில் காடா (gāda) எனத் திரிந்து முரட்டுத் துணியைக் குறித்தது.

கரடி *karaḍi*, பெ.(n.) 1. உடல் முழுவதும் அடர்த்தியான கருநிற மயிரை யுடையதும் கால்களில் கூரிய நகத்தை யுடையதுமான விலங்குவகை; Indian black-bear, sloth- bear. *"கொடுநாகமோடு கரடி" (தேவா. 1172, 6.).* 2. கரடி கத்துவது போலும் ஓசை யுடைய பறை; drum emutting sound similar to a bear to the growling. *"கரடி சயம் வளர் படகம் பாவ நாசம்" (குற்றா. தல. சிவபூசை. 49).*

மறுவ. உளியம், எண்கு, பல்லம், குடாவடி, பல்லூகம், மிளிறு, எலு.

ம., து. கரடி; **கூய்.** கரடி (புலி, சிறுத்தை); **தெ.** கரடி (யானை); **கோத.** கர்டி; **க.,குட., பட.** கரடி; **கொலா.** கெடியக் (புலி); **நா.** கரையக் (சிறுத்தை); **குவி.** க்ரணி (புலி); **Skt.** karaṭin (elephant); **Pkt.** karaḍa (tiger).

[கரு → கருள் → கரள் → கரடி (கரிய நிறத்தது).]

karaḍi, a bear, from karaḍu, rough, knotty, uneven, the ultimate base of which must be **kara** or **kar**. The Tuda word for 'a bear' is karsh (kar). Comp. the **Persian chars**, kurd, harj, and even the **Latin** urs-us. Comp. also the

கரடி

samoïede korao, and the **Tungusian** kuti. (C.G.D.F.L. p. 591) என்று **கர், கரடு** அடிப்படையில் கால்டுவெல் கருதிப்பார்த்துள்ளார்.

கரடி² *karaḍi*, பெ. (n.) 1. சிலம்பம்; fencing. 2. மல், சிலம்பம் முதலியன பயிலும் சாலையாகிய கரடிக் கூடம்; a fencing school, a place for wrestling, boxing and other athletic exercise. 3. இருப்பிடம், ஓய்விடம்; an abode, a place of resort. 4. புரட்டு; deceit, falsehood.

தெ. தூரடி, தளரி, களிக; **ம.** களரி; **க.** கருடி, தூரடி; **து.** தூரடி, தூரோடி; **Mar.** karata (a bird's nest); **Skt.** khatūrika.

த. களரி**→தெ.,க.** (கரளி → கரடி).

கரடி³ *karaḍi*, பெ.(n.) முத்து (அக.நி.); pearl.

[கரு → கருடி → கரடி (கருமுத்து).]

கரடி⁴ *karaḍi*, பெ.(n.) **கரடிப்பூடு** பார்க்க; see karaḍi-p-pūḍu.

[கரு → கரடு → கரடி.]

கரடிக்கூடம் *karaḍi-k-kūḍam*, பெ.(n.) மல், சிலம்பம் முதலியன பயிலுஞ் சாலை; school or gymnasium where wrestling and fencing are taught.

க. தூரடி, கருடி; **து.** தூரடி, தூரோடி; **தெ.** தூரிடி, தூரிடீ; **ம.** களரி.

[களரி → கரளி → கரடி² + கூடம்.]

கரடுகட்டு¹–தல் *karaḍu-kaṭṭu-*, 5 செ.கு.வி.(v.i.) மூட்டுகள் கெட்டிப்படல்; joints to swell and get pathology rigid.

[கரடு+கட்டல்.]

கரடுகட்டு²–தல் *karaḍu-kaṭṭu-*, 5 செ.கு.வி(v.i.) சரியாக எரிக்காத குற்றத்தினால் மாழைகள் கட்டிப்படுதல்; to form a knot in metals due to imperfect methods in their fusion.

[கரடு+கட்டல்.]

கரடிகை *karaḍigai*, பெ.(n.) கரடி கத்துவது போலும் ஓசையுடைய பறைவகை (சிலப். 3: 27, உரை.); a kind of drum, producing a sound similar to the growling of a bear. *"கடிபடு கரடிகை கணையகுஞ் சல்லிகை" (கந்தபு. கயமுக. 214).*

மறுவ. கரடிப்பறை

க. கரடி, கரடெ; **Skt.** karaṭa; H. karaṇā; Pkt. Karnā; PPkt. karnā.

[க. கரடி → கரடிகை.]

கரடித்தாங்கல் *karaḍi-t-taṅgal*, பெ.(n.) திருவண்ணா மலை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvaṇṇā malai dt.

[கரடு → கரடி+தாங்கல்—கரடித்தாங்கல். தாங்கல் = ஏரி.]

கரடிப்பயிற்சி *karaḍi-p-payiṟci*, பெ.(n.) சிலம்பப் பயிற்சி, art of fencing.

[கரடி + பயிற்சி.]

கரடிப்பறை *karaḍi-p-paṟai*, பெ.(n.) ***கரடிகை*** (திவா.) பார்க்க; see *karaḍigai*.

[கரடி + பறை.]

கரடிப்புங்கன் *karaḍi-p-puṅgaṉ*, பெ.(n.) ***கரடிப் புன்கு***, பார்க்க; (சா. அக.) see *karaḍi-p-puṉgu*.

[கரடி + புங்கன். புன்கு → புன்கன் → புங்கன்.]

கரடிப்புண் *karaḍi-p-puṇ*, பெ.(n.) வழியல்லா வழியில் புணருதலால் ஆண்குறியில் உண்டாகும் புண்; a sore or an ulcer in the male organ due to unnatural intercourse (சா. அக.).

[கரள் → கரடு → கரடி + புண்.]

கரடிப்புன்கு *karaḍi-p-puṉgu*, பெ.(n.) புன்கு மரவகை; four leaved soapnut.

[கரடி + புன்கு.]

மறுவ. நெய்க்கொட்டான், நெய்க்கொட்டை, பூவந்தி.

கரடிப்பூடு *karaḍi-p-pūḍu*, பெ.(n.) விரியன் பூடு, common sebesten (சா.அக.).

[கரடி + பூடு.]

கரடியாய்க்கத்து—தல் *karaḍi-y-āy-k-kattu-*, 5 செ.கு.வி. (v.i.) ஒரு செய்தியைப் பிறர் கேட்காத போதும் திரும்பத்திரும்பக் கூறுதல்; to reiterate, no purpose to shout oneself hoarse. நீ என்னதான் கரடியாய்க் கத்தினாலும் நான் ஒன்றும் கேட்பதாக இல்லை (உ.வ.).

[கரடி+ஆய்+கத்து.]

கரடிவணிகம் *karaḍi-vaṇigam*, பெ.(n.) புகழ்ச்சி யாகப் பேசி நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ளல் (mud.); coaxing by flattery, toadying, fawning.

[கரடி[2] + வணிகம்.]

கரடிவிடு[1]—தல் *karaḍi-viḍu-*, 20 செ.கு.வி.(v.i.) பொய்யைக் கூட்டிக் கூறுதல்; to spin a yarn. தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்று கரடி விடுகிறான் (உ.வ.).

[கரடி = புரட்டு, பொய். விடு (து.வி.) கரடி+விடு—.]

கரடிவிடு[2]—தல் *karaḍi-viḍu-*, 20 செ.கு.வி.(v.i.) தொடர்பற்ற ஒன்றைக் கூறிக் கலங்கச் செய்தல்; to confuse by expressing an unconnected incident or false news.

[கரடி+விடு—.]

கரடியைக் கட்டுப்பாட்டினின்று தளர்த்தி விடுதல் அச்சமுண்டாக்கும். அதுபோல் கலக்கத்தை யுண்டாக்கும் செயல்கள் கரடி விடுதல் என மரபுத்தொடராய் அமைந்துள்ளது. "சிவன் பூசையில் கரடி விட்டாற்போல்" என்ற பழமொழி, கரடியைக் குறித்ததன்று, கமண்டலத்தைக் குறித்தது எனக் கூறுவாரும் உளர். சிவ பூசைக்குத் தேவையான கரடிகை, கமண்டலத்தை மறந்துவிட்ட நிகழ்வையே சிவ பூசையில் கரடி [கரண்டம் → கரண்டிகை → கரடிகை → கரடி] விட்டதாக இப்பழமொழி சுட்டுகிறது என்பர்.

கரடிவித்தை *karaḍi-vittai*, பெ.(n.) ***கரடிப்பயிற்சி*** பார்க்க; see *karaḍi-p-payiṟci*.

[களரி → கரளி → கரடி + வித்தை.]

இச்சொல் பல்வகை உடற்பயிற்சிகளையும் சுட்டியது. இதனைக் கருமாய [மாயாசால] வித்தையைக் கருதி காரடிவித்தை என்பது தவறு.

கரடு[1] *karaḍu*, பெ.(n.) 1. கற்பாங்கான பெருந்திடல்; roughness, ruggedness, unevenness. *"ஈண்டுருகாக் கரடு" (அருட்பா, iv, பத்தி.6).* 2. முரட்டுக்குணம்; churlish temper. 3. குன்றினுஞ் சிறியது (இ.வ.); hillock, low hill. 4. வளர்ச்சியற்றது; that which is stunted in growth. கரட்டுப்பசு (உ.வ.). 5. ஒரு வகை முத்து (S.I.I. ii, 549.); a variety of pearl.

க., ம. கரடு; **கோத.** கர்ப் (சூறாவளிக்காற்று); **து.** கரடு; **தெ.** கரடி (விடாப்பிடி); **கோத.** கர்ப்; **தெ.** கர, கரகச.

[கரண் → கரடு. (மு.தா. 122). (கரண் = திரட்சி, முருடு).]

கரடு[2] *karaḍu,* பெ.(n.) 1. காற்பரடு (பிங்.); ankle. 2. மரக்கணு; knot in wood. "கரடார் மரம்" (திருப்பு. 70.). 3. புற்கரடு; tuft.

மறுவ. பரடு, மிசைத்திரள்.

ம. கரண (கரும்புக்கணு), குரட்ட (விரற்கணு); க. கரணெ, கண்ணெ (கட்டி, மொத்தை); தெ. கருடு (கட்டி, மொத்தை).

[கரண் → கரடு (மு.தா. 122).]

கரடு[3] *karaḍu,* பெ.(n.) யானையின் மதவெறி; running amuck of an elephant. *"கரடு பெயர்த்தது" (பெருங். உஞ்சை. 32, தலைப்பு).*

Skt. karaṭa

[கரண் → கரடு.]

கரடு[4] *karaḍu,* பெ.(n.) நரித்தலை ஊதைநோய், (மூட்டுகள் வீங்கிக் கெட்டிப்படல்); induration of a bone or bony substance as in Rheumatoid Arthritis. வீங்கிய இடம் கரடுதட்டிவிட்டது (உ.வ.).

[கரள் → கரண் → கரடு.]

கரடு[5] *karaḍu,* பெ.(n.) 1. சிற்றூர்ப் பெயர்; a village name. கரட்டுப்பாளையம். 2. ஊர்ப்பெயரீறு; place name sufix. புளியங்கரடு.

[கரடு- குறுமரச் சிறுகுன்று, புதர்க்குன்று, அதனைச் சார்ந்த ஊர்.]

கரடுமுரடு *karaḍu-muraḍu,* பெ.(n.) ***கரடுமுருடு*** பார்க்க; see *karaḍu-muruḍu.*

[குரு → கரு → கருடு → கரடு + முரடு. முருடு → முரடு]

கரடுமுருடு *karaḍu-muruḍu,* பெ.(n.) 1. ஒழுங்கின்மை; மேடும் பள்ளமும், குண்டும் குழியும்; unevenness, ruggedeness, roughness. 2. மரத்து வைரமும் கணுவும் கொண்ட பகுதி; knotty, induration part of a tree (சா.அக.).

ம. கரடும் முரடும்

Rus. grubiya

[கருடு → கரடு + முருடு.]

கரண்[1] *karaṇ,* பெ.(n.) 1. காய்கறிகளின் முண்டு; the uneven surface in vegetables and fruits. 2. புண்வடு; scar.

[கரள் → கரண்.]

கரண்[2] *karaṇ,* பெ.(n.) புற்பற்றை (குருகூர்ப் 26.); grass sod.

[கரு → கருள் → கரள் → கரண், கரு - அறுகம் புல், கருக்கம் புல்.]

கரண்டக்கை *karaṇḍa-k-kai,* பெ.(n.) முன்கை; fore arm.

[கரள் → கரண் → கரண்டு + அ + கை 'அ' சொற் சாரியை. கரண் - திரட்சி.]

கரண்டகம் *karaṇḍagam,* பெ.(n.) 1. தென்னை ஓலையால் முடைந்த பூக்குடலை; basket made of plaited coconut - leaves for carrying flowers for divine worship. *"கரண்டகநீர் தரியாபோல்" (ஞானவா. வைராக்.74).* 2. சுண்ணாம்புச் செப்பு (கொ.வ.); small metal box for keeping quick lime to be used with betel. 3. அணிகலச் செப்பு (பிங்.); Jewel box.

க. கரடகெ, கரடிகெ, கரண்டகெ, கர்டிகெ (இலிங்கப்பெட்டி); ம.கரண்டகம்; து. கரடிகெ (சிறுபெட்டி).

த. கரண்டகம் > Skt. karaṇḍa

[கரண் → காண்டகம். கரண் - திரட்சி, உருண்டை.]

கரண்டம்[1] *karaṇḍam,* பெ.(n.) நீர்க்காக்கை; water crow, coot. *"கரண்டமாடு பொய்கை" (திவ்.திருச் சந்த. 62).*

Skt. *karaṭa (a crow)*

[கரு → கருள் → கருண்ட → கரண்டம் (கருநிற முடையது).]

கரண்டம்[2] *karaṇḍam,* பெ.(n.) 1. கமண்டலம் (அக.நி.); water-vessel used by ascetics. 2. ***கரண்டி*** பார்க்க; see *karaṇḍi*.

மறுவ. கரண்டை

[கரம் + மண்டை (மட்பாண்டம்) = கமண்டம் → கரண்டம் = கையிலேந்தும் மொந்தை அல்லது சிறிய நீர்க்கடிகை.]

கரம் = கை, [வடதமிழ் என்னும் பாகதச் (Pkt.) சொல்லான கரம், கருத்தல் = செய்தல் என்னும் தமிழ்வேர் வழி விரிந்ததேயாகும்.].

கரண்டி[1] *karaṇḍi,* பெ.(n.) மாழையினாலாகியதும் (உலோகம்) காம்புள்ளதுமாகிய முகத்தற்கருவி (பிங்.); சிற்றகப்பை; spoon or ladle, made of metal. *"கச்சவே கரண்டிகொண்டு" (த.மொ.அக.).*

ம., பட., கசபா., உரா. கரண்டி; **த.** கரிடெ, கள்டெ.

[கரள் → கரண் → கரண்டு → கரண்டி.கரண்டுதல் = தோண்டுதல், பொள்ளுதல்]

கரண்டி[2] *karaṇḍi,* பெ.(n.) கொல்லூறு; trowel; சுவரில் அழகு வேலைப்பாடு செய்யச் சிறு கரண்டியைக் கொண்டுவா (உ.வ.).

ம. கரண்டி

[கரள் → கரண் → கரண்டு → கரண்டி.]

கரண்டிகை *karaṇḍigai,* பெ.(n.) பூக்கூடை; flower-basket, flower vessel. *"கரண்டிகையுட் சாலும் பலபோது" (கோயிற்பு. வியாக்கிர.15).* 2. மணி முடியின் ஒருறுப்பு; name of a special part of the crown. *'கரண்டிகையிற் கோத்தவடம்' (S.I.I. ii,87).*

ம.,கரண்டிகா; **க.,** கரண்ட, கராட.

[கரண்டு → கரண்டகம் → கரண்டிகை.]

த. கரண்டகம் > **Skt.** *karaṇḍikā.*

கரண்டு = அழகுவேலைப்பாட்டிற்காகச் சிறிது சிறிதாகச் செதுக்குதல்,சுரண்டுதல். கரண்டிகை, அழகுறப் பின்னப்படுவதால் பூக்கூடைக்கும், அழகு வேலைப்பாடுகளுடன் கூடிய அணிகலப் பெட்டிக்கும், அழகிற்காக மன்னர் முடியில் பதிக்கும் அணிகலனுக்கும் ஆகி வந்துள்ளது.

கரண்டிகைச் செப்பு *karaṇḍigai-c-ceppu,* பெ.(n.) சுண்ணாம்புச் செப்பு; small metal box for keeping quicklime to be used with betel.

[கரண்டு → கரண்டி → கரண்டிகை. கரண்டிகை + செப்பு.]

கரண்டிப்பாறை *karaṇḍi-p-pāṟai,* பெ.(n.) ஓரடி நீளமுடைய பச்சை நிறமுடைய கடல் மீன் வகை; horse-mackerel, greenish, generally attaining 1.ft. in length.

[கரண்டி + பாறை – கரண்டிப்பாறை. (வடிவ அமைப்பு நோக்கிப் பெயர் பெற்ற பாறை மீன்வகை).]

கரண்டியலகன் *karaṇḍi-y-alagaṉ,* பெ.(n.) நீர்வாழ் பறவை வகை; spoon bill.

[கரண்டி+அலகன்.]

கரண்டி போன்ற அலகுடையதால் இப்பெயர் பெற்றதென்க.

கரண்டியலகன்

கரண்டு-தல் *karaṇḍu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. அரித்தல், தோண்டுதல்; to gnaw as a rat, to paw as a dog. *"நாவினையென்பால்... கரண்டுகின்ற நாய்க்கும்"(அருட்பா, 1, மகாதேவ.86).* 2. சுரண்டுதல், செதுக்குதல்; to scrape. 3. சிறிது சிறிதாகத் தன்வயப்படுத்துதல்; to usurp gradually.

ம. கரண்டுக

[கரண்டு = சுரண்டு, சிறிது சிறிதாகச் செதுக்குதல், மேலும் கீழும் அசைதல்; கரண்டு → கரண்டை = பக்குவமாக மேலுங் கீழுஞ் சிறகசைத்துப் பறத்தல்.]

கரண்டு *karaṇḍu,* பெ.(n.) 1. உருண்டை; global shape. 2. திரட்சி, குவியல்; heap.

க., கரணே; **தெ.,** கரடு, கருடு, கருவு.

கரண்டை[1] *karaṇḍai,* பெ.(n.) 1. கற்பாழி (திவா.); rocky cave, cavern. *"கல்பொறிந்தன்ன விட்டுவாய்க் கரண்டை" (மதுரைக். 482).* 2. முனிவர் வாழிடம் (திவா.); the abode of sages, as mountain cave.

[கரள் → கரண்டு → கரண்டை. கரண்டு = கரண்டுதல், சுழிதல், வளைதல்.]

கரண்டை[2] *karaṇḍai* பெ.(n.) கமண்டலம்; water-vessel, used by ascetics. *"சிமிலிக் கரண்டையன்"* (மணிமே.3: 86).

மறுவ. கரண்டம்

[கரம் + மண்டை – கரமண்டை → கரண்டை. மண்டை = மட்கலம்.]

த். கரண்டை> **Skt.** karaṇḍa

கரண்டை[3] *karaṇḍai,* பெ.(n.) பறவை பறப்பதில் சிறப்பு நிலை; a mode in the flight of birds (காசிக.திரிலோ.6).

[கரள் → கரண் → கரண்டு. கரள் = வளைதல், சுழலுதல். கரண்டு = சுழற்சி.]

கரண்டை[4] *karaṇḍai,* பெ.(n.) கொட்டைக் கரந்தை; a low annual herbs; sphaeranthus indicus.

க. கரண்டே; **து.** கர்ண்டே.

[கரள் → கரண் → கரண்டை.]

கரண்டைக்காய் *karaṇḍai-k-kāy,* பெ.(n.) காய்களின் கொத்து; a bunch of unripe fruit.

[கரண்டு = திரட்சி, கொத்து. கரண்டு → கரண்டை + காய்.]

கரண்டைக்காய் மோதிரம் *karaṇḍai-k-kāy-mōdiram,* பெ.(n.) பரவமகளிர் ஒரு விரலுக்கு நாலைந்து மேனி ஐவிரலிலும் அணியும் மோதிரம்; a kind of finger-ring worn by Parava women on all the five fingers, four or five such rings being worn on each finger.

[கரண்டைக்காய்+மோதிரம், கரண்டைக்காய் = திரட்டுக் காய், காய்க்கொத்து.]

கரண்டைக்கால் *karaṇḍai-k-kāl,* பெ.(n.) கணுக் கால்; ankle.

மறுவ. கெண்டைக்கால்

[கரள் → கரண் → கரண்டு → கரண்டை + கால்.]

கரண்டைக்கை *karaṇḍai-k-kai,* பெ.(n.) முன்கை (இ.வ.); fore-arm.

மறுவ. கெண்டைக்கை

[கரள் → கரண்டை = திரட்சி. கரண்டை + கை.]

கரணக்கணக்கன் *karaṇa-k-kaṇakkaṉ,* பெ.(n.) ஆவணம் எழுதுவோன்; a document - writer.

ம. கரணக்கணக்கன்

[கரணம் + கணக்கன்.]

கரணகம் *karaṇagam,* பெ.(n.) மனம்; mind.

ம. கரள்; **கோத.** கர்ல்.

[கரள் → கரண் + அகம்.]

கரணத்தண்டம் *karaṇa-t-taṇḍam,* பெ.(n.) கட்டுப்பாட்டை மீறியமைக்காகச் செலுத்தும் தண்டம்; fine.

[கரணம் + தண்டம். கரணம் = ஒழுங்குபடுத்தப்பட்ட செயல்முறை; நெறிமுறை; தண்டம் = தப்பு.]

கரணத்தார் *karaṇattār,* பெ.(n.) ஊர்ப் பொதுச் செயல்களைச் செயற்படுத்துவோர்; village executive groups; *"இவ்வூர் கரணத்தார் கண்டு செய்வித்து" (தமிழில் ஆவணம். 157).*

[கரணம் + அத்து + ஆர்.]

கரணத்தான் *karaṇattāṉ,* பெ.(n.) ஊரவைக் கணக்கெழுதுபவன் (படித்தவன்); an accountant. *"அருள்பெறு கரணத்தானு மாவணந் தொழுது வாங்கி" (பெரிய.பு. தடுத்தாட். 58).*

ம. கரணத்தான்

[கரணம் + அத்து + ஆன்.]

கரணத்தியலவர் *karaṇattiyalavar,* பெ.(n.) அரசனுக்குத் துணையாகும் எண்பெருந் துணை வருள் ஒருவரான, கணக்கு மேற்பார்வையாளர்; account officers working under a king, one of *eṇperu-n-tuṇaivar.*

[கரணம் + அத்து + இயலவர்.]

கரணப்பல்படை *karaṇa-p-palpaḍai,* பெ.(n.) பல்வ கைப்படை ; all type of military forces.

[கரணம்+பல்+படை, கரு + அணம் – கரணம் = செய்கை.]

கரணம்[1] *karaṇam,* பெ.(n.) 1. அறிவுக்கருவி (அகக் கருவி), உறுப்புக் கருவி (புலனறிவு); intellect, cognition. 2. மனம்; mind. *"பொறியொடு கரணத் தப்புறம்" (கம்பரா.தைல.27).*

[கரு → கரணம் (செய்கை).]

கரணம்[2] *karaṇam,* பெ.(n.) 1. கையாற் செய்யுந்தொழில்; work by one's hand. *"சித்திரக் கரணஞ் சிதைவின்று செலுத்தும்" (சிலப். 3: 54.).* 2. பொறிகள்; organ of sense. *"கரணங்க ளெல்லாங் கடந்து" (திருவாச. 10. 9).* 3. வதுவைச்சடங்கு ; marriage ceremony. *"ஐயர் யாத்தனர் கரண மென்ப" (தொல். பொருள். 145).* 4. கலவி (சூடா.); coition. 5. கூத்தின் மாறுபாடு; a variety in dramatic action, a kind of dancing. *"கரணமிட்டுத் தன்மை பேசி" (தேவா. 56:3).* 6. தலைகீழாகப் பாய்கை; somer-sault, tumbling heels over head, caper. வயிற்றுப் பிழைப்புக்குக் கம்பத்திலே கரணம் போடுகிறான் (உ.வ.). 7. இன்றியமையாது வேண்டப்படும் கருவி; மூலப்பொருள்; implement, means, material, instrument. *"அதனதனுக்குரிய வாய பல்கரண முந்தருதி" (கந்தபு. குமாரபுரி. 65).*

ம. கரணம்

த. கரணம் > **Skt.** karaṇa (மு.தா.176)

[கரு → கரணம். கருத்தல் = செய்தல்.]

கரணம்[3] *karaṇam,* பெ.(n.) 1. கணக்கன்; (S.I. I.I,65.); accountant, karanam. 2. ஆவணம்; title-deed, document.

[கரு → கருணம் → கரணம். கரு = செய். கரணம் = செய்பவன், எழுத்துப்பணியாளன், அவனால் எழுதப்பட்ட ஆவணம்]

த.கரணம் > **Skt.** karaṇa.

கரணம்[4] *karaṇam,* பெ.(n.) நீத்தார் நிகழ்விற்குரிய பண்டங்கள்; ingredients mixed and used in connection with funeral rites.

கரு → கருணம் → கரணம். கரு = செய். கரணம் = செய்யப்பட்ட பண்டம், நீத்தார்க்குப் படைக்கும் பண்டங்கள்.

கரணம்[5] *karaṇam,* பெ.(n.) மெய்ப்பொருள்; philosophy. *"கரணமனைத்தும்" (கோயிற்பு. நடராச. 22).*

[கரு → கருணம் → கரணம். கரு = செய். கரணம் = உடற்பொருள், மனம், பூதங்கள் நிலையைத்துழாவி ஆராய்வது.]

கரணம்[6] *karaṇam,* பெ.(n.) விருப்பம் (யாழ்.அக.); desire.

ம.கரணம்

[கரு → கருள் → கருளம் → கருணம் → கரணம். கருள் = மனம், இதயம்.]

கரணன் *karaṇaṉ,* பெ.(n.) கணக்கன்; accountant. *"கரணர்கள் வந்தனர் கழல் வணங்கினர்" (கந்தபு. மார்க்கண். 210).*

ம. கரணன்

[கரணம் → கரணன்.]

கரணாப்பட்டி *karaṇā-p-paṭṭi,* பெ.(n.) புதுக் கோட்டை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Pudukkottai dt.

[கரணன் – கரணம் + பட்டி – கரணம்பட்டி → கரணாப்பட்டி. கரணன் = ஊர்க்கணக்கன்.]

கரணாவூர் *karaṇāvūr,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்து ஊர்; a village in Viluppuram dt.

[கரணன் + ஊர் – கரணனூர் → கரணவூர். கரணாவூ (கொ.வ.) கரணன் = ஊர்க்கணக்கன்.]

கரணி[1] *karaṇi,* பெ.(n.) செய்பவன் (யாழ். அக.); doer. *"கரணிச் சித்தருள் கச்சிப்பதியோனே" (திருப்பு 432.)* (த.மொ.அக.).

[கரு → கருணி → கரணி 'இ' வினைமுதல் குறித்த ஈறு.]

கரணி[2] *karaṇi,* பெ.(n.) மருந்து; medicine. *"மருத்த வன் கைக் கரணி யுண்ணே" (தைலவ. பாயி.1).*

[கரு → கரண் → கரணி. கருத்தல் = செய்தல். கரணி = செய்யப்பட்டது.]

கரணி[3] *karaṇi,* பெ.(n.) வகை, வழி, முறை; manner, way, mode (ஆந்.).

தெ. கரணி

[கருத்தல் = செய்தல். கரணம் = செய்முறை, செயல்வகை. கரு → கரணி.]

கரணிக்கன் *karaṇikkaṉ,* பெ.(n.) சிற்றூர்க் கணக்கன்; village accountant.

[கரு → கரணிகன் → கரணிக்கன். (செய்வோன், கணக்கிடுவோன்).]

கரணிகம் *karaṇigam,* பெ.(n.) 1. அந்தக்கரணம் (வின்.); intellectual power, any of the four *anda-k-karaṇam.* 2. கூத்தின் மாறுபாடு (வின்.); a kind of dramatic action or dancing. 3. கலவி (அக.நி.); copulation. *"கரணிகத்தில் சுரோணிதத்தின் வாதமினால்"* (அக.நி.குருநாடி.191). 4. கருணீகம் (இ.வ.); office of accountant.

[கரு → கரணி → கரணம் → கரணிகம். கருத்தல் = செய்தல்.]

த. கரணிகம் > **Skt.** karaṇa.

✤கரணியம் *karaṇiyam,* பெ.(n.) காரணம்; reason, cause.

மறுவ. காரணம்

[கரு → கரணி → கரணியம். ஒ.நோ. அரு → அரண் → அரணியம்.]

கருத்தல் = செய்தல். கரணம் = செயல்வகை, செய்முறை, வழிவகை. வடதமிழில் காரணம் என்று இச் சொல் திரிந்தது. கரணியம் தென்தமிழ்ச் சொல்லாம். – படைத். பாவாணர்.

கரணியமேனிக்கல் *karaṇiya-mēṉi-k-kal,* பெ.(n.) கரும்புள்ளிக்கல் (வின்.); a kind of metal-ore.

[கரு → கரண் = கருமை. கரணியம் + மேனி + கல்.]

கரணை[1] *karaṇai,* பெ.(n.) 1. கரணைக்கிழங்கு; elephant yam; 2. சேனைக்கிழங்கு; tuberous rooted herb.

[கரள் → கரணை. கரணை = மேற்பாகம் சமனற்றுக் கரடு முரடாக அமைந்துள்ளமை காண்க.]

கரணை[2] *karṇai,* பெ.(n.) 1. கொத்துக்கரண்டி (வின்.); small trowel.

[கரள் → கரண் → கரணை. கரள் = திரட்சி, கட்டி, உருண்டை.]

கரணை[3] *karaṇai,* பெ.(n.) 1. கரும்பு முதலியவற்றின் துண்டு; piece cut off, as sugarcane cut crosswise. 2. வீணைத்தண்டு (வின்.); main body of vina 3. புண்வடு; scar of wound (வின்.). 5. ***பாவட்டை*** பார்க்க (L.) ; see *pāvaṭṭai.*

[கரள் → கரண் → கரணை. (மு.தா.133). கரண் = திரட்சி, உருண்டை.]

கரணைக்கிழங்கு *karuṇai-k-kiḻaṅgu,* பெ.(n.) கறிக்கு உதவும் ஒருவகைக் கிழங்கு; elephant yam.

[கரணை + கிழங்கு.]

கரணைக்கொட்டி *karuṇai-k-koṭṭi,* பெ.(n.) காறற் கொட்டிச்செடி; a medicinal plant.

[கரணை + கொட்டி.]

கரணைப்பலா *karaṇai-p-palā,* பெ.(n.) வெருகுச் செடி (மலை.); a medicinal plant.

[கரணை + பலா.]

கரணைப்பாவட்டை *karaṇai-p-pāvaṭṭai,* பெ.(n.) பாவட்டைச்செடி (வின்.); pāvaṭṭai plant.

[கரணை + பாவட்டை.]

கரத்தை *karattai,* பெ.(n.) ஒற்றைமாட்டு வண்டி; cart. ஒ்ரு கரத்தைப் பிடித்துகொண்டு 'வா' (யாழ்ப்.).

E.cart

[கரு → கரத்தை; கரு → கருத்து = சேர்த்து, பொருத்து. கரத்தை = பொருத்திய வண்டி. இச்சொல் முன்னெழுத்து மறைந்து வடபுல மொழிகளில் ரதம் எனத் திரிந்து தேரைக் குறிப்பதாயிற்று. ஒ.நோ. நகர் (வீடு) > இந். கர்.]

கரதப்பத்திரம் *karada-p-pattiram,* பெ.(n.) அரசிறையை அறுதியிடும் ஆவணம் (சுக்கிரநீதி. 93); document fixing the tax.

[Skt. patra > த. பத்திரம் (இலை. ஓலை).]

[கரத்தை → கரதம் + பத்திரம். கரு → கருத்து → கரத்தை = நன்கு பொருத்தியது. செப்பம் செய்தது.]

கரதலப்பாடம் *karadala-p-pāḍam,* பெ.(n.) ***கடைதலைப்பாடம்*** பார்க்க; see *kaḍai-talai-p-pāḍam.*

[கடைதலை → கரதலை (கொ.வ.) + பாடம்.]

கரதலம் *kara-talam,* பெ.(n.) கைத்தலம்; palm of the hand. *“மானுற்ற கரதல மொன்று” (தேவா.44,3).*

க., து. கரதாள; தெ. கரதாளமு.

[கரு → கரம் + தலம். கரு = செய்.]

கரதாளம்[1] *kara-tāḷam,* பெ.(n.) 1. கையாற் போடும் தாளம்; keeping time with the hands.

தெ. கரதாளமு; க., து. கரதாள.

[கரம் + தாளம் – கரதாளம் = கைத்தாளம்.]

கரதாளம்[2] *kara-tāḷam,* பெ.(n.) ***கருதாலம்*** பார்க்க; see *karu-tālam.*

க., கரதாள (பனையோலை, கைவிசிறி); தெ. கரதாளமு (சிறு மடற்பனை); து. கரதாள.

[கரு + தாலம் – கருதாலம் → கரதாளம்.]

கரந்தகற்படை *karanda-kaṟpaḍai,* பெ.(n.) *“கற்படுத்து மூடப்பெற்ற நகரநீர்க்கால்” (சிலப். 14: 65, உரை.);* covered drainage channel in a city.

[கரந்த + கல் + படை. கர = மறைந்த.]

கரந்தல் *karandal,* பெ.(n.) திருநீற்றுப்பச்சை; sweet basil.

[கரு → கரந்தை → கரந்தல்.]

கரந்துபடை *karandu-paḍai,* பெ.(n.) ***கரந்தகற்படை*** பார்க்க; see *karanda-kaṟpaḍai.*

[கரந்து + படை.]

கரந்துவரலெழினி *karandu-varal-eḻiṉi,* பெ.(n.) நாடகத் திரைச்சீலை; a kind of over-hanging curtain put up on the ancient Indian stage. *"ஒருமுக வெழினியும் பொருமுக வெழினியும் கரந்துவர லெழினியும்" (சிலப். 109:110.).*

[கரந்து + வரல் + எழினி. எழினி - இடுதிரை.]

கரந்துறை *karanduṟai,* பெ.(n.) மறைந்து வாழ்தற் குரிய நிலவறை; underground room.

[கரந்து + உறை.]

கரந்துறைகிளவி *karanduṟai-kiḷavi,* பெ.(n.) உள்ளக்குறிப்பை மறைத்துச் சொல்லும் மொழி (திருக்கோ. 50, கொளு.); words that mask one's innermost feelings and purpose.

[கரந்து + உறை + கிளவி.]

கரந்துறைகோள் *karanduṟai-kōḷ,* பெ.(n.) மறைந்து சிறுபான்மையாகப் புலப்படும் கோள்கள்; வால் வெள்ளி, வானவில் போன்ற ஒளி வீச்சுகள்; phenomena of the heavens sometimes visible and sometimes not, for the most part regarded as ominous, such as Rāgu, Kēdu, pari-vēḍam, vāl-veḷḷi, vāṉa-vil. *"கரந்துறைகோ –ளொடு நிரந்தவை நிரீஇ" (பெருங். உஞ்சைச் 58, 57).*

[கரந்து + உறை + கோள்.]

கரந்துறைச்செய்யுள் *karanduṟai-c-ceyyuḷ,* பெ. (n.) ***கரந்துறைப் பாட்டு*** பார்க்க; see *karanduṟai-p-pāṭṭu.*

[கரந்துறை+செய்யுள்.]

கரந்துறைப்பாட்டு *karanduṟai-p-pāṭṭu,* பெ.(n.) ஒவ்வோரெழுத்து இடைவிட்டுப் படிக்கும்போது வேறு ஒரு பாட்டாகத் தோன்றும்படி, எழுத்துகள் அமைத்துப் பாடப்படும் ஒரு மிறைச்செய்யுள் (தண்டி. 95, உரை); stanza composed in such a way that when the alternate letters of the words in it are put together, in a correct sequence, they form by themselves another verse altogether.

[கரந்து + உறை + பாட்டு.]

கரந்துறைமாக்கள் *karanduṟai-mākkaḷ,* பெ.(n.) மறைந்து தங்கும் மாந்தர் (மணிமே.); hiding people.

[கரந்து + உறை + மாக்கள். கரந்து உறைதல் - மறைந்து வாழ்தல்.]

கரந்தை[1] *karandai,* பெ.(n.) 1. திருநீற்றுப்பச்சை; sweet basil. 2. கொட்டைக்கரந்தை; Indian globe - thistle. *"காய்த்த கரந்தை" (பதிற்றுப். 40:5.).* 3. மரவகை (மலை.); iron-weed. 4. நீர்ச்சேம்பு (L.); arrow-head aquatic plant.

ம. கரண்டெ; க. கரண்டெ; து. கரண்டெ, கர்ண்டெ.

[கரு → கரந்தை. கரு - கரிய.]

கரந்தை[2] *karandai,* பெ.(n.) 1. நிரைமீட்போர் அணியும் கரந்தைப் பூமாலை (பிங்.); chaplet of karandai flowers worn by warriors when recovering cows that had been seized by the enemy. 2. ***கரந்தைத்திணை*** பார்க்க; see *karandai-t-tiṇai.* *"கரந்தையுங் கரந்தைத் துறையு மென்ப" (பு.வெ. 2,1.).*

[கள் → கர் → கர → கரந்தை (வே.க.121).]

கரந்தை

கரந்தை[3] *karandai,* பெ.(n.) குரவன் (குரு.); priest. *"கரந்தைக ளாண்டி லொருக்கால் வருவது" (தனிப்பா. 1, 87, 171.).*

[குரவன் → குரந்தை → கரந்தை (கொ.வ.).]

கரந்தை[4] *karandai,* பெ.(n.) தவணை; time limit. சித்திரைக் கரந்தை (நெல்லை).

[கரு → கரந்தை. கரந்தை = செயற்பட வேண்டிய அல்லது செய்யப்பட வேண்டிய காலம்.]

கரந்தை[5] *karandai,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்துச் சிற்றூர்; name of a village in Thanjavur dt.

[கருந்தட்டான் + குடி– கருந்தட்டாங்குடி → கரந்தை (மரூஉ.).]

கரந்தைக்கொடி *karandai-k-koḍi,* பெ(n.) கொட்டைக் கரந்தை; Indian globe - thistle. (பதிற்றுப். 40.).

[கரந்தை + கொடி]

கரந்தைக்கோவை *karandai-k-kōvai,* பெ.(n.) 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பலபட்டடைச் சொக்கநாதப் புலவரால் இயற்றப்பட்ட சிற்றிலக்கியம்; a treatise by Paḷapaṭṭaḍai Cokkanata-p-pulavar of 18th C.

[கரந்தை + கோவை]

கரந்தை சூடி *karandai-šūḍi,* பெ.(n.) சிவன்; Šiva.

[கரந்தை + சூடி. கரந்தை = ஆநிரை மீட்கும்போரில் மறவர் சூடும் பூ. இங்கு வெற்றி குறித்தது .]

கரந்தைத்திணை *karandai-t-tiṇai,* பெ.(n.) பகைவர் கவர்ந்த ஆநிரை மீட்டலைக் கூறும் புறத்திணை (பு.வெ.. 2,1, உரை); theme of recovering the herd of cows seized by the enemy as a signal of the declaration of hostilities.

[கரந்தை + திணை.]

வெட்சியார் ஆநிரைகளைக் கவர்ந்தமை கேட்ட அவ்வாவினுடைய அரசன் படைமறவர் விரைந்து வெட்சியாரோடு இடைவழியிற் பொருது தமது நிரையினை மீட்பது கரந்தைத் திணையாம். இவ்வொழுக்கத்திற்குக் கரந்தைப் பூச்சூடுதல் மரபு. கரந்தை = ஒருவகைப் பூடு. இதனைக் கொட்டைக் கரந்தை என்றும் கூறுவர்.

கரந்தைத்திணை: 1. கரந்தையரவம் 2.அதரிடைச்செலவு 3.போர்மலைதல் 4. புண்ணொடு வருதல் 5. போர்க்களத் தொழிதல் 6. ஆளெறி பிள்ளை 7.பிள்ளைத்தெளிவு 8. பிள்ளையாட்டு 9. கையறுநிலை 10. நெடுமொழி கூறல் 11. பிள்ளைப் பெயர்ச்சி 12. வேத்தியன் மரபு 13. குடிநிலை என்றவாறு பதின்மூன்று துறைப்படும் எனப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும்.

கரந்தையரவம் *karandai-y-aravam,* பெ.(n.) கரந்தைத் திணைத் துறை பதின்மூன்றனு ளொன்று; one of the 13 Karandai tuṟai.

[கரந்தை + அரவம். அரவம் = ஆரவாரம், அது ஆநிரையைக் கைப்பற்றினமை கேட்டுச் செய்யாநின்ற காரியந்தவிரக் கடுகினராகித் திரளுங் கூறுபாட்டைச் சொல்லுவது (பு.வெ.).]

கரந்தையார் *karandaiyār,* பெ.(n.) பகைவர் கவர்ந்த நிரையை மீட்கும் மறவர்; warriors who rescue the cows that have been seized by the enemy. *"கரந்தையார் அலறும்படி கைக்கொண்ட இன நிரைகள்" (சிலப். 12, உரைப்பாட்டு.).*

[கரந்தை + ஆர்.]

கரநொடி *kara-noḍi,* பெ.(n.) கை சொடுக்கிப் போடும் தாளம்; snapping the fingers (பதினோராந் திருமுறை. 34.82).

[கரு → கரம் + நொடி.]

கரப்பறை *karappaṟai,* பெ.(n.) ஒளிந்திருத்தற்குரிய அறை; room to hide one self in, retreat. *"கரப்பறை வீதியுங் கள்ளப் பூமியும்" (பெருங். உஞ்சைக். 33:17).*

[கரப்பு + அறை. கரத்தல் = ஒளிந்திருத்தல். கரப்பு = ஒளிவு மறைவு.]

கரப்பன்[1] *karappaṉ,* பெ.(n.) ***கரப்பான்*** (யாழ்ப்.) பார்க்க; see *karappāṉ.*

ம. கரப்பன்

[கரப்பான் → கரப்பன்.]

கரப்பன்[2] *karappaṉ,* பெ.(n.) ***கரகரப்பு*** பார்க்க; see *kara-karappu.*

[கரகரப்பு → கரப்பு → கரப்பன்.]

கரப்பன்பண்டம் *karappaṉ-paṇḍam*, பெ.(n.) கரப்பானையுண்டாக்கும் உணவுப்பொருள் (வின்.); eatables which promote eruptions.

[கரப்பான் → கரப்பன் + பண்டம்.]

கரப்பன்பூடு *karappaṉ-pūḍu*, பெ.(n.) ***கரப்பான்பூடு*** பார்க்க; see *karappāṉ-pūḍu*.

[கரப்பன் + பூடு.]

கரப்பாக்கு *karappākku*, பெ.(n.) ***கரப்பு*** பார்க்க; see *karappu. "கண்ணும் எழுதேம் கரப்பாக் கறிந்து" (குறள், 1127).*

[கர + பாக்கு (தொ.பெ.ஈறு.) கரப்பு - மறைவு, ஒளிவு. கரப்பாக்கு - மறைத்தல். ஒ.நோ: "ஏதம்படு பாக்கு"]

கரப்பான்[1] *karappāṉ*, பெ.(n.) குழந்தை சொறிபுண்வகை; eruption on children unaccompanied with fever, any contaminable disease, rash, eczema, erysipelas, etc.

ம. கரப்பன்

H. karpān

[கரப்பு → கரப்பான். கரப்பு - சொறி, சுரசுரப்பு.]

மூன்று அல்லது நான்கு திங்கள் முதல் மூன்றாண்டு வரை குழந்தைக்கு உண்டாகும் சொறி. கடுவான் கரப்பான், செங்கரப்பான், கொள்ளிக்கரப்பான், குட்டக்கரப்பான், மண்டைக் கரப்பான் என்பன கரப்பானின் வகைகளாகும். இதில் இருபத்தொன்பது வகைகளுண்டு என்பர்.

கரப்பான்[2] *karappāṉ*, பெ.(n.) பகலில் மறைந்து திரியும் பூச்சி; kind of insect, cockroach.

[கரவு → கரப்பான் (வே.க.127).]

உலகில் மிகப் பரவலாகக் காணப்படும் பூச்சியினங்களுள், கரப்பான் பூச்சியினமும் ஒன்றாகும். இறக்கைகளுடைய பூச்சியினங்களிடையே இது மிகத் தொன்மையானது.

கரப்பான்கட்டு *karappāṉ-kaṭṭu*, பெ.(n.) கரப்பான் நோய் வகை; cellulitis.

[கரப்பான் + கட்டு.]

கரப்பான்கொல்லி *karappāṉ-kolli*, பெ.(n.) கரப்பானைப் போக்கும் மருந்து (m.m.); antidote for eruptions, anti-scorbutic.

[கரப்பான் + கொல்லி.]

கரப்பான்பித்தம் *karappāṉ-pittam*, பெ.(n.) ஒருவகைப் பித்தநோய்; a kind of bile.

[கரப்பான் + பித்தம்.]

கரப்பான்பூச்சி *karappāṉ-pūcci*, பெ.(n.) ***கரப்பான்***[2] பார்க்க; see *karappāṉ*[2].

[கரப்பு → கரப்பான் + பூச்சி.]

கரப்பான்பூடு *karappāṉ-pūḍu*, பெ. (n.) ஒருவகை முட்செடி (வின்.); a lowly flowering thorny shrub.

[கரப்பான் + பூடு.]

கரப்பான்றைலம் *karappāṉ-ṟailam*, பெ.(n.) கருப்பூரம் கலந்த ஒரு தைலம்; an oil mixed with camphor. *"பூரந்துடி..... கரப்பானும் வாங்கு மன்றே"* (தைல. தைலவ. 49).

[கரப்பான் + தைலம். த. நுல் (எள்) → தில் > **Skt.** taila > *த. தைலம்.]*

கரப்பிடும்பை *karappiḍumbai*, பெ.(n.) உள்ளது கரத்தலாகிய நோய்; habit of concealing. *"கரப்பிடும்பை யில்லாரைக் காணின்..." (குறள், 1056).*

[கரப்பு + இடும்பை. கர → கரப்பு - ஒளித்துவைத்தல். இடும்பை - நோய். ஈயாமல் மறைத்து வைத்தல் ஒரு நோயாகக் கூறப்பட்டுள்ளது.]

கரப்பு[1] *karappu*, பெ.(n.) 1. மறைக்கை; concealing, screening, hiding, as one's thoughts. *"கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார்" (குறள்,1053).* 2. களவு (திவா.); theft. 3. வஞ்சகம்; fraud, deceit. *"கரப்புறு சிந்தையர் காண்டற் கரியவன்" (தேவா. 524:3).* 4. மீன் பிடிக்குங் கூடை, பஞ்சரம் முதலியன (யாழ்ப்.); conical basket for catching fish, weel, hen-coop. 5. மத்து (யாழ்.அக.); churn. 6. ***கரப்பான் பூச்சி*** பார்க்க; see *karappāṉ-pūcci. "பூஞை கரப்பருந்த நாடுங்கடன்" (அருட்பா.).*

ம. கரப்பு

[கள் → கள → கர → கரப்பு.]

கரப்பு[2] *karappu,* பெ.(n.) மூங்கில், மரம், துணி போன்றவற்றால் செய்த தடுப்பு (pond.); screen.

மறுவ. தட்டி

[கர → கரப்பு (மறைப்பு)]

கரப்புக்குடில் *karappu-k-kuḍil,* பெ.(n.) சிறுகுடில் (யாழ்ப்.); small hut.

[கரப்பு + குடில் – கரப்புக்குடில் = ஓராள் ஒளிந்துகொள்ளும் அளவிலான சிறுகுடில்.]

கரப்புக்குத்து–தல் *karappu-k-kuttu-,* 10 செ.கு.வி. (v.i.) மறைவாகக் கூடுவைத்து ஒளிபாய்ச்சி மீன் பிடித்தல் (யாழ்ப்.); to catch fish with a basket, dazzling them by a strong light and thrusting the weel upon them.

[கரப்பு + குத்து.]

கரப்புடுப்பு *karappuḍuppu,* பெ.(n.) நாடக வுடுப்பு ; dramatic dress.

[கரப்பு + உடுப்பு.]

கரப்புடையான்பட்டி *karappuḍaiyānpaṭṭi,* பெ.(n.) கரூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Karur dt.

[கருப்பு+ உடையான்+பட்டி– கருப்புடையான்பட்டி → கரப்புடையான்பட்டி.]

கரப்புநீர்க்கேணி *karappu-nīr-k-kēṇi,* பெ.(n.) மறைகிணறு; well containing water that is hidden from view, covered wells. *"பரப்புநீர்ப் பொய்கையுங் கரப்புநீர்க் கேணியும்" (மணிமே. 19 : 104).*

[கரப்பு + நீர் + கேணி.]

கரப்பூண்டி *karappūṇḍi,* பெ.(n.) திருவண்ணா மலைமாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvanna malai dt.

[கரை + பூண்டி – கரைப்பூண்டி → கரப்பூண்டி. பூண்டி - ஏரி.]

கரப்பொறி *kara-p-poṟi,* பெ.(n.) 1. குரங்கு பிடிக்கும் ஒருவகைப் பொறி (வின்.); a kind of trap for catching monkeys.

[கரப்பு + பொறி – கரப்புப்பொறி → கரப்பொறி (மரூஉ).]

கரம்[1] *karam,* பெ.(n.) இடை (part.). ஓர் எழுத்துச் சாரியை; expletive used in designating the short vocalic letters of the Tamil alphabet. *"இருமைக் குறிலிவ் விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும்" (நன்.1126.).*

[கரு → கரம்–செய்தற்குறிப்புடைய சொல் சாரியை யாயிற்று.]

"காரமும் கரமும் கானொடு சிவணி நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை" என்பது தொல் காப்பியம் [134].

உயிரெழுத்தின் உதவியின்றித் தாமாக வொலிக்காத மெய்யெழுத்துகளை ஒலிப்பித்தற் பொருட்டும், தாமாக வொலிக்கும் உயிரெழுத்து களையும் எளிதாக ஒலிப்பித்தற் பொருட்டும், சில துணை யொலிகளைப் பண்டைத் தமிழிலக்கண நூலார் அமைத்துள்ளனர். அவை எழுத்துச் சாரியை எனப்படும்.

உயிரெழுத்துகளுள் குறிற்குக் கரமும், நெடிற்குக் காரமும் சாரியையாம் .

வடமொழியார் கரம், காரம் என்னும் இரண்டையே தமிழினின்று கொண்டுள்ளனர். அதோடு குறிற்கு இரண்டையும் வேறுபாடின்றி ஆள்வர். இதனாற் சாரியை யமைப்பின் தமிழ் மூலம், தெளிவாகத் தெரிகின்றது. கரம், காரம் என்பன வடமொழியில் கர, கார என்று ஈறுகெட்டு நிற்கும். சாரியை என்னுங் குறியீடும் வடமொழியிலில்லை [வ.மொ.வ.299].

கரம்[2] *karam,* பெ.(n.) கை; hand. *"கரமலர் மொட்டித்து" (திருவாச.4.84).* 2. முழம்; cubit. *"அங்குல மறுநான் கெய்தி னதுகரம்" (கந்தபு. அண்டகோ.6).* 3. துதிக்கை; elephant's trunk. 4.ஓலைக்கொத்தின் திரள் (யாழ்ப்.); heap of palm leaves. 5. ஒளிக்கற்றை; ray of light. *"ஆயிரந் தழற் கரத்து" (கல்லா.13.).* 6. ஒளி; light. *"அக்கரக் கணக்கர்" (தனிப்பா.ii,30,70).* 7. குடியிறை (திவா.); tax, duty.

த. கரு > Skt. kri.

கரு = செய். [ஒநோ: கருவாளி = உழைப்பாளி]. இச்சொல் உலகமொழிகளில் ஊடாடியுள்ளது. கருத்தல் = செய்தல். கரு → கரம். கரம் = செய்தற்குரியது, செய்தற்கு உதவியாக இருக்கும் கை. ஒளிக்கற்றை கதிரவனின் கையாகக் கருதப்பட்டமை நோக்கி 'கரம்' எனப்பட்டது.

கரம்[3] *karam,* பெ.(n.) 1. செய்வது; that which causes, used only as the second member of some compound nouns, as பயங்கரம். 2. வரிவகை; a tax.

[கரு → கரம்]

கரம்[4] *karam,* பெ.(n.) 1. வெப்பம் (வின்.); heat. 2. இடுமருந்து (சீவரட். 325); medicine for winning over a person, love philtre administered to a person without his knowledge or consent. 3. விலையேற்றம்; high price. விலை கரமா யிருக்கிறது (இ.வ.).

[குரு = ஒளி, வெப்பம். குரு → கரு → கரம், வெப்பத்தைக் குறித்த சொல் சூடேற்றப் பொருளில் மிகுந்த விலையேற்றத்தைக் குறித்தது]

கரம்[5] *karam,* பெ.(n.) நஞ்சு; poison. *"கரம்போலக் கள்ளநோய் காணுமயல்" (சிறுபஞ். 62).*

Skt. gara

[கரு → கரம் = நஞ்சு. கருத்திருப்பது நோக்கிக் கரம் எனப்பட்டது. களம் → கரம் (வே.க.126).]

கரம்[6] *karam,* பெ.(n.) அழிவு; destruction, destructibility. 2.சிறுமை; insignificance, smallness.

[குரு → கரு → கரம்.]

கரம்பக்காடு *karamba-k-kāḍu,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thanjavur dt.

[கரம்பு + காடு – கரம்புக்காடு → கரம்பக்காடு.]

கரம்பக்குடி[1] *karamba-k-kuḍi,* பெ.(n.) திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள சிற்றூர்ப் பெயர்; a village name in Tiruvārur and Pudukkottai district.

[கரம்பு + குடி = கரம்புக்குடி → கரம்பக்குடி.]

கரம்பக்குடி[2] *karamba-k-kuḍi,* பெ.(n.) ***கரம்பைக் குடி*** பார்க்க; see *karambai-k-kuḍi.*

[கரம்பு → கரம்பை + குடி – கரம்பைக்குடி → கரம்பக்குடி (கொ.வ).]

கரம்பதிவுக்கணக்கு *karam-padivu-k-kaṇakku,* பெ.(n.) வரிப்பதிவுப் புத்தகம்; register of assessment.

[கரம் + பதிவு + கணக்கு.]

கையால் குறித்து வைக்கும் கணக்கு, வரிக்கணக்கைக் கொண்ட பொத்தகத்திற்கும் ஆகிவந்துள்ளமை காண்க.

கரம்பம் *karampam,* பெ.(n.) 1. பொடிமா; nice-flour. 2. அரிசிமா; rice-flour.

[கரம்பு → கரம்பம்.]

கரம்பல் *karambal,* பெ.(n.) தூசு (ம.அக.); dust.

[கரம்பு → கரம்பல்.]

கரம்பவிடுதி *karambaviḍudi,* பெ.(n.) புதுக் கோட்டை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Pudukkottai dt.

[கரம்பு + விடுதி – கரம்புவிடுதி → கரம்பவிடுதி.]

கரம்பவிளைச்சேரி *karambaviḷai-c-cēri,* பெ.(n.) குமரி மாவட்டத்து அகத்தீசுவரம் வட்டத்துச் சிற்றூர்; a village in Agathiswaram taluk in Kanyakumari dt.

[கரம்பு + விளை + சேரி – கரம்புவிளைச்சேரி → கரம்பவிளைச்சேரி. விளை = களவற்காடு, பனங்காடு.]

கரம்பற்று–தல் *karam-parru-,* 5 செ.கு.வி.(v.i.) திருமணம் செய்தல்; to marry.

[கரம் + பற்று. கரம் = கை. பற்று = பிடி.]

கரம் பிடித்தலாவது, இருபாலருக்கும் பொதுவாயினும் பெரும்பான்மை நாணம் முதலிய குணங்களால், பெண் ஆடவனைத் தீண்டத்தயங்கும் தன்மை நோக்கி ஆடவருக்கே உரியதாய் அமையுமென்க. பெண்பால் கரம் பிடித்தலாவது கொழுகொம்பைப் பற்றும் கொடிபோலன்றி மனத்தளவில் பற்றி நிற்கும் தன்மை எனக் கொள்ளலே பொருந்தும். பெண்ணைக் கொடியென உவமையாகு பெயராற் குறிப்பது அவளது மென்மைத் தன்மையை நோக்கியே யாகும்.

"புல், பூண்டு, செடி, கொடி, மரம் என்னும் ஐவகை நிலத்திணை [தாவர] உயிர்களுள்

பெரும்பாலும் மெல்லியதும் விரைந்து வளர்வதும், கொம்பைப் பற்றிப் படர்வதும் கொடியே. பெண்ணைக் கொடியென்று சொன்னவளவிலேயே அவள் ஆடவனிலும் மெல்லியள் என்றும், அவனிலும் விரைந்து வளர்பவளென்றும், ஒரு கொழுநனைத் துணைக்கொண்டே வாழ்பவளென்றும் மூன்று பெண்பாற் குணங்கள் குறிப்பறியக் கிடக்கின்றன" [சொ.ஆ.க.].

கரம்பு[1] *karambu,* பெ.(n.) 1. பயிர் செய்யாத நிலம் (கொ.வ.); waste land uncultivated though cultivable of two kinds, viz. Cey and kāṟ-karambu. இரண்டாண்டாகப் பயிர் செய்யாததால் நிலம் கரம்பாக கிடக்கிறது (உ.வ.).

மறுவ. கராய்

க. கரம்பு

[கரு = கருக்கம்புல், அருகம்புல். கரு → கர → கரம்பு (வெறும் புல் மட்டும் படர்ந்த வறண்ட நிலம்).]

கரம்பு[2] *karambu,* பெ.(n.) கரிசல் நிலம்; black soil.

[கரு → கர → கரம்பு. கரு = கருமை; பு — சொ.ஆ. ஈறு.]

கரம்பை[1] *karambai,* பெ.(n.) 1. வண்டல் பரந்த நிலம்; land with a surface layer of alluvium (R.F.). 2. வறண்ட களிமண்ணிலம்; hard, clayey soil. *"இருநிலக் கரம்பைப் படுநீறாடி" (பெரும்பாண்.93.).* 3. போடுநிலம், பொட்டல் நிலம்; waste land. *"விடுநிலக் கரம்பை விடரளை நிறைய" (பதிற்றுப். 28).* 4. கரிசல் மண் (முகவை.மீனவ.); black soil (வே.க.121).

[கரு → கர → கரம்பு → கரம்பை.]

கரம்பை[2] *karambai,* பெ.(n.) சிறுகளா (மலை.); a low spreading spiny, evergreen shrub.

[கள் → கள → கர → கரம்பை.]

கரம்பைக்குடி *karambai-k-kuḍi,* பெ.(n.) ஓர் ஊர்ப்பெயர்; a name of a village.

[கரம்பை + குடி.]

கரம்பைமீன் *karambai-mīṉ,* பெ.(n.) கருநிற மீன் வகையுளொன்று; a kind of black fish.

[கரு → கரம்பு → கரம்பை + மீன்.]

கரமுகிழ்—த்தல் *kara-mugiḻ-,* 4 செ.கு.வி.(v.i.) கைகூப்புதல்; to join the palms of the hands in worship. *"கரமுகிழ்ப்ப நின்னருளைக் கருத்தில் வைப்போம்" (தாயு. பொருள்வ.10.).*

[கரம் + முகிழ்.]

கரமூக்கு *kara-mūkku,* பெ.(n.) நீர்விழும் கெண்டியின் உறுப்பு; spout of a pitcher or kettle.

[கரகம் + மூக்கு.]

கரமை *karamai,* பெ.(n.) யானை (சங். அக.); elephant.

[கரு → கரமை (கருமையானது). மை (ப.பெ.ஈறு.)]

கரமொழி *karam-oḻi,* பெ.(n.) வரிநீக்கம் (நாஞ்.); freedom from taxation.

[கரம் = குடியிறை. கரம் + ஒழிவு – கரமொழிவு → கரமொழி]

கரல் *karal,* பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish.

[கரு → கரல்.]



கரல் மீன்

கரலப்பாக்கம் *karalappākkam,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanchipuram dt.

[கரளை+பாக்கம் – கரளைப்பாக்கம் → கரளப்பாக்கம் → கரலப்பாக்கம். கரளை = மண்வகை.]

கரவடநூல் *kara-vaḍa-nūl,* பெ.(n.) களவைப்பற்றிக் கூறும் நூல் (சிலப். 16:180, அரும்.); a treatise on theft. ***களவடம்*** பார்க்க; see Kaḷavaḍam.

[களவு → களவடம் → கரவடம் + நூல் = கரவடநூல்]

களவடம் என்னும் பெயரிலிருந்த பண்டைத் தமிழ் நூலின் மொழிபெயர்ப்பாக வடமொழியில் இயற்றப்பட்டதே கரவடம். இது தமிழாக்கப்பட்டதாகச் செ.ப.அக. கூறுவது தவறு.

கரவடம்[1] *karavaḍam,* பெ.(n.) 1. களவு (திவா.); theft, stealing. 2.களவுபற்றிய பண்டைத் தமிழ்நூல்; an ancient Tamil treatise on stealing.

[களவு + அடம் – களவடம் → கரவடம். 'அடம்' சொல்லாக்க ஈறு.]

ஒ.நோ: **ஒத்தடம். களவடம்** பார்க்க; see kaḷavaḍam.

கரவடம்[2] *karavaḍam,* பெ.(n.) பொய், தவறு; falsehood. 2. ஏய்ப்பு; deceit, fraud. *"மார்பின் மீதிலே தாழ்வடங்கண் மனத்திலே கரவடமாம் வேடம்" (தண்டலைசத.29).*

ம. கரவடம்

[கரவு → கரவடம். 'அடம்' சொல்லாக்க ஈறு (வேக.129).]

கரவடம்[3] *karavaḍam,* பெ.(n.) காக்கை; crow.

[கரவு + அடம் – கரவடம். திருடித் தின்னும்பறவை, காக்கை.]

கரவடர் *karavaḍar,* பெ.(n.) 1. திருடர் (திவா.); thieves. 2. ஏய்ப்போர்; deceivers, crafty persons.

தெ. கரடி; **த.** கரவடர் > **Skt.** kharpara.

[கரவு → கரவடர் (வேக.129).]

கரவடி *karavaḍi,* பெ.(n.) 1. தங்கநகைக்கிடும் மெருகு வகை (நாஞ்.); rough polish for gold jewels. 2. நகைகளுக்கு மெருகூட்டப் பயன்படுத்தும் கருவி; a brush like instrument for polishing gold ornaments.

ம. கரவடி

[குரு → குருவடி → கரவடி. குரு → கரு = ஒளி, ஒளிக்கதிர்.]

கரவதம் *karavadam,* பெ.(n.) ***கரவடம்*** பார்க்க; see *karavaḍam.*

[கரவடம் → கரவதம். கரவடம் = திருடித்தின்னும் பறவை, காக்கை.]

கரவம் *karavam,* பெ.(n.) காட்டீந்து; wild date-palm.

[கரு → கர → கரவு + அம்.]

கரவர் *karavar,* பெ.(n.) கள்வர்(பிங்.); thieves.

[கரவு + அர். கள் → கர → கரவு. 'அர்' ப.பா.ஈறு.]

கரவல் *karaval,* பெ.(n.) யாருக்கும் தாராமல் ஒளித்து வைத்தல்; concealment of an article without giving to any one. *"கரவலருங் கற்பகமும்" (கம்பரா. சடாயுகாண்.21).*

[கர → கரவு + அல். 'அல்' தொ.பெ.ஈறு.]

கரவா *karavā,* பெ.(n.) கடல்மீன்வகை; a sea-fish of vermilion colour.

ம. கரவா

[கரு → கரவா.]

கரவாதி *karavādi,* பெ.(n.) சுரிகைக்கத்தி (சங்.அக.); poniard.

[கரம் + வாள் – கரவாள் → கரவாளி → கரவாதி (கொ.வ.)]

கரவாரம் *kara-vāram,* பெ.(n.) கையை எடுத்து வீசுகை; raising the arm, as while singing. *"பாடகர் வியந்து கரவாரங் கொண்டு" (திருவாத.பு.மந்திரி. 36).* 2. கைதட்டல்; claps (திருவாத. 4.43).

[கரம் + ஆரம் – கரவாரம்.]

கரவாலம் *kara-vālam,* பெ.(n.) நகம் (சங்.அக.); nail.

[கர + வாலம். வாளம் → வாலம்.]

கரவாள் *karavāḷ,* பெ.(n.) கைவாள்; dagger, poniard. *"கரவாள்கொடு.... ....தடிந்திட்டு" (பிரபுலிங்.துதி.8).*

ம. கரவாள்

[கரம் + வாள் – கரவாள்.]

கரவாளம் *karavāḷam,* பெ.(n.) ***கரவாள்*** பார்க்க; see *kara-vāḷ* *"கரவாளங் கைதுளங்க" (திருவாலவா.28, 34).*

ம.கரவாளம்; Pali karaba.

[கரம் + வாள் + அம் – கரவாளம். 'அம்' சொல்லீற்றுச் சாரியை.]

கரவிமானம் *kara-vimāṉam,* பெ.(n.) பக்கச்சிறையமைப்புடைய கோயில் விமான வகை (ம.ப.மதம்); a kind of tower structure over temple entrance.

[கரம் + விமானம் – கரவிமானம் = கோயில் முகட்டுக்கு இருபாலும் கைபோல் அமைந்த பக்கச்சிறகு.]

கரவீரம்[1] *kara-vīram,* பெ.(n.) அலரி; oleander. *"சரணெனக்கஞ்–சங்கரவீரமிட்டேத்து" [மருதூரந். 36].*

ம. கரவீரம்

[கரவீரம் = கைவாள். வாள் வீரர் நடுகல்லுக்கு நீரொடு அலரிப்பூ தூவலின் இப் பெயர்பெற்றது.]

கரவீரம்[2] *kara-vīram,* பெ.(n.) வாள் (சங்.அக.); sword. 2. இடுகாடு; burial ground.

ம. கரவீரம்

[கரம் + ஈரம். ஈர் → ஈரம் = ஈர்த்துவிடுவது, துண்டாக்குவது. கரவீரம் = கைவாள், வாள் வீரர் புதைக்கப்பட்ட இடுகாடு.]

கரவு[1] *karavu,* பெ.(n.) 1. மறைவு; concealment. *"கரவி லுற்றவை" (அரிச்.பு.வேட்டஞ்.9).* 2. ஏய்ப்பு; deceit. *"களவறிந்தார் நெஞ்சிற் கரவு" (குறள், 288).* 3. களவு(திவா.); theft. *"அம்பொனின் கரவை யிரண்டாயிரம்" (சேதுபு. சேதுச்சரு.39).* 4. பொய்; falsehood. *"கரவெனு முன்றனூலில்" (திருவாத.பு.புத்த.55).*

Gk. Cryptos

[(கர்) → கர → கரவு (வே.க.121,127).]

கரவு[2] *karavu,* பெ.(n.) முதலை; alligator. *"கரவார் தடம்" (திரு.திருவாய்.8,9,9).*

மறுவ. கராம், கரா.

[கள் → கள → கர → கரவு.]

கரத்தல் = மறைதல். நீருள் மறைந்து வாழும் இயல்பு நோக்கி முதலைக்குக் கரவு, கரா, கராம் என்னும் பெயர்கள் வழங்கின.

கரவுடையான் *karavuḍaiyāṉ,* பெ.(n.) அழுத்த மானவன்; hard-hearted man.

[கரவு + உடையான்.]

கரவுளி *karavuḷi,* பெ.(n.) கூர்மையான முகவமைப் புடைய கடல்மீன் (நெல்லை. மீனவ.); a kind of sea fish.

[கரவு + உளி – கரவுளி.]



கரவுளி மீன்

கரவை[1] *karavai,* பெ.(n.) கூத்து (அக.நி.); dance.

[கள் → கள → கர → கரவை. கரவு = மறைவு, புனைவு, வடிவமாற்று. இங்கு வடிவமாற்றுப்பொருள் கொண்டது.]

கரவை[2] *karavai,* பெ.(n.) கம்மாளர் கருவியுளொன்று (சங்.அக.); a. smith's instrument.

[கரு → கர → கரவு → கரவை. கரு = திரண்டது, உருண்டையானது.]

கரவொலி *kara-v-oli,* பெ.(n.) கைதட்டுவதால் உண்டாகும் ஒலி; applause.

[கரம் + ஒலி.]

கரவோர் *karavōr,* பெ.(n.) கரவர்; deceitful persons.

[கரவு +அர் – கரவர் → கரவார் → கரவோர்.]

கரள்[1] *karaḷ,* பெ.(n.) உருண்டை; roundness.

[கரு → கருள் → கரள்.]

கரள்[2] *karaḷ,* பெ.(n.) 1. நெஞ்சகம் (இதயம்); heart. 2. குடல்; intestine.

மறுவ. குண்டிக்காய், குண்டிகை, மாங்காய்.

ம. கரளு; **க.** கரளு, கர்ள்; **கோத.** கர்ல்; **குட.** கரி; **து.** கர்லு.

[கரு → கருள் → கரள் (உருண்டை, திரட்சி) = திரண்ட வடிவுள்ளது.]

L. kārd, cārdia; **E.** heart; **Yld.** harts; **Gk.** kardia., **F.** Coeur; **Sp.** corazon; **It.** cuore; **G.** harz; **Du.** hart; **Swed;** hjarta; **Dan.** hjerte; **Norw.** hijerte; **Turk.** kalf.

கரள்[3] *karaḷ,* பெ.(n.) முரட்டுக்கல்; rough stone.

Samo. gaoā

[கரு → கர → கரள். கர = கரகரப்பு]

கரளம்[1] *karaḷam,* பெ.(n.) 1. நஞ்சு (திவா.); poison, venom. 2.எட்டி(மலை.). strychnine tree.

த. கரளம் > **Skt.** garaḷa.

[கரு → கர → கரளம். நஞ்சின் கரிய தன்மையும், கைப்பும் உட்பொருளாயின.]

கரளம்[2] *karaḷam,* பெ.(n.) உலர்ந்த பழம்; dried fruit.

ம. கரள; **க.** கரட, கரடு, கடட் (உலர்ந்த வைக்கோல்போர்)
[கரு → கர → கரளம்.]

கரளவாடி *karaḷavāḍi,* பெ.(n.) ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் வட்டத்துச் சிற்றூர்; a village in Kobichettipālaiyam taluk in Erode dt.

[கறளை + பாடி – கரளைப்பாடி → கரளப்பாடி → கரளவாடி.]

கரளாக்கட்டை *karaḷā-k-kaṭṭai,* பெ.(n.) சுரைக்காய் வடிவில் கைப்பிடிப்பக்கம் சிறுத்தும் மறுபக்கம் தடித்தும் உருண்டையாக அமைந்த உடற்பயிற்சிக் கருவி; heavy wooden club.

[கரு → கருள்(பருமை) + கட்டை → கருளக்கட்டை → கரளாக்கட்டை.]

கரளாக்கட்டை

கரளிமாதப்பூர் *karavaḷimāda-p-pūr,* பெ.(n.) கோவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Coimbatore dt.

[கரை+வழி+மா+தோப்பூர்–கரைவழி மாத்தோப்பூர் → கரவளிமாதப்பூர் –கரளி மாதப்பூர் (கொ.வ.).]

கரளை[1] *karaḷai,* பெ.(n.) **கறளை** பார்க்க (இ.வ.); see *karaḷai.*

ம. கரள

[குறள் → குறளை → கரளை.]

கரளை[2] *karaḷai,* பெ.(n.) கரிசல் மண் வகை; clayay soil.

[கரு → கரளை.]

கரளையாளமரம் *karaḷaiyāḷa-maram,* பெ.(n.) அழுத்தமான வலிமையுள்ள மரம்; hardwood.

[கரளை + ஆள் + மரம்.]

கரளை வித்தை *karaḷai-vittai,* பெ.(n.) சிலம் பவித்தை; art of fencing.

[கரளை + வித்தை.]

கரன் *karaṉ,* பெ.(n.) 1. நிலையுள்ளவன்; firm, steady person. *"கரந்தெங்கும் பரந்துளன் இவையுண்ட கரனே" (திவ்.திருவாய்.* 1,1,10). 2. இராமனால் காட்டிற் கொல்லப்பட்ட ஓர் இயக்கன் (கம்பரா. கரன்வதைப்.); a cousin of Rāvaṇā, a powerful Iyakkaṉ slain by Rāmā during his stay in the Dhandag āraṇyam.

த. கரன் > **Skt.** khara.

[கரு → கரன். கரு = பெருமை, வலிமை.]

கரன் என்பவன் தண்டக ஆரணியத்தின் காவல்பூண்ட இயக்கர் குடிப் பெருமகன். காட்டைக் கொளுத்தி வேள்விக்காகக் கால்நடைகளைக் கவரும் ஆரியப் பகைவரை எதிர்த்துப் போரிட்டவன்.

கரனீவாடு *karaṉīvāḍu,* பெ.(n.) கரையில் ஏற்படும் நீரோட்டம் (நெல்லை. மீனவ.); stream of water in sea occuring near shore.

[கரை + நீர் + வாடு = கரைநீர்வாடு → கரனீவாடு. வாடு = வட்டம், ஓட்டம்.]

கரா *karā,* பெ.(n.) 1.முதலை; a species of alligator. *"கராவதன் காலினைக் கதுவ" (திவ்.பெரியதி. 2,3,9).* 2. ஆண் முதலை (பிங்.); male alligator.

[கரவு[2] → கரா. கராம் பார்க்க]

த. கரா > **Skt.** grāha

கராகரி *karākari,* பெ .(n.) தேவதாரு (சங்.அக.); deodar, cedar.

[கரு = பெரிய, உயர்ந்த. கரு → கர.]

கராசலம் *karāšalam,* பெ.(n.) யானை; elephant lit., mountain with a trunk (யாழ் அக.). *"கராசலத்தின் வன்றோல் வியன்புயம் போர்த்தாய்" (கந்தபு. கந்தவி.63).*

[கரம் + அசலம் – கராசலம். கரம் = கை. அசலம் = மலை. **Skt.** acala > **த.** *அசலம். கையுடைய மலை என யானை உருவகமாகியது. கைம்மலை எனின் முற்றுந்தமிழாம்.]*

கராடம் *karādam,* பெ.(n.) தாமரைக் கிழங்கு (நாநார்த்த.); tuber of the lotus plant.

[கரு → கரா + அடம். கரு = பருமை, உருண்டை.]

கராம் *karām,* பெ.(n.) 1. முதலை வகை; a species of alligator, gavial: *"முதலையு மிடங்கருங் கராமும்" (குறிஞ்சிப். 257).* 2. ஆண் முதலை (திவா.); male alligator.

Skt. grāha

[கரவு² → கரா → கராம் = நீருள் கரந்து (மறைந்து) இரை கொள்வது. கரவு → கராம் ஒ.நோ. புலவு + பாசறை - புலாம் பாசறை (பதிற்று.7).]

கராமம் *karāmam,* பெ.(n.) வெண்கடம்பு (மலை.); seaside Indian oak.

[கடம்பு → கடம்பம் → கரம்பம் → கராமம் (கொ.வ.).]

கராமுத்து *karā-muttu,* பெ.(n.) முதலையிற் பிறந்த வெண்ணிற முத்து (இ.நூ.த.பெ.அக.); a pearl like substance from crocodile.

[கராம் + முத்து – கராமுத்து.]

கராய் *karāy,* பெ.(n.) புற்கரடு(இ.வ.); turf.

மறுவ. கரம்பு

[கரு → கராஇ → கராய் = புல்படர்ந்த நிலம். கரு = கருக்கம்புல், அறுகம்புல். நீர்வளமில்லாததால் வெறும் புல் மட்டும் படர்ந்த தன்மை நோக்கிக் கரம்புநிலம் கராய் எனப்பட்டது.]

கராலகம் *karālagam,* பெ.(n.) **கராலம்** பார்க்க; see *karālam.*

[கராலம் → கராலகம்.]

கராலம் *karālam,* பெ.(n.) கருந்துளசி (செல்வி. சிலம்பு 65. ப. 85.); purple stalked basil.

[கரு → கரால் → கராலகம்.]

கராளம்[1] *karāḷam,* பெ. (n.) 1. தீக்குணம் (சீவரட்.281); wickedness, vice. 2. கொடுமை; frightfulness, terribleness, fierceness. *"கராளமுகமும் முக்கரமுமுடைய கூஷ்மாண்டர்" (கி.போ.பா.).*

[கரு → கரா → கராளம்.]

கராளம்[2] *karāḷam,* பெ.(n.) மான்மணத்தி (கத்தூரியுடைய மான்); musk, musk deer, (செல்வி, சிலம்பு.65.ப.85).

கரு = பெருமை, உயர்வு.

[கரு → கராளம். மான்மணத்தியின் பெருமை குறித்த பெயராகலாம்.]

கராளன் *karāḷaṉ,* பெ.(n.) சிவகணத் தலைவருள் ஒருவன்; name of a chief of Šiva's host. *"பதுமனே கராளன் றண்டன்" (கந்தபு.ஏமகூட.13).*

[கரு + ஆள் + அன் – கராளன். கரு = பெருமை, தலைமை]

கராளி *karāḷi,* பெ.(n.) 1. தீக்குணம் (வின்.); wickedness. 2. தீக்கடவுளின் ஏழு நாக்குகளில் ஒன்று; one of the seven tongues of God Agṉi.

[கராளம் → கராளி.]

கராளை *karāḷai,* பெ.(n.) குள்ளன், வளராதவன்; a short person.

[கறளை → கரளை → கராளை.]

கரி[1] *kari,* பெ.(n.) 1. அடுப்புக்கரி (தி.வா.); charcoal. கரி விற்ற பணம் கறுப்பாயிருக்குமா (பழ.). 2.கரிந்தது; charred wood, snuff of lamp. 3. நஞ்சு (மூ.அக.); poison. 4 கண்ணிடு மை;collyrium black for the eye. *"கரிபோக்கினாரே" (சீவக.626).* 5. மரவைரம் (வின்.); the hard part of timber.

ம., க., தெ., து., குட., பட., உரா. கரி; **கோத.** கர்; **துட.** கர்ய்; **பர்.** கெர்; **கூ.** க்ருமு; **கட.** கரித்; **கொலா.** காரி; **பிரா.** கர்.

[கள் (கர்) → கரி (வே.க. 121.).]

கரி[2]**—தல்** *kari-,* 4 செ.கு.வி.(v.i) 1. கரியாதல்;.to char, to become charcoal. *"கரிகுதிர் மரத்த கான வாழ்க்கை" (அகநா.75).* 2. கருமையாதல்; to become black. *"கரிந்த நீள்கயல்" (திருவிளை. விருத்தகு. 20).* 3. தீய்தல்; to be scorched, burnt. *"தளிர்.... காயெரிக் கரியக் கரிய" (கம்பரா.மிதிலை. 81).*

ம. கரிக்க

Akkadian. jara-na; **Brahu**. khar; **Fin.** hili; **Basq**. gari **yiddl.** keulen; **Arabic**. kari; **Dut**. steen-kool; **Swed**. kol; **Dan.** kul; **Nor.** kull; **Gr**. kar-vouno; **Russ**. gor.

[கள் → கரு → கரி.]

கரி³–த்தல் *kari-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. எரித்துக் கரியாக்குதல்; to become charred. *"கரித்த மூன்றெயில்" (கம்பரா. ஊர்தேடு.44).* 2. தாளித்தல் (வின்.); to season, as curries, with ghee or oil and spices.

ம. கரிக்குக; **கோண்** (அடிலா) கரூ.

[கள் → கரு → கரி.]

கரி⁴–த்தல் *kari-,* 4 செ.கு.வி.(v.i.) 1. உப்புச்சுவை மிகுதல்; to be saltish to the taste. இந்தக் குழம்பு உப்புக்கரிக்கிறது (உ.வ.). 2. உறுத்துதல்; to smart, as the eyes from oil or soap or chilly. கண்ணில் பட்டால் கரிக்குமா புருவத்தில் பட்டால் கரிக்குமா (பழ.). 3. உண்ட உணவு செரியாமையினால் நெஞ்சில் உறுத்துதல்; to feel an irritating sensation in the chest due to acidity of the stomach. உண்ட சோறு நெஞ்சிற் கரிக்கிறது (உ.வ.).

[கடு → கடி → கரி → கரித்தல் (வே.க.88.).]

கரி⁵–த்தல் *kari-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. குற்றங்கண்டு குறைகூறுதல்; to nag, worry; to blacken. என் பெண்ணைக் கரிக்கிறான் (உ.வ.). 2. வெறுத்தல்; to shun, despise. *"கரித்து நின்றான் கருதாதவர் சிந்தை" (திருமந். 2431).*

[கரி¹ → கரி⁵.]

கரி⁶ *kari,* பெ.(n.) யானை; elephant. *"கொடுங்கரிக் குன்றுரித்து" (திருவாச.6,19).*

மறுவ. தும்பி. கடிவை, புகர்முகம், தோல், உம்பல், வயமா, நால்வாய், கரிணி, கயம், மருண்மா, ஒருத்தல், களிறு, சிந்துரம், கறையடி, எறும்பி, வழுவை, வாரணம், வேழம், வல்விலங்கு, நாகம், மதகயம், அத்திரி, உவா, தூங்கல், மறமலிகைம்மா, ஆம்பல், கோட்டுமா, மொய், பொங்கடி, கைம்மா, ஒங்கல், கைம்மலை, தும்பி, புழைக்கை, பூட்கை, பெருமா, மதமா, மறமலி, மாதிரம்.

ம. கரி; **தெ.** கரி.

Skt. karin (having a trunk, an elephant) **L.** corri; **Mar.** khari.

[கல் = கருத்தல், பெருகுதல், உயர்தல், மேடாதல். கல் → கரு = உயர்வு; கரு → கரி = உயரமான ஆண் யானை.]

கரி⁷ *kari,* பெ.(n.) 1. பயிர்கள் தீய்கை; failure of crops. கரியுள்ள காலத்து (T.A.S.iii,62). 2. வற்கடம்; famine. வறுமை மிகுந்த காலம் (பஞ்சம்).

[கரு → கரி = மழையற்ற, வெப்பமிகுதியால் பயிர்ப்பச்சைகள் கரிந்து வறுமை நீடிய நிலைமை. இதனைக் கறுவுக்காலம், கறுப்புக்காலம் என்றும் கூறுவதுண்டு.]

கரி⁸ *kari,* பெ(n.) 1. சான்றுரைப்போன்; witness. *"இந்திரனே சாலுங் கரி" (குறள்,25).* 2. சான்று; proof, evidence, testimony, *"கரி போக்கினா ராதலானும்" (தொல்.பொருள்.649, உரை).*

தெ. கரி

[கள் → கரு → கரி – (மு.தா.200.) கரு = பெருமை, வலிமை. கரி = வலிமை அல்லது சார்பாகும் துணைப்பொருளில் முறைமன்றங்களில் சான்றாளியைக் (சாட்சி) குறித்தது.]

கரி⁹ *kari,* பெ.(n.) விருந்தினன்–ள்; guest. *"கரியுட னுண்ணார்" (கல்லா.92.8).*

[கரு = பெருமை, மேன்மை, புதுமை. கரு → கரி = புதிதாக வந்தவர்; விருந்தினர்.]

கரி¹⁰ *kari,* பெ.(n.) வயிரக்குற்றங்களுள் ஒன்று (சிலப். 14:180, உரை); a flaw in diamonds.

[கள் → கரு → கரி = குறைபாடு.]

கரிக்கட்டை *kari-k-kaṭṭai,* பெ.(n.) 1. எரிந்த கட்டை; burnt, charred wood. *தேய்ப்புப் பெட்டியில் கரிக்கட்டைகளைப் பொறுக்கிப் போடு.* 2. மரவகை (L.); red ebony of South India. கரி சுட ஒரு வண்டி கரிக்கட்டை வாங்கிவா (உ.வ.).

ம. கரிக்கட்ட

[கரி + கட்டை – கரிக்கட்டை = எரிந்து கரியாக நிற்கும் கட்டை, கரியாக்குவதற்குப் பயன்படும் துண்டு மரம்.]

கரிக்கண்டு *kari-k-kaṇḍu,* பெ.(n.) ***கரிசலாங் கண்ணி (மலை.)*** பார்க்க; see *karisalāṅ-kaṇṇi.*

[கரி + கண்டு. கள் → கரு → கரி = கருமை, கருநீலம். கண்டு = துண்டு, பருமனான, தடித்த.]

கரிக்கணை *kari-k-kaṇai,* பெ.(n.) யானைத்திப்பிலி; monkey creeper. *"முட்டிவித்தோம மிரு நிசிகரிக்கணை வேணி" (தைல.தைலவ.74).*

த. கரிக்கணை > **Skt.** kari-kaṇa.

[கரி = யானை. கரி + கணை.]

கரிக்கல் *kari-k-kal,* பெ.(n.) கரிசல் மண்; black soil.

[கரி→ கரிக்கல்.]

கரிக்கல்பாறை *kari-k-kal-pārai,* பெ.(n.) கடலடிப் பாறையுள் ஒன்று (நெல்லை. மீனவ.); a kind of rock found under sea.

[கருங்கல் → கரிக்கல் + பாறை.]

கரிக்களி *kari-k-kaḷi,* பெ.(n.) புண்ணுக்குக் கட்டுங் கரிப்பசை; charcoal poultice.

[கரி + களி.]

கரிக்காடி *kari-k-kāḍi,* பெ.(n.) கஞ்சி; சோறு; gruel, boiled rice.

ம. கரிக்காடி

[கரு → கரி (பெரிய, மூத்த) பழைய. கரி + காடி.]

கரிக்காந்தல் *kari-k-kāndal,* பெ.(n.) 1. கருகிக் காந்தினது (யாழ்.அக.); anything charred or burnt. 2. கலத்தில் அடிப்பற்றின உணவு; cooked food charred and sticking to the pot.

[கரி + காந்தல். காந்தல் = வேதல். கரிக்காந்தல் = கரிந்த நிறம் ஏற்படும் அளவுக்கு மிகுதியாக எரிந்தது அல்லது வெந்தது.]

கரிக்காப்பு *kari-k-kāppu,* பெ. (n.) 1. ஓலையெழுத்து விளங்கக் கரிபூசுகை (உ.வ.); smearing charcoal. 2. திருமேனியைத் துப்புரவு செய்யும் புற்கரி; charred grass used for cleaning an idol.

[கரி + காப்பு]

தெளிவாகத் தெரியும் பொருட்டும் எழுத்துகள் அழியாமல் நீண்டநாள் இருக்கும் பொருட்டும், ஓலைகளுக்குக் கரிக்காப்பு செய்யப்படும். அழுக்கை அகற்றுவதே பொருளுக்குப் பாதுகாப்பாக அமைதல் பற்றி, விளக்குதலுக்குக் கரிக்காப்பு ஏற்புடைத் தாயிற்று.

கரிக்காய்ப்பட்டி *karikkāy-p-paṭṭi,* பெ.(n.) சேலம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Salem dt.

[கக்கரிக்காய்+பட்டி–கக்கரிக்காய்ப்பட்டி → கரிக்காய்ப்பட்டி.]

கரிக்காரன் *kari-k-kāraṉ,* பெ.(n.) கரிவிற்பவன் (வின்.); charcoal-dealer.

[கரி + காரன்.]

கரிக்கால்[1] *kari-k-kāl,* பெ.(n.) அழிவுவேலை செய்பவன்–ள்; one whose advent brings calamity in its train, lit. one having an evil foot.

க. கரிகாலு

[கரி = தீமை, அழிவு. கரி + கால் – கரிக்கால் (கால் வைத்த (சென்ற) இடமெல்லாம் அழிவு செய்பவன்.]

கரிக்கால்[2] *kari-k-kāl,* பெ.(n.) செக்கின் கணை; the roller of an oil-press.

ம. கரிக்கால்

[கரு = பெரிய, திரண்ட. கரு → கரி + கால்.]

கரிக்காலன் *kari-k-kālaṉ,* பெ.(n.) அழிவு வேலைக் காரன், வேலைக்காரி; man, woman whose advent brings calamity.

க. கரிகால

[கரி + கால் + அன் – கரிக்காலன். கரி = அழிவு, தீமை.]

கரிக்காலி *karikkāli,* பெ.(n.) திண்டுக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dindigul dt.

[கரிக்கல்→கரிக்கலி→கரிக்காலி.கரிக்கல் = கரிசல் மண்.]

கரிக்காளவாய் *kari-k-kāḷavāy,* பெ.(n.) 1.சுண் ணாம்புக்காளவாய் வகை; a kind of lime-kiln (இ.வ.). 2. கரிசுடும் காளவாய்; a kiln for charcoal.

[கரி = கரிந்தது. கரி + காளம் + வாய்.]

கரிக்கிடங்கு *kari-k-kiḍaṅgu,* பெ.(n.) 1.அடுப்புக்கரி உண்டாக்குமிடம் (வின்.); pit or hole for burning wood for the production of charcoal. 2. கரிக்கடை; charcoal bazaar.

[கரி = கரிந்தது, கரி + கிடங்கு = கரிக்கிடங்கு.]

கரிக்கிலி *karikkili,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanchipuram dt.

[கரிக்கல்+கரிக்கில்–கரிக்காலி.கரிக்கல் = கரிசல் மண்.]

கரிக்கீற்றிடு–தல் *kari-k-kīṟṟiḍu-,* 20 செ.கு.வி.(v.i.) ***கரிக்கோடிடு–தல்*** பார்க்க; see *karikkōḍiḍu-.*

[கரி + கீற்று + இடு.]

கரிக்கீற்று *karikkīṟṟu-,* பெ.(n.) 1. **கரிக்குச்சு** பார்க்க; see *kari-k-kuccu.* 2. கரிக்கோடு; black mark line.

[கரி + கீற்று. கீறு → கீற்று.]

கரிக்குச்சு *karikkuccu,* பெ.(n.) புகைக் கரியால் ஏற்படும் கறை; smut.

[கரி + குச்சு.]

கரிக்குடல் *kari-k-kuḍal,* பெ.(n.) 1. மலக்குடல் (யாழ்ப்.); the large intestine, rectum. 2. கற்குடல் (இ.வ.); sluggish intestine causing constipation.

[கரு = வலிய. கரு → கரி + குடல்.]

கரிக்குருந்தக்கல் *kari-k-kurundakkal,* பெ.(n.) கட்டட வேலைகளில் பயன்படுத்தப்படும் கற்களுள் ஒருவகை; a kind of stone used in construction work.

[கரு = சிறந்த. குருந்தம் = குருவிந்தம். கரு → கரி + குருந்தம் + கல் – கரிக்குருந்தக்கல்.]

கரிக்குருமான் *kari-k-kurumāṉ,* பெ(n.) ***கரிக்குருவி*** பார்க்க; *see kari-k-kuruvi.*

மறுவ. கரிக்குருவி

[கரி + குருமான். குறு → குரு → குருமன் → குருமான் (சிறிய பறவை) (செல்வி. சிலம்பு. 65. ப.135).]

கரிக்குருவி *kari-k-kuruvi,* பெ.(n.) கறுப்பு நிறமும் பிளந்த வாலும் உள்ள குருவி; king-crow, glossy black bird with long forked tail. Turdus merula *"கரிக்குருவி குருமொழிகேட் டருளடைந்த கதை" (திருவிளை. கரிக்குருவி.).*

மறுவ. கரிச்சான், வலியன், வலியான், ஆனைச்சாத்தன், காரி பாரத்துவாசன், இரட்டைவாலன், கருவாட்டு வாலி.

ம. கரிங்குரிகில், கரிங்குருவி; **பட.** கரி அக்கிலு.

[கரி + குருவி.]

கரிக்குருவி

கரிக்கை[1] *kari-k-kai,* பெ.(n.) ***கரிசலாங்கண்ணி (மலை.)*** பார்க்க; see *kariśalāṅ-kaṇṇi.*

[கரி → கரிக்கை.]

கரிக்கை[2] *kari-k-kai,* பெ. (n.) கேடுவிளைக்குங் கை; hand the very touch of which is enough to cause loss or misfortune.

க. கரிகை

[கரி = அழிவு, தீமை. கரி + கை = கரிக்கை.]

கரிக்கொட்டான் *kari-k-koṭṭāṉ,* பெ.(n.) ***கருக்குவாய்ச்சி*** பார்க்க; see *karukku-vāyccі.*

[கரி + கொட்டான்.]

கரிக்கொடி *kari-k-koḍi,* பெ.(n.) கருங்கொடிவேலி (சித்.அக.); a variety of Ceylon leadwort.

[கரி + கொடி.]

கரிக்கொள்ளி *kari-k-koḷḷi,* பெ.(n.) குறைகொள்ளி (வின்.); charred brand.

[கரி + கொள்ளி.]

கரிக்கோடிடு–தல் *kari-k-kōḍiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. கருஞ்சாந்தால் நெற்றிக்குறியாகக் கோடு இடுதல்; to put a black mark line on the fore-head. 2. மோவாயில் மயிர் அரும்புதல் (வின்.); to appear, as soft hair, on the chin of a young man.

கரிக்கோடிடுதல், புள்ளிக்காரன், முகத்தில் கரியைப்பூசுதல் முதலிய வழக்குகள், ஊருக்கு மாறான குற்றவாளிகளை, ஊரார் செம்புள்ளி கரும்புள்ளி குத்தியும், முகத்தில் கரியைப் பூசியும், கரிக்கோடிட்டும், அவமானப்படுத்தியதை நினைவுறுத்தும் (சொல்.கட்.23.).

[கரி + கோடு + இடு–.]

கரிக்கோடு *kari-k-kōḍu,* பெ.(n.) 1.மாத்துவர் நெற்றியில் இடும் கருஞ்சாந்துக் கோடு; upright streak of black pigment worn on the forehead by Mādhva Brāhmins. 2. முகத்திற்றோன்றும் இளமயிர்; soft sprouting hair young beard or moustache.

[கரி + கோடு]

கரிக்கோல் *karikkōl,* பெ.(n.) கலப்பைத் தண்டு; the pole of shaft of a plough.

ம. கரிக்கோல்

[கரு → கரி + கோல். கரு = பெரிய, அடிப்படையான.]

கரிக்கோலம்[1] *kari-k-kōlam,* பெ.(n.) 1. கணவன் இறந்த பின் முதல் பத்து நாள் வரை, மனைவிக்குச் செய்யும் ஒப்பனைகள்; adorning a widow in weeds within 10 days of her husband's death, as the last adornment, she will ever receive. 2. கறுத்துத் தோன்றும் நிலை; unclean state, dirtiness. *"அழகு மேனி கரிக்கோல மானேன்" (தனிபா. ii., 238, 562).*

[கரி = தீமை, அழிவு. கரி + கோலம்.]

கரிக்கோலம்[2] *kari-k-kōlam,* பெ.(n.) அழிஞ்சில்; sage leaved alangium.

[கரி = தீமை, அழிவு. கரி + கோலம்.]

ஏறழிஞ்சில், இறங்கழிஞ்சல் என்னும் இருவகை அழிஞ்சில் மரவகைகளுள் இறங்கழிஞ்சில் தீவினைகளுக்குப் பயன்படும் என்னும் கருத்தில் இடப்பட்ட பெயராகலாம்.

கரிகரம் *kari-karam,* பெ.(n.) காதலின்ப விளையாட்டிலொன்று; a mode of sexual play. *"கரிகர மாதி யாய கனங்குழை மகளிர் வெஃக" (கந்தபு. இந்திரா.44).*

[கரி + கரம் – கரிகரம். கரி = ஆண் யானை. கரிகரம் = யானையின் செய்கை, யானையின் புணர்ச்சிக்கோலம்.]

கரிகரலீலை *kari-kara-līlai,* பெ.(n.) ***கரிகரம்*** பார்க்க; see *kari-karam.*

*[கரி + கரம் + லீலை. **Skt.** leela > **த.** லீலை.]*

கரிகரவிளையாட்டு *kari-kara-viḷaiyāṭṭu,* பெ.(n.) ***கரிகரம்*** பார்க்க; see *kari-karam.*

[கரி + கரம் + விளையாட்டு.]

கரிகறு-த்தல் *kari-kaṟu-,* 4 செ.கு.வி. (v.i.) மிகக் கறுத்தல் (வின்.); to grow very dark.

[கரி + கறு.]

கருத்தலும், கறுத்தலும் கருப்புநிறம் குறித்தனவாயினும், முன்னது தன்வினையும், பின்னது பிறவினையுமாம். ஓ.நோ.இருத்தல் → இறுத்தல். கரிகறுத்தல் = மிகக் கறுப்பாகக் கறுக்கச்செய்தல். கரிதல் = கருப்பாதல், கறுத்தல் = கறுப்பாக்குதல்.

கரிகன் தாங்கல் *karigantāṅgal,* பெ.(n.) வேலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Vellur dt.

[கருக்கன் + தாங்கல்–கருக்கன் தாங்கல் → கருக்கந் தாங்கல் → கரிக்கன்தாங்கல் → கரிகன் தாங்கல் (கொ.வ.).]

கரிகன்னி *kari-kaṉṉi,* பெ.(n.) 1. காட்டுப்பூனை; wild cat. 2. வெருகங்கிழங்கு (மலை.); a tuberous-rooted herb.

[கரி + கன்னம் → கன்னி.]

கரிகன்னி கருநிறக் கன்னத்தையுடையதும், கடும்பார்வை யுடையதும், கண்டாரை வெருள வைப்பதுமாகிய வெருகு (பூனை). இதன் வண்ணம் குறித்தே கரிகன்னி என்னும் பெயர் வந்ததாம். [சிலம்பு. மத.ப.86].

கரிகாடு *kari-kāḍu,* பெ.(n.) 1. கரிந்த பாலைநிலம் (திவா.); burnt desert tract. 2. சுடுகாடு; burning-ground. *"கரிகாட் டெரியாடி" (தேவா. 102, 3).*

[கரி + காடு]

கரிகாத்தாள் *karikāttāḷ,* பெ.(n.) அங்காளம்மை; Aṅgāḷammai, a village Goddess.

ம. கரிங்காளி

[கரி + காத்தாள் – கரியைக்காத்தாள் (இரண்டன் தொகை). கரி = வறுமை, வற்கடம் (பஞ்சம்). கரிகாத்தாள் என்னும் பெயர் கருக்காத்தம்மன் என்றும் வழங்கும். வற்கடம் நேராமல் காத்தல் என்பது வறுமை நேராமல் மழைபெய்யச் செய்பவள் எனப்பொருள் தரும். மழைத் தெய்வமாகிய மாரியம்மனைக் கரிகாத்தாள் என வழங்குவது மரபு.]

கரிகால் *kari-kāl,* பெ.(n.) ***கரிகாலன்*** பார்க்க; see *kari-kālaṉ. "பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்" (அகநா.125).*

[கரி + கால் – கரிகால் = கரிகாற்சோழன். கரிகாலன் என்னும் இயற்பெயர் 'அன்' ஈறுகெட்டுக் கரிகால் என நின்றது. ஒ.நோ. வேந்தன் → வேந்து. ஆண்பாலீறு 'அன்' சேர்த்தும், சேர்க்காமலும் இயற்பெயர்களை வழங்குவது பண்டைத் தமிழ் மரபு.]

கரிகால்வளவன் *kari-kāl-vaḷavaṉ,* பெ.(n.) கடைக்கழகக் காலத்தில் (கி.மு. 350 – கி.பி 175) வாழ்ந்த சோழ மன்னன்; Chōḷa king, Kari-kālaṉ. *"கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்" (பொருந. 148).*

[கரி + கால் + வளவன். கரிகால் = கரிகாலன். வளவன் = சோழன். கரி = ஆண்யானை. களிறு அடக்கும் திறனால் கரிகளுக்குக் காலன் (எமன்) போன்றவன் என்னும் பொருளில் கரிகாலன் என்னும் பெயர் அமைந்திருக்கலாம்,கால்கரிந்ததால் வந்த பெயராயின் கரிக்காலன் என்றிருத்தல் வேண்டும்.]

இவன் கி.மு. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கரிகாலன் பெயர் கொண்டவனும் கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவனுமான கடைக்கழகக் காலச் சோழன். இவன் காவிரிக்குக் கரையமைத்துக் கல்லணை கட்டி நன்செய் வேளாண்மை பெருக்கியதால் கரிகால் வளவன் என்றும், கரிகாற் பெருவளத்தான் என்றும் புகழப்பட்டான். இவன் கால் கரிந்தவன் அல்லன். தன் முன்னோன் கரிகாலனின் பெயர் கொண்டவன். கரிகால் வளவன் ஈழத்தின்மேற் படையெடுத்துப் பன்னீராயிரம் குடிகளைச் சிறைப் பிடித்துக் கொண்டுவந்து, காவிரிக்குக் கரை கட்டுவித்ததாக, அவன் மெய்க்கீர்த்தி கூறும் [சொல். கட்.25].

கரிகாலன் *kari-kālaṉ,* பெ.(n.) சோழமரபினருள் புகழ்பெற்ற கரிகாற்சோழன்; a Chōḷa king of very great renown, whose achievements and fame have been sung by several poets, *"இச்சக் கரமே யளந்ததால்... கரிகாலன் கானெருப்புற்று"* (பட்டினப். தனிப்பா.).

[கரி + காலன் – கரிகாலன் = இளமைக்காலத்தில் தீச்சுட்டதால் கால்கரிந்த சோழமன்னன் எனக் கருதப்படுபவன். ஆயின், கரிக்குக் காலன் (யானைகளுக்கு எமன் போன்றவன்) – [ஒ.நோ. காலகாலன் (காலனுக்குக் காலன், சிவன்.)]என்பதே பொருத்தமாகத் தெரிகிறது. கால் கரிந்ததால் பெற்ற பெயராயின் கரிக்காலன் என்றிருத்தல் வேண்டும். ஒ.நோ. கரிக்கட்டை.]

கரிகாற்சோழன் கி.மு. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். நரைமுடித்து முதியவர் இருவர்க்கு முறை வழங்கிய பெருமைக்குரியவன்.

"உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப – நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்"

என்னும் வெண்பாவும் இதனை வலியுறுத்துகிறது.

கரிகாலன் இளம் பருவத்திலேயே சிக்கலான வழக்கினைத் தீர்த்து முறை வழங்கிய கதை அலெக்சாந்தர் காலத்தில் பஞ்சாபு மாநிலத்துச் சிற்றூரிலும் வழங்கி வந்தது. இந்தியிலும் இக்கதை "சச்சா நியாய" என்னும் தலைப்பில் வழக்கூன்றியுள்ளது. ஆதலால் இந்த முதல் கரிகாலனின் காலம் கி.மு. 5ஆம் நூற்றாண்டு என்று கருதப் படுகிறது.

கரிகேரி *karigeri,* பெ.(n.) வேலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Velur dt.

[கரு+ சேரி – கருஞ்சேரி → கருகேரி. து.சேரி > க. கேரி.]

கரிகை *karigai,* பெ.(n.) செந்நிறமுள்ள கத்தூரிமான் (பதார்த்த. 1081); red musk, one of five kinds of kastūri.

[கரு → கரி → கரிகை.]

கரிங்காலிப்பாடி *kariṅgāli-p-pāḍi,* பெ.(n.) திருவண்ணாமலை மாவட்டத்துச்சிற்றூர்; a village in Thiruvannamalai dt.

[கருங்காலி+பாடி – கருங்காலிப்பாடி → காரிங்காலிப்பாடி.]

கரிச்சக்காய் *karicca-k-kāy,* பெ.(n.) 1. பேரீச்சங்காய்; datefruit. 2. பணிகார வகையுளொன்று; a preparation in confectionery, a puff.

[கரு → கரிச்சம் + காய்.]

கரிச்சட்டி *kari-c-caṭṭi,* பெ.(n.) கரிபடிந்த ஏனம்; begrimed, smutty pot.

[கரி + சட்டி.]

கரிச்சலாத்து *kari-c-calāttu,* பெ.(n.) நிலத்திலிருந்து வெட்டியெடுக்கப்படும் ஒருவகைப் பொருள் (கட்டட.சாத்.); asphalt.

சிலை = கல். த. சிலை > Skt. சிலா.

[கரி + சிலா + சத்து – கரிச்சிலாசத்து → கரிச்சலாசத்து (கொ.வ.).]

கரிச்சாம்பல் *kariccāmbal,* பெ.(n.) தக்கைக்கல் செய்யப் பயன்படும் சாம்பல்; ash used for making light weight building blocks.

[கரி + சாம்பல்.]

கரிச்சால் *kari-c-cāl,* பெ.(n.) **கரிசலாங்கண்ணி** (வின்.) பார்க்க; see *kariśalāṅ-kaṇṇi.*

[கரி + சால்.]

கரிச்சான்[1] *kariccāṉ,* பெ.(n.) ***கரிக்குருவி*** பார்க்க; *see kari-k-kuruvi.*

[கரி → கரிச்சான் (வே.க.122).]

கரிச்சான்[2] *kariccāṉ,* பெ.(n.) ***கரிசலாங்கண்ணி*** பார்க்க; see *karišalāṅ-kaṇṇi.*

[கரி + சால் – கரிச்சால் → கரிச்சான்.]

கரிச்சான்பூடு *kariccāṉ-pūḍu,* பெ.(n.) ***கரிசலாங் கண்ணி*** (மலை.) பார்க்க; see *karišalāṅ-kaṇṇi.*

[கரி + சால் – கரிச்சால் + பூண்டு → கரிச்சால்பூண்டு → கரிச்சான் பூண்டு → கரிச்சான் பூடு.]

கரிச்சை *kariccai,* பெ.(n.) கையாந்தகரை (சித்.அக.); kaiyāntagarai, a plant.

[கரி → கரிச்சை.]

கரிச்சோளம் *kari-c-cōḷam,* பெ.(n.) கருஞ்சோள வகை (G.sm.D.I.i.22 0.); a black variety of millet of Hosur grown for fodder.

ம. கரிஞ்சோளம்

[கரி + சோளம்.]

கரிசங்கு *kari-saṅgu,* பெ.(n.) தோணியின்மேற் கட்டுந் தென்னங்கீற்று (யாழ்ப்.); temporary / roof of coconut leaves put up in an Indian raft for protection against inclemencies of weather.

[சங்கு = வளைவு, வளைந்த கூரை. கரி = வாடிய உலர்ந்த கீற்று. கரிசங்கு = கீற்றுக்கூரை. கரி + சங்கு.]

கரிசம்[1] *karišam,* பெ.(n.) 1. தேய்கை; emaciation. *"காயமுங் கசாயமுங் கரிச மானவே" (மேருமந்.543).* 2. வற்கடம் (பஞ்சம்); famine.

[கரி = அழிவு, தீமை. கரி → கரிசம்.]

கரிசம்[2] *karišam,* பெ(n.) யானைக்குட்டி; young of an elephant.

[கரி → கரிசம்.]

கரிசல்[1] *karišal,* பெ.(n.) 1. கருமை (வின்.); darkness, blackness. 2. நீண்டநாள் ஈரத்தைத் தன்னுள் நிறுத்தி வைத்துக்கொள்ளும் தன்மையுடைய கருப்பு நிறமண்; black cotton-soil. இந்த நிலம் கரிசல் (உ.வ.).

[கள் → கரு → கருப்பு = கருமை, பேய். கரு → கரம்பு → கரம்பை = காய்ந்த களிமண். கரு → கரி = கருத்தது. கரி → கரிசு → கரிசல் (மு.தா.180).]

கரிசல்[2] *karišal,* பெ.(n.) விலையேற்றம் (யாழ்.அக.); dearness of price.

[கரு → கருசல் → கரிசல். கரு = பெருமை, அருமை, உயர்வு, மிகுதி.]

கரிசலாங்கண்ணி *karišalāṅ-kaṇṇi,* பெ.(n.) தடித்த சிறு இலைகளையும், கருநீலத் தண்டுப் பகுதியையும் உடைய ஒருவகைக் கீரை; a kind of greens with short thick leaves, eclipse plant.

மறுவ: கையாந்தகரை, கையாந்தகீரை. கரப்பான் கரியசாலை, கரிசா, கைகேசி, கரிசனம்.

[கரிசல் + அம் + கண்ணி.]

கரிசலாங்கண்ணி

கரிசலை *karišalai,* பெ.(n.) ***கரிசலாங்கண்ணி*** (மலை.) பார்க்க; see *karišalāṅ-kaṇṇi.*

[கரி → கரிதல் → கரிசல் → கரிசலை.]

கரிசற்காடு *karišaṟ-kāḍu,* பெ.(n.) 1.கரிசலான நிலம்; black soil tract. 2. அடர்ந்த காடு; dense forest.

[கரிசல் + காடு.]

கரிசனம்[1] *karišaṉam,* பெ.(n.) யானைக்கோடு; elephant's tusk. *"கரிசன மன்ன கொங்கை" (கந்தபு.தெய்வயா.87).*

[கரி +சனம். Skt. jan (பிறத்தல், தோன்றிய கொம்பு) > த. சனம்.]

கரிசனம்[2] *karišaṉam,* பெ.(n.) பொற்றலைக் கையாந்தகரை (மலை.); Ceylon verbisina.

[கரிசல் → கரிசனம்.]

கரிசனம்[3] *karišaṉam,* பெ.(n.) ஆர்வம் கலந்த அன்பு (யாழ்ப்.); tenderness, affection, as of a parent for the child, affectionate solicitude, concern, interest. *அதிகக் கரிசனமானாலும் ஆம்புடையானை அப்பா என்று அழைக்கலாமா (பழ.).*

[கருதல் = நினைவுகூர்தல், எண்ணுதல். கரு → கருதல் → கருதலம் → கருசலம் → கரிசனம் (கொ.வ.).]

கரிசனை *karisaṉai,* பெ.(n.) ***கரிசனம்**[3]* பார்க்க see *karišaṉam*[3].

[கரிசனம் → கரிசனை.]

கரிசாலை *karišālai,* பெ.(n.) கரிசலாங்கண்ணி (வின்.); a plant usually found in wet places. *"மதின்முசுக்கை கரிசாலை" [தைலவ. தைல.13).*

[கரிசலை → கரிசாலை (கரிசல் நிலத்தில் விளைந்தது).]

கரிசு[1] *karišu,* பெ.(n.) 1.கருமையானது; that which is black. 2. குற்றம்; fault, blemish, taint. *"வினை கரிசறுமே" (தேவா.129.1.).* 3. பாழ்வினை, அறங்கடை (பாவம்); sin. *"கரிசினை மாற்றி" (சைவ.பொது 568).*

[கரி → கரிது → கரிசு. (வே.க.122). கரிதல் = கருமையாதல்.]

கரிசு = கசடு, மண்டி போன்ற குற்றம், கரிசு = பாழ்வினை (பாவம்), கரிசில் = கொடுமை, களங்கம், கருத்தொளிப்பு, கறை, வாழை நுங்கு முதலியவற்றின் சாற்றாலுண்டாகும் சாயம் (சொல்.கட்.42.).

கரிசு[2] *karišu,* பெ.(n.) ***கரிசை**[1]* (வின்.) பார்க்க; *see karišai*[1].

[கரு → கரி → கரிசு. கரு = பெரிய.]

கரிசு[3] *karišu,* பெ.(n.) உறுதிப்பிடி; firm-hold. *"கரிசுடன் முன்கையைக் கடித்து" (பஞ்ச. திருமுக.728).*

[கரு → கரிசு.]

கரிசூழ்ந்த மங்கலம் *karisuḷnda-mangalam,* பெ.(n.) திருநெல்வேலி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thirunelveli dt.

[கரி + சூழ்ந்த + மங்கலம். மங்கலம் = நன்கொடையாக அளிக்கப்பட்ட ஊர்.]

கரிசை[1] *karišai,* பெ.(n.) 1. நானூறு மரக்காலளவு; measure of capacity 400 marakkāl, approximately 185. cu.ft. 320 cu.in. 2.48 படி கொண்ட மூட்டைகள் 64 கொண்டது. (G.T. D.i. 134.); a measure of capacity, 64 bags of 48 measures paḍi each.

தெ. கரிசெ; **க.** கரசெ.

கரு= பெரிய

[கரு → கரி → கரிசை (பெரிய அளவு).]

கரிசை[2] *karišai,* பெ.(n.) தவசங்களைக் கொட்டி வைக்கும் மட்கலம்; earthen receptacle for storing grains. கிராமாதிகாரிகள் வீட்டில் கரிசை கட்டி வைத்திருப்பார்கள் (மதி.க.11.21).

மறுவ. குதிர், ஒடை, சேர், குளுமை, இருவாய்சால், பத்தாயம், பந்தாயம், நெல்வரைவு, படப்பு, தொம்பை, சேந்தி.

[கரு + சால் – கருசால் → கரிசை. கரு: பருமை, பெரிய அளவு. கரிசை: 80 பறை அல்லது 400 மரக்கால் கொண்ட முகத்தல் அளவு, பெரிய அளவு, பெரிய சால். கரு → கரிசை.]

கரிஞ்சம் *kariñjam,* பெ.(n.) அன்றில்; a bird celebrated by poets for its staunch attachment to its mate and held up as a model of love which bears no separation. *"கரிஞ்சமென் றுள்ளபோர் வியூகமும்" (பாரத.ஆறாம் போ. 5).*

த. கரிஞ்சம் > **Skt.** kṛauñca

[கரு → கருஞ்சம் → கரிஞ்சம். கரு = அன்பு.]

கரிஞ்ஞாங்கோடு *kariññaṅkōḍu,* பெ.(n.) குமரி மாவட்டத்துக் கல்குளம் வட்டத்துச் சிற்றூர்; a village of Kalkulam in Kanniyakumari dt.

[கரு → கரி–கரிச்சான்+கோடு – கரிச்சான்கோடு→ கரிஞ்ஞான் கோடு. கோடு = ஏரி.]

கரிண்டு *kariṇḍu,* பெ.(n.) சிறுகத்தரி (n.) hedge caper plant.

[கரு = கருமை. கரு → கரி → கரிண்டு.]

கரிணி[1] *kariṇi,* பெ.(n.) 1.மலை (சூடா.); mountain.

[கரு → கருணி → கரிணி. கரு = உயர்வு.]

கரிணி[2] *kariṇi,* பெ.(n.) மலைக்குகை; mountain cave.

[கரு = கருமை, இருள். கரு → கரி → கரிணி.]

கரிணி[3] *kariṇi,* பெ(n.) பெண்யானை (பிங்.); female elephant. *"கார்மிசை வருவாருங் கரிணியில் வருவாரும்" (இராமா.கடிம.35).* 2.யானை; elephant.

[கரு → கரி (வடிவில் பெரிய ஆண்யானை).]

கரி → கரினி [கரிணி என்பது வழு]. கரி = ஆண் யானை என்னும் சிறப்பு இழந்து வடமொழி யாளரால், யானைக்குரிய பொதுப் பெயராக ஆளப்பட்டபோது, அதனின்று கரி → கரினி என்னும் பெண்பாற் சொல் படைத்திட்டுக் கொண்டனர்.

த. கரி > **Skt.** karini.

கரித்தண்ணீர் *kari-t-taṇṇīr,* பெ.(n.) கரிச்சட்டியைக் கழுவிய நீர் (வின்.); water in which begrimed pots have been washed.

[கரி + தண்ணீர்.]

கரித்திப்பிலி *kari-t-tippili,* பெ.(n.) யானைத்திப்பிலி (மலை.); monkey creeper.

[கரி = யானை. கரி + திப்பிலி.]

கரித்துண்டு[1] *kari-t-tuṇḍu,* பெ.(n.) 1. ***கரித்துணி*** பார்க்க; see *kari-t-tuṇi.* 2. அடுப்புக்கரியின் துண்டு; a piece of charcoal.

[கரி + துண்டு.]

கரித்துண்டு[2] *kari-t-tuṇḍu,* பெ.(n.) ***கரிச்சாரம்*** பார்க்க; see *kari-c-cāram.*

[கரி + துண்டு.]

கரித்துணி *kari-t-tuṇi,* பெ.(n.) அழுக்குச்சீலை; dirty begrimed cloth. *"கரித்துணி யாடையும்" (பட்டினத். திருப்பா. பொது.29).*

[கரி + துணி.]

கரித்தூபம் *kari-tūbam,* பெ.(n.) கரிப்புகை (நெல்லை); lamp-black.

க. கரிதூப

[கரி + தூபம். தூ = வெண்மை. தூவம் (வெண்புகை) → தூபம்.]

கரித்தூள் *kari-t-tūḷ,* பெ.(n.) ***கரிப்பொடி*** பார்க்க; see *kari-p-poḍi.*

[கரி + தூள்.]

கரிதொட்டாம்பாளையம் *kari-toṭṭām-pāḷaiyam,* பெ.(n.) ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிப்பாளையம் வட்டத்துச் சிற்றூர்; a village in Kobichettipalaiyam taluk in Erode dt.

[கரியன் + தொட்டம் + பாளையம் – கரியன்தொட்டம் பாளையம் → கரிதொட்டாம் பாளையம் க.தொட்டம் > த. தொட்டாம். க. தொட்ட = பெரிய. கரியன் பெரியபாளையம் எனின் முற்றும் தமிழாம்.]

கரிந்தமிழ் *karintamiḻ,* பெ.(n.) 1. மலையாள மொழியின் பழைய வடிவம்; the early stage of Malayāḷam. 2. கொடுந்தமிழ்; colloquial Tamiḻ.

ம. கரிந்தமிழ்

[கரு + தமிழ் – கரிந்தமிழ்.]

கரிநாக்கு *karinākku,* பெ.(n.) ***கருநாக்கு*** பார்க்க see *karu-nākku.*

[கரு → கரி + நாக்கு.]

கரிநாள்[1] *kari-nāḷ,* பெ.(n.) தீயநாள்; an inauspicious day, specified days after a death, etc. *"மலரடிகள் .... வந்திக்க வராச் சிறுநாளே கரிநாள்" (தனிப்பா. 11,207,495).*

க. கரிதின; **ம.** கரிநாள்.

[கரி = அழிவு, தீமை. கரு → கரி + நாள்.]

செ.ப.அகர முதலியில் கரிநாள் என்பது தீய நாள் எனும் பொருளில் பொங்கல் இறுதி நாள் எனக் குறித்திருப்பது தவறு.

கரிநாள்[2] *kari-nāḷ,* பெ.(n.) 1. பொங்கல் விழாவின் இறுதி நாளில், மன்னன் கரி (மதயானை)யின் மீது ஊர்வலம் வந்த நாள்; procession day of the king on elephant on the last day of Pongal festival. 2. *காணும் பொங்கல்;* the last day of merriment and visiting good places during pongal festival.

[கரி = களிறு, ஆண்யானை. கரி + நாள்.]

பொங்கல் விழாவின் இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கலன்று எருதாட்டமும், மஞ்சு விரட்டும் நடைபெறுவது போன்று பண்டைத் தமிழகத்தில் மூன்றாம் நாள் மன்னன் களிற்றின் மீது ஊர்வலம் வரும் காட்சி நடைபெற்றதாகலின் பெற்ற பெயர். கருநாடக மாநிலத்தில் மன்னன் களிறூர்ந்து வருதல் நீடுநிலைத்திருத்தல் காண்க.

கரிப்பான் *karippāṉ,* பெ.(n.) ***கரிசலாங்கண்ணி*** (மலை.) பார்க்க; see *kariśalāṅ-kaṇṇi.*

[கரு → கரி → கரிப்பான்.]

கரிப்பு[1] *karippu,* பெ.(n.) 1. அச்சம் (திவா.); fear. 2. கவலை, துன்பம்; worry, nagging distress. 3. காரம்; pungency. *"ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே" (தொல்.சொல். 384.).* 4. வெறுப்பு; disgust, aversion.

ம. காரம்; **க.** கார.

Indo. garam. **Thai.** kluer; **Mal.** garam.

[கரி → கரிப்பு.]

கரிப்பு[2] *karippu,* பெ.(n.) உப்புச்சுவை; saltiness மிளகுநீர் உப்புக் கரிக்கிறது (உ.வ.).

[கடி → கரி → கரித்தல் = மிகுதல் (வே.க.188)]

கரிப்புளிப்பு *kari-p-puḷippu,* பெ.(n.) கரியமிலம்; carbonic acid (mod.).

[கரி + புளிப்பு. கரி = காரம், உரைப்பு, மிகுதி.]

கரிப்புறத்திணை *kari-p-puṟa-t-tiṇai,* பெ.(n.) புறத்திணையில் ஒன்று; சான்றோர் கூற்றைச் சான்றாகக் காட்டுகை (தொன்.வி.161); citing learned authors in support of one's opinion a Puram theme.

[கரி = சான்று. கரி + புறத்திணை.]

கரிப்பூட்டை *kari-p-pūṭṭai,* பெ.(n.) சோளப்பயிருக்கு வரும் ஒரு நோய் (இ.வ.); smut which blights maize crop.

[கரு → கரி + பூட்டை. கரு = கருகுதல், கரியாதல்.]

மணிக்கரிப்பூட்டை, தலைக்கரிப்பூட்டை, நீளக்கரிப் பூட்டை, கம்பின் கரிப்பூட்டை என நான்கு வகைக் கரிப்பூட்டை நோய்கள் சோளப் பயிரைத் தாக்குகின்றன.

கரிப்பை *karippai,* பெ.(n.) ஒருவகைக் கடல்மீன்; a kind of sea-fish.

[கரி → கரிப்பு → கரிப்பை.]

கரிப்பொடி *kari-p-poḍi,* பெ(n.) பல்தேய்க்கப் பயன்படுவது; charcoal powder or burnt husk used as tooth - powder.

ம. கரிப்பொடி

[கரி + பொடி.]

கரிபிடி-த்தல் *karipiḍi-,* 4 செ.கு.வி.(v.i.) கரிபற்றுதல் (உ.வ.); to be begrimed with soot, as a pot on the fire.

மறுவ. கரிபற்றுதல்

ம. கரிப்பிடி; **பட.** கரிகிடி.

[கரி + பிடி.]

கரிபிப்பிலி *kari-pippili,* பெ.(n.) யானைத்திப்பிலி (சங்.அக.); elephant-pepper, climber.

[கரி = யானை. கரி + பிப்பிலி. திப்பிலி → பிப்பிலி]

கரிபூசு[1]**-தல்** *kari-pūšu-,* 5 செ.கு.வி. (v.i.) கண்ணூறு நீங்கக் கரி தீற்றுதல்; to begrime with the smut of charcoal to avert the effects of the evil eye. ரிஷி கரிபூசுகிறான் (ஈடு.7,4, ப்ர).

[கரி + பூசு.]

கரிபூசு[2]**-தல்** *kari-pūšu-,* 5 செ.குன்றாவி.(v.t.) வெட்கித் தலைகுனியச் செய்தல்; to deliberately put a person to shame, to disgrace one, lit., to begrime a person's face.

[கரி + பூசு.]

கரிபோக்கு[1]**-தல்** *kari-pōkku-,* 9 செ.கு.வி.(v.i.) கண்ணுக்கு மையெழுதுதல்; to paint the eyelids with black collyrium. *"கருங்கய லல்ல கண்ணே யெனக் கரிபோக்கினாரே" (சீவக. 626.).*

[கரி + போக்கு-.]

கரிபோக்கு[2]**-தல்** *kari-pōkku-,* 9 செ.கு.வி.(v.i.) சான்று கூறுதல்; to give testimony. *"அது கூறிக் கரிபோக்கினா ராதலானும்" (தொல்.பொருள். 69.உரை.).*

[கரி(சான்று) + போக்கு.]

கரிமணம் *kari-maṇam,* பெ.(n.) தீய்ந்த நாற்றம்; smell of scorched food.

[கரி + மணம்]

கரிமணி *kari-maṇi,* பெ.(n.) ***கருமணி*** பார்க்க; see *karumaṇi "கட்டக் கரிமணி யில்லாமற் போனாலும் பேர் பொன்னம்மாள்" (பழ.).*

*[கரு → கரி + மணி.]

கரிமக்காலக்கணிப்பு *karima-k-kāla-k-kaṇippu,* 14 பெ.(n.) அகழாய்வில் கிடைக்கின்ற கரித்துண்டு, மரத்துண்டு, எலும்புத்துண்டு ஆகியவற்றின் கரிமத் தன்மையை ஆய்ந்து காலத்தைக் கணிக்கும் முறை; a method of dating from the available pieces of carbon, wood, bone etc. from the archaeological excavations by the loss of radio activity in the carbon remains.

[கரிமம் + காலம் + கணிப்பு.]

கரிமம் *karimam,* பெ.(n.) கரியின் மூலக்கூறுகள் அடங்கியவை; organic substances.

[கரி → கரிமம்.]

கரிமரநாய் *kari-maranāy,* பெ.(n.) கறுப்பும் உறுப்புக்கேடுமானது (யாழ்.அக.); that which is black and malformed.

[கரி + மரம் + நாய்.]

கரிமருந்து *kari-marundu,* பெ.(n.) வெடிமருந்து (வின்.); the mixture of charcoal, sulpher, saltpetre, used for fire-works; gun powder.

ம. கரிமருந்நு

[கரி + மருந்து.]

கரிமலப்பாடி *karimala-p-pāḍi,* பெ.(n.) திருவண்ணா மலை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvanna malai dt.

[கெழுமல் → கழுமல் → கழுமலம் → கரிமலம் + பட்டி– கரிமலப்பட்டி. கழுமலம் = (குடியிருப்புகள்) செறிந்த ஊர்.]

கரிமவேதியியல் *karima-vēdi-y-iyal,* பெ.(n.) வேதியியலிற் கரியை மூலக்கூறாகக் கொண்ட கூட்டுப்பொருள் பற்றிய வேதியியல்; organic chemistry.

[கரிமம் + வேதியியல்.]

கரிமா *karimā,* பெ.(n.) யானை; elephant.

[கரி + மா. கரி = ஆண்யானை. கரிமா – இருபெயரொட்டுப் பண்புத் தொகை.]

கரிமுகவம்பி *kari-muga-v-ambi,* பெ.(n.) யானைமுகவோடம் (சிலப். 13: 176.); boat with a figure of an elephant's head or prow. *"பரிமுக வம்பியுங் கரிமுக வம்பியும்" (சிலப்.புறஞ்சேரி.179).*

[கரி + முகம் + அம்பி. அம் → அம்பு = நீர்வடிவானது; நீர்த் தொடர்பானது.]

கரிமுகவம்பி

கரிமுகன் *kari-mugaṉ,* பெ.(n.) ஆனைமுகக் கடவுள்; Gaṇēśa, the elephant faced. *"கரிமுகனடி பேணி" (திருப்பு.1).*

ம. கரிமுகன்

[கரி + முகன்.]

கரிமுட்டி *kari-muṭṭi,* பெ.(n.) பாதி எரிந்த கட்டை; a half burnt stick. 2. கயவன், இழிமகன்; blackguard

ம. கரிமுட்டி

[கரி + முட்டி (திரள், திரட்டு).]

கரிமுட்டு *kari-muṭṭu,* பெ.(n.) கரிக்குவியல்; heap of charcoal. சூளைக்கருகில் கரிமுட்டுக் கிடக்கின்றது (உ.வ.).

[கரி + முட்டு. முட்டு = மேடு, குவியல்.]

கரிமுட்டைச்சுறா *kari-muṭṭai-c-cuṟā,* பெ.(n.) கடல் மீன் வகை; a shark, grey. 2. நீண்ட கடல்மீன் வகை; a shark attaining 12 ft in length.

ம.கரிமுத்துச்ராவு

[கரி + முட்டை + சுறா.]

கரிமுண்டம் *kari-muṇḍam,* பெ.(n.) 1. மிகக் கறுத்த ஆள்; person of very dark complextion, lit., a lump of charcoal. 2.கொடிய உருவம் (வின்.); bogey mentioned to frighten children.

ம. கரிமுண்டன்

[கரி + முண்டம்.]

கரிமுரடு *kari-muradu,* பெ.(n.) கரிக்கட்டை (வின்.); quenched fire-brand.

[கரி + முரடு.]

கரிமுள் *kari-mu!,* பெ.(n.) 1. உறுதியான முள்; hard thorn. 2.பலாக்காயின் மேல்முள்; thorn-like projections on the rind of jack-fruit.

ம. கரிமுள்ளு

[கரு = வலி. கரி + முள்.]

கரிமுள்ளி *kari-mulli,* பெ.(n.) நாய்முள்ளிச்செடி; Indian night-shade.

ம. கரிமுள்ளி

[கரி + முள்ளி.]

கரிமூஞ்சிப்பாறை *kari-mūñji-p-pārai,* பெ.(n.) ஓரடி நீளத்திற்கு மேல் வளரக்கூடிய சாம்பல் நிறமுடைய சிறுகடல் மீன்வகை; horse-mackerel, grey, attaining more than a foot in length.

[கரி + மூஞ்சி + பாறை.]



கரிமூஞ்சிப்பாறை மீன்

கரிமூட்டம் *kari-mūttam,* பெ.(n.) ***கரியாக்கம்*** பார்க்க see *kariyā-kam.*

[கரி + மூட்டம்.]

கரிய *kariya,* கு.பெ.எ.(adj.) கருப்பான, கருமை நிறம் உடைய; black.

க. கரிது., **ம.** கரி, கரு; **தெ., து.** கரிய.

Gk. gree

[கரு = கருமை. கரு → கரி + அ = கரிய (கு.பெ.எ.) 'அ' பெயரெச்ச ஈறு, வினையாக்க உருபாகிய 'இ'கரம் பெற்று, கரு → கரி என்று பிறிது பொருள் சுட்டிய வினையாயிற்று. பிறிது பொருள் வினை என்பது 'கரு' என்னும் பொது வேரடியினின்றும் குறித்தவோர் தனிப்பொருளில் வளர்ந்த வினைச்சொல்லாட்சி]

கரியடுப்பு *kari-y-aduppu,* பெ.(n.) கரியிட்டெரிக்கும் அடுப்பு; charcoal stove.

[கரி + அடுப்பு. அடு = சுடுதல், சமைத்தல். அடு → அடுப்பு.]

கரியநாழிகை *kariya-nāligai,* பெ.(n.) அந்திவேளை; dusk.

[கரிய = இருள் படரக்கூடிய. கரி → கரிய (கு.பெ.எ.) + நாழிகை.]

கரியநிம்பம் *kari-ya-nimbam,* பெ.(n.) கறிவேம்பு (தைலவ. தைல.39);curry-leaf tree.

[கரி → கரிய (கு.பெ.எ.) + நிம்பம். நிம்பம் = வேம்பு.]

கரியபோளம் *kariya-pōlam,* பெ.(n.) 1. ஒரு பூடு (பதார்த்த 1051.); socotrine aloe. 2. அரத்த போளம்; hepatic aloes. "*புகழான சூகைநீறுகரிய போளங் கூட்டே" (வை.120.)* (த.மொ.அக.).

[கரு → கரி → கரிய + போளம்.]

கரியமணி *kariya-maṇi,* பெ.(n.) 1. கருகுமணி (யாழ்.அக.); small black beads. 2. கண்மணி (யாழ்.அக.); pupil of the eye. 3. கருஞ்சீரகம் (சங்.அக.); black cumin.

[கரு → கரி → கரிய + மணி.]

கரியமால் *kariya-māl,* பெ.(n.) 1. திருமால்; Vishṇu, who is dark in complexion. "கன்னி கரியமால்" (கலித். 92.உரை). 2. காய்ச்சல் நஞ்சு (பாடாணம்) (மூ.அக.); a mineral poison. 3. துளசி (சங்.அக.); sacred basil.

[கரு → கரி → கரிய + மால்.]

கரியமான் *kariya-māṉ,* பெ.(n.) கறுப்பு மான்; Indian antelope, black buck, having a dark back.

ம.கரிமான்

[கரு → கரி → கரிய + மான்.]

கரியர் *kariyar,* பெ.(n.) சான்று சொல்வோர்; witnesses. *"கரியரோ வேண்டா" (பழ.148).*

[கரு → கரி → கரியர். கரி = சான்று. கரியர் = சான்றாளர்.]

கரியல்[1] *kariyal,* பெ.(n.) 1.வளராத மரம்; tree or plant stunted and grown blackish. 2.ஒருவகைத் துகில் (சிலப்.14, 108, உரை); a kind of cloth.

[கரி → கரியல்.]

கரியல்[2] *kariyal,* பெ.(n.) 1. கருகல் (யாழ்.அக.); that which is black or charred. 2. தொடுகறி (சரவண. பணவிடு.274.); a kind of relish.

[கரு → கரி + அல் – கரியல். 'அல்' தொ.பெ.ஈறு.]

கரியல்வடலி *kariyal-vaḍali,* பெ.(n.) பனங்கருக்கு (யாழ்ப்.); young stunted palmyra having dried leaves on it.

[கரியல் + வடலி. மடல் → வடல் → வடலி.]

கரியவன்[1] *kariyavaṉ,* பெ.(n.) 1. கரியநிற முடையவன்; darkman. 2.திருமால்; Vishnu. *"வாழி கரியவன்" (கம்பரா.பள்ளி.55).* 3. இந்திரன் ; Indira. *"பீடிகை கரியவ னிட்ட காரணம்" (மணிமே. 25.55).* 4. காரி (சனி); Saturn. *"கரியவன் புகையினும்" (சிலப்.10:102.).*

[கரு → கரி + அவன் – கரியவன்.]

இந்திரனைக் கரியவன் என்றது யானைமீதமர்ந்தவன் என்னும் கருத்தினது. கரி = யானை.

கரியவன்[2] *kariyavaṉ,* பெ.(n.) கள்வன் (சூடா); robber, thief.

[கர → கரவன் → கரியவன்.]

கரியவன்[3] *kariyavaṉ,* பெ.(n.) சான்று சொல்வோன் (பிங்.); one who gives evidence as witness.

[கரு → கரி + அவன் – கரியவன். கரி = சான்று.]

கரியவாகு–தல் *kari-y-a-v-āgu-,* 7 செ.கு.வி.(v.i.) எரிந்து சாம்பலாகுதல்; to be burnt into ashes.

[கரி → கரிய + ஆகு–.]

கரியன்[1] *kariyaṉ,* பெ.(n.) திருடன் (இராட்.); thief.

[களவன் → கரவன் → கரியன்.]

கரியன்[2] *kariyaṉ,* பெ.(n.) ***கரியவன்*** பார்க்க; see *kariyavaṉ (வேக.122).*

க. கரியன், கரியவனு;

[கரி + அன் – கரியன்.]

கருநீலவண்ணமுடைய காரணத்தால் கரியன் திருமாலைக் குறித்தது.

கரியாக்கம் *kari-y-ākkam,* பெ.(n.) 1. விறகைக் கரியாக்குதல்; preparation of charcoal. 2. கரிமப் பொருள்களிலுள்ள கரியின் மூலக்கூறுகளை மிகுதியாக்குதல்; carbonisation.

[கரி + ஆக்கம்.]

கரியாக்கு–தல் *kariyākku-,* 5 செ.குன்றாவி.(v.t.) பயனற்ற வகையில் செலவு செய்தல், வீண்செலவு செய்தல்; to squander. காசைக் கரியாக்காதே (உ.வ.).

[கரி + ஆக்கு = ஆகு(த.வி.) → ஆக்கு (பி.வி).]

கரியார்[1] *kariyār,* பெ(n.) 1. கருநிறமுடையார்; people who are of dark complexion. 2.கீழ்மக்கள்; Inferior people. *"கரியாரை நள்ளான்" (சிறுபஞ்.21).*

[கரு → கரி → கரியார்.]

கரியார்[2] *kariyār,* பெ.(n.) சான்று கூறுவோர்; witness. *"வன்றொண்டர்க் கரவணங் கரியார் முன்பு காட்ட வல்லார்" (மருதூ.11.).*

[கரு → கரி → கரியர் → கரியார்.]

கரியாவட்டம் *kariyā vaṭṭam,* பெ.(n.) திருவனந்தபுரம் அருகே உள்ள சிற்றூர்; a village near Thiruvanathapuram.

[கரியன் → கரியான் + வட்டம் – கரியாவட்டம்.]

கரியான் *kariyāṉ,* பெ(n.) குதிரைவகை (அசுவசா.152); horse, of the black-coloured variety.

[கரு → கரி → கரியான். கரு = கருமை 'ஆன்' உடைமையீறு.]

கரில் *karil,* பெ.(n.) 1. கார்ப்பு; pungency. 2. குற்றம்; fault, defect. 3. கொடுமை; cruelty, tyranny, severity.

[கரு → கரி → கரில்.]

கரி வலம் வந்த நல்லூர் *karivalamvandanallur,* பெ.(n.) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஒருசிற்றூர்; a place in Thirunelveli dt.

[கரி+வலம்வந்த+ நல்லூர். கரி = யானை.]

கரிவாகனன் *kari-vāgaṉaṉ,* பெ.(n.) ஐயனார்; Aiyaṉār, who rides on an elephant.

[கரி + வாகனன்.]

கரிவாய் *karivāy*, பெ.(n.) தீய அல்லது அழிவுபற்றிப் பேசும் வாய்; the mouth whose uttering brings calamity.

க. கரிபாயி

[கரி = அழிவு, தீமை. கரி + வாய்.]

கரிவாரி *kari-vāri*, பெ.(n.) கரியைவாரும் கருவி; spade.

[கரி + வாரி. வார் → வாரி. 'இ' உடைமை குறித்த ஈறு.]

கரிவாளன் கோலா *kari-vāḷaṉ-kōlā*, பெ.(n.) மூன்றரை அடி நீளமும், நீலமும் பச்சையுங் கலந்த நிறமுடைய கடல்மீன் வகை; garfish, bluish green, attaining 3½ ft. in length.

[கரி + வாளன் + கோலா.]



கரிவாளன் கோலா

கரிவாளை *kari-vāḷai*, பெ.(n.) பன்னிரண்டடி நீளமுள்ளதும், நீலமும் பச்சையும் கலந்த நிறமுள்ளதுமான பெரிய கடல்மீன்வகை; large herring-like sea-fish, bluish-green, attaining 12 ft. in length.

ம. கரிவாள

[கரு → கரி + வாளை. கரு = பெரிய, வலிய.]



கரிவாளை மீன்

கரிவு[1] *karivu*, பெ.(n.) பயிர்தீகை (நாஞ்.); failure of crops.

[கரி → கரிவு.]

கரிவு[2] *karivu*, பெ.(n.) தீவு; Island.

[கரை → கரைவு → கரிவு.]

கரிவேடு *kari-vēḍu*, பெ.(n.) வேலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Vellore dt.

[கரியன் + பேடு → கரியபேடு → கரியவேடு → கரிவேடு. பேடு = பொட்டல் நிலம்.]

கரிவைரி *kari-vairi*, பெ.(n.) வெள்ளைச் செய்ந்நஞ்சு; prepared arsenic.

[கரி + வைரி. வைரம் → வைரி (திண்மையானது, கொடியது).]

கரு[1]**—த்தல்** *karu*, 4 செ.குன்றாவி. (v.i.) செய்தல்; to do.

[குல் → குரு → கரு. குல் = தோன்றற் கருத்து வேர், செய்தற் பொருளில் விரிந்தது.]

"கரு என்னும் முதனிலை இன்று வழக்கற்றது. கருத்தல் = செய்தல், கருங்களமரும், வெண்களமரும் போலப் பல்வகைப்பட்ட கரியரும், பல்வகைப்பட்ட பொன்னருமென, இருவேறு நிறவகையினராகத் தமிழர், தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கின்றனர். வருந்தியுழைப்பதன் விளைவாகக், கரியர் கைமிகக் கருப்பதும், பொன்னர்கை சிவப்பதும் இயல்பு.

"கருங்கை வினைஞருங் களமருங் கூடி" [சிலப். 10:125].

'செய்தகை சேவேறும், செய்யாத கை நோவேறும்' [பழ].

கை கருத்தல் பற்றிக் கரு என்னும் வினைச்சொல்லும், சிவத்தல் பற்றிச் செய் என்னும் வினைச்சொல்லும் தோன்றியதாகத் தெரிகின்றது. இவற்றிற்குப் பிறவினை வடிவம் வேண்டியதில்லை.

ஒ.நோ. வெளுத்தல் = வெள்ளையாதல் [த.வி.], துணியை வெள்ளையாக்குதல் [பி.வி.].

கருமம் → கம்மம் → கம். கம்மம் = முதற்றொழிலாகிய பயிர்த்தொழில்.

கம்மவர் → கம்மவாரு = பயிர்த்தொழில் செய்யும் தெலுங்கர்

கம் = பல்வேறு கனிம [உலோக]த் தொழில்.

'ஈமுங் கம்மும்' [தொல்.328].

கம்மாளன் = பொற்கொல்லன், ஐங்கொல்லருள் ஒருவன்.

கம்மியன் = கற்றச்சன் [சிற்பி].

கரு + வி – கருவி. கரு + அணம் – கரணம் = செய்கை,

திருமணச் சடங்கு, கருவி, அகக்கருவி.

'கற்பெனப் படுவது கரணமொடு புணர' [தொல். 1088]. இதிற் கரணம் என்பது, திருமண வினையாகிய சடங்கைக் குறித்தது.

வடவர் கரு என்னும் முதனிலையைக் க்ரு எனத் திரித்துள்ளனர். இங்ஙனம், சொன்முதல் உயிர்மெய்யில், உயிரை நீக்குவது ஆரிய மரபு.

ஒ.நோ. பொறு – bhru, திரு – sri, வரி – Vrhi, கரை – E.cry, துருவு – E.through, புருவம் – E.brow.

வடவர் கரணம் என்னும் சொல்லைக் காரண என நீட்டி, அதற்கேற்பக் 'கார்ய' என்னும் சொல்லையுந் திரித்துள்ளனர். காரணம் என்னும் நீட்டம் தமிழுக் கேற்கும் ஆயின், 'கார்ய' என்னும் திரிபு ஏற்காது.

ஏற்கெனவே, கரணம் என்பதினின்று, கரணியம் என்னும் சொல் திரிந்துள்ளது. அதற்கேற்பக் கருமம் என்பதினின்று கருமியம் [காரியம்] என, ஒரு சொல்லைத் திரித்துக் கொள்ளலாம்.

செய், பண்[ணு], புரி முதலிய பல பிற ஒரு பொருட் சொற்கள், தமிழில் இருப்பதனாலும், கரு என்பது வழக்கற்றுப் போனதினாலும், பின்னது வடசொல்லென மயங்கற் கிடந் தருகின்றது. தமிழ் வடமொழிக்கு முந்தியதென்றும் பெருஞ்சொல்வள மொழியென்றும் அறியின், இம் மயக்கந் தெளிந்துவிடும். தமிழ் திராவிட மொழிகட்குரிய இல், மனை, வீடு முதலிய சொற்களை மட்டுமன்றி, ஆரிய மொழிகட்குரிய 'குடி' என்னுஞ் சொல்லையுந் தன்னகத்துக் கொண்டுள்ளதென்று, கால்டுவெலார் கூறியிருப்பதைக் கூர்ந்து நோக்குக. [வ.மொ. வ.பக்.274,275].

கருத்தல் = செய்தல், வினையாற்றுதல் என்ற பொருளுடன், வினை வடிவத்தில் நெல்லை மீனவர் வழக்கில், ஆளப்படுதல் நோக்குக. உழைப்பாளியைக் "கருவாளி" எனக் குறிக்கும் வழக்கம், இன்றும் அங்கு உள்ளது.

த. கரு > **Skt.** kri தமிழிலிருந்துக் கடன் கொள்ளப்பட்ட இவ்வினை வடமொழியில் பெருவழக்காக வழக்கூன்றியுள்ளது. இவ் வினையடியிலிருந்தே, கரம்[கை], கரி [தும்பிக்கையை உடைய யானை] என்பன போன்ற பல சொற்கள் உருவாகியுள்ளன.

கரு[2] *karu-,* பெ.(n.) 1.கருப்பு (தேவா.10,1.); dark colour. 2.நிறம் (பிங்.); colour, tint, tinge. 3.அழகு; beauty.

[கள் → கரு.]

karu-u; black, an euphonised form of which is kār; Gujarāthi karo, comp, Turkish quara or kara; Calmuck chara; Mongolian kara; Japanese Kuroi - one of the eight words belonging to the language of the ancient Turks of the Altae; recorded by the Chinese, was koro, black. These Scythian affinities are too distint to admit of the smallest doubt. There is evidently a connection between this Scytho-Dravidian root and this Sanskrit kāla, black; Tamiḷ kāḷam; from which there is a derivative, kāḻagam, that throws light on the relation of kāla to kar-u. Comp. Greek K-aivos(Kel-ainos). Probably also kri(kar), the radical portion of Krishṇa, Sans. black cadjectivel form kārshṇa) is related to the same Scythian theme, and ultimately to kāl-a (C.G.D.F.L.p.616).

கரு[3] *karu,* பெ.(n.) குப்பைமேடு (பிங்); dunghill.

[கரி → கரு.]

கரு[4] *karu,* பெ.(n.) கருவிகளில் உள்ள பல்; prong, barb, pine, spike. *"கருவாணையுற"* (அருட்பா. அறநிலை1.).

மறுவ. கருக்கு

[குல் → குரு → கரு. குல் = குத்துதல். கரு = முட் போன்ற கூர்மையுடையது.]

கரு[5] *karu,* பெ.(n.) 1. கருப்பம்; foetus, embryo. *"மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்" (புறநா.34:2.).* 1. முட்டைக்கரு; yolk of an egg. *"புறவுக் கருவன்ன புன்புல வரகின்" (புறநா.34:9).* 3. முட்டை; egg, germ. 4. உடம்பு; body. *"கருவுள் வீற்றிருந்து" (திவ்.திருவாய்.5.10,8.).* 5. பிறப்பு; birth. *"கருவைத் துடைப்ப்" (பிரபுலிங். கொக்கி.15).* 6. குழந்தை; child. *"சோரர்தங் கருவைத் தங்கள் கருவெனத் தோளி லேந்தி" (பாரத.நிரை.116).* 7. குட்டி; the young of an animal. *"காசறைக் கருவும்" (சிலப். 25:52.).* 8. அச்சுக்கரு; mould, matrix. *"திருவுருவினைக் கருவினாற் கண்டு" (திருவிளை. இரச.9.).*

ம., க. கரு; **து.** கரு; **தெ.** கருகு, கருவு; **கோத.** கர்வ்; **பர்.** கெர்ப; **கட.** கர்பெ; **உரா.** கர்ப்ப.

குருத்தல் = தோன்றுதல். குரு → கரு → (கருப்பு) → கருப்பம். கரு = சூல், மீன், முட்டை, சேய், குட்டி. வடமொழியாளர் 'க்ரு' (விளி) என்றும், grabh → grah (பற்று) என்றும், மூலங்காட்டுவது பொருந்தாது.

த. கரு > **Skt.** garbha (வ.மொ.வ.108).

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலி, கரு என்னும் தூய தென்சொல்லை, கருப்பம் (garbha) என்னும் வடசொல்லினின்று திரித்துள்ளது. வடசொல்லே தென் சொல்லினின்று தோன்றியிருத்தல் வேண்டும் [வே.க.148.].

கரு[6] *karu,* பெ.(n.) உயரம்; height.

[குல் → குரு → கரு.]

கரு[7] *karu,* பெ.(n.) 1. சிறப்புடைக் காரணம்; efficient cause. *"கருவா யுலகினுக்கு" (திருவாச. 10,14).* 2. நடு; middle. *"உள்ளூர்க் கருவெலா முடல்" (கம்பரா.கிங்கரர்.44).* 3. உட்பொருள் (வின்.); substance, contents. 4.அடிப்படை; foundation, basement. *"கருவோ டிவரடி... காணாமையின்" (இரகு.நகரப் 20).* 5. கருப்பொருள்; characteristic regional features of the five tracts. "தெய்வ முணாவே... கருவென மொழிப" (தொல்.பொருள்.18) 6. எண்வகைக் கருமக்கரு(வின்.); ingredients for magical preparations employed in aṭṭa karumam. 7. அணு; atom. *"கருவளர் வானத்து" (பரிபா.2:5).* 8. இயற்கையறிவு(வின்.); genius, ingenuity.

[குல் → குரு → கரு. கரு = நடு.]

ME., **E.** *core.*

கரு[8] *karu,* பெ(n.) பெருமை; greatness.

[குல் → குரு → கரு (மு.தா.236). கருமாடம் = உயர்ந்த மாளிகை. கருநாடு = பெரிய நாடு.]

கரு[9] *karu,* பெ(n.) 1.பொன்; gold. *"கருக் கலந்த காளமேக மேனியாய்" (திவ்.திருச்சந்த.104, வியா. ப.305).* 2. காரியம் (சம்.அக.); வணிகம்; business, affair. 3. முகில்(சம்.அக.); cloud. 4. நடுமேடு (அக.நி.); central elevation, that which is raised in the middle.

[குரு → கரு. குரு = ஒளி, சிறப்பு, அழகு, மேன்மை.]

கருக்கட்டான் *karu-k-kaṭṭāṉ,* பெ.(n.) **கருக்கு வாய்ச்சி** பார்க்க; see *karukku-vāycci.*

[கரு + கட்டான்.]

கருக்கட்டு[1]–தல் *karu-k-kaṭṭu-,* 5 செ.கு.வி. (n.) 1. மாழையால் (உலோகத்தால்) உருவம் வார்ப்பதற்கு அச்சுக்கரு அமைத்தல்; to make a mould. 2. மழைக் குணங் கொள்ளுதல்; to become dense with watery vapour, as clouds.

க. கருக்கட்டு

[குரு → கரு[3] + கட்டு.]

கருக்கட்டு[2]–தல் *karu-k-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) எண்ணுதல், நினைத்தல்; ஆய்வு செய்தல்; to think, to consider.

[கரு + கட்டு.]

கருக்கட்டை *karu-k-kaṭṭai,* பெ.(n.) நன்கு முற்றிய மரம் (ம.அக.); fully grown wood.

[கரு + கட்டை.]

கருக்கண்ணி *karu-k-kaṇṇi,* பெ.(n.) வெள்ளைக் கண்ணி; clerodendron.

[கரு + கண்ணி.]

கருக்கபாளையம் *karukkapāḷaiyam,* பெ.(n.) ஈரோடு மாவட்டத்துச் சிற்றூர்; a village in Erode district.

[கருக்கன் + பாளையம் – கருக்கம்பாளையம் → கருக்கபாளையம்.]

கருக்கம் *karukkam,* பெ.(n.) கார்முகில்; rain-cloud. *"கருக்க மெல்லாங் கமழும் பொழில்" (தேவா.884,8.).*

[கருக்கு → கருக்கம். (வே.க.122.) கருகு → கருக்கு.]

கருக்கம்புல் *karukkam-pul,* பெ.(n.) அறுகம்புல்; karigalli grass. களையெடுத்தாலும் கருக்கம்புல் வளர்ந்துகொண்டே இருக்கிறது (செங்.வ.).

க.கருக்கெ; **தெ.** கரிக; **பட.** கரிக்கெ.

Mar. gavat; **Guj.** ghās; **H., U.** ghās; **Punj.** ghāh; **Sind.** gāhu; **Kas.** gāsu; **Beng.** gās; **Ass.** ghanh; **Ori.** ghās; **Chin.** cao; **E.** grass; **M.E.** gras, gres, gers; **O.E.** graes; **O.N.,**

O.S., DU., G., O.H.G., M.H.G., goth, gras; **Dan.** graes; **Swed.** gras; **L.**gramen.

[அறுகம் → அருக்கம் → கருக்கம் + புல்.]

கருக்கரிவாள் *karukkarivāḷ*, பெ.(n.) பற்கள் உள்ள அரிவாள்; sickle with serrated edge.

[கருக்கு + அரிவாள்.]



கருக்கரிவாள்

கருக்கரை–தல் *karukkarai-*, 4 செ.கு.வி.(v.i.) கருப்பஞ்சிதைதல்; to miscarry.

[கரு + கரை–.]

கருக்கல்[1] *karukkal*, பெ.(n.) 1.காரிருள்; darkness. அமாவாசைக் கருக்கல் (வின்.). 2. மங்கலிருட்டு; twi-light, விடியற்காலைக் கருக்கிருட்டு (மு.தா.180). 3. காலையில் பொழுது விடியும் முன் உள்ள மெல்லிருட்டு ; pre-dawn darkness. 4. வானத்தில் முகில் படிதல்; cloudiness. வானம் கருக்கலிட்டிருக்கிறது (உ.வ.). 5. காய்ந்த பயிர் (யாழ்ப்.); sun-burnt paddy crop. 6. ***கருக்கல்நெல்*** (வின்.) பார்க்க; see *karukkal-nel.*

ம.கருக்கல்; **தெ.**கனுமபு்பு.

[கர் → கரு → கருத்தல் = கருப்பாதல். கரு → கருகு= நிறங்கருத்தல், இருளாதல், பயிர்தீய்ந்து போதல். கருகு → கருக்கு = மருந்துச்சரக்கு; காய்ச்சிய சாறு. கருக்கு → கருக்கல் (வேக.122).]

கருக்கல்[2] *karukkal*, பெ.(n.) சப்பட்டை (யாழ்.அக.); shoddy, useless. *"கருக்கா மெருகுப் பச்சை நெய்யிதே"* *(தைல.தைலவ.84).*

[கரு = மேடு, திட்டு. கரு → கருக்கல் = மேற்புறம் திட்டானது.]

கருக்கல்[3] *karukkal*, பெ.(n.) வெப்பத்தால் கருகுதல்; withering.

[குள் → கள் → கரு → கருக்கல். கரு=கருகல், வேதல்.]

கருக்கல் நெல் *karukkal-nel*, பெ.(n.) மணிபிடியாத நெல்; (இ.வ.); thin corn of paddy, not fully matured.

[குரு → கரு → கருக்கல் + நெல். கருக்கல் = கரு அளவிலேயே வளர்ச்சி நின்று போன நெல்.]

கருக்கலிடு–தல் *karukkal-iḍu-*, 20 செ.கு.வி.(v.i.) அடர்த்தியாகக் கார்மேகம் திரளுதல்; to become dark with clouds, as the sky. வானங் கருக்கலிட்டிருக்கிறது (உ.வ.).

[கருக்கல் = கருமேகத் திரட்சி. கருக்கல் + இடு.'இடு (துவி.)]

கருக்கலை[1]–தல் *karukkalai-*, 2 செ.கு.வி.(v.i.) கரு உரிய வளர்ச்சி பெறுவதற்கு முன் அழிதல்; to get aborted.

[கரு + கலை–.]

கருக்கலை[2]–த்தல் *karukkalai-*, 4செ.குன்றாவி.(v.t.) கருவை அழித்தல்; to cause to abort.

[கரு + கலை.]

கருக்கலைப்பு *karukklaippu*, பெ.(n.) கருவழித்தல்; abortion.

[கரு+கலை – கலைப்பு. 'பு'.சொ.ஆ.ஈறு.]

கருவளர் காலத்தின் முதல் இருபத்தெட்டு கிழமைகளுள் தாயின் உடலைவிட்டு வெளிவந்து தனியாக வாழக்கூடிய தன்மையை ஒரு கரு அடையாத நிலையில் கருப்பையினின்று முதிர்கரு வெளியேற்றப்படுவதே கருக்கலைப்பாகும். கருக்கலைதல் செயற்கை முறையாலன்றி இயல்பாகவும் நிகழலாம்.

கருக்கழி–தல் *karukkaḻi-*, 2 செ.கு.வி.(v.i.) 1. கூர்மழுங்குதல் (வின்.); to lose sharpness, as the edge of a cutting instrument. 2.புதுமை குலைதல்; to lose freshness, as cloth. சேலை கருக்கழிந்து விட்டது (கொ.வ.).

[கரு = கூர்மை, புதுமை. குரு → கரு + கழி–.]

கருக்கன்[1] *karukkaṉ*, பெ.(n.) ஆணின் இயற்பெயர்; proper name of a male.

[கரு → கருக்கு + அன். கரும் = பெருமை, உயர்ச்சி.]

கருக்கன்[2] *karukkaṉ,* பெ.(n.) எலி; rat.

[கரு → கருக்கன் (கரியது).]

கருக்கா *karukkā,* பெ.(n.) எலியின் முகம் போன்ற, வெண்மை நிறமுடைய ஒருவகை மீன் (நெல்லை. மீனவ.); a kind of fish.

[கருக்கன் → கருக்கா (கொ.வ.). கருக்கன் - எலி.]

கருக்காக்கு-தல் *karuk-kā-kku-,* 5 செ.குன்றாவி. (v.t.) கூராக்குதல்; to sharpen.

[கரு → கருக்கு + ஆக்கு.]

கருக்காடி *karukkāḍi,* பெ.(n.) சிறிய இறால்மீன் (முகவைமீனவ.); a kind of small fish, prawns

[கரு - கூர்மை, சிறுமை. கரு → கருக்கு + (ஆனி)ஆடி.]

கருக்காப்பாரை *karukkā-p-pārai,* பெ.(n.) கடல்மீன் வகை; horse mackerel, silvery.

[கருக்காய் - பிஞ்சு, இளமை. கருக்காய் + பாரை – கருக்காய்ப்பாரை → கருக்காப்பாரை.]

கருக்காம்பாறை *karukkām-pāṟai,* பெ.(n.) இரத்த சூறை மீன்; tiny fish.

[கருக்கு + ஆம் + பாறை.]

கருக்காமரம் *karukkā-maram,* பெ.(n.) ***கருக்குவாய்ச்சி(வின்.)*** பார்க்க; see *karukku-vāycci.*

[கருக்குத்தாமரம் → கருக்காமரம்.]

கருக்காமலை *karukkāmalai,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanchipuram Dt.

[கருக்கன் + மலை –கருக்கன்மலை→ கருக்கான்மலை→ கருக்காமலை.]

கருக்காய்[1] *karukkāy,* பெ.(n.) பிஞ்சு; young and immature fruit. *"கருக்காய் கடிப்பவர்போல்" (திவ். திருவிருத்.64).*

ம.கரிங்ங, கரிக்கு; து.கர்காயி; கட. கர்கெ (பிஞ்சு மாங்காய்).

[குரு → கரு + காய் – கருக்காய் - கரு நிலையில் அல்லது பிஞ்சு நிலையில் உள்ள காய்.]

கருக்காய்[2] *karukkāy,* பெ.(n.) 1. **கருக்கு** பார்க்க; see *karukku,* 2. எள்ளு கொள்ளு முதலியவற்றின் மாறு (திருநெல்.); dry stalk, as seasame, gram, etc, after threshing out the grains. 3. முற்றாத காய் (சொ.ஆக.67.; unripe fruit.

[கரு + காய் – கருக்காய் → கருக்காய்ந்தது, வளர்ந்து முற்றியது அல்லது வெப்பத்தால் கருகியது.]

கருக்காலம் *karu-k-kālam,* பெ.(n.) மகப்பேற்றுக் காலம்; gestation period.

[கரு + காலம்.]

கருகாவூர் *karugāvūr,* பெ.(n.) தேவார வைப்புத் தலங்களுள் ஒன்று; name of a village *"கருகாவூரார்" (தேவார. திருவீழி. 19.).*

[கரு + கா + ஊர்]

கருக்கான் *karukkāṉ,* பெ.(n.) 1. எலி; rat. 2.பெருக்கான், பெருச்சாளி; bandicoot.

[கரு - பெரிய. கருக்கான் - பெரிய எலி.]

கருக்கானபணம் *karukkāṉa-paṇam,* பெ.(n.) புதுநாணயம் (வின்.); newly minted money.

[குரு → கரு → கருக்கான் + பணம். கரு - புதியது.]

கருக்கானவன் *karukkāṉavaṉ,* பெ.(n.) 1. ஒழுங் குள்ளவன்; straight forward man. 2. கண்டிப் புள்ளவன்; strict man.

[கரு → கருத்து → கருக்கு + ஆனவன் – கருக்கானவன்.]

கருக்கிக்கொடு-த்தல் *karukki-k-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) பத்தியத்துக்குக் கஞ்சி முதலியன காய்ச்சிக் கொடுத்தல் (வின்.); to cook food, as slops, and give it to a patient, as diet.

[கருக்கி + கொடு.]

கருக்கிடு-தல் *karukkiḍu-,* 18 செ.குன்றாவி.(v.t.) கூர்மையாக்குதல் (வின்.); to grind, whet, sharpen edge.

[கருக்கு - வெப்பமுண்டாக உரசித் தேய்த்துக் கூர்மையாக்குதல்.]

[கருக்கு + இடு-.]

கருக்கிடை *karu-k-kiḍai,* பெ.(n.) கலந்தாய்வு (ஆலோசனை) (யாழ்.அக.); counsel, consideration.

[குரு → கரு → கருத்து + இடு – கருத்திடு → கருத்திடை → கருக்கிடை (கொ.வ.). இடு → இடை (பெ.).]

கருக்கு[1]—தல் *karukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கருகச்செய்தல்; to burn, scorch, tan, darken by heat. 2. காய்ச்சுதல்; to toast, fry, parch, boil. *"கருக்கா மெருகுப்பச்சை நெய்யிதே" (தைலவ. தைல.84).* 3. எரித்தல்; to burn up, consume. *"இவன்றனைக் கருக்கி" (அரிச்.பு.மயான.33).* 4.திட்டுதல்; to harass, to abuse. ஆளைக் கருக்கிப் போட்டார்கள் (உ.வ.).

க. கரகிசு; படை. கரக்கு.

[கரு → கருகு (த.வி.) → கருக்கு (பி.வி.) = வெப்பத்தாற் கருக்குதல்.] (மு.தா.180)

கருக்கு[2]—தல் *karukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. செய்தல்; to do. 2. வெட்டுதல்; to cut.3. உருவம் துக்குதல்; to engrave a figure. கருக்கிய கோழி(அரசலவூர் கல்.). 4. எழுத்துப் பொறித்தல்; to engrave script.

[கரு → கருக்கு.]

கருக்கு[3] *karukku,* பெ.(n.) 1. ஆயுதப் பற்கூர்; teeth of a saw, of a sickle, sharp edge of a newly ground cutting instrument. என் ஈரலைக் கருக்கரிவாள் கொண்டு அறுக்கிறது (உ.வ.). 2. பனைக்கருக்கு, பனைமட்டைத் தண்டின் விளிம்புகளில் அமைந்த கூர்மையான பகுதி; jagged edge of the palmyra leaf stalk. *"கருக்கின்... போந்தை" (குறுந்.281).* 3. இலையின் கருக்கு (வின்.); jagged indentation of leaves. 4. கூர்மை; sharpness. *"கருக்கு வாளருள் செய்தான்" (தேவா. 35,8).* 5. அறிவுக்கூர்மை; keenness of intellect. மூத்த பையன் கருக்காய் இருக்கிறான் (உ.வ.). 6. நேர்மை; strictness, accuracy, correctness. 7.பனங்காய்த் தோற்கருக்கு(வின்.); external rind of palmyra fruit which dries and peels off in flakes. 8.கொத்துளி (Pond.); a kind of chisel.

தெ.கருகு

[குல் → கரு → கரு → கருக்கு.]

கருக்கு[4] *karukku,* பெ.(n.) 1. மருந்துச் சரக்கைக் கருக்கிக் காய்ச்சிய சாறு (கியாழம்); decoction in water of several charred drugs. 2.சாம்பலாக்கிய மருந்துச் சரக்கு; medicinal drugs burnt to ashes. 3. போதைப்பொருள்; narcotic drug as hemp. *"கஞ்சாக் கருக்கு வகை" (அழகர் கல. 41).*

தெ.கருகு

[கரு → கருக்கு (காய்ச்சியது).]

கருக்கு[5] *karukku,* பெ(n.) 1. பொறித்த ஒவியம்; engraving carving, embossed work. "முகையுரு மேற்சேரி (இட்) டுயாடிக்க கரு(க்)கிய கோழி" (அரசலாவூர்.கல்.), 2. புதுமை; newness, freshness. பாத்திரம் கருக்கழியவில்லை (உ.வ.). 3. தூய்மை; neatness, tidiness, அவன் காரியமெல்லாம் கருக்காயிருக்கும் (உ.வ.). 4. அழகு; beauty. *"கருக்குச் சரிகைக் கச்சை" (கவிகுஞ்.4).*

[குரு → கரு → கருக்கு.]

கருக்கு[6] *karukku,* பெ.(n.) இளநீர் (நெல்லை.); tender coconut.

[கரு = பிஞ்சு. கரு → கருக்கு.]

கருக்கு[7] *karukku,* பெ.(n.) மரம் வெட்டுதல் போன்ற வற்றில் உண்டாகும் பேரொலி; a sharp noise like that made in cutting or sawing (ஆந்.).

தெ.கருக்கு

[கரு → கருக்கு = தீட்டுதல், உரசுதல் அறுத்தல், வெட்டுதலால் உண்டாகும் ஓசை.]

கருக்குச்சுருட்டு *karukku-c-curuṭṭu,* பெ.(n.) ஏய்ப்பு (வஞ்சகம்) (வின்.); guilefulness, crookedness of mind.

[கரு → கருக்கு = மூலம், அடிப்படை, முதற்பணம். கருக்கு + சுருட்டு.]

கருக்குப்பணி *karukku-p-paṇi,* பெ.(n.) சிற்பவேலை, கடைசல் வேலை; embossed work, sculpture fret-work.

ம.கருக்குப்பணி; **க.**கரு.

[கருக்கு + பணி.]

கருக்குப்பீர்க்கு *karukku-p-pīrkku,* பெ.(n.) ஒருவகைப் பீர்க்கங்கொடி; a kind of sponge gourd.

[கருக்கு + பீர்க்கு.]

கருக்குமட்டை *karukku-maṭṭai,* பெ.(n.) கருக் குள்ள பனைமட்டை; stem of a palmyra-leaf with the sharp jagged edges.

[கருக்கு + மட்டை.]

கருக்குமீசை *karukku-mīšai,* பெ.(n.) முறுக்கிய மீசை; curled moustache.

[கருக்கு + மீசை.]

கருக்குவராகன் *karukku-varāgan,* பெ.(n.) புது நாணயம் (வின்.); new pagoda coin on which the figures are well defined.

[கரு → கருக்கு = பிஞ்சு, இளமை, புதுமை. கருக்கு + வராகன். வராகன் = பன்றி இலச்சினை பொறித்த காசு.]

கருக்குவாய்ச்சி *karukku-vāychi,* பெ.(n.) மரப் பொது; jagged jujube.

[கருக்கு + வாய்ச்சி.]

கருக்குவாய்ப்படு-தல் *karukku-vāy-p-paḍu-,* 20.செ.கு.வி.(v.t.). ஆயுதவலகு கூர்மைப்படுதல் (வின்.); to become sharp edged, as a cutting instrument.

[கரு = கூர்மை, கரு → கருக்கு. கருக்கு + வாய் + படு. படுதல் = உண்டாகுதல்.]

கருக்குவாள் *karukku-vāḷ,* பெ.(n.) கூரிய வாள்; sword with a sharp edge. *"கருக்கு வாளருள் செய்தான்" (தேவா.135.8).*

[கரு = கூர்மை. கரு → கருக்கு. கருக்கு + வாள்.]

கருக்குவேலை *karukku-vēḷai,* பெ.(n.) சிற்பவேலை (வின்.); work in stone or metal raised work, basrelief, fret-work.

[கருக்கு + வேலை – கருக்கு வேலை = காய்ச்சி, வார்க்கும் வேலை வார்ப்பு வேலை, இது மரச்சிற்பம், கற்சிற்பம் செதுக்குதலையும் குறித்தது.]

கருக்குழாய் *karu-k-kuḷāy,* பெ.(n.) கருப்பப்பைக் குழாய்; womb tube.

[கரு + குழாய்.]

கருக்குழி *karu-k-kuḷi,* பெ.(n.) கருப்பப்பை, சூற்பை; womb. *"கருக்குழி வாய்ப்படுந் தொல்லைச் சென்மம்" (மறைசை. 32).*

H. karpāsay

[கரு + குழி.]

கருக்கூட்டம் *karu-k-kūṭṭam,* பெ.(n.) சூல் கொள்ளல்; conception, impregnation.

[கரு + கூட்டம்.]

கருக்கூட்டு[1]-தல் *karu-k-kūṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. **கருக்கட்டு-** பார்க்க; see *karu-k-kaṭṭu-.* 2.திட்டமிடுதல், வழிவகுத்தல் (வின்.); to scheme, contrive, plan.

[கரு + கூட்டு-.]

கருக்கூட்டு[2]-தல் *karu-k-kūṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சினையாக்குதல்; to impregnate.

[கரு + கூட்டு.]

கருக்கூட்டு[3]-தல் *karu-k-kūṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) நடுவுநிலைமை பிறழாது செயற்படுதல்; to maintain justice.

[கரு + கூட்டு.]

கருக்கூடு *karu-k-kūḍu,* பெ.(n.) சினைப்பை (வின்.); ovary.

[கரு + கூடு.]

கருக்கூடு-தல் *karu-k-kūḍu-,* 5 செ.குன்றாவி.(v.t.) சினையுண்டாதல்; to impregnate, to conceive.

[கரு + கூடு-.]

கருக்கை *karukkai,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kadalur taluk.

[கருக்கன் + ஊர் – கருக்கனூர் – கருக்கை(மரூஉ).]

கருக்கொள்(ளு)-தல் *karuk-koḷ(ḷu)-,* 16 செ.கு.வி.(v.i.); 1. ஒரு பொருளைக் குறித்து எண்ணுதல்; to form a concept in mind, 2. நீர்கொண்ட மேகங்கள் ஒன்றுசேர்தல்; to form clouds. 3. மலர்களில் துகள் (மகரந்தச்) சேர்க்கை நடந்து முடிதல்; to pollinate, 4. குழந்தைப் பேற்றிற்காகக் கருப்பம் உண்டாதல்; to conceive, to be impregnated.

[கரு + கொள்-.]

கருக்கோடு-தல் *karu-k-kōḍu-,* 5 செ.கு.வி.(v.i.) மீசை அரும்புதல் (உ.வ.); to appear, as young growth, as the soft hair on a young man's upper lip.

[கரு + கோடு.]

கருக்கோளம் *karu-k-kōḷam,* பெ.(n.) கருவுற்ற முட்டை அடையும் கோள வடிவம்; blastula.

[கரு + கோளம்.]

கருகம்பத்தூர் *karukambattur,* பெ.(n.) வேலூர் வட்டத்துச் சிற்றூர்; a village in Vellore taluk.

[கருக்கன் + புத்தூர் – கருக்கம்புத்தூர் → கருக்கம்பத்தூர் (கொ.வ.).]

கருகரு–த்தல் *karu-karu-,* 4 செ.கு.வி.(v.i.) அரிகண்டப்படுத்தல் (இ.நு.த.பெ.அக.); to part into pieces.

[கரு : கூரிய, சிறிய. கருகரு : சிறிது சிறிதாதல், துண்டம் துண்டமாதல்.]

கருகருவெனல் *karu-karu-v-eṉal,* பெ.(n.) 1.மிகவும் கருமையாதல் குறிப்பு; in onom. expr. signifying utter blackness. 2. செழிப்பாதற் குறிப்பு; onom. expr. signifying flourishing, ever green.

[கரு + கரு + எனல்.]

கருகல்[1] *karugal,* பெ.(n.) 1.சோறுகறிகளின் காந்தல் (உ.வ.); charred rice or curry, in cooking. 2. கருகின பொருள் (வின்.); dried betel leaves, grain or other vegetation, scorched or blackened by the sun. 3. தீய்ந்து போகை (கொ.வ.); state of being partially charred or over-roasted. 4.நெற்பயிர் போன்ற வகைகளுக்கு வரும் நோய்; disease of paddy crops.

[கருகு → கருகல்.]

கருகல்[2] *karugal,* பெ.(n.) மங்கல் வெளிச்சம்(வின்.); dusk of the evening or of the dawn. 2. தெளிவில்லா வாக்கு (உ.வ.); obscurity in language, ambiguity in meaning, considered as a defect.

[கரு → கருகு → கருகல். 'அல்' தொ.பெ. ஈறு.]

கருகல்[3] *karugal,* பெ.(n.) மரகதக் குற்றம் எட்டனுள் ஒன்றாகிய இருள் (சிலப். 14: 184.உரை); a flaw in emeralds, one of eighth such flaws.

[கருகு → கருகல்.]

கருகற்புண் *karukaṟ-puṇ-,* பெ.(n.) ஆறின புண் (வின்.); healed or dried sore.

[கருகல் + புண்.]

கருகு[1]**–தல்** *karugu-,* 5 செ.கு.வி.(v.i.) 1.உருகுதல்; to melt, dissolve, liguety. 2. நிறங்கறுத்தல்; to be scorched, scarred, to blacken by fire or the sun; to be tanned, as the face. *"ஒளிகருகா" (பாரத. அருச்.தீர்த்.5).* 3. பயிர் முதலியன தீய்தல்; to turn brown, to wither from lack of water, as plants. 4. இருளுதல்; to become dark, grow dim, to deepen into night, as the shades of evening twilight. *"கருகு கங்குலிற் போதரும்" (உபதேசகா. கைலை.46).*

க.கரங்கு, கரகு; து.கரகுனி: தெ. கரகு; பட. கரகு.

[கள் → கரு → கருகு. கரு : கருப்பாகு(மு.தா.100)]

கருகு[2]**–தல்** *karugu-,* 5.செ.கு.வி.(v.i.) 1.மனம் வருந்துதல்; to be pained. *"இப்படியிருக்கிறவனை நான் கருக நியமிக்கமாட்டேன்" (திவ். பெரியாழ். 2,9,2. வ்யா. ப. 454).* 2. வாடுதல்; to fade, to be famished, உடல் கருகிப் போயிற்று (உ.வ.).

க.கருகொள்; து.கரகுனி.

[கள் → கரு → கருகு.]

கருகுமணி *karugu-maṇi,* பெ.(n.) மகளிர் உட் கழுத்தில் அணியும் கறுப்பு மணிவகை; string of small black beads with a pendant in the centre, worn close- fittingly, around the neck by girls and young women generally.

[கரு → கருகு + மணி – கருகுமணி. கருகு : கரியது.]

கருகுமாலை *karugu-mālai,* பெ.(n.) மாலையில் தோன்றும் மங்கல் வெளிச்சம் (வின்.); twilight, dim light of the evening.

[கருகு + மாலை.]

கருகூலம்[1] *karukūlam,* பெ.(n.) **கருவுகலம்** பார்க்க; see *karuvukalam "கருகூலத்... தேடிவைத்த கடவுண்மணியே" (மீனாட். பிள்ளைத். முத்த.1).*

[கருவுகலம் → கருகூலம்.]

கருகூலம்[2] *karukūlam,* பெ.(n.) கருப்புக்கட்டி (யாழ்.அக.); palmyra-jaggery.

[கரும்புல் + கூழ் + அம் – கரும்புல் கூழம். கருங்கூழம் → கருகூலம் (கொ.வ.). கரும்புல் : கரும்பு.]

கருங்கஞ்சம் *karuṅ-kañjam,* பெ.(n.) வெண்கலம் (சங். அக.); bell-metal.

[கரும் + கஞ்சம்.]

கருங்கடல்[1] *karuṅ-gaḍal,* பெ.(n.) ஐரோப்பா கண்டங்களுக்கு நடுவில் உள்ள ஒரு கடலின் பெயர்; the black sea.

ம. கரிங்கடல்

[கரு → கரும் + கடல்.]

கருங்கடல்[2] *karuṅ-gaḍal,* பெ.(n.) தூத்துக்குடி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tuttukudi dt.

[கரும் + கடலன் – கருங்கடலன் → கருங்கடல். கடலன் = கடல்வணிகன். கருங்கடலனைச் கருங்கடல் என்றழைத்த வழக்கினால் அவன் பெயரிலமைந்த ஊர்.]

கருங்கடல்வண்ணன் *karuṅ-kaḍal-vaṇṇaṉ,* பெ.(n.) திருமால் (திவா.); Vishnu whose complexion is as dark as the colour of the deep sea. 2. ஐயனார் (வின்.); Aiyaṉār.

[கரும் + கடல் + வண்ணன்.]

கருங்கடுக்காய் *karuṅ-kaḍukkāy,* பெ.(n.) கறுப்புக் கடுக்காய் (பதார்த்த.971.); black variety of chebulic myrobalan (செ.அக.).

[கரு → கரும் + கடுக்காய் – கருங்கடுக்காய்.]

கருங்கடுகு *karu-ṅ-kaḍugu,* பெ.(n.) கருமை நிற முள்ள கடுகுவகை; balck mustard.

ம. கரிங்கடுகு

[கரு → கரும் + கடுகு.]

கருங்கண் *karu-ṅ-kaṇ,* பெ.(n.) 1. கரியகண்; dark eye *"கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்"* (குறுந்–69.). 2. கண்ணேறு படுங் கண் (இ.வ.); evil eye.

மறுவ. கொள்ளிக்கண்

க. கரியகண். ம. கரிங்கண்ணு.

[கரு → கரும் + கண்.]

கருங்கண்ணன் *karu-ṅ-kaṇṇaṉ,* பெ.(n.) கண்ணேற்றை உண்டாக்கும் பார்வையுடையவன்; one who has evil eye (male). அந்தக் கருங்கண்ணன் பார்வையில் பட்டால் எந்தச் செயலும் வெற்றி பெறாது (உ.வ.).

ம. கரிங்கண்ணன்

[கரும் + கண்ணன்]

கருங்கண்ணாளன் *karu-ṅ-kaṇṇāḷaṉ,* பெ.(n.) மீன் வகை; a kind of fish. *"ஓலைவாலன் கருங்கண் ணாளன் ஊரிற்பெரிய மீனெலாம்"* (பறாளை. பள்ளு.16.).

ம. கரிங்கண்ணி

[கரு → கரும் + கண் + ஆளன்.]

கருங்கண்ணி[1] *karuṅkaṇṇi,* பெ.(n.) பருத்தி வகை (G.Tn.D.1.191); a species of cotton.

[கரும் + கண்ணி.]

கருங்கண்ணி[2] *karuṅ-kaṇṇi,* பெ.(n.) 1. கரிய கண் களையுடையாள்; black-eyed woman. *"மையார் கருங்கண்ணி" (திவ். திருவாய்.9,4,1).* 2. கண்ணேற்றை உண்டாக்கும் பார்வையுடையவள்; one who has evil eye (female). 3. மீன்வகை (வின்.); a kind of fish.

ம. கரிங்கண்ணி

[கரு → கரும் + கண்ணி.]

கருங்கண்ணி[3] *karuṅ-kaṇṇi,* பெ.(n.) பூரான்; centipede (சேரநா.).

மறுவ. ஆயிரக்காலி

ம. கரிங்கண்ணி

[கரு → கரும் + கண்ணி.]

கருங்கண்ணி[4] *karuṅ-kaṇṇi,* பெ.(n.) நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள சிற்றூர்; a village in Naga patinam (சேரநா.).

[கருங்கண்ணன் → கருங்கண்ணி. கருங்கண்ணன் பெயரிலமைந்த ஊர்.]

கருங்கண்ணிப்பாறை *karuṅ-kaṇṇi-p-pārai,* பெ.(n.) ஒருவகை மீன் (வின்.); a kind of fish.

ம. கரிங்கண்ணு

[கரும் + கண்ணி + பாரை.]

கருங்கண்தோகை *karuṅ-kaṇ-tōgai,* பெ.(n.) மயிலிறகு; peacock's feather (சா.அக.).

[கரும் + கண் + தோகை.]

கருங்கண்வாளை *karuṅ-kaṇ-vāḷai,* பெ.(n.) மீன் வகை; a kind of fish. *"வாவு கருங்கண்வாளை பவளவாளை" (பறாளை.பள்ளு.16.).*

[கரும் + கண் + வாளை.]

கருங்கத்தரி *karu-ṅ-kattari,* பெ.(n.) நீல நிறக் கத்தரிக்காய்; purple brinjal (சா.அக.).

[கரு → கரும் + கத்தரி.]

கருங்கத்தலை *karuṅkattalai,* பெ.(n.) ஒருவகை ஆற்று மீன்; a kind of river fish (சா.அக.).

[கரு → கரும் + (கல்+தலை – கற்றலை) கத்தலை.]



கருங்கத்தலை

கருங்கந்தன் *karu-ṅ-kandaṉ,* பெ. (n.) கார்க்கோடல்; acute-leaved mangrove (சா.அக.).

[கரும் + (காந்தள்) கந்தன்.]

கருங்கந்து *karu-ṅ-kandu,* பெ.(n.) நெற்களத்தில் பொலிக் கந்துக்கு அடுத்துவிழும் பதர் (வின்.); the second layer of chaff in a threshing floor, next to the poli-k-kandu.

மறுவ. கருக்காய் நெல்

[கரும் → கந்து.]

கருங்கரணை *karuṅkaraṇai,* பெ.(n.) கருப்புக் கரணைக் கிழங்கு; a black variety of elephant foot yam (சா.அக.).

[கரும் + கரணை.]

கருங்கரப்பான் *karuṅkarappāṉ,* பெ.(n.) கரப்பான் வகை; a kind of dark eruption.

[கரும் + கரப்பான்.]

கருங்கரிசலாங்கண்ணி *karuṅkarišalāṅkaṇṇi,* பெ.(n.) கருநிறக் கரிசலாங் கண்ணி; a black or blue variety of the eclipse plant.

[கரிசல் + ஆம் + கண்ணி.]

கருங்கரிசாலை *karuṅkarišālai,* பெ.(n.) ***கருங்கரி சலாங்கண்ணி*** பார்க்க; see *karu-ṅ-karišalāṅkaṇṇi* (சா.அக.).

[கரும் + கரிசாலை. கரிசலாங்கண்ணி → கரிசாலை.]

இது சித்தர் கூறியுள்ள பெரு மூலிகை இருபத்தி மூன்றில் ஒன்று. இதன் சிறப்பு திருமூலர் கருக்கிடை என்னும் நூலில் பின் வருமாறு குறிக்கப்பட்டு உள்ளதால், இது காயகற்பத்திற்குச் சிறந்ததா (சா.அக.).

"தின்னக் கரிசாலை தேகந் திரை போக்கும்
தின்னக் கரிசாலை சிறந்த நரை போக்கும்
தின்னக் கரிசாலை தேகஞ் சிறு பிள்ளை
தின்னக் கரிசாலை சிதையாதிவ் வாக்கையே.

கருங்கரிப்பான் *karuṅkari-p-pāṉ,* பெ.(n.) ***கருங்கரி சலாங்கண்ணி*** பார்க்க; see *karu-ṅ-karišalāṅ kaṇṇi.*

[கல் + (கரி → கரிப்பு) கரிப்பான்]

கருங்கல் *karuṅkal,* பெ.(n.) 1. மலைக்கல்; boulder of black rock, large granite stone. *"எருமையன்ன கருங்கல்" (புறநா,5,1.).* 2. ஞெகிழிக்கல், சக்கிமுக்கிக் கல் (தைலவ.தைல.); flint for striking fire. 3. பாறை யுடைத்த கல்; pebble or stone. 4. சித்திரக்கல்; ornamental granite of bright colour. 5. பொன்னின் மாற்றறியப் பயன்படுத்தும் உரைகல்; a black siliplous fossil touch stone, 6. காரீயக்கல்; black lead stone-Graphite. 7. தீ முருகற் செய்நஞ்சு (பாடாணம்); a kind of mineral poison with properties of phosphorous.

ம., பட. கரிங்கல்லு **கூ.** கர்ககல்.

[கரும் + கல்.]

கருங்கலம் *karuṅkalam,* பெ.(n.) கருநிற மட் பாண்டம்; earthen vessel. *"கருங்கலந் தோய் விலாக் காமர் பூந்துறை" (சீவக.97.).*

மறுவ. கருஞ்சட்டி

ம. கரிங்கலம்

[கரும் + கலம்.]

வளைந்து காய்ந்த மண் ஏனங்களைப் பெரிய கலத்தினுள் இட்டு, காற்றுப்புகாமல் மூடிச் சுடும்போது, சுட்ட ஏனங்கள் முழுதும் கருமையாக இருக்கும்.

கருங்கலி[1] *karuṅgali*, பெ.(n.) வற்கடம் (பஞ்சம்); famine. புதுமதிபோல வெண்குடைமீமிசை நிழற்றக் கருங்கலியொளித்து வன்பிலத்திடைக் கிடப்ப.

மறுவ. வறம், வற்கடம்.

[கரும் + கலி கரும் = மிகுந்த. கலி = துயர்.]

கருங்கலி[2] *karuṅkali*, பெ.(n.) ***கருங்கற்றாழை*** பார்க்க see *karuṅkaṟṟāḻai*.

[கரும் + கலி.]

கருங்கழுகு *karuṅkaḻugu*, பெ.(n.) கருப்பு நிறக் கழுகு; black vulture; king vulture (சா.அக.).

[கரும் + கழுகு.]

பிற கழுகுகள் இதைக் கண்டு அஞ்சும் இயல்புடையன.

கருங்கழுகு

கருங்கழுதை *karuṅkaḻudai*, பெ.(n.) கருப்பு நிறம் வாய்ந்த கழுதை; black ass (சா.அக.).

ஒ.நோ. கருநாய், கரும்பூனை.

[கரும் + கழுதை]

கருங்களத்தூர் *karuṅkaḷattur*, பெ.(n.) இராமநாத புரம் மாவட்டத்தில் உள்ள சிற்றூர்; a village in Rāmanādapuram district.

[கரும் + களம் + அத்து+ ஊர்–கருங்களத்தூர். 'அத்து' சாரியை.]

கருங்களம் *karuṅkaḷam*, பெ.(n.) களைவெட்டி; grass hoe (ம.அக.).

[கரும் + களம். கலம் → களம்.]

கருங்களமர் *karuṅkaḷamar*, பெ.(n.) உழுதுண்ணும் வேளாளரில் ஒருவகையினர்; a sect in vēḷāḷas who are tillers of the soil (பழ.தமி.109.).

[கரு → கரும் + களமர். கருத்தல் = செய்தல், உழைத்தல், நிலத்தில் பாடுபடுதல்.]

கருங்களர் *karu-ṅ-gaḷar*, பெ. (n.) கடல்மீன் வகை; sea-fish.

[கருமை + களர்.]

கருங்களிமண் *karuṅkaḷimaṇ*, பெ.(n.) இரும்புச் சத்து கலந்துள்ள களிமண்; fine clay containing manganese and iron.

[கரும் + களிமண்.]

கருங்கற்றலை *karuṅkaṟṟalai*, பெ.(n.) 1. கடல்மீன் வகை; umbrine, dark brown or coppery, attaining 9 inch. in length.

[கரும் + கற்றலை.]

கருங்கற்றாழை *karuṅ-kaṟṟāḻai*, பெ.(n.) ஆனைக் கற்றாழை; elephant aloe.

[கரும் + தாழை = கற்றாழை. கல் → கரும் = பெரிய.]

கருங்காக்கட்டான் *karuṅkākkaṭṭāṉ*, பெ.(n.) ***கருங்காக்கணம்*** பார்க்க; see *karuṅkākkaṇam*.

[கரு → கரும் + காக்கட்டான்.]

கருங்காக்கணம் *karuṅkākkaṇam*, பெ.(n.) காக்கணங் கொடிவகை; mussell-shell creeper.

[கரும் + காக்கணம்.]

கருங்காக்கொன்றை *karuṅkākkoṉṟai*, பெ.(n.) கொடிவகை(புட்ப.3.); a creeper.

[கரும் + காக்கொன்றை.]

கருங்காசி *karuṅkāśi*, பெ.(n.) வெண்கலம்; bell metal.

[கரும் + காசி. கஞ்சம் → காஞ்சம் → காஞ்சி → காசி (கொ.வ.).]

கருங்காசு *karuṅkāsu*, பெ.(n.) ஈழக்காசு; an ancient coin of Ceylon.

[கரு = பெரிய. கரு → கரும் → காசு = கருங்காசு.]

கருங்காஞ்சொறி *karuṅkāñcoṟi*, பெ.(n.) கருப்புக் காஞ்செறி; elinbring the black variety of a small chimbix nettle.

[கரும் + காஞ்சொறி.]

கருங்காடிகம் *karuṅkāḍigam*, பெ.(n.) இனிப்பு நாவற்பழம்; sweet jamoon.

[கள் → கான் → காளகம் → காடிகம்(கரியது.) கரு → கரும் + காடிகம்.]

கருங்காடு[1] *karuṅkāḍu*, பெ.(n.) சுடுகாடு; cremation ground. *"வெண்டலைக் கருங்காடுறை வேதியன்" (தேவா.39,2).*

[கரு + கரும் + காடு = கருங்காடு. கருத்தல் = வேகவைத்தல், சுடுதல்.]

கருங்காடு[2] *karuṅkāḍu*, பெ.(n.) திருநெல்வேலி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thirunelvēli district.

[கரும் + காடு – கருங்காடு.]

கருங்காடை *karuṅkāḍai*, பெ.(n.) கறுப்புக் காடைப் புள்; black-breasted bustard quail.

[கரும் + காடை – கருங்காடை.]

கருங்காணம் *karuṅkāṇam*, பெ.(n.) காட்டுக் கொள்; black horse-gram.

[கரும் + காணம் – கருங்காணம்.]

கருங்காந்தள் *karuṅkāndal*, பெ.(n.) கார்க் கோடல்; brown-backed acute-leaved mangrove.

[கரும் + காந்தள் – கருங்காந்தள்.]

கருங்காமாலை *karuṅkāmālai*, பெ.(n.) உடலில் ஆங்காங்கு தோன்றும் கருநிறக் காமாலை; a kind of scrofuloderm marked by deep black scars (சா.அக.).

[கரும் + காமாலை.]

கருங்காய் *karuṅkāy*, பெ.(n.) 1. இளம்பாக்கு (வின்.); dark areca-nut, not yet turned red. 2. சற்றே முதிர்ந்த தவசம் அல்லது காய்; grain or fruit almost ripe. 3. களிமண்கட்டி; clay sand.

[கருத்தல் = தோன்றுதல், பிறத்தல். கரு = தோன்றிய தொடக்க நிலை. இளமைப்பொருள் சுட்டியது. கரு → கரும் + காய்.]

கருங்காய்ப்பனை *karuṅkāy-p-panai*, பெ.(n.) பழம் கருநிறமாக இருக்கும் பனைவகை (சங்.அக.); palmyra tree bearing black fruit.

[கரும் + காய் + பனை.]

கருங்காரம் *karuṅkāram*, பெ.(n.) காடிக்காரம்; silver nitrate (சா.அக).

[கரும் + காரம்.]

கருங்காரை *karuṅkārai*, பெ.(n.) சல்லி, சரளைக்கற் களுடன் கலந்த புகைக்கீல் (தார்) கொண்டமைக்கப் படும் தளம்; asphalt.

[கரும் + காரை.]

கருங்கால் *karuṅkāl*, பெ.(n.) மாட்டு நோய் வகை (கால்.வி.23.); black leg, symptomatic anthrax.

[கரும் + கால்.]

கருங்கால்நாரை *karuṅkāl-nārai*, பெ.(n.) கரியநிற முள்ள கால்களுடைய ஒருவகை நாரை; a kind of crane with black legs (சாஅக.).

[கரும் + கால் + நாரை.]

கருங்கால்நாரை

கருங்காலக்குடி *karuṅkāla-k-kudi*, பெ.(n.) மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள சிற்றூர்கள்; a villages in Madurai and Rāmanādhapuram dts.

[கருங்காலி + குடி – கருங்காலிக் குடி → கருங்காலக்குடி (கொ.வ.) கருங்காலி = கருங்காலிபுரம்.]

கருங்காலன் *karuṅkālaṉ,* பெ.(n.) ஒருவகைக் கருப்பு எலி; a black rat (சா.அக.).

[கரும் + காலன்.]

கருங்காலி[1] *karuṅkāli,* பெ.(n.) எருமையூர் (மைசூர்)க் காடுகளில் காணப்படும் கருநிற மரம்; black wood/ coromandal ebony of Mysore. 2. மரவகை; Ceylon ebony. 3. எட்டி (மலை); strychnine tree. *'கருங்காலி உலக்கைக்கு வெள்ளிப்பூண் கட்டினதுபோல' (பழ.).*

ம. கரிங்ஙாலி; க. கரிமர, கக்கலி.

[கரும் + காலி.]

கருங்காலி[2] *karuṅgāli* பெ.(n.) 1. தொழிலாளர் போராட்டங்களில் பெரும்பான்மையோர்க்கு ஆதரவாகப் போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் வேலைக்குச் செல்லும் பணியாள்; workman who works for the master whose men are on strike, black leg. 2. ஆளுவத்தை (நிருவாகத்தை) எதிர்ப்பவர்களுடன் இருந்து கொண்டு ஆளுவத்துக்கும்(நிர்வாகத்துக்கும்) ஆதரவாகச் செயற்படுபவர்; black leg scab. தொழிலாளர்கள் 'கருங்காலிகள்' ஒழிக என்று கூக்குரலிட்டனர் (உ.வ.).

ம. கரிங்காலி

[கரும் + காலி.]

கருங்காலி[3] *karuṅgāli* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvaḷḷur dt.

[கரும் + காலி – கருங்காலி (கருங்காலிமரம்).]

கருங்காலி[4] *karuṅgali,* பெ.(n.) புன்செய் நிலத்தில் விளையும் கருப்பு நிற நெல்வகை; a species of paddy which grows in dry land.

[கரும் + காலி.]

கருங்காலிப்பட்டி *karuṅgāli-p-paṭṭi,* பெ.(n.) வேலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Vēlur dt.

[கருங்காலி + பட்டி– கருங்காலிப்பட்டி. கருங்காலி = கருங்காலிமரம்.]

கருங்காலிப்பட்டு *karuṅgāli-p-paṭṭu,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram dt.

[கருங்காலி + பற்று – கருங்காலிப் பற்று → கருங்காலிப் பட்டு.]

கருங்காலிப்பாடி *karuṅgāli-p-pāḍi,* பெ.(n.) மீவேண்ணாட்டைச் சார்ந்த ஊர்; a village of mīvēṇṇāḍu. *"மீவேண்ணாட்டு கருங்காலிப்பாடி ஆள்" (த.தொ.1971/113 கி.பி ஏழாம் நூற்றாண்டு. முதலாம் மகேந்திரவருமனின் 14 ஆம் ஆண்டு.).*

[கருட்காலி + பாடி. கருங்காலி = மரப்பெயர்.]

கருங்காலிப்பாடிப்பட்டு *karuṅgāli-p-pāḍi-p-paṭṭu,* பெ.(n.) திருவண்ணாமலை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvannamalai dt.

[கருங்காலி + பாடி + பட்டு– கருங்காலிப்பாடிப்பட்டு.]

கருங்காவகம் *karuṅ-kāvagam,* பெ.(n.) கடுக்காய்ப்பூ; gallnut flower (சா.அக.).

[கரும் + (காவிகம்) → காவகம்.]

கருங்காவயல் *karuṅgāvayal,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டதில் உள்ள சிற்றூர்; a village in Rāmanathapuram dt.

[கருங்காலி + வயல் – கருங்காலிவயல் → கருங்காவயல். கருங்காலி = ஒருவகைமரம்.]

கருங்காவி *karuṅkāvi,* பெ.(n.) **கருங்குவளை** (மலை.) பார்க்க; see *karuṅkuvaḷai.*

[கரும் + காவி.]

கருங்காவிகம் *karuṅkāvigam,* பெ.(n.) கருங்குவளை; blue Indian water lily. 2. அவுரி மருந்துண்டை; indigo cake of commerce (சா.அக.).

[கரும் + காவிகம்.]

கருங்காற்சம்பான் *karuṅkāṟ-cambāṉ,* பெ.(n.) கருநிறக்காலுள்ள குதிரை வகை (அசுவசா.152.); a species of horse, having dark coloured legs.

[கரும் + கால் + சம்பான்.]

கருங்காற்றலையன் *karuṅkāṟṟalaiyaṉ,* பெ.(n.) ஒருவகையெலி; a kind of rat (சா.அக.).

[கருங்கால் + தலையன்.]

கருங்கிளி *karuṅ-kiḷi,* பெ.(n.) கழுத்தைச்சுற்றி கருநிறமுள்ள கிளிவகை; having a black colour around its neck.

ம. கரிங்கிளி

[கரும் + கிளி.]

கருங்கிளி

கருங்கீச்சான் *karuṅ-kiccāṉ,* பெ.(n.) கருநிறக் கீச்சான் மீன் (மீனவ.); a kind of fish.

[கரும் + கீச்சான்.]

கருங்குங்கிலியம் *karuṅkuṅgiliyam,* பெ.(n.) கருநிறப் பிசின்; black-dammer.

[கரும் + குங்கிலியம்.]

இது வெள்ளைக் குங்கிலியத்தை விட அதிகமான புகை தருவதும் பளபளப்புத் தன்மை கொண்டதுமாகும்.

கருங்குட்டம் *karuṅkuṭṭam,* பெ.(n.) குட்டவகை (கலித்.65, உரை); black leprosy.

[கரும் + குட்டம்.]

கருங்குண்டகம் *karuṅkuṇḍagam,* பெ.(n.) பாறை களில் முளைக்கும் கருப்புப் பாசி; stone lichen. (சா.அக.).

[கரும் + குண்டகம். குண்டு - பாறை.]

கருங்குண்டு *karuṅguṇḍu,* பெ.(n.) காசுக்கட்டி; catachue.

[கரும் + குண்டு. பாக்கைக்காய்ச்சிச் சிறுபகுதிகளாகக் காயவைத்து எடுப்பது காய்ச்சுக் கட்டியாம். இது கருநிறமாகவும் சிறுசிறு துண்டுகளாகவும் இருப்பதால் கருங்குண்டு எனப்பெயர் பெற்றது.]

கருங்குண்டுமிளகாய் *karuṅguṇḍu miḷagāy,* பெ.(n.) கருஞ்சிவப்பு குண்டுமிளகாய்; a blackish chilly which is round in shape.

[கரும் + குண்டு + மிளகாய்.]

கருங்குணம் *karuṅguṇam,* பெ.(n.) தீக்குணம்; bad, malevolent disposition. *"கருங் குணத்தார் கேண்மை கழிமின்"(சிறுபஞ்.26.).*

[கரும் + குணம் – கருங்குணம்.]

கருங்குந்தம் *karuṅkundam,* பெ.(n.) கண்ணோய் வகை (வின்.); a disease of the eye.

[கரும் + குந்தம். குல் → குன்று → குந்தம். குந்தம் = குற்றம், குறைபாடு, நோய்.]

கருங்கும்மெனல் *karuṅkummeṉal,* பெ.(n.) மிக இருளுதல் குறிப்பு (வின்.); phrase signifying pitch dark.

[கரும் + கும் + எனல் – கருங்கும்மெனல். 'கும்' ஒலிக்குறிப்பு.]

கருங்குமிழ் *karuṅkumiḻ,* பெ.(n.) கருங்குமிழ் பூமரம்; black kandahar tree, bearing blue or black flowers (சா.அக).

[கரு → கரும் + குமிழ்.]

கருங்குமுதம் *karuṅ-kumudam,* பெ.(n.) ஒருவகைக் கண்ணோய்; a kind of eye disease.

[கரும் + குமுதம்.]

கருங்குயில் *karuṅkuyil,* பெ.(n.) கரும்பச்சை நிறமுள்ள ஆண்குயில்; the black indian cukkoo.

ம. கரிங்குயில்

[கரும் + குயில். குயிலின் சேவலைக் கருங்குயில் என்றும், பெட்டையைப் புள்ளிக்குயில் என்றும் வழங்குவர்.]

கருங்குரங்கு *karunṅ kuraṅgu,* பெ.(n.) குரங்கு வகை(சீவக.1893,உரை);black monkey.

ம. கரிங்குரங்நு

[கரும் + குரங்கு.]

கருங்குரவை *kauṅkuravai,* பெ.(n.) கருமை நிறமுடையகுரவை மீன்வகை (மீனவ); **கருங்குறவை** பார்க்க; see *karuṅkuṟavai.*

[கரும் + (குறவை) → குரவை]

கருங்குரா *karuṅkurā,* பெ.(n.) காட்டுக் கரணைக் கிழங்கு; wild yam root.

[கரும் + குரா.]

கருங்குருந்து *karuṅkurundu,* பெ.(n.) மருந்து அரைக்கும் குழியம்மி செய்வதற்குப் பயன்படும் கருங்கல்; a black stone for preparing cancave grinding stone used for making medicine.

[கரு + கரும் + குருந்து.]

கருங்குருவி *karuṅkuruvi,* பெ.(n.) **கரிக்குருவி** பார்க்க; see *kari-k-kuruvi. "கருங்குருவி யெந்நாளுங் காக்கைக் கொளித்தே" (திருவாலவா.60.2.).*

மறுவ. கரிக்குருவி

ம. கரிங்குரிகில்

[கரும் + குருவி – கருங்குருவி.]

கருங்குவளை *karuṅkuvaḷai,* பெ.(n.) 1. கருநீல நிறக்குவளைப்பூ; blue nelumbo. 2. நெய்தல் பார்க்க(குறிஞ்சிப்.84, உரை.); see neydal.

மறுவ. நீலம், கல்லாரம், பானல், காவி.

[கரும் + குவளை – கருங்குவளை.]

கருங்குழல் *karuṅkuḻal,* பெ.(n.) கருங்குருவி; common drango.

[கரு → கரும் + குழல். குழல் - கூந்தல். நீண்டகூந்தல் போன்ற வாலுடையது.]

கருங்குழி *karuṅkuḻi,* பெ.(n.) காஞ்சிபுரம், விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள சிற்றூர்; a village in Kanchipuram and Villuppuram dt.

[கரும் + குழி - கருங்குழி.]

கருங்குழிக்கரும்பு *karuṅkuḻi-k-karumbu,* பெ.(n.) காட்டுக் கரும்பு; wild sugarcane (சா.அக.).

[கரும்குழி + கரும்பு. கருங்குழி என்னும் இடத்தில் முதலில் பயிராக்கப்பட்ட காட்டுக்கரும்பாகலாம்.]

கருங்குழித்தாவு *karuṅkuḻi-t-tāvu,* பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டத்து அறந்தாங்கி வட்டத்தில் உள்ள ஊர்; a village in Arantangi taluk Pudukkottai dt.

[கரும் + குழி + தாவு– கருங்குழித்தாவு . தடவு→தாவு (சமமான இடம்).]

கருங்குளந்தான்விளை *karunkuḷandāṉviḷai,* பெ.(n.) குமரிமாவட்டத்து அகத்தீசுவரம் வட்டத்துச் சிற்றூர்; a village in Agathiswaram taluk in Kanniyakumari dt.

[கருங்குளம் + அத்து + அன் + விளை – கருங்குளத்தன் விளை→ கருங்குளத்தான் விளை. 'அத்து' சாரியை. 'அன்' ஆ.பா.ஈ.று. விளை - காவற்காடு, பனங்காடு.]

கருங்குளவி *karuṅkuḷavi,* பெ.(n.) குளவி வகை; a species of wasp. *"கருங்குளவிச் சூரைத் தூற்றீச்சங் கனிபோல்" (தனிப்பா.1,110,50.).*

[கரும் + குளவி – கருங்குளவி.]

கருங்குளிரி *karuṅkuḷiri,* பெ.(n.) நஞ்சுள்ள கடற்பாம்பு; poisonous sea-snake.

[கரும் + குளிரி. குளிர்தல் - சாதல், சாகச்செய்யும் நஞ்சு.]

கருங்குற்றி *karuṅkuṟṟi,* பெ.(n.) 1. கருப்புக்கம்பம்; a black stake or post. 2. ஒருவகைப் புழு; a kind of pest.

ம. கரிங்குற்றி

[கரு → கரும் + குற்றி. குற்றி - சிறியது, குட்டையானது.]

கருங்குறிஞ்சி *karuṅkuṟiñji,* பெ.(n.) கருநிறப்பூப் பூக்கும் குறிஞ்சி; a kind of medicinal plant.

மறுவ. கருங்குறிஞ்சான், கருங்கோற் குறிஞ்சி.

ம. கரிங்குருஞ்ஞி

[கரும் + குறிஞ்சி.]

கருங்குறிஞ்சிகா *karuṇkuṟiñjikā,* பெ.(n.) மணித்தக்காளிக்காய்; berries of black night show.

[கரும + குறிஞ்சி + கா. கரிய சிறிய காய்.]

கருங்குறுவை *karuṅkuṟuvai,* பெ.(n.) மூன்று மாதத்தில் விளையும் ஒருவகை நெல்; a dark variety of paddy maturing in three months.

ம. கரிங்குறுவ

[கரும் + குறுவை – கருஙகுறுவை]

கருங்குன்றி *karu-ṅ-kuṉṟi,* பெ.(n.) கருநிறக் குன்றி மணி (l.); a black species of crab's-eye.

ம. கரிங்குன்னி

[கரும் + குன்றி – கருங்குன்றி.]

கருங்கூத்து *karuṅkūttu,* பெ.(n.) இழிவான நாடகம்; drama of a very low order. *"முதுபார்ப்பான் வீழ்க்கைப்பெருங் கருங்கூத்து" (கலித்.65: 29).*

[கரு - பெரிய, வலிய, கொடிய, தாழ்ந்த, இழிந்த. கரும் + கூத்து.]

கருங்கூலம் *karuṅkūlam,* பெ.(n.) அகிற்கட்டை; eagle - wood.

[கரும் + கூலம்.]

கருங்கெண்டை *karuṅkeṇḍai,* பெ.(n.) ஆற்றுமீன் வகை; bitter crap, silvery attaining 5 inch.in length.

[கரும் + கெண்டை – கருங்கெண்டை. கள் → கண்டு → கெண்டை.]



கருங்கெண்டை

கருங்கெளுத்தி *karuṅkeḷutti,* பெ.(n.) கரியநிறம் கொண்ட கெளுத்தி மீன்வகை; black coloured scorpion fish.

மறுவ. தேளிமீன்

[கரும் + கெளுத்தி.]



கருங்கெளுத்தி

கருங்கை *karuṅkai,* பெ.(n.) 1. வலிமையுடைய கை; brawny hand of labour, as of smiths. *"கருங்கைக் கொல்லர்" (சிலப். 5:29.).* 2. கொல்லுங்கை (திவா.); slaughtering hand. *"கன்றிய தொழிற்கை கருங்கை யெனப்படும்"* (திவா.). 3. மேகநோய் கொண்ட கை; rendered black from venereal causes (சா.அக.).

[கரும் + கை – கருங்கை. கரு = பெரிய, வலிய, கொடிய. வினை செய்து காய்ப்பேறும் போது செந்நிறத்தார் அல்லது பொன்னிறத்தார் கை மிகச் சிவந்தும், கருநிறத்தார் கை மிகக் கறுத்தும், தோன்றுவது இயல்பு. 'செய் தகை சேவேறும் செய்யாத கை நோவேறும்' என்பது பழமொழி. இது செந்நிறத்தார் கையைக் குறித்தது. கருநிறத்தார் கை கருங்கை எனப்படும். "கொன்றுவாழ் தொழிலினும் வன்பணித் தொழிலினும் கன்றிய தொழிற்கை கருங்கையெனப்படும்" (திவா.). கருங்கை என்பதற்கு வலியகை என்று பொருளுரைப்பார் அடியார்க்கு நல்லார். அப்பொருள் இருவகை நிறத்தார்க்கும் பொதுவாகும். கருநிறத்தாராயின், கருங்கை என்பது கருமையையும் வலிமையையும் ஒருங்கே உணர்த்தும். கருநிறத்தாரின் பெரும்பான்மை பற்றியே, கருங்கை யென்பது செங்கையையும் தழுவிற்றென அறிக (வே.க.128).]

கருங்கையான் *karuṅkaiyāṉ,* பெ.(n.) ***கரிசலாங் கண்ணி*** (சங்.அக.) பார்க்க; see *kariśalāṅ-kaṇṇi.*

[கரும் + கையான் – கருங்கையான். 'கை' என்பது இங்கு இலைகளைக் குறித்தது.]

கருங்கொக்கு *karuṅkokku,* பெ.(n.) கொக்கு வகை (பதார்த்த.889.); a dark kind of paddy-bird.

ம. கரிங்கொக்கு

[கரும் + கொக்கு – கருங்கொக்கு.]

கருங்கொக்கு

கருங்கொட்டி *karuṅ-koṭṭi,* பெ.(n.) 1. கருநெய்தல்; black Indian water lily. 2. கருப்புக் கொட்டிக்கிழங்கு; the root of black Indian water lily.

[கரு → கரும் + கொட்டி.]

கருங்கொட்டை *karuṅkoṭṭai,* பெ.(n.) கருக்காத்தா மரம்; jagged jujube (சா.அக.)

[கரும் + கொட்டை.]

கருங்கொடி *karuṅkoḍi,* பெ.(n.) 1. கொடிவகை (வின்.); a kind of creeper that yields berries. 2. வெற்றிலை வகை (G.sm.d.215.); one of the two chief varieties of betel. 3. குறிஞ்சா; common delight of the wood (சா.அக.).

ம. கரிங்கொடி

[கரும் + கொடி.]

கருங்கொடிக்கத்தரி *karuṅkoḍi-k-kattari*, பெ.(n.) வெற்றிலைத் தோட்டத்தில் ஊடுபயிராகப் பயிரிடும் கத்தரி; brinjal cultivated in the betel-vine gardens.

[கரும் + கொடி + கத்தரி.]

கருங்கொடிவேலி *karuṅkoḍi-vēli*, பெ.(n.) கருப்புச் சித்திர மூலம்; black flowered leadwort (சா.அக.).

[கரு → கரும் + கொடிவேலி.]

கருங்கொண்டல் *karuṅkoṇḍal*, பெ.(n.) 1. தென்கீழ்க் காற்று (வின்.); south-east wind. 2. வடமேற்கு காற்று (யாழ்.அக.); north-west wind. 3. மழைமேகம்; rainy clouds.

[கரு = பெரிய, வலிய. கரும் + கொண்டல் – கருங்கொண்டல்.]

கருங்கொம்பு *karuṅkombu*, பெ.(n.) ஊதுகொம்பு வகை (நாஞ்.); a kind of bugle.

[கரும் + கொம்பு – கருங்கொம்பு (நீண்ட பெரிய கொம்பு).]

கருங்கொல் *karuṅkol*, பெ.(n.) இரும்பு (சூடா.); iron.

[கரும் + கொல் – கருங்கொல். 'கொல்' = தட்டுதல், அடித்தல். கொல்லன் உலையில் தட்டிச் செய்யப்படும் மாழை 'கொல்' தொழிலாகுபெயராகி மாழைப்பொது வாயிற்று (மாழை = உலோகம்) 'கொல்' முன்பின்னாக மாறி (இலக்கணப் போலியாகிக் கொல்(லு) → லோக (loha) என, வடபுல மொழிகளில் திரிந்தது.]

கருங்கொல்லன் *karuṅkollaṉ*, பெ.(n.) கருமான்; blacksmith.

[கரும் + கொல்லன். கரு → கரும் + கொல் = கருங்கொல்(இரும்பு). கருங்கொல் + அன்(ஆ.பா.ஈறு.). கருங்கொல்லன் = இரும்புப்பணி செய்பவன்.]

கருங்கொள் *karuṅkoḷ*, பெ.(n.) **கருங்காணம்** (வின்.) பார்க்க; see *karuṅkāṇam*.

ம. கரிங்கொள்ளு

[கரும் + கொள் – கருங்கொள்.]

கருங்கொள்ளிக்கரப்பன் *karuṅkoḷḷi-k-karappaṉ*, பெ.(n.) கருப்புக் கொள்ளிக் கரப்பன்; a kind of strop hulus in children attended with dark spots (சா.அக.).

[கரு →கரும் + கொள்ளி + கரப்பான்.]

கருங்கொன்றை *karu-ṅ-koṉṟai*, பெ.(n.) மஞ்சட்கொன்றை; Siamese tree senna.

[கரும் + கொன்றை – கருங்கொன்றை.]

கருங்கோங்கு *karuṅ-kōṅgu*, பெ.(n.) 1. கருப்புக் கோங்கு; tinnevely black dammer. 2. நெடுவார்க் கோங்கு; dipterocarp dammer (சா.அக.).

[கரு → கரும் + கோங்கு.]

கருங்கோலம் *karuṅkōlam*, பெ.(n.) இரும்பு; iron (சா.அக.).

[கருங்கொல் → கருங்கோலம். கருங்கோல் இரும்பு.]

கருங்கோலா *karuṅkōlā*, பெ.(n.) கட்டா என்னும் மீன் வகை (முகவை மீன.).

[கரு → கரும் + கோலா.]

கருங்கோவை *karuṅkōvai*, பெ.(n.) கரும்புக் கோவை; black bitter melon (சா.அக.).

[கரு → கரும் + கோவை.]

கருங்கோழி *karuṅkōḻi*, பெ.(n.) 1. கறுப்புக் கோழி (பதார்த்த.869.); fowl of a black variety. 2. கறுப்பு உயர்வகைக் கோழிகளுள் ஒன்று; a highly prized variety of black fowl (சேரநா.).

ம. கரிங்கோழி

கருங்கோழி

[கரும் + கோழி.]

கருங்கோழிகன்னிமுட்டை *karuṅkōḻikaṉṉi muṭṭai*, பெ.(n.) கருங்கோழி முதல் ஈடாக இடும் முட்டை; the first set of eggs laid by the black foul.

[கரு → கரும் + கோழி + கன்னி + முட்டை. இது உடலுக்கு வலுவைத் தரும் என்பர்.]

கருங்கோள் *karuṅkōḷ*, பெ.(n.) இராகு என்னும் நிழற்கோள் (வின்.); Rāhu, the ascending node.

2. ஒருவகை நச்சுப்பாம்பு; a snake, highly poisonous (சேரநா.).

ம. கரிங்கோளி

[கரும் + கோள் – கருங்கோள்.]

கருச்சிதை–தல் *karu-c-cidai-,* 2 செ.கு.வி.(v.i.) ***கருக்கலை–தல்*** பார்க்க; see *karu-k-kalai-,*

[கரு + சிதை.]

கருச்சிதைவு *karu-c-cidaivu,* பெ.(n.) **கருக்கலைப்பு** பார்க்க; see *karu-k-kalaippu.*

[கரு + சிதைவு.]

கருச்சீலை *karu-c-cīlai,* பெ.(n.) 1. கருமருந்து தடவிய துணி; piece of cloth smeared with magic paint. 2. மாதவிடாய்ச் சீலை; menstrual cloth.

[கரு + சீலை. சீரை → சீலை.]

கருச்சீவல் *karu-c-cīval,* பெ.(n.) கடற்பாசி; sea weed.

[கரு + சீவல்.]

கருஞ்சங்கங்குப்பி *karuñcaṅgaṅkuppi,* பெ.(n.) கருப்புச் சங்கங்குப்பி; black-flowered glory tree.

[கரு → கரும் + சங்கங்குப்பி.]

கருஞ்சங்கு *karuñ-caṅgu,* பெ.(n.) மீன்வகை (சங்.அக.); shell - fish. 2. கருப்புச் சங்கஞ்செடி; a black variety of four-spined monetia. 3. கருப்புச் சங்கு; black conch (சா.அக.).

[கரும் + சங்கு – கருச்சங்கு.]

கருஞ்சடைச்சி *karuñcaḍaicci,* பெ.(n.) 1. கருப்புச் சடைச்சி; a black variety of Indian snake root. 2. கருப்பு நெட்டிச் செடி; black solar (சா.அக.).

[கரு → கரும் + சடைச்சி.]

கருஞ்சந்தனம் *karuñcandaṉam,* பெ.(n.) கருப்புச் சந்தனம்; black sandal wood.

[கரு → கரும் + சந்தனம்.]

கருஞ்சரக்கு[1] *karuñcarakku,* பெ.(n.) மேன்மையான சரக்குகள்; superior kind of drugs.

கரு = பெரிய, உயர்ந்த, சிறந்த, மேன்மையான.

[கரு → கரும் + சரக்கு.]

கருஞ்சரக்கு[2] *karu-ñ-carakku,* பெ.(n.) 1. கூலம் (சிலப்.5,23, அரும்); grains, as paddy, millet, etc. 2. பலசரக்கு; groceries. 3. கருப்பு நிறமான சரக்குகள், கருஞ்சீரகம், கருஞ்சூரை, கருநெல்லி முதலியன; black variety of drugs such as black common hedge caper shrub, black goose berry.

[கரும் + சரக்கு.]

கருஞ்சாட்டியம் *karuñ-cāṭṭiyam,* பெ.(n.) கருந்துவரை; apple fruited bony (சா.அக.).

[கரு → கரும் + சாட்டியம்.]

கருஞ்சாணி *karuñcāṇi,* பெ.(n.) **கருஞ்சாளி** பார்க்க; see *karuñcāḷi.*

[கரு → கரும் + சாணி.]

கருஞ்சாந்து *karu-ñ-cāndu,* பெ.(n.) 1. குழைசேறு (தைலவ.தைல); clay used as mortar for building. 2. புனுகு, மான்மணத்தி, அகில் ஆகியவை சேர்ந்த கருப்புக் கலவைச்சாந்து; a black mixture of perfumes such as a civet, musk, agil, etc. (சா.அக.).

[கரும் + சாந்து – கருஞ்சாந்து.]

கருஞ்சாமிக் கவுண்டன் பாளையம், *karuñcāmi-k-kavuṇḍaṉpāḷaiyam,* பெ.(n.) கோவை மாவட்டம் கோயம்புத்தூர் வட்டத்துச் சிற்றூர்; a village in Coimbatore taluk in Coimbatore dt.

[கரும் + சாமி + கவுண்டன்+ பாளையம்.]

கருஞ்சாமை *karuñcāmai,* பெ.(n.) சாமைவகை; a species of little millet.

[கரும் + சாமை – கருஞ்சாமை.]

கருஞ்சாயவேர் *karuñcāya-vēr,* பெ.(n.) சாயவேர் வகை (வின்.); madder root.

[கரும் + சாயம் + வேர்.]

கருஞ்சார் *karuñcār,* பெ.(n.) அரைப்பொருத்து (இ.வ.); hip-joint.

[கரும் + சார் – கருஞ்சார். சார் - சார்தல், சேர்தல், பொருந்துதல், கரு - பெரிய. கருஞ்சார் - பெரிய மூட்டுப் பொருத்து.]

கருஞ்சாரை *karuñcārai,* பெ.(n.) 1. சாரைப்பாம்பு வகை; black rat-snake. 2. வழலை; a mystic name for the quintessance used in alchemy. 3. ஒரு வகைப் பூடு; a plant, black rusty varnish.

[சால் → சார் → சாரை (நீட்சி, நீளமானது).]

கருஞ்சாரைப்பிச்சு *karuñcārai-p-piccu,* பெ.(n.) மருந்திற்குப் பயன்படும் கருப்புச் சாரைப் பாம்பின் பித்தப்பை; the bile duct of black rat-snake used in medicine (சா.அக).

[கரு → கரும் + சாரை + பிச்சு(பித்தப்பை). பித்து → பிச்சு.]

கருஞ்சாளி *karuñcāḷi,* பெ.(n.) கல்யானை (காண்டா மிருகம்); rhinoceros.

[ஆள்(ஆண்) → ஆளி → சாளி (ஆண்விலங்கு) கரு = பெரிய. கரு → கரும் + சாளி.]

கருஞ்சாளை *karuñcāḷai,* பெ.(n.) தரங்குறைந்த கருப்பு மீன் வகை (வின்.); a dark, inferior kind of fish.

[கரும் + சாளை– கருஞ்சாளை. கரு = பெரிய. சாளை = ஆண் விலங்கு, மீன்களுள் ஆணினம்.]

கருஞ்சிட்டை *karuñciṭṭai,* பெ.(n.) கருந்தழும்பு; a black scar (சா.அக.).

[கரு → கரும் + சிட்டை.]

கருஞ்சிலந்தி *karuñcilandi,* பெ.(n.) 1. ஒருவகைப்பூ மரம்; golden blossomed pear tree. 2. கருப்புச் சிலந்திப்புண்; black ulcer. 3. கருப்புப் புற்றுநோய்; black cancer (சா.அக.)

[கரு → கரும் + சிலந்தி. சிலை = கல். சிலை → சிலந்தி (கட்டி).]

கருஞ்சிலி *karuñcili,* பெ.(n.) குறிஞ்சான்; indian ipecacuanha (சா.அக.).

[கரு → கரும் + சிலி.]

கருஞ்சிலை *karuñcilai,* பெ.(n.) கருநிறக்கல் (வின்.); black-rock.

[கரும் + சிலை – கருஞ்சிலை.]

கருஞ்சிலைக்குளான் *karuñcilai-kuḷāṉ,* பெ.(n.) கருங்கல்லிற் குள்ளிருக்கும் கெண்டகச் சிலை; இது மருந்துச் சரக்குகளுள், துணைச் சரக்காகும்; a mineral substance found in the strata of granite stones (சா.அக.).

[கரு → கரும் + சிலைக்கு + (உள்ளான்) உளான்.]

கருஞ்சிலைக்கூழன் *karuñcilai-k-kūḻaṉ,* பெ.(n.) கருங் கூழாங்கல்; a black pebble found on the sea-shore (சா.அக.).

[கரு → கரும் + சிலை + கூழன்.]

கருஞ்சிவதை *karuñcivadai,* பெ.(n.) கருப்புச் சிவதைக்கொடி; the black variety of indian Jalap.

[கரு → கரும் + சிவதை.]

இது காரமும் கசப்பும் கலந்த சுவையுடையது. எலி கடித்த நஞ்சை நீக்கும் என்பர்.

கருஞ்சிவதைவேர் *karuñcivadhaivēr,* பெ.(n.) நச்சுத்தன்மையுடைய கருஞ்சிவதைவேர்; black turpeth root poisonous by nature (சா.அக.).

[கரு → கரும் + சிவதை + வேர்.]

கருஞ்சிற்றகத்தி *karuñciṟṟagatti,* பெ.(n.) 1. கருப்புச் சிற்றகத்தி; a black variety of sesbane. 2. கருஞ்செம்பை; bastard sensitive plant (சா.அக.).

[கரு → கரும் + சிறு + அகத்தி]

கருஞ்சிறைப்பறவை *karuñciṟai-p-paṟavai,* பெ.(n.) மயில்; peafowl. *"கருஞ்சிறைப் பறவையூர்திக் காமரு காளை தான்கொல்" (சீவக. 1261.).*

[கரும் + சிறை + பறவை.]

கருஞ்சீந்தில் *karu-ñ-cīndil,* பெ.(n.) பேய்ச்சீந்தில்; black moon-creeper (சா.அக.).

[கரு (பெரிய) + சீந்தில்.]

கருஞ்சீரகம் *karuñ cīragam,* பெ.(n.) சீரகவகை (பதார்த்த. 1034.); black cumin.

ம. கரிஞ்சீரகம்; க. கடசீரிகெ., கர்சீரிகெ.

[கரும் + சீரகம்.]

கருஞ்சீரக விதைகள் மணத்தோடு காரச்சுவையும் கொண்டவை. இவ்விதைகளைக் கறி, உணவுப்பண்டங்களில் சேர்ப்பதுண்டு. இவ்விதைகளைத் துணிகளின் மடிப்புகளிடையே வைத்தால் பூச்சித்தொல்லை கட்டுப்படும்.

கருஞ்சீரகம்

கருஞ்சுக்கான் *karuñcukkāṉ,* பெ.(n.) 1. ஒருவகைக்கல் (வின்.); black kanker. 2. சுடாத கருப்புச் சுக்கான் கல்; black limestone. 3. மணற்பொருக்குஞ்சுக்கான் (போக. நிகண்டு.), கருப்புச் சுண்ணாம்புக்கல்; a black variety of quick lime as opposed to white.

[கரும் + சுக்கான். சுள்→ சுக்கு→ சுக்கான் = கோடை வெப்பத்தால் சூடேறிப் பாதத்தைச் சுடும் கல்.]

கருஞ்சுக்கிரன் *karuñcukkiraṉ,* பெ.(n.) விழியைச் சுற்றிலும் சிறுபுள்ளிகளை உண்டாக்கும் கண்ணோய்; a disease of the eye causing white specks in the eye.

[கரு →கரும் + சுக்கிரன். சுக்கல் = மிகச்சிறியது. சுக்கல்→ சுக்கரம் → சுக்கிரன் (கொ.வ.)]

கருஞ்சுண்டி *karuñcuṇḍi,* பெ.(n.) தொட்டால் சிணுங்கிச் செடி; sesa sitire plant.

[சுள் + தி = சுண்டி. சுள் = சுருங்கு. கரு → கரும் + சுண்டி.]

கருஞ்சுருட்டை *karuñcuruṭṭai,* பெ.(n.) ஒருவகைக் கருப்புப் பாம்பு; a kind of black carpet snake.

[கரு → கரும் + சுருட்டை.]

கருஞ்சுருமா *karuñcurumā,* பெ.(n.) கருப்புச் சுருமாக்கல்; a black variety of sulphuret of antimony (சா.அக.).

[கரு → கரும் + சுருமா.]

கருஞ்சுரை[1] *karuñcurai,* பெ.(n.) 1. சுரைக்காய் வகை (வின்); a black guard. 2. காட்டுக்கத்தரி; hedge caper shrub.

ம. கரிச்சுர

[கரும் + சுரை – கருஞ்சரை.]

கருஞ்சுரை[2] *karuñcurai,* பெ.(n.) 1. புகையிலை; tobacco. 2. நீர்முள்ளி; water-thorn (செ.அக.).

[கரும் + சுரை.]

கருஞ்சுரை[3] *karu-ñ-curai,* பெ.(n.) நீர் முள்ளி; water thirst (சா.அக.).

[கரு + சுரும் + சுரை. சுல் → சுரை = முட்போன்ற சுணைப்புடையது.]

கருஞ்சுழுந்து *karuñ-cuḻundu,* பெ.(n.) நீண்ட இலையுடைய காட்டுமரம், வெள்ளைக் கோரான்; long-leaved jungle geranium (செ.அக.).

[கரும் + சுழுந்து – கருஞ்சுழுந்து. சுளுந்து = காட்டு மரவகை. சுளுந்து → சுழுந்து.]

கருஞ்சூகம் *karuñcūgam,* பெ.(n.) அகச்சம்பங்கி; a kind of primrose creeper (சா.அக.).

[கரும் + சூகம். சூகம் = தாமரை.]

கருஞ்சூரகம் *karuñcūragam,* பெ.(n.) ***கருஞ்சூரை*** பார்க்க; see karuñcūrai.

[கரு → கரும் + (சூரை) சூரகம்.]

கருஞ்சூரை[1] *karuñcūrai,* பெ.(n.) 1. காட்டுக்கத்தரி (வின்.); hedge caper shrub. 2. ***செங்கத்தரி*** **(மலை.)** பார்க்க; see *seṅkattari.*

[கரும் + சூரை – கருஞ்சூரை.]

கருஞ்சூரை[2] *karuñcūrai,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy. *"கருஞ்சூரை சூரை கறுத்ததிக்க ராதி" (நெல்விடு. 187.).*

[கரும் + சூரை – கருஞ்சூரை.]

கருஞ்சூளை *karuñcūḷḷai,* பெ.(n.) மண் ஏனங்கள் முழுமையும் கருப்பாக இருக்கும் வண்ணம், சுடுவதற்கேற்ற சூளை; kiln arrangement to get fully black clay ware. ***கருங்கலம்*** பார்க்க; see *karuñgalam.*

[கரும் + சூளை.]

கருஞ்சூளைப்பானை *karuñcūḷḷai-p-pāṉai,* ப.(n.) கருஞ்சூளையில் வைத்துச் சுடப்பட்ட பானை; pots baked in black kiln.

மறுவ. கருஞ்சுள்ளைப்பானை

[கரும் + சூளை + பானை.]

கருஞ்செண்பகம் *karuñ-ceṇbagam,* பெ.(n.) கருஞ் செண்பகப்பூ; a black variety of champak (சா.அக.).

[கரும் +செண்பகம்.]

கருஞ்செந்தாமரை *karuñ-cendāmarai,* பெ.(n.) கருஞ்சிவப்புத் தாமரைப்பூ; the lotus of a dark red colour (சா.அக.).

[கரு → கரும் + செந்தாமரை.]

கருஞ்செந்தொட்டி *karuñcen-doṭṭi,* பெ.(n.) ***கருங்காஞ்சொறி,*** பார்க்க; karuṅkāñcoṟi (சா.அக.).

[கரு → கரும் + செந்தொட்டி.]

கருஞ்செம்பருத்தி *karuñcemparutti,* பெ.(n.) செம்பருத்தி; common sesban.

மறுவ. கருஞ்செம்பை, சகுடை, செம்பை, கருஞ்செம்பருத்தி, கருஞ்சிற்றகத்தி.

[கரும் + செம்பருத்தி.]

கருஞ்செய்[1] *karuñcey,* பெ.(n.) நன்செய்; wet cultivation *"நீர்நிலமுங் கருஞ்செய்புன்செயும்" (S.I.I.V. 170.).*

[கரும் + செய். கரு = பெருமை, சிறப்புக் குறித்த சொல்லாகலான், சிறப்பு நோக்கி நன்செய் நிலப்பொருளில் கருஞ்செய் எனப் பண்பு குறித்து, முன்மொழி சிறந்தது.]

கருஞ்செய்[2] *karuñcey,* பெ.(n.) உழப்படாத புன்செய்; dry land, uncultivated waste. *"இந் நான்கெல்லைக்குட்பட்ட நஞ்செய் கருஞ்செய்களும்" (S.I.I.iv.106.). "நான்கெல்லைக்குட்பட்ட நீர் நிலமும் கருஞ்செய் புன்செய்யும்" (S.I.I.v.170.).*

[கரு = வலிய, கரடான. கரும் + செய் – கருஞ்செய் = கரம்பு நிலம்.]

கருஞ்செவ்வாப்பு *karuñcevvāppu,* பெ.(n.) பிறந்த குழந்தையின் நோய்க்கு அறிகுறியான நிற வேறுபாடு (இ.வ.); unhealthy colour of a new infant, as patches of dark on the skin.

[கரும் + செவ்வாப்பு – கருஞ்செவ்வாப்பு. செவ்வாப்பு = செந்நிறத் தோல்நோய்.]

கருஞ்சேம்பு *karuñcēmbu,* பெ.(n.) ***கல்லடிச் சேம்பு*** பார்க்க; see *kallaḍi-c-cēmbu.*

[கரு + சேம்பு.]

கருஞ்சேரா *karuñcērā,* பெ.(n.) கடித்தலால் உடம்பில் கறு நிறமான தடிப்பை உண்டாக்கும் ஒரு நச்சுப்பூச்சி (சீவரட்.); a poisonous insect whose bite produces dark patches on the skin (செ.அக.).

[கரும் + சேரா. சேரா = உடலுக்கு ஒவ்வாமை விளைவிப்பது.]

கருஞ்சேல் *karuñ-cēl,* பெ.(n.) கரு நிறமுடைய ஆற்றுக்கெண்டை மீன்; a black Carnatic carp.

[கரு = கருமை. கரு + சேல்.]

கருஞ்சேவகம் *karuñcēvagam,* பெ.(n.) பெருவீரச்செயல்; daring act of heroism. *"கருஞ் சேவகஞ்செய்து செஞ்சோறறச்செய்த கைம்மாறு.' (கலிங். 477, புதுப்.).*

[கரும் + சேவகம். கரு = பெரிய, உயர்ந்த.]

கருஞ்சேவகம் பெரிதும், போர்த்தொழிலையே குறித்தது. உயிர் வழங்கும் பெருஞ்செயல் என்னும் குறிப்பினது. செய் →சேவை → சேவகம் (வடதமிழ்.).

கருஞ்சொறி *karuñcoṟi,* பெ.(n.) உடலிற் கருப்புத் தழும்பையுண்டாக்கும் ஒரு வகைச் சொறி; a kind of itch leaving a dark stain on the skin (சா.அக.).

[கரு + சொறி.]

கருஞ்சோளம் *karuñ-cōḷam,* பெ.(n.) சோளவகை; (பதார்த்த. 833.); black maize.

மறுவ. காக்காச்சோளம், இருங்குச் சோளம்.

ம. கரிஞ்சோளம்

[கரும் + சோளம்.]

கருஞாயிறு *karuñayiṟu,* பெ.(n.) கதிரவன் மறைப்பு (சூரிய கிரகணம்); solar eclipse. *"தண்டாமரை போற் கரு ஞாயிறென" (கம்பரா. ஆரண்ய. சரபங்க.24).*

[கரு + ஞாயிறு.]

கருஞானம் *karuñāṉam,* பெ.(n.) பாம்பாட்டிச் சித்தர் இயற்றிய (ஞான.) அறிவ நூல்; a treatise on philosophy compiled by Pampatti Cittar (சா.அக.).

[கரு + ஞானம்.]

கருட்டம் *karuṭṭam,* பெ.(n.) ஏற்றம்; maximum.

[கரு = பெரிய, உயர்ந்த. கரு – கருத்தம் – கருட்டம்.]

கருடக்கண் *karuḍa-k-kaṇ,* பெ.(n.) 1. ஓரக்கண்; squint eye. 2. கூர்மையான பார்வை; acute vision (சா.அக.).

[கருடன் + கண்.]

கருடக்கண்ணன் *karuḍa-k-kaṇṇaṉ,* பெ.(n.) 1. கூர்மையான பார்வையுடையவன்; one who has acute vision. 2. ஓரக்கண்ணன்; scquint eyed person (சா.அக.).

[கருடன் + கண்ணன். கலுழன் → கருடன்.]

கருடக்கல் *karuḍa-k-kal,* பெ.(n.) பாம்புக்கடி நஞ்சை நீக்கக்கூடிய தன்மையுள்ளதாகக் கருதப்படும் ஒருவகைக் கல்; a kind of stone which is considered as charm or antidote for snake bite.

மறுவ. கருடப்பச்சைக்கல்

[கருடன் + கல். கலுழன் → கருடன்]

கருடக்கல்வி *karuḍa-k-kalvi,* பெ.(n.) கடிநஞ்சை நீக்கும் மந்திரம்; an art of curing bite as of snake etc. ***கருடன்*** பார்க்க; see *karuḍan.*

[கருடன் + கல்வி.]

கருடக்கொடி[1] *karuḍu-k-koḍi,* பெ.(n.) 1. பெருமருந்துக்கொடி; Indian birth-wort. 2. குறிஞ்சான்; common delight of the woods.

[கருடன் + கொடி. கருடன் - பாம்புக்கடி, நஞ்சை முறிக்கும் தன்மை.]

கருடக்கொடி[2] *karuḍa-k-koḍi,* பெ.(n.) 1. பெருங்கஞ்சா; Indian hemp. 2. பேய்ச்சீந்தில்; a variety of moon creeper.

[கருடன் + கொடி. கருடன் - வலிய, பெரிய.]

கருடக்கொடிச்சி *karuḍa-k-koḍicci,* பெ.(n.) ***கருடக்கொடி***[1] பார்க்க; see *karuḍa-k-koḍi*[1] (சா.அக.).

[கலுழன் → கருடன் + கொடிச்சி.]

கருடக்கொவ்வை *karuḍua-k-kovvai,* பெ.(n.) காக்கணங்கொவ்வை; mussel - shell creeper.

மறுவ. கருவரை

[கலுழன் → கருடன் + கொவ்வை.]

கருடக்கோவை *karuḍa-k-kōvai,* பெ.(n.) 1. ***கருடக் கொவ்வை*** பார்க்க; see *karuḍa-k-kovai,* 2. அப்பைக் கோவை; saffron indian creeper (சா.அக.).

[கலுழன் →கருடன் + (கொவ்வை) கோவை.]

கருடகம் *karuḍagam,* பெ.(n.) குறிஞ்சா; Indian Ipecacuanha (சா.அக.).

கருடத்தொண்டை *karuḍa-t-toṇḍai,* பெ.(n.) ***கருடக் கொவ்வை*** பார்க்க; see *karuḍa-k-kovvai* (சா.அக.).

[கருட + தொண்டை.]

கருடதிசை *karuḍadišai,* பெ.(n.) கணியத்தில் குறிப்பிடப்படும் கீழ்த்திசை; east side used in astrology.

[கருட + திசை.]

கருடப்பார்வை *karuḍa-p-pārvai,* பெ.(n.) ***கருடக்கண்*** பார்க்க; see *karuḍa-k-kaṉ.*

[கருடன் + பார்வை.]

கருடப்பாலை *karuḍa-p-pālai,* பெ.(n.) ஒருவகைப் பாலைச் செடி; a kind of brahminy kite paulay.

[கருட + பாலை.]

கருடமாணிக்கம் *karuḍa-māṇikkam,* பெ.(n.) பச்சைக்கல்; emerald (சா.அக.).

[கருட + மாணிக்கம்.]

கருடமூக்கு *karuḍa-mūkku,* பெ.(n.) தேள் கொடுக்கி; scorpion sting plant.

[கருடன் + மூக்கு.]

கருடல் *karuḍal,* பெ.(n.) விருப்பம்; desire.

[கரள் → கரடல் → கருடல்.]

கருடவித்தை *karuḍa-vittai,* பெ.(n.) ***கருடக்கல்வி*** பார்க்க; see *karuḍa-k-kalvi.*

கருடன்[1] *karuḍaṉ,* பெ.(n.) ***கலுழன்*** பார்க்க; see kaluḻaṉ. கருடனைக் கண்ட பாம்பு போல (உ.வ.).

Skt. garuda; **H.** karut; **Pali.** karul; **Mal.** garuda.

[கலுழன் → கருடன்.]

கருடன்[2] *karuḍaṉ,* பெ.(n.) 1. கொல்லங் கோவை; snake caper. 2. கருடாழ்வார்; a mythical bird known as Vishnu's vehicle.

[கருடன்[1] → கருடன்[2].]

கருடன்[3] *karuḍaṉ,* பெ.(n.) ***கலுழன்*** பார்க்க; see *kaluḻaṉ.*

[கலுழன் (மங்கிய நிறமுடையது.) → கருடன்.]

கருடன்கிழங்கு *karuḍaṉ-kiḻaṅgu,* பெ.(n.) 1. பெருமருந்து; Indian birth-wort. 2. ஆகாச கருடன் கிழங்கு; snake caper (சா.அக.).

[கலுழன் → கருடன் + கிழங்கு.]

கருணம் *karuṇam,* பெ.(n.) எலுமிச்சமரம்; lemon tree.

[கரு → கருண் → கருண் + அம். கரு = நல்ல. பல்லாற்றானும் நன்மை விளைவிப்பதால் இப்பெயர் பெற்றது. அம் = பெருமைப்பொருள் பின்னொட்டு.]

கருணிகை *karuṇigai,* பெ.(n.) 1. பூவினிற் கொட்டை; the pericarp of a flower. 2. தாமரைப் பொகுட்டு; the pericarp of lotus. 3. காயின் நெற்று; the germ or rudiment of the future fruit; dried fruit. 4. காதணி; ear ring (சா.அக.).

த. கருணிகை > **Skt.** karṇigā.

கருணை[1] *karuṇai,* பெ.(n.) ***கரணை*** பார்க்க; see *karaṇai, 'காறிப்போன கருணைக்கிழங்கு பழம் புளியால் பதம் பெற்றது' (பழ.). 'வாய் வாழைப்பழம் கை கருணைக் கிழங்கு' (பழ.).*

ம. கரண கிழங்நு

[கரணை → கருணை.]

கருணை[2] *karuṇai,* பெ.(n.) ***கரணைக் கிழங்கு*** பார்க்க; see *karaṇai-k-kiḻaṅgu.*

[கரணை → கருணை.]

கருணைக்கிழங்கு *karuṇai-k-kiḻaṅgu,* பெ.(n.) ***கரணைக்கிழங்கு*** பார்க்க; see *karaṇai-k-kiḻaṅgu.*

[கரணைக் கிழங்கு → கருணைக்கிழங்கு.]



கருணை—பிடிகரணைக்கிழங்கு

கருணைத்தண்டு *karuṇai-t-taṇḍu,* பெ.(n.) ஒருவகைக் கடற்கரைச் செடி; typhonum trilobatum.

[கரணைத்தண்டு → கருணைத்தண்டு.]

கருணைப்பலா *karuṇai-p-palā,* பெ.(n.) ***கரணைப் பலா*** பார்க்க; see *karaṇai-p-palā.*

[கருணை + பலா.]

கருத்த *karutta,* கு.பெ.எ. (adj.) கருமையான; black; dark.

[கரு → கருத்த.]

கருத்தகடப்பு *karutta-k-kaḍappu,* பெ.(n.) நெல்வகை (w.g.); a kind of paddy.

[கருத்த + கடப்பு.]

கருத்தங்கல் *karuttaṅgal,* பெ.(n.) கருப்பம் தங்கல் (சூல்); foetus settling in the ovary.

[கரு + தங்கல்.]

கருத்தடை *karuttaḍai,* பெ.(n.) கருவுறாவண்ணம் தடுத்தல்; birth control.

[கரு + தடை.]

கருத்தடைக் கருவி *karuttaḍai-k-karuvi,* பெ.(n.) கருத்தடை செய்ய உதவும் கருவி; appliance used for birth control.

[கருத்தடை + கருவி.]

கருத்தடை மாத்திரை *karuttaḍai-māttirai,* பெ.(n.) கருவுறாவண்ணம் தடுக்கும் மருந்து; medicine used for birth control.

[கருத்தடை + மாத்திரை.]

கருத்ததிகாரி *karuttadigāri,* பெ.(n.) அதிகார முடையவர்; authority. இன்றும், பாவாணர் சொல்லாராய்ச்சியின் கருத்ததிகாரியாக விளங்குகிறார் (உ.வ.).

[கருத்து + அதிகாரி.]

கருத்தபத்தை *karuttapattai,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச்சிற்றூர்; village in Ramanathapuram dt.

[கரு → கருத்த + பற்றை - கருத்தப்பற்றை → கருத்தப்பத்தை. பற்றை = பகுதி.]

கருத்தரங்கம் *karuttaraṅgam,* பெ.(n.) ***கருத்தரங்கு*** பார்க்க; see *karuttaraṅgu.*

[கருத்து + அரங்கம்.]

கருத்தரங்கு *karuttaraṅgu,* பெ.(n.) கலந்துரையாடி, ஆய்வு செய்யும் வல்லுநர் குழுக்கூட்டம்; seminar.

[கருத்து + அரங்கு.]

கருத்தரி–த்தல் *karu-t-tari-,* 4. செ.குன்றாவி. (v.t.) சூல்கொள்ளுதல்; to be conceived.

[கரு + தரி.]

கருத்தரியாமை *karu-t-tariyāmai,* பெ.(n.) கருப்பமுண்டாகாமை; incapability of conception (சா.அக.).

[கரு + தரி + ஆ + மை. 'ஆ' எதிர் மறை இடைநிலை.]

கருத்தழி–தல் *karuttali-,* 2 செ.கு.வி.(v.i.) மனநிறைவின்றி வருந்துதல்; to afflict. *"தம்மின் கற்றாரை நோக்கிக் கருத்தழிக" (நீதிநெறி. 15.).*

[கருத்து + அழிதல்.]

கருத்தளவு *karu-t-taḷavu,* பெ.(n.) ஊகம், மதிப்பீடு; approximation, estimation.

[கருத்து + அளவு.]

கருத்தளவை *karu-t-taḷavai,* பெ.(n.) ஊகவளவை; வழியளவை; inference. *"பிரத்தியங் கருத்தள வென்ன" (மணிமே. 29: 48.).*

[கருத்து + அளவை.]

கருத்தன் *karuttaṉ,* பெ.(n.) 1. செய்வோன்; doer, maker, agent, author, managing member of a family, one who performs, as a religious ceremony. 2. கடவுள்; God as creator. 3. தலைவன்; (விவிலியம். மத். 7, 22); master, chief, lord.

[கரு → கருத்து + அன் – கருத்தன்.]

'கரு' செய்தற்பொருளில் செய்வோனையும், பெருமைப்பொருளில், தலைவன், கடவுள், மேலோன் ஆகியோரையும் குறித்தது.

கருத்தனாகு பெயர் *karuttaṉāgu-peyar,* பெ.(n.) செய்பவன் பெயர், செய்யுஞ் செயலைக் குறித்து வழங்கும் ஆகுபெயர் (நன். 290, விருத்.); metonymy, where the doer is put for the work done, திருவள்ளுவர் படித்தான், திருக்குறள் படித்தான்.

[கருத்தன் + ஆகுபெயர் – கருத்தனாகு பெயர். இதனைக் கருத்தாவாகுபெயர் என வழங்குவது நன்றன்று. 'கருத்தா' என்பது, வடமொழியாளர் தம்மொழிக்கேற்பத் திரித்துக்கொண்ட திரிபு.]

கருத்தா *karuttā,* பெ.(n.) ***கருத்தன்*** பார்க்க; see *karuttaṉ.*

த. கருத்தன் > **Skt.** karta.

கருத்தாக்கம் *karu-t-tākkam,* பெ.(n.) ஒரு தன்மைத்தாகியவைகளைப் பற்றிய பொதுநோக்கு பொருள்; concept.

[கருத்து + ஆக்கம்.]

கருத்தாடு *karuttāḍu,* பெ.(n.) வெள்ளாடு; goat (சா.அக.).

[கரு → கருத்த + ஆடு.]

கருத்தாப்பொருள் *karuttā-p-pōruḷ,* பெ.(n.) செய்பவனை அல்லது கருத்தாவைக் குறிக்கும் பொருள்; sense of agency.

[கரு → கருத்தா + பொருள்.]

"அரசனால் ஆகிய கோயில்" என்பது, போன்று உயர்திணையாய் அமைவது கருத்தாப் பொருள்.

கருத்தா, முதல் வேற்றுமையாய் இருக்கும் பொழுது செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமை யாய் வரும். [எ.டு.] 'தச்சன் கோவிலைக் கட்டினான்'. கருத்தா மூன்றாம் வேற்றுமையாய் இருக்கும் பொழுது, செயப்படுபொருள் முதல் வேற்றுமையாய் வரும். [எ.டு.] 'தச்சனால் கோயில் கட்டப்பட்டது.'

கருத்தாய்வு *karuttāyvu,* பெ.(n.) ஒரு கருத்தைப் பற்றித் திறனாய்வு செய்தல்; critical discussion of a concept.

[கருத்து + ஆய்வு.]

கருத்தாவாகு பெயர் *karuttā-v-āgupeyar,* பெ.(n.) ***கருத்தனாகு*** பெயர் பார்க்க; see *karuttaṉāgu-peyar.*

[கருத்தன் → கருகருத்தா + ஆகுபெயர்.]

கருத்தாளி[1] *karuttāḷi,* பெ.(n.) 1. அறிவாளி; மதிநுட்பமுடையவன் (வின்.); person of genius, judgement, discrimination, acumen, penetration, discernment. 2. கருத்துள்ளவன் (யாழ்ப்.); one who is careful, industrious, diligent.

[கருத்து + ஆள் + இ – கருத்தாளி. 'இ' உடைமை குறித்த ஈறு.]

கருத்தாளி[2] *karuttāḷi,* பெ.(n.) 1. உடைமையாளி, உரிமையாளி; heir. அம்மான் சொத்துக்கு மருமான் கருத்தாளி (இ.வ.).

[கருத்து + ஆள் + இ – கருத்தாளி. 'இ' உடைமை குறித்த ஈறு.]

கருத்தாளி[3] *karuttāḷi,* பெ.(n.) மரவகை (யாழ்.அக.); a kind of tree.

[ஒருகா. கரு + தாளி.]

கருத்தாளி[4] *karuttāḷi,* பெ.(n.) ***கருந்தாளி*** பார்க்க; see *karundāḷi.*

[கருந்தாளி → கருத்தாளி.]

கருத்திணக்கம் *karuttiṇakkam,* பெ.(n.) உடன்பாடு; compromise, consent.

[கருத்து + இணக்கம்.]

கருத்தியல் *karuttiyal,* பெ.(n.) கோட்பாடு; ideology.

[கருத்து + இயல்.]

கருத்து *karuttu,* பெ.(n.) 1. நோக்கம்; தன் முனைப்பாற்றல்; object, design, purpose. *"திருவுளத்துக் கருத்தெதுவோ" (பாரத. கிருட்டி. 32.).* 2. உட்பொருள்; கருத்துப்பிழிவு; gist, substance or pith of a matter. *"பாடங் கருத்தே" (நன். 21.).* 3. கொள்கை; opinion, notion, idea, doctrine. காந்தியடிகளின் கருத்து மக்களைக் கவர்ந்தது (உ.வ.). 4. சீரிய விழிப்புணர்வு; earnestness, awakening. அவன் ஆசிரியர் சொல்வதைக் கருத்தாய்க் கேட்கிறான் (உ.வ.). 5. விருப்பம், ஆசை; wish, desire, inclination. *"கருத்திலாட் டொடுதல்" (கம்பரா. திருவடி. 65.).* 6. அறிவு, நடுநிலை சார்ந்த அறிவுக்கூர்மை; discrimination, judgement. கருத்தாய்ப் பணி செய்தால் கவலைக்கு இடமில்லை (பழ.). 7. உடன்படிக்கை, ஏற்றுக்கொள்கை; agreement. *"அதுவெனக்குங் கருத்தென்றான்" (பாரத. கிருட்டி. 32.).* 8. மனம்; mind. *"தாபதர் நால்வரு மெனக்கருத்திடை முற்பக லெய்தினார்" (கந்தபு. மேருப். 56.).* 9. பயன், நன்மை; good, benefit, use. *"அந்த மருந்திலே கருத்தில்லை" (வின்.).*10. மனவுறுதி; will, determination. *"கருத்தில்... எல்லாப் பொருளும் வருத்தித்த" (திவ். திருவாய். 2, 2, 8.).* 11. தன் மதிப்பு; self-esteem. *"கற்றாரை நோக்கிக் கருத்தழிக" (நீதிநெறி.15.).* 12. எண்ணம்; intention.

ம. கருத்து

[குரு → கரு → கருத்து. குருத்தல் = தோன்றுதல், ஒளிர்தல், விருப்பமாதல், மனநிறைவாதல், உள்ளடங்குதல், நோக்கமாதல், பெரிதாதல்.]

கருத்துக்குறிப்பு *karuttu-k-kuṟippu,* பெ.(n.) விளக்கவுரை; explanation.

[கருத்து + குறிப்பு.]

கருத்துக்கொள்(ளு)—தல் *karuttu-k-koḷḷu-,* 16. செ.கு.வி.(v.i.) நோக்கமுறுதல்; to have an inclination for to set one's mind upon.

[கருத்து + கொள்.]

கருத்துச்சாயல் *karuttu-c-cāyal,* பெ.(n.) ***கருத்துப்பாங்கு*** பார்க்க; see *karuttu-p-pāṅgu.*

[கருத்து + சாயல்.]

கருத்துத் தோன்று—தல் *karuttu-t-tōṉṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மனத்தகத்தே தோன்றுதல்; to occur to the mind as an idea; plan. 2. கருத்து விளங்குதல்; to be clear to the mind, to be well understood.

[கருத்து + தோன்று.]

கருத்துப்படம் *karuttu-p-paḍam,* பெ.(n.) கருத்தை விளக்க வரையும் படம்; cartoon.

[கருத்து + படம்.]

கருத்துப்படிவம் *karuttu-p-paḍivam,* பெ.(n.) மனக்கருத்து; mental impression.

[கருத்து + படிவம்.]

கருத்துப்பாங்கு *karuttu-p-pāṅgu,* பெ.(n.) தனிக்கோட்பாடு, எண்ணப்போக்கு; notion; opinion.

[கருத்து + பாங்கு.]

கருத்துப்பிசகு *karuttu-p-pišagu,* பெ.(n.) தவறான விளக்கம்; erroneous interpretation.

[கருத்து + பிசகு. பிழை → பிழகு → பிசகு.]

கருத்துப்பிரி—தல் *karuttu-p-piri-,* 4. செ.கு.வி. (v.i.) ***கருத்துத்தோன்றுதல்*** பார்க்க; see *karuttu-t-tōṉṟu-.*

[கருத்து + பரி.]

கருத்துப்பொருள் *karuttu-p-poruḷ,* பெ.(n.) மனத்தாற் கருதப்பட்ட பொருள்; object of thought, a thing imagined, dist. from kāṭci-p-poruḷ. *"காட்சிப் பொருளும் கருத்துப்பொருளும்" (தணிகைப்பு. கனவு. 89.).*

[கருத்து + பொருள்.]

கருத்துரு *karutturu,* பெ.(n.) செய்யக் கருதுவது; proposal.

[கருத்து + உரு.]

கருத்துருவம் *karut-t-uruvam,* பெ.(n.) **கருத்துரு** பார்க்க; see *karutturu.*

[கருத்துரு+ கருத்துருவம்]

கருத்துரை *karutturai,* பெ.(n.) உட்பொருள், கருத்துப்பிழிவு (நன்.22,உரை.); gist, substance of a text.

[கருத்து + உரை.]

கருத்துரையாடல் *karutturaiyāḍal,* பெ.(n.) ஒரு பொருள் குறித்த உரையாடல்; dialogue about particular case.

[கருத்து + உரையாடல்.]

கருத்தூன்று–தல் *karuttūṉṟu-,* 5. செ.கு.வி.(v.i.) எண்ணம் ஒரு வயப்படுதல்; to concentrate. கருத்தூன்றிப் படி (உ.வ.).

[கருத்து + ஊன்று.]

கருத்தெடு–த்தல் *karutteḍu-,* 4. செ.கு.வி.(v.i.) 1. சூழ்ச்சி செய்தல் (வின்.); to plan a project. 2. உட்கருத்தறிதல்; to find out the purport of a passage.

[கருத்து + எடு.]

கருத்தெழுத்து *karutteḻuttu,* பெ.(n.) ஒரு சொல்லைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட வடிவம்; ideograph.

[கருத்து + எழுத்து. கருத்தெழுத்தாவது, ஒவ்வொரு கருத்தையும் படவெழுத்தடிப்படையில் ஒரு குறியாற் குறிப்பது.]

கருத்தொட்டு–தல் *karuttoṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. பொருள் காணுதல் (வின்.); to construe a difficult passage, put a construction on a passage. 2. தொக்கு நின்ற சொல்லை விரித்துப் பொருள் காணுதல்; to interpret a passage after supplying the word or words understood. 3. பிறர் பாடத்தில் தன் கருத்தை ஒட்டுதல்; to read one's own meaning in a passage and to distort the idea intended by the author. 4. மனத்தை ஒருமுகப்படுத்துதல்; to concentrate the mind.

[கருத்து + ஒட்டு.]

கருத்தொண்டை *karuttoṇḍai,* பெ.(n.) 1. காக்கணங்கொவ்வை; crow creeper. 2. காக்கை; crow.

மறுவ: கருடக்கொவ்வை

[கரு + தொண்டை.]

கருத்தொழில்[1] *karu-t-toḻil,* பெ.(n.) பேறுகாலப்பணி; the practice of a mid-wife.

[கரு + தொழில்.]

கருத்தொழில்[2] *karu-t-toḻil,* பெ.(n.) அச்சு வார்க்கும் தொழில்; mould work.

[கரு + தொழில்.]

கருத்தொழில்[3] *karu-t-toḻil,* பெ.(n.) பாழ்வித்தை; sorcery or magic.

[(கரு + தொழில்) கரு - கருமை, இழிந்த.]

கருத்தொற்றுமை *karuttoṟṟumai,* பெ.(n.) இணக்கம்; agreement.

[கருத்து + ஒற்றுமை.]

கருத்தோன்றும் காலம் *karuttōṉṟumkālam,* பெ.(n.) மகளிர் பூப்பெய்தல் முடிந்த நாளிலிருந்து பன்னிரண்டு நாள் வரையான காலம் (தொல். பொருள். இளம். 185); the period of twelve days from the day of menstruation.

[கரு + தோன்றும் + காலம்.]

கருத்தோன்றும் காலம், இல்லறத்தார் கூட்டத்திற்கு இன்றியமையாதது எனக்கருதப் படுவதை, "பரத்தையர் சேரியானாலும், பூப்புத்தோன்றி மூன்று நாள் கழித்த பின்பு, பன்னிரண்டு நாளும் நீங்குதல் அறமன்று" என்று இளம்பூரணர் கூறும் விளக்கத்தால் அறியலாம்.

கருதல்[1] *karudal,* பெ.(n.) புனைவுகோள், ஓர்ந்தறிதல், ஊகித்தல்; inference. *"அளவை காண்டல் கருத லுரை" (சி.சி. அளவை.1.).*

[கருது + அல் – கருதல். 'அல்' தொ.பெ.ஈறு.]

கருதல்[2] *karudal,* பெ.(n.) 1. எண்ணுதல், சிந்தித்தல்; thinking, pondering. 2. உறுதிப்படுத்தல்; ascertaining. 3. மதித்தல்; estimate. 4. விரும்பல்; liking.

[கருது + அல். 'அல்' தொ.பெ.ஈறு.]

கருதலர் *karudalar,* பெ.(n.) பகைவர்; foes, enemies. *"கருதலர் பெருமை" (கம்பரா. திருவடி.10.).*

[கருது + அல் + அர் – கருதலர். 'அல்' எ.ம.இ.நி. 'அர்' ப.பா.ஈறு.]

கருதலளவை *karudal-aḷavai,* பெ.(n.) 1. உன்னித் துரைத்தல், ஓர்ந்துரைக்கை. (குறள். 930, உரை.); law of inference. 2. குத்துமதிப்பு; approximate.

[கருதல் + அளவை]

கருதலார் *karudalār,* பெ.(n.) ***கருதலர்*** பார்க்க; see *karudalar. "கருதலார் புரமூன் றெரித்தானை" (தேவா. 178, 1.).*

[கருது + அல் + ஆர் – கருதலார். 'அல்' எ.ம.இ.நி. 'ஆர்' ப.பா.ஈறு.]

கருதாதார் *karudādār,* பெ.(n.) சிந்தனை செய்யாதார், நினையாதார்; one who is not thinking. *"திண்சிலைவாய்க் கணை சிதறியும் வரகிரியிற் கருதாதவர் வரகரி குளநிறை வாரியும்" (S.I.I. vol.3. insc. 206.).*

[கருது + ஆ + த் + ஆர். "ஆ" (எ.ம.இ.நி.) "த்" எழுத்துப்பேறு. 'ஆர்' பலர் பாலீறு.]

கருதார் *karudār,* பெ.(n.) ***கருதலர்*** பார்க்க; see *karudalar, "கருதார் குலக்கட்டை வாங்கி" (உத்தரரா. திருவோலக்.6.).*

[கருது + ஆ + ஆர் - கருதார். 'ஆ' எ.ம.இ.நி. புணர்ந்து கெட்டது. 'ஆர்' ப.பா.ஈறு.]

கருதியிரு–த்தல் *karuti-iru-,* 2 செ.குன்றாவி.(v.t.) எதிர்பார்த்திருத்தல்; காத்திருத்தல்; to expect.

[கருதி + இரு. 'இ' வி.எ.ஈறு.]

கருதுகோள் *karudukōḷ,* பெ.(n.) உண்மை நிலையை வெளிப்படுத்தும் முகத்தான், காரணகாரியங்களடிப் படையில், இவ்வாறு இருக்கலாம் எனக்கொள்ளுதல்; hypothesis.

[கருது + கோள்.]

கருது–தல் *karudu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. சற்று விருப்பத்தோடு முன்னுதல் (பிங்.); to intend, purpose, design. 2. மறந்ததை நினைத்தல்; to recall to mind, recollect. *"கருத லாராய்ச்சி" (தொல். பொருள். 260.).* 3. தீர்மானித்தறிதல்; to judge calmly, take heed. *"காலங் கருதி யிருப்பர்" (குறள்., 485.).* 4. ஓர்ந்தறிதல்; ஊகித்தல்; உறுதிசெய்தல்; to suppose, consider, imagine, to take it into one's head. 5. மதித்தல்; to regard. *"செல்வத்தே புக்கழுந்தி நாடோறும் மெய்யாக் கருதி" (திருவாச.10, 17.).* 6. விரும்புதல் (வின்.); to wish for, desire. 7. உன்னித்தறிதல்; to infer, deduce. *"அளவை காண்டல் கருதல்" (சி.சி. அளவை.1.). 8.* இறுதியாக ஆராய்தல்; to ponder, think deeply, meditate. *"கருதி நீமனம்" (தேவா. 889,2.).* 9. ஒத்தல்; to resemble. *"கார்கருதி வார்முரச மார்க்கும்" (பு.வெ. 6, 9.).*

ம. கருதுக; **கோத.** கர்ந்த்; **க.**கரு (குறித்தல்).

Chin. Kaolu

[உல் → உரு → குரு → கரு → கருது. உல் - ஒத்தல், பொருந்துதல்கருத்து வேர்ச்சொல். ஒன்றனோடொன்றைப் பொருத்தி நினைத்தலால் தோன்றும் எண்ணங்களின் திரட்சி, கருதுதலாயிற்று.]

கருந்தக்காளி *karuntakkāḷi,* பெ.(n.) 1. மருத்துவத்திற்குப் பயன்படும் கருப்புத்தக்காளி; a black takkāḷi for medicinal use. 2. மிளகு தக்காளி; mad apple (சா.அக.).

மறுவ. தக்காளி

கருந்தகரை *karuntagarai,* பெ.(n.) செடிவகை (வின்.); a species of fetid cassia plant.

ம. கரிந்தகர

[கரும் + தகரை.]

கருந்தகி *karundagi,* பெ.(n.) காக்கைக் கொல்லி விதை; the seed of the crow-killer or the crowberry (சா.அக.).

[கரும் + தகி.]

கருந்தட்டாங்குடி *karuntaṭṭāṅ-kuḍi,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thañjāvūr dt.

[கரும் + திட்டை + குடி – கருந்திட்டைக்குடி → கருந்தட்டாங்குடி → கருந்தட்டான்குடி.]

கருந்தட்டைப்பயறு *karuntaṭṭai-p-payaṟu,* பெ.(n.) கருப்புத் தட்டைப் பயிறு; a kind of flat black pulse of the Dolichos genus (சா.அக.).

[கரும் + தட்டை + பயிறு.]

கருந்தண்ணீர் *karu-n-taṇṇīr,* பெ.(n.) 1. அயம் சேர்ந்த தண்ணீர்; a black mineral water. 2. பாறை நீர்; water found deposited on the beds of granite rocks.

[கரும் + தண்ணீர்.]

கருந்தண்ணீர்க்கல் *karuntaṇṇīr-k-kal,* பெ.(n.) பூச்சிலை என்னுங்கல் (யாழ்.அக.); a kind of stone.

[கரும் + தண்ணீர் + கல்.]

கருந்தண்பை *karundaṇbai,* பெ.(n.) 1. ***கறுப்புத் தாமரம்*** பார்க்க; see *karu-p-pu-t-tāmaram.* 2. உறப்புப்பிசின்; rock dammer (சா.அக.).

[கரும் + தண்பை – கருந்தண்பை.]

கருந்தணல் *karuntaṇal,* பெ.(n.) செந்நாயுருவி; a red variety of Indian burr (சா.அக.).

[கரும் + தணல்.]

கருந்தமிழ் *karuntamiḻ,* பெ.(n.) 1. கொச்சைத் தமிழ்; colloquial, unrefined Tamiḻ. *"கருந்தமிழுஞ் செந்தமிழாங் கோவைத் தினகரா" (தினகர. 75.).* 2. மலையாளமொழியின் பழைய வடிவம்; the early stage of Malayāḷam.

ம. கரிந்தமிழ்

[கரு - தாழ்ந்த. கரும் + தமிழ்.]

கருந்தரை *karu-n-darai,* பெ.(n.) 1. கருப்பு மண்ணிலம்; black soil. 2. பாழ்நிலம் (ஈடு.); barren land, waste land.

[கரும் + தரை. கரு → கரும். கரு = கருமை நிறம், தீமை, அறிவு, பாழ்.]

கருந்தலாக்குறிச்சி *karuntalākkuricci,* பெ.(n.) விழுபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Viḻuppuram dt.

[கரும் + தலை + குறிச்சி – கருந்லைக்குறிச்சி→ கருந்தலாக்குறிச்சி.]

கருந்தலை *karuntalai,* பெ.(n.) 1. காற்பாகம்; a quarter, the fraction ¼. *"கருந்தலை செந்தலை தங்காறிரிக்கால்" (தனிப்பா.1,87,171.).* 2. முடிவு; end, close. ஆனிக்கருந்தலை (C.N.). 3. தொடக்கம்; beginning. கருந்தலையிற் பேசாமல் விட்டது தவறு (இ.வ.) 4. கொடிவழி, தலைமுறை; generation.

ம. கரிந்தல, கருந்தல.

[கரும் + தலை. கருத்தல் = தோன்றுதல், பகுதி.]

கருந்தலைக்குத்தகை *karuntalai-k-kuttagai,* பெ.(n.) குறுங்காலக் குத்தகை (இ.வ.); temporary lease.

[கரும் + தலை + குத்தகை. கொத்து→ கொத்தகை குத்தகை = மொத்தப் பணம். கருந்தலை = பாகம், பிரிவு.]

கருந்தவளை[1] *karuntavaḷai,* பெ.(n.) கறுப்புத்தவளை; black frog.

[கரும் + தவளை. கரு = கருமை.]

கருந்தவளை[2] *karuntavaḷai,* பெ.(n.) மிடாத்தவளை; bull frog.

[கரும் + தவளை. கரு = வலிய, பெரிய.]

கருந்தளிர் *karundaḷir,* பெ.(n.) இளந்தளிர்; tender shoot.

ம. கருந்தளிர்

[கரு → கரும் + தளிர்.]

கருந்தனம்[1] *karundaṇam,* பெ.(n.) 1. பொன் (திவா.); gold. 2. பணம்; money. *"கருந்தனம் கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட்டு" (நீதிநெறி.9.).*

Skt. dhana > த. தனம்.

[கரும் + தனம். கரும் = சிறப்பு. வ. தனம் = மாடு, பணம்.]

கருந்தனம்[2] *karundaṇam,* பெ.(n.) கரும்பொன்; இரும்பு; iron.

[கரும் + தனம்.]

கருந்தாது *karuntādu,* பெ.(n.) 1. இரும்பு; iron. *"கருந்தாது கொட்கு மிருஞ்சிலை" (ஞானா.57, 29.).* 2. இரும்பு மாழை; iron ore. 3. நிலக்கரி; coal.

[கரும் + தாது. தாழ்து → தாது (நிலத்தினடியிற் கிடைப்பது)]

கருந்தாமக்கொடி *karuntāma-k-koḍi,* பெ.(n.) சிறுசெங்குரலி என்னும் மலைக்கொடி (குறிஞ்சிப். 82, உரை.); a mountain creeper.

[கரும் + தாமம் + கொடி. தாமம் = சிவப்பு.]

கருந்தாமரை *karuntāmarai,* பெ.(n.) மருந்திற்குப் பயன்படும் கருப்புத் தாமரை; black lotus.

[கரும் + தாமரை.]

கருந்தாரை *karundārai,* பெ.(n.) 1. மாட்டின் மீதுள்ள கரியகோடு (வரைவு.) (வின்.); black streak on an ox. 2. காரொளி; black-light.

[கரும் + தாரை.]

கருந்தாள் *karuntāḷ,* பெ.(n.) அறுபட்ட தாளடி; stubble.

[கரும் + தாள். கருத்தல் = தோன்றுதல், அடிப்பகுதி.]

கருந்தாளி *karuntāḷi,* பெ.(n.) காட்டத்தி; devil fig.

ம. கரிந்தாளி; க. கரிதாளி.

[கரும் + தாளி.]

கருந்திடர் *karuntiḍar,* பெ.(n.) பெரியமேடு (வின்.); high mound, hillock.

[கரும் + திடர். கரும் = பெரிய. திடல் → திடர்.]

கருந்திப்பிலி *karuntippili,* பெ.(n.) யானைத்திப்பிலி; elephant long pepper (சா.அக.).

[கரு → கரும் + திப்பிலி. கரு = பெரிய.]

கருந்திருக்கை *karuntirukkai,* பெ.(n.) திருக்கை மீன் வகை; a kind of tirukkai fish.

[கரும் + திருக்கை.]

கருந்திரைச்சூட்டுமணல் *karuntirai-c-cūṭṭumaṇal,* பெ.(n.)கடலோரத்தில் அலைகளினால் ஒதுக்கப்பட்ட கருமணல்; black sand driven to the shore by sea-waves.

[கரும் + திரை + சூட்டு + மணல்.]

கருந்தினை *karuntiṉai,* பெ.(n.) கரிய தினை வகை; black Italian millet. *"கருந்தினை யோம்பக் கடவுட் பராவி" (திருக்கோ. 279.).*

மறுவ. இறடி கங்கு, இறுங்கிறடி.

[கரும் + தினை.]

கருந்து *karundu,* பெ.(n.) 1. மரக்கன்று; sapling, young tree. 2. வாழையின் இளநிலை; tenderness of plantain tree.

[குருந்து → கருந்து.]

கருந்துத்தி *karuntutti,* பெ.(n.) கறுப்புத்துத்தி; serrate morning mellow (சா.அக.).

[கரும் + துத்தி.]

கருந்தும்பி *karuntumbi,* பெ.(n.). கருங்காலி; Mysore cormandel ebony. 2. கருந்தண்பை மரம்; black dammer. 3. கரும்பிலிமரம்; South Indian pine.

[கரும் +தும்பி.]

கருந்தும்பிமீன் *karuntumbi-mīṉ,* பெ.(n.) உடலில் பட்டைகளுடன் கூடிய செந்நிற மீன்வகை; a kind of red fish.

[கரும் + தும்பி + மீன்.]



கருந்தும்பிமீன்

கருந்தும்பை *karuntumbai,* பெ.(n.) 1. பேய்மருட்டி; malabar catamint. 2. கருங்காலி (L.); coromandel ebony. 3. செடிவகை; an ornamental plant.

ம. கரிந்தும்ப; க. கரிதும்பெ; தெ. நல்லதுமிக்கி.

[கரும் + தும்பை. தூ = தும்பை வெண்ணிறம் கொண்டது.]

கருந்துவரை[1] *karuntuvarai,* பெ.(n.) 1. மலைத் துவரை; hill dhall. 2. மரவகை; bourdillon's apple-fruited ebony. 3. தோதகத்தி; dark black wood. 4. கருப்புத் துவரை; topasi ebony. 5. இரும்பிலி; common satin ebony.

[கரும் + துவரை.]

கருந்துவரை[2] *karuntuvaṛai,* பெ.(n.) சிற்றிலைப் புலவு (வண்டி அடிக்கட்டை, தூண்டிற்கோல் முதலியவற்றிற்குப் பயன்படும் கெட்டியான மரவகை); lance wood (சா.அக.).

[கரும் + துவரை.]

கருந்துழாய் *karuntuḻāy.* பெ.(n.) ***கருந்துளசி*** பார்க்க; see *karuntuḷaši.*

[கரும் + துழாய்.]

கருந்துளகம் *karuntuḷakam,* பெ.(n.) கருப்பூர வெற்றிலை; camphor betel (சா.அக.).

[கரும் + துளகம்.]

கருந்துளசி *karuntuḷaši,* பெ.(n.) துளசிவகை (பதார்த்த. 304.); purple-stalked basil.

க. கரிதுளசி; ம. கரிந்துளசி; து. கப்புதொளசி.

[கரும் + துளசி.]

துளவம் → துளசி. கருந்துளசி = துளசி போன்று சற்றே காரல் மணம் கொண்டது.

கருந்துளை *karuntuḷai,* பெ.(n.) அண்டப்பெரு வெளியின் ஓரிடத்தில், அனைத்துக் கோள்களும் உள்ளொடுங்கும், பெரிய கருந்துளை வாயில்; black hole as discovered by scientists in the greater universe.

[கரு → கரும் + துளை.]

கருந்தூள் செந்தூள் பறத்தல் *karuntūḷ-sentūḷ-paṟattal,* பெ.(n.) கடுமுனைப்பாய் முயலுகை (இ.வ.); making much ado; bustling feverish activity.

[கரும் + தூள் + செம் + தூள் + பறத்தல்.]

போர்க்காலத்தில் பகைவர் இடங்களுக்குத் தீக்கொளுவிக் கருந்தூள் பறக்க விரைந்து செல்லுதலானும், செல்லும்போதும் திரும்பி வரும்போதும், வழிநெடுகச் செந்தூள் பறக்க விரைந்து இயங்குதலானும், போர்த்தொழிலின் கடுமையும் விரைவும் கருதிக் கருந்தூள் செந்தூள் பறக்க வினையாற்றுதல், பொதுவாக ஊக்க மிகுதியுணர்த்தும் மரபுச் சொல்லாயிற்று.

கருந்தேள் *karuntēḷ,* பெ.(n.) கருப்புத்தேள்; black scorpion.

ம. கரிந்தேள்; க. கரிதேளு, கரிசேள்.

[கரும் + தேள்.]

கருந்தேளி *karundēḷi,* பெ.(n.) கருநிறத்துத் தேளி மீன்; black scorpion-fish.

[கரும் + தேளி.]

கருந்தேன் *karuntēṉ,* பெ.(n.) 1. கொம்புத்தேன்; honey collected from honeycombs from branches of a tree, pure honey (சா.அக.). 2. நெல்லிக்காய்ச் சாறு; the juice of Indian gooseberry.

[கரு → கரும் + தேன். கடு = உயர்ந்த, சிறந்த.]

கருந்தை *karundai,* பெ.(n.) 1. காடைக்கண்ணிநெல்; common paddy of the colour of quail's eyes. 2. மதுக்காரை; common emetic nut (சா.அக.).

[கரு → கருந்தை. கரு = சிறந்த, உயர்ந்த. கருந்தை = சிறந்த நெல்வகை.]

கருந்தொழில்[1] *karuntoḻil,* பெ.(n.) வலிய தொழில்; strong workmanship. *"கருந் தொழில் வினைஞர்" (சிறுபாண். 257).*

[கரும் + தொழில்.]

கருந்தொழில்[2] *karuntoḻil,* பெ.(n.) கொலைத் தொழில்; foul deed, dark assassin's work, killing. *"கருந்தொழிற் கொல்லன்" (சிலப். 16: 154.).*

[கரும் + தொழில்; கரும் = இழிந்த, கீழான.]

கருந்தோல்விரல் *karu-n-tōl-viral,* பெ.(n.) நூக்க மரம்; black wood of Southern India (சா.அக.).

[கரும் + தோல் + (விரில்) + விரல்).]

கருந்தோலி *karu-n-dōli,* பெ.(n.) அவுரி; indigo plant.

[கரும் + தோல் + இ. 'இ' உடைமைப் பொருளீறு.]

(சென்னை அகரமுதலியில் "தோழி" என்று குறித்திருப்பது பிழை வடிவமாகும்.)

கருந்தோளி *karuntōḷi,* பெ.(n.) **கருந்தோலி;** பார்க்க see *karuntōli.*

[கருந்தோலி → கரும்தோளி (கொ.வ.).]

கருந்தோற்புலவு *karuntōṟpulavu,* பெ.(n.) சிற்றிலைப் புலவு; rusty leaved lancewood (சா.அக.).

[கரும் + தோல் + புலவு.]

கருநச்சுழி *karu-naccuḻi,* பெ.(n.) பச்சைக்கல் நிறமும், ஆறங்குலநீளமுமுடைய கடல்மீன்வகை; goby, a sea-fish greenish, stone coloured, attaining more than 6 inches in length.

[கரு + நச்சுழி.]

கருநஞ்சிப்பயறு *karunañci-p-payaṟu,* பெ.(n.) 1. **கரும்பயறு** பார்க்க; see *karumpayaṟu* 2. சிறுதுவரை; small dhall (சா.அக.).

[கரு + நஞ்சு + பயறு.]

கருநடம் *karu-naḍam,* பெ.(n.) **கருநாடு** பார்க்க; see *karu-nāḍu. "கருநடப்போர் வெள்ளத்து விழாமல்" (பாரத. சிறப்புப். 18.).*

[கருநாடு → கருநடம்.]

கருநந்து *karu-nandu,* பெ.(n.) நத்தைவகை (பிங்.); a species of snail.

[கரும் + நந்து.]

கருநன்னாரி *karu-nannāri,* பெ.(n.) கருப்பு நன்னாரி; a species of dark sarasaparilla.

[கரு + நன்னாரி.]

கருநாக்கு *karu-nākku,* பெ.(n.) 1. சிறு கரும் புள்ளிகளையுடைய நாக்கு; tongue with black dots. 2. தீயநாக்கு; vile tongue. 3. தீயநாக்குள்ளவ–ள்–ன்; evil-tongued person.

ம. கரிநாக்கு; க. கரிநாலகெ.

[கரும் + நாக்கு – கருநாக்கு.]

கருநாகத்தி *karunāgatti,* பெ.(n.) காட்டத்தி; downry grislea (சா.அக.).

[கரு + நாகத்தி.]

கருநாகதாளி *karunāgatāḷi,* பெ.(n.) 1. கருப்பு நாகதாளி; black and few spined prickly pear. 2. நாகப்படம் போன்ற தாளிக்கொடி; snake-hood creeper (சா.அக.).

[கரு + நாக + தாளி.]

கருநாகம்[1] *karu-nāgam,* பெ.(n.) 1. கருநிறமுடைய கொடிய நச்சுப்பாம்பு; a highly poisonous black-snake, black cobra. 2. நஞ்சுள்ள கடற்பாம்பு; a poisonous sea-snake.

ம. கரிநாகம்; க. கரிநாக.

[கரு + நாகம்.]

கருநாகம்[2] *karu-nāgam,* பெ.(n.) ஒன்பது கோள்களு ளொன்று (ராகு); one among the nine planets.

[கரு + நாகம்.]

கருநாங்கு *karu-nāṅgu,* பெ.(n.) மரவகையுளொன்று (L.); long-pointed broad-leaved Ceylon iron-wood.

ம. கரிநாங்கு

[கரும் + நாங்கு – கருநாங்கு.]

கருநாடகம்[1] *karu-nāḍagam,* பெ.(n.) 1. பழங்கால ஐம்பத்தாறு நாடுகளுளொன்று; name of the Kanarese country including Mysore and the West Coast between Malabar and Goa, one of 56 nāḍu. *"கொங்கணங் கன்னடங் கொங்கந் தெலிங்கம்" (நன்.272, மயிலை.).* 2. நவாபு ஆட்சி செய்த தென்பகுதி; the carnatic, as ruled by the Nawābs.

[கரு + நாடு + அகம் – கருநாடகம்.]

கருநடம் அல்லது கருநாடகம் என்னும் சொல்லுக்கு, இரு பொருள்கள் கூறப்படுகின்றன. அவை, 1. கரிய நாடு, 2. கருங்கூத்து என்பன.

கன்னட நாட்டிற் பெரும்பகுதி கரிசல் நிலமா யிருப்பதால், கரியநாடு என்று பொருள் கொண்டனர் குண்டெட் பண்டிதரும், (Dr. Gundert) கால்டுவெல் கண்காணியாரும் (Dr. Caldwel).

கூத்துகளில் இழிந்த வகைக்குக் கருங்கூத்து என்று பெயர். "முதுபார்ப்பான் வீழ்க்கைப்பெருங் கருங்கூத்து" [கலித். 65:29].

நடம் = கூத்து. நடன் = கூத்தன். "வளிநடன் மெல்லிணர்ப் பூங்கொடி மேவர நுடங்க" [பரிபா. 22: 42].

நடர் = கூத்தர். "விடரும் தூர்த்தரும் நடரும் உள்ளிட்ட" [குறள். பரிமே. உரை.].

நாடகம் = கதை தழுவிவரும் கூத்து. மிகப் பழைமையான கண்மூடிப் பழக்கத்தைப், "பழைய கருநாடகம்" என்பர். இங்கு கருநாடகம் என்பது, பழைமையான நிலையைக் குறிக்கலாம். ஆகவே, கருநடம் அல்லது கருநாடகம் என்னும் பெயர், கருங்கூத்து நிகழும் நாடு என்னும் பொருள் கொண்டதாயிருக்கலாம். சிலப்பதிகாரத்தில் கருநாடர் குறிக்கப்படும் போதெல்லாம், திருந் தாமையைக் குறிக்கும் 'கொடு' என்னும் அடைகொடுத்தே குறிக்கப்படுகின்றனர்.

'கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்' [சிலப். 25 : 156].

கொங்கணக் கூத்தருங் கொடுங்கரு நாடரும் [சிலப். 26 : 106].

இன்றும், 'யக்ஷகானம்' என்னும் கருங்கூத்து, கன்னட நாட்டில் நடிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

"ஆயினும், கருநடரைக் கருநாடர் என்னும் வழக்கும் உண்மையானும், கூத்தாகிய காரணத் தினும், நிலவகையாகிய காரணம் பெயர்ப்பேற்றிற்குச் சிறத்தலானும், கரிசற்பாங்கான நாடு என்று பொருள் கொள்வதே பொருத்தமாம். கரைநாடு என்பது கருநாடு என மருவிற்றென்பர் சிலர்" [திரவிடத்தாய். பக். 54,55].

க. கருநாடகம் > Skt. karṇāṭaka.

கருநாடகம்[2] *karu-nāḍagam,* பெ.(n.) 1. தென்னாட்டு இசை; pure-South - Indian music. 2. பண்வகையு

ளொன்று; a musical mode. கருநாடக இசையில் இவர் வல்லவர்(உ.வ.). 3. பழைய பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பவர்; old fashion, amepithet applied in facetious disparagement, to a person of old fashioned ways. அவன் ஒரு கருநாடகம் (உ.வ.).

கருநாடகம் என்ற சொல், தென்னக வடபால் பகுதியாகிய தக்காணத்தையே முதலிற்குறித்தது. இப்பகுதி முகமதியர் ஆட்சிக்குட்பட்டபோது, தென்னக இசை கருநாடக இசை எனப்பெயர் பெறுவதாயிற்று. முன்மையாகிய பழமைப் பொருளும் அதன்வழி நிலைப்பதாயிற்று.

கருநாடகம்[3] *karu-nāḍagam,* பெ.(n.) 1. பழைமை யானது (இ.வ.); that which is old fashioned or antiquated. 2. நாகரிகமானது (யாழ்.அக.); that which is civilised.

[கருநாடகம்² → கருநாடகம்³.]

மலையாளமொழி தோன்றாத காலத்தில் தமிழகம், கருநாடகம், ஆந்திரம், மராத்தியம், குச்சரம், ஆகிய ஐந்தும் ஐந்திரவிட [பஞ்ச திராவிடம்] நாடுகளாக வடமொழியாளரால் வகைப்படுத்தப்பட்டன. தமிழிசை, தமிழ் நாகரிகமே இப்பகுதிகளில் நிலவியதால், பழமைப்பொருளும் நாகரிகச் செம்மைப் பொருளும், இச்சொல்லுக்கு உரியனவாயின.

கருநாடர் *karu-nāḍar,* பெ.(n.) கன்னட நாட்டார்; Kanarese people. *"கொடுங் கருநாடரும்" (சிலப். 25, 156.).*

ம. கர்நாட; Pkt.kannāṭa.

[கரு + நாடு + அர். 'அர்' ப.பா.ஈறு.]

தொடக்கத்தில் மராத்திய மாநிலத்தையும் கன்னட மாநிலத்தையும் சேர்த்துக் குறித்த இச்சொல், நாளடைவில் கன்னட மாநிலத்தை மட்டும் குறிப்பதாயிற்று.

கருநாடு *karunāḍu,* பெ.(n.) 1. திருந்திய திராவிட மொழிகளுள் ஒன்றான கன்னடம் பேசுகின்ற பகுதி; the area where the Kaṉṉaḍa language is spoken. 2. கன்னட நாட்டின் மொழி; Kaṉṉaḍa, one of the principal Dravidian languages. 3. ஒரு இசை; name of a raga in Carnatic music.

த. கருநாடு>Skt. karnāṭa.

[கரு + நாடு. கரு → கரிய, கரிசற் பாங்கான நிலம்.]

கருநாணல் *karu-nāṇal,* பெ.(n.) கருப்பு நாணல்; black reed (சா.அக.).

[கரு + நாணல்.]

கருநாய் *karu-nāy,* பெ.(n.) செந்நாய்; a wolf.

ம. கருநாய்

[கரு + நாய். கரு - கொடுமை.]

கருநாயுருவி *karu-nāyuruvi,* பெ.(n.) கருப்பு நாயுருவி; a black variety of Indian burr.

[கரு + நாயுருவி.]

கருநார் *karu-nār,* பெ.(n.) பனையின் கறுப்புநார்; black palmyra fibre (சா.அக.).

[கரு + நார்.]

கருநார்ப்பெட்டி *karu-nār-p-peṭṭi,* பெ.(n.) பனையின் கருநாரால் முடையப்பட்ட பெட்டி (வின்.); basket made of good black fibre.

[கரும் + நார் + பெட்டி.]

கருநாரத்தை *karu-nārattai,* பெ.(n.) கருப்பு நாரத்தை; a black or dark variety of bitter orange.

[கரு + நாரத்தை.]

கருநாரை *karu-nārai,* பெ.(n.) நாரை வகை (பிங்.); black ibis.

ம. கரிநார

[கரு + நாரை.]

கருநாவி *karu-nāvi,* பெ.(n.) 1. நாவிப்பூடுவகை (பதார்த்த.1056); black species of aconite. 2. கல்லுப்பு; a mystic name for sea-salt (சா.அக.).

[கரு + நாவி.]

கருநாழி *karunāḻi,* பெ.(n.) சுழுத்திநிலை; one of the five stations of the soul in the body (சா.அக.).

[கரு - கருநிறம், இருள். கரு + நாழி.]

கருநாழிகை *karu-nāḻigai,* பெ.(n.) இரவு; night. *"கரு நாழிகைதான் ... விடியாவிடின்" (கம்பரா. கடிமண.5.).*

[கரு + நாழிகை. கரு - கருநிறம், இருள்.]

கருநாள் *karu-nāḷ*, பெ.(n.) ***கரிநாள்*** பார்க்க; see *kari-nāḷ*, *"தொழாமற் செலுத்திய நாள் கருநாள்" (அருட்பா.1, வடிவுடை.38.).*

ம. கரிநாள்

[கரு + நாள்.]

கருநிமிளை *karunimiḷai*, பெ.(n.) நீலநிறமைக்கல்; black antimony or trisulphide of antimony (சா.அக.).

[கரு + நிமிளை. நிமிளை = ஒருவகை மாழை.]

கருநிலம் *karu-nilam*, பெ.(n.) 1. பயன்படாத நிலம் (திவா.); barren soil, useless, waste land. 2. கருமண் வயல்; paddy field with black soil.

ம. கரிநிலம்; க. கரிநெல.

[கரு + நிலம்.]

கருநிறம் *karu-niṟam*, பெ.(n.) 1. கந்தகச் செய்நஞ்சு; a kind of prepared black arsenic. 2. கருமை; darkness.

[கரு + நிறம்.]

கருநீர் *karunīr*, பெ.(n.) பனிக்குடத்துநீர்; amniotic fluid with womb (சா.அக.).

[கரு + நீர்.]

கருநீர்ப்பறவை *karunīr-p-paṟavai*, பெ.(n.) 1. கருப்பு நீர்க்கோழி; black water-fowl. 2. கருப்பைக்குள் பனிக்குடத்து நீரில் மிதக்கும் பிண்டம்; foetus floating in the amniotic fluid in the womb.

[கரு + நீர் + பறவை. பறவை உயிரைக் குறித்த உருவகம்.]

கருநீலப்பிறப்பு *karunīla-p-piṟappu*, பெ.(n.) மிகவும் இழிந்த பிறப்பு; birth in the lowest state of existence. *"கரும்பிறப்பும் கருநீலப்பிறப்பும்" (மணிமே.27:150.).*

[கருநீலம் + பிறப்பு.]

கருநீலம் *karunīlam*, பெ.(n.) கருமை கலந்த நீலநிறம்; dark-blue colour.

[கருமை + நீலம்.]

கருநூல் *karu-nūl*, பெ.(n.) சூழிய (சூனிய) நூல்; treatise on black magic.

[கரு + நூல்.]

கருநெய்க்காரம் *karu-ney-k-kāram*, பெ.(n.) மரங்களைக் காக்கப் பூசும் எண்ணெய்; a kind of oil used for the preservation of timber.

[கரு + நெய் + காரம்.]

கருநெய்தல் *karu-neydal*, பெ.(n.) அல்லி (பிங்.); blue Indian water-lilly.

மறுவ. நீலோற்பலம்

ம. கன்னல்; க. கன்னெய்தில்.

[கரு + நெய்தல்.]

கருநெருஞ்சி *karu-neruñji*, பெ.(n.) நெருஞ்சிவகை; black nerinjy, a prostrate herb.

[கரு + நெருஞ்சி.]

கருநெல்[1] *karunel*, பெ.(n.) 1. கருப்பு நெல்; black paddy in common. 2. கருங்குறுவை நெல்; a special kind of black paddy the rice of which is red and is highly esteemed as a yogic diet.

ம. கருநெல்லு

[கரு + நெல்]

கருநெல்[2] *karu-nel*, பெ.(n.) மணிபிடித்த நெற்பயிர்; paddy-crop bearing the corns.

[கரு + நெல். கரு = கருமை.]

கருநெல்[3] *karunel*, பெ.(n.) நெருப்பு; fire. ***கருஞெகிழி*** பார்க்க; see *karuñegiḻi*.

மறுவ. கருஞெலி

[கருஞெகிழி → கருஞெலி → கருநெலி → கருநெல் (கொ.வ.).]

கருநெல்லி[1] *karu-nelli*, பெ.(n.) கருநெல்லிச் செடிவகை (பதார்த்த.226.); small papery-downy-glabrate elliptic-ablong-obtuse-or-acute-leaved feather-foil.

[கரு + நெல்லி.]

கருநெல்லி[2] *karu-nelli*, பெ.(n.) 1. மிளகு; pepper. 2. உச்சிலிந்தி; a variety of phyllanthus.

[கரு + நெல்லி. நெல் = நெற்று முதிர்ந்த வித்து. நெல் → நெல்லி.]

கருநெல்லி³ *karunelli,* பெ.(n.) நஞ்சுக்கொடி; umbilical cord (சா.அக.).

[கரு + நெல்லி.]

கருநெறி *karu-neṟi,* பெ.(n.) நெருப்பு (பிங்.); fire. ***கருஞெகிழி*** பார்க்க; see *karu-ñegiḻi.*

மறுவ. கருநெல்

[கரு + ஞெகிழி – கருஞெகிழி → கருஞெலி → கருநெறி.]

கருநொச்சி *karu-nocci,* பெ.(n.) 1. நொச்சிவகையு ளொன்று (வின்.); a plant, dark-leaved evergreen, planted in gardens by the side of walks.

ம. கரிநொச்சி; **க., து.** கரிநெக்கி.

[கரு + நொச்சி. நொச்சில் → நொச்சி.]

கருநொச்சிகம் *karunoccigam,* பெ.(n.) விந்து; semen (சா.அக.).

[கரு + நோச்சிகம். நெல் (வித்து) → நெத்திகம் → நெச்சிகம். கருநொச்சியம் = கருவுக்கு வித்தாக இருக்கும் வித்து.]

கருநொச்சில் *karu-noccil,* பெ.(n.) ***கருநொச்சி*** பார்க்க; see *karu-nocci.*

[கரு + நொச்சில்.]

கருநோய் *karu-nōy,* பெ.(n.) மாட்டுநோய் வகை (யாழ்ப்.); a kind of mange in cattle.

[கரு + நோய்.]

கருப்பஇசிவு *karuppa-iśivu,* பெ.(n.) பேறுகாலங்களில் பெண்களுக்குண்டாகும் ஒருவகை நோய்; a kind of disease occuring during delivery time.

[கருப்ப(ம்) + இசிவு.]

கருப்பக்காலம் *karuppa-k-kālam,* பெ.(n.) கருவுற்றிருக்கும் காலம்; the period of pregnancy.

த. கருப்பக்காலம் >**Skt.** garbhakala.

[கருப்பம் + காலம்.]

கருப்பக்கீரை *karuppa-k-kīrai,* பெ.(n.) சாணாக் கீரை; a kind of edible greens (சா.அக.).

[கருப்பம் + கீரை. கருப்பம் = முளை, முளைக்கீரை போன்றது.]

கருப்பக்கு *karu-p-pakku,* பெ.(n.) கருமருது; black murdah.

[கரு + பக்கு. பக்கு = மரப்பட்டை.]

கரிய பிதிர்ப் பட்டை உடைமையின், புறத் தோற்றத்தால் பெற்ற பெயர்.

கருப்பக்குழி *karuppa-k-kuḻi,* பெ.(n.) ***கருக்குழி*** பார்க்க; see *karu-k-kuḻi.*

[கருப்பம் + குழி.]

கருப்பக்கோள் *karuppa-k-kōḷ,* பெ.(n.) கருப்பையின் தன்மை, பண்பு, கோட்பாடுகள் முதலியன; the nature condition etc. of the womb (சா.அக.).

[கருப்பம் + கோள்.]

கருப்பக்கோளகை *karuppa-kōḷogai,* பெ.(n.) கருப்பப்பை (யாழ்ப்.அக.); womb.

[கருப்பம் + கோளகை. கோளகை = பை.]

கருப்பக்கோளாறு *karuppa-k-kōḷāṟu,* பெ.(n.) கருப்பையிலேற்படும் ஒருவகை நோய்; disorder of the uterus (சா.அக.).

[கருப்பம் + கோளாறு.]

கருப்பக்கோளிலக்கணம் *karuppa-k-kōḷ-iliakkaṇam,* பெ.(n.) கருப்பையின் தன்மை, அமைப்பு, செயற்பாடு முதலியவைகளைப் பற்றிச் சொல்லும் நூல்; the science relating to the nature, structure, function etc. of the womb (சா.அக.).

[கருப்பக்கோள் + இலக்கணம்.]

கருப்பங்கட்டி *karuppaṅkaṭṭi,* பெ.(n.) வெல்லக் கட்டி; jaggery.

[கரும்புக்கட்டி → கருப்பங்கட்டி.]

கருப்பங்கரை-தல் *karuppaṅ-karai-,* 2 செ.கு.வி. (v.i.) 1. கருச்சிதைதல்; to be aborted. 2. அச்ச மிகுதல்; to be frightened out of one's wits.

[கருப்பம் + கரைதல்.]

அச்சப்பொருள் அணிவகை சொல்லாட்சியால் விளைந்தது.

கருப்பங்கலங்கு-தல் *karuppaṅ-kalaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) ***கருப்பங்கரை-தல்*** பார்க்க; see *karuppaṅ-karai-.*

[கருப்பம் + கலங்கு.]

கருப்பங்கழல்(லு)–தல் *karuppaṅkaḻal(lu)-,* 13 செ.கு.வி.(v.i.) ***கருப்பங்கரைதல்*** பார்க்க; see *karuppaṅ-karai* (சா.அக.).

[கருப்பம் + கழல்.]

கருப்பங்கழி *karuppaṅkaḻi,* பெ.(n.) ***கரும்பு*** பார்க்க; see *karumbu* (தஞ்சை.).

[(கரும்பு) கருப்பு + அம் + கழி. (மு.தா. 212).]

கருப்பங்காடி *karuppaṅkāḍi,* பெ.(n.) கரும்புச் சாற்றிலிருந்து எடுக்கப்படும் ஒருவகைப் புளித்த காடி; an acetous fermentation of the juice derived from sugar-cane (சா.அக.).

[கரும்பு + அம் + காடி – கருப்பம்காடி → கருப்பங்காடி. கரும்பு → கருப்பு எனத் திரிந்தது வலித்தல் திரிபு. 'அம்' சாரியை.]

கருப்பங்கொல்லை *karuppaṅ-kollai,* பெ.(n.) கரும்புத்தோட்டம்; sugar cane field.

[கரும்பு + அம் + கொல்லை. கரும்பு → கருப்பு (வலித்தல் திரிபு).]

கருப்பங்கொள்(ளு)–தல் *karuppaṅ-koḷḷu-,* 13 செ.குன்றாவி.(v.t.) ***கருக்கொள்ளு–தல்*** பார்க்க; see *karu-k-koḷḷu-*

[கருப்பம் + கொள்.]

கருப்பச்சிதைவு *karuppa-c-cidaivu,* பெ.(n.) கருக்குலைவு; abortion.

[கருப்பம் + சிதைவு.]

கருப்பச்சின்னம் *karuppa-c-ciṉṉam,* பெ.(n.) ***கருப்பவடையாளம்*** பார்க்க; see *karuppava ḍaiyāḷam.*

[கருப்பம் + சின்னம்.]

கருப்பச்சூடு *karuppa-c-cūḍu,* பெ.(n.) 1. பெற்றோர் வழியாகக் குழந்தைக்கு வரும் நோய்வகை; constitutional debility of an infant brought on by antenatal conditions. 2. நாக்கில் காணும் நோய்; a disease of the tongue.

[கருப்பம் + சூடு.]

கருப்பச்சூலை *karuppa-c-cūlai,* பெ.(n.) ஒருவகைச் சூலை (குத்தல்) நோய்; a kind of ulser.

[கருப்பம் + சூலை.]

கருப்பசன்னி *karuppa-śaṉṉi,* பெ.(n.) ***கருப்பஇசிவு*** பார்க்க; see *karuppa-iśivu.*

[கருப்ப(ம்) + சன்னி.]

கருப்பஞ்சாறு *karuppañ-cāṟu,* பெ.(n.) கரும்புச் சாறு; sugarcane juice.

[கரும்பு + அம் + சாறு. கரும்பு → கருப்பு.]

கருப்பஞ்சீனி *karuppañ-cīṉi,* பெ.(n.) கரும்பின் சருக்கரை; cane sugar.

[கரும்பு + அம் + சீனி.]

கருப்பஞ்சோகை *karuppañ-sōgai,* பெ.(n.) ***கருப்பந்தோகை*** பார்க்க; see *karu-p-pantōgai.*

[கரும்பு + அம் + தோகை = கருப்பந்தோகை → கருப்பஞ்சோகை; 'அம்' சாரியை. தொகு → தோகை → சோகை. (கொ.வ.).]

கருப்பட்டி *karuppaṭṭi,* பெ.(n.) 1. பனைவெல்லம்; jaggery, made from palmyra juice. *"சீவன் கருப்பட்டியோ" (இராம. உயுத். 69.).* 2. பனங்கற் கண்டு (யாழ்.அக.); candy made from palmyra juice. 3. வெல்லம் (வின்.); jaggery.

ம. கரிஞ்சக்கர, கரிப்பட்டி; **துட.** கபோடி; **H.** gud.

[கரும்புல் + அட்டி – கரும்புல்லட்டி → கரும்பட்டி → கருப்பட்டி. கரும்புல் = பனைமரம். அட்டி = அடப்பட்டது, காய்ச்சப்பட்டது.]

கருப்பட்டிக்கற்கண்டு *karuppaṭṭi-k-kaṟkaṇḍu,* பெ.(n.) பனங்கற்கண்டு; palmyra sugar-candy (சா.அக.).

[கருப்பட்டி + கற்கண்டு.]

கருப்பட்டிப்பாகு *karuppaṭṭi-p-pāgu,* பெ.(n.) பனை வெல்லப்பாகு; the sacchrina fluid consisting of the inspisated juices or decoctions of the palmyra plant (சா.அக.).

[கருப்பட்டி + பாகு.]

கருப்படம் *karu-p-paḍam,* பெ.(n.) கந்தற்புடைவை (யாழ்.அக.); rags.

[கரு + படம். கரு = இழிந்த, பயன்படாத.]

கருப்படித்துண்டு *karuppaḍi-t-tuṇḍu,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kadalūr dt.

[கரும்பு + அடி + துண்டு – கரும்படித் துண்டு → கரும்படித்துண்டு (கரும்பு வயலைச் சார்ந்த கீழ்ப்பகுதித் துண்டு நிலம், அந்நிலத்திலமைந்த சிற்றூர்.]

கருப்பணி *karruppaṇi,* பெ.(n.) பனையினின்று இறக்கும் பதநீர் (யாழ்ப்.); sweet toddy of the palmyra, drawn into an earthen vessel smeared within with lime to prevent fermentation.

[கரும்பு + பதநீர் – கரும்புப் பதநீர் → கருப்பநீர் → கருப்பணி (கொ.வ.). கரும்புல் = பனைமரம். கரும்புல் → கரும்பு (லகர ஈறு கெட்டது).]

கருப்பத்துளை *karuppa-t-tuḷai,* பெ.(n.) 1. இயற்கை யாகவே அமைந்துள்ள துளை; any natural hole or cavity (சா.அக.). 2. பவளங்கள் உண்டாகும் போதே காணும் உட்டுளையாகிய குற்றம்; inner hole or cavity formed at the first formation of a coral, a flaw in coral. *"கருப்பத்துளையவுங் கல்லிடை முடங்கலும்" (சிலப். 14:197.).* 3. கருப்பையிலேற்படும் துளை; rupture or perforation in the womb.

[கருப்பம் + அத்து + துளை. 'அத்து' சாரியை.]

கருப்பதும்பம் *karuppa-tumbam,* பெ.(n.) கருப்பத்தை மூடியிருக்கும் நஞ்சுப்பை; after birth; the membranous covering containing the embryo. *"கர்ப்பதும்பமாகிற பையிலே கட்டுண்டு" (திவ். திருமாலை, அவ. வ்யா, பக். 4.).*

[கருப்பம் + தும்பம். தூம்பு → தும்பம்.]

கருப்பந்தெப்பம் *karuppanteppam,* பெ.(n.) பேய்க்கரும்பு பிணைத்துச் செய்யப்படும் மிதவை (பதிற்றுப். 87, 4, உரை.); raft made of wild sugar-cane reeds.

[கரும்பு = பேய்க் கரும்பு. கரும்பு + அம் + தெப்பம் – கரும்பந்தெப்பம் → கருப்பந்தெப்பம். 'அம்' சாரியை.]

கருப்பந்தோகை *karuppan-tōgai,* பெ.(n.) கரும்பின் நெட்டிலை (அ) தாள் (இ.வ.); leaf of the sugar-cane plant.

[கரும்பு + அம் + தோகை . 'அம்' சாரியை. கரும்பு → கருப்பு (வலித்தல் திரிபு.]

கருப்பநாடி *karuppa-nāḍi,* பெ.(n.) கொப்பூழ்க்கொடி (யாழ்.அக.); navel cord.

[கருப்பம் + நாடி. நாளி → நாடி (உட்டுளையுடையது).]

கருப்பநாள் *karuppa-nāḷ,* பெ.(n.) 1. குழந்தை பிறந்த ஒன்பதாம் நாள் (யாழ்.அக.); the ninth day after child-birth. 2. கருப்பிணியாய் இருக்கும் காலம்; the period of pregnancy. 3. கருக்கொள்ளுங்காலம்; period of conception (சா.அக.).

[கருப்பம் + நாள்.]

கருப்பநீர்[1] *karuppa-nīr,* பெ.(n.) பனிக்குடத்து நீர்; discharge from the amniotic sac.

[கருப்பம் + நீர்.]

கருப்பநீர்[2] *karuppa-nīr,* பெ.(n.) 1. கருப்பஞ்சாறு; sugar cane juice. 2. பனை, தென்னை முதலியவற்றின் நீர் (பதநீர், கள்); the sap or toddy extracted from palmyra, coconut trees etc. 3. இளநீர்; tender coconut water.

[கரும்பு + நீர் → கரும்பு நீர் → கருப்பநீர். கரும்பு → கருப்பு (வலித்தல் திரிபு).]

கருப்பநோக்காடு *karuppa-nōkkāḍu,* பெ.(n.) கருப்பவலி; pain in the womb.

மறுவ. இடுப்புநோவு, இடுப்பு வலி.

[கருப்ப + நோக்காடு. நோய் + காடு = நோக்காடு]

கருப்பப்பரிசம் *karuppa-p-parišam,* பெ.(n.) மகப்பேறு வாய்க்கை (யாழ்.அக.); pregnancy.

[கருப்பம் + பரிசம் – கருப்பபரிசம். பரிசு → பரிசம்.]

கருப்பப்பேழை *karuppa-p-pēḻai,* பெ.(n.) தவசங்கள் வைக்க மண்ணால் செய்யப்படும் கூடு; large earthen receptacle for storing grain.

[கருப்பம் + பேழை.]

இவ்வகைப்பேழைகள் செய்ய நண்டுவளை மண், யானைக்கொம்புமண், புற்றுமண், குளத்துமண் ஆகிய மண்வகைகள் பயன்படுத்தப்படுகின்றன [மனைநூல்].

கருப்பப்பை[1] *karuppa-p-pai,* பெ.(n.) கருத்தங்கும் உறுப்பு; the uterus.

[கருப்பம் + பை.]

கருப்பப்பை[2] *karuppa-p-pai,* பெ.(n.) **கருப்பை** பார்க்க; see *karuppai* (செ.அக.).

[கருப்பம் + பை.]

கருப்பம்[1] *karuppam,* பெ.(n.) 1. கரு; embryo, foetus, the young in the womb. 2. கருப்பப் பை; womb, matrix uterus.

மறுவ. கரு, கருவு, கருவம். கருபு, கருபம்.

த. கருப்பம் > Skt. garbha.

[குருத்தல் = தோன்றுதல். குரு → கரு → (கருப்பு) கருப்பம். கரு = சூல், பீள், முட்டை, சேய், குட்டி. வடமொழியாளர் 'க்ரு' (விளி) என்றும் grabh = grah (பற்று) என்றும் மூலங்காட்டுவது பொருந்தாது (வட. வர. 108.).]

கருப்பம்[2] *karuppam,* பெ.(n.) 1. பொருள் பொதிந்தது, உட்கொண்டது; fig., essence, substance, inside, inner contents of anything. கருப்பமுள்ள பாட்டு. 2. நாடக வுத்தி யைந்தனுள் ஒன்று; crisis of a plot in a drama, one of five nāḍaga-utti. 3. நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று; name of one of 108 Upanisads.

வ. கருப்ப

[கரு → கருப்பம். குரு → கரு = உட்குருத்து, உள்ளடங்கியது.]

கருப்பம்[3] *karuppam,* பெ.(n.) உட்பொருளாகக் கொண்டது (சிலப்.17: 442.); that which is suggestive, prognosticative.

Skt. garpha

[கரு → கருப்பம்.]

கருப்பம்[4] *karuppam,* பெ.(n.) 1. வித்தினின்று தோன்றும் முளை; sprout from the seed. 2. மழை பொழிதற்கான மேகத்திரட்சி; cloud formation in the rainy season.

Skt. garpha

[கரு → கருப்பம். கருத்தல் = தோன்றுதல்.]

கருப்பம்கொள்—தல் *karuppam-koḷ-,* 7 செ. குன்றாவி.(v.t.) கருக்கொள்ளுதல்; to conceive, to be pregnant.

[கரு → கருப்பம் + கொள்.]

கருப்பம்பாகு *karuppam-pāgu,* பெ.(n.) வெல்லப் பாகு (வின்.); sugar-cane treacle, medicated molasses.

[கரும்பு + அம் + பாகு – கரும்பம்பாகு. கருப்பம்பாகு. 'அம்' சாரியை. கரும்பு → கருப்பு (வலித்தல் திரிபு).]

கருப்பமழி—தல் *karuppam-aḻi-,* 2 செ.குன்றாவி.(v.t.) ***கருக்கலை—தல்*** பார்க்க; see *karukkalai-.*

[கரு → கருப்பம் + அழி–.]

கருப்பரம்[1] *karupparam,* பெ.(n.) 1. தலையோடு; skull. 2. எலும்பு; bone. 3. இருப்புப்பாண்டம்; iron utensil.

[கரு + பரம் – கருப்பரம். பரம் = மேலிருப்பது. மூடியிருப்பது. கரு = அடிப்படையானது, வலுவானது, மூலமானது.]

கருப்பவடையாளம் *karuppavaḍaiyāḷam,* பெ.(n.) சூலுற்றதற்கான அறிகுறிகள்; signs and symptoms of pregnancy.

[கருப்பம் + அடையாளம்.]

மாதவிலக்கு நிற்றல், மசக்கையுண்டாதல், கொங்கை விம்மல், மூலைக்காம்பில் கருப்புப் படர்தல், வயிறு பருத்தல், குழந்தையசைதல் போன்றன கருப்பவடையாளங்களாகும். சூலுற்ற பெண்ணின் பண்பு, நடை ஆகியவற்றிலும் மாறுபாடு காணப்படும்.

கருப்பவதி *karuppa-vadi,* பெ.(n.) கருவுற்ற பெண்; pregnant woman. ***கருவத்தி*** பார்க்க; see *karuvatti.*

மறுவ. உண்டானவள், சூலி, சூலாள், வயிறி, முழுவாதவள், கருவத்தி.

[கருப்பம் + வதி – கருப்பவதி. அத்தி → வதி. (பெ.பா.ஈறு.)]

கருப்பவலி *karuppa-vali,* பெ.(n.) தாய்மைப்பேற்று வலி; travail, pains of child-birth; labour pain.

மறுவ. இடுப்புவலி, இடுப்புநோவு.

[கருப்பம் + வலி – கருப்பவலி.]

கருப்பவேதனை *karuppavēdaṉai,* பெ.(n.) ***கருப்ப நோவு*** பார்க்க; see *karuppanōvu* (சா.அக.).

[கருப்பம் + வேதனை.]

கருப்பவேர் *karuppavēr,* பெ.(n.) ஆணிவேர்; main root (சா.அக.).

[கரு → கருப்பம் + வேர்.]

கருப்பவோட்டம் *karuppa-v-ōṭṭam,* பெ.(n.) சிலை (மார்கழி) மாதத்தின் பிற்பகுதியில் கருக்கொண்ட மேகத்தின் தென்திசை நோக்கிய ஓட்டம்; southern passage of the rain clouds about the latter half of the Mārgaḻi month.

[கருப்பம் = மழைநீரைக் கருக்கொண்டமேகம். கருப்பம் + ஓட்டம் – கருப்பவோட்டம்.]

கருப்பழிஞ்சில் *karuppaḻiñjil,* பெ.(n.) கருப்பு அங்கோலம்; sage-leaved alangium (சா.அக.).

மறுவ. காரழிஞ்சில்

[கருப்ப + அழிஞ்சில்.]

கருப்பற்று *karu-p-paṟṟu,* பெ.(n.) தாய்மைப்பேறு அடைதல்; attaining mother-hood.

[கரு + பற்று.]

கருப்பறுகு *karupparugu,* பெ.(n.) இருளறுகு; a dark variety of panic grass (சா.அக.).

[கருப்பு + அறுகு.]

கருப்பாசயம் *karuppāšayam,* பெ.(n.) கருப்பப்பை; uterus womb. *"கர்ப்பாசயக் குழிக்கே தள்ளுமோ" (பட்டினத். திருப்பா. திருச்செங்காடு. பக். 142.).*

[கருப்பம் + ஆசயம்.]

Skt. asaya (resting place) > **த.** ஆசயம்.

கருப்பாணி *karuppāṇi,* பெ.(n.) பனைமரத்தின் பாளையினின்று வடிக்கும் பதநீர்; a sweet juice extracted from the palmyra tree (சா.அக.).

[கரும்புல் = பனைமரம். கரும்புல் → கரும்பு + பதநீர். கரும்பதநீர் → கரும்பாணி (கொ.வ.).]

கருப்பாதம் *karuppādam,* பெ.(n.) செம்முருங்கை; a kind of moringa (சா.அக.).

[கரு + (பதம்) பாதம். கரு = சிறந்த. பதம் = உணவு.]

கருப்பாலை *karuppālai,* பெ.(n.) கரும்பாட்டும் ஆலை; sugar-cane press. *"கருப்பாலைச் சோதி நெடும்புகை" (சேக்கிழார். 4, 74.).* 2. கரும் பாலைமரம்; ape-flower tree.

[கரும்பு + ஆலை – கரும்பாலை→ கருப்பாலை. கரும் + பாலை (மரம்). கரும்பு → கருப்பு (வலித்தல் திரிபு).]

கருப்பி[1] *karuppi,* பெ.(n.) (பேய்கட்குத்தலைவியாகிய) காளி; kāḷi.

[கருப்பு→கருப்பி.]

கருப்பி[2] *karuppi,* பெ.(n.) 1. நீலச் செய்ந்நஞ்சு; a kind of arsenic. 2. இரும்பு; iron. 3. கருநொச்சி; a three-leaved chaste tree.

[கரு = கரியநிறம். கரு → கருப்பு → கருப்பி 'இ' கரம் உடைமை குறித்த ஈறு.]

கருப்பி[3] *karuppi,* பெ.(n.) புற்றாஞ்சோறு; an artificial cellular receptacle like beehive, for the habitation of white-ants.

[கரு → கருப்பு → கருப்பி.]

கருப்பிடி–த்தல் *karu-p-piḍi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. அச்சில் வார்த்தல்; to cast in a mould. *"இவனை மயிலோடே கூடக் கருப்பிடித்த தென்னும்படியா யிருக்கை" (திவ். திருப்பள்ளி. 6, வ்யா. பக். 33.).* 2. ஒருமைப்படுத்தல்; to concentrate. 3. எண்ணத்தை மட்டுக்கட்டுதல் (யாழ்.அக.); to stick to the point. 4. கரு உண்டாதல்; conception.

ம. கருப்பிடிக்குக

[கரு + பிடி.]

கருப்பிண்டம் *karuppiṇḍam,* பெ.(n.) கருப்பத்திலுள்ள கரு (கொ.வ.); foetus.

[கரு + பிண்டம்.]

கருப்பில்லம் *karuppillam,* பெ.(n.) 1. இருட்டறை; dark room. 2. சிறை; jail.

து. கர்பில், கர்பில்லு.

[கருப்பு + இல்லம்]

கருப்பிலவு *karuppilavu,* பெ.(n.) முள்ளிலவு; thorny cotton tree (சா.அக.).

[கரு → கருப்பு + இலவு.]

கருப்பிலை *karuppilai,* பெ.(n.) கறிவேப்பிலை; curry-leaf (சா.அக.).

[கறி + வேம்பு + இலை. கறிவேப்பிலை → கருப்பிலை (கொ.வ)]

கருப்பினிசூல் *karuppiṉisūl,* பெ.(n.) கருக்கொண் டிருக்கும்போதே மறுபடியும் சூல் கொள்ளல்; a second conception of a female who has already a foetus in the womb (சா.அக.).

[கருப்பம் → கருப்பினி 'இன்' சாரியை 'இ' பெ.பா.ஈறு ஒ.நோ. பார்ப்பு → பார்ப்பினி.]

கருப்பு[1] *karuppu,* பெ.(n.) **கரும்பு** பார்க்க; see *karumbu.*

ம. கருப்பு

[கரும்பு → கரும்பு.]

கருப்பு[2] *karuppu,* பெ.(n.) 1. கருமை; blackness. 2. இருள்; dark. 3. இருண்டு தோன்றும் பேய்; devil. 4. இன்மை, வறுமை, அருமை; famine, dearth, scarcity, *"மழையின்றிப் பசையில் கருப்புவர" (சேதுபு. வேதாள–20.).*

க. கப்பு; **ம.** காப்பு; **தெ.** கரவு, கருவு; **குவி.** கர்வு; கொலா, **நா., கோண்.** கரு (பசி); பட. கப்பு; **து.** கர்பு.

[கள் → கரு → கருப்பு = கருமை.]

இருள், இருண்டு தோன்றும் பேய், இருட்காலம் போன்ற பஞ்சம் (வே.க. 122 .).

கருப்பு[3] *karuppu,* பெ.(n.) 1. கரி; charcoal. 2. கருந்தும்பி; crow ebony.

[கரு → கருப்பு.]

கருப்பு அகில் *karuppu-agil,* பெ.(n.) கருப்பு அகிற் கட்டை; a black variety of agilwood (சா.அக.).

மறுவ. காரகில்

[கருப்பு + அகில்.]

கருப்புக் கச்சோலம் *karuppu-k-kaccōlam,* பெ.(n.) கருப்பு ஏலத்தோல்; skin of black cardamom (சா.அக.).

[கரு → கருப்பு + கச்சு + ஏலம்.]

கருப்புக் கசகசா *karuppu-k-kašakašā,* பெ.(n.) ஒருவகைக் கருப்புக் கசகசா; black and bitter poppy seed (சா.அக.).

[கருப்பு + கசகசா.]

கருப்புக் கசடு *karuppu-k-kašaḍu,* பெ.(n.) 1. மருந்தின் அடி வண்டல்; percipitated medicine. 2. மருந்தெண்ணெயின் மேலாகப் படியும் அழுக்கு; the deposit on the surface of medicinal oils etc. (சா.அக.).

[கரு → கருப்பு + கசடு.]

கருப்புக்கட்டி *karuppu-k-kaṭṭi,* பெ.(n.) 1. வெல்லம் (திருவானைக். திருநீற்று. 13.); sugar-cane jaggery. 2. பனைவெல்லம்; palmyra jaggery. 3. கற்கண்டு (வின்.); rock candy.

[கரும்புல் = பனைமரம், கரும்பு. கரும்பு + கட்டி – கரும்புக்கட்டி → கருப்புக்கட்டி.]

கருப்புக்கடலாரை *karuppu-k-kaḍalārai,* பெ.(n.) ***கடலாரை*** பார்க்க; see *kaḍalārai.*

[கரு → கருப்பு + கடலாரை.]

கருப்புக் கடுக்காய் *karuppu-k-kaḍukkāy,* பெ.(n.) 1. கடுக்காய் வகை; a black variety of gallnut. 2. பிஞ்சுக் கடுக்காய்; tender gallnut.

[கரு → கருப்பு + கடுக்காய்.]

கருப்புக் கரிக்கான் *karuppu-k-karikkāṉ,* பெ.(n.) உளுந்து; black dhall (சா.அக.).

[கரு → கருப்பு + (கரிக்கன்) கரிக்கான்.]

கருப்புக் கரிசலை *karuppu-k-karisalai,* பெ.(n.) கருங்கரிசலாங்கண்ணி; black eclipse plant (சா.அக.).

[கரு → கருப்பு + கரிசலை.]

கருப்புக்கரும்பு *karuppu-k-karumbu,* பெ.(n.) கருஞ்சிவப்புக் கரும்பு; a dark red sugar-cane (சா.அக.).

[கரும் + சிவப்பு + கரும்பு.]

கருப்புக்கலியாணமுருங்கை *karuppu-k-kaliyāṇa muruṅgai,* பெ.(n.) ***கலியாண முருங்கை*** பார்க்க; see *kaliyāṇamuruṅgai.*

[கருப்பு + கலியாண + முருங்கை.]

கருப்புக்களிமண் *karuppu-k-kaḷimaṇ,* பெ.(n.) ***கருங்களிமண்*** பார்க்க; see *karuṅkaḷimaṇ.*

[கருப்பு + களிமண்.]

கருப்புக் காஞ்சொறி *karuppu-k-kāñjoṟi,* பெ.(n.) ***கருங்காஞ்சொறி*** பார்க்க; see *karuṅkāñjoṟi.*

[கருப்பு + காஞ்சொறி.]

கருப்புக்காடை *karuppu-k-kāḍai,* பெ.(n.) ***கருங் காடை*** பார்க்க; see *karuṅkāḍai.*

[கருப்பு + காடை.]

கருப்புக்காமரம் *karuppu-k-kāmaram,* பெ.(n.) கருப்பு உகா மரம்; a black variety of uga tree.

[கரு → கருப்பு + உகா + மரம்.]

கருப்புக்காரம் *karuppu-k-kāram,* பெ.(n.) ***கடுங் காரம்*** பார்க்க; see *kaduṅkāram.*

[கரு → கருப்பு + காரம்.]

கருப்புக்கிட்டி *karuppu-k-kiṭṭi,* பெ.(n.) சோளப்பயிர்க்கு வரும் ஒருவகை நோய் (இ.வ.); a pest that affects the maize or Indian corn.

[கரு → கருப்பு + கிட்டி.]

கருப்புக்கொண்டைக்குருவி *karuppu-k-koṇḍai-k-kuruvi,* பெ.(n.) பெரும்பாலும் மலைப்பகுதிகளில் வாழும் கருப்பு நிறக் கொண்டையுடைய பறவை வகை; south Indian black bulbul.

[கருப்பு + கொண்டை + குருவி.]

கருப்புக்கொண்டைக்குருவி

கருப்புச்சடை *karuppu-c-caḍai,* பெ.(n.) ஒருவகை சிப்பி (நெல்லை மீனவ.); a kind of shell.

[கரு → கருப்பு + சடை.]

கருப்புச்சந்தை *karuppu-c-candai,* பெ.(n.) ***கள்ளச் சந்தை*** பார்க்க; see *kaḷḷaccandai.*

[கருப்பு + சந்தை.]

கருப்புச்சாறு *karuppu-c-cāṟu,* பெ.(n.) ***கருப்பஞ்சாறு*** பார்க்க; see *karuppañjāṟu...* உழுந்து நானாழி யுந்தின நானாழியுங்கருப்புச் சாறு நானாழியும் இளநீர் நானாழியும். (S.I.I. vol.19, insc. 341, S.No.9.).

[கருப்பு + சாறு – கருப்புச்சாறு.]

கருப்புத்தேளி *karuppu-t-tēḷi,* பெ.(n.) ***கருந்தேளி*** பார்க்க; see *karuntēḷi.*

[கரு → கருப்பு + தேளி.]

கருப்புப் பணம் *kauppu-p-paṇam,* பெ.(n.) கணக்கில் காட்டாது பதுக்கப்படும் பணம்; black-money.

[கருப்பு + பணம்.]

கருப்புப்பாறை *karuppu-p-pāṟai,* பெ.(n.) கடற்பாறை வகை (தஞ்சை.மீனவ.); a kind of sea rock.

இவ்வகைப் பாறை கடலின் 12 அடி ஆழத்தில் காணப்படும்.

[கரு → கருப்பு + பாறை.]

கருப்புப்பூனை *karuppu-p-pūṉai,* பெ.(n.) ***கரும் பூனை*** பார்க்க; see *karumpūṉai.*

[கருப்பு + பூனை.]

கருப்பு மட்டலா *karuppu-maṭṭalā,* பெ.(n.) ஒரு வகை மீன்; a kind of fish.

[கருப்பு + (மட்டில்) மட்டலா.]

கருப்பு மட்டி *karuppu-maṭṭi,* பெ.(n.) கிளிஞ்சில் வகையுள் ஒன்று; a kind of shell.

[கரு → கருப்பு + மட்டி (மட்டில்).]

கருப்புமட்டிவாய் *karuppu-maṭṭi-vāy,* பெ.(n.) ஒரு வகைக் கடல் மீன்; a kind of sea - fish.

[கருப்பு + மட்டிவாய்.]

இவ்வகைக் கடல் மீன் மூன்றடி வரை வளரக் கூடியதும், வெள்ளி போன்ற நிறமுடையதுமாகும்.

கருப்புமுரல் *karuppu-mural,* பெ.(n.) கருமை நிற முரல்வகை; a kind of black needle fish.

[கரு → கருப்பு + முரல்.]

கருப்புரம்[1] *karuppuram,* பெ.(n.) ***கருப்பூரம்*** பார்க்க; see *karuppūram.* *"கருப்புரந் துதைந்த கல்லுயர் மணித்தோள்" (கல்லா.10.).*

[கருப்பூரம் → கருப்புரம்.]

கருப்புரம்[2] *karuppuram,* பெ.(n.) 1. நெல்; a kind of paddy. 2. நீர்; water. 3. பாழ்வினை; sin. 4. பொன்; gold (இ.நூ.த.பெ.அக.).

[கரு → கருப்பு → கருப்புரம். கருப்பு - உயர்வு, மேன்மை, வறுமை, துன்பம்.]

கருப்புவட்டு *karuppu-vaṭṭu,* பெ.(n.) வெல்லம்; sugar-cane jaggery. *"கன்னறரும் பாகாய்க் கருப்பு வட்டாய்" (தாயு.பராபர. 248.).*

[கரும்பு + வட்டு – கரும்புவட்டு→ கருப்புவட்டு. வட்டு = வட்டமாயிருப்பது. தொடக்கத்தில் பனைவெல்லத்தையே குறித்த சொல், நாளடைவில் கரும்பு வெல்லத்தையும் குறித்தது.]

கருப்புவரால் *karuppu-varāl,* பெ.(n.) கருநிறமுடையதும் இரண்டடி நீளம் வளரக்கூடியதுமான நன்னீர் மீன்; a kind of fish.

[கரு → கருப்பு + வரால்.]

கருப்புவழலை *karuppu-vaḻalai,* பெ.(n.) நச்சுப்பாம்பு வகையுளொன்று; a venomous kind of snake.

[கருப்பு + வழலை.]

கருப்புவில் *karuppu-vil,* பெ.(n.) கரும்பு வில்; sugar-cane bow of the god of love. *"கருப்புநாண் கருப்புவி லருப்புக்கணை தூவ" (மணிமே .18:105.).*

[கரும்பு → கருப்பு + வில் – கருப்புவில்.]

கருப்புவில்லி *karuppu-villi,* பெ.(n.) கரும்பு வில்லை உடையவனாகக் கருதப்படுபவன், காமன்; Kāma, the God of love, whose bow is made of sugar-cane. *"மீன்றிகழ் கொடியனைக் கருப்பு வில்லியை" (மணிமே.20: 92.).*

[கரும்பு கருப்பு + வில்லி – கருப்புவில்லி. வில்லி = வில்லுடையவன். 'இ' உடைமைப்பொருளீறு.]

கருப்பூர் *karuppūr,* பெ.(n.) கரூர், காஞ்சிபுரம், தஞ்சை, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள சிற்றூர்; name of villages in Karur, Kancipuram, Thanjavur and Thuttukkudi dt.

[கருப்பன் + ஊர் – கருப்பனூர் → கருப்பூர்.]

கருப்பூர் உக்கடை *karuppūr-ukkaḍai,* பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டதுச் சிற்றூர்; a village in Pudukkottai dt.

[கருப்பன் + ஊர் – கருப்பனூர் → கருப்பூர் + உக்கடை. உக்கடை=மேற்பக்கம், மேற்பக்கத்துச் புதுக்குடியிருப்பு.]

கருப்பூர்தோட்டம் *karuppūr-tōṭṭam,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thanjavur dt.

[கருப்பன் + ஊர் – கருப்பனூர் → கருப்பூர் + தோட்டம்.]

கருப்பூர்வழக்கு *karuppūr-vaḻakku,* பெ.(n.) தீராத வழக்கு (வின்.); undecided suit.

[கருப்பு + ஊர் + வழக்கு. கருப்பு = துன்பம். ஊர் = ஊர்தல், தொடர்தல்.]

கருப்பூரக்கிளுவை *karuppūra-k-kiḷuvai,* பெ.(n.) மலைமா (L.); hill balsam tree.

[கருப்பூரம் + கிளுவை.]

கருப்பூரக்கொடி *karuppūra-k-koḍi,* பெ.(n.) வெற்றிலை வகை; a variety of betel (G.Sm.D.215.).

[கற்பூரம்→ கருப்பூரம் + கொடி – கருப்பூரக்கொடி.]

கருப்பூரவெற்றிலையை மெல்லும்போது, கருப்பூர மணம் வீசுவது போலவும், சற்று காரச்சுவை உடையதாகவும் இருப்பதால் இதனைக் கருப்பூர வெற்றிலை என்றும், கருப்பு வெற்றிலை என்றும் அழைப்பர். மற்றொரு வகைக்கு வெள்ளை வெற்றிலை என்று பெயர்.

கருப்பூரத்துளசி *karuppūra-t-tuḷaši,* பெ.(n.) கருப்பூர மணமுள்ள துளசிவகை; a kind of tulasi plant that diffuses the smell of camphor.

[கருப்பூரம் + துளசி .]

கருப்பூரநீர் *karuppūra-nīr,* பெ.(n.) ஒரு மருந்து; a kind of medicine.

[கருப்பூரம் + நீர்.]

கருப்பூரப்புல் *karuppūra-p-pul,* பெ.(n.) நறுமணப்புல் வகையுளொன்று (வின்.); lemon-grass, camphor grass.

[கருப்பூரம் + புல்.]

கருப்பூரம்[1] *karuppūram,* பெ.(n.) 1. எரிக்குங் கருப்பூரம்; common camphor. *"கருப்பூரமும் சுமந்துடன் வந்த" (சிலப்.14,109.).* 2. முக மணங்களுள் ஒன்றான பச்சைக் கருப்பூரம் (சீவக.838, உரை.); camphor in its native state one of five muga-vāšam. 3. ***கருப்பூரமரம்*** பார்க்க; see *karuppūra-maram.*

ம. கற்பூரம்; **க.** கர்பூர; **தெ.** கர்பூரமு; **ம.** கர்பூர.

Gk. Campora; **Skt.** Kāpūr; **Mar.** kafur; **H., Ar., Persn.** kapur; **U.** Kapur; **Mal.** karpūra; **Sinh.** kapūru.

[பீர்→பீரம் (ஊறுவது, கசிவது) →பூரம். கரு = பெரிய, மிக. கரு + பூரம் = கருப்பூரம் (மிகக் கசியும் பசையுள்ள பட்டை மூடிய மரம், அம்மரத்தின் கசிவான கருப்பூரம்).]

கருப்பூரமரம் *karuppūra-maram,* பெ.(n.)1. கருப்பூரம் உண்டாதற்குரிய மரம்; camphor tree. 2. மரவகையுளொன்று (வின்.); blue-gum tree.

[கருப்பூரம் + மரம்.]

கருப்பூரயெண்ணெய் *karuppūra-y-eṇṇay,* பெ.(n.) ஒரு மருந்து எண்ணெய்; medicinal oil.

[கருப்பூர + எண்ணெய். எள் + நெய் – எண்ணெய்.]

கருப்பூரவல்லி *karuppūra-valli,* பெ.(n.) ***கருப்பூரவள்ளி*** பார்க்க; see *karuppūra-vaḷḷi.*

[கருப்பூரவள்ளி → கருப்பூரவல்லி.]

கருப்பூரவழுதலைக்கனி *karuppūra-vaḻudhalaik-kaṉi,* பெ.(n.) நச்சுத் தன்மை பொருந்திய பழம்; a poisonous fruit (சா.அக.).

[கருப்பூரம் + வழுதலைக்கனி.]

கருப்பூரவள்ளி *karuppūra-vaḷḷi,* பெ.(n.) 1. ஒருவகை மருந்துச் செடி; thick-leaved lavender. *"நெஞ்சிற்பட்டு கபம் வாதமும்போம்.... கர்ப்பூரவள்ளி"* (பதார்த்த. 330.). 2. ஒருவகை நறுமணச் செடி; country borage. 3. ஒருவகை வாழை; banana.

[கருப்பூரம் + வள்ளி. இங்குக் கற்பூர மணத்தைக் குறித்தது.]

கருப்பூரவாழை *karuppūra-vāḻai,* பெ.(n.) ஒருவகை வாழை; a kind of banana.

[கருப்பூரம் + வாழை.]

கருப்பூரவில்வம் *karuppūra-vilvam,* பெ.(n.) ஒருவகை வில்வம்; a kind of Vilva tree.

[கருப்பூரம் + வில்வம்.]

கருப்பூரவிலை *karuppūra-vilai,* பெ.(n.) 1. திருக்கோயிலைச் சார்ந்த நிலங்களுக்கு மக்கள் கொடுக்கும் விலை (இ.வ.); price paid for temple lands. 2. ஒருவகை வரி; a kind of tax.

[கருப்பூரம் + விலை.]

கருப்பூரவெற்றிலை *karuppūra-veṟṟilai,* பெ.(n.) மணமிக்க வெற்றிலை வகை (வின்.); fragrant white betel.

[கற்பூரம் → கருப்பூரம் + வெற்றிலை.]

கருப்பெட்டி *karu-p-peṭṭi,* பெ.(n.) ***கருப்பை*** பார்க்க (யாழ்.அக.); see *karu-p-pai.*

[கரு + பெட்டி .]

கருப்பேந்திரம் *karuppēndiram,* பெ.(n.) ***கரும்பியந்திரம்*** பார்க்க; see *karumbiyandiram.* *"கருப்பேந்திர முதலாயின கண்டாள்"* (கம்பரா. கங்கை. 6.).

[கரும்பு + (இயந்திரம்) எந்திரம் – கரும்பெந்திரம் → கருப்பேந்திரம் (கொ.வ.).]

வடமொழியிலக்கண மரபு தழுவிக் கரும்பேந்திரம் எனக்கம்பர் எடுத்தாண்ட சொல்லாட்சி தமிழிலக்கண மரபுக்கு ஒவ்வாதது; கரும்பியந்திரம் என்பதே செவ்விய சொல்லாட்சி.

கருப்பேரண்டம் *karuppēraṇḍam,* பெ.(n.) கருப்பா மணக்கு; a dark variety of castor seed (சா.அக.).

[கரு → கருப்பு + ஏரண்டம்.]

கருப்பை[1] *karuppai,* பெ.(n.) கருத்தங்கும் பை, சூற்பை; womb. *"கருப்பைக்குண் முட்டைக்கும்"* *(தனிப்பா. 1,120,3.).*

[கரு + பை – கருப்பை.]

கருப்பை[2] *karuppai,* பெ.(n.) 1. எலி; rat. *"அணிலொடு கருப்பை யாடாது"* *(பெரும்பாண்.85.).* 2. கருங்காய்ப் பனை (யாழ்ப்.); palmyra, that bears black fruit.

[கருப்பு → கருப்பை ; கரிய நிறமுடையது.]

கருப்பைக்கட்டி *karuppai-k-kaṭṭi,* பெ.(n.) பெண்களின் கருப்பையினுள் ஏற்படுங் கட்டி; a tumour formed in the womb (சா.அக.).

[கரு +பை + கட்டி – கருப்பைக்கட்டி.]

கருப்பைக்கழலை *karuppai-k-kaḻalai,* பெ.(n.) ***கருப்பைக்கட்டி*** பார்க்க; see *karuppaikkaṭṭi.*

[கருப்பை + கழலை.]

கருப்பொருள் *karu-p-poruḷ,* பெ.(n.) 1. அடிப்படையாக அமையும் மூலப்பொருள்; theme. 2. காரணப் பொருள்; God, the efficient cause, the originator of all things. *"அந்தக்கரணங் கடந்த கருப்பொருளே"* *(பதினொ.திருக்கழு. மும்மணிக்.3.).* 3. ஐந்திணைகளுள் ஒவ்வொன்றுக்கு முரிய தெய்வமுதலிய பொருள்கள் (நம்பியகப். 19.உரை.); distinctive regional features of each of the *aindinai* or five tracts of land embracing 14 items, viz., teivam, talaivar, makkaḷ, puḷ, vilaṅgu, ūr, nīr, pū, maram, uṇā, paṟai, yāḻ, paṉ, toḻil.

[கரு + பொருள் ; கருப்பொருள் ; எல்லாவற்றுக்கும் அடிப்படையானது. காலமும் இடமும் ஆகிய முதற்பொருளிலிருந்து கருக்கொண்டு தோன்றியது.]

மக்கள், தெய்வம், தலைவர், விலங்கு, புள், ஊரார், நீர், பூ, மரம், உணவு, பண், பறை, யாழ் என 14 வகைப்படும்.

கருப்பொருளியல் *karu-p-poruliyal,* பெ.(n.) கனிப்பொருள் இயல்; minerology.

[கரு + பொருள் + இயல். கரு = கனிமம்.]

கருப்போட்டம் *karuppōṭṭam,* பெ.(n.) கருப்பப் பையில் பிண்டத்தின் அசைவு; the movements of the child in the womb (சா.அக.).

[கரு = கருப்ப(ம்) + ஓட்டம்.]

கரும் *karum,* பெ.எ.(adj.) கரிய; black.

[கரு→கரும்.]

கரும்பக்கம் *karumpakkam,* பெ.(n.) தேய்பிறை; descending moon.

[கரும் + பக்கம். பக்கம் = பகுதி.]

த. கரும்பக்கம் > skt. krisṇapaksa.

கரும்பச்சை *karumpaccai,* பெ.(n.) கருமை கலந்த பச்சை நிறம்; deep green.

ம. கரிம்பச்ச

[கருமை + பச்சை.]

கரும்பசலி *karumpaśali,* பெ.(n.) கருப்புப்பசலை; a black bitter variety of Indian spinach (சா.அக.).

[கரு→கரும் + பசலை.]

கரும்பசு *karumpaśu,* பெ.(n.) காராவு, (காராம் பசு); cow with black dugs (சா.அக.). ***காராவு*** பார்க்க; see *kārāvu.*

[கரு → கரும் + பசு. ***Skt.*** *pasu > த. பசு.]*

கரும்பட்டியல் *karumpaṭṭiyal,* பெ.(n.) குற்றம் கண்டபின் பொதுப்பட்டியிலிலிருந்து நீக்கித் தனியாக வைத்தல்; black-list.

[கரும் + பட்டியல்.]

கரும்படை *karum-paḍai,* பெ.(n.) மேகப்படை (m.l.); ringworm.

[கரும் + படை.]

கரும்பணி *karumbaṇi,* பெ.(n.) பெண்களின் தோள்மார்புகளில் சந்தனக் குழம்பு முதலியவற்றால் கரும்பின் வடிவமாக எழுதப்படுங்கோலம்; figure of sugar-cane drawn with sandal paste on women's arms and breasts, an adornment for women in ancient times. *"அன்றுதானீத்த கரும்பணி வாட" (கலித். 131. 29.).*

[கரும்பு + அணி – கரும்பணி. அணி = கோலம், அழகு.]

கரும்பந்தன் *karumpandaṉ,* பெ.(n.) சாரைப்பாம்பு; male cobra (சா.அக.).

[கரு → கரும் + (பாந்தள்) பந்தன்.]

கரும்பயறு *karumpayaṟu,* பெ.(n.) சிறுபயறு; a small black variety of pulse (சா.அக.).

[கரு → கரும் + பயறு.]

கரும்பருந்து *karu-m-parundu,* பெ.(n.) பருந்து வகை (வின்.); spotted eagle.

ம. கரிம்பருந்து

[கரும் + பருந்து.]

கரும் பல்லி[1] *karumpalli,* பெ.(n.) கறுப்புப் பல்லி; black lizard (சா.அக.).

[கரு → கரும் + பல்லி.]

கரும் பல்லி[2] *karumpalli,* பெ.(n.) கறுப்புப் பல்லிப்பூடு; black lizard plant (சா.அக.).

[கரு → கரும் + பல்லி.]

கரும்பல்லிப்பூடு சித்தருண்ணும் காயகற்ப மூலிகையாகும். இதுபோல், சிவப்புப் பல்லிப்பூடும் இருக்கின்றதென்பர்.

கரும்பலகை *karum-palagai,* பெ.(n.) பள்ளியில் மாணவர்களுக்கு எழுதிக்காட்டிப் பாடங்களை விளக்கப்பயன்படும் கருப்பு வண்ணம் பூசப்பட்ட பெரிய பலகை; black-board.

[கரு → கரும் + பலகை.]

கரும்பவளம் *karumpavaḷam,* பெ.(n.) கருப்புப் பவளம்; black coral (சா.அக.).

[கரும் + பவளம்.]

கரும்பளிங்கு *karumpaḷiṅgu,* பெ.(n.) பளிங்குக் கல்வகை (m.m.247.); basalt, crystaline form of dolerite.

[கரு→கரும் + பளிங்கு.]

கரும்பன் *karumbaṉ,* பெ.(n.) கரும்பை வில்லாக வுடைய காமன்; God of love who has a sugar-cane bow. *"சாற்றுக் கரும்பனைக் கூற்றென்னும்" (அஷ்டப்.அழகரந்.17.).*

[கரும்பு + அன்.]

கரும்பன்பள்ளம் *karumbaṉ-paḷḷam,* பெ.(n.) அம்பாசமுத்திரம் வட்டம் ஆழ்வார்க் குறிச்சி கோயிலுக்கு இறையிலியாக விடப்பட்ட ஊர்; village gifted tax free to the temple of Alwarkkuruchi in Ambasamudram taluk; *"திருப்பணிப் புறத்துக்கு விட்ட சோலைச்சேரி சாம்பன் குளமும் கரும்பன் பள்ளம் ஏலேலசிங்கத்துக்கும் பெருநான்கெல்லை"* (தெ.இ.கல்.தொ.23 கல்.119.).

[கரும்பு + அன் + பள்ளம். கரும்பன்பள்ளம்; கரும்பன் பெயரிலமைந்த சிற்றூர்.]

கரும்பனசை *karu-m-baṉašai,* பெ.(n.) ***கருப்பு வழலை*** பார்க்க; see *karuppuvaḻalai.*

[கரும் + பனசை. பனையன் → பனசை.]

கரும்பனிச்சை *karumbaṉiccai,* பெ.(n.) ஒருவகை அம்மை நோய்; a kind of variola or small pox. (சா.அக.).

[கரு → கரும் + பனிச்சை. (கொப்புளம்).]

கரும்பனை *karumpaṉai,* பெ.(n.) பனைமரம்; palmyra tree (சா.அக.).

[கரு → கரும் + பனை.]

கரும்பனைக்கண்ணி *karumpaṉai-k-kaṇṇi,* பெ.(n.) பனைமரம்; palmyra tree (சா.அக.).

[கரு → கரும் + பனை+கண்ணி (பெண்ணாகக் கருதிய உருவகம்).]

கரும்பனையன் *karu-m-baṉaiyaṉ,* பெ.(n.) பாம்பு வகை (வின்.); krait, as black in colour.

[கரும் + பனையன்.]

கரும்பாடு *karu-m-bāḍu,* பெ.(n.) ஏரியின் நீர்ப்பிடி வரையுள்ள நிலம்; margin of a tank between the bund and the water limit, usually clayey.

[கரு → கரும் + பாடு – கரும்பாடு. கரு - மேடு. நீர்ப்பரப்பைத் தொடும் நிலப்பரப்பு கரும்பாடு எனப்பட்டது. படு → பாடு - தொடுதல்.]

கரும்பாம்பு *karu-m-bāmbu,* பெ.(n.) 1. கறுப்பு நிறமுள்ள பாம்பு; black snake. 2. ஒன்பது கோள் களுள் ஒன்றாகக் கருதப்பட்ட பாம்புக் கோள். (இராகு.) (பிங்.); Rahu, the ascending node, which accg. to mythology is regarded as a serpent.

ம. கரிம்பாம்பு; **க.** கரிஹாவு.

[கரும் + பாம்பு.]

கரும்பாலை[1] *karu-m-bālai,* பெ.(n.) கரும்பாட்டும் இயந்திரம் (கொ.வ.); sugar-cane press.

மறுவ. கரும்பியந்திரம்

ம. கரும்பால

[கரும்பு + ஆலை –.]

கரும்பாலை[2] *karu-m-bālai,* பெ.(n.) பாலைமரவகை; obtuse-leaved ape flower.

[கரும் + பாலை.]

கரும்பாவை *karum-pāvai,* பெ.(n.) ஒருவகைக் கண்ணோய்; a kind of an eye disease (சா.அக.).

[கரு → கரும் + பாவை.]

கரும்பித்தம் *karu-m-pittam,* பெ.(n.) 1. பித்தநீர் வகையுளொன்று; black bile. 2. அறிவு திரிதல்; மூளைக்கோளாறு; madness, dementia.

ம. கரும்பித்தம்

[கரும் + பித்தம்.]

கரும்பியந்திரம் *karumbiyantiram,* பெ.(n.) ***கரும்பாலை*** பார்க்க; see *karumbālai.*

[கரும்பு + இயந்திரம் (இயங்குவது).]

கரும்பிலாச்சை *karu-m-bilāccai,* பெ.(n.) கடல்மீன் வகை; globe-fish, dull reddish.

[கரும் + பிலாச்சை.]

கரும்பிள்ளை *karumpiḷḷai,* பெ.(n.) காக்கை; crow. *"அலர்கதிர் கரும்பிள்ளை மடுப்ப" (சீவக. 1252.).*

யெரு. காஉரகம்

[கரும் + பிள்ளை.]

கரும்பிறப்பு *karumpiṟappu,* பெ.(n.) நிரயத்திலுள்ள அறுவகைப்பிறப்புகளுள் மிகவும் இழிந்ததாகக் கருதப்படும் ஒரு பிறப்பு; lowest form of existence, in a naragam. *"கரும்பிறப்புங் கருநீலப்பிறப்பும்" (மணிமே.27:150.).*

ம. கரும்பிறப்பு

[கரும் + பிறப்பு.]

பல்வகைப் பிறப்புகளுக்கு நிறங்கூறும் இயல்பு சிந்தாமணி முதலிய சமண நூல்களில் காணப் படுகிறது.

கரும்பிறை *karumpiṟai,* பெ.(n.) 1. கரும்பளிங்குக் கல் (வின்.); black marble. 2. கருஞ்சுக்கான்கல்; black limestone.

[கரும் + பிறை.]

பிறை என்பது நிலவைக்குறித்துப் பிறகு குளிர்ந்த வெண்ணிறப்பளிங்குக் கல்லுக்கும், சுக்கான் கல்லுக்கும் பளபளக்கும் இயல்பு நோக்கி ஆகுபெயராயிற்று.

கரும்பு[1] *karumbu,* பெ.(n.) 1. புல் வகையைச் சார்ந்ததும் மூங்கிலும் நாணலும்போற் கணுக் களுள்ளதும், இனிக்கும் சாறுள்ளதும், கழை வடிவானதும், வெப்ப நாடுகளில் 6 அடி முதல் 26 அடி வரை வளர்வதும், சருக்கரை, வெல்லம் செய்ய மூலப்பொருளானதுமான, உயிர்க்கால் நெடும் பயிர்வகை; sugar-cane, major source of the world's sugar and molasses, a giant perennial grass of the genus Saccharum officinarum cultivated in tropical and sub-tropical regions. *"கரும்புபோற் கொல்லப் பயன்படுங் கீழ்" (குறள். 1078.).* 2. கழை (புனர்பூசம்) என்னும் ஏழாம் நாண்மீன் (திவா.); punarpūsam, the seventh nakshatra. 3. காமனின் வில்; bow of Manmatha. *"கைக்கரும் பென்ன கணையென்ன நீயென்ன மன்மதா" (குற்.குற.34).* 4. இனிப்பு; sweetness. அவன் பேசினால் கரும்பு; நான் பேசினால் வேம்பா? (உ.வ.).

மறுவ. கழை, இக்கு, செறுக்கு, கன்னல்.

ம. கரிம்பு; **க.** கர்வு, கர்பு. கப்பு; **து.** கர்ம்பு; **குட.** கப்பி. **கோத. துட.** கப்.; **பட.** கப்பு; **உரா** கரும்பு.

[கரு = கருமை. கரு → கரும்பு = கரிய நிறமுள்ளது. 'கல்' கருமைக் கருத்து வேர்ச்சொல். குல் → குலவு. குல் → கல் → கலவு. குலவுதல் = கூடுதல், கலத்தல். கலத்தற் கருத்தினின்று மயக்கற் கருத்தும், மயக்கற் கருத்தினின்று இருண்மைக் கருத்தும் இருண்மைக் கருத்தினின்று கருமைக் கருத்தும் தோன்றும்.]

கல் → கன் → கன்னல் = கரியவகைக் கரும்பு [திவா.]. கல் = கரு. [ஒ.நோ : இல் → இரு]. கரும்புல் = பனைமரம். கரும்புல் பனைமரத்தைக் குறிப்பதுபோன்றே, கரும்பையுங் குறித்ததாகிப் பண்டு வழக்கிலிருந்து, பின் கரும்பு எனக் குறுகியது.

கரும்பு கரியது; வேழம் [வேழக்கரும்பு] வெளியது; இராமக்கரும்பு வெண்மையும் செம்மையுங் கலந்தது" [சொல்.கட்.67.].

பனையும் கரும்பும், வெல்லங்காய்ச்ச இன்சாறு உதவும் பயிர்வகைகளாக இருந்ததால், பனை வெல்லத்தையும் கரும்பினாற் செய்த வெல்லத் தையும் குறிக்கக் கருப்பட்டி என்னும் சொல் வழக்கூன்றியது. இது வடபுலமொழிகளில் கொர்டு என்றும், கூடு (gud.) என்றும் வழங்குதல் காண்க.

கரும்புல் = பனை. கருப்பணி = பதநீர். கருப்பட்டி = பனை வெல்லம். கரும்புல்லினின்று அட்டது கருப்பட்டி; கரும்பினின்று அட்டதும் கருப்பட்டி.

மூங்கில் போன்றிருத்தலான் கரும்பைக் 'கழை' என்றனர். முழுநீளக் கரும்பை 'கடெ' (gade), 'ஜொளெ' என்னும் இட வழக்குகள் கழை என்பதன் திரிபே. கழை → கடெ, ஒ.நோ : மழ → மட [இளமை]. கழை → களெ → சொளை → ஜொளை. நீர்வளம் மிக்க வயலில் விளைவிக்கப் படுதலாலும், இனிப்பான நீர்க்கோப்புடை மையாலும், 'செறுக்கு' என்னும் பெயர் பெற்றது.

தெ. செறுக்கு = கரும்பு. ருச். சொ்டி.

செறு = வயல். செல் = நீர் கொண்ட மழைமேகம். செல் → சேல் = நீரிற் பிறழும் மீன். சேறு → சாறு = நீர் கலந்த பொருள். சேறு → செறு = நீர் தேங்கும் வயல். செறுகு → செறுக்கு = நீர்வளம் மிக்க வயலில் விளைவதும் இனிப்பான நீர்கோப்புடையதுமான கரும்பு

வடஇந்திய மொழிகள் பெரும்பாலனவற்றுள், கரும்பு, இக்கு, ஈக், கன்னா எனப்படும். இந். ஈக், சன்னா. வங். அக், ஆக். மரா. ஈக், ஊஸ், உரு. என்னா, ஈக். அரபி கஸ்புஸ்கர். இள் → இள [இளகிய]. இள் + கு = இக்கு = கரும்பு. [ஒ.நோ : சுள் + கு = சுக்கு]. இனிய சாற்றுக்கோப்பால், ஒடித்தால் ஒடியும் அளவிற்கு, இளக்கமான தண்டையுடையது. வடமொழியிலும் இப்பழந்தமிழ்ச் சொல் சென்று 'இக்ஷீ' என வழங்குகிறது. அவர்கள் இச் சொல்லுக்கு, 'இஷ்' [விரும்புதல்] என்பதை வேராகக் காட்டுவர். விரும்பப்படுவன கரும் பொன்றே அன்மையான் அது பொருந்தாமை அறிக. ஒடியும் அளவிற்கு இளகிய தண்டாக இருப்பது இஃதொன்றே என்பதும், ஏனைய நாணல், மூங்கில்,

கொடி போன்றவை காற்றுக்குச் சாய்ந்து கொடுக்கும் இயல்பின்றி ஒடியும் இயல்புடையன அல்ல என்பதும், தெரிதருதேற்றம்.

கரும்புக்குரிய கழை என்னும் பெயர், சாலித்தீவினரின் [Java] மொழியில் 'கோள' [Goela] என்று வழங்குகிறது.

புதிதாக உண்டாக்கப்பட்ட கலப்பினக் கரும்புகளில் 68 வகைகள் உள்ளன. கரும்பு இந்நாட்டின் தொல்பழங்காலப் பயிர். இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் கரும்பு இருந்ததாக பிரித்தானியக் கலைக்களஞ்சியம் கூறுகிறது. விவிலிய நூலில் தேனொன்றே இனிப்புப் பொருளாக இடம்பெறினும், வடமொழி வேதங்களில் கரும்பு குறிப்பிடப் படுகிறது. கி.பி. முதல் நூற்றாண்டில், இந்தியாவிலிருந்து சீன அரசனுக்குக் கரும்பு அனுப்பப்பட்டது. கி.பி. 424–இல் தென்சீனத்தில் கரும்பு பயிராக்கப்பட்டது. ஆறாம் நூற்றாண்டில் பாரசீகத்திற்குச் சென்றது. கி.பி. 641–இல் கரும்பு எகுபதுநாட்டுக்கு அறிமுகமாகியது. அதற்குமுன், மேலைநாடுகளில் மருத்துவர்களிடம் மட்டும் பனைவெல்லம், சருக்கரை போன்றவை மருந்துச் சரக்காக அருகிய அளவில் பயன்பட்டன. கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில்தான் கரும்பு, கொலம்பசின் முயற்சியால் அமெரிக்காவுக்கு அறிமுகமாகியது.

ஆத்திரேலியாவின் வடகீழ்த்திசையிலுள்ள நியூகினியாத் தீவிலும், சாலமன் தீவிலும் கரும்பு இயற்கையாகவே பயிராகியது என்பர். சேரமன்னரின் கிளை மரபினனான அதியமானின் முன்னோன் அதியஞ்சேரல் கடல்கடந்து நெடுந்தொலைவு சென்று, பெறற்கரிய கரும்புப் பயிரைக்கொணர்ந்து, தமிழகத்திலும் அடுத்துள்ள பகுதிகளிலும் பரப்புதற்கு வழிகோலினான் என்னும் செவிவழிச் செய்தி, இது தெருக்கூத்து உரையாடலில் இடம் பெற்றிருக்கிறது.

"அரும்பெறல் மரபின் கரும்பிவண் தந்து
நீரக விருக்கை ஆழி சூட்டிய
தொன்னிலை மரபினின் முன்னோன் போல"

[புறம்.99.]. என்னும் புறப்பாடலாலும் தெளிவாகிறது.

தொல்பழங்காலச் சேர இளவரசர்கள் தம் கடற்பயணத்தின்போது எதிர்பாராமல் புதிது கண்டுபிடிக்கும் ஆற்றலுடையவராய் இருந்தனர் என்பதற்குச் சான்றான, ஈழத்துத் தொல்கதையைத் தழுவி serendipity [எதிர்பாராமல் புதிது காணல்] என்னும் ஆங்கிலச்சொல் படைக்கப்பட்டுள்ளது.

serendipity : the faculty of making happy chance finds. (Serendip, a former name for Ceylon. Horace Walpole coined the word (1754) from the title of the fairy-tale "The Three princes of Serendip', whose heroes `were always making discoveries by accidents and sagacity, of things they were not in quest of!). (Chambers Twentieth century Dictionary)

ஆத்திரேலியாவையடுத்ததும், இயற்கையாகவே உலகில் முதன்முதல் கரும்பு விளைந்ததாகக் கருதப்படுவதுமான சாலமன் முதலிய தீவுகளில் வாழும் பழங்குடி மக்கள், தம் முன்னோர் கரும்பிலிருந்து தோன்றியதாக நம்புவது, கரும்பு காரணமாக அங்குக் குடியேறிய முன்னோர் வரலாற்றை உட்கொண்டிருக்கும் எனக் கருதப்படுகிறது.

தென்கிழக்காசிய நாடுகளிலுள்ள பழங்குடிகளின் மொழிகள் தமிழோடு தொடர்புடையன என ஆய்வாளர் கூறிவருவதும், தமிழ் முன்னோரே முதன்முதல் கரும்பு கண்டுபிடித்துப் பரப்பியவர் என்பதற்குச் சான்றாகிறது.

சருக்கரை, நாட்டுச் சருக்கரை, வெல்லம் ஆகியன செய்ய உதவும் கரும்பு, மருத்துவத்திற்கும் பயன்படுகிறது. குருதியைத் தூய்மைப்படுத்தவும், இருமல், பித்தம் தணிவிக்கவும், பசி மிகுவிக்கவும், கரும்பஞ்சாற்றை ஏலங்கலந்து பருகுவர்.

பழமொழிகள் :

கரும்பிருக்க இரும்பைக் கடிக்கலாமா?
கரும்பென்றால் வாயினிக்குமா?
கரும்பு தின்னக் கூலி வேண்டுமா?
கரும்பு கட்டுக்கு எறும்பு தானே வரும்
கரும்பு கசக்கிறது வாய்க்குற்றம்
கரும்பும் எள்ளும் கசக்கினால் பலன்தரும்
கரும்பிலே தேன் இருக்கும் கள்ளியிலும் பால் இருக்கும்
கரும்புக்குக் கணு இருந்தாலும் கசக்குமா?
கரும்புருசி என்று வேரோடு பிடுங்கலாமா?

கரும்பன் என்னும் தொண்டை நாட்டு வள்ளல், தன் தோட்டத்திலுள்ள கரும்பை எவரும் வந்து நாணாது தின்னுக என யாவரையும் அழைத்தபோது, சிலர் மறுக்க, அவர்களுக்குக் கூலி கொடுத்து அழைத்திருந்தான் என்றும், கரும்பு தின்னக் கூலி என்னும் பழமொழி இவனால் வந்தது என்றும், கூறுவர்.

கரும்பின் வகைகள் : 1. செங்கரும்பு - red-coloured sugar-cane. சிவந்த நிறமுள்ள கரும்பு. 2. பேய்க் கரும்பு - wild sugar-cane - saccharum spontaneum. பட்டினத்தார் கையில் கொண்டிருந்த கரும்பைப் பேய்க்கரும்பு என்பர். இது நாணல் வகையைச் சார்ந்தது. உண்மையில் கரும்பன்று. இதனை வேழக்கரும்பு என்றும் கூறுவர். (பெரும்பா.263). 3. வெண்கரும்பு - white coloured sugar-cane - saccharum officinar தடித்து மென்மையாயிருக்கும் கிழக்காசியக் கரும்பு வகை. வெளுத்தும் வெளிர்ப் பச்சையாயுமிருக்கும். 4. வெண்கதலிக்கரும்பு - a superior kind of sugar-cane - Saccharum genus. உயர்வகைக் கரும்பு. இதனைக் இரசதாளிக் கரும்பு என்பர். 5. நாட்டுக்கரும்பு - Saccharum barberi. சன்னமான கரும்புவகை. வடஇந்தியாவில் மிகுதியாகப் பயிராகிறது. நோயும் தட்பவெப்ப வேறுபாடும் தாங்கும் வன்மையுள்ளது. 6. காட்டுக்கரும்பு - Saccharum Spontania. சமதட்பவெப்ப நிலையில் விளையும் கரும்பு. 7. கீழைக்கரும்பு - Saccharum Robausta. நியூகினித் தீவில் விளையும் கரும்பு வகை. 8. **சீனக் கரும்பு** - Saccharum Sinensia. சிறிது தடிப்பான சீனநாட்டுக் கரும்பு. 9. **கழைக்கரும்பு** - தென்னாட்டுக் கரும்பு வகை; இதனை மூங்கிற் கரும்பு என்பர். 10. **நாணற்கரும்பு** - நாணல்போல் பருமன் குறைந்த கரும்பு. 11. **வரிக்கரும்பு** - இதனை இராமக்கரும்பு என்றும், நாமக்கரும்பு என்றும் கூறுவர். 12. **சாலிக்கரும்பு** - சாவா எனப்படும் சாலித் தீவினின்றும் வந்த கரும்பு சாலிக் கரும்பு எனப்பட்டது. இது 10 அடி முதல் 26 அடி வரை வளரும். 13. **கன்னல் - கருங்கரும்பு**. 14. **குட்டைக் கரும்பு** - குட்டையாக வளரும் கரும்பு. (இதனைக் கட்டைக் கரும்பு என்றும் கூறுவர்.) 15. **சீமைக்கரும்பு** - வெளிநாட்டுக் கரும்பு. கலப்பின வகை. 16. **சீனிக்கரும்பு** - வெண்சருக்கரை எடுக்க உதவும் கரும்பு.

கரும்பு[2] *karumbu,* பெ.(n.) பேய்க்கரும்பு, கரும்பு போன்ற பொய்த் தோற்றமுடையது; sugar-cane, a saccharine grass.

[கரும்பு[1] → கரும்பு[2] (கரும்பு போன்ற தோற்றமுடையது).]

கரும்பு-தல் *karumbu-,* 5 செ.குன்றாவி.(v.t.) ஒரு பொருளின் ஓரத்தில் சிறிது சிறிதாய்க் கடித்தல் (சொ.ஆ.க.55.); to nibble.

[கொறி → கொறிம்பு → கறிம்பு → கரும்பு.]

கரும்புஅம்பர் *karuppuambar,* பெ.(n.) கருப்பு நிறமான் ஒருவகை அம்பர்; a black variety of amber (சா.அக.).

மறுவ. காரம்பர்

[கருப்பு + அம்பர்.]

கரும்புக்கட்டி *karumbu-k-katti,* பெ.(n.) கருப்பங் கட்டி; jaggery.

[கரும்பு + கட்டி.]

கரும்புடையன் *karumpudaiyan,* பெ.(n.) புடையன் பாம்பு வகை; black wart snake.

[கரும் + புடையன்.]

கரும்புமுத்து *karumbu-muttu,* பெ.(n.) கரும்பில் பிறந்த மஞ்சள் நிறமுத்து; yellowish pearl supposed to be born in the sugar-cane.

[கரும்பு + முத்து.]

கரும்புரசு *karum-purasu,* பெ.(n.) 1. புரசு மரம்; yellow-wood. 2. முதிரைமுரம்; east Indian satin wood.

[கரும் + புரசு.]

கரும்புல் *karumpul,* பெ.(n.) 1. பனை (மலை.); palmyra-palm. 2. கரும்பு; sugarcane.

மறுவ. கரும்புறம்

[கரும் + புல் – கரும்பு. கரும் = பெரிய, உயர்ந்த. புல் = புல்வகையைச் சார்ந்த பயிரினம். ஆதலின் கரும்புல் பனைமரத்தைக் குறிப்பதாயிற்று. ஓ.நோ. கருமாடம் = உயர்ந்த மளிகை. பனையைப் போல் கரும்பும் வெல்லங்காய்ச்ச உதவுதலின், கரும்புல் எனப்பட்டது.]

கரும்புலி *karumpuli,* பெ.(n.) ஒருவகைப் புலி; a kind of tiger.

[கரு → கரும் + புலி.]

கரும்புவில்லி *karumbu-villi,* பெ.(n.) காமன்; kāman, god of love.

[கரும்பு + வில்லி.]

வில் + இ. 'இ' உடைமை குறித்த ஈறு.

கரும்புள் *karumbul,* பெ.(n.) 1. வண்டுவகை (பிங்.); a kind of black-beetle. 2. பெண்வண்டு (சூடா.); female beetle. 3. காக்கை (யாழ்.அக.); crow.

[கரும் + புள் – 'புள்' பறவையைக்குறித்த சொல்லாயினும் பறக்கும் இயல்பு நோக்கி வண்டினையும் குறித்தது.]

கரும்புள்ளி[1] *karumpuḷḷi,* பெ.(n.) உடலிற் கரும் புள்ளிகளை உண்டாக்கும், ஒருவகைப் பாலியல் நோய்; a kind of venereal disease producing black spots all over the body. *"சரணமுறுப்பங்கையாங் கரும்புள்ளி" (தைல.தைலவ.71.).*

[கரும் + புள்ளி.]

கரும்புள்ளி[2] *karumpuḷḷi,* பெ.(n.) 1. குற்றங் குறை யுடையோர்; list of persons under suspicion. 2. தண்டனைக் குரியோர்; mark of discredit, against one's name.

[கரும் + புள்ளி.]

கரும்புள்ளிக்கல் *karumpuḷḷi-k-kal,* பெ.(n.) மாழைக் (உலோகம்) கனிமமுள்ள கல்வகை (வின்.); a kind of stone containing metal.

[கரும் + புள்ளி + கல்.]

கரும்புள்ளிதீட்டு—தல் *karumpuḷḷi-tīṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) கோலம் போடுதல்; to tattoo.

[கரும்புள்ளி + தீட்டு.]

கரும்புளி—த்தல் *karumpuḷi-,* 4 செ.கு.வி.(v.i.) களிம்பூறுதல் (வின்.); to become spoiled, as acid, food kept in a brass vessel.

[கரு → கரும் + புளி – கரும்புளி. கருத்தல் = மிகுதல். கரும்புளித்தல் = அதிகப் புளிப்புத்தோன்றுதல். அச்சுவைக்குரிய களிம்பு மிகுதல்.]

கரும்புற்று *karumpuṟṟu,* பெ.(n.) கருநிறமுள்ள புண்வகை (இங்.வை.307.); black cancer.

[கரும் + புற்று.]

கரும்புறத்தான்[1] *karumpuṟattāṉ,* பெ.(n.) மதுரை நெல்லை மாவட்டத்தில் வாழும் இனத்தார். (E.T.); man of a minor caste found in Madura and Nellai districts who use the title Pillai.

[கரும்புறம் → கரும்புறத்தான். கரும்புறம் = பனைமரம். பனைத்தொழிலாளியைக் குறித்த சொல், பிறதொழிலாளரையும் குறித்தது.]

கரும்புறத்தான்[2] *karumpuṟattāṉ,* பெ.(n.) முதுகில் கருப்பு நிறமுடைய விலங்கு; any animal having a dark back (சா.அக.).

[கரும் + புறம் + அத்து + ஆன். புறம் = முதுகு. 'அத்து' சாரியை.]

கரும்புறத்தோர் *karumpuṟattōr,* பெ.(n.) விலங்கு களை வேட்டையாடிக் கொன்றுண்ணும் இனத்தார் (சீவக. 2751, உரை.); hunters who live by chase. ***கரும்புறத்தான்*** பார்க்க; see *karum-puṟattāṉ.*

[கரும்புறத்தான் → கரும்புறத்தார் → கரும்புறத்தோர்.]

கரும்புறம் *karu-m-puṟam,* பெ.(n.) 1. பனை (பிங்.) palmyra-palm. 2. கருமை; blackness. *"நீலமே! .... நின்வண்ணம் யாது? கரும்புறமல்லவோ" (சீவக. 2514, உரை.).*

[கரும் + புறம் – கரும்புறம் - கரியதோற்றமுடையது.]

கரும்புறவு *karumpuṟavu,* பெ.(n.) புறாவகையு ளொன்று; turtle dove.

[கரும் + புறவு.]

கரும்புறா *karu-m-puṟā,* பெ.(n.) ***கரும்புறவு*** (திவா.) பார்க்க; see *karum-puṟavu.*

[கரும் + புறா. புறவு → புறா.]

கரும்புறாநயன் *karumpuṟā-nayaṉ,* பெ.(n.) ஒரு புறா ஒரிடஞ்சேர, அதன் இனமான புறாக்களெல்லாம் உடனே அதனைப் பின்பற்றி அங்குச் சேர்தல் போல, ஒன்று நிகழ அதனினமான பலவும் உடனிகழும் நெறி; illustration of the flock of dove showing how one thing is immediately followed by a multitude of other, as doves flock down successively one after another.

[கரும்புறா+நயன். நயன் = நெறி, ஒழுங்கு.]

த. கரும்புறாநயன் > **Skt.** kapotaka nyaya.

கரும்பூ *karum-pū,* பெ.(n.) 1. நீலோற்பலம், அல்லி (யாழ்.அக.); blue indian water lilly. 2. கரூவூமத்தை; black dautura.

[கரும் + பூ.]

கரும்பூசம் *karumpūšam,* பெ.(n.) கருப்பு முசுக் கட்டைச் செடி; black mulberry (சா.அக.).

[கரும் + பூசம்.]

கரும்பூமத்தை *karum-pū mattai,* பெ.(n.) கருவூமத்தை (யாழ்.அக.); purple stramony.

[கரும் + பூ + மத்தை. ஊமத்தை → மத்தை (முதற்குறை).]

கரும்பூல் *karumbūl,* பெ.(n.) ***கரும்பூலா*** பார்க்க; see *karumpūla* (சா.அக.).

[கரும்பூலா → கரும்பூல்.]

கரும்பூலா *karumbūlā,* பெ.(n.) கருப்புப் பூலாஞ்சி; black honey shrub (சா.அக.).

[கரும் + பூலா. இது முடிவளர்ச்சிக்குகந்தது.]

கரும்பூவரசு *karumpūvarašu,* பெ.(n.) கருப்புப் பூவரசு; black portia tree.

[கரும் + பூவரசு.]

கரும்பூனை *karumpūṉai,* பெ.(n.) கருப்புப்பூனை; black cat (சா.அக.).

[கரும் + பூனை.]

கரும்பெலாச்சி *karumpelācci,* பெ.(n.) ***கரும் பிலாச்சை*** பார்க்க; see *karu-m-pilāccai.*

[கரும்பிலாச்சை → கரும்பெலாச்சி (கொ.வ.).]

கரும்பேன் *karumpēṉ,* பெ.(n.) ஈரமிகுதியாற் சீலையில் தோன்றுங் கரும்புள்ளி (யாழ்ப்.); black spots that form in cloth kept wet for long.

ம. கரும்பன்

[கரும் + பேன். பேன் - பேன் போன்ற கரும்புள்ளி.]

கரும்பை *karumbai,* பெ.(n.) நாயுருவி; Indian burr (சா.அக.).

[கரும் → கரும்பை.]

கரும்பொன் *karumpoṉ,* பெ.(n.) இரும்பு; iron. *"கரும்பொனியல்பன்றி" (சீவக. 104.).*

மறுவ. இரும்பொன், இரும்பு.

ம. கரும்பொன்; **க.** கப்பின; **து.** கர்ப; **பட.** கபுப்ன; **துட.** கபின்.

[கரும் + பொன் - கரும்பொன் - கருநிறமுடைய மாழை. ஒ.நோ. இரும்பொன் – இரும்பு. இரும் - கரிய. பொன் என்ற சொல்லிற்கு அடையாகக் கரும், செம் ஆகியன அமைந்து, முறையே கரும்பொன் இரும்பையும், செம்பொன் செம்பையும், குறித்துவரும் சொல்லமைப்பின் அடிப்படையில் இரும்பு, செம்பு மாழைகளின் பயன்பாட்டிற்கு முன்னரே, பொன்னின் பயன்பாடு தமிழருக்குத் தெரிந்திருந்தது என்பது தெளிவு.]

கரும்பொன்மகன் *karumpoṉmagaṉ,* பெ.(n.) இரும்புக்கொல்லன்; blacksmith.

[கரும் + பொன் + மகன் – கரும்பொன்மகன். கரும்பொன் - இரும்பு.]

கரும்பொன்மம் *karumpoṉmam,* பெ.(n.) கருஞ் சாம்பல் நிற மாழைத்தனிமம்; titanium.

[கரும் + பொன்மம்.]

கரும்பொன்னர் *karumpoṉṉar,* பெ.(n.) கருவங்கம்; black lead (சா.அக.).

[கரும் + பொன்னர்.]

கருமக்கருத்தன் *karu-ma-k-karuttaṉ,* பெ.(n.) 1.பயனிலைக்கு நேரடி எழுவாயாகாத, வினை முதல்வன், தொழிலமைப்போன் (வின்.); doer, actor, performer. 2. செயப்படுபொருள் வினைமுதல் போல வருவது (பி.வி.11, உரை.) ; subject of a sentence in which the predicate is active in form, but passive in sense, as in பெற்றம்கறந்தது.

[கருமம் + கருத்தன். வினைமுதல்வுளை இயற்றுதற் கருத்தன், ஏவுதற்கருத்தன் எனப்பிரிப்பராதலின், கருமக்கருத்தன் என்பது, செயப்படுபொருள் வினைமுதல் போல வருவதையே குறிக்கும்.]

கருமக்கருத்தா *karuma-k-karuttā,* பெ.(n.) ***கருமக் கருத்தன்*** பார்க்க; see *karumakkaruttaṉ.*

[கருமம் + (கருத்தன்) கருத்தா.]

த. கருத்தன் > **Skt.** karta > **த.** கருத்தா.

கருமக்கருத்தன் என்பதே, செவ்விய வழக்கு. கருத்தா பிறிதொன்றாய் நில்லாது கருமமுங் கருத்தாவும் தானேயாய் நிற்பது கருமக் கருத்தாவாகும் [வீர. 40,41.].

கருமக்கழிபலம் *karuma-k-kaḻi-palam,* பெ.(n.) கரிசினைக் (பாவத்தை) கழிக்கும் நற்செயல் (புண்ணியம்); virtue or merit that expiates sin. *"கருமக்கழிபலங் கொண்மினோ" (சிலப்.15: 62.).*

[கருமம் + கழி + பலம். கருமம் - கருவினை, தீவினைப்பயன். பலன் → பலம் (இங்கு வினையினைக் குறித்தது.).]

கருமக்காமம் *karuma-k-kāmam,* பெ.(n.) செயல் ஈடேறுவதன் பொருட்டு மேற்கொண்ட பொய்க்காமம்; love, that is professed with a purpose dist. fr. that which is sincerely felt as a natural emotion or

passion, amour de convenance. *"கருமக் காம மல்ல தவண்மாட், டொருமையி னோடாது புலம்பு முள்ளமும்" (பெருங். வத்தவ. 7, 9.).*

[கருமம் + காமம். கருமம் = ஆர்வத்தோடு மேற்கொண்ட பணி.]

கருமக்காரகம் *karuma-k-kāragam,* பெ.(n.) வினையைப் பொருளிற் புலப்படுத்தும் உருபுடைப் பெயர்; case marker denoting action of the verb in its meaning.

[கருமம் + காரகம்.]

கருமக்காரன் *karuma-k-kāraṉ,* பெ.(n.) கம்மாளன்; blacksmith.

[கரு → கருமம் + காரன். 'காரன்' பெயரீறு.]

கருமக்கிழவர் *karuma-k-kiḻavar,* பெ.(n.) ஊர்த் தலைவர்; village head... திருவொற்றியூர்க் கருமக் கிழவராயின ஊரோம் (S.I.I. vol.12. part 1, insc. 92.).

[கருமம் + கிழவர்.]

கருமக்கோட்பாடு *karuma-k-kōṭpāḍu,* பெ.(n.) மேற்கொண்ட சூள்வினை; a vowed-object. *"கோசிகன் தான் வந்த கருமக்கோட்பாட்டினைக் கூறுகின்றவன்" (சிலப். 13:56. உரை.).*

[கருமம் + கோட்பாடு. கருமம் = மேற்கொண்டவினை. கோட்பாடு = கொள்கைப் பிடிப்பு, பற்று. ஒ.நோ. ஆடுகோட்பாடு → ஆடு கோட்பாட்டுச் சேரலாதன். ஆடு = வெற்றி.]

கருமகள் *karu-magaḷ,* பெ.(n.) 1. இழிவானவள், தீயவள்; base, infamous woman. *"கருமகளிலங்கையாட்டி" (திவ். பெரியதி. 4,5,5.).* 2. காக்கை (வின்.); crow.

[கரு + மகள். கரு = கருமை, தீமை, இழிவு.]

கருமகன் *karu-magaṉ,* பெ.(n.) கொல்லன்; black-smith. *"கருமகக் கம்மியன்" (கம்பரா. பம்பா.37.).*

மறுவ. கருமான், கம்மாளன்.

Pali. kammāro

[கரும்(பொன்) + மகன் – கருமகன். இது இரும்புக்கொல்லனைக் குறித்த கரும்பொன்மகன் என்பதன் மரூஉ. கரும்பொன் = இரும்பு.]

கருமகாண்டம் *karuma-kāṇḍam,* பெ.(n.) அகத்தியரால் எழுதப்பட்டதும், நோய்களின் முந்தைய வரலாற்றையும், அவைகருமத்தாலேற்படும் முறைகளையும் குறிப்பதுமான நூல்; a treatise on diseases, their history and origin as attributed to karma (actions of previous birth) written by Agastiya, the father of Tamil medicine (சா.அக.).

[கருமம் + காண்டம்.]

கருமகாரன் *karuma-kāraṉ,* பெ.(n.) வேலையாள்; servant.

[கருமம் + காரன் – கருமகாரன். காரன் = செய்பவன். 'கருமகாரன்' இரண்டன் தொகையாதலின் இடையில் வல்லெழுத்து மிகாதாயிற்று.]

கருமங்கட்டுப்படல் *karumaṅ-kaṭṭu-p-paḍal,* பெ.(n.) 1. தீச்செயல் செய்கை (யாழ்.அக.); sinning. 2. வினை தீராது நிற்கை; existence of unexhausted viṉai.

[கருமம் + கட்டுப்படல் (கட்டுண்டிருத்தல்) கருமம் = தீவினை.]

கருமச்சார்ச்சி *karuma-c-cārcci,* பெ.(n.) ***கருமச்சார்பு*** (தொல்.சொல்.84, உரை.) பார்க்க; see *karuma-c-cārbu.*

[கருமம் + சார்ச்சி.]

கருமச்சார்பு *karuma-c-cārbu,* பெ.(n.) இரண்டன் உருபேற்ற செயப்படுபொருளை, வினைமுதல்வன் மெய்யுறுஞ் சார்பு; direct relationship of the nominative of a verb with its object denoted only by the accusative case, as in tūṇai-c-cārndāṉ. தூணைச்சார்ந்தான் (தொல்.சொல். 84. சேனா.).

[கருமம் + சார்பு. எழுவாயின் வினைப்பாங்கு செயப்படுபொருளைச்சார்தலின், கருமச்சார்பாயிற்று. கருமம் இங்குச் செயப்படுபொருளைக் குறித்தது. கருமச்சார்பு தூணைச்சார்ந்தான் என, ஒன்றனையொன்று மெய்யுறுதலாம்.]

கருமசாட்சி *karumasāṭci,* பெ.(n.) கதிரவன் (சங்.அக.); sun.

[கருமம் + சாட்சி.]

சான்றுரைப்பவரும் சூளுரைப்பவரும் கதிரவனையே முன்னிறுத்தி உரையாடுவதால் இச்சொல் கதிரவனைக் குறிப்பதாயிற்று.

கருமஞ்செய்தல் *karumañ-cey-,* செ.கு.வி.(v.i.) நீத்தார் நிகழ்வினை யாற்றுதல் (கொ.வ.); to perform funeral rites.

[கருமம் + செய். கருமம் = செய்யக்கடவது.]

கருமட்டி *karu-maṭṭi,* பெ.(n.) கடல்வாழ் மட்டிப்பூச்சி வகை (வின்.); a large edible sea oyster.

[கரு + மட்டி.]

கருமணத்தக்காளி *karu-maṇa-t-takkāḷi,* பெ.(n.) மணித்தக்காளி வகை (பதார்த்த.282.); black night-shade. ***கருமணித்தக்காளி*** பார்க்க; see *karumaṇi-t-takkāḷi.*

[கரு + மணி + தக்காளி – கருமணித்தக்காளி → கருமணத்தக்காளி (கொ.வ.) = கருமணிபோன்ற தோற்றமுடைய பழங்களைக் காய்ப்பது.]

கருமணல் *karu-maṇal,* பெ.(n.) 1. கடற்கரை அல்லது ஒடு புனல் மருங்குள்ள கரிய நுண்மணல்; fine black sand found on the sea-shore or near the bed of running stream. 2. சென்னைக்கு அருகிலுள்ள ஓர் ஊர்ப்பெயர்; name of a small village near Chennai.

மறுவ. கருந்திரை, சூட்டுமணல், ஒளிமணல், நீலமணல், அறல்.

[கரு + மணல். கரு = கரிய.]

கருமணல்வாரி *karumaṇalvāri,* பெ.(n.) மாழைமணல் இருக்குமிடம்; place of iron ore deposit.

[கருமணல் + வாரி]

கருமணற்சுக்கான் *karumaṇaṟ-cukkāṉ,* பெ.(n.) கருப்புச்சுக்கான்கல்; black lime-stone (சா.அக.).

[கருமணல் + சுக்கான்.]

கருமணி[1] *karu-maṇi,* பெ.(n.) கண்மணி; the apple of the eye. *"கருமணிப் பாவையன்னான்" (சீவக.1508.).*

[கரு + மணி. கரு → கரிய. கருமணி போன்ற ஒப்புமை கருதி கண்மணியைக் கருமணி குறிப்பதாயிற்று.]

கருமணி[2] *karu-maṇi,* பெ.(n.) 1. கருநிறமுள்ள மணி (யாழ்.அக.); small black beads. 2. நீலமணி (சங்.அக.); sapphire.

[கரு + மணி. கரு = கரிய.]

கருமணிக்கெண்டை *karumaṇi-k-keṇḍai,* பெ.(n.) சிவப்பு நிறமுள்ளதும் சற்றொப்ப இரண்டடி நீளம் வரை வளர்வதுமாகிய, ஆற்றுக் கெண்டை மீன்; a reddish river fish of about 2 ft. in length (சா.அக.).

[கரு + மணி + கெண்டை.]

கருமத்தம் *karu-mattam,* பெ.(n.) ***கருவூமத்தை*** (பதார்த்த. 271.) பார்க்க; see *karu-v-ūmattai.*

[கரு + மத்தம். ஊமத்தம் → மத்தம் (முதற்குறை).]

கருமத்தலைவன் *karuma-t-talaivaṉ,* பெ.(n.) அரசர்க்குத் துணைவன், செயலாளன், வினை முதல்வன்; superintendent, secretary, *"மன்னார்க் குள்படு கருமத்தலைவர்க்கு" (திவா. 2, 129.).*

[கருமம் + தலைவன்.]

கருமநிலம் *karuma-nilam,* பெ.(n.) 1. உழவு, வாணிகம் முதலிய தொழில்களைச் செய்வதற்குரிய நிலம் (திவா.); the earth which is adapted for the occupations of agriculture, commerce, etc. 2. சுடுகாடு (வின்.); cremation ground.

[கருமம் + நிலம். கருமம் = செயல்.]

கருமநோய் *karuma-nōy,* பெ.(n.) முன்செய்த தீவினையால் வந்ததாகக் கருதப்பட்ட தீராநோய் (கொ.வ.); incurable disease , believed to be the result of the sins committed in the previous birth.

[கரும(ம்) + நோய்.]

கருமப்பழி *karuma-p-paḻi,* பெ.(n.) தீச்செயல் (யாழ்.அக.); evil.

[கருமம் + பழி (பழிக்கத்தக்க தீச்செயல்.).]

கருமப்பிறப்பு *karum-p-piṟappu,* பெ.(n.) கரிசுப் பிறப்பு (யாழ்.அக.); sinful birth.

[கருமம் + பிறப்பு. கரிசு = பாழ்வினை (பாவம்).]

கருமபலன் *karuma-palaṉ,* பெ.(n.) வினைப்பயன்; effect of deeds as pain , pleasure, etc. *"கருமமுங் கருமபலனுமாகிய காரணன்றன்னை" (திவ். திருவாய். 3,5,10.).*

[கருமம் + பலன்.]

கருமபூதகி *karuma pūtagi,* பெ.(n.) சுடலை யாவாரை; tanner's senna grown in burial grounds (சா.அக.).

[கருமம் + பூதகி. பூதகி = தோன்றியது.]

கருமம்[1] *karumam,* பெ.(n.) 1. செயல்; action, work. 2. ஆள்வினைச்செயல் (சொ.ஆக.53); deed. 3. வினைப் பயன்; fruit of deeds. *"கருமவரிசையாற் கல்லாதார் பின்னும் பெருமையுடையாருஞ் சேறல்" (நாலடி.*

249.). 3. தொழில்; business, profession, occupation. *"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்" (குறள், 266.).* 4. கடமைச்செயல்; moral duty, specific obligation. *"கானப்பேர் கைதொழல் கருமமே" (தேவா. 897,10.).* 5. நீத்தார்க் கடன்; funeral ceremonies. 6. செயப்படுபொருள் (வீரசோ. வேற்றுமை.1.); object of a verb.

Indon. kerja; **Beng., Mar.,**H. kar; **Skt.** kru; **E.** cre; **Chin.** kay; **Mar.** kām; **Vedic.** karmam;**Pali;** kammam.

குல் → குரு → கரு → கருமம் → கம்மம் (பே.வ.) kamma: pali & park எ.கா.: (கருமான்) – கருமாளன், கம்மாளன்; Kammari : Te Kammara : Pali Karuma.

கரு என்னும் முதனிலை இன்றுவழக்கற்றது. கருத்தல் = செய்தல்.

கருமம் → கம்மம் → கம். கம்மம் = முதற்றொழிலாகிய பயிர்த்தொழில். கம்மவர் → கம்மவாரு = பயிர்த்தொழில் செய்யும் தெலுங்கர். கம் = பல்வேறு கனிம (உலோக)த் தொழில். 'ஈமுங் கம்மும்' (தொல். 328.).

கம்மாளன் = பொற்கொல்லன், ஐங் கொல்லருள் ஒருவன். கம்மியன் = கற்றச்சன் [சிற்பி]. கரு+வி = கருவி. கரு + அணம் = கரணம் = செய்கை. திருமணச் சடங்கு, கருவி, அகக்கருவி. "கற்பெனப்படுவது கரணமொடு புணர" [தொல். 1088.].

இதிற்கரணம் என்பது திருமண வினையாகிய சடங்கைக் குறித்தது. வடவர் 'கரு' என்னும் முதனிலையைக் 'க்ரு' எனத் திரித்துள்ளனர். இங்ஙனம் சொன் முதல் உயிர்மெய்யில், உயிரை நீக்குவது ஆரியமரபு.

ஓ.நோ. பொறு – ப்ரு, திரு – ச்ரீ, வரி – வ்ரீஹி.

கரை – E. cry, துருவு – E. through, புருவம் – E. brow.

வடவர் கரணம் என்னும் சொல்லைக் காரண என நீட்டி, அதற்கேற்பக் கார்ய என்னும் சொல்லையுந் திரித்துள்ளனர். காரணம் என்னும் நீட்டம் தமிழுக்கேற்கும். ஆயின், காரிய என்னும் திரிப்பு ஏற்காது. ஏற்கனவே காரணம் என்பதினின்று கரணியம் என்னும் சொல் திரிந்துளது. அதற்கேற்பக் கருமம் என்பதினின்று, கருமியம் [காரியம்] என ஒரு சொல்லைத் திரித்துக் கொள்ளலாம்.

செய், பண்[ணு], புரி முதலிய பல பிற ஒரு பொருட் சொற்கள் தமிழில் இருப்பதனாலும், கரு என்பது வழக்கற்றுப் போனதினாலும், பின்னது வடசொல்லென மயங்கற் கிடந்தருகின்றது. தமிழ் வடமொழிக்கு முந்தியதென்றும் பெருஞ் சொல்வள மொழியென்றும் அறியின், இம்மயக்கந் தெளிந்து விடும். தமிழ் திராவிட மொழிகட்குரிய இல், மனை, வீடு, முதலிய சொற்களை மட்டுமன்றி, ஆரிய மொழிகளில் புகுந்த 'குடி' என்னுஞ் சொல்லையுந் தன்னகத்துக் கொண்டுள்ளதென்று, கால்டுவெலார் கூறியிருப்பதைக் கூர்ந்து நோக்குக [வ.வர. 274.].

கரு – கருத்தல் = செய்தல். வினையாற்றுதல். நெல்லை மாவட்ட மீனவர், உழைப்பாளியைக் கருவாளி என இன்றும் குறிப்பிடுதலைக் காணலாம். கருத்தல் என்னும் வினை வடதமிழில் வழக்கூன்றித் தென்னகத்தில் வழக்கிழந்ததெனினும், இது தொன்முது செந்தமிழ்ச் சொல் என அறியத்தகும்.

கருமம்² *karumam,* பெ.(n.) வெப்பம் (பிங்.); heat.

[உல் → குல் → குரு → கரு → கருமம்.]

கருமம்³ *karumam,* பெ.(n.) தீவினை, பாழ்வினை; illdeed.

[கரு = கரிய, தீய. கரு → கருமம்.]

கருமம், காரியம், வினை, நாற்றம், வீச்சம் என்பன தீப்பொருளிலும், உலகவழக்கில் வழங்கும். கருமம் என்று பழந்தீவினையையும் வினை என்று பிறப்பிற் கேதுவான செயலையும், காரியம் என்று கருமாந்தரத்தையும் குறிப்பர். [சொல்.கட்.97.].

கருமம்⁴ *karumam,* இடை. (Part.) செயப்படுபொருள் (வீரசோ. வே ற்றுமை. 1.); object of a verb.

[கரு → கருமம்.]

கருமம், கர்மன் என்னும் இரு சொற்களும் செய்கை, வினை, தொழில் எனப் பொருள்படும் ஒரே சொல்லின் இருவேறு வடிவுகளே. கருமம் என்பதனொடு தொடர்புடைய கருவி என்னும் சொல், வடமொழியிலில்லை. காரணம், காரியம் என்னும் வடசொல்லினையொத்ததே. கருவி, கருமம் என்னும் தென்சொல்லினையும்.

"மூன்றாகுவதே ஒருவெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி வினை முதல் கருவி அனைமுதற் றதுவே" (தொல்.557.)

"கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்கு உரிமையும் உடைத்தே கண்என் வேற்றுமை." (தொல். 568.)

இங்ஙனம் கருவி, கருமம் என்னும் இரு சொற்களும், தொன்றுதொட்டு த் தமிழில் வழங்கி வருவதுடன், இலக்கணக் குறியீட்டுறுப்புகளாகவும் அமைகின்றன. இவ்விரண்டும் கரு என்னும் ஒரே

முதனிலையினின்று பிறந்தவை. ஆதலால், கருவி என்னும் சொற்போன்றே, கருமம் என்னும் சொல்லும், தென்சொல்லாதல் தெளிவு [வ.மொ.வ. 273.].

கருமமல்லாச்சார்பு *karumam-allā-c-cārbu,*பெ.(n.) செயப்படு பொருளையேனும், பற்றுக் கோட்டினையேனும், வினைமுதல்வனின் மெய்யுறுதலின்றிச் சாரும் சார்பு (தொல். சொல். 84.); relationship of the subject of a verb with its object denoted either by the accusative case or locative case, as in *arasarai-c-cārndāṉ, arasar-kaṭ-cārndāṉ.* *அரசர்கட் சார்ந்தான் (தொல். சொல். 84. சேனா.).*

[கருமம் + அல்லா(த) + சார்பு.]

கருமமுடி-த்தல் *karumamuḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) செய்தொழில் முடித்தல்; to finish a work.

[கருமம் + முடி.]

கருமமூலம் *karumamūlam,* பெ.(n.) தருப்பைப்புல்; sacrificial grass so called from its use in ceremonies (சா.அக.).

[கருமம் + மூலம்.]

கருமயிர் *karu-mayir,* பெ.(n.) கரடி (அக.நி.); black bear.

[கரு + மயிர். (கருமயிர் அடர்ந்த கரடியைக் குறித்த அன்மொழித் தொகை.]

கருமயிர்த்தொங்கலி *karumayir-t-toṅgali,* பெ.(n.) மயிர்மரம் (சா.அக.); a species of tree.

[கருமயிர் + தொங்கலி.]

கருமயிலை *karu-mayilai,* பெ.(n.) இருண்ட சாம்பல் நிறம் (மாட்டுவை.); iron grey colour.

ம. கருமைல்

[கரு + மயிலை.]

கருமர் *karumar,* பெ.(n.) **கருமகன்** பார்க்க; see *karumagaṉ.*

[கருமன் (கருமான்) → கருமர்.]

கருமரமாத்தி *karumaramātti,* பெ.(n.) வெங்காயம்; onion (சா.அக.).

[காரம் + உறு + ஆத்தி.]

கருமருட்கிழங்கு *karumaruṭkiḻaṅgu,* பெ.(n.) கருப்புமருள் கிழங்கு; a black variety of bow-string hemp (சா.அக.).

[கரு + மருள் + கிழங்கு.]

கருமருது *karu-marudu,* பெ.(n.) மருத மரவகை; brown-hard-felted-backed-leaved winged Myrobalan.

ம. கரிமருது; **க.** கரிமத்தி; **தெ.** நல்லமத்தி.

[கரு + மருது.]

கருமருது (பூ)

கருமருதை *karumarudhai,* பெ.(n.) கருங்கொடி; spring creeper (சா.அக.).

[கரு + மருதை.]

கருமருதோன்றி *karumarutōṉṟi,* பெ.(n.) கருப்பு மருதோன்றி; a black species of fragrant nail dye (சா.அக.).

[கரு + மருதோன்றி.]

கருமருந்து[1] *karu-marundu,* பெ.(n.) வெடிமருந்து (நெல்லை.); gun-powder.

ம. கரிமருந்து

வெடி மருந்துகளுக்கு மூலம் கருமருந்து. அவை கந்தகம் , கரி, வெடியுப்பு என்ற மூன்றன் கலவையாகும். இம்மூன்றும் இந்திய நாட்டில் தொன்று தொட்டுக் கிடைக்கின்றன. கரிய நிறத்தானும், மருந்து போன்ற தோற்றத் தானும், மருந்துச் சரக்காகிய கந்தகத்தின் சேர்க்கையானும் கருமருந்தெனப்பட்டது [செல்வி. 1932. பரல்.3.].

[கரு ; கருநிறம். கரு + மருந்து.]

கருமருந்து[2] *karumarundu,* பெ.(n.) 1. கருப்பத்திலிருக்கும் இளங்கருவை வெளிப்படுத்தும் மருந்து; medicine that induces or faciliates the child-birth. 2. கருவைக் கரைக்கும் மருந்து; medicines that cause abortion. 3. கருவைக் கொண்டு செய்யும் தந்திர வித்தை மருந்து; a black magic drug pre-

pared from foetus or the product of it as a chief ingredient.

[கரு + மருந்து.]

கருமலாகி *karumalāgi,* பெ.(n.) நாயுருவி; Indian burr (சா.அக.).

[கரும் + அலகி.]

கருமலை *karu-malai,* பெ.(n.) இருப்புக்கனியுள்ள மலை (வின்.); mountain containing iron ore.

[கரும்பொன் = இரும்பு. கரும்பொன்மலை → கருமலை என மரூஉச் சொல்லாயிற்று.]

கருமலைப்பழம் *karumalai-p-palam,* பெ.(n.) கருப்புநிற மலைவாழைப் பழம்; black fruit of hill plantain tree (சா.அக.).

[கரு + மலைப்பழம்.]

கருமவதிகாரர் *karuma-v-adigārar,* பெ.(n.) நாட்டின் பல்வேறு துறைகளை ஆளும் தலைவர் (பிங்.); head of the various departments of administration in a state.

[கருமம் + அதிகாரர்.]

கருமவிதிகள் *karumavidigal,* பெ.(n.) அரசனின் மேற்பார்வை அதிகாரிகளை ஏவி நடத்துவோன்; a man who directs the supervisors of a king.

[கருமம் + விதிகள்.]

கருமவினைஞர் *karuma-vinaiñar,* பெ.(n.) மத விழாக்களை நிகழ்த்துவோர்; those who officiate as priests in conducting the religious rites and ceremonies performed by the householder. *"கரும வினைஞருங் கணக்கியல் வினைஞரும்" (சிலப். 26:40.).*

[கருமம் + வினைஞர்.]

கருமவுவமம் *karuma-v-uvamam,* பெ.(n.) செயலுவமம்; simile derived from an action.

[கரும(ம்) + உவமம்.]

கருமறு-த்தல் *karumaru-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கருவுண்டாகாதபடி தடுத்தல்; to resort to contraception. 2. பிள்ளையுண்டாகாதிருத்தல்; to be barren, sterile.

[கரு + மறு.]

கருமன் *karuman,* பெ.(n.) கொல்லன் (பிங்.); blacksmith.

ம. கருவான்

[கரும்பொன் = இரும்பு. கரும்பொன் + மகன் – கருமகன் → கருமான் → கருமன் (மரூஉச்சொல்).]

கருமா[1] *karumā,* பெ.(n.) யானை (பிங்.); elephant.

[கரு + மா. கரு = கரிய. மா = விலங்கு.]

கருமா[2] *karumā,* பெ.(n.) பன்றி; hog. *"கருமாலுங் கருமாவாய்" (பெரியபு. திருஞான. 1003.).*

மறுவ. இருளி, கனலி, ஏனம், மோழன், மிறுதாறு, வல்லுளி, கேழல், எறுழி, கோலம், களிறு, கோணி, போழ்முகம், அரி, மைம்மா, கோணவாயன்.

[கரு + மா. மா = விலங்கு. கரு = கரிய.]

கருமாடக்காரி *karumādakkāri,* பெ.(n.) ஓணான்; lizard; blood-sucker.

[ஒருகா. கருமாடம் + காரி, கருமாடம் – மேல் மாடம் உயர்வான இடம். 'காரி' பெயா.ஈறு. மேல் மாடத்தில் உலவும் பெண் என உருவகப்படுத்திய சொல்லாட்சி.]

கருமாடம் *karumādam,* பெ.(n.) 1. மேல்மாடம்; a lofty dwelling, an upstair house (கருநா.). 2. உயர்ந்த மாளிகை; multi-storyed building.

க. கருமாட, கருவாட, கருவாடு.

[கரு = உயர்ந்த. கரு + மாடம்.]

கருமாண்டபதி *karumāndapadi,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharamapuri dt.

[கருமன் + ஆண்ட + பதி – கருமாண்டபதி.]

கருமாண்டி சொல்லிபாளையம் *karumāndi sellipālāiyam,* பெ.(n.) ஈரோடு மாவட்டத்துச் சிற்றூர்; a village in Erode dt.

[கருமன் + ஆண்ட + செல்லி + பாளையம். கருமனாண்ட செல்லிபாளையம் → கருமாண்டி செல்லி பாளையம். செல்லன் (ஆ.பா.பெ.) → செல்லி (பெ.பா.பெ.).]

கருமி *karumi,* பெ.(n.) 1. தீவினையாளன் (வின்.); atrocious sinner. 2. ஈயாதவன்; miser.

[கருமம் → கருமி. கருமம் = தீவினை.]

கருமாணிக்கம் *karu-māṇikkam,* பெ.(n.) திருமால்; vishnu.

[கரு = கரிய கரு + மாணிக்கம்.]

கருமாணிக்காழ்வான் *karumāṇi-k-kāḻvāṉ,* பெ.(n.) கல்லிடைக்குறிச்சிக் கோயில் அதிகாரி; an officef, of the Kalliḍaikkurucci temple. *"கருமாணிக் காழ்வானான வேணாவுடையானுக்குக் குடுத்து" (தெ.இ.கல். தொ. 23. கல். 105.).*

[கருமாணிக்கம் + ஆழ்வான்.]

கருமாணிக்காழ்வான் நந்திவருமன் *karumāṇi kkāḻvāṉ-nandi-varumaṉ,* பெ.(n.) ஆந்திரமாநிலம் கடப்பா மாவட்டம் இராசம்பேட்டை வட்டம் நந்தலூர்க் கோயிலுக்கு நிலம் வழங்கிய வள்ளல்; donor of land to the temple of Nandalūru in Rajampet taluk, Kadappa district; *"ஜயங்கொண்ட சோழமண்டலத்து மணவிற் கோட்டத்துத் தோழூர் நாட்டுத் தோழூர்ச் சிறுமலிகிழான் கருமாணிக்க ஆழ்வானான நந்திவர்மநேன்" (தெ.இ.கல்.தொ.23 கல்.594.).*

[கருமாணிக்கம் + ஆழ்வான் + நந்தி + (வர்மன்) வருமன்.]

கருமாதி செய்தல் *karumādi-sey-,* 1 செ.குன்றாவி. (v.t.) ஈமக்கடன் செய்தல்; to perform final obsequies.

[கருமம் + ஆதி + செய். கருமாதி = அருங்கடன்கள் (சடங்குகள்). நீத்தார் இறுதிக்கடன்களை இறந்த நாள் தொடங்கி, முதல் நாள், மூன்றாம் நாள், பதினாறாம் நாள் நடப்பு என இறுதிநாள் வரை செய்தல் கருமாதி எனப்பட்டது.]

கருமாந்தம் *karumāndam,* பெ.(n.) **கருமாந்தரம்** பார்க்க; see *karumāndaram.*

[கருமம் + அந்தம் – கருமந்தம் → கருமாந்தம். அந்தம் = இறுதி.]

கருமாந்தரம் *karumāndaram,* பெ.(n.) இறந்தவர்க்கு 16ஆம் நாளில் அல்லது 11ஆம் நாளில் செய்யும் இறுதிக்கடன்; final ceremony, usually performed among Dravidians on the 16th day or 11th day after death, as the end of funeral obsequies.

[கருமம் + அந்தம் – கருமந்தம். கருமாந்தம் → கருமாந்தரம்.]

கருமாந்தியம் *karumāndiyam,* பெ.(n.) நீத்தார் இறுதிக்கடன் (யாழ்.அக.); funeral rites, obsequies.

மறுவ. கருமாந்திரம், கருமாந்தம்.

[கருமம் + அந்தம் – கருமந்தம் → கருமாந்தம் → கருமாந்தியம். அந்தம் = இறுதி. அந்தம் → அந்தியம். (திரிபு).]

கருமாநிமிளை *karumānimiḷai,* பெ.(n.) கண்களுக்கு மையிடுதற்குரிய அம்பரை வகை; black bismuth, used as antimony to blacken the eye lids.

[கரு + மா + நிமிளை.]

கருமாமிழ்தம் *karumāmiḻdam,* பெ.(n.) கழுதைத் தும்பை; donkey's tumbai or Indian borage (சா.அக.).

[கரு + மா + அமிழ்தம்.]

கருமாயம் *karu-māyam,* பெ.(n.) 1. அதிகவிலை; exorbitant price. கத்திரிக்காய் கருமாயமாய் விற்கிறது (கொ.வ.); 2. அருமையானது (வின்.); that which is scarce.3. ஏவல் தீவினை; black magic.

[கரு + மாயம். கரு = பெருமை, அருமை, சிறப்பு, மிகுதி, தீமை. மயம் → மாயம் (தன்மை).]

கருமார் *karumār,* பெ.(n.) கொல்லர்; black smith.

[கருமான் → கருமார்.]

கருமார்பட்டு *karumārpaṭṭu,* பெ.(n.) திருவண்ணாமலை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvannamalai dt.

[கருமான் → கருமார் + பற்று – கருமார்பட்டு.]

கருமாரன் *karumāraṉ,* பெ.(n.) கொல்லன் (யாழ்.அக.); blacksmith.

[கரும்பொன் + மாறன் – கரும்பொன்மாறன் → கருமாறன் கருமாரன் (மரூஉச்சொல்). கரும்பொன் = இரும்பு. மாறுதல் = அடித்தல். மாறன் = அடிப்பவன்.]

கருமாரி[1] *karumāri,* பெ.(n.) கருமாரியம்மன்; a female deity.

[கரு + மாரி. கரு = கரிய. மாறல் = அடித்தல், தாக்குதல். மாறல் → மாறி → மாரி (தீமையை அழிக்கும் தெய்வம்).]

கருமாரி[2] *karu-māri,* பெ.(n.) 1. மகப்பேற்றால் விளையுந் துன்பம் (வின்.); labour pains. 2. மகப்பேற்றுத் துன்பத்திற்குப் பயன்படுத்தும் பட்டையையுடைய மரவகை (யாழ்.அக.); a tree which is used medicinally in child-birth.

[கரு + மாரி. கரு = கருவுயிர்த்தல், மகப்பேறு. மாறல் = அடித்தல், தாக்குதல். மாறு → மாறி → மாரி (நோய், துன்பம்.) = நோய் நீக்கும் மருந்து அல்லது தெய்வம். இந்திய மொழிகள் பலவற்றுள் மாரி என்பது அம்மை நோயைக் குறித்த சொல்லாக வழங்கி வருவதைக் காண்க.]

கருமாலிகை *karumāligai,* பெ.(n.) பேரீச்சை; date fruit.

[கரு + மாலிகை. மால் → மாலிகை.]

கருமாளிகை *karu-māḷigai,* பெ.(n.) 1. இன்றியமையாத சிறப்பமைப்புகளுடன் கட்டப்பட்ட அரசமாளிகை; palace. 2. உயர்ந்த கட்டடம்; tall building. 3. மந்திரச் சுற்றம் கூடுமிடம்; conference hall of the top level committee of the administration. *"அரசுறை கருமாளிகை பொடியாக்கி" (தெ.கல். தொ.5.கல்.465.).*

[கரு + மாளிகை.]

கருமாறிப்பட்டை *karumāṟippaṭṭai,* பெ.(n.) முருங்கை மரப்பட்டை; bark of moringa tree.

[கரு + மாறி + பட்டை.]

முருங்கைப்பட்டைக் கியாழம் எளிமையான மகப்பேற்றிற்கு உதவும் என்ற அடிப்படையில் கரு [குழந்தை] மாறி என்று முருங்கைக்குப் பெயர் அமைந்திருத்தலைக் காண்க [சா.அக.].

கருமாறிப்பாய்-தல் *karu-māṟi-p-pāy,* 2 செ.கு.வி. (v.i.) கழுமாறிப் பாய்ச்சல் போன்ற செயற்கரிய செயலைச் செய்தல்; to do a very difficult and hazardous feat as jumping between two impaling stakes into a tank from a high place. *"கருமாறிப் பாய்ந்தாலும் பேற்றுக்குத் தக்கது போராதாய்" (திவ். திருவிருத். 21, வ்யா.).* ***கழுமாறிப்பாய்-தல்*** பார்க்க; see *kaḻumāṟi-p-pāy-,*

[கழு → கரு + மாறி + பாய்தல். கழு = கழுவேற்றும் கூர்முனைக்கழி. நீர்நிலையில் நடப்பட்டுள்ள கூர்முனையுள்ள கழிகளுக்கிடையில் நீருள் குதித்தல் கழு மாறிப்பாய்தல் எனப்பட்டது. இதில் கழு என்னும் சொல் கருவெனத் திரிந்தது.]

கருமாறிப்பாய்ச்சல் *karu-māṟi-p-pāyccal,* பெ.(n.) காஞ்சிபுரத்துக் காமாட்சி கோயிற் குளத்துள் நாட்டப் பட்ட இரண்டு கழுக்கோல்களின் இடையே உயரமான இடத்தினின்றுந் தவறாது குதிக்கை; very difficult and hazardous feat, as that of jumping from a high place between two impaling stakes planted into the tank in the temple of Kamatchi at Kanchipuram *"கருமாறிப் பாய்ச்சல் யார்க்குமினிது" (தனிப்பா. 1, 21, 37.).* ***கழுமாறிப்பாய்-தல்*** பார்க்க; see *kaḻumāṟi-p-pāy.*

[கழு→ கரு + மாறி + பாய்ச்சல்.]

கருமான்[1] *karumāṉ,* பெ.(n.) 1. ஆண்மான் (பிங்.); stag. 2. பன்றி; hog. *"கருமானுரைத் திடின் .... மருமத் தணிபடுப்பேன்" (தணிகைப்பு. கனவுப். 198.).*

ம. கரிமான்

[கரு + மான். மா → மான் = விலங்கு. கரு = பெரிய, வலிய.]

கருமான்[2] *karumāṉ,* பெ.(n.) ***கருமகன்*** (கொ.வ.) பார்க்க; see *karu-magaṉ.*

[கருமகன்→ கருமான்.]

கருமானம்[1] *karu-māṉam,* பெ.(n.) மாயக்கலை (மாயவித்தை.); witchcraft, black magic.

[கரு + மானம். மானம் = ஒழுங்கு, நேர்த்தி. கரு = செயல்.]

கருமானம்[2] *karumāṉam,* பெ.(n.) கரிய வானம்; black sky.

[கருவானம் → கருமானம்.]

கருமிகள் *karumigaḷ,* பெ.(n.) அரசனுக்குத் தேவை யானவற்றை நிறைவேற்றும் பணியாளர்; supervisors or personal servants of a king.

[கருமம் = கருமி. 'இ' உடையானைக் குறித்த ஈறு. ஒ.நோ : தருமம் → தருமி.]

அரசியல் அல்லது அரண்மனை தொடர்பான உணவு உடை, உறையுள், உண்கலம், அணிகலம், ஊர்திகள், தட்டு முட்டுகள் முதலிய பல்வகைப் பொருள்களையும், பணியாளர் வாயிலாக ஆக்குவித்து, அரசாணையை நிறைவேற்றும் தலைவர், பொதுவாகக் கருமிகள் அல்லது கன்மிகள் என அழைக்கப் பெறுவர். இவர் ஆக்கவினைத் துறையர் (பழந்தமிழாட்சி 31).

கருமியம் *karumiyam,* பெ.(n.) 1. செயல் கருமம்; work-deed. 2. செயற்பாடு (காரியம்); nature of work.

[கரு → கருமம் → கருமியம்.]

கருமிளகு *karumiḷagu,* பெ.(n.) ***குருமிளகு*** பார்க்க; see *kurumiḷagu.*

[குருமிளகு→ கருமிளகு.]

கருமிளகுதக்காளி *karumiḷagutakkāḷi,* பெ.(n.) ***கருந்தக்காளி*** பார்க்க (சா.அக.); see *karuntakkāḷi*

[கருமிளகு + தக்காளி.]

கருமுகம் *karumugam,* பெ.(n.) ***கருங்குரங்கு*** பார்க்க; see *karuṅkuraṅgu.*

[கரு + முகம்.]

கருமுகில் *karu-mugil,* பெ.(n.) நீருண்ட மேகம்; black cloud laden with rain. *"கருமுகிற் பொடித்த வெய்யோன்" (சீவக. 1724.).*

ம. கரிமுகில்

[கரு + முகில்.]

கருமுகில்வண்ணம் *karumukilvaṇṇam,* பெ.(n.) 1. கருமுகில் நிறம்; colour of a dark cloud. 2. தீமுறுகற்செய்நஞ்சு; a prepared arsenic of the colour of a dark cloud, perhaps refers to crude phosphorous (சா.அக.).

[கருமுகில் + வண்ணம்.]

கருமுகில்வைப்புநஞ்சு *karu-mugil-vaippu-nañju,* பெ.(n.) வைப்புநஞ்சு முப்பத்துஇரண்டு வகையுள் ஒன்று; a prepared arsenic one of thirty two.

[கரு + முகில் + வைப்பு + நஞ்சு.]

கருமுகிற்சிலை *karumugiṟcilai,* பெ.(n.) 1. காந்தக் கல்; magnet; load stone. 2. கருப்புக் காந்தக்கல்; black load stone. 3. கருமுகில் வண்ணக்கல்; a stone of the colour of a dark cloud.

[கருமுகில் + சிலை.]

கருமுகை *karumugai,* பெ.(n.) 1. சாரல் மல்லிகை (பிங்.); cādimalligai, malabār jasmine. 2. நள்ளிருள் நாறி (இருவாசி); மலை; iru-vatci, tuscan jasmine. 3. சிறுசண்பகம் (திவா.); kanaga flower tree. 4. முல்லை; smooth jasmine (சா.அக.).

[கரு + முகை. கரு = சிறப்பு.]

கருமுசுட்டை *karumuśuṭṭai,* பெ.(n.) கருப்பு முசுட்டை; black-leaved bindweed. It is used in preparing collyrium (சா.அக.).

[கரு + முசுட்டை.]

கருமுட்டை *karu-muṭṭai,* பெ.(n.) கருப்பையிலிருந்து வெளிப்படும் முட்டை; ovum.

[கரு + முட்டை.]

கருமுரசு *karu-muraśu,* பெ.(n.) உடலில் அதிகமான வங்கம், கந்தகம் சேருவதால் கருநிறமாகமாறும் பல்லீறு; bluish gum, due to the existence of lead in the system acted upon by H2S1 (சா.அக.).

[கரு + முரசு. கரு = கருமை.]

கருமுரடன் *karu-muraḍaṉ,* பெ.(n.) கீழ்ப்படியாதவன் (யாழ்.அக.); unruly person.

[கரு = தீய, கொடிய. கரு + முரடன். முரடு→முரடன்.]

கருமுரல் *karu-mural,* பெ.(n.) கருநிறமான கடல்மீன் வகை (வின்.); a kind of black sea-fish.

ம. கருவாரமுரல், கருமுதல்.

[கரு + முரல்.]

கருமுருகி *karu-murugi,* பெ.(n.) கையாந் தகரை; eclipse plant (சா.அக.).

[கரு + (முகம்) முகி.]

கருமுல்லை *karu-mullai,* பெ.(n.) காட்டுமுல்லை; smooth jasmine (சா.அக.).

[கரு + முல்லை.]

கருமுலை *karu-mulai,* பெ.(n.) சில விலங்குகளின் கரிய நிற முலை; black dug of smith animals.

[கரு + முலை.]

கருமுழிக்கெண்டை *karumuḻi-k-keṇḍai,* பெ.(n.) ***கருமணிக்கெண்டை*** பார்க்க; see *karu-maṇi-k-keṇḍai.*

[கரு + விழி (முழி) + கெண்டை.]

கருமுள்ளி *karumuḷḷi,* பெ.(n.) ***கரிமுள்ளி*** பார்க்க; (சா.அக.) see *kari-muḷḷi.*

[கரு + முள்ளி. முள்→ முள்ளி.]

கருமூக்குவாய் *karumūkku-vāy,* பெ.(n.) தமிழ் அறுவை மருத்துவத்தில் சொல்லிய 26 வகைக் கருவிகளுள் ஒன்று; one of the twenty-six instruments used in Tamil surgery (சா.அக.).

[கரு + மூக்கு + வாய்.]

கருமூஞ்சிப்பாரை *karumūñji-p-pārai,* பெ.(n.) இருப்பாரைமீன்; grey horse-mackerel.

[கரு + மூஞ்சி +பாரை.]

கருமூலி[1] *karumūli,* பெ.(n.) 1. கருப்பு மூலிகை; black herb. 2. ***அழிஞ்சில்*** பார்க்க; see *aḻiñjil.* பசியெடுக் காதிருக்க வேண்டிச் சித்தர்கள் உண்ணும் பொதிய மலையில் விளையும் மூலிகை. a rare herb grown in pothigai hills and taken by Siddhars to keep off hunger (சா.அக.).

[கரு + மூலி.]

கருமூலி[2] *karumūli,* பெ.(n.) மந்திரக்கலையில் பிண்டக் கருவைக்கொண்டு செய்யும் மருந்து; a drug prepared with foetus as chief ingredient in the art of sorcery.

[கரு + மூலி.]

கருமேகம்[1] *karu-mēgam,* பெ.(n.) உடம்பில் கரும் புள்ளிகளையுருவாக்கும் பாலியல் நோய்; a kind of syphillis characterized by dark spots over the body.

[கரு + மேகம்.]

கருமேகம்[2] *karu-mēgam,* பெ.(n.) ***கருமுகில்*** பார்க்க; see *karu-mugil.*

[கருமை + மேகம்.]

கருமேகன் *karu-mēgaṉ,* பெ.(n.) 1. துரிசு; blue vitriol. 2. கருமேகம் கொண்டோன்; one, whose skin is turned black from syphilitic causes (சா.அக.).

[கரு + (மேகம்) மேகன்.]

கருமேதை *karu-mēdai,* பெ.(n.) எருமை; buffalo (சா.அக.).

[கரு + (மேதி) மேதை. மேதி = எருமை.]

கருமேற்கரு *karu-mēṟ-karu,* பெ.(n.) கருப்பத்தின் மேற்கருப்பம்; conception after conception of a female (சா.அக.).

[கரு + மேல் + கரு.]

கருமேற்கருகொள்(ளு)-தல் *karumēṟkarukol(lu),* 7 செ.குன்றாவி.(v.t.) கருப்பத்தின் மேல் கருப்பம் உண்டாதல்; to form conception after conception (சா.அக.).

[கரு + மேல் + கரு + கொள்.]

கருமேனி *karu-mēṉi,* பெ.(n.) அழிந்தொழியும் பருத்தவுடல் (சி.சி. 1, 55, ஞானப்.); corpulent body.

[கரு + மேனி. கரு = தீமை, அழிவு.]

கருமேனி ஓடை *karu-mēṉi-ōḍai,* பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Pudukkottai dt.

[கருமேனி + ஓடை = கருமேனிஓடை. கருமேனி = இயற்பெயர்.]

கருமை[1] *karumai,* பெ.(n.) கருநிறம்; blackness, dark colour. *“கருமை பெற்ற கடல்.” (தேவா. 62,5.).*

ம. கருமு; **க.** கரு, கருவ, கரிது, கரி; **கோத.** கர்; **துட.** க, கங்கத்; **குட.** கரி; **து.** கர்து, கரியு, காரு, காரி; **தெ.** காரு; **கொலா.** காரி; **கோண்.** காரியல்; **பட.** கப்பு.

[கல் → கரு + மை – கருமை. ‘மை’ பண்புப்பெயரீறு. கரு = கரியநிறம்.]

கருமை[2] *karumai,* பெ.(n.) 1. பெருமை (திவா.). greatness, excellence. *“கருங்கறிமூடையொடு” (சிலப். 10. 210.).* 2. உயர்வு; highness.

க. கரு

[குல் → குரு → கரு → கருமை. மு.தா. 236.]

கருமை[3] *karumai,* பெ.(n.) 1. வலிமை; greatness, strength. *“கருங்கைக்கொல்லன்” (புறநா.21.).* 2. ஆற்றல்; power.

ம. கரு, கறு (பருமை, வன்மை), கருமு (வன்மை); **க.** கர, கரு, கருமெ.

[கல் → கரு → கருமை. கல் = அடர்த்தி, செறிவு, வலிமை.]

கருமை[4] *karumai,* பெ.(n.) 1. கொடுமை (சிலப்.15:20. அரும். 8); cruelty, severity. 2. தீமை; evil.

ம. கருமு

[குல் → கல் → கரு → கருமை. குல் = குத்துதல், துன்புறுத்துதல்.]

கருமை[5] *karumai,* பெ.(n.) வெள்ளாடு; goat. *“கருமை யமுதெணெயிரண்டிரண்டனை” (தைல.தைலவ. 19.).*

[கரு = பெரிய, சிறந்த. மை = கருநிறமுள்ள ஆடு. கரு + மை – கருமை (சிறந்த ஆடு), வெள்ளாடு ஆடுகளுள் சிறந்ததென, நாட்டு மருத்துவ நூலார் குறிப்பிடுவர். வெள்ளாட்டின் புலால் நோயாளர்க்குப் பக்க விளைவுகள் உண்டாக்குவதில்லை என்பது, அக்காலத்தோர் நம்பிக்கை.]

கருமை[6] *karumai,* பெ.(n.) 1. ***கருமம்***[2] பார்க்க; see *karumam.* 2. வெம்மை; heat.

[உல் → குல் → குரு → கரு → கருமை. உல் = வெப்பம்.]

கருமை[7] *karumai,* பெ.(n.) நஞ்சு; poison (சா.அக.).

[கரு = தீய. கரு → கருமை.]

கருமை[8] *karumai,* பெ.(n.) அறியாமை; ignorance.

[கரு = இருள். கருநிறம். கரு + மை = கருமை (இருள் போன்ற தெளிவில்லாத அறியாமை. ‘மை’ பண்புப் பெயரீறு.]

கருமொச்சை *karumoccai,* பெ.(n.) கருப்பு மொச்சை; black hyaclinth bean.

[கரு + முத்தை – மொத்தை→மொச்சை. கரு = கருப்பு.]

கருமொட்டு *karumoṭṭu,* பெ.(n.) இளமொட்டு; young flower bud.

ம. கரிமொட்டு

[கரு + மொட்டு. கரு = இளமை]

கருமொழிசாணான்வயல் *karumolicāṇānvayal,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanathapuram dt.

[கருமொழி + சாணான் + வயல். கருமொழி = ஊர்ப்பெயர்.]

கருமோலி *karumōli,* பெ.(n.) காத்தொட்டி; thorny cape, ***ஆதொண்டை*** பார்க்க (சா.அக.).

[கரு + (மூலி) மோலி.]

கருவக்கணை *karuvakkaṇai,* பெ.(n.) வக்கணை மரம்; yellow wood ebony (சா.அக.).

[கரு + வக்கணை.]

கருவங்கச்செந்தூரம் *karuvaṅga-c-cendūram,* பெ.(n.) காரீயத்தைக் கொண்டு செய்யப்படும் செந்தூரம்; இதனால் முதிர் நரை மாறும்; calcined red oxide prepared from black lead which is said to turn long standing grey hairs into black (சா.அக.).

கருவங்கம் *karuvaṅgam,* பெ.(n.) காரீயம்; black lead (சா.அக.).

[கரு + வங்கம்.]

கருவங்கு *karuvaṅgu,* பெ.(n.) கருப்பாக முகத்தில் படரும் வங்கு; black spots on the face foreboding some evil (சா.அக.).

[கரு + (மங்கு) வங்கு.]

கருவச்சி *karuvacci,* பெ.(n.) ***கருவத்தி;*** see *karuvatti*.

[கருவத்தி → கருவச்சி]

கருவசம்பு *karuvasambu,* பெ.(n.) கருநிற வசம்பு; black sweet flag (சா.அக.).

[கரு + வசம்பு.]

கருவஞ்சி *karuvañji,* பெ.(n.) எழுத்தாணிப் பச்சிலை; style-plant.

[கரு + வஞ்சி.]

கருவடகம் *karuvaḍagam,* பெ.(n.) ***கறிவடகம்*** (இந்துபாக. 260.) பார்க்க; see *kari-vaḍagam.*

[கறி → கரி → கரு + வடகம்.]

கருவடம்[1] *karu-vaḍam,* பெ.(n.) மலையும் ஆறும் சூழ்ந்த ஊர் (சூடா.); town or village surrounded by mountains and rivers.

Pkt., Pali., karvaḍa.

[கரு + இடம் – கருவிடம் → கருவடம் = மேடான இடம், மலையும் குன்றும் சூழ்ந்த பகுதி. மலைகள் இருத்தலால், ஆறும் ஓடைகளும் பாய்தல் இயல்பு. ஒ.நோ. கருநாடு = மேடான நாடு. கருகாலன் (கரிகாலன்) = நெடிய கால்களையுடையவன். கரு → கரி = கருத்தது, பெரியது (யானை).]

கருவடம்[2] *karuvaḍam,* பெ.(n.) பூ நீர்; efflorescence found in the sanid of fuller's earth (சா.அக.).

[கரு + வடம்.]

கருவடம்[3] *karuvaḍam,* பெ.(n.) ***கறிவடகம்*** பார்க்க; see *karivaḍagam.*

[கறிவடகம் → கருவடம் (கொ.வ.).]

கருவடிநாசம் *karuvaḍināśam,* பெ.(n.) பாழ் வித்தைக்குதவும் கருநாய்; black dog useful in sorcery and witchcraft (சா.அக.).

[கரு + அடி + நாசம்]

கருவண்டிறால் *karu-vaṇḍiṟāl,* பெ.(n.) கறுப்பு நண்டுவகை; black prawn.

[கரு + வண்டு + இறால். வண்டு = வளைவு.]

கருவண்டு *karu-vaṇḍu,* பெ.(n.) கறுப்புவண்டு (வின்.); black beetle.

[கரு + வண்டு.]

கருவத்தி *karuvathi,* பெ.(n.) கருவுற்றவள்; pregnant woman.

[கரு +அத்தி – கருவத்தி. 'அத்தி' பெ.பா.ஈறு.]

மறுவ. கருவச்சி

கருவதை *karuvadai,* பெ.(n.) கருவழித்தல்; abortion.

[கரு + வதை.]

கருவப்பை *karuva-p-pai,* பெ.(n.) விலைமதிப்புடைய பொருள்கள் வைக்கும் பை (சம்.அக.); bag for keeping valuables.

[கரு + அம் – கருவம் + பை – கருவப்பை. 'அம்' சாரியை. கரு = பெருமை, உயர்வு.]

கருவம்[1] *karuvam,* பெ.(n.) செருக்கு, ஆணவம்; haughtiness, arrogance, pride.

க. கர்வ; **தெ.** கர்வமு;

த. கருவம் >skt. garva.

[கரு + அம் – கருவம். 'அம்' சொல்லாக்கஈறு. கரு = உயர்வு, பெருமை, செருக்கு.]

கருவம்[2] *karuvam,* பெ.(n.) கருப்பம் (வின்.); foetus, embryo.

மறுவ. கருப்பம், கருவு (கர்ப்பம்).

[குல் = கூடுதல் கருத்துவேர். குல் → கல் → கரு → கருவம். கரு + அம். 'அம்' பெயரீறு.]

கருவம்பம் *karuvambam,* பெ.(n.) திருகுக்கள்ளி; twisted spurge (சா.அக.).

[கரு + (அம்பு+அம்) அம்பம்.]

கருவமரம் *karuvamaram,* பெ.(n.) ***கருவேல்*** பார்க்க; see *karu-vēl.*

[கருவேல் மரம் → கருவமரம்.]

கருவயிரக்கல் *karuvayira-k-kal,* பெ.(n.) உறைகல்; touchstone.

தெ. கல்லச்சு

[கரு + வயிரம் + கல்.]

கருவரங்கம் *karuvaraṅgam,* பெ.(n.) 1. கருப்பை; womb. 2. உண்ணாழிகை; sanctuary.

[கரு + அரங்கம்.]

கருவரி[1] *karuvari,* பெ.(n.) கண்ணிலுள்ள கரியவரைவு (ரேகை); dark lines in the eye, dist. fr. cevvari. *"செவ்வரி கருவரிபரந்த. ... மையுண்டவிழியும்" (பு.வெ. 11. ஆண்பாற். 3, உரை.).*

[கரு + வரி. கரு = கரிய.]

கருவரி[2] *karu-vari,* பெ.(n.) இருள் (பிங்.); darkness.

[கரு + வரி. கரு = கரிய. வரை → வரி (எல்லை.).]

கருவல்[1] *karuval,* பெ.(n.) குட்டையாள் (கொ.வ.); short person, person of stunted growth.

[குறு → குறுவல் → குருவல் → கருவல் (கொ.வ.).]

கருவலடி–த்தல் *karuvalaḍi-* 4 செ.கு.வி.(v.i.) தீய்ந்த மணம் பரவுதல்; to spread as of burn smell.

[கரு → கருவல். கரு + அல். அல் = பெ.ஆ.ஈறு.]

கருவல்[2] *karuval,* பெ.(n.) 1. கரிய நிறம்; black colour. அந்த ஆள் கருவலாய் இருந்தான் (கொ.வ.). 2. தீய்ந்த சோறு முதலியன; charredfood. கருவலைக் கிளறாமல் உணவைப் பங்கிடு (உ.வ.). 3. தீய்தல் வாடை; the smell of burn things. *"கருவலடிப்பதற்குள் உணவை இறக்கிவிடு."*

[கரு + அல் – கருவல். 'அல்' பண்புப்பெயரீறு.]

கருவலி *karu-vali,* பெ.(n.) மிகுந்த வலிமை; great strength. *"கருவலி . ..... காளையை" (சீவக. 2269.).*

[கரு + வலி . கரு = பெருமை, மிகுதி.]

கருவவ்வால் *karuvavvāl,* பெ.(n.) கருநிற வாவல்; black pomfret.

[கரு + (வாவல்) வவ்வால்.]

கருவழலை *karu-vaḻalai,* பெ.(n.) வழலைப்பாம்பு வகை (சீவக.1276, உரை.); a highly venomous nocturnal serpent of the black variety.

ம. கரிவழல

[கரு + வழலை. கரு = கரிய.]

கருவழி[1]**–தல்** *karuvaḻi-,* 2 செ.கு.வி. (v.i.) ***கருக்கலைதல்*** பார்க்க; see *karukkalai-.*

[கரு + அழி.]

கருவழி[2]**–த்தல்** *karuvaḻi-,* செ.கு.வி.(v.t.) ***கருக் கலைத்தல்***[2] பார்க்க; see *karukkalai-.*

ம. கருவழிக்குக

[கரு + அழி.]

கருவழிப்பு *karuvaḻippu,* பெ.(n.) ***கருக்கலைப்பு*** பார்க்க; see *karu-k-kalaippu* (சா.அக.).

[கரு + அழிப்பு.]

கருவழிவு *karu-v-aḻivu,* பெ.(n.) கருச்சிதைவு; abortion.

[கரு + அழிவு.]

கருவளைச்சுக்கான் *karu-vaḷai-c-cukkāṉ,* பெ.(n.) கருஞ்சுக்கான்கல் (வின்.); black limestone.

[கரு →கருவல் →கருவளை + சுக்கான் + கல்.]

கருவளையம் *karuvaḷaiyam,* பெ.(n.) கண்ணைச் சுற்றி உண்டாகும் கருப்பு நிறவட்டம்; black ring around the eye. *"கண்ணைச் சுற்றி உண்டாகும் கருப்பு நிறத்தோற்றம், கவலை, நோய் போன்றவற்றால் தோன்றும்."*

[கரு + வளையம்.]

கருவளையல் *karuvaḷaiyal,* பெ.(n.) பூநீரைக் கொண்டு செய்யப்படும் கருப்பு வளையல்; black bangle made from fuller's earth.

[கரு + வளையல். கருவளையல் மருந்திற்கும் மந்திர வித்தைக்கும் பயன்படுவதாகும் (சா.அக.).]

கருவறி[1]-தல் *karu-v-aṟi-,* 2 செ.கு.வி.(v.i.) பகுத்தறியும் பருவமடைதல் (வின்.); to attain the age of discretion.

[கரு + அறி. கரு = கருத்து.]

கருவறி[2]-தல் *karuvaṟi-,* 2 செ.குன்றாவி.(v.t.) கருப்பத்தை அறிதல்; to confirm pregnancy.

[கரு + அறி.]

கருவறிந்தோர் *karuvaṟindōr,* பெ.(n.) கருவேலை செய்யும் மந்திர வித்தைக்காரர்; magicians skilled in black art (சா.அக.).

கருவறிந்தோன்[1] *karuvaṟindōṉ,* பெ.(n.) சிவன்; shiva.

[கரு = அடிப்படை, மூலம். கரு + அறிந்தோன்.]

கருவறிந்தோன்[2] *karuvaṟindōṉ,* பெ.(n.) மந்திர வித்தைக்காரன்; magician.

[கரு + அறிந்தோன். கரு = மந்திர அடிப்படை, மூலம்.]

கருவறு-த்தல் *karu-v-aṟu-,* 4 செ.குன்றாவி.(v.t.) பூண்டோடு அனைத்தையும் அழித்தல்; to ruin, as an enemy, to exterminate, as a family. *"தான வரைக் கருவறுத்து" (கம்பரா. சூர்ப்ப. 111.).*

[கரு + அறு + கரு = மூலம்.]

கருவறை[1] *karu-v-aṟai,* பெ.(n.) **கருப்பை** பார்க்க; see *karu-p-pai.* *"ஆணவக் கருவறையிலறிவற்ற .... குழவியைப்போல்" (தாயு. சின்மயா. 6.).*

ம. கருவற

[கரு + அறை – கரு = கருப்பம்.]

கருவறை[2] *karu-v-aṟai,* பெ.(n.) கோவிலில் இறைவன் கொலுவீற்றிருக்கும் அறை; sanctum sanctorum of a temple.

Skt. garbhagrha

[கரு + அறை. கரு = மூலம்.]

கருவன் *karuvaṉ,* பெ.(n.) செருக்கன், ஆணவக் காரன்; arrogant man.

[கரு + அன். கரு = பெருமை, உயர்வு, செருக்கு. 'அன்' ஆ.பா.ஈறு.]

கருவா *karuvā,* பெ.(n.) 1. இலவங்கப்பட்டை மரம்; cinnamon tree. 2. மரவகை; cassia cinnamon.

[கரு → கருவு → கரு= உயர்வு, பெருமை, சிறப்பு, நறுமணம்.]

கருவாக்குறிச்சி *karuvā-k-kuṟicci* பெ.(n.) திருவாரூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvarur dt.

[கருவன்+குறிச்சி – கருவன்குறிச்சி → கருவங்குறிச்சி → கருவாங்குறிச்சி → கருவாக்குறிச்சி.]

கருவாகை *karuvāgai,* பெ.(n.) வாகைமரவகை (பதார்த்த. 223.); fragrant sirissa.

ம. கருவாக

[கரு + வாகை.]

கருவாகை

கருவாட்சி *karuvāṭci,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Viluppuram dt.

[கருவன் + வாழ்ச்சி– கருவன் வாழ்ச்சி → கருவாழ்ச்சி → கருவாட்சி. வாழ்ச்சி = வாழ்வு, வாழிடம்.]

கருவாட்டுவாலி *karuvāṭṭu-vāli,* பெ.(n.) 1. எருத்து வாலன் குருவி; a bird having a long tail. 2. வலியான் குருவி; king-crow.

[கருவாடு + வாலி – கருவாட்டுவாலி.]

கருவாடு போன்ற வாலுடையது [சா.அக.].

கருவாடு *karu-vāḍu,* பெ.(n.) மீன் உணங்கல், காய்ந்த உப்புமீன் (பதார்த்த. 921.); salted and dried fish. *'கடல்வற்றி கருவாடு தின்னலாம் என்று குடல்வற்றிச் செத்ததாம் கொக்கு' (பழ.).*

ம. கரிவாடு; தெ. கரவாடு; Port. caravado

[கரு + வாடு (கருக வாடியது, நன்கு உலர்ந்தது). கரு = கருமை. வாடுன் → வாடு.]

கருவாதியுப்பு *karuvāthiyuppu,* பெ.(n.) 1. மாழை மாற்றுப்பு; an alchemical salt. 2. கருப்பத்திற்குக் காரணமான உப்பு; salt inducing conception (சா.அக.).

[கரு + ஆதி + உப்பு.]

கருவாப்பட்டை *karuvā-p-paṭṭai,* பெ.(n.) இலவங்கப்பட்டை (மூ.அ.); cinnamon, the dry bark of cinnamonum zeylanicum.

[கரு → கருவு. கருவா + பட்டை – கருவாப்பட்டை.கரு = மணம்.]

கருவாப்பு *karuvāppu,* பெ.(n.) பிறந்த குழந்தைகளுக்குக்காணும் கருஞ்செவ்வாப்பு என்னும் நோய்; a disease attacking chiefly new-born children by which their skin is rendered dark (சா.அக.).

[கரு + ஆப்பு.]

கருவாப்பூ *karuvāppū,* பெ.(n.) இலவங்கப்பூ; flower of the clove-tree.

[கருவப் + பூ – கருவப்பூ → கருவாப்பூ.]

கருவாமணக்கு *karu-v-āmaṇakku,* பெ.(n.) 1. கருப்பு ஆமணக்கு; black castor plant as opposed to செவ்வாமணக்கு, a variety of castor with red seeds. 2. பொட்டிலுப்பு ; nitre.

[கரு + ஆமணக்கு.]

கருவாமம் *karuvāmam,* பெ.(n.) சாராயம்; arrack (சா.அக.).

[கரு + ஆமம். ஆமம் = சீர்மை செய்யப்படாதது. கரு = இழிந்த.]

கருவாமரம் *karuvāmaram,* பெ.(n.) இலவங்கப் பட்டை மரம்; cinnamon - bark tree (சா.அக.).

[கருவு → கருவா + மரம்.]

கருவாமுப்பு *karuvāmuppu,* பெ.(n.) வெடியுப்பு; nitre (சா.அக).

[கரு → கரு + ஆம் + உப்பு.]

கருவாய்[1] *karu-vāy,* பெ.(n.) கரு உருவாதற்கு ஏந்தான பெண்குறி; vulva.

[கரு + வாய். வாய் = இடப் பொருளீறு ஒ.நோ. எருவாய்.]

கருவாய்[2] *karu-vāy,* பெ.(n.) இலவங்கம் (நாமதீப்.); cloves.

[கரு → கருவு →கருவா → கருவாய். கரு = நறுமணம்.]

கருவாய்க்கால் *karuvāykkāl,* பெ.(n.) முதல் வாய்க்கால், தலை வாய்க்கால்; prime canal.

கீழ்பாற்கெல்லை கருவாய்க்காலுக்கு மேற்கும், தென்பாற்கெல்லை பெருமான் வாய்க் காலோடைக்கும். (S.i.i. vol.5. Part2. insc. 723.).

[கரு + வாய்க்கால். கரு = பருமை, பெருமை, உயர்வு, தலைமை.]

கருவாய்ச்சி *karuvāycci,* பெ.(n.) 1.கரிய முகமுடையவள்; a woman who has dark face. 2. கரிய நிறத்தினள் (கொ.வ.); woman with dark complexion.

[கரு + வாழை.]

[கரு + வாய்ச்சி. கரு → கரிய; வாய் = முகம்; 'சி' பெண்பால் ஒருமையீறு. வாய் என்ற சொல், வாயைகக் கொண்ட முகத்தையும் குறிக்கும்.]

கருவாய்ச் செய்–தல் *karuvāy-c-cey,* 1செ.குன்றா.வி. (v.t.) மாழைகளை உருக்கிச் சாய்த்து வார்ப்பு செய்தல்; to mould of casting melted metals.

[கருவாய் + செய்.]

கருவாய்த்தோட்டா *karu-vāy-t-tōṭṭā,* பெ.(n.) கரிய வாயுடைய தோட்டா என்னும் மீன் வகை; a kind of fish with black mouth.

[கரு + வாய் + தோட்டா.]-

கருவாயன் *karuvāyaṉ,* பெ.(n.) 1. கரிய முகமுடையவன்; a man who has black face. 2. கரிய நிறத்தினன்; dark complexed man. 3. தீய நாக்குள்ளவன்; evil tongued-person.

[கரு + வாய் + அன். கரு = கரிய, தீய.]

கருவால்குறுவை *karu-vāl-kuṟuvai,* பெ.(n.) நெல்வகை (விவசா. நான்மு. 2.); a kind of paddy.

[கரு + வால் + குறுவை.]

கருவால்திருக்கை *karuvāltirukkai,* பெ.(n.) **கருவாற்றிருக்கை** பார்க்க see *karuvāṟṟirukkai.*

[கரு + வால் + திருக்கை.]

கருவாலன்செந்திருக்கை *karuvālaṉsendirukkai,* பெ.(n.) திருக்கை மீன் வகைகளுள் ஒன்று; a kind of tirukkai fish.

[கருவாலன் + செந்திருக்கை.]

கருவாலி[1] *karuvāli,* பெ.(n.) 1. கருக்குவா; Ceylon tea. 2. கவுதாரி; partridge (சா.அக.).

கருவாலி[2] *karuvāli,* பெ.(n.) 1. மரவகை; Ceylon tea. 2. கறுவாலி; partridge.

[கரு + வாலி.]

கருவாழை[1] *karuvāḻai,* பெ.(n.) அளவில் சிறியனவும், கரும்பச்சை நிறமுடையனவுமாகிய பழங்கள், ஒரு குலையில் 200 முதல் 400 வரை விளையக் கூடிய வாழையினம் (G.Sm.D.iv.216.); a kind of plantain tree bearing small fruits of dark green colour, from 200 to 400 to a bunch.

மறுவ. காளி வாழை

[கரு + வாழை.]

கருவாழை[2] *karuvāḻai,* பெ.(n.) 1. கருப்புப் பழங்கள் காய்க்கும் வாழைமரம்; plantain tree yielding dark coloured fruits. 2. காட்டு வாழை; wild plantain. 3. பெருமூலிகை 23–ல் ஒன்றானதும், சித்தருண்ணும் ஒருவகைக் கற்ப மூலியானதும் கருஞ்சிவப்பாய் இருப்பதுமான கானல் வாழைப்பழம்; dark red plantain used by siddars, one of the classified drug of 23 kinds of drugs restoring lost youth or rejuvenation (சா.அக.).

கருவாளி[1] *karu-v-āḷi,* பெ.(n.) அறிவாளி, கூர்த்த மதியினன் (யாழ்.அக.); sagacious person, genius.

[குரு→ கரு + ஆள் + இ – கருவாளி. குருத்தல் = தோன்றுதல், விளங்குதல், ஒளிர்தல், அறிவு சிறத்தல். 'இ' உடைமை குறித்த ஈறு.]

கருவாளி[2] *karuvāḷi,* பெ.(n.) கடும் உழைப்பாளி; hard worker. அவன் பெரிய கருவாளியா? (நெல்லை.).

[கருத்தல் = செய்தல். கரு + ஆள் + இ – கருவாளி. 'இ' உடைமை குறித்த ஈறு. நெல்லை மீனவரிடை இச்சொல் செய்தற்பொருளில் வழக்கூன்றியுள்ளதால், இதன் தொன்மையை அறியலாம்.]

கருவாற்றிருக்கை *karu-vāṟṟirukkai,* பெ.(n.) சாட்டை போன்று தட்டையும் வால் நீட்சியுமுடைய கடல்மீன் வகை; broad flat sea-fish, greyish olive, attaining upwards of 6 ft. in width, with whip-like tail three or four times as long as the body.

[கரு + வால் + திருக்கை – கருவாற்றிருக்கை. கரு = பெரிய, நீண்ட.]



கருவாற்றிருக்கை

கருவானம் *karuvāṉam,* பெ.(n.) கார்மேகம் மூடிய வானம்; murky sky.

ம. கரிமானம்

[கரு + வானம்.]

கருவி[1] *karuvi,* பெ.(n.) 1. தொழில்துணைக்கலன், துணைக்கருவி; instrument, tool, implement. *"கருவிகொண்டு ... பொருள் கையுறின்" (சிலப். 16, 186.).* 2. வரும்படி, வழி, செய்பொருள், மூலப்பொருள்; means, materials, as for a sacrifice. *"அறிவற்றங் காக்குங் கருவி" (குறள். 421.).* 3. கவிப்பு, மெய்புதையரணம், மெய்யுறை (திவா.); armour, coat of mail. *"இளைஞருங் கருவி வீசினார்" (சீவக. மண. 113.).* 4. கேடகம்; shield. *"கருவித்தேன்" (சீவக. 1606.).* 5. குதிரைக்கலணை (திவா.); saddle. 6. குதிரைச் சாட்டை (சூடா.); horse-whip.

கருவி வகை:

கருவி-பருப்பொருள், ஆய்தப்பொது (instrument) : ஆயுதம் ஒரு தொழிற்குரிய கருவி (Tool); படை-போர்க்கருவி (weapon) கரணம் அறிவுக் கருவி அல்லது உறுப்புக்கருவி; காரணம் காரியத்தை விளைவிப்பது (cause); ஏது-வாதக் காரணம் (reason); முதல் - வணிக முதல் போன்ற முதனிலை. அடி-மரத்தின் அடிபோன்ற முதனில; மூலம் - மரத்தின் வேர் போன்ற முதனிலை; வித்த-மரம் முளைத்த விதை போன்ற முதனிலை; தலைக் கீடு - போலி ஏது (pretext) (சொல்.கட். 43.).

ம. கரி, கரிவி, கருவி, கரு.

[கருத்தல் = செய்தல், வினையாற்றுதல். கரு → கருவி (வினையாற்ற உதவுவது.).]

கருவி[2] *karuvi,* பெ.(n.) 1. தொகுதி (தொல். சொல். 354. உரை.); கூட்டம், ஒருங்கிணைப்பு, மந்தை; assembly, collection, flock, group. *"கருவிவானம்" (பெரும்பாண்.24.).* 2. தொடர்பு (திவா.); connection, concatenation. 3. ஆடை (சூடா.); garment. 4. ஓவியம்; painting. *"கருவியுயிர் பெற வெழுதி" (ஈடு.).* 5. துணைக்காரணம்; secondary or instrumental cause.

[குல் → குரு→ கரு → கருவி. குல் = கூடுதல், ஒன்று சேர்தல்.]

கருவி[3] *karuvi,* பெ.(n.) 1. யாழ் (திவா.); lute. *"கருவிமாக்கள்" (புறப்.வெ.கரந்தை.10.).* 2. இசையுண்டாதற்கு உரிய துணைக்கருவிகள்; one of the musical instruments, of which there are four kinds, viz., தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி. to which கண்டக்கருவி (the larynx) is sometimes added as the fifth. 3. கைத்தாளம்; cymbal. *"கருவித்தேன்." (சீவக.கனக.50.).*

[குல் → கரு → கரு → கருவி. தொகுதியான இசைக் கருவிகளைக் குறித்த சொல், தனித்த இசைக்கருவியையும் குறித்தது.]

கருவி[4] *karuvi,* பெ.(n.) அணிகலன்; jewel.

[கருவி = தொகுதி, அடைவு, அடைவாகத் தொகுத்து அணியப்படும் அணிகலன்களின் வரிசை.]

கருவி[5] *karuvi,* பெ.(n.) முகில் (அக.நி.); cloud. *"கருவி வானம்"*

[கருவீ – கருவி'.]

கருவி[6] *karuvi,* பெ.(n.) மனமும் ஐம்புலன்களும் ஆகிய அகப்புறக்கருவிகள்; organs or faculties either of the mind or the body (சா.அக.).

[கரு → கருவி.]

கருவிக்கருத்தன் *karuvi-k-karuttan,* பெ.(n.) கருவி வினைமுதலாக. வருவது (இறை. 18, உரை.); instrument, as agent, as - 'வாள் எறியும்'.

[கருவி + கருத்தன். கருவி = மூன்றாம் வேற்றுமை உருபு ஏற்றற்குரிய சொல். கருத்தன் = எழுவாய்.]

கருவிக்காரகம் *karuvi-k-kāragam,* பெ.(n.) கருவிப் பொருளைக் காட்டும் உருபுடைப்பெயர்; noun which denotes instrumental significrnce.

[கருவி + காரகம்.]

கருவிக்குயிலுவர் *karuvi-k-kuyiluvar,* பெ.(n.) தோற்கருவி வாசிப்பவர்; drummer. *"கண்ணுளாளர் கருவிக் குயிலுவர்" (சிலப். 5, 184.).*

[கருவி + குயிலுவர் – கருவிக்குயிலுவர். குயிலுதல் = இசைத்தல்.]

கருவிகரணங்கள் *karuvi-karaṇaṅgaḷ,* பெ.(n.) 1.திறமைகள்; faculties. 2. ஐம்பொறிகளும் மனமும் (வின்.); senses and intellectual powers.

[கருவி + கரணம் + கள். 'கள்' பன்மையீறு. கருவி = உள்ளாற்றல், மனம். கரணம் = பொறி.]

கருவிகலத்தொகுதி *karuvikalattogudi,* பெ.(n.) துணைக்கலத்தொகுதி; outfit.

[கருவி + கலம் + தொகுதி.]

கருவிகழல்(லு)–தல் *karuvi-kaḻal-,* 13 செ.கு.வி. (v.i.) வலியழிதல் (வின்.); to be greatly exhausted, to lose one's strength.

[கருவி + கழல் (கழலுதல்) கருவி = உள்ளாற்றல், வலிமை.]

கருவிகாண்டம் *karuvi-kāṇḍam,* பெ.(n.) **கருவி நூல்** பார்க்க(வின்.); see *karuvi-nūl.*

[கருவி + காண்டம். கண்டு → காண்டம் (நூல்).]

கருவிச்சூது[1] *karuvi-c-cūdu,* பெ.(n.) சதுரங்கம் முதலியவற்றால் ஆடுஞ்சூது; gambling. *"கருவிச் சூதாடி வென்றும்" (திருவிளை. நகாப். 48.).*

கருவிச்சூது[2] *karuvi-c-cūdu,* பெ.(n.) சூதாட்டம்; gambling. *"கண்ணுளாளர் கருவிக் குயிலுவர்" (சிலப். இந்திர. 184.)* (த.மொ.அ.).

[கருவி + சூது.]

கருவிஞ்சி *karuviñji,* பெ.(n.) 1. கருநொச்சி; a three-leaved chaste tree. 2. மலைவாழை; hill plantain (சா.அக.).

[கருவிச்சி → கருவிஞ்சி.]

கருவிடு—தல் *karuviḍu-,* 20 செ.கு.வி. (v.i.) கருவுண்டாதல்; to conceive, to be pregnant. *"கருவிடும் வாசல்" (திருமந். 584.).*

[கரு + விடு.]

கருவிடும்வாசல் *karu-viḍum-vāsal,* பெ.(n.) ஆண்குறி; penis. *"கருவிடும் வாச லிருவிரற் கீழே" (திருமந். 584.).*

[கரு + விடும் + வாசல்.]

கருவிண்டு *karuviṇḍu,* பெ.(n.) கருப்பு இண்டஞ்செடி; a black variety of indu plant (சா.அக.).

[கரு + இண்டு. கரு = கருமை.]

கருவிநாசம் *karuvi-nāšam,* பெ.(n) ஐம்புலனறுத்தல்; mortification of the five senses (சா.அக.).

[கருவி + நாசம்.]

கருவிநீர் *karuvi-nīr,* பெ.(n.) 1. மழைநீர்; rainwater. 2. உடல் நீர்; water from the body (சா.அக.).

[கருவி + நீர். கரு = கருமை = கருமையான மேகம்.]

கருவிநூல்[1] *karuvi-nūl,* பெ.(n.) கல்வியறிவினை வளர்ப்பதற்கும் கற்கும் போது ஏற்படும் ஐயங்களைத் தீர்ப்பதற்கும் பயன்படும் நூல்; book of reference.

[கருவி + நூல். கருவி = உள்ளாற்றல், அறிவு.]

கருவிநூல்[2] *karuvi-nūl,* பெ.(n.) 1. தொடக்க நூல் (வின்.); primer, elementary book. 2. துணை நூல்; reference book.

[கருவி + நூல். கரு = மூலம், அடிப்படை.]

கருவிநூல்[3] *karuvi-nūl,* பெ.(n.) உடற்கருவிகளைப் பற்றிக் கூறும் கட்டளை; a work on bodily organs (சா.அக.).

[கருவி + நூல்.]

கருவிநூற்பட்டி *karuvi-nūṟpaṭṭi,* பெ.(n.) குறிப்பிட்ட ஆய்விற்குத் துணை நின்ற கருவி நூல்கள்; bibilography.

மறுவ. துணைநூற்பட்டி, நோக்கு நூற்பட்டி, பார்வை நூற்பட்டி.

[கருவிநூல் + பட்டி.]

கருவிப்புட்டில் *karuvi-p-puṭṭil,* பெ.(n.) படைக் கலவுறை (பிங்.); scabbard, sheath. *"கருவிப் புட்டிலின் கண்டமும்" (சூளா. காசி. 230.).*

[கருவி + புட்டில்.]

கருவிப்பெயர் *karuvi-p-peyar,* பெ.(n.) கருவிகளைக் குறிக்கும் பெயர்ச்சொல்; name of instrument, tool etc.

[கருவி + பெயர்.]

கருவிப்பை *karuvi-p-pai,* பெ.(n.) முடியொப்பனை யாளனின் அடைப்பை (வின்.); barber's bag.

[கருவி + பை.]

கருவிப்பொருள் *karuvi-p-poruḷ,* பெ.(n.) கருவி யைக் குறிக்கும் வேற்றுமைப் பொருள்; instrumental case.

[கருவி + பொருள்.]

கருவிப்பொருள் அகக்கருவி, புறக்கருவி, ஒற்றுமைக்கருவி என மூன்றாய் வரும் [சிவ. நன். 297.].

'கருவி' வினை முதற்றொழிற் பயனைச் செயப்படு பொருட்கணுய்ப்பது [சேனா. தொல். சொல். 73; நச். தொல். சொல். 74.].

அதுவும் [கருவியும்], இயற்றுதற்கருவியாகிய காரகக் கருவியும், அறிதற் கருவியாகிய ஞாபகக் கருவியுமென இருவகைப்படும் [நச்.தொல். சொல்.74]. வினைமுதற்றொழிற் பயனைச் செயப்படு பொருளிற் சேர்ப்பது. கருவி, காரணம், ஏது என்பன, ஒருபொருட் சொற்கள், கருவிப் பொருள், முதற் கருவியுந் துணைக் கருவியுமென இருவகைப்படும் [ஆறு.நன்.297.].

கருவிபணம் *karuvi-paṇam,* பெ.(n.) வரிவகை (S.I.I.viii.188); a tax.

[கருவி + பணம்.]

கருவிமாக்கள் *karuvi-mākkaḷ,* பெ.(n.) யாழ் மீட்டும் பாணர்; bards, minstrels. *“கருவி மாக்கள் கையுற வுரைத்தன்று” (பு.வெ.2, 10, கொளு.).*

[கருவி + மாக்கள். கருவி - இசைக்கருவிகளின் தொகுதி.]

கருவிமொழி *karuvi-moḻi,* பெ.(n.) ஒரு மொழியை விளக்கிக் கூறப் பயன்படும் மொழி; metalanguage.

[கருவி + மொழி.]

கருவியமைப்பு *karuvi-yamaippu,* பெ.(n.) ஐம்புலன்களின் அமைப்பு; the organic structure of the five senses.

[கருவி + அமைப்பு.]

கருவியல் *karuviyal,* பெ.(n.) கருதோற்றம், வளர்ச்சி பற்றிய கல்வி; embryology.

[கருவி + இயல்.]

கருவியாகுபெயர் *karuvi-y-āgu-peyar,* பெ.(n.) கருவி, ஆற்றப்படும் செயலுக்கு (காரியம்) ஆகி வரும்பெயர் (நன். விருத். 290.); metonymy in which cause is put for effect, as திருவாசகம்.

[கருவி + ஆகு + பெயர்.]

திருவாசகம் என்ற சொல்லில் வாசகம் என்னும் முதற்கருவியின் பெயர் அதன் காரியமாகிய நூலிற்காயிற்று.

கருவியிசை *karuvi iśai,* பெ.(n.) குரலிசையினும் வேறான தோற்கருவி துளைக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக்கருவி போன்ற இசைக்கருவிகளின் துணைகொண்டு எழுப்பும் இசை; music produced with the help of musical instruments, i.e. instrumental music. opp. to oral music.

[கருவி + இசை.]

கருவியுப்பு *karuvi-y-uppu,* பெ.(n.) கழுக்கவுப்பு; secret salt prepared for controlling the senses and thus enabling one to be absorbed in eternity (சா.அக.).

[கருவி + உப்பு.]

கருவியைந்து *karuviyaindu,* பெ.(n.) இசை உண்டாவதற்குரிய துணைக் கருவிகள் ஐந்து; the five musical instruments. *“புரவி பூண்ட தாரொலி கருவியைந்துந் தழங்கொலி” (திருவிளை. 35.).*

[கருவி + ஐந்து.]

தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி ஆகிய நால்வகைக் கருவிகளுடன் மிடற்றுக்கருவியையும் சேர்த்து கருவியைந்து எனக் கணக்கிடுவர் [த.மொ.அ.].

கருவிரலூகம் *karu-viral-ūgam,* பெ.(n.) பழங்காலக் கோட்டைகளில் அமைக்கப்பட்டதும் அணுகும் பகைவரைப் பற்றிக் கடிக்கும் கருவிரல் குரங்கு வடிவு கொண்டதுமாகிய மதிற்பொறி; a catapultic machine, of the shape of a monkey with black claws, mounted on the walls of a fort in ancient times and intended to seize and bite the approaching enemy. *“கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும்” (சிலப். 15, 208.).*

[கரு + விரல் + ஊகம். ஊகம் - குரங்கு.]

கருவிரி-தல் *karu-viri-,* 4 செ.கு.வி. (v.i.) 1. தவசக் கதிர் பரிதல் (வின்.); to ear; to come into ear. 2. கருப்பை விரிதல்; dilatation of the womb (சா.அக.).

[கரு + விரி.]

கருவிருகணம் *karavirukaṇam,* பெ.(n.) காட்டெள்ளுச்செடி; wild gingelly plant (சா.அக.).

[கரு + (இருள்) இரு + கணம். காணம் → கணம்.]

கருவிலங்கு *karuvilangu,* பெ.(n.) 1. கருத்த விலாங்கு மீன் (தஞ்.மீன.); black eel. 2. கரிய விலங்கு; any animal black in colour.

[கரு + விலங்கு.]

கருவிலம் *karuvilam,* பெ.(n.) நுண்ணுயிரிகளில் உண்டான சிறு கொப்புளம்; germinal vesicle (சா.அக.).

[கரு + விலம். விலம் = பள்ளம், குழி.]

கருவிலி[1] *karuvili,* பெ.(n.) பாம்புவகை (யாழ்ப்.); a nocturnal ground snake.

[கருவல் → கருவலி → கருவிலி (கொ.வ.).]

கருவிலி[2] *karuvili,* பெ.(n.) குழந்தையில்லாத பெண்; barren woman.

[கரு + இலி.]

கருவிலி[3] *karuvili,* பெ.(n.) தஞ்சைப்பகுதியில் அமைத்த ஓர் ஊர்; name of village in Thanjavur region.

[கருவலி → கருவிலி.]

கருவிவேற்றுமை *karuvivēṟṟumai,* பெ.(n.) தொழிலுக்குக் கருவியாக அமையும் வேற்றுமை; instrumental case.

[கருவி + வேற்றுமை. 'ஆல், ஆன்' உருபுகள் இப்பொருளில் வரும்.]

கருவிழி[1] *karu-viḻi,* பெ.(n.) கண்மணி; apple of the eye.

ம. கருமிழி

[கரு + விழி. கரு = கரிய.]

கருவிழி[2] *karuviḻi,* பெ.(n.) 1. கருத்த கண்; dark eye. 2. கருத்த கண் உள்ளவள், அழகி; a woman with black eyes, a beautiful woman.

ம. கரிமிழி

[கரு + விழி.]

கருவிழிக்கெண்டை *karu-viḻi-k-keṇḍai,* பெ.(n.) ***கருமணிக் கெண்டை*** பார்க்க; see *karu-maṇi-k-keṇḍai.*

[கரு + விழி + கெண்டை.]

கருவிளங்கம் *karuviḷaṅgam,* பெ.(n.) கருவேம்பு; balsam tree (சா.அக.).

[கரு + விளங்கம்.]

கருவிளங்கனி[1] *karu-viḷaṅ-kaṉi,* பெ.(n.) மூன்று நிரையசைச் சீரைக் குறிக்கும் வாய்பாடு (காரிகை. உறுப். 7, உரை.); formula denoting a foot of three nirai, yšai (செ.அக.).

[கருவிளம் + கனி.]

கருவிளங்காய்[1] *karu-viḷaṅ-kāy,* பெ.(n.) நிரை நிரை நேர் கொண்ட மூவசைச்சீரைக் குறிக்கும் வாய்பாடு (காரிகை, உறுப். 7, உரை.); formula denoting a foot of two nirai yasai followed by a nēr.

[கருவிளம் + காய்.]

கருவிளந்தண்ணிழல் *karuviḷan-taṇ-ṇiḻal,* பெ.(n.) நிரை நிரை நேர் நிரை என்னும் நான்கசைச் சீரைக் குறிக்கும் வாய்பாடு (காரிகை, உறுப். 5, உரை.); mnemonic for the metrical foot of *nirai-nirai-ner-nirai.*

[கரு + விளம் + தண் + நிழல் – கருவிளந்தண்ணிழல்.]

கருவிளந்தண்பூ *karuviḷan-daṇ-pū,* பெ.(n.) நிரை நிரை நேர் நேர் என்னும் நாலசைச் சீரைக் குறிக்கும் வாய்பாடு, (காரிகை, உறுப். 5, உரை.); mnemonic for the metrical foot of *nirai-nirai-nēr-nēr.*

[கரு+ விளம் + தண் + பூ = கருவிளந்தண்பூ.]

கருவிளநறுநிழல் *karuviḷa-naṟu-niḻal,* பெ.(n.) நிரை நிரை நிரை நிரை என்னும் நாலசைச் சீரைக் குறிக்கும் வாய்பாடு (காரிகை, உறுப். 5, உரை.); mnemonic for the metrical foot of *nirai-nirai-nirai-nirai.*

[கரு + விளம் + நறு + நிழல் = கருவிளநறுநிழல்.]

கருவிளநறும்பூ *karuviḷa-naṟum-bū,* பெ.(n.) நிரை நிரை நிரை நேர் என்னும் நாலசைச் சீரைக் குறிக்கும் வாய்பாடு (காரிகை, உறுப். 5, உரை.); mnemonic for the metrical foot of *nirai-nirai-nirai-nēr.*

[கரு + விளம் + நறும் + பூ = கருவிளநறும்பூ.]

கருவிளநீர் *karu-viḷa-nīr,* பெ.(n.) சொறி புண்களைப் போக்கக் கூடிய கருநிறமுள்ள இளநீர் (பதார்த்த. 68.); a young or tender coconut with dark water inside capable of curing sores and itches.

[கரு + இளநீர்.]

கருவிளநெல்லி *karuviḷa-nelli,* பெ.(n.) கீழ்க்காய் நெல்லி; feather foil (சா.அக.).

[கருவிளம் + நெல்லி.]

கருவிளம்[1] *karu-viḷam,* பெ.(n.) இரண்டு நிரையசைச்சீரைக் குறிக்கும் வாய்பாடு; formula denoting a foot of two nirai. *"தேமா புளிமா கருவிளங்கூவிளஞ் சீரகவற்கு" (காரிகை. உறுப். 4.) (த.மெ ா.அ.).*

[கரு + விளம்.]

கருவிளம்[2] *karu-viḷam,* பெ.(n.) 1. காக்கட்டான், (மலை.); mussel-shell creeper. 2. வில்வம் (மலை.); bael.

[கரு + விளம்.]

கருவிளா *karu-viḷā,* பெ.(n.) 1. விளா (மலை.); wood-apple. 2. வில்வம் (மூ.அ.); bael.

[கரு + (விளம்) விளா.]

கருவிளை *karu-viḷai,* பெ.(n.) காக்கணம்; mussel-shell creeper. *"கண்ணெனக் கருவிளை மலர" (ஐங்குறு. 464.). "மணிகண்டன்ன மாநிறக் கருவிளை" (நற். 221.).*

[கரு + விளை.]

கருவின்மலர் *karuviṉmalar,* பெ.(n.) மயிலிறகு; the feather of a peacock (சா.அக.).

[கரு + இன் + மலர்.]

கருவின்வெளி *karuviṉveḷi,* பெ.(n.) முடித்தசை; the flesh on the top of the head (சா.அக.).

[கரு + இன் + வெளி.]

கருவினை *karu-viṉai,* பெ.(n.) பாழ்வினை, தீவினை (பாவம்); sin. *"ஐம்பதங்க ணீராக் கருவினை கழுவப்பட்டு" (சீவக. 931.).*

மறுவ. கரிசு, பாழ்வினை.

[கரு + வினை.]

கருவீ *karuvī* பெ.(n.) காக்கை; crow.

[கரு → கருவி → கருவீ.]

கருவீடு *karuvīḍu,* பெ.(n.) நஞ்சுக் கொடி; navel or umbilical cord, placenta (சா.அக.).

[கரு + வீடு.]

கருவீரல் *karu-vīral,* பெ.(n.) கல்லீரல்; liver.

[கரு + ஈரல்.]

கருவீழ்–தல் *karuvīḻ,* 2 செ.கு.வி.(v.i.) ***கருக்கலை–தல்*** பார்க்க; see *karukkalail.*

[கரு + வீழ்.]

கருவீழ்–த்தல் *karuvīḻ,* 2 செ.குன்றாவி(v.t.) ***கருக்கலை–த்தல்*** பார்க்க; see *karukkalai*[2].

[கரு + வீழ்.]

கருவீழி *karuvīḻi,* பெ.(n.) கருப்பு விழுதியாகிய பெருமூலிகை இருபத்துமூன்றனுள் ஒன்று; dark vizhudhi - one of the 23 rare drugs of high potency (சா.அக.).

[கரு + வீழி.]

கருவு *karuvu,* பெ.(n.) கருப்பம், சூல் கொள்ளுதல், வயிறு வாய்த்தல்; pregnancy.

மறுவ. கருப்பம், கருவம், கருபு, கருபம்.

கரு (உயிர்க்கரு) + உ = கருவு. கருப்பம், சூல்.

கருவுகலம் *karuvu-kalam,* பெ.(n.) பொருளறை; கருவூலவறை; treasury, treasure-house. *"கருவு கலத்திலே ஒரு நெஞ்சைத் தந்தாய்" (ஈடு. 2, 7, 7.).*

[கரு → கருவு + கலம். கரு = மூலம், தலைமை, முதன்மை.]

கருவுண்டா–தல் *karuvuṇḍā-,* 5 செ.குன்றாவி(v.t.) கருப்பம் ஏற்படுதல்; to conceive.

[கரு + உண்டாகு.]

கருவுணாயகன் பிள்ளையடியார் *karuvuṇāyagaṉ piḷḷaiyaḍiyār,* பெ.(n.) கிபி.1116 ஆம் ஆண்டு கும்பகோணம் வட்டம் திருச்சிறை கோயிலுக்கு நிலம் விற்றுக் கொடுத்தவர்; One who helped in the sale of land of the temple at Thiruchirai in Kumba konam taluk in 1116AD. *"வீதிவிடங்கன் கருவுணாயகன் பிள்ளையடியாரும்" (தெ.இ.கல். தொ. 26; கல் 661).*

[கரு + ஊர் + நாயகன் + பிள்ளை + ஆடியார் – கருவுணாயகன் பிள்ளையடியார். கருவுள் – கருவறையினுள் உள்ள நாயகன் – தலைவன் கடவுள்.]

கருவுப்பு[1] *karu-v-uppu,* பெ.(n.) 1. எள்ளுப்பு (சங்.அக.); salt extracted out of sesamum seed. 2. கல்லுப்பு; crystallised sea-salt.

[கரு + உப்பு. கரு = சிறப்பு, உயர்வு]

கருவுப்பு[2] *karuvuppu,* பெ.(n.) கருப்புப்பு; impure common salt (சா.அ க.).

[கரு + உப்பு. கரு = கரிய.]

கருவுப்பு[3] *karuvuppu,* பெ.(n.) பிண்டவுப்பு; salt extracted from the foetus (சா.அக.).

[கரு + உப்பு.]

கருவுமரி *karuvumari,* பெ.(n.) கருப்பு உமரிப்பூடு; greater indian salt wort (சா.அக.).

[கரு + உமரி.]

கருவுயிர்–த்தல் *karu-v-uyir-,* 4 செ.கு.வி.(v.i.) ஈனுதல்; to bring forth, bear. *"கருவுயிர்ப்பன கங்குடிப்பன" (தணிகைப். திருநாட்டு. 145.).*

[கரு + உயிர்–.]

கருவுள்ளி *karuvuḷḷi,* பெ.(n.) பேயுள்ளி; a black thorny shrub (சா.அக.).

[கரு + உள்ளி.]

கருவுளமைப்பு *karuvuḷamaippu,* பெ.(n.) உயிர் வாழ்வுக்கும் உடலுக்கும் ஏதுவான ஆறுவகை ஒழுங்குகள் (நியமங்கள்); the six orders of things essential to sentient beings after assuming the corporeal existence.

[கரு + உள் + அமைப்பு. பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, இறப்பு என்பன ஆறுவகை ஒழுங்குகளாகும். இவை பல பிறப்புகளால் ஏற்படும் விளைவு என்பர் (சா.அக.).]

கருவுறு–தல் *kavu-v-uṟu-,* 21 செ.கு.வி. (v.i.) 1. சூல் கொள்ளுதல்; to be gravid, to conceive. 2. மலர்தல்; to bloom. *"காந்தள் கருவுற" (திருக்கோ. 279, கொளு.).*

[கரு + உறு = கருவுறு.]

கருவூமத்தை *karu-v-ūmattai,* பெ.(n.) ஊமத்தை வகை (பதார்த்த. 271.); purple stramony.

[கரு + ஊமத்தை.]

கருவூமத்தை

கருவூர் *karu-v-ūr,* பெ.(n.) 1. சேரர் தலைநகரங் களுள் ஒன்று; Karur one of the capitals of the Chera kingdom. *"நெடுந்தேர்க் கோதை ... கருவூர் முன்றுறை" (அகநா.93.).* 2. கருவூர்த் தேவர் பார்க்க; see karuvūr-t-tēvar. *"கருவூரறைந்த சொன்மாலை" (திருவிசை. கருவூர்த். 6, 10.).*

மறுவ. கரூர்

க. கரவூர் (பெருமை வாய்ந்த நகரம்)

[கரு + ஊர். கரு = பெருமை. கருவூர் = பேரூர், பெருநகரம். இனி, கரு = நடு. கருவூர் = நடுஊர் என்றுமாம்.]

கருவூர்[2] *karu-v-ūr,* பெ.(n.) கருப்பை; the womb. *"கருவூரிலே பிறந்து கருவூரிலே வளர்ந்து" (ஞானவெட்டி.) (சா.அக.).*

[கரு + ஊர்.]

கருவூர்க்கந்தப்பிள்ளை சாத்தனார் *karuvūr-k-kandappiḷḷai-cāttaṉār,* பெ.(n.) கடைக்கழகப்புலவர்; a Sangam poet (த.ம. 75.).

[கருவூர் + கந்தப்பிள்ளை சாத்தனார்.]

கருவூர்த்தேவர் *karuvūr-t-tēvar,* பெ.(n.) திருவிசைப்பாவாசிரியருள் ஒருவர் (திருவிசை. கருவூர்த்தேவர்.); a Saiva saint, one of the authors of Thiru-v-isai-p-pa.

[கருவூர் + தேவர்.]

கருவூரர் நொண்டி மாலை *karuvūrar-noṇḍi-mālai,* பெ.(n.) 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த

கருவூர்ச் சித்தரால் இயற்றப்பட்ட சிற்றிலக்கிய நூல்; a poetic composition written by Karuvur-c-cittar of 15th century.

[கருவூரார் + நொண்டி + மாலை.]

கருவூரன் *karu-v-ūraṉ,* பெ.(n.) ***கருவூர்த்தேவர்*** (திருவிசை. கருவூர்த். 7, 10.) பார்க்க; see *karu-v-ūr-t-tēvar.*

[கருவூர் + அன். 'அன்' ஆ.பா.ஈறு.]

கருவூரானிலை *karuvūr-āṉilai,* பெ.(n.) கருவூரி லுள்ள சிவன் கோயில் (தேவா.); the Siva temple at Karur.

[கருவூர் + ஆனிலை. ஆலை - சுற்றுமதில்,ஆலை > ஆல் + நிலை – ஆனிலை சுற்றுமதிலுடைய கோவில்.]

கருவூலம் *karu-vūlam,* பெ.(n.) 1. பொருளறை; treasure, treasure-house. *"புந்தியதாகுமெய்க் கருவூலப் பொருளை" (பிரபோத. 27, 72.).* 2. அரசுக் கருவூலம்; government treasury.

ம. கரிவலம்

[கருவுலம் → கருவூலம். கருவு - முதன்மை, தலைமை.]

முன்பு விலையுயர்ந்த பொருள் சேமிப்பைக் குறிக்கும் சொல்லாக இருந்த கருவூலம் இன்று அரசுப் பணம் கொடுக்கல் வாங்கல் இடத்தைக் குறிப்பதாயிற்று.

கருவூலவரி *karuvūla-vari,* பெ.(n.) வரிவகை; (S.I.I. vii. 46.); a kind of tax.

[கருவூலம் + வரி.]

கருவேங்கை *karuvēṅgai,* பெ.(n.) வேங்கை மரம்; Indian kino (சா.அக.).

[கரு + வேங்கை.]

கருவேசரிக்கொடி *karuvēršari-k-kōḍi,* பெ.(n.) ***கழுதைப் பாலாட்டங்கொடி*** பார்க்க; see *kaḻudai pālāṭṭaṅgoḍi.*

[கரு + வேசரி + கொடி.]

Skt. vēsara > **த.** வேசரி - கழுதை.

கருவேட்டி *karuvēṭṭi,* பெ.(n.) கர்வி வேட்டி; cloth of a dark red colour or the one dyed in red ochre used by the Indian ascetics (சா.அக.).

[கரு + வேட்டி. கரு - அழுத்தமான நிறம்.]

கருவேப்பிலை *karu-vēppilai,* பெ.(n.) 1. கறி வேம்பின் இலை (பதார்த்த. 523.); curry leaf. 2. ***கறி வேம்பு*** (கொ.வ.) பார்க்க; see *kaṟi-vēmbu.* 3. செடி வகை (L.); china box.

ம. கரிவேப்பில; **க., து.** கரிபேவு; **தெ.** கரிவேமு; பட.கரம்பெலெ

[கறி + வேப்பிலை – கறிவேப்பிலை→ கருவேப்பிலை.]

கருவேம்பு *karu-vēmbu,* பெ.(n.) 1. கருவேப்பமர வகை; black neem tree. 2. கறிவேம்பு; curry-leaf tree.

தெ. கரிவேமு; **ம.** கரிவேப்பு; **க.** கரிபேவு; **து.** கரிபேவு.

[கரு + வேம்பு.]

கருவேம்பு

கருவேல் *karu-vēl,* பெ.(n.) வேலமரவகை (பதார்த்த. 462.); black babul *"கருவேலின் வேர்க்கு" (பதார்த்த. 505.).*

ம. கருவேலம்; **க.** கரிபெலே.

[கரு + வேல்.]

சிறிய இலைகளும் முட்களும் நிறைந்த கருமையான மரம். தண்ணீரால் விரைந்து கெட்டுப்போகாத தன்மை உடையது உழவுக் கருவிகள், கடல்கலங்கள் முதலியன செய்யப் பயன்படுவது.

கருவேல்

கருவேலம்பாடு *karuvelampāḍu,* பெ.(n.) தூத்துக்குடி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tuttukkudi dt.

[கருவேல் + கம் + பேடு – கருவேலம்பேடு → கருவேலம்பாடு. பேடு = பொட்டல் நிலம்.]

கருவேலன் *karuvēlaṉ,* பெ.(n.) **கருவேல்** பார்க்க; see karuvēl.

[கருவேல் → கருவேலன்.]

கருவேலி *karuvēli,* பெ.(n.) கருங்கொடி வேலி; black-flowered lead-wort.

[கருங்கொடிவேலி → கருவேலி.]

கருவை[1] *karuvai,* பெ.(n.) வரகு வைக்கோல்; millet straw. *"கருவை வேய்ந்த கவின் குடிச்சீறூர்" (பெரும்பாண்.191.).* 2. கருவேலமரம்; black babul.

[கரு + வை. கரு = கரிய. வை = வைக்கோல்.]

கருவை[2] *karuvai,* பெ.(n.) திருநெல்வேலி மாவட்டத் திலுள்ள சிவன் கோயில்; a Siva temple in Tirunelvēlidistrict. திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி.

[கரு → கருவை.]

கருவை[3] *karuvai,* பெ.(n.) மீன்வகை; aetobatus flagellum, spotted eagle ray.

[கரு → கருவை.]

கருவை[4] *karuvai,* பெ.(n.) வேதைக்குரு; a quintessence used in alchemy (சா.அக.).

[கரு → கருவை.]

கருவைக்காய்க்கொலுசு *karuvai-k-kāy-kolusu,* பெ.(n.) காலணி வகை (கொ.வ.); a kind of ornament for the ankle.

[கருவை + காய் + கொலுசு.]

கருவோடு *karuvōḍu,* பெ.(n.) பேரண்டம் என்னும் தலை மண்டையோடு; human skull (சா.அக.).

[கரு + ஓடு.]

கருவெளவால் *karu-vauvāl,* பெ.(n.) கடல் மீன் வகை; black pomfret, deep brown, attaining 2ft. in length.

[கரு + வெளவால்.]

கருள்[1]**(ளு)–தல்** *karuḷ,* 15 செ.கு.வி.(v.i.) கருநிறமடைதல்; to become black. *"அம்பொனல் வானங் கருண்டொன்று கூறுதலிற் கார்" (பதினொராந். காரொட்டு. 3.)*

[கல் → கரு → கருள் → கருளுதல் = கருத்தல். ஓ.நோ. இருள் → இருளுதல்.]

கருள்[2] *karuḷ,* பெ.(n.) 1. இருள்; darkness. *"கருளினொடு வெயில் கலந்த காட்சியன்ன மாட்சி" (சேதுபு. சீதைகு. 12.).* 2. கருப்பு; black, blackness. *"கருடரு கண்டத்து ... கைலையார்" (தேவா. 337, 4.).* 3. குற்றம்; blot, stain. *"கருடீர் வலியால்" (சேதுபு. முத்தீர்த். 5.) (த.மொ.அ.).*

க. கழ்தலெ, கத்தலு, கத்தலெ, கர்தலெ, கள்தலெ; **து.,** **பட.** கத்தலெ.

[கள் → கர் → கரு → கருள் = இருள், கருமை.]

த. கருள் > **Skt.** க்ருஷ். கருள் → க்ருஷ் → கிருஷ்ண =

கருமை. க்ருஷ்ணபக்ஷ = கரும்பக்கம், தேய்பிறை, க்ருஷ்ண ஸர்ப்ப = கரும் பாம்பு (வ.மொ.வ. 108.).

கருள்[3] *karuḷ*, பெ.(n.) 1. காங்குப்புடவை (நாநார்த்த.); a kind of coloured cloth. 2. நல்லாடை (திவ்.); excellent clothing.

[கரு → கருள் (கருநிறங்கலந்த புடைவை.).]

கருள்[4] *karuḷ*, பெ.(n.) சீற்றம்; wrath; indignation. *"கருளுடைய பொழின் மருதும்" (திவ். பெரியாழ். 4, 9, 3.).*

[கல் → கறு → கறுள் → கருள். கறுவுதல் = சீறுதல், மிகச்சினத்தல்.]

கருளக்கொடி *karuḷa-k-koḍi*, பெ.(n.) **கருடக்கொடி** பார்க்க; see *karuḍakkōḍi*.

[கருடன் + கொடி = கருடக்கொடி → கருளக்கொடி. கருடன் = பாம்புக்கடி நஞ்சை முறிக்கும் தன்மை.]

கருளன் *karuḷaṉ*, பெ.(n.) வெண்தலைக் கழுகு; white headed kite, sacred to Visnu. *"நாகம் விண்ணின் முரிக்குங் கருளன்" (இராமா. ஊர். 77.) (த.மொ.அ.).*

[கருள் + அன் – கருளன். 'அன்' ஒன்றன் பாலீறு. கருள் = நஞ்சு.]

கருனை *karuṉai*, பெ.(n.) பொரிக்கறி; any preparation which is fried. *"கருனைச்சோ றார்வர் கயவர்" (நாலடி, 200.)*

[கரு → கருனை. கருக்கப்பட்டது, வறுக்கப்பட்டது.]

கரூர் *karūr*, பெ.(n.) **கருவூர்** பார்க்க; see *karuvūr*.

[கரு + ஊர்.]

கரை[1]**–தல்** *karai-*, 3 செ.கு.வி.(v.i.) 1. கரைந்து போதல், நீரில் கரைதல், நீரியலாதல்; to dissolve, as salt or sugar in water. 2. மண்ணரிப்பு உண்டாதல்; to wear away as soil by the action of water. 3. உருகுதல்; to be reduced from a solid to a liquid form. *"கருங்கற்றான் வெண்ணெயெனக் கரைந்தோட" (அழகர்கல. 1.).* 4. இளைத்தல்; to become emaciated as the body. உடம்பு கரைந்துவிட்டது (கொ.வ.). 5. கெடுதல்; to become gradually attenuated. *"இந்திரன் செருக்குக் கரைய" (திருவிளை திருநகரப். 101.).* 6. வருந்துதல்; to undergo difficulties. *"ஞெகிழங் கரையாமல் வாங்கிய கள்வன்" (சிலப். 18, 26.).* 7. காலந்தாழ்த்தல் (சிலப். 18, 26, உரை.); to linger, delay. 8. அழுதல்; to weep, lament. *"கரையாவயர் வேனெனை" (கம்பரா. நகர்நீங். 33.).* 9. பதனழிதல்; to be over-ripe, as fruit. *"கரைந்த பழம்" (வின்.).* 10. கனிதல்; to become ripe.

க. கரகு, கரங்கு; **து.** கரகுனி; **தெ.** கராகு; கோண். கரெமன்; பட. கரகு; **கோத.** கர்க்; **துட.** கர்க்;

E. Cry (to weep).

[குள் → கள் → கரை (மு.தா. 312.).]

கரைதலாவது ஒருபொருள் சிறிது சிறிதாய் மறைதல். கர → கரை. கரைதல் = சிறிது சிறிதாய் சுரத்தல், உருகுதல் [வே.க.130.].

கரை[2]**–தல்** *karai-*, 2 செ.குன்றாவி.(v.t.) 1.அழைத்துச் சொல்லுதல்; to call, invite. *"அஞ்சிலோதியை வரக் கரைந்தீமே" (ஐங்குறு. 391.).* 2. சொல்லுதல்; to tell, expound. *"அறங்கரை நாவின்" (தொல். பாயிரம்.)* 3. ஒலித்தல்; to sound, roar. *"கல்லெனக் கரைந்து வீழும்" திருவிளை திருநா.) (தேவா. 742.1.).*

மறுவ. கரைதல், இயம்பல், இசைத்தல், அறைதல்.

ம. கர; **க.** கரெ; **து.** கரெ; **பர்.** கெரிப்; **குரு.** கர்க்கா; **மா.** கர்க்ரெ

S. gritar; **E.** call, kalde; **Nor., Dan.** kalle; **Gk.** Kalo Skrike; **OF.** cier; **Port.** gritar; **It.** gridare; **L.** quizitare **Aramic.** keri. **Hebrew.** kara; **Pol.** kryzyemec; **Czeco;** kricetc **Russ;** Kri-chat. **Fr; Cier**, **Span;** gri-tar; **E.** Cry; Aram : Keri. **Swedish;** Skrike

[கர் → கரை → கரைதல். கரை = அழை. அழைத்தலைக் குறிக்கும் அகவல் என்னும் சொற்போல், கரைதல் என்னும் சொல்லும் பாடுதலை; உணர்த்தும். ஆதலால் வடமொழியில் பாணனை அல்லது பாவலனைக் 'காரு' என்பர். (வ.மொ.வ. 314.).]

கரை[3]**–த்தல்** *karai-*, 4 செ.குன்றாவி.(v.t.) 1. கரையச் செய்தல்; to dissolve in water. 2. உருக்குதல்; to melt, as metal, to liquify. 3. அழித்தல்; to extirpate. *"உள்குவார் வினையைக் கரைக்கும்" (தேவா. 1040,5.).* 4. நிமிண்டுதல்; to pinch, squeeze so as to cause pain. 5. பணம் செலவழித்தல்; to expend. கையில் இருந்த பணம் கரைந்துவிட்டது (உ.வ.).

ம. கரக்குக; **தெ., பட.** கரகு; **க.** கரங்கு, கரகு; **துட., கோத.** கர்க்; க.,குட. கர் (செறித்தல்); **து.** கரகுனி, கரவுனி; **கோண்.** கரெமன்; **குவி.** கரன்கலி; **கசபா.** கரா.

[கர → கரை–. (வே.க.130).]

கரை[4]–த்தல் *karai-,* பி.வி.(caus.v.) அழைப்பித்தல், வரவழைத்தல்; to call, summon. *"உழையரிற் பலரைக் கரைத்து" (கந்தபு. குமாரபுரி. 66.).*

க., து. கரெ; **ம.** கர; **பர்.** கெரிப்; **குரு.** கர்க்னா; **மா.** கக்ரெர்

[கர் → கரை → கரைத்தல்.]

கரை[5]–தல் *karai-,* 2 செ.குன்றாவி.(v.t.) கொண்டு போதல்; to take, as a load. *"கருங்கடல் வளந்தரக் கரையும் பண்டியும்" (சீவக. 63.).*

[து. கரை > க. கரெ > கரை.]

கரை[6] *karai,* பெ.(n.) 1. கடற்கரை; shore of a sea. *"நாவாய் கரையலைக்குஞ் சேர்ப்ப" (நாலடி. 224.).* 2.நீர்க்கரை; bank, bund, as of a tank. *"யமுனைக் கரைக் கென்னை யுய்த்திடுமின்" (திவ். நாய்ச்சி. 12,4.).* 3. எல்லை; bound, limit. *"கல்வி கரையில" (நாலடி, 135.).* 4. செய்வரம்பு; embankment between fields. 5. புடைவைத் தலைப்பு; border, of a cloth. *"பூங்கரை நீலம்" (கலிங். 111.).* 6. பக்கம்; side, proximity, usu. in compounds, as அடுப்பங்கரை, வழிக்கரை. 7. இடம் (சூடா.); place.

மறுவ. கோடு, கட்டை, சிறை.

தெ., ம. கர; **க., து., குட.** கரெ; **பிரா.** கர்ரக்.

Norw; Kyst. grense; **Gk.** haros; **Nubian;** gar

[குரு → கரு → கரை. கரு = மேடு, உயரம்.]

கரை[7] *karai,* பெ.(n.) ஊரின்பெரு நிலப்பங்கு (S.I.I.ii.114; G.S.A.D. I, 288.); large division of co-parcenary land in a village consisting of dry and wet lands and garden fields.

[கரு → கரை. கரு = பெருமை, மிகுதி.]

கரை[8] *karai,* பெ.(n.) சொல் (நன். 458.); word. *"மாற்றநுவற்சி செப்புரைகரை" (நன். உரியி. 17.).*

[கரை[2] → கரை.]

கரை எல்ல பாளையம் *karaiellapāḷaiyam,* பெ.(n.) ஈரோடு மாவட்டத்துச் சிற்றூர்; a village in Erode dt.

[கரை + எல்லை + பாளையம் – கரையெல்லைப் பாளையம் → கரை எல்லபாளையம்.]

கரைக்கச்சான் *karai-k-kaccāṉ,* பெ.(n.) தெற்கிலிருந்து வடமேற்காய்க் கரைநோக்கி வீசுங்காற்று (குமரி மீன.); south-west wind.

*[கரை + கச்சான். **கச்சான்** பார்க்க.]*

கரைக்கட்டு *karai-k-kaṭṭu,* பெ.(n.) 1. நீர்க்கரைக்கு அடிப்படையாகக் கட்டியது; buttress for strengthening the bund of a tank. 2. புடைவையின் விளிம்பு; border of a saree.

க. கரெகட்டு

[கரை + கட்டு.]

கரைக்கட்டுக்கயிறு *karai-k-kaṭṭu-k-kayiṟu,* பெ.(n.) கரையோரக் கடலில் கலத்தை நிறுத்துதற்கு ஏதுவாய வலியதொரு கயிறு (முதவை மீன.); rope used in anchoring a boat etc in the shore.

[கரை+ கட்டு + கயிறு.]

கரைக்கட்டுக்கொம்பு *karai-k-kaṭṭu-k-kombu,* பெ.(n.) அலைவாயில் நிறுத்தப்பட்ட மரக்கலம் கடலில் தொலைவாய்ச் சென்றிடாமல் அதை அவ்விடத்திலே நிறுத்தற்கேதுவாய சிறுமரக்கொம்பு (முக வை மீன்.); wooden plank used for anchoring a boat.

[கரை + கட்டு + கொம்பு.]

கரைக்கடமை *karai-k-kaḍamai,* பெ.(n.) வரப்பிடச் செலுத்தும் வரி; tax for bund. புதுக்குளம் கரைக் கடமையில் (திருவாங். தொகுதி.6. பகுதி II கல்வெட்டு 100 வரிசை. 6.).

[கரை + கடமை.]

கரைக்கடல் *karai-k-kaḍal,* பெ.(n.) ஆழமில்லாத கடற்பரப்பு; shallow expanse of the sea shore.

[கரை + கடல்.]

கரைக்கல் *karrikkal,* பெ.(n) எல்லைக்கல், ஊர் அமைக்கும் பொழுது நடப்பட்ட கல்; boundary stone.

க. கரெகல்லு

[கரை + கல்.]

கரைக்கல்லோலம் *karai-k-kallōlam,* பெ.(n.) கடற்பாசி (மலை.); sponge, duck-weed.

[கரை + கல்லோலம்.]

கரைக்கல்லோலன் *karai-k-kallōlaṉ,* பெ.(n.) ***கரைக் கல்லோலம்*** பார்க்க; see *karaikkallōlam.*

[கரைக்கல்லோலம் → கரைக்கல்லோலன்.]

கரைக்காரன் *karai-k-kāraṉ,* பெ.(n.) 1. நிலப்பங்குக் குரியவன்; owner of a karai or determinate share in a co-parcenary village. 2. ஊர்மணியகாரன்; village officer. 3. சீட்டு நடத்துபவன் (நாஞ்.); conductor of a chit-fund. 4. கடற்கரையில் முதல் மதிப்புக்குரியவர்; one who gets respect at first at sea-shore.

[கரை + காரன்.]

கரைக்காற்று *karai-k-kāṟṟu,* பெ.(n.) கரையினின்று வீசுங் காற்று (வின்.); land breeze, dist. fr. கடற்காற்று, long shore wind.

[கரை + காற்று.]

கரைக்கூறு *karai-k-kūṟu,* பெ.(n.) 1. நிலப்பங்கு; partition in land (கல்.அக.). 2. வரப்பின் பங்கு; partition in bund.

[கரை + கூறு.]

கரைக்குலை–தல் *karaikulai-,* 4 செ.குன்றாவி.(v.t.) வரப்பை நீக்குதல்; to remove the bund.

[கரை + குலை.]

கரைக்குலை *karaikulai,* பெ.(n.) வரப்பை நீக்கிய இடம்; land modified by removing bund. பாண்டவாய்க் கரைக்குலையுமாக இறையிலி (நிலம். S.i.i. vol.2. insc.4.).

[கரை + குலை.]

கரைக்கூறுசெய்வார் *karai-k-kūṟu-ceyvār,* பெ.(n.) நிலத்தைப்பங்கிட வேண்டி நிலவளவை செய்யும் ஊரவை அதிகாரிகள் (கல்வெட்டு); officer, whose duty is to measure the lands in village, at the time of partition in land.

[கரை + கூறு + செய்வார். கரை = எல்லை.]

கரைகட்டு–தல் *karai-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1.நீர்க்கரைக்கு வரம்பு உண்டாக்குதல்; to construct a bank or a bund. 2. புடைவை விளிம்பைக் கட்டுதல்; to make the selvedge of cloth, put on a coloured border. கரைகட்டிச் சலவை செய்யவேண்டும்.

[கரை + கட்டு –.]

கரைகட–த்தல் *karai-kaḍa-,* 3 செ.கு.வி.(v.i.) 1.கரையை மீறுதல்; to overflow a bank, as a tank, a river. *"உலகுடைய தாயே கரைகடக்கலாகாது காண்" (தமிழ்நூ. 81.).* 2. எல்லை மீறுதல்; to pass or transgress the limit.

[கரை + கட–.]

கரைகண்டர் *karaikaṇḍar,* பெ.(n.) துருசு; blue vitriol (சா.அக.).

[கரை + கண்டர்.]

கரைகண்டவன் *karai-kaṇḍavaṉ,* பெ.(n.) கலைகளை முற்றாகச் செவ்வனே கற்றவன்; one whose learning in any branch of knowledge is at once profound and extensive; one who is skilled in business, master in science or learning.

[கரை + கண்டவன்.]

கரைகரு *karaikaru,* பெ.(n.) அழிந்த கருப்பம்; an aborted child or foetus (சா.அக.).

மறுவ. கரைகன்று, கரைஒட்டி.

[கரை + கரு.]

கரைகன்று *karai-kaṉṟu,* பெ.(n.) பருவத்துக்கு முன் ஈன்ற கன்று (யாழ்ப்.); a calf born prematurely.

மறுவ. கரைகுட்டி

[கரை + கன்று.]

கரைகாட்டாங் குறிச்சி *karai-k-kāṭṭāṅgkuric-ci,* பெ.(n.) பெரம்பலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Perambalur dt.

[கரைக்காடு + அம் + குறிச்சி–கரைக்காட்டங்குறிச்சி கரைச்காட்டாங்குறிச்சி.]

கரைகாண்(ணு)–தல் *karai-kāṇ-,* 12 செ.கு.வி.(v.i.) எல்லையறிதல்; to get to the very end; to reach a distined port; to master thoroughly an art or science. *"நற்றவ முனிவர் கரை கண்டோர்" (திவ். திருவாய். 8,3,10.).*

[கரை + காண்–.]

கரைகாணாப்பேரொளி *karai-kāṇāppēroḷi,* பெ.(n.) கடவுள்; god.

[கரை + காணா + பேரொளி.]

கரைகாரன் *karai-kāraṉ*, பெ.(n.) ***கரைக்காரன்*** பார்க்க; see *karai-k-kāraṉ*.

[கரை + காரன் → கரை - எல்லை.]

கரைகுட்டி *karai-kuṭṭi*, பெ.(n.) பருவத்துக்கு முன் ஈன்ற குட்டி (யாழ்ப்.); young animal born prematurely.

மறுவ. கன்று

[கரை + குட்டி. கரை - அழிதல்.]

கரைகொள்(ளு)-தல் *karaikoḷ(ḷu)*, 10செ.குன்றாவி. (v.t.) கரைபோடுதல், வரப்பமைத்தல்; to bund ... குலைக்கீழ் வாய்க்கால் நின்றும் சாமந்தியில் மேல்பாடு கரைகொள்ள கலத்தால் வாய்க்கால் பெற்று (கல்.அக.).

[கரை + கொள்.]

கரைச்சங்கு *karai-c-caṅgu*, பெ.(n.) கரையோரக் கடலடியில் திரியும் அல்லது மேயுஞ் சங்கு. (தஞ். மீனவ.); a kind of conch near the shore.

[கரை + சங்கு.]

கரைச்சல்[1] *karaiccal*, பெ.(n.) உருக்குகை (யாழ்.அக.); melting.

[கரை→ கரைச்சல்.]

கரைச்சல்[2] *karaiccal*, பெ.(n.) தொல்லை; trouble, botheration.

[கரை → கரைச்சல்.]

கரைச்சல்[3] *karaiccal*, பெ.(n.) கவலை; anxiety, care. *"கரைச்சல் கெட்டு மார்பிலே கைவைத்து உறங்கப்புக்கார்" (திவ். திருப்பள்ளி. அவ. வ்யா. பக். 11).*

[கரை → கரைச்சல்.]

கரைச்சி *karaicci*, பெ.(n.) 1. உடம்பை இளைக்கச் செய்யும் மருந்து; a medicine or agent reducing a corpulent body to a slender one. 2. தசையை அரிக்கக்கூடிய மருந்து; the substance which corrodes the flesh of animals as caustics. (சா.அக.).

[கரை → கரைச்சி 'சி' சொ.ஆ.ஈறு.]

கரைச்சுத்துஉவரி *karai-c-cuttu-uvari*, பெ.(n.) திருநெல்வேலி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thirunelveli dt.

[கரை + சுற்று + உவரி - கரைச்சுற்று உவரி → கரைச்சுத்து உவதி. உவரி - கடல் அலை.]

கரைச்சை *karai-c-cai*, பெ.(n.) உவர்மண்; fuller's earth (ம.அக.).

[கரை→ கரைச்சை (நீரில் கரைவது).]

கரைசல்[1] *karaiśal*, பெ.(n.) ஒரு திடப் பொருள் கரைந்திருக்கும் நீர்மம் (திரவம்.); a solution in which a solid substance is dissolved.

[கரையல் → கரைகளற சல்.]

கரைசல்[2] *karaiśal*, பெ.(n.) ***கரையல்*** பார்க்க; see *karaiyal*.

[கரையல் → கரைசல்.]

கரைசாந்து *karai-śāndu*, பெ.(n.) கற்சுவர்களில் அடுக்கப்பட்ட கற்களின் இடைவெளியை யடைக்கப் போடப்படும் சாந்து; paste used to plaster the gap between two bricks or stones of a wall.

[கரை + சாந்து.]

கரைசிலை *karaicilai*, பெ.(n.) கல்லுப்பு, இந்துப்பு; rock or sindh salt (சா.அக.).

[கரை + சிலை. சிலை - கல்.]

கரைசெய்-தல் *karaisey*[1], 1 செ.குன்றாவி.(v.t.) கரையையுயர்த்துதல்; to increase the level of mound ... *"மன்னுமடைக்கு மேக்குக்கருங் குளத்துக் குக் கிழக்கு நிலத்திட்டு கரைசெய்து" மடைவைப் பித்து" (S.I.I. vol. 14. insc. 43. S.No.5.5).*

[கரை + செய்.]

கரைசேர்-தல் *karaiśēr-*, 2 செ.கு.வி.(v.i.) 1. கரையடைதல்; to reach the shore. 2. வெற்றி பெறுதல்; to get victory. 3. நலம் பெறுதல்; to be curred as of disease.

[கரை + சேர்தல்.]

கரைசேர்-த்தல் *karai-sēr-*,4 செ.கு.வி.(v.i.) ஒருவனை நல்ல நிலைக்குக் கொண்டு வருதல்; to help one's dependents until they become self-supporting. என் தம்பி பிள்ளைகளைக் கரை சேர்ப்பது என் பொறுப்பு (உ.வ.).

[கரை + சேர்-.]

கரைசைமணி *karaisai-maṇi,* பெ.(n.) பட்டை தீட்டிய பளிங்குமணி; a kind of bell (ம.அக.).

[கரைசை + மணி. கரைசை - கரைத்தல், பட்டைதீட்டுதல்.]

கரைஞ்சால் *karaiñjāl,* பெ.(n.) ***கரைஞ்சான்*** பார்க்க; see *karaiñjāṉ.*

[கரைஞ்சான் → கரைஞ்சால் (சா.அக.).]

கரைஞ்சான் *karañjāṉ,* பெ.(n.) 1. அகில்; a fragrant wood. 2. வாழைப்பழம்; banana (ம.அக.).

[கரை → கரைஞ்சான் - மணம் பரப்புவது (சா.அக.).]

கரைத்தண்டயல் *karai-t-taṇḍayal,* பெ.(n.) கொண்டடித் தோணியின் சொந்தக்காரன்; owner of a boat (ம.அக.).

[கரை + தண்டயல்.]

கரைத்தாம்பு *karai-t-tāmbu,* பெ.(n.) கரைக்கு அண்மையிலுள்ள இருவேறு அலைகட்கிடைப்பட்ட சமதள நீர்ப்பரப்பு (செங்கை மீனவ.); the levelling space between two waves near a shore.

[கரை + தம்பு.]

கரைத்துக்குடி—த்தல் *karaittu-k-kuḍi,* 4 செ. குன்றாவி. (v.t.) 1. உணவு முதலியவற்றைக் கஞ்சியாக்கிக் கரைத்து நீர்மமாக்கி உட்கொள்ளுதல்; to drink any liquid in which solid food or medicine has been dissolved. 2. முற்றக்கற்றறிதல்; to learn thoroughly the contents of a book or books. அவன் பல நூல்களையும் கரைத்துக் குடித்தவன் (உ.வ.).

[கரைத்து + குடி.]

கரைதட்டு—தல் *karai-taṭṭu-,* 5. செ.கு.வி.(v.i.t.) கப்பல் மணலிற் பாய்தல்; to be stranded, as a ship. *"கப்பல் மூவாயிரமுங் கரைதட்டிப் போனதினால்" (கோவல. கதை. 1, 67.).*

[கரை + தட்டு.]

கரைதலைப்பாடம் *karai-talai-p-pāḍam,* பெ.(n.) ***கடைதலைப்படலம்*** பார்க்க; see *kaḍai-talai-p-pāḍalam.*

[கடை + தலைப்பாடம் – கரைதலைப்பாடம் (கொ.வ.).]

கரைதாண்டு—தல் *karaitāṇḍu-,* 11 செ.கு.வி.(v.i.) 1.சிக்கல் அல்லது துன்பத்திலிருந்து விடுபடுதல்; to extricate from sorrow, trouble or concer.

[கரை + தாண்டு.]

கரைதிறன் *karaitiṟaṉ-,* பெ.(n.) திண்மம் நீர்மத்தில் கரையும் அளவு; solvency.

[கரை + திறன்.]

கரைதுறை *karai-tuṟai,* பெ.(n.) 1. இறங்குமிடம் (வின்.); landing place. 2. முடிவு; end. 3. துறைமுகம்; port.

[கரை→துறை. கரை - எல்லை, முடிவு, முடிவிடம்.]

கரைதுறைக்காவற்காரன் *karai-tuṟai-k-kāvaṟkāraṉ,* பெ.(n.) துறைமுகங் காப்பவருள் தலைவன் (வின்.); tide-waiter, master attendant.

[கரை + துறை + காவல் + காரன்.]

கரைநிலம் *karainilam,* பெ.(n.) வரப்பிட்ட நிலம்; land partitioned land by bund (கல். கலை. அக.).

[கரை + நிலம்.]

கரைநீளமட்டு—தல் *karai-nīlamaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ஏரி போன்றவற்றின் கரையை நீளமாக்குதல்; to extend the bund. *"இக்குளந்தான் வேண்டுமாறு கல்லிக் கரைநீளம் அட்டப்பெறுவதாகவும்" (S.I.I. Part. 3:3. 106.).*

[கரை + நீளம் + அட்டு.]

கரைப்பங்கு *karai-p-paṅgu,* பெ.(n.) ஊர் நிலப்பங்கு; share in the village lands.

[கரை + பங்கு.]

கரைப்படகு *karai-p-paḍagu,* பெ.(n.) கரையோரப் பயணப்படகு; shore boat.

[கரை + படகு.]

கரைப்படு[1]—தல் *karai-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) கரைசேர்தல்; to get to the shore, as a vessel.

[கரை + படு-.]

கரைப்படு[2]—த்தல் *karai-p-paḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1.கரையிற் சேர்த்தல்; to convey to the shore.

"கரைப்படுத் தாங்குக் காட்டினன் பெயரும்" (சிலப். 11, 127.). 2. நற்பேறு அடைவித்தல் (வின்.); to land one on the shores of bliss, as a guru.

[கரை + படு-.]

கரைப்படை *karai-p-paḍai,* பெ.(n.) கரைகளைப் பாதுகாக்கும் பணியாளர்; men employed for maintenance of bund. *"இவர்கட்கு இறைப்புணைப்பட்ட கரைப்படையிலார்க்கு தண்டல் நாயகம்" (S.I.I. Vol. 5. Insc. 990.)*

[கரை + படை.]

கரைப்பற்று *karai-p-parru,* பெ.(n.) கரையோடிணைந்த நிலம்; land abutting bund.

[கரை + பற்று.]

கரைப்பாட்டுமீன் *karai-p-pāṭṭu-mīṉ,* பெ.(n.) குடைமீன், கரையோரக் கடற்பரப்பில் மேயும் மீன் (தஞ்ச மீன.); fish found near shore.

[கரை + பாட்டு + மீன். படு → பாட்டு (பகுதி.)]

கரைப்பாதை *karai-p-pādai,* பெ.(n.) 1. கரைவழி (யாழ்ப்.); land route. 2. கரைவழியே செய்யும் பயணம் (வின்.); journeying by land.

[கரை+பாதை.]

கரைப்பாம்பு *karai-p-pāmbu,* பெ.(n.) நிலத்தில் வாழும் பாம்பு; ground snake as opposed to கடற்பாம்பு, நீர்ப்பாம்பு; (sea-snake or water-snake.) (சா.அக.).

[கரை + பாம்பு.]

கரைப்பான் *karai-p-pāṉ,* பெ.(n.) கரைக்கும் பொருள்; dissolvent.

[கரைப்பு + ஆன்.]

கரைப்பு *karaippu,* பெ.(n.) வீட்டின் மேற்றளத்தை நீர்வாட்டமுறும்படிச் செய்கை (C.E.M.); sloping course in roofing.

[கரை → கரைப்பு (தாழ்ப்பு, வாட்டம்).]

கரைப்புக்கல் *karaippu-k-kal,* பெ.(n.) தளத்திற்கு இழைப்போட்டுங்கல் (C.E.M.); crystal-stone rubber.

[கரைப்பு + கல்.]

கரைப்பூடு *karai-p-pūḍu,* பெ.(n.) கடற்கரையோரங்களில் பயிராகும் செடிவகை; plant found grown or cultivated near the sea shore (சா.அக.).

[கரை + பூடு. இவ்வகைச்செடிகள் மருந்து உருவாக்கத்திற்குப் பயன்படாதவையாம்.]

கரைப்பொந்து *karai-p-pondu,* பெ.(n.) 1. வடிகால் மடை; sluice. 2. கரையில் உள்ள நண்டு போன்றவற்றின் வளை; hole as of crab etc. *"இந்நிலம் ஐவேலிக்கும் கரைப்பொந்து போதாததுக்கு இக்கலிங்குச் சாலுக்கு மேற்கு" (தெ.கல்.தொ.5.).*

[கரை + பொந்து.]

கரைப்போக்கு[1] *karai-p-pōkku,* பெ.(n.) கடற்கரை (வின்.); sea-coast.

[கரை + போக்கு.]

கரைப்போக்கு[2] *karaippōkku,* பெ.(n.) 1.***கரைப் போக்குக்கல்*** பார்க்க; see *karaippōkkukkal.* 2. இழிவானது; that which is base or inferior.

ம. கரப்போக்கு; தெ. கரம்போக.

[கரை + போக்கு.]

கரைப்போக்குக்கல் *karaippōkkukkal,* பெ.(n.) போலிச் செம்மணிக்கல்; spurious gem, found in alluvial soil.

[கரை + போக்கு + கல். போக்கு - பகுதி.]

கரைப்போக்குப்பொடி *karaippōkkuppoḍi,* பெ.(n.) ***கரைப்போக்குக்கல்*** பார்க்க; see *karaippōkkukkal.*

[கரை + போக்கு + பொடி.]

கரைப்போர் *karai-p-pōr,* பெ.(n.) கரையிலிருந்து செய்யும் போர் ; sea-shore war.

[கரை + போர்.]

கரைபடு¹–தல் *karai-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) பங்குக்கு ஏற்ப நிலம் பிரிவுபடுதல்; to be divided into lots according to the shares in the land.

[கரை + படு . கரை = எல்லை, வரம்பு, பங்கு.]

கரைபடு²–தல் *karaipaḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. கரைந்து போதல்; to dissolve. 2. உருகுதல்; to melt.

[கரை + படு. படு- து.வி.]

கரைபறி–தல் *karaipaṟi-,* 2 செ.குன்றாவி.(v.t.) நிலத்திடை அமைத்த கரையை நீக்குதல்; to remove bund. *"கீழ்பாதத்து ஒரு துருவும் கரைப் பறிச்சுப் பட்டம் கடித்துப் பிழையாமே சொன்னார்" (S.I.I. Vol.13. Insc. 250. S.No. 19.).*

[கரை + பறி.]

கரைபாடு *karaipāḍu,* பெ.(n.) கரையோரக் கடலிலிறக்கிய வலையிற் தென்படும் மீன்; (தஞ்.மீன.); the fish which came into fishing net near seashore.

[கரை + பாடு. படு→ பாடு.]

கரைபிடி–த்தல் *karai-piḍi-,* 4 செ.கு.வி.(v.i.) மரக்கலந்துறைசேர்தல் (வின்.); to arrive at a port.

ம. கரபிடி

[கரை + பிடி .]

கரைபிடித்தோடு–தல் *karai-piḍittōḍu-,* 5 செ.கு.வி. (v.i.) மரக்கலம் கரையோரமாய்ச் செல்லுதல்; to sail along the coast.

[கடை + பிடித்து + ஓடு .]

கரைபுரட்டு–தல் *karai-puraṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) **கரைபுரள்** பார்க்க; *karai-puraḷ.*

[கரை + புரட்டு. புரள் → புரட்டு.]

கரைபுரள்(ளு)–தல் *karai-puraḷ-,* 16 செ.கு.வி.(v.i.) 1. வெள்ளப் பெருக்கெடுத்தல்; to overflow as a river. 2. மிகுதல்; to exceed bounds. குளங்கள் கரைபுரண்டிருந்தால் (ஈடு, 1.1.1.).

[கரை + புரள் .]

கரைபோடு–தல் *karai-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1.செய்கரை கட்டுதல்; to construct an embankment, as of a tank. 2. நிலம் பிரித்தல் (வின்.); to fix the boundaries of land. 3. சீட்டுப்போடுதல் (வின்.); to cast lots.

[கரை + போடு .]

கரைமடி *karai-maḍi,* பெ.(n.) கரைவலை (வின்.); a shore-net, dist. fr.; தட்டுமடி.

[கரை + மடி.]

கரைமதிப்புவை–த்தல் *karaimadippu-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) கடற்கரையில் உயர்ந்த கோபுரம் அல்லது பெரியமரத்தைக் கலங்கரை விளக்கு போல் அடையாளமாக வைத்தல்; to keep high building or tall tree as a light house at sea-shore.

[கரை + மதிப்பு + வை.]

கரைமரஞ்சேர்–தல் karai-marañ-cēr-, 2 செ.கு.வி. (v.i.) உயர்வடைதல்; to attain salvation, as a boat reaching the shore. "லௌகிகர் நம்மையே பற்றிக் கரைமரஞ்சேரும் விரகோ" (ஈடு, 4, 8, 9.).

[கரைமரம் + சேர்–. கரைமரம் = கரைசேர்க்கும் மரக்கலம்.]

கரைமானியம் *karai-māṉiyam,* பெ.(n.) ஏரிக்கரையைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய ஆளைக் கூட்டுவதற்கு விடப்பட்ட இறையிலி நிலம் (m.m.); tax-free land assigned for the service of collecting workmen to repair tanks.

[கரை + மானியம் .]

கரைமீறு–தல் *karaimīṟu-,* 5 செ.கு.வி.(v.i.) ஒரு செயல் அல்லது நிலைமை வரம்பு கடந்து போதல்; to go to the extreme.

[கரை + மீறு–.]

கரைமுகம் *karai-mugam,* பெ.(n.) **கடற்கரை** (செங்கை மீனவ.) பார்க்க; see *kaḍaṟkarai.*

[கரை + முகம்.]

கரைமுண்டாக் கோட்டை *karaimuṇḍā-k-koṭṭai,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thanjavur district.

[கரைமுண்டன் + கோட்டை – கரைமுண்டக்கோட்டை → கரைமுண்டாக்கோட்டை.]

கரையட்டுவி-த்தல் *karaiyaṭṭuvi-,* பி.வி. (v.caus.) கரையை யுருவாக்கிக் கட்டுவித்தல்; to cause to make bund. *"குளத்தைப் பெருக கரையட்டுவிச்சு காடும் வெட்டுவிச்சு" (S.I.I. Vol.5. Part 1. 724.).*

[கரையட்டு + வி.]

கரையடி *karaiyaḍi,* பெ.(n.) அலை மோதும்படியாக வுள்ள கரை, நீருக்குப் பக்கத்திலுள்ள கரை; land adjoining a water body, bund (சேரநா.).

ம. கரயடி

[கரை + அடி.]

கரையத்தெரு *karaiya-t-teru,* பெ.(n.) கடற்கரையை யொட்டிய தெருவொன்றின் பெயர் (முகவை. மீனவ.); street near a sea-shore.

[கரை + தெரு – கரை + அ + தெரு → கரையத்தெரு.]

கரையம்பட்டி *karaiyam paṭṭi,* பெ.(n.) ஓர் ஊர்ப்பெயர்; name of a village.

[கரையன் + பட்டி. கரையோரக் குடிசைகளில் வாழும் பழங்குடியினத்தவர் ஊர். பட்டி = சிற்றூர்.]

கரையமரத்துவலை *karaiya-marattu-valai,* பெ.(n.) கரையோரக் கடற்பரப்பில் வலைத்தற்குரிய வலை (தஞ். மீன.); fishing net for putting into sea near seashore.

[கரையமரத்து + வலை.]

கரையல் *karaiyal,* பெ.(n.) 1. கரைகை; dissolving. 2. உருகுகை; melting. 3. கரைந்த பொருள்; that which is dissolved, reduced.

[கரை +அல் – கரையல். 'அல்' தொ.பெ.ஈறு.]

கரையல்பொன் *karayalpoṉ,* பெ.(n.) 1. உருகிய பொன்; melted gold. 2. பொன் துகள்; gold dust.

[கரை – கரையல் + பொன். 'அல்' சொ.ஆ.ஈறு.]

கரையலடிசில் *karaiyal-aḍišil,* பெ.(n.) குழைந்த சோறு (யாழ்ப்.); over cooked rice.

[கரையல் + அடிசில்.]

கரையற்சோறு *karaiyaṟ-cōṟu,* பெ.(n.) ***கரையலடிசில்*** பார்க்க; see *karaiyal-aḍišil.*

[கரையல் + சோறு.]

கரையனூல் *karaiyaṉūl,* பெ.(n.) எளிதிற்பிரியக் கூடிய நூல் (வின்.); loose yarn that easily parts.

[கரையல் + நூல்.]

கரையாக்கு *karaiyākku,* பெ.(n.) அசோகு போன்ற மரம்; a kind of tree (ம.அக.).

[கரை + ஆக்கு.]

கரையாக்கு-தல் *karai-y-ākku-,* 5 செ.கு.வி.(v.t.) நன்றாகக் கற்றல்; to learn thoroughly. *"கணித நூலில் உள்ள சகல பாவங்களையும் கரையாக்கும் வரை" (நித்தியானு. 174.).*

[கரை + ஆக்கு-தல். (வரம்பாக்குதல், எல்லை கண்டறிதல், முற்றக்கற்றல்.).]

கரையாக்குமணல் *karaiyākkumaṇal,* பெ.(n.) ***கருமணல்*** பார்க்க; see *karumaṇal.*

[கரை + ஆக்கு + மணல்.]

கரையாமை *karaiyāmai,* பெ.(n) தரையில் வாழும் ஆமை; tortoise.

ம. கரயாம

[கரை + ஆமை.]

கரையார் *karaiyār,* பெ.(n.) கடலோரத்தில் அல்லது உப்பங் கழியில் குறிப்பிட்டதோர் பருவத்தில் மட்டும் மீன்பிடி தொழில்செய்வோர் (செங்கை மீனவ.); those who are adjacent to a sea-shore or salt-pan for catching fish during a particular season.

[கரை + ஆர். 'ஆர்' ப.பா.ஈறு.]

கரையாளன் *karaiyāḷaṉ,* பெ.(n.) 1. சிற்றூர்க் கரைப் பங்கிற்குரியவன்; village proprietor. 2. மறவரிடையர் களின் பட்டப் பெயர் (E.T.); caste-title of Maravas and some Iḍaiyas.

ம. கரையாளன்

[கரை + ஆளன் – கரையாளன். கரை = தன் பாய்ச்சல் நிலம், விளைநிலம், நன்செய்நிலம். கரையாளன் = நிலவுடைமையாளன்.]

கரையான்[1] *karaiyāṉ,* பெ.(n.) 1. கடற்கரை அல்லது ஆற்றங்கரை பக்கத்தில் வாழ்பவன்; one who resides near a sea-shore or river bank. 2. மீனவருள்

ஒரு பிரிவினர்; a sect among fishermen or boat people.

[கரு → கரை (மேடு). கரை + ஆன். 'ஆன்' ஆ.பா.ஈறு.]

கரையான்[2] *karaiyāṉ,* பெ.(n.) கறையான் பார்க்க; see *kaṟaiyāṉ.*

[கறையான் →கரையான் (கொ.வ.).]

கறையானைக் கரையான் என வழங்குவது தவறு.

கரையிடுக்கு *karaiy-iḍukku,* பெ.(n.) இரு பெரிய நிலப்பாகங்கள் சேரும் குறுகிய கரை; an isthmus.

ம. கரயிடுக்கு

[கரை + இடுக்கு.]

கரையிடு-தல் *karai-y-iḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1.நிலப்பங்கு பிரித்தல்; to divide land into portions. 2. நிலங்களைப் பயிரிடுமாறு பிரித்துக் கொடுத்தல் (வின்.); to assign portions of land to be cultivated.

[கரை + இடு. கரை = எல்லை.]

கரையீடு[1] *karai-y-īḍu,* பெ.(n.) ஊர்நிலங்களை மாற்றியமைக்கை (C.G.); tenure by which the lands of a village are exchanged amongst the co-parceners or owners periodically.

ம. கரயீடு

[கரை + ஈடு – கரையீடு.]

கரையீடு[2] *karai-y-īḍu,* பெ.(n.) அடைமானம் (I.m.P.Tj.140.); lease.

[கரை + ஈடு. கரை = நிலம். ஒ.நோ.: காடுகரை வீடு வாசல். ஈடு = ஒற்றிடல், அடைமானம் வைத்தல்.]

கரையூர் *karaiyūr,* பெ.(n.) மீனவர் குப்பம்; habitation of fishermen.

[கரை + ஊர்.]

கரையேற்றம் *karai-y-ēṟṟam,* பெ.(n.) 1. நற்பேறு பெறுகை; salvation, final deliverance of the soul. 2. வறுமை முதலியவற்றினின்று ஈடேறுகை; emancipation from poverty, etc.

[கரை + ஏற்றம்.]

கரையேற்று-தல் *karai-y-ēṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. நற்பேறு சேர்த்தல்; to save, redeem, emancipate, as from karumam or previous deeds. 2. வறுமை முதலியவற்றினின்று ஈடேற்றுதல்; to raise from indigence, to reinstate in affluent circumstances. 3. திருமணம் பெறச் செய்தல் (வின்.); to marry and settle, as destitute girl.

ம. கரயேற்றுக

[கரை + ஏற்று-.]

பிறவிக் கடலினின்று ஆதன்களை [ஆன்மாக்களை]க் கரையேற்றுபவர் என்னும் கருத்தையுட்கொண்டே சமயகுரவரைத் தீர்த்தங்கரர் என்பர் சமணர் [சொல்.கட்.5.].

கரையேறவிட்டகுப்பம் *karaiēṟa-viṭṭa-kuppam,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Cuddalore district.

[கரை + ஏற + விட்டான் + குப்பம் – கரையேறவிட்டான் குப்பம் →கரையேறவிட்டகுப்பம். கரையேறவிடுதல் = கரை உயர்த்துதல்.]

கரையேறவிட்டநல்லூர் *karai-y-ēṟa-viṭṭa-nallūr,* பெ.(n.) ஒரு சிவன்கோயில் உள்ள இடம்; name of a village which has an ancient Shiva shrine.

[கரையேற + விட்ட + நல்லூர்.]

இது திருப்பாதிரிப் புலியூருக்கு [கடலூர்] அருகில் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. கெடில ஆறு பெருகி மாணிக்கவாசகரைத் தடுக்க சிவன் சித்தராய் வந்து வழி அமைத்துத் தந்த ஊர் இது என்பர்.

கரையேறு-தல் *karai-y-ēṟu,* 5 செ.கு.வி. (v.i.) 1. நீரினின்று கரையடைதல்; to get ashore, land. *"கடலோடி மீண்டு கரையேறினாலென்" (நல்வழி. 6.).* 2. உலகப்பற்றொழித்துப் பேரின்பம் அடைதல்; to be saved, rescued, as from the sea of transmigration, to gain heavenly bliss. *"உந்தை கரையேற வேண்டின்" (குற்றா.தல.கவுற்சனச்.83.).* 3.இடரினின்று விடுபட்டு முன்னேறுதல்; to ascend, mount, to be free from danger. 4. வறுமையினின்று ஈடேறுதல் (வின்.); to be freed from poverty. 5. வாழ்க்கைப்படுதல் (வின்.); to get married. 6. விரும்பியதை அடைதல் (வின்.); to attain an object of desire.

ம. கரயேறுக

[கரை + ஏறு.]

இவ்வுலக வாழ்க்கை ஓர் ஆற்றை அல்லது கடலைப் போன்றது. இவ்வுலக இன்பமாகிய சிற்றின்பத்திற் பற்று வைத்து வாழ்வது, அந்நீர் நிலையில் மூழ்கியிறப்பதையும் பற்றற்று வாழ்வது அதை நீந்திக் கரையேறி யுய்வதையும் நிகர்க்கும். இதனால், உலகப் பற்றொழித்துப் பேரின்ப வீட்டையடைவதற்குக் கரையேறுதல் என்றும் வீட்டுலக வாசிகளுக்கு அக்கரையர் என்றும் பெயர் [சொல். கட். 5.].

கரையோட்டு *karai-y-ōṭṭu,* பெ.(n.) கப்பலைக் கரைபிடித்தோட்டுகை (யாழ்.அக.); sailing along the coast.

[கரை + ஓட்டு.]

கரையோரம் *karaiyōram,* பெ.(n.) கடல், ஆறு போன்றவற்றின் கரை; shore, bank.

ம. கரயோரம்; க. கராவளி (கரையோரப்பகுதி)

[கரை + ஓரம்.]

கரையோலை *karai-y-ōlai,* பெ.(n.) பிரிவினை யாவணம் (இ.வ.); partition deed.

[கரை + ஓலை – கரையோலை.]

கரைவலம் *karaivalam,* பெ.(n.) கப்பல்; ship.

[கரை + வலம்.]

ஒரு கரையினின்று மற்றொரு கரைக்குச் சென்று வருதலை, அதாவது வலம் வருதலைக் குறிக்கும் அடிப்படையில் கரைவலம் கப்பலைக் குறித்துள்ளது.

கரைவலை *karai-valai,* பெ.(n.) சின்னஞ்சிறு துளைகள் பொருந்திய ஒரு பையைத் தன்னகத்தே கொண்டதாய்க் கரையிலிருந்து அரைகல் தொலைவுக்கு வட்டமாக வீசி மீன்களைத் துரத்திப் பிடிக்கப் பயன்படும் ஒருவகை வலை; drag-net, having a cotton bag with fine meshes in the centre, sometimes 1/2 miles in length spread out from the shore in a semi-circle and after an hour or two withdrawn from the water, while the boys beat it shouting so as to drive the fish into the bag as it nears the shore.

ம. கரவல

[கரை + வலை.]

கரைவலைக்காரர் *karai-valai-k-kārar,* பெ.(n.) கரையாரில் ஒரு பிரிவு மக்கள்; a sect of *'karaiyar'* people.

[கரை + வலை + காரர்.]

கரைவலைத்தோணி *karai-valai-t-tōṇi,* பெ.(n.) கரைவலையை இழுத்துச்செல்லுந் தோணி (வின்.); boat for fishing with the drag-net.

[கரை + கலை + தோணி.]

கரைவலைப்பு *karaivalaippu,* பெ.(n.) கரையோரக் கடற்றொழில் (முகவை மீனவ.); sea-shore marine business.

[கரை + வலைப்பு. வலை→ வலைப்பு.]

கரைவலையம்பா *karai-valai-yambā,* பெ.(n.) *'கரைவலை'*யை இழுக்கும் பொழுது மெய் வருத்தம் மறந்து செயற்பட மீனவர் பாடுமோர் பாடல் (மீனவ.); a song of fishermen which is sung by fishermen while pulling karaivalai.

[கரை + வலை + அம்பா. அம்பாவை→அம்பா.]

கரைவழி *karai-vaḻi,* பெ.(n.) 1. நீர்க்கரைப்பாதை, கடல் வழிக்கு எதிரானது (வின்.); road or path along the shore. 2. ஆற்றோரமான நிலம் (இ.வ.); lands lying along the banks of a river. 3. கடலோர நிலம்; the sea-coast, coastline.

ம. கரவழி; க., து. கராவளி.

[கரை + வழி.]

கரைவழித்தீர்வை *karai-vaḻi-t-tīrvai,* பெ.(n.) வேற்றூர்களிலிருந்து உள்நாடு வழியாக வரும் பண்டங்களுக்கு வாங்கப்படும் வரிவகை (வின்.); land customs, duty.

[கரை + வழி + தீர்வை.]

கரைவழிநாடு *karaivaḻinadu,* பெ.(n.) உடுமலைப் பேட்டை வட்டத்தில் உள்ள சோழமாதேவி என்ற ஊர் அமைந்துள்ள பகுதியின் பழைய நாட்டுப் பெயர்; the old name of the region involving Chozhamadevi in Udumalpet taluk. *"கரை வழிநாட்டு சோழமா தேவினல்லூர்" (தெ.இ.கல். தொ.26. கல்.243.)*

[கரை + வழி + நாடு.]

கரைவாடை *karai-vāḍai,* பெ.(n.) வடமேல் காற்று (வின்.); north-west wind.

[கரை + வாடை. கரை - மேடு, மேற்கு. வாடை - வடக்கிலிருந்து வீசும் காற்று.]

கரைவாரம் *karaivāram,* பெ.(n.) நெல்வயல் பக்கத்தில் உள்ள நிலம் ; land adjoining paddy fields.

ம. கரவாரம்

[கரை + வாரம். வாரம் - பக்கம்.]

கரைவாளை *karai-vāḷai,* பெ.(n.) அலைவாய்ப் பரப்பில் மேயுமொரு வகை வாளைமீன்; a kind of sea-fish.

[கரை + வாளை.]

கரைவான் *karaivāṉ,* பெ.(n.) காக்கை; crow.

[கரை → கரைவான்.]

கரைவிளங்கு *karai-viḷaṅgu,* பெ.(n.) சிறியமரவகை (L.); a species of white Cedar.

[கரு → கரை + விளங்கு.]

கரைவு *karaivu,* பெ.(n.) 1. கரைகை; dissolving. 2. மன இளக்கம் (வின்.); tenderness of mind. 3. சரிவு; slope. மலைக்கரைவு (இ.வ.).

[கரை → கரைவு.]

கரைவெட்டி *karaivetti,* பெ.(n.) பெரம்பலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Perambalur dt.

[கரை + வெட்டி + கரைவெட்டி. மண்ணை வெட்டிக் கரை உயர்த்துவோர் குடியிருப்பு.]

கரோடி *karōḍi,* பெ.(n.) மண்டையோட்டு மாலை; garland of skulls. *"கரோடி விரிசடைமேல் ..... அணி நாயகன்" (தேவா. 524. 8.).*

[கரு + ஒடு + இ – கரோடி. ஒடு - மண்டையோடு 'இ' உடைமை குறித்த ஈறு.).]

கரோடிகை *karōḍigai,* பெ.(n.) 1. **கரோடி** பார்க்க; see *karōḍi.* *"புலவுகமழ் கரோடிகை யுடையபுனிதர்" (பதினொ. கோயினான் மணி. 23.).* 2. கழுதை; donkey.

[கரோடி → கரோடிகை.]

கரோய்நாடு *karōiy-nāḍu,* பெ.(n.) கிரேக்கப் பயணி *"தாலமி"* கொற்கைப் பகுதிக்குத் தனது நூலில் சுட்டும் பெயர்; the term used by Ptolemy in his travalogue to represent Korkai port.

[கொற்கை → கரோய் (இ.வ.).]

கல்(லு)[1]–தல் *kallu-,* 14 செ.குன்றாவி.(v.t.) 1. குத்துதல்; to pierce, to stab, to make a hole. 2. தோண்டுதல்; to dig.

[குல் → கல் (கல்லு). குல் - குத்தற்கருத்துவேர்.]

கல்[2](லு)–தல் *kal(lu)* 14 செ.குன்றாவி.(v.t.) 1. தோண்டி வெளிக்கொணர்தல், தோண்டி எடுத்தல்; to dig out. 2. கல்லடைப்பை நீக்குதல்; to remove the obstruction of the stone.

[உல் → குல் → கல். குல் - குத்தற்கருத்துவேர்.]

கல்[3](ற்)–த(ற)ல் *kal-,* 9 செ.கு.வி.(v.i.) 1. படித்தல்; to learn, study. *"கல்லென்று தந்தை கழற" (நாலடி, 253.).* 2. பயின்றறிதல்; to practise, as arts; to acquire skill in the use of arms. *"கல்லாமா வன்னார்" (குறள். 814.).*

தெ.கரசு; ம., க., து.கல்; பட. கல்லு.

[குல் → கல். கல்லுதல் - தோண்டுதல். ஆய்தல், ஆய்ந்தறி தல்.]

கல்[4] *kal,* பெ.(n.) 1. வெட்டி எடுக்கப்பட்ட பெருங்கல்; stone. *"வாழ்நாள் வழியடைக்குங் கல்" (குறள். 38.).* 2. சிறுகல்; gravel, pebble, grit. *"கற் கொண்டெறியுந் தவறு" (நாலடி. 364.).* 3. பாறை; boulder, ledge, crag. *"கல்லகழ் கிடங்கின்" (மலைபடு. 91.).* 4. மலை; rock, hill, mountain. *"கல்சேர்பு மாமழை தலைஇ" (பதிற்றுப். 84, 23.).* 5. சிவப்புக்கல் (இரத்தினம்); precious stone. குருவிந்தக்கற்கள் (கம்பரா. சித்திர. 17.). 6. காவிக்கல்; red ochre, reddle, *"முக்கோலுங் கற்றோய் முழுமடியும்" (இலக். வி. 707, உரை.).* 7.முத்து; pearl. *"கற்குளிமாக்கள்" (42, 2.).* 8. வீரக்கல்; memorial stone in a village, as for a hero. *"பலர் என்னை முன்னின்று கன்னின்றவர்" (குறள், 771.).* 9. நீத்தார் நினைவால் இறந்தார் பொருட்டுப் பத்து நாளைக்கு நாட்டப்படுங் கல்; a stone fixed in the house of a deceased person for ten days since his demise. 10. மரகதக் குற்றம் எட்டனுள் ஒன்று (சிலப். 14:184, உரை.); a flaw in emerlads, one of eight maragada-k-kurram. 11. செங்கல் (கொ.வ.); brick. 12. ஒரு கல் தொலைவு அளவுக்கு நாட்டுங்கல்; milestone 13. ஒரு கல் தொலைவு (5280 அடி நீளங்கொண்டது) (mod.); mile. 14. அரைகல், ஆட்டுக்கல் முதலானவை;

grinding or pounding stone, etc. 15. எல்லைக்கல்; boundary stone. 16. சாணைக்கல்; a sharpening stone. 17. சிறுநீரகத்தில் உருவாகும் கல்; stone in the bladder. 18. கடுமையான பொருள்; a hard substance. 19.தோசை முதலியன சுடும் தட்டையான கல்; griddle for frying dosai, etc. 20. உப்பின் கட்டி; a crystal of bit of salt.

ம. கல்லு; **க.** கல்; கலு, கல்லு; **தெ.** கல்லு, கலு. கண்ட்லு (பன்மை); **து., பட., எரு.** கல்லு; **துட., கோத.** கல்; **குட.** கல்லி; **கை.** கல்; **பர்.** கெல்; **கட.** கன்ட், கண்டு, கண்கல் (பன்மை); **கோண்டி.** கல்/கள்; **இரு.** கல்லு; **கொண்.** கலு; **குரு.** கல்லு; **பிரா. கல்.**

Sinh. gal; **Gael.** clach; **Ir.** Chloich. Serbo-croation; komen. **L.** calculus.

W. carreg; **Afrik.** klip; **E.** hill, hillock; **Nubian.** kulu; **Hebrew**. sela; **Skt**. sal / sila, Chinishanghai. (k = s & lan) **San. Chin.** Nanking, pelcing; **Contonese & Amay.** shan / shan. **AS.** hill; **ME.** hil, hul, hull; **OE.** hyll; **MDU.** hil, hilk; **Lita.** kalnos; **L.** collis; **GK.** kolenos; **LG.** hull; **ON.** hallr; **Goth.** hallus.

Kal, a stone. comp. Lappish Kalle, also keke or kerke; Lesghian gul; kamtsc hadale kual, kualla. Probably these words have an ulterior connection with the Finnish Kiwi; Hungarian Kō; Ostiak Key, Kauck. Comp. also (through the interchange of l and r) the Tamil krā, gravel, a pebble, with the Greek XEP-a's (cher-as), gravel and XEP-Mas (chermas); a stone, and the Armenian K'ar, Kuar, a stone. The Dravidian root cannot be traced further than Kal, a stone; but the corresponding Lappish Kalle appears to be derived from, or connected with, Kalw-at, to become hard. Comp. also karra, Lappish, hard, rough (C.G.D.F.L. P. 616.).

[குல் → கல். கல் = குத்துதல். கற்காலமுதலே நிலத்தைக் குத்திக்கிளைத்துக் கிழங்கு அகழவும் ஏனைய உணவுப் பண்டங்களை உடைத்து உண்ணவும் பயன்பட்டதால் இப்பெயர் பெற்றது. கல்லுவது கல் என்றாயிற்று.]

கல்[5] *kal,* வி.அடி. (v.r.) கருமைக் கருத்து வேர்ச்சொல் (வே.க.119.); verbal base denoting darkness and black colour.

கல்[6] *kal,* பெ.(n.) ஒலிக்குறிப்பு; onom. expression signifying sound.

[குல் → கொல் (கொல்லெனல்) = ஒலிக்குறிப்பு.]

கல்கண்டு *kalkaṇḍu,* பெ.(n.) ***கற்கண்டு*** பார்க்க; see *kaṟkaṇḍu.*

[கல் + கண்டு.]

கல்கம்பி *kalkambi,* பெ.(n.) ***கற்கம்பி*** பார்க்க; see *kaṟkāmbi.*

[கல் + கம்பி.]

கல்கரி *kalkari,* பெ.(n.) ***கற்கரி***[2] பார்க்க; see *kaṟkari*[2].

ம. கல்க்கரி

Welsh : glo; **Guj** ; kolsa.

[கல் + கரி.]

கல்கலிங்கி *kalkaliṅgi,* பெ.(n.) ***கற்கலிங்கி*** பார்க்க; see *kaṟkaliṅgi.*

[கல் + கலிங்கி.]

கல்கவி உத்தரம் *kalkavi-utharam,*பெ.(n.) கற்றளி வாயிலில் இரண்டு நிலைக் கற்களின் மேல் அமையும் மேற்கல்; the top stone over the side vertical stones of the entrance. *"கல்வாசலில் கல்கவி உத்தரமும்"* (ஆவணம் 1971–2.).

[கல் + கவி + உத்தரம்; கல்லில் வட்டப் பூவடிவம் செதுக்கி, அது கீழ் நோக்குமாறு அமைக்கப்படுவதால், கவிந்த உத்தரம் கவி உத்தரம் ஆயிற்று; உத்தரக் கற்கவி = கதவு நிலைக்கு மேற் சித்திரம் வகுக்கப்பட்ட உத்தரம் (நெடுநல். 82. உரை.). இச்சொல் கற்கவி உத்தரம் என்றிருத்தல் வேண்டும்.]

கல்காரம்[1] *kalgāram,* பெ.(n.) பாறைக்கட்டடம்; stone building. நாலு அம்பலமும் திருமடைப்பள்ளியும் ரிஷபமண்டபமும் கல்காரமாய்ப் பணி செய்வித்து (T.A.S. 179.).

[கல் + காரம் (கொ.வ.) கரு → காரம். கருத்தல் = செய்தல். கல்காரம் = கற்பணி. இச்சொல் கற்காரம் என்றிருத்தல் வேண்டும்.]

கல்காரம்[2] *kalkāram,* பெ.(n.) ***கற்காரம்*** பார்க்க; see *kaṟkaram.*

[கல் + காரம். கல் = கட்டி, கட்டியானது.]

கல்கி *kalki,* பெ.(n.) ***கற்கி***[2] பார்க்க; see *karki*[2].

கல்கூனி *kal-kūṉi,*பெ.(n.) பச்சை நிறமுடைய இறால் (முகவை. மீனவ.); greenish seer-fish.

[கல் + கூனி.]

கல்கோட்டம் *kal-kōṭṭam*, பெ.(n.) இறந்தவரின் நினைவாக 15–ஆம் நாள் நடத்தப்படும் நடப்பில் (சடங்கில்) இறந்த இடத்தில் அல்லது வீட்டின் ஓரிடத்தில், பூக்களாலும் வாழைப்பட்டைகளாலும் அமைக்கும் வீடு (செங்கை.); a temporary shed built with flowers and barks ot plantain in a house for performing ritual, in memory of a dead person on 15th day from his death.

[கல் + கோட்டம்.]

கல்சட்டி *kalcaṭṭi*, பெ.(n.) ***கற்சட்டி*** பார்க்க; see *karcaṭṭi*.

[கல் + சட்டி.]

கல்சாலர்வேலை *kal-sālar-vēlai*, பெ.(n.) தேன்கூடு போல் செய்யப்பட்ட செங்கற் கட்டடவேலை (கட்டட. நாமா.); an ornamental building works.

[கல் + சாலர் + வேலை; சாளரம் → சாலர்.]

கல்சிலை *karsilai*, பெ.(n.) ***கற்சிலை*** பார்க்க; see *karsilai*.

[கல் + சிலை.]

கல்சுத்தி *kalśutti*, பெ.(n.) 1. கல்லுடைக்கும் சுத்தியல்; a hammer for breaking stones. 2. கல்லாலான சுத்தியல்; a hammer with a stone head.

[கல் + சுத்தி.]

கல்தறி *kal-tari*, பெ.(n.) தூண் (இ.வ.); post, pillar.

[கல் + தறி.]

கல்திட்டை *kaldiṭṭai*, பெ.(n.) பெருங்கற்கால ஈமச்சின்னம்; an indication of Megalithic burial.

[கல் + திட்டை. தரைக்குள் புதைக்கப்பட்ட, ஈமப்பேழை, கல்லறை ஆகியவற்றின் மேல் வட்டவடிவில் அடுக்கிய கற்களும் குவித்த கற் குவியலும் கல் திட்டை எனப்படும்.]

கல்தும்பி *kal-tumbi*, பெ.(n.) (தஞ்.மீன்.); a kind of sea fish.

[கல் + தும்பி.]

கல்தூண் *kal-tūṉ*, பெ.(n.) ***கற்றூண்*** பார்க்க; see *karrūṉ*.

ம. கல்த்தூண்; **படு.** கல்லகம்பு; **து.** கல்லதகம்ப.

[கல் + தூண்.]

கல்தேக்கு *kaltēkku*, பெ.(n.) ***கற்றேக்கு*** பார்க்க; see *karrēkku*.

தெ. கல்லதேக்கு

[கல் + தேக்கு.]

கல்நடுதல் *kal-naḍudal*, பெ.(n.) இறந்தார்பொருட்டு நடத்தும் நிகழ்வு; rite of planting a stone as a symbol of a deceased person, in funeral ceremonies.

*[கல் + நடுதல். **நடுகல்** பார்க்க.]*

கல்நடு–தல் *kalnaḍu-*, 17 செ.குன்றாவி.(v.t.) மறவன் நினைவாகக் கல்நடுதல்; to erect a stone (pillar) in memory of a hero.

க. கல்நாடு

[கல் + நடு.]

கல்நவரை *kalnavarai*, பெ.(n.) கடல்மீன்வகை; a sea-fish, purple red, attaining at least 16 in. in length.

ம. கல்நவர

[கல் + நவரை.]

கல்நாட்டு–தல் *kalnāṭṭu-*, 5 செ.குன்றாவி.(v.t.) மறவன் நினைவாகக் கல் நடுதல்; to set an hero stone (கருநா.).

க. கல்நாட்டு, கல்நட்டு, கல்நடு, கல்நாட்டு, கல்நாடு.

[கல் + நாட்டு.]

கல்நாடு[1] *kalnāḍu*, பெ.(n.) 1. மலைநாடு; hilly region. 2. கன்னட. நாட்டின் பழைய பெயர்; an ancient name of Karnataka state.

[கல் + நாடு. கல் = மலை. (ஒ.நோ. கல்லிறந்தோரே = மலை கடந்து சென்றவர்) கல் நாடு = மலைகள் அடர்ந்த நிலப்பகுதி. கருநாடக மாநிலம் மலைகள் மிகுந்த இயற்கைப் பாங்குடையதாதலால் பழங்காலத்தில் இதனை கல்நாடு என்றழைத்தனர். இது நாளடைவில் கல்நாடு – கன்னாடு – கன்னடம் என அந்நாட்டு மொழியைக் குறிக்கும் பெயராகவும் திரிபுற்றது. கன்னட அகரமுதலியில் "கன்னடமே, கர்னாட்ட நாமம்", "கன்னடம் நான்காயிரம்" – காவேரி கோதாவரிக்கிடையில் 4000 வேலி நிலப்பரப்பு எனும் மேற்கோள்கள் எடுத்தாளப் பட்டுள்ளன.]

கல்நாடு[2] *kalnāḍu*, பெ.(n.) 1. வீரக்கல்; hero-stone, cenotaph *"நாகத்தைச் சிறு கட்டியார் கல்நாடு"*

(S.I.I. V.11. 345.). 2. போரில் இறந்த வீரன் நினைவாகக் கல்நட்டு, அவன் உறவினர் வளர்ச்சிக்கு அளிக்கப்பட்ட ஆவணம்; the deed shows the presents offered to the relations of a hero after erecting hero stone in memory of that particular hero. 3. வீரச்சாவு அடைவோருக்கு நடுகற்கள் வைப்பதற்கு ஊரின் நடுவே ஒதுக்கப்பட்ட பார்வையிடம்; an allotted place in a village for erecting herostone in memory of hero's death.

[கல் + (நாட்டு) நாடு – கல்நாடு. இது கல்நாட்டு என்றிருத்தல் வேண்டும் (கொ.வ.).]

கல்நார் *kal-nār,* பெ.(n.) 1. சித்த மருந்து வகைகளி லொன்று; a kind of medicine in siddha. 2. தீப் பிடிக்காத ஒருவகைக் கூட்டுப் பொருள்; a kind of compound which is non-inflammable (fire proof asbestos).

மறுவ. கல்லுக்குள் சவளை

க. கல்நாரு, கல்லநாரு, கல்லுநாரு; **ம.** கல்நாரு.

[கல் + நார்.]

கல்நார்பற்பம் *kalnār-p-paṟpam,* பெ.(n.) கல்நார்ப் பொடி; calcinated country asbestos (சா.அக.).

[கல்நார் + பற்பம்.]

கல்நிலை *kal-nilai,* பெ.(n.) கல்லால் அமைந்த வாயில்; door frame made of stone.

பட. தாரங்கல்லு

[கல் + நிலை.]

கல்நீர் *kalnīr,* பெ.(n.) கருப்பத்திலுண்டாகும் பனிக்குடத்து நீர்; ammontic fluid contained in a sac in the womb (சா.அக.).

[கல் + நீர்.]

கல்நுங்கு *kal-nuṅgu,* பெ.(n.) முதிர்ந்த நுங்கு (இ.வ.); hard kernel of palmyra fruit.

[கல் + நுங்கு.]

கல்நெஞ்சம் *kalneñjam,* பெ.(n.) ***கன்னெஞ்சம்*** பார்க்க; see *kaṉṉenjam.*

[கல் + நெஞ்சம்.]

கல்பட்டறை *kalpaṭṭaṟai,* பெ.(n.) ***கற்பட்டறை*** பார்க்க; see *kaṟpaṭṭaṟai.*

[கல் + பட்டறை.]

கல்பட்டன் *kalpaṭṭaṉ,* பெ.(n.) ***கற்பட்டன்*** பார்க்க; see *kaṟpaṭṭaṉ.*

[கல் + பட்டன்.]

கல்பட்டு *kalpaṭṭu,* பெ.(n.) ***கற்பட்டு*** பார்க்க; see *kaṟpaṭṭu.*

ம. கல்பட்டு

[கல் + பட்டு.]

கல்படிவு *kalpaḍivu,* பெ.(n.) ***கற்படிவு*** பார்க்க; see *karpaḍivu.*

[கல் + படிவு.]

கல்பணம் *kalpaṇam,* பெ.(n.) ***கற்பணம்*** பார்க்க; see *kaṟpaṇam.*

ம. கல்பணம்

[கல் + பணம்.]

கல்பிடிப்புவேலை *kal-piḍippu-vēlai,* பெ.(n.) செங்கல் ஒன்றோடொன்று சேரும்படி இணைத்துச் செய்யுங் கட்டட வேலை (யாழ்ப்.); bonding of bricks.

[கல் + பிடிப்பு + வேலை (கொ.வ.). இது கற்பிடிப்பு வேலை என்றிருத்தல் வேண்டும்.]

கல்பிணைப்பு *kalpiṇaippu,* பெ.(n.) ***கற்பிணைப்பு*** பார்க்க; see *kaṟpiṇaippu.*

[கல் +பிணைப்பு.]

கல்மடி *kalmaḍi,* பெ.(n.) 1. ஆவின் (பசுவின்) காய்மடி (இ.வ.); hard udder of a cow. 2. கெட்டிமுலை; hardened breast of a female (சா.அக.).

[கல் + மடி. பால்சுரப்பு நன்கு அமையாததால் கல்மடி எனப்பட்டது.]

கல்மதம் *kal-madam,* பெ.(n.) ***கன்மதம்*** பார்க்க; see *kaṉ-madam.*

[கல் + மதம்.]

கல்மதமாலி *kalmadimāli,* பெ.(n.) நெய்க் கொட்டான் மரம்; soap-nut tree (சா.அக.).

[கல்மத + மாலி.]

கல்மதனம் *kal-madaṉam,* பெ.(n.) கடல்மீன்வகை; a sea-fish, pale dull red, attaining at least a foot in length.

[கல் + மதனம்.]

கல்மந்தாரம் *kal-mandāram,* பெ.(n.) அடைபட்டு அலைவின்றியுள்ள முகில் (இ.வ.); cloudiness, the state of being overcast.

[கல் + மந்தாரம். மங்கு → மந்து → மந்தரம் → மந்தாரம்.]

கல்மரம்[1] *kal-maram,* பெ.(n.) ***கன்மரம்***[1] பார்க்க; see *kaṉmaram*[1].

[கல் + மரம்.]

கல்மரம்[2] *kalmaram,* பெ.(n.) ***கன்மரம்***[2] பார்க்க; see *kaṉmaram*[2].

[கல் + மரம்.]

கல்மரவை *kal-maravai,* பெ.(n.) கற்சட்டி (திருநெல்.); utensils made of potstone.

[கல் + மரவை.]

கல்மழை *kal-maḻai,* பெ.(n.) ***கன்மழை*** பார்க்க; see *kaṉmaḻai.*

க. கல்மளெ, கலுமளெ, கலுவளெ; பட. கல்லுமே.

AS. hagol; **Gee.** hagl; **Due., Dan., G.,** hagel; **OE.** hagalian, hagol; **ME.** hagel, hawel; **OS.** hagal; **ON., Dan.,** hagl; **OHG.** hagl.

[கல் + மழை.]

கல்மா *kalmā,* பெ.(n.) ***கன்மா*** பார்க்க; see *kaṉmā.*

[கல் + மா.]

கல்மாசுணம் *kalmāšuṇam,* பெ.(n.) கருங்குன்றிமணி; black jeweller's bead (சா.அக.).

[கல் + மாசுணம்.]

கல்மாடம் *kalmāḍam,* பெ.(n.) ***கன்மாடம்*** பார்க்க; see *kaṉmāḍam.*

ம. கன்மாடம்

[கல் + மாடம்.]

கல்மாந்தம் *kalmāntam,* பெ.(n.) குழந்தைகளுக்கு ஏற்படும் ஒருவகை ஈரல் நோய்; an affection of the liver in children (சா.அக.).

[கல் + மாந்தம்.]

கல்மாரி[1] *kalmāri,* பெ.(n.) ***கன்மழை*** பார்க்க; see *kaṉmaḻai.*

[கல் + மாரி.]

கல்மாரி[2] *kalmāri,* பெ.(n.) ***கன்மாரி***[2] பார்க்க; see *kaṉmāri*[2].

[கல் + மாரி.]

கல்மிளகு *kalmiḷagu,* பெ.(n.) கெட்டி மிளகு; solid and matured pepper seed (சா.அக.).

[கள் + மிளகு.]

கல்மீசை *kal-mīcai,* பெ.(n.) கன்னமீசை (C.G.); whiskers.

[கல் + மீசை.]

கல்மீன் *kal-mīṉ,* பெ.(n.) பாறை இடுக்கில் தங்கும் மீன் (முகவை. மீனவ.); a kind of fish which lives in the gap of rocks.

[கல் + மீன்.]

கல்முடி *kal-muḍi,* பெ.(n.) உறுதியாகக் கட்டிய மணிமுடிச்சு (இ.வ.); well-tightened knot, hard like a stone.

[கல் + முடி.]

கல்முடிச்சு *kal-muḍiccu,* பெ.(n.) ***கல்முடி*** பார்க்க; see *kal-muḍi.*

[கல் + முடிச்சு.]

கல்முதிரை *kal-mudirai,* பெ.(n.) 1. கரும்புரசு மரம் (வின்.); karumpurasu, a tree. 2. கெட்டிப்பட்ட தவசம்; hardened grain (சா.அக.).

[கல் + முதிரை.]

கல்முரசு *kalmurašu,* பெ.(n.) ***கன்முரசு*** பார்க்க→ (சா.அக.); see *kaṉmurašu.*

[கல் + முரசு.]

கல்முருக்கு *kalmurukku,* பெ.(n.) ***கலியாண முருக்கு*** பார்க்க; see *kaliyāṇamurukku.*

[கல் + முருக்கு.]

கல்மூங்கில் *kal-mūṅgil,* பெ.(n.) 1. உட்டுளை சிறுகிய கட்டியான மூங்கில் வகை; a variety of bamboo in which the hollow is half filled up. 2. முள்ளில்லாத சிறுமூங்கில் வகை (L.); thornless reed.

[கல் + மூங்கில்.]

கல்மூடி *kalmūḍi,* பெ.(n.) குப்பி வாயையடைக்கும் கண்ணாடிக்கல்; glass-stopper which closes the mouth of a bottle any vessel (சா.அக.).

[கல் + மூடி.]

கல்மொந்தன் *kal-mondaṉ,* பெ.(n.) வாழைவகை (இ.வ.); a species of plantain.

[கல் + மொந்தன். மொந்து → மொந்தன் = தடித்த வாழை வகை.]

கல்யாணச்சாவு *kalyāṇaccāvu,* பெ.(n.) ***கலியாணச் சாவு*** பார்க்க; see *kaliyāṇccāvu.*

[கலியாணச்சாவு → கல்யாணச்சாவு.]

கல்யாணப்படிப்பு *kalyāṇa-p-paḍippu,* பெ.(n.) திருமாலுக்கு நடத்தும் ஒருவகை விழா (ம.அக.); a kind of festival to Vishnu.

[கலியாணம்→ படிப்பு.]

கல்யாணம் *kalyāṇam,* பெ.(n.) ***கலியாணம்*** பார்க்க; see *kaliyāṇam. "கல்யாணஞ் செய்து கடிபுக்கு" (நாலடி. பிறர்மண.9.).*

எரு : கல்யாணம்

Vedic. kalyan

[கலியாணம் → கல்யாணம்.]

கல்யானை *kalyāṇai,* பெ.(n.) கனத்த மேற்றோல் கொண்டதும் மூக்கின் மேல் கொம்பு வளர்ந்தது மாகிய நாற்கால் விலங்கு (காண்டாமிருகம்); rhinoceros (சா.அக.).

[கல் + யானை – கல்யானை. கல்போன்று உறுதியான தோலுடம்பு பெற்று யானையைப் போன்ற உருண்ட உடலமைப்புக் கொண்டிருத்தல் பற்றி இது தமிழில் கல்யானை எனப்பட்டது. பழந்தமிழர் இவ்விலங்கை வடஇந்தியாவில் கண்டிருத்தல் கூடும்.]

கல்லக்காரம்[1] *kal-l-akkāram,* பெ.(n.) பனங் கற்கண்டு (யாழ்ப்.); candied molasses made from palmyra juice.

ம. கல்லக்காரம்

[கல் +அக்காரம் – கல்லக்காரம்.]

கல்லகச்சத்து *kal-l-aga-c-cattu,* பெ.(n.) கற்சத்து (பதார்த்த. 1130.); fossil or mineral drug, supposed to ooze from mountains, bitumen.

[கல் + அகம் + சத்து –. கல்லகம் = மலை.]

கல்லகநாடு *kallaganāḍu,* பெ.(n.) கிபி.1446 அன்று தென்காசிக் கோயிலில் எழுதப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் நாடு; a region mentioned in an agreement drawn at Tenkasi Temple on 6.5.1446 AD *"கல்லகநாட்டு வீரசிகாமணிப்பற்றில் துட்டார்வர்கண்டப் பேரேரி உள்ளிட்ட பற்றும்" (தெ.இ.கல்.தொ. 26; கல்.561).*

[கல் + அகம் – கல்லகநாடு. (கற்பாங்கான நாடு)]

கல்லகம் *kallagam,* பெ.(n.) 1. மலை (திவா.); mountain. *"கல்லகம் குடைந்த செவ்வேற் கந்தன்" (கந்தபு. வள்ளி. 257.)* 2. கல்வீடு; stone house. 3. பொன்; gold (த.மொ.அ.).

Norw; gyle

[கல் + அகம் – கல்லகம்.]

கல்லகாரம் *kallagāram,* பெ.(n.) செங்குவளை (யாழ்.அக.); red Indian water-lilly (செ.அக.).

[கல் + அக்காரம் – கல்லக்காரம் → கல்லகாரம். (பனங்கற்கண்டுபோன்ற நிறமுடையது.)]

கல்லங்கரை *kallaṅgarai,* பெ.(n.) 1. கற்பாங்கான; நிலம்; stony-bank. 2. ஓர் ஊர்ப்பெயர்; name of a village.

[கல் + அம் + கரை.]

கல்லங்காய் *kal-l-aṅgāy,* பெ.(n.) இறுகிய காய் (வின்.); fruit which becomes as hard as stone.

[கல் + அம் + காய் – 'அம்' சாரியை.]

கல்லங்கோரை *kal-l-aṅ-gōrai,* பெ.(n.) கோரை வகை; a kind of sedge.

[கல் + அம் + கோரை. 'அம்' சாரியை.]

கல்லச்சகம் *kallaccagam,* பெ.(n.) அச்சுப்பொறி களைக் கொண்ட அச்சகம்; litho press.

[கல் + அச்சகம்.]

கல்லட்டிகை *kall-aṭṭigai,* பெ.(n.) அரியமணிகள் வைத்திழைக்கப் பெற்ற அட்டிகையணி; necklace set with precious stones.

[கல் + அட்டிகை.]

கல்லடார் *kal-l-aḍār,* பெ.(n.) விலங்குகளை அகப்படுத்தும் பொறி; trap for tigers and other animals. *"புனவன் சிறுபொறி மாட்டிய பெருங்கல்லடார்" (நற்.119.).*

[கல் + அடார்.]

கல்லடி *kallaḍi,* பெ.(n.) கற்கடகச் செய்நஞ்சு; a kind of native arsenic (சா.அக.).

[கல் + அடி.]

கல்லடி-த்தல் *kal-l-aḍi-,* 4 செ.கு.வி.(v.i.) 1.கல் வெட்டுதல்; to hew or cut stone. 2. காலிற் கல்லடி படுதல்; tc strike the foot against a stone.

[கல் + அடி.]

கல்லடிக்காளான் *kallaḍi-k-kāḷāṉ,* பெ.(n.) கல்லடியிலும் பாறைகளின் சந்துகளிலும் முளைக்கும் பெருங்காளன்; a large species of mushroom generally found grown under stone or in the crevices of rocks (சா.அக.).

[கல்லடி + காளான்.]

கல்லடிக்குறிச்சி *kallaḍi-k-kuṟicci,* பெ.(n.) நெல்லை மாவட்டம், அம்பா சமுத்திரம் வட்டம் கல்லிடைக் குறிச்சியின் பழைய பெயர்; old version of kallidaikkurichi in Ambasamudram taluk; Nellai district. *"தங்கள் பற்றில் தென்பிடாகையில் கல்லடைக் குறிச்சியில் வேணாவுடையாள்" (தெ.இ.கல்.தொ. 23, கல்.105.). "கல்லடிக் குறிச்சி நாலா இரவி விண்ணகர் எம்பெருமானுக்கு" (தெ.இ.கல்.தொ.23. கல்.107.).*

மறுவ. கல்லடைக் குறிச்சி, கல்லிடைக் குறிச்சி.

[கல் + அடி + குறிச்சி (கல் = மலை) மலையடிவாரத்துக் குடியிருப்பு]

கல்லடிச்சேம்பு *kal-l-aḍi-c-cēmbu,* பெ.(n.) சேம்பு வகை (வின்.); an edible vegetable, an inferior kind of cembu.

[கல்லடி + சேம்பு.]

கல்லடிப்பி-த்தல் *kallaḍippi-,* பி.வி.(v.caus.) 1. கல்லில் செதுக்கச் செய்தல்; to cause to engrave stones. குழுக்கப் படைக்கு மேல் திருக்கற் சாத்த வாங்கி கோவளத்து கல்லடிப்பிக்கவும் படவு கூலிக்கும் போகவிட்டோம் (S.i.i. Part. 11 No. 561. S.No. 23.). 2. பெரும் கற்களை உடைக்கச் செய்தல்; to cause to break big stones.

[கல் + அடி + பி. பி–காரண வினைகுறிக்கும் பிறவினை ஈறு.]

கல்லடிமூலம் *kallaḍi-mūlam,* பெ.(n.) பாறைகளின் அடியினின்று வெட்டியெடுக்கப்படும் நஞ்சு; a mineral poison, being found under rocks (சா.அக.).

[கல்லடி + மூலம்.]

கல்லடியிழுவைக்கூலி *kallaḍ-y-iḻuvaikkūli,* பெ.(n.) கல்குதைக் குழியிலிருந்து ஓரளவு செதுக்கிய கற்களை, மேலும் செப்பம் செய்வதற்காக இழுத்து வந்து கோயில் களத்தில் சேர்ப்பதற்கான கூலி; payment made to drag the semi dressed stones to the temple site for final dressing. "கல்வாசலில் கல்கவி உத்திரமும், கோமுகமும், மலையினின்று கொ(டு)வரக் கல்லடியிழுவைக் கூலி" (ஆவணம் 1991–2) .

[கல் + அடி + இழுவை + கூலி]

கல்லடைசல் *kallaḍaisal,* பெ.(n.)1. நீர்த்தாரையில் கல்லடைத்துக் கொள்ளல்; obstruction of stone in the urethra. 2. கல்லுறுத்துதல் ; irritation due to rubbing of the stone in the bladder (சா.அக.).

[கல் + அடைசல்.]

கல்லடைப்பு *kal-l-aḍaippu,* பெ.(n.) 1. நீர்டைப்பு நோய்வகை; stone in the bladder, retention of urine by gravel. 2. குழியை, குறிப்பாகச் சவக்குழியை மூடப்பயன்படுத்தும் கல்; a stone lid especially of a grave (சேரநா.).

[கல் + அடைப்பு.]

கல்லண்டம் *kal-l-aṇḍam,* பெ.(n.) அண்டவீக்க நோய்வகை (m.l.); blood-swelling.

[கல் + அண்டம்.]

கல்லணை[1] *kal-l-aṇai,* பெ.(n.) 1. கல்லாற் கட்டிய நீரணை; dam built of stone, anicut, causeway. 2. சோழமன்னன் கரிகாலனால் கட்டப்பட்ட அணை; the dam built by Chola King Karikālaṉ.

[கல் + அணை.]

சோழ மன்னன் கரிகாலனால் காவிரியாற்றின் மீது திருச்சிக்கருகே கட்டப்பட்ட கல்லணை பாசன அறிவியல் அணையாக இன்றளவும் கருதப்படுகிறது. இது ஆயிரத்தெண்பது அடி நீளமுடையது. சோழ மன்னர்கள் இலங்கையை வென்ற பொழுது அங்கிருந்து சிறைபிடிக்கப்பட்ட பன்னீராயிரம் பணியாளர்களைக் கொண்டு கட்டப்பட்ட அணை.

கல்லணை[2] *kallaṇai,* பெ.(n.) குதிரைமேல் உள்ள இருக்கை; seat on the hourse. *“வாளுழவர் வாம்பரிக்கும் கல்லணைகள் கைக்குங் கலைசையே” (கலைசைச். 42.).*

[கலணை → கல்லணை.]

கல்லணை[3] *kal-l-aṇai,* பெ.(n.) பழைய வரிகளுள் ஒன்று; a tax; *“மேற்காவிரி மாகணைக்குள்ளே நடந்துவருகிற கோடி, சூலவரி, கல்லணை, நாட்டுக் காணிக்கை, இராயவத்தனை, ஹவதரவத்தனை உட்பட நடந்து வருகிற தொண்ணூறு பொன்னும்” (தெ.இ.கல். தொ.23 கல்.493).*

[கல்+அணை–கல்லணை = கல்லால் அடைத்த கட்டுமானம். அதிலிருந்து பாயும் நீருக்காகச் செலுத்தும் வரி.]

கல்லத்தாணி *kallattāṇi,* பெ.(n.) கல்லால் அமைக் கப்பட்ட சுமை தாங்கி; a porter's rest made of stone (சேரநா.).

ம. கல்லத்தாணி

[கல் + அத்தாணி (மேற்கட்டு).]



கல்லத்தாணி

கல்லத்தி *kal-l-atti,* பெ.(n.) 1. அத்திமரவகை; hill banyan. பாலைகல்லத்தி தோதகத்தி (மச்சபு. நைமிச.8.) 2. ஒருவகை அத்தி; nooga. 3. கல்லால்; stone banyan. 4. பூதாளம்; great council tree (சா.அக.).

க., ம. கல்லத்தி.

[கல் + அத்தி.]

கல்லத்துவம் *kallattuvam,* பெ.(n.) செவிட்டுத் தன்மை; the state or condition of being deaf (சா.அக.).

[கல்லம் → கல்லத்துவம்.]

கல்லதர் *kal-l-adar,* பெ.(n.) பருக்கைக் கற்கள் பொருந்திய சிறுவழி; narrow path full of stones in a desert tract. *“கல்லத ரத்தங் கடக்க” (சிலப். 16, 57.) (செ.அக.).*

க. கல்லதாரி; **பட.** கல்லுதாரி

[கல் + அதர். அதர் = வழி, பாதை.]

கல்லம்[1] *kallam,* பெ.(n.) செவிடு (சங்.அக.); deafness.

Skt. kalla

[கல் + அம்.]

கல்லம்[2] *kallam,* பெ.(n.) 1. மஞ்சள்; turmeric. 2. விந்தியமலை; mount Vindhiya.

[கல் + அம்.]

கல்லம்பலம் *kallambalam,* பெ.(n.) கருங்கல் தரையமைத்த ஊரவை கூடும் அம்பலம்; village assembly, where the floor was paved with stones. *“இவ்வூர் கல்லம்பலத்து சந்திராதித்தவல் ஆற்றுத் தண்ணீர் அட்டுவதாகக் குடுத்தநிலம்” (தெ.கல்.தொ.8. கல்.607.).*

[கல் + அம்பலம்.]

கல்லம்மை *kallammai,* பெ.(n.) காயம்மை; stone-pox (சா.அக.).

[கல் + அம்மை.]

கல்லரசி *kallarasi,* பெ.(n.) **கல்லரசு** பார்க்க; see *kallarašu* (சா.அக.).

[கல் + அரசி.]

கல்லரசு *kal-l-aršu,* பெ.(n.) கொடியரசு மரம்; wild pipal-tree (செ.அக.).

[கல் + அரசு.]

கல்லரவிந்தம் *kal-l-ara vindam,* பெ.(n.) பூடு வகை, கற்றாமரை (மலை.); a mountain shrub (செ.அக.).

[கல் + அரவிந்தம். அரவிந்தம் - தாமரை.]

கல்லரளி *kal-l-araḻi,* பெ.(n.) 1. நச்சுக்கல்; poison stone. 2. சரளைக் காடுகளில் முளைக்கும் பூடு oleander. 3. காட்டரளி; wild oleander (சா.அக.).

[கல் + அரளி.]

கல்லரிதாரம் *kal-l-aridāram,* பெ.(n.) கட்டரிதாரம் (வின்.); orpiment or arsenic crystal.

[கல் + அரிதாரம்.]

கல்லல்[1] *kallal-,* தொ.பெ.(vbl.n.) 1. அரித்தல்; sifting, *"கரைகல்லித்திரை" (தேவா.10.).* 2. துருவல்; scooping. 3. தோண்டல்; boring. *"யோசனைய கலங்கல்லி" (திரு விளை – 11) (த.மொ.அ.).*

[கல் + அல். 'அல்' தொ.பெ.ஈறு.]

கல்லல்[2] *kallal,* தொ.பெ.(vbl.n.) கல்லடைப்பை நீக்குதல்; removing the obstruction of stone in the bladder.

[கல் + அல். 'அல்' தொ.பெ.ஈறு.]

கல்லல்[3] *kallal,* பெ.(n.) குழப்பம்; disturbance,chaos, confusion, tumult. *"கல்லலற வொன்றை யருள்வோனே" (திருப்பு. 291.).*

[கல் + அல். 'அல்' தொ.பெ.ஈறு.]

கல்லல்[4] *kallal,* பெ.(n.) ஒரே காலத்தில் பலர் பேசுவதாலெழு மொலி (யாழ்.அக.); noise due to many people speaking at the same time.

[கல் → கல்லல்.]

கல்லல்[5] *kallal,* பெ.(n.) மூன்று உடல் பொருந்திய மூன்று முகமுடைய ஒரு தோற்கருவி; a kind of musical instrument. *"தெண்கடிப்பு வாசித்த கல்லல் செறிய" (கல். 85. 23.).*

[கல்லெனல் → கல்லல்.]

கல்லல்[6] *kallal,* பெ.(n.) ஓர் ஊரின் பெயர்; name of a village in (Pasumpon) Ramanathapuram district.

[கல் + அல் – கல்லல் (கற்பாங்கு நிலம்).]

கல்லலகு *kallalagu,* பெ.(n.) இசைக்கருவி வகையு ளொன்று; a kind of musical instrument. *"கல்லலகு பாணி பயின்றார்" (தேவா. 519, 1.).*

[கல் + அலகு.]

கல்லலசு *kallalašu,* பெ.(n.) **கல்லலகு** பார்க்க; see *kallalagu. "கல்லலசு துத்தரி யேங்க" (கல்லா. 34.).*

[கல்லலகு → கல்லலசு.]

கல்லவடத்திரள் *kallavaḍattiral,* பெ.(n.) **கல்லவடம்** பார்க்க; see kallavaḍam. *"கல்லவடத்திரண் மணிவாய்த் தண்ணுமை" (கல்லா. 39.) (த.மொ.அ.).*

[கல்லவடம் + திரள்.]

கல்லவடம் *kallavaḍam,* பெ.(n.) பறைவகையு ளொன்று; a kind of drum. *"கல்ல வடமிட்டுத் திசைதொழுதாடியும்" (தேவா. 576, 6.).*

[கல் + அ + வடம்.]

கல்லவம் *kallavam,* பெ.(n.) மலைநெல்; mountain paddy (சா.அக.).

[கல் + அவம்.]

கல்லவல் *kallaval,* பெ.(n.) நாடறிசொற் பொருள் பயப்பப் பிழையாமையை முதன்மையாகக் கொண்ட மிறைக்கவி வகை (யாப். வி. 511.); a kind of verse in which common words are used in their plain meanings.

[கல் → கல்ல + வல். கற்கவல்லது, எளிதானது.]

கல்லவி *kallavi,* பெ.(n.) சச்சவிர்ப்பூடு; honey sweet tree (சா.அக.).

[கல் + அவி.]

கல்லவுத்து *kallavuthu,* பெ.(n.) ஆனைப்பிச்சான் கொடி; battle of plassey creeper (சா.அக.).

[கல் + அவுத்து.]

கல்லவுரி *kallavuri,* பெ.(n.) ஒருவகை அவுரி; bastard indigo (சா.அக.).

[கல் + அவுரி.]

கல்லழிஞ்சில் *kal-l-aliñjil,* பெ.(n.) மரவகை (யாழ். அக.); a kind of tree.

[கல் + அழிஞ்சில்.]

கல்லளை *kal-l-alai,* பெ.(n.) 1. மலைக்குகை; cleft or cave in a rock or mountain. *"புலி சேர்ந்து போகிய கல்லளை போல" (புறநா. 86, 4.).* 2. மண்பானை வனையும் பொழுது சிறுகற்களால் உண்டாக்கும் துளை; a hole as in earthen-ware utensils (due to defective moulding.) (சேரநா.).

ம. கல்லள, கல்லழ.

[கல் + அளை – கல்லளை (கற்குகை).]

கல்லறு–த்தல் *kal-l-aru-,* 4 செ.கு.வி.(v.i.) பச்சை செங்கல் அறுத்தல் (கொ.வ.); to mould raw bricks.

[கல் + அறு.]

கல்லறுப்புச்சட்டம் *kallaruppu-c-cattam,* பெ.(n.) செங்கற்கள் அறுக்கப்பயன்படும் மரச்சட்டம்; mould for making bricks.

[கல்லறுப்பு + சட்டம்.]

கல்லறை[1] *kal-l-arai,* பெ.(n.) 1. கல்லாலாகிய அறை; room having stone walls and roof. 2. குகை; cave, hewn in a rock, cavern. *"கல்லறையி னுழுவை சினங்கொண்டு" (தேவா. 1155, 4.).* 3. பிணக்குழி; vault, tomb hewn out in a rock, sepulchre, grave.

க. கல்லறெ; **ம.** கல்லற.

[கல் + அறை.]

கல்லறை[2] *kal-l-arai,* பெ.(n.) நிலத்தினடியில் யாரும் அறியாதபடி அமைத்திருக்கும் மூலபண்டார அறை. (இ.வ.); underground room or cellar for secretly storing main treasure.

[கல் + அறை.]

கல்லறைப்பெட்டி *kallarai-p-petti,* பெ.(n.) உறுதி யான பணப்பெட்டி; safety locker.

மறுவ. கல்லாப்பெட்டி

[கல் + அறை + பெட்டி. இது இக்காலத்தில் கல்லாப்பெட்டி எனத் திரிந்துவிட்டது.]

கல்லறைப்பெட்டி[2] *kallarai-p-petti,* பெ.(n.) மளிகைச்சரக்கு வணிகரின் பணப்பெட்டி; grocer's cash box.

[கல் + அறை + பெட்டி.]

கல்லன் *kallan,* பெ.(n.) 1. தீயோன்; vile, wicked, hard-hearted fellow. *"கழித்தவூன் முதலுண் கல்லன்" (சிவதரு. சுவர்க்கநரக. 30.)* 2. கற்றச்சன்; a stone mason (சேரநா.).

ம. கல்லன்

[கல் + அன். கல் = கருமை, தீமை, இன்னல். 'அன்' ஆ.பா.ஈறு.]

கல்லாகம் *kallāgam,* பெ.(n.) செங்குவளை; red Indian water lily (சா.அக.).

[கல் → கல்லகம் → கல்லாகம். கல் = கருமை, கருமை கலந்த செம்மை.]

கல்லாகு–தல் *kallāgu-,* 7 செ.கு.வி.(v.i.) கல்போன்று இறுகுதல்; to petrify.

[கல் + ஆகு.]

கல்லாங்காசு *kal-l-āṅ-kāsu,* பெ.(n.) சிறுவர் விளையாட்டிற் பயன்படுத்தும் வட்டமான ஓடு (வின்.); small round tile for a child's game.

மறுவ. கலவோடு

[கல் + ஆம் + காசு. கல் = ஓடு.]

கல்லாங்காய் *kallāṅgāy,* பெ.(n.) சிறுமியர் சிறுகற்களைக் கொண்டு ஆடும் விளையாட்டு; female children's play with small pebbles.

மறுவ. அஞ்சாங்கல்

க. கல்லாட

[கல் + ஆம் + காய்.]

கல்லாங்குத்து *kal-l-āṅkuttu,* பெ.(n.) வன்னிலம் (சொ.ஆ.க.29.); rugged, hard ground.

[கல் + ஆம் + குத்து. 'அம்' சாரியை.]

கல்லாங்குத்துநிலம் *kal-l-āṅ-kuttu-nilam,* பெ.(n.) மேற்பரப்பில் சிறுகற்களை மிகுதியாகக் கொண்ட நிலம் (முகவை); hard or stony ground.

[கல் + ஆம் + குத்து + நிலம்.]

கல்லாசாரி *kallāšāri,* பெ.(n.) கல் வேலை செய்பவன்; a stone-mason (சேரநா.).

ம. கல்லாசாரி

[கல் + ஆசாரி. ***கல்லாசான்*** *பார்க்க.]*

கல்லாசான் *kal-l-āašān,* பெ.(n.) 1. கற்றச்சன் (கொ.வ.); stone mason. 2. கற்றச்சர் தலைவன் (வின்.); master mason, architect.

ம. கல்லாசாரி

[கல் + ஆசான் – கல்லாசான்.]

கல்லாசிரியம் *kallāširiyam,* பெ.(n.) **கல்லுப்பனை** பார்க்க; see *kallu-p-paṉai* (சா.அக.).

[கல் + ஆசிரியம்.]

கல்லாடம்[1] *kallāḍam,* பெ.(n.) 1. சிவன் கோவில்; name of a Šiva shrine. 2. கற்பாங்கான நிலம்; hard or stony ground. *"கல்லாடத்துக் கலந்தினிதருளி" (திருவாச. 2, 11.).*

[கல் → கல்லடம் (ஊர்ப்பெயர்). கல்லடம் → கல்லாடம் (ஊர்ப்பெயரால் அமைந்த கோயில்.).]

கல்லாடம்[2] *kallāḍam,* பெ.(n.) கல்லாடரால் அகப்பொருளின் துறையமைய நூறு அகவற் பாக்களாற் செய்யப்பட்ட ஒருநூல்; name of an amatory poem describing the erotic emotions in 100 agaval stanzas by Kallāḍar.

[கல்லாடன் → கல்லாடம். கல்லாடனாரால் இயற்றப்பட்ட நூல் (கருத்தனாகு பெயர்).]

கல்லாடர் *kallāḍar,* பெ.(n.) 1. **கல்லாடனார்** பார்க்க; see *kallāḍaṉār. "ஆக்கவுங் கெடவும் பாடல் தரும் கபிலர் பரணர் கல்லாடர் மாமூலர்" (யாப்.வி.93, பக்.351.).* 2. கல்லாடநூல் இயற்றிய புலவர்; the author of Kallāḍam. *"கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறும்" (கல்லா.பாயி.).*

[கல்லாடம் → கல்லாடர். கல்லாடம் என்னும் ஊரிற் பிறந்தவர்.]

கல்லாடனார் *kallāḍaṉār,* பெ.(n.) கடைக்கழகப் புலவருள் ஒருவர் (புறநா. 23.); a poet of the third Tamil academy (sangam). *"தொல்காப்பியத்துக் குரையிடையிட்ட விரகர் கல்லாடர்" (சிலப். 3.).*

[கல்லாடம் → கல்லாடன் + ஆர். 'ஆர்' உ.ப.ஈறு. கல்லாடம் என்னும் ஊரிற் பிறந்ததனாற் பெற்றபெயர்.]

கல்லாடை *kal-l-āḍai,* பெ.(n.) காவியுடை; cloth dyed in red ochre, worn by those who have renounced the world. *"கோத்த கல்லாடையும்" (தேவா. 590. 2.).*

ம. கல்லாட

[கல் + ஆடை. காவிக்கல்லின் நிறம் ஊட்டப்பட்ட துணி. கல் = காவிக்கல்.]

கல்லாணக்காணம் *kallāṇa-k-kāṇam,* பெ.(n.) திருமணத்தின் பொருட்டுச் செலுத்தும் ஒரு பழையவரி (S.I.I. ii. 509.); an ancient marriage cess.

[கலியாணம் → கல்லாணம் (கொ.வ.) + காணம்.]

கல்லாதார் *kallādār,* பெ.(n.) **கல்லார்** பார்க்க; see *kallār. "மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப் பிறந்துங் கற்றார் அனைத்திலர் பாடு" (குறள். 409.).*

[கல் + ஆ + த் + ஆர். 'ஆ' எ.ம.இடைநிலை. 'த்' இ.கா.இடைநிலை.]

கல்லாந்தலை *kal-l-ān-dalai,* பெ.(n.) ஒருவகைக் கடல் மீன்வகை (யாழ்.அக.); a fish.

[கல் + ஆம் + தலை.]

கல்லாப்பலகை *kallā-p-palagai,* பெ.(n.) வணிகர்கள் அமரும் பலகை (தஞ்.); merchant's wooden seat.

[கல்லறைப்பலகை → கல்லாப்பலகை. ***கல்லறை*** *பார்க்க.]*

கல்லாப்பாறை *kallā-p-pāṟai,* பெ.(n.) மீன்வகை; caranse armatus (கட.பர.க.சொ.அக.).

[கல் → கல்லா + பாறை.]



கல்லாப்பாறை மீன்

கல்லாப்பெட்டி *kallā-p-peṭṭi,* பெ.(n.) **கல்லறைப் பெட்டி** பார்க்க (இ.வ.); see *kallaṟaippeṭṭi.*

[கல்லறைப்பெட்டி → கல்லாப்பெட்டி.]

கல்லாம்பல் *kallāmbal,* பெ.(n.) நீர்க்குளிரி; water archer (சா.அக.).

[கல் + ஆம்பல்.]

கல்லாமணக்கு *kal-l-āmaṇakku,* பெ.(n.) புல்லாமணக்கு (m.m.); creeping castor.

[கல் + ஆமணக்கு.]

கல்லாமறவர் *kallāmaṟavar,* பெ.(n.) இயல்பாகவே மறத்தன்மையுடையவர்; natural heros.

[கல் + ஆ + மறவர். படைப்பயிற்சியன்றிப் பிறவற்றைக் கல்லாத மறவர்.]

கல்லாரம்[1] *kallāram,* பெ.(n.) 1. செங்கழுநீர். (பிங்.); red Indian water lily. *"கல்லாரமாலை மென் கூந்தற்கைக் காந்தட்கவுரி பங்கன்" (மருதூரந். 57.).*

[கல் + ஆ + மை 'ஆ' எ.ம.இ.நி. 'மை' ப.பெ.ஈறு.]

கல்லாமை[2] *kallāmai,* பெ.(n.) ஆமை வகை; starred tortoise.

மறுவ. கரட்டாமை

[கல் + ஆமை.]

கல்லாய்-தல் *kallāy-,* 2 செ.குன்றாவி.(v.t.) ***கல்லாராய்-தல்*** பார்க்க; see *kallāray.*

[கல் + ஆய்.]

கல்லாய்வுநூல் *kallāyvu-nūl,* பெ.(n.) கற்பாறைகளின் தோற்றம், அமைப்பு முதலியவை பற்றிய நூல்; petrology.

[கல் + ஆய்வுநூல்.]

கல்லாயம் *kal-l-āyam,* பெ.(n.) வரிவகை (S.I.I.viii.188.); a tax.

[கல் + ஆயம்.]

கல்லார் *kallār,* பெ.(n.) கல்லாதவர்; the unlettered or ignorant persons. *"கல்லார்கண் பட்ட திரு" (குறள், 408.).* 2. கீழ்மக்கள்; inferior people.

ம. கல்லாதவர்

[கல் + ஆ + ர்.]

கல்லாரம்[1] *kallāram,* பெ.(n.) 1. செங்கழுநீர். (பிங்.); red Indian water lily. *"கல்லாரமாலை மென் கூந்தற்கைக் காந்தட்கவுரி பங்கன்" (மருதூரந். 57.).*

2. ***நீர்க்குளிரி** (பிங்.)* பார்க்க; see *nīr-k-kuḷiri.* 3.கருங்குவளை (திவா.); blue nelumbo (த.மொ.அ.).

மறுவ. செங்குவளை, அரத்தம், எருமணம்.

க. கல்லார

[கல்லகாரம் → கல்லாரம்.]

கல்லாரம்[2] *kallāram,* பெ.(n.) (த.மொ.அ.) மஞ்சள் (அக.நி.); turmeric.

[கல் → கல்லாரம்.]

கல்லாரல் *kal-l-āral,* பெ.(n.) கற்களுக்கிடையில் பதுங்கி வாழ்வதும், கூர்மையான வாலையுடையதும் இரண்டடிக்கு மேல் நீளமுள்ளதும் ஆகிய நன்னீர் மீன்வகை; spiny-eel, a fresh-water fish of rich brown colour, attaining, 2 ft. or more in length.

ம. கல்லாரல்

[கல் + ஆரல்.]

கல்லாராய்-தல் *kallārāy-,* 2 செ.குன்றாவி.(v.t.) 1. ஒரு பொருளில் கல் கலந்திருக்கின்றதா என ஆராய்ந் தறிதல்; to examine if stones are mixed with a thing. 2. தவசம் போன்றவற்றில் கலந்துள்ள கற்களைப் பொறுக்கி எடுத்தல்; to remove stones from grains etc.

[கல் + ஆராய்.]

கல்லாரிகம் *kallārigam,* பெ.(n.) குருவேர்; a fragrant root (சா.அக.).

[கல் + ஆரிகம்.]

கல்லாரை *kal-l-ārai,* பெ.(n.) கரந்தை (மலை.); iron weed.

க. கல்லு கூவு, கல்லு கூ.

[கல் + ஆரை.]

கல்லால் *kal-l-āl,* பெ.(n.) 1. ஆலமர வகை; banyan tree. *"கல்லானிழல் மேயவனே" (தேவா. 437, 3.).* 2. குருக்கத்தி (L.); white fig with fruits in clusters. 3. ஆல்வகை (L.); white fig. 4. பூவரசு (L.); portia tree.

ம., க. கல்லால்.

[கல் + ஆல்.]

கல்லாலம் *kal-l-ālam,* பெ.(n.) ***கல்லால்*** பார்க்க; see *kal-l-āl.*

[கல் + ஆலம்.]

கல்லாலி *kallāli,* பெ.(n.) **கல்லால்** பார்க்க; see *kallāl.* கல்லாலியோடு அடைப்படா பாறையும் (S.i.i. vol.2. (3-5) insc. 76. S.No.91.).

[கல் + ஆலி. ஆல்→ஆலி.]

கல்லாளிகம் *kallāligam,* பெ.(n.) குருந்து; Indian wild lime (சா.அக.).

[கல் + ஆளிகம்.]

கல்லான்[1] *kal-l-āṉ,* பெ.(n.) கல்வியில்லாதவன், எழுத்தறிவற்றவன்; unlearned, illiterate person. *"கல்லானே யானாலும்" (நல்வழி. 34.).*

பட. கல்லாதம

[கல் + ஆ + ஆன். 'ஆ' எ.ம.இ.நி. புணர்ந்துகெட்டது. 'ஆன்' ஆ.பா.ஈறு.]

கல்லான்[2] *kal-l-āṉ,* பெ.(n.) கடப்பாரை (யாழ்.அக.); crow bar.

[கல் + (அன்)ஆன். கல் = தோண்டுதல். 'அன்' ஒருமை குறித்த ஈறு.]

கல்லான்[3] *kallāṉ,* பெ.(n.) பாறை; rock (சா.அக.).

[கல் → கல்லான். 'ஆன்' ஒருமை குறித்த ஈறு.]

கல்லான்காரி *kallāṉkāri,* பெ.(n.) கல்வாழை; rock plantain (சா.அக.).

[கல்லான் + காரி.]

கல்லானை *kallāṉai,* பெ.(n.) கல்லில் வடித்த யானை உருவம்; life size elephant carved out of a single block of stone. கல்லானைக்குக் கரும்பருத்திய படலம். *"கல்லானை தின்னக்கம்பீந்த கதையும் சொல்வாம்" (திருவி. 21.).*

[கல் + (யானை) + ஆனை.]

கல்லானை[2] *kallāṉai,* பெ.(n.) 1. சுக்கான்கல்; lime-stone. 2. பூநீறு; fuller's earth (சா.அக.).

[கல் → கல்லன் → கல்லானை.]

கல்லி[1] *kalli,* பெ.(n.) 1. பருவத்துக்கு மேற்பட்ட நுண்ணறிவு; precocity. குழந்தை கல்லியாய்ப் பேசுகிறது (உ.வ.). 2. பருவத்துக்கு மேற்பட்ட நுண்ணறி வுள்ள குழந்தை; precocious child. அவன் அதிகக் கல்லி, அவனுடன் பேச்சுக் கொடுக்காதே (உ.வ.).

[கலி → கல்லி. 'இ' உடைமை குறித்த ஈறு. குழந்தை கலி கலியாய்ப் பேசுகிறது என்பது உலகவழக்கு.]

கல்லி[2] *kalli,* பெ.(n.) கிழங்கு தோண்டும் கருவி; hoe. *"கருங்குறமங்கையர் – கல்லியங்ககழ்காமர் கிழங்கெடா" (இராமா – 91).*

[கல் → கல்லி 'இ'வி.மு.ஈறு.]

கல்லி[3] *kalli,* பெ.(n.) 1. ஆமை (மூ.அ.); tortoise. 2. ஊர்க்குருவி (வின்.); sparrow.

[கல் → கல்லி. கல்லிடை வாழ்வது, கல்லிடை கூடு கட்டுவது.]

கல்லி[4] *kalli,* பெ.(n.) 1. சுற்றுவாரியென்னுங் கட்டடவுறுப்பு (திவா.); outer sloping roof beyond the main wall, caves. 2. தேர் (அக.நி.); cart. 3. எலும்பு மூட்டு; joint of the bones.

[கல் + கல்லி.]

கல்லி[5] *kalli,* பெ.(n.) 1. நகையாட்டு (கேலி); ridicule, derision, mockery. கல்லிபண்ணுகிறான்(உ.வ.). 2. வேடிக்கை; fun, as of a child. குழந்தை கல்லி கல்லியாய்ப் பேசுகிறது (உ.வ.).

[கல் → கல்லி.]

கல்லி[6] *kalli,* பெ.(n.) விரிவு. கீழ்முனை விரிவாக்க மான கைச்சட்டை; a kind of shirt with a widened lowerpart.

[கல்லுதல் = கல் பாவுதல், விரிவாக்குதல். கல் → கல்லி.]

கல்லி[7] *kalli,* பெ.(n.) 1. கல் பாவிய பாதை; a footpath paved by stones. 2. கல்பாவிய தெரு; a street paved by stones.

H. Guj. gali; **Spanish.** calle.

[கல் → கல்லி.]

கல்லிசை–த்தல் *kal-l-isai-,* 4 செ.கு.வி.(v.i.) சரிந்து விழாதபடி கற்களை அமைத்தல் (C.E.M.); to join stones by means of joggles so as to prevent their sliding apart.

[கல் + இசை–.]

கல்லிடலை *kalliḍalai,* பெ.(n.) ஒருவகை மரம்; the tree Linocierr courtallensis.

ம. கல்லிடல

[கல் + இடலை. இடலை = மரவகை.]

கல்லிடுக்கு *kalliḍukku,* பெ.(n.) அடுக்கிய கற்களுக் கிடையே அல்லது கற்பாறைகளுக்கிடையே உள்ள இடைவெளி; a space between two stones .

ம. கல்லிடுக்கு

[கல் +இடுக்கு.]

கல்லித்தி *kal-l-itti,* பெ.(n.) இத்தி வகையுளொன்று; stone fig.

ம. கல்லித்தி

[கல் + இத்தி. கல்லித்தி = கல்லிடை முளைத்து வளர்வது.]

கல்லித்திருத்து–தல் *kalli-t-tiruttu-,* 5 செ.கு.வி. (v.i.) மேடான நிலத்தை வெட்டித்திருத்துதல் (S.I.I. iii.170); to lower the level of a field and render it fit for cultivation.

[கல்லி + திருத்து.]

கல்லிதளை *kallidaḷai,* பெ.(n.) மலை இதளை; hill olive.

[கல் + இதளை. இடளை → இதளை.]

கல்லிமசக்கு–தல் *kallimasakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***கல்லி வயக்கு–தல்*** பார்க்க; *see kallivayakku. "பூமியை கல்லி மசக்கி குடுத்த னீர்நிலம்" (S.I.I. Vol.19. insc. 402. S.No.8.).*

[கல்லி + மசக்கு.]

கல்லிமயக்கு–தல் *kallimayakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***கல்லிவயக்குதல்*** பார்க்க; see *kallivayakku.* இவ்வூர் தேவதான பொன் (கா)க்குடி புன்செய் கல்லிமயக்கின நிலத்திற்கு கீழ்பாற் கெல்லை.

[கல்லிவயக்கு → கல்லிமயக்கு.]

கல்லிரும்பிலை *kallirumbilai,* பெ.(n.) இரும்பறுப்பி; jungle geranium (சா.அக.).

[கல் + இரும்பு + இலை.]

கல்லில் நாருரி–த்தல் *kāllil-nār-uri-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. இல்லாத பொருளைப் பெற முயலுதல்; to seek for the unattainable, strive for the impossible, as stripping fibre from stone. 2. ஒரு பொருளைப்பாடுபட்டு முயன்று பெறுதல்; to obtain by very great labour.

[கல்லில் + நார்–.]

கல்லிலிருந்து நார் உரிக்க முடியாது. அதுபோன்ற நடவாதசெயல், அரிய செயலுமாம்.

கல்லிவசக்கு–தல் *kalli-vaśukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***கல்லிவயக்கு–தல்*** பார்க்க; see *kallivayakku. "வளைச்சறியாத நிலம் கல்லிவசக்கின நிலம்" (S.I.I. Vol.19. Insc. 389. S.No.5.).*

[கல்லி + வசக்கு.]

கல்லிவயக்கு–தல் *kallivayakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) சமனற்ற நிலத்தை வெட்டிச் சமமாக்குதல்; to level the land for wet cultivation. *"நாட்டாண்மை மங்கலத்துத் திடல் ... கல்லிவயக்கின நிலம் இரண்டுமா" (S.I.I. Vol.8. Insc. 556.).*

[கல் → கல்லி + வயக்கு. கல்லுதல் = தோண்டுதல். கல்லி = வெட்டியெடுத்து. வயக்கு = தமக்கிசைந்தவாறு மாற்றியமைத்தல், நிலத்தைச் சமமாக்குதல்.]

கல்லிழை–த்தல் *kal-l-iḻai-,* 4 செ.கு.வி.(v.i.) அரிய கற்களைப் பதித்தல்; to set precious stones. கல்லிழைத்த அட்டிகை (உ.வ.).

[கல் + இழை–.]

கல்லிறாமூலி *kalliṟāmūli,* பெ.(n.) அழுகண்ணி; a plant from which water is continuously oozing and dripping.

[கல் + இறால் + மூலி. இறால் = தேன்கூடு போல் வடிவம் உள்ளது.]

கல்லிறால் *kal-l-iṟāl,* பெ.(n.) 1. ஈர்க்கிறால்; lobster. 2. கருப்பு இறால்மீன் வகை (வின்.); black prawn.

ம. கல்லுறாளு

[கல் + இறால்.]

கல்லிறால்வலை *kalliṟālvalai,* பெ.(n.) மீன்பிடிவலை வகை; a kind of fishing net.

[கல் + இறால் + வலை.]

கல்லீயம் *kal-l-īyam,* பெ.(n.) 1. வெள்ளீயங்காரீயங் களின் கலப்பு (வின்.); pewter. 2. ஈயத்தின் வகை (மூ.அ.); a kind of lead.

[கல் + ஈயம். கல் = பொடி.]

கல்லீரல் *kal-l-īral,* பெ.(n.) 1. மண்ணீரலுக்கு அருகிலுள்ள சாம்பல்நிறச் சிற்றீரல்;liver. 2. பறவைகளுக்கும் மீன்களுக்குமுள்ள இரண்டாம் இரைப்பை (இ.வ.); gizzard, so called because of its hardness.

[கல் + ஈரல்.]

கல்லு *kallu,* பெ.(n.) **1. *கல்லுருவி,*** பார்க்க; see *kallurivi* (சா.அ க.).

[கல் → கல்லு.]

கல்லு[1]–தல் *kallu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1.தோண்டுதல்; to work away gradually, as earth, pebbles, to dig out, as a hole; to hollow, as a rat; to excavate. *"கல்லுற்றுழி" (நாலடி, 185.).* 2.துருவுதல் (வின்.); to scoop out, as a nut. 3. நீர் அரித்தல்; to wash out, erode, as flowing water. வெள்ளம் கரையைக் கல்லிவிட்டது (உ.வ.). 4. தின்னுதல்; to eat away, as caustic. இந்தக் காரமருந்து கல்லிக்கல்லி எடுத்துவிடும் (வின்.); 5. எழுத்தாணிக் கூர் கழித்தல் (யாழ்ப்.); to tear, as a style, the palmyra leaf when writing upon.

ம. கல்லுக; **கோத.** கெல்வ்; **பர்.** கெல்ச்.

[உல் → குல் (குத்துதல்) → கல் → கல்லு.]

கல்லு[2]–தல் *kallu-,* 15 செ.கு.வி.(v.i.) ஒலித்தல்; to cause to sound, as a drum. *"மங்கல வியங் கல்ல" (திருவிளை. திருமணப். 103.).*

[குல் → கல் → கல்லு.]

குத்துதல் கருத்து மோதுதல் பொருளிலும் புடைபெயர்தலால், ஒலித்தல் பொருள் தோன்றியது.

கல்லுக்கடல் *kallu-k-kaḍal,* பெ.(n.) குன்று அல்லது பாறைகள் மலிந்த கடல் (செங்கை. மீனவ.); sea which has more peaks and rocks.

[கல் → கல்லு + கடல்.]

கல்லுக்கரண்டி[1] *kallu-k-karaṇḍi,* பெ.(n.) வீம்பு செய்பவன், ஒட்டாரம் பிடிப்பவன் (இ.வ.); one who is stubborn or obstinate.

[கல் → கல்லு + கரண்டி. கல் = கெட்டி.]

கல்லுக்கரண்டி[2] *kallu-k-karaṇḍi,* பெ.(n.) உள்துளையுடனோ, தகடாகவோ இல்லாதவாறு மாழையால் கெட்டியாகச் செய்யப்பட்ட கரண்டி; solid state karandi.

[கல்லு + கரண்டி.]

தட்டித் தகடாக்கமுடியாத கல்லுக்கரண்டி. முரட்டுத்தனத்தைக் குறிப்பால் உணர்த்தியது.

கல்லுக்காரர் *kallu-k-kārar,* பெ.(n.) செம்மணி (இரத்தினம்) விற்போர்; lapidaries.

[கல் + காரர்.]

கல்லுக்குடல் *kallu-k-kuḍal,* பெ.(n.) செரிப்புக் கடுமையுள்ள குடல்; intestine which performs not well.

[கல் → கல்லு + குடல்.]

கல்லுக்குத்து–தல் *kallu-k-kuttu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. மேற்றளம் முதலியவற்றிற்குக் கண்டிக்கல், பாவுகல் குத்துதல்; to arrange bricks edgewise, as in terracing a roof, arch-work, etc. 2. செயலை (காரியத்தை)த் தடைசெய்தல் (யாழ்ப்.); to frustrate a business by misrepresentation or by creating obstacles.

[கல் + குத்து –.]

கல்லுக்குருவி *kallukkuruvi,* பெ.(n.) ஆட்காட்டிக் குருவி போன்ற தோற்றத்துடன், வறண்ட மேய்ச்சல் நிலங்களில் வாழும் குருவிவகை; a kind of snipe (அறி. களஞ்.).

[கல் → கல்லு + குருவி.]

கல்லுக்குருவி

கல்லுக்குள்சவளை *kallukkuḷšavaḷai,* பெ.(n.) ***கல்நார்*** பார்க்க; see *kalnār* (சா.அக.).

[கல்லுக்குள் + சவளை.]

கல்லுக்குறைத்தான் *kallukkuṟaittāṉ,* பெ.(n.) பொன்; gold (சா.அக.).

[கல்லுக்கு + உறைத்தான்.]

கல்லுக்கொடி *kallu-k-koḍi,* பெ.(n.) ***கல்லுருவி[1]*** பார்க்க (சா.அக.); see *kalluruvi[1].*

[கல்லு + கொடி.]

கல்லுக்கோழிமீன் *kallu-k-kōḻi-mīṉ,* பெ.(n.) கடல்மீன்வகை; a sea-fish, bluish.

[கல் + கோழி + மீன்.]

கல்லுகம் *kallugam,* பெ.(n.) பெருவாகை மரம் (மூ.அ.); large sirissa.

[கல் → கல்லுகம்.]

கல்லுகொம்பு *kallu-kombu,* பெ.(n.) தரை தோண்டும் முனை; stake for digging the earth.

[கல்லு + கொம்பு.]

கல்லுசில் *kalluśil,* பெ.(n.) ஒருவகை உசிலி, ஊடுசில் (சா.அக.); a kind of black sirissa.

[கல் + உசில்.]

கல்லுடம்பு *kalluḍambu,* பெ.(n.) 1. கல்போன்ற உறுதியான உடம்பு; body as hard as a stone. 2.வலுவுள்ள உடல்; strong body (சா.அக.).

[கல் + உடம்பு.]

கல்லுண்டை *kal-l-uṇḍai,* பெ.(n.) ***கல்லுண்டைச் சம்பா (சங்.அக.)*** பார்க்க; see *kal-l-uṇḍai-c-cambā.*

[கல்-கல்லு + உண்டை.]

கல்லுண்டைச்சம்பா *kal-l-uṇḍai-c-cambā,* பெ.(n.) ஆறு மாதத்தில் விளையும் சம்பா நெல்வகை (பதார்த்த. 805); a kind of paddy yielding hard round rice, maturing in 6 months

[கல் → கல்லுண்டை + சம்பா.]

கல்லுணி *kalluṇi,* பெ.(n.) ***கல்லுருணி*** பார்க்க; see *kalluruṇi.*

[கல்லுருணி → கல்லுணி.]

கல்லுத்தரம் *kalluttaram,* பெ.(n.) கல்லால் அமைந்த உத்தரம்; a stone-beam (that supports the lower roof.) (சேரநா.).

ம. கல்லுத்தரம்

[கல் + உத்தரம்.]

கல்லுத்தீர்–தல் *kallu-t-tīr-,* 4 செ.கு.வி.(v.i.) செம்மணி (இரத்தினம்) செதுக்குதல் (வின்.); to cut and polish, as gems.

[கல் → கல்லு + தீர்.]

கல்லுத்தூக்கு–தல் *kallu-t-tūkku-,* 5 செ.கு.வி.(v.i.) நங்கூரந் தூக்குதல் (வின்.); to weigh anchor.

[கல் → கல்லு + தூக்கு.]

கல்லுதிரி[1] *kal-l-udiri,* பெ.(n.) நெல்வகை (சங்.அக.); a kind of paddy.

[கல் + உதிரி.]

கல்லுதிரி[2] *kal-l-udiri,* பெ.(n.) அம்மைவகை (வின்.); a variety of small-pox producing hard pustules.

ம. கல்லுருதி

[கல் + உதிரி.]

கல்லுநீராக்கி *kallu-nīrākki,* பெ.(n.) கல்லை நீராளமாக்கும் ஒரு வகை வேதிப் பொருள்; a kind of chemical with the peculiar virtue of converting stone into a liquid (சா.அக.).

[கல் → கல்லு + நீராக்கி.]

கல்லுப்பயற்றங்கொடி *kallu-p-payaṟṟaṅkoḍi,* பெ.(n.) சிறுபயற்றங்கொடி; creeper of kallu-p-payaṟu (சா.அக.).

[கல் + பயிறு + அம் + கொடி.]

கல்லுப்பயறு *kallu-p-payaṟu,* பெ.(n.) பயறு வகை (திருநெல்.); a kind of bean.

[கல் → கல்லு + பயிறு.]

கல்லுப்பனை *kallu-p-paṉai,* பெ.(n.) 1. மலைப்பனை என்னும் தொட்டிப்பனை; palmyra growing on hills. 2. ஆண்பனை; male palmyra.

[கல்(லு) + பனை.]

கல்லுப்பிடி–த்தல் *kallu-p-piḍi-,* 4 செ.கு.வி.(v.i.) 1.அரிசி களையும்போது சிறுகற்கள் கீழே தங்குதல் (இ.வ.); small stones settle at the bottom of a pot, as grit, when rice is washed prior to cooking.

2. தொலைக்க வழிதேடுதல் (உ.வ.); to scheme or plan for ruining a person.

[கல்→கல்லு + பிடி –.]

கல்லுப்பு *kal-l-uppu,* பெ.(n.) உப்புவகை (பதார்த்த. 1091); mineral or rock salt.

தெ., க., ம., து. கல்லுப்பு.

[கல் + உப்பு.]

கல்லுப்புக்கட்டு *kalluppu-k-kaṭṭu,* பெ.(n.) கட்டுப்பு; consolidated or fixed salt (சா.அக.).

[கல்லுப்பு + கட்டு.]

கல்லுப்பொறுக்கி *kallu-p-poṟukki,* பெ.(n.) கல்லை விழுங்கும் புறாவகை (வின்.); a species of dove which swallows little pebbles.

[கல்→கல்லு + பொறுக்கி.]

கல்லுப்போடு–தல் *kallu-p-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. நங்கூரம் போடுதல்; to lay anchor. 2. செயலைத் தடைசெய்தல்; to frustrate a business by malicious misrepresentation or by creating obstacles. 3. எதிர்பாராத துன்பத்தை உண்டாக்குதல் (உ.வ.); to bring out an unforeseen calamity.

[கல் → கல்லு + போடு–.]

கல்லுரல் *kal-l-ural,* பெ.(n.) கல்லாற் செய்த உரல்; stone mortar.

க. கல்லொரள், கல்லொரளு.

[கல் + உரல்.]

கல்லுருஞ்சி *kalluruñci,* பெ.(n.) கடல் மீன் வகையு ளொன்று (குமரி. மீனவ.); a kind of sea-fish.

[கல் + உருஞ்சி.]

கல்லுருட்டு *kalluruṭṭu,* பெ.(n.) கேழ்வரகு வகை; a kind of ragi.

[கல் + உருட்டு.]

பிணையலோட்டி அல்லது கடாவிட்டுக் கதிரடிக் காமல், கல்லுருளையை ஓட்டிக் கதிரடித்த தவசம், கல்லுருட்டு எனப்பொதுவாக வழங்கப் படினும், மிகுதியாகக் கேழ்வரகு விளைக்கும் கருநாடக மாநிலத்தார், கல்லுருளை ஓட்டிக் கதிரடித்தலே பெரும்பான்மையாதலின், இப்பெயர் வழக்கூன்றி யதாகலாம்.

கல்லுருணி *kalluruṇi,* பெ.(n.) 1. **புல்லுருவி** *(வின்.)* பார்க்க; see *pulluruvi.* 2. குருவிச்சி; honey suckle mistletoe (சா.அக.).

[கல் + உருணி.]

கல்லுருவி[1] *kal-l-uruvi,* பெ.(n.) கல்லைக் கரைக்கும் தன்மையுள்ள ஒருவகைப் பூடு (பதார்த்த. 287); blistering plant.

[கல் + உருவி.]

கல்லுருவி[2] *kal-l-uruvi,* பெ.(n.) 1. புல்லுருவி (சங்.அக.); vegetable parasite. 2. நீர் மேல் நெருப்பு என்னும் மூலிகைச் செடி; water-fire plant (சா.அக.).

[கல் + உருவி.]

கல்லுலக்கை *kallulakkai,* பெ.(n.) கல்லாலான உலக்கை; stone pestle (கருநா.).

க. கல்லொனகெ

[கல் + உலக்கை.]

கல்லுவம் *kalluvam,* பெ.(n.) மருந்தரைக்கும் குழியம்மி; a mortar for mascerating medicine.

[கல் = தோண்டுதல், குழித்தல், கல் → கல்லு → கல்லுவம் = நடுவில் குழிந்த கல்லுரல்.]

கல்லுவார் *kalluvār,* பெ.(n.) தோண்டுபவர்; excavator. *நிவேதனத்துக்கு நீரிறைச்சுகளை கல்லுவார் இருவர்க்குப் புடவை முதல் உட்பட நிசதம் நெல்லும் பதக்கு. (S.I.I. Vol.17. Insc. 243. S.No. 40.).*

[கல்லு + வ் + ஆர்.]

கல்லுவி–த்தல் *kalluvi-,* 1 பி.வி.(v.caus.) அகழ்தல், தோண்டுதல்; to dig out, excavate.

[கல்லு + வி.]

கல்லுவிச்சல் *kalluviccal,* பெ.(n.) **கல்லுவித்தல்** பார்க்க; see *kalluvi.* *"நான் கல்லுவிச்ச ஸ்ரீகரணப் பெருவிளாகத்து" (S.I.I. Vol.19. Insc. 27. S.No.24.).*

[கல்லுவித்தல் → கல்லுவிச்சல்.]

கல்லுவை *kalluvai,* பெ.(n.) ***கல்லுளுவை*** பார்க்க; see *kaluḷuvai.*

[கல்லுளுவை → கல்லுவை.]

கல்லுவை[1]-த்தல் *kallu-vai-,* 4 செ.கு.வி.(v.i.) 1.நங்கூரமிடுதல்; to lay anchor. 2. கடிவாயில் மந்திரங்கூறி நச்சுக்கல் வைத்தல்; to apply, with appropriate mantra, an antipoisonous stone tothe wound caused by a venomous bite. 3. நெற்றியிற் கல்லை வைத்துத் தண்டித்தல்; to set a stone on the forehead, the face being turned upwards to the sky and the head thrown back, a method of punishment.

[கல் → கல்லு + வை-.]

கல்லுவை[2]-த்தல் *kallu-vai-,* 4 செ.கு.வி.(v.i.) 1.இறந்தோர் நினைவாகக் கற்படிமம் நடுதல்; to erect a stone temporarily at a funeral ceremony to represent the deceased. 2. அணிகளில் விலைமதிப்பற்ற அரியகற்களைப் பதித்தல்; to set precious stones in jewels.

[கல் → கல்லு + வை.]

கல்லுவை[3]-த்தல் *kallu-vai-,* 4 செ.குன்றாவி.(v.i.) 1.ஆற்றுஞ்செயலைத் தடை செய்தல்; to obstruct and prevent fruition. 2. செற்றங்கொள்ளுதல்; to be at enmity with a person.

[கல் → கல்லு + வை-.]

மனவருத்தம் பெருகிய நிலையில், இருசாராரும் ஒருவர்க்குரிய பாதையில் மற்றவர் இயங்குவதில்லை எனச் சூளுரைத்து, வழியில் குத்துக்கற்களை இடுவதுண்டு; வெறுப்பைக் காட்டும் உணர்வு வெளிப்பாடு.

கல்லுளான்கல் *kalluḷāṉ-kal,* பெ.(n.) கருடக்கல்; a stone or concretion having the virtue of removing poisons.

[கலுழன் → கல்லுழன் → கல்லுளான் + கல்.]

கல்லுளி[1] *kal-l-uḷi,* பெ.(n.) 1. கல்வெட்டும் உளி; stone cutter's chisel. *'கல்லுளிமங்கன் போனவழி, காடு மேடெல்லாம் தவிடுபொடி' (பழ.).* 2. இரும்புக் கடப்பாரை; an iron crow bar (சேரநா.). 3. ஒருவகை யுருக்கு; a kind of hard steel.

க., ம. கல்லுளி.

[கல் + உளி.]

கல்லுளி[2] *kalluḷi,* பெ.(n.) 1. பேய்க்களா (மலை.); a species of whortle-berry. 2. மலைக்களா; carbolic acid plant. 3. பேய்ச்சுரை; a bitter species of bottle gourd (சா.அக.).

[கல் + உள் + இ.]

கல்லுளிச்சித்தன் *kal-l-uḷi-c-cittaṉ,* பெ.(n.) 1.ஒகநிலை கைவரப்பெற்ற துறவி; name of an ascetic who had the power of transporting himself to any place at will. 2. ***கல்லுளிமங்கன்*** பார்க்க; see *kall-uḷi-maṅgaṉ. 'கல்லுளிச்சித்தன் போனவழி கதவுகளெல்லாந் தவிடுபொடி' (பழ.).*

[கல் + உளி = கல்லுளி = கல்லை உடைக்கும் வன்மை வாய்ந்த உளி. இங்கு வன்மையையும் ஆற்றலையும் குறித்தது.]

கல்லுளித்தச்சன் *kal-l-uḷi-t-taccaṉ,* பெ.(n.) ***கற்றச்சன்*** பார்க்க; see *kaṟṟaccaṉ.*

ம. கல்பணிக்கன்; **க.** கல்லுகுடக, கல்லுகுடிக.

[கல் + உளி + தச்சன்.]

கல்லுளிமங்கன் *kal-l-uḷi-maṅgaṉ,* பெ.(n.) தன்னைத் தானே வருத்திக்கொள்ளும் அருவருப்பான செய்கைகளால் ஒட்டாரம் பிடிக்கும் பிச்சைக்காரன்; a pertinacious beggar who threatens to hack himself with his knife if he be not given alms, a kind of repulsive mendicant. *'கல்லுளி மங்கன் போனவழி காடுமேடெல்லாம் தவிடுபொடி' (பழ.).* 2. தான் எண்ணியது நிறைவேறும் வரை விட்டுக்கொடுக்காத முரடன்; a rogue, never yields until and unless his desire is fulfilled.

[கல் + உளி + மங்கன்.]

கல்லுளியுருக்கு *kal-l-uḷi-y-urukku,* பெ.(n.) கல்லைச் செதுக்கும் எஃகு (வின்.); a kind of very hard steel used for cutting stones.

[கல் + உளி + உருக்கு. (எஃகு)]

கல்லுளுவை *kal-l-uḷuvai,* பெ.(n.) கல்லிடுக்கில் தங்கும் கடல் மீன்; a sea-fish, whitish, attaining at least 5in. in length.

[கல் + உளுவை.]

கல்லுறவாலி *kalluṟavāli,* பெ.(n.) குதிரை வாலிப்புல்; horse tail grass (சா.அக.).

[கல் + உறல் + வாலி.]

கல்லுறுத்து-தல் *kalluruttu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1.கால், கண்போன்ற இடங்களில் கல்லழுத்துதல்; to press, as a rough or uneven surface on one sitting or lying down, to produce irritation as a dust in the eye. 2. சிறுநீரகத்தில் உருவாகும் கல் ஏற்படுத்தும் உறுத்தல்; to irritation caused by stone, formed in the kidney.

[கல் + உறுத்து. உறு → உறுத்து (பி.வி.).]

கல்லூசி *kal-l-ūci*, பெ.(n.) 1. ஒருவகை மருந்துக்கல் (வின்.); a medicinal stone. 2. ***கல்நார்*** பார்க்க (சா.அக.); see *kalnār*.

[கல் + ஊசி.]

கல்லூஞ்சை *kallūñjai*, பெ.(n.) ***கருவாகை*** பார்க்க; see *karuvāgai*.

[கல் + ஊஞ்சை.]

கல்லூடான் *kal-l-ūḍāṉ*, பெ.(n.) வெள்ளியைப்போல் பளபளப்பாயும் 9 விரல் நீளமாயும் இருக்கும் சிறிய கடல் மீன் வகை; a sea-fish, silvery, attaining more than 9 in. in length.

[கல் + ஊடான்.]



கல்லூடான்

கல்லூரி[1] *kallūri*, பெ.(n.) 1. தேவாரம் கற்பிக்கும் சுற்றுத்தாழ்வாரம் (வின்.); verandah used for reciting hymns used for *'தேவாரச் சுற்றுக் கல்லூரியிலிருந்து' (கல்வெட்.).* 2. திண்ணைப் பள்ளிக் கூடம்; pial school of ancient days. 3. உயர்கல்வி பயிலிடம்; academy, college institution where instruction is given in arts and sciences. *"கல்லூரி நற்கொட்டிலா" (சீவக. 995.).*

[கல் + ஊரி - கல்லூரி = கல்பரப்பிய திண்ணை, திண்ணைப் பள்ளிக் கூடம். தேவாரம் ஓதுதற்கு ஒதுக்கப்பட்ட திண்ணையொடு பொருந்திய சுற்றுத்தாழ்வாரம். இச்சொல் இந்நாளில் உயர்கல்வி பயிலும் நிறுவனத்தைக் குறிப்பதாயிற்று.]

கல்லூரி[2] *kallūri*, பெ.(n.) கல்லுப்பைக் கட்டக் கூடியதும், இரும்பை ச் செந்தூரமாக்குவதுமான சிறு கல்லூரியெனும் அரிய மூலிகை; a rare drug; which helps to consolidate sea-salt and convertion into a redoxide by calcination (சா.அக.).

[கல் + ஊரி.]

கல்லூரிக்கல்வி *kallūri-k-kalvi*, பெ.(n.) கல்லூரியில் பயிலும் படிப்பு வகைகள்; collegiate education.

[கல்லூரி + கல்வி.]

கல்லூருணி *kallūruṇi*, பெ.(n.) 1. பாறையிலூறும் கிணற்றுத் தண்ணீர்; well-water which springs from rocks. 2. பாறைக்கிணறு; rock well (சா.அக.).

[கல் + ஊருணி.]

கல்லூவல் *kallūval*, பெ.(n.) ***கல்மூங்கில்*** பார்க்க; see *kalmūṅgil* (சா.அக.).

[கல் + ஊவல். உவல் → ஊவல்.]

கல்லூற்று *kal-l-ūṟṟu*, பெ.(n.) கல்லிடைக்கசிந்து ஊறும் நீரூற்று (கொ.வ.); spring in a rocky soil.

[கல் + ஊற்று.]

கல்லூன்று-தல் *kal-l-ūṉṟu-*, 5 செ.கு.வி.(v.i.) நடுகல்லுக்கு மாற்றாக ஏதேனும் ஒரு கல்லை இறந்தாரை அடக்கம் செய்த இடத்தில் நடுதல்; (கொ.வ.); to erect temporarily a stone at a funeral ceremony to represent the deceased.

[கல் + ஊன்று-.]

கல்லெடுப்பு *kal-l-eḍuppu*, பெ.(n.) 1. இறந்தார்க்கு நடுகல் எழுப்புதல்; funeral rite of setting a stone, as a sign of respect for the departed soul. *'இதென்ன கல்லெடுப்பாகப் போய்விட்டதே' (இ.வ.).* 2. சாவுச்சடங்கில் வைத்தக் கல்லை 8 அல்லது 16வது நாள் எடுத்தல்; removing the stone which kept on funeral ceremony.

[கல் + எடுப்பு.]

கல்லெண்ணெய் *kalleṇṇey*, பெ.(n.) மண்ணெண்ணெய்; kerosene (கருநா.).

க. கல்லெண்ணெ

[கல் + எண்ணெய்.]

கல்லெரிப்பு *kal-l-erippu,* பெ.(n.) கல்லெரிப்புமேகம் பார்க்க; see *kal-l-erippu-mēgam. "கல்லெரிப்பு முதலவிடர்ப் பிணியால்" (திருக்காளத். பு. 17, 25.).*

[கல் + எரிப்பு.]

கல்லெரிப்புமேகம் *kal-l-erippu-mēgam,* பெ.(n.) நீர்ச்சுருக்குநோய் (வின்.); incontinence of urine.

[கல் + எரிப்பு + மேகம்.]

கல்லெலி *kalleli,* பெ.(n.) கல்லிற்குள் புதைந்து கிடக்கும் எலி; rat found under heaps of stones (சா.அக.).

தெ. கல்லெலுக, கல்லெல்க.

[கல் + எலி.]

கல்லெலும்பு *kallelumbu,* பெ.(n.) உறுதியான எலும்பு; hard bone (சா.அ க.).

[கல் + எலும்பு.]

கல்லெழுத்து *kalleḻuttu,* பெ.(n.) 1. கல்வெட்டு; a stone inscription. 2. கல்வெட்டு போல் நிலைத்து நிற்கக்கூடியது; anything not erasable, permanent (சேரநா.).

ம. கல்லெழுத்து

[கல் + எழுத்து.]

கல்லெறி *kal-l-eṟi,* பெ.(n.) 1. கல்லைவீசுகை; throwing of a stone. *"கண்டனமாகிய கல்லெறிக் கஞ்சி" (சிவசம. 45.)* 2. ***கல்லெறி தூரம்*** பார்க்க (வின்.); see *kal-l-eṟi-tūram.*

ம. கல்வேறு

[கல் + எறி.]

கல்லெறிஞ்சான்காணி *kal-l-eṟiñjāṉ-kāṇi,* பெ.(n.) 1. கல்லெறியும் தொலைவு அகலநீளமுடைய நிலப்பகுதி (தஞ்சை.); a big plot of land whose sides are each of the length of a stone's throw. 2.பெரும்பகுதியாகவுள்ள நிலத்தின் உரிமை (இ.வ.); ownership of a big plot of land.

[கல் + (எறிந்தான்) எறிஞ்சான் (கொ.வ.) + காணி.]

கல்லெறிதூரம் *kal-l-eṟi-tūram,* பெ.(n.) முழுவலிமையோடு கல்லை வீசியெறிய அதுவிழும் தொலைவின் அளவு (கொ.வ.); distance of a stone's throw from a strong arm.

ம. கல்வேர் தூரம்

[கல் + எறி + தூரம்.]

கல்லெனல் *kal-l-eṉal,* பெ.(n.) 1. பேரோசைக்குறிப்பு; onom.expr. signifying excitement. *"கல்லென் பேரூர்". (சிலப். 12, 12.)* 2. அழுதற்குறிப்பு; onom expr. signifying weeping *"கல்லென் சுற்றமொடு" (பெரும்பாண்.21.).*

[கொல் → கல் – கல்லெனல். (வே.க. 117.).]

கல்லேரிமலை *kallērimalai,* பெ.(n.) ஆம்பூர் குடியாத்தம் சாலையில் மேல்பட்டிக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள, தொல்லியல் அகழ் வாராய்ச்சி நடைபெற்ற ஊர்; an archaeological site on the road leading to Melpatti from Ambur-kudiyatham road.

[கல் + ஏரி + மலை.]

இவ்வூருக்கு, இராசகிரிப்பட்டினம் என்ற பழைய பெயர் உண்டு. முந்திய பெருங்கற்காலம், இடைக்காலம் ஆகிய மூன்று பண்பாட்டு பிரிவுகளின் நாகரிகமும், இங்குக் கண்டுபிடிக்கப் பட்டது.

கல்லேற்று–தல் *kallēṟṟu,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கல்லால் அடித்தல்; to throw stones on a person as a punishment. 2. வரி கொடாதவர் முதுகில் கல் ஏற்றி வைத்து ஒறுத்தல்; placing stone over the back of revenue defaulters as a punishment.

[கல் + ஏற்று – கல்லேற்று (கல்லால் தாக்குதல்.)]

கல்லேறு *kal-l-ēṟu,* பெ.(n.) 1. முத்தின் குற்றங்களுள் ஒன்று (சிலப். 14, 193, உரை.); flaw in a pearl. 2.கல்லெறிகை; throwing of a stone.

[கல் + ஏறு.]

கல்லை[1] *kallai,* பெ.(n.) 1. தையலிலைக் கலம் தொன்னை; plate made of leaves sewn together.

"சருகிலையிணைத்த கல்லை" (பெரியபு. கண்ணப்ப. 118.). 2. பாதக்குறட்டின் குமிழ் (பிங்.); knob in wooden sandals.

[கல் → கல்லை = குத்தி தைத்தஇலை. > Skt. khalla. (வ.மொ.வ.110.).]

கல்லை[2] *kallai,* பெ.(n.) பழிச்சொல்; calumny, aspertion; கல்லைப்பட்டுப் போனவன் (வின்.).

[கல்லை = இலைக்கலம், எச்சில் இலை, எச்சிற்கலம் போல் இழிவுக்குரியவன். இச்சொல் கலிப்பட்டுப்போனவன் என்றும் திரித்து வழங்குவதுண்டு]

கல்லை[3] *kallai,* பெ.(n.) இறந்தவர்கட்கு 8 அல்லது 30 வது நாள் வழிபாடு செய்து உணவிடுதல். (ம.அக.); feeding others on 8th or 30th day of death of person. *'சோற்றுக்கல்லையிலிருக்கும்போது எமனும் அணுகான்' (பழ.).*

[கல் → கல்லை – குத்தி வைத்தல்.]

கல்லைகுத்து—தல் *kallai-kuttu-,* 10 செ.கு.வி.(v.i.) இலைக்கலந் தைத்தல்; to sew leaves together into a plate to eat from.

[கல்லை' + குத்து.]

கல்லைநீராக்கி *kallai-nir-ākki,* பெ.(n.) இறைச்சியைக் கரைக்குந் தன்மையுள்ள கனிமம் (வின்.); a kind of ore.

[கல் + ஐ + நீராக்கி.]

கல்லொட்டர் *kal-l-oṭṭar,* பெ.(n.) கற்சுவர் எடுக்கும் ஒட்ட இனத்தார் (வின்.); a caste of people usually employed to build stone walls.

ம. கல்லொட்டர்; பட., க. கல்லொட்ட.

[கல் + ஒட்டர். ஒட்டர் – ஒட்டிர (ஒரிசா) நாட்டிலிருந்து வந்த தொழிலாளர்.]

கல்லொட்டி *kal-l-oṭṭi,* பெ.(n.) 1. நத்தை (வின்.); snail. 2. கற்பாசி; lichen, rock-moss.

ம. கல்லொட்டி (ஒருவகை ஆற்றுமீன்)

[கல் + ஒட்டி. (கல்லில் ஒட்டிக்கொள்வது).]

கல்லொத்து *kallottu,* பெ.(n.) காலில் கல் குத்துவதனால் ஏற்படும் கட்டி; stone-pressure, a kind of hard boil (abscess) appearing especially at the bottom of the heel from the effects of a bruise by a stone (கருநா.).

தெ. கல்லெத்து; க., து., பட. கல்லொத்து.

[கல் + ஒத்து, ஒத்துதல் = குத்துதல்.]

கல்லொழுக்கு *kallaḷukku,* பெ.(n.) கல்மதம்; fossil exudation from rocks (சா.அக.).

[கல் + ஒழுக்கு.]

கல்லோலம் *kallōlam,* பெ.(n.) அலை; billow, wave, surge. *"பெருங்கல்லோலப் புணரியின் மூழ்க" (திருவாலவா. 9, 5.).*

க. கல்லோல; ம. கல்லோலம்; Pali. kallolo; Skt., Pkt. kallōla.

[கல் + ஒலம். 'கல்' ஒலிக்குறிப்பு இடைச்சொல்.]

'கல்' லெனல் ஓர் ஓசைக்குறிப்பு. கல் – கலி. 'கலகல' ஒலிக்குறிப்புகள். ஓ → ஒல் = ஒலி. ஒல் → ஓலம் = ஓசை. 'கல்' என ஒலிக்கும் அலை கல்லோலம் எனப்பட்டது. ஓ.நோ. அல்லோல கல்லோம்.

கல்வட்டம் *kalvaṭṭam,* பெ.(n.) கற்பலகையாலான அறை, ஈமப் பேழை போன்ற ஈமப்புதைவுகள் அமைந்த தரையில் அவை அடையாளம் தெரியும் வண்ணம் வட்டமாக அமைக்கப்பட்ட கல்வரிசை; stones arranged in a circle over the burial in sarchophagus or dolmen.

[கல் + வட்டம்.]

கல்வம் *kalvam,* பெ.(n.) ***கல்லுவம்*** பார்க்க; see *kalluvam.*

[கல் → கலுவம் → கல்வம். (வ.மொ.வ.10.).]

கல்வரி *kalvari,* பெ.(n.) 1. செங்கற் சூளை அமைத்த தற்குரிய வரி; tax on kiln. 2. கல்லுடைத்தலுக்குரிய வரி; tax on quarry (கல்வெ.கலை.).

[கல் + வரி.]

கல்வருக்கை *kal-varukkai,* பெ.(n.) ***காட்டுப்பலா (வின்.);*** பார்க்க; see *kāṭṭu-p-palā.*

[கல் + வருக்கை.]

கல்வழி *kal-vaḻi,* பெ.(n.) 1. கல்லை வைத்தெண்ணும் ஒருவகைக் கணக்கு (கணக்கதி. பாயி.); a kind of

computation with the aid of pebbles. 2. கற்கள் நிறைந்த வழி; a stony path (கருநா.).

க. கல்வழி, கல்லதாரி.

[கல் + வழி.]

கல்வளை *kal-vaḷai,* பெ.(n.) 1. மலைப்பிளப்பு (R.); cleft or chasm in a mountain. 2. மலைக்குகை (யாழ். அக.); cave.

[கல் + வளை. கல் - மலை.]

கல்வாசல் *kalvāšal,* பெ.(n.) கற்றளியின் திருவாயில்; entrance to stone temple. *"கல்வாசலில் கல்கவி உத்திரமும்" (ஆவணம். 1991–2.).*

[கல் + வாசல்; வாயில் - வாசல்.]

கல்வாசல் நாடு *kalvāsalnādu,* பெ.(n.) திருமயம் வட்டம் பகுதியில் இருந்த பண்டைய நாட்டுப் பெயர்; name of an old division in Thirumayam vaṭṭam. *"கல்வாசல் நாட்டுத் தந்திரிமாற்கும், கானனாட்டுத் தந்திமாற்கும்" (தெ.இ.கல்.தொ. 23 கல்.156.).*

[கல் + (வாயில்) வாசல் + நாடு.]

கல்வாயில் நாடாழ்வான்[1] *kalvāyilnāḍāḻvaṉ,* பெ.(n.) திருப்பத்தூர் வட்டம், குன்றக்குடி கோயிலிலுள்ள கல்வெட்டு பொறித்த அலுவலர்; an officer, who inscribled in Tirupattur taluk. *"இப்படி கண்டன் ஆளுடையான் ஆன கல்வாயில் நாடாழ்வான் எழுத்து" (தெ.இ.கல்.தொ. 23 கல்.156.).*

[கல்வாயில் + நாடாழ்வான்.]

கல்வாயில் நாடாழ்வான்[2] *kalvāyilnāḍāḻvaṉ,* பெ.(n.) திருமயம் வட்டம் மேலக்கோயில் கல்குகைவாயில் உள்ள கல்வெட்டை வெட்டிக் கொடுத்தவர்; one who engraved the incripion in the sides of the rock-cut cave in the Melakkoyil of Thirumayam taluk. *"கல்வெட்டிக் குடுத்தேன் கல்வாயில் நாடாழ்வானேன்" (தெ.இ.கல்.தொ. 23 கல்.152.).*

[கல் + வாயில்; கல்லாலான குகையின் வாயில்; பின்னர் ஊரின் பெயராகிவிட்டது.]

கல்வாழை *kal-vāḻai,* பெ.(n.) 1. பூவாழை; Indian shot. 2. காட்டுவாழை; wild plantain. Hill plantain, stony plantain.

க. கல்வாழெ, கல்வாளெ; து. கல்லுபாரெ; ம. கல்லுவாழ

[கல் + வாழை.]

உவமையடிப்படையில் வன்மைப் பண்பு குறித்த 'கல்' பெயரெச்சமாயிற்று. [ஒ.நோ.] கல்விருசு.

கல்வாழை

கல்வாழைமணி *kalvāḻaimaṇi,* பெ.(n.) 1.கல்வாழையின் விதை; Indian head (flava) 2. மணிவாழை; Indian bead. (typica.) 3. குன்றிமணி வாழை; liquorice plantain (சா.அக.).

[கல்வாழை + மணி.]

கல்வி[1] *kalvi,* பெ.(n.) 1. கற்கை (குறள், 40, அதி.); studying. 2. படித்துப் பெறும் கல்வியறிவு; learning, erudition. *"ஒருமைக்கட்டான்கற்ற கல்வி" (குறள், 398.).* 3. அறிவு; science, literature. 4. பயிற்சி (அக.நி.); practice. 5. நூல் (வின்.); scientific work. *"கல்வி கரையில" (நாலடி. கல்வி. 5.) (த.மொ.அ.).*

ம. கல்வி; க. கல்பி, கலிகெ; **கோத.** கல்பி; **துட.** கல்வ்ய; படீ. கலிவி (அறிவுக்கூர்மை); **து.** கல்புனி (கற்றல்); **தெ.** கறசு (கற்றல்); **கொலா.** கர்ப்; **நா.** கரப்; **கோண்.** கரீநாநா. **கூ.** கராம்ப்.

[கல் → கல்வு → கல்வி. 'கல்' என்னும் ஏவலோடு உகர ஈறு சேர்ந்து 'கல்வு' (ஒ.நோ. செல் → செல்வு (அழகு)செல்வி) எனவும் கல் → கல்வு → கல்வி எனத் திரிந்திருத்தலை ஒப்பு நோக்குக.]

கல்வி[2] *kalvi,* பெ.(n.) கல்; stone. 2. கற்பலகை; stone slab.

[கல் → கல்வு → கல்வி. கல்வுதல் - தோண்டுதல். கற்காலத்தில் மண்ணைத் தோண்டப் பயன்பட்டகல் இப்பெயர் பெற்றது.]

கல்விக்களஞ்சியம் *kalvi-k-kaḷañjiyam,* பெ.(n.) கற்றுத்துறை போகியவ-ன்-ள்; lit. repository of learning, a very learned person.

[கல்வி + களஞ்சியம்.]

கல்விக்கூடம் *kalvi-k-kūḍam,* பெ.(n.) கல்வி பயிலும் இடம்; college, school, a seat of learning.

[கல்வி + கூடம்.]

கல்விச்சாலை *kalvi-c-cālai,* பெ.(n.) ***கல்விக்கூடம்*** பார்க்க; see *kalvikkūḍam.*

[கல்வி +சாலை.]

கல்விச்சுற்றுலா *kalvi-c-cuṟṟulā,* பெ.(n.) கலை, பண்பாடு, நாகரிகம் முதலியவற்றின் நிலைக்களனாகவுள்ள இடங்களுக்குக் கூட்டமாகச் சென்று, அவற்றின் சிறப்புகளை அறிந்து கொள்ள உதவும் சுற்றுப்பயணம்; educational tour.

[கல்வி + சுற்றுலா.]

கல்வித்துறை *kalvituṟai,* பெ.(n.) கல்வி தொடர்பான பணிகளைச் செய்யும் துறை; educational department.

[கல்வி + துறை.]

கல்விநாயகன் *kalvi-nāyagaṉ,* பெ.(n.) நெல்வகை (A.); a kind of paddy.

[கல்வி + நாயகன்.]

கல்விநிலையம் *kalvinilaiyam,* பெ.(n.) கல்வி நிறுவனம் பார்க்க; see *kalviniṟuvaṉam.*

[கல்வி + நிலையம்.]

கல்விநிறுவனம் *kalviniṟuvaṉam,* பெ.(n.) கல்வி கற்கும் இடம்; educational institute.

[கல்வி + நிறுவனம்.]

கல்விப்பணி *kalvippaṇi,* பெ.(n.) படிப்பறிவை வளர்க்கும் செயல்; academic work.

[கல்வி + பணி.]

கல்விப்பொருள் *kalvi-p-pōruḷ,* பெ.(n.), கல்வியாகிய செல்வம் (திவா.); learning as a material possession, dist. fr. செல்வப்பொருள்.

[கல்வி + பொருள்.]

கல்விபயில்களம் *kalvipayil-kaḷam,* பெ.(n.) ***கல்வி நிறுவனம்*** பார்க்க; see *kalviniṟuvaṉam.*

[கல்வி + பயில்களம்.]

கல்விபயிலிடம் *kalvipayiliḍam,* பெ.(n.) கற்கின்ற இடம்; training centre.

மறுவ. கல்வியூரி, கல்லூரி, கழகம், பட்டிமம், கல்வி, சுற்றுவாரி, கல்வி பயில்களம்.

[கல்வி + பயில் + இடம்.]

கல்விமதம் *kalvi-madam,* பெ.(n.) கல்விச்செருக்கு; pride of learning.

[கல்வி + மதம்.]

கல்விமான் *kalvi-māṉ,* பெ.(n.) படிப்பாளி (கொ.வ.); learned man, scholar.

[கல்வி + (மகன்) மான்.]

மான் என்பது மகன் என்பதன் மரூஉ.

கல்வியறிவு *kalvi-y-aṟivu,* பெ.(n.) படிப்பால் உண்டாகும் அறிவு; knowledge, the result of study.

[கல்வி + அறிவு.]

கல்வியாண்டு *kalviyāṇḍu,* பெ.(n.) கல்வி நிறுவனங்களில் படிப்புக்காலம் தொடங்கி முடியும் வரையிலான கால அளவு; academic year.

[கல்வி + ஆண்டு.]

கல்வியார்வலர் *kalviyārvalar,* பெ.(n.) கல்வியில் நாட்டமுடையவர்; one, interested in educational field.

[கல்வி + ஆர்வலர்.]

கல்வியாளர் *kalvi-y-āḷar,* பெ.(n.) கல்வித்துறை தொடர்பான எல்லாப் பணிகளிலும் தேர்ச்சி பெற்றவர்; educationist.

[கல்வி + ஆளர்.]

கல்வியியல் *kalvi-iyal,* பெ.(n.) பாடம் கற்பிக்கும் முறை; pedagogy teaching.

[கல்வி + இயல்.]

கல்வியூரி *kalvi-y-ūri,* பெ.(n.) கல்லூரி (யாழ்.அக.); school, educational institution.

[கல்→கல்வு + ஊரி. கல்வி - கல், கற்பலகை. கல்லூரி பார்க்க.]

கல்வியொழுக்கம் *kalvi-y-oḻukkam,* பெ.(n.) ஔவையார் இயற்றிய ஒரு அறநூல்; a collection of moral aphorisms arranged alphabetically and ascribed to Auvaiyar.

[கல்வி + ஒழுக்கம்.]

கல்விருசு[1] *kal-virušu,* பெ.(n.) மரவகை (திருநெல்.); a kind of tree.

[கல் + விருசு.]

கல்விருசு[2] *kalvirušu,* பெ.(n.) ஒருவகைக் கொடி; a mountain creeper.

[கல் + விருசு.]

கல்விளக்கு *kal-viḷakku,* பெ.(n.) மாக்கல்லாலாகிய விளக்கு; lamp made of soap-stone.

[கல் + விளக்கு.]

கல்வினையர் *kal-vinaiyar,* பெ.(n.) 1. சிற்பாசிரியர் (பிங்.); architects. 2. கருங்கல்லில் சிற்பம் செய்யும் கருவி; stone sirpi.

[கல் + வினையர்.]

கல்வீச்சு *kalviccu,* பெ.(n.) கற்களை வீசுவதன் மூலம் வெறுப்பையும் எதிர்ப்பையும் காட்டுதல்; throwing stone as a mark of contempt and opposition.

[கல் + வீச்சு. வீசு → வீச்சு.]

கல்வீடு *kal-vīdu,* பெ.(n.) 1. கல்லாற்கட்டிய வீடு; house built of brick or stone. 2. உறுதியான கட்டடம்; strong building.

ம. கல்க்கெட்டு

[கல் + வீடு.]

கல்வீரியம் *kal-vīriyam,* பெ.(n.) அன்னங்கரைப்பான் (மூ.அ.); green vitriol.

[கல் + வீரியம்.]

கல்வெட்டாங்கிடங்கு *kalveṭṭāṅkiḍaṅgu,* பெ.(n.) ***கல்வெட்டுங்கிடங்கு*** பார்க்க; see *kalvettun kidangu.*

[கல்வெட்டுங்கிடங்கு → கல் வெட்டாங்கிடங்கு.]

கல்வெட்டாங்குழி *kalveṭṭāṅkuḻi,* பெ.(n.) கல் ***வெட்டுக்குழி*** பார்க்க; see *kalveṭṭukkuḻi.*

[கல்வெட்டுக்குழி → கல்வெட்டாங்குழி.]

கல்வெட்டி[1] *kal-veṭṭi,* பெ.(n.) 1. அரிய மணிகளைச் செதுக்குவோ–ன்–ள்; one who cuts precious stones, as rubies, lapidary. 2. பச்சை வெட்டுக்கல் அறுத்தற்கு உரிய கத்தி (C.E.M.); brick-knife.

[கல் + வெட்டி.]

கல்வெட்டி[2] *kal-veṭṭi,* பெ.(n.) மீன் வகை; a kind of fish (கட. பர. க. சொ. அக.).

[கல் + வெட்டி.]

கல்வெட்டிக்கொடு–த்தல் *kalveṭṭikkoḍu-,* 4 செ.குன்றாவி(v.t.) ***கல்வெட்டு***[2] பார்க்க; see kalveṭṭu[2]. இறுக்கக் கடவோமாக சம்மதித்து கல்வெட்டிக் கொடுத்தோம் (S.I.I. Part.5. 459.).

[கல் + வெட்டி + கொடு.]

கல்வெட்டு[1] *kal-vettu,* பெ.(n.) 1. கல்லிற் பொறிக்கை; stone-cutting , engraving on stone, inscription on stone. 2. தவறாத சொல்; unalterable word, as if engraven on stone. அவன் பேச்சுக் கல்வெட்டுத் தான்.

க. கல்வெட்டு; ம. கல்லுவெட்டு

[கல் + வெட்டு.]

கல்வெட்டு[2] *kal-vettu,* பெ.(n.) 1. முன்னோர் பெயரும் பெருமையும் கல்லிற் செதுக்கிய செய்யுள் அல்லது செய்தி (யாழ்ப்.); stanza or lines commemorative of the name fame and date of death of an ancestor. 2. இரங்கற் செய்யுள் (யாழ்ப்.); elegy.

[கல் + வெட்டு.]

நடுகல்லிற்பொறித்த செய்தியும் பொது வகையான் கல்வெட்டு என வழங்கப்படலாயிற்று.



கல்வெட்டு

கல்வெட்டுக்குழி *kalveṭṭukkuḻi,* பெ.(n.) 1. கல் தோண்டி எடுத்த இடம்; place where the stones were digged off. 2. ஓர் இடப்பெயர்; name of a place.

[கல் + வெட்டு + குழி.]

கல்வெட்டுங்கிடங்கு *kalveṭṭuṅkiḍaṅgu,* பெ.(n.) கற்களைப் பெயர்தெடுக்குமிடம்; the place where the stones digged off.

[கல் + வெட்டு + கிடங்கு.]

கல்வெடி *kal-veḍi,* பெ.(n.) 1. மலைகளையுடைக்கப் பயன்படும் வெடிமருந்து வகை; blast. 2. உரத்த வொலியுடன் வெடிக்கும் வெடி (கொண்டல்விடு. 265.); detonator.

[கல் + வெடி.]

கல்வெள்ளங்கு *kal-veḷḷaṅgu,* பெ.(n.) காட்டுப் பச்சிலை (L.); bastard rose-wood.

[கல் + வெள்ளங்கு]

கல்வெள்ளி *kal-veḷḷi,* பெ.(n.) 1. இரும்பும் வெள்ளீயமுங் கலந்தது (வின்.); amalgam of iron and tin. 2. கலப்புவெள்ளி (C.G.); hard inferior silver mixed with much alloy.

ம. கல்லுவெள்ளி

[கல் + வெள்ளி.]

கல்வெள்ளை *kalveḷḷai,* பெ.(n.) கற்சுண்ணாம்பு; lime stone (சா.அக.).

[கல் + வெள்ளை.]

கல்வெள்ளைநீர் *kalvellainīr,* பெ.(n.) கற் சுண்ணாம்பின் தெளிந்தநீர்; lime water (சா.அக.).

[கல் + வெள்ளை + நீர்.]

கல்வேகம் *kal-vegam,* பெ.(n.) ***கல்வீரியம் (மூ.அ.)*** பார்க்க; see *kal-viriyam.*

[கல் + வேகம்.]

கல்வேல் *kalvēl,* பெ.(n.) உடைவேல்; pea-podded black babul.

[கல் + வேல்.]

கல்வேலை *kal-velai,* பெ.(n.) 1. கல்லிற்செய்யும் வேலை; stone-mason's or sculptor's work. 2. அரிய மணியைச்செதுக்கும் பணி; work of a lapidary.

க. கல்லுகெசல; **ம.** கல்பணி.

[கல் + வேலை.]

கல[1]–த்தல் kala-, 3 செ.கு.வி.(v.i.) 1. கூடுதல்; to mix, unite, join; to commingle, combine; to be absorbed, as the individual soul into the Godhead. *"கலந்து நின்னடியாரோடன்று" (திருவாச. 32, 1.).* 2.கூட்டுறவாடுதல்; to unite in friendship, grow intimate, to hold communion with, associate in friendship with, or matrimonial alliance friendly. *"ஒரு மூவேங்கலந்த காலை" (கம்பரா. சூர்ப்ப. 140.).* 3. பரத்தல்; to spread as news. *"கட்டுரை கலந்த காலை" (கம்பரா. கரன். 68.).* 4.தோன்றுதல்; to appear, come into being. *"அமுதொடு கலந்த நஞ்சை மிடற்றினி லடக்கிய" (தேவா. 473, 1.).* 5. நெருங்குதல்; to get close together; to come into close quarters with. *"கலந்து போர்செய்தா ரோர்சிலர்" (கந்தபு. சகந்திரவா. 32.)* 6. பொருந்துதல்; to be welded, held. *"அலங்கலந் தார்" (புலியூரந். 1.).*

க. கலெ, கலக; **தெ.** கலயு; **ம.** கலருக; **து.** கலடுனி; **துட.** கசவ்; **குட.** கல (பிசைதல்.); **கோத.** கல்வ்; **கொலா;** கலய்; **நா.** கல்ய் **கோண்.** கலீதாநா; **குவி.** கன்கினை; **குரு.** கன்நா; **உரா.** கலாசு; **எரு.** கலிப்பி; **கசபா.** கலாக்கி. **கோண்.** (கோயா): கல்ப; **Skt.** kalka (a medicinal mixture.).

[குல் → கல்– கல.]

கல[2]–த்தல் *kala-,* 3 செ.குன்றாவி.(v.t.) 1. கூட்டுதல்; to mix, blend, compound, amalgamate. *"பாலொடு தேன்கலந் தற்றே" (குறள், 1121).* 2 . புணர்தல், கூடுதல்; to copulate. *"பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல்" (குறள், 1276.).*

க. கலசு

Basq. gale (wishful); **E.Hamit.** e-kala in-kala; **Rum & Allan.** galash.

[குல் → கல் → கல.]

கல[3]–த்தல் *kala-,* 3 செ.கு.வி.(v.i.) இடைவிட்டிருத்தல் (இ.வ.); to have intervening spaces.

[குல் → கல் → கல.]

கலக்கடல் *kala-k-kaḍal,* பெ.(n.) கச்சத்தீவுக்கு அண்மையில் உள்ள கடல் பரப்பு. (கட. ப. சொ. அக.); sea portion adjacent to Kacha island.

[கலம் + கடல்.]

கலக்கடி[1] *kalakkaḍi,* பெ.(n.) குழப்பம் (யாழ்ப்.); confusion, perturbation, tribulation.

[கல → கலக்கு + அடி – கலக்கடி. கலக்கிபடித்தல் குழப்புதல் பொருள் தந்தது.]

கலக்கடி[2] *kalakkaḍi,* பெ.(n.) அச்சம் (இ.வ.); terror, fear.

[கலக்கம்→கலக்கடி 'அடி' சொல்லாக்க ஈறு.]

கலக்கம்[1] *kalakkam,* பெ.(n.) 1. நீர் முதலியன குழம்பி இருத்தல், கலங்குகை; being shake, as the surface of a sheet of water. 2. மனக்குழப்பம்; disquiet, discomposure, embrasssment. *"நலத்தகு நாடிற் கலக்கமு மதுவே" (தொல். பொருள். 270.)* 3. துன்பம்; distress, affliction. terror, dread. *"மகபதி கலக்கங் கொண்டு" (கந்தபு. தாரக. 2.)* 5. அறிவுமாறாட்டம்; perplexity, distraction, bewilderment. *"சித்துவிகாரக் கலக்கந் தெளிவித்த. வித்தகத் ... தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ" (திருவா. 10, 6.).* 6. அழுகை (திவா.); weeping, bewailing.

ம. கலங்ஙல், கலக்கம்; **க.** கலகு; **து.** கலங்கு **தெ.** கலாக, கலாகுவ.

[கல → கலகு → கலங்கு → கலக்கு → கலக்கம் (செல்வி. செப்டம்பர் 76,பக். 21.).]

ஒரு கவர்த்த வழியைக் காணின் எது வழியென்று தெரியாது கலங்கவும், அறியாதார் பலர் கூடியிருக்கக் காணின், அவருட் காண வேண்டியவர் யாரென்று தெரியாது மயங்கவும் நேரும். இதனால், பொருட் கலக்கத்திற்கும் மனக் கலக்கத்திற்கும் ஏதுவாம்.

அமைதியான மனத்தில் கவலை அல்லது அச்சம் கலப்பின் மனக்கலக்கம் உண்டாகும். மனத் தெளிவு முற்றும் நீங்குவதே மயக்கம். அது தீய பொருள் உடம்பிற் கலப்பதாலும் உண்டாகும்.

கலக்கம்[2] *kalakkam,* பெ.(n.) 1. இடைவெளியுடைமை; clearness, distinctness; being clearly; spaced out. எழுத்துக் கலக்கமாயிருக்கிறது (உ.வ.).

[கலை + கலக்கம்.]

கலக்கம்[3] *kalakkam,* பெ.(n.) பொருத்தம் (இ.வ.); agreement.

[குல் → கல் → கல → கலக்கம், குல் - பொருந்துதல்வேர்.]

கலக்கம்[4] *kalakkam,* பெ.(n.) ஆரவாரம் (யாழ்.அக.); uproar, bustle.

[குல் → கல் → கல → கலக்கம்.]

கலக்கமடை–தல் *kalakkamaḍai-,* 2 செ.கு.வி.(v.i.) மனக்குழப்பமடைதல்; to be confused.

[கலக்கம் + அடை.]

கலக்கல் *kalakkal,* பெ.(n.) 1. கலங்கச்செய்தல்; making things unclear. 2. குழப்பல்; confusion. 3. கூட்டல்; making addition. 4. சேருதல்; joining. 5. புணர்தல்; copulation.

[கல → கலக்கல்.]

கலக்கழி–தல் *kalakkaḻi-,* 2 செ.கு.வி. (v.ri.) கட்டுக்குலைதல்; to become loose and weak from the firm structure. *"கள்ளச்சகரு கலக்கழிய" (திவ்ய. பெரியாழ். 2:2:4.).*

[கலக்கு + அழி – கலக்கழிதல் - கலக்குற்று அழிதல்.]

கலக்கிக்குடி–த்தல் *kalakki-k-kuḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) நீர்ம மருந்துகளை அருந்துவதற்கு முன் குலுக்கிக் குடித்தல்; to drink medicine etc. after shaking.

[கலக்கு[3] → கலக்கி + குடி]

கலக்கு[1]**–தல்** *kalakku-,* 5 செ.குன்றாவி.(v.t.)) கலங்கச்செய்தல்; to confuse. *"கலக்கியமா மனத்தினளாய்க் கைகேசி வரம் வேண்ட" (திவ். பெரியாழ். 3, 10, 3.).*

ம. கலக்குக; **க.** கலகு, கலகிசு; **தெ.** கலயு, கலியு, கலக; **கோத.** கல்வ்; **துட.** கல்வ்; **குட.** கல (பிசைதல்); **து.** கலபுனி; **கொலா.** கல்ய்; **நா.** கலய், கல்ப்; **கோண்.** கலீநானா (சந்தித்துத் தழுவி); **குவி.** கல்பினெய்; **குரு.** கல்; **Skt.** avakalkana (mingling, mixing together.).

[கலங்கு →கலக்கு.]

கலக்கு[2] *kalakku,* பெ.(n.) கலக்கம் பார்க்க; see *kalakkam, "பெருங்கலக் குற்றன்று" (புறநா. 41, 16.).*

தெ. கலகுவ; **க.** கலகு.

[கலங்கு → கலக்கு.]

கலக்கு[3] *kalakku,* பெ.(n.) 1. பொருத்து; joint. *"சகடங் கலக்கழியக் காலோச்சி" (திவ். திருப்பா. 6.)* 2. கலங்கல் நீர்; muddy water (சேரநா.).

ம. கலக்கு

[கல → கலக்கு.]

கலக்குத்தொண்டன் *kalakku-t-tondaṉ,* பெ.(n.) தொண்டன் என்னும் மீன் வகையுள் ஒன்று. (முகவை. மீனவ.); a kind of 'tondaṉ' fish.

[கலக்கு + தொண்டன்.]

கலக்குமட்டிச்சுறா *kalakku-maṭṭi-c-cuṟā,* பெ.(n.) மீன்வகை; carcharhinus melmopterus (செ. அக.).

[கலக்கு + மட்டிச்சுறா.]

கலக்கெறி-தல் *kalakkeṟi-,* 3 செ.கு.வி.(v.i.) மீன்கள் பெருந்தொகையாய்ச் சேர்ந்து, வலையின் நெருக்கங் காரணமாக அங்குமிங்கும் ஓடும்போது ஏற்படும் நீர்ச்சுழிவால் கடலடியில் சேறு மேல் வருதல் (செங்கை. மீனவ.); mud at the sea-bed coming above because of the fish chased together on all directions by the closely laid fishing nets.

[கலக்கு + எறி-]

கலக்கை *kalaga-k-kai,* பெ.(n.) இரு கைவிரல் களையும் நிமிர்த்தி வளைக்கும் முத்திரைக்கை (பரத. பாவ. 59.); a gesture in which the fingers of both hands are brought together and bent from an upright position.

[கலம் + கை.]

கலகம்[1] *kalagam,* பெ.(n.) 1. சச்சரவு, சண்டை; strife, quarrel, wrangle, altercation. *"மாலொடொரு கலகந்தனை வாளா வருவித்தாள்" (சேதுபு. சேதுமா. 24.).* 2. ஒருவன் மேற் பிறர்க்குப் பகை உண்டாகும்படி தூண்டிவிடுகை; inciting one to break off from another. 3. பேரொலி (திவா.); uproar, tumult. 4. நாட்டுக் குழப்பம்; insurrection, revolt, rebellion. 5. போர் (வின்.); war, fight, skirmish.

க. கலக; **H. Skt.** kalaha; **Malay.** kelahi.

[கலத்தல் = பொருந்துதல், பொருந்திப்போர் செய்தல், ஒ.நோ : பொரு → போர், சமம் → சமர். கைகலத்தல் = சண்டையிடுதல். கல் → கலாம் = போர், கலகம். கல → கலவு → கலகு → கலகம் = கூட்டச்சண்டை. கலகு → கலகி. கலகித்தல் = கலகஞ்செய்தல். வடமொழியில் மூலமில்லை.]

Skt., Pkt., Nep., Sinh., Pali. kalaha; **H., Ass., Beng.** kalah; **Ori.** kaḷaha; **Guj.** kaḷo; **Mar.** kaḷho; **Kas.** kōla-kōl; **Mal.** kelani.

த. கலகம் > **Skt.** kalaha (வ.மொ.வ.109.)

இருகுழுவார் அல்லது கூட்டத்தார் செய்யும் போர் கலகமாகும் [சொல். கட். 59.].

மாறுபட்ட இருவர் அல்லது இருக்கூட்டத்தார் கலந்தே போர் செய்வர். கைகலத்தல் என்னும் வழக்கை நோக்குக. கல → கலகு = கலகம். கலகித்தல் = கலகஞ்செய்தல். கலகம் → கலாம். கலாய்த்தல் = சினத்தல், மாறுபடுதல். கலாவுதல் = சினத்தல், கலாவு → கலாவம் → கலாபம் = கலகம். கலாபித்தல் → கலகஞ்செய்தல் [வே.க. 40.].

கலகம்[2] *kalagam,* பெ.(n.) 1. நிரையம் (நரகம்); a hell. *"கலகக் கனற்கொடி" (தக்கயாகப். 457.).* 2.கலகக்குருவி (யாழ்.அக.); kingfisher.

[கலக்கம் → கலகம்.]

கலகம்³ *kalagam*, பெ.(n.) 1. மீன்வகை (சங்.அக.); a kind of fish. 2. ஒரு பறவை; a bird.

[கலங்கு → கலகம்.]

கலகக்காரன் *kalaga-k-kāraṉ*, பெ.(n.) 1.கலகஞ்செய்வோன்; insurgent, rebel. 2. சச்சரவு விளைப்போன் (கொ.வ.); quarrelsome person, wrangler, one who bickers.

க. கலகார்தி

[கலகம் + காரன்.]

கலகக்குருவி *kalaga-k-kuruvi*, பெ.(n.) 1. ***மீன்குத்தி*** பார்க்க; see *mīn-kutti*. 2. கலகம் செய்வோன் (கொ.வ.); mischievous person, meddler.

[கலகம் + குருவி]

கலகசெந்தயன் *kalaga-cendayaṉ*, பெ.(n.) விச்சுளி; a swift little bird; pied king fisher (சா.அக.).

[கலகம் + செந்தலையன்.]

கலகண்டம் *kala-kaṇḍam*, பெ.(n.) 1. குயில்; koel. 2. புறா; pigeon.

[கள் → கள → கல + கண்டம் (தொண்டை, கழுது).]

கலகல¹ *kala-kala*, பெ.(n.) ***கலகலெனல்*** பார்க்க; see *kala-kal-enal*. *"கலகல கூவுந் துணையல்லால்" (நாலடி, 140.).*

[கல - ஒலிக்குறிப்பு இடைச்சொல். கல + கல – கலகல. (இரட்டைக்கிளவி).]

கலகல²–த்தல் *kala-kala*, 3 செ.கு.வி.(v.i.) 1.கலகலவென்று ஒலித்தல்; to reiterate in sound; to rustle, as dry leaves, to tinkle, as little bells; to chink, as money; to clink, as chains; to rattle, as pebbles in a shell. *"வற்றிய வோலை கலகலக்கும்" (நாலடி, 256.).* 2. கட்டுக்குலைதல்; to become shaky, get loose in the joints, as an old cart. இந்த வண்டி கலகலத்துப் போயிற்று.

க. கலகலிசு, களகளிசு.

[கல + கல. கலகல–த்தல்.]

கலகல–³த்தல் *kalakala-*, 3 செ.கு.வி.(v.i.) 1.நன்றாகக் காய்தல் (யாழ்.அக.); to dry thoroughly. 2. மிகப்பேசுதல்; to talk too much.

ம. கலகலய்க்குக

[கல + கல – கலகலத்தல்.]

மரத்தில் முற்றிய காய்கள் காய்ந்தபின் காற்றில் கலகலத்தலால் காய்ந்து உலர்தலையும், ஒலித்தல் ஆகிய பேசுதலையும் குறித்தது.

கலகலக்கக்காய்–தல் *kalakalakka-k-kāy-*, 2 செ.கு.வி.(v.i.) நன்றாக உலர்தல் (கொ.வ.); to dry thoroughly.

[கலகலக்க + காய்–.]

கலகலத்தவாய் *kalakalatta-vāy*, பெ.(n.) 1.அரட்டையடிப்பவன், அலப்பும்வாயன்; a chatterbox, an incessant jabberer. 2. மனத்திலுள்ளதை மறையாது பேசுவோன்; an outspoken man.

[கலகலத்த + வாய்.]

கலகலப்பாயிரு–த்தல் *kalakappāyiru-*, 3செ.கு.வி.(v.i.) 1. ஊக்கம் கொண்டிருத்தல்; to be joyful, exhilerate. 2. கலந்து பழகுதல்; to be sociable with others. 3. நோயற்ற நிலையில் உடல் நலமுடன் இருத்தல்; to be healthy.

[கலகலப்பு + ஆய் + இரு.]

கலகலப்பு *kalakalappu*, பெ.(n.) 1. ஒலிக்கை; rustling. 2. கலந்துபழகுகை; sociability. அவன் கலகலப்பாய் இருக்கிறான். 3. களிப்பு மேலிடுதல்; joyfulness, exhilaration. திருமணவீடு கலகலப்பாயிருக்கிறது (உ.வ.). 4. நோயற்ற நிலையில் உடல் நலமுடனிருத்தல்; sound health. உடம்பு கலகலப்பாயிருக்கிறது (உ.வ.).

ம. களகள; **து.** கலகல, தல்தல், களகள, தளதள; **தெ.** கலகல; **க.** கலகல, களகள; **கோத.** தல் தல் **மா.** கல், கல்ட்ரெ.

[கலகல→ கலகலப்பு.]

த. கலகலப்பு > **Skt.** kalakala.

கலகலம்[1] *kala-kalam,* பெ.(n.) 1. பறவையொலி (உரி.நி.); chirping of birds. 2. பேரிரைச்சல் (வின்.); hullabaloo, confused noise of a crowd.

தெ. கலகல

[கல + கல – கலகல → கலகலம்.]

கலகலம்[2] *kalagalam,* பெ.(n.) அணிகலச் செப்பு (யாழ்.அக.); box for jewels.

[கல + கல – கலகல → கலகலம். ஒலிக்கும் உட்பரல் பெற்ற சிலம்புபோன்ற அணிகலன்களை வைக்கும் செப்பு.]

கலகலெனல் *kala-kal-enal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying tinkling, chinking. *"பசும்பொன் வளையல் கலகலென" (தனிப்பா. 11, 2, 2.).*

க. கலகலகுட்டு

[கல + கல + எனல்.]

கலகவாய்க்குருவி *kalaha-vāy-k-kuruvi,* பெ.(n.) ஒரு வகைக்குருவி; a sparrow.

[கலகம் + வாய் + குருவி.]

கலகவாயன் *kalaga-vāyan,* பெ.(n.) சண்டைக் காரன்; pugnacious, quarrelsome person.

[கலகம் + வாயன்.]

கலகி[1]**–த்தல்** *kalagi-,* 4 செ.கு.வி.(v.i.) கலகஞ் செய்தல்; to create a disturbance, cause a commotion.

[கலகம் → கலகி .]

கலகி[2] *kalagi,* பெ.(n.) கலகக்காரி; quarrelsome, intriguing woman. *"மால் கலகியாம்" (சினேந். 269.).*

[கலகம் → கலகி.]

கலங்கடி–த்தல் *kalaṅgadi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1.கலங்கச் செய்தல்; to discomfit, put to rout, as the forces of an enemy. எதிரி சேனையைக் கலங்கடித்தான் (உ.வ.). 2. திகைக்கச் செய்தல்; cause surprising.

[கலங்க + அடி .]

கலங்கரைவிளக்கம் *kalaṅ-karai-viḷakkam,* பெ.(n.) திக்குக்குறி காட்டிக் கலத்தை அழைக்கும் விளக்கம், கப்பல்களை அழைக்கும் வழி காட்டும் விளக்குக் கம்பம்; lit., light that invites vessels, beacon light, light-house. *"இலங்கு நீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்" (சிலப். 6, 141.).*

[கலம் + கரை + விளக்கம். விளக்கு + அம் – விளக்கம். ('அம்' பெருமைப்பொருள் பின்னொட்டு. கடலிற் செல்லும் மரக்கலத்திற்குத் துறைமுகம் உள்ள இடத்தை அடையாளம் காட்டி அழைக்கும் விளக்கு. கரைதல் - அழைத்தல்.]

கலங்கல்[1] *kalaṅgal,* பெ.(n.) 1. கலங்குகை; turbidity, muddiness. *"தெளிவிலாக் கலங்க னீர்சூழ்". (திவ். திருமாலை. 37.).* 2. கலங்கல் நீர்; muddy water. *"செங்கலங்கல் வெண்மணன்மேற் றவழும்" (திவ். பெரியதி. 4, 4, 7.).* 3. அழுகை (சங்.அக.); weeping. 4. அச்சம் (வின்.); fear. 5. மயங்குகை; perturbation. 6. கலங்கிய கள்; toddy. *"எமக்கே கலங்க றருமே" (புறநா.298:1). 7. நீர்;* water *(ம.அக.).*

ம. கலங்ஙல்; **க., பட.** கலகு; **குவி.** கங்கல; **H;** kalank; **Mal.** keroh.

[நீரும் மண்ணுங்கலத்தல் கலங்கல். கல → கலகு → கலங்கு → கலங்கல். கல → கலுழ். கலுழ்தல் - கலங்கல். கலுழ் - நீர்க்கலக்கம் (வேக. 142.).]

கலங்கல்[2] *kalaṅgal,* பெ.(n.) **கலிங்கு** பார்க்க; see *kaliṅgu.*

[கலிங்கு → கலிங்கல் → கலங்கல் (கொ.வ.).]

கலங்கன் *kalaṅgan,* பெ.(n.) 1. கலிங்கைக் காப்பதாகக் கருதப்படும் சிறு தெய்வம்; a demigod considered to be protecting sluice. 2. ஆண்பாற் பெயர்; name of a person.

கலிங்கு காத்த அம்மன் → கலங்காத்தம்மன் (கொ.வ.). (பெபா.) → கலங்கன் (ஆ.பெ) வடார்க்காடு மாவட்ட வழக்கு.

கலங்கனீர் *kalaṅganīr,* பெ.(n.) கலங்கல் தண்ணீர்; muddy water.

[கலங்கல் + நீர்.]

கலங்காச்சுடர் *kalaṅga-c-cuḍar,* பெ.(n.) தஞ்சாவூர் வட்டம் திருச்சோற்றுத் துறை (திருச்சாத்துரை)க் கோயிலுக்கு அணையா விளக்கு நல்கிய நங்கை; a lady who donated a lamp at Thiruchatturai in Thanjavur taluk. *"ஆயிரத்தளி தேவநார் மகள் கலங்காச்சுடர்" (தெ.இ.கல்.தொ. 19 கல்.148.).*

[கலங்கா + சுடர்– கலங்காச்சுடர்.]

கலங்காப்பெருநகரம் *kalaṅgā-p-peru-nagaram,* பெ.(n.) விண்ணுலகம்; Vaigundha, Vishnu's heaven. *"கலங்காப் பெருநகரத்துப் போலியாயிருக் கும்" (ஈடு, 10, 2, 1.).*

[கலங்கு + ஆ + பெரு + நகரம். 'ஆ' எ.ம.இ.நி.]

கலங்காவரிச்சு *kalaṅgā-variccu,* பெ.(n.) கூரை யின் கைமரங்களுக்கிடையே இடைவிட்டுக் கட்டிய வரிச்சுக்கட்டு (செங்கை.); thin rafters fixed equidistantly in a roof.

[கலங்கு + ஆ + வரிச்சு 'ஆ' எ.ம.இ.நி. கலங்காத = ஒன்றோடொன்று ஒட்டாத, நெருங்காத.]

கலங்கிண்ணி *kalaṅkiṇṇi,* பெ.(n.) 1. வெண்கலம்; bell-metal. 2. உணவுண்ணும் கிண்ணி; eating dish (சா.அக.).

[கலம் + கிண்ணி.]

கலங்கு-தல் *kalaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நீர் முதலியன குழம்புதல் ; to be stirred up, agitated, ruffled as water. *"கலங்க முந்நீர் கடைந்து" (திவ். பெரியதி. 6, 5, 1.)* 2. மனங்குழம்புதல்; to be confused, confounded. *"கலங்காமற் காத்துய்க்கும்" (நாலடி, 59.).* 3. மயங்குதல்; to be abashed, embarrassed, perplexed. *"காம நலியக் கலங்கி" (பு.வெ. 11. பெண்பாற். 1.);* 4. அஞ்சுதல்; to fear, to be intimidated; to be cowed. *"விண்ணு மண்ணுமெல்லாங் கலங்க" (திருவாச. 6, 28.).* 5. துன்பமுறுதல் (வின்.); to be sad; to grieve; to experience sorrow. 6. தவறுதல்; to fail. *"கலங்காது ஞாலங் கருதுபவர்" (குறள், 485.).*

ம. கலங்ஙுக; **கோத.** கல்க்; **க., பட.,** கலங்கு; **குட. கலங்க். து.** கலங்குனி; **தெ.** கலாகு. **கூ.** கல்ப; **குரு.** கலாக்சனா; **மால்.** கல்லுகெ

Skt. kalusa (turbid of water or mind.).

[குல் → கல் → கல → கலங்கு.]

கலங்கொம்பு *kalaṅ-kombu,* பெ.(n.) கலைமான் கொம்பு (யாழ்ப்.); stag's horn.

ம. கலங்கொம்பு

[கலை → கல + கொம்பு.]

கலசச்சுரை *kalaśa-c-curai,* பெ.(n.) கும்பச்சுரை; a species of bottle -gourd in the shape of a pot (சா.அக.).

[கலசம் + சுரை = கலயம் போன்ற வடிவுடையது.]

கலசநிறுத்து-தல் *kalaśa-niṟuttu-,* 5 செ.கு.வி.(v.i.) மாவிலை தேங்காய் நிறுத்திய நிறைகுடம் அமைத்தல்; to set up with mantras, on religious occasions, a pot full of water covered with sprays of mango leaves and a coconut a top of it.

[கலயம் → கலசம் → நிறுத்து-.]

கலசப்படை *kalaśa-p-paḍai,* பெ.(n.) பரவ மகளிர் காதணி வகை; an ear ornament worn by parava women.

[கலயம் → கலசம் + படை.]

கலசப்பால் *kalaśa-p-pāl,* பெ.(n.) முலைப்பால்; woman's breast milk (சா.அக.).

[கலசம் + பால். கலசம் = குடம், கிண்ணம், இவைபோன்றிருக்கும் முலை.]

கலசப்பானை *kalaśa-p-pāṉai,* பெ.(n.) 1. விளக்குக் கலசம் (திவா.); censer. *"கலசப்பானை யொன்று மூக்கும் அடியுமுட்பட" (S.I.I. ii. 5.).* 2. காளாஞ்சி

(சது.); spittoon. 3.வழிபாடு, மணவிழா போன்ற வற்றின் போது பயன்படுத்தும் அடுக்குப் பானைகள்; set of pots in different sizes used for prayer.

[கலயம் + கலசம் + பானை.]

கலசம் *kalašam*, பெ.(n.) 1. குடம்; small vessel, pot. *"செப்பெுன்பன் கலசமென்பன்" (கம்பரா. நாடவி. 43.).* 2. கிண்ணம் (விவிலி. மத். 10, 42.); cup. 3. விளக்குக்கலசம்; censer. 4. விளக்குத் தூண்; (arch.) dome, cupola. கலசக்கோட்டை. 5. ஆயிரம் பாக்கு (அபி. சிந். பக். 204.); a standard measure of capacity = 1000 பாக்கு.

ம. கலம்; கோத. கல்ம்; க. கல; குட. கல (பெரியபானை); து. கர.

H. kalah; Pkt. kalas; Skt. kalasa.

[கலயம் → கலசம்.]

கலசமாட்டு[1]–தல் *kalašam-āṭṭu-*, 5 செ.கு.வி.(v.i.) *"கலசத்தால் திரு முழுக்காட்டுதல்" (S.I.I. iii. 102.);* to bathe an idol with the consecrated water from a kalasam reciting appropriate mantras as the water is poured.

[கலயம் → கலசம் + ஆட்டு–.]

கலசமாட்டு[2] *kalašam-āṭṭu*, பெ.(n.) கலசங் கொண்டு திருமுழுக்குச் செய்கை (இ.வ.); pouring consecrated water on an idol, from a kalasam, with mantras.

[கலயம் → கலசம் + ஆட்டு.]

கலசமுனி *kalašamuṉi*, பெ.(n.) குடத்தினின்றுப் பிறந்தவராகக் கருதப்படும் அகத்திய முனிவர்; agattiya was supposed to have been born from a pot. *"அன்று கலச முனி வயிற்றி லற்றா யென்னில்" (நைட.சந்.4.).*

[கலயம் → கலசம் + முனி.]

கலசர் *kalašar*, பெ.(n.) இடையர்; shepherd.

[கலயம் → கலசம் → கலசன் → கலசர்.]

கலசன் *kalašaṉ*, பெ.(n.) இடையன் (யாழ்.அக.); cow-herd.

[கலயம் → கலயன் → கலசன்.]

கையில் கூழ்மொந்தையொடு ஆடுமேய்க்கச் செல்லும் இடையனைக் கலயம் ஏந்தியவன் என்னும் பொருளில் கலயன் → கலசன் என அழைத்ததனால் பெற்ற பெயராகலாம். இச்சொல் நாளடைவில் ஏவிய தொழில் செய்யும் தாழ்ந்த பணியாளன் என்னும் பொருளில் கலாசி என வழங்கலாயிற்று.

கலசு–தல் *kalašu-*, 10 செ.கு.வி.(v.i.) கலத்தல்; to mingle. பிரமருத்திரர்கள் நடுவே கலசி நின்றான் (ஈடு.).

க. கலசு

[கல → கலசு → கலயு → கலசு (கொ.வ.).]

கலஞ்சாரி *kalañjāri*, பெ.(n.) ஆன்மணத்தி (கோரோசனை); cow's bezoar (சா.அக.).

[கலம் + சாரி.]

கலஞ்செய்கோ *kalañceycō*, பெ.(n.) மட்பாண்டம் வனையும் தொழில் வல்லவர், குயவர்; pot maker, potter. *"கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே" (புறம். 256.).*

மறுவ. குயவர், வேட்கோ.

[கலம் (மட்கலம்) + செய் + கோ. கோ = குயவர்.]

கலஞ்செலுத்து–தல் *kalañceluttu-*, 6 செ.குன்றாவி. (v.t.) கப்பல் செலுத்துதல்; to sail the ship. *"அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்தி" (S.I.I. Vol.5. Part.II. 404.).*

[கலம் + செலுத்து.]

கலட்டிக்காய் *kalaṭṭi-k-kāy*, பெ.(n.) பிஞ்சும் முதிர்வும் அற்ற காய் (ம.அக.). fruit just formed.

கலடு *kalaḍu*, பெ.(n.) கற்பாங்கான நிலம் (யாழ். அக.); stony ground.

[கல் → கல்லது → கலது → கலடு.]

கலணை *kalaṇai*, பெ.(n.) **கலனை[2]** பார்க்க; see *kalaṉai[2]*, *"கலணை விசித்து ... புரவி செலுத்தி" (திருப்பு. 405.).*

[கலனை → கலணை (கொ.வ.).]

கலத்திற்பிரிவு *kalattiṟ-pirivu,* பெ.(n.) 1. கடல்கடந்து செல்வதனால் ஏற்படும் பிரிவு (பழ.தமி.114) separation due to going on sea voyage.

[கலம் + அத்து + இல் + பிரிவு. கலம் = மரக்கலம். 'அத்து' சாரியை, 'இல்' ஏழன் உருபு.]

கலத்திற்போடுதல் *kalattiṟpōḍudal,* தொ.பெ.(vbl.n) மணமகள் மணமகனுக்கு (முதன்முதல்) படைக்கும் உணவு (ம.அக); The first meal served by the bride to the bridegroom immediately after marriage.

[கலம் = உண்கலம். கலம் + அத்து + இல் + போடுதல்.]

கலத்தோசை *kalattōšai,* பெ.(n.) வெண்கலம்;bell-metal (சா.அக.).

[கலம் + அத்து + ஓசை.]

கலதம் *kaladam,* பெ.(n.) வழுக்கைத் தலை; baldhead.

க. கலதி (மட்பாண்டம்)

[கலம்+அத்தி–கலத்தி (மட்பாண்டம்) → கலதம் (மட்பாண்டம்போன்ற வழுக்கைத்தலை).]

கலதி[1] *kaladi*[1], பெ.(n.) 1. தலைவழுக்கையை உண்டாக்கும் நோய் *"கலதிரோகம்" (சிவரட்.294) (சீவரட்.);* the disease that produces bald head. 2.தலைவழுக்கை; baldness

க. கலதி(மட்பாண்டம்)

[கலம் → கலத்தி (மட்பாண்டம்). மட்பாண்டம் போல் தலைவழுக்கை உண்டாக்கும் நோய்.]

கலதி[2] *kaladi,* பெ.(n.) 1. கேடு; ruin, destruction, disaster. *"கலதியம் பிவையுங் காய்ந்த" (சீவக.769.)* 2. மூதேவி; the goddess of misfortune. *"கலதிபூதவேதாளி" (திருப்பு.381) (பிங்.).* 3. தீக்குண முடையவன்; wicked man. *"கள்வன் கடியன் கலதியிவன்" (திருவாச.10,19).*

ம.கலதி ; க.கலதி (தீயவன்).

H.galti; E.guilty.

[கல → கலக்கம் → கலத்தம் → கலத்தி → கலதி.]

கலதிமை *kaladimai,* பெ.(n.)தீவினை;misfortune. *"நல்லறங் காய்வது கலதிமைப் பாலதாகுமே" (சீவக.2932.).*

[கல→கலதி→கலதிமை. 'மை' ப.பெ.ஈறு]

கலதை[1] *kaladai,* பெ. (n.) குழப்பம் (வின்.); confusion, tumult, turmoil. 2. அழுக்குத்தன்மை;dirtiness

[கலக்கம் → கலத்தம் → கலத்தை → கலதை.]

கலதை[2] *kaladai,* பெ.(n.) மூதேவி. (யாழ்அக); the goddess of misfortune. 2.கீழ்மை;meanness (த.மொ.அ).

ம.கலத

[கலக்கம்→கலத்தம் → கலத்தை → கலதை.]

கலந்தருநன் *kalan-tarunaṉ,* பெ.(n.) 1.பொற்கொல்லன்(சூடா.); goldsmith,jewel-maker. 2.குயவன் (யாழ்.அக); potter.

[கலன்+தருநன்.கலன்=அணிகலன்,கலன்+தருநன். கலம்=மட்பாண்டம், ஏனம், தருநன்= தருபவன், மட்கலம் செய்பவன்.)

கலந்தருவார் *kalantaruvār,* பெ.(n.) யாழ்ப்பாணர்; கந்தருவர்; bards who play lutes;gandharvas.

[கலம்+தருவார்–கலந்தருவார்.கலம்=யாழ். தருதல்=உடன் கொணர்தல், எடுத்துச்செல்லுதல், யாழானாகிய இசையெழுப்புதல். இச்சொல் கலந்தருவார் → கலந்தருவர்→ காந்தருவர்→கந்தருவர் எனத்திரிந்தது. கந்தர்வ என்னும் வடசொல்லுக்கு அம்மொழியில் மூலச்சொல் இல்லை.]

கலந்தவர் *kalandavar,* பெ.(n.)அன்பர்;well-wishers, *"கலந்தாரைக் கைவிடுதல்"(நாலடி,பொறை.76)* 2. உறவினர்; relatives 3. சேர்ந்தவர்;one who mingles.

[கல→ கலந்தவன்→ கலந்தவர். வி.அ.பெ 'அர்' (ப.பா.ஈறு).]

கலந்தாய்–தல் *kalanday-,* 2 செ.கு.வி.(v.i.) ஒரு பொருள்குறித்துப் பிறருடன் கருத்தாய்வு மேற்கொள்ளல்; to confer with others on a particular subject.

[கலந்து + ஆய்வு.]

கலந்தார் *kalandār,*பெ.(n.) ***கலந்தவர்*** பார்க்க; see *kalandavar.*

[கல → கலந்தவர் → கல்ந்தார் (த.மொ.4).]

கலந்தான் *kalandāṉ,* பெ.(n.) மைக்கூடு (C.G.); ink-stand (செ.அக.).

[கல→கலந்தான். நிறங்களைக் கலந்து கூட்டிய மை உள்ள மைக்கூடு.]

கலந்துகட்டி *kalandu-kaṭṭi,* பெ.(n.) நல்லதும் கெட்டதும் கலந்தது; admixture of the good and bad; haphazard interlarding. *"தேவதாந்தரங் களையும் கலந்துகட்டியாக ப்ரதிபாதிக்கையாலும்" (ஈடு,4,10.ப்ர.).*

[கல→ கலந்து+கட்டி.]

கலந்துகட்டிப்பரிமாறு–தல் *kalandu-kaṭṭi-p-arimāṟu-,* 5 செ.கு.வி.(v.i.) வேறுபாடின்றிக் கலத்தல்; to mix freely without any distinction, as caste, rank, etc.

[கலந்து+கட்டி+பரிமாறு.]

கலந்துகட்டிப்பரிமாறு²–தல் *kalandu-kaṭṭi-p-parimāṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. அணிகலன் முதலியவற்றைப் பொதுவில் பயன்படுத்தல்(வின்.); to use ornaments or other property in common. 2.விழாக்களில் உணவுப்பரிமாற்றத்தில் பற்றாக்குறை நேருங்கால் இருப்பனவற்றைக்கலந்து அனைவருக்கும் கிடைக்குமாறுசெய்தல்; to serve by adjusting food for all, with available items in a function etc.

[கலந்து + கட்டி + பரிமாறு.]

கலந்துகொள்–தல் *kalandukoḷ-,*16 செ.கு.வி. (v.i.) விழாவில், பங்கேற்றல்; to participate.தலைவர் அந்தத் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வில்லை(உ.வ.). 2.ஒன்றோடொன்று கலத்தல்; to mix.

[கலந்து+கொள். 'கொள்' துணை வினை.]

கலந்துபரிமாறு–தல் *kalandu-parimāṟu-,* 5 செ.கு.வி. (v.i) 1.கூடிக்கலந்து வினையாற்றுதல்; to co-operate. 2. ஒன்றாக இணைந்து இன்பம் நுகருதல் (திவ்.திருவாய்.4.2.ப்ர.ஆறா); to enjoy in common.

[கலந்து + பரிமாறு.]

கலந்துரை–த்தல் *kalandurai-,* செ.கு.வி.(v.i.) ***கலந்துரையாடுதல்*** பார்க்க; see *kalanduraiyāḍutal*

[கல → கலந்து+உரை.]

கலந்துரையாடல் *kalanduraiyāḍal,* பெ.(n.) ஒன்றுக்கு மேற்பட்டோர் பங்குப்பெறும் உரையாடல்; conversation, discussion. ஒரு கலந்துரை யாடலுக்கு ஏற்பாடுசெய் (உ.வ.).

[கலந்து+உரை+யாடல்.]

கலந்துரையாடு–தல் *kalanduraiyāḍu,* செ.கு.வி. (v.t.) ஒன்றுக்கு மேற்பட்டோர் உரையாடுவது; to converse, discuss. இன்றே கலந்துரையாடு நான் கலந்து கொள்கிறேன் (உ.வ.).

[கலந்து + உரை+யாடு.]

கலந்தை *kalandai,* பெ.(n.) பெருமை (திவா.) greatness.

[கல் → கலந்தை. கல்வியால் சேர்ந்த பெருமை.]

கலந்தோர் *kalandhōr,* பெ.(n.) நட்புற்றோர்; friends

[கலந்தவர் → கலந்தோர்.]

கலப்படக்காரன் *kalappaḍakkāraṉ,* பெ.(n.) கலப்படம் செய்பவன்;one who adulterates.

[கலப்படம் + காரன்.]

கலப்படம் *kalappaḍam* பெ.(n.)1. ஒன்றுக்கும் மேற்பட்டபொருள்கள் கலந்த கலவை; mixture 2. தரம்வாய்ந்ததோடு தரமற்றதைச் சேர்த்து கலந்த கலவை;adulterated things. கலப்படம் செய்வது சட்டப்படிக்குற்றமாகும் (உ.வ.).

தெ. கலப்படமு

[கல → கலப்பு + அடம். அடம். – சொ.ஆ.ஈறு.]

கலப்படம்செய்–தல் *kalappaḍamšey-,* செ.குன்றாவி. (v.t.) தரமற்றபொருளைத் தரம் வாய்ந்த பொருளோடு கலத்தல்; to adulterate

[கல → கலப்பு + அடம் + செய்.]

கலப்படமாக்கு–தல் *kalappaḍamākku-,* 5 செ. குன்றாவி. (v.t.) ***கலப்படம்செய்*** பார்க்க; see *kalappaḍamšey.*

[கலப்படம் + ஆக்கு.]

கலப்படை *kalappaḍai,* பெ.(n.) ***கடற்படை*** பார்க்க; see *kaḍaṟpaḍai.*

[கலம் + படை.]

கலப்பத்துஆள் *kala-p-pattu-āḷ,* பெ.(n.) மரக் கலத்தைச் செப்பனிடும் ஆள் (நெல்லை. மீனவ.); repairer of a ship.

[கலம்+பற்று+ஆள்டி.]

கலப்பத்துக்கட்டை *kala-p-pattu-k-kaṭṭai,* பெ.(n.) கொட்டாப்புளி (நெல்லை–மீன.); hammer.

[கலம்+பற்று+கட்டை(மீன.தொ.).]

கலப்பத்துவேளை *kala-pattu-vēḷai* பெ.(n) மரக் கலத்தைச் செப்பனிடும் வேலை; repair work in a ship.

[கலம் + பற்று + வேலை (மீன்.தொ).]

பற்று = செப்பணீடு.

கலப்பரப்புநெல் *kala-p-parappu-nel,* பெ.(n.) கலசத்தின் கீழ் இடும் நெல்; paddy spread under a kalasam, in relgious rites.

[கலம் + பரப்பு + நெல்.கலயம் = கலம்.]

கலப்பற்றடி–த்தல் *kala-p-parraḍi-,*4 செ.கு.வி.(v.i.) ***கலப்பற்றுப்பார்*** பார்க்க; see *kala-p-parru-p-pār,*

[கலம்பு + அற்று + அடி.]

கலப்பற்று *kala-p-parru,* பெ.(n.) படகின் நீக்கல் அடைக்கை (யாழ்ப்.); calking of a boat.

[கலம் + பற்று. கலம் = மரக்கலம். பற்று = இணைப்புப் பலகை இடைவெளி நீக்கிச் சேர்த்தல்.]

கலப்பற்றுக்காரன் *kala-p-parru-k-kāraṉ,*பெ.(n.) படகின் நீக்கலடைப்பவன்;one whose occupation is the calking of ships, boats, etc., calker.

[கலம் + பற்று + காரன்.]

கலப்பற்றுத்தோணி *kala-p-parru-t-tōṇi,* பெ.(n.) நீக்கல் அடைக்கப்பட்டுள்ள படகு(வின்);calked boat, surf-boat,the seams of which are formed by joining planks without lapping.

[கலம் + பற்று + தோணி.]

கலப்பற்றுப்பார்–த்தல் *kalap-p-parru-p-pār-,* 4 செ.கு.வி.(v.t.) படகின் நீக்கலடைத்தல்; to calk a boat.

[கலம் + பற்று + பார்.]

கலப்பற்றுளி *kala-p-parruḷi,* பெ.(n.)படகின் நீக்கலடைக்குங் கருவி; calking-iron.

[கலம் + பற்று + உளி.]

கலப்பாச்சி *kala-p-pācci,* பெ.(n.) கல்பாசி; very small mossy plants without stems or leaves, growing on rocks.

[கல் + (பாசி) பாச்சி.]

கலப்பாடு *kalappāḍu,* பெ.(n.) ஒரு கலம் விதை விதைக்கக்கூடிய நிலப்பரப்பு; the extent of rice field in which one kalam of seeds can be sown. ***கலவித்துப்பாடு*** பார்க்க see *kalavittu-p-pāḍu*

[கலம் + வித்து + பாடு – கலம்வித்துப்பாடு → கலப்பாடு.]

கலப்பாந்தத்தி *kalap-pāndatti,* பெ.(n.) புளியாரை; indian sorrel (சா.அக.).

கலப்பிரு–த்தல் *kalappiru-,* செ.கு.வி.(v.t.) கூடியிரு த்தல், ஒன்றாயிருத்தல்; to be united.

க. கலப்பிரு

[கலப்பு + இரு.]

கலப்பினம் *kalappiṉam,* பெ.(n.) ஒர்இனத்தின் இருவகைகளை ஒன்று சேர்த்து உருவாக்கும் ஆற்றல் மிகுவகை; (of animal, seed etc.) hybrid, கலப்பின விதைகள், கலப்பின மாடு.

[கலப்பு + இனம்.]

கலப்பு[1] *kalappu,* பெ.(n.)1 மொத்தம், கூட்டுத் தொகை; gross, total, the whole 2. நிரவல் (சராசரி); average.

ம. கலப்பு

[கல → கலப்பு.]

கலப்பு[2] *kalappu,* பெ.(n.)1. கலக்கை; cordiality, *"கலப்புறக்குழுமி" (சேதுபு.3);* combination, mixture. 2. வந்து கூடுகை; meeting. 3.நட்பாகை; friendship,fellowship, intimacy. பெரியோருடன் கலப்பு நன்மைதரும் (உ.வ.). 4. கலந்து கட்டி யாகுகை; adulteration; alloyage. 5. மெய்யுறு புணர்ச்சி; copulation. *"கந்திருவர் கண்ட கலப்பு" (தொல்.பொருள்92உரை).* 6.கலவை;mixture *"கலப்பினாற்ற" (தணிகைப்பு.57).*

க. கலபு; தெ., து., ம.கலப்பு.

[கல → கலப்பு (வேக.133).]

கலப்பு—தல் *kalappu-,* 5 செ.குன்றா.வி.(v.t.) ஒன்று சேர்த்தல் இணைத்தல்; to join, to unite.

க.கலபு; படை. கலப்பு.

[கல → கலப்பு - ஒன்று சேர்த்தல்.]

கலப்புக்கதிர் *kalappu-k-kadir,* பெ.(n.) 1. கதிர் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணும் பருவம் (தஞ்.); the stage when ears of corn appear here and there in a field. 2. ஒருவகைக் கதிரோடு வேறுவகைக் கதிர் கலந்திருத்தல்; a variety of corn which is mixed with other variety.

[கலப்பு + கதிர்.]

கலப்புக்கீரை *kalappu-k-kīrai,* பெ.(n.) ***கலவைக் கீரை*** பார்க்க see *kalavaikīrai*

[கல → கலப்பு + கீரை.]

கலப்புவன்னி *kalappuvaṉṉi,* பெ.(n.) ஒன்பது வகை மாழைகளையும், செய்ந்நஞ்சையும் வேறுபடுத்தும் மூலிகை; an unknown herb said to act upon the nine metals and the arsenical compounds.

[கலப்பு + வன்னி.]

கலப்புச்சரக்கு *kalappu-c-carakku,* பெ.(n.) கவப் படம் செய்தபண்டம்; adulterated article. ***கலப்படம்*** பார்க்க.

[கலப்பு + சரக்கு.]

கலப்புத்திருமணம் *kalappu-t-tirumaṇam,* பெ.(n.) இரு வேறு குல மக்களிடை நடைபெறும் மணவுறவு; inter-caste marriage.

[கலப்பு + திருமணம்.]

கலப்புநெய் *kalappuney,* பெ.(n.) 1. முக்கூட்டு நெய்; a mixture of three kinds of oil of oil viz, gingelly oil, castoroil and ghee. 2. தரக்குறைவான நெய்; adultrerated ghee (சா.அக) .

[கவப்பு + நெய்.]

கலப்புமணம் *kalappumaṇam,* பெ.(n.) ***கலப்புத் திருமணம்*** பார்க்க see *kalappu-t-tirumaṇam.*

[கலப்பு + மணம்.]

கலப்புமேற்கட்டு *kalappu-mērkaṭṭu,* பெ.(n.) கல்லும் மரமும் கொண்டு அமைக்கப்படும் கோயில் மேற்கட்டு; turret of a temple made of stone and wood.

[கலப்பு+மேல்+கட்டு.]

கலப்புமொழி *kalappumoḻi,* பெ.(n.) ஒன்றுக்கு மேற்பட்ட மொழிக்கூறுகள் கலந்துள்ள மொழி; hybrid language.

[கலப்பு + மொழி.]

கலப்புவிமானம் *kalappu-vimāṉam,* பெ.(n.) ***கலப்பு மேற்கட்டு*** பார்க்க; see *kalapumērkaṭṭu*

[கலப்பு + மேல் + கட்டு.]

கலப்புவினை *kalappuviṉai,* பெ.(n.) பிறமொழிச் சொற்கள் தமிழ் வினையுடன் சேர்ந்து உருவாகும் கூட்டு வினை; a mixed compound verb, a foreign noun and a native auxiliary verb.

[கலப்பு + வினை.]

பெரும்பாலும் ஒருமொழி பிறமொழியினின்று பெயர்ச்சொல்லையே கடன் கொள்ளும். அவ்வாறு கடன் கொண்ட செயர்ச் சொற்களுடன் தம்மொழித் துணை வினைகளை இணைத்துக்கலப்பு வினை உருவாக்குவது அனைத்து மொழிகளிலும் காணப் படும் பொதுத்தன்மை எனினும் இது முற்றிலும் விலக்கத்தக்கது.

எடு : (சாந்தி) பண்ணு, try- பண்ணு, copy அடி.

கலப்புறம் *kalappuṟam,* பெ.(n.) 1. மருந்து அரைக்கும் குழியம்மி; apthecary's stone-mortar. *"கலப் புறத்திற்றேய்த்து" (பரராச.1.235.).* 2. உண்கலத்தின் அடிப்பக்கம்; the bottom of an eating plate made of bell metal (சா.அக).

[கலம் + புறம்.]

கலப்புறுமொழி *kalappuṟu-moḻi,* பெ.(n.) இருதிணை யிலும் வருஞ்சொல் (பேரகத்.139.); words which occur in both genders, uyardiṇai and akriṇai.

[கலப்பு + உறு + மொழி.]

கலப்புறை *kalappuṟai,* பெ.(n.)மருந்தின் மூன்று பகுப்புகளுள் ஒன்று; one among the mixture of drugs

[கலப்பு + உறை.]

கலப்பூ *kalappū,* பெ.(n.) கற் பிளவுகளில் முளைக்கும் கற்பாசி; stone-moss-lichen,

[கல்லு + பூ – கல்லுப்பூ → கலப்பூ.]

கலப்பெண் *kalappen,* பெ.(n.) கீழிலக்கத்துடன் (பின்னத்துடன்) சேர்ந்த முழு எண்; mixed number.

[கலப்பு + எண்.]

கலப்பை[1] *kalappai,* பெ.(n.) உழுபடை; plough,ploughshare. *"கலப்பை பூண்ட வேரால்" (சேக்கிழார்.பு.16.).* 2. ஒன்றற்கமைந்த உறுப்புகள்; parts as of a sacrifice. *"ஆயதற் குரியன கலப்பை யாவையும்" (கம்பரா.திருவவ. 84.).*

மறுவ. மேழி, ஏர், உழுபடை, நாஞ்சில், அலம்.

ம.கலப்பு; **க.**கலபு; **தெ.**கலப; **கசபா.** கலப்பெ; **து.**கலப்பு. **Skt.**hala,vedic.hal, **H.**hal.

[கலன் →கலம் + பை – கலப்பை. பெய் = பை. கலப்பை → கலன் (கொழு) சேர்த்து, கொழுமுனை செருகப்பட்டது, உழுபடை.]



கலப்பை

கலப்பை[2] *kalappai,* பெ.(n.)1. இசைக்கருவி முதலிய முட்டுகள் வைக்கும் பை; hold-all for keeping musical instruments and other articles.*"சுருக்கிக் காய கலப் பை"(மலைபடு.13.)* 2.யாழ்;*"காவினெங்கலனே சுருக்கினெங்கலப்பை"* (புறநா,206)

[கலன் + பை. பெய் – பை.]

கலப்பைக்கட்டை *kalappaikkattai,* பெ.(n.) கலப்பை செய்வதற்கான மரம்; piece of wood for making plough

[கலப்பை + கட்டை.]

கலப்பைக்கிழங்கு *kalappai-k-kilangu,* பெ.(n.) கார்த்திகைக் கிழங்கு; root of Malabar glory lily.

மறுவ. நாபிக்கொடிக்கிழங்கு; வெண் தோன்றிக் கிழங்கு.

ம. கலப்பக்கிழங்கு

[கலப்பை + கிழங்கு.]

கலப்பைக்குத்தி *kalappai-k-kutti,* பெ.(n.) மரத்தூண்களின்தலைப்பில் போதிகைக் கட்டை போலக் கூரைவளையைத் தாங்குவதற்காக வைக்கப்படும் கட்டை; cornice.

[கலப்பை + குத்தி.]

கலப்பைக்கூர் *kalappai-k-kūr,* பெ.(n.) கலப்பையின் கொழுமுனை; sharp point of the colter of a plough.

[கலப்பை + கூர்.]

கலப்பைகோ—த்தல் *kalappaikō-,* 4 செ.குன்றாவி. (v.t.) கலப்பையின் வடிவமைத்த உறுப்புகளைக் கோத்தல்;to assemble a plough.

[கலப்பை + கோ.]

கலப்பைச்சக்கரம் *kalappai-c-cakkaram,.* பெ.(n.) ஏர்ப்பொருத்தம் பார்க்கும் சக்கரம் (விதான.ஏர்மங். 4.தலைப்பு); (Astrol.) diagram in the form of plough used in determining the auspicious day for commencing ploughing during the season.

[கலப்பை + சக்கரம்.]

கலப்பைசேர்—த்தல் *kalappai-cēr-,* 4.செ.குன்றாவி. (v.t.) கலப்பை செய்தல் (வின்.); to make a plough.

[கலப்பை + சேர்.]

கலப்பைநாக்கு *kalappainākku,* பெ.(n.) கொழு; ploughshare

[கலப்பை + நாக்கு.]

கலப்பைநூல் *kalappai-nūl,* பெ.(n.) உழவுநூல்; science of agriculture. *"நுண்கலப்பை நூலோதுவார்" (சிறுபஞ்.60.)*

[கலப்பை + நூல்.]

கலப்பைப்படை *kalappai-p-padai,* பெ.(n.) பலராமர் பயன்படுத்திய போர்ப்படையாகிய ஏர்ப்படை; the plough used as a weapon of war by Balarama.

[கலப்பை + படை.]

கலப்பையெலும்பு *kalappaiyelumbu,* பெ.(n.) மூக்கின் துளையை இரண்டாகப் பிரிக்கும் எலும்பு;

a bone in the centre of the nose dividing the nostrils (சா.அக).

[கலப்பை + எலும்பு.]

கலபம் *kalabam,* பெ.(n.) மயிற்றோகை; peacock's tail-covert. *"மாக்கவின் மிகுங் கலப மஞ்ஞை" (திருவாத.பு.திருபெருந்.13.).*

[கல → கலவு → கலவம் → கலபம். கலவம்=தொகுதி.]

கலபி *kalabi,* பெ.(n.) மயில்;peacock. *"செழுங் கலபி யாலித்து" (கந்தரலங்.97).*

த.கலபி-->**Skt.**kalapin.

[கலவம் → கலபம் → கலபி.]

கலம்[1] *kalam,* பெ.(n.) 1.குழிந்த உண்கலம், ஏனம்; vessel;hollow utensil, as a cup; plate, whether of earth or metal; earthenware.*"பொற்கலத் தூட்டி" (நாலடி,345.).* 2.குப்பி; bottle-shaped vessel. *"யவனர் நன்கலந்தந்த....தேறல்" (புறநா.56,18).* 3. மரக்கலம்;ship, boat. *"கலங்கவிழ் மாக்களை" (மணி,மே.16,120).* 4. அணிகலன்; jewel. *"நன்கலம் பரிசின் மாக்கட்கு நல்கி" (புறநா.6,15).*

க. கல; **ம.** கலம்; **தெ.** கலமு(கப்பல்); **கோத.** கல்ம்; **குட.** கல; **து.** கர; பிரா. கலண்; (உடைந்த பானையோடு).

மா. கால் (தொன்னை) **Skt.**kala(boat).

[குல் → கல் → கலம்=தோண்டப்பட்டது. கர;பிரா. கலண்ட் (உடைந்த பானை ஒடு)அல்லது குழிந்த ஏனம் (வே.க.190, senegalese;gal (boat); manding;kulu(boat) ஒ.மொ.நூ.178.]

பழங்காலத்தில் சமைப்பதற்குக் கற்கலம் உதவிற்று. கல்லுதல், தோண்டுதல் அல்லது குடைதல்; கல்லப்பட்ட ஏனம் கலம் எனப்பட்டது [தமி.வர.33] Galleon (Sp.galeon-low.L.galea), galley(o.Fr.galee.)என்னும் பெயர்கள் கலம் என்னும் பெயரைப் பெரும்புடை ஓத்திருக்கின்றன. நில வாணிகம் போன்றே நீர்வாணிகமுஞ் சிறந்தது. ஆற்றைக் கடக்கப் பரிசல்,அம்பி,ஓடம்,பள்ளியோடம் முதலிய கல வகைகளும்;கால்வாய் 'ஆறு' கரை யோரக் கடல் ஆகியவற்றிற் சரக்குகளைக் கடத்து தற்குதோணி, பஃறி முதலிய கடத்து வகைகளும் கடலினுட்சென்று மீன் பிடிக்கக் கட்டுமரம், மேங்கா, திமில், படகு முதலிய சிறுகல வகைகளும்; முத்துக் குளிக்கச் சலங்குப் படகும், ஆழ்கடலைக் கடந்து அக்கரை நாடுகளில் வணிகஞ் செய்து மீளக் கப்பல், நாவாய், வங்கம் முதலிய பெருங்கல வகை களும் ஏற்பட்டன [தமி.வர.92,93].

கலம்[2] *kalam,* பெ.(n.) 1.உழுபடை(சூடா); plough. 2.படைக்கலம்; weapon. *"கையினுங்கலத்தினு மெய்யுறத் தீண்டி" (பட்டினப்.70).*3.வெண்கலம் ;bell-metal (சா.அக).

[குல் → கல் → கலன்பொருத்தியது,பொருந்தத்தக்கது பணியாற்ற உதவியாய் அமைந்தது.]

கலம்[3] *kalam,* பெ.(n.) 1.யாழ்; lute.*"கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டத்தால்" (சிலப்.7,24.).* 2. ஓலையாவணம் (தொல்.சொல்.81. உரை.); document written on palm-leaf.

[குல் → கல் → கலம் (உட்குழிவானது).]

கலம்[4] *kalam,* பெ.(n.) மூன்று தூணிகொண்ட ஒரு முகத்தலளவு (தொல்.எழுத்து.168);a measure of capacity. *'நல்லநாளில் நாழிப்பால் கறவாதது கன்று செத்துக் கலப்பால் கறக்குமா?' (பழ.).*

ம.கலன்; **க.**கலம்.

[குல் → கல் → கலம் = உட்குழிவானது, முகத்தல் அளவை]

பன்னிரண்டு மரக்கால் ஒருகலம். இரண்டுகலம் ஒருமூட்டை பன்னிரண்டு கலம் ஒருபொதி. நாலு மரக்கால் ஒரு தூணி. மூன்று தூணி ஒரு கலம்.

கலம்[5] *kalam,* பெ.(n.)பத்தி; column, a narrow division of a sheet, page,etc.

[கால் → காலம் → கலம் (நீண்டது ,உயரமானது, நெடுகப்பிரிக்கப்பட்ட பகுதி.)]

கலம்[6] *kalam,* பெ.(n.) வில்லங்கம்;encumbrance. *"நிலத்துக்கு எப்பேர்ப்பட்ட கலமும் இறையுமில்லை"* (S.I.I.VII,279.).

H. galti.

[குல் → கலம். கல் = கருப்பு,குற்றம்]

கலம்[7] *kalam,* பெ.(n.)தொழு பஃறி (இரேவதி) நாண்மீன்; the 27th naksatra. *"பூரம் பரணி கலம்" (சிலம்பு.3,123,உரை).*

[குல் → கல் → கலம். (கலம் போன்ற வடிவுடையது.]

கலம்சாம்பலிடு—தல் *kalamšāmbalidu-,* 17 செகுன்றாவி. (v.t.) எச்சிற் கலத்தைச் சாம்பலிட்டுக் கழுவுதல்; to wash

vessels with ash. எச்சில் எடுத்து எச்சில் மண்டலம் செய்து கலம் சாம்பல் இடுவாள் ஒருத்திக்கு நிசதம் நெல்லு (S.I.I.vol.19.insc.357. S.No.64,65).

[கலம் + சாம்பல் + இடு.]

கலம்பகக்கலி *kalambaga-k-kali,* பெ.(n.) அடிகள் எழுத்தொவ்வாது வருங்கலி (யாப்.வி.95,470.); stanza consisting of lines of unequal number of letters, opp.to கட்டளைக்கலி.

[கலம்பகம் + கலி.]

கலம்பகம்[1] *kalambagam,* பெ.(n.) 1.பூக்கலவை; mixture;compound;combination;miscellany;perfumed ointment containing several ingredients. *"கலம்பகம்புனைந்த வலங்கலந் தொடையல்" (திவ்.திருப்பள்ளி.5.).* 2. குழப்பம்(வின்.); confusion, tumult, disturbance. 3. ஒரு கணித நூல்(கணக்கதி,5, உரை.); a work in mathematics.5. கடப்பமரம்; seaside indian oak (சா.அக).

ம.கலம்பன்

[கலம்பம் → கலம்பகம்; 'அகம்'சொல்லாக்க ஈறு.வே.க.133]

கலம்பகம்[2] *kalambagam,* பெ.(n.) பல்வகை செய்யுட்களாலாகிய சிற்றிலக்கிய வகை (இலக்.வி.812); a kind of poem composed of different kinds of stanzas.

[குல → கல →கலவை, கல → கலம் → கலம்பம்→ கதம்பம் = பலவகைப் பூக்கள் கலந்தமாலை, கலம்பு → கலம்பகம்= பலவுறுப்புகள் கலந்து வருஞ்செய்யுள் நூல் (மு.தா.176).]

ஒரு போகுவெண்பாக் கலித்துறை முதல் கலியுறுப்பாகக் கூறிப் புயவகுப்பு;மதங்கம், அம்மானைக் காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் மிப்பதினெட்டுறுப்பு மியைமடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சி விருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை யென்னும் மிவற்றின் இடையே வெண்பாவுங் கலித்துறையும்விரவிவன் அந்தாதித் தொடையான் முற்றுறக் கூறுவது.

கலம்பகமாலை *kalambaga-mālai,* பெ.(n.) 1. பல பூக்கள் கலந்த மாலை; garland of flowers of different kinds; *'கலம்பகமாலையைப் பணியாக' (ஈடு,அவ.).* 2. சிற்றிலக்கிய வகை (வின்.); a kind of poem formed of different kinds of verses.

ம. கலம்பன்மால

[கலம்பகம் + மாலை, கலம்பு →கலம்பகம்.]

கலம்பகன் *kalambagan,* பெ.(n.) செவிட்டூமன்; dumb and deaf person.

[கலம்பு (குழப்பம் = செயலறுதல்) → கலம்பகன்.]

கலம்பங்கயிறு *kalambaṅkayiṟu,* பெ.(n.) தும்பினால் செய்த கயிறு (ம.அக); rope made of coconut fibre.

கலம்பம்[1] *kalambam,* பெ.(n.) வைப்பு நஞ்சு வகைகளிலொன்று; a mineral poison.

[கல் → கல → கலம்பு → கலம்பம்.]

கலம்பம்[2] *kalambam,* பெ.(n.) கடப்பமரம் (சங்.அக.); common Kadamba tree.

[கடம்பம் → கலம்பம் (கொ.வ.).]

கலம்பாடு *kalam-pāḍu,* பெ.(n.) ***கலவித்துப்பாடு*** (T.A.S.I.i.10.) பார்க்க; see *kalavittu-p-pāḍu.*

[கலவித்துப்பாடு → கலம்பாடு.]

கலம்பாவேர் *kalambāvēr,* பெ.(n.) மிகுக் கசப்புச் சுவையுடையதும் உடலுக்கு வலுவைக் கொடுக்கக் கூடியதுமான ஒருவகைச் செடியின் வேர்; a bitter root which gives strength to body(சா.அக).

கலம்பி *kalambi,* பெ.(n.)1. கொத்துப்பசளை (மலை.); cluster of Malabar night shade. 2. கொடிப்பசலை; red malabar night shade (சா.அக).

[குல் → குலம்பி → கலம்பி.]

கலம்பூச்சு *kalam-pūccu,* பெ.(n.) ஏனந்தேய்க்கும் ஓசை; sound produced when scouring household utensils. *"கலம்பூச் சாவஞ் சிலஞ்சி முற்றத்து" (பெருங்.உஞ்சைக். 40,128.).*

[கலம் + பூச்சு.]

கலமடல் *kalamatal,* பெ.(n.) அஞ்சல் முறையிலன்றிக் கலம் வாயிலாக அனுப்பப்படும் மடல் (அ) முடங்கல்; letter (or) written message.

[கலம் + மடல்.]

கலமம் *kalamam,* பெ.(n.) சின்னச்சம்பா நெல்; a small variety of south Indian paddy.

[கலவம் → கலமம்.]

கலமர் *kalamar,* பெ.(n.) பாணர்(அக.நி.); a class of minstrels in ancient Tamil country.

[கலம் + அர் – கலமர், கலம்-யாழ். கலமர்-யாழிசைக்கும் பாணர்.]

கலமலக்கு—தல் *kalamalakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) உழக்குதல்; to cause to flounder; to stir, agitate,confound. *"மனத்துள்ளே கலமலக்கிட்டுத் திரியும் கணபதி" (தேவா.949,5.).*

[கலக்கு + மலக்கு. கலக்குமலக்கு → கலமலக்கு.]

கலமறு¹—த்தல் *kalamaru-,* 5. செ.குன்றாவி.(v.t.) கடலில் பகைவரின் மரக்கலங்களைப் போரிட்டு அழித்தல்; to destroy ships of the enemies or pirates.

[கலம் + அறு.]

காந்தளூர்ச் சாலை கலமடுத்த [கல்.வெ] சோழப்பேரரசன் இராசராசனின் [985–1014] மெய்க் கீர்த்தியில் அவன் ஈழமண்டலம் முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரம் போன்ற பலஇடங்களை வென்ற வெற்றிச்சிறப்போடு காந்தளூர்ச்சாலை கலமறுத் தருளிய அருஞ்செயலும் குறிப்பிடப்படுகிறது. விக்கிரம சோழனுலா, குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ் கலிங்கத்துப்பரணி ஆகிய நூல்களும் இதனைப்போர்வெற்றியாகவே குறிப்பிடுகின்றன. கலமறுத்தான் என்பதற்கு வடமொழி பயிலும் மாணவரின் பாடசாலைக்கு இத்தனைக் கலம்நெல் என்று அளவீடு செய்ததாக உரை கூறுவது பொருந்தாது. கோக்கருநந்தடக்கனின் [கி.பி.885] பார்த்திப சேகரபுரத்துச்செப்பேட்டில், காந்தளூர்மர் யாதியால் தொண்ணூற்று ஐவர் சட்டர்க்குச் சாலையும் செய்தான் என்னும் மேற்கோளும் கலமறுத்த செய்திக்குத்தக்க எடுத்துக் காட்டு ஆகாது. 'இச்சாலைக்குப் பெய்த கலத்தில் பவிழிய சரணத்தார் கலம் நாற்பத்தைந்து' என்னும் தொடரிலும் கலமறுத்தல் என்னும் சொல்லாட்சி இடம் பெறவில்லை. வடமொழி பயிலும் மாணவர்க்கு உணவளித்த சேரநாட்டு நான்கு ஊர்களிலும் அவர்களுக்கு வேண்டிய நெல் அவ்வூர் கோயிலி லிருந்து தரப்பட்டதாகத் திரவிடக் கலைக் களஞ்சியம் கூறுகிறது. அந்த நெல் அளவு 5 மரக்கால் கொண்ட பறை அளவாகக் குறிக்கப்பட்டுள்ளது. தமிழக முறையைப் பின்பற்றி 8 மரக்கால் கொண்ட கல அளவாகக் கூறப்படவில்லை. கோயிலில் ஏற் கெனவே நெல் தரப்பட்ட நிலையில் இராச ராசனும் நெல் வழங்க வேண்டியதில்லை. நெல் வழங்குவதும் ஓர் அருஞ்செயலாகாது. இராசராசன் தன் ஆசிரியருக்கு [அவர் எந்த நாட்டிலிருந்தாலும்] ஆண்டுக்கு ஈராயிரம் கலம் நெல் வழங்கி யிருக்கிறான். நெல் தருவது அருஞ்செயலாயின் அதுவும் மெய்க்கீர்த்தியில் குறிப்பிட்டிருக்க வேண்டு மல்லவா? ஆதலின் கலமறுத்தல்என்பதற்கு நெல் வழங்கும் அளவை வரையறுத்தான் என்பது முற்றிலும் பொருந்தாது.

மற்றும் ஒரு சாரார் கலம் என்னும் வடசொல், பிழை என்று பொருள் தருதலால் வடமொழிவேதம் பயிலும் மாணவர் ஓதுதலிலும் எழுதுதலிலும் பிழைதவிர்ந்தார்க்கு என்னும் பொருளில் கலமறுத்து என்னும் சொல் ஆளப்பட்டிருப்பதாகக் கூறுவதும் இங்குப்பொருந்தாது. தஞ்சை தேவராயன் பேட்டைக் கல்வெட்டில், "கலமறுத்து நல்லாரா யினார் ஒருவற்கு" எனவும் திருச்சி காமாரசவல்லி கல்வெட்டில், " கலமறுத்துச் சொல்லினாரானார்" எனவும் கூறப்பட்டிருப்பினும் பிழையின்றி எழுதவும் சொல்லவும் வல்லராக்குவது ஆசிரியனின் கடமை யாகுமே யன்றி அரசனின் பொறுப்பும் சிறப்பும் ஆகாது. ஆதலின் இவை பொருந்தா உரைகளாகும்.

மெய்க்கீர்த்தியில் கூறப்பட்ட வெற்றிகள் திண்டிறல் தண்டாற் கொண்ட கோப்பரகேசரி என்று தெளிவாகக் கூறப்பட்டிருப்ப தாலும், கலிங்கத் துப்பரணியில் காந்தளூர்ச்சாலை என்னும் ஊர்ப் பெயரையே குறிக்கும் சாலை என்னும் சொல்லைக் கையாண்டிருப்பதாலும்,

"வேலை கொண்டு விழிஞம் அழித்ததும்
சாலை கொண்டதும் தண்டு கொண்டே அன்றோ"

காந்தளூர்ச்சாலை என்னும் கடல் துறையில் பகைவரின் மரக்கலங்களை அழித்த கடற்போர் வெற்றியையே ஐயமின்றி கலமறுத்தருளி என்னும் சொல் குறிக்கிறது என்பது உறுதிப்படுகிறது. அருளி என்னும் வினையெச்சம், கடற்கடம்பர்களாலோ பிற வன்முறையாளர்களாலோ கடல் வணிகரும் கடலோடிகளும் பட்ட துன்பங்களிலிருந்து அவர் களைக் காத்தருளிய அருஞ்செயலைச்சுட்டி நிற்கிறது.

இடைக்காலச் சோழர்கள் கடலில் நிலையான பெரும்படை வைத்திருந்தனர் என்பது கடலகப்

பெரும்படைத் தலைவன் என்னும் கல்வெட்டுத் தொடராலும் உறுதிப்படுகிறது.

கலமறு[2]**–த்தல்** *kalamaru-,* 5-செ.குன்றாவி.(v.t.) வடமொழிப்பாடசாலையில் இத்தனைப் பேர்க்கு உணவளிக்க வேண்டும் என்று வரையறுத்தல்; to fix the number of persons to be fed in sanskrit school.

[கலம் (உண்கலம்) + (அறு வரைறைசெய்).]

கலமறுப்பி–த்தல் *kalamaruppi-,* 1 பி.வி. (caus.) மரக்கலங்களை அழித்தல்; to destroy boats etc., வேணாட்டாரை சேணாட்டொதுக்கி மேவு புகழி ராமகுடமூவர் கெடமுனிந்து வேலைகெழு காந்தளூர்ச்சாலை கலமறுப்பித்தா கவமல்லனும் அஞ்ச (S.I.I.17,23,:19.).

[கலம் + அறு + பி. கலம் (மரக்கலம், கப்பல்) + அறுத்தல் = அழித்தல்.]

கலமா *kalama,* பெ.(n.) மாக்கல்; pot-stone used for making pots and dishes. 2. எழுதுகல் (பற்பக்கல்); soapstone (சா.அக).

[கலம் → கலமா.]

கலமிடு–தல் *kalamiḍu-,* 7 செ.குன்றாவி.(v.t.) ஏனம் செய்து தரல்; to provide vessel. சாலைக்குக்கலம் இட குசவன் னொருவனுக்கு நிசதம் நெல்லு இருநாழியாக (S.i.i.vol.19.insc.357.s.no.68).

[கலம் + இடு.]

கலமிழ–த்தல் *kalamiḷa-,* செ.குன்றாவி.(v.t.) உண்கலத்தைத் துறத்தல்; to renounce eating plate 'சட்டர்–பொருவார் அற்றைக்கலம் இழப்பது (கல்.கலை.அக).

[கலம் + இழ.]

கலமூர்–தல் *kalamūr-,* செ.குன்றாவி.(v.t.) கப்பல் செலுத்துதல்; to sail.

[கலம் + ஊர்.]

கலமெடு–த்தல் *kalameḍu-,* 4 செ.குன்றாவி.(v.t.) வரி நிலுவைக்காக வெண்கல ஏனங்களைப் பறிமுதல் செய்தல்; to seize bronze vessels for the tax dues. *"இம் முதல்கள் தண்டுமிடத்து மண் கலந்தந்தும் வெண்கல மெடுத்தும்" (ஆவணம் 1991:10–iii:2).*

[கலம் + எடுத்தல் – கலமெடுத்தல்.]

கலயம் *kalayam,* பெ.(n.) 1. மாழை அல்லது மண்ணாலாகிய கலம்; small pot of earth or metal. *"கலயத்தின் முகந்து தண்புனலாட்ட" (சிவப்.பிரபந். சோணசைல.10).* 2. நீர்பருகும் சிறுகுவளை (கிறித்.); tumbler.

H; gat cup vedi; kala-ska, **pali;**kalavam vagri **Boli;** kali pkt kalas. **skt;** kala sa **arab;** kala

[குல் → கல் → கலயம். (உட்குழிவானது).]

கலயன் *kalayaṉ,* பெ.(n.) இடையன்; cowherd

[கலயம் → கலயன்.]

கலயனார் *kalayaṉār,* பெ.(n.) அறுபத்து மூன்று நாயன்மாருள் குங்கிலயக்கலயர் என்னும் நாயனார்; a canonized Saiva Saint, one of 63 Nāyaṉmārs கலயனார் (பெரியர் குங்கிலியக்.9.).

[கலயம் → கலயன் + ஆர்.]

கலர் *kalar,* பெ.(n.) 1. கீழோர்; the vulgar, the rabble. *"கலரெனத் தணித்தலும்" (ஞானா.48,19.).* 2.தீமக்கள்; the wicked. *"கலராயினர் நினையார் தில்லை" (திருக்கோ.259.).*

[கல் → கலர். கல் = கருப்பு, தீமை.]

கலரவம் *kalaravam,* பெ.(n.) 1. புறா; dove 2. குயில்; cuckoo.

ம. கலரவம்; **skt.** kalaravam.

['கல்' ஒலிக்குறிப்பு கல் + அரவம், அரவம் = ஆரவாரம், ஒலி எழுப்புதல்.]

கலரை *kalarai,* பெ(n.) ஒன்றரைக்கலம் அளவைக் குறித்த முகத்தல் அளவு (தொல். எழுத்து.171.உரை); a measure of capacity, prob. equal to a kalam and a half.

[கலம் + அரை; கலமும் அதன்மேல் அரைக்கலமும் ஆக 1.5 கல அளவு.]

கலல் *kalal,* பெ.(n.)1. ***கல்லல்*** (C.G.) பார்க்க; see *kallal.* 2. செய்தல்; making, doing 3. சேர்த்தல்; join-ing, affixing.

க. கலன

[கல்லல் → கலல்.]

கலலம் *kalalam,* பெ.(n.) கருவைச் சூழ்ந்து தோன்றுந் தோல்; thin membrance covering the foetus. *“சேருமற்றைத்தினங் கலலம்”(சூத.ஞான.10,9.).*

[குல் → கல் → கலல் → கலலம் (சுற்றிச்சூழ்வது.]

கலவகம் *kalavagam,* பெ.(n.) காக்கை (வின்); crow.

[கல் → கலவம் → கலவகம் (கருப்பாய் இருப்பது).]

கலவங்கீரை *kalavaṅ-kīrai,* பெ.(n.) ***கலவைக்கீரை*** (இ.வ);பார்க்க;see *kalavai-k-kīrai.*

[கலவை → கலவம் + கீரை.]

கலவஞ்சம்பா *kalavañ-cambā,* பெ.(n.) ஆறு மாதத்திற் பயிராகக் கூடிய சிறுமணி நெல்.(இ.வ.); a variety of small camba paddy maturing in six months.

[கலவம் + சம்பா.]

கலவடை[1] *kalavaḍai,* பெ.(n.) 1. ஏனம் (பாத்திரம்) உருண்டு போகாமல் இருப்பதற்காக ஏனத்தின் அடியில் வைக்கப்படும் கயிறு வைக்கோல் போன்றவற்றால் செய்யப்பட்ட வளையம்; plaited coil of straw or coir used for resting vessels; mouth of broken pot, also used as a rest, as above. 2.உரலிலிட்டுக் குற்றும் பொழுது தவசம் சிதறாமலிருக்க உரலின் மேல் பாகத்தில் வைக்கும் கல், இரும்பு, மண் போன்றவற்றாலான வட்ட வடிவ அடைப்பு ; circular piece of stone, iron, earth fitted to the mouth of a mortar to keep the grain within.

[கலம் + அடை. அடை = துணையாகும் சேர்ப்பு.]



கலவடை

கலவடை[2] *kalavaḍai,* பெ.(n.) அறிவிலியைக் குறிக்கும் வசைச்சொல்; a reproaching term.

[கலம் + அடை – கலவடை.]

தனித்துப்பயன்படாத் தன்மையைக் கொண்டது. அதனால் இது தனித்து இயங்கும் திறமின்மையைக் கொண்டோரைக் குறிக்கும் வசையாயிற்று.

கலவம்[1] *kalavam,* பெ.(n.) 1. கற்றையான மயிற் றோகை; peacock's tail. *“கலவம் விரித்த மஞ்ஞை” (பொருந.212.).* 2.மயில் (சினையாகுபெயர்); peacock. *“கலவஞ்சேர் கழிக்கானல்” (தேவா.532,4).* 3.கலாப மென்னும் இடையணி; women's jewelled girdle. *“பூந்துகில் கலவங்கண் புதையாது” (சீவக.1982).*

[கல → கலவு. கலவுதல் = கலத்தல். கலாவுதல் = கலத்தல். கலவம் → கலாவம் = மயில் தோகை.சினையாகு பெயராய் மயிலைக்குறித்தது. மயில் தென்னாட்டுக் குறிஞ்சி நிலத்திற்குரிய பறவை;குறிஞ்சித் தெய்வமாகிய முருகன் ஊர்தி. வடமொழியின் கலா (சிறுபகுதி) + ஆப் (கொள் to obtalin) என்று பிரித்து, பல பகுதிகளை ஒன்று சேர்த்து கற்றை (“ that which holds single parts together, a bundle” என்று காரணங்கூறுவது, வட்டஞ்சுற்றி வலிந்தும் நலிந்தும் பொருள் கொள்ளுவ தாயிருத்தல் காண்க.]

த. கலவம் > **skt.** kalaba.

கலவம்[2] *kalavam,* பெ.(n.) தோணி; boat. *“கலவஞ்சேர் கழிக்கானல்” (தேவா.532,4.).*

[கலம் + அம் – கலவம்.]

கலவம்[3] *kalavam,* பெ.(n.) குழியம்மி (நாமதீப.); chemist's mortar., an apothecary's mortar in which drugs are rubbed with a pestle.

தெ. கலவமு

[கல + அம் – கலவம்(உட்குழிவானது).]

கலவர் *kalavar,* பெ.(n.) 1. மரக்கலமாக்கள்; navigators, sailors. *“கடற்குட்டம் போழ்வர் கலவர்” (நான்மணி.16.).* 2. கப்பலிற் செல்வோர்; passengers in a ship. *“காற்றத்திடைப்பட்ட கலவர் மனம்போல்” (திவ்.பெரியதி.11,8,2).* 3. நெய்தனில மாக்கள்; inhabitants of a maritime tract, fishermen. *“கலவர்.... மீனெறி சால நேர்விரித் துலர்த்தலும்” (சேதுபு .கந்தமா.91).* 4. படைவீரர்(வின்.); warriors.

தெ.கலமரி; **Skt.** kalā.(boat)

[கலம் + அர் – கலமர் → கலவர். கலம் = மரக்கலம்.]

கலவரம்[1] *kalavaram*[1], பெ.(n.) 1. குழப்பம், மனக் கலக்கம்; confusion of mind, perturbation, perplexity. 2.பூசல், சிறுசண்டை; quarrel.

மறுவ: கலவரை

க. களவள, களவளிகெ; **து.** களவள; **தெ.** களவளமு, கலவரமு ; **H.** kalāṭṭa.

[குல் → கல் → கல + வரல் – கலவரல் → கலவரம்.]

கலவரி—த்தல் *kalavari-*, 4 செ.கு.வி.(v.i.) 1. கலங்குதல் (வின்); to be confused, perturbed. 2. சச்சர விடுதல்; to fight.

க. களவளம்படு; **தெ.** களவளின்சு.

[கலவரம் → கலவரி.]

கலவரை[1] *kalavarai*, பெ.(n.) ***கலவரம்*** பார்க்க; see *kalavaram*.

க. களவளிகெ

[கலவரம் → கலவரை.]

கலவரை[2] *kalavarai*, பெ.(n.) ஒன்றரைக்கலம் அளவு; a measure of one and a half kalam. *"நிசதி கலவரை அரிசி" (கல்.வெ.கலை.அ.).*

[கலம் + அரை – கலமரை → கலவரை.]

கலவல் *kalaval*, பெ.(n.) 1. கலக்கை (பிங்.); mixing, combining. 2. எழுத்திலாவோசை (வின்); inarticulate sound.

தெ. கலபமு

[கலவு → கலவல் (வே.க. 133).]

கலவறை *kalavaṟai*, பெ.(n.) அணிகலன் வைக்கும் அறை; strong room, guarded chamber in a palace in which ornaments are kept. *"வியனகர்க் கலவறை காக்கும்" (பெருங்.உஞ்சைக்.32,61.).*

[கலன் → கலம் → கல + அறை – கலவறை.]

கலவன் *kalavaṉ*, பெ.(n.) கலப்பானது (இ.வ.); medley, hotch-potch, mixture of various things.

[கல → கலவன்.(வே.க. 133)]

கலவாங்கட்டி *kalavāṅ-kaṭṭi*, பெ.(n.) உடைந்த ஓடு (யாழ்ப்); (சில்லு) small potsherd.

[கலயம் → கலவம் + சட்டி – கலவஞ்சட்டி → கலவாங்கட்டி. (கொ.வ.)]

கலவாணியன் *kalavāṇiyaṉ*, பெ.(n.) குயவன்; potter (திருவாங்கூர். கல் .அக.பக்.37).

[கல + வாணியன்.]

கலவாய்[1] *kalavāy*, பெ.(n.) கடல்மீன்வகை (வின்.); the sea-perches.

[கல + வாய்.]

கலவாய்மீன் வகை

1. கலவாய் - perch
2. சிவப்புக் கலவாய் - red perch
3. வடுத்தலைக்கலவாய் - sore headed perch
4. புள்ளிக் கலவாய் - spotted perch
5. வரிக்கலவாய் - striped perch
6. மஞ்சட்கலவாய் - yellow perch (சா.அக)

கலவாய்[2] *kalavāy*, பெ.(n.) வெடிவகை (சங்.அக.); a *kind of crackers*.

[கல + வாய் – கலவாய்.]

கலவாய்[3] *kalavāy*, பெ.(n.) நீலஅல்லி;blue Indian water lily (சா.அக).

[கலம் → கல+ வாய்.]

கலவாயோடு *kalavāy-ōḍu*, பெ.(n.) கடனுரை (யாழ்ப்.) foam.

[ஒருகா. கடல்வாய் → கலவாய் + ஓடு – கலவாயோடு.]

கலவார் *kalavār*, பெ.(n.) பகைவர்; enemies. *"கலவார் முனைமேற் செலவமர்ந்தன்று" (பு.வெ.1,3, கொளு.).*

[கலவு + (ஆ) ஆர் – கலவார். 'ஆ' எ.ம.இ.நி.புணர்ந்து கெட்டது.]

கலவாள் *kala-vāḷ*, பெ.(n.) மரக்கலத்தில் அல்லது கப்பலில் பணியாற்றும் ஆடவன்; a worker in the sailor's boat or ship.

H.,U., Ar., Pern. kalāsi.

[கலம் = மரக்கலம்; கப்பல். கலம் + ஆள் – கலவாள். 'வ்' உடம்படுமெய். கலம் + ஆள் – கலஆள் எனற் பாலது வட இந்திய மொழிகளிலும் பாரசிக அரபி மொழிகளிலும் கலாள்→கலாசி எனத்திரிபுற்றது. கலாசி என்னும் சொல்லுக்கு அரபி பாரசீக

மொழிகளிலும் வடஇந்திய மொழிகளிலும் வேர்மூலம் இல்லை. தமிழிலிருந்து அரபி முதலிய மொழிகளுக்கு 'கலாள்' கடன் சொல்லாகச் சென்றுள்ளது.]

கலவான் *kalavāṉ,* பெ.(n.) கலவாய் மீன்; the sea perch (சா.அக.).

[கலவாய் → கலவான்.]

கலவி *kalavi,* பெ.(n.) 1. கலக்கை (திவா.); union combination. 2. புணர்ச்சி; sexual union. *"கலவியான் மகிழ்ந்தான் போல்" (சிலப்.7,24, கட்டுரை.).*

[கல → கலவு → கல்வி.]

கலவித்துப்பாடு *kala-vittu-p-pāḍu,* பெ.(n.) ஒருகல விதை விதைத்தற்குரிய நிலம் (T.A.S.I,i,7.);land sufficient in extent for sowing one kalam of paddy.

[கலம் + வித்து + பாடு, கலம் = அளவு.]

கலவியிற்களி–த்தல் *kalaviyiṟkaḷi-,* 4 செ.கு.வி.(v.i.) புணர்ச்சியின் மகிழ்தல்; to enjoy in clandestine union between lovers before marriage.

[கலவி + இல் + களி.]

கலவிருக்கை[1] *kalav-irukkai,* பெ.(n.) இன்பம் நுகருமிடம்; pleasant abode. *"மாவலியை.... பாதாளங் கலவிருக்கை கொடுத்து" (திவ்.பெரியாழ். 4,9,7,.).*

[கலவு + இருக்கை. கலவுதல் = மகிழ்தல்.]

கலவிருக்கை[2] *kala-v-irukkai,* பெ.(n.) சரக்கறை; store-house. *"வேயாமாடமும் வியன் கலவிருக்கையும்" (சிலப்.5,7.).*

[கலம் + இருக்கை. கலம் = கொள்கலம்;பெட்டி, பேழை, போல்வன.]

கலவிருக்கை[3] *kalavirukkai,* பெ.(n.) ஓலக்க மிருக்கை; sitting in stage, as in an audience hall.

[கல → கலம் + இருக்கை. தமக்கு வேண்டிய துணைக் கலங்களுடன் கூடியிருத்தல்.]

கலவிரைப்பாடு *kala-virai-p-pāḍu,*பெ.(n.) ***கலவித் துப்பாடு*** (கொ.வ.) பார்க்க; see *kalavittu-p-pāḍu.*

[கலம் + (விதைப்பாடு) விரைப்பாடு (கொ.வ.).]

கலவினார் *kalaviṉār,* பெ.(n.)1.நண்பர்;friends, loving associates, relations. *"கலவினார் பழிகரக்கு மேதை" (தணிகைப்பு. திருநாட்டு.142.).* 2. உறவினர்; relations.

[கல → கலவு + இன் + ஆர். கலவு = கூடுதல். உறவாதல் 'இன்'சாரியை. 'ஆர்'ப.பா.ஈறு.]

கலவினை *kalaviṉai,* பெ.(n.) குயவன் செய்யும் கலத்தொழில்; pottery.

[கல(ம்) + வினை.]

கலவு[1]–தல் *kalavu-,* 5. செ.கு.வி. (v.t.) கலத்தல்; to mix. *"கனியின் றிரளுங் கலவி" (சூளாசீய.230.).*

[கல → கலவு(வே.க.133).]

கலவு[2] *kalavu,* பெ.(n.) உடலின் மூட்டுவாய்; joint of the body. *"கலவுக் கழி கடுமுடை" (அகநா.3.).*

[கல → கலவு.]

கலவு[2] *kalavu,*பெ.(n.) 1. துயரம்; grief. 2. பகைமை; enmity.

து. கலவு

[அலவு → கலவு.]

கலவூர் *kalavūr,* பெ.(n.) ஓர் ஊரின் பெயர்; a place name.

க. கலவூர்

[கலம் = மட்கலம், கலம் + ஊர்.]

கலவை[1] *kalavai,* பெ.(n.)1.பல்பொருட்கலப்பு; mixture,compound, medley. 2.விரை(மண) நீர்கலந்த சந்தனக் குழம்பு; perfumed paste of sandal *"தழுவிய நிலவெனக் கலவை" (கம்பரா.கடிமணப்.51.).* 3. கலந்த உணவு; mixture of different kinds of food, scraps, leavings. *"கலவை களுண்டு கழிப்பர்" (நாலடி, 268).* 4. மணல்கலந்த சுண்ணாம்பு (கொ.வ.); lime and sand mixed for mortar.5. சுதைமாவினை மணல், சல்லிக்கல், ஆகிய வற்றொடு நீரளாவி கலக்கிய கலவை; cement mixed with sand, gravel and water to prepare concrete.

[கல + வை – கலவை.]

கலவை[2] *kalavai,* பெ.(n.) மீன்வகை (G.TN.D.i,229); Indian rock cod.

[கல் → கல → கலவை.]

கலவை[3] *kalavai,* பெ.(n.) ஒருவரியின் பெயர்; name of a tax "கடமை அந்தராயம், சில்வரி, பெருவரி, நாடு... கலவை, காடுவெட்டி, முடிப்பொன், மற்றும் எப்பேர்ப்பட்ட தேவையும் தரகுந்தரவிட்டு" (தெ.இ.கல்.தொ. 23 கல் 19).

[கலவல் → கலவை.]

கலவைக்கீரை *kalavai-k-kīrai,* பெ.(n.) பலவகைக் கீரைகள் கலந்தது (பதார்த்த.592.); edible greens of sorts mixed together.

[கல → கலவை + கீரை.]

கலவைச் சந்தனம் *kalavai-c-candaṉam,* பெ.(n.) நறுமணப் பொருள்கள் சேர்ந்த சந்தனம். (பரத. பாவ.23. உரை); sandal paste prepared with the addition of many aromatic substances.

Skt. sandana > த. சந்தனம்.

[கலவை + சந்தனம்.]

கலவைச்சாந்து *kalavai-c-cāndu,* பெ.(n.) நறுமணச் சந்தனம் (இ.வ .); unguent of sandal paste with other aromatic ingredients.

[கலவை + சாந்து.]

கலவைச்சாறு *kalavai-c-cāṟu,* பெ.(n.) பலவகை மூலிகைகளினின்று பிழிந்தெடுக்குஞ் சாறு; a mixture of the expressed juices of several plants, (சா.அக).

[கலவை + சாறு.]

கலவைச்சுண்ணாம்பு *kalavai-c-cuṉṉāmbu,* பெ.(n.) மணலோடு கலந்த சுண்ணாம்பு; lime and sand mixed with water, mortar.

[கலவை + சுண்ணாம்பு).]

கலவைச்சேறு *kalavai-c-cēṟu,* பெ.(n.) ***கலவைச் சந்தனம்*** (திவா.) பார்க்க. see *kalavai-c-candaṉam.*

[கலவை + சேறு. செறு → சேறு).]

கலவைத்தசை *kalavai-tašai,* பெ.(n.) இறுகியமைந்த தசை (வின்); complex muscle. 2.பின்னலான தசை; a network of muscles (சா.அக.).

[கலவை + தசை.]

கலவைத்தொட்டி *kalavai-t-toṭṭi,* பெ.(n.) கலவை கலப்பதற்குப் பயன்படும் சிறிய தொட்டி; bucket used for mixing cement. sand etc.

[கலவைத் + தொட்டி.]

கலவைநீர் *kalavai-nīr,* பெ.(n.) நறுமணங் கலந்த நீர்; fragrant solution for ladies bath. *"கருங்குழல் கழீஇய கலவை நீரும்" (மணி மே 28. 6.)* பனிநீர்; dew water. 3. கருப்பை நீர்; water in the amniotic sac (சா.அக.).

[கலவை + நீர்.]

கலவைப்பொடி *kalavaippoḍi,* பெ.(n.) பல மூலிகைகளையிடித்துக் கலந்த மருந்துத்தூள்; a medicinal powder containing a mixture of several herbs pounded and pulverised. நறுமணக் கலப்புப் பொடி; a powder of different perfumes (சா.அக.).

[கலவை + பொடி.]

கவவைப்பொருத்து *kalavai-p-poruttu,* பெ.(n.) ஒரு வகை மூட்டு நோய்; a kind of disease in joints (சா.அக).

[கலவை + பொருத்து.]

கலவைப்பொன் *kalavai-p-poṉ,* பெ.(n.) தரக் குறைவான பொன்; gold mixed with other metals such as copper etc.

[கலவை + பொன்.]

கலவையணி *kalavai-y-aṉi,* பெ.(n.) நீரும்பாலும் போலப் பிரிக்க வியலாதவாறு பலவகை எழில் நலன் விரவி வரும் அணி (அணியி.பக்.43.).; figures of speech indistinguishably blended together, dist. fr. சேர்வையணி.

[கலவை + அணி.]

கலவோடு *kala-vōḍu,* பெ.(n.) மட்பாண்டச்சல்லி (யாழ்.அக.); Potsherd.

[கலம் + ஓடு.]

கலன்[1] *kalaṉ,* பெ.(n.) தடை, வில்லங்கம்; encumbrance. *"மனைக்கு... எப்பேர்ப்பட்ட கலனுமில்லை" (S.I.I.i.104.).*

[கல் + அன் – கலன். கல் = கருமை, குற்றம்.]

கலன்[2] *kalaṉ,* பெ.(n.) 1. பூண்; jewel.2. நாவாய்; ship. 3. யாழ்; lute. *"கலனிடைத் தருவதும்" (கந்தபு. திருநாட்டு 48.).*

[குல் → கல் → கலன். (உட்குழிவானது. உள்ளீடு கொண்டது.]

கலன்[3] *kalaṉ,* பெ.(n.) பன்னிரண்டு மரக்கால் கொண்ட முகத்தலளவு; a measure of capacity

[குல்→கல்→கலன்.]

கலன்[4] *kalaṉ,* பெ.(n.) கோட்சொல்பவன் (நாநார்த்த.); tale-bearer. 2. தீயவன்; wicked person. *"வற்கலக்கல னிற்க லின்றியே சொரிந்தனன்" (சேதுபு.17.).*

[கலம் → கலன்.]

கலன்கழிமடந்தை *kalaṉ-kaḻi-maḍandai,* பெ.(n.) கைம்பெண் (சூடா); lit., woman who has given up wearing ornaments, widow.

[கலன் + கழி + மடந்தை, கலன் = அணிகலன்.]

கலன்கொம்பு *kalaṉkombu,* பெ.(n.) கலைமான் கொம்பு; stag's horn (சா.அக.).

[கலை → கலன் + கொம்பு.]

கலனம் *kalaṉam,* பெ.(n.) 1. வாய்பிதற்றுகை; prattling, as in sleep. *"கலனமுறு சொப்பனத்தில்" (ஞானவா.உற்பத்.65).* 2. விள்ளு (விந்து) நெகிழ்ச்சி; seminal emission; செந்தீயிந்தியக் கலனஞ் செய்தான் (திருவிளை. மாணிக்.64.3. பெரும்பாடு) (யாழ்.அக); profuse discharge of menstrual blood. 4. வடித்தல்; filteration.

[கலுழ் → கலுழம் → கலுனம் → கலனம்.]

கலனரசு *kalaṉarašu* ,பெ.(n.) திருமணப்பூட்டு; lit., the paramount ornament. tali, the marriage badge.

[கலன் + அரசு. (அணிகலன்களுள் தலைமையானது. தாலி]

கலனி *kalaṉi,* பெ.(n.) வடித்தல்; filteration (சா.அக.).

[கலு → கலுழ் → கலுனி → கலனி.]

கலனிருக்கை *kalaṉirukkai,* பெ.(n.) 1. ***கலவிருக்கை*** (திவா.) பார்க்க; see *kalavirukkai.*

[கலவிருக்கை → கலனிருக்கை.]

கலனிலி *kalaṉili,* பெ.(n.) கைம்பெண் (நாமதீப.); widow.w

[கலன் + இலி. இல்லி → இலி. கலன் = அணிகலன்.]

கலனை[1] *kalaṉai,* பெ.(n.) 1. கலப்பை (திவா.); plough. 2. ஒன்றற்கமைந்த பல்வகை உறுப்புகள் (திவா); parts, as of a whole.

[கலன் → கலனை (கலன்களின் சேர்ப்பு).]

கலனை[2] *kalaṉi,* பெ.(n.) சேணம்; horse-saddle. *"மேற்கலனையினுக்க செம்மணி" (காஞ்சிப்பு.நகர. 17.)*

ம. கலன; **க.** கலின.

த. கலனை > **Skt.** Khalinam.

[கலன் → கலனை (கலன்கள் சேர்த்தது).]

'கலன்' என்னுஞ்சொல் வட புலமொழிகளில் 'லகான்' எனத் திரிந்தது.

கலாங்கம் *kalaṅgam,* பெ.(n.) துத்தவைப்புநஞ்சு (வின.); tutta vaippu-nanju, a mineral poison.

[கல் → கலங்கு → கலாங்கம் (கலந்து செய்யப்பட்டது).]

கலாங்கழி *kalāṅ-kaḻi,* பெ.(n.) ***கலாங்கம்*** *(யாழ்.அக.)* பார்க்க; see *kalāṅgam.*

[கல → கலங்கு → கலாங்கு → கலாங்கழி.]

கலாசாலை *kalā-sālai,* பெ.(n.) ***கலைச்சாலை*** பார்க்க; see *kalaic-cālai.*

[கலைச்சாலை → கலாசாலை. ஐ – ஆ வாகத் திரிவது வடசொற்றிரிபு.]

கலாசி[1] *kalāši,* பெ.(n.) 1. முன்கை (யாழ்.அக.); forearm. 2. சிற்றாள்; labourer who does helping work to a mason.

த. கலாசி > **Skt.** kalachi.

[குலம் → கலம் = பொருத்து. மூட்டு, முட்டிக்கை. முன்கை. கலம் = கலமுட்டுகளாகிய துணைக்கருவித்தொகுதி. கலம் → கலத்தி → கலாத்தி → கலாச்சி → கலாசி (கொ.வ.).]

யாழ்ப்பாணத்துச் சொல்லாட்சிகளில் எத்தகைய தொழிலிலும் துணைக்கருவிகளை அருகிருந்து எடுத்துத் தரும் சிற்றாளும் அத்தொழிலுக்குத் துணையான பணியாளனும் கலாத்தி, கலாசி என வழங்கப்படுதல் மரபாயிற்று.

கலாசி[2] *kalāśi,* பெ.(n.) ***கலவாள்*** பார்க்க; see *kalavāḷ.*

[கலவாள் → கலாசி.]

கலாட்டா *kalāṭṭā,* பெ.(n.) ***கலாட்டு*** பார்க்க;see *kalāṭṭu.*

[கலாட்டு → கலாட்டா (கொ.வ.).]

கலாட்டு *kalāṭṭu* பெ.(n.) குழப்பம்; disturbance. 2 . கலவரம், riot, commotion, tumult. 3. வேடிக்கை; merry making, fun.

தெ.கலாத

[கலகம் → கலாம் + ஆட்டு – கலாட்டு.]

கலாதன் *kalādaṉ,* பெ.(n.) தட்டான் (யாழ்.அக.) goldsmith.

த. கலாதன் >**Skt.** kaladaka.

[கலம் → கலத்தன் → கலாதன் (கொ.வ.).]

கலாப்பு *kalāppu,* பெ.(n.) காதணிவகை; an ear-ornament.

[கலம் → கலாப்பு.]

கலாபம்[1] *kalābam,* பெ.(n.) 1. பதினாறு கோவையுள்ள மாதரிடையணி; women's gurdle of beads or bells consisting of 16 strands. *"வெண்டுகிற் கலாபம் வீக்கி" (சீவக.624.).* 2. மேகலை (பிங்.); jewelled girdle of a woman. 3.மயிற்றோகை; peacock's tail. *"மணிவயிற் கலாபம்" (சிறுபாண்.15).* 4. மயிற்றோகைக் குடை (திவா.); umbrella made up of peacock's feathers.

க. கலாப, களாப.

த. கலாவம் > **Skt.** kalapa (peacock's tail)

[கலாவம் → கலாபம். கலாவம் = மயிற்றோகை.]

கலாபம்[2] *kalābam,* பெ.(n.) கலகம் சண்டை, எழுச்சி; rising, disturbance, uproar, raid, invasion.

ம. கலாபம்

[கலகம் → கலவம் → கலாவம் → கலாபம் (கொ.வ.).]

கலாபம்[3] *kalābam,* பெ.(n.) 1. தொகுதி; collection, cluster. 2.அம்புக்கூடு; quiver. 3. குழுகாயம்; society. மந்திரகலாப மார்க்கம் (சி.சி.99.9.மந).

[கலம் → கலவம் → கலாபம்.]

கலாபி *kalābi,* பெ.(n.) 1.மயில்; peacock. 2. பெண்மயில்; pea-hen. 3.மயிலிறகு;peacock's quill (சா.அக.).

[கலாவம் → கலாபம் → கலாபி.]

கலாபினை *kalāpiṉai,* பெ.(n.) கலகம் (யாழ்.அக.); disturbance.

[கலாம் + (வினை) பினை.]

கலாம்[1] *kalām,* பெ.(n.) 1.போர்; way, battle. *"கலாஅத் தானையன்" (புறநா.69இ11.).* 2. மாறுபாடு; rivalry, competition. *"போர்க்கலாமின்று கண்டும்" (சீவக.620.).* 3. சினம். சீற்றம்; (பிங்.); rage, fury. *"அருங்கலாமுற்றிருந்தானென்னினும் (இராம.சூர்ப்ப.141).* 4. கொடுமை (பிங்.); severity, impetuosity. 5. பகை; enmity.

த. கலாம்>**Skt.** kalaba

[குல் → கல் → கல → கலாம்.]

சண்டை இருவர் செய்யும் போர்; மல் இருவர் தம் வலிமை காட்டச் செய்யும் போர்; கலாம் பலர் செய்யும் போர் [சொல்.கட்.55.].

கலாம்[2] *kalām,* பெ.(n.) 1.ஊடல் (யாழ்.அக.); bouderie, feigred dislike as of a women to her husband.

[கல → கலாம் (மு.தா.180).]

கலாய்–த்தல் *kalāy-,* 4. செ.கு.வி.(v.i.) 1.கலகித்தல்; to quarrel, to be at variance. *"யாமினிக் கலாய்த்தல் வேண்டலொழிகென" (காஞ்சிப்பு. அனந்த.5.).* 2. சினத்தல்; to get angry. *"கலாய்த் தொலைப் பருகு வார் போல்" (சீவக.1950.).*

து. கலம்புனி

[கல → கலாய் → முதா 188.]

கலாயம் *kalāyam,* பெ.(n.) பட்டாணி;pea. 2.மோர்; butter milk. 3.தயிர்; curd.

[கல → கலாவு → கலாவம் → கலாயம் = நீருடன் கலந்தது.]

கலார் கூற்றம் *kalārkūṟṟam,* பெ.(n.) இலால்குடி வட்டம் ஆதிக்குடிப் பகுதியின் பழைய பெயர்;old name of Adikkudi of Lalgudi taluk. *"வடகரை மழநாட்டு கலார்க் கூற்றத்துக் கீழ்க் கூற்று பிரமதேயந் திருவாதிக்கு" (தெ.இ.கல்.தொ.19.கல் 57).*

[ஒருகா. கழார் + கூற்றம்–கழார்கூற்றம்→கலார்கூற்றம்.]

கலால் *kalāl,* பெ.(n.) **கள்ளாள்** பார்க்க see *kaḷḷāḷ.* 1. கள் (கொ.வ.); toddy. 2. சாராயம்; arrack. 3. புளிக்க வைத்த மது; any fermented liquor.

க. கலா

Skt.kalyapāla; **H., Mar.**,Kalāl; **Pkt.**kallāl.

[கள் + ஆள் – கள்ளாள் → கள்ளால் → கலால் (கொ.வ.). கள்ளாள் = கள் விற்கும் ஆளுக்கு இடப்பட்ட வரியைக்குறித்த சொல் 'கலால்' எனத் திரிந்தது. நாளடைவில் மது வகையைக் குறிக்கும் பொதுச் சொல்லாயிற்று.]

கலால்தீர்வை *kalāl-tīrvai,* பெ.(n.) கள்வரி (கொ.வ.); excise duty.

[கள்ளாள் = கள் விற்பவன் ; கள் விற்பவனுக்கு இடப்பட்ட வரி. கள் + ஆள் → கள்ளாள் → கலால் (கொ.வ).]

கலாவம் *kalāvam,* பெ.(n.) **கலாபம்**[1] பார்க்க;see *kalabam. "கலிமயிற் கலாவம்" (புறநா.1468.).*

[கல → கலவு → கலவம் → கலாவம் (மு.தா.116).]

கலாவு–தல் *kalāvu-,* 5.செ.கு.வி.(v.i.) கலத்தல்; to mix, join together, unite. *"வானத்து வீசுவளி கலாவலின்" (குறிஞ்சி.48.).*

[கலவு → கலாவு (வே.க.133).]

கலாவு–தல் *kalāvu-,* 5 செ.கு.வி.(v.i.)1. கலக்க மடைதல்; to be perturbed, confused. *"கண்ணி நீரலைக் கலாவ" (நெடுநல்.6.).* 2. சினத்தல்; to be displeased, angry. *"வசந்த மோகினி பெரு நிலாவினொடு கலாவினாள்" (குற்றா.குற.29).).*

[குல் → கல் → கலவு → கலாவு.]

கலி[1]**–த்தல்** *kali-,* 4. செ.கு.வி.(v.i.) 1. ஒலித்தல்; to sound, clamour, roar. *"கடவுட் பராவி நமர்கலிப்ப" (திருக்கோ.279.).* 2. யாழொலித்தல் (திவா.); to sound as Yāḻ. 3. செழித்தல்; to grow luxuriantly. *"ஆர்பெயற்கலித்த... நெல்லின்" (நெடுநல்.21.).*

தெ. கலுகு. கலிகின்சு (உருவாக்கு).

[குல் → கல் → கலி.]

கலி[2]**–த்தல்** *kali-,* 4 செ.கு.வி.(v.i.) 1.முளைத்தல், பிறத்தல்; to sprout , come into being. *"களியிடைக் கலித்த தென்ப" (ஞானா.11).* மழை பெய்தால் மீன் கலிக்கும் (நெல்லை). 2. எழுதல் (யாப்.வி.55.207.) to appear. become manifest. 3. உயர்தல்; to grow high. 4. பெருகுதல்; to increase. *"செய்யார் தேஎந் தெருமரல் கலிப்ப" (பொருந.134.).* 5. மகிழ்தல்; to rejoice. *"கலித்த வியவர்" (மதுரைக்.304.).* 6. செருக்குதல்; to swell, to be proud, to grow arrogant. *"கராஅல் கலித்த... அகழி" (புறநா.37.7).* 7. வேகமாதல் (யாப்.வி.55,207.); to be swift, quick. 8.நெருங்கி யிருத்தல் (யாப்.வி.55,207.); to be dense, crowded. 9. கக்குதல்; rejecting through the mouth. 10. தழைத்தல்; sprouting (சா.அக.) *"கலிகொள் யாணர் வெண்ணிப்பறந்தலை" (புறநா.99).*

[குல் → கல் → கலி (வே.க.117).]

கலி[3]**–த்தல்** *kali-,* 4 செ.குன்றாவி.(v.t.) செலுத்துதல் (சி.போ.பா.151.); to cause to go, move.

[குல் → கல் → கலி.]

கலி[4]**–த்தல்** *kali-,* 4 செ.கு.வி. (v.i.) நழுவுதல்; to trickle, flow gently. *"சுக்கிலங் கலித்தலாற் பெருந்தவ வலிகுன்றும்" (வைராக். சத. 43).*

[கலி[2] → கலி[4].]

கலி[5]**–த்தல்** *kali-,* 4 செ.குன்றாவி.(v.t.) நீக்குதல் (சி.போ.பா.151.) to remove.

[கழி → கலி.]

கலி[6] *kali,* பெ.(n.) 1.ஒலி (தொல்.சொல்.349);sound. 2.கடல் (பிங்.); sea. 3. வலி (பிங்.); strength, force. 4. செருக்கு; haughtiness, conceit, self-esteem. *"இக்கலி கேஎழரே" (கலித்.52.).* 5. தழைக்கை; flourishing, thriving, prospering. *"கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை" (புறநா.66.6.).* 6. துளக்கம்; perturbation, discomposure, uneasiness. *"கலியினெஞ்சினேம்" (பரிபா.2.74.).* 7. மனவெழுச்சி; spiritedness, sprightliness, animation. *"கலிமாப் பலவுடன் பூட்டி" (பு.வெ.12. வென்றிப்.14.).* 8. போர் (வின்); dissension, war, strife. 9. போர் வீரன்; warrior. 10. ஆண்மை; manliness.

தெ. கலிதனமு (வீரத்தனம்); **ம., து.** கலி; **க.** கலி (வலியவன், வீரன்).

[குல் → கல் → கலி.(வேக.117).]

கலி[7] *kali,* பெ.(n.) 1. ***கலிப்பா*** பார்க்க (தொல் பொருள்.53.); see *kali-p-pā.* 2. இடைக்கழகக் காலத்து இயற்றப்பட்ட ஒரு நூல் (இறை.1, உரை.); a poem of the Second Sangam period, not extent. 3.***கலித்தொகை*** பார்க்க; see *kali-t-togai.* *"கற்றறிந்தார் ஏத்தும் கலியோடகம் புறமென்று" (புறநா.முகவுரை.).*

[கலி² → கலி⁴.]

கலி[8] *kali,* பெ.(n.) 1. தோற்றம்; appearance. 2. அரும்பு; bud.

க. கலி

[குல் → கல் → கலி.]

கலி[9] *kali* பெ.(n.) கலியூழி, கலியுகம் என்னும் ஆண்டுமானம்; cycle of year known as Kaliyugam.

[கலி → கலித்தல் = தோன்றுதல். கி.மு.3101 ஆண்டு கலியூழியின் தொடக்கம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.]

கலி[10] *kali,* பெ.(n.) 1. காரிக்கடவுள்; the deity presiding over the iron age. *"கலி நீங்கு காண்டம்" (நள.).* 2. காரிக்கோள்; Saturn, as a malignant planet. 3. துன்பம், அழிவு; mishap, disaster, calamity. *"ஆழ்கலத் தன்ன கலி" (நாலடி.12.).* 4. வறுமை; poverty, want. *"கலி கையா னீக்கல் கடன்" (பு.வெ.12, வென்றிப்.2.).* 6. ஏமாற்று; deceit, fraud. *"கலிக்கிறை யாய நெஞ்சிற் கட்டியங்காரன்" (சீவக.266.).* 7. இழிவு, தாழ்வு; low, mean.

Pali. kali

[கல் → கலி. கல் = கருப்பு, வறுமை, துன்பம்.]

கலி[11] *kali* பெ.(n.) புதுமை; novelty. குழந்தை கலிகலியாய் பேசுகிறது (கொங்.வ.).

[கல் → கலி = தோன்றுதல், புதுமை.]

கலி[12] *kali,* பெ.(n.) கலிப்பா வகை; a poetic form in Tamil Prosody.***கலிப்பா*** பார்க்க; see *kalippā.*

[குல் → கல் → கலி.]

கலி[13] *kali,* பெ.(n.) 1. இரும்பு; iron. 2. பனங்கிழங்கு; palmyra root (சா.அக.). 3. பெருக்கு; increase. *"ஒலியோவாக் கலியாணர்" [மதுரைக்.118].* 4. தடிப்பு; swelling (சா.அக.).

[குல் → கல் → கலி.]

கலிஎழுத்து *kali-ēḻuttu,*பெ.(n.) குறிப்புணர்த்தும் அடையாளம் (யாப்.536.); a secret code.

[கலி + எழுத்து.]

கலிக்கந்தீட்டு–தல் *kalikkantīṭṭu,* 5 செ.குன்றாவி. (v.t.) கண்ணோய்க்கு மருந்திடுதல்; to apply pungent eye - salve for curing eye-disease (சா.அக.).

[கலிக்கம் + தீட்டு. கலிக்கம் = கரியமை.]

கலிக்கம் *kalikkam,* பெ.(n.) கண்ணிலிடும் மருந்து; pungent eye-salve used as a stimulantive to revive a person who is in an unconscious condition, or to cure a person of chronic headache. 2. கண்ணுக்கிடும் மை; collyrium.

தெ. கலிகமு

[கல் → கலி → கலிக்கம் (கருமையானது).]

கலிக்கம்பநாயனார் *kali-k-kamba-nāyaṉār,* பெ.(n.) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர் (பெரியபு.); a canonized Saiva saint, one of 63 Nayanmars.

[கலி = வீரன். கம்பன் – இயற் பெயர். நாயன் = தலைவன் கலிக்கம்பன் + நாயன் + ஆர். 'ஆர்' உயர்வுப் பன்மையீறு.]

கலிக்கிமரம் *kalikki-maram,* பெ.(n.) மரவகை (A.); a tree.

[கலி → கலிக்கி + மரம்.]

கலிக்கொண்டை *kali-k-koṇḍai,* பெ.(n.) போர் வீரர் முடிந்து கொள்ளும் தலைக்கொண்டை; hair-knot of warriors.

[கலி = வீரன். கலி + கொண்டை.]

கலிக்கோட்டை *kali-k-kōṭṭai,* பெ.(n.) வலிமை வாய்ந்த கோட்டை; a strong fort.

க. கலிகோண்ட்டெ

[கலி = வலிமை. கலி + கோட்டை.]

கலிக்கோடை *kali-k-kōḍai,* பெ.(n.) கோடைக்கால வெப்பம்; sultriness. *"கன்றுபிணி நெருப்பவியுங் கலிக்கோடை தீரும்" (தஞ்.சர. 11,94).*

[கலி + கோடை. கலி = துன்பம்.]

கலிகடிந்த பாண்டிய தேவர் *kalikādindapaṇḍiya dēvar,* பெ.(n.) கிபி1284இல் திருமயம் பகுதியில் வாழ்ந்த பாண்டியநாட்டுச் சிற்றரசர்; local chieftan around 1284 AD over Thirumayam area. *“இந்நாயனாற்குச் சோலை கயிலாய முடையானான கலிகடிந்த பாண்டிய தேவர் எளுந்தருவித்த” (தெ.இ.கல்.தொ.23 கல் 149.).*

[கலி = ஒலித்தல், காஞ்சி = இடையணிகலன். கலி + காஞ்சி = கலிகாஞ்சி → கலகாஞ்சி.]

கலிகம்[1] *kaligam,* பெ.(n.) **கலிக்கம்** பார்க்க; see *kalikkam. “கலிகங் கியாழம்” (திருவேங். சத.68.).*

[கலிக்கம் → கலிகம்.]

கலிகம்[2] *kaligam,* பெ.(n.) வன்னிமரம் (சித்.அக.); Indian mesquit.

[கலி → கலிகம் → கலி = வீரம். கலிகம் = வீரத்திற்கு அடையாளமாகியமரம்.]

கலிகள் *kaligaḷ,* பெ.(n.) போர் வீரர்கள்; warriors.

க. கலிகள்

[கலி = வீரன். கலி + கள்.]

கலிகன்றி *kali-kaṉṟi,* பெ.(n.) திருமங்கையாழ்வார் (திவ். பெரியதி. 1,1,10.); lit., one who puts down with a strong hand the might of Kali-purusan, an appellation of Tirumangai-y-āḻvār.

[கலி + கன்றி. கன்றி = அழித்தவன்.]

கலிகாஞ்சி *kalikāñji,* பெ.(n.) ஒலிக்கும் ஒட்டியாணம்; waist ornament of women which produces light sound.

க. கலகாஞ்சி

[கலி = ஒலித்தல், காஞ்சி = இடையணிகலன். கலி + காஞ்சி = கலிகாஞ்சி → கலகாஞ்சி.]

கலிகாரம் *kaligāram,* பெ.(n.) நள்ளிருள் நாறி, இருள்வாசி (சங்.அக.); Tuscan jasmine.

[கலி →கலிகாரம்.]

கலிகாலம் *kali-kālam,* பெ.(n.) 1.இரும்புக் கருவிகளை மக்கள் பயன்படுத்திய காலம்; the iron age. *“கங்குபூசி வருகின்ற கலிகாலமெனவே” (கம்பரா.விராதன்.14.).* 2. தீமை, கொடுமை ஆகியவை பெருகிவிட்ட காலம்; time in which evils and atrocities abound. கலிகாலத்தில் எது தான் நடக்காது (உ.வ.).

[கலி + காலம். கலி = கருப்பு. கருநிறத்து இரும்பு. இது இரும்பொன் (இரும்பு) கரும்பொன் என்றும் வழங்கப்பட்டுள்ளதை ஒப்பு நோக்குக.]

கலிகி *kaliki,* பெ.(n.) 1.அழகு; a beauty. 2.பெண்; a lady (ஆந்.). 3. பூவரும்பு; bud.

க. கலிகி; **தெ.** கலிகி.

[கலி = தோற்றம், அழகு. கல் → கலி → கலிகி.]

கலிகை[1] *kaligai,* பெ.(n.) மொட்டு (திவா.); tender bud.

மறுவ. முகை, நனை, முகிழ், சினை, நகை, கன்னிகை, போகில், மொட்டு, கலுவடம், அரும்பு, முகிளம், மொக்குள், சாலிகை, கண்ணி.

க. கலி

த. கலிகை > **Skt.** kalikā.

[குல் → கல் → கலி[2] → கலிகை. கலி = தோன்றுதல், அரும்புதல்.]

கலிகை[2] *kaligai,* பெ.(n.) 1. உசில் (சங்.அக.), black sirissa.2. நாகமல்லி (மலை.); snake-jasmine. 3.சீக்கிராத்தூள்; powder of the washing tree (சா.அக.).

[கலி[2] →கலிகை.]

கலிகேசரி *kalikēsari,* பெ.(n.) கும்பகோணம் வட்டம் திருவிசலூர்க் கோயிலுக்கு அணையாவிளக்கு வழங்கிய பெண்ணின் கரைவர்; husband of one who made donations for a perpetual. *“கலிகேசரி மணவாட்டி நயனவல்லி வைத்த நொந்தா விளக்கு” (தெ.இ.கல்.தொ.23; கல் 33.).*

*[கலியன் +கேசலி–கலியன் கேசரி→கலிகேசரி. **வ.** கேசரி > த. கேசரி (அரிமா).]*

கலிகொள்–தல் *kali-koḷ,* 16 செ.கு.வி.(v.i.) வருந்துதல், துன்பப்படுதல்; to feel sorry.

க. கலிகொள்

[கலி = துன்பம். கலி + கொள்.]

கலிகொள்ளு–தல் *kalikoḷḷu-,* 16 செ.கு.வி.(v.i.) வெளிப்படுதல்; to be revealed, to be discovered.

"உரூடி யானுங் கலிகொள வறியலாகும்" (ஞானா.15,23).

[கலி = தோன்றுதல், வெளிப்படுதல். கலி² + கொள்ளு.]

கலிங்கச்சம்பா *kaliṅga-c-cambā*, பெ.(n.) நாலைந்து மாதத்திற் பயிராகும் சம்பா நெல் வகை; a kind of paddy, maturing in four or five months, so called because it was prob. brought from Kalingam.

[கலிங்கம் + சம்பா.]

கலிங்கத்தரையன் *kaliṅgattaraiyaṉ*, பெ.(n.) பாண்டியன் சீரிவல்லபன் ஆட்சியிலிருந்து ஒரு திணைக்களத்து நாயகன்; head of a department in the rule of Pandyan Srivallabam. *கீழ்க் குண்டாற்று "வெளியாற்றூடையார் அரைய நமச்சிவாயத்தாரான கலிங்கத்தரையன்" (ஆவணம் 1991).*

[கலிங்கம் + அத்து + அரையன் 'அத்து' சாரியை.]

கலிங்கத்துப்பரணி *kaliṅgattu-p-paraṇi*, பெ.(n.) முதற்குலோத்துங்க சோழனது படைத்தலைவனான கருணாகரத் தொண்டைமான் கலிங்க நாட்டின் மீது படையெடுத்து வென்றதைப் பொருளாகக் கொண்டு சயங்கொண்டார் இயற்றியதொரு பரணி நூல்; a poem by Seyankondar describing the successful invasion of the Kalinga country by Karunagara-t-tondaiman, the Generalissimo of king Kulottunga I, 1115 A.D. cir.

[கலிங்கம் + அத்து + பரணி. 'அத்து' சாரியை.]

கலிங்கத்துருமம் *kaliṅgatturumam*, பெ.(n.) தான்றிக்காய்; unripe fruit of deirl's tree (சா.அக.).

[கலிங்கம் + அத்து + உருமம் (வெப்பம்).]

கலிங்கம்¹ *kaliṅgam*, பெ.(n.) 1. ஐம்பத்தாறு நாடுகளுள் ஒன்று (பிங்.); country comprising modern Orissa and Ganjam, one of the 56 Nadus. 2.ஒரு மொழி (திவா.); language of Kalinga, one of 18 languages known to the ancient Tamil.

Skt. kalinga; **Pali.** kalinga.

[கலிங்கு + கலிங்கம்.]

கோதாவரிக்கும் மகாநதிக்கும் இடையி லமைந்த வளமான நாடு. இதனை ஆட்சி செய்த மன்னர் கலிங்கர் எனப் பெயர் பெற்றனர். முதல் இராசராசன் கைப்பற்றிய நாடுகளுள் ஒன்று. "குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்" முதல் இராசராசன் மெய்க்கீர்த்தி [கல்.அகர].

கலிங்கம்² *kaliṅgam*, பெ.(n.) ஆடை; cloth, garment. *"கலிங்கம் பகர்நரும்" (மதுரைக்.513).*

மறுவ. மடி, கோடி,

Heb. hali, haifa, halifoshpali, kamen, matay, kam, kalingam →ka-in: indonesian.

[கலிங்கு → கலிங்கம்.]

ஒரு காலத்தில் க்லிங்கம் ஆடை நெசவுக்குப் பெயர் பெற்றிருந்தது. அதனால் ஆகுபெயராகக் கலிங்கம் எனபது ஆடையைக் குறித்தது.

கலிங்கம்³ *kaliṅgam,b* பெ.(n.) 1. வானம்பாடி. (பிங்.); skylark, 2.ஊர்க்குருவி, (பிங்.); sparrow.

ம. கலிங்கம்

[கலிங்கு → கலிங்கம். த. கலிங்கம் > **Skt.** kalinga.]

கலிங்கம்⁴ *kaliṅgam*, பெ.(n.) மிளகு (மலை); black pepper.

தெ. கலிகமு

[கல் → கலி → கலிங்கம் = கரு நிறமுடைய மிளகு.]

கலிங்கம்⁵ *kaliṅgam*, பெ.(n.) 1.தும்மட்டி (பதார்த்த 720) country cucumber. 2. வெட்பாலை மர வகை; kind of tree (as Ivory tree). 3. விப்பாலை a kind of poisonous tree.

[கலி → கலிங்கம்.]

கலிங்கம்⁶ *kaliṅgam*, பெ.(n.) 1. குதிரை (யாழ். அக.); horse. 2.பட்டாடை; silk cloth. *"மணிமுடி கலிங்கமாலை" (மேருமந்.123).*

G. kleid; **Norw.** kjole; **Yid.** kleid; **Swed.** klanning; **Serbo.** halijina; **Swa.** kanga; **Dan.** kjole; **W.** gwisg.

[கலிங்கு → கலிங்கம். கலிங்கத் துறைமுகத்தின் வாயிலாக வந்தவை]

கலிங்கமுரல் *kaliṅgamural*, பெ.(n.) பச்சை நிற முடைய முட்களைக் கொண்ட மீன்; a kind of greenish thorned fish.

[கலிங்க + முரல். இறல் → இரல் → முரல் (கொவ) முரல் = மீன்வகை. ஒருகா. கலிங்கல் + முரல் என்றாகலாம். கலிங்கல் = ஏரியின் கால்வாய் முகம்.]

கலிங்கர் *kaliṅgar,* பெ.(n.) 1. கலிங்க நாட்டினர். an inhabitant of Kalinga country. 2. கோமட்டிகளின் குலப் பிரிவு, name of a sub-sect among Komattis in south India.

[கலிங்கம் → கலிங்கர்.]

கலிங்கல்[1] *kaliṅgal,* பெ.(n.) ***கலிங்கு*** பார்க்க; see *kaliṅgu.*

[கலிங்கு → கலிங்கல்.]

கலிங்கல்[2] *kaliṅgal,* பெ.(n.) ஓர் ஊர்ப்பெயர்; name of a village.

[கலிங்கு + கல்.]

கலிங்கி *kaliṅgi,* பெ.(n.) மலைக்கொன்றை (L.); shingle tree.

[கலி → கலிங்கி.]

கலிங்கிடு–தல் *kaliṅgiḍu,* 20 செ.கு.வி.(v.i.) மதகு அமைத்தல்; to construct sluice.

[கலிங்கு + இடு.]

கலிங்கு[1] *kaliṅgu,* பெ.(n.) 1. ஏரியின் வடிகால் மடை; sluice or water weirs for surplus vents; to prevent soil erosion. *"வாட்கண் கலிங்குக டிறந்த" (சீவக .2476).* 2. நீர்வழியும் அணைக்கட்டு (வின்.); calingula.

மறுவ. தூம்பு

தெ. கலிங்க; **க.** கலுகு (மதகிற்காகப் போடப்பட்ட வரி)

[கலி → கலுழ் → கலிங்கு = நீர்க்கசிவது, வழிவது, மதகு, ஏரியின் கால்வாய் முகம், அணைக்கட்டு.]

நீர் நிலை நிறைந்து வழிந்தோடும் பொழுது கரை உடையாமல் தடுக்க ஏரியின் கோடியில் கல்லால் அமைக்கப்படும் வடிகால் மடை. கல்லை நெட்டுக் குத்தாக வைத்துக் கலிங்கு அமைத்தலும் உண்டு.

மறுவ. கலிஞ்சு

கலிங்கு[2] *kaliṅgu,* பெ.(n.) கலிங்கு வரி; a tax on irrigation from the tank.

க. கலிகு

[கலிங்கு = மதகு நீர்ப்பாசனம். நீர்ப்பாசன வரி]

கலிங்குவாரியம் *kaliṅguvāriyam,* பெ.(n.) பாசனத்திற்கு நீர் விடப்படும் மதகு, தூம்பு ஆகியவற்றைக் கண்காணிக்கும் குழு; village committee which looks after the irrigation facilities.

[கலிங்கு + வாரியம்.]

ஏரியில் கட்டப்பெறும் மிகு நீர் வடிகாலா கலிங்கு, பாசனத்திற்கு விடப்படும் மதகு, தூம்பு ஆகியவற்றைக் கண்காணிக்கும் குழு. இக்குழு கிராம மகாசபையின் உட்பிரிவிகளிலொன்றாகும். ஏரிகளின் கரைகளில் அமைக்கப்படும் வலிமையான சுவரின் மேற்பகுதியில் கற்களால் மடைகளமைக்கப் பெறும். ஏரியின் அளவுக்கு மேல் மிகுங்காலத்துக் கலிங்குகளின் மடைகள் வழியே நீர் வழிந்தோடும் [கலிங்கு வேறு மதகு வேறு] 'ஏரியும் துகுந்து மதகுகளும் முறிந்து கலிங்குகளும் அழிந்து கிடக்கையில் உடைந்த மடைகளும் அடைத்து ஏரியும் கல்லி, கரையும் கற்கட்டி மதகுகளும் அட்டுவித்து கலிங்குகளும் செய்தபடி' [தெ.கல். தொ.12.கல்.126] [கல்.அக.).

கலிச்சி *kalicci,* பெ.(n.) இரட்டைப்பிள்ளைகளுட் பெண் (வின்); female of twins when they happen to be of opposite sexes.

ம. கலிச்சி; **தெ.** கலிகி (பெண்).

[கலி → கலித்தி → கலிச்சி.]

கலிசம் *kalicam,* பெ.(n.) வன்னிமரம் (திவா.) Indian mesquit tree.

[கலி → கலியம் → கலிசம்.]

கலிசெய்–தல் *kalisey-,* 1 செ.கு.வி.(v.i.) 1. ஊக்கம் ஊட்டு; to encourage. 2. ஆத்திரம் ஊட்டு; to enrage.

க. கலிசெய்

[கலி + செய்.]

கலிஞ்சகம் *kaliñjagam,* பெ.(n.) (மீன்; fish. 2. வன்னி; vanni tree. 3. வாகை; sirissa tree (சா.அக.).

[கலிகம் → கலிஞ்சம் → கலிஞ்சகம்.]

கலிஞ்சிடு–தல் *kaliñjiḍu,* செ.கு.வி.(v.i.) ***கலிங்கிடு*** பார்க்க; see *kaliṅgiḍu.* *"வாமநிலை நி(ற்ற)குங் கலிஞ்சிட்டு நிமிர வைய்கை மலைக்கு நீடுழி" (S.I.I.Vol.1 insc.66. S.No.7-8).*

[கலிங்கு → கலிங்கி + இடு.]

கலிஞ்சு *kaliñju,* பெ.(n.) **கலிங்கு** (S.I.I.i.5). பார்க்க; see *kalingu.*

தெ. கலூசு

[கலிங்கு → கலிஞ்சு → (கொ.வ.).]

கலித்தம்[1] *kalittam,* பெ.(n.) 1. பேரொல; tumult uproar. 2. பொலிவு; grand appearance.

[கலி → கலித்தம்.]

கலித்தம்[2] *kalittam,* பெ.(n.) 1. கக்குகை; vomiting, emitting. 2. பொசிகை; oozing. 3. வெடிக்கை; bursting.

[கலி = தோன்றுதல், வெளிவருதல். கலி கலித்தம்.]

கலித்தரையன் *kalingadaraiyan,* பெ.(n.) கி.பி.1249இல் ஆழ்வார் திருநகரிக்கோயில் பதியப்பட்ட ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டவர்; a signatory of an agreement in the temple at Alwar Thirunagari in tThiruchendur taluk during 1249 AD. *"இவை கீழ்வேம்பு நாட்டு தச்சனூர் அரையன் கதிராயிரமுடைானான கலிங்க தரையன் எழுத்து" (தெ.இ.கல்.தொ.26; கல் 495).*

[கலிங்கம் + தரையன்.]

கலித்தளை *kali-talai,* பெ.(n.) வெண்பா உரிச்சீர் நின்று தன்வருஞ்சீர் (நிரை) முதலசையோ டொன்றாது வரும் தளை (யா.கா.10); metrical connection between two successive feet in which a kay-c-cir is followed by a foot beginning in nirai.

[கலி + தளை.]

"செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லை நீர் வியன் கொண்மூ இடை நுழையு மதியம் போல்
மல்லலோங் கெழில் யானை மருமம் பாய்ந் தொளித்ததே."

கலித்தாழிசை *kali-t-tāl-isai,* பெ.(n.) இரண்டடியாயும் பல வடியாயும் வந்து, ஈற்றடிமிக்கு, அல்லாதவடி தம்முள் ஒத்தும்,ஒவ்வாதும் நிற்பத் தனித்தேனும் ஒரு பொருள் மேல் மூன்று அடுக்கியேனும் வரும் கலிப்பாவின் இனம் (யாப்.காரி.44); a kind of Kali verse consisting of lines of equal length the last one being longer than the rest.

[கலி + தாழிசை.]

"கொய்தினை காத்துங் குளவியடுக்கத் தெம்
பொய்தற் சிறுகுடி வாரல் நீ ஐய நலம் வேண்டின்"
ஆய்தினை காத்தும் அருவியடுக்கத்தெம்
மாசில் சிறுகுடி வாரல் நீ ஐய நலம் வேண்டின்"
"மென்தினை காத்தும் மிகுபூங் கமழ்சோலைக்
குன்றச் சிறுகுடி வாரல் நீ ஐய நலம் வேண்டின்"

இவை இரண்டடியாய், ஈற்றடிமிக்கு ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வந்த கலித்தாழிசை.

கலித்தி *kalitti,* பெ.(n.) பெண்ணின் இயற்பெயர்; proper name of a female.

[கலி → கலித்தி. இரட்டைப்பிள்ளைகளுள் ஒன்று ஆணும் ஒன்று பெண்ணு மாயிருப்பின் பெண் குழந்தைக்கு இடும் பெயர்.]

கலித்துரிஞ்சல் *kalitturiñjil,* பெ.(n.) கருவாகை. (L); fragrant sirissa.

[கலி + துரிஞ்சல். கலி = கருப்பு.]

கலித்துறை *kali-t-turai,* பெ.(n.) 1.நெடிலடி (ஐஞ்சீரடி) நான்கு கொண்டு வருவதாகிய கலிப்பாவின் இனம் (காரிகை. செய்.13.); a kind of verse allied to Kali metre. 2. **கட்டளைக் கலித்துறை** பார்க்க; see *kattalai-k-kali-t-turai. "கலித்து றைதானா னூறு அகப் பொருள்– மேல் வாய்ந்தநற் கோவையாம்" (வெண்பாப். செய்.15.).*

[கலி + துறை.]

எ.டு.

"யானுந் தோழியும் ஆயமும் ஆடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளும் கைதையு மெல்லாங் கரியன்றே"

கலித்தொகை *kali-t-togai,* பெ.(n.) எட்டுத் தொகையுள் நல்லந்துவனார் தொகுத்த 150 கலிப்பாக் களைக் கொண்ட நூல்; an ancient anthology of 150 verses written in <u>kali</u> metre describing the erotic emotions characteristic of the five tracts of land, composed by Nallanduvanār, one of Ettu-t-togai.

[கலி + தொகை.]

கலிதம் *kalidam,* பெ.(n.) 1. பொருத்தம் (யாழ். அக.); fitting, 2. பெருக்கு; an abnormal flow or discharge of any fluid (சா.அக.).

[குல் → கல் → கலி → கலித்தம் → கலிதம் (கொ.வ.).]

கலிதி *kalidi,* பெ.(n.) திப்பிலி (மல); long pepper.

[கலி = கருநிறம் → கலி → கலிதி (கரியது).]

கலிந்தம் *kalintam,* பெ.(n.) 1.ஒரு மரம்; an unknown tree. 2.ஒரு மலை; a mountain. 3. வெந்தயம்; dillseed. 4. மலைதாங்கிப்பூடு; sickle leaf (சா.அக.).

[கலி → கலிந்தம் (கரியது).]

கலிநடம் *kali-nadam,* பெ.(n.) கழாய்க்கூத்து (சிலப்.3,12, உரை); acrobatic performance. ***கழைக்கூத்து*** பார்க்க; see kalai-k-kūttu.

த. கலி நட. > **Skt**. kalinda.

[கலி + நடம். கலி = உயர்வு, எழுச்சி. இங்கு மூங்கிற் கழைமேல் ஏறிநிற்றலைக் குறித்தது.]

கலிநீதியார் *kali-nidiyār,* பெ.(n.) ***கலியநாயனார்*** (பெரியபு. கலிக்கம்.10.) பார்க்க; see *kaliya-nāyanār.*

[கலித்தல் = உயர்தல். கலி + நீதி + ஆர். கலிநீதி = உயர்ந்த நீதி. 'ஆர்' உயர்வுப் பன்மையீறு.]

கலிநெய்க்கொட்டான் *kaliney-k-kottān,* பெ.(n.) நெய்க்கொட்டான் மரம்; soapnut tree (சா.அக.).

[கலி + நெய் + கொட்டான்.]

கலிப்பணம் *kali-p-panam,* பெ.(n.) ஈமச்சடங்கிற்குப் பயன்படுத்திய பண்டைக் காலத்து ஒரு நாணயம்; a coin of ancient times used in funeral ceremonies = $3^1/_2$ annas, = cakkaram (in Trav.) = $^1/_{10}$ pon, (in.J).

[கலி + பணம் – கலிப்பணம்.]

இறந்தவரின் நெற்றியில் வைத்துப் பட்டுத் துணியால் கட்டும் பொற்காசு கலிப்பணம் எனப்படும். இது பட்டங் கட்டி வானுலகுக்கு வழியனுப்பும் பழங்கால மக்களின் நம்பிக்கையைக் குறித்தது. சென்னை அகர முதலி இதனைக் கலிபணம் எனக்குறித்திருப்பது தவறு.

கலிப்பா *kalippā,* பெ.(n.) நால்வகைப் பாக்களுள் ஒன்று (திவா); one of the four kinds of stanza forms in Tamil. ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் பாவகை நான்கு (உ.வ.).

[கலி + பா – கலிப்பா (கலித்தளையும் துள்ளலோசையும் பெற்று வரும் பாவகை.]

கலிப்பா

(தரவு)

அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியும் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள் வயிற் சென்ற நம் காதலர்
வருவர் கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி.

(தாழிசை)

அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் உரைத்தனரே;

2

இன்பத்தின் இகந்தொரீஇ இலைதீயுந்த உலவையால்
துன்புறூஉம் தகையவே காடென்றார் அக்காட்டுள்
அன்பு கொண் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவும் உரைத்தன்ரே

3

கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
துன்னரூஉம் தகையவே காடென்றார் அக்காட்டுள்
இன்னிழல் இன்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலையெனவும்
உரைத்தனரே;

எனவாங்கு

இனைநல முடைய கானம் சென்றோர்
புனைநலம் வாட்டுநர் அல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே' (கலித்.11)

இது காட்டு வழியாய்த் தொலைவான இடத்திற்குப் பொருள் தேடச் சென்ற கணவனார், காட்டிலுள்ள ஆண் யானை பெண் யானைக்கும், ஆண்புறா பெண் புறாவிற்கும் ஆண்மான் பெண் மானிற்கும் காட்டும் அன்பை ஏற்கனவே தனக்குச் சொல்லியிருத்தலால், அவற்றை நேரிற் கண்டபின் நீண்ட நாள் வேற்றிடத்தில் தங்கியிராது விரைந்து வருவாரென்றும், அதற்கேற்ற நற்குறிகளும் தோன்றுகின்றனவென்றும், மனைவி தன் தோழிக்குச் சொல்லியது.

இது நாலுறுப்பமைந்த நேரிசையொத் தழிசைக் கலி. ஐறுப்பமைந்த அம்போதரங்க வொத் தாழிசைக் கலியும், ஆறுறுப்பமைந்த வண்ணக வொத்தாழிசைக் கலியும் இலக்கண நூல்களுட் கண்டு கொள்க. காதலையும் கடவுளையும் வண்ணித்துப் பாடுவதற்கு அவற்றிலும் சிறந்த செய்யுள் வகை எதிர்காலத்திலும் இருக்கமுடியாது. அம்போதரங்கம், வண்ணகம் என்னும் இரண்டும் தென் சொற்களே [பண். நா.ப.30].

குமரிக் கண்டத் தமிழர் செய்யுட் கலையின் கொடுமுடியேறி அறுவகை வெண்பாக்களையும் நால்வகை அகவற்பாக்களையும் நாலும் ஐந்தும் ஆறுமான உறுப்புகளையுடைய நால்வகைக் கலிப் பாக்களையும் இருவகை வஞ்சிப்பாக்களையும் யாத்திருந்தனர்.

வெண்பாவும் கலிப்பாவும் போன்ற செய்யுள் வகைகளை வேறெம் மொழியிலும் காண்டலரிது.

கலிப்பு *kalippu,* பெ.(n.) 1. ஒலிக்கை; sounding, murmuring, as of a brook. *"கலிப்புடை நறும்புனல் படிந்து" (இரகு, இரகுவ.30.).* 2.பொலிவு (விங்.); brightness, freshness. 3. தரா(செம்பும் தகரமும் கலந்த கலப்புமாழை) (வின்.); amalgam of copper and tin. 4. கக்குதல்; ejection. 5. மிகுதி; excess. 6.வெடிப்பு; fissure (சா.அக.). 7.உயரம்; height. 8. இனப்பெருக்கம்; excessive breed.காட்டில் முயல் கலிச்சுப்போச்சு (உ.வ.).

[கலி → கலிப்பு.]

கலிப்புநுரை *kalippunurai,* பெ.(n.) நீர்மப் பகுதியின் மேல்பாகத்தில் படியும் கசடு; scum.

[கலிப்பு + நுரை.]

கலிப்பேடு *kalippēḍu* பெ.(n.) ***கலிப்புநுரை*** பார்க்க; see *kalippunurai.*

[கலிப்பு + ஏடு.]

கலிபலி *kalipali,* பெ.(n.) ***கலிபிலி*** பார்க்க; see kalipili

[கலிபிலி → கலிபலி.]

கலிபிலி *kalibili,* பெ.(n.) 1.சச்சரவு; quarrel, wrangle. 2. ஆரவாரம்; uproar, disturbance, hubbub.

ம. கலிபிலி; **க.,தெ.,து.**கலிபிலி; **U.** ghalibili; **Mar.** galbalne.

[கலி = ஆரவாரம். கலி → கலிபிலி → எதுகை நோக்கி வந்த இணைமொழி.]

கலிமகிழ் *kali-magil,* பெ.(n.) ஓலக்கம்; public audience or levee of an Indian king, royal court, durbar. *"விழவினன்ன நின் கலிமகிழானே" (பதிற்றுப்.61,18.).*

[கலி + மகிழ் – கலிமகிழ். கலி =பெருக்கம், மிகுதி, ஆரவாரம்.]

கலிமத்தி *kalimatti,* பெ.(n.) ***கலிமதி*** பார்க்க; see *kalimadi* (சா. அக.).

[கலிமதி → கலிமத்தி.]

கலிமதி *kalimatti,* பெ.(n.) மருது; black-winged myrobalan.

[கலி → கலிமதி (கலி = கரிய).]

மறுவ. கலிமத்தி

கலிமருது *kali-marudu,* பெ.(n.) ஒருவகை கருப்பு மருத மரம்; black-winged myrobalan (சா.அக.).

[கலி → கலிமருது (கலி = கரிய) கலி + மருது – கலிமருது. கலி → கரி, கருப்பு.]

மறுவ. கலிமி

கலிமனம் *kalimanam,* பெ.(n.) போராடும் மனம்; agitating mind.

க. கலிமன

[கலி + மனம்.]

கலிமா *kalimā,* பெ.(n.) மொட்டு; bud.

[கலி + மா. கலி = உயர்ந்த.]

கலிமாரகம் *kalimāragam,* பெ.(n.) 1.கிலுகிலுப்பை (மலை); a species of rattle wort. 2.மயிற்கொன்றை; peacock crest.

[கலி + மாரகம். கலி = ஓசை. மரம் → மாரகம் (கொவ.).]

கலிமி *kalimi,* பெ.(n.) கரியமருதமரம்; black winged myrobalan.

[கலிமருது → கலிமி.]

கலிமிக்காவிமரம் *kalimi-k-kāvi-maram,* பெ.(n.) கலிமி மரத்தின் அடிக்கட்டைக்கு மேலுள்ள பாகம் (M.navi.81); mizzen-top-mast.

[கலிமி + காவிமரம். கலம் → கலமி → கலிமி.]

கலிமி சவர்மரம் *kalimi-cavar-maram,* பெ.(n.) கலிமி மரத்தின் பகுதியான காவிமரத்துக்கு அடுத்து மேலுள்ள பாகம் (M.navi.81.); mizzen-top-gallant mast.

[கலம் → கலமி → கலிமி. கலிமி + சவர்மரம்.]

கலிமிடவர்மரம் *kalimiḍavar-maram,* பெ.(n.) கலிமிமரத்தின் உச்சிப்பாகம் (M.navi.81); mizzen-royal mast.

[கலிமி + இடவல் + மரம். கலம் → கலமி → கலிமி.]

கலிமிடவர்பறுவான் *kalimiḍavarparuvāṉ,* பெ.(n.) கலிமிடவர் மரத்தின் குறுக்கே போடப்பட்டிருக்கும் பறுவான் (M. navi.82.); mizzen-royal yard.

[கலிமி + இடவல் + பறுவான் = கலம் → கலமி → கலிமி.]

கலிமிமரம் *kalimi-maram,* பெ.(n.) கப்பலின் பின்னணியத்தில் இருக்கும் பாய்மரம் (m.navi.80); mizzen-mast.

[கலம் = கப்பல். கலம் → கலமி → கலிமி + மரம்.]

கலியகம் *kaliyagam,* பெ.(n.) வெட்பாலையரிசி (சங்.அக.); seeds of conessi bark.

[கலி + அகம். அகம் = உள்ளீடு, அரிசி.]

கலியங்கன் *kaliyaṅgaṉ,* பெ.(n.) இயற்பெயர்; a proper name.

க. கலியங்க

[கலி = வீரன். 'அங்கன்' இயற்பெயர். கலி + அங்கன் – கலியங்கன்.]

கலியநாயனார் *kaliya-nāyaṉār,* பெ.(n.) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர் (பெரியபு.); name of canonized Saiva saint, one of 63 Nāyanmār.

[கலியன் = போர் வீரன். கலியன் + நாயன் + ஆர் (ஆர். உயர்வுப்பன்மை ஈறு).]

இவர் திருவொற்றியூரில் பிறந்தவர். சிவாலயத்திற்குத் திருவிளக்கிடும் பெருந் தொண்டிற்குத் தமது செல்வங்களைச் செலவிட் டமையால் வறுமையுற்று, தமது மனைவியையும் அத் தொண்டிற்காக விற்கப்புகுந்தும் வாங்குவோர் இன்மையால் தமதூட்டியையறிந்து கொள்ளத் துணிந்தபோது சிவன் வெளிப்பட்டு அருள் புரியப் பெற்றவர் எனப் பெரியபுரணம் கூறுகிறது.

கலியம் *kaliyam,* பெ.(n.) குடிப்பெயர்; name of a dynasty or clan.

க. கலியம்

[கலி = வீரன். கலி + அம் – கலியம்.]

கலியன்[1] *kaliyaṉ,* பெ. (n.) 1.படைவீரன் (திவா); warrior. 2. திருமங்கை ஆழ்வார் (திவ்.பெரியதி 5.2.10); Tirumaṅgai āḻvār, who was a warrior before he became a saint.

[கலி + அன். கலி = பெருக்கம், வலிமை.]

கலியன்[2] *kaliyaṉ,* பெ.(n.) இரட்டைப் பிள்ளைகளுள் ஆண் (வின்); male of twins when they are of opposite sex.

ம. கலியன்; **க.** கலிக.

[கலி + அன் – கலியன் ('அன்' ஒன்றன்பாலீறு).]

கலி = புதுமை. இரட்டைக் குழந்தைகளுள் இரண்டும் ஆணாக அல்லது இரண்டும் பெண்ணாகப் பிறத்தல் பெரும்பான்மை. ஒன்று ஆணும் ஒன்று பெண்ணுமாகப் பிறப்பது புதுமையாகக் கருதப்பட்டதால் கலியன், கலிச்சி எனப் பெயரிடப்பட்டன.

கலியன்[3] *kaliyaṉ,* பெ.(n.) 1. கலியிறைவன்; the deity presiding over the iron age. *"தணந்த வெந்திறற் கலியனைச்சபிக்குவன்"* (நைடத.கலிநீ.16.). 2.காரி (வின்.); saturn.

ம. கலியன்

[கலி → கலியன். கலி = கருநிறம்.]

கலியன்[4] *kaliyaṉ,* பெ.(n.) 1. பசித்தவன்; hungry man. *"கலியர் சோற்றின் மேலே மனம் என்னுமா போலே" (ஈடு.4, 3, 7.).* 2. வறுமையாளன்; poor man; needy indigent person. *"மூதேவி மூடிய கலியனை" (திருப்பு).*

[கலி → கலியன். கலி = வறுமை.]

கலியன்[5] *kaliyaṉ,* பெ.(n.) சீர்காழிவட்டம் திருக் கருகாவூர் கோயில் அதிகாரி; officer connected

with Thirukkarukarur Temple of Sirkazhi taluk during 10th Century A.D. *"கொம்மைப் பாக்கமுடைய சிங்கன் கலியனான உத்தமசோழ மூவேந்த வேளான் விண்ணப்பத்தால்". "சாத்தன் பகவதியான கலியன் தண்டேசுவரனும்" (தெ.இ.கல். தொ.19. கல். 130).*

[கலி → கலியன்.]

கலியாச்சா *kaliyācca,* பெ.(n.) பசலாத்தி; spathe trumpet tree (சா.அக.).

[கலி + (ஆச்சான்) ஆச்சா.]

கலியாண்டு *kaliyāṇḍu,* பெ.(n.) கலியூழி (கலியுக) ஆண்டுமானத்தின்படி கணிக்கப்பட்ட ஆண்டு; year reckoned according to Kaliyuga calculation from 3102 BC.

மறுவ. கலியுக ஆண்டு

[கல் → கலி (தோன்றுதல்) + ஆண்டு.]

கலியாண ஒப்பந்தம் *kaliyāṇaoppandam,* பெ.(n.) திருமண உடன்படிக்கை (வின்.); contract of betrothal in which the parties or their friends bind themselves under penalty to perform the marriage.

[கலியாணம் + ஒப்பந்தம்.]

கலியாணக்கத்தரி *kaliyāṇakkattari,* பெ.(n.) புல்லிவட்டம் காய் முழுவதையும் மூடிக் கொண்டிருக்கும் ஒரு வகைக் கத்தரிக்காய்; a kind of brinjal which is fully covered by sepals.

[கலியாணம் + கத்தரி.]

கலியாணக்காரர் *kaliyaṇa-k-kārar,* பெ.(n.) 1. மணமக்கள்; married couple, bride and bridegroom. கலியாணக்காரரை மணமேடையில் அமரச்செய்(உ.வ.). 2. மணமக்களின் பெற்றோர், விழைவர். (கொ.வ.); people related to either of the parties in a marriage. கலியாணக்காரர்களே நேரில் அழைப்பிதழ் கொடுத்தனர்(உ.வ.). 3. திருமண விருந்தினர்; guests attending a wedding. இந்தப் பேருந்து முழுவதும் கலியாணக்காரர்களே(உ.வ.).

[கலியாணம் + காரர்.]

கலியாணக்கால் *kaliyāṇa-k-kāl,* பெ.(n.) ஆணுடை சாத்திப் புதுமனைச் சுவரில் பொருத்திய பசுங்கொம்பு (யாழ்ப்.); one of the new posts set in the wall of a new house placed over against the kanni-k-kal and dressed with a new cloth as a male.

[கலியாணம் + கால்.]

கலியாணக்கூடம் *kaliyāṇa-k-kūḍam,* பெ.(n.) திருமண வீட்டில் மணச்சாலையாகப் பயன் படுத்துமிடம்; a central hall in a storeyed or terraced house, commodious and well ventilated to serve as a hall for celebrating marriages.

[கலியாணம் + கூடம்.]

கலியாணக்கூடை *kaliyāṇakkūḍai,* பெ.(n.) மணமகளை அழைக்கச் செல்லும்போது மணமகன் வீட்டிலிருந்து கொண்டு செல்லும் சீர்வரிசைப் பொருள்கள் கொண்ட கூடை; the basket which contains present and articles to bride by bridegroom's party.

[கலியாணம் + கூடை.]

கலியாணக்கோலம் *kaliyā-ṇa-k-kōlam,* பெ.(n.) மணக்கோலம்; wedding attire.

[கலியாணம் + கோலம்.]

கலியாணங்கூறு-தல் *kaliyā-ṇaṅ-kūṟu-,* 5 செ.கு.வி. (v.i.) திருமண அறிக்கை படித்தல் (கிறித்.); to publish the banns of marriage.

[கலியாணம் + கூறு.]

கலியாணச் சடங்கு *kaliyāṇa-c-caḍaṅgu,* பெ.(n.) 1.திருமணச் சடங்கு; wedding ceremony. 2.திருமணத்திற்குமுன் மாப்பிள்ளை காதணியணியுஞ் சடங்கு. (யாழ்ப்.); ceremony of the wearing of earrings by a bridegroom just before the wedding.

[கலியாணம் + சடங்கு.]

கலியாணச்சாவு *kaliyāṇaccāvu,* பெ.(n.) மூதாளரின் இயற்கைச் சாவு; natural death of a person at a ripe old age (which is not considered a sorrowful event.).

[கலியாணம் + சாவு.]

கலியாணசுந்தரர் *kaliyāṇa-sundarar,* பெ.(n.) சிவத் திருமேனிகளுள் ஒன்றான மணக்கோலநம்பி; one of the forms in which Śiva is worshipped.

Skt - Sundara → **த.** சுந்தரர்.

கலியாணஞ்சொல்(லு)–தல் *kaliyāṇañ-col-*, 13 செ.கு.வி. (v.i.) திருமண முழுத்தத்தை அறிவித் தழைத்தல்; to invite to a wedding.

[கலியாணம் + சொல்(லு).]

கலியாணத்துவரை *kaliyāṇa-t-tuvarai*, பெ.(n.) துவரை வகை; a species of dhall (சா.அக.).

[கலியாணம் + துவரை.]

கலியாணப்பந்தல் *kaliyāṇa-p-pandal*, பெ.(n.) மணப்பந்தல்; temporary shed put up for celebrating a marriage.

[கலியாணம் + பந்தல்.]

கலியாணப் புத்தகம் *kaliyāṇa-p-puttagam*, பெ.(n.) திருமணத்தைப் பதிவு செய்யும் புத்தகம் (சிறித்.); marriage register.

[கலியாணம் + புத்தகம்.]

கலியாணப்பூ *kaliyāṇa-p-pū*, பெ.(n.) மூன்றாம் முறையாக நிறைந்து விழும் இலுப்பைப்பூவின் வீழ்ச்சி (யாழ்ப்.); the third plentiful fall during the season of the flowers of the iluppai, dist-fr. பந்தர்ப்பூ, பாவாடைப்பூ and கப்பிப்பூ.

[கலியாணம் + பூ.]

கலியாணப்பூசணி *kaliyāṇa-p-pūšaṇi*, பெ.(n.) 1. பெரும்பூசணி (m.m.); a gourd, common pumpkin. 2.நீற்றுப்பூசணி; white gourd melon.

[கலியாணம் + (பூகணி) பூசணி.]

கலியாணப்பொருத்தம் *kaliayāṇa-p-poruttam*, பெ.(n.) 1. திருமணத்தி ற்குப் பார்க்கும் பொருத் தங்கள் (பஞ்.); (Astrol.) hormonious correspondence between the naksatras of a man and a woman which is a determinining factor in reference to their fitness for marriage examined in ten aspects, viz., natcattira-p-poruttam, kana-p-poruttam, magendirap-poruttam, pentirkka-p-poruttam, Yoni-p-poruttam, irasi-p-poruttam, irasi-y-adipadipporuttam, vasiyapporuttam, vedaip-poruttam, iraccu-p-poruttam.

[கலியாணம் + பொருத்தம்.]

கலியாணம்[1] *kaliyāṇam*, பெ.(n.) புதிய பொருள்கள்; new objects, natural or artificial, invented or discovered, ***கலியாணர்*** பார்க்க; see *kaliyāṇar.*

[கலி + யாண் + அம்.]

கலி = மிகுதி. யாண் = புதுமை. 'அம்' சொல்லீறு. கடல்கடந்த நாடுகளிலிருந்தும் தொலை நாடுகளிலிருந்தும் தருவித்த பொருள்கள் புதுமை விளைத்தலின் பெற்ற பெயர். இப் பொ◌ுள்களை விற்போர் கலியாணர் எனப்பட்டனர்.

கலியாணம்[2] *kaliyāṇam*, பெ.(n.) 1. திருமணம், (திவா.) wedding. "கலியாணஞ் செய்தார்கள்" (பெரியபு. காரை. 12.) 2. நன்னிகழ்ச்சி, மகிழ்வூட்டும் செயல், விழா; festivity, conviviality, joyful celebration. 3.பொன் (சூடா.); gold. 4. நற்குணம்; good character, virtue.

த. கலியாணம் > Skt. kalyāṇa.

[கலி + யாணம் – கலியாணம்.]

கலித்தல் = ஆரவாரித்தல், மிக்கெழுதல், பெருகுதல், செருக்குதல், தருக்குதல், செருக்கி வளர்தல், தழைத்தல், மகிழ்தல்.

கலி = ஆரவாரம், பெருக்கு, செருக்கு, தழைத்தல், மகிழ்ச்சி. யாணம் = அழகு "யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்" [தொல்.1446].

ஏண் → ஏணம் [எழுச்சி, அழகு] → யாணம் = அழகு. யாணம் → யாணர் = புதுமை, புதுவருவாய்

"கலியாணர்" = மனச்செருக்கு எழுதற்குக் காரணமான புது வருவாய் [பட்டினப்.32]

"கலிகொள்யாணர்" = தழைத்தலைக் கொண்ட புது வருவாயையுடைய [புறம்.66]

"கலியாணர்" = ஓசையுடைய புதுப்பெயல் [புறம்.205] "கலியாணர்" = செருக்கினை யுடைத்தாகிய புதுவருவாய் [மதுரைக்.330] "கலியாணர்" = பெருக்கினையுடைத்தாகிய புதுவருவாய் [மேற்படி.118]. யாணர் எனபது யாணம் என்பதன் திரிபாதலின், கலியாணம் என்பதே முன்னை வடிவாம்.

"கல்யாண" என்னும் வடசொற்கு, அழகிய, மனத்திற்கேற்ற சிறந்த, உயர்ந்த, நல்ல, நலமான, மங்கல, மகிழ்ச்சியான, ஆக்கமான, என்னும் பொருள்களும், அதன்கல்யாணம் என்னும் வடிவிற்கு ஆசுழ், மகிழ்ச்சி, ஆக்கம், தழைப்பு, நல்லொழுக்கம், அறப்பண்பு என்னும் பொருள்களும் கூறப்பட்டிருப்பதால், அது கலியாணம் என்னும் தென்சொல்லின் திரிபோ என ஐயுறக் கிடக்கின்றது.

அதன் மூலமாகக் காட்டும் "கல்ய" என்னும் சொற்கு நல்ல, நலமான என்னும் பொருள்களும், அதன் "கல்யம்" என்னும் சொற்கு நல்ல, நலமான என்னும் பொருளும் கூறப்பட்டுள. ஆயினும் இச்சொல் "கல்யாண" என்பதன் சிதைவாகவு மிருக்கலாம். யாண என்னும் பிற்பகுதியை ஈறாகக் கொள்ளாது கிளவியாகக் கொள்வதே பொருத்தமாம்.

வடசொல்லாகக் கருதப்படும் கல்யாணம் என்னும் சொற்கு உலக வழக்குத் தமிழில் திருமணம் என்னும் பொருளுண்டு; வடமொழியில் அஃதில்லை. மங்கலம் என்னும் பொருளே இருமொழிக்கும் பொதுவாம். ஆகவே, திருமணம் பொருள் தென் நாட்டிலேயே வட சொற்குக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். மங்கலம் என்னுஞ் சொல் வடமொழியில் நன்மை என்று பொருள்படுமேயன்றித் திருமணத்தைக் குறிக்காது. கல்யாண குணம் = நல்ல பண்பு, கலி என்னும் சொல் இசைக்கருவி முழக்கத்தையும்; யாணம் என்னுஞ் சொல் பந்தற்சுவடிப்பும் மணமக்கள் கோலமுமாகிய அழகையும், வரிசை வைத்தலும் மொய்யெழுதுதலும் சீர்செய்தலுமாகிய புதுவருவாயையும் குறிப்பது கவனிக்கத்தக்கது [வ.மொ.வ.278, 279].

கலியாணம்பண்ணு-தல் *kaliyāṇampaṇṇu-*, 11 செ.குன்றாவி.(v.t.) 1. திருமணம் புரிதல்; to marry. 2. மொய்யிடவேண்டி விருந்து செய்தல் (யாழ்ப்.); to give a treat for the sake of obtaining presents from the guests, as by persons in reduced or indigent circumstances.

[கலியாணம் + பண்ணு-.]

கலியாணமண்டபம் *kaliyāṇamaṇḍabam*, பெ.(n.) 1. தெய்வத் திருமேனிகளுக்குவிழாக்காலங்களில் திருக்கலியாணம் நடக்குங்கோயில் மண்டபம்; spacious hall in a temple for marriage celebrations. 2. திருமணம் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு வாடகைக்கு விடப்படும் மிகப்பெரிய மாளிகை; rented building with a large hall for conducting marriages, etc.,

[கலியாண + மண்டபம்.]

கலியாணமுடி-த்தல் *kaliyāṇamuḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. திருமணம் பேசி உறுதிப்படுத்துதல் (இ.வ.); to settle a marriage. 2. திருமணம் புரிதல்; to marry.

[கலியாணம் + முடி.]

கலியாணமுருக்கு *kaliyāṇa-murukku*, பெ.(n.) ***முண்முருங்கை-***[2] பார்க்க; see *muṇmuruṅgai*[2]

[கலியாணம் + முருக்கு.]

கலியாண முருங்கை *kaliyāṇamuruṅgai*, பெ.(n.) கரி முருக்கு, ஒரு வகை முருங்கை மரம்; black coral tree with glassy black seeds.

[கலியாணம் + முருங்கை.]

கலியாணமெழுது-தல் *kaliyāṇam-eḻudu-*, 10 செ.குன்றாவி. (v.t.) திருமணப்பதிவு செய்தல்; (யாழ்ப்.) to register a marriage.

[கலியாணம் + எழுது.]

கலியாணர் *kaliyāṇar*, பெ.(n.)கடல் வணிகர்; treader by sea.

[கலி = மிகுதி, யாண் = புதுமை, பெரிதும் புதுமையான பொருள்களை விற்பவர்கள்.]

கலியாண வஞ்சி *kaliyāṇavañci*, பெ.(n.) வீரவஞ்சி மரம்; an unknown tree (சா.அக.).

[கலியாணம் + வஞ்சி, கலி = வீரம். கலி → கலியாணம்.]

கலியாண வாழ்த்து *kaliyāṇa-vāḻttu*, பெ.(n.) வாழ்த்துதல் (வின்.); felicitation, blessings to the married couple.

[கலியாணம் + வாழ்த்து.]

கலியாணன் *kaliyāṇaṉ*, பெ.(n.) நற்பண்பு நற்செய்கை யுள்ளவன்; man of excellent character, of a noble

disposition. *"என்னையின்றோர் கலியாணனாகக் காண்மின்" (திருவாலவா.27,85.).*

[கலி + யாண் + அன்.]

கலியாணி[1] *kaliyāṇi,* பெ.(n.) 1.உயர்குணங்களை உடையவள்; மலைமகள்; அலைமகள்; a woman endowed with auspicious features and excellent traits, usually applied to goddesses like Laksmi and Parvati. *"பரம கல்யாணி தன் பாலகனே" கந்தரல.80) (த.மொ.அ.)*

த. கலியாணி > **Skt** kalyā (illustrious]

[கலி + யாண் + இ – கலியாணி.]

கலியாணி[2] *kaliyāṇi,* பெ.(n.) நீர்க்கடம்பு; female cadamba tree called also wild jack (சா.அக.).

[கலி + யாண் + இ.]

கலியாறு *kaliyāṟu,* பெ.(n.) வறுமை; drought.

[கலி + யாறு – கலியாறு. வறட்சி நீட்டிப்பால் உண்டான வறுமையாகிய வற்கடத்தை ஆறாகக் கூறிய உருவகம்.]

வறுமைக்காலம் கரை கடந்துபெருகியழிக்கும் ஆறாக உருவகப்படுத்தப்பட்டது. பருவ மழையின்மையால் நாட்டில் பெருகிய வறுமையாகிய ஆறு கலியாறு ஆயிற்று. 'மனுவாறு பெருக கலியாறு வறப்ப' (முதற்குலோத்துங்கன் மெய்க்கீர்த்தி).

கலியிராகன் *kaliyirāgaṉ,* பெ.(n.) கி.பி.பத்தாம் நூற்றாண்டில் கச்சிப்பேட்டில் வாழ்ந்த குடிமகன்; a resident of Kaccipedu during 10th CenturyA.D. *"கலியிராகனேன் கச்சிப்பேட்டுப் பெரிய" (தெ.இ.கல். தொ.19 கல்.337).*

கலியுக ஆண்டு *kaliyuga āṇḍu,* பெ.(n.) கலியூழி ஆண்டுமானத்தின் வண்ணம் குறிக்கப்படும் ஆண்டு; a year reckoned according to Kaliyuga calculation. see *kaliyāṇḍu.*

மறுவ. கலியாண்டு

[கலி + உக + ஆண்டு – கலியுக ஆண்டு.]

கலியுகம் *kaliyugam,* பெ.(n.) கி.மு. 3102 ஆண்டில் தொடங்கியதாகக் கணிக்கப்படும் ஆண்டுமானம்; நான்கு ஊழிகளுள் இறுதியானதாகக் கருதப் படுவது, நான்காம் ஊழி; Kali-yuga, the present Iron age, the last of the four great ages of the world which is reckoned as having begun in 3102 B.C. *"கலியுகமொன்று மின்றிக்கே" (திவ். திருவாய். 5,2,11.).*

த. கலியுகம் > **Skt.** kaliyuga.

*[கலி + உகம் = கலியுகம். **கலியூழி** பார்க்க; see kaliyuli.*

கலியுஞ்சை *kaliyuñjai,* பெ.(n.) கலித்துரிஞ்சில் மரம்; fragrant sirissa.

[கலி + உஞ்சை. கலி = கருப்பு. உஞ்சை = ஊஞ்சை மரம்.]

கலியூழி *kaliyūḻi,* பெ.(n.) கலிகாலம் எனப்படும் நெடுங்காலப் பிரிவு; name of an era - kali.

[கலி + ஊழி = கலியூழி. கலி = கருப்பு, கரிய இரும்பு. கலியூழி = இரும்பின் பெயரால் அமைந்த ஊழி.]

தமிழ் வானநூல் வல்லுநரால் கணிக்கப்பட்ட ஊழிப்பிரிவுகளுள் கலியூழியும் ஒன்று. அவை பொன்னூழி, வெள்ளியூழி, செப்பூழி, கலியூழி என்பன. இவற்றை வட மொழியாளர் கிரேதா யுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்பர். கலியூழி கி.மு.3102–ம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 18ஆம் நாள் பிறந்ததாகக் கணித்தனர். நான்கு ஊழிகளுக் கும் சேர்த்து நான்கூழி (சதுர்யுகம்) எனப் பெயரிட் டனர். இதற்குரிய காலம் 43,20,000 ஆண்டுகள்.

ஊழியின் பெயர்	ஆண்டுகள்
1. பொன்னூழி (கிரேதா யுகம்) (சத்திய யுகம்)	17,28,000
2. வெள்ளியூழி (திரேதா யுகம்)	12,96,000
3. செப்பூழி (துவாபர யுகம்)	8,64,000
4. கலியூழி (கலியுகம் – இரும்பூழி)	4,32,000

இந்நான்கு ஊழிகளும் 12:8:6:3 என்னும் ஈவுபாட்டில் (விகிதத்தில்) உள்ளன. ஊழிக் காலங்கள் அனைத்தும் 1,440 ஆல் (360X4) மீதமின்றி வகுபடக்கூடியவை.

கலியேற்று[1]–தல் *kali-y-ēṟṟu-,* பி.வி.(caus.) வெறுப் பேற்றுதல்; to tease.

[கலி = துன்பம், வருத்தம். ஏற்று = உண்டாக்கு. கலி + ஏற்று.]

கலியேறு²–தல் *kali-ēṟu-,* செ.கு.வி.(v.i.) மறம் (வீரம்) கொள்; to become courageous, heroic.

க. கலிஏறு

[கலி = வீரம். கலி + ஏறு.]

கலிரம் *kaliram,* பெ.(n.) 1.முள்ளு முருக்கு; east Indian coral tree. 2. பலாசம்; palas-tree (மலை).

[கலி + ஈரம்.]

கலிரெனல் *kalir-eṉal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. of sounding, as small bells, a brass vessel. *'கெட்டித் தங்கமானாலும் கலி ரென்று ஒலிக்குமா' (பழ.).*

[கலிர் + எனல்.]

கலிவிராயன் *kalivi-rayāṉ,* பெ.(n.) நெல்வகை (வின்.); a kind of paddy.

க. கலம, களம (நெல்).

[கலி → கலிவி + ராயன்.]

கலிவிருத்தம் *kali-viruttam,* பெ.(n.) நாற்சீரடி நான்காய் வரும் கலிப்பாவின் இனம் (யாப்.45.); a kind of verse allied to kali having four feet in each of its four lines. *"அளவா நான்கின கலிவிருத்தம் மே" (யாப், செய்யுள்.89 (த.மொ.அ.).*

"வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலின்
ஆய்தலின் ஒண்சுடர் ஆழியி னான்றமர்
வாய்தலின் நின்றனர் வந்தென மன்னர்முன்
நீதலை சென்றுரை நீள்கடை காப்போய்"

[கலி + விருத்தம். **Skt.** vrutta > **த.** விருத்தம்*]*

கலிவெண்பா *kali-veṇbā,* பெ.(n.) கலித்தளை தட்டுக் கலியோசை தழுவி ஈற்றடி வெண்பாப் போல முச்சீரடியான் வருவதான கலிப்பாவின் இனம் (யாப்.85.); a kind of verse allied to kali in which the last line has three feet similar to a venba. *"தன்றளையோசை தழீஇநீற்றடி வெண்பாவியலகலி வெண்பாவே" (யாப்.85).*

[கலி + வெண்பா.]

"பண்கொண்ட வரிவண்டும் பொறிக்குயிலும் பயில்வானா
விண்கொண்ட அசோகின் கீழ் விழுமியோர் பெருமானைக்
கண்ணாலும் மனத்தாலும் மொழியாலும் பயில்வார்கள்
விண்ணாளும் வேந்தரா வார்".

கலிவெண்பாட்டு *kali-veṇ-pāṭṭu,* பெ.(n.) **கலி வெண்பா** (திவா.); பார்க்க; see *kali-veṇbā.*

[கலி + வெண் + பாட்டு.]

கலிழ்¹தல் *kaliḻ-,* 4 செ.கு.வி.(v.i.) 1. அழுதல்; to weep shed tears; to be troubled in mind. *"கூதிராயிற்றண் கலிழ்தந்து" (ஐங்குறு.45.).* 2. ஒழுகுதல்; to shine forth, as beauty. *"அங்கலிழ் மேனி" (ஐங்குறு.174.).* 3. புடைபெயர்தல்; to change position. *"காலொடு மயங்கிய கலிழ்கடலென" (பரிபா.8,31).*

[கலுழ் → கலிழ்.]

கலிழ்² *kaliḻ,* பெ.(n.) **கலிழிநீர்** பார்க்க; see *kaliḻinīr. "விரை மண்ணுக் கலிழ" (கரிபா.6,44).*

[கலுழ் → கலிழ்.]

கலிழிநீர் *kaliḻi-nīr,* பெ.(n.) கலங்கல்நீர்; muddy water, puddle. *"மானுண்டெஞ்சிய கலிழி நீரே" (ஐங்குறு.203.).*

[கலுழி → கலிழி + நீர்.]

கலின்கலினெனல் *kaliṉ-kaliṉ-eṉal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom. tinkling of anklet bells. *"கிண்கிணி சிலம்பொடு கலின்கலினென"(குமர.பிர. முத்துக்.வருகைப்.1.).*

[கலின் + கலின் + எனல். 'கலின்' ஒலிக்குறிப்பு இடைச்சொல்.]

கலினம்¹ *kaliṉam,* பெ.(n.) கடிவாளம்; bit of a horse's bridle. *"கலினமா" (சீவக.2258.).*

[கலன் → கலினம்.]

கலினம்² *kaliṉam,* பெ.(n.) 1.கற்பரி வைப்பு நஞ்சு; karpari-vaippu-nanju, a mineral poison. 2.வன்னி மரம்; palas tree.

[கலன் → கலின் → கலினம்.]

கலினா *kaliṉa,* பெ.(n.) கூ வாகு ; millet (சா.அக.).

[கலி → கலனா.]

கலினி¹ *kaliṉi,* பெ.(n.) கைம்பெண் (வின்.); widow, as afflicted.

[கலன் + இலி – கலனிலி → கலினி.]

கலினி² *kalini,* பெ.(n.) 1. திப்பிலி; long pepper. 2. திரிபலை; the three galls viz. galnut, Tandrinut and goose berry fruit (சா.அக.).

[கலன் = குற்றம்; கலன் + இல் – கலனில் → கலினி.]

கலினெனல் *kalin-enal,* பெ.(n.) **கலின்கலினெனல்** பார்க்க; see *kalin-kalin-enal.* *"கலினென வறைகழ லமரேசன்"(சேதுபு. சேதுபல.40.).*

[கலின் + எனல்.]

கலினை¹ *kalinai,* பெ.(n.) 1.***மிளகு*** (சூடா.) பார்க்க; see *milagu.* 2. கொள்ளு. (மலை.); horse gram. 3. கீழாநெல்லி; feather foil. 4. கழற்சேம்பு; a plant unknown, probably one of colacasia genus. 5.வெண்மிளகு; white pepper (சா.அக.).

[கலி - பெருக்கம், மிகுதி, புதுமை.]

கலினை² *kalinai,* பெ.(n.) **கலினம்** (வின்.) பார்க்க; see *kalinam.*

[கலினம் → கலினை.]

கலினை³ *kalinai,* பெ.(n.) கைம்மை (யாழ்.அக.); widow-hood.

[கலினிலி → கலினி → கலினை.]

கலியம் *kaliyam,* பெ.(n.) கடிவாளம்; bit of a horse's bridle.

[கலினம் → கலியம்.]

கலீரிடல் *kaliridal,* பெ.(n.) **கலீரெனல்** பார்க்க; see *kalir-enal.*

[கலின் – கலீர் + இடல்.]

கலுக்குப்பிலுக்குப் பண்ணு–தல் *kalukku-p-pilukku-p-pannu-,*11.செ.கு.வி.(v.i.) அணிகல னொலி பட நடத்தல் (வின்.); to walk in such a way as to make ornaments tinkle on the stage.

[கலுக்கு + பிலுக்கு + பண்ணு–.]

கலுக்குப்பிலுக்கு *kalukku-p-pilukku,* பெ.(n.) 1.அணிகலனொலி (வின்.); tinkling sounds of ornaments worn by women and children, clinking of little bells. 2.செருக்கு, பெருமிதம்; ostentation.

[கலுக்கு + பிலுக்கு.]

கலுக்கெனல் *kalukkenal,* பெ.(n.) சிரிப்பினால் உண் டாகும் ஒலியைக் குறிக்கும் ஒலிக் குறிப்பு; onom. expr. of loud, sharp sound, as when laughing.

[கலுக்கு + எனல்.]

கலுகுலுத்தல் *kalukuluttal,* பெ.(n.) பல சிற்றொலி களிலுண்டான ஓசை (யாழ். அக.); confused noise due to various low sounds.

[கலு + குலுத்தல்.]

கலுகுலுப்பூ *kalukuluppū,* பெ.(n.) ஒலிக்குறிப்பு; onom. expr. of sound.

[கலு + குலுப்பூ.]

கலுங்கு *kalungu,* பெ.(n.) **கலிங்கு** பார்க்க; see *kalingu.*

[கலிங்கு → கலுங்கு.]

கலுடம் *kaludam,* பெ.(n.) 1. கலங்கனீர் (வின்.); muddy, turbid water. 2. கரிசு, தீவினை, பாழ்வினை (பிங்.); sin.

[கலுழ் → கலுழம் → கலுடம் (வ.மொ.வ.110.).]

கலும்பு *kalumbu,* பெ.(n.) களிம்பு (இ.வ.); ointment.

பட. கிலும்பு

[களிம்பு → கலும்பு (கொ.வ.).]

கலுமி *kalumi,* பெ.(n.) கூழ்; pudding (சா.அக.).

[கலுழ் → கலுழி → கலுமி.]

கலுமிச்சங்காய் *kalumiccankāy,*பெ.(n.) எலுமிச் சங்காயைப் போல் குளிர்ச்சியை உண்டாக்கும் ஒரு வகைக்காய்; a kind of fruit causing chilness like the lime fruit (சா.அக.).

[கலுமித்தல் + காய்.]

கலுமொலெனல் *kalumolenal,* பெ.(n.) ஓர் ஒலிக் குறிப்பு (வின்.), onom. expr. of chattering, clacking.

[கலு + மொலு + எனல்.]

கலுவடம் *kalu-vadam,* பெ.(n.) பூவரும்பு (பிங்.); flower-bud.

[கலி → கலு + அடம். 'அடம்' சொல்லாக்க ஈறு.]

கலுவம் *kaluvam,* பெ.(n.) மருந்து அரைக்குங் குழியம்மி; an apothecary's mortar in which drugs are rubbed with a pestle. *"கலுவத்தில் வெள்வேற்றோற் குடிநீராலரைத்து" (தைலவ. தைல.33.).*

தெ. கலவமு; **Pkt.** khala.

த. கலுவம் > **Skt.** khalva, khalla. (வ.மொ.வ.110).

[கல் → கலுவம் = மருந்தரைக்கும் சிற்றுரல். கல்லுதல் = தோண்டுதல், குழித்தல்.]

கலுழ்[1]–தல் *kaluḷ,* 2 செ.கு.வி. (v.i.) (பிங்.) கலங்குதல்; to become turbid, as water. *"உண்கண் கலுழ்ந்து வாரரிப்பனி" (புறநா.144.)* 2. தடுமாறுதல்; to be troubled, disturbed in mind. *"தன்னெஞ்சு கலுழ்ந்தோனை" (தொல்.பொருள்.39.)* 3. அழுதல்; to weep, wail, shed tears. *"கண்டாங் கலுழ்வ தெவன் கொலோ" (குறள்.1171.).* 4. ஒழுகுதல்; to shine forth, as beauty. *"அங்கலுழ்மாமை" (அகநா.41.).* 5. உருகுதல்; to be touched, as the heart. *"கலுழத் தன்கையிற் றீண்டி" சீவக.1926).* 6. கலத்தல்; to mix (த.ம.50.).

ம. கலம்புக

[நீரும் மண்ணுங் கலத்தல், கலங்கல், கல் → கலகு → கலங்கு → கலங்கல். கல → கலுழ். கலுழ்தல் = கலங்கல், கலுழ்.]

த.கலுழம் > **Skt.** kaludi. (வே.க.142)

கலுழ்[2]–தல் *kaḷuḷ-,* 2 செ.குன்றாவி.(v.i.) பொருந்துதல்; to join with. *"கண்முத்தமாலை கலுழ்ந் தனவே" (திருக்கோ.397.).*

[குல்→கல் → கலுழ் (வே.க.133.).]

கலுழ்[3] *kaluḷ,* பெ.(n.) 1. அழுகை (பிங்.);weeping. 2.நீர்க்கலக்கம்; muddiness. *"கடும்புனல் கால்பட்டுக் கலுழ்தேறி" (கலித்.31.).*

[குல்→ கல் → கலுழ்.]

கலுழ்ச்சி *kaluḷcci,* பெ.(n.) 1.துன்பம், அவலம்; sorrow. *"உவகைக் கலுழ்ச்சி யோவிலரே" (ஞானா. 31,14.).* 2. அழுகை (பிங்.); weeping.

[குல் → கல் → கலுழ் → கலுழ்ச்சி.]

கலுழ்வு *kaluḷvu,* பெ.(n.) **கலுழ்ச்சி** பார்க்க; see *kaluḷcci. "கோயிலெல்லாம்... கலுழ்வுற்றதன்றே" சீவக.3137.).*

[கலுழ் → கலுழ்வு.]

கலுழக்கல் *kaluḷakkal,* பெ.(n.) **கருடக்கல்** பார்க்க; see *karuḍakkal.*

[கலுழன் + கல் – கலுழக்கல்.]

கலுழம் *kaluḷam,* பெ.(n.) கலங்கல் நீர்; muddy turbid water.

த. கலுழம் >**Skt.** kaluṣa.

[கலுழ்தல் = கலங்குதல். கலுழ் = நீர்க்கலக்கம். 'கலுழ் தேறி' (கலித்.31.) கலுழ் → கலுழி = கலங்கல் நீர் (திவா.) கலுழ் → கலுழம் = வடவர் காட்டும் கல் (துண்டு) என்னும் மூலம் பொருந்தாது. (வ.மொ.வ.110).]

கலுழன்[1] *kaluḷaṉ,* பெ.(n.) 1.கருடன்; kite. 2.வெண்மையும் செம்மையும் கலந்த பருந்தினம்; a mythical bird, vehicle of Viṣṇu, *"கலுழன் மேல் வந்து தோன்றினான்" (கம்பரா.திருவவ.13.).*

[கல் → கலுழ், கலுழ்தல் = கலத்தல். கலுழ் → கலுழன் = வெண்மையும் செம்மையும் கலந்த பருந்தினம்.]

த. கலுழன் > **Skt.** garuḍa.

வடமொழியார் க்ரு [g] என்பதை மூலமாகக் காட்டி, எல்லாவற்றையும் விழுங்குவது என்று பொருட் காரணங் கூறுவர் [வ.மொ.வ.110.]. இது பொருந்தாது.

கலுழி[1] *kaluḷi,* பெ.(n.) 1. கலங்கனீர் (திவா.); disturbed water; puddle. 2. காட்டாறு (திவா.); jungle river. 3. நீர்ப்பெருக்கு; flood. *"நுரையுடைக் கலுழி" (குறிஞ்சிப்.178).* 4. கண்ணீர்; tears. *"மடவாள் கலுழிதனை மாற்றி" (நல்.பாரத. சர்ப்பயா.11.)* 5. கலக்கம்; confusion, perturbation. *"அஞ்சனக் கலுழி அஞ்சே றாடிய" (சீவக. 2318).).*

[கல் → கலுழ், கலுழி (கலங்கல் நீர்) கலுழ்தல் = கண்கலங்கி, மனங்கலங்கி அழுதல்.]

Skt. kalus

பல பொருள்கள் ஒன்றாகக் கலக்கும்போது கலக்கம் உண்டாகின்றது. பொருட் கலக்கத்தால் சில விடத்து மனக் கலக்கமும் விளைகின்றது.

நீரும் மண்ணுங் கலப்பது கலங்கல். அது பொருட் கலக்கம். பலர் கூடியிருக்கும்போது குறிப்பிட்ட ஒருவர் யார் என்று தெரியாது திண்டாடுவதும், பல வழிகள் கூடுமிடத்தில் செல்லவேண்டிய வழி எதுவென்று தெரியாது

மயங்குவதும், ஒன்றைத் துணியாது ஊசலாடுவதும், மனக் கலக்கமாகும்.

[குல → கல → கலங்கு → கலங்கல் → கலங்கு → கலக்கு → கலக்கம் → கல் → கலுழ் → கலுழி = கலக்கம், கலங்கல் நீர். கலுழ்தல் = = கலங்குதல், கண்கலங்கி அல்லது மனங்கலங்கி அழுதல்.]

கலுழி[2] *kaluḻi*, பெ.(n.) காட்டெருமை (சங்.அக.); wild buffalo.

[கலுழி → கலுளி (கொ.வ.).]

கலங்கல் நீரில் மகிழ்ந்து திளைக்கும் இயல்பு கருதி எருமைக்குக் கலுழி என்னும் பெயர் பொருந் துவதாயிற்று.

கலேர் *kalēr*, பெ.(n.) **கலேல்** பார்க்க; see *kalēl*.

[கலேல் → கலேர்.]

கலேல் *kalēl*, பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு (வின்.); an imitative sound.

[கல் + ஏல் – கலேல் = ஒலிக்குறிப்பு.]

கலை[1]**–தல்** *kalai-*, 4.செ.கு.வி.(v.i.) 1. கூட்டம் முதலியன பிரிந்து போதல், குலைதல்; to disperse, as an assembly, a defeated army; to be driven to different parts, as a herd pursued by dogs; to be scattered, as clouds. *"உடலுமுயிரு நினைவுந் தம்மிற்கலையா" (அஷ்டப்–அழகரந்.12.).* 2. அழிதல் to be ruined, destroyed. *"காத்தும் படைத்துங் கலைத்து நிற்போர்" (அருட்பா.* விண்ணப்பக்கலி, 50.). 3. நிலைகுலைதல்; to be absent minded, to wonder in thought. ஊழ்கம் (தியானம்) கலைந்துவிட்டது. 4. பலகை முதலியவற்றில் எழுதப்பட்டவை அழிதல்; to be blurred beyond recognition, as the writing on slate. பலகையில் எழுதியது கை பட்டு கலைந்து போயிற்று (இ.வ.).

ம. கலயுக; தெ. கலயு.

[குலை → கலை.]

கலை[2]**–தல்** *kalai-*, 4. செ.கு.வி. (v.i.) 1. இசையில் சுரம் குலைதல். (வின்.); to be out of tune, as an instrument. 2.பண் (இராகம்) மயங்குதல்; to glide from one tune into another.

[குலை → கலைதல்.]

கலை[3]**–தல்** *kalai-*, 4.செ.கு.வி.(v.i.) மிரளுதல் (திருநெல்.); to be startled, to shy. குடையைக் கண்டால் மாடு கலையும் (நெல்லை.).

[கல் → கலைதல். 'கல்' ஒலிக்குறிப்பு.]

கலை[4]**–த்தல்** *kalai-*, 4.செ.குன்றாவி.(v.i.) 1.குலைத்தல்; சிதைத்தல்; to disperse, derange, break up, disorganize, scatter, rout. *"பற்றலரைக் கலை... வேந்தர்" (அஷ்டப். திருவரங்கத்.25.).* 2. பிரித்து நீக்குதல்; to separate from a company, detach, banish, exile, exclude. *"குருவிக் கூட்டைக் கோலால் கலைத்தது போல"* 3. எண்ணத்தைக் கணித்தல்; to frustrate or thwart an object. *"இராட்சத குலத்தைத் தொலைக்கின்றான் இராவணனைக் கலைக்கின்றானே" (இராமநா. உயுத்.31.).* 4. பலகை முதலியவற்றில் எழுதப்பட்ட வற்றை அழித்தல்; to erase, as writing on slate. 5. ஒட்டுதல்; to chase. *அவன் என்னை வெகுதூரம் கலைத்தான் (யாழ்ப்.).*

ம. கலய்க்குக

[குலை → கலை (வே.க.190).]

கலை[5]**–த்தல்** *kalai-*, 4.செ.குன்றாவி.(v.t.) இசையின் ஓசை குலைத்தல் (வின்.); to relax, put out of tune, as stringed instruments.

[குலை → கலை–.]

கலை[6] *kalai*, பெ.(n.) 1.ஆண்முசு; male black monkey. (தொல்.பொருள்.601, உரை.). 2. சுறாமீன் (பிங்.); shark. 3. மகரவோரை (திவா.); capricorn of the zodiac.

[கல் → கலை. கலை = வலிமை வாய்ந்தது, உறுதியானது.]

கலை[7] *kalai*, பெ.(n.) 1. சீலை, புடைவை; cloth, garment. *"அருங்கலையயலுற" (பாரத. குருகல.57.).* 2. குதிரைக்கலனை (பு.செ.7, 7, உரை.); saddle of a horse.

[கல் → கலை. கல் = வன்மை.]

கலை[8] *kalai*, பெ.(n.) ஆண்மான்; stag, buck. *"கலையின் பிணை கன்றிடுமென்று கசிந்து" சீவக.1188).*

மறுவ. இரலை, மானேறு, கருமான், புல்வாய்.

[கல் → கலை. கலை = வலிமை வாய்ந்த ஆண்மான், வலிமை வாய்ந்தது, உறுதியானது.]

கலை[9] *kalai,* பெ.(n.) 1.அழகு; beauty. 2.பொலிவு; brightness or bloom of countenance. 3. கவர்ச்சி; attractiveness. 4.இயலிசை நாடகம் போன்ற கவின் கலைகள்; fine arts.

க., து. கலெ

[குல் = தோற்றம், அரும்பு, அழகு, குல் → கல் → கலை.]

கலை[10] *kalai,* பெ.(n.) 1. சிறப்பு நிலை; special portion. *"தத்துவக்கலையினில்" (ஞானா.1,26.).* 2. திங்களமைப்பில் பதினாறு நிலைகளுள் ஒன்று; moon's phase corresponding to a tidi. *"வெண்மதியினொற்றைக் கலைத்தலையாய்" (திருவாச. 6,40.).* 3.ஒளி; brightness, splendour. *"நிறைகலை வீச" (அரிசமய. பத்திசார.106.).* 4.முப்பது காட்டை கொண்ட நுட்பமான காலம் (கூர்மபு. பிரமாவி.3.); minute portion of time, 30 kattai, about 8 seconds. 5. ஒரு பாகையின் அறுபதிலொன்று (வின்.); Indian hour = 1/60 of a pagai = 1/60 of a zodiacal sign. 6. மரக்கவடு (பிங்.); branch of a tree.

ம. கல; **Skt., H.** kalā.

[குல் → கல் → கலை. (பிரிவு)]

கலை[11] *kalai,* பெ.(n.) மறு, தழும்பு, வடு; a scar, mark, mole (சேரநா.).

ம. கல; **க.** கலெ, கலி; **து., குட.** கலெ

[கலம் → கலை.]

கலை[12] *kalai,* பெ.(n.) 1. இசையின் கால நிலையிலொன்று; (mus.) a time measure. 2. ***அறுபத்து நாலுகலை*** பார்க்க; see arupattu-nalu-kalai. *"எண்ணெண் கலையோ ரிருபெரு வீதியும்" (சிலப்.14,127.).* 3. கல்வி (திவா.); learning, erudition. 4. நீதிநூல்; treatise, book. *"கலை நவின்ற பொருள்களெல்லாம்" (திருவாச.12, 13.).* 5. மொழி; language. *"தென்கலையே முதலுள்ள பல்கலை" (கந்தபு.நகரப்.49.).* 6. வண்ணப்பாட்டின் ஒரு பாகம்; part of a vaṇṇam. 7.கலைத்தன்மை ஏழனுள் ஒன்று; (Saiva) specific power of any of the superior deities as manifested in an avadāram or in a theophany for a specific purpose, manifestation of a deity; forms of the female energy of a deity as they appear, one of seven kinds of viddiyatattuvam. 8. இடைகலை பிங்கலைகள் (வின்.); breath passing from the nostril.

Skt., Pkt.,Mar.,Ori. kalā.

[கல் → கலை (வ.மொ.வ.110) வடமொழியில் மூலம் இல்லை.]

kalā, any practical art, mechanical or fine; assumed derivation ***kal***, to sound, to count. Tamil makes use of the same word (kalei for kala), but includes in the signification every science, as well as every art. We cannot, I think, doubt the derivation of ***kalei*** or ***kalā*** from the primitive Dravidian root ***kal***, to learn (another derivative of which is ***kalvi***, learning) the other meanings of the Sanskrit word ***kalā*** are so entirely unconnected with this, that it is evident that two different words spelled in the same manner (one of them Dravidian) have erroneously been supposed to be one and the same (C.G.D. F. L.P.569).

"கலை" தமிழிலிருந்து வடமொழி பெற்ற சொல் என்பது பாவாணர் கருத்து. நுண்கலை (fine arts), **விரிகலை** (liberal arts), **ஒழுக்கக் கலை** (arts of conduct) **என்பன கலையின் பெரும் பிரிவுகளாகும்.**

கலை[12] *kalai,* பெ.(n.) 1.உடல்; body. *"கலை யிலாளன்" (காமவேள்) (சிலப்.10,28.).* 2. புணர்ச்சிக் குரிய நிலைகள் (சீவக.1625இ உரை.); postures in sexual enjoyment.

[குல் → கல் → கலை (கூடுதல், கூடாகிய உடல் கூடுதலாகிய புணர்ச்சி]

கலை[13] *kalai,* பெ.(n.) மேகலை, காஞ்சியென்னும் இடையணிகள் (திவா.); woman's girdle consisting of seven strands of jewels. *"வாமாண் கலைசெல்ல நின்றார்" (திருக்கோ.263.).*

[கல் → கலை (கல் பதித்த இடையணிகலன்.]

கலை[14] *kalai,* பெ.(n.) 1. மரவயிரம் (பிங்.); core, solid part of timber. 2. காஞ்சிமரம் (யாழ். அக.); river portia tree.

[கல் → கலை. கல் = வன்மை (வ.மொ.வ.110).]

கலை[15] *kalai*[11], பெ.(n.) கருப்பூரவகை (சிலப்.14,109, உரை.); a kind of camphor imported from Kalah in the Malay peninsula.

[கலாய் → கலை. மலயத்தீவகப் பகுதியில் உள்ள கலாய் என்னுமிடத்திலிருந்து வந்த கருப்பூரமாதலின் இடவாகு பெயராயிற்று.]

கலை[16] *kalai,* பெ.(n.) உமையவள் (கூர்மபு. திருக்கல்யாண.23.); Parvati consort of Siva.

[கல் → கலை. கல் = மலை. கலை = மலைமகள்.]

கலைக்கல்லூரி *kalaika-kallūri,* பெ.(n.) கலைப் பாடங்கள் பயிற்றுவிக்கப்படும் கல்லூரி; Arts college.

[கலை + கல்லூரி.]

கலைக்களஞ்சியம் *kalai-k-kaḷañjiyam,* பெ.(n.) ஒரு துறை பற்றியோ பல துறைகள் பற்றியோ செய்திகளைப் பல கட்டுரைத் தலைப்புகளில் உள்ளடக்கிய நூற்றொகுதி, அகர வரிசையில்; encyclopaedia.

[கலை + களஞ்சியம்.]

கலைக்கூடம் *kalai-k-kūḍam,* பெ.(n.) 1.கலை நிகழ்ச்சிகள் நடத்துதற்கேற்ற பெரிய கூடம்; auditorium. 2. கலைப்பொருள்கள் காட்சிக்காக வைக்கப்பட்டிருக்குமிடம்; art gallery.

[கலை + கூடம்.]

கலைக்கோட்டுத்தண்டு *kalai-k-kōṭṭu-t-taṇḍu,* பெ.(n.) ஒரு பழைய நூல் (இறை.1, உரை.); an ancient poem.

[கலை + கோட்டு + தண்டு. கலைக்கோடு = மான் கொம்பு. கலைக்கோட்டு முனிவரால் இயற்றப்பட்ட நூலாகலாம்.]

கலைக்கோட்டுமுனி *kalai-k-kōṭṭu-muṉi,* பெ.(n.) உருசிய சிருங்க முனிவர்; name of Rsiyasringa, a famous Risi in the *Ramayana.* *"கலைக்கோட்டு முனிவரின் வான்பிலிற்றும்" (கம்பரா.திருவவ.37,).*

[கலை + கோடு + முனி. கலைக்கோடு = மான்கொம்பு.]

கலைகணாளர் *kalai-k-kanalar,* பெ.(n.) அமைச்சர்; ministers of a king, who have the eyes of knowledge. *"கலைக்கணாளரு மிங்கில்லை" (சீவக.1924.).*

[கலை + கண் + ஆளர். கலைக்கண் = அறிவுக்கண்.]

கலைகுறை[1]**–தல்** *kalai-kuṟai-,* 4.செ.கு.வி. (v.i.) தெய்வவன்மை குறைதல்; to diminish, as divinity in an idol, by the neglect of worship, etc.

[கலை + குறை.]

கலைகுறை[2]**–தல்** *kala-kuṟai,* 4 செ.கு.வி. (v.i.) சத்துக் குறைதல்; decrease in vitality or strength (சா.அக.).

[கல் → கலை + குறை. கல் = வன்மை, சத்து.]

கலைக்கொம்பு *kalai-k-kombu,* பெ.(n.) கலைமான் கொம்பு (பதார்த்த. 1138.); stag's horn.

[கல் → கலை + குறை. கல் = வன்மை, சத்து.]

கலைச்சாலை *kalai-c-cālai,* பெ.(n.) கல்வி பயிலுமிடமான கல்லூரி அல்லது பள்ளி; college or school. *"மந்தனெனப் பயின்ற கலைச்சாலை யினின்றகற்றி" (அருட்பா, VI, குடும்ப. குருதரி.36.).*

[கலை + சாலை.]

கலைச்சுவை *kalai-c-cuvai,* பெ.(n.) கலை நுகர்ச்சியால் விளையும் இன்பம்; pleasure obtained out of fine arts.

[கலை + சுவை.]

கலைச்சுவைஞர் *kalai-c-uvaiñar,* பெ.(n.) கலை யார்வலர்; one who is interested in fine arts.

[கலை + சுவைஞர்.]

கலைச்செம்பு *kalai-c-cembu,* பெ.(n.) ஓர் உயர்ந்த தூய்மையான செம்பு; a superior kind of refined copper (சா.அக.).

[கலை + செம்பு.]

கலைச்சொல் *kalai-c-col,* பெ.(n.) 1. துறைசார்ந்த கோட்பாட்டுச் சொல்; technical term. 2. துறை சார்ந்த சிறப்புச் சொல்; word used in special field.

[கலை + சொல்.]

கலைஞன் *kalaiñaṉ,* பெ.(n.) 1.கல்விமான் (திவா.); learned man, savant. 2.கலைவல்லான்; an artiste.

H; kākar; **Guj.** karigar

[கலை + அன் – கலையன் → கலைஞன்.]

பண்டைத் தமிழில் ஞ், ந், என்பவைகளும் உடம்படு மெய்களாக இருந்திருக்கின்றன. வினைஞர், அரிநர் முதலிய சங்க காலத்துச் சொற்கள் இவ்வுடம்படுமெய்களைப் பெற்று வருதலைக் காண்க.

கலைஞானம் *kalaiñāṉam,* பெ.(n.) 1. ***கலையறிவு*** பார்க்க; see *kalaiyaṟivu* *"கற்றறியேன் கலைஞானம்" (திருவாச.38, 5.).* 2. ***அறுபத்து நாலு கலை*** பார்க்க; see *aṟupāttunālu-kalai.*

Skt. gñānam > த. ஞானம்.

[கலை + ஞானம் – கலைஞானம்.]

கலைஞானி *kalai-ñāṉi,* பெ.(n.) **கலையறிவாளன்** பார்க்க; see *kalaiyaṟivāḷaṉ. "நண்ணிலேன் கலைஞானிக டம்மொடும்" திருவாச.26.6.).*

[கலை + ஞானி.]

கலைத்திறன் *kalai-t-tiṟaṉ,* பெ.(n.) கலை வல்லமை; effeciency in arts; artistry.

[கலை + திறன்.]

கலைத்துறை *kalaituṟai,* பெ.(n.) ஆடல், பாடல் போன்றவற்றைக் குறிக்கும் துறை; department of fine arts.

[கலை + துறை.]

கலைத்தொழில் *kalai-t-toḻil,* பெ.(n.) 1. யாழ்மீட்டுதலுக்குரிய செய்கைகள் (சீவக.657, உரை.); the eight kinds of action involved in playing the yāḻ, viz, paṇṇal, parivattanai, ārāydal, taivaral, celavu, vilāiyaṭṭu, kaiyuḷ, kurum-bōkku. 2. ஆடல் பாடல் முதலிய கலைகளைக் கொண்டிருக்கும் தொழில்; profession of arts.

[கலை + தொழில்.]

எண்வகை யாழ்மீட்டும் செயல்கள் : பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவால், செலவு, விளையாட்டு, கையுள், குறும்போக்கு.

கலைத்தோல் *kalai-t-tōl,* பெ.(n.) ஆண்மான் தோல்; the skin of a male deer (சா. அக.).

[கலை + தோல். கலை = ஆண்மான்.]

கலைநாட்டம் *kalai-nāṭṭam,* பெ.(n.) கலைத் துறையில் காட்டும் ஈடுபாடு; involvement in arts.

[கலை + நாட்டம்.]

கலைநாதன் *kalai-nādaṉ,* பெ.(n.) கலைவல்லார்; expert in arts. 2.புத்தன் (சூடா.); Buddha, the enlightened.

[கலை + நாதன். நாயன் → நாதன்.]

கலைநாறி *kalaināṟi,* பெ.(n.) மான்மணத்தி; musk (சா.அக.).

[கலை + நாறி. கலை = மான். நாறு → நாறி.]

கலைநிகழ்ச்சி *kalainigaḻcci,* பெ.(n.) கலைஞர்களால் நிகழ்த்தப்படும் ஆடல் பாடல் முதலிய நிகழ்ச்சிகள்; fine arts programme.

[கலை + நிகழ்ச்சி.]

கலைநியமம் *kalai-niyamam,* பெ.(n.) மதுரையிலிருந்த சிந்தாதேவி கோயில்; the temple of Sarasvathi which existed in Madura at the time when Manimegalai was written. *"சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்து" (மணிமே.13,106.).*

[கலை + நியமம்.]

கலைப்பற்றில்லார் *kalai-p-paṟṟillar,* பெ.(n.) கலையறி வில்லாதவர்; one who has no knowledge or taste in fine arts.

[கலை + பற்று = இல்லார்.]

கலைப்பற்று *kalai-p-paṟṟu,* பெ.(n.) **கலையார்வம்** பார்க்க; *kalai-y-ārvam.*

[கலை + பற்று.]

கலைப்பாகி *kalai-p-pāgi,* பெ.(n.) 1. கொற்றவை; Durga who rides on a stag. *"வெய்ய கலைப்பாகி கொண்டவளாய் நின்றாள்" (திவ்.பெரியாழ். 1, 3, 9.).* 2. கலைமகள்; Kalaimagaḷ the goddess of learning.

[கலை + பாகி. கலை = ஆண்மான், கல்வி, பாகன் (ஆ.பா.) பாகி (பெ.பா.).]

கலைமகள் *kalai-magaḷ,* பெ.(n.) கல்வித்தெய்வம், கலைவாணி (பிங்.) Sarasvathi, goddess of learning.

[கலை + மகள்.]

கலைமகள்கண்ணி *kalaimagaḷkaṇṇi,* பெ.(n.) வாடாமல்லிகை; everfresh jasmine (சா.அக.).

[கலை + மகள் + கண்ணி. கண்ணி = மாலை.]

கலைமகள்நிறம் *kalaimagaḷniṟam,* பெ.(n.) வெள்ளைச் செய்ந்நஞ்சு; white arsenic (சா.அக.).

[கலைமகள் + நிறம்.]

கலைமகள்பண்டாரம் *kalaimagal-pandāram,* பெ.(n.) நூல் நிலையம்; library (உ.வ.).

[கலை + மகள் + பண்டாரம்.]

பண்டாரம் என்பது பல பொருள்கள் நிறைந்த சரக்கறைப் பெயர். அது முறையே பல அறிவுப் பொருள்களை உள்ளத்தில் தொகுத்து வைத்த பேரறிஞனையும், அப்பேரறிவு காரணமாக உலகப் பற்றைத் துறந்த துறவியையும், அத்துறவி போலக் கோலம் பூண்டவனையும், அக்கோலம் பூண்ட இரப்போரையும் குறித்தது.

களஞ்சியத்தைப் பண்டாரம் என்பதும், நூல் நிலையத்தைக் கலைமகள் பண்டாரம் என்பதும் உலக வழக்கு [சொல்.ஆ.கட்.88].

கலைமடந்தை *kalai-madandai,* பெ.(n.) **கலைமகள்** பார்க்க; see *kali-magal.* *“உற்ற கலைமடந்தை ஓதுகிறாள்”*

[கலை = கல்வி, கலை + மடந்தை.]

கலைமருது *kalai-marudu,* பெ.(n.) கருப்பு மருதமரம்; black winged myrobalan (சா.அக.).

[கலை + மருது.]

கலைமலைவு *kalai-malaivu,* பெ.(n.) இயல், இசை, கணிதம் முதலிய கலை நூல்களிற் கூறியவற்றோடு மாறுபட வருவது (தண்டி, 118, தலைப்பு.); anything opposed to accepted tenets in arts and sciences.

[கலை + மலைவு.]

கலைமாமணி *kalaimāmani,* பெ.(n.) கலைகளில் துறைபோயவர்களுக்குத் தமிழக அரசு ஆண்டு தோறும் வழங்கும் விருது; Tamilnadu State award to eminent artistes.

[கலை + மா + மணி.]

கலைமான்[1] *kalaimān,* பெ.(n.) 1. ஆண்மான்; male of deer. *“பிணைமா இனிதுண்ண வேண்டி கலைமா தன்கள்ளத்தின் ஊச்சும்” (கலி.)* மான் வகை; spotted deer. *“கலைமான் வினாயது” (திருக்கோ.53, கொரு.).* 2. செம்பழுப்பு நிற உடலில் வெள்ளைப் புள்ளிகளை உடைய மான் வகை; spotted deer.

[கலை = ஆண், அழகு. கலை + மான்.]

கலைமான்[2] *kalaimān,* பெ.(n.) கலைவாணி; the Kalaivāni, the goddess of learning. *“கலை மான்றனை நன்முறை மாதிரியாக் காயத்திரியை முக நோக்கி” (சேதுபு.காயத்.32.).*

[கலை + மான்.]

கலைமான்மூலி *kalaimānmūli,* பெ.(n.) திருகுக் கள்ளி; Indian tree spurge (சா.அக.).

[கலை + மான் + மூலி.]

கலையப்பட்டி *kalaiyappatti,* பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டத்தில், பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் உள்ள ஊர்; a place in Kulathur taluk of Pudukkottai where remains of megalithic cuture excavated.

[கலையம் + பட்டி.]

கலையம் *kalaiyam,* பெ.(n.) **கலயம்** பார்க்க, see *kalayam.*

[கலையம் → கலயம்.]

கலையரங்கம் *kalai-yarangam,* பெ.(n.) கலை நிகழ்ச்சிகள் பார்க்கும் மேடை; a stage for cultural activities.

[கலை + அரங்கம். அர் → அரங்கு → அரங்கம் = நாடக மேடை, நாடக சாலை, விளையாடிடம், படைக்கலம் பயிலுமிடம், போர்க்களம், ஆற்றிடைக்குறை, திருவரங்கம். (பண்.தமி.நா .பண்.129)]

கலையரங்கு *kalaiyarangu,* பெ.(n.) **கலையரங்கம்** பார்க்க; see *kalaiyarangu.*

[கலை + அரங்கு.]

கலையறிபுலவன் *kalai-y-ari-pulavan,* பெ.(n.) முருகக் கடவுள் (பிங்.); Muruga, well versed in all branches of knowledge.

[கலை + அறி + புலவன். புலவன் = புலமையாளன். முருகன் தமிழ்க் கடவுளாதலின் கலையறி புலவன் எனப்பட்டான்.]

கலையறிவாளன் *kalaiyarivālan,* பெ.(n.) பலதுறை வல்லுநன்; one well versed in different arts.

[கலை + அறிவாளன்.]

கலையறிவாளி *kalaiyarivāḷi*, பெ.(n.) ***கலையறி வாளன்*** பார்க்க; see *kalaiyarivāḷaṉ*.

[கலை + அறிவாளன்.]

கலையறிவு *kalaiyarivu*, பெ.(n.) பல துறையறிவு; knowledge of different arts.

[கலை + அறிவு.]

கலையார்வம் *kalai-y-ārvam*, பெ.(n.) கலைகளில் ஈடுபாடு காட்டுதல்; evincing keen interest in fine arts.

[கலை + ஆர்வம்.]

கலையானத்தி *kalai-yāṉatti*, பெ.(n.) ***கலையூர்தி*** (சூடா.) பார்க்க; see *kalai-y-ūrdi*.

[கலை + யானத்தி. யானம் = ஊர்தி, யானத்தி = ஊர்பவள், இயனம் → யானம் → யானத்தி.]

கலையியல் *kalaiyiyal*, பெ.(n.) கலையியல் படிப்பு; studies in arts i.e. humanities subjects.

[கலை + இயல்.]

கலையிளக்குங்காரி *kalaiyiḷakkuṅkāri*, பெ.(n.) தசையைக் கரைக்கும் வேதிக்கல்; a mineral stone supposed to dissolve flesh (சா.அக.).

[கலை = கட்டியானது. கலை + இளக்கும் + காரி.]

கலையினன் *kaliyiṉaṉ*, பெ.(n.) திங்களவன் (சூடா.); moon, as having phases.

[கலை + இன் + அன். 'இன்' ஐந்தன் உருபு ஆறன் பொருளில் வந்து உருபு மயக்கமாயிற்று.]

கலையுருவினோன் *kalai-y-uruviṉōṉ*, பெ.(n.) கலைகளை உருவாகவுடையவன் எனப்படும் சிவன்; Siva, who is the embodiment of all knowledge. *"கட்டி நிற்போனுங் கலையுருவினோனும்" (மணிமே. 27,91).*

[கலை + உருவு + இன் + (ஆன்) ஒன். 'இன்' சாரியை 'ஆன்' (ஆ.பா. ஈறு.]

கலையூர்தி *kalai-y-ūrdi*, பெ.(n.) கொற்றவை (திவா.); Durga, who rides on a stag.

[கலை = ஆண்மான், கலை + ஊர்தி.]

கலையேற்று-தல் *kalai-y-ēṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) உருவேற்றுதல்; to chisel, paint, as of sculpture, painting etc.

[கலை + ஏற்று.]

கலையேறு-தல் *kalai-y-ēṟu-*, 5 செ.கு.வி.(v.i.) 1.தெய்வ வலிமை மிகுதல்; to increase as divinity in an idol, with the increase of worship by way of mantras. 2. செருக்கடைதல் (வின்.); to grow arrogant by prosperity, promotion.

[கலை + ஏறு.]

கலையொடுமலைவு *kalai-y-oḍu-malaivu*, பெ.(n.) செய்யுட் குற்றங்களுள் ஒன்று (யாப்.வி.525.); a defect in poetry.

[கலை + ஒடு + மலைவு.]

கலையோன் *kalaiyōṉ*, பெ.(n.) நிலவன் (பிங்.); moon, as having phases.

மறுவ. நிலவு, அம்புலி, திங்கள் தண்கதிர், இரவோன், அலவன், அல்லோன், மதி, களங்கன், முயற்கூடு.

[கலை + (ஆன்) ஒன். ஆன். ஆ.பா.ஈறு.]

கலையோன் என்பதின் கலையென்பது நிலவொளியின் ஒரு பகுதியைக் குறிக்கும்; நாளுக்கொரு கலையாக வளர்தலும் தேய்தலுமாகிய தோற்றந் திங்களில் காணப்படுதலால் அதற்குக் கலையோன் எனும் பெயர் போந்தது.

கலை வல்லமை *kalaivallamai*, பெ.(n.) பல்கலைத் தேர்ச்சியுடமை; well versed in arts; artistry.

[கலை + வல்லமை.]

கலைவல்லார் *kalai-vallār*, பெ.(n.) 1. புலவர் (திவா.); learned men, the literati. 2. பரத்தையர்; dancing-girls, who are skilled in the arts of music, dancing etc. *"கலைவல்லார் நெஞ்சிற் காமமே போன்றும்" (சீவக.2107.).*

[கலை + வல்லார்.]

கலைவாணன் *kalaivāṇaṉ*, பெ.(n.) ***கலைஞன்*** பார்க்க; see *kaliñyaṉ*.

[கலை + வாணன். வாழ்நன் → வாணன்.]

கலைவிழா *kalai-viḻā,* பெ.(n.) நாட்டின் பண்பாட்டை விளக்கும் வகை அமைந்த கலை நிகழ்ச்சிகளைக் கொண்ட விழா; cultural festival.

[கலை + விழா.]

கலைவு *kalaivu,* பெ.(n.) 1. குலைவு; derange. 2.குழப்பம்; confusion.3 . பிரிவு; separate.

[குல் → கல் → கலை → கலைவு.]

கவ்வக்குன்று *kavva-k-kuṉṟu,* பெ.(n.) மந்தர மலை (வின்.); mt. mandara with which the gods churned the sea of milk.

[கவ்வு(ம்) + குன்று. கவ்வம் = மத்து.]

கவ்வம்[1] *kavvam,* பெ.(n.) மத்து; churning-stick.

தெ. கவ்வமு

[கவ்வு → கவ்வம்.]

கவ்வம்[2] *kavvam,* பெ.(n.) மாட்டுச்சுழிவகை. (பெரிய.மாட்.); a mark of cattle.

[கவ்வு → கவ்வம்.]

கவ்வாணம் *kavvāṇam,* பெ.(n.) குறிஞ்சி யாழ்த்திறங்களுள் ஒன்று (பிங்.); an ancient secondary melody-type of the Kuṟiñji class.

[கவ்வு + ஆணம்.]

கவ்வு[1]–தல் *kavvu-,*5 செ.கு.வி.(v.i.) வெளவுதல்; to seize, grasp with eagerness. *"கவ்வித் தோ றின்னும் குணுங்கர் நாய்" (நாலடி.322.).*

[அவ் → அவ்வு → வவ்வு → கவ்வு → வாயாற் பற்றுதல் (மு.தா.11).]

ஒன்றைக் கவ்வுதலையொத்த வாய்ச்சைகை நிலை, அவ் என்னும் ஒலியைத் தோற்றுவித்தற் கேற்றதாதல் காண்க. மேல் வாய்ப்பல் கீழுதட்டோடு பொருந்துவதே கவ்வும் நிலையாம். இந்நிலை வகர மெய்யொலிப்பிற்கே ஏற்கும்.

"மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே" [நன்.85]

"பல்லிதழியைய வகாரம் பிறக்கும்" [தொல். எழுத்.98] பிற்காலத்தில் கவ்வுதல் என்னும் சொல் வாயினாற் பற்றுதலுக்கும் வவ்வுதல் என்னும் சொல் கையினாற் பற்றுதலுக்கும் வரையறுக்கப் பெற்றன. ஆயினும் இன்னும் அவ்வுதல் உலக வழக்கில் வாயினாற் பற்றுதலை உணர்த்தும்.

எ.டு. கன்று புல்லை ஔவித் தின்கிறது.

அவ்வு → ஔவு, கவ்வு → கௌவு, வவ்வு → வௌவு. (தமி.வர.64).

கவ்வு[2] *kavvu,* பெ.(n.) 1. வாயாற் கவ்வுகை; bite, seizing by the mouth, as dog. *"இந்திர கோபங் கவ்வி நோக்கினவென்று" (இராமா.வரைக்.9)* நாய் ஒரு கவ்வுக் கவ்வியது. 2. தின்கை; eating. *"கருங்காக்கை கவ்வுமுனையின்" (பொருந.184).* 3. கவட்டை (வின்.); fork of a branch or horn.

[அவ் → அவ்வு → கவ்வு.]

கவ்வை[1] *kavvai,* பெ.(n.) 1.ஒலி, உறுமல்; sound, din, noise, roar *"எவ்வையர்சேரி யிரவு மிமை பொருந்தாக் கவ்வை" (பு.வெ.12.வெண்பாற்.10.).* 2. பழிச்சொல்; scandal, slander, calumny. *"கவ்வையற்ற நடை பயில" (தாயு.சிற்சுகோ.8.).* 3. துன்பம்; affliction, distress. *"கவ்வையொழிந் துயர்ந்தனன்" (கம்பரா. திருவவ.66.).* 4. கவலை; anxiety, care. *"கவ்வையாற் கலங்குமனம்" (திருக்காளத். பு.18,27,).* 5.பொறாமை; jealousy. 6. கள் *(பிங்.; toddy.).*

[கவ் → கவ்வை (மு.தா.14.).]

கவ்வை[2] *kavvai,* பெ.(n.) செயற்படுத்துகை, வணிகம்; concern, business, affair. *"இவன் சேர்ந்த கவ்வை யுரைத் தருள்க" (கம்பரா. திருவவ.63.).*

[கவ் → கவ் → கவ்வை.]

கவ்வை[3] *kavvai,* பெ.(n.) எள்ளிளங்காய்; green sesamum seed. *"சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்ப"* (மதுரைக்.271).

மறுவ. எள்காய்

[கவ் → கவ்வை. உள்ளொடுங்கி ஒட்டியிருப்பது.]

கவ்வை[4] *kavvai,* பெ.(n.) ***ஆயிலியம்*** (சூடா.) பார்க்க; see *āyiliyam*[2].

[கல் → கவ் → கவ்வை.]

கவ்வை பார்த்தல் *kavvai-pār-,* 4 செ.கு.வி.(v.i.) பணியாற்றுதல் (வின்.); to be employed, to attend to business.

[கவ்வை + பார்.]

கவக்கட்டை *kava-k-kaṭṭai,* பெ.(n.) **கவைக்கட்டை** பார்க்க; see *kavai-k-kaṭṭai.*

[கவைக்கட்டை → கவக்கட்டை.]

கவக்குன்று *kava-k-kuṉṟu,* பெ.(n.) கவ்வக்குன்று (வின்.); mount Mandara.

[கவ்வம் → கவம் + குன்று. கவ்வம் = மத்து.]

கவக்கால் *kavakkāl,* பெ.(n.) முன் தூக்கப் பயன்படும் கவட்டையான கம்பு.

கவசங்கட்டு-தல் *kavašaṅ-kaṭṭu-,*5 செ.கு.வி.(v.i.) 1.தீயதேவதைகளால் தீங்கு நேராதபடி மந்திரத் தினாற் காப்புச் செய்தல் (வின்.); to bind or restrain malignant deities by repeating mantras while beginning daily worship in order to prevent their depriving the worshipper of benefit. 2. சீலை மண்ணால் சட்டியின் வாயைக் கட்டுதல் (கொ.வ.); to cover the mouth of a vessel with a cloth over-spread with loam or clay.

[கவ்வு → கவ்வியம் → கவயம் → கவசம் + கட்டு.]

கவசப்பூடு *kavacappūḍu,* பெ.(n.) அங்கப் பிச்சு, bile enclosed in a sac; bile in the duct (சா.அக.).

[கவச +பூடு. கசவம் → கவசம்.]

கவசம்[1] *kavašam,*பெ.(n.) 1. மெய்புகு கருவி; armour mail, coat of mail, *"புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய" (புறநா.13,2.)* 2. பாதுகாக்கை; amulet, charm worn as a protection against evil, phylactery. *"நீற்றுக் கவசம்" (திருவாச.46, 1.).* 3. பாதுகாப்புக் கயிற்றி(இரட்சை)னையுண்டாக்கு வதற்காகச் சொல்லப்படும் மந்திரம்; a kind of mantra as a means of protection. *"உளத்தாற் கவச முரைத்து" (சைவச.பொது.285.).*

க.கவச: **H.** kavac; **Skt.** kavaca; **Pkt.** kavaya.

[கவ்வு → கவ்வியம் → கவயம் → கவசம்.]

கவசம்[2] *kavašam,* பெ.(n.) 1.மருந்தெரிக்கும் பாண்டங்களை மூட இடும் சீலை மண்; Lute, clay composition with which cloth to close vessels. 2. காயத்திற்கு இடுங் கட்டு (இராட்.); dressing of a wound, application of medicine.

[கவ்வு → கவ்வியம் → கவயம் → கவசம்.]

கவட்டடி *kavaṭṭaḍi,* பெ.(n.) 1. எட்டி அடிவைத்தல் (யாழ்ப்.); to stride, pace. 2.ஆண்குறி அல்லது பெண்குறி; private parts of the humans.

ம. கவட்டடி

[கவடு + அடி – கவட்டடி.]

கவடு = பிளவு, பிரிவு, இடைவெளி, இடை வெளி விட்டுக் காலெடுத்து வைப்பது கவட்டடி.

கவட்டன் *kavaṭṭaṉ,* பெ.(n.) ஏமாற்றுபவன்; diceitful person. *"உளமழிக்கும் கவட்டர்களிணக்கந் தவிர்த்து" (திருப்பு.238.).*

Skt. kapaṭa

[கவடு → கவட்டன்.]

கவட்டி *kavaṭṭi,* பெ.(n.) **கவட்டை** பார்க்க; see *kavaṭṭai.*

[கவடு → கவட்டி (மு.தா.13.).]

கவட்டுக்கால் *kavaṭṭu-k-kāl,* பெ.(n.) வளைந்த பாதம்; bandy legs.

மறுவ. கடப்புக்கால்

[கவடு + கால் – கவட்டுக்கால்.]

கவட்டு[1]**-தல்** *kavaṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. மெல்லுதல்; to chew. 2. சப்புக் கொட்டல்; touching the palate witht the tongue and withdrawing it by a sound to find the taste of anything (சா.அக.).

[கவள் → கவட்டு.]

கவட்டு[2]**-தல்** *kavaṭṭu-,* 5 செ.கு.வி.(v.t.) 1. வளைத்தல் (யாழ். அக.); to bend.

[கவடு → கவட்டு.]

கவட்டுநாக்கு *kavaṭṭunākku,* பெ.(n.) ஏய்ப்பு (வஞ்சகம்) பேசும் நா; deceitfulness of speech, double-tongue.

[கவடு = இரட்டைத் தன்மை. கவட்டு + நாக்கு.]

கவட்டுநெஞ்சன் *kavaṭṭuneñjaṉ,* பெ.(n.) ஏமாற்றும் இயல்பினன்; cunning, shy person man of guile.

க. கவடு நடெக

[கவடு + நெஞ்சன் – கவட்டுநெஞ்சன்.]

கவட்டுப் படிக்கல் *kavaṭṭu-p-paḍikkal*, பெ.(n.) கள்ள நிறைகல்; false weight.

[கவட்டு + படிக்கல்.]

கவட்டுப் பேச்சு *kaṭṭu-p-pēccu*, பெ.(n.) ஏமாற்றுப் பேச்சு; cunning speech (கருநா.).

க. கவடுநுடி, கவடுமாது.

[கவடு + பேச்சு.]

கவட்டை[1] *kavaṭṭai*, பெ.(n.) 1. மரக்கிளையின் கவர்; fork of a branch, branching root. 2. இரு தொடைகளுக்கு இடையே உள்ள இடைவெளி; fork of the legs, crotch. கவட்டையில் கையைக் கொடுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான் (உ.வ.).

ம. கவட்ட; **க.** கவதெ, கவடு, கவெ, கவல்; **கோத.** கவ்ட்; **துட.** கவ; **து.** கபெ, கபர்; **தெ.** கவட.

[கவடு → கவட்டை (மு–தா.14).]

கவட்டை[2] *kavaṭṭai*, பெ.(n.) 1. கவை, பிரிவு; clevage. 2. சுண்டுவில்; the bow for shooting pellets.

[கவை → கவடு → கவட்டை.]

கவடஆரா *kavaḍa-ārā*, பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish.

[கவடம் + ஆரா. கவடம் = ஏய்ப்பு.]

கவடக்கலை *kavaḍa-k-kalai*, பெ.(n.) மாயக்கலை, மாயவித்தை; jugglery.

[கவடம் + கலை.]

கவடகம் *kavaḍagam*, பெ.(n.) வெண்கடம்பு; white cadambu (சா.அக.).

[கவடு + அகம் – கவடகம்.]

கவடநாடகம் *kavaḍanāḍagam*, பெ.(n.) போலி நடிப்பு; deceitful dealing.

[கவடம் + நாடகம்.]

கவடம் *kavaḍam*, பெ.(n.) ஏமாற்றுதல்; ஏய்ப்பு; deceit, guile.

த.கவடம் > **Skt.** kapaṭa.

[கவடு → கவடம்.]

கவடமஞ்சி *kavaḍamañji*, பெ.(n.) சிறுதுவரை; a small variety of dhall.

[கவடம் + மஞ்சி.]

கவடமருத்துவம் *kavaḍamaruttuvam*, பெ.(n.) மருத்துவம் செய்பவன் எனப் பொய்யாக நடிப்பவன்; a pretender to medical skill.

[கவடம் + மருத்துவம்.]

கவடன் *kavaḍaṉ*, பெ.(n.) ஏமாற்றுபவன்; man with guile.

[கவடு → கவடன்.]

கவடி[1] *kavaḍi*, பெ.(n.) 1. வெள்வரகு (பு.வெ.6,26, உரை.); a coarse kind of white millet, unfit for food. 2. பலகறை, சோழி; cowry. *"கவடி வெண்பற்கள்" (திருவாலவா. 38,47.).* 3. ஒருவகை விளையாட்டு; game of leap - frog.

மறுவ. பலகறை, சோழி.

தெ. கவ்வ; **க., ம.** கவடி.

H. kauri, kaudi; **Mar.** kavadi; **Skt.** kaparda; **Hung.** keszpenz; **Finn.** kateinen; **Pol.** gotowka; **Eng.** cowrie; **G., Du., Yid.** geld; **O.Ir.** karpardah; **Ser.Croa.** gotovina; **Cz.** kotore; **It.** contente; **Norw., Swed.** kontanter; **Indon.** kontan; **Jap.** genkin.

[கவை → கவடு → கவடி (பிளவுண்டது. பிரிவுக் கட்டங்களுள்ள பலகைகளை வைத்து விளையாடும் விளையாட்டு).]

கவடி[2] *kavaḍi*, பெ.(n.) கரவு (வஞ்ச) மனத்தினன்; deceitful person. *"கவடி களாகத்திரியுங் கள்ளர்காள்" (தமிழ்நா.237.).*

[கவடு→கவடி (ஒருபாற் படாமல் பலதிசை செல்லும் குற்றமுள்ள இயல்பினன்).]

கவடி[3] *kavaḍi,* பெ.(n.) தகரம்; tin.

[கவை → கவடு → கவடி = வளைக்க அல்லது சுருட்டத் தக்கது]

கவடி[4] *kavaḍi,* பெ.(n.) படிகாரம்; alum.

[கவடம் → கவடி.]

கவடி[5] *kavaḍi,* பெ.(n.) சிறுவர் விளையாட்டு வகை; game of leap-frog.

ம. கவடி

[கவடு → கவடி. (கவைத்த கால் கொண்ட தவளை. தவளைப் போல் தத்தி ஆடும் ஆட்டம்).]

கவடி[6] *kavaḍi,* பெ.(n.) எதிரணியார் மறித்தும் வளைத்தும் பிடித்தடக்க முயலவும் பிடி கொடாமல் ஒட்டங்காட்டி ஒடியாடி ஒருவரையோ பலரையோ தொட்டுத் தோல்வி காட்டி தொடுகோட்டை எட்டித்தாவித் தன்னணிக்கு, ஆட்டச்சொல்லைப் பாடிக்கொண்டே, ஒடிவரும் தமிழ் இளைஞர் விளையாட்டு; kabadi game.

[கவடு → கவடி (இரண்டு அணியாகப் பிரிந்து நின்று ஆடும் ஆட்டம்).]

கவடித்து *kavaḍittu,* பெ.(n.) சிறு ஆலமரவகை; a kind of short or stunted banyan tree (சா.அக.).

[கவடு → கவடித்து – வளைந்தது, குட்டையானது.]

கவடிவித்து–தல் *kavaḍivittu,* 5 செ.குன்றாவி.(v.t.) வெள்வரகு விதைத்தல்; to sow coarse kind of white millet. *"கழுதை கொண்டுழுது கவடி விச்சி" (S.i.i.vol5. part, II431.6).*

[கவடி + வித்து → விச்சு (கொ.வ.). கவடி = வளைந்த வரகுக்கதிர்.]

கவடு[1] *kavaḍu,* பெ.(n.) 1.மரக்கிளை; branch of a tree. *"காதலுங் களிப்பு மென்னுங் கவடுவிட்டு" (சீவக.1389.)* 2. கவையுள்ள மரக்கிளை; forked branch. 3. தொடைச்சந்து; fork of the leg. அவன் கவட்டிலே நுழைந்தான் (உ.வ.). 4.யானை கழுத்திலிடுங் கயிறு (திவா.); rope of an elephant's neck. 5. பகுப்பு; separation, division. *"கவடுபடக் கவைஇய .... உந்தி" (மலைபடு.34).* 6. அடிவைப்பு (யாழ்ப்.); stride, pace.

தெ. கவட; **க.** கவடு.

[கவை → கவடு.]

கவடு[2] *kavaḍu,* பெ.(n.) ஏமாற்று; ஏய்ப்பு; fraud, guile. *"பிரியக் கருதினான் கவடு போலும்" (இறை.51, அரை).*

க. கவடு, கவட, கௌடி; **Skt.** kapaṭa.

[கவை → கவடு.]

கவடு[3] *kavaḍu,* பெ.(n.) உட்பிரிவு; section, ramification. *"கார்ப்பண்யத்தின் கவடுகளையெல்லாம்" (ரஹஸ்ய.504.).*

[கவை → கவடு, கவை = சிறுகிளை.]

கவடுக்காரன் *kavaḍu-k-kāraṉ,* பெ.(n.) ஏமாற்றுக் காரன்; cheat, deceiver.

[கவடு + காரன்.]

கவடு தாக்கி *kavaḍutākki,* பெ.(n.) அடிவைப்பு (இ.வ.); pace, as a measure.

[கவடு + தாக்கி.]

கவடுபடு–தல் *kavaḍu-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. யாழ்ப்பத்தர் போல இருபுறமும் தாழ்ந்து நடுவுயர்தல்; to slope down on either side, as the belly of a yāḻ. *"குளப்பு வழியன்ன கவடுபடு பத்தல்" (பொருந.4.)* 2. பிரிவுபடுதல்; to be separated, divided.

[கவடு + படு.]

கவடுவட்டம் *kavaḍu-vaṭṭam,* பெ.(n.) முத்துவகை (சிலப்.14,196, உரை .); a kind of pearl.

[கவடு + வட்டம்.]

கவடுவை–த்தல் *kavaḍu-vai-,* 4 செ.கு.வி.(v.i.) எட்டி நடத்தல் (யாழ்ப்.); to pace, straddle, stride.

[கவடு + வை] கவடு = இடைவெளி, இடைவெளி விட்டு நடத்தல்.

கவண் *kavaṇ,* பெ.(n.) கல்லெறியுங் கருவி; sling, made up of forked branch. *"கடுவிசைக் கவணி

னெறிந்த சிறுகல்" (அகநா.292.). 2.கயிற்றில் கட்டப்பட்ட பட்டையான தோலில் கல் வைத்துச் சுழற்றி எறியும் சிறுவிசைக் கருவி, sling which discharges stones etc.

மறுவ. கவணை, கவண்டு, கவண்டி, கவண்டை.

ம.கவண; **க.**கவணெ; **கோத.** கிவ்ண்டிகன்; **துட.** திவிண்ய; **து.** கவணெ.

[கவண் : கல் கவ்வுமாறு அழுத்திப் பிடித்து விட்டோச்சுதல். கவள்→கவண் (மு.தா.13.).]

கவண்கல் *kavaṇ-kal,* பெ.(n.) கவணில் வைத்து எறியுங்கல்; stone pelted from a sling, catapult. ***கவண்*** பார்க்க; see *kavaṇ.*

ம. கவணக்கல்லு; **க.** கவணெ கல்லு

[கவண் + கல்.]

கவண்காரன் *kavaṇ-kāraṉ,* பெ.(n.) கவண்கல் வீசுவோன்; slinger.

[கவண் + காரன்.]

காரன், உடைமை அல்லது உரிமை பற்றிய ஆண்பால் ஈறு. கடுமை = மிகுதி, வலிமை. கடு → கடி → கரி → காரம் = கடுமை, மிகுதி, வலிமை, அதிகாரம், உரிமை, உடைமை. காரம் → காரன் = உரிமையாளன், உடையவன். கவண்காரன் = கவணைக் கொண்டவன்.

கவண்டன் *kavaṇḍaṉ,* பெ.(n.) ***கவுண்டன்*** கார்க்க; see *kavuṇḍaṉ.*

[கவுண்டன் → கவண்டன் (கொ.வ.)]

கவண்டி *kavaṇḍi,* பெ.(n.) ***கவண்*** (வின்.) பார்க்க; see *kavaṇ.*

[கவண் → கவண்டு → கவண்டி.]

கவண்டு *kavaṇḍu,* பெ.(n.) ***கவண்*** பார்க்க; see *kavaṇ.* கவண்டுக் கல்லால் எறிந்தான் (கொ.வ.).

[கவண் → கவண்டு. 'டு' ஒருமை குறித்த மிகைச் சொல்லாக்க ஈறு.]

கவண்டை *kavaṇḍai,* பெ.(n.) கவண் (கலித்.பக்.242, கீழ்க்குறிப்பு); sling.

[கவண் → கவண்டு → கவண்டி → கவண்டை.]

கவணங்கட்டு-தல் *kavaṇaṅ-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) காயத்தைக் கட்டுதல்; to dress a wound (சா.அக.).

[கவணம் + கட்டு.]

கவணச்சீலை *kavaṇa-c-cīlai,* பெ. (n.) காரச்சீலை (பரராச.1, 231.); corrosive plaster.

[கவ்வு → கவ்வணம் → கவணம் + சீலை.]

கவணம் *kavaṇam,* பெ. (n.) 1. காயக்கட்டு; bandage for wound. கவணங்கட்ட(வின்.). 2. கட்டுமருந்து; medicine for external application before bandaging.

[கவ்வு → கவ்வணம் → கவணம்.]

கவணமத்தளம் *kavaṇa-mattaḷam,*பெ.(n.) கோயில் இறைவழிபாட்டின் போது முழக்கப்படும் ஒருவகைத் தோற் கருவி; a kind of percussion instrument layed during worship at temple.

[கவண(ம்) + மத்தளம்.]



கவணமத்தளம்

கவணி[1] *kavaṇi,* பெ. (n.) 1. புண்களுக்கிடும் மெல்லிய சீலை; lint. 2. மெல்லிய சீலை வகை; kind of muslin cloth.

ம. கவணி; **க.** கவுதி.

[கவ் → கவ்வணி → கவணி.]

கவணி[2] *kavaṇi,* பெ.(n.) பொன்,வெள்ளி நுண் இழைகளைக் (சரிகை) கொண்டு ஆடைகளில் செய்யும் பூவேலை. (புதுவை.); lace work.

[ஒருகா. கவின் → கவினி → கவணி (கொ.வ.). கவின்= அழகு.]

கவணி[3]**–த்தல்** *kavaṇi-,* 4 செ.குன்றாவி.(v.t.) மூடிக் கட்டுதல்; to pack. கட்டுச்சோற்றைக் கவணித்த வகை ஒழுங்காக இருந்தது (உ.வ.).

[கவுள் → கவளி → கவணி.]

கவணிச்சால்வை *kavaṇi-c-cālvai,* பெ.(n.) மெல்லிய சால்வை வகை (யாழ்ப்.); muslin shawl.

[கவள் →கவளி →கவணி. கவணி[2] *+ சால்வை.சால்-சால்வை. சால்வை = நீளம் அதிகமுள்ள துணி. கவணிச்சால்வை = மிகச்சிறிதாக மடிக்கத்தக்க வகையில் நெய்யப்பட்ட மெல்லிய சால்வை வகை.]*

கவணை[1] *kavaṇai,* பெ.(n.) **கவண்** பார்க்க; see *kavaṇ. "இலங்கொளி மருப்பிற் கைம்மா உளம்புநர் புலங்கடி கவணையில் பூஞ்சினை யுதிர்க்கும்" (கலித். 23.).*

க. கவணெ; து. கவணெ; ம. கவண; **கோத.** கிவ்ண்டிகல்.

[கவள் → கவண் = கவட்டை போன்ற கயிற்றுக்கருவி. கவண் → கவணை (மு.தா.13).]

கவணை[2] *kavaṇai,* பெ.(n.) 1. தொழுவத்தில் மாட்டிற்கு வைக்கோல் புல் முதலியன போடும் தடுப்பு; a wickered ring for feeding cattle. கவணையில் வைக்கோல் போட்டு விட்டீரோ (உ.வ.). 2. இரு கையால் அள்ளக்கூடிய அளவுடைய வைக்கோல்; handful of straw. மாட்டுக்கு ஒரு கவணை வைக்கோல் போதுமா? (உ. வ.).

தெ. கவணமு; க. கவண, கவணெ.

மறுவ. மாட்டுக்காடி

[காவு + அண் + ஐ = காவணை → கவணை. காவு = கதிரடிக்கும் போது உதிரும் தவசத்தொலிகளாகிய கொங்கு. வளர்ப்பு விலங்குகளுக்கு நீரில் கலந்து வைக்கும் ஊட்டத்தீனி. அண் = இடம். 'ஐ' சொல்லாக்க ஈறு.]

கவந்தம்[1] *kavandam,* பெ.(n.) 1. தலையற்ற உடல்; trunk, headless body. *"கவந்த மெங்கணு மாடவும்". (சீவக. 2310.).* 2. தலைதறிந்த மரம் (இ.வ.); stump of a tree. 3. செக்கு (பிங்.); oil - press. 4. பேய் (பிங்.); demon. 5. நீர்; water. *"கவந்த மலைந்தனவே". (பாரத.பதினாறாம்.58.).* 6. வயிறு; stomach (த.சொ.அக.).

[கவை → கவந்தம். (பிரிந்தது, குறைவுற்றது, வாய்பிளந்து நிற்பது, சுனைவாய் நீர்).]

கவந்தம்[2] *kavandam,* பெ.(n.) மருக்காரை; common emetic nut.

[கவை → கவந்தம் → சுனைவாய் நீர், கக்கல் (வாந்தி) எடுக்க உதவும் மருந்து.]

கவந்தலைக்கண்ணி *kavandalai-k-kaṇṇi,* பெ.(n.) காடைக்கண்ணி என்னும் தவச வகை; a kind of grain resembling the eye of a quail.

மறுவ. காடைக்கண்ணி

[கவந்தலை + கண்ணி.]

கவந்தன் *kavandaṉ,* பெ.(n.) இராமனால் கொல்லப்பட்ட ஓர் அரக்கன் (கம்பரா.கவந்த.2.); a demon killed by Rama.

[கா →காவு (காடு) → காவன் –காவந்தன் → கவந்தன்.]

த. கவந்தன் > **Skt.** kabandha.

கவந்தி *kavandi,* பெ.(n.) 1. கந்தைகளாலாகிய மெத்தைப்போர்வை; quilted cover made of rags to keep off cold. *"ஒடுங் கவந்தியுமே யுறவென்றிட்டுள் கசிந்து தேடும் பொருளும் சிவன்கழலே எனத் தெளிந்து" (திருவாச.40,1).* 2. கோவணம்; loin-cloth.

ம. கவியன்; க. கவதி, கவிதி, கவுதி; **கோத.** கவ்தி

[கவி → கவிதி → கவிந்தி → கவந்தி (கொ.வ.).]

பொதியெருது அல்லது பொதி சுமக்கும் விலங்குகளின் மீது, பொதியின் அடியில் முதுகின் மீது விரிக்கப்படும் கந்தைத்துணிகளால் தைத்த மெத்தை; கவித்துப்போர்த்தும் இயல்பு பற்றிக் கவிதி அல்லது கவந்தி எனப்பட்டது. 'கவித்தல்' வளைத்தல் பொருளும் தருதலான் வளைத்துக்கட்டும் கோவணத்தையும் குறித்தது.

கவந்திகை *kavandigai,* பெ.(n.) **கவந்தி** பார்க்க; see *kavandi. "போர்வைக் கவந்திகை கரியுரி. . . அரவங் கோவணம்".(திருவிசை. கருவூ. திருச்சாட்.3.).*

[கவிதி → கவிந்தி → கவிந்திகை → கவந்திகை.]

கவம்[1] *kavam,* பெ. (n.) ***கவ்வம்*** பார்க்க; see *kavvam.*

[கவ்வம் → கவம்.]

கவம்[2] *kavam,* பெ.(n.) மார்ச்சளி; phlegm. *"கவம் புருடராகம் பொருந்து செங்குருதி மாணிக்கம்" (திருவாலவா. 25,10.).* "கவம் பிடித்து மனிதனை வாட்டுகிறது".

[கவ்வம் → கவம்.]

த. கவம் > **Skt.** kapha.

கவயம்[1] *kavayam,* பெ.(n.) காட்டுமாடு (திவா.); bison, wild cow.

[கோ → கோவு → கோவயம் → காவயம் → கவயம் (கொ.வ).]

கவயம்[2] *kavayam,* பெ.(n.) கவசம்; armour,coat of mail. *"வீரக் கழலினார்க்கொரு கவயமுங் கண்ணு மாய் நடப்பார்" (திருவிளை. பன்றிக்குட்டிகளை.12.).*

[கவ்வு → கவு → கவயம்.]

த. கவயம் > **Skt.** kavaca.

கவயமா *kavaya-mā,* பெ.(n.) ***கவயம்***[1] பார்க்க; see *kavayam*[1]. *"அவைய மிட்டன கவயமா" (சேதுபு. சங்கர.19.).*

[கவயம் + மா – கவயம்மா → கவயமா.]

கவயல் *kavayal,* பெ.(n.) ***கவயம்***[1] பார்க்க; see *kavayam*[1].

[கவயம் → கவயல்.]

கவயன் *kavayaṉ,* பெ.(n.) குரங்கினத் தலைவன்; king of monkeys (த.சொ.அக.).

[கவயம் → கவயன்.]

கவர்[1]**–தல்** *kavar-,* 2 செ.குன்றாவி.(v.t.) அகப் படுத்துதல்; to seize, grasp, catch, capture, take by force, steal. *"கான்முளை மூங்கிற் கவர்கிளை போல உய்தல் யாவது நின்னுடற்றியோரே" (பதிற்றுப்.84,12.).* 2. கொள்ளையிடுதல்; rob,plunder, pillage. *"கூடார் முனை கொள்ளை சாற்றி வீடறக் கவர்ந்த வினைமொழிந்தன்று" (பு.வெ.3,15,கொளு.).* 3. தன்னகப்படுத்துதல்; to get control of, charm, captivate. *"காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்" (தேவா.1;1.).* 4. கைப்பற்றுதல்; to confiscate. *"கண்கவர் வனப்பிற் சிந்துரம்" (நைடத. அன்னத்தைத்தூ.12.).* 5. ஆசைப்பெருக்கம் (பேரவா); extreme desire. *"அடியவரேசிவமாகக் கவர்ந்தொழுகி அருச்சிக்குங் கடப்பாட்டின் நெறி நின்றோன்" (திருவிளை மெய்க்கா.).* 6.விரும்புதல். (திவா.); to desire. *"கவர்வு விருப்பாகும்" (தொல்.உரி.64.).* 7. பெற்றுக் கொள்ளுதல்; to receive. *"வறியோர் கவர முத்துந்துகிரு மிரங்குந்தரங்க முகந்தெறிந்து" (தஞ்சைவா.26.).* 8. நுகர்தல்; to experience, enjoy. *"கனியிருப்பக் காய்கவர்ந்தற்று" (குறள்.100.).* 9. முயங்குதல்; to have sexual connection with *"காமர் நடக்கு நடைகாண் கவர்கணைச் சாமனார் தம்முன் செலவு காண்க" (கலித்.94,33–34.).* 10. பிடித்தல்; to catch, hold. *"கவர்வான் வரல்கண்டு" (நைடத. அன்னத்தைத்தூ. 48.).* 11. கடைதல் (திவா.); to churn, reduce by trituration or attrition. 12. அழைத்தல்; to call, summon. *"கானக்கோழிக் கவர்குரற் சேவல் கானப்பலவின் முழவும்" (மலைபடு.510–511.).*

ம. கவருக; **க.** கவர்; **தெ.** கமுகு;

[கவ்வு → கவள் → கவல் → கவர்.]

கவர்[2]**–தல்** *kavar-,* 2 செ.கு.வி.(v.i.) 1. பிளவுபடுதல்; to split. *"கவராதவன்" (திருவிளை. மெய்க்கா.11.) (ஓ.மொ.37.).* 2. பல பிரிவாகப் பிரிதல்; to separate into various channels . *"காவிரி வந்து கவர்பூட்டத் தோடுகொள் வேலின் தோற்றம் போல" (புறநா.35, 8–9).* 3. மாறுபடுதல்; to deviate, depart from instructions. *"கவராக் கேள்வியோர் கடவாராகலின்" (மணிமே.1,10.).*

[கவை → கவல் → கவ

கவர்[3]**–த்தல்** *kavar-,* 2 செ.கு.வி.(v.i.) 1. பிரிவுபடுதல்; to branch off, as roads. *"அறைவாய்ச் சூலத் தருநெறி கவர்க்கும்" (சிலப்.11,73.).* 2. கவடுபடுதல்; to fork, bifurcate. கவர்த்த கொம்பு (உ.வ.).

தெ., ம. கவ; **க.** கவலு; **உரா.** கவர்.

[கவை → கவல் → கவர்.]

கவர்[4] *kavar,* பெ.(n.) 1. மரம், ஆறு போன்றவற்றில் பிரியுங்கிளை; bifurcated branch, as of a tree or river. *"கவர்க்கண் வைகிடும் வானரங்கள்" (சேதுபு. கவிதீர்.3.).* தெற்கு நோக்கி நீர்பாய்கிற கவ்ருக்குக் கிழக்கும் (s.i.i. iii.45.). 2. பலவாகப் பிரிகை; divergence of branches, roads, rivers. *"மாற்றரு மணநெறி மகளிர் நெஞ்சமேபோற் பலகவர்களும் பட்டது" (சீவக.1212.).* 3. சூலத்தின் கவர் (வின்.); prong, as of a trident. 4. நீண்ட திருமண்கட்டி; cone-shaped white clay for marking the forehead. 5. உத்தரம் புகுத்துஞ் சுவர்ச்சந்து (வின்.); groove or

a kind of mortise on the top of a gate or door-post to receive a beam. 6. ஏய்ப்பு (வஞ்சம்); deception. *"கவரிலா யுகந்தராயணன்" (சேதுபு. விதூம.118.).* 7.வாழை(பிங்.);plantain tree. 8. அணையில் நீர் செல்லுதற்கு விடும் வழி. (இ.வ.); opening in a dam to let water out. 9. விருப்பு; desire, wish. *"கவர்வு விருப்பாகும்" (தொல்.சொல்.341.).*

[கவை → கவல் → கவர்.]

க. கவல், கவடு, கவலு, கவலெ; **ம.** கவ, கவர், கவர; **து.** கவ, கபுர்; **தெ.** கவ, கவலு (இரட்டை.).

கவர்[5] *kavar,* பெ.(n.) 1. மறைப்பு; cover.

உரா. கவரு

[கவை → கவல் → கவர்.]

கவர் *kavar,* பெ.(n.) சிறுவாய்க்கால்; field channel. *"ஊராண்மைக் கண்ணாற்றுக் கவருக்கு மேற்கும்" (தெ.இ.கல்.தொ.26. கல்155.).*

[கவல் → கவர் (கிளைத்துச்செல்லும் வாய்க்கால்).]

கவர்க்கட்டை *kavar-k-kaṭṭai,* பெ.(n.) பட்டிமாட்டுக் கிடும் கட்டை (புதுவை.); stocks.

[கவை → கவர் + கட்டை.]

கவர்க்கழி *kavar-k-kaḻi,* பெ.(n.) **கவர்க்கோல்** பார்க்க; see *kavar-k-kol.*

[கவர் + கழி.]

கவர்க்கால் *kavar-k-kāl,* பெ.(n.) 1. கவராயுள்ள முட்டுக்கட்டை; forked prop. 2. கப்புள்ள மரம் (வின்.); tree with forked branches. 3. கிளை வாய்க்கால்; branch channel, in irrigation.

க. கவர்கோலு

[கவை → கவல் → கவர் + கால்.]

கவர்க்குளம்பு *kavar-k-kuḷambu,* பெ.(n.) பிளவுபட்ட குளம்பு; cloven hoof.

[கவல் → கவர் + குளம்பு.]

கவர்க்கை *kavar-k-kai,* பெ.(n.) கைப்பெரு விரலுக் கும் ஆள்காட்டி விரலுக்கும் இடைப்பட்ட சந்து; the cleft between the thumb and the fore finger (துளுவ.).

து. கபெகை

[கவர் + கை.]

கவர்க்கோல் *kavar-k-kōl,* பெ.(n.) மேல்பகுதியில் பிளவுபட்டகோல்; a post or stick forked at the top.

து. கபகோலு; **க.** கவலுகோலு.

[கவர் + கோல்.]

கவர்கடப்பாரை *kavar-kaḍappārai,* பெ.(n.) ஆணி பிடுங்கும் கம்பி, சுத்தியல் (கோவை.வழ.); claw of hammer.

[கவர் + கடப்பாரை.]

கவர்கோடல் *kavar-kōḍal,* பெ.(n.) ஐயநிலை; a state of doubt. *"சுட்டல் திரிதல் கவர்கோட றோன்றாது" (மணிமே. 27,22.).*

[கவல் → கவர் + கோடல்.]

கவர்ச்சி[1] *kavarcci,* பெ.(n.) வெள்ளைக்காக்கணம். (மலை.) பார்க்க; veḷḷai-k-kākkaṇam.

[கவல் → கவர் → கவர்த்தி → கவர்ச்சி.]

கவர்ச்சி[2] *kavarcci,* பெ.(n.) 1. மனம் பற்றுதல், இழுக்கை; captivation, attraction. 2. அழகு; beauty.

[கவர்தல் = பற்றுதல், அகப்படுத்துதல், வசப்படுத்துதல். கவர் → கவர்ச்சி. (மு.தா.13.).]

கவர்சுத்தியல் *kavar-cuttiyal,* பெ.(n.) சுத்தியற் கருவிவகை; claw hammer. ஒருபுறம் ஆணியை அடிப்பதற்கும், மறுபுறமுள்ள வளைவினால் அடித்த ஆணியைப் பிடுங்குதற்கும் பயன்படும் சுத்தியல்.

[கவல் → கவர் + சுத்தியல். கவல் = பிளவுண்டது.]



கவர்சுத்தியல்

கவர்த்தடி *kavar-t-tadi,* பெ.(n.) 1. முள்ளைத்தூக்கும் கவர்க்கோல். (வின்.); forked stick, used as a pitch-fork. 2. இருபுறமும் முனையுள்ள அம்பு;arrow sharpened at both ends (கருநா.).

க. கவல்கோல், கவலுகோலு, கவுளுகோல், கவுளகோல்; து. கபெகோலு, கபெ.

[கவல் → கவர் + தடி.]



கவர்த்தடி

கவர்தொடை *kavar-todai,* பெ.(n.) 1. விரும்பத்தக்க மாலை; pleasant garland. 2. உயிர்கவர் கணை; a fatal arrow.

[கவர் + தொடை. தொடை = தொடுக்கும் அம்பு]

கவர்ந்தூண் *kavarndūṇ,* பெ.(n.) அடித்துண்ணும் உணவு; food seized by force. *"காய்ந்த பசியெருவை கவர்ந்தூ ணோதையும்" (மணிமே.6,117.).*

[கவர்ந்து + உண் – கவர்ந்துண் → கவர்ந்தூண். உண் → ஊண் .]

கவர்நாக்கு *kavar-nākku,* பெ.(n.) கொடுத்த வாக்குறுதியைத் தள்ளி வேறொன்று பேசும் நாக்கு ; insincere talk. பொய் பேசும் நாக்கு; the tongue which utters falsehood.

க. கவலு நாலகெ

[கவர் + நாக்கு.]

கவர்நெறி *kavar-neṟi,* பெ.(n.) கிளைவழி. (திவா.); fork in a road.

க. கவலுதாரி

[கவர் + நெறி.]

கவர்ப்பு *kavarppu,* பெ.(n.) பலவாகப் பிரிகை (சீவக.1212, உரை.); forking, bifurcation, ramification.

[கவல் → கவர் → கவர்ப்பு.]

கவர்படு–தல் *kavar-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1.பிரிவுபடுதல்; to be forked, as a road. வழி கவர்பட்டிருக்கிறது (உ.வ). 2. பலபொருள்படுதல்; to be ambiguous, as language equivocation.

க. கவலொடெ

[கவல் → கவர் + படு.]

கவர்படுபொருண்மொழி *kavar-paḍu-poruṇmoḻi* பெ.(n.) ஒரு பொருளைக் கருதிச் சொல்லப்பட்ட சொல் அதனை ஐயுறும் படி, பல பொருண் மேனிற்கும் வழு; the error where a word signifies ambiguous meaning when uttered to express a particular meaning. *"ஒரு பொருடுணிய வுரைக்க லுற்ற சொல் இருபொருட் கியைவது கவர்படு பொருண்மொழி" (தண்டி. சொல்லணி. 107.).*

[கவர்படு + பொருள் + மொழி.]

"புயலே புறம்பொதிந்து பூந்தா தொழுக்கி
மயலே கடவுளர்க்கு வாய்த்துச் – செயலை
எரிமருவு பூந்துணர்த்தாய் யாவருமூ டாடார்
அரிமருவு சோலை யகத்து"

இப்பாடலில் "அரிமருவு சோலை யகத்து" என்ற வழி அரியென்பது –வண்டு, மடங்கல் (சிங்கம்) நெருப்பு முதலிய பலபொருள்களுக்கும் பொதுவாதலான் ஒன்று துணியப் படாமையான் வழுவாயிற்று (தண்டி. சொல்லணி .107. உரை.)

கவர்படுமொழி *kavar-paḍu-moḻi,* பெ.(n.) பல பொருள்தரும் சொல்; double meaning, ambiguous language.

[கவல் → கவர் + படு + மொழி.]

இருவகைப் பொருள்களைத் தந்து நிற்கும் தொடர்கள் கவர்படு மொழியாகும். (எ–டு) செம்பொன் பதின்றொடி, குன்றேறாமா. (செம்பொன் + பதின் (பத்து) தொடி (எடையளவு). செம்பு + ஒன்பதின் + தொடி. குன்று + ஏறு + ஆமா. குன்று + ஏறா + மா.)

கவர்பரிப்புரவி *kavar-pari-p-puravi,* பெ.(n.) விரைந்து செல்லுங் குதிரை; galloping horse.

[*கவர் + பரி + புரவி.*]

கவர்பு *kavarbu,* பெ.(n.) வேறுபடுகை; differing. *"கவர்பு முண்டோ கற்றோய்" (ஞானா.66,13.).*

க. கவலெணிகெ

[*கவல் → கவர் + பு.*]

கவர்வழி *kavar-vaḻi,* பெ.(n.) கிளைவழி (பிங்.); fork in a road.

க. கவலுதாரி

[*கவர் + வழி.*]

கவர்விடு-தல் *kavar-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. கப்புவிடுதல்; to become forked, divaricate. 2. பிரிவுபடுதல்; to ramify, branch out, as a subject. 3. பல பொருள்படுதல்; to be ambiguous, as words. 4. புரை யோடல்; (in anatomy) the forming of sinuses as in an ulcer or a wound (சா.அக.).

[*கவல் → கவர் + விடு.*]

கவர்வு[1] *kavarvu,* பெ.(n.) 1. விருப்பம்; desire (தொல். சொல் 362.). *"கவர்வு விருப்பாகும்"* 2. ***கவர்ச்சி***[1] பார்க்க; see *kavarcci*[1]. 3. துன்பம்; sorrow. *"களிப்புங் கவர்வு மற்றுப் பிறப்புப்பிணி மூப்பிறப்பற்று ஒளிக்கொண்ட சோதியுமாய் உடன் கூடுவது என்று கொலோ." (திவ்.திருவாய். 2,3,10.).*

[*அவ்வு → கவ்வு → கவர் → கவர்வு.*]

கவர்வு[2] *kavarvu,* பெ.(n.) துன்பமின்மை, வன்முறையின்மை (சம்.அக.); harmlessness, non-violence.

[*காவு → காவல் → கவல் → கவர்வு.*]

கவரக்கோல் *kavarakkōl,* பெ.(n.) 1. பளுவான பொருள்களைத் தூக்கப் பயன்படுத்தும் கவடு பட்டகழை; a fork used for lifting heavy things. 2. மரத்தச்சர் பயன்படுத்தும் கருவி; a carpenter's set square.

ம. கவரக்கோல்

[*கவரம் + கோல்.*]

கவரச்சு *kavaraccu,* பெ.(n.) பூவரசு; portia tree (சா.அக.).

[*கவர் + அச்சு.*]

கவரம் *kavaram,* பெ.(n.) சினம். (வின்.); fury, rage, wrath.

[*கவல் → கவர் → கவரம்.*]

கவரம்[2] *kavaram,* பெ.(n.) உப்பு; salt (சா.அக.).

[*கவல் → கவர் → கவரம்.*]

கவரவிளக்கு *kavaraviḷakku,* பெ.(n.) பிளவுபட்ட தண்டுள்ள குத்து விளக்கு; a bronze lamp borne on a forked stand (சேரநா.).

ம. கவரவிளக்கு

கவரவிளக்கு

[*கவரம் + விளக்கு.*]

கவராசம் *kavarāšam,* பெ.(n.) ***கவராயம்*** பார்க்க; see *kavarāyam.*

[*கவராயம் → கவராசம்.*]

கவராமொழிமாதேவன் *kavarā-moḻi-madēvan,* பெ.(n.) கும்பகோணம் வட்டம் திருவிடைமருதூர் கோயிலுக்கு விட்ட நிலத்தைத் திருத்தி உழுதவர்; a peasant who developed land given to Thiruvidaimarudur temple in Kumbakonam taluk. *"இந்நிலம் கல்லி திருத்தி உடையார் பட்டாரகிக்கு கவராமொழி மாதேவனாகிய தொண்டரடிப் பொடி குடுக்கக் கடவானாக" (தெ.இ.கல்.தொ.23.கல்207.).*

[*கவரா + மொழி + மா + தேவன்- கவராமொழி மாதேவன். கவராமொழி = மயக்கில்லாத, ஏமாற்றமில்லாத வாய் மொழி.*]

கவராயம் *kavarāyam,* பெ.(n.) வட்டம் வரையுங் கருவி (வின்.); pair of compasses. கணக்குத் தேர்வுக்குக் கவராயம் கொண்டு செல் (உ.வ.).

க. கவயர

[கவர் → கவரம் → கவராயம்.]

கவ → கவ்வு = கவட்டை. கவர்தல் = கவ்வும் அலகு போற் பிரிதல். கவர் = பிரிவு, கவை, கிளை. கவராசம் = இரு கவருள்ள கருவி (divider) (மு.தா.13.).

கவராயுதம் *kavarāyudam,* பெ.(n.) கவராயம் பார்க்க; see kavarāyam.

[கவராயம் → கவரயுதம்.]

கவரி[1] *kavari,* பெ.(n.) தேர் (திவா.); car, chariot.

[கவி → கவிரி → கவரி. மேற்கவிப்பு அமைந்த குறுந்தேர்.]

கவரி[2] *kavari,* பெ.(n.) 1. காட்டெருமை; bison. 2. எருமை; buffalo. *"படிந்துசே டெறியுஞ் செங்கட் கவரியும்" (கல்லா.56,30.).*

[கவரம் (சினம்) → கவரி (திரு.தமி. மர. 740.) கவிரி = சினமிக்க காட்டெருமை, எருமை.]

கவரி[3] *kavari,* பெ.(n.) 1. சாமரை; yak-tailfan, used for fanning idols and great personages. *"வெண்மதிக் கதிர் பெய்கற்றைபோல் இவர் கவரிவீச (சீவக.541.)"* 2. அடர்ந்து வளரும் சம்பா நெற் பயிர் வகை; a kind of samba paddy. *"புரவிச் சூட்டுமூட்டுறு கவரி தூக்கி யன்ன செழுஞ்செய் நெல்லின் சேயரி" (அகநா, 156.).*

[கவ்வு→ கவ்வரி → கவரி = அடர்ந்தது, அடர்ந்த கூந்தல் உள்ளது, கவரி மயிர் போல அடர்ந்து வளரும் சம்பா நெற்பயிர்.]

கவரி → சவரி → சவரம் → சமரம் → சாமரம். சவரி > **Skt.** *samrī சாமரம் >* **Skt.** *sāmara (திரு.தமி.மர.740.).*

கவரி[4] *kavari,* பெ.(n.) 1. **கவரிமான்** பார்க்க; see *kavarimāṉ."கவிர்ததை சிலம்பிற்றுஞ்சுங் கவரி" (பதிற்றுப் 11–21).* 2. கவரிமான் மயிர்; hair of musk deer. *"கவரி முச்சிக் கார்விரி கூந்தல் ஊசன் மேவற் சேயிழை மகளிர்" (பதிற்றுப்.43.1.).*

கவரி[5] *kavari,* பெ.(n.) முடி, பின்னல், சடை; a braid or fillet of hair.

ம. கவரம், கவரி (அழகான கூந்தல் உடையவள்); **க.** கபரி, கவரி; **து.** கபரி; **Skt.** kavara, kabara, kavarī, kabarī; **Wol.** kawar; **Sp.** cabellos.

[கவ்வு → கவ்வரி → கவரி (அடர்ந்தது).]

கவரி[6] *kavari,* பெ.(n.) தணக்கு மரம்; catamaran tree. (சா.அக.)

[கவர்[1] → கவரி.]

கவரிச்சம்பா *kavari-c-cambā,* பெ.(n.) ஐந்து மாதங்களில் விளையுஞ் சம்பா நெல்வகை; a kind of sambā paddy, sown in Aṉi, Puraṭṭāsi, and maturing in five months.

[கவரி + சம்பா.]

கவரிபந்தம் *kavari-pandam,* பெ.(n.) தலைமயிர்க் கற்றை; bunch of hair. *"நிலத்தின் கதிரையெல்லாங் கறந்தொரு கற்றையாக்கி வைத்ததாங் கவரிபந்தம்" (மேருமந்.769.).*

[கவரி + பந்தம்.]

கவரிமா *kavari-mā,* பெ.(n.) **கவரிமான்** பார்க்க; see *kavarimāṉ. "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா" (குறள்,969.).*

[கவரி + (மான்) மா.]

கவரிமான் *kavari-māṉ,* பெ.(n.) மான்வகை; a kind of deer, yak. *"கொள்ளிக் கூரெரி வெள்ளி விளக்கிற் கவரி மானேறு கண்படை கொள்ளும்" (பெருங். உஞ்சைக்.50,20.).*

ம. கவரிமான்

[கவரி + மான்.]

கவரிமான்

கவரிமான்மயிர் *kavari-māṉ-mayir,* பெ.(n.) 1. சாமரம்; chowrie or bushy tail of the camari, the Tibetan yak set in a decorated handle, used as a fly-flap or fan before an idol or a great personage. 2. கூந்தலுடன் இணைத்துப் பின்னும் சவரி (யாழ்ப்.); the bushy tail of the yak used as false hair.

[கவரி + மான் + மயிர். மான் = விலங்கு இங்குச் சடைபெருமையைக் குறித்தது.]

கவரியம் *kavariyam,* பெ.(n.) கூந்தற்பனை; fan palm (சா.அக.)

[கவர் → கவரியம்.]

கவரிறுக்கி *kavariṟukki,* பெ.(n.) வேலி முதலிய வற்றின் முகப்பில் விலங்குகள் உட்புகாதபடி இடப் படும் தடைமரம் (பிங்.); fork of a branch planted at the mouth of a fence, path, etc., to prevent animals from entering fields, houses, etc.

[கவர் + (இறுக்கு) இறுக்கி.]

கவரிறுக்கு *kavariṟukku,* பெ.(n.) 1.***கவரிறுக்கி (பிங்.)*** பார்க்க; see *kavariṟukki.* 2. கடவு மரம்; catamaran tree (சா.அக.).

மறுவ. தணக்கு

[கவர் + இறுக்கு.]

கவருகோல் *kavaru-kōl,* பெ.(n.) மட்பாண்டத் தொழிற் கருவிகளுளொன்று; one of the of potter's instruments.

[கவர் → கவரு + கோல்.]

கவரெழுசங்கம் *kavar-eḻu-šaṅgam,* பெ.(n.) சங்கஞ்செடி. (வின்.); mistletoe berry thorn.

[கவர் + எழு + சங்கம்.]

கவல்[1]**(லு) –தல்** *kaval-,* 13 செ.கு.வி.(v.i.) மனம் வருந்துதல்; to be distressed, anxious, troubled. *“மாணிழை மகளிர் கவல் ஏமுற்று வெய்துவீழ் அரிப்பணி” (நற்.30) “யாதுநீ கவல வேண்டா” (சீவக. 1456.).*

[கவ → கவல். கவலுதல் = பல கவர்படுதல், பல கவர் படுதல் போலப் பல நினைவு கொண்டு கலங்குதல். கவல் → கவலி. கவலித்தல் = கவலைப்படுதல் (மு.தா.14.).]

கவல்[2] *kaval,* பெ.(n.) கவலை; sorrow. *“மனங்கவ லொழிகென மந்திரங் கொடுத்ததும்” (மணிமே. பதி.52.)*

[கவல்[1] → கவல்[2].]

கவல்பு *kavalbu,* பெ.(n.) கவலை; sorrow. *“மனங்கவல் பின்றி மாழாந் தெழுந்து” (பொருந. 95.).*

[கவல் → கவல்பு. பு = சொ.ஆ.ஈ.று.]

கவல்வு *kavalvu,* பெ.(n.) கவலை; sorrow. *“மனங் கவல் வின்றி மனையகம் புகுந்து” (மணிமே.16.47.)*

[கவல் → கவல்வு.]

கவலம் *kavalam,* பெ.(n.) கவலை; sorrow. *“கவலங் கொள் பேய்த்தொகை பாய்தரக் காட்டிடை யாட்டு வந்து” (திருக்கோ.389.).*

[கவல் + அம் → கவலம்.]

கவலம்[2] *kavalam,* பெ.(n.) எருமைக்கொம்பு; buffalo's horn (சா.அக.).

[கவரம் → கவரி = எருமை, சினமுடைய காட்டெருமை, கவரம் → கவலம் = எருமைக் கொம்பு, எருமையின் சினமுடைமையைக் காட்டும் உறுப்பு.]

கவலி–த்தல் *kavali-,* 4 செ.கு.வி.(v.i.) ***கவல்*** பார்க்க (சிலப்.13,91,உரை.); see *kaval.*

[கவல் → கவலி (மு.தா.14.)]

கவலி[2] *kavali,* பெ.(n.) கவலை; sorrow.

[கவல் – கவலி.]

கவலி[3] *kavali,* பெ.(n.) கவலங்கொடி; star flower swallow wort (சா.அக.).

[கவல் + அம் + கொடி. கவல் → கவலி.]

கவலிகம் *kavaligam,* பெ.(n.) கொத்தவரை; clustor bean (சா.அக.).

[கவல் → கவலிகம்.]

கவலிகா *kavaligā,* பெ.(n.) செந்தினை; red millet.

[கவல் → கவலிகை → கவலிகா.]

கவலிகை *kavaligai,* பெ.(n.) பஞ்சு; cotton (சா.அக.).

[கவல் → கவலிகை.]

த. கவலிகை> **Skt.** kavalikā. (piece of cloth over a wound).

கவலை *kavalai,* பெ.(n.) 1. பல ஊர்களுக்குச் செல்லும் வழிகள் ஒன்று கூடும் கவர்த்த வழி; diverging roads. *“கல்லதர் கவலை செல்லின் மெல்லியல் புயல் நெடுங் கூந்தல் புலம்பும்” (ஐங்குறு.304.).* 2. பல தெருக்கள் கூடுமிடம்; place where several ways meet. *“கவலை முற்றங் காவனின்ற” (முல்லைப்.30.)* 3. மரக்கிளை (பிங்); branch, forking of branches, fork. 4. ஆற்றிடைக் குறை; dry place in a river, river island. 5. பலநினைவு அலைபாயுமெண்ணம்; wandering thought. *“கவலை கொணெஞ்சினேன்” (கலித்.134,13.).* 6. மனத்துயர், வருத்தம், துன்பம்; distress, affliction. *“மனப்பேரின்பமுங் கவலையுங்

காட்டும்" (மணிமே.30.63). 7. மனத்தடுமாற்றம்; hesitation and confusion of mind. மறையினைக் கவலையின்றிச் சொல்பவர் (உ.வ.). 8. அச்சம் (திவா.); fear, dread. *"தலைதுமிந் தெஞ்சிய வாண்மலியூப மொடு உருவில் பேய்மகள் கவலை கவற்ற." (பதிற்றுப்.67.10–11).* 9. பற்றார்வம்; care, anxiety. 10. அக்கறை; concern, interest. அவனுக்குக் கல்வியிற் கவலையில்லை (உ.வ.).

க. கவலெ; **ம.** கவ. கவர், கவர, கவல; **து.** கபர்; **தெ.** கவலு (இரட்டைக் குழந்தை).

[கவ → கவல். கவலுதல் = பல கவர்படுதல்.]

பலகவர் படுதல் போலப் பல நினைவு கொண்டு கலங்குதல். கவல் – கவலை = கவை, கிளை, கவர்த்தவழி, பல நினைவுக்கலக்கம், அக்கறை, கவல் → கவலி. கவலித்தல் = கவலைப் படுதல் [மு.தா.14.]

கவலை[2] *kavalai,* பெ.(n.) 1. கிழங்குள்ள ஒரு வகைக் கொடி; a rooted creeper. *"ஆய்கொடிக் கவலையும்" (சிலப்.11,82.).* 2. செந்தினை; Italian millet.

[கவல் → கவலை. கவலை = கிளைத்தல், வளைவு .வளைந்த கிழங்கும், வளைந்த தினையும் கவலை எனப் பெயர் பெற்றன.]

கவலை[3] *kavalai,* பெ.(n.) கடலில் வாழும் சிறு மீன் வகை; Malabar sardine of beautiful green colour, attaining 7in, in length.

[கவ → கவல் → கவலை.]

கவலை மீன்வகை: 1.மத்துக்கவலை, 2. செதில்கவலை, 3. குடக்கவலை, 4. பேய்க்கவலை, 5. நட்டைக்கவலை.

கவலை[4] *kavalai,* பெ.(n.) இரு மாடுகள் அல்லது எருதுகளைக் கட்டி நீரிறைக்கச் செய்யும் நீரேற்றம்; a kind of waterlift drawn by a pair of oxen.

தெ. கபிலெ; **க.** கபலி; **ம.** கப்பி, **து.** கபி.

[கவை → கவல் → கவலை. (மாட்டைப்பிணைத்துக் கட்டி ஒட்டும் நீரேற்றம்). கவைத்தல் = சேர்த்துக் கட்டுதல்.]

கவலை[4] *kavalai,* பெ.(n.) நோய்வகை. (அக.நி.); a disease.

[கவல் → கவலை.]

கவலைக்கிடம் *kavalai-k-kiḍam,* பெ.(n.) இறக்குந் தறுவாயிலிருக்கும் நிலை; critical condition or state. இந்த நோயாளியின் நிலை கவலைக்கிட மாயுள்ளது. (உ.வ.)

[கவலை + கு + இடம். 'கு' நான்கன் உருபு.]

கவலைகவற்று–தல் *kavalai-kavaṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) வருத்தஞ் செய்தல்; to cause distress. *"தலைதுமிந் தெஞ்சிய வாண்மலி யூபமொடு உருவில் பேய்மகள் கவலைகவற்ற" (பதிற்றுப்.67, 10–11).*

[கவலை + கவற்று–.]

கவலைகொள்–ளுதல் *kavalai-koḷ,* 16. செ.கு.வி.(v.i.) ***கவலைப்படுதல்*** பார்க்க; see *kavalai-p-paḍu.*

[கவலை + கொள்.]

கவலைச்சால் *kavalai-c-cāl,* பெ.(n.) கவலையேற்றத் தில் நீர் தூக்குஞ்சால்; large leather bucket for a kavalai waterlift.

[கவலை + சால்.]

கவலைபடு–தல்[1] *kavalaipaḍu,* 20.செ.கு.வி.(v.i.) கவலை மீன் வலையிற் படுதல் (மீன.வழ.); to fall into a net as of kavalai fish.

[கவலை + படு.]

கவலைபடு–தல்[2] *kavalaipaḍu,* 20. செ.கு.வி.(v.i.) மனம் வருந்துதல்; to be distressed.

[கவலை + படு.]

கவலைபாய்–தல் *kavalai-pāy-,* 2 செ.கு.வி.(v.i.) 1. கவலைமிகுதல்; to be very anxious. 2. மயங்குதல் (கொ.வ.); to be so confused that one cannot attend to anything, 3. மறையோதும் போது வரிசை தவறியோதுதல்; to be confused while chanting the Veda.

[கவலை + பாய்.]

கவலைமாப்பு *kavalai-māppu,* பெ.(n.) கவலை மீன் கூட்டம்; shoal of kavalai fish.

[கவலை + மாப்பு, மாப்பு = மீன்றிரள்.]

கவலையேற்றம் *kavalai-y-ēṟṟam,* பெ.(n.) மாடு கட்டி நீரிறைக்கும் ஏற்றம்; a kind of water lift. "கவலையேற்றத்திற்கு இரண்டு காங்கேயக்காளை வேண்டும்" (உ.வ.).

[கவலை + ஏற்றம்.]

கவலைவலை *kavalai-valai,* பெ.(n.) கவலை மீன் பிடிப்பதற்காகப் பின்னப்பட்ட வலை (மீன.வழ.); a kind of net for catching kavalai fish. "கவலைவலையைக் கொண்டு சென்றால் கை நிறைய பணம் கிடைக்கும்" (உ.வ.).

[கவலை + வலை.]

கவவு[1]-தல் *kavavu-,* 5 செ.குன்றா.வி.(v.t.) 1. அகத்திடுதல்; to put in, insert. *"ஆயிடைக் கவவுக்கை நெகிழ்ந்தமை போற்றி" (அகநா.26.16-17)* 2.விரும்புதல்; to desire. *"கன்னிக் கலிங்கமகிலார்ந்து ... கவவிக் கிடந்த குறங்கினாள்" (சீவக.1658.)* 3. கையால் தழுவுதல்; to embrace. *"கவவுக்கை தாங்கும் மதுகை அம் குவவுமுலை" (நற்.350.7.) "கண்ணு நுதலுங் கவுளுங் கவவியார்க்கு" (கலித்.83,17.).* 4. முயங்குதல்; to copulate. *"வார்முலை முற்றத்து நூலிடை விலங்கினும் கவவுப்புலந்துறையுங் கழிபெருங் காமத்து" (அகநா.361.5-6.).*

Sp. querido

[கவ்வு → கவவு.]

கவவு[2]-தல் *kavavu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நெருங்குதல்; to crowd, to draw near. *"நயந்தகாதலர் கவவுப் பிணித்துஞ்சிப் புலர்ந்து விரிவிடிய லெய்த விரும்பி" (மதுரைக்.663-664.).* 2. பொருந்துதல்; to be connected. *"பவபயங் கவவ" (ஞானா.62,21.).*

[கவ்வு → கவவு-.]

கவவு[3] *kavavu,* பெ.(n.) 1. அகத்திடுதல்; being contained. *"கவவு அகத்திடுமே" (தொல்.சொல்.353.).* 2. உள்ளீடு; the contents of anything. *"அயிருருப் புற்றவாடமை விசயம் கவவொடு பிடித்த வகையமை மோதகம்" (மதுரைக்.625-626.).* 3. முயக்கம்; embracing; copulation. *"கண்ணிலா நீர்மல்கக் கவவி நாம் விடுத்தக்கால்" (கலித்.35.).*

பட. கவ (அன்பு); துட. கவ் (அன்பு,அருள்)

[கவ → கவவு (மு.தா.13.).]

L. Capio; **G.** haben; **AS.** habban; **Dan.** have; **E.** have (to hold or poseess) (ஒ.மொ.332.).

கவவுக்கை *kavavu-k-kai,* பெ.(n.) அகத்திட்டகை, அணைத்த கை; embracing arms. *"கவவுக்கை தாங்கும் மதுகை அம் குவவுமுலை" (நற்.350.7.)*

[கவ → கவவு - கவ்வுதல், கவ்வினாற் போல் அணைத்தல், அகப்படுத்துதல், அகத்திடுதல். "கவவசத் திடுதல்" (தொல். உரியியல்.59.) கவவுக்கை - அணைத்த கை. மு.தா.13.]

கவழம் *kavaḻam,* பெ.(n.) **கவளம்** பார்க்க; see *kavaḷam. "கவழ மறியாநின் கைபுனை வேழம் - புரிபுனை பூங்கயிற்றிற் பைபய வாங்கி" (கலித்.80.)*

[கவளம் → கவழம்.]

கவழிகை *kavaḻigai,* பெ.(n.) திரைச்சீலை (வின்.); curtain.

க. கவதிகெ

[கவளிகை → கவழிகை.]

கவள் *kavaḷ,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. வளைத்தல்; to bend. 2.கட்டுதல்; to bend.

[கவ்வு → கவள்.]

கவளம்[1] *kavaḷam,* பெ.(n.) 1. கவுள் என்னும் கன்னக் கதுப்பு அளவு கொண்ட உணவு; a mouthful, a morsel, as much curry rice or other food as is taken-up with the hand and put into the mouth. 2. யானை ஒருமுறை வாயிலிட்டு உண்ணும் அளவு; a lump of food that an elephant can take at one mouth. *"கானயானைக்கவளம் கொள்ளும்" (அகநா. 157.8.)* 3. கைப்பிடி அளவான சோற்று உருண்டை; a small lump of rice kneaded into a ball. 4. சோற்றுப்பருக்கை; a grain of boiled rice. *"காய் நெல் லறுத்துக் கவளங் கொளினே மாநிறை வில்லதும் பன்னாட் காகும்" (புறநா. 184.1.2.).*

க. அகுளு; **Pali.** kabala.

[கவ்வு → கவளம். (மு.தா.13).]

வடமொழியாளர் kri என்னும் மூலத்தைக் காட்டி இச்சொல்லுக்கு உண்ணுதல் விழுங்குதல் பொருளுள்ளது எனக்காட்டுதல் பொருந்தாது. kri – krita எனப் பெயராகும் போது வடமொழியில் வேர் முதலில் உள்ள ரகரம் மறைவது மரபன்று. ஆதலின் "கவளம்" தமிழ்ச்சொல்லே என்பதும், கவ்வு என்னும் வினையடியாகத் தோன்றியதென்பதும் விளங்கும்.

*கவ்வு → கவள் → கவளம். கவ்வும் அளவான உணவு. வடமொழியில் மூலமில்லை. த. கவளம் > **Skt.** kavala (வ.மொ.வ.110).*

கவளம்[2] *kavaḷam,* பெ.(n.) 1. கன்னக் கதுப்பு; bulging cheek. 2. யானை மதம். (திவ்.பெரியதி.4,8,1.); must of an elephant.

H. kaval

[கவுள் → கவுளம் → கவளம்.]

கவளம்[3] *kavaḷam,* பெ.(n.) வெற்றிலைக்கட்டு (யாழ்.அக.); bundle of betel leaves. "திருமணத்திற்கு 50 கவளம் வெற்றிலை இருந்தால் போதுமானது."

[கவ் → கவளம்.]

கவளமான் *kavaḷamāṉ,* பெ.(n.) யானை; elephant.

[கவள் → கவள + மா(ன்).]

கவளி *kavaḷi,* பெ.(n.) 1. **கவளிகை** பார்க்க; see *kavaḷigai, "கையினில் படைகரந்த புத்தகக் கவளி யேந்தி" (பெரியபு. மெய்ப்.7.)* 2. வெற்றிலைக்கட்டு. "விழாவிற்கு ஐந்து கவளிவெற்றிலை வேண்டும்." ; pack of betel leaves its number varying in different places. 3. கல்வினாற்போல் மேலும் கீழும் சட்டம் வைத்துக் கட்டும் புத்தகக் கட்டு, கட்டு; bundle of books tied by keeping frames on the top and bottom.

[கவ்வு (கவள்) கவளி – கவ்வினாற் போல் மேலும் கீழும் சட்டம் வைத்துக்கட்டும் புத்தகக்கட்டு, கட்டு, வெற்றிலைக்கட்டு (மு.தா.13.).]

'கவளி' – நூறு வெற்றிலை.

கவளி–த்தல்[1] *kavaḷi,* 4. செ.குன்றாவி.(v.t.) 1. கவுள்அளவு அல்லது வாய் கொள்ளுமளவுக்கு நீரைக் கொப்புளித்தல்; to gargle with a mouth full of water. 2. கவுள் அல்லது வாய்கொள்ளும் அளவுடைய உணவு உண்ணுதல்; to eat a mouthful of food.

[கவள் → கவளி → கவுளி.]

கவளி–த்தல்[2] *kavaḷi,* 4. செ.குன்றாவி.(v.t.) மடித்துக் கட்டுதல்; to pack

[கவ்வு → கவள் – கவளி.]

கவளிகரி–த்தல் *kavaḷigari-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. முழுவதையும் விழுங்குதல்; to take in at one sweep. 2. அனைத்தும் எடுத்துக் கொள்ளுதல் (கொ.வ.); to misappropriate.

க. கவர்தெகொள்

[கவுள் → கவுளி → கவளி + கரி – கவளிகரி கவளிகரி]

கவளித்தல் என்னும் வினையே போதுமானது. வடமொழித் தாக்கத்தால் கரித்தல் துணைவினையாயிற்று. கவுளிகரித்தல் = கவுளுள் அடக்குதல், விழுங்குதல். இச்சொல் வடமொழியின் கபளீகர எனத்திரிந்து, வாய்க்கொப்பளிக்கும் அளவுள்ள நீரையே குறித்தது.

கவளிகை[1] *kavaḷigai,* பெ.(n.) கட்டு; bundle, as of books. *"புத்தகங் கட்டியார்த்த கவளிகையே கொலோ" (சேதுபு.இராமதீர்.49.)*

க. கவளிகெ, கவளிக.

[கவளி → கவளிகை.]

கவளிகை[2] *kavaḷigai,* பெ.(n.) ***கவளம்***[2]. *(யாழ்.அக.)* பார்க்க; see *kavaḷam.*

[கவளம் → கவளிகை.]

கவளிகைக்கட்டு *kavaḷigai-k-kaṭṭu,* 12. செ.குன்றாவி. (v.t.) ஒன்றாகச் சேர்த்துக் கட்டுதல்; to pack, to bundle.

க. கவளிகெகட்டு

[கவளிகை + கட்டு.]

கவற்சி *kavaṟci,* பெ.(n.) 1. ஆர்வத்துடிப்பு; anxiety, concern. *"இரங்கினர் கவற்சியெய்தி புணைவிழச் சலதி யாழ்ந்து புலம்புகொள் மாக்களே போல்" (கந்தபு.மேரு.19.).* 2. மனவருத்தம்; grief, sorrow, anguish.

[கவல் - பிளவு, வருத்தம் (கவலல்) கவல் + சி = கவற்சி. 'சி' பண்புப் பெயரீறு.]

கவற்சி[2] *kavaṟci,* பெ.(n.) விருப்பம்; desire *"நாட்டிய கவற்சியோடு நண்ணியங் கிருந்தானன்றே" (சேதுபு. வேதாள 39.)*

[கவ்வு → கவ்வல் → கவல் + சி → கவற்சி.]

கவற்சீரகம் *kavaṟcīragam,* பெ.(n.) பிளவுச் சீரகம்; a split cumin seed (சா.அக.).

[கவல் = பிளவு. கவல் + சீரகம்.]

கவற்றி *kavaṟṟi,* பெ.(n.) ஆர்வத்துடிப்பு; anxiety. *"புடை கவற்றியில்லா நிலைமைக்கண் வந்தால் ஒரு மறுமாற்றஞ் சொல்லும் பிற" (இறை.12,உரை.).*

[கவல் + தி = கவற்றி.]

கவற்று–தல் *kavaṟṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கவலையுறுத்துதல்; to cause anxiety or sorrow. *"காதல் கவற்று மனத்தினால் கண்பாழ்பட்டேதில வரை இரவு." (நாலடி,306.)* 2. வருத்துதல்; afflict. *"களிகொண்ட நோக்கங்கவற்ற" (பு.வெ.15.)*

[கவல் → கவற்று –.]

கவற்றுமடி *kavarru-madi,* பெ.(n.) பட்டாடை வகை (சிலப்.14, 108, உரை.); a kind of silk used in an ancient times.

[கவற்று + மடி. கவான் + து. கவாற்று → கவற்று (இடையில் கச்சாக உடுத்தத்தக்க) மடி = மடித்த துணி.]

கவறல் *kavaral,* பெ.(n.) 1. ஆர்வம் மீதூர்தல்; being anxious. 2. வருந்துகை; sorrowing, grieving. *"கவறல் கொண்டு கலங்கரு ரெய்தினார்" (கந்தபு.மேரு.68.).*

க. கழல், களல், களலு.

[கவல் → கவலு → கவறு → கவறல்.]

கவறாடல் *kavarādal,* பெ.(n.) சூதாடுகை; gambling. *"ஏகவின்பக் காமக் கவறாட லியைவ தன்றே" (சீவக.1657.).*

[கவறு + ஆடல்.]

கவறு[1] *kavaru,* பெ.(n.) சோழி; cowrie.

ம. கவடி; **க.** கவடெ, கவடி; **து.** கவடெ, கவடி; **தெ.** கவ்வ கவறறு.

Skt. kapardikā; **Mar.** kavadi; **H.** kaudī; **Pkt.** kavaḍḍiṇu.

[கவல் → கவர் → கவறு (பிளவுண்ட தோற்றமுடையது.)]

கவறு[2] *kavaru,* பெ.(n.) 1.சூதாடுகருவி; dice. *"பொதும்புதோறு அல்கும் பூங்கண் இருங்குயில் கவறுபெயர்த்து அன்ன" (நற்.243:4–5).* 2. சூது; gambling. *"கள்ளுங் கவறுந் திருநீக்கப் பட்டார் தொடர்பு" (குறள்,920).*

[கவர்தல் = பற்றுதல், பறித்தல். கவா அன் = கவருங்கள் வன். கவர் → கவறு = கவருஞ்சூதாட்டு, சூதாடுகருவி (மு.தா.13).]

தனிக்காய் நகர்த்தியும் காய்களைக் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பிரித்து வைத்தும் ஆடும் தாயக்கட்டம், ஆடுபுலி, பல்லாங்குழி போன்ற ஆட்டங்கள் பொழுது போக்கு அகமனை விளையாட்டுகளாகத் தொடங்கிப் பணயம் வைத்தாடும் பந்தயச் சூதாட்டங்களாக மாறியன என்பதால் பிரித்து வைத்தல், பிரித்தெடுத்துக் கொள்ளல், பறித்துக் கொள்ளல் என்னும் பொருள்களில் கவறு, எனுஞ்சொல் வளர்ந்து சூதாட்டத்தைக் குறித்தது.

கவறு[3] *kavaru,* பெ.(n.) 1. பனைவிட்டம் (யாழ்ப்.); palmyra timber. 2. பனைமட்டை; the stem of palmyra leaves (சா.அக.).

[கவல் → கவறு = அறுத்தது. நெடுகப்பிளந்தது.]

கவறுருட்டு–தல் *kavaruruttu-,* 5 செ.கு.வி.(v.i.) சூதாடுதல்; to play at dice.

[கவறு + உருட்டுதல்.]

கவறை *kavarai,* பெ.(n.) வடுகருள் ஒரு பிரிவினர்; Balija caste among the Telugus.

ம. கவர; **க.** கலரிக.

[கவர் → கவறு பிரிவு, கவறு → கவறை. சோழியர் பிரிவைச்சேர்ந் தவர்.]

கவனஈர்ப்புத்தீர்மானம் *kavana-īrppu-t-tīrmāṉam* பெ.(n.) அவையில் ஒரு பொருள்பற்றிய பேச்சு நடந்து கொண்டிருக்கும் போது வேறொரு விரைவு பொதுச் சிக்கலை அவைத் தலைவரின் இசைவோடு அவையில் முன்வைக்கும் தீர்மானம்; Call Attention motion in legislative bodies.

[கவனம் + ஈர்ப்பு + தீர்மானம்.]

கவனக்குறைவு *kavana-k-kuraivu,* பெ.(n.) முன்னெச்சரிக்கை இல்லாமை; lacking in foresight, not attentive.

கவனம்[1] *kavaṉam,* பெ.(n.) அக்கறை; interest. குழந்தையைக் கவனமாகப் பார்த்துக்கொள் (உ.வ.).

[கவலம் → கவனம்.]

கவனம்[2] *kavaṉam,* பெ.(n.) நினைவோட்டம்; mental activity

கவ்வு → கவ்வல் → கவல்(கவர்) = உள்ளத்தில் பதிதல். கவல் → கவலம் → கவனம் (வடதமிழ்ச்சொல்லாட்சி).

வடமொழியாளர் gamana (செல்லுதல் என்னும் சொல்லிலிருந்து 'கவனம்' வந்ததாகக் காட்டுவது பொருந்தாது. வடமொழி gamana நினைத்தல், கருதுதல் பொருளில் யாண்டும் ஆளப்படவில்லை.

கவனம்[3] *kavaṉam,* பெ.(n.) 1. கருத்து; attention, care. படிப்பில் உன் கவனத்தைச் செலுத்து (உ.வ.). 2. பரிப்பு, வேகம்; swiftness, rapidity, velocity, *"கவன மாம்பரி இரதமேற் பனிபடுங்காலைத்" (கந்தபு படையெழு.18).*

ம. கவ்வ, கவனம்; **க.** கவன; **து.** கவ; **கோத., துட., பட.** தவ (இரக்கம், அன்பு).

[கவல் → கவலம் → கவனம்.]

கவனம்[4] *kavaṉam,* பெ.(n.) காடு, (திவா.); forest, jungle

[கா → காவு → காவனம் → கவனம். (கொ.வ.)]

கவனி-த்தல்[1] *kavaṉi,* 4 செ.குன்றாவி.(v.t.) நுட்பமாய்ப்பாத்தல்; to be attentive to, to attend to, take notice of, heed, observe. போக்குவரத்துச் சாலையைக் கவனித்துக் கடக்கவும் (உ.வ.).

[கவ்வு → கவல் → கவலி → கவனி.]

கவனி[2] *kavaṉi,* பெ.(n.) கந்தகச் செய்நஞ்சு (மு.அ.); mineral poison.

[கவல் → கவலி → கவனி.]

கவனி[3] *kavaṉi,* பெ.(n.) கொன்றை; common cassia (சா.அக).

[கவனம் → கவனி.]

கவனிப்பு *kavaṉippu,* பெ.(n.) கருத்தூன்றுகை; attention, செய்யும் வேலையில் கவனிப்புத் தேவை (உ.வ.).

Chin. guān

[கவனி → கவனிப்பு.]

கவா *kavā,* பெ.(n.) 1. வெள்ளைக் காக்கணம்; white flowered mussel-shell creeper. 2. காட்டுமல்லிகை; wild jasmine (சா.அக.).

[கல் → கவவு → கவா.]

கவாஅன் *kavāaṉ,* பெ.(n.) கள்வன்; thief, robber, thief, *"விண்ணுயர் விறல்வரைக் கவாஅ னொருவன்" (இலக்.வி.580 உரை).*

[கவ்வு → கவாஅன்.]

கவாஅன்[2] *kavāaṉ,* பெ.(n.) 1. பக்கமலை (ஐங்குறு.299, உரை); side mountain. *"குன்றநாடன் குன்றத்துக் கவாஅன்" (ஐங்குறு 299).* 2. மலைப் பக்கம்; slope of hill. *"மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்" (நற்.32).* 3. ஒட்டிய மலைப்பிரிவு; இரு குவடுகள் சேருமிடம்; mountain slope. *"வான்றோய் சிமைய விறல்வரைக் கவாஅன்" (அகம் 3.6.).* 4. பக்கம் (நற்.357,உரை.); side *"சேண்உறத் தோன்றும் குன்றத்துக் கவாஅன்" (நற். 357).*

[கவை → கவாஅன்.]

கவாஅன்[3] *kavāaṉ,* பெ.(n.) கள்வன்; robber. *"விண்ணுயர் விறல்வரைக் கவாஅ னொருவன்" (இலக்.வி.5.க,உரை).*

[கவ்வு → கவா → கவாஅன்.]

கவாட்டி *kavāṭṭi,* பெ.(n.) சிப்பி; oyster. துரைமார் கவாட்டிபிடிக்கப் போயிருக்கிறார்கள் (யாழ்ப்).

[கவை → கவாள் + தி – கவாட்டி.]

கவாடஇளகியம் *kavāḍa-iḷagiyam,* பெ.(n.) துவர்ப்புச் சரக்குகளால் ஆன, வயிற்றுப் போக்கைக் கட்டுப்படுத்தும் இளகியம்; an electuary prepared by astringent drugs, to arrest dysentery (சா.அக).

[கவாடம் + இளகியம்.]

கவாடக்காரன் *kavāḍa-k-kāraṉ,* பெ.(n.) 1. பொதி மாட்டுக்காரன் (வின்); he who conveys burdens on bullocks. 2. புல்வெட்டுவோன் (யாழ். அக); grass-cutter.

*[**தெ.**கபாடமு + காரன்.]*

கவாடகுளிகை *kavāḍa-kuḷigai,* பெ.(n.) வயிற்றுப் போக்கைக் கட்டும் துவர்ப்பான மாத்திரை. (பைசச.154); a kind of astringent styptic pill.

[கவாடம் + குளிகை.]

கவாடபுரம் *kavāḍapuram,* பெ.(n.) பாண்டி நாட்டுத் துறைமுக நகர் (பழந்.தமி. 115); a port city in the kingdom of Pandya's

[கவாடம் + புரம்.]

கவாடம்[1] *kavāḍam,* பெ.(n.) ஓர் எருது சுமக்கக் கூடிய விறகு அல்லது புல் அல்லது வைக்கோலின் பொதி; (வின்); a bullock-load of wood or grass or straw.

*[**தெ.** கபாடமு. > **த.** கவாடம்.]*

கவாடம்[2] *kavāḍam,* பெ.(n.) கதவு; door. *"மன்னு மறையோர் திருநரையூர் மாமலை போல் பொன்னி யலுமாடக் கவாடம் கடந்து புக்கு" (திவ் இயற். பெரிய.ம.43).*

[கவை → கவல் → கவள் → கவடு → கவடம் → கவாடம் : இரட்டைக் கதவு அமைந்த நுழை வாயில் இரண்டாகப் பிளவுபட்ட ஓடுடைய சிப்பியை கவாட்டி என்பது ஈழநாட்டு வழக்கு.]

கவாடம்[3] *kavāḍam,* பெ.(n.) பாண்டி நாட்டுத்துறை முக நகர் (பழந்.தமி.115.); a port city in the kingdom of Pandyas.

[கவாடம் → கவாடம்]

கவாலி *kavāli,* பெ.(n.) ***கபாலி*** பார்க்க; see *kabāli*. *"கவாய் கதிர்முடி மேற் கங்கைதனை" (பதினோ பரண.சிவ. திருவந்.12.)*

Skt. kapālin.

[கபாலி → கவாலி.]

கவாளம் *kavāḷam,* பெ.(n.) காயக்கட்டு (இராட்.); bandage for wound.

[கவ்வு → கவ்வளம் → கவாளம்.]

கவான் *kavāṉ,* பெ.(n.) 1. இரு குவடுகள் சேருமிடம்; mountain slope. *"மால்வரைக் கவான்" (பட்டினப் 138)* 2. தொடைச்சந்து, தொடை; thigh *"கழுமியவுவகையிற் கவாற்கொண்டிருந்து" (மணிமே. பதி,27):* 2. திரள்; multitude; collection, as of trees in a forest,*"கவானுயர் சோலையின் வாய்வண்டல் ஆருழைக் கண்டனமே" (தஞ்சைவா. 119).*

[கவை →கவான்: கவைத்த தொடைச்சந்து, அது போன்ற மலை.சந்து. வட மொழியில் மூலமில்லை.

கவான்செறி *kavāṉ-ceṟi,* பெ.(n.) தொடையில் அணியும் ஓர் அணிகலன் (சிலப்.6,86,அரும்.); an ornament worn on the thigh.

[கவான் + செறி]

கவானக்கவுட்டி *kavāṉa-k-kavuṭṭi,* பெ.(n.) கிட்டிப் புள்ளு விளையாட்டில் வெற்றிபெற்றவன், தொடைகளின் வழியாய் எறியும் புள்ளை எறிந்த இடத்திற்கு, ஒரே மூச்சில் தோற்றவன் எடுத்துவரும் ஒறுப்பு; (இட.வ.) punishment by which defeated party in the game of kiṭṭi-p-puḷḷu takes to the post in one breath, the stick thrown by the winner between his thighs.

[கவான் + அம் + கவுட்டி.]

கவி[1]**–தல்** *kavi-,* 4 செ. குன்றாவி.(v.t.) 1. மூடுதல்; to cover, overspread, bend in or over, over shadow. *"வாய்கவிந்த வையகம் எல்லாம் பெறினும் உரையற்க பொய்யோ டிடைமிடைந்த சொல்"(நாலடி 80.).* 2. வளைதல்; to surround, hem in, invest *"கயந்தலைக் குழவிக் கவிபுகிர் மடப்பிடி" (அக.நா.229).*

ம., க., கவி; **தெ.** கவிபு; **து.** கபி.

[குவி → கவி]

கவி[2] **–தல்** *kavi,* 4 செ.கு.வி (v.i.) 1. கருத்தூன்றுதல்; to be eagerly intent upon, to be absorbed earnestly in. அவர் மனம் அதிற்கவிந்திருக்கிறது (உ.வ.). 2. இடிதல்; to break down,as the bank of a river; to crash, fall. *"பிணியகத்திருந்து, பீடுகொழ் முற்றி அருங்கரை கவியக் குத்தி" (பட்டினப்.222.223).* 3. கவிழ்தல்; to hang down, as the head. *"கவிதலை எண்கின் பருஉமயிர் ஏற்றை" (நற்.325.1.).*

[குவி → கவி]

கவி[3]**–த்தல்** *kavi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. வளைந்து மூடுதல்; to cover as with an umbrella; to overshade; to cover over, as an arch. *"கொல்லாற் செய்த வேலாற்குக் குடையாய் நின்று கவித்ததுவே" (சூளா. அரசி.* 213). 2. முடியைக் கவித்துச் சூட்டுதல்; to invest with, as a crown. *"இளையவற் கவித்த மோலி யென்னையுங் கவித்தியென்றான்" (கம்பரா. விபீடன.145).* 3. மூடுதல்; to close. *"கன்றுபுகு மாலை நின்றோள் எய்திக் கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகி" (அகநா.9–21).*

Port. cobrir

[குவி → கவி → கவி – த்தல்.]

கவி[4] *kavi,* பெ.(n.) குரங்கு; ape, monkey. *"கவிக்குல மவற்றுக்கெல்லாம் நாயகன் சுக்கிரீவன்" (கம்பரா. உருக்காட்.29).*

Skt.,H. kavi; **Nep.** kabi.

[கவி → கவிழ் : தொங்குதல், மரம், மற்றும் கொடிகளில் தொங்கும் தன்மையுடையதால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.]

கவி[5] *kavi,* பெ.(n.) 1. பூனைக்காலி (மலை); cowhage. 2. முருங்கை; drum stick tree (சா.அக).

[கவி ⁴ → கவி ⁵]

கவி[6] *kavi,* பெ.(n.) 1. பள்ளம்; depth, pit deep valley. 2. அளை, குகை; cave, cavern in a mountain or rock.

க.,தெ.,து., கவி. **Skt.** guhā.

[கவி ³ →கவி]

கவிக்கட்டை *kavikkaṭṭai,* பெ.(n.) 1. ஐம்பான் முடிகளுள் ஒன்று; a mode of dressing the hair of women. 2. கழுத்தின் பின்குழி; depression on the nape of the neck. 3. ஒருவகைப் பிளவை; swollen ulcer on the back of the head.

[குவி → கவி + கட்டை.]

கவிகண்ணோக்கு *kavi-kaṇṇōkku,* பெ.(n.) புருவத்திற்கு அண்மையில் கையைக் கவித்துக் கொண்டு பார்க்கும் பார்வை; looking at objects by shading one's eyes with the hand *"கவி கண்ணோக்கின் செந்தொடை பிழையா வன் கணாடவர்" (புறநா.3,19).*

[கவி + கண் +நோக்கு.]

கவிகம்² *kavigam,* பெ.(n.) கடிவாள இரும்பு (சங்.அக); bit of a bridle, the metal part of the bridle put into a horse's mouth.

[கவ்வு → கவி +கம்]

கவிகை¹ *kavigai,* பெ.(n.) 1. வளைவு; bending, being concave *"உமணர் கீழ்மரத் தியாத்த சேமவச் சன்ன இசைவிளங்கு கவிகை நெடியோய்" (புறம் 102.).* 2. குடை; umbrella. *"வேந்தன் கவிகைகீழ்த் தங்கு முலகு" (குறள். 389) "நெடுங்கவரி கவிகையென" (இரகு. அரசி 14.)* 3. நன்மை தீமை; good and evil *"நொதுமலர் கவிகை" (ஞானா.29,4).*

[குவி → கவி + கை.]

கவிகை² *kavi-kai,* பெ.(n.) ஈகம் (தியாகம்); lit, inverted palm of the hand, transfer, liberality, munificence,bounty. *"காரினை வென்ற கவிகையான்" (பு.வெ.9,29).* 2. கொடுத்துக்கவிந்த கை; munificient hand. *"வரையாது சென்றோர்க் கானாது ஈயுங் கவிகை வண்மை" (புற.நா. 54, 6–7).*

[கவி + கை.]

கவிச்சடி–த்தல் *kaviccaḍi-,* 4 செ.கு.வி.(v.i.) அழுகிய மீன் நாற்றம் வீசுதல்; to smell, rankle

து. கௌண்டுனி

[கவிச்சு + அடி]

கவிச்சி *kavicci,* பெ.(n.) **கவிச்சு** பார்க்க; see *kaviccu.* ஆசாரப் பூசைச் சட்டி அதன் மேல் கவிச்சிச் சட்டி; (பழ).

[கவிச்சு → கவிச்சி (கொ.வ.)]

கவிச்சு *kaviccu,* பெ.(n.) புலால் நாற்றம்; stench of fish, of raw flesh, of rotten eggs. *"கழுவிக்கழுவி ஊற்றினாலும் கவிச்சு நாற்றம் போகாது" (பழ.).*

ம. கவர்; **க.** கவுரு, கவரு, கமரு; **து.** கௌண்டு; **தெ.** கமரு.

[குமிழ்) → குமிர் → கமர்(தல்) பொங்கிவருதல், உணர்வு வெளிப்படுமாறு வரும் அழுகை; கமர் → கமர்ச்சு → கவர்ச்சு → கவிச்சு = தன்னுள் அடங்கிய இயல்பு நாற்றம் வெளிப்படுதல்.]

கவிச்சுக்கடை *kaviccu-k-kaḍai,* பெ.(n.) 1. மீன் கடை; fish-stall. 2. இறைச்சிக் கடை;muttan stall.

[கவிச்சு + கடை.]

கவிசனை *kaviśaṉai,* பெ.(n.) 1. உறை (மாறனலங். 120, 248, உரை); wrapper, envelope, cover, sheath. 2. சேணம் (சங்.அக); saddle-pad, saddle.

தெ. கவிசென; **ம.** கவியன்

[கவிழ் + அணை → கவிழணை → கவிசணை.]

கவிசுகட்டி *kaviśukaṭṭi,* பெ.(n.) பாண்டுவினால் வயிற்றில் ஏற்படும் கட்டி; a tumour in the stomach arising from dropsy (சா.அக).

[கவிச்சு + கட்டி.]

கவிசை *kaviśai,* பெ.(n.) வயிற்றுக்கட்டி (வின்); tumour in the stomach.

[கவிசு → கவிசை. கவிசு = கட்டி.]

கவிணியன் சங்கரன் *kaviṇiyaṉsaṅkaraṉ,* பெ.(n.) கும்பகோணம் வட்டம் திருவிசலூர்க் கோயிலுக்கு அணையா விளக்கு எரித்திட நன்கொடை வழங்கிய பெண்ணின் கணவர்; husband of a lady who made donations for a perpetual lamp in the Thiruvisalur temple in Kumbakonam taluk. *"தென்கரைத் திருமழலை கவிணியன் சங்கரன் தோலன் பிராமணி சமாதி கொற்றி வைத்த விளக்கு" (தெ.இ.கல்.தொ.23 கல் 321).*

[கவுணியன் → கவிணியன் + சங்கரன். கவுணியன் = ஆரிய வகுப்பினருள் ஒரு பிரிவைக் குறித்த பெயர்.]

கவிப்பர் *kavippar,* பெ.(n.) ஆ (பசு) மறையச் சொறி யும் அளவுக்கு தேடிய பொருளுள்ள வணிகவகையினர் (சிலப்.15,179, அரும்); one of three main divisions of Vaisya caste, as those whose store of wealth is so large as to immerse a cow within it, the other two being ippar and peruṅ-kuḍiyar.

[கவி → கவிப்பர்.]

கவிப்பு *kavippu,* பெ.(n.) 1. மூடுகை; covering, over shading. 2. குடை (பிங்.); canopy, umbrella, awning. 3. மனம் பற்றுகை; partiality, bias, predilection. அவர் இவர்கள் மேல் கவிப்பாயிருக்கிறார் (வின்.).

[கவி → கவிப்பு.]

கவியம் *kaviyam,* பெ.(n.) கடிவாளம். (பிங்.); bit of a horse's bridle.

Pkt. kaviya

[கவி + அம்]

கவிர் *kavir,* பெ.(n.) 1. முள் முருக்கு; Indian coral tree. *"கவிரி தழ் அன்ன காண்பின் செவ்வாய் அந் தீங் கிளவி ஆயி தழ் மடந்தை" (அகநா.3.:14,15).* 2.உவர்நீரின் மினுமினுப்பு; glitter, glittering of salt water.

[கவி → கவிர்.]

கவிரநாடு *kaviranādu,* பெ.(n.) திருக்கோகர்ணம் அமைந்துள்ள நாட்டுப் பகுதியின் பெயர்; name of the region containing Thirukkōkarnam. *"கவிர நாட்டுத் திருவெரும்பியூர் ஊரோம்" (தெ.இ.கல். தொ.19 கல் 395).*

[கவிர் → கவிரம்.]

கவிரம்[1] *kaviram,* பெ.(n.) 1. தெய்வத் தன்மையுள்ள ஒரு மரம். (சீவக.1710, உரை); a celestial tree. 2. அலரி; oleandar.

[கவிர் → கவிரம்.]

கவிரம்[2] *kaviram,* பெ.(n.) ஆய்வள்ளலின் நாட்டி லிருந்த பக்க மலைகளுள் ஒன்று (அகநா.198, உரை); one of the mountain sides which can be seen from the kingdom of Aayvallal.

[கவி → கவிர் + அம். கவி : மூடு, வளைந்து சூழ்ந்துள்ளது.]

கவிவு *kavivu,* பெ.(n.) 1. உள்வளைவு; inner bend (சா.அக). 2. குழிவு; conical shape.

[கவி → கவிவு.]

கவிழ்–தல் *kavil-,* 4 செ.கு.வி.(v.i.) 1. தலைகீழாதல்; to be capsized, turned bottom upwards, to turn down. தோணிக விழ்ந்தது (உ.வ.). 2. நாணமுதலிய வற்றால் தலையிறங்குதல்; to bow one's head from modesty; to hang down, as the head, with shame, confusion, defeat. *"காணின் குவளை கவிழ்ந்து நிலனோக்கும் மாணிழை கண்ணொவ்வேம் என்று" (குறள் 1114.).* 3. குனிதல்; to stoop, bend down. *"கவிழ்ந்து நிழறுழாம் யானை" (யாப்.36.).* 4. நிலை குலைதல்; to be overthrown, discomfited, routed. எதிரிகள் சேனை கவிழ்ந்தது. 5. அழிதல்; to die, perish *"தான் சாவ உலகு கவிழும்" (சிலப்.7,50. அரும்.)* 6. முழுகிப்போதல்; to be submerged, to founder. *"மாரி யிரவின் மரங்கவிழ் பொழுதின்" (புறநா.238.16). "கங்கையிற் கவிழ்ந்திட்டான் கொலோ" (பாகவ.1,6,6.).* 7. தாழ்தல்; to fall low. *"கதிர்தெறக் கவிழ்ந்த உலறுதலை நெறியயல் மராஅம் ஏறி" (அகநா.81, 7–8).*

ம. கவிழ்; க. கவிசு, கவசு, கவுசு; குட. கவின்; து. கப்பெ, கப்ப.

[கவி → கவிழ்.]

கவிழ்[2]**–த்தல்** *kavil-,* 11 செ.குன்றாவி.(v.t.) 1. கவிழச் செய்தல், தலைகீழாக இறங்குதல்; to turn upside down,capsize,invert. *"கவிழ்மயி ரெருத்திற் செந்நா யேற்றை குருளைப்பன்றி கொள்ளாது கழியும்" (ஐங்குறு.397,1–2).* 2. கெடுத்தல்; to topple,ruin, destroy நாட்டையெல்லாங் கவிழ்த்துப் போட்டான் (உ.வ.). 3. மூடுதல்; to put a cover. பானையின்மேல் சட்டியைக் கவிழ். 4. ஒழுகவிடுதல்; to pour out. *"இருகவுள் கவிழ்த்த மதநதி உவட்டின்" (கல்லா. கணபதிதுதி).* 5. வெளிப்படுத்துதல்; to shed, as tears;to emit *"கார்கண்டு கவிழ்த்த விழிப்புனல்" (தணிகைப். நாட்டுப்.71).* 6. நிலை குலைத்தல்; to overthrow. ஆட்சியைக் கவிழ்த்து விட்டார்கள் (உ.வ).

க. கவிசு; ம. கவிழ்த்து, கமிழ்த்துக; குட. கவின்ம்ப், பட. கவுசு.

[கவி → கவிழ் →கவிழ்த்தல்.]

கவிழ்தும்பை *kaviḻ-tumpai,* பெ.(n.) 1. கவிழ்ந்து பூக்கும் தும்பை வகை; a low annual plant flourishing in dry localities. 2. மலைத்தும்பை; hill toombay (சா.அக).

[கவிழ் + தும்பை.]

கவிழ்தும்பை

கவிழ்வேல் *kaviḻvēl,* பெ.(n.) குடைவேல்; umbrella thorn babool (சா.அக.).

[கவி → கவிழ் + வேல்.]

கவிழம் *kaviḻam,* பெ.(n.) மோர்; butter milk (சா.அக).

மறுவ. கவிளம் (கொ.வ)

க. கழல்

[குவி → கவி → கவிழ் → கவிழம்]

கவின்[1] *kavin,* பெ.(n.) அழகு; beauty,grace, fairness,comeliness. *"கார் செய் தன்றே கவின்பெறு கானம்" (அகநா.4.7.).*

[கவி → கவின். கவி = சூட்டுதல், அணிவித்தல், அழகுபடுத்துதல்.]

கவின்கலை *kavin-kalai,* பெ.(n.) உணர்வுகளைத் தொடும் பாடல், இசை, ஓவியம், சிற்பம், கட்டடக் கலை போன்றவற்றின் அழகுத் தன்மை; those apealing to sense of beauty, as poetry music,painting, sculpture, architecture.

[கவின் + கலை. கவின் = அழகு.]

கவின்[2](னு)-தல் *kavin,* 13 செ.கு.வி.(v.i.) அழகு பெறுதல்; to be beautiful, fair,graceful,comely.

[கவி → கவில் → கவின் → கவினுதல்.]

கவின்[3] *kavin,* பெ.(n.) கொடிமுந்திரிப்பழம்; vine fruit (சா.அக).

[கவி (தொங்குதல்) → கவின்.]

கவினம்[1] *kavinam,* பெ.(n.) கடிவாளம் (நாமதீப); bit, metal mouth piece in bridle.

[கல் → கவி → கவினம்.]

கவினம்[2] *kavinam,* பெ.(n.) 1. வெண்ணெய்; butter 2. மோர்; butter milk. 3. பன்னீர்; rose water.

[கவி → கவிழ் → கலக்கம், கவிழம் → கவினம்]

கவினல் *kavinal,* பெ.(n.) 1.அழகு; beauty 2.பண்பு; culture.

[கவின் → கவினல், 'அல்' சொ.ஆ.ஈறு.]

கவுக்கை *kavukkai,* பெ.(n.) பாறையினடியில் தங்கும் கடல் மீன் (தஞ்.மீன.வழ); a kind of sea fish

த. கவுக்கை>**Skt.** kavika akind of fish.

[கவி → கவு → கவுக்கை, பாறைகளால் வளைந்து மூடப்பட்ட பொந்துகளில் வாழ்வன.]

கவுகம் *kavugam,* பெ.(n.) அம்மைப்பால்; lymph used in vaccination (சா.அக).

[கோ → கோவு → கோவுகம் → கவுகம்.]

கவுச்சுமாறி *kavuccūmāṟi,* பெ.(n.) தசையாசை பற்றிய காம வெறியன்; lustful person.

[கவுச்சு + மாறி. (மாறியவன், தாவியவன் – நல்லியல்பு இருந்து தீய ஒன்றுக்கு மாறியவன்).]

கவுச்சு *kavuccu,* பெ.(n.) 1. புலால், மீன் போன்றவற்றின் இயற்கை மணம், a natural smell of fresh meat, fish etc. 2. ஊன் உணவு; non vegetarian food.

[கவுல் → கவுசு → கவுச்சு.]

கவுசனை *kavušanai,* பெ.(n.) 1. உறை; wrapper, envelope,cover. *"கண்மூடா விண்மூடத். தேடுங் கவுசனை போல்" (ஒழிவி. யோகக்.8)* 2. சேணம்; saddle.

[கவிழணை → கவுசனை.]

கவுசி[1] *kavuši,* பெ.(n.) 1. குழைவு; fainting. 2. வருத்தம்; affliction.

தெ. காசி

[கவல் → கவுல் → கவுசி.]

கவுசி[2] *kavuši,* பெ.(n.) 1. ஒரு வகை வரிக்கூத்து. (சிலப்.3,13,உரை.) ; a kind of dancing with gestures. 2. பாட்டு (அக.நி.); song.

[கவிழி → கவிசி → கவுசி.]

கவுசி[3] *kavuši,* பெ.(n.) ஒருவகை நோய்; a kind of disease. *"கண்ட மாலை கவுசி மகோதரம்" (திருவாலவா.27,14.)*

[கவுசி[1] → கவுசி[3].]

கவுசிகம்[1] *kavusigam,* பெ.(n.) 1. வெண்பட்டு; silk. 2. கோட்டான்; rock horned owl. 3. குக்கில்; Indian olibanum (சா.அக).

[கவுசி[1] → கவுசிகம்.]

கவுசிகம்[2] *kavušigam,* பெ.(n.) 1. ஒரு பண் (சூடா.); a musical mode. 2. சாமமறை; Sāmavēda. *"வெளி யிடற்குள நுதலிய கவுசிகம்" (அரிசமய. பராங்குச.9).*

[கவுசி[2] → கவுசிரம்.]

கவுசுத்தி *kavušutti,* பெ.(n.) சுத்தியல்வகை (C.E.M.); claw-hammer.

[கவை + சுத்தி → கவுசுத்தி.]

கவுட்டி *kavuṭṭi,* பெ.(n.) தொடைச்சந்து;space between thighs.

[கவை → கவுட்டி]

கவுடம்[1] *kavuḍam,* பெ.(n.) கொடிவகைகளு ளொன்று (சூடா.); a kind of creeper.

[கவை → கவடம் → கவுடம்.]

கவுடமாய் *kavuḍam-āy,* கு.வி.எ.(adv.) பொருள் வெளிப்படையின்றி; with hidden meaning. *"செந்தமிழினுங் கவுடமாக வுரைசெய்தார்" (சிவதரு.சிவஞானயோ.124.).*

[கவை → கவடு → கவடமாய்.]

கவுடி[1] *kavuḍi,* பெ.(n.) ***கவுடி***[2] (சூடா.) பார்க்க; see *kavuḍi*[2] **U.** *kauḍi.*

[கவுடி → கவுடி.]

கவுடி[2] *kavuḍi,* பெ.(n.) ஒருபண்; a musical mode. *"நெடிய கவுடியிசை" (திருப்பு.319).*

[கவுள் → கவுளி → கவுடி.]

கவுடிகம் *kavaḍu,* பெ.(n.) குளிர்தாமரை; sky lotus. (சா.அக.)

[கவுள் → கவுளிகம் → கவுடிகம்.]

கவுடிப்பாய்வு *kavuḍi-p-pāyvu,* பெ.(n.) ஒருவகை விளையாட்டு; kind of game.

[கவடி + பாய்வு.]

கவுடு *kavudu,* பெ.(n.) கழுத்தில் அணிவதும் பொற் குப்பியில் அமைந்ததுமான அக்கமணி; sacred eleocarpus bead enclosed in gold and worn round the neck.

[கவுள் → கவுடு.]

கவுண்டதனம் *kavuṇḍatanam,* பெ.(n.) ***கவுண்டிக்கை*** பார்க்க; see *kavuṇḍikkai.*

க. கவுடதன

[கவுண்ட(ன்) + தனம்]

கவுண்டர் *kavuṇḍar,* பெ.(n.) ***கவுண்டன்*** பார்க்க; see *kavuṇḍan,*

[கவுண்டன் → கவுண்டர் ; அர்[1] (உயர்வுப்பன்மை ஈறு)]

கவுண்டன் *kavuṇḍan,* பெ.(n.) தமிழர், கன்னடர் சிலர்க்குள் வழங்கும் (கொங்க வேளாளன், அனுப்பன், காப்பிலியன், பள்ளி, செம்படவன், ஊராளி, வேட்டுவன்) பட்டப் பெயர்; a caste title of certain Tamil and Canarese folk, as Kongavelalan Anuppan, Palli, Sembadavan, Urali, Vettuvan, Kappiliyan.

மறுவ. சாமந்தன், சாமுண்டன், காமுண்டன், கவுண்டன்.

க. காமண்ட, கஉண்ட, கவுட, கமண்ட, கவுண்ட, கவுண்டு, கவுடு, காமுண்டு, காவுண்ட, காவுண்டு, கொண்ட, கோவுண்டு, கௌஉட, கௌண்ட, கௌண்டு, கௌட, கௌடு, கௌவுண்ட; **தெ.** கௌடே.

Pkt. gãmauḍa,gãmaūḍa; **Skt.** gramavrutti.

கவுண்டன், காமுண்டன், காமிண்டன் என்பவை படைத்துறை மறவரின் பதவிப் பெயர்களாயிருந்து குலப் பெயர்களாக மாற்றப் பட்டவை. இவை எயின்குடி, வேளாண்குடி என்றாற் போன்ற குடிப்பெயராகவோ, குயவர், மீனவர் என்றாற் போன்ற தொழில்வழி குலப்பெயராகவோ; சேர்ப்பன், குன்றன், பொருப்பன், மூப்பன் என்றாற் போன்ற குலவழி தலைமக்கள் பெயராகவோ;

ஊராளி, நாட்டார் என்றாற் போன்ற ஆட்சிவழி அதிகாரப் பெயராகவோ வழங்கப்படவில்லை. பத்தாம் நூற்றாண்டில் தான் முதன்முதலாக நன்னி காமுண்டன் என்னும் பெயர் கல்வெட்டில் பயின்றுள்ளது. அதற்குமுன் இச்சொல்லாட்சி எங்கும் காணப்படவில்லை. சிற்றூர்த் தலைவர்கள் நாடுமுழுதும் கவுண்டன் என்னும் பெயரால் அழைக்கப்பட வேண்டும் என்று எந்த அரசர் காலத்திலும் ஆணை பிறப்பிக்கப்படவில்லை.

படை மறவர்களுள் சாமன், சாமந்தன், மாசாமந்தன் என்பவை படிப்படியாக உயர்ந்த பதவிகளைக் குறித்தன. பெரும்படைத் தலைவர் மாசாமந்தன் எனப்பட்டான். அவனுக்குக் கீழ் நிலையிலுள்ள அதிகாரி 'சாமந்தன்' எனப் பட்டான். இச்சொல் கன்னட ஆட்சியின் போது காமுண்டன் என்றும்,சோழர் ஆட்சியின் போது சாமுண்டன் என்றும் திரிந்தது. காமுண்டன் நாளடைவில் காவுண்டன் →கவுண்டன் எனத் தமிழிலும், கவுடு, கவுட எனத்தெலுங்கு கன்னட மொழிகளிலும் திரிபுற்றது. போர்க்காலத்திய பதவிப்பெயர் நாளடைவில் குலப்பெயராகி விட்டது. வழிவழி போர்மறவராயிருந்தவர் பற்றி, படையாட்சி என்றும் அழைக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்துப் பண்டார வன்னியனைக் கவுண்டன் எனக் குறிப்பிடவில்லை: உழவர்குடியில் பிறந்த திருநாவுக்கரசர் கவுண்டர் என அறியப்படவில்லை. வேளாளக் குடியினர் பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பு கவுண்டர் எனக் குறிக்கப்பட்டதில்லை. கன்னட, தெலுங்கு தாக்கம் பெறாத போதிலும் தென் தமிழகத்தில் இச்சொல் குலப்பெயராகவோ, குடிப்பெயராகவோ எப்பொழுதும் ஆளப்படவில்லை.

படைத்துறையில் தலைமை ஏற்றதால் பெற்ற முதலி என்னும் படைத்துறைப் பதவிப்பெயர் நாளடைவில் குலங்குறித்த (சாதி) பெயரானது போல், படைத்துறை பதவிப்பெயரான சாமந்தன் என்பது சாமுண்டன் → காமுண்டன் →கவுண்டன் எனத் திரிந்திருக்கிறது.

தொழில் வழி இன்ன குடியினர் என வகைப்படுத்துவ தல்லது தொழில் வழியைப் பிறப்புக்குரிய தொழில் எனத் தவறாக இட்டுக்கட்டி, தொழிலே பிறவிக் குலம் எனக் குறிமிட்டுக் காட்டுவது தமிழர் மரபன்று. தமிழர் தொழில் வழிப் பதினெண்குடிகளைப் பிரித்தனரேயன்றி பிறப்புவழி நால்வகைக் குலம் பிரித்து அதில் பற்பல குக்குலங்களை எக்காலத்திலும் பிரிக்கவில்லை என அறிக. தொழில்வழி குடியும் கொடிவழி குலமும் கூறப்படுதல் தமிழர் மரபு. பிறப்புக் கருதியும் நிறங்கருதியும் சாதிப் பாகுபாடு செய்வது ஆரியர் மரபு.

கவுண்டி *kavundi,* பெ.(n.) ***கவைக்கோர் கருவி*** பார்க்க; see *kavaik-kōr-karuvi.*

[கவண்டி → கவுண்டி.]

கவுண்டி

கவுண்டிக்கை *kavuṇḍikkai,* பெ.(n.) மிடுக்கான சிற்றூர் ஆட்சி அதிகாரம்; the business of a village

பட. கவுண்டிக்கெ; க. கவுடிகெ.

[கவுண்டன் → கவுண்டிக்கை.]

கவுண்டிச்சி *kavuṇḍicci,* பெ.(n.) சிற்றூர்த் தலைவரின் மனைவி; wife of a village chief.

க. கவுடகித்தி; பட. கவுடிச்சி.

[கவுண்டன் (ஆ.பா) → கவுண்டிச்சி (பெ.பா).]

கவுணி *kavuṇi,* பெ.(n.) ***கவுணியன்*** பார்க்க; see *kavuṇiyaṉ "கடையார்கொடி நன் மாடவீதிக் கழுமலவூர்க் கவுணி நடையார் பனுவன் மாலையாக ஞானசம்பந்தன்" (தேவா 138,12).*

கவுணியர்கோன் *kavaṇiyar-kōṉ,* பெ.(n.) கவுணிய குலத்துப் பெரியோரான திருஞானசம்பந்தர்; Campandar, the Saiva saint, so called from his being the most famous personage in the Caundinya Gotra *"கைந்நிறைந்த வொற்றறுத்துக் கலைப் பதிகங் கவுணி யர்கோன் பாடுங்காலை" (பெரியபு. திருஞா. 102).*

[கவுணி → கவுணியர் + கோன்.]

கவுணியன் *kavuṇiyaṉ,* பெ.(n.) 1. கவுணிய குலத்தான்; one born in the Caundinya Gotra சோணாட்டு பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கவுணியன் விண்ணந்தாயனை ஆவூர் முலங்முகிழார் பாடியது (புறநா,166). 2. கடைக்கழகப்புலவர் (அபி. சிந்); Sangam poet.கவுணியனார் பாடிய பாடலாகத் திருவள்ளுவமாலையில், *"சிந்தைக் கினிய செவிக்*

கினிய வாய்க்கினிய வந்த இருவினைக்கு மாமருந்து –முந்திய நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார் பன்னிய இன் குறள் வெண்பா" எனக் காணப்படுகிறது.

[கவுணி→ கவுணியன்.]

கவுணியன்விண்ணந்தாயன் *kavuṇiyaṉ viṇṇandāyaṉ,* பெ.(n.) கடைக்கழகப் புலவர்; a poet of sangam age.

[கவுணியன் (குடிப்பெயர்) + விண்ணந்தாயன்.]

சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப்பார்ப்பான் கவுணியன் விண்ணந் தாயனை ஆவூர் மூலங்கிழார் பாடியுள்ளார் (புறநா.166). தாயன் என்னும் அடைமொழி துளுநாட்டில் வழங்குவதாதலின் இப்புலவர் துளுநாட்டிலிருந்து வந்தவராகலாம்

கவுத்து[1]கவாதம் *kavuttuga-vādam,* பெ.(n.) அறுபத்துநாலு கலைகளுள் வருந்துகின்ற மனத்தை மகிழ்விக்கும் விச்சை; art of bringing delight to a sorrowful mind, one of arupattu-nalu-kalai.

[குவி→ கவி→ கவு→ கவுத்துகம் (மனத்தை ஓரிடத்தில் ஈர்ப்பது).]

கவுத்துவம் *kavuttuvam,* பெ.(n.) திருமால் மார்பில் அணியும் மணி; jewel obtained from churning the sea of milk, and worn by Višnu on his chest. *"கவுத்துவங் கிடந்த மார்பின்" (கூர்மபு. அந்தகா.85).*

[கவ்வு →கவு → கவுத்துவம் (வயிரமணி அழுத்திய நகை).]

கவுத்துவாய் *kavuttuvāy,* பெ.(n.) வெண்ணிற மானதும், வௌவால்போல் உடல்பரப்பு அகலமானதும், வால்துடுப்பு மொட்டையானதுமான. ஒரு வகைக் கடல் மீன்; a kind of sea fish.

[கவி→ கவு → கவுத்து = வளைந்து மூடிய. கவுத்து + வாய்.]

கவுதம்[1] *kavudam,* பெ.(n.) மீன்கொத்தி (பிங்); common kingfisher.

[கவ்வு→ கவு]

கவுதம்[2] *kavudam,* பெ.(n.) மழைநீரால் சுவர் நனையாதிருக்க சுவரின் உச்சியில் கட்டப்படும் கட்டட அமைப்பு; super structure of a wall.

[கவி→ கவு →கவுதம்.]

கவுதாரி *kavudāri,* பெ.(n.) **கதுவாலி** பார்க்க; see *kaduvāli "சிவல்குறும்பூழ்.... பொறிமயிர்க் கவுதாரிகள்" (கம்பரா.பள்ளி.14).*

[கதுவாலி→ கவுதாரி (இலக்கணப் போலி) (த.வ.134).]

கவுதாரி வகைகள்: 1. கல் கவுதாரி 2. வண்ணக் கவுதாரி 3. சாம்பற் பழுப்பு நிறக் கவுதாரி 4. கவுதாரி.

கவுதாரிபுடம் *kavudāri-puḍam,* பெ.(n." **கதுவாலிப் புடம்** பார்க்க;see *kaduvāli-p-puḍam*

[கதுவாலிப்புடம்→ கவுதாரிப்புடம்.]

கவுந்தியடிகள் *kavundi-y-aḍigaḷ,* பெ.(n.) சிலப்பதி காரம் குறிக்கும் சமணப்பெண் துறவி; female Jain ascetic *"காவதங் கடந்து கவுந்திப் பள்ளிப் பூமரப் பொதும்பர் பொருந்தி ஆங்கண்" (சிலப்.10.36,37).*

[கந்து = பற்றுக்கோடு. கந்தன் (ஆ.பா.பெ.) →கந்தி (பெ.பா.பெ.) கந்தி = பற்றுக்கோடான பெண், பெண்தெய்வம். த. கந்தி >வ. கௌந்தி > த. கவுந்தி, காவுந்தி. கவுந்தி + அடிகள்

அக்காலத்துச் சமணப் பெண்துறவிகளுக்குக் கந்தி என்ற பொதுப் பெயர் இருந்திருக்க வேண்டும் (பாவாணர் – செல்வி.66.பக்.392)

கவுமாரம் *kavumāram,* பெ.(n.)1. இளமை; adolescence,youth. *"கவுமாரமாய் வயங்கு" (பாகவ.1,1,23).* 2.**கௌமாரம்** பார்க்க;see *kaūmāram.*goddess Sarasvati.

[குமரம்→ கௌமாரம்→ கவுமாரம்.]

கவுமாரி *kavu-māri,* பெ.(n.) மலைமகள்; Parvati.

[குமரி→ கௌமாரி→ கவுமாரி.]

கவுமோதகி *kavumōdagi,* பெ.(n.) திருமாலின் படைக்கலம்; mace of Višnu *"மாயோன் செங்கை மூரிநெடுந்தண்டு கவுமோதகி" (சேதுபு. துராசா.34).*

[காவு + மோத (மோதும் தண்டு).]

கவுரகாசு *kavura-kāšu,* பெ.(n.) அக்குமணி (சங்.அக.); conch bead.

[கவை (பிளவு)→ கவுரி → கவுரி + காசு.]

கவுரம் *kavuram,* பெ.(n.) 1. வெண்மை; white colour *"கவுரவா நிறத்தனாய்" (காஞ்சிப்பு. கழுவாய்.23)* 2. மஞ்சட்கரு; the yolk of an egg (சா.அக).

[கவுரி→ கவுரம்.]

கவுரி *kavuri,* பெ.(n.) சோழி; cowrie. 2. வெண்மை நிறம்; white colour.

[கவடி → கவுரி (கொ.வ.).]

கவுரிக்கொம்பு *kavuri-k-kombu,* பெ.(n.) மாட்டுக் கொம்பு; a cow's or bull's horn (சா.அக).

கவுரிசங்கரம் *kavuri-śaṅgaram,* பெ.(n.) கவுரி சங்கரர்களது உருவினதாய் இருபிளவுபட்ட ஒற்றை அக்கமாலை (உருத்திராக்கம்); a double rudraksa bead believed to represent Parvadi and Siva.

கவுரிசெந்தூரம் *kavurisenthūram,* பெ.(n.) சித்தர் நூல் முறைப்படி கவுரிச் செய்ந்நஞ்சைக்கட்டி அதனின்று செய்யப்படும் செந்தூரம்; a red-oxide prepared from consolidated yellow arsenic according to the Siddha process.

[கவுரி + செந்தூரம்.]

கவுல்[1] *kavul,* பெ.(n.) கெட்ட நாற்றம்; fetid odour, bad smell.

க. கவுலு, கவலு, கௌலு; **தெ.** கவுலு, கௌலு.

[கமர் → கவர் → கவுல்.]

கவுல்[2] *kavul,* பெ.(n.) ஏய்ப்பு, (வஞ்சனை) (உ.வ.); deceit, fraud.

[கவை → கவுல்.]

கவுல்[3] *kavul,* பெ.(n.) இரவில் பளபளப்பாகத் தோன்றும் கடல் நீர். (செங்.மீன்.வழ.); glittering sea water at night.

[கவின் → கவில் → கவுல்.]

கவுள் *kavuḷ,* பெ.(n.) 1. கன்னம்; cheek. *"அங்குழை நெடுநிலையாஅம் ஒற்றி நனை கவுள்படி ஞிமிறு கடியும்" (அகநா.59.7–8).* 2.யானையின் கன்னம்; temple of an elephant. *"வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள் யானையால் யானையாத் தற்று" (குறள், 678).* 3. யானையின் உள்வாய்; jaw of an elephant. *"களிறு கவுளடுத்த எறிகற் போல" (புறநா.30,8.)* 4. பக்கம்; side. *"ஒலிகவுள் அம்சிலம்பும் கலையும் ஆரா கிண்கிணியும்" (சீவக.2967).*

ம. கவிள்; **க.** கவட; **H., Ur.** gāl; **Punj.** galha; **Sind.** gila-gito, **Mar., Guj.** gal-gala; **Beng.** Ass, gōla; **Ori.** gāla; **Skt.** kaola, gāla; **GK.** ghavolo.

*[கவ்வு → கவுள்=குறடுபோற்கவ்வும் அலகு, கன்னம். வடவர் காட்டும் கீரப்–கப் (இரங்கு) மூலம் இம்மியும் பொருந்தாது. த.கவுள் > **Skt.** kahola (வ.மெ.வ.110).]*

கவுளி–த்தல் *kavaḷi,* 4. செ.குன்றாவி (v.t.) கவுளில் அடக்கிக் கொள்ளுதல், வாய்கொள்ளும் சிற்றளவாக உண்ணுதல்; to chew slowly what is held between cheek and teeth.

[கவுள் → கவ்வு = கவுளி.]

கவுளி[2] *kavuḷi,* பெ.(n.) கவளி,வெற்றிலைக்கட்டு; pack of betel leaves,its number varying in different places.

[கவ்வு → கவுள் → கவுளி.]

கவுளி[3] *kavuḷi,* பெ.(n.) 1. பல்லி;lizard. *"இடத்தெழுந்த கவுளி நன்று" (குமர.பிர.மீனாட்.குற.11)* 2. சங்கு; conch.

ம., து., தௌளி; **க.** கவுளி, கன்வளி; **கோண்.** கூவால்; **குட.** கவ்ளி; **தெ.** கவுலி கௌளி. **Skt.** gauli, godha (iguana).

[கவ்வு → கவ்வுளி → கவுளி.]

கவுளி[4] *kavuḷi,* பெ.(n.) தெங்கு வகை (சங்.அக); a kind of coconut-palm.

[கவுள் → கவுளி.]

கவுளி[5] *kavuḷi,* பெ.(n.) மரத்திலிருந்து கிளை பிரியுமிடம்;angular part of a branch.

[கவை → கவுள் → கவுளி.]

கவுளிப்பாத்திரம் *kavuḷi-p-pāttiram,* பெ.(n.) சங்குவலை; conch net.

[கவுளி → பாத்திரம்.]

கவுளெலும்பு *kavuḷelumbu,* பெ.(n.) கன்னவெலும்பு cheek bone or molar-bone (சா.அக).

[கவுள் + எலும்பு.]

கவுனி *kavuṉi,* பெ.(n.) கோட்டை வாயில் (இ.வ.); gate of a fort or a city. யானைக் கவுனி (இ.பெ.) (யானை புகும் வாயில்).

தெ. கவினி

[கவாடம் = கதவு, வாயில். கவாடம் → கவானி → கவுளி → கவுனி.]

கவுனொட்டடை *kavuṉōṭṭaṭai,* பெ.(n.) ஒட்டடை நெல்வகை (இட.வ.); a kind of oṭṭaḍai paddy.

[கவின் → கவுன் + ஒட்டை.]

கவேதனம் *kavēthaṉam,* பெ.(n.) 1. ஒருவகை வெள்ளரி; a species of cucumber. 2. காக்கணம்; mussel-shell creeper (சா.அக).

[கவை → கவேதனம்.]

கவேது *kavēdu,* பெ.(n.) காட்டுக் கோதுமை. (சங். அக.); wild species of wheat.

[கா = காடு. கா + கோது – காகோது → கவேது.]

கவேரகன்னி *kavēra-kaṉṉi,* பெ.(n.) கவேரன் மகளான காவேரி ஆறு; the river Kaveri said to be the daughter of kavēraṉ. *"கவேர கன்னி பெயரோடு விளங்கிய தவாக்களி மூதூர்" (மணிமே.9.52)*

[கவிரன் → கவேரன் + கன்னி.]

கவேரகாடு *kavēra-kāḍu,* பெ.(n.) காவிரிப் பூம்பட்டினத்தருகில் கவேர முனிவர் வாழ்ந்த காடு; a forest near kāviri-p-pūm-paṭṭiṉam where kavēraṉ lived.

மறுவ. கவேரவனம்

[கவேரன் + காடு.]

கவேரவனம் *kavēra-vaṉam,* பெ.(n.) ***கவேர காடு*** பார்க்க; see *kavēra-kāḍu. "கவேரனாங் கிருந்த கவேரவனமும்" (மணிமே.3,56).*

[கவேரன் + வனம்.]

கவேரன் *kavēraṉ,* பெ.(n.) ஓர் அரச முனிவர் ; a royal sage (மணிமே.3.56).

[கவரன் → கவேரன்.]

கவேலம் *kavēlam,* பெ.(n.) குவளை (சங்.அக); Indian water-lily.

[குவளை + கவேலம்.]

கவை[1]–த்தல் *kavai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கவடுபடுதல்; to fork, as a branch. *"கவைமுள்ளிற் புழை யடைப்பவும்" (புறநா.98–8).* 2. உளதாதல்; to be, exist. *"சிற்றிடைப் பெருமுலைப் பொற்றொடி மடந்தைதன் கவைஇய கற்பினைக் காட்டுழி இதுவே" (கல்லா.6,21–22).*

ம. கவய்க்குக

[கவ(கவல்) → கவை.]

கவை[2]–த்தல் *kavai-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. அகத்திடுதல்; to contain within oneself, to include. *"கழுஉ விளங்கு ஆரங் கவைஇய மார்பே" (புறநா.19,18.).* 2. அணைத்தல்; to join with embrace. *"நாணுமுட்கு கண்ணுவழி யடைதர ஒய்யெனப் பிரியவும் விடாஅன் கவைஇ" (குறிஞ்சிப்.185–186).*

[கவ் + கவ – கவை.]

கவை[3] *kavai,* பெ.(n.) 1. கவர்; division, cleavage as of a hoof, crab's claws *"பெயன்மழை துறந்த புலம்புறு கடத்துக் கவைமுட் கள்ளிக் காய்விடு கடுநொடி" (குறுந்,174,1–2).* 2. அடிமரத்தினின்று பிரியும் மரக்கிளை; branch of a tree *"கள்வர் பகைமிகு கவலைச் சென்னெறி காண்மார், மிசைமரஞ் சேர்த்திய கவைமுறி யாத்து" (அகநா, 257,12-14).* 3. கவ்வும் அலகு போன்ற கவட்டை, கவைக்கோல்; forked stick *"தொடுதோல் கானவன் கவை பொறுத்தன்ன" (அகநா,34,3).* 4. முனை கவரான இருப்பாயுதம்; a weapon with forked iron points 5. கவர்வழி(சூடா.); cross roads, diverging path. 6. எலும்புக் கவை (வின்); notch in a bone.

ம. கவ; **க.** கவத; **கோத.** கவ்ய்; **து.** கம்ப; **தெ.** கவட, **ப.** கவெ

[கவ → கவை (மு.தா.14).]

கவை[4] *kavai,* பெ.(n.) 1. காடு (பிங்); wood, jungle. 2. ***அகில்*** (மலை) பார்க்க; see *Agil.* 3. கோட்டை (வின்); fort, fortification.

[கவ் → கவ → கவை]

கவை[5] *kavai,* பெ.(n.) ஒருவரின் நலனில் அன்பு கலந்த ஈடுபாடு; affectionate interest in one's welfare.

[கவ → கவை.(மு.தா.14).]

கவை[6] *kavai,* பெ.(n.) 1. செயல்; business *"நமனார்க் கிங்கேதுகவை" (பதார்த்த.1499).* 2. தேவை (பாண்டி.,); need necessity. 3. தொழில் (சம்.அக.); activity.

[கள் → கர்(கரு) → கய் → கவ் → கவை]

கவை[7] *kavai,* பெ.(n.) பிரிவு, பிளவு குற்றம், பழுது; cleavage-deficit, fault. கவையில்லை (பரவா யில்லை) (யாழ்ப்.); 2. எள்ளின் இளங்காய்; young sesame pod, 3. ஒன்பதாவது நாண்மீன்; ninth naksatra.

[கவை = பிளவுபட்டது.]

கவைக்கட்டு *kavai-k-kaṭṭu,* பெ.(n.) அக்குள்; armpit.

மறுவ. கமுக்கட்டு, கவைக்குழி.

[கவை + கட்டு.]

கவைக்கட்டை *kavai-k-kaṭṭai,* பெ.(n.) வேலியில் ஆள் செல்வதற்காக மட்டும் நடும் கவர்த்த கொம்பு; cleavage passage in fencing. வேலியில் கவைக் கட்டை வைத்து நடு (உ.வ.).

[கவை + கட்டை.]

கவைக்கம்பு *kavai-k-kambu,* பெ.(n.) 1. கவையை யுடைய கம்பு; stick with forked branch. 2. முனிவர் கையைத் தாங்கும்படியான 'Y'வடிவக் கட்டை;'Y' shaped arrest.

[கவை + கம்பு.]

முனிவர்கள் வைத்திருக்கும் கம்பு, பிளவுபட்டு இருப்பதால் இப்பெயர் பெற்ற தென்க.

கவைக்கல் *kavai-kal,* பெ(n.) பந்தல் கழையைத் தாங்குவதற்காகச் சுவரில் பதிக்கப்படும் கல் (முகவை.வழ.); stone built in a wall to be used to shoulder a shed. கவைக்கல்லை ஆழமாகப் பதித்தால் தான் தாழ்வாரம் நீண்டநாள் நிற்கும் (உ.வ.).

மறுவ. ஆழாங்கல் (முகவை).

கவைக்காகாமை *kavaikkāgāmai,* பெ.(n.) பயன் படாமை; uselessness, unprofitableness. அவன்படிப்பு கவைக்காகாமை தெரிந்ததே (உ.வ.).

[கவை +கு+ ஆகாமை.]

கவைக்கால் *kavai-k-kāl,* பெ.(n.) பிளவுபட்டுத் தோன்றுங்கால்; forked post. வேலியில் நடுவதற்கு ஒரு கவைக்கால் கொண்டுவா (உ.வ.).

[கவை + கால்.]

கவைக்கால்நண்டு *kavai-k-kāl-naṇḍu,* பெ.(n.) கவைபோல் பிளந்த கால்களையுடைய நண்டு (நெல்லை மீனவ.); crab with cleavaged legs.

[கவை + கால் +கண்டு]

கவைக்குதவாத *kavai-k-kudavāda,* பெ.எ.(adj.) நடைமுறைக்குப் பயன்படாத; useless, worthless, fubile; இது கவைக்குதவாத கருத்து (உ.வ.).

[கவை + கு +உதவாத. கவைக் கோலாகவும் பயன்படாத பயனற்றது.]

கவைக்குழி *kavai-k-kuḻi,* பெ.(n.) அக்குள்; armpit.

க. கவுங்குழ், கங்குழ், கங்கழ், கங்குழ, கொங்குழ், கொங்கழ், கொங்கழ; **து.** கங்குள; **கோத.** கஞ்குய், கஞ்குளி; **துட.** கொம்க்வீள்; **பர்.** கவ்கொர், கவ்கொட்; **கோண்.** காக்ரி

H., Mar. kākh.

[கவை + குழி.]

கவைக்குளம்பு *kavai-k-kuḷambu,* பெ.(n.) விலங்கின் பிளவுபட்ட கால் குளம்பு; cloven hoof.

[கவை + குளம்பு.]

கவைக்கொம்பு *kavai-k-kombu,* பெ.(n.) 1.பிரிவுற்ற மரக்கொம்பு; forked stick. முட்கட்டைத்தூக்க ஒரு கவைக் கொம்பு கொண்டுவா (உ.வ.). 2. கலைமான் கொம்பு; branched stag's horn (சா.அக).

[கவை → கொம்பு.]

மறுவ. கவைக்குச்சி

கவைக்கோல் *kavai-k-kōl,* பெ.(n.) 1. கவரான கழி (அகநா.34உரை); forked stick. 2. குத்துக்கோல் (சிலப் 16,142அரும்); pikestaff. 3. ***கொடிற்றுக்கோல்.*** (சிலப்.16,142,உரை) பார்க்க;see *koḍiṟṟu-k-kōl.*

[கவை + கோல்.]

கவைக்கோற்கருவி *kavaikkōṟkaruvi,* பெ.(n.) கவைக்கொம்பைப் போன்ற ஆயுதம்; a weapon made with forked branch.

[கவைக்கோல் + கருவி.]

கவைத்தடி *kavai-t-taḍi,* பெ.(n.) கவர்த்தடி; forked wooden pole.

[கவை + தடி.]

கவைத்தாம்பு *kavai-t-tāmbu,* பெ.(n.) தாமணியை யுடைய தாம்பு; slip-knot, noose. *"பகட்டாவீன்ற கொடு நடைக் குழவி கவைத்தாம்பு தொடுத்த காழ்" (பெரும்பாண். 244).*

[கவை + தாம்பு]

கவைத்தாள் *kavai-t-tāḷ,* பெ(n.) 1. பிளவுபட்ட கால்; forked divaricated claws. *"மிதியுலைக் கொல்லன் முறி கொடிற்றன்ன கவைத்தாள் அலவன்" (பெரும் பாண்.208)* 2. நண்டு(பிங்); crab, having forked claws.

[கவை + தாள்.]

கவைநா *kavai-nā,* பெ.(n.) 1. பிளவுபட்ட நா; forked tongue, as of a snake or iguana *"கவைநா வரவின் அணைப்பள்ளியின் மேல்" (திவ்.பெரியதி.3,2,4).* 2. பாம்பு; snake.

[கவை + நா.]

கவைமகன் *kavaimagan,* பெ.(n.) இரட்டைப்பிள்ளை; twins. *"கவைமக நஞ்சுண் டாஅங்கு" (குறுந்.324-6).*

[கவை + மகன்.]

கவைமுட்கருவி *kavai-mutkaruvi,* பெ.(n.) யானையை அடக்கும் குத்துக்கோல்; elephant-goad,having spikes. *"கவைமுட் கருவியுமாகிக் கடிகொள்" (மணிமே.18.164).*

[கவை + முள் + கருவி.]

கவைமுள் *kavaimul,* பெ.(n.) வேலமரத்துமுள்; acacia thorn (சா.அக).

[கவை + முள்.]

கவையடி *kavai-y-adi,* பெ.(n.) பிளவுள்ள அடி; cloven foot *"கவையடி பெயர்த்து" (மணிமே,6,165)*

[கவை + அடி.]

கவையம் *kavayam,* பெ.(n.) காட்டெருமை; wild buffalo (சா.அக).

[காவு → காவையம் (காடு).]

கவையமா *kavayamā,* பெ.(n.) காட்டு ஆ; wild cow. (சா.அக).

[காவு – காவையம் = ஆ.]

கவையல் *kavayal,* பெ.(n.) மாதுளை; pomegranate (சா.அக).

[கவையம் → கவையல்.]

கவையாயிரு–த்தல் *kavai-y-āy-iru-,* 3 செ.கு.வி.(v.i) 1. வேலையாயிருத்தல் (இட.வ); to be busy. 2. அக்கறை யாயிருத்தல்; to be interested.

[கவை + ஆய் + இரு.]

கவையாள்வார் *kavaiyālvār,* பெ.(n.) இருநிலை ஆளுவப்பணியை மேற்கொள்பவர்; one who looks after two portfolios.சிறுபுலியூர் சபையாரிடை நிலை கொண்ட கவையாள்வாருக்கு... (S.I.I.vol.19.insc.68 s.no 4-6).

[கவை (இரண்டு) + ஆள்வார்.]

கவையேணி *kavai-yēni,* பெ.(n.) தலையில் பிணிக்கப் பட்டுக் கவராகவுள்ள இரட்டை யேணி; forked ladder.

[கவை + ஏணி.]



கவையேணி

கழகண்டு *kala-kandu,* பெ.(n.) தீம்பு; mischief *"கண்ணைப் புரட்டி விழித்துக் கழகண்டு செய்யும் பிரானே" (திவ்.பெரியாழ்,2,4,6).*

[கழகு → கழகண்டு.]

கழகு *kalagu,* பெ.(n.) 1. பேசுதல்; speaking. 2. கூடுதல்;to assemble. 3. விளையாட்டு; play, game. 4. குறும்பு; mischief.

[கல் → கல → கழ → கழகு.]

கழங்கம் *kalaṅgam,* பெ.(n.) கவறாடு கருவி; conical pieces in the game of dice.

[கழங்கு → கழங்கம். கழங்கு = கழற்சிக்காய்.]

கழங்காடல் *kalangādal,* பெ.(n.) பெண்கள் ஆடும் கழற்சிக் காயாட்டம்.(பிங்.); girl's game with molucca-beans.

[கழங்கு + ஆடல்.]

கழங்கிட்டுரை–த்தல் *kalaṅkitturai-,* 4 செ.குன்றாவி.(v.t.) கழற்சிக்காயாற் குறியறிந்து சொல்லுதல்; to divine with Molucca-beans. *"களமாவது கட்டுங் கழங்கும் இட்டுரைக்குமிடமும் வெறியாட்டிட்முமாம்" (தொல்.பொருள்.114.உரை.).*

[கழங்கு + இட்டு + உரை.]

கழங்கு[1] *kalaṅgu,* பெ.(n.) 1. கழற்சிக்காய்; Molucca-bean *"மகளிர் பொலஞ்செய் கழங்கிற்றெற்றி யாடும்" (புறநா.36,4.).* 2. கழற்சிக்காய் விளையாட்டு; play among girls with molucca-beans.

3. ***கழங்குப் பருவம்*** (இலக்.வி.807.) பார்க்க; see *kaḷaṅgu-p-paruvam* 4. கழற்சிக்காயைக் கொண்டு வெறியாட்டில் வேலன் சொல்லுங்குறி; divination with the help of Molucca-beans by a soothsayer when possessed. *"அணங்கறி கழங்கிற் கோட்டங்காட்டி" (நற்.47.)* 5. சூது. (சூடா.); gambling.

ம. கழச்சி; **க.** கசுக; **து.**கசிகெ; **தெ.** கச்ச.

[கழு(ல்) → கழ → கழங்கு.]

கழங்கு[2] *kaḷaṅgu,* பெ.(n.) 1. வேலனாடல் (அக.நி.); vēlaṉ-āḍal, a frenzied dance. 2. உயிர்ச்சத்து இந்திரியம்; semen.

[கழ → கழங்கு.]

கழங்குக்காய் *kaḷaṅgu-k-kāy,* பெ.(n.) கழற்சிக் கொட்டை; banduc nut (சா.அக).

[கழங்கு + காய்.]

கழங்குப்பருவம் *kaḷaṅgu-p-paruvam,* பெ.(n.) பெண்பாற் பிள்ளைத் தமிழ்க்குரிய பருவங்களுள் கழற்சிக்காய் கொண்டு ஆடுவதை விளக்கிக் கூறும் பருவம்; section of Piḷḷai-t-tamilonwomen which describes the stage of childhood in which the girl plays kalangu game.

[கழங்கு + பருவம்.]

காப்புப்பருவம், செங்கீரைப்பருவம், தாலப்பருவம் சப்பாணிப்பருவம், முத்தப்பருவம், வருகைப்பருவம், அம்புலிப்பருவம், கழங்கு அல்லதுநீராடற்பருவம், அம்மானைப் பருவம், ஊசற்பருவம் என்பன அப்பருவங்களாகும்.

கழங்குபடு–த்தல் *kaḷaṅgu-paḍu-,* 20 சென்றா.கு.வி.(v.t.) கழங்கு கொண்டு குறியறிதல்; to practise soothsaying or divination with the help of molucca -beans. *"பெய்ம்மணல் வரைப்பில் கழங்குபடுத் தன்னைக்கு முருகென மொழியும் வேலன்" (ஐங்குறு.249.).*

[கழங்கு + படு.]

கழங்குமெய்ப்படு[1]**–த்தல்** *kaḷaṅgu-mey-p-paḍu-,* 20 செ.குன்றா.வி(v.t.) பயிர்களை விலங்குகள் அழிக்காத படி புலிபோற் செய்துவைக்கும் உருவுக்குக் கழற்சிக் காயைக் கண்ணாக அமைத்தல்; to use molucca-beans to serve as eyes for tiger-like figures put up in fields to prevent wild beasts from ravaging on the crop. *"கன்முகை வயப்புலி கழங்கு மெய்ப்படூஉம்" (ஐங்குறு.246.).*

[கழங்கு + மெய் + படு.]

கழங்குமெய்ப்படு[2]**த்தல்** *kaḷaṅgu-mey-p-paḍu-,* 20 செ.குன்றா.வி.(v.t.) கழற்சிக்காய் மூலம் குறியறிதல்; to practise soothsaying with the help of molucca-beans. *"கழங்குமெய்ப் படுத்து.... முருகென மொழி யுமாயின்" (ஐங்குறு.245.).*

[கழங்கு +மெய் + படு.]

கழஞ்சு[1] *kaḷañju,* பெ.(n.) ஓர் எடுத்தலளவை; a weight equal in modern measure to 1/6 oz. troy. *"விழுக்கழஞ்சிற் சீருடைய விழைபெற்றிசினே"* (புறநா.11,12.).

க. கணசு; **தெ.** கணுசு, களஞ்சு; **ம.** கழஞ்சு.

(கழஞ்சு =1.77கிராம்.) கழஞ்சு வ. கிலஞ்ச

கழங்கு → கழஞ்சு = ஒரு நிறை, கழங்கு = கழற்சிக்காய்.

வடமொழியில் மூலமில்லை. **த.** கழஞ்சு **Skt.**kalanja (வமொ.வ.11)

கழஞ்சு[2] *kaḷañju,* பெ.(n.) தங்கத்தை அளக்கும் (1.77கிராம் எடை உள்ள) ஓர் அளவு; a unit of weight (1.77 gram) used for weighing gold.

[கழங்கு → கழஞ்சு.]

கழஞ்சு[3] *kaḷañju,* பெ.(n.) சிறிது; a little,a small quantity. *"இந்தக் கழஞ்சு மண்ணுமழிந்தால் பின்பு ஸ்ருஷ்டிக்கை அரிதாய்" (திவ்.திருக்குறுந்.4.வ்யா. பக்.16.).*

Skt. *kaṇa(relatedtokanā,kanishta,kaniyas,kanyā, inallofwhichsmallnessisimplied)*

[கழல் → கழஞ்சு (கழற்சிக்காய் போல் சிறியது).]

கழந்து *kaḷandu,* பெ.(n.) ***கழஞ்சு***பார்க்க; see *kaḷañju.* *"விலைப்பொருள் முக்கழந்து பொன்"* (S.I.I.vol.19. insc.203.s.no.7-8).

[கழஞ்சு → கழந்து (கொ.வ.).]

கழப்பன் *kaḷappaṉ,* பெ.(n.) ***கழப்பாளி***பார்க்க; see *kaḷappāḷi.*

ம. கழப்பன்

[கழ → கழப்பன். 'அன்'ஆ.பா.ஈறு.]

கழப்பாகம் *kaḻappāgam,* பெ.(n.) வெண்மிளகு; white pepper (சா.அக).

[கழ + பாகம்.]

கழப்பாடி *kaḻappāḍi,* பெ.(n.) ***கழப்பாளி*** பார்க்க; see *kaḻappāḷi.*

[கழப்பாளி → கழப்பாடி.]

கழப்பாளி *kaḻappāḷi,* பெ.(n.) வேலையைச் செய்யாமல் வீண்பொழுது போக்குபவர்; idle,shuffling person, shirker.

ம. கழப்பாளி

[கழ → கழப்பு + ஆளி – கழப்பாளி.]

கழப்பு[1]–தல் *kaḻappu-,* 5 செ.கு.வி.(v.i.) வேலை செய்யாது வீண்பொழுது போக்குதல்; to be idle,making excuses, to shirk work.

[கழ → கழப்பு.]

கழப்பு[2] *kaḻappu,* பெ.(n.) 1. சோம்பல்; laziness, idleness, slothfulness. *"கழப்பின் வாராக் கையற வுளவோ"* (பதினொ.திருவிடை. மரு.மும்மணிக்.10.). 2. மூட்டுவலி; pain of joints and muscles. 3. களைப்பு; fatigue, exhausition, weakness. 4. மனவருத்தம்; distress or pain (of the mind).

ம. கழப்பு, கழய்பு.

[கள் → கள → கழ → கழப்பு.]

கழப்புணி *kalappuṇi,* பெ.(n.) ***கழப்பாளி*** *(வின்); பார்க்க; see kaḻappāḷi.*

[கழப்பு + உண்ணி – கழப்புண்ணி → கழப்புணி.]

கழப்பு = சோம்பல்

கழம்பு *kaḻambu,* பெ.(n.) 1. செடிகளின் காம்பு; stalk of vegetables, pot herbs etc. 2. பழச்சதை; pulp of fruit, pith, essence.

ம. கழம்பு

[கழி → கழ → கழம்பு.]

கழர் *kaḻar,* பெ.(n.) களாமரம்; Bengal currant (சா.அக).

[களா → கழா → கழர்.]

கழல்[1](லு)–தல் *kaḻal-,* 13 செ.கு.வி. (v.i.)1. நெகிழ்ந்து போதல்; to become loose, as a fastening, nail, shoe, handle, lock, leaf, hair, braclets,knot,part of any mechanism, to be unhinged,to slip off,to slough off, as s snake's skin, to become extricated, disentangled. *"நங்கைதன்றுகிலொடு சரிவளை கழல்கின்றதே" (திவ்.பெரியாழ்.3,4,8.).* 2.உடற் பொருத்து விலகுதல்; to be put out of joint, dislocated.விழுந்து முழந்தாள் கழன்றது (இ.வ.). 3.வெளியேறுதல்; to pass through as an arrow. *"தங்கா தப்புறங் கழன்று" (கம்பரா. தாடகை.72.).* 4. ஓடுதல்; to run away. *"அவரைக் கழல வழக்கி எதிர் சென்று சாடி" (கலித். 106,20).* 5.நீங்குதல்; to pass away, to disappear. *"துயரெல்லாங் கழன்றது" (உபதேசகா.சிவபுரா.16)* 6.பிதுங்குதல்; to protrude,bulge out.*"கழல்கட் கூகையொடு கடும் பாம்பு தூங்க" (திருமுரு.49).* 7.விழுதல்; to fall out,as a loose tooth. *"சொல்தளர்ந்து கோல் ஊன்றிச் சோர்ந்த நடையின ராய்ப் பல்கழன்று" (நாலடி,13.).* 8.செலவாதல்; to be expended. மாதம் எவ்வளவு தொகை கழலும் (இ.வ.). 9.அவிழ்தல்; to loose as knot.

ம., க. கழல்; **கோத.** ககெ; **துட.** கோள்; **குட.**கய். **து.** கனெயுனி. **தெ.** க்ராலு; **கட.** கரைங்கான; **பெங்.** கரங், **கூ.** கரெங்கு.

[கழ → கழல்.]

கழல்[2] *kaḻal,* பெ.(n.) 1. வீரக்கழல்; anklet given as a token of honour to a warrior.*"ஓடாப் பூட்கை யொண் பொறிக்கழற்கால்" (பதிற்றுப்.34,2.).* 2. சிலம்பு; anklet.*"அறைகழ லருளொலி" (ஞானா.2.9.).* 3. காஞ்சொறி; toe-ring *"கட்டுவடக் கழலினர்".*

ம. கழல்; **க.** கழல், கழலு.

[கழ → கழல்.]

கழல்[3] *kaḻal,* பெ.(n.) நடக்கும் உயிரினங்களின் உடற்பகுதிகளில் ஒன்றாகவும் அதன் துணை கொண்டு நிற்கவும், நடக்கவும் பயன்படும் பகுதியாகிய கால்; the part of its body on which a human or animal stands or walks, foot. கணவன் கழல் வாழ்த்தி (பு.வெ.10.முல்லைப்).

மறுவ. கால், அடி, பதம், பாதம், தாள்.

ம. கழல்

[கழ → கழல்.]

கழல்[4] *kaḻal,* பெ.(n.) மோர், தயிர்; butter-milk,curd (கருநா.).

க.கழல்–களலு

[குழ → கழ → கழல்.]

Skt kadara,curds,this word exactly represents kaḻal (l=d) curds,which meaning also buttermilk mixed with water is the origin also of the Skt terms katura,katuara,kadvara, kaccarr,and kankara (K.K.E.D.P.xxxvi).

கழல்[5] *kaḻal,* பெ.(n.) காற்றாடி (திவா.); weather cock moved by the wind.

[கல் → கல → கழ → கழல்.]

கழல்[6] *kaḻal,* பெ.(n.) ***கழற்சி*** பார்க்க; see *kaḻarci.* *"கழற்கனி வகுத்த துணைச்சில் லோதி" (புறநா. 97.23).*

[கழ → கழல்.]

கழல்மணி *kaḻalmaṇi,* பெ.(n.) கழற்சிக்காய்; bonduc nut. *"கழல்மணி வெள்ளை யுள்ளி" (தேரையர்) (சா.அக).*

[கழல் + மணி.]

கழல்வளை *kaḻal-vaḷai,* பெ.(n.) வளைவகை; a variety of bangles.*"என்னுடைய கழல்வளையைத் தாமும் கழல்வளையே யாக்கினரே" (திவ்.நாய்ச்.11.2.).*

[கழல் + வளை.]

கழலக்குத்து–தல் *kaḻala-k-kuttu,* 5 செ.கு.வி.(v.i) குற்றஞ்சொல்லி செயலைத் தடுத்தல் (யாழ்ப்.); to defeat an object by an unfavourable remark.

[கழல் + அ + குத்து. 'அ'வினையெச்ச ஈறு.]

கழலடி *kaḻaḍi,* பெ.(n.) கழற்சிக் கொடிவேர்; the root of nut creeper (சா.அக).

[அழல் + அடி.]

கழலடை–தல் *kaḻaḍai-,* 4 செ.கு.வி.(v.i.) வேற்றரசர்கள் பணிதல்; to surrender,as of rival kings.தம் கழலடைந்த மன்னவர் (S.I.I.vol.5.insc.408).

[கழல் + அடை.]

கழலவிடு–தல் *kaḻala-viḍu-,* 18 செ.குன்றாவி.(v.t.) அன்பின் மிகுதியால் வெண்டுமென்று நெகிழ விடுதல்; to connive at, let pass or escape without notice, through leniency or partiality.

[கழல் + விடு.]

கழலாபு *kaḻalābu,* பெ.(n.) பீர்க்கு;sponge-gourd (சா.அக)

[கழல் → கழலாப்பு. கழல் = சமமற்ற.]

கழலி *kaḻali,* பெ.(n.) ***பிரண்டை*** பார்க்க; see *piraṇḍai.*

[கழல் → கழலி.]

கழலிச்சிட்டு *kaḻali-c-ciṭṭu,* பெ.(n.) சிட்டுக்குருவி வகை (யாழ்.அக.); a kind of a ciṭṭu bird.

[கழலி + சிட்டு.]

கழலிலை *kaḻalilai,* பெ.(n.) கழற்சியிலை; the leaves of bonduc nut creeper (சா.அக.).

[கழல் + இலை.]

கழலூதை *kaḻalūdai,* பெ.(n.) 1. காலில் ஏற்படும் ஊதைநோய்; rheumathism affecting the leg. 2. பொன்வண்டு; a golden coloured beetle.

[கழல் + ஊதை.]

கழலேறுஊதை *kaḻalēṟu ūdai,* பெ.(n.) காலின் நரம்புகளைப் பற்றிய ஓர் ஊதை நோய்; a rheumatic affection of the nerves of the leg (சா.அக).

[கழல் + ஏறு + ஊதை.]

கழலை *kaḻalai,* பெ.(n.) ***கழலைக்கட்டி*** பார்க்க; see *kaḻalai-k-kaṭṭi.* *"கீழ்வயிற்றுள் கழலை" (ஈடு.1.1.3.).*

[கழல் → கழலை. கழல்=கழற்சிக்காய். கழற்சிக்காய் போன்ற கட்டி.]

கழலைக்கட்டி *kaḻalai-k-kaṭṭi,* பெ.(n.) 1. கழுத்து முதலிய உடற்பகுதியில் பெருத்துத் தோன்றும் தசைக்கட்டி நோய்; wen, tubercle, Adenoid cyst. 2. புண்கட்டி; tumour. 3. வழக்கத்திற்கு மாறாக உண்டாகும் திசுக்களின் பெருக்கம்; abnormal growth of tissues, tumour.

[கழலை + கட்டி.]

கழலைக்கரப்பான் *kaḻalai-k-karappāṉ*, பெ.(n.) ஒரு வகைச் சொறி நோய்; a kind of eruption on various parts of the body. *"கழலைக் கரப்பான் போலே எங்கும் ஒக்கச்சஞ்சரிக்கும் நோய்" (திவ்.திருநெடுந். 23. வியா).*

[கழலை + கரப்பான்.]

கழற்காய் *kaḻaṟ-kāy*, பெ.(n.) 1. கழற்சிக்காய் (பதார்த்த.793.); molucca-bean. 2. கிழங்கு; bulbous root (சா.அக.).

[கழல் + காய் –கழற்காய்.]

கழற்காய்வல்லி *kaḻaṟkā-y-valli*, பெ.(n.) ஒரு வகைக் கொடி; elephant cow-hitch (சா.அக.).

[கழற்காய் + வல்லி. வள்ளி – வல்லி.]

கழற்கொடி *kaḻaṟ-koḍi*, பெ.(n.) ***கழற்சி*** பார்க்க; see *kaḻaṟci.*

[கழல் + கொடி – கழற்கொடி.]

கழற்சி *kaḻaṟci*, பெ.(n.) 1. ஒருவகைக் கொடி (வின்); molucca-bean. 2. கழற்சிக்காய்; bonduc nut.

[கழல் + சி – கழற்சி. 'சி' சொல்லாக்க ஈறு.]

கழற்சி

கழற்சிக்காய் *kaḻaṟcikkāy*, பெ.(n.) கழற்காய்; molucca bean.

[கழற்சி + காய்.]

கழற்சிக்கொட்டை *kaḻaṟci-k-koṭṭai*, பெ.(n.) 2. ***கழற்சி*** பார்க்க; see *kaḻaṟci.*[2]

[கழற்சி + கொட்டை.]

கழற்சிங்கநாயனார் *kaḻaṟ-śiṅga-nāyaṉār*, பெ.(n.) அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவர் (பெரியபு.53.); name of canonized saiva saint,one of 63.

[கழல் + சிங்கம் + நாயனார் – கழற்சிங்கநாயனார்.]

இவர் காடவர்குல அரசர் என்றும் திரு வாரூரில் இறைவனை வழிபடுங்கால் தம் மனைவி ஒரு பூவை எடுத்து முகர்ந்த குற்றத்திற் காகக் கையை வெட்டிச் சிவனருள் பெற்றதாகவும் திருத்தொண்டர் மாக்கதை கூறும்.

கழற்சேவகம் *kaḻaṟsēvagam*, பெ.(n.) கொள்ளிக் கட்டைத் தேக்கு; fire-brand teak (சா.அக.).

[கழல் + சேவகம்.]

கழற்பதி *kaḻaṟ-padi*, பெ.(n.) ***பெருங்குமிழ்*** (மலை) பார்க்க; see *peruñ-kumiḻ* ; ஒரு வகைத் தேக்கு; a kind of teak,coomb teak.

[கழல் + பதி.]

கழற்பேதி *kaḻaṟ-bēdi*, பெ.(n.) பாச்சான் கள்ளி; a kind of a spurge (சா.அக.).

[கழல் + பேதி.]

கழற்றல் *kaḻaṟṟal*, தொ.பெ.(vbl.n.) நீக்குதல்; omiting.

[கழல் (த.வி) → கழற்று(பி.வி). கழற்றல்(தொ.பெ.).அல் தொ.பெ.ஈறு.]

கழற்றி *kaḻaṟṟi*, பெ.(n.) கழலப் பண்ணுவது; that which causes one to slip off, to disappear. *"யோகக்கழற்றி" (ஒழிவி.3,106).*

[கழல் → கழற்றி.]

கழற்று[1]**–தல்** *kaḻaṟṟu-*, 5 செ.குன்றா.வி.(v.t.) 1. நெகிழச் செய்தல்; to make loose,to unfasten, loosen, unhinge, dislocate, unlock, unbolt, unscrew, unbutton, disentangle, extricate, disencumber.] 2. ஆடையணிகலன் போன்றவைகளை நீக்குதல்; to strip, take off, divest,dismantle, unrig, to slough off, as a snake, its skin,. *"கழற்றிப் பொன்னணி" (இரகு.திக்கு.255.).* 3.போக்குதல்;to remove,to be freed, as from sin.*"வல்வினையைக் கழற்றலாமே" (தேவா.1225,7.).*

[கழல் →கழற்று.]

கழற்று[2] *kaḻaṟṟu*, பெ.(n.) உறுதிமொழி; admonition, expostulation, criticism, at once kind and severe.

[கழறு → கழற்று.]

கழற்றுரை *kaḻaṟṟurai*, பெ.(n.) 1. உறுதிச்சொல் (பிங்.); charge, rebuke. 2. இகழ்ந்துரைத்தல்; censure.

[கழற்று + உரை – கழற்றுரை.]

கழற்றெதிர்மறு–த்தல் *kaḻaṟṟedir-maṟu-,* 4 செ.குன்றாவி. (v.t.) பாங்கனது உறுதிமொழியைத் தலைவி கேளாது மறுத்தல் (திருக்கோ.23,தலைப்பு.); to reject the dissuasions of a friend, as a lover.

[கழற்று + எதிர் + மறு.]

கழற்றெதிர்மறை *kaḻaṟṟedir-maṟai*, பெ.(n.) தலைவன், பாங்கன் உறுதிமொழியைக் கேளாது மறுத்துச் சொல்லுஞ் சொல் (இறை.3.47.); rejecting as a lover, the dissuasions of a friend.

[கழற்று + எதிர் + மறை. மறு → மறை-மறுத்தல்.]

கழறல் *kaḻaṟal*, பெ.(n.) 1. சொல்லுகை; speech, word, speaking. *"இனையன கழறலுற்றான்" (கந்தபு.தாரக.128.).* 2. உறுதிமொழி (திவா.); exhortation,admonition.

H. kakh; **Samo.** gagana.

[கழறு → கழறல்.]

கழறியுரை–த்தல் *kaḻaṟi-y-urai*, 4. செ.கு.வி.(v.i.) 1.இடித்துரைத்தல்; to protest, find fault with and advice, as a minister, to the king.மந்திரி அரசனுக்குக் கழறியுரைத்தான்(உ.வ.). 2.பாங்கன் தலைவனுக்கு இடித்துரைத்து உறுதிமொழி கூறுதல். (திருக்கோ.22.தலைப்பு); to dissuade a lover from his intention, as a friend.

[கழறு + இ + உரை – 'இ'வினையெச்ச ஈறு.]

கழறிற்றறிவார் *kaḻaṟiṟṟaṟivār*, பெ.(n.) சேரமான் பெருமாள் நாயனார்; name of Śaiva saint, CēramānPerumal.[who is so called because he is said to have been able to understand the language of the lower animals.] *"பிறவுயிர்கள் வேறு கழறிற்றறிவார்" (பெரியபு.சிறுத்.88).*

[கழறிற்று + அறிவார்.]

மாந்தரல்லாப் பிறவுயிர்கள் பேசுவனவற்றை (கழறியவற்றை)யும் புரிந்து கொள்ளும் ஆற்றலுள்ளமையால் பெற்ற பெயரென்பர்.

கழறு[1]**–தல்** *kaḻaṟu*, 5 செ.கு.வி. (v.i.) 1. இடித்தல்; to thunder.*"கமஞ்சூல் அகலிரு விசும்பின் அதிர்சினஞ் சிறந்து... கடுஞ்சிலை கழறி" (பதிற்றுப்.81.4.).* 2.சூளுரைத்தல்; to make solemn declaration,bind oneself by a vow. *"கொல்வோ மென்றாங் கவரவர் கழறிப்பேசி" (திருவாலவா.36.17.).* 3.உறுதி சொல்லுதல்; to urge,exhort,charge earnestly. *"கல்லென்று தந்தை கழற அதனையோர் சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன்" (நாலடி.253).*

க. களரு (அறிவுரை)

[கழ → கழல் → கழறு.]

கழறு[2]**–தல்** *kaḻaṟu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கடிந்து சொல்லுதல்; to say angrily declare, tell. *"சிலர் கழறிச் சோர்வார்" (பாகவ.1.4.35.).* 2.வன்மையாகக் கண்டித்தல்; scold angrily. *"கடிந்தது மிலையாய் நீ கழறிய வந்ததை" (கலித்.76.13.).* 3.அவமதித்தல்; to abuse,dishonour. *"கற்றவர் தம்மையும் கழற நோக்குமே" (சூளா.முத்.16.).*

மறுவ. கடிதல்

[கழ → கழல் → கழறு.]

கழனி *kaḻaṉi*, பெ.(n.) கழுநீர் (இ.வ.); water in which rice has been washed.

க. கச்சலு; பட. கோநீர்

[கழு + நீர் – கழுநீர் → கழுநி → கழனி (மரூஉ).]

கழனி[1] *kaḻaṉi*, பெ.(n.) 1. போரடிக்கும் களமுள்ளவயல்; field,paddy-field.*"கழனியுழவர் சூட்டொடு தொகுக்கும் கொழுமீன்" (புறநா.13.11.).* 2. மருதநிலம். (பிங்.); agriculture tract. 3. சேறு (வின்); mud.

ம. கழனி; **க.** கழநி, கலநி, களநி.

W. cae; **Norw.** gard; **S.** granja.

[களம் → களன் → கழனி(வே.க134).]

கழனி[2] *kaḻaṉi*, பெ.(n.) ***கழினி*** (பிங்.) பார்க்க; see *kaḻiṉi*.

[கழினி → கழனி.]

கழனி[3] *kaḻaṉi*, பெ.(n.) ***கழுநீர்*** (இ.வ.) பார்க்க; see *kaḻunīr*.

[கழு + நீர் – கழுநீர் → கழுநி → கழனி.(மரூஉ).]

கழனிக்கடைத்தவர் *kaḻaṉi-k-kaḍaittavar,* பெ.(n.) மருத நில மக்கள் (திவா.); people of the agricultural tract.

[கழனி + கு + அடைத்தவர்.]

கழனிக்குளம் *kaḻaṉi-k-kuḷam,* பெ.(n.) நன்செய் நடுவிலுள்ள ஏரி (S.I.I.ii,43.); tank lying amidst cultivable lands.

[கழனி + குளம்.]

கழனிக்கோல் *kaḻaṉikkōl,* பெ.(n.) நிலமளக்கும் கோல்; a pole used to measure field (கல்.அக.).

[கழனி + கோல்.]

12, 14, 16, ஆகியசாண்கள் நீளம் கொண்ட மூவேறுபட்ட அளவினதாக இருந்த இவற்றுள், 16 சாண் கோலே பண்தொட்டு [அதாவது சிந்து சமவெளி நாகரிகக் காலத்தமிழர் வழக்கிலிருந்த வண்ணம்] செந்தரக் கோலாக (standard linear measurement) நிலவியது. 8.25" கொண்டது ஒரு சாண். 16 சாண் கொண்டது ஒரு கோல் – இதன் நீளம் 11 அடி.

கழனிச்சுறா *kaḻaṉi-c-cuṟā,* பெ.(n.) சுறா மீன் வகையுளொன்று; a kind of shark fish.

[கழனி + சுறா.]



கழனிச்சுறா

கழனிநண்டு *kaḻaṉi-naṇḍu,* பெ.(n.) வயல் நண்டு வகை (வின்); fresh water crab found in fields.

[கழனி + நண்டு.]

கழனிப்பயிர் *kaḻaṉi-p-payir,* பெ.(n.) நெல் (வின்.); paddy.

[கழனி + பயிர்.]

கழனிப்பாக்கம் *kaḻaṉippākkam,* பெ.(n.) வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; name of a village in Vellore district.

[கழனி + பாக்கம்.]

கழனியடுத்தவர் *kaḻaṉi-yaḍuttavar,* பெ.(n.) உழவர், வேளாளர்; agtriculturist.

[கழனி + அடுத்தவர்.]

கழனியூரன் *kaḻaṉi-y-ūraṉ,* பெ.(n.) மருத நிலத் தலைவன்; cheiftain of agricultural tract. *"கரும்பி னலமருங் கழனி யூரன்" (ஐங்குறு.18.).*

[கழனி + ஊரன்.]

கழனிலை *kaḻaṉilai,* பெ.(n.) இளைஞனொருவன் போரிற் புறங்கொடாமை கண்டு வியந்த வீரர் அவனுக்கு வீரக்கழல் அணிவித்துப் புகழ்ந்தாடும் புறத்துறை; theme of warriors decorating a youthful victor with anklets and singing his praise to the accompaniment of a dance. *"வயவர் ஏத்திய ஓடாக்கழனிலை உளப்பட" (தொல். பொருள்.60). "அடுமுரண் அகற்றும் ஆளுகு ஞாட்பிற் கடுமுரண் வயவன் கழல் புனைந்தன்று" (பு.வெ. பொதுவியல் 7).*

[கழல் + நிலை.]

கழனிவாரியப்பெருமக்கள் *kaḻaṉi-vāriyə-p-pērumakkaḷ,* பெ.(n.) வேளாண்மையைக் கவனிக்கும் ஊர்ச்சபையார் (S.I.I.iii,231.); members of the village assembly who looks after cultivation.

[கழனி + வாரியம் + பெரு + மக்கள்.]

கழனிவாரியப் பெருமக்கள் *kaḻānivāriyap perumakkaḷ,* பெ.(n.) வயல்களுக்குப் பாசனத் தண்ணீர் வழங்கும் பொறுப்பை ஏற்றுள்ள குழு; members of the irrigation committee. இவ்வாட்டை குடும்பு வாரியப் பெருமக்களும் ஏரிவாரியப் பெருமக்களும், கழநிவாரியப் பெருமக்களும், இருநூற்றுவப் பெருமக்களும் பட்டர்களும் (தெ.,.க.தொ.19 கல்.179 கல். 84 & 297).

[கழநி + வாரியம் + பெருமக்கள். உத்திரமேரூரிலுள்ள கல்வெட்டு மூலம் கழநி வாரியப் பெருமக்கள் குடவோலை முறைத் தேர்தல் மூலம் தேர்வு செய்யப்பட்டனர் எனத் தெரிகிறது.]

கழனீர் *kaḻanīr,* பெ.(n.) ***கழுநீர்*** பார்க்க; see *kaḻunīr.*

[கழுநீர் → கழனீர்.]

கழாஅல் *kaḻāal,* பெ.(n.) கழுவுகை; washing, cleansing. *"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்" (புறநா.94.1.).*

[கழுவு + அல் – கழுவல் → கழால்(மரூஉ).]

கழாஅல *kaḻāala,* இ.கா.வி.எ.(p.ple)கழற்ற; to unlose or divest.*"கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவும்" (சிறுபாண்.148.).*

[கழல → கழாஅல (இடைநீட்சி).]

கழாத்தலையார் *kaḻā-t-talaiyār,* பெ.(n.) கடைக் கழகப் புலவர்; Sangam poet.

[கழார்த்தலை + ஆர்–கழாத்தலையார். ஊர்ப்பெயரால் அழைக்கப்பட்டவர்.]

பரணர் காலத்தில் வாழ்ந்தவர்; இவர் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற் பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் பொருது களத்தில் விழுந்து கிடந்தபோது அவ்விருவர் பெருமையையும் அவர் தேவியர் துன்பத்தையும் எடுத்துப் பாடியவர்.

கழாநிலம் *kaḻā-nilam,* பெ.(n.) ***கழாலை*** (யாழ்.அக.) பார்க்க; see *kaḻālai.*

[கழார் + நிலம் – கழார்நிலம் → கழா நிலம்.]

கழாய் *kaḻāy,* பெ.(n.) சிறுகீரை (சங்.அக.); a species of amaranth.

[கழு → கழாய்]

கழாய்[2] *kaḻāy,* பெ.(n.) 1. மூங்கில்; spiny bamboo. 2. கழைக்கூத்தன் ஏறி நின்று ஆடுதற்கு நாட்டும் மூங்கிற்கம்பம் (சீவக.66.உரை.); acrobat's pole. 3. ***கமுகு*** (மலை.) பார்க்க; see *kamugu.*

[கழை → கழாய்(தமிழ்வ.71).]

கழாய்[3] *kaḻāy,* பெ.(n.) ***கழுகு;*** பார்க்க; see kaḻugu.

[கழு → கழுகு → கழாய்.]

கழாய்க்கூத்து *kaḻāy-k-kūttu,* பெ.(n.) ***கழைக்கூத்து*** பார்க்க; see *kaḻai-k-kūttu.* கானகக் கூத்தும் கழாய்க் கூத்தும் ஆடுபவராக (தொல். பொருள்.91.உரை.)

[கழை → கழாய் + கூத்து.]

கழாய்வனம் *kaḻāy-vaṉam,* பெ.(n.) ***சிறுகீரை*** (மலை.) பார்க்க; see *siru-kīrai.*

[கழாய் + வனம்.]

கழாயம் *kaḻayam,* பெ.(n.) ***கழாய்*** (சங்.அக) பார்க்க; see *kaḻāy.*

[கழாய் + அம் → கழாயம்]

கழாயர் *kaḻāyar,* பெ.(n.) கழைக்கூத்தர் (சூடா.); pole-dancers, rope dancers, tumblers.

மறுவ. கம்பக்கூத்தர்

[கழாய் + அர் – கழாயர்.]

கழாயினர் *kaḻāyiṉar,* பெ.(n.) ***கழாயர்*** பார்க்க; see *kaḻāyar. "கோடியர் கழாயினர்" (கந்தபு.அசமுகி.14.)*

[கழாய் + இனர் → கழாயினர்.]

கழால் *kaḻāl,* பெ.(n.) களைகை; weeding,rooting up.*"களைகால் கழாலிற் றோடொலிபு நந்தி" (புறநா.120.5.).*

[கழல் → கழால்.]

கழாலு–தல் *kaḻālu-,* 13 செ.கு.வி.(v.i.) நெகிழ்தல்; to become loose, *"கழாலுகின்ற பல்காழுடை மேகலை" (கந்தபு.திருக்கல்.15.).*

[கழல் → கழால் → கழாலு.]

கழாலை *kaḻālai,* பெ.(n.) 1. உவர்நிலம் (யாழ்.அக); saline soil. 2. கழிநிலம்; brackish soils (சா.அக.).

[கள் → கள → கழ → கழல் → கழால் →கழாலை.]

கழாற்றூக்கு *kaḻāṟṟūkku,* பெ.(n.) ஆறுசீரளவுள்ள தாளவுறுப்பு (சிலப்.3.16.உரை.); Music: a mode of keeping time composed of six cīr.

[கழல் + தூக்கு – கழற்றூக்கு → கழாற்றுக்கு.]

கழாறம்[1] *kaḻāṟam,* பெ.(n.) கமுகு (சங்.அக); areca palm.

[கழை → கழாறம்]

கழாறம்[2] *kaḻāṟam,* பெ.(n.) கள்; toddy.

[கழல் → கழாலம் → கழாறம்]

கழி[1]**–தல்** *kaḻi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கடந்து போதல்;to pass away. (அ). காலம், இடம், பருவம் முதலியன கடந்து போதல்; to pass as time, season. கோடைக் காலம் கழிந்து குளிர் காலம் வந்தது (உ.வ.). (ஆ) வளமை, இன்பம் முதலியன நழுவுதல்; to slip away as prosperity, adversity.2. செல விடுவதால் கழிதல்; to elapse, become spent.

"பொழுதொடு நாளும் வாளா கழிந்தன போலும்" (கம்பரா.சூர்ப்ப.1+8). 3.நடத்தல் (பிங்); to walk,proceed.

ம. கழியுக, கழிக்க; **க.** கழி, களி, கழெ, களெ; **து.** கரியுனி, கரிபுனி; **பட.** கயி; **து.இ.** கொடி; **குட.** கய்ய (பொழுதுகழித்தல்); **கெ.** கட கட (பொழுது போதல்).

[கள் → கழி.]

கழி[2]–தல் *kaḻi-,* 4.செ.கு.வி.(v.i.) **1.** குறைபடுதல்;to be abated,deducted, discounted.*"கழியாம லளித்தனை கண்ணதுகில்" (பாகவ.1.4.37).* 2. அழிதல்; to be ruined. *"அங்குரங் கழியும் வேனில்" (சிசி1.9.).* 3. ஒழிதல்; to be removed, பாவங்கழிந்தது (உ.வ.) . 4. இறத்தல்; to expire,die. கழியா தலந்தினையும் (பு.வெ.10.சிறப்பிற்.18.). 5.முடிவடைதல்; to finish, come to an end, cease. *"மாழைமென்னோக்கி யிடையாய்க் கழிந்தது" (திருக்கோ.61).*

ம. கழி

[கள் → கழு → கழி.]

கழி[3]–தல் *kaḻi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. துயருறுதல்; to suffer. 2. இன்னலுறுதல், வருந்துதல்; to be troubled. *"தாழிக்குவளையொடு தண்செங்கழுநீர் வீழ்பூஞ் சேக்கை மேவாது கழிய" (சிலப்.4.65.).*

[கள் → கழு → கழி.]

கழி[4]–தல் *kaḻi-,* 4 செ.கு.வி (v.i.) 1. சிறுநீர் மலம் போன்றவை உடம்பினின்று வெளியேறுதல்; materials like urine, excrement etc to be discharged. 2. நோயாளி குணமாகி மருத்துவ மனையினின்று வெளியேறுதல்; patient's discharge from hospital. 3. கசிதல்; leakage as of water or oil. குடிநீர்க் குழாயில் கழிவுண்டாகித் தண்ணீர் வீணாகிறது (உ.வ.).

[கள் → கழு → கழி.]

கழி[5]–தல் *kaḻi-,* 4 செ.கு.வி.(v.i.) அச்சங்கொள் ளுதல்; to be in terror. அவரைக் கண்டால் கழிவான் (உ.வ.).

[கள் → கழு → கழி]

கழி[6]–தல் *kaḻi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கடத்தல்; to pass through. *"விளிமுறை அறியா வேய்கரி கானம் வயக்களிற்றன்ன காளையொ டென்மகள் கழிந்தற்கு அழிந்தன்றோ இலனே" (அகநா.4–6).* 2. ஒத்தல் (பரிபா. 3, 32. உரை); to resemble.

[கள் → கழு → கழி.]

கழி[7]–தல் *kaḻi-,* 4 செ.கு.வி (v.i.) அளவில், தன்மையில் பண்பில் பரப்பில், பாங்கில், மிகுந்து நிற்றல்; to be great in a quantity or quality, excessive to be abundant, copious, intense, extensive, *"கழிகின்றதோர் கடலேபுரை காமந்தெறு நோயால்" (கந்தபு.அசமுகிப்.4).*

[கள் → கழு → கழி.]

கழி[8]–தல் *kaḻi,* 4 செ.குன்றாவி (v.t.) இயலுதல்; to be able. எனக்கு இது கழியாது (இ.வ.).

[கள் → கழு → கழி.]

கழி[9] *kaḻi,* பெ.(n.) 1. கடலையடுத்த உப்பு நீர்ப்பரப்பு; back-water,shallow sea-waters, salt river, marsh. *"மாக்கழி மலர்ந்த நெய்தலானும்" (புறநா.48.3.).* 2. உப்பளம் (பின்); salt-pan.

ம. கழிக்கண்டம், கழி.

[கள் → கழு → கழி (மு.தா.232).]

கழி[10]–த்தல் *kaḻi,* 4 செ.குன்றாவி.(v.t.) **1.** நீக்குதல்; to reject, expel, discard,exclude, dislodge, remove, strip off, separate, eliminate. *"மாண்ட குணத்தொடு மக்கட்பேறில் லெனினும்பூண்டான் கழித்தற் கருமையால்"* (நாலடி.56.) 2.ஒதுக்குதல்; to eject, to leave as refuse, to abandon.ஆடு தின்று கழித்த பயிர் விளங்காது (உ.வ.). 3. பெரிய எண்ணினின்று சிறிய எண்ணைக் குறைத்தல்; to substract. பத்தில் ஐந்தைக்கழி (உ.வ.). 4. குறைத்தல்; to deduct, abate, discount, remit. பத்துவிழுக்காடு கழிவில் துணி வாங்கினேன் (உ.வ.). 5. வெட்டுதல்; to cut off, as hair, to pare off as nails; to clear off, clear away; to smooth off,as knots; to prune top. மூங்கிலில் இருந்து முள்ளைக் கழித்தான். 6.போக்குதல்; to spend, waste, as time. *"கருவிலே திருவிலாதீர் காலத்தை கழிக்கின் றீரே"* (திவ்.திருமாலை.11.). 7.வரி முதலியவை தள்ளிக்கொடுத்தல்; to exempt, release, free as from duties or postage. வருமானத்தில் பத்து விழுக்காடு கழிவு செய்து வரிகட்டினான்(உ.வ.). 8. மலம் முதலியவற்றை வெளிப் படுத்துதல்; to cast off, as exudate, to evacuate, void,as excreta. குழந்தை நின்ற இடத்திலேயே மலம் கழித்து விட்டது. 9. உருவுதல்; to unsheath. *"கழித்துறை செறியா வாளுடை எறுழ்த்தோள்" (அகநா.24.).*

ம. கழி, கழிக்குக; **க.** கழி, களி, கழெ, களெ; **து.** கரி, களெ; **பட.** கயி; **துட.** கொடி; **குட.** கய்ய (பொழுது கழித்தல்); **தெ.** கடசு (பொழுது போதல்); **உரா.** களெ.

[கள் → கழு → கழி]

கழி[11] *kaḻi,* பெ.(n.) 1. கோல்; rod,cudgel, staff, stick *"ஆயர்மேய்க்குங் கழி" (புலியூரந்.8.)* 2. நுகத் துளையில் இடுங்கழி; wooden peg to keep a yoke in place.*"தென்கட விட்டதோர் நோன்கழிசிவணி" (சீவக.2749.).* 3. ஆய்தப்பிடி; handle of a tool. *"தோல் கழியோடு பிடிசெறிப்பவும்" (புறநா.98.11.).* 4.வரிச்சல்; lath, strip put across the rafters to support tiles.*"கழி நிறைத்து" (தேவா.838.4.).* 5. கரும்பின் அடி (சொ.ஆ.க65); base of sugarcane.

[கள் → கழு → கழி.]

கழி[12] *kaḻi,* பெ.(n.) இறைச்சி; flesh. *"கல்லுமிழ் கவணினர் கழிப்பிணிக் கறைத்தோல்" (சிலப்.5.81).*

[கள் → கழு → கழி.]

கழி[13] *kaḻi,* பெ.(n.) 1. செம்மெழுகு;red-wax. 2. மெழுகு வத்தி; candle (சா.அக).

[கள் → கழி.]

கழி[14] *kaḻi,* பெ.(n.) யாழின் இசையெழுப்புங் கருவி (வின்); lute-stick, plectrum.

[கள் → கழு → கழி.]

கழி[15] *kaḻi,* கு.பெ.எ.(adj.) மிகுந்த (நன். 456.); much, great, excessive.

[கள் → கழு → கழி.]

கழி[16] *kaḻi,* பெ.(n.) கயிறு; coir rope. *"கழிவிடும் பரிபிளந்து" (தக்கயாகப்.132.).*

ம. கழி

[அழி → கழி.]

கழி[17]**-த்தல்** *kaḻi-,* 4 செ.கு.வி(v.i.) 1. நீத்தார் கடன் நிகழ்த்துதல்; to perform funeral ceremonies. 2. விலக்கிக் கொள்ளுதல்; to keep aloof, to withdraw.

[கள் → கழு → கழி.]

கழிகட்டை *kaḻi-kaṭṭai,* பெ.(n.) கழிகடை (இ.வ.); useless person or thing.

[கழி + கட்டை.]

கழிக்கரை *kaḻi-k-karai,* பெ.(n.) 1. கழிமுகம்; river mouth. 2. உப்பங்கழியை யொட்டிய நிலப்பரப்பு (தஞ்சை. மீன்வ.); land space, around backwater canal.

[கழி + கரை.]

கழிக்கரைப்புலம்பல் *kaḻi-k-karai-p-pulambal,* பெ.(n.) 1. பிரிந்த தலைவனை நினைந்து தலைவி கடற்கரையிலிருந்து கொண்டு தனியே இரங்குகை; soliloquy of a maiden in a maritime tract lamenting the separation from her lover. 2. சமுத்திர விலாசம் என்னும் சிற்றிலக்கியம்; a poem on such a theme.

[கழி + கரை +புலம்பல்.]

கழிக்காரை *kaḻi-k-kārai,* பெ.(n.) ஒருவகைக் காரை முட்செடி; common honey-thorn.

[கள் → கழி + காரை.]

கழிக்காறல் *kaḻi-k-kāṟal,* பெ.(n.) கடல்மீன்வகை; a sea fish, silvery, attaining 5" in length.

[கழி + காறல்.]

கழிக்குடி *kaḻikuḍi,* பெ.(n.) கன்னியாக்குமரியின் தொன்மைப் பெயர்; an ancient name of Cape Comorin (கல்.அக).

[கழி + குடி.]

கழிக்கோல்[1] *kaḻi-k-kōl,* பெ.(n.) ***கழிகோல்*** பார்க்க; see *kaḻikōl.*

[கழி + கோல் = கழிக்கோல்.]

கழிக்கோல்[2] *kaḻi-k-kōl,* பெ.(n.) மூங்கில் (நாஞ்.); bamboo.

[கழை → கழி + கோல்.]

கழிகடை *kaḻi-kaḍai,* பெ.(n.) 1. மிக இழிந்த-வன்-வள்-து-வை; the worst, as applied to persons or things; refuse, that which is base.2. அறக்கெட்டது (கழ.அக); completely destroyed, fully spoiled. 3. பயனற்றதென நீக்கியது; that which is rejected or thrown out as worthless;refuse.

[கழி + கடை.]

கழிகண்ணோட்டம் *kaḻi-kaṉṉōṭṭam,* பெ.(n.) அளவிறந்த உவகை (குறள்.432.உரை.); lit, glance with overflowing eyes, great joy, delight.

[கழி + கண்ணோட்டம்.]

கழிகணம் *kaḻikaṇam,* பெ.(n.) வயிற்றுப் போக்கை உண்டாக்கும் குழந்தை நோய்வகை (பாலவா,40.); a disease of children attended with diarrhoea.

[கழி + கணம்.]

கழிகம் *kaḻigam,* பெ.(n.) வாலுளுவை (யாழ்.அக.); climbing staff plant.

[கழி → கழிகம்.]

கழிகலமகடூஉ *kaḻi-kala-magaḍūu,* பெ.(n.) கைம்பெண்; widow, who has been stripped of her ornaments.*"கொய்ம்மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய கழிகல மகடூஉப் போலப் புல்லென் றனை யால்" (புறநா.261.18.).*

[கழி + கலன் + மகடூஉ (பெண், மகள்.).]

கழிகாலம் *kaḻi-kālam,* பெ.(n.) சென்றகாலம்; past-time. *"வருங்காலம் நிகழ்காலம் கழிகால மாயுலகை ஒருங்காக அளிப்பாய்" (திவ். திருவாய்.3.1.5.).*

மறுவ. கழிந்தகாலம்

[கழி + காலம்.]

கழிகாலம்[2] *kaḻi-kālam,* பெ.(n.) கக்கற்கழிச்சல் காலம்; the time or season of cholera.

[கழி + காலம்.]

கழிகெட்டவன் *kaḻi-keṭṭavaṉ,* பெ.(n.) மிகக் கெட்டவன் (யாழ்ப்.); reprobate fellow, vile, wretch.

[கழி + கெட்டவன்.]

கழிகோல் *kaḻikōl,* பெ.(n.) 1. எளிதில் பால் கறவாத ஆவினை அசையாமல் நிறுத்திக் கறப்பதற்குப் பயன்படுத்தும் இணைப்புக்கழி; two rods joined at an angle and thrown round the horns of an intractable cow to keep it under control while milking. *"கடையாவின் கழி கோற்கைச் சறையினார்" (திவ். திருவாய்.4.8.4.).* 2. கன்று பாலுண்ணாதிருக்க முகத்திற்கட்டும் வாய்ப்பூட்டு (ஈடு.4.8.4.); wicker basket for the mouth of a calf to prevent it from sucking.

[கழி + கோல்.]

கழிச்சல் *kaḻiccal,* பெ,(n.) 1. வயிற்றுப்போக்கு; diarrhoea, looseness of bowels. *"குழந்தை கழிச்சலில் அழுகிறது" (உ.வ).* 2.கடும் வயிற்றுப்போக்கினால் ஏற்படும் அளவிற்கதிகமான அச்சம்; extreme fear, producing instantaneous diarrhoea.

[கழி → கழிச்சல்.]

கழிச்சல் வகை: 1. சீதக் கழிச்சல்- diarrhoea mucosa, 2. இரத்தக் கழிச்சல்- dysenteric diarrhoea, 3. சலக்கழிச்சல் அல்லது நீர்க் கழிச்சல்- watery diarrhoea diabetes, 4. சங்கரக் கழிச்சல்- diarrhoes attended with various symptoms-sympathetic diarrhoea, 5. சோபக் கழிச்சல்- diarrhoea followed by great weakness and exhaustion, 6. வெள்ளுடைக் கழிச்சல்- white diarrhoea, 7. வயிற்றுக் கழிச்சல்- gastrogenic diarrhoea (சா.அக.).

கழிச்சியர் *kaḻicciyar,* பெ.(n.) நெய்தனிலத்து மகளிர்; women of the maritime tracts. *"கழிச்சியர்க ளவரை யேனலுக்கு" (பெரியபு. திருக்குறிப்புத்.44.).*

[கழி[2] → கழிச்சியர்.]

கழிசடை *kaḻicaḍai,* பெ.(n.) கழிக்கப்பட்ட மயிர்ச்சடை போல இழிந்த–வன்–வள்–து (இ.வ.); person or thing that is cast away, as shaven hair, கழிசடைப் புத்தகம் படித்துக் காலத்தை வீணாக்காதே (உ.வ.).

[கழி + சடை.]

கழிசல் *kaḻiśal,* பெ.(n.) கழிக்கப்பட்டது; that which is rejected. கழிசல்தாள்களுக்கு இந்நாளில் மதிப்பு அதிகம் (உ.வ.).

[கழிச்சல் → கழிசல்.]

கழிசறை *kaḻiśaṟai,* பெ,(n.) ***கழிசடை*** (இ.வ.) பார்க்க; see *kaḻiśaḍai.*

[கழிசடை → கழிசறை → கழிசிறை (கொ.வ.).]

கழிசிறை *kaḻisiṟai,* பெ,(n.) ***கழிசடை*** (இ.வ.) பார்க்க; see *kaḻiśaḍai.*

[கழிசடை → கழிசறை → கழிசிறை (கொ.வ.).]

கழிஞன் *kaḻiñaṉ,* பெ.(n.) உருட்டு வடிவுள்ள செம்பழுப்பு வண்ணக் கடல்மீன் (குமரி.மீன.வழ); a cylindrical sea fish of reddish brown colour.

[கழி → கழிஞன்.]

கழித்தல் *kaḻittal,* பெ.(n.) எண்ணின் கழிப்பு; subtraction. கழித்தல் கணக்கு கடினம் (உ.வ.).

[கழி → கழித்தல்.]

கழித்துக்கட்டு[1]**–தல்** *kaḻittu-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. போக்குச் சொல்லி நெகிழ விடுதல்; to evade by excuses. நன்கொடை கேட்டால் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிக் கழித்துக் கட்டுவதில் கைதேர்ந்தவர் இவர் (உ.வ.). 2. இகழ்ந்து ஒதுக்குதல்; to cast off with contempt; பேதைகளின் பேச்சை பேரறிஞர் கழித்துக்கட்டுவர் (உ.வ.). 3.பயன்படாத தென ஒதுக்கி விடுதல்; avoiding as useless. "தைத்திங்களில் பழைய பொருள்களைக் கழித்துக் கட்டி வீட்டைத் துப்புரவு செய்வர்".

[கழித்து + கட்டு.]

கழித்துக்கட்டு[2]**–தல்** *kaḻittu-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தனக்குப் பயன்படாதவற்றைப் பிறனிடஞ் சேர்த்தல்; to give away to others what is not useful to oneself. வீட்டுக்காரி வெளுத்துப்போன சேலைகளை வேலைக்காரியிடம் கழித்துக்கட்டினாள் (உ.வ.).

[கழித்து + கட்டு.]

கழிந்தகாலம் *kaḻindakālam,* பெ.(n.) 1. இறந்த காலத்தைக் குறிக்கும் இலக்கணக் கூறு; a grammatical category which shows past tense. 2. அகவை, பருவம், ஆண்டு, மாதம், நாள் போன்றவற்றின் கழிந்த நிலை; past age, season period, years, month, day etc. நேற்று என்பது கழிந்த காலம் (உ.வ.).

[கழி → கழிந்த + காலம்.]

கழிந்தார் *kaḻindār,* பெ.(n.) 1. பொருளில்லாதவர்; poor, destitute persons. *"எடுப்பிற்கிளையுட் கழிந்தா ரெடுக்க" (நான்மணி62).* 2. *இறந்தவர்; deceased persons. "கழிந்தாரிடுதலை" (நாலடி.49).*

[கழி → கழிந்தார்.]

கழிந்தோர் *kaḻindōr,* பெ.(n.) வலிமிக்கோர்; very strong men. "கழிந்தோருடற்றுங் கடுந்தூ வஞ்சா". (பதிற்றுப்.90,5.).

[கழி → கழிந்தோர்.]

கழிநிலம் *kaḻi-nilam,* பெ.(n.) 1. உப்பளம் (பின்.); natural salt pan. 2. உவர்த்தரை (வின்.); saline soil, marshy tract bordering on the sea. கழி நிலத்தில் விதைச்ச விதை கால்காசுக்கும் பயனில்லை (உ.வ.).

[கள் → கழு → கழி + நிலம் – கழிநிலம்.]

கழிநெடியன் *kaḻi-neḍiyaṉ,* பெ.(n.) மிகநெட்டையாக வளர்ந்தவன்; tallest person.

[கழி + நெடியன்.]

கழிநெடில் *kaḻi-n-eḍil,* பெ.(n.) ***கழிநெடிலடி*** பார்க்க; see *kaḻi-neḍil-aḍi.*

[கழி + நெடில்.]

கழிநெடிலடி *kaḻi-neḍil-aḍi,* பெ.(n.) ஐந்தின் மிக்க சீரால் வரும் அடி (காரிகை, உறுப்பு.12.); lit., a very long line, a line in verse containing more than five feet.

(எ.டு.) நீரிடை உறங்கும் சங்கம் நிழலிடை உறங்கும் மேதி
தாரிடை உறங்கும் வண்டு தாமரை உறங்கும் செய்யாள்
தூரிடை உறங்கும் ஆமை துறையிடை உறங்கும் இப்பி
போரிடை உறங்கும் அன்னம் பொழிலிடை உறங்கும் தோகை.

அறு சீரால் அமைந்த கழிநெடிலடிக்கு எடுத்துக்காட்டு.

[கழி + நெடில் + அடி.]

கழிப்பணம் *kaḻi-p-paṇam,* பெ.(n.) **கலிப்பணம்** பார்க்க; see *kali-p-paṇam.*

[கலிப்பணம் → கழிப்பணம்.]

கழிப்பறை *kaḻi-p-paṟai,* பெ.(n.) ***கழிவறை*** பார்க்க; see *kaḻi-vaṟai.*

மறுவ. கழிப்பிடம், ஒதுங்கறை.

[கழி – கழிப்பு + அறை.]

கழிப்பாக்கு *kaḻippākku,* பெ.(n.) ***களிப்பாக்கு*** பார்க்க; see *kaḻi-p-pākku.*

குட. களியடக்கெ

[களி → கழி + பாக்கு (கொ.வ).]

கழிப்பாம்பு *kaḻi-p-pāmbu,* பெ.(n.) ஆறுகாலுடைய ஒரு விலங்கு (சிலப்.பக்.524, குறிப்பு.); kind of animal or creature having six legs.

[கழி + பாம்பு.]

கழிப்பிடம் *kaḻippiḍam,* பெ.(n.) கழிப்பறை; public convenience. இது கட்டணக் கழிப்பிடம் (உ.வ.).

மறுவ. கழிப்பறை, ஒதுங்கறை.

[கழிப்பு → இடம்.]

கழிப்பிரண்டை *kaḻi-p-piraṇḍai* பெ.(n.) கோப்பிரண்டை; a species of adamantine creeper (சா.அக.).

[கழி → பிரண்டை.]

கழிப்பு[1]–தல் *kaḻippu-,* 5 செ.கு.வி.(v.t.) 1. போக்குதல்; to spend, pass, as time. *"பன்னாட் கழிப்பி" (பொருந.111.).* 2. செய்து முடித்தல்; to complete. *"மூவேழ் துறையு முறையுளி கழிப்பி" (புறநா.152.20.).*

க. கழிபு, களிபு, களுபு. களுவு, களுகு, கழிப்பு, கழுபு, கழ்பு

[கழி → கழிப்பு.]

கழிப்பு[2] *kaḻippu,* பெ.(n.) 1. ஒழிக்கை; expulsion, ejection. 2. சாந்தி கழிக்கை (உ.வ.); propitiating malignant deities by giving them offerings. 3. குற்றம் (திவா.); blemish, defect, fault. 4. தள்ளுண்ட பொருள் (வின்.); that which is cast aside and rejected. 5. கழித்தல் (வின்.); subtraction.

ம. கழுப்பு, க. கழிபு.

[கழி → கழிப்பு.]

கழிப்புக்கழி–த்தல்[1] *kaḻippu-k-kaḻi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. நோயாளி தலையைச்சுற்றிச் சோறு முதலியவற்றைக் கண்ணேறாகக் (திருஷ்டி) கழித்து எறிந்து விடுதல்; to throw away boiled rice, etc. after waving it round the head of a patient by way of averting the influence wrought by an evil eye or a malignant spirit. கழிப்புக் கழிச்சலைத் தாண்டினால் கால்நோய் வரும் (உ.வ.).

[கழிப்பு + கழி.]

கழிப்புக்கழி[2]–த்தல் *kaḻippukaḻi-,* 4 செ.கு.வி.(v.t.) தீய ஆவிகளை ஒருவரின் உடலிலிருந்தோ ஓரிடத்தி லிருந்தோ நீக்கிவிடச் செய்யும் ஒருவித நடப்பு (சடங்கு); perform a ceremony, to expel the evil spirit,from a place or ones body.

[கழிப்பு + கழி.]

கழிப்புச்சுற்றல் *kaḻippu-c-cuṟṟal,* பெ.(n.) ***கழிப்புக் கழித்தல்*** பார்க்க; see *kaḻippu-k-kaḻittal.* கண்ணேறு கழிவதற்குக் கழிப்புச் சுற்றிப் போடவேண்டும் (உ.வ.).

[கழிப்பு + சுற்று.]

கழிப்புச்செய்–தல் *kaḻippu-c-cey-,* 2 செ.குன்றாவி .(v.t.) ***கழிப்புக்கழித்தல்*** பார்க்க; see *kaḻippu-k-kaḻittal.* செய்வினை தீர கழிப்புச் செய்ய வேண்டும் (உ.வ.).

[கழிப்பு + செய்.]

கழிப்புல் *kaḻi-p-pul,* பெ.(n.) உப்பு நிலத்தில் விளையும் புல்வகை; grass grown on saline soil (சா.அக.).

மறுவ. கழிமுட்டான்

[கழி + புல்.]

கழிப்பெடு–த்தல் *kaḻippeḍu-,* 4.செ.குன்றா.வி.(v.t.) **கழிப்புக் கழி** (இ.வ.) பார்க்க; see *kaḻippu-k-kaḻi.*

[கழிப்பு + எடு.]

கழிபடர் *kaḻi-paḍar,* பெ.(n.) அளவிடற்கரிய துன்பம்; great distress. *"தலைவிக்குக் காமமிக்க கழிபடர் சிறந்தாற் போல்வது" (தொல். பொருள்.111.உரை.).*

[கழி + படர்.]

கழிபிறப்பு *kaḻi-piṟappu,* பெ.(n.) முற்பிறப்பு (திவா.); previous birth; the birth preceding the present.

[கழி + பிறப்பு.]

கழிபெரும் *kaḻiperum,* பெ.எ.(adj.) மிக அதிகமாக; very excessive, enormous.

[கழி + பெரும்.]

கழிபேருவகை *kaḻi-pēruvagai,* பெ.(n.) பெரு மகிழ்ச்சி; great joy.

[கழி + பேருவகை.]

கழிமாந்தம் *kaḻi-māndam,* பெ.(n.) குழந்தைகட்கு வயிற்றுப் போக்கோடு வரும் மாந்த நோய்; infantile diarrhoea, one of eight kinds of mandam. கழிமாந்தம் வந்து குழந்தை இளைத்து விட்டது (உ.வ.).

[கழி + மாந்தம்.]

கழிமீன் *kaḻi-mīṉ,* பெ.(n.) உப்பங்கழியில் மேயுமோர் மீன் (செங்.மீனவ.); fish in back water.

[கழி + மீன்.]



கழிமீன்

கழிமுகம் *kaḻi-mugam,* பெ.(n.) 1.ஆறு கடலோடு கலக்குமிடம் (திவா.); mouth of a river; delta of a river, mountain torrent, waterfall.

Indoni. kali

[கழி + முகம்.]

கழிமுட்டான் *kaḻi-muṭṭāṉ-,* பெ.(n.) உவர்நிலத்தில் விளையும் ஒருவகைப்புல் வகை; a kind of grass grown on a saline soil.

மறுவ. கழிப்புல்

[கழி + முட்டான்]

[இப்புல்வகை, கூரை வேயப் பயன்படுவதாம்.]

கழிமுள்ளி *kaḻi-muḷḷi,* பெ.(n.) கழிநிலத்தில் வளரும் முட்செடி (மதுரைக்.96,உரை.); Indian night shade grown on saline soil.

[கழி + முள்ளி.]

முள்ளிவகை: 1. அடுக்குமுள்ளி, 2. ஆற்றுமுள்ளி, 3. கழுதைமுள்ளி, 4. செம்முள்ளி, 5. வெள்ளை முள்ளி, 6. நீர்முள்ளி, 7. வறட்டுமுள்ளி, 8. கறிமுள்ளி, 9. பப்பர முள்ளி, 10. கழிமுள்ளி.

[கழி + முள்ளி.]

கழிமூலி *kaḻi-mūli,* பெ.(n.) கழிநிலத்தில் வளரும் மூலிகை; herbaceous plant growing in saline soil or found on the banks of back water.

[கழி + மூலி.]

கழிமை *kaḻimai,* பெ.(n.) விலக்குகை (சங்.அக.); avoidance, riddance.

[கழி + மை – கழிமை.]

கழிய *kaḻiya,* கு.வி.எ.(adv.) மிகவும்; much; many exceedingly. *"கல்லாதா னொட்பங் கழியநன் றாயினும் கொள்ளார் அறிவுடையார்" (குறள், 404.).*

[கழி → கழிய.]

கழியர் *kaḻiyar,* பெ.(n.) 1. உப்பளவர்; dwellers in marine tract who are preparing salt. 2. நெய்தல நில மக்கள்; people who are living in sea treact.

[கழி → கழியர்.]

கழியல்[1] *kaḻiyal,* பெ.(n.) 1. கழிகை; departing, passing. 2. கழிக்கப்பட்டது. (யாழ்.அக.); that which is cast away, rejected. 3. ***கழிச்சல்*** (இ.வ.) பார்க்க ; see *kaḻiccal.*

[கழி → கழியல்.]

கழியல்[2] *kaḻiyal,* பெ.(n.) 1. கழி. (திருநெல்.); cane, stick. 2. ***கடைமுளை.*** (நாஞ்.) பார்க்க; see *kaḍai muḷai.*

[கழி → கழியல்.]

கழியல்மாறு–தல் *kaḻiyal-māṟu-,* 5. செ.கு.வி.(v.i.) பிணங்குதல் (நாஞ்.); to be at loggerhead.

[கழியல் + மாறு.]

கழியவர் *kaḻiyavar,* பெ.(n.) ***கழியர்*** பார்க்க; see kaḻiyar *"கழியவர் கானவர்க் களித்து" (பெரியபு. திருக்குறிப்.44.).*

[கழி → கழியவர்.]

கழியிருக்கை *kaḻi-y-irukkai,* பெ.(n.) ஆறுசூழ்ந்த இடம்; delta tract.

மறுவ. அரங்கம்; ஆற்றிடைக் குறை.

[கழி + இருக்கை.]

கழியுடல் *kaḻi-y-uḍal,* பெ.(n.) பிணம் (Pond.); carcass, corpse.

[கழி + உடல் – கழியுடல்.]

கழியுப்பு[1] *kaḻi-y-uppu,* பெ.(n.) கடலுப்பு (C.G.); salt from salt-pans.

[கழி + உப்பு.]

கழியுப்பு[2] *kaḻi-y-uppu,* பெ.(n.) மீனுக்கு உப்பு வைக்கும் போது சிதறிக் கிடக்கும் உப்பு; scattered salt while preparing dry fish.

[கழி + உப்பு.]

கழியூணன் *kaḻi-y-ūṇaṉ,* பெ.(n.) பெருந்தீனியுண் பவன்; glutton.

மறுவ. சாப்பாட்டு இராமன் (உ.வ.).

[கழி + ஊண் + அன் – கழியூணன்.]

கழிவட்டம் *kaḻivaṭṭam,* பெ.(n.) 1. கடைப்பட்டவன்–வள்–து.(இ.வ.); refuse,riff-raff,dregs of society. கழிவட்டப் பேர்வழியால் காரியம் உருப்படாது (உ.வ.). 2. கவைக்குதவாதவன்; a person who is good for nothing.

[கழி + வட்டம் – கழிவட்டம்.]

கழிவட்டை *kaḻi-vaṭṭai,* பெ.(n.) ***கழிவட்டம்*** பார்க்க (கொ.வ.); see kaḻi-vaṭṭam. கழிவட்டையை வேலைக்கு வைத்தால் காசுக்குத்தான் கேடு (உ.வ.).

[கழி +(வட்டம்) வட்டை.]

கழிவலி *kaḻivali,* பெ.(n.) பிரியும் எதிராற்றல்; negative current of electricity as opposed to. கவர் வலி; positive current (சா.அக.).

[கழி + வலி.]

கழிவலை *kaḻi-valai,* பெ.(n.) மீன்பிடிவலை; fishing net.

[கழி + வலை.]

கழிவழி *kaḻivaḻi,* பெ.(n.) கழிமுகப்பாதை; a path through backwater.

[கழி + வழி.]

கழிவாசல் *kaḻvāšal,* பெ.(n.) இரைப்பை; stomach (சா.அக).

[கழி + வாசல்.]

கழிவாய்நஞ்சன் *kaḻivāy-nañjaṉ-,* பெ.(n.) பாம்பு வகை (யாழ்.அக.); a kind of snake.

[கழி + வாய் + நஞ்சன்.]

கழிவிடம் *kaḻi-v-iḍam,* பெ.(n.) **1.** குப்பைக் கொட்டும் இடம்; place or site for keeping refuse. **2.** கழிப்பறை; lavatory.

[கழி + இடம்.]

கழிவிரக்கம் *kaḻivirakkam,* பெ.(n.) 1. நெக்கு உருகுதல்; அளவற்ற இரக்கம்; remorse, repentance. *"கற்றார்முற்றோன்றா கழிவிரக்கம்" (நான்மணி.8.).* 2. பிறர்மேற் காட்டும் இரக்கம்; sympathy. கழிவிரக்கங் கொண்டு அவன் தீச்செயலுக்குத் துணை போகாதே (உ.வ.). 3. நிகழ்ந்ததை யெண்ணி ஒருவன் தன்னைத்தானே நொந்து கொள்ளுகை; self pity கழிவிரக்கங் கொள்ளாதே, அது உன்னைச் செயலற்றவன் ஆக்கிவிடும் (உ.வ.).

[கழிவு + இரக்கம்.]

கழிவு[1] *kaḻivu,* பெ.(n.) 1. காலம், இடம் முதலியன கழிந்து போகை. தேர்வு விரைந்து எழுதியதால் கழிவு நேரம் இன்னும் இருக்கிறது. 2. இறந்தகாலம் (நன்.145.); past tense. 3. நிகழ்காலம்; present tense.*"இறப்பெதிர்காலக் கழிவுமானானை" (திவ். பெரியதி.4.3.2.).* 4. கழிகடை; waste, refuse, leaving, dross; that which is inferior, base, vile. 5. வயிற்றிலிருந்து வெளியேறும் மலம், சிறுநீர் முதலியன; discharge as from the bowels.

[கழி → கழிவு.]

கழிவு[2] *kaḻivu,* பெ.(n.) 1. தள்ளுபடியான தொகை; deduction, discount, rebate. மொத்தவட்டியில் எவ்வளவு கழிவு (உ.வ.). 2. ஈவு, மீதி; remainder. கட்டடம் கட்டியது போகக்கழிவு மிகுதியாகவே இருக்கிறது (உ.வ.). 3. ஏலச்சீட்டு முதலியவற்றில் கிடைக்கும் தள்ளுபடி; dividend in auction chit. ஏலக்கழிவு போகக் கட்ட வேண்டிய பணம் எவ்வளவு (உ.வ.). 4. விலைக்குறைப்பு; discount. இந்தச் சட்டை கழிவு போக ஐம்பது உருபாதான் (உ.வ.).

[கழி → கழிவு.]

கழிவு[3] *kaḻivu,* பெ.(n.) **1.** ***கழுவாய்*** பார்க்க; see *kaḻuvāy*-sin. *"பெரும்பாவக் கழிவு" (காஞ்சிப்பு. கயிலாய.30.).* 2. உள்ளது சிறத்தல் (தொல். சொல்.314.); becoming excellent *"கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்".*

[கழி → கழிவு.]

கழிவு[4] *kaḻivu,* பெ.(n.) 1. அழிவு; destruction. *"கழிவிலாத வாகாயம்" (பிரபுலிங். முத்தாயி.9.).* 2. சாவு, இறப்பு (சூடா.); death.

[கழி[2] → கழிவு.]

கழிவு[5] *kaḻivu,* பெ.(n.) மிகுதி; excess, abundance, surplus.

[கழி[3] → கழிவு.]

கழிவு[6] *kaḻivu,* பெ.(n.) 1. கெட்டுப்போன பொருள்; spoiled, destroyed materials. ஊசிப்போன கழிவுப் பொருளைக் குப்பையில் கொட்டு (உ.வ.). 2. தேவை யற்றது என்று கழிக்கப்பட்ட குப்பை கூளம்; waste, garbage. தொழிற்சாலைக் கழிவுகளால் குடிநீர் மாசுபடுகிறது (உ.வ.). 3. உரமாகப் பயன்படும் கழிவான இயற்கைப் பொருள்; agricultural waste. வேதிமஉரங்களின் வருகையால் இலைதழை முதலான இயற்கைக் கழிவுகள் வீணாகின்றன (இ.வ.). 4. தரக்குறைவால் நீக்கப்பட்டது; that which is discarded as inferior in quality. வெற்றிலைக் கழிவுகளை வாங்கி வந்து விற்கிறார் (உ.வ.).

[கழி → கழிவு.]

கழிவுச்சங்கு *kaḻivu-c-caṅgu,* பெ.(n.) வளையல் போன்ற பொருள்கள் செய்தபின் எஞ்சிய சங்கின் பகுதி (மீனவ.); the remaining part of conch after the bangles have been cut out.

[கழிவு + சங்கு.]

கழிவுச்சரக்கு *kaḻvu-c-carakku* பெ.(n.) தள்ளுபடி யான பொருள்; rejected goods. அடிப்பட்ட கழிவுச் சரக்குகளைக் குறைந்த விலைக்கு விற்பர் (உ.வ.).

[கழிவு + சரக்கு.]

கழிவுசெய்–தல் *kaḻivu-cey,* 1 செ.குன்றாவி.(v.t.) நீக்குதல்; omit, reject.

[கழிவு + செய்தல்.]

கழிவுநீர் *kaḻivu-nīr* பெ.(n.) 1. சாக்கடை நீர்; sewage water. 2. தொழிற்சாலை வீடு முதலியவற்றி லிருந்து வெளியேறும் அழுக்கு நீர்; industrial waste water.

[கழிவு + நீர்.]

கழிவுநீர்க்கால் *kaḻivu-nīr-k-kāl,* பெ.(n.) கழிவு நீர் செல்லும் வாய்க்கால்; sewer.

[கழிவு + நீர்க்கால்.]

கழிவுப்பொருள் *kaḻivu-p-poruḷ,* பெ.(n.) உடலிலிருந்து வெளியாகும் வியர்வை, சிறுநீர், மலம் முதலிய வேண்டாத பொருள்கள், excretory matters (சா.அக.).

[கழிவு + பொருள்.]

கழிவுமுள் *kaḻivu-muḷ,* பெ.(n.) 1. கடல் நடுவே உள்ள முட்காடுகள்; thorn forest (island)in the ocean 2. மீனிலிருந்து கழிக்கப்படும் முள்; scales, bones etc discarded before preparing fish for food.

[கழிவு + முள்.]

கழிவெண்பிறப்பு *kaḻiveṇpiṟappu,* பெ.(n.) அறுவகைப்பிறப்பையும் கடந்து ஆதன் அடையும் மேனிலை (நிருவாணநிலை); Jaina the final emancipation after passing through six kinds of births. *"கழிவெண் பிறப்பிற் கலந்து வீடணைகுவர்" (மணிமே.27:155.).* அறுவகைப் பிறப்பாவன: கரும் பிறப்பு, கருநீலப் பிறப்பு, பசும்பிறப்பு,செம்பிறப்பு, பொன்பிறப்பு, வெண்பிறப்பு (மணிமே. 27,150–152).

[கழி + வெண் + பிறப்பு – கழிவெண்பிறப்பு (வெண்பிறப்பு கழிந்த அடுத்த நிலை).]

கழிவெளி *kaḻi-veḷi,* பெ.(n.) 1. கடற்கழியுள்ள இடம் (இ.வ.); back-water. 2. பரந்த இடம்; large expanse of land.

[கழி + வெளி.]

கழிவொற்றி *kaḻivoṟṟi,* பெ.(n.) வட்டிக்கும் முதலுக்கு மாக ஒற்றிவைக்கப்பட்ட நிலத்தைக் குறித்த காலத்திற்குப் பயன்படுத்திக்கொண்டு, திருப்பிக் கொடுப்பதற்கான அடைமானம்; usufructuary mortgage which becomes automatically discharged by enjoyment for a fixed period in lieu of payment of principal and interest.

[கழி + ஒற்றி.]

கழினி *kaḻiṉi,* பெ.(n.) இடுதிரை(திவா.); curtain.

மறுவ. எழினி

[கழி → கழினி.]

கழு[1] *kaḻu-,* பெ.(n.) 1. கழுமரம்; stake for impaling criminals. *"கழுவிலேறி" (தமிழ்நா.235.).* 2. சூலம் (திவா.); trident. 3. கறவாத ஆவினைக் கறக்கும் பொருட்டு அதன் கழுத்தில் இரு முனையுஞ் சீவி மாலைபோற் கட்டியிடுங் கழி; piece of wood sharpened at both ends, strung together and put around the neck of fierce cows when milking. *"கழுவொடு சுடுபடை சுருக்கிய தோல்" (கலித்.106.).*

[கள் → கழு. கள் = முள்.]

கழு[2] *kaḻu,* பெ.(n.) பிணம்; dead body. கழுமரத்தில் ஏற்றிக் கொல்லப்பட்டவரின் பிணம்; body of a man killed on stake.

[கள் → கழு - கழுமறத்தில் ஏற்றிக்கொல்லப்பட்டவரின் பிணம்.]

கழு[3] *kaḻu,* பெ.(n.) புற்பற்றை(வின்.); green turf.

[கள்=கூர்மை. கள் → கழு (கூரியநீண்ட புல்முளை).]

கழு[4] *kaḻu,* பெ.(n.) **கழுகு** பார்க்க; see *kaḻugu.* *“கழுக்குன்றமமர்ந்தான்றன்னை” (தேவா.1131.1).*

ம. கழு

[கள் → கழு. (கூரிய அலகுடையது).]

கழு[5] *kaḻu,* பெ.(n.) நொது நொதுப்பு, ஈரத்தால் ஆகிய சேற்றுப்பதம்; dampness in earth.

[குள் → கழு.]

கழுக்கடை *kaḻu-k-kaḍai,* பெ.(n.) 1. கழுவாயுதம் (திவா.); impaling stake with an iron point. 2. சிறிய ஈட்டி; spike, short spear. *“பிண்டி பாலங்கள் கழுக்கடைவாட்படை” (திருவிளை.திருமண.31.).* 3.சூலம்;trident. *“கழுக்கடை தன்னைக் கைக் கொண்டருளியும்” (திருவாந.2,110.)* .

மறுவ. கழுமுள். ம. கழுமுள், கழுக்கோல்.

[கழு + கடை.]

கழுக்களம் *kaḻukkaḷam,* பெ.(n.)1. கழுவேற்றும் இடம்; place of execution by impaling. 2. கொலைக் களம்; murdering spot.

ம. கழுக்களம்

[கழு + களம்.]

கழுக்காணி[1] *kaḻu-k-kāṇi,* பெ.(n.) 1. உலக்கை (ஈடு.1.1.1. ஜீ.); pestle. 2. வேங்கை மரம் (ஈடு.1.1.1.ஜீ).; Indian kino tree. 3. அறிவற்ற தடியன்; stout man without common sense, thick head, dullard. *“கறுத்த செங்கழுக்காணிச் சமணரே” (திருவாலவா. 38.51.).*

ம.கழுக்காணி

[கழு→ கழுக்கு + ஆனி – கழுக்கானி → கழுக்காணி.]

கழுக்காணி[2] *kaḻukkāṇi,* பெ.(n.) தாமரை (ஈடு.1.1.1.ஜீ); lotus.

கழுக்குமொழுக்கெனல் *kaḻukku-moḻukkeṉal.* பெ.(n.) உடல் மிகப் பருத்திருத்தற் குறிப்பு; expr. signifying corpulence, fatty appearance.

[கழுக்கு + மொழுக்கு + எனல்.]

கழுக்குன்றம் *kaḻu-k-kuṉṟam,* பெ.(n.) செங்கற்பட்டுக் கருகில் உள்ள திருக்கழுக் குன்றமலை; Thirukkaḻu-k-kuṉṟamalai, an ancient śaiva shrine near in chengalpaṭṭu. *“கணக்கில்லாத் திருக்கோலம் நிவந்து காட்டினாய் கழுக்குன்றிலே” (திருவாச.30–1).* **கழு**[4] பார்க்க; see *kaḻu*[4].

[கழுகு + குன்றம். கழு = கழுகு.]

இங்கு, கழுகுகள் நண்பகல் வேளையில் உணவுக்காக வருவது வழக்கமாக உள்ளது.

கழுக்கையர் *kaḻukkaiyar,* பெ.(n.) மயிற்பீலிக்கு மாற்றாக கழுகுகளின் இறகு முடிப்பைக் கையில் எடுத்துச்செல்லும் சமணர்; Jain saints who take eagle's feather with them.

[கழுகு + கையர்.]

கழுக்கோல்[1] *kaḻu-k-kōl,* பெ.(n.) கழுமரம்; impaling stake. *“வேன்மழுக் கடைத்தலைக் கழுக்கோல்” (திருவாலவா.39.19.).*

ம.கழுக்கோல் (கூரை விட்டம்)

[கழு + கோல்.]

கழுக்கோல்[2] *kaḻu-k-kōl,* பெ.(n.) ***கழிக்கோல்*** (நாஞ்.) பார்க்க; see *kaḻi-k-kōl.*

[கழு + கோல்.]

கழுகண்டு *kaḻu-kaṇḍu,* பெ.(n.) வணங்காத தலையன் (யாழ்.அக.); refractory person.

[கழுகன் → கழுகண்டு.]

கழுகரிப்பரி *kaḻugari-p-pari,* பெ.(n.) இறக்கையுள்ள குதிரை(புதுவை); winged horse.

[கழுகு + இறகு + பரி – கழுகிறகுப்பரி → கழுகரிப்பரி (கொ.வ.).]

கழுகழு–த்தல் *kaḻu-kaḻu-,* 4 செ.கு.வி.(v.i.) ***கழுகுழு–த்தல்*** பார்க்க; *see kaḻu-kuḻu.-,*

[கழுகுழு → கழுகழு.]

கழுகு *kaḻugu,* பெ.(n.) 1. வளைந்த கூரிய அலகு டையனவும் பிணம் தின்பவையுமான பலவகைப் பறவைகளின் பொதுப் பெயர்; common name for vulture and eagle. *"கழுகொடு செஞ்செவி யெருவை திரிதரும்" (புறநா.370.25.).* 2. பறவை வகை; Pharaoh's chicken.3. பொன்னிறக் கழுகு; eagle.

ம.கழு,கழுகு,கழுகன்; **க.**கிடுக; துட.கழ்ள்; **து.**கரு; **தெ.**பர்.தத்த; **கொலா.** தத்தா; நா.தத்தம்.

kaḻug-u, an eagle, comp. ***Persian.*** *kergish;* ***Ossete.*** *kartziga;* ***Sans.*** *garuḍa,* - the mythical eagle; *gridhra,* a vulture (C.G.D.F.L.591 and 616.). ***Ostiak.*** *kuruk,*an eagle (C.G.D.F.L.616)

[கள் → கழு → கழுகு.]

கழுகுவகைகள்: கருங்கழுகு, வெண்கழுகு, பிணந்தின்னிக் கழுகு, அரசாளிக் கழுகு.

கழுகுப்பொறி *kaḻugu-p-poṟi,* பெ.(n.) கோட்டை மதிலில் வைக்கப்படும் கழுகின் உருவமுள்ள பொறி (சிலப்.15.216.உரை.); ancient machine in the shape of an eagle mounted on a fort for defence.

[கழுகு + பொறி.]

கழுகுழு–த்தல் *kaḻu-kuḻu-,* 4 செ.கு.வி.(v.i.) ஈரத்தால் தரை முதலியன நொதுநொதுத்தல் (யாழ்.அக.); to feel damp and chilly.

[கழு + குழு.]

கழுங்கு *kaḻuṅgu* பெ.(n.) கமுகு, அடைக்காய்மரம்; arecanut tree (சேர. நா.)

ம. கழுங்ஙு

[கமுகு → கமுங்கு → கழுங்கு (கொ.வ.).]

கழுச்சிறையன் *kaḻu-c-ciṟaiyaṉ,* பெ.(n.) கழுவேற்றப் படத்தக்கவன்(வின்.); one who deserves implaing.

[கழு + சிறையன்.]

கழுத்தகமுடையான் *kaḻauttagam-uḍaiyāṉ,* பெ.(n.) கணவன் (இ.வ.); husband.

[கழுத்து + அகம் + உடையான்.]

கழுத்தணி *kaḻuttaṇi* பெ.(n.) கழுத்தையொட்டி அணியும் அணிகலன்; necklace.

[கழுத்து + அணி.]

கழுத்தல் *kaḻuttal,* பெ.(n.) பொய் (வின்.); lie.

[கழி → கழு → கழுத்தல்.]

கழுத்தறு–த்தல் *kaḻuttaṟu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கழுத்தை அறுத்துக்கொல்லுதல்; slitting the throat. 2. சிறுசிறு செயலுக்காக முன்னெச்சரிக்கை இல்லாமல் பெருந்துன்பத்திற்கு உள்ளாக்குதல்; to put into great trouble without prior notice for small acts. 3. நம்பிக்கை தந்து ஏமாற்றுதல்; to deceive, causing frustration, to disappoint.

[கழுத்து + அறு.]

கழுத்தறுப்பு *kaḻuttaṟuppu,* பெ.(n.) 1. பெருந்துன்பம்; தொல்லை;distress,trouble as if the throat is being cut. அவன் தலையிட்டிருப்பது எனக்குக் கழுத்துறுப்புத்தான் (உ.வ.). 2. மிகுந்த தொந்தரவு; big nuisance. காலையிலேயே சரியான கழுத்தறுப்பில் மாட்டிக் கொண்டேன் (உ.வ.). 3. மிகுந்த துன்பம் தருபவ–ன்–ள்; a pain in the neck (said of a person).அவன் சரியான கழுத்தறுப்புப் பேர்வழியாக இருக்கிறான் (உ.வ.).

[கழுத்து + அறுப்பு.]

கழுத்தாடாளி *kaḻuttāḍāḷi,* பெ.(n.) கழுத்தாடாத ஒட்டகம்; camel or any animal with a stiff neck. (சா.அக)

[கழுத்து + ஆடா + ஆளி.]

கழுத்தாரம் *kaḻuttāram,* பெ.(n.) 1. கழுத்தணி; ornament worn around the neck. 2. அலைதாடி (யாழ்.அக.); dewlap of cattle.

ம.கழுத்தாரம் (கழுத்துமாலை)

[கழுத்து + ஆரம்.]

கழுத்திரு–த்தல் *kaḻuttiru-,* 3 செ.கு.வி.(v.i.) ***கழுத் திறு–த்தல்*** பார்க்க see *kaḻuttiṟu.-,*

[கழுத்து + இறு –கழுத்திறு → கழுத்திரு (கொ.வ).]

கழுத்திற்கட்டு–தல் *kaḻuttiṟ-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) ஒருவனைக் கட்டாயப்படுத்திப் பொறுப்பாளி யாக்குதல் (கொ.வ.); to consign to one's care against one's wishes, as a family which one cannot or will not maintain.

[கழுத்து +இல் + கட்டு.]

கழுத்திறு—த்தல் *kaluttiru* 4 செ.கு.வி.(v.i.) அதிகமான சுமையால் கழுத்து அழுங்குதல்; to press down the neck with heavy load.

[கழுத்து + இறு.]

கழுத்து *kaluttu.* பெ.(n.) 1. தலையையும் உடலையும் இணைக்கும் பகுதி; part of the body that connects the head with shoulder, neck. 2. தொண்டை அல்லது குரல்வளை அமைந்திருக்கும் பகுதி; part of the body where the throat is placed. 3.குடம்,குவளை, போன்றவற்றின் வாய்ப்பகுதியையும் பருத்த உடற் பகுதியையும் இணைக்கும் பகுதி; narrow part of vessel as of bottle, pot etc. 4. இருபொருள்களை இணைக்கும் குறுகிய பகுதி; narrow connecting part between two parts of things.5. நிலத்திற் பானை முதலியன வைத்தற்கேற்ற இடம்.elevation on or depression in the floor suitable for placing big pots.

ம. கழுத்து; **க.**கத்து, கழ்த்து; **தெ:** குத்துக, கொந்து; **து.** கண்டெறு, கெக்கில் ; **கோத.** கழ்தல், கிட்க்; **பட.** கத்து; கட, கட்லி; **கோண்.** கடலி : **மால்.** க்வலர; **குரு.** கேசெர்.

H.,V. galla,gālam; **Kash.**kan. **Guj**. galum; **Beng.** ghad; **Skt**. gala,griva; **E.**collar; **Gk.** kolla; **It.** collotto; **Sp.** cuello; **F.** col; coll-n; **Dan.** halsi, hals ; **Cata:** coll; **Fin.** kausal; **Hung.** galler;**Pali.** Kol; neity; **Russ.** gule-n.

[கள் = முள், கூர். கள்→கழு = கூரானகோல், குறுந்தடி. கழு→கழுந்து = குறுந்தடி; கழுந்து→ கழுத்து = குறுந்தடி போன்ற தோற்ற முடைய கழுத்துப் பகுதி.]

கழுத்துக்கட்டி *kaluttu-k-katti,* பெ.(n.) 1. கழுத்துக் கழலை; tumour of the neck. 2. இடையூறு; obstacle, impediment. *"ஜ்ஞாந பக்திகளிரண்டும் கழுத்துக் கட்டியாய் விட்டன" (ஈடு.4.7.10).* 3. கழுத்துக் குட்டைவகை; woollen wrap for the neck.

[கழுத்து + கட்டி.]

கழுத்துக்கரப்பான் *kaluttukkarappān,* பெ.(n.) குழந்தைகளுக்குக் கழுத்தைச்சுற்றிலும் வரும் கரப்பான் புண்; skin eruption found round the neck in children (சா.அக.).

[கழுத்து + கரப்பான்.]

கழுத்துக்குக்கத்தி *kaluttukku-k-katti,* பெ.(n.) அழிவை உண்டாக்கக்கூடிய—வன்—வள்—து (கொ.வ.); person or thing feared, as a fatal knife.

[கழுத்து + கு +கத்தி.]

கழுத்துக்குட்டை *kaluttu-k-kuttai,* பெ.(n.) அங்கிக்குமேலே கழுத்தைச் சுற்றிக் கட்டுந் துணி; neck-tie,cravat.

[கழுத்து + குட்டை.]

கழுத்துக்கொடு—த்தல் *kaluttu-k-kodu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. தன்வருத்தம்பாராமல் பிறராற்றும் பணியைத் தானேற்று நிற்றல்; to risk one's life for the sake of others. 2. உயிர்க்கு இறுதி தரக்கூடிய குற்றத்தைப்புரிதல்(வின்); to commit a heinous crime likely to bring about one's own destruction.3. வாழ்க்கைப்படுதல்(இ.வ.); to be married முரடனுக்குக் கழுத்துக் கொடுத்த பிறகு மிதிக்குப் பயந்து என்ன பயன் (உ.வ.).

[கழுத்து + கொடு.]

கழுத்துக்கோல் *kaluttu-k-kōl,* பெ.(n.) ***கயிற்றுக் கோல்*** பார்க்க; (G.TJ.D.i.133.); see *kayirru-k-kōl.*

[கழுத்து + கோல்.]

கழுத்துச்சட்டை *kaluttu-c-cattai,* பெ.(n.) பெண்களின் அங்கிவகை(யாழ்ப்.); a girl's jacket.

[கழுத்து + சட்டை.]

கழுத்துச்சந்து *kaluttu-c-candu,* பெ.(n.) கழுத்தின் மூட்டு (திவா); nape of the neck.

[கழுத்து + சந்து.]

கழுத்துத்திருகு—தல் *kaluttu-t-tirugu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. கழுத்தை முறித்தல் (கொ.வ.); to wring the neck as of a fowl. 2. கட்டாயப்படுத்தல்; lit, to twist the head, to persecute.

மறுவ. கழுத்திறுக்குதல், கழுத்துமுறித்தல்.

[கழுத்து + திருகு.]

கழுத்துப்பட்டி *kaluttu-p-patti* பெ.(n.) ***கழுத்துப் பட்டை*** பார்க்க see *kaluttu-p-pattai*

[கழுத்துப்பட்டை → கழுத்துப்பட்டி]

கழுத்துப்பட்டிகை *kaḻuttu-p-paṭṭigai,* பெ.(n.) ***கழுத்துப்பட்டை*** பார்க்க; see *kaḻuttu-p-paṭṭai.*

[கழுத்து + கட்டிகை.]

கழுத்துப்பட்டை *kaḻuttu-p-paṭṭai,* பெ.(n.) 1. சட்டையின் கழுத்தைச் சுற்றித் தைத்திருக்கும் பட்டைத்துணி; collar of a cloak. 2. ***கழுத்துக் கட்டி***[3] பார்க்க; see *kaḻuttu-k-kaṭṭi*[3].

[கழுத்து + பட்டை.]

கழுத்துப்பிடிப்பு *kaḻuttu-p-pidippu,* பெ.(n.) கழுத்துச் சுருக்கு; stiff neck, torticollis.

[கழுத்து + பிடிப்பு.]

கழுத்துப்பொருத்தம் *kaḻuttu-p-poruttam,* பெ.(n.) திருமணப்பொருத்தம் (வின்.); thirumana-p-poruttam,an agreement between the horoscopes of the bride and the bridegroom.

[கழுத்து + பொருத்தம்.]

திருமணத்தின் போது கழுத்தில் மாலை அணிவித்தல் இன்றியமையாச் சடங்காக அமைந்ததன் அடிப்டையில் கழுத்துப் பொருத்தம் திருமணப் பொருத்தத்தைக் குறித்தது.

கழுத்துமணி *kaḻuttu-maṇi,* பெ.(n.) கழுத்தணிவகை; a kind of neklace.

[கழுத்து + மணி.]

கழுத்துமுடிச்சு *kaḻuttu-maḍiccu,* பெ.(n.) குரல் வளை (C.G.); Adam's apple, projection formed by the thyroid cartilage in the neck.

[கழுத்து + முடிச்சு.]

கழுத்துமுறி[1]-த்தல் *kaḻuttu-muṟi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. உடன்பாடின்மையைக் குறிக்கும் பொருட்டு கழுத்தைத் திருப்பிக் கொள்ளுதல். (இ.வ.); to express dissent by turning the neck. 2. கழுத்தை திருகுதல்; to twist the head, to persecute.

[கழுத்து + முறி.]

கழுத்துமுறி[2]-த்தல் *kaḻuttu-muṟi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. ஒருவனை வருத்திப் பொருள் முதலியன பெறுதல்; to obtain by force, as by ruining a person. 2. தொல்லை (தொந்தரவு) செய்து கேட்டல்; to importune.

[கழுத்து + முறி.]

கழுத்துமேல் நில்(ற்)-தல்(றல்) *kaḻuttumēl-nil(r)-,* 14 செ.கு.வி.(v.i.) 1. கழுத்தை மிதித்தல்; to step upon one's neck. 2. தப்பித்துக் கொள்ளாதபடி வற்புறுத்தல்; to press one so as not to escape (சா.அக.).

[கழுத்து + மேல் + நில்.]

கழுத்துரு *kaḻutturu,* பெ.(n.) தாலியிற் கோக்கும் பலவகையான தங்க உருக்கள்; pieces of gold of various shapes and sizes forming the accompaniments of the tāli.

[கழுத்து + உரு.]

கழுத்து வெட்டி *kaḻuttu-veṭṭi,* பெ.(n.) கொலைகாரன் (வின்.); cut-throat, murderer, assassin.

[கழுத்து + வெட்டி.]

கழுத்தூட்டி *kaḻuttūṭṭi,* பெ.(n.) தொண்டை (வின்.); throat.

[கழுத்து + ஊட்டி.]

கழுத்தேர் *kaḻuttēr* பெ.(n.) முதலேரைப் பின்தொடரும் இரண்டாம் ஏர்; the second plough in a row.

[கழுத்து + ஏர்.]

கழுத்தேறுதண்டம் *kaḻuttēṟu-taṇḍam,* பெ.(n.) கழுத்தைத் துண்டிக்கும் தண்டனை; capital punishment.

[கழுத்து + ஏறு + தண்டம்.]

கழுத்தைக்கட்டு-தல் *kaḻuttai-k-kaṭṭu,* 5 செ.குன்றா வி (v.i.) விடாது கட்டாயப்படுத்துதல்; lit., to press the neck, to importune, trouble unceasingly, harass. அந்தக்குடும்பம் என் கழுத்தை கட்டிக் கொண்டு வருத்துகிறது (உ.வ.).

[கழுத்து + ஐ + கட்டு.]

கழுத்தைக் கொடு-த்தல் *kaḻuttai-k-koḍu-,* 4 செ.கு.வி.(v.i.) திருமணத்திற்கு உட்படுதல்; accept the inevitablity of marriage. பணக்காரன் என்பதற்காகப் படிக்காதவனுக்குக் கழுத்தைக் கொடுக்க முடியுமா? (உ.வ.).

[கழுத்து + ஐ + கொடு.]

கழுத்தை நீட்டு-தல் *kaḻuttai-nīṭṭu-,* 5 செ.கு.வி (v.i.) ***கழுத்தைக்கொடு*** –பார்க்க; see *kaḻuttai-k-koḍu* காசு வைத்திருப்பவனுக்கெல்லாம் கழுத்தை நீட்ட முடியுமா? (உ.வ.).

[கழுத்து + ஐ + நீட்டு.]

கழுதாழி *kaḷu-tāḷi,* பெ.(n.) பேய்த்தேர்; lit, the devil chariot. *"எழுகழுதாழியினிடையே" (பகவற்சாங்கிய. 22).*

[கழுது + ஆழி. கழுது = பேய். ஆழி =சக்கரம்,சக்கரம் பொருத்திய தேர்.]

கழுதிரதம் *kaḷudiradam,* பெ.(n.) **கழுதாழி** பார்க்க; see *kaḷu-tāḷi. "கனாக் கழுதிரதம்" (சி.சி.6.3.).*

[கழுது + இரதம்.]

கழுது[1] *kaḷudu,* பெ.(n.) 1. பேய்வகை; demon *"கூற்றுக் கொஃறேர் கழுதொடு கொட்ப" (மதுரைக்.633.)* 2. வண்டு (திவா.); beetle.

ம. கழுது

[கழு → கழுது. கழு=தள்ளுதல், நீக்குதல், உதைத்தல், தாக்குதல், கழுது = தாக்குவது, தாக்கித் துன்புறுத்துவது.]

கழுது[2] *kaḷudu,* பெ.(n.) காவற்பரண்;elevated plat form from which fields are guarded against damage from beasts and birds. *"சேணோனிழைத்த நெடுங்காற் கழுதில்" (நற்.276.).*

[கழு = கூரியகோல், நெடுங்கழை,நெடுங்கால். கழு → கழுது= நெடுங்கால்கள் மீது அமைந்த பரண்.]

கழுதுக்குத்தி *kaḷudu-k-kutti,* பெ.(n.) **கடிச்சை** பார்க்க; see *kaḍiccai.*

[கழுது + கத்தி.]

கழுதும்பை *kaḷu-tumbai,* பெ.(n.) கவிழ்தும்பை; dial.

[கவிழ்தும்பை → கழுதும்பை.]

கழுதை *kaḷudai,* பெ.(n.) 1. வெள்ளை நிற மூக்கும் நீண்ட காதுகளும் கொண்ட குதிரை இனத்தைச் சேர்ந்த விலங்கு; domestic ass, donkey. *"வெள்வாய்க் கழுதைப் புல்லினம்" (புறநா.392.9.).* 2. இழித்துப்பேசப் பயன்படுத்தும் வசைச்சொல் லாகவும் அன்பின் மிகுதியால் செல்லமாக அழைக்கப் பயன்படும் சொல்லாகவும் விளங்குவது a term of abuse as well as endearment. *சீ* கழுதை, வாயைமூடு (உ.வ.). 3. தாழ்ந்தது அல்லது இழிந்தது எனச் சுட்டும் அடைமொழி; an epithet to denoting meanness and lowness.

ம. கழுத; **க.**கழுதெ, கத்தெ; **தெ.**காடித; **து.,பட.** கத்தெ; **கை.** கெதி; **துட.** கத்ய்,க்வத்தெ; **கோண்.** கதான்; **கூய்.** கொடொ; **நா.** காட்தி; **கொலா.** கத்தி, காட்தி; **பர்.** கரத்; **குரு.** கத்த; **மா.** கதகொள்ப்; **பிரா.** கத்த. **H.,U.** gadha, gadha; **Mar.**gaddha, gaddhey, gadubha; **Pkt.** gaddaha; **Sind.** gadha gadhano;**Persian.** char; **Kurdish.** kerr; comp the **Laghmani** karatik (female ass). **Gk.** gaidaros; **Indon.** keladai; **Mal.** keldai; **Ori.** gadha. **Skt.** gardabha,khara as ass. compares **T.** kaḷudai an ass. The final bha of gardabha may have arisen from a **D.** sign of the nominative. The original idea of kalte is uncertain. Gardabha appears in Maharatta as gadhava [k.k.e.d.xx].

காள் → காழ் → கழு → கழுதை. காள் காள் என்று கத்துவது கழுதை (தமி.வா. 107).

[கழுது → கழுதை. கள் → கழு = தள்ளுதல், உதைத்தல். கழுதை = உதைப்பது (ஒ.நோ. கழுது = பேய், தாக்குவது).]

கழுதைக்குடத்தி *kaḷudai-k-kuḍatti,* பெ.(n.) **கழுதைப்புலி** பார்க்க; see *kaḷudai-p-puli.*

[கழுதை + கடத்தி = கழுதைக்கடத்தி → கழுதைக் குடத்தி. கடம் = பாலை நிலம். கடத்தி = பாலைநிலத்துக் கொடுவிலங்கு (கழுதைப்புலி).]

கழுதைக்குரல் *kaḷudai-k-kural,* பெ.(n.) நற்குறியாகக் கொள்ளப்படும் அவயக்குரல்; the call of an ass though disagreeable is considered a good omen (சா.அக.).

[கழுதை + குரல்.]

கழுதைக்குளம்படி *kaḷudai-k-kuḷamnaḍi.* பெ.(n.) வட்டக் குளம்படி; plant known as ass's hoof (சா.அக.).

[கழுதைக் குளம்பு + அடி.]

கழுதைக்குளம்பு *kaḷudai-k-kuḷambu,* பெ.(n.) குதிரை வலியைப் போக்கும் கழுதையின் கால் குளம்பு; ass's hoof used for curing convulsions attended with spasm,occurring in women subsequent to their confinement (சா.அக.).

[கழுதை + குளம்பு.]

கழுதைக்குறண்டி *kaḷudai-k-kuṟanḍi,* பெ.(n.) பூனை முட்குறண்டி; a species of plant of the cepidagathis genus.

[கழுதை + குறண்டி.]

கழுதைக்குறத்தி *kaḷudai-k-kuṟatti,* பெ.(n.) **கழுதைப்புலி** பார்க்க;see *kaḷudai-p-puli,* (சா.அக).

[கழுதை + குறத்தி (குறம்(மலை) → குறத்தி).]

கழுதைக்கூத்து *kaḻudai-k-kūttu,* பெ.(n.) எள்ளி நகையாடத் தக்க செய்கை; ridiculous behaviour. கழுதைக் கூத்தாடிக் காரியத்தைக் கெடுத்து விட்டான் (இ.வ.).

[கழுதை + கூத்து.]

கழுதைகடி *kaḻudai-kaḍi,* பெ.(n.) ஒருமூலை இடிந்த வீடு(யாழ்.அக.); house with one corner damaged, considered inauspicious.

[கழுதை + கடி.]

கழுதைத் திசை *kaḻudai-t-tiśai,* பெ.(n.) வடமேற்குத் திசை; north-west direction.கழுதைத் திசையில் தலைவைத்துப்படுக்காதே (உ.வ.).

ம. கழுத திக்கு

[கழுதை + திசை.]

கழுதைத்தும்பை *kaḻudai-t-tumbai,* பெ.(n.) தும்பைச் செடிவகை (பதார்த்த.309.); a low annual plant with many hispid branches, flourishing in dry situation.

[கழுதை + தும்பை.]

கழுதைத்தும்பை

கழுதைப்பாக்கு *kaḻudai-p-pākku,*பெ.(n.) காட்டுப் பாக்கு; wild arecanut plant (சா.அக.).

[கழுதை + பாக்கு. கழுதை = இழிந்தது, மட்டமானது.]

கழுதைப்பாலாட்டங்கொடி *kaḻudai-p-pālāṭṭaṅkoḍi* பெ.(n.) ***கழுதைப்பாலை*** பார்க்க; see *kaḻudaippālai.*

மறுவ. நஞ்சறுப்பான் கொடி

[கழுதைப்பால் + ஆட்டாங்கொடி.]

கழுதைப்பால் போன்ற நீர்மத்தைக் கொண்ட கொடி. இது ஆட்டாங் கொடி யினத்தைச் சார்ந்ததாகும் (சா.அக).

கழுதைப்பாலை *kaḻudai-p-pālai,* பெ.(n.) நஞ்சறுப் பான் கொடி; Indian ipecacuanha.

[கழுதை + பாலை.]

கழுதைப்புலி *kaḻudai-p-puli,* பெ.(n.) வெளிர் மஞ்சளும் சாம்பல் நிறமுங்கலந்த கோடுகளைக் கொண்ட ஓநாய் வடிவினதும் கழுதை போன்று கத்தும் தன்மையதும் புனுகுப்பூனை இனத்தைச் சார்ந்ததுமான காட்டுவிலங்கு; hyaena; it is of a pala yellowish grey colour with stripes though it somewhat resembles the dog in appearance it connects the cat with the civet. It's cry is disagreeable like that of an ass.

மறுவ. கழுதைக் குடத்தி, கழுதைக் குறத்தி.

ம.கழுதப்புலி; தெ.காடிதபுலி.

[கழுதை +புலி.]

கழுதைமத்தி *kaḻudaimatti,* பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish.

ம. கழுத மத்தி

[கழுதெ + மத்தி.]

கழுதைமறி *kaḻudai-maṟi,* பெ.(n.) கழுதைக்குட்டி; young of ass.

[கழுதை + மறி.]

கழுதைமான் *kaḻudaimāṉ,* பெ.(n.) ஒருவகைமான்; a kind of deer.

ம.கழுதமான்

[கழுதை + மான்.]

கழுதைமான்புள்ளி *kaḻudai-māṉ-puḷḷi,* பெ.(n.) செய்ந்நஞ்சைக் கட்டுமோர்வித மூலி; an unknown drug capable of binding or fixing arsenical poisons (சா.அக.).

[கழுதை + மான் + புள்ளி.]

கழுதைமுள்ளி *kaḻudai-muḷḷi,*பெ.(n.) செடிவகை; holly-leaved bear's breech.

ம. கழுமுள், கௌமுள்.

[கழுதை + முள்ளி.]

கழுதையாட்டம் *kaḷudai-y-āṭṭam,* பெ.(n.) ஒருவன் கையிற் சீட்டுக்குவிதலால் அவன் தோல்வியைக் குறிக்குஞ் சீட்டாட்ட வகை; a card game where an accumulation of cards in one's hand signifies one's defeat.

மறுவ: தழைவாரி

[கழுதை + ஆட்டம்.]

கழுதையூர்தி *kaḷudai-y-ūrdi,* பெ.(n.) கழுதையை ஊர்தியாகக்கொண்ட பெண் தெய்வம், மூதேவி (பிங்.); goddess of ill-luck who rides an ass.

[கழுதை + ஊர்தி – கழுதையூர்தி.]

கழுதைவாகினி *kaḷudai-vāgiṉi,* பெ.(n.) ***கழுதையூர்தி*** பார்க்க; see *kaludai-y-ūrdi.* *"நிணத்தசையில் வீழும்... கழுதை வாகினி பதாகை" (இரகு.திக்கு.112.).*

[கழுதை + வாகினி.]

கழுதைவிடை *kaḷudai-viḍai,* பெ.(n.) மரவகை; bloody drop ordure tree.

[கழுதை +விடை.]

கழுதை விரியன் *kaḷudai-viriyaṉ,* பெ.(n.) கருப்பு நிறமுடையதும், நீளமாக வளர்வதும், கடித்தால் கொல்லக்கூடிய நச்சுத் தன்மையுள்ளதுமான விரியன் பாம்புவகை; ass viper of the family of viperidae. It is of black colour and grows up to a large size. Its bite is deadly.

[கழுதை + விரியன்.]

கழுந்தன் *kaḷundaṉ,* பெ.(n.) கழுந்துபோற் பருத்து அறிவு மழுங்கினவன்; stout person without brains as the smooth end of a pestle. *"கழுந்தரா யுன்கழல் பணியாதவர்" (கம்பரா.தனியன்.9.).*

[கழு → கழுந்தன்.]

கழுந்தாக்கு–தல் *kaḷundākku-,* 5 செ.கு.வி.(v.i.) பலகையில் பொருத்துவாய் உண்டாக்குதல் (வின்.); to make tenons for dovetailing.

[கழுந்து + ஆக்கு.]

கழுந்தி *kaḷundi,* பெ.(n.) 1. முத்து(அக.நி.); pearl. 2. கரும்பு; sugarcane.

[கழு → கழுந்தி.]

கழுந்து *kaḷundu,* பெ.(n.) 1. உலக்கை, வில் முதலிய வற்றின் திரண்ட நுனி; rounded end as of pestle or of bow. *"கழுந்துடை வரிசிலை" (கம்பரா. கிளை.26.).* 2. முருட்டுத்தனம்; rashness, rudeness. *"கழுந்துறுமவுணர்"(கந்தபு.காசிபன்பு.25.).* 3. மரவயிரம்(வின்.); heart or core of a tree. 4. பலகைகளின் பொருத்துக்கூர்; tenon. கழுந்தாக்குதல் (யாழ்.அக.).

ம. கழுன்னு

[கழு → கழுந்து.]

கழுந்துலக்கை *kaḷundu-lakkai,* பெ.(n.) நெல் குற்றுவதற்கு உதவும் பூணில்லாத உலக்கை (திருநெல்.); pestle without ferrule, used in husking paddy, as dist.fr. tiṭṭulakkai.

[கழுந்து + உலக்கை.]

கழுநர் *kaḷunar,* பெ.(n.) அழுக்கு, கரிசு (பாவம்) முதலியவை கழுவுவோர்; those who wash away dirt or sin. *"பாரகங் கழுநர்போல பரூஉத்தடி பலரு மேந்தி" (சீவக.2771.).*

[கழுவு + நர் – கழுவுநர் → கழூஉநர் → கழுநர்.]

கழுநீர்[1] *kaḷu-nīr,* பெ.(n.) 1. செங்குவளை; purple Indian water-lily. *"கழுநீர்மாலை ஏலுடைத்தாக எழில்பெற அணிந்தும்" (திருவாச.2.113.).* 2. கருங்குவளை; blue Indian water lily. *"வள்ளிதழ்க் கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை" (சிறுபாண்–41–42).* 3. குவளை மலர்பூக்கும் கொடிவகை; water lily.

ம. கழுநீர்; **க.** கலுவெ; **கெ.**கலுவ.

[கழு + நீர்.]

கழுநீர்[2] *kaḷu-nīr* பெ.(n.) 1. அரிசி கழுவிய நீர்; water in which rice has been washed. *"கழுநீருட் காரட கேனும்" (நாலடி,217.).* 2. தீவினையைக் கழுவுதற்குரிய தூய்மையான நீர்; sacred water for cleaning away sin, as that of the Ganges. *"கழுநீர் கொண்ட வெழுநாளந்தி" (மதுரைக்.427.).*

ம. கழிநீர்; **க.** கழி (புளித்த கஞ்சி); **தெ.** கடுகுநீரு; **பட.** கோநீர்.

[கழுவு + நீர் – கழுவுநீர் → கழுநீர்.]

கழுநெற்றி *kaḷuneṟṟi,* பெ.(n.) அகலமான நெற்றி; broad forehead (சேரநா.).

ம. கழநெற்றி, கழுநெற்றி.

[கழு + நெற்றி.]

கழுப்பற்றை *kaḻu-p-paṟṟai,* பெ.(n.) புற்கரடு (வின்.); tut of grass, turf.

[கழு + பற்றை.]

கழுப்பாணி *kaḻuppāṇi,* பெ.(n.) எதற்கும் பயன் படாதவன்; one who is good for nothing.

[கழுக்காணி → கழுப்பாணி.]

கழுப்பு *kaḻuppu,* பெ.(n.) சுணக்கம் (சம்.அக.); delay.

[கள் → கழு → கழுப்பு.]

கழும் *kaḻum,* பெ.(n.) மயக்கம்; mental delusion. *"கழுமென் கிளவி மயக்கஞ்செய்யும்" (தொல்.உரி.53).*

[குள் → குழு → கழு → கழும் (மு.தா.177.).]

கழுமணி *kaḻu-maṇi,* பெ.(n.) கடைந்த தூய்மையாக் கப்பட்ட செம்மணி; a spotless gem; polished gem. *"கழுமணியே யின்னும் காட்டு கண்டாய்" (திருவாச. 6,27.).* 2. தூய்மை செய்த சங்குமணி; polished beads made of conch (சா.அக.).

[கழுவு + மணி – கழுமணி → கழுமணி.]

கழுமம் *kaḻumam,* பெ.(n.) குற்றம்; fault. *"கழுமமி னெஞ்சகம்" (காஞ்சிப்பு.பன்னிரு.93.).*

[கள் → கழு → கழுமம். கள் = குற்றம்.]

கழுமரம் *kaḻu-maram,* பெ.(n.) கழுவேற்றுவதற்கு நடப்பட்ட மரம்; impaling stake.

ம. கழுமரம்

E. gallows; **Oe.** galgo; **G.**k.galwos; galgerv.

[கழு + மரம்.]

கழுமல்[1] *kaḻumal,* பெ.(n.) 1. மயக்கம்; confusion, fascination, delusion. *"கழுமலெய்திய காதற் றோழன்"* (திருக்கோ.28.கொளு.). 2. பற்றுகை (சூடா.); seizing. 3. நிறைவு (சூடா.); fulness.4. மிகுதி(சூடா); abundance.5. இணைப்பு; joint.

[கழு → கழுமல்.]

கழுமல்[2] *kaḻumal,* பெ.(n.) மாதுளை; common pomegranate (சா.அக.).

[கழு → கழுமல்.]

கழுமலம் *kaḻu-malam,* பெ.(n.) 1.திருஞான சம்பந்தர் பிறந்த ஊர்; the birth place of Thirugnana sambandar. *"கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை" (தேவா. 127–12).* 2. சீர்காழியின் பன்னிரு பெயர்களுள் ஒன்று; one of the twelve names for Sīrgali, a Saiva shrine in Tanjore district. கருங்குவளை கருநெய்தல் கண்காட்டும் நாட்டி லுள்ள ஊர்; name of an ancient town in the cera country. *"நற்றேர்க் குட்டுவன் கழுமலத் தன்ன" (அகநா.270–9).*

மறுவ. சீர்காழி, திருப்பிரமபுரம், திருப்புகலி, திருச்சிரபுரம், திருச்சண்பை நகர், திருப்புறவம், திருப்பூந்தராய், திருவேணுபுரம், இருதோணிபுரம், திருக்கொச்சைவயம், திருவெங்குரு.(பெரியபு. திருஞான.14)

[கழுவுமலம் → கழுமலம்.]

கழுமலை *kaḻu-malai,* பெ.(n.) பிணக்குன்று; mound of carecasses. *"கன்டவிடமெடலலாம் கழுமலை யாக்குவே னென்றாரிறே" (திவ்.பெரியாழ்.4.3.7. வ்யா.பக்941.).*

[கழு +மலை. கழு = கழுவிலேற்றப்பட்ட பிணம்.]

கழுமு[1]**–தல்** *kaḻumu-,* 5. செ.கு.வி (v.i.) 1. சேர்தல்; to join, unite. *"பெண்டிர்...செந்தீக் கழுமினார்" (பு.வெ.7.28.)* 2. பொருந்தியதாதல்; to be fitting, suited. *"கழுமிய காதல்" (பு.வெ.10.முல்லைப்.5. கொளு)* 3. திரளுதல்; to come together, to crowd. *"மென்புகை கழுமு சேர்க்கை" (சீவக.1350.).* 4. கலத்தல்; to mix together. *"கழுமிய ஞாட்பு" (தொல்.சொல்.351.உரை.).* 5. நிறைதல்; to be full, complete. *"கழுமிற்றுக் காதல்" (சீவக.1870.).* 6. மிகுதல் (சூடா.); to be abundant, copious plentiful, to overflow. 7. மயங்குதல்; to be fascinated, bewildered,confused. *"கழுமிக் கோதை கண் படுக்கும்" (சீவக.349.).*

தெ. க்ரம்மு; **கூய்.** தர்ச்

[கழு → கழுமு]

கழுமு[2] *kaḻumu,* பெ.(n.) 1. கலப்பு (தொல்.சொல். 351.); combination, mixture. 2. திரட்சி. (தொல். சொல்.351.உரை.); denseness as of the tuft of hair.

[கல் → கல → கழ → கழு → கழுமு]

கழுமுள் *kaḷu-muḷ*, பெ.(n.) 1. ***கழுக்கடை***[1] (சூடா.) பார்க்க; see *kaḷu-k-kaḍait.* 2. படைக்கலன் (திவா.); weapon. 3. ***மாதுளை*** (திவா.) பார்க்க; see *māduḷai.*

ம.கழுமுள்

[கழு + முள்]

கழுமோது-தல் *kaḷu-mōdu-*, 5 செ.கு.வி.(v.i.) தரையிற் புற்பற்றை அடித்தல்; to cover the ground with green sods, to turf.

[கழு + மோது]

கழுவஞ்சம்பா *kaḷuvañ-cambā*, பெ.(n.) ஆறு மாதத்தில் விளையும் நெல்வகை (விவசா.நான்மு.2.); a kind of paddy maturing in six months.

[கழுவம் + சம்பா. சம்பு – சம்பா.]

சம்பு என்பது சிறந்த நெல்வகைக்கும் சிறந்த கோரை வகைக்கும் பொதுப் பெயர். ஓங்கி வளர்ந்த சம்பாநெற் பயிரும் சம்பங் கோரையும் ஒத்த தோற்றமுடையன வாயிருத்தல் காண்க. நெல்லைக்குறிக்கும் சம்பு என்னும் பெயர் இன்று சம்பா என வழங்குகின்றது. உகரவீற்றுச் சொற்கள் ஆகார வீறு பெறுவது இயல்பே[எ.டு]கும்பு–கும்பா,தூம்பு–தூம்பா, குண்டு–குண்டா. கும்புதல் = திரளுதல் [சொ.ஆ.கட்.21.].

கழுவடிக்கறுப்பன் *kaḷu-v-aḍi-k-kaṟuppaṉ*, பெ.(n.) ***கழுவடியான்*** பார்க்க; see *kaḷuvaḍiyāṉ.*

[கழு + அடி + கறுப்பன்.]

கழுவடியான் *kaḷu-v-aḍiyāṉ*, பெ.(n.)கழுவடியில் ஆளுயரத்தில் கழியில் நிறுவப்பட்டுள்ள ஒரு சிறுதெய்வம். 5 (இ.வ.); a demon represented by a pole of the height of a man, on a raised platform beside an impaling stake.

[கழு + அடியான்.]

கழுவண்டம் *kaḷuvaṇḍam*, பெ.(n.) மருத்துவ முப்பு; a universal agent composed of three salts used in medicine (சா.அக.).

[கழு + அண்டம்.]

கழுவல் *kaḷuval* பெ.(n.) மழைநீர்வழிந் தோடும் நிலம்; terrain to drain rain water.

[கழி → கழு→ கழுவு + அல்.]

கழுவறை-தல் *kaḷu-v-aṟai-*, 4 செ.கு.வி.(v.i.) ***கழுமோது-***, பார்க்க; see *kaḷu-mōdu-*,

[கழு + அறை.]

கழுவன் *kaḷuvaṉ*, பெ.(n.) 1. பொய்யில் நிலைப்பவன், கொடுந்தீயன்; daring villain, wretch, as deserving the stake. அவன் கழுவனாய்ச் சாதிக்கிறான் (கொ.வ.). 2. கழுவேறினவன்; One impaled.

ம. கழுவன்

[கள் → கழு → கழுவன்.]

கழுவாணி *kaḷu-v-āṇi*, பெ.(n.) கழுவிலுள்ள இருப்பு முள் (வின்.); iron point of an impaling stake.

[கழு + ஆணி → கழுவாணி.]

கழுவாநெஞ்சன் *kaḷuvā-neñjaṉ*, பெ.(n.) நெஞ் சுறுதியுள்ளவன் (இ.வ.); hard-hearted man.

[கழு → கழுவம் + நெஞ்சன் → கழுவநெஞ்சன் கழுவாநெஞ்சன்.) கொ.வ.).]

கழுவாய் *kaḷu-vāy*, பெ.(n.) தீங்கொழிப்பு, தீவினையைப் (பாவத்தைப்) போக்கிக்கொள்ளுகை; ஆதனைத் தூய்மைப் படுத்துகை; purification, expiation from sin. *"வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென" (புறநா.34,4,).*

[கழு + வாய். 'வாய்' சொல்லாக்க ஈறு ஒ.நோ.எழுவாய்.]

கழுவாய்நிலம் *kaḷu-vāy-nilam*, பெ.(n.) புற்பற்றை எடுக்கக்கூடிய நிலம் (வின்.); green fields from which sods are taken.

[கழுவாய் + நிலம்.]

கழுவிக்குளிப்பாட்டு-தல் *kaḷuvi-k-kuḷippāṭṭu-*, 5 செ.குன்றாவி.(v.t.) பிணத்தை நீராற் கழுவுதல் (இ.வ.); to wash a corpse.

[கழுவி + குளிப்பு + ஆட்டு-.]

கழுவிழுங்கி *ka-ḷu-viḷuṅgi*, பெ.(n.) சோம்பேறி (இ.வ.); sluggard.

[கழு + விழுங்கி.]

கழுவு–தல் *kaḻuvu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. நீரால் தூய்மையாக்குதல்; to wash, cleanse by washing, rinse, purify. *"கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால்" (குறள்,840.).* 2. நீக்குதல்; to remove. *"அருவினை கழூஉ மாதி முதல்வன்" (மணிமே.12,36.).*

ம. கழுவுக, கழுகுக; **க.** கர்சு, கச்சு; **கோத.** கழ்த்; குட. கத்த். **தெ.** கக்கி, கடுகு, கட்கூ, கடுவு, கட்வு; **கூய்.** கடுப், **குவி.** க்லாபினை; **குரு.** கச்ச்னா; **மால்.** கசெ.

[கள் → கழு → கழுவு–.]

கழுவு[2]–தல் *kaḻuvu-,* 5செ.குன்றாவி.(v.t.) வட்டாக உருக்குதல்; to melt iron and mould as ingot. *"இரும்பறக் கழுவி" (சிவக.698.).*

[கள் → கழு → கழுவு–.]

கழுவுநீர் *kaḻuvu-nīr,* பெ.(n.) புண்கழுவும் மருந்து நீர். (mod.); lotion.

[கழுவு + நீர்.]

கழுவுப்பற்றை *kaḻuvu-p-paṟṟai,* பெ.(n.) ***கழுப்பற்றை*** பார்க்க; see *kaḻu-p-paṟṟai.*

[கழுவு + பற்றை.]

கழுவுணி *kaḻu-v-uṇi,* பெ.(n.) ***கழுவிழுங்கி*** பார்க்க; see *kaḻuviḻuṅgi.*

[கழு + உண்ணி → உணி (இடைக்குறை).]

கழுவெண்ணெயுருக்கி *kaḻuveṇṇey-urukki,* பெ.(n.)1. பிடித்தபிடி விடாது மனம்போல பணியாற்றுபவ–ன்–ள். (யாழ்.அக.); one who persists pertinaciously in his work. 2. கொடியவ–ன்–ள்; cruel person.

[கழு + வெண்ணெய் + உருக்கி.]

கழுவெளி *kaḻu-veḷi,* பெ.(n.) ***கழுவாய் நிலம்*** (வின்.) பார்க்க; see *kaḻuvāy-nilam.*

[கழு + வெளி.]

கழுவேற்றம் *kaḻu-v-ēṟṟam,* பெ.(n.) கழுவில் ஏற்றுகை; impalement.

[கழு + ஏற்றம் – கழுவேற்றம்.]

கழுவேற்றி *kaḻuvēṟṟi,* பெ.(n.) கழுவேற்றுபவன்; one who executes the impalement.

[கழு + ஏற்றி.]

கழுவேற்று–தல் *kaḻuvēṟṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) கழுவினில் ஏற்றிக் கொல்லுதல்; to impale. *"வெங்கழுவேற்றுவா னிவ்வேந்தனே" (பெரியபு. திருஞான.798.).*

ம. கழுவேற்றுக

[கழு + ஏற்று. ஏ → ஏற்று.]

கழுவேறி *kaḻuvēṟi,* பெ.(n.) 1. கழுவேறினவன்; a malefactor, one impaled. 2. ***கழுவன்*** (வின்.) பார்க்க; see *kaḻuvaṉ.*

ம. கழுவேறி

[கழு + ஏறி – கழுவேறி.]

கழுவேறு–தல் *kaḻuvēṟu-,* 5 செ.குவி.(v.i.)1. கழுவின் கூரிய முனை உடலில் குத்தி ஊடுருமாறு செய்தல்; to be impaled. 2. பிறர் துன்பத்தைத் தாங்குதல்; to partake voluntarily in another's sufferings through friend-ship. *'கழுவேறத் துணிந்த நீலி கண்ணில் மைஇட்டதற்கு கரிக்கிறது என்கிறாளாம்' (பழ.).*

ம. கழுவேறுக

[கழு + ஏறு.]

கழை[1] *kaḻai,* பெ.(n.) 1. மூங்கில் (திவா.); spiny bamboo. *"கழைமாய் நீத்தம் காலை ஆர்ப்ப" (நற். 7).* 2. மூங்கிற்குழாய்; bamboo bottle. *"கழைபெய் தீந்தயிர்" (மலைபடு.523).* 3. வேய்ங்குழல்; musical bamboo-pipe. *"கண்ணன் மலர்வாய்க் கழைபெறிந்து" (சிவப். பிரபந். வெங்கையு 98.).* 4. கழைக்கூத்து; pole dance. *"கழைபா டிரங்கப் பல்லியங் கறங்க" (நற். 95.).* 5. கரும்பு (திவா.); sugarcane. *"கழைகண்டன்ன தூம்புடைத் திரள்கால்" (அகநா.176).* 6. தூம்பு என்னும் மூங்கிலாலி என்றவோர் இசைக்கருவி (அகநா. 398. உரை); a kind of musical instrument. *"வாங்கமைக் கழையின் நரலும்" (அகநா. 398).*

மறுவ. மூங்கில், புல்.

க.கழிலெ, களிலெ, களலு, களலெ, களிலு, களிலெம்; **து.**கணிலெ; **பர்.** களீர; **தெ.**,கட.,**ம.** கழ; **பட.** கணெ; **Pkt.** karilla.

(தொழு வாயிலை அடைக்கும் கம்பு)

[குல் → கல் → கழ → கழை = மூங்கில், மூங்கில் போன்ற பயிரி.]

கழை[2] *kaḻai,* பெ.(n.) 1. ஓடக்கோல்; pole used for propelling boats. *"கழை நிலை பெறாஅக் காவிரி நீத்தம்" (அகநா.6).* 2. குத்துக்கோல், கோல்; elephant - goad, pole. *"கழை காண்டலுஞ் சுளியுங் களியானை" (திருக்கோ. 111). "இலங்கு பூங்கரும் பின் ஏர்கழை இருந்த வெண்குருகு நரல வீசும்" (அகநா.13.).* 3.தண்டு; stem of sugarcane; shaft of a bamboo. *"நெடுவரை ஆடுகழை யிருவெதிர்" (அகநா. 27.). "ஓங்கு மலை அடுக்கத்து ஆடுகழை நிவந்த பைங்கண் மூங்கில்" (நற். 28.).*

[கழை¹ → கழை².]

கழை[3] *kaḻai,* பெ.(n.) ஏழாவது விண்மீன் (புனர்பூசம்); the seventh asterism punarpusam *"திங்கட ருங்குழை சோனை" (விதாந. குணாகுண. 11).*

[குழு → கழு → கழை.]

கழைக்கூத்தன் *kaḻai-k-kūttaṉ,* பெ.(n.) ***கழைக்கூத் தாடி*** (திவா.) பார்க்க; see *kaḻai-k-kūttāḍi.*

[கழை + கூத்தன்.]

கழைக்கூத்தாடி *kaḻai-k-kūttāḍi,* பெ.(n.) மூங்கிற் கழியைப் பயன்படுத்திக் கூத்தாடுவோன்; pole-dancer, rope-dancer.

[கழை + கூத்து + ஆடி.]

கழைக்கூத்து *kaḻai-k-kūttu,* பெ.(n.) மூங்கிலில் நின்றாடுங் கூத்து; bamboo pole-dancing. *"மோகன மாடக் கழைக்கூத்தாட" (தனிப்பா. 1,235,1.).*

[கழை + கூத்து.]

கழைக்கூத்து

கழைஞ்சு *kaḻaiñju* பெ.(n.) ***கழஞ்சு*** பார்க்க; see *kaḻaiñju "நிறை ஊர்க்கல்லால் நானூற்றுக் கழைஞ்சு" (S.I.I.vol.19. insc. 107.).*

[கழஞ்சு → கழைஞ்சு.]

கழைதின்யானையார், *kaḻaidiṉ-yāṉai-yār,* பெ.(n.) *"கழைதின் யானை"* என்ற தொடரைப் பயன்படுத்தி வல்வில் ஓரியைப் பாடிய பெயரறியப்படாத கடைக்கழகப் புலவர் (புறநா. 204); unknown Sangam poet known by one of the catching phrases used by him in his poems.

[கழை + தின் + யானை + ஆர். கழை = கரும்பு. 'ஆர்' உயர்வுப் பன்மையீறு.]

கழைந்து *kaḻaindu,* பெ.(n.) ***கழஞ்சு*** (T.A.S.i.9.) பார்க்க; see *kaḻañju.*

[கழஞ்சு → கழைந்து (கொ.வ.).]

கழைநெல் *kaḻainel,* பெ.(n.) மூங்கிலரிசி; bamboo seed. *"போகுயர் நீள்கழை நெல்லும்" (சீவக. 1422.).*

[கழை + நெல்.]

கழைமுத்தம் *kaḻaimuttam,* பெ.(n.) மூங்கிலிற் பிறந்த புகைநிற முத்து; a dark brown coloured pearl supposed to be formed in a bamboo.

[கழை + முத்தம். முத்து → முத்தம்.]

கழைவளர்தூம்பு *kaḻaivaḷartūmbu,* பெ.(n.) யானைத்துதிக்கை வடிவில் மூங்கிலால் செய்யப்பட்ட இசைவளரும் பெருவங்கியம்; long wind-instrument like an elephant's trunk, made up of bamboo. *"கழைவளர் தூம்பின் கண் ணிடம் இமிர" (மலைபடு. 533).*

[கழை + வளர் + தூம்பு.]

கள்[1]**–தல்** *kaḷ-,* 6 செ.குன்றாவி.(v.t.) 1. களைபிடுங்குதல்; to weed. *"ஏரினும் நன்றால் எருவிடுதல் நட்டபினீரினு நன்றதன் காப்பு" (குறள். 1038.).* 2. பறித்தல் (சூடா.); to pluck. 3. திருடுதல்; 5.115.); to rob, steal. *"கட்போ ருளரெனின்" (சிலப்.)* 4. ஏய்த்தல் (பிங்.); to deceive, entertain furtive designs upon.

ம. கள்க்குக, கக்குக; **கோத.** கள்வ்; **துட.** கொள்; **குட.** கள்; க.கள்; து.களு; **தெ.**கல்லெ; பட.கல்லு; கோண். கல்லானா; குரு கா்னா; **மா.**கலெ.

[குல (குத்தல் கருத்துவோ்) → கல் = கல்லுதல், தோண்டுதல், பறித்தல்.]

கள்[2] *kaḷ,* பெ.(n.) களவு (சூடா.) stealing, theft, robbery.

க.கள்

[கல் → கள்¹ → கள்²]

கள்[3] *kaḷ,* பெ.(n.) 1. புளிக்க வைத்த பனை, தென்னை போன்றவற்றின் வடிநீர்.; the fermented sap, vinous liquor. *"கட்காதல் கொண்டொழுகுவார்" (குறள். 921.).* 2. கள்ளிற்கினமான தேன்; the saccharine juice formed in flowers; honey. *"கள்ளார்ந்த பூங்கொன்றை" (தேவா.1581.).* 3. தேனுண்ணும் வண்டு; bee *"கள்ளின மார்த்துண்ணும் வன்கொன் றையோன்" (திருக்கோ.295).*

மறுவ. சுடிகை, சுண்டம், சுண்டை.

ம., க., பட. கள், கள்ளு; **தெ.**கல்லி; கோத.கள்; **குட.** கள்ளி; **து.**கலி; கோண்.கல்; **நா.**கள்; **கூ.**கலு; **குவி.** காரு.

Skt. kalyā; **Pkt.** Kallā; **H.**kal(w)ār; kalāl, **Mar., Guj.** khilo.

[குல் → கல் → கள் : திரட்சி, ஊறி நிரம்பிய தேன் (மு.தா.196), வ.பொ.ச. 50.]

கள்வகைகள்: தென்னங்கள், பனங்கள், ஈச்சங்கள், வேப்பங்கள், அத்திக்கள், அரசங்கள், சப்பாத்துக்கள், கூந்தற்பனைக்கள்.

கள் என்னும் சொல் வெறிநீர், பதநீர் (தெளிவு அல்லது பனஞ்சாறு) மட்டு (சர்பத்து), தேன் என்னும் நால்வகையையுங் குறிக்கும். இந்த நான்கையும் பயன்படுத்தினர் பண்டைத் தமிழர். இவற்றுள் வெறிநீர் வகையே வள்ளுவரால் கள்ளுண்ணாமை என்னும் அதிகாரத்திற் கண்டிக்கப்பட்டது.

வெறிநீர், இயற்கைக் கள்ளும் செயற்கைக் கள்ளும் என இருவகைத்து. பனங்கள்ளும் தென்னங்கள்ளும், ஈச்சங்கள்ளும் இயற்கை. அரிசிச்சோற்று நீரைப் புளிக்கவைத்து அரிக்கப் பட்ட அரியலும், மேனாடுகளினின்று புட்டிகளில் வந்த மதுக்கள்ளும் செயற்கை (பண்.நா.ப. 42.).

கள்[4] *kaḷ,* இடை (part) 1. பன்மை ஈறு; a plural surfix (usually of neuter). *"வாய்ச்சொற்க ளென்ன பயனுமில" (குறள். 1100).* 2. அசைநிலை; an expletive. *"சுட்டுங்களன்றே" (சீவக. 2773).*

[குல் (கூடுதற் கருத்துவேர்) → கல் → கள் (திரட்சி, தொகுதி).]

க. கள், களு; **ம.** கள்; **தெ.** குலு. லு, ளு; **குவி.** க; **கோண்.** க; பிரா. க், கள்; **பட.** கொ; **கோத.** கொளு.

பன்மையீறு மொழியில் பழமையுணர்த்தற்குத் தொகுதிப் பெயர்களின் ஈற்றில் சேர்க்கப் படுகிறது.

கா. : gin = man. kiai = whole or totality.

gin - kiai = men. i = stranger. Pei = class. i = Pei - strangers. ngo - I. che = assembly. ngo -che. = we. தமிழில் 'கள்' ஈறு இங்ஙனம் தோன்றியதே (ஒ.மொ.நூ. 281.).

கள் ஈறு பலவின் பாற்குரியதென்று,

"கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே"

என்ற நூற்பா வரையறுக்கினும், இவ்வீறு பெற்ற 'மக்கள்' என்னும் சொல் தொல்காப்பியர் காலத்திலேயே உயர்திணை குறித்தமை, "உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே" என்பதினா லறியப்படும். மக்கள் என்பது பலர்பால் வினைகொண்டு முடிதலின் தொகுதிப் பெயரன்றிப் பலர்பாற் பெயரே. மக + கள் = மக்கள். இது மரூஉப் புணர்ச்சி. மகவு என்னும் பெயர் குழந்தையைக் குறித்தலாலும், பகுத்தறிவில்லாத குழந்தை அஃறிணையின் பாற்பட்டதே யாதலாலும், மரபியலில் குரங்குக் குட்டிக்கும் மகவுப் பெயர் கூறப்பட்டிருத்தலாலும், முதலில் அஃறிணை மரபிற் சிறு பிள்ளைகளைக் குறித்த மக்கள் என்னும் பெயர் பிற்காலத்தில் ஒருவனின் மக்களான பெரியோ ரையும், ஓர் ஊர்த்தலைவனின் மக்களான பொது மக்களையும் குறிக்கத் தலைப்பட்டதென்று கொள்ள இடமுண்டு. முதுபண்டைக் காலத்தில் ஒவ்வோர் ஊரும் ஒவ்வொரு பெருங் குடும்பமாயிருந்து அவ்வக் குடும்பத் தலைவ ராலேயே ஆளப்பட்டு வந்தமை நோக்குக. மக்கள் என்னுஞ் சொல் முதன் முதல் அஃறிணை குறித்தமை கருதியே "மக்கள் என்னுஞ் சொல்லாற் சுட்டப்படும் உயர்குலம்" என்னும் கருத்தில் மக்கட்சுட்டென்று கூறியிருக்கலாம் தொல்காப்பியர் (பாவாணர். தொ.சொல். 169.அடிக்குறிப்பு).

கள்[5] *kaḷ,* பெ.(n.) முள்; thron.

[குள் → கள். குள் : குத்தல் (வ.மொ.வ.10).]

கள்[6] *kaḷ,* பெ.(n.) 1. மருதநிலம் (அக.நி.); agricultural region. 2. பொய்கை; tank.

[குல் → கல் → கள். தாழ் நிலம்.]

கள்மரம் *kaḷmaram,* பெ.(n.) கள்ளைத்தரக்கூடிய மரங்களான பனை தென்னை மரங்கள்; toddy-drawing trees, palmyra tree (சா.அக.).

[கள் + மரம்.]

கள்வம்[1] *kaḷvam,* பெ.(n.) திருட்டுச்செயல்; act of thieving. *"திருவளர் சோலைத் தென் நாட்கரை யென்னப்பன் கருவளர் மேனி என் கண்ணன் கள்வங்களே" (திவ். திருவாய். 9.6.5.).*

[களவு → கள்வம் (வே.க.129.).]

கள்வம்[2] *kaḷavam,* பெ.(n.) கவர்ச்சியுள்ளது; that which is charming, attractive. *"கள்வப் பணிமொழி நினைதொறு மாவிவேமால்" (ஈடு. 10,3,4. ஜீ.பக்.93).*

[கள் → கள்வம்.]

கள்வர்கள்வன் *kaḷvarkaḷvaṉ,* பெ.(n.) சுவரன் மாறனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று; one of the titles of Suvaranmāran (கல்.அக.).

[கள்வர் + கள்ளன். கள்வன் → களவன் → களவரர் = (களப்பிரர்) களவர்க்குத் தலைவனான கள்வன்.]

கள்ளன் → கள்வன்.

இவன் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு இரண்டாம் நந்திவர்ம பல்லவனின் கீழிருந்து ஆட்சி செய்தவன். முத்தரையர் இனத்தைச் சார்ந்தவன்.

கள்வன்[1] *kaḷvaṉ,* பெ.(n.) 1. திருடன்; thief, robber *"என்னுள்ளங் கவர் கள்வன்" (தேவா. 1.1.).* 2. தீயவன்; a rogue, a bad fellow. 3. பொய்யுரைப்பவன், ஏமாற்றுபவன்; a liar, deceiver. *"கடைக்கணாற் கொல் வான் போல் நோக்கி நகைக்கூட்டஞ் செய்தானக் கள்வன் மகன்" (கலித். 51,15,16.).* 4. உள்ளங்கவர் பவன்; one who admires *"என்னுள்ளங் கவர்கள்வன்" (தேவா. 1:1.).*

ம. கள்ளன், களவன், களமன்; **க., பட., உரா.** கள்ள; **துட.** கெளு; **கசபா.** கள்ள, கள்ளா.

Skt. kalama; **Heb.** ganar; **Yid.** ganev; **Gk.** kleftis.

[கள்ளுதல் = திருடுதல். கள் → களவு → கள்வு → கள்வன்.]

த.கள்வன் >skt. kalam (வ.மொ.வ.111).

கள்வன்[2] *kaḷvaṉ,* பெ(n.) இடையீட்டாளர்; mediator.

[களம் → களவன் → கள்வன் (கொ.வ.).]

கள்வன்[3] *kaḷvaṉ,* பெ.(n.) 1. கரிய யானை (பிங்.); elephant. 2. கரியவன் (பிங்.); dark black person. 3. கருநண்டு; crab. *"புள்ளிக் கள்வன் ஆம்ப லறுக்கும் தண்டுறை யூரன்" (ஐங்குறு.21.).* 4. நண்டு வடிவான (கடக) ஓரை; karkadagam, cancer of the zodiac. 5. ஏய்ப்பவன்; deceitful or cunning person.

[கள் → கள்வன். கள் = கருமை.]

கள்வி *kaḷvi,* பெ.(n.) 1. திருடி; women thief. 2. ஏய்ப்பவள்; cunning woman. 3. மனமடக்கமுள்ளவள்; one who is able to conceal her mind. *"வெள்ளநீர்க் கிடந்தாயென்னும் எனக்கள்விதான் பட்ட வஞ்சனையே" (திவ். திருவாய். 2,4,7.).*

ம.,பட. கள்ளி; **க.**கள்ளதி

[கள் → கள்ளி.]

கள்விலைஞன் *kaḷ-vilaiñaṉ,* பெ.(n.) கள்விற்போன் (திவா.); toddy-seller.

மறுவ. படுவர், பழையர், பிழியர், கவுண்டியர், துவசர்.

[கள் + விலைஞன். விலை + ஞ் + அன். 'ஞ்' சாரியை.]

கள்விலையாட்டி *kaḷ-vilai-y-āṭṭi,* பெ.(n.) கள்விற்பவள்; she who sells toddy. *"கள்விலையாட்டி மறுப்பப் பொறாமறவன்" (சிலப்.12, உரைப்பாட்டுமடை, 13.பாடல்).*

[கள் + விலை + ஆட்டி.]

கள்விற்போர் *kaḷviṟpōr,* பெ.(n.) **கள்விலைஞன்** பார்க்க; see *kaḷvilaiñaṉ.*

[கள் + (விற்பவர்) விற்போர்.]

கள்வெறி *kaḷveṟi,* பெ.(n.) குடிவெறி; drunkenness.

[கள் + வெறி.]

கள்ள *kaḷḷa,* இடை.(part.) ஓர் உவம உருபு; a particle of comparison *'கள்ள மதிப்பவெல்ல வீழ" (தொல். பொருள் 289.).*

உல் – உ → உத்தல் = பொருந்துதல்.

உத்தி = விளையாட்டில் இருவர் சேர்ந்து வரும் சேர்க்கை, அறிவிற்குப் பொருத்தமான இலக்கண நெறிமுறை.

உல் ஒல், ஒல்லுதல் = பொருந்துதல். ஒல் → ஒன். ஒன்னுதல் = பொருந்துதல். ஒல் → [ஒன்] → ஒண் → ஒண்ணுதல் = பொருந்துதல். ஒன் → ஒட்டு. ஒல் → ஒ. ஒத்தல் = பொருந்துதல். குல் → குலவு, குலவுதல் = கூடுதல். குல் → [குள்] → கள். கள்ளுதல் = நந்தல், கூடுதல். கள்ள = போல [தமிழ். வர. பக். 79.80.].

கள்ளக்கடத்தல் *kaḷḷa-k-kaḍattal,* தொ.பெ.(vbl.n.) பொருள்களைத் திருட்டுத்தனமாக ஓரிடத்திலிருந்து

மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்லுதல்; smuggling.

ம. கள்ளக்கடத்து

[கள்ள + கடத்தல்.]

கள்ளக்கடவி *kaḷḷa-k-kaḍavi,* பெ.(n.) கொடி நெல்லி; gooseberry creeper said to possess refuvenating virtue (சா.அக.).

[கள்ள(ம்) + கடவி.]

கள்ளக்கடவு *kaḷḷakaḍavu,* பெ.(n.) திருட்டுவழி; secret passage.

பட. கள்ளதாரி

[கள்ளம் + கடவு.]

கள்ளக்கடை[1] *kaḷḷa-k-kaḍai,* பெ.(n.) திருட்டுப் பொருளை விற்குங்கடை; a repository of stolen goods.

[கள்ள + கடை .]

கள்ளக்கடை[2] *kaḷḷa-k-kaḍai,* பெ.(n.) ***கள்ளக்கடவு*** பார்க்க; see *kaḷḷak-k-kaḍavu.*

[கள்ள + கடை.]

கள்ளக்கணக்கு *kaḷḷa-k-kaṇakku,* பெ.(n.) பொய்க் கணக்கு; false accounts.

ம. கள்ளக்கணக்கு

[கள்ளம்(ம்) + கணக்கு.]

கள்ளக்கத்தி *kaḷḷa-k-katti,* பெ.(n.) உள்ளே கத்தியுள்ள கைத்தடி; hollow cane, with a knife inside it.

[கள்ள + கத்தி.]

கள்ளக்கதவு *kaḷḷa-k-kadavu,* பெ.(n.) பிறரறியாமற் செல்லுதற்குரிய கதவுள்ள வாயில் (C.E.M.); trap-door, secret door.

[கள்ள + கதவு.]

கள்ளக்கப்பல் *kaḷḷa-k-kappal,* பெ.(n.) கடற்கொள்ளைக் காரர்க்குரிய கப்பல் (வின்.); vessel of the pirates.

ம.கள்ளப்படகு

[கள்ளம் + கப்பல்.]

கள்ளக்கப்பற்காரன் *kaḷḷa-k-kappaṟ-kāraṉ,* பெ.(n.) கடற்கொள்ளையடிப்போன்; pirate.

[கள்ள(ம்) + கப்பல்காரன்.]

கள்ளக்கம்மட்டம் *kaḷḷa-k-kammaṭṭam,* பெ.(n.) கள்ள நாணயம் அடிக்கும் இடம்; a mint for counterfeit coins.

ம. கள்ளக்கம்மட்டம்

[கள்ளம் + கம்மட்டம். கம்மம் = கருமான் தொழில், இரும்பு போன்ற மாழைத்தொழில். கம்மம் → கம்மடம் → கம்மட்டம்.]

கள்ளக்கயிறு *kaḷḷa-k-kayiṟu,* பெ.(n.) 1. உறியின் சுருக்குக் கயிறு; ring or cord for holding articles firm in an *uri.* *"உறிகளிலே சேமித்துக் கள்ளக் கயிறுருவி வைத்த" (ஆடு. 2,3,8.)* 2. பையின் சுருக்குக் கயிறு; cord for opening and closing a bag or purse.

[கள்ளம் + கயிறு.]

கள்ளக்கருப்பம் *kaḷḷa-k-karuppam,* பெ.(n.) 1. பொய்க் கருப்பம்; psreudo-preganancy. 2. முறையிலாப் புணர்ச்சியினாலுண்டான கருப்பம்; pregnant following an illicit intercourse (சா.அக.).

[கள்ள + கருப்பம்.]

கள்ளக்கல் *kaḷḷa-k-kal,* பெ.(n.) நன்றாக வேகாததும் குறையுடையதுமான சுண்ணாம்புக்கல்; lime stone not properly burnt.

[கள்ள + கல்.]

கள்ளக்கவறு *kaḷḷa-k-kavaṟu,* பெ.(n.) கள்ளச் சூதுகருவி; false dice.

[கள்ள(ம்) + கவறு]

கள்ளக்கவி *kaḷḷa-k-kavi,* பெ.(n.) 1. பிறனொருவனது பாட்டைத் தனதென்று காட்டுபவன்; one who palms off another's poetical composition as one's own, plagiarist-poet. 2. ஒருவனுக்காகப் பாடிய பாட்டை மற்றொருவனுக்குக் கொடுப்போன் (வெண்பாப். செய். 48.,உரை) he who transfers a poem composed in honour of one to another. 3. ***கள்ளச் செய்யுள்*** பார்க்க; see *kaḷḷa-c-ceyyuḷ.*

[கள்ள(ம்) + கவி.]

Skt. kavi > **த.**கவி.

கள்ளக்களவு *kaḷḷa-k-kaḷavu,* பெ.(n.) ஒளிப்பு மறைப்பு; hiding, concealing.

[கள்ளக் + களவு.]

கள்ளக்காசு *kaḷḷa-k-kāšu,* பெ.(n.) ***கள்ளநாணயம்*** பார்க்க; see *kaḷḷa-nāṇayam.*

க.கள்ளநாண்ய

[கள்ள(ம்) + காசு.]

கள்ளக்காதல் *kaḷḷa-k-kādal,* பெ.(n.) முறையற்ற காதல் தொடர்பு; illegal love.

[கள்ள(ம்) + காதல்.]

கள்ளக்காதலன் *kaḷḷa-k-kādalan,* பெ.(n.) அயலாளுடன் காதல் கொள்ளும் ஆடவன்; illegal lover.

[கள்ள(ம்) + காதலன்.]

கள்ளக்காதலி *kaḷḷa-k-kādali* பெ.(n.) முறையற்ற ஆடவனிடம் காதல் கொள்ளும் பெண்; lady engaged in illegal love.

[கள்ள(ம்) + காதலி.]

கள்ளக்காது *kaḷḷa-k-kādu,* பெ.(n.) 1. தூர்ந்துபோன காது; blocked ears after growth. 2. செவிடுபோல் நடித்துப்பிறர் சொல்வதை அவரறியா வகையில் கேட்கும் செவி; the ear which hears others, voice by pretending to be deaf.

[கள்ள(ம்) + காது.]

கள்ளக்காமம் *kaḷḷa-k-kāmam,* பெ.(n.) ஏதேனுமொரு வினை முடிவதற்காக மேற்கொண்ட பொய்க்காமம்; feigned or pretended love to gain some ulterior object. *"கரும நுதலிய கள்ளக் காமம்" (பெருங். உஞ்சைக். 35,228.).*

[கள்ள(ம்) + காமம்.]

கள்ளக்காய் *kaḷḷa-k-kāy,* பெ.(n.) பழுக்காமற் பழுக்கும் காய்; unripe fruit even when simulated for ripening (சா.அக.).

[கள்ளம் + காய்.]

கள்ளக்காய்படு-தல் *kaḷḷa-k-kāy-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) பழுக்கவைத்த காய் பழுக்காமற் போதல் (வின்.); to fail in the process of ripening fruits by smoke.

[கள்ள(ம்) + காய்படு.]

கள்ளக்கிடை *kaḷḷa-k-kiḍai,* பெ.(n.) 1. பொய்த்துயில், நோயாளி முதலியவர் போல பாசாங்கு காட்டி படுத்துக் கிடக்கை; malingering, feigning sickness or sleep. 2. மறைந்து பதுங்கியிருக்கை (வின்.); lying in ambush.

[கள்ள(ம்) + கிடை.]

கள்ளக்கீலி *kaḷḷa-k-kīli,* பெ.(n.) தூண்டிலிற் பிடிபடும் கீலிமீன் வகையுள் ஒன்று (முகவை.மீன.வழ.); a kind of kīli fish caught by a fish hook.

[கள்ள(ம்) + கீலி.]

கள்ளக்குணம் *kaḷḷa-k-kuṇam,* பெ.(n.) 1. திருட்டுக் குணம்; false, insidious, deceptive disposition, in man or beast. 2. மாறான தோற்றம் (வின்.); insidiousness, as in boils or diseases changeableness, as in weather, wind.

[கள்ளம் + குணம்.]

கள்ளக்கும்பிடு *kaḷḷa-k-kumbiḍu,* பெ.(n.) கரவாக (வஞ்சகமாக)ச் செய்யும் வணக்கம்; hypocritical civility.

மறுவ. கள்ளக் கும்பிடு

[கள்ள(ம்) + கும்பிடு.]

கள்ளக்குரல் *kaḷḷa-k-kural,* பெ.(n.) பொய்க்குரல்; pretended voice (சா.அக.).

[கள்ள(ம்) + குரல்.]

கள்ளக்குழி *kaḷḷa-k-kuḻi* பெ.(n.) மேற்பரப்பில் இலை, தழை முதலியவற்றால் மூடப்பட்ட குழி; a hole by leaves etc (சே.நா.).

ம.கள்ளக்குழி

[கள்ள(ம்) + குழி.]

கள்ளக்கூவை *kaḷḷa-k-kūvai,* பெ.(n.) போலிக் கூவைக் கிழங்கு; false arrow-root (சா.அக.).

[கள்ள(ம்) + கூவை.]

கள்ளக்கையெழுத்து *kaḷḷa-k-kaiyeḻuttu,* பெ.(n.) ஒருவர் கையொப்பம் போன்று வேறொருவர் இடும் கைச்சாத்து; forged signature, forgery. அவர் கள்ளக்கையெழுத்திட்டு மாட்டிக்கொண்டார் (உ.வ.).

[கள்ளம் + கை + எழுத்து.]

கள்ளக்கோல் *kaḷḷa-k-kōl,* பெ.(n.) அளவைத் தவறாக நிறுத்துக்காட்டுந் துலாக்கோல்; false balance.

ம. கள்ளக்கோல்

[கள்ளம் + கோல்.]

கள்ளக்கோலம் *kaḷḷa-k-kōlam* பெ.(n.) குணக் கேடான சாயல்; one's pretended, appearance.

[கள்ள(ம்) + கோலம்.]

கள்ளங்கடலி *kaḷḷa-ṅ-kaḍali,* பெ.(n.) குருந்தோட்டி; common balah.

[கள்ள(ம்) + கோலம்.]

கள்ளங்கபடம் *kaḷḷaṅkabaḍam,* பெ.(n.) 1. பொய் களவு, சூழ்ச்சி, உள்ளிட்ட இழி செய்கை; guile, deceitfulness. 2. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகை; deceptive talk.

மறுவ. கள்ளங் கபடம்

[கள்ளம் + கவடம் → கபடம்.]

கள்ளங்கவடு *kaḷḷaṅ-kavaḍu,* பெ.(n.) ஏய்ப்பு (சூதுவாது); cunning, deceitful disposition.

மறுவ. கள்ளங்கபடு

[கள்ளம் + கவடு – கள்ளங்கவடு (சொல்லிணை).]

கள்ளங்காய்படு–தல் *kaḷḷaṅ-kāy-paḍu,* 20 செ.கு.வி. (v.i.) 1. ஆறிவரும் நேரத்தில் சொறிதல் முதலியவற்றால் புண் புடைகொள்ளுதல்; to reach an acute or aggravated stage, as a sore at almost the healing point when carelessly scratched or badly dressed. 2. செயல்முற்றுப் பெறுமுன் அதுபற்றிய செய்தி வெளியாகி அவ்வினை முடிய இடையூறு ஏற்படுதல்; to be thwarted in the accomplishment of a plan by premature disclosure.

[கள்ளம் + காய் + படு.]

கள்ளச்சந்தை *kaḷḷa-c-candai,* பெ.(n.) வரியேய்ப்பு வணிகம்; black market.

க.கள்ளச்சந்தெ; **ம.**கரிஞ்சந்த

[கள்ள(ம்) + சந்தை.]

கள்ளச்சமயம் *kaḷḷa-c-camayam* பெ.(n.) போலிச் சமயம்; false religion.

[கள்ள + சமயம்.]

கள்ளச்சரக்கு *kaḷḷa-c-carakku,* பெ.(n.)1. கள்ளத் தனமாகக் கொண்டுவரப்பட்ட சரக்கு; smuggled goods, contraband articles, articles conveyed evading public notice. 2. ஏமாற்றிவிற்கும் போலிச்சரக்கு; imitation goods sold as genuine articles. 3. திருடிய பொருள்; stolen property (சேரநா.).

ம.கள்ளச்சரக்கு; **க.**கள்ளமாலு.

[கள்ள(ம்) + சரக்கு.]

கள்ளச்சாட்சி *kaḷḷa-c-cāṭi,* பெ.(n.) 1.பொய்ச்சான்று; false evidence. 2. பொய்ச்சாட்சி சொல்லுவோன்; one who bears false witness.

ம. கள்ளச்சாட்சி; **து.** கலுசாட்சி

[கள்ளம் + சாட்சி. Skt. Sākshi > த. சாட்சி.]

கள்ளச்சாமம் *kaḷḷa-c-cāmam,* பெ.(n.) திருடுவதற்குகந்த நடுஇரவு; dead of night; midnight, as suitable for thieving.

[கள்ளம் +சாமம். யாமம் → சாமம்.]

கள்ளச்சாராயம் *kaḷḷa-c-cārāyam,* பெ.(n.) அரசு இசைவு பெறாமல் காய்ச்சப்படும் சாராயம்; illicit liquor

[கள்ள(ம்) + சாராயம்.]

கள்ளச்சாவி *kaḷḷa-c-cāvi,* பெ.(n.) ***கள்ளத்திறவு கோல்*** பார்க்க; see *kaḷḷathiṟavukōl*

[கள்ள(ம்) + சாவி.]

கள்ளச்சி[1] *kaḷḷacci,* பெ.(n.) கள்ளனினத்தைச் சேர்ந்தவள்; woman of kalla cast.

[கள்ளன் (ஆ.பா.)→ கள்ளத்தி →கள்ளச்சி (பெ.பா.).]

கள்ளச்சி[2] *kaḷḷacci,* பெ.(n.) திருடி; woman thief.

[கள்ளன்→ கள்ளத்தி → கள்ளச்சி .]

கள்ளச்சி[3] *kaḷḷacci,* பெ.(n.) வாழைப்பூவின் உள்ளுள்ள நரம்பு; a hard membranous substance inside the plantain flower (சா.அக.).

[கள்→ கள்ளச்சி.]

கள்ளச்சிந்தை *kaḷḷa-c-cindai,* பெ.(n.) ஏய்ப்பு எண்ணம்; proneness to deceive, cunning *"வெள்ளைக் கில்லை கள்ளச்சிந்தை"*

[கள்ள(ம்) + சிந்தை.]

கள்ளச்சிரிப்பு *ka!!a-c-ciruppu,* பெ.(n.) 1. நெஞ்சினுள் பொய்மை வைத்து வெளிக்கு இனிமை காட்டுஞ் சிரிப்பு; simulated smile. 2. காதலர்களுக்குள் நிகழும் சிரிப்பு; smile between lovers.

[கள்ள(ம்) + சிரிப்பு.]

கள்ளச்சீட்டு பெ.(n.) பொய் ஆவணம்; false or note or draft.

[கள்ள(ம்) + சீட்டு.]

கள்ளச்சுரம் *kaḷḷa-c-curam,* பெ.(n.) 1. உள்மறைவான காய்ச்சல் நோய்; a lingering fever often deceptive and evading diagnosis. 2. விட்டு விட்டுக் காயும் காய்ச்சல்; intermittent fever. 3. பொய்ச்சுரம்; feverishness. 4. பொய்யாக நடித்த சுரம்; feigned or pretended fever. 5. பகுத்தறிய முடியாத சுரம்; any fever difficult to diagnose.

[கள்ள(ம்) + சுரம்.]

கள்ளச்சூள் *kaḷḷa-c-cūḷ,* பெ.(n.) பொய்யான உறுதி மொழி; false oath, perjury.

மறுவ. கள்ளச்சத்தியம்

[கள்ளம் + சூள்.]

கள்ளச்செய்யுள் *kaḷḷa-c-ceyyuḷ,* பெ.(n.) தன்னுடையதென்று காட்டப்பட்ட மற்றொருவனுடைய செய்யுள்; of another person poetical composition shown as one's own.

[கள்ள(ம்) + செய்யுள்.]

கள்ளச்சோறு *kaḷḷa-c-cōṟu,* பெ.(n.) பணி செய்யாமல் உண்ணும் உணவு; food got without doing anywork. 2. திருட்டுச்சோறு; stolen meals.

ம.கள்ளச்சோறு

[கள்ள(ம்) + சோறு.]

கள்ளஞானம் *kaḷḷa-ñāṉam,* பெ.(n.) **கள்ளவறிவு** பார்க்க; see *kaḷḷavaṟivu*

[கள்ளம் + ஞானம்.]

கள்ளஞானி *kaḷḷa-ñāṉi,* பெ.(n.) **கள்ளவறிஞன்** பார்க்க; see *kaḷḷavaṟiñaṉ.*

[கள்ள(ம்) + ஞானி.]

கள்ளடிமங்கன் *kaḷḷaḍi-maṅgaṉ,* பெ.(n.) **கல்லுளிமங்கன்** (இ.வ.). பார்க்க; see *kaḷḷuḷi-maṅgaṉ*

[கள்ளடி + மங்கன்.]

கள்ளத்தனம் *kaḷḷattaṉam.* பெ.(n.) ஏய்ப்பு, சூழ்ச்சி, போலித்தன்மை, பாசாங்கு, பொய்மை (வஞ்சம்); cunning, craftiness. pretence, hypocrisy. dishonesty, falsehood.

தெ.கள்ளத்தனமு; ம.கள்ளத்தரம்; க.,குட. கள்ளத்தன; து.கள்ளண்டி, கள்ளண்டிகெ.

[கள்ளம் + தனம்.]

கள்ளத்தாலி *kaḷḷa-t-tāli,* பெ.(n.) பிறர் மணஞ்செய்யாதிருக்கும் பொருட்டு தனக்கு உரிமையுள்ள பெண்ணிற்குத் திருட்டுத்தனமாகக் கட்டும் தாலி; string surreptitiously tied by certain people round the neck of a female relative, to prevent her from being married without consent.

ம. கள்ளத்தாலி

[கள்ள(ம்) + தாலி.]

கள்ளத்திருக்கை *kaḷḷa-t-turukki,* பெ.(n.) திருக்கை மீன்வகை; a kind of shrik fish.

[கள்ள(ம்) + திருக்கை.]

கள்ளத்திருக்கை

கள்ளத்திறவுகோல் *kaḷḷattiṟavukōl,* பெ.(n.) பூட்டைத் திருட்டுத்தனமாகத் திறப்பதற்குப் பயன் படுத்தும் திறவுகோல்; duplicate key used illegally

மறுவ. கள்ளச்சாவி

ம. கள்ளத்தாக்கோல்

[கள்ள(ம்) + திறவு + கோல்.]

கள்ளத்தீனி *kaḷḷattīṉi,* பெ.(n.) திருட்டுத்தனமாக உண்ணும் உணவு; food taken by a patient clandestinely when prohibited in diet (சா.அக).

[கள்ளம் + தின் → தீன் → தீனி.]

கள்ளத்தும்பு *kaḷḷa-t-tumbu,* பெ.(n.) முடிச்சில் ஒருவகை; a kind of knot.

[கள்ளம் + தும்பு.]

கள்ளத்துறை *kaḷḷa-t-tuṟai,* பெ.(n.) ஏற்றுமதி இறக்குமதியினைத் திருட்டுத்தனமாகச் செய்யுந் துறைமுகம் (வின்.); port where export and import are carried on stealthily.

[கள்ளம் + துறை.]

கள்ளத்தும்பு - முடிச்சில் ஒரு வகை.

கள்ளத்தூக்கம் *kaḷḷa-t-tūkkam,* பெ.(n.) பொய் யுறக்கம்; pretended sleep.

[கள்ள(ம்) + தூக்கம்.]

கள்ளத்தொழில் *kaḷḷa-t-toḻil,* பெ.(n.) பிறரை ஏமாற்றிச் செய்யும் வேலை; false, deceitful, cunning act; indolent or knavish action.

ம. கள்ளத்தொழில்

[கள்ள(ம்) + தொழில்.]

கள்ளத்தோணி *kaḷḷa-t-tōṇi,* பெ.(n.) 1. கடற் கொள்ளைக்காரர் படகு; a piratical vessel engaged in plunder. 2. திருட்டுத்தனமாகச் சரக்குகளைக் கடத்துவதற்கு உதவும் படகு; boat used for smuggling. 3. கள்ளத்தனமாகக் குடியேற உதவும் படகு; boat used for illigal migration from one country to another.

ம. கள்ளப்படகு

[கள்ள(ம்) + தோணி.]

கள்ளத்தோற்றம் *kaḷḷa-t-tōṟṟam,* பொய்த் தோற்றம்; false appearance, incognito.

[கள்ள(ம்) + தோற்றம்.]

கள்ளநடத்தை *kaḷḷanaḍattai,* பெ.(n.) 1. பொய் யொழுக்கம்; false, deceitful or fraudulent conduct. 2. தகாத உடலுறவு; adultery.

[கள்ள(ம்) + நடத்தை.]

கள்ளநாடு *kaḷḷanāḍu,* பெ.(n.) ***கள்ளர்நாடு*** பார்க்க; see *kaḷḷarnāḍu.*

[கள்ளர் + நாடு.]

கள்ளநாணயம் *kaḷḷa-nāṇayam,* பெ.(n.) போலி நாணயம்; counterfeit coin.

க. கள்ளநாணய; **ம.** கள்ளநாணயம்.

[கள்ள(ம்) + நாணயம்.]

கள்ளநிலம் *kaḷḷanilam,* பெ.(n.) பகைவரை அகப்படுத்த, உள்ளிடம் படுகுழியாய் மேலிடம் தரைபோல் அமைக்கப்பட்ட நிலம், பொய்க்குழி; covered hollow ground, meant as a trap to ensnare enemies.

[கள்ள(ம்) + நிலம்.]

கள்ளநீர் *kaḷḷa-nīr,* பெ.(n.) 1.ஆறவொட்டாமல் புண்ணிலிருந்து வடியும் தீ (துர்)நீர்; morbid humour in the body preventing the healing of ulcers. 2. அரத்தம்; blood (சா.அக.).

[கள்ள(ம்) + நீர்.]

கள்ளநேரம் *kaḷḷa-nēram,* பெ.(n.) 1. களவு முதலியன நடத்துவதற்கேற்ற வேளை; time favourable for theft or other illicit acts. 2. கன்னிருட்டுவேளை; darkness before dawn. 3. உறங்கும் நேரம்; sleeping time.

க. கள்ளகொத்து

[கள்ள(ம்) + நேரம்.]

கள்ளநோக்கம் *kaḷḷanōkkam,* பெ.(n.) 1.கள்ளப் பார்வை; sly, furtive look, opp. to vellai-nokkam (plain look) (திருக்கோ. 65 உரை.).2. மாற்றுக் கருத்து; insidious motive; deceitful object.

ம. கள்ளக்கண்ணு; **க.** கள்ளநோட.

[கள்ள(ம்) + நோக்கம்.]

கள்ளநோக்கு *kaḷḷanōkku,* பெ.(n.) ***கள்ளநோக்கம்*** பார்க்க; see *kaḷḷa-nokkam, "கள்ளநோக்கி லகப் படாதவர்"(திருவிளை. விடை. 12).*

[கள்ள (ம்) + நோக்கு]

கள்ளநோய் *kaḷḷanōy* பெ.(n.) கண்டுணர முடியாத நோய்; deceptive disease difficult of diagnosis (சா.அக.).

[கள்ள (ம்)+ நோய்.]

கள்ளப்பசி *kaḷḷappaši,* பெ.(n.) பொய்ப்பசி; illusive appetite.

[கள்ள(ம்) + பசி.]

கள்ளப்படு—தல் *kaḷḷa-p-paḍu-,* 20 செ.கு.வி (v.i.) பொய்யாதல்; to become false. *"கள்ளப்படாத களிவந்த வான்கருணை" (திருவாச.10,16).*

[கள்ள(ம்) + படு.]

கள்ளப்பணம் *kaḷḷappaṇam,*பெ.(n.) 1. போலிப்பணம்; counterfeit currency. 2. கணக்கில் காட்டி வரி செலுத்தாத பணம்; கருப்புப் பணம்; black money.

க.கள்ளவண, கள்ளகண.

[கள்ள(ம்) + பணம்.]

கள்ளப்பணி *kaḷḷappaṇi,* பெ.(n.) 1. திருட்டுவேலை; trickery. 2. திருட்டுத்தனமாக அல்லது தலைத் தாழ்வு [illegible] செய்யும் பணி; a tricky knavish and indolent work (சேரநா.).

ம.கள்ளப்பணி, கள்ளவேல.

[கள்ள(ம்) + பணி.]

கள்ளப்பருந்து *kaḷḷapparundu,* பெ.(n.) ஒருவகைப் பருந்து; a kind of kite.

[கள்ள(ம்) + பருந்து.]

வானத்தில் வட்டமிட்டவாறே யாரும் அறியாவண்ணம் திடீரென்று இறங்கி இரை எடுத்தலால் இதன் செயல் போலியாய்ப்பட்டு கள்ளம் என அடைபெற்றது.

கள்ளப்பல் *kaḷḷappal,* பெ.(n.) பொய்ப்பல்; artificial teeth.

ம.கள்ளப்பல்லு

[கள்ள(ம்) + பல்.]

கள்ளப்பாடம் *kaḷḷa-p-pāḍam,* பெ.(n.) ஆசிரியரை ஏமாற்றி மறைவாக ஏட்டைப் பார்த்தோ அருகிலிருப் பவர் மெதுவாகக் கூறக்கேட்டோ ஒப்பிக்கும் பாடம்; lesson recited by a student who, though unprepared, is prompted or uses an open page to satisfy the teacher.

[கள்ள(ம்) + பாடம்.]

கள்ளப்பார்வை *kaḷḷa-p-pārvai,* பெ.(n.) 1. ஏய்ப்பு (வஞ்சக) நோக்கம்; thievish, designing look. 2. காமக்குறிப்போடு நோக்கும் நோக்கம்; sly look of lovers or libidinous persons. 3. பலர் முன்பு பிறர் அறியாவண்ணம் பார்க்கும் பார்வை; sly look.

க. கள்ளநோட

[கள்ள(ம்) + பார்வை.]

கள்ளப்பாரை *kaḷḷa-p-pārai,* பெ.(n.) விரகுள்ள (தந்திரமுள்ள) ஒருவகைக் கடல்மீன்; a sea-fish, attaining in length, bluish green, cunning in its habits. 2. கடல்மீன்வகை; a sea-fish.

[கள்ள(ம்) + பாரை.]

கள்ளப்பிரான் *kaḷḷappirāṉ,* பெ.(n.) ***கள்ளழகர்*** பார்க்க; see *kaḷḷaḻagar... "திருவழுதிவள நாட்டு ஸ்ரீவைகுந்தத்து கள்ளப்பிரான் கோயிலில் திருப்பதி..." (S.I.I. vol.v part II insc. 74.).*

[கள்ள(ம்) + பிரான். பெருமான் → பிரான்.]

கள்ளப்பிள்ளை *kaḷḷa-p-piḷḷai,* பெ.(n.) முறையற்ற உறவால் பெற்ற பிள்ளை; unnatural offspring, illegitimate child, bastard.

[கள்ள(ம்) + பிள்ளை.]

கள்ளப்புணர்ச்சி *kaḷḷa-p-puṇarcci,* பெ.(n.) திருமணத்திற்கு முன்பு பெற்றோரறியாமல் தாமே கூடுங் கூட்டம் (நம்பியகப்.34.); secret union between lovers before marriage without the knowledge of parents.

[கள்ள(ம்) + புணர்ச்சி.]

கள்ளப்புனைவு *kaḷḷa-p-puṉaivu,* பெ.(n.) ஏமாற்றும் பொருட்டு மேற்கொண்ட மாறுகோலம்; பொய்ப் புனைவு; guise of a dissembler, disguise for purposes of deception. *"கள்ள வேடத்தைக் கொண்டு போய்ப் புறம் புக்கவாறும்" (திவ். திருவாய். 5,10,4.).*

[கள்ள(ம்) + புனைவு.]

கள்ளப்பூட்டு *kaḷḷa-p-pūṭṭu,* பெ.(n.) நுட்பமாகத் தகவுற அமைத்த பூட்டு; lock with an intricate mechanism.

ம. கள்ளப்பூட்டு

[கள்ள(ம்) + பூட்டு.]

கள்ளப்பூமி *kaḷḷa-p-pūmi,* பெ.(n.) **கள்ளநிலம்** பார்க்க; see *kaḷḷa-nilam, "கரப்பறை வீதியுங் கள்ளப்பூமியும்" (பெருங். உஞ்சைக் 33, 17).*

[கள்ள(ம்) + பூமி . புவி → பூவி →பூமி.]

கள்ளப்பெயர் *kaḷḷappeyar,* பெ.(n.) பொய்ப்பெயர்; false name.

ம. கள்ளப்பேரு

[கள்ள(ம்) + பெயர்.]

கள்ளப்பேச்சு *kaḷḷa-p-pēccu,* பெ.(n.) ஏய்ப்பு (வஞ்சக)ப் பேச்சு; insincere talk.

[கள்ள(ம்) + பேச்சு.]

கள்ளப்பேட்டை *kaḷḷa-p-pēṭṭai,* பெ.(n.) **கள்ளச் சந்தை** பார்க்க; see *kaḷḷa-c-candai*.

க. கள்ளப்பேடெ

[கள்ள(ம்) + பேட்டை.]

கள்ளப்பேறு *kaḷḷa-p-pēṟu,* பெ.(n.) நெறியற்ற முறையில் திருட்டுத்தனமாகப் பெறும் பிள்ளைப் பேறு; illegitimate child bearing.

[கள்ள(ம்) + பேறு.]

கள்ளப்பொன் *kaḷḷa-p-poṉ,* பெ.(n.) போலிப் பொன்; a counterfeit, base gold coin.

க. கள்ளகொன்னுது

[கள்ள(ம்) + பொன்.]

கள்ளம் *kaḷḷam,* பெ.(n.) 1. ஏய்ப்பு; guile, deception, dissimulation, trickishness, secrecy, slyness. *"கள்ளம் பிறவோ பசப்பு" (குறள், 1184).* 2. பொய்; lie, falsehood. *"கள்ளமே பேசி" (தேவா. 1115,6).* 3. களவு (சூடா); stealing, robbery, fraud, embezzlement. 4. குற்றம்; fault, defect, blemish. 5. மெய்யியல் அறியாமை, அவிச்சை; spiritual ignorance. *"ஞானத்தீயாற் கள்ளத்தைக் கழிய நின்றார்" (தேவா. 1103.).* 6. புண்ணிலுள்ள அசறு; morbid matter concealed in a boil or lodged in the system causing irritation.

தெ.கல்ல; ம.கள்ளம்; க.கள்ள; து.கள்ளெ; கோத. கள்வ்.

[கள் →கள்ளம் = பொய். பொய்யாவது, சொல்லால் ஒன்றை மறைத்தல்.]

கள்ளம்பண்ணுதல் *kaḷḷampaṇṇu-,* 9 செ.கு.வி.(v.i.) 1. வேலை செய்யாமல் ஏமாற்றுதல்; to play the truant. 2. வேலை செய்யச் சோம்புதல்; to be idle in work, to be dull, slow. 3. போலிப்புப் பண்ணுதல் (வின்.); to practise deception; to use alloy, cheat, act of the rogue, dissemble, pretend. 4. பொய்வேடமிட்டு ஏமாற்றுதல்; deception.

[கள்ளம் + பண்ணு.]

கள்ளமடை *kaḷḷamaḍai,* பெ.(n.) கள்ளவழியால் நீரைச் செலுத்தும் மடை; sluce for letting in water stealthily. *"வெள்ளத்தைக் கள்ளமடையாலே பள்ளத்தில் விடுமாபோலே" (திவ். அமலனாதி.1.வியா.).*

[கள்ளம் + மடை.]

கள்ளமணம் *kaḷḷamaṇam,* பெ.(n.) பெற்றோர் இசைவின்றி மணமொத்தோர் தாமே செய்து கொள்ளும் மணம்; clandestine marriage *"கள்ள மணம் எம்குலத்தின் பழையசொத்து" (மாங்கனி).*

[கள்ள(ம்) + மணம்.]

கள்ளமயிர் *kaḷḷa-mayir,* பெ.(n.) பொய்ம்மயிர்; ஒட்டுமுடி; false hair. கள்ள மயிர் வைத்தால் உள்ள மயிரும் போய்விடும் (உ.வ.).

[கள்ள(ம்) + மயிர்.]

கள்ளமனம் *kaḷḷamaṉam* பெ.(n.) கள்ளத்தனமான மனம்; deceitful heart. *'கள்ளமனம் துள்ளும்' (பழ.).*

[கள்ள + மனம்.]

கள்ளமாடு *kaḷḷa-māḍu,* பெ.(n.) 1. பட்டிமாடு; cattle that intrude and graze by stealth, cow or bullock prone to stray. 2. சண்டி மாடு; ox that refuses to work. 3. திருடப்பட்ட மாடு; stolen cattle.

க. கள்ளதன

[கள்ள(ம்) + மாடு.]

கள்ளமுத்திரை *kallamuttirai,* பெ.(n.) போலிமுத்திரை; fake seal.

ம. கள்ளமுத்ர; க.கள்ளச்சு

[கள்ள(ம்) + முத்திரை.]

கள்ளர் *kaḷḷar* பெ.(n.) முக்குலத்தோரில் ஒரு பிரிவினர்; one of the divisions of Mukkulattōr.

[கள் : கள்ளுதல், கவர்தல். கள் + அர் – கள்ளர் : பண்டையர்.]

தமிழ் வேந்தர் காலத்தில் வெட்சிப்படை மறவருள் ஒரு பிரிவினர். இவர்கள் கொள்ளைக் காரர்களோ, கள்வர்களோ அல்லர். கள்ளர், மறவர், அகமுடையோர் என்ற முக்குத்தோர்களுள் ஒரு பிரிவினராகிய கள்ளர் முன்னர் வெட்சிப் படை மறவர்களாக இருந்து போர் தொடங்குமுன் பகையரசரின் ஆநிரைகளைக் கவர்ந்து வரும் தொழிலைச் செய்தவர்களாவர். வெட்சிப்பூச்சூடி இவர்கள் ஆநிரை கவர்ந்ததை 'வெட்சி நிரை கவர்தல்' என்னும் செய்யுள் வரியும் நிறுவ வல்லது. இவர்களையும் வேறு சில இனத்தவரையும் குற்ற மரபினர் (tribes) என்று வெள்ளையர் வகைப் படுத்தியது பொருந்துவதன்று.

கள்ளர்தடி *kaḷḷar-taḍi,* பெ.(n.) கள்ளர் எறியும் வளைதடி ஆய்தம்; throwing stick used by the Kallas and maravas resembling a boomerang.

[கள்ளர் + தடி.]

இன்றைக்கு 10,000 ஆண்டுகட்கு முன்னரே தொல் தமிழருக்கும் ஆத்திரேலியப் பழங்குடி மக்களுக்கும் தொடர்பு அறுந்து விட்டது. எனினும் இன்றும் அவர்கள் பேசும் மொழிகள் தமிழியத் தன்மை கொண்டுள்ளன. அவர்கள் பூமராங் ஆயுதமும் வளைதடி போன்றதே. ஒருசார் வளைதடி எறிந்தால் திரும்பி வராது. பெரும் பாலான 'பூமராங்' குகளும் அவ்வாறே. "Is the Boomerang oriental?" by D.S. Davidson. Journal of the American orental society: 1935.

கள்ளர்நாடு *kaḷḷar-nāḍu,* பெ.(n.) கள்ளர் இன மக்கள் மிகுதியாய் வாழும் பாண்டி நாட்டுப்பகுதி; region inhabited mostly by Kallar in and around Pudukottai Sivaganga Ramanathapuram and Madurai districts.

[கள்ளர் + நாடு.]

கள்ளர்பற்று *kaḷḷar-paṟṟu,* பெ.(n.) கள்ளர் வாழும் ஊர்; village or villages inhabited by Kallas.

[கள்ளர் + பற்று (வளநாட்டின் உட்பிரிவு).]

கள்ளல்[1] *kaḷḷal,* பெ.(n.) திருடுகை; stealing

[கள் → கள்ளல். 'அல்' தொ.பெ.ஈறு.]

கள்ளல்[2] *kaḷḷal,* பெ.(n.) கள்குடிக்கை; drinking toddy.

[கள் → கள்ளல்.]

கள்ளல்[3] *kaḷḷal,* பெ.(n.) கரும்பு; sugarcane.

[கள் → கள்ளல். கள் → கருமை.]

கள்ளவலி *kaḷḷavali,* பெ.(n.) மகப்பேற்றில் ஏற்படும் பொய்வலி; pains which do not indicate the beginning of real labour.

[கள்ள + வலி.]

கள்ளவறிஞன் *kaḷḷa-v-aṟiñaṉ,* பெ.(n.) கரவு (வஞ்சம்) நெஞ்சமுள்ள அறிஞன்; hypocrite

[கள்ள(ம்) + அறிஞன்.]

கள்ளவறிவு *kaḷḷavaṟivu,* பெ.(n.) போலியறிவு; pseudo-knowledge.

[கள்ள(ம்) + அறிவு.]

கள்ளவறை *kaḷḷa-vaṟai,* பெ.(n.) 1. பிறர் அறிய முடியாதபடி அமைந்துள்ள அறை; concealed or closed, room whose existence no one would suspect. 2. பெட்டி முதலியவற்றுள் பிறர் அறியா வகை அமைக்கப்படும் அறை; a secret case or cell within a box.

மறுவ. கள்ளறை

ம. கள்ளற, கள்ளயற.

[கள்ள(ம்) + அறை.]

கள்ளவாதி *kaḷḷavādi,* பெ.(n.) பொன் செய்வதாக நடிக்கும் திருட்டு மருத்துவர்; dabblers in alchemy.

[கள்ள(ம்) + வாதி. ஆளி → வாளி → வாதி.]

கள்ளவாயில் *kaḷḷavāyil,* பெ.(n.) 1. கமுக்கவழி; trap-door. 2. திட்டிவாசல்; wicket -gate.

[கள்ளம் + வாயில்.]

கள்ளவாள் *kaḷḷavāḷ,* பெ.(n.) பொய்யாக இளமை கொண்டாடல்; pretended youthfullness.

[கள்ள + ஆள் – கள்ளவாள்.]

கள்ளவிலை *kaḷḷa-vilai,* பெ.(n.) திருடர் விற்கும் குறைவு விலை; fabulousely low price, as of stolen goods. அந்த நகையைக் கள்ளவிலைக்கு விற்றாலும் நூறுரூபாய் கிடைக்கும் (உ.வ.).

[கள்ளம் + விலை.]

கள்ளவிழி *kaḷḷaviḻi,* பெ.(n.) பிறர் உள்ளபொழுதே அவர்களுக்குத் தெரியாமல் தான் பேச விரும்பும் ஆளுடன் குறிகாட்டும் கண்; the eyes which signal even without the knowledge of others.

[கள்ள(ம்) + விழி.]

கள்ளவுப்பு *kaḷḷa-v-uppu,* பெ.(n.) பரவர் (பரதவர்) ஆடும் விளையாட்டு வகை; a Paravadavar game.

[கள்ளம் + உப்பு.]

கள்ளவுரி *kaḷḷavuri,* பெ.(n.) 1. போலி அவுரி; bastard indigo. 2. கள்ளவுரிச்சாயம்; dye from the same.

[கள்ள(ம்) + அவுரி.]

கள்ளவெட்டு *kaḷḷa-veṭṭu,* பெ.(n.) ***கள்ளத்தனம்*** (யாழ்.அக.) பார்க்க; see *kaḷḷa-t-taṉam* (செ.அக.).

[கள்ள(ம்) = கள்ளத்தனம். கள்ள(ம்) + அட்டு– கள்ளவட்டு கள்ளவெட்டு. அட்டு = மிகுதி, பெருக்கம்.]

கள்ளவெள்ளி *kaḷḷaveḷḷi* பெ.(n.) மட்டமான வெள்ளி inferior silver.

க. கள்ளவெள்ளி

[கள்ள(ம்) + வெள்ளி.]

கள்ளவேடம் *kaḷḷa-vēḍam,* பெ.(n.) ***கள்ளப்புனைவு*** பார்க்க; see *kaḷḷa-p-puṉaivu.*

[கள்ள(ம்) + வேடம்.]

கள்ளவேலை *kaḷḷavēlai* பெ.(n.) ***கள்ளப்பணி*** பார்க்க; see *kaḷḷappaṇi.*

ம. கள்ளவேல

[கள்ள(ம்) + வேலை.]

கள்ளழகர் *kaḷḷaḻagar,* பெ.(n.) கள்ளர் நாட்டில் உள்ள அழகர் மலையில் கோயில் கொண்ட திருமால்; vishnu, in Alagar-koil, situated in the Kallar-nādu.

[கள்ள(ர்) + அழகர்.]

கள்ளன்[1] *kaḷḷaṉ,* பெ.(n.) 1. திருடன்; thief, robber, depredator. கள்ளன் புத்தி திருட்டு மேலே (உ.வ.). 2. ஏய்ப்பவன் (வஞ்சகன்;) deceitful or cunning person.

ம. கள்ளன், களவன்; **க.** கள்ள. கள; கள்ளால்; **து.** கள்வெ; **குட.** கள்ளே; **கோண்.** கல்லெ, கல்லே, கல்வால்; குரு கல்பச்; **மா.** கல்வே, க்வல்வ; **பிரா.** கள்ளே; **துட.** கொள்ண்; **தெ.** கல்லரி பட.கள்ள.

Skt. kalama

[கள் → கள்ளன் → கள் = கருமை.]

கள்ளன்[2] *kaḷḷaṉ,* பெ.(n.) ***கள்ளர்*** பார்க்க; see *kaḷḷar.*

[கள் → கள்ளன்.]

கள்ளன்[3] *kaḷḷaṉ,* பெ.(n.) ஒருவகைச் செய்நஞ்சு; a preparced arsenic (சா.அக.).

[கள் → கள்ளன்.]

கள்ளாகிச்சொரிந்த உப்பு *kaḷḷākicerinda-v-uppu.* பெ.(n.) வழலையுப்பு; quintessence salt (சா.அக.).

[கள் + ஆகி + செரிந்த + உப்பு.]

கள்ளாட்டு *kaḷḷāṭṭu,* பெ.(n.) களியாட்டம், drunken revel. *"கன்றிய காமக் கள்ளாட் டயர்ந்து" (மணிமே. 22, உரை).*

[கள்[3] + ஆட்டு.]

கள்ளாம்பல் *kaḷḷāmbal,* பெ.(n.) வெள்ளாம்பல் (மலை.); white Indian water-lily.

[கள்[3] + ஆம்பல்]

கள்ளாமை *kaḷḷāmai,* பெ.(n.) 1. களவு செய்யாமை; not stealing. 2. திருக்குறள் அதிகாரங்களுள் ஒன்று; one of the chapters of Tirukural.

[கள் + ஆ + மை] 'ஆ' எ.ம.இடைநிலை

கள்ளி[1] *kaḷḷi,* பெ.(n.) 1. முட்செடிவகை; spurge. *"கள்ளியங் கடத்திடை கேழல் பார்க்கும்" (ஐங்குறு. 323.).* 2. திருகுகள்ளி; milk-hedge, 3. இலைக்கள்ளி; five - tubercled spurge. 4. சதுரக்கள்ளி; square spurge. *'கள்ளிக் கொம்புக்கு வெள்ளிப்பூண் கட்டினாற் போல்' (பழ.).* 5. மண்டங்கள்ளி; cement

plant. 6. சப்பாத்துக்கள்ளி; common prickly pear. 7. சாதிக்காய் மரம்; deal-tree. கள்ளிப்பெட்டியில் சீமைச் சாமான்கள் வரும் (உ.வ.).

ம., க.,தெ.,து.கள்ளி.

[கள் - முள். கள் → கள்ளி. ஒ.நோ. முள்ளி.]

கள்ளிவகைகள் : 1. ஆட்டான்கள்ளி 2. இரணக்கள்ளி 3. இலைக்கள்ளி 4. ஈத்தக்கள்ளி 5. ஈரக்கள்ளி 6. எருமை நாக்குக்கள்ளி 7. ஐங்கணுக் கள்ளி 8. கடற்கள்ளி 9. கண்டங்கள்ளி 10. கணுக் கள்ளி 11. கருங்கள்ளி 12. காட்டெருமைக் கள்ளி 13. காம்புக்கள்ளி 14. குதிரைச் செவிக்கள்ளி 15.கொடிக்கள்ளி 16.கொம்புக்கள்ளி 17.கோடுகள்ளி (கோட்டுக்கள்ளி) 18. சதுரக்கள்ளி 19. சப்பட்டைக் கள்ளி 20. சப்பாத்துக்கள்ளி 21. சுரக்கள்ளி 22. செஞ்சதுரக்கள்ளி 23. சோற்றுக் கள்ளி 24. திருகுக்கள்ளி 25. திருவற்கள்ளி 26. தேர்க் கள்ளி 27. நண்டுக்கள்ளி 28. நாகதாளிக் கள்ளி 29. நாதாங்கிக்கள்ளி, 30. நாய் நாக்குக்கள்ளி 31. நானாங்கள்ளி 32. நிலக்கள்ளி 33. பட்டங்கள்ளி 34. பட்டணத்துக்கள்ளி 35. பயற்றங்கள்ளி 36. பலகைக்கள்ளி 37. பாச்சான் கள்ளி 38. புட்டன்கள்ளி 39. பூச்சிக்கள்ளி 40. பெருங் கள்ளி 41.பொத்தைக்கள்ளி 42. மரக்கள்ளி 43.மலைக்கள்ளி 44. மாந்தங்கள்ளி 45. மான் செவிக்கள்ளி 46. முப்பட்டைக்கள்ளி 47. முயற் செவி கள்ளி 48. முரித்தற்கள்ளி 49. முள்ளுக் கள்ளி 50. வயற்கள்ளி 51. வலங்கள்ளி (சா.அக.).

கள்ளி[2] *kaḷḷi,* பெ.(n.) 1. திருடி; a female thief. 2. கள்ளனின் மனைவி; the wife of a thief. 3. வேலை செய்யாது குழப்புபவள்; woman who shirks work. வேலைக்கள்ளிக்குப் பிள்ளைமேலே சாக்கு (உ.வ.).

க. கள்ளதி, கள்ளெ; **ம.** கள்ளி, கள்ளத்தி; **கோத.** கய்ள்; **குட.** கள்ளி; **தெ.** கல்லரி (பொய்யன்); பட. கள்ளெ; **கசபா.** கல்லி.

[கள்ளம்→ கள்ளி.]

கள்ளிக்காக்கை *kaḷḷi-k-kākkai,* பெ.(n.) செம் போத்து;crow pheasant.

[கள்ளி + காக்கை.]

கள்ளிக்குருவி *kaḷḷi-k-kuruvi,* பெ.(n.) பன்றிக்குருவி (m.m.815.); white headed babbler frequenting milk-hedge.

[கள்ளி + குருவி.]

கள்ளிக்கோட்டை *kaḷḷi-k-kōṭṭai,* பெ.(n.) கேரளாவில் உள்ள ஒரூர்; name of a town called kozhikode or calicut in kerala. ***கோழிக்கோடு*** பார்க்க; see *koḻikkōḍu.*

[கோழிக்கோடு > E. Calicut > த. கள்ளிக்கோட்டை.]

கள்ளி கொள்ளு-தல் *kaḷḷi-koḷḷu,* பெ.(n.) 10 செ.குன்றாவி (v.t.). கால்நடைகள் கள்ளியைத் தின்னுதல்; to graze tender spurge. (S.I.I. vol.19 insc.151.)

[கள்ளி + கொள்.]

கள்ளிச்சிட்டு *kaḷḷi-c-ciṭṭu,* பெ.(n.) ஒரு பறவை; kind of bird.

[கள்ளி + சிட்டு.]

கள்ளிச்சொட்டு *kaḷḷi-c-coṭṭu,* பெ.(n.) கள்ளிப் பாலின் திவலை; drop of spurge milk. பால் கள்ளிச்சொட்டு போல் இருக்கிறது (உ.வ.).

[கள்ளி + சொட்டு.]

கள்ளிப்பால் *kaḷḷi-p-pāl,* பெ.(n.) கள்ளிச்செடியின் பால்; spurge milk.

[கள்ளி + பால்.]

கள்ளிப்புறா *kaḷḷi-p-puṟā,* பெ.(n.) தவிட்டுப்புறா; little brown dove.

[கள்ளி + புறா.]

கள்ளிப்பூ, *kaḷḷippū,* பெ.(n.) 1. ஓர் அணியுறுப்பு; part of a jewel. *"படுகன் நாலும் கள்ளிப்பூ நாலும் கொக்குவாய் ஒன்றும் சவக்கமிரண்டும் உட்பட பொன்" (S.I.I.II. 16.).* 2. கள்ளிச்செடியின் மலர்; spurge flower.

[கள்ளி + பூ.]

கள்ளிப்பூப்புண் *kaḷḷi-p-pūpuṇ,* பெ.(n.) ஒருவகைப் பால்வினை நோய்; secondary syphilis.

[கள்ளி + பூ + கிரந்தி.]

கள்ளிப்பெட்டி *kaḷḷi-p-peṭṭi,* பெ.(n.) சாதிக்காய் மரப் பெட்டி; deal-wood box.

[கள்ளி + பெட்டி.]

கள்ளிமட்டை *kaḷḷimaṭṭai,* பெ.(n.) உலர்ந்த கள்ளி; dried spurge

[கள்ளி + மட்டை. ஒ.நோ. தென்னைமட்டை.]

கள்ளிமடையான் *kaḻḻimaḍaiyāṉ,* பெ.(n.) ***கள்ளி மந்தாரை*** பார்க்க; see *kalli-mandarai.*

[கள்ளி + மடையான்.]

கள்ளிமந்தாரை *kaḻḻi-mandārai,* பெ.(n.) பெருங் கள்ளி; (மலை.); pagoda tree.

மறுவ. கள்ளி மடையான்

[கள்ளி + மந்தாரை]

கள்ளிமந்தாரை

கள்ளிமுளையான் *kaḻḻi-muḷaiyāṉ,* பெ.(n.) 1. ***கள்ளி மந்தாரை*** பார்க்க; (பதார்த்த. 371.); see *kalli-mandārai,* 2. செடிவகை; spurge sprout, fleshy plant with angular stems.

[கள்ளி + முளையான்.]

கள்ளிமேடு *kaḻḻimēḍu,* பெ.(n.) திருத்துறைப்பூண்டி அருகிலுள்ள ஓர் சிற்றூர்; village near Thirutturai-p-pundi.

[கள்ளி + மேடு = கள்ளிச்செடி அதிகமாக உள்ள மேடான இடம். இவ்வூர் தற்பொழுது கோடிக்கரை என வழங்கப்படுகிறது.]

கள்ளிமேற்புல்லுருவி *kaḻḻimēṟpulluruvi,* பெ.(n.) கள்ளிச் செடியின் புல்லுருவி; a parasite of spurge tree (சா.அக.).

[கள்ளி + மேல் + புல்லுருவி.]

கள்ளியிடையான் *kaḻḻiyiḍayāṉ,* பெ.(n.) இலைக் கள்ளி; leaf spurge (சா .அக.).

[கள்ளி + இடையான்.]

கள்ளியுப்பு *kaḻḻi-y-uppu,* பெ.(n.) கள்ளியை எரித்து அதன் சாம்பலினின்று செய்த உப்பு; salt extracted from the ashes of the milk-spurge plant (சா.அக.).

[கள்ளி + உப்பு.]

கள்ளில் ஆத்திரையனார் *kaḻḻil āttiraiyaṉār,* பெ.(n.) கடைக்கழகப் புலவருள் ஒருவர்; a poet of the Sangam age.

[கள்ளில் + ஆத்திரையனார்.]

தொண்டை நாட்டிலுள்ள 'கள்ளில்' என்ற தேவாரப்பாடல் பெற்ற ஊரினர்; ஆத்திரையன் – அத்திரி குடிலத்தில் பிறந்த ஆரிய மரபினர்; இவராற் பாடப்பட்டோர் வேங்கடமலைக்குரிய தலைவ னாகிய ஆதனுங்கனும், ஆதியருமனு மானவர். இவர் செய்த பாடல்கள் 3. [புறநா. 175, 389. குறுந். 293.] [புறநா. உ.வே.சா. பதிப்பு].

கள்ளிறக்கு–தல் *kaḻḻirakku-,* 5 செ.குன்றாவி (v.t.). மரத்திலிருந்து கள்ளொடுத்தல்; to collect the toddy from the trees.

[கள் + இறக்கு.]

கள்ளின்செருக்கு *kaḻḻiṉcerukku,* பெ.(n.) கள்ளின் வெறி; intoxication of toddy.

[கள் + இன் + செருக்கு.]

கள்ளுக்காசு *kaḻḻu-k-kāśu,* பெ.(n.) பெரிய வலை மேற் செல்வோர் கள்ளுண்ணுதற் பொருட்டுப் பெறுங் காசு; the amount meant for drinking, given to those who go for deep sea fishing.

[கள் → கள்ளு + காசு.]

கள்ளுக்காய் *kaḻḻukkāy,* பெ.(n.) இளங்காய்; tender fruit, vegetable etc.

[கள் → கள்ளு + காய்.]

[உ → உல் → உர் → உரு → உருத்தல் = தோன்றுதல்

உல் → உல்லரி = தளிர். உலவை = தழை.

உல் → குல் → குள் → குளகு = தளிர், தழை

குள் → கள் = இளமை, பிஞ்சு (த.வா. 73–74).*]*

கள்ளுண்ணி *kaḻḻuṇi-,* பெ.(n.) தேனீ; honey bee (சா.அக.).

[கள் + உண்ணி.]

கள்ளுண்ணு–தல் *kaḻḻuṉ-,* 13 செ.குன்றாவி (v.t.) கள்ளைக் குடித்தல்; to drink toddy.

[கள் + உண்ணு.]

கள்ளுணி *kaḻḻuṇi,* பெ.(n.) 1. கள்ளுண்போன்; one who drinks toddy. 2. தேனுண்ணும் வண்டு; honey bee (சா.அக.).

[கள் + உணி.]

கள்ளு–தல் *kaḷḷu* 5 செ.கு.வி.(v.i.) கூடுதல்; to join. பன்மை பல்பொருட் கூட்டமாதலால், கூடுதலைக் குறிக்கும் 'கள்ளுதல்' என்னும் வினைச் சொல்லி னின்று 'கள்' என்னும் பன்மையுருபு அமைக்கப் படடது. (எ.டு.) மக்கள் (மக + கள்), மரங்கள், விலங்குகள், யாங்கள், நீங்கள், இவர்கள் (வேர்ச். கட்.14.).

[குல் → குள் → கள் → கள்ளு.]

கள்ளூறும்பனை *kaḷḷūrumpaṉai* பெ.(n.) ***இடுக்குப் பனை;*** palmyra tree.

[கள் + ஊறும் + பனை.]

கள்ளேடுவிடு–தல் *kaḷḷeḍu-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. படித்துக்கொண்டு அல்லது எழுதிக் கொண்டு போகும்போது சில ஏடுகளை வேண்டுமென்றே படியாமலோ எழுதாமலோ தள்ளிவிடுதல்; to pass over a leaf wilfully while reading or copying. 2. அரைகுறையாக வேலை செய்தல் (வி.); to perform duties perfunctorily.

[கள் → கள்ள + ஏடு + விடு.]

கள[1] *kaḷa,* பெ.(n.) ***களா*** பார்க்க (நன்.165, மயிலை); see *kaḷā.*

[களா → கள. (செல்வி, 78 சிலை 242.).]

கள[2] *kaḷa,* பெ.(n.) ***களவொழுக்கம்*** பார்க்க; see *kaḷavoḷukkam. "காமங் கள விட்டு" (பரிபா.11.42.).*

[கள் → கள.]

களஆய்வு *kaḷaāyvu,* பெ.(n.) ***களப்பணி*** பார்க்க; see *kaḷa-p-paṇi.*

மறுவ. களப்பணி

[களம் + ஆய்வு.]

களக்கட்டை *kaḷa-k-kaṭṭai,* பெ.(n.) நெற்களத்தில் பிணையல் ஓட்டும் போது நடுவில் நடும் கட்டை; a wooden rod erected in the middle of threshing floor when yoking oxen.

[கள(ம்) + கட்டை.]

களக்கம் *kaḷakkam,* பெ.(n.) குற்றம்; fault, defect. *"களக்கமில்லாதோன்" (திருவாலவா.50:8.).*

[களங்கம் → களக்கம் (வேக 127).]

களக்கர் *kaḷakkar,* பெ.(n.) 1. ஈனர்; inferiors by habits. 2. வேடர்; a hunting caste.

[கள் → களக்கு → களக்கர்.]

களக்காட்டூர் *kaḷakkāṭṭur,* பெ.(n.) செங்கை வட்டத்து மானாமதியின் பண்டைப் பெயர்; the old name of Manamathi of Chengalpet taluk. *"களக்காட்டூர் திருசக்கரபுரத்தாள்வார்க்கு" (தெ.இ. கல்.தொ.19 கல் 385.).*

[களா + காடு + ஊர்– களாக்காட்டூர் → களக்காட்டூர். களாக்காடு = களாமரத்துக்காடு.]

களக்குக்கொளக்கெனல் *kaḷakku-k-koḷakkeṉal,* பெ.(n.) சளக்குப் புளக்கெனத் தண்ணீரில் அலையடித்தல்; onomatopoeic expr. referring to the beating of the waves against.

[களக்கு + கொளக்கு + எனல்.]

களக்குடி[1] *kaḷakkuḍi* பெ.(n.) கும்பகோணம் வட்டம் திருக்கோடிகாவல் அருகில் உள்ள ஓரூர்; a place near Thirukkodikaval in Kumbakonam taluk. *"களக்குடி வாய்க்காலாறு பாயவும்" (தெ.இ.கல்.தொ. 19 கல் 114).*

[களம் + குடி–களக்குடி= களத்தின் ஓரக்குடியிருப்பு.]

களக்குடி[2] *kaḷakkuḍi* பெ.(n.) கல்லிடைக் குறிச்சியின் பழைய பெயர்; old name of Kallidaikkurucci of Ambasamudram taluk. *"களக்குடியில் எழுந்தருளியிருக்க" (தெ.இ.கல்.தொ. 23 கல் 91 கி.பி. குலசேகரன் காலம்.).*

[களா + குடி–களாக்குடி= களக்குடி.]

களக்குறிப்பு *kaḷa-k-kuṟippu,* பெ.(n.) களத்துத் தவசக்கணக்கு; account of the grain on the threshing-floor.

[களம் + குறிப்பு.]

களக்கெனல் *kaḷakeṉal,* பெ.(n.) திடுமெனச் சிரித்தற் குறிப்பு; onom. expr. signifying sudden burst of laughter.

Mal. gelak

[களக்கு + எனல்.]

களக்கொட்டு *kaḷa-koṭṭu,* பெ.(n.) நெற்களங் காத்தற்குக் கொட்டும் பறையொலி; beating of the drum to keep thieves away from the threshing - floor.

[களம் + கொட்டு.]

களகண்டம் *kaḷa-kaṇḍam,* பெ.(n.) குயில்; koel, the Indian cuckoo, as having a sweet throat.

[கள + கண்டம்.]

களகண்டமாலை *kaḷa-kaṇḍa-mālai,* பெ.(n.) ஒரு வகைச் சிலந்திக் கட்டி; absess.

[களகண்ட (ம்) + மாலை.]

களகண்ணி *kaḷakaṇṇi,* பெ.(n.) கழுத்தில் புண்களை உண்டாக்கும் கண்டமாலை என்னும் நோய்; sores or ulcers with sinuses in the neck (சா.அக.).

[களம் = தொண்டை. களம் → கள + கண்ணி.]

களகம்[1] *kaḷagam,* பெ.(n.) பெருச்சாளி; bandicoot.

[கல் → கள் → கள → களகம் = களவாடுவது.]

களகம்[2] *kaḷagam,* பெ.(n.) நெற்கதிர்; sheaf of paddy. *"வண்களக நிலவெறிக்கும்" (திவ்.பெரியதி. 6,9,10.).*

[கள → களகம்.]

களகம்[3] *kaḷagam,* பெ.(n.) சுண்ணாம்புச்சாந்து; lime mortar. *"களகப்புரிசைக் கவினார் சாருங். கலிக்காழி" (தேவா. 113,3.).*

[கள் → களகு → களகம்.]

களகம்[4] *kaḷagam,* பெ.(n.) ஓதிமம்; hamsa, swan. (திவ்.பெரியதி. 6,9,10.வியா.).

[கள் → களகு → களகம்.]

களகம்[5] *kaḷagam,* பெ.(n.) மாட்டுவண்டி அச்சின் இருபுறமும் செங்குத்தாகச் செருகி வைக்கும் முளைக்குச்சி; pieces of wood which are perpendicularly inserted in the pieces of timber at either side of the platform of a cart bullock.

க. களிகெ, களக.

[கழி → களி → களிகம் → களகம்.]

களகம்பளம் *kaḷakambaḷam,* பெ.(n.) எருத்தின் அலைதாடி; bull's dew-lap. *"களகம்பளமாங் குறியுடைய தானெனல் போல்" (வேதா. சூ–30).*

[களகம் + (வாளம்) பளம்.]

களகள[1] *kaḷa-kaḷa,* பெ.(n.) **களகளெனல்** பார்க்க; see *kaḷakaḷeṉal. "கடாந்திறத்திட்டு வானிற் களகள முழங்கும் வேழம்" (சீவக. 806.).*

[கள + கள.]

களகள[2]**–த்தல்** *kaḷa-kaḷa-,* 4 செ.கு.வி. (v.i.) ஒலியெழுதல்; to rattle, chatter, gurgle.

[கலகல → களகள.]

களகளப்பு *kaḷa-kaḷappu,* பெ.(n.) 1. பேரொலி (பிங்.); lud and confused noise, as the din of the bazaar or the roar of the waters. 2. நெஞ்சில் கோழை கட்டுவதால் உண்டாகும் ஓசை; noise due to the accumulation of phlegm in the chest. 3. இறக்குந் தறுவாயில் நெஞ்சிற் காணும் ஓசை; the sound emited by the dying.

[களகள → களகளப்பு.]

களகளெனல் *kaḷa-kaḷeṉal,* பெ.(n.) ஈரடுக்கொலிக் குறிப்பு (திவா.); onam. expr. signifying tinkling, flowing with a gentle sound, chattering.

[களகள + எனல்.]

களங்கட்டி[1] *kaḷaṅkaṭṭi,* பெ.(n.) மீன்வகை (வின்.); kind of fish.

[களம் + கட்டி.]

களங்கட்டி[2] *kaḷaṅkaṭṭi,* பெ.(n.) நெல் முதலிய கூலங்களைப் போரடிக்கும் களத்தில் போடப்படும் சிறு குடிசை (செங்கை.); small hut erected on the threshing floor

[களம் + கட்டி.]

களங்கட்டுவலை *kaḷaṅkaṭṭu-valai,* பெ.(n.) கிழங்கான் மீன் பிடிக்கும் வலை; net used for fishing kiḷaṅgāṉ fish.

[களம் + கட்டு + வலை.]

களங்கப்படு–தல் *kaḷaṅga-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) புகழ்க் கேட்டிற்கு ஆளாதல்; to be defamed.

[களங்கம் + படு.]

களங்கப்படுத்து–தல் *kaḷaṅga-p-paḍuttu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. புகழ்க்கேடு உண்டாக்குதல்; to defame. 2. கறை உண்டாக்குதல்; to cause stain

[களங்கம் + படுத்து.]

களங்கம் *kaḷaṅgam,* பெ.(n.) 1. கரிய மறு (திவா.); stain, blot, tarnish. 2. கருத்தொலைப்பு குற்றவகை; fault, defect, moral guilt. 3. புகழ்க்கேடு; defamation, blame. 4. துரு (சூடா.); rust. 5. களிம்பு

(சங்.அக.); verdigris. 6. கறுப்பு (திவா.); black colour. 7. கறுப்புபுள்ளியாகிய ஒருவகை வயிரக்குற்றம்; dark spot in a diamond. *"காகபாதமும் களங்கமும் விந்துவும்" (சிலப். 14,180).* 8. நீலம்; blue colour. 9. அடையாளம்; mark, sign, token *"களங்க மொன்றிட்டு மண்ணுறுத்தி நற்றுகில் கொடு பொதிந்தனன்" (கந்தபு. மார்க்கண்.133).*

ம. களங்கம்; **க.** கலங்க; **தெ.** கலங்கமு; **து.** களங்க்.

கல் → கள் = கருமை. கள் → களம்=கருமை, களம் – களங்கு=கருமை; குற்றம். களங்கு → களங்கம் = கருமை, கறை, மறு, குற்றம்.

களங்கன் = மறுவுள்ளமா ; மா.வி.அ.க. 'இதன்மூலம் ஐயுறவிற்கிடமானது' (etym, doubtful) என்று குறித்திருப்பது கவனிக்கத் தக்கது. (வ.மொ.வ.111.)

த.களங்கம் >**Skt.**kalam.

களங்கன் *kaḷaṅgaṉ,* பெ.(n.) 1. மறுவுள்ளமதி (திவா.); moon, as spotted. 2. மனத்தால் அல்லது ஒழுக்கத்தால் குறைபாடுள்ளவன்; person with mental, or moral defect.

[களங்கம் → களங்கன் (வே.க.120.).]

நிலவின் இடையிடையே கறையுடையது போற் காணப்படுதலான் களங்கன் என வழங்கப் படுகிறது.

களங்கு[1] *kaḷaṅgu,* பெ.(n.) களங்கம்; blemish *"திங்கள்... உடற்களங்கால்" (பிரபுலிங். கைலாச. 6.).*

[களவு → (களகு) → களங்கு (வே.க.120.).]

களங்கு[2] *kaḷḷaṅgu,* பெ.(n.) இதளியம் (பாதரசம்) முதலிய மாழைகளால் உண்டாக்கிய குளிகை (வின்.); pill prepared from several metals including mercury.

[கள → களங்கு.]

களங்குமுறை *kaḷaṅgu-muṟai,* பெ.(n.) ***களங்கு***[2] (வின்.) பார்க்க; see *kaḷaṅgu*[2]

[களங்கு + முறை.]

களங்கொள்(ளு)[1]**–தல்** *kaḷaṅkoḷ(ḷu)* 13 செ. குன்றாவி (v.t.) இருப்பிட மாக்குதல்; to secure an abiding place *"கண்ணையு மனத்தையுங் களங்கொண்டிட்டவே" (சீவக. 1481).*

[களம்[2] + கொள்.]

களங்கொள்(ளு)[2]**–தல்** *kaḷaṅkoḷ(ḷu)-,* 13 செ. குன்றாவி. (v.i.) வெல்லுதல்; to gain a victory. *"ஆர்த்துக் களங்கொண்டோர்" (சிலம். 5, 83.).*

[களம்[2] + கொள் = இருப்பிடத்தைத் தாக்குதல், அவ்விடத்திற்குரியவனை அடக்குதல், வெல்லுதல்.]

களஞ்சம் *kaḷañjam,* பெ.(n.) கஞ்சா முதலிய போதைப்பொருள்கள்; intoxicating drugs like ganja. *"உணர்வழி களஞ்ச முண்டல்" (பிரபோத. 39,16).*

[கள் → கள → களஞ்சம்.]

களஞ்சி[1] *kaḷañji,* பெ.(n.) செய்நஞ்சுவகை; a prepared arsenic.

[கள → களஞ்சு → களஞ்சி.]

களஞ்சி[2] *kaḷañji,* பெ.(n.) 1. ***கழஞ்சி*** பார்க்க; see kaḷañji. 2. கழற்சிக்காய்; bonduc nut (சா.அக.).

[கள → களஞ்சு → களஞ்சி.]

களஞ்சியம் *kaḷañjiyam,* பெ.(n.) 1. தவசம் சேர்க்கும் இடம்; granary barn. 2. பண்டகசாலை, சரக்கறை; storeroom, repository *"திருக்காளத்தி ஞானக் களஞ்சியமே" (அருட்பா. 1.விண்ணப். 255.).* 3. கருவூலம்; treasury.

தெ. களஞ்சமு; **க.** களஞ்சி.

[குள் → குளஞ்சி → களஞ்சி + அம்.]

களஞ்செதுக்கு–தல் *kaḷañ-cedukku-,* 5 செ.கு.வி (v.i.) களத்தைச் செய்தல்; to clear an area of grass weeds etc., for threshing-floor.

[களம் + செதுக்கு.]

களத்தடி *kaḷattaḍi* பெ.(n.) 1. ***களத்துமேடு*** பார்க்க; see *kaḷattumēḍu. "இன்னமும் நாங்கள் விற்றுக் குடுக்கிற களத்தடி ஒன்று"* (S.I.I. vol5. Part II insc 984. s.no.5). 2. களத்தில் சிதறிக் கிடக்கும் தவசம்; sweeping of grain of a threshing floor.

[களம் + அத்து + அடி.]

களத்தி *kaḷatti,* பெ.(n.) கட்டடத்தில் நீட்டிக் கொண் டிருக்கும் பகுதி; extended part of a building to prevent rain, sunshine etc.

மறுவ. புறப்பாடு, கழிவு, பிதுக்கம். கவுதம்

[கள் → கள (திரண்டது). கள → களத்தி (திரண்டபகுதி).]

களத்துட்டியிறு—த்தல் *kaḷattuṭṭiyiṟu-,* 4 செ.குன்றாவி (v.t.) களத்து மேட்டிலேயே தீர்வையைச் செலுத்துதல்; to remit tax at threshing place itself.

[களத்து + இட்டு – களத்திட்டு → களத்துட்டி இறுத்தல் (கொ.வ.).]

களத்துமேடு *kaḷattu-mēḍu,* பெ.(n.) தவசங்கள் போரடிக்க அமைத்த மேடு; elevated place used as threshing-floor.

[களம் + அத்து + மேடு. 'அத்து' சாரியை.]

களத்துவாய் *kaḷattuvāy,* பெ.(n.) **களத்துமேடு** பார்க்க; see *kaḷattumēḍu.*

[களம் + அத்து + வாய். 'அத்து' சாரியை.]

களத்தூர் *kaḷattūr,* பெ.(n.) செங்கற்பட்டுக்கருகில் உள்ள சிற்றூர்; a village near Chengalpattu.

[களத்து + ஊர்.]

களத்தூர்கிழவர் *kaḷattūr-kiḻāvar,* பெ.(n.) சுத்த மல்லி வளநாட்டு பாம்புணிக் கூற்றத்துப் பிழிசூர், தற்காலத் திருத்துறைப் பூண்டி வட்டத்தில் உள்ள களத்தூரில் நில உரிமை கொண்டவர்; possessers of land and rights in Kalathur of Pambunik kootram in Suthamalli valanadu, currently in Thiruthuraipoondi taluk. "இவ்வூரில் காணியுரிமை யுடைய களத்தூர்க் கிழவன் திருமா காளத்தாண்டார் & களத்தூர்க் கிழவன் தளரா நிலைக் காக்குநாயகன் உய்யவந்தாந்" (தெ.இ.கல். தொ. 23. கல் 475). *"களத்தூர் கிழவன் அரயன் அளவன்தாள்". "களத்தூர் கிழவன் தில்லையுள் வில்லி பெரியாழ்வார்" (கல் 476).*

[களத்தூர் + கிழவர். கிழவர் = நிலக்கிழார்.]

களத்தூர்கிழார் *kaḷattūr-kiḻār,* பெ.(n.) கடைக் கழகப்புலவர்; a Sangam poet.

[களத்தூர் + கிழார்.]

களந்தூன்றி *kaḷandūṉṟi,* பெ.(n.) தான்றி; *belleric myrobalan.*

[ஒருகா. களம் + (தன்றி) தூன்றி – களந்தூன்றி.]

களந்தெளி—த்தல் *kaḷanteḷi-,* 4 செ.கு.வி.(v.t.) செதுக்கிய களத்தில் சாணிப்பால் அல்லது நீர் தெளித்துப் புழுதியடங்கச் செய்தல்; to smear the levelled threshing floor with cowdung mixture or water.

[களம் + தெளி.]

களந்தை *kaḷandai,* பெ.(n.) களத்தூர்; Kalathur.

[களத்தூர் → களந்தை (மரூஉ வழக்கு).]

களநடை *kaḷa-naḍai,* பெ.(n.) கண்டுமுதல் (இ.வ.); actual produce of a field.

[களம் + நடை.]

களநடைக்கணக்கு *kaḷa-naḍai-k-kaṇakku,* பெ.(n.) களத்துத் தவசக் கணக்கு (C.G.); account of the grain on the threshing-floor.

[களம் + நடை + கணக்கு.]

களப்படி *kaḷa-p-paḍi,* பெ.(n.) ஊர்ப்பணியா ளர்களுக்கும் வேலையாள்களுக்கும் களத்தில் பிரித்துக் கொடுக்கும் தசவம் (C.G.); grain distributed at the threshing-floor to labourers or village public servants.

[களம் + படி.]

களப்படையல் *kaḷa-p-paḍaiyal,* பெ.(n.) போர்க்களத் தில் போர் தொடங்குமுன் கொற்றவைக்குக் கொடுக்கும் படையல்; sacrifice offered at the battle field to the goddess of victory before commencing battle.

[களம் + படையல்.]

களப்பணி *kaḷa-p-paṇi,* பெ.(n.) உரிய இடத்திற்குச் சென்று நேரிடையாகச் செய்யும் பணி; field work. field study.

[கள(ம்) + பணி.]

களப்பணியாளர் *kaḷa-p-paṇiyāḷar,* பெ.(n.) தொடர்பு டைய இடத்திற்குச் சென்று ஆய்வுப்பணி மேற்கொள் பவர்; field-worker.

[கள(ம்)+பணி + ஆளர்.]

களப்பலி *kaḷa-p-pali,* பெ.(n.) **களப்படையல்** பார்க்க; see *kaḷa-p-paḍaiyal. "களப்பலிக்குரியார் யாவர்" (வில்லிபா. உத்தி. 6:2).*

[களம் + பலி. பிராகி. பலி = படையல்.]

களப்பலிகூட்டுதல் *kaḷa-p-pali-kūṭṭudal,* (தொ.பெ.) (vbl.n.) முறையின்றிக் கொல்லுதல் (ம.அக.); to offer human sacrifice.

[களம் + பலி + கூட்டுதல்.]

களப்பன்றி *kaḷappaṉṟi,* பெ.(n.) பெருங்குமிழ்; coomb teak.

[கள(ம்) + பன்றி.]

களப்பாட்டு *kaḷa-p-pāṭṭu,* பெ.(n.) களத்தில் போரடிப் போர் பாடும் பாட்டு; song or ballad of the thresh-ing-floor.

ம.களப்பாட்டு

[கள(ம்)² + பாட்டு.]

களப்பாய் *kaḷa-p-pāy,* பெ.(n.) களத்தில் விரிக்கும் பாய். (வின்.); mat spread on the threshing - floor to tread out grain.

[கள(ம்) + பாய்.]

களப்பாழ்குடி *kaḷappāḻkuḍi,* பெ.(n.) திருச்சோற்றுத் துறை (திருச்சாத்துறை) அருகில் இருந்த பண்டைய ஊர்; an old place near Thiruchatturai in Thanjavur taluk. "இப்பொன் இருபத்து ஐங்கழஞ்சும் மிறைக் கூற்றத்துப் பிரமதேயம் களப்பாழ்குடி சபையோம்." (தெ.இ.கல். தொ.19. கல்336.).

[களப்பான்(களப்பாளர்)+குடி–களப்பான்குடி→களப்பாழ்குடி என்பதில் ள→ழகரத்திரிபு, கல்லெழுத்துப் பொறித்தோனின் எழுத்துப்பிழை.]

களப்பாள் *kaḷappāḷ,* **களப்பிரர்** பார்க்க; see *kaḷ apirar.*

களப்பாளர் *kaḷappāḷar,* **களப்பிரர்** பார்க்க; see *kaḷ apirar.*

களப்பாளராயன்[1] *kaḷa-p-pāḷa-rāyaṉ,* பெ.(n.) களப்பிரர் வழிவந்த அரசன்; a descendant of Kalappirar king. *"களப்பாளராயன் சொன்னமையில் இப்படிச் செய்யக் கடவதாக" (S.I.I. 5, volI).*

[களப்பாளர் + (அரையன்) ராயன்.]

களப்பாளராயன்[2] *kaḷa-p-pāḷa-rāyaṉ,* பெ.(n.) கி.பி. 12ஆம் நூற்றாண்டில் இலால்குடி வட்டம் திருநெடுங்களம் கோயில் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ள பெருமகன் பெயர்; the name of a gentleman who had signed in an agreement of the temple at Thirunedungalam in Lalgudi taluk. *"இவை களப்பாளராயனெழுத்து" (தெ.இ.கல். தொ. 26 கல் 726).*

[களப்பாளன் + அரையன்– களப்பாளராயன்.]

களப்பாளன்[1] *kaḷappāḷaṉ,* பெ.(n.) **களப்பாளராயன்** பார்க்க; see *kaḷappāḷrāyaṉ.* கணவதி அழகனான களப்பாளனும் (S.I.I. vol.5 part I insc 412.).

[களப்பான் + அன்.]

களப்பாளன்[2] *kaḷappāḷaṉ,* பெ.(n.) கி.பி.12 ஆம் நூற்றாண்டில் செங்கை வட்டம் திருக்கச்சூர்க் கோயில் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்ட பெரு மானார்; a gentleman who had signed in the agree ment of the temple of Kachur of Chengalpet dt. *"களப்பாளன் எழுத்து" (தெ.இ.கல். தொ. 26 கல் 333.).*

[களப்பாளன் → களப்பாளர் குடியினன்.]

களப்பிச்சை *kaḷa-p-piccai,* பெ.(n.) இரப்பவர்க்குக் களத்திற் கொடுக்குந் தவசம் (C.G.); grain given in charity on the threshing floor.

[கள(ம்) + பிச்சை.]

களப்பித்தம் *kaḷa-p-pittam,* பெ.(n.) ஒருவகைப்பித்த நோய்; a kind of bile disease.

[கள(ம்) + பித்தம்.]

களப்பிரர் *kaḷa-p-pirar,* பெ.(n.) தமிழராயிருந்து மொழியால் வடுகர், கருநடராகவும் சமயத்தால் பவுத்த சமணராகவும் விளங்கி கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஐந்தாம் நூற்றாண்டு வரை தமிழகத்தை ஆட்சி புரிந்த அரசமரபினர்; a dynasty of rulers from third century to fifth century A.D., who ruled over Tamilnadu, being Vaduga Kannadiga by language and Budha, Jaina by re-ligion, and whose ancestry is traceable to ancient Tamils.

க. களபோர; skt. kaḍavabra

[கள்→ கள்வர் →களவர்→களவாளர் →களப்பாளர் →களப்பிரர்.]

போர் தொடங்குவதற்கு முன்னரே பகை வரின் ஆநிரைகளைக் கவர்ந்து வருதற்காகப் பண்டைத் தமிழ் வேந்தர் அமைத்திருந்த வெட்சிப் படைப் பிரிவுக்குக் கள்ளர் படை எனவும், கள்வர்

படை எனவும் பெயரிருந்தது. போர்க்காலத்தில் ஆநிரைகளின் மீது அம்பு படலாகாது என்னும் அறத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட படை யாதலின் இம்மறவரைக் களவாடும் தொழிலினராக யாரும் கருதவில்லை. இக்குடியினர் கள்வர் என அழைக்கப்பட்டதை அகநானூற்றில் [295] வேங் கடத்துத் தலைவன் புல்லியை, "கள்வர் கோமான்" எனக் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம். இக் குடியினர் நாளடைவில் கள்வர் – களவாளர் – களப்பாளர்–களப்பிரர் என அறியப்பட்டனர். புகார் நகரிலிருந்து அரசாண்ட களப்பிர மன்னன் அச்சுதக் களப்பாளன் என யாப்பருங்கல விருத்தி யுரை மேற்கோள் குறிப்பிடுகிறது.

மதுரையை ஆண்ட களப்பிர மன்னனை "கருநடர் வேந்தன்" எனக் கல்லாடமும் "கானக கடிகமழ் வடுக கருநாடர் மன்னன்" எனப் பெரியபுராணமும் குறிப்பிடுகின்றன.

களப்பாளக் குடியினரின் ஒரு பிரிவினர் இன்றைய கருநாடகத்துச் சிரவண பெளகுள பகுதியில் குடியேறி குறுநில மன்னர்களாயினர். இப்பகுதி, அக்காலத்தில் களபப்ப எனப்பெயர் பெற்றிருந்தது. மாமன்னன் அசோகனின் பாட்ட னாகிய சந்திரகுப்த மௌரியன், பத்ரபாகு முனி வருடன் இந்நகருக்கு அருகிருந்த களபப்பு மலை யில் தங்கியிருந்தான் எனவும் களபப்ப அரசர்கள் ஆட்சி இன்றைய கோலார் வரை அக்காலத்தில் பரவியிருந்தது எனவும் கி.பி. 250 இல் இப்பகுதியை ஆண்ட களப்பிர மன்னன் தமிழ் நாட்டின் மீது படையெடுத்து மூவேந்தர் நாடும் கவர்ந்து கொண் டான் எனவும் கூறப்படுகிறது. கி.பி. 475 இல் பாண்டியன் கடுங்கோன் களப்பிரரை வென்று பாண்டிய நாட்டை மீட்கும் வரை களப்பிரர் ஆட்சி நிலவிற்று.

களப்பிரர்காலம் *kaḷa-p-pirar-kālam,* பெ.(n.) தமிழ் நாட்டில் கி.பி. 250 முதல் 500 வரை ஆட்சி புரிந்த வடுகக் கருநட அரச மரபினரின் ஆட்சிக் காலம்; a period between 250 A.D. and 500 A.D. in which Vaduga Karnataga rulers known as Kalabras who ruled over Tamilnadu.

*[களவர்→ களவாளர் →களப்பாளர் →களப்பிரர் + காலம்; **களப்பிரர்** பார்க்க.]*

அக்காலத்தில் களபப்பெ என அறியப்பட்ட இன்றைய சிரவண பெளகுள கருநாடகப் பகுதி மிலிருந்த களப்பிர மன்னன் கி.பி. 250 இல் தமிழ் நாட்டை வென்று ஆட்சி புரிந்தான். அன்று முதல் மூன்று நூற்றாண்டுகள் களப்பிரர் ஆட்சி தமிழ் நாட்டில் நீடித்தது.

பிற்காலத்தில் வந்த தமிழ் வேந்தர்கள் வேதந்தழுவிய இரண்டன்மை [அத்துவைதக்]க் கோட்பாட்டில் மிகுந்த பற்றுக் கொண்டவராதலால் அதற்கு முன் பவுத்த சமண மதங்களைப் பெரிதும் ஆதரித்த களப்பிரரைக் கலியரசர் எனத் தாழ்த்தி யுரைத்தனர்.

கடைக்காலம் மருவிய களப்பிரர் காலத்தில் பெரும்பாலான தொகை நூல்கள் தொகுக்கப் பட்டுள்ளன. சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி போன்ற பெருங்காப்பியங்களம், கொங்குவேளின் பெருங்கதையும் பிற இலக்கி யங்களும் தோன்றிய இலக்கிய வளம் செறிந்த காலம் இது எனப்படுகிறது. பின்னர் சிவனியமும் மாலியமும் தழைத்த காலத்தில் எழுந்த சமயப் பூசல்களில் களப்பிரர் கால இலக்கியங்கள் பலவும் கனலிலும் புனலிலும் அழிக்கப்பட்டன.

களப்பிரர் கால வரலாறு மிகுதியாக வெளிப் படாததால் அதனை இருண்ட காலம் என்றனர். எனினும் குறிப்பாக வேத வீச்சுகளையும் வடமொழி வல்லாண்மையையும் முன்று நூற்றாண்டுகளாக வளர வொட்டாமல் தடுத்து நிறுத்திய பெருமை களப்பிரருக்கு உண்டு எனலாம்.

களப்பு[1] *kaḷappu,* பெ.(n.) கடலில் ஆழமில்லாத இடம் (வின்.); shallow part of the sea.

[களம் → களப்பு (உள்ளகமேடு) .]

களப்பு[2] *kaḷappu,* பெ.(n.) பயிரிடுவதற்காகப் புல்வெட்டி நிலத்தைச் சீர்ப்படுத்துகை (W.G.); levelling a field for cultivation after removing the grass.

[களை → களைப்பு →களப்பு.]

களப்பூசை *kaḷa-p-pūšai,* பெ.(n.) நெற்களத்தில் கொடுக்கும் படையல்; sacrifice offered on the threshing - floor. களப்பூசைக்குப் பன்றி பிடிக்கப் போனேன் (இ.வ.).

[களம் + பூசை.]

களப்பேச்சு *kaḷa-p-pēccu,* பெ.(n.) பணிச்சுமை தெரியாமல் இருப்பதற்காகக் களத்தில் பேசிக்

கொள்ளும் நகையாட்டுப் பேச்சு (வின்.); dialect peculiar to the threshing - floor.

[களம் + பேச்சு.]

களப்பேறு *kaḷa-p-pēṟu,* பெ.(n.) நெற்களத்தில் குடிமக்கள் முதலியோர் பெறும் உரிமை (யாழ்ப்.); grain distributed on the threshing - floor at different fixed rates to religious mendicants, washermen, barbers and other dependants.

[களம் + பேறு.]

களபம்[1] *kaḷabam,* பெ.(n.) 1. கலவை (சூடா.); mixture. 2. சுண்ணச்சாந்து; mortar-lime. *"நுண்களபத் தொளிபாய" (திருக்கோவை. 15).* 3. கலவை மணச்சாந்து; perfumery. *"புலிவிரா யெறிந்திடக் களபம் போக்குவார்" (இரகு. இரகுவுற். 26.).*

[கல் → கல → கலவம் → களவம் களபம் (கொ.வ.). களகம் → களபம். ஒநோ. மண்டகம் → மண்டபம் வாணிகம் → வாணிபம் (வே.க.134.).]

களபம்[2] *kaḷabam,* பெ.(n.) 1.கயம் (யானைக்கன்று); young elephant. *"மதகரிக் களபமும்" (சிலப். 25,49).* 2.யானை (திவா.); elephant.

[குளவு → களவு → களவம் → களபம்.]

த களபம் >**Skt.** kalabha

களம்[1] *kaḷam,* பெ.(n.) களாச்செடி (சூடா.); a low spreading spring evergreen shrub. *"காக்கையிற் கரிது களம்பழம்" (தொல். சொல். 79உரை).*

[கள → களம் (வே.க.119).]

களம்[2] *kaḷam,* பெ.(n.) 1. இடம் (திவா.); place, locality, open space, expanse. 2. கதிரடிக்கும் நிலம்; threshing - floor, place for treading grain. *"காவலுழவர் களத்தகத்துப் போரேறி" (முத்தொள்.).* 4. அவை; assembly, meeting, court, theatre. *"களனஞ்சி" (குறள். 730.).* 5. வேள்விச்சாலை; hall of sacrifice. *"யூபநட்ட வியன்களம் பலகொல்" (புறநா. 15.21.).* 6. போர்க்களம்; battle - field. *"ஈரைம்பதின்மரும் பொருதுகளத் தொழிய" (புறநா. 2,15).* 7. களர்நிலம் (பிங்.); saline soil. 8. உள்ளம்; mind. *"உயர்பின்மை களக்கொள" (ஞானா. 44,4.).* 9. கடலில் விழும் திட்டு; shallow shelf of rocks at sea, sand-bank. *"களத்திலே தோணி பொறுத்துப் போயிற்று" (வின்.).*

ம. களம்; **க.** கள, கண; **கோத.** கள்ம்; **துட.** கள்ண்; **குட.** கள; **கொலா.** கல்வெ; **நா.** களவெ; **பர்.** கலி; **கோண்.** கலின்; **கொண்.** கால்; **கூ.** க்லை; **குவி.** கலோமி; **குரு.** கலி; **மா.** க்வாலு.

[கள் → களம் (வேக.119, 120.)]

த. களம் > **Skt.** khala

இருக்கு வேதத்தில் khala (= threshing floor) என்னும்வடிவில் இச்சொல் வருவதை பரோ குறிப்பிடுகிறார். உல் → உத்தல் = பொருந்துதல். உத்தி = விளையாட்டில் இருவர் சேர்ந்து வரும் சேர்க்கை. உல் → குல் → குலவுதல் = கூடுதல். கள்ள = போல. கள் → களம் = கூட்டம். கூடும் ஏர்க்களம், போர்க்களம். அவைக்களம் என்பவற்றை நோக்குக [தமிழ் வர. 79, 80].

களம்[3] *kaḷam,* பெ.(n.) இன்னோசை; melodious sound. *"களங்கொள் திருநேரிசைகள்" (பெரியபு. திருநா. 337.).*

[கல் → கலம் → களம்.]

களம்[4] *kaḷam,* பெ.(n.) 1. கருமை (திவா.); blackness, dark colour. 2. முகில்; cloud. *"கனைக்களமென" (அரிசமய. பரசரா. 44).*

[கல் → கள் → களம்.]

களம்[5] *kaḷam,* பெ.(n.) 1. கழுத்து; neck, 2. தொண்டை; throat. *"பாடுகள மகளிரும்" (சிலப். 6,157.).*

மறுவ. கழுத்து, மிடறு.

Skt.gala; l.collum, gula

H. gala; **Punj.** gala; **Kas.** hot; **Sind.** galo; **Mar.** galo; ghasa; **Guj.** galum, ghar; **Beng.** gala; **Ori.** gala; **U.** gala, halak; **Ar.** halq; **Heb.** gorron; **Yid.** halts; **F.** garge; garganta (throat); **It.** gola; **Gk.** khela; **Sp., Port.** cullo; **Du.** keel; **Pol.** gardlo; **Czeach.** hrdly; **Ser.** grlo; **Fin.** kurkku; **Esper.** gargo; **Rus.** garlo.

கள்ளுதல் = கலத்தல், பொருந்துதல். கள் → களம் = தலையை உடலுடன் பொருத்தும் கழுத்து, தொண்டை. களம் → (களுத்து) → கழுத்து. வடவர் கல் என்னும் செயற்கையடியை க்ரு(விழுங்கு) என்னும் சொல்லின் திரிபாகக் கொண்டு, கல என்பதற்கு விழுங்கும் உறுப்பு என்று பொருட்காரணங் காட்டுவர் (வ.மொ.வ.112) இது பொருந்துவதன்று.

களம்[6] *kaḷam,* பெ.(n.) நஞ்சு (பிங்.); poison, venom.

[கல் → கள் → களம். கல் = கருமை.]

களம்[7] *kaḷam,* பெ.(n.) 1. கொட்டகை (P.T.L.); shed. 2. வீடு; house.

Sp. casa

[கள்→களம் = களத்துமேட்டில் இடப்பட்ட கொட்டகை.]

களம்[8] *kaḷam,* பெ.(n.) கொம்பில்லா யானை. (நாநார்த்த.); tuskless elephant.

[களவம் (யானைக்கன்று) → களம்.]

களம்பழம் *kaḷam-paḷam,* பெ.(n.) களாவின் கரியகனி; the black fruit of the kaḷā shrub. *"காக்கையிற் கரிது களம்பழம்" (தொல்.சொல். 7 9, உரை.).*

[களா + பழம் – களாப்பழம் → களம்பழம்.]

களம்பாடு–தல் *kaḷampāḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) போர்க்களத்தில் புலவன் தன் அரசனுடைய மறச் செயல்களைப் புகழ்ந்து பாடுதல்; poet singing his king's victorious and heroic deeds at the battle-field.

[களம் + பாடு.]

களம்பொலிதல் *kaḷam-polidal,* தொ.பெ.(vbl.n.) சூடடித்தல் (ம.அக.); threshing.

[களம் + பொலி.]

களம்விடு[1]**–தல்** *kaḷam-viḍu-,* செ.கு.வி.(v.i.) 1. நெற்கதிரடிக்க ஆணை யிடுதல்; to give orders to commence threshing. 2. தவசக்குவியலை அளந்த பின் களத்தில் சிதறிய தவசத்தை உழுதவனுக்கு விடுதல்; to give away to the cultivator the grain scattered on the threshing - floor after the heap of grain is measured.

[களம்² + விடு .]

களம்விடு[2]**–தல்** *kaḷam-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) நெல்லடித்த களத்திலுள்ள சிந்துமணி சிதறு மணிகளைக் குத்தகை விடுதல் (இ.வ.); to sell in one lot the grain scattered on the threshing- floor.

[களம் + விடு .]

களம்வேட்டல் *kaḷam-vēṭ-,* 14 போரிற் பகைப்படை யைக் கொன்று பேய்கட்கு விருந்தூட்டுதல்; to destroy enemies in the battle-field and to feast devils with the dead bodies, as gods in a sacrifice. *"தொடித்தோட் துடுப்பின் துழந்த வல்சியின் அடுகளம் வேட்ட அடுபோர்ச் செழிய" (புறநா. 26,11.).*

[களம்² + வேள்.]

களமடி–த்தல் *kaḷam-aḍi-,* 4 செ.கு.வி.(v.i.) விளைந்த நெல் முதலியவற்றின் கதிர்களை அடித்து உதிர்த்தல்; to thresh out the corn from the stalks.

[களம் + அடி.]

களமதிப்பு *kaḷa-madippu,* பெ.(n.) களத்தில் குவிந்த தவச மதிப்பளவு; estimate of the produce of grain on the threshing-floor.

மறுவ. களமதி

[களம்² + மதிப்பு.]

களமம் *kaḷamam,* பெ.(n.) நெல்; paddy.

[களம் → களமம் (வே.க.134.).]

களமமிடல் *kaḷamam-iḍal,* தொ.பெ.(vbl.) நெற் குவியலுள் வைத்தல்; to keep buried under a heap of paddy.

[களமம் + இடு.–]

களமர் *kaḷamar,* பெ.(n.) 1. வேளாளரில் ஒருவகைப் பிரிவனர்; husbandmen in agricultural tract.*"கருங்கை வினைஞருங் களமருங் கூடி" (சிலப். 10,125).* 2. போர்மறவர்; warriors. *"கள்ளார் களமர் இருஞ்செரு மயக்கமும்" (மதுரைக். 393).* 3. பணியாளர் பண்ணையாள்கள்; workers. *"களமர் கதிர்மணி காலேகம் செம்பொன் வளமனை பாழாக வாரி" (பு.வெ.3,15.).*

[களம்² → களமர் (வே.க.134.).]

களத்தில் பணியாற்றுவோர் களமர் எனப் பெயர்பெற்றனர். நெற்களத்தில் பணியாற்றும் உழவரையும் போர்க்களத்தில் அமராற்றும் படை மறவரையும் இச்சொல் ஒருசேரக்குறித்தது. இச் சொல்லுக்குச் சூத்திரர் என்றும் அடிமைகள் என்றும் செ.அக. குறித்திருப்பது முற்றிலும் தவறாகும். அனைத்துத் தொழிற்பிரிவினரும் அமைச்சராகவும் புலவராகவும் படைத் தலைவராகவும் ஆகும் தகுதி பெற்றிருந்த பண்டைத் தமிழகத்தில் உயர்வு தாழ் வுகள் ஆரியரால் மென்மெலப்புதிதாகப் புகுத்தப் பட்டனவேயன்றி மரபார்ந்தனவல்ல.

வடபுலத்து மொழிகளில் இச்சொல்லி அடியாகப்பிறந்த 'கலாசி' என்னும் சொல்

கீழ்நிலைப்பணியாளர்க்கு இட்டு வழங்குவது நாற்குல வேறுபாட்டில் வந்த மாற்றம் எனலாம்.

வடமொழியில் களம் என்ற சொல்லடியில் உண்டான களபு (kalapu) எனும் சொல், களத்தைத் தூய்மைப் படுத்துபவன், துப்புரவுத்தொழிலாளி என அதன் சொற்பொருளில் இழிவுபட்டு வந்திருப்பது இங்கு நோக்கத்தக்கதாகும்.

களமள—த்தல் *kaḷam-aḷa-,* 3 செ.கு.வி.(v.i.) களத்தில் தவசத்தை அளத்தல்; to measure at the threshing - floor.

[களம் + அள—.]

களமன் *kaḷamaṉ,* பெ.(n.) வேளாண் நிலத்தில் இருப்பவன், உழவன்; inhabitant of the agricultural tract.

ம. களமன்

[களம் → களமன் (சு.வி. 74.).]

களமாலை *kaḷa-mālai,* பெ.(n.) கண்டமாலை நோய்; goitre. *"வலிவாத பித்தமொடு களமாலை" (திருப்பு. 627.).*

[களம் + மாலை – களமாலை. களம் = தொண்டை. மாலை = கழுத்தில் வளைவாக வீங்கும் நோய்.]

களமாற்றம் *kaḷamāṟṟam,* பெ.(n.) விதைத்தபின் செய்யும் உழவு; ploughing after sowing seeds.

ம. களமாற்றம்

[களம் + மாற்றம்.]

களமுறம் *kaḷamuṟam,* பெ.(n.) நெற்களத்தில் பயன்படுத்தும் ஒரு வகை முறம்; a winnow used in the threshing-floor to sift grain.

ம. களமுறம்

[களம் + முறம்.]

களமெழுத்து *kaḷam-eḻuttu,* பெ.(n.) பகவதியம்மன் கோயிலில் அம்மன் உருவம் வரைந்து வழிபடுதல் (நாஞ்.); drawing the image of the goddess and singing her praises, in Bhagavadi temples.

ம. களமெழுத்து

[களம் + எழுத்து. எழுத்து = ஓவியம்.]

களமேடு *kaḷa-mēḍu,* பெ.(n.) **களத்துமேடு** பார்க்க; see *kaḷattu-mēḍu.*

[களம் + மேடு.]

களர்[1] *kaḷar,* பெ.(n.) 1. உவர்நிலம்; saline soil. *"பயவாக் களரனையர் கல்லாதவர்" (குறள், 406.).* 2. சேற்றுநிலம்; bog. *"காலாழ் களரின் நரியடும்" (குறள், 500.).*

ம. கழி; **க.** கறலு, கரலு, கர்லு, கறளு.

[கள் → கள → களர்.]

களர்[2] *kaḷar,* பெ.(n.) கூட்டம் (சூடா.); assemblage, meeting.

ம. களர்

[களம் → களர் (வே.க.120.1340).]

களர்[3] *kaḷar,* பெ.(n.) கறுப்பு (சூடா.); blackness.

ம. களர்

[களம் → களர் (வே.க.120,134.)]

களர்[4] *kaḷar,* பெ.(n.) கழுத்து (சூடா.); neck.

[கள் → களம் → களர் (வே.க.120, 134).]

களர்நிலம் *kaḷar-nilam,* பெ.(n.) உவர்நிலம்; saline soil; alkaline earth. *"களர்நிலத்துப் பிறந்த வுப்பினை" (நாலடி, 133.).*

[களர்[1] + நிலம்.]

களர்ப்பாழ் *kaḷar-p-pāḻ,* பெ.(n.) உப்புப்படிந்த பாழ் நிலம்; brackish waste. *"முது நிலத்தரிசான களர்ப் பாழாய்" (S.I.I. viii,109).*

[களர் + பாழ்.]

களர்மண் *kaḷar-maṇ,* பெ.(n.) உவர்மண்; saline soil.

[களர் + மண்.]

களர்மண்ணுப்பு *kaḷarmaṇṇuppu,* பெ.(n.) உவர் மண்ணுப்பு; crystal salts found in brackish soils.

[களர் + மண் + உப்பு.]

களர்மேடு *kaḷar-mēḍu,* பெ.(n.) விளைச்சலுக்குப் பயன்படாத மேட்டுநிலம் (இ.வ.); high land unfit for cultivation.

[களர் + மேடு.]

களர்விழுதி *kaḷarviḻudhi,* பெ.(n.) ஒருவகை மந்தாரை; purple mountain ebony (சா.அக.).

[களர் + விழுதி.]

களராத்தி *kaḷarātti,* பெ.(n.) களர் நிலத்தில் விளையும் ஆத்திவகை; wild sesban growing in the brackish soil.

[களர் + ஆத்தி]

களரி[1] *kaḷari,* பெ.(n.) 1. களர்நிலம்; saline soil. *"கள்ளி போகிய களரியம் பறந்தலை" (புறநா. 225.7.).* 2. பாழ்நிலம் (பிங்.); barren uncultivated ground. 3. காடு (பிங்.); jungle.

[களம் (களர்) → களரி.]

களரி[2] *kaḷari,* பெ.(n.) 1. விற்போர், மற்போர், நாடகம் முதலியன பயிலும் அரங்கு (யாழ்ப்.); circular area for dramatic performances, gladiatorial or gymnastic exhibitions, hall for literary performance. 2. அவை; assembly. *"அரங்கேற்றுங் களரியிலே" (திருக்கை.).* 3. அறமன்றம்; court of justice *"களரியிலே அநியாயம் அக்கிரமங்கள் நடவாமல் விசாரிக்கிறதும்"* (கோயிலொ. 64.). 4. போர்க்களம்; battle-field. *"பூசற் களரியிலே" (பு.வெ.2,6, கொளு, உரை.).* 5. தொழில் செய்யும் இடம் (திவா.); place of work or of business.

ம. களரி; **க.** கருடி; **தெ.** கரிடி; **து.** கரடி.

[குல் → கல் → கள் → களர்[2] → களரி ஓ.நோ. முள் → முளரி, வள் → வளரி (வளை தடி).]

களரி[3] *kaḷari,* பெ.(n.) மிடறு (யாழ்.அக.); throat.

[களம் → களர் → களரி.]

களரிக்கோழை *kaḷari-k-kōḻai,* பெ.(n.) அவையில் உரையாற்றவோ அல்லது நடிக்கவோ அஞ்சுபவன் (வின்.); person too bashful or diffident to play his part before an assembly.

ம. களரிக்கோழ

[களரி[2] + கோழை.]

களரிகட்டு-தல் *kaḷari-kaṭṭu-,*7 செ.கு.வி.(v.i.) அறங்கூர் அவை வேலையாளைத் தன் வயப்படுத்துதல்; to ingratiate oneself with the attendants, officers at court; to secure the superior's good -will. 2. நாடக சாலை கட்டுதல்; to form an area for the performance, of a play. 3. கூத்தரை ஆடல்பாடல் செய்யவொட்டாமல் மந்திரத்தினாற் கட்டுதல்; to prevent an actor or dancer from playing his part by magic spells.

[களரி + கட்டு.]

களரிகூட்டு[1]**-தல்** *kaḷari-kuṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) நாடகவரங்கில் கூத்து ஆடுதற்கான ஏற்பாடுகள் தொடங்குதல்; to make necessary arrangements to commence a play on the stage, as the sounding of the drum, etc., *"களரிகூட்டியபின்பு கூத்திற்குச் செல்வோம்."*

[களரி + கூட்டு.]

களரிகூட்டு[2]**-தல்** *kaḷarikūṭṭu-,* 5 செ.குன்றாவி (v.t.) சின்ன சிக்கலையும் கலவரச் சூழ்நிலையாக மாற்றுதல்; to magnify even a small incidient and lead to quarrel. *"இந்தத் திருமணத்திற்கு வராதற்குப் பெரிய களரி கூட்டி விட்டாயே" (நெல்லை).*

[களரி + கூட்டு.]

களரிச்சுற்று *kaḷari-c-cuṟṟu,* பெ.(n.)கூத்தர் அரங்கைச் சுற்றிவருகை; actors who go around the stage (ம.அக.).

[களரி + சுற்று.]

களரிப்பயிற்று *kaḷari-p-payiṟṟu,* பெ.(n.) ***களரி***[2] பார்க்க; see *kaḷari* [2].

[களரி + பயிற்று.]

களரியக்குளத்துழான் ஒற்றிகொண்டான் இராசராசதேவன் *kaḷariya-k-kuḷa-t-tuḻāṉoṟṟik oṇḍāṉ irāsarāsadēvaṉ,* பெ.(n.) கிபி. 1218 ஆம் ஆண்டு செங்கை வட்டம் திருக்கச்சூர் கோயிலுக்கு அணையா விளக்கெரிக்க நன்கொடை வழங்கியவன்; One who had made donations for perpetual lamps in the temple of Thirukkachur of Chengalpet taluk during 1218AD. "செங்குன்ற

நாட்டு திருக்கச்சூற்காலை மாலை பாகம் வைத்தான் வில்லாழ்வானும் களரியக் குளத்துழான் ஒற்றி கொண்டான் இராசராசதேவனும்".

[களரியம் + குளம் + அத்து+ உழான் + ஒற்றிகொண்டான். களரிக்குளம் = ஊரின்பெயர் 'அத்து' சாரியை உழவன்→ உழான் (ஒ.நோ. கிழவன் – கிழான்) ஒற்றிகொண்டான் = நிலத்தை ஒற்றிக்கு (குத்தகைக்கு)க் கொண்டவன்.]

களரியமர்த்து–தல் *kaḷari-y-amarttu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. அவையோரை அரங்கில் உட்காரவைத்தல்; to seat the spectators around an arena. 2. பறைய றைந்து அவையை ஒலியெழுப்பாமல் அமரச்செய்தல்; to silence the spectators by the beating of drums.

[களரி + அமர்த்து.]

களரியார் *kaḷariyār,* பெ.(n.) அவையத்தார்; representatives of an assembly.

[களரி + ஆர்.]

களரியாவிரை *kaḷari-y-āvirai,* பெ.(n.) இறந்துபட்ட தலைக்கழக நூல்களுள் ஒன்று (இறை.1, உரை.4); a poem of the first Sangam, now extinct.

[களரி + ஆவிரை.]

களம் அல்லது அவையம் களரி எனப்படும். நெற்களத்தில் அல்லது போர்க்களத்தில் ஆவலித்துப் பாடும் பாடல்வகை களரியாவிரை என வழங்கப் பெற்றதாகலாம்.

களரியேறு–தல் *kaḷari-y-ēṟu-,* 5 செ.கு.வி(v.i.) அரங்கேறுதல்; to be presented for the first time to a learned body. சிலப்பதிகார நாடகம் நாளை களரியேறுகிறது (இ.வ.).

[களரி + ஏறு.]

களரிதோன்றி *kaḷaritōṉṟi,* பெ.(n.) கும்பகோணம் வட்டம் திருவிடைமருதூர் கோயில் ஆடவல்லானுக்கு கையணி வழங்கிய வணிகன்; merchant, who donated a hand ornament to the Nataraja of Thiruvidaimarudur, Tanjore dt. *"திரைமூர் நாட்டுத் திருவிடை மருதில் வயாபாரிய் களரிய் தோன்றிய் திருவிடை மருதில் ஆடல் விடங்க தேவர்க்கு" (தெ.இ.கல்.தொ.19. கல் 90.).*

[களரி + தோன்றி. தோன்றல்→ தோன்றி (சிறந்தவன், வெற்றியாளன்) களரிப்போரில் வெற்றி வாகை சூடியவன் என்பதால் பெற்ற பெயராகலாம்.]

களரிவிடு–தல் *kaḷari-viḍu-,* 18 செ.குன்றாவி.(v.t.) அரங்கில் முதன் முறையாக நாடகமாந்தரை ஆட விடுதல் (வின்.); to introduce a person on a stage for the first in a trial performance. நள்ளிர வாகப் போகிறது. விரைவில் களரிவிட ஏற்பாடு செய்யவேண்டும் (உ.வ.).

[களரி² + விடு–.]

களவட்டி *kaḷa-vaṭṭi,* பெ.(n.) சூடடிக்கும் களம்; threshing-floor (ம. அக.).

[கள(ம்) + அட்டில் (முற்றம்) – கள வட்டி.]

களவடி¹–த்தல் *kaḷavaḍi-,* 4.செ.கு.வி.(v.i.) திருட்டுத்தனஞ்செய்தல்; to play the truant. அந்தப் பையன் பள்ளிக்கூடம் போகாமல் களவடிக்கிறான் (இ.வ.).

[களவு¹ + அடி.]

களவடி² *kaḷavaḍi,* பெ.(n.) களத்திற் சிதறிய தவசம் (இ.வ.); sweepings of grain of a threshing-floor. களவடியைக் கூட்டியள்ளு (இ.வ).

[களம் + அடி.]

களவம்¹ *kaḷavam,* பெ.(n.) ***களா¹*** பார்க்க; see *kaḷā¹* *"கனிக்களவத் திருவுருவத் தொருவனை" (திவ். பெரியதி. 11,6,4).*

[களா → கள → களவு → களவம். (வே.க.11).]

களவம்² *kaḷavam,* பெ.(n.) 1. கலவை (சூடா.); mircture. 2. சுண்ணச்சாந்து; mortar, cement. *"நுண்களபத் தொளிபாய" (திருக்கோ. 15.).* 3. மணச் சாந்து; perfumery. *"புலிவிரா யெறிந்திடக் களபம் போக்குவார்" (இரகு.இரகுவற். 26.).*

[கல → கலவம் → களபம்.]

களவம்³ *kaḷavam,* பெ.(n.) 1. யானைக்கன்று; the young of an elephant. *"மதகரிக் களபமும்" (சிலப். 25,49).* 2. யானை (திவா.); elephant.

[குளவு → களவம்.]

களவர் *kaḷavar,* பெ.(n.) 1. உழவர்; agriculturists. 2. போர்மறவர்; warriors.

[களம் → களமர் → களவர்.]

களவழிநாற்பது *kaḷavaḻi-nāṟpadu,* பெ.(n.) பதினெண் கீழ்க்கணக்கினுட்கோச் செங்கணானது

போர் வெற்றியைப் புகழ்ந்து பொய்கையார் பாடிய நூல்; name of an ancient poem of 50 stanzas on the victory of cō-c-ceṅkaṇāṉ over Cēramāṉ-Kaṇaikkāl-irumpoṟai, by Poykaiyar, one of eighteen minor works.

[களம்² + வழி + நாற்பது.]

களவழிவாழ்த்து *kaḷa-vaḻi-vāḻttu,* பெ.(n.) அரசன் போர்க்களத்துப் பெற்ற செல்வத்தைப் பாணர் புகழ்ந்து கூறும் புறத்துறை (வு.வெ.9,19.); Puram theme of a bard praising the spoils of a victorious king in war.

[களம்² + வழி + வாழ்த்து.]

களவன்[1] *kaḷavaṉ,* பெ.(n.) சான்று (சாட்சி) கூறுவோன்; deponent.

[கள(ம்) + அன்.]

களவன்[2] *kaḷavaṉ,* பெ.(n.) கருநண்டு; crab. *"புள்ளிக் களவன் புனல் சேர் பொதுக்கம் போல்" (கலித். 88.10.).*

[கள் → களவன் (வே.க.119)]

களவாசம் *kaḷa-vāśam,* பெ.(n.) 1. வாரம் பிரிப்பதற்கு முன் ஊர்ப்பணிக் குடிமக்களுக்கு களத்தில் கொடுக்கும் தவசம்; wages paid to the labourers or inferior village servants at the threshing-floor before the division of the produce. 2. நெற் களத்தில் வேலையாள்களுக்குக் கொடுக்கும் கூலி; grain given at the threshing-floor to the workmen.

ம. களவாரம்

[கள + ஆயம் – களவாயம் →களவாசம். ஆயம் = குழு.]

களவாய்க்கால் *kaḷavāykkāl,* பெ.(n.) களத்துமேட்டை யொட்டிச்செல்லும் வாய்க்கால்; the channel adjacent to threshing-floor.

[களம் + வாய்க்கால்.]

களவாடு–தல் *kaḷavāḍu-,* 5 செ.குன்றாவி (v.t.) திருடுதல்; to steal.

கோண். (அடிலா)கல்ல; **உரா.** கள்ளு.

[களவு1 + ஆடு (து.வி.)]

களவாணி *kaḷavāṇi,* பெ.(n.) **களவாளி** பார்க்க; see *kaḷavāḷi.*

[களவாளி → களவாணி (த.வ.74).]

களவாமீன் *kaḷavāmīṉ,* பெ.(n.) தலைப்பகுதியில் முட்களைக் கொண்ட ஒருவகைக் கடல்மீன்; kind of sea fish having thorns on the head.

[கள் → கள → களவா + மீன். கள் = முள்.]



களவாமீன்

களவாரம் *kaḷavāram,* பெ.(n.) களத்தில் வேலைக் காரர்களுக்குக் கொடுக்கும் தவசக்கூலி (வின்.); grain given at threshing-floor to the labourers.

ம. களவாரம்

[களம் + வாரம். வாரம் = பங்கு, வருவது.]

களவாளன் *kaḷa-vāḷaṉ,* பெ.(n.) **களவாளி** பார்க்க; see *kaḷavāḷi* *"களவாளனாவதூஉங் காண்டும்" (நீலகேசி, 338. உரை,மேற்.).*

க. களவளிக

[களவு + ஆளன்.]

களவாளி *kaḷavāḷi,* பெ.(n.) திருடன்; thief. *"சாதனைக் களவாணியாய்" (திருப்பு. 628.).*

க. களவளிக

[களவு + ஆளி.]

களவியல் *kaḷaviyal,* பெ.(n.) அகப்பொருளுறுப்புகளுள் ஒன்று (தொல்.); a chapter in Porul-adikaram by Tolkappiyanar treating of clandestine union of lovers.

2. இறையனாரகப் பொருள்; treatise on Aga-p-porul, by Iraiyanar. *"சிறப்பினாற் பெயர் பெற்றது களவியல் என்பது" (இறை.1, உரை.).*

[களவு + இயல்.]

களவிற்கூட்டம் *kaḷaviṟ-kūṭṭam,* பெ.(n.) ***களவுப் புணர்ச்சி*** (ஐங்குறு) பார்க்க; see *kaḷavu-p-puṇarcci.*

[களவில் + கூட்டம்.]

களவு[1] *kaḷavu,* பெ.(n.) 1.திருட்டு; robbery, theft. *"களவினாலாகிய ஆக்கம்" (குறள், 283.).* 2. பிறர் உடைமைகளைப் பறித்து உரியவருக்கு உரிமை இல்லாமலாக்கிக் கொள்ளும் நோக்கத்தில் மேற்கொள்ளும் செயல்; the act of stealing, theft, robbery, the felonious taking and removing of the personal property with the intent to deprive the rightful owner of it. 3. திருடியபொருள்; stolen property. கையுங் களவுமாய் அவனைப்பிடித்துக் கொண்டான். 4. முறையற்ற செயற்பாடு; unlawful act. 5. ஏய்ப்பு (வஞ்சனை); deceit, treachery, hypocrisy. *"நங் களவறுத்துநின் றாண்டமை" (திருவாச.5.35.).* 6. ***களவுப்புணர்ச்சி*** பார்க்க; see *kalavu-p-punarcci. "கற்பு களவுபோல ஒரு தலையான அன்பிற்றன்று" (இறை.1,உரை.).*

ம. களவு; **க.** களவு, களக; **தெ., பட.** கல்லு; **துட.** கொள்; **குட.** கள்; **து.** களவு, களு; **கோண்.** கல்லானா; **குரு.** கர்நா.

[கள் → களவு (திருக். (தமி.ம.) 551).]

த. களவு>**Skt** khala.

Kan. kaḷa, to steal; **Tam.** kalavu; **Mal.** kaḷḷ-lat. **M.** a theft comp. **Lat.** clep-o, to steal; **Greek.** (klap-eis) comp. **Lappish keles**. a lie; **Hung.** tsal to cheat; also **Sans.** chhala, fraud (C.G.D.F.L.591. 616).

களவு[2] *kaḷavu,* பெ.(n.) ***களா***[1] பார்க்க; see *kaḷā*[1]

ம. களவு; **க.** களவெ; **தெ.** கலவெ;

[களா→ களவு. ஒ.நோ. நிலா → நிலவு.]

களவு[3] *kaḷavu,* பெ.(n.) ஊமத்தம்; datura (சா.அக.).

[கள்(முள்) → கள → களவு.]

களவுகாண்(ணு)–தல் *kaḷavu-kāṇ-,* 13. செ.குன்றாவி (v.t.) திருடுதல்; to steal. கைத்தலங் கண்ணாக் களவு காண்பா னொருவன் (இலக்.வி. 665. உரை.).

க. களவுகெய்

[களவு + காண்.]

களவுச்சொத்து *kaḷavu-c-cottu,* பெ.(n.) திருட்டுப் பொருள்; stolen property.

[களவு + சொத்து.]

களவுகொள்(ளு)–தல் *kaḷavu-koḷ-,* 16. செ.கு.வி (v.i.) திருடுதல்; to steal. *"களவு கொண்டாபரணம் பூண்டாற் போலே" (ரஹஸ்ய.13, 48).*

க. களவுகெய்

[களவு + கொள்.]

களவுணி *klavuṇi,* பெ.(n.) சிறுகளா; small Bengal currant (சா.அக.).

[களா → களவு → களவுணி.]

களவுப்புணர்ச்சி *kaḷavu-p-puṇarcci,* பெ.(n.) கொடுப்பாரும் அடுப்பாருமின்றிக் காதலர் தாமாகக் கூடும் கூட்டம்; clandestine union between lovers before marriage without the knowledge of others.

[களவு + புணர்ச்சி.]

காதலர் கூடும் கூட்டம், உடம்பாற் கூடுவதும் உள்ளத் தாற் கூடுவதும் என இருவகை. இவற்றுள் முன்னது மெய்யுறு புணர்ச்சி என்றும் பின்னது உள்ளப்புணர்ச்சி என்றும் சொல்லப் பெறும். கற்புடைய பெண்டிற்கு இரண்டும் ஒன்றே.

கொடுப்பாரும் அடுப்பாருமின்றிக் காதலர் தாமாகக் கூடும் கூட்டம், மறைவாகத் தொடங்குவதும் வெளிப்படையாய்த் தொடங்குவதும் என இருவகைப்படும். மறைவான கூட்டம் களவு என்றும் வெளிப்படையான கூட்டம் கற்பு என்றும் சொல்லப்பெறும். களவு பெரும்பாலும் இருமாதத் திற்குட்பட்டே இருக்கும். அது வெளிப் பட்டபின் கற்பாம் [பண்.நா. ப. 62.].

களவுபிடி–த்தல் *kaḷavu-pidi-,* 5 செ.கு.வி. (v.i.) மந்திரம், சூழ்ச்சிகளால் திருடனைக் கண்டுபிடித்தல் (வின்.); to catch a thief by magic, stratgem etc.

[களவு + பிடி.]

களவுபூசல் *kaḷavu-pūšal,* பெ.(n.) நேர் முறையின்றி நடத்தும் போர்; irregular fight; guerilla warfare. *"களவுபூசல் செய்வார்க்கு ஒதுங்க நிழலான பையலை" (ஈடு.10,6,8, பக்.205.).*

[களவு + பூசல்.]

களவு போ-தல் *kaḷavupō-,* 8. செ.கு.வி (v.i.) பறி போதல்; to be plundered.

மறுவ. திருட்டுபோதல்

க. களவு வோகு

[களவு + போ.]

களவெட்டு *kaḷaveṭṭu,* பெ.(n.) ***களம்*** பார்க்க (யாழ்ப்.); see *kaḷam.*

[களம் + வெட்டு]

களவேர்வாழ்க்கை *kaḷavērvāḻkkai,* பெ.(n.) திருட்டுத் தொழில்; lit. living by the plough of theft, profession of thieving. *"களவேர் வாழ்க்கையர் உறூஉங் கடுந்துயர்" (மணிமே. 23, 126.).*

[களவு + ஏர் + வாழ்க்கை.]

களவேள்வி *kaḷa-vēḷvi,* பெ.(n.) கொல்லும் வலிவுடைய பேய்கள், வயிறார வுண்ணும்படி பரந்தவலியினையுடைய வீரன் போர்புரிந்து பகை யழித்ததைக் கூறும் புறத்துறை (பு.வெ. 8,6.); Puram theme eulogising a warrior on his destroying his enemies to feast devils, as gods in a sacrifice.

[களம்² + வேள்வி.]

களவேற்று-தல் *kaḷavēṟṟu-,* 5.செ.கு.வி.(v.i.) திருட்டுக் குற்றஞ் சுமத்துதல்; to charge with theft. *"என் பிள்ளையைக் களவேற்றாதே" (திவ். பெரியாழ். 2,1,5, வியா. பக். 225.).*

[களவு + ஏற்று-.]

களவொழுக்கம் *kaḷavoḻukkam,* பெ.(n.) ***களவுப் புணர்ச்சி*** பார்க்க; see *kaḷavu-p-puṇarcci.* *"களவொழுக்கமென்னும் பெயர்பெற்று" (திருக்கோ.1, உரை.).*

[களவு¹ + ஒழுக்கம்.]

காதலர் இருவரின் மணவாழ்க்கை, தெய்வ ஏற்பாட்டால், ஓரோவழி பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் தெரியாத களவொழுக்கமாகத் தொடங்குவதுமுண்டு. அது இரு மாதத்திற்குள் வெளிப்பட்டுவிடும். மணவாழ்க்கை ஆயிரங் காலத்துப் பயிராதலால், தமிழர் களவொழுக்கம் ஆரியர் கூறும் அற்றைப் புணர்ச்சியான யாழோர் (கந்தருவர்) மணமன்று. மரபார்ந்த நல்லாசிரி யரிடம் கல்லாதவரும், அயல் நாட்டாருகள் சிலரும் கருது கின்றவாறு, இல்வாழ்க்கை யேற்படாத அநாகரிகக் காலத்துக் காமப்புணர்ச்சியன்று.

கற்பில் தொடங்கும் மணவாழ்க்கையே பெரும்பான்மை, களவில் தொடங்குவது மிகமிகச் சிறுபான்மை. கற்பாகத் தொடராத களவு இழிந்தோ ரொழுக்கமெனப் பழிக்கப்படுவது. இறைவன் ஏற்பாடும் இன்ப மிகுதியும் களவின் சிறப்பியல்புகள் (தமி. வர. 122, 123.).

களவோலை *kaḷavōlai,* பெ.(n.) பொய் ஆவணம்; false document (கருநா.).

க. கள்ளோலெ

[களவு + ஓலை.]

களன்¹ *kaḷaṉ,* பெ.(n.) 1. ***களம்²*** பார்க்க; see *kaḷam.* 2. மருதநிலம் (திவா.); agricultural tract.

தெ. கலனு

[களம்² → களன். (வே.க.134)]

களன்² *kaḷaṉ,* பெ.(n.) ஒலி (திவா.); sound, noise.

[கல்→ கள் → களன். 'கல்' ஒலிக்குறிப்பு இடைச்சொல்.]

களன்³ *kaḷaṉ,* பெ.(n.) கழுத்து (திவா.); throat, neck.

[களம் → களன்.]

களன்⁴ *kaḷaṉ,* பெ.(n.) 1. தொடர்பு (திவா.); attachment, connection. 2. மயக்கம் (பிங்.); stupor, bewilderment.

[கல் → கள் → களன்.]

களன்⁵ *kaḷaṉ,* பெ.(n.) பொய்கை (திவா.); natural reservoir of water.

[குளம்→ குளன் → களன்.]

களா *kaḷā,* பெ.(n.) 1. சிறுகளா; a low spreading shrub. *"தீம்புளிக் களாவொடு துடரி முனையின்" (புறநா. 177.9).* 2. பெருங்களா; large Bengal currant. *'நாளை கிடைக்கும் பலாக்காயைவிட இன்று கிடைக்கும் களாக்காய் மேல்' (பழ.).* 3. களாவகை

(L.); small lancecrenate- acute-leaved wortleberry. 4. மலைக்களா; farkleberry. 5. முள் முருங்கை; (L.) nepal barberry. 6. தணக்கு (L.); whirling-nut.

ம. களவு; **க.** களவெ, களிவி; **தெ.** கலிவெ, கலிவி.

[கல் → கள் → களா(கருநிறமுடைய பழம்.).]

களா வகைகள்: 1.சிறுகளா 2.பெருங்களா 3. மலைக்களா 4. முள்ளுக் களா 5. சொத்தைக்களா 6. கொட்டைக்களா 7. சீமைக் கொட்டைக் களா 8. கொத்துக்களா 9. ஊசிக்களா (சா.அக.).

களாக்காய்[1] *kaḷākkāy,* பெ.(n.) களாச்செடியின் காய்; fruit of vaccinium Nilgherrence.

ம. களாக்கா(ய்)

[களா + காய்.]



களாச்செடி

களாக்காய்[2] *kaḷā-k-kāy,* பெ.(n.) 1.களாக்காயுருவாகப் பொன் வெள்ளி போன்றவற்றில் செய்யும் ஒருவகைக் கழுத்தணி; a circular piece of gold or silver in the shape of a carissa fruit attached to the necklace or tali worn by women.

[களா + காய்.]

களாசம் *kaḷašam,* பெ.(n.) பிரம்பு; cane, rattan. *"வேதகாமப் பவுரி வீசுங் களாசநிலை" (ஒழிவி. பொது.1.).*

ம. களாசம்

[கழை → களை → களாயம் → களாசம். (கொ.வ.).]

களாசி *kaḷāši,* பெ.(n.) சிறுகீரை; greens

[கல்→ கள்→ களா + சி (கரியது).]

களாஞ்சி[1] *kaḷāñji,* பெ.(n.) எச்சிற் கலம், எச்சிற் படிக்கம்; spittoon *"உருப்பசி களாஞ்சி தாங்க" (குற்றா. தல.திருமண. 131.).*

ம. காளாஞ்சி; **தெ., க.** களாஞ்சி.

[காளாஞ்சி → களாஞ்சி.]

களாஞ்சி[2] *kaḷāñci,* பெ.(n.) ஒருவகை ஊதைநோய்; a kind of rheumatism.

[கோளாம்பி → காளாம்பி→ களாஞ்சி.]

கோளாம்பி = எச்சில் ஏனத்தின் தண்டு பாகத்தைப் போல் பருக்கும் நோய்.

களாஞ்சு *kaḷāñju,* பெ.(n.) தண்டங்கீரை; garden greens.

[களாஞ்சி → களாஞ்சு.]

களாநூல் *kaḷā-nūl,* பெ.(n.) காமநூல்; treatise on sexual love.

[களவு→ களா + நூல். களா = களவுப்புணர்ச்சி.]

களாப்பூக்கோரை *kaḷa-p-pū-k-kōrai,* பெ.(n.) கோரைவகை (வின்.); a kind of sedge.

[களா + பூ + கோரை.]

களாயம் *kaḷāyam,* பெ.(n.) கீல்; joint (சா.அக.).

[கள் = திரண்டது. கள் + ஆயம். ஆய்→ஆயம் கூடியிருப்பது.]

களாவம் *kaḷāvam,* பெ.(n.) 1. மயில்தோகை; peacock tail. 2. இடையணி; girdle *"களாவம் ஒன்றிற் கோத்த முத்துவட்டமும் அனுவட்டமும்" (S.I.I.ii.180.).*

[கள்→ களா→ களாவம் (நெருங்கிய தோகையுடையது).]

களாவி *kaḷāvi,* பெ.(n.) ஈயத்தைப் போன்ற தரா என்னும் ஒருவகைக் கனிமம்; a mineral resembling lead (சா.அக.).

[கள்→ கள→ களா→ களாவி. கள் = கருமை.]

களாவு *kaḷāvu,* பெ.(n.) மலைக்களா; wortleberry. (சா.அக).

[களா → களாவு.]

களி¹–த்தல் *kaḷi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. மகிழ்ச்சியில் திளைத்தல்; to exult. rejoice, glow with delight. *"கருணைமுட்டப் பருகிக்களித்து" (திருவாச. 6,33).* 2. கள்ளைப்பருகி வெறி கொள்ளுதல்; to be intoxicated to revel, as bees feeding on toddy. *"களிப்பவர் தமக்கு மோர்கதி யுண்டாகுமோ" (கந்தபு. திருநாட்.12.).* 3. மதமுடையதாதல்; to be in rut, as an elephant. *"கண்ணயற் களிப்பன வண்ணல் யானை" (சீவக. 566.).* 4. செருக்குதல்; to be proud, vain, conceited. *"முழுவதூஉங் கற்றனமென்று களியற்க" (நீதிநெறி. 14.).*

ம. களி, களிக்குக; **க.** கள்; **தெ.** கல்லு; **து.** கலி; **Afric.** ge luk.

[கள்→ களி.]

இச்சொல் முதலில் கள்ளுண்டு களித்தலையே குறித்தது. கள்ளுண்டு களித்திருப்போனைக் "களி" என்றழைத்தனர் [நன்–39]. பின்னர் இச்சொல் நால்வகை மகிழ்ச்சிகளைக் குறிக்கும் பொதுச் சொல்லாயிற்று. திருவள்ளுவர் காலத்திலேயே இவ்வுயர் மாற்றத்தை இச்சொல் பெற்றுள்ளது. உள்ளக் களித்தலும் [குறள்.1201] என்பதை நோக்குக.

களி² *kaḷi,* பெ.(n.) 1. மகிழ்ச்சி; joy, delight, exhilaration, exultation, mirth, hilarity. *"களிவந்த சிந்தையொடு" (திருவாச. 6,15.).* 2. கள்ளுண்டு களிக்கை; revelling, intoxication. *"சான்றோர் முகத்துக் களி" (குறள் 923.).* 3. தேன்;honey *"களிமகந்தி வண்டார் பொழில்" (தேவா. 555,6.).* 4. கள்; toddy. *"களிநொடை நுவல" (மதுரைக் : 662). 5. கட்குடியன்,* drunkard; reveller. *"தண்ணறவுள் களிநீயென (திருக்கோ. 122.).* 6. கட்குடியன் கூற்றாகவரும் கலம்பகவுறுப்பு (இலக்.வி.812); stanza in Kalambagam embodying the effusions of a drunkard. 7. உள்ளச்செருக்கு (திருக்கோ. 52,உரை); arrogance, pride. 8. சினம்; anger. 9. தியக்கம் (திவா.); bewilderment. 10. யானைமதம்; 'must' in an elephant. *"காலவேகங் களிமயக் குற்றென" (மணிமே. 4,44).* 11. மதங்கொண்டயானை; elephant in rut. (களி கொள்வது களிறு.).

ம., தெ., து., குட. களி.

U.,H. gāle, kheel; **Mar.** khel; **H.** kaggi.

[களித்தல் = கள்ளுண்டு மகிழ்தல், விளையாடுதல்; மயக்கம், செருக்கு.]

த. களி > **Skt.** kēl (வ.மொ.வ. 112).

களி³ *kaḷi,* பெ.(n.) 1. குழைவு; pulpiness, state of being mashed. *"கொழுங்களி மிதவை" (அகநா.86.).* 2. குழம்பு; thick pulp, liquid paste. *"வாசமென கலவைக்களி" (கம்பரா. மிதிலைக். 80.).* 3. மாவு முதலியவற்றால் ஆக்கிய களி; a kind of pasty pottage made with flour, etc., pasty pudding; poultice. *"அவையா வரிசி யங்களித் துழவை" (பெரும்பாண். 275).* 4. கஞ்சி; gruel, conjee.*"களிசெய் கோசிகம்" (சீவக. 1673.).* 5. வண்டல்; silt, sediment. *"இருங்களி பரந்த வீர வெண்மணல்" (நெடுநல். 16.).* 6. உருகிய மாழைநீர்; liquid metal. *"செம்புருகு வெங்களிக ளுமிழ்வ" (சீவக. 103.).* 7. களிமண் (சிலப். 3, 96 உரை); clay. 8. இறுகிய பழச்சாறு; jam.

ம. களி; **க.** கழி, கடி (புள்ளித்த கஞ்சி); **தெ.** கலி.

F. colli; **Sp.** cola; **It.** colla; **Rum.**clei; **G.** klebstoff; **Swed.** kli-ster; **Pol.** klej; **Cz.** kleh; Russ. klyey; **Gk.** kolla; **Yid.** kleb; **Mal.** kuala; **Skt**. kali, (sour rice gruel), khali (boiled ground rice gruel).

[கள்→ களி. (கருமண் அல்லது களிமண்).]

களி⁴ *kaḷi,* பெ.(n.) விளையாட்டு; sport, games, play.

Ori. khela; **chin**. hauju; **H**. khel; **Skt**. keḷi.

[கள் → களி.]

களி⁵ *kaḷi,* பெ.(n.) சினம் (யாழ்.அக.); anger.

[கள்→ களி. களிப்பு = செருக்கினைக் குறித்துப் பின் சினத்தைக் குறிப்பதாயிற்று.]

களி⁶–த்தல் *kaḷi-,* 4 செ.குன்றாவி.(v.t.) நுகர்தல்; enjoy, *"பொற்கொடிமாதரைக் களிப்பதினும்" (பாரதி. பாஞ்சாலி. 34.).*

[கள்→ களி.]

களிக்கண் *kaḷikkaṇ,* பெ.(n.) தட்டார் பயன்படுத்தும் கம்பி இழுக்குங் கருவி (யாழ்ப்.); instrument for drawing wire for chainwork in jewellry with different sizes of holes in it.

ம. களிக்கண்

[கள் (முள்) → களி + கண்.]

களிக்கல் *kaḷi-k-kal,* பெ.(n.) கல்லைப் போன்று திண்மையுடைய களிமண் உருண்டை; clay stone.

[களி + கல்.]

களிக் கவைக்கோல் *kaḷi-k-kavai-k-kōl,* பெ.(n.) களி கிண்டும்போது ஏனம் அசையாவகை தாங்குங் கவைக்கோல் (இ.வ.); forked stick for bracing a pot in making pulp.

[களி + கவை + கோல்.]

களிக்காய் *kaḷi-k-kāy,* பெ.(n.) தசைப்பற்றுள்ள காய் (யாழ்ப்.); pulpy fruit.

[களி + காய்.]

களிக்குரு *kaḷi-k-kuru,* பெ.(n.) களிச்சுண்ணம் என்னும் குருமருந்து; universal solvent (சா.அக.).

[கள் + குரு.]

களிகம் *kaḷigam,* பெ.(n.) வாலுளுவை மரம் (மலை.); thorny-staff tree.

ம. களிகம்

[கள் → களி→ களிகம். கள் = முள்.]

களிகிண்டு–தல் *kaḷi-kiṇḍu-,* 5 செ.கு.வி.(v.i.) களியுணவாக்குதல்; to make paste or pap.

[களி³ + கிண்டு–.]

களிகூர்–தல் *kaḷi-kūr-,* 2 செ.கு.வி.(v.i.) மகிழ்ச்சி மிகுதல்; to exult, be in ecstasy. *"சீரொரு கால் வாயோவாள் சித்தங் களிகூர" (திருவாச. 7,15.).*

[களி² + கூர்–.]

களிகை¹ *kaḷigai,* பெ.(n.) 1.மொட்டு (அக.நி); tender bud. 2. நாகமல்லி; ringworm plant (சா.அக.).

[குள் → குளிகை→ களிகை.]

களிகை² *kaḷigai,* பெ.(n.) ஒருவகைக் கழுத்தணி; a kind of necklace. *"நலம்பெருங் களிகையு நன்முத்தாரமும்" (பெருங். இலாவாண. 19,118.).*

[குள் → குளிகை→ களிகை.]

களிங்கம்¹ *kaḷiṅgam,* பெ.(n.) ஒருவகைப்பண் (பரத. ராக. 533.); a specific melody-type.

[கள் → களிங்கம்(களிப்பு).]

களிங்கம்² *kaḷiṅgam,* பெ.(n.) மரங்கொத்திப்பறவை; wood-pecker (சா.அக.).

[கள் = வெட்டுதல். கள் → களி → களிங்கம்.]

களிச்செம்மண் *kaḷi-c-cemmaṉ,* பெ.(n.) பூங்காவி; red ochre (சா.அக.).

[களி+ செம்மண்.]

களித்தரை *kaḷi-t-tarai,* பெ.(n.) களிமண் நிலம் (சிலப். 3,96, உரை.); clayey soil.

[களி² + தரை.]

களித்துடுப்பு *kaḷi-t-tuḍuppu,* பெ.(n.) 1. களி கிண்டுந்துடுப்பு; wooden instrument for mashing pap. 2. இளகியம் கிண்டும் துடுப்பு; wooden stirring rod used in preparing electuaries (சா.அக.).

[களி³ + துடுப்பு.]

களித்துயிர் *kaḷi-t-tuyir,* பெ.(n.) குளவி; wasp. (சா.அக.)

[கள் +அத்து – களத்து + உயிர். கள் = முள் முள்ளை உடையது.]

களித்துயில் *kaḷi-t-tuyil,* பெ.(n.) இன்பத்துயில்; happy sleep of lovers. *"கொழுநரகலத்து ஒடுங்கிக் காவியங்கண்ணார் களித்துயிலெய்த" (சிலப். 4,46.).*

[களி² + துயில்.]

களித்துழவை *kaḷi-t-tuḻavai,* பெ.(n.) களியாகத் துழாவி சமைத்த கூழ்; mashed pap. *"அவையா வரிசி யங்களித் துழவை" (பெரும்பாண். 275.).*

[களி³ + துழாவு – களித்துழாவு → களித்துழவை.]

களிதம் *kaḷidam,* பெ.(n.) 1.வழுக்கல் (சது.); slipperiness. 2. பெருங்கல் (சங்.அக.); huge stone,.

[கள் → களி → களிதம்.]

களிதின்னல் *kaḷi-tiṉṉal,* பெ.(n.) 1. களியுண்கை; eating pap. 2. கையூட்டுப் பெறுகை; taking bribes.

[களி³ + தின்னல். களி = கள்ளத்தனமான மகிழ்ச்சி.]

களிதூங்கு–தல் *kaḷi-tūṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) மகிழ்ச்சிமிகுதல்; to be in ecstasy; to rejoice greatly. *"மாலோ டும்பர்கணங் களிதூங்க" (சேதுபு. கடவுள்.5.).*

[களி² + தூங்கு.]

களிந்தை *kaḷindai,* பெ.(n.) யமுனை ஆறு; the river Jamuna. *"பாய்மையாங் களிந்தை தன்னை" (இரகு. மாலை. 100.).*

[களி → களிந்தை (கலங்கல் நீருள்ளது).]

களிநடம் *kaḷinaḍam,* பெ.(n.) மகிழ்ச்சியால் ஆடும் நாட்டியம்; dance of joy; ecstatic dance. *"கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக்கண்டேன்" (கம்ப. சுந்தர. 1275).*

[களி + நடம்.]

களிநெஞ்சன் *kaḷi-neñjaṉ,* பெ.(n.) 1. செருக்கன்; proud man. 2. வன்கொடுமையாளன்; cruel man.

[களி + நெஞ்சன்.]

களிநோய் *kaḷi-nōy,* பெ.(n.) கட்குடியாலுண்டாகும் நோய்; disease due to excessive drinking. *"கட்கொண்டாங்குக் களிநோய் கனற்ற" (பெருங். உஞ்சைக். 35,51.).*

[களி + நோய்.]

களிப்பாக்கு *kaḷi-p-pākku,* பெ.(n.) 1. வேகவைத்துச் சாயமூட்டிய பாக்கு (பதார்த்த. 1441.); boiled areca-nut covered with thick paste; areca-nut boiled and dried. 2. தெங்கம்பாக்கு; another kind of areca nut (சா.அக.).

ம. களப்பாக்கு

[களி³ + பாக்கு.]

களிப்பாவை *kaḷippāvai,* பெ.(n.) பொம்மை; doll.

ம. களிப்பாவ

[களி + பாவை = குழந்தைகட்கு மகிழ்ச்சி உண்டாக்கும் பாவை.]

களிப்பாறை *kaḷippāṟai,* பெ.(n.) பாறை போன்று வலிமையுடைய களிமண்பரப்பு; shale.

[களி + பாறை.]

களிப்பிரண்டை *kaḷi-p-piraṇḍai,* பெ.(n.) கோப் பிரண்டை; a species of adamantine creeper (சா.அக.).

[களி³ + பிரண்டை.]

களிப்பு *kaḷippu,* பெ.(n.) மனமகிழ்ச்சி; joy, exultation, delight, hilarity. *"களிப்புமான் செல்வக் காவற் பேரூர்" (மணிமே. 7.26.).* 2. செருக்கு (பிங்.); vanity, conceit, pride. 3. மயக்கம்; mental delusion, aberration of mind. *"காமமும் வெகுளியும் களிப்புங் கைத்து" (கம்பரா. திருவவ.48.).* 4. மதுவெறி; intoxication, inebriation. *"களிப்பாலே வறிதிடத்திலும் மாலைகொண்டோச்சி" (சிலப். 14, 135, அரும்.).* 5. சிற்றின்பம் (வின்.); sexual pleasure. 6. மண்ணின் பசை; adhesive power, as in clay. களிப்பு நிலத்தில் வைத்தபயிர் வீடு வந்து சேராது (உ.வ.).

ம. களிப்பு

Indon. kesukan; **Norw., Swed.** Glade. **Turk.** keyif; **Chin.** kuaile; **E.** gay.

[களி + பு (சொல்லாக்க ஈறு)]

களிப்புக்கள்ளி *kaḷippu-k-kaḷḷi,* பெ.(n.) கொடிக் கள்ளி; beak-flowered creeping milk-hedge (சா.அக.).

[களிப்பு + கள்ளி. களிப்பு = செழிப்பு, அடர்த்தி.]

களிப்புச்சுண்ணாம்பு *kaḷippu-c-cuṇṇāmbu,* பெ.(n.) புளித்த சுண்ணாம்பு; lime mortar, ground and left for sometime before using.

[களிப்பு + சுண்ணாம்பு.]

களிப்புமண் *kaḷippu-maṇ,* பெ.(n.) செம்மண்; red clay (சா.அக.).

[களிப்பு + மண்.]

களிப்புறா *kaḷi-p-puṟa,* பெ.(n.) மணிப்புறா; ring dove (சா.அக.).

[களி + புறா.]

களிம்பகற்று–தல் *kaḷimbakaṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1.செம்பு முதலியவற்றின் குற்றத்தைப் போக்கல்; removing the verdigiris of copper or the rust of iron etc. 2. புடமிடல்; refining by calcination (சா.அக.).

[களிம்பு + அகற்று-.]

களிப்புறம் *kaḷippuṟam,* பெ.(n.) விளையாடும் இடம்; a place set apart for play, play house.

ம. களிப்புறம்

[களி + புறம்.]

களிம்பற்றவன் *kaḷimbaṟṟavaṉ,* பெ.(n.) குற்ற மற்றவன் (இ.வ.); man of unimpeachable character.

[களிம்பு + அற்றவன்.]

களிம்பு *kaḷimbu,* பெ.(n.) 1. செம்பின் மலப்பற்று; veridigris, sub-acetate of copper. *"செம்புதன் களிம்பு பாற்றறியாது" (தணிகைப்பு. அகத். 360.).* 2. துரு (வின்.) ; rust. 3. மாசு; spot, blemish, fault. defect *"கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே"* (திருமந். 113.). 4. பூச்சுமருந்து; ointment. *"கந்தகக் களிம்பு" (வைஷஜ.). 'புடம் போட்டால் பொன் வேறு களிம்பு வேறு' (பழ.).*

ம. களிம்பு; **க.** கிலும்பு, கிலிம்பு, கிலுவு; **தெ.** சிலுமு, கிலுமு; **து.** கிலிம்பு, கிலாம்பு; **கோத.** கில்ப்; **பட.** கிலும்பு; **குவி.** கில்மூ (துரு).

[களி + களிம்பு (களி போன்ற மருந்து)]

களிம்புபதம் *kaḷimbupadam,* பெ.(n.) பிசுபிசுப்பான பதம்; glutinous or viscous state (சா.அக.).

[களிம்பு + பதம்]

களிம்பு மண் *kaḷimbu-maṇ,* பெ.(n.) 1. செம்மண்; copper ore. 2. இரும்பு மண்; iron one (சா.அக.).

[களிம்பு + மண்.]

களிம்புமலை *kaḷimbu-malai,* பெ.(n.) செம்புமலை; mountain containing copper ore (சா.அக.).

[களிம்பு + மலை.]

களிம்பூறு-தல் *kaḷimbūṟu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. களிம்பு பிடித்தல்; to form, as verdigris. 2. தயிர் முதலியன களிம்பாற் கெடுதல்; to become spoiled, as curds, when kept in a brass vessel.

[களிம்பு + ஊறு-.]

களிம்பேறு-தல் *kaḷimbēṟu-,* 5.செ.கு.வி.(v.i.) ***களிம்பூறு*** பார்க்க; see *kaḷimbūṟu-.*

[களிம்பு + ஏறு.]

களிமகன் *kaḷi-magaṉ,* பெ.(n.) கட்குடியன்; drunkard. *"உண்மென விரக்குமோர் களிமகன் பின்னரும்" (மணிமே.3,103.).*

ம. களிமகன்

[களி² + மகன்.]

களிமண் *kaḷi-maṇ,* பெ.(n.) 1.பசையுள்ள மண்வகை; clay, potter's clay. 2. நிலத்தைச் செழிப்பிக்கும் பொருக்குமண்; a rich calcareous earth or clay much used for manure. 3. வண்டல்மண்; a deposit of clay or fine earth from running water (சா.அக.).

Afrik. kleius; **Rus.** glina.

[களி³ + மண்.]

களிமண் ஏடு *kaḷimaṇēḍu,* பெ.(n.) எழுத்துகள் பொறித்த சுடுமண் ஓடு; clay tile with inscribed letters.

[களி + மண்+ ஏடு.]

கோவைக்கருகிலுள்ள பேரூரில் பல களிமண் ஓடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் சில சுடுமண் படிமங்களும் கிடைத்துள்ளன. அவற்றில் சிந்துவெளி எழுத்துகள் இடையிடை கொண்ட தமிழ் [பிராமி] எழுத்துகள் கண்ணழுத்தங்கோலால் குடைவு செய்யப் பட்டுள்ளன. மண் ஓடு முற்றக் காய்வதற்கு முன் அழுத்தியும் கீறியும் எழுதப்பட்டுள்ளன. எழுத்துகள் இன்றும் முழுமையாக படித்தறியப்படவில்லை. எருமிநாடு, குமிழியூர் என்ற சொற்கள் அடிக்கடி தொடர்ந்து வருகின்றன. இவை செஞ்சூளையில் சுட்டு எடுக்கப்பட்டவை.

களிமண்குளிர்ச்சி *kaḷimaṇkuḷircci,* பெ.(n.) களிமண்ணைப்போல் மிக்க குளிர்ச்சி; clay-cold (சா.அக.).

[களிமண் + குளிர்ச்சி.]

களிமண்சுண்ணாம்பு *kaḷimaṉ-cuṉṉāmbu,* பெ.(n.) 1. களிமண் கலந்த சுண்ணாம்புவகை. (கட்டட.சாத்.); a kind of mortar mixed with clay. 2. பிசுபிசுப்பான சுண்ணாம்பு; lime-clay (சா.அக.).

[களிமண் + சுண்ணாம்பு.]

களிமயக்கு *kaḷimayakku,* பெ.(n.) மதத்தினால் ஏற்பட்ட மயக்கம்; dizziness due to infatuation (சா.அக.).

[களி + மயக்கு.]

களிமுத்தை *kaḷi-muttai,* பெ.(n.) கேழ்வரகு, சோளம், கம்பு முதலிய தவசத்தால் கிண்டிய களியுருண்டை

(வின்.); boiled ball of meal from millet or other grain.

[களி² + முத்தை.]

களியடி–த்தல் *kaḷiyaḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) உப்பள உருவாக்கலில் முதன் முதலாக வெற்று நிலத்தில் களிமண் கொட்டுதல்; to spread clay on (sea shore) vacant land for the preparation of salt-pan.

[களி + அடி.]

களியடைக்காய் *kaḷi-y-aḍaikkāy,* பெ.(n.) வேக வைத்துக் காயவைத்த பாக்கு (இ.வ.); arecanut boiled and dried, for chewing.

மறுவ. களிப்பாக்கு

ம. களியடய்க்க; க. களியடிகெ; குட. களியடகெ

[களி² + அடைக்காய்.]

களியம் *kaḷiyam,* பெ.(n.) தேசிக்கூத்துக்குரிய கால்வகை (சிலப். 3, 14. உரை.); specific posture of feet in dancing.

ம. களியம்

[களி→களிய. நாட்டுப் பாடல்கள் களித்தாடுவதையே குறிக்கொண்டவையாதலின் பொதுமக்களின் நாட்டுப்புறக் கூத்து களியம் எனப் பெயர் பெற்றது.]

களியம்புறா *kaḷiyampuṟa,* பெ.(n.) ஒருவகைப்புறா; a kind of dove (சா.அக.).

[களி + அம் + புறா.]

களியர் *kaḷiyar,* பெ.(n.) 1. நெய்தனிலமாக்கள்; maritime people. 2. கட்குடியர்; drunkard.

[களி² களியர்.]

களியர்வண்ணம் *kaḷiyar-vaṇṇam,* பெ.(n.) குடியர் உண்டு குடித்து மகிழ்வதைச் சிறப்பித்துப் பாடும் வண்ணப்பாட்டு (வின்.); kind of Vannam verse extolling the pleasures of high living, dainty food, and winous liquors.

[களியர் + வண்ணம்.]

களியலடி *kaḷiyal-aḍi,* பெ.(n.) கும்மியாட்டம் (நாஞ்.); a kind of kummi dance.

[கழி → கழியல் + அடி – கழியலடி → களியலடி.]

களியன் *kaḷiyaṉ,* பெ.(n.) குடியன்; drunkard.

[களி² → களியன்.]

களியாட்டம் *kaḷiyāṭṭam,* பெ.(n.) 1. மகிழ்வுடன் ஆடும் ஆட்டம்; play, sport, merriment. 2. குடி, சிற்றின்பம் முதலியவற்றில் ஈடுபட்டு மகிழும் கேளிக்கை; revelry.

ம. களியாட்டம்

[களி² + ஆட்டம்.]

களியாட்டு *kaḷi-y-āṭṭu,* பெ.(n.) கள்ளுண்டு ஆடும் ஆட்டம்; drunken feast, bacchanal, revel.

ம. களியாட்டு

[களி² + ஆட்டு.]

களியுப்பு *kaḷi-y-uppu,* பெ.(n.) வழலை அல்லது முப்பு; the three alchemical salts forming an universal solvent (சா.அக.).

[களி + உப்பு.]

களிர் *kaḷir,* பெ.(n.) சுறாமீன்; shark (சா.அக.).

[கள் → களிர்.]

களிவா–தல் (களிவருதல்) *kaḷi-vā-,* 18 செ.கு.வி. மகிழ்வடைதல்; to be blissful. *"கள்ளப்படாத களிவந்த வான்கருணை" (திருவாச. 10.16.).*

[களி² + வா...]

களிவாய்நஞ்சன் *kaḷi-vāy-nañjaṉ,* பெ.(n.) கொடிய நஞ்சுடைய பாம்புவகை (வின்.); a very venomous snake.

[கடி → களி + வாய் + நஞ்சன்.]

களிவாய் நிலம் *kaḷi-vāy-nilam,* பெ.(n.) களிமண் நிலம் (இ.வ.); clayey soil.

[களி + வாய் + நிலம்.]

களிவிரி–த்தல் *kaḷi-viri-,* செ.கு.வி.(v.i.) களிமண் குவியலை உப்பளத்தில் பரப்புதல்; spreading the heaps of clay in the salt-pan (sand).

[களி + விரி.]

களிற்றரசு *kaḷiṟṟarašu,* பெ.(n.) தேவர்கோமான் ஆகிய இந்திரனின் ஊர்தியான ஐராவதம் என்னும் வெள்ளையானை; Indra's elephant as the king of elephants. *"வால்வெண் களிற்றரசு வயங்கிய கோட்டத்து" (சிலப். 5.143.).*

[களிறு + அரசு.]

களிற்றியானை *kaḷiṟṟi-yāṉai,* பெ.(n.) ஆண்யானை (திவா.); male elephant.

[களிறு + யானை.]

களிற்றியானை நிரை *kaḷiṟṟi-yāṉai-nirai,* பெ.(n.) அகநானூற்றின் முதற்பகுதி; first part of Aga-nāṉūṟu.

[களிறு + யானை + நிரை.]

அகநானூற்றுப் பாயிரப் பாடலின் பின் "வண்டுபடத் ததைந்த கண்ணி" என்பது முதலாக "நெடுவெண் மார்பின்" என்பது ஈறாகக் கிடந்த பாட்டு நூற்றிருபதும் களிற்றியானை நிரை யெனப்படும்.

நெடியவாகி நிமிர்ந் தோடும் அடிகளைக் கொண்டு செம்மாந்து செல்லும் பாட்டின் நடையும் பொருட்சிறப்பும் நன்கு விளக்கமுறும் பகுதி களிற்றியானை நிரை எனப்படும்.

களிறு = ஆண்யானை, நிரை = அணி, வரிசை. களிற்றியானை நிரை எனில் ஆண் யானைகளின் அணி என்பது பொருள்.

'களிற்றியானை' என்னும் வழக்காறு பழைய நூல்களில் பல இடங்களில் உள்ளமை ஈண்டு எண்ணத்தக்கது. பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தின் பதிகப்பாட்டின் இடையே,

"கருங் களிற்றியானைப் புணர் நிரை நீட்டி இருகடல் நீரும் ஒரு பகல் ஆடி" எனக் களிற்றி யானை நிரை என்னும் முழுத்தொடரும் அமைந் திருப்பதைக் காணலாம்.

தொல்காப்பியர் அகத்திணையியலில் 'முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே' என்று தொடங்கும் நூற்பாவின் கீழ் "வண்டுபடத் ததைந்த கண்ணி" என்று தொடங்கும் அகநானூற்றுப் பாடல் முழுவதையும் தந்து அதன்கீழே "இக்களிற்றி யானை நிரையுள் பாலைக்கு முதலும் கருவும் தந்து உரிப்பொருளாற் சிறப்பெய்தி முடிந்தது."– என்று நச்சினார்க்கினியர் எழுதியுள்ளது நோக்கத் தக்கது [தமி.நூ.தொ.களஞ்.].

களிற்றுடனிலை *kaḷiṟṟuḍaṉilai,* பெ.(n.) மறவ னொரு வன் யானையை வேலால் எறிந்து அதன்கீழ் இறந்துபட்டதைக் குறிக்கும் புறத்துறை (பு.வெ.7,20); (Puram) theme of a warrior being killed by the elephant that he has pierced through with his javelin.

[களிறு + உடன் + நிலை.]

களிற்றொடு உடன்மாய்ந்து வீழ்தலைக் குறித்த புறத்துறையாதலின் இப்பெயர்பெற்றது.

களிற்றுத்தானை *kaḷiṟṟu-t-tāṉai,* பெ.(n.) அறு வகைப் படையுள் ஒன்றான யானைப்படை (திவா.); elephantry, one of six kinds of armed forces.

[களிறு + தானை.]

களிற்றுப்பன்றி *kaḷiṟṟu-p-paṉṟi,* பெ.(n.) ஆண்பன்றி (தொல்.பொருள். 589, உரை.); boar.

[களிறு + பன்றி.]

களிற்றுப்பொறி *kaḷiṟṟu-p-poṟi,* பெ.(n.) பகைவரை அழிக்கக்கோட்டை மதிலில் வைக்கப்படும் யானை வடிவ இயந்திரம் (சிலப். 15,216.உரை.); elephant-shaped machine mounted on a fort for defence.

[களிறு + பொறி.]

களிற்றுயிர் *kaḷiṟṟuyir,* பெ.(n.) **களிற்றுயிர்த்தூம்பு** பார்க்க; see *kaliṟruyir-t-tūmbu. "களிற்றுயிர் கொடுமின்" (புறநா. 152.).*

[களிறு + உயிர்.]

களிற்றுயிர்த்தூம்பு *kaḷiṟṟuyir-t-tūmbu,* பெ.(n.) பெருவங்கியம் (புறநா.152.); a kind of blow-pipe.

மறுவ. களிற்றுயிர்

[களிற்றுயிர் + தூம்பு.]

களிற்றின் பிளிறல் ஒலி போன்று ஓசை எழுப்பும் இசைக்கருவி.

களிற்றுவட்டம் *kaḷiṟṟu-vaṭṭam,* பெ.(n.) நிரைய வகை (சூடா.); a hell.

[களிறு + வட்டம். மத யானையின் கொடுமை போன்ற துன்பம் குறித்தது.]

களிறு *kaḷiṟu,* பெ.(n.) 1. ஆண்யானை; male elephant. *"மண்டமர் முழக்குங் களிறனையார்க்கு" (மணிமே. 18.150.)* 2. ஆண்பன்றி; boar. *"கேழற் கண்ணும் கடிவரையின்றே" (தொல். 1534.).* 3.ஆண் சுறா மீன்; male shark. 4. கைம்மீன் (அத்தம்); the 13th star.

ம. களிறு

[களி² → களிறு. களிகொள்வது களிறு (வே.க.131.)]

களிறுதருபுணர்ச்சி *kaḷiṟu-taru-puṇarcci,* பெ.(n.) தலைவன் தலைவியை யானையினின்று காத்தமை பற்றி அவ்விருவருக்கும் உண்டான கூட்டம் (இறை. 14, உரை,97.); union of a young man with a maiden on his having rescued her from an elephant.

[களிறு + தரு + புணர்ச்சி.]

களுக்களுக்கெனல் *kaḷukaḷuk-k-eṉal,*பெ.(n.) சிரித்தல் ஒலிக்குறிப்பு; onom, expr. signifying laugh.

[களுக்கு + களுக்கு + எனல்]

களுக்கென்று *kaḷukkeṉṟu,* வி.எ.(adv.) சிரித்தல் ஒலிக்குறிப்பு; onom expr. signifying laugh. களுக்கென்று சிரித்துத் தன் முல்லைப்பல்லைக் காட்டினார் (உ.வ.).

[களுக்கு + என்று.]

களேபரம்¹ *kaḷēparam,* பெ.(n.) 1. உடம்பு; body, *"இக்களேபரத்தை யோம்ப" (தேவா.1194,2).* 2. எலும்பு (பிங்.); bone. 3. பிணம் (திவா.); corpse.

[கள் (கட்டுதல்) → கள + உரம் (உடம்பு) → களவுரம் → களவரம் → களேபரம் (கொ.வ.).]

களேபரம்² *kaḷēparam,* பெ.(n.) **களேவரம்** பார்க்க; see *kalevaram.*

[களேவரம் → களேபரம்.]

களேவரம் *kaḷēvaram,* பெ.(n.) குழப்பம்; confusion.

தெ. கலவாமு

[கலவரம் → களேவரம் (கொ.வ.).]

களை¹–தல் *kaḷai-,* 2 செ.குன்றாவி.(v.t.) 1. பிடுங்கி யெறிதல்; to weed, pull up, pluck out *"களையுநர் கைகொல்லும்" (குறள், 879.).* 2. நீக்குதல்; to remove, expel, separate; to extirpate, as disease; to share; to pare, as the nails, to moult as feathers. *"இடுக்கண் களைவதாம் நட்பு" (குறள், 788.).* 3. ஆடையணி முதலியன கழற்றுதல்; to strip or put off, as clothes or ornaments. *"உடுத்துக் களைந்தநின் பீதகவாடை" (திவ். திருப்பல்.9).* 4. அழித்தல்; to exterminate, as a family or foe; to kill, destroy. *"பொல்லா வரக்கனைக் கிள்ளிக் களைந்தானை" (திவ். திருப்பா.13.).* 5. குழைதல் (பிங்.); to soften, melt, as the heart. 6. அரிசி கழுவுதல்; to wash or cleanse as rice.

ம. கள; **க.** களெ; **தெ.** தடசு; **து.** களையுனி, களெவுனி

[கள் → களை.]

களை²–தல் *kaḷai-,* 2 செ.குன்றாவி (v.t.) கட்டி முடித்தல்; to tie, fasten, as a tuft of hair. *"குடுமி களைந்தா னெங்கோ" (பு.வெ.9.21.).*

[கள் = சேர்த்தல், தட்டுதல். கள் → களை.]

களை³ *kaḷai,* பெ.(n.) 1. கழனியில் முளைக்கும் பயனற்ற பயிர்; any usless plant of small growth which is not wanted, weeds. *"பைங்கூழ் களை கட்டதனோடு நேர்" (குறள், 550.).* 2. குற்றம்; defect, fault *"என்களையறுக்கும்" (தேவா. 818,5.).*

ம. கள்; **க.** களெ; **தெ.** கலபு; **குட.** களெ; **பட.** கா(யெ.); **து.** களெ.

Sp. hierba; **Cata.** herba; **Guj.** ghas; **Pali.** kasambn; **H.** ghas.

[களை¹ → களை²]

களை⁴–த்தல் *kaḷai-,* 2 செ.கு.வி.(v.i.) இளைப்புறுதல்; to be fatigued or exhausted; to be languid; to flag, faint, swoon. *"ஓடிக் களைத்தோ" (இராமநா.பக்.20.).*

தெ. களாசின்சு

[கள் → களை.]

களை[5] *kaḷai,* பெ.(n.) சோர்வு; களைப்பு; weariness, exhaustion. *"வேட்கையாற் களையினோடு கறுமெனச் சென்று" (கந்தபு. தநீசியுத்.55.).*

[களை³ → களை⁴.]

களை[6] *kaḷai,* பெ.(n.) 1. நிலவின்கலை (சந்திரகலை); a digit of the moon. *"களைப்பான் மதிமுகக் காரிகையீர்" (வெங்கைக்கோ. 61.).* 2. அழகு; beauty. *"முகமுங் களைக ளின்று" (தாயு.வண்ணம்.).* 3. ஒலி; splendour, glow, lustre. கையில் காசுமில்லை; முகத்தில் களையுமில்லை (பழ.).

க. களெ

[கள் → களை (திரட்சி, செழிப்பு).]

களை[7] *kaḷai,* பெ.(n.) களைக்கோலால் வெட்டிய வெட்டு (அக.நி.); cut with hoe.

[கள் → களை.]

களை[8] *kaḷai,* பெ.(n.) 80 விரற்கிடையளவு (சிற்பரத்.16.); a linear measure of 80 fingers breadth or viraṟkiḍai.

[கள் → களை.]

விளைநிலத்தில் களைவெட்டுவார்க்கு ஒதுக்கப்படும் சால் அளவு அரைக்கோல் அகல முடையது. அரைக் கோல் என்பது 5½ அடி அல்லது 80 விரற்கிடையளவு [0.825" — 1 விரற்கிடை, 10 விரற்கிடை — 1 சாண் [8¼", 16 சாண் — 1 கோல்].

களைகட்டா *kaḷai-k-kaṭṭā,* பெ.(n.) கட்டா எனும் ஒருவகை கடல்மீன் (முகவை மீனவ.); a kind of katta sea fish.

[களை + கட்டா]

களைகட்டு[1]**–தல்** *kaḷaikaṭṭui,* 5.செ.குன்றாவி.(v.t.) பூண்டோடு ஒழித்தல்; to destroy completely. *"செருவிற்சினவி இருபத்தொரு... காலரைசு களைகட்ட பரசுராமன்"* (S.I.I.vol3. insc. 207. S.No.8).

[களை + கட்டு.]

களைகட்டு[2]**–தல்** *kaḷai-kaṭṭu-,* 5 செ.குன்றாவி (v.t.) 1. அழகு கூடுதல், வண்ணமேறுதல், செம்மையாக இருத்தல்; to get beauty, splendour, glow. 2. மகிழ்ச்சி உண்டாக்கு, களிப்பாய் இரு; to get happy.

க. களெகட்டு

[களை⁵ + கட்டு.]

களைகட்டு[3]**–தல்** *kaḷaikaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) இசைக்கருவிகளின் ஓசை அடக்கமான இடத்தில் நன்கு ஒலித்தல் (உ.வ.); to sound effectively, as music within an enclosure.

[களை⁵ + கட்டு.]

களைகண் *kaḷai-kaṇ,* பெ.(n.)1. பற்றுக்கோடு; support, as relieving distress. *"மற்றோர் களைகண் இல்லேன்" (தேவா. 645,1).* 2. தலைவன்; master lord.

[கள் = சேர்த்தல், கட்டுதல், கட்டிக்காத்தல். கள் → களை + கண். களைகண் = கட்டிக்காப்பதற்குப் புகலிடமானவன்; தலைவன்.]

களைகள்–தல் (களைகட்டல்) *kaḷai-kaḷ-,* 12 செ.கு.வி. (v.i.) ***களைபறி*** பார்க்க; see *kaḷaipaṟi.* *"பைங்கூழ் களைகட்டதனோடு நேர்" (குறள், 550.).*

க. களெகளெ

[களை² + கள்.]

களைகூடு–தல் *kaḷai-kūḍu,* 5 செ.கு.வி.(v.i.) ***களைகட்டு²–தல்*** பார்க்க; see *kaḷai-k-kaṭṭu.*

[களை + கூடு.]

களைகெடு–தல் *kaḷai-keḍu-,* 7 செ.குன்றாவி (v.t.) அழகு கெடுதல்; மெருகு குறைதல்; to lose beauty.

க. களெகளெ, களெகெடு.

[களை⁵ + கெடு.]

களைகொட்டு *kaḷai-koṭṭu,* பெ.(n.) ***களைக் கொத்து*** பார்க்க; see *kaḷai-k-kottu*

[களை + கொட்டு–.]

களைகொத்து[1]**–தல்** *kaḷai-kottu-,* 4 செ.குன்றாவி (v.t.) களைக்கொத்தால் கொத்திக்களை யெடுத்தல்; to remove weeds by using hoe.

மறுவ. களையெடுத்தல்

க. களெகீள், களெகீளு.

*[களை + கொத்து.]

களைகொத்து² *kaḷai-k-kottu,* பெ.(n.) களை பறிக்குங் கருவி; weeding - hook, grass-hoe, small iron pick with broad blade and wooden handle.

மறுவ. களைக்குச்சி, களைக் கொட்டு; களைக்கோல், களைச் சத்தகம் (யாழ்ப்.).

ம. களகொத்து

[களை² + கொத்து.]

களைகொல்லி *kaḷaikolli,* பெ.(n.) களைகளை அழிக்கும் மருந்து; a chemical used to destroy weeds.

[களை + கொல்லி.]

களைகொள்(ளு)–தல் *kaḷai-koḷḷu-,* 16 செ.கு.வி (v.i.) அயர்வு கொள்ளல்; tired or exhausted (சா.அக.).

[களை³ + கொள்க.]

களைகோல் *kaḷai-kōl,* பெ.(n.) ***களைக்கொத்து*** பார்க்க; see *kaḷai-k-kottu. "காரியன் நீந்த களைக்கோலும்" (தமிழ் நா. 45.).*

[களை + கோல்.]

களைச்சத்தகம் *kaḷai-c-cattagam,* பெ.(n.) (யாழ்ப்.) ***களைகொத்து*** பார்க்க; see *kalai-kottu.*

[களை2 + சத்தகம்.]

களைஞன் *kaḷaiñaṉ,* பெ.(n.) 1.களைபறிப்போன்; one who weeds. *"களைஞர்தந்த கணைக்கால் நெய்தல்" (பெரும்பாண். 213.).* 2.கொடியவன் (சூடா.); vllian, wretch.

[களை → களைஞன்.]

களைதீர்–தல் *kaḷaitīr-,* 4 செ.கு.வி. (v.i.) வருத்தம் தீர்தல்; to recover from fatigue or langour (சா.அக.).

[களை + தீர்.]

களைதீர்க்கி *kaḷaitīrkki-,* பெ.(n.) 1.மயில் விசிறி; peacock feather fan so called from its removing fatigue when used. 2. கஞ்சி; rice-gruel water (சா.அக.).

[களை + தீர்க்கி.]

களை தெளி–தல் *kaḷaiteḷi-,* 4 செ.கு.வி (v.i.) சோர்வு நீங்குதல்; to recover from fatigue or langour (சா.அக.).

[களை³ + தெளி.]

களைப்படை–தல் *kaḷaippaḍai,* 4 செ.கு.வி.(v.i.) ***களைத்தல்*** பார்க்க; see *kaḷai-,*

தெ. களாசின்சு

[களைப்பு + அடை.]

களைப்பாயிரு–த்தல் *kaḷai-p-pāyiru-,* 3 செ.கு.வி (v.i.) ***களைப்படை–தல்*** பார்க்க; see *kaḷai-p-paḍai*

[களைப்பு + ஆக → ஆய் + இரு.]

களைப்பு *kaḷauippu,* பெ.(n.) சோர்வு; fatigue, exhaustion. *"களைப்பாச்சோ வென்பார்" (குற்றா. குற. 27.).*

[களை³ → களைப்பு.]

களைப்புல் *kaḷai-p-pul,* பெ.(n.) பயிருக்குட் களையாக முளைக்கும் புல் (யாழ்.அக.); grass-like weed.

[களை² + புல்.]

களைபறி–த்தல் *kaḷai-paṟi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. களைபிடுங்குதல்; to weed. 2. இடையூற்றைப் போக்குதல்; to remove a hindrance. *"கைங்கர்யத்திற் களைபறித்து" (ஈடு. 10, 4. ப்ர.).*

க. களெகீளு; பட. காகீ.

[களை² + பறி.]

களைபோடு–தல் *kaḷai-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) சோர்வாய் இருத்தல்; to be languid.

[களை³ + போடு.]

களையறு–த்தல் *kaḷai-y-aṟu-,* 4 செ.கு.வி.(v.i.) ***களைபறி*** பார்க்க; see *kaḷai-paṟi-, "கைங்கர்யத்திற் களையறுக்கிறது" (அஷ்டாதச. முமுட்சு. திவ்ய.63.).*

[களை² + அறு–.]

களையாவாரம் *kaḷaiyāvaram,* பெ.(n.) குழப்பம் (இ.வ.); confusion.

தெ. கலவரமு

[களை + ஆவாரம். ஆவலம் → ஆவரம் (ஆவலித்தல், ஆரவாரித்தல்) களை = களைதல், அழித்தல், தாக்குதல்.]

களையாவேட்கை *kaḷaiyā-vēṭkai,* பெ.(n.) நீங்காத ஆசை; desire that cannot be got rid of.

[களை + ஆ + வேட்கை.]

களையாற்று–தல் *kaḷai-y-āṟṟu-,* 5 செ.குன்றாவி (v.t.) இளைப்பாற்றுதல்; to remove the effect of fatigue or weariness.

[களை = களைப்பு. களை + ஆற்று.]

களையாறு–தல் *kaḷai-y-āṟu-,* 5 செ.கு.வி.(v.i.) இளைப்பாறுதல்; to take rest (சா.அக.).

[களை + ஆறு.]

களையான் *kaḷaiyāṉ,* பெ.(n.) வானம்பாடி (இ.வ.); skylark.

[களை → களையான். களை = பொலிவு, அழகு.]

களையெடு–த்தல் *kaḷai-y-eḍu-,* 4 செ.கு.வி.(v.i.) 1.தேவையான செடிகளை வைத்துக் கொண்டு தேவையற்றவற்றை நீக்குதல்; to uproot weeds.

[களை² + எடு–.]

களையேறு–தல் *kaḷai-y-ēṟu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. ஒளிமிகுதல்; to increase in lustre, as one's countenance. 2. தெய்வச்சிலையில் தெய்வத் தன்மை மிகுதல்; to grow in lustre on account of the increased manifestation of godhood in an idol. 3. நிலவின்கலை வளர்தல் (வின்.); to increase, as the phase of the moon.

[களை⁵ + ஏறு.]

களைவாங்கு–தல் *kaḷai-vāṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. அழகு குறைதல்; to decrease in lustre, as one's countenance. 2. தெய்வச்சிலையில் தெய்வத் தன்மை நீங்குதல்; to lose lustre, on account of the decreased manifestation of godhood in an idol.

[களை⁵ + வாங்கு–.]

களைவாரி *kaḷai-vāri,* பெ.(n.) ***களைக்கொத்து*** (வின்.) பார்க்க; see *kaḷaikottu.*

ம. களவாரி

[களை² + வாரு = களைவாரு → களைவாரி.]

களைவு *kaḷaivu,* பெ.(n.) நீக்குகை; rejection; extirpation; weeding; stripping off. *"பிறர்தம் மதமேற் கொண்டு களைவே" (நன்.10).*

[களை¹ → களைவு.]

களைவெட்டி *kaḷai-veṭṭi,* பெ.(n.) களைவெட்டுங் கருவிவகை (C.E.M.); jumper, a tool that works with a jumping motion.

[களை² + வெட்டி.]

களைவெட்டு–தல் *kaḷai-veṭṭu,* 5 செ.கு.வி.(v.i.) ***களைகொத்துதல்*** பார்க்க; see *kaḷaikottu-,*

கற்கசி–த்தல் *kaṟkaśi-,* 4 செ.கு.வி.(v.i.) கடுமையாயிருத்தல்; to be hard or unyilding; to be firm. *"விலை கொடுக்கும் பொழுது கற்கசிப்பார்க்குக் கொடாதும்" (நீலகேசி. 337, உரை.).*

[கள் + கசி – கற்கசி.]

கற்கட்டிமதகு *kaṟkaṭṭimadagu,* பெ.(n.) ஏரிக்கரையில் கற்களால் அமைக்கப்படும் மடை; out flowing sluice made up of stone. கலிங்குகளும் இடக்கையில் உடைந்த மடைகளும் அடைத்து ஏரியும் கல்லி கரையும் கற்கட்டி மதகுகளும் அட்டுவித்து.... (S.I.I. vol.12. in 126.).

[கல் + கட்டி + மதகு.]

கற்கட்டியிடையர் *kaṟ-kaṭṭi-y-iḍaiyar,* பெ.(n.) பெண்களுக்குத் தாலியுடன் கருகுமணி கோத்துக் கட்டுவதை வழக்கமாகவுடைய இடையர் இனம்; (e.t.); division of the Idaiya caste, whose women wear glass beads with tāli.

[கல் + கட்டி + இடையர்.]

கற்கட்டு¹–தல் *kaṟ-kaṭṭu-,* 5 செ.குன்றாவி (v.t.). 1.கற்களைக் கொண்டு கட்டுதல்; to build wall with stone brick. 2. அணிகலன்களில் செம்மணி இரத்தினக் கற்களைப் பதித்துக் கட்டுதல்; to set stones in the frame work of a jewel.

[கல் + கட்டு.]

கற்கட்டு[2] *kaṟ-kaṭṭu,* பெ.(n.) கற்களாகிய கட்டடம்; a structure built of stone. *"கற்கட்டாகிய மடமும் காணியும்" (தண்டலை.43).*

ம. கல்க்கெட்டு

[கல் + கட்டு.]

கற்கட்டு மோதிரம் *kaṟ-kaṭṭu-mōdiram,* பெ.(n.) ***கற்கட்டு விரற்செறி*** பார்க்க; see *kaṟkaṭṭu-viraṟ-ceṟi,*

[கல் + கட்டு + மோதிரம்.]

கற்கட்டுவிரற்செறி *kaṟkaṭṭu-viraṟ-ceṟi,* பெ.(n.) மணிபதித்த கணையாழி; ring set with one or more precious stones.

[கல் + கட்டு + விரல் + செறி.]

கற்கண் *kaṟkaṇ,* பெ.(n.) கலிங்கின் நீர்செல்லும் துளை; the hole of a surplus *"கற்கண்ணு... க்குமேலைச் செய்க்கு" (S.I.I.vol.19. in 275. s14-150).*

ம. கல்க்கண்டம், கல்க்கண்டி, கல்க்கண்டு; தெ. கலகண்ட; கசபா. கல்க்கண்டி; பட. கல்கண்டு.

[கல் + கண்.]

கற்கண்டம் *kaṟkaṇḍam,* பெ.(n.) அகில் (சங்.அக.); eagle wood.

[கல் + கண்டம்.]

கற்கண்டு[1] *kaṟkaṇḍu,* பெ.(n.) அணிகலவகை; a kind of ornament. *'கற்கண்டு ஒன்றில் தடவிக் கட்டின பளிங்கு இரண்டு'* (s.i.i.ii. 413).

[கல் + கண்டு.]

கற்கண்டு[2] *kaṟkaṇḍu,* பெ.(n.) பளிங்கு போன்று இறுகிய கருப்பஞ்சாற்றுக் கட்டி (பதார்த்த. 188.); rock-candy, sugar-candy. *"கற்கண்டால் செய்த எட்டிக்கனியும் கசக்குமா?" (பழ.).*

[கல் +கண்டு.]

கற்கண்டு வகைகள்: 1. பனங்கற்கண்டு 2. ஈச்சங்கற்கண்டு 3. சீனிக்கற் கண்டு 4. பத்தைக் கற்கண்டு 5. தேன்கற்கண்டு.

கற்கண்டுப்பானகம் *kaṟ-kaṇḍu-p-pāṉagam,* பெ.(n.) கற்கண்டு முதலாகிய பண்டங்கள் கூட்டிச் செய்த சுவைநீர்; a syrup of rock candy and other ingredients.

[கற்கண்டு + பானகம்]

கற்கந்து *kaṟ-kandu,* பெ.(n.) கற்றூண்; stone pillar. *"கற்கந்தும் எறிபோத்தும் கடுங்கண் யானையும் தறுகட் பன்றியும் கருவரையும் இரு நிலனும் பெருவிசும்பும் அனையார்" (இறைவ.2, உரை.31.).*

[கல் + கந்து.]

கற்கம்[1] *kaṟkgam,* பெ.(n.) 1. இலுப்பைப்பூ (வின்.); mahula flower. 2. தாமரை (மலை.); lotus.

[கல்+அகம்– கல்வகம் → கற்கம். கரு. நிறமுடையதாய் இலுப்பைக் கொட்டையும் தாமரைக் கொட்டையும் அமைந்த அடிப்படையில் இப்பெயர் பெற்றன வாகலாம்.]

கற்கம்[2] *kaṟgam,* பெ.(n.) 1. ***கல்கம்*** பார்க்க (தைலவ. தைல. 135.); see *kalgam.* 2. கருக்குக் குடிநீர் (கஷாயம்) முதலியவற்றின் கசடு; residuum or sediment of decoctions, oil or ghee.

[கல்→ கரு → கருமை. கல் + அகம். → கல்லகம்→ கற்கம்.]

கற்கம்[3] *kaṟgam,* பெ.(n.) 1. பாழ்வினை (பாவம்);sin. 2. விட்டை; dung of animals. 3. இரும்புக் கிட்டம்; Iron ore. 4. தீ; fire.

[கல் → கரு → கருமை. கல் +அகம் → கல்லகம் கற்கம்.]

கற்கருசிலை *kaṟkarusilai,* பெ.(n.) ஒருவகைப்பூடு (வின்.); a plant of the cucurbita genus.

[கல் + கருசிலை.]

கற்கலிங்கி *kaṟ-kaliṅgi,* பெ.(n.) 1. மலைக் கொன்றை (L.); hingle tree. 2. சிவப்பு அகில்; pink cedar (சா.அக.).

[கல் + கலிங்கி.]

கற்கலை *kaṟ-kalai,* பெ.(n.) காவியுடை; cloth dyed in red ochre. *"வார்செஞ்சடையுங் கற்கலையும்" (திருவானைக். திருநீ. 7.).*

[கல் + கலை.]

கற்கவி *kaṟkavi,* பெ.(n.) கதவுநிலையின் மேலே இடப்பட்டிருக்கும் பாவுகல் (நெடுநல். 86.) உரை; தமிழ்நா.. 256); stone vault put up on the portal or doorway.

[கல் + கவி.]

கற்கவுதாரி *kaṟ-kavudāru,* பெ.(n.) காட்டுக் கோழிவகை (m.m.761.) ; common sand - grouse.

[கல் + கவுதாரி.]

கற்கனல் *karkanal,* பெ.(n.) ஒருவகைச் செய் நஞ்சு; a mineral poison.

[கல் + கனல்.]

கற்கா *kaṟ-kā,* பெ.(n.) **கற்காநாடு** (நன்.272. மயிலை.) பார்க்க; see *kaṟkānāḍu.*

[கல் + கா[3].]

கற்காக்காச்சி *kaṟ-kākkacci,* பெ.(n.) ஒருவகைக் கடல் மீன்; a red coloured sea-fish.

[கல் + காக்காச்சி.]

கற்காண்டல்[1] *kaṟkāṇḍal,* பெ.(n.) ஆறுவிரற்கிடை நீளமும் சாம்பல் நிறமும் உடைய கடல்மீன்வகை; a sea-fish, greyish, attaining 6 inches in length.

[கல் + (கண்டல்) காண்டல்.]

கற்காண்டல்[2] *kaṟkāṇḍal,* பெ.(n.) போரிற் பட்ட மறவனது உருவம் செதுக்குவதற்கேற்ற கல்லைத் தெரிந்து கொள்வதைக் கூறும் புறத்துறை (பு.வெ.10, பொது வியற்.8); (Puram.) theme of selecting a stone to cut the form and inscribe the memoirs of a fallen hero.

[கல் + காண்டல்.]

கற்காணம்[1] *kaṟ-kāṇam,* பெ.(n.) கல்லாலமைந்த செக்கு; stone oil-press.

[கல் + காணம்.]

கற்காணம்[2] *kaṟ-kāṇam,* பெ.(n.) கருஞ்சீரகம். (மலை); black cumin.

[கருமை + காணம். கல் = கரு → கருமை, கல் + காணம், கற்காணம்.]

கற்காந்தம் *kaṟ-kāndam,* பெ.(n.) ஒருவகைக் காந்தக்கல் (வின்.); a kind of load-stone.

[கல் + காந்தம்.]

கற்காநாடு *kaṟkā-nāḍu,* பெ.(n.) பன்னிரு கொடுந் தமிழ் நாடுகளிலொன்று; one of the twelve Kodun-Tamil-nadu (தொல்.சொல். 400.சேனா).

[கல் + கா – கற்கா + நாடு.]

இந்நாடு மேற்குத் தொடர்ச்சி மலையின் கீழ்ப்புறத்தில் கற்குன்றுகள் நிறைந்ததாம். இது தற்காலக் கோவை மாவட்டத்தில் அமைந்துள்ளது.

கற்காப்பு *kaṟ-kāppu,* பெ.(n.) மாற்றார் படையெடுப்பு நிகழும் காலங்களில் கோயில் கருவறையைக் காப்பதற்காக அதன் வாயிலை அடைத்து எழுப்பும் கற்சுவர் (யந்திரப். 10); stone wall erected to close the entrance to the inner sanctuary of Hindu temple, to keep it safe in times of foreign invasion.

[கல் + காப்பு.]

கற்காய் *kaṟkāy* பெ.(n.) விளாம்பழம் போன்றவற்றின் ஓடு; shell, cockle (சேரநா.).

ம.கல்க்காய், கக்க; **து.** கசக்க.

[கல் + காய்.]

கற்காரம்[1] *kaṟkāram,* பெ.(n.) 1. கற்களாகக் கிடைக்கும் காரச்சரக்குகள்; stone-lime alkaline substances found naturally. 2. வெண்காரம்; borax 3. படிக்காரம்; alum. 4. பனை செ[illegible]க்கட்டி; palmyra jaggery in a lump. 5. பனங்கற்கண்டு; sugar, candy prepared from palmyra juice.

[கல் + காரம் கல் = கட்டியானது, இறுகினது.]

கற்காரம்[2] *kaṟkaram,* பெ.(n.) கருங்கல் கட்டுமானப் பகுதி; stone work portion in a building or temple.

[கல் + காரம்.]

கோயிலின் அடிமனைப்பகுதி கருங்கல் லாலும் மேற்பகுதி செங்கல்லாலும் கட்டுவதுண்டு.

கருங்கல் → பகுதியை கல்காரம் கற்காரம் என்பது சிற்பமரபு.

கற்காரம்[3] *kaṟ-kāram,* பெ.(n.) கல்வேலை; stone-work *"புலிமுகமான சோபானத்துக்கு வேண்டும் பொன்விட்டுக் கற்காரஞ்செய்வித்தேன்" (S.I.iii.86.).*

[கல் + காரம்.]

கற்காரம்[4] *kaṟkāra,* பெ.(n.) காரக்கல்; a kind of caustic mineral.

[கல் + காரம்.]

கற்காலம் *kaṟ-kālam,* பெ.(n.) கல்லைக் கருவியாகப் பயன்படுத்திய காலம்; stone age.

[கல் + காலம்.]

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சிலபிரிவுகளாகப் பிரித்து, அவ்வக்காலங்களில் மக்கள் பயன் கொண்ட கருவி, மாழை போன்ற வற்றின் அடிப்படையில் குறித்தல் மரபு. அவ் வகையில் கற்களைக் கருவியாகக் கொண்ட மக்கள் வாழ்ந்த காலம் கற்காலமாம்.இதில் பழைய கற்காலம், புதியகற்காலம் என்ற இரு பிரிவுகள் உண்டு.

கற்காவி *kaṟ-kāvi,* பெ.(n.) காவிக்கல் (தைலவ. தைல. 135.); ochre .

[கல் + காவி.]

கற்கி[1] *kaṟki,* பெ.(n.) கோயில் (சது.); temple. *"கற்கிளர் கற்கிசெய்தோன்" (சேதுப. இராமநா.43.).*

[கல் →கற்கு - கற்படுத்துதல், கற்களால் செய்வித்தல். கல் (த.வி.)→கற்கி (பி.வி). கல் →கற்கு + இ – கற்கி (கல்லால் செய்விக்கப் பட்டது) 'இ'ஒன்றன்பால் ஈறு ஒ.நோ. நில் → நிற்கு (நிற்கச்செய்.)]

கற்கி[2] *kaṟki,* பெ.(n.) 1. திருமாலின் பத்துத் தோற்றரவு களில் இனி நிகழவிருக்கும் தோற்றரவு; the future incarnation of Vishnu, when he is to assume the form of a horse, to restore righteousness, one of the ten incarnations. *"தாமோதரனாய்க் கற்கியு மானான்றன்னை" (திவ். பெரியதி.8,8,10.).* 2. குதிரை; horse, *"கனகமுற்றுங் கற்கிக ளிடுவதாக நம்முளோர் கைக் கொண்டார்கள்" (திருவாலவா. 28, 62.).*

கற்கிடை[1] *kaṟ-kiḍai,* பெ.(n.) செங்கற்சூளை (S.I.I.ii, 54.); brick-kiln.

[கல் + கிடை.]

கற்கிடை[2] *kaṟ-kiḍai,* பெ.(n.) துறுகற்களால் கோலப்பட்டு இடையே முதுமக்கள் தாழிகள் புதைக்கப்படும் இடம்; place of gravel where large earthen jar intended for, corpse is buried. *"இவ்வூர் ஈழச்சேரியும் பறைச்சேரியும் வெள்ளான் சுடுகாடும் பறைச் சுடுகாடும், கற்கிடையும் ஆக இறையிலி நீங்கு நிலம்" (தெ.கல்.தொ.2.கல்.4.).*

[கற் + கிடை.]

கற்கிணறு *kaṟkiṇaṟu,* பெ.(n.) 1. கல்லால் கட்டிய கிணறு; well, built by stone. 2. பாறையை வெட்டி உண்டாக்கப்பட்ட கிணறு; well excavated in rocky ground.

[கல் + கிணறு.]

கற்கிளிச்சி *kaṟ-kiḷacci,* பெ.(n.) ஒருவகைக் கடல்மீன், நீலமும் பச்சையும் கலந்தது; a sea-fish, bluish-green.

[கல் + கிளிச்சில்.]

கற்குகை *kaṟkugai,* பெ.(n.) கல்லிடுக்குகளில் அமைந்த குழிவானபகுதி; cave.

[கல் + குகை.]

கற்குடல் *kaṟ-kuḍal,* பெ.(n.) கழிச்சல் மருந்துக்கு எளிதில் மலம் நெகிழ்தலில்லாத குடல் (உ.வ.); hard or costive bowels, as not amenable to mild purgatives.

[கல் + குடல்.]

கற்குரு *kaṟkuru,* பெ.(n.) ஒருவகை மருந்துக்கல்; foliated crystallized gypsum.

[கல் + குரு.]

கற்குழி[1] *kaṟ-kuḻ,* பெ.(n.) 1. கல்லை வெட்டி எடுக்கத் தோண்டும் குழி; stone pit, a quarry. 2. கல்லறை; a sepulchre (சேரநா.).

ம. கல்க்குழி

[கல் + குழி.]

கற்குழி² *kaṟkuḻi,* பெ.(n.) வயிற்றுக்குழி; stomach. *"கற்குழி தூரக் கனகமுந் தேடுவர்" (திருமந் 211).*

[கல் + குழி.]

கற்குளி-த்தல் *kaṟ-kuḷi-,* 4 செ.கு.வி (v.i.) முத்து, செம்மணி (பவழம்) முதலியவை எடுப்பதற்காகக் கடலில் மூழ்குதல்; to dive in the sea for pearls, gems, etc.

[கல் + குளி.]

கற்குளிமாக்கள் *kaṟ-kuḷi-mākkaḷ,* பெ.(n.) முத்துக் குளிப்போர் (கல்லா.); divers for pearls.

[கற்குளி + மாக்கள்.]

கற்குறவை *kaṟ-kuṟavai,* பெ.(n.) பாறையில் சேர்ந்து வாழும் சிறு கடல் மீன்வகை. (m.m.); rock doke which clings to rocks, attaining at least 8 inches. in length.

[கல் + குறவை.]

கற்குறிச்சி *kaṟkuṟicci,* பெ.(n.) அம்பாசமுத்திரம் வட்டம் பாப்பாங்குளம் கோயிலுக்கு இறையிலி யாகவிட்ட ஊர்; village given as tax free to the temple at Pappankulam in Ambasamutiram taluk.*"இந்நாட்டுக் கற்குறிச்சியாள விக்கிரம பாண்டிய நல்லூர்" (தெ.இ.கல்.தொ.23 கல்125.).*

[கல் + குறிச்சி.]

கற்குறும்பு *kaṟkuṟumbu,* பெ.(n.) 1.மலைமுகடு; peak. 2. மலைப்பாங்கான மேட்டுப்பகுதி; mound துரிஞ்சிலோடடைக் கற்குறும்பும்; (S.I.I. vol. 2. in 76. 93.).

[கல் + குறும்பு.]

கற்கெண்டை *kaṟ-keṇḍai,* பெ.(n.) ஒருவகை ஆற்றுமீன் (m.m.); rock carp, river-fish, dark-brown, haunting rocky streams.

[கல் + கெண்டை.]

கற்கேணி *kaṟ-kēṇi,* பெ.(n.) ***கற்கிணறு*** பார்க்க; see *kaṟkiṇaṟu* *"நெடிய கயிறிட் டிறைக்கின்ற கற்கேணி நீருண்பதாய்" (அறப். சத.49.).*

[கல் + கேணி.]

கற்கை *kaṟkai,* பெ.(n.) படிக்கை; learning *"பிச்சைப் புகினும் கற்கை நன்றே" (நறுந்.).*

[கல் + கை. 'கை' பெயராக்க ஈறு,ஒ.நோ. வருகை.]

கற்கொத்தி *kaṟ-kotti,* பெ.(n.) 1. கல்லைப்பொளிந்து வேலை செய்பவன்; a stone-cutter. 2. கல்லுப் பொறுக்கிப் புறா (வின்.); a species of dove.

ம. சுங்கொத்தி, கல்க்கொத்தி; **க.**கல்லுகுடிக

[கல் + கொத்தி.]

கற்கோட்டை *kaṟkōṭṭai,* பெ.(n.) கல்லால் கட்டப்பட்ட அரண்மனை; fort built by stone.

[கல் + கோட்டை.]

கற்கோடாலி *kaṟkōḍāli,* பெ.(n.) கல்லால் ஆன கோடாரி; a stone axe.

ம. கக்கோடாலி

[கல் + கோடாலி. கோடு + அரி→ கோடரி→ கோடாரி→ கோடாலி (கொ.வ.).]

கற்கோணிலை *kaṟ-kōṇilai,* பெ.(n.) போரிற்பட்ட மறவனது உருவத்தை வடிப்பதற்காகத் தேர்ந்தெடுக் கப்பட்ட கல்லைக் கைக்கொள்ளுதலைக் கூறும் புறத்துறை (பு.வெ. 10, பொதுவியற். 9); Puram theme of removing a selected block of stone for a herostone.

[கல் + கோள் + நிலை.]

கற்கோது-தல் *kaṟ-kōdu-,* 5 செ.கு.வி.(v.i.) கற்களின் கரடுமுரட்டுத் தன்மையை நீக்குதல்; to polish the surface of a stone.... *"குளமாக்கிக் கற்கோதிக் குமுழி செய்வித்து" (S.I.I. Vol. 14. in. 24. S.No.:4).*

[கல் + கோது.]

கற்கோயில் *kaṟ-kōyil,* பெ.(n.) கல்லால் கட்டப்பட்ட கோயில்; stone temple.

[கல் + கோயில்.]

கற்கோவை *kaṟ-kōvai,* பெ.(n.) 1. கொல்லங் கொவ்வை (மலை.); a climbing shrub 2. இராமக் கோவை (m.m.); Rama's caper. 3. கருடன் கிழங்கு; Indian birthwort

[கல் + கோவை.]

கற்கோளம் *kaṟ-kōḷam,* பெ.(n.) உருண்டைக்கல்; lithosphere.

[கல் + கோளம்.]

கற்சக்கரம் *kaṟcakkaram,* பெ.(n.) கல்லால் செய்யப்பட்ட சக்கரம்; a stone-wheel.

க.கல்லுகாலி

[கல் + சக்கரம்.]

கற்சட்டி[1] *kaṟ-caṭṭi,* பெ.(n.) மாக்கல்லால் அமைத்த சட்டி; vessel, made of stone, soft stone.

ம. கல்லுச்சட்டி; க.கல்சட்டி.

[கல் + சட்டி.]

புளிக்குழம்பு, ஊறுகாய் போன்றவற்றைப் பாதுகாத்து வைக்கப்பயன்படுத்தும் மூடியில்லாத ஏனம். கற்சட்டி என்பது திருநெல்வேலி வழக்கு.

கற்சட்டி[2] *kaṟ-caṭṭi,* பெ.(n.) உட்பக்கம் சிறுகற்கள் பதித்த மண்சட்டி; clay vessel with small stone grits embedded inside at the bottom.

[கல் + சட்டி.]

கீரை கடையப் பயன்படும்.

கற்சட்டிப்பாறை *kaṟcaṭṭi-pāṟai,* பெ.(n.) களிமண் இறுகுவதால் ஏற்படும் மாக்கல் பாறை; a variety of stea slite consisting of hardened clay used for making vessels - soap stone (சா.அக.).

[கல் + சட்டி + பாறை → கற்சட்டிப்பாறை.]

கற்சவளை *kaṟ-cavaḷai,* பெ.(n.) கல்நார் (யாழ். அக.); asbestos.

[கல் + சவளை.]

கற்சவுடு *kaṟcavuḍu,* பெ.(n.) 1. கெட்டிப்பட்ட வண்டல்; hardened sedim ent. 2. கெட்டியான உவர்மண் தரை; hard soil of fuller's earth (சா.அக.).

[கல் + சவுடு.]

கற்சாடி *kaṟcāḍi,* பெ.(n.) கலலைக் குடைந்து உண்டாக்கிய சட்டி; soap stone jar, stone pitcher.

[கல் + சாடி. தாழி → சாழி → சாடி.]

கற்சாலர்வேலை[1] *kaṟ-cālar-vēlai,* பெ.(n.) செங்கல் கட்டடத்தில் அமைக்கப்பட்ட சாளரச் சித்திர வேலை (c.e.m.); artistic brick-work effected with fringed borders, serving the purpose of a window without doors.

[கல் + சாலர் + வேலை. சாலரம் →சாளர் (கொ.வ.).]

கற்சாலர்வேலை[2] *kaṟ-cālar-vē!ai,* பெ.(n.) தேன்கூடுபோல் அமைக்கப்பட்ட செங்கற்கட்டட வேலை (கட்டநாமா.); honey-comb, brick-work.

[கல் + சாலர் (சாளரம்) + வேலை.]

கற்சிட்டம் *kaṟciṭṭam,* பெ.(n.) உருகின கல்; over burnt brick (சா.அக.).

[கல் + சிட்டம்.]

கற்சிட்ட வகைகள்: 1. அரிச்சிட்டம் – half over - burnt brick. 2. கட்டுச்சிட்டம் – hard over - burnt brick. 3. நகற்சிட்டம் fully blown over-burnt. 4. நாறுஞ்சிட்டம் – fetid over burnt brick (சா.அக.).

கற்சிப்பி *kaṟcippi,* பெ.(n.) பாறைகளில் கிடைக்கும் கிளிஞ்சில்; rock oyster (சா.அக.).

[கல் + சிப்பி.]

கற்சிலை *kaṟ-cilai,* பெ.(n.) கல்லால் உருவாக்கப்பட்ட உருவம் (mod,); statue, stone image.

[கல் + சிலை.]

கற்சிற்பர் *kaṟ-ciṟppar,* பெ.(n.) கற்றச்சர்; stone masons, stone cutters.

[கல் + சிற்பர்.]

கற்சிறை *kaṟ-ciṟai* பெ.(n.) கல்லணை; stone dam, anaicut, embankment *"புனலைக் கற்சிறை போல வொருவன் றாங்கிய" (தொல் பொருள். 63.).*

மறுவ. தத்து

[கல் + சிறை.]

மதுரைக்காஞ்சி [வரி 725], அகநானூறு 346 ஆகியவற்றிலும் "கற்சிறை" குறிப்பிடப்படுகிறது. அணையைக் குறிக்கும் "சிறை" என்னும் தமிழ்ச் சொல் sirah என்ற வடிவத்தில் இருக்கு வேதத்தில் ஏறியுள்ளது. [பி.எல்.சாமி. "கற்சிறையும் அரப் பாவும்" செந்தமிழ்ச் செல்வி நவம்பர் 1994]

கற்சீரகம் *kar-ciragam,* பெ. (n.) சீரக வகையுள் ஒன்று; a hard variety of cumin seed (சா.அக).

[கல் + சீரகம். கல் = கருமை, உறுதி.]

கற்சுண்ணக்குகை *karcunna-k-kugai,* பெ.(n.) கல்லுச் சுண்ணாம்பினாற் செய்த உருக்குங்குகை; crucicble made of common lime stone (சா.அக.).

[கல் + சுண்ணம் + குகை.]

கற்சுண்ணம் *karcunnam,* பெ.(n.) ***கற்சுண்ணாம்பு*** பார்க்க; see *karsunnāmbu.*

[கல் + சுண்ணம்.]

கற்சுண்ணமுப்பு *karcunnamuppu,* பெ.(n.) அண்டக்கற் சுண்ணத்தாற் செய்யும் முப்பு; a universal salt prepared with lime- stone (essence) as its chief ingredient (சா.அக.).

[கற்சுண்ணம் + உப்பு.]

கற்சுண்ணாம்பு *kar-cunnāmbu,* பெ.(n.) ஒடக் கல்லை நீற்றி யெடுக்கும் சுண்ணாம்பு; stone lime, dist. fr. kilinjal sunnambu.

மறுவ. கற்சுண்ணம்

ம. கல்ச்சுண்ணாம்பு; **க.** கல்லுசுண்ணாம்பு

[கல் + சுண்ணாம்பு.]

கற்சுணை *karcunai,* பெ.(n.) கல்லின் மேலுள்ள சொர சொரப்பு; sharp grains or roughness of the surface of stones (சா.அக.).

[கல் + சுணை.]

கற்சுவர் *karcuvar,* பெ.(n.) 1. கற்கள் வைத்துக் கட்டப்படும் சுவர்; a stone wall, a structure built of stone. 2. செங்கற்கள் வைத்துக் கட்டும் சுவர்; brick wall.

ம. கல்க்கெட்டு

[கல் + சுவர்]

மண்சுவர்க்கு எதிர்ச்சொல்லாக அமைந்த கற்சுவர் கருங்கல் சுவரையே முதலில் குறித்து நின்றாலும், பின் அது செங்கல், செம்பராங்கல் போன்றவற்றைக் கொண்டமைக்கும் சுவர்க்கும் ஆகிப் பொதுமைப்பட்டு வழங்கி வந்துள்ளமை காண்க.

கற்சூரை *kar-cūrai,* பெ.(n.) செக்கவுரி (சா.அக.) (L.); spinous wild indigo.

[கல் + சூரை.]

கற்சூலை *kar-šūlai,* பெ.(n.) வலிப்புநோய்வகை (மு.அ.); a kind of rheumatic pain.

[கல் + சூலை.]

கற்சேம்பு *kar-sēmbu,* பெ.(n.) சேம்பு வகை (இட.வ.); a kind of Indian kales.

[கல் + சேம்பு.]

கற்பசு *karpašu,* பெ.(n.) பயனற்றது; useless thing, as a cow made of stone. *"கழிய நின்றார்க்கொரு கற் பசுவாமே" (திருமந். 308.).*

[கல் + பசு.]

கற்பட்டறை *karpattarai,* பெ.(n.) கல்லுடைக்கும் இடம்; the place where stones are crushed into different sizes.

[கல் + பட்டறை.]

கற்பட்டு *karpattu,* பெ.(n.) ஒருவகைப்பட்டு; a kind of silk.

ம. கல்பட்டு

[கல் + பட்டு.]

கற்படி *karpadi,* பெ.(n.) கல்லினா லியன்ற படிக்கட்டு; a flight of stone steps.

ம. கல்பட(வு), கல்படி.

[கல் + படி.]

கற்படி மாற்று-தல் *kar-padi-mārru-,* 5 செ.கு.வி. (v.t.) கல்லில் உள்ளதைப் பொத்தகத்திற்குப்படி எடுத்தல்; to transcribe into a book from inscription. *"ஸ்ரீ விமானத்துள்ள கற்படி மாற்று சேர்க்க" (பொத்தகப்படி. (S.I.I. vol.5. in 654.).*

[கல் + படி + மாற்று.]

கற்படிவு *karpadivu,* பெ.(n.) அறப்பழங்காலத்து மரம், விலங்கு போன்றவற்றைக் காட்டும் புதைவடிவம்; fossil.

[கல் + படிவு.]

மண்ணுக்கடியில் புதையுண்டு கிடக்கும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மரம், செடி, விலங்கு போன்றவற்றின் உருவங்கள் கல்லைப் போன்று இறுகிப் பிறதாக்குதல்களால் மாற்றங்களுக்கு உள்ளாகாமல் அல்லது மிகச் சிறிய அளவே மாற்றம் அடைந்தவனவாக இருக்கும். இவை பெரும்பாலும் தொல் பழங் காலத்து நிலையைக் காட்டப் பெருந்துணை புரியும்.

கற்படு-த்தல் *karpaḍu-*, 4 செ.கு.வி (v.i.) கற்படுத்த நிலம் (திவா); stone paved area. 2. மடையில் மேற்பகுதியில் கல் பரவுதல்; to pave stones on the sluice. *"வெப்பமடை கற்படுத்தும்" (S.I.I. vol.14. 44. s.no. 21.).*

[கல் + படு.]

கற்படை *kar-paḍai*, பெ.(n.) 1. கற்பாவின இடம்; stone pavement. 2. நீர் செல்வதற்குக் கற்களால் மறைத்து மூடிய சுருங்கை (சூடா.); closed drain. 3. சுவரின் கல்வைப்பு (உ.வ.); layer of brick or stone in a wall. 4. கோட்டையின் கள்ளவழி (வின்.); secret way into a fort.

[கல் + படை.]

கற்பணம் *karpaṇam*, பெ.(n.) கல்லுடைத்தலுக்கு இடப்பட்ட வரி; a tax levied on quarrying.

ம.கல்பணம்

[கல் + பணம்.]

கற்பணி *karpaṇi*, பெ.(n.) 1. கல்வேலை; stone masonry. 2. கற்சிலை செய்யும் வேலை; stone sculpture (திருவாங்கூர்.. கல்வெட்டுத் தொகுதி. பக். 37.).

ம. கல்பணி.

[கல் + பணி.]

கற்பதி[1]-த்தல் *karpadi-*, 4. செ.கு.வி.(v.i.) 1. கற்பாவுதல்; to pave with stones. 2. மணிபதித்தல்; to encase precious stones in ornaments.

[கல் + பதி.]

கற்பதி[2]-த்தல் *karpadi-*, 4.செ.கு.வி.(v.i.) கல்லில் எழுதுதல்; to inscribe on stone. *"கற்பதித்தான் சொன்ன கவி" (சாச. தமிழ்க். 34.).*

[கல் + பதி.]

கற்பதுக்கை *karpadukkai*, பெ.(n.) தரைக்குள் அமைக்கப்படும் கற்பலகைகளாலான கல்லறை; இறந்தோரை அவர்களின் சில உடைமைகளுடன் அடக்கம் செய்யும் இடம்; sub surface coffin made of stone slabs where the dead bodies are placed along with some materials used by the person.

[கல் + பதுக்கை. படுக்கை → பதுக்கை. 'த' திரிபு.]

கற்பம்[1] *karpam*, பெ.(n.) நானூற்று முப்பத்திரண்டு கோடி ஆண்டுகள் கொண்ட காலம், நான்முகனின் ஒரு நாள்; a day of Brahma, a period of 4,320,000,000 years of mortals. *"கற்பம் பல சென்றன" (கம்பரா. சரபுங். 18).* 2. நான்முகனின் வாழ்நாள் (திவா.); period of Brahma's life-time. 3. இந்திரன் முதலியதேவர்களின் வாழ்நாளளவு; the standard by which the life-time of Indra and other celestials is measured. *"ஆயுக்கற்பத்தினை மிகவுடைய இந்திரன்" (சிலப். 11, 154,உரை.).* 4. வாழ்நாளை நீட்டிக்கச் செய்யும் மருந்து; medicine to promote longevity. *"காயகற்பந்தேடி" (தாயு. பரிபூ. 13.)* 5. இலக்கங் கோடி (பிங்.); the number 1,000,000,000,000. 6. தேவர் உலகம் (பிங்.); the world of gods.

[கல்பம் → கற்பம். கல் → கலி = ஒன்று சேர்தல், கூடுதல், மிகுதல்,பெருகுதல். கல் → கல்பம் → கற்பம்.]

கற்பம்[2] *karpam*, பெ.(n.) 1. ஆவின் சாணத்தை முறைப்படி பக்குவப்படுத்தி உண்டாக்கிய திருநீறு (சைவச.பொது. 178.); sacred ashes prepared according to Agamas from cowdung received directly from the cow, by hand. 2. புளியாரை. (மலை.); yellow wood-sorrel.

[கல் → கல்வம் → கற்பம்.]

கற்பமூலிகை *karpamūligai*, பெ.(n.) காயகற்ப மூலிகைகள்; Siddhar's rejuvenation herbs and drugs (சா.அக.).

[கற்பம் + மூலிகை.]

கற்பயறு *kar-payaru*, பெ.(n.) பயறுவகை (பெரிய மாட். 34.); a kind of greengram.

[கல் + பயறு.]

கற்பரணை *karparaṇai*, பெ.(n.) 1. கல்லினாற் செதுக்கிய மூடி; stone cork. 2. கண்ணாடியாற் செய்த மூடி; glass stopper, glass cork (சா.அக.).

[கல் + பரணை.]

கற்பலகை *kar-palagai,* பெ.(n.) 1. பருமனின்றித் தட்டையான கல்; stone slab. 2. எழுதுபலகை; slate for writing.

ம.கல்பலக; க. கல்கலகெ.

[கல் + பலகை.]

கற்பலா *karpalā,* பெ.(n.) கல்லுப்பலா; stone-jack of the arrocarpus genus (சா.அக).

[கல் + பலா.]

கற்பழி-த்தல் *karpali-,* 4 செ.கு.வி(v.i.) கற்புக் கெடுதல்; to lose one's chastity. *"கொன்றானோ கற்பழியாக் குலமகளை" (கம்பரா. ஊர்தேடு. 226.).*

[கற்பு + அழி.]

கற்பழிப்பு *karpalippu,* பெ.(n.) வல்லந்தமாக, வலிய கொள்ளும் உடலுறவு; rape, molestation.

மறுவ. மெய்தீண்டல்

[கற்பு + அழிப்பு. அழி→ அழிப்பு. 'பு' சொல்லாக்க ஈறு.]

கற்பள் *karpal,* பெ.(n.) கற்புடையவள்; *"பொலிவுறு கற்பள்" (நீதிசாரம். 27);* chaste woman.

[கற்பு + அள்.]

கற்பற்று *kar-parru,* பெ.(n.) 1. கல்பற்றுகையாகி குற்றமுள்ள மாணிக்கம்; unpolished ruby adhering to the ore. *"லசுநியும் த்ராசமும் கற்பற்று முடையன" (S.I.I.ii.78.).* 2. கிட்டக்கல் (வின்.); stony concretion in chemical preparation, minerals.

[கல் + பற்று கற்பற்று.]

கற்பன் *karpan,* பெ.(n.) கல்வியுள்ளவன்; learned person, scholar. *"தொலையாக் கற்ப" (பதிற்றுப். 43.31.).*

ம. கற்ப்பன்

[கல் + பு-- கற்பு + அன் – கற்பன்.]

கற்பனை[1] *karpanai,* பெ.(n.) கல்வி; learning, study. (திருக்கோ. 22. உரை.) 2. பயிற்றுவித்தல்; teaching, instruction. *"அருங்கற்பனை கற்பித்தாண்டாய்" (திருவாச. 21.7.).*

[கல் + பு → கற்பு + அன் + ஐ → கற்பனை. ஒ.நோ. விற்பனை.]

கற்பனை[2] *karpanai,* பெ.(n.) 1. மனவுறுதி; determination, vow. *"அவன்றிருக் களத்திலல்ல தலங்கல் போடே னென்னக் கற்பனை கொண்டனன்" (சேதுபு.அகத். 16.).* 2. கட்டளை; command, order, *"காவல்கொணீ யெனக் கற்பனை செய்தான்;" (கந்தபு.மகாசா.68).* 3. செயல், ஏற்பாடு; plan, prescribed *"அழல் வேள்வியின் கற்பனைக்குதவி தருகென" (பாரத. இராசசூ.64.).* 4. இல்லாததைக் கட்டிச் சொல்லுகை; fabrication, invention, guess. என்மேற்கூறிய மொழி கற்பனையாகும் (உ.வ.). 5. வண்ணனை; (poets.) description, imagination 6.ஏய்ப்பு; guile, deceit. *"வாதாபி கற்பனை யகன்று" (கந்தபு. திருக்கல். 61.).* 7. பொய்த்தோற்றம்; (வேதா. சூ. 68.உரை.); illusion or illusory superimposition.

ம.கல்பன; **து.** கல்பனெ **H. skt.** kalpana, **Guja;** kalpha.

[கல் + பு + அன் + ஐ → கற்பனை.]

கற்பனை[3] *karpanai* பெ.(n.) 1. அறிவு; knowledge. 2. சொல்லிக் கொடுத்தல்; teaching, instructiion. (சேரநா.).

ம. கறபன

[கல் + பு + அன் + ஐ → கற்பனை.]

கற்பனைச்செருக்கு *karpanai-c-cerukku,* பெ.(n.) கற்பனை செய்வதில் மிகைபடுதலாகிய குற்றம்; defect of cumbrousness in a hypothesis or an assumption. *"பந்தம் ஒன்றினாலென்னாமல் மூன்றைச் சொன்னது கற்பனா கௌரவம் எனின் அற்றன்று" (சி.சி. 1.1.சிவாக்.).*

[கற்பனை + செருக்கு.]

கற்பனைசெய் *karpanai-cey-,* 1.செ.குன்றாவி.(v.t.) வண்ணனை செய்தல்; இட்டுக்கட்டிச் சொல்லுதல்; to imagin.

[கற்பனை + செய்.]

கற்பனைத்திறன் *kaṟpaṉai-t-tiṟaṉ,* பெ.(n.) இல்லது புனைந்து கட்டுரைக்கும் ஆற்றல்; power of illusion and creativeness.

[கற்பனை + திறன்.]

கற்பா *kaṟ-pā,* பெ.(n.) கோட்டை உள்மதில் வாரியுள் உயர்ந்த நிலம் (பிங்.); high ground in the narrow path on the inner side of the walls of a fort.

[கல் + பாவு → கற்பாவு → கற்பா.]

கற்பாசி *kaṟpāši,* பெ.(n.) கல்லிற் பற்றியுள்ள பாசி வகை; lichen rock-moss.

[கல் + பாசி.]

கற்பாசிச்சத்து *kaṟpāši-c-cattu,* பெ.(n.) கற்பாசியின் சத்து; essence of rock-moss (சா.அக.).

க. கல்லு கூவு, கல்லுகூ, கல்லகூவு.

[கல் + பாசி.]

கற்பாட்டி *kaṟpāṭṭi,* பெ.(n.) கற்பை உடையவள் (பிங்.); chaste woman.

[கற்பு + ஆட்டி– கற்பாட்டி. ஆள் + தி –ஆட்டி.]

கற்பாடு *kaṟ-pāḍu,* பெ.(n.) கல்லுள்ள நிலம் (யாழ்ப்.); stony ground left uncultivated.

[கல் + பாடு – கற்பாடு. படு→ பாடு.]

கற்பாத்தி *kaṟpātti,* பெ.(n.) கல்லால் அமைத்த கால்வாய்; a stone conduit.

ம.கல்பாத்தி

[கல் + பாத்தி.]

கற்பாம்பு *kaṟpāmbu,* பெ.(n.) கடற்குதிரைவகை; pipe-fish light brown, body scarcely deeper than broad.

க. கல்லு காவு (ஒருவகைப்பாம்பு).

[கல் + பாம்பு – கற்பாம்பு.]

கற்பாரியம் *kaṟpāriyam,* பெ.(n.) ஒரு சிற்ப நூல் (வின்.); name of a treatise on architecture.

[கல் + பாரியம் – கற்பாரியம்.]

கற்பாலம் *kaṟpālam,* பெ.(n.) கல்லால் அமைக்கப் பட்ட பாலம்; a stone - bridge (சேரநா.).

ம.கல்பாலம்

கற்பாலை *kaṟpālai,* பெ.(n.) காட்டிலுப்பை; East Indian star apple (சா.அக.).

[கல்பாலை → கற்பாலை; கல் = கருமை.]

கற்பாவு–தல் *kaṟ-pāvu-,* 5.செ.கு.வி.(v.i.) 1. கல்லால் தளம் போடுதல்; to pave with stones. 2. கற்கள் பரவியிருத்தல்; to lie scattered, as stones in a hill. *"கற்பாவிய வரைவாய்க் கடிதோட்ட களவகத்தே"* (திருக்கோ.8.).

[கல் + பரவு.]

கற்பாவை *kaṟ-pāvai,* பெ.(n.) கல்லினால் இயன்ற படிவம் (வின்.); an effigy made of stone; stone statue.

[கல் + பாவை + கற்பாவை.]

கற்பாழி *kaṟ-pāḻi,* பெ.(n.) 1. மலைக்குகை (திவா.); a rock-cut cave, cavern in a rock. 2. மலைப்பொந்து; deep cavern in a rock (சா.அக.).

[கல் + பாழி – கற்பாழி. பாழி = இடம்.]

கற்பாள் *kaṟpāḷ,* பெ.(n.) மனைவி; wife. ஆனந்தத் தாண்டவ நம்பி கற்பாள் (மதுரைத்திருப். 13.).

மறுவ. மனைவி, இல்லாள்

[கற்பு + ஆள் – கற்பாள்.]

கற்பாளம் *kaṟpāḷam,* பெ.(n.) மலையிலிருந்து பிளக்கப்பட்ட பெரும் பாறைத்துண்டு; boulder.

[கல் + பாளம்.]

கற்பாளி *kaṟpāḷi,* பெ.(n.) மலைமுழைஞ்சு; cleft or cave in a rock or mountain.

[கல் + (வாழி →பாழி) பாளி.]

கற்பாறை *kaṟpāṟai,* பெ.(n.) கல்லாக அமைந்த பாறை; rock.

க.கல்லுபண்டெ

[கல் + பாறை → கற்பாறை.]

கற்பி[1]–த்தல் *karpi-,* பி.வி. (cani.) பயிற்றுவித்தல்; to teach, instruct *"அருங்கற்பனை கற்பித்து" (திருவாச. 21.7.).*

கற்பி[2]–த்தல் *karpi-,* 4 செ.குன்றாவி (v.t.) 1. புதிதாக உண்டாக்குதல்; to create; to construct; to invent, as a term; to compose; as a poem. *"நான்முகன் கற்பிக்க வொருகடவுளோ" (தாயு. சுகவா.3).* 2. கட்டளையிடுதல்; to direct, command. *"கனையிருள் வாய்வரக் கற்பித்த நீ" (தஞ்சைவா. 193.).* 3. முறைப்படுத்துதல்; to prescribe, ordain. 4. ஏற்பாடு செய்தல்; to arrange. *"அருந்துமிடங் கற்பித்தானே" (பாரத. அருச்சுனன்றீர். 23.).* 5. நிலைகொள்ளச் செய்தல்; (insc.) to install as a deity in a temple. அக்கோயிலில் முருகனைக் கற்பித்தான் (இ.வ.). 6. கொடுத்தல்; to donate, present. *"மேற்படியூரில் இருக்கும் அம்மைமாரில் ஆண்டினார் மகள் சீரங்கம் வழிபாடாகக் கற்பித்த திருநந்தா விளக்கு" (S.i.i. vol.5. Part II insc. 748. S.9.).*

ம. கல்பிக்குக; **க.** கலிசு; பட. கல்சு.

[கல் + ப் + இ – கற்பி. 'ப்' எதிர்கால இடைநிலை. 'இ' பிறவினை ஈறு.]

கற்பி[3]–த்தல் *karpi-,* 4 செ.கு.வி.(v.i.) கற்பனை செய்தல்; to imagine, build castles in the air.

[கல் + ப் + இ – கற்பி.]

கற்பிடிப்பு வேலை *kar-pidippu-vēlai,* பெ.(n.) கற்களைப் பொருத்தும் வேலை (C.E.M.); art of laying brick or stone.கற்பிரண்டைகற்பிரண்டை

[கல் + பிடிப்பு + வேலை.]

கற்பிணைப்பு *karpiṇaippu,* பெ.(n.) கற்களை நெட்டாயமாகவும் கிடையாகவும் வைத்துக் கட்டடம் கட்டும் போது கற்களுக்கிடையே ஏற்படும் பிணைப்பு; The grip occuring when piling up stones for construction perpendicularly and horizontally.

[கல் + பிணைப்பு.]

கற்பித்தஅளவு *karpitta aḷavu,* பெ.(n.) பணியின் அளவு; the quantum of work instructed to be done. முட்டாமல் நடத்திக் கொண்டு போதும் படியும் கற்பித்த அளவுக்கு இம்மரியாதியிலே இவ்வோலை... (S.I.I. vol.5. Part II in 267, S. 8.).

[கற்பித்த + அளவு.]

கற்பித்தநாள் *karpitta nāḷ,* பெ.(n.) 1. ஆணை பிறப்பித்த நாள்; date of ordering. 2. புதியதாகச் செய்த நாள்; newly ordained day. நடத்திப் போகுமாறு கற்பித்த நாள் ஒன்றுக்கு அமுதுபடி (திருவாங். 6. பகுதி II கல். 127, வரிசை. 9, 10.).

[கற்பித்த + நாள்.]

கற்பித்தமை *karpittamai,* பெ.(n.)1. புதியதாகச் செய்தமை, படைக்கை; making, creating. 2. ஆணை பிறப்பித்தமை; ordering. (திருவாங்.கல். அக.). *'கற்பித்தவன் கண்ணைக் கொடுத்தவன்' (பழ.).*

[கற்பி → கற்பித்தல் → கற்பித்தமை.]

கற்பித்தவன் *karpittavaṉ,* பெ.(n.) ஆசிரியன்; teacher, instructor. *'கற்பித்தவன் கண்ணைக் கெடுத்தவன்' (பழ.).*

[கற்பி + த் + த் + அ + அவன். (வினையா. பெ.) 'த்' இறந்தகால இடைநிலை.]

கற்பிதம்[1] *karpidam,*பெ.(n.) 1. மனதில் உருவகித்தல்; fancy, imagination. 2. புனையப்பட்டது; that which is invented, artificial. 3. பொய்; lie, fabrication. *"எல்லாங் கற்பித மென்று" (கைவல்ய. தத்துவ. 3.).*

ம. கல்பிதம்

[கல் → கற்பி → கற்பிதம். 'த்' எழுத்துப்பேறு. 'அம்' பெயரீறு.]

கற்பிதம்[2] *karpidam,* பெ.(n.) இன்ன நோய்க்கு இன்ன மருந்து என்று எழுதி வைத்த மருந்துப்பட்டி; a medicinal direction for remedies for diseaes (சா.அக.).

[கற்பி → கற்பிதம் (தெளிவு).]

கற்பியல் *karpiyal,* பெ.(n.) கற்பென்னும் கைகோளைப் பற்றிக்கூறும் அகப்பொருட்பகுதி; section in *aga-p-poruḷ* dealing with *karpu.*

[கற்பு + இயல்.]

கற்பிரண்டை *karpiraṇḍai,* பெ.(n.) முப்பிரண்டை; a rare species of adamantive creeper having three facets (சா.அக.).

[கல் + பிரண்டை.]

கற்பிரம் *kaṟpiram,* பெ.(n.) ***கல்லாரை*** பார்க்க; see *kallārai.*

[சல் + (புறம்→புரம்)→பிரம்.]

கற்பிலக்கணம் *kaṟpilakkaṇam,* பெ.(n.) கற்புநடை; அது உள்ள மகிழ்ச்சி; ஊடல், ஊடலுணர்த்தல், பிரிவு ஆகியவற்றையும் பிறவற்றையும் உணர்த்தும் தன்மை; feature of happiness, sulkiness, impressing sulkiness, separation etc. of married life.

[கற்பு + இலக்கணம்.]

கற்பிலாச்சி *kaṟ-pilācci,* பெ.(n.) பழுப்பு நிற முடையதும் ஒன்பதங்குலம் வளர்வதுமாகிய ஒரு வகைக் கடல்மீன் (m.m.688); coffer-fish, olive-brown, attaining at least 9 inches. in length.

[கல் + பிலாச்சி – கற்பிலாச்சி.]

கற்பிள–த்தல் *kaṟpiḷa-,* 3 செ.குன்றாவி.(v.t.) பாறைகளைத் துண்டாக்குதல்; to break rocks. *"மாலங்குடிப் பெருங்குளத்து மடைவைத்து மதன் குளவாய் நீலப் பெருங்கற் பிளந்து காலப்புனல்வர" (S.I.I. Vol. 14. in 44 S.22.).*

[கல் + பிள.]

கற்பு[1] *kaṟpu,* பெ.(n.) திருமணமானவர் தம் ஒழுக்கம் காக்கும் உறுதி; தூய அக ஒழுக்கம்; கற்பு நெறி; conjugal fidelity, chastity. *"வான்றரு கற்பின்" (மணிமே. 22, 53.).* 2. களவுக் கூட்டத்துக்குப்பின் தலைவன் தலைவியை முறைப்படி மணந்து இல்லறம்புரியும் ஒழுக்கம் (நம்பியகப். 26.); mutual love resulting in marriage. 3. பெண்ணின் கன்னித்தன்மை; virginity. 4. முல்லை (திவா); jasmine, an emblem of female chastity. *"முல்லை சான்ற கற்பின் மெல்லியள்" (சிறு. 30.).*

[கல் → கற்பு (திருக். தமி. மர. 66.). கற்போல் உறுதியான இருபாலிடைக் காதற் பண்பு. "கற்பு றுத்திய கற்புடை யாடனை" (கம்பரா. அயோத். நகர்நீங்கு. 16.).]

கற்பு[2] *kaṟpu,* பெ.(n.) 1. கல்வி; learning, study, knowledge. *"உலகந்தாங்கிய மேற்படு கற்பின்" (பதிற்று. 59. 8.).* 2. ஊழ்கம் (தியானம்); meditation. பல புவனமு நின்பாற் கற்பு வைத்துய்ய (திருவிளை. மாயப். 29.). 3. வேலைப்பாடு; workmanship. *"கற்பார் புரிசை" (திவ். பெரியதி. 5, 1, 4.).*

[கல் + பு – கற்பி. 'பு' பெயராக்க ஈறு.]

கற்பு[3] *kaṟpu,* பெ.(n.) 1. மனவுறுதி; vow, decision, determination. *"கற் பென்னும் திண்மையுண்டாகப் பெறின்" (குறள். 54.).* 2. ஆணை; ordinance, command. *"மறுவறு கற்பினில் ... ஆண்டு" (கம்பரா. கிளைகண். 72.).* 3. உய்யும் வழி; refuge; means of relieving distress. *"கண்டுவிடுவோர்க்குண்டோ கற்பு" (சைவச. பொது. 103.).*

[கல் + பு – கற்பு. கல் போன்ற மனவுறுதி, உறுதியான ஆணை, உறுதியான வழிவகை.]

கற்பு[4] *kaṟpu,* பெ.(n.) ***கற்பா*** பார்க்க; see *kaṟpā.*

[கற்பா → கற்பு.]

கற்புடைமை *kaṟpuḍaimai,* பெ.(n.) பழி பிறங்கா ஒழுக்கமுடைமை, ஒருமையுடைமை; sincerity and loyalty evinced in wedded life.

[கற்பு + உடைமை.]

கற்புநிலை *kaṟpu-nilai,* பெ.(n.) ஒழுக்கந் தவறா நிலை; chastity, honesty, loyalty and sincerity attached to wedded life. *"கற்பு நிலையென்று சொல்லவந்தார் இரு கட்சிக்கும் அஃதைப் பொதுவில் வைப்போம்" (பாரதி.).*

[கற்பு + நிலை.]

கற்புநிலை தவறு–தல் *kaṟpu-nilai-tavaṟu-,* 5 செ.கு.வி. (v.i.) ஒழுக்கந்தவறுதல்; to lose chastity.

[கற்பு நிலை + தவறு.]

கற்புமுல்லை *kaṟpu-mullai,* பெ.(n.) 1. தலைவி தன்கொழுநன் நலத்தைப் பெருகச் சொல்லும் புறத்துறை (பு.வெ.10, முல்லைப். 8.); (Puram.) theme of wife extolling the virtues of her husband. 2. கணவனைப் பிரிந்த தலைவி தனியிருந்து தன் நிறைகாத்தலின் சிறப்பைக் கூறும் புறத்துறை (பு.வெ. 10, முல்லை.9.); (Puram.) theme of extolling a woman maintaining equanimity during the separation of her husband. 3. கணவனொடு தலைவி விருந்தோம்புஞ் செல்வத்தை வாழ்த்தும் புறத்துறை. (பு.வெ. 10. முல்லைப். 10.); (Puram.) theme of a wife praying for the continuance of the pleasure of welcoming guests with the kind co-operation of her husband.

[கற்பு + முல்லை.]

போரிலும் புறத்தே புலப்பாடான தொழில் திறங்களிலும் புறத்தார்க்குச் செவ்விதின் புலப்படும் வெற்றிகளெல்லாம் வாகைத் திணையின்கண் அடங்கும். அமைதியான இல்லற ஒழுகலாறு களாலும் பண்பாட்டுத் திறங்களாலும் அகவாழ்வின் செப்பங்களாலும் புறத்தார்க்குப் புலப்படும் வெற்றித் திறங்கள் முல்லைத் திணையின் பாற்படு வதனால் இது கற்புமுல்லை யாயிற்று.

"கற்புமுல்லை: பொன்போலிலங்கு சுணங்கி னையும் பொலிந்த கண்ணினையுமுடைய மடந்தை கொழுநனுடைய நன்மைமையைப்பெருகச்சொல்லுவதும், பொருந்துதலமைந்த கொழுநன் நீங்கத் தன்னிடத்துக் காவலைச் சொல்லுவதும், செல்வம் பெருகும் அழகிய மாளிகையிலே சேர்ந்த கணவன்றன் பெரிய செல்வத்தை வாழ்த்துவதுமாம்" என்னும் உரைக் குறிப்பு ஒப்பு நோக்கத்தக்கது.

கற்புரம் *kaṟpuram,* பெ.(n.) 1. பொன் (யாழ்.அக.); gold. 2. பொன்னாங்கண்ணி; an edible plant.

[கல் + புரம் – கற்புரம். புரை = உயர்வு. புரை → புரம். விலையுயர்ந்த மணிக்கற்கள் பதிக்கத்தக்க பெருமையுடைமை பற்றிப் பொன்னுக்குக் கற்புரை → கற்புரம் என்னும் பெயர் வழங்கியிருக்கலாம். பொன்போன்ற சிறப்பு கருதி பொன்னாங் கண்ணியும் இப்பெயர் பெற்றது.]

கற்புரி *kaṟpuri,* பெ.(n.) கற்புக்கு அடையாளமாகக் கூறப்படும் முல்லை; eared-jasmine (சா.அக.).

[கற்பு + உரி – கற்புரி = கற்புக்கு உரியது.]

கற்புரை *kaṟpurai,* பெ.(n.) நறைகல் (சாம்பிராணி); frankincense, olibanum.

[கல் + புரை – கற்புரை = கல் போன்றது. புரைதல் = ஒத்தல்.]

வடிவத்திலும் வண்ணத்திலும் கல்போன் றிருப்பதை [முற்பகுதி] கல்லும், தன்மையில் உறுதியின்மை இருப்பதை [பிற்பகுதி] புரையும் குறித்து வந்துள்ளமை ஓர்ந்து நோக்குக.

கற்புழை *kaṟ-pulai,* பெ.(n.) 1. மலைக்குகை. (திவா.); cavern, cave. 2. கோட்டையின் கள்ளவழி (மறைவு வழி.); secret way of a fort. 3. கல்வளை; hole, hollow as in a stone.

[கல் + புழை – கற்புழை. கல் = மலை. புழை = குகை.]

கற்புறை *kaṟpuaṟi,* பெ.(n.) 1. கல்மாடம்; stone house. 2. கருவறையின் உட்பக்கம்; the inner part of sanctum sanctorium.

[கல் + புறை. உறை → புறை (இருப்பிடம்).]

கற்பூ[1] *kaṟ-pū,* பெ.(n.) பரவமகளிர் (மீனவப்பெண்கள்) அணியும் காதணிவகை; an upper ear ornament of Parava women.

ம. கொப்பு

[கல் + பூ – கற்பூ. கற்பதித்துப் பூவடிவில் செய்யப்பட்ட நகை.]

கற்பூ[2] *kaṟ-pū-,* பெ.(n.) 1. **கல்லாரை** பார்க்க; (மலை.); see *kallārai.* 2. கற்றாமரை (மலை.) mountain plant.

க. கல்லு கூவு

[கல் + பூ – கற்பூ. கல் = வன்மை. பூ = பூத்தல், தோன்றுதல்.]

கற்பூ[3] *kaṟ-pū,* பெ.(n.) நாகக்கனிமம், ஈயம்; lead.

[கல் + பூ – கற்பூ. கல்லிடைப்பூத்தது அல்லது தோன்றியது என்னும் பொருளுடையதாகலாம்.]

கற்பூசரம் *kaṟ-pūšaram,* பெ.(n.) நாகமலை; mountain containing lead ore (சா.அக.).

[கற்பூ + அசலம் – கற்பூசரம். அசலம் = மலை.]

கற்பூசே *kaṟpūšē,* பெ.(n.) கழுதை மான்புள்ளி என்னும் செய்நஞ்சைக் கட்டும் ஒரு மூலி; an unknown drug capable of binding or fixing arsenical poisons (சா.அக.).

[கல் + (பூசி) பூசே.]

கற்பூடு *kaṟpūḍu,* பெ.(n.) பவளம்; stone plant; coral (சா.அக.).

[கல் + பூடு. கல் போன்று உறுதியான செடியின் தோற்ற முடையது.]

கற்பூண்டிநாடு *kaṟpūṇḍināḍu,* பெ.(n.) திருக் கோவலூர் அருகில் உள்ள சேதிநாட்டின் ஒரு பகுதி; a part of Sethinadu near Thirukkovalur. *"சேதிப்பற்றான இவ்வேரியும் இக்கழனியும் இது தாம்பும் கண்டான் கற்பூண்டி நாட்டுக் கருத் தாருடைய" (ஆவணம். பக். 156.).*

[கல் + பூண்டி + நாடு – கற்பூண்டிநாடு. கல் = மலை. பூண்டி = ஏரி.]

கற்பூணி *kaṟpūṇi,* பெ.(n.) கல்லிற்குள் பதிந்து நிற்கும் பூ; any fossil or organic remains of animals or vegetables, imbedded in rocks (சா.அக.).

[கல் + பூ + (உனி). உணி. (கல்லில் பூத்தது, கல்லில் படிந்த படிவு).]

கற்பூரக்கண்ணி *karpūra-k-kaṇṇi,* பெ.(n.) பொன் னாங்கண்ணி; an edible plant (சா.அக.).

[கற்பூரம் + கண்ணி. கற்பூரம் = வெண்மை.]

கற்பூரக்கிச்சிலி *karpūra-k-kiccili,* பெ.(n.) நறுமணக் கிச்சிலி (அக.) நறுமண ஆரஞ்சு வகை; a variety of sweet scented orange (சா.அக.).

[கற்பூரம் + கிச்சிலி.]

கற்பூரக்கிளுவை *karpūrakiḷuvai,* பெ.(n.) மலைக் கிளுவை; mountain jujube (சா.அக.).

[கற்பூரம் + கிளுவை.]

கற்பூரக்கொடி *karpūra-k-koḍi,* பெ.(n.) வெற்றிலை வகை (G.Sm.D.215.); a kind of betel.

[கற்பூரம் + கொடி. கற்பூரம் = வெண்மை.]

கற்பூரச்செடி *karpūra-c-ceḍi,* பெ.(n.) கற்பூர நறுமணமுள்ள செடி; eucalyptus plant (சா.அக.).

[கற்பூரம் + செடி.]

கற்பூரணி *karpūraṇi,* பெ.(n.) கற்றாழை; aloe (சா.அக.).

[கற்பூரம் – கற்பூரணி. கற்பூரம் = வெண்மை.]

கற்பூரத்தட்டு *karpūra-t-taṭṭu,* பெ.(n.) 1. கோயிலில் பயன்படும் விளக்கு வகை; a kind of temple-lamp. *“கற்பூரத் தட்டிற் கனல் வாய்ப்ப” (தமிழ்விடு. 238.).*

[கற்பூரம் + தட்டு.]

கற்பூரத்திரி *karpūrattiri,* பெ.(n.) கற்பூரத்திலான திரி; wick of camphor. தக்ஷிணமேரு விடங்கற்குத் தூபத்தொடு காட்டுந்தீபத்துக்குக் கற்பூரத்திரியிட்டு (S.I.I. Vol.2 insc.26.).

[கற்பூரம் + திரி.]

கற்பூரப்பாண்டியன் *karpūra-p-pāṇḍiyaṉ,* பெ.(n.) குங்குமப் பாண்டியனுக்குப் பின் முடிசூடிய பாண்டியன்; Pandiya king who was crowned after Kunguma Pandiyan.

[கற்பூரம் + பாண்டியன்.]

கற்பூரம்[1] *karpūram,* பெ.(n.) **கருப்பூரம்** பார்க்க (கலைசைச். 41.); see *karuppūram.*

[கருப்பூரம் + கற்பூரம்.]

கற்பூரமணிக்காடி *karpūramaṇi-k-kāḍi,* பெ.(n.) பொன்னம்பரை வாலையிலிட்டு வடிப்பதனாற் கிடைக்கும் அமிலம்; Succinic acid obtained from amber by distillation (சா.அக.).

[கற்பூரமணி + காடி.]

கற்பூரவல்லி *karpūravalli,* பெ.(n.) 1. ஒருவகை வாழை; a kind of plantain. 2. ஒருவகைப் பூண்டு; a kind of creeper.

மறுவ. கற்பூரவள்ளி

[கற்பூரம் + வல்லி.]

கற்பூரவள்ளி *karpūravaḷḷi,* பெ.(n.) ***கற்பூரவல்லி*** பார்க்க; see *karpūravalli.*

[கற்பூரம் + வள்ளி.]

கற்பூரவழுதலை *karpūravaḻudalai,* பெ.(n.) கருப்பூர நறுமணமுள்ள கத்தரிக்காய்; a species of brinjal.

[கற்பூரம் + வழுதலை.]

கற்பூரவாழை *karpūravāḻai,* பெ.(n.) நறுமணமுள்ள வாழை வகை; a kind of plantain which has aroma of camphor.

[கற்பூரம் + வாழை.]

கற்பூரவிலை[1] *karpūravilai,* பெ.(n.) வெற்றிலைக் கொடிக்கால்; land of betel leaves. *“நீர்நிலமும் புன்செயும், நத்தமும், தோட்டமும், காராண்மை, மீயாட்சி, வெட்டிப் பாட்டம், கற்பூரவிலை, காரியவாராட்சி மற்றும் எப்பேர்பட்டனவும்” (தொ.இ.கல்.தொ.26 கல் 18).*

[கற்பூரம் + விளை→விலை.]

கற்பூரவிலை என்பது நிலத்தின் விலையும், அதை வைத்துக் கொடுக்கும் வட்டித் தொகை எனவும் சிலரால் கருதப்படுகிறது

கற்பூரவிலை[2] *karpūra-vilai,* பெ.(n.) 1. மிகக் குறைந்த விலை. (இ.வ.); very low price, as of arti cles sold to temples. 2. விலை அறுதியிடும் அலுவலருக் காகச் செலுத்தும் வரி; tax paid to the price control authority. இந்நிலத்துக்கு காரிய வாராட்சியும் ஸபா விநியோக கற்பூரவிலை காரிய வாராட்சியும் மற்றும் எப்பேர்ப்பட்ட வரிகளும் தவிர்த்தோம் (S.I.I. vol.5. in. 738.).

[கற்பூரம் + விலை.]

கற்பூரவிளக்கு *karpūra-viḷakku,* பெ.(n.) விளக்காகப் பயன்படுத்தும் கிண்ணிக் கருப்பூரம்; camphor cast in moulds and used like lamps (சா.அக.). *"இக்கற்பூர விளக்கும் நொந்தா விளக்கும்."*

[கற்பூரம் + விளக்கு.]

கற்பூரவுப்பு *karpūravuppu,* பெ.(n.) சாறு வராத் தழைகளில் சாறு வரச் செய்யும் பூரம் சேர்ந்த ஒரு வகை வேதையுப்பு; an alchemical salt prepared with Chloride of Mercury as chief ingredient (சா.அக.).

[கற்பூரம் + உப்பு.]

கற்பெலாச்சி *kaṟ-pelācci,* பெ.(n.) சாம்பல் கலந்த பழுப்பு நிறமுடையதும் 5 விரலம் நீளமுடையதுமான கடல் மீன்வகை; a sea-fish, greyfish-brown attaining 5 inches in length.

[கல் + பிலாச்சி – கற்பிலாச்சி → கற்பெலாச்சி (கொ.வ.).]

கற்பேதி *karpēti,* பெ.(n.) சிறுபீளைச் செடி; woolly caper (சா.அக.).

[கள் = முள்; கள் + பேதி

skt. bheta > *பேதம்→பேதி.]*

கற்பை *kaṟ-pai,* பெ.(n.) நிறைகல், துலாக்கோல், உரைகல் முதலியவற்றை வைப்பதற்காக வணிகர் அல்லது பொன் வணிகர் பயன்படுத்தும் பை; bag of weights, scales and touch stone, used by a jeweller or merchant.

[கல் + பை – கற்பை. கல் = எடைகல்.]

கற்பொடி *kaṟ-poḍi,* பெ.(n.) 1. கல்லின் துகள்கள்; debris. *"காயிலுலகனைத்துங் கற்பொடிகாண்" (திருவாச. 12,3.).* 2. சுண்ணாம்புக்கல் முதலியவற்றின் பொடி (பரிபா. 12, 19.); powder as of chalk. 3. கல் உடைக்கும் போது உண்டாகும் துகள்; stone-dust.

ம. கல்பொடி

[கல் + பொடி – கற்பொடி.]

கற்பொடி² *kaṟ-poḍi,* பெ.(n.) ***அன்னவேதி*** பார்க்க; see *aṉṉvēdi,* இரும்புக்கனிமம்; sulphate of iron, iron ore.

[கல் + பொடி.]

கற்பொழுக்கம் *karpoḷukkam,* பெ.(n.) கற்புநெறி (தஞ்சவா. உரை, அவ. பக்.4.); chastity. *"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மை உண் டாகப் பெறின்" (குறள் 54.).*

[கற்பு + ஒழுக்கம்.]

கற்பொளி–தல் *kaṟ-poḷi-,* 2 செ.கு.வி. (v.i.) உளியாற் கல்லைச் செப்பனிடுதல் (C.E.M.); to dress stones, as with a chisel.

க. கல்லுமுள்ளு

[கல் + பொளி. புள் (பிள்) → பொள் → பொளி. பொளிதல் = உடைதல்.]

கற்பொறி *kaṟ-poṟi,* பெ.(n.) 1. பற்றிரும்பு (பிங்.); clamp iron, iron brace, iron pincers. 2. கோட்டைமதிலில் வைக்கப்படும் கல்வடிவுள்ள இடங்கணி முதலிய பொறி (சீவக. 102.); machine mounted on a fort.

[கல் + பொறி – கற்பொறி.]

கற்பொறுக்கி *kaṟ-poṟukki,* பெ.(n.) புறாவகை (சங்.அக.); a species of pigeon.

[கல் + பொறுக்கி – கற்பொறுக்கி.]

கற்போடு–தல் *kaṟ-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) செயலைக் கெடுத்தல்; lit., to throw stones; to spoil, as a business, to cause ruin.

[கல் + போடு–.]

கற்போன் *karpōṉ,* பெ.(n.) மாணாக்கன் (சூடா.); scholar, pupil.

[கல் + ப் + (ஆன்) ஓன்.]

கற்றச்சன் *kaṟṟaccaṉ,* பெ.(n.) 1. கல்வேலை செய்யும் தச்சன்; stone-mason, sculptor. 2. கல்லுடைப்பவன்; a stone-cutter; a hewer of stone.

ம. கற்றச்சன், கல்பணிக்கன்.

[கல் + தச்சன் – கற்றச்சன்.]

கற்றசை *kaṟṟašai,* பெ.(n.) 1 கடிதான தசை; muscles as hard as stone. 2. வாடாத தசை; irreducible flesh (சா.அக.).

[கல் + தசை.]

கற்றசைவுடம்பு *kaṟṟašaivuḍambu,* பெ.(n.) இளைக்காத உடல்; irreducible constitution (சா.அக.).

[கல் + தசை + உடம்பு.]

கற்றடம் *kaṟṟaḍam,* பெ.(n.) கல் அடர்ந்த காடு; rocky ground, stony region. *"கற்றடங் கண்டு நான் வருவன்" (கம்பரா. நகர்நீ. 221.).*

[கல் + தடம் – கற்றடம்.]

கற்றடி விரியன் *kaṟṟaḍi-viriyaṉ,* பெ.(n.) விரியன் பாம்பு வகை; a species of viper-snake (யாழ்.அக.).

[கல் + தடி + விரியன் – கற்றடி விரியன்.]

கற்றது *kaṟṟadu,* பெ.(n.) கல்வி, கேள்வியாலும் பட்டறிவாலும் ஒருவன் பெற்ற அறிவு; knowledge attained by education and hearsay. *'கற்றது கையளவு கல்லாதது உலகளவு', 'கற்றதைக் காப்ச்சியா குடிக்கப் போகிறாய்' (பழ.).*

[கல் → கற்று → கற்றது. இஃது ஒன்றன் பால் வினைமுற்று போலத் தோன்றினும், வழக்கில் செய்ததுபோலத் தொழிற்படக் கிளந்த செயப்படுபொருளாகிக் கற்ற கல்வியைக் குறித்தது.]

கற்றரை *kaṟṟari,* பெ.(n.) கல் பாவிய தரை; a stone-laid floor, an elevated ground covered by stones (சேர.நா.).

ம. கல்த்தற; **க.** கலுநெல.

[கல் + தரை.]

கற்றலம் *kaṟṟalam,* பெ.(n.) கல்பாவிய மேடை; stone platform, as in a grove or village. புரையோர் தாமும்... கற்றலத் திருந்துழி (மணிமே. 28, 113.).

[கல் + தலம்.]

கற்றலை *kaṟṟalai,* பெ.(n.) ஒருவகைக் கடல் மீன்; a species of sea-fish.

[கல் + தலை.]

கற்றலை வகை : 1. கூர்க்கற்றலை, 2. கருங் கற்றலை, 3. வரிக்கற்றலை, 4. பெருவாய்க் கற்றலை, 5. வெள்ளைக் கற்றலை, 6. தூறடிக் கற்றலை, 7. ஆனைவாய்க் கற்றலை (சா.அக.).

கற்றலைக்கெண்டை *kaṟṟalai-k-keṇḍai,* பெ.(n.) வெண்மை நிறமுடையதும் ஒரடிநீளம் வளர்வதுமாகிய ஆற்றுமீன்வகை; a river-fish, silvery, attaining 1 ft. in length.

[கல் + தலை + கெண்டை – கற்றலைக்கெண்டை.]

கற்றவன் *kaṟṟavaṉ,* பெ.(n.) கற்றறிந்தவன்; a man of erudition, scholar. 2. முனிவன்; learned sage. *"கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை" (திருவிசை. சேந்தனார். திருவீழி.2.).*

ம. கற்றவன்; கற்றோன்; **பட.** கத்தம; **க.** கலிதவனு, கலித

[கல் → கற்ற + அவன் – கற்றவன் (வினையா.பெ.).*]*

கற்றளம்[1] *kaṟṟaḷam,* பெ.(n.) கல்பாவிய மேடை; stone pavement.

ம. கல்தலம், கத்தளம்.

[கல் + தலம் (தளம்) → தளம்.]

கற்றளம்[2] *kaṟṟaḷam,* பெ.(n.) 1. கற்கள் பதித்த தரை; pavement. 2. கல் பாவப்பட்டுள்ள அறை; a hall paved with stone, a stone-pavement.

ம. கற்றலம், கல்த்தளம்.

[கல் + தளம் – கற்றளம்.]

கற்றளி *kaṟṟaḷi,* பெ.(n.) கற்கோயில்; temple built of stone. *"நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி" (S.I.I. ii. 2.).*

ம. கற்றளி

[கல் + தளி – கற்றளி. தளி = கோயில்.]

கற்றளிப்பட்டாலகன் *kaṟṟaḷi-paṭṭālagaṉ,* பெ.(n.) தஞ்சைவட்ட திருப்பழனம் கோயிலுக்கு அணையா விளக்கு எரித்திட நிலம் வழங்கிய வீரன்; a soldier, who donated land for a perpetual lamp in the temple at Thiruppazhanam in Thanjavur dt. *"உடையார் அருள்மொழித் தேவச் தெரிஞ்ச கைக்கோளரில் கற்றளி பட்டாலகன் விலை கொண்டு மயக்கின நிலத்துக்கு" (தெ.இ.கல். தொ. 19 கல் 29).*

[கல் + தளி + பட்டாலகன்.]

கற்றளிப்பிச்சன் *kaṟṟaḷi-p-piccaṉ,* பெ.(n.) மயிலாடு துறை வட்டம் திருவாவடுதுறைக் கோயில் பூசைப் பணிகளுக்காக நிலம் நன்கொடை வழங்கியவர்; one who donated land for pooja affairs for the temple at Thiruvadudurai in Mayiladudurai taluk. *"திருவாடுதுறைக் கற்றளிப் பிச்சனேன்" (தெ.இ.கல். தொ. 19 கல் 69).*

[கல் + தளி + பிச்சன்.]

கற்றளிப்பிராட்டியார் வேளம் *kaṟṟaḷai-p-pirātti yār,* பெ.(n.) தஞ்சாவூரில் கற்றளிப் பிராட்டியார் பெயரில் அமைந்த பணியாளர் குடியிருப்பு; servants quarters in the name of kaṟṟalippirāthiyār at Thanjavur. *"இவ்வூர்க் குற்றத்துத் தஞ்சாவூர்க் குற்றத்துத் தஞ்சாவூர் கற்றளிப் பிராட்டியார் வேளத்துப் பெண்டாட்டி மாதே(ங்) கண்டி" (தெ.இ. கல்.தொ.19 கல் 131).*

[கல் + தளி + பிராட்டி ஆரி + வேளம் – கற்றளிப்பிராட்டியார் வேளம். பெருமாட்டி = பிராட்டி.]

கற்றளிப்புரம் *kar̤r̤aḷi-p-puram,* பெ.(n.) கோயிற்கு விட்ட இறையிலிநிலம் (M.E.R. 45 of 1928-29.); endowment made to a temple.

[கல் + தளி – கற்றளி + புரம். புறம் = புரம்.]

கற்றளை *kar̤r̤aḷai,* பெ.(n.) கடல்மீன்வகை (பதார்த்த. 935.); a genus of sea-fish.

ம. கற்றல

[கல் + தலை – கற்றலை → கற்றளை.]

கற்றறிமூடன் *kar̤r̤ar̤i-mūḍan̲,* பெ.(n.) படித்த முட்டாள்; learned fool.

[கற்று + அறி + மூடன்.]

கற்றறிமோழை *kar̤r̤ar̤i-mōḻai,* பெ.(n.) **கற்றறி மூடன்** பார்க்க; see *kar̤r̤ar̤i-mūḍan̲. "ஆயிரம் வேதங் கற்றும் நீயே கற்றறிமோழை" (இராமநா. உயுத். 82.).*

[கற்று + அறி + மோழை.]

கற்றறிவு *kar̤r̤ar̤ivu,* பெ.(n.) கற்றதனாலாகிய அறிவு; knowledge acquired by learning.

[கற்ற + அறிவு – கற்றறிவு.]

கற்றா *kar̤r̤ā,* பெ.(n.) கன்றையுடைய ஆன்; cow with a young calf. *"கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே" (திருவாச. 39, 3.).*

ம. கற்றாவு

aust; karru. **nicho;** kapabo.

[கன்று + ஆ – கன்றா → கற்றா.]

The Tamil adjectival form which is always the oldest, rejects the nasal and goes back to the original r̤ which doubles by rule. Thus Kan̲r̤u becomes adjectively kar̤r̤u-e.g. kar̤r̤-a, a cow which has a calf. C.G.D.F.L.p. 325.

கற்றாமரை *kar̤r̤āmarai,* பெ.(n.) 1. மலைகளிலும் பாறைகளின் சந்துகளிலும் முளைக்கும் நீருதவி யில்லாத, பெரு மூலிகைகளில் ஒன்றான கல்தாமரை; dry lotus generally found grown inthe crevices or rocks and mountains. 2. ஒருவகைத் தாழை; a variety of screwpine (சா.அக.).

[கல் + தாமரை – கற்றாமரை.]

கற்றார் *kar̤r̤ār,* பெ.(n.) கல்வி அறிவு நிரம்பியவர்கள்; learned men. *"கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முன் கற்ற செலச் சொல்லுவார்" (குறள். 722.).*

ம. கற்றோன்; **க.** கலிதவனு; **பட.** கத்தம.

[கல் கற்று + ஆர் – கற்றார்.]

கற்றாழஞ்சோறு *kar̤r̤āḻañ-cōr̤u,* பெ.(n.) கற்றாழையின் உள்ளீடான கூழ்ப் பகுதி (யாழ்ப்.); pith of the aloe.

[கல் + தாழை + அம் + சோறு – கற்றாழையம்சோறு → கற்றாழஞ்சோறு.]

கற்றாழை *kar̤r̤āḻai,* பெ.(n.) 1. வெளிர்ப்பச்சை நிற மடல்களின் நுனியில் கருஞ்சிவப்பு நிற முள்ளோடு கூடிய ஒரு பூடு (பதார்த்த. 370, தலைப்பு); aloe. 2. சிவப்புக்கற்றாழை; curacoa aloes, 3. கற்றாழை வகை; Barbadoes aloe.

ம. கற்றவாழ; **க.** கத்தாளெ, கத்தாளெ; **தெ.** கலபந்த; **பட.** கத்தாளெ.

[கல் + தாழை – கற்றாழை.]

கற்றாழை வகை : 1. கருங்கற்றாழை, 2. நார்க்கற்றாழை, 3. இலைக் கற்றாழை, 4. சோற்றுக் கற்றாழை அல்லது காட்டுக் கற்றாழை, 5. செங் கற்றாழை, 6. எருமைக் கற்றாழை, 7. மலைக் கற்றாழை, 8. ஆனைக் கற்றாழை, 9. வெண் கற்றாழை, 10. பேய்க் கற்றாழை, 11. மருள் கற்றாழை, 12. வரிக் கற்றாழை, 13. துருக்கக் கற்றாழை, 14. சிறு கற்றாழை, 15. சீமைக் கற்றாழை, 16. சிவப்பு வரிக் கற்றாழை, 17. நாகபடக் கற்றாழை (சா.அக.).

கற்றாழைச்சாறு *kar̤r̤āḻai-c-cār̤u,* பெ.(n.) கற்றாழை யின் சாறு; juice extracted from aloe.

[கற்றாழை + சாறு.]

கற்றாழைநாற்றம் *kar̤r̤āḻai-nār̤r̤am,* பெ.(n.) 1. கற்றாழைச் சோற்றின் மணம்; the smell of pith of the aloe. 2. வியர்வையினால் உடலில் உண்டாகும் ஒருவகை நாற்றம்; a kind of strong smell of perspiration on a body (சா.அக.).

[கற்றாழை + நாற்றம்.]

கற்றானை *kar̤r̤ān̲ai,* பெ.(n.) காவித்துணி; garment dyed in ochre, as worn by ascetics. *"கற்றானை முக்கோ லந்தணீர்" (மறைசை. 84.).*

[கல் + தானை – கற்றானை. கல் = காவிக்கல். காவிக்கல்லின் நிறம்.]

கற்றிருத்து–தல் *kaṟṟiruttu-,* 5. செ.குன்றாவி.(v.t.) கல்லை உளியாற் செப்பமாக்குதல்; (C.E.M.); to shape stones, as with a chisel.

[கல் + திருத்து.]

கற்றிருப்பணி *kaṟṟirupaṇi,* பெ.(n.) கற்களாற் செய்யும் கோயில் கட்டுமானக்கலை; sacred task of erecting or repairing stone temples.

[கல் + திருப்பணி.]

கற்றீட்டு *kaṟṟīṭṭu,* பெ.(n.) கன்மதம் (யாழ்.அக.); rock alum.

[கல் + தீட்டு – கற்றீட்டு.]

கற்றுக்குட்டி *kaṟṟu-k-kuṭṭi,* பெ.(n.) 1. இள மாணாக்கன், கற்கும் மாணவன் (வின்.); very young student. 2. கல்வியில் நன்கு தேறாதவன்; superficial scholar, one who has a smattering of knowl edge. 3. ஏதாவது ஒரு துறையில் அல்லது தொழிலில் தெளிவற்ற நிலையிலிருப்பவன்; one who has not attained perfection in a field or profession. அவனோர் கற்றுக்குட்டி (உ.வ.).

[கற்று + குட்டி.]

கற்றுக்கொடு–த்தல் *kaṟṟu-k-koḍu-,* 4 செ. குன்றாவி. (v.t.) பயிற்றுவித்தல்; to instruct. தில்லையில் பிறந்தவனுக்குத் திருவெம்பாவை கற்றுக் கொடுக்க வேண்டுமா (உ.வ.).

[கற்று + கொடு–.]

கற்றுக்கொள்(ளு)–தல் *kaṟṟu-k-koḷḷu-,* 10செ. குன்றாவி. (v.t.) பயிலுதல்; to learn. *"கற்றுக் கொள்வன வாயுள நாவுள" (தேவா. 1205, 6.).*

[கற்று + கொள். செய்தென் வாய்பாட்டு எச்சம் துணைவினையொடு புணர்ந்து கூட்டுவினை யாயிற்று.]

கற்றுச்செற்றை *kaṟṟu-cceṟṟai,* பெ.(n.) கிபி. 1462 இல் தென்காசிக் கோயிலுக்கு கொடையாக வழங்கப்பட்ட ஊர்களில் ஒன்று; One of the place donated to Tenkasi Temple found in an agreement drawn on 6-5-1462AD. "நல்லூர்ப்பற்றில் தஞ்சாவூர், காடேற்றிவள்ளை, முட்டம், பன்றி முட்டம், தண்ணம்பை, கற்றுச் செற்றை உள்ளிட்ட பற்றும்" (தெ.இ.கல்.தொ.26. கல்.561).

[கல் + கற்று(செறு) + செற்றை – கற்றுச் செற்றை (மண்ணைத்தோண்டி அச்சு கட்டி வயலாக்கிய நிலம்) கல் = குத்துதல், தோண்டுதல். செறு = வயல்.]

கற்றுச்சொல்லி *kaṟṟu-c-colli,* பெ.(n.) ***கற்றுச் சொல்வோன்*** பார்க்க; see *kaṟṟu-c-colvōṉ.*

[கற்று + சொல்லி.]

கற்றுச்சொல்வோன் *kaṟṟu-c-colvōṉ,* பெ.(n.) புலவனொருவனிடங்கற்று அவனுக்குத் துணைப்புல வனாயிருப்பவன்; junior poet who always accompanies his teacher and speaks out for him. *"கற்றுச்சொல்வோர் பின்வர ... வந்தனன் புலவனாகி" (திருவாலவா. 16, 19.).*

மறுவ. கற்றுச்சொல்லி

[கற்று + சொல்வோன்.]

கற்றுப்புல் *kaṟṟu-p-pul,* பெ.(n.) புல்வெளி; meadow. உடும்போடு ஆமை தவழ்புற்று எழுந்த இடம் கற்றுப் புல் பேரகா முற்றூட்டும் இறுப்பதாக (S.I.I. Vol.3:1. p. 89.).

[கன்று → கற்று + புல் – கற்றுப்புல் = கன்றுகள் தின்னத்தக்க மென்புல்வகை.]

கற்றுரிஞ்சில் *kaṟṟuriñjil,* பெ.(n.) சாயமிறக்க உதவும் கல்லுத் துரிஞ்சில் என்னும் ஒரு வகை மரம்; a kind of tree used for dyeing; stipulated acacia.

[கல் + துரிஞ்சில்.]

கற்றுருவல் *kaṟṟuruval,* பெ.(n.) சிறுநீரகப் பையிலிருக்கும் கல்லைக் கரைத்தல்; the process adopted to crush and dissolve the stone in the urinal bladder with an instrument.

[கல் + துருவல்.]

கற்றுளசி *kaṟṟuḷaśi,* பெ.(n.) மலைத்துளசி (பதார்த்த. 307.); mountain basil.

[கல் + துளசி – கற்றுளசி.]

கற்றூண் *kaṟṟūṇ,* பெ.(n.) கற்பாறையைப் பிளந்து செதுக்கி உருவாக்கிய தூண்; a stone-pillar.

ம. கல்த்தூண்; **து.** கல்லதகம்ப; **பட.** கல்ல கம்பு.

[கல் + தூண்.]

கற்றேக்கு *kaṟṟēkku,* பெ.(n.) 1. கல்தேக்கு என்னும் ஒருவகை மரம்; racemed fish-bone tree. 2. கும்பிமரம். (L.); Carey's myrtle bloom.

[கல் + தேக்கு – கற்றேக்கு.]

கற்றை *kaṟṟai,* பெ.(n.) 1. திரள்; collection, as of hair, rays of the sun. *"சடைக்கற்றை" (திருக்கோ. 134.).* 2. கட்டு; bundle, as of straw, grass, paddy seedlings. 3. தென்னோலைக் கற்றை (வின்.); coconut leaves braided like ropes, as bands for hedging.

ம. கற்ற; **க.** கந்தெ; **தெ.** கட்ட; **து.** கந்தெ.

[குல் → கல் → கற்றை. 'குல்' திரட்சிக்கருத்துவேர்.]

கற்றைபிடி–த்தல் *kaṟṟai-piḍi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. தென்னோலை பின்னுதல்; to braid coconut bands. 2. கூரைநிரைச்சல் வேய்தல்; to fasten a hedge with kaṟṟai, the thatch on a house. 3. நாற்றங்காலில் நெல்போன்றவற்றின் நாற்றினை முடிமுடியாகக் கட்டுதல்; to bundle the seedlings in nursery.

[கற்றை + பிடி–.]

கற்றைபோடு–தல் *kaṟṟai-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. கூரை வேய்தல் (வின்.); to thatch. 2. நடவு நடும் கழனியில் நாற்றுக் கட்டுகளைப் போடுதல்; to place the bundles of seedlings in a wetland.

[கற்றை + போடு–.]

கற்றைவைத்துக்கட்டு–தல் *kaṟṟai-vaittu-k-kaṭṭu-*,5 செ.கு.வி.(v.i.) 1. நிரைச்சல் கட்டுதல்; to tie a hedge with kaṟṟai. 2. மண்திரள் வைத்துக் கட்டுதல்; to build with handfuls of mud.

[கற்றை + வைத்து + கட்டு–.]

கற்றொட்டி *kaṟṟoṭṭi,* பெ.(n.) கருங்கல்லாற் செய்யப் பட்ட நீர்த்தொட்டி; a stone-trough.

ம. கல்தொட்டி; **க.** கல்தொட்டி, கல்லுதொட்டி.

[கல் + தொட்டி.]

கற்றொழிலோர் *kaṟṟoḻilōr,* பெ.(n.) கல்தச்சர்கள். (பிங்.); stone-masons, architects.

மறுவ. கல்வினையாளர், கல்வினைஞர், கற்கம்மியர்.

[கல் + தொழிலோர்.]

கற்றோர்நவிற்சியணி *kaṟṟor-naviṟci-y-aṇi,* பெ.(n.) குணமிகுதிக்குக் காரணமாகாததைக் காரண மாக்கிச் செல்லும் அணி (அணியி. 63.); figure of speech in which enhancement of merit is attri buted to a seeming cause.

[கற்றோர் + நவிற்சி + அணி.]

கற்றோன் *kaṟṟōṉ,* பெ.(n.) **கற்றவன்** பார்க்க; see *kaṟṟavaṉ.*

ம. கற்றவன்; **க.** கலிதவனு.

[கல் → கற்றான் → கற்றோன்.]

கற–த்தல் *kaṟa-,* 3 செ.குன்றாவி.(v.t.) 1. பால் கறத்தல்; to milk. *"ஆவின்பாலைக் கறந்து கொண்டாட்டக்கண்டு" (தேவா. 192, 3.). 'கறந்த பாலும் எச்சில், பிறந்த பிள்ளையும் எச்சில்' (பழ.).* 2. பால் கொடுத்தல்; to yield milk, as a cow. இந்த மாடு எத்தனைபடி கறக்கும்? (உ.வ.). 3. கவர்தல்; to misappropriate, as another's property; to extort. எதிரி சொத்துகளையெல்லாம் கறந்து கொண்டான். (இ.வ.). *கறக்கக் கறக்க ஊறும் பசுவின் பால் படிக்கப் படிக்க ஊறும் மெய்யறிவு (பழ.). 'முந்நாழி கறக்கிற பசுவானாலும் முன் இறப்பைப் பிடுங்குகிற பசு ஆகாது' (பழ.).*

ம. கறக்குக. **க.** கறெ, கரசு; **பட.** கறெ; கோத. கர்வ்; **துட.** கற்; **உரா.** கற.

[கல் → கறு → கற. கல் = தோண்டுதல், வெளிவரச்செய்தல் கல் (த.வி.) → கறு (பி.வி.).]

கறக்கு–தல் *kaṟakku-,* 5.செ.கு.வி.(v.i.)1. நூல் முறுக்கேற்றுதல்;to spin,as yarn. நூல் கறக்கினான் (இ.வ.). 2. நிமிண்டுதல்; to pinch, jerk so as to cause severe pain. அவன் துடையைக் கறக்கினான் (இ.வ.).

[கற → கறக்கு.]

கறகற[1]–த்தல் *kaṟa-kaṟa-,* 4.செ.கு.வி.(v.i.) 1. ஒலித்தல்; to utter a rattling sound. 2. கடித்தற்கு நறுமுறுவென்றிருத்தல்; to crackle in the mouth, as a crisp cake. 3. தொண்டையுறுத்தல்; to irritate the throat, as phlegm.

ம. கறகற

[கற + கற – கறகற. ஒலிக்குறிப்பு அடிப்படையில் பிறந்த வினைச்சொல்]

கறகற[2] *kaṟa-kaṟa,* 1. இடை. (Part.); ஓர் ஒலிக் குறிப்பு; onom. expr. signifying rattling sound. *"ஒருவன் கோல்பற்றிக் கறகறவிழுக்கை" (தேவா. 1111, 5.).*

தெ. கரகர

[கற + கற – கறகற. இரட்டைக்கிளவி.]

கறகறப்பு *kaṟa-kaṟappu,* பெ.(n.) 1. கறகறவென்று ஒலிக்கை; reiterative sound, rattling. 2. கடித்தற்கு நறுமுறுவென்றிருக்கை; crispness. தேங்குழல் கறகறப்பாயிருக்கிறது (உ.வ.). 3. தொண்டையறுப்பு; rattling in the throat. 4. மனவருத்தம்; misunderstanding. அவர்களுக்குக் கொஞ்சம் கறகறப்புண்டு (உ.வ.). 5. அல்லற் படுத்தல், அல்லாட்டம், தொல்லை செய்கை; importuning, teasing.

ம. கறகறப்பு

[கறகற – கறகறப்பு.]

கறகறெனல் *kaṟa-kaṟēnal,* பெ.(n.) 1. ஒலிக்குறிப்பு; onom. exp. of sound. 2. விரைவுக்குறிப்பு; onom. exp. of speed.

[கற + கற + எனல்.]

கறங்கல் *kaṟaṅgal,* பெ.(n.) 1. ஒலிக்கை (பிங்.); sounding. 2. சுழற்சி (பிங்.); whirling. 3. பேய் (அக.நி.); devil, vampire. 4. வளைந்த தடி (அக.நி.); curved club, cudgel.

ம. கறங்கல்

[குறங்கு → கறங்கு → கறங்கல் (வே.க. 156.).]

கறங்கு[1]–தல் *kaṟaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. ஒலித்தல்; to sound. *"முரசங் கறங்க" (புறநா. 36, 12.).* 2. சுழலுதல்; to whirl. *"பம்பரத்து .... கறங்கிய படிய" (கந்தபு. திருநகரப். 28.) (ம. கரங்ஙு.).* 3. சூழ்தல்; to surround, overwhelm, envelop as darkness. *"கறங்கிருண் மாலைக்கும்போ" (வள்ளுவமா. 34.).*

ம. கறங்குக; **க.** கறங்கு; கற; **து.** கரு.

[கற → கறங்கு. (சு.வி. 98.).]

கறங்கு[2]–தல் *kaṟuṅgu-,* 5.செ.கு.வி.(v.i.) கறுப்பு வண்ணமாதல்; to be blackened.

[கல் → கற → கறங்கு–.]

கறங்கு[3] *kaṟaṅgu,* பெ.(n.) 1. சுழற்சி (திவா.); whirling, gyration. 2. காற்றாடி; kite, wind-whirl. *"கறங்கு போல விற்பிடித்த காலதூதர் கையிலே" (கம்பரா. யுத்த.கா.1258.).* 3. ஒலி, அரவம் (பிங்.); sound.

O.N. hringer; **O.H.G., O.S., O.E.,** hring; **E.** ring.

[கறு → கற → கறங்கு. (மு.தா. 216).]

கறங்கோலை *kaṟaṅgōlai,* பெ.(n.) ஓலைக்காற்றாடி; wind-whirl made of palmyra leaf. *"கறங்கோலை கொள்ளிவட்டம்" (திருமந். 2313.).*

[கறங்கு + ஓலை.]

கறட்டியோணான் *kaṟaṭṭi-y-ōṉāṉ,* பெ.(n.) ***கரட்டோணான்*** பார்க்க; see *karaṭṭōṉāṉ.*

கறட்டுகறட்டெனல்[1] *kaṟaṭṭukaṟaṭṭeṉal,* பெ.(n.) புல் முதலியவற்றைச் செதுக்குதல் ஒலிக் குறிப்பு; onom. expr. signifyng shoveling the ground.

[கறட்டு + கறட்டு + எனல். கறட்டுக் கறட்டென்று புல்லைச் செதுக்குறான், பறட்டுப் பறட்டென்று சொறிகிறான், வறட்டு வறட்டென்று பானையைச் சுறண்டுகிறான் என்பன வழக்கு. (மு.தா. 122).]

கறட்டுகறட்டெனல்[2] *kaṟaṭṭukaṟaṭṭeṉal,* பெ.(n.) சளி முதலியவற்றால் தொண்டையிலேற்படும் ஒலி.

[கறட்டு + கறட்டு + எனல்.]

கறட்டுழந்தான் *kaṟaṭṭuḻandāṉ,* பெ.(n.) மாட்டுச் சுழிவகை. (சரிபா.மாஃ 22.); a curl-mark in cattle.

[கறடு + உழந்தான் – கறட்டுழந்தான். கறடு = சுழி.]

கறடிகை *kaṟaḍigai,* பெ.(n.) ஓர் அணிகலவுறுப்பு; component part of an ornament, as of a crown, bracelet or anklet. *"முத்தின் சூடகமொன்றில்... கறடிகை ஆறும்" (S.I.I. ii, 211.).*

[கறள் → கறண்டு → கறண்டிகை → கறடிகை.]

கறடு[1] *kaṟaḍu,* பெ.(n.) ***கரடு*** பார்க்க; see *karaḍu. "தென்பாற்கெல்லை கறுங்கல் கறட்டுக்கு வடக்கும்" (S.i.i. vo.2.2. 51.).*

[கரடு → கறடு.]

கறடு[2] *kaṟaḍu,* பெ.(n.) 1. தரமில்லா முத்துவகை; crude or inferior pearl. *"ஒப்பு முத்துங் குறுமுத்துங் ... கறடும் நிம்பொளமும்" (S.I.I. ii, 143.).*

ம. கறடு; **க.** கரடு (தீட்டப்படாது); **தெ.** கறடி (விடாப்பிடி); **து.** கறடு.

[கரடு → கறடு.]

கறடு[3] *kaṟaḍu,* பெ.(n.) 1. குட்டையானது; that which is dwarfish. *"கறட்டுப்பேய் தின்று களிக்க" (மான்விடு. 117.)* 2. பொன் (அக.நி.); gold. கற்கறடு வியாபாரி (இ.வ.). 3. சிறுகுன்று; hillock.

[குறள் → கறள் → கறடு.]

கறடுமுறடு *kaṟḍumuṟaḍu,* பெ.(n.) ***கரடுமுருடு*** பார்க்க; see *karaḍumuruḍu.*

[காடுமுருடு → காடு முரடு → கறடு முறடு.]

கறண்டி *kaṟaṇḍi,* பெ.(n.) குறண்டுங் கருவி; a spoon, ladle.

ம. கறண்டி

[குறண்டி → கறண்டி (மு.தா.132).]

கறண்டிகை *kaṟaṇḍigai,* பெ.(n.) முடியுறுப்புகளுள் ஒன்று; component part of a crown. *"கறண்டிகையிற் கோத்த வடம்" (S.I.I. ii. 90.).*

[குறள் → கறள் → கறண்டு → கறண்டிகை.]

கறண்டிகைச்செப்பு *kaṟaṇḍaigai-c-ceppu,* பெ.(n.) 1. சுண்ணாம்புக் கரண்டகம் (S.I.I. ii. 5.); a chunam-box.

[கறண்டிகை + செப்பு.]

கறண்டு–தல் *kaṟaṇḍu-,*5. செ.கு.வி.(v.i.) வறண்டுதல்; to scratch.

[குறண்டு → கறண்டு (வே.க. 180).]

கறணை *kaṟaṇai,* பெ.(n.) மாட்டுக்குற்றவகை (மாட்டுவா.); a defect in cattle.

[கறள் → கறணை.]

கறத்தை *kaṟattai,* பெ.(n.) ஒற்றை மாட்டுவண்டி (யாழ்ப்.); cattle cart.

[கறங்கு (சுழலுதல்) → கறத்தை.]

கறந்தமேனியாய் *kaṟanda-mēṉi-y-āy,* வி.எ.(adv.) இப்பொழுது கறந்தபால் போல் தூய்மையாய், வேறு கலப்பின்றித் துப்புரவாய்; in a pure unadulterated condition, as fresh milk; in a pure state; guilelessly, innocently.

[கற → கறந்த (பெ.எ.) + மேனி + ஆய்.]

கறப்பற்று *kaṟa-p-paṟṟu,* பெ.(n.) துருப்பிடித்தல் (யாழ்ப்.); formation of rust.

[கறள் = துரு. கறள் + பற்று.]

கறப்பு *kaṟappu,* பெ.(n.) கறக்கை; milking.

ம. கறப்பு

[கற → கறப்பு. 'பு' பெயராக்க ஈறு.]

கறம் *kaṟam,* பெ.(n.) 1. கொடுமை; severity, harshness. *"கறம்படு மனத்தின்" (திருவாலவா. 37, 51.).* 2. பழிவாங்கும் சினம்; respite.

ம. கறம்; **க.** கறமெ; **த.** கறம் > **Skt.** khara.

[கறு → கறம்.]

கறமன் *kaṟamaṉ,* பெ.(n.) காய்ந்து வறண்டது (யாழ்.அக.); that which is withered and dried.

[கறள் + மண் – கறமண்.]

கறல்[1] *kaṟal,* பெ.(n.) விறகு (பிங்.); firewood, fuel.

தெ. கர்ர

[கறள் = வறண்டது. கறள் → கறல்.]

கறல்[2] *kaṟal,* பெ.(n.) தவசத்தை அளக்கும் ஒரு அளவை; a measurement of grain (திருவாங். கல். அக. பக்.39.)

ம. கறல்

[கறு → கறை = உரல். கறு → கறல் = உரல் போன்று குழிவுள்ள அளவை ஏனம்.]

கறவாமாடு *kaṟavā-māḍu,* பெ.(n.) உதைகால் பெற்றம் (பசு) (பிங்.); intractable cow.

மறுவ. கறவாத்தேனு

[கற → கறவா. (ஈ.கெ.எ.பெ.எ.) + மாடு.]

கறவு[1] *kaṟavu,* பெ.(n.) திறை, கப்பம்; tribute. *"கஞ்சன்கடியன் கறவெட்டு நாளி லென்கைவலத் தாதுமில்லை" (திவ். பெரியதி. 10,7,10.).*

ம. கறவு

[குல் → கல் → கற → கறவு.]

கறவு[2] *kaṟavu,* பெ.(n.) கறவைமாடு; milch cow. *"கறவிடைப் பாலின்" (தேவா. 585, 5.).*

ம. கறவு

[கற → கறவை → கறவு.]

கறவுமறப்பனி *kaṟavumaṟappaṉi,* பெ.(n.) சதுரக்கள்ளி; square spurge (சா.அக.).

[கறவு + மாறா + பெண் + ஆ – கறவுமாறப்பெணா → கறவுமறப்பிணா → கறவுமறப்பனி (கொ.வ). (பால் சொரிதல் நில்லாத சதுரக்கள்ளி.)]

கறவை[1] பெ.(n.) பால் கறக்கும் மாடு; milch cow. கற்றுக்கறவைக்கணங்கள் (திருப்பா.11).

மறுவ. பெற்றம், ஆன், ஆவு.

ம. கறவ; **க.** கறாவு, கறப; **உரா.** கறாக்கதன.

Siam. karav; **Ahoom.** khrai; **Thai.** khamti; **Ucaos:** khai, khwaai, khww; **Mal.** kerbow; **Ar.** ba-qara; **Aust.** karak; **Ser.** krava; **Pol.** krowa; **Cz.** kravo; **Russ.** karova.

கறவை[2] *kaṟavai,* பெ.(n.) 1. பால் சுரப்பு, கறக்கை, கறவி; milk yielding cow. மாட்டின் கறவை நின்றுவிட்டது (உ.வ.). 2. பால்மாடு; milch cow. *"கறவைகள் பின்சென்று" (திவ். திருப்பா. 28.). 'கறவையுள்ளான் விருந்துக்கு அஞ்சான்' (பழ.).* 3. கறக்கும் அளவு; the quantity that is milked in one round. 4. மாடு முதலியன பால் கறக்கும் காலம்; milking or lactation period of cows, buffaloes etc. கறவையில் உள்ள மாட்டை வாங்க வேண்டும் (உ.வ.).

மறுவ. பெற்றம், மாடு, கோ, ஆ.

[கற – கறவை.]

பால்தரும் உயிரினம், நிலைத்திணை [கள்ளி முதலியன], காலம், அளவை ஆகிய அனைத்தையும் கறவை குறித்து வந்தது.

கறவைக்கலம் *kaṟavai-k-kalam,* பெ.(n.) பால் கறக்கும் ஏனம் (சீவக. 69, உரை.); milk pail.

[கறவை + கலம்.]

கறவைக்காணம் *kaṟavai-k-kāṇam,* பெ.(n.) 1.கறவை மாட்டுக்கு வாங்கப்பட்ட வரி; tax levied on milch cow. 2. பால் கறக்கும் பொருட்டு கறவை மாட்டைப்பிறர்க்கு விட்டதற்காகப் பெறும் பணம்; money realised by the owner of a milch cow leased to another for the purpose of taking the milk.

ம. கறவக்காணம்

[கறவை + காணம். காணம் - பொன், பொற்காசு, காசு.]

கறவைமாடு *kaṟavaimāḍu,* பெ.(n.) பால் கறக்கும் மாடு; a milch cow.

ம. கறவப்பசு

[கறவை + மாடு.]

கறவையான் *kaṟavai-y-āṉ,* பெ.(n.) 1. பால்மாடு (வின்.); milch cow. 2. பால்காரன்; milk man.

ம. கறவு; **க.** கறாவு.

[கறவை + ஆன். ஆன் - மாடு.]

கறள்[1] *kaṟaḷ,* பெ.(n.) 1. கறை (யாழ்ப்.); rust, dross, stain. 2. வன்மம்; grudge. அவர் என் மீது கறள் வைத்திருக்கிறார் (இ.வ.).

க. கறள்

[கறு → கறள். (வே.க.124.).]

கறள்[2]**(ளு)–தல்** *kaṟaḷ-ḷu,* 16.செ.கு.வி.(v.i.) 1. வளர்ச்சியறுதல்; to be stunted in growth. 2. எண்ணெயின்மையால் திரி மங்கியெரிதல்; to burn low, as a wick for want of oil.

[குறள் → கறள்.]

கறள்பிடி–த்தல் *kaṟaḷ-piḍi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. பல்லீற்றில் மாசுபடிதல்; formation of plaque or hard crust on the teeth. 2. துருப்பிடித்தல்; to become rusty (சா.அக.).

[கறள் + பிடி. கறு → கறள்.]

கறளை *kaṟaḷai,* பெ.(n.) 1. வளர்ச்சியின்மை; defect in stature, under sizedness. 2. குள்ளன்; dwarf. 3. வளர்ச்சியற்றது; anything dwarfish, stunted in growth, as beast, fowl or tree. 4. பருக்காத காய்; fruit not grown to full size. 5. கட்டிவகை; cystitis. 6. ஒரு வகை மரம்; a kind of tree.

மறுவ. கறாளை

ம. கரள

[குறள் → கறள் → கறளை. (மு.தா. 139.).]

கறா *kaṟā,* பெ.(n.) காடைக்குரல்; chirp of a quail.

[குறு → கறு → கறா. (குறுகிய ஒலிக்குறிப்பு).]

கறாளி *kaṟāḷi,* பெ.(n.) 1. அடங்காமை; state of being ungovernable or unmanageable, intractableness. கறாளிக் குதிரை (இ.வ.). 2. அடங்காக் குதிரை; uncontrollable horse.

[கறள் + ஆளி – கறாளி.]

கறாளை *kaṟāḷai,* பெ.(n.) ***கறளை*** பார்க்க; see *kaṟaḷai.*

[கறளை → கறாளை.]

கறி[1]–த்தல் *kaṟi-,* 4 செ.குன்றாவி.(v.t.) மெல்லக் கடித்தல்; to chew; to eat by biting or nibbling, as biscuits, grass. *"அரிமா கொடிப்புற் கறிக்குமோ" (நாலடி. 141.).*

ம. கறி; **க.** கர்சு, கர்ச்சி; **தெ.** கரசு; **து.** கசெபுனி, கச்சுனி; **கொலா., பர்.** கச்ச்; **கோண்.** கச்கானா, கசீன; **கூ.** கச; **குரு.** கச்சினை; **மா.** க்வலவெ; கசபா. கறி; **குவி.** கர்கி.

Mal. kerat, **Norw.** klippe.

[குல் → கல் → கறு → கறி. குல் → குத்தல் கருத்துவேர். கறு = வெட்டுதல், துண்டாக்குதல். கறு ஒலிக்குறிப்புச் சொல். கறு → கறி (மு.தா. பக்.2).]

கறி[2] *kaṟi,* பெ.(n.) மிளகு; pepper. *"கறிக்கொடி கருந்துணர்" (திருமுருகா. 309.).* பசிக்குக் கறி வேண்டாம், தூக்கத்துக்குப் பாய் வேண்டாம் (பழ.).

ம. கறி; **கசபா.** கரி; **து.** கெரெ.

[கறு → கறி.]

கறிக்கும் கார இயல்பினால் மிளகுக்குக் கறி என்னும் பெயர் இடப்பட்டது.

கறி[3] *kaṟi,* பெ.(n.) கடித்துத் தின்னுதல்; chewing, eating by biting.

ம., க., குட. கறி; **தெ.** கூர; **து.** கசிபு; **பட.** கொரெ.

Guj. gost; **Skt.** kara; **Mal.** kari. **Chin.** gali. **Gk.** kre as; **Sp.** carne, **Cata.** carn; **It.** carne; **Port.** carne; **Swed.** koft; **Rum.** carne; **Dan., Norw.** kyo.

[குறு → கறு → கறி.]

கறி[4] *kaṟi,* பெ.(n.) 1.மரக்கறி; vegetables, raw or boiled. 2. வெந்த காய்கறி; cooked vegetables. *'கறிக்கு இல்லாத வாழைக்காய் பந்தலிலே கட்டித் தொங்கவோ' (பழ.).*

கோண். (அடிலா) கரூ; **கசபா.** கறி.

[குறு → கறு → கறி.]

கறி[5] *kaṟi,* பெ.(n.) இறைச்சி; meat.

ம., க., குட. கறி; **தெ.** கூர; **து.** கசிபு; **பட.** கொரெ; **உரா.** கறி; **எரு.** கர்ரி;

Mal. kari; **Chin.** gali; **Gk.** kre'as; **Sp.** carne; **Port.** carne, **Kata.** carn; **Swed.** kotta; **Norw.** kyott; **Rum.** carne; **It.** carne; **Dan.** kod.

கறி[6] *kaṟi,* பெ.(n.) தசை; muscle

கசபா. கரி

[கறி = மிளகு. கறி = மிளகிட்டுச் சமைத்தது.]

கறிஅகப்பை *kaṟi-agappai,* பெ.(n.) இறைச்சிச் சமையலின் போது மட்டுமே பயன்படுத்தும் அகப்பை; ladle used while cooking meat.

[கறி + அகப்பை.]

கறிக்கடை *kaṟi-k-kaḍai,* பெ.(n.) இறைச்சிக் கடை; meat stall.

[கறி + கடை.]

கறிக்கத்தி *kaṟikatti,* பெ.(n.) காய்கறி முதலியவற்றை நறுக்குவதற்குப் பயன்படுத்தும் கத்தி; a kitchen knife.

ம. கறிக்கத்தி

[கறி + கத்தி.]

கறிக்கருணை *kaṟi-k-karuṇai,* பெ.(n.) காராக் கருணை (வின்.); Tahiti arrowroot.

[கறி[2] + கருணை.]

கறிக்கன்று *kaṟikkaṉṟu,* பெ.(n.) கையாந்தகரை; eclipse plant (சா.அக.).

[கறி + கன்று.]

கறிக்காய் *kaṟi-k-kāy,* பெ.(n.) மிளகு; black pepper.

[கறி + காய்.]

கறிக்குடலை *kaṟi-k-kaḍalai,* பெ.(n.) கறியைக் கொண்டு செல்லுதற்குரிய இலைக்கலம் (வின்.); wicker-work of leaf for carrying meat.

[கறி[5] + குடலை.]

கறிக்கும்மட்டி *kaṟikkummaṭṭi,* பெ.(n.) சாம்பற் பூசணி; ash pumpkin (சா.அக.).

[கறி + கும்மட்டி.]

கறிக்கூட்டு *kaṟi-k-kūṭṭu,* பெ.(n.) 1. கூட்டுக்கறி; vegetable, or vegetables prepared in semi-liquid form. 2. ***கறிமசாலை*** பார்க்க; see *kaṟi-masālai.*

Mal. gulai

[கறி + கூட்டு.]

கறிக்கொடி *kaṟi-k-koḍi,* பெ.(n.) மிளகுக்கொடி; pepper creeper. *"கறிக்கொடி கருந்துணர் சாய" (திருமுருகா.).*

[கறி + கொடி. கறிப்பு = கார்ப்பு. கறி = கார்ப்புடைய மிளகு.]

கறிக்கோப்பு *kaṟi-k-kōppu,* பெ.(n.) கறிப் பொருள்கள்; vegetables, condiments etc.

ம. கறிக்கோப்பு

[கறி + கோப்பு.]

கறிச்சட்டி *kaṟi-c-caṭṭi,* பெ.(n.) கறிசமைக்குஞ் சட்டி; pan used for cooking curry.

[கறி + சட்டி.]

கறிச்சரக்கு *kaṟi-c-carakku,* பெ.(n.) கறிமசாலை (அல்.) கறியோடு சேர்க்கும் சரக்குகள்; ingredients of curry.

[கறி + சரக்கு.]

கறிச்சுரை *kaṟi-c-curai,* பெ.(n.) 1. சுரைக்கொடி; calabash. 2. கறிக்குதவும் சுரைக்காய்; bottle gourd used for culinary purpose.

ம. கறிச்சுர

[கறி + சுரை.]

கறிச்சூலை *kaṟi-c-cūlai,* பெ.(n.) அடிவயிற்றில் உண்டாகும் ஒரு வகை நோய்; a kind of disease affecting the abdomen.

ம. கறிச்சூல

[கறி + சூலை.]

கறிச்சேம்பு *kaṟi-c-cēmbu,* பெ.(n.) சேப்பங்கிழங்கு; Egyptian yam.

[கறி + சேம்பு.]

கறி-த்தல் *kaṟittal,*4 செ.கு.வி.(v.t.) மெல்லக்கடித்தல்; to chew; to eat by biting or nibling, as biscuits, grass. *"அரிமா கொடிப்புற் கறிக்குமோ" (நாலடி. 141).*

ம. கறி; **க.** கர்கு, கர்ச்சி; **தெ.** கரகு; **து.** கசெபுனி, கச்சுனி; **கொலா., பர்.** கச்ச்; **கோண்.** கச்கானா, கசீன; **கூ.** கச; **குரு.** கச்சினை; **மா.** க்வலவெ; **கசபா.** கறி; **குவி.** கரிகி.

Mal. kerat; **Norw.** klippe.

[குல் → கல் → கறு → கறி. குல்→குத்தல் கருத்துவேர். கறு = வெட்டுதல், துண்டாக்குதல். கறு ஒலிக்குறிப்புச் சொல். கறு → கறி (மு.தா.பக்.2.).]

கறித்தும்பை *kaṟi-t-tumbai,* பெ.(n.) 1. பெருந்தும்பை; large leucase. 2. கொடித்தும்பை; a creeper with an edible fruit.

[கறி + தும்பை.]

கறித்தூள் *kaṟi-t-tūḷ,* பெ.(n.) கறிக்குரிய சம்பாரப் பொடி, (வின்.); curry powder.

[கறி + தூள்.]

கறிதுமி-த்தல் *kaṟitumi-,*7 செ.கு.வி.(v.i.) கறியைக் கடைதல், மசித்தல்; to churn vegetables. எற்றிக் கறி ஐஞ்சினுக்குங் கறிபதின் பலம் கறிதுமிக்கவும் பொரிக்கவும் (S.I.I. vol. 14. insc. 13. S. 23.).

[கறி + துமி.]

கறிப்பலா *kaṟi-p-palā,* பெ.(n.) ஈரப்பலா; bread-fruit tree.

[கறி + பலா.]

கறிப்பாகல் *kaṟi-p-pāgal,* 1. கறிக்குதவும் பாகற்காய்; bitter-gourd. 2. மிதிப்பாகல்; ground bitter gourd.

[கறி + பாகல்.]

கறிப்பாலை *kaṟi-p-pālai,* பெ.(n.) 1. மரவகை. (L.); wild olive. 2. பாலைக்கீரை; edible paulay.

ம. கறிப்பால

[கறி + பாலை.]



கறிப்பாலை

கறிப்புடல்[1] *kaṟi-p-puḍal,* பெ.(n.) புடல்; snake gourd.

[கறி + புடல்.]

கறிப்புடல்[2] *kaṟippuḍal,* பெ.(n.) ஒருவகை வண்டு (வின்.); a kind of beetle.

[கறுப்பு + உடல் – கறுப்புடல் → கறிப்புடல்.]

கறிப்பெருங்காயம் *kaṟi-p-peruṅgāyam,* பெ.(n.) ஒருவகைப் பெருங்காயம். (மு.அ.); a kind of asafoetida.

[கறி + பெருங்காயம்.]

கறிப்போளம் *kaṟi-p-pōḷam,* பெ.(n.) ஒருவகை நறுமணப் பிசின்; a fragrant resin or gum (சா.அக.).

[கறி + போளம்.]

கறிமசாலை *kaṟi-mašālai,* பெ.(n.) கறிக்குரிய சம்பாரப்பொடி முதலியன; spices used for flavouring curries.

ம. கறிமசால

[கறி + மசாலை. மசி → மசிலை → மசாலை.]

கறிமஞ்சள் *kaṟi-mañjal,* பெ.(n.) பொடியாக்கிக் கறியிற் சேர்த்தற்குரிய மஞ்சள்வகை; a kind of turmeric used in curry powder.

[கறி + மஞ்சள்.]

கறிமுள்ளி *kaṟi-muḷḷi,* பெ.(n.) கழிமுள்ளி; Indian nightshade.

[கழி + முள்ளி – கழிமுள்ளி → கறிமுள்ளி.]

கறிமுள்ளிக்காளி *kaṟimuḷḷikkāḷi,* பெ.(n.) மிளகுத் தக்காளி; pepper tomato (சா.அக.).

[கறி + முள்ளிக்காளி. முள்ளித்தக்காளி → முள்ளிக்காளி.]

கறியசீரம் *kaṟiyašīam,* பெ.(n.) **கருஞ்சீரகம்** பார்க்க; see *karuñciragam.*

[கறிய + சீரம். சீரகம் → சீரம் (சா.அக.).]

கறியபாட்டம் *kaṟiyapāṭṭam,* பெ.(n.) ஒரு வகை வரி; a type of tax. கோயிற்றாமப் பேறாய்க் கடைகளில் எடுக்கும் கறியபாட்டம் உடையார் திருவண்ணாமலை நாயநாற்கு விட்டேன் (S.I.I. vol.8. insc. 136.).

[கறியமுது + பாட்டம் – கறியமுது பாட்டம் → கறியபாட்டம். பாட்டம் = வரி.]

கறியமால் *kaṟiyamāl,* பெ.(n.) துளசி; holy basil (சா.அக.).

[கறிய +மால்.]

கறியமுது *kaṟi-y-amadu,* பெ.(n.) 1. சமைத்த கறியாகக் கடவுளுக்குப் படைக்கும் உணவு; offerings of vegetable curry to deities. *"செழும் போனகமுங்கறியமுதும்" (பெரியபு. சிறுத். 73.).* 2. கறியாகிய உணவுப்பண்டம்; vegetables .... கறியமுதுசட்டிக ஆக ... (S.I.I. Vol. 5. In. 445. Part. II. S.4.).

[கறி + அமுது.]

கறியமுதுவடகம் *kaṟi-y-amudu-vaḍagam,* பெ.(n.) ***கறிவடகம்*** பார்க்க; see *kaṟi-vaḍagam.*

[கறி + அமுது + வடகம்.]

கறியன் *kaṟyaṉ,* பெ.(n.) செந்நெல்லி; tapering nutmeg (சா.அக.).

[கறி → கறியன்.]

கறியாமணக்கு *kaṟi-y-āmaṇakku,* பெ.(n.) பப்பாளி (மு.அ.); papaya.

[கறி + ஆமணக்கு.]

சற்றொப்ப ஆமணக்கின் இலையைப்போன்ற இலைகளையுடையதாய் காய் கறிசமைக்க உதவுவதாய் இருத்தலின் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

கறியுப்பு *kaṟi-y-uppu,* பெ.(n.) கறிக்குரிய உப்பு. (பதார்த்த. 1090.); culinary salt, common salt, Sodium chloride.

ம., க. கறியுப்பு

[கறி + உப்பு.]

கறிவகை *kaṟi-vagai,* பெ. (n.) உணவுத் தொடு கறிகளாகப் படைக்கப்படுபவை; side dishes served while eating.

[கறி + வகை.]

கறிவகைகளைப் பண்டையோர் தொடு கறிகளாகக் கருதி 18 வகைப்படுத்தினர்.

பதினெண் வகைக் கறிகள்: அவியல் (உவியல்), கடையல், கும்மாயம், கூட்டு (வெந்தாணம்), துவட்டல், புரட்டல், பொரியல், வறுவல், புளிக்கறி, பச்சடி (ஆணம்), அப்பளம், துவையல், ஊறு காய், வற்றல், உழுந்துவடை, காரவடை, தேங் குழல், முக்கனிகளுள் ஒன்று என்பன (பண். நா.ப. 38.).

கறிவடகம் *kaṟi-vaḍagam,* பெ.(n.) கறியிற் சேர்ப்பதற்காகத் தனியே செய்து உலர்த்திவைக் கப்படும் வடகவகை; curry condiments ground together and dried in cakes to be kept for use.

மறுவ. கறியமுதுவடகம்

[கறி + வடகம்.]

கறிவெஞ்சனம் *kaṟivēñjaṉam,* பெ.(n.) சமைத்த கறியுணவு; vegetable relish.

[கறி + வெஞ்சனம்.]

கறிவேப்பிலை *kaṟivēppilai,* பெ.(n.) கறிதாளிக்கும் போது சேர்க்கும் இலை; curry-leaf.

ம. கறிவேப்பில; ப. கரம்பெ சொப்பு

[கறிவேம்பு + இலை.]

கறிவேப்பிலை

கறிவேம்பு *kaṟi-vēmbu,* பெ.(n.) கறிவேப்பிலை மரம்; curry-leaf tree.

ம. கறிவேப்பு; க., து. கரிபேபு; தெ. கறிவேமு, கறிவேப

[கறி[2] + வேம்பு.]

கறு[1]–த்தல் *kaṟu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கருமையாதல்; to grow black, darker. *"கறுத்தா யுருவம்" (கம்பரா. நகர்நீங். 58). [ம.கறு.]* 2. முற்றுதல்; to mature, come to a climax. *"கௌவை கறுப்ப" (மதுரைக். 271.).* 3. அழுக்காதல் (வின்.); to become impure, polluted, to contract moral defilement.

[கல் → கறு.]

கறு[2]–த்தல் *kaṟu-,* 4செ.குன்றாவி.(v.t.) சினத்தல்; to resent, to get angry with. *"வசையுநர்க்கறுத்த பகைவர்" (பதிற்றுப். 32, 15.).*

ம. கறுக்குக; க. கர்கு, கறங்கு; துட. கர்வ்; குட. கற.

[கல் → கறு.]

"கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள" என்று தொல்காப்பியம் [855] கறுப்புச் சொல்லை சிவப்புச் சொல்லோடு சேர்த்துக் கூறுவதால், கறுப்பு என்பது இதில் நிறம் பற்றிய சொல்லாக இருத்தல் வேண்டும். வெண்களமர் கருங்களமர், வெள்ளாளர், காராளர், வெள்ளொக்கல், காரொக்கல், என்று தொன்று தொட்டு வழங்கிவரும் எதிரிணைச் சொற்கள் பண்டை நாளிலும் இன்று போன்றே தமிழருட் பொன்னருங் கரியரும் இருந்தமையை உணர்த்தும். ஆகவே அவ்விருசாராரும் சினந்தபோது அவர் முகம் சிவந்தும் கறுத்தும் போனமை உய்த்துணரப்படும். கறு, கறுவு, கறுமு முதலிய சொற்கள் இவ்வகையிற் சினங்குறிக்கத் தோன்றியவையாகும் [வே.க. 127.].

கறு[3] *kaṟu,* பெ.(n.) 1. மனவுரம்; rancour, enmity. *"அரக்கன் ... கறுவுடையான்" (கம்பரா. கும்பக. 357.).* 2. சினம்; anger.

[கல் → கர் → கறு (வே.க. 126.).]

கறு[4] *kaṟu,* பெ.(n.) 1. கருமை; black. 2. கறை; stain. 3. தழும்பு; scar. *"கைத்தலத் துணை கருப்புற" (உப. தேச. சிவபுண். 315).* 4. குற்றம்; mistake. *"உள்ளக் கறுப்பினையறுக்க". (சிவதரு. சிவதரும. 25.).* 5. பேய்; devil. *"கறுப்பென்னிலோ போய்ப் பணிகுவார்" (அறப். சற். 30.).* 6. கருவயிரம்; black diamond. 7. வெகுளி; fury

[கல் → கரு → கறு.]

சினக்கும்போது கருநிற மக்கள் முகம் மிகக் கருத்தலும், செந்நிற அல்லது பொன்னிற மஞ்சள் முகம் மிகச்சிவத்தலும் பற்றி கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள் பெற்றன. முகத்தினுங் கண் சிவத்தல் விளங்கித் தோன்றுவதாம் [வே.க. 123.].

கறுக்கட்டு–தல் *kaṟu-k-kaṭṭu-,* 5செ.குன்றாவி.(v.t.) தீராப்பகை கொள்ளுதல்; to entertain deep rooted malice. அவன் அதைச்செய்யக் கறுக்கட்டி விட்டான் (இட.வ.).

[கறு + கட்டு–.]

கறுக்கன்வெள்ளி *kaṟukkaṉ-veḷḷi,* பெ.(n.) மட்ட வெள்ளி; grey or inferior silver.

ம. கறுக்கன் வெள்ளி

[கறுக்கன் + வெள்ளி.]

கறுக்கன்னி *karukkanni,* பெ.(n.) வெள்ளைக் கண்ணி; volkemeria infortunata (சா.அக.).

[கறு + கன்னி. கண்ணி → கன்னி.]

கறுக்காய் *karu-k-kāy,* பெ.(n.) இளநீர்க்காயின் கண்பக்கத்துள்ள கயர் (யாழ்.அக.); soft spongy astringent top of a tender coconut.

[கரு → கறு + காய்.]

கறுகறு-த்தல் *karu-karu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. மிகுந்த கருநிறமடைதல் (இலக்.வி. 325, உரை.); to become very black. 2. மிகச்சினத்தல்; to rage.

ம. கறுகறு

[கல் → கர் → கறு. கறுத்தல் = கருநிறமாதல். கறுகறுத்தல் = மிகக் கருத்தல், மிகச்சினத்தல் (வே.க. 123.).]

கறுங்கரணை *karunkarani,* பெ.(n.) கறுப்புக் கரணைக் கிழங்கு; black elephant yarn.

[கறும் + கரணை.]

கறுங்காய்ஞ்சொறி *karuṅkāyñcori,* பெ.(n.) கறுப்புக் காஞ்சொறி; black nettle plant (சா.அக.).

[கறும் + காய்ஞ்செறி.]

கறுங்குறிஞ்சி *karuṅkuriñci,* பெ.(n.) கறுப்பு மருதோன்றி; black henna.

[கறு + குறிஞ்சி.]

கறுத்த கடப்பு *karutta-kaḍappu,* பெ.(n.) நெல்வகை. (A.); a species of paddy.

[கறுத்த + கடப்பு.]

கறுத்தகல்லுண்டை *karutta-kal-l-uṇḍai,* பெ.(n.) நெல்வகை (A.); a species of paddy.

[கறுத்த + கல்லுண்டை.]

கறுத்த காக்கட்டான் *karutta-kākkaṭṭan,* பெ.(n.) ***கருங்காக்கணம்*** (யாழ்.அக.). பார்க்க; see *kruṅkākkanam.*

[கறுத்த + காக்கட்டான்.]

கறுத்த கார் *karutta-kār,* பெ.(n.) ஐந்துமாதத்தில் விளையக்கூடிய குறுவைநெல்வகை (G.Tj.D.94); a species of kuruvai paddy maturing in five months.

[கறுத்த + கார்.]

கறுத்த கெளிறு *karutta-keliru,* பெ.(n.) மீன்வகை; a species of fish. *"சின்னத்தாளங் கறுத்த கெளிற்று மீன்" (பறாளைப் பள்ளு. 16.).*

[கறுத்த + கெளிறு.]

கறுத்த பாசி *karutta-pāši,* பெ.(n.) கரியமணி; black bead.

[கறுத்த + பாசி.]

கறுத்த பூ *karutta-pū,* பெ.(n.) கருங்காக்கணம் (சங்.அக.); mussel-shell creeper.

[கறுத்த + பூ.]

கறுத்த மொச்சை *karutta-moccai,* பெ.(n.) மொச்சை வகை (விவசா.4.); hyacinth bean.

[கறுத்த + மொச்சை.]

கறுத்த வளை *karuttavalai,* பெ.(n.) தூதுவளை; three lobed night shade (சா.அக.).

[கறுத்த + வளை.]

கறுத்தவன் *karuttavan,* பெ.(n.) 1.கருநிறமுடையவன்; black, dark person. 2. பகைவன் (யாழ்.அக.); enemy.

ம. கறும்பன்

[கறு → கறுத்த + அவன்.]

கறுத்த வுப்பு *karutta-v-uppu,* பெ.(n.) சில செடி களைச் சாம்பராக்கி உண்டாக்கும் கருநிறமுள்ள உப்பு (வின்.); black salt produced from the ashes of certain plants.

ம. கறுத்துப்பு

[கறு → கறுத்த + உப்பு.]

கறுத்தை *karuttai,* பெ.(n.) 1. கரியவள்; a black woman. 2. கருங்காளை; black ox (வே.க.123.).

[கறு → கறுத்தி → கறுத்தை (வே.க. 123.).]

கறுத்தோர் *karuttōr,* பெ.(n.) பகைவர்; enemies. *"கறுத்தோ ருறுமுரண் டாங்கிய" (பதிற்றுப். 66,9).*

[கறு → கறுத்தோர். கறுத்தல் = சினத்தல்.]

கறுநாகம் *karunāgam,* பெ.(n.) காரீயம்; lead.

[கறு + நாகம்.]

கறு நிமிளை *karunimiḷai,* பெ.(n.) கறுப்பு நிமிளை; black bismuth (சா.அக.).

[கறு + நிமிளை.]

கறு நிறத்தி *karuniratti,* பெ.(n.) **கருவூமத்தை** பார்க்க; see *karuvūmattai.*

[கறு + நிறத்தி. நிறம் → நிறத்தி 'இ' உடைமை குறித்த ஈறு.]

கறுப்பண்ணன் *karuppaṇṇaṉ,* பெ.(n.) தமிழக நடுகல் தெய்வம் (த.ம.36.).

[கறுப்பு + அண்ணன்.]

கறுப்பர் *karuppar,* பெ.(n.) **கறுப்பன்** பார்க்க; see *karuppaṉ.*

[கறுப்பு +அர்.]

கறுப்பறுகு *karupparugu,* பெ.(n.) கறுப்பு அறுகம்புல்; black panic grass (சா.அக.).

[கறுப்பு + அறுகு.]

கறுப்பன் *karuppaṉ,* பெ.(n.) 1. கரியவன்; black man. 2. ஒரு சிறு தெய்வம்; a fierce demon worshipped by the lower castes. 3. மூன்று மாத்தில் விளையக்கூடிய கார்நெல் வகை (வின்.); a species of black paddy maturing in three months.

ம. கறுப்பன், கறும்பன், கறப்பன்; **பட.** கறப்ப

[கறுப்பு → கறுப்பன் (வே.க. 123.).]

கறுப்பி[1] *karuppi,* பெ.(n.) 1. கருநிறமுடையவள்; a black woman (ம. கறும்பி.). 2. நவச்சாரம் (மூ.அ.); salt petre. 3. பேய்த்தும்பை (சங்.அக.); flower tumbai. 4. நிமிளை வகை (சங்.அக.); a kind of bismuth. 5. நீலச் செய்நஞ்சு (சங்.அக.); a prepared arsenic. 6. கருவண்டு (வின்.); species of black beetle.

ம. கறும்பி

[கறுப்பு → கறுப்பி (வே.க. 123.).]

கறுப்பி[2] *karuppi,* பெ.(n.) மீனம்பர் (சங்.அக.); grey amber.

[கறு → கறுப்பி.]

கறுப்பிறுங்கு *karuppiruṅgu,* பெ.(n.) சோளவகை (விவசா.3.); a species of millet.

[கறுப்பு + இறுங்கு. இறுங்கு = சோளம்.]

கறுப்பீரல் *karuppīral,* பெ.(n.) மண்ணீரல்; spleen (சா.அக.).

[கறுப்பு + ஈரல்.]

கறுப்பு[1] *karuppu,* பெ.(n.) 1. கருமை. (பிங்.); blackness, darkness. 2. சினம்; anger, displeasure. கருப்பன்முகம் கறுத்துத்தோன்றும் (சினம். சொ.ஆ.க.52.). 3. குற்றம்; moral delinquency, blemish, fault. *"உள்ளக் கறுப்பினை யறுத்து" (சிவதரு. சிவதரும. 25.).* 4. கறை; spot, taint, pollution, moral defilement. 5. **கறுப்புப்புள்ளி** பார்க்க; see *karuppuppuḷḷi.* 6. தழும்பு; scar. *"கைத்தலத்துணை கறுப்புற" (உபதேசகா. சிவபுண்ய. 315).* 7. கருங்கோள் (இராகு.) (சூடா.); (Astron). Rahu, the ascending node. 8. பேய்பிசாசுகள். (இ.வ.); evil spirits. *"கறுப்பென்னிலோ போய்ப்பணிகுவார்" (அறப். சத. 30.).* 9. அபின் (நெல்லை.); opium. 10. மீனம்பர் (வின்.); ambergris. 11. தும்பிலி; ebony. 12. வயிர்த்த பகை; enmity.

ம. கறுப்பு; **க.** கப்பு, கர்பு, கறெ, கறி; **உரா.** கறுப்பு; **எரு.** கர்த்தடு; **தெ.** கற, கறி, கர்றி, கப்பு; **து., பட.** கப்பு; **கோத.** கர்ப்; **துட.** கப்; **குட.** கரபி, கரதெ; **பிரா.** கர்.

கல் → கர் → கரு → கறு. கல் → கறு (பிங்.) ஒ.நோ. நில் → நிறு.

[கறு → கறுப்பு. (வே.க.123.) கறுத்தல் = மேன்மேலும் கருப்பாதல். கறுப்பு = கடுங்கருப்பு, அட்டக்கரிநிறம்.]

கரு, கறு இரண்டும் நிறத்தைக் குறிக்கின்றன. கரு என்பதை நோக்கக் கறு என்பது நிறத்தைக் குறிப்பது மிகச்சிறுபான்மையே.

கறுப்பு[2] *karuppu,* பெ.(n.) சீட்டாட்டத்தில் தோற்றவர் பெறுங்குறியீடு (உ.வ.); minus mark againt the defeated party in the game of cards, etc.

[கறு → கறுப்பு.]

கறுப்புக்கட்டு—தல் *karuppu-k-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. பயிர் முதிர்ந்து கருநிறங்கொள்ளுதல்; to become dark green, as corn or grain. 2. மழைக் கோலங் கொள்ளுதல்; to become cloudy and hence dark.

[கறுப்பு + கட்டு.]

கறுப்புக்கண்ணாடி *karuppu-k-kaṇṇāḍi,* பெ.(n.) குளிர்ச்சிக்காக அணியும் மூக்குக்கண்ணாடி, தண்ணாடி; sunglasses, cooling glasses.

[கறுப்பு + கண் + ஆடி.]

கறுப்புக்கல் *karuppu-k-kal,* பெ.(n.) நீலாஞ்சனக்கல்; sulphide of antimony.

[கறுப்பு + கல்.]

கறுப்புக்கன்னிமார் *karuppu-k-kannimār,* பெ.(n.) கருஞ்சிலையில் வரிசைப்படப் பொறிக்கப்பட்ட கன்னித் தெய்வங்கள் (இட.வ.); Black Virgins name for the ākāša-k-kannimar so called because they are carved all in a row on a black stone.

[கறுப்பு + கன்னிமார்.]

கறுப்புக்காஞ்சொறி *karuppu-k-kāñjori,* பெ.(n.) சிறுகாஞ்சொறி (வின்.); small climbing nettle.

[கறுப்பு + காஞ்சொறி.]

கறுப்புக்காலிநெல் *karuppu-k-kāli-nel,* பெ.(n.) நெல்வகை. (n.); a species of paddy.

ம. கருப்புகாலி

[கறுப்பு + கால் + இ + நெல். கால் = தாள். 'இ' உடைமை குறித்த ஈறு. கறுப்பு = மிகக்கருப்பு.]

கறுப்புக்குங்கிலியம் *karuppu-k-kuṅgiliyam,* பெ.(n.) கருங்குங்கிலியம்; black dammer, resin.

[கறுப்பு = மிகக்கருப்பு. கறுப்பு + குங்கிலியம்.]

கறுப்புக்கொடி *karuppu-k-kodi,* பெ.(n.) துயரத்தையோ, எதிர்ப்பையோ தெரிவிக்கும் அடையாளமாக அணியும் கறுப்புத் துண்டுத்துணி; black flag or strip of black cloth used as a sign of mourning or protest.

[கறுப்பு + கொடி.]

கறுப்புக்கொள்—தல் *karuppu-k-kol-,* 16 செ.கு.வி. (v.i.) சினம் கொள்தல்; to get angry.

[கறுப்பு = சினம். கறுப்பு + கொள்.]

கறுப்புக்கொள் *karuppu-k-kol,* பெ.(n.) கருங்கொள், கருங்காணம் (வின்.); black horse gram.

[கறுப்பு = மிகக்கருப்பு கறுப்பு + கொள்.]

கறுப்புச்சந்தை *karuppu-c-candai,* பெ.(n.) ***கள்ளச்சந்தை*** பார்க்க; see *kalla-c-candai.*

[கறுப்பு + சந்தை.]

கறுப்புச்சருக்கரை *karuppu-c-carukkarai,* பெ.(n.) தூய்மை செய்யாத சருக்கரை (பாண்டி.); unrefined sugar; raw sugar.

[கறுப்பு + சருக்கரை.]

கறுப்புச்சித்திரமூலம் *karuppu-c-cittiramūlam,* பெ.(n.) கருங்கொடிவேலி; black-flowered leadwort (சா.அக.).

[கறுப்பு + சித்திரமூலம்.]

கறுப்புத்தாமர் *karuppu-t-tāmar,* பெ.(n.) ஒருவகை மரம்; green dammer.

[கறுப்பு = மிகக்கருப்பு. கறுப்பு + தாமர்.]

கறுப்புத்தேயிலை *karuppu-t-tēyilai,* பெ.(n.) சீனத்தேயிலை (L.); China tea-plant (சா.அக.).

[கறுப்பு = கரும்பச்சை. கறுப்பு +தேயிலை.]

கறுப்புநாய் *karuppunāy,* பெ.(n.) மூக்கத்தாரிச் செடி; an unknown plant (சா.அக.).

[கறுப்பு + நாய்.]

கறுப்புப்படர்—தல் *karuppu-p-padar-,* 2 செ.கு.வி. (v.i.) கருமேக நோய் உடலிற் பரவுதல்; to spread as a black eruption over the body.

[கறுப்பு = மிகக்கருப்பு. கறுப்பு + படர்-.]

கறுப்புப்பணம் *karuppu-p-panam,* பெ.(n.) 1. வருமானவரிக்கணக்கில் சேர்த்துக்கொள்ளாத பணம்; black money; money not accounted for income tax.

[கருப்பு + பணம்.]

கறுப்புப்பயறு *karuppu-p-payaru,* பெ.(n.) கருநிற முள்ள பயறு (D.); black variety of green gram.

[கறுப்பு = மிகக்கருப்பு. கறுப்பு + பயறு.]

கறுப்புப்பிசானம் *karuppu-p-pisānam,* பெ.(n.) தாளடிநெல் (A.); second crop of paddy.

[கறுப்பு + பிசானம்.]

கறுப்புப்பு *karuppuppu,* பெ.(n.) உப்புவகை (பைசச. 35.); black salt , impure chloride of sodium, containing a little sulphuret or iron.

[கறுப்பு = மிகக்கருப்பு. கறுப்பு + உப்பு.]

கறுப்புப்புள்ளி *karuppu-p-pulli,* பெ.(n.) 1. வயிரக் குற்றங்களுள் ஒன்று; dark spot, a flaw in diamond. 2. உடம்பில் கறுப்புப்புள்ளிகள் ஏற்படும் ஒரு வகை மேக நோய்; a veneral or syphilitic disease developing black spots in several parts of the body (சா.அக.).

[கறுப்பு = மிகக்கறுப்பு. கறுப்பு + புள்ளி.]

கறுப்புப் பூலாஞ்சி *karuppu-p-pūlāñji,* பெ.(n.) பூலா என்னுமோர் மூலிகை (L.); a large shrub, pūla.

[கறுப்பு = மிகக்கருப்பு. கறுப்பு + பூலாஞ்சி.]

கறுப்புமட்டிவாய் *karuppu-maṭṭivāy,* பெ.(n.) முப்பது விரலம் நீளம் வளரக் கூடிய வெள்ளிநிற கடல்மீன் வகை; black rock-cod, sea-fish, silvery-grey, attaining 30 inches in length.

[கறுப்பு = அடர் கருப்பு; படர் கருப்பு. கறுப்பு + மட்டிவாய்.]

கறுப்புமட்டிவாயன் *karuppu-maṭṭivāyaṉ,* பெ.(n.) ***கறுப்புமட்டிவாய்*** பார்க்க; see *karuppu-maṭṭivāy.*

[கறுப்பு = அடர்கருப்பு. கறுப்பு + மட்டிவாயன்.]

கறுப்புமணித்தக்காளி *karuppu-maṇi-t-takkāli,* பெ.(n.) மணித்தக்காளி வகை (பதார்த்த. 282.); black nightshade.

[கருப்பு = மிகக்கருப்பு. கறுப்பு + மணித்தக்காளி.]

கறுப்புமரம் *karuppu-maram,* பெ.(n.) தும்பிலி என்னும் கருந்தும்பி மரம் (m.m.); Coromandel ebony.

[கறுப்பு + மரம்.]

கறுப்புமுருங்கை *karuppumuruṅgai,* பெ.(n.) முருங்கை மரவகை; a black variety of moringa (சா.அக.).

[கறுப்பு + முருங்கை.]

கறுப்புவரால் *karuppu-varāl,* பெ.(n.) மூன்றடி நீளத்துக்கும் மேலாக வளர்வதும் கறுப்பு அல்லது பழுப்பு நிறமுடையதும் நல்ல தண்ணீரில் வாழ்வதுமாகிய ஒரு மீன்வகை; a walking-fish, dark-grey or black, attaining 3ft. or more in length.

[கறுப்பு = மிகக்கருப்பு. கறுப்பு + வரால்.]

கறுப்புவவ்வால் *karuppu-vavvāl,* பெ.(n.) இரண்டடிநீளம் வளர்வதும் செம்பழுப்பு நிற முடையதுமான கடல்மீன்வகை; black pomfret, deep brown attaining 2 ft. in length.

[கறுப்பு = அடர் கருப்பு. கறுப்பு + வவ்வால்.]

கறுப்புவீரம் *karuppu-vīram,* பெ.(n.) விளக்கின் கொழுந்தினால் படரும்கரி; lamp-black.

[கறுப்பு = மிகக் கருப்பு. கறுப்பு + வீரம். பீரம் → வீரம். பீர்தல் = படர்தல்.]

கறுப்புவெற்றிலை *karuppu-veṟṟilai,* பெ.(n.) கம்மார் வெற்றிலை; a black variety of betel leaf.

[கறுப்பு = மிகக் கருப்பு. கறுப்பு + வெற்றிலை.]

கறுப்பூனம் *karuppūṉam,* பெ.(n.) பச்சை மணியிலுள்ள குற்றவகை; a flaw in emeralds. *"பச்சை கறுப்பூனமாய்" (சரவண. பணவிடு. 206.).*

[கறுப்பு + ஊனம்.]

கறுப்பேற்றிக் கொள்(ளு)-தல் *karuppu-ēṟṟi-k-kol(lu)-,* 16 செ.கு.வி.(v.i.) அபினி தின்னுதல்; to eat opium.

[கறுப்பு = மயக்கம் (போதை). கறுப்பு + ஏற்றிக்கொள்.]

கறும்பு-தல் *karumbu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. துன் புறுத்தல்; to torment. *"கறும்பி யூர்வன வைந்துள காயத்தில்" (தேவா. 370, 6.).* 2. சிறிது சிறிதாகக் கடித்துண்ணுதல்; to eat bit by bit.

ம. கறும்புக

[கல் → கறு → கறும்பு.]

கறுமு-தல் *karmu-,* 5 செ.கு.வி.(v.i.) சினத்தல்; to show signs of anger, to be enraged.

[கறுவு → கறுமு (வே.க. 124.).]

கறுமுறு-த்தல் *karumuru-,* 4 செ.கு.வி.(v.i.) சினத்தல்; to get anger.

[கறு + முறு.]

கறுமுறெனல் *karumureṉal,* பெ.(n.) ***கறுமொ றெனல்*** பார்க்க; see *karumoreṉal.*

ம. கறுமுறெ

கறுமொறெனல் *kaṟumoṟeṉal*, பெ.(n.) 1. இடி இடிக்கும் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying rumbling sound, as of thunder cloud. 2. சினக்குறிப்பு (வின்.); onom. expr. signifying signs of anger. 3. உணவுப் பண்டங்களை மெல்லும் போது ஏற்படும் ஒலிக்குறிப்பு; onom. expression of chewing the solid eatables.

[கறு + மொறு + எனல். ஒலிக் குறிப்புச்சொல் சினத்தைக்குறித்தது.]

கறுவம்[1] *kaṟuvam,1* பெ.(n.) வெகுளி. (பிங்.); anger (செ.அக.).

ம. கறுவம்

[கறுவு → கறுவம்.]

கறுவம்[2] *kaṟuvam,* பெ.(n.) செருக்கு, ஆணவம்; haughtiness, arrogance, pride.

த. கறுவம் > **Skt.** garva.

[கல் → கறு → கறுவு → கறுவம்.]

கறுவல் *kaṟuval,* பெ.(n.) 1. கரியவன், கரியது; black, dark person, or animal of the larger kind. 2. கருநிறம்; black colour. 3. சினக்குறிப்பு (வின்.); sign of anger.

[கறு → கறுவல்.]

கறுவலந்தான் *kaṟuvalandāṉ,* பெ.(n.) விச்சுளி; swift bird or king-fisher (சா.அக.).

[கறு[2] (மனவுரம்) + (வலந்தன்) வலந்தான்.]

கறுவா *kaṟuvā,* பெ.(n.) இலவங்க மரம்; clove tree.

[கறி → கறு → கறுவா.]

கறுவாலன் *kaṟu-vālaṉ,* பெ.(n.) நெல்வகை. (A.); a species of paddy.

[கறு = மிகக்கரிய. கறு + வாலன்.]

கறுவியம் *kaṟuviyam,* பெ.(n.) தீராப்பகை. (யாழ். அக.); rancour, implacable hatred.

[கறுவு → கறுவி → கறுவியம்.]

கறுவிருளை *kaṟuviruḷai,* பெ.(n.) கருங்காக்கணம்; mussell-shell creeper.

[கறு + இருளை.]

கறுவு[1]**-தல்** *kaṟuvu-,* 5செ.கு.வி.(v.i.)1. சினக் குறிப்புக் காட்டுதல்; to exhibit signs of displeasure, frown, look sternly.2. மனவுரங் கொள்ளுதல்; to rankle; to entertain malice, implacable hatred. *"கறுவி வெகுண்டுரைப்பான்" (திரிகடு. 46.).* 3.பல்லால் துருவுதல்; to nibble, as a rat. எலி தேங்காயைக் கறுவுகிறது (செ.அக.).

[குல் → கல் = குத்துதல், கடித்தல், துன்பஞ்செய்தல், பகைத்தல், சிதைத்தல். கல் → கறு → கறுவு.]

கறுவு[2] *kaṟuvu,* பெ.(n.) 1. தணியாச்சினம் (சொ.அக.52.); anger, wrath. 2. மனவுரம் (மனவைரம்.); enmity, hostility, hatred. *"கறுவொடும் பிரகலாதன் கதழ்சினந் தலைக்கொண்டானே" (கூர்மபு. அந்தகா. 86.).* எதிராளியை ஒழித்துக் கட்டுவதாக அவன் கறுவிக் கொண்டிருந்தான் (உ.வ.).

ம. கறுவம், கறுவு.

[கல் → கறு → கறுவு (வே.க. 123.).]

கறுவை-த்தல் *kaṟu-vai-,* 4 செ.கு.வி.(v.i.) மனவுரங்கொள்ளுதல்; to entertain deep-rooted malice, cherish a grudge.

[கறு + வை.]

கறுழ் *kaṟuḻ,* பெ.(n.) கடிவாளம்; bridle. *"மாவே ... கறுழ் பொருத செவ்வாயான்" (புறநா. 4, 8.).*

மறுவ. கருள்

[கறு → கறுழ் (கடித்தல்).]

கறுள் *kaṟuḷ,* பெ.(n.) ***கறுழ்*** பார்க்க; see *kaṟuḻ.*

[கறுழ் → கறுள்.]

கறேரெனல் *kaṟēr-eṉal,* பெ.(n.) ***கறேலெனல்*** பார்க்க; see *kaṟēl-eṉal.*

[கறேலெனல் → கறேரெனல்.]

கறேலெனல் *kaṟēl-eṉal,* பெ.(n.) மிகக் கறுப்பாதற் குறிப்பு; expr. signifying intense darkness. இந்தப் பூனை கன்னங் கறேலென்றிருக்கிறது (உ.வ.).

[கறு → கறேல் + எனல்.]

கறை[1] *karai,* பெ.(n.) 1. வாழை, நுங்கு முதலியவற்றின் சாற்றாலுண்டாகும் சாயம் (சொ.ஆ.க. 44.); rust; spot, as on the moon; as of the teeth. stain, tarnish, blemish, uncleanliness. *"பற்கறைகள் மாற்றல்" (காசிக. இல்லொழுக். 27.).* 2. குற்றம்; fault, defect. *"பிறக்கப் பிறக்கக் கறையேறுகை" (திவ். திருப்பா. 21. வியா.).* 3. கறுப்புநிறம்; black *"கறைமிடறு" (புறநா. 1,5.).* 4. நிறம். (பிங்.); colour, hue, tinge. 5. இருள்; darkness. *"கறைபடு பொழில்" (தேவா. 624, 8.).* 6. நஞ்சு; poison. *"கறையுறு பகுவா யுரகம்" (ஞானா. பாயி. 7, 5.).* 7. அரத்தம்; blood. *"புறங் கறைபொழுகு செம்புண்ணில்" (பிரபுலிங். துதி.15.).* 8. மாதவிலக்கு; defilement, as of catamenia. *"கொழுநனை யில்லாள் கறையும்" (திரிகடு. 66.).* 9. உரல்; mortar for pounding. *"கறையடி யானை" (பெரும்பாண். 351.).* 10. கருங்காலிவகை (வின்.); glabrous foliaged cutch.

ம. கற; **க., பட., குட.** கறெ; **தெ.** கர; **துட.** கர்.

Sinh. kunu

[கல் → கரு → கறு → கறை. கறு = மிகக்கருப்பாதல், குடைதல், மிகவும் இருளாதல் (மு.தா.180.).]

"ஆடையிற் பற்றுங் கறை பெரும்பாலும் கருநிறமாயிருப்பதால் கறுப்பு, கறை, களங்கம், முதலிய கருமைப் பெயர்கள் மாசும் மறுவுமான புள்ளிகளையும் பொட்டல்களையும் குறித்தன" [வே.க. 126.]. ஒரு கறை அதையுடைய பொருட்குக் குற்றமாதலாலும் கறுப்பு நிறம் பெரும்பாலும் மக்களால் வெறுக்கப்படுவதாலும் கறைக் கருத்திலும் கறுப்புக் கருத்திலும் குற்றக் கருத்துத் தோன்றிற்று [வே.க. 126.].

கறை[2] *karai,* பெ.(n.) குடியிறை; tribute, poll-tax. *"கறைவீடு செய்ம்மின்" (சிலப். 23, 127.).*

மறுவ. இறை, கடன், கடமை, காணிக்கை, தீர்வை, பகுதி, பாட்டம், பூட்சி, பேறு, மகமை, மகன்மை.

[கல் → கற → கறை. கற = கறத்தல், உரிஞுதல், பெறுதல். கறை = பெறத்தக்கவரி. ஒ.நோ. பற → பறை (பறவை) பறைத்தொழுதி = பறவைக்கூட்டம். கற → கறை = பெறத்தக்கது.]

கறைக்கண்டன் *karai-k-kaṇḍaṉ,* பெ.(n.) 1. சிவன்; Siva, as having poison in his throat. *"கறைக்கண்ட னுறைகோயில் ... கோகரணம்" (தேவா. 1182, 9.).* 2. துருசு; blue vitriol (சா.அக.).

ம. கறக்கண்டன்; **க.** கறெகண்ட, கறெகொரல. **தெ.** கறகண்டுடு.

[கறை¹ + கண்டன்.]

கறைக்கணி-த்தல் *karai-k-kaṇi-,* 4. செ.கு.வி. (v.i.) குறை வேண்டித்தொழுதல்; to pray for redress of grievances. *"எம்பெருமானென்று கறைக்கணித்தவர் கண்டவணக்கத்தாய்" (தேவா. 612, 2.).*

[கறை¹ + கணி.]

கறைக்கோங்கு *karai-k-kōṅgu,* பெ.(n.) இலைப் புன்கு; dipterocarp dammer (சா.அக.).

[கறை + கோங்கு. கறை = கருமைபடர்ந்த இலை.]

கறைச்சூலை *karai-c-cūlai,* பெ.(n.) சூலைநோய் வகை (சீவக. 123.); a form of neuralgia.

ம. கறிசூலா

[கறை¹ + சூலை.]

கறைநிலம் *karainilam,* பெ.(n.) 1. புன்செய் நிலம்; dry land. 2. களர் நிலம்; saline soil (கல். கலை. அக.).

[கறை = குற்றம், பழுது. கறை + நிலம்.]

கறைநீக்கு-தல் *karainīkku-,* 5 செ.கு.வி.(v.i.) மாசு நீக்கல்; to remove the stain or blemish (சா.அக.).

[கறை + நீக்கல்.]

கறைப்பல் *karaippal,* பெ.(n.) மாசுபடிந்த பல்; discoloured teeth, unclean teeth. *"கறைப்பற் பெருமோட்டுக் காடுகிழவோட்கு" (யாப்.வி. 94, 352.).*

[கறை = குற்றம், அழுக்கு. கறை¹ + பல்.]

கறைப்பறுக்குழி *karaipparu-k-kuḻi,* பெ.(n.) உவர் நிலம்; salty land. கரைப்பறுக்குழி ... முன்னூறும் (S.I.I. Vol.1. in. 503. S.2.).

[கறை → கறைப்பு+உறு+குழி. உறகுழி → அறக்குழி எனத்திரிந்து.]

கறைப்போக்கன் *karai-p-pōkkaṉ,* பெ.(n.) கீழ்மகன்; loafer.

[கறை + போக்கன்.]

கறைபடிதல் *karaipaḍi-,* செ.கு.வி.(v.i.) களங்கம் ஏற்படுதல்; to be stained with accusation.

க. கறெவெரசு

[கறை + படி.]

கறைபடு–தல் *karaipadu-,* 20 செ.கு.வி.(v.i.) இருள் படர்தல்; to darken. பூங்கொடியே கறைபடுவது நிறைமதியே பட்டுண்பன அணியல்குலே (S.I.I. Vol.17. S.No. 585. S.4.).

[கறை + படு.]

கறைபிடி–த்தல் *karai-p-pidi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. துருவுண்டாதல்; to become rusty; to form, as rust. 2. மாசுபடுதல்; to be stained or soiled with rust or verdigris. 3. அரத்தங்கட்டுதல்; to collect, as blood in inflammation.

[கறை = குற்றம், பழுது, அழுக்கு. கறை + பிடி–.]

கறைபோக்கி *karai-pōkki,* பெ.(n.) சவர்க்காரம் (தைலவ. தைல.); lit., remover of stains, soap.

[கறை = குற்றம், அழுக்கு. கறை' + போக்கி.]

கறைபோக்கு *karai-pōkku,* பெ.(n.) கீழ்மை; lowliness.

[கறை = அழுக்கு, குற்றம், கீழ்மை. கறை + போக்கு.]

கறைமிடற்றண்ணல் *karai-midarrannal,* பெ.(n.) மிடற்றில் நஞ்சினை வைத்த சிவன் (திவா.); Šiva, as having poison in his throat..

ம. கறமிடறன்

[கறை = நஞ்சு. கறை + மிடறு + அண்ணல்.]

கறைமிடற்றான் *karai-midarrān,* பெ.(n.) **கறைமிடற்றண்ணல்** பார்க்க; see *karai-midar rannal.* *"கடிகமழ்மா மலரிட்டுக் கறைமிடற்றா னடி காண்பாம்" (தேவா. 198,1.).*

ம. கறமிடறான்

[கறை = கஞ்சு. கறை + மிடற்றான்.]

கறைமுறி–த்தல் *karai-muri-,* 4 செ.கு.வி.(v.i.) ஆடை முதலியவற்றின் கறையை நீக்குதல் (வின்.); to remove a spot or stain from cloth, etc.

[கறை = ஒட்டிய அழுக்கு, கரி. கறை + முறி.]

கறையடி *karai-y-adi,* பெ.(n.) உரல்போன்ற தடித்த காலுடைய யானை; elephant, as having legs like mortar. *"பொழிமதக் கறையடி" (கல்லா. 61, 22.).*

ம. கறயடி

[கறை + அடி. கறை = உரல்.]

கறையான் *karaiyān,* பெ.(n.) சிதல்; white ant. *"கறையானேறி" (பாரத. அருச்சுனன்றவ. 41.).* கறையான் புற்றில் கருநாகம் குடி கொண்டதுபோல் (உ.வ.).

ம. கறயான்

[கற → கறை. உள்வாங்குதல், உரிஞுதல், அரித்தல். கறை → கறையான் = அரிக்கும் இயல்புடையது.]

கறையான்நோய் *karaiyānnōy,* பெ.(n.) அரத்த நோய்வகை; disease relating to blood (சா.அக.).

[கறையான் + நோய்.]

கறையான்புற்று *karaiyānpurru,* பெ.(n.) சிதல்களினாற் கட்டப்பெற்ற வளைகளோடு கூடிய மண்புற்று; termite mound.

[கறையான் + புற்று.]

கறையான்மேய்–தல் *karaiyān-mēy-,* 2. செ.கு.வி. (v.i.) செல்லுப்பிடித்தல்; to be eaten, as a book, by white ants.

[கறையான் + மேய்.]

கறையுரல் *karai-y-ural,* பெ.(n.) பெரியவுரல்; large mortar.

[கறை + உரல். கறை = மிகுதி பெருக்கம்.]

கறையோர் *karaiyōr,* பெ.(n.) வரிசெலுத்துவோர்; tax-payers, rate-payers. *"கறையோரில்லாச் சிறையோர் கோட்டம்" (மணிமே. 19, 161.).*

[கறை → கறையோர்.]

கறைவிலங்கு *karai-vilangu,* பெ.(n.) செந்தரைப்பூடு (L.); a species of white cedar (சா.அக.).

மறுவ. கருவிலங்கம்

[கறை + விலங்கு.]

கறைவிழியாள் *karaiviliyāl,* பெ.(n.) கஞ்சாறு கோரை; wild basil (சா.அக.).

[கறை + விழியான்.]

கன்[1](னு)–தல் *kan(nu)-,* 5 செ.குன்றாவி.(v.t.) ஈனுதல், பிள்ளைப் பெறுதல்; to give birth.

தெ. கனு

[குல் → கல் → கன்.]

கன்[2] *kaṉ,* பெ.(n.) 1. வேலைப்பாடு; workmanship. *"கன்னார் மதில்சூழ் குடந்தை" (திவ். திருவாய். 5, 8, 3.).* 2. கன்னார் தொழில் (வின்.); copper work. 3. செம்பு. (ஈடு. 5, 8, 3.); copper. 4. ***கன்னத்தட்டு*** (நன். 217, விருத்.) பார்க்க; see kanna-t-tattu.

[கல் → கன் (வே.க.190.).]

கன்[3] *kaṉ,* பெ.(n.)1.கல்(சூடா.); stone.2. உறுதிப்பாடு (ஈடு, 5, 8, 3.); firmness.

[கல் → கன்.]

கன்[4] *kaṉ,* பெ.(n.) கன்னாரத்தொழில்; the occupation of smiths,smithy. *"மின்னும் பின்னும் பன்னும் கன்னும் அந்நாற் சொல்லும் தொழிற் பெயரியல" (தொல்.எழுத்து நூற்பா 345.).*

[குல் → கல் → கன்.]

கன்கூட்டு *kaṉ-kūṭṭu,* பெ.(n.) கற்சுருங்கை; cave, cavern. *"கன்கூட்டெய்தி கறந்தனனிருப்ப" (பெருங். இலாவண. 17, 17.).*

[கல்+ கட்டு.]

கன்சருக்கரை *kaṉ-šarukkarai,* பெ.(n.) கற்கண்டு; loaf sugar.

[கண்டசருக்கரை → கன்சருக்கரை.]

கன்மகாண்டம் *kaṉma-kāṇḍam,* பெ.(n.) முற்பிறப்புத்தீவினைகளால் தோன்றும் நோய்களையும் அவற்றிற்குரிய மருத்துவ முறைகளையும் விளக்கும் ஒரு மருத்துவ நூல்(வின்.); a medical treatise on diseases caused by the sins of former births, and their cure.

[கருமம்→கன்மம் + காண்டம்.]

கன்மடி *kaṉ-maḍi,* பெ.(n.) ஆவின் காய்மடி (யாழ்.அக.); hard udder of cows, yielding milk with difficulty.

[கல் + மடி – கன்மடி.]

கன்மணவாரி *kaṉ-maṇavāri,* பெ.(n.) நான்கு மாதங்களில் விளையும் ஒருவகை நெல்; (Rd.m.45.). a kind of coarse paddy sown in September maturing in four months.

[கல் + மணவாரி.]

கன்மதம் *kaṉ-madam,* பெ.(n.) ஒரு மருந்துச்சரக்கு (பதார்த்த. 1229.); rock alum.

ம. கன்மதம்

[கல் + மதம்.]

கன்மதில் *kaṉmadil,* பெ.(n.) கல்லால் அமைந்த மதில்; wall round a fort built by stone.

ம. கல்மதில்

[கல் + மதில்.]

கன்மரம்[1] *kaṉmaram,* பெ.(n.) கருஞ்சந்தனம்; black sandal wood.

[கல் + மரம்.]

கன்மரம்[2] *kaṉmaram,* பெ.(n.) நெடுங்காலத்திற்கு முன்பு மண்ணில் புதைந்த மரங்களின் ஊடே படிப்படியாகச் சுண்ணாம்புச் சத்துப் புகுந்து, அதன் பழைய வடிவிலேயே கல்லாகிப்போன மரம்; impression of a tree embedded in rock, fossilized tree.

[கல் + மரம்.]

கன்மலி *kaṉ-mali,* பெ.(n.) ஏலம் (மலை.); cardamom plant.

[கல் + மலி.]

கன்மலை *kaṉ-mali,* பெ.(n.) 1. பெரும்பாறையாலான மலை; rocky mountain. 2. படிக்காரம் (வின்.); rock, alum.

ம. கன்மல

[கல் + மலை.]

கன்மழை *kaṉ-maḻai,* பெ.(n.) ஆலங்கட்டியாகப் பெய்யும் மழை; hail. *"கன்மழை சொரிந்திடும்" (கந்தபு. திருநகரப். 15.).*

மறுவ. கன்மாரி

ம. கல்மழ; **க.** கல்மழெ; **பட.** கல்லுமே.

[கல் + மழை.]

கன்மா *kaṉ-mā,* பெ.(n.) காட்டுமா (L.); a species of Buchanan's mango.

[கல் + மா.]

கன்மாடம் *kaṉmāḍam,* பெ.(n.) கருங்கல்லால் அமைந்த கட்டடம்; a granite building, stone house.

ம. கன்மாடம்

[கல் + மாடம்.]

கன்மாடன் *kaṉmāḍaṉ,* பெ.(n.) களங்கமுடையவன்; one who is spotted, as the moon. *"மேனிகருகிக் கன்மாட னானான்" (குற்றா. தல. வடவருவி. 17.).*

[கல் + மாடன்.]

கன்மாரி[1] *kaṉmāri,* பெ.(n.) ***கன்மழை*** பார்க்க; see *kaṉmaḻai.*

ம. கல்மாரி

[கல் + மாரி.]

கன்மாரி[2] *kaṉmāri,* பெ.(n.) உடலெங்கும் காய் காயாக கொப்பளம் உண்டாக்கும் ஒரு வகை அம்மை நோய்; a form of small pox.

[கல் + மாரி.]

கன்மி[1] *kaṉmi,* பெ.(n.) ***கருமி*** பார்க்க; see *karumi.*

கன்மி[2] *kaṉmi,* பெ.(n.) தொழிலாளி; labourer. *"மட்கலஞ்செய் கன்மி" (பாரத. திரௌபதிமாலை. 64.).*

[கருமி → கன்மி.]

கன்மிகள் *kaṉmigaḷ,* பெ.(n.) ***கருமிகள்*** பார்க்க; see *karumigaḷ.*

[கரு → கருமி→ கன்மா.]

கன்மிளகு *kaṉmiḷagu,* பெ.(n.) கெட்டி மிளகு; solid and matured pepper seed (சா.அக.).

[கல் + மிளகு – கன்மிளகு.]

கன்மீன் *kaṉ-mīṉ,* பெ.(n.) பதினாறுவிரலம் வளரக் கூடியதும் மஞ்சட் பழுப்பு நிறமுடையதுமான ஒருவகைக் கடல்மீன்; bride-fish, purplish yellow, attaining 16 inches. in length.

ம. கல்மீன்

[கல் + மீன்.]

கன்முகை *kaṉ-mugai,* பெ.(n.) மலைக்குகை; mountain cavern. *"கன்முகை வயப்புலி" (ஐங்குறு. 246.).*

[கல் + முகை.]

கன்முரசு *kan-murašu,* பெ.(n.) பெருவாகை (மலை.); siris.

[கல் + முரசு.]

கன்முரிசு *kanmurišu,* பெ.(n.) புரசு (சங்.அக.); east indian satinwood.

[கல் + முரிசு.]

கன்முருக்கு *kanmurukku,* பெ.(n.) கல் முருக்க மரம்; a species of moringa tree (சா.அக.).

[கல் + முருக்கு.]

கன்முலை *kan-mualai,* பெ.(n.) இறுகிய ஆவின்மடி; hard udder.

[கல் + முலை.]

கன்முழை *kan-muḻai,* பெ.(n.) மலைக்குகை (புறநா. 86, உரை.); mountain cavern.

[கல் + முழை. முழை-குகை.]

கன்மேய்வு *kan-mēyvu,* பெ.(n.) மாடப்புறா (பிங்.); blue rock-pigeon.

[கல் + மேய் – கல்மேய் → கன்மேய் → கன்மேய்வு.]

கன்மேலெழுத்து *kan-mēl-eḻuttu,* பெ.(n.) அழிவில்லாக் கல்லில் எழுதிய எழுத்து; inscription on a stone, expressive of that which is stable and enduring. *"கன்மே லெழுத்து போற் காணுமே" (வாக்குண். 2.).*

[கல் + மேல் + எழுத்து.]

கன்மொந்தன் *kaṉ-mondaṉ,* பெ.(n.) வாழைவகை; a kind of Abyssinian banana.

[கல் + மொந்தன்.]

கன்றல் *kaṉṟal,* பெ.(n.) 1. சினக்குறி (பிங்); sign of anger. 2. எழுச்சியின் மிகுதி (திவா.); luxuriance.

[கன்று →கன்றல்.]

கன்றி *kanṟi,* பெ.(n.) சிறுகீரை; pig greens (சா.அக.).

[கன்று (இளமை) → கன்றி.]

கன்றிப்போ–தல் *kanṟipō-,* 8 செ.கு.வி. (v.i.) சதைக் கன்றுதல்; to become injured by blow without breaking the skin (சா.அக.).

[கன்று → கன்றி.]

கன்றினகாயம் *kaṉṟiṉa-kāyam,* பெ.(n.) கன்றிப் போன புண்; livid mark; contused wound.

[கன்று – கன்றின + காயம்.]

கன்று–தல் *kaṉṟu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. முதிர்தல்; to mature, grown intense. *"களவின்கட் கன்றிய காதல்" (குறள். 284.).* 2. அடிபடுதல்; to get accustomed. *"கன்றிய கள்வன்" (சிலப். 16, 152.).* 3. சினக் குறிப்புக் கொள்ளுதல். (தி.வா.); to be enraged. 4. வெயிலாற் கருகுதல்; to be scorched; to be sunburnt, as the face. வெயிலில் முகம் கன்றிவிட்டது (உ.வ.). 5. களைகுன்றுதல்; to become dim or dull. 6. மனமுருகுதல்; to feel compassion; to melt, as the heart. *"கலையின்பிணை கன்றிடுமென்று" (சீவக. 1188.).* 7. வருந்துதல்; to suffer, to be aggrieved. நெஞ்சு கன்றக் கவிபாடுகிற (ஈடு. 3,9,6.). 8. குழப்ப மடைதல்; to be vexed, confused. 9. நோதல்; to become sore, as with a blow, as the feet with walking, as the hands with first using a tool. நடந்துநடந்து கால்கன்றியது (இ.வ.). 10. வாடுதல்; to fade, become pale, as from exhaustion. *"தன்னுடம்பு கன்றுங்கால்" (திரிகடு. 91.).* 11. அடி படுதலால் காய் முதலியன பதனழிதல்; to become hard and unfit for use, as fruits injured in their growth. காய்கன்றி விழுந்தது (உ.வ.).

ம. கன்னுக; **க., தெ., பட.** கந்து. **குட.** கந்தி; **து.** கந்துனி.

[கல் → கன்று → கன்றுதல்.]

காய் கிழங்கு முதலியன கடினமாதல். [மு.தா.246]. கன் → கன்று → கன்று = சினத்தல், வெயிலாற் கருகுதல் [வ.மொ.வ.82.].

கன்று[2] *kaṉṟu,* பெ.(n.) 1. கழுதை, கடமை, ஆன், எருமை, யானை, குதிரை, மரை, கவரிமா, கராம், ஒட்டகம் முதலிய விலங்குகளின் இளமைப் பெயர்; calf, colt; young of the animal. *"பிள்ளை குழவி கன்றே போத்தெனக் கொள்ளவும் அமையும் ஓரறிவுயிர்க்கே" (தொல். பொருள். 570.); "கன்று கூடி களம் அடித்தால் வைக்கோலும் ஆகாது செத்தையும் ஆகாது." – (பழ.).* 2. மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை.;sapling, young tree. *"கருப்புரக்கன்று" (சீவக. 1267.).* 3. சிறுமை (தி வா.); anything insignificant, trifle, particle. 4. கைவளை; bracelet. *"கன்றணிகரத்தெம் மன்னை" (சீகாளத். பு.கன்னி.147.).*

ம. கன்னு; **க.** கந்து, கரு, கறு, கறுவு; **தெ.** கந்து, கந்துவு (குழந்தை); **து.** கஞ்சி, கந்து; **தொட.** கொர்; **பட.** கரு; **பர்.** கர் (நாற்று); **கட.** கர் (ஈனுதல்); **கோண்.** கோண்ட (எருது); **கூ.** கோறு; **குரு.** கந்து; **மா.** கடெ(மகன்): **பிரா.** கணங்க (பெறுதல்); **கொர.** கஞ்சிகெ; **கசபா.** கய்ந்தி;

கன்– **தெ.** கனு = பிள்ளைபெறு (to bring forth young) ஆபிரகாமு ஈசாக்குனு கனெனு = ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்.

பிரா. (பிராகுவீ). கன் (khan), to gibe brith to.

KGad. Karr, to yean; Kur (kurukh), kharj to be produced, to bear Fruit.

LATIN WORDS:

- L. geno, to beget. genero, to beget, produce, create, cause to exist, bring to life, generate.

Gener, a son-in-law.

Generosus, of noble birth.

genesis, the constellation which presides over one's birth.

Genetivus. Genativus, in norn, innate

Genetrix, one who brings forth or bears, a mother.

Genitabilis, relating to production or birth

genitalis. belonging to birth.

Genitura, a begetting, genitor, a begetter.

Gens, a clan, a number of families connected together by a common discent and the use of the same gentile name.

Genus, birth, descent, origin.

GREEK WORDS

GK, genos, race.

genomai. gignamai, I am born.

genea, race

genēs, born,of, produced by.

gennān, to beget.

Teutonic words derived from Latin and Greek

E. **gen,** GK. suf. forming nn. in Scientific use.

1. in the sense 'that which produces' Ex.oxygen, hydrogen, nitrogen.

2. in the sense 'growth'. Ex. undogen, acrogen, thallogen.

gender, ME f. OF gon(d)re, f. L. genus.

gene, modern formation of GEN.

geneology, ME f. OF (gie) f. LL. f. GK. genealogia.

General, ME f. OF f.L. generalia.

generate, of L. generare, to beget.

generic, f. F. **generique** or mod.

L, genericus.

genesis, L. f. GK. gen, to become.

genetic, f. L. **genesis**. **genial,** **generative**. f. L.

genialis. **genital**. f. OF. genital or L.

genitalis, genitalia (genit, to beget)

genitive, ME. f. OF **genitif** or L. genitivus

genius. f. root of L. **gignere,** to beget.

genscide f. GK. **genos**, race (cide, killing)

gens, clan. f. L. **gignere,** to beget. **genteel,** re- adoption of F. gentil. **gentile,** ME f.L. gentilis.

gentle, well-born. ME f. OF gentil f.L. gentilis.

gentry, prob. f. obs. gentrice f. OF genterise.

Genuine, pure-bred, f.L. genuinus

innate, authentic.

genus, group of species. f.L.

genus - aris. geny, suf. forming nn. indicating mode of production f. F. genie (gen)

Ex. monogeny, anthropogeny. **gony,** suf. signifying creation. E. cosmogony f. GK. cos-mogonia, cosmos, universe, **gonia** f. **gonos**, begetting.

சமற்கிருதச் சொற்கள்.

(கன் – gan - ஜந்)

ஜந், to be born, RV, AV. to grow, AV. to generate beget, produce, create, cause RV, AV. to be grown or produced, come into existence, RV, AV.

ஜந, generating, creature, living being, man, person, race, RV.

ஜநக, (K) generative, generating, begetting, producing causing, a progenitor, father.

ஜநந, generating, begetting, producing, causing, a progenitor creator, birth.

ஜநநீ, mother.

ஜநயதி, (ti), generation. *ஜநி,* a woman, wife.

ஜநித, (ta) engendered, begetting, produced, occasioned.

ஜநித்ர, a birth place, place of origin, home, origin.

ஜநீ, a daughter-in-law *ஜந்து,* a child, off-spring, a creature, living being, man, person.

ஜந்ம, birth

ஜந்மந், birth, production.

ஜந்ய, born, produced; born or arising or produced from, occasioned by.

ஜந்–ஜ

ஜ, born or descended from, produced or caused by, born or produced in or at or upon, growing in, living at.

எ–டு: அக்ரஜ, (g) *அண்டஜ, அநுஜ, கிரிஜ,* (g) *த்விஜ, நிஜ, பங்கஜ* ....(nk) *ஸஹஜ.*

ஜ–ஜா

ஜா born, produced. Ex. agraja, adrija *ஜாத* (ta), born, brought into existence by, engendered by, grown, produced, arisen, caused, appeared, appearing on orin, destined for. (taka) engendered by, born under an asterism, a new-born child, nativity, astrological calculation of a nativity, the story of a former birth of Gauthama Buddha. *ஜாதி* (ti), birth, production, re-birth, the form of existence fixed by birth, position assigned by birth, rank, causte, family, race, lineage, kind, genus, species, the generic properties, the character of a species.

ஜாந birth, origin, birth place. ஆங்கிலச் சொல்லாராய்ச்சியாளர், kind, king என்னுஞ்சொற்களையும் kin என்னுஞ்

சொல்லினின்று திரிக்கின்றனர். "kind, n. ME. kinde, kund, kende, fr. OE. cynd. ge-cynd, kind nature, quality, manner, origin, generation off-spring, rel. to OE. cyn. kind, kin."

"Kindergarten. n.G. kindergarten, lit. 'garden of childred' . . . . . kinder, Pl. of kind, child, and garten, garden, kin-kind" "Kinchin, n.child - corrupted fr. G.Kindchen, 'little child' dimin. of Kind, child, which is rel. to ON kunder, son" - klenis.

சமற்கிருதம் உட்பட்ட ஆரிய மொழிகளையெல்லாம் ஆழ்ந்து ஆராய்ந்த கீற்று (skeat) கிளேன் முதலிய பேரறிஞரெல்லாம் மேற்காட்டிய சொற்கட்கு ***gen, gene*** என்பதே வேர் என்று திட்ட வட்டமாய்க் குறித்துள்ளனர்.

க –ச, **ga** - ஜ ஆதலால், **gan (Kan)** என்பது மூலமும் **jan** என்பது அதன் திரிபுமாகும் என்று தெற்றெனத் தெரிந்து கொள்க (செல்வி சூலை 78, பக். 541–544).

[கன் → கன்று.]

கன்று – மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை. யானை, குதிரை, கழுதை, ஆ, எருமை முதலியவற்றின் கன்றுகளைக் குறித்த 'கன்று' இன்று ஆ, எருமைக் கன்றை மட்டும் குறித்து நிற்கிறது.

கன்றுக்குட்டி *kaṉṟu-k-kuṭṭi,* பெ.(n.) ஆன், எருமைகளின் இளங்கன்று (உ.வ.); calf. கன்றுக் குட்டியிடமும் கடன்காரனிடமும் இருக்கக்கூடாது (உ.வ.).

ம. கன்னுகுட்டி; **G.** kalf; **Dan.** kalv; **Du.** kalf; **Norw.** kalv; **Swed.** kalv; **Yid.** kalf.

[கன்று + குட்டி.]

கன்றுக்குட்டிப்புல் *kaṉṟu-k-kuṭṭi-p-pul,* பெ.(n.) கானாவாழை (m.m.); calf's grass.

[கன்று + குட்டி + புல்.]

கன்றுக்குடுமி *kaṉṟu-k-kuḍumi,* பெ.(n.) குடுமியைச் சுற்றி வளர்க்குஞ் சிறுகுடுமி (உ.வ.); hair allowed to grow next to tuft.

[கன்று + குடுமி.]

கன்றுகயந்தலை *kaṉṟu-kayandalai,* பெ.(n.) சிறுபிள்ளைகள்; children.

[கன்று + கயந்தலை.]

கன்றுகால்மாறு—தல் *kaṉṟu-kālmāṟu-,* 5 செ.குன்றாவி (v.t.). 1. தீயனவாயுள்ள தங்கன்றுகளை மாற்றி வைத்து நல்லன வாயுள்ள பிறர் கன்றுகளை எடுத்துக்கொள்ளுதல்; to substitute stealthily one's bad calves for another's good calves. 2. கன்றுகளைக் களவிலே நிலை பேர்த்துக் கொண்டுபோதல்; to steal away calves.

[கன்று + கால் + மாறு–.]

கன்றுகாலி *kaṉṟu-kāli,* பெ.(n.) கன்றுகளுடன் கூடிய மாட்டுமந்தை (வின்.); cattle, young and old.

ம. கன்னுகாலி

கன்னாலிப்பிள்ளர் (மாட்டுக்காரன்).

[கன்று + காலி.]

கன்றுகொல்லி *kaṉṟu-kolli,* பெ.(n.) கன்றுகள் இறக்கும்படி கால்நடைகளுக்கு வரும் நோய் (வின்.); disease in cattle causing the death of their calves.

[கன்று + கொல்லி.]

கன்றுதாய்ச்சி *kaṉṟu-tāycci,* பெ.(n.) சினைஆன் (வின்.); pregnant cow.

[கன்று + தாய்ச்சி.]

ஒ.நோ. பிள்ளைத்தாய்ச்சி.

கன்றுப்பொங்கல் *kaṉṟu-p-poṅgal,* பெ.(n.) மாட்டுப்பொங்கலுக்கு அடுத்தநாள்; the day after the māttu-p-poṅgal.

[கன்று + பொங்கல்.]

காண்பொங்கல் அல்லது காணும் பொங்கல் என்ற வடிவம் கண்ணுப்பொங்கல் என்றும் ஆளப்படுதல் உண்டு. பின்னர்க் கண்ணு, கன்று என்பதின் கொச்சை வடிவமாக இருக்கக்கூடும் எனக்கொண்டு இதைக் கன்றுப் பொங்கல் என மாற்றிச் சொல்லியுள்ளனர்.

இதையே செ.அக. குறித்துள்ளது. ஆனால் காண் பொங்கல் அல்லது காணும் பொங்கல் என்பதே சரியான வழக்கு. காண் பொங்கல் பார்க்க.

கன்றுபடு—தல் *kaṉṟu-paḍu-,* 20. செ.கு.வி. (v.i.) ஆன் முதலியன சினைப்படுதல் (வின்.); to be pregnant, as a cow.

[கன்று + படு. படுதல் - தோன்றுதல், உண்டாதல்.]

கன்றுபுக்கான் *kaṉṟu-pukkāṉ,* பெ.(n.) கானா வாழை (வின்.); calf's grass.

[கன்று + புக்கான்.]

கன்றுபோடு-தல் *kaṉṟu-pōḍu-,* 20.செ.கு.வி.(v.i.) ஆன் முதலியன கன்றீனுதல்; to yean, calve.

[கன்று + போடு-.]

கன்றுமேய்பாழ் *kaṉṟu-mēy-pāḻ,* பெ.(n.) ஊரில் கால்நடை மேயும் பொதுநிலம் (S.I.I.iii,305.); village pasture land.

[கன்று + மேய் + பாழ்.]

கன்றுவிடு-தல் *kaṉṟu-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1.பால்சுரக்கும்படி கன்றை ஊட்டவிடுதல்; to let the calf suck the cow for starting the flow of milk. 2. பால் கறத்தல்; to milk.

[கன்று + விடு-.]

கன்றுவீசு-தல் *kaṉṟu-vīsu-,* 5.செ.கு.வி.(v.i.) ஆன் முதலியன அகாலத்தில் ஈனுதல், கருக்கலைதல்; to miscarry as a cow.

[கன்று + வீசு-.]

கன்னக்கட்டு *kaṉṉa-k-kaṭṭu,* பெ.(n.) 1. கன்னத்தி லேற்படும் வீக்கம்; swelling of the cheeks. 2. கூகைக்கட்டு; mumps.

[கன்னம் + கட்டு.]

கன்னக்களவு *kaṉṉa-k-kaḷavu,* பெ.(n.) 1. சுவரில் துளைபோட்டு அதன்வழியாக வீட்டினுள் சென்று செய்யும் களவு; theft by house-breaking; burglary. 2. கன்னம் போட்டுத்திருடிக்கொண்ட பொருள்; property acquired by house - breaking.

ம. கன்னக்களவு; **க.** கன்னகளவு.

[கன்னம்[3] + களவு.]

கன்னக்காரன் *kaṉṉa-k-kāraṉ,* பெ.(n.) 1. கன்ன மிடுந்திருடன்; house-breaker, burglar. 2. ஏமாற்று பவர்; a deceitful person.

ம. கன்னக்காரன்; **க.** கன்னகார; **தெ.** கன்னகாடு.

[கன்னம்[3] + காரன்.]

கன்னக்கிரந்தி *kaṉṉa-k-kiranti,* பெ.(n.) தோல் நோயால் கன்னத்திலுண்டாகும் ஒருவகைக் கட்டி (மூ.அ.); swelling in the cheek due to skin disease.

[கன்னம்[2] + கிரந்தி.]

கன்னக்கீரை *kaṉṉakkīrai,* பெ.(n.) சிறுகீரை; pig green (சா.அக.).

[கன்று → கன்னு + கீரை.]

கன்னக்குடுமி *kaṉṉa-k-kuḍumi,* பெ.(n.) காதுக்கு மேற்பக்கமாக முடிக்குங்குடுமி (யாழ்ப்.); side-lock of tuft.

[கன்னம் + குடுமி.]

கன்னக்குருகு *kaṉṉa-k-kurugu,* பெ.(n.) நோய் வகை (பரராச. 1, 236.); a form of disease.

[கன்னம் + குருகு.]

கன்னக்கொண்டை *kaṉṉa-k-koṇḍai,* பெ.(n.) ஒரு வகை மயிர்முடிப்பு (வின்.); coil of hair tied in a special way.

[கன்னம் + கொண்டை.]

கன்னக்கோல் *kaṉṉa-k-kōl,* பெ.(n.) 1. சுவரைத் தோண்டுதற்குக் கள்ளர் கையாளுங் கருவி; iron-crow bar of thieves. *எங்கே திருடினாலும் கன்னக்கோல் வைக்க ஒரு இடம் வேண்டும் (பழ.).* 2. நெசவாளர் பயன்படுத்தும் ஒரு கருவி (சேரநா.); an implement of the weavers.

மறுவ. கன்னகம்

ம. கன்னக்கோல்; **க.** கன்னகத்திரி; **தெ.** கன்னக்கோல.

[கல்லு → கன்னு → கன்னம். கல் = தோண்டுதல். கன்னம் = குழி, குழித்தல், வெட்டுதல். கன்னம்[4] + கோல்.]

கன்னக்கோல் = சுவரில் துளையிடும் சிறிய கடப்பாறை.

கன்னகம் *kaṉṉagam,* பெ.(n.) **கன்னக்கோல்** பார்க்க; see *kaṉṉa-k-kōl. "கன்னக மின்றியுங் கவைக்கோ லின்றியும்" (சிலப். 16, 142.).*

[கன்னம் → கனன்னகம்.]

கன்னகுப்பியம் *kaṉṉa-kuppiyam,* பெ.(n.) இசிவு (சன்னி) வகை (தஞ்.சரசு. 111, 194); a kind of delirium.

[கன்னம் + குப்பியம்.]

கன்னங்கறேல் *kaṉṉaṅ-kaṟēl,* பெ.(n.) மிகக் கறுப்பு நிறம்; deepest black colour (சா.அக.).

[கல் → கன் → கன்னம் + கறேல்.]

கன்னங்கறேலெனல் *kaṉṉaṅ-kaṟēl-eṉal,* பெ.(n.) மிகக் கறுத்தகுறிப்பு; expr. signifying pitch like darkness.

[கல் → கன்னம் + கறேல் + எனல்.]

கன்னச்சிலந்தி *kaṉṉa-c-cilandi,* பெ.(n.) ***கன்னப் புற்று*** பார்க்க; see *kaṉṉa-p-puṟṟu* (சா.அக.).

[கன்னம் + சிலந்தி.]

கன்னசந்தம் *kaṉṉašandam,* பெ.(n.) செவித்துளை; ear-cavity.

[கன்ன + சந்தம். கன்ன + சந்து (சந்தம்). சந்து : துளை.]

கன்னசாலை *kaṉṉa-šālai,* பெ.(n.) மேல்மாளிகைப் பக்கங்களில் முன்புறம் நீண்டுள்ள பரண்கூடு; balcony. *“மீதொருபாற் கன்னசாலை குல வயிரத்தா லமைத்த கொள்கையாலே” (பெரியபு. திருக்குறிப். 91.).*

[கன்னம் + சாலை.]

கன்னசூலை *kaṉṉa-šūlai,* பெ.(n.) கன்னக்கழலை நோய்வகை (வின்.); tumour in the region of the cheek.

[கன்னம் + சூலை.]

கன்னஞ்செய்–தல் *kaṉṉaṅ-cey-,* 1. செ.குன்றாவி. (v.t.) கேட்டல்; to hear. *“கன்னஞ்செய்வா யாகில்” (பதினொ. சேத்திர. 20.).*

[கன்னம் + செய்–.]

கன்னடகௌளம் *kaṉṉaḍa-kauḷam,* பெ.(n.) ஒருவகைப்பண் (பரத. இராக. 55,); a musical mode.

[கன்னடம் + கௌளம்.]

கன்னடம் *kaṉṉaḍam,* பெ.(n.) 1. ஐந்து திராவிட மொழிகளுள் ஒன்றான கன்னடம் பேசுகின்ற நாடு; the Kannada country, the place where the Kannada language is spoken. கொங்கணங் கன்னடந் தெலிங்கம் (நன். 272. மயிலை.). 2. இந்தியப் பதினெண்மொழிகளுள் ஒன்று; language of the Kanarese, one of 18 languages of India mentioned in Tamil works. 3. ஒருவகைப்பண். (பரத. இராக. 55.); a musical note.

ம. கன்னடம்; **க.** கன்னட; **தெ.** கன்னடமு; **து.** கர்நாடக, கன்னட; **மரா.** கானட; **Skt.** karṇāṭa.

[கல் : மலை, குன்று. கல்+நாடு–கன்னாடு→கன்னடம்.]

மலையாளத்திற்கு அடுத்து தமிழோடு தொடர்புள்ளது கன்னடம். கன்னடம் என்பது கருநடம் என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபு. இது முதலாவது கன்னட நாட்டைக் குறித்தது. இதன் பழைய வடிவங்கள் கருநாடு, கருநாடகம் என்பன. கன்னட நாட்டார் கருநாடர் என்றும் கருநடர் என்றும் அழைக்கப்பட்டனர். [பாவாணர் – திராவிடத்தாய், பக். 54]

தொல்காப்பியர் காலத்தில் கன்னடம் தோன்றவில்லை. கன்னடம் தமிழிலிருந்து பிரிந்தது. ஏறத்தாழ கி.பி. 6ஆம் நூற்றாண்டு எனக்கூறலாம்.

திருந்திய திராவிட மொழிகளுள் ஒன்றான கன்னடம் இலக்கிய இலக்கண வளமுடையது.

கன்னடர் *kaṉṉaḍar,* பெ.(n.) கருநாடக நாட்டைச் சேர்ந்தவர்; people of Kannada country, the Canarese people.

ம. கன்னடர்

[கருநாடர் → கன்னடர்.]

கன்னடா *kaṉṉaḍa,* பெ.(n.) கன்னாடப் (கானடா) பண்; a musical mode.

[கல் + நாடு – கன்னாடு → கன்னாடம் → கன்னாடா (கொ.வ.).]

கன்னடிகன் *kaṉṉaḍigaṉ,* பெ.(n.) கன்னடநாட்டான், (S.I.I.i, 83); native of the Canerese country.

க. கன்னடிக

[கல் + நாடு – கன்னாடு + அகன் – கன்னாடகன் → கன்னடிகன் (கொ.வ.).]

கன்னடுதல் *kaṉṉaḍudal,* பெ.(n.) போரில் இறந்த மறவனது உருவகுத்துப் பெயர் பொறித்த நடுகல் நாட்டுதலைக் கூறும் புறத்துறை (பு. வெ. 10, பொதுவியற். 12.); theme of setting up a memorial stone for a warrior who died in battle.

[கல் + நடுதல் – கன்னடுதல்.]

கன்னத்தசை *kaṉṉattašai*, பெ.(n.) கன்னப் பகுதியின் தசை; buccinator.

[கன்னம் + தசை.]

கன்னத்தட்டு *kaṉṉa-t-taṭṭu*, பெ.(n.) சிறுதுலைத் (தராசு) தட்டு (நன். 217. விருத்.); scale-pan, pan of a small balance.

[கன்' + தட்டு – கன்னத்தட்டு. கன்னான் செய்து கொடுத்த துலைத்தட்டு.]

கன்னதாளி *kaṉṉatāḷi*, பெ.(n.) நிலப்பனை; ground palm (சா.அக.).

[கல் → கன் → கன்னம் + தாளி.]

கன்னப்பரிசை *kaṉṉa-p-parišai*, பெ.(n.) 1. கதுப்பு மயிர் (வின்.); whiskers on the cheek. 2. கீழலகு; mandible or lower jaw (சா.அக.).

[கன்னம் + பரிசை.]

கன்னப்பால் *kaṉṉappāl*, பெ.(n.) மாட்டின் ஈன்றணிமைப் பால்; beestings, especially of cow.

மறுவ. சீம்பால், திரட்டுப்பால், கடும்பு – தீம்பால்;

க. கிண்ணு வாலு, கிண்ணு காலு; **தெ.** சுன்னு.

[கன்னு + அம் + பால். கன் → கன்னு (திரட்டு)]

கன்னப் பிளவை *kaṉṉa-p-piḷavai*, பெ.(n.) கன்னத்தில் ஏற்படும் கட்டி வகை;

[கன்னம் + பிளவை.]

கன்னப்புற்று *kaṉṉa-p-puṟṟu*, பெ.(n.) பெரும்பாலும் குழந்தைகட்கு வரும் ஒரு கன்னப்பிளவை (யாழ்.அக.); a form of cancer in the form of a shallow ulcer, most frequently in the mouth of ill-fed delicate children after a debilitating disease (செ.அக.).

ம. கன்னப்புற்று

[கன்னம் + புற்று.]

கன்னப்பூ *kaṉṉa-p-pū*, பெ.(n.) காதணிவகை; jewel worn at the top of the ear, usually made of gold.

ம. கன்னப்பூ, கன்னப்பூவு.

[கன்னம் + பூ (வே.க. 191.).]

கன்னப்பொறி *kaṉṉa-p-poṟi*, பெ.(n.) கன்னத்தின் பொட்டு (வின்.); temple, the flat part of either side of the face between forehead and ear.

[கன்னம் + பொறி.]

கன்னம்[1] *kaṉṉam*, பெ.(n.) 1. பொற்கொல்லர் கையாளும் சிறிய துலைத் தட்டு (திவா.); scale pan of a goldsmith. 2. நோய் தணியும் பொருட்டுக் கோயிற்கு நேர்த்தியாகச் செய்து கொடுக்கும் சிறுபடிமம்; small image presented to a temple for effecting a cure. *"கன்னந் தூக்கி" (ஐங்குறு. 245.).*

[கன்' → கன்னம்–.]

கன்னம்[2] *kaṉṉam*, பெ.(n.) 1. கதுப்பு; cheek. *"கன்னத்து விழுந்தது காளர்கதை" (உபதேசகா. சிவ நாம.51).*

ம. கன்னம்; **க.** கன்ன; கென்னெ; **பட.** கென்னி

குல் → கல் → கன் → கன்னம் (குழிந்த பகுதி).

த. கன்னம் < **Skt.** karna. (வ.மொ.வ.112.) **Pkt.** kanna. **Iraqi;** khadd.

West Sudan; gone; **Nil., Aby., Ger., Norw.** kinn; **It.** guan-cia; **Swed.** kin-d; **Dan.** kind, Berber; **Mzab.** Ka→ga.

மறுவ. கொடிறு, கவுள்.

[கல் → கன் = துளை. கன் → கன்னம் = துளையுள்ள காது, யானைச்செவி, காதையடுத்த அலகுப்பக்கம். வடவர் காட்டும் 'த்' 'க்ரு' என்னும் மூலங்கள் பொருந்தா.]

கன்னம்[3] *kaṉṉam*, பெ.(n.) 1. நாற்பக்கத்தின் (சதுரத்தின்) ஒரு மூலையினின்று அதற்கு நேர் மூலையிலுள்ள குறுக்கு; diagonal. 2. நேர்கோண முக்கோணத்தில் நேர்கோணத்திற்கு எதிரிலுள்ள கை; hypotenuse.

[குல் → கல் → கன் → கன்னம் = குழி, நடு, நடுப்பக்கத்துக் கோடு.]

கன்னம்[4] *kaṉṉam*, பெ.(n.) சுவரிடிக்கும் சிறிய கடப்பாரை (பிங்.); crow bar for breaking into a house, jemmy. கப்பல் மூழ்கினாலும் கன்னத்தில் கை வைக்காதே (பழ.). 2. கன்னக் கருவியால் அகழ்ந்த துளை; hole made by burglars in a house-wall. *'அன்னம் இட்டாரைக் கன்னம் இடலாமா?' (பழ.).* 3. களவு; theft, burglary. *"கன்னமே கொடுபோயின கண்டகா" (இரகு. யாகப். 42.).*

மறுவ. சுவரகழ்கத்தி

[கல் = பெரியது, பெருமை. கல் → கன் → கன்னம்.]

கன்னம்[7] *kaṉṉam,* பெ.(n.) 1. துளையுள்ள காது; ear. 2. யானைச் செவி (திவா.); cheek of an elephant. 3. காதையடுத்த அலகுப் பக்கம்; temple.

ம. கன்னம்; **க.** கன்ன; **தெ.** கன்னம்; **Skt.** karna; **Pkt.** kanna.

[கன் → கன்னம் (குழிந்த பகுதி). வடமொழியில் கன் என்னும் சொல்லிற்கு மூலமில்லை, மூலமாகக் காட்டப்படும் க்ருத், க்ரு என்பன மூலமாகா.]

கன்னம் வடபுல மொழிகளில் கன் → கான் எனத் திரிந்து காதை உணர்த்தும் சொல்லாயிற்று. தொடக்க காலத்தில் 'கன்' காதையும், அம் ஈறு பெற்ற கன்னம் காதைச் சார்ந்த பகுதியையும் குறித்திருத்தல் வேண்டும். கான் [கானம்] → காடு எனத் திரிந்தது போன்று முந்து தமிழிலிருந்து கன் → கான் 'காது' எனத் திரிந்த தாகலாம்.

கன்னம்[8] *kaṉṉam,* பெ.(n.) மாழைகளால் ஏனம் செய்பவன்; brazier.

[கன்னம்[5] → கன்னம்[8].]

கன்னம்போடு-தல் *kaṉṉampōḍu,* 18.செ. குன்றாவி.(v.t.) ***கன்னமிடுதல்*** பார்க்க; see *kaṉṉamiḍu-,*

[கன்னம் + போடு.]

கன்னம்வற்று-தல் *kaṉṉamvaṟṟu-,* 5 செ.கு.வி.(v.i.) மூப்பு, நோய் போன்றவற்றால் கன்னச் சதை சுருங்குதல்; to emaciate, of the blooming. Cheeks through old age, disease etc.

[கன்னம் + வற்று.]

கன்னம்வை-த்தல் *kaṉṉam-vai-,* 4. செ.குன்றாவி. (v.t.) ***கன்னமிடு-தல்*** பார்க்க; see *kannamidu-.*

[கன்னம் + வை.]

கன்னமதம் *kaṉṉa-madam,* பெ.(n.) ஆண் யானையின் கன்னத்தினின்று தோன்றும் மதநீர் (திவா.); secretion from the temples of male elephants while in rut - masth.

[கன்னம் + மதம்.]

கன்ன மலம் *kaṉṉamalam,* பெ.(n.) காதுக்குறும்பி; ear-wax.

[கன்னம் + மலம்.]

கன்னமிடு-தல் *kaṉṉam-iḍu-,* 20 செ.குன்றாவி. (v.t.) 1. கன்னக் கோலால் சுவரகழ்தல்; to break into a house through the wall. அன்னமிட்ட வீட்டிலேயே கன்னமிட்டு விட்டான்(உ.வ.). 2. கொள்ளை கொள்ளுதல்; to take in one sweep, as in plunder. *"ஒரு நாளைக் கன்னமிட்டார் தருமமெல்லாங் கன்னமிட்டார்" (குற்றா.தல.மூர்த்தி. 34.).*

மறுவ. கன்னம் போடுதல்; கன்னம் வைத்தல்.

து. கன்னகுரெபினி (துளை உண்டாக்கு); **க.** கன்னமிடு, கன்னவிடு.

[கன்னம் + இடு.]

கன்னமிலை *kaṉṉamilai,* பெ.(n.) தகரையிலை; leaf of ring worm plant (சா.அக.).

[கன்னம் + இலை.]

கன்னமீசை *kaṉṉa-mīšai-,* பெ.(n.) தாடைமீசை; whiskers.

[கன்னம் + மீசை.]

கன்னமூலம் *kaṉṉamūlam,* பெ.(n.) காதின் உட்புறத்தினடி; the inner ear (சா.அக.).

[கன்னம் + மூலம்.]

கன்னர் *kaṉṉar,* பெ.(n.) செங்குட்டுவனுக்கு நட்பினராகிய ஆந்திரவரசர், சாதவாகனர்; Andhra kings who were the friends of senguttuvan.

[பிரா. சதகர்ணி > த. சதகன்னி → கன்னி → கன்னர்.]

கன்னரதேவர் *kaṉṉaradēvar,* பெ.(n.) தமிழ்நாட்டில் ஆட்சியுரிமை பெற்றிருந்த இராட்டிரகூட அரசர் கிருட்டிணர் III; *"கச்சியுந் தஞ்சையுங்கொண்ட ஸ்ரீ கன்னர தேவர்க்கு" (தெ.இ.கல்.தொ.23 கல் 65 கிபி* 958-59). கன்னரதேவ பிரித்விகங்கரயர் என்பது இவ்வரசனின் முழுப்பெயர்.

[கன்னரன் + தேவர்.]

கன்னல்[1] *kaṉṉal,* பெ.(n.) 1. நீர்க்கலம் (கரகம்.); earthen vessel, water pot. *"தொகுவாய்க் கன்னற் றண்ணீ ருண்ணார்" (நெடுநல். 65).* 2. நாழிகை வட்டில்; a device with two giass chambers containing sand or water that takes an hour to pass from the upper to the lower chamber. *"கன்னலின் யாமங் கொள்பவர்" (மணிமே. 7, 65.).* 3. நாழிகை

வட்டிலால் அறியப்படும் அளவு, நாழிகை; measure of time - 24 minutes. *"காவத மோரொரு கன்னலினாக" (கந்தபு. மார்க். 142.).*

ம. கன்னல்; **க.** கந்தல்; **து.** கந்தெல்.

[கன்¹ → கன்னல். (வே.க. 191). கன் = வெளிவருதல், கசிதல். கன்னல் = கசிதல், ஒழுகுதல், சிறுதுளையுள்ள நீர்க்கலம், நீர்க்கடிகை, நாழிகை வட்டில், நாழிகை வட்டிலால் கணிக்கப்படும் நாழிகை.]

கன்னல்² *kannal,* பெ.(n.) 1. கரும்பு (திவா.); sugar-cane. 2. கருப்பஞ்சாற்றிலிருந்து செய்யப்படும் சருக்கரை; sugar. 3. கற்கண்டு (திவா.); rock-candy. 4. மணற்பாகு (பிங்.); thick molasses.

ம. கன்னல்; **து.** கன்ன; **கோத.** கல்ன.

Ma. kannā; **L.**canna; **Chin.** gān - zhe; **G.** kanne; **F.**canne.

[கன் → கன்னல் (ஈனுதல், முளைவிடுதல், வளர்தல்.]

கன்னல்³ *kannal,* பெ.(n.) 1. ஒருவகைச் சிறு குருவி; a kind of small bird, prob. tūkkanāṅkuruvi. *"கன்னலெனுஞ் சிறுகுருவி ... விளக்கேற்றுங் கார்காலம்" (பெருந்தொ. 1196.).*

து. கன்ன

[கன் = ஈனுதல், ஈன்றகுட்டி, சிறுமை. கன் → கன்னல் → சிறுகுருவி.]

கன்னல்⁴ *kannal,* பெ.(n.) **கன்னலமுது** பார்க்க; see *kannalamudu.*

கன்னல் சருக்கரை *kannal šarukkarai,* பெ.(n.) கரும்பின் சாற்றினாற் செய்யப்படும் சருக்கரை; sugar manufactured from the expressed juice of sugar-cane.

[கன்னல் + சருக்கரை.]

கன்னல் வெல்லம் *kannalvellam,* பெ.(n.) கரும்பின் சாற்றினால் செய்யப்படும் வெல்லம்; jaggery prepared from sugar-cane juice (சா.அக.).

[கன்னல் + வெல்லம்.]

கன்னலமுது *kannal-amudu,* பெ.(n.) சருக்கரை கலந்து அடும் அடிசில் (பாயசம்.); a liquid food prepared from milk, rice, sago, etc., mixed with sugar or jaggery.

மறுவ. கன்னல்

[கன்னல்¹ + அமுது.]

கன்னவகம் *kannavagam,* பெ.(n.) சிறுகீரை (மலை.); a species of amaranth.

[கன் → கன்னு + அகம் – கன்னுவகம். (முளைவிடும் கீரை.)]

கன்னற்கட்டி *kannar-katti,* பெ.(n.) 1. கருப்புக்கட்டி; molasses. *"கோதவமிலென் கன்னற்கட்டி" (திவ். திருவாய். 2, 7, 3.).* 2. கற்கண்டு. (வின்.); rock-candy.

[கன்னல் + கட்டி.]

கன்னற்றடிப்பு *kannarradippu,* பெ.(n.) அடி யினால் உண்டான வீக்கம்; protuberance, as on a slapped face; contusion.

[கன்றல் + தடிப்பு – கன்றல் தடிப்பு → கன்னற்றடிப்பு (கொ.வ.).]

கன்னன் *kannan,* பெ.(n.) அங்கநாட்டரசனும் துரியோதனன் நண்பனுமான கர்ணன்; Karna, king of Anga and friend of Duryodhana.

[கர்ணன் → கன்னன்.]

கன்னன்மணி *kannan-mani,* பெ.(n.) கற்கண்டு; கண்டசருக்கரைத் தேறு; lump sugar. *"கன்னன் மணியும் நறுநெய்யும்" (சீவக. 2703.).*

[கன்னல்² + மணி.]

கன்னா¹ *kannā,* பெ.(n.) காற்றின் வேகத்தால் கலம் சாயும்போது அதனைச் சமநிலைப் படுத்துதற்குரிய ஓரமைப்பு; an arrangement in a vessel which used to stabilise the vessel at the time of topling.

[கல் → கன் → துளை, துளையுள்ள, கன் → கன்னா.]

கன்னா² *kannā,* பெ.(n.) தில்லைமரம்; tiger's milk spurge.

[கல் → கன் → கன்னா.]

கன்னாங்கீரை *kannān-kīrai,* பெ.(n.) கானாவாழை (L.); calf's grass.

[கன்று + ஆம் + கீரை – கன்றாங்கீரை → கன்னாங்கீரை.]

கன்னாடகம் *kannādagam,* பெ.(n.) தற்போது கன்னடம் பேசும் பகுதி; the region where kannada is spoken as mother tongue. *"திருமலைப் பள்ளியில் நிசதமொரு அடிகள்மார்க்குச் சோறு வைத்தார் இம்மடிச்சோழக் கன்னாடகக் கடுத்தலை விற்சேவகன் பிடாரன் பூத்துகனும் மதுராந்தகக் கருநாடகக் கடுத்தலை விற்சம நாயகன் சந்தய னாயிரவனும்" (தெ.இ.கல்.தொ.19 கல் 89).*

[கல் + நாடு + அகம் – கன்னாடகம் → கருநாடகம்.]

கன்னாடம் *kaṉṉāḍam,* பெ.(n.) **கன்னடம்** (வின்.) பார்க்க; see *kaṉṉaḍam.*

[கல் + நாடு – கன்னாடு → கன்னாடம்.]

கன்னாடர் *kaṉṉāḍar,* பெ.(n.) **கருநாடர்** பார்க்க; see *karunāḍar. "கன்னாடர் மண்கொண்ட வாணன்" (தஞ்சைவா. 356.).*

[கல் + நாடு – கன்னாடு → கன்னாடர்.]

கன்னாடு[1] *kaṉṉāḍu,* பெ.(n.) மலைநாடாகிய கல்நாடு, இன்றைய கருநாடகம்; Karnataka state.

க. கன்னாடு

[கல் + நாடு.]

கன்னாடு[2] *kaṉṉāḍu,* பெ.(n.) வீரன் நினைவாக நடுகல் நடுவதற்கான இடம்; place allotted to erect hero-stone. தகடூரில் பட்டார் நாகந்தை சிறுகுட்டி யார் கல்நாடு (s.i.i. vol. 7. insc. 345.).

[கல் + நாடு.]

கன்னாத்தோணி *kaṉṉa-t-tōṇi,* பெ.(n.) தனியொரு மரத்திலேயே குடைந்து செய்யப்படும் பெரிய மரக்கலம்; a wooden vessel made of a single log.

[கல் → கன் → கன்னா : துளை, துளைக்கப்பட்ட. கன்னா + தோணி.]

கன்னாரிறை *kaṉṉārirai,* பெ.(n.) கன்னார் செலுத்தும் வரி; tax paid by brazier (தென்.சஅக.)

[கன்னார் + இறை.]

கன்னாபின்னாவெனல் *kaṉṉā-piṉṉā-v-eṉal,* பெ.(n.) பொருளின்றிக் குழறுதற் குறிப்பு; expr. signifying vain babble, meaningless talk; talking nonsense.

பட. கன்னா பின்னா (ஏறக்குறைய)

[கன்னா + பின்னா (ஒலிக்குறிப்பு இணைச்சொல்.).]

கன்னார்[1] *kaṉṉār,* பெ.(n.) **கல்நார்** (பதார்த்த. 1127) பார்க்க; see *kal-nār.*

ம. கன்னாரம்; **க.** கல்லுநாரு, கல்நாரு.

[கல் + நார்.]

கன்னார்[2] *kaṉṉār,* பெ.(n.) ஒருமடைக்குரிய பாசனப் பகுதி; area of irrigation.

கன்னாருரி–த்தல் *kaṉṉār-uri-,* 4 செ.கு.வி. (v.i.) **கல்லில்நாருரி** பார்க்க; see *kallil-nāruri. "கன்னாருரித் தென்னை யாண்டுகொண்டான்" (திருவாச. 13,9.).*

[கல்நார் + உரி.]

கன்னான் *kaṉṉāṉ,* பெ.(n.) மாழைகளால் ஏனம் செய்பவன்; brazier, bell-metal worker, one of the divisions of the Kammala caste.

ம. கன்னான்; **தெ.** கஞ்சுப்பனிவாடு; **க., து.** கஞ்சுக்கார; **Skt.** kamsakara.

[கன் → கன்னான்.]

கன்னி[1] *kaṉṉi,* பெ.(n.) கரந்தை (சங்.அக.); fragrant basil.

[கல் → கல்லி → கன்னி.]

கன்னி[2] *kaṉṉi,* பெ.(n.) 1. குமரி; virgin, maiden, young, unmarried woman. *"கன்னி தன்னைப் புணர்ந்தாலும்" (சிலப். 7. கானல்வரி. ஆற்றுவரி இசைப்பாடல் 3.). "கன்னி யிருக்கக் காளை மனை ஏறலாமா?" (பழ.).* 2. இளமை; youthfulness, tenderness, juvenility, virginity. *"கன்னிப்புன்னை" (திருக்கோ.177).* 3. புதுமை; freshness. *"கன்னிநீலக்கட் கன்னி" (சீவக. 900).* 4. முதன் முதலான நிகழ்ச்சி; state of being earliest in time. கன்னிப்பேச்சு; கன்னிப்போர்(உ.வ.). 5. அழிவின்மை; imperishable state. *"கன்னிமா மதில்சூழ் கருவூர்" (திவ். பெரியதி. 2, 9, 7.).* 6. பெண் (சூடா.); woman. 7. தவப்பெண் (சூடா.); female ascetic. 8. என்றும் இளமையழியாத பெண்; female possessing perpetual youth, as celestials. சத்தகன்னியர் (பிங்.); 9. கொற்றவை; goddess Durga. *"கன்னிசெங் கோட்டம்" (கல்லா. 58.)* 10. மலைமகள் (பிங்.); Parvati. 11. குமரியாறு; name of a river that flowed in ancient times, south of Cape Comorin. *"கன்னியழிந்தனள் கங்கை திறம்பினள்" (தமிழ்நா. 81.).* 12. கன்னிஒரை. (பிங்.); virgo, a zodiacal sign. 13. புரட்டாசி மாதத்தின் தமிழ்ப்பெயர் (தைலவ. பாயி. 55.); Tamil name of Purattasi. 14. கைம்மீன் (அத்தம்); the 13th naksatra. 15. பத்துநாடியி லொன்று (சிலப். 3, 26 உரை.); a principal tubuler vessel of the human body, one of tasa-nāḍi. 16. கற்றாழை (சூடா.); aloe. 17. காக்கணம். (திவா.); mussel-shell creeper.

ம. கன்னி; **க., தெ.** கன்னெ.

த. கன்னி > **Skt. Guj.** Kanya; **Vedic ;** kanyaha; **Turk.** kanim; **Swed.** kvinna. **Norw**: kvinne; **Pkt.** kannaga.

[கன் → கன்னு → கன்னி.]

முழுகிப்போன குமரிக்கண்டம் தென்கோடியில் குமரி என்னும் மலைத் தொடரையும் வடகோடியில் குமரி என்னும் பேரியாற்றையும் கொண்டிருந்தது.

'வடவேங்கடம் தென்குமரி' என்னும் தொல்காப்பியச் சிறப்புப் பாயிர அடியிற் குறிக்கப் பட்டது குமரியாறே.

பரதன் என்னும் மாவேந்தனின் மகளாகிய குமரியின் பெயரால், பெயர் பெற்றது குமரிக்கண்டம் என்பது தொல்கதைக்கட்டே.

குமரி, கன்னி என்பன ஒரு பொருட் சொற்கள் ஆதலால், குமரியாறு கன்னியெனவும் படும்.

மன்னுமாலை வெண்குடையான்ஷ
வளையாச் செங்கோலது வோச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி".

என்னும் சிலப்பதிகாரக் கானல் வரிப்பாடல் குமரியாற்றைக் கன்னியென்க் குறித்தல் காண்க. கன்னி என்பதும் காளியின் பெயரே.

கன்னி என்னும் சொல், மக்களினத்துப் பெண்ணைக் குறிக்கும் போது, பூப்படைந்து மணமாகாத பெண்ணைக் குறிக்கும். ஒரு பெண் வாழ்நாள் முழுவதும் மணமாகாதிருக்கலாமாதலால், இளங்கன்னி கன்னிகை யெனப்படுவாள். கை என்பது ஒரு குறுமைப்பொருள் பின்னொட்டு (Diminutive suffix.)

ஒ.நோ. குடி [வீடு] குடிகை [சிறுவீடு] – குடிசை.

பூப்படையாத சிறுமியையும் மணமான பெண்ணையும், கன்னியென்று சொல்லும் வழக்க மில்லை. கன்னிகழிதல் கன்னியழிதல், கன்னி யழித்தல், என்னும் வழக்குகளை நோக்குக.

கன்னி என்னும் சொல்லைக் கன்யா என்றும், கன்னிகை என்னும் சொல்லை கன்யகா என்னும், வடமொழியாளர் திரித்து, சிறுமி, மகள் என்ற பொருள்களிலும் வழங்குவர். அதற்கேற்ப, கன் [இகழ்], கன [சிறு] என்பவற்றை வேராகக் காட்டுவர்.

இகழ்தலைக் குறிக்கும் கன்னெனும் சொல் வலிந்து பொருத்துவதாகும். சிறுமையைக் குறிக்கும் கன் என்னும் சொல் பூப்படைந்த பெண்ணிற்குப் பொருந்தாது. மிகச் சிறியதைக் குன்னியென்பது தமிழ் மரபு. குல் → குன் → குன்னி. குல் → குள் → குறு. நன்னியும் குன்னியும் என்பது பாண்டி நாட்டு வழக்கு. குன் → கன் → கன் (kana.).

'கன்னுதல்' என்பது பழுத்தலைக் குறிக்கும் ஓர் அருந்தமிழ்ச் சொல். வெப்பத்தினாலாவது அழுத்தத்தினலாவது உள்ளங் கையிலும் உள்ளங் காலிலும் அரத்தங்கட்டிச் சிவந்துவிட்டால், அதை அரத்தங் கன்னுதல் என்பர். கனி [பழம்] என்னும் சொல் 'கன்னி' [பழுத்தது] என்பதன் தொகுத்தலே. நகு என்னும் முதனிலை வழக்கற்றுப் போனபின், நகை என்னும் தொழிற் பெயர் முதனிலையாய் வழங்குவது போலவே கனி என்னும் முதனிலையும், பூப்பு என்னும் சொற் போன்றே கன்னுதல் என்பதும் நிலைத்திணைக் குரிய தாயிருப்பதும், Mature என்னும் ஆங்கில வழக்கும் இங்குக் கருதத்தக்கன [பண். நா. ப. 16.].

கனிந்த கனிபோன்ற பூப்படைந்த பெண்ணும் நுகர்ச்சிக் கேற்றவள் என்பதையே, கன்னி என்னும் சொல் உணர்த்தும். சமைந்தவள் [பக்குவமானவள்] என்னுஞ்சொல்லையும் நோக்குக [தமிழ். வர. பக். 57.].

கன்னி[3] *kaṉṉi,* பெ.(n.) பருவமடைந்தவள், பருவப் பெண்; matured woman.

[கன் → கன்னி. கன்தல் - மகவுபெறுதல், ஈனுதல், குழந்தைபெறும் பூப்பு நிலை எய்தியவள்.]

கன்னி[4] *kaṉṉi,* பெ.(n.) வெள்ளிநிறமும், கருப்பு உதடும் கொண்ட ஒரு வகை மீன்; black lipped silver belly fish.

[கன் → கன்னி.]

கன்னிக்கருமம்கழி–த்தல் *kaṉṉi-k-karumam kaḻi-*, 4. செ.குன்றாவி.(v.t.) ***கன்னிப்பழிகழி–த்தல்*** பார்க்க; see *kaṉṉi-p-paḻi-kaḻi.*

[கன்னி + கருமம் + கழி.]

கன்னிக்காய் *kaṉṉi-k-kāy,* பெ.(n.) முதன்முதலாகக் காய்க்கும் காய் (நாஞ்.); first fruits of a plant.

[கன்னி + காய். கன்னுதல் - பிறத்தல், தோன்றுதல்.]

கன்னிக்காய்ச்சல் *kaṉṉi-k-kāyccal,* பெ.(n.) கன்னி (புரட்டாசி) மாதத்தில் காயும் வெயில் மிகுதி; scorching rays of the September sun; hot September.

ம. கன்னிக்காய்ச்சல்

[கன்னி + காய்ச்சல்.]

கன்னிக்கால் *kaṉṉi-k-kāl,* பெ.(n.) 1. புதுவீட்டின் மதிலில் தென்முகமாக முதலில் நாட்டுஞ் சீலை சுற்றிய தூண் (வின்.); first post set up in the wall of a new house, facing south and decked with a woman's cloth. 2. வீட்டின் தென்மேற்குப்பகுதியில் நடும் திருமண முழுத்தக்கால்; the first marriage post erected in the south-west portion of a house. 3. வாய்க்காலிலிருந்து வெட்டிய சிறுகால் (இ.வ.); branch channel.

ம. கன்னிக்கால்

[கன்னி + கால்.]

கன்னிக்காவல் *kaṉṉi-k-kāval,* பெ.(n.) கன்னிப் பருவத்துக் காக்குங் கற்பு; virgin's chastity, maiden modesty. *"கன்னிகாவலுங் கடியிற் காவலும்" (மணிமே. 18, 98.).*

[கன்னி + காவல்.]

கன்னிக்கிழங்கு *kaṉṉi-k-kiḻaṅgu,* பெ.(n.) ***சின்னி*** பார்க்க. (மலை.); Indian shrubby copper-leaf.

[கன்னி + கிழங்கு.]

கன்னிக்குட்டி *kaṉṉi-k-kuṭṭi,* பெ.(n.) முதலீற்று ஆட்டுக்குட்டி, (யாழ்ப்.); first-born kid or lamb.

[கன்னி + குட்டி.]

கன்னிக்குடம் *kaṉṉi-k-kuḍam,* பெ.(n.) பனிக் குடம் (நெல்லை.); amnion.

[கன்னி + குடம்.]

கன்னிக்குமரி *kaṉṉi-k-kumari,* பெ.(n.) 1. கன்னியாக் குமரி முனை; cape of Kanya kumari. 2. கன்னியாக் குமரி மாவட்டத்தின் தலைநகர்; district capital of Kanyakumari. 3. கன்னியாக்குமரி என்னும் பெண் தெய்வம், அத்தெய்வம் கோயில் கொண்ட ஊர்; name of virgin deity and the temple town of the same deity.

[கன்னி + குமரி – கன்னிக்குமரி (இரு பெயரொட்டுப் பண்புத் தொகை.]

கன்னி, குமரி என்னும் இருசொற்களும் கொற்றவையான காளியையும் குமரியாற்றையும் குமரிப் பெண்ணையும் குறிப்பன.

மகப்பேற்றுப் பருவமடைந்து திருமணமாகாதவளையும் இளமை தீராதவளையும் குறிக்கும் கன்னி என்னும் சொல், வற்றா வளமும் மாறா எழிலும் கொண்ட குமரிநாடு, குமரி ஆற்றாலும் குமரித் தெய்வத்தாலும் முது பண்டைக் காலத்தில் அறியப்பட்டதாகலின் இன்றும் கன்னிக்குமரிப் பகுதி கடல் கொண்ட குமரிக் கண்டத்தின் எச்சமாகத் திகழ்கிறது. குமரித் தெய்வத்தின் அழகையும் முருகனின் அழகையும் மணங்கமழ் தெய்வத்து இளநலம் எனப்பாடி மகிழ்ந்துள்ளனர். கன்னிக் குமரியை கன்னியாக்குமரி என்பது வடமொழித் திரிபாகும்.

கன்னிக்கொம்பு *kaṉṉi-k-kombu,* பெ.(n.) சொக் கலைமரம். (L.); roxburgh's five-leaved tree of beauty.

மறுவ. செம்புளி

[கன்னி + கொம்பு.]

கன்னிக்கோரை *kaṉṉi-k-kōrai,* பெ.(n.) இளங் கோரை; a variety of tender sedge grass (சா.அக.).

[கன்னி + கோரை.]

கன்னிக்கோழி *kaṉṉi-k-kōḻi,* பெ.(n.) முட்டையிடத் தகுதியுள்ள இளங் கோழி; pullet arrived at maturity.

ம. கன்னிக்கோழி

[கன்னி + கோழி.]

கன்னிகம் *kaṉṉigam,* பெ.(n.) மணித்தக்காளி (மலை.); black nightshade.

[கன் → கன்னு → கன்னி → கன்னிகம்.]

கன்னிகழி—தல் *kaṉṉi-kaḻi-,* 2 செ.கு.வி.(v.i.) 1. மணம்புரியப்பெறுதல்; to pass from maidenhood to married state. 2. புது மணப்பெண் கணவனுடன் கூடித் தன் கன்னிமை நீங்குதல்; consummate.

ம. கன்னிஅழியல்

[கன்னி + கழி.]

கன்னிகாரம் *kaṉṉigāram,* பெ.(n.) கோங்கு; false tragacanth. *"கன்னிகாரத்து .. ஒருத்தி தோன்றி" (சிலப். 11, 110.).*

[கன்னி + காரம்.]

கன்னிகுமரி *kaṉṉi-kumari,* பெ.(n.) **கன்னிக் குமரி** பார்க்க; see *kaṉṉi-k-kumari, "கன்னி குமரிமுதற் றீர்த்தமெல்லாம்" (திருக்காளத்.பு.கடவுள்வா. 16.).*

ம. கன்னிமாகுமரி

[கன்னி + குமரி.]

கன்னிகை[1] *kaṉṉigai,* பெ.(n.) 1. பூப்படைந்த இளைஞை, குமரிப்பெண்; virgin. 2. கொற்றவை; goddess Durga.

[கன்னுதல் = பழுத்தல். கன் → கன்னி → கனி = பழுத்தது, பழம். கன்னி = பழுத்தவள். பூப்படைந்தவள். Mature என்னும் ஆங்கிலச் சொல்லை நோக்குக. கன்னி → கன்னிகை = பூப்படைந்த இளைஞை. கை என்பது இங்குச் சிறுமைப் பொருட் பின்னொட்டு. வடவர் காட்டும் கன் என்னும் மூலம், பல பொருளொரு சொல்லும் பொருந்தாப் பொருட் சொல்லும் ஆகும்.]

*[**த.** கன்னிகை > Skt. kanyaka. (வ.மொ.வ.112.).]*

கன்னிகை[2] *kaṉṉigai,* பெ.(n.) 1. தாமரைக்கொட்டை; pericap of the lotus. 2. பூவின்மொட்டு; flower bud.

[கன்னு → கன்னி → கன்னிகை. 'கை' சிறுமைப்பொருள் ஈறு.]

கன்னிகைமாடம் *kaṉṉigai-māḍam,* பெ.(n.) ***கன்னி மாடம்*** பார்க்க; see *kaṉṉi-māḍam.*

கன்னிச்சவ்வு *kaṉṉi-c-cavvu,* பெ.(n.) கன்னிமை நீங்குதற்கு முன் பெண்ணுறுப்பை மூடியுள்ள மெல்லியதோல் (வின்.); virginal membrane stretched across the external orifice of the vagina, hymen.

ம. கன்னிகச்சிக்க

[கன்னி + சவ்வு.]

கன்னிச்செயநீர் *kaṉṉi-c-ceyanīr,* பெ.(n.) 1. சாகா உப்புச் செய்நீர்; a strong pungent saline preparation used in alchemy. 2. பெண்ணின் முதற் பூப்பு; the first menstruation of a girl (சா.அக.).

[கன்னி + செயநீர் (சே → செய)]

கன்னிச்செவ்வாய் *kaṉṉi-c-cevvāy,* பெ.(n.) கன்னி யோரையிற் படிந்த செவ்வாய்; Mars in the zodical sign, virgo, indicating drought and famine. கன்னிச் செவ்வாயிற் கடலும் வற்றும் (உ.வ.).

[கன்னி + செவ்வாய்.]

கன்னிசாக்கிழங்கு *kaṉṉi-śākkiḻaṅgu,* பெ.(n.) ஆண் பூவரசுக் கிழங்கு; the root of the male portia tree (சா.அக.).

மறுவ. வெருகு

[கன்னி + (சே) சா + கிழங்க. சே = ஆண்.]

கன்னித்தமிழ் *kaṉṉi-t-tamiḻ,* பெ.(n.) அழிவில்லாத தமிழ்மொழி; immortal Tamil. *"கன்னித் தமிழோர் கம்பலை யென்ப" (திவா. 11.).*

[கன்னி + தமிழ்.]

கன்னித்தன்மை *kaṉṉi-t-taṉmai,* பெ.(n.) கன்னியின் உடலுறவு கொள்ளாத தன்மை; virginity.

[கன்னி + தன்மை.]

கன்னித்திங்கள் *kaṉṉi-t-tiṅgaḷ,* பெ.(n.) கன்னி மாதம் (புரட்டாசி.); Tamil month Kanni (Purattasi).

[கன்னி + திங்கள்.]

கன்னித்திசை *kaṉṉi-t-tiśai,* பெ.(n.) தென்மேற்கு மூலை (உ.வ.); south-west.

மறுவ. கன்னிமூலை

[கன்னி + திசை.]

கன்னித்தீட்டு *kaṉṉi-t-tīṭṭu,* பெ.(n.) முதற்பூப்புக்கு உரிய தீட்டு; ceremonial pollution at the attainment of puberty by a girl.

[கன்னி + தீட்டு.]

கன்னித்தேங்காய் *kaṉṉi-t-tēṅ-gāy,* பெ.(n.) தென்னையின் முதற்காய் (யாழ்.அக.); first fruit of a coconut tree.

[கன்னி + தேங்காய்.]

கன்னிநகர் *kaṉṉi-nagar,* பெ.(n.) பார்க்க; ***கன்னி மாடம்*** (கம்பரா. மதிலைக்.82.); see *kaṉṉi-māḍam* (செ.அக.).

[கன்னி + நகர்.]

கன்னிநாகு *kaṉṉi-nāgu,* பெ.(n.) ஈனாத இளம் பெற்றம் (யாழ்.அக.); heifer.

[கன்னி + நாகு.]

கன்னிநாடு *kaṉṉi-nāḍu,* பெ.(n.) பாண்டிநாடு; the Pandya country, which was, according to tradition, once ruled by a virgin princess Taṭātakai, identified with the goddess Mīnākshi, *"கன்னி நாட்டு நல்வினைப்பயத்தாற் கேட்டார்" (பெரியபு. திருஞான. 605.).*

[கன்னி = குமரி ஆறு; கன்னி + நாடு.]

பண்டைத் தமிழ் நாடு குமரி நாடு கன்னிநாடு என்றும் அறியப்பட்டது.

கன்னிநீலம் *kaṉṉinīlam,* பெ.(n.) கடற்றாமரை; sea-lotus (சா.அக.).

[கன்னி + நீலம்.]

கன்னிப்பழி *kaṉṉi-p-paḻi,* பெ.(n.) கன்னியைக் கற்பழித்ததால் உண்டான பழி (யாழ்.அக.); sin of deflowering a virgin.

மறுவ. கன்னிக்கருமம்

[கன்னி + பழி.]

கன்னிப்பழிகழி-த்தல் *kaṉṉi-p-paḻi-kaḻi-,* 4 செ.குன்றாவி. (v.t.) திருமணத்திற்கு முன் எதிர்பாரா வகையில் கற்பிழந்த பெண்ணின் பழி துடைப்பதற் காகச் செய்யப்படும் நடப்பு; a ceremonial ritual among certain sections of agriculturists in Dharmapuri district according to which a token fire bath is performed for a virgin who has been unexpectedly put to the shame of losing her chastity.

மறுவ. கன்னிக் கருமம் கழித்தல்

[கன்னி + பழி – கழி.]

கன்னிப்பழிகழித்தல்

எதிர்பாரா வகையில் கற்பிழந்த கன்னிப் பெண்ணின் பழி துடைப்பதற்காக ஏழு வகை முட் செடிகளை விறகாகச்சுற்றிலும் அடுக்கி அப் பெண்ணை ஈர ஆடை அணிகலன்களுடனும் தலையில் [எட்டி, எருக்குவிளார் சும்மாட்டின் நடுவே] முள் முடியுடனும் நடுவில் நிறுத்தி முள் விறகுக்குத் தீமூட்டி தீச்சுடர் தன்னைப் பற்றுமுன் முள்முடி, ஆடை அணிகலன்கள் ஆகியவற்றை ஒன்றில்லாமல் அனைத்தும் தீயில் எறிந்து விட்டுப் பிறந்தமேனியாய் தீயைக் குதித்துத் தாண்டி வெளி வரச் செய்யும் நாட்டுப்புற நடப்பு [சடங்கு] முறை. இது வெள்ளிக்கை வெள்ளாளர் என்னும் ஒருசார் உழவர் களிடையே அண்மைக் காலம் வரை நிலவி வந்தது. இதனைக் கன்னிக் கருமம் கழித்தல் என்றும் கூறுகின்றனர். இந்தப் பழி கழிப்பு நடப்பில் [சடங்கில்] நெருங்கிய உறவு முறைப்பெண்டிர் மட்டும் கலந்து கொள்ள இசைவளிக்கப்படுகிறது. ஊரடங்கிய நள்ளிரவு நேரத்தில் இது நடத்தப்பெறும்.

கன்னிப்பறவை *kaṉṉi-p-paṟavai,* பெ.(n.) பறவைக் குற்ற வகை நோய் (குழந்தைகளுக்கு உண்டாகும்.) (பரராச. 11, 214); a disease of children, believed to be caused by the shadow of birds being cast over them in the evening twilight.

[கன்னி + பறவை.]

கன்னிப்பால் *kaṉṉ-p-pāl,* பெ.(n.) 1. கற்றாழம் பால்; fresh juice of indian aloe. 2. இளம் பெண்ணின் முலைப்பால்; the breast milk of a young woman. 3. சதுரக்கள்ளிப்பால்; the milky juice drawn for the first time from the square spurge (சா.அக.).

[கன்னி + பால்.]

கன்னிப்பாறை *kaṉṉi-p-pāṟai,* பெ.(n.) கடல்மீன் வகை; horsemackerel bluish green, attaining at least 1ft. in length.

[கன்னி + பாறை.]

கன்னிப்பிடி *kaṉṉi-p-piḍi,* பெ.(n.) தைப் பொங்கலுக்கு (மாதப்பிறப்புக்கு) அடுத்தநாள் பெண்கள் தம் உடன்பிறந்தாருடைய ஆக்கங்கருதிக் காகங்க ளுக்கு இடும் பலவகை உணவுகளின் பலி; ball of coloured food thrown to feed crows by women praying for the welfare of their brothers on the day following Makara-cankaranti.

[கன்னி + பிடி.]

கன்னிப்பிள்ளைத்தாய்ச்சி *kaṉṉi-p-piḷḷai-t-tāyacci,* பெ.(n.) முதற்கருவுற்றவள் (யாழ்ப்.); a woman in her first pregnancy.

[கன்னி + பிள்ளை + தாயச்சி.]

கன்னிப்புதன் *kaṉṉi-p-pudaṉ,* பெ.(n.) பிறந்த வனுக்குக் கலை (வித்தை) நிரம்புவதன் அடையாள மாகக் கன்னி ஓரையிலுள்ள அறிவன் (புதன்) (வின்.); mercury in the zodiacal sign virgo, indicating learning for one born under such influence.

[கன்னி + புதன்.]

கன்னிப்பூ[1] *kaṉṉi-p-pū,* பெ.(n.) 1. காரறுவடை. (நாஞ்.); the harvest in the month of Purattaci, dist. fr. kumpa-p-pu. 2. முதன்முதல் பூக்கும் பூ; the first blossoming flower of a plant. 3. பெண்குறி; the genital of a female. 4. திருமணத்தைக் குறிக்கும் ஒரு பூ; a kind of flower indicating the approach of marriage (சா.அக.).

[கன்னி + பூ.]

கன்னிப்பூ[2] *kaṉṉi-p-pū,* பெ.(n.) பூப்பெய்துவதைக் குறிப்பதாகக் கருதப்படும் இல் மலர்; a flower said to indicate onset of first menstruation. கன்னிப்பூ மலராதவள் – (பழ.).

கன்னிப்பூப்பு *kaṉṉi-p-pūppu,* பெ.(n.) முதற்பூப்பு; first menstruration. கயலேர் மலருண்கண் கன்னிப்பூப் பெய்தி (இலக். வி. 485. உரை.).

[கன்னி + பூப்பு.]

கன்னிப்பூமலர்–தல் *kaṉṉi-p-pū-malar-,* 2 செ.கு.வி. (v.i.) பூப்படைதல் (இ.வ.); to attain puberty.

[கன்னிப்பூ + மலர்.]

கன்னிப்பேச்சு *kaṉṉi-p-pēccu,* பெ.(n.) 1. சட்ட மன்றம், நாடாளுமன்றம் போன்ற அவைகளில் முதன் முறையாக உறுப்பினரானவர் பேசும் முதல் பேச்சு; maiden speech of a newly elected member for Assembly, Parliament etc. 2. ஆன்றோர் அவையில் பேசும் முதல் பேச்சு; maiden speech in an assembly of scholars.

[கன்னி + பேச்சு.]

கன்னிப்பேறு *kaṉṉi-p-pēṟu,* பெ.(n.) முதற்பேறு; the first delivery (சேரநா.).

ம. கன்னிப்பேறு; **பட.** கன்னெகெரிகெ.

[கன்னி + பேறு.]

கன்னிப்பொங்கல் *kaṉṉi-p-poṅgal,* பெ.(n.) சுறவத்திங்களின் (தை மாதம்) இரண்டாவது நாளில் கன்னிகைகளாற் கொண்டாடப்பெறும் ஒரு பண்டிகை; festival on the day following the Pongal specially celebrated by unmarried girls.

[கன்னி + பொங்கல்.]

கன்னிப்போர் *kaṉṉi-p-pōr,* பெ.(n.) வீரனது முதற் போர்; maiden battle. *"காகுத்தன் கன்னிப் போரில்" (கம்பரா. தாடகை. 76.).*

ம. கன்னிப்போரு

[கன்னி + போர்.]

கன்னிமண் *kaṉṉiman,* பெ.(n.) தொல்லியல் அகழ்வுக் குழிகளில், மாந்த நடவடிக்கையற்ற, தொல் பொருள்களற்ற அடிமண்பாகம்; vigin soil found at the bottom most part of the archaeological excavations, where there is no remains of human activities or archaeo-materials.

[கன்னி + மணி.]

கன்னிமணி *kaṉṉi-maṇi,* பெ.(n.) ஆடு, மான் முதலியவற்றின் மறி. young one of goat, deer etc.

[கன்னி + (மறி) மணி (கொ.வ.).]

கன்னிமதில் *kaṉṉi-madil,* பெ.(n.) அழியாத கோட்டை (கம்பரா. மதிலைக் 69.); impregnable fort.

ம. கன்மதில் (கற்கவர்)

[கன்னி + மதில்.]

கன்னிமரம் *kaṉṉimaram,* பெ.(n.) வாழை; plantain tree (சா.அக.).

[கன்னி + மரம்.]

கன்னிமரி *kaṉṉi-mari,* பெ.(n.) ***கன்னிமரியம்மாள்*** பார்க்க; see *kaṉṉi-mariyammāḷ.*

[கன்னி + (மேரி) மரி]

கன்னிமரியம்மாள் *kaṉṉi-mari-ammāḷ,* பெ.(n.) ஏசுநாதரைப்பெற்றெடுத்த தாய்; virgin Mary.

மறுவ. கன்னிமரியாள்

[கன்னி + மரியம்மாள்.]

கன்னிமரியாள் *kanni-mariyāḷ,* பெ.(n.) ***கன்னி மரியம்மாள்*** பார்க்க; see *kanni-mariyammāḷ.*

ம. கன்யாமரியம்

[கன்னி + மரியாள்.]

கன்னிமா *kannimā,* பெ.(n.) மீன்பிடி தொழில் செய்வோர் வணங்கும் பெண் தெய்வம்; fisher man's goddess.

[கன்னி + மா. அம்மா – மா.]

கன்னிமாங்காய் *kanni-māṅgāy,* பெ.(n.) வடுமாங்காய் (இட.வ.); tender mango, used as pickles.

[கன்னி + மாங்காய்.]

கன்னிமாடம் *kanni-māḍam,* பெ.(n.) 1. அரசமகளிர் வாழும் மாளிகை; residence of virgin princesses. *"மற்றவள் கன்னிமாடத் தடைந்தபின்" (மணிமே. 22, 100.).* 2. கன்னியர் உடனுறையும் தனிமாடம் (பழ. தமி. 139.); palace where the royal maidens live.

க. கன்னெமாட, கன்னெவாட.

[கன்னி + மாடம்.]

கன்னிமாதம் *kanni-mādam,* பெ.(n.) ***கன்னித் திங்கள்*** பார்க்க; see *kanni-t-tiṅgaḷ.*

கன்னிமார் *kannimār,* பெ.(n.) 1. மணம்பெறாத மகளிர்; virgins, unmarried girls. 2. நற்கதிபெற்ற கற்புடைக் கன்னியர் (வின்.); deified females, pious virgins on earth, afterwards born in the supernatural worlds in one of the three lower states of bliss. 3. ஏழு மகளிர்; seven deified virgins. *"எங்கன்னிமா ரறியச் சொன்னேன்" (குமர. பிர. மீனாட். குறம். 22.).*

ம. கன்னிமார்

[கன்னி → கன்னிமார்.]

பாயவந்த முரட்டுக்காளைக்கு அஞ்சியோடிய உடன்பிறப்புகளான ஏழுகன்னிப் பெண்கள் ஆற்றில் விழுந்து இறந்த அவலத்தை நினைவு கூர்வதும், இனிமேல் கன்னிப்பெண் இறக்கும் அழிகேடு (பாவம்) நிகழலாகாது என்பதற்காகக் கன்னி மாடன் எனும் தெய்வத்தை வணங்குவதுமாகிய வழக்கம் மராட்டிய மாநிலத்தில் நிலவுகிறது.

கன்னிமார் செய்-தல் *kannimār-cey-,* 1 செ.கு.வி. (v.i.) எழுவர் கன்னியராம் தெய்வங்களுக்குப் பூசை செய்து துயர் நீக்க வேண்டுதல்; a ritual of worship to seven deified virgins to relieve from sufferings.

[கன்னி – கன்னிமார் (ப.பா) + செய்.]

கன்னிமார்பொங்கல் *kannimār-poṅgal,* பெ.(n.) பெண்குழந்தைகள் கொண்டாடும் பொங்கல் விழா, (எங்களூர். 94.); a festival on the first day of Tai, celebrated with pongal, by unmarried girls.

[கன்னிமார் + பொங்கல்.]

கன்னிமுட்டை *kannimuṭṭai,* பெ.(n.) கோழி முதல் ஈடாக இடும் முட்டை; eggs hatched for the first time (சா.அக.).

[கன்னி + முட்டை.]

கன்னிமுத்திரை *kanni-muttirai,* பெ.(n.) ***கன்னிச் சவ்வு*** பார்க்க; see *kanni-c-cavvu.*

[கன்னி + முத்திரை.]

கன்னிமுயற்சி *kanni-muyaṟcci,* பெ.(n.) ஒரு துறையில் ஒருவருடைய முதல் முயற்சி; maiden attempt. 'மலைமருவு நெடுங்கானிற் கன்னி வேட்டை மகன்போக' (பெரியபு. கண்ணம். 47).

[கன்னி + முயற்சி.]

கன்னிமூலை *kanni-mūlai,* பெ.(n.) தென்மேற்கு மூலை; south west corner.

ம. கன்னிமூல

[கன்னி + மூலை.]

கன்னிமை *kannimai,* பெ.(n.) கன்னித்தன்மை; virginity. *"கன்னிமை கனிந்து முற்றி" (சீவக. 1260.).*

க. கன்னெதன

[கன்னி → கன்னிமை.]

கன்னியம் *kanniyam,* பெ.(n.) நன்னாரி; Indian sarsaparilla (சா.அக.).

[கன்னி → கன்னியம்.]

கன்னியழி-தல் *kanni-y-aḻi-,* 2 செ.கு.வி.(v.i.) கன்னிமைகெடுதல் (வின்.); to lose virginity, be deflowered, as a virgin.

[கன்னி + அழி-.]

கன்னியழி—த்தல் *kaṉṉi-y-aḻittal,* பெ.(n.) விலை மகளிர் குடிப்பிறந்த கணிகையருடன் ஆடவர் முதன் முதற் கூடிக் கன்னித்தன்மையை நீக்கும் சடங்கு; the ceremonial celebration of the first sexual intercourse of a girl of the dancing-girl caste.

[கன்னி + அழித்தல்.]

கன்னியன்னம் *kaṉṉi-y-aṉṉam,* பெ.(n.) கற்றாழஞ் சோறு (மூ.அ.); pulp of the aloe leaf.

[கன்னி + அன்னம்.]

கன்னியாக்கம் *kaṉṉi-y-ākkam,* பெ.(n.) கருவுற்ற காலத்தில் பெண்கள் கொள்ளும் ஆசை; the longing of a pregnant woman during the first pregnancy (சேரநா.).

ம. கன்னியாக்கம்

[கன்னி + ஆக்கம்.]

கன்னியாக்குமரி *kaṉṉiyā-k-kumari,* பெ.(n.) 1. ***கன்னிக்குமரி*** பார்க்க; see *kaṉṉi-k-kumari.* குமரியாறு. (வின்.); the ancient river kanni, said to have been swallowed by the sea.

ம. கன்யாகுமரி; **க.** கன்னெகுமாரி.

[கன்னிக்குமரி – கன்னியாகுமரி. கன்னி + குமரி.

கன்னிக்குமரி. கன்னி எனும் சொல் வடமொழியில் கன்யா எனத் திரிந்தது. அதன் இருமடித் திரிபான கன்னியா செந்தமிழ்ச் சொல்லன்று.

குமரி என்பது காளியின் பெயர். காளி தமிழர் தெய்வங்களுள் ஒன்று. இறவாதவள் அல்லது என்றும் இளமையாயிருப்பவள் என்னும் கருத்தில், காளியைக் குமரி என்றனர்.

கும்முதல் = திரள்தல். கும்மல் →கும்மிலி = பருத்தவள்.

கும் → கும்மல் → குமர் – திரட்சி, திரண்ட கன்னிப்பெண்,

குமரி, கன்னி என்பன ஒரு பொருட் சொற்களாதலால், குமரியாறு கன்னியெனவும் படும்.

கன்னியிருட்டு *kaṉṉi-y-iruṭṭu,* பெ.(n.) வைகறைக்கு முன் தோன்றும் இருள் (உ.வ.); darkness before dawn.

ம. கன்னியிருட்டு

[கன்னி + இருட்டு.]

கன்னியீற்று *kaṉṉi-y-īṟṟu,* பெ.(n.) ஆவின் தலையீற்று (வின்.); first calving of a cow.

ம. கன்னியீற்று; **பட.** கன்னெயீத்து.

[கன்னி + ஈற்று.]

கன்னியூஞ்சல் *kaṉṉi-y-ūñjal,* பெ.(n.) திருமண விழாவின் தொடக்கத்தில் மணமக்கள் ஆடும் ஊஞ்சலாட்டம்; ceremonial swing of the bride and bridegroom at the beginning of marriage.

ம. கன்னூஞ்சல்

[கன்னி + ஊஞ்சல் – கன்னூஞ்சல் (கொ.வ.).]

கன்னிலம் *kaṉṉilam,* பெ.(n.) கற்கள் நிறைந்த நிலம்; a stony soil.

க. கல்லுநெல

[கல் + நிலம்.]

கன்னில மேடு *kaṉṉilamēḍu,* பெ.(n.) முரம்பு; hard or stony ground.

[கல் + நிலம் + மேடு. கல் + நிலம் – கன்னிலம்.]

கன்னிவாழைப்பழம் *kaṉṉi-vāḻai-paḻam,* பெ.(n.) திண்டுக்கல்லிற்கு அருகிலுள்ள கன்னிவாடி மலையில் விளையும் மலைப்பழ வகை; a kind of plantain from the hill of kannivadi near Dindigul (கீ.ரா.குறிப்பு.).

[கன்னிவாடி → கன்னி + வாழைப்பழம்.]

கன்னிவிடியல் *kaṉṉi-viḍiyal,* பெ.(n.) வைகறை; early dawn. *"கன்னிவிடியற் கணைக்காலாம்பல் ... மலரும்" (ஐங்குறு. 68.).*

[கன்னி + விடியல்.]

கன்னிவெறி *kaṉṉi-veṟi,* பெ.(n.) கன்னித்திங்களில் காயும் வெயில்; the heat of Purattāši.

ம. கன்னிவெறி

[கன்னி + வெறி.]

கன்னிவேட்டை *kaṉṉi-vēṭṭai,* பெ.(n.) முதல் வேட்டை; first hunt. *"கன்னிவேட்டை மகன்போக" (பெரியபு. கண்ணப்ப. 47.).*

[கன்னி + வேட்டை.]

கன்னிறம் *kaṉṉiṟam,* பெ.(n.) சங்கஞ்செடி. (மலை.); mistletoe-berry thorn.

[கல் + நிறம் - கன்னிறம்.]

கன்னீர் *kaṉṉīr,* பெ.(n.) 1. கருமையான நீர்; black water. 2. பனிக்குடத்து நீர்; amniotic fluid. contained in a sac in the womb (சா.அக.).

க. கன்னீர், கன்னீரு.

[கல் + நீர்.]

கன்னீர்ப்படுத்தல் *kaṉṉīr-p-paḍuttal,* பெ.(n.) 1. போரிலிறந்த வீரனது நடுகல்லை நீராட்டும் புறத்துறை (பு.வெ.10, பொதுவியற். 10.); (Puram). theme of bathing a memorial stone of a dead warrior. 2. போர்செய்து இறந்த வீரனது வீரச் செயலை வரைந்த கற்களைப் போர்க்களத்திலே மறவர் நிரைத்தலைக்கூறும் புறத்துறை. (பு.வெ.10, பொதுவியற்.11.); (Puram) theme of soldiers storing up the memorial stones of the dead warriors in the battle-field.

[கல் + நீர்ப்படுத்தல்.]

சுரும்பு சூழும் மாலை பக்கத்திலே அசைந்து வரப் பார்த்துக் கைக்கொண்ட கல்லினைப் புனலிலே யிட்டதைக் கூறுவது கன்னீர்ப்படுத்தல்.

கன்னு *kaṉṉu,* பெ.(n.) பருத்தி; cotton (சா.அக.).

[குல் → கல் → கன் → கன்னு - பிறந்தவர், பூத்தல்.]

கன்னுகா *kaṉṉugā,* பெ. (n.) கல்நார்; asbestos.

[கல் → கன் → கன்னுகா.]

கன்னு¹-தல் *kaṉṉu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. பழுத்தல்; to rippen; 2. அரத்தங்கட்டிச் சிவப்பாதல்; to be black or yellow spot produced by extravasated blood caused by a contusion.

[கன் → கன்னு. (வ.மொ.வ.112.).]

கன்னுதல் என்பது பழுத்தலைக் குறிக்கும் ஓர் அருந்தமிழ்ச் சொல். வெப்பத்தினாலாவது அழுத்தத்தினலாவது உள்ளங்கையிலும் உள்ளங் காலிலும் அரத்தங்கட்டிச் சிவந்துவிட்டால் அதை அரத்தங்கன்னுதல் என்பர். கன்னுதல் வேறு; கன்றுதல் வேறு. முன்னது பழுத்தல்; பின்னது வலுத்தல். கனி [பழம்] என்னும் சொல் கன்னி [பழுத்தல்] என்பதன் தொகுத்தலே. [தமிழ் வரலாறு 56,57.]

கன்னு²-தல் *kaṉṉu-,* செ.குன்றாவி.(v.t.) குழந்தை பெறுதல், ஈனுதல்; to give birth to.

தெ. கன

[குல் (தோன்றல் கருத்து) → கல் → கன் → கன்னு.]

கன்னுவர் *kaṉṉuvar,* பெ.(n.) கன்னார் (திவா.); braziers, bell-metal workers.

[கன் → கன்னுவர்.]

கன்னுறுகம் *kaṉṉuṟugam,* பெ.(n.) சிறுகீரை. (மலை.); a speceies of amaranth.

[கன்று + உறுகம் – கன்னுறுகம்.]

கன்னூஞ்சல் *kaṉṉūñjal,* பெ.(n.) ***கன்னியூஞ்சல்*** பார்க்க; see *kaṉṉi-ūñjal.*

ம. கன்னூஞ்சல்

[கன்னியூஞ்சல் கன்னூஞ்சல். (கொ.வ.).]

கன்னெஞ்சம் *kaṉṉeñjam,* பெ.(n.) இரக்கவுணர்வு இல்லாத மனம்; வன்மனம்; hard heartedness.

க. கல்லெர்தெ; கல்லெதெ.

[கல் + நெஞ்சம்.]

கன்னெஞ்சன் *kaṉṉeñjaṉ,* பெ.(n.) வன்மன முள்ளவன்; hard-hearted, unfeeling, unrelenting person. *"அன்ப ரன்புக் கெளியை கன்னெஞ்சனுக் கெளியையோ"* (தாயு. கருணா. 9.).

க. கல்லெர்தெக, கல்லெதெக.

[கல் + நெஞ்சன்.]

கன்னெஞ்சி *kaṉṉeñji,* பெ.(n.) அவுரி (யாழ்.அக.); Indigo.

[கல் (காவி நிறம்) + நிறஞ்சி – கன்னெஞ்சி.]

கன்னெஞ்சு *kaṉṉeñju,* பெ.(n.) வன்மனம்; stony hearted, hard-hearted. *"கன்னெஞ் சுருக்கி"* (திருவாச. 10, 11.).

க. கல்லெதெ, கல்லொதெ.

[கல் + நெஞ்சு.]

கன்னை *kaṉṉai,* பெ.(n.) கட்சி; side; party, as in games, wrestling, fighting.

[கன் → கன்னு → கன்னை (பிரிவு).]

கன்னைக்கோல் *kaṉṉai-k-kōl,* பெ.(n.) ***கன்னக்கோல்*** பார்க்க; see *kaṉṉa-k-kōl.*

ம. கன்னக்கோல்; **க.** கன்னகத்தரி; **தெ.** கன்னக்கோல.

[கன்னக்கோல் → கன்னைக்கோல்.]

கன்னைக்கொற்றி *kaṉṉai-k-koṟṟi,* பெ.(n.) இரண்டு பக்கமும் உதவி செய்வோன் (யாழ்ப்.); one who helps both the parties, generally in play.

[கன்னை + கொற்றி.]

கன்னைபிரி–த்தல் *kaṉṉai-piri-,* 4 செ.குன்றா.வி.(v.t.) விளையாட்டில் பங்கு பெறுவோரை இருபிரிவு செய்தல் (யாழ்ப்.); to divide a company into two parties for a game.

[கன்னை + பிரி.]

கன்னைமாறு–தல் *kaṉṉai-māṟu-,* 5 செ.கு.வி.(v.i.) விளையாட்டிற் பக்கமாறி ஆடுதல் (யாழ்ப்.); to change sides for a new game.

[கன்னை + மாறு.]

கன[1] *kaṉa,* பெ.(n.) ***கனா*** பார்க்க; see *kaṉā.* *"துஞ்சு மிடைக் கன மூன்றவை தோன்றலின்" (சீவக.219.).*

ம. கனவு; **க., து.** கன; **தெ., கொலா., நா.** கல.

[கனா → கன.]

கன[2]**–த்தல்** *kanna-,* 4 செ.கு.வி.(v.i.) 1. பாரமாதல்; to be heavy. *"கனக்கும் வெண்டரள வடம்" (பாரத. குருகுல. 137).* 2. மிகுதியாதல்; to be abundant, copious, numerous. *"சாமந்தர்க்குப் புறம்பே நாடுகள் கனக்கவுண்டாகிலும்" (ஈடு.1,3,9.).* 3. பருத்தல்; to be stout. *"கனத்தெழு விலங்கற்றிண்டோர்" (இரகு. இரகுவ.59.).* 4. தடித்தல்; to grow dense or thick. 5. கட்டைக் குரலாதல்; to be hoarse; to break, as the voice of a youth. குரல் கனத்து விட்டது (உ.வ.). 6. பெருமையுறுதல்; to be honourable, noble, illus trious. கனத்த குடியிற் பிறந்தவன்(உ.வ.).

ம. கனக்குக; **H:** kan; **Skt.** ghana.

[கல் → கன → கனத்தல்.]

கனக்குறைவு *kaṉa-k-kuṟaivu,* பெ.(n.) 1. இலேசான தன்மை; loss of weight, lightness. 2. பெருமைக் கேடு; degradation. அந்தச் செயலில் தலையிடுவது கனக்குறைவு (உ.வ.).

ம. கனக்குறவு, கனக்கேடு.

[கனம் + குறைவு.]

கனக்கேடு *kaṉa-k-kēḍu,* பெ.(n.) மதிப்புக்குறைவு; loss of prestige, humiliation, degradation.

ம. கனக்கேடு.

[கனம் + கேடு.]

கனகக்கதலி *kaṉaga-k-kadali,* பெ.(n.) பொன் னிறமான வாழைவகை; a species of gold- coloured plantain (சா.அக.).

[கனகம் + கதலி.]

கனகச்சண்பகம் *kaṉaga-c-caṇbagam,* பெ.(n.) மஞ்சள் சண்பகம்; yellow champak (சா.அக.).

[கனகம் + சண்பகம்.]

கனகச்சம்பா *kaṉaga-c-cambā,* பெ.(n.) உயர்ந்த சம்பா நெல்வகை; a superior kind of paddy.

[கனகம் + சம்பா.]

கனகச்சுற்றம் *kaṉaga-c-cuṟṟam,* பெ.(n.) அரசர்க் குரிய எண் பெருந்துணைவருள் ஒரு வகையாராகிய கருவூலவதிகாரிகள் (திவா.); men in charge of the treasury, one of eṉ-peruntuṇaivar.

[கனகம் = பொன், கருவூலப்பொருள்கள். கனகம் + சுற்றம்.]

கனகச்செம்பு *kaṉaga-c-cembu,* பெ.(n.) தங்கச் செம்பு; highly concentrated gold of copper colour. (சா.அக.)

[கனகம் + செம்பு.]

கனகசபை[1] *kaṉga-šabai,* பெ.(n.) சிவபெருமான் நடனமிடும் பொன்னம்பலம்; lit. hall made of gold, hall roofed with gold plates in which the deity Nataraja is kept, as at Chidambaram. *"கனக சபைமேவு மெனது குருநாதா" (திருப்பு.).* ***பொன் னம்பலம்*** பார்க்க; see *poṉṉambalam.*

[கனகம் +சபை.]

கனகசபை[2] *kaṉaga-šabai,* பெ.(n.) தலைப் பேரண்டம்; human skull (சா.அக.).

[கனக(ம்) + சபை.]

கனகத்தும்பி *kaṉaga-t-tumbi,* பெ.(n.) பொன் வண்டு; dragonfly.

ம. கனகதும்பி

[கனகம் + தும்பி.]

கனகதண்டி *kaṉaga-taṇḍi,* பெ.(n.) **கனகதண்டிகை** பார்க்க; see *kaṉagataṇḍigai. "கனகதண்டி மேலுக்குப் பஞ்சணையில்லை யென்பார்க்கும் விசனமொன்றே" (தனிப்பா.).*

[கனகம் + தண்டி.]

கனகதண்டிகை *kaṉaga-taṇḍigai,* பெ.(n.) பொற் சிவிகை; taṇḍigai studded with gold.

ம. கனகத்தண்டு

[கனகம் + தண்டிகை.]

கனகதப்பட்டை *kaṉga-tappaṭṭai,* பெ.(n.) இசைக் கருவிவகை (வின்.); a small tabor.

[கனகம் + தப்பட்டை.]

கனகதோராவல்லி *kaṉaga-tōrāvalli,* பெ.(n.) ஒருவகை மணி; a kind of topaz. *"இவற்றின்க ணுதித்த ... தோராவல்லி கனகதோராவல்லி" (திருவாலவா.25,22.).*

[கனகம் + தோராவல்லி.]

கனகந்தம் *kaṉagandam,* பெ.(n.) காட்டுமா; wild mango.

[கனம் + கந்தம். கனம் = மிகுதி. கந்தம் = சுவை, மணம்.]

கனகநிறத்தி *kaṉaga-niṟatti,* பெ.(n.) மஞ்சள்; turmeric.

[கனகம் = பொன். கனக(ம்) + நிறத்தி = கனகநிறத்தி = பொன்வண்ணமுடையது. 'இ' உடைமை குறித்த ஈறு.]

கனகப்பிரபை *kaṉaga-p-pirabai,* பெ.(n.) முடக் கற்றான் (சா.அக.). palsy curer (சா.அக.).

மறுவ. நொடக்கத்தான்

[கனகம் + பிரபை.]

கனகம்[1] *kaṉagam,* பெ.(n.) பொன்; gold. *"காரார் வண்ணன் கனகமனையானும்" (தேவா.502,9.).*

க. கனக; **H.** kanagam; **Skt.** kanaka; **Pkt.** kaṉaka.

[கல் → கன் → கனலுதல் = எரிதல், ஒளிர்தல். கன் → கன + அம் – கனவம் →கனகம். அம் = பெருமைப் பொருள் பின்னொட்டு.]

kanaka, kandala, kala (Ct.I,47)., kāñcana, gold. There is the Sk. Verbal theme kan, to shine (cf.D.kāṉ1.), for which, however, there are no authoritative references. The D. terms for gold are cini, cinna, cinni, which are related to can1. etc. cf.D. keṅka, keṅch, ken etc. (K.K.E.D. XXV.).

கனகம்[2] *kaṉagam,* பெ.(n.) மீன்கொத்தி; common king fisher.

[குல் → கல் → கன்→ கனகம் (கொத்துவது).]

கனகம்[3] *kaṉagam,* பெ.(n.) 1. மிளகு; pepper. 2.வால் மிளகு; tail pepper. 3. ஊமத்தை; thorn apple. 4. நெல்லிக்காய்; Indian goose berry. 5. ஒருவகை மஞ்சட் சந்தன வகை; a species of yellow sandal wood (சா.அக.).

[கனகம் = பொன். பொன் போன்று மதிக்கத்தக்க சிறந்த பொருள்கள்.]

கனகமலை *kaṉaga-malai,* பெ.(n.) மேருமலை; Mēru, the gold mountain. *"புலியூர்க் கனக மலைச்சிலை வாணனை" (புலியூரந்.).*

ம. கனகமல, கனகமாமல; **க.** கனககிரி, கனகநக.

[கனகம் + மலை.]

கனகமாரிபொழி–தல் *kaṉaga-māri-poḻi-,* 2 செ.கு.வி. (v.i.) பொருளைச் சிறப்பாக வழங்குதல்; lit., to shower gold, to bestow gifts liberally.

[கனகமாரி + பொழி.]

கனகமாழை *kaṉaga-māḻai,* பெ.(n.) பொற்கட்டி; lump of gold, nugget. *"கப்பிய கனகமாழையால் (சீவக.913.).*

[கனகம் + மாழை.]

கனகமிளகு *kaṉaga-miḻagu,* பெ.(n.) வால்மிளகு (மலை.); cubeb.

[கனக(ம்) + மிளகு.]

கனகமூலி *kanaga-mūli,* பெ. (n.) சோற்றுக் கற்றாழை; Indian pulp aloe (சா.அக.).

[கனகம் + மூலி – கனக மூலி = பொன் போன்ற நிறமுடையசெடி.]

கனகரம்பை *kanaga-rambai,* பெ.(n.) ஒருவகை வாழை; a kind of plantain tree (சா.அக.).

[அரம்பை = வாழை. கனகம் + அரம்பை.]

கனகவல்லி *kanaga-valli,* பெ.(n.) கற்பூரவல்லி; thick leaved lavendar (சா.அக.).

[கனக(ம்) + வல்லி.]

கனகவுப்பு *kanga-v-uppu,* பெ.(n.) 1. ***கல்லுப்பு*** பார்க்க; see *salt.* 2. பொதுவகை யுப்பு; common salt (சா.அக.).

[கனக(ம்) + உப்பு.]

கனகன்[1] *kanagan,* பெ.(n.) இரணியகசிபு; a Daitya king of golden colour. *"நன்றெனக் கனகன் சொன்னான்". (கம்பரா.இரணியன்வ.124.).*

[கனக(ம்) + அன்.]

கனகன்[2] *kanagan,* பெ.(n.) காசுக்குற்றவகை. (சரவண.பணவிடு.67.). a blemish, in coins.

[கல → கலகன் → கனகன் = குற்றம்.]

கனகனப்பு *kanakanappu,* பெ.(n.) ***கணகணப்பு*** பார்க்க; see *kanakanappu.*

[கணகணப்பு → கனகனப்பு.]

கனகாட்சி *kanakātci,* பெ.(n.) சுடரும்புல் (சோதிப் புல்); luminous grass (சா.அக.).

[கனக(ம்) + காட்சி.]

கனகாம்பரம் *kanagāmbaram,* பெ.(n.) பூச்செடி வகை; unarmed orange nail dye, a kind of plant with golden yellow flowers.

ம., தெ. கனகாம்பரம்.

[கனகம் + அம்பரம். அம்பரம் = ஆடை கனகாம்பரம் = பொன் போன்ற தோற்றமுடையது.]

கனகாரியம் *kana-kāriyam,* பெ.(n.) முகாமையான பணி; important business.

[கன + காரியம். கன = பெரிய.]

கனகி *kanagi,* பெ.(n.) ஊமத்தை; thorn-apple. *"கனகியின் முகை ... பொதிசடை முடியினன்" (தேவா.832,4.).*

[கனகம் → கனகி (பொன்னூமத்தை).]

கனகு *kanagu,* பெ.(n.) பொன்; gold.

[கல் → கன் → கன → கனகு.]

கனங்காசிகம் *kanaṅgāśigam,* பெ.(n.) சிவப்பு, அந்திமல்லிகை; (சா.அக.).

[கனல் = எரிதல், சிவப்பு நிறமடைதல். கனல் + காசிகம்.]

கனங்காய் *kanaṅkāy,* பெ.(n.) 1. கோரைக்கிழங்கு; Rōray root. 2. மனோரஞ்சிதம். (வின்.); fragrant heart's joy.

[கனம் = மிகுதி, பெருமை + காய்.]

கனங்குழை *kanaṅ-kuḻai,* பெ.(n.) கனவிய குழையணிந்த பெண்; woman, wearing heavy ear-rings. *"கனங்குழை மாதர்கொல்" (குறள்,1081).*

ம. கனக்குழயாள்

[கனம் + குழை.]

கனங்கொள்(ளு)–தல் *kanaṅ-koḷ-,* 16 செ.கு.வி. (v.i.) 1. சுமையுடைத்தாதல்; to become heavy, unwieldy. 2. பெருமையுடையதாதல் (வின்.); to become serious, important, momentous.

[கனம் + கொள்–.]

கனச்சூடு *kana-c-cūḍu,* பெ.(n.) அதிகச்சூடு; intense heat (சா.அக.).

[கனம் + சூடு. கனம் = மிகுதி.]

கனசாரம் *kanaśāram,* பெ. (n.) 1. பச்சைக் கருப்பூரம்; Crude Camphor. 2. சீதளம்; Camphor cinna momum. 3. மிகுதியான சத்து; highly concentrated essence; thick extract (சா.அக.).

[கனம் + சாரம். கனம் = மிகுதி.]

கனசுரம் *kanaśuram,* பெ.(n.) கடுமையான சுரம்; high fever (சா. அக.).

[கனம் + சுரம்.]

கனத்தகுரல் *kanatta-kural,* பெ.(n.) வெடித்தகுரல்; coarse voice (சா.அக.).

[கனம் → கனத்த + குரல்.]

கனத்தநாள் *kanatta-nāḷ,* பெ.(n.) கோள் நிலையில் நோயைப்பெருகச் செய்வதாகக் கருதப்பட்ட காருவா வெள்ளுவா நாள்கள்; day which is supposed to have in itself powers to aggravate a disease in its course, as the new or full moon; when the influence of the planets is supposed to be unusually powerful.

[கனத்த + நாள்.]

கனத்தி *kanatti,* பெ.(n.) வைப்பரிதாரம் (வின்.); a kind of prepared arsenic.

[கனம் → கனத்தி (மிகுவிப்பது).]

கனத்தொழிலியற்று-தல் *kana-t-toḻiliyaṟṟu-,* 8 செ.கு.வி.(v.i.) உடம்பினுறுப்பு அதிகமாகத் தொழிற்படுதல்; to function excessively on the part of an organ (சா.அக.).

[கனம் + தொழில் + இயற்று.]

கனதண்டி *kanataṇḍi,* பெ.(n.) கன முள்ளது; that which is heavy (சா.அக.).

[கன(ம்) + தண்டி.]

கனதந்தி *kanatandi,* பெ.(n.) நெருஞ்சி; caltrops thistle (சா.அக.).

[கனம் + தந்தி. தந்தம் = பல், முள். தந்தம் → தந்தி.]

கனதனம் *kanatanam,* பெ.(n.) பெருஞ்செல்வம்; excessive wealth. காட்டில் புதைத்த கனதனமும், பாட்டில் புதைத்த பழம் பொருளும், வீட்டில் மனையாள் திருமனமும் அறிவது அரிது (பழ.).

[கனம் + தனம்.]

கனதாது *kanatādu,* பெ.(n.) உடம்பிற் றோய்ந்த தாது; inspissated element of the body (சா.அக.).

[கன(ம்) + தாது.]

கனதாள் *kanatāḷ,* பெ.(n.) உள்ளங்கால்; sole of the feet (சா.அக.).

[கன(ம்) + தாள்.]

கனதி *kanadi,* பெ.(n.) 1. சுமை; heaviness, ponderosity, gravity. 2. பருமை (வின்.); thickness. 3. இறுமாப்பு. (வின்.); pride, haughtiness.

[கல் → கனம் → கனதி.]

கனதூக்கம் *kanatūkkam,* பெ.(n.) அதிகமான தூக்கம்; deep sleep.

[கன + தூக்கம்.]

கனதை[1] *kanadai,* பெ.(n.) 1. மதிப்பு; honour, dignity. *"மற்றுள பொருளுந் தோற்றுக் கனதைபோய்" (குற்றா.தல.மந்தமா.43.).*

[கனதி → கனதை.]

கனதை[2] *kanadai,* பெ.(n.) மூட்டுகளை வளைத் தசைக்க முடியாமை; immobility of a joint.

[கல் → கனம் = சுமையானது, உறுதியானது. கன(ம்) → கனதை = அசையாதது.]

கனநாள் *kana-nāḷ,* பெ.(n.) கனத்தநாள்; (Astrol.) unpropitious day considered as exerting evil influence, on sick person, etc. ***கனத்தநாள்*** பார்க்க; see *kanattanāḷ.*

[கனம் + நாள்.]

கனநீர் *kana-nīr,* பெ.(n.) அணு உலைகளின் தேவைக்கேற்ப வேதியியல் முறைப்படி உண்டாக்கும் நீர்; heavy water.

[கன(ம்) + நீர்.]

கனப்படுத்து-தல் *kana-p-paḍuttu-,* 5 செ.கு.வி. (v.i.) பெருமைப்படுத்துதல்; to honour, respect, esteem.

[கனம் + படுத்து-.]

கனப்பாகு *kana-p-pāgu,* பெ.(n.) 1. கன்னல் சருக்கரை; sugar prepared from sugar-cane juice. 2. அதிகத் தடிப்பான பாகு; a thick syrap (சா.அக.)

[கனம் + பாகு.]

கனப்பாடு *kana-p-pāḍu,* பெ.(n.) 1. கனமாயுள்ள தன்மை (திவ். பெரியாழ்.3,5,பிர.பக். 626); massiveness, weight. 2. அகற்சி; expanse. *"கனப்பாட்டிற் காயமே" (நீலகேசி.288.).*

[கனம் + பாடு "பாடு" (தொ.பெ.ாறு).]

கனப்பு *kaṉappu,* பெ.(n.) 1. கனமாயிருக்கை; being heavy. 2. பருமை (வின்.); thickness. 3. சுமை (வின்.); weight, heaviness. 4. அழுத்தம்; hardness, as of a swelling. 5. கொழுப்பு (வின்.); fattiness. 6. இறு மாப்பு; pride, self-conceit. உன் கனப்பு எடுத்துப்போடுவேன். (வின்.). 7. மிகுதி;abundance. *"புதுமலரின் கனப்பெண்ணிறிரை சுமந்து" (பெரியபு.திருநா.3.).* 8. வீக்கம்; hard boil.

[கனம் → கனப்பு.]

கனப்புக்காட்டு–தல் *kaṉappu-k-kāṭṭu-,*5செ. குன்றாவி. (v.t.) சூடுண்டாக்குதல்; to heat, to make hot.

[கனப்பு + காட்டு.]

கனப்புச்சட்டி *kaṉappu-c-caṭṭi,* பெ.(n.) ***கணப்புச் சட்டி*** பார்க்க; see *kaṇappu-c-caṭṭi.*

[கணப்பு → கனப்பு + சட்டி.]

கனப்புப்போடு–தல் *kaṉappu-p-pōḍu,* 19 செ.குன்றாவி. (v.t.) தீ மூட்டுதல்; to kindle fire (சா.அக.).

[கனப்பு + போடு–.]

கனப்புற்று *kaṉa-p-puṟṟu,* பெ. (n.) நார்த்தசை மிகுதியாகவுள்ள புற்று; cancer containing hard fibrous tissue (சா.அக.).

[கனம் + புற்று.]

கனப்பேறு–தல் *kaṉappēṟu-,* 20 செ.கு.வி.(v.i.) உடற்சூடு அதிகமாகுதல்; to get increased in temperature of the body (சா.அக.).

[கனப்பு + போடு–.]

கனப்பொள்ளல் *kaṉappoḷḷal,* பெ.(n.) மாழையில் பெரியதாக அமையும் உள்கூடு; inner hollow, as of statue. கனப் பொள்ளலாகச் செய்த ரிஷபம் ஒன்று. (S.I.I.Vol.2:2.inisc.46.)

[கனம்(ம்) + பொள்ளல்.]

கனபண்டம் *kaṉapaṇḍam,* பெ.(n.) 1. திண்மையான பொருள்; solid substance. 2. செரிக்காத பண்டம்; substance not easily digestible (சா.அக.).

[கன(ம்) + பண்டம் கனம் = பருமையானது, உறுதியானது, கட்டியானது.]

கனபல்லவம் *kaṉapallavam,* பெ.(n.) முருங்கை; drumstick tree. (சா.அக.)

[கன(ம்) + பல்லவம் – கனபல்லவம் = பெருந்தளிர்.]

கனபார்வை *kaṉapārvai,* பெ.(n.) எட்டப்பார்வை; far-sightedness Hyperopia. (சா.அக.)

[கன(ம்) + பார்வை. கனம் = பெரியது, நீண்டது, தொலைவானது.]

கனபித்தம் *kaṉa pittam,* பெ.(n.) உடம்பில் அதிகமாகும் பித்தம்; excessive secretion of bile. (சா.அக.)

[கன(ம்) + பித்தம். கனம் = சுமையானது, மிகுதியானது, அதிகமானது.]

கனபுடம் *kaṉa-puḍam,* பெ.(n.) ஐம்பது அல்லது நூறு எரு முட்டையாலான புடம் (யாழ்.அக.); calcination by using 50 or 100 cakes of dried cow-dung.

[கனம் + புடம்.]

கனம்[1] *kaṉam,* பெ.(n.) 1. சுமை (திவா.); heaviness, weight. 2. பருமன்; thickness; size. 3. பெருமை; honour, dignity, respectability, moral worth. 4. செறிவு (திவா.); density, closeness, hardness, solidity. 5. திரட்சி (திவா.); roundness. 6. உறுதி; firmness. *"கனமே சொல்லினேன்" (திவ்.திருவாய். 9,3,5.).* 7. மிகுதி; abundance, copiousness, excessiveness, plenty, much. 8. ஒரெண்ணை அதனாலேயே இருமுறை பெருக்க வரும் இலக்கம். (பிங்.); (math.) cube of a number, one of aṭṭa-kaṇidam. 9. கனவடிவு; cube, as a solid. 10. கூட்டம் (வின்.); multitude, assemblage, crowd. 11. வட்டம் (திவா.); circle. 12. அகலம்; width, breadth. 13. முகில்; cloud. *"கனமே குழல்" (தஞ்சைவா.49).* 14. கோரைக்கிழங்கு; tuber of kōraigrass.

[கல் → கன் = கல், உறுதிப்பாடு. கன் → கன. கனத்தல் = பளுவாதல், மிகுதியாதல், பருத்தல், குரல் தடித்தல், பெருமையுறுதல். கன → கனம் = தடிமன், பருமன், பெருமை, செறிவு, திரட்சி உறுதி, மிகுதி, கூட்டம், மும்மான வடிவு.]

பொதுவாகக் கனத்திற்கு எடுத்துக்காட்டாகச் சொல்வது கல்லே. கல்லைப்போற் கனக்கிறது என்பது உலகவழக்கு. பண்டைநாளிற் கனத்த எடைக் கெல்லாம் கல்லையே பயன்படுத்தியதால், படிக்கல் என்னும் வழக்கெழுந்தது. இங்கிலாந்திலும், அவ் வழக்கமிருந்ததை stone [14 பவுண்டு] என்னும் சொல் உணர்த்தும்.

வடமொழியில் கனத்தல் என்னும் வினை யில்லை. மா.வி.அகரமுதலி காட்டியிருக்கும் "ஹன்" [கொல்] என்னும் மூலம், வடமொழியிற் "கன" என்னும் சொற்குள்ள பல்வேறு பொருள் களுள் ஒன்றற்குத்தான் ஏற்கும்.

த. கனம்> **Skt.** ghana. (வ.மொ.வ.112,113.).

கனம்[2] *kaṉam,* பெ.(n.) விளங்கி ஒளிரும் பொன்; gold. *"கனங்குழாய்" (கலித்.57).*

[கல் → கன் → கனம். (செல்வி.1978.பிப்.279).]

கனம்பாடு-தல் *kaṉam-pāḍu-,* 5 செ.கு.வி.(v.i.) குரல்விட்டுப் பாடுதல் (வின்.); to sing with a full deep voice.

[கனம் + பாடு-.]

கனம்பார்-த்தல் *kaṉam-pār-,* 4 செ.கு.வி.(v.i.) 1. நிறையளவையை மதிப்பிடுதல்; to estimate weight. அந்த மூட்டையைக் கனம்பார்த்து எடையைச் சொல் (உ.வ.). 2. நிலைதெரிதல்; to consider conditions or external circumstances. அவன் பேசும்போதே என்னைக் கனம் பார்க்க வந்திருக் கிறான் என்பதை உணர்ந்து கொண்டேன் (உ.வ.).

[கனம் + பார்-.]

கன்மாப்பலகை *kaṉam-ā-p-palagai,* பெ.(n.) கடைக்கழக (சங்கப்பலகை); the famous miraculous seat of the members of the third Tamiḻ Šangam. *"கன்மாப்பலகை யேற்றிக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப" (இறை.1,உரை.).*

[கல் + மா + பலகை – கன்மாப்பலகை.]

கனமூலம்[1] *kaṉa-mūlam,* பெ.(n.) கனத்தொகை யினின்று அறியும் அதன்மூலம் (திவா.); (math.) cube root, one of aṭṭa-kaṇidam.

H. kanamul

[கனம் + மூலம்.]

கனமூலம்[2] *kaṉa-mūlam,* பெ. (n.) வேர் பருத்த செடி; thick rooted plant (சா.அக.).

[கன(ம்) + மூலம்.]

கனமூலி *kaṉa-mūli,* பெ.(n.) சிறந்த பண்புகளை யுடைய மூலிகைகள்; protent drugs (சா.அக.).

[கன(ம்) + மூலி.]

கனரகத்தொழில் *kaṉaraga-t-toḻil,* பெ.(n.) **கன வகைத்தொழில்** பார்க்க; see *kaṉavagai-t-toḻil.*

[கன(ம்) + ரக + தொழில்.]

கனராகம் *kaṉa-rāgam,* பெ.(n.) **வல்லராகம்** பார்க்க; see *vallarāgam,*

[கனம் + அராகம். அராகம் → ராகம் (கொ.வ.).]

கனல்[1] *kaṉal,* பெ.(n.) 1. நெருப்பு; fire. *"உழிதரு காலுங் கனலும்" (திருவாச.5,8.).* 2. வெப்பம்; heat.

ம., க. கனல்; **தெ.** கனலு; **கோத.** கன்; **து.** அனல், கனிமூரி (புகை நாற்றம்); **உரா;** கனலு; **பட.** கனகன.

[குல் → குன் → கன் → கனல். (வே.க.182).]

கனல்[2]**(லு)-தல்** *kaṉalu-,* 13 செ.கு.வி.(v.i.) 1. எரிதல்; to be hot; to glow, as fire. 2. கொதித்தல்; to boil, as hot water. *"தீப்பொறி கனலுமே" (நாலடி ,291).* 3. சினத்தல்; to be angry, to be enraged. *"மாமுனி கனல மேனாள்" (கம்பரா.நீர்விளை.2.).* 4. சிவத்தல்; to redden. *"கண்கனன்று ... நோக்குதலும்" (பு.வெ.6,23.).*

க. கனல்; **தெ.** கனலு. **கூ.** கம்ப.

[கன் → கனல்(லு) (வேக.183).]

கனல்[3]**(லு)-தல்** *kaṉal(lu)-,* 14 செ.குன்றாவி.(v.t.) சுடுதல்; to burn, to be warm, as body in temperature. *"சுலவி வயிற்றகங் கனலுஞ் சூலை நோய்" (பெரியபு. திருநா.62.).*

[கல் → கனல் → கனறுதல் = எரிதல், கருகுதல், சினத்தல். கல் → கன் → கனல் = நெருப்பு. கனலுதல் = எரிதல், சினத்தல். (த.வர.56).]

கனல்கட்டை *kaṉalkaṭṭai,* பெ.(n.) தணல்கரி; cinder.

[கனல் + கட்டை.]

கனல்தட்டு *kaṉal-taṭṭu,* பெ.(n.) நெருப்புக்கலம்; brazier.

[கனல் + தட்டு.]

கனல்மூங்கில் *kaṉal-mūṅgil,* பெ.(n.) நச்சுமூங்கில்; Asiatic poison bulb or Asiatic quill (சா.அக.).

[கனல் + மூங்கில்.]

கனல்வாதை *kaṉal-vādai,* பெ.(n.) பசி; hunger. *"கனல்வாதை அன்ளிப் புசித்து நான் கண்மூடி மௌனியாகி" (தாயுமான.).*

[கனல் + வாதை (துன்பம்).]

கனல்வு *kaṉalvu,* பெ.(n.) சினம்; anger. *"இங்கு நின்வர வென்னவெனக் கனல்வெய்த" (கம்பரா. சூளா.78.).*

க. கனல்; **தெ.** கனலு.

[கனல் → கனல்வு (வே.க.183).]

கனலல் *kaṉalal,* தொ.பெ.(vbl.n.) 1. எரிதல்; burning. வெப்பங் கொள்ளல்; growing warm (சா.அக.).

[கனல் → கனல. 'அல்' தொ.பெ.ஈறு.]

கனலி[1] *kaṉali,* பெ.(n.) 1. கதிரவன்; sun. *"வெங்கதிர்க் கனலி" (புறநா.41,6.).* 2. நெருப்பு. (திவா.); fire.

[கல் → கன் → கனல் = நெருப்பு. கனலுதல் = எரிதல், சினத்தல். கனல் → கனலி. (வே.க.183).]

கனலி[2] *kaṉali,* பெ.(n.) 1. கள்ளி (யாழ்.அக.); spurge. 2. பம்பவெட்டி (L.); apple bladder-nut. 3. காட்டாமணக்கு; physic nut. 4. கருப்புச் சித்திரமூலம்; a black variety of leadwort. 5. செய்ந்நஞ்சைக் கட்டுமொரு மூலிகையான கப்பட்டி; a plant. 6. கொடுவேலி; Ceylon lead wort *"முந்தூழ்–மாட்டுறு கனலியென" (கந்தபு. மகா.11.) (சா.அக.).*

[கனல் → கனலி.]

கனலி[3] *kaṉali,* பெ.(n.) 1. அரத்த மூலமென்னுமோர் நோய்; bleeding piles. 2. செவிட்டுத்தன்மை; deafness.

[கனல் → கனலி.]

கனலி[4] *kaṉali,* பெ.(n.) பன்றி; hog. *"இளமதியம் புரையுங் கனலி மருப்பு" (சிவப்.பிரபந். வெங்கைக்கல. 99.).*

[கனல் → கனலி → கனல் = சினம். கனலி = கடுஞ்சினம் கொண்ட பன்றி.]

கனலிநாள் *kaṉali-nāḷ,* பெ.(n.) கைம்மீன் (அத்தம்) என்னும் நாண்மீன்; the 13th nakshatra.

[கனலி + நாள்.]

கனலை *kaṉalai,* பெ.(n.) காயா; bilboary tree (சா.அக.).

[கனல் → கனலை.]

கனலொழுக்கு *kaṉal-oḻukku,* பெ.(n.) எரிமலைப் பிழம்பொழுக்கு; flowing of lava.

[கனல் + ஒழுக்கு.]

கனலொழுங்கு *kaṉal-oḻuṅgu,* பெ.(n.) தீக்கொழுந்து (சூடா.); flame.

[கனல் + ஒழுங்கு.]

கனலொளி *kaṉal-oḷi,* பெ.(n.) வெந்தழலொளி; glow.

[கனல் + ஒளி.]

கனலோன் *kaṉalōṉ,* பெ.(n.) கதிரவன்; lit., he who is hot, sun. *"காடுகனலக் கனலோன் சினஞ் சொரிய" (பு.வெ.10,பொதுவியற்.10.).*

[கனல் → கனலோன்.]

கனவகைத்தொழில் *kaṉavagai-t-toḻil,* பெ.(n.) எஃகு, இரும்பு போன்ற மூலப்பொருள்கள் உருவாக்கும் தொழில்துறை; heavy industry.

மறுவ. கனரகத் தொழில்

[கன(ம்) + வகை + தொழில்.]

கனவட்டம் *kaṉa-vaṭṭam,* பெ.(n.) 1. குதிரை (திவா.); horse. 2. பாண்டியன் குதிரை; the state horse of the Pāṇḍya kings. *"வழுதி கனவட்டம்". (பெருந்தொ.656.).*

[கன + வட்டம். பருமனும், (கனமும்) உருட்சியும், உடைமை பற்றி, "கனம்" குதிரைக்கு அடையாக வந்தது.]

கனவமலம் *kaṉava-malam,* பெ.(n.) உமரிப்பூடு; Indian salt-wort (சா.அக.).

[கன + அமலம்.]

கனவரம் *kaṉavaram,* பெ.(n.) உடலின் சிறந்த பகுதி; the vital part of the body (சா.அக.).

[கன → கனவரம்.]

கனவரி–த்தல் *kaṉavari-,* 4 செ.கு.வி.(v.i.) கனவில் தனக்குத் தானே பேசுதல்; to talk in sleep.

க. கனவரிசு; **தெ.** கலவரிஞ்சு; **து.** கனம்பர், கணம்பர்.

[கனவு + அரி. அல(ப்பல்) → அரி(ப்பல்).]

கனவல் *kaṉaval*, பெ.(n.) கனாக்காண்கை; dreaming. *“கனவலிற் பொருக்கென வெழுந்து” (தணிகைப்பு. திருநாட்டுப்.42.).*

[கனவு → கனவல்.]

கனவளர்த்தி *kaṉavaḷartti*, பெ.(n.) மிக்கவுயரம்; excessive tallness (சா.அக.).

[கன + வளர்த்தி. வளர்ச்சி → வளத்தி.]

கனவளவு *kaṉa-v-aḷavu*, பெ.(n.) ***கனவளவை*** பார்க்க; see *kaṉa-v-aḷavai.*

[கன + (அளவை) அளவு.]

கனவளவை *kaṉa-v-aḷavai*, பெ.(n.) அகல நீளங்களுடன் ஆழம் அல்லது உயரம் அல்லது கனத்தைப் பெருக்குதலாற் பெறப்பட்ட கணக்கு; cubic measure.

மறுவ. கனவளவு

[கன(ம்) + அளவை.]

கனவான் *kaṉavāṉ*, பெ.(n.) பெருமகன்; benign lord.

[கன(ம்) + ஆன்.]

கனவியன் *kaṉaviyaṉ*, பெ.(n.) பற்று மிக்கவன்; one who is deeply immersed or attached with world affairs. *“சம்சாரத்தில் நம்மிலும் கனவியராயிருப்பார்கள்” (ஈடு,10,4,2,பக்.3).*

[கனம் → கனவன் + கனவியன்.]

கனவு¹-தல் *kaṉavu-*, 5 செ.குன்றாவி.(v.t.) தூக்கத்தில் நேரில் நிகழ்வது போன்ற காட்சிகளைக் காணுதல்; to have visions in sleep as seen while awake, to dream. *“பரந்திலங் கருவியொடு ... நரந்தங் கனவும்” (பதிற்றுப்.11,22).*

ம. கனவுக; **க.** கனகான்; **தெ.** கலகனு; **பட.** கனசு காணு.

[கலவு → கனவு-.]

கனவு²-தல் *kaṉavu-*, 5 செ.கு.வி.(v.i.) மயங்குதல்; to be charmed, allured. *“சிந்தை மாத்திரங் கனவலின்” (ஞானா.41,9.).*

[கலவு → கனவு-.]

கனவு³ *kaṉavu*, பெ.(n.) 1. நனவில் உள்ளது போன்றே தூங்குபவனின் மனத்திரையில் தோன்றும் தொடர் நிகழ்வுகள் அல்லது காட்சிகள்; vision series of pictures or events, presented to sleeping person. *“கனவினாற் காதலர்க் காணாதவர்” (குறள்,1219.).* இராக் கண்ட கனவு மிடாப்போல வீங்கியது *(உ.வ.).* 2. தூக்கம்; sleep. *“கனவுமுண்டேல்” (திருக்கோ.378.).* 3. மயக்கம் (திவா.); stupor, drowsiness.

ம. கனவு,கினாவு; **க.** கன,கனசு,கனச;**தெ., கொலா.,நா.** கல; **பட.** கனசு; **து.** கன.; **குட.** கெனசி; **துட.** கொனொவ்; **பர்.** கெலய்; **கட.** கிர்க்; **கோண்.** கனச்கானா (கனவு காண்).

குரு. கந்தர்னா [உறங்கு]; **மால்.** காந்த்ரெ [உறங்கு]

[கலவு → கனவு.]

கனவுக்கன்னி *kaṉavu-k-kaṉṉi*, பெ.(n.) மனதில் நிறைந்தபெண்; lovely damsel.

[கனவு + கன்னி.]

கனவுகாண்-தல் *kaṉavukāṇ-*, 13 செ.குன்றாவி.(v.t.) ***கனாக்காண்*** பார்க்க; see *kaṉā-k-kāṇ.*

க. கனகாண்; **பட.** கனசுகாண. **கோண்.** கனச்கானா; **பர்.** கெலய்; **து.** கனகட்டுனி.

[கனவு + காண்.]

கனவுடல் *kaṉa-v-uḍal*, பெ.(n.) தூங்கும் நிலையிலுள்ள மெய் (உடம்பு). (சி.போ.சூர்ணி); body of a person who is sleeping.

[கனவு + உடல்.]

கனவுநூல் *kaṉavunūl*, பெ.(n.) கனவைப்பற்றி சொல்லும் ஒரு நூல்; a book on dreams.

மறுவ. கனாநூல்

[கனவு + நூல்.]

கனவுமூலி *kaṉavu-mūli*, பெ.(n.) நச்சுமூங்கில். (மலை.); Asiatic poison bulb or asiatic quill (சா.அக.).

[கனவு + மூலி.]

கனவுலகம் *kaṉvulakam*, பெ.(n.) கற்பனையுலகம்; dream world.

[கனவு + உலகம்.]

கனற்கண் *kaṉaṟ-kaṇ,* பெ.(n.) 1. திட்டிவிடம், நஞ்சு; a kind of snake whose look is considered fatal, basilisk. 2. சினக்கண்; eye which shows the angry or enraged. 3. சிவந்தகண்; reddened eye.

[கனல் + கண்.]

கனற்கூர்மை *kaṉaṟ-kūrmai,* பெ.(n.) வளையலுப்பு; glass-gall.

[கனல் + கூர்மை.]

கனற்கொடி *kaṉaṟ-koḍi,* பெ.(n.) வால்மீன், புகைக் கொடி; comet. *"கலகக் கனற்கொடிகள்" (தக்கயாகப்.457.).*

[கனல் + கொடி.]

கனற்சட்டி[1] *kaṉaṟ-c-aṭṭi,* பெ.(n.) நெருப்புக்கலம்; brazier.

[கனல் + சட்டி.]

கனற்சட்டி[2] *kaṉaṟ-c-aṭṭi,* பெ.(n.) நோயாளியின் கழிகலம்; bed pan.

[கனல் + சட்டி.]

கனற்சி *kaṉaṟci,* பெ.(n.) 1. வெப்பம்; heat, glow. 2. உள்ளக் கொதிப்பு; rage, anger. வீரனது கனற்சியைச் சொல்லியது (பு.வெ,8,27,கொளு, உரை.).

[கனல் → கனற்சி.]

கனற்சிலை *kaṉaṟ-cilai,* பெ.(n.) 1. ஒருவகைக் கருங்கல்; a kind of black stone. 2. மந்தாரச்சிலை எனப்படும் ஒருவகை மருந்துக் கல்வகை; a kind of medicinal stone by name mandhāra-c-cilai.

[கனல் + சிலை.]

கனற்சுக்கிரன் *kaṉaṟ-cukkiraṉ,* பெ.(n.) விழியில் வலியையும், உள்ளே காந்தலையும் உண்டாக்கும் ஒரு கண்ணோய் (சீவரட்.265.); a disease of the eye.

[கனல் + சுக்கிரன்.]

கனற்பு *kaṉaṟpu,* பெ.(n.) 1. நெருப்பு; fire. அடுப்பு; oven.

[கனல் + பு. 'பு'சொ.ஆ.ஈறு.]

கனற்று[2]**–தல்** *kaṉaṟṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. எரிவித்தல்; to cause to burn. *"கலந்தவர் காமத் தைக் கனற்றலோ செய்தாய்" (கலித்.148.).* 2. சுடு வித்தல்; to heat gently, to impart heat by direct rays, not applicable to heating in a vessel. வெயில் பிள்ளையைக் கனற்றியது (வின்.): 3. வெதுப்புதல்; to render warm. *"கனற்றக் கொண்ட நறவென்னாம்" (புறநா.384.).*

[கனல் → கனற்று (வே.க.183).]

கனற்று[3]**–தல்** *kaṉaṟṟu-,* 5 செ.கு.வி.(v.i.) மிக விளங்குதல்; to shine brightly. *"காதல் கனற்ற நின்றானும்" (தேவா.696,7.)*

[கனல் → கனற்று.]

கனறல் *kaṉaṟal,* பெ.(n.) சினம் (வின்.); anger.

[கனல் → கனறல்.]

கனன்மரம் *kaṉaṉ-maram,* பெ.(n.) ஒளிமரம் (சங். அக.); a kind of tree said to shine in the dark.

[கனல் + மரம் = கனன்மரம். 'ன்' ஈற்றுப்போலி. வடமொழியாளர் இதனைச் சோதிமரம் என்பர்.]

கனனஞ்செய்–தல் *kaṉaṉañ-cey-,* 1 செ.குன்றாவி. (v.t.) பிணம் முதலியன புதைத்தல் (உ.வ.); to bury as a corpse.

[கனனம் + செய்–. கனல் → கனலம் → கனனம் = எரியூட்டுதல், சுடுதல்.]

கனனத்தம்பம் *kaṉṉana-t-tambam,* பெ.(n.) அறுபத்துநான்கு கலையுள் புதையலை அகப்படாமற் செய்யும் கலை (வின்.); art of preventing the discovery of buried treasures one of *aṟupattu-nālu-kalai.*

[கல் = தோண்டுதல், கல் → கன் → கனனம் = தம்பம். தம்பம் = நிறுத்துதல், தடுத்தல், செயற்படாமற் செய்தல்.]

கனனம் *kaṉaṉam,* பெ.(n.) குழிமுதலியன கல்லுதல்; digging. *"கனனாவபூரண சேசனமும்" (தத்துவர்.69.)*

[கல் (தோண்டுதல்) → கன் + அன் + அம் = கனனம் 'அன்' சாரியை 'அம்' பெயரீறு.]

கனனிறக்கல் *kaṉaṉiṟa-k-kal,* பெ.(n.) மாணிக்கம் (வின்.); ruby.

மறுவ. சிவப்புக்கல்

[கனல் + நிறம் + கல்.]

கனா *kaṉā*, பெ.(n.) கனவு; dream. *"கனாவுறு திறத் தினும்" (மணிமே.27,281.).* கிடக்கிறது ஒட்டுத் திண்ணை கனவு காண்பது மச்சுவீடு (வ.ழ.).

ம. கினாவு; **க.,து.** கன; **தெ.**;கொலா, நா. கல

[கலவு → கனவு → கனா - திரிபீற்றுப் பெயர்ச்சொல். ஒ.நோ. நிலவு → நிலா.]

கனாக்காண்(ணு)-தல் *kaṉā-k-kāṇu-*, 6 செ.குன்றாவி. (v.t.) 1. கனவு காணுதல்; to dream. *"கனாக்கண்டேன் தோழி நான்" (திவ்.நாய்ச்.6,1).* 2. கிடைத்தற்கரியதைப் பெற விழைதல்; to aspire for anything beyond reach.

ம. கனாவிக்குக; **க.** கனகான், கனசுகாண்.; படகனசுகாணு.

[கனா + காண்.]

கனாநூல் *kaṉā-nūl*, பெ.(n.) கனாப்பயன்களைப் பற்றிப் பொன்னவன் என்ற புலவர் இயற்றிய நூல். (சிலப்.15,106.உரை.); treatise on the significance of dreams by Poṉṉavaṉ.

[கல → கலவு → கனவு → கனா + நூல்.]

கனி[1]-தல் *kaṉi-*, 4 செ.கு.வி.(v.i.) 1. பழுத்தல்; to ripen, as fruits; to turn mellow, luscious sweet. *"கால மின்றியுங் கனிந்தன கனி" (கம்பரா.வனம்பு. 44.).* 2. அளிதல்; to be over ripe. 3. முதிர்தல்; to become complete, perfect. *"கன்னிமை கனியா" (பரிபா.11,136.).* 4. இனித்தல்; to be mellifluous, to be full of sweetness. *"கனிந்த சொல்லாய்" (தஞ்சைவா.174).* 5. மனமுதலியன இளகுதல்; to melt, grow tender, become soft, as the heart by affection, love, devotion. *"விஞ்சையர் கனிந்து சோர்ந்தார்" (சீவக.727)* (சூ.கரி.). 6. தழல்மிகுதல்; to be red-hot, to glow. நெருப்புக் கனிகின்றது (உ.வ.). 7. பழுக்கக் காய்தல்; to become red-hot, as a metal. கனிய வெந்த இரும்பு. 8. முன்சினம் அடைதல் (சூடா.); to get suddenly angry, to be irritable.

ம. கனியுக; **க.** கனிகரிசு, கழி, களி; **தெ.** கனி. **து.** கனி, கணி; **குவி.** கம்பலி.

[கன் → கன்னு → கன்னி → கனி → கனிதல்.]

கனி[2]-த்தல் *kaṉi-*, 4 செ.குன்றாவி.(v.t.) இளகச் செய்தல்; to melt, soften. *"அனங்கனைக் கனிக்கு நீராள்" (சீவக.607.).*

ம. கனிக்குக.

[கன் → கன்னு → கன்னி → கனி → கனி-த்தல்.]

கனி[3] *kaṉi-*, பெ.(n.) 1. கனிவு; ripeness, maturity. *"கனிவளர் கிளவி" (சீவக.486).* 2. பழம்; fruit; ripe, mellow fruit. *"கனியிருப்பக் காய்கவர்ந்தற்று"* (குறள்,100). 3. இனிமை. (சூடா.); sweetness. 4. சாரம்; essence. *"காமக் கொழுங்கனி சுவைத்து (சீவக.1985.).* 5. **கனிச்சீர்** பார்க்க; see *kaṉi-c-cīr*. *"வெள்ளைத் தன்மை குன்றிப்போஞ் சீர்கனிபுகில்" (காரிகை,ஒழிபி.3.).* 6. மூவசைச்சீரில் இறுதியிலுள்ள நிரையசை; the last metrical division in a word of three syllables sounding like `Kaṉi'. *"அந்தங் கனியா.... வகுத்த வஞ்சிக்குரிச்சீர்" (காரிகை. உறுப்.7.).*

மறுவ. பழம், நெற்று, காய்ப்பழம், ஒதப்பழம்,.

ம. கனி.

[குல் → கல் → கன் → கனி. (முதிர்தல், பழுத்தல்) கனி (பழம்) என்னும் சொல், கன்னி (பழுத்தது) என்பதன் தொகுத்தலே.] (பண்.தமி.நா.ப.17).

கனிவகைகள்:

1. காய் – தெங்கு பூசணி முதலியவற்றின் கனி; 2. கனி – முந்திரி,நெல்லி முதலியவற்றின் கனி (கனிவாயிருப்பது); 3. பழம் – மா, வாழை முதலியவற்றின் கனி (பழுப்பு நிறமானது); 4. நெற்று – வேர்க்கடலை போன்றதின் முதிர்வு; 5. காய்ப்பழம் – பழுக்கத் தொடங்கிய காய்; 6. ஒதப்பழம் – புளியின் காய்ப்பழம். (சொ.ஆ.க.68.).

கனி[4] *kaṉi*, சுரங்கம்; mine. பெ.(n.)

Oriya; khani.

[கல் → கல்லி (தோண்டுதல்) → கனி.]

கனிக்காய் *kaṉi-k-kāy*, பெ.(n.) பழுக்கும் பதத் திலுள்ள காய் (சிலப்.16,24 உரை.); unripe fruit in the process of ripening. *"பூவாது காய்க்கும்*

பாகலினுடைய கொழுவிய திரண்ட கனிக்காயும்" (சிலப்–கொலைக்.24.).

[கனி + காய்.]

கனிக்காழ் *kaṉi-k-kāḻ,* பெ.(n.) பழத்தின்விதை. (திவா.); seedling, seed of a fruit.

[கனி + காழ்.]

கனிகரம் *kaṉi-garam,* பெ.(n.) அன்பு; affection, love.

ம., க. கனிகரம்; **தெ.** கனிகரமு; **து.** கனிகர.

[கனி + கரம். கரம் = செய்தல். கனிகரம் = மனம் கனியச் செய்யும் பண்பு, அன்பு.]

கனிகாலம் *kaṉi-kālam,* பெ.(n.) பழுக்குங் காலம். (வின்.); fruiting season.

[கனி + காலம். கனிகாலம் – வினைத்தொகை. கனிதல் = முதிர்தல், பழுத்தல்.]

கனிச்சீர் *kaṉi-c-cīr,* பெ. (n.) கனி என்ற வாய்ப்பாடு கொண்ட அசையை இறுதியிலுடைய வஞ்சியுரிச்சீர். (யாப்.வி.12.); (pros.); foot of three Asai necessarily ending in Nirai, of four kinds.

தேமாங்கனி: நேர் – நேர் – நிரை

புளிமாங்கனி: நிரை – நேர் – நிரை

கருவிளங்கனி: நிரை – நிரை – நிரை

கூவிளங்கனி: நேர் – நிரை – நிரை.

[கனி² + சீர். கனி என்னும் சொல்லே, இருகுறில் இணைந்த நிரையசையாதலின், நிரையசையில் முடியும் முச்சீர் வாய்பாட்டிறுதி, "கனிச்சீர்" என இலக்கண நூலோரால் குறியிடப்பட்டு வழக்கூன்றியது.]

கனிந்தபாடம் *kaṉinda-pāḍam,* பெ.(n.) தெளிந்த பாடம். (வின்.); well-learnt lesson, verse well committed to memory.

[கனிந்த + பாடம்.]

கனிப்பு *kaṉippu,* பெ.(n.) இனிமை; mellifluence, sweetness, pleasantness. *"கனிப்புறு சொல் லளைஇ" (சீவக.1020.).*

[கனி → கனிப்பு.]

கனிப்பொருள் *kaṉi-p-poruḷ,* பெ.(n.). **கனிமம்** பார்க்க; see *kaṉimam.*

H. kaniz

[கனி + பொருள்.]

கனிபலா *kaṉipalā,* பெ.(n.) வாகை; sirissa tree (சா.அக.).

[கனி (நெற்று) + பலா.]

கனிமநீர் *kaṉima-nīr,* பெ.(n.) இயற்கைக் கனிமம் நிறைந்த நீர்; mineral water.

[கனிம(ம்) + நீர்.]

கனிமம் *kaṉimam,* பெ.(n.) தனித்த பண்புகளைக் கொண்ட, இயற்கையான தோண்டப்பட்ட பொருள், இயற்கைப்பொருள்; mineral.

மறுவ. கனிப்பொருள்

H. kaniz; **Guj.** khanij.

[கல் → கல்லி → கன்னி → கனி → கனிமம்.]

கனிமவியல் *kaṉimaviyal,* பெ.(n.) கனிமங்களைப் பற்றிய பாடம்; mineralogy, science of mineral.

[கனிமம் + இயல்.]

கனிமவேதியியல் *kaṉima-vētdiyiyal,* பெ.(n.) கனிமங்கள் குறித்த வேதியியல்; inorganic chemistry.

[கனிம(ம்) + வேதியியல்.]

கனிமுதல் *kaṉimudal,* பெ.(n.) வெள்ளி; silver (சா.அக.).

[கனி + முதல்.]

கனிமேதி *kaṉimēdi,* பெ.(n.) கற்கண்டு; sugarcandy (சா.அக.).

[கனி + மேதி. மேலி → மேதி.]

கனியளவு *kaṉayaḷavu,* பெ.(n.) எலுமிச்சம் பழ அளவு; as big as lemon fruit.

[கனி + அளவு.]

கனியாமணக்கு[1] *kaṉi-y-āmaṇakku,* பெ.(n.) ஒரு வகையாமணக்கு; a kind of castor.

[கனி + ஆமணக்கு.]

கனியாமணக்கு[3] *kaṉi-y-āmaṇakku,* பெ.(n.) பப்பாளி; common papaw (சா.அக.).

[கனி + ஆமணக்கு.]

கனியுறை *kaṉi-y-uṟai,* பெ.(n.) விதைகளின் மேலுறை; pericarp.

[கனி + உறை → கனியுறை.]

கனிவல்லி *kaṉi-valli,* பெ.(n.) வெள்ளைக் குன்றி மணி; white country liquorice (சா.அக.).

[கனி + வல்லி.]

கனிவாழை *kaṉi-vāḻai,* பெ.(n.) வாழைவகை; a kind of sweet plantain. "தீங்கனி வாழையின் பழனும்" (சீவக.1562).

[கனி + வாழை.]

கனிவு *kaṉivu,* பெ.(n.) 1. முதிர்கை; ripening. 2. அன்பு; love. *"கண்டேனெஞ் சங்கனிவாய்க் கனிவாய்விடம்" (இராமா.நகர்நீங்.48.).* 3. மாந்த நேய வெளிப்பாடு; tenderness. 'கனிவுடன் நோக்கப் பிணிபாதி போகும்.' *(உ.வ.)* 4. இரக்கம்; compassion. *"கனிவுறுமன்பிலாழ்ந்து" (திருவிளை. மாய. 27.).*

ம. கனிவு; **க.** கனி, கனிகர; **தெ.** கனிகரமு; **து.** கனிகர.

[கனி → கனிவு.]

கனுக்கு[1]**–தல்** *kaṉukku-,* 5 செ.கு.வி.(v.i.) பாடும் போது கண்டத்தொனி உருளுதல்; to shake the voice in singing, quaver or flourish.

[கல் → கனு → கனுக்கு–.]

கனுக்கு[2]**–தல்** *kaṉukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) கசங்கப்பண்ணுதல்; to emaciate, to grow lean by disease or by labour, to train, inure, keep closely engaged; to cause to grow mellow by heat, or by reiterated pressure. காய்ச்சல் நாளுக்கு நாள் அவனைக் கனுக்கிப் போட்டது (உ.வ.).

[கல் → கன் → கனுக்கு–.]

கனுக்குப்பினுக்கெனல் *kaṉukku-p-piṉukkeṉal,* பெ.(n.) 1. மிகக்களித்தற் குறிப்பு; expr. signifying ecstasy, great joy, conviviality. 2. ஒலிக்குறிப்பு; onom, expr. signifying bustling, rustling.

[கனுக்கு + பினுக்கு + எனல்.]

கனுகு–தல் *kaṉugu-,* 7 செ.கு.வி.(v.i.) நோயால் இளைத்தல்; to emaciate as from diseases (சா.அக.)

[கல் → கன் → கன்று. கன் → கனுகு.]

கனுப்பிடி *kaṉu-p-piḍi,* பெ.(n.) **கன்னிப்பிடி** பார்க்க; see *kaṉṉi-p-piḍi.*

[கன் → கன்னி → கனு + பிடி.]

கனுப்பொங்கல் *kaṉu-p-poṅgal,* பெ.(n.) **கன்னிப்பொங்கல்** பார்க்க; see *kaṉṉi-p-poṅgal.*

[கன் → கன்னி → கனு + பொங்கல்.]

கனை[1]**–தல்** *kaṉai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. நெருங்குதல்; to be crowded. *"கனைதுளி சிதறென" (கலித்.16,7.).* 2. மிகுதல்; to be intense. *"காமங் கனைந்தெழ" (பரிபா.10,63.).* 3. ஒலித்தல்; to sound, as a drum. *"ஆடுதொறு கனையும் ... துடி" (அகநா.79.).*

ம. கனெக்க; **கோத.** கன்வ் (மாடு அல்லது எருமை கன்றுக்காகக் கத்துதல்) **துட.** கென்வ் (உருமுதல்); **க.** கனெ: **குட.** கெனெ; **பட.** கனெ (கால் நடைகள் ஒலி எழுப்புதல்)

[கல் → கன் → கனை–.]

கனை, அகவு, குரை, பிளிறு முதலிய கத்து வினைச்சொற்கள் ஒலிக்குறிப்பையடியாகக் கொண்டு பிறந்தவை. [மு.தா.4.]. சில அஃறிணை யொலிக்குறிப்புகளும் சொற்களும் கடுமை அல்லது இழிவுபற்றி, மக்கள் செயலையுங் குறிக்கவரும். எ.கா: ஏண்டா சும்மா கனைக்கிறே [உ.வ.].

கனை² *kaṉai,* பெ.(n.) 1. செறிவு (சூடா.); density, crowdedness, closeness, intensity. *"கனையிரு முந்நீர்" (மதுரைக்.235).* 2. நிறைவு (உரி.நி.); fullness. repletion. 3. மிகுதி; abundance. *"கனையெரி" (புறநா. 23.11.).*

[கல் → கன் → கனை.]

கனை³–த்தல் *kaṉai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. தொண்டையைச் சீர்படுத்துதல்; to become clear or shrill as the voice. 2. ஒலித்தல்; to sound, as a drum; to bellow, as a buffalo. *"கனைகடற் றண்சேர்ப்ப" (நாலடி.349). "மேதி கன்றுள்ளிக் கனைப்ப" (கம்பரா. நாட்டுப்.13.).* 3. குதிரை முதலியன கத்துதல். (உ.வ.); to neigh, as a horse. 4. கொக்கரித்தல் (வின்.); to laugh in contempt, ridicule, hum and haw. 5. வடமொழி ஐவர்க்க எழுத்துகளுள் நான்கா மெய்களை அழுத்தியொலித்தல் (நன்.146,மயிலை); to sound the aspirated soft consonants in Sanskrit.

[கல் → கன் → கனை.]

கனை⁴–த்தல் *kaṉai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. திரளுதல்; to mature; to grow round, as fruits. *"கவிழ் கனைத்து ... தீங்கழைக் கரும்பு" (மலைபடு.117).* 2. இருளுதல் (சூடா.); to become darkened. 3. மூண்டு செல்லுதல்; to proceed in eager, haste. *"மனத்தினார் மாண்பலா நெறிகண்மேலே கனைப்பரால்" (தேவா.9,8.).* 4. கதறல்; to bleat. *"மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த பாலுண்டு" (இராமா.நாட் டு.13).*

ம. கனய்க்குக; **க.** கெனெ; **கோத.** கன்வ்; **துட.** கென்வ்.

E. neigh

[கல் → கன் → கனை–.]

கனை⁵ *kaṉai,* பெ.(n.) 1. ஒலி (சூடா.); sound,roar, resonance. 2. சிரித்தல்; laughing. கனைப்பு; neigh.

[கல் → கன் → கனை.]

கனை⁶ *kaṉai,* பெ.(n.) பருத்துக் குறுகின வடிவும், பசும் பொன்னிறமு முள்ள பெண்; stout, short-statured woman of a golden complexion. *"தரித்தபேர் கனையென்றோதும்" (கொக்கோ.4,5.).*

[குல் → கல் → கன் → கனை.]

கனை⁷ *kaṉai,* பெ.(n.) மூங்கில்; bamboo (சா.அக.).

[கழை → கணை → கனை.]

கனைப்பு *kaṉaippu,* பெ.(n.) 1. ஒலி; sound, roar. 2. குதிரை முதலியவற்றின் குரலோசை; neighing, braying, bellowing. 3. கொக்கரிப்பு (வின்.); laughter, giggling, chukling.

ம. கனய்ப்பு, கனப்பு.

[கனை → கனைப்பு.]

கனைவரிவண்டு *kaṉai-vari-vaṇḍu,* பெ.(n.) பல வரிகளையுடைய வண்டுவகை; a kind of beetle with several stripes (சா.அக.).

[கனை² + வரி + வண்டு.]

கனைவலங்கள்ளி *kaṉai-valaṅ-kaḷḷi,* பெ.(n.) ஐங்கணுக் கள்ளி; five angled milk spurge (சா.அக.).

[கனை² + வலம் + கள்ளி.]

கனைவு *kaṉaivu,* பெ.(n.) நெருக்கம் (சங்.அக.); closeness, thickness.

[குல் - கூடுதல், நெருங்கல். குல் → கல் → கன் → கனை² → கனைவு.]

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

இரண்டாம் மடலம் - இரண்டாம் பாகம்

VOL. II - PART II

க. இராமகிருட்டிணன், இ.ஆ.ப.
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

முனைவர் இரா. மதிவாணன்
முதன்மைப் பதிப்பாசிரியர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு
2000

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

இரண்டாம் மடலம் – இரண்டாம் பாகம்

(கா-கூ)

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

VOLUME II - PART II

சு. இராமகிருட்டிணன், இ.ஆ.ப.,
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

முனைவர். இரா. மதிவாணன்
முதன்மைப்பதிப்பாசிரியர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு
சென்னை – 8.
2000

செ.சொ.பி. அகரமுதலித்திட்ட இயக்கக வெளியீடு-5
முதற்பதிப்பு : துலை (ஐப்பசி); தி.பி. ௨௦௩௧; நவம்பர் 2000

(C) தமிழ்நாட்டரசு

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. II, Part-II

விலை உருபா 300.00/-

குறியீட்டெண்: Colon No. P.J1-J, 314" K.M4

Published by:
Directorate of Tamil Etymological
Dictionary Project,
Govt. Museum Campus,
Egmore, Chennai - 600 008.

Copies available at:
International Institute of Tamil Studies
Tharamani,
Chennai - 600 113.

Printed at:
Royapettai Stationery and Printing and Allied Products Producers
Industrial Co-op. Society Ltd.,
Royapettai, Chennai - 600 014.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககத்தை உருவாக்கிய
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

'ஐந்தமிழறிஞர்'

கலைஞர் மு. கருணாநிதி

அவர்கள்

பெறப்பட்டது
சென்னை-600

விலைமதிக்க ஒண்ணாத சொல்லாய்வுச் செம்மல்
உலகேத்தும் பாவாணர் ஒண்புலமை நோக்கி
இலகுமொழிச் செந்தமிழ்க்கு ஆக்கங்கள் சேர்த்த
தலைஞரே எங்கட்குக் கண்:

அலைகடல் போன்றதோர் ஆழ்ந்ததமிழ் உள்ளம்
மலைமுகடு போன்றதோர் மாபெரும் சீர்த்தி
கலைஞர் முதல்வராய் வாய்த்திருப்ப தெங்கள்
தலைமுறை பெற்றநற் பேறு:

= முதன்மைப்பதிப்பாசிரியர்

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.
நாள்: 4.10.2000

அணிந்துரை

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி இரண்டாம் மடலம்–இரண்டாம் பாகம் – ஐந்தாம் தொகுதி நூல் வெளிவருவது அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தனித்தமிழ் இயக்கத்துக்கு வித்தூன்றி, தம்காலத்திலேயே அதனை நிலைநாட்டிய பெருமைக்குரியவர் மறைமலையடிகள். அவருக்குப்பின் அந்த இயக்கத்தை மேலும் வலுப்படுத்திப் பல்வேறு ஊர்களில் கிளைகளை நிறுவி, பலரையும் தனித்தமிழ்ப் பெயர் தாங்கவைத்து ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் ஞா. தேவநேயப் பாவாணர். புலவர்கள் அளவிலும், ஆர்வமுடைய அன்பர்கள் அளவிலும் நின்ற தமிழ் இயக்கத்தை நாடெங்கிலும் செயற்படுத்தி, பட்டி தொட்டிகளில் எல்லாம் பைந்தமிழ் உணர்வைப் பரப்பிய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு என்பதை எந்த வரலாற்றறிஞரும் மறைத்துவிட முடியாது.

பாவாணரின் தமிழ் உணர்வைப் போற்றி அவரது சொல்லாராய்ச்சித் திறன் தமிழுக்கு ஆக்கமாக முகிழ்க்க வேண்டும் என்ற உணர்வுடன் 8.5.1974 அன்று செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்ககம் என்ற அமைப்பை நிறுவி, அதற்குப் பாவாணர் அவர்களையே இயக்குநர் ஆகவும் நியமித்தது அன்றைய கழக அரசு.

அலுவலக அமைப்பு, உரிய வசதிகள், தக்கார் பணியமர்த்தம் என்றவாறு இத்திட்டப் பணிகள் நடைபெற்றன. இவ்வேளையில், 1976 – இல் அரசு கலைக்கப்பட்டது. அதன்பின் சொல்லாராய்ச்சிப் பணிகள் தொய்வடைந்தன. இதற்கிடையில் பாவாணர் 1981 – இல் இயற்கை எய்தினார். 1974 – இல் அகரமுதலி இயக்ககம் தொடங்கப்பட்டாலும், 13.5.1996 வரை இருபத்திரண்டு ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் இரண்டு தொகுதி நூல்கள் மட்டுமே வெளியிடப்பட்டிருந்தன. ஆனால், 1996– இல் தமிழ் ஆட்சிமொழித் துறை எனப் புதிய அமைச்சகம் உருவாக்கப்பட்டு, முனைவர்

தமிழ்க்குடிமகன் அதன் அமைச்சராக நியமிக்கப்பட்டதையும் தொடர்ந்து நான்காண்டுகளில் மூன்று தொகுதி நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1997 – இல் மூன்றாம் தொகுதிநூல் வெளிவந்தது. 16.1.2000 அன்று நான்காம் தொகுதிநூல் வெளியிடப்பட்டது. இப்போது , 2000 செப்டம்பரில் ஐந்தாம் தொகுதிநூல் 680 பக்கங்கள் கொண்ட பெரிய தொகுதியாக வெளியிடப்படுகிறது.

காலத்தால் அழியாது ஞாலம் முழுவதும் பரந்துள்ள தமிழ் மொழியின் சொல்லாட்சி மாண்புகள் மேலும்மேலும் மெருகடைவதற்கு வழிவகுக்கும் வண்ணம் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி திட்டத்தின் எஞ்சியுள்ள நூல் தொகுதிகள் அனைத்தும் விரைவில் வெளிவருதற்குத் தேவையான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அகரமுதலி இயக்கக நூல்களின் வெளியீட்டுப்பணிகளுக்கு ஊக்கமளித்து, அடுத்தடுத்து நூல்கள் வெளிவருவதற்கு உதவிவரும் தமிழ் ஆட்சிமொழித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், இப்பணியில் அயராது ஈடுபட்டுள்ள சான்றோர்களுக்கும் என் உளமார்ந்த பாராட்டுகள் உரித்தாகுக.

அன்புள்ள,

(மு. கருணாநிதி)

முனைவர் **மு. தமிழ்க்குடிமகன்,**
எம்.ஏ., பி.எச்.டி.,
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு,
இந்து சமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

நாள்: 17.9.2000
தி.பி.2031 சிலை (புரட்டாசி) 2.

முன்னுரை

என் நினைவுகளைப் பின்னோக்கி ஓடவிட்டால் அவை வியப்பாகவும் இருக்கின்றன; பெருமிதமாகவும் இருக்கின்றன. 1957–ஆம் ஆண்டில் பாவாணர் எழுதிய "ஒப்பியன் மொழிநூல்" என் கைக்குக் கிடைத்தது. அதுவும் பழைய புத்தகக் கடையில் – உரூபா ஒன்று விலையில் – திருச்சிராப்பள்ளியில் நான் மாணவனாக இருந்தபோது. அந்த நூல் என் வாழ்வில் எவ்வளவு பெரிய மாறுதலை உண்டாக்கிவிட்டது?

திராவிட இயக்க நெஞ்சில் ஊன்றப்பட்ட தனித்தமிழ்க் கன்று – இன்று அந்த மரத்தின் நிழலில் நாற்பதாண்டுக் கால வாழ்வு – தக்க நேரத்தில் அடையாளம் கண்டு அழைப்பு. என்னை இப்பணிக்கு ஆளாக்கிய ஐந்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நெஞ்சில் நிறுத்தி, கண்களில் நன்றிக் கண்ணீர் கசிய, உள்ளத்தில் பெருமிதம் பொங்க நிமிர்ந்து நின்று, கைகளைக் குவிக்கிறேன். பாவாணரின் அன்பனையே பாவாணர் வழியிலான சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு மூன்றாம் முறையாக முன்னுரை வழங்கிட வாய்ப்பு நல்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நன்றி மலரைக் காணிக்கையாக்குகிறேன்.

பாவாணரிடம் பழகத் தொடங்கிய பிறகு அவர் அமைத்த உலகத் தமிழ்க் கழகத்தில் முகவை மாவட்ட அமைப்பாளராகி 1969–இல் பறம்புக்குடியில் மாநாட்டை நடத்தி இயக்கத்துக்கு மிகப் பெரிய விளம்பரத்தை உருவாக்கினோம்.

பாவாணரின் அனைத்து நூல்களும் ஆராயப்பட்டன. அவற்றைப் படித்த பிறகு அவர் வாயிலாக மறைமலையடிகள் நூல்களைப் படித்தோம்.

பாவாணரது விருப்பப்படி அவரது "கொள்கைப் படைப்பாக" விளங்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தைச் செயற்படுத்த முனைந்தோம். பலரது வேண்டுகோளையும் ஏற்று 1974–இல் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்ககம் தொடங்கிய பெருமை அனைத்தும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களையே சாரும்.

புதிய அமைச்சகத்தின் சார்பில் "இயக்ககம்" சீரமைக்கப்பட்டு, கணினி ஏந்துகளுடன் இன்று மூன்று தொகுதிகள் வந்துவிட்டன.

"இந்த இரண்டாயிரத்தில் மற்றொரு தொகுதியையும் கொண்டுவந்துவிட வேண்டும்" என்று கடந்த தொகுதியில் எழுதினேன். சொன்னபடியே எட்டே மாதத்தில் அடுத்த தொகுதி. முதன்மைப் பதிப்பாசிரியர் இரா. மதிவாணன், பதிப்பாசிரியர்கள், சொல்தொகுப்பாளர்கள் அனைவர்க்கும் என் பாராட்டுகள்.

இப்போது 'கு' வரை வந்துள்ளோம். இன்னும் இருக்கிறது வேலை; நம்முன் நீண்டு கிடக்கிறது சாலை. இதில் நடந்து இறுதி இலக்கினை எய்துவதற்குள் எத்தனை நாள் ஆகுமோ!

மேலைநாட்டார் பல்வேறு துறைகளில் நமக்கு வழிகாட்டியும், வளஞ்சேர்த்தும் உள்ளனர். தமிழுக்கு அவர்கள் செய்த தொண்டுகள் அளப்பரியவை, எனினும் அவர்கள் வழிகாட்டிய ஆய்வில் சில மயக்கங்கள் உள்ளன. தில்லியும், கல்கத்தாவும் ஆங்கிலேயர் ஆட்சியின் தலைநகர்களாக இருந்தமையால், "சமற்கிருதமே" இந்தியாவின் ஒரே தொன்மொழி என்றும், இந்திய இலக்கியங்கள் அனைத்துக்குமே சமற்கிருதமே மூலப் பிறப்பிடம் என்றும், இந்திய மொழிகள் அனைத்துமே சமற்கிருதத்திலிருந்து பிறந்தவைதான் என்றும், தவறான எண்ணம் அவர்களிடம் ஏற்பட்டுவிட்டது.

இந்தப் போக்கினை மாற்றி, இந்தியாவில் தமிழும், சமற்கிருதமும் தொன்மை மொழிகள் (Ancient Languages) என்றும், திராவிட மொழிகள் அனைத்துக்கும் தமிழே தாய் என்றும் நிலைநாட்டுவதற்குப் பலரும் முயல வேண்டியதாயிற்று. கால்டுவெல் போன்றவர்கள் தந்த துணையுடன் பாவாணர் போன்ற அறிஞர்கள்தாம் இதனை எவராலும் மறுக்கவொண்ணாச் சான்றுகளுடன் மெய்ப்பித்தனர்.

வடமொழி தேவமொழி எனும் ஏமாற்றையும், ஆங்கிலம் உலகமொழி எனும் மயக்கத்தையும் தகர்த்தவர் பாவாணர். அதனை வலுவான சான்றுகளுடன் நிலை நிறுத்துவதுதான் இந்தச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி.

பாவாணர் திட்டம் 12 மடலங்கள் – 31 தொகுதிகள். முதன்மடலத்தை ஐந்துக்குப் பதில் மூன்றில் அடக்கிவிட்டனர். தற்போது இரு தொகுதிகள் வந்துள்ளன. எனவே, மேலும் 24 தொகுதிகள் வெளியிடப்பட்டாக வேண்டும். இறுதி இலக்கு எங்களை மலைக்கச் செய்கிறது.

அடுத்த தொகுதி திசம்பருக்குள் வந்துவிட வாய்ப்புள்ளது. கணினிப் பயன்பாடும், பதிப்பாசிரியர்கள், சொல் தொகுப்பாளர்களின் அயரா உழைப்பும் இந்த நம்பிக்கையை வெற்றிபெறச் செய்யும் என்று கருதுகிறேன்.

பாவாணர் கருதியபடி முழுமையாக முடிக்க இன்னும் 50 ஆண்டுகள் ஆகலாம். பதிப்பாசிரியர்களின் எண்ணிக்கையை விரிவுபடுத்தினால் நூல் தொகுப்பினை விரைவு படுத்தியதாக அமையும். ஏப்பிரல் 2001–ல் இதுபற்றிய சிந்தனையை முடிவாக்கி அரங்கேற்றுவோம்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஒவ்வொரு சொல்லும் – கட்டளையும் சட்டமுமாகும் காலம் இது.

இத்தொகுப்பில் 'குறி' என்ற ஒரு சொல் எத்தனை வகையான பொருள்களை உள்ளடக்கியுள்ளது என்பதனைக் கண்டால் வியப்பாக இருக்கும்.

குறி¹–த்தல் *kuṟi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. கருதுதல்; to design, intend, contemplate, consider, think. *"கொலைகுறித் தன்ன மாலை" (அகநா.364).* 2. ஊழ்கம் செய்தல்; to meditate. *"ஞானியர்தாங் குறியெட்டக் காத்தார்" (அட்டப். திருவேங்கடமா.*

57). 3. வரையறுத்தல் (பிங்.); to determine, ascertain. 4. கோடு வரைதல்; to draw, as a line. *"புழுக் குறித்தது எழுத்தானாற் போல" (ஈடு,2.4:3).* 5. குறித்துக் கொள்ளுதல்; to note down, to make the first draft in writing, to sketch an outline in painting, to trace. இந்நூலின் அரும்பதங்களைக் குறிக்க. 6. சுட்டுதல்; to refer to, denote, suggest. specify. 7. பற்றுதல்; to pertain, relate to. *எதைக் குறித்துப் பேசினாய்?".* 8. இலக்கு வைத்தல்; to aim at, as in shooting. *"வெய்யோன் குறித்தெறி பிறங்கல்" (கந்தபு.கயமுகன்வ.38).* 9. அடைதல்; to reach, attach oneself to. *"குரவன் பதத்தைக் குறித்து" (சைவச. பொது.125).* 10. மதித்தல்; to regard, fancy. *"குறித்துச் சிவனெனக் கோபுரத்தை" (சைவச.பொது.126).* 11. சொல்லுதல்; to narrate briefly, tell. *"உற்றதுங் குறித்தான்" (கம்பரா. அகலிகை.41).* 12. முன்னறி வித்தல்; to foretell, predict, forebode. 'தீச்சகுனம் பொல்லாங்கைக் குறிக்கும்'. 13. ஊதியொலித்தல்; to blow, as a conch; to sound *"வலம்புரி குறித்து" (பாரத. பதினேழாம்.12).*

ம., க. குறி; தெ.,து. குறி.

[குல் → குறு → குறி]

குறி[2] *kuṟi* பெ.(n.) 1. அடையாளம் (பிங்.); mark, sign, stamp, emblem. 2. இலக்கு; aim, mark to shoot at. *"கூரிய குணத்தார் குறிநின்றவன்" (தேவா. 356:3).* 3. குறியிடம் (தொல்.பொருள்.130); (Akap.) secret appointment by lovers. 4. நினைத்த இடம்; goal, destination. *"சென்று மீளாக்குறி" (கம்பரா. கடிமண.49).* 5. நோக்கம்; motive, intention. 6. குறிப்பு; suggestion,hint, insinuation. 7. மதக் கொள்கை; doctrine. *"குறிபலவுங் கொளு வினார்" (பெரியபு.திருநா.38).* 8. முன்னறிந்து கூறும் தன்மை; omen, presage, prognostic. *"குறியிறைப் புதல்வரோடு" (குறுந்.394).* 9. கூட்டம், அவை; assembly, village council. *"மத்யஸ்தரைக் கொண்டு குறிகூட்டி" (சோழவமி.55).* 10. தடவை; turn, occasion. *"ஒருகுறி கேட்போன்" (நன்.42).* 11. காலம்; time, days, season, as in, இக்குறி–now-a-days. 12. ஒழுக்கம்; character, principle of conduct. குறிகெட்டவன் (இ.வ.). 13. ஆண்குறி அல்லது பெண்குறி; generative organ. 14. அடி; stripes, lashes. 15. இலக்கணம்; definition, accurate description. *"குறியறிந் தோரே" (தொல்.பொருள்.47).*

[குல் → குறு → குறி]

குறி[3] *kuṟi,* பெ.(n.) குறியாடு; a sheep.

[குறு → குறி.]

குறி[4] *kuṟi,* பெ.(n.) உணர்தல், தெளிதல் என்னும் இரு வகையில் நோயின் தன்மை அறிவிக்கும் சின்னங்கள்; symptoms of diseases they are of two kinds subjective and objective (சா.அக.).

[குல் → குறு → குறி.]

குறி[5] *kuṟi,* பெ.(n.) அளவு; measure. *"ஸர்வேஸ் வரனுக்கும் கைக்குறி யாப்பை வாங்குவது இங்கேயிறே" (ஈடு.1,4,6).*

[குல் → குறி.]

வேறெந்த அகரமுதலியும் தாராத விளக்கத்தினைத் தருவது – அந்தச் சொல் எப்பொருளில் எந்த இடத்தில் ஆளப்படுகிறது என்ற 'மேற்கோளை'யும் தருவது – தமிழ்ச் சொல்லுக்கிணையான ஆங்கிலச் சொல்லைத் தருவது – விளக்கத்தினை ஆங்கிலத்திலும் தருவது, என்ற முறையில் சிறப்புப்பெறும் இந்த அகரமுதலி தமிழர்களுக்கு மட்டுமின்றி ஆங்கிலம் மட்டுமே அறிந்து, தமிழைப் படிக்க நினைப்பார்க்கும் வழிகாட்டுவதாகும்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். இப்பணி சிறப்புடன் நடைபெற வாழ்த்தும் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

இதில் ஈடுபட்டுள்ளவர்கள் மேலும் முனைப்புடன் செயற்பட வேண்டுகிறேன்.

அன்புடன்,

19.9.2000

(மு. தமிழ்க்குடிமகன்)

வண்ணப்படங்களின் பட்டியல்

படத்தாள் எண்	படத்தின் பெயர்	எதிரும் பக்கம்
1	**காக்கை வகைகள்**	8
	அண்டங்காக்கை	
	கடற் காக்கை	
	சாம்பல் கழுத்துக் காக்கை	
	சிறுவெண் காக்கை	
	நீர்க் காக்கை	
	மணியங்காக்கை	
2	**காசு வகைகள்**	28
	குட்டுவன்	
	கொல்லிரும்பொறை	
	மாக்கோதை	
	மலையமான்	
	காரிக்காசு	
	சேரர்காசு	
	பெருவழுதி	
3	காட்டிலந்தை	40
	காட்டுக் கருணை	
	காட்டத்தி	
	காட்டரளி	
4	**காடை வகைகள்**	72
	கட்டுக் காடை	
	கருங்காடை	
	குறுஞ்சாண் காடை	
	குறுங்காடை	
	சரளைக் காடை	
	நீலமார்புக் காடை	
	பெரிய காடை	
	மலைக்காடை	
	வண்ணக் காடை	

வண்ணப்படங்களின் பட்டியல்

படத்தாள் எண்	படத்தின் பெயர்	எதிரும் பக்கம்
14	**குயில் வகைகள்**	**466**
	கருங்குயில்	
	கள்ளிக் குயில்	
	வரிக்குயில்	
	புள்ளிக்குயில்	
	இரட்டைவாலன் குயில்	
	சுடலைக்குயில்	
	காக்கா குயில்	
	கொண்டைக் குயில்	
	அக்கா குயில்	
15	**குரங்கு வகைகள்**	**470**
	கருங்கலைக் குரங்கு	
	முசுக் குரங்கு	
	ஊகைக் குரங்கு	
	மந்திக் குரங்கு	
16	**குரலிசைக் குறியீடுகள்**	**476**
17	**குருகு வகைகள்**	**482**
	குருகு	
	கருங்கால் வெண் குருகு	
	வெள்ளாங் குருகு	
	சிறுவெள்ளாங் குருகு	
	பெருங்குருகு	
18	**குருவி வகைகள்**	**500**
	அடைக்கலாங்குருவி	
	சிட்டுக் குருவி	
	மைனாக் குருவி	
	வானம்பாடிக் குருவி	
	விசிறிக் குருவி	
	தையற்சிட்டுக் குருவி	
	வாலாட்டிக் குருவி	
	மீன் கொத்திக் குருவி	
19	**குறிஞ்சி வகைகள்**	**584**
	வெண் குறிஞ்சி	
	நீலக் குறிஞ்சி	
	செந்நீலக் குறிஞ்சி	

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

கா

கா[1] *kā*, ககரமெய் முன்னும் ஆகார உயிர் பின்னுமாகிய, ஒலிப்பு வடிவும் கூட்டெழுத்து வரி வடிவும் கொண்ட, தமிழ் நெடுங்கணக்கில் சார் பெழுத்துகளுள் ஒன்றாகிய வல்லின அசை யெழுத்து; opened syllable of velar voiceless plosive and long vowel (k + ā - kā, vowel consonant) grammatically grouped with *cārbu eḻuttu*, a classification among Tamil alphabets.

[க் + ஆ – கா.]

கா[2]–த்தல் *kā-*, 4 செ.குன்றாவி.(v.t.) 1.காவல் செய்தல்; to guard, keep guard over, watch. *"சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்?" (குறள்,57).* 2. கெடாது பேணுதல்; to keep safe from harm or loss. குளிர்ப்பதனத்தில் பழங்களைப் பல நாள் காத்து வைக்கலாம் (உ.வ.). 3. அழியாது காத்தல்; to keep safe from danger or death. இடையன் ஆடுகளைக் காத்து வளர்க்கிறான் (உ.வ.). 4. உயிருடன் வைத்துப் பேணுதல்; to keep alive. முடமான சிறுவனை அவன் தாய் காத்து வருகிறாள் (உ.வ.). 5. நடைமுறையில் இருக்குமாறு செய்தல்; to keep in existence. பாவாணர் அறக்கட்டளையை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் காத்து வருகிறது (உ.வ.). 6. பாதுகாத்தல்; to preserve, shelter. *"காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்" (திருமுரு.இறுதி.8).* 7. அரசாளுதல்; to govern, rule, reign *"மன்னுயிர் காக்கு மாயிரத் தோரெட் டரசுதலைக் கொண்ட" (சிலப்.5:163,164).* 8. பின் பற்றுதல்; to observe, as vow, a fast. அவள் நோன்பு காத்தாள் (உ.வ.). 9. அரண்காப்புச் செய்தல்; to keep watch. 10.பேணி வளர்த்தல், பேணிக் காத்தல்; to tend, to nourish. 11. கவனித்துப் பேணுதல்; to take care of. 12. ஆடுமாடு முதலியன மேய்த்தல்; to graze cattle. மாடுகாத்த மாயவன் (உ.வ.).

ம.கா, காக்குக; **க.** கா, காய், காயு; **தெ.** காச்சு; **து.** காபுனி; **கோத.** காவ்; **துட.** கோவ்; **குட.** கா; **கொலா.** கய்; **பர்.,கட.** காப்; **கோண்.** கேபனா; **கூ.** காப; **குவி.** காசலி; **குரு.** காப்ன; **மா.** க்வபெ; **பிரா.** க்வாப்ங்க்; **பட.** காலு.

[கல் → கள் → கவ்(வு) → கா. கவ்வுதல் = பிடித்தல், பேணிக்காத்தல். இதிலிருந்து தோன்றிய 'கா' வினையடி பாதுகாத்தல் பொருளுடையதாயிற்று. கவ்வுதல் நெருங்குதல் பொருள் தருதலின், துணையாக வழங்கும் செறிவு (அடர்த்தி)ப் பொருளும் தந்தது.]

கா[3]–த்தல் *kā-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. விலக்குதல்; to prohibit. *"எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை" (குறள்,429).* 2. தடுத்தல்; to restrain. *"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்த லரிது" (குறள்,29).* 3. தீமை வரவொட்டாமல் காப்பாற்றுதல்; to rescue, safe-guard. *"கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்" (கம்பரா.பால.வேள்வி.41).*

ம. காக்குக

[கல் → கள் → கவ் → கா = செறிதல், செறித்தல், தீங்கு வராமல் தடுத்தல், விலக்குதல்.]

கா[4]–த்தல் *kā-*, 4செ.கு.வி. (v.i.) எதிர்பார்த்திருத்தல்; to wait for, to maintain. அவனுக்காகக் காத்திருந் தாள் (உ.வ.).

குட. க

[கா[2] → கா[4].]

கா[5]–த்தல் *kā-*, 4 செ.கு.வி. (v.i.) கா என்னும் ஏவல்;imperative verb. *"காதலையா னின்னடியே வணங்க" (மருதூரந்.84).*

[கல் → கள் → கவ் → கா.]

கா[6] *kā,* பெ.(n.) காப்புநிலை (திவா.); preservation, protection.

[கா[2] → கா[6]]

கா[7] *kā,* பெ.(n.) 1. காக்கப்படுஞ் சோலை, பூந்தோட்டம்; forest, pleasure grove garden. இளமரக்கா காட்சிக்கினியது (உ.வ.). 2. மரங்களும் புதர்களும் அடர்ந்த பெரிய நிலப்பரப்பு, காடு; forest, jungle, wood. *"கடிமரந் துளங்கிய காவும்" (புறநா. 23:9).* 3. விரும்பியதைத் தருவதாகக் கருதப்பட்ட கற்பகமரம் (அக.நி.); the kalpaka tree. 4. ஆல்; the banyan tree (சா.அக.).

ம. கா, காப்பு, காவு; **க.** கா; **தெ., து.** கான.

[கா[5] → கா[7]]

கா[8] *kā,* பெ.(n.) 1. செறிவு, அடர்த்தி; thickness, density. 2. தோட்சுமை (அக.நி.); a load or pack, hung at either end of a pole and carried on the shoulders. *'காவினது ஒருதலைக்கண்ணே பதலை தூங்க' (புறநா.103, உரை).* 3. இருபக்கமுஞ் சுமை தாங்கும் காவடித் தண்டு; pole with ropes hung on each end, used to carry loads or gifts to a temple easily on the shoulder. *"காமமு நாணு முயிர்காவாத் தூங்கும்" (குறள்,1163).* 4. துலாக்கோல் (வின்.); lever or beam for a well-sweep; lever of a steelyard; scales 5. 100 பலம் கொண்ட நிறையளவு; a standard weight = 100 பலம். *"பனையென் அளவும் காவென் னிறையும்" (தொல்.எழுத்து.தொகை.27).* 6. பூ அல்லது இதழ் முதலியன வைக்கும் பெட்டி; receptacle, basket, as for betel or flowers. *"இவர்தரு மெல்லிலைக் காவும்" (சீவக.826).*

ம. காவு, காவடி; **க.** காகடி, காவடி; **தெ.** காவடி, காடி (நுகம்); **து.** காவடி; **கொலா.** காவரி; **பர்.** காங்; **கட.** காசல்; **கொண்.** காஞ்த்; **குவி.** காச.

[கல் → கள் → கவ் → கா = செறிவு, அடர்த்தி, சுமை, எடை, சுமை தூக்கும் பெட்டி.]

கா[9] *kā,* இடை (part.) ஓர் அசைச்சொல்; a poetic expletive. *"புறநிழற் பட்டாளோ விவளிவட் காண்டிகா" (நன்.இடை.22 உரை).*

[கா[2] → கா[9]. கா என்னும் கடிவினை பேணிக்காத்தல், துணையாதல் பொருள் தருதலின் உண்கா (உண்ணத் துணையாகு), செல்கா (செல்லத் துனையாகு) என்னும் சொற்களில், துணைவினையாகப் பெருக ஆட்சி பெற்றதால் துணைவினைகளாக வருபவை உரிச்சொற்களாகவும் அசைச் சொற்களாகவும் வளரும் என்னும் நெறிமுறைக் கிணங்க அசைச்சொல்லாயிற்று.]

கா[10] *kā,* பெ.(n.) கல்விக்குத் தெய்வமான கலைமகள்; goddess of learning; Brahma's spouse.

ம. கா

[கா[2] → கா[10].]

கா

கா[11] *kā,* பெ.(n.) தென்னை, பனை இவற்றின் கள் (த.சொ.அக.); toddy.

[கல் → கள் = கூடுதல், சேர்தல், திரளுதல், ஊறுதல். கள் → கவ் → கா = ஊறிய கள்.]

கா[12] *kā,* பெ.(n.) 1. துன்பம்; distress. 2. வலி; pain,ache.

[கா = செறிவு, அடர்த்தி, மிகுதி, துன்பம், வலி.]

கா[13] *kā,* பெ.(n.) உளுந்து; blackgram (சா.அக.).

[காய் → கா.]

கா[14] *kā,* பெ.(n.) காக்கை கரைதலைக் குறிக்கும் ஒலிக்குறிப்புச் சொல் (கருநா.); onomatopoeic expr. to refer to the cawing of crows.

க. கா

காக்கசந்தி *kākkaśandi,* பெ.(n.) உளுந்து; blackgram (சா.அக.).

க. கா

[காய் → கா → காக்கம் + (சத்தி) சந்தி.]

காக்கட்டான் *kākkaṭṭāṉ,* பெ.(n.) 1. கொடிவகை; mussell-shell creeper. 2. கொடிக்காக்கட்டான் (L.); sky-blue bindweed.

மறுவ. காக்கணம், காக்கணங்கொவ்வை, காக்கணத்தி, கருவிளை, சங்குப்பூ, காக்கணா, கருவிளை.

ம. காக்கணம், காக்காய் வல்லி.

[கா² → காக்கு → காக்கணம்→காக்கட்டான். காக்கட்டான் – இதனைக் காக்கரட்டான் என்பது விலக்கத்தக்க கொச்சை வழக்கு.]

வகைகள்: 1. வெண்காக்கணம், 2.நீலக்காக் கணம், 3. கருங்காக்கணம் 4.இரட்டைக்காக்கணம்.

காக்கடா *kā-k-kaḍā,* பெ.(n.) தீப்பந்தம்; flambeau.

[கா → காக்கு → காக்கடம் → காக்கடா. காக்கு= செறிவு, எரிவு, அனல்.]

காக்கண்டம் *kākkaṇḍam,* பெ.(n.) காவடி; pole or stave of wood used for carrying burdens (சேரநா.).

ம. காகண்டம்

[கா + கண்டம்]

காக்கண்டல் *kā-k-kaṇḍal,* பெ.(n.) சதுப்புநில மரவகை; calycine mangrove (சா.அக.).

[கா + கண்டல்]

காக்கணக்கிரியம் *kākkaṇa-k-kiriyam,* பெ.(n.) காட்டுச்சுரை; forest bottle - gourd (சா. அக.).

[காக்கணம் + கிரியம்.]

காக்கணங்கொவ்வை *kākkaṇaṅkovvai,* பெ.(n.) ***காக்கட்டான்*** பார்க்க; see *kākkaṭṭāṉ.*

[காக்கணம் + கொவ்வை]

காக்கணத்தி *kākkaṇatti,* பெ.(n.) ***காக்கட்டான்*** பார்க்க; see *kākkaṭṭāṉ.*

[காக்கணம் → காக்கணத்தி.]

காக்கணம் *kākkaṇam,* பெ.(n.) 1. ***காக்கட்டான்*** பார்க்க; see *kākkaṭṭāṉ.* 2. கருப்பு, சிவப்பு புள்ளிகளைக் கொண்ட ஒருவகைத் தொழுநோய்; a kind of leprosy with black and red spots.

மறுவ. *காக்கம்*

ம. காக்கணம்

[கா⁴ → காக்கு → காக்கணம் (அடர்ந்து வளரும் கொடி). கா = செறிவு, அடர்த்தி. காக்கண விதையின் கருப்பு சிவப்பு புள்ளிகளைப் போல் தொழுநோயின் வெளி அடையாளம் காணப்படுவதால் காக்கணம் தொழுநோயைக் குறித்தது.]

வகைகள்: 1. வெண்காக்கணம், 2.நீலக்காக் கணம், 3. கருங்காக்கணம் 4.இரட்டைக்காக்கணம்.

காக்கணா *kākkaṇā,* பெ.(n.) ***காக்கட்டான்*** பார்க்க; see *kākkaṭṭāṉ.*

[காக்கணம் →காக்கணா.]

காக்கத்துவான் *kākkattuvāṉ,* பெ.(n.) கிளிவகை; cockatoo.

[கா + கத்துவான்.]

காக்கத்துவான்

காக்கம் *kākkam,* பெ.(n.) சவரிக் கொடி; bitter snake-gourd. 2. கொவ்வைக் கொடி ; a common creeper of the hedges.

[கா² → காக்கு → காக்கம் (செறிந்து படரும் கொடி).]

காக்கரட்டான் *kākkaraṭṭāṉ.* பெ.(n.) ***காக்கட்டான்*** பார்க்க; see *kākkaṭṭāṉ.*

[காக்கட்டான் → காக்கரட்டான் (கொ.வ.).]

காக்கரை *kākkarai,* பெ.(n.) கரிசல் நிலம் (மதுரை); black, stiff, clayey soil, cracking widely in dry weather, requiring a good soaking before being ploughed.

தெ. கக்கரை

[கார் + கரை = காக்கரை.]

காக்களி *kākkaḷi,* பெ.(n.) தேட்கொடுக்கி என்னும் மூலிகை; Indian heliotrope (சா.அக.).

[கா + கொளி–காக்கொளி →காக்களி.]

காக்கறை மூக்கறை *kākkaṟai-mūkkaṟai,* பெ.(n.) 1. அசடன் (இ.வ.); nincompoop (Loc) 2. அறிவற்றவன்; fool.

ம. காக்கரம் பூக்கரம் (ஒழுங்கற்ற நிலை)

[காக்கறை + மூக்கறை.]

காக்கறை மூக்கறை என வரும் எதுகை குறித்த மரபிணைச் சொல் 'எதனையும் காக்கும் திறனற்றவன்' [காப்பில் அறை போயவன்], 'புகழ் பெறத்தக்க தோற்றம் இழந்தவன்' எனப் பொருள் தருவதாகும் [மூக்கு அறை – மூக்கிழந்த தோற்றம்].

காக்கன்[1] *kākkaṉ,* பெ.(n.) 1. கடல்மீன் வகை (M.M.); a sea-fish, grey, attaining 1½ ft. in length. 2. காக்கை; a crow. 3. கருப்பன்; a black man.

ம. காக்கன்

[கரு →காக்கு → காக்கன்.]

காக்கன்[2] *kākkaṉ,* பெ.(n.) 1. காப்பவன்; protector. 2. தாய்மாமன்; maternal uncle. 3. மதிக்கத்தக்கவன்; respectable person.

குச். காகா

[கா → காக்கன்.]

காக்கன்போக்கன் *kākkaṉ-pōkkaṉ,* பெ.(n.) 1. ஊர் பேர் தெரியாதவன்; stranger, unknown person. *"காக்கனுக்கும் போக்கனுக்கும் பூத்தாயோ முல்லை" (நாட்டுப்பா).* 2. தீயவன்(வின்.); idle vagrant.

க., து. காகபோக

[காக்கறையன் = காக்கன். போக்கறையன் = போக்கன். இவ்விடைக் குறைச் சொற்கள் காக்கன் போக்கன் என எதுகை குறித்த இணைமொழி வடிவுற்றமை காணலாம்.]

காக்காச்சி[1] *kākkācci,* பெ.(n.) 1.கடலிலும் ஆற்றிலும் வாழ்வதும், ஆறுவிரலம் நீளமுடை யதுமான வெளிறிய மீன்வகை; a sea and river fish, silvery, attaining 6 in. in length. 2. 11¼ விரலம் வளரக்கூடிய கடல்மீன் வகை; a sea-fish, roseate, attaining 11¼ in. in length. 3. ஒருவகைக் கிளிஞ்சில்; cockle.

[கார்[2] → காக்கு → காக்காச்சி.]



காக்காச்சி

காக்காச்சி[2] *kākkācci,* பெ.(n.) காக்கையினத்தில் பெண்பால் (பேச்சு வடி.); female crow.

[காக்கை + ஆச்சி – காக்காச்சி.]

காக்காந்தோல் *kākkāntōl,* பெ.(n). குதிகாலில் உண்டாகும் கொப்புளவகை (நெல்லை.); abscess in the heel.

மறுவ. காக்காய்க்கொப்புளம், காக்காய்த்தோல், காக்காய்த்தோலி, காக்காய்ப்புண்.

[கார்[2] → காக்கு → காக்கன் + தோல் – காக்கந்தோல் → காக்காந்தோல். காக்கு = திரட்சி (செறிவு). இதனைக் காக்காய்த்தோல் என்று செ.அக. குறித்திருப்பது கொச்சை வழக்கு.]

காக்காய் *kākkāy,* பெ.(n.) ***காக்கை*** பார்க்க; see *kākkai.* *'காக்காய் உட்காரப் பனம்பழம் விழுந்தது' (பழ.).*

[கா+கா–காக்கா→ காக்கை → காக்காய் → (ஐகார ஈறு ஆய் ஈறாகத் திரிவது கொச்சை வழக்கு.).]

காக்காய்க்கடி *kākkāy-k-kaḍi,* பெ.(n.) பெரும்பாலும் சிறுவரிடையே காணப்படும் தின்பண்டம் போன்ற வற்றை எச்சில் படாமல் துணியால் மூடிக் கடிக்கும் முறை; practice of splitting sweets nuts etc; in which the object is not directly bitten but through a cloth (prevalent among children). அந்த வெல்லக்கட்டியில் எனக்குக் காக்காய்க்கடி கடித்துத்தா (உ.வா).

[காக்காய் + கடி.]

காக்காய்க்கால் *kākkāy-k-kāl,* பெ.(n.) 1. காய்ந்த வயலிற் காணும் வெடிப்பு (இ.வ.); splits or clefts in dried fields of wet cultivation. 2. காக்கையின் கால்போற் காணும் வயிரக்குற்ற வகை (உ.வ.); flaw in a gem, esp. a diamond, so called from its resembling a crow's foot. 3.குழந்தைகள் வரைபடம், கிறுக்கலான கையெழுத்து; drawing made by children, ugly hand-writing. 4.எழுத்து வரிப்பிளப்பைக் குறிக்கும் புள்ளடி(இ.வ.); caret (loc.). 5. மிளகுக் கொடி, வெற்றிலைக் கொடி போன்றவற்றின் கணுக்களில் தோன்றும் சிறிய பற்று வேர்; roots at the nodes of climbers like betel vine, pepper vine etc. 6.கற்றை கட்டுவதில் ஒரு வகை; one of the nodes of binding the sheaves of corn.

ம. காக்கக்கால்

[காக்கை → காக்காய் + கால் (கோணலான கோடு).]

காக்காய்க்கால் தையல் *kākkāy-k-kāl-taiyal,* பெ.(n.) தையல்வேலைப்பாடுகளுள் ஒன்று; feather-stitching.

[காக்கை → காக்காய் + கால் + தையல்.]

காக்காய்க் குளியல் *kākkāy-k-kuḷiyal,* பெ.(n.)முழு உடம்பையும் நனைக்காமல் தண்ணீரை அள்ளித் தெளித்துக் குளித்தல்; have wash in a hurry. காக்காய்க்குளியல் போட்டு விட்டு ஐந்து நிமிடத்தில் வந்துவிடுகிறேன் (உ.வ.).

க. காகச்நான

[காக்கை → காக்காய் + குளியல்.]

காக்காய்க்குறவன் *kākkāy-k-k-kuṟavaṉ,* பெ.(n.) காக்கை தின்னும் ஓர் இனத்தார்; crow eating people.

மறுவ. காக்கைக் குறவன்

ம. காக்கக்குறவன்

[காக்கை → காக்காய் + குறவன்.]

காக்காய்க்கொப்புளம் *kākkāy-k-koppuḷam,* பெ.(n.) ***காக்காந்தோல்*** பார்க்க; see *kākkāntōl.*

[காக்கை → காக்காய் + கொப்புளம்.]

காக்காய்க்கொல்லி *kākāy-kolli,* பெ.(n.) ***காக்கைக் கொல்லி*** பார்க்க; see *kākkai-k-kolli.*

[காக்கை → காக்காய் + கொல்லி.]

காக்காய்ச்சிப்பி *kākkāy-c-cippi,* பெ.(n.) ஏரிகளிலும் குளங்களிலும் காணும் நத்தை வகை; cockles in lakes and tanks (சா.அக).

மறுவ. காக்கைச்சிப்பி

[காக்கை → காக்காய் + சிப்பி. காக்கை நிறம், கறுப்பு நிறச் சிப்பி.]



காக்காய்ச்சிப்பி

காக்காய்ச்சோளம் *kākkāy-c-cōḷam,* பெ.(n.) ***காக்கைச்சோளம்*** பார்க்க; see *kākkai-c-cōḷam.*

மறுவ. காக்கைச்சோளம்

ம. காக்கச்சோளம்; க. காகெஜோள.

[காக்கை → காக்காய் +சோளம் - காக்காய்ச்சோளம். 'காக்கை' கருநிறம் குறித்தது.]

காக்காய்த்தாளி *kākkāy-t-tāḷi,* பெ.(n.) கருங்காலி வகை (L); Ceylon ebony.

மறுவ. காக்கைத்தாளி

[காக்கை → காக்காய் + தாளி.]

காக்காய்த்தும்பை *kākkāy-t-tumbai,* பெ.(n.) ***காக்கைத்தும்பை*** பார்க்க; see *kākkai-t-tumbai* name of a plant, Malabar catmint(சேரநா.).

மறுவ. காக்கைத்தும்பை

ம. காகத் தும்ப; க. கரிதும்பெ.

[காக்கை → காக்காய் + தும்பை.]

காக்காய்த்தோல் *kākkāy-t-tōl,* பெ.(n.) ***காக்காந்தோல்*** பார்க்க; see *kākkāi-t-tōl.*

[காக்கு → காக்கன் → காக்காய் + தோல். காக்கு - திரட்சி (கொ.வ.).]

காக்காய்த்தோலி *kākkāy-t-tōli,* பெ.(n.) ***காக்காந்தோல்*** பார்க்க; see *kākkāi-t-tōl.*

[காக்காய்த்தோல் → காக்காய்த்தோலி.]

காக்காய்நீர் *kākkāy-nīr,* பெ.(n.) இளநீர் போன்ற தெளிவான தண்ணீர் (இ.வ.); clear, limpid water (loc.).

[கால் + காய் – காக்காய் + நீர். வழுக்கை ஒருசிறிதும் திரளாத இளநீர் கால்காய் (தேங்காயின் காற்பகுதி வளர்ச்சி எனப்படுதலின் இது இப்பெயர் பெற்றது.)]

காக்காய்ப்பாலை *kākkāy-p-pālai,* பெ.(n.) மரவகை(L.); cluster-flowered croton.

மறுவ. காக்கைப்பாலை

[காக்கை → காக்காய் + பாலை.]

காக்காய்ப்பிசின் *kākkāy-p-pisin,* பெ.(n.) கருவேலமரத்தினின்று வடியும் கொற கொறப்பான கரிய போலிப்பிசின்; gum-like back extrusion

மறுவ. காக்கைப்பிசின்

[காக்கை → காக்காய் + பிசின். 'காக்கை' கருநிறம் குறித்தது.]

காக்காய்ப்புண் *kākkāy-p-puṇ,* பெ.(n.) ***காக்காந் தோல்*** பார்க்க; see *kākkān-tōl.*

[கா² → காக்கு → காக்கன் → காக்காய் + புண். காக்கு = திரட்சி.]

காக்காய்ப்பூ *kākkāy-p-pū,* பெ.(n.) 1. தொட்டிகளில் வைத்து வளர்க்கும் ஒரு பூஞ்செடி (M.M.); sispara creeper, herbaceous pot plant, which bears small purple flowers. 2.அனிச்சம்; the plant hibiscus furcatus(சேரநா.).

ம.காக்கப்பூ

[காக்கை → காக்காய் + பூ. 'காக்கை' கருநிறம் குறித்தது.]

காக்காய்ப்பொன் *kākkāy-p-poṉ,* பெ.(n.) ***காக்கைப்பொன்*** பார்க்க; see *kākkai-p-poṉ.*

[காக்கை → காக்காய் + பொன்.]

காக்காய்பிடி-த்தல் *kākkāy-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) ***கால்கைபிடி-த்தல்*** பார்க்க; see *kāl-kai-piḍi-.*

ம. காக்கபிடிக்குக; க. காக்காய் கிடி; தெ. காக்கா பட்டு.

[கால் + கை → கால்கை → காக்கை → காக்காய் + பிடி. காலும் கையும் பிடித்து, நயமாகத் தாழ்ந்து, இனிமையாகப் பேசிப் பிறரை வயப்படுத்துதலை, கால்கை பிடித்தல் என்பர். இது காக்காய் பிடித்தல் எனத் திரிந்தது. கடுங்கொச்சை வழக்கு.]

காக்காய் மரங்கொத்தி *kāyāy-maraṅkotti,* பெ.(n.) ஒருவகை மரங்கொத்தி; the Malabar great black woodpecker (சேரநா.).

ம. காக்க மரங்கொத்தி

[காக்கை → காக்காய் + மரங்கொத்தி. 'காக்கை' கருநிறம் குறித்தது.]

காக்காய் மரங்கொத்தி

காக்காய்மீன்[1] *kākkāy-mīṉ,* பெ. (n.) கொருக்கை என்னும் கடல்மீன்வகை; a kind of sea - fish.

[காக்கை → காக்காய் + மீன். 'காக்கை' கருநிறம் குறித்தது.]



காக்காய்மீன்

காக்காய்மீன்[2] *kākkāy-mīṉ,* பெ. (n.) பொன்னிறப் பிசின்; gold-coloured gum (சா.அக.).

[காக்காய் + மீன் = காக்காய்மீன். செவுள்களின் பசை போன்ற தாகலாம்.]

காக்காய்முள் *kākkāy-muḷ,* பெ. (n.) 1. கூடுகட்டக் காக்கை பயன்படுத்தும் முள்; thorns used by crows in building their nests. 2. ஆனை நெருஞ்சி (M.M.). crow thorn, elephant caltrop pedalium murex.

ம. காக்கமுள்ளு

[காக்கை → காக்காய் + முள்.]

காக்காய்மூக்கன் *kākkāy-mūkkaṉ,* பெ.(n.) நீண்ட மூக்குள்ளவன் (இ.வ.); man with sharp long nose.

ம. காக்கமூக்கன்

[காக்கை → காக்காய் + மூக்கன்.]

காக்காய்மூக்கி *kākkāy-mūkki,* பெ.(n.) கருமுகிற் செய்நஞ்சு(வின்.); a prepared arsenic.

[காக்கை → காக்காய் + மூக்கி.]

காக்காய்மூக்கு[1] *kākkāy-mūkku,* பெ.(n.) நட்ட தென்னை நெற்றினின்று தோன்றும் முளை; sprout from a coconut seedling just as it begins to grow, resembling a crow's beak.

[காக்கை → காக்காய் + மூக்கு.]

காக்காய்மூக்கு[2] *kākkāy-mūkku,* பெ.(n.) கருமுகிற் செய்நஞ்சு (யாழ். அக.); a prepared arsenic.

[காக்கை → காக்காய் + மூக்கு.]

காக்காய்வடை *kākkāy-vaḍai,* பெ.(n.) நீத்தார் நினைவுநாளில் அல்லது ஈமை இறுதி நாளில் தென் புலத்தார்க்குப் படைக்கும் வடை; cake offered to manes at the end of the last rites or annual ceremony of the deceased ancesstors.

[காக்கை → காக்காய் + வடை. காக்கைக்கு இடும் வடை எனப் பொருள்படும்.]

காக்காய்வல்லி *kākāyvalli,* பெ.(n.) **காக்கணம்** பார்க்க see *kākkaṇam* (சா.அக.).

[காக்காய் + வல்லி.]

காக்காய்வலிப்பு *kākkāy-valippu,* பெ.(n.) ***கால்கை வலிப்பு*** பார்க்க; see *kālkai-valippu.*

ம. காக்கவலி

[கால் + கை – காக்கை + வலிப்பு – காக்கை வலிப்பு → காக்காய் வலிப்பு எனத் திரிந்தது. கடுங்கொச்சை வழக்கு.]

காக்காய்வெருட்சி *kākkāy-verutci,* பெ.(n.) காக்கைகட்கு மன வெருட்சியை உண்டாக்கும் வௌவால் வகை (M.M.); lit., crow-terror, vampire bat of which crows are scared.

[காக்கை → காக்காய் + வெருட்சி.]

காக்காரர் *kā-k-kārar,* பெ.(n.)பல்லக்கின் காத்தண்டு களைச் சுமப்போர் (வின்.); palanquin - bearers; persons who carry loads suspended from a pole on their shoulders.

[கா + காரர் – காக்காரர்.]

காக்காவல்லி *kākkā-valli,* பெ.(n.) கொடிவகை (விவசா.நூன்மு.7); a kind of creeper.

[கார்² → காக்கு → காக்கன் → காக்கா + வல்லி.]

காக்காவெனல் *kā-k-kā-v-enal,* பெ.(n.) காக்கை கரையும் ஒலிக்குறிப்பு; onom. expression signifying the cawing of the crow.

Skt. kāka

க.காகா

[கா + கா+ எனல்.காக்கையின் 'காகா' என்னும் தொடரோசை. தொல்லை தரும் வெற்றோசை என்பது குறிப்பு.]

காக்கி¹ *kākki,* பெ.(n.) 1. கருநிறத்துப் பெண்; a woman of black colour. 2. காக்கை; crow.

[காருக்கி→காக்கி. ஒ.நோ. கருக்கன் (ஆ.பா.) → கருக்கி (பெ.பா.).]

காக்கி² *kākki,* பெ.(n.) ஒருவகைப் பழுப்பு நிறத்துணி; light drabor chocolate - coloured cloth produced by boiling myrobalans and sulphate of iron together.

[கால் → காக்கு → காக்கி.]

காக்குத்துவான் *kākkuttuvāṉ,* பெ.(n.) ***காக்கத்துவான்*** பார்க்க; see *kākkattuvāṉ.*

[காக்கத்துவான் → காக்குத்துவான் (கொ.வ.).]

காக்குநாயகன் *kākku-nāyagaṉ,* பெ.(n.) 1. ஒரு குடி;a community in TamilNadu; 2. ஒரு படை முதல்வர்;a main of the army. *"இருப்பைபாக்கிழான் தாழி காக்குநாயகன், ஏறி அருளப் பண்ணின முதலியார் காக்கு நாயகர்க்கு காக்கு நாயகன் விசையன் செம்பிய தரையன் வைத்த" (SII.vi.330-4 p.328).*

[காக்கு + நாயகன்.]

காக்குறட்டை *kākkuṟaṭṭai,* பெ.(n.) காக்கண வகை (மலை.); mussell-shell creeper.

மறுவ. கருங்காக்கணம்

[காக்கரட்டை → காக்குறட்டை.]

காக்கை¹ *kākkai,* பெ.(n.) 1. கருநிறமுடையதும் கா கா வென்று கத்துவதுமான இந்தியப் பறவை; country crow. *"காக்கை கரவா கரைந்துண்ணும்" (குறள்,527).* 2. 23 ஆம் நாண்மீன், பறவை (அவிட்டம்) (திவா.); the 23rd nakšatra.

ம. காக்க; **க.** காகி, காகி, காகெ; **தெ.**காகி; **து.**காக்கெ காக; **கோத.** காக் காய்க்; **துட.** காக்; **குட., பட.,** காகெ; **கொலா.** காக; **பர்.** காகன்; **கட.** காகன்; **கோண்.** காகர்; **கூ.** காக; **குவி.** காவ்வ, காவ; **குரு.** காகா; **மா.** க்வக்வெ; **பிரா.** காகொ. **Skt.** kāka; **Nep.** kāk.

Beng.kāk, **Guj.** kagto; **H.U.,** howā;Punj.kā;**Kash.** kāv, **Sind.** kāngum; **Mar.** kāvļā; **Ass.** Kāyuri, **Ori.** kuvā, kāvu. **Aust.** koa.

காக்கை வகைகள்

சாம்பல் கழுத்துக் காக்கை



கடற் காக்கை

அண்டங்காக்கை

மணியங்காக்கை



சிறுவெண் காக்கை



நீர்க் காக்கை

kâka, kâga, a male crow, ***kâki,*** a female crow. Cf. D. ***kâge,*** etc.; ***kâ3, kâvu 3***. As Samskrita, in the *Amarakôśa* alone, has nine other names for the crow, it is certain that ***kâka, kâki,*** and ***kâga*** have been borrowed from D. wherein ***kâge*** and its dialectical forms are the only names for the crow, that is so very common also in the South of India (K.K.E.D.XX).

[கா + கா → காக்கா→ காக்கை. காகாவெனக் கத்துதலால் காக்கை எனப்பெயர்பெற்றது. காகா வெனும் அஃறிணை உயிர் ஒலிக் குறிப்பினின்று தோன்றிய சொல் (மு.தா.2).]

வகைகள்:

1. காக்கை, 2. அண்டங் காக்கை, 3. **சீமைக் காக்கை**, 4. நீர்க் காக்கை, 5. மணியங் காக்கை.

காக்கை[2] *kākkai,* பெ.(n.) பேணிக்காத்தல், பாதுகாத்தல்; preserving, protecting. *"மண் காக்கைக்கு மாய்க்கைக்கும்" (அஷ்டப். திருவரங் கத்தந்.9).*

[கா[2] → காக்கை (காத்தல்).]

காக்கைக் கண் *kākkai-k-kaṉ,* பெ.(n.) 1. ஒருக் கணிப்பு கண்; squint - eye. 2. கூர்ந்து நோக்குதல்; fixing one's eyes or one spot, close attention.

ம. காக்கத்ரும்டி; க. காகெகண்ணு.

[காக்கை + கண்.]

காக்கைக்கண்ணன் *kākkai-k-kaṇṇaṉ,* பெ.(n.) காக்கை போல் செருகட் பார்வையுடையோன், மாறுகண்ணன்; squint-eyed or cross-eyed person. *"கற்புளார் செயலை நொய்து கழறினன் காக்கைக் கண்ணன்" (சிவதரு.சுவர்க்கநரகசே.31).*

[காக்கை + கண்ணன். காக்கை ஒரு கண்ணைச் சாய்த்து நோக்கும் இயல்புடையதாதலின் மாறுகண்ணுள்ள வனைக் காக்கை கண்ணன் என்பது உலகியலாயிற்று.]

காக்கைக்கரிச்சான் *kākkai-k-kariccāṉ,* பெ.(n.) 1.ஈயத்தண்டுச்செடி; a plant with lead like stem. 2. கறுப்புக் கரிசலாங்கண்ணி; black eclipse plant (சா.அக.).

[காக்கை + கரிச்சான்.]

காக்கைக் கருப்பி *kākkai-k-karuppi,* பெ.(n.)1. மிகக் கருப்பு நிறத்தவள்; a female of utter dark complexion. 2. அழகற்றவள்; an ugly woman.

ம. காக்கக்குடிக்கி

[காக்கை + கருப்பு + இ.]

காக்கைக் கருப்பு *kākkai-k-karuppu,* பெ.(n.) மிகக் கருப்பு; utter dark complexion.

ம. அட்டக் கருப்பு

[காக்கை + கருப்பு.]

காக்கைக்குணம் *kākkai-k-kuṇam,* பெ.(n.) காக்கைக்குரிய ஐந்து தன்மைகள் (திருக்கோ. 235;உரை). characteristics of a crow being five.

[காக்கை + குணம். காக்கைக்குணங்கள்: மடியின்மை, கலங்காமை, நெடுகக் காண்டல், பொழுதிறவா திடம்புகுதல், மறைந்த புணர்ச்சி.]

காக்கைக் குயில் *kākkai-k-kuyil* பெ.(n.) கருங் குயில்; the black Indian cukkoo bird.

ம. காக்ககுயில்; து. காக்குயில்; Skt. kākajāta.

[காக்கை + குயில்.]

காக்கைக் குயில்

காக்கைக்குரல் *kākkai-k-kural,* பெ.(n.) 1. காக்கை கரைதலின் ஒலி; the cry of a crow. 2. கரகரத்த குரல்; a harsh or coarse sound. 3. வசை இசை (அபஸ்வரம்); solecism.

ம. காகச்வரம்

[காக்கை + குரல்.]

காக்கைக் குறவன் *kākkai-k-kuṟavaṉ,* பெ.(n.) 1. காக்கை தின்னுங்குறவன்; crow eating kuṟava. 2. அழகில்லாத கருப்பு நிற ஆள்;a black ugly person. 3.***காக்காய்க் குறவன்*** பார்க்க; see *kākkay-k-kuṟavaṉ.*

ம. காக்க குறவன்

[காக்கை + குறவன்.]

காக்கைக்கொடியாள் *kākkai-k-koḍiyāḷ,* பெ.(n.) மூதேவி, சோம்பலுக்குரிய பெண்தெய்வம் (திவா.); the goddess of ill-luck, who has a crow on her banner.

மறுவ. முகடி, தவ்வை

[காக்கை + கொடி + ஆள் = காக்கைக்கொடியாள். காக்கை வடிவம் பொறித்த கொடியுடையவள்.]

காக்கைகொல்லி *kākkai-kolli,* பெ.(n.) கொடிவகை; coculus-indicus.

மறுவ. பேன்கொட்டை

[காக்கை+ கொல்லி. இதன் விதை மிகுந்த நச்சுத்தன்மையுடையது; மயக்கந்தர வல்லது.]

காக்கைச் சுரம் *kākkai-c-curam* பெ.(n.) ***கால்கை வலிப்பு*** பார்க்க; see *kālkaivalippu.*

ம. காகச்வரம்

[கால்கைச்சுரம் → காக்கைச்சுரம்.]

காக்கைச் சுள்ளி *kākkai-c-cuḷḷi,* பெ.(n.) 1. சிறிய மிளாறுகள்; small twigs.2. காகம் கூடு கட்டப் பயன்படுத்துவது போன்ற சிறு குச்சிகள்;small sticks collected by crows to build their nests.

ம. காக்கச் சுள்ளி

[காக்கை + சுள்ளி = காக்கை கூடு கட்டுதற்குப்பயன் படுத்தும் சுள்ளி.]

காக்கைச்சேல் *kākkāi-c-cēl,* பெ.(n.) நல்ல தண்ணீரில் வாழும் கெண்டை மீன்வகை; a fresh - water coast-fish, yellowish, attaining 3 in. in length, very pugnacious.

[கால்காய் + சேல் – காற்காய்ச்சேல் → காக்கைச் சேல். கால்காய் = இளநீர் (தெளிவான நீர்). காற்காய்ச் சேல்மீனை காக்கைச்சேல் என்பது கொச்சை வழக்கு.]

காக்கைச் சோளம் *kākkai-c-cōḷam,* பெ.(n.) கருஞ்சோளம்;blcak cholam.

ம. காக்கச்சோளம்

[காக்கை + சோளம். நிறத்தால் பெற்ற பெயர். அளவில் சிறிய சோளம்.]

காக்கைத் தனம் *kākkai-t-taṉam,* பெ.(n.) 1. கெட்ட இயல்பு; bad notion. 2. காக்கையின் இயல்பு; the character of a crow.

க. காகுதன

Skt. kākatra

[காக்கை + தனம்.]

காக்கைத் தும்பை *kākkai-t-tumbai,* பெ.(n.) கருந் தும்பை; name of a plant, Malabar catanint (சேரநா.).

ம. காக்கத்தும்ப; க. கனிந்தும்பை.

[காக்கை + தும்பை.]

காக்கைநஞ்சு *kākkai-nañju,* பெ.(n.) ஒருவகைச் செய்நஞ்சு; a prepared arsenic.

[காக்கை + நஞ்சு.]

காக்கைப்பலா *kākkai-p-pālā,* பெ.(n.) ஒருவகைப் கருப்புப் பலா; a black variety of Jack fruit.

[கார்² → காக்கு → காக்கன் + பலா – காக்கன்பலா → காக்கைப்பலா (கொ.வ.). (நெருங்கக்காய்க்கும் இயல்பு பற்றிக் காக்கன் பலா எனப்பட்டது).]

காக்கைப்பலி *kākkai-p-pali,* பெ.(n.) தென்புலத்தார் (இறந்த முன்னோர்) பொருட்டுக் காக்கைக்கு இடும் சோற்றுருண்டை; ball of rice and other ingredients placed to crows for the soul of the dead persons by the relatives. "காக்கைக்குப்பலி காட்டிய வாறே" (திருமந்.191).

[காக்கை + பலி]

காக்கைப் பார்வை *kākkai-p-pārvai,* பெ.(n.) ஒற்றைப்பார்வை; an oblique look (சா.அக.).

[காக்கை + பார்வை]

காக்கைப் புள்ளி *kākkai-p-puḷḷi,* பெ.(n.) சிறிய கருத்த புள்ளி, மச்சம்; a small black spot.

[காக்கை + புள்ளி]

காக்கைப் பேச்சு *kākkai-p-pēccu,* பெ.(n.) கெட்ட பேச்சு; evil talk.

க. காகுநுடி

[காக்கை + பேச்சு.]

காக்கைப்பொன் *kākkai-p-poṉ,* பெ.(n.) 1. பொன் னிறத்தில் இருக்கும் ஒருவகைப்பித்தளை; kind of tinsel, resembling gold leaf, used for decoration at weddings and other festivals. ஒருவன் ஒரு குழகனைப் பண்ணி அதன்கழுத்திலே காக்கைப் பொன்னைத் தொற்றி (ஈடு,3:1.10). 2. பொன்னிறப் பிசின்; a gum having gold colour(த.சொ.அக.). 3. மின்னு (அப்பிரக)த் தகடு; mica in flakes (சா.அக.).

ம. காக்கபொன்னு; க. காகிபங்கார; தெ. காகிபங்காரு.

[காக்கை + பொன். பளபளக்கும் எளிய மாழைத்தகடு, காக்கையின் கண்களுக்குக் கவர்ச்சியாகத் தோன்றுமாதலின் காக்கை விரும்பும் பொன் என்னும் பொருள் குறித்ததாகலாம்.]

காக்கைபாடினியம் *kākkai-pāḍiṉiyam,* பெ.(n.) காக்கைபாடினியார் இயற்றிய யாப்பிலக்கண நூல்; an ancient work on Tamil prosody by *kākkaipāḍiṉiyār,* not extant, only a few *sutras* of which are found quoted in the old commentaries.

[காக்கை + பாடினி + அம் – காக்கைபாடினியம்.]

வகைகள்: 1. பெருங்காக்கை பாடினியம் 2. சிறுகாக்கை பாடினியம்.

காக்கைபாடினியார் *kākkai-pāḍiṉiyār,* பெ.(n.) காக்கை பாடினியம் என்னும் யாப்பிலக்கணஞ் செய்த பழைய ஆசிரியர் (தொல்.பொருள்.மரபு. 98, உரை); author of *kākkaipāḍiṉiyam* a Tamil prosodi.

[காக்கை + பாடினி + ஆர் –காக்கைபாடினியார். காக்கையை வியந்து பாடியதால் பெற்ற சிறப்புப்பெயர். 'ஆர்' உயர்வுப்பன்மையீறு.]

காக்கைபாடினியார் நச்செள்ளையார் *kākkai-pāḍiṉiyār-naccellaiyār,* பெ.(n.) காக்கை கரை தலைப் பாராட்டிப்பாடியமை பற்றிக் காக்கை பாடினி எனப் பெயர் பெற்றவரும் பதிற்றுப் பத்தின் ஆறாம் பத்தினை இயற்றியவருமானபெண்பாற் புலவர்; a famous poetess, author of the sixth decade of *Padiṟṟu-p-pattu,* so named because she vividly described the cawing of a crow.

[காக்கை + பாடினி + ஆர் +நல் + செள்ளை + ஆர். 'ஆர்'உ.ப. ஈறு. நச்செள்ளை என்பது இயற்பெயர். பதிற்றுப்பத்தில் ஆறாம்பத்தினைப் பாடியவர். மேலும், குறுந்தொகை 210, புறம் 278 ஆகியவையும் இவர் பாடியவை. "விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே" என்னும் குறுந்தொகை வரிகளால், காக்கை பாடினியார் என்று சிறப்புப் பெயர் பெற்றார்.]

காக்கைமரங்கொத்தி *kākkai-maraṅkotti,* பெ.(n.) ஒரு வகை மரங்கொத்தி; the Malabar great black wood pecker.

ம. காக்கமரங்கொத்தி

[காக்கை + மரங்கொத்தி.]

காக்கைமல்லி *kākkai-malli,* பெ.(n.) நுணா; wild jasmine (சா. அக.).

ம. காக்கமல்லி

[காக்கை + மல்லி.]

காக்கைமனம் *kākkai-manam,* பெ.(n.) தீய மனம்; evil mind.

க. காகுமன

[காக்கை + மனம்.]

காக்கைமாசி *kākkaimāci,* பெ.(n.) ***காகமாசி*** பார்க்க; see *kāga-māši.*

[காக்கை + மாசி.]

காக்கைமீன் கொத்தி *kākkaimīn-kotti,* பெ.(n.) ஒரு வகை மீன் கொத்தி; brown headed stork hilled king fisher.

ம. காக்க மீன்கொத்தி

[காக்கை + மீன்கொத்தி.]

காக்கைமுகம் *kākkai-mugam,* பெ.(n.) காக்கை போன்ற முகம்; crow-faced.

skt. kākamukha

[காக்கை + முகம்.]

காக்கைமூக்கன் *kākkai-mūkkan,* பெ.(n.) நீண்ட, கூர்மையான மூக்குள்ளவன்; a person with long nose.

ம. காக்க மூக்கன்

[காக்கை + மூக்கன்.]

காக்கைமூக்கு *kākkai-mūkku,* பெ.(n.) குறடு, இடுக்கிப்பொறி; pincers, tongs.

ம. காக்கவா; **பட.** காக்கெ மூக்கு.

[காக்கை + மூக்கு.]

காக்கை மெய்ப்பாடு *kākkai-meyppāḍu,* பெ.(n.) ***காகசத்துவம்*** பார்க்க; see *kāga-sattuvam.*

[காக்கை + மெய்ப்பாடு.]

காக்கைவலி *kākkai-vāli,* பெ.(n.) ***கால்கை வலிப்பு*** பார்க்க; see *kāl-kai-valippu.*

ம. காக்கவலி

[கால் + கை + வலி – கால்கை வலி→காக்கைவலி (கொ.வ.).]

காக்கைவளையல் *kākkai-vāḷaiyal,* பெ.(n.) ஒரு வகைக் கருப்பு நிறக் கண்ணாடி வளையல்; a kind of black glass bangle.

ம. காக்கவளை

[காக்கை + வளையல்]

காகவிருந்தம் *kāgavirundam,* பெ.(n.) ஒருவகை வைரம்; a kind of Diamond. *"ஒன்றிற் கட்டின வயிரங்காக விருந்தமும் உருளையுமாக ஐஞ்சும்" (SII.ii.79-143 p.396).*

[காகம் + விருந்தம்.]

காக்கைவிளக்கு *kākkai-viḷakku,* பெ.(n.) ஒரு வகை இரும்பு விளக்கு; a kind of iron lamp.

ம. காக்கவிளக்கு

[காக்கை + விளக்கு]

காக்கைவேலி *kākkai-vēli,* பெ.(n.) வேலிப்பருத்தி; headge-cotton.

[காக்கை + வேலி.]

காகக்கரிப்பன் *kāga-k-karippan,* பெ.(n.) கருங் கையாந்தகரை; a black - coloured eclipse plant. *"கவிர் முடக்கற்றான் காகக்கரிப்பனீர் வல்லி" (தைலவ.தைல.94).*

[காக்கை + கருப்பன் – காக்கைக்கருப்பன்→ காக்கைக்கருப்பான்→ காகக்கரிப்பன் (கொ.வ.).]

காகக்கல் *kāga-k-kal,* பெ.(n.) கறுப்புநிறக் காந்தக்கல்; black load stone (சா.அக.)

[காக்கை + கல் – காக்கைக்கல்→காகக்கல்.]

காகக்குடம் *kāga-k-kuḍam,* பெ.(n.) எள் (த.சொ.அக.); sesame.

[காகம் + குடம் = காகக்குடம்.]

காகச்சிலை *kāga-c-cilai,* பெ.(n.) காந்த ஆற்றல் உள்ள ஒருவகை இரும்புக்கட்டி (வின்.); black load-stone, magnetic oxide of iron.

மறுவ. கருமுகிற்சிலை

[கார்² → காக்கு → காக்கன் + சிலை – காக்கஞ்சிலை → காகச்சிலை (கொ.வ.).]

காகச்சுக்கான் *kāga-c-cukkāṉ,* பெ.(n.) கருஞ் சுக்கான் (வின்.); black marble.

[காக்கை + சுக்கான் – காக்கைச்சுக்கான் → காகச்சுக்கான் (கொ.வ.) 'காக்கை' கருநிறம்குறித்தது.]

காகசகுட்டம் *kāgaša-kuṭṭam,* பெ.(n.) கொப்புளங்கள் சிவந்த நிறத்துடனுண்டாகிப் பின் கறுத்துக் கிராம்பு முகிழினுருவத்தைப் பெற்று உடைந்து காயமாகும் தொழுநோய்வகை (சீவரட்.151.); kind of leprosy, with reddish shinning spots followed by an eruption of dark nodules.

[காக்கை + குட்டம் – காக்கைக் குட்டம் → காக்கசக்குட்டம் → காகசகுட்டம் (கொ.வ.). 'காக்கை' கருநிறம் குறித்தது. காக்கையின் பிறப்பைப்போல் முதற்சிவந்து பின்பு கறுப்பதால் இப் பெயர் பெற்றது (த.சொ.அக.).]

காகசத்துவம் *kāga-šattuvam,* பெ.(n.) மகளிரின் பத்து மெய்ப்பாடுகளுள் ஒன்று (கொக்கோ. 4.26.); (Erot.) the natural disposition of a women, classed under the crow type, one of the *ten-cattuvams.*

Skt. satva > **த.** சத்துவம்.

[காக்கை→ காகம் + சத்துவம்.]

காகசிஞ்சை *kāgašiñjai,* பெ.(n.) குன்றிக்கொடி (த.சொ.அக); climber of crab's eye.

[காக்கை→ காகம் + (செஞ்சி) சிஞ்சை.]

காகசுரம் *kāga-šuram,* பெ.(n.) (இசை.) இசைக் குற்றவோசை (திருவாலவா.57:14.); (Mus.)cawing note, a defect in singing.

[காக்கை→காகம் + சுரம். 'காக்கை' கருநிறம் குறித்துக் குற்றப்பொருள் உணர்த்திற்று.]

காகத்துரத்தி *kāga-t-turatti,* பெ.(n.) ஆதொண்டை (மலை.); thorny caper.

[காக்கை+துரத்தி–காக்கைத்துரத்தி → காகத்துரத்தி.]

காகத்துவசத்தாள் *kāga-t-tuvašattāḷ,* பெ.(n.) **காக்கைக்கொடியாள்** பார்க்க; see *kākkāi-k-koḍiyāḷ.*

Skt. twaja< **த.** துவசம்

[காக்கை→ காகம் + துவசத்தாள்.]

காகதாலியம் *kāga-tāliyam,* பெ.(n.) **காகதாலீயம்** பார்க்க; see *kāga-tālīyam. "விளங்கிலிரோ... காக தாலிய மென்பதுவே" (வெங்கைக்கோ.10).*

[காகம் + தாலம் – காகதாலம் → காகதாலியம். தாலம் = பனைமரம்.]

காகதாலீயம் *kāga-tālīyam,* பெ.(n.) காக்கை பனையில் வந்து அமர, பனம்பழம் வீழ்ந்தது போல எதிர்பாராமல் இயல்பாக ஒத்து நிகழும் நிகழ்வு; illustration of the sitting of the crow on the palm-tree followed by the fall of palm-fruit as an instance of post hoc ergo propter hoc. *"காகதாலீயம்போல் வாதனையின் வசத்திலுளங் கலந்து நிற்குமேகமுற" (ஞானவா.உற்ப.66).*

[காகதாலியம் → காகதாலீயம். காக்கை உட்கார்ந்ததால்தான் பனம்பழம் கீழே விழ்ந்தது என வலியப் பொருத்தியுரைக்கும் ஏரணத்தாரின் வலக்காரக்கூற்று]

காகதுண்டம் *kāga-tuṇḍam,* பெ.(n.) அகில்; eagle-wood. *"ஏந்தெழிற் காகதுண்டம்" (சூளா.சீய.105)*

[காக்கை → காகம் + துண்டம்.காக்கை கருநிறம் குறித்தது. துண்டம் = அகிற்கட்டையின் துண்டு.]

காகதேரி *kāga-tēri,* பெ.(n.) மணித்தக்காளி (மலை.); black nightshade.

[காக்கை → காகம் + தேரி. காக்கை கருநிறம் குறித்தது.]

காகந்தி *kāgandi,* பெ. (n.) காவிரிப்பூம்பட்டினம்; *Kāviri-p-pūm-paṭṭiṉam* so named after one of its kings Kakantaṉ. *"ககந்தன் காத்தலிற் காகந்தியென்றே" (மணிமே.22:37).*

[ககந்தன் → காகந்தி.]

காகநதி *kāga-nadi,* பெ. (n.) காவிரியாறு; river Kāviri (த.சொ.அக.).

[காகம் + நதி. காக்கையால் உண்டாக்கப்பட்ட ஆறு. நீர் → நீத்தம் → நத்தம் → நத்தி → நதி. 'நதா' எனில் ஒலியெழுப்புதல்; அதனால் ஒலியெழுப்பி ஓடும் ஆறு. நதி என்றாயிற்று என்பர் வடநூலார். ஒலிக்குறிப்பு எல்லா மொழிக்கும் பொதுவானதாதலின் இது பொருந்தாது.]

காகநாசம் *kāga-nāśam,* பெ. (n.)1. நரிமுருங்கை; a short or stunted variety of coral tree. 2. தவசு முருங்கை; Tranquebar gendarussa. 3. காக்கை கொல்லி, ஒருவகைக் கொடி; crow - killer (சா.அக.).

[காக்கை → காகம் + (நாற்று → நாத்து → நாச்சு → (நாச்சம்) → நாசம்.]

காகநாசனி *kāga-nāśaṉi,* பெ.(n.)சேவகனார் கிழங்கு; plough root (சா. அக.).

[காக்கை → காகம் + நாசனி.]

காகநாசி *kāga-nāśi,* பெ.(n.)1. பாற்சொற்றி (மூ.அ.); Indian guttapercha. 2. சிறுகொவ்வை (மலை.); crow's beak.

[காக்கை → காகம் + நாசி.]

த.நாளி > வ.நாசி.

காகநாசிகை *kāga-nāśigai,* பெ.(n.) சிறுகோவை; crow's beak(சா.அக.).

[காக்கை → காகம் + நாசிகை.]

காகநிமிளை *kāgā-nimiḷai,* பெ.(n.) 1. கருநிமிளை (மூ.அ.); antimony.2. ஈயக்கரடு; an alloy of tin and antimony. 3. காக்கைப்பொன்; brass tinsel or brass leaf glittering like gold (சா.அக.).

[காக்கை → காகம் + நிமிளை.]

காகநீலை *kāganīlai,* பெ.(n.) நாவல்மரம்; a kind of jaumoon-plum tree.

[காகம் + (நீலம்) நீலை.]

காகநேரி *kāganēri,* பெ.(n.) மணித்தக்காளி (மலை.); black nightshade (த.சொ.அக).

[காகம் + நேரி.]

காகப்புள் *kāga-p-puḷ,* பெ.(n.) 1. காக்கை; crow. 2. 23ஆம் நாண்மீன், பறவை (அவிட்டம்) (பிங்.); the 23rd star *Aviṭṭam.*

[காக்கை → காகம் + புள். புள் = பறவை.]

காகபதம் *kāga-padam,* பெ.(n.) 1. அறுபத்தையாயிரத்து ஐந்நூற்று முப்பத்தாறு (65,536). கணங்கொண்ட காலவகை (பரத.தாள.27); (Mus.) one of ten varieties of *kālam.* 2. வயிரக்குற்றங் களுளொன்று; a kind of diamond fault. காகபாதம் பார்(உ.வ.). 3. எழுத்து வரிப்பிளப்பைக் குறிக்கும் புள்ளடி (உ.வ.); caret.

[காக்கை → காகம் + (பாதம்) பதம்.]

காகபரணி *kāga-barani,* பெ.(n.) நரிப்பயறு; a variety of greengram (த. சொ.அக.).

[காக்கை→ காகம் + பரணி.]

காகபலம் *kāga-palam,* பெ.(n.) 1. வேம்பு; neem. 2. நாவல்வகை; a kind of jamboo.3. எலுமிச்சை; lime tree (சா.அக.).

[காக்கை→ காகம் + பலம்.]

காகபலி *kāga-pali,* பெ.(n.) 1. பகலில் உணவு கொள்ளுதற்கு முன்பு காகத்துக்கு இடும் உணவு; ball of rice thrown to crows by Hindus just before their mid-day meal.2. இறந்தவர் (ஆன்மாவு)க்காக காகத்துக்கு இடும் உணவு; ball of rice and other ingredients placed to crows for the soul of the dead person by the relatives.

மறுவ. காக்கைப்பலி

[காக்கை→ காகம் + பலி.]

காகபாடாணம் *kāga-pāḍāṇam,* பெ.(n.) ***காக்கை நஞ்சு*** பார்க்க; see *kākkai-nañju.*

Skt. pāsāṇa > த. பாடாணம்.

[காக்கை→ காகம் + பாடாணம்]

காகபாதம்[1] *kāga-pādam,* பெ.(n.) 1. பன்னிருவகை வயிரக்குற்றங்களுள் ஒன்று; a flaw in diamond, one of 12 *vayira-k-kuṟṟam. "காகபாதமும் களங்கமும் விந்துவும்"* (சிலப். 14:180.).

[காக்கை→ காகம் + பாதம்.]

காகபாதம்[2] *kāga-pādam,* பெ.(n.) எழுத்து வரிப்பிளப்பைக் குறிக்கும் புள்ளடி (இ.வ.); caret.

[காக்கை→ காகம் + பாதம். விடுபட்டுப்போன எழுத்து அல்லது சொல்லை இடைச்செருக இடப்படும் காக்கையின் கால் போன்ற அடையாளக் குறி.]

காகபிந்து *kāga-pindu,* பெ.(n.) கரும்புள்ளி; black dot. *"வயிரம், ரக்தபிந்துவும் காகபிந்துவும் உடையன"* (S.I.I.ii,78).

மறுவ. காக்கைப்புள்ளி

Skt. bindu > த. பிந்து

[காக்கை→ காகம் + பிந்து.]

காகபீலி *kāga-pīli,* பெ.(n.) குன்றிக்கொடி; crab's eye creeper(சா.அக.).

[காகம் + பீலி. பீலி = தழைத்த கொடி.]

காகம் *kāgam,* பெ.(n.) 1. காக்கை; crow. *"காகபந் தரிற் கருமுகிற் காளிமங்களுலும்" (கந்தபு.ஆற்றுப். 13.)* 2. 23 ஆம் நாண்மீன் பறவை (அவிட்டம்); the 23rd star (aviṭṭam). *``புடையுறு காகம் வசுக்கை நாள் பறவைபுள்ளு மாவணியு மேயவிட்டம்'' (சாதகசிந். காலநிகண். 20).* 3. கீரி;mongoose. 4. கற்பகமரம்; kalpaga tree.

மறுவ. காணுகம்

[காக்கை→ காக்கய் →காக்கம் → காகம்.]

காகமஞ்சி *kāga-mañji,* பெ.(n.) காட்டுச் சாதிக்காய்; wild nut-meg (சா.அக.).

[காகம் → மஞ்சி.]

காகமர்த்தம் *kāga-marttam,* பெ.(n.) ஒருவகைக் கொம்மட்டி; a kind of colocynth (சா.அக.).

[காகம் → மருத்தம்.]

காகமல்லிகை *kāga-malligai,* பெ.(n.) ***காட்டு மல்லிகை*** பார்க்க; see *kāṭṭumalligai.*

ம. காகமாலிக

[காக்கை + மல்லிகை.]

காகமலடி *kāga-maladi,* பெ.(n.) ஐவகை மலட்டுப் பெண்களுள் ஒருத்தி; one of the five classes of barren women (சா.அக.).

[காகம் + மலடி.]

இரண்டு பிள்ளைப் பெற்றுப் பிறகு பிள்ளை பெறாதவள். ஐவகை மலடு: 1 ஆதி மலடு 2. காகமலடு 3. கதலிமலடு 4 கருப்ப மலடு 5.ஆண்மலடு

காகமாசி *kāga-māśi*, பெ. (n.) 1. கருந்தக்காளி; black *takkāḷi* plant. 2.செம்மணித்தக்காளி; a red variety of nightshade. *"சதபுட்பி துஸ்பரிசமுண்டி வீழி சங்கரத்தை வாராகி காகமாசி" (தைல. தைலவ.76.).* 3.மணித்தக்காளி; black nightshade. *"காகமாசிப் பாதுகைமோரடமுருக்கு" (தைலவ. தைல.135) (த.சொ.அக.).*

[காக்கைமாசி→ காகமாசி.]

காகமாசிகம் *kāga-māśigam*, பெ. (n.) வழுதலை; brinjal (சா.அக.).

[காகம் → மாசிகம்.]

காகயவம் *kāgayavam*, பெ.(n.) பதர்; chaff.

[காகம் + (அவம்) யவம்.]

காகரி *kāgari*, பெ.(n.) திப்பலி (மலை.); long pepper.

Skt. krkara

[ஒருகா. கருங்கரை→ காகரை → காகரி]

காகருகம் *kāgarugam*, பெ.(n.) 1.எள்ளுச்செடி; sesame seed plant. 2.எட்டி; nux vomica.3. குருவிச்சை; a parasitic plant (சா.அக.).

[கரு→ கருக்கல் → கருக்கலகம் → காகருகம்.]

காகருடி *kāgaruḍi*, பெ.(n.) 1. பன்றி; pig 2. குயில்; Indian cuckoo (சா.அக.)

[கரு + கருளி → காக்கருளி → காகருடி.]

காகருபலா *kāgaru-palā*, பெ.(n.) பூசணிக்காய்; pumpkin (சா.அக.).

[காகல் → காகரு + பலா (கொ.வ.) .]

காகல் *kāgal*, பெ.(n.) கருமை; black.

[கரு → கருகல் → காகல்.]

காகலிநிசாதம் *kāgali-niśādam*, பெ.(n.) ஏழாம் இசை வகையுள் ஒன்று; highest variety of the seventh note of the gamut, one of the *cōtaccuram.*

[காகளி → காகலி + நிசாதம்.]

காகலீரவம் *kāgalīravam*, பெ.(n.) குயில்; Indian cuckoo (சா.அக.)

[காகல் + ஈரவம்(நிலவு).]

காகலூகம் *kāgalūgam*, பெ.(n.) ஆந்தை; owl (சா.அக.).

[காகல் + ஊகம்.]

காகலோத்திரம் *kāgalōttiram*, பெ.(n.) அரக்காம்பல்; red Indian water-lily (சா.அக.).

[காகல் + ஒத்திரம்.]

காகவல்லாரி *kāga-valtāri*, பெ.(n.) குன்றிச்செடி; creeper Indian Licorice (சா.அக.).

[காகம் + வல்லாரி.]

காகவாகனன் *kāga-vāgaṉaṉ*, பெ.(n.) ***காகவூர்தியான்*** பார்க்க; see *kāga-v-ūrdiyāṉ.*

[காகம் + வாகனன்.]

காகவிருந்தம் *kāga-virundam*, பெ.(n.) வயிரமணி வகை; a variety of diamond. *"வயிரம் காகவிருந்தமும் உருளையுமாக ஐந்தும்" (S.I.I.II. 79–143 பக்.396).*

[காக்கை→ காகம் + விருந்தம்.]

காகவூர்தியான் *kāga-v-ūrdiyāṉ*, பெ.(n.) காக்கையை ஊர்தியாகக் கொண்ட சனி (காரி)க் கடவுள்; Sāturn, as riding a crow.

[காக்கை→ காகம் + ஊர்தியான்.]

காகவேப்பிலை *kāga-vēppilai,* பெ.(n.) கறுப்பு வேப்பிலை; false wampee tree (சா.அக.).

[காக்கை → காகம் + வேப்பிலை.]

காகவோசை *kāga-v-ōšai,* பெ. (n.) காக்கை கத்துவது போன்ற காட்டோசை; cawing note, a defect in singing. *"வினைபடு காகவோசை" (திருவாலவா.57:26.)*

[காக்கை → காகம் + ஓசை. காக்கை கருநிறம் குறித்துக் குற்றப்பொருள் உணர்த்துகிறது. இசைவாணர்க்கு ஒவ்வாத ஓசைக்குற்றம். இதனை அவச்சுரம் என்பர்.]

காகளம்[1] *kāgaḷam,* பெ.(n.)1. எக்காளம்; trumpet. *"கல்லென விரங்குறு கரடி காகளம்" (கந்தபு. சரவண.9).* 2. பித்தளையாலான நீண்ட குழலிசைக் கருவி (கோயில் விழாக்களிலும், மதிப்புரவு வரவேற்பு நிகழ்ச்சிகளிலும் இயக்கப் பெறும்.); a kind of cornet (with a heavy sound, used in temple processions, and in welcome ceremonies). *"அக நாழிகைச் சென்னடைக்கு அடுத்தன தட்டழி, மத்தளி, கரடிகை, தாளம், காகளம் ஏற்றி" (பார்த்திப சேகரபுரச் செப்பேடுகள் கி.பி.9 ஆம் நூற்றாண்டு)* 3.புள்ளோசை; bird's noise (த.சொ.அக.).

Skt. kahala

[காகாளம் → காகளம்.]



காகளம்

காகளம்[2] *kāgaḷam,* பெ.(n.)1. தொண்டையின் எலும்பு முருந்து; the thyroid cartilage (சா.அக.). 2. ஒருவகைக் கழுத்தணி;a kind of necklace.

[காகாளம் → காகளம்.]

காகளி *kāgaḷi,* பெ.(n.) இன்னிசை; a musical, melody, tune.

[கா + களி. கா = பெரிய. காகளி = பெருங்களிப்பு மிகப் பாடுவது.]

காகா *kākā,* பெ.(n.) 1. காக்கையின் ஓசை; the cawing of crow. 2. நாணல்; reeds (சா.அக.).

[கா + கா – காகா = கால்காலாக (குச்சிக் குச்சியாக) இருக்கும் நாணலும் இப்பெயர் பெற்றது.]

காகாங்கி *kākāṅgi,* பெ.(n.) சிறுகோவை; a small variety of crow creeper of the clitcrea genus (சா.அக.)

[காகம் → காகாங்கி.]

காகாசி *kākāši,* பெ.(n.) ஒருவகைக் கடல்மீன்; a kind of sea-fish (சா.அக.).

[காக்காச்சி – காகாசி.]

காகாண்டம் *kākāṇḍam,* பெ.(n.) வெள்ளைக் கரும்பு; white sugar-cane (சா.அக.).

[ஒருகா. கோ + கண்டம் – கோகண்டம் → காகண்டம்.]

காகாரி *kākāri,* பெ.(n.) ஆந்தை; owl. (த.சொ.அக.).

[காகல்(கருமை) → காகாலி + காகாரி.]

காகாலன் *kākālaṉ,* பெ. (n.) அண்டங்காக்கை; raven.

[கருங்காலன் → காகாலன்.]

காகாவிரிச்சி *kākā-viricci,* பெ. (n.) குருதியுண்ணும் வாவல் பறவை (யாழ்ப்.) ; a kind of vampire-bat of black colour and bristling hair (J.).

மறுவ. காகாபிசாசு

[காக்கை→ காக்கா→ காகா + (வெருட்சி) விரிச்சி (கொ.வ.). காக்கைகளை அஞ்சியோடச் செய்யும் இயல்புடைய வாவல்பறவை என்பது கருத்து.]

காகாளம் *kākāḷam,* பெ.(n.) ***காளம்*** பார்க்க; see *kāḷam.*

[கா+காளம். கா = பெரியது. காளம் = எக்காள இசைக்கருவி.]

காகிவெல்லம் *kāgi-vellam,* பெ. (n.) பழுப்பு வெல்லம் (மதி.கள.ii,112); crude jaggery.

[காக்கை–காக்கி (தரம் குறைந்தது). காக்கி + வெல்லம் – காக்கிவெல்லம் → காகிவெல்லம்.]

காகு *kāgu,* பெ.(n.) கூறப்படாத அல்லது வேண்டாத பொருளைத் தரக்கூடிய சொல்லின் ஓசை வேறுபாடு. (குறள்,1318, உரை); modulation of voice which indicates an implied meaning.

க.காவு

[காவு→காகு. (களத்தில் கதிரடிக்கும்போது தவசங்களில் சேர்ந்துவிடும் கதிர்பொதி கூளங்கள் காவு எனப்படும்.இது காகு எனத் திரிந்தது.)]

காகுத்தன் *kāguttaṉ,* பெ.(n.) காகுத்தக் குலத்தில் தோன்றிய இராமன்; *Rama,* the hero of the *Rāmāyana,* as a Kakutstha. *"உற்ற ஞாலத்தொரு நகர் காகுத்தன்,அற்றமில் கவியாற் றந்தது" (சேதுபு.சேதுச.11.) (த.சொ.அக.).*

காகுளி[1] *kāguḷi,* பெ. (n.) 1. பேய் கத்தினாற்போல் அஞ்சத்தக்க வல்லோசையில் பாடுவது (கல்லா. 21:40); harsh demoniac sound produced while singing. *வெள்ளை காகுளி கீழோசை வெடிகுரனாசி" (திருவிளை.விறகு.30).* 2.மிடற்றில் எழும் தாழ்வு ஓசை (பிங்.); guttural sound.

[காவு → காகு → காகுளி.]

காவு = தவசங்களில் கலந்துள்ள கதிர்பொதி கூளங்கள், குப்பையாகக் கருதப்படும் கதிரின் புடைக்கூறுகளான கொம்மை. இவை வேண்டாதவையென உழவர் களால் நீக்கப்படுதலின் விரும்பத்தகாத ஓசை காகுளி எனப்பட்டது. இதனோடு விரும்பத்தக்க காகளி இசையை ஒப்பாகக் கருதிச் செ.அக. காகுளி என்னும் சொல்லுக்கு மூன்றாம் பொருளாக 'இசை' எனப் பொருள் தந்திருப்பது தவறு.

காகுளி[2] *kāguḷi,* பெ. (n.) மெத்தை, இருக்கை (பிங்.); bed, seat.

[காவு → காகு→ காகுளி=கதிர் பொதிவளங்களான காவு கொம்மை உள்ளடைத்த மெத்தை.]

காகூவெனல் *kā-kū-enal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr.as in wailing.

[கா + கூ + எனல். 'கா' 'கூ'என்பன வெற்றோசைக் குறிப்புகள். கந்தரனுபூதியில் "கூகாவென வென்கிளை கூடியழ" என மாற்றிக் கூறினமை காண்க.]

காகொடி *kākoḍi,* பெ.(n.) எட்டிமரம் (மலை.); nux vomica tree (சா.அக.).

[கா + கொடி (கொடியது).]

காகோடகி *kākōḍagi,* பெ.(n.) வாலுளுவை (மலை.); spindle tree.

[ஒருகா. கார் → கா + கோடகி.]

காகோடி *kākōḍi,* பெ. (n.) ***காகொடி*** பார்க்க; see *kākoḍi.*

[கா + கோடி. கொடு → கொடி → கோடி (கொடியது). கா = பெரிய.]

காகோடியன் *kā-kōḍiyaṉ,* பெ.(n.) கழைக்கூத்தன் (அக.நி.); strolling dancer.

[கா + கோடியன். கா = தண்டு, தடி, கழை. கோடியன் = கூத்தன்.]

காகோதம் *kākōdam,* பெ.(n.) ***காகோதரம்*** பார்க்க; see *kākōdaram. "கங்குலிரைதேருங் காகோத ராசனும்" (திருப்பு.).*

[கால்கொள் உதரம் → காகோதரம் → காகோதம்.]

காகோதரம் *kākōdaram,* பெ.(n.) பாம்பு (பிங்.); snake, that which moves on its belly in a zigzag way.

[கால்கொள் + உதரம் (வயிறு) – காகோதரம் (கொ.வ.) வயிற்றைக் காலாகக் கொண்டது.]

காகோலம் *kākōlam,* பெ. (n.) அண்டங்காக்கை (உரி.நி.); black jungle crow, raven.

[கார் + கோலம் – கார்க்கோலம் →காகோலம் (கருநிறத்தது).]

காகோளி *kākōḷi,* பெ.(n.) 1.அசோக மரம் (திவா.); tree *aśōkā.* 2. தேட்கொடுக்கி (மலை.); Indian tutnsole. 3. கொடியரசு (மலை.); wild pipal.

[கா (பெரிய) + கோளி (பூவாது காய்க்கும் மரம்).]

காங்கயநாடு *kāṅgayanāḍu,* பெ. (n.) கொங்கு நாட்டின் 24 நாடுகளுள் ஒன்று; one of the 24 *nāḍu* of *kongu* country.

[காங்கயம் + நாடு.]

காங்கயம் *kāṅgayam,* பெ.(n.) ஈரோடு மாவட்டத்திலுள்ள ஒரு வட்டத்தின் தலைநகரம்; capital of taluk in Erode dt.

[கங்கை → கங்கையர் → காங்கையர் → காங்கேயம் காங்கயம்.]

காங்கயம்காளை *kāṅgayam-kāḷai,* பெ.(n.) வேளாண் வேலைகளுக்கு உகந்த காளைகள்; bulls fit for agriculture.

[காங்கயம் + காளை.]

காங்கி *kāṅgi,* பெ. (n.) பேராசைக்காரன்; avaricious person. *"மற்றவன் கைத்துண்பான் காங்கி யெனப் படுவான்" (நான்மணிக்.61).*

[காங்கு→ காங்கி. காங்குதல் = பேராசை கொள்ளுதல்.]

காங்கிசை *kāṅgiśai,* பெ.(n.) விருப்பம்; desire. *"காங்கிசை மிக்க மறக்கொடி வெற்றியில்" (திருப்பு.263).*

[காங்கு + இசை.]

காங்கு[1] *kāṅgu,* பெ.(n.) 1. கருநீல நிறம்; dark blue colour. *"காங்கிட்ட கச்சையுமாய்க் கானவர்கள் வந்து கண்டு" (கூளப்ப.66).* 2.கருநீலப்புடைவை; dark blue colour saree.

[கங்கு → காங்கு.]

காங்கு[2] *kāṅgu,* பெ.(n.) கோங்கு (L.); common caung.

[கோங்கு →காங்கு.]

காங்கு[3]**–தல்** *kāṅgu-,* 5 செ.கு.வி.(v.i) பேராசை கொள்ளுதல்; to get arathicious.

[கா =பெரிதாதல். கா →காங்கு.]

காங்கு[4] *kāṅgu,* பெ.(n.) பெரும்பானை; large earthen pot.

[த. காங்கு > Chin. kaṅg]

[கா (பெரியது) → காங்கு.]

காங்குப்புடவை *kāṅgu-p-puḍavai,* பெ.(n.) நிறமூட்டப்பட்ட புடவை(G.Sm.D.i.265); a kind of coloured saree.

ம.காங்கி; க.காங்கு காகு; து. காங்கு

[காங்கு + புடவை.]

காங்கூலம் *kāṅgūlam,* பெ.(n.) ஆட்காட்டிவிரல், பெருவிரல், நடுவிரல் ஆகியவை ஒட்டிநிற்க மோதிரவிரல் முடங்கிச் சுண்டுவிரல் நிமிர்ந்து

நிற்கும் 33 இணையாவினைக்கை வகைகளுள் ஒன்றான நாட்டிய நளிநயக்கை (சிலப்.3;18, உரை); (Nāṭṭya) a gesture with one hand in which the thumb, the forefinger and the middle finger are joined and bent forward while the ring-finger is folded and the little finger is held upright, one of 33 *iṇaiyā-viṉaikkai.*

[ஒருகா. நாஞ்சில் → நாங்கில் → நாங்கூலம் → காங் கூலம் (கொ.வ.). நாஞ்சில் = ஏர்.]

வகை: 1. குவிகாங்கூலம், 2. முகிழ்காங்கூலம், 3. விரிகாங்கூலம்.

காங்கெயம் *kāṅgeyam,* பெ.(n.) பொன்; gold. *"காங்கெயத் தொழிற் கம்மியர்" (இரகு. திக்கு.189).*

[கங்கம் → காங்கெயம் (கங்க நாட்டில் கிடைத்த பொன்.]

காங்கெயர் *kāṅgeyar,* பெ.(n.) 1. கங்கநாட்டினர்; inhabitants of the country ruled by the Gangas. *"பொப்பண காங்கெயர்கோன்" (சிலப்.பக்.11).* 2. உரிச்சொல் நிகண்டு செய்த ஆசிரியர்; name of the author of the Uriccol-nikaṇḍu. *"முந்துகாங் கெய னுரிச்சொல்" (ஆ.நி.)*

[காங்கம் → கங்கயர் → கங்கெயர் (கொ.வ.).]

காங்கேயம் *kāṅgēyam,* பெ.(n.) கோரைக் கிழங்கு; *kōrayroot* (சா.அக.).

[கங்கம் → காங்கேயம்.]

காங்கேயர் *kāṅgēyar,* பெ.(n.) 1. திருச்செங் கோட்டிற்கு அருகில் மோரூரில் வாழ்ந்த கொங்கு வேளாளர் தலைவர்; a leader kongu vēlālar who lived at Morur.

[கங்கம் – கங்கயம்–காங்கயம்–காங்கேயர்.]

கொங்கு நாட்டு வேளாளர்களில் காங்கேயர் குடி வள்ளண்மை மிக்கது. மோரூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த குறுநிலத் தலைவர்கள். திருச்செங்கோடு நகரில் நிலத்தம்பிரான் கோயிலிலும், மலைமேல் உள்ள உமையொரு பாகர், வேலவர் கோயிலிலும் பல திருப்பணிகள் செய்துள்ளனர். சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லாரை ஆதரித்தவர்கள். "காங்கேயர் கோனளித்த சோற்றுச் செறுக்கல்லவோ மூன்றுரை கண்டதுவே" என்று அடியார்க்கு நல்லார் உரை போற்றும். திருச்செங்கோடு திருப்பணி மாலையும் பாம்பலங்காரர் கோவையும் இவர்களைப் பற்றிய கூடுதல் விவரம் தரும் நூல்கள்.

காங்கேயன் *kāṅgēyaṉ,* பெ.(n.) 1. முருகன்; God Muruga. *"ஈங்கனம் நமது கண்ணினெய்திய குமரன் கங்கை தாங்கினள் கொண்டு சென்று சரவணத் திடுதலாலே காங்கெயனெனப் பெயர்பெற்றான்" (கந்தபு. திருவிளை.16).* 2. வீட்டுமன் (சூடா.); Bishma. *"காங்கேய னுள்ளிட்ட காவலர்கள்" (பாரத வெண். ஸ்ரீவாசுதேவன் 46.).*

[கங்கை → கங்கையன் → காங்கேயன்.]

காங்கை *kāṅgai,* பெ. (n.) வெப்பம்,சூடு; heat, feverishness, pyrexia (radiation of heat). திருச்சியை விட மதுரை காங்கையான இடம் (உ.வ.)

மறுவ. வெம்மை, வெக்கை, சூடு, உருப்பம், உருமம்.

க, பட காங்கெ; **தெ.**காக.

[காய் → காய்ங்கு → காங்கு → காங்கை (வே.க.186).]

காய் > வ. காச் (kāś)

ய.ச.போலி எ.டு. இயை → இசை. நெயவு–நெசவு, நேயம் → நேசம், வாயில் → வாசல்.

இங்கனம் யகர சகரப் போலியால் ஒளிவீசுதலைக் குறிக்கும் காய் என்னும் தென்சொல் வடமொழியில் 'காச்' என்று திரிந்துள்ளது. வடமொழியில் இச் சொல்லிற்கு வேரில்லாமலிருப்பதுடன், இதிலுள்ள சகரம் தமிழ்ச் சகரமாய் இருப்பதும் கவனிக்கத் தக்கது. ப்ர என்னும் முன்னொட்டுப் பெற்று இச்சொல் ப்ரகாச் என்று பெரிதும் வழங்குகிறது (செல்வி 78. பிப்ரவரி, 285).

காங்கையன் *kāṅgaiyaṉ,* பெ.(n.) நீலச் செய்நஞ்சு(வின்.); a prepared arsenic.

[காங்கு = எரிதல், காய்தல். காங்கு → காங்கை → காங்கையன்.]

காச்சக்கீரை *kācca-k-kīrai,* பெ.(n.) புளிச்சைக்கீரை (வின்); Indian brown hemp.

தெ.காசி

[கச்சல் → காச்சல் + கீரை காச்சக்கீரை. கச்சல் = இளமை.]

காச்சகம் *kāccagam,* பெ.(n.) பேய்ப் புடல்; devil's gourd (சா.அக.).

[காய் – காய்ச்சகம் – காச்சகம்.]

காச்சகற்கீரை *kāccagaṟkērai,* பெ.(n.) முன்னைக் கீரை; leaves of the Indian headache tree (சா.அக.).

[காய் – காய்ச்சு + அகல் + கீரை.]

காச்சரக்கிழங்கு *kāccara-k-kḻaṅgu,* பெ.(n.) மஞ்சள் முள்ளங்கி; carrot (சா.அக.).

[காய் – காய்ச்சல் – காச்சல் → காச்சலம் → காச்சரம்+ கிழங்கு.]

காச்சரக்கு *kāccarakku,* பெ.(n.) ***காச்சக்கீரை*** பார்க்க; see *kācca-k-kīrai* (சா.அக.).

[காச்சக்கீரை → காச்சரக்கு.]

காச்சல் *kāccal,* பெ.(n.) ***காய்ச்சல்*** பார்க்க; see *kāyccal.*

[காய்ச்சல் → காச்சல்.]

காச்சலம் *kāccalam,* பெ.(n.) தேவதாரு; red cedar (சா.அக.).

[கா (பெரியது) + காச்சலம்.]

காச்சி[1] *kācci,* பெ.(n.) துவரை (மலை.); common dhal.

[காய் → காய்ச்சி → காச்சி (அடர்ந்து காய்ப்பது).]

காச்சி[2] *kācci,* பெ.(n.) காய்ச்சிய உப்பு என்னும் வளையலுப்பு; glass-gall (சா.அக.).

[காய்ச்சி → காச்சி.]

காச்சிக்கிழங்கு *kācci-k-kiḻaṅgu* பெ.(n.) பெரு வள்ளிக் கிழங்கு; white yam (சா.அக.).

[காய் → காச்சி + கிழங்கு.]

காச்சிகம் *kāccigam,* பெ.(n.) துவரை; common dhal (சா.அக.).

[காச்சி → காச்சிகம்.]

காச்சிரம் *kācciram,* பெ.(n.) நிலப் பனைக் கிழங்கு; root of ground palm (சா.அக.).

[காய் → காய்ச்சி → காச்சி → காச்சிரம்.]

காச்சிலை *kāccilai,* பெ.(n.) கஞ்சா இலை; Ganjah leaf (சா.அக.).

[காஞ்சம் → கச்சம் → காச்சம் + இலை.]

காச்சுப்பீச்செனல் *kāccu-p-pīccenal,* பெ.(n.) ***காச்சுமூச்செனல்*** பார்க்க; see *kāccu-mūccenal.*

[காச்சு + பீச்சு + எனல். காச்சு பீச்சு என்பன ஒலிக்குறிப்பு குறித்த எதுகை மரபிணைச் சொல்.]

காச்சுமூச்செனல் *kāccu-mūccenal,* பெ. (n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom.expr. signifying noise or clamour, as in a family of children and women.

[காச்சு + மூச்சு + எனல். காச்சுமூச்சு என்பன ஒலிக்குறிப்புக் குறித்த எதுகை மரபிணைச்சொல்.]

காச்சுரக்கை *kāccurakkai,* பெ.(n.) உலர்ந்த சுரைக் குடுக்கை; dried bottle-gourd (சா.அக.).

[காய்ச்சுரக்கை → காச்சுரக்கை.]

காச்சுரை *kāccurai,* பெ.(n.) புளிச்சைக்கீரை(வின்.); Indian brown hemp.

[காய்ச்சற்கீரை → காச்சிரக்கு → காச்சுரை (கொ.வ.)]

காச்சுவா *kāccuvā,* பெ.(n.) சிற்றா மல்லி; short-tubed Arabian jasmine (சா.அக.).

காச்சுறுக்குக்கீரை *kāccuṟukku-k-kīrai,* பெ.(n.) புளிச்சைக்கீரை; Indian brown hemp (சங்.அக.).

[காய்ச்சுரை → காச்சிறுக்கு + கீரை.]

காச்சொறிக்கீரை *kāccoṟi-k-k-īrai,* பெ. (n.) புளிச்சைக் கீரை; Indian brown hemp (சா.அக.).

[காய்ச்சுரை → காச்சொறி + கீரை.]

காசகம் *kāšagam,* பெ.(n.)1. கல்; stone. 2.காரச் சாம்பல்; alkaline ashes (சா.அக.).

[காய்ச்சு → காச்சுகம் → காசகம்.]

காசகுப்பி *kāša-kuppi,* பெ.(n.) காரச் சாம்பலினாற் செய்த குப்பி; a glass bottle made out of alkaline ashes (சா.அக.).

[காய்ச்சு → காச்சம் → காசம் + குப்பி.]

காசண்டி *kāšaṇḍi,* பெ.(n.) வாயகன்ற ஏனம்; a kind of vessel with a wide mouth. *"கெண்டிகை காசண்டி செப்புக் கும்பம்" (பிரபோத.11:31).*

மரா. காசகண்டி

[கா + கெண்டி – காகெண்டி → காசெண்டி → காசண்டி (கொ.வ.) கா. = பெரியது.]

காசத்துரு *kāšatturu,* பெ.(n.) பறவைக் கொல்லிப் பூடு; a plant so called from being an enemy of bird (சா. அக.)

[காசம் + சத்துரு.]

காசதிலகம் *kāša-tilagam,* பெ.(n.) கருப்பு உப்பு; a black salt.

[கா → காசம் + திலகம்.]

காசநீர் *kāša-nīr,* பெ.(n.) தலையில் சேர்ந்து காசநோயை விளைக்கும் ஒருகெட்டநீர் (வின்.); a morbid fluid collected in the head supposed to cause asthma.

[காசம் + நீர்.]

காசப்புல் *kāša-p-pul,* பெ.(n.) பொன்னிறமான ஒரு புல்வகை; a yellow or gold - coloured grass (சா.அக.).

[காசம் + புல்.]

காசபித்தம் *kāsā-pittam,* பெ.(n.) ஒருவகை நோய்; a kind of disease.

[காசம் + பித்தம்.]

இந்த நோய் வந்தால் இருமல் அதிகமாகி உடம்பிளைத்து, குரல் கம்மி, வாயில் நீரூறி, நெஞ்சு கனத்து, விக்கல் ஏற்படும் (சா. அக.).

காசபிந்து *kāsabindu,* பெ.(n.) 1. கருவிழி யிலேற்படும் ஒருவகைக் கண்ணோய்; disease of the cornea of the eye. 2. கருவிழியில் புள்ளிகளை உண்டாக்கும் ஒருவகைக் கண்ணோய்; a disease causing spots on the black of the eye (சா.அக.).

[காசம் + (விந்து) பிந்து.]

காசம்[1] *kāšam,* பெ.(n.) 1. பொன்; gold. 2. கல்நஞ்சு; a mineral poison. 3. பளிங்கு; crystal.

[காய்ச்சு → காசு → காசம் (கொ.வ.).]

காய்ச்சி வடிவமைக்கப்பட்ட பொன்னும் பொற்காசும் காசு-காசம் எனப்பட்டது. காய்ச்சி வடிக்கப்படும் கல்நஞ்சுக்கும் அதுவே பெயராயிற்று.

காசம்[2] *kāšam,* பெ.(n.) 1. நாணல்; a large corse grass. 2. வானம்; sky. *"காச மாயின வெல்லாங் கரந்து" (கம்பரா.யுத்த. மருத்து.40).* 3. வெளி; space. 4. கருமை; blackness.

வ. ஆகாச

[கா = நீட்சி, உயரம். கா → காயம் → காசம் (நீண்ட நாணல்.) (வே.க.5) இச்சொல் பரந்த வானத்தையும் திறந்த வெளியையும் குறிப்பதாயிற்று. காயம் பார்க்க; see kāyam.]

காசம்³ *kāšam*, பெ.(n.) 1. பெரும்பாலும் நுரையீரலைத் தாக்கி உடலை இளைக்கச் செய்யும் ஈளை நோய்; tuberculosis. 2. கோழை (பிங்.); phlegm. 3. கண்ணோய் வகை; a disease of the eyes, cataract, affection of the optic nerve. *"கண்ணின் காசகாமலாதி தோஷம்" (சி.சி.2:85, சிவாக்.).*

[கால் → கார் → காய் → காசம் (வெளிவருவது). காலுதல் - வெளிவருதல், உமிழ்தல்.]

காசமர்த்தகம் *kāšamarttagam*, பெ. (n.) பெரும் புல்; a kind of large grass. *"களாவிழுது காசமர்த் தகம்" (தைலவ.தைல.76).*

[காசம் + மருத்தகம்.]

காசமல்லிகை *kāša-malligai*, பெ.(n.) நத்தைச் சூரி; (lit) oyster knife (சா.அக.).

[காசம் + மல்லிகை.]

காசரம் *kāšaram*, பெ. (n.) 1. எருமை; buffalo. 2. நாணல்; reed. 3. காட்டெருமை; wild buffalo (சா.அக.). 4. இருள்; darkness.

[காசம் (நீட்சி) + காசரம்.]

காசரளி *kāšarali*, பெ.(n.) ஆற்றரளி; a kind of oleander (சா.அக.).

[காசம் + அரளி.]

காசரிமுத்திரை *kāšarimuttirai*, பெ.(n.) மூன்றங்குலத் தொலைவில் கண்ணுக்கு நேராகப் பார்வையை நாட்டி அசைவற்றிருக்கும் நிலை (யோகஞானா.34); a posture in which the gaze is fixed steadily on a spot in front about three inches from the eyes.

[காசாரம் (இருள்) → காசரி + முத்திரை.]

காசரைக் கீரை *kāsarai-k-kirai*, பெ. (n.) கொடிக் காசரை; a kind of edible greens.

[காசல் → காசரை + கீரை.]

காசல் கீரை *kāšal-kirai*, பெ. (n.) ஒருவகைக் கீரை; a kind of edible greens (சா.அக.).

[காசல் + கீரை.]

காசவெளி *kāšaveli*, பெ. (n.) ஒருவகைக் கண் நோய்; a kind of eye disease.

[காசம் + வெளி. வலி → வெளி. (கொ.வ.)]

எழுத்தைப் பார்த்த பின் மனிதரைப் பார்த்தால் இருள் போலத் தோற்றமளிக்கும் ஒருவகை கண்நோய் (சா. அக.).

காசறை¹ *kāšarai*, பெ.(n.) 1. மணத்தி மான் (கத்தூரி மான்); musk deer. *"காசறைக் கருவும்" (சிலப்.25;52).* 2. மான் மணத்தி; musk. *"காசறைத் திலகக் கருங்கறை" (சிலப்.28:27).* 3. மயிர்ச்சாந்து; pomatum. *"குழன்மேல் வாசக்காசறை வழியப்பெய்து" (திருவிளை.திருமணப் 156).* 4. மயிருக்கிடும் எண்ணெய்; hair-oil.

[காசு + அறை.]

காசறை² *kāšarai*, பெ.(n.) மணி (அக.நி.); gem, precious stone.

[காசு + அறை.]

காசறைக்கரு *kāšarai-k-karu*, பெ.(n.) மான் மணத்தி மானின் குட்டி; fawn of the musk deer. *"காசறைக் கருவு மாசறு நகுலமும்" (சிலப்.25.52).*

[காசறை + கரு. கன்று → கறு → கரு (கொ.வ.).]

காசா¹ *kāšā*, பெ.(n.) காயாமலர்; flower of kāyā tree. *"காசா கடன்மழை யனையானை" (கம்பரா. கங்கை.53).*

ம. காயாவு

[காயா → காசா (கொ.வ.)]

காசா² *kāšā*, பெ.(n.) 1. எருமை (பிங்); buffalo. 2. நாணல் (மலை.); kaus a large and coarse grass.

[காயா → காசா (கொ.வ.).]

காசா[3] *kāšā*, பெ. (n.) பொன்னாவாரை; occidental cassia (சா.அக.).

[காயா → காசா.]

காசாக்கு—தல் *kāšākku-*, 5 செ.கு.வி. (v.i.) 1. தன் வருவாயையே குறியாகக் கொண்டு எதையும் விற்றுப் பணம் சேர்த்தல்; cashing on something. நடிகையின் தந்தை மகளின் புகழைக் காசாக்கு வதில் குறியாக இருக்கிறார் (உ.வ.).

[காசு + ஆக்கு.]

காசாசை *kāšāšai*, பெ. (n.) பணத்தாசை; love of money. *"காசாசை சற்று மிலாதவனாய்" (தனிப்பா.).*

[காசு + ஆசை.]

காசாண்டி *kāšāṇḍi*, பெ. (n.) 1. ஒருவகைச் செம்பு (த.சொ.அக.) ; a kind of copper. 2. வாயகலமுள்ள ஒருவகை ஏனம்; a kind of copper vessel with a wide mouth.

மரா. காசண்டி

[காசண்டி → காசாண்டி.]

காசாம்பாரை *kāšām pārai*, பெ.(n.) மீன் வகை; a kind of fish.

[காசம் → காசாம் + பாரை. காசம் → காசாம் (கருநிறம்). பாரை 🙰 கடற்பகுதிகளில் நீண்டிருக்கும் பாறைகளின் உட்புறத்தில் இரைதேடும் மீன் வகை. பார் 🙰 நீட்டுப்பாறை = பாரை → பார் = பாறைகளின் அருகிலுள்ள மீன்.]


காசாம்பாரை

காசாம்பூவண்ணன்[1] *kāšām-pū-vaṇṇaṉ*, பெ.(n.) ***காயாம்பூவண்ணன்*** பார்க்க; see *kāyām-pū-vaṇṇaṉ.*

[காயாம்பூ → காசாம்பூ + வண்ணன் (கொ.வ.).]

காசாம்பூவண்ணன்[2] *kāšām-pū-vaṇṇaṉ*, பெ.(n) 1. துரிசு (மூ.அ.); vitriol. 2. காய்ச்சல் நஞ்சு ((மூ.அ.); a mineral poison.

[காயாம்பூ → காசாம்பூ + வண்ணன் (கொ.வ.)]

காசாமுந்திரிகை *kāšā-mundirigai*, பெ.(n.) கொடி முந்திரி; common grape vine (சா.அக.).

[காசா + முந்திரிகை.]

காசாயக்குடி *kāšāya-k-kuḍi*, பெ. (n.) சிற்றூரில் உள்ளோர் இடும்பணிகளை அவ்வப்போது செய்யும் கட்டுப்பாட்டோடு, சிற்றூர்ப் பொதுவிடத்தில் வீடுகட்டிக்கொண்டு வாழும் தொழிலாளிகள்; a kind of village labour.

[காசு + ஆயம் + குடி.]

காசாயம் *kāšāyam*, பெ.(n.) அரசு காசாகப் பெறும் சுங்கவரி; வழிநடைச் சுமைச் சாரிகை வரி; revenue in money. *"பொன்வரி காசுக் கடமை உள்ளிட்ட பல காசு ஆயங்களும்" (தெ.கல்.தொ.*VII *கல்.82).*

[காசு + ஆயம்.]

காசாயேலம் *kāšā-y-ēlam*, பெ .(n.) சிவப்பு ஏலக்காய்; a red variety of cardamom (சா.அக.).

[காசு → காசா + ஏலம்.]

காசாளர் *kāšāḷar*, பெ.(n.) வங்கி, அலுவலகம் முதலியவற்றில் பணம் தருதல், பெறுதல் ஆகிய வற்றையும் அவை தொடர்பான பிற பணிகளையும் செய்பவர்; cashier.

[காசு + ஆளர்.]

காசி[1] *kāši*, பெ.(n.) சிவ நகரங்கள் ஏழில் ஒன்று; *vāraṇāši* the sacred city on the Ganges, one of catta-puri, an abode of Siva.

[காழ் → காசு → காசாயம் (காவித்துணி)→காசாயி →காசி (துறவி). துறவிகள் வாழும் ஊர்.]

காசி என்பதற்கு வடமொழியாளர் காசிய என்னும் முனிவன் பெயரால் அமைந்த ஊர் என்றும் (காசு → காசி) எனத் திரிந்த திரிபால் பொன் என்னும் பொருளில் அமைந்த ஊர் என்றும் பெயர்க்காரணம் கூறுவர்.

பொன்போல் ஒளிவிடும் நகரம் என்பதும் பொருந்தவில்லை. உலக அழிவின் போது அண்டவெளியிலுள்ள அண்டபேரண்டங்கள் அனைத்தும் தன்னுள் ஒடுங்கும் சிவன், குடிகொண்டிருத்தலால் காய்தல் : எரிதல், காய் - காசி எனப் பெயர் வந்ததாகக் கூறுவாரும் உளர்.

காசாயம் என்பது காவித்துணி. பிராகிருத மொழியில் காவித்துணி அணிந்த பெண் துறவியை,காசவி என்றும் ஆண் துறவியை,காசவ என்றும் வழங்கினர். Pkt. காசாயிய → காவித்துணி. Pkt. *kāhiya,kāthika.*An ascetic telling long-drawn scriptural stories at the houses of house holders.

காவித்துணி உடுத்துதல் பழந்தமிழ் முனிவர் மரபு. இல்லங்கள் தோறும் வாயிலில் நின்று அறநெறிகளும் அறநெறிக்கதைகளும் கூறி நற்பண்புகள் வளர வழிவகுத்த காரணத்தால் 'காசிய' என்றழைக்கப்பட்ட முனிவர்களின் பெயராலே இந்நகருக்குக் காசி எனப் பெயரமைந்தது என்பர்.

காசி[2] *kāśi,* பெ.(n.) சீரகம்(மலை.); cumin.

[காய் → காசு → காசி.]

காசி[3] *kāśi,* பெ.(n.) 1. முட்டுப்பாடு; difficulty. தண்ணீருக்குக் காசியாயிருக்கிறது. 2. பல்லாங்குழி யாட்டத்திற் காய்கள் சேர்தற்குரிய நடுக்குழிகள்; the hollow in the centre of each row of *pallāṅguḷi.*

தெ. காசி

[காய் → காய்ச்சி (வெம்மை, வறுமை) → காசி (கொ.வ.).]

காசி[4] *kāśi,* பெ.(n.) 1. சிறுசெப்புக்காசு; a small copper coin. 2. ஒருவகைத்தாது; a kind of mineral.

[காசு → காசி (கொ.வ.).]

காசிக்கம்பு *kāśi-k-kambu,* பெ.(n.) ஆடவை (ஆனி)யில் விதைத்துக் கன்னி (புரட்டாசி)யில் அறுவடை செய்யும் கம்புப்பயிர் (G.SM.D.i.219); a variety of kambu, sown in *Aṉi* and harvested in *Puraṭṭāśi.*

[காய்ச்சல் →காய்ச்சி(கோடைக்காலம்) → காசி + கம்பு.]

எல்லாப் பயிர்களும் பொதுவாகக் கடக (ஆடி)த் திங்களில் விதைக்கப்படினும் இக் கம்பு ஒரு மாதம் முன்னதாகக் விதைக்கப்படுதலின் இப் பெயர் பெற்றதாகலாம்.

காசிக்கமலம் *kāśi-k-kamalam,* பெ.(n.) பட்டை தீட்டிய வயிரக்கல் வகை; a variety of cut diamond.

[காசு → காசி + கமலம்.]

காசு - பொற்காசு. பொன்போல் ஒளிவிடும் இயல்பால் பெற்ற பெயராகலாம்.

காசிக்கல் *kāśi-k-kal,* பெ. (n.) ***காகச்சிலை*** பார்க்க; see *kāga-c-cilai.*

[காய்ச்சு → காச்சி → காசி + கல்.]

காசிக்கலம்பகம் *kāsi-k-kalambagam,* பெ.(n.) குமரகுருபரர் இயற்றிய சிற்றிலக்கிய நூல்களுள் ஒன்று; a *kalampagam* poem on Vārañaśi by *Kumara-kuru-parar.*

[காசி + கலம்பகம்.]

காசிக்குப்பி *kāśi-k-kuppi,* பெ.(n.) உழை மண்ணால் (உவர் மண்)செய்யப்பட்டு கங்கை நீர் அடைத்த குப்பி (வின்.); a phial containing holy water taken from the Gangas at *Vārañaśi* and other places.

[காசி + குப்பி.]

இது புடமிடவும், மருந்து அடைத்து வைக்கவும் பயன்படும்.

காசிகண்டம் *kāśi-kaṇḍam,* பெ.(n.) அதிவீரராம பாண்டியன் இயற்றிய காசியின் பெருமை கூறும் தொன்ம நூல்; as *tala-purāṇam* in Tamil by *Ativīrarāmapāṇḍiyan* on *vāraṇaśi.*

[காசி + கண்டம்.]

காசிச்சம்பா *kāśi-c-cambā,* பெ.(n.) நெல்வகை (A); a kind of paddy.

[காசி + சம்பா.]

காசிச்சாரம் *kāśi-c-cāram,* பெ.(n.) ஒருவகைத் தாதுப்பு; a mineral salt.

மறுவ. அணங்கன்

[காயம் → காசம் → காசி + சாரம்.]

காசிச்சீரம் *kāśi-c-cīram,* பெ.(n.) 1. சிறு சீரகம்; cumin seed as opposed to. 2. பெருஞ்சீரகம்; sweet - fennel (சா.அக.).

[காசி + சீரம். சீரகம் → சீரம்.]

காசிச்செம்பு *kāśi-c-cembu,* பெ.(n.) ஒருபாதி செம்பினாலும் மறுபாதி பித்தளையினாலும் செய்யப்பட்ட (கங்கைநீர் கொணர்தற்குரிய) ஏனம்; *vāraṇaśi* water-pot, made partly of copper and partly of brass.

[காசி + செம்பு.]

காசிடு-தல் *kāśiḍu,* 20 செ.கு.வி. (v.i.) பணஞ்செலுத்துதல்; to remit. *"நெல்லுக்குத் தலை அகப்படி காசு இடவும்" (தெ.இ.க.தொ. VII. 1039,18).*

[காசு + இடு.]

காசித்தும்பை *kāśi-t-tumbai,* பெ.(n.) 1. செடிவகை (வின்.); garden balsam. 2. பேய்த்தும்பை; cucus.

[காய் → காய்ச்சி → காசி + தும்பை (காய்க்கும் தும்பை).]

காசித்தும்பை

காசிதாக்கியம் *kāśitākkiyam,* பெ.(n.) கொம்புப் புடலை; common snake-gourd (சா.அக.).

[காசி (கருப்பு, கருங்கோடு)+ (தூக்கியம்) தாக்கியம்.]

காசிப்பட்டு *kāśi-p-paṭṭu,* பெ.(n.) ஒருவகைப் பட்டாடை; Benares silk.

[காசி + பட்டு.]

காசிமணிமாலை *kāśi-maṇi-mālai,* பெ.(n.) **காசுமணி மாலை** பார்க்க; see *kāśu-maṇi-mālai.*

[காசுமணிமாலை → காசிமணிமாலை (கொ.வ.).]

காசியரளி *kāśi-y-araḷi,* பெ.(n.) தங்க அரளி; a species of oleander with yellow flowers (சா.அக.).

[காசி + அரளி.]

காசியலரி *kāśi-y-alari,* பெ.(n.) அலரிவகை (இ.வ.); a kind of oleander.

[காசி + சாரம்.]

காசியாத்திரை *kāśi-yāttirai,* பெ.(n.)1. காசிச் செலவு; pilgrimage to vāraṅaśi. 2. திருமணத் துக்குமுன் நோன்புமுடிவில் மணமகன் நிகழ்த்தும் ஒரு சடங்கு; mock pilgrimage before the beginning of a marriage ceremony. (wherein the bridegroom leaves the bride's house in the role of a pilgrim to Benares, when the girl's father meets him and begs him to accept the hands of his daughter).

[காசி + யாத்திரை]

மாப்பிள்ளை காசிக்குச் செல்வது என்பது தமிழ் மரபன்று. இஃது ஆரிய வரவால் கடன் பெற்ற சடங்கு.

காசிலவணம் *kāśi-lavaṇam*, பெ.(n.) *காசிச்சாரம்* பார்க்க; see *kāśi-c-cāram.*

[காசி + லவணம்.]

காசிலிக்கீரை *kāśili-k-kīrai*, பெ.(n.) புளிச்சக்கீரை (சுவை.ர.448); Indian brown hemp.

[காசல்(சிவப்பு) + காசிலி + கீரை.]

காசின் வாய் *kāśiṉvāi*, பெ.(n.) ஒரு காசுக்கு இவ்வளவு (வட்டி) என்ற படிமுறை; rate as part a *kāsū. "ஆட்டை வட்டம் காசின் வாய் அரைக் காற்காசு பொலிசைக்காக" (SII.ii.26-3 p.129).*

[காசு + இன் + வாய்.]

காசினி[1] *kāśiṉi*, பெ.(n.) நிலவுலகம் (பு.வெ.9:42. உரை); earth. *"காசினி யளந்து" (கந்தபு. இந்திரனருச்.9).*

[கா + இன் + இ – காயினி → காசினி. (பசுமையான சோலைகள் நிறைந்த நிலவுலகம்). கா – சோலை, இன் – சாரியை, இ – ஒருமையீறு.]

காசினி[2] *kāśiṉi*, பெ. (n.) 1. அரைக் கீரை; a pot-herb. 2. சிக்கரி, சிவந்த முள்ளங்கிச் செடி; chicory; wild endive (சா.அக).

[காசல் → காசிலி → காசினி.]

காசினிக்குப் பாண்டம் *kāśiṉikku-p-pāṇḍam*, பெ.(n.) பூசணிக்காய்; pumpkin (சா.அக.).

[காசல் (சிவப்பு) + நிறக்கும் + பாண்டம்– காசினிக்குப்பாண்டம் (கொ.வ.).]

காசு[1] *kāśu*, பெ. (n.) 1. குற்றம்; defect, fault. *"காசறு விரையே" (சிலப்.2:74).* 2. கவறாடுங் கருவி (திவா.); dice.

[கள் → காள் → காய் → காசு. காசு = கருநிறமுடையது, குற்றமுடையது.]

புளியங்கொட்டை போன்ற வித்துகளை, தாயக்கட்டைக் காய்களாகப் பயன்படுத்தியதால் சூதாடும் கருவியையும் குறித்தது.

காசு[2] *kāśu*, பெ.(n.) 1. முற்காலத்தில் ஓர் உருபாயில் 320 பங்கில் ஒன்றான குறைந்த மதிப்புடைய செப்புக்காசு; a copper coin of lowest value i.e., 1/320th of a rupee in olden days. *"நெஞ்சே உனையோர் காசாமதியேனான் காண்" (தாயு.உடல் பொய்.72).* 2.ஆங்கிலேயர் காலத்தில் ஓர் உருபாவில் 192 பங்கில் ஒன்றான செப்புக்காசு; a copper coin of the value of 1/192th of a rupee in English period.3. இக்கால இந்திய உருபாவில் 100 பங்கில் ஒன்றான காசு; one hundredth of a present rupee.

ம. காசு; **கோத்.** காச்; E. cash; L.z casca; OF. casse.

[காய்ச்சு → காசு. காய்ச்சு = காய்ச்சிச் செய்யப்பட்டது.]

காசு[3] *kāśu*, பெ.(n.) 1. பொன் (ஆ.நி.); gold. 2. அச்சுத்தாலி; necklace of gold coins. *"காசும் பிறப்பும் கலகலப்ப" (திவ்.திருப்பா.7).* 3. ஒரு பழைய பொன்நாணயம்; an ancient gold coin = 28 gr. troy. 4. கைப்பணம்; coin, cash, money. *"ஏரி மீன்காசு, இநவரி வகைத்த காசு, பட்டோலைக் காசு மற்றுமெப் பேர்ப்பட்ட பல காசாயங்களும்"* (S.I.I.i.60-5 பக் 89). 5.மணி; gem. *"நாண்வழிக் காசு போலவும்" (இறை. 2 உரை,பக்.29).* 6. மணிமேகலை என்னும் அணிகலன்; girdle strung with gems. *"பட்டுடை சூழ்ந்த காசு" (சீவக.468).* 7. பல்லாங்குழியாட்டத் திற் காய்கள் சேர்தற்குரிய நடுக்குழிகள்; the hollow in the centre of each row of *pallāṅkuḻi*

[காய்ச்சு → காசு (காய்ச்சி உருக்கிய பொன்னால் செய்யப்பட்டது). இது பளப்பளப்புடைய பிறவற்றுக்கும் ஆகிவந்தது.]

காசு[4] *kāśu*, பெ. (n.) வெண்பாவின் இறுதிச்சீர் வாய்பாட்டுள் ஒன்று (யா.கா.செய். 7); a formula of a foot of two nērāśai the letter ending in 'u' occuring in

the last foot of a *veṉbā*. எ–டு : மங்கலமென்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட் பேறு.

[காசு – நேர்நேர் வாய்ப்பாடு. அதாவது குற்றியலுகரம் ஈறு கொண்ட நேரசை + நேரசைச் சீராகிய ஈற்றுச்சீர்.]

காசு[5] *kāšu,* பெ.(n.) கோழை (பிங்.); phlegm.

[கால் → காள் → காய் → காசு.(கொ.வ.)காலுதல் = உமிழ்தல், வெளியிடுதல்.]

காசுக்கட்டளை *kāšu-k-kaṭṭaḷai,* பெ.(n) பணவிடை (ஈழநா.); money order.

மறுவ. பணவிடை

[காசு + கட்டளை.]

காசுக்கட்டி[1] *kāsu-k-kaṭṭi,* பெ.(n.) தங்கக்கட்டி; mass of gold.

[காசு + கட்டி.]

காசுக்கட்டி[2] *kāsu-k-kaṭṭi,* பெ.(n.) ஒருவகைக் கூட்டு மருந்துச் சரக்கு; a compound of a catechu formed with the juice of tender coconuts, areca-nuts, and other spices.

[காய்ச்சு → காசு + கட்டி.]

காசுக்கட்டி[3] *kāsu-k-kaṭṭi,* பெ.(n.) மரவகை; downy-foliaged cutch.

[காசு + கட்டி.]

காசுக்கடமை *kāšu-k-kaḍamai,* பெ.(n.) பணமாகச் செலுத்தும் வரி (S.I.I.II.114); tax payable in money. *"கடமை, குடிமை, காசுக் கடமை ஒடுக்கும்படி" (S.I.I.ii.22 பக் 114).*

[காசு + கடமை. காசு = பணம். கடமை = செலுத்தக் கடமைப்பட்டிருக்கும் வரி.]

காசுக்கடை *kāšu-k-kaḍai,* பெ. (n.) 1. பணம் மாற்றுங் கடை; money - changer's shop. 2. பொன் வெள்ளி விற்கும் இடம்; shop dealing in gold and silver. 3. வட்டிக்கடை; money lending shop. 4.அடகுகடை; pawn broker's shop.

[காசு + கடை – காசுக்கடை. காசு – தொடக்கத்தில் பொற்காசை மட்டும் குறித்து நாளடைவில் பொதுவாகப் பணத்தைக் குறிப்பதாயிற்று.]

காசுக்கல் *kāšu-k-kal,* பெ.(n) நிறைகல்; standard weight for weighing jewels. *"காசு கல்லால் துளைநிறை செம்பொன் முக்கழஞ்சு" (S.I.I.III.45).*

[காசு + கல். காசின் எடைக்குச் சமமான நிறுத்தல் அளவு, எடைகல்.]

காசுக்கள்ளன் *kāšu-k-kaḷḷaṉ,* பெ.(n) இவறன் (உலோபி) (இ.வ.); miser.

[காசு + கள்ளன்.]

காசுக்காரச்செட்டி *kāšu-k-kāra-c-ceṭṭi,* பெ.(n.) செட்டிகளுள் ஒரு பிரிவினராகிய பொன்வாணிகர்; a sub - division of the Tamil Chetti caste who are by profession money-changers, dealers in coins, gold, silver and gems.

[காசு + காரன் + செட்டி – காசுக்காரச்செட்டி. காசு = பணம், செல்வம், கைப்பணமாகவே இருக்கும் பெரிய முதலீடு.]

காசுக்காரன் *kācu-k-kāraṉ,* பெ.(n.) 1. காசுக் கடைக்காரன்; money-changer. 2. பணக்காரன்; rich man.

[காசு + காரன் – காசுக்காரன்.]

காசுகட்டு–தல் *kāšu-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. செப்புக்காசால் விளையாடுதல் (வின்.); to play with copper coins. 2. பணம் வைத்துச் சூதாடுதல் (இ.வ.); to bet, wager, as in gambling.3. வணிகம் முடிந்தபின் விற்பனைத் தொகையைக் கணக்குப் பார்த்தல்; to count the total sale-amount.4.பணம் செலுத்துதல்; to pay or deposit.

[காசு + கட்டு.]

காசுகொள்ளா விறையிலி *kāšu-koḷḷā-v-iṟai-y-ili,* பெ.(n.)ஒருவகை வரியுமின்றி அளிக்கப்பட்ட நிலம்;

காசு வகைகள்

பெருவழுதி

சேரர்காசு

குட்டுவன்

கொல்லிரும்பொறை

மாக்கோதை

மலையமான்

காரிக்காசு

land granted free of tax. *"காசு கொள்ளா விறையிலியக விட்ட நிலம்" (S.I.I.V, 989. 35-37).*

[காசு + கொள்ளா + இறை + இலி.]

காசுசங்கம் *kāsusaṅgam,* பெ. (n.) வளையலுப்பு; salt used in the manufacture of bangles known as glass gall (சா.அக.).

[காய்ச்சு → காசு + சங்கம்.]

காசுமண் *kāšu-man* பெ. (n.) காவிக்கல்; (parav); red ochre, used with water or oil.

[காசு + மண். காசுமண். காசு = செந்நிறம். காவிநிறம் பொன்னின் நிறம்,காவி நிறத்துக்கும் ஆகிவந்தது.]

காசுமணிமாலை *kāšumaṇi-mālai,* பெ. (n.) காசுகளும், மணிகளும் கோர்த்த மாலை; necklace decorated with *kāsu* & gems.

[காசு + மணி + மாலை.]

காசுமரி *kāsumari,* பெ.(n.) 1. பெருங்குமிழ்; kāshmere tree. 2. நன்னாரி; Indian sarsaparippa. 3.கொடிமுந்திரிகை; grap-vine (சா.அக.).

[காசு (செந்நிறம்) + மரி(மருவியது. பொருந்தியது.]

காசுமாலை *kāšu-mālai,* பெ.(n.) பெண்கள் அணியும், வட்ட வடிவப் பொற்காசுகளைக் கோத்துச் செய்யப்பட்ட கழுத்தணிகலன்; necklace of gold coins worn by women.

[காசு + மாலை. காசு = பொற்காசு.]



காசுமாலை

காசோலை *kāšōlai,* பெ.(n.) சேமித்து வைத்திருக்கும் பணத்திலிருந்து குறிப்பிட்ட தொகையைத் தான் குறிப்பிடுபவருக்கு வழங்கு மாறு வங்கிக்கு அனுப்பும் ஆணைத்தாள்; cheque.

[காசு + ஓலை.]

காஞ்சச்சம் *kāñcaccam,* பெ. (n.) புங்கமரம்; puṅgu tree (சா.அக.).

[காய்ச்சு → காஞ்சு → காஞ்சச்சம்.]

காஞ்சம் *kāñcam,* பெ.(n.) துருசு; blue vitriol (சா.அக.).

[காஞ்சு → காஞ்சம்.]

காஞ்சன் *kāñcaṉ,* பெ. (n.) சாதிலிங்கம்; vermilion (சா.அக.).

[காய்ச்சு – காஞ்சு (சிவப்பு) → காஞ்சன்.]

காஞ்சனகம் *kāñcaṉagam,* பெ. (n.) மந்தாரை; mountain ebony (சா.அக.).

[காய்ச்சு → காஞ்சு → காஞ்சல் → காஞ்சலகம் → காஞ்சனகம்.]

காஞ்சன காரிணி *kāñcaṉa-kāriṇi,* பெ.(n.) தண்ணீர்விட்டான் கிழங்கு; water root (சா.அக.).

[காஞ்சு → காஞ்சனம் + காரிணி.]

காஞ்சனத்தூள் *kāñcaṉa-t-tūḷ,* பெ. (n.)1. பொன் மணல்; gold ore. 2.பொன் அராவிய தூள்; gold filings (சா.அக.).

[காஞ்சனம் + தூள்.]

காஞ்சனம்[1] *kāñcaṉam,* பெ.(n.) 1.தாமரைக் கொத்து; bunch of lotus. 2. மருதோன்றி; fragrant nail dye. 3. செஞ்சந்தனம்; red sandal. 4. பொன்னூமத்தை; yellow thorn - apple. 5. நீர் விளா; water feronia. 6. காட்டாத்தி; mountain ebony. 7.சண்பகம்; champak. 8.மஞ்சள்; turmeric.

9. பொன் (திவா.); gold. 10. புன்கு (பிங்.); punngu tree.

[காய் → காய்ச்சு → காஞ்சு → காஞ்சனம் (காய்ச்சி உருக்கிச்செய்த பொற்காசு போன்ற செந்நிறப்பூக்களைக் கொண்ட மரம்.)]

காஞ்சனம்² *kāñcaṉam*, பெ.(n.)1.பொன் (திவா.); gold.2. தங்கம்; refined gold.3.இலிங்கச் செய்நஞ்சு; an arsenic poison.

[காய் → காய்ச்சு → காய்ஞ்சு → காஞ்சு → காஞ்சனம் (கொ.வ.). (இது வடதமிழ் வழக்காகக் காய்ச்சி உருக்கிச் செய்த பொற்காசைக் குறித்தது. காசு – தென் தமிழ். காஞ்சு, காஞ்சனம் வடதமிழ்.]

காஞ்சனி *kāñjaṉi*, பெ. (n.) 1.மஞ்சள் (பிங்.); turmeric. 2. பொன்னிறம் (பிங்.); colour of gold. 3. ஊமத்தை ; datura plant. 4.காட்டாத்தி; mountain ebony. 5.கொடிப்புன்கு; hog creeper. 6.சண்பகம்; Indian magnolia (சா.அக.)

[காய் → காய்ச்சு → காய்ஞ்சு → காஞ்சு → காஞ்சனி.]

பொறகாசைககுறித்த சொல் அந் நிறமுள்ள பிறவற்றுக்கும் ஆகிவந்தது. இது வடதமிழ்த் திரிபாகிய கொச்சை வழககு.

காஞ்சா *kāñjā*, பெ. (n.) கஞ்சா எனப்படும் கஞ்சாங் குல்லை; Indian hemp.

[கஞ்சாம் குல்லை → கஞ்சரம் → கஞ்சா → காஞ்சா (கொ.வ.).]

காஞ்சான் *kāñjāṉ*, பெ. (n.) 1. கண்டிப்புள்ளவன் (நாஞ்.); strict man. 2. இவறன் (உலோபி) (இ.வ.); miser.

[காய் → காஞ்சான்.]

காஞ்சான்கட்டு–தல் *kāñjāṉ-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) உளுத்துப்போதல் (யாழ்); to become rotten.

[காஞ்சான் + கட்டு.]

காஞ்சி¹ *kāñji*, பெ.(n.)1.ஆற்றுப் பூவரசு; river portia. "*குறுங்காற் காஞ்சிக் கொம்பர்*" (*சிறுபாண்.179*). 2. காஞ்சிப்பூமாலை; garland of *kāñji* flowers worn by soldiers while defending themsleves against the onslaught of the enemy. "*காஞ்சிசூடி நின்றனன்*" (*திருவாலவா. 43:8.*). 3. ***காஞ்சித் திணை*** பார்க்க; see *kāñji-t-tiṇai*. "*கண்ணிய காஞ்சித் துறையென மொழிப*" (*பு.வெ.4, தலைப்பு நூற்பா*). 4. வேற்றுமன்னன் படையெடுத்து வரும்போது அரசன் காஞ்சியென்னும் பூவைச் சூடித் தன் காவலிடத்தைக் காக்கும் புறத்துறை (பு.வெ.4:1); theme describing the defence of a fortress on the approach of an enemy by a king decked with kāñji flower appropriated to the occastion. 5. நிலையாமை; instability, transiency. "*காஞ்சி சான்ற செரு*" (பதிற்றுப். 84:19). 6. செவ்வழிப்பண் வகை (திவா.); an ancient secondary melody-type of the *śevvaḻi* class. 7. கோவை மாவட்டவழியோடிக் கொடுமுடிக்கு அருகில் காவிரியுடன் கலக்கும் நொய்யலாறு; a tributary of the *Kāviri* flowing through Coimbatore district. "*காஞ்சிவாய்ப் பேரூர்*" (*பெரியபு. ஏயர்கோன். 88*). 8. மருதப்பண்; melody - type peculiar to agricultural tracts. "*தண்காஞ்சி மென்சினைப் பூங் கொம்பர் ஆடல் சார்ந்தசைய வதன் மருங்கு சுரும்பு தாழ்ந்து பண்காஞ்சி யிசைபாடும் பழனவேலிப் பணைமருதம் புடையுடைத்தாய்*" (*பெரியபு. திருக்குறிப்.86*). 9. பாலாற்றுக்கும் சேயாற்றுக்கும் இடையில் உள்ள காஞ்சிமாநகரம்; the great city of *Kāñjipuram* between *Pālāru* and *Sēyāru*. "*கங்கை காளிந்தி யிடைப்படுந் தலத்தின் முற்படுங் காஞ்சி மாநகரம்*" (*கந்தபு.நகர.76*).

[காய்ச்சு → காஞ்சு → காஞ்சி = (பொன்னிறமுடையது. நிறத்தாலும் அழகாலும் பெருமையாலும் சிறந்தவற்றுக்கு ஆகிவந்தது. காஞ்சி என்னும் பூவரசு மரங்கள் இருந்த பகுதி காஞ்சி நகராகப் பெயர்பெற்றது.)]

காஞ்சி² *kāñji*, பெ. (n.) 1. நாதாங்கி (வின்.); staple of bolt. 2.மகளிர் இடையில் அணியும் ஏழு கோவையுள்ள அணி; woman's waist - girdle con-

sisting of seven strings of beads of bells *"காஞ்சி யெழுகோவை" (சிலப்.4:30,உரை).*

[கா : அகலம், விரிவு. கா → காஞ்சி : வாய்விரிந்தது, அகன்றது. வாயகன்றிருத்தலால் நாதாங்கியையும், மகளிர் இடுப்பிலணியும் காஞ்சி அணிகலனையும் குறித்தது.]

காஞ்சி[3] *kāñji,* பெ.(n.) மயிர்; hair *"காஞ்சியொடு கேசமொரு பொருட்கிளவி யாகும்" (காஞ்சிப்பு. தழுவக்.70.).*

[குஞ்சி → காஞ்சி (கொ.வ.).]

காஞ்சி[4] *kāñji,* பெ.(n.) 1. பெருமை; greatness. 2.அறிவு; knowledge, wisdom.

[கா : விரிவு, பெருக்கம் கா → காஞ்சி.]

காஞ்சிகம் *kāñjigam,* பெ.(n.) 1. அரிசி, வாற் கோதுமை முதலிய தவசங்களிலிருந்து வடித்த காடி; a sour liquid with a vinous smell produced from the acetus fermentation of powdered rice, barley or other grains.2.கழுநீர்; water of cleansed rice.3.தோட்டத்துக் களை; a destructive weed in garden. 3. காடி; vinegar.

மறுவ. கொல்லைப்பல்லி (சா.அக.).

[கஞ்சி → காஞ்சி → காஞ்சிகம்.]

காஞ்சிகா *kāñjigā,* பெ. (n.) ***காஞ்சிரங்காய்*** பார்க்க; see *kāñjiraṅkāy.*

க., து. காசர.

[காஞ்சிரம் + காய் - காஞ்சிரங்காய் → காஞ்சிகா (கொ.வ.).]

காஞ்சிகை *kāñjigai,* பெ.(n) 1. சிறுபாலை; a kind of *pālai.* 2. பலாசு; Bengal kino (சா.அக.).

[காஞ்சி → காஞ்சிகை.]

காஞ்சித்திணை *kāñji-t-tiṇai,* பெ.(n.) 1. அகத்திணை ஏழனுள் பெருந்திணைக்குப் புறனாகி வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமைகளைச் சாற்றும் புறத்திணை (தொல்.பொருள்.78); major theme inculcating a belief in the instability of earthly things as a necessary preliminary to attain liberation. 2. வீரன் காஞ்சிமலர் மாலை அணிந்து பகைவர்முன் எதிரூன்றி நிற்றலைக்குறிக்கும் புறத்திணை; major theme describing a warrior defending his position wearing a garland of kāñji flowers. *"வட்கா ரெதிரூன்றல் காஞ்சி" (பிங்.).*

[காஞ்சி + திணை.]

அகத்திணை ஏழனுள் பெருந்திணைக்குப் புறனாகியது காஞ்சித்திணை. அஃது ஒன்றற்கொன் றுரிமையாதல், யாக்கை செல்வம் இளமை முதலிய பலநெறியானும் நிலையாதவுலக இயற்கைக்குப் பொருந்திய நெறியினை யுடையது (இலக்.வி.614, உரை).

எண்வகை மணத்தினும் நான்கு மணம் பெற்ற பெருந்திணை போல இக்காஞ்சியும் அறமுதலாய மும்முதற்பொருளும் அவற்றது நிலையின்மையுமாகிய ஆறனுள்ளும், நிலையின்மை மூன்றற்குமுரித்தா யெல்லாத் திணைகட்குமொத்த மரபிற் றாகலானும், "பின்னர் நான்கும் பெருந்திணைபெறு" மென்ற நான்குஞ் சான்றோ ரிகழ்ந்தாற் போல அறமுதலியவற்றது நிலையின்மை யுணர்ந்து அவற்றை அவரிகழ்தலானும் ஏறிய மடற்றிற முதலிய நான்கும் பொருந்தாக்காம மாயினவாறு போல உலகியல் நோக்கி நிலையாமை நாற் பொருளன்றாகலானும் உரிப் பொருளிடம் மயங்கி வருதலன்றித் தனக்கு நிலமில்லாத பெருந்திணை போல அறம்பொருளின்பம் பற்றி யன்றி வேறு நிலையாமை யென்றோர் பொருளின் றாதல் ஒப்புமையானும் காஞ்சித்திணை பெருந்திணைக்குப் புறத்திணையெனப் பட்டது (த.சொ.அக.).

காஞ்சிதம் *kāñjidam,* பெ.(n.) கூத்துக்குரிய நடை வகையுள் ளொன்று (சிலப்.ப.81); a kind of pase.

[காஞ்சி + காஞ்சிதம்.]

காஞ்சிப்புராணம் *kāñji-p-purāṇam,* பெ.(n.) 18ஆம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தைப்பற்றிச் சிவஞான முனிவர், கச்சியப்ப முனிவர் ஆகிய இருவராலும்

இயற்றப்பெற்ற தொன்மம் (புராணம்); a Saiva puranā about *Kāñjivaram* by *Siva-ñana-munivar* and Kacciyappa-munivar, 18th c.

[காஞ்சி + புராணம்.]

த.பழைய. > **Skt.** purna > purāṇa > த.புராணம்.

காஞ்சிபுரம் *kāñji-puram,* பெ. (n.) ***காஞ்சி***[1] பார்க்க; see *kāñji.*

[காஞ்சி + புரம் – காஞ்சிபுரம். காஞ்சி = ஆற்றுப் பூவரசு மரம், அம் மரம் மிகுந்த ஊர்.]

காஞ்சிமாலை *kāñji-mālai,* பெ.(n.) 1. தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களுள் ஒன்று, அது காஞ்சிமாலை சூடிப் பகைவரைத் தடுத்தற்கு எதிரூன்றி நிற்றலைக் கூறும் இலக்கியம். (தொன்.வி.283, உரை); poem on the firm stand of warriors wearing the *kāñji* garland ready to face the assailing enemy. 2. படை முன் எதிர்த்து நிற்கும் வீரர் சூடும் மாலை; a kind of garland worn warrior (த.சொ.அக.).

[காஞ்சி + மாலை.]

காஞ்சியம் *kāñjiyam,* பெ.(n.) வெண்கலம்; bell metal.

[கஞ்சு → காஞ்சு → காஞ்சியம்.]

காஞ்சியெதிர்வு *kāñji-y-edirvu,* பெ.(n.) எதிரூன்றுஞ் சேனையை மேலிடாது தடுக்கும் வீரனுடைய திறமையைக் கூறும் புறத்துறை (பு.வெ.4:2.); theme of a warrior defending himself against the onslaught of his enemies.

[காஞ்சி + எதிர்வு.]

காஞ்சிரக்கொட்டை *kāñjira-k-kottai,* பெ.(n.) காஞ்சிரமரத்தின் கொட்டை; nut of kāñjiram .

[காஞ்சிரம் + கொட்டை. சாம்பசிவம் மருத்துவ அகரமுதலி போன்றவை எட்டிக்கொட்டை என்று குறித்திருப்பது தவறு.]

காஞ்சிரங்காய் *kāñjiraṅ-kāy,* பெ.(n.) கருநாடக மாநிலத்தில் வளரும் நச்சு மரத்தின் காய்; a poisonous nut of a tree known as *kāšaraka* in Karnataka, *kāñjiram* in Tamilnadu, and *kāññire* in Malayalam. *"கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்தேல்" (வாக்குண்.2).*

ம. காஞ்சிரா; **க.** காசரக.

[காஞ்சி → காஞ்சில் → காஞ்சிலம் → காஞ்சிரம் + காய் காஞ்சிரங்காய்.]

பூவரச மரத்தைப்போல் தோற்றமளிக்கும் நச்சுமரத்தின் காய். இதனை எட்டிமரத்தின் காய் என உரையாசிரியர்கள் குறித்திருப்பது தவறு. இது எட்டியைப்போல் கசப்புடையதன்று. தின்றால் ஓரளவு இனிப்பதும், உண்டாரைக் கொல்வதுமாகிய பழங்களைக் காய்க்கும் மரம். மேலைமலைத் தொடர்களில் வளரும் பாங்குடையது. இதனைச் சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலியும், சாம்பசிவம் மருத்துவ அகரமுதலியும், பிற அகரமுதலிகளும் எட்டிக் கொட்டை எனக் குறித்திருப்பது தவறு.


காஞ்சிரங்காய்

காஞ்சிரம் *kāñjiram,* (n.) ***காஞ்சிரை*** பார்க்க;see *kāñjirai.* "*காஞ்சிர மரத்தி னல்ல தீங்கனி பழுப்பவும்*" *(திருவிளை.எல்லா.11).*

[காஞ்சில் → காஞ்சிலம் → காஞ்சிரம்.]

காஞ்சிரை *kāñjirai,* பெ.(n) ***காஞ்சிரங்காய்*** பார்க்க; see *kāñjiraṅ-kāy.*

[காஞ்சில் → காஞ்சிலம் •→ காஞ்சிரம் → காஞ்சிரை.]

காஞ்சிரைப் புல்லுருவி *kāñjirai-p-pulluruvi,* பெ.(n.) காஞ்சிர மரத்தின்மேல் முளைக்கும் புல்லுருவி; a parasite on the *kāñjiram* tree (சா.அக.).

[காஞ்சிரை + புல்லுருவி.]

காஞ்சில் *kāñji,* பெ.(n.) பூவரசமரத்தின் வகை; a kind of pivaram tree.

[காய்தல் (எரிதல், கொல்லல்)→காஞ்சு→ காஞ்சில்.]

காஞ்சினி *kāñjiṉi* பெ.(n.) 1. மஞ்சள்; turmeric. 2. கொக்குச் சிறகு; stork's feather. 3. சண்பகம் ; Indian magnolia champak. 4. காட்டாத்தி; mountain ebony. 5. மஞ்சிட்டி (மலை.); Indian madder (சா.அக.).

[காஞ்சு → காஞ்சினி.]

காஞ்சுகம்[1] *kāñjugam,* பெ.(n.) சட்டை (பிங்.); jacket, shirt.

ம. காஞ்சுகம்; **Skt.** kāñcuka

[கஞ்சுகம் → காஞ்சுகம்.]

காஞ்சுகம்[2] *kāñjugam,* பெ. (n.) முருங்கை; drum stick (சா.அக.).

[காஞ்சு → காஞ்சுகம் மேற்சட்டைபோன்ற புறப்பட்டை கொண்ட காய்.]

காஞ்சுகன் *kāñjugaṉ,* பெ.(n.) சட்டையிட்ட மெய்க் காப்பாளன்; lit., he who wears a jacket, king's attendant, body guard. *"காஞ்சுகர் வினைசெய்ய" (திருவிளை. திருமணப்.108).*

[காஞ்சுகம் → காஞ்சுகன்.]

காஞ்சுகி[1] *kāñjugi,* பெ.(n.) ***காஞ்சுகன்*** பார்க்க see *kāñjugaṉ. "காஞ்சுகன் அவன்முன்வரு காஞ்சுகி வன்கண் மாக்கள்" (திருவிளை.கல்லா.4.).*

[காஞ்சுகன் → காஞ்சுகி.]

காஞ்சுகி[2] *kāñjugi,* பெ.(n.) சட்டை (பிங்.); jacket.

[காஞ்சுகம் → காஞ்சுகி.]

காஞ்சொறி *kāñjoṟi,* பெ.(n.) செந்தொட்டி; scorpion leaf.

மறுவ. செந்தட்டி, காண்டுதி

வகைகள் :

1. எருமைக் காஞ்சொறி. 2. பூனைக் காஞ்சொறி. 3. வெள்ளைக் காஞ்சொறி. 4. சிறு காஞ்சொறி. 5. பெருங் காஞ்சொறி. 6. கறுப்புக் காஞ்சொறி. 7. எட்டிக் காஞ்சொறி.

காஞ்சொறி

காஞ்சோன்றி *kāñjōṉṟi,* பெ.(n.) ***காஞ்சொறி*** பார்க்க; see *kāñjōṟi.*

[காஞ்சொறி → காஞ்சோன்றி.]

காட்சி *kāṭci,* பெ.(n.) 1.கண்ணுறல்; sight, view. *"தரும மூர்த்தியைக் காட்சியே யினிக்கடன்" (கம்பரா. யுத்த. விபீடண.18).* 2.தோற்றம்; form, appearance. *"கையென லாயிற்றன்றே... மணியின் காட்சி" (கம்பரா. சுந்தர. திருவடி.47).* 3. தோன்றி யருளல்; vision of a deity, sight of a great personage; audience. *"எதிரேநின்று காட்சி தந்தருளி"*

(பெரியபு. மெய்ப்பொ.23). 4. கண்காட்சி; exhibition. 5.புதுமையான நிகழ்ச்சி; attractive object of sight. அஃது ஒரு கண்கொள்ளாக் காட்சி யாயிருந்தது. (உ.வ.). 6. நேர்த் தோற்றம்; perception. *"மருடீர்ந்த மருளில் காட்சி யைவகை யாகும்" (மணிமே.27:14).* 7. அறிவு; knowledge. *"மாசறு காட்சி" (குறள்,199).* 8. தலைவன் தலைவியை முதன்முதற் காணுதலைக் கூறும் ஒரு கைக்கிளைத் துறை (பு.வெ.11:ஆண் பால்.); theme describing the first sight of a maiden by a man who falls in love with her. 9.வீரருக்கோ, வீரரின் கற்பில் சிறந்த மனைவியருக்கோ எடுத்த நடுகல்லை ஆராய்ந்து காணும் புறத்துறை (தொல்.பொருள்.60; உரை; சிலப்.25 அரும்.); (purap.) theme describing the choice of a suitable stone for a memorial of a warrior or of a virtuous wife who chose not to survive her deceased husband. 10. நடுகல்லை வீரர் வணங்குவதைக் கூறும் புறத்துறை (தொல்.பொருள். 60, உரை); (purap.) theme describing the actual sight of the memorial stone. 11.ஒரு பொருளைக் கண்ட இடம்; place, site, where something was once seen or found. *"கண்டு நின்று வந்த காட்சியு மிதுவே" (கல்லா.6:28).* 12.அழகு; beauty. *"அணங்கு மெய்ந்நின்ற வமைவரு காட்சி" (பொருந. 20).* 13. தன்மை; nature. *"கற்குழித்து நெறிசெயுங் காட்சியே" (சேதுபு. அவை.4).* 14. திருவடிப்பேறு *"கணக்கறிந் தார்க்கன்றி கைகூடா காட்சி" (திருமந்.303).* 15. வேடிக்கை; joke. கண்டதே காட்சி (பழ.). 16. வியப்பு; wonder. 'காட்சிமேய வக்கழதிற் கதலிகை (கந்தபு. திருநகர.23). 17. தேற்றம்; precisim. ஆடும்பவுசியவன் பொய்க்காட்சியாகாது போலேயறி (ஒழிவி. பொதுகரி. 34).

[காண் + சி – காட்சி. 'சி' பண்புப்பெயரீறு.]

வகைகள்:

1. ஐயக் காட்சி, 2. திரிபுக் காட்சி, 3. விகற்பக் காட்சி, 4. பொறி வாயில் காட்சி, 5. மனக் காட்சி, 6. நுகர்வு காட்சி, 7. ஓகக் காட்சி (சா. அக.).

காட்சிகொடு-த்தல் *kāṭci-koḍu-,* 5 செ.கு.வி.(v.i.) தோற்றமளித்தல்; to appear or manifest oneself, as God to worshippers, to give audience, as a king to his subjects. *"பேதையுந் தாமுமாங் காட்சிமுன் கொடுத்தார்"* (பெரியபு.அமர்நீதி.46).

[காட்சி + கொடு.]

காட்சிப்பொருள் *kāṭci-p-poruḷ,* பெ.(n.) கட்புலனாற் காணும் பொருள் (தொல். பொருள்.1. உரை.); thing seen, object of sight opp. to *karuttu-p-poruḷ.*

[காட்சி + பொருள்.]

காட்சிமறைத்தல் *kāṭci-maṟaittal,* பெ.(n.) தோற்ற மறைப்பு (தரிசனாவரணீயம்) (சூடா.); (Jaina.) that which causes the obscuration or clouding of the appearance.

[காட்சி + மறைத்தல்.]

காட்சியணி *kāṭci-y-aṇi,* பெ.(n.) அணியிலக் கணங்களுள் ஒன்று (அணியி.19.); (Rhet.) a kind of rhetoric.

[காட்சி + அணி.]

ஒரு பொருளின் செயல் முதலியன மற்றோர் பொருளுக்கு நன்மையோ தீமையோ புலப்பட நிகழ்வதாகக் கூறும் அணிவகை (தண்டி.88).

காட்சியர் *kāṭciyar,* பெ.(n) ***காட்சியவர்*** பார்க்க; see *kāṭci-y-avar.*

[காட்சியவர் → காட்சியர்]

காட்சியவர் *kāṭci-y-avar,* பெ.(n.) அறிஞர்; the wise. *"புன்மையில் காட்சியவர்" (குறள்.174).*

[காட்சி + அவர். காட்சி = அறிவு.]

காட்சியளவை *kāṭci-y-aḷavai,* பெ.(n.) எதிரும் தோற்றம் காண்டலளவை (சி.போ.சிற்.1; 1, ப.15) perception; means of perception.

[காட்சி + அளவை. இதனை வடமொழியாளர் காட்சிப் பிரமாணம் எனத்திரித்துக் கொண்டனர்.]

காட்சியறிவு *kāṭci-y-aṟivu,* பெ.(n.) தெளிவான அறிவு; perceptual cognition.

[காட்சி + அறிவு.]

காட்சியுணர்வு *kāṭci-y-uṇarvu,* பெ.(n.) *காட்சி யறிவு* பார்க்க; see *kāṭci-y-aṟivu.*

[காட்சி + உணர்வு.]

காட்சியெருதுக்காசு *kāṭici-y-erudu-k-kāšu,* பெ.(n.) ஒரு பழைய வரி (S.I.I.II.,425); an ancient tax probably on bulls kept for sale. *"காட்சி எருது காசும் ஊர்க்கழஞ்சுக்காசும் உட்பட இவ்வூர் இறைகட்டின காணிக்கடன்" (S.I.I.ii.92-1 பக் 425).*

[காட்சி + எருது +காசு.]

காட்சியோகு *kāṭci-y-ōgu,* பெ.(n.) மெய்யுணர்வு பெறுதற்கான நிலை; realisation of true insight thought and conduct. *"கட்படு மிமைத் துணை காட்சி யோகினை நுட்பமனதாகவே நுதலிக் காட்டினோன்" (கந்தபு. மோனநீங்.33).*

[காட்சி + ஒகு.]

காட்சிவரி[1] *kāṭci-vari,* பெ.(n.) தன்வருத்தத்தைப் பலருங் காணும்படி நடிக்குங் கூத்து (சிலப்.8: 106,உரை); (Dram.) dance, exhibiting sorrow and distress.

[காட்சி + வரி]

(வரி:காமங்கண்ணிய இசைப்பாட்டு. அப் பாட்டின் மெய்ப்பாடு துலங்கச் செய்யும் நளிநயம் காட்சி வரி எனப்பட்டது.)

காட்சிவரி[2] *kāṭci-vari,* பெ.(n.) திரைப்படக் காட்சிகளுக்காக வாங்கப்படும் வரி; entertainment tax.

[காட்சி + வரி. வரி : வாங்கப்படும் வரிப்பணம்]

காட்சிவாதி *kāṭci-vādi,* பெ.(n.) உலகியற் பொருண்மையன்றி வேறு பொருண்மையில்லை யெனக் கூறும் உலகியலாளர் (சி.போ.பர.அவை.ப. 40); materialist, who holds that perception is the only means of acquiring knowledge.

[காட்சி + வாதி. வாளுதல் : பேசுதல். வாள் → வாளி→வாதி(பேசுபவன்).]

கண்ணால் கண்டு தெளிவதுதான் 'அறிவு' என்னும் கொள்கையோன் (சா.அக).

காட்டகத்தமிர்து *kāṭṭagattamirdu,* பெ. (n.) *காட்டகத்தமிழ்து* பார்க்க; see *kāṭṭagattamiḻdu. "காட்டகத்தமிழ்துங் காண்வரக் குவவி" (சீவக.2110).*

[காடு + அகத்து : காட்டகத்து + அமிழ்து.]

காட்டகத்தமிழ்து *kāṭṭagattamiḍu,* பெ.(n.) மக்கட்குப் பயன்படும் காட்டுப்பொருள்கள்; forest produce.

[காடு + அகத்து – காட்டகத்து + அமிழ்து.]

அரக்கு, உலண்டு, தேன், மயிற்பீலி, நாவி போன்றவை.

காட்டகத்தி *kāṭṭagatti,* பெ.(n.) வீழிச்செடிப்புதர் (மலை.); a straggling shrub.

[காடு + அகத்தி –காட்டகத்தி.]

காட்டகம் *kāṭṭagam,* பெ.(n) காழகில்; aloe wood. (சா.அக.)

[காடு → அகம்– காட்டகம்.]

காட்டகி *kāṭṭagi,* பெ. (n.) காட்டுக் கொன்றை; wild kondra (சா.அக.).

[காட்டகம் → காட்டகி.]

காட்டசை *kāṭṭasai,* பெ.(n.) காட்டுச்சீரகம்; purple fleabane. *"நீர்முத்தங் காட்டசை சத்தி யெல்லெண்" (தைலவ.தைல.69).*

[காடு + அசை – காட்டசை. அசை : சீரகம்.]

காட்டட்டம் *kāṭṭaṭṭam,* பெ.(n.) வெண்பாதிரி; white flowered fragrant trumpet tree (சா.அக.).

[காட்டு + அட்டம்.]

காட்டணம் *kāṭṭaṇam,* பெ.(n.) பெருங்குமிழ் (மலை.); coomb teak.

[காடு + ஆணம். காட்டாணம் → காட்டணம்.]

காட்டத்தி *kāṭṭatti,* பெ.(n.) 1. பேயத்தி (மலை.);devil fig. 2.மரவகை; gaub.

[காடு + அத்தி – காட்டத்தி.]

காட்டத்தி

காட்டதாதி *kāṭṭatādi,* பெ.(n.) படர் முன்னை அல்லது கொடிமுன்னை; spreading or creeper premna (சா.அக.).

[காடு + அதைதி– காட்டதைதி→ காட்டதாதி.]

காட்டதிமதுரம் *kāṭṭadi-maduram,* பெ.(n.) காட்டில் விளையும் அதிமதுரம் என்னும் வேர்; root of wild Indian liquorice as opposed to. நாட்டு அதிமதுரம் (சா.அக.).

[காடு → காட்டு + அதிமதுரம்.]

காட்டப்பெறு–தல் *kāṭṭa-p-peṟu-,* 18 செ.குன்றாவி. (v.t.) உரிமை கொண்டாடுதல்; to lay claim. *"இந்நிலத்துக்கு வேலிக்காசும் நீர்விலைக் காசும் சில்லிறை சோறு மாட்டுள்ளிட்டு. எப்பேர்ப்பட்டதுங் காட்டப் பெறாதோமாகவும்" (S.I.I.III,68-5).*

[காட்டு →காட்ட(வி.எ.) + பெறு.]

காட்டம்[1] *kāṭṭam,* பெ.(n.) 1 விறகு (திவா.); fire wood. 2. காய்ந்த குச்சி; small stick, as of pipal tree, used in ritual. *"தண்டே குண்டிகை வெண்குடை காட்டம்"* (சிலப்.23:77).

த.கட்டை > **Skt.**karṭa > த.காட்டம் (கொ.வ.).

காட்டம்[2] *kaṭṭam,* பெ.(n.) 1. உறைப்பு (இ.வ.). pungency, anything hot to the taste. 2.புளிப்பு; sourness. 3.எரிநோவு; burning sensation. சாராயம் மிகக் காட்டமாக இருக்கிறது (உ.வ)

க., தெ. காட்டு

[கடு →கடுப்பு → காட்டி → காட்டு → காட்டம். கடுப்பு உறைப்பு.]

காட்டம்[3] *kāṭṭam,* பெ. (n.) வெண்கலம் (வின்.); bell-metal.

[**த.** கண்டி > **தெ.**கண்ட்டெ காட்டெ> த.காட்டம். வெண்கலமணி செய்யப்பட்ட மாழையும் வெண்கலமணியின் பெயர் பெற்றது.]

காட்டம்[4] *kāṭṭam,* பெ.(n.) பதினைந்து மணித்துளி கொண்டகாலம் (கால்மணிநேரம்) (விணி.291); quarter hour.

*[காட்டை →காட்டம். **காட்டை** பார்க்க; see kāṭṭai.]*

காட்டம்[5] *kāṭṭam,* பெ.(n.) 1. சினம்; anger. என்மீது காட்டமாக இருக்கிறார் (உ.வ.). 2. மிகுதி (அக.நி.); abundance.

தெ. காடு

[காட்டம்[2] → காட்டம்[5].]

காட்டரண் *kāṭṭaraṇ,* பெ.(n.) நால்வகை அரண்களுள் காடாகிய அரண்(திவா.); forest, as a source of defence, one of four kinds of *araṇ.*

[காடு + அரண் – காட்டரண்.]

காட்டலரி *kāṭṭalari,* பெ. (n.) 1. அலரிவகை (L.); willow-leaved water croton. 2. நச்சுப்பாலுள்ள ஒரு மரம்; jungle mango. 3.பாலைவகை (L.); mango-like cerbera.

[காடு + அலரி – காட்டலரி.]

காட்டவரை *kāṭṭavarai,* பெ.(n.) காட்டுமொச்சை (மூ.அ.); country-bean.

[காடு + அவரை – காட்டவரை.]

காட்டவரை

காட்டவீணை *kāṭṭa-vīṇai,* பெ.(n.) மரத்தால் செய்த வீணை; *vīṇā,* made of wood.

[காடு + வீணை.]

காட்டவுரி *kāṭṭavuri,* பெ. (n.) 1.அவுரி வகை; silvery-leaved indigo. 2. புனல் முருங்கை; three-leaved indigo.

[காடு + அவுரி – காட்டவுரி.]

காட்டழகியவாணன் *kāṭṭaḻagiya-vāṇaṉ,* பெ. (n.) ஒருவகைநெல் (இ.வ.); a kind of coarse paddy.

[காடு + அழகு+ வாணன்.]

காட்டழல் *kaṭṭaḻal,* பெ.(n.) காட்டுத்தீ (சூடா.); forest conflagration.

[காடு + அழல். அழல் = தீ, நெருப்பு.]

காட்டா *kāṭṭā,* பெ.(n.) ***காட்டான்²*** பார்க்க; see *kāṭṭāṉ*

[காடு + ஆ → ஆன் → ஆ = மாடு, பெற்றம்.]

காட்டாக்கி *kāṭṭākki,* பெ.(n.) கட்டையைக் கடைந்துண்டாக்கும் நெருப்பு; fire produced from fuel by churning. *"காட்டாக்கிற் றோன்றி" (சி.போ.9.3:2).*

[காடு + அக்கி – காட்டக்கி → காட்டாக்கி (கொ.வ).]

[த. அழல் (தீ) > அழனி **Skt.** *> agni >* **தெ.** *அக்கி > த. அக்கு → அக்கி.]*

காட்டாகு *kāṭṭāgu,* பெ. (n.) கொடிமுல்லை; eared-jasmine (சா.அக.).

[காடு + ஆகு.]

காட்டாசாரி *kāṭṭāšāri,* பெ.(n.) தச்சன்(வின்.); carpenter.

[காடு + ஆசாரி – காட்டாசாரி.]

காட்டாஞ்சி *kāṭṭāñji,* பெ.(n.) மரவகை (L.); entire-leaved staff tree.

ம. காட்டாடு

[காடு + ஆஞ்சி – காட்டாஞ்சி.]

காட்டாடு *kāṭṭāḍu,* பெ.(n.)காட்டில் வாழும் ஆட்டைபோன்ற விலங்கு; jungle sheep, barking deer.

[காடு + ஆடு – காட்டாடு]

இது ஆட்டைப்போல் தாவும், நரியைப் போல் ஊளையிடும்.

காட்டாடு

காட்டாணி *kāṭṭāṇi,* பெ.(n.) ***காட்டேணி*** பார்க்க; see *kāṭṭēṇi.*

[காட்டேணி → காட்டாணி.]

காட்டாத்தி *kāṭṭātti,* பெ.(n.) திருவாத்தி; holy mountain ebony. *"காட்டாத்திப் பூமார்ச் சாலஞ் சடிலை வீரை" (தைலவ. தைல. 51).*

ம. காட்டத்தி; **க.** காடத்தி.

[காடு + ஆத்தி – காட்டாத்தி.]

காட்டாதளை *kāṭṭādaḷai,* பெ. (n.) ***காட்டாமணக்கு*** பார்க்க; see *kāṭṭāmaṇakku* (சா.அக.).

[காடு + ஆதளை.]

காட்டாதாரிகம் *kāṭṭadārigam,* பெ.(n.) கொடியத்தி; creeper fig (சா.அக).

[காடு + ஆதரிகம்.]

காட்டாமணக்கு *kāṭṭāmaṇakku,* பெ.(n.) 1. ஆமணக்கு வகை (பதார்த்த.541); common physic nut. 2.பேயாமணக்கு (L.); red physic nut.

மறுவ. காட்டாதளை, காட்டாமணத்தி.

ம. காட்டாவணக்கு

[காடு + ஆமணக்கு – காட்டாமணக்கு.]

காட்டாமணக்கு

காட்டாமணத்தி *kāṭṭāmanatti,* பெ.(n.) ***காட்டா மணக்கு*** பார்க்க; *kaṭṭāmaṇakku.*

[காடு + ஆமணத்தி.]

காட்டாமணி *kāṭṭāmaṇi,* பெ.(n.) ***உத்தாமணி*** பார்க்க; see *uttāmaṇi* (சா.அக.).

[காடு + ஆமணி.]

காட்டாரியம் *kāṭṭāriyam,* பெ.(n.) கேழ்வரகின் வகை; (G.Sm.D.i, i :217); dry - crop ragi.

[காடு + ஆரியம் – காட்டாரியம்.]

காட்டாரை *kāṭṭārai,* பெ. (n.) ***கல்லாரை*** பார்க்க; see *kallārai* (சா.அக).

[காடு + ஆரை.]

காட்டாலம் *kāṭṭālam,* பெ. (n.) பேயால மரம்; wild banyan tree, demonfig (சா.அக.).

ம. காட்டால்

[காடு + ஆலம்.]

காட்டாவரை *kāṭṭāvarai,* பெ. (n.) ***காட்டாவிரை*** பார்க்க; see *kāṭṭāvirai.* mountain downy senna (சா.அக.).

[காடு + ஆவரை.]

காட்டாவிரை *kāṭṭāvirai,* பெ. (n.) மலையாவாரை; small-stipuled downy rachis glandular senna.

[காடு + ஆவிரை – காட்டாவிரை.]

காட்டாள் *kāṭṭāḷ,* பெ.(n.) 1. நாகரிகமற்ற முரட்டாள்; rustic, savage, uncivilised rude man. 2. காட்டில் இருப்பவன், வேடன்; a forest-dweller, hunter.

ம. காட்டாள்; **க., து.** காட.

[காடு + ஆள் – காட்டாள்.]

காட்டாள் காசு *kāṭṭāḷ-kāśu,* பெ.(n.) வரிக்கூறு செய்பவர்களுக்கு நிலத்தை அடையாளம்

காட்டுவதற்கான கூலி; payment for identifying the land for the tax assessers. *"வரிக்கூறு செய்வார்களுக்கும் சொல்ல காட்டாள் காசு 25" (S.I.I.VIII,263-9).*

[காட்டாள் + காசு.]

காட்டாளத்தி *kāṭṭāḷatti,* பெ.(n.) இசையின் விரிவோசை (சிலப்:3:26,உரை.); systematic elaboration of a musical mode in all its variation.

[காடு + ஆளத்தி – காட்டாளத்தி. ஆளத்தி என்னும் தமிழ்ச்சொல் வடமொழியில் ஆலாபனை ஆயிற்று.]

காட்டாளை *kāṭṭāḷai,* பெ.(n.) ஒருவகைச் சுழல் வண்டு; a whirling beetle (சா.அக.).

காட்டாறு *kāṭṭāṟu,* பெ.(n.) 1. காட்டில் ஓடும் ஆறு; a forest-river. 2. மழைக் காலத்தில் மட்டும் ஓடும் ஆறு; the river where water flows only in rainy season.

ம. காட்டாறு

[காடு + ஆறு.]

காட்டான்[1] *kāṭṭāṉ,* பெ.(n.)1. நாகரிகமாகப் பழகும் இயல்பு இல்லாதவன்; person of rough manners, rustic. 2. அயலான்(யாழ்ப்.); stranger.

ம. காட்டன், காடன்; **கா.து.** காட

[காடு + ஆன் – காட்டான். 'ஆன்' ஆண்பாலீறு.]

காட்டான்[2] *kāṭṭāṉ,* பெ.(n.)காட்டு மாடு; wild cow. *"வெல்லரிய கரடி காட்டான் பூனை" (அறப். சத.62.).*

ம. காட்டி, க. காட்டா

[காடு + ஆன் – காட்டான். ஆன் = மாடு,பெற்றம்.]

காட்டான்கரையான்[2] *kāṭṭāṉ-karaiyāṉ,* பெ.(n.) பட்டிக்காட்டான்(நெல்லை.); rustic.

[காட்டான் + கரையான்.]

காட்டானை *kāṭṭāṉai,* பெ.(n.) காட்டில்வாழும் யானை (பழக்கப்படுத்தப் படாதயானை); wild elephant.

ம. காட்டான

[காடு + யானை.]

காட்டி[1] *kāṭṭi,* பெ.(n.)(வியங்கோள்) காட்டுக. இகரவீற்று வியங்கோள், (த.சொ.அக). optative mood with final 'I'.

காட்டி[2] *kāṭṭi,* பெ.(n.) பன்றி (அக.நி.); pig.

காட்டிக்கொடு-த்தல் *kāṭṭi-k-koḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கற்றுக் கொடுத்தல்; to put one in the way, to teach or show the method of doing anything. 2.தன்பக்கத்தானொருவனை எதிரி கைக்கொள்ளும் நிலைமையை உண்டாக் குதல்; to play false, to accuse; to betray, as a person to his enemy. 3.சோதனை முறையைக் கையாண்டு வெளிப்படுத்துதல்; reveal. பையில் வைத்திருக்கும் பேனாக் கத்தியைக்கூட இந்த மின்கருவி காட்டிக் கொடுத்துவிடும்(உ.வ.).

[காட்டு → காட்டி + கொடு.]

காட்டிக்கொள்ளு-தல் *kāṭṭi-k-koḷḷu-,* 16 செ.குன்றாவி. (v.t.) இல்லாததை உள்ளதுபோலக் காட்டிக் கொள்ளுதல்; try to pass for; put on airs. அவன் தன்னை அறிவாளி போலக் காட்டிக் கொண்டான் (உ.வ.).

[காட்டு → காட்டி + கொள்.]

காட்டிச்சி *kāṭṭicci,* பெ.(n.) கல்லத்தி; stone fig (சா.அக.).

[காடு + இச்சி.]

காட்டிஞ்சி *kāṭṭiñji,* பெ. (n.) 1. இஞ்சிவகை (L.); wild ginger. 2. சரணை (மலை.); purslane - leaved trianthema.

ம. காட்டிஞ்சி

[காடு + இ ஞ்சி – காட்டிஞ்சி]

காட்டிண்டு *kāṭṭiṇḍu,* பெ.(n.) copious narrow-leaved soap pod.

[காடு + இண்டு – காட்டிண்டு.]

காட்டிமறை-த்தல் *kāṭṭi-maṟai-,* 4 செ.குன்றாவி. (v.t.) எளிதில் கிடைப்பது போல் தோற்றுவித்து ஏமாறச்செய்தல்; to tantalise a person by presenting something desirable to his view and snatching it away just at the moment of his taking it *"கருணை மூர்த்தி காட்டி மறைத்தலும்" (திருவிளை வாதவூ.54.)*

[காட்டு → காட்டி (வி.எ.) + மறை.]

காட்டியானை *kāṭṭiyāṉai,* பெ.(n.) காட்டில் வாழும் யானை(திவா.); wild elephant.

[காடு + யானை – காட்டியானை. ஒ.நோ. கற்றி யானை.]



காட்டியானை

காட்டியும் *kāṭṭiyum,* இடை.(part.) காட்டிலும்; a case-sign, the ablative of comparison. *"என்னைக் காட்டியு முண்டோ" (குருகூர்ப். 96.).*

*[காட்டிலும் → காட்டியும் (கொ.வ.). **காட்டில்¹** பார்க்க; see kāṭṭil – காட்டாஞ்சி.]*

காட்டிருப்பை *kāṭṭiruppai,* பெ.(n.) காட்டிலுப்பை பார்க்க; see *kāṭṭiluppai.*

[காட்டிலுப்பை → காட்டிருப்பை.]

காட்டிருள் *kāṭṭiruḷ,* பெ.(n.) கனத்த இருள்; பேரிருள்; pitch-darkness, thick darkness.

[காடு + இருள்.]

காட்டில்¹ *kāṭṭil,* இடை.(conj.) உறழ்ச்சிப் பொருள் காட்டும் இடைச்சொல்; than. *"ஒழிந்த பெருத்த உறுப்புகளில் காட்டில் பெரிய அழகையுடைய" (சீவக.1461,உரை).*

ம. காட்டில்

[காண் → காட்டு → காட்டில். ஒன்றை ஒப்புமையாகக் காட்டும்போது எனப் பொருள்படும் இடைச்சொல் 'அதனைவிட'என்னும் உறழ்ச்சிப்பொருள் தந்தது.]

காட்டில்² *kāṭṭil,* வி.எ.(adv.) 1. அளவில்; when *"தவநெறி என்னுங் காட்டில் பக்தியைச் சொல்லிற் றாமோ"(ஈடு, 10.4:1).* 2. உடன்; as soon as, at the very instant. 'ஒரு குயில் ஒருகாற் கூவுங்காட்டில் விடிந்ததோ' (திவ்.திருப்பா.18, வியா.171.).

[காட்டில்¹ → காட்டில்².]

காட்டிலந்தை *kāṭṭilanai,* பெ. (n.) இலந்தை மரவகை; a species of jujube.

ம. காட்டிலந்த

[காடு + இலந்தை.]

காட்டிலம் *kāṭṭilam,* பெ. (n.) வாழை வகை (மலை.); a kind of plantain.

[காட்டேலம் → காட்டிலம். ஏலவாழையின் வகைகளுள் ஒன்று.]

காட்டிலமிர்து *kāṭṭilamirtu,* பெ.(n.) ***காட்டகத் தமிழ்து*** பார்க்க; see *kāṭṭagattamiḻdu.*

[காட்டகத்தமிழ்து → காட்டகத்தமிந்து → காட்டிலமிர்து. சீவக.2110 உரையில் காட்டிலமிர்து என ஆண்டிருப்பது கொச்சை வழக்கு.]

காட்டிலவு *kāṭṭilavu,* பெ. (n.) 1. கோங்கிலவு; false traganth. 2. பாறையிலவு; large flowered silk cotton (சா.அக.).

மறுவ. காட்டுப்பருத்தி

[காடு + இலவு – காட்டிலவு.]



காட்டிலந்தை

காட்டுக் கருணை



காட்டத்தி

காட்டரளி

காட்டிலா *kāṭṭilā*, பெ. (n.) 1. வெள்ளெருக்கு; white flowered giant swallow wort. 2.வாழை;plantain tree (சா.அக).

[காடு + ஈலை – காட்டீலை → காட்டிலா.]

காட்டிலுப்பை *kāṭṭiluppai*, பெ.(n.) 1. காட்டிலுப்பை மரம்; wild mowah 2. கற்பாலை; East Indian star apple. 3. பாற்சோற்றிப் பாலை; oval mowah (சா.அக.).

[காடு + இலுப்பை.]

காட்டிலும்[1] *kāṭṭilum*, இடை. (conj.) உறழ்ச்சிப் பொருள் குறிக்கும் இடைச்சொல்; than. அதைக் காட்டிலும் இது நல்லது (உ.வ.).

[காண் → காட்டு → காட்டில் → காட்டிலும். காட்டில் பார்க்க;see kaṭṭil.]

காட்டிலும்[2] *kāṭṭilum*, வி.எ.(adv.) உடன்; as soon as, at the very instant.விடியுங்காட்டிலும் வந்தான் (உ.வ.).

[காண் → காட்டு → காட்டில் → காட்டிலும். காட்டில் பார்க்க; see kaṭṭil.]

காட்டிலுமிழி *kāṭṭil-umiḻi*, பெ.(n.) நாகர வண்டு (வின்.); a large kind of beetle.

[காட்டில் + (உமுறி)உமிழி. உமுறி = ஓசைபெழுப்புவது.]

காட்டிலேபோ-தல் *kāṭṭil-e-pō-*, 8 செ.கு.வி. (v.i.) வீணாய்க்கழிதல் (யாழ்ப்.); to be lost, wasted.

[காடு + இல் + ஏ – காட்டிலே + போ.]

காடு = இடுகாடு. இச் சொல் மறைந்தொழிதல், கழிந்துபோதல், பயனற்றுப்போதல் என்னும் பொருள்களின் அடியாக வீணாகப்போதலைக் குறித்தது.

காட்டினாவாடை *kāṭṭiṉāvāḍai*, பெ.(n.) நன்னாரி; Indian sarsaparilla (சா.அக.).

காட்டீஞ்சு *kāṭṭīñju*, பெ. (n.) காட்டீந்து பார்க்க; see *kāṭṭīndu*.

[காட்டீந்து → காட்டீஞ்சு.]

காட்டீந்து *kāṭṭīndu*, பெ.(n.) ஈச்சம்பனை; wild date-palm.

மறுவ. காட்டீச்சை

ம. காட்டீந்தல்

[காடு + ஈந்து – காட்டீந்து.]

காட்டீரகம் *kāṭṭīragam*, பெ. (n.) கொட்டைமுந்திரி; cashew nut (சா.அக.).

காட்டீருள்ளி *kāṭṭīruḷḷi*, பெ. (n.) நரிவெங்காயம்; jungle onion or jackal onion.

க. காடீருள்ளி

மறுவ. காட்டு வெள்ளை வெங்காயம்.

[காடு + ஈருள்ளி – காட்டீருள்ளி.]

காட்டீலை *kāṭṭīlai*, பெ.(n.) 1. வாழை; plantain tree. 2. கடுக்காய்; gallnut.

[காடு + ஈலை.]

காட்டு[1]**-தல்** *kāṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. காண்பித்தல்; to show, exhibit, display. *"எம்மில்லங் காட்டுதும்" (நாலடி,293.).* 2. அறிவித்தல்; to reveal, disclose, set forth. *"காணாதாற் காட்டுவான்" (குறள்,849).* 3. நிறுவுதல்; to prove. *"நிறைமொழி மாந்தர்.... மறைமொழி காட்டிவிடும்" (குறள்,28).* 4. நினைவூட்டுதல்; to remind. *"முறுவற் குறிகாட்டி முத்தே யுலகை முடிப்பாயோ" (கம்பரா. கடல் காண்.8.).* 5.திருவமுது படைத்தல்; to offer to a deity. *"ஆழ்வார்க்குக் காட்டுகின்ற திருவமுர்தும்" (S.I.I.III.49-3:102).* 6.நிழலுருச் செய்தல்; to reflect, as a mirror or water. *"அடுத்தது காட்டும் பளிங்கு

போல்" (குறள்.706.). 7. உண்டாக்குதல்; to create, bring to pass. *"களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி" (சிலப். 19:17).* 8. அறிமுகஞ் செய்வித்தல்; to introduce. *"செவ்வழி யுள்ளத் தோனைக் காட்டுதி தெரிய வென்றான்" (கம்பரா. கிட்கிந் அனுமப்.23.).* 9. நறுமண முதலியன ஊட்டுதல்; to apply, as incense or perfume to the hair. *"ஆவிகாட்டி.... சோர்குழல்" (கம்பரா. கிட்கிந். நாடவி.59.).* 10. வெப்பம் உறைக்கச் செய்தல்; to heat, as a vessel of ghee. நெய்ப்பாத்திரத்தை நெருப்பிற்காட்டி உருக்கினான் (உ.வ.). 11. மீட்டுத்தருதல்; to bring back. *"ஆழிகாட்டியென் னாருயிர் காட்டினாய்" (கம்பரா. சுந்தர. பிணிவீட்டு.34).*

ம. காட்டுக; **க.** காணிசு; காணிபின்சு; **து.** காணுசாபுனி, காணிசாவுனி; குட., **கோத.** காட்; துட. கோட்.

[காண் (த.வி)→ காட்டு (பி.வி.).]

காட்டு[2] *kāṭṭu,* பெ. (n.) 1.காண்பிக்கை; showing; exhibition, presentation. 2.சான்று; instance, example. *"கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்" (நன்.22.).* 3. துணைக்கருவி; means, implements. *"இவ்வுடலே காட்டொடுங்க காணாதே" (சி.போ.3.5:1.).* 4.ஒளி (சி.சி.5:4.); brightness, light.

[காண் → காட்டு. ஏவலடியே பெயராகிக் காட்டுதலையும், காட்டுதற்கும் காணுதற்கும் காரணமாகிய பொருள்களையும் பொருளால் புடைபெயர்ந்து சுட்டியது.]

காட்டு[3] *kāṭṭu,* பெ.(n.) உறைப்பு; pungency, acridity.

தெ.காட்டு

[காட்டம் → காட்டு.]

காட்டு[4] *kāṭṭu,* பெ.(n.) குப்பை; rubbish. காட்டுக் *"களைந்து கலங்கழீஇ"(ஆசாரக்.46).*

தெ.காட்டு

காட்டுஓமவல்லி *kāṭṭumavalli,* பெ.(n.) ஓமவல்லி வகை; a variety of ōmavalli (சா.அக).

[காடு + ஓமவல்லி.]

காட்டுக்கசகசா *kāṭṭu-k-kaša-kašā,* பெ.(n.) கசகசா வகை; wild poppy.

[காடு + கசகசா]

காட்டுக்கசகசா

காட்டுக்கஞ்சாங்கோரை *kāṭṭu-k-kañjāṅkōrai,* பெ.(n.) செடிவகை (மூ.அ.); sage tea plant.

[காடு + கஞ்சு + அம் + கோரை. காட்டுக்கஞ்சாங் கோரை. 'அம்' சாரியை 'ஆம்' என நீண்டது.]

காட்டுக்கட்டை *kāṭṭu-k-kaṭṭai,* பெ.(n.) பலவகை மரங்களின் விறகு; firewood of various kinds.

[காடு + கட்டை.]

காட்டுக்கடலி *kāṭṭu-k-kaḍali,* பெ.(n.) பூனைப் பிடுக்கன் செடிவகை(வின்.); roughish round-leaved Indian linden.

[காடு + கடலி]

காட்டுக்கடலை *kāṭṭu-k-kaḍalai,* பெ.(n.) புதர்ச்செடிவகை (வின்.); rough small - leaved spider flower shrub.

ம. காட்டுகடலை

[காடு + கடலை – காட்டுக்கடலை.]

காட்டுக்கடன் *kāṭṭu-k-kaḍaṉ,* பெ.(n.) ஈமக்கடன்; obsequies or funeral rites at the burning ghat.

மறுவ. காட்டுக்கிரியை.

[காடு + கடன்.]

காட்டுக்கடுகு *kāṭṭu-k-kaḍugu,* பெ.(n.) நாய் வேளை (M.M.937); a sticky plant that grows best in sandy places.

ம. காட்டுகடுகு

[காடு + கடுகு.]

காட்டுக்கண்ணி *kāṭṭu-k-kaṇṇi,* பெ.(n.) முட்டை நாறி; claw-flowered laurel (சா.அக.).

[காடு + கண்ணி.]

காட்டுக்கத்தரி *kāṭṭu-k-kattari,* பெ.(n.) செடிவகை; hedge caper.

[காடு + கத்தரி.]

காட்டுக்கத்தூரி *kāṭṭu-k-kattūri,* பெ.(n.) பெட்டகத் துத்தி எனும் மூலிகைச் செடி (மலை.); musk mallow, hairy shrub.

[காடு + கத்தூரி – காட்டுக்கத்தூரி.]

Skt. kastūri > த. கத்தூரி.

காட்டுக்கதலி *kāṭṭu-k-kadali,* பெ. (n.) காட்டு வாழை (மூ.அ.); wild plantain.

[காடு + கதலி.]

காட்டுக்கப்பற்கிழங்கு *kāṭṭu-k-kappaṟ-kiḻaṅgu,* பெ.(n.) காட்டுக்கிழங்கு; a wild root (சா.அக).

[காடு + கப்பற்கிழங்கு.]

காட்டுக்கம்பம்புல் *kāṭṭu-k-kambam-pul,* பெ. (n.) ஒருவகைக் கம்பம் புல்; a wild coraly (சா.அக.).

[காடு + கம்பம் + புல்.]

காட்டுக்கமுகு *kāṭṭu-k-kamugu,* பெ.(n.) இலங்கைக்கமுகு; betel palm of srilanka (சா.அக).

ம. காட்டுகமுகு

[காடு + கமுகு.]

காட்டுக் கரந்தை *kāṭṭu-k-karandai,* பெ.(n.) ஒரு வகைக் கரந்தை; wild sweet basil of the Sphoeranthes genus (சா.அக.).

[காடு + கரந்தை.]

காட்டுக்கருணை *kāṭṭu-k-karuṇai,* பெ. (n) 1. ஒரு வகைப் பூடு. (பதார்த்த.417); purple stalked dragon, s.sh., synantherias sylvatica. 2. சேனைக்கிழங்கு வகை (வின்.); tahiti arrow-root.

[காடு + கருணை – காட்டுக்கருணை.]

காட்டுக்கருப்பூரக்கிச்சிலிக்கிழங்கு *kāṭṭu-k-karuppūra-k-kiccili-k-kiḻaṅgu,* பெ.(n.) காட்டுப் பூலாங் கிழங்கு; forest orange root of Curcuma genus (சா.அக.).

[காடு + கருப்பூரம் + கிச்சிலி + கிழங்கு.]

காட்டுக்கரும்பு *kāṭṭu-k-karumbu,* பெ.(n.) பேய்க்கரும்பு; wild sugarcane (சா.அக.).

ம. காட்டுகரிம்பு

[காடு + கரும்பு.]

காட்டுக்கருமிளகு *kāṭṭu-k-karu-miḷagu,* பெ.(n.) மிளகுவகை; kind of pepper.

ம. காட்டுகரிமுளகு

[காடு + கருமிளகு.]

காட்டுக்கருவா *kāṭṭu-k-karuvā,* பெ. (n.) 1. காட்டில வங்கம்; jungle cloves. 2. சீனமிளகு; China pepper.

ம. காட்டுகறுவா

[காடு + கருவா – காட்டுக்கருவா. கருவேல் → கருவா (கொ.வ.) ஒரு சிறிய மரம்.]

காட்டுக்கருவேப்பிலை *kāṭṭu-k-karuvēpilai,* பெ.(n.) கறிவேப்பிலை வகை(L.); axil flowered shrubby Indian wampee.

மறுவ : ஆனாந்தளை

[காடு + கருவேப்பிலை.]

காட்டுக்கரையாம்பூ *kāṭṭu-k-karaiyāmbū*, பெ.(n.) மலைநாவல்; clove-like black plum (சா.அக).

[காடு + கரையாம்பூ.]

காட்டுக்கல் *kāṭṭu-k-kal*, பெ. (n.) 1. ஒருவகை முருட்டுக்கல் (வின்.); a rough unshaped stone. 2. வெள்ளைக்கல்; white stone. (சா.அக.).

[காடு + கல் –காட்டுக்கல்.]

காட்டுக்கல்லுண்டை *kāṭṭu-k-kalluṇḍai*, பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[காடு + கல் லுண்டை.]

காட்டுக்கழுதை *kāṭṭu-k-kaḻudai*, பெ.(n.) காட்டில் வாழும் (பழக்கப்படுத்தப் படாத) கழுதை; a wild-ass.

ம. காட்டுகழுத

[காடு + கழுதை.]

காட்டுக்கள்ளி *kāṭṭu-k-kaḷḷi*, பெ. (n.) மலைக்கள்ளி; hill kaḷḷi (சா.அக).

[காடு + கள்ளி.]

இதன் இலைகளை வதக்கிக் காயம், புண் முதலியவற்றில் வைத்துக் கட்ட எரிச்சல் நீங்கும்.

காட்டுக்கற்றாழை *kāṭṭu-k-kaṟṟāḻai* பெ.(n.) ஆனைக் கற்றாழை; wild aloe or hill aloe.

[காடு + கற்றாழை.]



காட்டுக்கற்றாழை

காட்டுக்கனி *kāṭṭu-k-kaṉi*, பெ.(n.) காட்டெலுமிச்சை; Indian wild lime (சா.அக).

[காடு + கனி.]

காட்டுக்காசினி *kāṭṭu-k-kāšiṉi*, பெ.(n.) காட்டில் விளையும் காசினி; wild endive (சா.அக.).

[காடு + காசினி.]

காட்டுக் காட்டாமணி *kāṭṭu-k-kāṭṭāmaṇi*, பெ.(n.) காட்டு உத்தாமணி; wild hedge twiner.

[காடு + காட்டாமணி.]

காட்டுக்காய்ச் சாறுமுட்டி *kāṭṭu-k-kāy-cāṟu muṭṭi*, பெ.(n.) ஓர் அவுரிப் பூடு; curved podded five-leaved indigo (சா.அக).

[காடு + காய் + சாறுமுட்டி.]

காட்டுக்காய்ச்சுரை *kāṭṭu-k-kāy-c-curai*, பெ.(n) 1.சுரை வகை; a species of bottle gourd. 2.புளிச்சைவகை (வின்.); deccan hemp. 3. முட்புளிச்சை (M.M.83); thorny hemp bendy, herbaceous plant.

[காடு + காய்ச்சுரை.]

காட்டுக்காய்வள்ளி *kāṭṭu-k-kāy-vaḷḷi*, பெ.(n.) 1. வள்ளி காய் (மூ.அ.); cultivated yam, dioscorea sativa. 2. காய்ச்சீரக வள்ளிவகை (வின்.); cummin yam.

[காடு + காய்வள்ளி.]

காட்டுக்காரை *kāṭṭu-k-kārai*, பெ.(n.) மலைக்காரை; gland petioled saw-leaved olive linden (சா.அக).

ம. காட்டுகார

[காடு + காரை.]

காட்டுக்காளை *kāṭṭu-k-kāḷai,* பெ.(n.) மாட்டு வகையைச் சார்ந்த ஒரு காட்டு விலங்கு; a wild animal of the cow family.

ம. காடுகாள

[காடு + காளை.]

காட்டுக்கானாங்கோழை *kāṭṭu-k-kāṉāṅ-kōḻai,* பெ.(n.) கானாவாழை (மூ.அ.); calf's grass.

[காடு + கானாங்கோழை.]

காட்டுக்கானாவாழை *kāṭṭu-k-kāṉā-vāḻai* பெ.(n.) கானா வாழைவகை (யாழ்.அக.); a species of calf's grass.

[காடு + கானாவாழை]

காட்டுக்கிச்சிலி *kāṭṭu-k-kiccili,* பெ.(n.) 1.காட்டெலுமிச்சை; (L.) wild lime. 2. காட்டில் விளையும் கிச்சிலிப்பழம்; wild orange (சா.அக).

[காடு + கிச்சிலி.]

காட்டுக்கிட்டம் *kāṭṭu-k-kiṭṭam,* பெ.(n.) மலைக் கிட்டம்; iron crust; spongy stones such as prunice etc. found in mountains or mountainous tracts. (சா.அக.).

[காடு + கிட்டம்.]

காட்டுக்கிராம்பு *kāṭṭu-k-kirāmbu,* பெ.(n.) நீர்க் கிராம்பு (மூ.அ.); primrose-willow.

[காடு + கிராம்பு – காட்டுக்கிராம்பு (கொ.வ.). குறும்பு → குறும்பு → கிராம்பு (கொ.வ.).]

காட்டுக்கிரியை *kāṭṭu-k-kiriyai,* பெ.(n.) ***காட்டுக் கடன்*** பார்க்க; see *kāṭṭu-k-kaḍaṉ.*

மறுவ. ஈமக்கடன்

Skt. kriya> த. கிரியை.

[காடு + கிரியை.]

காட்டுக்கிள்ளை *kāṭṭu-k-kiḷḷai,* பெ. (n.) நகுதாளி யிலை; common cherry nutmeg (சா.அக).

[காடு + கிள்ளை.]

காட்டுக்கிளுவை *kāṭṭu-k-kiḷuvai,* பெ. (n.) கற்பூரக் கிளுவை; hill kiluvai or hill mango.

[காடு + கிளுவை.]

காட்டுக்கீரை *kāṭṭu-k-kīrai,* பெ.(n.) காட்டி லுண்டாகும் பலவகைக் கீரை (வின்.); wild greens of different kinds.

[காடு + கீரை.]

காட்டுக்கீழாநெல்லி *kāṭṭu-k-kīḻā-nelli,* பெ. (n.) பூலாவகை. (L.); black-honey shrub, large, often scandent.

[காடு + கீழ் + ஆம் + நெல்லி.]

காட்டுக்குணம் *kāṭṭu-k-kuṇam,* பெ.(n.) விலங் கியல்பு (யாழ்.அக.); rudeness; savagery.

[காடு + குணம்.]

காட்டுக்குதிரை *kāṭṭu-k-kudirai,* பெ. (n.) 1. காட்டில் வாழும்குதிரை; a wild-horse. 2. வரிக்குதிரை; a zebra.

ம. காட்டுகுதிர

[காடு + குதிரை.]

காட்டுக்குமிழ் *kāṭṭu-k-kumiḻ,* பெ. (n.) 1. மரவகை; French mulberry of the Western ghauts. 2. பாமரக் குமிழ்; false white teak.

ம. காட்டு குமிழ்

[காடு + குமிழ்.]

காட்டுக்குயின் *kāṭṭu-k-kuyiṉ,* பெ. (n.) மரவகை; a kind of tree.

ம. காட்டுகுருந்த

[காடு + குயின்.]

காட்டுக்குருக்கு *kāṭṭu-k-krukku,* பெ. (n.) ***காட்டுநெருஞ்சில்*** (புதுவை) பார்க்க; see *kāṭṭu-neruñjil.*

[காடு + குருக்கு.]

காட்டுக்குருந்து *kāṭṭu-k-kurundu,* பெ.(n.) காட்டெலுமிச்சை (மலை.); Indian wild lime.

மறுவ. காட்டு நாரத்தை.

ம. காட்டுகுருந்த

[காடு + குருந்து.]

காட்டுக்குருந்தோட்டி *kāṭṭu-k-kuṟundōṭṭi,* பெ.(n.) ஆனைக்குருந்தோட்டி; forest morning mellow (சா.அக).

[காடு + குருந்தோட்டி.]

காட்டுக்குறிஞ்சி *kāṭṭu-k-kuṟiñji,* பெ. (n.) குறிஞ்சா; country ipecacuanha (சா.அக.).

[காடு + குறிஞ்சி.]

காட்டுக்கூந்தல் *kāṭṭu-k-kūndal,* பெ. (n.) புல்வகை (யாழ்.அக.); a kind of grass.

[காடு + கூந்தல்.]

காட்டுக்கொஞ்சி *kāṭṭu-k-koñji,* பெ.(n.) கொழிஞ்சிச் செடிவகை (மூ.அ.); opal orange.

[காடு + கொழுஞ்சி → காட்டுக்கொழுஞ்சி (கொ.வ.).]

காட்டுக்கொட்டை *kāṭṭu-k-koṭṭai,* பெ.(n.) காட்டாமணக்கு; physic nut.

[காடு + கொட்டை.]

காட்டுக்கொடி *kāṭṭu-k-koḍi,* பெ. (n.) 1. கசப்புள்ள ஒருவகைக் கொடி; broom-creeper. 2. நன்னாரி வகை (L); square branched sarsaparilla. 3. வாயு விளங்கம்; wind-berry climber.

[காடு + கொடி.]

காட்டுக்கொடிமுந்திரிகை *kāṭṭu-k-koḍi-mundirigai,* பெ.(n.) முந்திரி வகை (L.); jungle grape-vine.

[காடு + கொடி + முந்திரிகை.]

காட்டுக்கொய்யா *kāṭṭu-k-koyyā,* பெ. (n.) மலைச் சிறுகொய்யா; wild guava of Ceylon (சா.அக.).

[காடு + கொய்யா.]

காட்டுக்கொழுகி *kāṭṭu-k-koḻugi,* பெ. (n.) சிறு கீரை; pig-greens (சா.அக.).

[காடு + கொழுகி.]

காட்டுக்கொழுஞ்சி *kāṭṭu-k-koḻuñji,* பெ.(n.) 1.கொள்ளுக்காய் வேளை; purple wild indigo. 2. காட்டெலுமிச்சை; a species of wild lime.

[காடு + கொழுஞ்சி.]

காட்டுக்கொள் *kāṭṭu-k-koḷ,* பெ.(n.) 1. கருங் காணம் (மூ.அ.); black horse-gram. 2. காலியாந் துவரை (L.); black dhal, low twining weed.

[காடு + கொள் – காட்டுக்கொள். கொள் = வளைவு வளைந்த காய்.]

குதிரைக் கொள்ளைப்போல் இருக்கும், மருந்துக்குப் பயன்படும்.

காட்டுக்கொன்றை *kāṭṭu-k-kōṉṟai,* பெ. (n.) 1.கருங்கொன்றை; rox-bugh's cassia. 2. மலைக் கொன்றை; hill cassia (சா.அக).

மறுவ. காட்டுக்கொன்னை

[காடு + கொன்றை.]

காட்டுக்கோங்கு *kāṭṭu-k-kōṅgu,* பெ. (n.) கோங்கு மரவகை; prussic-acid tree.

[காடு + கோங்கு.]

காட்டுக்கோதிகம் *kāṭṭu-k-kōdigam,* பெ. (n.) சிறுகுமிழ்; small Kashmir tree (சா.அக.).

[காடு + கோதிகம்.]

காட்டுக்கோதுமை *kāṭṭu-k-kōdumai,* பெ.(n.) 1.வாற்கோதுமை; barley or tail wheat. 2.காட்டில் விளையும் கோதுமை; wild wheat.

[காடு + கோதுமை.]

காட்டுக்கோரை *kāṭṭu-k-kōrai,* பெ.(n.) பெருங்கோரை; large sedge grass (சா.அக.).

[காடு + கோரை.]

காட்டுக்கோவை *kāṭṭu-k-kōvai,* பெ.(n.) 1.பெருங் கோவை; large flowered bryony. 2.இராமக்கோவை அல்லது கருங்கோவை; Rama's caper or black caper.

[காடு + கோவை.]

காட்டுக்கோழி *kāṭṭu-k-kōḻi,* பெ.(n.) 1.சம்பங் கோழி; jungle-fowl. 2. கற்கவுதாரி (M.M.); common sand-grouse. 3. சாம்பற் காட்டுக்கோழி; grey jungle fowl or Indian woodcock. 4. சிவப்பு காட்டுக் கோழி; red jungle fowl. 5. சிறகுகோழி; red spur fowl (சா.அக.).

ம. காட்டுகோழி; க. காடுகோழி; து. காடுகோரி.

[காடு + கோழி.]



காட்டுக்கோழி

காட்டுச்சங்கம் *kāṭṭu-c-caṅgam,* பெ. (n.) நாகர வண்டு; a kind of beetle (சா.அக.).

[காடு + சங்கம்.]

காட்டுச்சண்பகம் *kāṭṭu-c-caṇbagam,* பெ.(n.) நீலகிரிச் சண்பகப்பூ; white-stalked fruited tulip tree of the Nilgiris.

மறுவ. காட்டுச்சம்பங்கி

[காடு + சண்பகம் – காட்டுச்சண்பகம். செம் → செம்பகம் → சம்பகம் →சண்பகம்.]

காட்டுச்சதகுப்பை *kāṭṭu-c-cadakuppai,* பெ. (n.) சதகுப்பை போலவே இருக்கும் கடைச்சரக்கு; a plant akin to common dill (சா.அக.).

[காடு + சதகுப்பை.]

காட்டுச்சந்தனம் *kāṭṭu-c-candaṉam,* பெ. (n.) தேவதாரு என்னும் மரவகை; red cedar.

[காடு + சந்தனம் – காட்டுச்சந்தனம். சாந்து → சாந்தனம் → சந்தனம்.]

காட்டுச்சம்புநாவல் *kāṭṭu-c-cāmbu-nāval,* பெ. (n.) காட்டுப் பெருநாவல்; munro's wax rose apple (சா.அக.).

[காடு + சம்புநாவல்.]

காட்டுச்சருக்கரை *kāṭṭu-c-carukkarai,* பெ.(n.) நிலச் சருக்கரைக் கிழங்கு; ground sugar-root (சா.அக.).

[காடு + சருக்கரை.]

காட்டுச் சல்லாத்து *kāṭṭu-c-callāttu,* பெ.(n.) சல்லாத்துக்கீரை; garden lettuce or cabbage lettuce (சா.அக.).

[காடு + சல்லாத்து. உணாணி மருத்துவத்தில் பயன்படும் இலை.]

காட்டுச்சாதி *kāṭṭu-c-cādi*, பெ.(n.) 1. காட்டில் விளையும் மரங்கள்; forest trees in general. காட்டுச்சாதியில் செய்த மேசை (உ.வ.). 2. காட்டுச் சாதிக்காய்; jungle nutmeg. 3. காட்டுச்சாதி பத்திரி; wild mace.

ம. காட்டு ஜாதி

[காடு + சாதி – காட்டுச்சாதி. சாதிக்காய் மரம்.) இது பால் மர வகையைச் சார்ந்ததாகலின் யாதிக்காய் → சாதிக்காய் எனத் திரிந்தது. த. யா > Skt. > sati த. *சாதி.]*

காட்டுச்சாம்பல் *kāṭṭu-c-cāmbal*, பெ. (n.) 1. சிறுமர வகை (இலம்பிலி) (L.); munro's rose wax apple. 2. காட்டுச் சம்புநாவல் பார்க்க; see kāṭṭu-c-cambu-nāval.

மறுவ. இலம் பிலி

[காடு + சாம்பல். வெண்ணிறத் தோற்றத்தால் பெயரிடப்பட்ட மரம்.]

காட்டுச்சாயவேர் *kāṭṭu-c-cāyavēr*, பெ. (n.) காட்டு இம்பூறற்செடி; wild chay root (சா.அக).

மறுவ. பாப்பன் பூண்டு.

[காடு + சாயவேர்.]

காட்டுச்சார்வளை *kāṭṭu-c-cārvaḷai*, பெ. (n.) ***காட்டுச்சாரணை*** பார்க்க; see *kāṭṭu-c-cāraṇai*.

[காடு + சார்வளை.]

காட்டுச்சாரணை *kāṭṭu-c-cāraṇai*, பெ. (n.) மூக்கரைச் சாரணை; white trianthema (சா.அக.).

[காடு + சாரணை.]

காட்டுச்சாரை *kāṭṭu-c-cārai*, பெ.(n.) மருகு; marjoram (சா.அக.).

[காடு + சாரை. இதன் எண்ணெய் பல் வலிக்கு மருந்தாகும்.]

காட்டுச்சிகை *kāṭṭu-c-cigai*, பெ. (n.) 1. காட்டுச் சீயக்காய்; sensitive tree. 2.பேய்ச்சீயக்காய்; rusty mimosa (சா.அக.).

[காடு + சிகை.]

காட்டுச்சிலந்தி *kāṭṭu-c-cilandi*, பெ.(n.) காட்டுச் செருந்தி; forest gold champak (சா.அக.).

[காடு + சிலந்தி]

காட்டுச்சிவிகை *kāṭṭu-c-civigai*, பெ.(n.) பாடை (திருமந்.153); bier. *"காட்டுச்சிவிகையொன்றேறி" (திருமந்.197).*

[காடு + சிவிகை.]

காட்டுச்சிறுகீரை *kāṭṭu-c-cirukīrai*, பெ.(n.) காட்டில் விளையும் சிறுகீரை வகை; fine-leaved amarnath.

[காடு + சிறுகீரை.]

காட்டுச்சிறுதுளசி *kāṭṭu-c-ciṟu-tuḷasi*, பெ.(n.) சிறிய இலைகள் உள்ள ஒருவகைத் துளசிச் செடி; a variety of basic.

ம. காட்டுச்செறு துளசி

[காடு + சிறு+ துளசி.]

காட்டுச்சீரகம் *kāṭṭu-c-cīragam*, பெ.(n.) சிற்றிலைச் சீரகம்; wild cumin (சா.அக.).

ம. காட்டுசீரகம்

மறுவ. நெய்ச்சிட்டி

[காடு + சீரகம். கசப்புச் சுவையுடையது. பலவகை மருத்துவக் குணமுடையது.]

காட்டுச்சீரகவள்ளி *kāṭṭu-c-cīraga-vaḷḷi*, பெ.(n.) 1. காயா வள்ளி; humped yam (சா.அக.). 2. ***காட்டுக் காய் வள்ளி–¹*** பார்க்க; see *kāttu-k-kāy-valli-¹* (சா.அக.).

[காடு + சீரகவள்ளி.]

காட்டுச்சுண்டை *kāṭṭu-c-cuṇṭai,* பெ.(n.) ஒருவகைச் சிறுமரம்; Indian tree potato.

[காடு + சுண்டை.]

காய் பழுத்து முதிர்ந்ததும் தானாகவே உள்ளீரம் சுண்டிச் சுருக்கம் விழுந்து சுருங்கிப் போவதால் சுண்டைக்காய் எனப் பெயர் பெற்றது.

காட்டுச்சுரை *kāṭṭu-c-curai,* பெ.(n.) கசப்புச்சுரை; false calabash (சா.அக.).

[காடு + சுரை.]

காட்டுச்சுள்ளி *kāṭṭu-c-cuḷḷi* பெ.(n.) 1. ஒருவகை முள்ளி; Mysore prickly nail-dye. 2. சிறு விறகு; small tie wood.

[காடு + சுள்ளி.]

காட்டுச்சூட்டி *kāṭṭu-c-cūṭṭi* பெ.(n.) மந்திர விச்சைக்குப் பயன்படும் பூடுவகை (M.M.); mandrake.

[காடு + சூட்டி.]

காட்டுச்சேங்கொட்டை *kāṭṭu-c-cēṅkoṭṭai,* பெ.(n.) பெரியசேங்கோட்டை; glabrous marking nut (சா.அக.).

மறுவ. தேன்சேரான்

[காடு + சேங்கொட்டை.]

காட்டுச்சேப்பங்கீரை *kāṭṭu-c-cēppaṅkīrai,* பெ.(n.) அடிக்காம்பு வெண்மையாகவும், இலை நீள்வட்டமாகவும் உள்ள சமையலுக்குதவும் கீரை; a vegetable green with white pedicle at the bottom; leaves oval and edible (சா.அக).

[காடு + சேப்பங்கீரை.]

காட்டுச்சேம்பு *kāṭṭu-c-cēmbu,* பெ. (n.) காட்டில் விளையும் சேப்பங்கிழங்கு; Egyptian yam, jungle variety of colo casia (சா.அக.).

ம. காட்டுச்சேம்பு

[காடு + சேம்பு.]

காட்டுச்சேரான் *kāṭṭu-c-cērāṉ,* பெ.(n.) கருஞ்சாரை; jungle marking nut (சா.அக).

[காடு + சேரான்.]

காட்டுச்சேனை *kāṭṭu-c-cēṉai,* பெ.(n.) நிலவாவிரையில் ஒருவகை (வின்.); a species of senna growing wild.

ம. காட்டுச்சேன

[காடு + சேனை–காட்டுச்சேனை.]

காட்டுச்சோளம் *kāṭṭu-c-cōḷam,* பெ.(n.) அடவிச் சோளம்; wild sage; wild cholum (சா.அக.).

ம. காட்டுசோளம்

[காடு + சோளம்.]

காட்டுடுகு *kāṭṭuḍugu,* பெ. (n.) ஒடுகு மரம் (கருப்பு ஆச்சா); twin-leaved false copaiba.

மறுவ. காராச்சா

[காடு + உடுகு.]

காட்டுத்தகரை *kāṭṭu-t-takarai,* பெ.(n.) நாற்றத் தகரை (மூ.அ); wild fetid cassia.

ம. காட்டுதகர

[காடு +தகரை.]

காட்டுத்தம்பட்டன் *kāṭṭu-t-tampaṭṭaṉ,* பெ. (n.) காட்டுவாளவரை; wild sword-bean.

[காடு + தம்பட்டன்.]

காட்டுத்தமரத்தை *kāṭṭu-t-tamarattai,* பெ.(n.) மலைத் தமரத்தை; hill carambola (சா.அக.).

[காடு + தமரத்தை.]

காட்டுத்தர்பார் *kāttu-t-tarpār,* பெ. (n.) ஒரு முறையும் இன்றித் தன்னிச்சையாக நடைபெறும் ஆட்சி; anarchy. குற்றவாளியை விட்டுக் குற்றம் சுமத்தியவனைத் தண்டிக்கும் காட்டுத்தர்பார் (உ.வ.).

[காடு + தர்பார். காட்டாட்சி.]

காட்டுத்தனம் *kāttu-t-tanam,* பெ.(n.) முருட்டுத் தன்மை; recklessness, being rude and uncivilised; rusticity. காட்டுத்தனமாகக் காரை ஓட்டுவான் (உ.வ.).

[காடு + தனம் – காட்டுத்தனம். தன்மை → தனம்.]

காட்டுத்தாரா *kāttu-t-tārā,* பெ.(n.) வாத்துவகை; (யாழ்ப்.); wild duck.

ம. காட்டுதாராவு

[காடு + தாரா.]



காட்டுத்தாரா

காட்டுத்தாளி *kāttu-t-tāli,* பெ.(n.) கொடிவகை. (மூ.அ.); purple moon flower.

[காடு + தாளி.]

காட்டுத்திப்பிலி *kāttu-t-tippili,* பெ. (n.) திப்பிலி வகை (L.); long pepper.

ம. காட்டுதிப்பிலி

[காடு + திப்பிலி.]

காட்டுத்தினை *kāttu-t-tinai,* பெ. (n.) தினைவகை (மூ.அ.); forest millet.

[காடு + தினை.]

காட்டுத்தீ *kāttu-t-ti,* பெ. (n.) காட்டில் பற்றிய பெருந்தீ; forest conflagration.

ம. காட்டுத்தீ; க. காடுகிச்சு, காடுரி.

[காடு + தீ.]

காட்டுத்துத்தி *kāttu-t-tutti,* பெ. (n.) துத்திவகை. (M.M.399); bristly-leaved Jew's mallow.

ம. காட்டுதுத்தி

[காடு + துத்தி.]

காட்டுத்தும்பை *kāttu-t-tumbai,* பெ.(n.) ஒருவகைச்செடி; wild dead nettle .

ம. காட்டுதும்ப

[காடு + தும்பை.]

காட்டுத்தும்மட்டி *kāttu-t-tummatti,* பெ.(n.) பேய்த்தும்மட்டி; wild melon.

ம. காட்டுதும்மட்டி

[காடு + தும்மட்டி.]

காட்டுத் துரிஞ்சில் *kāttu-t-turiñjil,* பெ. (n.) கற்றுரிஞ்சில்; stone sirissa (சா.அக.).

[காடு + துரிஞ்சில்.]

காட்டுத்துவரை *kāttu-t-tuvarai,* பெ.(n.) 1.துவரை வகை (மூ.அ.); jungle dhal. 2.இரும்புலி; Cochin-China eboney.

ம. காட்டுத்துவர

[காடு + துவரை.]

காட்டுத்துளசி *kāttu-t-tulasi,* பெ. (n.) துளசி வகை (மூ.அ.); wild basil.

ம. காட்டுத்துளசி

[காடு + தும்மட்டி.]

காட்டுத்துளசி

காட்டுத்தெங்கு *kāṭṭu-t-teṅgu,* பெ.(n.) பனை வகையைச் சேர்ந்த ஒரு வகை மரம்; single leaved sugar palam.

600906

ம. காட்டுதெங்நு

[காடு + தெங்கு.]

494.811321 SEN·2-2

காட்டுத்தேக்கு *kāṭṭu-t-tēkku,* பெ. (n.) சிறுதேக்கு; small kind of teak (சா.அக.).

ம. காட்டுதேக்கு

CPL600906

[காடு + தேக்கு.]

காட்டுத்தேற்றா *kāṭṭu-t-tēṟṟa,* பெ. (n.) காட்டுத் தேற்றான்கொட்டை; forest water-cleaning nut (சா.அக).

[காடு + தேற்றா.]

காட்டுத்தேன் *kāṭṭu-t-tēṉ,* பெ.(n.) காட்டில் கட்டும் தேன்; honey found collected in forests, wild honey or wood honey (சா.அக.).

[காடு + தேன்.]

காட்டுத்தொட்டியன் *kāṭṭu-t-toṭṭiyaṉ,* பெ.(n.) நரி எலி முதலியவற்றை உண்ணும் தொட்டியரினத்தைச் சார்ந்தவன் (நெல்லை); a sub - division of the Toṭṭiya caste, who eat jackals and rats.

[காடு + தொட்டியன்.]

காட்டுநத்தை *kāṭṭu-nattai,* பெ. (n.) காட்டில் வாழும் நத்தை; a kind of snail found in forests (சா.அக.).

[காடு + நத்தை.]

காட்டுநறுவள்ளி *kāṭṭu-naṟuvaḷḷi,* பெ.(n.) ***காட்டுக் காய்வள்ளி*** பார்க்க; see *kāṭṭ-k-kāyvaḷḷi* (சா.அக).

[காடு + நறுவள்ளி.]

காட்டுநறுவிலி *kāṭṭu-naṟuvili,* பெ. (n.) பெரு நறுவிலி; large or broad-leaved sebesten (சா.அக).

[காடு + நறுவிலி.]

காட்டுநாடு *kāṭṭu-nāḍu,* பெ.(n.) காட்டினுள்ளாகிய குடிவாழ்பகுதி; inhabited region in a forest. *"காட்டுநாட் டேமென" (புறநா.150. 19).*

[காடு + நாடு.]

காட்டுநாபி *kāṭṭu-nābi,* பெ.(n.) காட்டுக் கலப்பைக் கிழங்கு; forest plough root (சா.அக).

[காடு + நாபி.]

காட்டுநாய் *kāṭṭu-nāy,* பெ.(n.) கட்டில் வாழும் நாய்; a wild-dog.

ம. காட்டுநாய், காட்டுபட்டி.

[காடு + நாய்.]

காட்டுநாயகர் *kāṭṭu-nāyakar,* பெ.(n.) கேரளத்து மலபார் பகுதியில் வாழும் ஒரு இனத்தார்; name of a hill tribe of North Malabar.

ம. காட்டுநாயகன்

[காடு + நாயகர்.]

காட்டுநாரகம் *kāṭṭu-nāragam,* பெ.(n.) காட்டுக் கொழுஞ்சி; raceme-flowered wild lime (சா.அக).

[காடு + நாரகம்.]

காட்டுநாரங்கம் *kāṭṭu-nārangam,* பெ.(n.) நாயெலுமிச்சை; dog wood apple (சா.அக).

[காடு + நாரங்கம்.]

காட்டுநாரஞ்சி *kāṭṭu-nārañji,* பெ. (n.) குருந்து; obtuse-leaved wild lime (சா.அக.).

[காடு + நாரஞ்சி.]

காட்டுநாரத்தை *kāṭṭu-nārattai,* பெ. (n.) காட்டு நாரத்தை (மலை.); Indian wild lime.

ம. காட்டு நாரத்தை

[காடு + நாரத்தை.]

காட்டுநிலாவிரை *kāṭṭu-nilāvirai,* பெ.(n.) வெள்ளைப் பொன்னாவிரை; Italian senna (சா.அக.).

[காடு + நிலம் + ஆவிரை]

காட்டு நீரடிமுத்து *kāṭṭu-nīraḍimuttu,* பெ.(n.) காட்டுநீர் வெட்டி; forest tamana oil tree (சா.அக).

[காடு + நீரடி + முத்து.]

காட்டுநீரூறி *kāṭṭu-nīrūṟi,* பெ.(n.) மணிப்புல்லாஞ்சி; Indian snow berry (சா.அக.).

[காடு + நீரூறி.]

காட்டுநூறன்கிழங்கு *kāṭṭu-nūṟaṉ-kiḻangu,* பெ.(n.) காட்டுக்கிழங்கு வகை; forest prickly yam (சா.அக.).

[காடு + நூறன்கிழங்கு.]

காட்டுநெரிஞ்சில் *kāṭṭu-neriñjil,* பெ.(n.) ஆனை நெரிஞ்சில்; elephant *neriñjil* (சா.அக.).

மறுவ. காட்டுக்குருக்கு, காட்டுநெருஞ்சி.

ம. காட்டுநெரிஞ்ஞில்

[காடு + நெரிஞ்சில்.]

காட்டுநெல் *kāṭṭu-nel,* பெ.(n.) காட்டில் வளரும்நெல்; wild paddy.

மறுவ. காட்டுநெல்லு

ம. காட்டுநெல்லு

[காடு + நெல்.]

காட்டுநெல்லி *kāṭṭu-nelli,* பெ.(n.) நெல்லிவகை (மூ.அ.); emblic myrobalan.

ம. காட்டுநெல்லி

[காடு + நெல்லி.]

காட்டுநேர்வாளம் *kāṭṭu-nērvāḷam,* பெ.(n.) மலையாமணக்கு; coral plant.

[காடு + நேர்வாளம் – காட்டு நேர்வாளம். நீர்வாளம் → நேர்வாளம். மலையாமணக்குக்குக் காட்டு நீர்வாளம் என்னும் பெயரும் உண்டு.]

காட்டுநொச்சி *kāṭṭu-nocci,* பெ. (n.) 1.நொச்சி மர வகை; tall chaste tree. 2. நீர்நொச்சி; water peacock's foot tree.

ம. காட்டுநொச்சி

மறுவ. மயிலடி நொச்சி

[காடு + நொச்சி.]

காட்டுநோய் *kāṭṭu-nōy,* பெ. (n.) மாட்டுக்கு ஆண்டின் முதல் மழையில் முளைக்கும் புல்லினால் ஏற்படும் கழிச்சல் நோய்; dysentery amoung cattle due to eating the first-grown grass after the annual rain.

க. காடுரோக (கெட்டநோய்)

[காடு + நோய்.]

காட்டுப்பச்சிலை *kāṭṭu-p-paccilai,* பெ.(n.) காட்டு வெள்ளங்கு என்னும் மரவகை; forest rose wood (சா.அக).

[காடு + பச்சிலை.]

காட்டுப்பச்சைப்பயிறு *kāṭṭu-p-paccai-p-payiṟu,* பெ.(n.) காட்டுப் பாசிப்பயறு; wild green gram (சா.அக.).

[காடு + பச்சைப்பயிறு.]

காட்டுப்பசு *kāṭṭu-p-pašu,* பெ. (n.) **காட்டா** பார்க்க; see *kāṭṭā.*

Skt.pasu > த.பசு.

•[காடு + பசு.]

காட்டுப்பசு

காட்டுப்பஞ்சு *kāṭṭu-p-pañju,* பெ. (n.)காட்டிலவு (L.); false tragacanth.

[காடு + பஞ்சு.]

காட்டுப்படை *kāṭṭu-p-paḍai,* பெ. (n.) காடுவாழ் மக்களினின்று திரட்டப்பெற்ற படை (குறள், 762, உரை); forest - force, one of six kind of forces.

[காடு + படை.]

காட்டுப்பயற்றங்கொடி *kattu-p-payarraṅkoḍi,* பெ.(n.) காட்டுத்தட்டைப் பயற்றின் கொடி; kidney bean creeper (சா.அக.).

[காடு + பயற்றங்கொடி.]

காட்டுப்பயறு *kāṭṭu-p-payaṟu,* பெ.(n.) பயறுவகை; wild green gram.

ம. காட்டுபயறு

[காடு + பயறு.]

காட்டுப்பயிர் *kāṭṭu-p-payir,* பெ.(n.) 1. தானே விளையும் பயிர் (வின்.); wild uncultivated crops, vegetables that grow of themselves. 2. புன்செய்ப் பயிர் (இ.வ.); dry crop. 3. புல்; grass.

க. காடஅசறு

[காடு + பயிர்.]

காட்டுப்பருத்தி *kāṭṭu-p-parutti,* பெ.(n.) 1.காட்டிலவு; false tragacanth. 2.கத்தூரி வெண்டை (I.P.); musk mallow. 3. மலை வெண்டை; hill rose mallow (சா.அக.).

ம. காட்டுப்பருத்தி; க. காடுகத்தி

மறுவ. காட்டுப்பஞ்சு.

[காடு + பருத்தி.]

காட்டுப்பலம் *kāṭṭu-p-palam,* பெ.(n.) சவ்வரிசி; sago (சா.அக).

[காடு + பலம்.]

காட்டுப்பலா *kāṭṭu-p-palā,* பெ.(n.) பலாவகை; jungle jack.

மறுவ. கானற்பலா

[காடு + பலா – காட்டுப்பலா]

காட்டுப்பன்றி *kāṭṭu-p-panṟi,* பெ. (n.) வாயின் இருபுறமும் வெளியே நீண்டிருக்கும். இரு கோரைப்பற்களைக் கொண்ட பன்றி வகை (பதார்த்த.854); wild boar.

மறுவ. மிறுதாறு

ம. காட்டுபன்னி; க. காடகந்தி

[காடு + பன்றி.]



காட்டுப்பன்றி

காட்டுப்பாகல் *kāṭṭu-p-pāgal,* பெ.(n.) பழுபாகல் (மூ.அ.); prickly carolah.

[காடு + பாகல்.]

காட்டுப்பாதை *kāṭṭu-p-pādai,* பெ.(n.) 1.காட்டிற் செல்லும் வழி; path in jungles. 2. நாட்டுப்புறத்து வழி; country track.

[காடு + பாதை.]

காட்டுப்பாலை *kāṭṭu-p-pālai,* பெ.(n.) வெட்பாலை; downy oleander (சா.அக.).

[காடு + பாலை.]

காட்டுப்பாலை வள்ளி *kāṭṭu-p-pālai-valli,* பெ.(n.) ஒருவகைக் காட்டு மூலிகை; a forest milk creeper. (சா.அக.)

[காடு + பாலைவள்ளி.]

காட்டுப்பிரண்டை *kāṭṭu-p-piranḍai,* பெ.(n.) பிரண்டை வகை (L.); pedate seven-leaved vine.

ம. காட்டுப்பிரண்ட

[காடு + பிரண்டை.]



காட்டுப்பிரண்டை

காட்டுப்பிராய் *kāṭṭu-p-pirāy,* பெ.(n.) மரவகை (பதார்த்த.117); a species of mercury.

[காடு + பிராய்.]

காட்டுப்பிள்ளை *kāṭṭu-p-piḷḷai,* பெ.(n.) ஆதரவற்ற குழந்தை (வின்.); a neglected orphan, foundling.

[காடு + பிள்ளை.]

காட்டுப்பீ *kāṭṭu-p-pī,* பெ.(n.) குழந்தை பிறந்தவுடன் கழிக்கும் உடற்கழிவு (மலம்) (வின்.); first black excrement of a new-born child or calf.

[காடு + பீ.]

காட்டுப்புகையிலை *kāṭṭu-p-pugai-y-ilai,* பெ.(n.) புகையிலை வகை; wild tobacco.

ம. காட்டுபுகயில

[காடு + புகை + இலை.]

காட்டுப்புங்கு *kāṭṭu-p-puṅgu,* பெ.(n.) மணிப்புங்கு; rusty soap-nut (சா.அக.).

[காடு + புங்கு.]

காட்டுப்புடல் *kāṭṭu-p-puḍal,* பெ.(n.) பேய்ப்புடல்; devils gourd (சா.அக.).

[காடு + புடல்.]

காட்டுப்புத்தி *kāṭṭu-p-putti,* பெ.(n.) அறியாமை, மூடவறிவு (வின்.); stupidity, senselessness.

[காடு + புத்தி – காட்டுப்புத்தி. த. புலம் → புந்தி. > Skt. buddhi. > த. புத்தி]

காட்டுப்புரசு *kāṭṭu-p-puraśu,* பெ. (n.) வெள்ளைப் புரசு; bastard satin wood (சா.அக.).

[காடு + புரசு.]

காட்டுப்புளி *kāṭṭu-p-puḷi,* பெ. (n.) கொடுக்காய்ப் புளி; sweet babool (சா.அக.).

[காடு + புளி.]

காட்டுப்புளிச்சை *kāṭṭu-p-puḷiccai,* பெ.(n.)
1. புளிச்சைக்கீரை (மூ.அ.); Indian brown hemp.
2. முட்புளிச்சை; thorny hemp bendy.

[காடு + புளிச்சை.]

காட்டுப்புறா *kāṭṭu-p-purā,* பெ.(n.) 1. கபோதம் என்னும் புறாவகை (மூ.அ.); wood-pigeon. 2. காட்டில் வாழும் ஒருவகைப் புறா; turtle-dove.

ம. காட்டுப்ராவு

[காடு + புறா.]



காட்டுப்புறா

காட்டுப்புன்னை *kāṭṭu-p-puṉṉai,* பெ.(n.) சேர நாட்டில் வளரும் நீண்ட மரவகை (L.); Malabar poon.

ம. காட்டுபுன்ன

[காடு + புன்னை.]

காட்டுப்பூசுணி *kāṭṭu-p-pūšuṇi,* பெ.(n.) காட்டுப் பறங்கிக்கொடி; jungle pumpkin creeper (சா.அக.).

[காடு + பூசுணி.]

காட்டுப்பூலாங்கிழங்கு *kāṭṭu-p-pūlāṅkiḻaṅgu,* பெ.(n.) காட்டுக் கருப்பூரக் கிச்சிலிக் கிழங்கு; wild orange root.

[காடு + பூலாங்கிழங்கு.]

காட்டுப்பூலிகம் *kāṭṭu-p-pūligam,* பெ.(n.) ஒருவகைக் காட்டுப்புல்; a variety of wild grass (சா.அக.).

மறுவ. பீனசப்புல்

[காடு + பூலிகம்.]

காட்டுப்பூவம் *kāṭṭu-p-pūvam,* பெ.(n.) பூவம் மரவகை (L.); longan.

[காடு + பூவம்.]

காட்டுப்பூவரசு *kāṭṭu-p-pūvarašu,* பெ.(n.) ஒருவகைப் பூவரசு; false fern tree.

ம. காட்டுபூவரசு; க. காடுகூவரசு;

[காடு + பூவரசு.]

காட்டுப்பூவாணன் *kāṭṭu-p-pū-vāṇāṉ,* பெ.(n.) நெல் வகை (A); a kind of paddy.

[காடு + பூவாணன்.]

காட்டுப்பூளை *kāṭṭu-p-pūḷai,* பெ. (n.) 1. பாறையிலவு large-flowered and capsuled silk cotton. 2.பூளைக் கொடி; forest wool plant (சா.அக.).

ம. காட்டுபூள

[காடு + பூளை.]

காட்டுப்பூனை *kāṭṭu-p-pūṉai,* பெ.(n.) கோழி களைத் தெரியாமல் தூக்கிப்போகும் பூனை; wild cat.

ம. காட்டுபூச்ச, காட்டுபோக்கன்; க. காடுபெக்கு; பட. காடுகொத்தி.

[காடு + பூனை.]



காட்டுப்பூனை

காட்டுப்பெண்சாதி *kāṭṭu-p-peṇ-šādi,* பெ. (n.) வைப்பாட்டி; concubine. பெண்சாதி வேம்பும் காட்டுப் பெண்சாதி கரும்பும் (வின்.).

[காடு + பெண்சாதி.]

காட்டுப்பேய்ப்புடல் *kāṭṭu-p-pēyppuḍal,* பெ.(n.) காட்டுப்புடல் பார்க்க; see *kāṭṭū-p-pūḍal.*

[காடு + பேய் + புடல்.]

காட்டுப்பேரிகை *kāṭṭu-p-pērigai,* பெ.(n.) கிலுகிலுப்பை; a species of rattle-wort (சா. அக.).

[காடு + பேரிகை.]

காட்டுமஞ்சரி *kāṭṭu-mañjari,* பெ.(n.) காட்டில் வளரும் சிறுமரவகை (L.); dichotomous flowered hill oilve.

[காடு + மஞ்சரி.]

காட்டுமஞ்சள் *kāṭṭu-mañjal,* பெ.(n.) ஒருவகை மஞ்சள்;wild turmeric.

ம. காட்டு மஞ்ஞள்

[காடு + மஞ்சள்.]

காட்டுமந்தாரை *kāṭṭu-mandārai,* பெ.(n.) ***காட்டாத்தி*** பார்க்க; see *kāṭṭātti.*

[காடு + மந்தாரை.]

காட்டுமயிரங்காய் *kāṭṭu-myiraṅgāy,* பெ.(n.) காட்டுமாங்காய்; jungle mango (சா. அக.).

[காடு + (மயிலங்காய்) மயிரங்காய்.]

காட்டுமயிலம் *kāṭṭu-mayilam,* பெ.(n.) நொச்சி மரவகை; tall chaste tree.

மறுவ. காட்டுமயிலை

[காடு + மயிலம்.]

காட்டுமரம் *kāṭṭu-maram* பெ.(n.) 1. காட்டில் வளரும் மரவகை; forest trees in general. 2. காட்டு மா மரம்; wild mango tree (சா.அக.).

[காடு + மரம்.]

காட்டுமரவள்ளிக்கிழங்கு *kāṭṭumara-vaḷḷi-k-kiḷaṅgu,* பெ.(n.) மலைச் சக்கரைவள்ளி; mountain sweet potato.

[காடு + மரம்வள்ளி + கிழங்கு.]

காட்டுமரி *kāṭṭumari,* பெ.(n.) காட்டில் வளரும் உமரிச்செடி; marsh samphire.

[காடு + உமரி.]

காட்டுமருக்கொழுந்து *kāṭṭu-marukkoḷundu,* பெ.(n.) மணமில்லா மருக்கொழுந்து; southern-wood.

மறுவ. பனிதாங்கி

[காடு + மருக்கொழுந்து.]

காட்டுமல்லி *kāṭṭu-malli,* பெ.(n.) நீண்ட மர மல்லிவகை; Indian cork.

மறுவ. காட்டுமல்லிக

[காடு + மல்லி.]

காட்டுமல்லிகை *kāṭṭu-malligai,* பெ.(n.) 1.மல்லிகை வகை(பதார்த்த.478); wild jasmine. 2.சிறு மல்லிகை; narrow-leaved jasmine and rivers (சா.அக.).

ம. காட்டுமல்லிக

[காடு + மல்லிகை.]

காட்டுமழை *kāṭṭu-maḷai,* பெ.(n.) நாட்டில் ஆறாகப் பெருக்கெடுக்கும் வகையில் மலைக்காட்டிற் பெய்யும் மழை; rain in mountain - forest flooding the streams and rivers.

[காடு + மழை.]

காட்டுமனிதன் *kāṭṭu-manidan,* பெ.(n.) ***காட்டு மாந்தன்*** பார்க்க; see *kaṭṭu-māndan.*

ம. காட்டுமனுஷ்யன்

[காடு + மனிதன்.]

காட்டுமா[1] *kāṭṭu-mā,* பெ. (n.)1. சாரப்பருப்பு மரம் (L.) ; Cuddapah almond. 2. மரவகை (K.R.); buchanan's mango. 3. புளிமா (L.); Indian hog-plum. 4. உதளை; jungle mango.

ம. காட்டுமாவு

[காடு + மா – காட்டுமா. மா =மாமரத்தின் வகையைச் சார்ந்ததாகப் பொதுமக்களால் கருதப்பட்ட மரவகை. இதன்காய் ஊதா நிறமாக இருக்கும்.]

காட்டுமா[2] *kāṭṭu-mā,* பெ.(n.)1. காட்டுக்குதிரை; wild horse. 2. காட்டில் வாழும் விலங்கின் பொதுப்பெயர்; name refering to animals living in forest.

[காடு + மா.]

காட்டுமாசிகம் *kāṭṭu-māśigam,* பெ.(n.) பொத்தைக்கள்ளி; stout spurge (சா.அக.).

[காடு + மாசிகம்.]

காட்டுமாஞ்சரி *kāṭṭu-mañjari,* பெ.(n.) பசலை; dichotomus flowered will olive (சா.அக.).

[காடு + மாஞ்சரி.]

காட்டுமாடு *kāṭṭu-māḍu,* பெ.(n.) ***காட்டா*** (இ.வ.) பார்க்க; see *kāṭṭā.*

ம. காட்டுமாடு

[காடு + மாடு.]

காட்டுமாதளை *kāṭṭu-mātaḷai,* பெ.(n.) மலைத் தணக்கு; wild anaur (சா.அக).

[காடு + மாதளை.]

காட்டுமாந்தன் *kāṭṭu-māndaṉ,* பெ.(n.) 1. நாகரிக மற்றவன்; wild, uncivilized man. 2. காட்டில் வாழும் குரங்கு போன்ற மனிதன், வாலில்லாக் குரங்கு; lit., man of the woods, chimpanzee, orangoutang.

[காடு + மாந்தன்.]

காட்டுமாம்பருப்பு *kā ṭṭu-māmparuppu,* பெ.(n.) சாரப்பருப்பு; the seed of Cuddapah almond (சா.அக.).

[காடு + மாம்பருப்பு.]

காட்டுமாவிரை *kāṭṭu-māviral,* பெ.(n.) சாரப்பருப்பு (மூ.அ.); the seed of Cuddapah almond (சா.அக.).

[காடு + மாவிரை.]

காட்டுமாவிலங்கை *kāṭṭu-māvilaṅgai,* பெ.(n.) சின்னமாவிலங்கை(L.); a species of garlic pear.

[காடு + மாவிலங்கை.]

காட்டுமிராண்டி *kāṭṭu-mirāṇḍi,* பெ.(n.) ***காட்டு மாந்தன்*** பார்க்க; see *kāṭṭu-māndaṉ* மிராண்டி வாழ்க்கை; savage life.

Skt. mriga > த. மிருகம் + ஆண்டி – மிராண்டி.

[காடு + மிருகம் + ஆண்டி.]

காட்டுமிளகு *kāṭṭu-miḷagu,* பெ.(n.) 1. வால்மிளகு; wild pepper, flat branched pepper. 2.முள்ளுக் கரணைஅல்லது கிச்கிலிக்கரணை; forest pepper (சா.அக.).

ம. காட்டுமிளகு

[காடு + மிளகு.]

காட்டுமுசுக்கை *kāṭṭu-muśukkai,* பெ.(n.) பித்தத்தைப் போக்கும் குணமுடைய கீரை; bristly bryony (சா.அக.).

[காடு + முசுக்கை.]

காட்டுமுசுட்டை *kāṭṭu-muśuṭṭai,* பெ.(n.) மலைக் கொட்டை; mountain bind weed creeper (சா.அக.).

[காடு + முசுட்டை.]

காட்டுமுந்திரி *kāṭṭu-mundiri,* பெ.(n.) 1. காட்டுக் கொடிமுந்திரிகை; jungle grape vine. 2. காட்டுக் கொட்டை முந்திரிச் செடி; wild cashew nut.

மறுவ. காட்டு முந்திரிகை

[காடு + முந்திரி.]

காட்டுமுயல் *kāṭṭu-muyal,* பெ.(n.) காட்டில் வாழும் முயல்; jungle hare (சா.அக.).

மறுவ. முளவு, முளவுமா

[காடு + முயல்.]

காட்டுமுயல்

காட்டுமுருக்கு *kāṭṭu-murukku,* பெ.(n.) 1.பலாசு; dhak tree, gum lac tree. 2. பூனை முருக்கு; bastard kino.

[காடு + முருக்கு.]

காட்டுமுருங்கை *kāṭṭu-muruṅgai,* பெ.(n.) 1.பலாசு; dhak tree. 2. வனமுருங்கை; wild Indian horse radish. 3. ஆடாதோடை(L); Malabar-nut tree. 4.மாவிலங்கை (மலை.); garlic pear. 5. புனல் முருங்கை; oval-leaved Indigo. 6. பூனைமுருங்கை; jungle moringa. 7. பவளப்பூலா; coral berry tree. 8. கசப்பு முருங்கை; bitter moringa.

[காடு + முருங்கை.]

காட்டுமுல்லை *kāṭṭu-mullai,* பெ.(n.) காட்டு மல்லிகை (சித்.அக.); wild jasmine.

[காடு + முல்லை.]

காட்டுமுள்ளங்கி *kāṭṭu-mullaṅgi,* பெ.(n.) முள்ளங்கி வகை (M.M.237); forest country radish. 2. நாறு கரந்தை; a forest plant.

[காடு + முள்ளங்கி.]

காட்டுமுள்ளி *kāṭṭu-mulli,* பெ.(n.) பெருமுள்ளி; large nail-dye (சா.அக.). 2. மரமல்லிகை; Indian cork.

[காடு + முள்ளி. முள்ளுடையது.]

காட்டுமுன்னை *kāṭṭu-munnai,* பெ.(n.) பேய் முன்னை; oriental nettle (சா.அக.).

[காடு + முன்னை.]

காட்டுமூக்கிரட்டை *kāṭṭu-mūkkiraṭṭai,* பெ.(n.) மூக்கிரட்டைக்கீரை; spreading hog weed (சா.அக.).

[காடு + மூக்கிரட்டை.]

காட்டுமூங்கில் *kāṭṭu-mūngil,* பெ.(n.) சிறுமூங்கில் (L.); swollen node-ringed semi-solid bamboo.

மறுவ. கல்மூங்கில்

[காடு + மூங்கில்.]

காட்டுமூரி *kāṭṭu-mūri,* பெ. (n.) நாகர வண்டு(யாழ். அக.); a kind of beetle.

[காடு + மூரி.]

காட்டுமூலிகை *kāṭṭu-mūligai,* பெ.(n.) காட்டில் வளரும் மருந்திற்குப் பயன்படும் செடி கொடிகள்; syluan herbs (சா.அக.).

[காடு + மூலிகை.]

காட்டுமைச்சீரகம் *kāṭṭu-maiccīrakam,* பெ.(n.) கருஞ்சீரகம்; black cumin (சா.அக.).

[காடு + மைச்சீரகம்.]

காட்டுமொச்சை *kāṭṭu-moccai,* பெ.(n.) காட்டவரை (மூ.அ); country bean.

[காடு + மொச்சை.]

காட்டுயானை *kāṭṭuyānai,* பெ.(n.) காட்டில் வாழும் யானை; wild elephant.

[காடு + யானை.]

காட்டுயேணி *kāṭṭu-y-ēṇi,* பெ.(n.) காட்டுப் ஆன் அல்லது காட்டெருது; wild cow or wild ox (சா.அக.).

[காடு + ஏணி.]

காட்டுரோகம் *kāṭṭu-rōgam,* பெ.(n.) ***காட்டுநோய்*** பார்க்க; see *kāṭṭu-nōy.*

[காடு + தோகம்.]

காட்டுவக்கு *kāṭṭu-vakku,* பெ.(n.) மலைவிராலி; fish poison cedar (சா.அக.).

[காடு + வக்கு.]

காட்டுவரகு *kāṭṭu-varagu,* பெ.(n.) வரகுவகை (சித்.அக.); wild *varagu.*

ம. காட்டு வரகு

[காடு + வரகு.]

காட்டுவருச்சம் *kāṭṭu-varuccam,* பெ.(n.) கடலாத்தி; falcate trumpet flower (சா.அக).

[காடு + வருச்சம்.]

காட்டுவல்லாரை *kāṭṭu-vallārai,* பெ.(n.) காட்டில் விளையும் வல்லாரை; Indian penny wort (சா.அக.).

[காடு + வல்லாரை.]

காட்டுவல்லி *kāṭṭu-valli,* பெ.(n.) 1. காட்டில் படரும் கொடி; any forest spreading creeper. 2. பேய்ச் சீந்தில்; moon-creeper. 3. ***காட்டுக்காய் வள்ளி*** பார்க்க; bulbous rooted yam.

[காடு + வல்லி.]

காட்டுவள்ளி *kāṭṭu-valli,* பெ.(n.) 1. *சீரகவள்ளி* (L.); cultivated yam, cuminyam. 2. வள்ளிக்கொடி வகை (A.); five leaved yam. 3. காய்வள்ளி; malacca yam. 4. மலைவல்லிக் கிழங்கு; otaheite potato. 5. காட்டு நூறன் கிழங்கு; mouse root.

[காடு + வள்ளி.]

காட்டுவாகடத்தான் *kāṭṭu-vāgaḍāttaṉ,* பெ.(n.) கண்டங்கத்தரி; wild thorny brinjal (சா.அக).

[காடு + வாகடத்தான்.]

காட்டுவாகை *kāṭṭu-vāgai,* பெ.(n.) வாகை மரவகை; siris.

மறுவ. அடுக்குவாகை

ம. காட்டுவாகை

[காடு + வாகை.]

காட்டுவாகை

காட்டுவாதுமை *kāṭṭu-vādumai,* பெ.(n.) கசப்பு வாதுமை; wild or bitter almond (சா.அக.).

[காடு + வாதுமை.]

காட்டுவாரி *kāṭṭu-vāri,* பெ.(n.) காட்டாறு; jungle stream.

[காடு + வாரி – வார்தல் = நீருதல். வாரி = நெடுகப் பாய்ந்தோடும் ஆறு.]

காட்டுவாழ்புங்கம் *kāṭṭu-vāḻ-puṅgam,* பெ.(n.) செந்நாய்; a red variety of ferocious dogs; hound (சா.அக.).

[காடு + வாழ் + புங்கம்.]

காட்டுவாழை *kāṭṭu-vāḻai,* பெ.(n.) வாழைவகை; wild plantain.

ம. காட்டுவாழ; க. காடுபுளெ.

[காடு + வாழை .]

காட்டுவிலங்கு *kāṭṭu-vilaṅgu,* பெ.(n.) காட்டில் வளரும் உயிரி; a wild animal. 2. நாகரிகமற்றவன்; an uncivilised man.

ம. காட்டுசந்து; க. கான்மிக.

[காடு + விலங்கு.]

காட்டுவிளா *kāṭṭu-viḷā,* பெ.(n.) நாய் விளா அல்லது நாயெலுமிச்சை; dog wood apple (சா.அக.).

[காடு + விளா.]

காட்டுவிறட்டி *kāṭṭu-viṟaṭṭi,* பெ.(n.) மருந்துப் புடத்திற்குச் சிறந்ததாகச் சொல்லப்படும் காட்டு எருமுட்டை; dung of cattle, naturally found dried in forests (சா.அக.).

[காடு + விறட்டி. வறட்டி → விரட்டி.]

காட்டுவெக்காலி *kāṭṭu-vekkāli,* பெ.(n.) கானமடக்கு மரம்; patridge pea tree (சா.அக.).

[காடு + வெக்காலி.]

காட்டுவெங்காயம் *kāṭṭu-veṅgāyam,* பெ. (n.) நரிவெங்காயம் ; Jackal onion.

ம. காட்டுவெங்காயம்; க. காடீருள்ளி.

[காடு + வெங்காயம்.]



காட்டுவெங்காயம்

காட்டுவெங்குகம் *kāṭṭu-veṅgugam,* பெ.(n.) மலைப்பச்சை; long - leaved gamboge (சா.அக.).

[காடு + வெங்குகம்.]

காட்டுவெண்டை *kāṭṭu-veṇḍai,* பெ.(n.) பேய் வெண்டைச் செடி; white wild musk mallow.

[காடு + வெண்டை.]

காட்டுவெள்வெங்காயம் *kāṭṭu-veḷ-veṅgāyam,* பெ.(n.) நரிவெங்காயம்; jungle onion.

[காடு + வெள் + வெங்காயம்.]

காட்டுவெள்ளரி *kāṭṭu-veḷḷari,* பெ.(n.) பேய்க் கொம்மட்டி (மலை.); bitter cucumber.

ம. காட்டுவெள்ளரி

[காடு + வெள்ளரி.]

காட்டுவெள்ளாகிகம் *kāṭṭu-veḷḷāgigam,* பெ.(n.) மலை முருங்கை; bitter moringa (சா.அக.).

[காடு + வெள்ளாகிகம்.]

காட்டுவெற்றிலை *kattu-verrilai,* பெ.(n.) குருவிஞ்சி; box-leaved ivory wood. 2. மலை வெற்றிலை; hill betel.

ம. காட்டுவெற்றில

[காடு + வெற்றிலை.]

காட்டுவெறிப்புகையிலை *kāṭṭu-verippugaiyilai,* பெ.(n.) 1. மலைப் புகையிலை; wild or mountain tobacco. 2. காட்டுப் பெரிய புகையிலை; larger wukd tobacco (சா.அக.).

[காடு + வெறிப்புகையிலை.]

காட்டுவேந்தன் *kāṭṭu-vēndaṉ,* பெ.(n.) கற்செய் நஞ்சு; a kind of arsenic (சா.அக.).

[காடு + வேந்தன்.]

காட்டுவேப்பிலை *kāṭṭu-vēppilai,* பெ.(n.) கறிவேம்பு; curry-leaf tree. 2. செடிவகை; a species of wampee.

மறுவ. கறிவேப்பிலை

[காடு + வேப்பிலை – காட்டுவேப்பிலை.]

காட்டுவேம்பு *kāṭṭu-vēmbu,* பெ.(n.) வேப்ப மரத்தையொத்த ஒரு வகை மரம்; a kind of tree.

ம. காட்டுவேப்பு

[காடு + வேம்பு.]

காட்டுழாய் *kātuḷāy,* பெ.(n.) நாய்த்துளசி; white basil.

மறுவ. கஞ்சாங்கோரை

[காடு + துழாய்.]

காட்டுள்ளான் *kāṭṭuḷḷāṉ,* பெ.(n.) ஒருவகைக் குருவி; wood snipe.

[காடு + உள்ளான்.]



காட்டுள்ளான்

காட்டுள்ளி *kāṭṭuḷḷi,* பெ.(n.) நரிவெங்காயம்; jungle onion. *"ஈருளி காட்டுள்ளி நிம்பத்தின் சள்ளிகத் தூரிகை"(தைல.தைலவ.135).*

மறுவ. காட்டுவெங்காயம்

க. காடுள்ளி

[காடு + உள்ளி.]

காட்டுனா *kāṭṭuṉā,* பெ.(n.) மயிலைமரம்; peacock's foot tree (சா.அக.).

[காடு + உனா.]

காட்டூசிமல்லி *kāṭṭūśi-malli,* பெ.(n.) காட்டிவளரும் ஊசி மல்லிகை; cured jasminum growing in forest (சா. அக.).

[காடு + ஊசிமல்லி.]

காட்டெரு *kāṭṭeru,* பெ.(n.) காட்டில் உலர்ந்து கிடக்கும் எரு; forest manure, esp. dried dung of cattle. *"நிலந்திருத்திக் காட்டெருவும் போட்டு" (அருட்பா,VI, உறுதிகூறல்,2:2,)*

[காடு + எரு.]

காட்டெருக்கு *kāṭṭerukku,* பெ.(n.) மலை யெருக்கு; hill swellow-wort.

[காடு + எருக்கு.]

காட்டெருமை *kāṭṭerumai,* பெ.(n.) 1. எருமை யினம்; wild buffalo. 2. எருக்கு; madar. 3. திருகுகள்ளி; milk-hedge. 4. சதுரக்கள்ளி (மலை.); spuare spurge. 5. கூவைக்கிழங்கு; East Indian arrowroot 6.காட்டுவெள்ளை வெங்காயம்; jungle white onion.

ம. காட்டெரும; க. காடெம்மெ, காடெர்மெ; பட. காடெம்மெ.

[காடு + எருமை – காட்டெருமை.]



காட்டெருமை

காட்டெருமைக்கள்ளி *kāṭṭerumai-k-kaḷḷi,* பெ.(n.) 1. சதுரக்கள்ளி; square spurge. 2. எருக்கு; madar plant.

[காட்டெருமை+ கள்ளி.]

காட்டெருமைக்கள்ளி

காட்டெருமைத்தொக்கு *kāṭṭerumai-t-tokku,* பெ.(n.) நச்சுப்புல்; a poisonous grass (சா.அக.).

[காடு + எருமை + தொக்கு.]

காட்டெருமைப்பால் *kāṭṭerumai-p-pāl,* பெ.(n.) 1. எருக்கம் பால்; milky juice drawn from madar plant. 2. திருகுகள்ளிப் பால்; milky juice of *Tirugukaḷḷi.* 3.சதுரக்கள்ளிப்பால்; milky juice of square spurge. 4.கூகைநீறு; flour of Indian arrow root.

[காடு + எருமை + பால்.]

காட்டெலி[1] *kāṭṭeli,* பெ.(n.) 1. காட்டில் வாழும் எலி; jungle rat. 2. மலையெலி; mountain rat (சா.அக.).

ம. காட்டெலி

[காடு + எலி.]

காட்டெலி[2] *kāṭṭeli,* பெ.(n.) கருஞ்சீரகம்; black cumin seed.

[காடு + எலி.]

காட்டெலிச்செவி *kāṭṭeli-c-cevi,* பெ.(n.) 1. உண்ணத்தகுதியுடைய சிவப்பு எலிச்செவிக் கீரை; rat's ear plant. 2. எலிச்செவிக் கள்ளி; a kind of sedge (சா.அக.).

[காட்டெலி + செவி.]

காட்டெலுமிச்சை *kāṭṭelumiccai,* பெ.(n.)1. காட்டு நாரத்தை; Indian wild lime. 2. காட்டுக்கொழுஞ்சி; wild lime organge. 3. நாய்விளா; musk lime. 4. மலை நாரத்தை (M.NA.D.i:30); trifoliate winged lime.5. கசப்பு எலுமிச்சை;wild bitter lime 6. மலை எலுமிச்சை;mountain lime.

க. காடுலிம்பெ, காட்டுநிம்பெ.

[காடு + எலுமிச்சை.]

காட்டெள் *kāṭṭeḷ,* பெ.(n.) 1. காட்டில் தானாகவே விளையும் எள்; wild gingally. 2. பேயெள்; kersem or niger seed. 3. ஒருவகைப் புல் (M.M.310); ram til.

ம. காட்டெள்ளு **க.** காடெள்ளு காடெள்.

[காடு + எள்.]

காட்டெறி *kāṭṭeṟi,* பெ.(n.) கள்ளி; spurge plant (சா.அக.).

[காடு + எறி.]

காட்டெறும்பு *kāṭṭeṟumbu,* பெ.(n.) ஒரு வகை பெரிய எறும்பு; a kind of big ant.

ம. காட்டுறும்பு

[காடு + எறும்பு.]

காட்டேணி *kāṭṭēṇi,* பெ.(n.) காட்டில் வாழும் எருது; bison.

[காடு + ஏணி – காட்டேணி. ஏண் = உயரம், உயர்வு, செம்மை, திரட்சி, அழகு. ஏண் → ஏணி (நல்ல தோற்ற முடையது). நாட்டு எருதுகளைவிடக் காட்டெருது மிகுந்த வலிவும் தோற்றப்பொலிவுமுடையதாகலின் இப் பெயர் பெற்றது. இச்சொல் இக்காலத்தில் காட்டாணி எனத் திரிபுற்றது.]

காட்டேலம் *kāṭṭēlam,* பெ.(n.) பேரேலம் (பதார்த்த.1030); greater cardamom.

[காடு + ஏலம்.]

காட்டேறி *kāṭṭēṟi,* பெ.(n.) தீண்டிவருத்தும் பெண்ணாகக் கருதப்படும் அணங்கு, பேய்; an evil spirit.

ம. காட்டேரி

[காடு + ஏறி – காட்டேறி. காடு = துன்பம், கொடுமை. கொடுமை செய்யும் இயல்பு தன்னுள் ஏறப்பெற்றவள் காட்டேறி.]

காட்டை[1] *kāṭṭai,* பெ.(n.) 1. திசைகாட்டும் குச்சி; direction, point of compass. 2. திசை(திவா.); direction. 3. எல்லை(சூடா.); limit, boundary. 4. 12 நொடி கொண்ட கால அளவு; a measure of time-12 seconds. 5. நுனி (வின்.); point, extremity, top, tip, apex. 6. மேலானது; that which is great and beautiful. 7. இடம்; place.

[காடு → காட்டை (காட்டிலுள்ள சிறுகுச்சி). இதனைக் காட்டுத்துரும்பு எனவும் கூறுவர். புதுமனைக்கு அடிமானம்

(கடைகால்) – அளவுக்குறி இடுவோரும், கோயில், அரண்மனை, நகரம் ஆகியவற்றைச் சமைப்போரும் சரியான கிழக்குத்திசை அறிதற்காக அவ்வூரில் கதிரவன் செவ்விய உச்சிக்கு வரும் நாள் பார்க்க நட்டுவைக்கும் குச்சியைக் காட்டை (காட்டுத்துரும்பு)என்பர். குச்சியின் நிழலை அளந்து பகற்காலத்தில் நாழிகை குறிக்கும் பழங்கால இயல்பு பற்றி இச்சொல் மிகச்சிறு கால அளவையும் குறித்தது. இச்சொல் வடமொழியில் *kāšṭa* எனத்திரிந்தது.]

கணம்	-	இமையளவு (கண்ணிமைக்கும் நேரம்)
4 கணம்	-	1 உயிர்
4 உயிர்	-	1 நொடி (மாத்திரை - seconds)
12 நொடி (மாத்திரை)	-	1 காட்டை
2 காட்டை	-	1 விநாழி (24 seconds)
60 விநாழி	-	1 நாழிகை (24 minutes)
3¾ நாழிகை	-	முழுத்தம்
2 முழுத்தம்	-	1 யாமம்
4 யாமம்	-	1 பொழுது
2 பொழுது	-	1 நாள்

காட்டொலிவம் *kāṭṭolivam,* பெ.(n.) சீமைமர வகை (விவிலி.ரோம.11,17); wild olive.

[காடு + ஒலிவம்.]

காட்டொளி *kāṭṭoḷi,* பெ.(n.) ஒளிப்புல்; grass, luminous in the dark (சா.அக.).

[காடு + ஒளி.]

காட்டோமம் *kāṭṭōmam,* பெ.(n.) காட்டில் விளையும் ஓமம்; jungle sison (சா.அக.).

[காடு + ஓமம்.]

காட்டோலை *kāṭṭōlai,* பெ.(n.) பனையோலை; palmyra leaf (சா.அக.)

[காடு + ஓலை.]

காட்பு *kāṭpu,* பெ.(n.) மரவயிரம்; hardness, as of timber. "காட்புடைச் சிலையின்" (கந்தபு. சிங்க.194).

[காழ் → காழ்ப்பு → காட்பு (கொ.வ.).]

காடகச்சக்கரம் *kāḍaga-c-cakkaram,* பெ.(n.) சித்திரப்பாவகை (யாப்.வி.497); a kind of metrical composition.

[காடகம் + சக்கரம்.]

காடகம்[1] *kāḍagam,* பெ.(n.) ஆடை (திவா.); cloth.

[காழகம் → காடகம் (கொ.வ.). காழகம் பார்க்க; see kāḷagam.]

காடகம்[2] *kāḍagam,* பெ.(n.) காட்டுமுள்ளி; large nail dye (சா. அக.).

[காடு → காடகம்.]

காடசத்திரி *kāḍašattiri,* பெ.(n.) பழமுண்ணிப் பாலை; edible paulay (சா.அக.).

[கடு → காடு → காட + சத்திரி.]

காடபந்தம் *kāḍa-pandam,* பெ.(n.) தீவட்டி; large torch for festive occasions (சா. அக.).

[கடு → காடு → காட + பந்தம்.]

காடம் *kāḍam,* பெ.(n.) 1. உறுதி; strength. 2. கடினம்; hard. 3. அடர்த்தி; density. 4. மிகுதி; abundence (த.சொ.அக.).

[கடு→ காடு + அம்.]

காடம்பரம் *kāḍambaram,* பெ.(n.) 1. பிரைகுத்திய பாலின் மேற் படரும் ஆடை; the surface or skin of coagulated milk. 2. கடம்பம் பூவினின்று வாலையைக் கொண்டு இறக்கிய ஒருவகை மது; a spirituous liquor distilled from the flowers of *Kadamba.* 3.கடம்பமரம் நன்றாகப் பூத்துத் தேன் பொருந்திய காலத்து, அம்மரத்தின் குழிகளில் தங்கி நிற்கும் மழைத்தண்ணீர்; the rain water that collected in

the hollow spots of the tree (Nauclea Kadamba) when the flowers are in full bloom and are found impregnated with honey. 4. மது; a spirituous liquor in the general. 5. யானை மதம்; the fluid which issues from the temple of an elephant in rut. 6. குயில்; Indian cuckoo; preaching crow.

[கடு→ காடு + அம்பரம்.]

காடமர்செல்வி *kāḍamar-šelvi,* பெ.(n.) கொற்றவை; *Korravai,* as dwelling in the forest. *"காடமர்செல்வி கழிபெருங்கோட்டமும்" (மணிமே. 6:53).*

[காடு + அமர் + செல்வி.]

காடர் *kāḍar,* பெ.(n.) 1. காட்டில் வாழும் குடிகள்; hill tribes, dwellers in the forest. *"குன்றகஞ் சேர்ந்த காடரில்" (இறை.23, உரை. பக்.126).* 2.ஆனை மலையில் வாழும் ஓரினத்தார்; hill tribes occupying the Anaimalai hills, of strong build with woolly hair and African features.

[காடு → காடர் (காட்டில் வாழ்பவர்).]

காடவர் *kāḍavar,* பெ.(n.) கடிலம் ஆற்றங்கரையிலமைந்த சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த குறுநில மன்னர் குடி; local chieftien, who ruled from Sendamangalam on the banks of kadilam river in Villuppuram dt. *"சகல புவனச் சக்கரவர்த்திகள் காடவராயன் கோப்பெருஞ்சிங்கன்".*

காடவன்[1] *kāḍavan,* பெ.(n.) பல்லவர்களின் சிறப்புப்பெயர்(பெரியபு.ஐயடிகள்.7); title of the Pallava kings.

[காடு + அவன் – காடவன். காடுகளை அழித்து விளைநிலங்களாக மாற்றிய வேளாண் மரபின் பழங்கிளை மரபினன். வடதமிழராகியும் பிறகு பல்லவராகியுங் கூட மறவாமல் புனைந்து கொண்ட மரபுப்பெயர்.]

காடவன்[2] *kāḍavan,* பெ.(n.) கழற்சிங்கனின் சிறப்புப்பெயர்(பெரியபு.ஐயடிகள்.7); title of the Kalar-šiṅgan king.

[காடு + அவன் – காடவன். காடுகளை அழித்து விளைநிலங்களாக மாற்றிய வேளாண் மரபின் பழங்கிளை மரபினர். வடதமிழராகியும் பிறகு பல்லவராகியுங் கூட மறவாமல் புனைந்து கொண்ட மரபுப்பெயர்.]

காடவிளக்கு *kāḍā-viḷakku,* பெ.(n.) பெருவிளக்கு (வின்.); lamp formed by putting oil and wick in large vessels for illumination on great occasions.

[அகடு + விளக்கு – அகட்டுவிளக்கு → அகடவிளக்கு → காடவிளக்கு (கொ.வ.). அகடுவிளக்கு வயிறு பெருத்த அல்லது அகன்று பெரிய வடிவுடைய விளக்கு.]



காடவிளக்கு

காடன் *kāḍan,* பெ.(n.) மீன்வகை (வின்.); a species of fish (w.).

[கடு→காடு→காட + அன்.]

காடா *kāḍā,* பெ.(n.) நன்றாக முறுக்கிய கடினத் தன்மையுள்ள தடித்த இழைகளால் நெய்யப்பட்ட துணி; fabric woven with coarse yarn. ஒரு மீட்டர் காடா வாங்கிவா.

[கடுவு → கடா → காடா.]

காடாக்கினி *kāḍākkini,* பெ.(n.) 1.பெருநெருப்பு (வின்); great fire,conflagration. 2. மருந்து எரிப்பதற்காக இருவிரல் கனமுள்ள 4 அல்லது 5 விறகால் எரிக்கும் பெருநெருப்பு; a strong fire produced in order to prepare medical powder, from four or five sticks each as thick as two fingers and encircling the melting pot containing herbs.

[காடு + அக்கினி.]

காடாந்தகாரம் *kādāndakāram,* பெ.(n.) கனத்த இருள், பேரிருள்(சி.சி.2,58, சிவாக்.); pitch darknes, thick darkness.

[காடு + அந்தகாரம்.]

Skt. antakara. த. அந்தகாரம். ***காட்டிருள்*** *பார்க்க; see kaṭṭiruḷ.*

காடாய்ப்போ–தல் *kāḍāy-p-pō,* 8 செ.கு.வி. (v.i.) மரமடர்ந்துநிலம் பயனின்றி ஒழிதல்; to lie waste, grow woody as land.

மறுவ. காடுபற்றுதல், காடமண்டுதல்.

[காடு + (ஆகி) ஆய் + போ = காடாய்ப்போ).]

காடாரம்பம் *kāḍārambam,* பெ.(n.) புன்செய் நிலப்பகுதி(G.TN.D.1,293); dry tract, rain-fed land where only dry crop can be raised, opp. to *nīr-ārambam* (நீராரம்பம்).

க. காடாரம்ப; **தெ.** காடாரம்பமு.

[காடு + ஆரம்பம் → காடாரம்பம். ஏர் → ஏரம்பம் – ஆரம்பம் (கொ.வ.). ஏரம்பம் பார்க்க; see ērambam.]

காடாரம்பற்று *kāḍāram-paṟṟu,* பெ.(n.) காட்டுப் புறம் (யாழ்.அக.); forest region.

[காடாரம்பம் + பற்று – காடாரம்பற்று.]

காடாவிளக்கு *kāḍā-viḷakku,* பெ.(n.) ***காடவிளக்கு*** பார்க்க; see *kāḍa-viḷakku*

[காடவிளக்கு → + காடாவிளக்கு.]

காடாற்று–தல் *kāḍāṟṟu,* 8 செ.கு.வி.(v.i.) இறந்தவரை எரியூட்டிய பின்னர் நெருப்பை நீர்விட்டு ஆற்றியபின் புதுப்பானையில் அங்கம் (எலும்பு முதலியன) சேர்த்தல்;to perform the ceremony connected with quenching the fire when a corpse has been burnt, and collecting the bones in a new earthern pot. *"இரண்டு மூன்று நாளுறுங் காடாற்றாமுன்" (மச்சபு. பிண்டி.19).*

[காடு + ஆற்று – காடாற்று. காடு = சுடுகாடு, ஈமம். ஆற்றிச் சூடுதணிக்கும் கடன்.]

காடி[1] *kāḍi,* பெ.(n.) 1. புளித்த கஞ்சி (பதார்த்த.49); fermented gruel or rice-water. 2. புளித்தகள்; vinegar. 3. கஞ்சி; gruel. *"காடி கொண்ட கழுவுறு கலிங்கத்து" (நெடுநல்.134).* 4. புளித்த பழச்சாறு ; acetous fermentation of sweet fruits. *"துப்புர வில்லார் துவரத் துறவாமை யுப்பிற்குங் காடிக்குங் கூற்று" (குறள்.1050.).* 5. ஊறுகாய்; pickles. *"கயிறுபிணித்துக் காடிவைத்த கலனுடைமூக்கின்" (பெரும்பாண்.57.)* 6. சோறு. (அக.நி.); rice food.

ம., தெ. காடி

[கடு → கடி → காடி. கடு → உறைப்பு அல்லது புளிப்பு மிகுதி.]

காடி வகைகள்:

1. பழக்காடி 2. அரிசிக் காடி 3. கள்ளுக் காடி 4. சருக்கரைக் காடி 5. கடலைக் காடி 6. ஈச்சங் காடி 7. பனங் காடி 8. தென்னங் காடி 9. திராட்சைக் காடி 10. கஞ்சிக் காடி 11. ஆறு மாதக் காடி 12. சீமைக் காடி (சா.அக.).

காடி[2] *kāḍi,* பெ.(n.) நெய் (பெரும்பாண்.57, உரை); ghee.

[கடி → காடி. கடி = மிகுதி. நறுமணமிகுதி. நறுமணமுள்ள நெய்.]

காடி[3] *kāḍi,* பெ.(n.) 1. கழுத்து; neck; nape of the neck. *"காடியின் மிதப்ப வயின்ற காலை" (பொருந.115).* 2. மிடா முதலியன வைப்பதற்குத் தரையில் கழுத்துப்போலமைக்கப்பட்ட மேடை (பெரும்பாண். 57,உரை); neck-like elevation on the floor for placing big pots. 3. மூளை; brain.

[கடி → கடிகை → காடிகை → காடி (கொ.வ.). கடி = கடித்தல், இறுக்கப்பிடித்தல், சுருக்குதல், சிறிதாக்குதல். சிறிய வாயினையுடைய பானை.]

காடி[4] *kāḍi,* பெ.(n.) தவசம் அளக்கும் முகத்தலளவுள் ஒன்று; a measure of capacity for grain. *"எழுத்துச்*

சடையன் பக்கல் ஆயிரக்காடி நெல் கொண்டோம்" (S.I.I.III,6-1 pg.9).

[கடிகை → காடிகை → காடி. கடிகை = குறிப்பிட்ட அளவுக்குரிய மட்பாண்டம்.]

காடி[5] *kāḍi,* பெ.(n.) வண்டி; cart, carriage.

க., தெ. காடி; **ப., H.** gāḍi.

[சகடு→சாகாடு → காடு → காடி (கொ.வ.). சாகாடு = சகடம் (வண்டியின் சக்கரம்). சக்கரத்தைக் குறித்த சொல், வண்டியைக் குறிப்பதாயிற்று. வடபுலத்து மொழிகளில் பொதுவாக அனைத்து ஊர்திகளுக்கும் பொதுப் பெயராயிற்று. இதனை உருதுச்சொல் என்பது பொருந்தாது.]

காடி[6] *kāḍi,* பெ.(n.) 1. அகழி; trench of a fort. 2. கோட்டையடுப்பு; a fireplace in the form of a long ditch. 3. மாட்டுக்கொட்டில்(உ.வ.); manger. 4. மர வேலையின் பொளிவாய்; groove in wood-work, rabbet. மரத்தில் காடிவெட்டினான் (உ.வ.).

[அகழ் → அகழி → காழி → காடி. (கொ.வ.). குழி, பள்ளம் அல்லது வெட்டுவாயைக் குறித்த பழந்தமிழ்ச்சொல். காடி எனத் திரிந்து கொச்சை வழக்காயிற்று.]

காடிக்காரம் *kāḍi-k-kāram,* பெ.(n.) நெருப்புக்கல் (மூ.அ.); nitrate of silver, lunar, caustic.

மறுவ. ஆயக்கல் (சா.அக.)

[கடி → காடி + காரம் – காடிக்காரம். காடி = உறைப்பு, எரிதல்.]

காடிக்கூழ் *kāḍi-k-kūḷ,* பெ.(n.) புளிக்கவைத்த கூழ்; sour pap (சா.அக.).

[காடி[1] + கூழ்.]

காடிகம் *kaḍigam,* பெ.(n.) சீலை (சூடா.); cloth, stiff-ened with starch or gruel.

[காழ் → காழகம், காழ் = வித்து. ஆடைகளுக்குச் செந்நிறம் ஊட்டுதற்குப் பயன்பட்ட வித்து. செந்நிறம் ஊட்டப்பட்ட துணி காழகம் எனப்பட்டது.]

காடிச்சத்து *kāḍi-c-cattu,* பெ.(n.) புளித்த காடியை வாலையிலிட்டு இறக்கிய மயக்கமூட்டும் பொருள்; the intoxicating principle obtained from fermented liquors (சா.அக.).

[காடி + சத்து.]

காடிச்சால்[1] *kāḍi-c-cāl,* பெ.(n.) காடி வைக்குஞ் சால், மட்பாண்டம் (சினேந்.172.); broad-mouthed pot-keeping sour rice-water.

[காடி + சால்.]

காடிச்சால்[2] *kāḍi-c-cāl,* பெ.(n.) மரவேலையின் பொளிவாய்; groove in woodwork, rabbet.

[காடி[6] + சால்.]

காடிச்சால்மூலை *kāḍi-c-cāl-mūlai,* பெ.(n.) வேள்விச்சாலையில் காடி வைக்கப்படும் வட கிழக்குத் திசை; north-eastern corner where waste water is emptied in a pot at sacrifice. *"காடிச்சால் மூலையில் தேவதையை ஆசிரயித் தாராகில்" (திவ். கண்ணிநுண்.வ்யா. அவ.பக்.5).*

[காடி + சால் + மூலை.]

வடகிழக்குத் திசையில் முதன்முதலாகப் பொன்னேர் கட்டத்தொடங்குதல், அறுவடை தொடங்குதல் போன்றன தொன்றுதொட்டுப் பழந்தமிழர் வழக்கமாதலின் வடபுலத்து ஆரியரும் இதனை மேற் கொண்டிருக்கலாம்.

காடிச்சோறு *kāḍi-c-cōṟu,* பெ.(n.) 1. புளித்த கஞ்சி; sour gruel. 2. புளித்தகஞ்சியின்று எடுக்கப் பட்ட சோறு; rice taken out of sour kañji. 3. சொண்டிச் சோறு; an intoxicating liquor extracted from the fermentation of boild-rice.

மறுவ. குசாண்டிச் சோறு, ஊறவைத்த சோறு.

[காடி + சோறு.]

காடித்தாய் *kāḍi-t-tāy,* பெ.(n.) காடிக் காதி; mother of vinegar (சா. அக.).

[காடி + தாய்.]

காடித்தெளிநீர் *kāḍi-t-teḷi-nīr,* பெ.(n.) தெளிய வைத்த காடிநீர்; vinegar (சா. அக.).

[காடி + தெளிநீர்.]

இது நோய்களுக்குக் கொடுக்கவும், புடம் போடுவதற்கு மருந்துகளை அரைக்கவும் பயன்படும். இது கருங் குருவை அரிசியிலிருந்துசெய்யப்படும்.

காடித்தேன் *kāḍi-t-tēṉ,* பெ.(n.) தேனிலிருந்து செய்யப்படும் காடி; vinegar prepared from honey (சா. அக.).

[காடி + தேன்.]

காடிநீர் *kāḍi-nīr,* பெ.(n.) 1. காடி; vinegar. 2. கழுநீரை வெயிலில் வைத்து வடித்தெடுக்கப் படும் புளித்த நீர்; rice-water fermented by exposing it to the Sun (சா. அக.).

[காடி + நீர்.]

காடிப்பால் *kāḍi-p-pāl,* பெ.(n.) பனங்கள்; palmyra toddy. (சா.அக.)

[காடி[1] + பால்.]

காடிபுளி *kāḍi-p-puḷi,* பெ.(n.) வியர்வையிலுள்ள ஒருவகைப் புளிப்பு; the sour substance found in sweat (சா.அக.).

[காடி[1] + புளி.]

காடிமூலி *kāḍi-mūli,* பெ.(n.) பருத்தி; cotton (சா.அக.).

[காடி + மூலி.]

காடியடுப்பு *kāḍi-y-aḍuppu,* பெ.(n.) பெருகச் சமைப்பதற்காக ஆழமற்ற நீண்ட கால்வாய் போன்று குழிவெட்டி அமைக்கப்பட்ட அடுப்பு, கோட்டையடுப்பு; a fire place in the form of a long ditch used for cooking on a large scale.

மறுவ. கோட்டையடுப்பு.

[காடி[6] + அடுப்பு.]

காடியலகு *kāḍi-y-alagu,* பெ.(n.) பொளிவாய் செதுக்குங் கருவி(C.E.M.); groove cutter.

[காடி[6] + அலகு. அலகு = உளியின் வாய்.]

காடியிலை *kāḍiilai,* பெ.(n.) புளித்தகீரை; Indian brown hemp (சா.அக.).

[காடி + இலை. காடி = புளிப்பு.]

காடியிழைப்புளி *kāḍi-y-iḻaippuḷi,* பெ.(n.) ஓச்சுக் கருவி வகை (C.E.M.); plough-plane.

[காடி[6] + இழைப்பு + உளி.]



காடியிழைப்புளி

காடியுளி *kāḍi-y-uḷi,* பெ.(n.) இழைப்புளி வகை (C.E.M.); rabbet-plane.

[காடி[10] + உளி.]



காடியுளி

காடிவெட்டு–தல் *kāḍi-veṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) பள்ளந்தோண்டுதல், குழிவெட்டுதல், துளை செய்தல் (வின்.); to scoop, cut into hollowness.

[காடி[6] + வெட்டு.]

காடு[1]–தல் *kāḍu,* 5 செ.குன்றாவி (v.t.) அலைக்கழித்தல், துன்புறுத்துதல்; to treat harsly, give trouble.

க. காடு; து. காட்யுனி, காடியுனி.

காடு[2] *kāḍu,* பெ.(n.) 1. மரங்கள் செறிந்த நிலப்பகுதி; forest; jungle. *"காடே கடவுண் மேன"* *(பதிற்றுப்.13:20.).* 2. மிகுதி; excessiveness, abundance. எங்கும் வெள்ளக்காடாயிருக்கிறது (உ.வ.). 3. நெருக்கம்; density. *"தாமரைக் காடு போன்றார்"* *(சீவக. 2199).* 4. செத்தை (பிங்.); chaff, straw, etc., 5.சோலை; park. *"அரம்பையங் காட்டுக்கு"* *(மருதூரந். 22).* 6. கடற்கரை; sea shore. கட்டுமரத்தை மேற்கில் வலித்துக்கொள் அதோ காடு தெரிகிறது (மீனவ.).

ம., க., தெ., து. காடு.

[கடு → காடு. கடு = அடர்த்தி, மிகுதி, செறிவு.]

காடு[3] *kāḍu,* பெ.(n.) 1. சுடுகாடு; burning-ghat, burial ground. *"நெய்தல் கல்லென வொலிக்குங் காடு" (பு.வெ.10, காஞ்சிப் 6, கொளு).* 2. இடம்; place, tract of land. வயற்காடு, பட்டிக்காடு (பிங்.). 3. புன்செய்நிலம்(C.G.); dry land. *"காடுகாரையுழுது பிழைப்பு" (தனிப்.).* 4. சிறிய ஊர் (பிங்.); small village.5. எல்லை (பிங்.); border, boundary. 6. நான்கு அணைப்புள்ள ஒரு நிலவளவு; a measure of 4 *anaippu* = more than 2 acres.7. தாழி (பரணி) நாண்மீன்; *paraninakstra.* 8. முரட்டுத்தன்மை; roughness.

[கடு → காடு. கடு = மிகுதி, செறிவு, அடர்த்தி மரங்களின் செறிவு மிக்க இடம் காடு எனப்பட்டது.)]

காடுவெட்டி நிலந்திருத்தியபோது விளைநிலம், விளைநிலத்தையடுத்த ஊர் எல்லை; ஊரெல்லையிலுள்ள சுடுகாடு ஆகிய பொருள்களில் புடைபெயர்ந்தது. ஓர் உழவன் அரைநாளில் உழும் நிலப்பரப்பு ஓர் அணைப்பு எனப்படுதலால் இரண்டு உழவர்கள் ஒருநாளில் அல்லது ஓர் உழவன் இரண்டுநாளில் உழும் நான்கு அணைப்புநிலம் ஒரு சமமாதல் காடு என்னும் நில அளவாகக் கருதப்பட்டது.

காடு[3] *kāḍu,* இடை (part.). ஒரு தொழிற்பெயர் ஈறு; an ending of verbal nouns, as in. (எ–டு) சாக்காடு.

[காடு[2] → காடு[3].]

இடம் குறித்த சொல் சிறுபகுதியையுங் குறித்தலான் தொடர்புடையது என்னும் பொருளில் புடைபெயர்ந்து முதற்சொல்லின் பொருளை விரிப்பதற் காகப் பெயரீறு வடிவுற்றது. ஒ.நோ. தூக்கம் → தூக்காடு, நோவு → நோக்காடு.

காடு[4] *kāḍu,* இடை.(part.) வளப்பம், இடம், தன்மை, நிலைமை ஆகிய பொருள்களைச் சுட்டும் பெயரீறு; a noun suffix denoting fertility, situation, nature and state.

[கடு → காடு.]

வளப்பம் குறித்த பெயரீறு - மலைக்காடு, வயற்காடு, பருத்திக்காடு, மாங்காடு

தன்மை குறித்த பெயரீறு - வெள்ளக்காடு

இடம் குறித்த பெயரீறு - இடுகாடு, சுடுகாடு

நிலைமை குறித்த பெயரீறு - கரம்பைக்காடு, புற்காடு, புழுதிக்காடு, மணற்காடு, புதர்க்காடு, புகைக்காடு, பிணக்காடு.

காடுகட்டு[1]–தல் *kāḍu-kaṭṭu,* 5 செ.கு.வி.(v.i.) விலங்கு, பறவைகளைக் குறித்தவிடத்தில் வராமல் தடைசெய்தல்; to prevent, with incantations, wild beasts and birds of prey from frequenting a particular place. *"காக மணுகாம லெங்குங் காடுகட்டி" (குற்றா.குற.23.).*

[காடு + கட்டு. காடு = எல்லை, அரண், பாதுகாப்பு, வேலி, அமைப்பு]

காடுகட்டு[2]–தல் *kāḍu-kaṭṭu,* 5 செ.கு.வி.(v.i.) செடிகளும் மரங்களும் வளர்ந்து அடர்ந்திருத்தல்; to over grow of Vegetation.

ம. காடுகெட்டுக

[காடு + கட்டு. காடு = எல்லை, அரண், பாதுகாப்பு, வேலி, அமைப்பு]

காடுகரை *kāḍu-karai,* பெ.(n.) வயலும் அதனைச் சார்ந்த பகுதியும்; cultivable land and adjacent area. காடுகரையெல்லாஞ் சுற்றி வந்தேன், களைப்பாயிருக்கிறது (உ.வ.).

[காடு + கரை.]

காடுகலை–த்தல் *kāḍu-kalai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. வேட்டைக்காரர்கள் விலங்கு பறவைகளைக் கலைத்தெழுப்புதல்; to beat the bush for starting the game. 2. வேலைக்காரரை அச்சுறுத்தல்; to threaten subordinates or servants by calling them to a strict account.

[காடு + கலை.]

காடுகாட்டு[1]–தல் *kāḍu-kāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. ஏமாற்றுதல் (வின்.); to show the burning ghat, to deceive, disappoint. 2. கொல்லுதல் (யாழ்.அக.); to kill.

[காடு + காட்டு.]

விளைநிலம் காட்டுவதாக அழைத்துச்சென்று விளைச்சலுக்குதவாத புதர்க் காடுகளைக் காட்டி ஏமாற்றுதல் பொருளிலும், இடுகாட்டைக் காட்டுதல் எனக் கொல்லுதல் பொருளிலும் புடைபெயர்ந்தது.

காடுகாட்டு[2]–தல் *kāḍu-kāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) வெறிச்சென விடுதல் (யாழ்.அக.); to be desolate.

[காடு + காட்டு.]

காடுகாள் *kāḍu-kāḷ,* பெ.(n.) ***காடுகிழாள்*** பார்க்க; see *kāḍukiḻāḷ.* கோயில் ஊரெல்லையில் உள்ளது (நெல்லை). *"காடுபோக்கில் அரைமாவும், காடுகாள் வாரத்து அரைமாவும்" (தெ.கல்.தொ.19, கல்.71)*

H. Gadakali

[காடு + கிழாள் – காடுகிழாள்→ காடுகாள் (தொகுத்தல் திரிபு). காடுகிழாள் என்பது காடு காளென மருவிற்று. வரலாற்றுச் சிறப்பு மிக்க உச்சயினி மாநகரக எல்லையிலுள்ள மாகாளிகோயில் இன்றளவும் கடகாளி காமந்திர், காடுகாள் மந்திரம் (கோயில்) என வழங்கி வருதல் குறிப்பிடத்தக்கது.]

காடுகி *kāḍugi,* பெ.(n.) சிற்றெழுத்தாணிப்பூண்டு; a small variety of style plant (சா.அக.).

[காடு → காடுகி.]

காடுகிழவோள் *kāḍu-kiḻavōḷ,* பெ.(n.) 1. ***காடுகிழாள்*** பார்க்க; see *kāḍu-kiḻāḷ.* *"காடு கிழவோட் கரைத்திருந்த சாந்தை" (யாப்.வி.93).* 2. (பரணி) நாண்மீன் (திவா.); the second star presided over by Durga.

[காடு + கிழவோள்.]

காடுகிழாள் *kāḍu-kiḻāḷ,* பெ.(n.) கொற்றவை (திருமுருகு.259. உரை); *Koṟṟavai,* as godess of the forest.

மறுவ. காடுகிழவோள், காடுகாள்.

[காடு + (கிழவோள்) கிழாள் – காடுகிழாள்.]

பாலை நிலத்தின் தெய்வமாகவும் ஊரெல்லைத் தெய்வமாகவும் வழிபடப்பட்டுவரும் கொற்றவை வழிபாடு இந்தியப் பெருநிலம் முழுவதிலும் பரவிய ஒன்றாகும். உதயணன் ஆண்ட உஞ்சை (உச்சயினி) மாநகரத்துக் காடுகிழாள் இன்றும் அம் மொழியில் கடகாள் எனப்படுதல் காண்க. நெல்லை மாவட்டத்துக் கொற்றவை கோயில்கள் காடுகாள் கோயில் என்றே வழங்கப்படுகின்றன.

காடுகிழாள்வெயில் *kāḍu-kiḻāḷ-veyil,* பெ.(n.) பொழுதுசாயும்போது தோன்றும் மஞ்சள்வெயில் (சிலப்.4:5,உரை); refracted light at sunset.

[காடு + கிழாள் + வெயில். கொற்றவையை வழிபட்டால் வெம்மை தணியும் என்னும் நம்பிக்கையால் மாலை நேரத்து வெயில் காடுகிழாள் வெயில் எனப் பெயர் பெற்றது.]

காடுகெடு–த்தல் *kāḍu-keḍu-,* 4 செ.கு.வி.(v.i.) காடழித்தல்; to clear the forest. *'காடுகெடுத்து நாடாக்கி' (தொல். பாயி.உரை).*

மறுவ. காடழித்தல், காடுவெட்டுதல், காடுகொல்லுதல்.

[காடு + கெடு.]

காடுகெழுசெல்வி *kāḍu-keḻu-celvi,* பெ.(n.) கொற்றவை; *Koṟṟavai,* as dwelling in the forest. 'காடுகெழு செல்விக்குப் பரணிநாட் கூழுந் துணங்கையுங் கொடுத்து' (தொல்.பொருள்.461. உரை).

[காடு + கெழு + செல்வி.]

காடுகிழாள் பார்க்க; see *kāḍukiḻāḷ*

காடுகொல்(லு)-தல் *kāḍu-kol-*,13 செ.கு.வி(v.i.) காட்டை வெட்டி யழித்தல்; to clear the forest. *"காடுகொன்று நாடாக்கி" (பட்டினப்.283).*

[காடு + கொல்.]

காடுகொள்(ளு)-தல் *kāḍu-koḷ(ḷu)-*, 16 செ.கு.வி. (v.i.) வேளாண் நிலமாக இருந்த பகுதி பயிரிடப் படாமையால் புல் பூண்டுகள் மரங்கள் முளைத்து காடாக மாறுதல்; covering arable land with jungle growth.

[காடு + கொள்.]

காடுகோள் *kāḍu-kōḷ*, பெ.(n.) வேளாண் நிலம் காடுபற்றுகை, காடாக மாறுகை; arable land co vered with jungle growth. *'ஏரி உடைந்து காடுகோளாய்ப் பாழ்கிடந் தமையில்' (S.I.I.IV,133-2 pg.9).*

[காடுகொள் → காடுகோள்.ஒ.நோ. கடல்கோள்.]

காடுதரிசு *kāḍu-tarišu*, பெ.(n.) செடிகள் முளைத் துத் தரிசாகக் கிடக்கும் நிலம்; waste land with bushy growth. *"நஞ்சை, புஞ்சை, நத்தம், செந்தலைக்கை, கரைகாடு, காடுதரிசு, மாவடை, மரவாடை, பாசிவிலை, ஆயந்தற்கு" (SII.V.410-10 pg.137).*

[காடு + தரிசு.]

காடுபட்டி *kāḍu-paṭṭi*, பெ.(n.) ***காடுவெட்டி***^{2}. பார்க்க; see *kāḍu-veṭṭi* *"காடுபட்டிகள் நந்திப் போத்தரையர் (S.I.I. III,124-3 Pg.261).*

[காடு + (வெட்டி) பட்டி.]

காடுபடு-தல் *kāḍu-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. நிரம்புதல்; to abount, as wealth. *"ஐசுவரியம் அவனுக்குக் காடுபடும்படியிறே அவன் பார்த்தது" (ஈடு.5,9,5.).* 2. வீணாதல்; to go waste. *'இப்பரப் பெல்லாம் . . . காடுபட்டுக் கிடக்குமோ' (ஈடு.1.1:1).*

[காடு + படு. காடு = செறிவு, அடர்த்தி மிகுதி.]

காடுபலியூட்டு-தல் *kāḍu-pali-y-ūṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) வேடர் குறவர் முதலியோர் காட்டில் உள்ள தெய்வங்களுக்குப் பலியிடுதல்; to sacrifice cock, etc., to the forest deities before hunting to en-sure a good game. *"காட்டிலுறை தெய்வங்கள் விரும்பியுண்ணக் காடுபலியூட் டென்றான், கவலை யில்லான்" (பெரியபு. கண்ணப்ப.50).*

[காடு + பலி + ஊட்டு]

காடுபடுபொருள் *kāḍu-paḍu-poruḷ*, பெ.(n.) காட்டில் கிடைக்கும் அரக்கு, இறால் தேன், மயிற்பீலி, நாவி போன்றவை; forest produce, as *arakku, iṟāl, tēṉ, mayir-pīli-nāvi.*

மறுவ. காடுபாடுதிரவியம்

[காடு + படு + பொருள்.]

காடுபற்று-தல் *kāḍu-paṟṟu-*, 5 செ.கு.வி.(v.i.) காடாக மாறுதல்; to become forest.

[காடு + பற்று.]

காடுபார்த்த கொம்பு *kāḍu-pārtta-kombu*, பெ.(n.) மாடுகளின் குற்ற வகையில் ஒன்று (பெரியமாட்.16); a defect in cattle.

[காடு + பார்த்த + கொம்பு.]

காடுபிறாண்டி *kāḍu-piṟāṇḍi*, பெ.(n.) காடுவாரி (யாழ்.அக); garden rake.

[காடு + பிறாண்டி]

காடுமறை-தல் *kāḍu-maṟai-*, 4 செ.கு.வி.(v.i.) இறத்தல்; to die. கொண்ட கணவரும் போய்க் காடு மறைந்தார்(உ.வ.).

[காடு + மறை.]

காடு மேடு *kāḍu-mēḍu*, பெ.(n.) மேடாயுள்ள கரம்பு நிலம் (இ.வ.); rough, uneven waste land.

க. காடுமேடு

[காடு + மேடு.]

காடுமேய்-தல் *kāḍu-mēy-*, 2 செ.கு.வி. (v.i.)வீணாய்த் திரிதல் (இ.வ.); to wander uselessly, aimlessly.

[காடு + மேய்.]

காடுவசாதியாய்த்திரி–தல் *kāḍuva-cādi-y-āy-t-tiri-,* 3 செ.கு.வி. (v.i) மலைவாழ்நர் கோலத்தோடு திரிதல்; to be slovenly, negligent of one's dress. 2. யாருமற்ற ஏதிலியாய்த்திரிதல்; to be vagrant, as a neglected orphan.

[காடுவாழ்சாதி → காடுவசாதி + ஆய் + திரி(கொ.வ.).]

காடுவாரி *kāḍu-vāri,* பெ.(n.) 1. செத்தைவாருங் கருவி; garden rake. 2. கண்ட பொருளெல்லாஞ் சேர்ப்பவன்; one who scrapes up all he can. 3. பிழைப்புக்கென்று எத்தொழிலையுஞ் செய்பவன்; he who resorts to any kind of profession however low to maintain himself.

[காடு + வாரி]

காடுவாழ்சாதி *kāḍu-vāḻ-cādi,* பெ.(n.) ***காடு வாழ்நர்*** பார்க்க; see *kāḍu-vāḻnar. "காடுவாழ் சாதியு மாகப்பெற்றான்"* (*திவ். நாய்ச்சி.12.8.*).

Skt. jati > த.சாதி.

[காடு + வாழ் + சாதி.]

காடு வாழ்த்து[1] *kāḍu-vāḻttu,* பெ.(n.) எல்லோரும் இறந்துபோகவும் தான் இறப்பின்றி நிலைபெற்ற புறங்காட்டை வாழ்த்தி உலகவியல்பை விளக்கும் ஒரு புறத்துறை(தொல். பொருள். புறத்.24); (*Puṟap.*) theme of praising the burning ghat, as perpetually impressing upon the minds of people the transitoriness of earthly things.

[காடு + வாழ்த்து.]

பிறப்பெடுத்த எல்லா உயிர்களும் இறந்து படுதலால் நிலையாமையே நிலையாகிவிட்ட உலகியல்பைச் சுட்டிக்காட்டி மக்களை அறநெறிப்பாற் படுத்தும் பாடல் வகைமையது.

காடுவாழ்த்து[2] *kāḍu-vaḻttu,* பெ.(n.) காட்டுத் தெய்வங்களை வேடர்கள் வாழ்த்துதல்; praising the forest dwelling gods, as the hunters

[காடு + வாழ்த்து.]

காடுவாழ்நர் *kāḍu-vāḻnar,* பெ.(n.) காட்டில் வாழும் பழங்குடிமக்கள்; savage tribe, as forest dwellers.

[காடு + வாழ்நர்.]

காடுவெட்டி[1] *kāḍu-veṭṭi* பெ.(n.) 1. மரம்வெட்டு பவன்; wood cutter, one who clears the forest. 2. நாகரிக மற்றவன் (வின்.); savage, uncivilized man.

ம., க. காடுவெட்டி.

[காடு + வெட்டி.]

காடுவெட்டி[2] *kāḍu-veṭṭi,* பெ.(n.) சிறியமண் வெட்டி (யாழ்.அக.); a kind of small hoe.

[காடு + வெட்டி.]

காடுவெட்டி[3] *kāḍu-veṭṭi,* பெ.(n.) பல்லவ அரசர் களுக்குரிய சிறப்புப்பெயர்களுள் ஒன்று; a title of Pallava king. *"வக்ரிமாதித்த வாணதாயின் விண்ணயந்தாலும் காடுவெட்டித் தமிழ்பேரயன் ஆணத்தியாலும்"* (*தெ.கல்.தொ.*).

ம. காடுவெட்டி

[காடு + வெட்டி.]

காடுறைநிலை *kāḍuṟai-nilai,* பெ.(n.) வாழ்க்கை யின் மூன்றாவது நிலை (வானப்பிரத்தம்) (சுக்கிர, நீதி 219); the third stage of life, "living in the forest".

[காடு + உறை + நிலை.]

காடெழுகரம்பு *kāḍeḻu-karambu,* பெ.(n.) செடி கொடிகள் மண்டிக் காடாக எழுந்துநிற்கும் சமனில்லாத நிலப்பரப்பு; un cultivable land. *"ஏரிக்கு மேற்கு காடெழு கரம்பு"* (*தெ.கல். தொ.17,கல்.304*).

[காடு + எழு + கரம்பு.]

காடேறு–தல் *kāḍeṟu,* 5 செ.கு.வி. (v.i.) 1. காட்டிற்கு ஓடுதல்; to flee away to a forest. *"காடேறி நாடேறித் திரிவார் கண்டீர்"* (*தமிழ்நா. 235*). 2. சாகுந்தறு வாயில் நோய்த்தெளிவு உண்டாதல்; to seemingly disappear, as a disease, just before the death of a person who suffered from it.

க.காடுவாய்

[காடு + ஏறு]

காடை[1] *kāḍai,* பெ.(n.) தவிட்டுநிற இறகுகளை யுடைய குறும்பூழ்ப்பறவை (திவா.); rain quail.

ம. காட; க.,து. காடெ; Skt. cāsa.

[காடு → காடை (காட்டில் அண்டி வாழ்வது).]

வகைகள் : 1. பெரியகாடை 2. கருங்காடை 3. நீல காடை 4. மலைக்காடை 5. வண்ணக்காடை 6. சாலைக் காட்டுக் காட்டுள் காடை 7. குறுஞ்சான் காடை 8. குறுங் காடை.



காடை

காடை[2] *kāḍai,* பெ.(n.) கொங்கு வேளாளர் குடிகளுள் ஒன்று; a clan of *konguveḷāḷar.* கொங்கு வேளாளர் குடிகளுள் பல பறவையின் பெயரில் அமைந்துள்ளன. ஆந்தை குலம், காடை குலம் போன்றன. காடை குலம், சாகாடை, பனங்காடை என இருவகைப்படும். *"எழுமாத்தூர் இருந்து வாழும் சாகாடைச் சிற்றன்; அவன் இதில் பட்டான்" (செங்கம். நடுகற்கள்).*

காடைக்கண்ணி *kāḍai-k-kaṇṇi,* பெ.(n.) காடை யின் கண்போன்ற தினைவகை (பதார்த்த.1400); common millet, having the colour of quail's eyes.

மறுவ. கவந்தலைக்கண்ணியரிசி

[காடை + கண்ணி.]

காடைக்கழுத்தன் *kāḍai-k-kaḻuttaṉ,* பெ.(n.) ஐந்து திங்களில் விளையக்கூடிய நெல்வகை (வின்.); quail-neck paddy maturing in five months, raised in the southern Tamil districts (W.).

ம. காடகழுத்தன் (ஒருவகை நெல்)

[காடை + கழுத்தன். காடையின் கழுத்தின் நிறமுள்ள கதிர்களையுடைய நீளமான நெல்வகை.]

காடைக்கழுத்தி *kāḍai-k-kaḻutti,* பெ.(n.) முன்னைமரம்; Indian head-ache tree.

[காடை + கழுத்தி.]

காடைக்கறுப்பன் *kāḍai-k-kaṟuppaṉ,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy. *"பொன்னாயகன் சொற்காடைக் கறுப்பன்"* (பறாளை. பள்ளு).

[காடை + கறுப்பன்.]

காடைக்கொக்கு *kāḍai-k-kokku,* பெ.(n.) காடை இனத்தைச் சார்ந்த ஒருவகைப் பறவை; the green sand piper.

ம. காடக்கொக்கு, காடக்கொற்றி.

[காடை + கொக்கு.]

காடைக்கொம்பன் *kāḍai-k-kombaṉ,* பெ.(n.) நெல்வகை (நெல்லை); a kind of paddy.

[காடை + கொம்பன்.]

காடைச்சம்பா *kāḍai-c-cambā,* பெ.(n.) சம்பா நெல்வகை (பதார்த்த.818); a kind of camba paddy.

[காடை + சம்பா = காடைச்சம்பா.]

காடைத்தனம் *kāḍai-t-taṉam,* பெ.(n.) முரட்டுக் குணம்; rowdyism. அவன் செய்யும் காடைத்தனத் தால் பல உயிர்கள் அழிந்தன (இலங்.வழ).

[கடு → காடு → காடை + தனம்.]

காடைப்புடம் *kāḍai-p-puḍam,* பெ.(n.) காடை யளவாக ஒரே எருவிட்டு எரிக்கும் மருந்துப்புடம்

காடை வகைகள்

கட்டுக் காடை

குறுங்காடை


சரளைக் காடை

குறுஞ்சாண் காடை

வண்ணக் காடை

கருங்காடை

நீலமார்புக் காடை


மலைக்காடை

பெரிய காடை

(மூ.அ); a measure determining the strength of fire in the calcination or reduction of metals with a single dried dung cake.

[காடை + புடம்.]

காடைமீன் *kāḍai-mīṉ*, பெ.(n.) வெண்மையான சிறு கடல்மீன்; a small whitish or silvery sea-fish. (சா.அக).

[காடை + மீன்.]



காடைமீன்

காடையன், *kāḍaiyaṉ*; பெ.(n.) வன்முறையைக் கையாள்பவன்; gangster, rowdy.

[கடு → காடு → காடை → காடையன்.]

காடையிறகு *kāḍai-y-iṟagu*, பெ.(n.) நாடகம் நடிப்போர் தலையிலணியும் பலவண்ண இறகு (வின்.); crest made of variegated feathers worn by stage players (W.).

[காடை + இறகு.]

காடோடி *kāḍōḍi*, பெ.(n.) 1. காட்டில் திரிபவன்; one who roams about in forest, savage, rustic. 2. வீட்டில் தங்காமல் வெளியில் திரிபவன்; an idle wandere r, vagrant.

ம. காடோடி

[காடு + ஓடி.]

காண்[1] (ணு)-தல் *kāṇ-*, 16 செ.குன்றாவி.(v.t.) 1. பார்த்தல்; to see, perceive, view. *"காணிற் குடிப்பழியாம்" (நாலடி,84).* 2. இறைவன் பெரியமனிதர், முழுநிலவு போன்றவற்றைக் காணுதல்; to gain sight of, as a deity, a great person, the moon. *"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" (திவ்.இயற்.3:1).* 3.கண்டறிதல்; to discover, find out. *"காணாதாற் காட்டுவான் தான்காணான்" (குறள்,849).* 4. உண்டாக்குதல்; to make, create. *"முனைவன் கண்டது" (தொல். பொருள்.மரபு.95).* 5. பொறி யாலறிதல்; to perceive by the sensse. அவன் பேச்சைக் கண்டு (திருவாலவா.16:28). 6. ஆராய்தல்; to consider, investigate. *"அறம் பொருள் கண்டார் கணில்" (குறள்:141).* 7. தானே நுகர்ந்து அறிதல்; to experience. 8. மதித்தல்; to regard. *"தானெனக் கண்டும்" (கல்லா.51:7).* 9. வணங்குதல் (பிங்.); to worship, venerate, reverence. 10. புறங்காணுதல்; to put to flight, drive away, as seeing the back of enemies. *"நிலவுக் காண்பது போல" (கலித்:119.4.).* 11. பெறுதல்; to attain, abtain, get. *"முற்று மிடங்கண்டபின்" (குறள்,491.).* 12. சொல்லுதல்; to tell say. *"யாவருங் கண்ட நெறி" (ஆசாரக்.17).* 13. ஒத்திருத்தல்; to look like, resemble. *"மழைகாணு மணிநிறத்தோய்" (கம்பரா. அயோத். குகப்.26).* 14. பொருந்துதல்; to be fit. *"மற்காணுந் திரடிண்டோள்" (கம்பரா. குக.26).*

[கண்(ணு)-தல் → காண்(ணு)-தல். கண்(ணு)தல் = பொருந்துதல்.]

காண்[2](ணு)-தல் *kāṇ-*, 12 செ.கு.வி.(v.i.) 1. உண்டாதல், பலித்தல்; to accrue, result. இவ்வாண்டு விளைச்சல் எவ்வளவு காணும்? (உ.வ.). 2. கண்ணுக்குத் தெரிதல்; to appear, to be found, to become visible evident. *"காண்கின்ற நிலமெல்லாம் யானே யென்னும்" (திவ். திருவாய்.5.6:3).* 3. போதியதாதல்; to be sufficient. இப்பொருள் எத்தனை நாளைக்குக் காணும் (உ.வ.).

[காண்[1] → காண்[2].]

காண்[3] *kāṇ*, பெ.(n.)1.காட்சி; sight. *"காண்பிறந் தமைந்த காதல்" (கம்பரா.திருவடிதொழு.70).*

2. அழகு; beauty. "காண்டக... முகனமர்ந்து" (திருமுருகு.250).

[காண்[1] → காண்[3]]

A.S. cnawan; **ICE.** kna; **Russ.** znate; **L.** nosco, gnosco; **G.** gignosko; **Sans.** jna(all from a base GNA, a secondary form of GAN or KAN, to know. *(செல்வி.78 சிலை 245).* **Chin.** kān.

காண் என்னும் சொல் ஆங்கிலத்திலும் அதன் இனமொழிகளிலும் கன் (cun) கான் (con) கென் (ken) கெஅன் (can) என்று திரிந்துள்ளது. கீன் (keen) என்று திரிந்துள்ளதாகவும் கீற்று (skeat) கூற்றினின்று தெரிகிறது.

காணுதல் என்னும் சொல் தமிழில் புறக்கண்ணாற் காணுதலையும், அகக்கண்ணாற் காணுதலையும் குறிக்கும். முன்னது பார்த்தல், பின்ன அறிதல். நூத் தானிய மொழிகளில் காண் என்பதன் திரிசொற்களெல்லாம் பின்னதையே உணர்த்துகின்றன.

Cun., **A.S.** cunnan, to know, **ME.** cunnen, to know, **ON.** cunna, to know, **Ice.** kunna, *to know*, **Sw.** kunna, to know, **Dan.** kunde, to know, **M., Goth.** kunnan, to know.

செய்வான் (செய்ய)' என்னும் எதிர்கால வினையெச்சத்தின் (முற்றெச்சத்தின்) 'வான்' ஈறு மலையாளத்தில் 'ஆன்' ஈறாகத் திரியும். அதுவே 'அன்' என்று குறுகியும் பின்னர் 'என்' என்று திரிந்தும் பழைய ஆங்கிலத்தில் நிகழ்கால வினையெச்ச (Infinitive) ஈறாக வழங்கினதாகத் தெரிகின்றது. ஆங்கில இன மொழிகளில் அவ்விரண்டும் 'அ' எனக் கடைக்குறைத்துள்ளன. E. cunning, 1. kowing, skilful, ME cunning conning, Northern form cunnand, Ice. kunnandi. 2. Knowledge, skill, M.E. conninge, Ice. cunnandi, AS. cunnung, temptation, trial.

E. *con*, A secondary verb, formed from AS cunnan, to know: it signifies accordingly 'to try to know' and may be regarded as the desiderative of 'to know'- Skeat's. Etymological Dictionary of the English Language, p.126. con, 1. to learn, learn to know, study. 2 to commit to memory.-- The Random House Dictionary, p.303. To con (the passage) (Shakespeare) = to learn by heart.

E. ken, to know. Every man kens (knows) best where his own shoe pinches, (prov.). ME kennen, to make known, see, know, discern. OE. cennen to make known, declare, Ice. kenna, to know, Sw. kanna, Dan. kjende, Du. kennen, G. kennen.

E. can, to know, to know how to, to be able.; G., Ice., Goth. kann.; Cf. AS cunnan, to know, to know how to do, to be able; Ice. kunna, to know, to be able; Sw. kunna, to know, to be able; Dan. kunde, to know, to be able.

முதற்கண், 'கான்' (con, kon) என்னும் நூத்தானியச் சொல் முதலெழுத்துயிர் முன் பின்னாக முறைமாறி 'க்னா' (cna, kna) என்னும் 'க்னோ' என்றும் திரிந்தது.

AS. cnawan, **Ice.** kna, ON. kna, ME knowen, E. know, OHG. chnaan, cnahan.

ககரம் சில மொழிகளில் 'ga' என்னும் எடுப்பொலியாக (voiced sound) மாறுகின்றது.

L. gna; gnarus, knowing, having knowledge of, acquainted with; O. Irish, gnath, known, accustomed, W. gnawd, a custom.

கிரேக்கத்தில் இவ்வெடுப்பொலிக் ககரம் (ga) இரட்டிக்கின்றது.

GK. gignnōskō.

சமற்கிருதத்தில் எடுப்பொலிக் ககரம் (ga) ஜகரமாகத் திரிகின்றது. Skt. jna (ஜ்ஞா). g-j ந-ஞ போலித் திரிபு.

வ. ஜ்ஞான - இந். ஜான்.

ஜகரம் சில மொழிகளில் ஸகர எடுப்பொலியாக (za) மெலிந்து விடுகின்றது.

Russ. znafe, to know, **Pers**. far-zān, knowledge.

இவ்வெல்லாத் திரிபுகட்கும் மூல வேர் GEN (கென்) எனக் குறிக்கின்றார் கீற்று (Skeat)

மேலையார் இன்னும் மொழிகளைச் சரியாய் ஆராயவில்லை. இற்றை அறிவியல்களெல்லாம் மேலையர் கண்டவையே. ஆயின் மொழிகள் வரலாற்றிற்கு முந்திய பண்டைக் காலத்தன வாதலால், அவர்களின் ஆராய்ச்சிக்குட்பட்டதன்று. பொறிக் கருவிகள் எத்துணைச்சிறந்தனவாயினும் மாந்தன் கையாளாவிடின் இயங்கா. இயக்கிய பின்பும் இறுதிவரை மாந்தன் உடனிருத்தல் வேண்டும். துலையுங் கணிப்பானும் கெட்டிருப்பின் தவறான நிறையுங் கணக்குங் காட்டும். தவறான வழியைக் கையாளின் எவ்வினையும் வெற்றியாய் முடியாது.

கால்டுவெல் தமிழ் நாட்டின் இருண்ட காலத்தில் வந்ததனால், தமிழர் வெளி நாட்டினின்று வந்த வந்தேறிகள் என்றும், திரவிட மொழி சித்தியத்திற்கு இனமென்றும், தவறாக முடிவு செய்துவிட்டார். இந்தைரோப்பிய மொழிகளின் அடிப்படை தமிழே. அவற்றின் கொடு முடியே சமற்கிருதம். ஆகவே, ஐரோப்பிய மொழியமைப்பின் அல்லது வரலாற்றின் திறவுகோல் தமிழிலேயே ஆழப்புதைந்து கிடக்கின்றது. இதைக் கண்டுபிடிக்கும்வரை மேலையர் மொழியாராய்ச்சி யெல்லாம் விழலுக்கு நீரிறைத்தலும் வானத்து மீனுக்கு வன்றூண்டிலிடுதலுமேயாகும்.

தமிழரின் முன்னோர் மாந்தன் பிறந்தகமாகிய குமரி நாட்டில் தோன்றியவர். தமிழ் வடக்கே சென்று திரவிடமாய்த் திரிந்தது. திரவிடம் வடமேற்கிற் சென்று ஆரியமாக மாறிற்று. அவ்வாரியம் ஐரோப்பாவின் வடமேற் கோடியை முட்டித் தென்கிழக்காகத் திரும்பி இந்தியா என்னும் நாவலந்தேயம் வந்து சேர்ந்தது.

ஆதலால், அடிப்படைத் தமிழ்ச் சொற்கள் திநூத்தானியத்தில் தமிழுக்கு நெருங்கியும், இலத்தீனில் சற்றுத் திரிந்தும், கிரேக்கத்தில் அதனினும் மிகத் திரிந்தும், வேதமொழியிலும் சமற்கிருதத்திலும் மிகமிகத் திரிந்தும் உள்ளன.

எ-டு.

தமிழ்	ஆங்கிலம்	இலத்தீன கிரேக்கம்	வேதமொழி/ சமற்கிருதம்
அகரம் (மருத நிலம், மருதநிலத்தூர்)	Os. ax, akkar	L. ager (field) aj (to drive)	GK. agros, ajras
உகை–அகை (செலுத்து)	E.acker	G.ago	
கும் (கூடு)	com, co,con. col, cor.	com cum	sum
மன்	man	-	manu
முழுகு		L.mergo	majj
வலி (வலம்)	–	L. Valeo	bala,

வல்லின மெய்யெழுத்துக்களுள், எடுப்பிலா (voice less) வொலிகளே எடுப்பொலிகளினும் முந்தியவை. தமிழில் தனி அல்லது இயற்கை யெடுப்பொலிகள் இல்லை. மெல்லின மெய்யொடு கூடிய செயற்கை யெடுப்பொலிகளே உள. தமிழ் எடுப்பிலா வொலிகள் திரவிடத்திலேயே எடுப்பொலிகளாகத் திரிந்து விடுகின்றன.

எ–டு.

தமிழ்	தெலுங்கு
குடி (வீடு கோயில்)	guḍi
கும்பு (கூடு)	gumpu

ஆதலால், ஆரியத் திரிபைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. காண் என்பதன் திரி சொற்கள், இலத்தீன கிரேக்கத்தில் இருத்தல், முன்னவற்றினும் பின்னவை தமிழுக்கு நெருக்கமாயிருத்தலை உணர்த்துதல் காண்க.

கால்டுவெலார், தொல்காப்பியமும் பத்துப்பாட்டு எட்டுத் தொகைகளும் தமிழர்க்கும் தெரியாது மறைந்து கிடந்த காலத்தில், வழி காட்டியுமின்றித் தன்னந்

தனிமையாய் ஆராய்ந்த போதும், தமிழின் தொன்மை முன்மைகளையும் மூலத் தன்மையையும் உணர்ந்து, தம் திரவிட ஒப்பியலிலக்கண நூலின் இறுதியில், சொல்லியல் உறவுகள் (Glossarical Affinities) என்னும் பகுதியில், கீழ் வருமாறு வரைந்துள்ளார்.

"kan, the eye; kan (in the preterite kandu), to see; also secondarily, to mark, to consider, to think. In the latter sense it comes kannu in Tamil, but the base remains unchanged. In (kanu, kannu) Telugu, the ordinary n, the nasal of the dental row, is used instead of n, the cerebral nasal. Comp. the Welsh ceniaw, to see; English ken, view, power of reach of vision, to ken, to know by sight. In Webster's 'English-Dictionary' kanna was said to be 'an eye' in Sanskrit; whereas it is exclusively a Dravidian word. This error may be compared with Klaproth's representing kuruta, blind, as a Sanskrit word, istead of referring it to the DRavidian languages, to which alone it belongs. There is a curious word in Sanskrit kana, one-eyed which seems to have some Dravidian relationship. It becomes in Bengali kana, blind which, in form at least, is identical with the Dravidian negaive kana, that sees not. Possibly the Dravidian kan, to see, kannu, to consider, may have some ulterior connection with the Gothic kunna-an, to know; Greek gno-nai; Sans. na; Latin gna (gnarus); Old High German chann. The different shades of meaning which are attributed to Greek to gno-nai and eide-nai; seem to corroborate this supposition; for the latter is represented as meaning to know by reflection, to know absolutely, whereas the former means to perceive, to mark, and may therefore have an ulterior connection with the Dravidian root".

-- Caldwell's Dravidian Comparative Grammar, University Edition, p.591.

காணம் அல்லது காட்சியென்றும் மூலச்சொல் சிறவாது, ஞானம் என்னும் அதன் திரிசொல்லே சிறந்தது உண்மையான ஒளிக்கல்லினும் போலிக்கல்லே பொலிந்து தோன்றுவது போலும்; எனினும், சமற்கிருதத்திற்கு ஞானத்தைத் தந்தது தமிழே என்னும் புகழ் நிலைத்து நிற்கும் (செல்வி. 78 சனவரி 251).

காண்[4] *kāṇ,* இடை.(int.) முன்னிலையில் வரும் ஓர் உரையசை; expletive of the 2nd pers, meaning behold. *"துவ்வாய் காண்" (குறள், 1294).*

[காண்–[1] → காண்–[4].]

காண்கம் *kāṇgam,* வி.மு.(v.fin.) காண்போம்; let us see *"வானுயர் நெடுமணலேறி யானாது காண்கம் வம்மோ" (ஐங்குறு.199).*

[காண் → காண்கம்.]

காண்கை *kāṇgai,* பெ.(n.) 1.அறிவு; knowledge. *"பொய்யா.. காண்கையர்" (முல்லைப். 56).* 2. காணுதல்; seeing. *"அவர்க்குத் தோன்றியது பொய்யாகக் காண்கையிலே தோன்றாத" (ஒழிவி. யோகக்.1).*

க. காண்கெ, காணிகெ.

[காண் → காண்கை.]

காண்கொடு–த்தல் *kāṇ-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) பார்க்கும்படிச் செய்தல்; to enable to see. *"கனவினுட் காண்கொடாக் கண்ணும்" (புறத்திரட்டு, 1524).*

[காண் + கொடு.]

காண்டகம்[1] *kāṇḍagam,* பெ.(n.) 1. காடு (பிங்.); jungle, desert, woods. 2.நோய் (மூ.அ.); sickness, malady, disease. 3.நிலவேம்பு; ground neem. 4. கல்யானைக் கொம்பு; the tusk of reinoceros. 5. நீர்; water. 6. சீந்தில்; moon-creeper (சா. அக.).

[காள் → காண் → காண்டு → காண்டம். → காண்டகம். காள் = கருமை, இருள், இருண்டகாடு, துன்பம், நோய்.]

காண்டகாகம் *kāṇḍakāgam,* பெ.(n.) பாகல்; spiked bitter cucumber (சா.அக).

[கண்டு = முள். கண்டு → கண்டகம் → காண்டகம் + ஆகம்.]

கண்டகிகம் *kāṇḍakigam*, பெ.(n.) நந்தியா வட்டம்; Indian rose bay (சா.அக.).

[கண்டு (திரட்சி, வட்டம்) → கண்டகி → காண்டகிகம் + (கொ.வ).]

காண்டகுண்டம் *kāṇḍakuṇḍam*, பெ.(n.) ஒருவகைக் கோரைப் புல்; a variety of sedge grass (சா.அக.).

[கண்டு = முள். கண்டு → கண்டகம் → காண்டகம் + உண்டம்.]

காண்டகை *kāṇḍagai*, பெ.(n.) காட்டுக்கருணை; a species of forest elephant yam (சா.அக.).

[கண்டு → காண்டு → காண்டகை.]

காண்டஞ் சூலி *kāṇḍañjūli*, பெ.(n.) கரிச்சுள்ளி; Indian purple nail dye (சா.அக.).

[காண்டம் + சூலி.]

காண்டம்[1] *kāṇḍam*, பெ.(n.) 1. காடு (திவா.); jungle, desert, wilderness. 2. மலை (பிங்.); mountain, hill. 3. மலை வேம்பு; hill margose. 4. நிலவேம்பு; ground neegn. 5. சீந்தில்; moon-creeper. 6. வஞ்சிமரம்; South Indian willow.

[காள் → காண் → காண்டு → காண்டம். காள் = கருமை, இருள். இருளடர்ந்த காடு, காடடர்ந்தமலை.]

காண்டம்[2] *kāṇḍam*, பெ.(n.) 1. நீர்; water, sacred water. *"திருத்திவா யதுக்கிய குங்குமக் காண்டமும்" (கல்லா. 49:16).* 2. கோல் (சூடா.); staff, rod. 3. அடித்தண்டு (யாழ்.அக); stem, stalk. 4. அம்பு (சூடா.); arrow. 5. படைக்கலன் (சூடா.); weapon. 6. நூலுட் பெரும்பிரிவு (பிங்.); a large section of a book. 7. முடிவு (சூடா); end, limit. 8. சமயம்; opportunity, season. 9. திரள் (அக.நி.); collection, multitude, assemblage.

[கண்டம் → காண்டம் → கண்டம் = வெட்டப்பட்ட சிறுதுண்டு, துணி, சிறுபகுதி.]

கண்டம் என்னும் சொல்லை *khaṇḍa* என்றும் காண்டம் என்னும் சொல்லை *kāṇḍa* என்றும் முதலெழுத்தை வேறுபடுத்தி வடமொழியாளர் மயக்கியிருக்கின்றனர் (வ. வ. 114.)

காண்டம்[3] *kāṇḍam*, பெ.(n.) 1. அணிகலச்செப்பு; jewel-box. 2. கமண்டலம்; ewer.

[கண்டம் → காண்டம். கண்டம் = பகுதி, துண்டு, சிறியது.]

காண்டம்[4] *kāṇḍam*, பெ.(n.) 1. திரைச்சீலை (பிங்.); curtain. 2. ஆடை (சூடா.); cloth, garment.

[கண்டம் → காண்டம். கண்டம் = வெட்டப்பட்ட பகுதி. கள் = வெட்டு, நீக்கு. கள் → கண்டு → கண்டம்.]

காண்டம்[5] *kāṇḍam*, பெ.(n.) அறிவு (புத்தி) (அக.நி); mind, intellect.

[காண் → காண்டம்.]

காண்டம்[6] *kāṇḍam*, பெ.(n.) நீர்க்காக்கை; water crow.

[காருண்டம் → காண்டம்.]

காண்டம்[7] *kāṇḍam*, பெ.(n.) முகமன் (த.சொ. அக.); flattery, greetings.

[காண்கு → காண்டு → காண்டம்.]

காண்டம்பலா *kāṇḍam-palā*, பெ.(n.) காட்டுப் பலா; wild-jack fruit (சா.அக).

[கண்டு → கண்டம் → காண்டம் + பலா.]

காண்டம்பனை *kāṇḍa-mpaṇai*, பெ.(n.) மலைக் கமுகு; hill areca-nut palm of Travancore (சா.அக).

[காண்டம் + பனை.]

காண்டமந்திரம் *kāṇḍa-mandiram*, பெ.(n.) நளனுக்குத் தெரிந்திருந்ததாகக் கூறப்படுவதும், குதிரையை விரைவாக வானில் ஓடச்செய்வதுமான மந்திரம்; the art of making horse run faster with

the aid of mantrams. It is said that Nala an expert in the art and was aware of this Mantram.

[காண்டம் (விரைவு, முடுக்கம்) + மந்திரம்.](சீவக.793. உரை)

காண்டமோசனம் *kāṇḍa-mōšaṉam,* பெ.(n.) திருமறையின் ஒவ்வொரு காண்டத்தையும் பாடிமுடிக்குங்காற் செய்யும் செயல்கள் (திருவானைக். கோச்செங்.14.); ceremony performed at the close of the study of a *kāṇḍa* of a Vēda.

[காண்டம் + மோசனம்.]

காண்டல் *kāṇḍal,* பெ.(n.) ***காண்டலளவை*** பார்க்க; see *kāṇḍal-aḷavai.* *"காண்டல் கருத—லுவம மாகமம்"(மணிமே.27:9.).*

[காண் → காண்டல்.]

காண்டலளவை *kāṇḍal-aḷavai,* பெ.(n.) கண்ணால் பார்த்தல், கண்கூடாகப் பார்த்தல்; perception; means of perception. *"காண்டவனை நோக்குபு கசுத்திறைவன்" (சேதுபு. கத்துரு.77).*

[காண்டல் + அளவை.]

காண்டவதகனன் *kāṇḍava-dagaṉaṉ,* பெ.(n.) பாண்டவரில் நடுப்பிறந்த அருச்சுனன்; Arjuna, who burnt down the kāṇḍava forest.

[காண்டவம் + தகனன்.]

காண்டவம் *kāṇḍavam,* பெ.(n.) தேவர் தலைவனுக்கு விருப்பமானதும் அருச்சுனனால் நெருப்பூட்டப்பட்டதுமான ஒரு காடு; a forest, sacred to Indra and burnt by Arjuna as an offering to Agni (சா.அக.). *"காண்டவத்தைக் கனலெரிவாய் பெய்வித்தானை" (திவ்.பெரியதி.2-5-2).*

[கண்டு → காண்டு (பகுதி) → காண்டவம்.]

காண்டவம்[2] *kāṇḍavam,* பெ.(n.) நிலவேம்பு; ground neem (சா.அக.).

[கண்டு → காண்டு → காண்டவம்.]

காண்டாதிநெய் *kāṇḍādi-ney,* பெ.(n.) நிலவேம்பு முதலியவற்றால் ஆன நெய்வடிவாயுள்ள ஒரு கூட்டு மருந்து (வின்); medicinal preparation of chiretta, etc with ghee as vehicle.

[காண்டாதி + நெய்.]

காண்டாமிருகம் *kāṇḍā-mirugam,* பெ.(n.) கல்யானை; rhinoceros.

மறுவ. காலயானை

ம. காண்டாமிர்கம்

[காண்டு → காண்டம் + மிருகம்.]

காண்டாமிருகரத்தம் *kāṇḍā-miruga-rattam,* பெ.(n.) 1. வேங்கைமரம்; Indian kino tree. 2. பெருமரவகை; (L.); dragon's-blood tree. 3. பிரம்பு வகை.(L.); dragon's blood cane. 4. பிசின் வகை. (வின்.);resin from these trees.

[காண்டா மிருகம் + அரத்தம். ஒரு மரத்தின் பிசினில் செய்த அரக்கு.]

காண்டாவனம் *kāṇḍā-vaṉam,* பெ.(n.) ***காண்டவம்***[1] பார்க்க; see *kāṇḍavam*[1]. *"காண்டா வன மென்பதோர் காடு"(திவ். பெரியதி.2.4:2).*

[காண்டவம் → காண்டாவனம்.]

காண்டாவனன் *kāṇḍā-vaṉaṉ,* பெ.(n.) இந்திரன்; Indra the lord of *Kāṇḍava.*

[காண்டாவனம் → காண்டாவனன்]

காண்டிகை *kāṇḍigai,* பெ.(n.) நூற்பாப் பொருளைச் சுருக்கமாக விளக்கும் உரைவகை; brief exposition of the salient points in a text. *"சூத்திரம் புரைதப*

வுடன்படக் காண்டிகை புணர்ப்பினும்" (தொல். பொருள்.மரபு.102).

[கண்டு - தொகுப்பு, பிரிவு. கண்டு → கண்டி கண்டிகை → காண்டிகை.]

காண்டியகாலம் *kāṇḍiya-kālam,* பெ.(n.) முதுவேனிற்காலம்; mid summer (சா.அக.).

[காண்டியம் (வெப்பம்) → காலம்.]

காண்டியம் *kāṇḍiyam,* பெ.(n.) வெக்கை; intensity of heat; heat as felt in the hot season.

[காள் → காண்டு → காண்டியம்.]

காண்டிர் *kāṇḍir,* பெ.(n.) முன்னிலைப் பன்மையசை; "வேளைத் தரு வள் காண்டிர்" (கந்தபு. காமதகன.13).

[காண் → காண்டி → காண்டிர்.]

காண்டில் *kāṇḍil,* பெ.(n.) ஒருவகைச் செய்நஞ்சு; a kind of prepared arsenic (சா.அக).

[காள் → காண்டு (வெப்பம்) → காண்டில்.]

காண்டிவம் *kāṇḍivam,* பெ.(n.) **காண்டீவம்** பார்க்க; see *kāṇḍīvam.* "காண்டிவங் கரத்தேந்தி" (பாரத.காண்டவ.8.).

[காண்டீவம் → காண்டிவம்.]

காண்டீபன் *kāṇḍībaṉ* பெ.(n.) காண்டீவன் பார்க்க; see *kāṇḍīvaṉ.*

[காண்டீவம் → காண்டீபன்.]

காண்டீரம் *kāṇḍīram,* பெ.(n.) யானைத்திப்பிலி; a big variety of *tippali* (சா.அக).

[கண்டு → கண்டீரம் → காண்டீரம்.]

காண்டீவம் *kāṇḍīvam,* பெ.(n.) அருச்சுனன்வில்; Arjuna's bow. 2.சிலையோரை (தனு ராசி) (வின்.); sagittatius, a constellation of the zodiac.

மறுவ. காண்டிவம், காண்டிபம், காண்டீபம்

[கா → காண்டு → காண்டீவம்.]

காண்டீவன் *kāṇḍīvaṉ* பெ.(n.) காண்டீவம் என்னும் வில்லையுடைய அருச்சுனன் (பிங்.); Arjuna, as armed with *kāṇḍīvam.*

மறுவ. காண்டிபன்

[கா → காண்டு → கண்டீவன்.]

காண்டு[1] *kāṇḍu,* பெ.(n.) கூப்பிடு தொலைவு (வின்); earshot; hearing distance.

[காண் → காண்டு.]

காண்டு[2] *kāṇḍu,* பெ.(n.) 1. சினம்; anger. 2.துன்பம்; difficulty. உனக்கு அதைச் செய்ய என்ன காண்டு? (உ.வ.)

க. காண்டு; தெ. காடு (gadu)

[காள் + காண்டு.]

காண்டுமதம் *kāṇḍu-madam,* பெ.(n.) துன்பம் (யாழ்.அக.); suffering, pain.

[காள் → காண்டு + மதம்.]

காண்டை[1] *kāṇḍai,* பெ.(n.) 1. கற்குகை, கற்பாழி (சூடா.); cave, cavern. 2.தவம் செய்வோர் இருப்பிடம் (பிங்.); dwelling of a sage, hermitage.

[காள் → காண்டை.]

காண்டை[2] *kāṇḍai,* பெ.(n.) காண் என்னும் ஓர் ஏவல்வினை; imperative. "முயங்கு முறைநாள் கழிதலுறாமைக் காண்டை" (கலித்.12).

[காண் → காண்டை.]

காண் என்பது காண்டையெனத் திரிந்தது என்பர் நச்சினார்க்கினியர்.

காண்டைப்பாய் *kāṇḍaippāy,* பெ.(n.) பார்ப்பாய்; seeing second person. "தகையது காண்டைப்பாய் நெஞ்சே" (கலித்.87).

[காண் → காண்டை + பாய்.]

காண்பவன் *kāṇbavaṉ,* பெ.(n.) அறிபவன்; one who knows. *"காண்பவன் முதலிய திறமும்" (கந்தபு.கடவுள்வா.6).*

[காண் → காண்பவன்.]

காண்பி-த்தல் *kāṇbi,* 1 பி.வி.(v.caus.) 1. காட்டுதல்; to show, exhibit, display. 2. மெய்ப்பித்தல், சரியென்று காட்டுதல்; to prove, demonstrate.

[காண் + பி.-(பி.வி.ஈறு)]

காண்பு *kāṇpu,* பெ.(n.) காட்சி; seeing, sight. *"கார்ப்பெய றலைஇய காண்பின் காலை" (புறநா.119:1).*

[காண் → காண்பு]

காண்பொங்கல் *kāṇ-poṅgal,* பெ.(n.) ***காணும் பொங்கல்*** பார்க்க; see *kāṇum-poṅgal.*

மறுவ. காணும்பொங்கல், கருநாள்.

[காண் + பொங்கல்.]

காண்போர் மாடம் *kāṇbōrmāḍam,* பெ.(n.) பொதுமக்கள் வசதியாக இருந்து நல்ல காட்சிகளைப் பார்க்க ஒதுக்கப்பட்ட இடம்; viewers gallery.

[காண்போர் + மாடம்.]

காண்வரி *kāṇ-vari,* பெ.(n.) பிறர் காணும்படி அடிக்கடி வந்து நடிக்குங் கூத்து; dances performed at frequent and repeated intervals by expert dancers on the stage. *"கருநெடுங் கண்ணி காண்வரிக் கோலமும்" (சிலப். 8:83).*

[காண் + வரி.]

காண்வா-தல் (காண்வருதல்) *kāṇ-vā-,* 18 செ.கு.வி. (v.i.)காட்சிவருதல்; to come into view; to be sighted. *"காண்வர வியன்றவிக் கவின்பெறு பனித்துறை" (கலித்.127:14).*

[காண் + வா.]

காணடி-த்தல் *kāṇ-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) காணாமல் செய்தல், போக்கடித்தல் (இ.வ.); to lose.

[காணா + அடி.]

காணநாழி *kāṇa-nāḷi,* பெ.(n.) ஒரு பெய்தல் அளவு; a measure of capacity. *"காண நாழியால் நிசதி அட்டக்கடவ நெய் இருநாழி" (SII.XIV.10-19 pg.6).*

[கணம் → காணம் + நாழி.]

காணப்பத்தியம்[1] *kāṇa-p-pattiyam,* பெ.(n.) கொள்ளுக்கஞ்சி பத்தியம்; regimen in which horse-gram conjee is prescribed as a diet for paetients (சா.அக.).

[காணம் + பத்தியம்.]

காணபத்தியம்[2] *kāṇa-pattiyam,* பெ.(n.) பிள்ளையாரை முதற்கடவுளாக வழிபடுஞ்சமயம்; the religion of the *Gaṇapati* adoing him as the Supreme Being.

மறுவ. காணாபத்தியம்

[கணம் (கூட்டம்) + பதி = கணபதி→காணபத்தியம்.]

காணம்[1] *kāṇam,* பெ.(n.) வளைந்த காயிலுள்ள கொட்பயிறு; horsegram. *"ஆரமாடங் காணம் வெந்தநீர் படிபடி பெய்" (தைலவ.தைல.72).* 2. பழைய நிறுத்தலளவையுள் ஒன்று (கல்.); an ancient weight. 3. பொன் (திவா.) ; gold. 4. தாண மொத்த வடிவிலுள்ள பழைய பொற்காசு; an ancient gold coin. *"ஒன்பதுகாப் பொன்னும் நூறாயிரங் காணமுங் கொடுத்து" (பதிற்றுப். 60, பதி.).* 5. பொருள்; wealth, riches. *"மேற்காண மின்மையால்" (நாலடி, 372).* 6. பாகம்; share.

ம. காணம்

[கோணம் →காணம்.]

காணம்[2] *kāṇam,* பெ.(n.) 1. வட்டமான செக்கு(சூடா.); oil-press. *"காணக் கடையில் வருமெண்ணெயென" (தைலவ.கடவு.3.);* 2. ஒரு செக்களவுள்ள முகத்தலளவை (வின்.); a measure of capacity, as much as will fill an oil -press. 3. நிலம்; land. (தொல்.சொல். சேனா.20).

ம. காணம்; க., து. காண; தெ. கானக, கானகு, கானுக.

H. khāna; **Guj.** khāṇa; **Beng.** khāni; **Sinh.** khāṇi; **Pkt.** khāyaṇa; **Skt.** khātanam, khātani.

[கோணம் →காணம்.]

செக்குகள் பெரும்பாலும் மரத்தைச் செதுக்கிச் செய்யப்பட்டிருக்கும். கருங்கல்லால் ஆன செக்குகளும் உண்டு. மரத்தால் ஆனவை மரக்காணம் என்றும் கல்லால் ஆனது கல்காணம் என்றும் அழைக்கப்படும்.

காணம்போடு-தல் *kāṇam-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) 1. செக்காட்டி எண்ணெய் பிழிதல்; to extract oil by an oil-press, as from coconuts, etc. காணம் போடுவதற்காகக் கடலை உடைக்கிறார்கள் (உ.வ.). 2. குழந்தைகளைப்போல் அடிக்கடி ஏதேனும் தின்று கொண்டேயிருத்தல் (இ.வ.); to eat frequently, as children.

[காணம்² + போடு.]

காணல் *kāṇal,* பெ.(n.) 1. காண்கை; beholding. *"காணலுறுகின்றேன்" (திவ். இயற். 4:41.).* 2. மனத்தால் குறிக்கை (சூடா.); seeing with the mind's eye, thinking, considering. 3. வணங்குகை (உரி.); reverencing, worshipping. 4. தோற்றம்; appearance. 5. பெரியோரை நேர்காணல்; visiting people.

[காண் → காணல்]

காணலன் *kāṇalaṉ,* பெ.(n.) பகைவன்; enemy, as one whose sight is unbearable. *"காணலற் செற்ற காளை" (பாரத. வேத்.20).*

[காண் + அல் + அன்.]

காணலிங்கம் *kāṇa-liṅgam,* பெ.(n.) சிவனின் ஏவலர்களாகிய கணங்களால் உருவாக்கப்பட்ட சிவலிங்கம் (சைவவி.203); Siva-lingam established by the celestial hosts of šiva.

[கணம் → காணம்+ லிங்கம். கணம் – சிவகணங்கள்.]

காணவட்டம் *kāṇa-vaṭṭam,* பெ.(n.) ஊர் அலுவலர்க்கும், பணியாளர்க்கும் நாள்தோறும் எண்ணெய் ஆட்டும் செக்கார் கொடுக்கும் எண்ணெய் வரி (W.G.); a small quantity of oil given daily, as a perquisite by the oil - mongers to the villaged officers and servants.

[காணம் + வட்டம்.]

காணன் *kāṇaṉ,* பெ.(n.) ஒருகண் குருடன், ஒற்றைக்கண்ணன்; one-eyed man. *"கஞ்சன், குணிகூனன், காணனிரு கண்ணுமில்லான்" (சைவச.ஆசாரி.10).*

ம. காணன்; **Skt.** kāṇa.

[காண் + அல் + அன்–காணலன்→ காணன்.]

காணா *kāṇā,* பெ.(n.) சிறுபாம்பு; small reptile of the snake species.

[குள் → குண் → குண்ணு→குண்ணா→ காணா.]

காணாக்கடி *kāṇa-k-kaḍi,* பெ.(n.) 1. இன்னது கடித்தது என்று அறிய முடியாத நஞ்சுக்கடி; bite or sting of a reptile in the dark. 2. சிறுபாம்புக் கடி; bite of a reptile named kāṇā.

[காண் + ஆ + கடி. 'ஆ' எதிர்மறை இடைநிலை.]

காணாக்கண்ணிடு-தல் *kāṇā-k-kaṇṇiḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) பார்த்தாலும் பாராதது போல் இருத்தல்; to overlook, connive. *"இவன் செய்த குறையைத்தான் காணாக்கண்ணிட்டி ருக்கை யன்றிக்கே" (ஈடு. 6.10:10).*

[காண் + ஆ + கண்ணிடு.]

காணாக்காட்சி *kāṇā-k-kāṭci,* பெ.(n.) காண்பதற்குரிய அரிய காட்சி; a rare spectacle, a wonderful sight, exhibition, as not seen before.

[காண் + ஆ + காட்சி.]

காணாக்கிரகணம் *kāṇā-k-kiragaṇam,* பெ.(n.) கீழுலக ஒளிமறைப்பு (பாதாளக்கிரகணம்)(வின்.);

கண்ணால் காணமுடியாத ஒளிமறைப்பு; invisible eclipse.

[காண் + ஆ + கிரகணம்.]

காணாக்கிரகம் *kāṇā-k-kiragam,* பெ.(n.) ***காணாக்கோள்*** (வின்) பார்க்க ; see *kāṇa-k-kōḷ.*

[காண் + ஆ + கிரகம்.]

காணாக்கோல் *kāṇā-k-kōl,* பெ.(n.) திடீரென வந்து தைக்கும் அம்பு; arrow shot unseen. *"காணாக்கோலாகவந்து தைக்கிறபடி" (திவ்.இயற். திருவிருத்.75,வியா.).*

ம. காணாக்கோல்

[காண் + ஆ + கோல்]

காணாக்கோள் *kāṇā-k-kōḷ,* பெ.(n.) மறைவாக உள்ள கோள்; phenomena of the heavens, sometimes visible and sometimes not, opp. to *kāṇuṅ-kōḷ.*

மறுவ. காணாக்கிரகம்

*[காண் + ஆ + கோள். **கரந்துறைகோள்** பார்க்க]*

காணாத்தலம் *kāṇā-t-talam,* பெ.(n.) ஆண்பெண் குறிப்பொது(வின்); private parts, genitals, as kept concealed from view.

[காண் + ஆ + தலம்]

காணாதகண் *kāṇāda-kaṇ,* பெ.(n.) அறிவுக்கண் (ஞானக்கண்); mind's eye. *"காணாத கண்ணுடன்" (திருமந் :1610).*

[காண் + ஆ + கண் – காணாதகண். ஆ–எ.இ.நி.]

காணார் *kāṇār,* பெ.(n.) 1. குருடர்; blind men. *"காணார் கேளார் கான்முடப் பட்டோர்" (மணிமே.13:111.).* 2. பகைவர்; enemies.

[காண் + ஆ + அர்.]

காணாவுயிர் *kāṇā-v-uyir,* பெ.(n.) கண்ணால் தெளிவாகக் காண்பதற்கரிய நுண்ணிய உடம்புள்ள உயிரி; an insect too small to be seen. *"காணாவுயிர்க்குங் கையற் றேங்கி" (மணிமே.3: 89).*

[காண் + ஆ + உயிர்.]

காணி[1]–த்தல் *kāṇi-,* 4 செ.குன்றாவி.(v.t.) காட்டுதல் (நாஞ்); to show.

ம. காணிக்கு; **க.** காணிசு; **தெ.** கனுபின்சு.

[காண் → காணி.]

காணி[2] *kāṇi,* பெ.(n.) 1. காணியாட்சி (வின்.); landed property, estate, possession. 2.கொடிவழியுரிமை; right of possess, hereditary rights. *"மனுமுறைக் காணி வேந்தரைக் கொல்லக் கருதினாய்" (சேதுபு. இராமதீ.48).*

ம.,க., தெ., து. காணி.

[காண் → காணி]

காணி[3] *kāṇi,* பெ.(n.) 1. நில அளவில் ஒரு வேலியில் ஐந்தில் ஒரு பகுதி; 400 குழிப்பரப்பு;an area of 400 kuzhi; one fifth of a veli in land measure. 2. நகரப் பரப்பில் ஒரு குடும்பில் 320இல் ஒரு பங்கு; 4 குழி; 2 பெருங்கோல் சதுரம் (22 x 22 அடி); ***குடும்பு*** பார்க்க; see *kuḍumbu* . 3.நிலம்; land. *"ஊரிலேன் காணியில்லை" (திவ்.திருமாலை.29).*

ஒரு பெருங்கோல் (11 அடி) சதுரம் ஒரு குழி ஆகும். 100 குழி - ஒரு மா; 400 குழி - 1 காணி. 2000 குழி - ஒரு வேலி. காணி என்பது 20 பெருங்கோல் சதுரம் (220 அடி X 220 அடி).

[காண் → காணி]

காணி[4] *kāṇi,* பெ.(n.) 1/80 மதிப்புடைய கீழ்வாய் இலக்க எண்; a fraction of value 1/80. *"முந்திரி மேல் காணி மிகுவதேல்" (நாலடி.346).*

பழந்தமிழரின் பின்ன முறை கணக்குகளை எளிதில் செய்யும் வண்ணம் அமைந்தவை. ஒரு முழு எண்ணை 320 பகுதியாகப் பகிர்ந்து, அதில் ஒரு பகுதி முந்திரி எனப்படும். முந்திரியை மேலும் 320 கூறிட்டால் அதில் ஒரு கூறு கீழ்

முந்திரி எனப்படும். கீழ் முந்திரியை மேலும் 320 கூறிட்டால் அதில் ஒரு கூறு கீழ்க்கீழ் முந்திரி ஆகும்.

முந்திரி	=	1/320
கீழ் முந்திரி	=	1/320 X 1/320
கீழ் கீழ் முந்திரி	=	1/320 X 1/320X 1/320
முந்திரி	=	1/320
காணி	=	1/80
மா	=	1/20
மாகாணி	=	1/20+1/80 = 1/16 = வீசம்
அரை	=	1/2 கால் = 1/4; பாழ் = 0

காணி[5] *kāṇi,* பெ.(n.) பொன்னாங்காணி (தைலவ. தைல.); a plant growing in damp places.

[பொன்னாங்காணி → காணி]

காணிக்கடன் *kāṇi-k-kaḍaṉ,* பெ.(n.) நிலவரி; land tax. *"இவ்வூர் இறை கட்டின காணிக்கடன்" (S.I.I.III,35).*

ம. காணிக்கடன்

[காணி + கடன்]

காணிக்கல் *kāṇi-k-kal,* பெ.(n.) எல்லைக்கல்; boundary stone. *"காணிக்கல்லின் கீழே இரண்டு செப்புத்தவலை அகப்பட்டது" (மதி.கள 1:177).*

[காணி + கல்]

காணிக்காரன் *kāṇi-k-kāraṉ,* பெ.(n.) 1. சிற்றூர்ப் பங்காளி (இ.வ.); hereditary proprietor of land, coparcener in village lands held in common. 2. தென்பாண்டி நாட்டிலுள்ள மலைவாழ் மக்களின் ஓரினம் (G.Tn.D.7.); a hill tribe in Tirunelveli district and Thiruvidhangur; one belonging to that tribe.

ம. காணிக்காரன்; க. காணிகாற.

[காணி + காரன்.]

காணிக்கை[1] *kāṇikkai,* பெ.(n.) தெய்வத்திற்கும் திருவடியார்க்கும் படைக்கும் அன்பளிப்புப் பொருள்; voluntary offering, commonly in money, gold, fruits; gifts to a temple or church or greatmen; present to a guru or other great person. *"வேதாள நாதன் மகிழுங் காணிக்கை யாகி" (சேதுபு. வேதாள. 34).*

ம.காணிக்க; க.,து.காணிகெ; தெ.காநுக.

[காணி → காணிக்கை]

காணிக்கை[2] *kāṇikkai,* பெ.(n.) கடன்; debt, loan. *"காணிக்கையானேன் ... மாலையை வைத்து நான் காணிக்கை தீர்ந்த மறு மாதம்" (விறலிவிடு.296).*

[காணி → காணிக்கை]

காணிக்கைச்சாசனம் *kāṇikkai-c-cāšaṉam,* பெ.(n.) ***காணிக்கை முறி*** பார்க்க; see *kāṇikkai-muṟi.* *"இம்முடிக் காணிக்கைச் சாசனந் தந்தனனே"* (பெருந்தொ.1338).

[காணிக்கை + சாசனம்]

காணிக்கைத்தட்டு *kāṇikkai-t-taṭṭu,* பெ.(n.) காணிக்கை வாங்கு தட்டு; salvar for receiving gifts.

[காணிக்கை + தட்டு]

காணிக்கைமுறி *kāṇikkai-muṟi,* பெ.(n.) உரிமை முறி; document conferring a right to properties.

மறுவ. காணிக்கைச் சாசனம்

[காணிக்கை[1] + முறி]

காணிக்கோல் *kāṇi-k-kōl,* பெ.(n.) 11' 0" பண்டைய நிலம் அளக்கும் கோல்; an ancient linear measure to measure lands.

6 விரல்	=	1 சாண் (8 1/4 அங்குலம்)
2 சாண்	=	1 முழம் (16 1/2 அங்குலம்)
2 முழம்	=	1 கோல் (சிறுகோல்) (2' 9")
4 கோல்	=	1 காணிக்கோல் (11'–0")

[காணி + கோல்.]

காணிச்சாறு *kāṇi-c-cāṟu,* பெ.(n.) 1. பொன்னாங் காணிச்சாறு; the juice of the leaves of the eclipse plant. (சா.அக.)

[காணி² + சாறு]

காணித்தாய வழக்கு *kāṇi-t-tāya-vaḻakku,* பெ.(n.) பங்காளிகளின் நிலவழக்கு (யாழ்ப்.); dispute between coparceners about heriditary land.

மறுவ. காணித்தாயம்

[காணி + தாயம் + வழக்கு.]

காணித்துண்டு *kāṇi-t-tuṇḍu,* பெ.(n.) நிலத்தின் சிறுபகுதி (வின்.); piece or strip of land.

[காணி + துண்டு.]

காணிநிலம்[1] *kāṇi-nilam,* பெ.(n.) உரிமைநிலம் (வின்.); land in full ownership.

மறுவ. காணிப்பூமி

[காணி + நிலம்.]

காணிநிலம்[2] *kāṇi-nilam,* பெ.(n.) ஒரு காணி நிலம்; land measuring one *kāṇi.* *"காணி நிலம் வேண்டும்" (பாரதி).*

மறுவ. காணிப்பூமி

[காணி + நிலம்.]

காணிப்பற்று *kāṇi-p-paṟṟu,* பெ.(n.) உரிமை ஊர்; village in full ownership. *"குருகுலராயன் காணிப்பற்று மணவிலிருக்கை" (கல்.).*

[காணி + பற்று.]

காணிப் பிடிபாடு *kāṇi-p-piḍipāḍu,* பெ.(n.) நில விளைவு ஓலை (பத்திரம்) (M.E.R.66 of 1916,p.123); deed of lease for cultivation.

[காணி + பிடிபாடு.]

காணிப்பூமி *kāṇi-p-pūmi,* பெ.(n.) ***காணிநிலம்*** பார்க்க; see *kāṇi-nilam.*

[காணி + பூமி.]

காணிப்பேறு *kāṇi-p-pēṟu,* பெ.(n.) நிலச் சொத்து படைத்திருப்பதால் உண்டாகும் பெருமை(W.G.); the dignity of a land-holder, a term used in conveyances of mirasi rights.

[காணி + பேறு.]

காணிமாறு-தல் *kāṇi-māṟu-,* 5 செ.கு.வி.(v.i.) உரிமைநிலத்தை இழக்கச் செய்தல்; to disposses a person of his land. *'கருப்பூரில் துரோகம் செய்தாரைக் காணிமாறின நிலமும்' (S.I.I.V, 708-5, 298).*

[காணி + மாறு.]

காணிமானியம் *kāṇi-māṉiyam,* பெ.(n.) 1. குடிவழி மானியம் (சர்வமானியம்) ; hereditary land exempt from all taxes. 2. ஊர்ப் பங்காளிகளுக்குப் பொதுவான மானியம்; inam land enjoyed in common by the whole community of mirasdars in a village.

[காணி + மானியம்.]

காணிமேரை *kāṇi-mērai,* பெ.(n.) நில உடைமை யாளர், விளைவைப் பொறுத்து அதிகப்படியாகப் பெற்றுக் கொள்ளும் விளைவின் பகுதி (W.G.); a portion of the produce claimed extra by mirasdars as their customary perquisite.

[காணி + மேரை.]

காணியாட்சி *kāṇi-y-āṭci,* பெ.(n.) உரிமை நிலம்; hereditary right to land, to offices, to fees, to an estate or to a kingdom; domain obtained by inheritance; that which is held as free and hereditary property; estate, one's own possession. *'மேலைத் தெருவில் ஒரு மடமும் காணியாட்சியும் கொடுத்த அளவுக்கு' (S.I.I.i, 124).*

மறுவ. காணாசி (கொ.ஆ.)

க., தெ. காணயாசி.

[காணி + ஆட்சி.]

காணியாட்சிமிராசு *kāṇi-y-āṭci-mirāšu,* பெ(n.) ஊர்நிலவுரிமை (C.G.); proprietary right in village lands.

[காணி + ஆட்சி + மிராசு]

காணியாட்சியூர் *kāṇi-y-āṭci-y-ūr,* பெ. (n.) குடிவழியுரிமையுள்ள ஊர்; hereditary village.

[காணி +ஆட்சி + ஊர்.]

காணியாண்மை *kāṇi-y-āṇmai,* பெ.(n.) காணியாட்சி (புது.கல்வெட்டு.745); hereditary right to land etc.

[காணி + ஆண்மை.]

காணியாளன்[1] *kāṇi-y-āḷaṉ,* பெ.(n.) 1. காணி யாட்சியுள்ளவன்; proprietor of land. 2. உழவின் மேல் ஊக்கமுள்ள குடி (சிலப். 5:43,உரை); hard working agriculturist. 3. அந்தணரில் ஒருவகுப்பார் (G.Tj.D.78); a sub-division of Smartha Brahmans.4. வேளாளருள் ஒரு வகுப்பார் (G.Tj.D.81); a sub-division of *Vēḷāḷas.*

ம. காணியாளன்; க. காணியால.

[காணி + ஆளன்.]

காணியாளன்[2] *kāṇi-y-āḷaṉ,* பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish. *"வயலி னுதிக்குங் காணி யாளனும்" (பறாளை . பள்ளு.16).*

[காணி + ஆளன்.]

காணிவெட்டி *kāṇi-veṭṭi,* பெ.(n.) வரிவகை; a kind of tax. இவ்வூர்ப் பிடாகை ஒபாதி இறை என்றும் நீர்விலை என்றும் தவணைக்காடி என்றும் நெலெ இத்தன் என்றும் ஆயம் அந்தராயமென்றும் இறையிலிக்காசு என்றும், மாவிறையென்றும் உள்ச்சேவக மென்றும் காணிவெட்டி என்றும்" (S.I.I.V.1003-4 pg.383).

[காணி + வெட்டி.]

காணீலம் *kāṇīlam,* பெ.(n.) கொடிவேலி; Ceylon leadwort (சா.அக.).

[காள் + நீலம்.]

காணுகம் *kāṇugam,* பெ.(n.) காகம்; crow (த.சொ.அக.).

[காள் → கானகம் (கருப்பு) → காணுகம்.]

காணுங்கோள் *kāṇuṅ-kōḷ,* பெ.(n.) கண்ணுக்குப் புலனாகும் கோள் (வின்.); visible planets, opp. to *kaṇā-k-kōḷ.*

[காணும் + கோள்.]

காணும்[1] *kāṇum,* இடை. (part.) முன்னிலைப் பன்மையில்வரும் ஓர் அசை; expl. in the 2nd pers. pl. in compounds.நீர்பேங்காணும் (தஞ்சை.).

[காண் → காணும்]

காணும்[2] *kāṇum,* வி.மு.(v.fin.) போதுமானது; sufficient. இந்த அரிசி இரண்டு மாதத்துக்குக் காணும் (உ.வ.).

[காணுதல் : பார்வைக்கு ஒப்பாயிருத்தல், நிறைவளித்தல்.]

Chin. kān; **Gothic.** kunnama.

காணும்பொங்கல் *kāṇum-poṅgal,* பெ.(n.) மாட்டுப் பொங்கலை அடுத்து ஒருவரை ஒருவர் கண்டு நலம் உசாவும் கொண்டாட்ட நாள்; the day of social visit, following the *māṭṭu-poṅgal.*

மறுவ. காண்பொங்கல்

[காண்பொங்கல் → காணும்பொங்கல்.]

காணும்பொழுது *kāṇum-poḻudu,* பெ.(n.) கதிரவன் தோற்றம்; sunrise. *'படுத்திருந்து காணும்பொழுதி லெழுந்து"(தெய்வச். விறலி.44.).*

[காண் + உம் + பொழுது.]

காணுமோர் *kāṉumōr,* பெ.(n.) காண்போர்; those who see. *"செலவு பெரிதினிது நிற்காணு மோர்க்கே"(பதிற்றுப். 83: 5).*

[காண் → காணுமோர்]

காத்தட்டி *kāttaṭṭi,* பெ.(n.) ஆதொண்டை (வின்.) என்னும் முட்செடி வகை; thorny creeper.

மறுவ. காற்றோட்டிக்கொடி, காத்தொட்டி; காத்தோட்டி

[காற்றோட்டி → காத்தட்டி.]

காத்தடி *kā-t-taḍi,* பெ.(n.) காவடித்தண்டு (வின்.); pole for carrying burdens.

[கா + தடி.]

காத்தண்டு[1] *kā-t-taṇḍu,* பெ.(n.) காவடியின் தண்டு (குறள்,1163,உரை); pole for carrying on the shoulder weights balanced at both ends.

மறுவ.சீர்

[கா + தண்டு.]

காத்தண்டு[2] *kā-t-taṇḍu,* பெ.(n.) 1. தோட்டத்தில் விளையும் தண்டாகிய கீரைத்தண்டு; a kind of garden green. 2.வாழைத்தண்டு; amaranthus blitum (சா.அக.).

[கா + தண்டு.]

காத்தய்யன் *kāttayaṉ,* பெ.(n.) ஓர் ஊர்த் தெய்வம்; a village deity. *"பாரிய காத்தய்யா" (பஞ்ச.திருமுக. 655).*

[கா + அய்யன்.]

காத்தவராயன் *kātta-varāyaṉ,* பெ.(n.) 1. ஊரில் காணப்படும் சிறு தெய்வங்களுள் ஒன்று; a village deity. 2. காவல் புரிபவன் (W.G.); watchman, guard.

[காத்தான் +அரையன்.]

காத்தாயி *kāttāyi,* பெ. (n.) சிற்றூரில் காணப்படும் சிறு பெண் தெய்வங்களுள் ஒன்று; a village goddess.

[காத்தாள் →ஆயி.]

காத்தான் *kāttāṉ,* பெ.(n.) ***காத்தவராயன்*** பார்க்க; see *kāttava-rāyaṉ.*

காத்தானம் *kāttāṉam,* பெ.(n.) மரப்பொந்து; the hollow of a tree (சா.அக).

[கா→ தானம்.]

காத்தி *kātti,* பெ.(n.) காவென்னும் அடியாற் பிறந்த ஓர் ஏவல் வினைமுற்று; imperative finite verb. *"நன்று காத்தி யென்றி ராமனு மெதிர் செல நடந்தான்" (இராமா. கரன்.148).*

[கா → காத்தி.]

காத்திடல் *kāttiḍal,* தொ.பெ.(vbl.n.) காத்தல்; to guard. *"ஒருசத்தி... காத்திடலால்" (கந்தபு. திருநகர.65).*

[கா → காத்து + இடல்.]

காத்திரம் *kānttiram,* பெ.(n.) சினம் (பிங்.) anger.

[ஆத்திரம் → காத்திம்.]

காத்திரன் *kāttiraṉ,* பெ.(n.) வலியோன் (யாழ்.அக.); strong man.

[கா → காத்திரன்.]

காத்திரு-த்தல் *kāttiru-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. எதிர்பார்த்திருத்தல்; to wait, expect, watch for, look for. 2. காவல்பூண்டிருத்தல்; to safeguard, as one's property. *"பொருள் காத் திருப்பனேல் அ ஆ இழந்தான்"(நாலடி, 9).*

து.காதொநுநி

[கா + இரு.]

காத்தூட்டு-தல் *kāttūttu,* 5 செ.குன்றாவி. (v.t.) தன் கொள்கையை அடிக்கடி பயன்படுத்தி மகிழ் வூட்டுதல்; to make frequent use of one's dogma in such a way as to make it pleasant. *'அது நிலைநிற்கைக்காகவும் அத்தைக் காத்தூட்டு கைக்காகவும்' (திவ்.திருப்பா.29.வியா.).*

[காத்து + ஊட்டு.]

காத்தூலம்[1] *kāttūlam,* பெ.(n.) பழங்காலத்து வழங்கிய துகில் வகை(சிலப்.14:108,உரை); a garment of ancient times.

[கா = பாவல், அகலம். கா + தூலம்.]

காத்தூலம்[2] *kāttūlam,* பெ.(n.) அதிகமாய்க் கள்ளைக் குடிப்பதால் ஏற்படும் உடல் பாரிப்பு; stoutness of the body through drinking too much of toddy (சா.அக.).

[கா + தூலம்.]

காத்தை *kāttai,* இடை.(part.) ஓர் அசை நிலை (தொல்.சொல்.426, உரை); an expletive.

[ஆத்தாள் → ஆத்தை → காத்தை.]

காத்தொட்டி *kāttoṭi,* பெ.(n.) ஆதொண்டைச் செடி; thorny creeper.

[காற்றொட்டி → காத்தொட்டி.]

காதகம் *kādagam,* பெ.(n.) 1. கொலை; killing. 2. துன்புறுத்துதல்; harrassing.

[கொல் → கோறு → சாறு → சாது → சாதுகம் → சாதகம்.]

காதகன் *kādagaṉ,* பெ.(n.) 1. கொடுந்திறல் படைத்தவன்; astute man. 2. கொலையாளி; murderer (பிங்.).

[காது → காதுவன் → காதகன்.]

காதடை-த்தல் *kādaḍai-,* 4 செ.கு.வி.(v.i.) நோய், பசி முதலியவற்றால் செவி கேளாது போதல்; to experience a choking sensation in the ear owing to fatigue,hunger, disease etc.

ம. காதடயுக

[காது + அடை.]

காதடைப்பு *kādaḍaippu,* பெ.(n.) பசி, நோய் முதலியவற்றால் காதுகேளாமை; deafness occasioned by fatigue, disease, etc.,

[காது + அடைப்பு.]

காதணி *kādaṇi,* பெ.(n.) காதுக்கிடும் அணிகலன் (திவா.); ear ornament.

[காது + அணி.]

காதம்[1] *kādam,* பெ.(n.) 1. பண்டைய நீட்டல் அளவு; a linear measure of ancient times. *"ஆறைங்காதம்" (சிலப்).* 2. ஏழரை நாழிகை வழி; a distance of walk of three hours.

க. காவத, காவுத; ம.காதம்; து.காவுத.

[கா(நீட்சி) → காவு → காவதம்.]

காதம்[2] *kādam,* பெ.(n.) 1. கள்; toddy. 2. நாற் சதுரமான துரவு(கிணறு); small, square well.

[கள் → கதம் → காதம்.]

காதம்[3] *kādam,* பெ.(n.) 1. கொலை (வின்.); killing, slaughter, murder.

[கொல் → கோறு → காறு → காது → காதம்.]

காதம்பம்[1] *kādambam,* பெ.(n.) 1. அன்னப் புள்வகை (வின்.); a kind of swan with dark grey wings. 2. கானாங்கோழி (பிங்.); a kind of wood-fowl with long legs. 3. தயிரேடு; cream on curded milk.

[கது = (சிறியது)→கதும்பம்→காதம்பம்.]

காதம்பம்[2] *kādambam,* பெ.(n.) 1. கரும்பு; sugarcane. 2. அம்பு; arrow (சா.அக.).

[காழ்→காடு → காது → காதம்பம்.]

காதம்பரம் *kātambaram,* பெ.(n.) 1. தயிரேடு; cream deposited on curdled milk. 2. சருக்கரை; sugar (சா.அக.).

[காழ்→காடு → காது → காதம்பரம்.]

காதம்பரி *kādambari,* பெ.(n.) ஆதிவராக கவியால் வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்க் காவியம் (செந்.5:492); Tamil rendering of the Sanskrit *Kādambari* of *Bāna* by *Adi-varāgakavi.*

[கடம்பு (மரம்) → காதம்பரம் (கடம்பு மலர்) → காதம்பரி.]

பாணபட்டர் என்பவரால் வடமொழியில் இயற்றப்பட்ட நூல்.

காதரம் *kādaram,* பெ.(n.) 1. அச்சம்; timidity, want of courage. *"காதரந் தீர்த்தருளும்" (திருக்கோ. 117).* 2. தீவினைத் தொடர்பு; effect of evil deeds upon the soul. *"காதரமடைந்தாள் போலக் கவலையுஞ் சிறிதுதோன்ற" (திருவிளை.வலை.3.).*

[காத்திரம்→காதரம்.]

காதரவு *kādaravu,* பெ.(n.) பாதுகாப்பு; protection. *"காதரவு செய்துநலங் கற்பித்து" (அருட்பா, 1,நெஞ்சறி.170).*

[காத்தல் → அரவு → காத்தரவு → காதரவு (ஆதரவு.]

காதரன் *kādaraṉ,* பெ.(n.) அச்சமுடையவன் (பிங்.); timid person.

[காதரம் → காதரன்.]

காதரி *kādari,* பெ.(n.) மரமஞ்சள்; tree-turmeric (சா.அக.).

[காதுதல் (சினத்தல், எரிதல், மஞ்சள்நிறம்) → காத்தரி → காதரி.]

காதல்[1] *kādal,* பெ.(n.) 1. அன்புடைமை; warm attachment, fondness, love, affection. *"காதல் வேண்டி யெற்றுறந்து போதல் செல்லா வுயிர்" (அக.நா.55)* 2. காமவிச்சை; lust. 3.இறையுணர்வு; reverence, devotion. *"காதலா னெஞ்சமன்பு கலந்திலேன்" (திவ்.திருமாலை,26).* 4. வேட்கை; desire, longing. *"காதலாற் காம பூமிக் கதிரொளி யவரு மொத்தார்" (சீவக.189).* 5. ஆவல் (வின்.); earnestness, intentness, eagerness. 6.மகன்; son, as an object of love. *"இராவணன் காதல்" (கம்பரா.பிரமா. 164).* 7. சிற்றிலக்கிய வகை; a kind of poem with amorous theme. *"கூளப்ப நாயக்கன் காதல்"*

ம., க. காதல்; தெ.காதிலி; கூ. காதி.

[கதுவுதல் = பற்றுதல், அணைத்தல் அன்பு செலுத்துதல். கது → கதுவு→ கதுவல் → காதல். ஒ.நோ. நல் = செறிவு, நெருக்கம், அன்பு. க. நல்லை = காதலி, மனைவி.]

காதல்[2] *kādal,* பெ.(n.) 1. கொல்லுகை (சூடா.); killing. 2. தாக்குகை; fighting. *"காலனென்மேற் காதலையானின் புறந்தோற்றிமாற்று" (மருதூ.84).* 3. தறிக்கை (வின்.); cutting in pieces, breaking. snapping. 4. ஆந்தை முதலியவற்றின் ஒலி; cry, chirp of certain birds, as ominous. 5. எதிராப்பு (வின்.); peg for driving out nails.

[காது → காதல்.]

காதலம் *kādalam,* பெ.(n.) ஒருவகைமீன்: a kind of fish. (சா.அக)

[கது → கதலம்–காதலம்.]

காதலவர் *kādalavar,* பெ.(n.) 1. அன்புக் குரிய மனைவிமக்கள் முதலியோர்; wife, children, etc., as objects of one's affection. 2.சுற்றத்தார்; relatives. *"கைம்மக வோடுங் காதலவ ரொடும்" (பரிபா.15:47).*

[காதல் → காதலவர்]

காதலன் *kādalaṉ,* பெ.(n.) 1. அன்புள்ளவன் (பிங்.); lover, suitor. 2.கணவன்; husband. *"காதல ிறப்பிற் கனையெரி பொத்தி" (மணிமே.2:42).* 3. நண்பன்; intimate friend, choice associate. *"தீயின் காதலன் விடை கொண்டேகி" (கந்தபு. திருவவ.10).* 4. மகன்; son. *"அறத்தின் காதலன்" (பாகவ.1.6:1).*

ம. காதலன்; க. காதல்.

[காதல் → காதலன்.]

காதலான் *kādalāṉ,* பெ.(n.) **காதலன்** பார்க்க; see *kādalaṉ. "கரை காணாக் காதலான்" (கம்பரா. குகப்.26). "காதலான் காதல் போல" (சீவக.1666).*

[காதல் → காதலன்.]

காதலி[1]-த்தல் *kādali-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. அன்பு கூர்தல்; to love, delight in; to be fond of; to be warmly attached to. *"காதலித் தாதுநா மென்னு மவாவினை"(நாலடி, 181).* 2. விரும்புதல்., to long for, desire. *"கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோதுவார்" (கந்தபு பாயி. நூற்பய.).*

[காதல் → காதலி.]

காதலி[2] *kādali,* பெ.(n.) 1. அன்பு கொண்டவள்; a beloved woman, sweet heart. 2. மனைவி; wife. *"காதலி தன்னொடு கைதொழு தெடுத்து" (மணிமே.13:20).* 3. மகள்; daughter. *"காதலிதன் காதலனைக் கண்ணுற்றான்"(நள.கலிநீ.67).* 4. தோழி; lady's maid. *"காதலி மாரொடும் - பெருகுங் காதலைப் பேசுகின் றார்சிலர்" (கந்தபு. திருக்கல்.21).*

[காதல்→காதலி.]

காதலித்தவன் *kādalittavaṉ,* பெ.(n.) ***காதலித் தோன்*** *(சூடா.)* பார்க்க; see *kādalittōṉ.*

[காதலி → காதலித்தவன்.]

காதலித்தோன் *kādalittōṉ,* பெ.(n.) அன்பன் (பிங்.); friend, lover.

[காதலி→ காதலித்தோன்.]

காதலோன் *kādalōṉ,* பெ.(n.) 1. அன்பன், கணவன்,தலைவன்; lover, husband. *"தாம்வந்த னர்நங் காத லோரே" (ஐங்குறு.270.).* 2. மகன் (ஐங் குறு.); son.

[காதலன்→ காதலோன்.]

காதவம்[1] *kādavam,* பெ.(n.)வான்கோழி (யாழ்.அக.); turkey fowl.

[கது→ கதுவம்→ காதவம்.]

காதவம்[2] *kādavam,* பெ.(n.)1. சீந்தில்; moon, creeper. 2.நிலவேம்பு; ground neem. 3.ஆல்; ban-yan.

[கதம்(சாறு)→ கதவம்→ காதவம்.]

காதளிகம் *kādaḷigam,* பெ.(n.) சிறுசின்னி; birch-leaved acalypha (சா.அக).

[காழ் → காடு → காது → காதுளி→ காதளிகம்.]

காதற்பரத்தை *kādaṟ-parattai,* பெ.(n.) சேரிப் பரத்தையின் மகளாய்த் தலைவனது காதற்குரிமை பூண்டு அவனையே சார்ந்திருப்பவள் (ஐங்குறு.90, உரை.); (Akap.) woman of the courtezan class warmly attached to a hero and not residing in his quarters, dist. fr. *iṟ-parattai. "யாரையு நயவா வியல்பிற் சிறந்த சேரிப்பரத்தையர் மகளி ராகிக் காதலிற் புணர்வோர் காதற் பரத்தையர்"(அகப். அகத்.114.).*

[காதல் + பரத்தை.]

காதற்பாங்கன் *kādaṟ-pāṅgaṉ,* பெ.(n.) தலை வனுக்கு உற்ற நண்பன்; intimate friend of the hero. *"மன்னவன் றனக்குக்... காதற் பாங்க னாதலின்" (மணிமே.28, 125).*

[காதல் + பாங்கன்.]

காதற்பிள்ளை *kādaṟ-piḷḷai,* பெ.(n.) காதலிக்குப்பிற வளர்ப்பு மகன்; foster child. *"அரசர் காதற் பிள்ளையாய்" (பெரியபு. தடுத்தாட்.6).*

[காதல் + பிள்ளை.]

காதற்ற முறி *kādaṟṟa-muṟi,* பெ.(n.) செலுத்தற் குரியதை செலுத்தித் தீர்த்துக் கிழித்துவிட்ட ஓலையாவணம் (வின்.); cancelled bond written on a palmyra leaf.

[காது + அறு + முறி – காதற்றமுறி.]

காதற்றோழி *kādaṟṟōḻi,* பெ.(n.) *தலைவியின் அன்புக்குரிய பாங்கி (திருகோ.50,அவ.);* confidant of a heroine.

[காதல் + தோழி.]

காதறு[1]-தல் *kādaṟu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. காதின் துளை அறுதல்; to have the perforated lobe of the

ear cut or torn. 2. ஆவணம் தீர்க்கப்பெற்றுக் கிழிபடுதல்; to be cancelled, as a bond, by mutilation. 3. செருப்பின் வாரறுதல் (இ.வ.); to snap, as the thong of a sandal. 4.ஊசித்துளை முறிதல்; to have the eye of a needle broken. *"காதற்ற வூசியும் வாராது காணும்"(பட்டினத். திருப்பா. பொது. 10.).* 5. கவணிற் கல்வைக்கும் இடம் அற்றுப்போதல்; to have that part of the sling snapped from which the stone is generally thrown. *"காதறு கவண தேய்க்கும்" (ஐங்குறு. பக்.143. பாட்டு,1).* 6.பகை கொள்ளுதல் (யாழ்.அக.); to become inimical.

[காது + அறு.]

காதறு²-த்தல் *kādaṟu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. காதின் துளையை அறுத்தல்; to rend the ear, as by tearing off the ear-rings. *'காதறுத்த கூலி கைமேலே' (வின்.).* 2. ஆவணத்தை அறுதியாகத் தீர்த்துக் கிழித்துவிடுதல்; to cancel a bond, as by mutilating it.

[காது + அறு.]

காதறுப்பான் *kādaṟuppāṉ,* பெ.(n.) காதைச் சுற்றி வரும் புண் (வின்.); a sore that appears around the ear.

[காது + அறுப்பான்.]

காதறை¹ *kādaṟai,* பெ.(n.)1. காதறுபட்ட ஆள்; one whose ear has been cut off or mutilated. 2. காதுக்குழி; cavity of the ear. 3. கெட்டது; that which is spoiled. 4. செவிடு; deaf.

Fin. kūro;**Karel.** kūmeh;**Es.** kurt;**Livonian.** kūrli;**Q.** karu.

[காது + அறு – காதறு → காதறை.]

காதறை² *kādaṟai,* பெ.(n.) சம்பங்கிப்புல்; fragrant champak grass (சா.அக.).

[கா = பரவுதல், மணம் பரவுதல். கா → காதல் → காதறை.]

காதறை கூதறை *kādaṟai-kūdaṟai,* பெ.(n.) ஒழுக்கங்கெட்டவள் (இ.வ.); a disreputable woman.

[காதறை + கூதறை.]

காதறைச்சி *kādaṟaicci,* பெ.(n.) சண்டை பிடிப்பவள். (யாழ்.அக.); quarrel some woman, as one who rends the ear.

[காது + அறு – காதறு → காதறைச்சி.]

காதன் *kādaṉ,* பெ.(n.) கொலை செய்பவன் (வின்.); murderer.

[காதுதல் = வெட்டுதல். காது → காதன்.]

காதன்மை *kādaṉmai,* பெ.(n.) 1. அன்பு; affection, attachment. *"காதன்மை கந்தாவறி வறியார்த் தேறுதல்" (குறள், 507).* 2. விருப்பம்; desire. *"காதன்மை கையல் லதன் கட் செயல்"(குறள்; 832).*

[காதல் → காதன்மை.]

காதாங்கி *kādāṅgi,* பெ.(n.) பாற்சொற்றிப்பாலை (மலை.); Indian guttapercha.

[கதம் (சாறு, பால்) → காதம் → காதாங்கி.]

காதார்-தல் *kādār-,* 2 செ.குன்றாவி.(v.t.) 1. காதில் அணிகலன் அணிதல் (தேவா.); towear on the ear as a jewel. "காதார் குழையாட". 2. தன் செவிப் புலன் நிரம்புதல்; to near tothe full satisfaction of the ears.

[காது + ஆர் – காதார் = காதார.]

காதித்தம் *kādittam,* பெ.(n.) 1. கஞ்சா; ganjah. 2. குறிஞ்சா; Indian ipecacuanha (சா.அக.).

[காதித்தல் + கதித்தம் – காதித்தம்.]

காதிதம் *kādidam,* பெ.(n.) ஓர் எண்ணை அதனாலேயே ஒருமுறையேனும் பலமுறையேனும் பெருக்கிவந்த தொகை(வின்.); result arising from the multiplication of a number by itself.

[காது = மோதுதல், பெருக்குதல். காது → காதிதம் (பெருக்கல்).]

காதிரைச்சல் *kādirai-c-cal,* பெ.(n.) காதடைப் பால் உண்டாகும் குமுறல் (வின்.); ringing in the ear.

[காது + இரைச்சல்.]

காதில்விழு—தல் *kādil-vilu-,* 2 செ.கு.வி. (v.i.) காதுக்குச் செய்தியெட்டுதல்; to reach one's ears, to be heard.

ம. காதில் வீழுக

[காது→ காதில் + விழு.]

காதிலடிபடு—தல் *kādil-adi-padu-,* 20 செ.கு.வி. (v.i.) அடிக்கடி செய்தி கேட்கப்படுதல்; to be heard frequently,as news.

[காது→காதில் + அடி +படு.]

காதிலி *kādili,* பெ.(n.) செவிடன், செவிடி; deaf person.

[காது+ இலி]

காதிலோது—தல் *kādil-ōdu-,* 5 செ.குன்றாவி. (v.t.)1. மந்திரம் சொல்லிக்கொடுத்தல்; to initiate a disciple by whispering a mantra in his ear. 2.மறைபொருள் (இரகசியம்) சொல்லுதல்; to whisper in the ear, as secrets. 3. கோட் சொல்லுதல் (உ.வ.); to back-bite, to carry tales

[காதில் + ஓது.]

காதிற்சவ்வு *kādir-cavvu,* பெ.(n.) காதிலுள்ள குருத்து; ear-rum, tympanum.

[காதில் + சவ்வு.]

காது[1] *kādu,* பெ.(n.) 1. ஒலியைப்பற்றும் செவி; ear. *"வடிந்துவீழ் காதினள்"(சிலப்.4:51).* 2. ஊசி முதலியவற்றின் துளை; hole through which thread, rope, hook, pin or shaft is passed; as the eye of a needle. *"காதற்ற ஊசியும்" (பட்டினத். திருப்பா.பொது.10.).* 3.கவண்கல் வைக்குமிடம்; the groove in a sling in which is placed the sling-stone. *"காதறு கவணதேய்க்கும்" (ஐங்குறு. பக்.143, பாட்டு,1).* 4.புகையிலையின் காம்பு (இ.வ.); part near the stem of a tabacco leaf. 5. ஏனங்களின் விளிம்புப்பிடி; ear of a jar; projection in the rim of a vessel serving as a handle. 6. அடித்து இறுக்கப்படும் ஆப்பு(வின்.); small wedge to hold in its place a tenon, a handle, a peg.

ம.காது

H., V., Guj., Ben., Ori. kān; **Punj.** kash, kan; **Sind.** kann; **Ass.** kaṇu. **Afri. Koraofanian.** ki-t kicu; **Charian.** ku-wo; Hansa. ka-nne; **Nigero-cameroonian.** n-kki.

[கது → காது (மு. தா. 210.]

காது[2]**—தல்** *kādu-,* 5 செ.குன்றாவி(v.t.) 1. கொல்லுதல்; to kill, slay, murder. *"அவுணர் தங்கிளையைக் காதி" (கந்தபு.விடை.43).* 2. வெட்டுதல்; to cut. *"குயத்தாற் காதி" (கந்தபு. வில்வலன் வாதாவிவதை.15).* 3. பிரிவு செய்தல் (வின்.) ; to divide, dissect.

க., பட. காது; து.காதுநி.

Fin. kātā; **Karel.** koada; **ED.** kāduma; **Jap.** katsu; **Q.** fatikaca.

[கொல் → கோறு → கோது → காது.]

காது[3] *kādu,* பெ.(n.) கொலை (சூடா.); murder.

[கொல் → கோறு → கோது → காது.]

காதுக்கரப்பான் *kādu-k-karappāṉ,* பெ.(n.) காதின் வெளிப்புறத்திற் காணும் நோய் (M.L.); inflammation of the external part of the ear.

[காது + கரப்பான்.]

காதுக்கற்சட்டி *kādu-k-kar-catti,* பெ.(n.) காதுள்ள மாக்கற் சட்டி (உ.வ.); eared vessel made of soap-stone.

[காது + கல் + சட்டி.]

காதுக்கிண்ணம் *kādu-k-kiṇṇam,* பெ.(n.) விளிம்பிலே பிடிப்புள்ள கிண்ணம்; vessel with projections in the rim for lifting.

[காது + கிண்ணம்.]

காதுக்குடைச்சல் *kādu-k-kudaiccal,* பெ.(n.) காதுநோய்வகை (M.L.); inflammation of the ear.

[காது + குடைச்சல்.]

காதுக்குத்தல் *kādu-k-kuttal,* பெ.(n.) ***காதுக் குத்து*** பார்க்க; see *kadu-k-kutu.*

[காது + குத்தல்.]

காதுக்குத்து *kādu-k-kuttu,* பெ.(n.) உட்காதில் உண்டாகுங் குத்து நோய் (M.L.); ear-ache.

மறுவ. காதுக்குத்தல்

[காது + குத்து.]

காதுக்குறும்பி *kādu-k-kurumbi,* பெ.(n.) 1. காதுப் பீளை; ear-wax,cerumen. 2. குறும்பி வாங்கி; ear-cleaner.

[காது + குறும்பி.]

காதுகடி-த்தல் *kādu-kadi,* 4 செ.கு.வி.(v.i.) 1. மந்தணம் (ரகசியம்)மாகச் சொல்லுதல்; to whisper in the ear.

ம. காதுகடிக்குக

[காது + கடி.]

காதுகன் *kādugan,* பெ.(n.) 1.கொலைகாரன்; murderer. 2. கொடியோன்(சங்.அக.); wicked person.

[கொல் → கோறு → கோது → காது → காதுகன்.]

காதுகிழி-த்தல் *kādu-kili-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஆவணத்தை அறுதியாக்கிக் கிழித்தல் (இ.வ.); lit, to tear the ear, to tear the top of a bond written on a palmyra-leaf as far as the hole through which it is filed, to tear the stamped part of an indenture or bond, in token of its discharge.

[காது + கிழி.]

காதுகிள்ளு-தல் *kādu-killu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. ***காதுகிழி-*** (இ.வ.) பார்க்க; see *kādu-kili-* 2.***காதுகுத்து-***[2] பார்க்க; see *kādu-kuttu-.*

[காது + கிள்ளு.]

காதுகுடை-தல் *kādu-kudai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. காதிற் குடைச்சல்நோய் உண்டாதல் ; to have itching or tingling pain in the ear. 2. காதுக்குறும்பி எடுத்தல்; to clear the ear of wax. 3. காதில் குறுகுறுப்பு ஏற்படும் போது பறவை இறகால் தடவுதல்; to rule with birds feather when he ear feels for it.

ம. காதுகுத்து

[காது + குடை.]

காதுகுத்தல் *kādu-kuttal,* பெ.(n.) 1. காதுகுத்துந் திருவிழா; ear-boring ceremony. 2. காதுநோய் வகை; a disease of the ear.

[காது + குத்தல்.]

காதுகுத்து[1]-தல் *kādu-kuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. காதில் அணிகலன் அணிய துளை போடுதல்; to bore the ear for wearing ear ornaments. *"கேசவ நம்பீ யுன்னைக் காதுகுத்த" (திவ்.பெரியாழ்.2,3:1,).* 2.வஞ்சித்தல்; to beguile, deceive, mislead.

ம. காதுகுத்துக

[காது + குத்து.]

காதுகுத்து[2]-தல் *kādu-kuttu-,* 5 செ.கு.வி. (v.i.) காதுக்குள் நோவெடுத்தல்; to feel pain in the inner part of the ear.

[காது + குத்து.]

காதுகுத்துகிறவர் *kādu-kuttukiravar,* பெ.(n.) காதுகுத்துந் தொழிலையுடைய தட்டாரி வகை யினர்; a class of goldsmith whose profession is to perforate the ear-lobes.

[காது + குத்துகிறவர்.]

காதுகுளிர்-தல் *kādu-kuli-,* 2 செ.கு.வி.(v.i.) செவிப்புலனுக்கு இன்பமாதல்; to experience a pleasant sensation in the ear, as in hearing sweet music; to hear good news.

[காது + குளிர்.]

காதுகை *kādugai,* பெ.(n.) கொல்லுகை; killing. *"மால்க ளிற்றினைக் காதுகை நீக்கி" (கந்தபு. மார்க்கண் 283).*

[காது² → காதுகை.]

காதுகொடு-த்தல் *kādu-kodu-,* 4 செ.கு.வி. (v.i.) கவனித்துக்கேட்டல்; to give ear, hearken, listen, give attention to.காது கொடுத்துக் கேட்டேன் குவா குவா சத்தம் (உ.வ.).

ம. காதுகொடுக்குக

[காது¹ + கொடு.]

காதுச்சில்லறை *kādu-c-cillarai,* பெ.(n.) காதணிவகை; ear-ornament.

[காது + சில்லறை.]

காதுச்சோணை *kādu-c-cōṇai,* பெ.(n.) ***காதுத் தண்டு*** பார்க்க; see *kādu-t-tandu.*

[காது + சோணை.]

காதுசெய்-தல் *kādu-sey-,* 1. செ.கு.வி. (v.i.) ***காதுவளர்-*** பார்க்க; see *kadu-vaḷar-.* *"காது செய்வான் கூதைசெய்து" (திவ். திருவாய்.9. 1:9).*

[காது + செய்.]

காதுடம் *kāḍuḍam,* பெ.(n.) வாலைப்பூ நீறு; distilled liquid extracted from a solution of fuller's earth (சா.அக.).

[காது → காதுளம் → காதுடம்.]

காதுடனிருக்கான் *kāduḍaṉirukkāṉ,* பெ.(n.) தூக்கணாங்குருவி; Indian tailor-bird (சா.அக.).

[காது + உடல்(கூடு) +இருக்கான்]

காதுண்டி *kādundi,* பெ.(n.) குறுஞ்சூலி மரம்; toon tree (சா.அக.).

[கோது → கோதுண்டி → கோதுண்டி.]

காதுணம் *kāduṇam,* பெ.(n.) பாகல்; balsam pear (சா.அக.).

[காதுதல் → கோதுண்டி → கோதுண்டி.]

காதுத்தண்டு *kādu-t-taṇḍu,* பெ.(n.) காது மடலின் பகுதி (உ.வ.); lobe of the ear.

[காது + தண்டு.]

காதுதூர்-தல் *kādu-tūr-,* 2 செ.கு.வி.(v.i.) காதுமடலின் துளை தூர்தல்; the hole made for the ear ring in the ear lobe getting closed. *"வாமன நம்பியுன் காது தூரும்" (திவ்.பெரியாழ்2,3:8).*

[காது + தூர்.]

காதுநறுக்கு-தல் *kādu-narukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***காதுகிழி*** பார்க்க; see *kādu-kiḷi-.*

[காது + நறுக்கு.]

காதுப்பானை *kādu-p-pāṉai,* பெ.(n.) விளிம்புப் பிடியுள்ள பானை; vessel with projections in the rim serving as handle.

[காது + பானை.]

காதுப்பி *kādu-p-pi-,* பெ.(n.) ***காதுக்குறும்பி*** பார்க்க: see *kadu-k-kurumbi.*

[காது + பீ.]

காதுப்பூ *kādu-p-pū,* பெ.(n.) பூவடிவான காதணிவகை (வின்.); flower-shaped ear-ornament of women.

[காது + பூ.]

காதுப்பூச்சி *kādu-p-pūcci,* பெ.(n.) செவிப் பாம்பு (யாழ்ப்.); typhlope, as crawling into the ear.

[காது + பூச்சி.]

காதுபெருக்கு-தல் *kādu-perukku-,* 5 செ.கு. வி. (v.i.) ***காதுவளர்-*** பார்க்க; see *kadu-vaḷar-.* *"காதுபெருக்கித் திரியவுங் காண்டி" (திவ். பெரியாழ்.2.3:10).*

[காது + பெருக்கு.]

காதுமடல் *kādu-maḍal,* பெ.(n.) புறக்காது; external ear, conch.

[காது + மடல்.]

காதுமந்தம் *kādu-mandam,* பெ.(n.) செவிப்புலன் நன்றாகச் கேளாமை; dullness of hearing.

[காது + மந்தம்.]

காதுவலி *kādu-vali,* பெ.(n.) ***காதுக்குத்து²*** பார்க்க; see *kadu-k-kuttu.²*

[காது + வலி.]

காதுவளர்-த்தல் *kādu-vaḷar-,* 4 செ.கு.வி.(v.i.) காதின் அடித்தண்டிலுள்ள துளையைப் பெருக்குதல்; to enlarge the perforation of the ear for wearing ear-rings.

[காது +வளர்.]

காதுவிடாய் *kādu-viḍāy,* பெ.(n.) பசி முதலியவற்றால் உண்டாகுஞ் செவியடைப்பு; weakness, lassitude in hearing caused by hunger, sickness, etc.

[காது + விடாய்.]

காதுவிடு-தல் *kādu-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) ***காதுவெட்டு-*** பார்க்க; see *kadu-vettu-.*

[காது + விடு.]

காதுவெட்டு¹-தல் *kādu-veṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***காதுகிழி-*** பார்க்க; see *kādu-kiḻi-,*

[காது + வெட்டு.]

காதுவெட்டு²-தல் *kādu-veṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) ஏனத்தில் துளை விழுதல்; to punch a hole, as in an embossed stamp.

[காது + வெட்டு.]

காதெழுச்சி *kādeḻucci,* பெ.(n.) தேவையற்ற சதை வளர்ந்து காதைச் செவிடுபடுத்தும் நோய் வகை; a tumour visible in meatus causing loss of hearing.

[காது + எழுச்சி.]

காதெளிவு *kāteḷivu,* பெ.(n.) பொற்றலைக் கையாந்தகரை; verlisinia marigold (சா.அக.).

[கா + தெளிவு.]

காதை¹ *kādai,* பெ.(n.) 1. வரலாறு; story narrative. *"காதைகள் செப்பென" (சீகாலித்.4. நான்மு.155).* 2. சொல் (திவா.); word term vocable.3. கதை; tale. *"காதைமுகங்கண்டலராகம தாடகமா மெழிற் காரிகையாள்" (புலியூரந்.22.) "காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்" (இராமா.நாட்டு.51).*

[கதை → காதை.]

காதை² *kādai,* பெ.(n.) 1. பாட்டு (நீல.); poem. 2.கதையைக் கொண்ட பகுதி (*சிலப்.பதி.63, உரை*); division of a poem containing a narrative.

[கதை → காதை.]

காதை³ *kādai,* பெ.(n.) 1. கொலை (வின்.); killing, murder. 2. தாளத்தின் அடிப்பு; beating time, as of the right palm on the left.

[காதுதல் = மோதல். காது → காதை.]

காதைகரப்பு *kādai-karappu,* பெ.(n.) ஒரு செய்யுளை முடிய எழுதி அதன் ஈற்று மொழியுள் முதலெழுத்துந் தொடங்கி ஒரோர் எழுத்து இடையிட்டுப் படிக்கப் பிறிதொரு செய்யுள் வரப் பாடும் மிறைக்கவி (இலக். வி.690.உரை); stanza so composed, that, by begining with the first letter of the last word and reading backwards every alternate letter only, a new stanza is formed.

[காதை + கரப்பு.]

காதைநெறி-த்தல் *kādai-neṟi-,* 4 செ.கு.வி.(v.i.) உற்றுக்கேட்கும்படி குதிரை முதலிய விலங்குகள்

காதை நிமிர்த்தல் (வின்.); to cock the ear, as horses on hearing a frightful noise.

[காதை + நெறி.]

காதோதி *kādōdi,* பெ.(n.) தீய எண்ணத்தோடு கமுக்கமாகப் பேசுவோன் (வின்.); malicious whisperer.

[காது + ஓதி.]

காதோலை *kādōlai,* பெ.(n.) 1.காதுக்கிடும் பனங்குருத்தின் ஓலைச்சுருள்; small roll of a palmyra leaf often stained with magenta, used by women as an ornament inserted in the lobe of the ear. 2. மகளிர் காதணிவகை; ear ornament made of gold, gems, diamond, etc. worn by women.

ம. காதோல

[காது + ஓலை.]

காதோலை கருமாரி *kādōlai-karumāri,* பெ.(n.) தமிழ் நாட்டில் ஏழுகன்னிமார் வணக்கத்தின்போது படைக்கப் பெறும் ஓலை வளையமும் கறுப்பு வளையல்களும்; ring of palm leaf and black bangled placed for the worship of seven virgius.

[காது + ஓலை + கருமாரி.]

காந்தஊசி *kānta-ūsi,* பெ.(n.) ***காந்தவூசி*** பார்க்க; see *kāndavūsi.*

[காந்தம் → ஊசி.]

காந்தக்கம்பி *kānda-k-kambi,* பெ.(n.) 1. இடிதாங்கி; lightning rod. 2. மின்கம்பி; electric wire.

ம. காந்தக்கம்பி

[காந்தம் + கம்பி.]

காந்தக்கல் *kānda-k-kal,* பெ.(n.) அயக்காந்தம் (வின்.); magnet, loadstone.

ம. காந்தக்கல்லு

[காந்தம் + கல்.]

காந்தக்கழி *kānda-k-kali,* பெ.(n.) 1.கழியைப்போற் செய்த காந்தம்; bar-magnet. 2. மாத்திரைக் கோல்; magic wand; magnetic rod (சா.அக.).

[காந்தம் → கழி.]

காந்தகன் *kāndagan,* பெ.(n.) ஒருவகைச் செய்நஞ்சு; a kind of arsenic (சா.அக).

[காந்தம் → காந்தகன்.]

காந்தச்சவளை *kānda-c-cavaḷai,* பெ.(n.) காந்த மணல்; magnetic iron ore (சா.அக).

[காந்தம் → சவளை.]

காந்தச்செம்பு *kānda-c-cembu,* பெ.(n.) ஊதைச் செம்பு; an alchemical copper prepared from magnetism (சா.அக.).

[காந்தம் → செம்பு.]

காந்தசத்துரு *kānda-šatturu,* பெ.(n.) காந்தத்துக்கு மாற்றுச்சரக்கு (வின்.); that which counteracts the magnetic power, as blue vitriol, sal-ammoniac, saltpetre.

[காந்தம் + சத்துரு.]

காந்தசிந்தூரம் *kānda-šindūram,* பெ.(n.) காந்தத்தைப் புடமிட்டுச் செய்யப்படும் சிந்தூரம் (பாதார்த்த.1205); loadstone powder of red colour prepared by chemical process (red-oxide).

[காந்தம் + சிந்தூரம்.]

காந்தப்பர் *kāndappar,* பெ.(n.) ***காந்தருவர்*** பார்க்க; see *kāndaruvar.*

[காந்தருவர் → காந்தப்பர்.]

காந்தப்பெட்டி *kānda-p-peṭṭi,* பெ.(n.) திசையறி கருவி (வின்.); mariner's compass, engineers compass.

ம. காந்தப்பெட்டி

[காந்தம் + பெட்டி.]

காந்தபசாசம் *kānda-pašāšam,* பெ.(n.) காந்தக் கல்; loadstone, magnet. *"காந்த பசா சம்போ லவ்வினையைப் பேராம லூட்டும்" (சி. போ.சிற்.2.2:2)*

[காந்தம் + பசாசம்.]

காந்தபற்பம் *kānda-parbam,* பெ.(n.) காந்தத் திஷின்று செய்யப்படும் பொடி; load stone powder made by chemical process.

[காந்தம் + பற்பம்.]

காந்தபுராணம் *kānda-purāṇam,* பெ.(n.) பதினெண்தொன்மத்துள் ஒன்று; a chief purāṇa, one of the 18 purāṇas.

மறுவ. காந்தம்

[கந்தபுராணம் → காந்தபுராணம்.]

காந்தம்[1] *kāndam,* பெ.(n.) 1. ***காந்தக்கல்*** பார்க்க; see *kanda-k-kal. "நாராசத் திரிவிற் கொள்ளத் தகுவது காந்தம்" (மணிமே.27;56).* 2. ஒருவகைப் பளிங்கு; a class of crystals, as šūriyā-kandam, šantira-kāndam. 3. அழகு (உரி.நி.); beauty, loveliness, attractiveness. 4. உலகநடையைக் கடவாது பொதுவாக யாவரும் மகிழும்படி புகழ் வதாகிய செய்யுட்குணம் (தண்டி.22); (Rhet.) description within conventional limits, satisfying the aesthetic sense, a merit of poetie composition. 5.மின்சாரம்; electricity.

Skt kānta.

[காந்து → காந்தம்.]

காந்தம்[2] *kāndam,* பெ.(n.) ***காந்தபுராணம்*** (திவா.); பார்க்க; see *kāndapurāṇam.*

காந்தம்பிடி–த்தல் *kāndam-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) ***காந்தம் வலி–*** பார்க்க; see *kāndam-vali.*

[காந்தம் + பிடி.]

காந்தம்வலி–த்தல் *kāndam-vali-,* 4 செ.கு.வி. (v.i.) காந்தம் இரும்பை இழுத்தல்; to attract an iron piece with magnetic force.

[காந்தம் + வலி.]

காந்தமண் *kānda-maṇ,* பெ.(n.) காந்தச் சத்துள்ள செம்மண்(வின்.); magnesite wherein is found carbonate of magnesia, red earth.

[காந்தம் + மண்.]

காந்தமண்ணுப்பு *kāndamaṇṇuppu,* பெ.(n.) வேதியுப்பு; epsom salt (சா.அக).

[காந்தமண் + உப்பு.]

காந்தமணி *kānda-maṇi,* பெ.(n.) ***காந்தக்கல்*** (வின்.) பார்க்க; see *kānda-k-kal.*

[காந்தம் + மணி.]

காந்தமயமலை *kānda-maya-malai,* பெ.(n.) காந்தமும் இரும்பும் கலந்து கிடைக்கப் பெற்ற மலை; mountain containing magnet mixed with iron ore (சா.அக.).

[காந்தம் + அயம் + மலை.]

காந்தமலை *kānda-malai,* பெ.(n.) நிலப்பகுதியின் வடகோடியிற் காந்தமயமாயுள்ளதாகக் கருதப் படும் மலை (வின்.); mountain far north regarded as the centre of attraction to the magnet; the magnetic pole.

[காந்தம் + மலை.]

காந்தமூட்டு–தல் *kānda-mūṭṭu-,* 5 செ.கு.வி (v.i.) காந்த சக்தி கொடுத்தல்; inducing magnetism (சா.அக).

[காந்தம் + ஊட்டு.]

காந்தர்ப்பம் *kāndar-p-pam,* பெ.(n.) ***காந்தருவம்*** பார்க்க; see *kāndaruvam. "காந்தர்ப்ப மென்ப துண்டால் .... மறைகளே வகுத்த கூட்டம்" (கம்பரா. சூர்ப்பண.54).*

[காந்தருவம் → காந்தர்ப்பம்]

காந்தருப்பம் *kāndaruppam,* பெ.(n.) ***காந்தர்ப்பம்*** பார்க்க; see *kāndarppam. "காந்தருப்பம் மெனுங் கடவுண் மாப்படை" (கம்பரா.மூலபல.182).*

[காந்தர்ப்பம் → காந்தருப்பம்]

காந்தருவப்புணர்ச்சி *kāndaruva-p-punarcci,* பெ.(n.) ***காந்தருவம்,*** 1 (சங்.அக.) பார்க்க; see *kāndaruvam1.*

[காந்தருவம் + புணர்ச்சி.]

காந்தருவம் *kāndaruvam,* பெ.(n.) 1. காதலர் தம்முள் மனமொத்துக் கூடுங்கூட்டம் (தொல். பொருள்.92, உரை); a form of marriage which results entirely from love and which has no ritual whatever, as common among Gandharvas. 2. இசைப்பாட்டு (சூடா.); music. 3. காந்தருவமறை; musical composition. *"வில்வேதமமல் காந்தருவ வேதம்" (காஞ்சிப்பு. சனற்.41).* 4. யாழ்; harp.

[காந்தருவம் → காந்தருவம்.]

காந்தருவர் *kāndaruvar,* பெ.(n.) 1. யாழிசைப்போர் கந்தருவர் (சிலப்.5:176,உரை.); Gandharvas. 2. பாடுவோர் (கல்.); songsters, minstrels.

[காந்தருவம் (யாழ்) → கந்தருவர் → காந்தருவர் (யாழோர்).]

காந்தருவி *kāndaruvi,* பெ.(n.) பாடுபவள்; songstress. *"தளிச்சேரிப் பெண்டுகளுக்கும் காந்தருவி களுக்கும் நாயகஞ்செய்ய" (S.I.I.II,66-13 pg.276).*

[காந்தருவம் → காந்தருவி.]

காந்தல் *kāndal,* பெ.(n.) 1.காந்துகை; burning. 2.உமி, ஓலை முதலியவற்றின் எரிந்த கருகல்; burnt flakes of straw, palm leaves, paper, chaff etc. 3.காய்ந்த பயிர் (வின்.); growing crop scorched by the sun.4. சினம் (வின்.); anger.

ம. காந்தநா

[காந்து → காந்தல்.]

காந்தலாடம் *kāndalādam,* பெ.(n.) குதிரை லாடத்தைப்போற் செய்து வலுவூட்டிய இரும்பு; horse-shoe magnet (சா.அக.).

[காந்தம் + லாடம்.]

காந்தவட்டை *kānda-vattai-,* பெ.(n.) காந்தவூசி பொருத்திய வட்டத்தட்டு; circular instrument fitted with magnetic needle.

[காந்தம் + வட்டை — காந்த வட்டை.]

கட்டடங்களின் நிலையைத் தரையில் குறித்திடப் பொறியாளர்களும், கடலில் பயணம் செய்யும்போது திசையறிவதற்கு மாலுமிகளும் பயன்படுத்துகின்றனர்.



காந்தவட்டை

காந்தவண்டி *kānda-vandi,* பெ.(n.) இருப்புப் பாதையிற் செல்லும் மின்வண்டி; electric train; electric tramcar.

[காந்தம் + வண்டி.]

காந்தவர் *kāndavar,* பெ.(n.) காந்தருவர், பதினெண்கணத்துள்ஒரு தொகுதியார் (திவா.); a celestical group of singers. *"காந்தவர் சேனை யெல்லாம்" (உத்தரரா.கந்திருவ.43).*

[காந்தருவர் → காந்தவர்.]

காந்தவிளக்கு *kānda-vilakku,* பெ.(n.) ஊர் வலங்களில் தலைமேல் தூக்கிச் செல்லும் எரிவளி விளக்கு; gas light carried over persons.

[காந்தம் + விளக்கு.]

காந்தவூசி *kānda-v-ūsi,* பெ.(n.) காந்தம் ஏற்றிய திசை காட்டும் முள்; magnetic needle; steel pointer of a compass.

[காந்தம் + ஊசி.]

காந்தவை-த்தல் *kānda-vai-,* 4 செ.கு.வி.(v.i.) தீயவைத்தல்; allowing to be scorched (சா.அக.).

[காந்தல் + வை.]

காந்தள் *kāndaḷ,* பெ.(n.) 1. செங்கோடல் கார்த்திகைப்பூ; Malabar glory lily,red or white species. *"காந்தள் மலராக்கால்" (நாலடி,283).* 2. காந்தள் மலரணிந்து வேலன் வெறியாடுவதைக் கூறும் புறத்துறை (தொல்.பொருள்.60); theme of describing a dance of one possessed by the spirit of *skandā* and wearing the *kāndaḷ* flower. 3. முருகக்கடவுளுக்குரிய காந்தளைச் சிறப்பித்துக் கூறும் புறத்துறை (பு.வெ.6:9); theme of singing the praises. 4. சவர்க்காரம் (வின்.); soap.

ம. காந்தல்

[காந்தல் → காந்தள் (வே.க. 185).]

காந்தள் வகைகள்:

1. செங்காந்தள் 2. வெண்காந்தள் 3. சிறுகாந்தள் 4. கருங்காந்தள் 5. நரிக்காந்தள் 6. காய்க்காந்தள் (சா.அக.).

காந்தள் மலரான் *kāndaḷmalarāṉ,* பெ.(n.) உழுமண்; fuller's earth (சா.அக.).

[காந்தள் + மலரான்.]

காந்தளம் *kāndaḷam,* பெ.(n.) கலப்பைக் கிழங்கு; plough root (சா.அக.).

[காந்தள் → காந்தளம்.]

காந்தளிகம் *kāndaḷigam,* பெ.(n.) சின்னிமரம்; lirch-leaved acalypha (சா.அக.).

[காந்தள் → காந்தளிகம்.]

காந்தளூர்ச்சாலை *kāndaḷūr-c-cālai,* பெ.(n.) கேரள நாட்டைச் சார்ந்த விழிஞ்சம் அல்லது நெய்யாற்றின் கரைப் பக்கத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் ஒரு பழைய ஊர்; name of a old place, said to be near viḻiñjam or Neyyaṟṟinkara of kerala.

[காந்தளூர் +சாலை.]

திருவனந்தபுரத்திலுள்ள வலிய சாலையே காந்தளூர்ச்சாலை என்ற கருத்தும் உண்டு.

காந்தற்சோறு *kāndaṟ-sōṟu,* பெ.(n.) கரிந்த சோறு; rice partly charred by over-heating.

[காந்தல் +சோறு.]

காந்தன் *kāndaṉ,* பெ.(n.) கணவன்; husband. *"திருமடந்தை காந்தன்" (கம்பரா.நகர்நீங்.95).*

[காந்து → காந்தன்.]

காந்தாரக்கிராமம் *kāndāra-k-kirāmam,* பெ.(n.) தேவர் உலகத்து வழங்குவதாகக் கருதப்படும் இசைப்பண்வகை (பரத. இராக.80); a musical note of the celestials.

[காந்தாரம் + கிராமம்.]

காந்தாரபஞ்சமம் *kāndāra-pañcaman,* பெ.(n.) பாலையாழ்த்திறங்களுள்ஒன்று (சிலப்.4,75, உரை.); an ancient secondary melody type of the palai class.

[காந்தாரம் + பஞ்சமம்.]

காந்தாரம்[1] *kāndāram,* பெ.(n.) 1.ஐம்பத்தாறு நாடுகளுள் ஒன்று; Kandahar, a country north - east of Peshawar, one of ancient 56 *nāḍu.* *"காந்தார மென்னுங் கழிபெரு நாட்டு" (மணிமே. 9:12).* 2. ஏழிசைகளுள் ஒன்று (பரத. இராக,42); third note of the gamut, one of *śatta-śuram.* 3.பாலை யாழ்த்திறவகை (சிலப்.8, 35, உரை.); an ancient secondary melody-type of the *pālai* class.

[காந்தருவம் → காந்தாரம்.]

காந்தாரம்[2] *kāndāram,* பெ.(n.) காடு(திவா.); jungle, forest, wood.

[கான் → காந்து →காந்தாரம். ஒ.நோ. மன் → மந்து (அரசன்).]

காந்தாரி *kāndāri,* பெ.(n.) 1. காந்தார நாட்டு இளவரசி; துரியோதனன் தாய்; name of a princess of Kandahar, mother of Duryōdana. *"காந்தாரி*

பெறப்பட்டது
சென்னை-600 00

காந்தள்

செங் காந்தள்

வெண் காந்தள்

கானாங் கோழை

கிளையோ டின்றேகெடும்" (பாரத.சூதுபோர்.222). 2. கொடியவள் (வின்.); hard-hearted cruel woman. 3. சிவனார் வேம்பு; wiry indigo. *"அரிக்காந்தி காந்தாரி நவ மொவ்வொண்றுக் கவ்வி" (தைலவ. தைல.135).* 4. பத்து நாடியிலொன்று (சிலப்.3:26, உரை);a principal tubular vessel of the human body one of taca-naḍi. 5. ஒருவகைப் பண் (பரத.இராக.56); a specific melody-type. 6. சத்திசாரம் (வின்.) a kind of salt, of burning and acrid nature.

[காந்தாரம் → காந்தாரி.]

காந்தாரிசெம்மல் *kāndāri-šemmal,* பெ.(n.) துரியோதனன்(சூடா.); Duriyodana, the son of Kandhari.

மறுவ. காந்தாரிமைந்தன்

[காந்தாரி + செம்மல்.]

காந்தாரிமிளகாய் *kāndāri-miḷagāy,* பெ.(n.) சீமை மிளகாய் (சு.வை. ர. 509); a kind of chilly.

ம. காந்தாரிமுளகு

[காந்து → காந்தாரி + மிளகாய்.]

காந்தாரியுப்பு *kāndāri-y-uppu,* பெ.(n.) ஒருவகை உப்பு; an acrid salt.

[காந்தாரி + உப்பு.]

காந்தாள் *kāndāḷ,* பெ.(n.) காந்தன் பார்க்க; see *kāndan.*

[காந்து (ஒளி) + ஆள்.]

காந்தாளம் *kāndāḷam,* பெ.(n.) சினம் (வின்.); anger.

[காய் → காந்து → காந்தாளம்.]

காத்தாளிகம் *kāndāḷigam,* பெ.(n.) சின்னி;Indian copper leaf, m.sh.,

[காந்தாளம் → காந்தாளிகம் (வே.க.186).]

காந்தானம் *kāndāṉam* பெ.(n.) நாய்வேளை; dog mustard (சா.அக.).

[காந்து → காந்தானம்.]

காந்தி[1] *kāndi,* பெ.(n.)1. ஒளி (சூடா); brightness, light, glare. 2.அழகு(பிங்.); beauty. 3.ஒளிக்கதிர் (வின்.); ray. 4. வெப்பம் (மூ.அ.) heat. 5. காவிக்கல் (வின்.); ochre. 6. வைடூரியம் (வின்.); cat's-eye.

[காந்து → காந்தி.]

காந்தி[2] *kāndi,* பெ.(n.) ஒரு சொல்லணி வகை (யாழ்.அக.); a figure of speech.

[காந்து → காந்தி.]

காந்திகொள்(ளு)—தல் *kāndi-koḷ-,* 16 செ.கு.வி. (v.i.) உடம்பு வெப்பமாதல் (வின்.); to become morbidly inflamed, as the bodily system from neglect of bathing, from taking hot medicine, etc.

[காந்தி + கொள்.]

காந்திப்போ—தல் *kāndi-p-pō-,* 8 செ.கு.வி.(v.i.) சோறு முதலியவை கரிந்துபோதல்; to be charred, as rice or curry by over-heating.

[காந்தி +போ.]

காந்தியெரி—தல் *kāndi-y-ēri-,* 4 செ.கு.வி.(v.i.) தலையிலும் உடம்பிலும் வெப்பத்தால் எரிச்சல் உண்டாதல்; to experience burning sensation, as the head or any other part of the body.

[காந்தி +எரி.]

காந்தியெறி—த்தல் *kāndi-y-eṟi-,* 4 செ.கு.வி. (v.i.) வெப்பம் தாக்குதல்; to strike hot, as rays of the sun etc.

[காந்தி +எறி.]

காந்து[1]**—தல்** *kāndu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. எரிவெடுத்தல்; to burn, smart as a sore. கைப்புண் காந்துகிறது. 2. வெப்பங்கொள்ளுதல்; to feel burn-

ing sensation in the body. 3. கருகுதல்; to be scorched,charred, reduced to cinder. சோறு சாந்திப் போயிற்று. 4.மனங்கொதித்தல்; to be hot with indigation. *"புத்திபோய்க் காந்துகின்றது"* *(கம்பரா. சடாயுகா.37).* 5. ஒளிவிடுதல்; to shine, give out lustre, emit rays. *"பரம்பிற் காந்து"* *(கம்பரா. நாட்டுப்.7.).* 6. பொறாமை கொள்ளுதல்; to burn with envy. அவளைக் கண்டு காந்து கிறான். 7.வீணாய் எரிதல்; to burn without use, as oven.

ம. காந்துக

[காய்→ காய்ந்து→காந்து→காந்துதல்(வே.க. 185).]

காந்து – L. Candeo, to glow with heat, to shine, glitter, to be of a shining white.

இலத்தீன் வினைச் சொற்களைத் தன்மை யொருமை யீறாகிய 'O' அல்லது நிகழ்கால வினையெச்ச ஈறாகிய 're' சேர்த்துக் குறிப்பது மரபு. இவற்றை நீக்கின் எஞ்சி நிற்பது வினைமுதனிலை என அறிக.

L. *Candela, a wax or tallow candle*, A.S. candel, OE. Candel, An, OF. candel (1)e E.candle (f. candere, to glow) cylinder of wax, tallow spemaceti, etc., enclosing wick, for giving light. L. candidus, shining white, white, candidum, n.white colour, a.honest, straight forward. E. candid, white, fair, sincere, honest, E.candescent, glowing with white heat, f. L. candeseere, f. candere, be white. L. candidaus, clothed in white; a candidate for office, who among the Romans was always clothed in white, for the consulship. E. candidate, one who offeres himself or is put forward to be elected to an office, orig. white-robed.

L. candor, whiteness, sincerity, E. candour, openmindedness, frankness, impartiality. E.chandler, dealer in candles. ME., AF. chandeler, OF. chandelier f. L. candela.

இலத்தீன் தகர முதற் சொல்லாயிருந்தது, பிற்காலத்தில் ஆங்கிலப் பிரெஞ்சு மொழியிலும் இடையாங்கிலத்திலும் சகர முதற் சொல்லாகத் திரிந்து விட்டமையை நோக்குக. இச்சகர முதற் சொல்லே வேத மொழியிலும் சமற்கிருதத்திலும் முதலுயிர் குறுகியும் குறுகாதும் உள்ளது.

Skt. cand, to shine, be bright; to gladden. canda, *the moon*, L. *candaka, pleasing*, W; *the moon* W., moon light, W. candira, the moon, Bham, ii, 120.

candra, glittering, shining (as gold), having the brilliancy or hue of light (said of gods, of water (RV. x.121, 9; TS.vi) & of Soma), RV.; VS., TS. vi; TBr. 1; m. the moon. Candra, lunar. Scand, to shine. Scandra, shining, radiant.

இங்ஙனம் திகழ்தலையும் திகழும் திங்களையும் குறிக்கும் வடசொற்கள், காந்து என்னும் தென்சொல்லை அடிமூலமாகவும், இலத்தீன் வழியாக வந்த திரிசொல்லை நேர்முகமாகவும், கொண்டனவாயிருத்தல் காண்க.

ஒ.நோ. திகழ் → திங்கள், தகம் தங்கம். 'திகழ்' என்னும் வடிவம் இறந்துபட்டது. புரன் ›பிறன்→ பிறழ் என்னும் திரிபில் இடைப்படு சொல் இறந்து பட்டமை காண்க.

தகுதல் = எரிதல், விளங்குதல், தகதகவென்று சொலிக்கிறது என்னும் வழக்கை நோக்குக. ஆரியர் வருகைக்கு முற்பட்ட பழம்பாண்டி நாடும் தனித் தமிழிலக்கியமும் முற்றும் மறைந்து போனமையால், பல இணைப்புண்ட சொற்களை இன்று காட்ட இயலவில்லையென்பதை அறிக *(செல்வி பெப்ரவரி 78 பக்.286).

காந்து[2]–தல் *kāndu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1.சினத்தல்; to be angry with. *"காந்தி மலைக்குத்து மால்யானை" (வள்ளுவமா.11).* 2. சுட வைத்தல் (யாழ்ப்); to heat. 3. சுவறச்செய்தல் (யாழ்ப்.); to absorb, exhaust by evaporation, as water, rain. *4.பல்லினாற் கறுவுதல்* (யாழ்ப்.); to bite off, scrape out with the teeth, as a coconut.

ம. காந்துக

[காய்→ காய்ந்து→காந்து.]

காந்துகம் *kāndugam,* பெ.(n.) வெண்காந்தள் (சூடா.); white *kāndal*flower.

[காந்து → காந்துகம்.]

காந்துகன் *kāndugaṉ,* பெ.(n.) 1. பந்தடிப்போன்; one who plays with ball. 2. தின்பண்டம் விற்பவன்; one who sells snacks (த.சொ.அக.).

[கந்து → கந்துகன் → காந்துகன்.]

காந்தை *kāndai,* பெ.(n.) 1. மனைவி; beloved woman, wife. *"குலக்காந்தை யொருத்தி" (பெருந்தொ. 1581).* 2. பெண்; woman. *"காந்தையருக் கணியனைய சானகியார்" (கம்பரா. இராவணன்வ 241).*

[கந்து → காந்து → காந்தை → காந்து - பற்றுக்கோடு.]

காந்தைக்கண் *kāndai-k-kaṇ,* பெ.(n.) இரண்டு இமைகளையும் விரித்து விழித்து உள்ளக் குறிப்பைக் காட்டும் கண்(பரத.பாவ.9); an expressive ocular movement which consists in opening both the eyes wide.

[காந்தை + கண்.]

காப்பரிசி *kāppariśi,* பெ.(n.) 1. பிறந்த குழந்தைக்குக் காப்பிடும் நாளில் வழங்கும் பாகுகலந்த அரிசி; rice mixed with treacle generally distributed on the occasion when a new-born baby is provided with bangles. 2. மணவிழா முதலிய காலங்களில் காப்பு நாண் கட்டும்போது கையிலிடும் அரிசி (இ.வ.); rice held in the hands of a person on his marriage occasion, when a string is tied round his wrist, with mantras to ward off evil. 3. இயேசு பிறந்த பதின்மூன்றாம் நாள் விழாவில் கோயிலில் வழங்கும் பாகு கலந்த அரிசி (R.C.); rice mixed with treacle distributed in Roman Catholic churches on the Epiphany, the 13th day after the nativity.

ம. காப்பரி

[காப்பு + அரிசி.]

சென்னை-600 008

காப்பவிழ்-த்தல் *kāppaviḻ-,* 2. செ.கு.வி. (v.i.) மணம் முதலிய விழாவில் கையில் கட்டிய காப்பு நாணை நீக்குதல்; to untie the ceremonial string from the wrist with appropriate ceremonies.

[காப்பு + அவிழ்.]

காப்பன் *kāppaṉ,* பெ.(n.) காவலாளி; guard. *"கடையருங் கணக்கருங் காப்பரு முளப்பட" (பெருங் உஞ்சைக். 32:82).*

[கா → காப்பன்.]

காப்பாடு-தல் *kāppāḍu-,* 5. செ.குன்றாவி.(v.t.) மறைத்துக்காத்தல்; to conceal, screen. *"துறைவன் கொடுமை நம்முணாணிக் காப்பா டும்மே" (குறுந்.9).*

தெ. காபாடு

[காப்பு + ஆடு.]

காப்பாள் *kāppāḷ,* பெ.(n.) காவல்வீரன்; one who defends, guards. *"மாரிக் குன்றத்துக் காப்பாளன்" (ஐங்குறு.206).*

[காப்பு + ஆள்.]

காப்பாற்று-தல் *kāppāṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.i.) உதவி செய்து காப்பாற்றுதல்; to preserve, guard, watch, take care of, protect, save. உன்னைக் கடவுள் காப்பாற்றுவார் (உ.வ.).

ம. காப்பாற்றுக, காப்பாத்துக; க.,தெ. காபாடு.

[காப்பு + ஆற்று.]

காப்பிடு-தல் *kāppiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1.நெற்றியில் திருநீறு அல்லது மண்ணைக் குழைத்திட்டுக் காப்புச் செய்தல்; to rub sacred ashes or earth on the forehead, as a means of protection. *"சீரார் செழும்புழுதிக் காப்பிட்டு" (திவ்.இயற். சிறிய.ம.16).* 2. காப்புநாண் கட்டுதல்; to

tie a string, round the wrist of a person on occasions like marriage, with mantras to ward off evil. 3. பிறந்த குழந்தைக்கு ஐந்தாவது, ஏழாவது, ஒன்பதாவது நாளில் காப்புப் பூட்டுதல்; to provide a new born baby with bangles and anklets on the 5th, 7th or 9th day after its birth. 4. திருக்காப்புச் சாத்துதல்; to close the temple doors after worships. 5. ஆவணங்களில் அரச முத்திரை இடுதல்; to impress documents with the royal seal.

[காப்பு → காப்பிடு.]

காப்பியக்கலித்துறை *kāppiya-k-kalitturai*, பெ.(n.) நெடிலடி நான்காய்வருங் கலித்துறை (வீரசோ.யாப்.18,உரை.); a variety of *kalitturai* verse.

[காப்பியம் + கலித்துறை.]

காப்பியக்குடி *kāppiya-k-kudi*, பெ.(n.) 1. பழைய தமிழ்க் குடியின் பெயர்; name of an ancient Tamil clan. 2. சீர்காழிக்கு அருகிலுள்ள ஓர் ஊர். (சிலப்.30:83, கீழ்க்குறிப்பு); an ancient village near *Sirkāli*.

தெ. காப்புலு

[காப்பு - காவல், காப்பியம் - உழவுத் தொழில். காப்பியன் - உழவன். காப்பியம் + குடி – காப்பியக்குடி - உழவர்குடி.]

காப்பியம் *kāppiyam*, பெ.(n.) நால்வகை உறுதிப்பொருளையும் கூறுவதாய்க் கதைபற்றி வரும் தொடர்நிலைச் செய்யுள்; a narrative poem dealing with *aram, porul, inpam and vidu* describing the exploits of a hero, being of two kinds, viz peru-ṅ-kāppiyam and śiru-kāppiyam. *"காப்பியக் கவிகள்" (சீவக,1585).*

ம. காப்பியம்

skt. kāvya

[காப்பு + இயம்.]

காப்பியன் *kāppiyan*, பெ.(n.) 1. உழவன்; farmer. 2. வெள்ளிமுனி (பிங்.); Sukra, the son of Kavi or Bhrgu.

ம. காப்பியன்.

[காப்பு → காப்பியன்.]

காப்பிரிக்கோழி *kāppiri-k-kōli*, பெ.(n.) மயிர்ச்சுருள் அடர்ந்த சிறகுகளையுடைய கோழிவகை; frizzled fowl, having curly feathers.

ம. காப்பிரிக்கோழி

[காப்பிரி + கோழி.]

காப்பிரிமிளகாய் *kāppiri-milagāy*, பெ.(n.) குடைமிளகாய் (M.M.170). bell-pepper.

[காப்பிரி + மிளகாய்.]

காப்பிலியர் *kāppiliyar*, பெ.(n.) திருநெல்வேலி போன்ற தென்மாவட்டங்களில் குடியேறிய கவந்தன் என்றழைக்கப்படும் கன்னட இனத்தவர்; a caste of Kanarease cultivator, found chiefly in Madura and Tirunalvelly districts, using the title Kavandan.

[காப்பு→காப்புளார்→ காப்பிலியர்.]

காப்பிலியெலுமிச்சை *kāppili-y-elumiccai*, பெ.(n.) காட்டெலுமிச்சை (யாழ்ப்.); Indian wild lime.

[காப்பிலி + எலுமிச்சை.]

காப்பீடு *kāppidu*, பெ.(n.) 1. காப்பாற்று; safeguarding, protecting. 2. காக்கப்படுவது (சங்.அக.); that which is protected. 3.உயிர் போனால் தொகை வழங்கும் திட்டம்; insurance scheme.

[காப்பு +இடு – காப்பிடு → காப்பீடு.]

காப்பு *kāppu*, பெ.(n.) 1.காவல் (பிங்.); watching. 2. காவலாயுள்ளது; that which serves as a

protective. *"கண்ணேறு காத்திட்ட காப்பென" (குமர.பிர.மதுரைக்101).* 3. ***காப்புநாண்*** பார்க்க; see *kāppu-nāṇ.* 4. மூலிகை கெடாமல் இருக்கவும் அதன் கெட்ட குணங்கள் நீங்கவும் அதைச் சுற்றிக் கட்டும் மந்திரக்கயிறு; string or cord tied round medicinal plants with mantras either by way of preserving them from injury, or by way of atteuanting their pernicious effects, before using them in medicine.5. தொடங்கிய செயல் இனிது முடிய வேண்டி நூலின் தொடக்கத்திற் செய்யும் கடவுள் வணக்கம்; invocation of deities at the commencement of a poem to facilitate its successful completion. 6. ***காப்புப்பருவம்*** (இலக்.வி.806) பார்க்க; see *kāppu-p-paruvam.* 7.திருநீறு; sacred ashes, as an amulet. *"விருத்தனாகிக் கூனிவந்துயர் காப்பிட்டான்" (திருவாலவா.38, 56).* 8. கைகால்களில் அணியும் வளை; bangle, bracelet, anklet. *"மைந்தரும்... காப்பணியாக் கொள்ளுங் கலைசையே" (கலைசைச்.53).* 9. வேலி (பிங்.); fence, hedge. 10. மதில்; surrounding wall, fortification. *"திருத் துஞ்சுந் திண்காப்பின்" (பட்டினப்.41).* 11. கோட்டையின் உள்ளுயர் நிலம் (பிங்.); Mound within a fort. 12. கதவு (பிங்.); door. 13. கதவின் தாழ்; bolt of a door. *"கதவுதனைச் காப்பவிழ்க்கப் புரிந்து"(அருட்பா.4. அருட்பிர.26).* 14. அரசமுத்திரை; royal seal. *"ஓலைமுகடு காப்பியாத்து" (கலித்.94).* 15. ஏட்டுக்கயிறு; the running cord connecting the leaves of a cadjau manuscript. *"புத்தகத்தின் காப்பொருவி வாசித்து" (விநாயகபு.62:15).* 16. காவலான இடம்; place of special protection. *"கெடில வீரட்டமும் ... உறைவார் காப்புக்களே".* 17. ஊர்; village, as in a pastoral region. *"கடிகொ ளிருங்காப்பின்" (கலித்.110).* 18. திசை நாயகர்கள்; guardian deities of the eight points of the compass. *"காப்புக் கடைநிறுத்தி" (சிலப். 28:231).* 19. சிறை; prison. *"பங்கயன் காப்பினை.... விடுத்தனன்" (கந்தபு. அயனைச்சிறைநீ.12).* 20. காலணி; sandals. *"காப்பணி தாளன்" (திருவிளை. பழியஞ்.13).* 21.அரசன் நுகர்தற்குரிய பொருள்கள்; objects of enjoyment by a king. *"மஞ்சனத்தை யுள்ளுறுத்த காப்பும்"(சீவக.1873).*

ம. காப்பு; **க.,தெ., து.** காபு.

[கா→ காப்பு.]

காப்புக்கட்டிப்போடு—தல் *kāppu-k-katti-pōdu.* 19 செ.குன்றாவி.(v.t.) 1. செயலை இடையில் நிறுத்துதல் (வின்.); to leave a business half done. 2. பின் வரும் நிகழ்விற்காக முன்னமே மற்றொரு செயலை நிறுத்தி வைத்தல்; to reserve keep back anything for subsequent use.

[காப்பு +கட்டி +போடு.]

காப்புக்கட்டு[1]—தல் *kāppu-k-kattu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மஞ்சணூற்காப்பு அணிதல்; to tie an amulet; a yellow string on the arm in token of a vow and as a pledge of its fulfilment. 2. மூலிகைக்குக் காப்புநாண் கட்டுதல் (இ.வ.); to tie a string round herbs in order to dispel any evil curse. 3. ஊக்கத்துடன் செயலைத் தொடங்குதல் (வின்.); to engage in a pursuit. with earnestness. 4. கோயிலில் திருவிழாத் தொடங்குதல்; to commence a temple festival.

ம. காப்புகட்டுக

[காப்பு + கட்டு.]

காப்புக்கட்டு[2]—தல் *kāppu-k-kattu-,* 5 செ.கு.வி. (v.t.) கொங்கு நாட்டில் பொங்கல் நாளுக்கு முதல்நாள், வீட்டின் முகப்பில் பூளைப்பூ, ஆவாரம் பூ, வேப்பிலை ஆகிய மூன்றையும் கொத்தாகச் செறுகி வைத்தல்; inserting the bunch containing, pūlai, avārai and neem.

[காப்பு + கட்டு.]

காப்புக்கடவுள் *kāppu-k-kaḍavuḷ,* பெ.(n.) திருமால் (பிங்.); Višṇu, as preserver.

[காப்பு + கடவுள்.]

காப்புக்கரப்பறி-தல் *kāppu-k-karappaṟi-,* 4 செ.கு.வி.(v.i.) பொருளறிந்து ஏட்டெழுத்தைப் படித்தல்; to read intelligently, as without confounding the letters கா and கர–காப்புக்கரப்பறியாமல் வாசிக்கிறான் (வின்.).

[காப்பு +கரப்பு + அறி.]

தமிழ் எழுத்துகளில் ா,ர ஆகிய இரு எழுத்துகளும், அடிக்கோடின்றி முன்பு எழுதப்பட்டன. இடத்திற்கேற்பப் பொருள் வேறுபாடு அறிந்து காப்பு என்றும் படிக்க வேண்டும். திண்ணைப்பள்ளியில் தொடக்கக் கல்வி பயிலும் மாணவர்களைக் "காடு, கரடு பிரித்துப் படிக்கக் கற்றுக் கொண்டானா வெனக்" கேட்பதும் மரபு. இன்றும் ர், ரி, ரீ என்றே ரகரத்திற்கு அடிக்கோடின்றி எழுதுகிறோம்.

காப்புக்காடு *kāppu-k-kāḍu,* பெ.(n.) காவற்கட்டுள்ள காடு; reserved forest.

ம. காப்புக்காடு

[காப்பு + காடு.]

காப்புச்செய்-தல் *kāppu-c-cey-,* 1 செ.கு.வி. (v.i.) ஓலைச்சுவடியைக் கட்டிவைத்தல்; to tie up, as a cadjan bundle. *"உடன்காப்புச் செய்து" (தணிகைப்பு.அகத்.167).*

[காப்பு +செய்.]

காப்புத்தடை *kāppu-t-taḍai,* பெ.(n.) கோயில் திருவிழாக்கள் தொடங்குவதற்குக் காப்புக் கட்டியபின் யாரும் ஊரை விட்டு வெளியே செல்லக்கூடாதென்ற மரபு; the practice of staying in the village and not going out after the temple celebration commenced.

[காப்பு + தடை.]

காப்புதாரி *kāppu-tāri,* பெ.(n.) தற்காப்புரிமை (C.G.); right of private defence. ***காப்புரிமை*** பார்க்க; see *kāpurimai.*

[காப்பு + தாரி.]

காப்புதாரிக்காடு *kāppu-tāri-k-kāḍu,* பெ.(n.) ***காப்புக்காடு*** (C.G.) பார்க்க; see *kāppu-k-kāḍu.*

[காப்பு + தாரி + காடு.]

காப்புநாண் *kāppu-nāṇ,* பெ.(n.) விழாக் காலங்களில் காப்பாகக் கையில்கட்டும் மஞ்சள் நனைத்த கயிறு; string tied round the wrist of a person with mantras to ward off evils, as an amulet, in times of marriage, illness, etc. *"காப்பு நாண் கட்டக் கனாக்கண்டேன்" (திவ்.நாய்ச்.6,4.).*

[காப்பு + நாண்.]

காப்புப்பணம் கட்டு-தல் *kāppu-p-paṇam-kaṭṭu,* 5.செ.கு.வி. (v.i.) தெய்வத்துக்கு நேர்ந்துகொண்ட பணத்தை மஞ்சள் தோய்த்த துணியிற் கட்டி வைத்தல்; to tie up a coin in a piece of cloth dyed in saffron, as a vow to a deity in any temple.

[காப்பு + பணம் + கட்டு.]

காப்புப்பருவம் *kāppu-p-paruvam,* பெ.(n.) பிள்ளைத்தமிழ் கூறும் பத்துப் பருவங்களுள் முதற்பருவம், (இலக்.வி.808,உரை.); the first section of Piḷḷai-t-tamiḷ.

[காப்பு + பருவம்.]

காப்புமறம் *kāppu-maṟam,* பெ.(n.) காவல்வீரர்; military guard. *"காப்புமறம் தான்விட்டான் அக்கோ" (பதிற்றுப்.90,பதி.).*

[காப்பு + மறம்.]

காப்புமாலை *kāppu-mālai,* பெ.(n.) தெய்வங் காப்பதாக மூன்று ஐந்து அல்லது ஏழு செய்யுளாற்

பாடப்படும் ஒரு சிற்றிலக்கியம் (இலக்.வி, 832); a poem of three, five or seven verses in which the *protection of deities is implored.*

[காப்பு + மாலை.]

காப்புவாவரிசி *kāppuvā-v-ariśi* பெ.(n.) கார் போகரிசி (சு.வை.ர.227); seed of scurfy pea.

[கார்புகா + அரிசி – காப்புவாவரிசி.]

காப்பொன் *kā-p-poṉ,* பெ.(n.) நூறு பலம் நிறையுள்ள பொன்; a weight of gold = 100 palam *"அவர்க்கு ஒன்பதுகாப் பொன்னுங்...கொடுத்து" (பதிற்றுப்.60,பதி.).*

க.கப்பொன்

[கா +பொன்.]

காபட்டியம் *kāpaṭṭiyam,* பெ.(n.) இரண்டகம், கபடத்தன்மை; guile, deceit.

[கவடு → கவட்டியம் → கபாட்டிய→ காபட்டியம் (கொ.வ.).]

காபணங்கட்டு–தல் *kāpaṇam-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) ***காப்புப்பணம் கட்டுதல்*** பார்க்க; see kāppu-p-paṇam-kaṭṭu-,

[காப்புப்பணம் கட்டு → காபணங்கட்டு.]

காபணம் *kāpaṇam,* பெ.(n.) ஒற்றடம் (இ.வ.); fomentation.

ம.காபணம்; **தெ.**காபடமு.

[கப்பணம்→காபணம்.]

காபாலம்[1] *kāpālam,* பெ.(n.) 1.நான்முகன் மண்டை ஓட்டைக் கையிலேந்திச் சிவன் ஆடுங் கூத்து; dance of Siva with the skull of Brahma in his hand. *"தலையங்கை கொண்டுநீ காபால மாடுங்கால்" (கலித்.1).* 2.சிவனியத்தின் அகப்புறச் சமயம் ஆறனுள் ஆதன் என்றும் உள்ளதாய்ப் பலவாய்ப் பரந்து இருப்பதென்றும், பச்சைக்கொடி பிடித்து மக்களின் தலையோட்டில் ஐயமேற்றுண்பவர் முத்தராய்ச் சிவசமம் ஆவரென்றும் கூறும் சமயம் (சி.போ.பா.அவை.); one of the minor Saivite systems which holds that souls are eternal, plural, and Omnipresent, enjoins taking alms in human skull with green flags in hand, as a necessary stage for becoming the mukta or perfected soul and promises the later Siva like bliss, one of six akappuraccamayam.

க.கப்பாள

Aust. cobbra (skull).

[கப்பாளம்→காபாலம்.]

காபாலம்[2] *kābālam,* பெ.(n.) குட்டநோய் (தொழுநோய்); leprosy (சா.அக.).

[கரும்+கொப்புளம்–கருங்கொப்புளம்→ கப்புளம் →காபாலம் (கொ.வ.).]

காபாலி[1] *kābāli,* பெ.(n.) 1. சிவன்; Siva. "விடையேறு காபாலி யீசன்" (திவ்.பெரியாழ் 1.3:2). 2.காபால சமயத்தான்; one who holds the kapala doctrine. *"இம்மொழியைக் காபாலி யியம்புமுன்" (பிரபோத. 18.29).*

ம.காபாலி

[கன்னப்புலம்→கப்பாளம்→கபாலி→காபாலி.]

காபாலி[2] *kābāli,* பெ.(n.) திருகுதாளி என்னும் செடி வகை; twisted tali. *'தில்லை முள்ளும் திருகுதாளியும்' (பழ.).*

[கவல்→கவலி→காபாலி.]

காபாலிகம் *kābāligam,* பெ.(n.) ***காபாலம்*** பார்க்க; see *kābālam. "இவ்விரதங் காபாலிக மென்பது" (பிரபோத,18:25).*

[காபாலி → காபாலிகம்.]

காபினி *kāpi,* பெ.(n.) ஒருவகைப் பண்(பரத. இராக.55); a musical mode.

[ஒருகா. காப்பு → காப்பு→ காப்பினி→காபினி.]

காபோதி *kābōdi,* பெ.(n.) 1. கண்ணிலி; blind person. 2.அறிவிலி; illiterate ignorant person. *"அறிவிலாத காபோதி" (திருப்பு 530).*

[கண்போகி→கபோகி→ கபோதி→காபோதி.]

காம்பி *kāmbi,* பெ.(n.) நீரிறைக்குங்கருவி (திவா.); an ancient water-lift.

[காராம்பி → காம்பி.]

காம்பிரம் *kāmpiram,* பெ.(n.) முருக்குமரம் (மலை.); palas tree.

[காள் → காம்பு→ காம்பிரம்.]

காம்பிலி *kāmbili,* பெ.(n.) வடநாடுகளுள் ஒன்று; of an ancient kingdom in N.India. *"காம்பிலிக் காவன்மன்னன்" (சீவக.611).*

மறுவ. காம்பிலியம்

[காப்பு→காப்பிலி → காம்பிலி (உழவர் ஊர்).]

காம்பு[1]-தல் *kāmbu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. அரிசி பயறு முதலிய உணவுப் பொருள்கள் நீண்ட நாளுக்குப்பின் சுவையற்றுப்போதல்; to become insipid, as food stuff.

[குமுல் → கமல் → காமல் → காம்பு.]

காம்பு[2] *kāmbu,* பெ.(n.) 1. இலை, பூ முதலியவற்றின் தாள் (சூடா.); flower-stalk, peduncle, pedicel, leaf-stalk. 2.மலர்க்கொம்பு (சூடா.); flowering branch.3.கருவிகளின் கைப்பிடி; straight handle, shaft, haft. *"கரிய காம்பினையுடைய வேல்" (மலைபடு.490,உரை.).* 4.மூங்கில்; bamboo. *"காம் பேர்தோட் பேதைக்கு"(குறள்,1272).* 5. ஆடைக்கரை; coloured borders of a cloth. *"காம்பு துகிலவை கீறி" (திவ்.பெரியாழ். 2.7:3) (திவா.).* 6. ஒருவகைப் பட்டாடை; a kind of silk cloth. "பொறசுரிகை காம்பு சனவளை" (திவ்.பெரியாழ்.1,3,8). 7. பூசனி (மலை.); pumpkin. 8.அம்புச்சிறகு (நாமதீப); the feather end of an arrow.

தெ.காமு; **க.,து.**,காவு; **ம.**காம்பு

[கம்பு → காம்பு.]

காம்புக்கிண்ணம் *kāmbu-k-kiṇṇam,* பெ.(n.) 1. கைப்பிடியுள்ள ஏனம்; small cup with a handle. 2. அகப்பை (யாழ்.அக.); ladle.

[காம்பு + கிண்ணம்.]

காம்புச்சத்தகம் *kāmbu-c-cattagam,* பெ.(n.) ஒலைவாருஞ் சிறுகத்தி (யாழ்ப்); iron handled curved knife, used in basket-making.

[காம்பு +சத்தகம்.]

காம்புச்சல்லடை *kāmbu-c-calladai,* பெ.(n.) சல்லடைவகை; colander.

[காம்பு +சல்லடை.]

காம்புப்புகையிலை *kāmbu-p-pugai-y-ilai,* பெ.(n.) காம்புடன் கூடிய புகையிலை (வின்.); tabacco leaf with a part of its stem.

[காம்பு +புகை + இலை.]

காம்போதி *kāmbōdi,* பெ.(n.) ஒரு பண் (திவா.); a specific melody-type.

[கமம்→ காம் + பொதி+ காம்பொதி→காம்போதி.]

காமக்கடப்பு *kāma-k-kaḍappu,* பெ.(n.) காம மிகுதி; inordinate passion, uncontrollable lust. *"காமக் கடப்பினுட் பணித்த கிளவி" (தொல்.பொருள்.160).*

[காமம் + கடப்பு.]

காமக்கடவுள் *kāma-k-kaḍavuḷ* பெ.(n.) 1. வழிபடு தெய்வம்; the particular manifestation of god which one chooses to worship as the god of one's choice. *"கண்டு மயரறுக்குங் காமக் கடவுள்" (பரிபா.15.37).* 2. மன்மதவேள், மதன், காமவேள்; Kāma, the God of love.

[காமம் + கடவுள்.]

காமக்கண்ணி *kāma-k-kaṉṉi,* பெ.(n.) காஞ்சியில் கோயில் கொண்டிருக்கும் காமாட்சியம்மன்; lit., she who has love-inspiring eyes, a name of Parvati as enshrined at Kānji param. *"காமக் கண்ணியாம் பெயரெய்துவை" (காஞ்சிப்பு. வீராட்.45).*

[காமம் + கண்ணி.]

காமக்கலகம் *kāma-k-kalagam,* பெ.(n.) 1.புணர்ச்சி; copulation. *"காமக்கலகந் தெளிந்த பின்" (தனிப்பா.1. 82:164).* 2. ஊடல்; lovers tiff.

[காமம் +கலகம்.]

காமக்கவலை *kāma-k-kavalai,* பெ.(n.) காம மிகுதியால் தோன்றும் நோய்; mental distress caused by sexual desire.

[காமம் + கவலை.]

காமக்காய்ச்சல் *kāma-k-kāyccal,* பெ.(n.) காமநோய்; love sickness.

[காமம் + காய்ச்சல்]

காமக்காணி *kāma-k-kāṇi,* பெ.(n.) **காமக்கிழவு** (சாச.தமிழ்க்.147) பார்க்க; see *kāma-k-kiḻavu.*

[காமம் + காணி.]

காமக்கிழத்தி *kāma-k-kiḻatti,* பெ.(n.) ஒருவர்க்கே உரிமை பூணுங் குலப்பரத்தை மகளாய்க் காமங்காரணமாகத் தலைமகனால் வரைந்து கொள்ளப்பட்டவள் (நம்பியகப்.113.); faithful concubine or mistress.

[காமம் + கிழத்தி.]

காமக்கிழவு *kāma-k-kiḻavu,* பெ.(n.) ஊர் உரிமை (சாச.தமிழ்க்.21,2); proprietory right to a village.

[காமம் + கிழவு. கிழவு = கிழமை, உரிமை.]

காமக்கிழான் *kām-k-kiḻaṉ,* பெ.(n.) ஊர்க் காணியாளன் (சாச.தமிழ்க்.147); proprietor of a village.

[காமம் + கிழான்.]

காமக்குறிப்பு *kāma-k-kuṟippu,* பெ.(n.) 1. காதலிற்றோன்றும் மெய்ப்பாடு; bodily changes wrought by love. 2. காதலை வெளியிடும் சைகை; amorous gestures.

[காமம் + குறிப்பு.]

காமக்கூட்டம் *kāma-k-kuṭṭam,* பெ.(n.) தலைவனுந் தலைவியும் தம்முள் அன்பொத்துக் கூடுங் கூட்டம்; literary theme expounding clandestine intercourse between lovers before marriage.

[காமம் + கூட்டம்.]

காமக்கொடி *kāma-k-koḍi,* பெ.(n.) ***காமக்கண்ணி*** பார்க்க; see *kāma-k-kaṇṇi. "கச்சிப்பொலி காமக்கொடியுடன் கூடி" (தேவா.772,4).*

[காமம் + கொடி.]

காமக்கோட்டத்தி *kāma-k-kōṭṭatti,* பெ.(n.) உமை (சூடா.); Parvadi, who dwells in *kāmakkōṭṭam.*

[காமக்கோட்டம் → காமக்கோட்டத்தி.]

காமக்கோட்டம் *kāma-k-kōṭṭam,* பெ.(n.) 1.காஞ்சி யிலுள்ள காமக்கண்ணி கோயில்; temple of Kamaksi at *Kāñjiparam. "காமக்கோட்டங் காவன் மெச்சி" (சிலப்.5:95,உரை).* 2. கோயில்களில் இறைவிக்கான தனிக்கோயில்; separate temple for Goddess.

[காமம் + கோட்டம்.]

காமக்கோட்டி[1] *kāma-k-kōṭṭi,* பெ.(n.) 1.மலைமகள் (திவா.) Parvati, as enshrined at *Kāñjiparam.* 2. ***காமக்கோட்டம்*** பார்க்க; see *kāmakkōṭṭam. "உமையமர் காமக் கோட்டியை" (கந்தபு.நகரப்.78).*

[காமம் + கோட்டி.]

காமக்கோட்டி[2] *kāma-k-kōṭṭi,* பெ.(n.) காமப்பித்து (நெல்லை); mad, craving for sexual union.

[காமம் +கோட்டி.]

காமகாண்டம் *kāma-kāṇḍam,* பெ.(n.) காமன் வில்லாகப் பயன்படும் ஒருவகைப்பூ; a kind of flower used by Kāma as a bow. *"கயக்க ணின்ற பூவின்மிக்க காமகாண்டம்" (கந்தபு.காமத.62.)*

[காமம் + காண்டம்.]

காமசாரி *kāmaśāri,* பெ.(n.) 1. அடைக்கலாங் குருவி; domestic sparrow. 2. காமுகன்; one who has mad craving for sexual union. 3. தன் விருப்பப்படி உருவெடுத்து உலாவருவது; one who roam round with desired outlook.

[காமம் + சாரி.]

காமசாலை *kāma-sālai,* பெ.(n.) சிற்றின்பத்துக்குரிய இடம்; a place intended for amorous dalliance. *"தோகையர் மாதவக் காமசாலையுமே கணக்கில்லவே" (அரிச்.பு.நகரச். 14).*

[காமம் +சாலை.]

காமத்தீ *kāma-t-tī,* பெ.(n.) காமமாகிய நெருப்பு; venereal principle manifesting itself in the form of sexual desire.

மறுவ. காமாக்கினி

[காமம் +தீ.]

காமத்துப்பால் *kāmattu-p-pāl,* பெ.(n.) காமத்தைப் பற்றிக் கூறும் 25 அதிகாரங்களைக் கொண்ட திருக்குறட் பகுதி; section of a book treating of love, in 25 chapters in Thirukkural.

[காமம் + அத்து +பால்.]

காமத்துப்பாலோர் *kāmattu-p-pālōr,* பெ.(n.) ஒழுக்கமிலார் (திவா.); lascivious persons.

[காமம் + அத்து + பாலோர்.]

காமதகனன் *kāma-tagaṉaṉ,* பெ.(n.) சிவன் (திவா.); Siva, as one who burnt Kāma, god of love.

மறுவ. காமநாசன்

[காமம் + தகனன்.]

காமதேவன் *kāma-dēvaṉ,* பெ.(n.) காதல்தெய்வ மாகிய காமன், மன்மதன்; Indian Cupid, the god of love. *"முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா" (திவ்.நாய்ச்.1,2).*

ம. காமதேவன்

[காமம் + தேவன்.]

காமதேனு *kāma-dēṉu,* பெ.(n.) விரும்பியதை யளிக்கும் தேவருலக ஆன் கறவை; celestial cow, which supplies every want. *"போனக மமைந்த தெனவக் காமதேனு... சொலுமே"* (தாயு.மௌன.7).

ம. காமதேனு

[காமம் + தேனு.]

காமநாசன் *kāma-nāsaṉ,* பெ.(n.) சிவன்(பிங்.); siva, the destroyer of love.

[காமம் + நாசன்.]

காமநிலம் *kāma-nilam,* பெ.(n.) இன்பம் துய்க்கும் நிலம்; world of enjoyment, paradise. *"காதலாற் காமபூமிக் கதிரொளி யவரு மொத்தார்"* (சீவக.159).

[காமம் + நிலம்.]

காமநீர் *kāma-nīr,* பெ.(n.) காமமிகுதியால் தோன்றும் நீர்; veneral secretion as semen, virile. *"கீண்ட பாறொறுழுறிய காமநீ ரொழுகிற் றென்ப"* (கந்தபு.அசுரர்தோற்.15).

[காமம் +நீர்.]

காமநூல் *kāma-nūl,* பெ.(n.) 1. காமம் பற்றிய நூல்; science of sex. 2. **காமகாண்டம்** பார்க்க; (சிலப்.2:44.உரை.) see *kāma-kāṇḍam.*

[காமம் + நூல்.]

காமநோய் *kāma-nōy,* பெ.(n.) காமத்தால் உண்டாகும் நோய்; love-sickness. *"உரவோர்கட் காமநோ யோஒ கொடிதே"* (நாலடி,88).

[காமம் + நோய்.]

காமப்பற்று *kāma-p-paṟṟu,* பெ.(n.) காமவிருப்பு; sexual desire. *"பாரிடை யுயிருங் காமப் பற்றுவிட் டிருந்த தன்றே"* (கந்தபு.மேரு.17).

[காமம் + பற்று.]

காமப்பால் *kama-p-pāl,* பெ.(n.) முலைப்பால்; mother's milk. *"காமப்பால் விட்டரைப்பாய்"* (சங்.அக.).

[காமம் + பால்.]

காமப்பித்து *kāma-p-pittu,* பெ.(n.) அறிவினை யழிக்குந் தீராப் பெருங்காமம்; inordinate passion or lust; maddening passion 2. காமமிக்கவன்; person given to inordinate lust.

[காமம் + பித்து.]

காமப்புணர்ச்சி *kāma-p-puṇarcci,* பெ.(n.) இயற்கைப் புணர்ச்சி (தொல். பொருள்.498); first union of lovers brought about by destiny..

[காமம் + புணர்ச்சி.]

காமப்பூ *kāma-p-pū,* பெ.(n.) மதனகாமப்பூ என்னும் ஒருவகைக் கொடி (மலை.); cowslip creeper.

[காமம் + பூ.]

காமப்பேய் *kāma-p-pēy,* பெ.(n.) **காமப்பித்து** பார்க்க; see *kāma-p-pittu.*

[காமம் +பேய்.]

காமப்பைத்தியம் *kāma-p-paittiyam,* பெ.(n.) **காமப்பித்து** பார்க்க; see *kāma-p-pittu.*

[காமம் + பைத்தியம்.]

காமப்போர் *kāma-p-pōr,* பெ.(n.) புணர்ச்சி; sexual union.

[காமம் + போர்.]

காமபாணம் *kāma-pāṇam,* பெ.(n.) காமன் அம்பு; arrow of God for love. *"காம பாணம் படப்பட" (இரகு.மட்சி.1).*

[காமம் + பாணம்.]

காமபாலன் *kāma-bālaṉ,* பெ.(n.) பலராமன்; Balaraman, the brother of Krishna, as the fulfiller of his followers' desires. *"காம பாலனுஞ் சொன்னான்"(பாரத.உலா.க.3)*

[காமம் + பாலன்.]

காமபூமி *kāma-pūmi,* பெ.(n.) ***காமநிலம்*** பார்க்க; see *kāma-nilam. "காதலாற் காமபூமிக் கதிரொளி அவருமொத்தார்" (சீவக. 189).*

[காமம் + பூமி.]

காமம் *kāmam,* பெ.(n.) 1. விருப்பம்; desire.*"காமம் வெகுளி மயக்கம்"(குறள். 360).* 2. உறுதிப் பொருள்களுள் ஒன்றான இன்பம்; happiness in love, one of three kinds of beneficence. *"காமத்தின் மன்னும் வழிமுறையே நிற்றுநாம்" (திவ்.இயற்.பெரியதி.ம. 10.37).* 3. புணர்ச்சியின்பம்; sexual pleasure. *"காமத்திற் செம்பாக மன்று"(குறள்,1092).* 4. காமநீர்; venereal secretion.*"மெய் பொடித் திருங்காம மிக்கொழுக்கும்" (உபதேசகா. அயமுகி. 25).* 5. விரும்பிய பொருள்; object of desire *"தாம் வேண்டுங் காமமே காட்டுங் கடிது"(திவ். இயற்.2,92).* 6. பிறப்போரைக்கு (இலக்கினத்துக்கு) ஏழாவது இடம் (சங்.அக.); the seventh house from the ascendant. 7.***காமமரம்*** (மூ.அ.) பார்க்க; see *kāma-maram.*

[கமம் : நிறைவு, மகிழ்வு, விருப்பம் "கமம் நிறைந்தியலும்" (தொல்.) கமம் → காமம்.]

வடமொழியாளர் காம் என்னும் சொல்லுக்கு 'கம்' என்பதை வேராகக் காட்டுவர். ஆயின் வடமொழியில் 'கம்' இடைச்சொல்லாகவும், ஆம், நலம் என்னும் பொருள்களில் வழங்குவதாகவும் நான்காம் வேற்றுமை உருபாகவும் வழங்குகிறது.

காமமரம் *kāma-maram,* பெ.(n.) சவ்வரிசி தரும் மரவகை (மூ.அ.); sago ferm palm.

[காமம் + மரம்.]

காமமலடி *kāma-malaḍi,* பெ.(n.) கனவினால் கருப்பம் சிதைவுற்றவள் (சைவச. பொது. 241, உரை); woman who has had an abortion because of a dream.

[காமம் + மலடி.]

காமர்[1] *kāmar,* பெ.(n.) 1. விருப்பம்; desire. *"காமர் கடும்புனல்"(கலித்.39).* 2. அழகு; beauty. *"காமர் வண்ண மார்பிற் றாருங் கொன்றை" (புறநா.1:1).*

[காமம் → காமர்.]

காமரசி *kāmarasi,* பெ.(n.) ***நெருஞ்சி*** (மலை.) பார்க்க; see *neruñji.*

[காமம் + அரசி.]

காமரம்[1] *kāmaram,* பெ.(n.) 1. அடுப்பு (திவா.); fireplace for cooking. 2. அத்த நாள் (சூடா.); the 13th star.

[கமர்→கமரம்→காமரம்.]

காமரம்[2] *kāmaram,* பெ.(n.) 1. இசை (பிங்.); singing, music, melody. 2. சீகாமரம் என்னும் பண்; a musical mode. *"தும்பி காமரஞ் செய்யும்" (சிறுபாண்.77).*

[கமரம்→காமரம்.]

காமரம்[3] *kāmaram,* பெ.(n.) ***அகில்*** (மலை.) பார்க்க; see *agil.*

[கா[3] + மரம்.]

காமரம்[4] *kāmaram,* பெ.(n.) ***ஆல்***[1] (வின்.) பார்க்க; see *āl.*

காமரம்[5] *kāmaram,* பெ.(n.) காவடித் தண்டு (யாழ்ப்.); shoulder pole for carrying heavy timber.

ம. காமரம்

[காவு + மரம்.]

காமரம்[6] *kāmaram,* பெ.(n.) வண்டு (யாழ்.அக.); beetle.

[கா+அமர்+அம் = காவமரம்→காமரம் (பூஞ்சோலையில் அமரும் வண்டு).]

காமரி *kāmari,* பெ.(n.) ***புளிநறளை*** (மலை.) பார்க்க; see *puḷi-naraḷai.*

[கமர்→கமரி→காமரி]

காமரீசம் *kāmarīšam,* பெ.(n.) ***புல்லுருவி*** (மலை.) பார்க்க; see *pulluruvi.*

[கமர்→கமரிசம்→காமரீசம்]

காமரு *kāmaru,* பெ.(n.) விருப்பம் பொருந்துகின்ற, விரும்பத்தக்க; likeable.

[காம் + மரு (மருவு) – காமரு. (வ.மொ.வ.115).]

காமரூபம் *kāma-rūbam,* பெ.(n.) 1. பண்டைய இந்தியாவின் 56 நாடுகளுள் ஒன்று; இன்றைய அசாம் பகுதி; an ancient country, now part of Assam. 2. விரும்பிய படி மேற்கொள்ளும் உருவம்; form assumed at pleasure. *"காமரூபங் கொண்டெழுந்தளிப்பான்" (திவ்.திருவாய்.10,1,10)*

[காமம் + உருவம் – காமவுருவம்→காமரூபம்.]

காமரூபி *kāma-rūpi,* பெ.(n.) 1. நினைத்த உருவங் கொள்பவன்; one able to assume any form at pleasure. 2. ***பச்சோந்தி*** பார்க்க; (திவா.);see *paccōnti.*

[காமம் + உரூபி.]

காமல்லிகை *kā-malligai,* பெ.(n.) ***வனமல்லிகை*** (பதார்த்த.478) பார்க்க; see *vaṉa-malligai.*

[கா + மல்லிகை.]

காமலீலை *kāma-līlai,* பெ.(n.) ***காமவிளையாட்டு*** பார்க்க; see kāma-viḷai-y-āṭṭu.

ம. காமலில

[காமம் + லீலை.]

காமலை *kāmalai,* பெ.(n.) ***காமாலை*** பார்க்க; see *kāmālai. "பந்தியங் காமலை குட்டங்கள்" (மருதூ. 32.)*

[காமாலை→ காமலை.]

காமவர்த்தனி *kāma-varttaṉi,* பெ.(n.) பண்வகைகளுள் ஒன்று (சங்.சந்.47); a primary raga.

[காமம் + வர்த்தனி.]

காமவல்லி *kāma-valli,* பெ.(n.) 1. கற்பகத்திற் படருங்கொடி; fabled creeper of gold that twines round the celestial kalpaga tree. *"எரிமணிப் பளிக்கு மாடத் தெழுந்ததோர் காம வல்லி"(சிந்தா.காந்த.57.).* 2. பெண்; woman. *"இலங்கார் வலவடக் கொங்கை வெற்பாலிணை நீலவுண்கட் பொலங் காமவலவடக் கொங் காமவல்லி கடைந்த வப்போது"(வாண.54).*

[காமம் + வல்லி.]

காமவாயில் *kāma-vāyil,* பெ.(n.) இயற்கையன்பு; love as the gateway to conjugal happiness. *"உருவு நிறுத்த காம வாயில்" (தொல். பொருள்.273).*

[காமம் + வாயில்.]

காமவிடாய் *kāma-viḍāy,* பெ.(n.) கலவி விருப்பம்; thirst for sexual union. *"ஆறேனோ வெய்தாமக் காம விடாய்" (நள.சுயம்.44).*

[காமம் + விடாய்.]

காமவிளையாட்டு *kāma-viḷaiyāṭṭu,* பெ.(n.) புணர்ச்சி வேட்கைக் கேளிக்கைச் செயல்கள்; love sports.

மறுவ. காமலீலை

[காமம் + விளையாட்டு.]

காமவின்னிசை *kāma-v-vinnišai,* பெ.(n.) செந்துறைப் பாட்டின்வகை (யாப்.வி.538); a kind of sendurai verse.

[காமம் + இன்னிசை.]

காமவெறி *kāma-veṟi,* பெ.(n.) ***காமப்பித்து*** பார்க்க; see *kāma-pittu.*

[காமம் + வெறி.]

காமவேதம் *kāma-vēdam,* பெ.(n.) ***காமநூல்*** பார்க்க; see *kāma-nūl.* *"காமவேதத்தைக் கருங் கடைக் கண்களான் மொழிவார்" (பாரத. அருச்சுனன்தவ. 62).*

[காமம் + வேதம்.]

காமவேழம் *kāma-vēlam,* பெ.(n.) ***நாணல்*** *(பிங்.)* பார்க்க; see nāṇal.

[காமம் + வேழம்.]

காமவேள் *kāma-vēḷ,* பெ.(n.) காமன் ; Kāma, the Indian cupid. *"கருப்புவின் மலர்க்கணைக் காமவேளை"(திவ்.நாய்ச்.1,10)*

[காமம் + வேள்.]

காமற்கடந்தோன் *kāmaṟ-kaḍandōṉ,* பெ.(n.) புத்தன் (மணிமே.5:102). Buddha, as having conquered Kāma the Buddhistic God of evil.

[காமம் → காமன் + கடந்தோன்.]

காமற்காய்ந்தோன் *kāmar-kāyndōṉ,* பெ.(n.) 1. அருகன் (திவா.); Arhat. 2. சிவன்; šiva.

[காமன் + காய்ந்தோன்.]

காமன்[1] *kāmaṉ,* பெ.(n.) 1. காதற்கடவுள்; the Indian cupid. *"பண்டாரங் காமன் படையிவள் கண்காண்மின்" (பரிபா.11.123உ.).* 2. புத்த சமயத்திற் கூறும் தீமைவிளைக்கும் தெய்வம்; the Buddhistic god of evil. 3. ஒருவகை வரிக்கூத்து (சிலப். 3,13, உரை); a kind of masquerade dance.

[கமம் → காமம் → காமன்.]

காமன்[2] *kā-maṉ,* பெ.(n.) வண்டு (சூடா.); beetle, that abides in a grove. 2. திப்பிலி (திவா.); long pepper.

[கா+மன்–காமன்.]

காமன்கொடி *kāmaṉ-kōḍi,* பெ.(n.) காமவேளின் அடையாளமான மீன் (பிங்.); fish, as the emblem of *Kāma's* banner.

[காமன் + கொடி.]

காமன்பண்டிகை *kāmaṉ-paṇḍigai,* பெ.(n.) காமனை எரிக்கும் திருவிழா; a spring festival in the lunar month of Magam to commemorate the burning of *Kāma* bySiva.

[காமன் + பண்டிகை.]

காமன்ரதி[1] *kāmaṉ-rati,* பெ. (n.) கருந்துளசி; black basil (சா. அக.).

[காமன் + ரதி. Skt.rati>த.ரதி.]

காமன்வில் *kāmaṉ-vil,* பெ. (n.) கரும்பு (பிங்.); sugar-cane, as Kāmā's bow.

[காமன் + வில்.]

காமனம் *kāmaṉam,* பெ. (n.) திப்பிலி; long pepper (சா.அக.).

[காமன் + அம்.]

காமனாள் *kāmaṉāḷ,* பெ. (n.) காமன் திருநாள் கொண்டாடும் பருவம்; spring season.

[காமன் + நாள்.]

காமனி *kāmaṉi,* பெ.(n.) நவச்சாரம்; Ammonium chloride (சா. அக.).

[கமம் → கமணம் → கமணி → காமணி.]

காமனூர்தி *kāmaṉ-ūrdi,* பெ.(n.) தென்றல் (பிங்.); south breeze, as the vehicle of Kāmā.

[காமன் + ஊர்தி.]

காமனை[1] *kāmaṉai,* பெ.(n.) சிறு கிழங்கு (மலை.); goa potato.

[கா+மனை.]

காமனை[2] *kāmaṉai,* பெ.(n.) விருப்பம்; desire. *"காமனைகள் பூரித்து" (தேவா. 134:9).*

[கமம் → காமம் → காமன் → காமனை.]

காமனைங்கணை *kāmaṉai-ṅ-kaṇai,* பெ.(n.) காமனின் ஐந்து அம்புகள்; Kāmā's five arrows.

க. காமபாண

[காமன் + ஐங்கணை.]

காமனின் ஐந்து அம்புகள் :

1. தாமரை மலர் 2. அசோகுமலர் 3. மாமலர் 4. முல்லைமலர் 5. கருங்குவளை மலர்

காமாட்சி *kāmāṭci,* பெ.(n.) காஞ்சியிலுள்ள அம்மன் (சிவரக. தேவிமேரு. 13); Pārvadi worshipped at Kanjipuram, as having love - inspiring eyes.

Skt. kāmāksii

[கமம் + காமம் (விருப்பம்) + அட்சி.(கண்) Skt. atssa>த.அட்சி : கண்.]

காமாட்சிக்கீரை *kāmāṭci-k-kīrai,* பெ.(n.) கீரைவகை; a kind of greens.

[காமாட்சி + கீரை.]

காமாட்சிப்புல் *kāmāṭci-p-pul,* பெ.(n.) 1. புல்வகை (I.P.); black khus-khus grass. 2. காவட்டம்புல் (வின்.); citronella grass. 3. சுன்னாறிப்புல் (M.M. 765); roussa oil grass. 4. கருப்பூரப்புல் (M.M.); lemon grass.

[காமாட்சி + புல்.]

காமாட்சிப்புல் தைலம் *kāmācci-p-pul-tailam,* பெ.(n.) காவட்டம் புல்லை, மற்றக் கடைச் சரக்குகளோடு சேர்த்து அணியமாக்கும் மருந்து எண்ணெய்; a medicated oil extracted from the root of citronella mixed with other ingrediants and used for colic and sprain (சா.அக.).

மறுவ.காவட்டம்புல் எண்ணெய்.

[காமாட்சி + புல் + தைலம்.]

காவட்டம் புல் எண்ணெய் பார்க்க; see kavaṭṭam-puleṇṇai.

காமாட்சியம்மாள் கை விளக்கு *kāmāṭci-y-ammāl-kai-viḷakku,* பெ.(n.) வீட்டின் முன்சுவர்ப் பக்கத்தில் மாடப்புரையில் வைக்கும் விளக்கு (இ.வ.); hand - lamp put in a niche of the front wall of a house.

[காமாட்சி + அம்மாள் + கை + விளக்கு.]

காமாட்சி விளக்கு *kāmāṭci-viḷakku,* பெ.(n.) திருமணம் முதலிய விழாக்களில் பயன்படுத்தும் பாவை விளக்கு (E.T.); brass lamp in the form of a woman who holds with both her hands, a hollow vessel for oil and wick, used during marriage occasions.

[காமாட்சி + விளக்கு.]



காமாட்சி விளக்கு

காமாட்டி *kāmāṭṭi,* பெ.(n.) 1. மண்வெட்டுவோன்; labourer, one who works with a hoe, digger of earth. 2. மூடன்; fool, idiot, dunce. *“உன் பிள்ளை பரதன் காமாட்டி யானானே” (இராமநா. அயோத்.6).*

ம. காமாட்டி; **க.,தெ.** காமாடி; **ம** காமாட்டி; **து.** காமாதெ. **மரா.** காமாட்கி

Mar. kāmāṭhi

[கம்மம் (உழவு) + ஆள் – கம்மாள் → கம்மாளி → கம்மாத்தன் → கம்மாத்தி → கம்மாட்டி → காமாட்டி..]

காமாடு-தல் *kāmāḍu,* 5 செ.குவி .(v.i.), காமவின்பம் நுகர்தல்; to indulge in sexual pleasures.

[காமம் + ஆடு.]

காமாதுரன் *kāmādduraṉ,* பெ.(n.) காம ஆசை மிக்கவன்; libidinous person. ***காமி*** பார்க்க; see *kāmi.*

Skt. kāmātura

[காமன்+ஆதுரன். Skt. ātura>த.ஆதுரன்.]

காமாந்தகன் *kāmāṇdagaṉ,* பெ.(n.) சிவன்;Siva, the destroyer of Kāmā.

ம. காமந்தகன்; **க.** காமாந்தக.

[காமன் + அந்தகன்]

காமாப்பலகை *kāmā-p-palagai,* பெ.(n.) மரக்கலத்தின் சுற்றுப் பலகை (வின்.); top board around the side of a boat.

[ககம் → காமம் + பலகை – காமப்பலகை → காமாப்பலகை.]

காமாரி *kāmāri,* பெ.(n.) 1. சிவன் (பிங்.); Siva, the enemy of *Kāmā.* 2. காளி;Durgā. *“காமாரி திருமுன்னர்ச் சாந்திகனைக் காட்டுறலும்” (உபதேசகா. உருத்திராக்க. 162).*

ம., க. காமாரி.

Skt. kāmāri

[காமம் + மாரி.]

காமாலை *kāmālai,* பெ.(n.) பித்தம் அதிக மாவதால் ஏற்படும் ஒருவகை நோய்; jaundice. *“காமாலை சோகை சுரம்” (திருப்பு. 153).*

ம. காமால, காமில; தெ. காமிலா; து. காமால, காமெலி;

Skt. kāmala; **Mar.** kāmiṉ, kāmiṉi

மறுவ. காமாலை, மஞ்சள் காமாலை.

[கமம் → காமம் + ஆலை.]

காமி[1] – த்தல் *kāmi-,* 4 செ. குன்றாவி. (v.t.) 1.விரும்புதல்; to desire. *“தப்புதி யறத்தை யேழாய் தருமத்தைக் காமி யாதே” (கம்பரா. நிந்த. 54).* 2. காமங் கொள்ளுதல்; to have sexual desire.

ம. காமிக்குக

[காமம் → காமி.]

காமி[2]–த்தல் *kāmi-,* 1 பி.வி. (v.caus.) காண்பித்தல், காட்டுதல்; to show, exhibit, display.

[காண்பி → காமி]

காமி[3] *kāmi,* பெ.(n.) காமம் மிக்கவன் ; lustful person. *“களிமடி மானி காமி கள்வன்” (நன். 38).*

ம., க. காமி

Skt. kāmin

[காமம் → காமி]

காமி[4] *kāmi,* பெ.(n.) 1. உவர்மண்; fuller's earth. 2. பொன்னிமிளை; gold - coloured antimony.

[கம் → கம்மு → காமு → காமி.]

காமிகம் *kāmigam,* பெ.(n.) சிவனிய நூல்கள் இருபத் தெட்டுள் ஒன்று; an ancient Saiva scripture in Sanskrit,one of 28 Sivagamam. *“காமிக மாதி யைந்து முற்பவித்து” (சைவச. பொது.331).*

ம. காமிகம்; **க.** காமிகாகம்

Skt. kāmika

[காமம் → காமிகம்.]

காமிண்டன் *kāmiṇḍaṉ*, பெ.(n.) 1. காவலன்; king, captain. 2. தலைவன்; chief.

[மிண்டு = வலிமை. மிண்டன் = வல்லோன். கா + மிண்டன் (தமி.வ.300).]

காமியக்கல் *kāmiya-k-kal*, பெ.(n.) கோமேதகம் (வின்.) cinnamon stone.

[காமியம் + கல்.]

காமினி *kāmiṉi*, பெ.(n.) காமம்மிக்கபெண்; lustful woman. *"கஞ்சமலராலனைய காமினி" (உத்தரரா. அசுவமே.65.).*

ம., க. காமினி

Skt. kāmin

[காமி² + காமினி.]

காமீனி *kāmīṉi*, பெ.(n.) பிறப்போரையிலிருந்து ஏழாமிடத்துள்ள கோள் (சா. அக.); the planet in the seventh house from the ascendant.

[காமி² → காமீனி.]

காமுகன்[1] *kāmugaṉ*, பெ.(n.) 1. பல பெண்களோடு உடலுறவு கொள்ள மிகுந்த விருப்பம் உள்ளவன்; lustful person. *"காமுகர்ப் படுவ மாதர் கண்களும்" (கம்பரா.நாட் 5).* 2. நாகரிகன் (பிங்.); polite, polished man.

ம. காமுகன்; **க.** காமுக; **து.** காமுகெ

Skt. kāmuka

[காமம் → காமுகன்.]

காமுகன்[2] *kāmugaṉ*, பெ.(n.) 1.திருமால்; Viṣṇu. 2. ***காமதேவன்*** பார்க்க; see *kāma-dēvaṉ*.

Skt. kāmuka

[காமம் → காமுகன்.]

காமுண்டன் *kāmuṇḍaṉ*, பெ.(n.) படைத்துறை மறவரின் பதவிப் பெயர்; designation of the chief of an army formation.

[சாமன் → சாமந்தன் → சாமுண்டன் → காமுண்டன்.]

காமுருகி[1] *kāmurugi*, பெ.(n.) கொடியவள் (யாழ்.அக.); wicked woman.

[காமம் → உருகி.]

காமுருகி[2] *kāmurugi*, பெ.(n.) ஓணான் (வின்.); blood - sucker.

[கா → முருகி.]

காமுறு – தல் *kāmuṟu-*, 20 செ.குன்றாவி.(v.t.) 1.விரும்புதல்; to desire, wish for. *"இன்பமே காமுறுவ ரேழையார்" (நாலடி, 60).* 2.வேண்டிக் கொள்ளுதல்; to beseech, pray for. *"கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ" (கலித் 16).*

[காமம் + உறு –.]

காமூச்சு *kāmūccu*, பெ.(n.) முக்கால் நாழிகை வழி (யாழ்.அக.); distance which would take 18 minutes to walk.

[கா = முக்கால், மூச்சு = நாழிகை. கா + மூச்சு..]

ஒரு காதத் தொலைவில் பத்தில் ஒரு பகுதி நடப்பதற்கு ஆகும் காலம்.

காய்[1] **– தல்** *kāy-*,4 செ.கு.வி (v.i.) 1. நீர் முதலியன வெப்பமுறுதல்; to become hot. 2. சுடுதல்; to burn; to be warm, as body in temperature. சுரத்தால் உடல் காய்கிறது. 3. உலர்தல்; to wither, as vegetables by the sun; to parch, as the lips or mouth; to dry, as the ground. வெயிலிற் காய்ந்த பொருள். 4. மெலிதல் (வின்.); to be dried up, as the humours of the body; to become emaciated. 5. வயிறு பசியால் வருந்துதல்; starving due to hunger.

ம. காயுக; **க.** காய்; **தெ.** காகு; **து.** காயுனி; **குட.**, **கோத்.** காய்; **துட.** கேகாய்; **கொலா.**, **நா.** காங்க்; **பர்.** காபிப்; **கோண்.** காசனா; **குரு.** காய்னா; **மா.** க்வெ; **கூ.** காந்த.

Fln. kajo; **Es.** kajastada; **Jap.** kaga; **Q.** jaya.

kāy, to be hot, to burn. The **Tel.** *kā-gu* (also *kā-lu*), **Can.** *kāy-u*, to burn, and the **Can.** *kāge*, heat, compared with the Tamil *kāṅ-gei*,

show that the ultimate root is *kâ*, to which *y* or *gu* is added dialectically as a formative. The only **Sans.** word which seems to be related to this **Drav.** one is *kâm-a*, to desire; and we should not, perhaps, have suspected this to be related, were it not for its connection with the Hebrew *hâm-ad*, to desire, and the derivation of that word from *hâm-am* (base *hâm*), to be warm. Comp. with the Dravidian *kâ* or *kây*, the Greek *kai-w* (*kai-ô*) (Attick *ká-w) (ka-ô)* to burn, to be hot. The words seem identical. Liddell and Scott represent *kaiw (kaiô)* to be connected with the Sanskrit such, to dry. How much more nearly it appears to be connected with the Dravidian *kây*. Besides, the Dravidian languages have another word which seems to have a real relation to sush-a - viz., *suḍ-u*, to burn. To heat, or be hot, to burn, to boil. Comp. Finnish *keite, keitta*, to boil, to cook; Hungarian *keszil*. Comp. especially the Indo-European affinities of this word.

[கனல் → கனய் → காய்.]

காய்²-தல் *kāy-*, 2 செ.குன்றாவி. (v.i.) 1. எரித்தல்; to burn, consume. *"மதவேள் தன்னுடலங் காய்ந்தார்" (தேவா. 15:6).* 2. அழித்தல்; to kill, destroy. *"கஞ்சனைக் காய்ந்தானை" (திவ். பெரியதி. 7.6.5).* 3. விலக்குதல், to remove, do away with, lay aside. *"கோப முதலிய குற்றங் காய்ந்தார்" (பெரியபு அப்பூதி .2).* 4. வெறுத்தல்; to be prejudice to dislike, hate. *"காய்த லுவத்த லகற்றி யொருபொருட்க ணாய்தல்" (அறநெறி.22).*

ம. காயுக

[கனல் → கனய் → காய்.]

காய்³-த்தல் *kāy-*,4 செ.கு.வி(v.i.) மரம்செடி முதலியன காய்களைக் கொள்ளுதல்; to bear fruit.

ம. காய்க்குக; க. காய்; தெ. காசு, கான்சு; து. காயுனி.

[கள் → காள் → காழ் → காய். (மு.தா.244).]

காய்⁴-த்தல் *kāy-*,2 செ.கு.வி(v.i.) நுகர்வு முதிர்தல்; to be of ripe experience. *"உணரு மாண் பினாற் காய்த்தவர்" (கம்பரா. விபீடண.95).*

[கா → காய்.]

காய்⁵ *kāy*, பெ.(n.) 1. முதிர்ந்து பழுக்காத மரஞ் செடிகளின் பலன்; unripe fruit. *"கனி யொழிய ... நற்கா யுதிர்தலு முண்டு" (நாலடி, 19).* 2. மூவசைச் சீரின் இறுதியிலுள்ள நேரசை; the last metrical division in a word of three syllables sounding like kāy. *"ஆம்கடை காயடையின்" (காரிகை, உறுப்பு. 7).* 3. ***காய்ச்சீர்*** பார்க்க; see *kāy-c-cīr*. 4. பழுக்காத புண்கட்டி; unripe boil. கட்டி இன்னும் காயாக இருக்கிறது. 5. முதிராது விழுங் கரு (உ.வ.); aborted foetus. 6. சதுரங்கம் முதலிய விளையாட்டில் பயன்படும் காய்; chessman, die. 7. திருமண விழாவின்போது செய்யப்படும் பருப்புத் தேங்காய்ப் பணிகாரம் (இ.வ.); a preparation in the form of a cone made of pulse mixed with treacle, one of the many important eatables exhibited in a marriage.

ம., குட., **கோத.** காய்; க. காய், காய, காயி; தெ. காய; து., பட. காயி; துட. கோய; **கொலா.** கைக்; நா. காய்க்; **கோண்.** காயா, கைய; கூ. காவு; **குவி.** கைய்; **குரு.** கேன.

[கா → காய்.]

காய்⁶ *kāy*, பெ.(n.) 1. புண்ஆறிய வடு; cicatrice form a wound. அடிபட்டு உடம்பிற் காயுண்டாயிற்று. 2. உடம்பில் உண்டாகும் வெடிப்பு; callous humour, excrescence, wart.

Mhr. ghāya

[கா → காய்.]

காய்⁷-த்தல் *kāy-*, 4 செ.கு.வி. (v.i.) தழும் புண்டாதல்; to become callous; to form hard bunches, knots, warts excrescences on the body,

as from wounds, from walking, from using tools. கையெல்லாம் காய்த்துப்போயிற்று.

[கா → காய்.]

காய்க்கட்டி *kāy-k-katti,* பெ.(n.) பழுக்காத கட்டி; undeveloped abscess (சா.அக).

[கா → காய்.]

காய்க்கடுக்கன் *kāy-k-kadukkan,* பெ.(n.) அக்கமணி வைத்துக்கட்டிய கடுக்கன்(யாழ்ப்.); ear ring with rudrākša pendants, the water falling from which during baths is believed to have a purifying effect.

[காய் + கடுக்கன்.]

காய்க்கரு *kāy-k-karu,*பெ.(n.) 1. முதிராத கரு; child not fully developed. 2. சிதைந்த கரு; aborted child (சா.அக.).

[காய் → கரு.]

காய்க்கழலை *kāy-k-kalai,*பெ(n) கெட்டியானதும், பழுக்காததுமாகிய கழலைக்கட்டி; a hard fibrous tumour (சா.அக).

[காய் → கழலை.]

காய்க்கறியமிது *kāy-k-kari-y-amidu,*பெ.(n.) கடவுட்குப் படைக்குங் கறி; vegetable curry, as an offering to a deity. *"அப்பக் காய்க் கறியமிதுக்கு மிளகு முக்காற் செவிடும்" (SII.II.26-13 pg.127).*

[காய் + கறி + அமுது.]

காய்க்கீரை *kāy-k-kirai,* பெ.(n.) முருங்கைக் கீரை; moringa leaf (சா.அக).

[காய் + கீரை.]

காய்க்குடல் *kāy-k-kudal,* பெ.(n.) 1. புடைவளர்ச்சி கொண்ட குடல்; appendages of the intestines. 2. நெஞ்சங்குலையோடு சேர்ந்த குடல்; entrails. 3. கெட்டிக் குடல்; a condition of the bowels in which evacuations are not freed easy. 4. காயினுள்ளிருக்கும் சக்கை; soft pithy substance inside certain fruits such as jack, pumpkin etc (சா.அக.). (உ-ம்) பலா, பறங்கி, பூசணி முதலியன.

[காய் + குடல்.]

காய்க்கும் பருவம் *kāykkum-paruvam,*பெ.(n.) 1. காய்தோன்றுங் காலம்; fruit -bearing season. 2. பிள்ளைபெறும் பருவம் (வின்.); age of child bearing.

[காய்க்கும் + பருவம்.]

காய்க்குலை[1] *kāy-k-kulai,*பெ.(n.) நெஞ்சங் குலையோடு கூடிய ஈரற்குலை; the heart including the lungs and the liver (சா.அக.).

[காய் + குலை.]

காய்க்குலை[2] *kāy-k-kulai,* பெ.(n.) காய்களுள்ள கொத்து; bunch of unripe fruits. *"காய்க்குலைத் தெங்கும்" (சிலப் 13: 193).*

[காய் + குலை.]

காய்கண்டிதம் *kāy-kanditam.*பெ.(n.) வேளைச் செடி ; five leaved cloeme (சா. அக.).

[காய் + கண்டிதம்.]

காய்கறி *kāy-kari,* பெ.(n) உணவுக்குரிய மரக்கறிகள்; unripe fruits, vegetables and the like used for preparing curry.

ம. காய்கறி; து. காயிகசிப்பு

[காய்+கறி.]

காய்கொள்(ளு)-தல் *kāy-kollu-.* 16 செ.கு.வி. (v.i.) 1. காய்த்தல்; to bear fruit. 2. காயாதல்; to take the shape of a fruit (சா.அக.).

து. காயிபோபுனி

[காய்+கொள்.]

காய்ங்கனி *kāy-ṅ-kani,*பெ.(n.) காயும் கனியும் (தொல். எழுத். 48, உரை.); fruits ripe and unripe.

ம. காய்கனி.

[காய் + உம் + கனி.]

காய்ச்சல் *kāyccal,* பெ.(n.) 1. உலர்ச்சி; heating, drying. புதுநெல்லை இரண்டு காய்ச்சல் போட்டுக் குத்தவேண்டும் (உ.வ.). 2. வெப்பம்; heat, warmth, dryness. 3. காய்ச்சல் நோய்; fever, inflammatory state of the system. 4. மனவெரிச்சல், hatred, rancour.

ம. காய்ச்சல்; க. காகலு.

[காய் + காய்ச்சல்.]

காய்ச்சல்வெள்ளம் *kāyccal-veḷḷam,* பெ.(n.) புழுதிப்பருவத்தில் விதைத்தபின் வயலிற் பாய்ச்சும் பாசனநீர் (நாஞ்சில்); water let into a field after sowing in a dry condition.

[காய்ச்சல் + வெள்ளம்.]

காய்ச்சலடக்கி *kāyccal-aḍakki*, பெ.(n.) காய்ச்சல் நோயைப் போக்கும் மருந்து; febrifuge, antidote for fever.

[காய்ச்சல் + அடக்கி.]

காய்ச்சற்கட்டி *kāyccaṟ-kaṭṭi,* பெ.(n.) காய்ச்சல் நோயால் வயிற்றில் உண்டாகுங் கட்டி; enlarge-ment of the spleen, etc., ague-cake.

[காய்ச்சல் + கட்டி.]

காய்ச்சற்காரன் *kāyccaṟ-kāraṉ,* பெ.(n.) 1. காய்ச்சல் நோய் உள்ளவன்; one who suffers from fever. 2. பணம் இல்லாதவன்; one who suffers from penury. 3. பொறாமையால் மனவெரிச் சலுள்ளவன் (இ.வ.); a jealous or rancorous person.

[காய்ச்சல் + காரன்.]

காய்ச்சற்பாடு *kāyccaṟ-pāḍu,*பெ.(n) 1. நிலக் கடலை பருப்பின் நன்றாகக் காய்ந்தநிலை; condition of being fully dried, as ground - nut kernels ready for crushing, opp. to īrappāḍu, நெல் காய்ச்சற் பாடானது (உ.வ.). 2. நெல் முதலியவற்றை யுலர்த்துதலால் உண்டாகும் அளவுக் குறைவு; reduction in quantity, as of paddy, etc., when dried. 3. பொருளிழந்து ஏங்கிநிற்கும் நிலை; barrenness, impoverished state.

[காய்ச்சல் + பாடு.]

காய்ச்சி *kāycci,* பெ.(n.) துவரை (இ.வ.) pigeon - pea, dhal.

[காய் → காய்ச்சி.]

காய்ச்சிக்கிழங்கு *kāycci-k.kiḻaṅgu,* பெ.(n) ***காச்சிக்கிழங்கு*** (நாஞ்சில்) பார்க்க; see *kacci-k-kiḻaṅgu.*

[காய் + காய்ச்சி + கிழங்கு.]

காய்ச்சிப்பதப்படுத்து–தல் *kāycci-ppada-p-paḍuttu-,*5 செ.குன்றாவி.(v.t.) 1. மாழைகளை அடிப்பதற்கு இசையும்படி நைப்புண்டாக முன்ன தாகவே பதமாகக் காய்ச்சுதல்; the process of applying heat to a metal and then cooling it very slowly for purposes of removing its brittleness and increasing its ductility and malleability. 2. துவைச்சல்; the process of giving the requisite temper or degree of hardness of softness as to iron or steel (சா.அக.).

[காய்ச்சி + பதம் + படுத்து.]

காய்ச்சிரக்கு *kāyccirakku,*பெ.(n.) காட்டுக் காய்ச்சுரை; wild sour greens (சா.அக.).

[காய் + சரக்கு– காய்ச்சரக்கு →காய்ச்சிரக்கு (கொ.வ.).]

காய்ச்சிரங்கு[1] *kāy-c-ciraṅgu,*பெ.(n.) பழுக்காத கட்டி; unripe boil or abscess (சா. அக.).

[காய் + சிரங்கு.]

காய்ச்சிரங்கு[2] *kāy-c-ciraṅgu,*பெ.(n.) ***காசிலிக் கீரை (சு.வை.ர. 448)*** பார்க்க; *kāśili-k-kīrai.*

[காசிலி → காச்சிலி → காச்சிரங்கு (கொ.வ.).]

காய்ச்சிவடி–த்தல் *kāyccivaḍi-,*4 செ.கு.வி. (v.i.) 1. வாலையிலிட்டிறக்கல்; distilling. 2. நெருப்பிற் கொதிக்கவைத்து வடிகட்டுதல்; filtering after boiling (சா.அக.).

[காய்ச்சி + வடி.]

காய்ச்சீர் *kāy-c-cīr*,பெ.(n.) நேரீற்று மூவசைச்சீர் (யாப். வி.1); metrical foot of three asai, ending in kāi

[காய் + சீர்.]

காய்ச்சு[1] – தல் *kāyccu-*, 5 செ. குன்றாவி. (v.t.) 1. காயச் செய்தல்; to boil. கஞ்சி காய்ச்சினாள். 2. சமைத்தல்; to cook. 3. தீயாற் சூடாக்குதல்; to heat by fire. 4. உலர்த்துதல் (வின்.); to dry, warm, as in the sun or by putting near the fire. 5. கடிதல்; to scold, reprove, take to task. 6. நையப்புடைத்தல்; to beat, belabour. முதலாளி அவனை நன்றாகக் காய்ச்சிவிட்டார் (உ.வ.). 7. சாயமிடுதல். (யாழ்.); to dye, tinge, as a cloth.

ம. காயிக்குக; பட. காசு.

Fin. keittä; **Es.** keeta; **Mari.** kūam; **Jap.** gutaguta; **Q.** janchay.

[காய் → காய்ச்சு-.]

காய்ச்சு[2] *kāyccu*,பெ.(n.) தீயிற் காய்ச்சுகை; heating, as metal or a stone; boiling, as a liquid. அதனைத் தீயில் இரண்டு காய்ச்சுக் காய்ச்சினான்.

ம. காச்சு

Fin. kahi; **Lap.** gaske; **Komi.** kos; **Jap.** kaseru; **Mordvin.** koske.

[காய் → காய்ச்சு.]

காய்ச்சு[3] *kāyccu*,5 செ.குன்றாவி.(v.t.) உருக்குதல்; to melt.பொன்னை காய்ச்சிக் கம்பியாக்கினான் (உ.வ.).

ம. காயிக்குக; **க., து.** காசு; **தெ.** கா஁சு.

Fin. kesa; **Mordvin.** kiga; **Mong.** ges, geske; **Karel.** keza.

[காய் → காய்ச்சு.]

காய்ச்சுக்கட்டி *kāyccu-k-katti*பெ.(n.) **காசுக் கட்டி** பார்க்க; see *kāśu-k-katti*

[காய்ச்சு + கட்டி.]

காய்ச்சுக்கல் *kāyccu-k-kal*,பெ.(n.) போலி மாமணி (இரத்தினம்) (வின்.); lit., dyed or tinged stone, counterfeit gem.

[காய்ச்சு + கல்.]

காய்ச்சுக்குப்பி *kāyccu-k-kuppi*, பெ.(n.) செய்நீர் (திராவகம்) காய்ச்சி இறக்கும் குப்பி (வின்.); glass vessel used in sublimation, elembic, still.

ம. காசகுப்பி

[காய்ச்சு + குப்பி.]

காய்ச்சுகுறி *kāyccu-kuri*, பெ.(n) கொதிவரும் சூட்டின் வரம்பு; the temperature at which boiling commences (சா. அக).

[காய்ச்சு + குறி.]

காய்ச்சுசாரம் *kāyccu-śāram*,பெ.(n.) வளையலுப்பு; glass-gall (சா.அக.).

[காய் → காய்ச்சு + சாரம்.]

காய்ச்சுண்டி *kāyccundi*, பெ.(n.) காசுக்கட்டி; black catechu (சா.அக).

மறுவ.காய்ச்சுண்டை

[காய்ச்சு + சுண்டி.]

காய்ச்சுநீர் *kāyccu-nīr*,பெ.(n.) வெந்நீர்; hot water (சா.அக.).

[காய்ச்சு + நீர்.]

காய்ச்சு நீருப்பு *kāyccu-nīr-uppu*, பெ.(n.) கடல் நீரைக் காய்ச்சியெடுத்த உப்பு ; commom salt obtained by boiling sea-water (சா.அக.).

மறுவ.கடலுப்பு

[காய்ச்சு + நீர் + உப்பு.]

இனவகை . கடலுப்பு, கவட்டுப்பு, கல்லுப்பு

காய்ச்சுப்பு *kāyccuppu*, பெ.(n.) 1. சவட்டுப்பு (மூ.அ.); common salt, extracted from soils by filtration and evaporation or by boiling. 2. உவர்நீரைக் காய்ச்சியெடுக்கும் உப்பு (வின்.); salt obtained from salt water.

[காய்ச்சு + உப்பு.]

காய்ச்சுமண் *kāyccu-man*, பெ.(n) வளையல் செய்வதற்குரிய மணல் (G.TP.D 175); fine sand obtained by washing alkaline earth, for making glass -armlets.

[காய்ச்சு + மண்.]

காய்ச்சுரை[1] *kāy-c-curai,* பெ.(n.) புடமிட்ட பொன் (தைலவ. தைல); gold purified by fire.

[காய்ச்சு + உரை.]

காய்ச்சுரை[2] *kāyccurai,* பெ.(n.) 1. ***புளிச்சைக் கீரை (மூ.அ.)*** பார்க்க; see *puḷi-c-cai-k-kīrai.* 2. பேய்ச் சுரை; bitter gourd. 3. காட்டுக் காய்ச் சுரை; wild sour greens (சா.அக).

[காய் + சுரை.]

காய்ச்சுலவணம் *kāyccu-lavaṇam,* பெ.(n.) ***காய்ச்சுப்பு (வின்.)*** பார்க்க; see *kāy-c-cuppu.*

[காய்ச்சு + உலவணம். த. உலவணம்>Skt.lavana.]

காய்ச்சுறுக்கு *kāyccuṟukku,* பெ.(n.) ***புளிச்சைக் கீரை*** பார்க்க; see *puḷi-ci-cai-k-kīrai.*

[காய்ச்சுரை → காய்ச்சுறுக்கு(கொ.வ.).]

காய்ச்செண்ணெய் *kāyccennai,* பெ.(n.) 1. மருந்து கலந்த எண்ணெய்; oil boiled with drugs. 2. ஊற்றிய விளக்கெண்ணெய்; hot-drawn castor-oil (சா.அக.).

[காய்ச்சு + எண்ணெய்.]

காய்சரக்கு *kāy-šarakku,* பெ.(n.) 1. உலர்ந்த மருந்துச் சரக்கு; dried herbs or drugs. 2. ஊமத்தை, தும்மப் பேரி காயாகவே இருக்கும் மருந்துச் சரக்கு; unripe medicinal fruit such as datura, bitter-apple etc (சா. அக.).

[காய் + சுரக்கு.]

காய்சினவழுதி *kāy-šiṉa-vaḻudi,* பெ.(n.) தலைச் சங்கத்தின் தொடக்கத்திலிருந்த பாண்டியன் (இறை, 1,உரை); the first Pāṇḍyaṉ of the first Tamil Sangam.

[காய் + சினம் + வழுதி. காய்சினம் = கடுஞ்சீற்றம். வழுதி = பாண்டியர்களின் குடிப்பெயர்.]

காய்த்த *kāytta,* இடை.(part.) ஓர் உவமவாய்பாடு; a particle of comparison. வெயிலொளி காய்த்த விளங்குமணி (தொல். பொருள். 291, உரை.).

[காய் → காய்த்த (முதிர்தல், நிறைதல்,முழுமையாக ஒப்புதல்).]

காய்த்தனியம் *kāy-t-taṉiyam,* பெ.(n.) முசுக் கட்டை; Indian mulberrry tree (சா.அக.).

மறுவ. கம்பளிகொண்டான்

[காய் + தனியம்.]

காய்த்தானியம் *kāy-t-tāṉiyam,* பெ.(n.)1. முதிரை (வின்.); pulses, containing seeds in pods or legumes, dist, fr. *katir-t-tāṉiyam.* 2. முசுக்கட்டை (மூ.அ.); Indian mulberry.

[காய் + தானியம்.]

காய்த்து-தல் *kāyttu-,* 5 செ.குன்றாவி.(v.i.) 1. எரியச்செய்தல்; to ignite, cause to burn. *"காய்த்திய பொற்றொடி யேவ" (சிலம்பு 21; 55).* 2. சினத்தல் (சிலப், 21:55 அரும்.). 3. ***காய்ச்சு-***[1,2,3] பார்க்க; see *kāyccu-*[1,2,3].

[காய் → காய்த்து.]

காய்த்தும்பை *kāy-t-tumbai,* பெ.(n.) ***கறித்தும்பை*** (வின்) பார்க்க; see *kari-t-tumbai.*

[காய்+தும்பை.]

காய்த்தொட்டி *kāy-t-toṭṭi,* பெ (n) ஆதொண்டை; thorny caper (சா.அக.).

[காய் + தொட்டி.]

காய்நீர் *kāy-nīr,* பெ.(n.) வெந்நீர் (பதார்த்த. 78); warm-water.

ம. காய்நீர்

[காய்+நீர்.]

காய்நீர்க்கயம் *kāy-nīr-k-kāyam,* பெ.(n) ***காய்நீரூற்று*** பார்க்க; see *kāy-nīrūṟṟu* (சா.அக).

[காய் + நீர் + கயம் (நீர்நிலை)..]

காய்நீரூற்று *kāy-nīr-ūṟṟu,* பெ.(n) வெந்நீரூற்று; hot water spring (சா. அக.).

மறுவ. காய்நீர்க்காயம்

[காய் + நீர் + ஊற்று.]

காய்ந்த பதம் *kāynda-padam,* பெ.(n) உலர்ந்த பதம்; dried state (சா.அக.).

[காய்ந்த + பதம்.]

காய்ந்தமீன் *kāynda-mīṉ,* பெ.(n) கருவாடு; dried fish (சா.அக.).

[காய்ந்த + மீன்.]

காய்ந்துபோ-தல் *kāyndu-pō-,* 8 செ.கு.வி.(v.i) உலர்தல்; growing dry (சா.அக.).

[காய்ந்து + போ.]

காய்ந்தெரியான் *kāynderiyāṉ,* பெ.(n) கருஞ்செம்பை; common sesban (சா.அக.).

[காய்ந்து + எரியான்.]

காய்நெரிஞ்சில் *kāy-neruñjil,* பெ.(n) நெருஞ்சில் வகையுள் ஒன்று; downy fuinjuifoil voine (சா.அக.).

[காய் + நெரிஞ்சில்.]

காய்ப்ப *kāyppa,* (இடை.) (part.) ஓர் உவம உருபு (தொல் பொருள். 286); a particle of comparison.

[காய் → காய்ப்ப.]

காய்ப்பலா *kāy-p-palā,* பெ.(n) கறிக்குதவும் பலா; edible jack as distinguished from other varieties of non-edible fruit (சா.அக.).

[காய் + பலா.]


காய்ப்பலா

காய்ப்பழம் *kāy-p-paḻam,* பெ.(n) முற்றும் பழுக்காத பழம் (இ.வ.); fruit not fully riped.

[காய் + பழம்.]

காய்ப்பறங்கி *kāy-p-paṟaṅgi,* பெ.(n) கோழி நோய்களிலொன்று (சங்.அக.); a disease of fowls.

[காய் + பறங்கி.]

காய்ப்பனை *kāy-p-paṉai,* பெ.(n.) சாறெடுக்காத பெண்பனை (G.Tn.D.307); fruit - bearing palmyra which has not been tapped, one of five varieties of idarayiṭṭam-paṉai.

[காய் + பனை.]

காய்ப்பாகல் *kāy-p-pāgal,* பெ.(n) 1. பாகற்கொடி; spiked bitter cucumber. 2. ஒருவகைக் கசப்பு பாகல்; a bitter variety of (pāgal) bitter-gourd (சா.அக.).

[காய் + பாகல்.]

காய்ப்பாலை *kāy-p-pālai,* பெ.(n) பாற்சோற்றிப் பாலை; Indian gutta-percha (சா.அக.).

[காய் + பாலை.]

காய்ப்பு[1] *kāyppu,* பெ.(n.) 1. வெறுப்பு (வின்.) dislike, aversion, disgust. 2. மட்டமான இரும்பு (யாழ்ப்.); hard inferior iron.

ம. காய்பு

[காய் → காய்ப்பு.]

காய்ப்பு[2] *kāyppu,* பெ.(n) மரஞ்செடி முதலியன பலன்தருகை; produce of a tree, crop of fruit or grain.

ம. காய்பு; தெ. காபு.

[காய் → காய்ப்பு.]

காய்ப்பு[3] *kāyppu,* பெ.(n) 1. தோலின் தடிப்பு; callousness of skin. 2. தழும்பு (ஈடு, 4,2,5 ஜீ.); scar, callous excrescence.

[காய் → காய்ப்பு.]

காய்ப்புக்காய்-த்தல் *kāyppu-k-kāy-,* 4 செ.கு.வி. (v.i.) உடம்பின் தோல் உரம் பெறுதல்; the hardening

of the skin through friction or constant rubbing in the affected part (சா.அக.).

[காய்ப்பு + காய்.]

காய்ப்பு மரம் *kāyppu-maram,* பெ.(n) காய்த்த மரம், காய்களுள்ள மரம்; fruit bearing tree.

[காய்ப்பு + மரம்.]

காய்ப்புரசு *kāyp-purašu,* பெ.(n) 1. காட்டுப் புரசு; dhak tree. 2. வெள்ளைப் புரசு; a rare white variety of Palaus having medicinal virtues (சா.அக.).

[காய்+ புரசு.]

காய்ப்புளிச்சை *kāy-p-puḷiccai,* பெ.(n.) ***காய்ச்சுரை***[1] (பாண்டி) பார்க்க; see *kāy-c-curai.*

[காய் + புளிச்சை.]

காய்ப்பூவரசு *kāy-p-pūvarašu,* பெ.(n) காட்டுப் பூவரசு; false fern tree (சா.அக.).

[காய் + பூவரசு.]

காய்பசி *kāy-paši,* பெ.(n) 1. மிக்க பசி; extreme hunger. *"காய்பசிக் கடும்பேய்"* (மணிமே. 6:82). 2. வருத்தும் பசி; agonising hunger.

[காய் + பசி.]

காய்பலம் *kāy-palam,* பெ.(n) 1. தான்றி; belleric myrobalan. 2. தேக்கு; teak (சா.அக.).

[காய் + பலம்.]

காய்பிடி–த்தல் *kāypiḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) ***காய்கொள்(ளு)–தல்*** பார்க்க; see *kāykoḷ(ḷu).*

து. காயிபோபுனி

[காய் + பிடி.]

காய்ம்பனை *kāy-m-paṉai,* பெ.(n) காய்க்கும் பனை (யாழ்ப்.); fruit - bearing palmyra.

[காய்க்கும் + பனை – காய்த்திருக்கும்பனை → காய்ம்பனை.]

காய்ம்பாளை *kāy-m-pāḷai,* பெ.(n) பெண் பனையின் பாளை (வின்.); flower calyx of the fruit bearing palmyra tree.

[காய்க்கும் + பாளை – காய்க்கும் பாளை → காய்ம் பாளை.]

காய்மகாரம் *kāy-maǵāram,* பெ.(n) பொறாமை (வின்.); envy, jealousy impelled by selfishness.

த. நமது > **தெ.** மனதி > மம.

[காய் + மகாரம். மம = நமது அல்லது எனது என்னும் தன்னல உணர்வு. மம + காரம் – மகாரம்.]

காய்மடி *kāy-maḍi,* பெ.(n) ஆவின் வன்முலை (வின்.); hard udder of a cow, yeilding milk with difficulty.

[காய் + மடி.]

காய்மடை *kāy-maḍai,* பெ.(n) 1.சிறுதெய்வத் திற்குப் படைக்கும் கனிவகைப் படையல் (யாழ்ப்.); offering of fruits, commonly to a ferocious deity. 2.சிற்றுண்டி; light repast.

மறுவ. பலகாரம்

[காய் + மடை. மடுத்தல் = உண்ணுதல். மடு → மடை (உணவு). பழங்களையே மடுத்தற்குரிய, உண்ணுதற்குரிய உண்டியாகப் படைப்பது வழக்கம். இது பழ ஆகாரம் பலகாரம் எனத் திரிந்தது.]



காய்மடை

காய்மண்டை *kāy-maṇḍai,* பெ.(n) 1. வறட்சியான தலை; parched head. 2. கரப்பான், சொறி இவையுள்ள தலை; a popular name for favus, porrigo (சா.அக.).

[காய் + மண்டை.]

காய்மரம் *kāy-maram,* பெ.(n) ***காய்ப்புமரம்*** (பிங்.) பார்க்க; see kāyppu-maram.

[காய்² + மரம் – காய்மரம். (வி.தொ.).]

ஆண்டுதோறும் அல்லது பருவந்தோறும் காய்க்கும் மரங்களும் ஆண்டு மாறி அல்லது பருவம் மாறிக் காய்க்கும் மரங்களும் காணப்படுவதால், காய்ப்பு நிலையிலுள்ள மரங்களைக் காய்மரம் எனப் பிரித்தறிய நேர்ந்ததால் இப் பெயர் வழங்கலாயிற்று.

காய்முந்திரி *kāy-mundiri,* பெ.(n) கொட்டை முந்திரி; cashew-nut fruit (சா.அக.).

து. காயன (நன்கு முதிராத முந்திரி)

[காய் + முந்திரி. காய் = கொட்டை.]



காய்முந்திரி

காய்முருங்கை *kāy-murungai,* பெ.(n) உணவுக் குதவும் முருங்கை; edible horse radish (சா.அக.).

[காய்³ + முருங்கை. காய் = காய்கறியாக உண்ணத்தக்கது.]

காய்முள்ளங்கி *kāy-muḷḷaṅgi,* பெ.(n) உண்பதற் குரிய முள்ளங்கி; edible Indian radish (சா.அக.).

[காய் + முள்ளங்கி.]

காய்மை *kāymai,* பெ.(n) ***காய்மகாரம்*** (வின்.) பார்க்க; see *kāy-magāram.*

[காய் → காய்மை]

காய்மைகரி–த்தல் *kāymai-kari-,* 4 செ.கு.வி. (v.i.) பொறாமைப்படுதல் (வின்.); to be envious.

[காய்மை + கரி. காய் → காய்மை = மனவேக்காடு, பொறாமை. கரித்தல் = வெறுப்போடு புலப்படுத்துதல். பொங்கிப்புகைந்து பேசுதலைக் கரித்துக்கொட்டுதல் என வழங்குதலை ஒப்பு நோக்குக.]

காய்மைக்காரி *kāymai-k-kāri,* பெ.(n) பொறாமைப் பட்டவள் (வின்.); envious woman.

[காய்மை + காரி. காய் – காய்மை = மனவேக்காடு, பொறாமை, கரு → கரி → காரி = செய்பவள், செயற்பாட்டுக் குரியவள்.]

காய்வலாகம் *kāy-valāgam,* பெ.(n) மஞ்சள் நிறக்காய்காய்க்கும் நக்குவாரத்தீவின் தென்னை; tree, yielding yellow coconuts (சா.அக.).

[காய் + வலாகம்.]

காய்வள்ளி *kāy-vaḷḷi,* பெ.(n) 1. ***காட்டுவள்ளி*** (L) பார்க்க; see *kāṭṭu-vaḷḷi.* 2. சீரகவள்ளி வகை. (M.M.463); Malacca yam. 3. வெற்றிலை வள்ளி (வின்.); betel yam. 4. கிழங்கு வகை (M.M.53); humped yam.

ம. காய்வள்ளி

[காய்³ + வள்ளி.]

காய்வாசியம் *kāy-vāśiyam,* பெ.(n) நாறாக் கரந்தை; a variety of sweet basil (சா.அக.).

[காய் + வாசியம்.]

காய்வாழை *kāy-vāḻai,* பெ.(n) ஒரு குலையில் 40 முதல் 80 வரை காய்களையுடைய வாழை வகை (G. Sm.D.i,215); large green plantain of 40 to 80 plantains to a bunch.

[காய் +வாழை.]

காய் வாழை என்பது பழுக்காய் ஆவதற்கு முன்பே கருக்காய் அல்லது செங்காய் நிலையில் பயன் கொள்ளப்படும் வாழை வகை.

கச்சல், கருக்காய், பைங்காய், செங்காய், குங்காய், பழுக்காய் என்பன கனிக்கு முந்தைய காய்நிலைகள்.

காய்விழு-தல் *kāy-viḻu-,* 2 செ.கு.வி. (v.i) கருச்சிதைந்து விழுதல்; to miscarry, abort. நேற்று எருமைக்குக் காய் விழுந்துவிட்டது (கொங்.).

மறுவ. கன்றுவீசுதல், விசிறுதல், இறங்குதல், களைதல்.

[காய்+விழு-.]

காய் என்பது ஆகுபெயராகி முற்றாத நிலை - முதிராதநிலையில் வயிற்றிலுள்ள கருவை குறித்தது. காய்விழுதல் சிறப்பாகக் கருச்சிதைவையே குறித்தது. இது விலங்கினத் துக்கும் மாந்தரினத்துக்கும் பொதுவான மரபுச்சொல்லாட்சி.

காய்வு *kāyvu,* பெ.(n) 1. உலர்வு; dryness. 2. எரிச்சல்; burn. *"பொய்க்காய்வு காய்தி என் நெஞ்சு" (குறள்.1246).* 3. சூடு; heat. 4.மெலிவு; weakness (சா.அக.). 5. கடுஞ்சினம்; angry.

ம. காய்வு

[காய் → காய்வு. (சொ.ஆ.க.55).]

காய்வெட்டிக்கள் *kāyveṭṭi-k-kaḷ,* பெ.(n.) பாளைக்குப் பகரமாகக் காயை வெட்டி இறக்கும் பனங்கள்; toddy drawn from the tree by cutting the tender fruit instead of spath so as to make the juice flow from the central part (சா.அக.).

[காய் + வெட்டி + கள்.]

காய்வெட்டு *kāyveṭṭu,* பெ(n) நன்கு பழுக்காக பழம்; unripe fruit.

[காய் + வெட்டு]

காய்வேளை² *kāy-vēḷai,* பெ(n) கை வேளை; five-leaved cleome.

[காய்மை + வேளை.]

வகைகள் :

1. இரும்புக் காய்வேளை 2. கொள்ளுக்காய்வேளை 3. சிவப்புக்காய்வேளை 4. பூனைக்காய்வேளை 5. முட்காய் வேளை 6. கருப்புக் காய் வேளை (சா.அக.).

காயக்கட்டு *kāya-k-kaṭṭu,* பெ(n) புண் புரைகளுக்குக் கட்டும் துணிக்கட்டு; bandage for a wound (சா.அக.).

க. காயகட்டு (கட்டுப்படுத்துவது)

[காயம் + கட்டு.]

காயக்கம்¹ *kāyakkam,* பெ.(n) அளவிறந்த காதல்; stupor due to extreme love-passion. *"உன்னை மருவிய காயக்கங் கொஞ்சமோ" (மதுரகவி.62).*

ம. காயக்கம்

[காயகம்² → காயக்கம்.]

வெப்பநாட்டில் காய்தல், எரிச்சலையும் வெறுப்பையும் சினத்தையும் குறிக்கும். குளிர்நாட்டில் காய்தல் - உவத்தலையும் காதலையும் குறிக்கும். இச் சொல் குளிர்நாட்டு இடவழக்காய் உருப்பெற்றுப் பரவியதாகலாம். குளிர் நாட்டில் வெப்பம் அல்லது வெயில் விருப்பத்திற்கு உரியதாகும்.

காயக்கம்² *kāyakkam,* பெ.(n) சூழ்ச்சி (விறலி விடு. 507); artfulness.

[தெ. காயகமு, காயக்கம்.]

காயக்கரணம் *kāya-k-karaṇam,* பெ.(n) உடலுறுப்புச் செய்கையால் (சைகையால்) உள்ளக் குறிப்புக் காட்டல் (அபிநயம்); bodily gestures, as exhibited in dancing. *"காயக் கரணமுங் கண்ணிய துணர்தலும்" (மணிமே. 2.25).*

ம. காயக்கரணம்

[காயம் + கரணம்: காயம் = உடம்பு. கரணம் மெய்ப்பாடு (அவிநயம்) நளிநயம்.]

காயக்கி *kāyakki,* பெ.(n) மெல்லியள்; woman of slender build. *"நளனைக் கண்டு மண மாலையிட்ட காயக்கி நீர்தாமோ" (கூளப்ப.173).*

[தெ. காயகமு → காயக்கி. காய்தல் = உலர்தல், மெலிதல். மெலிந்தவள் காயக்கி எனப்பட்டாள்.]

காயக்கிலேசம் *kāya-k-kilēšam,* பெ.(n) உடலை வருத்தியொடுக்குகை; mortification of body. *"காயக் கிலேச முணர்ந்த பயனன்றே" (ஔவைகு. உள்ளுணர்.5).*

[காயம்+கிலேசம் காயம்=உடம்பு வ. கிலேச=துன்பம், வருத்தம். வ. கிலேச < த.கிலேசம்.]

காயக்கோல் *kāya-k-kōl,* பெ.(n) அறுவை மருத்துவக் கருவிவகை (தஞ்.சா.iii,40); a surgicol instrument.

*[காயம் + கோல். காயம் = உடம்பு. கோல்=கைக்கருவி. எழுதுகோல், கத்தரிக்கோல் போன்ற சொல்லாட்சிகளில் கைக்கருவி என்னும் பொருளில் **கோல்** ஆளப்பட்டிருத்தல் காண்க. உடம்பில் அறுவை மருத்துவம் செய்யும் கருவியும் கருவித் தொகுதியும் **காயக்கோல்** எனப் பண்டைக்காலத்தில் பெயர் பெற்றது.]*

காயகம் *kāyagam,* பெ.(n) 1.இசை; music. 2. அளவுக்கதிகமான காதல்; delusion in love, libidinous fascination. *"உனக்கே னிந்தக் காயகமே" (தனிப்பா.ii, 156: 391).*

ம. காயமு

*[காய் → காயகம். காய்தல் சினத்தலை உணர்த்தியது போன்றே முரண் பொருள் தந்து உவத்தலையும் குறித்தது. **காய்தல்** பார்க்க see kāy-.]*

காயகம்² *kāyagam,* பெ.(n) வாணிகம்; profession, trade.

தெ. காயகமு.

[காய் → காயகம். (விளைந்து முற்றிய தவசம், வித்து, பயறு, கொட்டை, நெற்று முதலியவை).]

காயகம்³ *kāyagam,* பெ.(n) மகளிர் ஈன்றணிமை யில் உட்கொள்ளும் மருந்து; a herbaceous drug prescribed for a lying-in-woman (சா.அக.).

தெ. காயமு

[காய் → காயகம். (மருந்தாகும் காய்கறி மூலிகை வகை).]

காயகற்பம் *kāya-karbam,* பெ.(n) உடல் வலிமைக்கும், நீண்டவாழ்நாளுக்குமாக உண்ணும் மருந்து; medicine for strengthening the body and prolonging life. *"காயகற்பந் தேடி நெஞ்சு புண்ணாவர்" (தாயு.பரிபூரண.10).*

ம. காயகல்பம்

[காயம்+கற்பம். காயம்=உடம்பு. கற்பம்=கல்வத்தில் அரைத்த மருந்து.]

காயகன் *kāyagan* பெ.(n) 1. பாடுவோன்; songster, vocal musician. *"கலைமுழு துணர்ந்த செல்வக் காயகன்" (திருவாலவா. 54.12).* 2.மயக்குவோன் (வின்); fascinator, amorous, wheedler.

H.gāyak;**Skt.**gāyak.

Aust. gayandi (bullroares).

[கூ → கூவு → காவு → காவகன் → காயகன்.]

காயங்கட்டு-தல் *kāyan-kattu-,* 5 செ.கு.வி.(v.i) புண்ணுக்கு மருந்திட்டுக் கட்டுதல்; to dress a wound.

தெ. காயமு

[காயம் + கட்டு-. காய் → காயம் = வீக்கம், புண்]

காயங்கழியாத நாயகி *kāyan-kāliyāta-nāyaki,* பெ.(n) புளிச்சிறுகீரை; soursorrel (சா.அக.).

[காயம் + கழியாத + நாயகி.]

காயச்சம் *kāyaccam,* பெ.(n) சிற்றீந்து; small date (சா.அக.).

[காய் → காயச்சம்.]

காயசன்னி *kāya-šanni,* பெ.(n) காயம் பட்டதனால் உண்டாகும் குளிர்க்காய்ச்சல்; traumatic tetanus.

[தெ. காயமு + சன்னி.]

காயசித்தி¹ *kāya-šitti,* பெ.(n) 1. சித்தரின் மூலிகைக் கற்பத்தால் நரைதிரையின்றி நெடு நாளிருக்கச் செய்யுஞ் பேறு (சித்தி); power of securing the body

by magical medicaments against age and its effects, as loss of teeth, grey hairs, decay of mental or physical powers. *"சித்தரானவர் காயசித்தி முதலெய்திடுவார்" (குற்றா.தல. நூற்பய.16).* 2. சிறுமை பெருமை (அணிமா மகிமா) முதலிய பேறுகள் (சித்திகள்). (வின்.); super-normal powers of the soul over its physical vesture, as reducing it to an atom or enlarging it to any size at pleasure.

[காயம் = உடம்பு. சித்தி = பேறு. காயம் + சித்தி.]

காயசித்தி[2] *kāyaśitti,* பெ.(n) பொன்னாங்காணி கீரை; a kind of green.

[காயம் + சித்தி.]

காயசித்திக்கடியான் *kāyaśittikkaḍiyāṉ,* பெ.(n) காந்தக்கல் (வின்.); load stone.

[காயசித்திக்கு+அடியான்.]

காயசித்தியுப்பு *kāya-śitti-y-uppu,* பெ.(n) அமரியுப்பு (வின்.); urine salt.

[காயம்+சித்தி+உப்பு.]

காயடி—த்தல் *kāyaḍi-,* 4 செ.கு.வி.(v.i.) விரையடித்தல்; to castrate.

மறுவ. விதையடித்தல்

[காய்+அடி–.]

காய்-ஆகுபெயராய் இனப்பெருக்கத்திற்குக் காரணமாகிய விலங்குகளின் விதையைக் குறித்தது.

காயத்தவசம் *kāyattavaśam,* பெ.(n.) 1. நெற்று அல்லது கொட்டையில் அடங்கியுள்ள பருப்பு வகை; pulses, seeds contained in pods or legumes. 2. தவசம்; grains (ingeneral).

ம. காயதான்யம்; **தெ.** காயதான்யமு.

[காய்+தவசம்.]

காயத்தானியம் *kāyattāṉiyam,* பெ.(n.) ***காயத்தவசம்*** பார்க்க; see *kāyattavaśam.*

ம. காயதான்யம்; **தெ.** காயதான்யமு.

[காய் + தானியம்.]

காயத்திரி[1] *kāyattri,* பெ.(n.) அந்தணர் நாள்தோறம் ஓதும் மந்திரம்; Gayatri, the sacred mantra of 24 syllables in the Gayatri metre recited by Brahmans in their daily worship.

[கூ → கூவு → காவு → காவன் (கவிபாடுபவன்) காயன் → காயதன் → காயத்தம் → காயத்திரி.கா→ கான (வடதமிழ்ச்சொல்).]

ஓரடிக்குப் பன்னிரு அசைகள் கொண்ட ஈரடி கட்டளைக் கலித்துறையாகவோ, ஓரடிக்கு எட்டு அசைகள் கொண்ட மூன்றடி (சிந்தடி) கலித்துறையாகவோ பாடப்படும் பாடல் வகைக்கு வடமொழியாளர் ***காயத்திரி*** *எனப்பெயர் சூட்டினர். ஆயின் இது முற்றிலும் கட்டளைக்கலித்துறை யாப்பமைதி கொண்டது. எழுத்துகளுக்கு மாத்திரை வகுப்பதும் அதற்கேற்ப சீர்களுக்கு அசையலகு கொள்வதும் முற்றிலும் தமிழ்யாப்பமைதிக்கே உரியது. இது இசைத்தமிழின் தாக்கத்தால் இயற்றமிழிலும் அமைந்த இலக்கணப்பாங்கு. மேலையாரிய மொழிகளில் எழுத்துகளுக்கு மாத்திரை வகுக்கும் பாங்கு யாண்டும் நிலவியதில்லை.*

வடமொழியில் Gāthā- a verse not belonging to Vedas but to the epic poetry of legends' என்று கூறப்பட்டுள்ளது. Gāthaka, Gāyaka இரண்டும் பாடுபவனைக் குறிக்கும். காயத்திரி என்பது பாகதம் (Pkt) எனப்படும் வடதமிழ்ச்சொல்.

"Om bhur bhuvas suva
Tat savitur Varenyam
Bhargo Devasya Dheemahi
Dhiyo yo nah Prachodayat"

" மாணிக்கவாசகர் வரலாறுங்காலமும்" (1930) என்னும் நூலில் (பக்கம் 675) மறைமலையடிகள் இம் மந்திரம் பற்றித் தந்துள்ள ஆய்வுரை:

'தீத்திரளையான ஞாயிற்றினையும், அஞ்ஞாயிற்றினை ஓர் உடம்பாய் கொண்டு 'பர்க்கன்' எனப் பெயர் பூண்டு விளங்குஞ் சிவபெருமானையும் வழுத்துங் காயத்திரி மந்திரமானது, விசுவாமித்திரரையும் அவர் தங்குடியினரையும் ஆசிரியராய்க் கொண்ட இருக்குவேத மூன்றாம்

மண்டிலத்தின் இறுதிக் கண்ணதான 62ஆம் பதிகத்தின் 10வது செய்யுளாய் அமைந்திருத் தலையும் இம் மூன்றாம் மண்டிலத் தொடக்கத்திலுள்ள பதிகங்களுந் தீக்கடவுண் மேலனவாயிருத்தலையும், தீக்கடவுண் மேலனவாய் இம்மூன்றாம் மண்டிலத்தினும் ஏனை மண்டிலங்களிலும் பாடப்பட்டுக் கிடக்கும் பதிகங்கள் பெரும்பாலனவற்றில் மட்டுமே 'பரதர்' என்னுந் தமிழக் குடியினர் பெயர் எடுத்துக் கூறப்படுதலையும், இருக்கு வேதத்தில் தீக்கடவுண் மேலும் உருத்திரர் மேலும் பாடப்பட்டிருக்கும் பதிகங்களின் ஆசிரியர் பெரும்பாலும் விசுவாமித்திரக் குடியினைச் சேர்ந்த முனிவராயிருத் தலையும் உற்று நோக்க வல்லார்க்குத் தீக்கடவுளையுஞ் சிவபிரானையும் பாடிய அம்முனிவரரெல்லாரும் பண்டைத் தமிழ் வகுப்பினரே யாதல் தெற்றென விளங்கா நிற்கும்'.

காயத்தீர்த்தம் *kāya-t-tirttam,* பெ.(n) பொரும் பிலிச்செடி; a kind of horse gram plant (சா.அக.).

[காயம் + தீர்த்தம்.]

காயத்துக்குயிர் *kāyattukkuyir,* பெ. (n) காந்தம்; loadstone as mainstay of life (சா.அக.).

[காயம் + அத்து + கு + உயிர்.]

காயத்தேனுகம் *kāya-tēṉugam,* பெ. (n) நாகமல்லிகை; snake - jasmine (சா.அக.).

[காயம் + தேனிகம்.]

காயத்தையிருத்தி *kāyattai-y-irutti,* பெ.(n) பூவழலை (மூ.அ.); fuller's earth.

மறுவ. உழமண், உவர்மண்.

[காயம் + அத்து + ஐ +இருத்தி.]

காயம் = உடம்பு. அத்து-சாரி யை. 'ஐ'-இரண்டன் உருபு.

காயத்தையுருக்கி *kāyattai-y-urukki,* பெ.(n) அத்திபேதி (மூ.அ.); iron ochre.

[காயம் + அத்து + ஐ + உருக்கி. காயம் = உடம்பு. அத்து சாரியை. 'ஐ', இரண்டன் உருபு]

காயநூல் *kāya-nūl,* பெ.(n) உடற்குறிகளைக் கொண்டு வருங்காலம் உரைக்க உதவும் நூல்; treatise relating to marks on the body, and the good or bad fortune indicated thereby, *"காய நூன்முறை யுரைத்திடும்" (கந்தபு. மார்க்கண். 71).*

[காயம் + நூல்.]

காய்த்தல் = பருத்தல், பெருத்தல். காயம் = பருத்தவுடல். காயம் = உடம்பு. காயநூல் = உடலில் உள்ள மச்சங்கள் பிற அடையாளங்களைக்கொண்டு நன்றும் தீதுமாகிய எதிர்காலம் கணித்துரைக்கும் நூல்.

காயப்பத்திரி *kāya-p-pattiri,* பெ (n) ஞாழல். (நாநார்த்த.); cinnamon

[காயம் = உடற்பகுதி. காயம் + பத்திரி. பத்திரி = இலை. தாழைமரத்தின் இலை வடிவில் தோற்றம் தருவதால் காயப் பத்திரி எனப்பட்டது.]

காயப்பெண் *kāya-p-peṇ,* பெ (n) கனவிற்றோன்றி மயக்கி வருத்தும் மோகினி என்னும் ஆவிப் பெண் (வின்.); a female spirit believed to appear in dreams and excite passion, succubus.

[காயம் + பெண்.]

காயம் = உடம்பு. காயப்பெண் = உண்மையான மண்ணுலகப் பெண்போன்ற வடிவில் தோன்றும் கனவுக்கன்னி.

காயம்[1] *kāyam,* பெ. (n) 1. உறைப்பு. (பிங்.) pungent. 2. மிளகு; pepper. *"காயத்தின் குழம்பு தீற்றி" (சீவக் 788).* 3. குழம்பில் வெந்த கறித் துண்டு; sliced vegetables for curry. *"நெய்கனி குறும்பூழ் காயமாக" (குறுந். 389).* 4. கறிக்கூட்டுச் சரக்கு; curry stuffs, condiments, seasoning. *"காயங்களான் இனிய சுவைத்தாக்கி" (குறள், 253, உரை.).* 5. உள்ளி; garlic. *"காயமுங் கரும்பும்" (சிலப். 25:45).* 6 பெருங்காயம்; asafoetida. 7. ***ஐங்காயம்*** பார்க்க; see *aiṅkāyam.* 8. ***காய மருந்து*** பார்க்க; see *kāyamarundu.*

ம.காயம்; தெ.காயமு.

[காய்தல் = வேதல், எரிதல் உறைப்பு. காய் → காயம்.]

ஐங்காயம் = கடுகு, ஓமம், வெந்தயம், உள்ளி, பெருங்காயம்.

காயம்[2] *kāyam*, பெ.(n.) 1. அடி, குத்து, வெட்டு முதலியவற்றாலான புண்;wound, injury to the flesh, bruise, contusion. 2. வடு;scar, cicatrice. *"காயமிலை மையரவர்க்கு" (குமர. பிர. மதுரைக் கலம்.13).*

ம. காயம்,காய; **க.,து.**காய; **தெ.** காயமு;

Pkt. Mar. khaya; **குயி., குவி.** கஹ, காவெ; **பர்.** காவ்; **பாலி.** காத; **வ.** காத; **நேப்.** காஉ.

[கள் → கய் → கவ் → (கச்சு – கடித்தல், துண்டாக்கல்) கய் → காய் → காயம்.]

வடதிராவிட மொழிகளான குயி,குவி, பர்சி ஆகியவற்றில் 'கவ்' என்பதற்கு இணையான காவெ, காவ் என்பனவே இடம் பெற்றிருத்தல் காண்க.

காயம்[3] *kāyam*, பெ.(n) உடல்;body. *"மாகாயமாய் நின்ற மாற்கு "(திவ். இயற். மூன்றாந்.13).*

ம. காயம்

Skt. kāya.

[கா+அம் – காயம். கா=விரிவு, பருமன். 'அம்'பருமைப்பொருள் பின்னொட்டு, இங்குப் பெயரீறாயிற்று.]

காயம் = பருத்த உடம்பு, பருவுடல். மெய்யியலார் நுண்ணுடல் எனக் கொண்ட சொல்லாட்சிக்கு எதிரானது, இதனைப் பூதவுடல் என்பதும் ஒப்பு நோக்கத்தக்கது.

காயம்[4] *kāyam*, பெ.(n.) 1. விண்வெளி, கரிய வானம்; space,sky. *"விண்ணென வருஉங் காயப்பெயர்" (தொல். எழுத்து. 305).* 2. கரிய காயாமலர்; dark purple flower of kāyā. 3. கருமை; dark.

[காள் → காய் → காயம். (வேக. 125).]

காள்=கருமை.காயம்=கரிய (கருநீல வானம்) இஃதோர் நிறங்குறித்த பெயராதலின் கருநீல வண்ணமுடைய மலர் காயாம்பூ எனப்பட்டது, ஆகாயம் என்னும் விண்வெளியைக் குறித்தது.

காயம்[5] *kāyam* பெ.(n.) 1. செறிவு; density. 2. திண்மை; strong. 3. உறுதி; certainity. அவன் வருவது காயம் இல்லை (உ.வ.).

[காள் → படு(முற்றுதல், செறிதல்) + அம்.]

காயம்படு-தல் *kāyam-paḍu-*, 20 செ.கு.வி. (v.i) புண்படுதல்; to be wounded or bruised.

[காயம்+படு.]

காயமருந்து *kāya-marundu*, பெ. (n.) கருவுயிர்த்த வட்க்குக் கொடுக்குங் காரமருந்து; a medicinal preparation of vegetable stimulants given to a lying-in woman.

[காயம் + மருந்து. காயம்=உறைப்பு, காரம்]

காயமலர் *kāya-malar*, பெ.(n.) காயாம்பூ, dark purple flower of kāyā. *"காயமலர் நிறவா" (திவ். பெரியாழ். 1,5,6).*

மறுவ. காயா, காயம்

[காயம் + மலர். காயம் = கருநீல நிறம்.]

காயமேரை *kāya-mērai*, பெ.(n.) அரசின் வரிபோக எஞ்சிய விளைச்சலில் குடிகளிடமிருந்து ஊர்த்தச்சர், கொல்லர் முதலிய தொழிலாளிகள் அடையும் கூலி (G.sm.D.ii, 49); a perquisite of the village establihsment from the produce remaining with the ryot after the claims of Governments are satisfied.

ம. காயமேர

[காயம்+மேரை.]

(காயம் = உறுதி. காயமேரை = உறுதிப்படுத்தப்பட்ட வழக்கமான விளைச்சல் பங்கு. மேரை = பணிமேற் கொண்டகுழுத்தலைவனுக்குரிய பங்கு. மேலை → மேரை மேலாள், தலைவன்.)

காயல் *kāyal*, பெ.(n.) 1. கரிய உப்பங்கழி (சூடா.) stretch of salt water close to the coast and separated from the sea by sand spits, back-water, lagoon. [ம.காயல்] 2. கழிமுகம் (பிங்.); mouth of an ebbing stream. 3. உப்பளம் (சூடா.); salt-

pans. 4. பொருநை முகத்திலுள்ள (தாமிரபரணி) ஒரூர்; a village in Tuttukudi district once a famous port at the mouth of the Tāmaraparaṇi, where Marco polo landed. *"தென்காயற் பதியானே சீதக்காதி (தனிப்பா. 1:238,9).*

ம., க. காயல்.

[கா = விரிதல், பரவுதல். கா → காய் → காயல் = நிலத்துள் ஊடுருவிப் பரந்த நிலை.]

காயலான் *kāyalāṉ,* பெ.(n.) ஒரு முகம்மதிய இனம்; lit., native of the port Kayal, Moorman, Tamil-speaking Muhammadan merchant.

[காயல் → காயலான். காயல் எனும் கழிமுகத்தின்வழி வணிகம் மேற்கொண்டவன்.]

காயவேகம் *kāya-vēgam,* பெ.(n.) 1. சினம் (வின்.); anger, spleen, fretfulness. 2. பசி (யாழ்.அக.); hunger.

[காயம்+வேகம். காயம் = உடம்பு. காயவேகம் = உடம்பின் பசிவேகத்தையும் மனத்தில் பொங்கும் சீற்றத்தின் வேகத்தையும் குறித்தது.]

காயவை-த்தல் *kāyavai,* பி.வி.(caus.v.) 1. சூடேற்றுதல், கொதிக்கச் செய்தல்; to boil. 2. உலரச் செய்தல்; to dry.

க. காயிசு; படு. காசு.

[காய்+அ+வை. 'வ' பி.வி.ஈறு.]

காயா[1] *kāyā,* பெ.(n.) காயாமரம் (திவா.); iron wood tree.

[கள் → காள். காய் → காயா. (வேக.125) கருநீல நிறமுடைய மலர் கொண்டதாதலின் பெற்ற பெயர்.]

காயா[2] *kāyā,* பெ.(n.) 1. செடிவகை; oblong cordate - leaved tree bilberry. 2. பீக் கொஞ்சி; coromandel eugene myrtle.

[காயர் → காயா. கருநீல நிறத்தால் பெற்ற பெயர்.]

காயாகாயம் *kāyā-kāyam,* பெ. (n.) உடற்றழும்பு; scar on the body.

[காயம் + காயம் – காயாகாயம்(உடம்பிலுள்ளதழும்பு). காயம்= உடம்பு, புண்.]

காயாசூடகம் *kāyā-šūḍagam,* பெ. (n) நிழலில் உலர்த்துகை; drying anything in the shade without exposing it to direct sunlight (சா.அக.).

[காய் → காயா (வெயிலிற் காயாமல்.) காயா + சூடு + அகம்.]

காயாணி *kāyāṇi,* பெ.(n) ஆணிக் காய்ப்பு; a hard thorny excrescence in the toe or foot (சா. அக.).

[காய் + ஆணி.]

காயாதபூமரம் *kāyāda-pū-maram,* பெ.(n.) 1. வேங்கை; Indian dragon's blood. 2. பூத்தும் காய்க்காத மரம்; tree not bearing any fruit though blossomed (சா.அக.).

[காயாத + பூமரம்.]

காயாதிகலை *kāyādi-kalai,* பெ.(n.) இடது மூக்குத் துளையில் மூச்சுப்பயிற்சி செய்யும் ஒக நிலை (சந்திரகலை) நிலாக் கலை; the vital air passing from the left nostril (சா.அக.).

[காயம் + ஆதி + கலை.]

காயாப் பேரீஞ்சு *kāyā-p-pērīñju,* பெ.(n.) காட்டுப் பேரீச்சை மரம்; barren date tree. 2. சீமையீச்சை; english fern-palm (சா.அக).

[காயா (பேரீந்து) + பேரீஞ்சு.]

காயாபுரி *kāyāpuri,* பெ. (n) உடம்பு; the human body. as compard to a fort (சா.அக.).

[காயம் + புரி – காயபுரி → காயாபுரி.]

காயாபுரிக்கோட்டை *kāyāpuri-k-kōṭṭai,* பெ.(n) 1. உடம்பின் தோல்; the outer covering of the body. 2. ஆன்மாவைப் பற்றி நிற்கும் கோசங்கள்; the sheaths encircling the soul (சா.அக.).

[காயம் + புரி + கோட்டை.]

காயாம்பூ *kāyāmbū,* பெ.(n) காயாமலர்; dark purple flower.

[காய் → காயா→காயாம்பூ (வேக.125).]

காயாம்பூவண்ணன் *kāyāmbū-vaṇṇaṉ*, பெ.(n.) திருமால்; lit, He of purple colour like kāyā flower, viṣṇu. *"காயாம்பூ வண்ணனிவை கழறு மன்றே" (கூர்மபு. இராமனவதா.1).*

[காயா + பூ + வண்ணன். காயா= கருநீலமலர்.]

காயாமரம் *kāyā-maram*, பெ.(n) ஒருபொழுதும் காய்ப்பில்லாத மரம்; barren tree. *"காயாமரமும் வறளாங் குளமும்" (பட்டினத்.திருப்பா.திருவேகம். மா.21).*

[காய்[2] + ஆ + மரம். 'ஆ'–எதிர்மறை இடைநிலை.]

காயாமை *kāyāmai*, தொ.பெ. (verb.n.) சினவாமை (கோ.அக.); unprovoked angerless.

[காய் → காயாமை.]

காயாவரசு *kāyā-v-arašu* பெ.(n) காய்க்காத அரசமரம்; a peepul tree not bearing fruit. (சா.அக.).

[காயா + அரசு.]

காயிகம் *kāyigam*, பெ.(n) உடம்பினாற் செய்வது; bodily activity. *" அன்னவைதாங் காயிகமே வாசிக மானதமேயாம்" (விநாயகபு.83:78).*

[காயம்+இகம்–காயிகம். காயம்=உடம்பு. இகம்= தொடர் புடையது.]

காயின்சுனை *kāyiṉ šuṉai*, பெ.(n) பூனைக்காலி; cowhage plant (சா.அக.).

[காய் + இன் + சுனை.]

காயின்பனை *kāyiṉ-paṉai*, பெ.(n) பெண்பனை; female palmyra tree. (சா.அக).

[காய் + இன் + பனை. (காய்க்கும் பனை).]

கார்[1]–த்தல் *kār-* 4 செ.கு.வி.(v.i.) கறுப்பாதல்; to darken, grow black. *"கார்க்கின்ற மெய்யவுணர்" (கந்தபு, பானுகோ.122).*

[குல்→கல் → கால் → கார்.]

கார்[2]–த்தல் *kār-*, 4 செ.கு.வி.(v.i.) 1. உறைத்தல் (பிங்.); to be pungent, acrid, hot to the taste. 2. உப்புக்கறித்தல்(வின்); to be very saltish or brackish.

[கள் → காள் → காய் → கார் = கார்த்தல். கள் = செறிவு, உறைப்பு, கார்ப்பு.]

கார்[3]–த்தல் *kār-*, 4 செ.குன்றாவி.(v.t.) வெறுத்தல்; to hate. *"பாலர்கள் கார்ப்பார்" (ஏலா.54).*

[கள்→காள்→காய்→கார்.]

உறைத்தல் பொருள் வெறுத்தல் பொருளில் வளர்ந்தது.

கார்[4]–த்தல் *kār-*, 4 செ.குன்றாவி.(v.t.) அரும்புதல்; to bud. *"வண்கொன்றைகள் கார்த்தனவே" (திவ். இயற். திருவிருத்.68).*

[கால்→கார் = நீளுதல், வளர்தல், அரும்புதல்.]

கார்[5] *kār*, பெ.(n) 1. கருமை; blackness. 2. கரியது; that which is black. *"களங்கனியைக் காரெனச் செய்தாரு மில்" (நாலடி,103).* 3. முகில்; cloud. *"கார்கலந்த மேனியான்" (திவ். இயற் பெரியதிருவந். 86).* 4. மழை; rain. *"வைகறை கார்பெற்ற புலமே போல்" (கலித்.38).* 5. நீர்(பிங்.); water. 6. **கார்ப்பருவம்** பார்க்க; see *kār-p-paruvam*. *"காரு மாலையு முல்லை" (தொல். பொருள். 6.).* 7. கார்நெல்; paddy harvested in the rainy season. *"காரரிசி மந்தம்" (பதார்த்த. 799).* 8. கருங்குரங்கு (பிங்.); black monkey. 9. வெள்ளாடு (பிங்.); goat. 10. ஆண்மயிர்(பிங்.); men's hair. 11. எலிமயிர் (பிங்.); rat's hair. 12.கருந்தொழுநோய் (கருங்குட்டம்); black reprosy. *"காரக் குறைந்து" (கலித். 65).* 13. இருள்; darkness, gloom of night. *"காரடுகாலை" (பரிபா: 12.85).* 14. அறிவு மயக்கம்; ignorance, illusion. *"களவென்னுங் காரறி வாண்மை" (குறள், 287).*

ம., க., து.கார் தெ.காரு.

[கரு → கார் (வே.க.124.).]

கார்[6] *kār,* பெ.(n) 1. திப்பிலிக் கட்டை; root of long pepper. 2. பசுமை; greenness. (சா.அக). 2. அரும்புதல்; to bud. *"வண்கொன்றைகள் கார்த் தனவே" (திவ். இயற்.திருவிருத். 68).*

[கால் → கார் நீளுதல், வளர்தல், அரும்புதல், அரும்பும் பசுமை.]

கார்[7] *kār,* பெ.(n.) 1. எலி; rat.2. எலிமயிர்; rat's hair. 3. ஆண்களின் தலைமயிர்; men's hair.

[குல் →கல் →கால்→ கார். கருநிறத்தால் பெற்ற பெயர்.]

கார்[8] *kār,* பெ.(n.) கலப்பையின் கொழு; plough share.

[கால்→கார் (நீண்டது).]



கார்

கார்[9] *kār,* பெ.(n.) ஆறாச்சினம், அடங்காச்சீற்றம்; uncontrollable anger. *"காரார் குருந்தோடு" (திணைமாலை.112).*

[கார்[2] → கார்[9].]

கார்க்காய் *kār-k-kāy,* பெ.(n.) கருங்கோள் (இராகு.) (வின்.); ascending node.

[கார்+காய்.]

கார்=கருமை. காய்-திரட்சி குறித்த வடிவொப்புப் பொருள் தாவலால் விண்ணில் உலவும் கோள் குறித்த சொல்லாயிற்று. புலப்படாத கருங்கோள் என்பதும் கருத்தாகலாம்.

கார்க்குவளை *kār-k-kuvaḷai,* பெ.(n.) மழைக் காலத்தில் பூக்கும் குவளைப்பூ; water-lily flowering in rainy season (சா.அக.).

[கார்+குவளை.]

கார்க்குழல் *kār-k-kuḻal,* பெ.(n.) கருமையான கூந்தல்; black tresses.

ம. கார்குழல்

[கார்+குழல்.]

கார்க்குறட்டை *kār-k-kuṟaṭṭai,* பெ.(n.) ***நீலக்காக்கணம்*** (மலை.) பார்க்க; see *nīla-k-kākkaṇam.*

[கார்+குறட்டை.]

கார்க்கை *kārkkai,* பெ.(n) துவரை; common dhall (சா.அக.).

[கார்+கை.]

கார்ப் பருவத்தில் பயிராகும் புன்செய்ப் பயிர்.

கார்க்கொள் *kār-k-koḷ,* பெ.(n) ***கருங்காணம்*** பார்க்க; see *karuṅ-kāṇam.*

[கார் + கொள்.]

கார் = கருமை. கொள் = காணம் என்னும் பயறுவகை.

கார்க்கோடகன் *kār-k-kōḍagaṉ,* பெ.(n.) 1. எட்டு பெரிய பாம்புகளுள் ஒன்றான கடவுட்பாம்பு (நள. கலிநீங். 13); a divine serpent, one of *aṣṭa-māgam.* 2. இரக்கமற்றவன் (தாட்சிணிய மற்றவன்) (உ.வ.); a hard - hearted unfeeling man; strict, exacting person. 3. கருடக்கல் (வின்.); mineral stone used in snake-bite.

மறுவ. கார்க்கோடன்

[கார் + கோடகன். கார் = கருமை. கோடகன் = எதனையும் விழுங்குபவன்.]

கார்க்கோடம் *kār-k-kōḍam,* பெ. (n) பிரண்டை; adamant creeper (சா.அக.).

[கார்க்கோடகன் → கார்க்கோடம் (பாம்பு போல் நீண்டது).]

கார்க்கோடல் *kār-k-kōḍal,* பெ.(n.) கருங்காந்தள்; brown-backed acute-leaved mangrove. *"கார்க்கோடற் பூக்கள்" (திவ். நாய்ச். 10:1).*

[கார் + கோடல். கார் = கருமை. கோடு (கிளை) →கோடல் → மரக்கிளை பூங்கொத்து.]

கார்க்கோடன் *kār-k-ōḍaṉ,* பெ.(n.) ***கார்க்கோடகன்*** (சங்.அக.) பார்க்க; see *kār-k-kōḍagaṉ.*

[கார் +(கோடகன்) கோடன்.]

கார்க்கோணி *kār-k-kōṇi,* பெ.(n.) தேட்கொடுக்கி; Indian turn sole (சா.அக.).

[கார் + கோணி.]

கார்க்கோலம் *kār-k-kōlam* பெ.(n.) கார்ப்போக வரிசி ; hazel-leaved psorales (சா.அக.).

[கார் + கோலம்.]

கார்க்கோலி *kār-k-kōli,* பெ.(n.) கோரைப்புல்; sedge grass (சா.அக.).

[கார் + காலி – கார்க்காலி → கார்க்கோலி.]

கார்க்கோழி[1] *kār-k-kōḻi,* பெ.(n.) கருங்கோழி; black fowl. *"காட்டிடைமேய்ந்த கார்க்கோழி யோய்ப்புற்று" (தேவா. 890,9).*

தெ. காருகோடி

[கார் + கோழி. கார் = கருமை.]

கார்க்கோழி[2] *kār-k-kōḻi,* பெ(n.)1. கருங்காணம்; black horse-gram. 2. கருஞ்சீரகம்; black cumin. 3. நிலப்பனை என்னும் கிழங்கு வகை; ground palm (சா.அக.).

[கார் + கோழி.]

கார் = கருமை. பழங்காலத்தமிழ் (சித்த) மருத்துவர் தாம் மருத்துவத்தில் கையாளும் மருந்துச் சரக்குகளின் பெயரைப் பிறர் அறியாவண்ணம் குழூஉக் குறியிட்டு வழங்குவது மரபாதலின் கருங்காணம் வட்டமாக இருப்பது நோக்கி கார்க்கோளி, (கோளி = வட்டம்) என்றனர். அது கார்க்கோழி எனத் திரிந்தது. சீரகத்தின் நீட்சிக்குக் கோழியிறகை உவமையாக்கிக் கார்க்கோழி எனக்கருஞ் சீரகத்தைக் குறித்துள்ளனர்.

கார்க்கோழிகம் *kār-k-kōḻigam,* பெ.(n.) தேட்கொடுக்கி; Indian turn sole (சா.அக.).

[கார் + கோழிகம்.]

கார்க்கோழினி *kār-k-kōḻiṉi,* பெ.(n) கருங் கொள்; black gram, horse gram (சா.அக.).

[கார்கோழி→ கார்க்கோழினி.]

கார்காத்த வேளாளர் *kār-kātta-vēḷāḷar,* பெ.(n.) வேளாளரில் ஒரு வகையார்; an endogamous division of velalas, who developed wet cultivation by constructing dams and forming lakes.

[கார் + காத்த + வேளாளர்.]

கார் = மழை. மழையை வேளாளர் காத்தனர் என்று மதுரைத்தலபுராணம் கூறுவது பொருந்தாது. மழை வெள்ளத்தை அணையிலும் ஏரியிலும் தேக்கி, வெள்ளத்தை ஆண்டு முழுவதும் காத்து நன்செய் வேளாண்மையைப் பெருக்கியவர்கள் என்பதே உண்மை வரலாறாகும்.

கார்காய் *kārkāy,* பெ.(n.) 1. கருநாகம்; a black serpant. 2. நளித் (கார்த்திகைத்) திங்களில் காய்க்கும் மாங்காய்; mango yielding in November. (சா.அக.).

[கார் + காய்.]

கார்காரெனல் *kār-kār-eṉal,* பெ.(n.) சின மிகுத்தற் குறிப்பு (இ.வ.); expr. of sething with anger

[கார் + கார் + எனல். கார் கார் –ஒலிக்குறிப்பு.]

கார்காலம் *kār-kālam,* பெ.(n.) மழைக்காலமான மடங்கல் (ஆவணி), கன்னி (புரட்டாசி) மாதங்கள்; rainy season, the months of *Āvaṇi* and *puraṭṭāsi* one of six paruvam.

ம. கார்க்காலம்; க., து. கார்கால; தெ. காருகாலம்.

[கார் + காலம். கார் = மழை.]

கார்காலவங்கி *kār-kāla-vangi* பெ.(n.) பழுபாகல்; buffalo carolah.

[கார் + காலம் + வங்கி. வங்கி = வழுதுணங்காய், கத்தரி. கத்தரிக்காய் போன்ற பாகற்காய்.]

கார்கோல் *kar-kōl,* பெ.(n.) கருஞ்சீரகம்; black cumin (சா.அக.).

[கார் + கோல்.]

கார்கோள்[1] *kār-kōḷ,* பெ.(n.) 1. கடல்; lit.,that which is absorbed by the clouds, sea. *"கார்கோண் முகந்த கமஞ்சூண்... மாமழை"* *(திருமுருகு. 7).* 2. ***ஓமை*** (ட.) பார்க்க; see *ōmai*

[கார் + கோள். கொள் → கோள்.]

கார் = கரிய மழைமேகம். கார்கோள் = கரிய மழைமேகங்கள் நீராவிவடிவில் நீரை உறிஞ்சிக் கொள்ளுதற்கு இடமாகிய கடல்.

கார்கோள்[2] *kār-kōḷ,* பெ.(n.) காரி (சனி.) (யாழ்.அக); saturn.

[கார் + கோள்.]

கார் = கரிய. கோள் = கோளவடிவிலுள்ள அண்டம்.

கார்கோளி *kār-kōḷi,* பெ.(n.) 1. முத்தக்காசு (மலை.); straight sedge. 2. ***கார்க்கோழி*** பார்க்க; see *kar-k-kōḻi*

[கார் + கோளி.]

கார்கொளி *kārkoḷi,* பெ.(n.) தேட்கொடுக்கு; (கோ.அக.); Indian turn sole.

மறுவ. கார்கோணி

[கார் + கொளி.]

கார்சினம் *kār-šiṉam,* பெ.(n) குருதிக் கக்கல் கழிச்சல் நோய்; a disease characterised by evacuation and vomitting of dark bloody matter (சா.அக.).

[கார் + சினம்.]

கார்த்தம் *kārttam,* பெ.(n) காமம்; sexual passion. (சா.அக.).

[கார் → கார்த்தம் (மிகுதி).]

கார்த்தவீரியன் *kārtta-viriyaṉ,* பெ.(n.) ***கார்த்தவீரியார்ச்சுனன்*** (திவா) பார்க்க; see *kārtta-vīriyār-c-cuṉaṉ.*

[கார்த்தவீரியன்(மரூஉ).]

கார்த்தவீரியார்ச்சுனன் *kārtta-vīriyārccuṉaṉ,* பெ.(n) பரசுராமனால் கொல்லப்பட்டவனும், ஆயிரம் கைகளையுடையவனுமான மன்னன்;a puranic thousand - armed emperor, who was sleain by Parašurama, and whose capital was Mahismati.

மறுவ. கார்த்தவீரியன்

[கருத்த → கார்த்த + வீரன் + அருச்சனன். ஆரியரின் இனப்பகைவன்.]

கார்த்தன் *kārttaṉ* பெ.(n.) துரிசு (யாழ்.அக.), verdigiris.

மறுவ : செம்புக்களிம்பு

[கார் → கார்த்தன்.]

கார்த்தாளி *kārttāḷi,* பெ.(n) தாளி வகை; a kind of *tāḷi* (சா.அக).

[கார் + தாளி.]

கார்த்திகேயன் *kārttikēyaṉ,* பெ.(n) ***கார்த்திகையன்*** பார்க்க; see *karttigaiyan.*

[கார்த்திகையன் → கார்த்திகேயன்.]

கார்த்திகை[1] *kārttigai,* பெ.(n) காந்தள்; November flower (சா.அக.).

[கார் → கார்த்திகை.]

கார்த்திகை *kārttigai,* பெ.(n) ஒரு விண்மீன் (திவா.); the constellation pleiades, part of mēša- rāši and iḍaba-rāši. 2. நளிமாதம் (சைவச. ஆசாரி. 79); the eighth month of the Indian calendar. 3.

கார்த்திகைப்பூ (இலக். வி. 192, உரை.). பார்க்க; see *kārttigai-p-pū.* 4. நளி (கார்த்திகை) மாதத்தில் வீடுதோறும் விளக் கேற்றிக் கொண்டாடும் முழுமதி நாள்; the full-moon day in the month of Karttigai when every house is beautifuly lit with lamps. 5. துர்க்கை (திவா.); Durga.

ம. கார்த்திக; **து.** கார்திக.

[கார் → கார்த்திகை.]

கார்த்திகை அரிசி *kārttigai-arisi,* பெ.(n) ***கார்த் திகைக் காசு*** பார்க்க; see *kārttigai-k-kāšu.*

[கார்த்திகை → கார்த்திகையன்.]

கார்த்திகைக்காசு[1] *kārttigai-k-kāšu,* பெ.(n). ***கார்த்திகைக் காணிக்கை*** (S.I.I. i. 90) பார்க்க see *kārttigai-k-kāṇikkai.*

[கார்த்திகை + காசு.]

கார்த்திகைக்காசு[2] *kārttigai-k-kāšu,* பெ.(n). ஒரு வகை வரி; a kind of tax. "கார்த்திகை அரிசி, கார்த்திகைக் காசு, கார்த்திகைப் பச்சை, வேலிப்பயறு, நீர்நிலக்காசு, தறியிரை, கடையிறை, காலக்கப்பாட்டம், தட்டார்ப்பாட்டம்...... மற்றுமெப்பேர்பட்டப் பல காசாயங்களும்" (SII.i.62-15 pg.90).

ம. கார்த்திகக்காசு

[கார்த்திகை → காசு.]

கார்த்திகைக் காணிக்கை *kārttigai-k-kāṇikkai,* பெ.(n) ஒரு பழைய வரி (கல்.); an ancient money tax.

மறுவ. கார்த்திகைக்காசு

ம. கார்திகக் காணிக்க

[கார்த்திகை+காணிக்கை.]

கார்த்திகைக்கார் *kārttigai-k-kār,* பெ.(n) நெல் வகை; a kind of paddy. *"சித்திரைக் கார், நவிரைக்கு நூறுகுழிக்கு" (SII.vii.122-2 pg.51).*

[கார்த்திகை+கார்.]

கார்த்திகைக்கிழங்கு *kārttigai-k-kiḻaṅgu,* பெ.(n.) ***கலப்பைக் கிழங்கு*** பார்க்க; *kalappai-k-kiḻaṅgu.*

ம. கார்திகக் கிழங்நு

[கார்த்திகை+கிழங்கு.]

கார்த்திகைக்கூம்பு *kārttigai-k-kūmbu,* பெ.(n.) கார்த்திகை மதிய நாட்களில் சிறுகோயில்களில் முன்னிரவில் கூம்பு வடிவில் அமைத்து கொளுத்தப்படும் சருகு; cone shaped fuel, burnt in the night of Karthigai full moon night.

[கார்த்திகை+கூம்பு.]

கார்த்திகைக்கொடி *kārttigai-k-koḍi,* பெ.(n) ***கார்த்திகைக் கிழங்கு*** பார்க்க; see *kārtigai-k-kiḻaṅgu* (சா.அக.).

[கார்த்திகை+கொடி.]

கார்த்திகைக்கொள்ளி *kārttigai-k-koḷḷi,* பெ.(n.) கார்த்திகைத் திருநாளில் அனற்பொறிதட்டி விளையாடுதற்குரிய அகத்திக் கொள்ளி (இ.வ.); firebrand of awatti, used by children to scatter sparks in sport in the evening of the *tiru-k-kārttigai.*

மறுவ. அகத்திக் கொள்ளி, அகத்துக் கொள்ளி.

[கார்த்திகை+கொள்ளி.]

கார்த்திகைச்சம்பா *kārttigai-c-cambā,* பெ. (n.) நான்கு முதல் ஆறுமாதங்களில் விளையக்கூடிய சம்பா நெல்வகை; a kind of *cambā* paddy, maturing in four to six months.

[கார்த்திகை+சம்பா.]

கார்த்திகைச்சேவகன் *kārttigai-c-cēvagaṉ* பெ.(n.) கருநாவிக் கிழங்கு; black aconite (சா.அக.).

[கார்த்திகை + சேவகன்.]

கார்த்திகைத் தேவிமார் *kārttigai-t-tēvimār,* பெ.(n) ***கார்த்திகைப் பெண்கள்*** பார்க்க; see *kārtti-gai-p-peṇgaḷ.*

[கார்த்திகை+தேவிமார்.]

கார்த்திகை நோன்பு *kārttigai-nōṉbu*, பெ.(n.) முருகனைக் குறித்துக் ஒவ்வொரு திங்களும் கார்த்திகை நாளன்றும் கடைப்பிடிக்கும் நோன்பு; monthly fast in honour of Skanda, when the moon is in conjunction with pleiades.

ம. கார்த்திக விரதம்

[கார்த்திகை + நோன்பு.]

கார்த்திகைப் பச்சை *kārttigai-p-paccai*, பெ.(n.) பழைய வரிவகை (S.I.I.i, 62-15 pg.90); an ancient tax.

[கார்த்திகை + பச்சை.]

கார்த்திகைப்பூ *kārttigai-p-pū*, பெ.(n.) காந்தள் மலர்; Malabar glory lily blossoming in Karttigai.

ம. கார்த்திகப்பூ

[கார்த்திகை + பூ.]

கார்த்திகைப் பெண்கள் *kārttigai-p-peṇgaḷ*, பெ.(n) அறுவராகிய கார்த்திகைப் பெண்கள் (வின்.); the six presiding deities of the constellation pleiades.

மறுவ. கார்த்திகையறுவர்

[கார்த்திகை + பெண்கள்.]

கார்த்திகைப்பொரி *kārttigai-p-pori*, பெ.(n) கார்த்திகைத் திருநாளிற் வழங்கும் நெற்பொரி; fried paddy mixed with treace, used in the Karttigai festival.

[கார்த்திகை + பொரி.]

கார்த்திகையறுவர் *kārttigai-y-aṟuvar*, பெ.(n.) ***கார்த்திகைப் பெண்கள்*** பார்க்க; see *kārttigai-p-peṇgaḷ*.

[கார்த்திகை + அறுவர்.]

கார்த்திகையன் *kārttigaiyaṉ*, பெ.(n.) கார்த்திகை மகளிரால் வளர்க்கப்பட்ட முருகக் கடவுள் (சூடா.); Skanda, as nursed by the six áesiding deities of the constellation leiades.

[கார்த்திகை → கார்த்திகையன்.]

கார்த்திகைவறட்டி *kārttigai-varaṭṭi*, பெ.(n.) மாதக் கார்த்திகைதோறுந் திண்ணைப் பள்ளிக் கூடத்து ஆசிரியருக்குக் கொடுக்கும் எருமுட்டை. (இ.வ.); cowdung cakes given to the pial school teacher, on the eve of the monthly Karttigai.

[கார்த்திகை+வறட்டி.]

கார்த்திகைவாளை *kārttigai-vāḷai*, பெ.(n.) பதினாறு விரலம் நீளமுடையதும் வெள்ளி நிறமுடையதுமான கடல் மீன்வகை; ribbon-fish, silvery, attaining at least 16 in.in length,

[கார்த்திகை+வாளை.]

கார்த்திகை விளக்கீடு *kārttigai-viḷakkiḍu*, பெ.(n.) கார்த்திகை விழாவின்போது வீடு முதலி யவற்றில் விளக்கேற்றுகை; lighting of lamps in the evening of *tirukkarttigai*

[கார்த்திகை+விளக்கீடு.]

இவ்விழா விளக்கணி (தீபாவளி) யோடு ஒப்பிடத் தக்கது. ஐப்பசி (அமாவாசையன்று) தீபாவளி வரும். கார்த்திகை மதியத்தன்று கார்த்திகை விளக்கீடு நடைபெறும். தீபாவளி வடபுலத்தில் பெருஞ்சிறப்போடு, இரவு முழுவதும் விளக்கணி வைத்துக் கொண்டாடப்படும். விளக்கணி விழாவின் பிற பழக்க வழக்கங்கள் தமிழ் நாட்டில் பெரிதும் ஊடுருவிய போதும், விளக்கேற்றும் பழக்கம் நுழையவில்லை. அது கார்த்திகை நாளில் மட்டுமே சிறப்பாக நடைபெறுகிறது.

கார்த்திகை விளக்கு *kārttigai-viḷakku*, பெ.(n) திருக்கார்த்திகை விழாவின்போது ஏற்றப்படும் விளக்கு; lights of the kārttigai festival, placed at the gate and other parts of the house.

ம. கார்த்திக விளக்கு

[கார்த்திகை+விளக்கு.]

கார்த்துளசி *kārttuḷaśi,* பெ.(n.) கருந்துளசி; black variety of basil (சா.அக).

[காரு → கார் + துளசி.]

கார்த்துளசி

கார்நாள் உரும் *kārnāḷ-urum* பெ.(n.) மழைக் காலத்து இடி (கோ.அக.); thunder of the rainy season.

[கார் →நாள் + உரும்.]

கார்நாற்பது *kār-nāṟpadu,* பெ.(n.) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றானதும், கார்காலம் வந்ததும் தலைவன் வாராமையால் வருந்தும் தலைவி கூற்றாகக் கண்ணங் கூத்தனாரால் 40 செய்யுளிற் பாடப் பெற்றதுமான நூல்; an ancient love poem of forty stanzas by kaṇṇaṉ-kūttāṉār in which the long-expected approach of the rainy season is described by a love-lorn lady pining for the sight of her lover, one of Patiṉeṉ-kīḻ-k-kaṇakku.

[கார் + நாற்பது.]

கார்நாற்றம் *kār-nāṟṟam,* பெ.(n.) தலைப்பெயல் மழையால் மண்ணிற்றோன்றும் மண்ணின் மணம்; earthy odour caused by fresh drizzle. *"கானாற்றுங் கார்நாற்றம்" (பரிபா. 20:10).*

[கார்+நாற்றம்.]

கார்நிதி *kār-nidi,* பெ.(n.) பேய்ப்பீர்க்கு; wild bitter gourd (சா.அக).

[கார்+நிதி]

கார்நிறக்கல் *kār-niṟa-k-kal,* பெ.(n) முகில் வண்ணக் கல்; a dark-grey stone (சா.அக.).

[கார்+நிறம்+கல்.]

கார்நிறம் *kār-niṟam,* பெ.(n) 1. தசைநிறச் சிவப்புக்கல் (குருவிந்தக்கல்); lit., a red stone of the colour of flesh. 2. கறுப்பு நிறம்; dark colour (சா.அக.).

[கார் + நிறம்.]

கார்நெல் *kār-nel,* பெ.(n) நெல்வகை; a kind of paddy.

[கார்+நெல்.]

கார்நொச்சி *kār-nocci,* பெ.(n) கருப்பு நொச்சிச் செடி; black species (சா.அக.).

[கார்+நொச்சி.]

கார்ப்படிகன் *kār-p-paḍigaṉ,* பெ.(n.) கோயில் உள்ள இடங்களுக்குச் சுற்றுலா செல்வோன் (யாத்திரைக்காரன்) (யாழ்.அக.); pilgrim.

[கார்+(படிவன்) படிகன். கார்= கார்ப்பருவம். படிகன்= நோன்பு மேற்கொண்டவன்.]

கார்ப்பருவம் *kār-p-puruvam,* பெ.(n.) கார்காலம் பார்க்க; see *kār-kālam.*

[கார்+பருவம். கார்=மழை.]

கார்ப்பாசி *kār-p-pāśi,* பெ.(n.) ***இலைப்பாசி*** பார்க்க; see *ilai-p-pāśi* (சா.அக.).

[கார் + பாசி.]

கார்ப்பாளன் *kārppāḷaṉ,* பெ.(n.) கொடியவன்; wicked person, sinner. *"வெள்ளி வெற்பெடுத்த கார்ப்பாள னுக்கும்" (அருட்பா, ii, சிகாமணி.4).*

ம. கார்ப்பாளன்

[கார்ப்பு+ஆள்+அன். கார்ப்பு = கடுமை, கொடுமை]

கார்ப்பான் *kārppāṉ,* பெ.(n.) கரிசலாங் கண்ணி (மூ.அ.); a plant growing in moist places eclipta prostata

[கார் → கார்ப்பான்.கார்=கருமை.]

கார்ப்பிகம் *kārppigam,* பெ.(n.) கருப்பப்பை; uterus womb(சா.அக.).

[கருப்பம் → கார்ப்பம் → கார்ப்பிகம் (கொ.வ.).]

கார்ப்பீகம் *kār-p-pīgam,* பெ. (n.) பருத்தி; Indian cotton shrub (சா.அக.).

H.kapps.

[கால் + பூ – காற்பூ → கார்ப்பூ → கார்ப்பீகம் (பருத்திப்பூ, பருத்தி) காற்பூ என்பது குச்சிப்பூ எனப் பொருள்படும்..]

கார்ப்பு *kārppu,* பெ. (n.) 1. அறுசுவையுள் ஒன்றான உறைப்பு (சூடா.); pungency, one of six tastes. 2. உவர்ப்பு (pt;d.); salt-ness.

.*[கார் → கார்ப்பு.]*

கார்ப்புப்பு *kārppuppu,* பெ.(n.) காரமான உப்பு; a caustic or corrosive salt of any kind (சா.அக.).

[கார்ப்பு+உப்பு.]

கார்ப்புரம் *kārppuram,* பெ.(n.) 1. நீர்; water. 2. பொன்; gold (சா. அக).

[கார்ப்பு+உரம்.]

கார்ப்பெயல் *kār-p-payal,* பெ.(n.) கார்காலத்து மழை; heavy rain, as in the rainy season. *"கார்ப் பெயற் கலித்த பெரும்பாட் டீரத்து" (புறநா. 120).*

[கார்+பெயல். கார்=கார்காலம், மழைக்காலம். பெயல்=மழை.]

கார்பாலை *kār-pālai,* பெ. (n.) ***காட்டிலுப்பை*** பார்க்க; see *kāttiluppai.*

[கார்+பாலை.]

கார்புகா *kārpugā,* பெ. (n) ***கார்போகி*** பார்க்க; see *kār-pōgi.*

[கார்+(போகி) புகா.]

கார்புரவு *kār-puravu,* பெ.(n.) கார்நெற் சாகுபடி; cultivation of the paddy, harvest.ஊர் அளந்த கோல்*"சுந்தர பாண்டியனாலேஅளந்து கார்புரவுக்கு முன் இறுக்கும் கடமைக்கு"(S.I.I.viii, 169-5 pg.79).*

[கார்+புரவு.]

கார்போகம் *kār-pōgam,* பெ. (n.) ***கார்போகி*** (பதார்த்த. 1020) பார்க்க; see *kar-pōgi.*

[கார்+போகம்.]

கார்போகரிசி *kār-pōgariśi,* பெ.(n) கார்போகியின் விதை; seed of scurfy pea.

[கார்போகி+அரிசி. கார்+போகம்=கார்ப் பருவத்தில் விளைந்தது.]

கார்போகி *kār-pōgi,* பெ.(n.) 1. பூடுவகை; scurfy pea. 2. கார்ப்பருவத்தில் விளையும் ஒருவகை நெல்; a kind of paddy

[கார்+போகி . போகு → போகி. கார்போகி– கார்போகத்தில் (பருவத்தில்) விளைந்தது.]

கார்போகு *kār-ppōgu,* பெ. (n.) ***கார்போகி***–[1] பார்க்க; see *kār-pōgi.*

[கார்+(போக.)போகு.]

கார்மணி *kār-maṇi,* பெ. (n.) 1. கரிசலாங்கண்ணி. (மலை); a plant growing in moist places. 2.காராமணிப்பயறு; cow-gram (சா.அக.).

[கார்+மணி.]

கார்மணித் தக்காளி *kārmaṇi-t-takkāḷi,* பெ.(n) கருப்பு நிறமான மணித்தக்காளி; black berried solanum.

[கார் + மணி + தக்காளி.]

கார்மலி *kār-mali,* பெ. (n.) கடல் (வின்.); sea

[கார்+மலி கார்=கருமை, கார்மலி = கருநிறம் படர்ந்தது.]

கார்மழை *kār-maḻai,* பெ. (n.) கார்காலத்தில் பெய்யும் மழை; monsoon rain.

க. கார்மழு, காரமளெ, கார்மளெ.

[கார்+மழை.]

கார்மறுநிலம் *kār-maṟu-nilam,* பெ. (n.) இருபோக நிலம்; double crop land. *"ஊர் விழுக்கட் டோபாதி கார்மறுநிலம் அறேகால் முக்காணி" (SII. iv.422-4 pg.125).*

[கார்+மறு+நிலம். கார்ப்பருவத்துக்கு அடுத்த மறு பருவத்திலும் விளைச்சல் எடுக்கத்தக்க நிலம்.]

கார்மனத்துவம் *kār-maṉattuvam,* பெ.(n.) பிறர்க்குத் தீங்கிழைக்கும் மனத்தன்மை; evil-mindedness (சா.அக.).

[கருப்பம் + மனத்துவம்.]

கார்முகம் *kārmugam,* பெ. (n.) 1. வில்;bow. *"கார் முகங்கான்ற ... விசிகம்" (ஞானா. 20,19).* 2. பஞ்சு கொட்டும் வில்; bow for cleaning cotton. *"கார்முகம் வீசிட மாசறு துவட்பஞ்சு" (திருப்பு.44).* 3. மூங்கில் (மலை.) bamboo. 3. முகில்; cloud (சா.அக.).

[கார்+முகம். கார்=முகில். கார்முகம்= மழை மேகக்காலத்தில் முகம் காட்டும் வானவில். வானவில் வடிவில் செய்யப்பட்ட பருத்தி கொட்டும் விற்கோல்.]

கார்முகன் *kār-mugaṉ,* பெ. (n.) ஒருவகை செய் நஞ்சு (சங்.அக.); a prepared arsenic.

[கார்+முகன்=கார்=கருமை, நஞ்சு.]

கார்முகில் *kār-mugil,* பெ.(n.) கருக் கொண்ட முகில்; black cloud heavy with rain *"நீலக்கார் முகில் கமலம் பூத்து" (கம்பரா.வாலிவ. 75).* 2. ஒருவகைச் செய்நஞ்சு; a prepared arsenic.

ம. கார்முகில்; தெ. காருமொகுலு.

[கரு+முகில்– கார்முகில்.]

கார்முகில் வண்ணம் *kār-mugil-vaṇṇam,* பெ. (n.) தீமுறுகற் செய்நஞ்சு; a dark grey- coloured arsenic (சா.அக.).

[கார் + முகில் + வண்ணம்.]

கார்முகில் வன்மை *kār-mugil-vaṉmai,* பெ. (n.) ஒருவகைச் செய்நஞ்சு; a prepared arsenic.

[கார் + முகில் + வன்மை]

கார்முகிற் சுண்ணம் *kār-mugircuṇṇam,* பெ. (n.) ஒரு வகைக் கறுப்புச் சுண்ண மருந்து; a dark compound of calcium carbonate prepared by calcination (சா.அக.).

[கார்+முகில்+சுண்ணம்.]

கார்முல்லை *kār-mullai,* பெ. (n.) தலைவியைப் பிரிந்த தலைவன் வருமுன் அவன் வருதற்குரிய கார்காலத்தின் அறிகுறியாக முகில் முன் வந்ததைக் கூறும் புறத்துறை (பு.வெ.10, முல்லைப்.2.); theme describing the approach of a dark clouds, reminding an expectant wife that the time has come for her husband to return.

[கார் + முல்லை. கார் = கார்காலம்.]

கார்மேகம் *kār-mēgam,* பெ.(n.) கருங்குரங்கு; black-faced monkey.

[கார் + முகம் . கார்முகம் → கார் = கருமை.]

கார்வண்ணர் *kār-vaṇṇar,* பெ.(n.) அசுரர் (பிங்.); asuras, as dark in complexion.

[கரு → கார் + வண்ணர். கார் = கருமை.]

கார்வண்ணன் *kār-vaṇṇaṉ* பெ.(n.) கார்முகில் வண்ணத் திருமால் (பிங்.); Viṣṇu, as dark in complexion like clouds.

[கார் + வண்ணன். கார் = கருமை.]

கார்வலயம் *kār-valayam,* பெ.(n.) பெருங்கடல் (வின்.); ocean.

[கார் + வலயம் - கார்வலயம்]

கார்வழலை *kār-vāḻalai,* பெ.(n.) பெரிய பாம்பு (உரி.நி.); black cobra.

[கார் + வழலை. கார் = கருமை.]

கார்வா *kārvā,* பெ.(n.) 16.5, 12, 16 விரலம் அள்வுள்ள கடல்மீன் வகைகள்; species of sea fish.

[கால் → கார் → கார்வா. கால் = நீட்சி]



கார்வா

கார்வாய்சன்னி *kārvāy-s-aṉṉi,* பெ.(n.) பெண்களுக்கு உண்டாகும் ஒருவகை இசிவு நோய்; a kind of delirium peculiar to women (சா.அக.).

[கார் + வாய் + சன்னி.]

கார்வினை *kār-viṉai,* பெ.(n.) பாழ்வினைத் தொழில் (பாவத்தொழில்); sinful action. *"கொடுங்கார் வினை... புரியல்"* (புலியூரந். 2).

[கார் + வினை – கார்வினை.]

கார்வெள்ளி *kār-veḷḷi,* பெ.(n.) மட்ட வெள்ளி. (C.G.); impure silver.

[கார் + வெள்ளி. கார் = கருமை, தரக் குறைவு.]

கார்வை *kārvai,* பெ.(n.) இசையில் பண்நீட்சி (நாத நீட்சி); a prolonged musical note, as in a harmonium.

[கால் → கார் → கார்வை. கால் = நீட்சி, கால நீட்டிப்பு.]

காரக்கட்டி *kāra-k-kaṭṭi,* பெ.(n.) காடிக்காரம் (இ.வ.); nitrate of silver, lunar caustic.

[காரம் + கட்டி.]

காரக்கருணை *kār-k-karuṇai,* பெ.(n.) ***காறுகருணை*** (M.M.289) பார்க்க; see *kāṟu-karuṇai*

[கார் + கருணை–காரக்கருணை. கார் = காரல் சுவை.]

காரக்கல் *kāra-k-kal,* பெ.(n.) ஒருவகை நஞ்சுகல் (வின்.); a kind of caustic mineral.

ம. காரக்கல்லு

[கார் = கருநிறம், நஞ்சு. கார் → காரம் + கல்]

காரக்கழிச்சல் *kāra-k-kaḻiccal,* பெ.(n.) செரியாமல் வயிற்றுப்போக்கு ஏற்படுதல்; a kind of diarrhoea.

[காரம் + கழிச்சல். காரம் = மிகுதி.]

காரக்காஞ்சிரம் *kāra-k-kāñjiram,* பெ.(n.) ஒரு வகை மருந்துச்செடி. (M.M.161); medicinal herb.

ம. காரக்காஞ்சிரம்

[காரம் + காஞ்சிரம்.]

காரகக்கருவி *kāraga-k-karuvi,* பெ.(n.) தொழிலை இயற்றுவிக்குங் கருவி (தொல். சொல். 74, உரை); that which is instrumental in bringing about action.

[கருத்தல் = செய்தல். கரு → காரம் + கருவி.]

காரகம்[1] *kāragam,* பெ.(n.) வேற்றுமையுருபேற்ற பெயர் வினைகொண்டு முடியும் நிலை (பி.வி.8); the relation of a noun to a verb denoted by the case-ending.

கருத்தல் = செய்தல், கரு → கார் → காரகம். ஏற்ற வினையைப் பயனிலையாகக் கொண்டு முடியும் பாங்கு.

காரகம்[3] *kāragam,* பெ.(n.) தோல்நோய் (மேகநோய்); secondary syphilis.

[கரு + அகம் – காரகம்.]

காரகவரிக்கொம்பு *kār-aga-vari-k-kombu,* பெ.(n) உட்புறத்தே கறுப்புவரிகொண்ட மாட்டின் கொம்பு (இ.வ.); horn of an ox with black streaks inside it.

[கார் +அகம் + வரி + கொம்பு.]

காரகவெட்டை *kāraga-veṭṭai,* பெ.(n) ***காரகம்***[2] (இராசவைத்.) பார்க்க; see *kāragam*[2].

[காரகம்[2] + வெட்டை.]

காரகவேது *kāraga-v-ēdu,* பெ.(n) தொழினிகழ்ச்சிக்குக் கருவியாகவுள்ள ஏது (தண்டி, 58, தலைப்பு.); efficient cause, actually producing the effect, dist. fr. ñābaga-v-ēdu, as. வாணிகத்தான் ஆயினான்.

[காரகம் + ஏது. காரகம் = தொழில், நிகழ்ச்சி. ஏது = காரணம். ஏந்து → ஏது.]

காரகன் *kāragaṉ,* பெ.(n.) 1. செய்வோன்; agent, doer. 2. படைப்போன்; creator. *"காரகன்றனையும்"* (சிவதரு. சிவஞான.31).

[கரு → (கருகன்) → காருகன் – காரகன். கருத்தல் = செய்தல்.]

காரகில் *kār-agil,* பெ.(n.) அகில்வகை (சிலப்.14: 108, உரை); a kind of eagle-wood , used as incense.

[கார் + அகில்.]

காரங்கட்டு-தல் *kāraṅ-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i) 1. நீலச்சாயத்தை உறுதியாக்குதல் (வின்.); to strengthen the blue dye by adding the necessary ingredients. 2. உறைப்புமருந்து கூட்டுதல்; to prepare caustics.

[காரம் + கட்டுதல். காரம் பார்க்க; see kāram.]

காரங்கூட்டு-தல் *kāraṅ-kūṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) சாயமருந்து சேர்த்தல் (வின்.); to prepare dyer's lye.

[காரம் + கூட்டு.]

காரங்கொடு-த்தல் *kāraṅ-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) காரமருந்தை உண்பித்தல் (உ.வ.); to give pungent medicines, as to a lying-in woman.

[காரம் + கொடு.]

காரச்சாயம் *kāra-c-cāyam,* பெ.(n) ஒருவகைக் கலப்புச் சாயம் (யாழ்ப்.); a compound colour for dyeing.

[காரம் + சாயம்.]

காரச்சீலை *kāra-c-cīlai,* பெ.(n) புண்ணுக்கிடும் மருந்துச் சீலை (உ.வ.); corrosive plaster, blister.

[காரம் + சீலை.]

காரச்சேர்வை *kāra-c-cērvai,* பெ.(n) தீப்பற்றுள்ள மருந்தின் சேர்க்கை (பாண்டி); cauteriser.

[காரம் + சேர்வை.]

காரச்சேவு *kāra-c-cēvu,* பெ.(n) எண்ணெய்யில் பொறித்த காரப்பண்டம்; a kind of comestibles.

[காரம் + சேவு.]

காரசாரம் *kāra-šāram,* பெ.(n) வேண்டிய அளவோடு அமைந்த காரச்சுவை; pungency, the quality of being pungent and palatable. *"கார சாரஞ்சேர் சாற்றிலே கலந்த சோற்றிலே" (அருட்பா, vi, அவாவறுப்பு.).*

[காரம் + சாரம். சாரம் = சார்ந்த சுவை.]

காரடம் *kāraḍam,* பெ.(n) கண்கட்டுக் கலை (கண் கட்டு வித்தை); juggling, legerdemain.

ம. காரடம்; க.தாரட்; தெ.தார.

காரடை *kār-aḍai,* பெ.(n) அரிசிமாவில் செய்யும் ஒருவகை அடை; a kind of rice cake.

[கார் + அடை. கார் = கார் அரிசி.]

காரடையாநோன்பு *kāraḍaiyā-nōṉbu,* பெ.(n.) கும்பமும் (மாசி) மீனமம் (பங்குனி) கூடும் நாளில் கணவரின் நீண்ட வாழ்நாளுக்காக மகளிர் கைக்கொள்ளும் ஒரு நோன்பு; a ceremonial fast observed by women when the Sun passes from Aquarius to Pisces, praying for the longevity of their husbands.

[காரடை+ஆம்+நோன்பு. (மகர ஈறு கெட்டது).]

கார் அரிசியில் செய்த காரடை வைத்து வழிபடும் நோன்பு.

காரண்டம் *kāraṇḍam,* பெ.(n.) 1. நீர்க்காக்கை (சூடா.); little cormorant. 2. கடுகு; mustard.

[கார்+அண்டம். கார்=கருநிறம். அண்டம் = மிகுதி. கருநிறம் மிகுந்த காக்கையும், கடுகும் காரண்டம் எனப்பட்டது.]

காரண்டலம் *kāraṇḍalam,* பெ.(n.) நீர்க்காக்கை; water-crow (சா.அக.).

[காரண்டம் → காரண்டலம்.]

காரண்டலம்

காரண்டவம் *kāraṇḍavam,* பெ.(n.) நாரைவகை (பாண்டி); a kind of crane.

[கார் + அண்டம் + அம் = காரண்டவம்.]

காரண்டவைப்பு *kār-aṇḍa-vaippu,* பெ.(n.) கார்முகிற் செய்நஞ்சு; a prepared arsenic (சா.அக.).

[கார்+அண்டம்+ வைப்பு.]

காாரணக்குரவன் *kāraṇa-k-uravaṉ,* பெ.(n.) விழுப்பொருள் உணர்த்தும் ஆசிரியன் (வின்); spiritual teacher whose sole object is the spiritual benefit of his disciple, opp. to *kāriya-guru*

[காரணம் + குரவன்.]

காரணக்குறி *kāraṇa-k-kuṟi,* பெ.(n.) 1. காரணப் பெயர்; noun conveying the etymological sense. opp to iḍu-kuṟi. 2. முன்னறிகுறி (வின்.); presage, omen, prognostic. *“மழைக்குக ணென்பது காரணக்குறியென விழுத்தான்” (கம்பரா. காட்சி.6).*

[காரணம்+குறி.]

காரணக்குறிமரபு *kāraṇa-k-kuṟi-marabu,* பெ.(n.) காரணம்பற்றித் தொன்றுதொட்டு வழங்கும் பெயர்ச்சொல் (நன். 275); noun used in its etymological sense and sanctioned by long usage. (எ.டு.) அவன், அவள், பறவை, விலங்கு.

[காரணம்+குறி+மரபு.]

காரணக்குறியாக்கம் *kāraṇa-k-kuṟi-y-ākkam,* பெ.(n.) காரணம்பற்றிப் படைத்துக்கொள்ளும் பெயர்ச்சொல் (நன். 275, விருத்.); noun used in its etymological sense to suit an occasion. (எ.டு.) பொன்னன், பூணன்.

[காரணக்குறி + ஆக்கம்.]

காரணகர்த்தா *kāraṇa-karttā,* பெ.(n.) *காரணகருத்தன்* பார்க்க; see *kāraṇa-karuttaṉ*

[காரணம் + கர்த்தா.]

த. கருத்தன் **Skt.**> kartha

காரணகருத்தன் *kāraṇa-karuttaṉ,* பெ.(n.) முதற்கடவுள் (வின்.); the supreme being, the cause of all things.

[காரணம் + கருத்தன்.]

காரணகுரு *kāraṇa-guru,* பெ.(n.) ***காரணக் குரவன்*** பார்க்க; see *kāraṇak-kuravaṉ.*

[காரணம்+குரு]

த. குரவன் **Skt.**> guru.

காரணச்சிறப்புப்பெயர் *kāraṇa-c-ciṟappu-p-peyar,* பெ.(n.) காரணத்தால் ஓரினத்தில் ஒன்றற்குச் சிறப்பாக வரும் பெயர்ச்சொல் (நன்.62, உரை); noun used in its etymological sense and applicable to a particular object in a class or group, dist. fr. kāraṇa-p-peyar. (எடு.) முடி, (முடியப்படுவது), கழல் (காலில் கட்டப்படுவது).

[காரணம் + சிறப்பு + பெயர்.]

காரணச்சொல் *kāraṇa-c-col,* பெ.(n.) கதை (பிங்); story, narrative.

[காரணம் + சொல். காரணம் = ஒன்றோடொன்று தொடர்புறுத்தல். சொல் = சொல்லுவது – ஆகுபெயராய் சொல்லப்படும் கதையைக் குறித்தது.]

காரணப்பெயர் *kāraṇa-p-peyar,* பெ.(n.) ஒரு காரணம்பற்றி வழங்கும் பெயர் (நன். 62, உரை); derivative name, dist. fr. *iḍu-kuṟi-p-peyar.* (எடு.) பொன்னன்

[காரணம் + பெயர்.]

காரணப்பொதுப்பெயர் *kāraṇa-p-podu-p-peyar,* பெ.(n.) பலபொருட்குப் பொதுவாக வழங்கும் காரணப்பெயர்ச்சொல் (நன். 62, உரை); noun used in its etymological sense and applicable to a class or group, dist. fr. *kāraṇa-c-ciṟappu-p-peyar.* (எடு.) அணி (அணியப்படும் கலன்கள் அனைத்தையும் குறிப்பது).

[காரணம் + பொது + பெயர்.]

காரணம் *kāraṇam,* பெ.(n.) 1. மூலம்; principle, origin, source, cause, of three kind viz., முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம். 2. ஏது; reason, ground of an assertion or argument. *“கல்லார்க்கொன் றாகிய காரணம்” (நாலடி, 265).* 3. நோக்கம்; motive, object. நீ

அவனை வருத்துங்காரணம் என்ன? 4. வழிவகை (உபாயம்); means. *"இதனைத் தீருங் காரணம் யாது" (கம்பரா. நாகபா.234).* 5. சிவனியநூல்; 28ல் ஒன்று (சைவச.பொது.331, உரை); an ancient šaiva scripture in šanskrit.

மறுவ. கரணியம், வயணம்.

[கரு → கார் → காரணம். (மு.தா.176).]

கரணம் - காரணம். கரு + அணம் = கரணம். கருத்தல் - மேகம் கருத்தலைக் குறிக்கும். கரு - கார். மேகம் சூல்கொள்ளும்போது கருத்திருத்தலின் மக்களின் சூலும் கரு, கருப்பம் எனப்படும்.

மேகம் கருத்து மழை பொழிவது உலகவினைகட்கெல்லாம் காரணமா யிருத்தலின் கரு என்பது காரணத்தையும் குறிக்கும்.

"வானின்றுலகம் வழங்கி வருதலான்" என்றார் வள்ளுவரும்.

காரணம், கருவி என்பன கரு என்னும் ஒரு வினைத் தொழிற்பெயர்கள். திரிகரணம் = முக்கருவி. அந்தக்கரணம் = உட்கருவி. கரணம் = அணம் விகுதி. கருவி - வி = விகுதி. கரணத்தின் நீட்டம் காரணம். கருவி மேகத்தின் தொகுதியையும் உணர்த்தும். (எ-டு) 'கருவி மாமழை' 'கருவி தொகுதி' - தொல்காப்பியம். கரு → கார். கார் + அணம் - காரணம். கார் + இயம் - காரியம். இயம் தொழிற் பெயர் விகுதி (செல்வி. பரல் 6 சிலம்பு 18, பக். 256, 257).

காரணமரபு *kārana-marabu,* பெ.(n.) ***காரணக் குறிமரபு*** (நன்.275) பார்க்க; see *kārana-k-kuri-marabu.*

[காரணம் + மரபு.]

காரணமறிநிலை *kāranam-ari-nilai,* பெ.(n.) அணிவகை (யாழ்.அக.); a figure of speech.

[காரணம் + அறி + நிலை.]

காரணமாலை *kārana-mālai,* பெ.(n.) பின் தொடர்ந்து வருவனவற்றிற்கு முன்தொடர்ந்து வருவனவற்றைக் காரணங்களாகவேனும் காரியங் களாகவேனுஞ் சொல்லும் அணி (அணியி.46.); a figure of speech in which a chain of causes and corresponding effects occur.

[காரணம் + மாலை. மாலை = நிரல்படவரும் தொடர்ச்சி.]

காரணமொழி *kārana-moli,* பெ.(n.) விருதாகக் கொள்ளும் மொழி (பாண்டி); motto, emblem.

[காரணம் + மொழி.]

காரணவன்[1] *kāranavan,* பெ.(n.) மூலமான கடவுள்; one who is the first cause, God. *"ஏழுலகும் பரவுங் காரணவன்" (திருவாலவா. 27,32).*

[காரணம் + அவன்.]

காரணவர்[1] *kāranavar,* பெ.(n.) 1. ஊர்ப் பெருமக்கள்; land holders of the village. *"சுந்தரபாண்டிய நல்லூர்க் காரணவரோம்"* (S.I.I.V.105). *நாயனார் பண்டாரத்தார்க்கு விடுதீட்டுக் குடுத்த பரிசாவது"* 2. குடும்பத் தலைவர் (நாஞ்.); head of a family.

[காரணம் → காரணம் → காரணவன். கருத்தல் = செய்தல், பணியாற்றுதல், மேற்பார்த்தல், கணக்குகளை எழுதுதல். கரு காரணம் (செய்கை, தொழிற்படுதல்) ஒ.நோ. அரு → அரண் → அரணம்.]

காரணவாக்கியம் *kārana-vākkiyam,* பெ.(n.) ***காரணமொழி*** பார்க்க; see *kārana-moli.*

[காரணம் + வாக்கியம்.]

காரணவாகுபெயர் *kārana-v-āgu-peyar,* பெ.(n.) திருவாசகம் என்றாற்போலக் காரணம் காரியத் திற்கு ஆகிவரும் பெயர்ச்சொல் (நன்.290, உரை); a noun literally signifying cause, used figureatively to denote the effect, as Tiruvasāgam, dist. fr. *kāriya-v-āgu-peyar.* (எடு.) திருவாசகம் – அடை அடுத்த வாசகமென்னு முதற் காரணத்தின் பெயர் அதன் காரியமாகிய ஒரு நூலுக்கு ஆகியது). வாசகம் – காரணம் (கருவி), திரு – அடைமொழி.

மறுவ. கருவியாகு பெயர்

[காரணம் + ஆகுபெயர்.]

காரணவாராய்ச்சி *kāraṇa-v-ārāycci,* பெ.(n.) காரணம் குறைவின்றி யிருந்தும் காரியம் பிறவாமையைச் சொல்லும் அணி (அணியி.35); figure of speech in which an antecedent cause is represented as not producing its effect.

[காரணம்+ஆராய்ச்சி. காரணவாராய்ச்சி - நிலைமொழி யிறுதி மகரமெய்கெட்டு வருமொழி முன்னர் 'வகர உடம்படுமெய் தோன்றியது.

காரணவிடுகுறி *kāraṇa-v-iḍu-kuṟi,* பெ.(n.) முக்கணன் என்றாற்போலச் சொல்லின் காரணங் கருதியவழிப் பிள்ளையார் முதலிய பலர்க்குஞ் செல்லினும், இடுகுறிபோல ஒருபொருட்கே (சிவனுக்கே) செல்லும் பெயர்ச்சொல் (நன் 62, உரை); noun used in its etymological sense but restricted in application, as Mukkaṇaṉ for šivan. (எடு). முக்கண்ணன், முள்ளி (முள்ளுடைய பலவற்றிற்கும் பெயராயினும் ஒரு வகைச் செடிக்கே பெயராயிற்று).

[காரணம் + இடுகுறி]

காரணவிலக்கணை *kāraṇa-v-ilakkaṇai,* பெ.(n.) காரணத்தைக் காரியமாகக் கூறும் அணி (வின்.); a figure of speech which states the cause as the effect.

[காரணம் + இலக்கணை.]

காரணவொழிப்பு *kāraṇa-v-oḻippu,* பெ.(n.) அவநுதியணிவகை (யாழ்.அக.); a kind of avanudi-y-aṇi.

[காரணம் + ஒழிப்பு.]

காரணன் *kāraṇaṉ,* பெ.(n.) 1. மூலமானவன்; one who is the first cause, as the Supreme Being. *"ஆழியிடைத் துயிலுங் காரண (பாரத. மூன்றாம்போ. 17).* 2. தலைவன் (பிங்.); chief, ruler, lord.

[காரணம்+அன்.]

காரணாதிமூலி *kāraṇadi-mūli* பெ.(n) பொன்னூமத்தை; yellow coloured datura.

[காரணம்+ஆதி+மூலி.]

காரணி[1] *kāraṇi,* பெ.(n.) மலைமகள் (யாழ்.அக.); *pārvati.*

[காரணம்→காரணி (அனைத்துப் பொருள்களின் தோற்றத்துக்கும் காரணமானவள்.]

காரணி[2] *kārāṇi,* பெ.(n.) கல்லாரை; a creeper to be found very rarely at the foot of the hills (சா.அக.).

[கரு → காரணி]

காரணிக்கன் *kāraṇikkaṉ,* பெ.(n.) கணக்கன். (கல்.); accountant.

[கரணிக்கன் → காரணிக்கன்.]

காரணிகன் *kāraṇigaṉ,* பெ.(n.) அறம் கூறுவோன்; judge, arbitrator, umpire. *"நமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டும்" (இறை. 1, உரை).*

[காரணிகன் → காரணிகன்.]

காரணீகன் *kāraṇīgaṉ,* பெ.(n.) மூல காரணமானவன்; one who is the first cause. *"தெரிமறையிற் காரணீகனார்" (சீறாப். கட. 10).*

[காரணிகன் → காரணீகன்.]

காரத்தண்ணீர் *kāra-t-taṇṇīr,* பெ.(n.) 1. உறைப்பான நீர்; pungent water. 2. சோடா நீர்; soda water. 3. ஓம நீர்; omum water.

[காரம் + தண்ணீர்.]

காரத்தி *kāratti,* பெ.(n.) 1. புளிக்கரணை; sour-sorrel. 2. கருப்பு அத்தி; black fig. 3. கார முடையது; that which is pungent. 4. கார்ப்புப்பு; caustic or corrosive of any kind (சா.அக.).

[கார்+அத்தி.]

காரத்திராவகம் *kāra-tirāvagam,* பெ.(n.) காரமான செய்நீர்; an acid with a pungent taste (சா.அக.).

[காரம்+ Skt. dhravaka> த திராவகம்.]

காரத்திரி *kāra-t-tiri,* பெ.(n.) அறுத்த புண் முதலியவற்றில் உட்செலுத்தும் காரமருந்து தோய்த்த சீலைத்திரி (உ.வ.); a kind of seton with a corrosive

or caustic preparation on it, inserted as in an abscess.

[காரம் + திரி.]

காரத்திரியூசி *kāra-t-tiri-y-ūši,* பெ.(n.) காரத் திரியை உடம்பினுட் செலுத்தும் ஊசி; seton needle.

[காரத்திரி + ஊசி]

காரத்திற்காரம் *kārattiṟkāram.* பெ.(n) 1. நாயுருவி; Indian burr. 2. செந்நாயுருவி; red Indian burr of the Aspera genus (சா.அக.).

[காரத்தில் + காரம்.]

காரதாளி *kāratāḷi,* பெ.(n.) நிலப்பனை; ground palm (சா.அக.).

[காரம்+தாளி.]

காரநீர் *kāra-nīr,* பெ.(n) சாயநீர்வகை (வின்.); dyer's lye.

[காரம் + நீர்.]

காரநெய் *kāra-ney,* பெ.(n.) கார மருந்துகள் சேர்ந்த நெய்; oil boiled with pungent drugs (சா.அக.).

[காரம்+நெய்.]

காரப்பசை *kāra-p-pašai,* பெ.(n.) குன்றிமணியை யும் சீனிக்காரத்தையும் அரைத்து சேர்த்துத் தட்டார் பயன்படுத்தும் ஒருவகைப் பசை (வின்.); cement or solder of kuṉṟi-maṇi and alum, used by gold or silver smiths.

[காரம் + பசை.]

காரப்பொடி[1] *kāra-p-poḍi,* பெ.(n.) 1. எரிவுண்டாக் கும் மருந்து; caustic powder. 2. பற்றாசு (இ.வ.); solder.

[காரம் + பொடி.]

காரப்பொடி[2] *kāra-p-poḍi,* பெ.(n.) சிறுமீன் வகை; a small sea-fish.

[காறல் + பொடி காறப்பொடி → காரப்பொடி.]

மீன் குழம்பு செய்வதற்கேற்ற சிறுமீன்; இதன் உலர்ந்த கருவாடும் இதே பெயரில் வழங்கும். நெத்திலிப் பொடி என்றும் கூறுவர்.

காரம்[1] *kāram,* பெ.(n.) 1. உறைப்பு (சூடா); pungency. 2. காரவுப்பு . (வின்.); caustic, corrosive. 3. சாம்பலுப்பு; alkali, soda, potash, impure carbonate of soda. 4. துணிகளின் அழுக்கைப் போக்கும் காரம்; washerman's lye, lixivium. 6. சீனிக்காரம்; alum. 7. வெண்காரம்; borax. 8. ***அக்கரகாரம்*** (தைலவ தைல. 112) பார்க்க; see *akkara-kāram.* 9. அழிவு; ruin, destruction. *"பாவங்கள் யாவையுங் கார மாக்குதலால்" (திருக்காளத். பு. 26,4).* 10. திருநீறு; sacred ashes. *"காரமென் றுரைப்பர்" (திருக்காளத். பு:26,4).* 11. சினம்; anger. அவன் என் மீது காரமாயிருக் கிறான். 12. மரவைரம் (மூ.அ); core of timber, hard or solid part of a tree.

ம., கோத. காரம்; **க., குட., து.,**பட.கார; **தெ.**காரமு; **பிரா.** கரேன்.

Skt. ksāra; **Pali., Pkt.** khāra.

[கரி → கார் → காரம் (செல்வி.78, பக்.284).]

காரச்சீலை, காரச்சேவு, காரத்துளி, (பூந்தி), காரப்பகை, காரப்பொடி, காரமருந்து முதலியன வேகத்தையும் உறைப்பையுமுடைய பொருட் பெயர்கள்.

கரி என்னும் வினையடியால் பிறந்த தொழிற் பெயர். கரி + அம் - காரம்; முதனிலை திரிந்து விகுதி பெற்ற தொழிற்பெயர். ஒ.நோ. படி + அம் - பாடம். தவி + அம் - தாவம். கரித்தல் மிகுதல், காரம் மிகுதி.

கரி என்பது கடி என்னும் உரிச்சொல்லின் திரிபு. ட-ர போலி. ஒ.நோ. படவர் → பரவர். முகடி → முகரி. உப்புக்கரிக்கும் உப்புக் கடுக்கும் என்பன ஒரு பொருள் பற்றிய உலக வழக்கு. கடி என்னும் உரிச்சொற் பொருள்களுள் மிகுதியும் ஒன்று.

காரம் என்னும் சொல் முதலாவது மிகுதியை உணர்த்திப் பின்பு உறைப்பு மிகுதியை உணர்த்தும் (செல்வி. பரல். 6. சிலம்பு 18. 1981 பக்.255).

காரம்[2] *kāram,* இடை (part.) 1. ஆகாரம் என்றாற் போல. எழுத்தோடு சேர்ந்துவரும் சாரியைகளில்

ஒன்று. (நன். 126); a particle added to the sounds of letters when pronouncing, as ākāram. 2. ஒலிக்குறிப்போடு சேர்த்து வரும் ஒரு சாரியை; kind of connective cotters.

['காரம்'-ஒலிக்குறிப்பாய் எழுத்துச்சாரியையாயிற்று. நெட்டுயிர் மற்றும் உயிர்மெய் நெட்டெழுத்து ஆகியவற்றுக்கே இஃது எழுத்துச்சாரியையாய் வருதல் மரபு.]

காரம்[3] *kāram,* பெ. (n.) பொன் (பிங்.); gold.

[காள் → கார் → காரம், எரிதற்பொருள் நிறத்திற்காகிச் செம்பொன்னைக் குறித்தது.]

காரம்[4] *kāram,* பெ.(n.) தொழில்; act. *"எண்ணார்ந்த காரங்க ளில்லகத்தே பயின் றாயேல்" (நீலகேசி, 280).*

கரு + செய். கருதல் - செய்தல். கரு → கார்+அம்- காரம். கரு → கருமம் என்பதே தமிழ் மரபுக்கேற்ற தொழிற்பெயர். வருபவர்களை (வரு → வார்) வாராங்க (தரு → வார்) தாராங்க என வழங்கும் கிளை மொழி வட்டாரத் திரிபினையொத்து கருபவர்களை (செய்பவர்களை) காராங்க என்னும் சொல்லாட்சியும் தோன்றியதன் விளைவாகத் தமிழறியா வடபுலத்தாரிடை கரு → கார் → கார்யம் என்னும் சொல் புதிதாகத் தோன்றி வடமொழிச் சொல்லென்றே பெயர் பெற்றுவிட்டது. இது மீண்டும் தமிழில் புகுந்து காரியம் எனத் திரிந்தது. இதனை வடதமிழ்த் திரிபு என்பர். வடதமிழ் என்பது பழங்காலத்தில் பிராகிருத மொழியைக் குறித்தது.

கரு → காரு → கார் என நெடுமுதலாகத்திரிந்த பின் 'அம்' சொல்லாக்க ஈறு பெற்றது.

காரம்[5] *kāram,* பெ.(n.) 1. உறுதி; certainly. 2. வலிமை; strength. 3. முயற்சி; effort. 4. மிகுதி; surplus. 5. கடுமை; rigour. 6. உரிமை; responsiblity. 7. உடைமை; property.

[கடு → காரம். (வே.க.189).]

காரம்பம் *kārambam,* பெ.(n.) காட்டுத்திப்பிலி; wild long-pepper.

[காரு → காரம்பு → காரம்கக்-.]

காரம்பூசு-தல் *kāram-pūsu,* 5 செ.கு.வி. (v.i.) நிறங்கெடாதபடி சாயத்துக்குச் சீனிக்காரமிடுதல்; (வின்.); to imbue cloth with alum so that it may retain colour.

[காரம் + பூசு-.]

காரம்பை *kārambai,* பெ.(n.) ஞாழல்; cinnamon.

[கார் → காரம்பை = கொடிவகை.]

காரம்போடு-தல் *kāram-pōḍu-,* 19 செ.கு.வி (v.i.) 1. ஆடை முதலியவற்றிற்குக் காரம் வைத்தல்; to apply caustic, lye-alkali, as in washing clothes. 2. உணவுப் பொருளுக்குக் காரம் சேர்த்தல்; to add pungent ingredients to eatables.

[காரம் + போடு-.]

காரமருந்து *kāra-marundu,* பெ.(n.) 1. பிள்ளை பெற்ற பெண்களுக்குக் கொடுக்கும் காரமருந்து; a medicinal preparation of vegetable stimulants given to women after child-birth. 2. தோலை எரித்துத் தின்னும் மருந்து (கால்.வி.); caustic.

[காரம் + மருந்து.]

காரல் *kāral,* பெ.(n.) ***காறல்*** பார்க்க; see *kāṟal.*

[காறல் → காரல்.]

காரவல்லி *kāra-valli,* பெ.(n.) பாகல்(சூடா.);balsam-pear; ***காறல் வல்லி*** பார்க்க; see *kāṟal-valli.*

[காறல் - காரம் + (வள்ளி) வல்லி - காரவல்லி.]

காரவி *kāravi,* பெ.(n.) 1. கருஞ்சீரகம்; black cumin. 2. சதகுப்பி; dill. 3. ***காயப்பத்திரி*** பார்க்க; see *kāya-p-pattiri.* 4.மயிற்சிகை; peacock feather.

[கார் + அவி - காரவி. கார் - கருமை. அவி - சிறியது, சிறிய வடிவுடைய சீரகம்.]

காரள-த்தல் *kār-aḷa-,* 3 செ.கு.வி (v.i.) நெல்லளத்தல்; to measure paddy. *"கோயிலில் காரளக்கும் ராஜராஜப் பல்லவரையனுக்கு" (S.I. I.ii. 310).*

[கார் + அள. கார் - கார்காலத்து நெல் (காலவாகு பெயர்).]

காரற்கத்தரி *kārar-kattari,* பெ.(n.) கத்திரிச் செடிவகை; brinjal.

[கார் → காரல் + கத்தரி.]

காரற்கத்தரி

காரறிவு *kār-arivu,* பெ(n.) மயக்கம் பொருந்திய அறிவு; knowledge, wanting in discrimination or clouded by bias; confused intellect. *"காரறி வாளர்முன்" (நாலடி, 311).*

[கார் + அறிவு, கார் = கருமை.]

காரறு-த்தல் *kār-aru-,* 4 செ.கு.வி. (v.i.) கார் நெற்பயிரை அறுவடைசெய்தல்; to reap kār paddy.

[கார் + அறு. கார் = கார்காலத்து அறுவடைக்குரிய நெல்.]

காரன்[1] *kāran,* இடை. (part.)வேலைக்காரன் பணக்காரன் என்பவற்றிற்போல, வினைமுதல் உடைமை முதலிய பொருளில் வரும் ஆண்பாற் பெயர் ஈறு (விகுதி); masculine termination of certain nouns, meaning doer, possessor, as வேலைக்காரன், பணக்காரன். ***காரம்***[4] பார்க்க; see *kāram*[4]

[கரு → காரன்.]

காரி (பெ.பா.). வீட்டுக்காரன் என்பது உரிமையும், பணக்காரன் என்பது உடைமையும், காவற்காரன் என்பது வினையுடைமையும் (குலப் பெயராயின் வினையுரிமையும்) அண்ணன் காரன் என்பது உறவுரிமை உணர்த்தும் பெயர்களாம். தோட்டக்காரன், வண்டிக்காரன், மாட்டுக்காரன் என்பன உரியவனைக் குறிக்காவிடத்துப் பொறுப்புரிமைக் காரனைக் குறிக்கும். உரியவன் சொந்தக்காரன்.

காரன் காரியீற்றுப் பெயர்கள் நூற்றுக்கணக்கின.

காரன் - வ. கார

வடமொழியாளர் இவ்வீற்றை வடசொல்லாக்கு வதற்கு 'க்ரு' (செய்) என்னும் முதனிலையினின்று திரித்துச் செய்பவன் என்று பொருள் கூறுவர். ஆட்டுக்காரன், கோழிக்காரன், சொந்தக்காரன், தண்ணீர்க்காரன், நாழிமணிக்காரன், புள்ளிக்காரன், முட்டைக்காரன், வெள்ளைக்காரன் முதலிய பெயர்கட்குச் செய்பவன் என்னும் பொருள் பொருந்தாமை காண்க. வேலைக்காரன், கூலிக்காரன் என்பனவும் வினையுடைமையே குறிக்கும்.

செய்வானைக் குறிக்கும் வடமொழியீறுகள் கார, காரு, காரி, காரின் (செய்பவன்), காரின் (செய்பவள்) எனப்படும் வடிவில் நிற்கும் (வே.க.189).

காரன்[2] *kāran,* பெ.(n.) ஒருவகைச்செய்நஞ்சு(வின்.); a prepared arsenic.

[கார் + அன் – காரன். கார் = கருமை, கருநிறத்து நஞ்சு.]

காரன்னம் *kār-annam,* பெ.(n.) கரிய அன்னப் பறவை (சீவக. 930, உரை.); black swan.

[கார்+அன்னம்.]

காரா[1] *kār-ā,* பெ.(n.) 1. எருமை; buffalo. *"செங்கண் வன்கட் காரா" (தஞ்சைவா. 380).* 2.நாக்கும் முலைக்காம்பும் கருநிறமாக உள்ள ஆவகை; cow with black tongue and black nipple

தெ. காராவு; **உருது.** காரா; **ம.** காராம்பசு.

*[கார் + ஆன் – காரான் → காரா. கார் = கருமை. ஆன் = பெற்றம். (பசு)] **காரான்** பார்க்க; see kārān.]*

காரா[2] *kār-ā,* பெ.(n.) கருநிற ஆ; black cow. *"கன்றுபிரி காராவின் றுயருடைய கொடி" (கம்பரா. குகப். 66).*

தெ. காராவு

[கரு → கார்+ஆ. ஆன் = பெற்றம், கறவை. ஆன் = ஆ னகர மெய்யீறு கெட்டுக் கடைக்குறையாயிற்று.]

காராக்கருணை *kārā-k-karuṇai,* பெ.(n.) ***காறாக்கருணை*** பார்க்க; see *kāṟā-k-karuṇai*

[கார் + ஆ + கருணை. ஆ – எ.ம.இ.நி.]

காராச்சா *kār-ācca,* பெ.(n.) ***காட்டுடுகு*** பார்க்க; see *kāṭṭuḍugu.*

[கார் + ஆச்சா.]

காராஞ்சி *kārāñji,* நீரிறைக்கும் ஒருவகை இறைப்புச்சால் (இ.வ.); a kind of water-lift.

[காராம்பி → காராஞ்சி.]

காராஞீலி *kārā-ñili,* பெ.(n.)1. மரவகை; Travancore wood-oil tree. 2. மரவகை; wild durian.

[கரு → கார் → காராம் + நீலி.]

காராடு–தல் *kār-āḍu-,* 5 செ.கு.வி.(v.i) கறுவிப் பேசுதல் (நெல்லை.); to talk with rankling nature.

[கார் + ஆடு–.]

காராடு *kār-āḍu,* பெ.(n) வெள்ளாடு (நன்.267, விருத்.); goat.

[கார் + ஆடு. கார் = கருநிறம்.]

காராடு

காராடை *kār-āḍai,* பெ.(n.) வண்ண உறைப்புள்ள ஆடை; deep-dyed cloth. *"காராடை போர்த்த வெம்புத்தா" (நீலகேசி, 259).*

[காரம்+ஆடை.]

காராண்கிழமை *kārāṇ-kiḻamai,* பெ.(n.) உழவடை உரிமை (M.E.R. 103 of 1916); occupancy right in a field.

[காராண்மை+கிழமை.]

கரு → செய்தல். கரு → கார் → காராண்மை = நேரடியாகத்தாமே செய்யும் உழவுத் தொழில், உழுதுண்ணும் வேளாண்மை. உழுதுண்போர் காராளர் என்றும் உழுவித்துண் போர் வெள்ளாளர் என்றும் பெயர் பெற்றனர்.

காராண்மை *kār-āṇmai,* பெ.(n.) 1. நிலத்தைப் பயிரிடுங் குடியுரிமை (T.A.S.i,7); cultivator's right. 2. ஒரு பழைய வரி; an ancient tax. *"கங்கபாடி பதிநாட்டு ஆலூர் முன் உடையாரை மாற்றக் காராண்மை மீகாட்சியும், மிகுதிக் குறைமையும் உள்ளடங்க" (S.I.I. ii, 92-1, 425).*

ம. காராழ்ம

[கார்+ஆண்மை. கரு → கார் → காராண்மை. கருத்தல் = செய்தல். காராண்மை = நேரடியாகத் தாமே செய்யும் உழவுத்தொழில். அத் தொழில் செய்தற்கான உரிமை. இச் சொல் காராளர் கட்டிய வரியையும் குறித்தது.]

காராம்பி *kār-āmbi,* பெ.(n.) எருது பூட்டி நீரிறைக்கும் கருவிவகை (பிங்.); water lift, used with oxen.

[காரான்+ஆம்பி–காராம்பி. காரான்=கருநிறத்து எருமை அல்லது எருது.]

காராமணி *kārāmaṇi* பெ.(n.) ஒருவகைப் பயறு (பிங்.); chowlee bean.

தெ. காராமணி.

[கார் + ஆம் + மணி. மணி = மணிபோன்ற பயறு.]

காராமணிக்காய் *kārāmaṇi-k-kāy,* பெ.(n.) ஒருவகை மரம்(l); whirling nut.

[காராமணி+காய்.]

காராளம் *kār-āḷam,* பெ.(n.) ஊழிமுடிவில் இறைவன் உயிர்களைத்தன்னுள் ஒடுக்கிக் கொள்ளும் செயல்; the act of the god Siva absorbing the souls in to himself at the time of the universal dissolution.

மறுவ. காராணம்

[காரு+கார் → ஆளம் → காராளம் ஒ. நோ. ஏர் → ஏராளம்.]

உலகங்கள் அழியும் போது படைக்கப்பட்ட அனைத்தும் இறைவனின் வாயில் புகும் என்பது மெய்யியலர் கருத்து. அறிவியலாரும் இதனைக் கருந்துளையில் (black hole) அனைத்து அண்டங்களும் உட்புகும் என்பர். காராளம் எனும் சொல் காராணம் → காரோணம் எனத்திரிந்தது. ***காரோணம்*** பார்க்க see *kārōṇam*

காராளர்[1] *kār-āḷar,* பெ.(n.) உழுதுண்ணும் உழவர், உழுதூண் குடிகள்; peasants, tillers of the soil.

ம. காராளர்

[கார்+ஆள்+அர் – காராளர். கரு → கருத்தல் = செய்தல். தாமே நிலத்தில் இறங்கி உழவுத் தொழில் செய்யும் உழவர் காராளர் எனப்பட்டனர். உணவுப்பொருள் விளைத்து உலகு புரக்கும் உழைப்பாளரை பிங்கல நிகண்டு சூத்திரர் எனக் குறித்திருப்பது முற்றிலும் தவறானது.]

காராளர்[2] *kārāḷar,* பெ.(n.) 1. சேலம், தென்னார்க் காடு மாவட்டங்களிலுள்ள மலைவாழ் மக்களான ஒரு வேடர் இனத்தார் (E.T); a tribe of hunters and cultivators in the hills of Salem and South Arcot.

[கரு = கார் + ஆள் + அர் – காராளர் = கடிய உழைப்பாளர். கரு – கருத்தல் = செய்தல், உழைத்தல்.]

காரான் *kār-āṉ,* பெ.(n.) 1. எருமை, buffalo. 2. நாவும் காம்பும் கருத்திருக்கும் மாடு *"ஈன்றணிக் காரான் (குறுந். 181).*

[கார் + ஆன். கார் = கருமை. ஆன் = மாடு.]

காரானை *kār-āṉai,* பெ.(n.) கடலின்மீது குவிந்து கீழிறங்கி நீரைமுகந்து பெருந்தூண்போல நிற்கும் முகில் (யாழ்ப்.);the cloud brought down to the surface by a waterspout at sea.

[கார் + ஆனை. கார் + கருமை. ஆனை = யானைபோல் பருத்துத் திரண்ட கார் மேகம்.]

காரி[1] *kari,* பெ.(n.) 1. கருமை (பிங்.); blackness. 2. கருநிறமுடையது (திவா.); that which is black. 3. கரிக்குருவி; king-crow. *"கட்சியுட் காரி கலும்" (பு.வெ.1:3).* 4. காக்கை. (திவா).crow. 5. காரி (சனி); saturn. *"காரி வாரத்தில்" (குற்றா. தல.மூர்த்தி.30).* 6. நஞ்சு; venom, poison. *"காரியுண்டிக் கடவுள தியற்கையும்" (மலைபடு.83).* 7. கரிய எருது; black bull. *"சுரிநெற்றிக் காரி" (கலித். 101, 21).).* 8. காரீயம் (சங்.அக.); black lead. 9. கண்ணன்; kannan. *"செங்கட் காரி" (பரிபா.3:81).*

10. ஐயனார் (திவா); Aiyanar. 11. வைரவன் (திவா); Vairavan. 12. கடைவள்ளல்களுள் ஒருவன்; a chief famed for liberality, one of seven *kaḍai-vaḷḷalgaḷ. "கழறொடித் தடக்கைக் காரியும்" (சிறுபாண். 95).* 13. காரிநாயனார்; *Kārināyaṉār. "காரிக்கு மடியேன்" (தேவா. 737,8).* 14. காரி வள்ளலின் குதிரை; horse of the chief *Kāri. "காரிக் குதிரைக் காரியும்" (சிறுபாண். 110).* 15. ஓர் ஆறு ; a river. *"காரியாற்றுக் கொண்ட" (மணிமே. 19: 126).*

[கார் → காரி. கார் – கருமை. இ– உடைமை குறித்த பண்பீறு.]

காரி[2] *kāri,* பெ.(n.) ***கண்டங்கத்தரி*** (மலை) பார்க்க; see *kāṇḍaṅkattari*

[கார் + இ – காரி (கருநிறமுடையது).]

காரி[3] *kāri,* பெ.(n.) செய்பவன்; doer, generally used in compounds. *"பாவகாரிகளைப் படைத்தவன்" (திவ். பெரியாழ். 4.4:1).*

[கரு → கருத்தல் = செய்தல். கரு – கார் + இ – காரி 'இ' உடையவனைக் குறித்த சொல்லாக்க ஈறு.]

காரி[4] *kāri,* இடை (Part.) வேலைக்காரி, பணக்காரி என்பவற்றிற் போல வினைமுதல் உடைமை முதலிய பொருளில் வரும் ஒரு பெண்பாற் பெயர் இறுதி (விகுதி.); fem termination of certain nouns, meaning doer, possessor, as *vēlai-k-kāri,paṇa-k-kāri*

[கரு → கருத்தல் = செய்தல். கரு → கார் + இ – காரி. 'இ'– உடையவரைக் குறித்த பெண்பாலீறு.]

காரி[5] *kāri,* பெ.(n.) பதினாறுபடியளவு (தைலவ தைல. 114); a grain measure 16 paḍi.

[கரு = பெரியது. கரு – கார் – காரி. (அளவில் பெரியது).

காரி[6] *kāri,* பெ.(n.) 1. களர்; blackish soil 2. முதுநிலம்; waste land. 3. கீழ்மகன் ; low-born person. 4. வெண்காரம் (சங்.அக.); borax.

[கள் → காள் → காரி. காள் → கருமை. கருமை = பயனின்மை கீழ்மை.]

காரி[7] *kāri,* பெ.(n.) தொழிற்சாலை (அக.நி.); workshop.

H. kārkāna

[கரு = செய்தல், தொழில். கடு → காரி.]

காரி[8] *kāri,* பெ.(n.) காரி மன்னர் விடுத்த செப்பு நாணயங்கள்; copper coins issued by *kāri.*

காரிக்கத்தளை *kāri-k-kattalai,* பெ.(n) பழுப்பு கலந்த சாம்பல் நிறமும் 5 அடி நீளமும் உடைய கடல்மீன் வகை; a sea-fish that ascends tidal rivers and estuaries, brownish-grey, attaining at least 5 ft. in length.

[காரி + கத்தளை.]



காரிக்கத்தளை

காரிக்கன் *kārikkan,* பெ.(n.) வெளுக்காத ஒருவகைத் துணி; unbleached plain cotton cloth, mostly imported.

தெ. காரிகமு.

மறுவ. காரிக்கம்

[காரிக்கன் → காரிக்கம்.]

காரிக்கிழமை *kāri-k-kilamai,* பெ.(n.) ஞாயிற்றுக் கிழமைக்கு முந்திய நாள் (சனிக்கிழமை) ;saturday.

[காரி + கிழமை.]

காரி = கரியது. 'கரியவன்' என்று சிலப்பதிகாரத் துள்ளும் (10:102), 'மைம்மீன்' என்று புறநானூற்றுள்ளும் (117) வந்திருத்தல் காண்க. மை = கறுப்பு.

காரிக்குதிரை *kāri-k-kudirai,* பெ.(n.)1. ஐயனாரது குதிரை (பிங்.); Aiyanar's horse. 2. வள்ளல் காரியின் குதிரை; name of the horse of kāri, an ancient chieftien. 3. கருப்புக் குதிரை; black horse.

[காரி + குதிரை.]

காரிக்கூன் *kāri-k-kūn,* பெ.(n.) ஒருவகைக் காளான்; agaric, a fungus.

[காரிக்கு + ஊன்.]

காரிகம்[1] *kārigam,* பெ.(n.) ***காரகம்[3]*** (M.l) பார்க்க; see *kāragam.*

[காரகம் → காரிகம்.]

காரிகம்[2] *kārigam,* பெ.(n.) காவிக்கல் (திவா.); red ochre, red dye.

[காரகம் → காரிகம்.]

காரிகம்[3] *kārigam,* பெ.(n.) ***காரிகை*** (யாழ்.அக.). பார்க்க; see *kārigai.*

[காரிகை → காரிகம்.]

காரிகை[1] *kārigai,* பெ. (n) 1. பெண்; woman, lady. *"காலை யெய்தினிர் காரிகை தன்னுடன்" (சிலப். 11:67).* 2. அழகு; beauty, comeliness, *"கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்கு" (குறள், 1272).* 3. ஒப்பனை அணி; ornament. *"கழல்யாப்புக் காரிகை நீர்த்து" (குறள், 777).*

[கரு = கார். கருமை, அழகு. கறுப்பு மிக்குள்ளது அழகு என்பது பண்டைத்தமிழ்க் கருத்தாகலின் கருமைக்கு அழகு பொருள் உண்டாகியது. கரு → கார் → காரிகை (அழகிய பெண்).]

காரிகை[2] *kārigai,* பெ.(n.) யாப்பருங்கலக் காரிகை, 11–ம் நூற்றாண்டில் அமிதசாகரரியற்றிய ஒரு யாப்பிலக்கண நூல்; a treatise on prosody in *kali-t-turai* verse by *Amidāsāgarar,* 11th.c.

[காரிகை¹ → காரிகை² – பெண்ணை விளித்துப் பாடும், பா வகையில் அமைந்த வெண்பாக்களைக் கொண்டது.]

காரிகை³ *kārigai,* பெ.(n.) இருபது அருமணங் கொண்ட ஒருநிறை (சுக்கிரநீதி, 105); a weight of 20 arumanams.

[கரு = பெரியது. கரு → காரி → காரிகை.]

காரிகை⁴ *kārigai,* பெ. (n.) துன்பம் (வேதனை) (நாா்த்த.); torment; extreme suffering; torture.

[கரு → காா். (கருமை, துன்பம்) காா் → காரிகை (துன்பம்).]

காரிடம் *kār-iḍam,* பெ.(n.) காா்காலம்; rainy season. *"பயில்வித் தெல்லாம் காரிட மதனிற் காட்டு மங்குரம்" (சி.சி. 1:9).*

[காா் + இடம். காா் = மேகம், மழை.]

காரிண்டு *kār-iṇḍu,* பெ.(n.) துறட்டிச்செடி; prickly climbing cockspur.

[காா் + இண்டு.]

காரிதம் *kāridam,* பெ.(n.) பிறவினை; causalverb. *"விப்பிவரிற் காரிதமாம்" (பிரயோக. 35).*

[காா் → காரிதம்.]

காரிதாய் *kār-tāy,* பெ.(n.) வைரவரின் தாய், காடுகிழாள் (பிங்.); Durga, as mother of Bhairava.

[காரி (வைரவா்) + தாய்.]

காரிநாயனாா் *kāri-nāyaṉār,* பெ.(n.) அறுபத்து மூவருள் ஒருவரும், கோவைச் சிற்றிலக்கியம் ஒன்றின் ஆசிரியருமாகிய ஒரு நாயனாா் (பெரியபு.); name of a cononized *šaiva* saint, author of a Tamil *kōvai* work, one of 63.

[காரி + நாயனாா்.]

காரிப்பிள்ளை *kāri-p-piḷḷai,* பெ.(n.) ***காரிப்புள்*** (குடா.) பாா்க்க; see *kāri-p-puḷ.*

[காரி + பிள்ளை.]

காரிப்புள் *kāri-p-puḷ,* பெ.(n.) கரிக்குருவி வகை (பிங்.); a species of king crow.

[காரி + புள், காரி = கருமை.]

காரிமாறன் *kāri-māṟaṉ,* பெ.(n.) காரியின் மகனான நம்மாழ்வாா் (திவ். திருவாய். 4.5:11); *Nammāḻvār,* son of *Kāri.*

[காரி + மாறன். காரி = மாறனாாின் தந்தையாா் பெயா்.]

காரிமை *kārimai,* பெ.(n.) ***கொடுவேலி*** (மலை.) பாா்க்க; see *koḍu-vēli.*

[காா் → காரிமை.]

காரியக்கடிசு *kāria-k-kaḍišu,* பெ.(n.) ஒருவகைச் செய்நஞ்சு (கற்பாசாணம்) (வின்.); a mineral poison.

[காா் → காரியம் + (கடிது) கடிசு.]

காரியக்காரன் *kāriya-k-kāraṉ,* பெ.(n.) கைத்திறம் வாய்ந்தவன், சூழ்ச்சி நயம் மிக்கவன்; a clever man, a man of ability.

ம. காா்ய கா்த்தாவு (பணியாள்); க. காரெகார; தெ. காா்ய காண்டு.

[காரியம் + காரன்.]

காரியசிவதத்துவம் *kāriya-šiva-tattuvam,* பெ.(n.) சிவ உண்மைகளுள் ஒன்று (சி.சி.1:66, ஞானப்.) ; a siva-tattuvam.

[காரியம் + சிவம் + தத்துவம்.]

காரியம்¹ *kāriyam,* பெ.(n.) 1. செயல்; action. 2. செயற்பாடு, செய்யப்பட்ட செயல்; performed action.

மறுவ. கருமியம்

ம. காா்யம்; க., து. காா்ய; தெ. காா்யமு.

Skt. kārya

[கரு → காா் → காரியம். கரு – செய்தற்பொருள்.]

காரியம்² *kāriyam,* பெ.(n.) சாணம் (சைவ. சந், 61); cow dung.

[காா் → காரியம்.]

காரியமொழி *kāriya-moḻi,* பெ.(n.) செய்தல் என்னும் பொருளிலிருந்து விரிந்து காரியத்தைக்

குறிக்குஞ்சொல். (தொல் சொல் 112, உரை); a term meaning action in general.

மறுவ. காரியவாசகம்

[காரியம் + மொழி.]

காரியவிலக்கு *kāriya-vilakku,* பெ.(n.) விலக்கணி வகை (யாழ்.அக.); a kind of vilakkaṇi.

[காரியம் + விலக்கு.]

காரியவேது *kāriya-v-ēdu,* பெ.(n.) காரியம் ஏதுவாய்நின்று காரணமுண்மையை விளக்குகை (சி.சி. அளவை. 10, சிவஞா.); inference of a cause from an effect.

[காரியம் + ஏது.]

காரியாசான் *kāri-y-āšāṉ,* பெ.(n) சிறுபஞ்சமூலம் என்னும் நூலின் ஆசிரியர்; the author of širu-pañja-mūlam.

[காரி + ஆசான்.]

காரியார் *kāriiyār,* பெ.(n.) கணக்கதிகாரம் என்னும் நூலின் ஆசிரியர்; the author of the kaṇakkadikāram, a mathematical treatise.

[காரி + ஆர் – காரியார்.]

காரியிண்டு *kāri-y-iṇḍu,* பெ.(n.) வெள்ளிண்டு; shining - leaved soap - pod.

[கார் + இண்டு.]

காரிருள் *kār-iruḷ,* பெ.(n.) மிக்க இருள்; dense darkness. *"கயவன் காரிருட் டான் வர" (மணிமே. 23,94).*

[கார் + இருள்.]

காரிலவணம் *kār-ilavaṇam,* பெ.(n.) (பிடாலவணம்) (யாழ்.அக.); a salt bitnoben.

[கார் + இலவணம்.]

காரியக்கல் *kār-iya-k-kal,* பெ.(n.) கரிவளி (கரியமிலவாயு) நிறையப் பெற்ற கருநிறமான ஒருவகை ஈயக்கல்; graphite, a form of carbon.

[கார் + ஈயம் + கல்.]

காரீயம் *kār-īyam,* பெ.(n.) ஈயவகை (பதார்த்த. 1175, தலைப்பு); black lead.

[கார் + ஈயம்.]

காரு *kāru,* பெ.(n.) 1. கம்மாளன்; artisan. 2. கம்மத் தொழில்; artisanship, smithery.

[கரு – கருத்தல் = செய்தல், கரு → காரு (செய்பவன்).]

காருகால் *kārukāl,* பெ.(n.) நறுமணப் புகைத்தட்டு, pan for burning incense. *"காரு காலிலே கருமுகை பூத்தாற் போலே" (திவ். பெரியாழ். 3.6:7, வியா.ப.686).*

[கரு → காரு + கால். கால் = அடிப்பீடம், புகைத்தற்கான அடித்தட்டு.]

காருகோலரிசி *kāru-kōlariši,* பெ.(n.) கார் போகரிசி; seed of scurfy pea.

[கரு → காரு + கோல் + அரிசி.]

காருசம் *kārušam,* பெ.(n.) 1. காட்டெள்; wild sesamum. 2. நாவி; Indian aconite. 3. நுரை; froth 4. ஓவியம்; painting. 5. காவிக்கல்; red achre.

[கார் → காருவம். காருயம் → காருசம்.]

காருண்ணி *kāruṇṇi,* பெ.(n.) ஆடுதின்னாப் பாளை (இரு.நூற்); āḍutiṇṇāppāḷai.

[கார் + உண்ணி.]



காருண்ணி

காருப்பு *kār-uppu,* பெ.(n.) கடுந்திலாலவணம் (வின்.) ; salt obtained from the sesame seed.

மறுவ. மரவுப்பு.

ம.,தெ. காருப்பு.

[கார் → காருப்பு.]

காரூகம் *kār-ūgam,* பெ.(n.) கருங்குரங்கு. (திவா);black monkey.

[கார் + ஊகம். கார் = கருமை. ஊகம் = குரங்கு.]

காரூகம்

காரூமத்தை *kār-ūmattai,* பெ.(n.) கறுப்பு நிறமுள்ள ஊமத்தை (வின்.); purple stramony.

[கார் + ஊமத்தை.]

காரெட்டு *kār-ettu,* பெ.(n.) பதினொராந்திரு முறையைச் சேர்ந்ததும், முகிலைச் சிவனோடு ஒப்பிட்டு எட்டு வெண்பாக்களால் நக்கீரதேவர் இயற்றியதுமான நூல்; a poem of eight venba stanzas by Nakkira-tēvar included in padinoran-tirumurai, wherein siva is compared to a cloud.

[கார் + எட்டு. கார் = முகில். காரெட்டு = கார்முகிலைச் சிவனொடு ஒப்பிட்டுப் பாடிய எட்டு வெண்பாக்கள்.]

[கார் → காரிமை.]

காரெலி *kār-eli,* பெ.(n.) கறுப்பெலி (சூடா.); black rat.

ம. காரெலி

[கார் + எலி.]

காரெள் *kār-el,* பெ.(n.) எள்ளின்வகை; a black species of sesame.

ம., க. காரெள்ளு

[கார் + எள்.]

காரெனல் *kār-enal,* பெ.(n) 1. ஒளிமழுங்குதற் குறிப்பு; expr. signifying lack-lustreness. *"காரெ னொக்கற் கடும்பசி யிரவல"(புறநா. 141:6).* 2. கருநிறமாகை; darkening, growing black. *"களங்கனியைக் காரெனச் செய்தாரு மில்" (நாலடி, 103).*

[கார் + எனல். கார் = கருமை. எனல் = என்றாதல்.]

காரேலம் *kār-ēlam* பெ.(n.) ஏலவகை (சங்.அக.); a kind of cardamom.

[கார் + ஏலம்.]

காரை[1] *kārai,* பெ.(n.) 1. காட்டுச் செடிவகை; a low shrub with sharp axilliary spines met with in scrubby jungles and common waste places. *"முட்காற் காரை" (புறநா. 258).* 2. மதுக்காரை ; emetic-nut. 3. காறல்மீன்; a sea-fish. 4. ஆடை; cloth. *"யானைப்பாகர் ஆடையைக் காரை யென்றலும்" (நேமிநா. சொல். 10, உரை).*

ம. கார; க. காரெ; தெ.கார; து. காரெ, காரி; குட- காரெமர.

[கால் → கார் → காரை. கால் = நீட்சி. காரை = நீண்முள் கொண்ட செடி, நீண்முள் மீன், நீண்ட ஆடை.]

காரை[2] *kārai,* பெ.(n.) 1. சுண்ணச்சாந்து; mortar, plaster for building. *"காரையினால்விளக்குறு மேனிலத் தோகையர் கீதமும்" (திருப்போ.சந் அலங்க.17).* 2. பல்லில் இறுகப்பற்றிய ஊத்தை (உ.வ.); concretions that encrust the teeth, tartar.

க. காரெ; தெ.கார.

[கள் → காள் → கார் → காரை. கள் = குறுகப்பற்றுதல், கட்டுதல், திரட்சியாதல், காரை = இறுகப் பற்றுவது.]

காரை[3] *kārai* பெ.(n.) பாகல் (இராசவைத்.); balsam pear.

[கள் → காள் → கார் → காரை. கள் = முள். காரை = முட்புறம் கொண்ட காய்.]

காரைக்கட்டுவீடு *kārai-k-kaṭṭu-vīḍu,* பெ.(n.) சுண்ணாம்பு அல்லது சிமிட்டிக் காரை கொண்டு செங்கற்களாற் கட்டப்பட்ட வீடு; building of brick and mortar.

[காரை+கட்டு+வீடு.]

காரை = இறுகப்பற்றுவது. காரை பார்க்க; see kārai

காரைக்காலம்மையார் *kāraikkāl-ammaiyār,* பெ.(n.) அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவரும், கருநாடக இசை எனப்படும் பண்டைத் தமிழிசைக்குத் தாயானவரும் பதினொராந் திருமுறையுட் சில சிற்றிலக்கியங்களுக்கு ஆசிரியருமான சிவனடியார் (பெரிய.); name of one of 63 canonizad šaiva saints, mother of karnataka music, authoress of certain works included in the *Padinorān-tirumuṟai.*

மறுவ. காரைக்காற் பேயார்

[காரைக்கால் + அம்மையார். காரைக்கால் – ஊர்ப்பெயர்.]

காரைக்காற்பேயம்மையார் *kāraikkāṟ-pēy-ammaiyāṟ,* பெ.(n.) ***காரைக்காலம்மையார்*** (ஐங்குறு. முகவுரை,ப. 14). பார்க்க; see *kāraikkāl-ammaiyār.*

[காரைக்கால் + பேய் + அம்மையார்.]

காரைக்காற்பேயார் *kāraikkāṟ-pēyār,* பெ.(n.) ***காரைக்காலம்மையார்*** (யாப்.வி.93) பார்க்க; see *karaikkal-ammaiyār.*

[காரைக்கால் + பேயார்.]

காரைச்செங்காரி *kārai-c-ceṅkāri,* பெ.(n.) மரவகை (a); Java almond

[காரை+செம்+காரி.]

காரொக்கல் *kārokkal,* பெ.(n.) வறிய சுற்றம்; poor relation.

[கருத்தல் = செய்தல். கரு → கார் + ஒக்கல்.]

காரொளி *kār-oḷi,* பெ.(n.) கருந்தாரை (யாழ். அக.); black stripe, as on cattle.

[கார் + ஒளி.]

காரோடன் *kārōḍaṉ,* பெ.(n.) 1. ஆய்தவுறை செய்வோன் (திவா); sheath-maker. 2. சாணைக் கல் செய்வோன்; whetstone maker. *"சிறுகாரோ டன் பயினொடு சேர்த்திய கற்போல்" (அகநா.1).*

[காரை + ஓடன் – காரோடன், காரை = இறுகப்பற்றுவது. இறுகிக் கட்டியானது. வன்மையானது. காரோடன்–பிடிப்புள்ள அல்லது இறுக்கமான மேலுறை. மேலுறையை ஓடு என்பர். காரோடு செய்பவன் காரோடன். வன்மையான ஓடுபோன்ற சாணைக்கல் காரோடன் எனப்பட்டது. 'அன்' ஒன்றன்பாலீறு.]

காரோணம் *kārōṇam,* பெ.(n.) உலகமுடிவின் போது சிவன், ஆன்மாக்களைத் தம்முள் அடக்கிக் கொண்ட ஊர்களாகக் கருதப்பட்ட நாகை, கச்சி, குடந்தை போன்ற திருத்தலங்களின் பொதுப்பெயர் (தேவா.); sacred shrines, where šiva had absorbed the souls into Himself at the time of the universal dissolution, as *Nāgai, Kacci, Kuḍandai.*

[கார் → காரணம் → காராணம் → காரோணம்.]

கார் = கருமை, இருள். இறைவன் உலக உயிர்களை ஊழி முடிவில் தன்னுள் ஒடுக்கிக் கொள்ளும் போது இருண்ட வாயில் புகுதலாக மெய்யியலார் புனைந்துரைப்பர். ஏரால் விளைந்த மிகுவிளைச்சல் ஏராளம் எனப்பட்டது போலக் காரால் (கருத்த இருளால்) விளைந்த நிறம் காராளம் → காராணம் எனப்பட்டது. இதுவே காரோணம் எனத் திரிந்து சிவனின் ஐந்தொழில்களுள் தன்னுள் ஒடுக்கிக் கொள்ளுதலுக்குப் பெயராகி ஊர்ப் பெயருமாயிற்று.

கால்[1]**(லு)–தல்** *kāl-,* 5 செ.கு.வி (v.i.) 1. வெளிப்படுதல் (திவா); to flow , as saliva from the mouth, poison from a serpent's fang; to issue, as blood from a vein. *"உருமுகான் றென்னப் பல்லியங்களு மார்த்தன" (கந்தபு. முதனாட். 3).* 2.

குதித்தல்; to leap forth, as a water fall. *"விடர்கா லருவி வியன்மலை" (சிறுபாண். 170).* 3. கக்குதல் (திவா.); to vomit, disgorge. [ம. காலுக] 4. தோற்றுவித்தல்; to bring to public view; to reveal; to shoot forth, as ears of corn. *"பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி" (பெரும்பாண். 2).*

ம. காலுக; க.,பட.காறு.

[குல் → தோன்றல், கருத்துவேர். குல் → கல் → கால் = தோன்றுதல், வெளிவருதல், பாய்தல், ஓடுதல், பரவுதல், வீசுதல்.]

கால்[2] *kāl,* பெ.(n.) 1. வெளிப்படும் அல்லது தோன்றும் முளை(பிங்.); shoot, sprout. *"நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்" (குறள்,959).* 2. மரக் கன்று (பிங்.); sapling. 3. மகன் (பிங்.); son. 4. முளை போன்ற குறுந்தறி (சூடா.); peg, pin, stake.

[குல் → தோன்றல் கருத்துவேர். குல் → கல் → கால் (தோன்றல்).]

கன்று என்னும் இளமைப் பெயர் நிலைத் திணைக்கும் விலங்கினத்திற்கும் பொதுவாயிருத் தலையும், சிறு பிள்ளைகளைக் கன்று கயந்தலை என்னும் உலக வழக்கையும் காண்க. கன்று, குட்டி, பிள்ளை என்னும் மூவிளமைப் பெயர் இருதிணைக்கும் பொதுவாக வழங்குதலும் உண்டு.

கால்[3] *kāl,* பெ.(n.) 1. மூலம், பிறப்பிடம்; place of origin, source. *"மணிக்கா லறிஞர்" (கல்லா.முரு.).* 2. இடம்; place, room. *"புனல்கால் கழீஇய பொழில்" (பெரும்பாண். 380).* 3. அடிநிலம்; basement. கடைக்கால், நாற்றங்கால், பள்ளக்கால். 4. இடப் பொருளுருபு; particle donating place. *"கண் கால் கடை இடை தலை வாய் திசைவயின்" (நன் 302).* 5. வில்லின் அடி, குதை, முனை; point, end, as of a bow. *"ஒருதனு விருகால் வளைய" (தேவா. 142 : 14).* 6. கால் போன்ற அடிப்பாகம்; lower part, base, bottom. *"களைகால் கழாஅலின்" (புறநா. 120).* 7. பாதம்; foot, leg of a person, animal or thing. *"காலிற்குப் போடச் செருப்பில்லை என்பார்க்கும்" (தனிப்பா.).* 8. நெசவுத்தறியின் கான்மிதி; treadle in a loom. *"காஞ்சிபுரம் போனால் காலாட்டிக் கொண்டு சாப்பிடலாம்" (பழ).* 9. குடையைத் தாங்கும் பிடி; shaft, handle. *"குடைக்கால் போல்" (நாலடி. 368).* 10 காடு; forest. 11. தமிழில் நாலிலொன்றைக் குறிக்கும் 'வ' என்னும் பின்னவெண்குறி; the symbol 'வ' to denote ¼ in Tamil. *"காலெனப் பாகென" (பரிபா.372).*

ம., க. காலு, கால்; **தெ., பட.** காலு; **து.** காலு, காரு; **கோத., குற., கை., கொண்., கட., கொலா.,** கால்; **இரு.** கால்லு; **குரும்.** கால; **துட.**கோல்; **குட.** காலி; **கோண்.** கால், காடு; **கூ.** காடு; **பர்.** கேல்; **குரு.**கெட்ட; **மா.** க்வெடு.

[குல் – தோன்றல் கருத்துவேர். குல் → கல் → கால்– தோன்றுமிடம் (இடப்பொருள்).]

கால்[4] *kāl,* பெ.(n) 1. பந்தல் தாங்கும் கம்பு; pole, staff. *"வந்த வேலையை விட்டுவிட்டுப் பந்தற் காலைப் பிடித்தானாம்" (பழ.).* 2. மண்டபந் தாங்கும் தூண்; post. *"தருநிரை நிமிருங் கால்களாய்" (கந்தபு. வரைபுனை. 6).* 3. விழாத் தொடக்கத்திற்கு அடையாளமாகப் பந்தற்கால் போல் நாட்டுங்கோல் (கம்பு); pole. *"கால்கோள் விழாவின் கடைநிலை சாற்றி" (சிலப். 5:144).* 4. இவர் கொடிகள் பற்றும் பற்றுக்கோடு (சூடா.); prop, support. 5. மண்டபக் கால்போல உடம்பைத் தாங்கும் உறுப்பு, பாதம்; leg. *"கழாஅக் கால் (குறள், 840).* 6. முழங்கால்; knee. 7. உடம்பில் நாலிலொரு பங்கான முழங்கால் போன்ற காற்பகுதி;quarter, one fourth of a whole. 8. காலால் நடக்கும் நடை; pace, as of a horse. *"காறூய்மை இல்லாக் கலிமாவும்" (திரிகடு. 46).* 9. நடையால் அமையும் பாதை (பிங்.); path, way, road. 10. கால்போற் கட்டிலைத் தாங்கும் உறுப்பு; leg of the cot. *"கட்டிற்கால் போல் நால்வர் (உ.வ.).* 11. வண்டிக்குக் கால் போன்ற சக்கரம்; wheel of the cart. 12. சக்கரமுள்ள வண்டி; cart with wheel. *"கலத்தினும் காலினும்" (சிலப். 2:7).* 13. தேர்ச் சக்கரம்; car-wheel, carriage-wheel (க.காலி) *"கடலோடா கால்வ னெடுந்தேர்" (குறள். 496).* 14. பூவின் தாள்; stem of a flower. *"திரள்கால் ... அலரி" (நாலடி, 199).* 15. கால்போல் தாங்கும் வாசல் நிலை; door-frame. வாசற்கால் (உ.வ). 16. வாசற் கால் போன்ற எழுத்துவரி; the symbol 'ா' in Tamil alphabet. *'புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினர்' (தொல். எழுத்து. 17. உரை).* 17. கால்போன்ற சடைப்

பிரிவு; lock of hair in plaiting. இரண்டுகொற் பின்னல்; இரட்டைக் காற் சடை. 18. பிரிவு; division. 'தேசிக் குரிய கால்களும்' (சிலப். 3:16, உரை). 19. இனமுறை; degree of consanguinity or affinity. இரண்டாங் கால்முறை. 20. குடும்பம், சரவடி, இனவழி; family, relation-ship. கால்வழி. 'பழைய காலைத் தூர்க்காதே, புதுக்காலை வெட்டாதே' (பழ.) 21. கால்போல் ஊன்றும் மழைப் பெயல்; the descent of rain. மழைக் கால் ஊன்றி விட்டது (உ.வ.) 22. கால்போல் ஊன்றும் ஆலவிழுது; aerial root, as of the banyan. 'கான் மரம்' (திவா). 23. கால்போல் நீண்டு விழும் சுடர்க்கதிர்; ray. "நிலாக்கால் விடுதலை" (மீனாட். பிள்ளை. ஊசற். 11). 24. கால்போல் நீண்டு செல்லும் நீர்க்கால்; irrigation channel; streamlet. "சரயுவும் பல காலி னோடியும்" (கம்பரா. நாட்டு. 60). வாய்க்கால், ஆற்றக்கால், வெள்ளக்கால், பள்ளக்கால். 25. மரக்கால்; a measure of capacity for grain. "கால் பெருத்துப் பொலி சிறுத்தாலும்" (திருவிருத். 58. வியா. ப. 324). 26. அளவு (கருவியாகு பெயர்); measure, degree. 27. இருநூற்று நாற்பது இழை கொண்ட அகலம்; breath of 240 threads.

ம.,க கால்; தெ., து.பட.,காலு.

[குல்-தோன்றல் கருத்துவேர். குல் → கல் → கால்-தோன்றல் வளர்தல்-நீட்சிப் பொருள்.]

kāl, foot; Tuda *kōl*; Tulu *kār*. Comp. Mongol *k'ul*; Ostiak *kur*, Tungusian *chalgan, halgan*; Permian *kok;* Ossete *kach, koch*; Vogul *lal;* Korean *pal;* Canton-Chinese *koh;* Hung. *gyalog*, on foot (C.G.D.F.L. Pg.617); **Gk.** kuklos; **Russ.** koleso.

கால்[5] *kāl*, பெ.(n.) கருநிறம்; black colour. "கால்தோய் மேனிக் கண்டகர்" (கம்பரா. உயுத் வானர. 21).

ம.கால

skt.kāla

[கல் → கால்(வே.க.119).]

கால்[6] *kāl*, பெ.(n) 1. காற்று; wind, air, any of the vital airs. "கால்கடிப் பாகக்கடலொலித் தாங்கு" (பதிற்றுப். 68,1). 2. ஊதைநோய்; rheumatic affection. "காற்கானோய் காட்டி" (நாலடி, 372). 3. ஐந்து முதற்பொருளுள் ஒன்றாகிய காற்று (பஞ்சபூதம்); the five elements.

க. காளி, காள்; தெ.காலி; து. காலி, காளி; கொலா. கலி; நா. களி; குவி. காலி; குரு. காலி; பட. காயி.

Fin. keli; **Karel.** keli; **Mong.** kei.

Dan. gal; **Ice.** gola, galinn; **Norw.** galen; **F.** galerne.

[குல்-தோன்றல் கருத்துவேர் குல் → கல் → கால் (காலுதல்)-ஒழுகுதல், ஓடுதல், வெளிப்படுதல், தோன்றுதல்.]

கால்[7] *kāl*, பெ.(n.) 1. பொழுது (பிங்.); time. 2. செவ்வி; bloom, freshness. beauty. "கான்மலியும் நறுந்தெரியல்" (பு.வெ. 8:18). 3. தடவை; turn. "சென்றே யெறிப வொருகால்" (நாலடி, 24). 4. காலன் (சூடா); Kala, minister and attendant of Yama. 5. கூற்றுவன்; Yama. "காலொக்குஞ் சில" (இரகு. யாகப். 71).

ம.கால்.

கால்-நீட்சி. இங்குக் கால நீட்சியைக் குறித்துப் பொழுதின் பெயராயிற்று. பிறகு நல்ல நேரம் (செவ்வி), பணி தொடங்கு நேரம் (தடவை), காலம் (வாழ்நாள்) கணிக்கும் காலன் பொருள்களில் தாவிற்று.

கால்[8] *kāl*, இடை. (part.) 1. ஏழுருபுளொன்று. (நன். 302); a locative ending. 2. ஒரு வினையெச்ச ஈறு; ending of the verbal participle meaning if, provided, while, when. "பழவினை வந்தடைந்தக் கால்" (நாலடி, 123).

[கால்-இடம். இடப் பொருள் உணர்த்திய சொல் அப்பொருட்குரிய வேற்றுமை உருபாயிற்று. அதேசொல் வந்தவிடத்து சென்றவிடத்து என்னும் சொல்லாட்சிகளை ஒருபுடை தழுவி வந்தக்கால், சென்றக்கால் என வினையெச்ச ஈறாயிற்று. வந்தாக்க, போனாக்க என்று மக்கள் பேசும் கொச்சை வழக்கு விலக்கற்பாலது.]

கால்கட்டு *kāl-kaṭṭu,* பெ. (n.) *காற்கட்டு* பார்க்க; see *kāṟkaṭṭu.*

ம. கால்கெட்டு ; க.காலுகட்டு

[கால் + கட்டு.]

கால்கடியன் *kāl-kaḍiyaṉ,* பெ.(n) வல்லவன்; lit., fleet-footed person, person of ability, *'கால்கடியரானவர்கள் ஏத்தப்புக்கால்' (ஈடு,3.1:7).*

[கால்+கடியன்.]

கால்கடு–த்தல் *kāl-kaḍu-,* 4 செ.கு. வி. (v.i.) தாள் (கால்)நோதல்; to have an aching sensation in the leg.

[கால்+கடு–.]

கால்கழிகட்டில் *kāl-kaḻi-kaṭṭil,* பெ.(n.) பாடை; bier. *"கால்கழி கட்டிலிற் கிடப்பி" (புறநா. 286).*

[கால்+கழி+கட்டில்.]

கால்கழுவு–தல் *kāl-kaḻuvu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. பாதபூசை செய்தல்; to wash the feet of a guru or saint. 2. மலங்கழுவுதல். (உ.வ.); to wash oneself after evacuation.

[கால்+கழுவு–.]

கால்கிளர்–தல் *kal-kiḷar-,* 3 செ.கு.வி. (v.i.) 1. ஓடுதல்; to run. "கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்து திரிதரும்" (பெரும்பாண். 21). 2. படையெடுத்துச் செல்லுதல்; to set out on an expedition, as an army. *"அரைசு கால் கிளர்ந் தன்ன" (கலித். 149:3).*

[கால்+கிளர்]

கால்கூசு–தல் *kāl-kūšu-,* 5 செ.கு.வி.(v.i.) பிறவிடஞ் செல்ல மனங்கூசுதல்; to feel shy of entering a house, as of a stranger.

[கால்+கூசு –]

கால்கெஞ்சு–தல் *kāl-keñju-,* 5 செ.கு.வி. (v.i.) அடிவருந்துதல்(இ.வ.); to feel exhausted and unable to proceed further as after a hard, long walk.

[கால்+கெஞ்சு.]

கால்கைப்பிடிப்பு *kāl-kai-p-piḍippu,* பெ.(n.) ஊதைநோய்; rheumatism.

[கால்+கை+பிடிப்பு.]

கால்கைவலிப்பு *kāl-kai-valippu,* பெ.(n.) மூளைக்கு ஏற்படும் பாதிப்பினால் கைகால்கள் வெட்டிவெட்டி இழுப்பதும் வாயில் நுரை தள்ளி நினைவை இழக்கச் செய்வதுமான ஒரு நோய்; epilepsy.

[கால்+கை+வலிப்பு.]

கால்கைபிடி–த்தல் *kāl-kai-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) இசைவாக நடந்து வயப்படுத்துதல்; cajole, coax by word and deed.

[கால்+கை+பிடி.]

காலும் கையும் பிடித்து நயமாகத் தாழ்ந்து, இனிமையாகப் பேசிப் பிறரை வயப்படுத்துதலை, கால்கை பிடித்தல் என்பர்.

கால்கொள்(ளு)–தல் *kāl-koḷ-,* 7 செ. குன்றாவி. (v.t.)1. திருவிழா முதலியவற்றுக்குத் தொடக்கஞ் செய்தல்; to commence, as a festival; to begin. *"இந்திர விழாவிற்குக் கால்கொண்டு" (சிலப். 6:6, உரை).* 2. கல்லில் கடவுள் வடிவமைக்கத் தொடங்குதல்; to begin sculpturing the image of a deity in stone. *"பத்தினிக் கற்கால் கொண்டனன்" (சிலப். 26: 254, அரும்.).* 3. இடங் கொள்ளுதல்; to spread, increase. *"முலைகால் கொளக் கண்டு" (தஞ்சைவா.53).*4.ஏற்றுவித்தல் (ஆரோகணஞ் செய்தல்); to get into; to mount, as a horse. *"மயிலின்மேற்கால்கொளுங் குகனை" (அருட்பா, V, தரிசன).* 5. பெருக்கெடுத்தல்; to be filled, flooded. கால்கொண்டு நீர்வருகிறது. (இ.வ.).

[கால்+கொள்.]

கால்கெடு–தல் *kālkeḍudal,* 17 செ.குன்றாவி. (v.t.) வழிமரபு அற்றுப்போதல்; to put an end to the generation of a clan

[கால்+கெடு.]

கால்கோள் *kālkōl,* பெ.(n.) 1. தொடக்கம்; beginning, commencement, as planting a pole for a festival. *"கால்கோள் விழவின் நிலைசாற்றி" (சிலப்.5:144).* 2. போரில் இறந்த வீரனுருவைக் கல்லில் வகுக்கத் தொடங்குதலைக் கூறும் புறத்துறை (தொல்.பொருள். 60); theme of commencing the sculpture of the figure of a warrior who died in battle, on a memorial stone.

[கால்கொள் → கால்கோள்.]

கால்சாய்-தல் *kāl-šāy-,* 1 செ.கு.வி. (v.i.) அடியோடழிதல்; to perish utterly, to be completely ruined. *"குலமுழுதுங் கால்சாயப் பெயர்ப்ப னன்றே" (பிரயோத.38:28).*

[கால்+சாய்.]

கால்சிதை-தல் *kāl-šidai-,* 4 செ.கு.வி. (v.i.) காலாற் பறண்டுதல்; to scratch with the legs. *"கால்சிதைந்து நீலவல்லேறு பொராநின்ற வானம்". (திவ். இயற். திருவிருந்.7).*

[கால்+சிதை.]

கால்சீ[1]-த்தல் *kāl-šī-,* 4 செ.குன்றாவி. (v.t.) காலினாற் கீறுதல்; to scratch, as a fowl. கோழி கால்சீத்து உண்ணும் (உ.வ.).

[கால்சீறுதல் → கால்சீ-த்தல்..]

கால்சீ[2]-த்தல் *kal-si-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. அடியோடு போக்குதல்; to root out, exterminate. *"மாவிருள் கால்சீப்ப" (பரிபா.10:112).* 2. துடைத்தல்(வின்.); to efface, obliterate, brush away.

[கால்+சீ.]

கால்செய்வட்டம் *kāl-šey-vaṭṭam,* பெ.(n.) பேராலவட்டம்(பிங்.); large circular fan.

[கால்+செய்+வட்டம்.]

கால்தடுக்கு-தல் *kāl-taḍukku-,* 5 செ.கு.வி. (v.i)அடியிடறுதல்; to stumble.

[கால்+தடுக்கு.]

கால்தாங்கு-தல் *kāl-tāngu-,* 5 செ.கு.வி. (v.i) காலை இழுத்துநடத்தல்; to have the feet drawn up, stiffened, as by a fall, by disease; to hobble, limp, as bullock, because of pain in the hoof. மாடு கால்தாங்கி நடக்கிறது (உ.வ.).

[கால்+தாங்கு.]

கால்தாழ்-தல் *kāl-tāl-,* 2 செ.கு.வி. (v.i.) 1.சுணங்குதல், காலந்தாழ்த்தல்; to delay. *'இழந்தவையடைய மீட்பதாகச் சொல்லிப்போன நெஞ்சினாரும் அங்கே கால்தாழ்ந்தார்' (ஈடு,7.3:4).* 2. ஈடுபடுதல்; to be absorbed, engrossed. *'ஒரோகுணங்களிலே கால்தாழ்ந்து' (ஈடு,4.2:4).* 3. மூழ்கிவிடுதல்; to be immersed, drowned; to be steeped thoroughly. *"புண்ணீர் வெள்ளத்து காறாழ்ந்து" (திருவிளை. பழியஞ்சி.10).*

[கால்+தாழ்.]

கால்நடை *kāl-naḍai,* பெ.(n.) 1. காலால் நடக்கை; walking, going by foot. அவர்கள் குமரியிலிருந்து சென்னைக்குக் கால்நடையாகவே வந்தனர் (உ.வ.). 2. ஆடுமாடுகள் (உ.வ.); cattle, sheep and goats.

ம. கால்நட; **க.** கால்நடெ; **தெ.** கால்நட, காலிநட.

[கால்+நடை.]

கால்நடைதருவார் *kāl-naḍai-taruvār,* பெ.(n) நடக்குந்திறனுள்ளவர்; those who are able to walk. *'கால்நடை தருவார் காலிலே விழுந்து' (ஈடு,6.1: ப்ர.).*

தெ. கால்நடவாடு (நடப்பவர்)

[கால்+நடை+தருவார்.]

கால்நோக்கு *kāl-nōkku,* பெ.(n.) கோள்களின் (கிரகங்களின்) காற்பகுதிப் பார்வை (சங்.அக.); one fourth aspect of a planet.

[கால்+நோக்கு]

கால்நோய் *kāl-nōy* பெ.(n.) காலில் உண்டாகும் நோய் (M.L); lymphangitis in the leg.

[கால்+நோய்.]

கால்பந்து *kālpandu,* பெ.(n.) ***காற்பந்து*** பார்க்க; see *kāṟpandu.*

து. கால்செண்ட்

[கால்+பந்து.]

கால்பரப்பு-தல் *kāl-parappu-,* 5 செ.கு.வி (v.i.) 1. கால் வைத்தல்; to set foot, as on the ground. 2. நிலைகொள்ளுதல்; to settle down, rest, as in a place.

[கால் + பரப்பு.]

கால்பரி-தல் *kāl-pari-,* 4 செ.கு.வி. (v.i.) அறுபடுதல்; to break, to give way, as a rope. *"கயிறுகால் பரிய" (மணிமே. 4:31).*

[கால்+பரி.]

கால்பாதை *kāl-pādai-,* பெ. (n.) ***கால்வழி*** பார்க்க; see *kālvaḻi.*

தெ. காலிடொங்க

[கால்+பாதை]

கால்பாவு-தல் *kāl-pāvu-,* 5 செ.கு.வி. (v.i.) ***கால்பரப்பு-தல்*** பார்க்க; see *kāl-parappu-.* *"நெருப்பிலே கால் பாவினாற்போலே"(திவ். திருமாலை, 4:24).*

[கால்+பாவு.]

கால்பிடி-த்தல் *kāl-piḍi-,* 4 செ. குன்றாவி. (v.t.) 1. காலை வருடுதல்; to press and rub the legs to induce sleep, to shampoo. 2. காலைப் பற்றிக் கெஞ்சுதல்; to fall at one's feet for a favour. *'பால்குடிக்கக் கால்பிடிக்க வேண்டி யிருக்கிறது' (ஈடு).* 3. தொண்டு புரிதல்; to do service. *"கேசவ நம்பியைக் கால்பிடிப்பா ளென்னு மிப்பேறு"·(திவ். நாய்ச்.1:8).* 4. வாய்க்கால் வெட்டுதல்; to excavate or dig a channel. 5. விதையடித்தல்; to castrate.

ம. கால்பிடிக்குக

[கால்+பிடி.]

கால்பின்னு-தல் *kāl-piṉṉu-* 5 செ.கு.வி. (v.i.)1. கால்கள் முறுக்கிக் கொள்ளுதல்; to become cross-legged, as a result of extreme physical debility. 2. முட்டிக்கால் தட்டுதல்; to be knock-kneed, as a donkey from carrying too heavy a burden.

[கால்+பின்னு.]

கால்மட்டம் *kāl-maṭṭam,* பெ.(n.) கட்பார்வை யின்றிக் காலால் தடவிநடக்கை (யாழ்ப்.); feeling the way with the feet, as a blind man.

[கால்+மட்டம்.]

கால்மடக்கு *kāl-maḍakku,* பெ.(n.) கடப்புக்கால். (M.L); club-foot in which the heel is elevated and the foot bent or turned inward.

[கால்+மடக்கு.]

கால்மர-த்தல் *kāl-mara-,* 3 செ. கு.வி. (v.i.) கால் உணர்ச்சியற்றுக் கட்டைபோலாதல்; to get benumbed, as the feet.

[கால்+மர.]

கால்மாடு *kāl-māḍu,* பெ.(n.) 1. செல்வம் என்று பொருள்படும் மாடு என்னும் சொல்லினும் வேறாகிய வளர்ப்பு விலங்கு; cattle as distinguished from *māḍu* meaning gold. *"இராசராசதேவர் கொடுத்த கால்மாட்டிலும்' (S.I.I. II, 2, 49).* 2.காலின் பக்கம் (உ.வ.); place near the foot of a bed, or of a person in bed. கண்ணனின் கால்மாட்டில் அர்ச்சுனன் அமர்ந்திருந்தான் (உ.வ.).

[கால்+மாடு. கால்மாடு=கால்நடையாகிய மாடு.]

கால்மிதி *kal-midi,* பெ.(n) 1. அடிவைப்பு; a pose of foot in dancing 2. அடிச்சுவடு; track, footmark, footprint. 3. அடிவைக்கும் படி அல்லது படிக்கட்டு, கிணற்றுப் படிக்கட்டு (இ.வ.); well-staircase, steps cut for the feet inside the well. 4. காலிற்பட்ட

தூசியைத்துடைத்துக் கொள்வதற்காக இடப்படும் தென்னைநார்த் தடுக்கு; door-mat.

[கால்+மிதி.]

கால்முளை-த்தல் *kāl-muḷai-,* 4 செ.கு.வி. (v.i.) குழந்தை நடைகற்கத் தொடங்குதல் (உ.வ.); to begin to walk, as a child.

[கால்+முளை.]

கால்மெட்டி *kāl-meṭi-,* பெ.(n.) கால் பெருவிரலுக்கு அடுத்த விரலில் இடும் வெள்ளி வளையம்; a silver ring worn on the second toe.

ம. காலுங்கர

[கால்+மெட்டி]

கால்மெட்டிடுகை *kāl-meṭṭidugai,* பெ.(n) திருமணத்தில் மணமகன் கால்விரலில் கணையாழி இடுதல் (இ.வ.); putting a ring, mostly of silver, on the bridegroom's toe during marriage.

[கால்+மெட்டி+இடுகை - கால்மெட்டியிடுகை - கால்மெட்டிடுகை.]

கால்மேலுறை *kāl-mēl-uṟai,* பெ.(n.) கணுக்காலுறை (பாண்டி); gaiter, spat.

[கால்+மேல்+உறை.]

கால்யா-த்தல் *kāl-yā-,* 6 செ.கு.வி. (v.i.) நெருங்குதல்; to be close, crowded. *"கால்யாத்த பல்குடி கெழீஇ" (பெரும்பாண். 399).*

[கால்+யா-. யாத்தல்= கட்டுதல், நெருங்குதல் → கால்யாத்தல் = நெருங்குதல், கூட்டமாதல்.]

கால்யா[1]-த்தல் *kāl-yā-,* 4 செ. குன்றாவி. (v.i.) 1. மறைத்தல்; to conceal. *"சொன்றி ... வறைகால் யாத்து" (பெரும்பாண். 133).* 2. தேக்குதல்; to fill with water, as a channel. *"நீர்கால் யாத்தல்" (குறள், 1038,உரை).*

[கால்+யா- யாத்தல்=கட்டுதல், செயற்பாடு ஒடுங்குதல்.]

கால்வடம் *kāl-vaḍam,* பெ.(n.) காலணிவகை; foot-ornament strung with pearls. *'திருக்கால் வட மொன்றிற் கோத்த' (S.I.I.ii, 79-205 pg. 397).*

[கால்+வடம்.]

கால்வயம் *kāl-vayam,* பெ.(n.) துவரை; dhall (சா.அக).

[கால்+வயம்.]

கால்வழி *kāl-vaḻi,* பெ.(n.) 1. ஒற்றையடிப் பாதை; footpath. 2. காற்சுவடு; footprint. *"யானைக் கால் வழி" (புறநா. 368).* 3. **கால்வாசி[2]** பார்க்க; see *kāl-vāśi.[2]* 4. குடிவழி; lineage, family. *"நோய் பழியிலாததோர் கால்வழியில் வந்தவளுமாய்" (அறப்.சத.2).*

க., பட.காலுகாரி; தெ. காலிதாரி, காலி தோவ, காலிபாட.

[கால்+வழி.]

கால்வழி நூல்வழி *kāl-vaḻi-nūl-vaḻi* பெ.(n) வழிவழிவரும் மருத்துவ நூன்முறை; hereditary or customary, practice and theory as in *'கால்வழியும் நூல்வழியும் கண்டு தேரே' (சா.அக.).*

[கால் + வழி + நூல் + வழி.]

கால்வளைவி-த்தல் *kāl-vaḷaivi-,* பி.வி. (v.caus.) வளைத்தல்; to bend, as the bow. *"சிலைகால் வளைவித்து" (திவ். பெரியதி. 8.6:4).*

[கால்+வளைவி-.]

கால்வாங்கு[1]-தல் *kāl-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.i) 1. காலை வெட்டுதல்; to have the leg cut off. 2. கால் வழுக்குதல்; to slip, slide. 3. உயிர்மெய் நெடில் பெரும்பாலானவற்றில் நெடிற்குறியாகக் காலைவரைதல்; to write the symbol 'ா' to denote the lengthening to of vowel-consonants in the Tamil alphabet.

[கால்+வாங்கு.]

கால்வாங்கு[2]—தல் *kāl-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. பின்வாங்குதல்; to retrace one's steps, withdraw *"கண்ண நீரோடே யாய்த்துக் கால்வாங்குவது" (திவ். திருமாலை, 15, வியா.).* 2. இறத்தல் (உ.வ.); to die.

[கால்+வாங்கு.]

கால்வாசி *kāl-vāśi,* பெ.(n.) 1. நாலில் ஒருபங்கு; a fourth part, quarter, 2. அடிவைத்த பலன்; lit., the nature or quality of one's foot as gauged from the weal or woe that accompanies a person's first entry in any concern, the nature of one's entry in any concern on which its good or evil prospects are supposed to depend. அவன் கால்வாசி நல்லது.

ம. கால்வாசி; **து.** காலம்ச, காலம்சொ.

[கால்+வாசி. பகுதி → பாதி → பாசி → வாசி. வாசி (பங்கு,பகுதி) = பிறப்பியம் (ஜாதகம்) கணிப்போர் வரைந்த ஒரைக்கட்டத்தில் நற்பயனுக்கு உரிய பகுதிக்கட்டம்.]

கால்வாதம் *kāl-vādam,* பெ.(n.) ***காலூதை*** பார்க்க; see *kāl-ūdai.*

[கால்+(ஊதை) வாதம்.]

கால்வாய் *kāl-vāy,* பெ.(n.) வாய்க்கால்; channel branching from a river or tank, for irrigation. *"கால்வாய்த் தலையின் கண்கள் போலும்" (பாரத. முதற்போ. 72).*

ம. கால்வாய்; **க.** காலுவெ, கால்வெ; **தெ.** காலுவ., காலவ; **து.** காலிவெ; **பட.** காவெ.

skt. khalla

[கால்+வாய்.]

கால்வாய்க் கோமாரி *kāl-vāy-k-kōmāri,* பெ.(n.) கால்நடையின் கால் குளம்புகளில் காணும் கோமாரி நோய்வகை; disease that affects the foot and mouth of cattle.

[கால்+வாய்+கோமாரி.]

கால்வாயடுப்பு *kālvāy-aḍuppu,* பெ.(n) காடியடுப்பு; a fire-place or oven in the form of a ditch, cooking trench.

[கால்+வாய்+அடுப்பு.]

கால்வாயன் *kāl-vāyaṉ,* பெ.(n) தெரிந்து பேசும் வன்மையற்றவன் (இ.வ.); one who cannot hold his own in a learned discussion, insufficiently educated person; a person of little knowledge and poor speech.

[கால்+வாயன். ஒரு செய்தியின் காற்பகுதி மட்டும் விளங்கிக் கொள்ளும் தெளிவில்லாதவன், பேதை.]

கால்வார்—த்தல் *kāl-vār-,* 4 செ.கு. வி. (v.i.) கொடிக்காலில் கடக (ஆடி) மாதத்தில் அகத்தி விதையை ஊன்றுதல்(இ.வ.); to sow seeds of *agatti* in a betel garden in the month of *āḍi.*

[கால்+வார்-]

கால்வாரி *kāl-vāri,* பெ.(n.) மாட்டுக் குற்றவகை (பெரிய.26); a defect in cattle.

[கால்+வாரி.]

கால்விடு[1]—தல் *kāl-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. கால்கள் செயலறுதல்; to have the feet crippled. 2. முட்டுக்கொடுத்தல்; to place a support, as to a falling roof. 3. தொலை உறவாதல் (C.G.); to be removed to some degrees in relationship.

[கால்+விடு.]

கால்விடு[2]—தல் *kāl-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) அறவொழித்தல்; to renounce or give up entirely, to forsake.

[கால்+விடு.]

கால்விரல் *kāl-viral,* பெ.(n.) மாந்தரது காலின் முற்பகுதியில் அமைந்துள்ள ஐந்து விரற் பகுதிகளுள் ஒன்று; toe.

ம. கால்விரல்; க.,பட. கால்பெரலு; தெ. காலுவெள்ளு, காலுவ்ரேலு; து. கார்பெரல், காலுபெரல்.

[கால்+விரல்.]

கால்விலங்கு *kāl-vilaṅgu,* பெ.(n.) ***காற்கட்டு*** பார்க்க; see *kāṟkaṭṭu.*

ம. காலவிலங்நு

[கால்+விலங்கு.]

கால்விழு–தல் *kāl-viḻu-,* 20 செ.கு.வி.(v.i) 1. மழைக்கால் இறங்குதல்;to descend, as rain clouds on the horizon. கால்விழுந்த மேகம் மழைவெள்ளத்தைத் தரும் (பு.வெ.9,16, உரை. 2. ஒளிவீசுதல்; to shed rays of light. *"நிலாக்கால் விழுந்தனைய" (மீனாட். பிள்ளைத். ஊசற். 1).*

[கால்+விழு.]

கால்விழுந்துபோ¹–தல் *kāl-viḻundu-pō-,* 8 செ.கு.வி. (v.i.) பாரிச ஊதை (பாரிசவாயு) முதலியவற்றால் கால் அசைவற்றுப் போதல்; to be rendered powerless, as one's legs by paralytic attack.

[கால்+விழுந்து+போ.]

கால்விழுந்துபோ²–தல் *kāl-viḻundu-pō-,* செ.கு.வி. (v.i.) முழுவதும் செயலற்றுப் போதல்; to be spent up or thoroughly exhausted, as at the time of death. 2. சாய்ந்து விழுதல்; turn turtle. *கொட்டகை கால்விழுந்து போனது (உ.வ.).* 3. அமிழ்தல்; to be ruined. *அக் குடும்பம் கால்விழுந்து போயிற்று (உ.வ.).*

[கால்+விழுந்து + போ.]

கால்வீச்சு *kāl-viccu,* பெ.(n.) கால் வீசி நடக்கை; sweeping motion of legs as in strut generally due to one's arrogance.

[கால்+வீச்சு.]

கால்வீசு¹–தல் *kāl-vīsu,* 5 செ.கு.வி. (v.i.) ஒளிக்கதிர் வீசுதல்; to shed rays, as the moon.

[கால்+வீசு.]

கால்வீசு²–தல் *kāl-vīsu,* 5 செ.கு.வி. (v.i.) காற்றடித்தல்; to blow, as the wind. *"கால்வீசி மின்னிப் படர்ந்து" (தாயு.சுகவாரி.8).*

[கால்+வீசு-.]

கால்வெடிப்பு *kāl-veḍippu,* பெ.(n) காலிற்காணும் பித்தவெடிப்பு (M.L); fissure in feet, as due to excess of bile in one's system.

[கால்+வெடிப்பு.]

கால்வை–த்தல் *kāl-vai-,* 4 செ.கு.வி. (v.i.) உள்நுழைதல்; lit., to place the foot, to step in, enter. அவன் வீட்டில் நான் கால்வைக்கமாட்டேன்.

ம. கால்வய்க்குக, கால்குத்துக; க.காலிடு; பட.கால்பீ.

[கால்+வை.]

காலக்கட்டம் *kālakkaṭṭam,* பெ. (n.) ஒரு கால எல்லை; a period or length of time.

ம. காலகட்டம்

[காலம் + கட்டம்]

காலக்கடவுள் *kāla-k-kaḍavuḷ,* பெ.(n.) 1. காலன்; Yama, as the deity that puts an end to life. 2. அழிப்புக்கடவுளான சிவன்; Siva, as the god of destruction. *"காலக்கடவுட் குயர்கமா வலனே" (தொல். பொருள். 81, உரை).*

[காலம்+கடவுள்.]

காலக்கடப்பு *kāla-k-kaḍappu,* பெ.(n.) காலத்தின் வேகம், காலவோட்டம் (தக்கயாகப். 447); passage of time.

[காலம்+கடப்பு.]

காலக்கணிதம் *kāla-k-kaṉidam,* பெ.(n.) காலக்கணக்குப்பற்றிய விண்நூல்; astronomy. *"காலக் கணிதமுங் கலைகளின் துணிவும்" (மணிமே. 2:29).*

[காலம்+கணிதம்.]

காலக்கணிதர் *kāla-k-kaṇidar,* பெ.(n.) காலத்தைக் கணித்தற்குரிய கணியர்; astronomers. as calculators of time. *"மாலைக் காரரும் காலக்கணிதரும்" (மணிமே. 28,40).*

[காலம்+கணிதர்.]

காலக்கந்தம் *kāla-k-kandam,* பெ.(n.) 1. தும்பைப்பூ; leucas flower. 2. காட்டத்தி; false mangosteen. 3. பிசினத்தி; gum fig. 4. கருவேல்; black babool. (சா.அக.).

[காலம்+கந்தம்.]

காலக்கழிவடை *kāla-k-kaḻivaḍai,* பெ.(n.) 1. காலங்கடந்து; that which is unlimited by time.. 2. காலக்கழிவானது; that which is time-barred.

[காலம்+கழிவடை.]

காலக்கழிவு *kāla-k-kaḻivu* பெ.(n.) 1. காலத்தாழ்வு; delay, postponement, putting off. *"ஞானக்கைதா காலக்கழிவு செய்யேலே" (திவ். திருவாய். 2.9:2).* 2. வீண்பொழுது போக்குகை; wasting or killing time.

[காலம்+கழிவு.]

காலக்கனல் *kāla-k-kaṉal,* பெ.(n.) ***காலத்தீ*** பார்க்க; see *kāla-t-ti. "காலக்கனல் கட்கடை கக்குங் கணங்கள்" (கூர்மபு. அந்தகா. 102).*

[காலம்+கனல்.]

காலக்கினிதகன் *kālakkiṉitagaṉ* பெ.(n.) காட்டுத்தீ; jungle fire (சா.அக).

[காலம்+அக்கினி+தகன்.]

காலக்குறி *kāla-k-kuṟi,* பெ.(n.) பருவத்துக்குரிய அடையாளம்; seasonal indications, sign of weather.

[காலம்+குறி.]

காலக்கேப்பை *kāla-k-kēppai,* பெ.(n.) இராகி வகை (விவசா.3.); a species of ragi.

[காலம்+கேப்பை.கேழ்வரகு → கேப்பை(மரூஉச் சொல்).]

காலக்கொடுமை *kāla-k-koḍumai,* பெ.(n.) காலத்தின் தீமை; evil time , harmful of the times.

ம. காலக்கேடு

[காலம்+கொடுமை.]

காலக்கோட்டரிசி *kāla-k-ōṭṭariśi,* பெ.(n.) கவிழ்தும்பை; stooping leucas (சா.அக.).

[காலம்+கோட்டு+அரிசி.]

காலகஞ்சம் *kāla-kañjam,* பெ.(n.) ஈரல்; liver (சா.அக.).

[காலம்+கஞ்சம்.]

காலகட்கம் *kāla-kaṭkam,* பெ.(n.) ஒரு நிரயம் (நரகம்) (சி.போ.பா. 2:3, ப 203); a hell.

[காலம்+கட்கம்.]

காலகண்டகம் *kāla-kaṇḍagam,* பெ.(n) 1. நச்சுக் குருவி; a species of venomous sparrow. 2. தண்ணீர்ப் பாம்பு; water snake (சா.அக.).

[காலம்+கண்டகம்.]

காலகண்டம்[1] *kālakaṇḍam,* பெ.(n.) 1. தாழ்ந்த குரலுடைய ஒரு பறவை; a species of bird of sylviadae family with a low voice. 2. பாடும் பறவைகள்; singing birds in common. 3. வயிற்றின் வலப்பக்கச் சதை; the mascular portion on the right side of the abdomen.

[காலம் + கண்டம் – காலம் = நீளுதல், தாழ்தல், தொங்குதல்.]

காலகண்டம்[2] *kāla-kaṇḍam,* பெ.(n.) 1. கார் வழலை என்னும் கருநாகம்; black cobra. 2. ஆண் குருவி; cock- sparrow. 3.மயில்; pea-cock.(சா.அக.).

[காலம்+கண்டம். காலம் = கருப்பு, அழகு.]

காலகத்தூரி *kāla-kattūri,* பெ.(n) 1. கருப்பு மான்மணத்தி; black must. 2. கத்தூரி வெண்டை; musk benday (சா.அக.).

[காலம்+கத்தூரி.]

காலகம் *kalagam,* பெ.(n.) 1. சேங்கொட்டை; dhoby's nut. 2. கருவிழி; black part of the eye. 3. தண்ணீர்ப்பாம்பு; water snake. 4. பேய்; evil spirit. 5. பெண்காக்கை; female crow. 6. கரும்புள்ளி; dark spot. 7. தேள்; scorpion. 8. பால் புளிப் பதனால் ஏற்படும் ஒருவகைப் புழு; a small worm found in the fermentation of milk 9. சியா மாப்பறவை; syama bird (சா.அக.).

[கால் → காலகம்.]

காலகரந்தகம் *kāla-karandagam,* பெ.(n.) 1. பாம்பு; snake. 2. நீர்ப்பாம்பு; water snake. (சா.அக).

[கால் + கரந்தகம் – கால்கரந்தகம் → காலகரந்தகம்.]

காலகாலம் *kālakālam,* பெ.(n.) 1. உரிய காலம்; proper time. 2. காலந்தோறும்; all times, time after time.

[காலம் + காலம்.]

காலகரு *kāla-karu;* வெ.(n.) காழகில்; black aloe-wood (சா. அக.).

மறுவ. சோம்பரம்

[கால்+அகரு.]

காலகாலம் *kāla-kālam,* பெ.(n) வறுமை மிகுந்த; time of famine (சா.அக.).

மறுவ. காலங்கறுப்பு

[காலம்+காலம்.]

காலகாலன் *kāla-kālan,* பெ.(n.) சிவன்; Siva, as one who subdued Yama. *"காலகாலனைக் கம்பனெம் மானை"* (*தேவா. 1048,1*).

ம. காலகாலன்

[காலன் + காலன் – காலகாலன் : காலனுக்குக் காலன், எமனுக்கு எமன். நான்காம் வேற்றுமைத் தொகை.]

காலகுணத்தான் *kāla-gunattān,* பெ.(n.) அலரி; oleander (சா.அக.).

[காலம்+குணத்தான்.]

காலகுந்தி *kāla-kunti,* பெ.(n.) கழற்சிக் கொடி; molucca-bean (சா.அ க.).

[காலம்+குந்தி.]

காலகூடகம் *kāla-kūdagam,* பெ.(n.) ஒரு நச்சு மூலிகை; the name of a poisonous plant. (சா.அக.).

[காலம்+கூடகம்.]

காலகூடம் *kāla-kūdam,* பெ.(n.) 1. பாற்கடலில் தோன்றிய நஞ்சு; the poison that came out when the ocean of milk was churned;deadly poison. 2. எட்டிமரம்; nux-vomica tree.

[காலம்+கூடம்.]

காலக்கோட்டிநஞ்சுச்சுண்ணம் *kāla-kōtti-nanju-c-cunnam,* பெ.(n.) நஞ்சுக் கொடியினின்று அணியமாக்கும் சுண்ணம்; an alkaline compound prepared from the navel - cord of the first - born child. (சா.அக.).

[காலம்+கோட்டி+நஞ்சு+சுண்ணம்.]

மறுவ. குடற்சுண்ணம்

காலங்கடந்தோன் *kālaṅ-kadanton,* பெ. (n.) காலங்கடந்த கடவுள்; God, as unlimited by time. "காலாதீதனான ஈசுவரன்" (சி.சி.2:54, சிவாக்.)

[காலம்+கடந்தவன்.]

காலங்கடத்து-தல் *kālaṅkadattu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நேரத்தை வீணடித்தல்; to spend time just like that. 2. காலம்கழித்தல்;to pass one's time, to delay.

ம. காலம்கழியுக

[காலம்+கடத்து.]

காலங்கண்டவன் *kālaṅ-kandavan,* பெ.(n.) அகவையிலும் துய்ப்பிலும் (அனுபவத்திலும்) முதிர்ந்தவன்; aged and experienced person.

ம. காலம்கண்டவன்

[காலம்+கண்டவன்.]

காலங்கழி–தல் *kālaṅ-kaḻi,* 4 செ.கு.வி. (v.i.) பொழுதுபோதல்; to pass away, as time.

ம. காலம்கழியுக

[காலம்+கழி.]

காலங்கழி–த்தல் *kālāṅ-kaḻi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. காலந்தாழ்த்துதல்;to delay. 2.வாழ்நாள் போக்குதல் (திருக்கருவைக்கலித்.); to pass one's life-time. 3. வாழ்தல்; to make a living.

ம. காலம்கழிக்குக; து. காலகளெபுனி

[காலம்+கழி.]

காலங்கறுப்பு *kālaṅ-karuppu,* பெ.(n.) வறுமைக்காலம்; famine time. (சா.அக.).

[காலம்+கறுப்பு.]

காலங்காட்டி *kālaṅ-kāṭṭi,* பெ.(n) விடியற்காலம்; the break of the day as the first appearance of light in the morning (சா.அக.). அவன் காலங்காட்டியே எழுந்து வேலைக்குப் போய்விட்டான் (இ.வ.).

[காலம் + காட்டி.]

காலங்காண்–தல் *kālāṅkāṇ-,* 16 செ.கு.வி. (v.i) 1. காலத்தை அறிந்து கொள்தல், தெளி வடைதல்;to know the proper time, to be cleared.

ம. காலங்காண்

[காலம்+காண்]

காலங்கார்த்தாலே *kālaṅ-kārttālē,* கு.வி.எ. (adv.) விடியற் காலையில், புலர்காலையில் (உ.வ.); very early in the morning.

*[காலம்+காலத்தாலே – காலங்கார்த்தாலே. **காலத்தாலே** பார்க்க. see kālattālē.]*

காலங்காலம் *kālaṅkālam* பெ.(n.) பலதலை முறைகளை உள்ளடக்கிய நீண்டகாலம்; long duration, period of many generations.

[காலம்+காலம்.]

காலங்கிட்டு–தல் *kālaṅ-kiṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) ***காலங்கூடுதல்*** பார்க்க; see *kālaṅ-kūḍudal.*

[காலம்+கிட்டு-.]

காலங்கூடல் *kālaṅ-kūḍal* பெ.(n.) இறத்தல்; dying (சா.அக.).

[காலம்+கூடல்.]

காலங்கூடு–தல் *kālaṅ-kūḍu-* 5 செ.கு.வி. (v.i.) 1. இறக்குங்காலம் நெருங்குதல்; to approach or overtake, as death nearing one's end.2. வரையறுக்கப்பட்ட காலம் முடிதல்; to complete the allotted period.

ம. காலம் கூடுக; து. காலபர்புனி.

[காலம்+கூடு.]

காலங்கெட்ட காலம் *kālaṅkeṭṭakālam,* பெ.(n.) அல்லலுறும் காலம், தீய காலம்; in auspicious time.

ம. காலவேல

[காலம் + கெட்ட + காலம்.]

காலச்சக்கரம் *kāla-c-cakkaram,* பெ.(n.) 1.காலச் சுழற்சி; rotation of time. 2.அன்றாட வாழ்க்கை முறை; typical day to day life. ஏதோ காலச் சக்கரம் நடக்கிறது. நானும் வாழ்கிறேன் (உ.வ.).

மறுவ. காலவட்டம்

ம. காலசக்ரம்; தெ. காலசக்ரமு; து. காலசக்ர.

[காலம் + சக்கரம்.]

காலசங்கம் *kāla-šaṅgam,* பெ.(n.) வைகறை (யாழ்.அக.); dawn, early morning.

[காலம் = விடியற்காலம். காலம் + சங்கம். சங்கு சங்கம்.காலசங்கம் + விடியல் = சங்கு என்பது விடியற் காலையை உணர்த்தியதாகலாம்.]

காலசந்தி[1] *kāla-šandi,* பெ.(n.) ஒரு நாளின் ஆறு பாகங்களுள் (யாமங்களுள்), இரண்டிரண்டு கூடுஞ் சந்திக் காலங்களில் கோயில்களிலே செய்யும் பூசை; lit.,junction of times,worship in temples in the interval between every two of the six parts into which a day is divided.

[காலம் + சந்தி. காலம் = நாளின் முக்காலப் பிரிவு, அதாவது 20 நாழிகைக்கு ஒருமுறை (8 மணிக்கு) நடத்தும்,கோயிற்பூசைக்குரிய காலம்.]

காலசந்தி[2] *kala-šandi,* பெ.(n.) ***காலைசந்தி*** பார்க்க; see *kālai-šandi.*

[காலை → கால + சந்தி – காலசந்தி. காலை = காலைநேரம்.]

நாடொறும் 8 மணி இடைவெளிக்கு ஒருமுறை நிகழ்த்தும் முக்காலப் பூசைகளுள் முதற் பூசையாகிய வைகறை 4 மணிப்பூசை, காலை சந்தி எனப்பட்டது.

காலசம் *kālašam,* பெ.(n.) 1. பேராலவட்டம்; large circular fan. 2.காற்று; wind.

[கால் + அசை – காலசை → காலசம். கால் = காற்று. அசை = காற்று வரும் பொருட்டு அசைப்பது.]

காலஞ்செய்–தல் *kālañ-cey-,* 1. செ.கு.வி. (v.i.) இறத்தல்; to cease to exist, to die."காலாந்தரத் திருவர் தங்காலஞ் செய்ய"(திருவாச. 12:11).

மறுவ. காலமாதல்

ம. காலம்செய்யுக

[காலம் + செய். காலம் = காலத்தின் இறுதி. காலஞ்செய் = தம் வாழ்நாள் இறுதியை முடித்துக்கொண்டது.]

காலஞ்செல்(லு)–தல் *kālañ-cellu-,* 1 செ.கு.வி. (v.i.) 1.இறந்துபோதல்; to depart this life, die. 2.காலத்தாழ்வுப்படுதல் (யாழ்ப்.); tobe late, 3. காலயிறுதியாதல்(உ.வ.); tobe time barred by limitation.

[காலம் + செல்.]

காலஞ்சொல்லு–தல் *kālañcollu-,* 1 செ.கு.வி. (v.i.) வாழ்நாளின் நன்மை தீமைகளை முன்ன தாகவே கூறுதல்; predicting events good or bad of one's life-time (சா.அக.).

[காலம் + சொல்லு.]

காலஞ்சொல்லி *kālañ-colli,* பெ.(n.) காகம், பல்லி; crow, lizard.

ம. காலம்சொல்லி

[காலம் + சொல்லி.]

காலசாகம் *kālašāgam* பெ.(n.) 1.கறிவேப்பிலை; curry leaf. 2. துளசி; holy basil (சா.அக.).

[காலம் + சாகம். காலம் = கருமை.சாகம் = இலை,தழை, தளிர்.]

காலசாரம் *kālašāram,* பெ.(n.) அணில்; squirrel. (சா.அக.).

[காலம் + சாரம் – கால சாரம் = கரிய வரிகளைக் கொண்டது. மூவரி அணில் எனப்படுதல் காண்க. காலம் = கருமை, சாரம் = வரி, சாரை, கோடு.]

காலசாலி *kālasāli,* பெ.(n.) கருப்பரிசி; black rice.(சா.அக.).

[காலம் + சாலி. சாலி = நெற்பயிர்ப் பொது. காலம் = கருமை.]

காலடி[1] *kāl-adi,* பெ.(n.) 1. உள்ளங்கால்;sole of the foot. 2. காற்சுவடு; step or trace of the foot, footprint."*நடந்த பெருங்காலடி மேலடி*" *(தனிப்பா.ii,4:7.).*

ம. காலடி

[கால்[1] + அடி.]

காலடி[2] *kāladi,* பெ.(n.) 1. சேரநாட்டுப் பெரியாற்றங் கரையிலுள்ள சிற்றூர்; a village on the bank of the Periyar in Kerala. 2. ஆதிசங்கரர் பிறந்த ஊர்; a town in the Chera country, the birth-place of Sankara.

ம. காலடி

[கால் + அடி – காலடி. கால் – ஆற்றின் ஊற்றுக்கால் அல்லது வாய்க்கால் பக்கத்தில் அமைந்த சிற்றூர்.]

காலடி[3] *kāladi*, பெ.(n.) மிக்க அண்மை; close proximity (சா.அக.).

[கால் + அடி(கால் அடியெடுத்து வைக்கும் தொலைவு).]

காலடியில் *kāl-adi-y-il*, கு.வி.எ. (adv.) 1. மிக அண்மையில்; in close proximity. இதோ, காலடி யில் உள்ளது அவ்வூர் (உ.வ.). 2. பாதுகாப்பில்; under one's protection. அவன் என் காலடியில் வாழ்பவன் (உ.வ.).

[கால்[1] + அடியில்.]

காலணி *kāl-ani*, பெ.(n.) 1. காலில் அணியும் அணி கலன்; anklet,ankle rings or bells. *"கரந்தியான் கொண்ட காலணி" (சிலம்பு.16, 127.).* 2. செருப்பு; slipper.

ம. காலணி

[கால்[1] + அணி.]

காலத்தவணை *kālattavaṇai*, பெ.(n.) வரையறுக் கப்பட்ட காலவெல்லை; prescribed time limit.

மறுவ. காலவரம்பு

[காலம் + தவணை.]

காலத்தால் *kālattāl*, கு.வி.எ.(adv.) 1. உரிய பொழுதில்; seasonably, in proper time. *"காலத் தால் தக்க தறிவதாந் தூது."(குறள்,686).* 2.காலம் புலர; early, betimes. *"காலத்தாற் கொண் டுய்ம்மின்"(நாலடி,20.).*

[காலம் + அத்து + ஆல்.]

காலத்தாலணையும்பெயர் *kālattāl-aṇaiyum-peyar*, பெ.(n.) பருவ முதலிய காலங்களா லணையும் பெயர் (எ.டு.) வேனிலான்; proper name based on the names of seasons etc.,

[காலத்தால் + அணையும் + பெயர்.]

காலத்தாலே *kālattālē*, கு.வி.எ.(adv.) காலையில்; in the morning. காலத்தாலே வாருங்கள் (இ.வ.).

[காலம் + அத்து + ஆல் + ஏ. காலம் = புலர்காலம், புலர்காலை. 'அத்து'– சாரியை. ஆல் – மூன்றன் உருபு. ஏ – பிரிநிலை ஏகாரம்.]

காலத்தாலே என்னும் சொல் பார்ப்பனர் நாவில் கார்த்தாலே எனத்திரிந்தது. இக்கொச்சை வழக்கு விலக்கத்தக்கது. இது போன்ற காத்தாலே என்னும் பொதுமக்கள் கொச்சைவழக்கும் கடியத்தக்கது.

காலத்தாழ்வு *kāla-t-tāḻvu*, பெ.(n.) காலக்கழிவு; delay, loss of time.

மறுவ. காலச்சுணக்கம், தடைவு.

தெ. காலயாபநமு

[காலம் + தாழ்வு.]

காலத்திரயம் *kāla-t-tirayam*, பெ.(n.) இறப்பு நிகழ்வு, எதிர்வு என்னும் மூவகைக் காலம்; three fold division of time.

Skt. *kālatraya*

[காலம் + திரயம்.]

வ. த்ரியம்(மூன்று) > த. திரயம். ***முக்காலம்*** பார்க்க; see *mukkālam*.

காலத்தீ *kāla-t-tī*, பெ.(n.) ஊழித்தீ; destructive fire that is believed to prevail at the dissolution of the universe.

[காலம் + தீ. காலத்தீ – காலமுடிவில்(ஊழிக்கால முடிவில்) அனைத்தையும் அழிக்கும் தீ.]

காலத்தேவை *kāla-t-tēvai*, பெ.(n.) பழைய வரிவகை (புதுக்கல்.399); an ancient tax.

[காலம் + தேவை.]

வேளாண்மைப் பருவகாலங்களில் அறுவடை முதலிய கூலித் தொழிலுக்குப் பணியாளரை மற்றொரு ஊரார் பணிக்கு அழைப்பதற்காக அவ்வூர்த் தலைவர்க்கோ, ஊரவைக்கோ செலுத்திய வரியாகலாம்.

காலதண்டம் *kāla-taṇḍam,* பெ.(n.) காலனின் தண்டாயுதம்; Yama's staff. *"காலதண்டஞ் சுழற்றி" (உபதேசகா. சிவபுண்ய.222.).*

[காலன் + தண்டம்.]

காலதர் *kāl-adar,* பெ.(n.) சாளரம்; window, as an air passage. *"காலதர் மாளிகை" (சிலம்பு:5, 8.).*

[கால் + அதர். கால் = காற்று. அதர் = வழி. காலதர் = காற்று வரும் வழி.]

காலதாமதம் *kāla-t āmadam,* பெ.(n.) ***காலத் தாழ்வு*** பார்க்க; see *kāla-t-tāḻvu.*

[காலம் + தாமதம்.]

காலதிண்டுகம் *kāla-tiṇḍugam,* பெ.(n.) கருங்காலி; a black variety of ebony (சா.அக.).

[காலம் + திண்டுகம்.]

காலதீமை *kāla-tīmai,* பெ.(n.) காலக்கொடுமை; effect of bad time.

[காலம் + தீமை.]

காலதுரிதம் *kāla-turidam,* பெ.(n.) ***காலவிரைவு*** பார்க்க; see *kāla-viraivu.*

[காலம் + துரிதம்.]

Skt. drita > த. துரிதம்.

காலந்தள்ளு-தல் *kālan-taḷḷu-,* 5 செ.குன்றாவி. (v.i.) 1. உழைத்து வாழ்தல்; to pass one's days, maintain oneself. *"பிச்சைவேண்டிக்... காலந் தள்ளாமல்." (தனிப்பா.i:396.7).* 2. காலந்தாழ்தல்; to delay. 3. வீண்காலம் போக்குதல்; to waste time.

[காலம் + தள்ளு.]

காலந்தாழ்த்து-தல் *kālan-tāḻttu-,* 5 செ.கு.வி. (v.i.) காலத்தாழ்வு செய்தல்; to make delay.

[காலம் + தாழ்த்து.]

காலந்தோறும் *kālandōṟum,* வி.எ.(adv.) உரிய காலங்களில், எப்பொழுதும் ; ateverypropertime,at alltimes,timeaftertime.

ம. காலந்தோறும்

[காலம் + தோறும்.]

காலநியமம் *kāla-niyamam,* பெ.(n.) ***காலக்கடன்*** பார்க்க ; see *kāla-k-kaḍan.*

ம. காலநியமம்

[காலம் + நியமம்.]

காலநுட்பம் *kāla-nuṭbam,* பெ.(n.) காலத்தின் நுண்ணிய பகுதி; a moment of time.

[காலம் + நுட்பம்.]

காலநெடுமை *kāla-neḍumai,* பெ.(n.) காலநீட்டிப்பு; delay.

[காலம் + நெடுமை.]

காலநேமி *kāla-nēmi,* பெ.(n.) 1. காலவட்டம்; the wheel of time. *"காலநேமிப் பிரமையிற் றிரிவன்" (கைவல்ய. தத். 19).* 2.திருமாலாற் கொல்லப்பட்ட ஓர் அரசன்; an asura slain by Visṇu. *"காலநேமி காலனே" (திவ். திருச்சந்.31).*

[காலன் + நேமி.]

காலநேரம் *kāla-nēram,* பெ.(n.) 1. ஒருவருடைய நலந் தீங்கிற்குக் காரணமாகக் கணியத்தின்படி கொள்பயன்(வின்.); time with reference to the influence of planets upon one's fortune or health. 2. வினையாற்றுதற்குரிய சூழலமைந்த நேரம்; appropriate time for action.

ம. காலவேல

[காலம் + நேரம்.]

காலநோக்காடு *kāla-nōkkāḍu,* பெ. (n.) பெண்களுக்குக் கருமுதிரும் காலத்திற் காணும் வயிற்றுவலி; pain in the uterus or its adjacent parts due to the pressure exerted by the distended womb during the progressive period of pregnancy (சா.அக.).

[காலம் + நோக்காடு.]

காலநோய் *kāla-nōy,* பெ.(n.) தட்பவெப்ப நிலையையும், பருவகாலங்களையும் பற்றாகக் கொண்டு ஏற்படும் நோய்கள்; diseases of periodical type brought about by the variation of atmospheric heat or humidity with the change of seasons or other climatic conditions (சா.அக.).

[காலம் + நோய்.]

காலப்படிகம் *kāla-p-paḍigam,* பெ. (n.) 1. கருப்புப் படிகக்கல்; black crystal. 2. காசுமீரக்கல்; Kashmir stone(சா.அக.).

[காலம் + படிகம்.]

காலப்பண் *kāla-p-paṇ,* பெ.(n.) அவ்வக் காலத்திற்கு உரிய பண்; mode appropriate to a particular time.

[காலம் + பண். காலம் = பொழுது. பொழுதுக்கேற்பப் பாடுதற்காக வகைசெய்யப்பட்ட தமிழ்ப்பண்கள்.]

காலப்பயிர் *kāla-p-payir,* பெ.(n.) பருவத்தில் விளையும் பயிர்; lit.,seasonal crop, wet-season crop,opp.to kōḍai-p-payir.

[காலம் + பயிர். காலம் = பருவம்.]

காலப்பழக்கம் *kāla-p-paḻakkam,* பெ. (n.) 1. பழமையான பழக்கவழக்கம்; time-honoured usage. 2. நாட்பட்ட பழக்கம்; long-standing habit, or practice.

ம.காலப்பழக்கம்

[காலம் + பழக்கம். காலம் = பழமை.]

காலப்பாடு *kāla-pāḍu,* பெ.(n.) காலநிலைமை; condition of the times. *"கள்ளமில் காலப் பாடும் கருமமுங் கருதே னாகில்" (கம்பரா. உத்த. இராவணன் வதை.7).*

[காலம் + பாடு. படுதல் = உண்டாதல், படு → பாடு = உண்டாகும் நிலைமை.]

காலப்பூ *kāla-p-pū,* பெ.(n.) நன்னாரி; Indian sarsaparilla (சா.அக.).

[காலம் + பூ.]

காலப்பூப்பு *kāla-p-pūppu,* பெ.(n.) பெண்கள் சரியான அகவையில் பருவமடைதல்; maturity of girls at their proper age.(சா.அக.).

[காலம் + பூப்பு.]

காலப்பெயர் *kāla-p-peyar,* பெ.(n.) 1. காலத்தைக் குறிக்கும் பெயர்ச் சொல் (நன்.290); noun denoting time, as சித்திரை 2. காலத்தினடியாக வந்த பெயர்(நன்.132, உரை.); name derived from a noun denoting time, as ஆதிரையான்.

[காலம் + பெயர் – காலப்பெயர். காலம் உணர்த்தும் சொல்லால் பெற்ற பெயர்.]

காலப்பொல்லாங்கு *kāla-p-pollāṅgu,* பெ.(n.) கெட்ட காலம் (இ.வ.); evil times, hard times.

[காலம் + பொல்லாங்கு. பொல்லாங்கு = தீமை,கேடு.]

காலப்போக்கு *kāla-p-pōkku,* பெ.(n.) **காலப்பாடு** (மீனாட்.சரித்.ii, 160.) பார்க்க; see *kāla-p-pāḍu.*

[காலம் + போக்கு.]

காலபடர் *kāla-paḍar,* பெ.(n.) காலதூதர்; Yama's messengers. *"காலப் படரெனப் படரிற் பட்டார்" (திருவிளை. யானையெய்.32).*

[காலன் + படர். படை → படையன் → படையர் → படர் = படையாள், படைமறவர்.]

காலபரணம் *kāla-paraṇam,* பெ.(n.) தகரை என்னும் மூலிகை; ringworm plant (சா.அக.).

மறுவ. காலபர்ணம்

[காலம் + பரணம்.]

காலபரணி *kāla-paraṇi,* பெ.(n.) 1. நந்தியாவட்டம்; common wax flower. 2. கருந்தாளி; a dark kind of Ipomaea (சா.அக.).

[காலம் + பரணி.]

காலபரிபாகம் *kāla-pari-pāgam,* பெ.(n.) காலத்தின் பக்குவநிலை; fairness of time.

[காலம் + பரி + பாகம். பரி = வளைவு, முழுமை. பாகம் = பக்குவப்படுதல். பரிபாகம் = முற்றும் பக்குவப்பட்ட நிலை.]

காலபலன் *kāla-palaṉ,* பெ.(n.) காலநிகழ்ச்சி; events good or bad occurring in one's life time. (சா.அக.)

[காலம் + பலன்.]

காலபாசம் *kāla-pāšam,* பெ.(n.) கயிற்றின் வடிவான காலன் கைக்கருவி; Yama's noose, as an instrument of death.

[காலன் + பாசம். பாந்தள் = கயிறு. பாந்தள் → பாந்தன் → பாத்தம் → பாசம். (கொ.வ.).]

காலபுருடன் *kāla-puruḍaṉ,* பெ.(n.) சமயத்திற் கேற்ப ஒழுகுபவன்; time-server. இது காலபுருடர் நட்புத் தீதென்றது (குறள்,819,மணக்.)

[காலம் + புருடன்.]

Skt puruša > த. புருடன் (ஆண்).

காலபூதம் *kāla-pūdam,* பெ.(n.) கோழி; fowl. (சா.அக.).

[காலம் + பூதம் – கால பூதம் = காலத்தை அறிவிப்பது. பூதம் = தோன்றுதல், தோன்றச் செய்தல், அறிவித்தல்.]

காலபேதம் *kāla-bēdam,* பெ.(n.) நற்காலம் மாறிய நிலை; change of times, mostly for the worse. அவனுடைய காலபேதத்தாலே இப்படி நேர்ந்தது.

[காலம் + பேதம் Skt. bedai > த. பேதம் வேறு → வேறி → வேதி → பேதி → பேதம். த. வேறி → வேதி > Skt.bedai.*]*

காலபைரவர் *kāla-pairavar,* பெ.(n.) ***காலவயிரவர்*** பார்க்க; see *kāla-vayiravar.*

[காலம் + பைரவர்.]

த. வயிரவர் > Skt. Bairava.

காலபோகம் *kāla-pōgam,* பெ.(n.) 1. பருவத்திற் குரிய பயிர், கனி முதலிய நிலைத்திணை விளைச்சல்; crop of grain fruit, etc., proper to a season. 2. வினை கொண்டு இன்பதுன்பக் காலப் பயனை நுகர்கை (வின்.); enjoyment or suffering at the destined time, resulting from the actions of previous birth.

[காலம் + போகம். பாகம் → போகம் (கொ.வ.).]

பாகு → பாகம் (பக்குவப்பட்ட நிலை). வடமொழியாளர் 'புஜ்' என்பதனடியாக புஜ் → போஜ் → போக என மூலம் காட்டுவது பொருந்தாது. பயிர் விளைச்சலும் வினைப்பயனும் பக்குவப்படுதலன்றி உண்பதோ நுகர்வதோ ஆகா. இயற்கையில் விளைந்த அத்தனையும் உண்ணுதற் குரியனவல்ல.

காலம் *kālam,* பெ.(n.) 1. காலைப்பொழுது; time, duration. *"காலம் உலகம் உயிரே உடம்பே" (தொல்.கிளவி.58).* 2. விடியற்காலம்; dawn. அவர் காலத்தாலே எழுந்து போய்விட்டார் (ஆம்பூர் வழக்கு). *"காலமே தேவனைத் தேடு" (வே.சா.).* 3. தக்க நேரம்; proper time. *"காலங் கருதி இருப்பர் கலங்காது ஞாலங் கருது பவர்" (குறள், 485).* 4. நற்காலம்; fortune. தமிழுக்கு இன்னும் நற்காலம் வரவில்லை (உ.வ.). 5. குறித்த காலம்; fixed time. அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது. (இறை.1.உரை). 6. *தீக்காலம்,* கேடுகாலம்; evil times. அவனுக்கும் ஒரு காலம் வரும் (உ.வ.). 7. இளமைக் காலம்; early stage of life. சென்றது காலம், சிதைந்த திளமை நலம்" (திருக்கருவை. வெண்.). 8. வாழ்நாள்; life time. மறைமலையடிகள் காலமுழுவதும் தமிழுக்கே பாடுபட்டார், அவர் காலமாகி விட்டார். 9. இறப்புக் காலம்; time of death. அவனுக்குக் காலம் நெருங்கிவிட்டது. 10. இளவேனில், முதுவேனில், கார், கூதல், முன்பனி, பின்பனி என்னும் அறுவகை இயற்கைக் காலம்; season of the year. 11. உழவுத் தொழிலுக்குச் சிறந்த மழைக் காலம் அல்லது கோடையல்லாக் காலம்; wet season. காலச் சோளம், காலக் கேழ்ப்பை, காலப் பயிர் இவை முறையே கோடைச் சோளம், கோடைக் கேழ்ப்பை, கோடைப் பயிர் என்பவற்றிற்கு எதிர். 12. இறப்பு, நிகழ்வு, எதிர்வு

என்று இலக்கணங்கூறும் மூவகைத் தொடர்ச்சிக் காலம்;tense, three in number viz., past, present and future. 13. வெயில் மழை பனி என்னும் மூவகை இயற்கை வேறுபாட்டுக் காலம் (தொல்.புறத்.20. சோ.சு.பா.உரை). 14. சவுக்கம் (விளம்பம்), முடுக்கம் (துரிதம்), நடுப்பம் (மத்திமம்) என்னும் மூவகைப் பாட்டியக்கக் காலம்;tempo, a manure of time, three in number. 15. ஒரு முரலிற்கு (சுவரத்திற்கு) இருமாத்திரையும், ஒரு மாத்திரையும், அரைமாத்திரையும், கால் மாத்திரையும் எடுக்கும் முதற்காலம், இரண்டாங்காலம், மூன்றாங்காலம், நாலாங்காலம் என்னும் நால்வகை முரற் பயிற்சிக் காலம்; the element of time measure which speicifies duration being of term varieties. 16.கழகக் காலம், பிற்காலம் என்னும் கற்காலம், இரும்புக் காலம் என்னும் பல்வேறு வகையிற் பகுக்கப்படும் வரலாற்றூழிக் காலம்;historic period. 17. காலமெய்ப் பொருள்;the element time.

மறுவ. கால், பொழுது, வேளை, கொன், செவ்வி, அற்றம், ஏல்வை, சமையம், நேரம், ஞான்று, பதம், போழ்து, காலை, பாணி, போது, வேலை.

த. கால்→**வ.** கால

[கால் (நீட்சி) →காலம்.]

இடம் உண்மையின் இருத்தலின் தொடர்ச்சியே காலம். அது ஒரே தன்மையது. அழியும் பொருள்களை நோக்கியே இறப்பு நிகழ்வெதிர்வு என்றும், கதிரவன் திங்கள் தோற்ற மறைவும் தட்ப வெப்ப நிலை வேறுபாடும் பற்றியே சிறுபொழுதும் பெரும்பொழுதுமாகவும் அது பகுக்கப்படும். எதிர்வெல்லாம் நிகழ்வாகிப் பின்பு இறப்பாகிவிடும் (தமிழர் மதம் பக்.108).

சமற்கிருத ஆங்கில அகரமுதலி தொகுத்த மானியர் உவில்லியம்சு தென்சொல்லை வடசொல்லாகக் காட்டும் கலையிலும், அதற்கேற்றவாறு பொருந்தப் பொய்த்தலிலும் வடமொழியாளரை விஞ்சும் வகையில், வடமொழித் தாது பாடத்தில் (Dhatupatha) உள்ளவாறு kal to sound, to count என்று எடுத்துக் கூறி of L.Calculo என்று இனமொழிச் சொல்லோடு ஒப்பு நோக்கிச் சொல்கின்றார். ஒலித்தலுக்கும் எண்ணுதல் அல்லது கணக்கிடு தலுக்கும் யாதொரு தொடர்புமில்லை.

Calculus என்பது சிறுகல் என்று பொருள்படும் இலத்தீன் சொல். பண்டைக் காலத்திற் சிறு கூழாங்கற்களைக் கொண்டு எண்ணிப் பழகியதனால், calculate என்னும் வினைச்சொல் தோன்றிற்று. L. Calx கல். Gk. khalis. L. Culus என்பது சிறுமைப் பொருளீறு (dim.suf). இஃது எல்லா ஆங்கில அகர முதலிகளிலும் கூறப்பட்டுள்ளது. ஆகவே, காலம் என்னும் சொல்லிற்கு calculate என்னுஞ் சொல் மூலமாகாது.

கூழாங்கற்களைக் கொண்டு எண்ணிப் பழகிய காலத்தில் கணிக்கப்பட்டவை, காய்கறிகளும் காசும் போன்ற காட்சிப் பொருள்களேயன்றி, காலமும் நாளும் போன்ற கருத்துப் பொருள்களல்ல.

தமிழிற்போல், கால், காலை என்ற சொற்கள் வடமொழியில் இல்லை. இவ்விரு சொற் போன்றே காலம் என்னும் சொல்லும் தமிழில் அடிப்படைச் சொல்லாகத் தோன்றுதொட்டு இருவகை வழக்கிலும் வழங்கி வருகின்றது (கால் →காலம். ஒ.நோ. வால் →வாலம்).

உலக வழக்கு: காலக் கொடுமை, காலங்கண்டவன், காலங்கடத்தல், காலங்கடத்துதல், காலங்கழிதல், காலங்கழித்தல், காலங்காட்டி, காலங் காலத்தாலே, காலங்கிட்டுதல், காலங்கூடுதல், காலங்கூடி வருதல், காலங்கெடுதல், காலஞ்செய்தல், காலஞ்செல்லுதல், காலஞ்சொல்லி, காலத்தாலே, காலத்தின் கோலம், காலந்தள்ளுதல், காலந்தாழ்தல், காலந்தாழ்த்தல், காலப் பயிர், காலம் பண்ணுதல், காலம் பார்த்தல், காலம் பெற, காலம் போதல், காலம் போக்குதல், காலமல்லாக்காலம், காலமழை, காலமறிதல், காலமாதல், காலம் மாறுதல், காலமெல்லாம், கால வரம்பு, காலவரையறை, கால வழக்கம்.

அந்தக்காலம், இந்தக்காலம், எந்தக்காலம், ஆங்காலம், போங்காலம், வருங்காலம், ஆயிரங்காலத்துப் பயிர், ஊறுகாலம், நல்லகாலம், கெட்டகாலம், கேடுகாலம், நீண்டகாலம், பஞ்சகாலம், பனிக்காலம், பேறுகாலம், போனகாலம், வந்தகாலம், மழைகாலம், வெயிற்காலம்.

பழமொழிகள்:

1. காலஞ் செய்கிறது ஞாலஞ் செய்யாது. 2. காலத்திற் கேற்ற கோலம். 3. காலத்திற் கேற்றபடி பெருச்சாளி காவடியெடுத் தாடினதாம். 4.காலமல்லாக் காலத்திற் காய்த்ததாம் பேய்ச்சுரைக்காய். 5. காலமறிந்து ஞாலம் ஒழுகு. 6. காலமறிந்து பிழையாதவன் வாலறுந்த குரங்காவான். 7. காலம்போம் சொல் நிற்கும், கப்பல் போம் துறை நிற்கும். 8. காலம்போன காலத்தில் மூலம் வந்து குறுக்கிட்டது.

மரபுக்கூற்று : காலமெல்லாம் பாடுபட்டும் கையில் கால் துட்டைக் காணோம் - செய்யுள் வழக்கு (இலக்கணம்). இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், முக்காலம், காலப்பெயர், கால மயக்கம், கால மலைவு, காலவழு, கால வழுவமைதி, காலவாகு பெயர், கால விடைநிலை.

தொல்காப்பிய நூற்பாக்கள் :

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்

(தொல்.வினை.1).

காலந் தாமே மூன்றென மொழிப

(தொல்.வினை 2).

இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமுங் குறிபொடுங் கொள்ளும்
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே

(தொல்.வினை 3).

குறிப்பினும் வினையினும் நெறிபடத் தோன்றிக்
காலமொடு வருஉம் வினைச்சொ லெல்லாம்
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன வுரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே

(தொல்.வினை 4).

மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப

(தொல்.வினை 10).

அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானும்
....
அப்பால் காலங் குறிப்பொடு தோன்றும்

(தொல்.வினை 16).

அன்மையின் இன்மையின் உண்மையின்
வன்மையின்
....

(தொல்.வினை 17)

என்ன கிளைவியுங் குறிப்பே காலம்
"...காலக்கிளவியுயர்திணை மருங்கில்..."

(தொல்.வினை 18).

"... காலக் கிளவி யஃறிணை மருங்கில்..."

(தொல்.வினை 24).

"அன்ன மரபின் காலங் கண்ணிய..."

(தொல். வினை 32).

நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
....
செய்யும் செய்த என்னுஞ் சொல்லே

(தொல்.வினை 32).

செய்தென் எச்சத் திறந்த காலம்
எய்திடன் உடைத்தே வாராக் காலம்

(தொல்.வினை 37).

முந்நிலைக் காலமுந் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும்

(தொல்.வினை 42).

வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்க வருஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்.
"... செய்வதில்வழி நிகழுங் காலத்து ..."

(தொல்.வினை 45)

"வாராக் காலத்து வினைச்சொற் கிளவி..."

(தொல்.வினை 48).

"இறப்பே எதிர்வே ஆயிரு காலமும் ..."

(தொல்.வினை 50).

எனைக் காலமும் மயங்குதல் வரையார்

(தொல்.வினை 51).

தொல்காப்பியம் கி.மு. 6-ஆம் அல்லது 7-ஆம் நூற்றாண்டில் தோன்றியதாயினும் "மொழிப", "என்ப", என்மனார் புலவர்", "வரையார்" என்னும் ஆசிரியர் கூற்றுக்களாலும்,

"செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்

புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்" என்னும் பனம்பாரனார் கூற்றாலும், அதில் (தொல்காப்பியத்தில்) கூறப்பட்டுள்ள பண்டை இலக்கணமெல்லாம் தலைக்கழகக் காலத்தின வென்றும், இந்திய ஆரியரின் முதல் நூலாகிய இருக்கு வேதத்திற்கு முற்பட்டதும், வேத ஆரியரின் முன்னோர் இந்தியாவிற்கு வருவதற்கும் முந்தியதுமான, முதுபழந் தொன்மையானவென்றும், தெற்றெனத் தெரிந்து கொள்க.

இதுகாறுங் கூறிய இருவகை வழக்குச் சொற்களே போதுமாதலின் இலக்கணமல்லாத செய்யுட் சொற்கள் இங்குக் காட்டப்படவில்லை.

இருபத்தாறு செய்யுளுறுப்புக்களைக் கூறும் செய்யுளியல் முதல் நூற்பாவில், "கேட்போர் களனே காலவகை எனாஅ" என்று தொல்காப்பியர் கூறியிருப்பதை ஊன்றி நோக்குக (செல்வி. மார்ச், 78 பக்.881-882).

காலம்பண்ணிப்போ-தல் *kālam-paṇṇi-p-pō-*, 8 செ.கு.வி.(v.i.) ***காலம்பண்ணு-*** (வின்.) பார்க்க; see *kālam-paṇṇu-*

[காலம் + பண்ணி +போ.]

காலம்பண்ணு-தல் *kālam-paṇṇu-*, 11 செ.கு.வி. (v.i.) வாழ்நாள் முடிதல் (வின்.); to live out one's time,to die.

மறுவ. காலஞ்செல், காலஞ்செய், காலமாகு, காலம் அடை.

[காலம் + பண்ணு. பண்ணுதல் - செய்தல், முடித்தல்.]

காலம்பார்-த்தல் *kālam-pār-*, 4. செ.கு.வி. (v.i.) 1.நேரம் பார்த்தல்; to look out for a suitable time, watch for an opportunity *(கம்பரா. ஊர்தே.222).* 2. ஒருவனது இறுதிக்காலத்தைக் கணக்கிடுதல்; to calculate the time of death. *"காலனுங் காலம் பார்க்கும்" (புறநா.41).*

[காலம் +பார்.]

காலம்பிறக்கக் காட்டியும் *kālam-pirrakkak kāṭṭiyam*, வி.எ.(adv.) விடிவதற்கு முன் (கொ.வ.); before dawn (சா.அக.).

[காலம் + பிறக்கம் + காட்டியும். பிறக்கும் → பிறக்கம்.]

காலம்புரளல் *kālam-puraḷḷal* பெ.(n.) காலம் வேற்றுமைப்படல்; change of times to worse.

காலம்பெற *kālam-peṟa*, கு.வி.எ. (adv.) 1. தக்க காலத்தில்; at the right time. *"காலம் பெற வென்னைக் காட்டுமின்கள்" (திவ்.திருவாய்.7.3:6).* 2. விடியற்காலையில்; early in the morning *"காலம் பெறநீறணி மாமுனி" (கோயிற்பு வியா.15).*

[காலம் + பெற.]

காலம்போக்கு-தல் *kālam-pōkku-*, 5. செ.கு.வி. (v.i.)காலங்கழித்தல்; to spend time.

ம. காலம்போக்குக

[காலம் + போக்கு.]

காலம்மாறு-தல் *kālam-māru-,-*, 5. செ.கு.வி. (v.i.) பருவம் மாறுதல்; change of season (சா.அக.).

[காலம் + மாறு.]

காலம்விடு-தல் *kālamviḍudal*, 18 செ.குன்றாவி (v.t.) நாள்விடுதல்; to leave out.

[காலம் + விடு.]

காலமடை-தல் *kālam-aḍai-*, 4 செ.கு.வி (v.i.) இறத்தல்; to die as reaching the end of one's time.

[காலம் + அடை.]

காலமயக்கம் *kāla-mayakkam*, பெ.(n.) காலவழுவமைதி (புறநா.138,உரை); deviation in the use of tense sanctioned by usage.

[காலம் + மயக்கம்.]

காலமயக்கு *kāla-mayakku*, பெ. (n.) 1. ***காலமயக்கம்*** பார்க்க; see *kāla-mayakkam*. 2. பிரிந்த தலைவன் வருதற்குரிய கார்காலம் இஃதன்றெனத் தலைவிக்குத் தோழி காலத்தை மயக்கிக் கூறும் அகத்துறை (திவ்.இயற்.திரு விருத்.7, பெரியவாச்.); theme of a confidante convincing the heroine that the winter season when her lord should return has not arrived, though it is actually otherwise.

[காலம் + மயக்கு.]

காலமல்லாக்காலம் *kālam-allā-k-kālam,* பெ.(n.) அகாலம்; unseasonable, improper time. காலமல்லாக்காலத்தில் காய்ச்சுதாம் பேய்ச்சுரைக் காய் (பழ.).

ம. காலமல்லாக்காலம்

[காலம் + அல்லா + காலம். அல்லாத → அல்லா (ஈ.கெ.எ.ம.பெ.எ.).]

காலமல்லிகை *kāla-malligai,* பெ.(n.) துளசி; holy basil.

மறுவ. கறுப்பு மல்லிகை

[காலம் +, மல்லிகை.]

காலமலைவு *kāla-malaivu,* பெ.(n.) ஒரு காலத்துக் குரியதை மற்றொரு காலத்துக் குரியதாகக் கூறும் வழு (தண்டி.117,உரை.); mistake in regard to time as in the statement that the lotus blooms at night.

[காலம் + மலைவு. காலமலைவு, ஈறு போதல் என்பதற்கேற்ப ஈற்று மகரமெய் கெட்டது.]

காலமழை *kāla-malai,* பெ.(n.) பருவமழை; seasonal rain.

[காலம் + மழை - காலமழை. ஈறு போதல் என்பதற்கேற்ப ஈற்று மகரமெய் கெட்டது.]

காலமறி¹-தல் *kālam-ari-,* 2 செ.கு.வி.(v.i.) 1. வினைசெயற்கேற்ற காலத்தையறிதல்; to ascertain the time suitable for the accomplishment of one's object. *"கருவியாற் கால மறிந்து செயின்" (குறள்,483).* 2. முக்காலத்தும் நிகழ்வனவற்றைத் தமது சிறப்பு ஆற்றலால் அறிதல்; to know of events past, present or future, intuitively or by spiritual vision, as yogis.

[காலம் + அறி.]

காலமறி²-தல் *kālam-ari-,* 2 செ.கு.வி.(v.i.) பருவமடைதல்; attainment of puberty (சா.அக.).

[காலம் + அறி.] •

காலமா-தல் *kālam-ā-,* 6.செ.கு.வி.(v.i.) *காலமாகு-தல்* பார்க்க; see *kālam-āgu-.*

Fin. kalma (death), kalmisto (cemetery); **Karel.** kalma; **Es.** kalm; **Jap.** karu.

[காலம் + ஆ(கு) - காலமாகு → காலமா.]

காலமாகு-தல் *kālam-āgu-,* 6 செ.கு.வி.(v.i.) வாழ்நாள் முடிந்ததால் இறந்துபோதல்; to pass away, as having one's life time spent out.

மறுவ. காலம்அடை, காலம் செய், காலம் பண்ணு, காலம்செல், காலம் ஆ(தல்),

[காலம் + ஆகு. காலம் = வாழ்நாட்காலம். ஆகுதல் = தீர்தல், முடிதல்.]

காலமாறு *kāla-māru,* கு.வி.எ.(adv.) காலை தோறும் (வின்.); every morning.

[காலை + மாறு - காலைமாறு → காலமாறு. மாறு மாறிவரும் அல்லது மறித்து வரும் நிலை.]

காலமாறுபாடு *kāla-māru-pādu,* பெ.(n.) 1. கால வேறுபாடு; change of circumstances. 2. தீய காலம்; times of misfortune.

[காலம் + மாறுபாடு.]

காலமானம் *kāla-mānam,* பெ.(n.) கால அளவு; measure of time.

ம. காலமானம்; து. காலமான

[காலம் + மானம். மானம் = அளவு.]

காலமுகம் *kāla-mugam,* பெ.(n.) 1. கருப்பு முகம்; black - face. 2. கருங்குரங்கு; black faced monkey (சா.அக.).

[காள் → காளம் → காலம் + முகம். காளம் = கருப்பு.]

காலமுணர்ந்தோன் *kālamunarndōn,* பெ.(n.) முக்காலங்களையும் உணரும் திறமுள்ளவன்; one to whom the past, present and future are equally manifest

ம. காலவேதி

[காலம் + உணர்ந்தோன்.]

காலமுன் *kāla-muṉ*, பெ.(n.) காலத்தால் முற்பட்டது; priority in point of time. கால முன்னாகச் சொல்லார், இடமுன்னாகச் சொல்லுவர் (தொல்.சொல்.279, இளம்பூ.).

காலமூர்த்தி *kāla-mūrtti*, பெ.(n.) இதளியம்; quick-silver (சா.அக.).

[காலம் + மூர்த்தி.]

காலமூலம் *kāla-mūlam*, பெ.(n.) 1. கருப்புச் சித்திரமூலம் என்னும் மூலிகை; a black variety of lead wort (சா.அக.).

[காலம் + மூலம்.]

காலல் *kālal*, பெ.(n.) 1. கொப்புளித்தல்; blistering. 2. கொப்புளமெழும்பல்; rising in blisters (சா.அக.).

[கால் → காலல்.]

காலலம்பு-தல் *kāl-alambu-*, 5 செ.கு.வி (v.i.); 1. கால்கழுவுதல்; to wash one's feet. 2. கால் கழுவுதல் (மலம் கழுவுதல்)to wash after stools.

[கால் + அலம்பு.]

காலவகை *kāla-vagai*, பெ.(n.) 1. காலக்கூறு; times, seasons. 2.காலவேறுபாடு; circumstances depending on time. ``*வழுவல கால வகை யினானே*''*(நன்.462).*

[காலம்' + வகை.]

வகைகள் :

நிமிடம், காட்டை, கலை, முகூர்த்தம், சாமம், பகல், இரவு, நாள், வாரம், பட்சம், மாதம், இருது, அயனம், வருடம், சந்தி, அம்சம், சந்திவூழி, சதுர்வூழி, மகாவூழி, பிரளயம், கற்பம், பரார்த்தம், பரம் என இருபத்து மூன்று வகைகள் என்பர்.

காலவட்டம் *kāla-vaṭṭam*, பெ.(n.) 1. கோள்கள் சுழன்று வருதற்குரிய மண்டலம்; sphere in which planets move. 2.கோள்நிலையால் ஒருவனுக்கு உண்டாகும் பலன்; the influence of planets on one's life at different periods. 3. விடாது சுழன்றுவரும் காலம்; cycle of time, whirling of time.

[காலம் + வட்டம்.]

காலவம் *kālavam*, பெ.(n.) நெருப்பு (அக.நி.); fire.

[கனல் → கால் → காலுதல் = எரிதல். கால் → காலுவம் → காலவம்.]

காலவயிரவர் *kāla-vayiravar*, பெ.(n.) 1. சிவ மூர்த்தங்களுள் ஒன்று (காஞ்சிப். சிவபுண். 34); a manifestation of Siva.

[காலம் + வயிரவர்.]

காலவரையறை *kāla-varai-y-aṟai*, பெ.(n.) 1. காலம் அறுதியிடல்; fixing a time. 2.காலஅளவு; time-limit; specified period. 3.வரலாற்றுக் காலத்தை அறுதியிடல்; settlement of a historical date.

மறுவ. கால வரை.

[காலம் + வரை + அறை.]

காலவழக்கம் *kāla-vaḻakkam*, பெ.(n.) நடப்பு வழக்கமுறை; time-honoured usage.

[காலம் + வழக்கம்.]

காலவழு *kāla-vaḻu*, பெ. (n.) ஒரு காலச்சொல் தன்னோடு இயையாக் காலமொடு புணருங் குற்றம் (தொல். சொல். 11, சேனா); incorrect use of tense, as the past for the future.

[காலம் + வழு – காலவழு. ஈறுபோதல் என்பதற்கேற்ப நிலைமொழி ஈற்று மகரமெய் கெட்டது.]

காலத்தை முறைபிறழக்கூறுதல் (எ.டு.) நேற்றுண்பேன்.

காலவழுவமைதி *kāla-vaḻu-v-amaiti*, பெ.(n.) காலவழுவை இலக்கணமுடையதாக அமைப்பது (நன்.383); deviation in the use of tenses, sanctioned by usage.

[காலம் + வழு + அமைதி – காலவழுவமைதி. மகரமெய்

கெட்டது. வழுவமைதி எனபதில் வகரமெய் உடம்படு மெய்யாகத் தோன்றியது.]

(எ-டு.) மலை நிற்கின்றது, தெய்வமிருக்கின்றது- மலைக்கு நிற்றலும், தெய்வத்திற்கு இருத்தலும். முக்காலத்தினும் உள்ளனவாதல் காண்க. இவ்வாறு முக்காலத்திலும் ஒத்த இயல்புடைய பொருள்களை நிகழ்காலத்தால் கூறுவது காலவழுவமைதி.

காலவளவு *kālavaḷavu,* பெ.(n.) 1. காலத்தைக் குறிக்கும் அளவு; measure of time. 2.காலக்கட்டம்; a period or length of time.

ம. காலயளவு

[காலம் + அளவு]

காலவாகுபெயர் *kāla-v-āgu-peyar,* பெ.(n.) ஒரு காலத்தின் பெயர் அக்காலத்தோடு இயைபுடைய பொருளுக்கு ஆகிவருவது (நன்.390); noun literally signifying time or season used figuratively to denote anything connected therewith, as the month Karttigai for a plant which blossoms in the month. கார்த்திகை என்னும் மாதப் பெயர் அம்மாதத்தில் பூக்கும் கார்த்திகைப் பூவிற்கு ஆகி வந்தது. (கார்த்திகைப்பூ = காந்தள்.)

[காலம் + ஆகுபெயர் – காலவாகுபெயர். நிலை மொழியீற்று மகர மெய் கெட்டு வகர உடம்படுமெய் தோன்றியது.]

எ–டு. காரறுத்தது, கார்த்திகை மாதம்.

காலவிடைநிலை *kāla-v-iḍai-nilai,* பெ.(n.) காலத்தைக்காட்டும் இடைநிலை; tense - sign.

[காலம் + இடை + நிலை – காலவிடைநிலை. நிலைமொழியீற்று மகரமெய் கெட்டு வகர உடம்படுமெய் தோன்றியது.]

காலவித்தியாசம் *kāla-vitiyā-šam,* பெ.(n.) ***கால வேறுபாடு*** பார்க்க; see *kāla-vēṟupāḍu.* என் காலவித்தியாசம் துன்பப்படுகிறேன் (உ.வ.).

Skt. vityasa > த. வித்தியாசம்.

[காலம் + வித்தியாசம்.]

காலவிதி *kāla-vidi,* பெ.(n.) தீவினை(உ.வ.); misfortune.

[காலம் + விதி – காலவிதி. நிலைமொழியீற்று மகரமெய் கெட்டது.]

காலவிரயம் *kāla-virayam,* பெ. (n.) ***காலவிழப்பு*** பார்க்க; *kāla-viḷappu.*

[காலம் + விரயம்.]

காலவிருத்தி *kāla-virutti,* பெ.(n.) கழற்கொடி என்னும் மூலிகை; bonduc nut creeper.

மறுவ. கழற்சிக்கொடி.

[காலம் + விருத்தி.]

காலவிரைவு *kāla-viraivu,* பெ.(n.) 1. காலத்தின் வேகம்; rapid flux of time. 2. வேகம்; quickness.

மறுவ. காலதுரிதம்.

[காலம் + விரைவு.]

காலவிழப்பு *kāla-viḷappu,* பெ.(n.) ஒரு பயனுமில்லாமல் வீணேகாலம் போகை; waste of time.

[காலம் + இழப்பு.]

காலவெள்ளெழுத்து *kāla-veḷḷeḻuttu,* பெ.(n.) குறிப்பிட்ட காலத்தில் உண்டாகும் பார்வைக் குறைபாடு; defective sight which generally occurs above the age of 37, presbyopia (சா.அக.).

[காலம் + வெள்ளெழுத்து.]

காலவேகம் *kāla-vēgam,* பெ.(n.) காலத்தின் நிலை; state of time.

மறுவ. காயவேட்டம்

[காலம் + வேகம்.]

காலவேறுபாடு *kāla-vēṟu-pāḍu,* பெ.(n.) காலப்போக்கு பார்க்க; see *kāla-p-pākku.*

[காலம் + வேறுபாடு.]

காலவைரவன் *kāla-vairavan*, பெ.(n.) பைரவ மூர்த்தி; a form of Bhairava.

[காலம் + வைரவன்.]

காலளப்பான் *kāl-aḷappān*, பெ.(n.) தவசமளப் போன்; one who measures grain with a mara-k-kal. *'காலளப்பானுக்குத் திருக்கொட்டாரத்திலே காலளவும் பெரிய கோவிலுக்கு அமுதுபடி யெடுக்கிறது' (கோயிலோ.90).*

[கால்1 + அளப்பான்.]

கால் -மரக்கால் என்னும் முகத்தல் அளவை

காலளவு *kāl-aḷavu*, பெ.(n.) நாலில் ஒரு பங்கு; one fourth of anything (சா.அக.).

ம. காலளவு

[கால் + அளவு.]

காலளவுகொள் கூலி *kā-laḷ-avu-koḷkūli*, பெ. (n.) ஊர்ப்பொது மரக்காலாக ஊர் அவையாரிடத்து இருக்கும் மரக்காலை, மக்களோ, வணிகரோ நெல்லளப்பித்துக் கொள்வதற்கு அவையார் பெறும் கூலி–வரிக் காசு; a tax collected for using the measurement common to the village. 'குணமே நகைபுரத்துக் காலளவு கொள்கூலி உள்ளிட்ட அங்காடிப் பாட்டத்துக்கு வைக்கக் கடவ காசு நாற்பது'. (தெ.கல்.தொ.iv.கல்.223).

[கால் + அளவு + கொள் + கூலி.]

காலளவுப் பாட்டம் *kāl-aḷavu-p-pāṭṭam*, பெ.(n.) காலளவின் பேரில் வாங்கிய ஒரு பழைய வரி. (I.M.P.CG.1023); an ancient tax on kāl-aḷavu.

ம. காலளபாட்டம்

[கால் + அளவு + பாட்டம்.]

கால் - மரக்கால் என்னும் முகத்தல் அளவை. பாட்டம் நன்செய் நிலவரி.

காலற்றநாள் *kāl-aṟṟa-nāḷ*, பெ.(n.) ஆரல் (கார்த்திகை), மானேறு (உத்தரம்) கடைக்குளம் (உத்தராடம்) என்னும் மூன்று விண்மீன்கள் (சோதிடகிரக.40); the three naksatras Krttigai (v.i.) Uttaram, Uttrāḍamm.

[கால் + அற்ற + நாள்.]

வானத்து 27 நாண் மீன்களை மாதம் காண்பதற்காக பன்னிரண்டு ஓரை (ராசி)க் குழுக்களாக மேழம் விடை (மேழம் ரிஷபம் முதலியனவாக) எனப் பெயரிட்டு வகுத்த போது ஒரு குழுவில் 2¼ நாண்மீன்களை அடக்க நேர்ந்தது. மேற்கண்ட மூன்றும் காற்பகுதி நாண்மீன்களாக வகுபடாமல் நின்றதால் காலற்ற நாள் (நாள்- நாண்மீன்) எனப் பெயர் பெற்றன.

காலறு–தல் *kāl-aṟu-*, 20 செ.கு.வி. (v.i.) பிறங்கடை (சந்ததி) அற்றுப்போதல் (திருக்களிற்றுப். 97உரை); the become extinct as a family, lineage.

[கால் + அறு.]

காலறுவான் *kāl-aṟuvāṉ*, பெ. (n.) பிறங்கடை (சந்ததி) யற்றுப்போவான் என்று பொருள்படும் ஒரு வசைச்சொல்; a term of abuse meaning one whose line will become extinct. "எள்ளளவுங் கைக்கூலி தான் வாங்கிடுங் காலறுவான்" (தனிப்பா.i.108:47).

[கால் + அறுவான்.]

கால் = கால்வழி, கொடிவழி, அடுத்துவடும் தலைமுறை.

காலன்[1] *kālaṉ*, பெ.(n.) 1. எருமை, buffalo. 2. வழலையுப்பு; universal salt. (சா.அக.).

[கால் = கருமை. கால் + அன் – காலன் = கருமையானது.]

காலன்[2] *kālaṉ*, பெ.(n.) 1. காலத்தை முடிவு செய்யும், அல்லது கால முடிவில் வருங் கூற்றுவன் (யமன்) Yama. *"கால னென்னும் கண்ணிலி யுய்ப்ப"* (புறநா.240:5) 2. காலதூதர் (சீவக.1487,உரை) Yama's messenager. 3. காலன் கொடை ; gift made with a view to propitiate Yama. *"காலன்கொண்டு" (ஈடு.10.3:5)* 4. காரி, சனி; saturn. 5. கரந்துறை கோள்களுள் ஒன்று (வின்.); one of the unseen heavenly bodies. 6. ஒருவகை செய்நஞ்சு (மூ.அ); a mineral poison.

காலன் > வ. கால

ம. காலன்; து. கால.

[காலம் → காலன் (காலமறிந்து உயிர்களைக் கவர்பவன்).]

காலன்கொம்பு *kālankombu* பெ.(n.) மாட்டுக் கொம்பு (வின்.); ox horn.

[காளை → காலன் + கொம்பு (கொ.வ.).]

காலன்கொள்-(ளு)-தல் *kālan-kollu-*, 16 செ.கு.வி. (v.i.) கொடை வாங்குதல்; accept a gift made for the purpose of propitiating Yama to avert death. *"காலன்கொண்டு மோதிரமிடுவாரை போலே" (ஈடு,10.3:5).*

[காலன் + கொள்(ளு).]

காலனுண்ட கற்பம் *kālan-unda-karpam* பெ.(n.) நாகச் செய்நஞ்சு; a poisonous compound of zinc (சா.அக.).

[காலன் + உண்ட + கற்பம்.]

காலனூர் *kālan-ūr*, பெ.(n.) நிரயம் (நரகம்) (திவ்.திருச்சங்.அக); hell, the abode of Yama.

ம. காலனூர்

[காலன் + ஊர்.]

காலனையுதைத்தோன்[1] *kālanai-y-udaittōn*, பெ.(n.) ***காலக்கடவுள்*** பார்க்க; see *kāla-k-kadavul.*

[காலன் + ஐ + உதைத்தோன்.]

காலனையுதைத்தோன்[2] *kālanai-y-udaittōn*, பெ.(n.) சிவனார் வேம்பு என்னும் மூலிகை; Shiva's neem (சா.அக.).

[காலனை + உதைத்தோன்.]

காலனை வென்றோன் *kālanai-venrōn* பெ.(n.) ***காலனை உதைத்தோன்*** பார்க்க; see *kālanai udaittōn.* (சா.அக.).

[காலனை + வென்றோன்.]

காலா *kālā*, பெ.(n.) ஒருவகைக் கடல்மீன்; a sea fish called Indian sturgeon (சா.அக.).

ம. காலா

Fin.,Es. kala; Mong. kalimu; Jap. karei; Q. caiwa.

[காளன் → காலன் → காலா.]

காலா மீன்வகை நிறம் அல்லது நீட்சி குறித்து இப்பெயர் பெற்றிருக்கலாம். கால் = கருமை நீட்சி.

வகைகள் 1. பொலன் காலா. 2. தாழங் காலா. (தாழைக் காலா). 3. வரிக்காலா. 4. போலிக்காலா.



காலா

காலாகாலம் *kālākālam*, பெ.(n.) உரிய காலம், ஏற்ற காலம்; seasonable and un-seasonable occasions, proper time.

ம. காலாகாலம்

[காலம் + காலம்]

காலாகுரு *kālā-guru*, பெ.(n.) காரகில்; black agil wood (சா.அக.).

[காலா + குரு.]

காலாகோலம் *kālā-kōlam*, பெ.(n.) அலங்கோலம்; disorder, mass, medly.

ம. காலாகோலம்

[காலம் + கோலம்.]

கோலம் - புனைவு, வினைவு, வேறுபாடு.

காலாங்கம் *kālāṅgam*, பெ.(n.) கருத்தவுடம்பு; dark blue body (சா.அக.).

[காள் → கால் + அங்கம்.]

காலாங்கரை *kālāṅ-karai,* பெ.(n.) ஏரிக்கு நீர் கொண்டுவருங் கால்வாய் (இ.வ.); inlet to lakes, tanks etc.

[கால் + அம் + கரை → காலாங்கரை.]

கால் = நீர்க்கால், வாய்க்கால், கரையுயர்த்திய கால்வாய்.

காலாங்கன் *kālāṅgan,* பெ.(n.) ஒரு செய்நஞ்சு (யாழ்.அக.); a prepared arsenic.

[கால் = கருப்பு, நஞ்சு.கால் → காலங்கன் → காலாங்கன்.]

காலாங்கித் தங்கம் *kālāṅgi-t-taṅgam,* பெ.(n.) மாற்றுயர்ந்த தங்கம்; a kind of superior gold with high refinement (சா.அக.).

[கால் + அங்கி + தங்கம்.]

காலாங்கி நாதர் *kālāṅgi-nādar,* பெ.(n.) சீனநாட்டைச் சேர்ந்தவரும் போகர் என்னும் சித்தருடைய குருவுமான ஒரு சித்தர்; the preceptor of Bogar also a Chinese (சா.அக.).

[காலாங்கி + நாதர்.]

கால் = காற்று. காலங்கி = காற்றைத் தன் கூறாக உடையவர்.

காலாசு *kālāsu,* பெ.(n.) காலுறை, காற்கலசம்; greave. *"காலாசோ டறவெறிந்த கனைகழற்கால்" (சீவக.2236).*

[கால்[1] + ஆசு = பற்றுக்கோடு, உறை.]

காலாட்டம்[1] *kālāṭṭiam,* பெ.(n.) 1. நடைச்சுருக்கு; shortened walk. 2. நட்பு, முயற்சி; friendship.

[கால் + ஆட்டம்]

காலாட்டம்[2] *kāl-āṭṭam,* பெ.(n.) முயற்சி (வின்.); activity in business and consequent prosperity.

[கால் + ஆட்டம்.]

ஆட்டம் = செயல்,முயற்சி

காலாட்படை *kālāṭpaḍai,* பெ.(n.) தேர், யானை, குதிரை ஆகிய ஊர்திகளன்றி காலால் நடந்து செல்லும் படை; infantry.

மறுவ. பந்தி

ம. காலாற்ப்பட; **தெ.** காலரி.

[காலாள் + படை. காலாட்டம் = செயல்,முயற்சி]

காலாடி *kāl-ādi,* பெ.(n.) 1. முயற்சியுடையோன் (வின்.); energetic man, one who is active in business. 2. சில இனத்தின் தலைவர்க்குரிய பட்டப் பெயர், title given to the chief of the šāliya weavers Paḷḷās etc. 3. நீர் பாய்ச்சும் ஊர் ஊழியக்காரன் (இ.வ.) ; village servant attends to the distribution of water for irrigation 4. தொழிலற்றுத் திரிபவன் (உ.வ.) vagrant; idle and disorderly person.

[கால் + ஆடி. ஆடி = ஆடுதல், செய்தல், பணியாற்றுதல், ஈடுபடுதல், கெடுதல்.]

காலாடு[1]-தல் *kāl-āḍu-,* 5.செ.கு.வி. (v.i.) முயற்சியாற் செல்வஞ் செழித்திருத்தல்; to become prosperous by industry. *"காலாடு போழ்திற் கழிகிளைஞர்'.....பலராவர்" (நாலடி,113).*

[கால் + ஆடு.]

காலாடுதல் = விரைந்து செயற் படுதல், ஓய்வின்றி உழைத்தல், பொருள் திரட்டல்.

காலாடு[2]-தல் *kālāḍu-,* 5 செ.கு.வி.(v.i) 1. கால் நடுங்குதல்; trembling of the leg. 2. நடத்தல்; to stroll. 3. மூச்சாடுதல்; symptom of respiration said of a dying person (சா.அக.).

க. காலாடு

[கால் = நடக்கும் உடலுறுப்பாகிய கால், காற்று. கால் + ஆடு.]

காலாமீன் வகைகள்



பொன் காலா



தாழங் காலா



வரிக் காலா



போலிக் காலா

காலாடுநீர் *kāḍu-nīr,* பெ.(n.) கணுக்காலாளவு நீர்; water up to the level of ankle (சா.அக.).

[கால் + ஆடு + நீர்.]

காலாணி *kāl-āṇi,* பெ.(n.) 1. காலில் முள் அழுத்த லான் உள்ளங்காலில் தோன்றும் தடிப்புத்தோல்; callosity of the sole caused by the frequent prickling of thorns and sharp-edged stone. 2. மேற்கூரை தாங்கும் முளைக்கட்டை; peg in the beam of a house supporting the roof.

ம. காலாணி

[கால் + ஆணி – காலாணி = ஆணி. ஆணிபோன்று மரத்துப் போய் வலிக்கும் பகுதி.]

காலாணிக்குடிசை *kāl-āṇi-k-kuḍisai,* பெ.(n.) மூலைக்கட்டைகளின் மேல் அமைக்கப்படுங் குடிசை (C.G); hut resting for its support mainly on posts.

[காலாணி + குடிசை.]

ஆணிக்கால்–நிலைக்குத்து ஊன்றுகால். ஆணிக்கால் –காலாணி என முன்பின்னாகத் தொக்கது.

காலாணியறு –தல் *kāl-āṇi-y-aṟu-,* 4. செ.கு.வி. (v.i.) வலிமை, செல்வம் முதலியன குன்றித் தளர்தல்; to become weak, destitute or poor 'காலாணி யற்றுப்போனவன்' (வின்.).

[காலாணி + அறு.]

ஆணிக்கால் = ஊன்றுகாலான அடிப்படை, வலிமை, செல்வம், பாதுகாப்பு முதலியன. ஆணிக்கால் காலாணி என மாறியாது.

காலாதீதம் *kālā-tīdam,* பெ.(n.) 1. ***காலக் கழிவடை*** பார்க்க; see *kāla-k-kaḻvaḍai*

[காலம் + அதீதம்.]

Skt. adita > த. அதீதம்

காலாதீதன் *kālā-tīdaṉ,* பெ. (n.) ***காலங் கடந்தோன்*** பார்க்க; see kālaṉkaḍandōṉ.

[காலம் + அதீதன்]

Skt.adita > த. அதீதன்

காலாந்தகன் *kālāndagaṉ,* பெ.(n.) 1. சீவன்; Siva as the slayer of yama.*"காலாந்தகனும் வெருவுந் திறற்காளை" (பாரத. அருச்சுனன் தீர். 81).*

[காலம் + அந்தகன்.]

காலாந்தம் *kālāndam,* பெ. (n.) கால முடிவு. (இரு.நூ.) ; termination of period.

[காலம் + ஆந்தம். அந்தம் → ஆந்தம்.]

காலாந்தரம்[1] *kālāndaram,* பெ.(n.) வேறுபட்ட காலம்; another occasion. *"காலாந் தரத்திருவர் தங்காலஞ் செய்ய" (திருவாச.12:11).*

தெ. காலாந்தரமு

[காலம் + அந்தரம்.]

காலாந்தரம்[2] *kālāndaram,* பெ.(n.) இடைப்பட்ட காலம்; intervening time, intervel

[காலம் + அந்தரம்.]

காலாயுதம் *kāl-āyadam,* பெ.(n.) கோழி (பிங்.); cock as using the feet as weapons. "காலாயுதக் கொடியோன் கையாயுத" விழியாள் (தனிப்.).

[கால் + ஆய்தம்.]

காலாயுதம் – கோழிப் போரில் காலையே படைக்கலமாகக் கொண்டு போரிடும் இயல்பு காரணமாகக் கோழிக்குக் காலாயுதம் என்பது காரண சிறப்புப் பெயராயிற்று.

காலாரி *kālāri,* பெ.(n.) காலனை அழிப்பதற்காக சிவன் எடுத்த உருவம்; Siva as the destroyer of Yama.

[காலன் + அரி – காலனரி → காலாரி. அரிதல் = கொல்லுதல்.]

காலாவதிப்பட்டம் *kālāvadi-p-paṭṭam,* பெ.(n.) கடக மாதத்து விதைப்புப் பருவம்; a sowing season.

[காலம் + அவதி + பட்டம் – காலவதிப்பட்டம் → காலாவதிப்பட்டம்.]

ஆடிப்பட்டம் – இப்பட்டத்தில், சம்பா, பொன்னி, கிச்சலிச் சம்பா முதலிய நெற்கள் பயிரிடப்படும்.

காலாழ் *kāl-āl*, பெ. (n) சேறு (திவா.); mud.

[கால் + ஆழ்.]

காலாழி *kāl-āli*, பெ.(n.) மோதிரம், கால்விரற்செறி; toe ring. *"கண்டிய தேசத்திற் பண்டுநான் பெற்ற காலாழி" (குற்றாலக்.குற.123:14).*

ம. காலாழி

[கால் + ஆழி– காலாழி. ஆழி - வட்டம், வளையம், விரற்செறி.]

காலாள்[1] *kāl-āl*, பெ.(n.) காலாட் படைவீரன்; foot soldier, infantry. "பகடுதேர் புரவி காலாள்"(பாரத. பதினோராம் போ.6)

ம.,க.காலாள்

[கால் + ஆள். காலாள் (தரைப்படை மறவன்.]

காலாள்[2] *kāl-āl*, பெ.(n.) 2.பாசனக்காலில் நீர் பாய்ச்சுவோன்; one who attends to the supply of water from channels for irrigation purposes.

[கால் - நீர்க்கால், வாய்க்கால் காலாள் – வாய்க்கால்வழி நீர்பாய்ச்சும் பணி செய்வோன்.]

காலாறு[1]**–தல்** *kāl-āṟu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. நடை ஓய்ந்திருத்தல்; to rest from walking. 2. காலில் அரத்தவோட்டம் உண்டாக உலாவுதல்; to walk about for overcoming numbness of feet. குதிரை சிறிது காலாறட்டும் (உ.வ.).

ம. காலாறுக

[கால் + ஆறு.]

காலாறு[2] *kāl-āṟu*, பெ.(n.) வண்டு; beetle as having six legs. *"செந்தா மரையினிற்றேன் காலாறு பாயுங் கலைசையே" (கலைசைச்.13).*

[கால்[1] + ஆறு[1]. காலாறு - ஆறுகால்கள் உள்ள வண்டினம்.]

காலாறு[3] *kāl-āṟu*, பெ.(n.) சிற்றாறு; rivulet, stream. *"காவிரியாய் காலாறாய்க் கழியு மாகி" (தேவா.1227).*

மறுவ.கையாறு

[கால் + ஆறு.]

காலாறு என்பது நீர்க்காலாகப் பிரிந்துக் கொண்டு வந்த சிற்றாறு அல்லது கையாறு.

காலாறு பறவை *kāl-āṟu-paṟavai*, பெ.(n.) ஆறுகால் வண்டு; six legs beetle (சா.அக.).

[கால் + ஆறு + பறவை.]

காலாறு பறவை

காலான்பெட்டி *kālāppetty* பெ.(n.) கற்காரைத் தூண்கள் அமைக்கப் பயன்படும் மரம் அல்லது இரும்புத் தகட்டாலான பெட்டி (பொ.வழ) (கட்.தொ.வரி). wooden planks or iron sheets used while making concrete in construction works.

[கால் + ஆன் + பெட்டி. கால் - தூண்.]

காலி[1] *kāli*, பெ.(n.) பாம்பின் கீழ்வரிசைப் பற்களிலொன்று; one of the fangs of a snake in the lower row of teeth (சா.அக.).

[கீழ் → கீழி → கீலி → காலி.]

காலி[2] *kāli*, பெ.(n.) 1. ஆக்கூட்டம்; herd of cows as being quardrupeds. *"காலிப்பின் போவார்க் கோர்"*. 2. ஆ; cow. *"கன்றுமுட்டி யுண்ணச் சுரந்த காலி யவைபோல்"(தேவா.745:3).*

ம.காலி

[கால் → காலி - கால்நடை.]

காலி[3] *kāli*, பெ.(n.) 1. வன்கொடுமை;vicious life. "காலிச் சிறுநெறிபோய்க் கழிவீர்"(திருநூற்.33). 2. பயனற்றவன்; worthless fellow; ஒன்றுக்கும் உதவாத காலிப்பயல் (உ.வ.). 3.அடங்காக் கொடியவன்; uncontrollable rogue. "இந்தக் காடு காலிகளின் கூடாரமாகி விட்டது" (உ.வ.).

[கள் → காள் → கால் - கருநிறம், தீமை, வன்கண்மை, அடாவடித்தனம். கால் + இ - காலி (அடாவடித்தனம் கொடுமை நிரம்பியவன். 'இ' உடையவனைக்குறித்த ஈறு).]

காலி[4] *kāli,* பெ.(n.) 1. பூனைக்காலி (தைலவ.); cow-hage. 2. புனமுருங்கை வகை(மலை.); palas tree.

[கால் - கருமை, நீட்சி. கால் → காலி.]

காலி[5] *kāli* பெ.(n.) 1. கழிவு நாள்; days spent. 2. உள்ளே ஒன்றுமில்லாதது; empty. காலிப்பெட்டி (உ.வ.). 3. வெற்றிடம்; vacant. வீடு காலி (உ.வ.).

Fin. kaligu, kali; Mong. galzai; Q. kalichi.

[கால் - தீர்தல், கழிதல். கால் → காலி.]

காலி[6] *kāli-,* பெ. (n.) 1. காலுள்ளது; that which has legs. முக்காலி, நாற்காலி. 2.காலுள்ளவள்; she who has legs. ஒடுகாலி. 3. கால்நடை; cattle. கன்றுகாலி.

ம. காலி

[கால் + இ. 'இ' உடைமைக் குறித்த ஈறு, பெண்பால் ஈறுமாம் 'கன்றுகாலி' மோனைக் குறித்து வந்த மரபிணை மொழி.]

காலி[7]-த்தல் *kāli-,* 4 செ.கு.வி (v.i) கோள்கள் தோன்றுதல் (வின்); to rise with lustre above the horizon as sun, moon,etc.

[குல் → தோன்றல்கருத்துவேர். குல் → கல் - கலித்தல், தோன்றுதல். கலி பார்க்க; see kāli.]

காலி[8]-த்தல் *kāli-,* 4 செ.கு.வி (v.i.) உதித்தல்; to rise (இரு.நூ.).

[காலுதல் - தோன்றுதல் → கால் → காலு → காலி]

காலிகம் *kāligam,* பெ.(n.) கரி; coal (இரு.நூ.).

[கால் - கருமை. கால் → காலிகம்.]

காலிகயம் *kālikayam,* பெ.(n.) சிறியாணங்கை வேர்; rattle snake root (சா.அக.).

[காலி + கயம்.]

காலிகை *kāligai,* பெ.(n.) 1. கருமை; blackness. 2. கருஞ்சந்தனம்; black sandal. 3. கள்; toddy. 4. காக்கை; crow. 5. நரி; fox. 6. புடலங்கொடி; snake gourd creeper. 7.அத்திமரம்; fig tree (சா.அக.).

[கால் - கருமை. காலி → காலிகை 'சிறுமை' சிறுமைப்பொருள் பின்னொட்டு.]

காலிகோபுரம் *kāli-kōburam,* பெ.(n.) திருப்பதி திருக்காளத்தி முதலிய மலைகளின்மேல் முகப்பிலுள்ள காற்றுக்கு அணையாகும் கோபுரம் (இ.வ.); towers of great height at the entrance of temples especially in Tiruppati and Tiru-k-kalatti, as standing exposed to the violence of wind.

[கால் - காற்று. தெ.கால் > தெ. காலி (காற்று). காலி + கோபுரம் – காலிகோபுரம் (காற்றுக்கு ஈடுகொடுத்து எழும்பி நிற்கும் உயர்ந்த கோபுரம்).]

காலிங்கம் *kāliṅgam,* பெ.(n.) 1. வெள்ளைப் பூண்டு; garlic. 2. யானை; elephant. 3. பாம்பு; snake. 4. ஒருவகை வெள்ளரி; a species of cucumber. 5.வெட்பாலை; dysentry rosebay. 6. ஒரு வகைச் சுரை; a kind of gourd (சா.அக.).

[கால் - கருமை, கார்ப்பு. கால் → காலங்கம் → காலிங்கம்.]

காலிங்கராயன்சம்பா *kāliṅga-rāyaṉ-šambā* பெ.(n.) நான்குமுதல் ஆறுமாதங்களில் விளையும் சம்பாநெல்வகை (இ.வ.); a kind of paddy maturing in 4 to 6 months.

[காலிங்கராயன் + சம்பா.]

காலிங்கி *kāliṅgi,* பெ.(n.) வெட்பாலையரிசி; dowry oleander.

[கால் → காலிங்கி.]

காலிங்கை *kāliṅgai* பெ. (n.) **காலிங்கி** பார்க்க; see *kalingi* (சா.அக.).

[காலி → காலிங்கை.]

காலிடு-தல் *kālidu,* 20 செ.கு.வி (v.i) கால்வைத்தல்; to set foot, enter. *'அவர்கள் தாங்களுங் காலிடமாட்டாழுமி' (ஈடு.1,3,9).*

ம. காலிடுக

[கால் + இடு. இடுதல் - வைத்தல், காலடி எடுத்து வைத்தல் உட்புகுதல்.]

காலிமனை *kālimaṉai*, பெ.(n.) வீடு கட்டுவதற் கான காலி இடம் (முகவை.) (கட்.தொ.வரி.); vacant plot for house construction.

[கால் = மாடு. வெளிவரல், உமிழ்தல். கால் → காலி.]

காலிமாடு *kāli-māḍu*, பெ.(n.) காட்டில் வளர்க்கப்படும் கால்நடை; stray cattle herded in woods.

மறுவ. காலிய மாடு; காலியன்மாடு.

[காலி + மாடு. கால் → காலி = கால்போன போக்கில் செல்வது, கண்டபடிதிரிவது, கட்டுக்கடங்காதது.]

காலியகம் *kāliyagam*, பெ.(n.) ஒருவகை மஞ்சள்; a kind of turmeric (சா.அக.).

[காலி + அகம்.]

காலியம் *kāliyam*, பெ.(n.) விடியல் (சங்.அக.); day-break.

[கால் → காலை + அம் – காலையம் → காலியம்.]

காலியமாடு *kāliya-māḍu*, பெ. (n.) ***காலிமாடு*** (வின்.) பார்க்க; see *kāli-māḍu*.

[காலி + மாடு – காலியமாடு.]

காலியன்மாடு *kāliyaṉ-māḍu*, பெ.(n.) ***காலிமாடு*** பார்க்க; *kāli-māḍu*.

[காலி → காலியன் + மாடு.]

காலியாங்குட்டி *kāliyāṅ-kuṭṭi*, பெ.(n.) 1. ஒரு வகைப் பாம்பு; a common harmless snake. 2.தீங்கு செய்யும் ஆற்றல் அற்ற உயிரி; any innocuous reptile.

[காலி + ஆம் + குட்டி – காலியாங்குட்டி. காலி = தீங்கற்ற வளர்ப்புக் கால்நடைகள்.]

காலியாந்துவரை *kāli-y-ām-tuvarai*, பெ.(n.) துவரைவகை (m.m.274); black dhal, low turning weed.

[காலி + ஆம் + துவரை. கால் → காலி = கருப்பு நிறமுள்ளது.]

காலியூர்க்கோட்டம் *kāliyūr-k-kōṭṭam*, பெ.(n.) பல்லவர் ஆட்சியில் பிரிக்கப்பட்ட தொண்டை மண்டலத்தின் இருபத்து நான்கு பிரிவுகளில் ஒன்று; one among 24 divisions of districts in the administration of the Pallava kings *"செயங்கொண்ட சோழமண்டலத்துக் காலியூர் கோட்டத்து உக்கலாகிய ஸ்ரீ விக்கிரமாபரண சதுர்வேதி மங்கலம்" (தெ.கல்.தொ.3.1.கல்.4).*

[காலியூர் + கோட்டம்.]

காலிராசி *kālirāśi*, பெ.(n.) இலங்கை காலிப்பட்டணத்தில் விளையும் பாக்கு; betel-nut obtained from Galle town in Ceylon (சா.அக.).

[காலி + ராசி.]

காலிராணுவம் *kāli-rāṇuvam*, பெ.(n.) காலாட் படை; infantry, foot soldiers. ***காலாட்படை*** பார்க்க; see *kālāṭpaḍai*.

[கால்¹ + இராணுவம்.]

காலில் விழு-தல் *kālil-viḻu-*, 2 செ.கு.வி.(v.i) 1. காலில் விழுந்து வணங்குதல்; to fall prostrate, do homage at one's feet. 2. மன்னிப்பு வேண்டுதல்; to seek forgiveness 3. புகலடைதல்; to take refuge.

[கால் + இல் + விழு. இல் – இடப் பொருள் உருபு.]

காலிலி[1] *kāl-ili*, பெ. (n.) 1. முடவன், முடத்தி; one who is lame. 2. பாம்பு (சூடா.); snake as having no legs. 4.காற்று (சூடா.); wind 3. மீன் (யாழ்.அக.); fish.

க. காலிலி

[கால் + இலி → இல் → இல்லி → இலி (இல்லாதது).]

காலிவாசம் *kāli-vāśam*, பெ.(n.) செங்குளவி; red-wasp (சா.அக.).

[காலி + வாசம்.]

காலிறங்கு[1]–தல் *kāl-iraṅgu-,* 5 செ.கு.வி (v.i) யானைக் கால் உண்டாதல்; to develop elephantiasis. 2. மழைக்காலிறங்குதல்; to descend in torrents, as a cloud heavy with water.

[கால் + இறங்கு.]

காலிறங்கு[2]–தல் *kāl-iraṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1.மழைத்தாரை இறங்குதல்; to descend in torrents, as a cloud heavy with water. 2. சீலையின் விளிம்புகள் குறுக்கிழை கோடுகொள்ளுதல்; to have cross threads on the borders of coloured cloths worn by Indian women.

[கால் + இறங்கு.]

காலிறால் *kāl-irāl,* பெ.(n.) கால்நீண்ட இறால் மீன்வகை (M.M.373); prawn with long legs.

[கால் + இறால் – காலிறால் (கால் நீண்ட இறால்).]



காலிறால்

காலுக்கழுத்து *kālu-k-kaḻuttu,* பெ.(n.) கணைக்கால்; ankle. *'திருக்காலுக் கழுத்தின் காறை 2–ம்' (S.I.I.iv,81).*

மறுவ. கெண்டைக்கால், கணுக்கால்.

[கால் + உக்கழுத்து. உ- மேற்பகுதி. கால் - பாதம். உக்கழுத்து - பாதத்தின் மேற்பகுதியாகிய கெண்டைக்கால், கணைக்கால்.]

காலுக்குக்காலாய் *kālukku-k-kālāy,* வி.எ. (adv.) குடிவழியாய் (இ.வ); hereditarily.

மறுவ. வாழையடி வாழையாய்

[காலுக்கு + காலாய்.]

கால் - கால்வழி, குடிவழி. காலுக்குக்கால் – குடிவழிக்குக் குடிவழியாய், வாழையடி வாழையாக.

காலுதல் *kāludal,* பெ.(n.) கக்குதல், பொழிதல், வடிதல், விடல், விளம்பித்தல்; vomit, shower, flow pour drop.

Fin. karaba; **Es.** karata; **Mong.** xarai; **Jap.** karugaru.

[கால் → காலுதல்.]

காலுழற்றி *kāl-uḻarri,* பெ.(n.) காலிற் காணும் ஊதை (வாத) நோய் (வின்.); sparms in the leg.

[கால்[1] + உழற்றி. கால் - காற்று, ஊதை.]

காலுளைவு *kāl-uḷaivu,* பெ.(n.) கால்நோவு; ache or pain in leg as from cold.

[கால் + உளைவு]

காலுறை *kāl-urai,* பெ.(n.) காலுக்குப்போடும் உறை; socks.

ம. காலுற, கால்மேச.

[கால் + உறை.]

காலூதல் *kāl-ūdal,* பெ.(n.) கால் வீக்கமடைதல்; swelling of the leg (சா.அக.).

[கால் + ஊதல்.]

காலூதை *kāl-ūdai,* பெ.(n.) நோய்வகை (கடம்ப. 4.இலீலா.129); a disease.

[கால் + ஊதை.]

காலூர்–தல் *kāl-ūr-,* 2 செ.கு.வி (v.i.) 1. பயண அறிகுறியாகக் காலில் தினவுண்டாதல்; to feel an itching sensation in feet as foreboding an impending journey. 2. ஒடியாடப் பிள்ளைகள் விரும்புதல்; to be impatient, restless to walk run or move about, as a child.

[கால்[1] + ஊர்தல்.]

காலூரம் *kāl-ūram,* பெ.(n.) தவளை (சது.); frog.

[கால் + ஊரம் – காலூரம் (நீரில் காலுதைத்து ஊர்வது).]

காலூன்று–தல் *kāl-ūṉṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நிலையுறுதல்; to set foot firmly on the ground to become established. 2. ***காலிறங்கு*** பார்க்க; see *kāl-iraṅgu.* *"ககனவட்டத்தினின்று காலூன்றி மழை பொழியும்" (தாயு.சித்தர்க.4).* 3. பந்தற்கால் நாட்டுதல்; to have a decorated post planted in front of house as a preliminary to a marriage festival,etc.

க.,பட. காலூறு

[கால் +ஊன்று–.]

காலூனம் *kāl-ūṉam,* பெ.(n.) கால் முடமாதல்; impaired state of leg (சா.அக.).

[கால் + ஊனம்.]

காலெடு[1]–த்தல் *kāl-eḍu-,* 4 செ.கு.வி (v.i.) 1. வாய்க்கால் வெட்டுதல்; to dig irrigation channels 2. பின்னும்படி மயிரை வகிர்ந்தெடுத்தல்; to divide the hair into locks for braiding it.

[கால் + எடு – கால் = வாய்க்கால்,வரிசை,வகிடு.]

காலெடு[2]–த்தல் *kāl-eḍu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. தொடங்குதல்; to commence as setting forth 2. இசைந்துகொடுத்தல்; to yield, give consent. *"ஒன்றின் நினைவுக்கு ஒன்று காலெடுக்க அமைந்திருக்கை" (ஈடு,6,1,4).*

[கால் + எடு–.]

காலேகம் *kālēgam,* பெ.(n.) 1. முத்து; pearl. *"காலேகஞ் செம்பொன் வளமனை பாழாக வாரி" (பு.வெ.3,15).* 2. காலேகவண்ணம் (வின்.) பார்க்க; see *kālēgavaṇṇam.*

[கால் (காற்று, எரிதல்) → காலேகம் (சிவப்பு).]

காலேகவண்ணம் *kālēgavaṇṇam,* பெ.(n.) 1. செவ்வேள்; red sesamum seed. 2. செவ்வள்ளி; red sweet potato (சா.அக.).

[காலேகம் + வண்ணம்.]

காலேகவண்ணம்[2] *kālēgavaṇṇam,* பெ.(n.) கலவைச் சாந்து; paste compound of narious perfumes.

[காலேகம் + வண்ணம்.]

காலேசம் *kālēsam,* பெ.(n.) ***காலேயம்[1]*** பார்க்க; see *kālēyam.* *"குஞ்சர முதலிய காலேசங்களும்" (தொல்.பொருள். 152,உரை).*

[கால்[1] → காலேசம்.]

காலேணி *kāl-ēṇi,* பெ.(n.) குறுக்குப் படிகளைக் கொண்ட இரு கால்களுடைய ஏணி (வின்); ladder with two supporting legs.

[கால்[1] + ஏணி. கால் = நெடுங்கால், நெடுங்கழை.]

காலேந்திரம் *kālēndiram,* பெ. (n.) ***கால யெந்திரம்*** பார்க்க; see *kāla-endiram.* காலத்தைப் புலப்படுத்தும் இயந்திரம்; a contrivance to show time as the sun dial or the hour glass. *"காலேந்திரமுங் கைவயிற் பிரியா நூலேந்திரமும்" (பெருங்.இலாவாண. 2:153).*

மறுவ.காலக்கடிகை,நாழிகைவட்டில்; காலயெந்திரம்

[காலம் + இயந்திரம் – காலேந்திரம் (வடமொழிப்புணர்ச்சி).] ***காலயெந்திரம்*** பார்க்க; see *kāla-endiram.*

காலேயகம் *kālyēgam,* பெ.(n.) 1. மரமஞ்சள்; tree turmeric. 2.குடலின் ஒரு பகுதி; a part of the intestnes 3. காமாலையைப் போன்ற ஒருவகை நோய்; a disease like jaundice. (சா.அக.).

[காலுதல் = ஒளிசிந்துதல். கால் → காலேகம் → காலேயகம் (சிவப்புமஞ்சள்).]

காலேயம் *kālēyam,* பெ.(n.) ஆ, யானை முதலிய புல்லுண்ணும் நாற்காலுயிரிகள்; herbivorous quadruped. *"புல்லினா னின்புறுஉங் காலேயம்" (நான்மணி.67).*

[கால் → காலி → காலியம் (கால்நடைகள்). காலேயம் - (வடமொழித் திரிபு). காலியம் எனின் முற்றுந்தமிழாம்– காலியம் பார்க்க; see kāliyam.]

காலேயம்[2] *kālēyam*, பெ.(n.) 1. அகில் (மலை) eagle wood. 2.கத்தூரிமஞ்சள் (மலை) yellow zedoary.

[கால் = கருநிறம். கால் → காலியம் → காலேயம் (வடமொழித்திரிபு).]

காலை[1] *kālai*, பெ.(n.) 1. நேரம், பொழுது (பிங்.); time. "மாலைவாராராயினும் மாணிழை-காலை காண்குவமென" (சிலப். வேனில்.116.) 2. வாணாள்; life-time. *"நோகோ யானே தேய்கமா காலை" (புறநா.234).* 3.தகுந்த நேரம்; season, opportunity. *"காலைய தறிந்தனை" (கந்தபு. திருவவ.14).* 4. முறை; occasion, turn. *"முக்காலைக் கொட்டினுள்" (நாலடி,24).* 5. விடியல்; early part of the morning. *"காலைக்குச் செய்தநன் றென்கொல்" (குறள்,1225).* 6.ஞாயிறு; sunday. *"காலை யன்ன சீர்சால் வாய்மொழி" (பதிற்றுப்.21,4).* 7. பகல்; day-time. *"எல்லியிது காலையிது வென்ப தறிகல்லாள்" (சீவக.1877).* 8. பள்ளியெழுச்சி முரசம்; waking-drum. "மேல் வந்தான் காலைபோல்....துயிலோ வெடுப்புக" (கலித்.70).

ம. கால; து. கால்தெ, கல்தெ.

Skt. kālya

[கால் = வெளிவரல், ஒளி சிந்துதல், விளக்கம் பெறல், செப்பம். கால் → காலை.]

காலை[2] *kālai*, செ.கு.வி.எ (adv) 1. இளங்காலை நேரம், முன்னதாகவே (வின்.); early, betimes, early in life. 2. அப்பொழுதில்; when, while *"அடுங்காலை நீர்கொண்டு வெப்பம்போல்" (நாலடி,68).*

[கால் + காலை.]

காலை[3] *kālai*, பெ.(n.) வேலி அடைப்பு (யாழ்ப்.); enclosure, area enclosed.

ம. காலா

[கால் = கோல், குச்சி, கம்பு, கழை. கால் → காலை (கம்புகள் நட்டு அடைத்த வேலி). காலுடையது காலி என வழங்கி அதுவே காலை எனவும் திரிந்தது. கோடையிலும் பட்டையில் பால் வடியும் மரம் பாலை எனப்படுவதை ஒப்பு நோக்குக.]

காலை[4] *kālai*, பெ.(n.) மீன்வகை; a kind of fish. *"உறுகிழாத்தி காலைபாலை" (பறாளை.பள்ளு.75).*

[கால் → காலை.]

காலை[5] *kālai*, பெ.(n.) தொழுவம்; cow shed.

[காலி = மாடுள் காலி → காலை.]

காலை[6] *kālai*, பெ.(n.) 1. நேற்று; yesterday. 2. நாளை; tomorrow.

H.Punj., kal, kala; **Sind.** kālha, kālha; **Guj.** gāli, kālā, jalikāl; **Beng.** gatakāla; **Ass.** kāli; **On.** gate kāli.

[கால் = (ஒளி) உமிழ்தல். கால் → காலை (விடியற்காலை, மறுநாள் காலை, நாளை. கால் = நேரம் உமிழ்தல், கழிந்த நாள், நேற்று).]

உடலுழைப்புத் தொழிலாளர்கள் கடு வெயிலுக்கு அஞ்சி, பொழுது விடியுமுன் கருக்கலிலேயே வேளாண்மை வேலைகளைத் தொடங்குவர். நாளை வா என்பதை விடியலில் அதாவது காலையில் வா என்பது மரபு. ஆதலின் காலை எனும் சொல் நாளை எனப் பொருள் தந்தது.

காலைக்கடன் *kālai-k-kaḍan*, பெ.(n.) குளித்தல், பல்துலக்குதல் போன்ற காலைச் செயல்கள்; morning observances.

[காலை[1] + கடன்.]

காலைக்கரிப்பான் *kālaik-karippaṉ*, பெ.(n.) உளுந்து; black gram. (சா.அக.).

[காலை + கரிப்பான் – காலைக்கரிப்பான்.]

கால் = காற்று, ஊதை. ஊதை (வாதம்) நோய்க்கு உளுந்து மருந்தாகும் தன்மையுடையது எனும் கருத்தில் காலைக் கரிப்பான் எனப்பட்டது.

காலைக்குளியல் *kālai-k-kuḷiyal*, பெ.(n.) கதிரெழுமுன் குளிர்நீரில் குளித்தல்; taking a bath in a cold water before sun rise. (சா.அக.).

[காலை + குளியல்.]

காலைச்சுற்று-தல் *kālai-c-cuṟṟu-*, 5 செ.குன்றாவி (v.t.) தொடர்ந்து பற்றுதல்; to cling to one, to hold persistently. "பாம்பு காலைச்சுற்றுகிறது".

[காலை[1] + சுற்று-.]

காலைச்செபம் *kālai-c-cebam,* பெ.(n.) ***காலை வாழ்த்து*** பார்க்க; see *kālai-vālttu.*

[காலை + செபம்.]

காலைஞாயிறு *kālai-ñāyiṟu,* பெ.(n.) தோன்றும் ஞாயிறு (உதயசூரியன்); rising sun. *"காலை ஞாயிற்றுக் கதிர்போற் றோன்றிய" (மணிமே.9:45).*

[காலை + ஞாயிறு.]

காலைநொச்சி *kālai-nocci,* பெ.(n.) கருநொச்சி; a variety of nocci (சா.அக.).

[காலை + நொச்சி.]

காலைப்பசி *kālai-p-paši,* பெ.(n.) காலை நேரத்தில் உண்டாகும் கொடிய பசி; vigorous hunger in early morning (சா.அக.).

[காலை + பசி.]

காலைப்பனி *kālai-p-paṉi,* பெ.(n.) விடியலில் பெய்யும் பனி; morning dew (சா.அக.).

[காலை + பனி.]

காலைப்பித்தம் *kālai-p-pittam,* பெ.(n.) காலையில் தலையிலேறி நிற்கும் பித்தம்; aggravated condition of bile prevailing in the morning rising to the head (சா.அக.).

[காலை + பித்தம்.]

காலைமுரசம் *kālai-murašam,* பெ.(n.) பள்ளி யெழுச்சி முரசு; morning drum sounded to awaken kings. "காலை முரசக் கனைகுர லோதையும்" (சிலப்.13,140).

[காலை + முரசம்.]

காலைமுழவு *kālai-muḻavu,* பெ.(n.) ***காலை முரசம்*** (சிலப்.3,27 உரை) பார்க்க; see *kālai-murušam.*

[காலை + முழவு.]

காலையடை—த்தல் *kālai-y-aḍai-,* 4. செ.கு.வி. (vi) வேலியடைத்தல் (யாழ்ப்.); to make an enclosure.

[காலை[2] + அடை-.]

காலையது பண்பு *kālaiyatupaṉbu,* பெ.(n.) சூரியனது வெம்மை (கோ.தமி.கை.); heat of the sun.

[காலை + அது + பண்பு.]

காலையந்தி *kālai-y-andi,* பெ.(n.) விடியலை யடுத்த அந்திப்பொழுது; morning twilight. *"காலை யந்தியும் மாலை யந்தியும்" (புறநா.34.8).*

[காலை + அந்தி = காலையந்தி (விடியலின் தொடக்கப்பொழுது)]

காலையாங் குலைச்செடி *kālaiyāṉ-kulaiceḍi,* பெ.(n.) ***எலியோட்டிச் சோபி*** பார்க்க; see *eliyōṭṭic-cōbi* (சா.அக.).

காலைவாழ்த்து *kālai-vāḻttu,* பெ.(n.) விடியற்காலையில் செய்யும் கடவுள் வழிபாடு; morning prayer.

[காலை + வாழ்த்து.]

காலைவிழிப்பு *kālai-viḻippu,* பெ.(n.) விடியற் காலையில் விழித்துக் கொள்ளல்; waking up early in the morning (சா.அக).

[காலை + விழிப்பு.]

காலைவெள்ளி *kālai-veḷḷi,* பெ.(n.) விடியலில் தோன்றும் வெள்ளி விண்மீன்; Venus as the morning star.

[காலை + வெள்ளி.]

காலொட்டு—தல் *kāl-oṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) குறைவைக் காட்டாமற் சரிப்படுத்துதல் (இ.வ); lit. to restore a lame leg, to make up for deficiencies.

[கால் + ஒட்டு-.]

காலொற்று—தல் *kāl-oṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) காற்று வீசுதல்; to blow gently, as the wind. *"கடிகாவிற் காலொற்ற வொல்கி" (கலித்.92,51).*

[கால்[2] + ஒற்று. கால் = காற்று.]

காலோட்டு—தல் *kāl-ōṭṭu-,* 5 செ.கு.வி (v.i.) மூச்சு வரும்படிச் செய்தல்; inhale artificial respiration (சா.அக.).

[கால் + ஓட்டு.]

காலோட்டூதை *kālōṭṭūdai,* பெ.(n.) மூச்சுத் திணறும்படிச் செய்யும் ஊதை நோய்; rheumatism marked by difficulty of respiration (சா.அக.).

[காலோட்டு + ஊதை.]

காலோடிகையோடி *kālōḍi-kaiyōḍi,* பெ.(n.) தொழிலற்றுத் திரிபவன் (நெல்லை); vagabond, vagrant.

[கால் + ஓடி + கை + ஓடி.]

கால் போன போக்கில் திரிந்து கைபோன போக்கில் ஏதோ செய்து எப்படியோ அலைபவன்.

காலோடு[1]-தல் *kāl-ōḍu-,* 5 செ.கு.வி (v.i.) 1.வழுக்குதல்; to slip as the leg. *"காலோடு மிடங் களையுடைய" (மலைபடு.215,உரை.).* 2. செயலில் முயற்சி உண்டாதல்; to pursue a business actively with keen interest. அந்தச் செயலில் எனக்குக் காலோடவில்லை.

[கால் + ஓடு-.]

காலோடு[2] *kāl-ōḍu,* பெ.(n.) கூடல்வாய் ஓடு (இ.வ.); gutter tiles.

[கால் + ஓடு. கால் = கால்வாய்.]

காலோதம் *kāl-ōdam,* பெ.(n.) 1. காலில் நீர் இறங்குவதாற் காணும் வீக்கம்; swelling in the leg due to morbid collection of fluid in the surface membrane of the skin. 2. யானைக்கால்; elephantiasis of the leg. 3. அண்டங்காக்கை; Indian raven.

[கால் + ஓதம்.]

காலோமம் *kāl-ōmam,* பெ.(n.) அகில்; lign aloe (சா.அக.).

[கால் + ஓமம்.]

காலோர் *kālōr,* பெ.(n.) காலாட்கள்; infantry. *"காலோர் காப்ப" (மதுரை.441).*

[கால் → காலோர்.]

காலோலம் *kāl-ōlam,* பெ.(n.) அண்டங்காக்கை; Indian raven (சா.அக.).

[கால் = கருப்பு. கால் + ஓலம்.]

காவட்டம் *kāvaṭṭam,* பெ.(n.) வாசற்கதவு (கட்.தொ.வரி.); front door.

[காவு + வட்டம் → காவட்டம்.]

காவட்டம்புல் *kāvaṭṭam-pul,* பெ.(n.) காமாட்சிப் புல் (மலை); citronella grass.

மறுவ : காவட்டை.

[காவட்டை + புல் – காவட்டம் புல்]

காவட்டம்புல்லெண்ணெய் *kāvaṭṭampul-eṇṇai,* பெ.(n.) கற்பூரப்புல் எண்ணெய்; oil of lemon grass (சா.அக.).

[காவட்டம்புல் + எண்ணெய்.]

காவட்டு *kāvaṭṭu,* பெ.(n.) ***கா[1]*** (நாஞ்.) பார்க்க; see *kā[1]*

[காவு → காவட்டு.]

காவட்டை *kāvaṭṭai,* பெ.(n.) ***காவட்டம்புல்*** பார்க்க; see *kāvaṭṭam-pul.*

ம. காவட்ட

[காவட்டம் → காவட்டை.]

காவடி *kāvaḍi,* பெ.(n.) 1.காவு தண்டு; pole or stave of wood used for carrying burdens. 2. வேண்டுதலுக்கு எடுக்குங் காவடி; a decorated pole of wood with an arch over it, carried on shoulders with offerings mostly for Muruga's temple commonly with some parade. 3. காவு தடியிற் கொண்டுபோகும் பொருள் (வின்.); that which is carried on the shoulders with a pole.

ம.காவு; காவடி; **க.** காவடி,காகடி; **தெ.,து.** காவடி; **பிரா.** காவட; **கொலா.** காவரி; **மா.** கொவெ; **பெங்.** கவரி.

[காவு + தடி → காவடி]

காவடி.

காவடிக்காரன் *kāvaḍikkāraṉ,* பெ.(n.) காவடி எடுப்பவர் (இரு.நூ.); one who carries *kāvaḍi*

ம. காவடிக்காரன்; க. காவடிகார.

[காவடி + காரன்]

காவடிச்சிந்து *kāvaḍi-c-cindu,* பெ. (n.) காவடி எடுக்கும் போது முருகனைப் புகழ்ந்து பாடும் நாட்டுப்புற இசைப்பா வகை; a type of folk-song usually in praise of Lord Muruga, intended to be sugn by pilgrims carrying 'kāvaḍi' as an offering.

ம. காவண்டம்; தெ. காவடெடப்பாலு.

[காவடி + சிந்து.]

காவடியாட்டம் *kāvaḍi-y-āṭṭam,* பெ.(n.) காவடியைத் தோளில் சுமந்து கொண்டு ஆடும் ஆட்டம்; a ritual dance of the devotees of Lord Muruga carrying kāvaḍi.

ம. காவடியாட்டம், காவடி துள்ளல்.

[காவடி + ஆட்டம்.]

காவடியெடு-த்தல் *kāvaḍi-y-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) வேண்டுதலின் பொருட்டு காவடி எடுத்தல்; to carry 'kāvaḍi' with offering unfulfilment of a vow.

தெ. காடின்சு

[காவடி + எடு.]

காவடித் தண்டு *kāvaḍi-t-taṇḍu,* பெ.(n.) இரு முனையிலும் சுமைகளைத் தொங்க விட்டு தோளில் வைக்க ஏதுவாக உள்ள நீண்ட கொம்பு;Pollor staue of wood used for carrying burdens.

ம. காவு, காவடி; க. காவடி, காகடி; தெ.,து. காவடி; பிரா. காவட; கொலா. காவரி; மா. கொவெ; பெங். கவரி.

[காவடி + தண்டு.]

காவடிதூக்கு-தல் *kāvaḍitūkku-,* 5 செ.கு.வி. (v.i.) 1. **காவடியெடு-த்தல்** பார்க்க; see *kāvaḍiyeḍu.*2. முகமன் கூறுதல்; to flatter.

[காவடி + தூக்கு.]

காவணப்பத்தி *kāvaṇa-p-patti,* பெ.(n.) மண்டபத்தின் அழகிய மேற்றளம்; ornamental roof of a mansion. *"குறட்டின்மேலே திருக்காவணப் பத்தித் திருமண்டபமும்" (கோயிலொ.14).*

[காவணம் + பத்தி.]

காவணம்[1] *kāvaṇam,* பெ.(n.) 1.பந்தல்; shed with a flat roof, pandal. "காவணங்களிற் றோன்றின பச்சிளங் கமுகம்" (பாரத. திருட்.56.). 2. சோலை; grove, tope. *"காவண மிலங்கு மந்தண் காசி" (காசிக. வியாதன்சா. 23).*

ம. காவணம்; க.காவண.

[கா[3] + அணம்.]

காவணம்[2] *kāvaṇam,* பெ.(n.) மண்டபம்; open hall. *"தேவாசிரியம் என்னுந் திருக்காவணம்" (பெரியபு. திருக்கூட்டச்.2).*

[கா - அகற்சி,பரப்பு. கா + அணம்- காவணம் (அகன்ற மண்டபம்). 'அணம்' சொல்லாக்க ஈறு.]

காவணம்[3] *kāvaṇam,* பெ.(n.) தெள்ளுக்கொடி; negro bean (சா.அக.).

[கா - அகற்சி, நீட்சி. கா + அணம்.]

காவணம்[4] *kāvaṇam,* பெ.(n.) புழுக்கூடு; nest of an insect as wasp. (சா.அக)

[காவணவன் (புழு.) காவணன் → காவணம்.]

காவணவன் *kāvaṇavaṉ,* பெ.(n.) ஒருவகைப் புழு(யாழ்ப்.); a small insect that spreads among

trees and growing corn, binds leaves to its nest and thus destroys the crop.

[காவணம் → காவணவன்.]

காவணம் = பந்தல், குடியிருப்பதற்காக இலைகளைக் குடிலாக அடைத்துக் கொள்ளும் புழு வகை.

காவத்திரம் *kāvattiram,* பெ.(n.) ஈரப்பலா; monkey jack (சா.அக.).

மறுவ. ஈரப்பலா, ஆசினிப்பலா

[காய் → காயு → காவு + திரள். (திரளம் → திரம்).]

திரண்டு உருண்ட வடிவத்தால் பெற்ற பெயராகலாம். காயாகவே உண்ணப்படுவது வழக்கம்.

காவதம் *kāvadam,* பெ.(n.) காதம்; distance of about elevan kilometers. *"காவதங் கடந்து" (சிலப்.10:36).*

ம. காவதம்; க. காவித, காவத; து. காவுத.

Fin. kaukama(distant); **Karel.** kaugoi; **Es.** kaua, kauva, kavva; **Mordvin.** kuvat; **Mansi.** koy, xow.

skt. gavyūta

[கா = அகற்சி, நீட்சி. கா → காவு → காவதம் (குறிப்பிட்ட எல்லை உள்ள தொலைவு).]

காவதன் *kāvadan,* பெ.(n.) வரிக்கூத்து வகை (சிலப்.3:13.பக்.88); a masquerade dance.

[கா-காவு = பொழில்,பூங்கா, எழில். காவு → காவதன் (எழில் மிகும் கூத்துவகை).]

காவம் *kāvam,* பெ.(n.) காட்டழல்; big forest fire kindled by friction (சா.அக.).

[கா → காவம். கா = காடு.]

காவல்[1] *kāval,* பெ.(n.) 1. பாதுகாப்பு; defence, protection, preservation, keeping. *"காவலன் காவல்" (மணிமே.22,209.).* 2.வேலி (பிங்.) ; enclosing fence, hedge. 3. மதில் (பிங்); surrounding wall, fortification. *"காவல் வேவக் கணையொன் றெய்தார்" (தேவா.1087,10).* 4.சிறை; prison, jail. "அவனைக் காவலில் வைத்தார்கள்". 5. காவலாள்; watchman, guard. 6. பரண் (உரி.நி.); platform raised for watching fields. 7. காக்கப்படும் நாடு; dominion of a king as protected by him. *"காவல் குழவிகொள் பவரி னோம்புமதி" (புறநா.5,6).* 8. கவசம்; coat of mail. *"வான்புலங்காவல் கொண்டார்" (சீவக.793).*

ம., க. காவல்; தெ.காவலி.

[கா + அல் - காவல்.]

காவல்[2] *kāval,* பெ.(n.) தம்பட்டம்; a kind of drum.

[காவல் = காவலுக்காக அடித்து முழக்கப்படும் தோற்கருவி.]

காவல்[3] *kāval,* பெ.(n.) தண்ணீர்; water.

[கூவல் → காவல். (கிணற்றுநீர்) (கொ.வ.).]

காவல்கட்டு *kāval-kaṭṭu,* பெ.(n.) 1. தக்க காப்பு; strong guard, strict watch. 2. நோயாளியின் பத்தியப் பாதுகாப்பு (யாழ்ப்.); strict attention to the diet of a sick person.

மறுவ.கட்டுக்காவல்

[காவல் + கட்டு. கட்டு = கட்டுப்பாடு.]

காவல்கா-த்தல் *kāval-kā-,* 4 செ.குன்றாவி (v.t) காவற்றொழில்செய்தல்; to watch, guard, protect.

க. காவல்குடு

[காவல் + கா.]

காவல்காரன் *kāvalkāraṉ,* பெ.(n.) ***காவற்காரன்*** பார்க்க; see *kāvaṟkāraṉ*.

[காவல் + காரன்.]

காவல்செய்[1]**-தல்** *kāval-sey-,* 1 செ.குன்றாவி (v.t.) 1.பாதுகாத்தல்; to guard, defend. 2. சிறைவைத்தல்;

to imprison, put in jail. confine. *"கணிகை மகளையும் காவல்செய் கென்றனன்" (மணிமே.22,214).*

க. காவலிடு

[காவல் + செய்.]

காவல்செய்²–தல் *kāval-sey-,* 1.செ.கு.வி. (v.i) களத்துநெற்குவியலில் அடையாளம் வைத்துப் பூதம் முதலிய அணுகாதபடி பாதுகாப்புச் செய்தல் (யாழ்ப்.); to protect a heap of grain from demons by passing a straw rope over the heap in the field or making diagrams with the rope on the ground or placing on the heap a handful of moist cow dung.

[காவல் + செய்–.]

காவல்துறை *kāvalturai,* பெ.(n.) ***காவற்றுறை*** பார்க்க; see *kāvarrurai.*

[காவல் + துறை.]

காவல்தெய்வம் *kāvalteyvam,* பெ.(n.) ***காவற்றெய்வம்*** பார்க்க; see *kāvarreyvam.*

[காவல் + தெய்வம்.]

காவல்பரண் *kāvalparaṉ,* பெ.(n.) ***காவற்பரண்*** பார்க்க; see *kāvarparaṉ.*

து. காவல் தொம்ப

[காவல் + பரண்.]

காவல்புரப்பு *kāval-purappu,* பெ.(n.) அரசுக்குக் எதிராகச் செய்த குற்றத்திற்காக விலக்கப்பட்ட காவற்காரனுக்கு மாற்றாக அமர்த்தப்பட்ட புதிய காவற்காரன் ஆண்டுதோறும் செலுத்திவரும் வரி (R.T.); an annual tax paid by a watchman appointed in the place of another dismissed for an offence against the government.

[காவல் + புரப்பு.]

காவல்மரம் *kāvalmaram,* பெ.(n.) ***காவன்மரம்*** பார்க்க; see *kāvaṉmaram.*

[காவல் + மரம்.]

காவல்மாளிகை *kāval-māḷigai,* பெ.(n.) காவற்காரர்கள் தங்கியிருந்து காவல் புரிவதற்காக அமைக்கப்பட்ட சிறுகோபுரம்; watch tower, a small turret where sentinels or watch guards are stationed.

ம. காவல் மாளிக

[காவல் + மாளிகை. மாளிகை = உயரமான இருப்பிடம்.]

காவல்மாற்று–தல் *kāval-māṟṟu-,* 5 செ.குன்றா.வி. (v.t.) இளைப் பாறுதற் பொருட்டுக் காவலாளரை முறைமாற்றி வேலைக்கு வைத்தல்; to relieve the guard, change sentinels.

[காவல் + மாற்று.]

காவல்மிராசு *kāval-mirāšu,* பெ.(n.) காவல் செய்வதற்காகப் பெறும் வழிவழியான மரபுரிமை; hereditary right of watchmen.

[காவல் + மிராசு.]

காவல்மேரை *kāval-mērai,* பெ.(n.) காவலுக்காகக் கொடுக்குங் களஉரிமை; share of produce given to the village watchman on the threshing floor. (R.T.).

[காவல் + மேரை.]

காவல்வழக்கு *kāval-vaḷakku,* பெ.(n.) காவற் காரனுக்குக் கொடுக்கும் வரி (R.T.)customary fees paid to watchmen.

[காவல் + வழக்கு.]

காவலம் *kāvalam,* பெ.(n.) 1. தோண்டிப்பூ மரம்; blood drop ordure tree. 2. பூந்தாளி; stringing fruited ordure tree (சா.அக.).

[கா → காவலம்.]

காவலர் *kāvalar,* பெ.(n.) **1.** அரசர்; king. **2.**கணவர்; husband. **3.** காவற்காரர்; guard (இரு.நூ.).

காவலளி–த்தல் *kāvalaḷi,* **4 செ.குன்றாவி.(v.t.)** ***காவல் செய்–தல்*** பார்க்க; see *kāvalcey.*

து. காவல் தீபுனி

[காவல் + அளி.]

காவலறை *kāval-arai,* பெ.(n.) 1. காக்கப் படுவதாகிய கருவூலம்; public treasury as guarded. *"காவ லறையழித் தரும்பொருள் கவர்ந்தே" (திருவாலவா.25,4).* 2. காவல்காத்து நிற்கும் அறை; watch house.

ம.கவாலற.

[காவல் + அறை.]

காவலன் *kāvalan,* பெ.(n.) 1. பாதுகாப்போன்; protector, guardian. "அருட்கா வலன்பா லொன்றி" (தாயு.காண்பே.2). 2.அரசன்; king. *"காவலன் காவா னெனின்" (குறள்,560).* 3. மெய்காப்போன் (சூடா.); bodyguard.4.கணவன்; husband. *"பொலங்குழையார் காவலர்சொற் போற்றல் கடன்" (இலக்.வி.658,உரை).*

[காவல் → காவலன்.]

காவலாள் *kāva-lāḷ,* பெ.(n.) ***காவற்காரன்*** பார்க்க; see *kāvārkāran.*

க. காவலவ; தெ. காவலிகாடு, காவலிவாடு.

[காவல் + ஆள்.]

காவலாளன் *kāval-āḷan,* பெ.(n.) ***காவற்காரன்*** பார்க்க; see *kāvarakāran.*

[காவல் + ஆளன்.]

காவலாளி *kāvalāḷi,* பெ.(n.) 1. ***காவற்காரன்*** பார்க்க; see *kāvarkāran* 2. கணவன் (யாழ்ப்); husband.3. கோலாமீன்; fish known as kōlāmin.

ம.காவலாளி

[காவல் + ஆளி.]

காவல் = பாதுகாப்பு. கோலா மீன் முன்கூட்டியே தம் பகை அறிந்து குறிப்புணர்த்தும் தன்மையால் பெற்ற பெயராகலாம்.

காவலாளி *kāvalāli,* பெ.(n.) இரவிலும், விழிப்பாக நோயாளிகளைப் பாதுகாக்கும் ஆண் அல்லது பெண்; a male or female waking in the night and nursing the patients. (சா.அக.).

[காவல் + ஆளி.]

காவலி *kāvali,* பெ.(n.) காவல் வேலை; police duty.

[காவல் → காவலி. (இ.வ.).]

காவலிடு-தல் *kāvalidu,* 17 செ.குன்றாவி.(v.t.) ***காவல் செய்-தல்*** பார்க்க; see *kāvalcey.*

க. காவலிடு

[காவல் + இடு]

காவலிரு-த்தல் *kāvaliru,* 3 செ.கு.வி.(v.i.) ***காவல்கா-த்தல்*** பார்க்க; see *kāvalkā.*

க.,பட. காவலிரு

[காவல் + இரு.]

காவவுசில் *kāvavusil,* பெ.(n.) வாழை; plantain tree (சா.அக.).

மறுவ. காவற்கலி

[காவு + உசிலம்.]

காவற்காரன் *kāvarkāran,* பெ.(n.) காவல் காப்பவன்; a guard, watcher.

க. காவலுகார

[காவல் + காரன்.]

காவற்குதிரை *kāvarkudirai,* பெ.(n.) காவலுக்குப் பயன்படுத்தப்படும் குதிரை; horse of a cavalry.

க. காவலுகுதுரெ

[காவல் + குதிரை.]

காவற்பரண் *kāvarparan,* பெ.(n.) பயிருக்கு அழிவை உண்டாக்கும் விலங்கு ஆகியவற்றை விரட்ட அமைக்கப்படும் பரண்; a thatched and raised platform for the guard to oversee the field and protect it from animals and birds.

து. காவல் தொம்ப

[காவல் + பரண்.]

காவற்றுறை *kāvaṟṟuṟai,* பெ.(n.) சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை நடைமுறைப்படுத்த உதவும் துறை; police department.

[காவல் + துறை.]

காவற்றெய்வம் *kāvaṟṟeyvam,* பெ.(n.) ஊர்த்தெய்வம் (கிராமத் தெய்வம்); village deity.

[காவல் + தெய்வம்.]

ஒவ்வொரு தீவிற்கும் ஊருக்கும் காவல்தெய்வம் இருந்தது. நாவலந் தீவிற்குச் 'சம்பாபதி' என்னும் நாவல் மகளும், மதுரைக்கு மதுராபதியும் காவல் தெய்வம். நாவல் தெய்வ இருக்கை காவிரிப்பூம்பட்டினமென்று மணிமேகலை கூறுவதால் சோழநாடு முதற் காலத்திற் பனிமலை வரை பரவியிருந்தமை உய்த்துணரப்படும்.

அரசர் சிலர் ஒவ்வொரு பூதத்தைத் தமக்குக் காவல் செய்ய அமர்த்தியிருந்தனர். முசுகுந்தச் சோழன் காவற் பூதப்படிமை, புகார் நடுச் சதுக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. முனியன் என்பது காவற் பூதங்களுள் ஒன்று. எல்லம்மன், எல்லைக் கறுப்பன் என்பன சிற்றூர்க் காவல் தெய்வங்கள் (தமிழர் மதம். 85,86).

காவன் *kāvaṉ* பெ.(n.) சிலந்திப்பூச்சி (பிங்.); spider.

ம. காவன்

[கா → காவன்.] (பந்தல் போல் வலை பின்னுவது)

காவன்மகள் *kāvaṉ-magaḷ,* பெ.(n.) தினைப்புனம் காவல் புரியும் பெண்;women watching the crop in the form.

[காவல் + மகள்.]

காவன்மகளிர் *kāvaṉ-magaḷir,* பெ.(n.) போரில் தோற்ற பகைவரின் மனையோராய்ச் சிறைபிடிக்கப் பட்ட மகளிர் (சீவக.154, உரைவிசேடக் குறிப்பு); captive wives of enemies.

[காவல் +மகளிர்.]

காவன்மரம் *kāvaṉ-maram,* பெ.(n.) பகைவர் அணுகாத வண்ணம் வளர்த்துக் காக்கப்படும் காவன் மரம்; tree planted and well guarded as a symbol of sovereign power or dominion, in ancient times.

[காவல் + மரம்.]

பண்டைத் தமிழரசர் ஒவ்வொரு மரத்தைத் கடி மரம் அல்லது மகாவல் மரமாகக் கொண்டு அதைப் பகைவர் அண்டாதபடி கருத்தாய்க் காத்து வந்ததனாலும், கா என்னும் சோலைப் பெயர்க்குக் காத்தற் பொருளுமிருப்பதாலும் ஒவ்வொரு திருப்பதியிலும் கடவுளுருவிற்கு நிழல்தந்து நிற்கும் மரம் தலமரம் எனப் போற்றப்படுதலினாலும் முற்காலத்தில், மக்கள் அடிமுதல் முடிவரை கிழங்கும் பாலும் கீரையும் பூவும் காயும் கனியும் நிழலும் உறையுளுமாகப் பலவகைப் பயனுதவிக் காத்த மரங்களையும் சோலைகளையும் தெய்வங்களாக வழிபட்டு வந்தனர் என ஊகிக்க இடமுண்டு (சொல்.கட். 18).

காவன்முரசம் *kāvaṉ-murašam,* பெ.(n.) காத்தற்றொழிலுக்கு அறிகுறியான அரசனின் முரசு; royal drum. *"காவன் முரசம் நாட்காலையிலே முழங்க" (பு.வெ.9:14 உரை).*

[காவல் + (முரசு + அம்) முரசம்.]

காவன் முரசு *kāvaṉ-murašu,* பெ.(n.) காவன் முரசம் பார்க்க; see *kāvaṉmurašam.*

[காவல் + முரசு.]

காவன்முல்லை *kāvaṉ-mullai,* பெ.(n.) அரசனாட்சியைச் சிறப்பிக்கும் புறத்துறை (பு.வெ.8:24); Puram theme of extolling the king's rule.

[காவல் + முல்லை = காவன் முல்லை. முல்லை = கற்பின் அடையாளப்பூ; அறநெறி பிழையாமை; அரசனின் உயர்பண்பினைக் காட்டும் முல்லைத் துறையில் பாடத்தக்க பெருமையுடைய அரசாட்சிச் சிறப்பு என்பது அதன் பொருள்.]

காவனிகுதி *kāvanigudi,* பெ.(n.) காவற்காரர் செலுத்தும் வரி; (CG) duty paid by village watchmen for enjoyment of their privileges.

[காவல் + நிகுதி.]

காவாளி *kāvāḷi*, பெ.(n.) ***காய்வேளை*** பார்க்க; see *kāyvēḷai*.

[காய்வேளை → காவாளி.]

காவளை *kāvaḷai*, பெ.(n.) ***காய்வேளை*** பார்க்க; see *kāyvēḷai*.

[காய்வேளை → காவளை.]

காவா *kāvā*, பெ.(n.) காட்டுமல்லிகை (M.M.38); wild jasmine.

[கா – காவு (காடு) காவான் → காவா = காட்டிலிருந்து கிடைத்த மல்லிகை.]

காவாங்கரை *kāvaṅ-karai*, பெ.(n.) வாய்க்காற் கரை (இ.வ.); bank of a channel.

[கால்வாய் + கரை → காவாங்கரை.]

காவா *kāvāy*, பெ.(n.) புல்வகை (வின்.); a kind of grass.

[கலை → காலை → காவாய்.]

காவாரம் *kāvāram*, பெ.(n.) நீர்ப்பாசி; duck weed. (சா.அக.).

[கா → காவாரம்.]

காவாலன்கொடி *kāvālaṅ-koḍi*, பெ.(n.) கவலைக்கொடி; star flower swallow wort. (சா.அக.).

[கவலை → காவலான் + கொடி.]

காவாலி¹ *kāvāli*, பெ.(n.) இளமை, வீண் பிதற்றல், ஏய்ப்பவன்; young of chap, trailor, bluff, rogue (இரு.நூ.).

[கவல் → கவலி → காவாலி.]

காவாலி² *kāvāli*, பெ.(n.) சிவன்; šiva. *"கற்றா னஞ்சாடு காவாலி" (பதினொ.சிவ. திருவந்.90).*

[வ.கபாலம் – கபாலி > த.காவாலி.]

காவாலி¹ *kāvāli*, பெ.(n.) திருநீற்றுப் பச்சை; holy ashes leaf (சா.அக.).

[கா + ஆலி.]

காவாளர் *kāvāḷar*, பெ.(n.) காவடி சுமப்போர் (சிலம்பு.15:20.5); carriers of *kāvaḍi*.

[காவு + ஆளர்.]

காவாளி *kāvāḷi*, பெ.(n.) காவடிக்காரர் (இரு.நூ.); carriers of *kāvaḍi*.

[காவு + ஆளி.]

காவாளை *kāvāḷai*, பெ.(n.) 1. காட்டுமல்லிகை; wild jasmine. 2. காய்வேளை (இரு.நூ.); five leaved clesme.

[கா + வேளை → காவேளை → காவாளை.]

மறுவ : காவாளி (மலை)

காவாறு *kāvāṟu*, பெ.(n.) கட்டடச் சாரம் (முக.வழ.); supporting rafters.

[கா + ஏறு → காவேறு – காவாறு (கொ.வ.).]

காவி¹ *kāvi*, பெ.(n.) 1. காவிக்கல் (பிங்.)red ochre 2. ஆடையிலேறும் பழுப்பு; light yellowish-brown colour in garments consequent on frequent washing. 3. தாம்பூலம் முதலியவற்றால் பல்லில் ஏறும் பழுப்பு நிறம்; colour of the teeth as from chewing betel. 4.கருங்குவளை; blue nelumbo. *"காவி சேருங் கயற்கண்ணாள் பங்கா" (திருவாச. 32:5).* 5. அவுரி மருந்துருண்டை (மூ.அ) indigo cake.

ம.,க.,தெ.,து.காவி

[கரு → கா → காவு → காவி. கருநிறம் மங்கிய நிறத்தைக் குறித்தது.]

காவி² *kāvi*, பெ.(n.) கள் (பிங்); toddy.

[கால் → காவு → காவி.]

காவி³ *kāvi*, பெ.(n.) கருநொச்சி (யாழ்.அக.); villow leaved justicia.

[கா → காவு → காவி.]

காவிக்கருப்பி *kāvi-kkruppi* பெ.(n.) கொடிவேலி; Ceylon lead wort (சா.அக.).

[காவி + கருப்பி.]

காவிக்கல்[1] *kāvi-k-kal,* பெ.(n.) ஒருவகைச் சிவப்புக் கனிமம்; ochre reddle red stone. "அடலுறுநற் காவிக்கல்" (பதார்த்த.1132).

து. காவிகல்லு

[காவி [1] + கல்.]

காவிக்கல்[2] *kāvikkal,* பெ.(n) 1. செம்மண்; red achre (red check) 2. செங்குழுநீர்க் கல்; stone of the colour of red Indian water lily.

[காவி + கல்.]

காவிக்கொள்(ளு)தல் *kāvi-k-kol-,* செ.குன்றாவி. (v.t.) தோளால் சுமந்து கொள்ளுதல் (கோ.தமி.கை.).

[காவி →காவு →காவி + கொள்.]

காவிகம்[1] *kāvaigam* பெ.(n.) கருந்தினை; black millet (சா.அக.).

[கருப்பு →கப்பு →காவி →காவிகம். (கொ.வ.).]

காவிகம்[2] *kāvigam,* பெ.(n.) சேங்கொட்டை; dhoby's nut (சா.அக.).

[கருப்பு → காவிகம்.]

காவிச்சீமைச்சுண்ணாம்பு *kāvi-c-cimai-cuṇṇāmbu,* பெ.(n.) சிவப்பும் மஞ்சள் நிறமும் கலந்த சுண்ணாம்பு; hydrated brown and yellow limonites. (சா.அக.).

[காவி + சீமை + சுண்ணாம்பு.]

காவிச்சீலை *kāvi-c-cilai,* பெ.(n.) செம்மண்சீலை; a dark red cloth (சா.அக.).

[காவி + சீலை.]

காவிதம் *kāviḍam,* பெ.(n.) கருங்குவளை; black water-lily. (சா.அக.).

[கருப்பு →கப்பு →காவி →காவிகம்.]

காவிதி *kāvidi,* பெ.(n.) 1. வேளாளர்க்குப் பாண்டியர் கொடுத்துவந்த ஒரு பட்டம் (தொல். பொருள்.30,உரை); ancient title bestowed on Velalas by Pāṇdya kings. 2. வணிகமாதர்பெறும் பட்டவகை; title conferred on Vaisya ladies. *"எட்டி காவிதிப் பட்டந் தாங்கிய மயிலியல் மாதர்" (பெருங்.இலாவாண.3:144).* 3. அமைச்சர் (திவா.) ; minister. 4. கணக்கர் இனம் (சூடா.); accountants caste. 5.வரி தண்டும் அரசுத்தலைவர்; collector of revenues.

மா. கவதி (முடித்திருத்துவோர்); **க.** கவிதி.

[கா →காவு →காவுதி →காவிதி. (தோளில் தொங்கவிடும் மெல்லிய நீள்துண்டு அல்லது மேலாடை. ஒருவரைப் பெருமைப்படுத்துவதற்காக அணிவிக்கும் மேலாடையின் பெயர், அவர் பெறும் பதவிக்கு ஆகுபெயராயிற்று).]

காவிதி என்னும் மேலாடை அணிந்த அமைச்சர் பதவியும் அமைச்சரும் காவிதியாயினர். (காவுதல் = சுமத்தல்). தோளில் அணிவிக்கப் பட்ட விலையுயர்ந்த ஆடை காவிதி எனப்பட்டது. குச்சரமொழியில் தோளில் துண்டு தாங்கிய துறவியை 'காவட' என்றும், 'காபடி' என்றும் வழங்குதல் காண்க. இடது தோளில் தொங்கும் மேலாடை (மெல்லிய சரிகை நெடுந்துண்டு. "புடைவீழந்துகில் இடவயின் தழீஇ" (நெடுநல்.181) என நக்கீரரும் குறிப்பிடுதல் காண்க.

காவிதிக்காணி *kāvidikāṇi,* பெ.(n.) காவிதிப் பட்டம் பெற்றாருக்கு அரசோ, ஊர்ச் சபையினரோ அளிக்கும் இறையிலிநிலம்;tax free lands granted to people with *kāvithi* title. *"இவ்வூர் மத்யஸ்தன் தம்பிமார் காவிதிக்காணி" (தொகல்.தொ. xix. கல்.63).*

[காவிதி + காணி.]

காவிதிகணை *kāvidi-k-aṇai* பெ.(n.) காவிதிப் பட்டம் பெற்றோர் பெறும் கணையாழி மோதிரம்;*kanayāḷi* ring given to people with *kāvithi* title. *"சுந்தரபாண்டிய ஈஸ்வரத்து தேவரடியாள தேவன் கருதாச் சிலைக் காவிதி மகள் காவிதி கணை பெற்றாள்" (தெ.கல்.தொ.14, கல். 83).*

[காவிதி + கணை.]

காவிதிப்புரவு *kāvidi-p-puravu,* பெ.(n.) அரசராற் காவிதியர்க்குக் கொடுக்கப்பட்ட ஊர் (நன்.

158,மயிலை.); land bestowed upon the kings ministers.

[காவிதி + புரவு.]

காவிதிப்பூ *kāvidi-p-pū,* பெ.(n.) காவிதி யென்னும் பட்டத்துடன் அரசர் அளிக்கும் பொற்பூ (தொல். எழுத்து. 154,உரை); gold flower, the badge of the title *kāvidi.*

[காவிதி + பூ.]

காவிதிமை *kāvidimai,* பெ.(n.) கணக்கவேலை; accountant's work. காவிதிமை செய்ய ஒருவனுக்கு அரையன் மணவிலிங்கனான செம்பியன் பெருங் காவிதிக்குப் பங்கு அரையும் (S.I.I.ii.277).

[காவிதி → காவிதிமை.]

காவிதோய்-த்தல் *kāvi-tōy-,* 4. செ.குன்றாவி. (v.t) வண்ணமூட்டுதல்; dye or tinge with ochre, as ascetic's cloth.

[காவி + தோய்-.]

காவிப்பட்டை *kāvi-p-pattai,* பெ.(n.) சுவர்களிலிடுஞ் செம்மண்பட்டை (தஞ்.); strips of red wash alternating with white made on festive occasion on walls of temples etc.

[காவி + பட்டை.]

காவிப்பாய் *kāvi-p-pāy,* பெ.(n.) பாய்மரத்தின் அடிக்கட்டைக்கு அடுத்த பாகத்திற் கட்டப்படும் பாய் (M.Navi.83);top-sail

[காவி + பாய்.]

காவிபிடி-த்தல் *kāvi-pidi-,* 4. செ.கு.வி (vi) பழுப்புநிறம் ஏறுதல்; to acquire an yellowish brown colour as cloth by daily washing in water, to acquire a reddish colour as teeth from betel as from octure.

[காவி + பிடி.]

காவிமண் *kāvi-man,* பெ.(n.) செம்மண்; red ochre in the shape of loose earth.

[காவி + மண்.]

காவிமரம் *kāvi-maram,* பெ.(n.) பாய்மரத்தின் அடிக்கட்டைக்கு மேலுள்ள பாகம் (M.Navi.81); top mast.

[காவி + மரம்.]

காவியடை-தல் *kāviadai-,* 2 செ.கு.வி. (v.i.) ***காவியேறுதல்*** பார்க்க; see *kāvi-yēr-,* (சா.அக.).

[காவி + அடைதல்.]

காவியம் *kāviyam,* பெ.(n.) ஒக இருக்கையுள் ஒன்றான கும்பகம்; suppression of breath in yoga practice (சா.அக.).

[குவி → கவி → கவியம் → காவியம்.]

காவியம் *kāviyam,* பெ.(n.) ***காப்பியம்*** பார்க்க; see *kāppiyam.*

[த. காம்பியம் >Skt. kAvya > காவியம்.]

காவியன் *kāviyam,* பெ.(n.) ***காப்பியன்*** பார்க்க; see *kāppiyan.*

[காப்பியன் → கவியன்.]

காவியேறு-தல் *kāviyēru-,* 5 செ.கு.வி. (v.i.) செந்நிறமடைதல்; to acquire a reddish-brown colour as the teeth. (சா.அக.). **2.** ஆடையில் நீர்ப்பழுப்பேறுதல்; to have the yellowish - brown colour produced as in white cloth by constant washing.

மறுவ : காவியடைதல், காவி பிடித்தல்.

[காவி + ஏறு-.]

காவிரம் *kāviram,* பெ.(n.) கருப்பறுகு; black panic grass (சா.அக.).

[கருப்பு → கப்பு → காவு → காவிரம்.]

காவிரி *kāviri,* பெ.(n.) தமிழ் நாட்டில் ஓடும் ஆறு; a river in Tamilnadu.

மறுவ.காவேரி பொன்னி

[கா + விரி. கா • சோலை. விரி • விரிந்திருத்தல்.

இருபுறமும் சோலை அடர்ந்திருக்க ஓடும் ஆறாதலின் காவிரி எனப் பெயர்பெற்றது. மணலோடு பொன் கொண்டுவரும் என்னும் கருத்தினால் பொன்னி என்றும் காவிரிக்குப் பெயரிட்டனர்.]

காவிரிப்பட்டினம் *kāviri-p-paṭṭiṉam,* பெ.(n.) **காவிரிப்பூம்பட்டினம்** பார்க்க; see *kāviri-p-pūmpaṭṭiṉam.*

[காவிரி + பட்டினம்.]

காவிரிப்பூம்பட்டினம் *kāviri-p-pūm-paṭṭṉam,* பெ.(n.) சோழர்க்குரிய தலைநகரமும் பழைய துறைமுகப் பட்டினமுமாகிய புகார் நகரம்; ancient sea port and capital of the Chola kingdom the Khaberis of Ptolemy. *"காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்" (அகநா.107).*

மறுவ. காவிரிப்பட்டினம்

[காவிரி + புகும் (பூம்) பட்டினம்.]

காவிரிபுதல்வர் *kāviri-pudalvar,* பெ.(n.) வேளாளர் (சிலப்.148.உலை); *Vēḷāḷās* as the sons of the soil, fertilised by the Kaveri.

[காவிரி + புதல்வர்.]

காவில்லி *kā-villi,* பெ.(n.) 1. தோண்டிப் பூடு; blood drop ordue tree. 2. பூந்தாளி; stringing fruited ordue tree (சா.அக.).

[கா + வில்லி.]

காவிளாய் *kāviḷāy,* பெ.(n.) **காவிளை** (மலை.) பார்க்க; see *kāviḷai.*

[காவிளை → காவிளாய்.]

காவிளை *kāviḷai,* பெ.(n.) 1. வேளை; an annual herb growing in waste lands 2. **கொழிஞ்சி** பார்க்க; see *koḻiñji.*

மறுவ. காவிளாய்

[காய்வேளை → காவிளை.]

காவீரம் *kāvīram,* பெ.(n.) 1.அலரி; oleander. 2. மஞ்சள்; saffron(சா.அக.).

[கரவீரம் → காவீரம்.]

காவு[1]–தல் *kāvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தோளாற் காத்தண்டு சுமத்தல்; to carry on the shoulder as a palanquin; a pole with a weight at each end. *"காவினெங் கலனே" (புறநா.206).* 2. சுமத்தல்; bear or sustain anything heavy on the arms or on the head *"ஊனைக்காவி யுழிதருவர்" (தேவா.338:1).*

Fin. kantaa; **Es.** kanda.

[கா → காத்தல் = சுமத்தல். கா = காவுதல்.]

காவு[2]–தல் *kāvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) விரும்புதல்; to long for, desire. *"தேனைக்காவி யுண்ணார் சிலதெண்ணர்கள்" (தேவா.338:1).*

[அவ்வு → கவ்வு → காவு = (விரும்புதல்.)]

காவு[3]–தல் *kāvu-,* 5. செ.குன்றாவி (v.t.) 1. கடி; to bite. 2. உண்ணு; to eat.

[கவ்வு → காவு (தின், உண்) காவு – கா எனத் திரிந்து வடபுலத்து மொழிகளில் வழங்குகிறது.]

காவு[4] *kāvu,* பெ.(n.) 1. சிறுதெய்வங்களுக்கு இடும் பலி; sacrifice offered to inferior deities. காளிக்குக் காவுகொடுத்தார்கள். 2.காவுப் பொட்டுக் குரியமை; magic ointment used for mark on the forehead.

[கவ்வுதல் → கடித்தல், தின்னுதல்,உண்ணுதல். கவ்வு → காவு (உண்ணுதற்குரிய பொருள்.]

காவு காவு என *kāvu-kāvu-eṉa-,* இடை. (part) உண்ணுதற்குரிய வேட்கையோடு ; with an eagerness to eat. போடப் போட எல்லாச் சோற்றையும் காவுகாவு என்று தின்றுவிட்டான் (உ.வ.).

[காவு + காவு + என.]

காவுதடி *kāvu-taḍi,* பெ.(n.) காவடித்தண்டு; pole for carrying burdens on the shoulders.

[காவு + தடி.]

காவுப் பொட்டு *kāvu-p-poṭṭu,* பெ.(n.) பூசாரி நெற்றியிலிடும் மைப்பொட்டு (வின்.); a mark of magic ointment worn on the forehead by the temple priest.

[கருப்பு → கப்பி → காவு + பொட்டு.]

காவுவோர் *kāvuvōr,* பெ.(n.) பல்லக்குச் சுமப்பவர்; palanquin bearers.

[காவு¹ → காவுவோர்.]

காவெட்டு *kāveṭṭu,* பெ.(n.) ***காய்வெட்டு*** பார்க்க; see *kāveṭṭu.*

[காய்வெட்டு→காவெட்டு]

காவேட்டைக்காரன் *kāvēṭṭai-k-kāran,* பெ.(n.) ஊராளி இனத்தில் வேட்டைக்காரர் தலைவன்; head huntsman of the Urāḷi caste who distributes every animal that is killed.

[கா + வேட்டைக்காரன். கா=தலைவன்.]

காவேரம் *kāvēram,* பெ.(n.) குங்குமம்; a red powder used for mark on the forehead (சா.அக.).

[கரவீரம் → காவேரம்.]

காவேரி *kāvēri-,* பெ.(n.) காவிரி பார்க்க; see *kāviri.*

[காவிரி → காவேரி.]

kâvêr-i, turmeric, also the river kâvêri (Cauvery) (from its muddy colour): assumed root *kav,* to paint. Greek name of the same river, *XáBnpos* (*Kabêros*). Possibly this word may be of Sanskrit origin. I may suggest, however, the possibility of the origin of the name of the river Kâvêri, from the Dravidian *Kâvi,* red ochre, or *kâ* (*kâ-vu*), a grove, and *êr-u,* Tel. a river, or *êr-i,* Tam. a sheet of water. A celebrated temple on the banks of the river exhibits this latter word *kâ*-viz., Tiruvânei-(*k*) *kâ,* near Trichinopoly, 'the sacred grove of the elephant' (C.G.D.F.L. Pg.569).

காவேரிப்பட்டணம் *kāvēri-p-paṭṭaṇam,* பெ.(n.) காவேரியின் பெயரால் அமைந்த நகரம்; a city in the name of Kāvēri.

Pkt.paṭṭaṇa> த. பட்டணம்.

[காவேரி + பட்டணம்.]

காவேரிமணல் *kāvēri-maṇal,* பெ.(n.) இரும்புப் பொடி கலந்த மணல் (வின்.); iron sand.

[காவேரி + மணல்.]

காவேரிமான்மியம் *kāvēri-manmiyam,* பெ.(n.) காவிரியின்பெருமை கூறும் ஒரு தொன்மம் (புராணம்); name of a purana on the Kavēri river.

[காவேரி + மான்மியம்.]

காவோலை *kāvōlai,* பெ.(n.) முற்றிய ஓலை; ripe palm leaf. *"ஒலிகாவோலை" (நற்.38).*

[காழ் + ஓலை – காழோலை → காவோலை.]

காழ்¹ –த்தல் *kāḷ-,* 4 செ.கு.வி (vi) 1. முற்றுதல்; to become hard, mature. "காழ்த்த மரம்" (திரிடுக.75) 2. மனக்காழ்கொள்ளுதல்; to be firm, strong in mind, implacable. *"காழ்த்த பகைவர் வணக்கமும்" (திரிகடு.24).* 3.அளவுகடந்து மிகுதல்; to increase beyond measure, abound. *"ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க்கு" (குறள்,760.).* 4. உறைத்தல் (திவா.); to be pungent, acrid.

[கர் → காள் → காழ்.]

காழ்²–த்தல் *kāḷ-,* செ.கு.வி (vi) கொல்லத் துணிதல்; to determine to kill. *"அவன் கருமங் காழ்த்தமை கண்டவர் தம்முளான்" (சீவக. நாமக.213) (த.சொ.அக.).*

[காள் → காழ்.]

காழ்³ *kāḷ,* பெ.(n.) 1. மரக்காழ் (திவா.); hardness, solidity, close grain as of timber core. 2. மனஉறுதி; strength of mind. *"காழிலா மம்மர்கொள் மாந்தர்" (நாலடி,14).* 3. கட்டுத்தறி; post to which a cow is tied. *"கவைத்தாம்பு தொடுத்த காழ்முன் நல்கல்" (பெரும்பாண்.214).* 4. தூண்; pillar. *"மாத்திரட்டிண்காழ்" (நெடுநல்.111).* 5. ஓடஞ் செலுத்தற்குரிய தண்டு; oar. "வணங்குகாழ் வங்கம் புகும்" (கலித்.92:47) 6. இருப்புக் கம்பி; iron rod. *"காழிற் சுட்டகோழூன்" (பொருந.105).* 7. யானையை செலுத்தும் பரிக்கோல்; elephant goad. *"காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்" (கலித்.2:26).* 8.கதவிற் செறியுந் தாழ் (திவா.); bolt bar as of a door. 9. விறகு (பிங்.); fire wood. 10.

காம்பு; handle, stem. "காழெஃகம்" பிடித் தெறிந்து (பதிற்றுப்.90:37) 11. கழி (சிறுபாண்.133, உரை)rafter.

[கள் → காள் → காழ்.]

காழ்[4] *kāḷ,* பெ.(n.) 1. ஒளி (திவா.); brightness, lustre. 2. செம்மணி (இரத்தினம்); gem. "பருக்காழுஞ் செம்பொன்னும்" (பு.வெ.914). 3. முத்து; pearl. *"பரூஉக்கா ழாரம்" (சிலப்.4:14.).* 4.பளிங்கு (பிங்.); crystal. 5.மணிவடம்; garland of pearls, of gems. *"முப்பத்திருகாழ்" (சிலப்.6:87).* 6. பூமாலை; garland of flowers *"ஒருகாழ் விரன்முறை சுற்றி" (கலித்.54:7).* 7.நூற்சரடு; thread, string. *"திருக்கோவை காழ்கொள" (பரிபா.6:15).* 8. முத்துவடம்; string of pearls. *"காழ்விரி வகையார மீவரு மிளமுலை" (கலித்.4).*

[கள் → காய் → காழ் (முரட்சி, முத்து). முத்தைக் குறித்த சொல் முத்தின் ஒளியையும் அழகையும் குறித்தது.]

காழ்[5] *kāḷ,* பெ.(n.) 1. விதை; seed. *"வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகா" (நாலடி.243).* 2. கொட்டை; stone, nut, kernl as of fruits. *"ஈந்தின்காழ் கண்டன்ன" (பெரும்பாண்.130).* 3. கனித்தோல் (பிங்.); skin as of fruit, rind. 4. பருக்கைக்கல் (திவா.); gravel.

[கள் → காள் → காழ். (திரட்சி) முற்றிய வித்து.]

காழ்[6] *kāḷ,* பெ.(n.) 1. கருமை; blackness *"கதுப்புவிரித் தன்ன காழக நுணங்கறல்" (சிறுபாண்.6).* 2. குற்றம்; blemish, defect, fault *"எக்காழு மிகந்துல கின்பமுற" (காஞ்சிப்பு. கழுவாய் 300).* 3. **இரும்பிலி மலை** பார்க்க; see *irumbili malai.*

[காள் → காழ் → கருமை (வே.க.121).]

காழ்[7] *kāḷ,* பெ.(n.) மரத்துண்டு; piece of wood. "தேய்வை வெண்காழ்" (புறநா.369:19).

[காள் – காழ் → திரட்சி, வன்மை.]

காழ்கொள்(ளு)–தல் *kāḷ-koḷ-,* 16 செ.கு.வி (v.i.) முதிர்தல்; to mature, come to a climax. *"நிறையு முண்டோ காமங் காழ்கொளின்" (மணிமே. 5:20).*

[காழ் + கொள் (ளு)–.]

காழ்கோளி *kāḷ-kōḷi,* பெ.(n.) ***நெட்டிலிங்கம்*** (L) பார்க்க; see *neṭṭliṅgam.*

[காழ் +கோளி.]

காழ்ப்பு *kāḷppu,* பெ.(n.) 1. உறைப்பு (திவா.); pungency. 2. மரத்தின் உறுதியான நடுப்பகுதி; close grain as of the heart of timber. 3. நீங்கா வெறுப்பு; implacable hatred. *"காழ்ப்பு மருட்கை மதத்தோடு" (சேதுபு. மங்கல. 15).* 4. தழும்பு (இ.வ).; scar. 5. சாரம்; essence *"வெளிறுங் காழ்ப்பு மாகச் சொல்லி" (ஈடு. 6,7,1).*

ம. காம்பு

[காழ் → காழ்ப்பு.]

காழ்வை *kāḷvai* பெ.(n.) அகில்; eagle wood. *"ஆரங்காழ்வை கடியிரும்புன்னை" (குறிஞ்சிப். 93) (த.செ.அக.).* 2. அகிற் பூ ; flower of agil tree (சா.அக.).

[காழ் → காழ்வை.]

காழகம்[1] *kāḷagam,* பெ.(n.,) மியான்மர் நாடு; Burmah Myanmar. *"காழகத்தாக்கமும்" (பட்டினப். 191) (திவா.).*

மறுவ. பர்மா

[காழ்வை (அகில்) + அகம் – காழகம்.]

காழகம்[2] *kāḷagam,* பெ.(n.)1.ஆடை; cloth. *"புலராக் காழகம் புலரவுடீஇ" (திருமுரு. 184).* 2. கையுறை; glove put on while handling an arrow *"வினைமாண் காழகம் வீங்கக் கட்டி" (கலித்.7).*

[காழ்[3] +அகம். காழ், கருநிறம், கருநிற முடைய ஆடை, கருநிறக் கையுறை.]

காழகம்[3] *kāḷagam,* பெ.(n.) கருமை; blackness. *"காழகமுட்டடபட்ட" (சீவக 1230).*

[கால் → காழ் → காழகம். (வேக.121).]

காழகம்[4] *kāḷagam,* பெ.(n.) கழுதை (அக.நி.); ass.

தெ. காடிதெ

[காள் → காழ் → காழகம் (காள்காள் எனக்கத்துவது).]

காழம் *kāḷam,* பெ.(n.) நீலநிற ஆடை; a blue garment. *"காழமிட்ட குறங்கினன்" (கம்பரா. கங்கைப். 31).*

[காழகம் → காழம்.]

காழி¹ *kāḻi,* பெ.(n.) மிகுவலி, உறுதி; great strength, toughness, hardness. *"காழிக்கிளர் நாவலந் தீவில்" (ஞானவா.கற்கடி.8).*

[காழ் → காழி.]

காழி² *kāḻi,* பெ.(n.) சீர்காழி என்னும் ஊர்; place name cirgāḻi.

[சீர்காழி → காழி.]

காழிப்பிரான் *kāḻipirāṉ* பெ.(n.) சம்பந்தன்; Saint Sambandan.

[சீர்காழி→காழி. காழி + பிரான்.]

காழியர்கோன் *kāḻiyarkōṉ* பெ.(n.) திருஞான சம்பந்தர்; Šaiva Saint, Gnanasambandar. *"கண்ணாருங் காழியர்கோன் கருத்தார் வித்த" (தேவா.170:1).*

மறுவ. காழிப்பிரான்

[சீர்காழி→ காழி → காழியர் + கோன்.]

காழோர் *kāḻōr* பெ.(n.) கரிக்கோலினராகிய யானைப்பாகர் ; mahouts. *"காழோர் வாலுவர் கடுந்தே ரூருநர்" (சிலப். 22:12).*

[காழ்² → காழோர்.]

காளக்கவி *kāla-k-kavi,* பெ.(n.) **காளப்புலவர்** பார்க்க; see *kāla-p-pulavar*

[காளம் = எக்காளம். காளம் + கவி.]

காளகண்டம்¹ *kāḷa-kaṇḍam,* பெ.(n.) குயில் (பிங்.); koel, kuil, Indian cuckoo.

[காளம் + கண்டம் → காளகண்டம் = கரிய கழுத்துடையது. காளம் = கருமை, கண்டம் = கழுத்து.]

காளகண்டம்² *kāḷa-kaṇḍam,* பெ.(n.) 1. மயில்; peacock. 2. கரிக்குருவி; wagtail. 3. ஊர்க் குருவி; sparrow. 4. வேங்கைமரம்; East Indian kino tree.

ம. காளகண்டம்

[காளம் + கண்டம் – காளகண்டம். காளம் = கருநிறம், கருநீலநிறம் கொண்ட கண்டம் (கழுத்து) கொண்ட மயிலும் கரிக்குருவியும் இந்நிறத்தன எனக் கருதினர். கருநிற அடிப்பகுதி கொண்டதால் வேங்கைமரத்தையும் சுட்டியது.]

காளகண்டன் *kāḷa-kaṇḍaṉ,* பெ.(n.) சிவன் (உரி.நி.); Siva, as having azure - coloured neck.

ம. காளகண்டன்

[காளம் + (கண்டம்) கண்டன் → காளகண்டன். காளம் = நஞ்சு. கண்டம் = தொண்டை.]

காளகண்டி¹ *kāḷa-kaṇḍi,* பெ.(n.) காளி; Durga.

[காளம் = கறுப்பு, நஞ்சு. கண்டம் = தொண்டை. கண்டம் → கண்டி (கண்டம் உடையவள்)]

காளகண்டி² *kāḷakaṇḍi,* பெ.(n.) ஏழு அமங்கல நாள்களுள் ஒன்று; one of the seven inauspicious days. *"கருதுங் கலிகாள கண்டியுந் தீதெனக் காட்டினரே" (விதான. குணாகுண. 78,79.) (த.சொ.அக.).*

[காளம் + கண்டி]

காளகந்தம் *kāḷakandam,* பெ.(n.) வெள்வேல்; white babool (சா.அக.).

[காளம் + கந்தம்.]

காளகம்¹ *kāḷagam,* பெ.(n.) 1.சோறு; boiled rice. 2. ஈரல்; liver. 3. சிவப்புச்சோளம்; red maize (சா.அக.).

[காளம் → காளகம் (வெந்தது, சிவந்தது).]

காளகம்[2] *kāḷagam,* பெ.(n.) 1.கருமை; blackness. *"காளக வுடையினள்" (சீவக. 320).* 2. சேங்கொட்டை (L); marking-nut. 3. ***மருக்காரை*** (மலை.) பார்க்க; see *marukkārai.*

காளம்>வ. காலக்க

[காளம் → காளகம் (வே.க.121.) காளம் → கருப்பு.]

காளகம்[3] *kāḷagam,* பெ.(n.) எக்காளம் (வின்.); long trumpet, ram's horn.

[கால் → கார் → காளம் → காளகம் = நீண்ட இசைக்கருவி, எக்காளம். கால் = நீட்சி.]

காளகன்று *kāḷa-kaṉṟu,* பெ.(n.) ***காளைக்கன்று*** பார்க்க; see *kāḷai-k-kaṉṟu.*

[காளை + கன்று = காளகன்று. (கொ.வ.).]

காளகன்னாதம் *kāḷakaṉṉadam,* பெ.(n.) 1.கறுப்புக்கல் நாதம்; fossil exudation from black granite stone. 2. வெண்கல் மலை; white stone mountain (சா.அக).

[காளம் + கல் + (நதம்) நாதம்.]

காளகாசம் *kāḷakāśam,* பெ.(n.) அவுரி; Indigo plant (சா.அக.).

[காளம் + காசம்.]

காளகாதம் *kāḷa-kādam,* பெ.(n.) வன்னிமரம்; arjuna penance tree.

மறுவ. பரம்பை (சா.அக.)

[காளம் + காதம்.]

காளகூடம் *kāḷa-kūḍam,* பெ.(n.) 1.பாற்கடலில் தோன்றிய நஞ்சு (ஆலகாலம்) (பிங்.); poison from the sea of milk kept by Siva in his throat in order to save the Devas from destruction. 2. ஒரு நிரயம்; a hell. *"கோளனைக் காளகூட நரகிற் கவிழ்த்தனர்" (குற்றா.தல.கவுற்.60.).*

ம. காளகூடம்

[காளம் = நஞ்சு, கருமை, துன்பம். கூடம் = ஒன்று கூடும் இடம். காளம் + கூடம்.].

காளச்சிலை *kāḷa-c-cilai,* பெ.(n.) வைடூரியம் (சங்.அக.); cat's eye, a variety of chalcedony.

[காழ் → காழம் → காளம் + சிலை – காளச்சிலை = கட்டியான கல்.]

காளச்சீரகம் *kāḷa-c-cīragam,* பெ.(n.) ***காட்டுச்சீரகம்*** பார்க்க; see *kāṭṭu-c-cīragam.*

ம. காளசீரகம்

[காள(ம்) + சீரகம்.]

காளசத்திரம் *kāḷaśattiram,* பெ.(n.) பாக்கு; areca nut (சா.அக.).

[காளம் + சத்திரம்.]

காளசுந்தரி *kāḷaśundari,* பெ.(n.) 1. உமை; Goddess Uma. 2. காளி, கொற்றவை; *kāḷi,* Parvati.

[காளம் + சுந்தரி.]

காளசூரம் *kāḷaśūram,* பெ.(n.) சிவதைவேர்; Indian falap (சா.அக.).

[காளம் + சூரம்.]

காளத்தி *kāḷatti,* பெ.(n.) வட ஆர்க்காடு மாவட்டத்தில் சிவன் கோயில் கொண்டுள்ள ஓர் ஊர்; a Siva shrine in north Arcot-district. *"மகிழ்ச்சி பொங்கக் காளத்தி கண்டு கொண்டு" (பெரியபு. கண்ணப்ப. 100).*

[காளம் + அத்தி → காளத்தி (கருங்குன்று).]

காளத்தீசுவரர் *kāḷattīśuvarar,* பெ.(n.) திருக்காளத்தியில் கோயில் கொண்டிருக்கும் சிவன் (சா.அக.); a Siva shrine in *Thirukkāḷatti.*

காளத்தீர்க்கி *kāla-t-tirkki,* பெ.(n.) 1.குளிரி; water archer. 2. மயில்விசிறி; fan made for peacock's feather. 3. நச்சு முறிக்கும் மருந்து; antidote (சா.அக.).

[காளம் + தீர்க்கி. காளம் = நஞ்சு.]

காளப்புலவர் *kāla-p-pulavar,* பெ.(n.) ஊது காளத்தை விருதாகப் பெற்ற புலவன்; (தக்கயாகப். பக்.) 277 poet whose presence is proclaimed by blowing a trumpet as mark of honour.

[காளம் = எக்காளம். காளம் + புலவர்.]

அரசனால் அல்லது புரவலரால் அரசப் பெருங் குடி மக்களுக்கு உள்ளது போன்ற உயர் மதிப்பு நடைமுறைகளைப் புலவர்களுக்கும் நடைமுறை களாகத் தந்து பெருமை படுத்தப் படுவது உண்டு. வருகையின்போதும் புறப்பாடின்போதும் எக்காளம் ஊதுவோர் உடன்வரச் செய்யும் பெருமை பெற்ற புலவர்.

காளபந்தம் *kāla-pandam,* பெ.(n.) ஒருவகை விளக்கு; a kind of light (த.சொ.அக.).

[காளம் + பந்தம்.]

காளபம் *kālabam,* பெ.(n.) போர் (சூடா.); battle, fight, warfare.

[காளகம் → காளவம் → காளபம் (கொ.வ.).]

காளம்[1] *kālam,* பெ.(n.) 1.கருமை; blackness. *"காளமா கிருளை" (சீவக. 2245).* 2. நஞ்சு (திவா.); poison, venom. 3. பாம்பு (சங்.அக.); serpent. 4. எட்டிமரம் (சூடா.); strychnine. 5. அவுரி (மலை.); Indian indigo.

[காள் → காளம். (வே.க. 120.)

kāla, krishna, black; a black colour. Gt. (p.520) and Cl. (p.501) derive *kāla* from D. *kāl*3. Cf.D. kad, etc., kandu 6, kari 3, kare 7, kare, kargu 2 and 3, karpu, kalgu, *kāgu, kāḍigĕ, kāḍu*3, from which themes probably also *krishna* is derived (K.K.E.D. XXVIII).

காளம்[2] *kālam,* பெ.(n.) 1.நல்விளைவுக்குக் காரணமான பெருமழை (வின்.); heavy shower productive of good crops. 2. முகில் (சது.); cloud.

[காள் → காளம் (வே.க.120.) காளம் = கருமை, கார்மேகம், மழை]

காளம்[3] *kālam,* பெ.(n.) 1. சூலம்; trident. 2. கழு; impaling stake.

ம. காளம்

[காழ் → காழம் → காளம். காழ் = குத்துக்கோல், சூலம்.]

காளம்[4] *kālam,* பெ.(n.) ஊதுகொம்பு; trumpet, horn. *"சங்க படகம் பேரிதாரை காளம் தாளம்" (பெரியபு. திருஞான. 620.).*

ம. காளம்

[கால் → காள் → காளம் (நீண்ட இசைக்கருவி, ஊது கொம்பு)]

காளம்[5] *kālam,* பெ.(n.) திருமாலின் சக்கரப் படை (ரஹஸ்ய. 65.); Visnu's discus.

[கோளம் → காளம்]

காளம்[6] *kālam,* பெ.(n.) 1.சிறுசின்னி; birch leaved acalypha. 2. கழுகு; eagle (சா.அக.).

[காள் → காளம்.]

காளம்பிடி-த்தல் *kālam-pidi,* 4 செ.கு.வி.(v.i.) எக்காளமூதுதல்; to blow the trumpet. *"குலக்கவிக்குக் காளம் பிடித்திடிற் சின்னம்படும்" (தமிழ்நா. 83.).*

[காளம் + பிடி-.]

காளமுகி *kāla-mugi,* பெ.(n.) ***காளமுகில்*** பார்க்க; see *kāla-mugil.*

ம. காளமுகி

[காளமுகில் → காளமுகி (கொ.வ.)]

காளமுகில் *kāla-mugil,* பெ.(n.) கல்மழை பொழியும் முகில்; a cloud which rains hail-stones one of seven kinds.

மறுவ. காளமேகம்

[காழ் → காழம் → காளம். (திரண்ட பனிக்கட்டி, ஆலங்கட்டி). காளம் + முகில். (காளமுகில் = ஆலங்கட்டி, பொழியும் முகில்.).]

காளமேகத்தி *kāla-mēgatti,* பெ.(n.) கருநாகம்; black cobra (சா.அக.).

[காளம் + மேகத்தி.]

காளமேகப்புலவர் *kāla-mēga-p-pulavar,* பெ.(n.) விரைந்து பாடும் பாவலராக (ஆசுகவி)வும், இரட்டுற மொழிதலில் வல்லவராகவும், வரதன் என்னும் இயற்பெயருடையராகவும் பெருமுகிற் போற் பாடல்களைப் பொழிபவராகவும், 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a distinguished Tamil poet of the 15th c., called from his pouring forth poems in great abundance, his real name being. Varadan. *"இருந்தால் இருந்தேன் எழுந்தேனே யாகில் பெருங்காள மேகம் பிளாய்" (தனிப்பா.).*

[காளமேகம் + புலவர். கருமழை பொழியும் காளமேகம் போலப் பாடல்களை விரைந்து பாடும் புலவர்.]

காளமேகம்[1] *kāla-mēgam,* பெ.(n.) 1.ஆலங்கட்டி மழை பொழியும் கருமேகம்; cloud which showers hail-stones. 2. காளமேகம் என்னும் பெயர் பெற்ற புலவர். **காளமேகப்புலவர்** பார்க்க; see *kāla-mēga-p-pulavar. "ஆசுகவியால் அகில உலகெங்கும் வீசுபுகழ்க் காளமேகமே" (தனிப்பா.).*

ம. காளமேகம்

[கார் → காள் → காளம் + மேகம் – காளமேகம்.]

காளமேகம்[2] *kālamēgam,* பெ.(n.) 1.தேற்றான் கொட்டை; marking nut. 2. செங்குன்றி; red Indian licorice (சா.அக.).

[காளம் = கருமை. காளம் + மேகம் (படர்ந்தது).]

காளயுத்தி *kālayutti,* பெ.(n.) ஆண்டு வட்டம் அறுபதுள் 52 ஆம் ஆண்டு; the 52nd year of the Indian cycle of 60 years.

மறுவ. காளபுத்தி

காளவஞ்சரம் *kālavañcaram,* பெ.(n.) காள வஞ்சர மலை; a mountain. *"கந்த மாதநமும் உயர் காளவஞ்சர – மந்தமில் சித்திரகூடம்" (வேதாரணி யபு. சூசுமார.6) (த.சொ.அக.).*

[காளம் + வெம் + சுரம் – காளவெஞ்சுரம் → காளவஞ்சரம்.]

காளவடிவழகி *kāla-vadivalagi,* பெ.(n.) பொன்னாங்காணி; Mari-gold verbesina (சா.அக.).

[காளம் + வடிவழகி.]

காளவாசல் காற்றாடி *kālavāśal-kārrādi,* பெ.(n.) சுண்ணாம்புக் காளவாயில் எரியும் கல்கரியை நன்றாக எரியச் செய்யக் காற்றைச் செலுத்தும் எந்திரம் (பொ.வழ.); wind blower in lime-kiln.

[காளவாசல் + காற்றாடி.]

காளவாய்[1] *kāla-vāy,* பெ.(n.) கழுதை (பிங்.); ass, as being trumpet-mouthed.

[காளம் = எக்காளம். காளம் + வாய் – காளவாய் (எக்காளம் போன்று தொடர்ந்து கத்தும் கழுதை.]

காளவாய்[2] *kālavāy,* பெ.(n.) சுண்ணாம்புக் காளவாய், செங்கல்கள் சுடுஞ்சூளை; kiln for lime or bricks.

மறுவ. காளவாசல்

ம. காளவாய்

[கால் → காள் → காளம் + வாய் (நீண்ட வாயுள்ள வடிவில் அமைக்கப்பட்ட சுண்ணாம்புச் சூளை.]

காளவாய்க்கல் *kālavāy-k-kal,* பெ.(n.) சுட்ட புதுச்செங்கல் (வின்.); bricks fresh from the kiln.

[காளவாய்[2] + கல்.]

காளவாயன் *kālavāyan,* பெ.(n.) கூச்சலிட்டுக் கத்துபவன் (வின்.); person with a trumpet tongue or a loud voice; one who blabs out secrets, babbler.

[காளவாய் + அன்.]

காளவிளக்கு *kāla-vilakku,* பெ.(n.) திருவிழா முதலிய காலங்களில் பயன்படுத்தும் பெருவிளக்கு;

lamps used for the illumination of gardens and grounds on great festive occasions.

[காளம் + விளக்கு. காளம் = நீட்சி, பருமை.]

காளன்[1] *kāḷaṉ,* பெ.(n.) கருநிறமுடையவன்; a black man. 2. இயற்பெயர்; a proper noun.

ம., பட. காளன்.

[காள் + அன்.]

காளன்[2] *kāḷaṉ,* பெ.(n.) மாழைகளை உருக்கும் உலைக்களம்; a fire-place where double bellows are used for melting metals (சா.அக.).

[காளம் = உலை.]

காளன்[3] *kāḷaṉ,* பெ.(n.) மாசாத்தாவின் படைத் தலைவனாகிய மாகாளான் (கந்தபு. மகாசாத். 67.); the commander-in - chief maha-sāsta.

[மாகாளன் → காளன். (முதற்குறை)]

காளன்[4] *kāḷaṉ,* பெ.(n.) பச்சடிவகை (இ.வ.); a savoury fluid treated with vegetables and spices in curd.

ம.காளன்

காளா *kāḷā,* பெ.(n.) மீன்வகை (m.m. 761.); robaul fish.

[காளம் → காளா.]



காளா

காளாஞ்சி[1] *kāḷāñji,* பெ.(n.) 1.தம்பலந் துப்புங் கலசம்; spittoon. 2. தாம்பூலமெடுக்குங் கலம்; betel-holder. *"பைம்பொனிற் றிகழ்தணிகை காளாஞ்சி"* (பிரபோத. 11, 31).

ம., க., தெ. காளாஞ்சி.

[காள் → காளம் → காளாஞ்சி.]

காளாஞ்சி[2] *kāḷāñji,* பெ.(n.) ஊதைநோய் வகை (வின்.); a kind of rheumatism.

[காள் → காளாஞ்சி.]

காளாஞ்சி[3] *kāḷāñci,* பெ.(n.) 1. எச்சிற் பழக்கம்; spitting habit. 2.காளசி; liquid of tambool. 3. தாம்பூலக் கமலம்; solid of tambool. 3. வாதநோய்; rheumatism (இரு.நூ.).

[காள் → காளாஞ்சி.]

காளாபிடாரி *kāḷāpiḍāri,* பெ.(n.) ஊரின் நடுவில் அமைக்கப்பெறும் சிற்றூர்த் தெய்வம் (பெண். தெய்வம்.);village female deity. *"இவ்வூர் நடு விற்சேரி திருமணி மண்டகமுடைய காளாபிடாரிக்கு நாங்கள் விற்றுக்கொடுத்த...." (கல்வெட்டு).*

காளாம்பி[1] *kāḷāmbi,* பெ.(n.) காளான்; mushroom. *"பூழி பூத்த புழற்கா ளாம்பி"* (சிறுபா. 134).

[காள் → காளான் → காளாம்பி.]

காளாம்பி[2] *kāḷāmbi,* பெ.(n.) கருங்காளான்; black mushroom.

[காள் + ஆம்பி.]

முதலிற் கரிய ஆம்பியையே குறித்த காளாம்பி, காளான் என்னும் இருபெயர்களும், பின்னர் வெள்ளாம்பிக்கும் காறாம்பிக்கும் பொதுப் பெயராகி விட்டன. "ஆவுதை காளாம்பி போன்ற" (களவழி. 86). இதில் "காளாம்பி" வெள்ளாம்பியைக் குறித்தது. காளான் என்று இருவகை ஆம்பியையுங் குறிப்பது இன்றைய உலக வழக்கு. காறாம்பியைப் பேய்க்காளான் என்பர் (வே.க.120).

காளாமுகம் *kāḷā-mugam,* பெ.(n.) மாவிரதத்தைப் பெரும்பாலும் ஒத்த சிவசமய உட்பகுதி; one of the minor systems of Saivasm closely allied to Maviradam.

[காளன் = சிவன். காளன் → காளம் → காளமுகம்.]

காளாமுகர் *kāḷāmugar,* பெ.(n.) சிவனியரில் ஒரு சாராரான காளாமுகவகுப்பினர் (பிங்.); Saiva sect following the *kaḷamugam* system.

[காளாமுகம் → காளாமுகர்.]

காளான் *kāḷāṉ,* பெ.(n.) சதுப்பு நிலங்களில் மழைக்குப்பின் தோன்றும் பச்சையமில்லாத செடிவகை; fungus mushroom, it is found largely grown in swampy soils, but generally shoots out from the earth a few days after the rain (சா.அக.).

Fin. kūkunen; **Kolami.** kūku; **Jap.** kū.

[காள் → காளான்.]

காளான்சக்களத்தி *kāḷāṉ-šakkaḷatti,* பெ.(n.) முறிவெட்டி என்னும் பூஞ்சைக்காளான் (வின்.); a kind of sea-fungus.

[காளான் + சக்களத்தி.]

காளான்சம்பா *kāḷāṉ-šambā,* பெ.(n.) காளான் நாற்றமுள்ள சம்பா நெல்வகை (பதார்த்த. 815); a kind of paddy with fungus odour.

[காளான் + சம்பா.]

காளான் வகைகள்:

1. அவற்காளான், 2.கடற் காளான், 3. குடைக் காளான், 4. நகக்காளான், 5. நிலக்காளான்,6.வரிக்காளான், 7.புற்றுக்காளான், 8. பேய்க்காளான்,9.மரக்காளான், 10. மஞ்சட் காளான், 11. பச்சரிசி காளான், 12. புழுங் கரிசிக்காளான், 13. மிதிகாளான், 14. மலைக்காளான் , 15. வலைக்காளான், 16. பொரிக்காளான், 17. கறிக்காளான், 18. இலைக்காளான், 19. நாய்க்குடைக்காளான், 20. குப்பைக்காளான், 21. முட்டைக்காளான்.

காளான்பஞ்சு *kāḷāṉ-pañju,* பெ.(n.) தீத்தட்டிப் பஞ்சு; touch wood prepared from fungus growing on trees (சா.அக.).

[காளான் + பஞ்சு.]

காளி[1] *kāḷi,* பெ.(n.) 1.கூளித்தலைவியாகிய கரிய பாலைநிலத் தெய்வம்; Durga, as being black. *"சீற்றக் காளிக டொகையும்" (கந்தபு. அசுரர்யாக. 40).* 2. மலைமகள் (சது.); *Pārvati.* 3. அரிமா (சது.); lion. 4. காற்றுக்கடவுளான காளரின் ஆற்றல் (சித். சா.ஞானபா.வியா.4); the Sakti of *kāḷa,* the *Vāyumūrtti.* 5. துணைத்தொன்மம் 18-ல் ஒன்று (திவா.); a secondary Purana one of 18 upa-purnam. 6. பரிமளகந்தி (பாரத. குருகுல.100); Parimaḷakandi, the mother of Vyasa 7. பாம்பின் நச்சுப்பல் நான்கனுள் ஒன்று (சீவக. 128, உரை); a poisonous fang of a serpent, one of four naccuppal. 8. எட்டி (மூ.அக.); strychnine. 9. கரிய மணித்தக்காளி (இராசவைத்.); black night - shade.

தெ. காளிக

[காள் → காள் → காளி. (வே.க.120).]

காளி[2] *kāḷi,* பெ.(n.) 1.காட்டுமுருக்கு (L.); palas tree. 2. கக்கரி (மலை.); kakri melon.

[கால் (நீட்சி) → காள் → காளி.]

காளிக்கங்கூட்டு-தல் *kāḷikkaṅ-kūṭṭu-,* 5 செ.கு.வி (v.i.) கருஞ்சாயங் கூட்டுதல் (வின்.); to prepare dark blue dye by compounding the necessary ingredient.

[காளிக்கம் + கூட்டு-. காளிக்கம் = கரிய வண்ணம்.]

காளிக்கம்[1] *kāḷikkam,* பெ.(n.) கருஞ்சாயம் (யாழ்.அக.); dark. blue dye for cloth.

[காளிகம் → காளிக்கம்.]

த.காளிக்கம்> வ.காலிக்க; **E.**calico.

சென்னை-600 008

காளான் வகைகள்

முட்டைக் காளான்

நாய்க் குடைக் காளான்

குப்பைக் காளான்

கறிக் காளான்

பொரிக் காளான்

வலைக் காளான்

மஞ்சட்காளான்

மரக்காளான்

காளிக்கம்[2] *kāḷikkam,* பெ.(n.) செம்புக் கனிமம் உள்ள மலை; a mountain containing copper ores.

[காள் → காளிக்கம்.]

காளிக்கமெழுது-தல் *kāḷikkam-eḻudu-,* 5 செ.கு.வி. (v.i.) சீலைத்துணியில் கருஞ்சாய வரி எழுதுதல் (வின்.); to delineate on chintz with *kāḷikkam pigment.*

[காளிக்கம் + எழுது-.]

காளிக்கோட்டம் *kāḷi-k-kōṭṭam,* பெ.(n.) காளிக்கோயில்; *kāḷi* temple.

[கள் → காளம் → காளி. கள் = கருப்பு கள்ளம், களங்கம், காளாண்ட (black mushroom) முதலிய சொற்கள் கருப்பு என்னும் மூலப்பொருளைக் கொண்டவை]

காளி வணக்கம் முற்காலத்தில் மிகச் சிறந்திருந்தது. வங்காளத்தில் உள்ள காளிக் கோட்டம் என்னும் இடப்பெயர் இன்று காளிக்கட்டம் (culcutta) - கல்கத்தா என்று திரிந்து வழங்குகின்றது. கோட்டம் = அரண், கோயில். கோடு+அம் = கோட்டம். கோடுதல் = வளைதல். கோடிய (வளைந்த) மதிலாற் சூழப்பெற்றது கோட்டம் (தொழிலாகு பெயர்). கோடு + ஐ = கோட்டை. தமிழர் அல்லது திராவிடர் பண்டு வடஇந்தியா வரை பரவியிருந்தனர் என்பதற்குக் காளிக்கோட்டமும் ஒரு சான்றாம் (ஒப்.மொழி. பக்.204).

காளிகம்[1] *kāḷigam,* பெ.(n.) துணைத்தொன்மம் 18-ல் ஒன்று (பிங்.); a secondary *Purāṇam.*

[காளி → காளிகம்.]

காளிகம்[2] *kāḷigam,* பெ.(n.) 1. கரிய மணித்தக்காளி (மலை.); black night-shade. 2. முகில்; cloud (த.சொ.அக.).

[காளி → காளிகம் (வேக.121).]

காளிகை *kāḷikai,* பெ.(n.) ஒரு தெய்வப் பெண்; an angel (த.சொ.அக.).

[காளி → காளி.]

காளிங்கம் *kāḷiṅgam,* பெ.(n.) அணிகலன்வகை; a kind of jewel. *"தெள்ளொளிய காளிங்கஞ் சோதி கிடப்பத் தொடுத்து"* (பதினொ. திருக்கை. உலா, 121).

[காள் → காளிங்கம்.]

காளிங்கராயன் *kāḷiṅga-rāyaṉ,* பெ.(n.) சோழ, பாண்டியர் காலத்து அரசுத்துறைத் தலைவர் சிலர்க்கு வழங்கிய பட்டப்பெயர் (கல்.); an ancient tittle borne by high officials of the time of Cōlās and *Pāṇḍiyās.*

[காளிங்கன் + அரையன்.]

காளிங்கன் *kāḷiṅgaṉ,* பெ.(n.) 1.கலிங்கநாட்டில் உள்ளவன்; inhabitant of the Kalinga country. 2. யமுனை ஆற்றில் கண்ணனால் அடக்கப்பட்ட ஒரு கொடிய பாம்பு; a serpent in the river Jamuna subdued by Krishna.

[கலிங்கன் → காலிங்கன் → காளிங்கன்.]

காளிச்சக்கரம் *kāḷi-c-cakkaram* பெ.(n.) காளி உருவம் பதித்த பழைய காசுவகை; an ancient gold coin, as stamped with the figure of *Kāḷi*

[காளி + சக்கரம் (வட்ட வடிவக்காசு).]

காளித்தனம் *kāḷi-t-taṉam,* பெ.(n.) கொடிய இயல்பு (இ.வ); cruelty, hard heartedness.

[காள் → காளி → தனம்.]

காளிதம் *kāḷidam,* பெ.(n.) களிம்பு; verdigris, dross. *"தாமிரத்துக்குக் காளிதஞ் சகசமா யிருக்குமாறு"* (சி.சி. 2,79. மறை.).

[களி → களிதம் → காளிதம்.]

காளிதாசன் *kāḷi-dāsaṉ,* பெ.(n.) வடமொழிப் பெரும்புலவர் ஒருவர்; *Kaḷidāsa* a famous Sanskrit poet and dramatist. *"வான்றிசைக் காளிதாசன் வடமொழி"* (இரகு. பாயி.8).

[காளி + தாசன் (காளிக்கு அடியவன்).]

விக்கிரமாதித்தன் அவையிலிருந்த தன்வந்திரி, சபணகர், அமரசிங்கர், சங்கு, வேதாளை காப்பரர், வராகமிகிரர், வரருசி என்னும் எண்மரினும் மேம்பட்ட வராய் மேகதூதம், இரகுவம்சம், குமாரசம்பவம், மிருதிசுந்தரிகை முதலிய நூல்களை இயற்றிய வடமொழிப் புலவர்.

காளிந்தி[1] *kāḷindi*, பெ.(n.) 1.வாகை; sirissa tree. 2. குளிரி; water archer. 4. நீர்ப்பசு; water cow (சா.அக.). 5. தேக்கு; teak.

[காள் → காளிந்தி.]

காளிந்தி[2] *kāḷindi*, பெ.(n.) யமுனை; the Jamuna.

[காள் → காளி → காளிந்தி (கருநிறக் கலங்கல் நீரோடும் ஆறு).]

காளிப்பணம் *kāḷi-p-paṇam*, பெ.(n.) வெள்ளையர் ஆட்சிக்கு முன்னர் ஓர் உருபா 320 காசாகப் பிரிக்கப்பட்டிருந்த காலத்தில் உருபாயில் எட்டில் ஒரு பங்கான 40 காசு; a coin of Pre-British period, 1/8 th of a rupee.

[காளி + பணம் (காளி உருவம் பொறித்த காசாகலாம்).]

வெள்ளையர் ஆட்சிக்கு முன்பு தமிழகத்தில் ஓர் உருபாவுக்கு இணையான வெள்ளிப் பணம் 320 காசாகப் பிரிக்கப்பட்டிருந்தது. புதுக்கோட்டை மன்னர் காலத் திலும் 320 விடுகாசுகளாகவே அம்மன்காசு என்னும் பெயரில் வழங்கி வந்தது. காளிப்பணம் இதில் எட்டில் ஒரு பங்காகும். வெள்ளையரின் 12 காசு ஓர் அணா, 16 அணா ஓர் உருபா என்ற பகுப்பில் காளிப்பணம் எட்டில் ஒரு பங்கான இரண்டு அணாவுக்குச் சமமாகும். சென்னை அகரமுதலியில் காளிப்பணத்தை 3 அணா 4 காசு எனக் குறித்திருப்பது பொருத்தமன்று. பழைய 320 காசுகளில் எட்டில் ஒரு பங்கு நாற்பது காசு. இதனை வெள்ளையர் காலத்து 40 காசாகக் கருதியது தவறு. அம்மன்காசுகளும் வெள்ளையர் காலத்துக் காசுகளும் சமமதிப்பு உடையவை அல்ல.

காளிமம்[1] *kāḷimam*, பெ.(n.) அறியாமை; ignorance. *"கருதியத் தடத்து மூழ்குமானவர் தங்கருத்துறு காளி மந்திரும்" (சேதுபு. சடாயுதீ. கரு.).*

[காள் = கருமை, இருள், அறியாமை. காள் → காளிமம்.]

காளிமம்[2] *kāḷimam*, பெ.(n.) 1.கறுப்பு; blackness, black colour. *"தனது காளிமங் கழிப்ப"* (கந்தபு. திருநகரப். 72). 2. களிம்பு; verdigris, dross. *"தாம்பிர காளிம மென்ன" (பிரபோத. 46,8).*

வ. காலிமன்

[காளிமை → காளிமம் (வே.க.121).]

காளிமை *kāḷimai*, பெ.(n.) ***காளிமம்*** பார்க்க; see *kāḷimam*. *"காளிமைப் பிழம்பு போத" (கம்பரா. நாகபா. 217).*

வ.காலிமா

[காளி → காளிமை (வே.க.121).]

காளிமோகம் *kāḷi-mōgam*, பெ.(n.) திருநீற்றுப் பச்சை; holy ashes leaf (சா.அக.).

[காளி + மேகம் – காளிமேகம் → காளிமோகம் (சொ.வ).]

காளியம் *kāḷiyam*, பெ.(n.) பளிங்கு; crystal (சா.அக.).

[காள் → காளியம்.]

காளியன் *kāḷiyaṉ*, பெ.(n.) கண்ணன் தன் கால்களைத் தலையில் மிதித்தாடப்பெற்ற பாம்பு; a serpent on whose hood Krishna danced. *"காளியன் பொய்கை கலங்க" (திவ். பெரியாழ். 3:9,7).*

[காளி → காளியன்.]

காளை[1] *kāḷai*, பெ.(n.) 1.இளவெருது; steer, young bullock. 2. எருது (பிங்.); bull, ox. 3. கட்டிளமைப் பருவத்தினன் (திவா.); young man, in his prime. 4. ஆண்மகன் (திவா.); man. 5. பாலைநிலத் தலைவன் (திவா.); chief of desert-fact. 6. மறவன்; warrior. *"உரவுவேற் காளையும்" (புறநா. 334).*

காளான் வகைகள்

பேய்க் காளான்

புற்றுக் காளான்

வரிக் காளான்

நிலக் காளான்

கடற் காளான்

அவற்காளான்

குடைக் காளான்

நகக் காளான்

ம.காள

[காழ் → காள் + ஐ → காளை (திரட்சிவண்ணம் பெற்றது]

காளை[1] *kāḷai,* பெ.(n.) 1.இளவெருது; steer, young bullock. 2. எருது (பிங்.); bull, ox.

ம.காள

[காழ் → காள் + ஐ → காளை (திரட்சிவண்ணம் பெற்றது]

காளை[2] *kāḷai,* பெ.(n.) 1. கட்டிளமைப் பருவத்தினன் (திவா.); young man, in his prime. 2. ஆண்மகன் (திவா.); man. 3. பாலை நிலத் தலைவன் (திவா.); chief of desertract. 4. மறவன்; warrior. *"உரவு வேற்காளையும்" (புறநா. 334).*

மறுவ.விடலை, மீளி.

[காழ் → காள் +ஐ → காளை (திரட்சிவண்ணம் பெற்றது]

காளைக்கன்று *kāḷai-k-kaṉṟu,* பெ.(n.) ஆவின் ஆண்கன்று; bull-calf.

மறுவ. காளகன்று

[காளை + கன்று.]

காளைப்பாம்பு *kāḷai-p-pāmbu,* பெ.(n.) நஞ்சில்லாத ஒருவகைப் பாம்பு; bull snake.

ம. காளப் பாம்பு

[காளை + பாம்பு]

காளைப்போர் *kāḷai-p-pōr,* பெ.(n.) காளைச் சண்டை; bull fight.

ம. காளக்களி, காளப்போரு.

[காளை + போர்.]

காளைமாடு *kāḷai-māḍu,* பெ.(n.) எருது; ox, bullock.

[காளை + மாடு.]

காளையங்கம் *kāḷai-y-aṅgam,* பெ.(n.) போர் (சது.); battle, fight, warfare.

[காளை + அங்கம்.]

காளையம் *kāḷaiyam,* பெ.(n.) பேராரவாரம்; uproar, tumult as in a battle. *"இதனிலும் பெரியதோர் காளையம் விளையுமா காண்மினோ"* (கலிங். 479).

மறுவ. காளகம்

க., து. காளஎக.

[காள் → காளயம் → காளையம்.]

காளைவண்டி *kāḷai-vaṇḍi,* பெ.(n.) மாட்டு வண்டி; a bullock-cart.

ம. காளவண்டி

[காளை + வண்டி.]

காற்கட்டு[1]**-தல்** *kāṟ-kaṭṭu,* 5 செ.குன்றாவி (v.t.) 1. செயலின்பொருட்டு வற்புறுத்துதல்; to press one to do a thing, as by preventing him from going further. *"என்னையே காற்கட்டி அவிழ்த்துக் கொள்ள வேணும்" (ஈடு. மகாப்ர.).* 2. திருமணம் செய்தல்; to marry, marriage being regarded as a hobble to one apt to stray.

[கால் + கட்டு → காற்கட்டு.]

காற்கட்டு[2] *kāṟ-kaṭṭu,* பெ.(n.) 1.காலுக்கிடும் கட்டு; fetters on the leg. 2.தடை; obstruction. 3. திருமணம்; marriage, as fetters.

ம. கால்கட்டு; க. கால்கட்டு.

[கால் + கட்டு.]

காற்கடுப்பு *kāṟ-kaḍuppu,* பெ.(n.) காலுளைச்சல்; aching pain in the feet, as from cold or too much walking.

[கால் + கடுப்பு.]

காற்கடுவன் *kāṟ-kaḍuvaṉ*, பெ.(n.) குழந்தைகட்கு வரும் கால்நோய்வகை (பாலவா. 687.); a disease of feet in children, chronic eczema.

[கால் + கடுவன்.]

காற்கடைகொள்(ளு)-தல் *kāṟkaḍai-koḷ-*, 16 செ.கு.வி. (v.i.) பொருட்படுத்தாதிருத்தல்; to discard, despise. *"அறிந்து வைத்துக் காற்கடை கொள்வாயே" (திவ்.திருப்பா. 7, வியா.).*

[கால் + கடை + கொள்(ளு)-.]

காற்கணை *kāṟ-kaṇai*, பெ.(n.) ***காற்கோமாரி***(இ.வ.) பார்க்க; see *kāṟkōmāri.*

[கால் + கணை.]

காற்கயிறு *kāṟ-kayiṟu*, பெ.(n.) கால்விலங்கு (பாண்டி); fetters.

[கால் + கயிறு.]

காற்காசு *kāṟkāśu*, பெ.(n.) ஒரு சின்னக்காசு; a coin (இரு.நூ.).

[கால் + காசு.]

காற்காந்தல் *kāṟ-kāndal*, பெ.(n.) காற்புண் (M.L.); abscess in the foot.

[கால் + காந்தல்.]

காற்காப்பு *kāṟ-kāppu*, பெ.(n.) காலில் அணியும் காப்பு; anklet.

[கால் + காப்பு.]

காற்காறை *kāṟ-kāṟai*, பெ.(n.) தெய்வப் படிமங்களின் காலில் அணிவிக்கும் அணிகலன்; foot-rings for the idol. *"திருக்காற் காறை நாற்பொன் ஐங்கழஞ்சு" (S.I.I. ii, 397).*

[கால் + காறை.]

காற்குடைச்சல் *kāṟ-kuḍaiccal*, பெ.(n.) காலுளைச்சல்; rheumatism, aching pain in the legs.

[கால் + குடைச்சல்.]

காற்குப்பாயம் *kāṟ-kuppāyam*, பெ.(n.) காற் சட்டை; troussers.

ம.கால்க்குப்பாயம்; க. கால்குப்பச.

[கால் + குப்பாயம்.]

காற்குழைச்சு *kāṟ-kuḻaiccu*, பெ.(n.) மாடு, குதிரைகளின் காற்குளம்புக்கு மேலிடத்துள்ள மயிர்க்கரண் (கால். வி. 74); fetlock.

[கால் + குழைச்சு.]

காற்குளம் *kāṟkuḷam*, பெ.(n.) பூசநாள்; the eighth naksatra. *"குருவினாள் கொடிறு சூழ்வண்டு காற்குளம்பூசம்" (சாதக.சிந்.காலநிக.16.) (த.சொ.அக.).*

[கால் + குளம்.]

காற்கூலி *kāṟ-kūli*, பெ.(n.) நடைக்கூலி; wage of walking. *"அடுத்தடுத்துப் பின்சென்றா லீவது காற்கூலி' (தமிழ்நா. 33).*

[கால் + கூலி.]

காற்கொட்டை *kāṟ-koṭṭai*, பெ.(n.) காலுக்கு இடும் திண்டு (வின்.); small bolster for the legs and feet.

[கால் + கொட்டை.]

காற்கோமாரி *kāṟ-kōmāri*, பெ.(n.) கால்நடைகளுக்கு வரும் கால்நோய் வகை (கால்.வி. 51); soreness of hoofs, a foot disease of cattle.

[கால் + கோமாரி.]

காற்கோள் *kāṟ-kōḷ* பெ.(n.) காலமாறுபாட்டால் நீர்ப்பாசனமின்றிக் கவனிப்பாரற்றுக் கிடந்த நிலம்; waste land. *"இந்நாற்பால் எல்லைக்கும் உட்பட்ட நிலம் காற்கோளாய்க் கிடந்தமையால்" (தெ.கல். தொ.51, கல். 465).*

[கல் + கோள் – கற்கோள் → காற்கோள்.]

காற்சட்டை *kāṟ-caṭṭai*, பெ.(n.) கால்களுக்கு இடும் சட்டை; trousers, pantaloons.

ம.காற்சட்ட

[கால் + சட்டை.]

காற்சப்பை *kāṟ-cappai,* பெ.(n.) 1.கால்நடைகட்குக் காலிலும் வாயிலும் வரும் தொற்று நோய்வகை (M.M. D.24); foot and mouth disease in cattle . 2. *சப்பை* பார்க்க; see *hips.*

[கால் + சப்பை.]

காற்சரி *kāṟ-cari,* பெ.(n.) பாதசரம், கொலுசு (கலித். 85:1, உரை.); an ornament for ankles.

[கால் + சரி.]

காற்சவடி *kāṟ-cavaḍi,* பெ.(n.) காலில் அணியும் அணிகலன் (சிலம்பு. 6:84, உரை.); a kind of ank let.

[கால் + சவடி.]

காற்சவுரம் *kāṟ-cavuram,* பெ.(n.) முகமழிப்பு (யாழ்.அக.); shaving the face only.

காற்சிப்பு *kāṟcippu,* பெ.(n.) இடுப்புச் சந்தெலும்பு (வின்.); hip bone.

[கால் + சிப்பு.]

காற்சிலம்பு *kāṟ-cilampu,* பெ.(n.) காலணி வகை; tinkling anklets.

ம. கால்ச்சிலம்பு

[கால் + சிலம்பு.]

காற்சுவடு *kāṟcuvaḍu,* பெ.(n.) அடிவைப்பின் குறி (உ.வ.); foot-print.

ம. கால்ச்சுவடு, கால்பாடு.

[கால் + சுவடு.]

காற்சுற்று *kāṟ-cuṟṟu,* பெ.(n.) மகளிர் கால்விரலில் அணியும் அணிவகை; small circular metal ring mostly of silver worn by women on the toes.

[கால் + சுற்று.]

காற்செபம் *kārcebam,* பெ.(n.) தினை; millet (சா.அக.).

[கால் + சேவம் – காற்சேவம் → காற்செபம் (கொ.வ.).]

காற்செருப்பு *kāṟ-ceruppu,* பெ.(n.) காலுக்கு இடும் செருப்பு; leather, sandals, slipers, shoe etc.

ம. காலுமெட்டு

[கால் + செருப்பு.]

காற்செறி *kāṟceṟi,* பெ.(n.) கால் விலங்கு; iron fetters put on the legs of the prisoner (கோ.தமி.அக.).

[கால் + செறி.]

காற்பங்கு *kāṟ-pangu,* பெ.(n.) கால் பாகம்; one fourth part.

[கால் + பங்கு.]

காற்படம் *kāṟ-paḍam,* பெ.(n.) 1.விரலை யடுத்திருக்கும் காலின் அடிப்பக்கம்; forepart of the sole of the foot. 2. புறவடி; the instep down to the toes.

ம. கால்படம்

[கால் + படம்.]

காற்படு-தல் *kāṟ-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) அழிதல்; to perish. *"எவையுங் காற்படப் புடைபெயர் கடல்" (கம்பரா. எழுச்சி.10).*

[கால்[5] + படு-.]

காற்படை[1] *kāṟ-paḍai,* பெ.(n.) 1.கோழி; cock, as using its foot for a weapon. *"காற்படைக் கொடியினன்" (கல்லா. 60:11).* 2. காலாட்படை; infantry.

மறுவ. காலாயுதம்

[கால் + படை.]

காற்படை[2] *kāṟ-paḍai,* பெ.(n.) கட்டடக் கால் கோளில் தரைக்கு மேலுள்ள பகுதி (M.E.R. 127 &

1926.); the portion of the basement of a building above the ground.

[கால் + படை.]

காற்பந்து *kārpandu,* பெ.(n.) 1. காலால் உதைத்து விளையாடுவதற்குப் பயன்படுத்தும் பந்து ; foot ball. 2. கால் பந்தால் ஆடும் ஒரு விளையாட்டு; a game played with foot ball.

க. கால்செண்டு

[கால் + பந்து.]

காற்பரடு *kār-paradu,* பெ.(n.) புறவடி; the roof or upper part of the foot.

[கால் + பரடு.]

காற்பாசியம் *kārpāśiyam,* பெ.(n.) 1. ***காய்ப் பருத்தி*** பார்க்க ; see *kāy-p-parutti.* 2. பருத்தி; Indian cotton plant (சா.அக.).

[காய்ப்பருத்தி → காற்பாசியம் (கொ.வ.).]

காற்பாதை *kār-pādai,* பெ.(n.) ஒற்றையடிப்பாதை; foot-path.

[கால் + பாதை.]

காற்பிடி-த்தல் *kār-pidi-,* 4 செ.குன்றாவி. (v.t.) விதையடித்தல் (வின்.); to geld, castrate.

மறுவ. காயடித்தல்

[கால் + பிடி-.]

காற்பிடிப்பு *kār-pidippu,* பெ.(n.) ஊதை நோயால் காலிற்காணும் பிடிப்புநோய்; rheumatic stiffness in legs.

[கால் + பிடிப்பு.]

காற்பித்தவெடிப்பு *kār-pitta-vedippu,* பெ.(n.) காலில் உண்டாகும் பித்தவிரி (M.L.); fissure in the foot, cracked foot.

[கால் + பித்தவெடிப்பு.]

காற்புத்தி *kārputti,* பெ.(n.) தாளகம்; yellow sulphure of arsenic. *"காற்புத்தி யோரை நீயோர் காசென மதித்து" (தைல. தைலவ. 80).*

[கால் + (பொடித்து) புத்தி.]

காற்புரவு *kār-puravu,* பெ.(n.) ஆற்றுப்பாசன நிலம்; land irrigated by channels.

ம. கால்ப்புரவு

[கால்[1] + புரவு = காற்புரவு. கால் = வாய்க்கால், புரவு = நிலம்.]

காற்புள்ளி *kār-pulli,* பெ.(n.) பொருள் தெளிவிற்காகச் சொற்களைப் பிரித்துப் படிக்கும்போது இடும் (,)குறி; punctuation mark, which indicates the least separation between parts of a sentance.

[கால்[1] + புள்ளி.]

காற்பெட்டி *kār-petti,* பெ.(n.) 1.வண்டியின் பின்பெட்டி (நெல்லை); back-box in a carriage for putting in things. 2. நான்கு கால்களைக் கொண்ட சிறுபெட்டி; a wooden-chest with tour small legs.

ம. கால்ப்பெட்டி

[கால்[1] + பெட்டி.]

காற்பெய்-தல் *kār-pey-,* 1 செ.கு.வி. (v.i.) ஓடுதல்; to run away. *"கருவினை காற் பெய் தனவே" (சீவக. 3102).*

[கால்[5] + பெய்-.]

காற்றகண்டுய்யாமூலி *kārragandu-y-yāmūli,* பெ.(n.) பிரண்டை; adama creeper; bone-setter (சா.அக.).

[கால் + தகண் + துமியா + மூலி.]

காற்றகற்றி *kārragārri,* பெ.(n.) காற்று வெளியேற்றி; air-pump (சா.அக.).

[காற்று + அகற்றி.]

காற்றடக்கி *kāṟṟaḍakki*, பெ.(n.) 1. நீர்க்குமிழி; bubble in water. 2. துருத்தி; bellows (சா.அக.).

[காற்று + அடக்கி]

காற்றடர்த்தி *kāṟṟaḍartti*, பெ.(n.) காற்றின் நெருக்கம்; density of air (சா.அக.).

[காற்று + அடர்த்தி]

காற்றடுக்கி *kāṟṟaḍukki*, பெ.(n.) முட்டிக்கால் தட்டி நடப்பவன்; a knock-kneed person.

மறுவ. கவட்டைக்கால், கழுதைக்கால், பின்னக்கால்.

[கால் + தடுக்கி]

காற்றண்டம் *kāṟṟaṇḍam*, பெ.(n.) ஊதையால் (வாதத்தால்) வீங்கிய அண்டநோய் வகை (இ.வ.); a kind of swelling of the scrotum, dist. fr. *nīr-aṇḍam*.

[காற்று + அண்டம்.]

காற்றண்டை *kāṟṟaṇḍai*, பெ.(n.) காலணிவகை; tinkling trinket for ankles.

[கால்[1] + தண்டை.]

காற்றருந்து-தல் *kāṟṟarundu-*, 5 செ.கு.வி. (v.i.) 1.காற்றையுட்கொள்ளுதல்; to feed on air, as snakes. 2. சோம்பியிருத்தல் (வின்.); to be gaping, listless, idle.

[காற்று + அருந்து.]

காற்றழும்பு *kāṟṟaḻumbu*, பெ.(n.) வலியோடு கூடிய கால்வீக்கம், சூட்டுக் கொப்புளம் (இ.வ.); bunion, inflamed swelling on foot.

[கால்[1] + தழும்பு.]

காற்றறை *kāṟṟaṟai*, பெ.(n.) காற்றுக்கொண்ட க்ண்ணறை (சா.அக.); air-cell.

[காற்று + அறை.]

காற்றன் *kāṟṟaṉ*, பெ.(n.) நீலநிறத் துரிசு (சங்.அக.); blue vitriol.

[கால் = கருமை, நீலம். கால் → காற்றன்.]

காற்றாடவை[1]-த்தல் *kāṟṟāḍavai-*, 4 செ.கு.வி (v.i.) நிழலிலுணர்த்துதல் (சா.அக.); drying in the shade by exposing to the breeze (சா.அக.).

[காற்று + ஆட + வை-,]

காற்றாடவை[2]-த்தல் *kāṟṟāḍa-vai-*, 4 செ.குன்றாவி. (v.i.) காற்றுப்படுமாறு பண்டங்களை வைத்தல்; to expose to open air; to air a thing.

[காற்று + ஆட + வை-.]

காற்றாடி[1] *kāṟṟāḍi*, பெ(n.) சுழல்கறங்கு (திவா.); that which whirls in the wind. 2. ***காற்றாடிப்பட்டம்*** பார்க்க; see *kāṟṟaḍi-p-paṭṭam*. 3. கறங்கின் சுழற்சியால் நீரிறைக்கும் இயந்திரப்பொறி; windmill. 4. நிலையில்லாதவன் (வின்.); restless, fid gety person; waverer. 5.சவுக்குமரம்; whip tree. 6. மரவகை; silk oak.

ம. காற்றாடி

[காற்று + ஆடி.]

காற்றாடி[2] *kāṟṟāḍi*, பெ.(n.) நிலையில்லாதவன்; unsteady person (த.சொ.அக.).

காற்றாடி[3] *kāṟṟāḍi*, பெ.(n.) விசிறி (ஞானபூசா. 28. உரை.); fan.

[காற்று + ஆடி.]

காற்றாடிப்பட்டம் *kāṟṟāḍi-p-paṭṭam*, பெ.(n.) காற்றில் பறக்கவிடும் பட்டம்; paper-kite.

[காற்றாடி + பட்டம்.]

காற்றாய்ப்பற-த்தல் *kāṟṟāy-p-paṟa-*, 3 செ.கு.வி. (v.i.) 1.விரைந்தோடுதல்; to roam, fly about as the wind. 2. சுறுசுறுப்பாய்த் தொழில் செய்தல்; to be over-active in gaining one's ends; to be industrious, zealous.

[காற்று → காற்றாய் + பறத்தல்.]

காற்றிகம் *kāṟṟigam,* பெ.(n.) காயாங்குலை; a barren tree (சா.அக.).

[கால் → காற்று → காற்றிகம்.]

காற்றில்லாக் கடல் *kāṟṟillā-k-kaḍal,* பெ.(n.) அமைதிக் காற்று நிலவும் நிலநடுக்கோட்டுக்கு அருகே உள்ள கடல் பகுதி; a region near the equator where calm winds prevail, doldrum.

ம. காற்றில்லாக் கடல்

[காற்று + இல்லா + கடல்.]

காற்றிளவல் *kāṟṟiḷaval,* பெ.(n.) இளங்காற்று (யாழ்.அக.); gentle breeze.

[காற்று + இளவல்.]

காற்றிற்கரைந்தறு-தல் *kāṟṟiṟ-karaindaṟu-,* 4 செ.கு.வி (v.i.) காற்றின் ஈரத்தைக் கொண்டு கரைந்து அற்றுப் போதல்; a melting or dissolution in the air or in a moist place.

[காற்றில் + கரைந்து + அறு-.] (சா.அக.)

காற்றிறங்கியிரு-த்தல் *kāṟṟu-iṟaṅki-yiru-,* 2 செ.கு.வி. (v.i.) கடல் தொழிலாளர் நடுக்கடலில் தொழிற்படும்போது காற்றுத் தானாக இறங்கி வீசுதல், மழை வருவதற்கு முந்திய நிலை.

[காற்று + இறங்கி + இரு-.]

காற்றிறுக்கம் *kāṟṟiṟukkam,* பெ.(n.) 1.காற்ற முத்தம்; air-pressure 2. காற்றடர்த்தி; density of air. 3. காற்றாடா இடம்; non ventilated place (சா.அக.).

[காற்று + இறுக்கம்.]

காற்றின்தோழன் *kāṟṟiṉ-tōḻaṉ,* பெ.(n.) தீ (சூடா.); fire, as the friend of wind.

[காற்று + இன் + தோழன்.]

'இன்' சொற்சாரியை. காற்றால் மண்டி எரியும் இயல்பு கருதித் தீயைக் காற்றின் தோழன் என்றனர்.

காற்றினாள் *kāṟṟiṉāḷ,* பெ.(n.) காற்றைக் கடவுளாகக் கொண்ட விளக்கு (சுவாதி) விண் மீன்; *Svādi,* the 15th naksatra, as having wind-god for its presiding deity, Arcturus.

[காற்றின் + நாள்.]

நாள் - நாண்மீன் (நட்சத்திரம்.) கதிரவக்காலப் (சூரிய மான) பகுப்புக்குக் கரணியமான இருபத்தேழு நாண்மீன்களுள் ஒன்றான விளக்குமீன் (சுவாதி) காற்றைக் கடவுளாகக் கொண்டது என்பது பிற்காலத் தொன்ம (புராண) வழக்கு. விளக்கு எரிதற்குக் காற்றுத் துணையாவது இயற்கை.

காற்று[1]-தல் *kāṟṟu-,* 5 செ.கு.வி. (v.i) வெளிப் படுத்துதல்; to make manifest, reveal, put forth. *"பொலிகதிர் காற்றியும்" (கல்லா.13).*

[கால் (வெளிப்படுதல், வீசுதல்) கால் + து – காற்று → காற்றுதல்.]

காற்று[2]-தல் *kāṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) அழித்தல்; to destroy, ruin. *"ஆற்றல் காற்றுஞ் செயல்" (தணிகைப்பு. நந்தியுப. 120).*

[கால் = வெளிப்படுதல், வீசுதல், கால் + து – காற்று = புறந்தள்ளு, வீழ்த்து, அழித்துவிடு.]

காற்று[3]-தல் *kāṟṟu-,* 5 செ.கு.வி. (v.t.) போக்குதல்; to remove, to drive. *"அடர்மலவாற்றல் காற்றுஞ் செயறலை நின்ற வின்பத்தருவுரு முதன்மை போற்றி" (தணிகைப்பு. நந்தியுப. 121) (த.சொ.அக.).*

[காறு → காற்று.]

காற்று[4] *kāṟṟu,* பெ.(n.) 1.உலகில் வெளியெங்கும் நிறைந்திருக்கும் வளி; air, wind. *"காற்றிய மானன் வானம்" (திருவாச. 5:63).* 2. உயிர்ப்பு; breath. மூச்சுக்காற்று (சூடா. 3:49). 3. குதம்வழி வெளிப் படும் காற்று (குசு); gas generated in bowels by indigestion, etc. flatulence. காற்றுப் பரிகிறது (உ.வ.).

ம.காற்று; க. காளி,காள்; **தெ., குவி., குரு.** காலி; **கோத.** காற்று; **துட.**கோற்ற்; **குட.**கதி,கள; **கொலா.**கலி; **நா.** களி; **பிரா.**காற்றோ (மேற்குக் காற்று); **பட.** காயி.

[கால் = வெளிப்படுதல், வீசுதல், உலாவுதல். கால் = காற்று.]

kârr-u (pronounced kâttr-u), wind. Probably from kâl, one of the meanings of which is wind, with the formative addition of du (kâl-du=kâttru); Tel. gâli. Comp. Kangazian (a Turkish dialect) kat, wind; Sojoten (a Samoïede dialect) kat; other Samoïede dialects chat, kada (also a storm, charru); Georg. kari; Jurazen chada (C.G.D.F.L. Pg.616).

காற்று வகை:

1.வேற்றம் (வாதம்) வளி 2. சூறாவளி 3. சுழல் 4. காற்று 5. அன்றமை 6.ஆவி 7.வெம்பாவி 8. நீராவி 9. புயல் 10. உயிர் 11. கொண்டல் கிழக்கினின்று வீசும் மழைக்காற்று; தென்றல் தெற்கினின்று வீசும் இனியமென் காற்று; கோடை மேற்கினின்று வீசும் வெப்பமான வன்காற்று; வாடை வடக்கினின்று வீசும் குளிர் காற்று.

காற்றுக்கடுவல் *kāṟṟu-k-kaḍuval,* பெ.(n.) பெருங் காற்று (யாழ்.அக.); violent wind.

[காற்று + கடுவல். கடுவல் = கடுமை.]

காற்றுக்கண் *kāṟṟu-k-kaṇ,* பெ.(n.) 1.காற்றுக் கண்ணறை; air-cell. 2. பிதுங்கிய கண்; gas eye in fishes. 3. முண்டகக்கண்; goggle-eye (சா.அக.)

[காற்று + கண்.]

காற்றுக்கரப்பு *kāṟṟu-k-karappu,* பெ.(n.) பேய்க் கோளாறு; demoniacal possession. அவனைக் காற்றுக்கரப்பு பிடித்து ஆட்டுகிறது (இ.வ.).

மறுவ. காற்றுக்கருப்பு, காற்றுக்கறுப்பு, காற்றுச்சேட்டை.

[காற்று + கறுப்பு → காற்றுக்கறுப்பு → காற்றுக்கரப்பு.]

காற்றுக்கறுப்பு *kāṟṟu-k-kaṟuppu,* பெ.(n.) பேய் பிசாசுகள் (இ.வ.); ghosts and evil spirits.

[காற்று + கறுப்பு. காற்று = தீயஆவி. கறுப்பு = பேய்.]

காற்றுக்காலம் *kāṟṟu-k-kālam,* பெ.(n.) கடக (ஆடி) மாதத்தில் பெருங்காற்று வீசுங்காலம்; windy weather, especially in the month of *āḍi.*

[காற்று + காலம்.]

காற்றுக்குழாய் *kāṟṟu-k-kuḻāy,* பெ.(n.) 1.காற்று செல்லும் குழல்கள்; air-tube. 2. குரல்வளை; trachea (சா.அக.).

[காற்று + குழாய்.]

காற்றுக்கொள்(ளு)-தல் *kāṟṟu-k-koḷ-,* 16 செ.கு.வி. (v.i.) வெளிப்பரவுதல்; to gain publicity, as an affair taking wind; செய்தி காற்றுக் கொண்டது (இ.வ.).

[காற்று + கொள்-.]

காற்றுச்சங்கை *kāṟṟu-c-caṅgai,* பெ.(n.) ***காற்றுக் கறுப்பு*** பார்க்க; see *kāṟṟu-k-kaṟuppu.*

மறுவ. காற்றுக்கறுப்பு

[காற்று + சங்கை.]

காற்றுச்சிகிச்சை *kāṟṟu-c-cigiccai,* பெ.(n.) காற்றைக்கொண்டு நோய்களைப் போக்குதல்; the theropeutic employment of air (சா.அக.).

[காற்று + சிகிச்சை.]

காற்றுச்சேட்டை *kāṟṟu-c-cēṭṭai,* பெ.(n.) பேய் பிசாசு களின் தீங்கு; mischief of evil spirits (சா.அக.).

[காற்று + சேட்டை.]

காற்றுத்திங்கள் *kāṟṟu-t-tiṅgaḷ,* பெ.(n.) விளக்கு விண்மீன் (சா.அக.).

[காற்று + திங்கள்.]

காற்றுத்துளைக்கல் *kāṟṟu-t-tuḷai-k-kal,* பெ.(n.) காற்றறைபட்ட துளைகளையுடைய செங்கற்கள். இவற்றால் சுவரில் விரிசல் விழ வாய்ப்பு ஏற்படும் (பொ.வ.); bricks with air bubbles; well develops crackes, when built with such bricks, porous bricks.

[காற்று + துளை + கல்.]

காற்றுநாள் *kāṟṟu-nāḷ,* பெ.(n.) சோதிநாள் (இரு.நூ.) விசாகம்; the day of *visāka,* the 16th naksatra.

காற்றுநோவு *kāṟṟu-nōvu,* பெ.(n.) கால்நடைகளுக்கு வரும் வெக்கைநோய்; rinderpest. (M.CM.D.24).

[காற்று + நோவு.]

காற்றுப்பரி-தல் *kāṟṟu-pari-,* 2 செ.கு.வி. (v.i.) குதத்தின் வழியாகக் காற்று வெளியேறுதல்; generating gas through anus (சா.அக.).

[காற்று + பரிதல்.]

காற்றுப்பு *kāṟṟuppu,* பெ.(n.) காறியுமிழ்கை; spitting, expectoration. *"நகையொடு கொட்டாவி காற்றுப்புத் தும்மல்" (ஆசாரக். 74).*

[கால் + துப்பு. கால் = வெளியிடுதல்.]

காற்றுப்பெயர்-தல் *kāṟṟu-p-peyar-,* 2 செ.கு.வி. (v.i.) காற்றுக்காலந் தொடங்குதல்; to set in, as monsoon. காற்றுப் பெயர்ந்துவிட்டது.

[காற்று + பெயர்.]

காற்றுப்பேத்தை *kāṟṟu-p-pēttai,* பெ.(n.) ஓர் அடி நீளமுடையதும் பச்சை கலந்த நிறமுடையதுமான கடல்மீன்வகை; a sea-fish, greenish, attaining 1ft. in length.

[காற்று + பேத்தை.]

காற்றுப்பை *kāṟṟu-p-pai,* பெ.(n.) நுரையீரல்; the lungs (சா.அக.).

[காற்று + பை.]

காற்றுப்போக்கி *kāṟṟu-p-pōkki,* பெ.(n.) காற்று உலாவும்படி வைக்கும் காலதர்; a contrivance for free ventilation of air. 2. உடம்பில் ஏற்படும் வாயுவைப் போக்கும் மருந்து; a medicine which relieves flatulence (சா.அக.).

[காற்று + போக்கி.]

காற்றுப்போ-தல் *kāṟṟu-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) 1. அடைப்பினின்றும் காற்று வெளியேறுதல்; to let air escape, as from bladder. 2. குதம்வழிக் காற்றுப் பரிதல்; to let gas through anus.

[காற்று + போ-.]

காற்றும் கடலுமாக இரு-த்தல் *kāṟṟum-kaḍalu māga-iru-,* 3 செ.குன்றாவி. (v.t.) கடுமை யான காற்றும், கொந்தளிப்புமான கடலுமாக இருத்தல் (கட.பர.க.சொ.அக.); tempestuous and turbulent.

[காற்று + கடலும் + ஆக + இரு-.]

காற்றுமழை *kāṟṟu-maḻai,* பெ.(n.) காற்றோடு கூடிவரும் மழை; tempest.

[காற்று + மழை.]

காற்றுமாரியாயி *kāṟṟu-māṟi-y-āyi,* பெ.(n.) புண்கட்டி (M.L.); syphilitic node, congenital or acquired.

[காற்று + மாரி + ஆயி.]

காற்றுமுட்டை *kāṟṟu-muṭṭai,* பெ.(n.) காற்றூதி, குழந்தைகள் விளையாடும் ஊதாம்பை; balloon, children's plaything.

மறுவ. ஊதாம்பை

[காற்று + முட்டை. காற்றூதுவதால் முட்டை வடிவில் பருத்துத் தோன்றும் ஊதாம்பை.]

காற்றுமுந்துநாள் *kāṟṟu-mundu-nāḷ,* பெ.(n.) காற்றைத் தெய்வமாகக் கொண்ட விளக்கு (சுவாதி) விண்மீனை முற்பட்ட நாளாகவுடைய சுளகு (விசாகம்) விண்மீன் (சூடா.); Viśākha, the 16th naksatra, as succeeding *Karināḷ.*

[காற்று + முந்துநாள்.]

காற்றுவாகு *kāṟṟu-vāgu,* பெ.(n.) காற்றடிக்குந் திசை; direction of wind (சா.அக.).

[காற்று + வாகு = வாக்கு → வாகு.]

காற்றுவாங்கு—தல் *kāṟṟu-vāṅgu-*, 5 செ.கு.வி. காற்றைத் துய்த்தல் (அனுபவித்தல்); to take an airing, enjoy, breeze. கடற்கரைக்குக் காற்று வாங்கப் போனேன் (உ.வ.).

[காற்று + வாங்கு-.]

காற்றுவாட்டம்[1] *kāṟṟu-vāṭṭam,* பெ.(n.) 1. காற்றுக்கு நேர்முகம்; windward. 2. காற்றடிக்கும் திசை (உழ.நெ.க.செ.); direction of wind.

[காற்று + வாட்டம்.]

காற்றுவாரி *kāṟṟu-vāri,* பெ.(n.) கதவிலிருக்கும் சிறுசாளரம் (இ.வ.); small ventilator without shutters in a door.

[காற்று + வாரி.]

காற்றுவாரிப்பந்தல் *kāṟṟu-vāri-p-pandal,* பெ.(n.) காற்றுமிகுதியாக வரும்படி அமைக்கும் பந்தல்; shed with an upward slope as to let in breeze plentifully.

[காற்று + வாரி + பந்தல்.]

காற்றுவாரிப்பலகை *kāṟṟu-vāri-p-palagai,* பெ.(n.) காற்றின் வரவைத் தடுக்க அமைக்கப்படும் முகட்டுச் சாளரப்பலகை (இ.வ.); movable wooden shutter of a ventilator or of a window near the roof.

[காற்றுவாரி + பலகை.]

காற்றேறு *kāṟṟēṟu,* பெ.(n.) காற்றினால் தோன்றும் ஒருவகை முத்துக் குற்றம் (சிலம்பு. 14: 193, உரை); a flaw in pearls.

[காற்று + ஏறு.]

காற்றொடுக்கம் *kāṟṟoḍukkam,* பெ.(n.) காற்று வீசாது ஒடுங்குகை (வின்.); calm, full, subsidence of wind.

[காற்று + ஒடுக்கம்.]

காற்றொதுக்கு *kāṟṟodukku,* பெ.(n.) காற்றடைப்பு (வின்.); shelter from the wind.

[காற்று + ஒதுக்கு.]

காற்றொழில் *kāṟṟoḻil,* பெ.(n.) (அற்பம்) வேலை; menial service, as performed by footmen. *"காற்றொழி லென்று கருதற்க" (நாலடி. 193).*

[கால்[1] + தொழில். கால்→காற்று. காற்றடிக்கும் குறுகிய நேரத்தில் எளிமையாகச் செய்யக்கூடிய வேலை.]

காற்றோட்டம் *kāṟṟōṭṭam,* பெ.(n.) காற்றின் தடையில்லா ஓட்டம் (வீச்சு); ventilation, free circulation of air. இது காற்றோட்டமில்லாத வீடு (உ.வ.).

[காற்று + ஓட்டம்.]

காற்றோட்டி *kāṟṟōṭṭi,* பெ.(n.) கொடிவகை; thorny caper. 2. செடிவகை; Ceylon caper.

[காற்று + ஓட்டி. காற்றால் அலைக்கழிக்கப்படாமல் தழையுடர்த்தியில்லாத கொடிவகை.]

காறடி *kāṟaḍi,* பெ.(n.) மருக்காரை (மலை.); emetic nut.

[காறு + அடி.]

காறல்[1] *kāṟal,* பெ.(n.) 1.தொண்டையில் உண்டாகும் கரகரப்பு; pungency, bitter musty flavour producing a tendency to hawk and spit, an itching sensation in the throat. 2. காறும் பொருள்; pungent substance, that which causes irritation in the throat. 3. ***காறற்கொட்டி*** (மலை.) பார்க்க; see *kāṟaṟkoṭṭi*

ம. காறல்

Fin. karvas; **Lap.** kārvās; **Komi.** kurit; **Jap.** karami; karasa, karō; **Q.** jarachiy.

[காறு → காறல். கால் → காறு (வெளிவரச்செய் காறித்துப்பும் உணர்வு உண்டாக்குதல். கரிப்பு, கரிப்புடைய பொருள்.]

காறல்[2] *kāṟal,* பெ.(n.) கடல்மீன்வகை; a sea - fish, silvery.

ம. காறல்

[காறு → காறல். காறல் = கரிப்புச்சுவை.]



காறல்மீன்

காறற்கத்தரி *kāṟaṟ-kattari,* பெ.(n.) கத்தரிவகை; a kind of brinjal.

[காறல்1 + கத்தரி. காறல் → கரிப்புச்சுவை.]

காறற்கொட்டி *kāṟaṟ-koṭṭi,* பெ.(n.) ஒருவகை மருந்துச் செடி (மலை.); a medicine plant.

[காறல் + கொட்டி.]

காறாக்கருணை *kāṟā-k-karuṇai,* பெ.(n.) 1. சேனைச்செடி (K.R.); tuberous - rooted herb. 2. சேனைச் செடிவகை (பதார்த்த. 416.); Tahiti arrow root.

[காற்று + ஆ + கருணை.]

காறாப்பி-த்தல் *kārāppi-,* 4 செ.கு.வி. (v.i.) ***காறியுமிழ்*** (யாழ்ப்.) பார்க்க; see *kāṟi-yumiḻ-.*

[காறு + (ஆப்பு) ஆப்பி.]

காறாயல் *kāṟāyal* பெ.(n.) ***காறாயில்*** பார்க்க;see *kāṟāyil.*

[காறு + அயல்.]

காறாயில் *kāṟāyil* பெ.(n.) ஒரு சிவத்தலம்; a place famous for its Siva temple. *"கடனாகை நள்ளாறு காறாயல் கோளரியூர் மடனாக முத்தீனும் வாய்மையூர் மறைக்கானம்" (கந்தபு. கந்தவி. 118.) (த.சொ.அக.).*

[காறை + இல்.]

காறித்துப்பு-தல் *kāṟittuppu,* 12. செ.குன்றாவி (v.t.) ***காறியுமிழ்-தல்*** பார்க்க; see *kāṟi-y-umiḻ.*

ம. காறித்துப்பு

[காறி + துப்பு.]

காறியுமிழ்-தல் *kāṟi-y-umiḻ-,* 2 செ.கு காறித்துப்புதல்; to hawk and spit.

ம. காறித்துப்புக; பட. காரியுகி.

*[காறி + உமிழ்-. **காறல்** பார்க்க; see kāṟa*

காறு[1]**-தல்** *kāṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. சுவையாதல்; to taste bitter musty or rancid stale food. 2. கோழையை மிடற்றினின்று முயலுதல்; to hawk, bring up phlegm.

ம. காறுக; க., பட.காறு (வாந்தியெடு); தெ. த்ராயு; து. கார்.

[கால் → காறு.]

காறு[2]**-தல்** *kāṟu-,* 5 செ.கு.வி.(v.i.) கறுத்தல், blackened. *"காறு கண்டத்தர்" (தேவா. 108 :3).* 2.காழ் (வைரம்) கொள்ளுதல்; to harbour revenge. *"காறின வுள்ள நோவ" (கம்பரா. இராவணன்கள. 20).*

க.,ம.காறு.

[கால் → காள் (கருநிறம்) → காறு (கருமை).]

காறு[3] *kāṟu,* பெ.(n.) கால அளவு; limit, point, measure, or extent of time, often used as on adverbial suffix. *"அன்னை சொற்காறாம்.... ஆண்டு போய் முடிந்த" (கம்பரா. மீட்சி. 140.).*

[கால் → காறு (நீட்சி). கால நீட்சி]

காறு[4] *kāṟu,* பெ.(n.) 1. கொழு; ploughshare. 2.ஈட்டி போன்ற கருவி (சலாகை); bar. வெள்ளிக்காறு.

M.E.scheien; **E.** shear; **DU.** gar; **A.S.** sceren; **ICE.** skera; **Dan.** skhere; **Gk.** keirein; **O.Ir.** sear-ain; **Gael.** szar; **Welsh.** ysgar.

[கால் → காறு (காலநீட்சி, நீண்ட ஈட்டி, கலப்பைக்கொழு)]

காறல் மீன் வகைகள்

காறுகருணை *kāṟu-karuṇai,* பெ.(n.) கருணைக் கிழங்கு (பதார்த்த. 415); elephant yam.

[காறு + கருணை.]

காறுகாறெனல் *kāṟu-kāṟeṉal,* பெ.(n.) சீறுதற் குறிப்பு; expr. of seething anger. *“இவ்வூரிலுள்ளார் என்னோடு காறுகாறென்று”* (திவ். பெரியாழ். 3.1,7 வியா. ப. 521).

[காறு + காறு + எனல். காறு காறு – ஒலிக்குறிப்பு சினக்குறிப்பைச் சுட்டியது.]

காறும் - இதுகாறும், சாகுங்காறும்.

காறுமரம் *kāṟumaram,* பெ.(n.) கேழ்வரகு பயிரில் களையெடுக்க உதவும் மூன்றடி உயரமுள்ள கருவி (உழ.நெ.க.அக.); a tool (3 feet high) used in weeding ragi crop.

[காறு + மரம்.]

காறுவடி-த்தல் *kāṟu-vaḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) கொழுமுனை தீட்டுதல் (வின்.); to sharpen, to coulter of a ploughshare.

[காறு + வடி. காறு = கொழு, கொழுமுனை.]

காறை *kāṟai,* பெ.(n.) 1. பெண்களும் குழந்தைகளும் கழுத்தில் அணிந்துகொள்ளும் ஒருவகை அணி; gold or silver collar necklet for women and children. *“கழுத்தினிற் காறையொடும் ... பொலிந்த விருட்டிகேசன்”* (திவ். பெரியாழ். 1:8,3). 2. வண்டிக் குடத்தைச் சுற்றியிடும் இரும்புவளையம் (இ.அ.); iron rings round the hub of a cart-wheel. 3. வண்டி; cart. *“காறைமுரி போருக்குக் காப்பிட வேணுமிறே” (திவ். திருப்பா. 24. ஆறா.).* 4. பூஞ்சாளம்;mustiness mould. 5. வைக்கோல் முதலியவற்றின் தாள்; a blade of grass or straw.

[கால் = நீளுதல். கால் → காறு (நீட்டுதல்) → காறை.]

காறைக்குட்டி *kāṟai-k-kuṭṭi,* பெ.(n.) ஒருவகைக் கடல்மீன்; ஓர் அடி நீளமும் வெளிர்சிவப்பு நிறமும் உடையது; a sea fish - pale dull red, attaining 1ft in length.

[காறை + குட்டி. காறை = காறல் சுவை.]

காறைச்செம்பு (இலை) *kāṟai-c-cembu, (ilai)* பெ.(n.) செம்பு சேர்த்த மூலிகை; an unknown drug, so called probably of its containing copper (சா.அக.).

[காறை + செம்பு + இலை.]

காறைமீன் *kāṟai-mīṉ,* பெ.(n.) ஒருவகைக் கடல்மீன்; palankeen boy's fish (சா.அக.).

[காறை + மீன்.]

காறையாடு-தல் *kāṟaiyāḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சார்ந்திருத்தல் (இரு.நூ.); dependence.

[காறை + ஆடு.]

காறையெலும்பு *kāṟai-y-elumbu,* பெ.(n.) கழுத்தெலும்பு; collar bone, clavicle.

ம. காறயெல்லு

[காறை + எலும்பு. காறை = கட்டியானது. கட்டியான = உறுதியான எலும்பு.]

கான்[1] *kāṉ,* இடை (part.) எழுத்துச் சாரியைகளில் ஒன்று (தொல். எழுத்து. 134); a particle used to facilitate the pronounciation of letters in Tamil, as in அஃகான்.

[கான் – தனித்த எழுத்தைப் பலுக்கும் இடர்ப்பாடு தணிப்பதற்காகச் சேர்க்கப்படும் துணைச்சொல். இதனை எழுத்துச்சாரியை என்பர்.]

கான்[2] *kāṉ,* பெ.(n.) 1.நீர்வழி (சலதாரை); gutter. 2. வாய்க்கால்; channel. 3. மரக்கலத்தின் அறை; cabin in a ship's, hold.

ம. கான

[கால் → கான்.]

கான்[3] *kāṉ,* பெ.(n.) 1.காடு (திவா.); jungle. 2. மணம்; smell, odour. கான்பொழில் (மதுரைக்.

337). 3. பூ; flower, blossom. *"கான்முகம் புதைத்த தெண்ணீர்" (சீவக. 2415).*

ம. கான்; க. கான்,கான,கானி, கானு; தெ.,து. கான

[கா→ கான். கா - விரிவு, படர்வு, அடர்வு.]

த.கான்>Skt.gāna

கான்[4] *kāṉ,* பெ.(n.) இசை; music. *"கான்பாட தங்குமறை யோசை" (சொக்க. உலா. 9).*

[கா - பிரிதல், பரவுதல். கா → கான் - பரவும் ஓசை, இசை.]

த.கான்>Skt.gāna

கான்குடம் *kāṉkuḍam,* பெ.(n.) நறும்பிசின்; fragrant gum or resin (சா.அக.).

[கான் → கூடு → கூடம் → குடம்.]

கான்செறி *kāṉceṟi,* பெ.(n.) கால்விரலணிகளுள் ஒன்று;(சிலப். 6:83, உரை.); ring usually worn on the second toe.

[கால் + செறி.]

கான்படுபொருள்கள் *kāṉ-paḍu-poruḷgaḷ,* பெ.(n.) அரக்கு, இறால், தேன், மயிற்பீலி, நாவி போன்று காட்டில் உண்டாகும் அரும்பொருள்கள் (பிங்.); products of the forest viz., like honey, peacock feathers.

மறுவ. கான்படுதிரவியம்

[கான்[3] + படு + பொருள்கள்.]

கான்பூனை *kāṉ-pūṉai,* பெ.(n.) ***கான்புலி*** (பிங்.) பார்க்க; see *kāṉ-puli.*

மறுவ. கான்புலி

[கான் + பூனை. பூசை → பூனை.]

கான்மரம் *kāṉ-maram,* பெ.(n.) **ஆல்**[1] (திவா.) பார்க்க; see *āl*[1].

[கால்[1] + மரம்.]

கான்மலைப்பட்சி *kāṉmalai-p-paṭci,* பெ.(n.) மீனம்பர்; ambergiris (சா.அக.).

[கான் + மலை + பட்சி.]

கான்மா[1] *kāṉmā,* பெ.(n.) பன்றிப்புடல்; short snake-gourd (சா.அக.).

[கான் + மா.]

கான்மா[2] *kāṉ-mā,* பெ.(n.) காட்டுப்பன்றி; (வி.); wild boar.

மறுவ. கானமா

[கான்[1] + மா.]

கான்மாறு-தல் *kāṉ-māṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. கழிந்துபோதல்; to pass a way, disappear, as the rays of the sun. *"சுடர்கான் மாறிய செவ்வி நோக்கி" (சிறுபாண். 171).* 2. கால்மாற்றுதல்; to change to leg. *"கான்மாறியாடிய படலம்" (திருவிளை).*

[கால்[5] + மாறு-.]

கான்முகில் *kāṉmugil,* பெ.(n.) காட்டுமல்லிகை; wild jasmine (சா.அக.).

[கான் + முகில்.]

கான்முரி-தல் *kāṉmuri-,* 4 செ.கு.வி (v.i.) அடியோடு கெடுதல்; to be utterly ruined, as getting the leg broken. *"பேதையான் வீழ்வானேற் கான்முரியும்" (நான்மணி. 74).*

[கால்[5] + முரி-.]

கான்முளை[1] *kāṉ-muḷai,* பெ.(n.) மகன்; son, child, as offshoot of the family. *"பின்னர்க் கான்முளை மன்னுத லிலரே" (ஞானா. 21:12).*

[கால்[1] + முளை.]

ஒரு மரத்தின் அடியில் முளைக்கும் முளையைப் போன்று மகனிருத்தலின் அவனுக்குக் கான் முளை என்றும் பெயர் (சொல்.கட்.8).

கான்முளை[2] *kāṉmuḷai,* பெ.(n.) 1.அனுமன்; Hanuman. *"கஞ்சமார் கண்ணன் காலிற் கான்முளை கரங்கள் கூப்பி"* (சேதுபு. இராமனரு. 82). 2. புதல்வன்; son. *"விழிக்குங்கண் வேறில்லா வெங்கானென் கான்முளையைச் சுழிக்கும் வினையாலேகச் சூழ்வாய்" (இராமா. நகர்நீ. 49) (த.சொ.அக.).*

[கால் + முளை.]

கான்மோதிரம் *kāṉ-mōdiram,* பெ.(n.) ***கான்செறி*** பார்க்க; see *kāṉ-sēri*

[கால் + மோதிரம்.]

கான்யாறு *kāṉ-y-āṟu,* பெ.(n.) முல்லை நிலத்துள்ள யாறு; river in a sylvan tract. *"விரவுமல ரணிந்த வேனிற் கான்யாற்று" (ஐங்குறு. 367).*

[கான்[3] + யாறு.]

கான்றருகன் *kāṉṟarugaṉ,* பெ.(n.) பாதிரிமரம்; trumpet flower tree (சா.அக.).

[கான் + தரு – கான்தரு → கான்தருகன்.]

கான்றல்[1] *kāṉṟal,* பெ.(n.) 1.வாயிலெடுத்தல் (திவா.); vomiting. 2. இருமிக் கோழை துப்புகை; coughing and ejecting phlegm. *"வெண்ணரை பொரக்கான்று"* (வேதாரணி. வீரசேன. 24).

[கால் → கான் → கான்றல்.]

கான்றல்[2] *kāṉṟal,* பெ.(n.) கொப்புளித்தல்; gargling (சா.அக.) (ஆ.ரேகவை. 10–2).

[கால் → கான்று → கான்றல்.]

கான்றியம் *kāṉṟiyam,* பெ.(n.) வெப்பம்; heat.

[காந்து → கான்றியம்.]

கான்று–தல் *kāṉṟu-,* 5 செ.கு.வி.(v.i.) வாயாலெடுத்தல்; to vomit.

ம. கான்றுக; பட. காரு.

[கால் → கான் → கான்று.]

கான்றை[1] *kāṉṟai,* பெ.(n.) ஒருவகை முட்செடி; a thorny shrub (சா.அக.).

[கான்று → கான்றை]

கான்றை[2] *kāṉṟai,* பெ.(n.) மரவகை; a kind of tree. *'கான்றையுஞ் சூரையுங் கள்ளியு மடர்ந்து (மணிமே. 6:81).*

[கான்று → கான்றை]

கானக்குதிரை[1] *kāṉa-k-kudirai,* பெ.(n.) 1.மரை, கடம்பை; elk. 2. மாமரம்; mango tree.

[கானம் + குதிரை.]

கானக்குதிரை[2] *kāṉa-k-kudirai,* பெ.(n.) 1.காட்டு மான்வகை (பிங்.); yak. 2. காட்டுக்குதிரை (வின்.); wild horse.

[கானம்[2] + குதிரை.]



கானக்குதிரை

கானக்குறத்தி *kāṉa-k-kuṟatti,* பெ.(n.) 1. வல்லாரை; Asiatic or Indian pennywort (சா.அக.). 2. தேன்; honey (கோ.தமி.கை.).

[கானம் + குறத்தி.]

கானக்குறத்திமுலைப்பால் *kāṉa-k-kuṟatti-mulai-p-pāl,* பெ.(n.) தேன் (வின்.); honey.

[கானம்[2] + குறத்தி + முலைப்பால்.]

கானக்குன்று *kāṉa-k-kuṉṟu,* பெ.(n.) ஒரு கனிமச் செய்ந்நஞ்சு; a mineral poison (சா.அக.).

[கானம் + குன்று.]

கானக்கைதை *kāṉa-k-kaitai,* பெ.(n.) காட்டுத் தாழை; forest screw-pine.

ம. கானகைத

[கானம்² + கைதை (தாழை வகை).]

கானக்கோழி *kāṉa-k-kōḻi,* பெ.(n.) காட்டுக்கோழி; grey jungle fowl. *"கானக்கோழியும் நீர்நிறக் காக்கையும்" (சிலப். 10,116).*

மறுவ. கானகக்கோழி

ம. கானக்கோழி

[கானம்² + கோழி.]



கானக்கோழி

கானக்கோழிப்பூ, *kāṉa-k-kōḻippū,* பெ.(n.) கானாங் கோழியின் கொண்டை; crest of Guinea fowl (சா.அக.).

[கானம் + கோழி + பூ.]

கானகக்கமுகு *kāṉaga-k-kamugu,* பெ.(n.) ஒரு வகைப் பாக்கு மரம்; a kind of wild areca nut tree.

ம. கானகக்கமுகு

[கானகம் + கமுகு.]

கானகக்கல் *kāṉaga-k-kal,* பெ.(n.) கருப்புக்கல். (வின்.); a kind of metallic ore.

மறுவ. கானக்கல்

[கானகம்¹ + கல்.]

கானகக்கறுப்பி *kāṉaga-k-kaṟuppi,* பெ.(n.) கருங்கொடிவேலி; black-flowered leadwort.

[கானகம் + கறுப்பி.]

கானகக்குவடு *kāṉaga-k-kuvaḍu,* பெ.(n.) மரகதப்பச்சை; emerald stone (சா.அக.).

[கானகம் + குவடு.]

கானகக்குறத்தி *kāṉaga-k-kuṟatti,* பெ.(n.) 1.நிலப்பனை; ground-palm. 2. கொம்புத்தேன்; honey collected on the branches of trees (சா.அக.).

[கானகம் + குறத்தி.]

கானகக்கூத்து *kāṉaga-k-kūttu,* பெ.(n.) கூத்து வகை; a kind of dancing. *"கானகக் கூத்துங் கழைக்கூத்தும் ஆடுபவராகச் சாதி வரையறை யிலராதலின்" (தொல். பொருள். 91, உரை).*

[கானகம்¹ + கூத்து.]

கானகக்கூபன் *kāṉaga-k-kūbaṉ,* பெ.(n.) நாகப்பச்சை என்னும் துணை மருந்துச் சரக்கு; a peculiar green stone forming one of the 120 kinds of natural substances (சா.அக.).

[கானகம் + கூபன்.]

கானகச்சங்கம் *kāṉaga-c-caṅgam,* பெ.(n.) **நாகவண்டு** (யாழ்.அக.) பார்க்க; see *nāga-vaṇḍu.*

[கானகம்¹ + சங்கம்.]

கானகச் சாரங்கம் *kāṉaga-c-cāraṅgam,* பெ.(n.) கலைமான் கொம்பு; stag's horn (சா.அக.).

[கானகம் + சாரங்கம்.]

கானகச்சிப்பி *kāṉaga-c-cippi,* பெ.(n.) கிளிஞ்சில்; bivallur-shell (சா.அக.).

[கானகம் + சிப்பி.]

கானகச்சீதம் *kāṉaga-c-cīdam,* பெ.(n.) 1.கரு வண்டு; black beetle. 2. காட்டில் நிலவும் குளிர்ச்சி; chillness in forest (சா.அக.).

[கானகம் + சீதம். சீதம் = குளிர்ச்சி.]

கானகச்சீரம் *kāṉaga-c-cīram,* பெ.(n.) கருஞ் சீரகம்; black cumin (சா.அக.).

[கானகம் + சீரகம் → சீரம்.]

கானகச்சீரம்

கானகச்சேவகன் *kāṉaga-c-cēvagaṉ,* பெ.(n.) 1.எலி; rat. 2. காட்டுப் பன்றி; wild boar (சா.அக.).

[கானகம் + சேவகன்.]

கானகத்தட்டான் *kāṉaga-t-taṭṭāṉ,* பெ.(n.) செவ்வட்டைவகை (யாழ்.அக.); tawny leech.

[கானகம் + தட்டான்.]

கானகத்ததிபதி *kāṉaga-t-tadipadi,* பெ.(n.) தூதுவளை; three-lobed night shade (சா.அக.).

[கானகத்து + அதிபதி.]

கானகத்தி *kāṉagatti,* பெ.(n.) வரகு; a kind of millet (சா.அக.).

[கான் + அகத்தி.]

கானகத்தின் முத்து *kāṉaga-t-tiṉ-muttu,* பெ.(n.) ஒருவகை மூலிகை; an unknown plant (சா.அக.).

[கானகத்தின் + முத்து.]

கானகத்தீயம் *kāṉaga-t-tīyam,* பெ.(n.) வெள்ளீய மணல்; lead-ore (சா.அக.).

[கானகம் + அத்து + ஈயம்.]

கானகத்துச் சோதி *kāṉagattu-c-cōdi,* பெ.(n.) சோதிமரம்; a forest tree imagined to be luminous in the dark (சா.அக.).

[கானகம் + அத்து + சோதி.]

கானகத்துநெல்லி *kāṉagattu-nelli,* பெ.(n.) கருநெல்லி; black species of Indian goosberry (சா.அக.).

[கானகம் + அத்து + நெல்லி.]

கானகத்துப்புல் *kāṉagathu-p-pul,* பெ.(n.) 1.காவட்டம்புல்; citronella. 2. காட்டுப்புல்; forest grass in common (சா.அக.).

மறுவ. கானகப்புல்

[கானகம் + அத்து + புல்.]

கானகத்தும்பி *kāṉaga-t-tumbi,* பெ.(n.) 1. கரு வண்டு; black beetler. (சா.அக.). 2. கருவண்டு வகை (வின்.); a kind of black beetle.

ம. கானகத்தும்பி

[கானகம் + தும்பி.]

கானகத்தும்பி

கானகத்துமா *kāṉaga-t-tumā,* பெ.(n.) காட்டு மாமரம்; jungle mango (சா.அக.).

[கானகம் + அத்து + மா.]

கானகத்துவெண்பல் *kāṉaga-t-tu-veṇpal,* பெ.(n.) கரடி; bear (சா.அக.).

[கானகம் + அத்து + வெண்பல்.]

கானகத்தூமம் *kāṉaga-t-tūmam,* பெ.(n.) 1. கற்செய்நஞ்சு; a kind of arsenic (சா.அக.) 2. கல்நஞ்சு (வின்.); a mineral poison.

[கானகம்¹ + தூமம்.]

கானகநாடன்[1] *kāṉaga-nāḍaṉ,* பெ.(n.) முல்லை நிலத் தலைவன் (திவா.); chief of a sylvan tract.

[கானகம் + நாடன்.]

கானகநாடன்[2] *kāṉaga-nāḍaṉ,* பெ.(n.) 1. குறிஞ்சிநிலத் தலைவன்; chief of a mountain tract. *"கானக நாடன் வரவும்" (ஐங்குறு. 217).*

மறுவ. கானநாடன், மலையன், வெற்பன், சிலம்பன், பொருப்பன்.

[கானகம் + நாடன்.]

கானகப்பச்சை *kāṉaga-p-paccai,* பெ.(n.) 1. மரகதப் பச்சை; emerald green (சா.அக.). 2. ஒரு வகைப் பச்சைமணி (வின்.); a kind of emerald.

மறுவ. கானகக்குவடு

ம. கானகப்பச்ச

[கானகம் + பச்சை.]

கானகம்[1] *kāṉ-agam,* பெ.(n.) காடு; forest, wood. "கானகத்தே நடக்குந் திருவடி (திருவாசக. 40:8). 2. கருஞ்சீரகம் (மலை.); black cumin.

ம. கானகம்

[கான்¹ + அகம்.]

கானகம்[2] *kāṉagam,* பெ.(n.) கால் நகம் (வின்.); toe-nail.

ம. கானகம்

[கால்¹ + நகம்.]

கானகம்[3] *kāṉagam,* பெ.(n.) 1.குறிஞ்சிநிலம்; mountainous tract. 2. வஞ்சிமரம்; country willow. 3. பெண்யானை; female elephant. 4. காட்டு மல்லிகை; jungle jasmine. 5. சிற்றகத்தி; small sesban (சா.அக.).

[கான் + அகம் – கானகம் (காடு, மலை, யானை, காடுபடு பொருள்கள்.]

கானகவல்லி *kāṉaga-valli,* பெ.(n.) இருவாட்சி (சா.அக.);moon-creeper.

மறுவ. கானகவாட்சி

[கானகம் + வல்லி.]

கானகவிருத்தி *kāṉaga-virutti,* பெ.(n.) தினை; millet (சா.அக.).

[கானகம் + விருத்தி.]

கானங்கோழி *kāṉaṅ-kōḻi,* பெ.(n.) 1.***கானக்கோழி*** (இறை. 1,18) பார்க்க; see *kāṉak-kōḻi.* 2. வழுக்கைத் தலையையுடைய புள்வகை (வின்.); bald coof.

[கானம்² + கோழி.]

கானடா *kāṉaḍā,* பெ.(n.) ஒரு பண்வகை; a musical node.

ம. கானட

[கான் + நாடு – கானாடு → கானடம் → கானடா (முல்லைப்பண் (வின்.).]

கானத்தி *kāṉatti,* பெ.(n.) 1.காட்டத்தி; forest fig tree. 2. காட்டில் முளைக்கும் செடி; forest plant in common (சா.அக.).

[கான் + அத்தி.]

கானத்தூபம் *kāṉa-t-tūbam,* பெ.(n.) ஒருவகைச் செய்நஞ்சு (கற்செய்நஞ்சு); a kind of arsenic (சா.அக.).

[கானம் + தூபம்.]

கானத்தேறு *kāna-t-tēṟu,* பெ.(n.) மஞ்சள் (கலை.); turmeric.

[கானம்² + தேறு.]

கானத்தை *kāṉattai,* பெ.(n.) மிளகு; black-pepper (சா.அக.).

[கானம் → கானத்தை.]

கானநாடன் *kāṉa-nāḍaṉ,* பெ.(n.) முல்லைநிலத் தலைவன் (சூடா.); chief of a sylvan tract.

[கானம்² + நாடன்.]

கானநாடி *kāṉa-nāḍi,* பெ.(n.) காளி; *Kāḷi.* *"கான நாடி திருமுன்றில்" (தக்கயாகப். 80).*

[கானம் = காடு. கானம் + நாடு + இ → கானநாடி. காட்டுக்கடவுளான பெண் தெய்வம். 'இ' பெண்பாலீறு.]

கானப்படம் *kāṉa-p-paḍam,* பெ.(n.) 1.காடெழுதின கேடயம்; shield adorned with the picture of a forest. *"கானப் படமுங் காழுன்று கடிகையும்" (சிலப். 14:173).* 2. யானை, சிங்க முதலிய படமெழுதின கிடுகு; wooden frame with figures of elephant, lion, etc. painted thereon. 3. பெருவாரல் வலை (சிலப். 14:173, அரும்.); net with large meshes.

[கானம்² + படம்.]

கானப்பயறு *kāṉa-p-payaṟu,* பெ.(n.) கொள்ளு; horse-gram (சா.அக.).

மறுவ. காணம்

[கானம் + பயறு.]

கானப்பலா *kāṉa-p-palā,* பெ.(n.) காட்டுப்பலா (சங்.அக.); jungle jack.

ம. கானப்பலா

[கானம்² + பலா.]

கானப்பால் *kāṉa-p-pāl,* பெ.(n.) தில்லைப்பால்; tiger's milk spurge (சா.அக.).

[கானம் + பால்.]

கானப்பாலை *kāṉa-p-pālai,* பெ.(n.) காட்டுப்பாலை; wild *pālai* (சா.அக.).

[கானம் + பாலை.]

கானப்பேர் *kāṉa-p-pēr,* பெ.(n.) காளையார் கோயில்; *kāḷaiyārkōil,* as a forest city in Sivagangai district. *"அருங்குறும் புடுத்த கானப்பேர்" (புறநா. 21:6).* •

[கானம் + பெரு + எயில் – கானப்பெரெயில் → கானப்பேர். கானப்பேரெயில் (ஊரின்பெயர்) கானப்பேரெயில் பார்க்க; see kāṉa-p-pēreyil.]

கானப்பொட்டு *kāṉa-p-poṭṭu,* பெ.(n.) கமேலா மரத்தின் காய்களிலிருந்து உதிரும் பொடி; kamela dye or scarlet croton (சா.அக.).

மறுவ. கபிலப்பொடி

[கானம் + பொட்டு.]

கானபலை *kāṉapalai,* பெ.(n.) கனுப்பாலை என்னும் ஏழிலைப் பாலை; seven leaved milky plant (சா.அக.).

[கனுப்பாலை → கானபலை.]

கானம்[1] *kāṉam,* பெ.(n.) தேர் (சூடா.); car.

[கா = பெரியது. கா = கானம். பெரிய வடிவுடைய தேர்.]

kânana, kântâra, a wood, a forest. There is no proper root in *Sk.* to derive these words from. They may have been formed of *D. kâḷa1*, etc (K.K.E.D.XXIII).

கானம்[2] *kāṉam,* பெ.(n.) 1.காடு (திவா.); woodlan grove, forest tract. 2. நந்தவனம்; flower-garden.

"காலுங் கானமுங் கடிமல ரேந்த" (சிலப். 14:114). 3. மணம் (திவா.); fragrant scent. odour. 4. தொகுதி; heap,crowd, collection, bevy. *"செங்காற் பறவைக் கானத்து"* (மணிமே. 5:129). 5. பேதை (சூடா.); ignorant, rude person.

ம. கானம்; க. கா; தெ.,து. கான.

Skt. kānana

[கா = பிரிவு, அகற்சி, பரப்பு.]

கானம்[3] *kāṉam,* பெ.(n.) 1.இசைப்பாட்டு (திவா.); song, musical composition. 2. வானம்பாடி (சூடா.); skylark.

[கா → கான் + அம் – கானம்.]

கானம்புல் *kāṉambul,* பெ.(n.) கூரைவேயப் பயன்படும் புல்வகைகளுள் ஒன்று (நெல்.வழ.);a grass used as thatch.

[கான் + அம் + புல்.]

கானமடக்கு *kāṉa-maḍakku,* பெ.(n.) காட்டு வெக்காலி; partidge pea tree (சா.அக.).

[கான் + அ + மடக்கு.]

கானமயிலை *kāṉa-mayilai,* பெ.(n.) 1.பாய் விரிமூலி; wild ramboutan. 2. பசலைக்கொடி; Indian spinach (சா.அக.). 3.மரவகை (L.); wild ramboutan.

ம. கானமயில

[கான் + அ + மயிலை.]

கானமல்லிகை *kāṉa-malligai,* பெ.(n.) காட்டு மல்லிகை (இலக்.வி.170, உரை.); wild jasmine.

[கானம்² + மல்லிகை.]

கானமா *kāṉamā,* பெ.(n.) காட்டுப்பன்றி; wild pig (சா.அக.).

[கானம் + மா.]

கானமூர்த்தி *kāṉa-mūrtti,* பெ.(n.) மேள வகைகளுள் ஒன்று (சங்.சந். 47); a primary *rāga.*

[கானம் + மூர்த்தி.]

கானமௌவல் *kāṉa-mouval,* பெ.(n.) காட்டு மல்லிகை (மலை.); wild jasmine.

[கானம்² + மௌவல்.]

கானயூகம் *kāṉa-yūgam,* பெ.(n.) காட்டுக் குரங்கு (வின்.); wild monkey.

[கானம்² + ஊகம்.]

கானல்[1] *kāṉal,* பெ.(n.) 1.மணம்; scent, odour. *"கானலங் காவும்"* (பரிபா. 16:17) 2. கடற்கரை; seashore. *"புலவு மணற் பசுங்கானல்"* (பட்டினப். 94). 3. கடற்கரை சோலை; grove or forest on the sea-shore. *"கானலுங் கடலுங் கரையுந் தேர்வழி"* (மணிமே. 25:196). 4. கழி(திவா.); salt marsh. 5. உப்பளம் (பிங்.); salt-pan. 6. உவர்நிலம் (பிங்.); saline soil. 7. மலைசார்ந்த சோலை (திவா.); forest on the slope of a hill.

ம., க. கானல்.

[கான் + அல் – கானல்.]

கானல்[2] *kāṉal,* பெ.(n.) 1.வெப்பம்; heat. இங்கே கானலடிக்கிறது (உ.வ.). 2. சூரியன் ஒளிக்கதிர் (திவா.); sun's ray. 3. ஒளி; light, lustre, brightness. *"தேங்கு கானற் கிளிச்சிறை"* (இரகு. நகர. 67). 4. பேய்த்தேர் (திவா.); mirage. 5. பரல் நிரம்பிய நிலம் (பிங்.); gravelly soil.

ம. கானல்

[கனல் → கானல்.]

கானல்கன்னி *kāṉal-kaṉṉi,* பெ.(n.) 1.காட்டு மருக்கொழுந்து; southern-wood. 2. காட்டுத் தெய்வமகள்; virgin goddess of the forest (சா.அக.).

[கானல் + கன்னி.]

கானல்தெங்கு *kāṉal-teṅgu,* பெ.(n.) காட்டுத் தென்னை; wild coconut palm.

ம. கானல்தெங்ங்ு

[கானல் + தெங்கு.]

கானல்நீர் *kāṉal-nīr,* பெ.(n.) பேய்த்தேர்; mirage.

ம. கானல்சலம்

[கானல் + நீர்.]

கானல்மிளகாய் *kāṉal-miḷakāy,* பெ.(n.) ஊசிமிளகாய்; a kind of chilli (சா.அக.).

[கானல் + மிளகாய்.]

கானல்வரி[1] *kāṉal-vari,* பெ.(n.) 1. கழிக்கரைக் காதற் பாடல் (சிலப். 6:35, உரை.); love-songs of fishermen, sung in coastal regions. 2. இசைப் பாவகையுள் ஒன்று; (சிலப்.கடலாடு. 35. உரை) (த.சொ.அக.);one of the musical poems.

ம. கானல் வரிப்பாட்டு

[கானல்[1] + வரி.]

கானல்விலங்கு *kāṉal-vilaṅgu,* பெ.(n.) 1.கொக்குமந்தாரை; taper pointed mountain ebony. 2. காட்டுப் பன்றி; wild boar (சா.அக.).

[கானல் + விலங்கு.]

கானல்வீசு-தல் *kāṉal-vīsu-,* 5 செ.கு.வி.(v.i.) 1.***கானலோடு*** (வின்.); பார்க்க; see *kāṉalōḍu.* 2. ***கானலடி*** பார்க்க; see *kāṉalaḍi.*

[கானல்[2] + வீசு .]

கானலடி-த்தல் *kāṉal-aḍi-,* 4 செ.கு.வி.(v.i.) வெக்கையடித்தல்; to have heat-wave, radiation of heat.

[கானல்[2] + அடி-.]

கானலோடு-தல் *kāṉal-ōḍu-,* 5 செ.கு.வி.(v.i.) பேய்த்தேரோடுதல் (வின்.); to have the mirage float before the eyes.

[கானல்[2] + ஓடு-.]

கானவன் *kāṉavaṉ,* பெ.(n.) 1.குறிஞ்சி, முல்லை அல்லது பாலைநிலத்து மகன் (பிங்.); inhabitant of a mountain, forest or desert tract. 2. குரங்கு (உரி.நி.); monkey.

[கானம்[2] → கானவன்.]

கானவாரணம் *kāṉa-vāraṇam,* பெ.(n.) காட்டுக்கோழி; jungle fowl. *"கான வாரண மீனுங் காடாகி"* *(புறநா. 52:16).*

[கானம்[2] + வாரணம்.]

கானவாழை *kāṉa-vāḻai,* பெ.(n.) நீர்வாழை (பிங்.); traveller's palm.

[கானம்[2] + வாழை.]

கானவிருக்கம் *kāṉa-virukkam,* பெ.(n.) பாதிரி (மலை.); trumpet flower.

[கானம்[2] + விருக்கம்.]

கானவிருடி *kāṉa-v-iruḍi,* பெ.(n.) சிற்றாமுட்டி; rose-coloured sticky mallow (சா.அக.).

[கானம் + இருடி.]

கானவைப்பு *kāṉavaippu,* பெ.(n.) முல்லைநிலம்; forest tract.

[கான் + அ + வைப்பு.]

கானற்குன்று *kāṉaṟ-kūṉṟu,* பெ.(n.) ஒருவகைச் செய்நஞ்சு; a kind of mineral poison (சா.அக.).

[கானல் + குன்று.]

கானற்பலா *kāṉaṟ-palā,* பெ.(n.) கல்வருக்கை (சங்.அக.); anjeli.

[கானல் + பலா.]

கானற்பேய்ச்சி *kāṉaṟ-pēycci,* பெ.(n.) பேய்த் தும்பை; devil lucas (சா.அக.).

[கானல் + பேய்ச்சி.]

கானனம் *kāṉaṉam,* பெ.(n.) காடு (பிங்.); forest, woods, grove.

ம. கானனம்; க. கானன.

[கான் + அன் + அம். 'அன்' சொற்சாரியை. 'அம்' சொல்லாக்க ஈறு.]

கானனீர் *kāṉaṉīr,* பெ.(n.) கானலில் தோன்றும் நீர்த்தோற்றம் (தாயு. பொருள்வ.6); mirage, as mistaken for a sheet of water.

மறுவ. கானற்சலம்

[கானல்² + நீர்.]

கானனுசாரி *kāṉ-aṉuśāri,* பெ.(n.) நன்னாரி (மலை.); Indian sarsaparilla.

[கான்³+அனுசாரி]

கானா *kāṉā,* பெ.(n.) வாச்சிய வகை; a kind of trumpet. *"வாங்காலுங் கானாவும் (மான்விடு. 239).*

[கால் (நீட்சி) → கான்→ கானா.]

கானாங்கள்ளி *kāṉāṅ-kaḷḷi,* பெ.(n.) இலைக்கள்ளி; spiral five tubercled spurge. *"கூட்டியே திருகு கள்ளி கானாங் கள்ளி கடசாதே படர்ந்திருந்த முள்ளிக் கள்ளி" (வைர.163.) (த.சொ. அக.).*

ம. கானங்கள்ளி

கானாங்கள்ளி

கானாங்கீரை *kāṉāṅ-kīrai,* பெ.(n.) ***கானாங் கோழை*** பார்க்க; see *kāṉāṅ-kōḻai*

[கான்³ + ஆம் + கீரை.]

கானாங்கெளிறு *kāṉāṅ-keḷiṟu,* பெ.(n.) நன்னீரில் வாழும் மீன்வகை (சங்.அக.); a fresh-water fish.

[கான்³ + ஆம் + கெளிறு.]

கானாங்கெளுத்தி *kāṉāṅ-keḷutti,* பெ.(n.) கடல்மீன்வகை; a kind of sea fish.

[கான்³ + ஆம் + கெளுத்தி.]



கானாங்கெளுத்தி

கானாங்கோழி *kāṉāṅ-kōḻi* பெ.(n.) 1.காட்டுக் கோழி (தொல். எழுத்து. 405, உரை.); jungle fowl. 2. வான்கோழி (வின்.); turkey.

[கான்³ + ஆம் + கோழி.]

கானாங்கோழை *kāṉāṅ-kōḻai,* பெ.(n.) 1.கானா வாழைவகை (M.M.); calf's grass. 2. பூடு வகை (வின்.); common spiderwort.

[கான்³ + ஆம் + கோழை.]

கானாங்கோனான்¹ *kāṉāṅkōṉāṉ,* பெ.(n.) குழப்பம் (வின்.); want of method, confusion.

[கானல் + கோனன் – கானாங்கோனன்→ கானாங்கோனான்.]

கானாங்கோனான்² *kāṉāṅ-kōṉāṉ,* பெ.(n.) எவ்வகையாரும் (யாழ்.அக.); all and sundry.

[கானான் + கோனான் – கானாங்கோனான். கானன், கோனன் இயற்பெயர்கள். யாரேனும் இருவர் இயற்பெயர்களை அடுக்கிச் சொல்வது எவனாயிருந்தாலும் என்று பொருள்படு வதாயிற்று.]

கானாத்தடி *kāṉā-t-taḍi,* பெ.(n.) ***கானா*** (வின்.) பார்க்க; see *kāṉā.*

[கானா + தடி.]

கானாமுசல் *kāṉā-mušal,* பெ.(n.) வேகமாய்ப் பறக்கும் பறவை வகை (M.M.); jungle hare, stone - plover, swift like a hare.

[கான்[3] + ஆம் + (முயல்) முசல்.]

கானாமுருங்கை *kāṉa-muruṅgai,* பெ.(n.) காட்டு முருங்கை; jungle moringa, senna-leaved french honeysuckle.

[கான்[3] + ஆம் + முருங்கை. கான் = காடு.]

கானாமொச்சை *kāṉa-moccai,* பெ.(n.) காட்டு மொச்சை; country bean (சா.அக.).

[கானம் + மொச்சை.]

கானாவதி *kānāvati,* பெ.(n.) திப்பிலி; long pepper (சா.அக.).

[கானம் + அத்தி – கானாத்தி → கானாவதி.]

கானாவாழை *kāṉ-ā-vāḻai,* பெ.(n.) ***கானாங் கோழை*** பார்க்க; see *kāṉaṅ-kōḻai.*

[கான்[3] + ஆம் + வாழை.]

கானாவு *kāṉāvu,* பெ.(n.) காட்டுக்குன்றி; wild cats eye crab (சா.அக.).

[கான் + ஆவு.]

கானாவேளை *kāṉāvēḷai,* பெ.(n.) 1. தைவேளை; ஒரு மூலிகை; a black variety of *vēḷai* or five leaved clome (சா.அக.). 2.செடிவகை (வின்.); a plant.

[கானம் + வேளை.]

கானாழி *kāṉaḻi,* பெ.(n.) 1.வெள்வங்கம்; white lead-tin. 2. கால்நாழிஅளவு; an Indian measure of capacity i.e. 28/4 or 7 cubic inches. 3. பட்டணம் படியில் (இரண்டு லிட்டர்) கால்படி; according to Madras measure, 1/4 measure (சா.அக.).

[கால் + நாழி.]

கானாழிகை *kāṉaḻikai,* பெ.(n.) கால்நாழிகை; an Indian time measure 4/24 or 6 minutes (சா.அக.).

[கால் + நாழிகை.]

கானான் *kāṉāṉ,* பெ.(n.) ஒருவகைக் கொடி (இராசவைத்.); a kind of creeper.

[கான் + ஆன்.]

கானிகம் *kāṉigam,* பெ.(n.) மணித்தக்காளி; black-berried solnum (சா.அக.).

[கான் → கானிகம்.]

கானித்தம் *kāṉittam,* பெ.(n.) ஏலம்; cardamom (சா.அக.).

[கான் → கானித்தம்.]

கானியமேனிக்கல் *kāṉiya-mēṉi-k-kal,* கரும் புள்ளிக்கல் என்னும் கானகக்கல்; a mineral stone with black dots arising on it from the presence in it of metallic remnants (சா.அக.).

[கானிய + மேனி + கல்.]

கானிருப்பியம் *kāṉiruppiyam,* பெ.(n.) அணு மூலுதுவரை; a kind of dhardocl (சா.அக.).

[கான் + இருப்பியம்.]

கானிலம் *kāṉilam,* பெ.(n.) கொடுவேலி (மலை.); Ceylon leadwort.

[கான்[3] + நிலம்.]

கானீயம் *kāṉīam,* பெ.(n.) 1.கக்கரிக்காய்; wild cucumber. 2. காட்டில் தோண்டியெடுக்கும் காரீயம்; graphite (சா.அக.).

[கான் + ஈயம்.]

காணெள் *kāṉ-el,* பெ.(n.).காட்டெள் (இ.வ.); ramtil.

[கான் + எள் – காணெள். கான் = காடு.]

காணெறி *kāṉeṟi,* பெ.(n.) 1.சாளரம்; window as passage for air. *"காணெறி யாயினானே" (சீவக. 2291).*

[கால் + நெறி]

காணை[1] *kāṉai,* பெ.(n.) மாட்டின் காலிற்காணும் நோய் வகை (இ.வ.); foot disease in cattle.

[கால் + நோய் – கால்நோய் → கானோய் → காணை.] (கொ.வ)

காணை[2] *kāṉai,* பெ.(n.) கானப்பேர் எனும் ஊர்; place name *kāṉappēr. "காணையம் பதியடைந் தார்" (திருவாலவா. 27).*

[கானப்பேர் → காணை (மரூஉ.)]

கானோக்கு *kāṉōkku,* பெ.(n.) காற்பங்குப் பார்வை (கணி); quarter vision. *"கோள்களின் நோக்கறியு மிடத்துக் கோள்கள் நின்ற ஓரை (இராசி). முதல் மூன்றும் பத்தும் கானோக்கு; கானோக்கிற் சனிவலியன்" (இரகுநாதையர் பஞ்சாங்கம்) (த.சொ.அக.).*

[கால் + நோக்கு → கானோக்கு.]

கி *ki,* பெ.(n.) 'க்' என்னும் மெய்யெழுத்தும் 'இ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து பிறந்த உயிர்மெய் யெழுத்து; the syllable formed by adding front short vowel (i) to the velar voiceless stop (k), one of the secondary alphabet of Tamil language.

[க் + இ – கி. உயிர்மெய்க் குறிலெழுத்து.]

கிக்கிரி *kikkiri,* பெ.(n.) மீன்கொத்திப் புள் (யாழ். அக.); king fisher.

ம. கிக்கிரி

[கீள் + கிளி →கீள்கிளி→கிக்கிரி (கொ.வ.).]

கிக்கிலம் *kikkilam,* பெ.(n.) மலைதாங்கி என்னும் மூலிகை; sickle leaf (சா.அக.).

[குறு + கிலம் –குறுக்கிலம்→குக்கிலம்→கிக்கிலம் (கொ.வ.).]

கிகண்டம் *kigaṇḍam,* பெ.(n.) மயிற்றோகை; peacock's tail (சா.அக.).

[கிகண்டம்→கிகண்டம்.]

கிகிணி[1] *kikiṇi,* பெ.(n.) காக்கணம் கொடி (திவா.); mussel-shell creeper (செ.அக.).

ம. கிகிணி

[காக்காணம்→காக்கனி→கக்கிணி→கிகிணி (கொ.வ.).]

கிகிணி[2] *kikiṇi,* பெ.(n.) வலியன் என்னும் கரிக் குருவிப் புள் (பிங்.); king-crow.

[கீள் = பிளத்தல், கொத்துதல். கீல்கு →கீற்கு →கீற்குணி → கிக்குணி → கிகிணி (கொ.வ.).]

கிகீதி *kigīdi,* பெ.(n.) காடை; quail (சா.அக.).

[கு+கூவி–குகூவி → கிகீதி.]

கிங்கரன் *kiṅgaraṉ,* பெ.(n.) ஏவலாள்; servant, attendant. *"நமனார், கிங்கரர்" (பதினோ.பொன் வண்.66).*

ம. கிங்கரன், கிங்கணன் (குறைந்த செல்வம் உள்ளவன்); க. கிங்கர; தெ. கிங்கருடு; து. கிங்கரெ; skt. *kiṅkara.*

[கீழ் + கருமன் – கீழ்கருமன் →கிக்கருமான் → கிக்கரன் → கிங்கரன் (கொ.வ.).]

கிங்கரி *kiṅgari,* பெ.(n.) 1. ஏவலாளனின் மனைவி; wife of a servant. 2.வேலைக்காரி; a maid servant.

ம. கிங்கரி

[கிங்கரன் (ஆ.பா.) – கிங்கரி (பெ.பா.) (கொ.வ.).]

கிங்கிணி *kiṅgiṇi,* பெ.(n.) 1. காற்சலங்கை (பிங்.); tinkling ornament for the ankle. 2. அரைச் சலங்கை; girdle of small bells. *"மாணிக்கக் கிங்கிணி தன்னரை யாட" (திவ். பெரியாழ். 1:8,2).* 3. கிலு கிலுப்பை வகை; a species of rattle wort.

ம. கிங்கிணி, கிங்ஙிணி; க., தெ., து. கிங்கிணி; skt. kinkiṇi.

[கிண்+கிணி – கிண்கிணி → கிங்கிணி. ஒலிக்குறிப்புச் சொல் அவ்வொலி யெழுப்பும் காற்சலங்கைக்கும் கிலுகிலுப்பைக்கும் ஆயிற்று.]

கிங்கிணிப்பாலை *kiṅgiṇi-p-pālai,* பெ.(n.) ஊசிப் பாலை (நாநார்த்த.); needle-leaved swallow-wort.

[கிண் + கிணி + பாலை – கிங்கிணிப்பாலை. கிண்கிணி– ஒலிக்குறிப்புச்சொல் காற்றால் இலைகள் ஒலியெழுப்பும் பாலை மரத்துக்குப் பெயராயிற்று.]

கிங்கிணிமாலைநெல் *kiṅgiṇi-mālai-nel,* பெ.(n.) நெல்வகை(A.); a kind of paddy.

[கிண்கிணி – கிங்கிணி + மாலை + நெல்.]

கிங்கிரம் பெ.(n.) 1. குதிரை; horse. 2. யானை; elephant. 3. வண்டு; beetle (சா.அக.).

ம. கிங்கிரம்

[கருங்கரம் → கங்கரம் → கிங்கிரம்.]

கிங்கிரை *kiṅgirai,* பெ.(n.) அரத்தம் (குருதி); blood (சா.அக.).

[செம் + குரு –செங்குரு → செங்கிரை → கிங்கிரை (கொவ.).]

கிங்கிலியன் *kiṅgiliyaṉ,* பெ.(n.) **கிங்கரன் (வின்.)** பார்க்க; see *kiṅgaraṉ.*

[கிங்கரன் → கிங்கிரி + அன் – கிங்கிரியன் → கிங்கிலியன் (கொ.வ.).]

கிங்கினி *kiṅgiṉi,* பெ.(n.) தண்ணீரைக் கட்டும் சிறுவீடுகொள் பயறு; a kind of jungle gram capable of binding water (சா.அக.).

[குறுங்கொள் → குங்கொணி → கிங்கினி (கொ.வ.).]

கிச்சடி *kiccaḍi,* பெ.(n.) 1. ஒருவகைச் சிற்றுண்டி (கோயிலொ.31); a dainty made of rice and split pulse boiled together with ghee and spices. 2. கறிவகை; curry prepared with fresh curds, coconut and green chillis. 3. கூழ்வகை (வின்.) a kind of rice gruel for sick people and children.

ம. கிச்சடி; க. கிச்சடி, கிசடி, கிச்சிடி; தெ. கிச்சிடி; பிரா. கிச்ச.

Mar.,H. khicaḍi

[குய் → குய்க்கல் → குத்தலி → குச்சடி → கிச்சடி. கஞ்சி வடிக்காமல் புழுங்கக் காய்ச்சும் தன்மைக் கருதி கிச்சடி எனப்பட்டது. குய்த்தல் = சுடுதல், வேகவைத்தல்.]

கிச்சம்மாள்வெட்டு *kiccammāḷ-veṭṭu,* பெ.(n.) பழைய நாணய வகை (பணவிடு.142); an ancient coin.

[கிச்சம்மாள்+ வெட்டி.]

கிச்சல் *kiccal,* பெ.(n.) அக்குளில் அல்லது விலாப்பக்கத்தில் விரலால் தொட்டுக் கூச்சம் உண்டாககுதல்; tickling with a view to make one laugh.

[குத்து → குச்சு → கிச்சு → கிச்சல்.]

கிச்சலாட்டம் *kiccal-āṭṭam,* பெ.(n.) தொல்லை தருதல் (வின்.); molestation, disquietude, vexation.

ம. கிச்சலாட்டம்; க. கித்தாட.

[கிச்சல் + ஆட்டம் – கிச்சலாட்டம். கிச்சல் பார்க்க; see kiccal.]

கிச்சாட்டம் *kiccāṭṭam,* பெ.(n.) **கிச்சலாட்டம்** (வின்.) பார்க்க; see *kiccal-āṭṭam*.

[கிச்சலாட்டம் → கிச்சாட்டம்.]

கிச்சான் *kiccāṉ,* பெ.(n.) சிறுபையன்; small boy.

[குள் → குச்சு → குச்சன் → கிச்சன் → கிச்சான் (குள் = மாணவன், சிறுவன்).]

கிச்சிகம் *kiccigam,* பெ.(n.) காட்டுக்கொளுஞ்சி; wild lemon (சா.அக.).

[கிச்சில் → கிச்சிகம்.]

கிச்சிகா *kiccigā,* பெ.(n.) காட்டுக்கொளுஞ்சி; wild lemon (சா.அக.).

[கிச்சிகம் → கிச்சிகா.]

கிச்சிலி *kiccili,* பெ.(n.) 1. கொழிஞ்சி; sylhet orange. 2. நாரத்தை (மலை.); seville orange. 3. கிச்சிலிக் கிழங்கு (யாழ்ப்.); spiked garland flower. 4. பூலாங்கிழங்கு (தைலவ.தைல.59); long zedoary.

மறுவ. கிச்சலி, கொளுஞ்சி, கொழுச்சி, கொழுச்சில்

தெ. கிச்சிலி, கித்தலி.

[கொழிச்சில் → கொச்சில் → குச்சில் → குச்சிலி → கிச்சிலி.]

கிச்சிலிக்கரணை *kiccili-k-karaṇai,* பெ.(n.) காட்டுமிளகு (L.); lopez root.

[கிச்சிலி + கரணை. கரணை = கருத்திருப்பது. கிச்சிலி = கொத்துச்செடியாயிருப்பது.]

கிச்சிலிக்கரணை

கிச்சிலிக்கிழங்கு *kiccili-k-kiḻaṅgu,* பெ.(n.) மணம் தரும் வேருள்ள செடிவகை (தைலவ.தைல. 119,உரை).; camphor zedoary.

ம. கிச்சிலிக்கிழங்நு

[கிச்சிலி + கிழங்கு. கிச்சிலி – இங்கு நறுமணப் பொருள் தந்தது.]



கிச்சிலிக்கிழங்கு

கிச்சிலிக்குடிநீர் *kiccili-k-kuḍi-nīr,* பெ.(n.) நாரத்தைத் தோலினின்று வடித்த குடிநீர்; tincture of orange peel (சா.அக.).

[கிச்சிலி + குடி + நீர்.]

கிச்சிலிக்குருவி *kiccili-k-kuruvi,* பெ.(n.) ஒருவகைக் குருவி; a kind of king-fish (சா.அக.).

[கிச்சிலி + குருவி.]



கிச்சிலிக்குருவி

கிச்சிலிச்சம்பா *kiccili-c-cambā,* பெ.(n.) சம்பா நெல்வகை (இ.வ.); a variety of small camba paddy.

ம. கிச்சிலிச்சம்பா

[கிச்சடி செய்தற்கேற்ற அரிசிவகைக்குரிய நெல்வகை.]

கிச்சிலிச்சோறு *kiccili-c-cōṟu,* பெ.(n.) முக–மதியர் விருந்திற் படைக்கும் ஒருவகைச் சோறு (உ.வ.); a kind of food, served in Mohammadan feasts.

[கிச்சடி → கிச்சிலி + சோறு.]

கிச்சிலிப்படிகம் *kiccili-p-padigam,* பெ.(n.) தும்புராமரம்; Indian tooth-ache tree (சா.அக.).

[கிச்சிலி + படிகம்.]

கிச்சிலிப்பனை *kiccili-p-panai,* பெ.(n.) குமுதிப் பனை; Malayan sugar-palm.

[கிச்சிலி + பனை.]

கிச்சிலிப்புளிப்பு *kiccili-p-pulippu,* பெ.(n.) கிச்சிலி அமிலம்; citric acid occurring free in oranges, lemons etc. (சா.அக.).

[கிச்சிலி + புளிப்பு.]

கிச்சிலிப்பூத்தைலம் *kiccili-p-pū-t-tailam,* பெ.(n.) கிச்சிலிப் பூவினின்று எடுக்கும் எண்ணெய்; oil extracted from orange flower (சா.அக.).

[கிச்சிலிபூ + தைலம்.]

கிச்சு *kiccu,* பெ.(n.) நெருப்பு; fire. *"கிச்சிடையிடு மெனக் கிளக்கின் றார்இலர்" (கம்பரா. பிணி வீட்டு. 3).*

க. கிச்சு, கிர்சு, கிழ்சு; **தெ.** கிச்சு; **து.,** **பட.** கிச்சு; **குட.** தித்; **கோத.** திச்; **நா.,** **பர்.** கிச்; **குரு.** கிச்ச்; **மா.** சிசு.

[குய் → குய்ச்சு → குச்சு → கிச்சு. குய் = சுடுதல், எரிதல்.]

கிச்சுக்கிச்சுத்தம்பலம் *kicci-k-kiccu-t-tambalam,* பெ.(n.) ***கீச்சுக் கீச்சுத் தாம்பாளம்*** பார்க்க; see *kiccu-k-kiccu-t-tāmbālam.*

[கீச்சுக் கீச்சு → கிச்சுக்கிச்சு + (தாம்பாளம்) தம்பலம்.]

கிச்சுக்கிச்சுப் பண்ணு-தல் *kiccu-k-kiccu-p-pannu-,* 5 செ.குன்றாவி.(v.t.) ***கிச்சுக்கிச்சு மூட்டு தல்*** பார்க்க; see *kiccu-k-kiccumūttu.*

[கிச்சு + கிச்சு + பண்ணு.]

கிச்சுக்கிச்சுமூட்டு-தல் *kiccu-k-kiccu-mūttu,* 5 செ.குன்றாவி.(v.t.) கூச்சமுண்டாகும்படி பிறர் உறுப்புகளைத் தொடுதல் (உ.வ.); to tickle with a view to make one laugh.

ம. கிக்கிணிக்குக; **பட.** திலிதிருகு.

[கிச்சு + கிச்சு + மூட்டு. கிச்சுக் கிச்சு = ஒரு பொருள் குறித்து வந்த மரபிணைச் சொல்.]

கிச்சுக்கிச்செனல் *kiccu-k-kiceenal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom, expr. signifying chirping, as lizards.

[கிச்சு + கிச்சு + எனல்.]

கிச்சுடர் *kiccudar,* பெ.(n.) சக்கரவாளம் (அக.நி.); a mythical range of mountains beyond the earth.

[கிழ் + சுடர்.]

கிசம் *kisam,* பெ.(n.) தளிர்; tender leaf. sprout.

[கிள் → கிளம் → கிசம்.]

கிசலம் *kiśalam,* பெ.(n.) ***கிசயம்*** பார்க்க; see *kiśayam.*

[கிள் → கிளம் → கிசம் → கிசலம்.]

கிசலயம் *kiśalayam,* பெ.(n.) தளிர்; tender leaf, sprout *"கிசலயப்புரை சீறடி" (கந்தபு. இரணியன்பு. 56).*

[கிசலம் → கிசலயம்.]

கிசலை *kiśalai,* பெ.(n.) ***கிசம்*** பார்க்க;see *kiśam.*

[கிசம் → கிசலை.]

கிசனி *kiśani,* பெ.(n.) மரக்கிளையினின்றும் பறந்தெழுவதாகிய ஒருவகைப் பறவை இயங் கோட்டம் (காசிக.திரிலோ.6); rising in flight from a branch, one of the movements of a bird.

[ஓசனித்தல் → ஓசனி → கோசனி → கிசனி.]

கிசாலம் *kiśālam,* பெ.(n.) தளிர் (யாழ்.அக.); sprout.

[கிசலம் → கிசாலம்.]

கிசில் *kiśil,* பெ.(n.) கீல்; tar, pitch (வின்.).

[கசி → கிசில் → கிசில்.]

கிசில்பூசு–தல் *kišil-pūšu-,* 5 செ.கு.வி.(v.i.) கப்பலிற் சந்துகளைப் பற்றுவைத்தடைத்தல் (பாண்டி); to caulk.

[கசி → கிசில். கிசில் + பூசு.]

கிசிற்கயிறு *kišir-kayiru,* பெ.(n.) தாரெண்ணெய் பூசின கயிறு (வின்.); tarred rope.

[கிசில் + கயிறு. கசி → கசில் → கிசில் + கயிறு. கசியும் எண்ணெய் கசில் அல்லது கிசில் எனப்பட்டது (கொ.வ.).]

கிசுகிசு–த்தல் *kišukišu-,* 7 செ.கு.வி.(v.i.) பிறர் கேட்காதவாறு ஒருவருடைய காதில் மெதுவாக ஒன்றைச் சொல்லுதல்; கமுக்கம் (இரகசியம்) பேசுதல்; to whisper, something in to the ears, tell a secret, in whispering voice. அவருடைய காதில் அவள் ஏதோ கிசுகிசுத்தாள்.

பட. குசுகுசு

கிசுகிசுத்தான் *kišu-kišuttāṉ,* பெ.(n.) வாலில்லாக் காற்றாடி (யாழ்ப்.); small paper-kite without a tail.

[கிசுகிசு – ஒலிக்குறிப்புச்சொல். கிசுகிசு → கிசு கிசுத் தான். ஒலிக்குறிப்புச் சொல்லடியாகப் பிறந்த பெயர்ச்சொல். அண்மையில் பறக்கும்போது மெல்லிய ஓசையெழுப்பும் காற்றாடி.]

கிசுகிசுப்பான் *kišu-kišuppāṉ,* பெ.(n.) வாலுள்ள காற்றாடி (யாழ்ப்.); a paper kite with a tail.

[கிசுகிசு = ஒலிக்குறிப்புச்சொல். கிசுகிசு → கிசுகிசுப்பான் = தொலைவில் பறக்கும்போது மெல்லிய ஓசையெழுப்பும் காற்றாடி.]

கிசுகிசுப்பு *kišu-kišuppu,* பெ.(n.) 1. ஒருவருடைய சொந்த வாழ்க்கையைப் பற்றி மறைவாகப் பேசிக் கொள்ளும் பேச்சு; juicy talk, about a person's pri-vate life. அந்தப் புது நடிகையைப்பற்றிப் பல கிசுகிசுப்புகள் வரத்தொடங்கிவிட்டன (உ.வ.). 2. பிறர் கேட்காத படியான மெல்லிய ஓசை; whis-per, soft voice. கிசுகிசுப்பான குரலில் கேட்டான்.

[கிசு + கிசு – கிசுகிசு → கிசுகிசுப்பு]

கிசுகிசெனல் *kišukišenal,* பெ.(n.) ஒலிக்குறிப்பு; onom. expr. signifying firing as a rocket, rustling as a starched garment when walking briskly.

[கீச்சுக்கீச்சு = கிச்சுக்கிச்சு. கிசுகிசு + எனல்.]

கிஞ்சகா *kiñjagā,* பெ.(n.) கொடிக் காசரைக்கீரை; a kind of edible greens (சா.அக.).

[கஞ்சகா → கிஞ்சகா.]

கிஞ்சனன் *kiñjaṉaṉ,* பெ.(n.) அறிவிலான் (யாழ்.அக.); ignorant man (செ.அக.).

[கிளிஞ்சிலான் → கிஞ்சலன் → கிஞ்சனன் (கொ.வ.). → கிளிஞ்சில் போன்று உள்ளீடில்லாதவன், அறிவிலி.]

கிஞ்சபன்னி *kiñja-paṉṉi,* பெ.(n.) நாயுருவி (மலை.); a plant growing in hedges and thickets.

[குஞ்சம் → குஞ்ச → கிஞ்ச + பன்னி. பன்னி = பன் வைத்த கருக்கருவாள் போல் கூர்முனை தெரிவது.]

கிஞ்சம்[1] *kiñjam,* பெ.(n.) 1. சிறிது; small quantity. 2. சிறுமை (சங்.அக.); smallness, littleness.

[கொஞ்சம் → கிஞ்சம் (கொ.வ.).]

கிஞ்சம்[2] *kiñjam,* பெ.(n.) 1. புளி (வின்.); tamarind. 2. புளிமா (மலை.); Indian logplum.

[குஞ்சம் → கிஞ்சம். குஞ்சம் = கொத்து. கொத்து, கொத்தாகக் காய்க்கும் புளி.]

கிஞ்சல் *kiñjal,* பெ.(n.) சுருக்கம்; limit, bounds 'கிஞ்சலிலா வஞ்சிடத்தும்' (ஒழிவி.பொதுவி.33).

[கொஞ்சம் → கொஞ்சல் → கிஞ்சல் (கொ.வ.).]

கிஞ்சள் *kiñjaḷ,* பெ.(n.) ஆரைக்கீரை; a kind of ed-ible greens (சா.அக.).

[கஞ்சல் → கிஞ்சள்.]

கிஞ்சன் *kiñjaṉ,* பெ.(n.) ஏழை; poor, destritute man, as having very little.

[கிஞ்சு → கிஞ்சன்.]

கிஞ்சனன் *kiñjaṉaṉ*, பெ.(n.) ஏழை (நிகண்டு); poor, dsestitute man, as having very little.

[கிஞ்சன்+ அன்– கிஞ்சனன்.]

கிஞ்சாரு *kiñjāru*, பெ.(n.) நெல்லின் முள்; paddy's spinke (சா.அக.).

[குள் → குஞ்சல் → குஞ்சாரு → கிஞ்சாரு.]

கிஞ்சி[1] *kiñji*, பெ.(n.) 1. வேம்பு (மலை.); margosa tree. 2. திருவாத்திமரம்; holy mountain ebony.

[கிழிஞ்சி → கிஞ்சி (கிழிந்தயிலை முனைகளை உடையது).]

கிஞ்சி[2] *kiñji*, பெ.(n.) 1. முதலை; crocodile. 2. வெள்ளைக் கழற்கொடி; white species of bonduc creeper. 3. மிகச் சிறியது; very little (சா.அக.).

[கிழிஞ்சி → கிஞ்சி]

கிஞ்சிக்கிஞம் *kiñji-k-kiñam*, பெ.(n.) சிற்றறிவு; shallow knowledge.

[குஞ்சு + குஞ்சம் → குஞ்சிக்கிஞம்.]

கிஞ்சிக்கிஞர் *kiñji-k-kiñar*, பெ.(n.) சிற்றறிவினர் (இரு.நூ.); people of shallow knowledge.

[குஞ்சு → குஞ்சர் → குஞ்சுகுஞ்சர் → கிஞ்சிக்கிஞர்.]

கிஞ்சிக்கினம் *kiñjikkiṉam*, பெ.(n.) **கிஞ்சிஞ்ஞம்** பார்க்க; see *kiñciññam*.

[கிஞ்சிக்சினம் → கிஞ்சிக்கினம்].

கிஞ்சிக்கினன் *kiñjikkiṉaṉ*, பெ.(n.) **கிஞ்சித்தன்** பார்க்க see *kiñcittaṉ*.

[கிஞ்சிக்கினம் → கிஞ்சிக்கினன்.]

கிஞ்சிகம் *kiñjigam*, பெ.(n.) திருவாத்தி; holy mountain ebony (சா.அக.).

[கிஞ்சி → கிஞ்சிகா.]

கிஞ்சிகா *kiñjiga*, பெ.(n.) வேப்பமரம்; neem tree (சா.அக.).

[கிஞ்சி → கிஞ்சிகா.]

கிஞ்சிஞ்ஞத்துவம் *kiñjiññattuvam*, பெ.(n.) சிற்றறிவுடைமை (சி.சி.4,21,ஞானப்.); state of being limited in knowledge. opp. to carvaññāttuvam.

*[கிஞ்சு → கிஞ்சுத்துவம். **கிஞ்சுத்துவம்** பார்க்க; see kiñsuttuvam.]*

கிஞ்சிஞ்ஞம் *kiñjiññam*, பெ.(n.) சிற்றுணர்வு; limited knowledge opp to carvagññam.

[கிஞ்சு → கிஞ்சம்.]

கிஞ்சித்தாகப்பேசு-தல் *kiñjittāga-p-pēsu-*, 5 செ.குன்றாவி.(v.t.) இழித்துக் கூறுதல் (வின்.); to speak in disparagemant of.

[கொஞ்சம் → கிஞ்சம் → கிஞ்சித்து + ஆக + பேசு– (கொ.வ.). இது கிளைமொழிப் பேச்சு வழக்காதலின் குறைத்துப் பேசுதல், தாழ்த்திப் பேசுதல் என்பதே செவ்விய வழக்கு.]

கிஞ்சித்து[1] *kiñjittu*, பெ.(n.) சிறுமை; any thing narrow, limited and mean, smallness.

[கொஞ்சம் → கிஞ்சம் → கிஞ்சித்து (கொ.வ.) • குறைந்த அளவு]

கிஞ்சித்து[2] *kiñjittu*, (adv.) கொஞ்சமாக; in small quantity, a little.

[கொஞ்சம் → கிஞ்சம் → கிஞ்சித்து.]

கிஞ்சித்து[3] *kiñjittu*, பெ.(n.) 1. புளிமா (மலை.); log plum. 2. திப்பிலி மூலம்; root of long-pepper (சா.அக.).

[கிஞ்சு → கிஞ்சித்து.]

கிஞ்சித்தும் *kiñjittum*, வி.எ.(adv.) சிறிதும்; even a little, not one bit. *அவனுக்கு ஏழைகள் மீது இரக்கம் கிஞ்சித்தும் கிடையாது.*

[கொஞ்சம் → கிஞ்சம் → கிஞ்சித்தும்.]

கிஞ்சித்துவம் *kiñjittuvam,* பெ.(n.) சிற்றறிவு (யாழ்.அக.); limited knowledge.

[கொஞ்சம் → கிச்சம் → கிஞ்சித்து → கிஞ்சித்துவம்.]

கிஞ்சித்தேனும் *kiñji-t-tēṉum,* கு.வி.எ.(adv.) சிறிதும்; even a little. கிஞ்சித்தேனும் இரக்கமில்லாதவன் (உ.வ.).

[கொஞ்சம் → கிஞ்சம் → கிஞ்சி + ஏனும் – கிஞ்சிற்றேனும் → கிஞ்சித்தேனும்.]

கிஞ்சிதம் *kiñjitam,* பெ.(n.) ***கிஞ்சித்து*** பார்க்க; see *kiñjittu.*

[கிஞ்சித்து → கிஞ்சிதம்.]

கிஞ்சில்[1] *kiñjil,* வி.எ.(adv.) 1. கொஞ்சம்; very little *'ஆமது கிஞ்சிலும் கிடையாது'* (ஞானவா.வைராக். 74). *'கிஞ்சளவு கேட்கலுமாம்' (ஒழிவி.பொது.24).*

[கொஞ்சம் → கிஞ்சம் → கிஞ்சல் → கிஞ்சில் (கொ.வ.).]

கிஞ்சில்[2] *kiñjil,* பெ.எ.(adj.) சிறிதான; a little.*'கிஞ்சளவு கேட்கலுமாம்' (ஒழிவி.பொது.24).*

[கொஞ்சம் → கிஞ்சம் → கிஞ்சல் → கிஞ்சில் (கொ.வ.).]

கிஞ்சில்[3] *kiñjil,* பெ.(n.) கீழ்மை (யாழ்.அக.); lowness.

[கீழ் → கீழ்ஞ்சல் → கிஞ்சல் → கிஞ்சில்.]

கிஞ்சு[1] *kiñju,* பெ.எ.(adj.) சிறிதான; a little *'கிஞ்சளவு கேட்க லுமாம்' (ஒழிவி.பொதுவி.24).*

[கொஞ்சம் → கிஞ்சம் → கிஞ்சு.]

கிஞ்சு[2] *kiñcu,* பெ.(n.) ***கிஞ்சுமாரம்*** (அக.நி.) பார்க்க; see *kiñjumāram.*

[கிஞ்சுமாரம் → கிஞ்சு.]

கிஞ்சுகபரணி *kiñjuga-paraṇi,* பெ.(n.) துளசி; holy basil (சா.அக.).

[கிஞ்சுகம் → பரணி.]

கிஞ்சுகம்[1] *kiñjugam,* பெ.(n.) 1. முண்முருக்கு (பிங்.); coral tree of the western ghats. m.tr. 2. கலியாண முருக்குவகை; Indian coral tree. 3. பலாசு மரம்; Palas tree. 4. சிவப்பு (பிங்.); red crimson.

[செம் → செஞ்சு → கெஞ்சு → கிஞ்சு → கிஞ்சுகம் (சிவப்பானது).]

கிஞ்சுகம்[2] *kiñjugam,* பெ.(n.) 1. கிளி; parrot. *"கிஞ்சுக மென்று கிளிக்கும் பேர்" (திவ்.பெரியாழ். 3:7,7,வியா.பக்.716).* 2. அசுணம் (அக.நி.); asuṇam, a creature of music supposed to possess a delicate sense of music.

[குஞ்சு → குஞ்சுகம் → கிஞ்சுகம். குஞ்சு மென்மையான இளம்பருவத்துப் பறவையைக் குறித்த சொல். மென்மையும் அழகும் வாய்ந்த பிற பறவைகளுக்கும் பெயராயிற்று.]

கிஞ்சுகி *kiñjugi,* பெ.(n.) பலாசுமரம் (தைலவ. தைல.40); palas tree.

[குஞ்சுகம் → கிஞ்சுகி.]

கிஞ்சுமம் *kiñjumam,* பெ.(n.) ***கிஞ்சுமாரம்*** பார்க்க;see *kiñjumāram.*

[கிஞ்சுமாரம் → கிஞ்சுமம்.]

கிஞ்சுமாரம் *kiñjumāram,* பெ.(n.) முதலை (யாழ்.அக.); crocodile.

[கீள்-பிளத்தல், இழுத்தல். கீள் → கீஞ்சு. கிஞ்சு + மாரம் (கொல்வது)–கிஞ்சுமாரம்.ஒ.நோ.தெ. குஞ்சு-இழு.]

கிஞ்சுலிகம் *kiñjuligam,* பெ.(n.) மண்ணுளிப்பாம்பு (இரு.நூ.);a kind of snake.

[கீள் = கிஞ்சு → கீஞ்சுள் → கீழ்சுளிகம் (மண்ணைப்பிளந்து உட்செல்வது) → கிஞ்சுலிகம் (கொ.வ.).]

கிஞ்ஞா *kiññā,* பெ.(n.) சிறிய பச்சை நிற இலைகளைக் கொண்ட புதர்ச்செடி (யாழ்ப்.); a kind of shrub with small evergreen leaf.

[குஞ்சம் → குஞ்ஞா → கிஞ்ஞா (சொ.அக.). குஞ்சம் = குள்ளமானது, குட்டையானது.]

கிஞம் *kiñam,* பெ.(n.) அறிவு (யாழ்.அக.); knowledge.

[குல் = சுடுதல், ஒளிர்தல். குல் → குயம் →குஞம் → கிஞம் (கொ.வ.).]

கிட்கிந்தை *kitkindai,* பெ.(n.) 1. எருமையூருக்கு (மைசூருக்கு) வடக்கில் உள்ள மலை; a mountain to the north of Mysore. 2. வாலி, சுக்கிரீவர் களுடைய தலைநகரம்; *Kiśkindha*, an ancient town on Mt. *Kiśkindha* the capital of *Vāli* and *Sugrīva,* the monkey chiefs of *Rāmāyana* fame.

[குடகுன்று → குடகுந்து → கிடகிந்து → கிட்கிந்தை (கொ.வ.)]

த. குடகுன்று >Skt. kiskinda.

வாலி என்னும் வாலியோனும், சுக்கிரீவன் என்னும் இரும்பிடர்த்தலையனும் ஆண்ட நாட்டின் மலையாகிய குடக்குன்று என்பது வடமொழியில் கிட்கிந்தை ஆயிற்று. *குடக்குன்று* பார்க்க; see *kuḍa-k-kuṉṟu.*

கிட்கிழங்கு *kitkiḻaṅgu,* பெ.(n.) சின்னிக்கிழங்கு; root of birch-leaved acalypha (சா.அக.).

[குட்டிக்கிழங்கு →கிட்கிழங்கு.]

கிட்ட[1] *kiṭṭa,* வி.எ. (adv.) அருகே; near, close by. *'கிட்ட வாவென' (கைவல்ய.தத்.87).*

ம. கிட்ட, கிட்டக்கெ; க. கிட்டு (கைக்கு அகப்படுதல்); துட. கிட்; து. கிட்ட; தெ. கிட்டு (அருகில்வருதல்); மா.கிடெ.

[கிள்→கிடு →கிட்டு→கிட்ட.]

கிட்ட[2] *kiṭṭa,* இடை (part.). ஐந்தாம் வேற்றுமைக்கும் ஏழாம் வேற்றுமைக்குமுரிய சொல்லுருபு; case sign of the ablative and the locative. *"சுழன்மாறி கிட்ட வாங்கி வழங்கிடுவீர்" (விறலிவிடு.901).*

[கிட்டு →கிட்ட.]

கிட்டக்கல் *kiṭṭa-k-kal,* பெ.(n.) 1. இரும்புத்துரிசு; iron dross. 2. கருக வெந்துள்ள செங்கல்; over burnt brick.

மறுவ. கிட்டம்

ம.கிட்டக்கல்

[கிட்டம்[2] + கல்.]

கிட்டங்கி *kiṭaṅgi,* பெ.(n.) பண்டசாலை (இ.வ.); store house, warehouse.

தெ.,க.கிட்டங்கி.

Malay.gaḍong

[கிடங்கில் = பள்ளம். கிடங்கில் → கிடங்கி→ கிட்டங்கி (பள்ளமாகச் செய்யப்பட்ட பண்டசாலை.]

பண்டைக் காலத்தில் நிலத்தில் குழிவெட்டிப் பூசி மெழுகித் தவசம் கொட்டிக் கற்பலகையால் மூடி வைக்கும் பழக்கம் இருந்ததால், கிடங்கில்-தவசம் கொட்டி வைக்கும் நிலவறையைக் குறித்தது.

கிட்டடி *kiṭṭaḍi,* பெ.(n.) அண்மை; proximity, vicinity.

[கிட்ட + அடி.]

கிட்டத்தட்ட *kiṭṭa-t-taṭṭa,* கு.வி.எ.(adv.) ஏறக்குறைய; nearly, about.

[கிட்ட + தட்ட - கிட்டத்தட்ட.]

கிட்டுதலும் தட்டுதலும் குறைபடுதல் பொருள் தருதலின் இரண்டும் இணைந்து ஒருபொருள் குறித்த மரபிணைச் சொல்லாயிற்று.

கிட்டத்தாள் *kiṭṭa-t-tāḷ,* பெ.(n.) அட்டைத்தாள் (இ.வ.); card-board.

[கிட்டம் + தாள் - கிட்டத்தாள். கிட்டம் = தடிப்பு.]

கிட்டப்பார்வை *kiṭṭa-p-pārvai,* பெ.(n.) அண்மை யிலுள்ளதுமட்டுந் தெரியும் பார்வைக் குறைபாடு; short sightedness.

[கிட்ட + பார்வை.]

கிட்டப்பிடி-த்தல் *kiṭṭa-p-piḍi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. அண்மையாயிருத்தல்; to keep near, as a ship

to the shore. 2. வேலை முடிவுக்கு வருதல்; to get near the end, as an undertaking.

[கிட்ட + பிடி-.]

கிட்டம்[1] *kittam,* பெ.(n.) அண்மை; nearness, vicinity (கொ.வ.).

ம. கிட்டம்

[கிட்டு → கிட்டம்.]

கிட்டம்[2] *kittam,* பெ.(n.) மாழைக்கட்டி; ore, lump of metal *"இரண்டு கிட்டஞ் சேரக் கிடக்க" (ஈடு.5:1,ப்ர).* 2. தீட்டப்படாத மணியிலுள்ள கரடு (ஸ்ரீவசன.பக்.7 ஆய்.வியா); dross or crust upon a precious stone. 3. இரும்பு முதலியவற்றின் துரு (பதார்த்த.1269.); dross, scoria, scum of metal. 4. வண்டல்; sediment, lees residuum. 5. சேறு முதலியவற்றின் ஏடு; coating, crust. 6. இறுக்கம்; state of being dry and hard.

[குள் → கிள் → கிட்டம் (திரட்சி,கட்டி).]

கிட்டம்பிடி-த்தல் *kittampidi-,* 4 செ.கு.வி.(v.i.) உலர்தல்; to be dried, as the surface of a garden bed.

[கிட்டம் + பிடி-.]

கிட்டமுட்ட *kitta-mutta,* வி.எ. (adv.) 1. ஏறக்குறைய; nearly, about. *'அதன்விலை கிட்டமுட்ட எவ்வளவு தொகையாகும்?'* 2. அண்மையில்; near, close by, in the near past. *அவனைக் கிட்டமுட்டக் காணோம்.*

மறுவ. கிட்டதட்ட

ம. கிட்டமுட்டெ

[கிட்டு + முட்டு.]

கிட்டலர் *kittalar,* பெ.(n.) பகைவர்; enemies, foes.

[கிட்டு + அல் + அர் + 'அல்' எ.ம. இடைநிலை]

கிட்டலோகம் *kittalōgam,* பெ.(n.) உருக்குமாழை; steel (சா.அக.).

[கிட்டம் + லோகம்.]

கிட்டாக்கினிக்கொட்டை *kittākkiṉi-k-kōttai,* பெ.(n.) சேரான்கொட்டை; marking nut (சா.அக.).

[கிட்டாக்கினி + கொட்டை.]

கிட்டாமாரி *kittā-māri,* பெ.(n.) சிறுபுள்ளடி; acute oblong unifolate tick trefoil (சா.அக.).

[கிட்டா + மாரி.]

கிட்டார் *kittār,* பெ.(n.) பகைவர்; foes.

[கிட்டு + ஆ + அர். 'ஆ' எ.ம.இடைநிலை.]

கிட்டாலம் *kittālam,* பெ.(n.) செப்புப்பாத்திர வகை (சங்.அக.); a kind of copper vessel.

[கிட்டலம் → கிட்டாலம்.]

கிட்டான் *kittāṉ,* பெ.(n.) உருகிய இரும்புத் துண்டு; a piece of melted iron.

[கிட்டடம் → கிட்டன் → கிட்டான்.]

கிட்டி[1] *kitti* பெ.(n.) 1. இறுக்குங்கோல்; clamps used to press hands, feet, etc. in torture, to castrate bulls, to press out medicinal oils, etc. *'கையுந்தாள் களுங்கிட்டி யார்த்தார்' (திருவிளை. நரிபரி.9).* 2. கவரிறுக்கி; fork of a branch planted at the mouth of a fence. 3. கொல்லர் கருவி வகை; iron cramp. 4. நுகமுளை (சங்.அக.); pegs that confine the bullock's neck to the ends of the yoke in drawing carts, etc. 5. பிள்ளைகளின் விளையாட்டுக் கருவியுள் ஒன்று; cat in the game of tip-cat. 6. கைத்தாளம் (திவா.); cymbal. 7. நாழிகை வட்டில்; clepsydra. 8. **சின்னி** பார்க்க *"கிட்டிக்கிழங்காற் கிளர்தீபனமுண்டாம்" (பதார்த்த. 435)* ; Indian shrubby copper leaf.

ம., க., பட. கிட்டி.

[கிள் → கிட்டு → கிட்டி.]

கிட்டி[2] *kitti* பெ.(n.) பன்றி (சூடா.); hog.

[கிட்டு → கிட்டி.]

கிட்டி[3] *kitti* பெ.(n.) தலையீற்றுப் பசு (பிங்.); young cow that has calved once.

[கிட்டு →கிட்டி.]

கிட்டிக்கயிறு *kitti-k-kayiru,* பெ.(n.) பூட்டுக் கயிறு (யாழ்.அக.); yoke ropes, bands.

[கிட்டி + கயிறு.]

கிட்டிக்கலப்பை *kitti-k-kalappai,* பெ.(n.) தேய்ந்த சிறுகலப்பை; small kind of plough worn out by use and age.

[கிட்டி + கலப்பை.]

கிட்டிக்கிழங்கு *kitti-k-kilangu,* பெ.(n.) சின்னிக் கிழங்கு; root of acalypha (சா.அக.).

[கிட்டி + கிழங்கு.]

கிட்டிக்கொள்(ளு)[1]**–தல்** *kitti-k-kollu-.* 16 செ.கு.வி. (v.i.) நெருங்கிச் சேர்தல்; to approach, draw near, as an evil hour.

[கிட்டி + கொள்.]

கிட்டிக்கொள்(ளு)[2]**–தல்** *kitti-k-kollu-,* 16 செ.குன்றாவி. (v.t.) நெருங்கி யெதிர்த்தல்; to attack, as a robber.

[கிட்டு → கிட்டி + கொள்.]

கிட்டிக்கோல் *kitti-k-kōl,* பெ.(n.) **கிட்டி**[13] பார்க்க; see *kitti*[13].

ம. கிட்டிக்கோல்; பட. கில்லி.

[கிட்டி + கோல்.]

கிட்டிகட்டல் *kitti-kattal,* தொ.பெ. (vb.) சாறுபிழிதல்; extracting juice by squeezing or crushing (சா.அக.).

[கிட்டி + கட்டல்.]

கிட்டிகட்டு–தல் *kitti-kattu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. இறுக்குக் கோலிட்டு வருத்துதல்; to torture with kitti. 2. நெருக்கி வருத்துதல்; to press hard, as for a debt; to screw.

[கிட்டி + கட்டு.]

கிட்டிச்சன்னல் *kitticcannal,* பெ.(n.) மரமாடிச் சுவரில் காற்று வருவதற்கு அமைக்கப்படும் சிறிய பலகணி அல்லது துளை; ventilator (செங்.வழ.) (கட்.தொ.அக.).

[கிட்டி + சன்னல்.]

கிட்டிணம் *kittinam,* பெ.(n.) மான்றோல் (யாழ்.அக.); antelop's kin, deer skin.

[கீள்→கிள் (பிறத்தல், உரித்தல்)→கிட்டு→ கிட்டிணம்.]

கிட்டிணவல்லி *kittinavalli,* பெ.(n.) நன்னாரி; Indian sarsaparilla (சா.அக.).

[கிட்டிணம் + வல்லி.]

கிட்டிணவாலி *kittinavāli,* பெ.(n.) குதிரைவாலி; horse tail millet; rough panic grass (சா.அக.).

[கிட்டிணம் + வாலி. கிட்டிணம் = பிளந்தது, விரிந்தது.]

கிட்டிப்பந்து *kitti-p-pandu,* பெ.(n.) சிறுவர் ஆடும் பந்து விளையாட்டு வகை; a boy's game, a kind of rounders with bat and ball.

[கிட்டி + பந்து.]

கிட்டிப்பாடு *kitti-p-pādu,* பெ.(n.) குறுகிய பாதை (யாழ்.அக.); narrow path.

[கிட்டு → கிட்டி + பாடு.]

கிட்டிப்பிரி *kitti-p-piri,* பெ.(n.) பனையோலைக் கூரைமீது போடப்பட்ட வைக்கோல், காற்றினால் சிதறாதவாறு வைக்கோல் நாரால் பின்னப்பட்டுக் கட்டப்பட்ட கயிறு (செங்.வழ.) (கட்.தொ.அக.); rope made of straw tied to keep the roof in place.

[கிட்டி + பிரி.]

கிட்டிப்புள் *kiṭṭi-p-puḷ,* பெ.(n.) 1. கிட்டிப்புள் விளை யாட்டுள் பயன்படும் சிறுகுச்சி; a short piece of wood tapering to a point at each end in the game of tip-cat. 2. கிட்டிப்புள்ளால் ஆடும் விளையாட்டு; the game of tip-cat.

[கிட்டி + புள்.]

கிட்டிப்புள்ளி *kiṭṭi-p-puḷḷi,* பெ.(n.) ***கிட்டிப்புள்*** பார்க்க; see *kiṭṭi-p-puḷ*

[கிட்டிப்புள் → கிட்டிப்புள்ளி.]

கிட்டிபூட்டு[1]—தல் *kiṭṭi-pūṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) கிட்டிக்கோல் பூட்டி வருத்துதல்; to torture with clamps.

கிட்டிபூட்டு[2]—தல் *kiṭṭi-pūṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) எருதைப் பூட்ட நுகமுளை போடுதல்; to fix the yoke on the bullock's neck.

[கிட்டி + பூட்டு-.]

கிட்டிமந்தாரம் *kiṭṭi-mandāram,* பெ.(n.) மயிற் கொன்றை (சு.வை.ரத்.); peacock's crest.

[கிட்டி + மந்தாரம்.]

கிட்டிமம் *kiṭṭimam,* பெ.(n.) உவர்நீர்; salt or brackish water (சா.அக.).

[கிட்டி → கிட்டிமம்.]

கிட்டிமுட்டி *kiṭṭimuṭṭi* து.வி.(aux.v.) மிக நெருக்கமாக; closely, pressingly near. அவன் கிட்டிமுட்டி வந்தால் வட்டியைத் தள்ளிவிட்டு முதலை மாத்திரம் வாங்குவேன் (கொ.வ.).

[கிட்டி + முட்டி.]

கிட்டியடி—த்தல் *kiṭṭiyaḍi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கிட்டிப் புள் விளையாடுதல்; to play tip-cat. 2. வீணிற் போது போக்குதல்; to misspend or waste time as in play. 3. கிட்டிபூட்டுதல்; to torture with clamps.

[கிட்டி + அடி-.]

கிட்டியிழைப்புளி *kiṭṭi-y-iḻai-p-puḷi,* பெ.(n.) தச்சுக் கருவியாகிய இழைப்புளி வகை; joiner's plane.

[கிட்டி + இழைப்புளி]

கிட்டிரம் *kiṭṭiram,* பெ.(n.) நெருஞ்சி (மலை.); a small prostrate herb.

[கிள் → கிட்டி → கிட்டிரம்.]

கிட்டிவான் *kiṭṭivāṉ,* பெ.(n.) எட்டி மரம்; strychnine tree (சா.அக.).

[கிட்டி → கிட்டிவான்.]

கிட்டினர் *kiṭṭiṉar,* பெ.(n.) உறவினர் (சங்.அக.); relations, friends, associates, allives.

[கிட்டி → கிட்டினர்.]

கிட்டினன் *kiṭṭiṉaṉ,* பெ.(n.) திப்பிலி; long-pepper (சா.அக.).

[கிட்டி → கிட்டினன்.]

கிட்டு[1]—தல் *kiṭṭu,* 5 செ.கு.வி.(v.i.) 1. நெருங்குதல்; to draw near, in time or place. "தீவினை கிட்டிய போதினில்" (கம்பரா.விபீடண.67). 2. உறவு நெருங்குதல்; to be on friendly terms with, closely related to. 3. கிடைத்தல்; to be attained, accomplished. "கிட்டாதாயின் வெட்டென மற" (கொன்றைவே.). 4. பல்முதலியன ஒன்றுடனொன்று பூண்டு இறுகுதல்; to be clenched, as the teeth in lock jaw.

க., ம. கிட்டு.

[குள் → கிள் → கிட்டு.]

கிட்டு[2]—தல் *kiṭṭu,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. அணுகுதல்; to approach. அவ்வூரைக் கிட்டினான். 2. எதிர்த்தல்; to attack, meet. 3. கட்டுதல் (சூடா.); to tie, bind.

தெ. கிட்டு

[குள் → கிள் → கிட்டு.]

கிட்டு³–தல் *kittu,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கைக்கு அகப்படுதல்; to come to hand, get, obtain. 2. எட்டுதல்; to reach, attain.

ம. கிட்டுக; க.,தெ.,பட. கிட்டு; குட., துட. கிட்.

[குள்→கிள் (நெருங்குதல்) (கிண்டு)→கிட்டு- நெருங்கச் செய், கைவரப்பெறு. கிட்டு→கிட்டை = நெருங்கிய பகுதி, அருகு, அண்மை. கிள் என்னும் வேரடி நெருங்குதல் நெருக்குதல் எனும் தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவானது. இதனைப் பிறவினைக்கே தெளிவாக ஆளும் பொருட்டு கிள்→கிட்டு எனத் திரிந்தது. பிள்(பிள) விள்→வெள்→வெட்டு எனும் வேரடி வளர்ச்சி, வெட்டு எனும் தெளிவான பிறவினை (பிளக்கச் செய்) வடிவு ஒற்றுமை காண்க.]

கிட்டை *kittai,* வினையெச்சம்.(adv.) *கிட்ட* பார்க்க; see *kitta.*

ம. கிட்டெ

[கிள்→ கிடு →கிட்டு→ கிட்டை.]

கிட்டைக்கு *kittaikku,* வி.எ.(adv.) அருகே; near, close by.

ம. கிட்டக்கெ

[கிட்டை+கு. நான்காம் வேற்றுமை உருபு 'கு' ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது.]

கிட¹–த்தல் *kida-,* 2 செ.கு.வி.(v.i.) 1. ஓய்வெடுக்க அல்லது உறங்க வேண்டித் தரையில் அல்லது கட்டிலில் கை, கால்களை நீட்டிப் படுத்தல்; to be in a prostrate position, to lie, lie down. *"மால் யாழ்கேளாக் கிடந்தான்போல்" (கலித்.123).* 2. ஓரிடத்தில் இருத்தல்,தங்குதல்; to be remain, exist, to dwell. *"புலி கிடந்த தூறு" (வாக்குண்.21).* 3. மீதமிருத்தல்; to be left over, remain. 4. உயிருடன் இருத்தல், வாழ்தல்;to exist, live in, dwell.5. உறங்குதல்;to sleep, rest, reposs. *"தாவி னல்லிசைக் கருதிய கிடந்தோர்க்கு" (தொல்.பொருள்.91).* 6. நோயால் படுத்த படுக்கை யாதல்;to be bed-riddess, as from disease. அவர் நிரம்பக் கிடக்கிறாள். 7. அவமதித்து ஒதுக்குதல்;to be unworthy of any attention. அவன் கிடக்கிறான், நீ போ.

ம. கிடக்குக; க. கெடெ; குட. கடாக.

[கிள்→கிட → கிடத்தல்.]

கிட² *kida,* இடை.(part.) நிகழ்கால இடைநிலைகளுள் ஒன்று; a particle denoting present tense; உண்ணாக் கிடந்தான் (தொல்.சொல்.204,உரை).

[கிடத்தல் = இருத்தல். உண்ணா இருந்தான் என்றாற் போன்று உண்ணாக் கிடத்தலும் ஆகின்று என்னும் வாய்பாட்டுப் பொருளதாகக் கருதப்பட்டது. ஆயின் பாவாணர் அவர்கள் இதனை வேறு வகையாகக் கருதினார். 'ஆநின்று' பார்க்க; see āninru.]

கிடக்க *kidakka,* வியங். (opt.) கிடக்குமாக இருக்குமாக; let it be.

[கிட + க. (கிடத்தல், இருத்தல்). 'க' வியங்கோள் ஈறு.]

கிடக்கட்டும் *kidakkattum,* ஏ.(imp.) இருந்த இடத்தில் இருக்கலாம்; let it be as its is.

[இருக்க+அட்டும். 'அட்டும்' ஏவல் பொருளுணர்த்திய துணை வினையீறு. இருக்க – வியங்கோள் வினைமுற்று. துணை வினையீறு பெற்று ஏவல் பொருள் உணர்த்தியது.]

கிடக்கிடு *kida-k-kidu,* ஏ.(imp.) 'அதைத் தள்ளு' என்னும் புறக்கணிப்புக் குறிப்பு; never mind, let it lie. *'இச்சேனை கிடக்கிடு' (கம்பரா.குகப்.20).*

[கிடக்க + விடு – கிடக்கவிடு → கிடக்கிடு.]

கிடக்கிடும் *kidakkidum,* ஏ.(imp.) 'அதைத் தள்ளு' என்னும் புறக்கணிப்புக் குறிப்பு; never mind, let it lie. *"உம்முடைய மேன்மை கிடக்கிடும்" (திவ்.பெரியதி. 8.2:1 வியா).*

[கிடக்கட்டும் → கிடக்கிடும்.]

கிடகு *kidagu,* பெ.(n.) இருபத்து நான்கு விரல் கொண்ட முழம்; cubit of 24 finger breadthes (சர்வா.சிற்.27).

மறுவ. தச்சுமுழம், செந்தரம், மானாங்குலம் (கிஷ்கு).

[கிழகு → கிடகு (தச்சுமுழம் எனப்படும் நீட்டல் அளவு). கிழ→கிழமை - உரிமை, தகவு. கிழகு–தகவானதாகவும் அரசனால்

உரிமைப்படுத்தப்பட்ட அளவாகவும் கொள்ளப்பட்ட 2¾ அடிநீளமுள்ள நீட்டல் அளவு. இது 11 அடி நீளமுள்ள கோல் என்னும் அளவில் காற்பகுதியாகும்.]

தமிழ்நாட்டு நீட்டல் அளவுகளில் அடிப்படைச் சிற்றளவு விரல். இதன் நீளம் தற்கால ஆங்கில அளவுப்படி $1^3/_8$ விரலம் (அங்குலம்). 6 விரல் ஒரு சாண், 2 சாண் ஒரு முழம், 2 முழம் ஒரு கோல் என்ற வாய்பாட்டின்படி ஒரு கோல் அளவு 24 விரல் நீளம் என்பது தற்கால ஆங்கில 33 விரலத்திற்குச் சமம். இது தச்சு முழம் என்ற பெயரில் கடந்த 2000 ஆண்டுகளாகச் செந்தர அளவாகத் தமிழ்நாட்டில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதனைக் கிட்கு (மலைமர) முழம் என்றும் அழைப்பர்.

எனினும் வேறு பல முழ அளவுகளும் தமிழ்நாட்டில் புழக்கத்தில் இருந்ததனைப் பல சிற்ப நூல்களிலிருந்து அறிகிறோம். அவையாவன:

1. வில் நாண்(கிஷ்க்கு) (கிடகு)	24விரல்	33"	84செமீ
2. பெருவிரல் (பிரஜாபத்யம்)	25விரல்	$34^3/_8$"	87.5 "
3. வில்முடி (தனுர் முட்டி)	26விரல்	$35^3/_4$"	91.0 "
4.வில்முனை(தனுர்கிரகம்)	27விரல்	$37^1/_8$"	94.5 "
5. நெடுவில் (பிராச்சியம்)	28விரல்	$38^3/_4$"	98.0 "
6. நெடுவில் முடி (சைதேகம்)	29விரல்	$39^5/_8$"	101.5 "
7. நெடுவில் முனை (வைபுல்யம்)	30விரல்	41.0"	105.0"
8. முழுவில் (பிரகீர்ணம்)	31விரல்	$42^3/_8$"	108.5"

கிடக்கை[1] *kiḍakkai,* பெ.(n.) 1. படுத்திருக்கும் நிலை; recumbent posture. கிடந்தோர் கிடக்கை கண்டும் (திவ்.திருமாலை.23). 2. படுக்கும் அணை (பிங்.); bed, couch. 3. படுக்குமிடும்; sleeping place. *"மனைபாய் கிடக்கையோ டிவ்வைந்தும்" (ஆசாரக்.55).* 4. நிலம் (பிங்.); earth. 5. பரப்பு; broad, expanse, long structure of land. *"முருகமர் பூமுரண் கிடக்கை" (பட்டினப்.37).* 6. இடம்; place. *"கரிபுறக் கிடக்கையும்" (சிலப்.11:77).* 7. உள்ளுறுபொருள்; subject-matter, contents *"உரைநூற் கிடக்கை" (மணிமே.2:31).*

ம. கிடக்க; குட. கடகெ.

[கிட = படு, படுத்தல். கிட → கிடக்கை 'கை' தொழிற்பெயர் ஈறு.]

கிடக்கை[2] *kiḍakkai,* பெ.(n.) நிலையானது; permanence, security.

[கிட → கிடக்கை.]

கிடக்கைப்புண் *kiḍakkai-p-puṇ,* பெ.(n.) படுக்கைப் புண்; a bed sore.

ம. கிடக்கப் புண்

[கிடக்கை + புண்.]

கிடக்கைவிரிப்பு *kiḍa-k-kaiviripपu,* பெ.(n.) படுக்கை விரிப்பு; a bed spread.

ம. கிடக்க விரிப்பு

[கிடக்கை + விரிப்பு.]

கிடங்கர் *kiḍaṅgar* பெ.(n.) 1. அகழி; moat. 2. பெருங்கடல்; ocean. *"திரைக்கிடங்கர் குவலயப் பரப்பில்" (உபதேசகா.விபூதி.35).*

மறுவ. கிடங்கு

[கிடங்கு[1] → கிடங்கர். கிடங்கு = பள்ளம், குழி. கிடங்கர் = ஆழ்ந்த நீர்நிலை, குழிந்த மடு, பள்ளம், அகழி.]

கிடங்காடு-தல் *kiḍaṅgāḍu-,* 5 செ.கு.வி.(v.i.) சுடுகாட்டில் பிணத்தைச் சுற்றி வருதல்; to go round the corpse on the pyre just before cremation (loc.).

[கிடங்கு = அகழி, வட்டம். கிடங்கு + ஆடு – கிடங்காடு = வட்டமாக வளைய வருதல், சுற்றி வருதல்.]

கிடங்கில் *kiḍaṅgil,* பெ.(n.) 1. அகழி; moat. *"கிணீர்க் கிடங்கிலுட் தோணி போக்கி" (பெருங்.மகத.25:21).* 2. ஓர் ஊர்ப் பெயர்; a place name. *"கிளை மலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்" (சிறுபாண்.160)*

[கிடங்கு → கிடங்கில். 'இல்' சொல்லாக்க ஈறு.]

கிடங்கில், நல்லியக் கோடனின் தலைநகரங்களுள் ஒன்று. திண்டிவனம் அருகிலுள்ள ஊர். "ஸ்ரீ கிடங்கில் புரியார் மகனல்லி ஓட்டை கண்டது" (ஓமலூர் வட்டம் கேத்த நாய்க்கனூர் பெரிய சக்கிலிச்சி ஏரிக்கல்வெட்டு).

கிடங்கு[1] *kiḍaṅgu,* பெ.(n.) 1.பள்ளம்; trench. *"பூங்கிடங்கி னீள்கோவல்" (திவ்.இயற்.முதற்.77).* 2. குளம்; pond, tank (சூடா.) 3. குழி; pit, depression. 4. அகழி;moat.

ம. கிடங்ங; **க.** கடகு, கடங்கு; **குட.** கடங்கி.

[கீழ் → கிழ → கிட → கிடங்கு. கீழ்த்தல் = தோண்டுதல், பள்ளம், ஆக்குதல், குழித்தல்.]

கிடங்கு[2] *kiḍaṅgu,* பெ.(n.) பண்டசாலை; warehouse, store house. *"அரிசிக் கிடங்கு" (அக.நி).*

[கிடங்கு[1] → கிடங்கு[2]. கிடங்கு = பள்ளம், சேமித்து வைக்குமிடம்.]

கிடங்கு[3] *kiḍaṅgu,* பெ.(n.) சிறைச்சாலை (வின்.); prison, jail, dungeon (W).

[கிடங்கு[1] → கிடங்கு[3]. கிடங்கு = பள்ளம், குழி, மூடுமிடம், சிறைச்சாலை.]

கிடங்குபள்ளம் *kiḍaṅgupaḷḷam,* பெ.(n.) 1. காதினுள்ளிருக்கும் ஆனகப் பள்ளம்; tympanic cavity. 2. காதின் புறத்தேயுள்ள பள்ளம்; glenoid cavity (சா.அக.).

[கிடங்கு + பள்ளம்.]

கிடசாரி *kiḍaśāri,* பெ.(n.) சடைச்சி என்னும் மூலிகை; matted-hair plant (சா.அக.).

[கடைச்சி → கடசாரி→கிடசாரி.]

கிடத்தல் *kiḍattal,* தொ.பெ.(vbl.n.) 1. உறங்காது படுத்திருத்தல்; to lie down on the bed sleeplessly. 2. ஒகவகையுள்ளொன்று படுத்திருக்கும் நிலை (சிலப்.14:11 உரை); recumbent posture.

[கிட → கிடத்தல்.]

Fln. kellia, kellattā; Q. kellakui.

கிடத்தியள-த்தல் *kiḍatti-y-aḷa,* 3 செ.குன்றாவி. (v.t.) தவசங்களில் அளவுக் கருவியைப் பாய்ச்சி அளத்தல் (வின்.); to measure a heap of grain by diving the measure deep into it (W.).

[கிட → கிடத்தி + அள.]

கிடத்து-தல் *kiḍattu-,*2 பி.வி. (caus.). 1. கிடக்கச் செய்தல்; to place in a recumbent posture, lay to rest, stretch oneself on the ground. *"தருப்பையிற் கிடத்தி" (மணி 23:13).* 2. விழச் செய்தல்; to cause to fall.

ம. கிடத்துக; **க.** கடசு, கெடைசு, கெடவு; **தெ.** கெடசு.

[கிட (த.வி.) → கிடத்து (பி.வி.).]

கிடந்தகிடை *kiḍanda-kiḍai,* பெ.(n.) நோயால் படுத்த படுக்கை; bed -ridden as from a disease (சா.அக.).

[கிடந்த + கிடை.]

கிடந்தகிடையாய் *kiḍanda-kiḍai-y-āi,* வி.எ.(adv.). நோயினால் படுத்த படுக்கையாய்; bed-ridden, as from a disease.

[கிடந்த + கிடை + ஆய்.]

கிடந்த திருக்கோலம் *kiḍanda-tiru-k-kōlam,* பெ.(n.) திருமாலின் பள்ளிகொண்ட நிலை; recumbent posture of *Viṣṇu,* one of the three *tiruk-kōlam*.

[கிட → கிடந்த + திரு + கோலம். கிடத்தல் = படுத்தல்.]

கிடந்துருளி *kiḍanduruḷi,* பெ.(n.) நீரிறைக்கும் கப்பியுருளை (இ.வ.); pulley for drawing water.

[கிட → கிடந்து + உருளி.]



கிடந்துருளி

கிடந்துருளு-தல் *kiḍanduruḷu-,* 16 செ.கு.வி.(v.i.) படுத்த படுக்கையில் உருளுதல்; rolling in bed; restlessness in bed (சா.அக.).

[கிடந்து + உருளு-.]

கிடப்பரிணம் *kiḍappariṇam,* பெ.(n.) அடுக்குச் செம்பரத்தை; double shoe flower (hibiscus) (சா.அக.).

[கிடப்பு + அரிணம்.]

கிடப்பு[1]-தல் *kiḍappu-,* 5 செ.குன்றாவி.(v.t.) கிடத்துதல்; to cause to lie down, lay down. *"திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி" (புறநா.93).*

[கிட → கிடப்பு.]

கிடப்பு[2] *kiḍappu,* பெ.(n.) 1. கிடந்து துயிலுகை; resting, sleeping. மக்கள் கிடப்பிடம் (திவா.). 2. நிலை; circumstance, condition, significance. *"ஈசன்.... பால் கொடுத்த கிடப்பறிவார்" (திருவாச.43:6).* 3. மேற்போகாத நிலைமை; stationary condition, standstill. செயலைக் கிடப்பிலே போட்டுவிட்டான்.

[கிட → கிடப்பு.]

கிடப்புத்தொகை *kiḍappu-t-togai,* பெ.(n.) இருப்புத் தொகை; cash reserve.

[கிட → கிடப்பு + தொகை.]

கிடவம் *kiḍavam,* பெ.(n.) ஊமத்தை; thorn-apple (சா.அக.).

[கிட → கிடவம்.]

கிடவாக்கிடை *kiḍavā-k-kiḍai,* பெ.(n.) 1. பெருந் துன்பநிலை (வின்.); unusual hardship as from hunger, poverty etc. 2. நோய்முற்றிப் படுக்கை யிலிருக்கை; bed ridden due to extreme illness.

[கிட + ஆ + கிடை. கிட → கிடவா + கிடை - கிடவாக் கிடை. கிடத்தல் = படுத்தல், படுத்திருத்தல். கிடவா - செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம். தொடர் நிகழ்காலம் சுட்டித் தொடர்ந்து படுக்கையில் இருக்கும் நிலையைச் சுட்டியது. செய்யா, செய்யூ என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள் முறையே கன்னடத்திலும் தெலுங்கிலும் இன்னும் தொடர் நிகழ்காலம் சுட்டுதலை ஒப்பிடுக.]

கிடா *kiḍā,* பெ.(n.) கடா[2] (சிலப்.14,98,உரை) பார்க்க; see *kaḍā[2].*

ம. கிடாவு

[கடு → கடா → கிடா.]

கிடாக்காலன் *kiḍā-k-kālaṉ,* பெ.(n.) எருமைக் கொம்பு (சங்.அக.); buffalo-horn.

ம. கிடாவு

[கிடா + காலன். கடா → கிடா + காலன்.]

கடா = எருமைக்கடா. கால் = நீட்சி. காலன் = நீண்ட ஊதுகுழல், கொம்பு.

கிடாசு-தல் *kiḍāsu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. ஆணி முதலியன அறைதல்; to drive in, as nail. 2. விட்டெறிதல்; to cast off, throw away.

க. கடாய்; ம. கிடவு

[கடாவு → கடாசு → கிடாசு (பி.வி.).]

கிடாமுன்னை *kiḍā-muṉṉai,* பெ.(n.) ஒருவகைத் தேக்கு; serrate fire-brand teak (சா.அக.).

[கடு → கடா → கிடா + முன்னை]

கிடாய்[1] *kiḍāy,* பெ.(n.) ஆண் ஆடு; male of sheep. கிடாய் விரவுகின்ற செம்மறித்திரள் (மலைபடு. 414,உரை).

[கடு → கடா → கடாய் → கிடாய்.]

கிடாய்

கிடாய்[2] *kiḍāy*, இடை. (part.) 1. ஒரு வியங்கோள் ஈறு; sign of the optative. *"கழிந்த கழிகிடாய்" (பதினொ.கைலை.பா.21).* 2. காண் என்னும் பொருளில் வரும் முன்னிலை யொருமை உரையசை; expletive used only in the 2nd pers. sing. meaning see! behold! *"சர்ப்பங்கிடாய்" (ஈடு).*

[கிடை → கிடாய் (விளி). கிடை = இளைஞன், மாணவன்.]

ஒ.நோ. கிடைகள் ஓதுமடங்கள் நெருங்கினவும். கிடை → கிடாய் = மாணவனே! என்பது விளி. இதனைக் காண் என்னும் பொருளில் வந்த உரையசையாகக் கொளினும் இச்சொற்கு அது நேர்பொருளன்று. பதினோராம் திருமுறையில் (கைலை. பா.21) "கழிந்த கழிகிடாய்" என்னும் மேற்கோள்காட்டி கிடாய் - வியங்கோள் ஈறு எனச் செ.அக. காட்டியிருப்பது தவறு. "கழிகிலாய்" என்னும் பாடலின் வேறுபாடே ஏற்கத்தக்கது.

கிடாரம் *kiḍāram*, பெ.(n.) வாயகன்றதும், அளவில் பெரியதும் விளிம்பில் இருபுறமும் பிறைவளையம் பொருத்தப்பட்டதுமான குழிந்த பெரும்பாத் திரமான கொப்பரை; caldron boiler. *"ஸ்ரீராஜராஜ தேவர், ஸ்ரீராஜராஜீசுவர முடையார்க்கு குடுத்த பொன்னின் கிடாரம் ஒன்று, ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை பதினோராயிரத்து எழுநூற்று நாற்பத்து இரு கழஞ்சு" (தெ.கல். தொ.2,கல்.1).*

[குடம் → கடம் → கடாய் → கடாரம் → கிடாரம் (வாயகன்ற பெரிய ஏனம், கொப்புளம். ஆரம் சொல்லாக்க ஈறு ஒ.நோ. கூடு → கூடாரம்]

கிடாரவன் *kiḍāravaṉ*, பெ.(n.) அகில்வகை (சிலப்.14:108.உரை); eagle-wood, used as incense.

[கடாரம் → கிடாரம் → கிடாரவன் = கடாரத்திலிருந்து கொணர்ந்த அகில் வகை.]

கிடாரி *kiḍāri*, பெ.(n.) ஆவினத்தில் ஈனாக்கன்று (உ.வ.); heifer.

மறுவ. கிடேரி

[கடாரி → கிடாரி]

கிடாரை *kiḍārai*, பெ.(n.) கடாரநாரத்தை (உ.வ.); seville orange.

[கடாரம் → கிடாரம் → கிடாரை (கடாரத்திலிருந்து வந்த நாரத்தை வகை.)]

கிடாவு-தல் *kiḍāvu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கடாவுதல்; to drive. 2. வினாவுதல்; to question.

[கடாவு → கிடாவு]

கிடி *kiḍi*, பெ.(n.) பன்றி (பிங்.); hog.

மறுவ. பன்றி, கோணவாயன்.

[கீறி → கீடி → கிடி (கொ.வ.). கோரைப்பல்லால் கீறிக் கொல்லும் இயல்பு பற்றிக் கீறி எனப்பட்டது.கீறிபார்க்க; see kīṟi]

கிடிகி *kiḍigi*, பெ.(n.) பலகணி; window.

க. கிடிகி; மகாராட். கிடாகி.

[கிடுகு → கிடிகு → கிடிகி. கிடுகு = கேடயம். கிடிகி = கேடயம் போன்று, மிகுகாற்று, மழைச்சாரல் உட்புகாமல் தடுக்கும் இயல்புபற்றிச் சுவரில் பதிக்கும் பலகணியைக் கிடுகு என்றனர் போலும். இது கன்னட மராத்திய மொழிகளில் கிடிகி, கிடாதி எனத் திரிந்தது.]

கிடிகோள் *kiḍikōḷ*, இடை.(part.) காண்மின் என்னும் பொருளில் வரும் முன்னிலைப்பன்மை உரையசை; expletive used only in the 2nd pers. pl. meaning see! behold! *'இழக்கவேண்டா, கிடிகோள்' (ஈடு.5:1,7).*

[கிட → கிடி + கோள். கிடை = மாணவன், இளைஞன். கிடைகள் → கிடைகாள் → கிடிகோள் (விளி) மாணவர்களே' என விளித்த விளிச்சொல் அவர்களைத் தான் சொல்லுவதை செவிமடுக்கத் தூண்டுதலின் 'காண்மின்' எனப் பொருள்படுவதாகக் கருதப்பட்டது.]

கிடிச்செவி *kiḍi-c-cevi*, பெ.(n.) அமுக்கிரா (சங்.அக.); Indian winter cherry.

[கிடி + செவி. ஒ.நோ. = கிடி = பன்றி (பிங்.)பன்றியின் காது வடிவான மூலிகை.]

கிடிபம் *kiḍibam*, பெ.(n.) மரத்தைத் துளைக்கும் பறவை; wood-pecker (சா.அக.).

[கடி → கடிவம் → கிடிவம் → கிடிபம் (கொ.வ.)]

கிடிமம் *kiḍimam,* பெ.(n.) ஆமையோட்டைப் போல் தடித்த சதை; a fattish raised patch of integument (சா.அக.).

[கிடி(பன்றி) → கிடிமம்]

கிடியம் *kiḍiyam,* பெ.(n.) பன்றிநெய்; lard (சா.அக.).

[கிடி → கிடியம்]

கிடீர் *kiḍir,* இடை.(part.) ***கிடிகோள்*** பார்க்க;see *kiḍikōl.* *"வெண்ணெய் விலக்கினார் புக்க லோகம் புகுவீர் கிடீர்" (ஈடு.1:5,அவ.)*

[கிடை = இளைஞன், மாணவன். கிடை+ஈர் – கிடீர். (ஈர் – முடபஈறு).]

கிடுக்கட்டி[1] *kiḍukkaṭṭi* பெ.(n.) 1. ஓர் ஒலி (சங்.அக.); sound of something shaking in a hollow vessel. 2. ஒருவகை முழவு (யாழ்ப்.); small drum as an accompaniment.

மறுவ. கிடுகட்டி

[கிடுக்கு → கிடுக்கட்டி.]

கிடுக்கட்டி[2] *kiḍukkaṭṭi* பெ.(n.) இருப்பைப் பூவைப் பிறவற்றோடு வறுத்தெடுத்துச் செய்த கட்டி (சங்.அக.); cake of the mahwa flower mixed with seasoning ingredients and then roasted and pounded in a mortar.

மறுவ. கிடுக்க

[கிடு + கட்டி.]

கிடுக்கட்டி[3] *kiḍukkaṭṭi* பெ.(n.) குருக்கு (இ.வ.); Mexican poppy.

[கிடு + கட்டி.]

கிடுக்கு *kiḍukku,* பெ.(n.) கிடுக்கட்டி[2] (சங்.அக.) பார்க்க; see *kiḍukkaṭṭi.*

ம. கிடுக்கு

[கிடு → கிடுக்கு.]

கிடுக்குக்கிடுக்கெனல் *kiḍukku-k-kiḍukkenal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying hollow sound.

ம. கிடுக்கென

[கிடுக்கு + கிடுக்கு + எனல்.]

கிடுக்கென்று *kiḍu-k-kenṟu,* வி.எ.(adv.) உடனே, விரைவாக; suddenly, quickly.

ம. கிடுக்னெ

[கிடுக்கு + என்று.]

கிடுகிடாய்–த்தல் *kiḍu-kiḍāy-,* 4 செ.கு.வி.(v.i.) 1. மலைத்தல், திகைத்தல்; to be amazed, thunder struck. 2. நடுநடுங்குதல்; to tremble with fear. கிடுகிடாய்க்கும்படி பேசினான் (உ.வ.).

[கிடுகிடு → கிடுகிடாய்-.]

கிடுகிடாயமானம் *kiḍukiḍāya-māṉam,* பெ.(n.) அதிர்ச்சி; tremor.

[கிடுகிடு + ஆய + மானம். கிடுகிடு = நடுங்குதற்குறிப்பு. அதிர்ச்சி. மானம் = தன்மை.]

கிடுகிடு[1]**–த்தல்** *kiḍukiḍu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. நடுங்குதல்; to tremble, shake, to totter, as a loose wall. 2. ஒலித்தல்;to sound , as the rolling of a carriage, to rumble, as a thunder cloud. 3. பல்லோடு பல் கொட்டுதல் (வின்.); to chatter, as the teeth with cold, to shiver, quake.

ம. கிடுகிடுக்குக

[கிடு + கிடு – கிடுகிடு = ஒலிக்குறிப்புச் சொல்.]

கிடுகிடு[2] *kiḍukiḍu,* பெ.(n.) 1. ஒருசிறுபறை; a small drum. *"தவளந் தப்புடனே கிடுகிடு" (திருப்பு.590).* 2. நடுக்கம் (வின்.); quaking, trembling.

கிடுகிடுப்பு *kiḍukiḍuppu,* பெ. (n.) 1.அசைவு; movement. 2. அச்சம்; fear. 3.நடுக்கம்; tremble.

ம. கிடுகிடுப்பு, க. கிடிகிடி, கடகடி; து.கிட்கிட்

[கிடுகிடு → கிடுகிடுப்பு]

கிடுகிடுபாதாளம் *kiḍukiḍu-pādālam,* பெ.(n.) அச்சத்தையுண்டாக்கும் மிக்க ஆழம்; abysmal depth, as causing fright.

[கிடுகிடு + பாதாளம் (ஆழம்). கிடுகிடு = ஒலிக்குறிப்புச் சொல், அச்சம் குறித்தது.]

கிடுகிடெனல் *kiḍukiḍenal,* பெ.(n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு (பிங்.); onom, expr. signifying rumbling sound. 2. அச்சக் குறிப்பு; expr. signifying tremor. *"புலி கரடி கிடுகிடென நடுநடுங்க" (குற்றா.குற.80).* 3. விரைவுக் குறிப்பு; rapidity, quickness.

[கிடுகிடு + எனல். கிடுகிடு = ஒலிக்குறிப்பு. விரைவும் அச்சமும் குறித்தது.]

கிடுகின்படம் *kiḍugiṉ-paḍam,* பெ.(n.) தோற் கேடகம்; leather shield. *"ஏனப் படமுங் கிடுகின் படமும்" (சிலப்.14:172).*

[கிடுகு¹ + படம். கிடுகு = கேடகம்.]

கிடுகு¹ *kiḍugu,* பெ.(n.) 1. கேடகம்; shield, buckles. *"வார்மயிர்க் கிடுகொடு" (சீவக.2218).* 2. சட்டப்பலகை; a wooden frame. *"பவளத் திண்காழ் கம்பலக் கிடுகி னூன்றி" (சீவக.113).* 3. தேர்மரச்சுற்று (ஞானா.7,16); boards round the body of a car.

ம. கிடுகு

[கிடு → கிடுகு (கோத்தது, இணைத்துப் பொருத்தியது.)]

கிடுகு² *kiḍugu,* பெ.(n.) முடைந்த ஓலைக்கீற்று (வின்.); braided coconut leaf for thatching, etc., cadjan.

ம.கிடில்

[கிடு → கிடுகு (இணைத்தது, பின்னியது).]

கிடுகு³ *kiḍugu,* பெ.(n.) வட்டவடிவான பறைவகை; an oval tabor. *"கிடுகு கொட்டின" (பாரத.அணி.15).*

[கிடுகு = கேடயம், கேடய வடிவத்திலுள்ள பொருள். வட்ட வடிவமானது.]

கிடுகுபின்னு-தல் *kiḍugu-piṉṉu-,* 5 செ.கு.வி.(v.i.) ஓலை முடைதல்; to braid coconut leaves.

[கிடுகு² + பின்னு-. கிடுகு = முடைந்த ஓலைக்கீற்று.]

கிடுகோலை *kiḍugōlai,* பெ.(n.) கீற்றுக்குரிய தென்னையோலை; coconut leaves fit for braiding.

[கிடுகு² +ஓலை.]

கிடுபிடி¹ *kiḍupiḍi,* பெ.(n.) வட்டவடிவான ஒருவகை வாச்சியம் (வின்.); a tambourine of oval form.

ம.கிடுபிடி; க. கிடிப்பிடி; தெ. கிடிபிடி; மரா. கடமட.

[கிடுகு + பிடி – கிடுகுமுடி → கிடுபிடி.]

கிடுபிடி² *kiḍupiḍi,* பெ.(n.) ஆர்ப்பாட்டம் (உ.வ.); uproar, loud noise.

உரு. காட்பாட்; க. கிடிபிடி; ம. கிடுபிடி.

[கடு + பிடி – கடுபிடி → கிடுபிடி.]

கிடுமுடி *kiḍumuḍi,* பெ.(n.) ஒருவகைச் சிறுபறை; a small drum as an accompaniment. *"கொம்பு கிடுமுடி முரசம்" (அறப்.சத.63).*

மராட். கடமடா

[கிடுகு + முடி – கிடுகுமுடி → கிடுமுடி.]

கிடேச்சு *kiḍēccu,* எபெ.(n.) நெட்டி; pith.

[கிடை → கிடேச்சு.வெண்கிடை = வெள்ளிய கிடேச்சு. (நெட்டி). கிடை பார்க்க; see kiḍai]

கிடேச்சை *kiḍēccai,* பெ.(n.) **கிடேச்சு** பார்க்க; see *kiḍēccu.*

[கிடை → கிடேச்சு → கிடேச்சை.]

கிடேரி *kiḍēri,* பெ.(n.) ஆவின் ஈனாக் கன்று; heifer.

[கிடாரி → கிடேரி]

கிடை[1]–த்தல் *kiḍai-*, 4 செ.கு.வி.(v.i.) 1. அடைதல்; to be obtained, recovered, found, to come into one's possession. *"திங்க ளெட்டாவதிற் கிடைக்கும்" (கனா.2).* 2. இயைதல்; to join, come together. *"கரத்தொடு கரதலங் கிடைப்பப் பூட்டி" (கம்பராஉத்த.மந்திர.100).*

ம. கிடெக்க

[கிள் → கிடு → கிடை.]

கிடை[2]–த்தல் *kiḍai-*, 4 செ.கு.வி.(v.i.) 1. அருகாதல்; to come near, approach. *"கிடந்தானைக் கிடைத்திரு தடங்கை கூப்பினன்" (கம்பரா.கிட்கிந்தை.23).* 2. எதிர்த்தல்; to encounter, oppose, meet in battle-field. *"இருபடைகளு மெதிர் கிடைக்கவே" (கலிங்.393).*

[கிள் → கிடு → கிடை.]

கிடை[3] *kiḍai*, பெ.(n.) 1. சடைமரம் (பிங்.); sola pith. 2. நெட்டி; pith. *"கிழியினுங் கிடையினுந் தொழில்பல பெருக்கி" (சிலப்.5:32).*

மறுவ. *கிடைச்சு, கிடேச்சு, கிடைச்சை.*

[கிள் → கிடு → கிடை : படுக்குமிடம், தங்குமிடம்.]

கிடை[4] *kiḍai*, பெ.(n.) 1.கிடக்கை; lying down. *"கிடைகொள் குசைப்புற் பள்ளியுள்" (சேதுபு. துத்தம்.18).* 2. நோய்வாய் படுகை; falling ill. 3. இருப்பிடம்; abode. *"மறையவர் கிடைக டோறும்" (குற்றா.தல.திருமால்.55).* 4. ஆட்டுக்கிடை; flock of sheep, sheepfold.

ம. கிடப்பு

[கிட → கிடை : படுக்குமிடம், தங்குமிடம்]

கிடை[5] *kiḍai*, பெ.(n.) தங்கிப் பயிலும் மாணவன்; student of a residential school.

[கிடை[4] → கிடை[5].]

கிடை[6] *kiḍai*, பெ.(n.) 1. மறை கற்பிக்கும் பாடசாலை; school for reciting *Vēdas*, *"மறையறா கிடையெங்கும்" (திருவிளை.வாதவூ.3).* 2. மறை கற்கும் குழாம்; band of desciples reciting *Vēda*. *"ஓது கிடையினுடன் போவார்" (பெரியபு. சண்டே. 17).* 3. படைக்கலம் பயிலிடம்; school where fencing is taught. *"இளங்கிடை காப்பரொடு (பெருங். உஞ்சைக்.37:11).*

[கிடை[5] → கிடை[6].]

கிடை[7] *kiḍai*, பெ.(n.) 1. உள்ளடக்கம், உட்கிடை; subject, matter, contents. *"அறநூற் கிடை நோக்கி" (சேதுபு.வேதாள.10).* 2. ஐயம்; doubt. *"பெருமை கிடையறக் கிளக்க லுற்றனனால்" (வாயுசங். இருடிகள்.பிர.4).*

[கிடை[4] → கிடை .]

கிடை[8] *kiḍai*, பெ.(n.) உவமை; comparison, match, parallel, likenss, equality. *"கீதங் கிடையிலாள் பாட" (சீவக.731).*

ம. கிட; க. கடை. கெடெ.

[கிளை → கிடை : உறவு, ஒப்பு, உவமை.]

கிடைக்காரன் *kiḍai-k-kāraṉ*, பெ.(n.) 1. ஆட்டுக் கிடைக் குரியவன்; owner of a flock of sheep. 2. ஆட்டுக்கிடை வைக்கும் நிலத்துக்குரியவன் (இ.வ.); owner of the land on which a flock of sheep or goat is penned.

[கிடை[4] + காரன்.]

கிடைகொடு–த்தல் *kiḍai-koḍu-*, 4 செ.கு.வி.(v.i.) பெற்றம் முதலியன பொலிபெருதின் சேர்க்கைக்கு இடங்கொடுத்தல்; to allow to copulate.

[கிடை + கொடு.]

கிடைகொடுக்காமை *kiḍai-koḍukkāmai*, பெ.(n.) படுக்கையில் பொருந்தாமை; restlessness in bed as of sick person (சா.அக.).

[கிடை + கொடுக்காமை.]

கிடைச்சரக்கு *kiḍai-c-carakku,* பெ.(n.) நாட்பட்ட சரக்கு; old stock of goods.

[கிடை⁴ + சரக்கு.]

கிடைச்சி *kiḍaicci,* பெ.(n.) ***கிடேச்சு*** பார்க்க; see *kiḍēccu.*

[கிடை³ → கிடைச்சி.]

கிடைச்சில் *kiḍaiccil,* பெ.(n.) 1.சண்டை; a quarrel, brawl. 2. எதிர்ப்படுதல்; encountering.

ம. கிடச்சில்

கிடைச்சு *kiḍaiccu,* பெ.(n.) ***கிடேச்சு*** பார்க்க; see *kiḍēccu.*

[கிடை³ → கிடைச்சு.]

கிடைச்சை *kiḍaiccai,* பெ.(n.) ***கிடேச்சு (வின்.)*** பார்க்க; see *kiḍēccu.*

[கிடை³ → கிடைச்சு → கிடைச்சை.]

கிடைதலை *kiḍai-talai,* பெ.(n.) இறங்குங்காலம் (யாழ்.அக.); moment of death.

[கிடை⁴ + தலை.]

கிடைப்படு-தல் *kiḍai-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. கட்டுப்படுதல்; to be caught, bound, enthralled. *"கிளர்சுருதி மயக்கத்தாற் கிடைப்பட்டாலும்" (ஞானவா.முமுட்சு,26).* 2. நோயுறுதல் (வின்.); to fall sick, become ill.

[கிடை⁴ + படு.]

கிடைப்பாடு *kiḍai-p-pāḍu,* பெ.(n.) நோய் (வின்.); disease.

[கிடைப்படு → கிடைப்பாடு. படு → பாடு.]

கிடைப்பாய் *kiḍaippāy* பெ.(n.) படுக்கைப்பாய்; mat.

[கிடை + பாய்.]

கிடைப்பிசகு *kiḍai-p-piśagu,* பெ.(n.) படுத்திருக்கும் போது நிலைமாறியதால் நேருஞ்சுளுக்கு; sprain from wrong position in sleep, cramp.

[கிடை⁴ + பிசகு.]

கிடைமறி-த்தல் *kiḍai-maṟi-,* 4 செ.கு.வி.(v.i.) உரத்திற்காகக் கால்நடைகளை வயல்களில் கூட்டுதல்; to herd cattle in the fields for manuring.

மறுவ. கிடை வைத்தல்

[கிடை⁴ + மறி.]

கிடைமாடு *kiḍai-māḍu,* பெ.(n.) ஆன்கூட்டம் (யாழ்.அக.); herd of cattle.

[கிடை⁴ + மாடு.]

கிடையன் *kiḍaiyaṉ,* பெ.(n.) கிடைச்சரக்கு (யாழ்.அக.); old or shop-soiled goods.

[கிடை⁴ → கிடையன்.]

கிடையாடை *kiḍai-y-āḍai,* பெ.(n.) படுக்கை விரிப்பு (அக.நி.); bed sheet.

[கிடை⁴ + ஆடை.]

கிடைவாய்-த்தல் *kiḍai-vāy-,* 2 செ.கு.வி.(v.i.) வாய்ப்பான படுக்கை அமைதல்; chance to get comfortable bed.

[கிடை⁴ + வாய்.]

கிடைவை-த்தல் *kiḍai-vai-,* 4 செ.கு.வி.(v.i.) ***கிடைமறி*** பார்க்க; see *kiḍai-maṟi.*

[கிடை⁴ + வை-.]

கிண்கிணி¹ *kiṇkiṇi,* பெ.(n.) 1. பொற்சதங்கையால் ஆன மாலை; tinkling of gold ornament for the ankle. *"திருப்பட்டிகை கிண்கிணி பெரும் நாணும் மாங்காய் நாணுடையவும்" (தெ.கல்.தொ.2 கல்.93).* 2. காலில் அணியும் சதங்கை; tinkling ornament for the ankle. *"தவளை வாய பொலஞ்செய் கிண்கிணி" (குறுந்.148).*

ம. கிண்கிணி; Skt. *kinkini*

[கிண்கிண் → கிண்கிணி.]

கிண்கிணி[2] *kiṇkiṇi*, பெ.(n.) வெண்கலமாலை; bronze or bell-metal ore.

[கிண் + கிண் + இ.]

கிண்கிணித்தாமம் *kiṇkiṇi-t-tāmam*, பெ.(n.) ***கிண்கிணிமாலை*** பார்க்க; see *kiṇkiṇi-mālai*. *"தவளைக் கிண்கிணித் தாமஞ் சேர்த்தியும்" (சீவக.3126).*

[கிண்கிணி + தாமம்.]

கிண்கிணிமாலை *kiṇkiṇi-mālai*, பெ.(n.) பெண்கள் இடுப்பில் அல்லது காலில் அணிவதும் குதிரை அல்லது விலங்குகளுக்குக் கழுத்தில் கட்டுவதுமான சதங்கை மாலை; string of small tinkling bells, for the waist or ankles of woman, for the neck of horse or other animal.

[கிண்கிணி + மாலை.]

கிண்கிணிவாய்க்கொள்(ளு)-தல் *kiṇ-kiṇivāy-k-koḷ-*, 16 செ.கு.வி.(v.i.) ***கிண்கிணிவாய்செய்*** பார்க்க; see *kiṇkiṇi-vāy-cey-*. *"கிண்கிணிவாய்க் கொள்ளுங்... கழுநீர் மலர்" (திருக்கோ.123).*

[கிண்கிணி + வாய் + கொள்(ளு).]

கிண்கிணிவாய்செய்-தல் *kiṇkiṇi-vāy-cey-*, 1 செ.கு.வி.(v.i.) 1. சிறு சதங்கையின் வாய்போலச் சிறிதே மலரத் தொடங்குதல்; to open slightly, as the mouth tinkling bell. *"கிணிவாய் செய்த தாமரைப்பூப்போல" (திவ்.திருப்பா.22).*

[கிண்கிணி + வாய் + செய்.]

கிண்கிணெனல் *kiṇkiṇ-eṉal*, பெ.(n.) ஓர் ஒலிக் குறிப்பு; onom. expr.signifying tinkling sound.

[கிண்+கிண்+எனல்.]

கிண்டல்[1] *kiṇḍal*, பெ.(n.) தூண்டிவிடுகை; stirring, setting one to do some mischief. அவன் கிண்டல் பண்ணுகிறான்.

ம. கிண்டல், கிண்டாட்டம்.

[கிள் → கிண்டு → கிண்டல்.]

கிண்டல்[2] *kiṇḍal*, பெ.(n.) ஏளனம் (இ.வ.); redicule, banter.

[கிண்டு → கிண்டல்.]

கிண்டல்கிளறல் *kiṇḍal-kiḷaṟal*, பெ.(n.) 1. தோண்டியெடுக்கை (வின்.); digging up, as yams. 2. உட்புகுந்து கிளறுகை; prying out.

ம. கிண்டாட்டம்

[கிண்டல் + கிளறல்.]

கிண்டன் *kiṇḍaṉ*, பெ.(n.) 1. தடியன்; fat man, strong person. 2. உரப்பாலை பஞ்சுத்துணி (வின்.); a kind of coarse cotton cloth, striped or checkered gingham.

க. கிண்ட; ம. கிண்டன்.

Mhr. gaṇḍa.

[கிண்டு + கிண்டன்.]

கிண்டான் *kiṇḍāṉ*, பெ.(n.) ஒருவகை உரப்புத் துணி; Cuddalore check, red and black, used for matresses and pillows. கூடலூர்க் கிண்டான் (இ.வ.).

[கண்டு → கிண்டு = தடிப்பு. கிண்டு→கிண்டன் → கிண்டான்.]

கிண்டி[1] *kiṇḍi*, பெ.(n.) மூக்குத் துளையால் நீர்வார்க்கும் சிறுகலம்; small drinking vessel with a nozzle, used for children to drink from. *"பொற் கிண்டியைக் கொண்டு உதகம் பண்ணப்புக" (திவ்.திருநெடு.13,வியா.).*

ம., கோத., குட., பட. கிண்டி; க., தெ. கிண்டி; து. கிண்டி, கிண்ட்டி; Mar. kindi.

[கிள் = பிளப்பு, துளை. கிள்→கிண்டு→ கிண்டி.]

கிண்டி[2] *kiṇḍi,* பெ.(n.) 1. துளை; hole. 2. நீர்க்கால்; canal.3. நீர்நிலை, ஏரி; tank, pool, water reservoir. 4. ஊர்ப்பெயர்; place name.

ம. கண்டி; **க.** கண்டி, கிண்டி. துண்டி; **குட.** கண்டி; **து.** கண்டி, துண்டி;**கெ.** கண்டி, தண்டிக; **பிரா.** கண்ட்;

[கண்டி → கிண்டி.]

கிண்டிக்கிளறு—தல் *kiṇḍi-k-kiḷaṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***கிண்டிக்கொடு*** பார்க்க; see *kiṇḍi-k-kōḍu-.*

[கிண்டு → கிண்டி + கிளறு-.]

கிண்டிக்கொடு—த்தல் *kiṇḍi-k-koḍu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கிளறிக்கொடுத்தல்; to stir, keep stirring, as fire.pap. 2. தூண்டிவிடுதல்; to stir up, incite as to a quarrel. 3. நினைப் பூட்டுதல்; to prompt. அவனுக்குச் சற்றே கிண்டிக் கொடு (வின்.).

[கிண்டி + கொடு]

கிண்டிப்பார்—த்தல் *kiṇḍi-p-pār-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. தோண்டிப்பார்த்தல்; to dig and look for, as yams. 2. ஆய்வு செய்தல்; to thoroughly investigate. சமாசாரத்தைக் கிண்டிப்பார் (உ.வ.).

[கிண்டி + பார்.]

கிண்டிவிடு—தல் *kiṇḍi-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. கொத்திக் கொடுத்தல்; to dig up, to break the ground with a hoe, to grub up. 2. தூண்டி விடுதல்; to stir up, incite, as to quarrel. 3. நினைவுப் படுத்துதல் (வின்.); to bring to notice, suggest.

[கிண்டு → கிண்டி + விடு.]

கிண்டு[1]**—தல்** *kiṇḍu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கிளறுதல் (பிங்.); to poke, to stir with a ladle, to scratch, as a fowl; to dig up as with a stick or iron bar, to burrow in, as rats, as worms; to penetrate, as bees into flower. 2. தோண்டுதல்; to excavate, as pit; to hoe up, hollow out, dig out, as a hole in a wall. 'மண்கிண்டி வயிறு வளர்க்கிறவன்' (வின்.). 3. ஆராய்தல்; to probe, scrutinize, investigate, inquire, pry into, search, examine. அவன் ஒவ்வொரு விஷயத்தையும் கிண்டிப் பார்க்கிறவன். 4. நினைப்பூட்டுதல் (வின்.); to remind, prompt. 5. தூண்டுதல் (வின்.); to incite, as to a quarrel.

ம. கிண்டு; **தெ.** செண்டு (வெட்டுதல்); **து.** செண்டாடுனி (கழித்தல்); **கோத.** கெச்; **துட.** கொச்; **கோண்.** கிட்டி; **மா.** கிண்டெ.

[கிள் → கிண்டு.]

kiṇḍ-u, to stir, to search, to turn up the ground. Comp. kevt-ew (*kent-eδ*), to prick, to goad, to spur on (C.G.D.F.L. Pg.592).

கிண்டு[2]**—தல்** *kiṇḍu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கடைதல்; to churn. *"பாம்புகயி றாய்ப் பிணித்துப் பாற்கடலைக் கிண்டாமல்"* ***(நெல்விடு.226).*** 2. கிளறிச் சமைத்தல்; to cook by constant stirring over the oven. உப்புமா கிண்டினாள் (யாழ்.அக.). 3. வெளிப்படுத்துதல் (யாழ்.அக.); to publish. 4. ஏளனப்படுத்துதல் (இ.வ.); to ridicule.

[கின் → கிண்டு.]

கிண்டு[3]**—தல்** *kiṇḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கிழித்தல் (திவ்.திருச்சந். 22.வியா); to tear off.

[கீண்டு → கிண்டு.]

கின்னகம் *kinnagam,* பெ.(n.) வெள்ளப்பெருக்கு; flood, deluge. ***"கின்னகத்திலிழிய அஞ்சு"*** ***(பெரியதி.3:1.1,வியா.).***

[கிள் → கின் + அகம்.]

கின்னம் *kinnam,* பெ.(n.) 1. சிறுவட்டில்; small cup made of metal, as perhaps producing a tinkling sound when struck. *"மழக்கை யிலங்குபொற் கிண்ண மென்றலால்" (திருவாச.5:92).* 2. நாழிகை வட்டில் (பிங்.); brass bowl with a hole in the bottom placed in water so as to fill and sink in a given time, used to calculate time depsydra.

ம. கின்னம்; க., பட. கின்னலு; தெ. கின்னிய, கின்னெ; து.கின்ன, கின்னல், திண்ணல்;துட. கிணம்.

[கின் → கிண் → கிண்ணம் = உட்குழிந்தது.]

கின்னன் *kinnan,* பெ.(n.) கருநிறமுடையான் (நீலகேசி,76); dark coloured person.

[கண்ணன் → கிண்ணன்.]

கின்னாரங்கொட்டு-தல் *kinnāraṅ-koṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) கின்னரம் இசைத்தல்; to play on a small fiddle or lute.

[கின்னரம் → கிண்ணாரம் + கொட்டு-.]

கின்னாரம் *kinnāram,* பெ.(n.) ஒரு நரம்பிசைக் கருவி; stringed instrument, small fiddle or lute.

ம. கின்னாரம்; **Skt.** kinnara.

*[கின்னரம் → கிண்ணாரம். **கின்னரம்** பார்க்க; see kinnaram.]*

கின்னாரிவட்டம் *kinnāri-vaṭṭam,* பெ.(n.) சுவர்த் தூணில் அமையும் அழகு வேலைப்பாடு (கம்.வழ.); beautiful design on the pillar.

[கிண்ணாரி + வட்டம்.]

கின்னி *kinni,* பெ.(n.) 1. **கின்னம்[1]** பார்க்க; see *kinnam[1]*. 2. **கின்னம்[2]** (G.Sm.D.i.29) பார்க்க; see *kinnam[2]*. 3. கத்தியின் கைப்பிடியுறை (சங். அக.); cover of the hilt of a sword. 4. நண்டின் கால் (வின்.); any one of the eight small legs of a crab. 5. நாயின் கிண்ணிக்கால் (வின்.); extra claw on the hind leg of some dogs. 6. எருது, மான் முதலிய ஒருசார் விலங்குகளின் குளம்பின் மேல் உள்ள திரட்சி (யாழ்.அக.);horny protuberance above the hoof and the hind part of the leg of certain animals as the ox, deer etc.

ம.,பட. கிண்ணி; க.கிண்ணல்; து. கிண்ணலு.

[கிண் → கிண்ணி.]

கின்னிக்கர்ப்பூரம் *kinni-k-karppūram,* பெ.(n.) இதளிய கருப்பூரம் (சங்.அக.); sublimate of mercury. 2. தூய்மைசெய்யப்பட்ட கருப்பூரம்; refined camphor.

மறுவ. இதளியக் கருப்பூரம்

[கிண்ணி + (கருப்பூரம்) கர்ப்பூரம்.]

கின்னிடு-தல் *kinnidu-,* 20 செ.கு.வி.(v.i.) கிண்ணென்னும் ஒலியுண்டாதல் (யாழ்.அக.); to tinkle, ring, as in the ear.

[கிண் + இடு.]

கின்னித்தேர் *kinni-t-tēr,* பெ.(n.) மேற்பாகம் பித்தளைத் தகட்டால் அமைந்த ஒருவகைத் தேர் (வின்.); a kind of car upper part of which is decorated all over with brass plates.

[கிண்ணி + தேர்.]

கின்னியெண்ணெய் *kinni-yeṇṇey,* பெ.(n.) கிண்ணியின் உட்பக்கம் பதங்கம் ஏறும்படி அணியம் செய்த மருந்தெண்ணெய்; medicated oil where the vapour is made to condense again as a deposit on inner side of a cup or receptacle.

[கிண்ணி + எண்ணெய்.]

கின்னு-தல் *kinnu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. போதல்; to go. *"கேரளத்தை நோக்கி வைச்சுக் கிண்ணி னனே" (பஞ்ச.திருமுக.1530).* 2. நிரம்பவுண்ணுதல்; to eat to the full. *"கிச்சடியாம் வைச்சடிக்கக் கிண்ணு வனாம்" (பஞ்ச.திருமுக. 1877).*

[கின் → கிடி → கிண்ணு.]

கிண்ணெனல்[1] *kinn-enal,* பெ.(n.) ஓர் ஒலிக் குறிப்பு; onom. expr. signifying tinkling, clinking sound. *"கிண்ணென் றிசைமுரலுந் திருக்கேதாரம்" (தேவா.1154,7).*

[கிண் + எனல்.]

கிண்ணெனல்[2] *kinnenal,* பெ.(n.) பெருத் திறுகியிருத்தற் குறிப்பு; expr. of being full and tight.குழந்தையின் வயிறு கிண்ணென்றி ருக்கிறது (இ.வ.).

[கிண் + எனல்.]

கிண்ணை *kinnai,* பெ.(n.) மரைமா என்னும் மரம்; kambala tree (சா.அக.).

மறுவ. கம்பலம், மரைமா.

கிணகன் *kinagan,* பெ.(n.) அடிமை (பிங்.); slave, menial.

ம. கிணகன்

[கீழ் → கீண் → கிண → கிணகு → கிணகன்.]

கிணம்[1] *kinam,* பெ.(n.) ***கிணறு*** (இ.வ.) பார்க்க; see *kinaru.*

[கீள் → கிள் → கிண் → கிணம்.]

கிணம்[2] *kinam,* பெ.(n.) தழும்பு (ஈடு.4:2:5,ஜீ); scar, scab.

[கிணம்[1] → கிணம்[2].]

கிணற்றாமை *kinarrāmai,* பெ.(n.) கிணற்றில் வாழும் ஆமைவகை; common terrapin.

[கிணறு + ஆமை.]



கிணற்றாமை

கிணற்றுக்கட்டு *kinarru-k-kattu,* பெ.(n.) கிணற்றின் சுற்றுக் கட்டடம் (வின்.); parapet wall of a well, well curb.கிணற்றுக்கட்டில் ஏனத்தை வைக்காதே? உள்ளே விழுந்துவிடும் (உ.வ.).

[கிணறு + கட்டு.]

கிணற்றுத்தவளை *kinarru-t-tavalai,* பெ.(n.) 1. தான் வாழும் சூழலுக்கு அப்பால் உள்ள எதையும் அறியாத நபர்; one who has no knowledge of things outside his or her own small sphere, innocent person (சா.அக.). அவன் ஒரு கிணற்றுத் தவளை (உ.வ.). 2. கிணற்றில் வாழும் தவளை; a kind of frog.

ம. கிணற்றுதவள

[கிணறு + தவளை.]

கிணற்றுநீர் *kinarrunir,* பெ.(n.) கிணற்றிலிருந்து எடுக்கப்படும் நீர். இது மிகுவறட்சி, வெப்பம், உடலழற்சி, சூலை, உட்கடுப்பு, குடைச்சல், மயக்கம், வீக்கம், பித்தக்குற்றம், மூச்சுக்குற்றம் முதலியவற்றை அகற்றக்கூடியது; well water. It is said to relieve the following complaints viz:- intense thirst, constitutional heat, colic pain, internal irritation, boring pain, giddiness, swelling, bilious affections pulmonary complaints etc. (சா.அக.).

[கிணறு + நீர்.]

கிணற்றுப்பொங்கல் *kinarru-p-pongal,* பெ.(n.) கிணறு வெட்டுகையில் தண்ணீர் கண்டவுடன் பாதாளவைரவனுக்கு இடும் பொங்கல் (வின்.); boiled rice offered to Bhairava of the lower region at the sight of water in the course of sinking well.

[கிணறு + பொங்கல்.]

கிணற்றுமிதி *kinarru-midi,* பெ.(n.) கிணற்றில் நீரிறைக்கும் போது நிற்குமிடம் (வின்.); foot hold for one who draws water from a well.

[கிணறு + மிதி.]

கிணற்றுவாரகம் *kiṇaṟṟu-vāragam,* பெ.(n.) கிணறுவெட்டுவதற்காக அரசினர் உழவர்களுக்குக் கொடுக்கும் கடன்; loan of government given to farmers for sinking wells.

[கிணறு + வாரகம்.]

கிணற்றுறை *kiṇaṟṟuṟai,* பெ.(n.) மண்சரியாமல் இருப்பதற்காகக் கிணற்றுள் இருக்கும் உறை (C.E.M.); pot-ring of a well.

[கிணறு + உறை.]

கிணறு *kiṇaṟu,* பெ.(n.) நிலத்திற்கு அடியிலிருந்து நீர் எடுப்பதற்காக மண்ணை வெட்டி அகற்றி உண்டாக்கிய வட்ட வடிவான ஆழமான குழி; well. *"உவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்" (நாலடி,263).*

ம. கிணறு

[கீள் → கீண் → கிண → கிணறு]

கிணறெடு-த்தல் *kiṇaṟeḍu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கிணறுவெட்டுதல்; to dig or sink a well. 2. கிணறு வெட்டுதற்கேற்ற இடந் தேர்தல் (வின்.); to select a spot for a well, with reference to the situation of house and other sourrounding objects, the nature of the soil, the depth at which water may be found, etc.

[கிணறு + எடு-.]

கிணாங்கு *kiṇāṅgu,* பெ.(n.) புல்வகை (வின்.); a species of grass.

[கிணகு → கிணாங்கு.]

கிணாட்டு *kiṇāṭṭu,* பெ.(n.) 1. ஓலை நறுக்கு; chip or nip of palm leaf. 2. மீன் செலுப்பு முதலியன; any small thing resembling an *ōla* chip, as the bony, appendage in gills of fish. 3. கதிர் முதலியவற்றின் சிறுகுலை (வின்.); small sub-division of a spike of grain or cluster of grapes.

[குணாட்டு → கிணாட்டு.]

கிணி[1] *kiṇi,* பெ.(n.) ஒருவகைக் கைத்தாளம் (வின்.); cymbal.

ம. கிணி

[கிள் → கிண் → கிணி.]

கிணி[2] *kiṇi,* பெ.(n.) நாயுருவி; Indian burr (சா.அக.).

[குள் → கிள் → கிண் → கிணி.]

கிணிதி *kiṇ-idi,* பெ.(n.) கிலுகிலுப்பை (மலை.); rattle-wort.

[கிண் + இதி.]

கிணினெனல் *kiṇiṉ-eṉal,* பெ.(n.) ***கிணீரெனல்*** பார்க்க; see *kiṇīr-eṉal. "இருமணி கிணினென விசைத்தன" (சீவக.1841).*

[கிணின் + எனல்.]

கிணீரெனல் *kiṇri-eṉal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom, expr. signifying, tinkling, clinking sound.

[கிணீர் + எனல்.]

கிணுக்குக்கிணுக்கெனல் *kiṇukku-k-kiṇuk-keṉal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு (வின்.); onom. expr. signifying tinkling sound, as a hand-bell.

[கிணுக்கு + கிணுக்கு + எனல்.]

கிணுகிணு-த்தல் *kiṇu-kiṇu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. வண்டுகளைப்போல் முரலுதல், கொசுக்களைப் போல் ஒலியெழுப்புதல்; (onom.) to hum as beas or buzz as moquitoes. 2. சிறுவர்களைப்போல் சிணுங்குதல்; to whimper. 3. முணுமுணுத்தல்; to mumble, mutter. 4. மணி முதலியன குறைவானவோசையுடன் ஒலித்தல்; tinkle. சைக்கிள் மணி கிணுகிணுத்தல்.

[குள் → கிள் → கிண் → கிணி.]

ம. கிணுகிணுக்குக

[கிணுகிணு - ஒலிக்குறிப்பு]

கிணை *kiṇai,* பெ.(n.) 1. ஒருவகை மருதப்பறை (பு.வெ.8:32.உரை); drum used in agricultural tract. 2. உடுக்கை; small drum shaped like an hourglass. *"நுண்கோற் றகைத்த தெண்கண் மாக்கிணை"* *(புறநா.70).*

[கிண் → கிணை.]

கிணைநிலை *kiṇai-nilai,* பெ.(n.) கிணைமகன் மருதநிலத்து வேளாளனைக் கிணைகொட்டிப் புகழும் புறத்துறை (பு.வெ.8:32); theme of singing the praises of a Vēḷāḷa chief, to the accom paniment of *kiṇai-drum.*

[கிணை+ நிலை.]

கிணைநிலைப் பொருநர் *kiṇai-nilai-p-porunar,* பெ.(n.) ***கிணைப்பொருநர்*** பார்க்க; see *kiṇai-p-porunar.* *"கிணைநிலைப் பொருநர்தஞ் செல்லல் கீழ்ப்பட"* *(சீவக.6).*

[கிணைநிலை + பொருநர்.]

கிணைப்பொருநர் *kiṇai-p-porunar,* பெ.(n.) கிணைப்பறை கொட்டிக்கொண்டு வேளாளரைப் புகழ்ந்து பாடும் பொருநர் (சிறுபாண்.203, உரை.); dancing minstrels who sing the praises of Vēḷāḷas, to the accompaniment of a *kiṇai-drum.*

[கிணை + பொருநர்.]

கிணைமகள் *kiṇai-magaḷ,* பெ. (n.)விறலி; female minstrel of ancient times, dancing and singing to the accompaniment of a drum. *"கிணைமகட் கெளிதாற் பாடினள் வரினே"* *(புறநா.111:4).*

[கிணை + மகள்.]

கிணைமகன் *kiṇai-magaṉ,* பெ.(n.) கிணைப்பறை இசைப்பவன்; ministrel who palys *kiṇai* drum of ancient times. *"இரும்பறைக் கிணைமகன்"* *(புறநா.388:3).*

[கிணை + மகன்.]

கிணையன் *kiṇaiyaṉ,* பெ.(n.) ***கிணைமகன்*** பார்க்க; see *kiṇai-magaṉ. "அங்கட் கிணையன் துடியன்" (பு.வெ.1:16).*

[கிணை → கிணையன்.]

கிணைவன் *kiṇaivaṉ,* பெ.(n.) ***கிணைமகன்*** பார்க்க; see *kiṇai-magaṉ, "நின் கிணைவன் கூற" (புறநா.379:11).*

[கிணை → கிணைவன்.]

கிணைவு *kiṇaivu,* பெ.(n.) கிணைத்தொழில்; the profession of playing *kiṇai* drums.

[கிணை → கிணைவு.]

கித்த *kitta,* கு.வி.எ.(adv.) விரைவாக; hastily. *"கித்தக் கருங்குவளைச் செவ்வியோடிக் கெழுமினவே" (திருக்கோ.388).*

[குள் → கிள் → கித்த.]

கித்தம் *kittam,* பெ.(n.) செய்யப்பட்டது (திருக்கோ. 388, உரை); that which is made.

[குல் → கில் → கித்தம்.]

கித்தா *kittā,* பெ.(n.) துடைப்பான்; rubber (தரங்கை).

[சீத்தல் → கீத்தன் → கித்தா.]

கித்து-தல் *kittu-,* 5 செ.கு.வி.(v.i.) ஒற்றைக்காலால் தாவி நடத்தல்; to hop, leap about on one leg, as boys do in the game of *kiṇdi-y-aḍittal. "கித்தி நின்றாடு மரிவையர்" (திருவிசை.கருவூ. திருக்கீழ்க்.11). (வே.க.178).*

ம. கித்துக

[குந்து → கிந்து → கித்து-.]

கிந்தாதி *kindādi,* பெ.(n.) துடரிப்பூடு; a thorny shrub (சா.அக.).

மறுவ. தொடரி

[கீள் → கிந்து → கிந்தாதி.]

கிந்திகம் *kindikam,* பெ.(n.) திப்பிலிமூலம்; root of long pepper. 2.புளிமா; sour mango (சா.அக.).

[கிள்→கிந்து→கிந்திகம்.]

கிந்திநட-த்தல் *kindi-naḍa-,* 3 செ.கு.வி.(v.i.) 1. முன்னங்காலால் நடத்தல் (வின்.); to walk on tip-toe. 2. நொண்டி நடத்தல்; to hobble, limp.

[கிந்து → கிந்தி + நட.]

கிந்திநில்-தல் (கிந்திநிற்றல்) *kindi-nil-,* 14 செ.கு.வி.(v.i.) முன்னங்காலை ஊன்றி நிற்றல் (வின்.); to stand on tip-toe.

[கிந்து → கிந்தி + நில்.]

கிந்தியடித்தல் *kindi-aḍittal,* பெ.(n.) பிள்ளைகள் நொண்டியடித்து ஒருவரையொருவர் பிடிக்கும் ஒருவகை விளையாட்டு (யாழ்ப்.); game of hopping about in a square traced on sand and trying to touch others while so engaged, a boy's game.

[கிந்து → கிந்தி + அடித்தல்.]

கிந்து-தல் *kindu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. முன்னங் கால் அல்லது விரல் குத்தி நடத்தல்; to stand or walk on toes of one foot or both, to go on tip-toe. 2. நொண்டி விளையாடுதல்; to hop, to leap about on one leg, as boys do in the game of *kindi-y-aḍittal.* 3. நொண்டி நடத்தல்; to limp, halt, hobble.

மறுவ. படங்குந்துதல்

பட. கொந்து

[கித்து → கிந்து.]

கிந்துகாலன் *kindu-kālaṉ,* பெ.(n.) கொந்தி நடப்பவன்; one who limps in his walk, who hobbles on tip-toe or on one foot.

பட. தொந்துகால

[கிந்து + காலன்.]

கிம்பகம் *kimbagam,* பெ.(n.) எட்டி; nux vomica (சா.அக.).

[கைப்பு→ கைம்பு→ கைம்பகம்→ கிம்பகம்.]

கிம்பரர் *kimbarar* பெ.(n.) கிம்புரி என்னும் அணிகலன் அணிந்த இசைவாணர்; a group among ancient Tamils, being professional singers and dancers (சா.அக.).

[கிம்புரி→ கிம்பரர். கிம்புரரைத் தொன்மக் கதையினர் மாந்தர் முகமும் குதிரை உடலும் கொண்டவராகக் கூறுவது புனைந்துரை.]

கிம்புரி *kimburi,* பெ.(n.) 1. யானைக் கொம்பிலிடும் பூண்; ornamental ring on an elephant's tusk. *"சித்திரக் கிம்புரி வைரஞ் சேர்த்துநர்" (சீவக.83).* 2.முடியுறுப்புள் ஒன்று (திவா.); ornamental boss of a crown, one of five *muḍi-y-uṟuppu.* 3. நீர் விழுதற்கு சுறவ வடிவில் அமைக்கப்பெற்ற தூம்பு; spout shaped like the mouth of a shark. *"கிம்புரிப் பகுவா யம்பணம்" (நெடுநல்.96).* 4. சுறா மீனின் வாய்போன்ற அணிகலன்; a kind of ornament. *"கைவினை யேசறு கிம்புரி யெயிறு வெண்ணிலா" (கம்பரா.கடிமண.66).* 5. தோளணி (வின்.); man's ornament for the upper arm, a kind of epaulet.

[கீள் = பிளத்தல். கீள் + புரி(வளையம்) – கீள்புரி → கிம்புரி (கொ.வ).]

கிம்புரிமுகம் *kimburi-mugam,* பெ.(n.) அணிகல முகப்பின் உறுப்புள் ஒன்று (S.I.I.ii.43); ornamental knob, as part of a jewel.

[கிம்புரி + முகம்.]

கிம்புருடர் *kimburuḍar,* பெ.(n.) பதினெண் கணத்துள் ஒருவராய் கருதப்படும் தேவ இனத்தார் (சிலப்.5: 176,உரை); a class of demigods, celestial lyrists supposed to have the form of a horse and the head of a man, one of *padiṉeṉ-kaṇam.*

[கிம்புரி→கிம்புரர்→ கிம்புருடர் (கிம்புரி என்னும் அணிகலன் அணிந்தவர். இவரைக் குதிரை உடலினர் எனப் பிற அகரமுதலிகள் குறித்திருப்பது தொன்மைக் கற்பனை.]

கிம்புருடம் *kimburuḍam,* பெ.(n.) கிம்புருட கண்டம், நாவல் தீவின் ஒரு பாகம்; a region of the mythical land.

[கிம்புரர்→கிம்புருடம்.]

கிம்மம் *kimmam,* பெ.(n.) துத்தம்; vitriol (சா.அக.).

[செம்→செம்மம்→ கிம்மம்.]

கிம்மியம் *kimmiyam,* பெ.(n.) கொல்லங்கோவை என்னும் ஆகாய கருடன் (மூலிகை); a climbing shrub (சா.அக.).

[கொம்பு→ கொம்பியம்→கௌம்பியம்→கிம்மியம் (கொ.வ).]

கிம்மீரம் *kimmīram,* பெ.(n.) செம்பட்டைநிறம்; brown colour (சா.அக.).

[செம்→கெம் →கெம்மிரம்→ கிம்மீரம்.]

கிமாச்சிமாவெனல் *kimā-c-cimā-v-eṉal,* முருமுருத்தற் குறிப்பு (இ.வ.); onom. expr. signifying muttering, grumbling sound.

மறுவ. கிமாவெனல்

[கிமா + சிமா + எனல். கிமாச்சிமா = ஒலிக்குறிப்பு, இடைச்சொல்.]

கிமாவெனல் *kimā-v-eṉal,* பெ.(n.) ***கிமாச்சிமா வெனல்*** பார்க்க; see *kima-c-cima-v-enal.* கிமா வென்பாரில்லை (வின்.).

[கிமா → எனல்.]

கிய்யாங்கிய்யாமெனல் *kiyyāṅ-kiyyām-eṉal,* பெ.(n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு; onom, expr. signifying peeping of chickens, etc. குழந்தை கிய்யாங் கிய்யாமென்று அழுகின்றது. 2. தடுமாறுதற் குறிப்பு; expr. signifying the state of being in a fix. *"கிய்யாங் கிய்யாமென்று விழிக்க"* (இ.வ.).

[கிய்யாம் + கிய்யாம்+எனல்.]

கிரக்கம் *kirakkam,* பெ.(n.) 1. களைப்பு ; exhaustion. 2. மயக்கம் ; giddiness.3. கிறுகிறுப்பு; dizziness.

[கில் → கிறு → கிறக்கம் + கிரக்கம்.]

கிரங்கு-தல் *kiraṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) சோர் வடைதல்; to get fatigued, jaded.

*[கிறங்கு → கிரங்கு (கொ.வ.). **கிறங்கு** பார்க்க; see kiṟaṅgu.]*

கிரந்தம் *kirandam,* பெ.(n.) சமற்கிருதத்தை எழுத தென்னிந்தியாவில் உருவாக்கப்பட்ட எழுத்து;a script used in south india to write Sanskrit.

[குரவன் → குரந்தை→ கரந்தை→ கரந்தம் > வ. கிரந்தம்.]

எழுத்தில்லா வடமொழிக்கு வழக்கிலிருந்த தமிழ் எழுத்து வரி வடிவங்களிலிருந்து, கற்பித்துக் கொண்ட எழுத்துகளாம். பல்லவர் காலத்தில் இக்கிரந்தம் வளர்க்கப் பெற்றமையால் இது பல்லவர் கிரந்தம் என்றும் பழங்கிரந்தம் என்றும் பெயர் பெறும். இவ் வெழுத்தின் தோற்றம் கி.பி. ஆறாம் நூற் றாண்டாகும்.

கிரந்தம் என்னும் சொல் கட்டுதல், எனும் வேர்ப் பொருளுடையது. கட்டப்பட்ட ஓலைச் சுவடியாகிய நூலைக் குறித்தது என்பர். நூலில் எழுதப்பயன்படும் எழுத்து எனும் பொருளில் கிரந்தலிபி எனப்பட்டது. நூல் கற்பிக்கும் ஆசிரி யனை கரந்தை என்றழைத்தனர். கரந்தைகள் ஆண்டில் ஒருக்கால் வருவது (தனிப்பா; 87, 171).

ஆசிரியன்மாறாகிய கரந்தைகள் வகுத்ததே கரந்தம்-கிரந்தம் ஆயிற்று என்பதே பொருந்தும். இந்தியாவில் பதினெட்டு மொழிகளுக்குச் சமண முனிவர்கள் தனித்தனி எழுத்து வடிவங்களை உருவாக்கித் தந்தனர். அவையே புத்தக எழுத்துகளுக்குரிய பொதுப்பெயராகிய கிரந்தம் எனப்பட்டது. பல்லவர் ஆட்சியில் எழுத்தில்லாத வடமொழிக்குப் புத்தக எழுத்து தேவைப்பட்டதால் உருவாக்கப்பட்ட எழுத்து இப்பெயர் பெற்றது என கருதலாம்.

கிரிகளா *kiri-kaḷā,* பெ.(n.) மலைக்களா; hill carondah (சா.அக.).

[கிரி+களா.]

கிரிகன்னி *kirikanni,* பெ.(n.) 1. வெள்ளைக்காக் கணம்; white flowered mussell-shell creeper. 2. மால்கரந்தை; *Vishṇu's* plant. 3. கொற்றவை; goddess Durga (சா.அக.).

[கரி → கிரி + கன்னி.]

கிரிச்செனல் *kiriccenal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom, expr. signifying creaking sound.

[கிரீச்சு → கிரிச்சு → எனல்.]

கிரிஞ்சனம் *kiriñjanam,* பெ.(n.) 1. நரிவெங்காயம் எனப்படும் காட்டு வெங்காயம்; a small red variety of wild onion prohibited as food. 2. அனுவல்லிப் பூடு (கஞ்சா) ; tops of hemp chewed to produce inebriating effect (சா.அக.).

[கரு → கரி → கரிஞ்சனம் + கிரிஞ்சனம்.]

கிரிடி *kiriḍi,* பெ.(n.). 1. கோழி; fowl. 2. காட்டீச்சம் பழம்; the fruit of marshy date-tree (சா.அக.).

[குரு・ சிவப்பு. குரு → கிரு + கிருடி → கிரிடு.]

கிரிமல்லி *kirimalli,* பெ.(n.) கொடிப்பாசி என்னும் மூலிகை; creeper moss (சா.அக.).

[குரு - கிரு + மல்லி –கிருமல்லி– கிரமல்லி.]

கிரிமல்லிகை *kirimalligai,* பெ.(n.) 1. மலை மல்லிகை; tree jasmine. 2. வெட்பாலை; Conessi bark (சா.அக.).

[குரு → கிரு → மல்லிகை.]

கிரிமல்லிப்பாலை *kirimalli-p-pālai,* பெ.(n.) வெட்பாலை; Tellicherry bark (சா.அக.).

[குரு → கிரு → கிரி + மல்லி + பாலை.]

கிரிமிக்கினி *kirimi-k-kiṇi,* பெ.(n.) வாலுளுவை; spindle tree (சா.அக.).

[கில் →கிலுமி→ கினுமிக்கி → கிரிமிக்கினி.]

கிரியரத்தை *kiriyarattai,* பெ.(n.) மலையரத்தை; hill galangal (சா.அக.).

[கிலி + அரத்தை – கிலியரத்தை → கிரியரத்தை.]

கிரியாம்பு *kiriyāmbu,* பெ.(n.) அரிசிக் கழுநீர்க்காடி; Soulgruel made from the fermentation of rice water (சா.அக.).

[கழி → கழியம் → கழியாம்பு → கலியாம்பு கிலியாம்பு → கிரியாம்பு.]

கிரிவாத்தியம் *kirivāttiyam,* பெ.(n.) முடக் கறுத்தான்; palsy-curer (சா.அக.).

[கீல் → கீலி → கிரி + வைத்தியம் → கிரிவாத்தியம் (கொ.வ.).]

கிரிவிளவல்லி *kiriviḷavalli,* பெ.(n.) சிறுநன்னாரி; country sarsaparilla (சா.அக.).

[கிலு → கிலி → கிரி → இள + வல்லி.]

கிரிவேம்பு *kiri-vēmbu,* பெ.(n.) மலைவேம்பு; large hill neem (சா.அக.).

[கரு → கரி → கிரி → வேம்பு.]

கிருசயம் *kiruśayam,* பெ.(n.) மலைப்பூவரசு; hill portia (சா.அக.).

[கிலுச்சயம் → கிருசயம்.]

கிருசரம் *kirusaram,* பெ.(n.) எள்; gingelly or sessamum seed (சா.அக.).

[கரு + தாரம் → கருத்தாரம் → கிருசரம்.]

கிருது *kirudu,* பெ.(n.) 1. செருக்கு; arrogance, haughtiness, self-conceit. அவனுடைய கிருதும் ஒயிலும் கட்டுக்கு அடங்கவில்லை (உ.வ.).

2. ஒய்யாரம்; affectation, foppery. வீண் செருக்கோ பெறுகிருதோ (தனிப்பா.II, 55:134).

[குல் + கில் → கிலுது → கிருது.]

கிருதுக்காரன் *kirudu-k-karan,* பெ.(n.) செருக்குடையவன்; arrogent, insolent person.

[கிலுது → கிருது → காரன்.]

கிருதுநடை *kirudu-nadai,* பெ.(n.) ஒய்யாரநடை (வின்.); proud strutting gait.

[கிருது + நடை.]

கிருதுப்பேச்சு *kirudu-p-pēccu,* பெ.(n.) செருக்கு மொழி; impertinent talk, insolent speech.

[கிருது + பேச்சு.]

கில்[1]–தல் (கிற்றல்) *kil-,* 14 செ.கு.வி. (v.i.) ஆற்றல் கொள்ளுதல்; to be able. *"கிற்பன் கில்லேன்" (திவ். திருவாய். 3,2,6).*

[குல்–பொருத்தல் கருத்துவேர். குல்→ கில்.]

கில்[2] *kil,* இடை.(part.) ஆற்றலுணர்த்தும் இடை நிலை; verbal infix indicating ability. *"வெம்ப வருகிற்பதன்று கூற்ற நம்மேல்" (தேவா.1229,2).*

[கில்[1] + கில்[2].]

கில்கில்லெனல் *kil-kil-l-enal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom.expr.signifying clinking sound.

['கில்கில்' – ஒலிக் குறிப்பு இடைச்சொல்.]

கில்லம் *killam,* பெ.(n.) 1. கழுத்து (பிங்); neck. 2. தொண்டைக்குழி.(இ.வ.); the hollow just below Adam's apple.

[கல் = பொருந்துதல். குல் → கில் → கில்லம். தோள், கழுத்து.]

கில்லா *killā,* பெ.எ.(adj.) இயலாதவை; not possible. *"கில்லா கேள்வி கேட்டன சிலசில" (பரி.12–39).*

[கில்→கில்லா.]

கில்லாடி *killadi,* பெ.(n.) 1. கயவன்; vagabond, scamp. 2. திறலோன்; a talented person. சொல்லாய்வில் இவரொரு கில்லாடி எனலாம் (உ.வ.).

மரா. கிலாடி : *khilādi*

[கிள்ளை + ஆடி → கிள்ளையாடி → கிள்ளாடி → கில்லாடி.]

கிள்ளை = மரப்பாவை, தோற்பாவை. கிள்ளையாடி= கரந்துறை கயிற்றால் மரப்பாவை அல்லது தோற்பாவைகளைப் பிணைத்து உயிருள்ளவை போல இயக்கும் கலை நுட்பத்தில் தேர்ந்தவன். மிகுந்த திறமைசாலியும் ஏய்ப்பதில் வல்ல கயவனும் இச் சொல்லால் குறிக்கப்பட்டனர்.

கில்லி *killi,* பெ.(n.) ***கிட்டிப்புள்*** பார்க்க; see *kitti-p-pul.*

மறுவ. கில்லிதாண்டு

[குள் → கில் → கில்ல.]

கில்லு–தல் *killu-,* 5 செ.கு.வி.(v.i.) தோண்டுதல்; to dig up.

க. கீல்; தெ.சீலு (C). கீன்ளுல.

[குல் → கில் → கில்லு.]

கிலாய்–த்தல் *kilāy-,* 4 செ.கு.வி.(v.i.) 1. சினத்தல்; to be angry. பிரணயரோஷந் தலையெடுத்துக் கிலாய்ப்பதும் (ஈடு, 8.1:2). 2. துன்பம்கொள்ளுதல் (அங்கலாய்த்தல்); to be distressed afflicted, to grieve. *"தனிமையைப் பார்த்துக் கிலாய்க்கையும்" (திவ். திருநெடுந். 9, வியா).*

[கலாய் → கிலாய்.]

கிலி *kili,* பெ.(n.) 1. பயப்படுகிறபடி நடந்துவிடும் என்ற மன அச்சம்; fear, fright. 2.கவலை; worry. *"கிலி கொள் மகயுனுத்தியினால்" (இராமநா. உத். 57).*

ம. கில்லு; க.,தெ., பட.கிலி.

[குல் → கல்→கலி → கிலி.]

கிலிபிடி—த்தல் *kili-pidi*, 4 செ.கு.வி. (v.i.) மனத்திற் பேரச்சங் கொள்ளுதல்; to be frightened, alarmed. கிலிபிடித்தவன் போல் பேசுகின்றான் (உ.வ).

க., பட. திலிகிடி.

[குல் → கல் → கலி → கிலி+பிடி .]

கிலிமண்டு—தல் *kili-mandu-*, 5 செ.கு.வி.(v.i.) ***கிலிபிடி*** பார்க்க; see *kili-pidi.*

[கிலி + மண்டு-.]

கிலுக்கம் *kilukkam*, பெ.(n.) பறவை வகை; a kind of bird. *"கின்னரங் குரண்டங் கிலுக்கஞ் சிரல்" (கம்பரா. ஊர்தேடு.151).*

[கிலுக்கு + கிலுக்கம்.]

கிலுக்கு[1]—தல் *kilukku-*, 5 செ.குன்றாவி.(v.t.) ஒலிக்கச்செய்தல்; to ring, rattle, clink.

ம. கிலுக்குக; க. கிலுகு.

[கிலுங்கு → கிலுக்கு.]

கிலுக்கு[2] *kilukku*, பெ.(n.) 1. ஒலிக்கை (வின்.); rattling, tinkling, clinking. 2. பள்ளிசெல்லும் சிறார்கள் ஒன்பானிரவு காலத்தில் ஒலித்துக் காசு திரட்டும் கிலுகிலுப்பை; rattling stickes of school boys, used especially in *nava-rāttiri* in soliciting presents for their teacher; children's rattle-box. என் பெயர்த்திக்கு ஒரு கிலுகிலுப்பு வாங்கிக் கொடுத்தேன்.

க.திலிகெ; தெ. கிலுக;பட.சிலிகெ.

[கிலுங்கு + கிலுக்கு.]

கிலுக்குத்தடி *kilukku-t-tadi*, பெ.(n.) அஞ்சலெடுத்துச் செல்வோர் கையிற் கொண்டு செல்லும் ஒலி செய்யுந்தடி; staff with jingles at one end, used by post runners and mendicants.

ம.கிலுக்குவடி

[கிலுக்கு + தடி.]

கிலுகிலி *kilukili*, பெ.(n.) பிள்ளைகளாட்டுங் கிலுகிலுப்பை; children's rattle-box. *"கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலுயாடும்" (சிறுபாலி.61).*

[கிலுகிலுப்பை – கிலுகிலி.]

கிலுகிலு—த்தல் *kilu-kilu-*, 4 செ.கு.வி. (v.i) 1. கிலுகிலென்று ஒலித்தல்; to rattle; to make a tinkling, clinking sound. 2. ஆரவாரித்தல்; to resound with noise. *"நகர் கிலுகிலுத்தது" (சூளா. சுயம்.161).*

[கிலுகில் → கிலுகிலு.]

கிலுகிலுப்பு *kilu-kiluppu*, பெ.(n.) ***கிலுகிலுப்பை*** பார்க்க; see *kilu-kiluppai.*

[கிலுகிலு → கிலுகிலுப்பு .]

கிலுகிலுப்பை[1] *kilukiluppai*, பெ.(n.) 1. உருண்டையான பகுதிகளில் கற்களை போட்டு ஆட்டி ஒலியெய்யும் ஒருவகை விளையாட்டுக்கருவி; child's rattle.

மறுவ.கிலுகிலுப்பு, கிலுங்கி.

ம.கிலுகிலுப்ப; க.திலிகெ; பட. சிலிகெ.

[கிலுகிலு → கிலுகிலுப்பை .]

கிலுகிலுப்பை[2] *kilu-kiluppai*, பெ.(n.) 1. செடிவகைகள் (குறிஞ்சிப். 88, உரை); species of rattlewort as having, when ripe, seeds that rattle in the pod. 2. கொடிவகை (K.R.); a copiously branching shrub with quadrangular stems.

க.திலிதிசிதி

[கிலுகிலு → கிலுகிலுப்பை - ஒலிசெய்யும் செடி, கொடிகள்.]

கிலுகிலுப்பை செடி

கிலுகிலுப்பைக்குட்டான் *kilu-kiluppai-k-kuttan,* பெ.(n.) பிள்ளைகளின் விளையாட்டுக் கருவிவகை (யாழ்ப்.); children's basket-rattle.

[கிலுகிலுப்பை + குட்டான்.]

கிலுகிலெனல் *kilu-kilenal,* பெ.(n.) ஓர் ஒலிக் குறிப்பு; onom. expr., signifying rattling, tinkling, jingling sound.

[கிலுகிலு + எனல்.]

கிலுங்கி *kilunigi,* பெ.(n.) ***கிலுகிலுப்பை*** பார்க்க; see *kilu-kiluppai.*

[கிலு – ஒலி குறிப்பு. கிலு → கிலுங்கி.]

கிலுங்கு–தல் *kilunigu-,* 5 செ.கு.வி. (v.i.) ஒலித்தல் (வின்.); to tinkle, ring, clink.

ம. கிலுங்குக; **க.** திலகு, திலுகு.

[கில் →கிலு → கிருங்கி.]

கிலுத்தம் *kiluttam,* பெ.(n.) 1. மணிக்கட்டு; wrist. *"கிலுத்தங் கூர்ப்பரங்க ளென்னு மிரண்டனுள்" (சீவக.1645).* 2. மக்கள் வடிவான பழமுள்ள மரவகை; a kind of tree whose fruit was said to assume human form. *"மானிடம் பழுத்தன கிலுத்தம்" (சீவக.1900).*

[குல்: பொருத்துதல் – சேர்த்தல் வடிவுறல். குல் → குறு → கிலு →கிலுத்தம்.]

கிலுமொலெனல் *kilumol-enal,* பெ.(n.) 1. வண்டு முதலியவற்றின் ஒலிக்குறிப்பு; onnom. expr. signifying buzzing, humming sound. 2. அடர்ச்சிக் குறிப்பு (வின்.); signifying crowding, swarming, as vermin, in the head, maggots in a carcass.

[கிலு + மொது + எனல்.]

கிழக்கத்தி *kilakkatti,* பெ.எ.(adj) கீழ்த்திசைக்குரிய; eastern, used in compounds as. கிழக்கத்திக் காற்று, கிழக்கத்தியான்.

[கிழக்கு + அத்து + இ + அ. கிழக்த்திய – கிழக்கத்தி.]

கிழக்கத்திய *kilakkattiya,* பெ.எ.(adj) கிழத்திசைப் குரிய; easterm

[கிழகு + அத்து + இ + அ – கிழக்கத்திய. அத்–சாரியை. இ – எழுத்துப்பேறு. அ– பெயரச்சாறு.]

கிழக்கதை *kila-k-kadai,* பெ.(n.) பழங்கதை (வின்.); stale, old story, stories of old people.இன்றும் கிழக்கதைகளுக்குச் சிறப்புக் கிடைக்கிறது என்பதை மறுக்க முடியுமா? (உ.வ.).

[கிழம் + கதை.]

கிழக்கன் *kilakkan,* பெ.(n.) 1. ***கிழங்கான்*** பார்க்க; see *kilangān.* 2. புகையிலை வகை; a kind of tobacco.

[கிழக்கு → கிழக்கன்.]

கிழக்கா *kilakkā,* பெ.(n.) ***கிழங்கான் (யாழ்ப்.)*** பார்க்க; see *kilangān.*

[கிழங்கான் → கிழக்கா (கொ.வ.).]

கிழக்கிடுபொருள் *kilakkidu-porul,* பெ.(n.) தாழ்பொருள்; lowners, plainness humbleness. கிழக்கிடு பொருளொடு ஐந்தும் ஆகும் (தொ. பொருள். 276 : 6).

[கிழக்கு : பள்ளம், குழி. கிழக்கு + இடு + பொருள்.]

கிழக்கு *kilakku,* பெ.(n.) 1. பள்ளமான கீழ்த்திசை (திவா.); east. 2. கீழிடம்; bottom, low place. *"கிளைஇய குரலே கிழக்கு வீழ்ந்தனவே" (குறுந். 337).* 3. இழிவு; lowness, plainness, humbleness. *"கிழக்கிடு பொருளோடு" (தொல். பொருள்.280).* 4. பள்ளம் (திவா.); depression, pit. 5. கீழ்; below. *"காணிற் கிழக்காந் தலை" (குறள், 488).* 6. கதிரவன் தோன்றும் திசை; east.

மறுவ. குணக்கு

ம. கிழக்கு

[கீழ் → கீழக்கு → கிழக்கு.]

'கிழக்கு' என்னும் சொல்லின் வேர்ப்பொருளே தமிழர்கள் வந்தேறிகள் அல்லர்; இந்நாட்டின் தொல்குடியினர் என்பதை நிறுவுகிறது என்பார். - சி.டி. மக்ளீன்.

"Taking the Dravidians as a whole there is no evidence of a descent from the north.----The inhabitants of the extreme south of the peninsula and those shut in by the mountains of the western coast show characteristics which are probably older and more unique than those of any other nation in the world which pretends to civilisation.---- As far as present evidence goes however they are ind genous to India and perhaps specially indigenous to sothern India. The Dravidian terms indicating direction which must be very primitive are derived from the configuaration of the southern peninsula. The east is "*kilakku*" or "down" and the west is "*Mērku*" or "up" that is to say the country sloping to the coast and the country rising to the western ghats"— C.D.Maclean:- MANUAL OF THE ADMINISTRATION OF THE MADRAS PRESIDENCY Vol. 1;1885.

கிழக்குக்கணவாய் *kilakku-k-kaṉavāy,* பெ.(n.) 1. கிழக்குத் தொடர்ச்சிமலை (C.G.); the Eastern ghats. 2. கிழக்குத் தொடர்ச்சிமலையில் உள்ள நெருக்கமான வழி; mountain pass in eastern Ghats.

[கிழக்கு + கணவாய்]

கிழக்கு வெளு-த்தல் *kilakku-veḷu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. கீழ்வானில் ஒளி தோன்றுதல், கீழ்த் திசையில் இருள் நீங்கத் தொடங்குதல்; to dawn, as to light the east. *"பகற்கண்டேன் என்கிற தோற்றரவுக்குக் கிழக்கு வெளுக்கிறபடி" (ஈடு 6,1,11).* கிழக்கு வெளுத்தது (உ.வ.).

[கிழக்கு + வெளு.]

கிழக்கோட்டான் *kila-k-kōṭṭāṉ,* பெ.(n.) வீட்டில் நடக்கும் எல்லாச் செயல்களையும் கவனித்துக் கொண்டு இருக்கும் முதியவர்; old hag, old geezer. அந்தக் கிழகோட்டான் கண்ணில் படாமல் எடுத்துவா (உ.வ.).

[கிழக்கு + வெளு.]

கிழங்கான் *kilaṅgāṉ* பெ.(n.) வெண்மையும், ஒலிவப் பச்சை நிறமும் கொண்ட அடி நீளமுள்ள கடல் மீன்.(பதார்த்த. 941); whiting sea fish olive-green attaining one ft. in length.

மறுவ. கிழங்கா

[கிழங்கு → கிழங்கான் → கிழங்கு போன்ற தோற்றம் தரும் மீன் வகை.]



கிழங்கான்மீன்

கிழங்கிரு-த்தல் *kilaṅgiru-* 3 செ.கு.வி.(v.i) அடிமூலம் பெயர்க்கப்படாது தங்குதல்; to remain unimpaired in root. *"கீழுலகி லசுரர்களைக் கிழங்கிருந்து கிளராமே யாழிவிடுத்து" (திவ். பெரியாழ். 4.8:6).*

[கிழங்கு + இரு.]

கிழங்கு *kilangu,* பெ.(n.) 1. செடிகொடி முதலியவற்றின் மூலம், நிலத்தின் கீழ்விளையும் திரட்சியன பகுதி; tuber, esculent or bulbous root,as potato, yam, turnip, parsnip, palmyra root. *"தீங்கனி கிழங்கு செழுங்காய் நல்லன"*

(மணிமே.17.58). 2. கரணியம்; cause. *"நாபிக்கமல முதற்கிழங்கே" (திங்.திருவாய். 10.10:3).*

ம. கிழங்ங்; க. கிழங்கு, கெணசு; தெ. கெனசு; து. கிரெங், கெரெங்க்; பட.காசு.

Chin. gen.

[கீழ் → கிழக்கு → கிழங்கு.]

கிழங்குசின்னி *kilaṅgucinni,* பெ.(n.) ஒருவகைக் கிழங்குச் செடி; a medicinal root curing leucoderma and promoting apelicibe.

[கிழங்கு + சின்னி.]

கிழங்குமஞ்சள் *kilaṅgu-mañjal,* பெ.(n.) மஞ்சள் வகை (வின்.);turmeric with round root.

[கிழங்கு + மஞ்சள்.]

கிழங்கெடு-த்தல் *kilaṅgedu-,* 4 செ.குன்றாவி. (v.t) 1.அடியோடு அழித்தல்; to destroy, root and branch. *'அநாசுரிதரைக் கிழங்கெடுத்துப் போகட்டானித்தனை' (ஈ.டு. 8.1:4).* 2. கிழங்கு தோண்டியெடுத்தல்; to dig without root.

[கிழங்கு + எடு-.]

கிழடன் *kiladan* பெ.(n.) கிழவன்; oldman.

ம.கிழடன்

[கிழவன் → கிழடன்.]

கிழடு *kiladu,* பெ.(n.) 1. முதுமை; old age, senility. *"ஒரு கிழட்டந்தணன்" (உபசேதகா. சிவபுண்ணிய. 217).* 2. முதியது; old thing, said of an animal, or a tree, and contemptuously, of a person. 3. முதிர்ந்தது; matured. 4. வயதான ஒருவர்; aged person.அந்தக்கிழடுக்குக் காதும் கேட்காது (உ.வ.).

ம.கிழடு

[கீழ் → கிழம் → கிழடு.]

கிழடுகட்டை *kiladu-kattai,* பெ.(n.). அகவை முதிர்ந்து எந்தவேலைக்கும் பயனற்றவர்களாகக் கருதப்படுவோர்; old useless persons, as a time-worn log of wood. கிழடு கட்டைகளைப் புறக் கணிப்பது நன்றன்று.

[கிழடு + கட்டை.]

கிழடுதட்டு-தல் *kiladu-tattu-,* 5 செ.கு.வி. (v.i.) வெளிப்படையாகத் தெரியும் வகையில் முதிர்ந்த தோற்றம் ஏற்படுதல்; age in a visible way. நண்பர் கிழடுதட்டி மிகவும் பரிதாபமாக இருந்தார் (உ.வ,).

[கிழடு+ தட்டு.]

கிழண்டுபோ-தல் *kilaṇdu-pō-,* 8 செ.கு.வி. (v.i.) கிழத்தன்மையடைதல்; to grow old.

[கிழடு →கிழண்டு + போ.]

கிழத்தனம் *kilattanam,* பெ.(n.) முதுமை; old age, senility.

[கிழம் + தனம்.]

கிழத்தி *kilatti,* பெ.(n.) 1. உரியவள்; proprietress, she who has a right. *"செம்புலக் கிழத்திக் காவி யன்னது" (பாரத. சிறப்பு.13).* 2. தலைவி; mistress, lady-love. *"தன்னுறு வேட்கை கிழவன் முற் கிளத்தில்... கிழத்திக்கில்லை" (தொல். பொருள்.118).*

[கிழமை (உரிமை)→ கிழத்தி]

கிழத்தியர் *kilattiyar,* பெ.(n.) உரிமைமகளிர்; women having rights. *"கண்ணிய காமக் கிழத்தியர் மேன" (தொல். பொருள் 149–14. 1097. நூற்பா.).*

[கிழத்தி → கிழத்தியர்.]

கிழப்பிணம் *kila-p-pinam,* பெ.(n.) செயலற்ற முதியோர்; old person, as a living corpse. இந்தக் கிழப்பிணம் சும்மா இருக்கக் கூடாதா? (உ.வ.).

[கிழம் + பிணம்.]

கிழம் *kiḻam,* பெ.(n.) 1. முதுமை; old age, senility. *"கிழமுதிரிளநலம்" (கந்தபு.கடவுள்.17.).* 2. முதியோர்; aged person used as a term of contempt. குழந்தைகள் முதல் கிழங்கள் வரை விழாவுக்கு வந்தனர் (உ.வ.). 3. முதுமையடைந்தது; aged animal or thing, used as a term of contempt. இந்த மாடு கிழம், கிழமாடு.

[கிழ் → கிழம்.]

கிழம்படு-தல் *kiḻam-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) முதுமையடைதல்; to grow old, to become worn out or useless by age. *"மரங் கிழம்படுதலின்" (பிரமோத்.7:30).*

[கிழம் + படு.]

கிழமழை *kiḻa-maḻai,* பெ.(n.) பெய்து ஒயும் நிலையிலுள்ள மழை (இ. வ.); rain about to cease.

[கிழம் + மழை.]

கிழமேல் *kiḻa-mēl,* கு.பெ.எ.(adj.) கிழக்கிலிருந்து மேற்குவரை; from east to west.

ம.கிழமேல்

[கிழக்கு + மேல் – கிழக்குமேல் = கிழமேல். கீழ்மேல் → கிழமேல்.]

கிழமேனி *kiḻamēṉi,* பெ.(n.) திரைத்தமேனி இது வயது முதிர்ந்த காலத்தில் உண்டாகும்; shrunken, body with wrinkles or folds. This occurs when the muscle loses its elasticity (சா.அக.). உடம்பில் தசைநார்கள் நெகிழ்ச்சியை இழந்த காலத் துண்டாகும் உடல்தோற்றம்.

[கிழம் + மேனி.]

கிழமேனிபடுகை *kiḻa-mēṉ-ipaḍugai,* பெ.(n.) மூப்படைதற்கு முன்னமே கிழத்தன்மையடைதல்; becoming old before the natural course; becoming prematurely old (சா.அக.).

[கிழம் + மேனி + படுகை.]

கிழமை[1] *kiḻamai,* பெ.(n.) 1. உரிமை; claim, right, *"உணர்ச்சிதா னட்பாங் கிழமை தரும்" (குறள்,785.).* 2. உறவு; relation, connection. அவனுக்கும் இவனுக்கும் என்ன கிழமை? (இ.வ.). 3. நட்பு; friendship, alliance. *"எமர்நும ரெழுவர் காறு நின்றது கிழமை" (சீவக.544).* 4. ஒன்றற்கும் மற்றொன்றற்கு முள்ள தொடர்பைத் தெரிவிப்பதாகிய ஆறாம் வேற்றுமைப் பொருள் (நன்.300); relation of one thing to another as denoted by the possesive case, being of two kinds viz., தற்கிழமை, பிறிதின் கிழமை. 5. பண்பு; quality.

[கீழ் = தொன்மை, பழமை. கீழ் → கிழமை = பழமையான உறவு, மாறாதபண்பு, உரிமை.]

கிழமை[2] *kiḻamai,* பெ.(n.) 1. நாள்;day of the week. 2. ஞாயிறு, திங்கள், செவ்வாய், அறிவன், வியாழன், வெள்ளி, காரி ஆகிய ஏழுநாள்கள் கொண்டது; seven day's of the week.இன்று என்ன கிழமை ? (உ.வ.).

ம. கிழம

[கீழ் → கிழமை (தொடர்ந்து வரும் நாட் சுழற்சி.]

kira-mei (base *kira*), a week, literally property, possession, each portion of a week being astrologically regarded as the property or inheritance of some planet. Comp. Ossete *kuri, kore,* a week Georgian *kuire.* Possibly these words are derived from the Greek-*kuptakn (kuri-ake),* Sunday, the Lord's day; but whence is the Greek word derived? From *kupt-os (kuri-os),* a lord, a possessor, the bas of which may perhaps be allied to the Tamil *kira,* possession. The ultimate root of *kira* is doubtless *kir,* ordinarily lengthened to *kir,* beneath; hence *kira-mei* means that which is beneath one, under his power, in his possession (C.G.D.F.L. Pg.592).

கிழமை[3] *kiḻamai,* பெ.(n.) முதுமை (சூடா.); old age.

ம. கிழம

[கீழ் → கிழம் → கிழமை.] (வ.மொ.வ.341).

கிழமைக்கழு—தல் *kilamaikkalu-,* 1 செ.கு.வி. (v.i.) இறந்துபட்ட எட்டாம்நாள் துக்கங் கொண்டாடுதல்; to mourn for the dead especially on the eighth day after death.

மறுவ. *எட்டாந்துக்கம் (தெ.ஆ.)*

[கிழமைக்கு² + அழு – கிழமைக் கழு.]

இறந்தவர் நினைவாக அவர் விரும்பும், உணவு, உடை, பொருள்கள் ஆகியவற்றை வைத்து வழிபடும் நீத்தார் கடன்.

கிழமைபிறந்த நாள் *kilamai-pirandanāl,* பெ.(n.) இன்ன விண்மீன் இன்ன நாளில் பிறந்தது என்னும் குறிப்பு; the asterism of each of the seven days of the week. தாழியில் ஞாயிறும், நெய்ம்மீனில் திங்களும், கடைக்குளத்தில் செவ்வாயும், பறவையில் அறிவனும், துளங்கொளி தழலில் வியாழனும், முற்குளத்தில் வெள்ளியும், தொழுபஃறியில் சனியும் பிறந்தனவாகும் (கணியம்); the day of the week appropriate to the star.

[கிழமை + பிறந்த + நாள்.]

கிழமையான் *kilamaiyān,* பெ.(n.) உரிமை யுடையவன்; owner; one who is entitled to. *"கொண் டேற்று கிழமையான் கோவலன்" (சிலப். 1:39).*

[கிழமை + ஆன்.]

கிழமையோன் *kilamaiyōn,* பெ.(n.) 1. உரிமை யுடையோன்;owner. 2.. தமையன்; elder brother. *"ஓடாப்பூட்கை நின் கிழமையோற் கண்டே" (புறநா. 165–15).*

[கிழமை + ஆன் (ஒன்).]

கிழமைவட்டம் *kilamai-vattam,* பெ.(n.) சுழற்சியில் வரும் நாள்கள் (மண்டலித்துவரும் வாரம்); week, as the cycle of seven *kilamai*

[கிழமை + வட்டம்.]

கிழலை *kilalai,* பெ.(n.) 1. திசை; quarter, part, region. இந்தக் கிழலையில் அவனைக் காண வில்லை. 2. மரக்கலத்தின் சாய்வுப் பக்கம்; the lower side of a vessel, the side on which the sail is hoisted.

[கிழக்கு → கிழலை. கிழக்கு திசை.]

கிழவது *kilavadu,* பெ.(n.) உரியது; that which pertains to. *"குழவி மருங்கினும் கிழவதாகும்" (சொல்.பொருள்.84).*

[கிழமை → கிழவது (கிழமை • உரிமை).]

கிழவரி *kilavari,* பெ.(n.) தண்ணீர் விட்டான் கிழங்கு; water root (சா.அக.).

[கீழ் →கிழ + வரி.]

கிழவன்¹ *kilavan,* பெ.(n.) 1. உரியவன்; owner, *"செல்லான் கிழவ னிருப்பின்" (குறள்.1039).* 2. தலைவன், கணவன்; lord, master, husband. *"கிழவனுங் கிழத்தியுஞ் சிறந்தது பயிற்றல்" (சொல். பொருள்.192.).* 3. மருதநிலத் தலைவன் (திவா.); chief of an agricultural tract.கிழவன் சேதுபதி (உ.வ.).

ம. கிழவன்

[குழு → கெழு → கெழுமை → கிழமை → கிழவன்.] *(வ.மொ.வ.341.)*

கிழவன்² *kilavan,* பெ.(n.) அகவைமுதிர்ந்தவன்; aged man, *"மூத்துடன டுங்கி நிற்குமிக் கிழவனை" (தேவா.648:4.).*

ம. கிழவன்; **க.** கிழவ, களவ, கெழவ;; **பட.** கெளவ.

[கிழம் → கிழவு→கிழவன்.]

கிழவன்³ *kilavan,* பெ.(n.) எண்ணெய்க் கசடு; black sediment in oil.

[கீழ் → கிழி → கிழவன் (கீழ்நோக்கித் தங்குவது).]

கிழவன்[4] *kiḻavaṉ,* பெ.(n.) இரண்டாவது நாண் மீனாகிய தாழி(பரணி); the second naksatra.

[கீழ் → கிழக்கு →கிழவன்.]

கிழவன்குடி *kiḻavaṉkuḍi,* பெ.(n.) பற்பாடகம், மிகுதியான விதைகளோடும் பச்சைப் பூண்டாக வுள்ளதுமான ஒரு கடைச்சரக்கு; fever plant.

[கிழவன் + குடி.]

கிழவன்தாடி *kiḻavaṉtāḍi* பெ.(n.) 1. காட்டு மருக்கொழுந்து; a plant, southern wood. 2. ஒருவகை மாம்பழம், a kind of mango (சா.அக.).

மறுவ. பனிதாங்கி

[கிழவன் + தாடி.]

கிழவி[1] *kiḻavi,* பெ.(n.) மனைவி, தலைவி; wife, mistress,lady love. *"கிழவிநிலையே வினையிடத் துரையார்" (தொல். பொருள்.186).*

[கிழம் → கிழவு → கிழவி.]

கிழவி[2] *kiḻavi,* பெ.(n.) முதியவள்; old woman. *"கிழவி கருந்துணி மேலிடு வெண்பிட்டு (குமர.பிர. மதுரைக்.11).*

ம. கிழவி; க. கிழவி, கெழவி; பட. கௌவி.

Aust. kombona.

[கிழம் → கிழவு → கிழவி.]

கிழவி[3] *kiḻavi,* பெ.(n.) முருங்கை (மலை); horse-radish tree.

[கிழ → கிழவி.]

கிழவிக்கிழங்கு *kiḻavi-k-kiḻaṅgu,* பெ.(n.) 1. நாட்பட்ட கிழங்கு, an old root. 2. முந்தைய ஆண்டின் கிழங்கு; root of the previous year (சா.அக.).

[கிழவி + கிழங்கு.]

கிழவிகாத்தட்டை *kiḻavikā-t-taṭṭai,* பெ.(n.) நாணல்தட்டை; reed (சா.அக.).

[கிழவி + காத்தட்டை.]

கிழவிதானிகம் *kiḻavitāṉigam,* பெ.(n.) முருங்கை; horse-radish tree (சா.அக.).

[கிழவி + தானிகம்.]

கிழவிமஞ்சள் *kiḻavi-mañjaḷ,* பெ.(n.) முந்திய ஆண்டின் மஞ்சள்; turmeric of the previous year (சா. அக.).

[கிழவி + மஞ்சள்.]

கிழவு-தல் *kiḻavu-,* 5 செ.கு.வி(v.i.) உரிமையுடையதாகுதல்; that which pertains to that which belongs to. *"குழவிமருங்கினும் கிழவதாகும்"*

[கிழ → கிழவு.]

கிழவு *kiḻavu,* பெ.(n.) கிழத்தன்மை; old age. *"பின்னாக் கிழவுதான் விளைக்கும்"(சீவக.379).*

ம.கிழவு

[கிழம் → கிழவு.]

கிழவோன்[1] *kiḻavōṉ,* பெ.(n.) 1. உரியவன்; proprietor, owner, *"பழமுதிர் சோலை மலைகிழ வோனே" (திருமுருகு.317).* 2. தலைவன்; lord, master, husband (தொல்.பொருள்.234).

[கிழமை → கிழவோன்.]

கிழவோன்[2] *kiḻavōṉ,* பெ.(n.) 1. முதியவன்; old man *"கிழவோன்றன் செயலினை" (கந்தபு. தவங்கள்.5.).* 2. தலைவன்; lover, head of the family.

[கிழவு → கிழவோன்.]

கிழாஅன்[1] *kiḻāṉ,* பெ.(n.) 1. தயிர் (பிங்.); curd. 2.தயிர்த்தாழி;curd pot. *"வெண்டயிருந் தண்ட யிரும் விராய்க் கிடந்த கிழாஅன் போல" (கலிங். 506, புதுப்.).* 3. நீரிறைக்கும் சால்; water lift.

[குள் → கில் (திரட்சி) உருண்டை → கில் →கிழ →கிழா அன்.]

கிழா அன்² *kilaan*, பெ.(n.) கதிரவன்; sun (சா. அக.).

[கிழன் = கிழ்த்திசையில் உதிக்கும் கதிரவன் கிழன் → கிழா அன்.]

கிழாத்தி *kilātti*, பெ.(n.) 1. கடல் மீன்வகை கிணற்று அல்லது ஆற்றுக் கிழாத்திமீன்; a fresh water shark of cat-fish family. 2. நன்னீர்வாழ் பெருங்குறவை மீன்; a dark coloured fish. 3. ஒருவகைக் கடல் சுறா மீன்; a silvery sea shark. 4.ஒரு பறவை; a kind of bird (சா.அக.).

[கிழ்→கிழான் = கிழாத்தி (திரண்ட தோற்றமுடைய மீன்.]



கிழாத்திமீன்

கிழார்¹ *kiḻār*, பெ.(n.) வேளாளர் பட்டப் பெயர்; ancient velala title. எத்தனை யேனுங் கிழார் கிழார்க்கும் (ஈடு. 6:3.7) (தொல். பொருள். 629, உரை).

ம.கிழார்

[குல் → கில் (திரட்சி, உருண்டை) → கில் →கிழ →கிழான்→ கிழார் (நீரிறைக்கும் சால், நன்செய் வேளாண்மை செய்யும் உழவர்).]

கிழார்² *kiḻār*, பெ.(n.) 1. மாடுகளைக்கொண்டு பாசனத்திற்கு நீரை இறைக்கப் பயன்படும் பூட்டைப் பொறி; water-lift for irrigation drawn by bullocks. *"ஆம்பியுங் கிழாரும் வீங்கிசை யேற்றமும்" (சிலப். 10:110).* 2. தோட்டம்; garden. வேணாட்டார் தோட்டத்தைக் கிழாரென்றும் (நன். 272, மயிலை).

ம.கிழார்

[குல் → கில் (திரட்சி, உருண்டை) → கில் →கிழ →கிழான் கிழார்.]

நீரிறைக்கும் கருவி. நீர்பாயும் வயலுக்கும் நன்செய், வேளாண்மைக்கும், வேளாளர்க்கும். பன்மடி ஆகுபெயராயிற்று. *"வயல் நிறைக்கும் மென்தொடை வன்கிழார் (மது.98)"* எனக் கிழாரின் தன்மை கூறப்படுகிறது.

கிழாலை *kiḻālai*, பெ.(n.) களர்நிலம் (யாழ்ப்.); hard kind of earth.

[கிழ் →கிழல் → கிழால் →கிழாலை.]

கிழாள் *kiḻāḷ*, பெ.(n.) உரியவள்; proprietress, feminine of kiḻāṉ.

[கிழமை → கிழாள்.]

கிழான்¹ *kiḻāṉ*, பெ.(n.) உரியவன்: owner, proprietor. *"மங்கலக் கிழானென" (திருவிளை. வலைவீசி. 42).*

ம.கிழான்

[கிழவன் → கிழான்.]

கிழான்² *kiḻāṉ*, பெ.(n.) 1. நீரிறைக்குஞ்சாலி; water lift.2. நன்செய் நிலத்து உழவன்; a farmer of wet land.

H. kisān

[கிழான் (நீரிறைக்குஞ்சால்) → கிழான் (உழவன்).]

கிழான் பச்சை *kiḻāṉ-paccai*, பெ.(n.) சந்தன வகை (சிலப். 14: 108); a kind of sandal.

[கிழான் + பச்சை.]

கிழி-தல் *kiḻi-*, 4 செ.கு.வி. (v.i.) 1.பீறுண்டு போதல்: to be torn, rent in shreds; to be scratched. 2.பிளந்து போதல்; to give way, burst out, split. 3.பேர்தல்; to be broken. *"முழந்தாள் கிழிந்தானை"*

(பழமொ.19). 4.தோல்வியுறுதல் ; to be defeated, to meet with repulse. *"வானவர் போர் கிழிந்து புறந்தர" (கம்பரா. முதற்போ.65).* 5. அழிதல்; to perish. *"என்றுங் கிழியாதென் பாட்டு" (தமிழ்நா.53).*

ம. கிளி

[கீழ்→கிழி.]

கிழி–த்தல் *kili-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1.பீறச் செய்தல்; to tear, rend, split, cut, pull to pieces, rip up, lacerate. *"தரியி னங்கடம் மெயிற்றினாற் சிதையக் கிழிந்த பேரிறால்" (கந்தபு. ஆற்று.23).* 2. பேர்த்தல்; to split, break, cleave, uproot. *"நெடுங்கிரி கிழிந்து" (கம்பரா. நிகும். 88).* 3.கீறுதல்; to scratch, as with claws or thorns. காலை முள் கிழித்தது. 4. கோடுவரைதல்; to mark, to line, to indent, to paint, to draw, as a line. நான் கிழித்த கோடு. 5.முடித்தல், நிலை நிறுத்தல்; to accomplish (used in contempt). செய்து கிழித்து விட்டாயோ(உ.வ.). 6. சொல்லாற் கண்டித்தல்; to rebuke. சில வசனங்கள் சொல்லிக் கிழிப்பதும் (கவிகுஞ்.2.). 7.அங்காத்தல்; to open the mouth wide. *"வாயுழுவை கிழித்தது" (திருக்கோ. 72).* 8. தின்னுதல்; to eat, consume. *"குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த வொக்கலொடு" (புறநா. 34.11).*

kir-i, to tear. Comp. *khur,* Sans. to cut, to scratch.

[கீழ்→கிழி.]

கிழி[3] *kili,* பெ.(n.) 1. கீறு (சூடா.) piece. 2. கிழிபட்ட துகில் (திவா.);piece of cloth torn off. 3. சீலையில் எழுதிய சித்திரப்படம்; figure painted on cloth. *"கிழிபிடித்து" (திருக்கோ.74).* 4. வெற்றி பெறுவோர்க்குப் பரிசாகச் சீலையில் முடித்தகாதப் பொதி(திவா.); gold or other valuables tied up in a piece of cloth and exhibited as a prize inviting competition in any work of skill. 5. கதிர்க்கிழி (வின்.); first fruits of grain tied in a bunch and suspended in a temple or dwelling. 6.கீளுடை (வின்); strip of cloth tied round the waist of a mendicant, mendicant's loin cloth.

[கீழ்→கிழி.கீழ்தள் = பிளத்தல், கிழித்தல்.]

கிழிக்கட்டு[1] *kili-k-kattu,* பெ.(n.) துணியிற் கட்டிய பொருள், நிதி முதலியன(வின்.); prize, treasure, sacred, ashes, as tied in a strip of cloth.

[கிழி + கட்டு.]

கிழிக்கட்டு[2]**–தல்** *kilikkattal,* 5 செ.கு.வி.(v.i.) 1. மருந்துகளின் ஆற்றல் இறங்கும்படி எரிப்பதற் காகவோ, கரையும்படி செய்யவோ அல்லது வேறுமுறையாக செய்யவோ துண்டுத் துணியில் தளர்ச்சியாக முடிதல்; extraction of the soluable part of a drug (tied up in a piece of cloth) by causing a liquid solvent to flow slowly through it. 2. மருந்தைத் துணியில் பொட்டலமாகக் கட்டுதல்; tying up of a medicine in a piece cloth and suspending it in a solution before heating or preparing it otherwise. 3 கரைந்து சாரம் இறங்கும்படி மருந்தைப் பொட்டலஞ் செய்து நீரில் தொங்கவிடல், hanging a medicinal bundle in a solution for extracting the essence (சா.அக.).

[கிழி + கட்டு.]

கிழிகட்டு[3]**–தல்** *kili-kattu-,* 5 செ.கு.வி.(v.i.) கிழியில் முடித்த பந்தயப் பொருளைப் பலருங் காணும்படி தூக்கிக் கட்டுதல்; to hang up a prize tied in piece of cloth inviting competitors.

[கிழி+கட்டு.]

கிழிச்சல் *kiliccal,* 5 பெ.(n.) கிழிந்த துணி; torn cloth.

[கிழித்தல்→ கிழிச்சல்]

கிழிச்சீரை *kili-c-cirai,* பெ.(n.) பணம் பொதிந்த சீலை, pouch containing money, purse. *'கிழிச்சீரையிலே பணங்கிடக்க' (ஈடு, 4.7:6).* 2. கிழிந்தது;that which is torn, tattered garment.

ம. கிழிச் சீல.

[கிழி +சீரை. சீலை → சீரை.]

கிழித்திடல் *kiḻi-ttiḍal,* தொ.பெ.(vbl.n.) அறுவை செய்தல், applying knife in the human system, i.e. operating in surgery (சா.அக.).

[கிழி +கிழித்து + இடல்.]

கிழிதம் *kiḻidam,* பெ.(n.) பொற்கிழி (திருக்கோ. 183, உரை); Gold or other valuables tied up in a piece of cloth.

[கிழி → கிழிதம்.]

கிழிதீட்டுதல் *kiḻi-tīṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) படம் வரைதல் (வின்.) to draw or paint a picture.

[கிழி + தீட்டு-.]

கிழிப்பு *kiḻippu,* பெ.(n.) 1. கிழிக்கை; rending, tearing, ripping. 2. பிளப்பு; cleft, as in a mountain. 3. குகை; cavern, cave. *"வரைக்கிழிப் பன்ன" (நற். 154).*

ம. கிழித்த (ஒட்டை, துளை)

[கிழி[2] → கிழிப்பு.]

கிழிப்புக்காயம் *kiḻippu-k-kāyam,* பெ.(n.) கீறுண்ட புண்: lacerated wound.

[கிழிப்பு + காயம்.]

கிழிமருந்து *kiḻimanumtu,* பெ.(n.) சாரம் வாங்கும் பொருட்டு, கிழிக்கட்டிய மருந்து; in alchemy a medicine tied up in a piece of cloth and suspended in a solution for extracting the essence (சா. அக).

[கிழி + மருந்து.]

கிழிமுறி *kiḻi-muṟi,* பெ.(n.) 1. கிழிக்கப்பட்ட ஆவணம்; mutilated or cancelled bond or indenture. 2. கிழித்த துண்டுச்சீலை; piece of torn cloth.

[கிழி + முறி.]

கிழியல் *kiḻiyal,* பெ.(n.) 1.கிழிவு; tear, rentin cloth.2. கிழிந்தது;that which is torn, tattered garment. 3. பயனற்றவன் (வின்.); good - for - nothing fellow, useless sluggard.

[கிழி → கிழியல்.]

கிழியற்சதை *kiḻiyaṟcatai,* பெ.(n.) கிழிந்த தசைப்பாகம், the portion of flesh torn (சா.அக).

[கிழியல் + சதை. தசை → சதை (இலக்கணப் போலி).]

கிழியறு-த்தல் *kiḻi-y-aṟu-,* 4 செ.கு.வி. (v.i.) போட்டியில் வென்று பொற்கிழி பெறுதல்;to win a contest and secure the prize, as cutting the cord with which it is suspended. *"வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்" (திவ். திருப்பல். தனியன்).*

[கிழி + அறு.]

கிழியீடு *kiḻi-y-īḍu,* பெ.(n.) பொன்முடிப்பு; valuables tied up in a piece of cloth. *"கீழ்ச்செய்தவத்தாற் கிழியீடு நேர்பட்டு" (திருவாச. 40,9).*

[கிழி + ஈடு.]

கிழிவு *kiḻivu,* பெ.(n.) 1. கிழிகை; rent, tear. 2. வாய்க்காமை(வின்.); failure, ill - success. 3. கீற்று; a piece (த.சொ. அக.).

[கிழி[1] கிழிவு.]

கிள்ளங்கி *kiḷḷangi,* பெ.(n.) ஒரு செடி வகை; a plant.

க. கிள்ளங்கி

[கிள் → கிள்ளங்கி.]

கிள்ளட்டிகை *kiḷḷaṭṭigai,* பெ.(n.) நகக்கிள்ளு வடிவான பொன்னுருக்களமைந்த கழுத்தணி வகை; ornament for the neck made of thin gold pieces strung together.

[கிள்ளு + அட்டிகை.]

கிள்ளல் *kiḷḷal,* தொ.பெ.(vbl.n.) 1. பசியெடுத்தல்; feeling hungry. பசி வயித்த கிள்ளுது(உ.வ.). 2. சிரங்கு கிள்ளல்; கொப்புளம் மறு இவற்றின் நுனியை கிள்ளி விடுதல்; nipping or pinching of the end of a pimple, pustule boil, etc..

[கிள்ளு → கிள்ளல்.]

கிள்ளாக்கு[1] *kiḷḷākku,* பெ.(n.) 1. நறுக்கிய பனையோலை; nipped piece of palam leaf used for writing. 2.கடவுச்சீட்டு முதலிய, அதிகார ஒலை, piece of palm, leaf given by a person in authority, as a passport, a warrant, a token of authority. *"கெடிகொண்டதலமாறும் மும் மண்டலத் தினுங்கிள்ளாக்குச் செல்ல" (தாயு. சித்தர்.6).*

மறுவ. கிள்ளாக்கை

தெ. கில்லாகு

[கிள்ளு → கிள்ளாக்கு (நறுக்கிய பனை ஓலை).]

கிள்ளாக்கு[2] *kiḷḷākku,* பெ.(n.)பேசிக் கொண்டே ஆடும் ஆட்டம். who continue to say something while playing

[கிள = பேசு. கிள → கிள்ளாக்கு.]

கிள்ளாக்குட்டி[2] *kiḷḷākkuṭṭi,* பெ.(n.)சிறுவரின் விளையட்டுத் தோழன்; playmate.

ம. கிள்ளாக்குட்டி

[கிள்ளாக்கு + குட்டி.]

கிள்ளாடி *kiḷḷāḍi,* பெ.(n.) 1. மரப்பாவை அல்லது தோற்பாவைகளை இயக்கும் பாவைக் கூத்தன்; a talented person skilled in performing puppet show. 2. ஏய்ப்பவன்; a cheat.

மறுவ. கில்லாடி, கிலாடி.

[கிள்ளை - மரப்பாவை. கிள்ளை + ஆடி - கிள்ளையாடி → கிள்ளாடி.]

கிள்ளாப்பிறாண்டு[1] *kiḷḷā-p-piṟāṇḍu,* பெ.(n.) ஆர்வக் குறைவோடு அளவுக்குக் குறைவாக விருந்திடுதல் (யாழ்ப்.); want of proper attention to guests at a feast, meagre distribution of food.

[கிள்ளு(பேசு) + ஆ + பிறாண்டு (உறவு கொண்டாடல்) முகம் கொடுத்துப் பேசாமல் உறவு காட்டும் காட்சி).]

கிள்ளாப் பிறாண்டு[2]பண்ணு-தல் *kiḷḷā-p-piṟāṇḍu-paṇṇu-,* செ.கு.வி.(v.i.) 1. அளவுக்குறை வாக விருந்திடுதல்; to supply too sparingly, as giving only a pinch. 2. விருந்திற் சிறுக உண்ணுதல்;to eat sparingly at a feast from modesty, delicacy. 3. சிறிதளவு அறஞ்செய்தல்; to stint in charity.

[கிள்ளாப்பிறாண்டு + பண்ணு.]

கிள்ளாயம் *kiḷḷāyam,* பெ.(n.) கப்பலின் உட்கூடு; traine of the ship.

து. கிளாய

[கிள்= செறிவு. இறுக்கம். கிள் → கிள்ளாயம்.]

கிள்ளாரம் *kiḷḷāram,* பெ.(n.) வயிறு; stomach.

து. கில்லார

[கிள் → கிள்ளாயம். ஒட்டிய வயிறு.]

கிள்ளி[1] *kiḷḷi,* பெ.(n.) சோழர்க்கு வழங்கிய சிறப்புப் பெயர்; title of some Cōlakings. *"கழல்புனை திருந்தடிக் கடுமான் கிள்ளி" (புறநா. 167).*

ம. கிள்ளி

[கிள் → நெருங்குதல், செறிதல். கிள்ளி = வன்மை செறிந்தவன்.]

கிள்ளி[2] *kiḷḷi,* பெ.(n.) 1. சிறியது; little object. 2.அரிவாள்; sickle.

ம. கிள்ளி

Aust. kiley (Boomerang).

[கிள் → கிள்ளி.]

கிள்ளி[3] *kiḷḷi,* பெ.(n.) பாக்கு மரப்பாளை மட்டையின் இருமுனைகளை மடித்துக்கட்டி குழிந்த ஏனம் போல் செய்த அமைப்பு; a container - a basin like structure made by folding and stitching the two ends of a stitching the two ends of a areca spathe.

து. கிள்ளி

[கிள் (குழித்தல்)→கிள்ளி.]

கிள்ளிக்கட்டு-தல் *kiḷḷi-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ஆலையில் இழை ஒரே சீராக வருவதற்கு அறுந்துபோன இழைகளைக் கிள்ளிக் கட்டுதல்; to join broken threads by pinching them together.

[கிள்ளி + கட்டு.]

கிள்ளிக்காட்டு-தல் *kiḷḷi-k-kāṭṭu,* 5 செ.கு.வி. (v.i) 1. குறிப்புக் காட்டுதல்; to give a hint, signal, as by pinching. 2. சிறிதளவு கொடுத்தல்; to be niggardly in giving food. அவன் திருமணப்பந்தியில் கிள்ளிக் காட்டிப் பரிமாறினான் (உ.வ.).

[கிள்ளு → கிள்ளி + காட்டு.]

கிள்ளிக்காய் *kiḷḷi-k-kāy,* பெ.(n.) நத்தை வகை (G.tn.D.22); wing shell, a mollusc .

[கிள்ளி + காய்.]

கிள்ளிக் குறிச்சி *kiḷḷi-k-kuṟicci,* பெ.(n.) ஒரு ஊரின் பெயர்; a place name.

[கிள்ளி + குறிச்சி.]

கிள்ளிக்கொடு-த்தல் *kiḷḷi-k-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) சிறுகக் கொடுத்தல்: to give a little from a great quantity, as a pinch. அள்ளிக்கொடுக்கச் சொன்னால் கிள்ளிக் கொடுக்கிறாயா? (உ.வ.).

[கிள்ளு → கிள்ளி + கொடு.]

கிள்ளிக்கொடு[1]-த்தல் *kiḷḷi-k-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) தூண்டிவிடுதல்: to stir up, instigate incite. நீ அவனைக் கிள்ளிக் கொடுக்காதே (உ.வ.).

[கிள்ளு → கிள்ளி + கொடு.]

கிள்ளித்தெளி-த்தல் *kiḷḷi-t-teḷi-,* 4.செ.கு.வி. (v.i.) சிறிது கொடுத்தல்; to give a small quantity, as a pinch. அவள் கிள்ளித் தெளிக்க மாட்டாள்.

[கிள்ளு → கிள்ளு + தெளி.]

கிள்ளிநடுதல் *kiḷḷi-naḍu-,* பெ.(n.) நடவு முறைகளில் ஒன்று; one made of transplanting crop.

[கிள்ளி + நடு.]

கிள்ளிப்போடு *kiḷḷi-p-pōḍu-,* 4 செ.கு.வி.(v.i.) நோய் தோன்றும் போதே குணப்படுத்துதல்; curing a disease in its infant stage; a nipping off in the bud as it were. முளையிலேயே கிள்ளியெறி.

[கிள்ளி + போடு.]

கிள்ளியான் *kiḷḷiyāṉ,* பெ.(n.) வலிய மருந்து; a big bird of preyfalion. பிள்ளையையுங் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறாள் (உ.வ.).

ம. கிள்ளியான

[கிள்ளி + ஆன்.]

கிள்ளிவிடு-தல் *kiḷḷi-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) தூண்டிவிடுதல்; to stir up, incite, instigate. பிள்ளையையுங் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறாள் (உ.வ.).

[கிள்ளு → கிள்ளி + விடு.]

கிள்ளு[1]-தல் *kiḷḷu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. நகத்தா லெடுத்தல்; to pinch with the finger and thumb with the nails, to pluck, nip, piece off, as a leaf. *"கற்கிள்ளிக் கையிழந் தற்று" (நாலடி. 336).* 2. தோண்டுதல்; to dig out, scoop. *"கிள்ள வெழு கின்ற புனல்" (கம்பரா.வரைக்.23).* 3. அழித்தல்; to destroy, as by nipping off the head. *"பொல்லா வரக்கனைக் கிள்ளிக் களைந்தானை" (திவ். திருப்பா.13).* 4. சிறிதளவு எடுத்தல் (வின்.); to hold, carry, as with the beak, with the fingers and thumb, to take up a little, a pinch.

ம. கிள்ளு.தெ. கில்லு;க. கில்லு; படூ. சிள்ளு

[கிள் → கிள்ளு.]

கிள்ளு[2] *kiḷḷu,* பெ.(n.) 1. கிள்ளுகை; pinching, nipping. *"கீள்கொடு நகங்கொடுகிள்ளுமொன்ற"*

(கந்தபு. சூரணமைச். 42). 2. கிள்ளப்பட்டது; that which is nipped off, as a little piece of betel leaf or tobacco. புகையிலையில் ஒரு கிள்ளுக் கொடு (உ.வ.). 3. கண்பீளை, அழுக்கு; dirt of the eye.

ம. கிள்ளு

[கிள் → கிள்ளு.]

கிள்ளு[3]–தல் *killu-,* 1 செ.கு.வி.(v.i.) துணித்தல்; to cut. *"பங்கயாசனனொருதலை கிள்ளியே" (கந்தபு. கடவுள்.9)* (த.மொ.அக.).

[குல் → கில் → கிள் → கிள்ளு.]

கிள்ளுக்கீரை *killu-k-kīrai,* பெ.(n.) 1. கிள்ளி யெடுக்கப்படும் கீரைவகை; feeble - rooted greens, as easily plucked. 2. எளிமையானவள்–வன்–து; anything easily handled, often used in reference to a weak man. அவன் உனக்கு கிள்ளுக் கீரையோ?.

[கிள்ளு + கீரை.]

கிள்ளுக்கீரைபண்ணு–தல் *killu-k-kīrai-paṇṇu-,* 5 செ.குன்றாவி.(v.t.) தாழ்மைப்படுத்துதல், இழிவு செய்தல்; to be little, treat insultingly.

[கிள்ளு + கீரை + பண்ணு.]

கிள்ளுங்கிழியுமாய் *killuṅ-kiḻiyumāy,* கு.வி.எ. (adv.) பயனற்றதாய் (வின்.); utterly useless, as shreds of anything. இந்த வேலை கிள்ளுங் கிழியுமாய்ப் போகக்கடவது.

[கிள்ளு + கிழியுமாய்.]

கிள்ளுவடை *killu-vaḍai,* பெ.(n.) **காக்காய் வடை** பார்க்க; see *kākkāy-vaḍai*

[கிள்ளு + வடை.]

கிள்ளை[1] *kiḷḷai,* பெ.(n.) 1. கிளி; parrot. *"கிள்ளை வளைவா யுகின்" (சீவக.2439).* 2. கருங்கிளி (திவா.); a dark species of parrot.

[கிள் → கிள்ளை (பேசும் திறம் கொண்ட பறவை, கிளி).]

கிள்ளை[2] *kiḷḷai,* பெ.(n.) குதிரை (திவா.); horse.

[கிள் = கிளர்ச்சி, எழுச்சி, விரைவு. கிள் → கிள்ளை.]

கிள்ளை[3] *kiḷḷai,* பெ.(n.) சாதிபத்திரி என்னும் மூலிகை (மலைய.); mace.

[கிள் → கிள்ளை.]

கிள்ளைச்சாதம் *kiḷḷai-c-cādam,* பெ.(n.) கிளிக்குஞ்சு; young parrot. *"செஞ்சொற் றேனினைத் தஞ்செவிப் படுத்திய கிள்ளைச் சாதமே" (இரகு.குறை.31).*

[கிள்ளை + சாதம்.]

கிள்ளைமொழி *kiḷḷai-moḻi,* பெ.(n.) கிளிப்பேச்சு; the word uttered by a parrot. 2. இனிமையான குரல் வளம் கொண்ட பெண்; a woman having sweet words, a beautiful woman.

ம. கிளிமொழி

[கிள்ளை + மொழி]

கிள்ளையன் *kiḷḷaiyaṉ,* பெ.(n.) ஆண்பால் இயற்பெயர்; name of male person.

க. கிள்ளைய்ய

[கிள்ளி + ஐயன் – கிள்ளியையன் →கிள்ளையன்.]

கிள்ளைவிடுதூது *kiḷḷai-viḍu-tūdu,* பெ.(n.) தலைவி தன் காதலுக்கு உரிய தலைவனிடத்துக் கிளியைத் தூது விடுத்தலைக் கூறும் சிற்றி லக்கியம்; poem in which the heroine languishing under love sends a parrot as a messenger to her lover.

[கிள்ளை + விடு + தூது.]

கிள–த்தல் *kiḷa-,* 3 செ.கு.வி.(v.t.) 1. ஒன்றைத் தெளிவாய்க் குறிப்பிட்டுச் சொல்லுதல்; to express clearly. *"இயற்கைப் பொருளை பிற்றெனக் கிளத்தல்" (நன்.404).* 2. விதந்து கூறுதல் (சி.போ.4,1,பக்.85,சிற்.); to make special mention of, to state specifically.

Chin. këng.

[கிள்→ கிள = பிள, வாய்திற, பேசு.]

கிளக்கல் *kiḷakkal,* தொ.பெ.(vbl.n.) 1. எழுப்பல்; to raise up some heavy thing as with a lever. 2. சொல்லுதல்; to express their ideas.

[கிள் → கிள → கிளக்கல்.]

கிளத்தி *kiḷatti,* பெ.(n.) 1. சொல்லி எனப் பொருள் படும் ஒரு வினையெச்சம்; kind of adverb. *"நன்னயங் கிளத்தி" (கந்தபு.திருநகர.46).* 2. நாமகள்; goddess of learning and art (த.மொ.அக.).

[கிள் → கிள → கிளத்தி.]

கிளத்து—தல் *kiḷattu-,* 5 செ.குன்றாவி.(v.t.) புலப்படக் கூறுதல்; to express clearly. *"குல முறைக் கிளத்துப்படலம்" (கம்பரா.).*

Fin. kiltā; **Es.** kita; **Kuwi.** gita(word); **Mong.** gedeg, getel(tosay); **Jap.** kito.

[கிள் → கிள → கிளக்கல்.]

கிளந்தேத்து—தல் *kiḷandēttal-,* 8 செ.கு.வி.(v.i.) மிகப் புகழ்தல்; to extol praise.

[கிளந்து + ஏத்து.]

கிளப்பம் *kiḷappam,* பெ.(n.) 1. கிளர்ச்சி; rising, heaving, swelling. *"திரைக் கிளப்பம்போலே" (திவ்.திருவாய்.5.9:3,பன்னீ.).* 2. வளர்ச்சி (த.மொ. அக.); to develop.

[கிளம்பு → கிளப்பம்.]

கிளப்பு[1]—தல் *kiḷappu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. எழுப்புதல்; to raise up some heavy thing, as with a lever. கல்லைக் கிளப்பினான். 2. சுவர் முதலியன எழச்செய்தல்; to raise, as a wall, to erect, cause to grow high. 3. நீக்குதல்; to turn out, discharge, dismiss. அவனை வேலையை விட்டுக் கிளப்பினான். 4. உண்டாக்குதல்; to excite, as a disturbance, to induce, as fever, to bring about. இந்தத் தூற்றல் சூட்டைக் கிளப்பிவிடும். 5. தூண்டிவிடுதல்; to rouse, animate. கிளப்பிவிட்டு வேடிக்கை பார்க்கிறான். 6. மிதத்தல் (த.மொ.அக.); to float.

[கிளம்பு → கிளப்பு.]

கிளப்பு[2] *kiḷappu,* பெ.(n.) 1. எழுப்புகை; raising, rousing.

[கிளம்பு → கிளப்பு.]

கிளப்பு[3] *kiḷappu,* பெ.(n.) சொல்லுகை; speech, utterance. *"கிந்தரர் பாடஞ் சீரான் கிளப்பருஞ் சிறையில் வைத்த" (பாரத.இராசசூய.87).*

[கிள → கிளப்பு.]

கிளப்புறம் *kiḷa-p-puṟam,* பெ.(n.) காற்றுப்படாத பக்கம்; leeward.

[கீழ் + புறம் – கீழ்ப்புறம் → கிளப்புறம்.]

கிளம்பல் *kiḷambal,* பெ.(n.) 1. எழுகை; rising. 2.பதிவுப் புத்தகத்தில் புதிதாகச் சேர்ந்த நிலங்களின் அட்டவணை; register of newly improved pieces of land. 3. அதிகரித்தல்;increasing. 4. உண்டாதல்; emerging. 5. எழும்பல்;rising. 6. புறப்படல்; starting. 7. வளர்தல்;growing.

[கிளம்பு → கிளம்பல்.]

கிளம்பிவிடு—தல் *kiḷambi-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. மனமின்றி ஒத்துக்கொள்ளுதல்; to be persuaded with difficulty, to agree reluctantly. 2. குடி போதல்; to leave or desert a house or village.

[கிளம்பு → கிளம்பி + விடு.]

கிளம்பினவாள் *kiḷambiṉa-v-āḷ,* பெ.(n.) அகவையால் வளர்ச்சியுள்ளவன் (வின்.); tall grown-up person.

[கிளம்பு → கிளம்பின + ஆள்.]

கிளம்பினவேலை *kiḷambiṉa-vēlai,* பெ.(n.) கட்டத்தில் எழும்பிநிற்கும் ஓவியவேலை (வின்.); bas-relief, work with figures somewhat raised.

[கிளம்பு → கிளம்பின + வேலை.]

கிளம்பு–தல் *kiḷambu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. மேலெழுதல்; to rise in air or water ascend. இந்தச் செடி இப்போதுதான் கிளம்புகிறது. 2. தோன்றுதல்; to emerge from obsecurity, to be elevated. அவனுடைய பேர் கிளம்பிற்று. 3. நில மட்டத்திற்கு மேல் வருதல்; to rise above the surface. இந்தக்கட்டடம் நாற்புறமும் கிளம்பிவிட்டது. 4. மூண்டெழுதல்; to be stirred, agitated. அவன்மீது பகை கிளம்பிற்று. 5. உண்டாதல்; to crop up, break out. ஊரில் போய்கிளம்பியிருக்கிறது. 6. புறப்படுதல்; to set out, start. அந்தப் படை கிளம்பிவிட்டது. 7. அதிகப்படுதல்; to increase. விலை கிளம்பவில்லை. 8. எடுபடுதல்; to become loose, detached, as a brick that still adheres.பழங்கட்டடத்தில் செங்கல் கிளம்பிவிடும்.

ம. கிளம்பு; **க.** கெரளு; **தெ.** கொரலு.

Aust. ngowalle.

[கிள் → கிள→கிளம்பு.]

கிளர்[1]–தல் *kiḷar-,* 2 செ.கு.வி.(v.i.) 1. மேலெழுதல்; to rise, ascend. *"ஆழி கிளர்ந்ததோ" (கம்பரா. மிதிலைக்.67).* 2. மேன்மேல் வளர்தல்; to spring up, grow higher, and higher, shoot up. *"கொள்ளென்று கிளர்ந்தெழுந்த" (திவ்.திருவாய். 4.9.4).* 3. மிகுதல்; to be intense, to increase. *"பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்" (சிலப்.பதி.4).* 4. விளங்குதல்; to shine, to be conspicuous, resplendent. *"மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை" (திருவாச.8:18).* 5. சிறத்தல் (வின்.); to be exalted, great. 6. உள்ளக்கிளர்ச்சி கொள்ளுதல்; to become spirited, fealous. *"வீடு செய்யும் கிளர்வார்க்கே" (திவ்.திருவாய்.2.9.11).* 7. சினத்தல்; to be roused, infuriated, to become angry. *"காலன் கிளர்ந்தாலும் போல்வார்" (பு.வெ.2:2).* 8. இறுமாப்புக் கொள்ளுதல் (வின்.); to become vain, conceited.

ம. கிளருக; **க.** கெளர்,கொளு; **தெ.** கொலு.

Skt. kaḍārā, karāla (wide open, gaping with projecting teeth); pali. kaḷāra.

[கிள் → கிள → கிளர்.]

கிளர்[2] *kiḷar,* பெ.(n.) ஒளி (பிங்.); light, brightness. *"கிளர்மகுட வயவேந்தர் நாண்க ளெல்லாங் கீழாக" (பாரத.திரௌபதி.நம).* 2. பூந்தாது (பிங்.); farina, pollen.

Fin. kieli; **Es.** keel; **Mansi.** kela; **Mordvin.** kel; **Hanti.** kol; **Mong.** kela; **Jap.** kotoba; **Q.** qaiu; **Aust.** klurtin (shine).

[கிள் → கிள → கிளர்.]

கிளர்ச்சி *kiḷarcci,* பெ.(n.) 1. எழும்புகை; rising, ascent. 2. உள்ளக்கிளர்ச்சி; enthusiasm, zeal. அவன் பேச்சைக் கேட்டபோது மனத்திற் கிளர்ச்சி யுண்டாயிற்று. 3. வளர்ச்சி; growth, increase, prosperity. அவனுக்குக் கிளர்ச்சியான காலம் (உ.வ.). 4. செழிப்பு; fertility, luxuriance. *"தண்கா வல்லையிற் கிளர்ச்சி யெய்தி" (கந்தபு.இந்திர னருச்.12).* 5.சினம்; anger. கடுஞ்செய்கையைக் கண்டு அவனுக்குக் கிளர்ச்சியுண்டானது. 6. கலவரம்; agitation. மொழித்திணிப்பு கிளர்ச்சியை உண்டாக்கும் (உ.வ.). 7. இறுமாப்பு (வின்.); conceit, vanity.

ம. கிளர்ச்ச

[கிளர் →கிளர்ச்சி.]

கிளர்ச்சியூட்டு–தல் *kiḷarcci-y-ūṭṭu,* 6 செ.குன்றாவி. (v.t.) கிளர்ச்சியடையச் செய்தல்; to intoxicate, enthuse.

[கிளர்ச்சி + ஊட்டு]

கிளர்த்தி *kiḷartti,* பெ.(n.) கொந்தளித்தெழுகை; rising in tumult. *'சந்நிதாநத்தாலே கிளர்த்தியை யுடைத்தாயி ருக்கை (ஈடு.3,6:3).*

[கிளர் →கிளர்த்தி.]

கிளர்த்து–தல் *kiḷarttu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. எழுப்புதல்; to raise up, rouse. 2. நிறைத்தல்; to fill, satiate.

ம. கிளர்த்துக

[கிளர்→ கிளர்த்து.]

கிளர்வரி *kiļar-vari,* பெ.(n.) நடுநின்றார் மாறுபட்ட இருவருக்குஞ் சந்துசொல்லக் கேட்டு நிற்பதாக நடிக்கும் நடிப்பு (சிலப். 8:101); posture assumed by an offended lover or love, when an intermediary tries to conciliate.

[கிளர் + வரி]

கிளர்வி *kiļarvi,* பெ.(n.) கதவு (பிங்.); door.

[கிள → கிளர் → கிளர்வி.]

கிளராலயம் *kiļar-ālayam,* பெ.(n.) ஒரு தமிழ்க் கணித நூல்; name of a mathematical work in Tamil (கணக்கதி. பாயி.).

[கிளரல் (மேல்நிலை) + இயம் – கிளரலியம் → கிளரலியம் → கிளராலயம் (கொ.வ.)]

கிளவரி *kiļavari,* பெ.(n.) தண்ணீர்விட்டான் கிழங்கு (மலை.); common climber with many thick fleshy roots.

[கீழ் → கிழ → கிள + வரி]

கிளவி *kiļavi,* பெ.(n.) 1. சொல்; word, term. கிளவியாக்கம் (தொல்.சொல்.). 2. பேச்சு; speech. *"அந்தீங் கிளவி" (ஐங்குறு.490).* 3. மொழி; language. *"பதினெண் கிளவி" (கல்லா.38:3).* 4. அகப்பொருட்டுறை; theme, subject, section in amatory compositions. *"களவிற் குரிய கிளவித் தொகை" (நம்பியகப்.123).* 5. பொருள்; meaning. *"பால்மயக் குற்ற வையக் கிளவி" (தொல்.சேனா.கிளவி.23).*

[கிள் → கிள → கிளவி.]

கிளவிக்கொத்து *kiļavi-k-kottu,* பெ.(n.) கோவை என்னும் சிற்றிலக்கியத்தின் பலதுறை கொண்ட ஒரு பிரிவு; division of a *kōvai* comprising many themes. *"இவ்விருபத்தைந்தும் இந் நூற்குக் கிளவிக்கொத்து எனப்படும் அதிகாரங்களாம்" (திருக்கோ. உரை, அவ.).*

மறுவ. கிளவித்தொகை

[கிளவி + கொத்து]

கிளவிக்கோவை *kiļavi-k-kōvai,* பெ.(n.) அகப் பொருட்கோவை; amatory poem, comprising many themes. கிளவிக்கோவையின் எடுத்துக் கோடற்கண் காட்சி முதலாயின சொல்லுதல் வனப்புடைமையின் (திருக்கோ.14,உரை).

[கிளவி + கோவை.]

கிளவித்தலைவன் *kiļavi-t-taļaivaŋ,* பெ.(n.) அகப்பொருட்டலைவன்; (கலித்.68,உரை); hero, chief male character in a love-poem.

[கிளவி + தலைவன்.]

கிளவித்தலைவி *kiļavi-t-taļaivi,* பெ.(n.) அகப் பொருட்டலைவி; heroine, chief female character in a love-poem.

[கிளவி + தலைவி.]

கிளவித்தொகை *kiļavi-t-togai,* பெ.(n.) சொற்களின் கூட்டம்; cluster of words. *"களவிற்குரிய கிளவித் தொகையே" (அகப்.களவி.).*

[கிளவி + தொகை.]

கிளவியாக்கம் *kiļavi-y-ākkam,* பெ.(n.) 1. தொல் காப்பியச் சொல்லதிகாரத்தில் வழுவற மொழிகளையமைத்துக் கொள்ளும் முறைகளைக் கூறும் முதற்பகுதி; the first chapter in collatig aram of Tolkappiyam which deals with morhology and syntax. 2. சொற்கள் பொருள்கள் மேல் ஆமாறு உணர்த்துதல்; the chapter explaining how words express meaning in contexts.

[கிளவி + ஆக்கம்.]

கிளறிப்பார்-த்தல் *kiļari-p-pār-,* 4 செ.கு.வி.(v.i.) 1. ஆய்ந்து தெரிதல்; to search by digging up; to ran-

sack, rummage. எவ்வளவு கிளறிப் பார்த்தும் உண்மையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. 2. கிண்டிப்பார்த்தல்; to probe, as a wound; to pry into, as a person's affairs. 3. தூண்டிவிடுதல்; to incite, stir up. பகையைக் குறைக்காமல் கிளறிப் பார்ப்பது முறையா?

[கிளறு + பார் – கிளறிப்பார்–.]

கிளறிவிடு—தல் *kiḷaṟi-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. கிண்டிவிடுதல்; to turn up, rake up, agitate. 2. தூண்டிவிடுதல்; to stir up, incite. 3. மறைபொருளை வெளியாக்குதல் (வின்.); to disclose, expose, reveal a secret.

[கிளறி + விடு – கிளறிவிடு.]

கிளறு—தல் *kiḷaṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கிண்டுதல்; to poke, ransack, dig up. *"ஏனமோ டன்னமாய்க் கிளறியும் பறந்தும்" (தேவா.101:9).* 2. கலக்குதல்; to disturb, derange, confuse. 3. துழாவுதல்; to stir, as with a ladle. மாட்டுத் தொட்டியைக் கிளறினான். 4. துருவியாராய்தல்; to probe, search, pry into. 5. வெளியாக்குதல் (வின்.); to disclose, expose.

ம. கிளறுக; க.கெளர்; தெ.கெலகு.

[கிள் → கிள → கிளறு.]

கிளாச்சங்கு *kiḷāccaṅgu,* பெ.(n.) சங்குவகை (மீனவ.); a kind of conch-shell.

மறுவ. குழாய்ச்சங்கு

[குழாய் + சங்கு – குழாய்ச்சங்கு → கிளாச்சங்கு.]

சங்குவகைகளில், மிகவும் சிறிய குழாய்ச் சங்கு எனும் சொல்லின் திரிபு.

கிளாத்தி *kiḷātti,* பெ.(n.) கடல் மீன் வகை, கெளிறு; sea fish, silvery (மீனவ.).

[கெளிறு → கெளித்தி → கிளாத்தி (கொ.வ.).]

கிளாய் *kiḷāy,* பெ.(n.) எள்ளுக்காய்க் கோது; pods or stalks of sesamum left after threshing

[கிள் → கிளாய்.]

கிளி *kiḷi,* பெ.(n.) 1. பறவை வகை; parrot, parakeet. *"கிளிமரீஇயவியன்புனத்து" (புறநா.138,9).* 2.கிளி வகை(m.m.); rose-ringed parakeet. 3. வெட்டுக் கிளி (வின்.); grass-hopper, locust. 4. கிளிமீன் என்னும் கடல்மீன் வகை; a sea fish. 5. கிளித்தட்டு விளையாட்டில் தன் சதுரக் கோட்டெல்லையைச் சுற்றிக் கொண்டு மறிக்கப்பட்ட ஆட்டக்கா ரைத் தொட முயல்பவன்; one who goes round patrolling the squares in the game of *kiḷi-t-taṭṭu.*

தெ.சிலுக; ம.கிளி; க.,து. கிணி, கிளி; குட. கிணி; பர்.கின்; skt. kira; **Aust.** kuyulpi.

[கிள் → கிள → கிளி (பேசுவது).]



கிளி

கிளிக்கத்தி *kiḷi-k-katti,* பெ.(n.) கத்திவகை; a kind of knife, billhook.

மறுவ. புல்லரிவாள்

ம. கிளிக்கத்தி

[கிளி + கத்தி.]

கிளிக்கூடு *kiḷi-k-kūḍu,* பெ.(n.) 1. கிளியை அடைத்து வளர்க்கும் கூடு; parrot cage. 2. குற்றவாளிகளை அடைத்துத் துன்புறுத்தும் கூடு; cage with spikes pointed inward for torturing criminals.

கிளிவகைகள்

தவிட்டுக் கிளி
கொண்டைக் கிளி
கழுகுக் கிளி
இமயக் கிளி
பச்சைக் கிளி
மரக்கிளி
கூகைக் கிளி
மஞ்சள் கிளி
ஊமன் கிளி
குட்டைக் கிளி

3. முறைமன்றத்தில் சான்று கூறுவோர் அல்லது குற்றவாளிகள் நிற்க அமைக்கப்படும் கூண்டு; witness-barer, prisoners' bar. 4.கோயிலைப் பிரித்துத் திருப்பணி செய்யும் பொழுது மூலத்திரு மேனிகளுக்குக் காப்பாகச் சுற்றியிடும் மரக்கூடு; temporary wooden enclosure for *mūlavar* or stationary idol, when the temple is under repair.

ம.கிளிக்கூடு

[கிளி + கூடு.]

கிளிக்கூண்டுக்காளவாய் *kiḷi-k-kūṇḍu-k-kāḷavāy,* பெ.(n.) 1. இலக்கம் கல் சூளை போடத்தக்க கிளிக்கூண்டு வடிவத்திலமைந்த பெரிய காளவாய்; a brick kiln shaped like a parrot cage in wich about 1 lakh bricks can be fired.

[கிளி + கூண்டு + காளவாய்.]

கிளிக்கொம்பன் *kiḷi-k-kombaṉ,* பெ.(n.) வளை கொம்புள்ள மாடு; ox with short horns turned downwards.

[கிளி + கொம்பன்.]

கிளிக்கொம்பு *kiḷi-k-kombu,* பெ.(n.) கிளிமூக்குப் போல வளைந்த விலங்குக் கொம்பு (வின்.); short and crooked horn like a parrot's beak.

க.கிளிகோலு

[கிளி + கொம்பு.]

கிளிகடிகருவி *kiḷi-kaḍi-karuvi,* பெ.(n.) தட்டை, கிளி யோட்டுங் கருவி; contrivance to scare away parakeets (புறநா.49,உரை).

மறுவ. தட்டை, கிளிகடிகோல்.

[கிளி + கடி + கருவி. கடிதல் = விரட்டுதல்]

"மூங்கிலைக் கண்ணுக்குக்கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசையுண்டாக ஒன்றிலே தட்டுவதொரு கருவி" (குறிஞ்சிப். 48). தென்னை மட்டையிலும் இக்கருவி செய்வதுண்டு.

கிளிகடிகோல் *kiḷi-kaḍi-kōl,* பெ.(n.) கிளியோட்டுங் கருவியுளொன்று; a kind of rod to scare away parrots (உரி.நி.).

மறுவ. தட்டை

[கிளி + கடி + கோல்.]

கிளிகொஞ்சு-தல் *kiḷi-koñju-,* 5 செ.கு.வி.(v.i.) அழகியதாதல்; to be beautiful, charmings, as the talk of a parrot. வீட்டு கிளி கொஞ்சுகிறது (உ.வ.).

[கிளி + கொஞ்சு.]

கிளிச்சல் *kiliccal,* பெ.(n.) கடல்மீன் வகை; a sea-fish, bluish-green.

ம.கிளித்தி

[கிளிஞ்சில் → கிளிஞ்சல் → கிளிச்சல்.]

கிளிச்சன் *kiḷiccaṉ,* பெ.(n.) வளி முறையிற் செய்த தங்கச் செம்பு என்னும் 108 மாற்றுப் பொன்; (in alchemy) a refined concentrated gold of 108 *'māṟṟu'* equivalent to about 11x24 or 264 carats lie, about 11 times the value of pure gold available in the market (10 *māṟṟu* 24 carat) (சா.அக.).

[கிளிச்சிறை → கிளிச்சன் (கிளிச்சிறகின் நிறம்).]

கிளிச்சிறை *kiḷi-c-ciṟai,* பெ.(n.) நான்குவகைப் பொன்னுள் கிளிச்சிறகு போன்ற நிறமுள்ள பொன்வகை (திருமுருகு.18,உரை.); gold resembling the parrot's wing in colour, one of four kinds of gold (q.v.) (சிலப்.14:201.).

மறுவ. தங்கச்செம்பு, கிளிச்சன்.

[கிளி + சிறை.]

ஊதை (வாத) முறையால் தமிழ்ச்சித்தர்கள் செயற்கையாகச் செய்த உயர் மாற்றுப் பொன்களான ஆடகம், கிளிச்சிறை, நாவல் (சாம்பூநதம்) புல்லன் (சாதரூபம்) என்பவற்றுள் கிளிச்சிறை 108 மாற்று கொண்டது; முப்பு போன்றவற்றோடு கருப்புக்கையாந்த

கரை சாறு சேர்த்துக் காய்ச்சினால் கிடைப்பது கிளிச்சிறைப் பொன். பொன்முசுட்டைசாறு சேர்ப்பின் 500 மாற்றுகொண்ட ஆடகப்பொன் கிடைக்கும் என்பர். நாவல் பொன் (சாம்பூநதம்) 1008 மாற்று கொண்டது எனவும் புல்லன் (சாதரூபம் - புல் நிறம்) 708 மாற்று கொண்டது எனவும் கூறுவதுண்டு.

கிளிசெயநீர் *kiliśeyanīr,* பெ.(n.) பூநீருப்புச் செயநீர்; a pungent liquid or hydrate prepared by exposing to night's dew a solution of efflorescent salt, collected from the surface of the soil of fuller's earth.

[கிளி + செயநீர்.]

இது காரத் தன்மை மிகுந்த உவர் மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட பூநீருப்பை இரவு முழுவதும் பனியில் திறந்து வைப்பதால் பெறப்படும் - ஒரு தனிமத்துடன் சேர்ந்த நீர் (சா.அக.).

கிளிஞ்சா *kiliñjā,* பெ.(n.) மீன்வகை (கட.பர. க.சொ.அ.); a kind of fish.



கிளிஞ்சா

கிளிஞ்சான் *kiliñcaṉ,* பெ.(n.) ***கிளிமீன்*** பார்க்க; see *kilimīṉ.*

[கிளிஞ்சல் → கிளிஞ்சான்.]

கிளிஞ்சில் *kiliñjil,* பெ.(n.) கடல்வாழ் உயிரி வகை (தொல்.பொருள். 584.உரை); bivalve mussel or shell, oyster-shell. *"மீன்நெய் அட்டிக் கிளிஞ்சில் பொத்திய சிறுதீ விளக்கில்"* (நற்.175:3).

ம. கிளிஞ்சிலு

[கிள் → கிளி → கிளிஞ்சில்.]

கிளிஞ்சிற்சிப்பி *kiliñjirċippi,* பெ.(n.) கிளிஞ் சலோடு; bivalve shell (சா.அக.).

[கிளிஞ்சில் + சிப்பி. இரு மடிப்பிதழ்களைக் கொண்ட ஒடு.]

கிளிஞ்சிற்சுண்ணம் *kiliñjir-cuṉṉam,* பெ.(n.) ***கிளிஞ்சிற் சுண்ணாம்பு*** பார்க்க; see *kiliñjir-cuṉṉāmbu.*

[கிளிஞ்சில் + சுண்ணாம்பு.]

கிளிஞ்சிற்சுண்ணாம்பு *kiliñjir-cuṉṉāmbu,* பெ.(n.) கிளிஞ்சிலை நீற்றியெடுக்கும் நீறு; shell lime made from sea-shells.

மறுவ. கிளிஞ்சிற்சுண்ணம்

[கிளிஞ்சல் + சுண்ணாம்பு.]

கிளித்தட்டு *kili-t-taṭṭu,* பெ.(n.) நிலத்திற் சதுரக்கோடு கீறி ஆடும் ஒரு வகைச் சிறார் விளையாட்டு; the game of *uppu-k-kōḍu.*

ம. கிளித்தட்டு

மறுவ. உப்புக்கோடு, கிளியந்தட்டு.

[கிளி + தட்டு.]

கிளிதம் *kilitam,* பெ.(n.) உண்ணுஞ்சோறு; rice food (சா.அக.).

[கிளி → கிளிதம். கிண்டிய சோற்றுத் திரள்.]

கிளிதி *kiliti,* பெ.(n.) கிலுகிலுப்பை, பேய்மிரட்டி; rattle wort, a plant (சா.அக.).

[கிள் → கிளிதி (கிள் - ஒலிக்குறிப்பு).இது காய்ந்தால் உள்ளிருக்கும் விதைகள் ஒலிக்கும்.]

கிளிநாவல் *kiḷināval*, பெ.(n.) கழற்சி; parrot jamboo (சா.அக.).

[கிளி + நாவல்.]

கிளிப்பட்டை *kiḷippaṭṭai*, பெ.(n.) ***கிளியூறற்பட்டை*** பார்க்க; see *kiḷi-y-ūṟaṟpaṭṭai*.

[கிளிபட்டை → கிளிப்பட்டை.]

கிளிப்பாட்டு *kiḷi-p-pāṭṭu*, பெ.(n.) 1. கிளியின் பாட்டு; song of a parrot (தொல்.பொ.559, உரை.). 2.கிளி பாடியதாகப் பாடப்படும் பாட்டு; song as told by a parrot.

ம. கிளிப்பாட்டு

[கிளி +பாட்டு]

கிளிப்பிள்ளை *kiḷi-p-piḷḷai*, பெ.(n.) 1. இளங்கிளி; young parrot. (தொல்.பொருள்.559, உரை). 2.கிளி; parrot சொன்னதைச் சொல்லுமாங் கிளிப்பிள்ளை (உ.வ.).

[கிளி + பிள்ளை.]

கிளிப்பூச்சி *kiḷi-p-pūcci*, பெ.(n.) சோளப்பூச்சி வகை; a pest that damages the maize crop.

[கிளி + பூச்சி.]

கிளிமீன் *kiḷi-mīṉ*, பெ.(n.) கடல்மீன்வகை; a sea fish green.

ம. கிளிமீன்

[கிளி + மீன்.]

கிளிமுருக்கு *kiḷimurukku*, பெ.(n.) முள்முருக்கு; thorny corel tree (சா.அக.).

ம. கலியாண முருக்கு

[கிளி + முருக்கு. கிளி = கிளிமூக்கு, முள்.]

கிளிமூக்கன் *kiḷi-mūkkaṉ*, பெ.(n.) 1. வளைந்த மூக்குடையவன் (வின்.); man with an aquiline nose. 2. கற்றாழை (மலை.); aloe. 3. மாங்காய் வகை (த.வ.); a kind of mango.

[கிளி + மூக்கன்.]

கிளிமூக்கு *kiḷi-mūkku*, பெ.(n.) 1. கிளிமூக்கைப் போன்றது; anything resembling parrot's beak. 2. சுவடிகளில் ஏடு விழாமல் தடுக்க வைக்கும் ஒலையீர்க்குத் துண்டு; piece of ōla-rib used to keep in the leaves of a palm leaf manuscript when strung together.

ம. கிளி மூக்கு; **க.** கிணிமூகு.

[கிளி + மூக்கு.]

கிளிமூக்குக்கிழங்கு *kiḷi-mūkku-k-kiḻaṅgu*, பெ.(n.) ஆகாய கருடன் கிழங்கு (வின்.); root of bryomia epegea.

க. கிணிமூகின கட்டெ

[கிளி + மூக்கு + கிழங்கு.]

கிளிமூக்குமரம் *kiḷi-mūkku-maram*, பெ.(n.) ஒரு வகை மரம்; parrot's bill of New Zealand, parrots beak cilanthus punicans (சா.அக.).

[கிளி + மூக்கு + மரம்.]

கிளிமூக்குமா *kiḷi-mūkku-mā*, பெ.(n.) கிளிமூக்குப் போல் நுனி வளைந்த காயையுடைய மா வகை; mango, whose fruit is of the shape of a parrot's beak.

க. கிணிமாவு

[கிளி + மூக்கு + மா.]

கிளிமூக்கு வெற்றிலை *kiḷi-mūkku-veṟṟilai*, பெ.(n.) கிளிமூக்கைப்போல் காம்பு வளைந்த ஒரு வகை வெற்றிலை; a species of betel the pedicle of which is bent like the beak of a parrot (சா.அக.).

[கிளி + மூக்கு + வெற்றிலை.]

கிளிமூக்கெழுத்தாணி *kiḷi-mūkkeḻu-t-tāṇi*, பெ.(n.) தலைப்பக்கம் கிளிமூக்குப் போன்ற கத்தியையுடைய எழுத்தாணி வகை; a style with a hooked knife at the top for cutting olas.

[கிளி + மூக்கு + எழுத்தாணி.]

கிளியட்டிகை *kiḷi-y-aṭṭigai*, பெ.(n.) பொற்கிளி யுருக்கள் அமையச் செய்த அட்டிகையணி; necklace of gold threads ornamented with golden parrots.

[கிளி + அட்டிகை.]

கிளியந்தட்டு *kiḷiyan-taṭṭu*, பெ.(n.) ***கிளித்தட்டு*** (G.TN.D.105) பார்க்க; see *kiḷi-t-taṭṭu*.

[கிளி + அம் + தட்டு.]

கிளியீடு *kiḷi-y-īḍu*, பெ.(n.) கிளியினாற் பொந்துகளில் சேமித்து வைக்கப்பட்ட கதிர்கள்; grain stocked by parrots in the hollows of trees.

[கிளி + ஈடு.]

"கிளி மரீஇய வியன்புனத்து மரனணி பெருங்குர லனைய னாதலின்" என்றது கிளியீடு வாய்த்தாற் போலவென்னும் வழக்கைப் பற்றி நின்றது (புறநா.138, உரை).

கிளியூறற்பட்டை *kiḷi-y-ūṟaṟ-paṭṭai*, பெ.(n.) ஒருவகை மருந்துப் பட்டை; a medicinal bark used for fever. *"மணவருக்க.......... கிளியூறற் பட்டையது"* *(பதார்த்த. குண. 553).*

மறுவ. கிளிப்பட்டை

[கிளியூறல் + பட்டை.]

கிளியெடு-த்தல் *kiḷi-y-eḍu-*, 4 செ.குன்றாவி. (v.t.) கிழியில் (துணியில்) கட்டிய மருந்தையெடுத்து வெய்யிலில் உலர்த்தல்; taking out the medicinel (tied up in a piece of cloth and kept suspended) from the solution contained in a vessel, and then drying it in the sun.

[கிழி → (கிளி + எடு.) கிளியெடுத்து ரவியில் போடுதல் என்பது நாட்டுமருத்துவ மரபு. இது துணியிலே கட்டி முடியப்பட்டு ஏனத்திலுள்ள நீரில் தொங்கவிடப்பட்ட மருந்தை எடுத்து வெயிலில் உலரவிடுதலாகும்.]

கிளுகிளு-த்தல் *kiḷi-kiḷu-*, 4 செ.கு.வி.(v.i.) 1. மகிழ்ச்சியாலுண்டாகும் ஓரொலிக்குறிப்பு; to feel joy, inwardly rejoice. *"கெண்டைத் தடங்கண்ணா ளுள்ளே கிளுகிளுத்தாள் (கம்பரா.மாயாசனக.87).*

[கிளு + கிளு.]

கிளுகிளெனல் *kiḷi-kiḷeṉal*, பெ.(n.) சிரித்தல் முதலிய ஒலிக்குறிப்பு; onom expr. signifying giggling, laughing, tittering, chuckling sound. 2. செழித்தற் குறிப்பு; expr. signifying thriving, flourishing. பயிர்கள் கிளுகிளென்று வளர்ந்தன (உ.வ.). 3. ஒளிர்தற் குறிப்பு; glowing brilliance. கிளுகிளென்று விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

[கிளு + கிளு + எனல்.]

கிளுவை *kiḷivai*, பெ.(n.) 1. பறவை வகை; common teal. *"பாலில்லா மாதர்கட்குப்..... அருங்கிளுவை யைத்தின்றி" (பதார்த்த.998).* 2. செடிவகை (சீவக.3076, உரை); Indian balm of gilead, common hedge plant. 3. மரவகை; hill balsam tree. 4. மீன்வகை; a kind of small fish-eel, grig.

[கிளு → கிளுவை.]

வகைகள்:

1.வெண்கிளுவை 2. செங்கிளுவை 3. முட் கிளுவை 4. பாறைக் கிளுவை 5. கர்ப்பூரக் கிளுவை 6.காட்டுக்கிளுவை 7.மலைக்கிளுவை 8. மல்லங்கிளுவை 9.பச்சைக்கிளுவை 10.மேலங் கிளுவை 11.சாம்பற் நிறக்கிளுவை 12. மாங்கிளுவை 13. செம்பலக் கிளுவை (சா.அக.).

கிளை¹—தல் *kiḷai,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. நீக்குதல்; to remove, purge. *"மனத்து மாசு கிளைவானை" (தேவா.682:3).* 2.அரிசி களைதல் (வின்.); to wash, as rice. 3. ஆடைகளைதல்; to put off, as garments. 4. கிளறுதல் (யாழ்ப்.); to pry out, as a thorn from the flesh with a needle.

[கிள் → கிளை.]

கிளை²—த்தல் *kiḷai-,* 2 செ.கு.வி.(v.i.) 1. மரம் கப்புவிடுதல்; to ramify, branch out. *"விண்பெருஞ் சென்னிக் கிளைஇய காந்தள்" (குறிஞ்சிப்.196).* 2. பெருகுதல்; multiply, increase in number, as families. அவர்கள் கிளைத்து விட்டார்கள் (உ.வ.). 3. நெருங்குதல்; to be close, to throng, to crowd, grow thick or close, as the beard, boughs, herbage, grain. *"கிருத்திம வினம்பல குதித்தன கிளைத்தே" (இரகு.திக்கு. 113).* 4.விளைதல்; to come into being, appear *"உழுநீர் வயலுட் பொன்கிளைப்ப" (திவ்.பெரியதி.8,8:5).* 5. நிறைதல் (பிங்.); to abound, to be copious, plenteous.

ம. கிளிக்குக

[கிளை¹ → கிளை²]

கிளை³—த்தல் *kiḷai-,* 4 செ.குன்றாவி.(v.t.) கிளறுதல்; to dig up, to stir, scratch up us fowls, to root up, as pigs, to burrow into as rats, to excavate. *"கேழலுழுத விருஞ்சேறு கிளைப்பின்" (புறநா.176:2).*

ம. கிளய்க்குக; தெ. கெலகு; து.கிலெகுனி; குட. கள; துட. கிள்ய்; பட.கலகு.

[கிளை¹ → கிளை³.]

கிளை⁴ *kiḷai,* பெ.(n.) 1. மரத்திலிருந்து பிரிந்து இலை, பூ, காய் ஆகியவற்றைத் தாங்கியிருக்கும் பகுதி; branch, bough. *"தாருவின் கிளைக் கௌன்ன" (கந்தபு.ஆற்றுப்.31).* கிளைகளை ஒடிக்காதே (உ.வ.). 2. தளிர் (திவா.); sprout, shoot, bud. 3. பூங்கொத்து; bouquet, bunch of flowers. *"கிளைமலர்" (சிறுபாண்.160).* 4. சுற்றம்; kindred, relations. *"கேளாதே வந்து கிளைகளாயிற் றோன்றி" (நாலடி.30).* 5. பகுப்பு; section, division. *"கிளையமை புவன மூன்றும்" (கம்பரா. கும்பக.16).* 6. இனம்; class, group, herd, flock, shoal, company, family, horde, race. *"களிறு..... கிளைபுகலத் தலைக்கூடி யாங்கு (புறநா.17:19).* 7. மூங்கில் (பிங்.); bamboo. 8. ஒருவகை இசைக் கருவி; a kind of flute. *"தண்ணுமை யாழ்முழவங் கிளைதுந்துபி" (பெரியபு.திருநாவுக்.76).* 9. ஓர் இசை; the fifth note in the gamut. *"கிளைக்குற்ற வுழைச்சுரும்பின்" (பரிபா.11:127).* 10. அலுவலகம், கட்சி, நிறுவனம் முதலியவற்றின் பிரிவு; an institution branch. எங்கள் அலுவலக கிளை அமெரிக்காவிலும் உள்ளது (உ.வ.). 11. உட்பிரிவு; supplementary. கிளைக்கதை.

[கிள் → கிளை.]

kiḷe-ei, a young branch. Comp. *Ossete kalius; Servian galusa; Greek klados,* a young shoot, a branch. The theme of the Greek word is *kla-ô,* to lop, to break; and the Tamil *kiḷ-ei,* considered as a verbal theme, means not only to sprout, but also to pluck off. *kiḷḷ-u,* to pinch, to pluck, is a collateral theme.

கிளைக்கதை *kiḷai-k-kadai,* பெ.(n.) மூலக்கதையிலிருந்து தோன்றிய, அதனோடு தொடர்புடைய தனிக்கதை; one story branching out of another, incidental narrative, episode.

[கிளை + கதை.]

கிளைக்கொம்பு *kiḷai-k-kombu,* பெ.(n.) பன்றியின் கோரைப்பல்; tusk of a boar (சங்.அக.).

[கிளை + கொம்பு.]

கிளைக்கோரை *kiḷai-k-kōrai,* பெ.(n.) கோரை வகை; a kind of sedge.

[கிளை + கோரை.]

கிளைகாமிகம் *kilaikāmigam,* பெ.(n.) நீர்ப்பூலா; water poola (சா.அக.).

கிளைகூட்டு-தல் *kilai-kūttu-,* 5 செ.கு.வி.(v.i.) ஆந்தைகள் கூட்டமாய் அலறுதல்; to screech simultaneously, as two or more owls together.

[கிளை + கூட்டு]

கிளைச்சங்கம் *kilai-c-cangam,* பெ.(n.) துணைஅவை; branch of an association. தமிழ் மொழியைப் பரப்புவதற்கெனப் பல கிளைச் சங்கங்கள் தோன்ற வேண்டும் (உ.வ.).

[கிளை + சங்கம்]

கிளைஞர் *kilaiñar,* பெ.(n.) 1. உறவினர்; kinsfolk, relation, *"காலாடு போழ்திற் கழிகிளைஞர்.... பலராவர்" (நாலடி.113).* 2. நட்பினர் (திவா.); friends, companions, *"கிளைஞரை நீட்டி யளப்பதோர் கோல்" (குறள்.796).* 3. மருதநில மக்கள்; inhabitants of an agricultural tract, husbandmen (திவா.). 4. கூட்டத்தார்; those belonging to a group, associates. *"வாமமாந் தந்திரக் கிளைஞர் போற்றாமுமே யினார்" (கந்தபு.திருநாட்டு.10).*

[கிளை → கிளையர் → கிளைஞர்]

பல குடும்பங்கள் சேர்ந்த ஒருகுடியை ஒரு மரமாகக்கொள்ளின், அக்குடும்பங்கள் அதன் கிளைகளைப் போன்றிருத்தலால், இனத்திற்குக் கிளையென்றும் இனத்தார்க்குக் கிளைஞர் என்றும் பெயர் (சொல்.கட்.).

கிளைநரம்பு *kilai-narambu,* பெ.(n.) குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளை என்ற யாழ்; collective name for the first, second, third, fifth and sixth notes of the gamut.

[கிளை + நரம்பு]

கிளைப்பனை *kilaippanai,* பெ.(n.) பல கிளைகள் ஒட்டிக் கொண்டுள்ள ஒருவகைப் பனை; a palmyra tree with several branches adhered together (சா.அக.).

[கிளை + பனை.]

கிளைப்பு *kilaippu,* பெ.(n.) 1. கப்புவிடுகை; branching, ramification. 2. கிண்டுகை; digging, scratching, burrowing. *"குப்பை கிளைப்போவாக் கோழிபோல்" (நாலடி.341).*

[கிள் → கிளை → கிளைப்பு.]

கிளைப்பெயர் *kilai-p-peyar,* பெ.(n.) சுற்றத்தை உணர்த்தும் பெயர்; nouns signifying kinship.

[கிளை + பெயர்.]

கிளைமை *kilaimai,* பெ.(n.) 1. உறவு (சீவக.330,உரை.); kinship . 2. நட்பு (த.மொ.அக.); friendship.

[கிளை → கிளைமை.]

கிளைமொழி *kilaimoli,* பெ.(n.) இலக்கண அமைப்பு, சொற்கள், பலுக்கம் ஆகியவற்றால் பொதுமொழி யிலிருந்து (அல்லது தரப்படுத்தப்பட்ட மொழியி லிருந்து) சில மாறுபாடுகளுடன் ஒரு வட்டாரத்தில் அல்லது ஒரு பிரிவினரால் பேசப்படும் மொழிவகை; dialect.

[கிளை + மொழி.]

கிளையடுப்பு *kilai-y-aduppu,* பெ.(n.) கொடியடுப்பு; side-hearth.

[கிளை + அடுப்பு]



கிளையடுப்பு

கிளையாமை *kiḷayāmai,* பெ.(n.) இளையாமை; not to grow, lean. *"வள்ளுகிர் ஞமலி கிளையாக் கண்ணவளைகுபு நெரிதர" (குறிஞ்சிப்.132) (த.மொ.அக.).*

[கிளை + ஆ + ஆமை.]

கிளையார் *kiḷaiyār,* பெ.(n.) 1. உறவினர்; relative. அவர் எனக்கு மனைவி வழியில் கிளையார் (உ.வ.). 2. நட்பினர்; friends (த.மொ.அக.).

[கிளை + ஆர்.]

கிளையாறு *kiḷai-yāṟu,* பெ.(n.) ஓர் ஆற்றிலிருந்து பிரிந்து வேறு வழியில் செல்லும் ஆறு; river branch (த.மொ.அக.).

மறுவ. கிளைநதி

[கிளை + ஆறு. கிளையாறு பார்க்க; see kiḷai-y-āṟu.]

கிளையிதழ் *kiḷai-y-idaḻ,* பெ.(n.) புறவிதழ்; outer petal of a flower. *"கிள்ளை யோப்பியும் கிளையிதழ் பறியா" (குறிஞ்சிப்.101).*

[கிளை +இதழ்.]

கிளையோடு-தல் *kiḷai-y-ōḍu-,* 5 செ.கு.வி.(v.i.) ***கிளைவிடு*** பார்க்க; see *kiḷai-viḍu.*

[கிளை + ஒடு.]

கிளைவழி *kiḷai-vaḻi,* பெ.(n.) கிளைபோற் பிரிந்த இனம் (சு.வி.21).; lineage, pedigree, family. 2. பிரியும் வழி; branching road, forked road.

[கிளை + வழி.]

கிளைவாதம் *kiḷaivādam,* பெ.(n.) ஆண்துடரி; a plant (சா.அக.).

[கிளை + வாதம்.]

கிளைவிடு-தல் *kiḷai-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) கப்பு உண்டாதல்; to ramify, branch off.

மறுவ. கிளைவைத்தல்

[கிளை + விடு-.]

கிளைவிளக்கு *kiḷai-viḷakku,* பெ.(n.) பல கிளைகளையுடைய மணவிளக்குவகை; lamp with many branching lights used in marriage ceremony.

[கிளை + விளக்கு.]

கிளை-வைத்தல் *kiḷai-,* 4 செ.கு.வி.(v.i.) ***கிளைவிடு*** பார்க்க; see *kiḷaiviḍu.*

[கிளை + வை.]

கிற்பு *kiṟpu,* பெ.(n.) 1. வலிமை; strength, power, ability. *"கிற்புறு மாயை" (கந்தபு.திருக்கல்.61).* 2. வேலைப்பாடு; workmanship. *"கிற்புறு செய்யப் பூண் கிழியை நோக்கினான்" (கந்தபு. குமாரபுரி. 23).* 3. செய்கை (வின்.); action, act, performance. 4. அடிமைத்தனம்; slavishness. 5. கட்டுப்பாடு; discipline (த.மொ.அக.).

[கில் → கிற்பு.]

கிற்புறு-தல் *kiṟpuṟu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. எழுதுதல்; to write. 2. எழும்புதல்; to rise up. 3. கட்டுப்படுதல்; to submit oneself. *"கிற்புறு செய்ய பூண்கிழியை நோக்கினான்" (கந்தபு. குமார.24). (த.மொ. அக.).*

[கிற்பு + உறு. கிற்பு = செய்கை, செயல்.]

கிற்றல் *kiṟṟal,* பெ.(n.) 1. செய்யுந் திறங் கொள்ளுகை (சிலப்.16:183); being able to do. 2. அடிமைத்தனமுறல்; slavery. 3. கட்டுப்படுத்தல்; restraint.

[கில் → கிற்றல்.]

கிறக்கம் *kiṟakkam,* பெ.(n.) மிகுந்த தூக்கம், குடிபோதை, காம நுகர்ச்சி முதலியவற்றால் கண்கள் உள்ளிழுத்துக் கொள்ளும் மயக்க

நிலை; stupor, drowsiness, languor. தூக்கக் கிறக்கம் (உ.வ.). அவளுடைய அழகு ஏற்படுத்திய கிறக்கம் (உ.வ.).

[கிறு → கிறக்கம்.]

கிறக்கு-தல் *kiṟakku-,* 5 செ.கு.வி.(v.i.) ஒருவரை தூக்கம், காமம், குடிபோதை முதலியன நிலைதடுமாறச் செய்தல், மயக்குதல்; induce languor, stupor. தூக்கம் கிறக்குகிறது (உ.வ.) அவளுடைய நினைவு மனத்தைக் கிறக்கிற்று (உ.வ.).

[கிறு → கிறங்கு → கிறக்கு.]

கிறங்கு-தல் *kiṟaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. ஒருவர் தூக்கம், குடிபோதை, காமநுகர்ச்சி முதலியவற்றால் நிலை தடுமாறுதல், மயங்குதல்; be in languor, stupor. போதைப் பொருள்கள் நரம்பைத் தூண்டிக் கிறங்க வைக்கும் (உ.வ.). 2.சோர்வடைதல்; get jaded dizzy. வெயிலில் நடந்து வந்ததால் குழந்தை கிறங்கிப் போய்விட்டான் (உ.வ.).

[கிறு → கிறங்கு.]

கிறட்டி *kiṟaṭṭi,* பெ.(n.) பிரண்டை; adamantine creeper, vitis quadrangular. (சா.அக.).

[கிறு → கிறட்டி.]

இதை உணவில் சேர்த்துக்கொள்ள வயிற்றுக் கோளாறுகள் நீங்கும் என்பர். இதைத் துவையலாக அரைத்து உண்பர்.

கிறட்டை *kiṟaṭṭai,* பெ.(n.) ஒரு மருந்துப் பூடு; an unknown medicinal plant (சா.அக.).

[கிறு → கிறட்டை.]

கிறமுகம் *kiṟamugam,* பெ.(n.) தென்னை போன்ற பாக்குமரம்; areca nut resembling coconut tree.

[கிறு + முகம் - கிறுமுகம் → கிறமுகம்.]

கிறாகிறாவெனல் *kiṟā-kiṟā-veṉal,* பெ.(n.) மயிலின் அகவல் போன்ற ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying calling repeatedly, crying sound, as of a peacock (w.).

[கிறா + கிறா + எனல்.]

கிறாம் *kiṟām,* பெ.(n.) குறும்பன்; mischievous person. அவன் வலுத்த கிறாம் (யாழ்ப்.).

[கிறு + ஆன் - கிறான் → கிறாம்.]

கிறாம்பு-தல் *kiṟāmbu-,* 5 செ.கு.வி.(v.i.) மெல்லச் செதுக்குதல் (யாழ்.அக.); to plane, smooth off.

[கின் → கிறு → கிறாம்பு → கிறாம்புதல்.]

கிறாய்[1] *kiṟāy,* பெ.(n.) புற்கரடு (வின்.); green clod, sod, turf (n.).

[கிறு → கிறாய்.]

கிறாய்[2] *kiṟāi,* பெ.(n.) மீனைக் காயப்போடும் உப்பள உவர் நிலம் (மீனவ.); drying yard for fish in salt pan.

[கிறு → கிறாய்.]

கிறாவு-தல் *kiṟāvu-,* 5 செ.கு.வி.(v.) மயில்போல் அகவுதல்; to cry, as a peacock.

[கிறு → கிறவு → கிறாவு.]

கிறாளித்தனம் *kiṟāḷi-t-taṉam,* பெ.(n.) கொடுமை (உ.வ.); cruelty, hard-heartedness.

[கிறு → கிறள் → கிறாளி + தனம்.]

கிறி[1] *kiṟi,* பெ.(n.) 1. வழி (பிங்.); way, path (பிங்.). 2. குழந்தைகளின் முன்கையிலணியும் சிறு பவளவடம்; coral wristlet. *"கிண்கிணிகட்டிக் கிறிகட்டி" (திவ்.பெரியாழ்.1.9:2).*

[கிறு → கிறி.]

கிறி[2] *kiṟi,* பெ.(n.) 1. பொய்; falsehood, lie. *"கிறிபேசி மடவார் பெய்வளை கொள்ளும்" (தேவா.228: 6).* 2. தந்திரம்; stratagem, artifice. *"மூவடிமண் வேண்டிச் சென்ற பெருங்கிறி" (திவ்.இயற்.திருவிருத்.91).* 3. மாயம்; deceit, fraud, playful, mischief, practical joke. *"கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்" (திருவா.8:6).*

[கிறு → கிறி.]

கிறி[3]**-த்தல்** *kiṟi-,* 4 செ.குன்றாவி (v.t.) 1. மாயஞ் செய்தல்; to play pranks. *"பொய்யர்களைப் பொய்செய்து போதுபோக்கிக் கிறிப்பானை" (தேவா.684:10).*

ம. கிளிக்குக (பல்லிளித்தல்)

[கிறு → கிறி.]

கிறிகள்ளி *kiṟi-kaḷḷi,* பெ.(n.) வெள்ளைக் காக்கணம்; white mussell-shell creeper (சா.அக.).

[கிறி + கள்ளி.]

கிறிச்சல் *kiṟiccal,* பெ.(n.) தீ முறுகற் செய்நஞ்சு(சங்.அக.); a prepared arsenic.

[கிறி → கிறிச்சல்.]

கிறிச்சான் *kiṟiccāṉ,* பெ.(n.) கிறிச்சென்று ஒலிக்குங் கருவி (வின்.); watch-man's rattle, child's rattle (w).

[கிறிச்சு → கிறிச்சான்.]

கிறிச்சிடு-தல் *kiṟiccidu-,* 20 செ.கு.வி.(v.i.) கிறிச்சென்று ஒலித்தல்; to creak, as new shoes, a wheel, an oil mill, a door, to sound, as a watch man's rattle.

[கிறிச்சு + இடு-.]

கிறிச்சு *kiṟiccu,* பெ.(n.) ஒலிவகை; creaking sound. கிறிச்சுச் சோடு.

[கிறி → கிறிச்சு.]

கிறிச்சுக்கிறிச்செனல் *kiṟiccu-k-ki-ṟiccenal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onam expr. signifying creaking noise.

[கிறிச்சு + கிறிச்சு + எனல்.]

கிறிச்சுச்சடா *kiṟiccu-c-cadā,* பெ.(n.) கிறிச்சென் றொலிக்குஞ் செருப்பு வகை; creaking shoes.

[கிறிச்சு + சடா.]

கிறிச்சுச்சாட்டை *kiṟiccu-c-cāṭṭai,* பெ.(n.) இலங்கையில் கண்டி நாட்டுத் தலைமையதிகாரிகள் முன்பு கிறிச்சென்று ஒலிக்கச் செய்யுஞ் சாட்டை (யாழ்ப்.); a large whip creaked before the chief officers of the Kandyan country (J).

[கிறிச்சு + சாட்டை.]

கிறிச்சுத்தலையணை *kiṟiccu-t-talai-yaṇai,* பெ.(n.) கிறிச்சென்று ஒலியிடுந் தலையணை; creaking pillow.

[கிறிச்சு + தலையணை.]

கிறித்தவம் *kiṟittavam,* பெ.(n.) கிறித்துவின் வாழ்க்கையையும், அறிவுறுத்தல்களையும் வாழ்க்கை நெறியாகக் கொண்ட மதம்; Christianity. கிறித்தவத்தின் வழிகாட்டு நூலாக விவிலியம் (பைபிள்) துலங்குகிறது (உ.வ.).

[கிறித்து → கிறித்தவம்.]

கிறு *kiṟu,* இடை. (part). ஒரு நிகழ்கால இடைநிலை; sign of the present tense. *"ஆநின்று கின்றுகிறு" (நன்.143).*

[செய்கு → செய்குதான் → செய்கிறான் எனக் குகர ஏவலீறும் தகர எழுத்துப்பேறும் திரிந்த இடைத்திரிபே 'கிறு' எனத் தோற்றம் தந்தது. உண்குதான் கேட்குதான் எனும் தென்பாண்டி வழக்குகளை நோக்குக.]

கிறுக்கட்டி[1] *kiṟukkaṭṭi,* பெ.(n.) இலுப்பைப் பூ முதலான பூக்களை வறுத்துப் பாகில் செய்யும் பணியாரம்; confection made of fried Mahwa flowers etc.

[கிறு + கட்டி.]

கிறுக்கட்டி[2] *kiṟu-k-kaṭṭi,* பெ.(n.) கண்கட்டி; sty in the eye.

மறுவ. கட்கட்டி, கண்கட்டி.

[கிறு + கட்டி.]

கிறுக்கர்மடம் *kiṟukkar-aḍam,* பெ.(n.) மனநோயாளிகளை ஆய்வுக்காக நிறுத்தி வைக்கும் இடம்; lunatic asylum.

[கிறுக்கர் + மடம்.]

கிறுக்கல் *kiṟukkal,* பெ.(n.) 1. தாறுமாறாக எழுதுகை; scribbling, writing hastily and clumsily. 2. எழுத்தின் அடிப்பு; scoring out. 'அழகாக எழுதவும்' என்ற கட்டுரைக் குறிப்பினை இப்படியா கிறுக்குவது (உ.வ.).

[கிறுக்கு → கிறுக்கல்.]

கிறுக்கன் *kiṟukkaṉ,* பெ.(n.) தான் செய்வது இன்னதென்று அறியாதபடி இருக்கும் அறிவு கலங்கியவன், மனநோயினன்; lunatic. அந்தக் கிறுக்கன் யாரைக் கண்டாலும் கல்லால் அடிப்பான் (உ.வ.). 2. அதிகமான பற்றும், இயல்பல்லாத நடத்தையும் உடையவன்; eccentric. திரைப்பட கிறுக்கன் (உ.வ.). 3. இறுமாப்புடையவன்; conceited, arrogant fellow.

ம. கிறுக்கன்

[கிறுக்கு + அன்.]

கிறுக்கு[1]**-தல்** *kiṟukku-,* 5 செ.கு.வி.(v.i.) 1. எழுதுதல் (பிங்.); to write. 2. உருத்தெரியாமல் எழுதுதல்; to scribble, write illegibly. 3. வரைந்த எழுத்தை அடித்தல் (வின்.); to cancel, score out.

ம. கிறுக்க; க. கீசு; தெ. கிர்க்கு; கோத. கீர்(கோடு)

[கீள் → கீறு → கிறுக்கு.]

கிறுக்கு[2]**-தல்** *kiṟukku-,* 5 செ.கு.வி.(v.i.) தலை சுற்றுதல்; to feel giddy, to be delirious, dizzy.

[கிறு → கிறுக்கு-.]

கிறுக்கு[3] *kiṟukku,* பெ.(n.) 1. உருத்தெரியாத எழுத்து; scribble. 2. எழுதிய எழுத்தைக் கீறியடிக்கை; scoring out anything written. 3. தலைச்சுற்று; giddiness, dizziness. 4. மனநலம் குன்றியமை (பைத்தியம்) (பெருந்தொ.1301); craziness, eccentricity, lunacy . 5 மிக்க ஆசை; passion, as for a thing. 6. செருக்கு (வின்.); egoism, self, conceit.

ம. கிறுக்கு; தெ. கிறுகு (சுற்றச் செய்தல்).

[கிறு + கிறுக்கு.]

கிறுக்குநாய் *kiṟu-k-kunāy,* பெ.(n.) வெறி (பைத்தியம்) பிடித்த நாய்; a rabid dog.

[கிறுக்கு + நாய்.] (சா.அக.).

கிறுக்குநோவு *kiṟukku-nōvu,* பெ.(n.) ஒருவகை ஆட்டுநோய் (M.Cm.D.(1887) 249).; a discease of sheep.

[கிறுக்கு + நோவு]

கிறுகிறு-த்தல் *kiṟu-kiṟu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மயக்கமாதல்; to be giddy, dizzy, to swim as the head. தலை சுழன்று கிறுகிறுத்து (பிரபோத.18,54). 2. தடுமாறுதல்; to be confounded, confused, disconcerted(u.). *'கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா' (கவிமணி.).*

ம. கிறுஞ்சுக

[கிறுகிறு → கிறுகிறுப்பு.]

கிறுகிறுப்பு *kiṟu-kiṟuppu,* பெ.(n.) 1. தலைச்சுழற்சி; giddiness, dizziness, swimming of the head, vertigo. *"இந்த மையலுங் கிறுகிறுப்புந் தையலவர்க் குண்டோ" (குற்றா.குற.73:3).*

[குறு → கிறு → கிறுகிறு → கிறுகிறுப்பு.] (மு.தா.276).

கிறுகிறெனல் *kiṟu-kiṟeṉal,* பெ.(n.) 1. தலைசுற்றற் குறிப்பு; expr. signifying being giddy, dizzy state. 2. விரைவுக் குறிப்பு; expr. signifying moving rapidly.

[குறு → கிறு → கிறுகிறு – எனல்.]

கிறுங்கு-தல் *kiṟuṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. அசைதல்; to move, stir, shake, stagger. அவன் சற்றுங் கிறுங்கவில்லை (உ.வ.).

ம. கிறுங்ஙுக; **தெ.** கிரசு.

[கிறு → கிறுங்கு.]

கிறுசந்திரன் *kiṟucandiraṉ,* பெ.(n.) நீர்ப்பாசி, நீரில் வளரும் பாசியினத்தைச் சேர்ந்த செடி; water - moss, duck-weed lumnaceae (சா.அக.).

[கிறு + சந்திரன்.]

கிறுசன்[1] *kiṟušaṉ,* பெ.(n.) 1. குங்குமப்பூ (மலை.); the flower of a bulbous-rooted plant. 2. மஞ்சள் (மலை.); turmeric.

[கிறு → கிறுசன்]

கிறுத்தவம் *kiṟuttuvam,* பெ.(n.) அகில் (மலை.); eagle-wood.

[கிறு → கிறுத்தவம்.]

கிறுதி *kiṟudi,* பெ.(n.) பக்க ஊதை (பாரிசம்), கைகால்கள் இயங்கும் தன்மையை இழந்துவிடல்; paralysis (சா.அக.).

[கிறு → கிறுதி.]

கிறுது *kiṟutu,* பெ.(n.) மென்மை, இனிமை; softness, tenderness. *"கிறுதுபடு மொழிபழகி"* (திருப்பு.790).

[கிறு → கிறுது.]

கிறுதுகம் *kiṟudugam,* பெ.(n.) பீர்க்கின் உள்ளே பஞ்சுபோல், மெதுவாக இருக்கும் கொடிவகையைச் சேர்ந்த காய்; luffa-luffa amara (சா.அக.).

[கில் → கிறு → கிறுதுகம்.]

கிறிது சுண்டி *kiṟutušuṇḍi,* பெ.(n.) நீர்ச்சுண்டி; water - minmose (சா.அக.).

[கில் → கிறுது + சுண்டி.]

கிறுபந்திகம் *kiṟupandigam,* பெ.(n.) திப்பிலி; long pepper (சா.அக.)

[கிறு + பந்திகம்.]

கின்று *kiṉṟu,* இடை (part.). ஒரு நிகழ்கால இடைநிலை; sign of the present tense, as in செய்கின்றது. *"ஆநின்று கின்றுகிறு"* (நன்.143).

[செய்கு + உந்து – செய்குந்து எனும் வாய்பாட்டினை ஒட்டி செய்குந்தான், செய்கின்றான் எனத் திரிந்த திரிபாதலின் 'கின்று' என்பதைத் தனித்த இடைநிலையாகக் கருதவியலாது. இந்தத் திரிபு இடைக்காலப் பேச்சு வழக்குத் திரிபாகும்.]

கின்னகம் *kiṉṉagam,* பெ.(n.) 1. தூக்கணங் குருவிக் கூடு; nest of weaver bird. 2. தூக்கணங் குருவி; weaver bird. *"கின்னக விளக்கம்"* (இரகு.நாட்.44).

[கில் → கின் → கின்னகம் = கவிழ்ந்த நிலையிலுள்ள கூடு கட்டும் பறவை, தூக்கணங்குருவி.]

கின்னம் *kiṉṉam,* பெ.(n.) துன்பம்; affliction, sorrow, distress. *"கின்னங் குறித்தடியேன்..... செவி சொன்ன"* (கந்தரலங்.24).

[இல் → இன் → கின் → கின்னம். இல் = குத்தல், துளைத்தல் கருத்துவேர்.]

கின்னரச்சுரை *kiṉṉara-c-curai,* பெ.(n.) பாம்பாட்டிகள் ஊதும் மகுடி என்னும் காற்றிசைக் கருவி செய்யப் பயன்படும் சுரை (m.m.293); calabash climber as used by snake-charmers for a wind instrument.

[கின்னரம் + சுரை.]

உருண்டைச் சுரைக்காய். இது காய்ந்த ஓடு, கின்னரி, வீணை முதலிய நரம்பிசைக் கருவிகளுக்கு உதவும் (சா.அக.).

கின்னரப்பெட்டி *kiṉṉara-p-peṭṭi,* பெ.(n.) ஒத்தியம் (ஆர்மோனியம்) போன்ற காற்றிசைக்கருவி வகை; musical instrument as harmonium, piano.

மறுவ. கின்னரர்பெட்டி

[கின்னரம் + பெட்டி.]

கின்னரம் *kiṉṉaram,* பெ.(n.) 1. இசையெழுப்பும் பறவை வகை; a sweet-voiced bird credited with musical powers. *"கின்னர முரலு மணங்குடைச் சாரல்" (பெரும்பாண்.494).* 2. நீர்வாழ் பறவை (பிங்.); water-fowl. 3. ஒருவகை யாழ்; a kind of lute. *"தந்தங் கின்னரந் தொடுகிலோ மென்றனரே" (திவ்.பெரியாழ்.3:6.5).* 4. ஆந்தை (பிங்.); owl, perh, ironically.

தெ. கின்னர, கின்னெர.

Fin. kannel, kantele; **Es.** kannel; **Mong.** xanggilga; **Jap.** kane, kanaderu; **Q.** kantela.

[கின்னரம் = கின்னரம் போல் இசையெழுப்புவன.]

கின்னரம்

கின்னரர் *kiṉṉarar,* பெ.(n.) யாழிசை வல்லவர்; celestial musicians *patiṉeṉ-kaṇam.* *"பண் ணெறிந்தாள் கின்னரருஞ் சோர்ந்தா ரன்றே" (சீவக.647).*

[கின்னரம் → கின்னரர். கின்னரர் குதிரை முகமுடையவர் எனத் தொன்ம (புராணம்) வியலார் கூறுவது ஏற்புடைத்தன்று.]

கின்னரர்பிரான் *kiṉṉararpirāṉ,* பெ.(n.) குபேரன் (பிங்.); *Kubēraṉ,* as lord of *Kiṉṉarar.*

[கின்னரர் + (பெருமான்) பிரான்.]

கின்னராகம் *kiṉṉa-rāgam,* பெ.(n.) ஒரு பெரும்பண் (பிங்.); a main musical mode.

க. கின்னரிகெ

[கின்னரம் + (அராகம்) ராகம்.]

கின்னரி[1] *kiṉṉari,* பெ.(n.) ஆந்தை; owl.

[கின்னரம் → கின்னரி.]

இரவு நேரத்தில் பறக்கும் ஒரு பறவை, இது எழுப்பும் ஓசை அலறலாகக் கேட்பதால் இதைப் பார்ப்பது தீய நிமித்தமாகக் கருதப்படும் (சா.அக.).

கின்னரி[2] *kiṉṉari,* பெ.(n.) 1. யாழ்வகை; a musical instrument, smaller than the viṇai. having two steel strings. *"கின்னரி வாசிப்பார்" (திருப்போ. சந்.பிள்ளைத்.சிறுபறை.8).* 2. கின்னர இனப் பெண்; celestial female chorister. இரண்டு கையுடை யராகக் கனமாகச் செய்த கின்னரிகள் இருவர் (S.I.I.II.200).

[கின்னரம் → கின்னரி.]

கின்னாரர் பெட்டி *kiṉṉarar-peṭṭi,* பெ.(n.) ***கின்னரப் பெட்டி*** பார்க்க; see *kiṉṉarap-peṭṭi.*

[கின்னரப் பெட்டி → கின்னாரப்பெட்டி.]

கின்னி *kiṉṉi,* பெ.(n.) மழைக்கிளி (வின்.); large green locust.

[கிள்ளி → கிண்ணி → கின்னி (கொ.வ.)]

கின்னிக்கோழி *kiṉṉi-k-kōḻi,* பெ.(n.) கினியா தேயத்துக் கோழி (வின்.); Guinea-fowl.

[கின்னி + கோழி]

கினாகினாவெனல் *kiṉā-kiṉā-veṉal,* பெ.(n.) குழப்பக் குறிப்பு; onam. expr. signifying confusion, disorder, disharmonry.

[கினா + கினா + எனல்.]

கினி[1]**—தல்** *kiṉi-,* 4 செ.கு.வி.(v.i.) முற்றும் கவிதல்; to envelope, engulf, swallow. *"ஒரு மேருவைக்*

கினியக் காளமேகம் படிந்தாற் போலே" (ஈடு.3,8:1).

[குல் → கில் → கினி. குல் = கவிதல்.]

கிளிப்புல் *kiḻi-p-pul,* பெ.(n.) 1. கினியாதேயத்துப் புல (m.m.333); tall Guinea-grass, native cf Africa. 2. கோரைப்புல்;a grass found luxuriously near wells, garden etc., (சா.அக.).

[கினியா → கினி + புல்.]

கினை *kiṉai,* பெ.(n.) 1. நீறு ஆக்கும்போது ஆவியாகாமல் காய்தற்குரிய காப்பு உறை; cover to prevent evaporation during calcination. 2. விளாம்பழம் (மலை.); wood apple.

[கினி → கினை.]

கினைசாரம் *kiṉaišāram,* பெ.(n.) விளாம்பழம்; wood apple.

[கினை + சாரம்.]

பிள்ளையார் நான்மி (சதுர்த்தி) அன்று படைக்கப்படும் பழம். இதன் ஓட்டைப் பிளந்து உள்ளிருக்கும் பழப்பகுதியை, அக்காரத்துடன் கலந்து படைப்பர் (சா.அக.).

கீ *kī* க் தமிழ் நெடுங்கணக்கில் அடியண்ண எடுத்தொலிப்பு வல்லின முதல் மெய்யும் (க்) நெட்டுயிரான 'ஈகாரமும்' சேர்ந்து உயிர்மெய்யாகிய சார்பெழுத்து; The syllable formed by adding the vowel 'i' to the consonant 'k'.

[கா + ஈ – கீ.]

கீக்கீயெனல் *kī-k-kī-y-eṉal,* பெ.(n.) பறவையொலிக் குறிப்பு; onom. expr. signifying (a) chirping, peeping sound as a chickens : (b) screeching, screaming sound, as of birds.

க. கீகீ; தெ. கீகீ.

[கீ+கீ+எனல்.]

கீங்கா *kiṅgā,* பெ.(n.) **கீங்காக்கயிறு** பார்க்க; see *kiṅgā-k-kayiṟu.*

[கீங்காக்கயிறு → கீங்கா.]

கீங்காக்கயிறு *kiṅgā-k-kayiṟu,* பெ.(n.) வலையின் கீழ்க்கயிறு; rope of the longer end of fishing net.

மறுவ. கீங்கா

[கீழ் → கீழாங்கு → கீங்கா + கயிறு.]

கீங்காப்பண்கயிறு *kiṅgā-p-paṇkayiṟu,* பெ.(n.) வலையின் கீழ்ப்பகுதியில் அமைந்த செயற்கை யிழை; synthetic rope of the fishing net.

[கீழாங்கு → கீங்கு → கீங்கா + பண்கயிறு.]

கீங்காப்பந்தல் *kiṅgā-p-pandal,* பெ.(n.) கீழ் வலையை எடுத்துவிடுதல்; to take away the lowernet.

[கீழாங்கு → கீங்கு → கீங்கா + பாந்தல் (பந்தல் (கொ.வ.).]

கீச்சாங்குருவி *kiccāṅ-kuruvi,* பெ.(n.) பறவை வகை (m.m.432.); large grey shrike, which imitates the cry of small birds in order to attract and capture them

[கீச்சு + ஆம் + குருவி. அம் → ஆம் – சாரியை முதனிலைத் திரிபு.]

கீச்சான் *kiccāṉ* பெ.(n) 1.குழந்தை; infant (உ.வ.). 2. கீச்சாங்குருவி; large grey shrike. 3. கடல்மீன் வகை; a sea-fish greyish.

ம. கீச்சான்

[கீச்சு → கீச்சான்.]

கீச்சான்கீச்சான்தன்புள்ளான் *kiccāṉ-kiccāṉ-taṉpuḷḷāṉ,* பெ.(n.) மணற்குவியலில் சிறுகுச்சியை ஒளித்துவைத்துப்பின் கண்டெடுக்கும், குழந்தை விளையாட்டு; child's game of finding out a small stick hidden in a ridge of sand.

மறுவ. கீச்சுக்கீச்சுத்தம்பலம், கீச்சுக் கீச்சுத்தாம்பாளம்.

[புள் = பறவை. கீச்சான் + கீச்சான் + தன் + புள் + ஆன். கீச்சான் = பறவை கத்தும் ஒலிக் குறிப்பு. தன்புள் = தன்பறவை. தன் பறவையைக் கண்டுபிடிப்பதென்பது குறிப்புப் பொருள்.]

கீச்சி *kicci,* பெ.(n.) பாசிமணியாலான கழுத்தணி (யாழ்ப்.); necklace, commonly, of black earthern beads.

[கரிச்சி → காச்சி → கீச்சி.]

கீச்சிடு-தல் *kiccidu-,* 20 செ.கு.வி. (v.i.) கீச்சென்று ஒலியெழுப்புதல்; to chrip, as birds, lizards to twitter, chatter, as monkeys, to speak or call with a shrill sound, to speak, scream, as an infant.

ம. கீச்சுக

[கீச்சு + இடு.]

கீச்சு[1] *kiccu,* பெ.(n.) 1. அழுகையொலி; shrill crying sound, scream. 2. ஒருவகைப் புள்ளொலி; chirps of birds (w).

ம. கீச்சு; க., தெ. கீசு; து. கீச்.

கீச்சு[2] *kiccu,* பெ.(n.) உருகியிறுகிய இரும்பு (யாழ்ப்); scoria.

Fin. kytea; **Es.** kutta; **Mansi.** kus; **Jap.** kitsnen; **Q.** katab.

[கிச்சு = நெருப்பு. கிச்சு → கீச்சு (கிச்சில் = உருகி இறுகிய இரும்பு.]

கீச்சுக்கிட்டம் *kiccu-k-kittam.* பெ.(n.) இரும்புக் கிட்டம்; iron dross.

[கீச்சு + கிட்டம். கீச்சு = உருகியிறுகிய இரும்பு. கிட்டம் = கரிக்கட்டி.]

கீச்சுக்கீச்சுத்தம்பலம் *kiccu-k-kiccu-t-tambalam,* பொ.(n.) **கீச்சான் கீச்சான் தன்புள்ளான்** பார்க்க; see *kiccan-kiccan-tanpullan*

மறுவ. கீச்சுக்கீச்சுத்தம்பாளம்

[கீச்சு + கீச்சு + தன்புள்ளான் (தம்பலம்).]

கீச்சுக்கீச்சுத்தாம்பாளம் *kiccu-k-kiccu-t-tām bālam,* பெ.(n.) **கீச்சான் கீச்சான் தன்புள்ளான்** பார்க்க; see *kiccan-kiccan-tanpullan.*

[கீச்சு + கீச்சு + தாம்பாளம்.]

கீச்சுக்கீச்செனல் *kiccu-k-kiccenal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying screaming, squeaking, chirping, twittering sound. *"பேச்சுப் பேச்சென்னும் பெரும்பூனை வந்தக்கால் கீச்சுக்கீச் சென்னுங் கிளி"* (தனிப்பா. 92,6).

[கீச்சு + கீச்சு + எனல்.]

கீச்சுக்குரல் *kiccu-k-kural.* பெ.(n.) ஒருவகை மென்குரல்; shrill voice, feminine or childish. *"மறைமலையடிகளார்"* தம் கீச்சுக் குரலால் தமிழுலகத்தையே வென்றார் (உ. வ.).

[கீச்சு + குரல்.]

கீச்சுத்தாரா *kiccu-t-tārā,* பெ.(n.) செங்கிளுவைப் புள்; whistling teal, from its piping note when on the wing.

[கீச்சு + தாரா.]

கீச்சுப்புட்டை *kiccu-p-puttai,* பெ.(n.) அண்டவூதை (M.L.); hernia.

[கீச்சு + புட்டை. புட்டை = ஆண் உயிரினத்தின் விதை (விதைக்காய்).]

கீச்சுமூச்செனல் *kiccu-muccenal,* பெ.(n.) கூக்குரலிடுங் குறிப்பு; onom. expr. signifying buzzing sound, noisiness as of a house, full of children, a hen and her brood.

[கீச்சு + மூச்சு + எனல்.]

கீசகநாடகம் *kiśaga-nādagam,* பெ.(n.) முறை கேடான நடத்தை; shameless, immodest behaviour as that of *Kiśagan* towards Draupadi. *"அவன் கீசகநாடகம் பண்ணுகிறான்"* (வின்.).

[கீசகன் + நாடகம்.]

கீசகம்[1] *kīšagam*, பெ.(n.) குரங்கு (பிங்.); monkey.

[கீச்சு → கீச்சகம் → கீசகம் (கீச்சுக்குரல் எழுப்பும் குரங்கு).]

கீசகம்[2] *kīšagam*, பெ.(n) மூங்கில் (திவா.); bamboo.

ம. கீசகம்; Skt. kicaka

[கழை → கய்சகம் → கீசகம் (கொ.வ.).]

கீசகம்[3] *kīšagam*, பெ.(n) தலைச்சீரா; helmet. "கீசகத்தோடே போக்குமென்னுதல்" (திவ்.திருமலை, 40. 133. வியா.).

[கொய்சகம் → குய்சகம் → கீசகம் (கொ.வ.). கொய்சகம் = மடித்துச் சுற்றும் தலைப்பாகை, தலைப்பாகை போன்ற தலைக்காப்பீடு.]

கீசகன் *kīšagan*, பெ.(n.) விராடனுக்குப் படைத் தலைவனும் வீமனாற் கொல்லப்பட்டவனுமான கொடியவன் (பாரத. கீசக.14.); Kīšaga, commander-in-chief of Virāḍa, noted for his profligacy and slain by Bhima in one of his wicked attempts.

[கீசகம்[3] → கீசகன்.]

கீசம்பறை *kīšam-parai*, பெ.(n) 1. ஒருவகைப் பறை; a kind of drum. 2. பேரோசை; loud noise. 3.பெருங் குழப்பம், ஒழுங்கீனம் (யாழ்ப்.); confusion, disorder (j).

மறுவ. கீசறை

[கீச்சம் (ஒலிக்குறிப்பு) → கீசம் + பறை.]

கீசரன் *kīšaran*, பெ.(n.) ***கீசரி*** பார்க்க (சங்.அக.); see *kīšari*.

[கீசரி → கீசரன்.]

கீசரி *kīšari*, பெ.(n.) சரக்கொன்றை (மலை.); Indian laburnam.

மறுவ. கீழ்ச்சரம், கீசரன்.

[கீழ் + சரம் – கீழ்ச்சரம் → கீசரி (கொ.வ.). கீழ்நோக்கி வளைந்த பூங்கொத்துடைய சரக்கொன்றை மரம் கீழ்ச்சரம் எனப்பட்டது. கீழ்ச்சரம் பார்க்க; see kīḻccaram.]

கீசறை *kīšarai*, பெ.(n.) கீசம்பறை; a kind of drum.

[கீசம் + பறை → கீசறை.]

கீசுகீசெனல் *kīšu-kīšenal*, பெ.(n.) ***கீச்சுக்கீச் செனல்*** பார்க்க; see *kīccu-k-kīccenal*. "கீசுகீசென்றெங்கு மானைச் சாத்தன் கலந்து பேசின பேச்சரவம்" (திவ். திருப்பா.7).

[கீசு + கீசு + எனல்.]

கீடக்கினம் *kīdakkinam*, பெ.(n.) பூச்சிகளைக் கொல்லும் வன்மை வாய்ந்த கந்தகம்; sulphur so called fron its property of killing insects (சா.அக.).

[கீள் → கீழ் → கீழம் → கீடம் = பூச்சி, புழு. கீடம் + கு + ஈனம் – கீடக்கீனம் → கீடக்கினம். ஈனம் = அழிவு.]

கீடப்பகை *kīda-p-pagai*, பெ.(n.) வாய்விளங்கம் என்னும் மூலிகை (தைலவ.தைல.8); worm killer, common wind berry.

[கீடம் + பகை. கீடம் = புழு.]

கீடம் *kīdam* பெ.(n.) 1. புழு (திவா.); worm, maggot, any of vermin species. 2. கோற்புழு (பிங்.); case-worm, larva of the caddis-fly. 3. வண்டு (சூடா.); beetle that makes itself an earthen house.

[கீள் = பிளத்தல், துளைத்தல், கடித்தல். கீள் → கீழ் → கீழம் → கீடம் (புழு, பூச்சி).]

த.கீழம் > Skt. kīṭa.

கீடமணி *kīda-mani*, பெ.(n.) மின்மினி (சங்.அக.); fire-fly, glow-worm.

ம. சீடமணி

[கீடம் + மணி.]

கீடமாரி *kīḍa-māri* பெ.(n.) சிறுபுள்ளடி (மலை.); scabrous ovate unifoliate tick trefoil.

ம. கீடமாரி

[கீடம் + மாரி.]

கீடிமா *kīḍimā,* பெ.(n.) துத்தம்; white vitriol.

[கீளி → கீடி → கீடிம → கீடிமா.]

கீண்டல் *kīṇḍal,* பெ.(n.) கிழிக்கை (திவா.); rending, tearing, splitting.

ம. கீண்டல்

[கீள் → கீண்டல்.]

கீணம் *kīṇam,* பெ.(n.) சிதைவு (அக.நி.); deteriora - tion, decline, growing worse.

ம. கீணம்

[கீள் → கீண் → கீணம்.]

கீணர் *kīṇar,* பெ.(n.) கீழோர் (வின்.); mean, low, vulgar people.

[கீழ்நர் → கீணர்.]

கீத்துக்கட்டை *kīttu-k-kaṭṭai,* பெ.(n) மரங்களில் துளையிடும் பகுதிகளைக் குறியிடப்பயன்படும் கருவி; a marker to indicate points to be bored in trees (தச்சு.).

[கீறு + கட்டை - கீற்றுக்கட்டை → கீத்துக்கட்டை (கொ.வ.).]

கீத்துக்கொட்டகை *kīttu-k-koṭṭagai* பெ.(n.) **கீற்றுக்கொட்டகை** பார்க்க; see *kīṟṟu-k-koṭṭagai*

[கீற்றுக்கொட்டகை → கீத்துக்கொட்டகை.]

கீத்துருணி *kītturuṇi,* பெ.(n.) கேந்திப் பூ; a flower (சா.அக.).

[கீற்று + உருளி – கீற்றுருளி → கீத்துருணி.]

கீதாரி *kīdari,* பெ.(n.) 1. இடையன்; shephered. 2. இடையர் தலைவர்; headman of shephereds.

மறுவ. கீலாரி, கூழாளி.

க. கீலாரி, மராட. கில்லாரி.

*[கூழாளி → கீலாரி → கீதாரி. மூங்கிற்குழாயில் கூழ் எடுத்துச் செல்லும் இடையன் கூழாளி எனப்பட்டான். கூழார் இடையன் எனும் சொல்லாட்சி ஒப்பிடுக. **கூழாளி** பார்க்க; see kūḷāḷi.]*

கீயோமுய்யோவெனல் *kīyō-muyyō-v-eṉal,* பெ.(n.) பிள்ளைகள் கூக்குரலிடுங் குறிப்பு; onom. expr. signifying screaming, squalling, as children or young people.

[குய்யோ முறையோ → கீயோமுய்யோ + எனல்.]

கீர் *kīr,* பெ.(n.) சொல்; word (திவா.) speech. ஒ.நோ. கீர்வாணி, கலைமகள்.

[கிள் → கீள் → கீர்.]

கீர்கீரெனல் *kīr-kīr-eṉal,* பெ.(n.) ஒலிக்குறிப்பு onom. expr. signifying creaking sound as that of a saw when cutting timber squeaking screaming, squalling sound, as that of an infant. *"சங்கதனைக் கீர்கீரெனவைறுக்குங் கீரனோ" (பெருந்தொ. 1397).*

[கீர் + கீர் + எனல்.]

கீர்த்திக்கொடி *kīrtti-k-koḍi,* பெ.(n.) ஈசுரமூலி; Indian birth - wort (சா.அக.).

[சீர்த்தி → கீர்த்தி + கொடி.]

கீரசால் *kīrašāl,* பெ.(n.) விதைத்த புன்செய் நிலத்தில் ஆமணக்கு அவரை போன்ற விதை களைக் கைச்சாலில் விதைப்பதற்காக ஒட்டும் இடை யிட்ட நெடுஞ்சால் உழவு; inner divisional row when ploughing meant-for crops as casrtor, bean etc.

[கீள் → கீர் → கீர + சால்.]

கிரந்தை *kirandai,* பெ.(n.) இடைச்சங்கப் புலவருள் ஒருவர் (இறை.1. உரை.); a poet of the middle.

[கிரன் + அந்தை. கிரன் = பழையன்.]

கிரநாண் *kiranāṇ,* பெ.(n.) மயிர்; hair (சா.அக.).

[கிழ்நாளமயிர் → கிழ்நாளம் → கிழ்நாண்.]

கிரம்[1] *kiram* பெ.(n.) 1. கிளி; rose-ringed parakeet. 2. கருங்கிளி (திவா.); black parrot.

[கிள் – கிள (பேசுதல்). த. கிள > Skt. kira. *கிள → கிள → கிரம்.]*

கிரம்[2] *kiram,* பெ.(n.) 1. பால்; milk, 2. நீர்; water.

[கீள் = பிளத்தல், பிளந்த பட்டை. கீள் → கீளம் → கீரம் = மரப்பட்டையினின்றும் வடியும் பசை, பால் நாளடைவில் நீரையும் பாலையும் குறித்தது.]

கிரன் *kiraṉ,* பெ.(n.) **நக்கீரன்** பார்க்க; see *Nakkiraṉ.* "சங்கதனைக் கீர்கீரென வறுக்குங் கீரனோ" (பெருந்தொ.1397).

[கீழ் → கீல் → கீலன் → கீரன். கீழ் = தொன்மை. பழமை. கீரன் = பழையோன், பழையன், பழைய குலவரவினன்.]

கீரி[1] *kiri,* பெ.(n.) **கீரிப்பிள்ளை** பார்க்க; see *kiri-p-piḷḷai.*

மறுவ. மூங்கா, ம., க. கீரி; குட. கீரி; கூ.கிர்பெளி, குவிகிராண்டு.

[கூரி → கீரி. (கூரான பல்லுடையது.)]

கீரி[2] *kiri,* பெ.(n.) 1. கருவாலி; Ceylon tea. 2. மரவகை; a species of kambala tree. 3. கள்ளி; milk hedge.

[காரி → கீரி (கருமை படர்ந்தது.)]

கீரிகண்ணி *kirikaṇṇi,* பெ.(n.) வெண்காக்கணம்; white mussell - shell creeper (சா.அக.).

[கீரி → கண்ணி.]

கீரிகம் *kirigam,* பெ.(n.) வேப்பிலை; leaves of margosa tree (சா.அக.).

[கீர் → கீரிகம் (பிளந்த கூர்முனை இலைத் தோற்றம் கொண்டது)]

கீரிநங்கை *kirinaṅgai,* பெ.(n.) சிறுயாணங்கை; snake-root; small nangy (சா.அக.).

[கீரி + நங்கை. (சிறியாணங்கை வேர்). கீரி தின்னும் செடி என்பது கருத்தாகச் சொல்லலாம்.]

கீரிநாயகம் *kirināyagam,* பெ.(n.) 1. ஆடுதின்னாப் பாலை; worm-killer. 2. நஞ்சறுப்பான்; country ipecacuanha (சா.அக.).

[கீரி + நாயகம். கீரியைத்தாக்கும் பாம்பின் நஞ்சினைக் குறிக்கும் மூலிகை நாயகம் ஆயிற்று.]

கீரிநோய் *kiri-nōy,* பெ.(n.) வயிற்றுப்பூச்சியால் வருங் குழந்தைநோய் (பாலவா.1044); disease in children arising from thread worms.

[கீரை + நோய்.]

கீரிப்பல் *kiri-p-pal,* பெ.(n.) கூர்மையான சிறுபல்; sharp little teeth as of mungoose.

மறுவ. சீர்ப்பல்

ம. கீரிப்பல்லு

[கீரி + பல்.]

கீரிப்பாம்பு *kiri-p-pāmbu,* பெ.(n.) வயிற்றிலுள்ள ஒருவகைப் பூச்சி; a species of intestinal worms. (W.)

மறுவ. கீரிப்பூச்சி, கீரைப்பூச்சி

ம. கீரிப்பாம்பு

[கீரை + பாம்பு.]

கீரிப்பிள்ளை *kiri-p-pillai* பெ.(n.) உலிலும் வாலிலும் அடர்த்தியான முடியுடையதும் பாம்புக்குப் பகையாக இருப்பதுமான ஒரு விலங்கு; common Indian mungoose, Indian ichreuman.

[கீரி + பிள்ளை.]

அணில், கீரி முதலிய அஃறிணைச் சொற்களோடு 'பிள்ளை' என்னும் சொல்லைச் சேர்த்துக் கூறுவது பண்டை மரபு. அணிற்பிள்ளை, கீரிப் பிள்ளை, கிளி, பூனை ஆகிய நான்கையும் ஓடும் பிள்ளை, பறக்கும் பிள்ளை, நடக்கும் பிள்ளை, இருக்கும் பிள்ளை எனக் குறிப்பது மரபு.

கீரிப்பிள்ளை

கீரிப்புரண்டான் *kiri-p-purandān,* பெ.(n.) ***கீரிப் பூண்டு*** பார்க்க; see *kiri-p-pūndu.*

[கீரி + புரண்டான்.]

கீரிப்பூச்சி *kiri-p-pūcci,* பெ.(n.) ***கீரைப்பூச்சி*** பார்க்க (பாலவா.1046); see *kirai-p-pūcci.*

[கீரைப்பூச்சி → கீரிப்பூச்சி.]

கீரிப்பூச்சு *kiri-p-pūccu,* பெ.(n.) செங்கல் வரிசை களுக்கிடையே பூசப்படும் காரைப்பூச்சு (செங்கை.); cement plastering between rows of bricks.

[கீறு → கீறி → கீரி + பூச்சு.]

கீரிப்பூடு *kiri-p-pūdu* பெ.(n.) ***கீரிப்பூண்டு*** பார்க்க; see *kiri-p-pūndu.*

[கீரி + பூடு.]

கீரிப்பூண்டு *kiri-p-pūndu,* பெ.(n.) பாம்பைக் கடித்த கீரி அதன் நஞ்சு தன்னை வருத்தாதிருக்கச் சார்ந்து புரளும் ஒரு பூண்டு; Indian snake-root, belived to be resorted to by the mungoose for getting rid of snake poison.

மறுவ. கீரிப்பூடு, கீரிப்புரண்டான்

[கீரி + பூண்டு.]

கீரிமரம் *kirimaram,* பெ.(n.) நெட்டிலிங்க மரம்; Indian mast tree (சா.அக.).

[கீழி → கீளி → கீரி + மரம்.]

கீரியுள்ளான் *kiri-y-ullān,* பெ.(n.) உள்ளான் வகை; a kind of snipe, as resembling a mungoose.

[கீரி + உள்ளான்.]



கீரியுள்ளான்

கீரிராசி *kiri-rāsi,* பெ.(n.) சுறுசுறுப்பில்லாது மிகப்பருத்துள்ள குதிரை வகை (அகுவசா.14); a species of horse characteristically sluggish.

[கீழி → கீரி + ராசி.]

கீருகண்ணி *kiru-kanni,* பெ.(n.) வெள்ளைக் காக்கணம்; white mussell-shell creeper (சா.அக.).

[கீறு → கீரு + கண்ணி.]

கிருகம்பளி *kiru-kambaḷi,* பெ.(n.) பீர்க்கு; sponge-gourd (சா.அக.).

[கீறு → கீரு + கம்பளி.]

கிருடன்மூலி *kiruḍaṉ-mūli,* பெ.(n.) துளசி; holy basil (சா.அக.).

[கலுழன் → கருடன் → கிருடன் → கீருடன்.]

கீரை *kīrai,* பெ.(n.) 1. தோட்டங்களில் வளர்க்கப் படும் செடியின் அல்லது முருங்கை, அகத்தி ஆகிய மரங்களின்; greens, pot-herbs, vegetables. *"அங்குழைக் கீரையடகு மிசையினும்" (பு.வெ.10; முல்லைப். 8).* 2. இலைக்கறி பொது; common name for greens.

மறுவ. அடகு, இலைக்கறி.

ம.சீர; க.கீரை, கிரெ; **தெ.**கீர,கிரெ; **கோத.**கீர்; ஆட.கீரப்; பட.கிரெ.

Aust. kirra (leaf).

[குல் - முளைத்தல், தோன்றுதல். குல் → கில் → கீல் → கீர் → கீரை.]

இனவகைகள்: 1.அறைக்கீரை 2. குப்பைக்கீரை 3. செந்தண்டுக் கீரை 4. சிறுகீரை 5. குமட்டிக் கீரை 6. கோழிக் கீரை 7. துடுப்புக் கீரை 8. பருப்புக்கீரை 9. பறட்டைக் கீரை 10. பிண்ணாக்குக்கீரை 11. முள்ளிக்கீரை 12. வள்ளைக் கீரை 13. அகத்திக்கீரை 14. பின்னைக் கீரை 15. புளியாரைக்கீரை 16. புளிச்சைக் கீரை 17. முளைக் கீரை 18. புளிச்சிறுகீரை எண் 15ல் உள்ளபடியே 19.பொன்னாங்கண்ணி 20. கரிசலாங்கண்ணி 21. ஆரைக்கீரை 22. பசலைக் கீரை 23. சோகிக்கீரை 24. வெந்தயக் கீரை 25. மணித் தக்காளிக்கீரை 26. காசினிக்கீரை 27. சாணாக்கிக்கீரை இன்னொரு வகை 28. புதினாக்கீரை 29. கறிவேப்பிலை 30. பூங்கீரை 31. முக்குளிக்கீரை 32. பலவகைக்கீரை அல்லது கலவைக் கீரை 33. தண்டுக்கீரை 34. தாதுவளைக்கீரை 35. பாற்சோற்றிக்கீரை அம்மான் பச்சரிசி 36. பண்ணைக் கீரை 37. காய்ச்சரைக் கீரை 38. மான்கீரை 39. துத்துக்கீரை 40. விழுதிக்கீரை 41. முருங்கைக் கீரை அல்லது காய்க்கீரை 42. பொடு தலைக்கீரை, 43. முசுமுசுக்கைக்கீரை 44. சிகப்புத் தோட்டக்கீரை 45. குள்ளந்தண்டுக் கீரை 46. சிறுபசலைக் கீரை 47. உமரிக்கீரை 48. மணலிக்கீரை 49. சுக்கங்கீரை 50. வல்லாரைக்கீரை (சா.அக.).

கீரைக்கலவை *kīrai-k-kalavai* பெ.(n.) பல கீரை களின் கலவை; a mixture of several greens (சா.அக.).

[கீரை + கலவை.]

கீரைக்காரன் *kīrai-k-kāraṉ* பெ.(n.) கீரையைப் பயிரிட்டு விற்போன்; cultivator and seller of pot-herbs.

[கீரை + காரன்.]

கீரைக்காரி *kīrai-k-kāri,* பெ.(n.) கீரைவிற்பவள்; seller of pot-herbs.

[கீரை + காரி.]

கீரைக்குமட்டி *kīrai-k-kumaṭṭi* பெ.(n.) குமட்டிக்கீரை, a variety of greens (சா.அக..).

[கீரை + குமட்டி.]

கீரைகடை—தல் *kīrai-kaḍai-,* 2 செ.கு.வி. (v.i.) ***கீரைமசி—,*** பார்க்க see *kīrai-maši-,*

[கீரை + கடை.]

கீரைச்சிறுமி *kīraiccirumi,* பெ.(n.) சிறுகீரை; field spinach (சா.அக.).

[கீரை + சிறுமி.]

கீரைத்தண்டு *kīrai-t-taṇḍu,* பெ.(n.) உணவுக்குப் பயன்படும் கீரையின் தண்டு (பதார்த்த. 584); common spinach.

[கீரை + தண்டு.]

கீரைத்தண்டுபோலாதல் *kirai-t-tandu pōlātal,* (vbl.n.) மரணக்குறியாக உடம்பு சில்லிட்டுப் போதல்; body becoming chill as a symptom of death (சா.அக.).

[கீரைத்தண்டு + போல் + ஆதல்.]

கீரைநார்ப்பட்டு *kirai-nār-p-pattu,* பெ.(n.) பூசைக் காலங்களில் உடுத்திக்கொள்ளப் பயன்படும் பட்டுச் சேலை வகை; a kind of silk, sometimes worn when performing religious duties.

[கீரை + நார் + பட்டு.]

கீரைப்பாம்பு *kirai-p-pambu,* பெ.(n.) ***கீரைப்பூச்சி*** பார்க்க; see *kirai-p-pūcci.*

[கீரை + பாம்பு.]

கீரைப்பூச்சி *kirai-p-pūcci,* பெ.(n.) வயிற்றி லுண்டாகும் நாகப்பூச்சி, thread worms.

[கீரை + பூச்சி.]

கீரைமசி—த்தல் *kirai-maśi-,* 4 செ.கு.வி. (v.i.) வெந்த உணவுக்கீரையை மத்தாற் கடைந்து கூழாக்குதல்; to mash pot-herbs to pulp.

[கீரை + மசி.]

கீரைமணி *kirai-mani,* பெ.(n.) கழுத்திலணியும் ஒருவகைச் சிறு பாசிமணி; tiny glass beads of various colours, worn on the neck by poor women and children dist, fr. pāla-mani. ***"அயலார் புன் கீரைமணி பூண்டாலு மென்கண் பொறுக்காது"*** *(அருட்பா.i. விண்ணப்.359).*

[கீரை + மணி.]

கீரைமணியட்டிகை *kirai-mani-y-attigai,* பெ.(n.) சிறு பொன்மணிகளுள்ள கழுத்தணிவகை; woman's necklace of tiny gold beads.

[கீரைமணி + அட்டிகை.]

கீரைமீன் *kirai-min,* பெ.(n.) ஒருவகைச் சிறிய மீன்; a small kind of fish.

[கீரை + மீன்.]

கீல்[1] *kil,* பெ.(n.) 1. உடற்பொருத்து (தைலவ.தைல.); joint in animal body. 2. பெட்டியின் மூடி, கதவு முதலியவற்றைத் திறந்து மூடுவதற்குப் பயன்படுத்தும் மாழை (உலோகப்)பட்டை; hinge.

[குல் → கில் → கீல்]

கீல்(லு)—தல் *kil-,* 9 செ.குன்றாவி. (v.t.) கிழித்தல் (சூடா.); to rend, tear.

ம. கீள்; க. சீள்

[கீள் → கீல்]

கீல்கீலாய் *kil-kilāy,* வி.எ.(adv.) சந்துசந்தாய்; joint by join, piece meal.

[கீல் + கீலாய்.]

கீல்சவ்வு *kilcavvu,* பெ.(n.) மூட்டுகளில் இருக்கும் சவ்வு; synovial membrane (சா.அக.).

[கீல் + சவ்வு.]

கீல்நெட்டை *kilnettai,* பெ.(n.) கீலிலுண்டாகும் நெட்டைச் சத்தம்; crackling of the joints (சா.அக.).

[கீல் + நெட்டை.]

கீல்நோய் *kilnōy,* பெ.(n.) மூட்டுகளுக்கு ஏற்படும் பலவகை நோய்கள்; diseases in common of the joints (சா.அக.).

[கீல் + நோய்.]

கீல்முளை *kil-mulai* பெ.(n.) கதவில் கீல்தாங்கும் முளை; pivot on which a hinge turns.

[கீல் + முளை.]

கீரை வகைகள்

அரைக்கீரை

புளிச்சக் கீரை

பொன்னாங் கண்ணிக் கீரை

அகத்திக் கீரை

மணித்தக்காளிக் கீரை

கீல்வாதம் *kīl-vādam,* பெ.(n.) ***கீலூதை*** பார்க்க; see *kīlūdai.*

[கீல் + வாதம் (ஊதை).]

கீல்வீக்கம் *kīl-vikkam,* பெ.(n.) உடற்பொருத்து, வீங்குகை; synovitis.

[கீல் + வீக்கம்.]

கீல்லூதை *kīl-ūtai,* பெ.(n.) உடற்பொருத்துகளில் உண்டாகும் ஊதை நோய்; rheumatism as in the joints.

[கீல் + ஊதை.]

கீலகம்[1] *kīlagam,* பெ.(n.) 1. ஆணி; pin, bolt, wedge. 2. பொருத்து; joint, juncture (e).

[கீல் → கீலகம்.]

கீலகம்[2] *kīlagam* பெ.(n.) தந்திரம்; tact, shrewdness, subtlety. *"கீலகமறிந்து பேசுகிறவன்" (சங்.அக.).*

Mhr.gilla.

[கீல் → கீலகம்.]

கீலகாவகம் *kīlakāvagam,* பெ.(n.) துடரிப்பூடு; prickly buch thorn (சா.அக.).

[கீல் – கீல + காவகம்.]

கீலச்சு *kīlaccu,* பெ.(n.) உருவமுண்டாக்கும் கட்டளையச்சு (C.E.M.); mandrel.

[கீல் : பொருத்து – கீல் + அச்சு.]

கீலசையாமை *kīl-asaiyāmai,* பெ.(n.) கீல்பிடிப்பு; stiff-joints (சா.அக.).

[கீல் + அசையாமை.]

கீலம்[1] *kīlam* பெ.(n.) 1. ஆணி (அக.நி.); nail, pin, spike. 2. சுடர்க்கொழுந்து; *lambent, shooting* flame. *"மலைக்கொடி பாலாகீலா" (குமர.பிர. முத்துக்குமார. பிள். தால.9).*

ம. கீலகம்; **Skt.**kīla

[கீல் → கீலம்.]

கீலம்[2] *kīlam,* பெ.(n.) பிசின்; resin. *"வெண்பாதிரி யின் கீலம்" (தைலவ.தைல.135).*

ம. கீலகம் **Skt.**krishira; **Pkt.**cila

[கீல் → கீலம்.]

கீலம்[3] *kīlam,* பெ.(n.) 1. கிழிதுண்டம்; shred, piece torn off or hanging in strips. *"கீலங்கீலமாய்க் கிழிக்க" (யாழ்ப்.).* 2. வெட்டு (வின்.); incision for salting, cutting.

[கீல் → கீலம்.]

கீலம்கீலமாயறுத்தல் *kīlam-kīlamāy-aru-,* செ.கு.வி. (v.i.) கூறுகூறாய் அறுத்தல்; making several incisions alternatively in a fish for pickling salting, etc., (சா.அக.).

[கீலம் + கீலம் + ஆய் + அறு-.]

கீலாணி *kīl-āṇi* பெ.(n.) கதவு முதலியவற்றின் கீலைப் பற்றியிருக்கும் ஆணி (C.E.M.); hinge nail.

[கீல் + ஆணி.]

கீலாரி *kīlāri,* பெ.(n.) இடையர் தலைவன் (E.T.); headman of the shepherd caste.

க. கிலாரி, கிதாரி; **Mhr.**khillāri

[கூழ் + ஆள் + இ – கூழாளி → கூழாரி → கீலாரி (கொ.வ.). கூழ் ஊற்றிய மூங்கிற் குழாயைத் தோளில் சுமப்பவன். கூழாரிடையன் என்பது இலக்கிய வழக்கு.]

கீலாலம் *kīl-ālam,* பெ.(n.) 1. நீர் (திவா.); water. 2. குருதி (சூடா.); blood. 3. காடி (சூடா.); vinegar.

4. தேன் ; honey. 5. தித்திப்புக் குடிநீர்; a sweet beverage (சா.அக.).

ம. கிலாலலம்; Skt. *kilāla.*

[கில் + ஆலம். ஆலம் = நீர்.]

kilāla, blood. If this word is composed of **kila** and **āla**, the first meaning might be "red water", **kila** being formed of **D. ken**, etc., "redness", and **āla** being "water" (see s. D. **āli1**, and cf. D. **kennir**). The Nn. (54) gives also the meaning of "redness" to **kilāla**, and Mr. (47) that of "a blazing flame". The last one is that of Sk. **kila, kilā,** fire, flame. *kiśa*, the sun, belongs to the same D. root; cf. especially D. **kisu2**, (**kiḍi1**); - **kilāla**, a sweet beverage, reminds one of D. *siyāla* (si, sweet, **āla**, water), the sweet water of the cocoa-nut (K.K.E.D. XVII).

கிலாலயம் *kilālayam,* பெ.(n.) தோதகத்தி; Malabar black wood (சா.அக.).

[கிலாலம் → கிலாலயம்.]

கிலி *kili,* பெ.(n.) தந்திரமுள்ளவள்; artfulttwoman. *"காமுகர் மேலிட் டேபெறி கிலிகள்" (திருப்பு.569).*

Mhr. gillā

[கிள்ளாடி → கிள்ளி → கில (கொ.வ.).]

கீழ்[1](ழு)—தல் *kil-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கிழித்தல்; to rend, tear. *"பழம்விழுத்து... பஃறாமரை கீழும்" (திருக்கோ. 249).* 2. பிளத்தல்; to rive, split, cleave. *"உறுகால் வரைகீழ்ந்தென" (சீவக.1157).* 3. சிதைத்தல்; to destroy, demolish. *"கிழமையைக் கீழ்ந்திடா நட்பு" (குறள், 801).* 4. தோண்டுல்; to dig. *"வேரொடுங் கீழ்ந்து வௌவி" (சீவக.2727).* 5. மீறுதல்; to break, as a promise, to transgress, as a command. *"தாய்வார்த்தை கீழாத வாண்மை" (விநாயகபு.21:19).* 6. பறியுண்ணுதல்; to be uprooted, dislocated. *"மரங்கள் வேரொடுங் கீழ்ந்தென" (சூளா.சீய.144).*

க. கீழ்

[கீள் → கீழு-.]

கீழ்[2](ழு)—தல் *kil,* 4 செ.கு.வி. (v.i.) 1.இழுத்தல்; to pull. 2. கோடு கிழித்தல்; to draw, as a line, a diagram.

[கீள் → கீழ்-.]

கீழ்[3] *kil,* (பெ.(n.) 1. கீழிடம்; place or space below. 2. அடிப்பகுதி; bottom. 3. மண்ணுக்குள் இருக்கும் பகுதி; under earth. *"நள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளும்" (திருவாச. 5:46).* 4. கிழக்கு; east (சூடா). 5. பள்ளம் (சூடா.) ; pit. 6. முற்காலம்; former time. *"கீழ்ச் செய்தவத்தாற்கி கீழியீடு நேர்பட்டு" (திருவாச. 40 : 9).* 7. குற்றம் (பிங்.); fault, blemish, defect. 8. கயமை; inferiority, baseness, viciousness. 9. இழிந்தவன்; low caste man; vicious person. *"கீழ் தன்மனம் புரிந்த வாறே மிகும்" (நாலடி.341).* 9. நிலம்; earth.

ம., க. கீழ்; து. கீடு

[கீள் → கீழ்]

கீழ்[4] *kil,* வி.எ. (adv.) கீழே; down. மாடத்திலிருந்து கீழிறங்கினாள் (உ.வ.).

[கீள் → கீழ்.]

கீழ்[5] *kil,* இடை (part.) ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு (தொல்.சொல்.83); locative case ending.

[கீள் → கீழ்.]

கீழ்[6] *kil,* பெ.(n.) 1.மறதி (சூடா.); forgetfulness. 2. கடிவாளம் (வின்.) ; bridle, rein, bit.

K. kil

க. கீழ்

[கீள் → கீழ்.]

சென்னை-600 008

கீரை வகைகள்

கண்டங்கத்தரிக் கீரை

தண்டுக் கீரை

முள்ளுக் கீரை

முளைக் கீரை

பாளைக் கீரை

சிறு கீரை

கீழ்க்கட்டு[1] *kī*ḻ*-k-kaṭṭu* பெ.(n.) வீட்டின் தரைத்தளம்; ground floor. இவ் வீட்டுக் கீழ்க்கட்டில் வீட்டின் உரிமையாளர் குடியிருக்கிறார் (உ.வ.).

மறுவ. கீழ்வீடு

[கீழ் + கட்டு.]

கீழ்க்கட்டு[2] *kī*ḻ*-k-kaṭṭu,* பெ.(n.) அச்சுப்பல்லைத் தீட்டிச் சமப்படுத்த உதவும் கத்தி ; file.

[கீழ் + கட்டு.]

கீழ்க்கடல் *kī*ḻ*-k-kaḍal* பெ.(n.) கிழக்கு திசையிலுள்ள கடல்; the eastern sea.

க. கிழ்கடல்

[கீழ் + கடல்.]

கீழ்க்கடை *kī*ḻ*-k-kaḍai,* பெ.(n.) 1. கடந்துபோன நாள்கள்; bygone years, the past. கீழ்க்கடையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பல (உ.வ.). 2. இழிந்தது; that which is mean-base. 3. அடிப்பாகம்; the lower side, the under side.hat which is mean, base.

ம. கிழுக்கட, கீழ்க்கட; க. கெளகடெ

[கீழ் + கடை.]

கீழ்க்கண் *kī*ḻ*-k-kaṇ,* பெ.(n.) 1. கீழ்ப்பார்வை; look from under the eyelids, ogling, indirect or sly look, looking askance. கீழ்க்கண்ணாற் பார்க்கிறான் (உ.வ.). 2. கண்ணின் கீழ்ப்பக்கம்; lower part of the eye, part below the pupil. கீழ்க்கண்ணிற் கட்டி வெடித்திருக்கிறது (உ.வ.).

[கீழ் + கண்.]

கீழ்க்கண்பார்வை *kī*ḻ*-k-kaṇ-pārvai,* பெ.(n.) கீழ்ப்பார்வை; down look, a squint or awry look, looking askance (சா.அக.).

மறுவ. கீழ்க்கண்நோக்கு

[கீழ் + கண் + பார்வை.]

கீழ்க்கணக்கு *kī*ḻ*-k-kaṇakku,* பெ.(n.) 1. அடி நிமிர்வில்லாச் செய்யுள் பலவற்றால் அறம் பொருளின்பங்களைப்பற்றிக் கூறும் நூல்வகை (பன்னிருபா.346); short poems mostly in veṇbā metre on any of the three topics viz., அறம் பொருள், இன்பம் dist. fr. mēṟ-kaṇakku. 2. கீழ்வாயிலக்கம் (யாழ்.அக.); fraction. 3. உதவிக் கணக்கன் (இ.வ.) ; assistant accountant.

ம. கீழக்கணக்கு

[கீழ் + கணக்கு.]

கீழ்க்கணக்கு நூல்கள் 18. அவை

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்

பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்

இன்னிலை காஞ்சியுட னேலாதி யென்பவே

கைந்நிலையோ டாங்கீழ்க் கணக்கு.

கீழ்க்கணவாய்மலை *kī*ḻ*-k-kaṇavāy-malai,* பெ.(n.) கிழக்குத் தொடர்ச்சி மலை; the Eastern Ghats.

[கிழக்கு + கணவாய் + மலை.]

கீழ்க்கணு *kī*ḻ*-k-kaṇu,* பெ.(n.) காலின் கீழாகவுள்ள கணு அல்லது காற்பொருத்து; the joint which connects the foot and the ankle (சா.அக.).

[கீழ் + கணு.]

கீழ்க்கணுவெலும்பு *kī*ḻ*-k-kaṇu-v-elumbu,* பெ.(n.) கால் கணுவிலுள்ள எலும்பு; ankle bone (சா.அக.).

[கீழ் + கணு + எலும்பு.]

கீழ்க்கது *kī*ḻ*-k-kadu,* பெ.(n.) 1. கட்டியின் அடிப்பாகம்; the bottom of an abscess or wort. 2. கீழ் வெடிப்பு; the fissure or rupture underneath the skin, internal rupture (சா.அக.).

[கீழ் + கது.]

கீழ்க்கதுப்பு *kīḻ-k-katuppu,* பெ.(n.) கன்னத்துக்குக் கீழுள்ள பகுதி; the lower part of the cheek (சா.அக.).

[கீழ் + கதுப்பு]

கீழ்க்கதுவாய்[1] *kīḻ-k-katuvāy,* பெ.(n.) கட்டியின் அடிப்பாகத்தில் உண்டாகும் துளை; the opening at the bottom of an abscess. 2. வெடிப்பின் வாய்; the face of a fissure (சா.அக.).

[கீழ் + கது + வாய்.]

கீழ்க்கதுவாய்[2] *kīḻ-k-katuvāy* பெ.(n.) **கீழ்க்கதுவாய்த் தொடை** பார்க்க (இலக்.வி.722); see *kil-k-katuvai-toḍai*

[கீழ் + கதுவாய்.]

கீழ்க்கதுவாய்த்தொடை *kīḻ-k-katuvāy-t-toḍai,* பெ.(n.) அளவடியுள் ஈற்றயற் சீர்க்கணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது (இலக்.வி.723); versification which requires mōṉai, etc., to occur in every foot of a line except the penultimate.

மறுவ. கீழ்க்கதுவாய்

[கீழ் + கதுவாய் + தொடை.]

கீழ்க்கம்பு *kīḻ-k-kambu,* பெ.(n.) கோயில் கட்டடத்தை அழகுப்படுத்தும் வகைகளுள் ஒன்று (கட்டடம்.); a kind of decoration of temple.

[கீழ் + கம்பு.]

கீழ்க்கருப்பை *kīḻ-k-karuppai,* பெ.(n.) கருப்பையின் கீழ்ப்பாகம் அதாவது கழுத்து; the neck or the lower part of the uterus, cervix uteri (சா.அக.).

[கீழ் + கருப்பை.]

கீழ்க்கரையாறு *kīḻ-k-karaiyāru,* பெ.(n.) 1.கீழ்க் கரையில் பிரியும் ஆறு; river diverting from the east bank.

[கீழ் + கரை + ஆறு.]

கீழ்க்கலனை *kīḻ-k-kalaṉai,* பெ.(n.) ஊர்த்தொழிலாளி; village artisan. *"தச்சர், கொல்லர், தட்டார், கோலியர் உள்ளிட்ட கீழ்க்கலனைகளும்"* (S.I.I.IV,30).

[கீழ் + கலனை.]

கீழ்க்கவடி *kīḻ-k-kavaḍi* பெ.(n.) பரவர் விளையாடும் விளையாட்டு வகை (பரவ.); a game.

[கீழ் + கவடி.]

கீழ்க்கவிசை *kīḻ-k-kavišai,* பெ.(n.) அடிவயிற்றி லேற்படும் கவிசை (கட்டி); abdominal ascites (சா.அக.).

[கீழ் + கவிசை.]

கீழ்க்காணி *kīḻ-k-kāṉi,* பெ.(n.) 1/25600 என்னும் ஒரு கீழ்வாயிலக்கவெண்; a fraction.

ம. கீழ்க்காணி

[கீழ் + காணி.]

கீழ்க்காது *kīl-k-kādu,* பெ.(n.) காதடி (வின்.); bottom part of the ear.

[கீழ் + காது.]

கீழ்க்காய்நெல்லி *kīḻ-k-kāy-nelli,* பெ.(n.) கீழாநெல்லி; a small plant with slenler green main branches.

ம. கிழுகாநெல்லி

[கீழ் + காய் + நெல்லி.]

கீழ்க்காய்நெல்லி

கீழ்க்கால் *kil-k-kāl,* பெ.(n.) 1/1280 என்னும் கீழ்வாயிலக்கவெண்; a fraction.

ம. கீழ்க்கால், கீழகால்

[கீழ் + கால்.]

கீழ்க்காற்று *kil-k-kārru,* பெ.(n.) 1. கீழ்த்திசை யிலிருந்து வீசும் காற்று;westward wind. 2. மலவாய்க் காற்று; gas in the intestine escaping through the anus, fart (சா.அக.).

க. கிக்காளி, கிர்காளி, கீளுகாளி

[கீழ் + காற்று.]

கீழ்க்குடுமி *kil-k-kudumi,* பெ.(n.) கதவின் கீழ்ப் பக்கத் தமைந்த குடுமிக்கீல்; lower pin of a door serving as a hinge.

[கீழ் + குடுமி.]



கீழ்க்குடுமி

கீழ்க்குத்தகை *kil-k-kuttagai,* பெ.(n.) குத்தகை யெடுத்தவனிடம் எடுக்குங் குத்தகை; sub-tenancy, sub-lease.

U.guttā; ம. கீழ்க்குத்தக

[கீழ் + குத்தகை.]

கீழ்க்குத்தகைக்காரன் *kil-k-kuttagai-k-kāran,* பெ.(n.) கீழ்க்குத்தகை எடுத்துள்ளவன்; a subordinate holder of a monopoly or contract.

ம. கீழ்க்குத்தகக்காரன்

[கீழ் + குத்தகை + காரன்.]

கீழ்க்குநாளம் *kilkku-nālam,* பெ.(n.) கீழ்ப் பாகத்திய உறுப்புகளின் அரத்தத்தை இதயத் திற்குக் கொண்டுபோகும் பெரிய அரத்தக்குழாய்; the large blood vessel which transmits the blood from the lower regions of the body to the heart-inferior venacava (சா.அக.).

[கீழ் + கு + நாளம்.]

கீழ்க்குமிழி *kil-k-kumili,* பெ.(n.) ஒரு வாய்க்காலின் நீர் அதன் குறுக்கே செல்லும் மற்றொரு வாய்க்காலின் கீழாகச் செல்லும்படி அமைத்த கட்டட வேலை (தஞ்சை.); syphon in the bed of a channel. கீழ்க்குமிழி அமைக்கும் வேலை ஒருசிலருக்கே கைவரும் (உ.வ.).

மறுவ. கீழ்ப்போக்கி

[கீழ் + குமிழி.]

கீழ்க்குரல் *kil-k-kural* பெ.(n.) கீழிறங்கிய குரல்; feeble voice, low tone, bass, under tone.

ம. கீழ்க்குரல்

[கீழ் +குரல்.]

கீழ்க்குரல்வளை *kil-k-kural-valai,* பெ.(n.) குரல் வளையின் அடிப்பக்கம்; the lower, or the hinder portion of the larynx (சா.அக.).

[கீழ் + குரல் + வளை.]

கீழ்க்குலம் *kī-k-kulam,* பெ.(n.) தாழ்ந்த குடியினர்; people of low status.

ம. கீழ்க்குலம்

[கீழ் +குலம்.]

கீழ்க்குலம் *kī-k-kulam,* பெ.(n.) இழிகுலம் (நன்.226, உரை); low caste.

க., ம. கீழ்சாதி

[கீழ் +குலம்.]

கீழ்க்குறண்டி *kī-k-kuraṇḍi,* பெ.(n.) பூடுவகை (M.M.227) ; a lowly flowering thorny shrub.

[கீழ் + குறண்டி.]

கீழ்க்கையொப்பம் *kī-k-kaioppam,* பெ.(n.) பிறர் எழுதியதை யொப்புக் கொண்டு இடும் கையெழுத்து பாண்டி; counter-signature.

[கீழ் + கை + ஒப்பம்.]

கீழ்கட்டை *kī-k-kaṭṭai,* பெ.(n.) மேழியைக் கலப்பையுடன் இணைக்கும் கட்டை ; a nail like pole connecting the plough handle with the plough.

[கீழ் + கட்டை.]

கீழ்காற்று *kī-kāṟṟu,* பெ.(n.) 1. கிழக்கினின்று வீசுங்காற்று; Easterly wind (திவா.). 2. ***காற்று***[3] பார்க்க; see *kāṟṟu.*

[கீழ் + காற்று.]

கீழ்ச்சாதி *kī-c-cāti,* பெ.(n.) ***கீழ்க்குலம்*** பார்க்க; see *kī-k-kulam.*

[கீழ் + சாதி.]

கீழ்த்தட்டு *kī-t-taṭṭui,* பெ.(n.) தாழ்ந்த நிலை;interior position or status.

[கீழ் + தட்டு.]

கீழ்த்தரம் *kī-t-taram,* பெ.(n.) தாழ்ந்தபடி; inferior sort, degree or class. அவன் அவ்வளவு கீழ்த்தரமாக நடப்பானென்று நான் நம்பவில்லை (உ.வ.).

ம. கீழ்த்தரம்.

[கீழ் + தரம்.]

கீழ்த்தலாச்சட்டம் *kī-t-talāccaṭṭam,* பெ.(n.) ஒரு வகைச் சட்டம்; a kind of frame.

[கீழ்த்தலை + சட்டம்.]

கீழ்த்தறி *kī-t-taṟi,* பெ.(n.) தரையை ஒட்டி அமைந்த தறி ; loom at floor level.

[கீழ் + தறி.]

கீழ்த்தாடை *kī-t-tāḍai,* பெ.(n.) 1. அடித்தாடை; lower jaw. 2. மோவாய்க்கட்டை; the point of the under jaw, chin (சா.அக.).

[கீழ் + தாடை.]

கீழ்த்திசை *kī-t-ticai,* பெ.(n.) 1. கிழக்கு (திவா.); East. 2. உலகில் கிழக்காசியப் பகுதி; East Asia oriental. கீழ்த்திசை நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது (உ.வ.).

ம. கீழ்ப்பால்

[கீழ் + திசை.]

கீழ்த்திசையியல் *kī-t-tišai-y-iyal,* பெ.(n.) உலகில் கிழக்கு ஆசியப் பகுதியைச் சார்ந்த மக்களின் வரலாறு கலை முதலியவற்றைப் பற்றிய படிப்பு; area studies of the Orient.

[கீழ் + திசை + இயல்.]

கீழ்த்தோண்டி *kī-t-tōṇḍi,* பெ.(n.) கழுதை விதை மரம்; bloody drop ordure tree (சா.அக.).

[கீழ் + தோண்டி.]

கீழ்நாலுமா *kīḻ-nālu-mā*, பெ.(n.) 1/1600 என்னும் கீழ்வாயிலக்க எண்; a fraction.

[கீழ் + (நான்கு) நாலு + மா.]

கீழ்நிலை *kīḻ-nilai*, பெ.(n.) 1. தாழ்ந்த நிலைமை; low position or status. 2. கீழ்மாடம்; ground floor, lower storey. *"இழிந்து கீழ்நிலை"* *(சீவக.2673)*. 3. நில வறை (பிங்.); underground room, cellar, opp. to mēḻilai.

ம. கீழ்நில

[கீழ் + நிலை.]

கீழ்நீர் *kīḻ-nīr*, பெ.(n.) நிலத்தடி நீரூற்று; underground spring of water.

[கீழ் + நீர்.]

கீழ்நெல்லி *kīḻnelli*, பெ.(n.) ***கீழாநெல்லி*** பார்க்க; see *kīḻānelli*.

ம. கீழ்நெல்லி

[கீழ் + நெல்லி.]

கீழ்நோக்கம் *kīḻ-nōkkam*, பெ.(n.) 1. கீழ்ப்பார்வை; downward look. 2. கீழானவற்றில் மனம் விரும்புகை; vicious tendency, base inclination.

[கீழ் + நோக்கம். கீழ்மை → கீழ் + நோக்கம்.]

கீழ்நோக்கி *kīḻ-nōkki*, பெ.(n.) நேர்வாளம் (மலை.); croton, as a purgative.

[கீழ் + நோக்கி.]

கீழ்நோக்கித்திட்டு-தல் *kīḻ-nōkki-t-tiṭṭu-*, 12 செ.குன்றாவி. (v.t.). இழிசொற்கூறி வைதல் (வின்.); to abuse with obscene language.

[கீழ் + நோக்கி + திட்டு.]

கீழ்நோக்கிராசி *kīḻ-nōkki-rāśi*, பெ.(n.) ***கீழ்நோக்கி ஓரை*** பார்க்க; see *kīḻ-nokku-ōrai*.

[கீழ் + நோக்கி + ராசி.]

கீழ்நோக்கு – தல் *kīḻ-nōkku-*. 15 செ.கு.வி (v.i.) 1. கீழ்முகமாதல்; to look down tend downward. 2. தரையின் கீழாதல்; to be beneath the surface, under-ground. 3. தாழ்ந்த நிலைக்குச் செல்லுதல்; to be on the decline as wealth; to go to ruin, decay, deteriorate. 4. கீழானவற்றில் மனஞ் செல்லுதல்; to be sensual, to have low or base desires. 5.கழிச் சலாதல்; to have diarrhoea.

[கீழ் + நோக்கு–.]

கீழ்நோக்குஓரை *kīḻ-nōkku-ōrai*, பெ. (n) நிலத்தில் நடுகை, கிணறு வெட்டுகை முதலியவற்றுக்கேற்ற கடகம், நளி (விருச்சிகம்) என்ற ஓரைகள் (வீடும.உள்.127,உரை.); lit., a zodiacal sign with is favourable for plant esculent roots, sinking wells, etc., of which there are two viz., karkkadagam and viruccigam.

[கீழ் + நோக்கு + ஓரை.]

கீழ்நோக்குநாள் *kīḻ-nōkku-nāḷ*, பெ.(n.) கிணறு வெட்டுகை முதலியவற்றுக்கேற்ற உடுக்கள் (பெரியவரு.37); lit., constellations or nakšatras that look downward, constellations that are favourable for planting esculent roots and sinking wells, numbering 9.

[கீழ் + நோக்கு + நாள்.]

கீழ்ப்பகுதி *kīḻ-p-pagudi*, பெ.(n.) ***கீழ்ப்பாகம்*** பார்க்க; see *kīḻ-p-pāgam*.

[கீழ் + பகுதி.]

கீழ்ப்பட்டவர் *kīḻ-p-paṭṭavar*, பெ.(n.) தாழ்ந்தவர் (உ.வ.); inferiors, social inferiors.

[கீழ் + பட்டவர்.]

கீழ்ப்படி-தல் *kīḻ-p-paḍi-,* 2 செ.கு.வி. (v.i.) அடங்கி நடத்தல்; to submit, yield, obey. நீதிமன்றத்தின் ஆணைக்குக் கீழ்ப்படியாமல் இருக்கமுடியாது (உ.வ.).

ம. கீழ்பற்றுக; க. கிழ்படு

[கீழ் + படி.]

கீழ்ப்படிவு *kīḻ-p-paḍivu,* பெ.(n.) அடங்கிப் பணிகை; submission, obedience.

ம. கீழ்ப்படி

[கீழ் + படிவு.]

கீழ்ப்படு[1]-தல் *kīḻ-p-paḍu-.* 20 செ.கு.வி. (v.i.) 1. அடங்குதல்; to submit, succumb, yield. 2. இழிவுபடுதல்; to be degraded, mean, base, to become degenerate.

ம. கீழ்ப்பெருக

[கீழ் + படு.]

கீழ்ப்படு[2]-த்தல் *kīḻ-p-paḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) கீழ்மைப் படுத்துதல்; to subdue, put down. *"கிறியெலா மிகக் கீழ்ப்படுத்தாய்" (திருவாச.5:32).*

[கீழ் + படு.]

கீழ்ப்பயிர் *kīḻ-p-payir,* பெ.(n.) 1. பயிருக்குக்கீழ் உண்டாகும் பயிர் (வின்.); grain or herbage in the shade of, or overtopped by, another plant; undergrowth. 2. புன்செய்ப்பயிர்; dry crop, as inferior.

[கீழ் + பயிர்.]

கீழ்ப்பல்முளை-த்தல் *kīḻ-p-pal-muḷai-,* 4 செ.கு.வி. (v.i.) குழந்தைகட்கு முதலாகப் பாற்பல் முளைத்தல்; the dentition of stomach tooth in children (சா.அக.).

[கீழ் + பல் + முளை.]

கீழ்பாகம் *kīḻ-p-pāgam,* பெ.(n.) காழ் உள்ள பகுதி; the lower portion.

க. கெளடளக

[கீழ் + பாடு.]

கீழ்ப்பாடு *kīḻ-p-pāḍu,* பெ.(n.) கீழ்ப்பக்கம் (வின்.); lower side, lower part.

ம. கீழ்பாடு; க. கித்தட்டு.

[கீழ் + பாடு.]

கீழ்ப்பாதி *kīḻ-p-pāti* பெ.(n.) 1. அடியிலுள்ள பாதி; the lower half. 2. குடிவாரம்; tenant's share of the crop. *"சந்ததி சந்ததியே கீழ்ப்பாதி அனுபவிப்ப தாக" (T.A.S i,6).*

ம. சீழ்ப்பாதி

[கீழ் + பாதி.]

கீழ்ப்பாய்ச்சல் *kīḻ-p-pāyccal,* பெ.(n.) மலசிறுநீர் இறக்கம்; the descent of faces and urine, running down of excretions (சா.அக.).

[கீழ்மை – கீழ் + பாய்ச்சல்.]

கீழ்ப்பாய்ச்சி[1] *kīḻ-p-paycci,* பெ.(n.) ஆடவர் கீழ்வேட்டியைக் கட்டிக்கொள்ளும் முறை; fashion, among men, of tying cloth so that one corner is tucked behind while the other hangs down.

மறுவ. மூலைக்கச்சங்கட்டுதல்

[கீழ் + பாய்ச்சி.]

கீழ்ப்பாய்ச்சி[2] *kīḻ-p-pāycci,* பெ.(n.) எருவாய் வழியாக நீர், உணவு அல்லது மருந்தைப் பாய்ச்சுங் கருவி ; a clyster employed for conveying water, nourishment or medicine through the rectum. (சா.அக.).

[கீழ் + பாய்ச்சி.]

கீழ்ப்பாய்ச்சிக்கட்டு-தல் *kīḻ-p-pāycci-k-kaṭṭu,* 5 செ.கு.வி.(v.i) மூலைக் கச்சங்கட்டுதல்; to draw one's cloth up between the legs and tuck it behind.

[கீழ் + பாய்ச்சி + கட்டு.]

கீழ்ப்பார்வை *kīḻ-p-pārvai,* பெ.(n.) 1. கீழ்நோக்குகை; low, cast down. 2. வஞ்சகப் பார்வை; deceptive, trickish look, as of an elephant.

[கீழ் + பார்வை.]

கீழ்ப்பால் *kīḻ-p-pāl,* பெ.(n.) கீழ்ப்பால் பிரிவினர்; low caste. *"கீழ்ப்பா லொருவன் கற்பின்" (புறநா.183).*

ம. கீழ்ப்பால்

[கீழ் + பால்.]

கீழ்ப்பாவல் *kīḻ-p-pāval,* பெ.(n.) மரக்கலத்தின் ஓர் உறுப்பு; the lower spare of a dōney the top of which is attached to the sail to keep it to the wind.

[கீழ் + பாவல்.]

கீழ்ப்பாறை *kīḻ-p-pāṟai* பெ.(n.) கீழறை (வின்.); sub-terranean cell or cavern.

[கீழ் + பாறை.]

கீழ்ப்பிள்ளை *kīḻ-p-piḷḷai,* பெ.(n.) முதுமரங்களின் கீழ்நடும் தெங்கு முதலியவற்றின் கன்று (யாழ். அக.); young coco-palm reared underneath old palms.

[கீழ் + பிள்ளை.]

கீழ்ப்புரைச்சவ்வு *kīḻ-p-purai-c-cavvu,* பெ.(n.) கருப்பையில் கரு உயிர்ப்பு வரையில் கருவைச் சுற்றிக் கொண்டிருக்கும் நாதப்பை; a temporary coat surrounding the ovum produced at the period of conception and thrown off from the uterus after parturition (சா.அக.).

[கீழ் + புரை + சவ்வு.]

கீழ்ப்புறம் *kīḻ-p-puṟam* பெ.(n.) 1. கீழ்ப்பக்கம்; lower side. 2. கப்பலின் சாய்வுப்பக்கம் (வின்.); the leeward or the leaning side of a vessel.

[கீழ் + புறம்.]

கீழ்ப்போக்கி *kīḻ-p-pōkki,* பெ.(n.) ***கீழ்க்குமிழி*** பார்க்க; see *kīḻ-k-kumiḻi.*

[கீழ் + போக்கி.]

கீழ்புறம் *kīḻ-puṟam* பெ. (n.) 1. தாழ்ந்த பகுதி; the lower side. 2.கிழக்குப் பக்கம்; eastern side.

ம. கீழ்புறம்

[கீழ் + புறம்.]

கீழ்போகம் *kīḻ-pōgam,* பெ.(n.) கிழங்குகளின் விளைவு (யாழ்ப்.); cultivation of edible roots.

[கீழ் + போகம்.]

கீழ்மக்கள் *kīḻ-makkaḷ,* பெ.(n.) 1. ஒடுக்கப்பட்டவர், இழிந்தோர்; low people, the base, the vulgar. *"கீழ்மக்கள் கீழாய சொல்லயக்கால்" (நாலடி. 70).*

[கீழ் + மக்கள்.]

கீழ்மகன் *kīḻ-magaṉ,* பெ.(n.) 1. ஒடுக்கப்பட்டவர், கீழ்ப்பிரிவினர் (சிலப்.15:95); low caste man. 2. இழிந்தவன்; low, mean person. 3. காரி (சனி) (திவா.); saturn.

[கீழ் + மகன்.]

கீழ்மட்டம் *kīḻ-maṭṭam,* பெ.(n.) 1. தாழ்ந்த நிலை; lower status. 2. அடிமட்டம்; base.

[கீழ் + மட்டம்.]

கீழ்மடை *kīḻ-maḍai,* பெ.(n.) 1. கடைமடை; lower most sluice of a tank. *"கீழ்மடைக் கொண்ட வாளையம்" (புறநா.42).* 2. மடைநீர் பாய்தற்குத்

தொலைமான நிலம் (C.G.); land far removed from the sluice, as last-watered opp. to mutal maḍai

[கீழ் + மடை.]

கீழ்மரம் *kīḻ-maram,* பெ.(n.) 1. அச்சுமரம்; axle-tree. *"கீழ்மரத் தியாத்த சேமவச் சன்ன" (புறநா. 102: 5).* 2. பாய்மரத்தின் அடிப்பாகம் (M.Nari.81); lower mast.

[கீழ் + மரம்.]

கீழ்மாரி *kīḻ-māri,* பெ.(n.) அடிவானத்தை அடுத்துப் பெய்யும் மழை; rain at a distance, as apparently near the horizon. *"கீழ்மாரி கொண்டு முழங்குகிறது" (வின்.)*

[கீழ் + மாரி.]

கீழ்முக்கன் *kīḻ-mukkaṉ,* பெ.(n) கற்றாழை; aloe vera.

[கீழ் + (மூக்கன்) முக்கன்.]

கீழ்முக்காணி *kīḻ-mukkāṇi,* பெ.(n) 13/25600 என்னும் கீழ்வாயிலக்கவெண்ணைக் குறிக்கும் பெயர்; a fraction.

[கீழ் + முக்காணி.]

கீழ்முக்கால் *kīḻ-mukkāl,* பெ.(n) 3/1280 என்னும் கீழ்வாயிலக்கவெண்ணைக் குறிக்கும் பெயர்; a fraction.

[கீழ் + முக்கால்.]

கீழ்முந்திரி *kīḻ-mundiri,* பெ.(n) 1/102400 என்னும் கீழ்வாயிலக்கவெண்ணின் பெயர்; the fraction of 1/102400.

[கீழ் + முந்திரி.]

கீழ்மும்மா *kīḻ-mummā,* பெ.(n) 3/1280 என்ற கீழ்வாயிலக்கவெண்ணின் பெயர்; a fraction.

[கீழ் + (மூன்று) + மும் + மா.]

கீழ்மூன்றுவீசம் *kīḻ-mūṉṟu-vīśam,* பெ.(n) 3/5120 என்ற கீழ்வாயிலக்கவெண்ணின் பெயர்; a fraction.

[கீழ் + மூன்று + வீசம்.]

கீழ்மேல் *kīḻ-mēl,* பெ.(n) தலைகீழ்; upside, down.

ம. கீழ்மேல்; **க.** கீள்மேலு, கௌாதமேலெ.

[கீழ் + மேல்.]

கீழ்மேலா–தல் *kīḻ-mēl-a-,* 2 செ.கு.வி.(v.i.) தலைகீழாதல்; to be turned upside down, to become topsy turny. *"பள்ளந்தா முறுபுனலிற் கீழ்மேலா" (திருவாச. 5:21).*

க. கௌகெ மேலாகு

[கீழ் + மேல் + ஆ.]

கீழ்மை *kīḻmai,* பெ.(n.) 1. இழிவு; degradation. *"கடைய னாயினேன் பட்ட கீழ்மையே" (திருவா.5.91).* 2. பணிவு (சங்.அக.); humility.

ம. கீழ்ம; **க.** கீழதன

[கீழ் → கீழ்மை.]

கீழ்வகைப் புணர்ச்சி *kīḻ-vagai-p-puṇarcci,* பெ.(n.) விலங்குகளின் புணர்ச்சி, the copulation of animals, 2. விலங்குகளைப் போலப் புணருதல்; having intercourse like animals. 3. கீழ்வகைப் விலங்குகளுடன் சேர்தல், men's intercourse with lower animals (சா. அக).

[கீழ் + வகை + புணர்ச்சி.]

கீழ்வயிற்றுக்கட்டு *kīḻ-vayiṟṟu-k-kaṭṭu,* பெ.(n.) கீழ்வயிறு நழுவாமற் இருப்பதற்காக இறுகிக் கட்டும் கட்டு; light abdominal bandage used to prevent hanging down (worn by males.). 2. கருப் பை சுருங்கவும், நழுவாமல் இருக்கவும் கரு வுயிர்ப்புக்குப் பின் பெண்கள் வயிற்றை இறுகக் கட்டுதல்; bandage

after confinement to insure contraction of the womb and also to keep it in position (சா.அக.).

[கீழ் + வயிறு + கட்டு.]

கீழ்வயிறு *kīḻ-vayiṟu,* பெ.(n.) அடிவயிறு; lower part of the abdomen.

மறுவ. அடிவயிறு

ம. கீழ்வயறு

[கீழ் + வயிறு.]

கீழ்வாடை *kīḻ-vāḍai,* பெ.(n) கொண்டல், கீழ்க்காற்று (மீனவ.); eastern wind.

[கீழ் + வாடை.]

கீழ்வாய் *kīḻ-vāy* பெ.(n.) 1. மோவாய் (யாழ்.அக.); chin, lower jaw. 2. ***கீழ்வாயிலக்கம்*** பார்க்க; see *kīḻ-vāy-ilakkam.* 3. குய்யம்; pudendum muliebre posteriors.

[கீழ் + வாய்.]

கீழ்வாய்நெல்லி *kīḻ-vāy-nelli,* பெ(n.) ***கீழாநெல்லி*** பார்க்க; see *kīḻa-nelli.*

[கீழ் + வாய் + நெல்லி.]

கீழ்வாய்ப்பாய்ச்சி *kīḻ-vāi-p-pāicci,* பெ.(n.) நோனித் துளையைத் தூய்மைப்படுத்தும் ஒரு கருவி; an instrument used for effecting a douche to the vagina (சா.அக.).

[கீழ் + வாய் + பாய்ச்சி.]

கீழ்வாயிலக்கம் *kīḻ-vāy-ilakkam,* பெ.(n.) 1. ஒன்றுக்குக் கீழ்ப்பட்ட எண் வாய்பாடு; multiplication of fractions, dist, fr. *mēl-vāy-ilakkam.* 2. மேல் கீழாக எழுதும் பின்ன வெண்ணின் கீழ்த் தொகை; denominator of a fraction opp. to. mel-vay-ilakkam.

[கீழ்வாய் + இலக்கம்.]

கீழ்வாயு *kīḻ-vāyu,* பெ.(n) 1. எருவாய்க் காற்று ; fart. 2.காலின் கீழ்ப்புறத்தில் காணும் காற்று; inflammation of the joints of the leg. 3. கால் பிடிப்பு; rheumatism of the joints of the legs (சா.அக.).

[கீழ் +வாயு.]

கீழ்வாரப் பச்சை *kīḻ-vāra-p-paccai,* பெ.(n) பழைய வரிவகை; ancient tax in kind.

[கீழ் + வாரம் + பச்சை.]

கீழ்வானம் *kīḻ-vāṉam,* பெ.(n) கிழக்கு திசை வானம்; the eastern sky.

[கீழ் + வானம்]

கீழ்விலாஎலும்பு *kīḻ-vilā-elumbu* பெ.(n) சிறிய விலா எலும்பு; short rib (சா.அக.).

[கீழ் + விலா + எலும்பு.]

கீழ்வீசம் *kīḻvīšam,* பெ.(n) 1/5120 என்னும் கீழ்வாயிலிக்க வெண்ணைக் குறிக்கும் பெயர்; a fraction.

[கீழ் + வீசம்.]

கீழ்வீடு *kīḻvīḍu,* பெ.(n) தரைத்தளவீடு; ground floor of the house (யாழ். அக.).

[கீழ் + வீடு.]

கீழ்வு *kīḻvu,* பெ.(n.) கீழிடம்; place below or underneath. *"கீழ்வுற வீழ்வுறு மளவில்" (ஞானவா. சித்த.24).*

[கீழ் → கீழ்வு.]

கீழ்வெட்டு *kīḻ-veṭṭu,* பெ.(n.) 1. சூழ்ச்சி செய்து கெடுக்கை ; undermining, supplanting. 2. தடுத் துப் பேசுகை; refuting, speaking against. என் சொல்லுக்கு அவன் கீழ்வெட்டுச் சொல்லு கின்றான் (உ.வ.).

[கீழ் + வெட்டு.]

கீழ்வெட்டுவெட்டு-தல் *kīḻ-veṭṭu-veṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. சூழ்ச்சி செய்தல்; to undermine. 2. தடுத்துப்பேசுதல்; to refute, speak against.

[கீழ் + வெட்டு + வெட்டு-.]

கீழக்கரை *kīḻakkarai,* பெ.(n) தஞ்சாவூர் மாவட்டத்து ஓர் ஊர்; a village of Tanjavur district.

[கீழ் + அ + கரை.]

கீழங்கம் *kīḻ-aṅgam,* பெ.(n.) பின்னத்தின் கீழ்த் தொகை; denominator of a fraction.

[கீழ் + அங்கம். அங்கம் = உறுப்பு.]

கீழண்டை *kīḻ-aṇḍai,* பெ.(n) 1. கிழக்குப் பக்கம்; eastern direction. 2. கீழ்ப்புறம்; lower side.

[கீழ் + அண்டை. அண்டை = பக்கம்.]

கீழது *kīḻatu,* பெ.(n.) கீழுள்ளது; that which is under or below. *"கீழது முப்புண ரடுக்கிய முறைமுதற் கட்டில்" (புறநா. 6).*

[கீழ் + அது.]

கீழரை *kīḻ-arai,* பெ.(n) 1/640 என்னும் கீழ்வாயிலக்க வெண்ணைக் குறிக்கும் பெயர்; a fraction, half of Muntiri 1/640.

ம. கீழா

[கீழ் + அரை.]

கீழரைக்காணி *kīḻ-arai-k-kāṇi,* பெ.(n) 1/51200 என்னும் கீழ்வாயிலக்க வெண்ணைக் குறிக்கும் பெயர்; a fraction, one sixteenth part of arai-k-kāṇi.

[கீழ் + அரைக்காணி.]

கீழரைமா *kīḻaraimā,* பெ.(n) முந்திரியின் நாற்பதில் ஒரு பங்கு; one fortieth part of mundiri.

ம. கீரமா

[கீழ் + அரை + மா.]

கீழறு[1]-தல் *kīḻ-aṟu-,* 4 செ.கு.வி. (v.i.) சேனைகளின் மனப்போக்குப் பகைவரால் வேறுபடுத்தப்படுதல் (சிலப்.4:60. அரும்.) ; to be undermined, to become disaffected, to become treacherous as an army corrupted by foes. 2. பதறுதல் அல்லது அச்சப்படுதல்; to be perplexed or frightened.

ம. கீழறுக

[கீழ் + அறு.]

கீழறு[2] – த்தல் *kīḻ-aṟu-,* 4 செ.கு.வி. (v.i.) நிலத்திற் சுரங்கஞ் செய்தல்; to burrow, excavate, make a sub-terranean passage, undermine.

ம. கீழறுக்குக

[கீழ் + அறு-.]

கீழறு[3]-த்தல் *kīḻ-aṟu-,* 4 செகுன்றாவி. (v.t.) மறைமுக மாகப் பிறரைக் கெடுக்கப் பணிசெய்தல்; to injure by any underhand, treacherous means. *"பகைமை தோன்றாமல் உள்ளாயிருந்தே கீழறுத்தலின்" (குறள். 883, உரை.).*

[கீழ் + அறு-.]

கீழறுப்பான் *kīḻ-aṟuppāṉ* பெ.(n), சூழ்ச்சி செய்து பிறரைக் கெடுப்பவன்; one who injures insidiously or inperceptibily, one who undermines.

[கீழ் + அறுப்பான்.]

கீழறுப்பு *kīḻ-aṟupu* பெ.(n), மறைமுகமாகப் பிறரைக் கெடுத்தற்குச் செய்யும் செயற்பாடு; underground work.

[கீழ் + அறுப்பு.]

கீழறை *kīḻ-aṟai,* பெ.(n.) 1. கீழறுக்கை (சிலப்.5: 130,உரை) ;undermining, treachery. 2. நிலவறை

(சிலப். 10:191, உரை.) ; underground room, cellar. 3. பொந்து (வின்.); cavern, cell, hole.

[கீழ் + அறை.]

கீழாக்கு-தல் *kiḻākku,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தாழ இறக்குமாறு செய்தல்; to bring down, lower. 2. கட்டுப் பாட்டிற்குக் கொண்டு வருதல்; to subdue, bring under control.

ம. கீழாக்குக; க. கிழ்மாடு

[கீழ் + ஆக்கு.]

கீழாண்டு *kiḻāṇḍu,* பெ.(n). கடந்த ஆண்டு; last year, preceding year.

ம. கீழாண்டு

[கீழ் + ஆண்டு.]

கீழாண்டைச்சிகை *kiḻ-āṇḍai-c-cigai,* பெ.(n). செலுத்த வேண்டிய பழைய நிலுவை; arrears of past years. *"நான் படுகிற கிலேசம் போதாதென்று கீழாண்டைச்சிகை வாசியாநின்றார்"* (ஈடு. 1,4:7).

[கீழ் + அண்டை + சிகை.]

கீழாதல் *kiḻādal,* 6 செ.கு.வி.(v.t.) 1. தாழ்தல்; to become low. 2. பயனற்றுப்போதல்; to becomee useless.

து. கீட் அப்புனி

[கீழ் + ஆ.]

கீழாநெல்லி *kiḻa-nelli,* பெ.(n.) 1. மஞ்சள் காமாலைக்கு மருந்தாகும் மூலிகைச் செடி; a small plant with slender green main branches. 2. சிறிய மரவகை; forest small-leaved feather foil.

ம. கிழாநெல்லி, கிழாற் நெல்லி; து. கிளாரநெல்லி, கீளாரநெல்லி.

[கீழ்வாய் + நெல்லி – கீழ்வாய் நெல்லி → கீழாநெல்லி.]

கீழாநெல்லி

கீழாநெல்லித்தைலம் *kiḻa-nelli-t-tailam,* பெ.(n.) கீழாநெல்லி சமூலத்துடன் மற்றக் கடைச்சரக்கு களை நல்லெண்ணெயில் சேர்த்து இறக்கிய தலைமுழுக்கு மருந்து எண்ணெய்; a medicated oil for anoiting the head, prepared by boiling gingelly oil mixed with the nirus plant as a chief ingredient along with other appropriate bazzar drugs (சா.அக.).

[கீழாம் + நெல்லி + தைலம்.]

கீழாலவத்தை *kiḻal-avattai,* பெ.(n.) விழிப்பினின்றும் (சாக்கிரத் தினின்று) கடந்த நிலை வரையிலுள்ள ஐந்து நிலையிலும் அதன் கீழ்நோக்கி நெற்றியிலிருந்து மூலாதாரத்திற்குச் செல்லும் நிலை; state of the soul descending from the forehead to *mūlātāram* as it passes through the five stages from *śākkiram* to the stage of absolute uncon sciousness.

[கீழ் + ஆல் + அவத்தை.]

கீழாள் *kiḻ-āḷ* பெ.(n). குற்றேவலன்; menial.

க. கீழாள், கீழாளு, கீளான், கீளாளு

[கீழ் + ஆள்.]

கீழாறு *kiḻ-āṟu* பெ.(n). நிலத்தடியில் ஓடும் ஆறு; underground stream.

[கீழ் + ஆறு.]

கீழாறுகொண்டுபோ–தல் *kīḻ-āṟu-koṇḍu-pō*, 8 செ.கு.வி. (v.i.) காரணம் வெளிப்படாமல் சொத்து முதலியன உள்ளூறச் சிதைதல்; to lose wealth, property, etc. imperceptibly, unaccountably, as if carried away by an underground stream.

[கீழ் + ஆறு + கொண்டுபோ.]

கீழாறெடு–த்தல் *kīḻ-āṟeḍu-*, 4 செ.கு.வி. (v.i.) ***கீழாறுகொண்டுபோ–***, பார்க்க; see *kīḻāṟu koṇḍupō.*

[கீழ் + ஆறு + எடு–.]

கீழிசை *kīḻ-isai*, பெ.(n.) பாடுதற் குற்றங்களுள் ஒன்று; a defect in singing. *"பேசாக் கீழிசை" (கல்லா. 21:4).*

[கீழ் + இசை.]

கீழிடம் *kīḻ-iḍam*, பெ.(n). கீழான இடம்; the lower part or side.

ம. கீழிடம்; க. கிழ்நெல, கின்னெல, கிள்நெல.

[கீழ் + இடம்.]

கீழிடு–தல் *kīḻ-iḍu-*, 18 செ.குன்றாவி (v.t.) தாழ்த்துதல்; to degrade. *"தன்னை நிலைகலக்கிக் கீழிடுவானெனும்" (நாலடி. 248).*

ம. கீழிடுக

[கீழ் + இடு.]

கீழிதழ் *kīḻ-idaḻ*, பெ.(n.) கீழுதடு (பிங்.); the lower lip.

[கீழ் + இதழ்.]

கீழிரு–த்தல் *kīḻ-iru-*, 3 செ.கு.வி. (v.i.) உட்பட்டிருத்தல்; to be under control; to submit.

[கீழ் + இரு.]

கீழிருமா *kīḻ-irumā*, பெ.(n.) 1/3200 என்னும் கீழ்வாயிலக்க எண்ணைக் குறிக்கும் பெயர்; a fraction.

[கீழ் + இருமா.]

கீழிரைப்பை *kīḻ-irai-p-pai*, பெ.(n.) கீழ்வயிறு; abdomen. 2 வயிறு; hypogastric region, the lower and front portion of the belly (சா.அக.).

[கீழ் + இரைப்பை.]

கீழிறைப்பாட்டம் *kīḻ-iṟai-p-pāṭṭam*, பெ.(n.) மீன்பாட்டம், ஆற்றுப்பாட்டம் போன்ற சிறுவரிகள் (S.I.I.V. 365); petty leirs or taxes, such as mīṉpāṭṭam, āṟṟuppāṭṭam, etc.

[கீழிறை + பாட்டம்.]

கீழீடு *kīḻīḍu*, பெ.(n.) 1. தலைமைக் குத்தகைக் காரரிடமிருந்து பெறும் கீழ்க்குத்தகை (T.A.S. III, 194). 2. கீழ்க்கோயில்; subordinate or subsidiary temple. *"ஆச்சிரமம் கோயில் சுசீந்திரம் கோயிலுக்குக் கீழீடு."*

[கீழ் + இடு.]

கீழுக்குப்போ–தல் *kīḻukku-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) தாழ்நிலைக்கு வருதல்; to degenerate, to be on the decline, to be degraded, to be reduced. அவன் அறிவும் கல்வியும் வரவரக் கீழுக்குப் போகின்றன (உ.வ.).

[கீழ் → கீழுக்கு + போ.]

கீழுடை *kīḻ-uḍai*, பெ.(n.) கோவணம்; loin cloth.

மறுவ. கீறுடை

[கீள் → கீழ் + உடை.]

கீழுதடு *kīḻudaḍu*, பெ.(n.) ***கீழிதழ்*** பார்க்க; see *kīḻidaḻ.*

க. கெளதுடி

[கீழ் + உதடு.]

கீழுப்பு *kīḻ-uppu*, பெ.(n.). 1. அமுரியுப்பு; uric salt 2. பாறையுப்பு; rock salt (சா.அக.).

[கீழ் + உப்பு.]

கீழுலகம் *kīḻ-ulagam,* பெ.(n.) நிலவுலகின் கீழுள்ள உலகம்; the nether world.

க. கெளலேக; து. கீள்லோக

[கீழ் + உலகம்.]

கீழுலகு *kīḻ-ulagu* பெ.(n.) 1. ***கீழேழுலகம்*** பார்க்க; see *kīḻēḻulagam.* *"கீழுலகி லசுரர்களைக் கிழங்கிருந்து கிளராமே" (திவ். பெரியாழ். 4.8:6).* 2. நாகலோகம் (உரி.நி.); the world of Nāgās.

ம. கீழுலகு

[கீழ் + உலகு.]

கீழெண் *kīḻ-eṉ* பெ.(n.) பின்னவெண்களுள் கீழிடமுள்ள இலக்கம்; denominator of a fraction.

ஒ.நோ. கீழ்வாயிலக்கவெண்.

[கீழ் + எண்.]

கீழே *kīḻē,* வி.எ.(adv.) தாழ; down, below.

ம. கீழே.; க. கீழெ, கெளகெ; பட.கீயெ

[கீழ்→ கீழே.]

கீழேழுலகம் *kīḻ-ēḻ-ulagam,* பெ.(n.) நிலவுலகின் கீழுள்ள ஏழு உலகங்கள்; (அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாலம்) (சூடா.); seven nether worlds, viz., Atalam, Vitalam, Sutalam, Taratalam, Mahatalam, Rasatalam, Patalam-situate one below another dist. fr. mēl-ēḻ-ulagam.

மறுவ. கீழுலகு, கீழுலகம்

[கீழ் + ஏழு + உலகம்.]

கீழைக்கடல் *kīḻai-k-kaḍal,* பெ.(n.) ***கீழ்க்கடல்*** பார்க்க; see *kīḻ-k-kaḍal.*

[கீழ் + ஐ + கடல்.]

கீழைத்திசை *kīḻai-t-tišai,* பெ.(n.) ***கீழ்த்திசை*** பார்க்க; see *kīḻ-t-tišai.*

[கிழக்கு →கீழை + திசை.]

கீழைத்தெரு *kīḻai-t-teru,* பெ.(n.) கிழக்குத் திசைத் தெரு; the eastern side street.

[கீழ் + ஐ + தெரு]

கீழைநாள் *kīḻai-nāḷ,* பெ.(n.) விடியற்காலம்; early hours of the morning, *"தொன்மனை கீண்டதால் வானவே றெறியக் கீழைநாள்" (கம்பரா. காட்சிப் 42).*

[கிழக்கு → கீழை + நாள்.]

கீழைமொழிகள் *kīḻaimoḻigaḷ,* பெ.(n.) கீழ்த்திசை நாடுகளில் பேசப்படும் மொழிகள்; oriental languages.

[கிழை + மொழிகள்]

கீழோங்கி *kīḻ-ōṅgi* பெ.(n.) செம்படவரிற் கீழ்த் தரத்தார் (யாழ்ப்.); inferior class of fishermen opp.to. mēlōṅgi.

[கீழ் + ஓங்கி.]

கீழோசை *kīḻ-ōšai* பெ.(n.) ***கீழிசை*** பார்க்க; see *kīḻisai.*

[கீழ் + ஓசை.]

கீழோர் *kīḻōr* பெ.(n.) 1. தாழ்ந்தோர்; persons inferior in status, the low, the vulgur. *"கீழோராயினுந் தாழ வுரை" (கொன்றைவே).* 2. இழிந்த குணமுடையவர்; a base or rude fellow. 3. உழவர்; cultivators. *"கீழோர் வயல்பரக்கும்" (பரிபா. 17.40).*

[கீழ் → கீழோர்.]

கீழோன் *kīḻōṉ,* பெ.(n.) ***கீழோர்*** பார்க்க; see *kīḻōr.*

ம. கீழோன்; து. கீடதி, கீடதெ.

[கீழ் + ஒன். ஆன் → ஒன்.]

கீள்[1](ளு)தல் *kīḷ-* 10 செ.குன்றாவி. (v.t.) கிழித்தல்; to rend, split, tear. *"கீண்டிடுவென் வாயது கேட்டு நின்றயான்" (கம்பரா. பள்ளி. 71).*

[கீழ் → கீள்.]

கிள்²(ளு)-தல் *kiḷ-* 16 செ.கு.வி. (v.i.) உடைதல்; to burst, as the bund of an overfull tank; *"தெண்ணீர்ச் சிறுகுளங் கீள்வது மாதோ" (புறநா.118,3).*

Fin. kiduttä; **Es.** kiduda; **Hung.** kikezd; **Mong.** kidu; **Jap.** kisu.

[குல் → கில் → கீல் → கீள்.]

கீள்³ *kiḷ* பெ.(n.) 1. கூறு; part, portion, section. *"கீளிரண் டாகக் குத்தி" (சீவக. 2248).* 2. அரையிற் சுட்டுந் துணியாலாகிய கோவணம்; strip of cloth used as a waist-band. *"வெளுத்தமைந்த கீளொடு கோவணமுந் தற்று" (தேவா. 811,2).*

[குல் → கில் → கீல் → கீள்.]

கீளி *kiḷi* பெ.(n.) கடல்மீன் வகை; mullet, purplish, attaining 8½ inc. in length.

[கீழ் → கீள் → கீளி.]

கீளுடை *kiḷ-uḍai* பெ.(n.) கோவணம்; loun cloth.

[கீள் + உடை - கீளுடை (கிழித்த துணி).]

கீற்கதவு *kiṟ-kadavu,* பெ.(n.) கீல் தைக்கப்பட்ட கதவு; door turning on hinges. dist, fr, *kuḍumik-katavu.*

[கீழ் + கதவு.]

கீற்கொண்டை *kiṟ-konḍai* பெ.(n.) மயிர் முடித்தலின் வகை; coil or hair dressed in a special way.

[கீல் + கொண்டை.]

கீற்பிடிப்பு *kiṟ-piḍippu* ஊதைப்பிடிப்பு நோய்; rheumatism.

[கீல் + பிடிப்பு.]

கீற்றரைக்கால் *kiṟṟarai-k-kāl* பெ.(n.) து, நு முதலிய எழுத்துகளில் உகரத்தைக் குறிக்க வளைத்தெழுதுங் குறி; the sign "ா" denoting 'உ' while writing the vowel consonants து, நு.

[கீறு → கீற்று + அரைக்கால்.]

கீற்றன் *kiṟṟan,* பெ.(n.) குறுக்குக்கோடுள்ள புடவை (யாழ்ப்.); striped cloth.

[கீற்று + அன்.]

கீற்று *kiṟṟu,* பெ.(n.) 1. வரி; mark, stroke, line. 2. துண்டு; slice, piece. 3.கூறைவேயுங் கிடுகு; part of a coconut leaf plaited for thatching. 4. வயிரக் குற்றம் பன்னிரண்டனுள் ஒன்று; a flaw in a diamond, one of 12 vaira-(k)-kuṟṟam. 5. பச்சை (மரகத)க் குற்றம் எட்டனுள் ஒன்று; a flaw in emerald one of 8 *marakada- k- kūṟṟam*

ம. கீற்று; க.து., கீது; குட. கிடி.

[கீல் → கீறு → கீற்று.]

கீற்றுக்கால் *kiṟṟu-k-kāl,* பெ.(n.) வெடிப்புள்ள பாதம் (வின்.); fissured or cracked foot.

[கீறு → கீற்று + கால்.]

கீற்றுக்கொட்டகை *kiṟṟu-k-koṭṭagai,* பெ.(n.) தென்னங்கீற்று வேய்ந்த கொட்டகை; thatched shed with plaited coconut.

[கீற்று + கொட்டகை.]

கீற்றுநாமம் *kiṟṟu-nāmam,* பெ. (n.) அந்தணருள் ஒரு சாரார் கீற்றாக நெற்றியிலிடும் முக்கோடு (நாஞ்); thin tridental mark worn on the forehead by some sects of Smarta Brahmans.

ம. கீற்றுநாமம்

[கீற்று + நாமம்.]

கீற்றுநோய் *kiṟṟu-noy,* பெ.(n.) உடம்பில் சதை பிளந்து காணும் ஓர் தோல் நோய்; a veneral disease characterised by fissures (சா.அக.).

[கீற்று + நோய்.]

கீற்றுமதி *kiṟṟu-madi* பெ.(n.) மூன்றாம் பிறை நிலவு; crescent moon as seen on the third day from the new moon.

ம. கீற்றுமதி

[கீற்று + மதி.]

கீற்றுவண்ணம் *kiṟṟuvaṇṇam,* பெ.(n.) புடைவை வகை; kind of saree.

[கீற்று + வண்ணம்.]

கீற்றுவெடிப்பு *kiṟṟu-veḍippu,* பெ.(n.) கத்தியால் கீறியதைப் போன்ற வெடிப்பு; cleft like an incised wound (சா.அக.).

[கீற்று + வெடிப்பு.]

கீறல் *kiṟal,* பெ.(n.) 1. கிழிகை; tearing, scratching, *"எள்ளுபு கழிக்கும் கீறலியை பழங்கந்தை" (குசேலோ. குசே. வைசன்.).* 2. வரிவரைகை; marking, drawing, lines. 3. கீறற் கையெழுத்து; mark of a person unable to write as a cross. 4. எழுதுகை; writing, scribbling. 5. கையொப்பமிடத் தெரியாதவன்; illiterate person.

[கீறு → கீறல்.]

கீறிக்கம்பு *kiṟi-k-kambu,* பெ.(n.) கட்டடத்துக்குரிய மரச்சாமான்; timber for building purposes.

[கீறு → கீறி + கம்பு.]

கீறிக்காட்டு-தல் *kiṟi-k-kāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. குறிப்பாய் உணர்த்துதல் (நெல்லை.); to hint, suggest. 2. வெளிப்படையாக உணர்த்துதல்; to give out plainly. அந்தச் செய்தியைக் கீறிக் காட்டிச் சொல்லுதல் முடியாது (உ.வ.).

[கீறி + காட்டு.]

கீறிக்காயப்போடு-தல் *kiṟi-k-kāya-p-pōḍu,* 18 செ.குன்றாவி. (v.t.) ***கீறிக்காயவை*** பார்க்க; see *kiṟi-k-kāyavai*

[கீறி + காய + போடு.]

கீறிக்காயவை-த்தல் *kiṟi-k-kāya-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) உப்புக்கண்டம் உலர்த்துதல் (வின்.); to slit and dry in the sun, as fish or meat.

[கீறு → கீறி + காயவை.]

கீறிப்பார்-த்தல் *kiṟi-p-pār-,* 4 செ.கு.வி. (v.i.) ஆய்ந் தறிதல்; to dissect, as a corpse, an argument.

[கீறி + பார்-.]

கீறியாற்றல் *kiṟi-y-āṟṟal,* பெ.(n.) கட்டி, சிலந்தி, முதலியவைகளை அறுத்து ஆறவைத்தல்; opening an ulcer or abscess and then healing it upper (சா.அக.).

[கீறி + ஆற்றல்.]

கீறியாற்று-தல் *kiṟi-y-āṟṟu,* 5 செ.கு.வி. (v.i.) உட்கருத்தை வெளிப்படுத்தி மனத்தாங்கலை நீக்கிக்கொள்ளுதல் (உ.வ.); to remove misunderstanding by open discussion of the actual facts.

[கீறி + ஆற்று-.]

கீறியுப்பிடல் *kiṟi-y-uppiḍal,* பெ.(n.) 1. மீனைப் பிளந்து உப்பிடல்; slitting and salting fish. 2. உடம்பில் கத்தியால் அறுத்து உப்பிட்டுச் சுடுதல்; making a incision and applying salt (சா. அக.).

[கீறி + உப்பு + இடல்.]

கீறிவை-த்தல் *kiṟi-vai-,* 4 செ.குன்றாவி (v.t.) 1. கத்தியாலறுத்துத் திறந்து வைத்தல்; cut and open by knife. 2. கத்தியால் பிளந்து மருந்து வைத்தல்; to open and apply medicine. 3. அறுவை செய்தல்; operating. 4. காயம்படுதல்; inflicting injury (சா.அக.).

[கீறி + வை-.]

கீறு[1]-தல் *kiṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. வரிகீறுதல்; to draw lines. 2.எழுதுதல்; to scribble, make marks, write, engrave. 3. கிறுக்கியடித்தல்; to score out. 4.கிழித்தல்; to slit, tear, rend. 5. பறண்டுதல்; to scratch, as a cat, a fowl, to work over, as one's toes. 6. ஆய்தத்தால் அறுத்தல்; to cut, gash, lance, dissect. *"புண்கீறிய குருதிப்புனல்" (கம்பரா. பரசுராமப்.9).* 7. வகிர்தல்; to slice, cut off longitudinally. 8. குறிப்பித்தல்; to give a clue to, as a subject.

ம. கீறுக, கீளு; குட. கீறு; து. கீறுனி; தெ. கீறு, கீயு, கீளு; துட., கோத. கீற்; கொலா. கீற; கொண்., பர். கிர்; கூ.கிர; பட. கீயி.

Fin. kirjotta; **FD.** kiruttoa; **Es.** kirjata; **Mong.** ziru; **Q.** qilqay.

[குல் → கில் → கீல் → கீறு.]

கீறு[2] *kīṟu-,* பெ. (n.) 1. வரி; stroke, mark, line. 2. பிளப்பு; furrow, incision, cut. "அந்தச் சுவரிற் கீறுள்ளது. 3. துண்டம்; slice, piece. மாம்பழத்தில் ஒரு கீறு தா (உ.வ.) 4. எழுத்து; scrawl, writing. 5. தென்னோலை அல்லது பனங்கிழங்கின் பாதி (யாழ்ப்.); half of a coconut leaf or an esculent palmyraroot.

[கீல் → கீறு.]

கீறு[3] *kīṟu,* பெ.(n.) பன்றி; hog.

[கீறு → கீறி.]

கீறுசுப்பல் *kīṟu-šūppal,* பெ.(n.) பாவைத் தெளிவு செய்வதற்காகப் பொரும்பாவைக் கீறப் பயன்படுத்தும் கம்பி அல்லது மூங்கில் குச்சி; stick used to stir liquid.

[கீறு + சுப்பல் (குச்சி).]

கீன்றல் *kīṉṟal,* பெ.(n.) கீறுகை (திவா.); burrowing, cleaving.

[கீல் → கீறு → கீறுகை.]

கீனம் *kīṉam,* பெ.(n.) 1. இழிவு; lowness, vileness. 2. குறைவு; defect, want.

[கீல் → கீனம்.]

கீனம்பிடித்தவன் *kīṉam-piḍittavaṉ,* பெ.(n.) 1. பித்துப்பிடித்தவன், a whimsical fellow. 2. கிறுக்கன்; crazy or crambly fellow (சா.அக.).

[கீல் → கீனம் + பிடித்தவன்.]

கீனன் *kīṉaṉ,* பெ.(n.) இழிந்தவன், ஈனமானவன்; low person.

[கீழ்→கீல்→கீனம் → கீனன்.]

கு[1] *ku,* ககரமெய்யும் உகர உயிரும் சேர்ந்து உண்டாகும் உயிர்மெய் எழுத்து; the syllable formed by adding back short vowel (u) to the velar voiceless stop (k), one of the secondary alphabet of the Tamil language.

[க்+உ=கு.]

கு[2] *ku,* இடை. (part) நான்கனுருபு (தொல். சொல். 76); dative case marker.

ம. கு, க்கு; க.கெ, க்கெ, இகெ; தெ. கு, கி; பட.க, கு; து.கு; குட.க,கு; துட. க,கு; குரு.கை; கோத. கெ; எரு. கு; கை. கு.

H. kō; **Beng.** kē; **Sind.** khē; **Sinh.** ghai; **Tib.** gya; **Ori.** kui; **Bodo.** khō; **Turk.** ke, ka, ga, ghah; **Scy.** ka, ki, ku; **Pkt.** kiē; **Mong.** dou; **Tatar.** ke; **Fin.** le, ke; **Ost.** ga; **Mord.** va, ga; **Jap.** he, ye, e; **Sia.** ke; **Mal.** ka, ākam; **Chin.** kih; **Burm.** go.

[குல் = கூடுதல் கருத்துவேர். குல் → கு.]

கு[3] *ku,* இடை. (part.) 1. ஒரு சாரியை (கலித். 79:18); connective particle, as in அறிகுவேன். 2. (அ) பண்புப் பெயர் ஈறு; abstract noun enching as நன்கு; (ஆ) தொழிற்பெயர் ஈறு; verbal noun tending, as. போக்கு (இ) தன்மையொருமை எதிர்கால வினைமுற்று ஈறு; sufix of firite verbs in Ist pers. Sing. fut., as உண்கு. 3. இருமடி ஏவலீறு; imperative verb additional suffix.

[குல்→கு]

கு[4] *ku,* பெ.(n.) புவி (திவா.); earth.

ம., க. கு.

[குவலயம்→கு]

கு[5] *ku,* இடை.(part.) 1. குறுமை முன்னொட்டு; diminutive prefix. குக்கிராமத்தில் வாழ்ந்தார் (உ.வ.). 2.இழிவு, தாழ்வு குறித்த முன்னொட்டு; a pronom, base... a prefix implying deterioration, depreciation, deficiency.

[குல் → கு (குல் = சிறிதாதல், தாழ்தல்) குல் + வலி – குவலி (இலந்தை). குல்+சரி→குச்சரி (ஒரு பண்). குல் + (பாகு – பாக்கு) வாகம் – குவாகம் (பாக்குமரம்). குல் + வாதம் (வாள் → வாளம் (பேசுதல்) → வாதம்) – குவாதம், குவாது (குதர்க்கம்).]

'குல்' முன்னொட்டின் பின் வருமொழி முதலில் வல்லெழுத்துவரின் வந்த வல்லெழுத்தே மிகும். நல் + கீரன் - நக்கீரன், நல் + செள்ளை-நச்செள்ளை, நல் + பின்னை - நப்பின்னை.

'குல்' முன்னொட்டின் பின் வரும் வருமொழி வட சொல்லாயின் ஈற்றுலகரமெய் கெட்டு குல் + கிராமம் - குக்கிராமம், குல் + தர்க்கம் - குதர்க்கம் எனப் புணரும். இம்முன்னொட்டைத் தமிழினின்று வடமொழி கடன் கொண்டது.

கு[6] *ku,* இடை. (part) நன்மை, உயர்வு குறித்த முன்னொட்டு; prefix used in the sense of auspicious, greatness.

[குல் = கூடுதல், பெருக்கம், மேன்மை, உயர்வு. குல் → கு.]

குக்கர் *kukkar,* பெ.(n.) மிக இழிந்தோர்; contemptible or despicable persons of low birth, as a dog. *"குடிமையிற் கடமைப்பட்ட குக்கரில்" (திவ். திருமாலை. 39).*

க. குக்கர, குக்கல.

kurkura, a dog. Gt. makes it a reduplicated form, derived from M. Kure, T. Kurai, to sound, to make a noise. See the so-called Sk. verbal theme kur S.kurkuta (K.K.E.D.XX)

[குக்கல் → தாழ்தல், இழிதல், குக்கல் → குக்கர்.]

குக்கல்[1] *kukkal,* பெ.(n.) கக்குவான் (யாழ்ப்.); whooping cough.

[குக்கு → குக்கன்.]

குக்கல்[2] *kukkal,* பெ.(n.) நாய் (சூடா.); dog. *"குக்கலைப் பிடித்து நாவிக் கூண்டினி லடைத்து வைத்து" (விவேகசிந்.).*

தெ., க. குக்க.

Skt. kukkura

[குல் → குக்கு = உட்கார்தல், இருத்தல். குக்கு → குக்கல் = உட்கார்ந்திருக்கும் விலங்கு (நாய்).]

குக்கலிங்கோ *kukkalingō,* பெ.(n.) கொம்மட்டி; bitter melon (சா.அக.).

[குக்கல் → குக்கலிங்கம் → குக்கலிங்கோ (கொ.வ.).]

குக்கன் *kukkan,* பெ.(n.) நாய்; dog (திவா.).

க. குக்கர, குக்கல.

[குக்கு → குக்கல் → குக்கன். 'அன்' ஒன்றன் பாலீறு (வே.க.151).]

குக்கி[1] *kukki,* பெ.(n.) வயிறு (திவா.); belly, cavity of the abdomen.

Skt. kukshi

[குல் = வளைதல் கருத்துவேர். குல் → குக்கு → குக்கி.]

குக்கி[2] *kukki,* பெ.(n.) கன்றுகள், கண்டவற்றை மேயாதவண்ணம் வாய்ப்பகுதிக்கு இடும் வலை, முக்காணி; mouth covering of calves made of fibre string.

[குல் + குக்கி.]

குக்கிக்கழிச்சல் *kukki-k-kaliccal,* பெ.(n.) வயிற்றுக் கழிச்சல்; purging, purgation (சா.அக.).

[குக்கி → கழிசல்.]

குக்கிச்சுரம் *kukki-c-curam,* பெ.(n.) வயிற்றுக் கோளாறினால் உண்டாகும் காய்ச்சல்; fever relating to the gastric disorder in the stomach (சா.அக.).

[குக்கி + சுரம்.]

குக்கிசம் *kukkišam,* பெ.(n.) இடுப்புப்பக்கம்; the hip region (சா.அக.).

[குக்கு → குக்கிசம்.]

குக்கிநீர் *kukki-nīr,* பெ.(n.) இரைப்பையினுள் உண்டாகும் செரிமான நீர்; gastric juice or fluid (சா.அக.).

[குக்கி + நீர்.]

குக்கிப்பிளிகை *kukki-p-piḷigai,* பெ.(n.) குடலை மூடிய சவ்வு; a membrane attached to the intestines, appendices (சா.அக.).

[குக்கி + பிளிகை.]

குக்கிரம் *kukkiram,* பெ.(n.) வயிற்றுக் கோளாற்றினால் உண்டாகும் பெருவழற்சி; acute disorder of the stomach (சா.அக.).

[குக்கி → குக்கிரம்]

குக்கிராமம் *kukkirāmam,* பெ.(n.) சிற்றூர்;small village.

ம. குக்கிராமம்

Skt.kugrāma

[குல்(குறுமை) +கிராமம்.]

குக்கிரி *kukkiri,* பெ.(n.) மண்புழு, நண்டு ஆகியவை வெளித்தள்ளிய மண்; the soil thrown out by earthworms or crabs.

ம. குக்கிரி

[குக்கில்³ →குக்கிரி.]

குக்கிரேகி *kukkiregi,* பெ.(n.) வயிற்றிலுள்ள நீர் அல்லது நீர்த்தன்மையான பொருள்களை வெளியேற்ற அல்லது உட்புகுத்தப் பயன்படும் நீர்க்குழாய்; a small pump, used for emptying the stomach or pumping some liquid into it, stomach pump (சா.அக.).

[குக்கில் →குக்கிலகி→குக்கிரேகி (கொ.வ.).]

குக்கில்¹ *kukkil,* பெ.(n.) செம்போத்து; prob. onom, crow pheasant. *"குக்கிற் புறத்த சிரல்வாய" (களவழி.5.).*

[குக்கு – ஒலிக்குறிப்பு. குக்கு → குக்கில்.]

குக்கில்² *kukkil,* பெ.(n.) 1.குங்கிலிய மரம்; piney varnish tree. 2.ஒரு சிறுமரம்; Indian bdellium. 3. கருங்குங்கிலியம்; black damma tree. 4. குங்கிலி யப்பிசின் (பிங்.); black dammar-resin.

ம. குக்கில்; க. குக்குள, குக்கிள.

[உல் → குல் → எரிதல் கருத்துவேர். குல் → குக்கு → குக்கில்.]

குக்கில்பால் *kukkil-pāl,* பெ.(n.) குங்கிலியம்; resin of Indian dammer (சா.அக.).

[குக்கில் + பால்.]

குக்கிலம் *kukkilam,* பெ.(n.) அதிவிடயம் என்னும் ஒரு மருந்துச் சரக்கு (மலை.); atees.

[குக்குல் → குக்கிலம்.]

குக்கிலி *kukkuli,* பெ.(n.) செம்போத்து (கழ.தமி. கை.);crow - pheasant.

[குக்கில்→குக்கிலி.]

குக்கிலிற்கண் *kukkiliṟkaṉ,* பெ.(n.) செங்கண்; blood shot eyes (சா.அக.).

[குக்கில்(எரிதல், சிவப்பு) + இல் + கண்.]

குக்கிற்பொடி *kukkiṟ-podi,* பெ.(n.) குங்கிலியம் கலந்த ஒருவகைப்பொடி மருந்து(வின்.); a kind of medicinal powder prepared by stuffing a fowl with dammer-resin, calcinating and pulverising it.

[குக்கில் + பொடி.]

குக்கு¹–தல் *kukku-.* 5 செ.கு.வி.(v.i.) இருமுதல்; onom, to whoop, hoop, as in whooping cough. *"பிணியுற்றவனாகிக் குக்கிக் கக்கி" (திருப்பு.430).*

ம. குக்குக (கூடாதல்)

[குக் (ஒலிக் குறிப்பு) + குக்கு.]

குக்கு²–தல் *kukku-,* 5 செ.கு.வி.(v.i.) ஒடுங்குதல் ; to be restrained as the senses or the resigned, to calm down.

[குல் → குற்கு → குக்கு.]

குக்கு³–தல் *kukku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. துணிகளைத் துவைக்க மெல்ல கல்லின் மேல் அடித்தல்; to beat cloth somewhat seny by in

washing. 2. கைமுட்டியால் குத்துதல்; to strike with the first culf.

க., பட. குக்கு.

[குல் → குக்கு.]

குக்கு[4]—தல் *kukku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. குனிதல், வளைதல்; to bend. 2. தாழ்தல்; to become low in position. 3. கெடுதல், அழிதல்; to get ruined.

க.,தெ. குக்கு.

[குல் → குக்கு.]

குக்கு[5] *kukku,* பெ.(n.) **குக்கர்** பார்க்க; see *kukkar.*

[குக்கல் → குக்கு.]

குக்குடச்சூட்டு *kukkuḍa-c-cūṭṭu,* பெ.(n.) கோழித் தலைக் கந்தகம் (வின்.); a kind of sulphur.

[குக்குடம் = கோழி, சேவல். சூட்டு = தலைக்கொப்பு. குக்குடம் + சூட்டு.]

குக்குடசருப்பம் *kukkuda-saruppam,* பெ.(n.) பறவைநாகம்; flying snake or cobra, a winged serpent - basilik. (சா.அக.).

[குக்குடம் +சருப்பம்.]

குக்குடசிவப்புக்காரம் *kukkuda-sivappu-k-kāram,* பெ.(n.) சிவப்புச் சேவலின் கழிவு; the dung of a red cock (சா.அக.).

[குக்குடம் +சிவப்பு + காரம்.]

குக்குடத்தண்டம் *kukkuḍa-t-taṇḍam,* பெ.(n.) கோழிமுட்டை; fowl's egg (சா.அக.).

க. குக்கடாண்ட

[குக்குடத்து + அண்டம்.]

குக்குடதீபம் *kukkuḍa-tīpam,* பெ.(n.) கோழி வடிவாகச் செய்யப்பெற்ற கோயில்விளக்கு (பரத. ஒழிபி. 42. உரை.); a fowl-shaped lamp used in temples.

[குக்குடம் + தீபம். குக்குடம் = கோழி.]

குக்குடப்பாம்பு *kukkuḍa-p-pāmbu,* பெ.(n.) வாணாள் நீட்டித்தலால் உடல் குறைந்து கோழி பறக்குமளவு பறந்து செல்லுந்தன்மையதான பாம்பு (சீவக. 1271,உரை); winged serpent, a variety of serpents said to become shorter with age, get wings ultimately and fly like domestic fowls.

ம. குக்குடசர்ப்பம்

[குக்குடம் + பாம்பு. குக்குடம் = கோழி.]

குக்குடபுடம் *kukkua-puḍam,* பெ.(n.) கோழியின் அளவாகப் பத்து வறட்டி கொண்டு இடப்படும் புடம் (கந்தபு. மார்க்கண். 134); calcination of metals in pile of ten dried dung cakes approximating to the height of a cock.

ம. குக்குடபுடம்

[குக்குடம் = கோழி. குக்குடம் + புடம்.]

புடத்தின் வகை:

1. ஆயுர்வேதப்படி 1 சாண் உயரம் 1 சாண் ஆழமுள்ள பள்ளத்தில் காட்டு முட்டையை, புடம் போடும் மருந்திற்குக் கீழுமேலுமாக நிரப்பிப்போடும் புடம்.

2. சித்தநூலின் முறைப்படி 5 எருவைக் கோழி உயரம் அடுக்கிப் போடுதல். இதன் சுற்றளவு 16 அங்குலமெனச் சொல்லப்படும்.

3. வேறுசில நூல்களில் ஆசிரியர்கள் 10 எருவைக் கொண்டு போடும் புடமெனக் கருதுவார்கள்.

குக்குடம் *kukkuḍam,* பெ.(n.) 1.கோழி; gallinaceous fowl, cock, hen. *"குக்குடம் வாழ்க" (கந்தபு. வள்ளி 261).* 2. இறகுள்ள பாம்பு (பிங்.); winged serpent.

ம. குக்குடம்; க.,து.,குக்குட; ***Skt.*** ***kukkuṭa.***

[கொக் – ஒலிக்குறிப்பு. கோழி எழுப்பும் ஓசை. கொக் + கொக் - கொக்கொக் → குக்குக் → குக்குடு → குக்குடம்.]

kurkuṭa, kukkuṭa, a cock, a wild cock; ***kukkuṭi***, a hen *Cf.*D. ***kuk, kural, koral, kugu 1***, and 2, and also Sk. ***kurkura*** (No.44). There is the Sk. verbal theme ***kur***, to sound, that has apparently been formed of the T. and M. verbs adduced s. ***kurkura***. ***Kurkuṭa*** (contracted into

kukkuṭa) is either a reduplication of a kuṭakuṭa, or more probably a composition of kur, sound, cry (i.e. T. kural) and D. kuṭa, beater, utterer (cry-beater or -utterer, i.e. crier, crower). The present and only D. word for a cock, a fowl, is kōḷi, q.v., which bird is found wild in the southern jungles. Koḷi is of course a contraction of some ancient D. term, and kurkuṭa and kōḷi certainly are cognate (K.K.D.E.XX).

குக்குடவிருக்கை *kukkuḍā-virukkai*, பெ.(n.) கோழியைப் போல்; sitting posture like cock. இருகால்களையும் கீழ்வைத்துக் குந்தியிருந்து ஒகஞ்செய்யும் இருக்கை வகை (திருமந்.561); sitting posture in yogic practic, the soles touching the ground like those of a cock.

[குக்குடம் + இருக்கை. குக்குடம் = உட்கார்ந்தநிலை.]

குக்குடி *kukkuḍi* பெ.(n.) 1. இலவமரம்; silk cotton tree. 2. பெட்டைக்கோழி; hen (சா.அக.).

ம. குக்குடி

[குக்குடம் → குக்குடி.]

குக்குரம் *kukkuram*, பெ.(n.) கோடகசாலை என்னும் பூடு(மலை.); a very small plant.

[குக்குல் → குக்குரம் = தரையில் படரும் பூடுவகை.]

குக்குரன் *kukkuraṉ*, பெ.(n.) நாய்; dog.

ம. குக்குரம்; து. குக்கரெ; Skt. kukkura.

[குக்கல்→குக்குரன்.]

குக்குரி *kukkuri* பெ.(n.) பெண்நாய்; a bitch.

ம., க. குக்குரி.

[குக்கல்→குக்கலி→குக்குரி]

குக்குலவம் *kukkulavam*, பெ.(n.) குக்கிலிலிருந்து எடுக்கும் எண்ணெய்; a medicated oil or ghee prepared from bedallium (சா.அக.).

[குக்கில்→குக்குலவம்]

குக்குலு *kukkulu*, பெ.(n.) 1. ஒருவகை மரம் (பதார்த்த.1120); tripterocarp dammar. 2. வெள்ளைக் குங்கிலியம்; piney varnish tree. 3. ஒருவகைப் பெருமரம்; konkani resin. 4. ஒருவகைச் சிறுமரம்; Indian bdellium.

[குக்கில் → குட்டையானது. குக்குல் → குக்குலு.]

குக்குலுவம் *kukkuluvam*, பெ.(n.) **குங்கிலியம்** பார்க்க; see *kuṅgiliyam*. *"குக்குலுவப்புகை" (கந்தபு. தேவகிரி. 29).*

மறுவ. குங்கலியம்

[குக்கில் → குக்குலுவம்.]

குக்குறம் *kukkuṟam*, பெ.(n.) குடசப்பாலை; conessi bark.

[குக்கல் (சிறியது) → குக்குறம்.]

குக்குறுப்பான் *kukkuṟuppāṉ*, பெ.(n.) **குக்குறுவான்** பார்க்க; see *kukkuṟuvāṉ*.

[குக்குறுவான் → குக்குறுப்பான்.]

குக்குறுவான் *kukkuṟuvāṉ*, பெ.(n.) கீச்சென்று ஒலிக்கின்ற பசுமை நிறமுள்ள பறவை வகை (யாழ்ப்.); a green, screeching barbet.

[கிக் - ஒலிக்குறிப்பு. கிக் + கிக் + உறு. கிக்கிறு + அன் - கிக்கிறுவான் → குக்குறுவான்.]

குக்குறுவான்

குக்கூடல் *kukkūḍal*, பெ.(n.) முட்டாக்கு; veil or covering for the head. *"பொன்னொத்த வாடைக்குக்கூடலிட்டு" (திவ். பெருமாள். 6:5).*

[குல் – வளைதல் கருத்துவேர். குல் → குக்கு → குக்குடல் → குக்கூடல் = வளைத்துப் போர்த்துக் கொள்ளும் போர்வை]

குக்கூவெனல் *kukkū-v-eṉal,* பெ.(n.) ஓர் ஒலிக் குறிப்பு; onom. expr. signifying crowing sound, as of a cock; cooing sound, as of a dove, hooting noise , as of an owl. *"குக்கூவென்றது கோழி"* *(குறுந். 157).*

[குக் + கூ – ஒலிக்குறிப்பு) குக் + கூ + எனல்.]

குக்கை *kukkai,* பெ.(n.) மூங்கிலால் முடைந்த சிறு கூடை; small basket made of bamboo.

க. குக்கெ, குக்கி; **து.**, படை. குக்கெ; **கோத.** கிக்.

[குக்கு → குக்கை.]

குகதி *kugadi,* பெ.(n.) முடவன்; lame person. *"குகதிகள் குருடர் மூகர்" (மேமருமந். 351).*

[குல் + கதி]

குகநன் *kuganaṉ,* பெ.(n.) 1.பாம்பு; snake. 2. எலி; rat (கோ.தமி. கை.).

[குழி → குழை → குகை + நன். குகை = இருள், கருப்பு.]

குகரம் *kugaram,* பெ.(n.) 1. மலைக்குகை; cave, cavern *"மலைக்குகரத்து" (அரிசமய. பக்தி சார. 37).* 2. சுரங்கம்; cavity, hollow, subterranean passage. *"குகர நீணெறி" (பாரத. வேத். 2).*

[குகை → குகம் → குகரம் (கொ.வ.).]

குகரர் *kugarar,* பெ.(n.) சாகத்தீவில் வாழும் ஒரு குலத்தார்; inhabitants of the annular continent, cāka-t-tivu. *"சாகத் தினெல்லை தன்னில்..... குகரராண்டு வாழ்வார்" (கந்தபு. அண்டகோ. 48.).*

[குகன் → குகர் → குகரர். குகர் = வேடர், படகோட்டிகள்.]

குகவேளாளர் *kuga-vēḷāḷar,* பெ.(n.) இராமன் கங்கை கடக்குமாறு துணைபுரிந்த குகனது மரபினராகச் செம்படவர் சிலர் வழங்கிக்கொள்ளும் குலப்பெயர் (E.T.); name assumed by a sect of *cempaḍavaṉ* tracing their descent from Kuga who ferried *Rāmā* over the Ganges.

[குகன் + வேளாளர்.]

குகன்[1] *kugaṉ,* பெ.(n.) 1. முருகன் (திவா.); God Murugan. *"ஆருயிர்க் குகைதோறும் வதிதலாற் குகனென்று" (தணிகைப்பு. நாட்டுப். 33).* 2. இராமனது நண்பனாகிய ஒரு வேடன்; a *Nisāda* ferryman and friend of *Rāmā*. *"கூரணிந்த வேல் வலவன் குகனோடும்" (திவ். பெரியாழ். 4.10: 4).*

[குக்கல் = நாய். குக்கலன் → குகன் (நாயை வேட்டைக்கு உடனழைத்துச் செல்பவன், வேடன்).குகன் = வேடர்குலத்து வள்ளியை மணந்தவன், முருகன்.]

குகன்[2] *kugaṉ,* பெ.(n.) ஆசிரியர், குரு (யாழ். அக.); preceptor.

[குரவன் → குவன் → குகன்.]

குகு *kuku,* பெ.(n.) 1. காருவா (அமாவாசை); new moon. *"குகுவைத் தொடர் பூரணை" (சேதுபு. தேவிபு. 60).* 2. பத்துநாடியுளொன்று; a principal tubular vessel of the human body, one of *taca-nāḍi*. *'குகு கன்னியலம்புடை' (சிலப். 3:26, உரை.).*

Skt. kuhu

[குல் → குவ் → குகு (குகை, இருள்).]

குகுரம் *kuguram,* பெ.(n.) ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்று; a country in Ancient India, the kingdom of Yadu, one of 56 *tēcam*. *"அவந்தியொடு சேதி குகுரம்" (திருவேங். சத.97).*

ம. குகுரம்

Skt. kukura

[குகர் = வேடர், படகோட்டிகள். குகர் → குகுரம்.]

குகுரன் *kuguraṉ,* பெ.(n.) நாய்; dog.

ம. குகுரம்

[குக்கல் → குக்குரன் → குகுரன் (கொ.வ.).]

குகை *kugai,* பெ.(n.) 1.மலைக்குகை (பிங்.); cave, mountain cavern, grotto. 2. முனிவர் இருப்பிடம் (பிங்.); hermit's cell. 3. சிமிழ்(சீவக.1906, உரை); scent box , casket. 4. மாழை களை உருக்குங் கலம்; crucible. *"கருமருவு குகையனைய காயத்தி னடுவுள்" (தாயு. 32).* 5. கல்லறை; cellar subterranean walled room for the ascetic in trance, serving as sepulchre after his death, when he is intered in it in a sitting posture. *"அந்தவுடறான் குகைசெய் திருத்திடின்"(திருமந். 1913).* 6. மலைமகள்(கூர்மபு. திருக்கலியாண.23);*Pārvati*

மறுவ. கெவி, அளை, குடவு, நூழை, பொதும்பு, போறை முழை, வங்கு, விடர்.

க.,தெ., து. கவி; **கூய்.** க்ராஉ.

Skt. guha

Fin. kāva; **Es.** kava; **Hung.** keb; **Mong.** keb; **O.Turk.** kib; **Jap.** gawab; **Q.** hawa.

[குழி → குழை → குகை. ஒநோ. முழை → முகை.]

குகைக்காமன் *kugai-k-kāmaṉ,* பெ.(n.) கல்நார் (மூ.அ.); asbestos.

[குகை + காமன்.]

குகைச்சட்டி *kugai-c-caṭṭi,* பெ.(n.) சட்டிவகை; kettle.

[குகை + சட்டி.]

குகைச்சி *kugaicci,* பெ.(n.) கறையான் புற்று (யாழ். அக.); white ant's nest.

[குகை → குகைச்சி.]

குகைநமச்சிவாயர் *kugai-nama-c-civāyar,* பெ.(n.) பதினெட்டாம் நூற்றாண்டில் திருவண்ணா மலைக் குகையில் வசித்து வந்தவரும் அருணகிரி யந்தாதி முதலிய நூல்களின் ஆசிரியருமான ஒரு முனிவர்; author of *Aruṇa-kiri-y-antāti* and other works, who lived in a cave at *Tiruvaṇṇāmalai* in the 18th c.

[குகை + நமச்சிவாயர்.]

குகைப்புடம் *kugai-p-puḍam,* பெ.(n.) மூசையில் வைத்து இடும் புடம்(வின்); calcination or refining of metal in a crucible.

[குகை + புடம். குகை = மூசை.]

குங்கிப்போ-தல் *kuṅgi-p-pō-,* 8 செ.கு.வி.(v.i.) குறைதல்; decreasing, becoming less (சா.அக.).

தெ. குங்கு, கூகு, க்ருங்கு (மூழ்குதல், மறைதல்).

[குறுகு → குக்கு → குங்கு → குங்கி+ போ.]

குங்கிலி *kuṅgili,* பெ.(n.) 1. தலூரம்; bastard saul. 2. காட்டுமா; wild mango (சா.அக.).

[குக்குல் → குங்குல் → குங்கிலி.]

குங்கிலிகம் *kuṅgiligam,* பெ.(n.) 1. ஒருவகை மரம்; tripterocarp dammar. 2. வாலுளுவை; black oil.

[குங்கிலியம் → குங்கிலிகம்.]

குங்கிலியக்கலய நாயனார் *kuṅgiliya-k-kalaya-nāyaṉar,* பெ.(n.) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்(பெரியபு.); name of a cononized *śaiva*saint, one of 63.

[குங்கிலியம் + கலயம் + நாயனார்.]

குங்கிலியக்கலயர் *kuṅgiliya-k-kalayar,* பெ.(n.) ***குங்கிலியக் கலய நாயனார்*** பார்க்க; see *kuṅgiliya-k-kalaya-nāyaṉār.*

[குங்கிலியம் + கலயம் + அர் – குங்கிலியக் கலயர்.]

குங்கிலியக் களிம்பு *kuṅgiliya-k-kaḷimbu,* பெ.(n.) ஆறாத புண்களுக்குப் பூச உதவும் வெள்ளைக் குங்கிலியக் களிம்பு; an ointment prepared from olibanum. It is applied for unhealed sores (சா.அக.).

[குங்கிலியம் + களிம்பு.]

குங்கிலியத்தூள் *kuṅgiliya-t-tūḷ,* பெ.(n.) குங்கிலியப்பொடி; powder of Indian olibanum (சா.அக.).

[குங்கிலியம் + தூள்.]

குங்கிலியம் *kungliyam,* பெ.(n.) 1. ஒருவகை மரம் (பதார்த்த. 1120.); tripterocarp dammar. 2. சாலமரம்; bastard sal. 3. சாலவகை; sal. 4. வெள்ளைக் குங்கிலியம்; piney varnish tree. 5. ஒருவகைப் பெருமரம்; Konkani resin. 6. ஒரு சிறுமரம்; Indian bdellium tree. 7. மலைக்கிளுவை; downy hill balsam tree. 8. கருங்குங்கிலியம்; black dammar tree. 9. ஆத்திரேலியாவிலுள்ள மரவகை; Australian dammar.

ம. குங்கிலியம்

[குக்கில் → குங்கிலியம்.]



குங்கிலியம்

குங்கு-தல் *kungu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. குன்றுதல்; to decrease, diminish, sink; to be humbled. *"உன்பொங்கு குங்க"(யாழ்ப்.).* 2. வணங்குதல்; to bend sralute. 3. குவிதல்; to close. 4. சுருங்குதல்; to condense.

ம. குங்ஙுக; க. குக்கு, குங்கு; தெ. குங்கு; து. குக்குனி; துட. க்விச்; கூட. க்ரும்ப, க்ரூவ; குவி. க்ருஇயலி; படட. குக்கு.

[குல் → குங்கு → குங்குதல்.(தமி.வ.219).]

குங்குமக்காவி *kunguma-k-kāvi,* பெ.(n.) செங்காவி (வின்.); saffron ochre.

மறுவ. குங்குமக்கவவி

ம. குங்குமக்காவி

[குங்குமம் - சிவப்பு, குங்குமம் + காவி.]

குங்குமக்குருவிக்கார் *kunguma-k-kuruvi-k-kār,* பெ.(n.) நெல்வகை(A); a kind of paddy.

[குங்குமம் + குருவி + கார்.]

குங்குமக்கோதை *kunguma-k-kōdai,* பெ.(n.) சிவப்புச்சத்திசாரணை; red shauranay, red trianthema. *"குங்குமக் கோதைகுடல் பிடுங்கி"* (சா.அக.).

மறுவ. குங்குமச்சத்தி

[குங்குமம் +கோதை.]

குங்குமச்சம்பா *kunguma-c-camba,* பெ.(n.) மஞ்சள் நிறமுள்ள சம்பா நெல் வகை(வின்.); a yellow variety of rice.

[குங்குமம் + சம்பா.]

குங்குமச்சிமிழ் *kunguma-c-cimil,* பெ.(n.) குங்குமம் வைக்கும் பெட்டி; small casket for holding *kungumam* powder.

மறுவ. குங்குமச்செப்பு, குங்குமப்பரணி

[குங்குமம் + சிமிழ்.]

குங்குமச்சிவதை *kunguma-c-civadai,* பெ.(n.) சிவப்புச் சிவதைக் கீரை; a red variety of cats greens (சா.அக.).

[குங்குமம் + சிவதை.]

குங்குமச்சீதா *kunguma-c-cīdā,* சிவப்புச் சீதா செங்கழுநீர், அல்லது சிவப்பு நெய்ச்சிட்டிக் கீரை; a red variety of ash-coloured fleabane (சா.அக.).

[குங்குமம் + சீதா.]

குங்குமச்செந்தொட்டி *kunguma-c-centotti,* பெ.(n.) சிவப்புச் செந்தொட்டி அல்லது சிவப்புக் காஞ்சொறி; a red variety of *kāñjori* (சா.அக.).

[குங்குமம் + செந்தொட்டி.]

குங்குமச்செப்பு *kunguma-c-ceppu,* பெ.(n.) **குங்குமச்சிமிழ்** பார்க்க; see *kunguma-c-cimili.*

ம. குங்குமச்செப்பு

[குங்குமம் + செப்பு.]

குங்குமச்செம்பரத்தை *kuṅguma-c-cembarattai,* பெ.(n.) சிவப்புச் செம்பரத்தை; flesh coloured shoe-flower (சா.அக.).

[குங்குமம் + செம்பரத்தை.]

குங்குமச்செவ்வந்தி *kuṅguma-c-cevvandi,* பெ.(n.) செவ்வந்தி வகை (மூ.அ.); a species of chrysanthemum.

[குங்குமம் + செவ்வந்தி]

குங்குமச்செழுமலர் *kuṅguma-c-ceḻumalar,* பெ.(n.) சிவப்புக்கொன்றை; a kind of red cassia tree (சா.அக.).

[குங்குமம் + செழுமலர்.]

குங்குமச்சோரன் *kuṅguma-c-cōraṉ,* பெ.(n.) ஒருவகைக் குதிரை (அசுவசா. 152); a species of horse.

[குங்குமம் + சோரன்.]

குங்குமதூபம் *kuṅguma-tūbam,* பெ.(n.) வெள்ளைப் போளம்; white myrrh (சா.அக.).

[குங்குமம் + தூபம்.]

குங்குமப்பயறு *kuṅguma-p-payaṟu,* பெ.(n.) பாசிப் பயறு இனத்தைச் சேர்ந்த ஒரு சிவப்புப்பயறு; a red variety of the species of green gram (சா.அக.).

ம. குங்குமப்பயறு

[குங்குமம் + பயறு.]

குங்குமப்பரணி *kuṅguma-p-paraṇi,* பெ.(n.) குங்குமச்சிமிழ் பார்க்க; see *kuṅguma-c-cimiḻ.*

[குங்குமம் + பரணி.]

குங்குமப்பருத்தி *kuṅguma-p-parutti,* பெ.(n.) செம்பருத்தி; Bengal cotton (சா.அக.).

[குங்குமம் + பருத்தி.]

குங்குமப்பாடாணம் *kuṅguma-p-pāḍāṇam,* பெ.(n.) குங்குமச்செய் நஞ்சு (மூ.அ.); a prepared arsenic one of 32.

[குங்குமம் + பாடாணம். Skt. pāṣāṇa > த. பாடாணம்.]

குங்குமப்பிரண்டை *kuṅguma-p-piraṇḍai,* பெ.(n.) சிவப்புப் புளியம் பிரண்டை; heavy wild vine (சா.அக.).

[குங்குமம் + பிரண்டை.]

குங்குமப்பூ *kuṅguma-p-pū,* பெ.(n.) குங்குமச் செடியின் பூ; saffron flower.

ம. குங்குமப்பூ

[குங்குமம் + பூ.]

குங்கமப்பூ காசுமீரத்தில் விளைவாகி மற்ற இடங்களுக்கு ஏற்றுமதியாகிறது. இது ஒரு மணப்பொருள். கருவுற்ற பெண்களுக்கு இதைக் கொடுப்பார்கள்.

குங்குமப்பேரிகம் *kuṅguma-p-pērigam,* பெ.(n.) சிவப்பாத்தி; crimson climbing mountain ebony (சா.அக.).

[குங்குமம் + பேரிகம்.]

குங்குமப்பொட்டு *kuṅguma-p-poṭṭu,* பெ.(n.) குங்குமப்பொடியால் நெற்றியிலிடும் பொட்டு; a mark of *kuṅgumam* powder worn on the fore-head.

[குங்குமம் + பொட்டு.]

குங்குமம் *kuṅgumam,* பெ.(n.) 1. ஒருவகைச் செடி; saffron, bulbous-rooted plant. 2. சாப்பிராவிரை; arnotto. 3. குரங்குமஞ்சணாறி; kamela. 4. செஞ் சாந்து; a kind of red paint. *"மார்பிற் கலவாக் குங்கும நிலவிய தென்ன" (கல்லா. 17:34).* 5. நெற்றியிலிடும் குங்குமப்பொடி; saffron powder worn on the forehead.6. செந்நிறம்; red colour. 7. சிவப்பு; redness.

ம. குங்குமம்; க. குங்கும, குங்குவ; தெ. குங்கும.

Skt. kuṅkuma

[கும் + கும். (நறுமண ஒலிக்குறிப்பு) கும் + கும் + அம் – குங்குமம்.]

குங்கும மந்தாரை *kuṅguma-mandārai,* பெ.(n.) சிவப்பு மந்தாரை அல்லது செம்மந்தாரை; pink and yellow mountain ebony (சா.அக.).

[குங்கும் + மந்தாரை.]

குங்கும மரம் *kuṅguma-maram,* பெ.(n.) குங்குமப் பூச்செடி (சா.அக.); saffron, bulbous-rooted plant.

[குங்குமம் + மரம்.]

குங்குமவண்ணக்கல் *kuṅguma-vaṇṇakkal,* பெ.(n.) மஞ்சட்கல்; yellow stone, saffron stone (சா.அக.).

[குங்குமம் + வண்ணம் + கல்.]

குங்குமவண்ணம் *kuṅguma-vaṇṇam,* பெ.(n.) குங்குமத்தின் நிறம், சிவப்பு நிறம்; the colour of saffron, red colour.

ம. குங்குமவர்ணம்

[குங்குமம் + வண்ணம்.]

குங்குமவண்ணி *kuṅguma-vaṇṇi,* பெ.(n.) 1.அரிதாரம்; yellow sulphuret of arsenic. 2. மஞ்சட்கல்; saffron stone.

ம. குங்குமவர்ண்ணி

[குங்குமம் + வர்ணி.]

குங்குமவலரி *kuṅguma-v-alari,* பெ.(n.) அலரிவகை, செவ்வலரி; sweet oleander or red oleander or oleander role bay, as containing a yellow poisonous resin in its root.

[குங்குமம் = குங்குமத்தின் நிறம். குங்குமம் + அலரி.]

குங்குமவாடை *kuṅguma-vāḍai,* பெ.(n.) குங்கும மணம்; saffron odour (சா.அக.).

[குங்குமம் + வாடை.]

குங்குமவாணிச்சி *kuṅguma-vāṇicci,* பெ.(n.) தாளகம் (யாழ்.அக.); yellow sulphuret of arsenic.

[குங்குமம் + வாணிச்சி.]

குங்குலு *kuṅgulu,* பெ.(n.) 1.குங்கிலிய மரம் (தைலவ. தைல.74); tripterocarp dammar. 2. ஒரு வகை நீண்டமரம்; bastard sal.

[குங்குல் → குங்குலு.]

குச்சத்தின்பாதி *kuccattiṉ-pādi,* பெ.(n.) சிறு புள்ளடி வகை (மலை.); a species of tick-trefoil.

[குச்சம்+அத்து + இன் + பாதி.]

குச்சம்[1] *kuccam,* பெ.(n.) 1.கொத்து (சூடா.); bunch of flowers, cluster, tuff. 2. அழகுக்குஞ்சம்; tassel of thred, hung as an ornament. 3. பற்படகம் (மலை.); fever plant.

[குல் = கூடுதல் கருத்துவேர். குல் → (குலவு) குச்சம்.]

குச்சம்[2] *kuccam,* பெ.(n.) ***குன்றிமணி (மலை.)*** பார்க்க; crab's eye.

[குன்றி → குற்றி → குச்சி → குச்சம். (கொ.வ.).]

குச்சம்[3] *kuccam,* பெ.(n.) ***நாணல் (மலை.)*** பார்க்க; kaus, a large and coarse grass.

[கச்சம் + குச்சம்.]

குச்சம்[4] *kuccam,* பெ.(n.) புறந்தூற்றுமொழி (வின்.); slander, as persion.

[குற்றம் → குத்தம் → குச்சம்.]

குச்சரக்குடிசை *kuccara-k-kuḍišai,* பெ.(n.) சோலையின் இடையில் அமைக்கப்பட்ட குடிசை வீடு (கட்டடம்);thatched house in a garden.

[குச்சரம் + குடிசை.]

குச்சரம் *kuccaram,* பெ.(n.) கூர்ச்சரம்; Gujarat ***"குச்சரக் குடிகைக்குமரி" (மணிமே. 18:152).***

[குச்சரம் - ஆலமரம். அம்மரத்தின் நடந்த குச்சர வாணிகம், வணிகரின் குடிப்பெயர். வணிகரால் பெயர் பெற்ற நிலப்பகுதி]

குச்சரர் *kuccarar,* பெ.(n.) கூர்ச்சர நாட்டினர்; people of Gujarat. *"குலிங்க ரவந்தியர் குச்சரர் கச்சியரே" (கலிங். 33).*

[குச்சரம் → குச்சரர்.]

குச்சரி[1] *kuccari,* பெ.(n.) 1. ஒரு பண் (இராகம்); a musical mode. *"குச்சரி குறுங்கலி சொல் கொல்லியது பாடா" (இரகு. தேனு. 25).* 2. முற் காலத்து வழங்கிய துகில்வகை (சிலப். 14:100, உரை.); a kind of garment used in ancient times.

[குல் + சரி – குச்சரி.]

குச்சரி[2]**–த்தல்** *kuccarittal,* 4 செ.கு.வி.(v.i.) அருவருப்புக் கொள்ளுதல்; to feel disgusted. *"கருமச் சழக்கிற் குச்சரிப்பன்" (ஞானவா. நிருவா.11).*

[குழை + தரு – குழைதரு → குச்சரு → குச்சரி.]

குச்சரிசி *kuccarisi,* பெ.(n.) நொய்யரிசி; broken rice.

ம. குச்சரி

[குற்றரிசி (குற்றிய அரிசி) → குத்தரிசி → குச்சரிசி.]

குச்சி[1] *kucci,* பெ.(n.) 1.மரக்குச்சி; splinter, peg, stick. 2. கொண்டையூசி; hairpin. 3. ஒருவகைச் செடி (மலை.); sickle leaf.

ம., து., பர்.குச்சிழு

[குல் → குச்சி. குல் - சிறியது.]

குச்சி[2] *kucci,* பெ.(n.) 1. முகடு; highest point, crest, summit. *"உதயத்தின் குச்சிச் சென்றா னொத்துளான்" (கம்பரா.வானர.20).* 2. சிறு குடிசை; hut.

[குள் → குறு → குற்றி → குச்சி (த.வ.47).]

குச்சி[3] *kucci,* பெ.(n.) 1.மயிற்சிகைப்பூடு (யாழ். அக.); peacock-fan, a fern. 2. திறவுகோல்; key.

[குல் → குச்சி.]

குச்சி[4]**–த்தல்** *kucci-,* 4 செ.குன்றாவி.(v.t.) அருவருத்தல்; to loathe, detest. *"குச்சித்த லின்றி நுகர்ந்தாள்" (பாரத. திரௌ. 74).*

[குல் → குச்சி.]

குச்சிக்கால் *kucci-k-kāl,* பெ.(n.) தூலத்தின் மீது வீட்டுக்கூரையைத் தாங்குங் கால் (தருமபுரி); roof supporting rafter.

[குச்சி + கால்.]

குச்சிகை *kuccigai,* பெ.(n.) வீணைவகை (பரத.ஒழிபி.15); a kind of lute.

ம. குச்சிக

[குச்சி → குச்சிகை.]

குச்சித்தமரத்தை *kuccitta-maratai,* பெ.(n.) புளிச்சக்காய் மரம் (இ.வ.); bilimbi tree.

[குச்சி + தமரத்தை.]

குச்சிதம் *kuccidam,* பெ.(n.) இழிவு; contemptibleness, despicableness, loathsomeness. அவன் எப்பொழுதும் மற்றவர்களைக் குச்சிதமாய்ப் பேசுகிறான் (உ.வ.).

[குத்து → குச்சு → குச்சி → குச்சிதம். குத்திப்பேசுதல், தவறுகளைச் சுட்டிக்காட்டி இழிவுபடுத்துதல்.]

குச்சிப்பதக்கம் *kucci-p-padakkam,* பெ.(n.) பதக்க அணிவகை; jewel pendant set with small rubies.

[குச்சி + பதக்கம்.]

குச்சிப்புல் *kucci-p-pul,* பெ.(n.) **குச்சுப்புல்** பார்க்க; see *kuccu-p-pul. "தடையறவே குச்சிப்புற் சாத்தி" (சிவரக. பசாசு. மோசரு.10).*

[குச்சு + புல் – குச்சுப்புல் → குச்சிப்புல்.]

குச்சில்[1] *kuccil,* பெ.(n.) சிறியவீடு; small house.

ம. குச்சில் (பெண்கள் அறை, சமையலறை)

[குற்றில்→ குச்சில் (த.வ.74).]

குச்சில்[2] *kuccil,* பெ.(n.) குச்சுப்புல்; cluster-grass. *"குச்சினிரைத்த குரூஉமயிர் மோவாய்" (புறநா. 257.).*

[குச்சு → குச்சி → குச்சில்.]

குச்சில்[3] *kuccil,* பெ.(n.) குச்சரம்; Gujarat.

மறுவ. குச்சரம், கூர்ச்சரம்.

[குச்சரம் → குச்சில்]

குச்சிலியப்பொட்டு *kucciliya-p-pottu,* பெ.(n.) தளுக்குப் பொட்டு; a fancy mark of mica worn on the forehead by women.

[குச்சிலியம் + பொட்டு.]

குச்சிலியர் *kucciliyar,* பெ.(n.) குச்சர நாட்டவர்; Gujaratis, people of Gujarat. *"குச்சிலிய மாதர் குயமும்"(தனிப்பா.ii,75,190).*

[குச்சில் → குச்சிலியர்.]

குச்சு[1] *kuccu,* பெ.(n.) 1.மரக்குச்சு; splinter, plug, any bit of stick, stalk. 2. கடாவுமுளை; tent-peg. 3. கொண்டையூசி; hairpin.

ம., க. குச்சு; **தெ.** குட்சி; **து., பர்.** குச்சி.

[குல் → குள் (குட்டை, சிறியது) → குச்சு.]

குச்சு[2] *kuccu,* பெ.(n.) 1.சிறுகுடில்; hut, shed made of palm leaves. *"என்னிலங் குச்சல" (தனிப்பா.i, 384,34.)* 2. சிற்றறை; small room.

ம. குச்சகம், குச்சு.

[குல் → குள் → குச்சு.]

குச்சு[3] *kuccu,* பெ.(n.) 1.குஞ்சம்; tassel, bunch, collection, cluster, tuft. *"கவரி மேனிலாப்படக் குச்சொடுந் தூக்கினர்"* (உபதேசகா. சிவ புண்ணிய.63). 2. ***குச்சுப்புல்*** பார்க்க;(புறநா. 257,உரை.); see *kuccu-p-pul.* 3. ஒரு வகைக் காதணி(வின்.); small bell -shaped gold pendant worn in a girl's ear. 4. ஊராளி மகளின் கழுத்தணி வகை; pencil-shaped ornament suspended from the neck, worn by *Urāli* women. 5. சீலையின் முன்மடி; folds, as of a woman's cloth when worn. 6. வண்ண ஓவியன் தூரிகை; painters brush.

Skt. kūrca

[கொத்து → குத்து → குச்சு (வ.மொ.வ.121).]

குச்சு[4] *kuccu,* பெ.(n.) பாவாற்றி என்னும் நெசவுக் கருவி; weaver's long brush with which the warp threads when laid out between trestes are separated from one another. *"குச்செனநிரைத்த யானைக் குழாம்"(சீவக. 1153).*

[குல் → குள் → குச்சு.]

குச்சுக்கட்டு—தல் *kuccu-k-kattu-,* 5 செ.குன்றாவி (v.t.) கூந்தல் முடித்தல்(வின்.); to braid the hair.

[குச்சு = சிறியது, சிறிய முடிச்சு. குச்சு + கட்டு.]

குச்சுக்கயிறு *kuccu-k-kayiru,* பெ.(n.) நெய்தற் குரிய கைப்பிடி; handle like knot made by coconut fibre.

[குச்சு + கயிறு.]

குச்சுக்காரி *kuccu-k-kāri,* பெ.(n.) 1.சிறுகுடிலில் வாழ்பவள்; woman residing in a hut. 2. இழிந்த விலைமகள்; a low prostitute.

[குச்சு = கூரை வீடு, குடில். குச்சு + காரி – குச்சுக்காரி.]

குச்சுக்கெம்பு *kuccu-kembu,* பெ.(n.) புறவிடம் மேடான சிவப்பு மணி; ruby with convex surface.

[குச்சு + கெம்பு. கெம்பு = செம்மணி.]

குச்சுப்பிடி—த்தல் *kuccu-p-pidi,* 4 செ.குன்றாவி. (v.t.) 1.ஆடையைக் கொய்து வைத்தல்; to make

folds in cloth when putting it on. 2. குஞ்சம் வைத்தல்; to make tassels.

[குஞ்சம் → குஞ்சு → குச்சு + பிடி.]

குச்சுப்புல் *kuccu-p-pul,* பெ.(n.) 1.ஒருவகைப் புல்; cluster-grass. குச்சுப்புல் நிரைத்தாற் போன்ற நிறம் பொருந்திய மயிரினையுடைய தாடியினையும் (புறநா. 257, உரை). 2. கொத்தாயுள்ள புல்; tassel of grass.

[குச்சு + புல்.]

குச்சுப்புற்சாத்து-தல் *kuccu-p-pur-cattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கோயிற்சிலைகளைக் குச்சுப்புல்லால் தூய்மைசெய்தல்; to wipe the temple idols with fine grass.

[குச்சு + புல் + சாத்து.]

குச்சுமட்டை *kuccu-mattai,* பெ.(n.) 1.ஓவியரின் கருவி வகை; painter's coarse brush. 2. வெள்ளை யடித்தற்குரிய மட்டை; brush used in white washing.

[குச்சு + மட்டை.]

குச்சுமணி *kuccu-mani,* பெ.(n.) பரவ மகளிர் கழுத்தணி வகை; a neck ornament.

[குச்சு + மணி.]

குச்சுவாங்கு-தல் *kuccu-vāngu-,* 5 செ.குன்றாவி. (v.t.) குச்சியிற் பதித்து ஒன்பான் மணிகளை ஒப்பஞ்செய்தல்; to polish gems after setting them in a stick.

[குச்சு + வாங்கு.]

குச்சுவீடு *kuccu-vidu,* பெ.(n.) சிறுகூரைவீடு; cottage.

[குச்சு + வீடு (வேட்க. 153).]

குச்சுள் *kuccul,* பெ.(n.) வீட்டின் முன்பாகத்திலுள்ள அறை; a room in front portion of the house.

[குச்சு → குச்சுள்.]

குச்செறி-தல் *kucceri-,* 2 செ.கு.வி.(v.i.) மயிர்சிலிர்த்தல்; to horripilate.

[குல் → குத்து → குச்சு + எறி.]

குச்சை *kuccai,* பெ.(n.) கொய்சகம்; fold or plait of a woman's cloth.

[குஞ்சு → குச்சு → குச்சை.]

குசக்கணக்கு *kuša-k-kanakku,* பெ.(n.) **குயக் கணக்கு** பார்க்க; see *kuya-k-kanakku.*

[குயவன் + கணக்கு → குயக்கணக்கு → குசக்கணக்கு.]

குசக்கருவி *kuša-k-karuvi,* பெ.(n.) குயவர் பயன்படுத்தும் திரிகை, கல், தட்டுப்பலகை முதலியன; tools used by the potters namely potter wheel, beating plate & stone. **குயக்கருவி** பார்க்க; see *kuya-k-karuvi.*

[குயவன் + கருவி – குயக்கருவி → குசக்கருவி.]

குசக்கலத்தி *kuša-k-kalatti,* பெ.(n.) **குயக்கலத்தி** பார்க்க; see *kuya-k-kalatti.*

[குயம் → குசம் + கலத்தி.]

குசக்கலம் *kuca-k-kalam,* பெ.(n.) **குயக்கலம்** பார்க்க; see *kuya-k-kalam.*

ம.குசக்கலம்

[குயவன் → குசவன் + கலம் – குசக்கலம்.]

குசக்காணம் *kuša-k-kānam,* பெ.(n.) **குயக் காணம்** பார்க்க; see *kuya-k-kānam.*

[குயவன் → குசவன் + காணம் – குசக்காணம்.]

குசக்குழாய் *kuša-kulāy,* பெ.(n.) **குயக்குழாய்** பார்க்க; see *kuya-k-kulāy*

[குயவன் → குசவன் + குழாய் – குசக்குழாய்.]

குசத்தி[1] *kušatti,* பெ.(n.) **குயத்தி** பார்க்க; see *kuyatti.s*

ம. குசத்தி

[குயவன் → குசவன் → குசத்தி.]

குசத்தி[2] *kušatti*, பெ.(n.) பூவழலை(வின்.); earth impregnated with soda.

[குய்யம் → குயம் → குயத்தி → குசத்தி.]

குசத்தி[3] *kušatti*, பெ.(n.) 1. சாதிக்காய்; nutmeg. 2. ஓடு; tile (சா.அக.).

[குயத்தி → குசத்தி.]

குசத்தீவு *kuša-t-tivu*, பெ.(n.) ***குசைத்தீவு*** பார்க்க; see *kušai-t-tivu*.

[குசை → குசம் + தீவு.]

குசந்தம் *kušandam*, பெ.(n.) தருப்பைப்புல்; sacrificial grass (சா.அக.).

[குயம் → குசம் + குசந்தம்.]

குசந்தனம் *kušandanam*, பெ.(n.) செஞ்சந்தனம் (மலை.); red sandalwood.

[குரு = சிவப்பு. குரு + சந்தனம் – குருச்சந்தனம் → குசந்தனம்.]

குசபலம் *kuša-palam*, பெ.(n.) 1. மாதுளை மரம்; pomegranate tree. 2. பெண்ணின் முலையைப் போன்ற பழங்கள்; fruits of the shape of the female breast. 2.விளா; wood apple (சா.அக.).

*[குயம் → குசம் + பலம். பழம் >**Skt.** palam.]*

குசம்[1] *kušam*, பெ.(n.) 1. தருப்பை; sacrifical grass. *"ஈரக் குசங்கள் கிழிக்குந் தொழிற் கேற்ற வாளோ" (பாரத. சம்பவ. 55).* 2. நீர் (பிங்.); water.

[குல் →குய் →குசை → குசம்.]

குசம்[2] *kušam*, பெ.(n.) மரம் (சூடா.); tree.

[குல் → குய் → குசம்.]

குசம்[3] *kušam*, பெ.(n.) முலை; woman's breast. *"பாரக்குசங்கள் பலதைவரும் பான்மை நீங்கி" (பாரத.சம்பவ. 55).*

[குல் (முளைத்தல், தோன்றுதல்) → குய் → குசம்.]

குசம்[4] *kušam*, பெ.(n.) 1.காட்டுத்துளசி;wild basil. 2. தொப்புள்; navel. 3. சாமைப்புல்; millet grass. 4. மூடம்; ignorance. 5. குற்றம்; mistake (சா.அக.). 6. புறங்கூறல் (யாழ். அக.); back biting.

[குல் → குள் → குய் → குயம் → குசம்.]

குசமசக்கு *kuša-mašakku*, பெ.(n.) 1.குழப்பம்; confusion, chaotic condition. 2. செயற்சிக்கல்; intricacy, difficulty. 3. பொய்; falsehood. 4. வீண்மயக்கு; vain show

[குயம் → மயக்கு → குயமயக்கு → குசமசக்கு.]

குசமண்ணாலி *kuša-mannāli*, பெ.(n.) குசமண் நாழி, குயவன் மண்ணால் செய்த நாழி அளவைப் படி; a measure *Nāḻi* mad of pottery.

[குயம்→குசம் + மண் + நாழி. நாழி →நாலி (கொ.வ.).]

குசலக்காரன் *kušala-k-kāraṉ*, பெ.(n.) 1.மந்திரக் காரன்; sorcerer, wizard. 2. ஏமாற்றுக்காரன், வஞ்சகன்; crafty person.

[குல்→குய் →குயல் → குசல்→ குசலம் + காரன்.]

குசலக்காரி *kušala-k-kāri*, பெ.(n.) மந்திர வித்தையள்; a woman supposed to display super *nalūral* powers through evil spirits, witch (சா.அக.).

[குய் →குயலம் →குசலம்+ காரி.]

குசலபுத்தி *kušala-p-putti*, பெ.(n.) 1.கூர்மையான அறிவு; sharp intelligence acuteness of intellect. 2. தந்திரவறிவு (யாழ்ப்.); crafty, cunning wit.

[குய் →குயலம் → குசலம் + புத்தி.]

குசலம் *kušalam*, பெ.(n.) 1.நலம்; well-being, prosperity. *"குசலவார்த்தை பேசி" (உத்தரரா. சம்பு. 37).* 2. நற்குணம் (பிங்.); virtue, goodness. 3. மாட்சிமை (பிங்.); excellence.4. திறமை; ability, skill, dexterity. 5. தந்திரம்; craftiness, cunning, wile, trickiness. 6. மந்திரிகம்; witchcraft, magic, sorcery.

[குல் →குய் →குயல் →குயலம் → குசலம்.]

குசலம்பண்ணு-தல் *kušalam-paṇṇu-*, 5 செ.கு.வி. (v.i.) மந்திரம் செய்தல்; to practise the black art, work magic.

[குல் → குய் → குயலம் → குசலம் + பண்ணு.]

குசலவர் *kušalavar,* பெ.(n.) இராமபிரானது இரட்டை மகனான குசனும் இலவனும் (உத்தரரா. இலவண.75); Kusa and Lava sons of Rama.

[குசன் → இலவன் → குசலவன் → குசலவர்.]

குசலவித்தை *kušala-vittai,* பெ.(n.) மகளிர்க்குரிய எண்ணல், எழுதல், இலைகிள்ளல், பூத்தொடுத்தல், யாழ்வாசித்தல் முதலிய கைத்தொழில்கள்; accomplishments of women, being five viz. *yeṇṇal, yeḻutal, ilaikiḷḷal, pūtoḍuttal, yāḻvāšittal.*

[குல் → குய் → குயலம் → குசலம் + வித்தை.]

குசலவேதனை *kušala-vēdaṉai,* பெ.(n.) இன்ப உணர்ச்சி; pleasurable sensation.

[குல் → குய் → குயலம் → குசலம் + வேதனை.]

குசலவைத்தியன் *kušala-vaittiyaṉ* பெ.(n.) நோய்களின் கூறுபாடுகளை நன்கறிந்த மருத்துவம் செய்யும் மருத்துவன் (சா.அக.); an able or expert physician skillful in diagnosis as well as treatment.

[குயலம் → குசலம் + வைத்தியன்.]

குசலன் *kušalaṉ,* பெ.(n.) 1. மிகவல்லோன் (திவா.); skilful person, expert. 2. அறிஞன் (யாழ். அக.); wiseman. 3. தந்திரசாலி (இ.வ.); artful person.

[குயல் → குயலன் → குசலன்.]

குசலனி *kušalaṉi* பெ.(n.) மாயவித்தை செய்பவன் (சா.அக.); expert in magic.

[குயலன் → குசலன் → குசலனி.]

குசலி *kušali* பெ.(n.) தந்திரமுள்ளவள்; artful woman. *"கதைச்சிறுக்கிகள் குசலிகள்" (திருப்பு. 267, புதுப்.).*

[குயல் → குயலி → குசலி.]

குசலை *kušalai,* பெ.(n.) சுவர்த்தலையில் கட்டும் ஆரல்; coping of a wall.

[குச்சலை → குசலை.]

குசவம் *kušavam,* பெ.(n.) கொய்சகம்; folds of cloth put on by Indian women.

[கொய்சகம் → குசவம்.]

குசவன் *kušavaṉ* பெ.(n.) மண்வினைஞன், குயவன்; potter.

ம. குசவன்; து. குசவே.

*[குயவன் → குசவன். **குயவன்** பார்க்க see kuyavaṉ.]*

குசவன்கலம் *kušavaṉ-kalam,* பெ.(n.) சட்டி; earthern pot or vessel (சா.அக.).

[குயவன் → குசவன் + கலம்.]

குசவன்கைவழித்தமண் *kušavaṉ-kaivaḻi-t-tamaṉ,* பெ.(n.) நுண்ணிய களிமண்; fine clay clinging to a potters hand, refined clay (சா.அக.).

[குசவன் + கை + வழித்த + மண்.]

குசவன்சூளை *kušavaṉ-cūḷai,* பெ.(n.) குயவன் மட்பாண்டம் சுடுவதற்கு ஏற்பட்ட இடம்; potters kiln (சா.அக.).

[குயவன் → குசவன் + சூளை.]

குசவீசம் *kušavīšam,* பெ.(n.) காட்டாத்தி; holy mountain ebony (சா.அக.).

[குயம் → குசம் + வீசம்.]

குசவோடு *kuša-v-ōḍu,* பெ.(n.) குயவன் செய்த ஓடு; pot tile.

[குயவன் → குசவன் + ஓடு.]

குசன் *kušaṉ,* பெ.(n.) செவ்வாய் (திவா.); the planet mars, as born of the earth.

[குய் = எரிதல், சிவப்பு. குய் → குயன் → குசன்.]

குசாண்டு *kušāṇḍu,* பெ.(n.) அற்பத்தன்மை; meanness, littleness. *"நன்மை தீமைகளைக் கணக்கிட்டுப் படிவைக்குங் குசாண்டுள்ள ஈச்வர கோஷ்டியை" (திவ்.திருப்பா.4, மூவா.).*

[குசை = புல். குசை → குசாண்டு.]

குசாமியம் *kušāmiyam,* பெ.(n.) மலைமா; hill balsam tree (சா.அக.)

[குயம் (குயவு = உயரம்) → குயாமம் → குசாமியம்.]

குசாரன் *kušāraṉ,* பெ.(n.) நாரத்தை; bitter orange.

[குய் → குயவு → குயால் → குயாலன் → குசாரன்.]

குசால் *kušāl,* பெ.(n.) மனக்களிப்பு; meriment, joy. "குசாலொடு சாய்ந்து கொண்டவர்"(மதுரகவி.70). 2. நடையுடைகளின் மினுக்கு; styleshness, gaudiness, finery, as in furniture, in dress, in perfumery.

[குல் → குய் → குயவு (இளமை, மகிழ்வு) → குயால் → குசால்.]

Fin. kuje; **Es.** kuju, koju; **Mordvin.** koj; **Q.** kuyay.

த. குயால் > u.khušāl

குசாலிங்கனம் *kušāliṅgaṉam,* பெ.(n.) 1. களித்து விளையாடி ஒருவரை ஒருவர் தழுவிக்கொள்ளல்; sexual embrace due to excess of delight and passion. 2. ஆசையால் தழுவல்; embrace out of love (சா.அக.).

[குசால் + ஆலிங்கனம்.]

குசாற்காரன் *kušāṟkāraṉ,* பெ.(n.) 1.மனக் களிப்புள்ளவன்; a merry, care-free happy-go-lucky person. 2. ஆடம்பரக்காரன்; beau, fop.

[குயால் → குசால் + காரன்.]

குசிகம் *kušigam,* பெ.(n.) 1. குதிரைச்செவி; horse ear. 2. குங்கிலிய மரம்; Indian dammer tree. 3. ஒரு வகைக் கள்ளி; a kind of spurge the leaf of which resembles the horse ear. 4. எண்ணெய்க் கசடு; the sediment of oil. 5. தான்றி; the devil's abode (சா.அக.).

[குய் → குசி → குசிகம்.]

குசினி[1] *kušiṉi,* பெ.(n.) சிறியது(யாழ்ப்.); anything very small, tender, slender (சா.அக.).

க. குசி; தெ. கூசு.

[குல் → குள் → குய் → குசி → குசினி.]

குசினி[2] *kušiṉi,* பெ.(n.) சமையலறை; cook-room, kitchen, galley.

F. cuisine

[குல் → குய் (எரிதல்) → குயினி → குசினி.]

குசினிக்காரன் *kušini-k-kāraṉ* பெ.(n.) 1.சமையற் காரன்; cook, house-keeper, as working in the kitchen. 2. குதிரைக்காரன்; syce, horseg-room.

[குய் → குயினி → குசினி + காரன்.]

குசினிப்பயிர் *kušiṉi-p-payir,* பெ.(n.) இளம்பயிர் (யாழ்ப்.); seedling, tender plant.

[குள் → குய் → குயினி + பயிர்.]

குசினிமேட்டி *kušiṉi-mēṭṭi,* பெ.(n.) சமையற் காரனுடைய உதவியாளர்; cook's matey or under-servant.

[குசினி + மேட்டி (மேலாள், மேட்டிமைக்காரன்).]

குசு *kušu,* பெ.(n.) கீழ்க்காற்று; fart, wind or gas generated in the bowels and broken downwards.

க. குசு

[குல் → குய் → குசு.]

குசுகுசு-த்தல் *kušu-kušu-,* 4 செ.கு.வி.(v.i.) காதுக்குள் முணுமுணுவென்று ஓதுதல்; to whisper.

ம. குசுகுசுக்க; க. குசு, குச; து. குசி, குசு, குச்சி, குசு, குசுகுசு; தெ. குசகுச; பட. குசுகுசு; குரு. குசமுசாநா.

[குசு + குசு − குசுகுசு.]

குசுகுசுப்பு *kuśu-kuśuppu,* பெ.(n.) காதுக்குள் ஒதுகை; whispering.

[குசு + குசுப்பு.]

குசுகுசெனல் *kuśu-kuśeṉal,* பெ.(n.) காதுக்குள் ஒதுதற்குறிப்பு; onom.expr. signifying whispering.

[குசு + குசு + எனல்.]

குசுண்டம் *kuśuṇḍam,* பெ.(n.) வெண்கருங்காலி; egg fruited ebony (சா.அக.).

[குச்சுள் → குச்சுண்டம்.]

குசும்பகம் *kuśumbagam,* பெ.(n.) ஒரு நச்சுப் பூச்சி; a venomous insect (சா.அக.).

[குய் → குசும்பு → குசும்பகம்.]

குசும்பம்[1] *kuśumbam,* பெ.(n.) ***செந்துருக்கம்*** பார்க்க; see *sendurukkam.* *"குசும்பமலர்க் கந்தம்" (திருமந். 2818).*

[குய் → குசு → குசம்பை → குசம்பம்.]

குசும்பம்[2] *kuśumbam,* பெ.(n.) குங்குமப்பூச்செடி; safflower (சா.அக.).

[குய் → குசு → குசும்பம்.]

குசும்பா[1] *kuśumbā,* பெ.(n.) ***செந்துருக்கம்*** பார்க்க; see *sendurukkam.*

[குய் → குசு → குசும்பம் → குசும்பா.]

குசும்பா[2] *kuśumbā,* பெ.(n.) 1. ஒருவகைக் குடிப்பு; a kind of drink. 2. வெண்சிவப்பு நிறம்; a whitish pink colour (சா.அக.). குசும்பா வேட்டி (யாழ். அக.).

[குய் → குசு → குசும்பம் → குசும்பா.]

குசும்பாச்சேலை *kuśumbā-c-cēlai,* பெ.(n.) குசும்பாச்சாயம் ஏற்றிய சேலை; cloth dyed red in a solution of safflower seeds.

[குசும்பா + சேலை.]

குசும்பாப்பூ *kuśumbā-p-pū,* பெ.(n.) குங்குமப்பூச் செடி; safflower (சா.அக.).

மறுவ. லாலாப்பூ

[குசும்பா + பூ.]

குசும்பாப்பூ வெண்ணெய் *kuśumbā-p-pū-veṇṇay,* பெ.(n.) குசும்பாப் பூவினின்று வடிக்கும் எண்ணெய்; oil extracted from safflover, it brings on haemoptysis (சா.அக.).

[குசும்பா + பூ + வெண்ணெய்.]

குசும்பாவெண்ணெய் *kuśumbā-veṇṇey,* குசும்பா விதையினின்று வடிக்கும் எண்ணெய்; safflower oil, used in confectionery.

[குசும்பா + எண்ணெய்.]

குசும்பு *kuśumbu,* பெ.(n.) குறும்புத்தனம்; mischief.

[குறும்பு → குதும்பு → குசும்பு(கொ.வ.).]

குசும்பை *kuśumbai,* பெ.(n.) ***குசும்பா*** பார்க்க; see *kuśumbā. "குசும்பையி னறுமலர்" (கம்பரா. அதிகாய. 89).*

[குய் → குசு → குசும்பை.]

குசும்பைமலர்மணி *kuśumbai-malar-maṇi,* பெ.(n.) ஒன்பான் மணிகளில் ஒன்று (கோவரங்கப் பதுமராகம்) (யாழ். அக.); a kind of Topaz.

[குசும்பை + மலர் + மணி.]

குசுமசத்தம் *kuśumaśattam,* பெ.(n.) நாணல்; reed (சா.அக.).

[குசுமம் + சத்தம்.]

குசுமம் *kuśumam,* பெ.(n.) 1. பூ (திவா.); flower. 2. ***காயா (மலை.)*** பார்க்க; see *kāyā.* 3. மலையிலுப்பை (காட்டிலுப்பை); wild mowah. 4. சங்கங் குப்பி; smooth volkameria (சா.அக.).

ம. குசுமம்

[குய் → குசு → குசுமம்.]

குசுமவரி *kušuma-v-ari,* பெ.(n.) செம்பரத்தை; Chinese rose mallow (சா.அக.).

[குசுமம் + அரி.]

குசுமாகரம் *kušumākaram,* பெ.(n.) வெயிற்காலம்; summer (சா.அக.).

[கும் → குசுமம் → குசுமாகரம்.]

குசேலன் *kušēlaṉ,* பெ.(n.) கண்ணன் நண்பனும் அவரால் வறுமை நீங்கிப் பெருஞ்செல்வம் பெற்றவனுமாகிய ஒரு முனிவன் (பாகவத. 10.45:1); a poverty-stricken Brahmin sage who through the friendship of Krishna became exceedingly wealth.

[குல் (எழுச்சி, உயர்வு, நன்மை) கு + சீலன் → குசீலன் → குசேலன். வ. கு = நல்ல.]

குல் என்னும் தமிழ் முன்னொட்டினை வடமொழி கடன் பெற்றது.

குசை[1] *kucai,* பெ.(n.) ***தருப்பை*** பார்க்க; see taruppai. *“குசைசுடு மறையோர்” (பிரபுலிங். கோரக்கர்.).*

[குல் → குய் → குயை → குசை]

குசை[2] *kušai,* பெ.(n.) 1.குதிரையின் வாய்க் கருவியிற் கோத்து முடியுங் கயிறு (நெடுநல். 178. உரை); rein. 2. கடிவாளம்; bridle, bit. *“அசைவி றொடை யடி கசைகுசை” (பாரத. பதினாறாம் போ. 27).*

[கசை → குசை]

குசை[3] *kušai,* பெ.(n.) மகிழ்ச்சி; gladness, joy. *“குசைதரு வினோதம்”(ஞானவா. தாசூர. 85).*

[குல் → குய் → குயை → குசை]

குசை[4] *kušai,* பெ.(n.) குதிரைப் பிடரிமயிர் (பிங்.); horse's mane.

[குல் → குய் → குசை]

குசைக்கயிறு *kušai-k-kayiru,* பெ.(n.) குதிரையின் வாய்வடம் (திவா.); rein.

[குசை + கயிறு.]

குசைக்கிரந்தி *kucai-k-kirandi,* பெ.(n.) தருப்பைப் புனித முடிச்சு; knot in a finger-ring, made of darbha grass. *“கண்டிவிசிட்டங் குசைக்கிரந்தி கனிட்டம்” (சிவதரு. ஐவகை. 4).*

[குசை + கிரந்தி.]

குஞ்சக்குறவர் *kuñja-k-kuṟavar,* பெ.(n.) பாவாற்றி செய்யும் குறவர் வகையினர்(E.T.); the Kuravas who manufacture weaver's brushes from roots, and are employed as shikaris.

[குஞ்சம் + குறவர்.]

குஞ்சங்கட்டு-தல் *kuñcan-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) அணியழகுக்காகத் தொங்கவிடுதல்; to hang up tassels as ornamentsh.

[கும் + குஞ்சு → குஞ்சம் + கட்டுதல்.]

குஞ்சட்டி *kuñJaṭṭi,* பெ.(n.) சிறுசட்டி(யாழ்ப்.); small earthen vessel.

[குறுமை + சட்டி – குறுஞ்சட்டி → குஞ்சட்டி.]

குஞ்சம்[1] *kuñjam,* பெ.(n.) 1.குறள், குள்ளம் (திவா.); dwarf. 2. கூன் (அக.நி.); hump-back. 3. குறளை (திவா.); calumny, aspersion, slander.

[குள் → குஞ்சு → குஞ்சம்.]

இச் சொல்சிற்கு 'குப்ஜ' என்னும் வடசொல்லை மூலமாகச் சென்னைப் பல்கலைக்கழக அகர முதலியில் குறித்திருப்பது தவறு. வளைந்தது என்பதே வடசொற்பொருள் (வே.க.150).

குஞ்சம்[2] *kuñjam,* பெ.(n.) 1.பூங்கொத்து; bunch of flowers. 2. தவசக் கதிர்; an ear of corn. 3. புல்லின் குச்சு; tassel, cluster of grass. 4. புடைவையகலத்தின் அரைக்காற்பாகம்; a measure in the width of cloth = 120 threads of the warp. 4. கொய்சகம்; fold of cloth.

ம. குஞ்சம்; Skt. guccha.

குஞ்சம்[3] *kuñjam,* பெ.(n.) ஈயோட்டி (சூடா.); chowry, bushy tail of the yak, often set in a richy decorated handle for use as a fly-flapper.

ம. குஞ்சம்

Fin. kassa; Karel. kassa, kassu; ED. kassa.

[குச்சு → குஞ்சு → குஞ்சம்.]

குஞ்சம்

குஞ்சம்[4] *kuñjam*, பெ.(n.) ***குன்றி*** பார்க்க (திவா.); crab's eye.

[குறு → குறுஞ்சம் → குஞ்சம். குறுதல் = முகத்தல்.]

குஞ்சம்[5] *kuñjam*, பெ.(n.) நாழி (திவா.); a measure of capacity.

[குய் → குய்ஞ்சம் → குஞ்சம். குய்தல் = முகத்தல்.]

குஞ்சம்[6] *kuñcam*, பெ.(n.) 1. ***புளிநரளை (மூ.அ.)*** பார்க்க; bristly trifliate vine. 2. ***சீ***தாங்கச் செய்நஞ்சு (மூ.அ.); a mineral poison.

[குய் → குய்ஞ்சம் → குஞ்சம்.]

குஞ்சம்வீசு-தல் *kuñjam-visu-*, 5 செ.குன்றாவி. (v.t.) ஈயோட்டியால் காற்றுவர வீசுதல்; to fan with a chowry.

[குஞ்சம் + வீசு.]

குஞ்சரக்கன்று *kuñjara-k-kaṉṟu*, பெ.(n.) குட்டியானை; young elephant. *"நற்குஞ்சரக் கன்று நண்ணின்" (அருட்பா. காப்பு).*

[குஞ்சரம் + கன்று.]

குஞ்சரத்தீ *kuñjara-t-ti*, பெ.(n.)யானைத்தீ (சீவக. 396); a disease causing great hunger.

[குஞ்சரம் + தீ. பெருபசிக்கு உவமை.]

குஞ்சரம்[1] *kuñjaram*, பெ.(n.) 1. கருங் குன்றிமணி; crab's eye. 2. கருமை; black. 3.யானை; elephant. *"குஞ்சர வொழுகை பூட்டி" (பதிற்றுப். 5, பதி.).* 3. ஒரு சொல்லைச் சார்ந்து உயர்வு குறிக்கும் மொழி; a epithet to denote excellence used in compounds like. கவிகுஞ்சரம்.

[குஞ்சரம் = கருமை. கரிய யானை.]

குஞ்சரம்[2] *kuñjaram*, பெ.(n.) கருங்குவளை (மலை.); blue nelumbo.

[குஞ்சரம் = கருமை. குஞ்சரம் = கருங்குவளை.]

குஞ்சரமணி *kuñcaramaṇi*, பெ.(n.) கழுத்தணி வகை(பர.); necklace worn by women.

[ஒருகா. குஞ்சரம் (குன்றி) + மணி.]

குஞ்சரவொழுகை *kuñcara-v-oḻukai*, பெ.(n.) யானை கட்டிய சகடம்; elephant cart. *"குஞ்சர வொழுகை பூட்டி" (பதிற்றுப் 5.பதி.).*

[குஞ்சரம் + ஒழுகை.]

குஞ்சராசனம் *kuñjarasaṉam*, பெ.(n.) பார்க்க ***அரசு*** (பிங்.); pipal as elephants food.

[குஞ்சரம் = யானை. குச்சராசனம் = யானை விரும்பித் தின்னும்இலை கொண்ட மரம்.]

குஞ்சரி *kuñjari*, பெ.(n.) 1.பெண்யானை; female elephant. 2. முருகக்கடவுளின் மனைவியான தெய்வானை; a consort of Murugan. *"குஞ்சரிகுயம் புயம்பெற" (திருப்பு.).*

[குஞ்சு → குஞ்சரி.]

குஞ்சலம் *kuñjalam*, பெ.(n.) மேல்மதகுகட்டை; upper log of a sluice.

[குஞ்சு → குஞ்சல் → குஞ்சாலம்.]

குஞ்சன் *kñjaṉ*, பெ.(n.) குறளன் (பிங்.); dwarf.

[குஞ்சு → குஞ்சன்.]

குஞ்சாமணி *kuñjā-maṇi*, பெ.(n.) ஆண் குழந்தைகளின் அரையிற்கட்டும் மணி வகை; a waist ornament of male children.

[குஞ்சு→ குஞ்சான் + மணி]

குஞ்சாலாடு *kuñcālāḍu*, பெ.(n.) கடலைமாவைச் சலித்துச் செய்த சிறுமணிகளைச் சருக்கரைப் பாகிற் கலந்து செய்த உருண்டை வடிவமான ஒரு தின்பண்டம்; a kind of sweet-meat made of dough of dhal or Bengal gram flour fried in ghee, and shaped like a ball of abrus-seeds.

ம., க. குஞ்சாலாடு

[குஞ்சு (சிறியது) + லாடு – குஞ்சுலாடு→ குஞ்சலாடு]

குஞ்சான் *kuñjāṉ*, பெ.(n.) குழந்தையின் ஆண்குறி; membrum virile, especially of a child (வே.க.149).

[குஞ்சு → குஞ்சான்.]

குஞ்சி[1] *kuñji*, பெ.(n.) 1.சிறுமையானது; anything small. குஞ்சிப்பெட்டி . 2. பறவைக்குஞ்சு; young bird, chicken. *"கரியகுஞ்சியின் றாகமார் பசி" (சி.சி.பர.மாயாவாதி மறு.1.).* 3. தாயின் தங்கை (யாழ்ப்.); mother's younger sister. 4. சிற்றப்பன் (யாழ்ப்.); father's younger brother (யாழ்ப்.). 5 ஆண்குறி; membrum virile as small.

ம. குஞ்சி; க.குன்னி (நாய்க்குட்டி), குன்ன (சிறிய); தெ. குன்ன (விலங்குக்குட்டி) கூன (குழந்தை); குட. குஞ்சி (குழந்தை); கொலா. குன (நாய்க்குட்டி).

[குஞ்சு → குஞ்சி.]

குஞ்சி[2]**–த்தல்** *kuñji-*, 4 செ.குன்றாவி. (v.t.) கால் தூக்கி வளைத்தல்; to upraise and bend, as the leg, to cause to bend. *"கால்குஞ்சித் தாடி னானும்" (தேவா. 521.4).*

[குஞ்சு→ குஞ்சி.]

குஞ்சி[3]**–த்தல்** *kuñji-*, 4 செ.கு.வி.(v.i.) காற்படங் குந்தி நிற்றல் (சூடா.); to stand on tip-toe.

[குஞ்சு→ குஞ்சி.]

குஞ்சி[4] *kuñci*, பெ.(n.) 1. கொடிநாட்டுங் குழி; pit for erecting a flagstaff *"குஞ்சி மாண்கொடி"(சீவக. 143)* 2. கொடிக்கழை; flagstaff (சீவக. 143.உரை.).

[குள்→ குஞ்சி.]

குஞ்சி[5] *kuñci*, பெ.(n.) 1.குடுமி (திவா.); tuft of hair, especially man's. 2. யானை, மயில் முதலியவற்றின் உச்சி மயிர்; hair, ason the head of an elephant crest of peacock. *"குஞ்சிக்களியானை" (சீவக. 2792). "குஞ்சி மா மஞ்ஞை" (சீவக. 301.).* 3. தலை; head *"குஞ்சு குறங்கின்மேற் கொண்டிருந்து"*(பதினொ. *ஷேத். 5.).* 4. சிற்றணுக் கனென்னும் விருது; tassels, as insignia of royalty *"புனைமயிற்குஞ்சு பிச்சமின்றவழ் கொடியோடிட்டு"(சீவக. 437).*

Fin. kalki; **Jap.** ke; **Mordvin.** kalgo; **Turk.** kyl; **Q.** kili.

[கொடிஞ்சி→ கொஞ்சி→ குஞ்சி.]

குஞ்சி[6] *kuñci*, பெ.(n.) குன்றி; crab's eye.

[குறு→ குறுஞ்சி→ குஞ்சி.]

குஞ்சிக்கூடை *kuñci-k-kūṭai*, பெ.(n.) சிறுகூடை; wicker-basket, small of a basket (w.) (வே.க.150).

[குஞ்சி + கூடை.]

குஞ்சிமணி *kuñci-maṇi*, பெ.(n.) ***குஞ்சாமணி*** பார்க்க;see *kuñcāmaṇi*.

[குஞ்சி + மணி.]

குஞ்சியப்பன் *kuñci-y-appaṉ*, பெ.(n.) 1.தந்தையின் தம்பி; father's younger brother. 2. தாயின் தங்கை கணவன்; mother's younger sister's husband. 3. தாயின் இரண்டாம் கணவன்; step-father.

ம. குஞ்ஞப்பன்

[குஞ்சி + அப்பன்.]

குஞ்சியப்பு *kuñciyappu*, பெ.(n.) ***குஞ்சியப்பன்*** பார்க்க; see *kuñjiyappaṉ*.

[குஞ்சி + அப்பு.]

குஞ்சியன் *kuñciyaṉ*, பெ.(n.) ***குஞ்சி யப்பன்*** பார்க்க; see *kuñjiyappaṉ*.

[குஞ்சி → குஞ்சியன்.]

குஞ்சியாத்தை *kuñci-y-āttai*, பெ.(n.) ***குஞ்சி யாய்ச்சி*** *(யாழ்ப்.)* பார்க்க; see *kunjiyāycci*.

[குஞ்சி → ஆத்தை.]

குஞ்சியாய்ச்சி *kuñci-y-āycci*, பெ.(n.) 1.தாயின் தங்கை; mother's younger sister. 2. தந்தையின் தம்பிமனைவி; father's younger brother's wife. 3. தந்தையின் இரண்டாந்தாரம்; step-mother (யாழ்ப்.).

ம. குஞ்ஞும்ம

[குஞ்சி - சிறிய, இளைய. குஞ்சி + ஆய்ச்சி.]

குஞ்சியாயி *kuñci-y-āyi*, பெ.(n.) பார்க்க ***குஞ்சியாய்ச்சி*** *(யாழ்ப்.)*.

[குஞ்சி + (ஆய்ச்சி) ஆயி.]

குஞ்சிரிப்பு *kuñcirippu*, பெ.(n.) புன்னகை; smile (W.).

[குமிண்சிரிப்பு → குஞ்சிரிப்பு.]

குஞ்சு *kuñcu*, பெ.(n.) 1.பறவைக்குஞ்சு (பிங்.); young of birds. 2. எலி, அணில் முதலியவற்றின் பிள்ளை; young of any living being as fish, oysters, rats, lizards, frogs, squirrels etc. 3. ஆண்குறி; membrun virile. 4. சிறுமையானது; anything small.

ம. குஞ்ஞு, குஞ்சி; க. குன்னி (விலங்குக் குட்டி); தெ. குன்ன (விலங்குக் குட்டி), கூன (குழந்தை); கோத. குன்ச்; துட., கூக்; குட. குஞ்ஞி (குழந்தை); கொலா. கூன (நாய்க்குட்டி).

[குள் → குய் → குய்ஞ்சு → குஞ்சு (வே.க.150).]

குஞ்சுக்கடகம் *kuñju-k-kaḍagam*, பெ.(n.) சிறிய ஓலைப்பெட்டி(யாழ்ப்.); small ola basket.

[குஞ்சு + கடகம்.]

குஞ்சுக்குவை-த்தல் *kuñcukku-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) முட்டையைக் குஞ்சு பொரிக்கும்படி செய்தல் (யாழ்ப்); to set eggs for hatching.

[குஞ்சு + கு + வை.]

குஞ்சு குழந்தைகள் *kuñju-kuḻandaikaḷ*, பெ.(n.) சிறியவும் பெரியவுமான குழந்தைகள்; infants and children. குஞ்சு குழந்தைகளெல்லாம் நலந் தானே? (கொ.வ.).

[குஞ்சு + குழந்தை + கள்.]

குஞ்சுங்குழுவானும் *kuñjuṅ-kuḻuāṉvum*, பெ.(n.) 1. பூச்சித்திரள்; swarm of insects. 2. பல அகவையிலுள்ள குழந்தைகளின் கூட்டம்; a group of children of different ages. *"குஞ்சுங் குழுவானு மாக வீடு கலகலவென்றிருக்கின்றது" (கொ.வ.).*

மறுவ. குஞ்சங்குழுமானும், குஞ்சுங்குழுவும்.

[குஞ்சு + உம் + குழுவான் + உம்.]

குஞ்சுச்சிப்பி *kuñju-c-cippi*, பெ.(n.) முற்றாத முத்துச்சிப்பி; immature bivalves, as young mussels, oysters.

[குஞ்சு + சிப்பி.]

குஞ்சுநறுக்கு-தல் *kuñcu-narukku-*, 5 செ.கு.வி. (v.i.) ஆண்குறியின் நுனி மேல் தோலை நீக்குதல்; to circumcise.

மறுவ. சுன்னத்துச் செய்தல்

[குஞ்சு + நறுக்கு.]

குஞ்சுப்பெட்டி *kuñju-p-peṭṭi*, பெ.(n.) சிறிய ஓலைப்பெட்டி(யாழ்ப்.); small ōla basket.

[குஞ்சு + பெட்டி.]

குஞ்சுபொரி-த்தல் *kuñju-pori-*, 4 செ.கு.வி.(v.i.) முட்டையினின்று குஞ்சு வெளிவரல்; to hatch, produce young from eggs.

[குஞ்சு + பொரி.]

குஞ்சுரம் *kuñcuram,* பெ.(n.) குன்றிமணி; crab's eye.

[குஞ்சு → குஞ்சுரம்.]

குஞ்சுவாயன் *kuñju-vāyan,* பெ.(n.) கைப்பெட்டி; small hand box (யாழ்ப்.).

மறுவ. குஞ்சுப்பெட்டி

[குஞ்சு + வாயன்.]

குஞ்சுறை *kuñjurai,* பெ.(n.) பறவைக்கூடு (சூடா.); bird's nest.

[குஞ்சு + உறை.]

குஞ்சை *kuñjai,* பெ.(n.) நெய்வோர் பாவில் தேய்க்கும் குஞ்சம்; the big broad, heavy sized brush of which the pā is twined into the venti sometimes double handled, with which men run swiftly back and forth.

[குஞ்சு + குஞ்சை.]

குட்சி *kutci,* பெ.(n.) வயிறு; stomach.

[குள் → குட்டம் (குழி) → குட்சி.]

குட்சி[2] *kutci,* பெ.(n.) உருட்டியாடும் கருவியில் விழும் ஒற்றைத் தாயம்; the number marked one that is turned upwards in a game played with cowries, etc. (கொ.வ.).

[குள் → குட்சி (ஒற்றைக் குழி, ஒன்று).]

குட்டக்கரப்பான் *kutta-k-karappān* பெ.(n.) படர்நோய் வகை; white scabby scurf, a kind of eruption spreading over the whole surface of the body.

[குட்டம் + கரப்பான்.]

குட்டக்குறடு *kutta-k-kuradu,* பெ.(n.) சிறுகுறடு (வின்); a kind of brazier's pincers.

[குட்டை + குறடு - குட்டைக் குறடு → குட்டக் குறடு.]

குட்டநாடன் *kuttanādan,* பெ.(n.) குட்ட நாட்டைச் சேர்ந்தவன்; one who belonges to *kuttanādu.*

ம. குட்டநாடன்

[குட்டம் + நாடு + அன்.]

குட்டநாடு *kuttanādu,* பெ.(n.) திருவாங்கூர் நாட்டைச் சேர்ந்ததும், கோட்டயம், கொல்லமென்று வழங்குகின்ற நகரங்களைக் கொண்டதும் ஏரிகளை மிகுதியாக உடையதுமாகிய ஒரு கொடுந்தமிழ் நாடு; the region full of lakes, where a vulgar dialect of Tamil was spoken, corresponding to area ofthe modern towns of Kottayam and Quilon in Travancore one of 12 Koduntamil Nādu. *"குட்டநாட்டுத் திருப்புலியூர்" (திவ்.திருவாய். 8.9:1).*

ம. குட்டநாடு

[குண்டு → குட்டு → குட்டம். (வேக.194).]

குட்டப்புழுதியாக்கு–தல் *kutta-p-puludi-y-ākku,* 5 செ.கு.வி. (v.i.) கும்மாளமடித்தல் (நெல்லை); to be tumultuously playful.

[குட்டம் → புழுதி + ஆக்கு.]

குட்டம்[1] *kuttam,* பெ.(n.) 1.ஆழம்; depth, profundity. *"இருமுந்நீர்க் குட்டமும்" (புறநா. 20:1).* 2. மடு; tank, pond. *"நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து" (புறநா. 243:9).* 3. **குட்டநாடு** பார்க்க; see *kuttanādu. "தென்பாண்டி குட்டம்" (நன். 272, மயிலை.).* 4. பரப்புள்ள இடம்; expanse, region. *"பெருங்கடற் குட்டத்து" (மதுரைக். 540).*

[குள் → குட்டு → குட்டம்.]

குட்டம்[2] *kuttam,* பெ.(n.) 1.திரள்; multitude, collection, heap. 2. அவை; assembly. *"படைக்கலம் பிடித்துக் குட்டத்துக்குச் செல்லப்பெறார் (T.A.S.I,9).*

[கூட்டம் → குட்டம்.]

குட்டம்[3] *kuttam,* பெ.(n.) 1.சிறுமை; smallness, littleness. 2. குரங்குக்குட்டி; the young of a monkey. *"தங்குட்டங்களை... மந்திகள் கண் வளர்த்தும்"*

(திவ். பெரியாழ். 3.5:7). 3. குறைந்த சீருள்ள அடி (தொல். பொருள்.427); verse-line with less than the required number of *cir.* 4. கலிப்பாவின் உறுப்புள் ஒன்றாகிய தரவு; a member in a kali verse.

[குள் → குட்டு → குட்டம்.(வே.க.148).]

குட்டம்[4] *kuttam,* பெ.(n.) 1.குட்டநோய்; leprosy. *"குட்டநோய்" (சீவக.253).* 2.கோட்டம் என்னும் மருந்துவேர் (மலை.); Arabian costum.

[குட்டை → குட்டம்.]

குட்டன்[1] *kuttan,* பெ.(n.) 1. சிறுபிள்ளை, சிறுவன்; laddie, lassie as a term of endearment. *"என் சிறுக்குட்டன்" (திவ். வெரியாழ். 14:2). "குயிலெனப் பேசு மெங்குட்டனெங்குற்றது" (திருக்கோ.224).* 2. ஆட்டுக்குட்டி (திவா.); kid or lamb. 3. விலங்கின் குட்டி; young of an animal. *"நாயின்வெங்கட் சிறு குட்டனை" (கம்பரா. நகர்நீ.117).*

ம. குட்டன்; க. குட்ட; தெ. கிட்ட; து. கிட்டெலெ; குட. குட்டி; துட. குட்; கூ. குட; குரு. கிட்ரு; பிரா. குட்டு.

[குள் → குட்டு → குட்டன்.]

குட்டன்[2] *kuttan,* பெ. (n.) 1.குட்டை விரல்; a little finger. 2. பெருவிரல் அல்லது கட்டைவிரல்; toe.

[குள் → குட்டு → குட்டன்.]

குட்டான்[2] *kuttan,* பெ. (n.) 1. சிறுபடப்பு; small basket. 2. சிறிய ஓலைப்பெட்டி; little ola case.

[குட்டம் → குட்டான் (வே.க.152).]

குட்டான்கட்டு-தல் *kuttan-kattu-,* பெ.(n.) 5 செ.கு.வி. (v.i.) பறவை முதலியன கொத்தாத படியும், அணில் கடியாதபடியும் காய்களின் மீது மூடிக்கட்டுதல்(வின்.); to put a cover over fruits for protection from birds and squirrile

[குட்டான் + கட்டு-.]

குட்டி[1] *kutti* பெ.(n.) 1.நாய், பன்றி, புலி, நரி ஆகியவற்றின் குட்டி (தொல்.பொருள்.மரபு. 20); young of dog, pig, tiger, etc. 2. ஆட்டுக்குட்டி; lamb. 3. சிறுமி (உ.வ.); small girl. 4.கடைசிப்பிள்ளை; child, especially the youngest, in endearment (W.). 5. விலங்கின் பிள்ளைப் பொது; yound of animals. 6. கரு அல்லது சினை; embryo. குட்டிபடுதல் = சினைப்படுதல். 7. ஓரறி வுயிரிப் பெயரின் இளமைப் பொருள் முன்னொட்டு; prefix of single sense being. *"குட்டிப் பிடவம், குட்டிவிளா" (பிள்ளை விளாத்தி).* 8. சிற்றப்பன் சிற்றன்னையர் பெயர் முன்னொட்டு; prefix of uncle and aunt. குட்டியப்பன், குட்டியாத்தாள். 9. சிறுமைப் பெயர்; smallness. குட்டித்தொல் காப்பியம்.

ம. குட்டி; க. குட்டி.

E. kid, a young goat, kid, kiddy(s) Child; ME. kid, kidde; Dan.,Swed.,Norw., kid; ON. kithi; OHG. kizzi, chizzi; MHG., G.K. kitze.

[குட்டு → குட்டி.]

குட்டி[2] *kutti* பெ.(n.) கோட்டம்; Arabian costum. *"பருங்காயங்குட்டி" (தைலவ. தைல.77).*

[குட்டு → குட்டி.]

குட்டி[3] *kutti* பெ.(n.) 1.பல்லாங்குழி முதலிய விளையாட்டில் அதிகமாகக் கூடுங்காய்(வின்.); additional coin or seed which a player gets in excess of another in games like *pallankuli,* etc., 2. பயன்; additional sum claimed or allowed in respect of a debt, as a share of the net profit. 3. காக்கைப் பலா; esculent - leaved false kamela. 4. கடிச்சை; downy-leaved false kamela.

[குள் → குட்டி.]

குட்டிக்கரணம் *kutti-k-karanam,* பெ.(n.) 1.தலை கீழாக மறிந்துவிழும் ஒரு வித்தை; performing a somersault on the ground, as minor acrobatics. 2.பெருமுயற்சி; making strenuous efforts, using all possible means, taking the utmost pains. *"குட்டிக்கரணம் போட்டென்னாலானமட்டும்" (இராமநா.உயுத்.77).*

ம. குட்டிக்கரணம்

[குட்டி + கரணம்.]

குட்டிக்கலகம் *kuṭṭi-k-kalagam,* பெ.(n.) 1.சிறு கலகம்; squabble, domestic quarrel, as rising out of trifles. 2. கோட் சொல்லால் விளையும் கலகம்; quarrel rising from backbitbing, talebearing.

[குட்டி + கலகம்.]

குட்டிக்கிழங்கு *kuṭṭi-k-kiḻaṅgu,* பெ.(n.) ஒரு கிழங்கின் பக்கத்தில் அதனையொட்டி உண்டாகும் கிழங்கு; small esculent root growing by the side of a large one.

[குட்டி + கிழங்கு.]

குட்டிக்கும்பிடு—தல் *kuṭṭi-k-kumbiḍu-,*20 செ.கு.வி. (v.i.) தலையிற் குட்டிக் கொண்டு பிள்ளையாரை வணங்குதல்; to cuff the head three times, and raise the hands in worship of (Ganēša) piḷḷiyār.

[குட்டு → குட்டி + கும்பிடு.]

குட்டிக்கொக்கான் *kuṭṭi-k-kokkāṉ* பெ.(n.) சிறு கற்களைக் கொண்டு ஆடும் விளையாட்டு வகை; a kind of play with pebbles.

[குட்டி + கொக்கான்.]

குட்டிச்சாத்தன் *kuṭṭi-c-cāttaṉ,* பெ.(n.) குறளித் தேவதை; elf, imp., little goblin invoked in performing jugglery, etc.

ம. குட்டிச்சாத்தான்; **க.** குட் சாத.

[குட்டி + சாத்தன்.]

குட்டிச்சாத்திக்காரன் *kuṭṭi-c-cātti-k-kāraṉ* பெ.(n.) பேயோட்டும் மந்திரக்காரன்(வின்.); enchanter, sorcerer, one who is supposed to have power over familiar spirits.

[குட்டி + சாத்திக்காரன்.]

குட்டிச்சுவர் *kuṭṭi-c-cuvar,* பெ.(n.) 1.இடிந்த சிறுசுவர்; ruined wall. *"குட்டிச் சுவரெனிலோ மாடு முரைஞ்சு மறைவாகும்" (பெருந்தொ.288).* 2. பாழ் மனை; ruins of a building. அந்தக் குட்டிச்சுவரிற் கழுதை மேய்கிறது (உ.வ.). 3. பழுது; ruin, damage. காரியம் குட்டிச்சுவராயிற்று (உ.வ.).

ம. குட்டிச்சுவரு

[குட்டி + சுவர்.]

குட்டிச்சுவரா(கு)—தல் *kuṭṭi-c-cuvarā(gu),* 6 செ.கு.வி. (v.i.) பழுதாதல், அழிதல்; to ruin, damage.

ம. குட்டிச்சோராவுக

[குட்டிச்சுவர் + ஆகு.]

குட்டித்தக்காளி *kuṭṭi-t-takkāḷi,* பெ.(n.) சிறு தக்காளி (வின்.); black night shade.

[குட்டி + தக்காளி.]

குட்டித்தாய்ச்சி *kutti-t-tāycci,* பெ.(n.) சினையான விலங்கு; pregnant animal.

[குட்டி + தாய்ச்சி. ஒ.நோ. பிள்ளைத்தாய்ச்சி.]

குட்டித்திருவாசகம் *kuṭṭi-t-tiruvācagam,* பெ.(n.) கருவைச் சிவபிரான் மேல் அதிவீரராமபாண்டியர் பாடியனவாக வழங்கும் மூன்று அந்தாதிகள்; antāti, on *šiva* at Karuvai, three in number ascribed to *Ativira-rāma-pāṇḍiyan* and considered as *Tiruvāšagam* in miniature.

[குட்டி + திருவாசகம்.]

குட்டித்தொல்காப்பியம் *kuṭṭi-t-tolkāppiyam,* பெ.(n.) தொல்காப்பியத்தைத் தழுவி ஐந்திலக் கணங்களையும் கொண்டதாக வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கண விளக்கம்; the *Ilakkaṇa* vilakkam, by *Vaittiya nāta-tēšikar,* as a compendium of the great *Tolkāppiyam.*

[குட்டி + தொல்காப்பியம்.]

தொல்காப்பிய மரபும் இலக்கணவிளக்க மரபும் வேறுபடுதலின் இவ்வாறு பெயரிடல் அத்துணைப் பொருத்த முடையதன்று.

குட்டிநடிகை *kuṭṭi-naḍigai,* பெ.(n.) சிறுபருவத்தில் நாடகம், திரைப்படம் போன்றனவற்றில் நடிக்கும்

பெண்; a small girl who acts on the stage, in films etc.

[குட்டி + நடிகை.]

குட்டிப்பயல் *kuttippayal,* பெ.(n.) **குட்டிப்பையல்** பார்க்க;see *kuttippaiyal.*

[குட்டி + (பையல்)→ பயல்..]

குட்டிப்பல் *kutti-p-pal,* பெ.(n.) 1. ஒட்டிமுளைக்கும் சிறுபல்; extra or dwarf tooth. 2. பாற்பல், அரும்புப்பல்; milk-tooth.

ம. குட்டிப்பல்லு

[குட்டி + பல்.]

குட்டிப்பலா *kutti-p-palā,* பெ.(n.) பிராய்மரம்; paper -tree.

[குட்டி + பலா.]

குட்டிப்பாடம் *kutti-p-pāḍam,* பெ.(n.) பொருளுணராது பாராமல் ஒப்பிக்கும்படி பண்ணும் நெட்டுரு. (மனப்பாடம்); blind recital, learning by rote.

தெ. குட்டிபாதமு

[த. குருடு > தெ. குட்டு. குட்டு→ குட்டி + பாடம்.]

குட்டிப்பிடவம் *kutti-p-piḍavam,* பெ.(n.) ஒருவகை மரம் (சிலப்.13:158 உரை.); bedaly emetic-nut.

[குட்டி + பிடவம்.]

குட்டிப்பையல் *kutti-p-paiyal,* பெ.(n.) சிறுவன்;small boy.

[குட்டி + (பைதல்) பையல்.]

குட்டிபஞ்சரம் *kuttypañcaram,* பெ.(n.) கோயில் விமானத்தில் அமையும் கொடிய மூக்குடைய வடிவம் (மது.); a figure on a temple gopuram.

Skt. alpanāsi.

[குட்டி + பஞ்சரம்.]

குட்டிபடல்[1] *kutti-paḍal,* பெ.(n.) சினைப்படுகை; becoming pregnant, as a sheep, goat, dog.

[குட்டி + (படுதல்) → படல்.]

குட்டிபடல்[2] *kutti-padal,* பெ.(n.) விளையாட்டில் தவறியடிக்கை; striking a wrong coin or seed in games.

தெ. குட்டி

[த. குருடு > தெ. குட்டு. குட்டு→ குட்டி + படல்.]

குட்டிபோடு[1]-தல் *kutti-pōdu-,* 19 செ.குன்றாவி. (v.t.) விலங்கு குட்டியீனுதல்; to bring forth young, as beasts.

ம. குட்டிப்பெடுக (பெற்றறெடுத்தல்)

[குட்டி + போடு.]

குட்டிபோடு[2]-தல் *kutti-pōdui-,* 19 செ.கு.வி. (v.i.) விளையாட்டில் அதிகப் பந்தயம் வைத்து விளையாடுதல்; to put down a forfeited seed or coin in gambling as stakes to be played for.

[குட்டி + போடு.]

குட்டிமணியம் *kutti-maniyam,* பெ.(n.) உதவி மணியக்காரன்; assistant to Maṇiyakāran.

[குட்டி + மணியம்.]

குட்டிமம் *kuttimam,* பெ.(n.) கற்பாவின தரை; paved floor, pavement, ground paved with mosaic ground smoothed and plastered. *"கோயிற் குட்டிம வன்றலத்து"* (கம்பரா. கிட்கிந்.109).

ம. குட்டிமம்

[குட்டு→ குட்டிமம்.குட்டுதல் - இடித்துச் செறித்து வலிமைப்படுத்துதல்.]

குட்டியடி-த்தல் *kutti-y-adi-,* 4 செ.கு.வி.(v.i.) **குட்டிவை** பார்க்க; see *kuttivai.*

தெ. குட்டியடித்தல்

[குட்டி + அடி.]

குட்டியப்பன் *kutti-y-appaṉ*, பெ.(n.) சிறிய தகப்பன்; father's younger brother.

ம. குட்டியச்சன்

[குட்டி + அப்பன்.]

குட்டியழி-த்தல் *kutti-y-aḻi-*, 4 செ.கு.வி.(v.i.) கள்ளக்கருவை மருந்திட்டுக் கரைத்தல்; to cause miscarriage, abortion of a child conceived in adultery.

[குட்டி + அழி.]

குட்டியாண்டவன் *kutti-y-āṇḍavaṉ*, பெ.(n.) பட்டினவர் வணங்கும் தெய்வம்; sea-god of Pattinavar caste, represented by a small conical heap of wet sand and mud.

[குட்டி + ஆண்டவன்.]

குட்டியாத்தாள் *kutti-y-āttāḷ*, பெ.(n.) சிறியதாய் (பா.); mother's younger sister.

[குட்டி + ஆத்தாள்.]

குட்டியிடு-தல் *kutti-y-iḍu-*, 20 செ.கு.வி.(v.i.) விலங்கு முதலியன கருவுயிர்த்தல் (கொ.வ.); to bring forth young, especially said of animals.

ம. குட்டியிடு

[குட்டி + இடு-.]

குட்டியிடுக்கி *kutti-y-iḍukki*, பெ.(n.) 1.சிற்றரத்தை வகை (மலை.); lesser galangal. 2. கோட்டம் (மலை.); arabian costum. 3. பயிருடன் வளரும் புல்வகை(வின்.); a kind of grass or weed in rice fields.

[குட்டி + இடுக்கி.]

குட்டிவிரல் *kutti-viral*, பெ.(n.) 1. கால்கைகளில் ஐந்துக்கு அதிகமாவுள்ள விரல்; sixth or extra finger or toe as smaller than the rest. 2. சுண்டு விரல்; a little finger or toe.

ம. குட்டிவிரல்

[குட்டி + விரல்.]

குட்டிவிளா *kutti-viḷā*, பெ.(n.) 1. விளா; wood apple. 2. பார்க்க நாய்விளா; musk-deer-plant.

[குட்டி + விளா.]

குட்டிவேல் *kutti-vēl*, பெ.(n.) வேலமரவகை(இ.வ.); kind of acaua

[குட்டி + வேல்.]

குட்டிவை[1]-த்தல் *kutti-vai-*, 4 செ.கு.வி.(v.i.) 1.விளையாட்டில் தவறான காயை அடித்தல் (யாழ்ப்.); to hit the wrong coin or seed. 2. சூதிற் பந்தயமிழத்தல்; to forfeit a coin or seed in gambling.

[த. குருடு > தெ. குட்டு. குட்டு → குட்டி + வை.]

குட்டினம் *kuttiṉam*, பெ.(n.) கருஞ்சீரகம் (மலை.); black cumin.

[குட்டு + குட்டினம்.]

குட்டினி *kuttiṉi*, பெ.(n.) 1.கற்பிழந்தவள் (சூடா.); unchaste woman. 2. கூட்டிக் கொடுப்பவள்(வின்); bawd, procaress.

ம. குட்டினி

Skt. kuttin

[கூட்டினி → குட்டினி.]

குட்டு[1]-தல் *kuttu-*, 5 செ.குன்றாவி.(v.t.) கை முட்டியால் தலையில் இடித்தல்; to cuff, strike with the knuckles on the head or temples. *"அவன் தலையில் குட்டினான்"(பிங்.).* (வே.க.174).

ம. குட்டுக; க.,தெ. குட்டு; து. குட்டுனி; துட.,கோத., குட. குட்; நா., கொலா. குட்க்; பர். குடிப்; கோண். கோட்டானா; மா. குட்யெ; பிரா. குட்டிங்க்; பட. குத்து (கை முட்டியால் இடித்தல்).

Skt. kuṭṭayati (to bruise, Pound, strike lightly); **Pkt.** kuṭṭe; Pali oṭṭeti.

[குள் → குட்டு. ஒ.நோ. வள் → வட்டு.]

குட்டு² *kuṭṭu,* பெ.(n.) கைமுட்டியால் தலையில் இடிக்கை; blow with knuckles or the fist on the head, cuff (வே.க.174).

ம. குட்டு

[குள் → குட்டு.]

குட்டு³ *kuṭṭu,* பெ.(n.) 1. மந்தணம்; secret (விறலிவிடு. 108.) 2. மானம் (வின்.); honour, dignity. அவன் குட்டு வெளிப்பட்டது (உ.வ.).

தெ. குட்டு

[குள் → குட்டு.]

குட்டு⁴ *kuṭṭi,* பெ.(n.) 1.குட்டம் (தைலவ. தைல.124); leprosy. 2. கோட்டம் (தைலவ.தைல.43); Arabian costum.

[குள் → குட்டு (குட்டம்) வ.மொ.வ.121).]

குட்டுணி *kuṭṭuṇi,* பெ.(n.) பிறரால் குட்டுண்பவன்–ள்; intractable, shameless person, as cuffed about by everyone.

[குள் குட்டு + உணி.]

குட்டுப்பட்டவன் *kuṭṭu-p-paṭṭavan,* பெ.(n.) ஒரு தொழிலில் இடர்ப்பட்டுப் பட்டறிவு (அனுபவம்) பெற்றவன்; one who grows wise by experiencing reverses.

[குட்டு + பட்டவன்.]

குட்டுப்படு-தல் *kuṭṭu-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) அடிக்கடி இடர்பெறுதல்; to undergo reverses.

[குட்டு + படு.]

குட்டுமம் *kuṭṭumam,* பெ.(n.) பூவரும்பு; emerging bud of flower.

[குட்டு → குட்டுமம்.]

குட்டுவம் *kuṭṭuvam,* பெ.(n.) நீரைக் காயவைக்கும் பெரிய செம்பு ஏனம்; big copper pot for heating water.

ம. குட்கம்

[குள் → குட்டு → குட்டுவம்.]

குட்டுவம் *kuṭṭuvam,* பெ.(n.) கொப்பரை (இ.வ.); a large brass vessel, cauldron.

ம. குட்கம்

[குள் → குட்டு → குட்டுவம்.]

குட்டுவன் *kuṭṭuvan,* பெ.(n.) 1.குட்ட நாட்டிலுள்ளவன்; inhabitant of the Kuṭṭam country. *"பல்குட்டுவர் வெல்கோவே" (மதுரைக். 105).* 2. கோட்டம் பகுதியை ஆண்ட சேரன்; Chēra king as ruling over kuṭṭam. *"எழுவுறழ் திணிதோளிய றோர்க் குட்டுவன்" (சிறுபாண்.49).*

ம. குட்டுவன்

[குள் → குட்டு + அவன்.]

குட்டேறு *kuṭṭēṟu,* பெ.(n.) 1.சிறிய காளை; small bull. *``குட்டேற்றைக் கோவர்த்தனனைக் கண்டீரே" (திவ்.நாய்ச். 14:2).* 2. எருத்தின் திமில் (கலித்.102: 24, உரை.); hump of an ox.

[குட்டு (இளமை) + ஏறு.]

குட்டை¹ *kuṭṭai,* பெ.(n.) 1.குறுகிய உருவம்; shortnesh, dwarfishness. 2. ***குட்டேறு¹*** பார்க்க see *kuṭṭeṟu.* 3. சிறுதுணி; kerchief, towel, small strip of cloth. 4. சிறுகுளம்; pool, small pond. 5. ***குட்டைமரம்*** பார்க்க; see *kuṭṭaimaram.* குட்டையிற் கட்டி அடித்தான். 6. குறுணி (தொல்.சொல்.400, உரை.); a dry measure of capacity. 7.தலைப்பாகை; turban.

ம. குட்ட; **க.** கிட்டு, குட்டு; **து.** கிட்ட; **கூ.** கூட; குரு. குட்ரூ; **பிரா.**குட்ரு.

Aust. katoa (short).

[குட்டு → குட்டை (வே.க.152).]

குட்டை[2] *kuṭṭai,* பெ.(n.) வெள்ளைக் குட்டம்; laucoderma, white leprsy.

[குள் → குட்டை.]

குட்டை[3] *kuṭṭai,* பெ.(n.) பிரம்பு, கோரை ஆகிய வற்றைக் கொண்டு முடைந்த கூடை; a basket made of reeds or rattan. "பெரிய பிரப்பங்குட்டையும் (குருகூர்ப். 25).

ம. குட்ட

[குள் (குறுமை) → குட்டை.]

குட்டைக்குறுவை *kuṭṭai-k-kaṟuvai,* பெ.(n.) நெல்வகை(A); a kind of paddy.

[குட்டை → குறுவை.]

குட்டைச்சி *kuṭṭaicci,* பெ.(n.) குள்ளமானவள்; short woman.

[குட்டை → குட்டைச்சி.]

குட்டைச்சேம்பு *kuṭṭai-c-cēmbu,* பெ.(n.) ஒரு வகைச் சேம்பு; a variety of colocasia.

ம. குட்டச்சேம்பு

[குட்டை + சேம்பு.]

குட்டைப்பாம்பு *kuṭṭai-p-pānbu,* பெ.(n.) செந்நிற நச்சுப்பாம்பு (மீனவ.); reddish poisonus snake

[குட்டை + பாம்பு.]

குட்டைப்புடல் *kuṭṭai-p-puḍal,* பெ.(n.) கொம்புப் புடல்; short snake-gourd, climber.

[குட்டை + புடல்.]

குட்டைமரம் *kuṭṭai-maram,* பெ.(n.) தொழுமரம்; stocks for legs or hauds as an instrument of punishment (உ.வ.).

[குட்டை + மரம்.]

குட்டையநெல் *kuṭṭaiya-nel,* பெ.(n.) நெல்வகை (A); a kind of paddy.

[குட்டை + நெல்– குட்டைநெல் → குட்டையநெல்.]

குட்டையன் *kuṭṭaiyaṉ,* பெ.(n.) குள்ளன்; dwarf, short man.

[குட்டு → குட்டையன்.]

குட்டையிலடி–த்தல் *kuṭṭaiyil-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) தொழு மரத்தில் கட்டியடித்தல்; to confine in stocks.

[குட்டையில் + அடித்தல்.]

குட்டைவிரல் *kuṭṭai-viral,* பெ.(n.) ***குட்டிவிரல்*** பார்க்க; see *kuṭṭaiviral.*

[குட்டை + விரல்.]

குட–த்தல் kuda-, 2 செ.கு.வி. (v.i.) வளைதல்; to curve, bend.

[குள் → குட.]

குடக்கம் *kuḍakkam,* பெ.(n.) வளைவு (யாழ்.அக.); bend, curve, crookedness.

[குட → குடக்கம். (மு.தா.249).]

குடக்கனி *kuḍa-k-kaṉi,* பெ.(n.) பலாப்பழம்; jack fruit, as being potshaped. *"சுளைப்பழுத்த மென் குடக்கனி" (காசிக. அருணாதி.22)*

[குடம் → குடக்கனி.]

குடக்கால் *kuḍa-k-kāl,* பெ.(n.) குடம் போன்ற விளக்குத்தண்டு (சிலப்.6, 138, உரை.); pot shaped lamp stand.

மறுவ. குடத்தண்டு

[குடம் + கால் → குடக்கால்.]

குடக்காற்று *kuḍa-k-kāṟṟu,* பெ.(n.) மேல்காற்று; western wind.

[குடக்கு + காற்று.]

குடக்கி *kuḍakki,* பெ.(n.) 1.வளைவானது (யாழ்.அக.); that which is crooked. 2. பித்தளை (யாழ்ப்); brass.

[குடக்கு → குடக்கி. குடம் செய்யப் பயன்பட்ட பித்தளையும் குடக்கி எனப்பட்டது.]

குடக்கியன் *kuḍaklkiyan,* பெ.(n.) கூனன்; hump - back.

[குடக்கு → குடக்கியன்.]

குடக்கினி *kuḍakkini,* பெ.(n.) 1.காசுக்கட்டி; dowry-foliaged cutch. 2. கருங்காலி (மலை.); glabrous - foliaged cutch.

[குடக்கு → குடக்கினி.]

குடக்கு *kuḍakku,* பெ.(n.) மேற்கு (திவா.); west. *"தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்"(புறநா.6).*

ம. குடக்கு

[குடத்தல் = வளைதல், மறைதல் குடம் → குடக்கு (கதிரவன் மறையும் மேற்குத் திசை).]

குடக்குழி *kuḍa-k-kuḻi,* பெ.(n.) நீர்க்குண்டு (யாழ்.அக.); water pond

ம. குடக்கு

[குட → குழி.]

குடக்கூத்து *kuḍa-k-kūttu,* பெ.(n.) தனது பேரனாகிய அநிருத்தனை வாணன் சிறைப்படுத்த, அவனது நகர வீதியிற் சென்று கண்ணன் குடமெடுத்தாடிய கூத்து; பதினோர்வகைக் கூத்துகளுள் ஒன்று (சிலப். 6,55. உரை); a dance with potrs performed by Krishna, when Vāṇan imprismed his grand son *āniruttan* one of elevan *kūttu.*

[குடம் + கூத்து.]

கூத்தின் வகைகள்: 1. கொடுகொட்டி, 2. பாண்டரங்கம், 3. குடை, 4. துடி, 5. அல்லியம், 6 மல்லு, 7. குடம், 8. பாவை, 9. மரக்கால், 10. பேடி, 11. கடையம்.

நின்றாடலுக்குரியவை: கொடுகொட்டி, பாண்டரங்கம், குடை, குடம் அல்லியம், மல்லு.

வீழ்ந்தாடலுக்குரியவை: துடி, கடையம், பேடி.(டு), மரக்கால், பாவை.

குடக்கூலி *kuḍa-k-kūli,* பெ.(n.) *குடிக்கூலி* பார்க்க(சென்னை): see *kuḍi-k-kūli.*

ம. குடக்கூலி

[குடி → குட + கூலி.]

குடக்கோ *kuḍa-k-kō,* பெ.(n.) சேரன்; Cēra king, as ruling the western country. *"குடக்கோ நெடுஞ் சேரலாதற்கு" (பதிற்றுப். 60., பதி.).*

மறுவ. குடக்கோன்

[குடக்கு + கோ. குடக்கு = கதிரவன் வளையும் (மறையும்) திசை. குடம் → குடக்கு கோன் → குடக்கோ (சு.வி.72).]

குடக்கோடுவான் *kuḍa-k-kōḍuvān,* பெ.(n.) பெ.(n.) கதிரவன்; Sun.

[குடக்கு = மேற்கு. குடக்கு + ஓடுவான்.]

குடக்கோன் *kuḍa-k-kōn,* பெ.(n.) சேர மன்னன்; Cēra king.

[குடக்கு = மேற்கு. கோன் = அரசன். குடக்கு + கோன்.]

குடகம்[1] *kuḍagam,* பெ.(n.) யாழ் மீட்டும் முறைகளுள் ஒன்று (சீவக. 657 உரை.); one of several modes of playing the yāḻ.

[குடக்கம் → குடகம்.]

குடகம்[2] *kuḍakan* பெ.(n.) 1.மேற்கு; west. *"குடக வானின் வயங்கிய ... திங்கள்" (கம்பரா. ஒற்றுக் .20.)* 2. தமிழ்நாட்டின் மேற்பாலுள்ள ஒரு நாடு (நன். 272மயிலை.); Coorg, the hill country west of Mysore, forming the western boundary of the Tamil Nadu. 3. குடகுமலை (புறநா. 166.உரை); a mountain in Coorg.

ம. குடகம்

[குடத்தல் = வளைதல், மறைதல். குட →குடக்கு, கதிரவன் மறையும் மேற்குத்திசை. குட → குடக்கு → குடகம்.]

குடகம்[3] *kuḍagam,* பெ.(n.) கோளகச் செய்நஞ்சு (மலை.); a mineral poison.

[கூடு → கூடகம் → குடகம் (பலவற்றைக் கூட்டிச் செய்தது).]

குடகரம் *kuḍagaram,* பெ.(n.) வேலிப்பருத்தி (மலை.); hedge cotten.

[குடகம் → குடகரம்.]

குடகன் *kuḍagaṉ,* பெ.(n.) 1.சேரன் (சூடா.); cēra king as a ruler of *kuḍanāḍu.* 2. மேல்நாட்டான்; westerner. *"குடகர் குண கடலென் றார்த்தார்" (தமிழ்நா. 157.).* 3. குடகு நாட்டைச் சார்ந்தவன்; a coorgman.

க.கொடக

[குடகு → குடகன்.]

குடகாற்று *kuḍa-kāṟṟu,* பெ.(n.) மேல்காற்று; westerly wind. *"குடகாற்றெறிந்து கொடி நுடங்கு மறுகின்" (சிலப். 14:70).*

[குடகு → காற்று.]

குடகு *kuḍagu,* பெ.(n.) 1. மேற்கு; west. 2. தமிழ் நாட்டிற்கு மேற்கே அமைந்த நாடு; the coorg country. 3. குடகு மொழி; the kuḍagu language.

ம. குடகு; க., து. கொடகு; தெ. கொடுகு; குட. கொடவி.

[குட → குடகு. கு – சொல்லாக்க ஈறு.]

குடகு மலை *kuḍagu-malai,* பெ.(n.) **குடகு மலை** பார்க்க; see *kuḍagumalai.*

[குடகு + மலை.]

குடங்கர்[1] *kuḍaṅgar,* பெ.(n.) 1. குடம்; waterpot. *"குடங்கர் கொணர்ந்திடா... கொண்டு கொண்டனர்" (கந்தபு. தேவகிரி.24).* 2. கும்ப ஓரை (சூடா.); a quarius, a constellation of the zodiac.

[குடம் → குடங்கர்.]

குடங்கர்[2] *kuḍaṅgar,* பெ.(n.) குடிசை; hut, cottage *"குடங்கரில் பாம்போடு உடன்உறைந்தற்று" (குறள்,890).*

[குடங்கு → குடங்கர்.]

வடமொழியாளர் குடிசை என்னும் பொருளில் குடங்கர் என்னும் சொல்லைக் குட்டங்கக *(kuṭṭaṅgaka)* என்று திரிப்பர். ஆட்டுக் குடில் போன்ற அரை யுருண்டை வடிவான குடிசைகளில் குறவரும், பன்றி யாடிகளும் போன்ற பழங்குடி மாந்தர் இன்றும் வதிந்து வருதல் காண்க (வே.க.159).

குடங்கரை *kuḍaṅ-karai,* பெ.(n.) தண்ணீர்க்குடம் வைக்கும் இடம் (யாழ்.அக.); place for keeping water-pots.

[குடம் → கரை.]

குடங்கல் *kuḍaṅkal,* பெ.(n.) சிறுகுடிசை; small hut.

[குடங்கு → குடங்கல்.]

குடங்கவிழ்–தல் *kuḍaṅ-kaviḻ-,* 2 செ.கு.வி.(v.i.) வண்டி குடஞ்சாய்ந்து விழுதல்; to be upset, be overturned, tipover, tip up on end, fall topsy-turvy as a cart.

[குடம் + கவிழ்.]

குடங்கால் *kuḍaṅ-kāl,* பெ.(n.) மடி; lap. *"மருவிக் குடங்காலிருந்து" (திவ்.பெரியதி.10.4:3).*

[குடங்கு → குடங்கால்.]

குடங்கு–தல் *kuḍaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) வளைதல் (யாழ்.அக.); to bend.

[குட → குடங்கு.]

குடங்கை *kuḍaṅgai,* பெ.(n.) 1. உள்ளங்கை; palm of the hand. *"தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு" (திவ்.இயற்.3:62).* 2. எல்லா விரலுங் கூட்டி உட்குழிக்கும் இணையா வினைக்கை (சிலப்.3:18, உரை.); a pose with a single hand in which all the fingers are joined and the palm is hollowed like a cup, one of 33 *iṉaiyā-viṉaikkai.*

ம. குடங்கை

[குடம் + கை.]

குடச்சிப்பி *kuḍa-c-cippi,* பெ.(n.) வளைவுள்ள இப்பி (வின்.); rounded shell.

[குடம் + சிப்பி.]

குடச்சூல் *kuḍa-c-cūl,* பெ.(n.) காற்சிலம்பு வகை (திவா.); tinkling anklet.

[குடம் + சூல்.]

குடசப்பாலை *kuḍaša-p-pālai,* பெ.(n.) 1. கசப்பு வெட்பாலை (பதார்த்த.235); conessi bark. 2. கொடிப்பாலை ; green wax-flower.3. கறிப்பாலை (வின்.); wild olive.

[குடசம் + பாலை.]

குடசம் *kuḍacam,* பெ.(n.) 1. ***குடசப்பாலை***[1] பார்க்க; see *kuḍašapālai. "வடவனம் வாகை வான்பூங் குடசம்" (குறிஞ்சிப்.67).* 2. மலைமல்லிகை (மலை.); Indian cork.

[குட →குடசம்.]

குடஞ்சாய்-தல் *kuḍañ-cāy-,* 2 செ.கு.வி. (v.i.) ***குடங்கவிழ்-தல்*** பார்க்க; see *kuḍaṅ-kaviḻ*

[குடம் + காய்.]

குடஞ்சுட்டவர் *kuḍañ-cuṭṭavar,* பெ.(n.) ஆனிரை மேய்க்கும் இடையர்; cowherds. *"புல்லினத் தார்க்கும் குடஞ்சுட்ட வர்க்கும்" (கலித்.107:2).*

[குடஞ்சுட்டு (மாடு) + அவர்.]

குடஞ்சுட்டு *kuḍañcuṭṭu,* பெ.(n.) ஆ; cow as offering a *kuḍam* of milk. *"நீரார் நிழல குடஞ்சுட் டினத்துள்ளும்" (கலித்.109:3).*

[குடம்' + சுட்டு (குடம் பால் கறக்கும் மாடு).]

குடத்தண்டு *kuḍa-t-taṇḍu,* பெ.(n.) ***குடக்கால்*** பார்க்க (சிலப்.6:138,உரை.); see *kuḍakkāl.*

ம. குடத்தண்டு

[குடம் + தண்டு.]

குடத்தண்டு விளக்கு *kuḍa-t-taṇḍu-viḷakku,* பெ.(n.) குடம் போன்ற வடிவில் தண்டமைந்த விளக்கு; a kind of lamp with pot-shaped stand.

ம. குடத்தண்டு விளக்கு

[குடம் + தண்டு + விளக்கு.]

குடத்தி[1] *kuḍatti,* பெ.(n.) இடைச்சி (சூடா.) குடவன்; faminine of shepherdess.

[குடம் (பால் நிரப்பி குடம்) → குடத்தி.]

குடத்தி[2] *kuḍatti,* பெ.(n.) 1. கழுதைப்புலி; hyena. 2. ஓநாய்; wolf.

[குறம் (குன்று) குறத்தி → குடத்தி.]

குடத்திநாய் *kuḍatti-nāy,* பெ.(n.) நாய்வகை (பாண்டி.); a kind of dog.

[குடத்தி + நாய்.]

குடதாடி *kuḍa-tāḍi,* பெ.(n.) தூணின்மேல் வைக்குங் குடவடிவிலான உறுப்பு (சீவக.593, உரை); capital of a pillar.

[குடம்' + தாடி.]

குடதிசை *kuḍa-dišai,* பெ.(n.) மேற்குப் பக்கம்;the western direction.

ம. குடதிச

[குட + திசை.]

குடதேவர் *kuḍa-tēvar,* பெ.(n.) மேற்கு மலை (பொதிய மலை)யில் இருந்த முனிவர் அகத்தியர் (S.I.I.II, introduction p.41) ; sage Agastya who stayed at western hill.

*[குட + தேவர்.குடு-மேற்கு. **குடமுனி** பார்க்க]*

குடந்தம் *kuḍandam,* பெ.(n.) 1. கைகூப்பி மெய் வளைத்துச் செய்யும் வழிபாடு; joining the hands together and bending the body, in worship. *"குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி" (திருமுரு.229).* 2. நால்விரல் முடக்கிப் பெருவிரல் நிறுத்தி நெஞ்சிடை வைக்கை (திருமுரு. பக்.47,

கீழ்க்குறிப்பு.);clenching the fingers and placing the ends of the thumbs on the chest. 3. குடம் (பிங்.); pot. 4. திரட்சி (அக.நி.); roundness.

ம. குடந்த

[குட → குடம் → குடந்தம்.]

குடந்தம்படு-தல் *kuḍantam-paḍu-*, 18 செகுன்றாவி.(v.t.) வழிபடுதல்; to bow in reverence, make obeisance. *"குடந்தம் பட்டெதிர் நின்றிடும்..... அரசன்" (காஞ்சிப்பு.கழுவாய்.96).*

[குட → குடந்தம் + படு.]

குடந்தை[1] *kuḍandai,* பெ.(n.) வளைவு; curve. *"குடந்தையஞ் செவிய கோட்டெலி" (புறநா.321).*

[குட → குடந்தை.]

குடந்தை[2] *kuḍandai,* பெ.(n.) குடமுக்கு கும்பகோணம்; Kumbakōṇam. *"கன்னார் மதில்சூழ் குடந்தைக் கிடந்தாய்" (திவ். திருவாய்,5,8,3).*

மறுவ. குடநகர்

[குடம் → குடந்தை. குடநகர் பார்; see kūḍanagar.]

பழங்கால நகரத்தின் குடதிசையில் (மேற்கில்) இருந்த குடியிருப்பு குடந்தை எனப் பெயர் பெற்றிருத்தல் வேண்டும்.

குடநகர் *kuḍa-nagar,* பெ.(n.) நாடு என்ற உட்பிரிவின் மேற்குப்புறம் அமைந்த நகர்; *Kumbakōṇam. "ஜெயங் கொண்ட சோழ மண்டலத்து காலியூர்க் கோட்டத்து காலியூர் நாட்டுக் குடநகர்" (தெ.கல்.தொ.7,கல்.96).*

[குடம் = மேற்கு. குடம் + நகர்.]

குடநாசினி *kuḍa-nāśiṉi,* பெ.(n.) வெண்கடுகு; white mustard (சா.அக.).

[குடம் + நாசினி.]

குடநாடன் *kuḍa-nāḍaṉ,* பெ.(n.) சேரன் (திவா.); Cēra king.

[குடக்கு + நாடன்.]

குடநாடு *kuḍa-nāḍu,* பெ.(n.) 1. மேல்நாடு (புறாந.17,உரை); western region. 2. கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டனுள் ஒன்று (நன்.273); the region where a dialect of Tamil was spoken, probably a portion of modern Malabar, one of 12 *Koḍun-tamiḻ-nāḍu.*

ம. குடநாடு

[குடம் – குடக்கு + நாடு. குடக்கு = கதிரவன் வளையும் திசை.]

குடநாழி *kuḍa-nāḻi,* பெ.(n.) கள்வரி (T.A.S.ii.67); a tax on toddy.

[குடக்கு + நாழி.]

குடப்படை *kuḍa-p-paḍai,* பெ.(n.) உட்கோயிலின் அடிமட்டத்திலுள்ள குடம் போன்று அமைந்த கட்டடப்பகுதி (M.E.R.143 of 1925); a horizontal section above the basement of the inner shrine of a temple.

[குடம் + படை.]

குடப்பம் *kuḍappam,* பெ.(n.) இருப்பை (மலை.) பார்க்க; South Indian mahua.

[குடவளப்பம் → குடப்பம்.]

குடப்பறை *kuḍa-p-paṟai,* பெ.(n.) குடவடிவான பன்றிப்பறை (திவா.); pot-shaped drum.

[குடம் + பறை.]

குடப்பனிநீர் *kuḍa-p-paṉṉir,* பெ.(n.) கருப்பையில் தங்கிய பனிக்குடத்து நீர்; the field inside the membrance which immediately surrounds the foetus in the womb (சா.அக.).

[குடம் + பனி + நீர்.]

குடப்பாணா *kuḍa-p-pāṇā,* பெ.(n.) குடவகை (யாழ்.அக.); a kind of pot.

[குடம் + பாணா]

[குடம் → பாணா]

குடப்பாம்பிற்கையிடு–தல் *kuḍa-p-pāmbir-kai-y-iḍu-,* 20 செ.கு.வி.(v.i.) பாம்பை அடைத்த குடத்திற் கையிட்டுச் சூளுரை செய்தல்; to demonstrate by the ordeal of inserting one's hand into a pot containing a serpent.

[குடம் + பாம்பு + இல் + கை + இடு.]

குடப்பாம்பு *kuḍa-p-pāmbu,* பெ.(n.) மதிற்பொறி வகை (சிலப்.15 : 216,உரை); a machine mounted on a fort as a defence.

[குடம் + பாம்பு.]

குடப்பாலை *kuḍa-p-pālai,* பெ.(n.) ***குடசப்பாலை;*** conessi bark.

ம. குடப்பால; **க.** கொடசிமெ கிட; **தெ.** கொடிச செட்டு.

skt. kuṭajam

[குடம் + பாலை.]

குடப்பிழுக்கை *kuḍa-p-pilukkai,* பெ.(n.) வரிக் கூத்து வகை (சிலப்.3:13,உரை); a kind of masquerade dance.

[குடம் + இழுக்கை.]

குடப்பெட்டி *kuḍa-p-peṭṭi,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[குடப்பட்டி + குடப்பெட்டி.]

குடபலை *kuḍa-palai,* பெ.(n.) 1. மணித்தக்காளி (தைலவ.பாயி.57); black night shade. 2. இலந்தை; jujube. 3. களர்வா; toothbrush tree (சா.அக.).

[குள்→ குட + (பலம்) பலை.]

குடபாசி *kuḍa-pāši,* பெ.(n.) 1. குடத்தைப் போன்ற பாசி; pot moss. 2. முட்டைப்பாசி; oval moss (சா.அக.).

[குடம் + பாசி.]

குடபுட்பம் *kuḍaputpam,* பெ.(n.) இலுப்பைப்பூ; mowah flower. 2. காட்டிலுப்பை; wild mowah (சா.அக.).

[குடம் + புட்பம்.]

குடபுலம் *kuḍa-pulam,* பெ.(n.) மேல்நாடு; western region. *"குடபுலங் காவலர் மருமான்" (சிறுபாண்.47).*

[குடம் + புலம்.]

குடம்[1] *kuḍam,* பெ.(n.) 1. மண் அல்லது மாழை (உலோகம்)யினால் செய்யும் சிறிய வாயுள்ள ஏனம் (பிங்.); water-pot. 2. கும்பவோரை (பன்னிருபா.163); aquarius, sign of the zodiac. 3. ***குடக்கூத்து*** பார்க்க; a dance of Krishna. *"நீணிலம் அளந்தோ னாடிய குடமும்" (சிலப்.6:55).* 4. ***குடதாடி*** பார்க்க ; see *kuḍa-tāḍi* 5. வண்டிக்குடம்; hub of a wheel. 6. திரட்சி (வின்.); globe, ball, sphericity. 7. ஆன் (சூடா.); cow.

ம. குடம்; **க.** கொட, குடிகெ; **தெ.** குடக, குடுக; **து.** குட்கி, குட்கெ, குட்க; **குட.,** பட. கொட; **துட.** குட்க்ய; **மா.** குண்ட; **குரு.** குண்டா.

[குள் (வளைவு) → குடம்.]

குடம்

குடம்[2] *kuḍam,* பெ.(n.) 1. நகரம்(பிங்.); town. 2. கொடிறு (பூசம்); the eighth nakšatra.

ம. குடம்

Skt. kuṭa

[கூடல் → கூடம் → குடம்.]

குடம்[3] *kuḍam,* பெ.(n.) *குடநாடு* பார்க்க; see *kuḍa-nāḍu.* *"தென்பாண்டி குட்டங் குடங்கற்கா" (நன். 273,உரை).*

[குடம் = மேற்கு, மேற்கிலுள்ள நாடு.]

குடம்[4] *kuḍam,* பெ.(n.) கரும்புக் கட்டி (பிங்.); jaggery.

[குடம் = வெல்லப்பாகு நிரப்பிய மட்பாண்டம், வெல்லப்பானை.]

குடம்[5] *kuḍam,* பெ.(n.) சதுரக்கள்ளி (தைலவ. தைல.9); square spurge.

[குடம் + பாற்குடம் போல் பால் சுரப்பது.]

குடம்[6] *kuḍam,* பெ.(n.) தூணில் குடம்போன்று அமைந்த ஓர் உறுப்பு (கட்டடம்) ; the part of a pillar shaped like a water - poem.

[குள் → குடம்]

குடம்பன் *kuḍamban,* பெ.(n.) கருஞ்சீரகம்; black cumin (சா.அக.).

மறுவ. குடமணம்

[குள் → குடம் → குடம்பின்.]

குடம்பை[1] *kuḍambai,* பெ.(n.) 1. கூடு; nest. *"குடம்பைநா றெற்றி" (கல்லா. கணபதிதுதி வரி.26).* 2. முட்டை (பிங்.); egg. *"குடம்பை தனித்தொழியப் புட் பறந் தற்றே" (குறள்,338).*

மறுவ. உடல், உடம்பு, கூடு, மெய், யாக்கை, முடை, கட்டை

[குடம் → குடம்பை]

குடம்விட்டுக்கட்டு-தல் *kuḍam-viṭṭu-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) திருமணத்திற்கு நடுங் காலை அடுக்குக்குடம் போலச் சீலையால் பொத்தி அழகு செய்தல்; to decorate the marriage post with stiffened cloth, so as to resemble a column of pots placed one over another.

[குடம் + விட்டு + கட்டு.]

குடம் வைத்தல் *kuḍam-vaittal,* பெ.(n.) முட்டியான கைகளை ஒன்றன்மேல் ஒன்றாக வைத்துத் தயிர்க்குடம், பாற்குடம் என்று கூவித் தட்டி ஆடும் பிள்ளை விளையாட்டு; playing with the fists one on another, and knocking them off in sucession, a child's play.

[குடம் + வைத்தல்.]

குடமஞ்சரி *kuḍa-mañjari,* பெ.(n.) மிளிரை என்னும் அரியப்படா மூலிகை; an unknown plant (சா.அக.).

[குடம் + மஞ்சரி.]

குடமண் *kuḍaman,* பெ.(n.) வெண்மணல்; white sand.

[குடம் + மண்.]

குடமண்டூரம் *kuḍamanḍūram,* பெ.(n.) அரத்த சோகைக்குக் கொடுப்பதற்கான. மண்டூரத்தில் செய்த ஆயுர்வேத மருந்து; an Aurvedic medicine prepared from hydrated oxide of iron and prescribed for anemia and bloodlessness (சா.அக.).

[குடம் + மண்டூரம்.]

குடமணம் *kuḍamaṇam,* பெ.(n.) கருஞ்சீரகம் (மலை.); black cumin.

மறுவ. குடம்பன், குடமாணகம்

[குடம்' + மணம்.]

குடமல்லிகை *kuḍa-malligai,* பெ.(n.) மல்லிகை வகை; Arabian jasmine.

[குடம் + மல்லிகை.]

குடமலை *kuḍa-malai,* பெ.(n.) குடகுமலை; a mountain in Coorg, source of the Kāveri. *"குடமலைப் பிறந்த கொழும்பஃ றாரமொடு" (சிலப்.10:106).*

[குடக்கு + மலை = குடமலை.]

குடமலைநாடு *kuḍamalai-nāḍu,* பெ.(n.) குடக நாடு; Coorg. *"குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்" (S.I.I.II, 68)*

[குடமலை + நாடு.]

குடமாடல் *kuḍam-āḍal*, பெ.(n.) ***குடக்கூத்து*** பார்க்க; see *kuḍa-k-kūttu.*

[குடம் + ஆடல்.]

குடமாணகம் *kuḍamāṇagam*, பெ.(n.) ***குடமணம்*** பார்க்க (சா.அக.); see *kuḍa-maṇam.*

[குடமணம் + குடமாணகம்.]

குடமாலை *kuḍa-mālai*, பெ.(n.) உருட்சியான மாலை வகை; round garland.

[குடம் + மாலை]

குடமிளகாய் *kuḍa-miḷagāy*, பெ.(n.) மிளகாய் வகை; bell-pepper.

[குடம் + மிளகாய்.]

குடமுடைத்தல் *kuḍam-uḍaittal*, பெ. (n.) கொள்ளி வைப்பவன் பிணத்தைச் சுற்றி வந்து நீர்க்குடம் உடைக்கும் இறப்புச் சடங்கு; the ceremony of breaking water-pots before a corpse in a funeral rite. *"கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தார்" (பட்டினத். திருப்பா. பொது.28).*

[குடம் + உடைத்தல்.]

குடமுருட்டி[1] *kuḍamuruṭṭi*, பெ.(n.) காவிரியின் கிளையாறுகளுள் ஒன்று; a river branch of kāviri (சா.அக.).

[குடம் + உருட்டி.]

குடமுருட்டி[2] *kuḍam-uruṭṭi*, பெ.(n.) மந்திர விச்சைக்கு உதவும் ஒரு மூலிகை; a plant with magical virtues used in preparing an amulet (சா.அக.).

[குடம் + உருட்டி.]

குடமுல்லை *kuḍa-mullai*, பெ.(n.) பெரிய பூக்கள் பூக்கும் முல்லை வகை; Arabian jasmine.

ம. குடமுல்ல

[குடை → குட + முல்லை.]

குடமுழ *kuḍa-muḻa*, பெ.(n.) ***குடமுழா*** பார்க்க; see *kuḍa-muḻā. "குடமுழ நந்திலனை" (தேவா.1233:11).*

[குடம் + (முழவு) முழ.]

குடமுழவம் *kuḍa-muḻavam*, பெ.(n.) ***குடமுழா*** பார்க்க; see *kuḍa-muḻā. "வான் குடமுழவமாதிப் பல்லியம்" (கந்தபு. ஏமகூட.21).*

[குடம் + முழவம்.]

குடமுழவு *kuḍamuḻavu*, பெ.(n.) முழவு எனும் தோற்கருவி ; large hemispherical lovd-sounding drum. *"குடமுழவென்பது பயிற்றினேன்" (பெருங்.மகத.14 :184).*

ம. குடமுழா

[குடம் + முழவு (முழக்கும் கருவி).]

குடமுழா *kuḍa-muḻā*, பெ.(n.) ***குடமுழவு*** பார்க்க; see *kuḍamuḻa. "குடமுழாத் திமிலை மொந்தை" (சேதுபு.இராமநா. 65).*

[குடம் + முழவு (முழா).]

குடமுனி *kuḍamuṉi*, பெ.(n.) மேற்குப் பொதிய மலையில் இருந்த முனிவர், அகத்தியர் the sage Agastya, the venerable sage of the western hill.

ம. குடமுனி

[குடம் + முனி. குட = மேற்கு.]

குமரிநாட்டைக் கடல்கொண்டபின் பாண்டியன் தலைநகர் பெருநை (தாமிரபரணி) முகத்திலிருந்த கபாட புரத்திற்கு மாற்றப்பட்டது. அகத்தியரும் தமது இருக்கையைப் பொதியமலைக்கு மாற்றிக் கொண்டார். பொதியம் என்பது பொதியில் என்பதன் மரூஉ. பொது + இல் = பொதியில் = அம்பலம். (இலக்கணப் போலி). அக்காலத்து ஆசிரியரெல்லாம் முனிவராதலின் மலைகளே இருக்கைகளாயிருந்தன. பொதியிலுக்கு மறுபெயர் மலையம். மலை என்னும் பொதுப் பெயரே அம்சாரியை பெற்றுப் பொதியிலைச் சுட்டுவதை மலையமுனி என்னும் தொடரிற் காண்க. மேற்குத் தொடர்ச்சி மலைகள் அக்காலத்தில் குடமலை யெனப்பட்டன. மகேந்திரமும், பொதியமும்,

குடமலைப்பகுதிகளாகும். குடதிசை யிலிருந்தது பற்றி அகத்தியர் குடமுனிவர் எனப்பட்டார். அதை யுணராதார் குடத்திற் பிறந்தவரென்று தொன்மம் (புராணங்) கட்டிவிட்டனர். அதன் பின்பு கும்பமுனி, கலசமுனி என அதன் இன மொழிகளாலும் பெயர் வழங்கத் தலைப்பட்டன (செல்வி. 1981. சிலம்பு .9, பரல் 8, பக்.879)

குடமூக்கில் *kuḍa-mūkkil,* பெ.(n.) **குடமூக்கு** பார்க்க; see *kuḍa-mūkku.* *"குடமூக்கில் கோயிலாக் கொண்டு" (திவ்.இயற்.2 : 97).*

[குடமூக்கு → குடமூக்கில்.]

குடமூக்கு *kuda-mūkku,* பெ.(n.) கும்பகோணம்; *kumbakōnam. "தண்குடமூக் கமர்ந்தான்" (தேவா.431 : 11).*

ம. குடமுக்கு

[குடம் + (முக்கு) மூக்கு. குடம் உடைந்த பகுதி குடமூக்கு என்பர். எனினும் பழைய நகரத்தின் மேற்கிலிருந்த குடியிருப்பு குடந்தை, குடநகர் எனப்படுதலின் குடமுக்கு →குடமூக்கு – என்னும் திரிபு பொருத்தமாகத் தோன்றுகிறது.]

குடமூது–தல் *kuḍam-ūdu-,*5 செ.கு.வி.(v.i.) குடத்தினுள்ளே ஊதி ஒலி பிறப்பித்தல்; to make a sound by blowing into pots, as an accompaniment to dancing among low caste women at marriages, and in some places of temples.

[குடம் + ஊது.]

குடமூலம் *kuḍa-mūlam,* பெ.(n.) தண்டுக்கீரை வகை; a kind of garden spinach (சா.அக.).

[குடம் + மூலம் (மூலிகை – முளைத்தது).]

குடர் *kudar,* பெ.(n.) குழல் போன்ற உட்டுளையுள்ள உறுப்பு, குடல்; bowels. *"குடருங் கொழுவும்" (நாலடி,46).*

ம. குடர்

[குடல் → குடர்.]

குடராசம் *kuḍa-rāšam,* பெ.(n.) பூரான் வகை (சங்.அக.); a kind of centipede.

[குடர் → குடராசம்.]

குடரி *kuḍari,* பெ.(n.) கோடரி, யானைத் துறட்டி ; axe elephant goad.

மறுவ. அங்குசம்

[குடர் → குடரி.]

குடல் *kuḍal,* பெ.(n.) 1. குழல் போன்ற உட்டுளை யுள்ள இரைப்பையைத் தொடர்ந்துள்ள குழாய் ; bowels, intestines, entrails. 2. காயின் குடல்; fungus matter, as in the hollow of a gourd. குடலழுகின பூசணிக்காய் (வின்.). 3. மரக்குடல் (வின்.); pith in the body of trees. 4. பழக்குடல் (வின்.); streaks running down in the interior of plantains and other fruits.

ம. குடல்

[குழல் → குடல்.]

குடல், சிறுகுடல், பெருங்குடல் என இருவகைப் பட்டாலும், குடலின் தன்மை குணம், தொழில் இவைகளைக் கருதி குடல் பலவகைப்படும்.

1. கல்குடல், 2. சிறுகுடல், 8. பெருங்குடல், 4. இரைக்குடல், 5. மணிக்குடல், 6. மலக்குடல், 7. கோழிக்குடல், (எளிதில் செரிக்கக் கூடியது), 8. ஓட்டைக் குடல் (எப்போதும் கழிச்சலாகும் குடல்), 9. தீனிக்குடல் (சா.அக.).

குடல்காய்கை *kuḍal-kāygai,* பெ.(n.) பசியால் வயிறு ஒட்டிக் கொள்ளுகை; shrinkage of the intestines from starvation.

[குடல் + காய்கை.]

குடல்தட்டு–தல் *kuḍal-taṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) குடலின் பிறழ்வை (குடலேற்றத்தை)த் தட்டி ஒழுங்குப் படுத்துதல்; to pat the bowels by way of massage.

[குடல் + தட்டு.]

குடல்தாங்கி *kuḍal-tāṅgi,* பெ.(n.) குடல் நழுவாதபடி கட்டும் கட்டு; a bandage used in cases of rupture of the intestines. 2. குடல் கீழிறங்காவண்ணம் நிறுத்தி வைக்கும் ஓர் கருவி; an apparatus for holding up the reduced hernia and preventing it (சா.அக.).

[குடல் + தாங்கி.]

குடல்திருகு-தல் *kuḍal-tirugu,* 5 செ.கு.வி. (v.i.) 1. குடல்பிசகுதல்; derangement of the intestines. 2.குடல் நடுக்கம்; trembling of the bowels (சா.அக.).

[குடல் + திருகு.]

குடல்நீர் *kuḍal-nīr,* பெ.(n.) குடலில் சுரக்கும் நீர்; fluid secreted in the intestines (சா.அக.).

[குடல் + நீர்.]

குடல்நீர்க்கமம் *kuḍal-nīr-k-kamam,* பெ.(n.) உறுப்புத் தள்ளல்; prolapsuani (சா.அக.).

[குடல் + நீர் + கமம்.]

குடல் நெளி-தல் *kuḍal-neḷi-,* 3 செ.கு.வி.(v.i.) குடல் புழுப்போல் அசைதல்; vermicular or undulatory motion of the intestines in digestion, peristaltic motion (சா.அக.).

[குடல் + நெளி.]

குடல்நோய் *kuḍal-nōy,* பெ.(n.) 1. பொதுவாகக் குடலுக்கு ஏற்படும் நோய்கள்; diseases in general of the intestines. 2. வயிற்று வலி; intestinal colic (சா.அக.).

[குடல் + நோய்.]

குடல்பதறு-தல் *kudal-padaṟu-,* 5 செ.கு.வி.(v.i.) வருத்தம் மிகுதி முதலியவற்றால் வயிறு கலங்குதல்; to feel as if the bowels would jump out of their place, to feel frightened, to feel troubled from excessive grief.

[குடல் + பதறு.]

குடல்பாகம் *kuḍal-pākam,* பெ.(n.) மலவாய்க்கடுப்பு; inflammation of the anus (சா.அக.).

[குடல் + பாகம்.]

குடல்மறுகல் *kuḍal-maṟugal,* பெ.(n.) ***குடலேற்றம்*** பார்க்க; see *kuḍalēṟṟam* (சா.அக.).

[குடல் + மறுகல்.]

குடல்மாலை *kuḍal-mālai,* பெ.(n.) குழந்தைகள் பிறக்கும்பொழுது கழுத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் நஞ்சுக்கொடி; cord found round the neck of the new-born baby (சா.அக.).

[குடல் + மாலை.]

குடல்முறுக்கு *kuḍal-muṟukku,* பெ.(n.) வாந்தி செய்வதற்குமுன் காணும் உணர்வு; a twisting sensation of the stomach just before vomitting. 2. குடல்வலி; intestinal colic. 3. பெருங்குடல் முறுக்கடைந்தது போல் தோன்றுவதுடன் கொடிய வலியும் காணும் ஓர் சூலை நோய்; a kind of violent spasmodic colic in which the large intestines seen, as it were twisted into knots (சா.அக.).

[குடல் + முறுக்கு.]

குடல்வர்த்தம் *kuḍal-varttam,* பெ.(n.) மலச்சிக்கல்; constipation (சா.அக.).

[குடல் + வர்த்தம்.]

குடல்வலி *kuḍal-vali,* பெ.(n.) உணவு மிகுதி முதலியவற்றாற் குடலிற் ஏற்படும் வலி; pain in bowels, as from over-eating, indigestion etc.

[குடல் + வலி.]

குடல்வளி *kuḍal-vaḷi,* பெ.(n.) குடலின் பிதுக்கம்; protrusion of the bowels Rupture (சா.அக.).

[குடல் + வளி.]

குடல்வறட்சி *kuḍal-vaṟaṭci,* பெ.(n.) மலவறட்சி; constipation (சா.அக.).

[குடல் + வறட்சி.]

குடல்வாதம் *kudal-vātam,* பெ.(n.) ***குடலூதை*** பார்க்க; see *kudalūdai.*

ம. குடல்வாதம்

[குடல் + வாதம்.]

குடல்விளக்கஞ்செய்தல் *kudal-vilkkam-cey-,* 1 செ.குன்றாவி. (v.t.) பிறந்த வயிற்றைப் பெருமை பெறச் செய்தல்; lit., to cause the womb to shine, to bring fame, as a son to his mother who gave him birth by himself becoming illustrious. *"குடல் விளக்கஞ் செய்த தாமோதரனை" (திவ். திருப்பா.18).*

[குடல் + விளக்கம் + செய்.]

குடல்வீக்கம் *kudal-vikkam,* பெ.(n.) குடலில் காணும் அழற்சி, புண், சூலை முதலிய காரணங் களினால் ஏற்படும் வீக்கம்; swelling due to inflammation, ulcers, colic, etc., of the intestines enteritis. 2. குடலுப்பிசம்; distension of the bowels with gas (சா.அக.).

[குடல் + வீக்கம்.]

குடல்வெப்பம் *kudal-veppam,* பெ.(n.) ***குடலழற்சி*** பார்க்க ; see *kudal-alarci.*

[குடல் + வெப்பம்.]

குடல்வேக்காடு *kudal-vēkkādu,* பெ.(n.) ***குடலழற்சி*** பார்க்க; see *kudal-alarci* (சா.அக.).

[குடல் + வேக்காடு.]

குடலண்டம் *kudalandam,* பெ.(n.) ***குடல்லிறக்கம்*** பார்க்க; see *kudal-irakkam.*

[குடல் + அண்டம்.]

குடலம் *kudalam,* பெ.(n.) பித்தளை; brass.

[குடல் → குடலம்.]

குடலழற்சி *kudal-alarci,* பெ.(n.) குடல் வெந்து புண்ணாதல்; informmation of the intestines or bowels.

[குடல் + அழிற்சி.]

குடலளைச்சல் *kudal-alaiccal,* பெ.(n.) பெருங் குடலில் தோன்றும் நோய்வகை; uneasy sensation in the larger intestine as a result of gastric irregularities.

[குடல் + அளைச்சல்.]

குடலி *kudali,* பெ.(n.) துளையுள்ள பொருள்; hollow things.

[குடு → குடல் → குடலி.]

குடலிரைச்சல் *kudal-iraiccal,* பெ.(n.) வயிற்றிரைவு; flatulence, rumbling of the bowels.

[குடல் + இரைச்சல்.]

குடலிறக்கம் *kudal-irakkam,* பெ.(n.) குடல் தன்னிருப்பிடத்தை விட்டு நழுவி, கவுட்டியின் வழியாய் விதைப்பையில் இறங்குதல்; protruson or the descent of the bowels from its place in to the scrotum through the groin.

[குடல் + இறக்கம்.]

குடலூதை *kudal-ūdai,* பெ.(n.) குடலைப் பற்றிய ஒருவகை ஊதைநோய் ; a disease in the intestines.

[குடல் + ஊதை.]

குடலெடு-த்தல் *kudal-edu-,* 4 செ.கு.வி.(v.i.) ***குடல்தட்டுதல்*** பார்க்க; see *kudal-tattu.*

[குடல் + எடுத்தல்.]

குடலெரிச்சல் *kudal-erriccal,* பெ.(n.) 1. வயிறு காந்துகை; inflammation of bowels. 2. வயிற் றெரிச்சல் (உ.வ.); heart - burning.

[குடல் + எரிச்சல்.]

குடலேற்றம் *kudal-ērram,* பெ.(n.) குடல் இடம் மாறி மேலேறுதலால் உண்டாகும் நோய்; twisting or derangement of the intestines, especially in children.

[குடல் + ஏற்றம்.]

குடலேறு–தல் *kudal-ēru-*, 7 செ.கு.வி.(v.i.) குடல் இடம்மாறி மேலேறுதல்; to have intestinal disorder.

[குடல் + ஏறு.]

குடலை *kuḍalai* பெ.(n.) 1. பூக்குடலை; long cylindrical basket of palm leaf for fruits and flowers. 2. கதிர்க்குடலை (யாழ்ப்.); ears of grain swollen and ready to shoot forth. 3. கிணற்றுக் குடலை (யாழ்ப்.); ring of wicker-work for a well. 4. பழக்கூடு (யாழ்ப்.); cover or screen for fruits. 5. கீற்றுக்கூடு (யாழ்ப்.); cover of palm leaf carried as a protection against rain. 6. குடல்; intestines, entrails.

[குட → குடலை.]

குடலை

குடலைக்காளை *kuḍalai-k-kālai*, பெ.(n.) இளங் காளை (வின்.); young bullock.

[குடலை + காளை.]

குடலைக்கிணறு *kuḍalai-k-kiṇaru*, பெ.(n.) உறைக் கிணறு வகை; welll walled with wicker - works.

[குடலை + கிணறு.]

குடலைக்குழப்பு–தல் *kuḍalai-k-kuḻappu-*, 5 செ.கு.வி. (v.i.) கக்கல் (வாந்தி) செய்யும்படி வயிற்றைப் புரட்டுதல்; to movement to stomach as to create a vomiting sensation, to produce nausea.

[குடலை + குழப்பு.]

குடலைப்பிடுங்கு–தல் *kuḍalai-p-piḍuṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. பசியால் வயிறு கிண்டப்படுதல்; to painfully affect or pinch the bowels, as hunger. பசிகுடலைப் பிடுங்குகிறது (உ.வ.). 2. வாந்தி யெடுக்க வருதல்; to cause retching. நாற்றம் குடலைப் பிடுங்குகிறது (உ.வ.). 3. அருவருப் பாதல்; to be unclean, unsightly.

[குடலை + பிடுங்கு–.]

குடலைப்பூச்சி *kuḍalai-p-pūcci*, பெ.(n.) பூச்சிவகை (யாழ்.அக.); a kind of worms.

[குடலை + பூச்சி.]

குடலையாகு–தல் *kuḍalai-y-āgu-*, 7 செ.கு.வி. (v.i.) கதிர் ஈனுதல் (யாழ்ப்.); to be ready to shoot forth as corn-ears.

[குடலை + ஆகு–.]

குடலையிட்டிலி *kudalai-yittilii* பெ.(n.) இட்டிலி வகை; a kind of ittilli

[குடலை + இட்டிலி.]

குடலையுங் கதிரும் *kuḍlai-uṅ-kadirum*, பெ.(n.) கருக்கொண்டதும் கொள்ளும் நிலையில் உள்ளது மான கதிர்; corn-ears or spikes partially shot forth.

[குடலை + கதிர்.]

குடலையேற்றம் *kuḍalai-y-ēṟṟam*, பெ.(n.) ஏற்ற வகை (வின்.); a kind of icco ttah.

[குடலை + ஏற்றம்.]

குடலைவயிறு *kuḍalai-vayiṟu*, பெ.(n.) குழைந்த வயிறு; shrivelled abdomen (உ.வ.).

[குடலை + வயிறு.]

குடவண்டிபோடு–தல் *kuḍavaṇḍi-pōḍu-*, 19 செ.கு.வி. (v.i.) 1. குடங்கவிழ்தல்; to have the cart capsized. 2. தலைகீழாய்க் கவிழ்தல்; to capsize, over-turn, upset.

[குட + வண்டி + போடு–தல்.]

குடவண்டியடி-த்தல் *kuda-vandi-y-adi-,* 4 செ.கு.வி. (v.i.) ***குடவண்டிபோடு*** பார்க்க; see *kuda-vandi-pōdu.*

[குடவண்டி + அடி.]

குடவண்டிவை-த்தல் *kuda-vandi-vai-,* 4 செ.கு.வி. (v.i.) தொந்தி தள்ளுதல்; to become pot-bellied.

[குடவண்டி + வைத்தல்.]

குடவப்புரசு *kudava-p-purasu,* பெ.(n.) முதிரை; satin - wood.

[குடவம் + புரசு.]

குடவம் *kudavam,* பெ.(n.) பித்தளை; brass.

[குடம் → குடவம்.]

குடவயிறன் *kuda-vayiran,* பெ.(n.) பெருவயிறு உள்ளவன்; a pot-bellied person.

ம. குட வயறன்

[குடம் + வயிறு + அன்.]

குடவயிறு *kuda-vayiru,* பெ.(n.) குடத்தைப் போன்ற பெருவயிறு; pot-belly.

மறுவ. சட்டி வயிறு

ம. குட வயிறு

[குடம் + வயிறு.]

குடவர் *kudavar,* பெ.(n.) மேற்கிலுள்ள குட நாட்டினர்; people of the western country. *"வடவர் வாடக் குடவர் கூம்ப" (பட்டினப். 276).*

[குட → குடவர்.]

குடவரை *kuda-varai,* பெ.(n.) மேற்கில் உள்ள மலை; the western mountain. *"குடவரை நெற்றி பாய்ந்த கோளரி போன்று" (சீவக.980).*

[குட + வரை.]

குடவரைவாசல் *kuda-varai-vāšal,* பெ.(n.) கோபுரவாயில்; gateway under the tower of a temple.

[குடை + வரை + வாசல்.]

குடவளப்பம் *kuda-valappam,* பெ.(n.) இருப்பை (மலை.); South Indian mahua.

[குட + வளப்பம்]

குடவறை *kuda-v-arai,* பெ.(n.) 1. நிலவறை (யாழ்.அக.); underground cellar, cave. 2. சிற்றறை; small room.

[குட + அறை]

குடவன்[1] *kudavan,* பெ.(n.) இடையன்; cowherd, shepherd. *"ஆம்பாற் குடவர் மகளோ" (சீவக.492).*

[குடம் + அன்.]

குடவன்[2] *kudavan,* பெ.(n.) 1. பித்தளை; brass. 2. பனங்காய் முதலிய ஒற்றைக் கொட்டைக் காய்; palmyra or mahua fruit with a single stone or seed. 3. கணிகை; dancing girl. *"குடவற்குந் தாட்டிக்குங் கொத்திட்டு மாய்வ தல்லால்" (தனிப்பா.I, 87,171).* 4. குடவுண்ணி; a kind of cattle-tick. *"வாய்ப்படைக் குடவனும்" (குமர. பிர.காசிக்.57).*

[குட → குடவன்]

குடவன்[3] *kudavan,* பெ.(n.) நறுமணப்பொருள், கோட்டம் (மலை.); Arabian costum.

[குடம் (மேற்கு) → குடவன்]

குடவன்செம்பு *kudavan-cembu,* பெ.(n.) பித்தளையைக் கொண்டு அணியமாக்கும் ஒரு வகை களிம்பற்ற செம்பு; pure copper free from ally verdigris.

[குடவன் + செம்பு.]

குடவன் பனங்காய் *kudavan-panankāy,* பெ.(n.) ***குடவன்***[2] பார்க்க; see *kudavan*[2].

[குடவன் + பனங்காய்.]

குடவன்பொடி *kuḍavaṉ-poḍi,* பெ.(n.) 1. பித்தளை அராவிய பொடி; brasslings. 2. பித்தளை முதலிய மாழைகள் சேர்ந்த பொடி; powder of several metals with brass as chief ingredients (சா.அக.).

[குடவன் + பொடி.]

குடவன்பொன் *kuḍavaṉ-poṉ,* பெ.(n.) வேதியியல் பித்தளையைக் கொண்டு அணியமாக்கிய பொன்; gold prepared by transmiting brass through alchemical process (சா.அக.).

[குடவன் + பொன்.]

குடவியிடு—தல் *kuḍavi-y-iḍu-,*19 செ.குன்றாவி. (v.t.) வளைத்து அகப்படுத்துதல்; to coax, entice, inveigle. *“குடவியிடு மரிவையர்கள்” (திருப்பு.514).*

[குட → குடவு, குடவி + இடு.]

குடவிளக்கு *kuḍa-viḷakku,* பெ.(n.) 1. தொங்க விடுவதும் மாழையினால் அமைந்ததுமான குடவடிவுள்ள விளக்கு; hanging lamp with the oil-can shaped like a small water-pot. 2. மண வறையில் தென்கிழக்கு (நெருப்பு) மூலையில் குடத்தின் மேல் வைக்கும் விளக்கு; light placed on a pot in the south-east corner of a marriage dais.

ம. குட விளக்கு

[குடம்' + விளக்கு.]

குடவு[1]—தல் *kuḍavu-,* 5 செ.கு.வி.(v.i.) வளை வாதல் (வின்.); to be crooked, bent curved (w.).

[குட → குடவு]

குடவு[2] *kuḍavu,* பெ.(n.) 1. வளைவு; bend, curve. 2. குகை; cave, grotto. 3. குமரனாடிய குடைக்கூத்து (யாழ்.அக.); a dance of god kumaraṉ.

[குட → குடவு]

குடவுண்ணி *kuḍa-v-uṇṇi,* பெ.(n.) ஒருவகைப் பெரியவுண்ணி (வின்.); a large kind of tick.

[குடம் + உண்ணி.]

குடவுபுரசு *kuḍavu-purašu,* பெ.(n.) கரும்புரசு; east Indian stain wood (சா.அக.).

[குடவு + புரசு.]

குடவுழுந்தர் *kuḍa-v-uḻundar,* பெ.(n.) ஒவ்வோர் உருவுக்கும் ஒவ்வொன்று மேனி, குடம் நிறை யுமளவும் உழுந்தையிட்டுப் பாடம் வரப் பண்ணிக் கல்வி நிரம்பியவராகச் சொல்லப்படும் ஒரு புலவர் (வின்.); a reputed poet, who in his youth took as much time in learning a lesson by rote as was required to fill a pot with uḻuntu grain, one for every time he repeated it, as an example of great perseverance.

[குடம் + உழுந்தர்.]

குடவெழுத்தாணி *kuḍa-v-eḻuttāṇi,* பெ.(n.) தலையிடம் குண்டுகுண்டாய்த் திரண்டிருக்கும் எழுத்தாணி (வின்.); iron style with knobs or balls at the top, one above another, tapering to a point.

[குடம் + எழுத்தாணி.]

குடவோலை *kuḍa-v-ōlai,* பெ.(n.) உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்கக் குடத்தில் இடுஞ் சீட்டு; vote by ballot, as recorded on ōla and cast into a pot. *“குடவோலை எழுதிப் புக இடுவதாகவும்” (சோழவமி.53).*

[குடம் + ஓலை.]

குடவோலைமுறை *kuḍavōlai-muṟai,* பெ.(n.) சோழர்கால தேர்தல் முறை ; an election of cōḻā period.

[குடவோலை + முறை.]

குடற்கட்டு *kuḍaṟ-kaṭṭu,* பெ.(n.) குடல் அசை வுராமை; absence or cessation of the movements of the intestines due to the lack of stimulus to Auerbach's plexus (சா.அக.).

[குடல் + கட்டு.]

குடற்கரிரோகம் *kuḍaṟ-karirōgam,* பெ.(n.) காற்று அதிகரித்துக் குடலில் தங்குவதால் உணவு

செரியாமை. ஏப்பம், குடல்வலி முதலிய குணங் களைக் காட்டுமோர் குன்ம நோய்; a kind of dyspepsia due to wind or gas in the intestines. It is characterised by indigestion, belching intestinal colic etc. (சா.அக.).

[குடல் + கரிரோகம்.]

குடற்கிருமி *kuḍar-kirumi,* பெ.(n.) ஒருவகை நுண்ணுயிரி (கிருமி); a kind of worm.

மறுவ. குடற்புழு

[குடல் + கிருமி.]

குடற்சரிவு *kuḍar-carivu,* பெ.(n.) ***குடலிறக்கம்*** பார்க்க; see *kuḍalirakkam.*

[குடல் + சரிவு.]

குடற்சவ்வு *kuḍar-c-cavvu,* பெ.(n.) வயிற்றின் உறுப்பை மூடியிருக்கும் தென்சவ்வு; mentum, caul.

[குடல் + சவ்வு. குடற்புழு பார்க்க; see kuḍarpuḻu.]

குடற்சூலை *kuḍar-cūlai,* பெ.(n.) குடலில் ஏற்படும் சூலை நோய்; pricking pain of the intestines (சா.அக.).

[குடல் + சூலை.]

குடற்படுவன் *kuḍar-p-paḍuvaṉ,* பெ.(n.) குழந்தை யின் குடர்நோய் வகை; an intestinal disease of children. *"திருகு குடற்படுவன் நீர்ப்பாடுந் தீரும்" (பாலவா.452).*

[குடல் + படுவன்.]

குடற்பாடம் *kuḍar-pāḍam,* பெ.(n.) சிறு குடலுக்கும், பெருங்குடலுக்கும் இடையில் இருக்கும் கதவு; the fold at the junction of the small and the large intestines (சா.அக.).

[குடல் + கபாடம் (பாடம்).]

குடற்பிசகு *kuḍar-piśaku,* பெ.(n.) குடலிருந்த இடத்தை விட்டுப் பல கரணியங்களை முன்னிட்டுப் பெயருதல்; displacement of the bowels due to various causes. 2. குடற் கோளாறு; disorder or derangement of the intestines.

[குடல் + பிசகு.]

குடற்பிடுங்கி *kuḍar-piḍuṅgi,* பெ.(n.) *"கக்க லெடுக்கச் செய்வதாகிய துரிசு" (சங்.அக.)*; blue vitriol, as causing vomiting sensation.

[குடல் + பிடுங்கி.]

குடற்பிரிவு *kuḍarpirivu,* பெ.(n.) குடல் பிறழுகை (யாழ்ப்.); dislodgement of the bowels.

[குடல் + பிரிவு.]

குடற்புரை *kuḍar-p-purai,* பெ.(n.) குடலின் உள்ளீடு; hollow, tubular, space inside the intestines.

[குடல் + புரை.]

குடற்புழு *kuḍar-puḻu,* பெ.(n.) குடலில் வாழும் ஒருவகைப் புழு ; a kind of worm.

[குடல் + புழு.]

குடற்பை *kuḍar-p-pai,* பெ.(n.) கருப்பை; uterus, womb.

மறுவ. குடற்போர்வை

[குடல் + பை.]

குடற்போர்வை *kuḍar-pōrvai,* பெ.(n.) கருப்பை; womb. uterus. *"குடற் போர்வைக்குள்" (சூடா. 12,20).*

[குடல் + போர்வை.]

குடற்றுடக்கு *kuḍarruḍakku,* பெ.(n.) அரத்தக் கலப்பான உறவு; consanguinity kinship, relationship. *"இவற்றினுடைய ரட்சணம் உன் பேறாம் படியான குடற்றுடக்கையுடையவனே" (ஈடு. 4:9,2).*

[குடல் + துடக்கு.]

குடனோவு *kuḍaṉōvu,* பெ.(n.) கொலைமுட்டி என்னும் கால்நடைநோய் (M.C.M.D(1887)24) ; a cattle disease involving congestion of the lungs

and swelling of the belly with the respiration checked.

[குடல் + நோவு.]

குடா *kuḍā,* பெ.(n.) 1. வளைவு; bend, curve. *"எண்கின் குடாவடிக் குருளை" (மலைபடு.501).* 2. குடைவு (வின்.); cavity, hollow, cavern. 3. குடாக்கடல் (மூன்றுபக்கம் நிலஞ்சூழ்ந்த கடல்) *மன்னார்குடா.* 4. மூலை; remote part of a large country or field.

[குட + குடா.]

குடாக்கடல் *kuḍā-k-kaḍal,* பெ.(n.) மூன்றுபக்கம் நிலஞ்சூழ்ந்த கடல் ; bay, gulf.

[குடா + கடல்.]

குடாக்குடல் *kuḍā-k-kuḍal,* பெ.(n.) குடைவுள்ள குடல்; a branch of the intestines (சா.அக.).

[குடா + கடல்.]

குடாக்கை *kuḍākkai,* பெ.(n.) வயலின் மூலை; corner of a field.

[குடா → குடாக்கு → குடாக்கை.]

குடாகாயம் *kuḍākāyam,* பெ.(n.) குடத்தால் அளவுபடுத்தப்பட்ட வானம்; space limited by a pot, a term frequently used in Indian philosophy. *"குடாகாய வாகாயக் கூத்து" (சி.போ.2.3:2).*

[குடம் + ஆகாயம்.]

குடாசகம் *kudāšagam,* பெ.(n.) 1. ஏய்ப்பு; fraud, duplicity, guile, dissimulation. 2. ஏமாற்று; deception, cheating. 3. அல்வழிப்படுத்தல்; ill advice, bad counsel.

[குடம் → குடசம் → குடாசகம்.]

குடாசு-தல் *kuḍāšu-,* 5 செ.கு.வி.(v.i.) ஏமாற்றுதல்; to commit fraud.

[குடத்துதல் - வளைத்தல், குடத்து – குடாத்து → குடாசு.]

குடாது *kuḍātu,* பெ.(n.) 1. மேற்கிலுள்ளது; that which is in the west. *"குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின்" (புறநா.6).* 2. மேற்கு; west. *"குடாதுங் குணாது மவற்றுட்படு கோண நான்கும்" (பாரத.பதின்மூ.80).*

[குடக்கு → குடாத்து → குடாது.]

குடாப்பு *kuḍāppu,* பெ.(n.) கூடு; plaited coop for fowls, pigs, lambs, etc., shaped like a cone.

மறுவ. கொடாப்பு

[குடா → குடாப்பு: கோழி, ஆட்டுக்குட்டி, பன்றி, முதலியவற்றை அடைக்கும் அரையுருண்டை வடிவான கூடு.]

குடாரம்[1] *kuḍāram,* பெ.(n.) கோடாலி; axe, hatchet. *"மழுவுந் தறுகட் குடாரமும்" (சூளா. சீய. 72).*

[குட → குடா → குடாரம்.]

குடாரம்[2] *kuḍāram,* பெ.(n.) 1. தயிர் கடைவதற்கு நட்ட தறி; fixed post used to keep the churning stick in position. 2. தயிர்கடை தாழி (திவா.); churning pot.

ம. குடரம்

குடாரி[1] *kuḍāri,* பெ.(n.) 1. கோடாலி; axe. குடா அரிக் கோவலர் (தொல்.பொருள்.329, உரை). 2. வளைந்த யானைத் தோட்டி (பிங்.); elephant-hook.

[கோடரி → குடாரி.]

குடாரி[2] *kuḍāri,* பெ.(n.) திப்பிலி (மலை.); long pepper.

[குடம் → குடாரி.]

குடாவடி *kuḍā-vaḍi,* பெ.(n.) வளைந்த அடியை யுடையதாகிய கரடி (திவா.); bear, as having crooked feet.

[குட → குடா + அடி.]

குடாவு *kuḍāvu,* பெ.(n.) குடைவு; cavity, hollow, cavern.

[குட – குடா → குடாவு.]

குடான் *kuḍāṉ,* பெ.(n.) செம்முள்ளி (மலை.); thorny nail dye.

[குடா → குடான்.]

குடான்னம் *kuḍāṉṉam,* பெ.(n.) சருக்கரைப் பொங்கல்; a preparation of boiled rice mixed with jaggery and ghee (சா.அக.).

[குடம் + அன்னம்.]

குடானசம் *kuḍāṉaśam,* பெ.(n.) செம்முள்ளி; common red nail dye (சா.அக.).

[குட → குடா → குடானசம். வளைந்த முள்ளுடையது.]

குடானம் *kuḍāṉam,* பெ.(n.) 1. குடம்; pot.

க. குடானம்

[குடம் + அனம் – குடானம். 'அனம்' சொல்லீறு.]

குடானன் *kuḍāṉaṉ,* பெ.(n.) தாளி; ipomaea genus (சா.அக.).

[குடு →குடம் →குடானன்.]

குடி[1]**–த்தல்** *kuḍi-,* 4 செ.குன்றாவி.(v.i.) 1. பருகுதல்; to drink, as from a cup, from the breast. *"கடலைவற்றக் குடித்திடுகின்ற செவ்வேற் கூற்றம்" (கந்தபு.தாரக.183).* 2. உட்கொள்ளுதல்; to inhale, absorb, imbibe, as air, tobacco, smoke. புகைச்சுருட்டுக் குடிக்கிறான் (உ.வ.).

க. குடி (kuḍi) ; **ம.** குடி (kuṭi); **தெ.** குடுசு (kuḍušu)

[குள் → குடி.]

குடி[2] *kuḍi,* பெ.(n.) 1. பருகுகை; drinking. பால்குடி மறந்த பிள்ளை. 2. மது ; drink, beverage. 3. மது வுண்ட மயக்கம் ; drunkenness, intoxication.

ம., க., குட., பட. குடி; **தெ.** குடுபு; **து.** குட்செலு, குடிசெலு.

[குள் → குடி.]

குடி[3] *kuḍi,* பெ.(n.) புருவம் (பிங்.); eye brow.

[குள் (வளைவு) → குடி.]

குடி[4] *kuḍi,* பெ.(n.) 1. குடியானவன்; ryot. *"கூடு கெழீஇய குடிவயினான்" (பொருந.182).* 2.குடியிருப்போர்; tenants. 3. ஆட்சிக்குட்பட்ட குடி மக்கள்; subjects citizens *"மன்னவன் கோனோக்கி வாழுங் குடி" (குறள்.542).* 4. குடும்பம்; family. *"ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்" (புறநா.183).* 5. கொடிவழி (பிங்.); lineage, descent. 6. குலம் (குடி.); caste, race. 7. வீடு; house, home, mansion. *"சிறுகுடி கலக்கி" (கந்தபு. ஆற்று.12).* 8. ஊர்; village. *"குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து" (திருமுரு.196).* 9. வாழ்விடம்; abode, residence. *"அடியாருள்ளத் தன்பு மீதூரக் குடியாக் கொண்ட" (திருவாச.2:8).*

ம., குட. குடி; **க.** குடி (கோயில்), குடில், குடிலு, குடிசலு; **தெ.** குடி (கோயில்), குடிசெ; **கொலா., து., பட., பர்.** குடி (கோயில்); **கோத.** குட்சல், குட்ள்; **துட.** குட்ய (கோயில்); **குரு.** குட்யா; **கூ.** குடி (வீட்டின் நடுவரை); **பிரா.** குட, குட்ட.

OE. cot; **MDU., MLG., ON.** kot; **E.** cot; **OE.** cote; **MLG.** kote; **R.** cote.

Fin. kota; **Es.** kodu; **O.Jap.** ka; **Jap.** ko, katei, kataku; **Mong.** kote, xota.

[குட → குடி. குட = வளைந்த.]

குடிக்காசு *kuḍi-k-kāśu,* பெ.(n.) சிற்றூர்க் குடிவரி (I.M.P.Tg.1068); a village cess.

[குடி + காசு.]

குடிக்காடு *kuḍi-k-kāḍu,* பெ.(n.) சிற்றூர்; village *"ஐவர்க்கும் ஐந்து குடிக்காடு நல்குதியோ கூறு" (பாரதவெண். வாசுதேவன்றூ.69).*

[குடி + காடு.]

குடிக்காணம் *kuḍi-k-kāṇam,* பெ.(n.) குடிவரி; a fee paid by tenants. (I. M.P.Cm.22).

[குடி + காணம். காணம் = வரி.]

குடிக்காணி *kuḍi-k-kāṇi,* பெ.(n.) நிலைத்த உழவுத் தொழில் உரிமை (தஞ்சை); permanent tenancy, as of temple lands.

[குடி + காணி.]

குடிக்காணியாட்சி *kuḍi-k-kāṇi-y-āṭci,* பெ.(n.) மரபு வழிச் சொத்துரிமை; inheritance, ancestral property.

[குடிக்காணி + ஆட்சி.]

குடிக்காவல் *kuḍi-k-kāval,* பெ.(n.) ஊர்க்காவல் (G.Tn.D.134) ; the system of village watch.

[குடி + காவல்.]

குடிக்குச்சகுனி *kuḍikku-c-caguṇi,* பெ.(n.) குடியோட்டிப் பூண்டு; prickly poppy.

[குடிக்கு + சகுனி.]

குடிக்கூலி *kuḍi-k-kūli,* பெ.(n.) 1. வீட்டுவாடகை; house rent. 2. வாடகை; hire.

மறுவ. குடக்கூலி

ம. குடக்கூலி

[குடி + கூலி.]

குடிக்கூலிக்கெடு-த்தல் *kuḍi-k-kūli-keḍu-,* 18 செ.குன்றாவி.(v.t.) வாடகைக்கு வாங்குதல்; to obtain for rent, as a house, for hire, as a cart.

[குடி + கூலிக்கு + எடுக்கு.]

குடிகாரன் *kuḍi-kāraṉ,* பெ.(n.) குடியன்; drunkard.

[குடி + காரன்.]

குடிகெடு-தல் *kuḍi-keḍu-,* 20 செ.கு.வி.(v.i.) குடும்பம் அடியோடு அழிதல்; to be utterly ruined, as a family. *"குடிகெடினு நள்ளே னினதடியா ரொடல்லால்" (திருவாச.5:2).*

ம. குடிகெடு

[குடி + கெடு.]

குடிகெடுத்தோன் *kuḍi-keḍuttōṉ,* பெ.(n.) கள், சாராயம் முதலிய போதைப் பொருள்கள்; intoxicants such as toddy, arrack or spiritious liquor (சா.அக.).

[குடி + கெடுத்தோன்.]

குடிகேடன் *kuḍi-kēḍaṉ,* பெ.(n.) தீயொழுக்கத்தால் குலத்தையழிப்போன்; one who spoils the fair name of a family by his foul deeds.

[குடி + கேடன்.]

குடிகேடி *kuḍi-kēḍi,* பெ.(n.) குலத்தை யழிப்பவ-ன்-ள்; one who is the ruin of a family. *"விலை மாதர் கள் இளைஞர்கள் குடிகேடிகள்" (திருப்பு.625).*

[குடி + கேடி.]

குடிகேடு *kuḍi-kēḍu,* பெ.(n.) குடும்ப அழிவு; ruin of a family *"குதிரையின் மேல்வந்து கூடிடுமேற் குடிகேடு கண்டீர்" (திருவாச.36:2).*

[குடி + கேடு.]

குடிகை[1] *kuḍi-gai,* பெ.(n.) ஓலைக் குடிசை; hut made of leaves, hermitage *"உண்டு கண்படுக்கு முறையுட் குடிகையும்" (மணி.6,63).* 2. கோயில்; temple. *"முதியாள் குடிகையும்" (மணிமே.24:161).*

[குடி → குடிகை.]

குடிகை[2] *kuḍigai,* பெ.(n.) ஏலவரிசி (மலை.); cardamom seed.

[குடி → குடிகை.]

குடிகை[3] *kuḍigai,* பெ.(n.) கமண்டலம்; ascetic's pitcher. *"அரும்புனற் குடிகை மீது" (கந்தபு. காவிரி.49).*

[குடுவை → குடுகை → குடிகை.]

குடிகொள்ளு-தல் *kuḍi-koḷ-,* 12 செ.கு.வி. (v.i.) நிலையாகத் தங்கியிருத்தல்; to occupy, take possession of the mind, as a deity, to haunt, infest as demons, bats snakes; to be deep-seated as a chronic disease. *"குரைகழல்கள் குறுகினம் நங்கோவிந்தன் குடிகொண்டான்" (திவ்.திருவாய். 10.6;7).*

ம. குடிகொள்ளுக

[குடி + கொள்ளு-.]

குடிகோள் *kuḍi-kōḷ,* பெ.(n.) வேண்டுமென்றே வஞ்சகம் செய்து குடியைக் கெடுக்கை; ruining a family by deep-laid schemes. *"உறுப்பறை குடிகோ ளலைகொலை" (தொ.பொருள்.258).*

[குடி + கோள்.]

குடிங்கு *kuḍiṅgu,* பெ.(n.) பறவை; bird. *"கோட்டகம் பரிதியங் குடிங்கு கூடுமே" (இரகு. நாட்டுப். 40).*

[குள் → குடு → குடிங்கு.]

குடிச்சி *kuḍicci,* பெ.(n.) 1. சாதிபத்திரி; mace. 2. செந்திராய்; Indian chickweed. 3. சீந்தில்; moon creeper (சா.அக.).

[குள் → குடி → குடிச்சி.]

குடிச்செருக்கு *kuḍi-c-cerukku,* பெ.(n.) 1. குடிப் பிறப்பாலுண்டான உயர்வெண்ணம் (கருதும்); pride of birth. 2. குடிவளம்; dense population.

[குடி + செருக்கு.]

குடிசரம் *kuḍišaram,* பெ.(n.) நீர்ப்பன்றி; hog, living in the star (சா. அக.).

[குடி + சரம்.]

குடிசல் *kuḍišal,* பெ.(n.) குடிசை; hut.

[குடி → குடிசை → குடிசல்.]

குடிசனம் *kuḍišaṉam,* பெ.(n.) குடிமக்கள்; inhabitans, subjects.

[குடி + சனம்.]

குடிசாய்—தல் *kuḍi-šāy-,* 8 செ.கு.வி. (v.i.) குடியின் அழிவு; ruin of a family.

[குடி + சாய்-.]

குடிசிகை *kuḍi-šigai,* பெ.(n.) நிலவரி நிலுவை; arrears of land revenue or rent.

[குடி + சிகை.]

குடிசில் *kuḍišil,* பெ.(n.) குடிசை; hut. *"மனைவியை யிலாக் குடிசில் (நூற்றெட்டுத். திருப்புகழ்.98).*

[குடி + சில்.]

குடிசீலை *kuḍišīlai,* பெ.(n.) கோவணம்; loin cloth.

[குடி + சீலை.]

குடிசெய்—தல் *kuḍi-šey-,* 1 செ.கு.வி.(v.i.) 1. பிறந்த குடியை யுயர்த்துதல்; to bring credit to one's family, as making it. *"குற்றமிலனாய்க் குடிசெய்து வாழ்வானை" (குறள்,1025).* 2. வாழ்தல்; to dwell, reside, settle. *" மனவாரமுடையார் குடிசெயுந் திருநலூரே" (தேவா.413:10).*

[குடி + செய்.]

குடிசை *kuḍišai,* பெ.(n.) சிறு குடில் (பிங்.); small hut, cottage.

தெ.குடிசெ, குடுசு; **ம.** குடிஞ்ஞில்; **க.** குடிசலு. **து.** குடிசில், குடிசல்.

Fin. koju; **Hung.** haj; **Jap.**koya; **E.** cot, cottage; **A.S.** cote, a small dwelling

[குடி → குடிசில் → குடிசை]

குடிசைதூக்கு—தல் *kuḍišai-tūkku-,* 5 செ.கு.வி. (v.i.) 1. **குடிசையெடுத்தல்** பார்க்க; see *kuḍišai-y-eḍu-.* 2. இருப்பிடம் மாற்றுதல்; to change habitation.

[குடிசை + தூக்கு.]

குடிசையெடு—த்தல் *kuḍišai-yeḍu-,* 4 செ.கு.வி. (v.i.) குடிசையை வேற்றிடம் மாற்றுதல்; to remove one's hut to another place.

[குடிசை + எடு-.]

குடிஞை[1] *kuḍiñai,* பெ.(n.) 1. ஆறு; river. *"கொண்மூ வரவொத் துளதக் குடிஞை" (கந்தபு.காளிந்தி.3).*

[குள் → குடி(வளைவு) → குடிஞை.]

குடிஞை[2] *kuḍiñai,* பெ.(n.) குடிசை; small hut. *"தூசக் குடிஞையும்" (பெருங்.இலாவாண. 12:43).*

ம. குடிஞு

[குடிசை → குடிஞை.]

குடிஞை[3] *kuḍiñai,* பெ.(n.) கோட்டான்; rock horned-owl. *"குடிஞை யிரட்டு நெடுமலை யடுக்கத்து" (மலைபடு.141).* 2. பறவை (பிங்.); bird.

[குடி → குடிஞை.]

ஒருகா. வளைந்த மூக்குடையதாகலின் கோட்டானுக்கு குடிஞை என்ற பெயர் பொருத்தமாகலாம்.

குடிஞை[4] *kuḍiñai,* பெ.(n.) 1. கோட்டையின் ஏவறை; bastion. நெடுமதிலுங் குடிஞைகளும் (நீலகேசி,268). 2. ஊர் (யாழ்.அக.); town, village.

[குடி → குடிஞை.]

குடிஞைக்கல் *kuḍiñai-k-kal,* பெ.(n.) சோழர் காலத்து வழங்கிய ஒருவகை எடைக்கல்; a standard weight current during Cōla sovereignty. *"ஆட வல்லா னென்னுங் குடிஞைக் கல்லால்" (S.I.I. II, 69).*

மறுவ. குடிநற்கல்

[குடி + நல் + கல் – குடிநற்கல் → குடிஞைக்கல்.]

குடிஞைப்பள்ளி *kuḍiñai-p-paḷḷi,* பெ.(n.) கண்ணுளாளர் தங்குதற்குரிய நாடக அரங்கின் பகுதி (சிலப்.3:105,உரை); a portion in green-room occupied by *kaṇṇuḷāḷar.*

[குடிஞை + பள்ளி.]

குடித்தரம் *kuḍi-t-taram,* பெ.(n.) தனித்தனியான குடித்தீர்வை; separate assessment for each individual ryot.

[குடி + தரம்.]

குடித்தனக்காரன் *kuḍi-t-taṉakkāraṉ,* பெ.(n.) 1. பயிரிடுவோன்; cultivator, farmer. 2. ஊரில் செல்வாக்கு உள்ளவன்; man of wealth and influence in a village. அந்தச் சிற்றூரில் அவர் பெரிய குடித்தனக்காரர். 3. வீட்டுத் தலைவன் (வின்.); house - holder, land lord.

[குடித்தனம் + காரர்.]

குடித்தனப்படு-தல் *kuḍi-t-taṉappaḍu-,* 20 செ.கு.வி. (v.i.) இல்வாழ்க்கை நிலையை அடைதல்; to enter married life.

[குடித்தனம் + படு.]

குடித்தனப்பாங்கு *kuḍi-t-taṉa-p-pāṅgu,* பெ.(n.) இல்வாழ்க்கை யொழுங்கு; domestic propriety, domestic economy.

[குடித்தனம் + பாங்கு.]

குடித்தனம்[1] *kuḍi-t-taṉam,* பெ.(n.) 1. இல்வாழ்க்கை; family, domestic life; household affairs *"ஓரஞ்சொன்னவன் குடித்தனம்போல் தேய்ந்தது" (இராமநா.உயுத்.29).* 2. வாடகைக்குடி; tenancy. இந்த வீட்டில் நாலு குடித்தனம் உண்டு (உ.வ.). 3. குடிவாழ்க்கையின் ஒழுங்கு (வின்.); domestic economy, domestic order.

[குடி → குடித்தனம்.]

குடித்தனவுறுப்பு *kuḍittaṉa-v-uṟuppu,* பெ.(n.) குடும்பத்திற்கு அங்கங்களான இடம், பொருள், ஏவல் முதலியன (யாழ்ப்.); things necessary for a family as chattels, furniture, dependants, servants, cattle.

[குடித்தனம் + உறுப்பு.]

குடித்திண்ணை *kuḍittiṇṇai,* பெ.(n.) வீட்டின் உட்பகுதியில் கூடத்திலமைந்த திண்ணை (நெல்லை); a inside the house pial.

[குடி + திண்ணை.]

குடித்தெய்வம் *kuḍideivam,* பெ.(n.) குலதெய்வம்; family, deity. *"நங்குடித் தெய்வங் கண்டீர்" (சீவக.547).*

ம. குடிதைவம்

[குடி + தெய்வம்.]

குடிதாங்கி *kuḍi-tāṅgi,* பெ.(n.) குலத்தைத் தாங்குபவன்; the mainstay of a family. *"என்னிருங் கலியின் குறும்பைத் துரத்துங் குடிதாங்கியை" (பெருந்தொ.1153).*

[குடி + தாங்கி.]

குடிதாங்கிக்கோல் *kuḍi-tāṅgi-k-kōl,* பெ.(n.) ஒரு பழைய அளவுகோல் (கல்.); an ancient measuring-rod.

[குடி + தாங்கிக்கோல்.]

குடிதிருத்து-தல் *kuḍi-tiruttu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. ஆட்சிக்குட்பட்ட குடிகளை நன்னிலையில் நிறுத்துதல்; to secure the welfare of one's subjects. *"துளங்குகுடி திருத்திய" (பதிற்றுப்.37:7).* 2. பிறந்த குலத்தை மேம்படுத்துதல்; to advance one's family in wealth, status, reputation etc.

[குடி + திருத்து.]

குடிநற்கல் *kuḍinaṟkal,* பெ.(n.) **குடினைக்கல்** *(S.I.I.ii.69)* பார்க்க; see *kuḍiṉai-k-kal.*

[குடி + நல் + கல்.]

குடிநாட்டு-தல் *kuḍi-nāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) குடியேற்றுதல்; to plant a colony.

[குடி + நாட்டு.]

குடிநிலம் *kuḍi-nilam,* பெ.(n.) 1. குடியிருக்கும் மனை நிலம்; house site, house premises. 2. மகட் கொடையாகக் கொடுத்த மனை; building sites, as an item in dowry.

ம. குடிநிலம்

[குடி + நிலம்.]

குடிநிலுவை *kuḍi-niluvai,* பெ.(n.) **குடிசிகை** பார்க்க; *see kuḍi-šigai.*

[குடி + நிலுவை.]

குடிநிலை *kuḍi-nilai,* பெ.(n.) வீரக்குடியின் பழமையையும் அஞ்சாமையையும் கூறும் புறத்துறை (பு.வெ.2:14); theme of extolling the greatness of a warrior's family.

[குடி + நிலை.]

குடிநிலையுரைத்தல் *kuḍi-nilai-y-uraittal,* பெ.(n.) **குடிநிலை** பார்க்க (புறநா.290); see *kuḍi-nilai*

[குடி + நிலை + உரைத்தல்.]

குடிநீங்காக் காராண்மை *kuḍi-niṅgā-k-kārāṇmai,* பெ.(n.) நிலத்தில் குடியிருப்பதோடு, பயிரிடும் உரிமையும் நிலையாகப் பெற்று ஆண்டு தோறும் உரிமையாளருக்கு உரிய தவசங்களை முறைப்படி செலுத்தும் உழவர் உரிமை;right of tenants to live and cultivate paying share of the crop. *"ஆண்டுதோறும் இரண்டாயிரத்தறுநூற்றுக்கல நெல் அட்டுவார்களாகவும், இப்பரிசு இந்நிலம் விற்றும், ஒற்றி வைச்சும் கொள்ளப் பெறுவார்களாகவும். இப்பரிசு நீங்காக் காராண்மையாக கல்மேல் வெட்டுவிச்சு" (தெ.கல். தொ.14, கல்.154).*

[குடி + நீங்கா + காராண்மை.]

குடிநீங்காச்சாவாமூவாப்பேராடு *kuḍi-niṅgā ccāvā-mūvā-p-pērāḍu,* பெ.(n.) புரக்கும் இடையர் வாரிசு மாறாதநிலையில், எண்ணிக்கையில் என்றும் குறையாத அளவில் வைத்திருக்கும் ஆடுகள்; number of sheep to be maintained perpetually by shepherds for temple use. *"இவ்வாடு இருநூற்று, தொண்ணூற்று இரண்டுங் குடிநீங்காச் சாவா மூவாப் பேராடு ஆகக் கொண்டு" (தெ.கல்.தொ.5, கல்.517).*

[குடி + நீங்கா + சாவா + மூவா + பேராடு.]

குடிநீங்காத்திருவிடையாட்டம் *kuḍi-niṅkā-t-tiruviṭaiyāṭṭam,* பெ.(n.) பயிர் செய்யுங் குடிகளோடு கோவிலுக்கு அளிக்கப்பட்ட முற்றூட்டு (P.Insc.224); endowment to a temple, of lands already in the occupation of cultivating tenants

[குடி + நீங்கா + திருவிடையாட்டம்.]

குடிநீங்காத்தேவதானம்[1] *kuḍi-niṅgā-t-tēva dāṉam,* பெ.(n.) **குடிநீங்காத்திருவிடை யாட்டம்** பார்க்க (M.E.R.45 of 1922) ; *see kuḍi-niṅkā-t-tiruviḍaiyāṭṭam.*

[குடி + நீங்கா + தேவதானம்.]

குடிநீங்காத்தேவதானம்[2] *kuḍi-niṅgā-tēvatāṉam,* பெ.(n.) பழங்குடி வாரிசு நீங்கா உழவர் வாழும் கோயிலுக்குரிய இறையிலி நிலம்; taxfree land gifted to temple, from which tillers are not removed. *"ஆகப்பாடகம் நாற்பத்திரண்டும் இவ் நாயனார்க்குடி நீங்காத் தேவதானமாக விட்டோம்" (தெ.கல்.தொ.7. கல்.402).*

[குடி + நீங்கா + தேவதானம்.]

குடிநீர் *kuḍi-nīr,* பெ.(n.) 1. குடித்தற்குரிய நீர்; drinking water, potable water. *"இட்ட குடிநீ ரிருநாழி" (பதினொ.க்ஷேத். 16).* 2.கியாழமருந்து; decoction, tincture, medicinal infusion. *"நோய்க்குத் தாயிரே குடிநீர் குடிப்பாள்" (திவ்.பெருமாள்.5.1வியா).*

ம. குடிநீர், குடி வெள்ளம்; க. குடியுவநீரு; தெ. குடிநீரு.

[குடி + நீர்.]

குடிப்படு-த்தல் *kuḍi-p-paḍu-,* 20 செ.குன்றாவி. (v.t.) குடும்பத்தை நல்லநிலைமையில் நிறுத்துதல்; to establish a family in good position. *"குடிப் படுத்துக் கூழீந்தான்" (ஏலா.42).*

[குடி + படு.]

குடிப்படை *kuḍi-p-paḍai,* பெ.(n.) குடிமக்களாலான சேனை; militia, volunteer corps as opposed to a mercenary army.

[குடி + படை.]

குடிப்பழக்கம் *kuḍi-p-paḷakkam,* பெ.(n.) குடிக்கும் பழக்கம்; drinking habit

க. குடிகதன

[குடி + பழக்கம்.]

குடிப்பழி *kuḍi-p-paḻi,* பெ.(n.) குலத்திற்கு ஏற்பட்ட நிந்தை; stigma, disgrace, slur, disrepute, on family. *"காணிற் குடிப்பழியாம்" (நாலடி.84).*

ம. குடிப்பழி

[குடி + பழி.]

குடிப்பழுது *kuḍi-p-paḻudu,* பெ.(n.) **குடிப்பழி** பார்க்க (வின்.); see *kuḍi-p-paḻi.*

[குடி + பழுது.]

குடிப்பற்று *kuḍi-p-paṟṟu,* பெ.(n.) குடியிருப்பு நிலம்; housing site. நிலத்தைப் பயிரிடும் உரிமை பெற்றான் அந் நிலப்பகுதியிலேயே குடியிருப்பமைத்து வாழ் வதற்கும் குடி பற்றாகும் (புதுப். கல்.195).

[குடி + பற்று.]

குடிப்பறையன் *kuḍi-p-paṟaiyaṉ,* பெ.(n.) பறையர்க்கு முடிமழிக்கும் தொழிலாளி (M.M.); barber who shaves Pariahs.

[குடி + பறையன்.]

குடிப்பாங்கு *kuḍi-p-pāṅgu,* பெ.(n.) 1. **குடித்தனப் பாங்கு** பார்க்க; see *kuḍi-taṉa-p-pāṅgu.* 2. குடியானவன் பின்பற்றுதற்குரிய ஒழுங்கு; orderly or proper conduct of a farmer. 3. குடிகளின் ஏற்பாடு (வின்.); usage, customs of cultivators or agriculturists.

[குடி + பாங்கு.]

குடிப்பாழ் *kuḍi-p-pāḻ,* பெ.(n.) 1. குடிகள் விட்டு நீங்குதலால் ஊருக்கு உண்டாகும் அழிவு; ruin of a village owing to depopulation one or three kinds of pāḻ. 2. குடிகளற்றுப் போன ஊர்; a deserted village. அந்த ஊர் குடிப்பாழ் (உ.வ.).

[குடி + பாழ்.]

குடிப்பிள்ளை *kuḍi-p-piḷḷai,* பெ.(n.) 1. பறையருள் மழிப்புவேலை செய்யும் ஒரு பிரிவினர் (E.T.); a division of the pariahs, generally doing the duty of barbers. 2. ஒரு இனத்தில் தாங்கள் சேர்த் துள்ளவர்களாக சொல்லிக் கொண்டு, அதன் பட்டப்

பெயரால் தங்களை வழங்கிக் கொள்ளும் இனத்தார் (இ.வ.); sects which trace their origin to particular castes and adopt their titles. 3. ஊர்ச் செட்டி யார்க்கு அவர் இட்ட வேலையை முடித்தற் குரிய எடுபிடி ஆள்; an errand boy for Chettiar grantee.

[குடி + பிள்ளை.]

குடிப்பிறப்பாளர் *kuḍi-p-piṟappāḷar,* பெ.(n.) உயர்குடியிற் பிறந்தோர்; persons of birth, of noble lineage. *"குடிப்பிறப்பாளர் தங்கொள்கையிற் குன்றார்" (நாலடி.141).*

[குடி + பிறப்பாளர்.]

குடிப்பிறப்பு *kuḍi-p-piṟappu,* பெ.(n.) உயர்குடியில் தோன்றுகை; noble birth, nobility, birth in a distinguished family. *"குடிப்பிறப் பழிக்கும்" (மணிமே.11:76).*

ம. குடிப்பிறவி

[குடி + பிறப்பு.]

குடிப்பெண் *kuḍi-p-peṇ,* பெ.(n.) 1. குலப்பெண் (யாழ்.அக.); woman of noble birth and respectability, wedded lawful wife.2. முறையாகத் திருமணமான பெண்;a lawfully wedded wife.

ம. குடிப்பெண்ணு

[குடி + பெண்.]

குடிப்பெயர் *kuḍi-p-peyar,* பெ.(n.) சேர, சோழ, பாண்டியர் என்றாற் போல, பிறந்த குலம் பற்றி வழங்கும் பெயர் (பன்னிருபா.145:சிலப்.1,33. அரும்.); family name as *Cēraṉ, Cōḻaṉ, Pāṇḍiyaṉ.*

[குடி + பெயர்.]

குடிபடை *kuḍi-paḍai,* பெ.(n.) குடிமக்கள் (உ.வ.); inhabitants.

[குடி + படை.]

குடிபுகு-தல் *kuḍi-pugu-,* 2 செ.கு.வி.(v.i.) 1. வேறு வீட்டிற்கு வாழச் செல்லுதல்; to occuppy a new home. 2. புதுக்குடி சேர்தல்; to immigrate, settle and colnize, seek a fresh refue. *"தாமரை துறந்து குடிபுக்கா ளென" (கம்பரா.வரைக்.12).* 3. புதுமனை புகுதல்; to occupy a newly-built house with appropriate ceremonies to do house-warming.

[குடி + புகு.]

குடிபோ-தல் *kuḍi-pō-,* 8 செ.கு.வி.(v.i.) 1. வேறு வீட்டிற்குக் குடிமாறிச் செல்லுதல்; to remove one self to a new home. 2. புதுமனை புகுதல்; to occupy a newly-built house with appropriate ceromenies. 3. இருப்பிடத்தை விட்டு வெளியேறு தல்; to quit, give up, abandon, as a house. *"ஆவி குடிபோன வவ்வடிவும்" (சிலப்.20 : வெண்பா.).* 4. வலசை போதல்; to emigrate, flee from home. 5. காற்றாகவேனும் ஆவியாகவேனும் பண்டங் கரைதல்; to evaporate, escape, as essential oil camphor.

[குடி + போ.]

குடிபோதை *kuḍi-pōdai,* பெ.(n.) **குடிமயக்கம்** பார்க்க; see *kuḍimayakkam.*

[குடி + போதை.]

குடிமக்கள் *kuḍimakkaḷ,* பெ.(n.) 1. (ஊர்களில்) பணி செய்தற்குரிய பதினெண்வகைக் சிற்றூர்க் குடிமக்கள்; sub-caste is rendering service in a village, being 18 in number. 2. அடிமைகள்; slaves. *"இந்திரியங்களுக்குக் குடிமக்களாய் வர்த்திக்கிற லீலா விபூதி" (திவ்.திருமாலை.13,வியா.).*

[குடி + மக்கள்.]

வண்ணான், நாவிதன், குயவன், தட்டான், கன்னான், கற்றச்சன், கொல்லன், தச்சன், எண்ணெய் வாணிகன், உப்பு வாணிகன், இலைவாணிகன், பள்ளி, பூமாலைக்காரன், பறையன், கோவிற்குடியான், ஓச்சன், வலையன், பாணன்.

குடிமக்கள் மானியம் *kuḍimakkaḷ-māṉiyam,* பெ.(n.) பணி செய்யும் குடிமக்கட்கு விடப்பட்ட இறையிலி நிலம்; land given free of rent to

washermen, barbers etc., for the services rendered by them to villagers.

[குடி + மக்கள் + மானியம்.]

குடிமகன் *kuḍi-makaṉ,* பெ.(n.) 1. நற்குடிப் பிறந்தவன்; person of noble birth. *"பொருளைக் குடிமகனல்லான் கைவைத்தல்" (பழமொ.209).* 2.படியாள்; hired servant, one whose wages are paid by grain. *"குடிமகனொரு வனுக்கு ஐயனாரேறி வலித்து நலிந்த வாறே" (ஈடு, 4.6:2).*

ம. குடிமகன்

[குடி + மகன்.]

குடிமதிப்பு *kuḍi-madippu,* பெ.(n.) 1. சிற்றூர் வரித்திட்டம் (வின்.); valuation of property for purposes of taxation.2. மக்கள் தொகை கணக்கெடுப்பு; census.

ம. குடிமதிப்பு

[குடி + மதிப்பு.]

குடிமயக்கம் *kuḍi-mayakkam,*பெ.(n.) 1. குடிப் பதனால் ஏற்படும் வெறி;intocication through drunkenness; 2. குடிவெறியினாலேற் படும் மனக்கலக்கம், தடுமாற்றம் முதலியன; a form of temporary alecoholic insanity characterised by mental clouding.

[குடு + மயக்கம்.]

குடிமராமத்து *kuḍi-marāmattu,* பெ.(n.) கால்வாய், குளக்கரை முதலியவற்றைச் சீர்படுத்துவதற்காக வழக்கமாய்க் குடிமக்கள் செய்தற்குரிய பணிக் கொடை (R.F.); customary contributions of labour by ryots for petty repairs to channels, tank-bunds, sluices etc.

ம. குடிமராமத்து

[குடி + மராமத்து.]

குடிமார்க்கம் *kuḍi-mārkkam,* பெ.(n.) **குடிவழி** பார்க்க; see *kuḍivaḻi*

[குடி + மார்க்கம்.]

குடிமிராசு *kuḍi-mirāšu,* பெ.(n.) நிலவுரிமை; right or privilege of a hereditary occupant.

[குடி + மிராசு.]

குடிமுழுகிப்போ—தல் *kuḍi-muḻugi-p-pō-,* குடும்ப நிலை முதலாயின முழுவதும் அழிதல்; to ruin utterly, as a family completely washed away by flood.

[குடி + முழுகி + போ–.]

குடிமுறை *kuḍi-muṟai,* பெ.(n.) குடித்தனம் (யாழ்.அக.) ; household affairs.

[குடி + முறை.]

குடிமை *kuḍimai,* பெ.(n.) 1. உயர்குலத்தாரது ஒழுக்கம் (தொல்.பொருள்.273); manners and customs of the higher classes of nobility. 2. பிறந்த குடியை உயரச் செய்யும் தன்மை; supreme quality of advancing the status of a family. *"மடிமை குடிமைக்கட் டங்கின்" (குறள்,608).* 3. குடிப்பிறப்பு; lineage, family, descent. *"குணனுங் குடிமையும்" (குறள்,793).* 4. அரசரது குடியாயிருக்குந் தன்மை; allegiance, homage, as of subjects to their sovereign. *"குடிமை மூன்றுலகுஞ் செயுங் கொற்றத்து" (கம்பரா.நிந்தனை.37).* 5. குடித்தனப் பாங்கு; domestic economy. 6. அடிமை; slavery, servitude, feudal dependance, feudatory in reference to his chief. *"குடிமை செய்யுங் கொடும்புலையன்" (அரிச்.பு. சூழ்வினை.70).* 7. குடிகளிடமிருந்து பெறும் ஒருவகை வரி (S.I.I.III, 110); a tax, certain dues from tenants.

ம. குடிம

[குடி → குடிமை.]

குடிமைப்பாடு *kuḍimai-p-pāḍu,* பெ.(n.) ஊழியம்; service (S.I.I.III, 48).

[குடிமை + பாடு.]

குடியம்பலம் *kuḍi-y-ambalam,* பெ.(n.) குடிகள் அரசிற்குச் செலுத்தும் வரிகளின் கணக்கை

ஒழுங்குபடுத்துதற்கு உதவி செய்ய அமர்த்தப்படும் ஒரு சிற்றூர்ப் பணி; village office established with a view to assist the ryots in keeping accounts of payments made by them to the government.

[குடி + அம்பலம்.]

குடியரசு *kuḍi-y-arašu,* பெ.(n.) குடிமக்களால் நடத்தப்பெறும் அரசு; republic - a government, government by the people, democracy.

[குடி + அரசு.]

குடியழிவு *kuḍi-y-aḻivu,* பெ.(n.) 1. குடும்பக்கேடு; ruin of a family. 2. பெருங்கேடு (வின்.); great evil.

[குடி + அழிவு.]

குடியன் *kuḍiyan,* பெ.(n.) குடிகாரன்; drunkard.

ம. குடியன்; **க.** குடக, குடிக; **து.** குட்செலெ, குடிசெலெ.

[குடி + அன்.]

குடியாட்சி *kuḍi-y-āṭci,* பெ.(n.) 1. குடித்தனத்தை நடத்துகை (யாழ்.அக.); domestic management. 2. குடியரசு; government by the people; democracy.

[குடி + ஆட்சி.]

குடியாட்டம் *kuḍi-y-āṭṭam,* பெ.(n.) குடிவாழ்க்கை (யாழ்.அக.) ; domestic life.

[குடி + ஆட்டம்.]

குடியாயக்கட்டு *kuḍi-y-āya-k-kaṭṭu,* பெ.(n.) சிற்றூர்க் குடும்பங்களின் மொத்தத் தொகை; total number of families in a village.

[குடி + ஆயக்கட்டு.]

குடியாள்[1] *kuḍi-y-āl,* பெ.(n.) பண்ணையாள்; tenant.

மறுவ. குடியால்

[குடி + ஆள்.]

குடியாள்[2] *kuḍi-y-āl,* பெ.(n.) தாளகம் (சங்.அக.); yellow sulphuret of arsenic.

[குடி + ஆள்.]

குடியான் *kuḍiyān,* பெ.(n.) **குடியானவன்** பார்க்க; see *kuḍiyāṉavaṉ.*

ம. குடியான்

[குடி + ஆன்.]

குடியான கவுண்டர் *kuḍiyāṉa-kavuṇḍar,* பெ.(n.) கொங்கு வேளாளர் (G.Sm. Di, 144); koṅgu-vēḷāḷa caste

[குடி + ஆன + கவுண்டர்.]

குடியானவன் *kuḍiyāṉavaṉ,* பெ.(n.) 1. பயிரிடுவோன்; cultivator, farmer, ryot. 2. கீழ்க்குடி; caste šūdra.

ம. குடியானவன்

[குடி + ஆனவன்.]

குடியிரு-த்தல் *kuḍi-iru-,* 3 செ.கு.வி.(v.i.) 1. வாழ்தல்; to reside, settle down. *"எப்படியினிக் குடியிருப்பது" (உபதேசகா.சூராதி.28).* 2. குடிக் கூலிக் கிருத்தல்; to live in rented quarters.

ம. குடியிருக்குக

[குடி + இரு.]

குடியிருக்கை *kuḍi-y-irukkai,* பெ.(n.) 1. குடியாகத் தங்கியிருக்கை; living, residing. 2. சிற்றூர்க் குடிகள் வாழும் இடம்; quarters occupied by the ryots in a village. *"இவ்வூர் நத்தங் குடி யிருக்கையும்" (S.I.I.II, 57).*

[குடி + இருக்கை.]

குடியிருப்பு *kuḍi-y-iruppu,* பெ.(n.) 1. குடியிருக்கை; living, residing. 2. வாழ்வு; life, existence. குடியிருப்புச் சுகமில்லை (கொ.வ.). 3. சிற்றூர்; village. *"அதன் பகுதியாகிய குடியிருப்பும்" (தொல்.பொருள்.114,உரை.).* 4. சில இனத்தார்கள்

தனியாக வாழ்ந்து வரும் இடம்; quarters occupied by a special class, as ryots.

ம. குடியிருப்பு

[குடி + இருப்பு.]

குடியிருப்புநத்தம் *kuḍi-y-iruppu-nattam,* பெ.(n.) சிற்றூரில் மக்கள் வீடுகட்டி வாழும் நிலப்பகுதி; the portion of a village site where villagers have their places of residence.

[குடி + இருப்பு + நத்தம்.]

குடியிலார் *kuḍiyilār,* பெ.(n.) குடிகள் (T.A.S.); tenants, ryots.

ம. குடியிலார்

[குடி → குடியில் + (அர்) ஆர்.]

குடியிறங்கு-தல் *kuḍi-y-iṟaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) நிலைக் குடியாகத் தங்குதல்; to fix or establish permanently one's abode; to settle down, as a family.

[குடி → இறங்கு.]

குடியிறை *kuḍi-y-iṟai,* பெ.(n.) குடிகள் செலுத்தும் வரி (திவா.); tax imposed upon ryots.

[குடி + இறை.]

குடியுடம்படிக்கை *kuḍi-y-uḍampaḍikkai,* பெ.(n.) 1. உரிமைச் சீட்டு பட்டா; title-deed registry of holdings. 2. குத்தகைச் சீட்டு; lease-deed.

[குடி + உடன்படிக்கை.]

குடியுந்தடியும் *kuḍiyun-taḍiyum,* பெ.(n.) வீடும் நிலமும்; houses and lands. *"ஸம்ஸாரத்திலே குடியுந் தடியுமாயிருக்க நினைத்தார்" (திவ்.இயற். திருவிருத்.6, ஸ்வா.வியா.பக்.56).*

[குடியும் + தடியும்.]

குடியெழும்பு-தல் *kuḍi-y-eḻmbu-,* 5 செ.கு.வி.(v.i.) கலகம் முதலிய நிகழ்ச்சியால் குடிநீங்கிப் போய் விடுதல் (வின்.); to evacuate a house, leave a village, commonly from disastrous events or anticipations.

[குடி + எழும்பு.]

குடியேற்றநாடு *kuḍi-ēṟṟa-nāḍu,* பெ.(n.) மக்கள் புதிதாகக் குடியேறிய நாடு; colony.

[குடி + ஏற்றம் + நாடு.]

குடியேற்றம் *kuḍi-y-ēṟṟam,* பெ.(n.) 1. புதிதாக ஒரு நிலப்பகுதியில் குடியேறுகை; colonization, newly populating a country or land area. 2. ஓர் ஊரின் பெயர்; name of a village.

ம. குடியேற்றம்

[குடி + ஏறு– குடியேறு → குடியேற்றம் = மக்கள் குடியேறிய ஊர். குடியேற்றம் என்பது இன்று குடியாத்தம் என மருவி வழங்குகிறது.]

குடியேற்று-தல் *kuḍi-yēṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.i.) குடியேறச் செய்தல்; to people, populate colonize. *"பொன்னெடு நாட்டையெல்லாம் புதுக்குடி யேற்றிற் றன்றே" (கம்பரா.இந்திரசித்.48).*

[குடி + ஏற்று.]

குடியேறு-தல் *kuḍi-y-ēṟu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. தம் நாடுவிட்டு வேற்றுநாடு சென்று வாழ்தல்; to colonize, settle in a new country. 2. நிலைத்துவிடுதல்; to secure a sure place or footing, to be firmly rooted. *"சிந்தை குடியேறியிருக்கின்ற மாவொழியும்" (ஏகாம்.உலா,168).*

ம. குடியேறுக

[குடி + ஏறு.]

குடியோட்டி *kuḍi-y-ōṭṭi,* பெ.(n.) **குடியோட்டிப் பூண்டு** பார்க்க; see *kūdiyōṭṭi-p-pūṇḍu.*

[குடி + ஓட்டி.]

குடியோட்டிப்பூண்டு *kuḍi-y-ōṭṭi-p-pūṇḍu,* பெ.(n.) பூடுவகை (பதார்த்த.293); prickly poppy.

[குடி + ஓட்டி + பூண்டு.]

குடிரகம் *kuḍiragam,* பெ.(n.) துளசி; holy basil (சா.அக.).

[குள் → குடு → குடி → குடிரம் (குட்டையானது).]

குடிரம் *kuḍiram,* பெ.(n.) காரைச் செடி (மலை.); a low shrub with sharp axillary spines.

[குள் → குடு → குடிரம்.]

குடில்[1] *kuḍil,* பெ.(n.) 1. குடிசையினும் சிறிய இல், குற்றில், குடிசை; hut, shed. *"என்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடில்" (பாரத.கிருட்.80).* 2. ஆட்டுக் கிடை முதலியவற்றை மூடுதற்கு உதவும் குடில்; movable, conoidal roof for sheltering beasts or stacks of straw or gate-ways from the weather. 3. வீடு; abod dwelling place. *"குடிலுறு காமர் பொன்னகர்" (கந்தபு.கடவுள்.14).* 4. தேர்ச் சக்கரங்களைத் திருப்பிச் செலுத்தற்குக் கொடுக்கும் மரக்கட்டை (இ.வ.); a cone-shaped block of wood used to prevent big cars from running fast and to turn them at street - corners.

[குள் (வளைவு) – குடி → குடில்.]

குடில்[2] *kuḍil,* பெ.(n.) வட்டவடிவமாக தோன்றும் காயம், வானம் (திவா.); space.

[குள் (வளைவு) → குடி → குடில்.]

குடிலச்சி *kuḍilacci,* பெ.(n.) 1. கருவண்டு வகை (வின்.); a black beetle. 2. ஒருவகைச் செய்நஞ்சு (சங்.அக.); a prepared arsenic.

[குடில் → குடிலச்சி.]

குடிலப்பாட்டு *kuḍila-p-pāṭṭu,* இசை; music (கழக.அக.).

[குடிலம் + பாட்டு.]

குடிலம்[1] *kuḍilam,* பெ.(n.) 1. வளைவு (திவா.); bend, curve, flexure. *"கூசும் நுதலும் புருவமுமே குடிலமாகி யிருப்பாரை" (யாப். வி. மேற்கோள்).* 2. வானம் (சூடா.); space. 3. சடை (பிங்.); tangled, matted hair. 4. வஞ்சகம்; deceit, guile, cunning. *"பெருங்குடிலமெல்லாங் குடி யிருக்குங் கருவிழி யாள்" (குற்றா.தல. தருமசாமி. 47).* 5. உள்வாங்கிப் பாடும் இசைத் தொழில்; a modulation of voice in singing. *"குடிலமுள் வாங்கிப் பாடல்" (சீவக.735, உரை)* 6. குராமரம் (திவா.); common bottle flower.

[குடு → குடி → குடில் → குடிலம்.]

குடிலம்[2] *kuḍilam,* பெ.(n.) 1. ஈயமணல்; lead ore. 2. வெள்ளீயம்; white lead.

[குடு → குடில் → குடிலம்.]

குடிலம்[3] *kuḍilam,* பெ.(n.) குதிரை நடைவகை (சுக்கிரநீதி,72); a pace of horse.

[குடில் (வட்டம்) → குடிலகம்.]

குடிலை *kuḍilai,* பெ.(n.) 1. மூலமந்திரமாகிய ஓங்காரம்; the mystic syllable Om; *"குடிலை யம்பொருட்கு" (கந்தபு. கடவுள்வா. 14).* 2. தூயமாயை (சி.போ.பா. 2:2, பக் 133, புதுப்.); pure māyā

[குண்டலி → குடிலி.]

குடிலை > வ. குட்டிலா (kutila)

குண்டலி, குடிலை என்னும் மெய்ப் பொருளியற் சொற்கட்கு வடமொழியில் வேர் மூலமில்லை.

"ஓங்காரத் துள்ளே யுதித்தவைம் பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர் மூன்று முற்றன
ஓங்கார சீவ பரமசிவ ரூபமே" (திருமந். 2677)

இத்திருமந்திரப்பாடல் பேருலகத் தோற்று வாய்க்குக் குடிலை என்னும் பெயர்த் தோற்றக் கரணியத்தை விளக்குகின்றது (வே.க. 162).

குடிலைவாயு *kuḍilai-vāyu,* பெ.(n.) விறகு கட்டுக்குள் மூஞ்சுறு உலாவுதல் போல் உடம்பில் வளைந்து வளைந்து ஓடும் ஒருவகை நாடி; alternative ascending and descending motion of pulses in the human body (சா.அக.).

[குடிலை + வாயு.]

குடிவகைபாவி–த்தல் *kuḍivagai-pāvi-,* 4 செ.கு.வி. (v.i.) குடித்துப் பழக்கப்படுத்தல்; taking to the habit of drinking (சா.அக.).

[குடி + வகை + பாவி.]

குடிவருணி *kuḍi-varuṇi,* பெ.(n.) செவ்விளநீர்; water of a red coloured tender co-conut (சா.அக.).

[குடி + வருணி → வாரிணி (வார் + நீர்) → வருணி.]

குடிவா–தல், குடிவருதல் *kuḍi-vā-,* 8 செ.கு.வி. (v.i.) குடியேறுதல்; to settle, take residence. *"மேவினன் குடிவர" (கந்தபு.கடவுள்.14).*

[குடி + (வரு) வா.]

குடிவாங்கு[1]–தல் *kuḍi-vāṅgu-,* 7 செ.கு.வி.(v.i.) இருப்பிடம் விட்டுப் பெயர்தல்; to remove, shift, abandon one's home, change place.

[குடி + வாங்கு.]

குடிவாங்கு[2]–தல் *kuḍi-vāṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) குடியிருத்தல்;to stay to reside. *"அடையவளைந் தானுக்குள்ளே குடிவாங்கியிருந்து" (ஈடு,1.3:9).*

[குடி + வாங்கு.]

குடிவாரக்கம் *kuḍi-vārakkam,* பெ.(n.) பயிர் செய்வோருக்குக் கொடுக்கும் விதை கூலி முதலியன; cultivation expenses. குடிவாரக் கமாய்க் குடிமேல் வைத்தெழுதி (சரவண. பணவிடு.138).

[குடிவாரம் + (அஃகம் = தவசம்) அக்கம்.]

குடிவாரநிலம் *kuḍi-vāra-nilam,* பெ.(n.) குடிகட்குப் பயிரிடும் உரிமையுள்ள நிலம்; land over which tenants have a vested right to cultivate.

[குடி + வாரம் + நிலம்.]

குடிவாரம் *kuḍi-vāram,* பெ.(n.) 1. நிலத்தை உழுது பயிரிடுவதற்குக் குடிகளுக்குரிய உரிமை; occupancy right, opp. to *mēlvāram.* 2. குடிவாரத்தில் குடியானவன் பங்குக்குரிய விளைபங்கு; the share of the produce to which a ryot having such right is entitled. opp, to *mēlvāram.*

[குடி + வாரம். வாரம் = உரிமை.]

குடிவாழ்க்கை *kuḍi-vāḻkkai,* பெ.(n.) 1. இல் வாழ்க்கை; domestic life. *"மாந்தர் குடிவாழ்க்கை ... சாந்தனையுஞ் சஞ்சலமே" (நல்வழி,28).* 2. குடும்ப ஆளுவம்; domestic economy, house-keeping. 3. வாழ்வின் ஒழுங்கு; life, mode or manner of life.

[குடி + வாழ்க்கை.]

குடிவிட்டோடல் *kuḍi-viṭṭōḍal,* பெ.(n.) நோய் உடம்பைவிட்டு வேரற நீங்கல்; to be completely or radically cured as in chronic disease (சா.அக.).

[குடி + விட்டு + ஓடல்.]

குடிவிளங்குதல் *kuḍi-viḷaṅgutal,* பெ.(n.) 1. குலம் முதலியன செழிக்கை; flourishing state of a family, the people of town, village, etc., 2. மக்கட்பேறு மிகுதியாதல்; increase of children.

[குடி + விளங்குதல்.]

குடிவீடு *kuḍi-vēḍu,* பெ.(n.) கருவின் மண்டை; the skull of a foetus (சா.அக.).

[குடி + வீடு.]

குடிவெறி *kuḍi-veṟi* பெ.(n.) மது அருந்திய மயக்கம்; intoxication inebriety, drunkenness.

[குடி + வெறி.]

குடிவை–த்தல் *kuḍivai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. வீட்டைக் குடிக்கூலிக்கு விடுதல்; to let a house for rent. 2. குடியை நிலைபெறச் செய்தல்; to settle or establish a family. *"அமரர் பதியினிய குடிவைத்தற் குற்ற" (திருப்பு.632).*

ம. குடிவய்க்குக

[குடி + வை.]

குடினை *kuḍiṉai,* பெ.(n.) குடிநற்கல்; a standard weight. *"குடினை எடைபொன் 30–ன் கழஞ்சு" (S.I.I.vii,400).*

[குழல் → குழலை → குடினை.]

குடு *kuḍu,* பெ.(n.) கள் (அக.நி.); toddy, fermented liquor.

[குள் → குடு.]

குடுக்கம் *kuḍukkam,* பெ.(n.) துணைத்தாளம் ஐந்தனுள் ஒன்று (பரத.தாள.3); a secondary time-beat, one of five *upa-tāḷam.*

[குள் → குடு → குடுக்கு → குடுக்கம்.]

குடுக்கி *kuḍukki,* பெ.(n.) காற்சட்டை; drawers; pants.

[குள் → குடு (தைத்தல்) → குடுத்தம் → குடுத்தா → குடுக்கி]

குடுக்குக்குடுக்கெனல் *kuḍukku-k-kuḍuk-keṉal,* பெ.(n.) ஒரொலிக்குறிப்பு (யாழ்.அக.); onom. expr. of rattling noise.

[குடுக்கு + குடுக்கு + எனல்.]

குடுக்கை[1] *kuḍukkai,* பெ.(n.) 1. தேங்காய் முதலிய வற்றாலான குடுவை; coconut or other hard shell used as a vessel. 2. துறவியின் கைப்பாத்திரம்; earthen or wooden pitcher of an ascetic. 3. இடக்கையென்னும் தோற்கருவி (சிலப்.3:27, உரை); a hand drum. 4. வீணையின் உறுப்பு; belly of a lute.

ம. குடிக்க; **க.** குடிகெ; **தெ.** குடக, குடுக; **து.** குட்கி, குட்கெ; **து.** குட்க்; **பட**.குடகெ.

[குடு → குடுக்கை.]

குடுக்கை[2] *kuḍukkai,* பெ.(n.)1. கஞ்சாக் குடுக்கை; the dried shell of a bottle gourd. 2. வாலையில் பயன்படுத்தும் ஒரு மண் ஏனம்; 3. பிடுக்கு; scrotum.

[குடு → குடுக்கை - துளையுள்ள பொருள்.]

வகைகள்: 1. சுரைக் குடுக்கை 2. தீக்குடுக்கை 3. தென்னங்குடுக்கை 4. வில்வக் குடுக்கை 5. வினாங் குடுக்கை 6. கஞ்சாக் குடுக்கை 7. புகைக் குடுக்கை (சா.அக.).

குடுக்கை தாங்கி *kuḍukkai-tāṅgi,* பெ.(n.) குடுக்கையை ஏந்தும் ஒரு கருவி; retort stand (சா.அக.).

[குடுக்கை + தாங்கி.]

குடுகுடு[1]**–த்தல்** *kuḍu-kuḍu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஒலித்தல்; to rumble, rattle. 2. விரைவுபடுதல்; to be in a great hurry.

ம. குடுகுடுக்குக

[குடு + குடு.]

குடுகுடு[2] *kuḍukuḍu,* பெ.(n.) மிக்க அகவை தளர்ந்த; of extreme old age, man or woman. 2. வயிற்றி ரைச்சல்; gurgling sound or rumbling noise of the stomach (சா.அக.).

[குடு + குடு (நடுக்கம் குறித்த ஒலிக்குறிப்பு.]

குடுகுடுக்கை *kuḍukuḍukkai,* பெ.(n.) கொப்பரைத் தேங்காய்; ripe coconut in which the kernel rattles.

[குடு + குடுக்கை.]

குடுகுடுகிழவன் *kuḍukuḍu-kiḻavaṉ,* பெ.(n.) தளர்ந்து தடுமாறி நடக்கும் கிழவன்; tottering decrepit old man.

[குடுகுடு + கிழவன்.]

குடுகுடுத்தான் *kuḍukuḍuttāṉ,* பெ.(n.) எப்போதும் எதிலும் விரைவாக இருப்பவன்; one who is always in a hurry.

[குடுகுடு → குடுகுடுத்தான்.]

குடுகுடுப்பாண்டி *kuḍukuḍu-p-pāṇḍi,* பெ.(n.) குடுகுடுப்பை அடித்துக் குறி கூறும் இரவலன்; professional beggar who goes about rattling a kuḍukuḍuppai and telling fortunes.

ம. குடுகுடுப்பாண்டி

[குடுகுடுப்பை + ஆண்டி.]

குடுகுடுப்பு *kuḍukuḍuppu,* பெ.(n.) பரபரப்பு; hurry, haste.

[குடுகுடு → குடுகுடுப்பு.]

குடுகுடுப்பை[1] *kuḍukuḍuppai,* பெ.(n.) 1. குடுகுடு என்று ஒலிக்கும் பொருள்; anything making a rattling sound. 2. குடுகுடுப்பாண்டி ஆட்டி யொலிக்கும் சிறிய உடுக்கை; a small tambourine. 2. பறவை யோட்டும் மரத்தட்டை; wodden clapper for scaring birds. 4. எப்பொழுதும் பரபரப்பாக இருப்பவன் (அவசரப்படுபவன்); a person who is always in a hurry. 5. கஞ்சாக் குடுக்கை; shell used as a raceptacle for bhang. 6. வறட்சி; dryness. தலை குடுகுடுப்பை பற்றியது.

[குடுகுடு → குடுகுடுப்பை.]

குடுகுடுப்பை[2] *kuḍukuḍuppai,* பெ.(n.) 1. குருக்கு; mexican poppy. 2. அதிகச் சுறுசுறுப்புள்ளவன்; one who is over busy. 3. ஒலிக்கும் சிறிய தோற்கருவி; a tiny musical drum.

[குடுகுடு → குடுகுடுப்பை.]

குடுகுடுப்பைக்காரன் *kuḍukuḍuppai-k-kāraṉ,* பெ.(n.) ***குடுகுடுப்பாண்டி*** பார்க்க (பரத.பாவ. 38. உரை.) ;see *kuḍukuḍu-p-paṇḍi.*

மறுவ. காலங்கொண்டாடி

[குடுகுடுப்பை + காரன்.]

குடுகுடுப்பைக்காரன்

குடுகுடெனல் *kuḍu-kuḍeṉal,* பெ.(n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying gurgling, rattling sound. 2. விரைவுக் குறிப்பு; expr. signifying great haste.

[குடு + குடு + எனல்.]

குடுசு *kuḍušu,* பெ.(n.) தரையைத் தோண்டப் பயன்படும் கருவி; an instrument used to dig.

[குடு + (குடம்) குடான் → குட்டுசு → குடுசு. (மண்வெட்டி போன்றது).]

குடுத்தா *kuḍuttā,* பெ.(n.) ***குடுத்துணி*** பார்க்க; see *kuḍuttuṇi.*

U. kurtā.

[குள் → குட்டு (தைத்தல்) குடு + துணி – குடுத்துணி → குடுத்தா (கொ.வ.).]

குடுத்துணி *kuḍuttuṇi,* பெ.(n.) அரைக்கைச் சட்டை; half arm jacket, shirt without sleeves.

ம. குடுத்துணி

[குள் → குட்டு (தைத்தல்) → குடு + துணி → குடுத்துணி. தெ. குட்டு = தைத்தல்.]

குடுப்பம் *kuḍuppam,* பெ.(n.) நான்கு பலமுள்ள அளவு (தைலவ.தைல.59); a dry measure of capacity - 4 palams.

[குள் → குடு → குடுப்பம்.]

குடுப்புக்கார் *kuḍuppu-k-kār,* பெ.(n.) கார்நெல் வகை; a kind of paddy.

[குடுப்பு + கார்.]

குடும்பச்சுமை *kuḍumba-c-cumai,* பெ.(n.) குடும்பத்தைத் தாங்கும் பொறுப்பு; burden or responsibility of a family.

[குடும்பம் + சுமை.]

குடும்பத்தானம் *kuḍumba-t-tāṉam,* பெ.(n.) ஓரைச் சக்கரத்தில் குடும்பத்தின் நிலைமையை உணர்த் துவதும் பிறப்பு ஓரைக்கு இரண்டாவதும் ஆகிய

இடம்; second house from the ascendant indicating the condition of one's family.

[குடும்பம் + தானம்.]

குடும்பபாரம் *kudumba-pāram,* பெ.(n.) குடும்பத்தைத் தாங்கும் பொறுப்பு; burden or responsibility of a family. *"இவரொடு நெடுநாட் டங்கினன் குடும்பபாரத்தில்" (ஞானவா.சித்த.20).*

[குடும்பம் + பாரம்.]

குடும்பம் *kudumbam,* பெ.(n.) 1. கணவனும் மனைவி மக்களும் சேர்ந்த கூட்டம், குடும்ப அமைப்பு; household, family including husband, wife and children. *"குடும்பத்தைக் குற்ற மறைப்பான்" (குறள்,1029).* 2. உறவினர்; relatives. *"குடும்பந் தாங்குங் குடிப்பிறந்தாரினே" (கம்பரா.சேதுப.53).* 3. குலம்; caste, family. அவன் என் குடும்பத்தைச் சார்ந்தவன் (உ.வ.). 4. மனைவி; wife. *"பாகத்தார் குடும்ப நீக்கி" (சீவக.1437).*

[குடும்பு → குடும்பம்.]

Skt. kuṭumba.

குடும்பன்[1] *kudumban,* பெ.(n.) 1. குடும்பத் தலைவன்; head of a family. 2. இல்வாழ்வோன், குடும்பத்தான் (சமுசாரி); house holder. *"ஏழைக் குடும்ப னாகி" (தாயு.தேசோ.4).* 3. பள்ளர் தலைவன் (வின்.); headman of the Paḷḷa caste.

[குடும்பு → குடும்பம் → குடும்பன்.]

குடும்பன்[2] *kudumpan,* பெ.(n.)ஊரில் சாகுபடியான நிலங்களை அளப்பவன்; the person who measures the extent of land under cultivation in a village.

[குடு → குடும்பு + அன்.]

குடும்பாண்டி *kudumpāṇḍi,* பெ.(n.) வீடுதோறும் மணியடித்துக் கொண்டு வழிவழியாகவே (பரம்பரையாகவே) பிச்சை யெடுத்து வாழ்பவன்; professional beggar who legs from house to house ringing a bell.

[குடும்பு + ஆண்டி.]

குடும்பி *kudumbi,* பெ.(n.) இல்வாழ்வோன்; householder, head of a large family. *"குடும்பியெனும் குறிப்பை மாற்றி" (ஞானவா.உற்ப.69).*

[குடும்பு → குடும்பி.]

குடும்பினி *kudumbini,* பெ.(n.) மனைவி (பிங்.); wife.

[குடும்பு → குடும்பினி.]

குடும்பு[1] *kudumbu,* பெ.(n.) 1. பல குடும்பங்கள் சேர்ந்த கூட்டம்; assembly of families. 2. ஊரின் உட்பிரிவு வட்டம், தொகுதி; a ward of a village or area, division. *"இவ்வாட்டை குடும்புவாரிய பெருமக்களும்" (தெ.கல்.தொ.19,கல்.179).*

[குழும்பு → குடும்பு.]

குடும்பு[2] *kudumbu,* பெ.(n.) 1. பூங்கொத்து; bunch of flowers. 2. காய்க்குலை; bunch of fruits (சா.அக.).

[குழும்பு → குடும்பு.]

குடும்பு[3] *kudumbu,* பெ.(n.) பண்டைய நகரமைப்பில் 80 சதுர கயிறு பரப்பளவு கொண்ட நிலப்பரப்பு (மயமதம்.அத்.9); an area measure of 80 square *kayiṟu,* inancient tour planning.

[குடும்பு → குடும்பம் (ஒரு குடும்பம் பயிர் செய்து வாழ்வதற்குப் போதுமானதாகக் கருதப்பட்ட உழவு நிலத்தின் பரப்பளவு).]

பண்டைய அளவைகள்:

நீட்டலளவு:

கோல்(சிறு கோல், தச்சுமுழம்) = 2 ¾ அடி

8 கோல் = I கயிறு (22 அடி)

பரப்பளவு:

8 கோல் (சிறுகோல்) = I காணி (8 கோல் சதுரம்)

= 22 X 22 = 484 ச.அடி

4 காணி = I மாடம் (மாஷம்)

=88 X 22 = 1986 ச.அடி

4 மாடம் = I பத்தி (வர்த்தனம்) - 88 X 88

= 7744 ச.அடி

5 பத்தி = I பாடகம் (வாடிகை) = 88 X 440

=38,720 ச.அடி

4 பாடகம் = 1 குடும்பு - 852 X 440
= 1,54,880 ச.அடி
90காணி = 1 ஏக்கர் (48, 560 ச.அடி)
820 காணி = 1 குடும்பு (8.5 ஏக்கர்)

குடுமி[1] *kuḍumi,* பெ.(n.) 1. ஆண்மக்களது மயிர் (திவா.); tuft of hair, especially of men. 2. மலை யுச்சி; summit or peak, of a mountain. *"வடவரைக் குடுமி" (கம்பரா.திருவவ.8).* 3. மாடத்தின் உச்சி; top of a building. *"புயறொடு குடுமி.... மாடத்து" (கம்பரா.நகர.4).* 4. தலையுச்சி; crown of the head. *"குடுமிக் கூந்தலிற் நறுநெய் பெய்து" (இறை.1, உரை).* 5. உச்சிக்கொண்டை; bird's crest. *"குடுமிக்கூகை" (மதுரைக்.170).* 6. நுனி; tip, end. *"குடுமிக் கூர்ங்கல்" (அகநா.5).* 7. தலையிற் சூடும் அணிகலன் (கிரீடம்); crown, diadem. *"குடுமி கொண்ட மண்ணு மங்கலம்" (தொல்.பொருள்.68).* 8. கதவின் குடுமி; projecting corners on which a door swings. *"தேயத் திரிந்த குடுமியவே" (பெருந்தொ.603).* 9. மேழிக்குடுமி; handle of a plough. 10. முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டியன்; name of a Paṇḍia king. *"குடுமிக் கோமாற் கண்டு" (புறநா.64).* 11. முடிபு; determination, resolve. *"அவன் கொண்ட குடுமித்து" (புறநா.32:10).* 12. வெற்றி (பிங்.); victory, success.

ம. குடும

[குடு – குடுமி]

குடுமி[2] *kuḍumi,* பெ.(n.) பாம்பாட்டி; snake charmer and dealer in antidotes for snake-bite.

[குட → குடு → குடுமி]

குடுமி[3] *kuḍumi,* பெ.(n.) வில்; bow.

[கொடு → குடு + குடுமி]

குடுமிக்கதவு *kuḍumi-k-kadavu,* பெ.(n.) கீலின்றிக் கீழும் மேலும் உள்ள முனைகளால் ஆடி அடைக்கவும் திறக்கவும் பெறுங் கதவு; door that turns on projecting corners instead of hinges.

[குடுமி + கதவு]

குடுமிக்கலியாணம் *kuḍumi-k-kaliyāṇam,* பெ.(n.) குடுமி வைக்கும் திருமணச்சடங்கு; tonsure or tuft-providing ceremony of Hindus.

[குடுமி + கலியாணம்.]

குடுமிக்காரன் *kuḍumi-k-kāraṉ,* பெ.(n.) குடுமி மயிர் மிகுதியுள்ளவன்; one who has a luxuriant growth of hair on the head, as actors.

[குடுமி + காரன்.]

குடுமிக்குயவன் *kuḍumi-k-kuyavaṉ,* பெ.(n.) குயவர் தலைவன்; chief of potters.

[குடுமி + குயவன்.]

குடுமிக்கூந்தல் *kuḍumi-k-kūndal,* பெ.(n.) உச்சிக் கூந்தல்; hair on the crown of the head. *"குடுமிக் கூந்தலில் நறுநெய் பெய்து" (இறை.1,உரை.).*

[குடுமி + கூந்தல்.]

குடுமிகளை–தல் *kuḍumi-kaḷai-,* 3 செ.கு.வி.(v.i.) தலைமயிர் நீக்குதல்; to shave, as in caulam. *"குடுமி களைந்த நுதல்" (புறநா.77:2).* 2. மயிர்ச் சிகையைக் கூட்டி முடித்தல்; to dress and tie the kuḍumi. *"குடுமி களைந்தானெங் கோ" (பு.வெ.9:21).*

[குடுமி + களை–.]

குடுமிகொள்(ளு)–தல் *kuḍumi-koḷ(ḷu)-,* 7 செ.குன்றாவி. (v.t.) வெல்லுதல்; lit., to hold in check by forelock, to win, conquer *"புத்திசேனன்.... மன்னரைக் குடுமி கொண்டான்" (சீவக.2249).*

[குடுமி + கொள்(ளு).]

குடுமிதட்டு–தல் *kuḍumi-taṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. சண்டைக்கு அணியமாதல்; make oneself ready for starting a fight. 2. அளக்கும்போது மரக்காலின் தலையிடத்துள்ள தவசத்தைத் தட்டி வழித்தல்; to strike off the top in measuring grain.

[குடுமி + தட்டு.]

குடுமிப்பருந்து *kuḍumi-p-parundu,* பெ.(n.) உச்சிச் சூட்டுடைய ஒருவகைப் பருந்து (யாழ்ப்.); Ceylonese crested falcon.

[குடுமி + பருந்து.]

குடுமியன் *kuḍumiyaṉ,* பெ.(n.) பார்க்க ***குடுமிப்பருந்து*** பார்க்க; see *kuḍumi-p-parundu.*

[குடுமி → குடுமியன்.]

குடுமியைப்பிடி-த்தல் *kuḍumiyai-p-piḍi-,* 4 செ.கு.வி.(v.i.) சண்டையிடுதல்; to quarrel, as by grappling another's hair tuft.

[குடுமியை + பிடி]

குடுமியை முடிந்துவிடு-தல் *kuḍumiyai-mudindu-vidu-* 18 செ.குன்றா.வி.(v.t.) சண்டை மூட்டுதல்; to create a quarrel between two persons, as by tying their kuḍumi together; to set persons by the ear or at logger heads.

[குடுமியை + முடிந்து + விடு.]

குடுமிவாங்கு[1]-தல் *kuḍumi-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) தெய்வத்திற்கு நேர்ந்து கொண்ட முடியை எடுத்தல்; to have a complete shave of the head in fulfilment of a vow.

[குடுமி + வாங்கு.]

குடுமிவாங்கு[2]-தல் *kūḍumi-vāṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) அவமதித்தல்; to disgrace, divest one of office and power, as causing the removal of the kudumi.

[குடுமி + வாங்கு.]

குடுமிவை-த்தல் *kuḍumi-vai-,* 4 செ.கு.வி. (v.i.) குழந்தைக்குத் தலையணி சூட்டுமுன்னர் நடத்தும் ஒருவித மயிர் நீக்கும் சடங்கு; to perform the ceremony of providing a child with a tuft of hair on the crown after tonsure.

[குடுமி + வை.]

குடுவிச்சு *kuḍu-viccu,* பெ.(n.) 1. தேங்காய்; coconut. 2. பாளைச்செடி; any plant or tree with spathe(சா.அக.).

[குடு + விச்சு.]

குடுவை[1] *kuḍuvai,* பெ.(n.) 1. வாய்குறுகிய குண்டு ஏனம் (திவா); vessel with a small narrow mouth. 2. கமண்டலம்; pitcher of an ascetic. ***"குடுவைச் செங்கையினானை"*** ***(கந்தபு.அயனைச் சிறைநீக்.9).*** 3. கள்ளிறக்கும் சிறுகலசம்; small pot used in collecting palmyra juice or toddy. ***"குடுவையிற் றென்னங் கள்ளும்"*** ***(குற்றா.குற.118:3).***

[குள் → குடு → குடுவை.]

குடுவை[2] *kuḍuvai,* பெ.(n.) இரண்டு அல்லது மூன்று சாக்கி பெற்றுள்ள ஓர் ஆட்டக்காரன் தான் கேள்வி கேளாமலிருந்து கேட்டவற்கு உதவிபுரிந்து விளையாடும் ஒருவகைச் சீட்டாட்டம்; a game at cards in which a player having two or more jacks is prohibited from bidding, but is given the option of assisting the bidder or remaining passive.

[கொடு → குடுவை.]

குடுவைப்பறி *kuḍuvai-p-pari,* பெ.(n.) மருந்திடு மட்பாண்டம்; a small earthern pot used for securing medicine, for purposes of calcination (சா.அக.).

[குட → குடுவை + பறி.]

குடுவைப்பொறையிடு-தல் *kuḍuvai-p-poraiyḍu,* 20 செ.கு.வி.(v.i.) குடோரியாடி குடுவை வைத்தல்; a treatment consisting in the abstraction with the aid of a cupping glass (சா.அக.).

[குடுவை + பொறையிடு.]

இது உடம்பினின்று அரத்தத்தை எடுக்கச் செய்ய வேண்டி செய்யும், மருத்துவமுறை.

குடூசி *kuḍūsi,* பெ.(n.) சீந்திற்கொடி; moon creeper (சா.அக.).

[குள் → குடுச்சி – குடூசி.]

குடை[1]–தல் *kudai-,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. கிண்டுதல்; to work through, as bees in gathering honey from flowers. *"குடைந்து வண்டுண் ணுந் துழாய் முடியானை"* (*திவ். திருவாய்.1.7,1*). 2. துளைத்தல்; to scoop, hollow out, to bore with a tool; to perforate, to make holes, as beetles in wood. வண்டு உத்திரத்தைக் குடைந்துவிட்டது (உ.வ.). 3. கடைதல்; to churn. *"நெய்குடை தயிரின்"* (*பரிபா.16:3*). 4. குடைந்தாற்போல்; to worry, harass, trouble. அவன் என்னைக் குடைகிறான் (உ.வ.). 5. வேண்டாதவற்றில் தலையிடுதல்; to meddle, interfere. ஏன் இந்தச் செய்தியிற் குடைந்து கொண்டிருக்கிறாய்? (உ.வ.). 6. துருவுதல்; to search through and through. புத்தகமெல்லாம் குடைந்து பார்க்கிறான் (உ.வ.).

ம. குடயுக; **க.** கொடபு, கொடவு; **து.** குட்புனி; **கோத.** கெட்வ்; **துட.** க்விட்ய்; **குட.** கொட, கொடக்; **பட.** கொடெ.

[குள் → குழை → குடை.]

குடை[2]–தல் *kudai-,* 2 செ.கு.வி.(v.i.) 1. உட்புகுதல்; to work one's way, penetrate. *"குடைந்துல கனைத்தையும் நாடும்"* (*கம்பரா. உருக்காட்.23*). 2. நீரில் மூழ்குதல்; to dive, bathe, plunge in water. *"குடைந்து நீராடு மாதர்"* (*கம்பரா.நீர்வி.12*). 3. உளைவு நோவெடுத்தல்; to pain, as the ear, the leg. கால் குடைகிறது (உ.வ.).

[குழை → குடை → குடைதல்.] (வேக.193).

குடை[3] *kudai,* பெ.(n.) 1. கவிகை; umbrella, parasol, canopy. *"குடைநிழன் மரபு"* (*தொல். பொருள்.91*). 2. அரசாட்சி; government. *"குடையுங் கோலும் பிழைத்தவோ"* (*சிலப்.27,77*). 3. குடைக் கூத்து; a dance of skanda *"குடைவீழ்த் தவர்மு னாடிய குடையும்"* (*சிலப்.6,53*). 4. பாதக்குறட்டின் குமிழ் (சூடா.); knob in sandals. 5. நீர் முதலியன வுண்ணும் ஓலைப்பட்டை; ōla basket for eating and drinking from. *"வேணீருண்ட குடையோ ரன்னார்"* (*கலித்.23*). 6. குடைவேல்; umbrella thorn babul. 7. உள்ளிடம் குடைவுபட்ட பொருள்; anything hollow.

ம.குட; **க.**, பட., **து.**, குட. கொடெ; **தெ.** கொடுகு; **துட.** க்வாட்; **கோத.**கொட்.

Skt. uttūta; **Sinh.** kuṭe.

[குள் → குடு → குடை.]

குடை[3]–தல் *kudai-,* 4 செ.குன்றாவி.(v.t.) அராவுதல்; to file, grate. *"அரங்குடைந்த அயில்"* (*கம்பரா. கும்பகர்.22*).

[குள் → குடு → குடை.]

குடைக்கல் *kudai-k-kal,* பெ.(n.) 1. கல்லறையின் மூடுகல் (M.M.); ortholithic stone with a wide cross slab used for covering graves. 2. ஊறவைத்த அரிசி, பருப்புப் போன்றவற்றை அறைக்குங்கல்; grinder.

ம.குடக்கல்லு

[குடை + கல்.]

குடைக்காம்பு *kudai-k-kāmbu,* பெ.(n.) 1. குடை யின் கைப்பிடி; handle of an umbrella. 2. குடை யின் நடுவில் அமைந்த நீண்ட தண்டு;the central shaft of an umbrella.

ம. குடக்கால்

[குடை + காம்பு.]

குடைக்காளான் *kudai-k-kāḷāṉ,* பெ.(n.) நாய்க் குடை; mushroom, as umbrella shaped.

[குடை + காளான்.]

குடைக்கிழங்கு *kudai-k-kiḻaṅgu,* பெ.(n.) சிற்றரத்தை (மலை.); lesser galangal.

[குடை + கிழங்கு.]

குடைக்கூத்து *kudai-k-kūttu,* பெ.(n.) தன்னொடு பொருத அசுரர் பின்வாங்கித் தம் ஆய்தங்களைக் கீழே போட்ட காலத்துக் குடையைச் சாய்த்து அதனையே திரையாகக் கொண்டு ஆடிய முருகனாடல் (சிலப்.6,53,20); Skanda's dance with an umbrella, when the Asuras unable to withstand his furious onslaught threw down their weapons and beat a retreal one of 11 *kūttu.*

ம. குடக்கூத்து

[குடை + கூத்து.]

குடைக்கொள்¹(ளு)-தல் *kudai-k-kollu-,* 16 செ.கு.வி. (v.i.) மேலெழுதல்; to overflow, as milk, to come to the surface, as some cakes in frying, to be pushed up as a cloth in water.

[குடை + கொள்ளு-.]

குடைக்கொள்²(ளு)-தல் *kudai-k-kol(lu)-,* 16 செ.கு.வி. (v.i.) குடஞ்சாய்தல்(யாழ்ப்.); to capsize, to be upset, as a cart (J).

[குடை + கொள்.]

குடைகரி *kudai-kari,* பெ.(n.) பொன்னுருக்கும் கரிக்குகை; piece of charcoal bored into a cup for melting small nuggets of gold or silver. *"படரிருட்குழாங் குடைகரியா..... என் பொன்னை யுருக்குமாறு" (பெருந்தொ.1278).*

[குடை + கரி.]

குடைகல் *kudai-kal,* பெ.(n.) ஆட்டுக்கல்; grinding stone.

[குடை + கல்.]

குடைகவிழ்-தல் *kudai-kavil-,* 2 செ.கு.வி.(v.i.) வண்டி குடங்கவிழ்தல்; to be upset, as a cart; to be overturned; to tip over.

[குடை + கவிழ்.]

குடைச்சல் *kudaiccal,* பெ.(n.) ஊதையால் உண்டாகும் குடைச்சல் நோவு (தைலவ.தைல.15); neuralgia, gnawing pain.

[குள் → குடை → குடைதல் → குடைச்சல்.]

குடைச்சூல் *kudai-c-cūl,* பெ.(n.) 1. சிலம்பு; anklet. *"அவ்வரிக் குடைச்சூல்" (பதிற்றுப்.68.18).* 2. உள்ளிடம் குடைவுபடுகை; the state of being hollow. *"குடைச்சூற் சித்திரச் சிலம்பின்" (சிலப். 16:118).*

[குடை + சூல். சிலம்பு, குடைச்சூல். உட் கருப்பம் உடைமை பற்றி இப் பெயர் பெறுவதாயிற்று. குடைச்சூல் – குடை படுதலென்பாருமுளர் என்பர் அடியார்க்கு நல்லார். நற்.90:48, உரை.]

குடைச்செலவு *kudai-c-celavu,* பெ.(n.) எதிர்த்து வந்த பகையைத் தடுத்துக் காக்கச் செல்லுமுன் தன் கொற்றக் கொடையை நல்வேளையிற் புறவீடுவிடும் காஞ்சித்திணைத் துறை (பு.வெ.4:8) (Purap.); theme of a kind sending the royal umbrella in advance in an auspicious hour, before he actually sets out to defend his territory from an advancing enemy.

[குடை + செலவு.]

குடைச்செவி *kudai-c-cevi,* பெ.(n.) வெகுளி முதலிய கரணியத்தால் வளைவுபட்ட விலங்கு களின் செவி; ears pricked up and bent, forward as those of an elephant, tiger, horse in surprise or rage.

[குடை + செவி.]

குடைந்தாடு-தல் *kudaintādu-,* 5 செ.கு.வி.(v.i.) அமிழ்ந்து நீராடுதல்; to bathe by immersion. *"புனல் குடைந்தாடினோ மாயின்" (சிலப்.24, பாட்டுமடை.).*

[குடைந்து + ஆடு.]

குடைநாட்கோள் *kudai-nāt-kōl,* பெ.(n.) பகை யரணைக் கொள்ள நினைந்து மேற்சென்ற வேந்தன்

தன் குடையை நல்வேளையிற் புறவீடு விடும் உழிஞைத்துறை (பு.வெ.6:2); theme of a king sending the royal umbrella in advance in an auspicious hour, before he actually sets out to capture his enemy's fortress.

[குடை + நாள் + கோள்.]

குடைநிலை *kuḍai-nilai,* பெ.(n.) பகைமேற்செல்லும் அரசன் தன் குடையை நல்வேளையிற் புறவீடு விடும் வஞ்சித்திணைத் துறை (பு.வெ.3:3); theme of a king sending the royal umbrella in advance in an auspicious hour, before he actually sets out on an expedition.

[குடை + நிலை.]

குடைநிலைவஞ்சி *kuḍai-nilai-vañji,* பெ.(n.) குடைநிலை பார்க்க; see *kuḍai-nilai.*

[குடை + நிலை + வஞ்சி.]

குடைநாட்கோள் தொப்பியத்து உழிஞைத் திணையிற் கூறி இருப்ப, வெண்பாமாலையில் வஞ்சி, உழிஞை என்னும் இருதிணைக் கண்ணும் கூறப்பட்டுள்ளது. இளங்கோ வடிகள் வஞ்சியிற் குடைநிலை கூறியது பன்னிரு படத்தைத் தழுவிய தாகும் (சிலப்.25: 141, உரை).

குடைநிழல் *kuḍai-niḻal,* பெ.(n.) மன்னனது ஆட்சி; reign of a king. *"கடனறி மன்னர் குடைநிழற் போலப்" (நற்.146:4).*

[குடை + நிழல்.]

குடைநிழற்றல் *kuḍainiḻaṟṟal,* பெ.(n.) உலகைக் காத்தல்; save the world. 2. குடைபிடித்தல் (கழ.அக.) (கழ.தமி.அக.).

[குடை + நிழற்றல்.]

குடைநீழல் *kuḍai-nīḻal,* பெ.(n.) **குடை நிழல்** பார்க்க; see *kuḍai-niḻal. "எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழல்" (கலித்.9:1).*

[குடை + (நிழல்) நீழல்.]

குடைப்பனை *kuḍai-p-paṉai,* பெ.(n.) தாளிப்பனை; talipot palm.

ம. குடப்பன

[குடை + பனை.]

குடைப்புல் *kuḍai-p-pul,* பெ.(n.) மயிற்கொண்டைப் புல்; trail grass.

[குடை + புல்.]

குடைப்பூ *kuḍai-p-pū,* பெ.(n.) குடையைப் போன்ற பூ; flower of fulge tragacanth tree. *"புல்லிதழ் கோங்கின் மெல்லிதழ்க் குடைப்பூ" (நற்.48:3).*

[குடை + பூ.]

குடைமங்கலம் *kuḍai-maṅgalam,* பெ.(n.) நான்கு திக்கும் புகழ்மிக வீற்றிருந்த அரசனது குடையைப் புகழ்ந்து கூறும் பாடாண்டுறை (பு.வெ.9:34); theme of eulogizing the state umbrella of a king whose fame has spread far and wide.

[குடை + மங்கலம்.]

குடைமிளகாய் *kuḍai-miḷagāy,* பெ.(n.) காப்பிரி மிளகாய்(L.); bell-pepper.

[குடை + மிளகு + காய்.]

குடைமுல்லை *kuḍai-mullai,* பெ.(n.) போரில் வெற்றி கொண்ட அரசனது குடையைப் புகழ்ந்து கூறும் வாகைத்துறை (பு.வெ.8:28); theme of eulogizing the state umbrella of a king who returned from battle laden with victory.

[குடை + முல்லை.]

குடைமேற்குடை *kuḍai-mēṟ-kuḍai,* பெ.(n.) மாட்டுச்சுழிவகை; a curl mark on cattle.

[குடை + மேல்குடை.]

குடையடி–த்தல் *kuḍai-y-aḍi-,* 4 செ.கு.வி.(v.i.) பார்க்க **குடங்கவிழ்தல்.** see *kuḍaṅ-kaviḻ-.*

[குடை + அடி.]

குடையாணி *kuḍai-y-āṇi,* பெ.(n.) 1. உருண்டையான தலையுடைய ஆணி; pin or nail with round head. 2. கோயிற் குடையிற் செருகும் ஆணி; large pin used to keep a temple umbrella open.

ம. குடயாணி

[குடை + ஆணி.]

குடையோலை *kuḍai-y-ōlai,* பெ.(n.) எளிய மக்களின் உண் கலமான ஓலைப்பட்டை (திவா.); *ōla* basket out of which low-caste people eat and drink.

[குடை + ஓலை.]

குடைவண்டு *kuḍai-vaṇḍu,* பெ.(n.) துளைக்கும் வண்டு வகை; perforating bettle, borer.

[குடை + வண்டு.]

குடைவிருத்தி *kuḍai-virutti,* பெ.(n.) திருவிழாக் காலங்களில் தெய்வங்கட்குக் குடை பிடிப்பதற்காக ஏற்பட்ட முற்றூட்டு; grant of land for holding the ornamental umbrella over the village deity during festivals.

ம. குடவிருத்தி

[குடை + விருத்தி.]

குடைவு *kuḍaivu,* பெ.(n.) 1. பொந்து; hollow. 2. குகை; cavity.

[குள் → குடை → குடைவு.]

குடைவேல் *kuḍai-vēl,* பெ.(n.) 1. குடைவேல்மரம் (திவா.); umbrella thorn babul. 2. நீருடை மரம்; buffalo thorn cutch.

[குடை + வேல்.]

குடோரம் *kuḍōram,* பெ.(n.) கடூரம் (யாழ்.அக.); harshness, cruelty.

[கடு → கடூரம் → குடோரம் (கொ.வ.).]

குடோரி *kuḍōri,* பெ.(n.) 1. கீறுகை; slitting, scratching. 2. பாம்புக்கடி முதலியவற்றால் நின்றுபோன உயிர்ப்பு மீளுதற்கு மண்டையைக் கீறி மருந்து இடுகை; scarifying the skin of the skull and inserting mercurial or other medicinal pill to revive suspended animation. 3. வங்கமணல்; lead ore. 4. வெங்காரம்; borax. 5. வெள்ளைச் செய்நஞ்சு; a prepared arsenic.

[கீள் → கீறு → குடுரி → குடோரி.]

குடோரியாடு–தல் *kuḍōri-y-āḍu-,* 5 செ.கு.வி.(v.i.) **குடோரிவைத்தல்** பார்க்க; see *kuḍōri-vai-,*

[குடோரி → ஆடு.]

குடோரிவை–த்தல் *kuḍōri-vai-,* 4 செ.கு.வி.(v.i.) மண்டையைக் கீறி மருந்து; to perform the *kuḍōri* operation.

[குடோரி + வை–.]

குண்டக்கணிகை *kuṇḍa-k-kaṇigai,* பெ.(n.) கற்பழிந்து வேசையானவள் (சிலப்.10:219,உரை.); prostitute.

[குண்டு (முழுமை) → குண்ட + கணிகை.]

குண்டக்கம் *kuṇḍakkam,* பெ.(n.) 1. குறளைச் சொல்; slander, calumny. 2. வஞ்சனை (யாழ்.அக.); fraud, duplicity. 3. வளைவு; bend.

[குள் → குண்டு → குண்டகம் → குண்டக்கம்.]

குண்டக்கமண்டக்கம் *kuṇḍakka-maṇḍakkam,* பெ.(n) சுருண்டு கிடக்கும் நிலை(இ.வ.); state of lying down in a crooked manner. குண்டக்க மண்டக்கமாய்க் கிடக்கிறது (உ.வ.).

ம. குண்டக்க மண்டக்கம்

[குண்டலமண்டலம் = சுருண்டு வளைதல். குண்டலமண்டலம் → குண்டக்க மண்டக்கம்.]

ஒருவன் சுருண்டு கிடக்கும் நிலை குண்டக்க மண்டக்கம் எனவும், ஒருவனைத் தலையும், காலும் சுருட்டிச் சேர்த்துக் கட்டும் வகை குண்டுக்கட்டு என்றும் சொல்லப்படும் (வே.க.157).

குண்டக்காய்ச்சி *kuṇḍa-k-kāycci,* பெ.(n.) பானையைப் போல் காய்க்கும் ஒருவகைத் தேங்காய்; a species of rounding cocoanut resemble a pot (சா.அக.).

[குண்டு → குண்ட → காய்ச்சி]

குண்டக்கிரியை *kuṇḍa-k-kiriyai,* பெ.(n.) ஒருவகைப் பண் (இராகம்) (பரத.இராக.56); a specific melody-type.

[குண்டம் + கிரியை.]

குண்டகம் *kuṇḍagam,* பெ.(n.) மண்பறிக்குங் கருவிவகை; garden hoe, scuffler.

தெ. குண்டக

[குள் → குண்டு → குண்டகம்.]

குண்டகன் *kuṇḍagaṉ,* பெ.(n.) கள்ளக் கணவனுக்குப் பிறந்தவன் (திவா.); son born in adultery, bastard of an adulteress.

[குண்டு → குண்டகன்.]

குண்டஞ்சு *kuṇḍañju,* பெ.(n.) கரைக்கோடு அமைந்த ஆடவர் உடுக்கும் ஆடைவகை; a kind of cloth with fine border worn by men.

[கண்டு → குண்டு + அஞ்சு (கரை).]

குண்டடி-த்தல் *kuṇḍaḍi* 4செ.கு.வி.(v.i.) 1. கோலி, இரும்புக்குண்டு முதலியவற்றால் விளையாடுதல்; to play with marbles, small metal ballsh etc., 2. பங்கியடித்தல்; to take in bhang. 3. தேர்வு முதலியவற்றில் தவறுதல்(வின்.);to fail, as in an examination. தேர்வில் அடிக்கடிக் குண்டடிக் கிறான்.

[குண்டு + அடி.]

குண்டடிகாயம் *kuṇḍaḍi-kāyam,* பெ.(n.) 1. துப்பாக்கியினாற் சுட்ட காயம்; gun shot wound. 2. நோய் கொண்ட பெண்ணைப் புணருவதாலேற்படும் அரையாப்புக் கட்டி; a veneral bubo of the groins as a result of veneral or syphilitis contact (சா.அக.).

[குண்டடி + காயம்.]

குண்டடியன் *kuṇḍaḍiyaṉ,* பெ.(n.) ஆண்சிறுத்தைப் புலி(வின்.); male hunting leopard.

[குண்டு + அடியன்.]

குண்டடுப்பு *kuṇḍaḍuppu,* பெ.(n.) ஒருவகைக் குழியடுப்பு (இந்துபாக.); earthern oven like a pit, with a side opening for putting in fuel.

ம. குண்டடுப்பு

[குண்டு + அடுப்பு.]



குண்டடுப்பு

குண்டணி *kuṇḍaṇi,* பெ.(n.) குறளைச் சொல்; slander, calumny.

மறுவ. கோள் சொல்லுதல்

ம. குண்டனி; க. கொண்டெய, கொண்டெ, கொண்டெக; தெ. கொண்டெமு.

[குண்டு → குண்டணி.]

குண்டப்பணிவிடை *kunda-p-panividai,* பெ.(n.) கீழ்த்தரமான ஊழியம்; menial service.

[குண்டம் + பணிவிடை.]

குண்டம்[1] *kundam,* பெ.(n.) பன்றி; pig.

[குண் → குண்டு → குண்டம்.]

குண்டம்[2] *kundam,* பெ.(n.) குளம்; tank. "சோம குண்டம் சூரிய குண்டம் துறை மூழ்கி (சிலப்.9:64).

தெ. குண்ட

[குள → குண்டு → குண்டம்.]

குண்டம்[3] *kundam,* பெ.(n.) 1. வேள்விப்பள்ளம் (ஓமகுண்டம்); hollow in the ground for the sacred fire of the Hindus. *"மறையவன் குண்ட முறைமுறை வாய்ப்ப" (கல்லா.94:12).* 2. குழி; deep cavity, pit. 3. வாவி (திவா.); pool, tank. 4. குடுவை (திவா.); small hollow vessel with a narrow mouth. 5. பானை (பிங்.); pot. 6. கற்பழிந்து வேசையானவள் (சிலப்.10:219, உரை); unchaste woman.

ம. குண்டம்; **க.** குண்ட, குண்டெ; **தெ.** குண்ட, குண்ட; **து.** குண்ட; **குட.,** **பட.** குண்டி; **பர்.** குட்ட.

[குண்டு → குண்டம்.]

குண்டம்பாய்-தல் *kundam-pāy-,* 2 செ.கு.வி.(v.i.) நேர்ந்துகொண்டு தீக்குழியில் நடத்தல்; to walk on fire in fulfilment of a vow.

[குண்டம் + பாய்-.]

குண்டரம் *kundaram,* பெ.(n.) திரட்சியுள்ள அரம்; round file.

மறுவ. உருட்டரம்

[குண்டு + அரம்.]

குண்டலக்கடுக்கன் *kundala-k-kadukkan,* பெ.(n.) வட்டக் கடுக்கன் வகை; a large ear-ring.

[குண்டலம் + கடுக்கன்.]

குண்டலகேசி *kundalakēši,* பெ.(n.) 1. பிற மதத்தாரை வாதில் வென்று தன் மதத்தை நிலைநாட்டிய ஒரு புத்தமதப் பெண்துறவி (நீலகேசி); a Buddhistic nun who stabilised Buddhism by vanquishing the representatives of other religions in disputation. 2. ஐம்பெருங் காப்பியத்துள் ஒன்றானதும் நாதகுத்தனார் இயற்றியதும் குண்டலகேசியின் வரலாறு உணர்த்துவதுமான நூல் (யாப்.வி.); an epic poem by *Nātakuttanār* describing the life and work of *Kundalakēci,* one of *Imperunkāppiyam*

[குண்டலம் + கேசி.]

குண்டலகேசி விருத்தம் *kundala-kēši-viruttam,* பெ.(n.) விருத்தப் பாவகையினால் இயன்ற குண்டலகேசி யென்னும் நூல் (மணிமே.பக்.448); the poem Kundalakēši, as composed in viruttam metre.

[குண்டல + கேசி + விருத்தம்.]

குண்டலப்பாலை *kundala-p-pālai,* பெ.(n.) 23 சிறந்த மூலிகைகளுள் ஒன்றான கற்பக மூலிகை; it is one of the 23 all healing drugs contemplated in the Siddhar's medicine (சா.அக.).

[குண்டலம் + பாலை.]

குண்டலப்புழு *kundala-p-pulu,* பெ.(n.) **குண்டலப் பூச்சி** பார்க்க; see *kundala-p-pūcci.* *"கோழி விட்டெறி குழையினைக் குண்டலப் புழுவென்று" (திருவானைக். திருநாட்.122).*

[குண்டலம் + புழு.]

குண்டலப்பூச்சி *kundala-p-pūcci,* பெ.(n.) வளைந்து சுருண்டு கொள்ளும் புழுவகை; a kind of worm that rolls itself up. *"சுண்டுவிரலிலே குண்டலப்பூச்சி சுருண்டு கிடப்பானேன்" (குற்றா.குற.123:3).*

[குண்டலம் +பூச்சி.]

குண்டலம் *kundalam,* பெ.(n.) 1. ஆடவர் காதணி வகை; gold ear-ring worn by men. *"குண்டல மொருபுடை குலாவி வில்லிட" (சீவக.1009).*

2. வானம் (பிங்.); sky, atmosphere, heaven. 3. வட்டம்; circle. 4. சுழி; zero.

க. குண்டல, குண்டல, கொண்டலு; தெ. குண்டல்முடல. கொண்மாகெ.

Skt. kuṇḍala

[குள் → குண்டு → குண்டலம்.]

குண்டலமண்டலம் *kuṇḍala-maṇḍalam*, பெ.(n.) சுருண்டு வளைகை; coiling round.

[குண்டலம் + மண்டலம்.]

குண்டலரேகை *kuṇḍala-rēgai*, பெ.(n.) கைவரை வகை (திருவாரூ.குற.); a line in palm of hand.

[குண்டலம் + (வரைகை) ரேகை.]

குண்டலவாசி *kuṇḍala-vāśi*, பெ.(n.) விண்வெளிப் பாழில் உலவுபவன்; one who travels in the etheric region of the sky (சா.அக.).

[குண்டலம் + வாசி. வசி → வாசி.]

குண்டலவுழுவை *kuṇḍala-v-uḻuvai*, பெ.(n.) நன்னீரிலும் கழியிலும் வாழும் மஞ்சள் நிறமுள்ள மீன்வகை; a yellowish fish found in fresh water and in back water.

[குண்டலம் + உழுவை.]

குண்டலன் *kuṇḍalaṉ*, பெ.(n.) குண்டல மணிவோன்; one who wears the *kuṇḍalam*. *"ஓர் குண்டலன்" (சூடா.1:10).*

[குண்டலம் → குண்டலன்.]

குண்டலாத்தி *kuṇḍalātti*, பெ.(n.) சங்கன் வேர்; mistletoe berry-thorn (சா.அக.).

[குண்டலம் + குண்டலத்தி.]

குண்டலி[1] *kuṇḍali*, பெ.(n.) 1.தொப்புள்; umbilical region. *"குண்டலியா னனலை யோம்பி" (சி.சி.9:8).* 2. குய்யத்திற்கும் எருவாய்க்கும் நடுவில் இருப்பதாகக் கருதும் மூலாதாரம் (ஔவை.கு. நினைப்புறு.2); mystic circle situated between the anus and generative organ.

[குண்டு → குண்டலி.]

குண்டலி[2] *kuṇḍali*, பெ.(n.) 1. சீந்தில் (தைலவ. தைல.56); gulancha. 2. சங்கஞ்செடி (திவா.); mistletoe berry-thorn.

[குண்டலம் → குண்டலி.]

குண்டலி[3] *kuṇḍali*, பெ.(n.) தூயமாயை (சி.போ.பா. 2:2,பக்.133); Primal- Māyā, as the presiding power in kuṇḍali.

[குண்டல் → குண்டலி.]

குண்டலி[4] *kuṇḍali*, பெ.(n.) 1. பாம்பு; snake. 2. மயில்; peacock. 3. மான் (யாழ்.அக.); deer.

[குண்டல் → குண்டலி.]

குண்டலி[5] *kuṇḍali*, பெ.(n.) தாளகம் (யாழ்.அக.); yellow orpiment.

[குள் → குண்டு → குண்டலி.]

குண்டலிக்கவிசை *kuṇḍali-k-kavisai*, பெ.(n.) வயிற்றிலேற்படும் ஒருவகை வீக்கம்; abdominal dropsy (சா.அக.).

[குண்டலி + கவிசை.]

குண்டலிக்குள் காயசித்தி *kuṇḍalikkuḷ-kāyaśitti*, பெ.(n.) நாகதாளி; snake hood (சா.அக.).

[குண்டலி → குள் → காயம் → சித்தி.]

குண்டலிகம் *kuṇḍalikam*, பெ.(n.) 1. சீந்தில்; moon creeper. 2. மூலாதாரம்; the first and the lowest psycical region in the human body. 3. மான்; deer. 4.குண்டலி ஆற்றல்; serpents power. 5. தாளகம்; orpiment. 6. பாம்பு; snake. 7. மயில்; peacock.

8. தொப்புள்; the navel region. 9. சுருட்டை; carpet snake. 10. 'ஓம்' என்னும் மந்திரம்; the mystic sound 'ōm' 11. உயிர்வளி; the prana (சா.அக.).

[குண்டலி → குண்டலிகம்.]

குண்டலிசக்தி *kuṇḍališakti,* பெ.(n.) **குண்டலினி** பார்க்க; see *kuṇḍalini.*

[குண்டலி(னி) + சக்தி.]

குண்டலிசம்பங்கி *kuṇḍali-šambaṅgi,* பெ.(n.) புல் சம்பங்கிப் பூ; சுருட்டைச் சம்பங்கி; a species of coiled champauk (சா.அக.).

[குண்டலி + சம்பங்கி.]

குண்டலிப்பாம்பு *kuṇḍali-p-pāmbu,* பெ.(n.) குண்டலிசக்தி, வல்லபை சக்தி; the serpent's power coiled up at the end of the spinal column (சா.அக.).

[குண்டலி + பாம்பு.]

குண்டலிப்பாலை *kuṇḍali-p-pālai,* பெ.(n.) ஒருவகைப் பாலை; a kind of paulay (சா.அக.).

[குண்டலி + பாலை.]

குண்டலியோகம் *kuṇḍali-y-ōgam,* பெ.(n.) சிவயோகம்; a kind of yoga practice (சா.அக.).

[குண்டலி + ஓகம்.]

குண்டலிவளி *kuṇḍali-vāli,* பெ.(n.) **குண்டலினி** பார்க்க; see *kuṇḍalini* 2. வயிற்றில் குத்தலை உண்டாக்கும் ஒருவகை வளி; a kind of flatulency due to air or gas in the stomach or the intestines. It is attended with acute pain (சா.அக.).

[குண்டலி + வளி.]

குண்டலினி *kuṇḍalini,* பெ.(n.) 1. மாமாயை (சி.சி.1:57,சிவாக்.); primal māyā. 2. மூலாதாரத்திலுள்ள பாம்பின் வடிவமைந்த ஒரு ஆற்றல் (பிரபோத. 44:20); a Sakti or principle in the form of a serpent, abiding in the *mūlādāram.*

[குண்டலி → குண்டலினி.]

குண்டவண்டன் *kuṇḍa-vaṇḍaṉ,* பெ.(n.) குள்ளமாய்த் தடித்தவன்; short, stumpy person (j.).

[குண்டன் + வண்டன்.]

குண்டழி-த்தல் *kuṇḍaḻi-,* 4 செ.குன்றாவி.(v.t.) விலங்கின் விதையடித்தல்; castrating, depriving of virility (சா.அக.).

[குண்டு + அழி.]

குண்டற்காய்ச்சி *kuṇḍaṟkāyčči,* பெ.(n.) ஒரு வகைத் தென்னை; a kind of cocoanut discriminated according to its fructility (சா.அக.).

மறுவ. குண்டற்கச்சி

[குண்டல் + காய்ச்சி.]

குண்டன்[1] *kuṇḍaṉ,* பெ.(n.) 1. விலைமகளுக்குப் பிறந்த மகன்; son born in adulery. 2. பருத்து வலுத்தவன்; strong, stout person. 3. இழிந்தோன்; man low in caste or character. *"சமண் குண்டர்" (திவ்.பெரியதி.2:6.6).*

ம. குண்டன்; க. குண்ட; தெ. குண்டடு.

[குள் → குண்டு → குண்டன்.]

குண்டன்[2] *kuṇḍaṉ,* பெ.(n.) 1. அடிமை; slave. 2. வளைந்தது; that which is bent. 3. குண்டனி, backbiter, குண்டுணி சொல்வோன், calumniator.

[குள் → குண்டு → குண்டன் (ஒ.நோ. புள் → புண்டு).]

குண்டனி *kuṇḍaṉi,* பெ.(n.) குறளை (யாழ்.அக.); calumny.

[குள் → குண்டு → குண்டனி (வளைவு, ஓரம் சொல்லுதல்.]

குண்டா *kuṇḍā,* பெ.(n.) உருண்டு திரண்ட கலம்; kind of vessel

மரா. குண்டா

[குண்டு → குண்டா.]

குண்டாக்கன் *kuṇḍākkaṉ,* பெ.(n.) தலைவன்; leader, chief. *"சமணர்க்கோர் குண்டாக்கனாய்" (தேவா.963:8).*

[குண்டன் + குண்டாக்கன்.]

குண்டாங்கரணம் *kuṇḍāṅ-karaṇam,* பெ.(n.) குட்டிக்கரணம்; somersault.

[குண்டு + அம் + கரணம்.]

குண்டாச்சட்டி *kuṇḍā-c-caṭṭy,* பெ.(n.) ***குண்டான் சட்டி*** பார்க்க; see *kuṇḍāṉ-caṭṭi*

[குண்டான் சட்டி → குண்டாச்சட்டி.]

குண்டாஞ்சட்டி *kuṇḍāñcaṭṭi,* பெ.(n.) ***குண்டான் சட்டி*** பார்க்க; see *kuṇḍāṉ-caṭṭy.*

[குண்டான் சட்டி → குண்டாஞ்சட்டி.]

குண்டாணி *kuṇḍāṇi* பெ.(n.) ***குடையாணி*** பார்க்க; see *kuḍai-y-āṇi*

[குண்டு + ஆணி.]

குண்டாணிக்கொடி *kuṇḍāṇi-k-koḍi,* பெ.(n.) ***குந்தாணிக் கொடி*** பார்க்க; see *kuṇḍāṇi-k-koḍi*

[குண்டாணி + கொடி.]

குண்டாந்தடி *kuṇḍāṉ-taḍi,* பெ.(n.) பருத்துக் குறுகிய கைத்தடி; short stout stick.

[குண்டு → குண்டான் + தடி.]

குண்டாமண்டி *kuṇḍāmaṇḍi,* பெ.(n.) குறும்பு; mischief.

ம. குண்டாமண்டி

[குண்டு + மண்டி.]

குண்டாலக்கட்டி *kuṇḍāla-k-kaṭṭi,* பெ.(n.) செவ்வாப்புக் கட்டி; blisters in several parts of the body specially in children (சா.அக.).

[குண்டலம் → குண்டாலம் + கட்டி.]

குண்டாலம் *kuṇḍālam,* பெ.(n.) குண்டாலக்கட்டி, பார்க்க; see *kuṇḍālak-kaṭṭi*

[குண்டு → குண்டாலம்.]

குண்டாலி *kuṇḍāli,* பெ.(n.) சங்கஞ்செடி; mistletoe berry-thorn (சா.அக.).

[குண்டு → குண்டாலி.]

குண்டான் *kuṇḍāṉ,* பெ.(n.) ***குண்டான் சட்டி*** பார்க்க; see *kuṇḍāṉ-caṭṭi*

[குண்டு → குண்டான்.]

குண்டான்சட்டி *kuṇḍāṉcaṭṭi,* பெ.(n.) வாயகன்ற ஏன வகை; vessel with wide mouth.

[குண்டான் + சட்டி.]

குண்டி *kuṇḍḍ,* பெ.(n.) 1. உருண்டு திரண்டபுட்டம் (ஆசனப்பக்கம்) ; buttocks, posteriors, ramp of an animal, any rump-like protuberance. 2. குண்டிப் போன்ற அடிப்பக்கம்; the end of a fruit or nut opposite to the stalk, bottom as of a vessel. 3. இதயம்; heart. குண்டிக்காய். 4. சிறுநீரகம்; kidney. 5. மீன் சினை; roe of fish, spawn.

ம. குண்டி; க. குண்டெ; தெ. குட்டெ; து. குல்லிகெ;

[குண்டு → குண்டி.]

குண்டிக்காய் *kuṇḍi-k-kāy,* பெ.(n.) 1. சிறுநீரகம்; kidneys. 2.இதயம்; heart. 3. உட்காரும் பக்கம் (பிருட்டபாகம்); buttocks posteriors.

ம. குண்டிக்காய்; க. குண்டு (ஆண்குறி விதை); தெ. குண்டு; நா. குண்டுர்காய்; பர்.குன்டெர்காய்; கோண். குன்துர்காய்.

[குண்டி + காய்.]

குண்டிக்காயெரிச்சல் *kuṇḍi-k-kāy-ericcal,* பெ.(n.) சிறுநீரகத்தில் காணும் ஒரு நோய்; inflammation of kidneys.

[குண்டிக்காய் + எரிச்சல்.]

குண்டிக்கொழுப்பு *kuṇḍi-k-koḻuppu,* பெ.(n.) இறுமாப்பு; lit. fatness of buttocks. Pride, wantonness, arrogance, sauciness, insolence.

[குண்டி + கொழுப்பு.]

குண்டிகம்[1] *kuṇḍigam,* பெ.(n.) எரு, வறட்டி; cow dung cake. 2. பேரேலம்; large cardamon (சா.அக.).

[குண்டு → குண்டிகம்.]

குண்டிகம்[2] *kuṇḍikam,* பெ.(n.) துகள் (யாழ்.அக.); powder.

[குள் → குண்டு → குண்டிகம்.]

குண்டிகம்[3] *kuṇḍikam,* பெ.(n.) எருவறட்டி (யாழ்.அக.); dried cow-dung cake.

[குள் → குண்டிகம் (வட்டமானது).]

குண்டிகாய்-தல் *kuṇḍi-kāy-,* 3 செ.கு.வி.(v.i.) உணவின்மையால் வயிறு காய்தல்; lit. to be thinned in the buttocks. To become emacitated on account of insufficient food, etc., to grow lean.

[குண்டி + காய்.]

குண்டிகுத்து-தல் *kuṇḍi-kuttu,* 5 செ.கு.வி.(v.i.) ***குத்தவைத்தல்*** பார்க்க; see *kuta-vaittal.*

[குண்டி + குத்து.]

குண்டிகை *kuṇḍigai,* பெ.(n.) 1. கமண்டலம்; ascetic's pitcher. *"நான் முகன் குண்டிகை நீர்பெய்து" (திவ்.இயற்.நான்.9).* 2. குடுக்கை; cocoanut or other shell, used as a receptacle. *"குண்டி கைப் பருத்தி" (தொல்.பாயி.உரை).* 3. நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று; one of an Upanisad among 108.

ம. குண்டிக

Skt. kuṇḍika

[குண்டு → குண்டிகை.]

குண்டித்துணி *kuṇḍi-t-tuṇi,* பெ.(n.) அரைத்துணி; waist cloth.

[குண்டி + துணி.]

குண்டிப்பட்டை *kuṇḍi-p-paṭṭai,* பெ.(n.) உருண்டு திரண்ட புட்டம்; buttocks.

[குண்டி + பட்டை.]

குண்டிப்பி *kuṇḍippi,* பெ.(n.) சிப்பி முத்து; pearl of oysters (சா.அக.).

[குண்டு → குண்டி → குண்டிப்பா.]

குண்டிப்புறம் *kuṇḍi-p-puram,* பெ.(n.) புட்டம்; buttocks (சா.அக.).

[குண்டி + புறம்.]

குண்டிமற-த்தல் *kuṇḍi-mara-,* 3 செ.கு.வி.(v.i.) நினைவுமறதி மிகவுமுடையனாதல்; to be extremely absent-minded.

[குண்டி + மற.]

குண்டிமுனை *kuṇḍi-muṉai,* பெ.(n.) இடுப்பெலும்புக் கூட்டின் முன்பக்கத்துக்கு மேலிருக்கும் ஒரு முனை; the anterior upper bone of the pelvis (சா.அக.).

[குண்டி + முனை.]

குண்டியம் *kuṇḍyam,* பெ.(n.) 1. குறளை (உரி.நி.); slander. 2. மந்தணத்தை வெளிப்படுத்துகை; exposure of secrets. 3. பொய்; falsehood, lie.

[குண்டு → குண்டி.]

குண்டியடி-த்தல் *kuṇḍi-y-aḍi-,* 4 செ.கு.வி.(v.i.) நிலத்திலிட்ட விதைகள் மூடுமாறு உழவுமாட்டை

யோட்டுதல்; to level ploughed land by a drag, after sowing.

[குண்டி + அடி.]

குண்டியெலும்பு *kuṇḍi-y-elumbu*, பெ.(n.) இருக்கை (ஆசனம்) எலும்பு; os sacrum.

[குண்டி + எலும்பு.]

குண்டில்[1] *kuṇḍil*, பெ.(n.) 1.சிறுசெய் (திவா.); small field or plot. 2. முதுகு; back.

[குண்டு → குண்டில்.]

குண்டில்[2] *kuṇḍil*, பெ.(n.) செடிவகை (யாழ்.அக.); a shrub.

[குண்டி + இல்.]

குண்டிவற்று-தல் *kuṇḍi-varru-*, 5 செ.கு.வி.(v.i.) ***குண்டிகாய்*** பார்க்க; see *kuṇḍi-kāy*.

[குண்டி + வற்று.]

குண்டு[1] *kuṇḍu*, பெ.(n.) 1. பந்துபோல் உருண்டு கனப்பது; ball, anything globular and heavy. 2. நிறைகல் வகை (பிங்.); a standard weight. 3. துலாக்கோல் (பிங்.); scales. 4. உருண்டை வடிவான ஒருவகை ஏனம்; round vessel of medium size. 5.பீரங்கிக் குண்டு; cannon ball bullet. 6. உருண்டையான பொன்மணி; globular gold bead. *"பொன்னின் பட்டைமேற் குண்டு வைத்து"* *(S.I.I.ii.182)*. 7. கஞ்சா முதலிய மயக்கம் தரும் உருண்டை; bolus of bhang or other narcotic drug. 8. விலங்குகளின் விதை; testicle of beasts. 9. ஆண்குதிரை (சூடா.); stallion, adult male horse. 10. காதர்ப்பசந்து என்னும் மாவகை; a kidney-shaped graft mango.

ம. குண்டு; **க.** குண்டு, குண்ட; **தெ., து., பட.**குண்டு; **கோத.** குண்ட்கல் (உருண்டையான கல்).

Mar. gunḍa

[குள் → குண்டு.]

குண்டூசி, குண்டுச்சம்பா, குண்டுமல்லிகை என்பவற்றில் குண்டு என்னுஞ் சொல் உருட்சி பற்றியது. உருட்சிக் கருத்தும், திரட்சிக் கருத்தை தோற்றுவிக்கு மாதலால், குண்டு, குண்டன், குண்டை, குண்டாந்தடி, குண்டடியன், குண்டுக்கழுதை என்பவற்றை வளைவுக் கருத்து வேரடிப் பிறந்தனவாகவும் கொள்ள இடமுண்டு (வே.க. 157).

குண்டு[2] *kuṇḍu*, பெ.(n.) 1. ஆழம்; depth. *"வண்டுணை மலர்ந்த குண்டுநீரிசிலஞ்" (மணிமே.8:8)*. 2. தாழ்வு (சூடா.); sinking in, hollow, lowness. 3. சிறுசெய் (S.I.I.III, 105); a small field. 4. 1089 சதுர அடியுள்ள ஒரு நிலவளவு; a land measure = 1089 sq. ft. = 1/40 acre (R.F.). 5. குளம் (சங்.அக.); pool, pond. 6. உரக்குழி; manure-pit. 7.நீர்நிறைந்த கிடங்கு; ditch, trench. 8.கிடங்கு; ware house, store house.

ம. குண்டு; **க.** குண்டி, குண்டெ; **தெ.** குண்ட, குண்ட; **து.** குண்ட, கொண்ட; **குட.** குண்டி; பட.குண்டி; **பர்.** குட்ட; **கோண்.** குண்ட.

Skt. kuṇḍam

[குள் → குண்டு.]

குண்டுக்கட்டு *kuṇḍu-k-kaṭṭu*, பெ.(n.) 1. திரளச் சேர்த்துக் கட்டுங்கட்டு; tying anything en masse. 2. ஒருவனுடைய கழுத்தையும் காலையும் ஒன்று சேர்த்துத் திரளாகக்ந் கட்டும் கட்டு; binding one's neck and heels and forcing him into a position like a ball.

[குண்டு + கட்டு.]

குண்டுக்கட்டு விளக்கு *kuṇḍu-k-kaṭṭu-viḷakku*, பெ.(n.) சொட்டுச்சொட்டாக எண்ணெய் திரியில் விழுமாறு குண்டு உள்ள விளக்கு; a kind of lamp which has a driping oil bowl.

[குண்டு + கட்டு + விளக்கு.]



குண்டுக்கட்டு விளக்கு

குண்டுக்கட்டை *kundu-k-kattai,* பெ.(n.) பிளக்காத உருண்டை விறகு; unhewn or unsplit pieces of wood.

[குண்டு + கட்டை.]

குண்டுக்கயம் *kundu-k-kayam,* பெ.(n.) ஆழமான நீர்நிலை; deep-pond. *"விழுந்தோர் மாய்க்குங் குண்டு கயத்து அருகா" (மலை.220).*

[குண்டு + கயம்.]

குண்டுக்கல் *kundu-k-kal,* பெ.(n.) 1. வேலை செய்து செப்பனிடப்படாத கல்; unshaped or undressed stone, rubble. 2. துலைகோலின் நிறைகல்; weights of a balance.

[குண்டு + கல்.]

குண்டுக்கலம் *kundu-k-kalam,* பெ.(n.) 24 மரக்கால் கொண்ட அளவு(C.G.); a standard measure of capacity = 24 marakkāl (G.).

[குண்டு + கலம்.]

குண்டுக்கழுதை *kundu-k-kaludai,* பெ.(n.) ஆண் கழுதை (பஞ்சதந்.); he-ass.

[குண்டு + கழுதை.]

குண்டுக்காயம் *kundu-k-kāyam,* பெ.(n.) துப்பாக்கிக் குண்டு பட்டதனால் உண்டான புண்; gunshot wound.

[குண்டு + காயம்.]

குண்டுக்காளை *kundu-k-kālai,* பெ.(n.) பொலி யெருது; bull.

[குண்டு + காளை.]

குண்டுக்கிராமம் *kundu-k-kirāmam,* பெ.(n.) 1690 ஆம் ஆண்டில் கடலூரிலுள்ள புனித டேவிட் கோட்டையிலிருந்து சுடப்பெற்ற குண்டு விழுந்த தொலைவிற்கு உட்பட்டவையும், மராட்டிய களால் கம்பெனியார்க்கு விற்கப்பட்டவையுமான 11 சிற்றூர்கள்(G.S.A. 143); villages, 11 in number included within random shot of a brass gun fired from Ft. St. David at Cuddalore in 1690, and forming the territory sold to the East Indian Company by the Maharastras.

[குண்டு + கிராமம்.]

குண்டுக்குதிரை *kundu-k-kudirai,* பெ.(n.) ஆண்குதிரை; stallion, adult male horse.

[குண்டு + குதிரை.]

குண்டுக்குழல் *kundu-k-kulal,* பெ.(n.) ***குண்டுக் குழாய்*** பார்க்க; see *kundu-k-kulāi.*

[குண்டு + குழல்.]

குண்டுக்குழாய் *kundu-k-kulāy,* பெ.(n.) ஒருவகைத் துப்பாக்கி; small cannon, blunderbuss.

[குண்டு + குழாய்.]

குண்டுக்கெம்பு *kundu-k-kembu,* பெ.(n.) ***குச்சுக் கெம்பு*** (C.G.) பார்க்க; see *kuccu-k-kembu.*

[குண்டு + கெம்பு.]

குண்டுங் குழியுமாய் *kunduñ-kuliyumāy,* மேடும் பள்ளமுமாய்; uneven.

[குண்டும் + குழியும் + ஆய்.]

குண்டுச்சம்பா *kundu-c-camba*, பெ.(n.) ஆறு மாதத்தில் விளையும் சம்பாநெல் வகை; a kind of camba paddy that matures in six months.

[குண்டு + சம்பா.]

குண்டுச்சுழி *kundu-c-culi*, பெ.(n.) உயிர்மெய் யெழுத்துகளின் கொம்பில் வளைக்கும் சுழி; the circular portion of *kombu* which forms part of the symbols of certain vowel-consonants, as in செ, கோ etc.

[குண்டு + சுழி.]

குண்டுச்சூளை *kundu-c-culai*, பெ.(n.) வட்டமாக அமைக்கப்படும் காளவாய் (இ.வ.); circle kiln.

[குண்டு + சூளை.]

குண்டுசட்டி *kundu-catti*, பெ.(n.) உருண்டையான சட்டிவகை; round earthen vessel. *"கூனையும் குடமும் குண்டு சட்டியும்" (தனிப்பா.I 169,20).*

[குண்டு + சட்டி.]

குண்டு சட்டியில் குதிரை ஓட்டுதல் என்பது ஒரே வகையான பணி செய்தல் எனப் பொருள் தரும் பழமொழி. மிகவும் பருமனாக இருப்பவனை குண்டுசட்டி என்பது நகையாட்டுக் குறிப்புமொழி. குண்டுசட்டியில் கரணம் போடுகிறான் என்பது இயலாமையைக் காட்டும் இகழ்வு.

குண்டுசாலை *kundu-salai*, பெ.(n.) பெருநகரின் எல்லை; boundary of a principal town.

[குண்டு + சாலை.]

குண்டுசொக்காய் *kundu-sokkai*, பெ.(n.) ஒருவகைச் சட்டை; a kind of jacket. *"குண்டு சொக்காய் தந்தான்" (விறலிவிடு.113).*

[குண்டு + சொக்காய்.]

குண்டுணி *kunduni*, பெ.(n.) 1. கலகமூட்டுகை; inciting, instigating to a quarrel. 2. கோட்சொல்; slander, calumny. 3. கோட் சொல்லுவோன்; tale bearer. யாரோடுங் குண்டுணியாய்த் திரிய வேண்டாம் (உலக.).

[குண்டு → குண்டுணி.]

குண்டுண்ணுதல் - ஒருவனை ஏதேனும் ஒரு நோக்கத்திற்காக அடிக்கடி அணுகி வளைய வளைய வந்து நயப்புறுத்துதல். குண்டுணிச் செயலில் ஈடுபட்டுப் பிறரை வயப்படுத்துபவன் குண்டுணி.

குண்டுணிநாரதர் *kunduni-naratar*, பெ.(n.) கோட் சொல்லிக் கலக மூட்டுபவன்; lit. Narada, the talabearer. Talebearere, instigator of quarrels (கொ.வ.).

[குண்டுணி + நாரதர்.]

குண்டு தலையணை *kundu-talai-y-anai*, பெ.(n.) வட்டத் தலையணை; small round pillow.

[குண்டு + தலையணை.]

குண்டு தைரியம் *kundu-tairiam*, பெ.(n.) முரட்டுத் துணிவு; rash courage, fool hardiness.

[குண்டு + தைரியம்.]

குண்டுநீர் *kundu-nir*, பெ.(n.) கடல்; the sea, as being deep. *"குண்டுநீ ர் வையத்து" (நாலடி.94).*

[குண்டு + நீர்.]

குண்டுநூல் *kundu-nul*, பெ.(n.) நுனியில் ஈயக்குண்டு கட்டப்பட்டிருக்கும் அளவுநூற் கயிறு; plumb line used by masons.

ம. குண்டுநூலு; க. குண்டு.

[குண்டு + நூல்.]



குண்டுநூல்

குண்டுப்பிணையல் *kundu-p-pinaiyal*, பெ.(n.) கீல்வகை(யாழ்ப்.); a kind of hinge.

[குண்டு + பிணையல்.]

குண்டுப்பி *kunduppi*, பெ.(n.) சிப்பிமுத்து; pearl of oysters (சா.அக.).

[குண்டு + இப்பி. இப்பி - சிப்பி.]

குண்டுப்பூக்கொன்றை[1] *kuṇḍu-p-pū-konṟai,* பெ.(n.) வெள்ளைத் தகரை; sulphure flowered senna (சா.அக.).

[குண்டு + பூ + கொன்றை.]

குண்டுப்பூக்கொன்றை[2] *kuṇḍu-p-pū-k-konṟai,* பெ.(n.) கொன்றைவகை; sulphur-flowered senna.

[குண்டு + பூ + கொன்றை.]

குண்டுபடு-தல் *kuṇḍu-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) வெடிகுண்டால் தாக்கப்படுதல்; to be shot, to be wounded with bullet. குண்டுபட்டுச் செத்தான் (உ.வ.).

[குண்டு + படு.]

குண்டுபாய்-தல் *kuṇḍu-pāy-,* 2 செ.கு.வி.(v.i.) ஆழம்படுதல்; to become hollow. முள்ளுக்குத்திய இடம் குண்டு பாய்ந்து விட்டது (கொ.வ.).

[குண்டு + பாய்.]

குண்டுபோடு-தல் *kuṇḍu-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. அரசில் உயர்ந்த பதவியில் இருப்பவர்கள் வரும் நேரத்திலும், பிற சிறப்பு நேர்வுகளிலும் மரியாதையின் பொருட்டு வெடிபோடுதல்; to fire a salute as a sign of honor to distinguished persons etc. 2. காலத்தை உணர்த்துவதற்காக வெடிபோடுதல்; to mark the time of day by gun-fire. 3. இறத்தல்; to die. 4. தொழில், தேர்வு முதலி யவற்றில் தோல்வி யடைதல்; to fail, to be unsuccessful, as in an undertaking, examination etc.

[குண்டு + போடு-.]

குண்டுமணி *kuṇḍu-maṇi,* பெ.(n.) **குன்றிமணி** பார்க்க; see *kuṉṟimaṇi.*

[குண்டு + மணி-.]

குண்டுமரக்கால் *kuṇḍu-marakkāl,* பெ.(n.) எட்டுப்படி கொண்ட அளவு (G. Tn.D.I.238); a grain measure of capacity 8 paḍi.

[குண்டு + மரக்கால்.]

குண்டுமரம் *kuṇḍu-maram,* பெ.(n.) நெசவுத்தறியின் ஓர் ஒஉறுப்பு; lower half of the batten, the heavy round bottom piece of the batten of which the upper part is the palakai, which gives it its force.

[குண்டு + மரம்.]

குண்டுமருந்து *kuṇḍu-marundu,* பெ.(n.) வெடி மருந்து; bullet and powder, gun powder.

[குண்டு + மருந்து.]

குண்டுமல்லிகை *kuṇḍu-malligai,* பெ.(n.) குடமல்லிகை (மூ.அ.); tuscan jasmine.

மறுவ. குடமல்லிகை

[குண்டு + மல்லிகை.]

குண்டு மாலை *kuṇḍu-mālai,* பெ.(n.) மணி யாலமைந்த கழுத்தணி வகை(இ.வ.); necklace of beads.

[குண்டு + மாலை.]

குண்டுமாற்றுக்குழிமாற்று *kuṇḍu-māṟṟu-k-kuḻi-māṟṟu,* பெ.(n.) 1. பெண்ணைக் கொடுத்துப் பெண் எடுக்கை; exchange between families, of daughters in marriage. 2. ஏமாற்றுக் காரியம்; deceitful action.

[குண்டுமாற்று + குழிமாற்று.]

குண்டுரம் *kuṇḍuram,* பெ.(n.) குழியிற் சேர்த்து வைக்கும் சாணம் முதலிய உரம்; manure of cow-dung etc., as stored in a pit.

[குள் → குழி → குண்டு + உரம்.]

குண்டுருட்டாய்க் கட்டு-தல் *kuṇḍuruṭṭaikaṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. திரளச் சேர்த்துக் கட்டுதல்; to tie anything enmasse. 2. ஒருவனுடைய தலை கால்களை ஒன்று சேர்த்துத் திரளக் கட்டுதல்; to tie up head to heel, as rolling one into a ball.

[குண்டு + உருட்டாய் + கட்டு.]

குண்டுலகரம் *kundu-lagaram,* பெ.(n.) சுழித்துத் தொடங்குவதாகிய பொதுலகரம் (இ.வ.); the Tamil letter 'ல' as beginning with a loop.

[குண்டு + லகரம்.]

குண்டுவட்டில் *kundu-vattil,* பெ.(n.) உட்குழிந்த வட்டில்; a hollow dish.

[குண்டு + வட்டில்.]

குண்டூசி *kundūši,* பெ.(n.) தலைதிரண்டுள்ள ஊசி; pin.

ம. குண்டூசி; க. குண்டு சூசி; தெ. குண்டு சூதி.

[குண்டு + ஊசி.]

குண்டெழுத்தாணி *kundeluttāni,* பெ.(n.) தலைப் பக்கம் திரண்டுள்ள எழுத்தாணிவகை; style with knob at the top.

[குண்டு + எழுத்தாணி.]

குண்டெழுத்து *kundeluttu,* பெ.(n.) திரண்டு தடித்த எழுத்து; bold round hand.

[குண்டு + எழுத்து.]

குண்டேறு *kundēru,* பெ.(n.) மீன்வகை; a kind of fish.

[குண்டு + ஏறு.]

குண்டை[1] *kundai,* பெ.(n.) 1. எருது; bull. *"வையம் பூண்கல்லா சிறுகுண்டை" (நாலடி;350).* 2. இடபவோரை (பிங்.); taurus a sign of the zodiac. 3. குறுகித்தடித்தது; that which is short and stout. *"குண்டைக் குறட்பூதம்" (தேவா.944:1).* 4. குறுமை; shortness. *"குண்டைக் கோட்ட குறுமுட் கள்ளி" (அகநா.184).*

ம. குண்ட

[குள் → குண்டு → குண்டை.]

குண்டை[2] *kundai,* பெ.(n.) சட்டி (யாழ்.அக.); earthen pot.

[குண்டு → குண்டை.]

குண்டைச்சம்பா *kundai-c-cambā,* பெ.(n.) சம்பா நெல்வகை(வின்.); a kind of *cambā* paddy.

[குண்டை + சம்பா.]

குண்டையம் *kundaiyam,* பெ.(n.) பிட்டு செய்யும் சுறாமீன்; shark fish.

[குண்டு → குண்டையம்.]

குண்டோதரன் *kundōtaran,* பெ.(n.) 1. பெரு வயிறும் குறுவடிவும் உடையனான சிவகணத்தவருள் ஒருவன்; a short gluttonous goblin in the host of Siva, having a capacioush round belly. *"குண்டோதரனெனு நாமம் பூண்டு" (திருவாலவா. 4:22).* 2. பெருந்தீனிக் காரன்; a stout big-bellied glutton.

[குண்டு + உதரன் – குண்டோதரன்.]

குண்ணவாடை *kunnavādai,* பெ.(n.) வடகீழ்க் காற்று; north-east wind. குண்ணவாடை கூட்டி னாலும் கூட்டும், கலைத்தாலும் கலைக்கும் (இ.வ.).

[குண்ணம் குணக்கு = கிழக்கு + வாடை.]

குண்ணி *kunni,* பெ.(n.) குன்றிமணி; crab's eye, jeweller's bead (சா.அக.).

[குள் → குண்ணி.]

குண்ணியம் *kunniyam,* பெ.(n.) பெருக்கப்படும் எண்; multiplicand.

[குள் → குண்ணி → குண்ணியம்.]

குணக்காய்ப்பேசு-தல் *kunakkāy-p-pēšu-,* 5 செ.கு.வி. (v.i.) வீண்வாதஞ் செய்தல்; to talk perversely, advance captious argument.

[குணக்கு + ஆய் + பேசு.]

குணக்கிராகி *kuna-k-kirāgi* பெ.(n.) நற்குணத்தையே கொள்பவன்; one who recognises and appriceates the good points only (செ.அக.).

[குணம் + கிராகி (கிரகித்துக் கொள்பவன் குணங்கொளி எனின் முற்றுந்தமிழாம்.]

குணக்கு[1]-தல் *kunakku-*, 5செ.குன்றாவி.(v.t.) வளைத்தல்; to bend.

[குள் + குணக்கு.]

குணக்கு[2] *kunakku,* பெ. (n) 1. கிழக்கு; east. *"கரைபொரு தொடுகடற் குணக்கும்" (புறநா.6:3).* 2. கோணல்; crookedness, curvature. நாயின் வாளைக் குணக்கெடுக்கலாமா? (உ.வ.). 3. எதிரிடை; crossness, opposition. குணக்குப் பண்ணாதே (உ.வ.). 4. நோய்முற்றிச் சிக்கலாதல்; complicatun in sickness. அவனுக்கு உடம்பு குணக்காயிருக்கிறது.

[குள் → குணக்கு.]

குணக்கு[3]-தல் *kunakku-*, 5 செ.கு.வி.(v.i.) 1. பின்னிற்றல் (யாழ்.அக.); to be backward; to lag behind. 2. சிக்கலாதல்; to become etangled, as threads.

[குள் → குணகு → குணக்க.]

குணக்குன்று *kuna-k-kunru,* பெ.(n.) நற்குணம் மிக்கவன்; lit. a mountain of good qualities, person of noble character.

[குணம் + குன்று.]

குணக்கேடன் *kuna-k-kēdan,* பெ.(n.) நற்குண மற்றவன்; ill-natured person. *"இரங்காக் குணக் கேடன்" (சைவச.ஆசா.17).*

[குணம் + கேடன்.]

குணக்கேடு *kuna-k-kēdu,* பெ.(n.) 1. கெட்ட பண்பு; bad disposition, ill-nature. 2. நோய் குணமாக்க முடியாத நிலைக்கு மாறுகை; unfavourable symptom in disease.

[குணம் + கேடு.]

குணகண்டி *kuna-kandi,* பெ.(n.) சிவதை (மலை.); Indian jalap.

[குணம் + கண்டி.]

குணகம் *kunagam,* பெ.(n.) பெருக்குந்தொகை; multiplier

[குள் (கூடுதல்) → குணகு + அக.]

குணகர் *kunakār,* பெ.(n.) கணக்கர்; accountant

[கணி → குணி → குணகர்.]

குணகன் *kunagan,* பெ.(n.) கணக்கன்; mathematician.

[குண்டு → குணகன்.]

குணகாங்கி *kunakāngi,* பெ.(n.) **குணகாங்கியம்** பார்க்க; see *kuna-kāngiyam. "குணகாங்கி யென்னுங் கருநாடகச் சந்தமும்" (யாப்.வி.96,பக்-490).*

[குணம் → குணகாங்கி (நற்பண்பினள்).]

குணகாங்கியம் *kuna-kāngiyam,* பெ.(n.) பழைய தொரு கன்னட யாப்பு நூல்; an ancient treatise on prosody in Kanarese. *"குணகாங்கியமென்னுங் கருநாடகச் சந்தமே போல மகடூஉ முன்னிலைத் தாய்" (காரிகை, பாயிரவுரை).*

[குணம் → குணகாங்கி → குணாகங்கியம்.]

குணகாரம் *kuna-kāram,* பெ.(n.) பெருக்கல் (சூடா.) (Arith.); multiplication.

[குள் → குழி(பெருக்குதல்) → குணி+காரம் – குணிகாரம் → குணகாரம்.]

குணகி *kuṇagi,* பெ.(n.) குணவான் (யாழ்.அக.); person of good qualities.

[குணகன் → குணகி]

குணகு[1]-தல் *kuṇagu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. வளைதல்; to become bent or crooked. 2. சோர்தல்; to sink, faint, fade, droop. 3. மனந் தளர்தல்; to be dejected. 4.மனந்தடு மாறுதல்; to feel uneasy, to be vexed.

ம. குணுகுக

[குணக்கு → குணகு.]

குணகு[2] *kuṇagu,* பெ.(n.) **குணங்கு** பார்க்க; see *kuṇaṅgu.*

[குணக்கு → குணகு.]

குணகு[3] *kuṇaku,* பெ.(n.) பூத பிசாசம்; goblin.

[குள் → குளகு → குணகு (குள்ளமானது).]

குணகுணி *kuṇa-kuṇi,* பெ.(n.) குணமும் குணமுடைய பொருளும்; an object and its attributes.

[குணம் + குணி.]

குணகுணிபாவம் *kuṇa-kuṇi-pāvam,* பெ.(n.) பண்பும் பண்பியும் போலப் பிரியாமலிருக்கும் நிலை; state of inseparableness as an object and its attributes. *"அனல் வெம்மையும் போல் ... குணகுணிபாவமாகி" (சி.சி.4:6).*

[குணம் + குணி + பாவம்.]

குணகோளார்த்தம் *kuṇa-kōlārtam,* பெ.(n.) புவியின் கிழக்குப் பாதிக்கோளம்; eastern hemisphere.

[குணக்கு + கோளம் + அர்த்தம். அர்த்தம் - பாதி.]

குணங்கர் *kuṇaṅgar,* பெ.(n.) பூதங்கள், தீக்குணப் பேய்கள்; devil, goblin, evil spirit. *"திரண்டன குணங்கரீட்டம்" (கந்தபு.முதனாட்பானு.312).*

[குணங்கு → குணங்கர்.]

குணங்காட்டு-தல் *kuṇaṅ-kāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. இயற்கைக் குணத்தை வெளிப்படுத்துதல்; to come out in one's true colours, reveal one's true character. 2. நோய் குணமாகுங் குறிகாட்டுதல்; to show signs of cure, as discese.

[குணம் + காட்டு.]

குணங்கு[1]-தல் *kuṇaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) வளைதல்; to bend.

[குணகு → குணங்கு.]

குணங்கு[2] *kuṇaṅgu,* பெ.(n.) பூதம், பிசாசம்; devil goblin *"குணங்கினம் கானம் பாடி" (கல்லா.34:4) (பிங்.).*

[குணகு → குணங்கு.]

குணங்குறி *kuṇaṅkuṟi,* பெ.(n.) தன்மையும் வடிவும்; form and attribute characteristics. *"குணங்குறியற் றின்பநிட்டை கூடவன்றோ" (தாயு.நின்றநிலை.3).*

[குணம் + குறி.]

குணசந்தி *kuṇa-śandi,* பெ.(n.) அ, ஆ முன், இ, ஈ வந்தால் அவ்விரண்டுங் கெட ஏகாரமும், உ, ஊ வந்தால் அவ்வாறே ஓகாரமுந் தோன்றும் வட மொழிச் சந்தி (நன்.239,உரை); sandhi or euphonic combination in Sanskrit of 'a' or 'ā' with i and 'u' short or long, resulting repectively in 'ē' and 'ō' as. தேவேந்திரன், ஞானோதயம்.

[குணம் + சந்தி.]

குணசாகரர் *kuṇa-śāgarar,* பெ.(n.) யாப்பருங்கலக் காரிகையின் உரையாசிரியர்; commentator of *Yāpparuṅgalakkārigai.*

[குணம் + சாகரர்.]

குணசாலி *kuṇa-śāli,* பெ.(n.) நற்குணமுள்ளவன்; good and virtuous person, one of noble character.

[குணம் + சாலி.]

குணசீலன் *kuṇa-šīlaṉ,* பெ.(n.) நற்குண நற்செயலு டையவன்; a man of noble character and actions.

[குண + சீலன்.]

குணசைவம் *kuṇa-šaivam,* பெ.(n.) பதினாறு வகைச் சிவசமயங்களுள் சிவபிரானை எண் குணங்களுடை யவராக மனத்தில் நினைத்து அடிமை செய்பவர்க்கே வீடு என்னுங் கொள்கை யுள்ள சிவசமயம் (த.நி.போ. வாதிகள் சமயம், 200); a Saiva sect which holds that salvation is for those who contemplate Siva as having eight attributes and worship Him as His devoted slaves, one of 16 saivam.

[குணம் + சைவம்.]

குணஞ்ஞன் *kuṇaññaṉ,* பெ.(n.) பிறர் குணங்களை அறிந்து மகிழ்பவன்; one who understands and appreciates the good qualities of others. 2. இனிய குணமுள்ளவன்; pleasant, good-natured, agreeable person, one of sweet disposition (கொ.வ.).

[குணம் + குணஞ்ஞன்.]

குணட்டு[1]-தல் *kuṇaṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) மயக்கிப் பேசுதல்; to coax, wheedle speak amorously, as a courtesan.

[குள் → குண → குணட்டு.]

குணட்டு[2]-தல் *kuṇaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. செல்லங் கொஞ்சுதல்; to whine in jest, to speak saucily, as petted children. 2. குதித்து விளையாடுதல்; to caper about. 3. பகட்டுப் பண்ணுதல்(இ.வ.); to fascinate, attract by fine dress etc., (இ.வ.).

ம. குணட்டுக

Fin. kina; **Es.** kone; **Mong.** kina; **Jap.** kenasu; **Q.** jenjuchiy.

[குள் → குண → குணட்டு.]

குணட்டு[3] *kuṇaṭṭu,* பெ.(n.) கதிர் முதலியவற்றின் சிறுகொத்து; small bunch in a spike of grain or a cluster of grapes.

[குள் → குணட்டு.]

குணத்திரயம் *kuṇa-t-tirayam,* பெ.(n.) சால்பு (சத்துவம்), கொடுமை (இராசதம்) மடிமை (தாமசம்) என்னும் மூவகை மூலகுணங்கள்; the three-fold fundamental qualities. *"குணத்திரயங் குலஞ்சு" (மருதூர.59).*

[குணம் → திரயம்.]

குணத்தீமை *kuṇa-t-tīmai,* பெ.(n.) நன்மை தீமைகள்; virtue and vice; merits and demerits.

[குணம் + தீமை.]

குணத்துக்குவா-தல் (குணத்துக்குவருதல்) *kuṇattukku-vā-,* 8 செ.கு.வி.(v.i.) 1. சீர்படுதல்; to grow better, reform. 2. நோயினின்று நலம்பெறுதல்; to recover health, as from illness. 3. இணங்குதல்; yield, assent.

மறுவ. குணப்படுதல்

[குணம் + அத்து + கு + வா.]

குணத்தொகை *kuṇa-t-togai,* பெ.(n.) பண்புத் தொகை (நன்.365); an appositional compound in which the first member stands in adjectival relation to the second.

[குணம் + தொகை.]

குணத்தொனி *kuṇa-t-toṉi,* பெ.(n.) வில்லின் நாணோசை; twang of a bow string.

[குணம் (வளைவு, வில்) + தொனி.]

குணதத்துவம் *kuṇa-tattuvam,* பெ.(n.) 1. விளங் காமல் நின்ற மூலப்பகுதி முக்குணமாய்ப் பகுப் படைந்து விளங்கிச் சமமாய் நின்ற நிலை (சி.போ.பா.2:2 பக்.161); condition in which the Primordial Matter manifests in itself the three-fold division of primary qualities, *satva, rājas, tāmas* in equal proportion. 2. குண தத்துவத்திற்குரிய உலகம்; the world in which the above condition prevails.

[குணம் + தத்துவம்.]

குணதரன் *kuṇadaraṉ,* பெ.(n.) 1. நற்குண முள்ளவன்; person of noble character. *"குண தரனாகிய குசனும்" (இரகு.வாகு.1).* 2. முனிவன்; sage. *"குணதரரே முனிமங்கை யரே" (திருநூற்.59).*

[குணம் + தரன்.]

குணதிசை *kuṇadisai,* பெ.(n.) கிழக்கு; east. *"குணதிசை பாதம் நீட்டி" (திவ்.திருமாலை,19).*

ம. குனதிச

[குணம் + திசை. குணம் = கிழக்குத்திசை.]

குணதோடம் *kuṇa-tōḍam,* பெ.(n.) ***குணத்தீமை*** பார்க்க; see *kuṇa-t-tīmai.*

[குணம் + (தோஷம்) தோடம்.]

குணநாற்பது *kuṇa-nāṟpathu,* பெ.(n.) நாற்பது பாடலாலாகிய இறந்துபட்ட ஒரு பழைய நூல் (தொல்.பொருள்.246, உரை); an ancient poem of 40 stanzas, not extant.

[குணம் +நாற்பது.]

குணநிதி *kuṇa-nidi,* பெ.(n.) நற்குணம் நிறைந்தவன்; lit., store house of good qualities; person of noble character.

[குணம் + நிதி.]

குணநூல் *kuṇa-nūl,* பெ.(n.) நாடகத் தமிழ்நூல் களுள் ஒன்று (சிலப்.3:12,உரை); an ancient treatise on the art of dancing.

[குணம் + நூல்.]

குணப்படு-தல் *kuṇa-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. சீர்ப்படுதல்; to change for the better, to reform. 2. நோயினின்று நலமடைதல்; to recover health, as from disease. 3. செழிப்படைதல்; to improve, grow, thrive, as crops. 4. கழிவிரக்கம் கொள்ளுதல்; to repent, to become penitent.

[குணம் + படு.]

குணப்படுத்து-தல் *kuṇa-p-paḍuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. சீர்ப்படுத்துதல்; to make better, reform. 2. நோயைக் குணப்படுத்துதல்; to effect a cure, as of disease.

[குணம் + படுத்து.]

குணப்பண்பு *kuṇa-p-paṇbu,* பெ.(n.) தன்மை குறிக்கும் பண்புச் சொல் (சீவக.11 உரை); attributes, as qualities of objects.

[குணம் + பண்பு.]

குணப்பிழை *kuṇa-p-piḻai,* பெ.(n.) குணக்கேடு; bad temper.

[குணம் + பிழை.]

குணப்பெயர் *kuṇa-p-peyar,* பெ.(n.) 1. பண்பு குறிக்கும் பெயர்ச்சொல் (நன்.132); nouns of qualities, abstract nouns, as கருமை, அழகு. 2. பண்பினடியாகப் பிறந்த பெயர்ச்சொல்; nouns derived from abstract nouns as கரியன், அழகன். 3. சிறப்பியல்புபற்றி மக்கட்குப் புலவரால் கொடுக்கப் பட்டு வழங்கும் பெயர் (பன்னிருபா.147); names given by poets to persons on account of their special qualities .

[குணம் + பெயர்.]

குணபத்திரன் *kuṇa-pattiraṉ,* பெ.(n.) 1. அருகக் கடவுள் (யாழ்.அக.); arhat. 2. கடவுள்; God.

[குணம் + பத்திரன்.]

குணபம் *kuṇabam,* பெ.(n.) 1. பிணம்; corpse. *"கோழைய ரவரே யல்லாற் குணபம்வே றுலகத் துண்டோ" (பிரபோத.31:28).* 2. சுடுகாட்டிலுள்ள பேய் (பிங்.); spirit supposed to haunt burning-grounds.

[குள் → குணம் → குணவம் → குணபம்.]

குணபலம் *kuṇapalam,* பெ.(n.) அதிவிடையம் (மலை.); atees.

[குணம் + பலம்.]

குணபாகம் *kun-a-pāgam,* பெ.(n.) 1. தன்மையான நிலை; favourable turn, as of a disease. நோய் குணபாகமாயிருக்கிறது (உ.வ.). 2. ஏற்ற பக்குவம்; suitableness of preparation, as in medicine. மருந்தைக் குணபாகமாகச் செய்க (உ.வ.).

[குணம் + பாகம்.]

குணபாசி *kuṇa-pāśi,* பெ.(n.) பிணந்தின்னும் பேய்; evil spirit, demon, as devouring corpses. *"குணபாசி..... நடித்து நின்றயின்றன புறணி" (அரிசமய.பரகா.37).*

[குணம் + பாசி.]

குணபாடம் *kuṇa-pāḍam,* பெ.(n.) பதார்த்த குணநூல்; that branch of medical science which deals with medicinal drug and their uses (சா.அக.).

[குணம் + பாடம்.]

குணபாடல் *kuṇa-pāḍal,* பெ.(n.) **குணவாகடம்** பார்க்க; see *kuṇa-vāgaḍam.*

[குணம் + பாடல்.]

குணபாடலியற்றுவோன் *kuṇa-pāḍaliyaṟṟuvōṉ,* பெ.(n.) நோயின் கூறுப ாடுகளை அறிந்தவன்; one who is thoroughly acquainted with the nature of disease and their symptoms (சா.அக.).

[குணம் + பாடல் + இயற்றுவோன்.]

குணபேதம் *kuṇa-pētam,* பெ.(n.) 1. குணம் கேடுறுகை; change of disposition for the worse, degeneracy. 2. நோய் நலமாகாத நிலைக்கு மாறுகை; unfavourable symptom of a disease.

[குணம் + பேதம்.]

குணபேதி *kuṇapēdi,* பெ.(n.) ஒருவரின் பண்பை மாற்றும் மருந்து; any drugs which bring about changes in one's character such as intoxicants, stupefying drug etc (சா.அக.).

[குணம் + பேதி.]

குணம்[1] *kuṇam,* பெ.(n.) 1. பொருளின் தன்மை; attribute, property, quality. *"அதன் குணங் கருதி" (தொல்.சொல்.416).* 2. ஒழுக்கத் தன்மை; character. *"மாண்ட குணத்தொடு மக்கட்பே றில் லெனினும்" (நாலடி,56).* 3.மூலகுணங்களாகிய சால்பு (சத்துவம்), கொடுமை (ராட்சசம்), மடிமை (தாமசம்); fundamental qualities. 4. கொள்கை (திவா.); opinion, belief. 5. காப்பியத்தைச் சிறப்பிக்கும் செறிவு, தெளிவு முதலிய தன்மை; inherent excellence of style in a poetic composition. *"அவற்றுள் சொற்சுவை குணம் அலங்காரமென இரு வகைத்து" (குறள்,420,உரை).* 6. நன்மை; favourableness. காரியம் குணமாயிற்று (உ.வ.). 7. நலமாதல்; convalescence. நோய் நலமாயிற்று. 8. மேன்மை (உ.வ.); excellence merit, virtue. 9. அறிவுத் தெளிவு; soundness of intellect. 10. நிறம் (பிங்.); colour. 11. கயிறு (திவா.); rope, cord. 12. வில்லின் நாண்; bow-string. *"தன் சிலை .... குணத்தினிசை காட்டினன்" (கந்தபு. அமரர். சிறை.44).* 13. **குணவிரதம்** பார்க்க; see *kuṇa-viradam. "குணநூற்றுக் கோடியும்" (சீவக.2818).*

[குள் →குணம் (வளைவு, அடங்கிய தன்மை, பணிவு, ஒத்துவரும் இயல்வு, நலம், மேன்மை மேம்பட்டு விளங்கும் நிறம், அறிவு).]

குணம்[2] *kuṇam,* பெ.(n.) குடம் (பிங்.); waterpot, pitcher.

[குள் (வளைவு) → குணம்.]

குணம்[3] *kuṇam,* பெ.(n.) 1.கடலாற் பள்ளமான கிழக்கு; east.

[குள் → குண் → குணம் - தாழ்ந்த கீழ்த்திசை.].

குணம்பாழ் *kuṇam-pāḻ,* பெ.(n.) மிதித்தால் திகைப்புண்டாக்கும் மூலிகை; a plant supposed to cause perplexity or bewilderment when touched (சா.அக.).

[குணம் + பாழ்.]

குணம்பேதி-த்தல் *kuṇam-pēti-t-tal,* செ.கு.வி.(v.i.) பண்பு மாறுதல்; change of temprament of mind or disposition as in some diseases (சா.அக.).

[குணம் + பேதி.]

குணமணி *kuṇa-maṇi,* பெ.(n.) நற்குணமுள்ளவன்; person of excellent character.

[குணம் + மணி.]

குணமா-தல் *kuṇam-ā-,* 6 செ.கு.வி.(v.i.) நலமாதல்; to become cured, healed restored to health.

[குணம் + ஆ.]

குணமாக்கு-தல் *kuṇamākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. நலப்படுத்துதல்; to cure, heal, restore to health. 2. சீர்திருத்துதல்; to reform, amend, correct.

[குணம் + ஆக்கு.]

குணமாய்ப்பேசு-தல் *kuṇamāy-p-pēsu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. அறிவோடு பேசுதல்; talking with reason and sense, talking banely. 2. இசிவு, மயக்கம், வலிப்பு முதலியவற்றால் நினைவு தடுமாறிப் பேசுவதினின்று தெளிந்து இயல்பாய்ப் பேசுதல்; after recovery from delirum, giddines fits, etc., involving incoherant talks (சா.அக.).

[குணமாய் + பேசு.]

குணமாய்ப்போ-தல் *kuṇamāy-p-pō,* 8 செ.கு.வி. (v.i.) நோயினின்று தெளிதல்; to recove from illness (சா.அக.).

[குணம் + ஆய் + போ.]

குணமாலி *kuṇa-māli,* பெ.(n) மாவிலிங்க மரம்; lingam tree (சா.அக.).

[குணம் + மாலி.]

குணமுள்ளது *kuṇamuḷḷadu,* பெ.(n.) நலமாகக் கூடியது; that which has curative virtues or healing power. 2. நற்பண்பு வாய்ந்தது; anything having good qualities (சா.அக.).

[குணம் + உள்ளது.]

குணமுள்ளவன் *kuṇa-muḷḷavaṉ,* பெ.(n.) நற்குணம் உடையவன்; person of noble character.

[குணம் + உள்ளவன்.]

குணமுற்றவன் *kuṇam-uṟṟavaṉ,* பெ.(n.) நற்குண பண்பு வாய்ந்தவன்; man of good qualities (சா.அக.).

[குணம் + உற்றவன்.]

குணமூலி *kuṇa-mūli,* பெ.(n.) குணமாக்கும் மருந்துகள்; drugs having healing power, curative drugs (சா.அக.).

[குணம் + மூலி.]

குணலி *kuṇali,* பெ.(n.) 1. சீந்தில்; moon creeper. 2. செவ்வகத்தி; red sesbane (சா.அக.).

[குள் (வளைவு) → குண → குணலி.]

குணலை[1] *kuṇalai,* பெ.(n.) 1. ஆரவாரத்துடன் நடிக்குங் கூத்து; a dance attended with shouting *"அந்தணர் குணலை கொள்ள" (திருவாலவா. 4,22).* 2. வீராவேசத்தாற் கொக்கரிக்கை; warrior's shout of triumph, valour, or defiance.

[குணல் (வளைதல், வளைந்தாடுதல்) → குணலை → (கூத்து).]

குணலை[2] *kuṇalai,* பெ.(n.) நாணத்தால் உடல் வளைகை; bending of the body through bashfulness. *"கூச்சமுமாய்ச் சற்றே குணலையுமாய்" (பணவிடு.310).*

[குள் → குணல் → குணலை.]

குணலையிடு-தல் *kuṇalai-y-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. கொக்கரித்தல்; to shout. 2. இரைந்து கூத்தாடுதல்; to dance and shout.

[குணலை + இடு.]

குணவதம் *kuṇa-vatam,* பெ.(n.) 1. ***குணவிரதம்*** பார்க்க; see *kuṇa-viratam.* 2. நற்குணம்; good qualities, nobility. *"களியுணர்வி னாரைக் குணவதங் கொளுத்த லாமோ" (சீவக.378).*

[குணம் + குணவந்தம் → குணவதம்.]

குணவதன் *kuṇavataṉ,* பெ.(n.) 1. நற்குண முடையவன்; person of noble character. *"பரமன் குணவதன் பரத்தி லொளியோன்"(சிலப்.10:181).* 2. குணநோன்பை நோற்பவன் (சிலப்.10:181 உரை); one who observes *kuṇa-nōṉbu.*

[குணம் + அந்தன்–குணவந்தன் →குணவதன்.]

குணவதி *kuṇavati,* பெ.(n.) நற்குணமுள்ளவள்; woman of noble character.

[குணம் + அந்தி–குணவந்தி → குணவதி.]

குணவந்தன் *kuṇavandaṉ,* பெ.(n.) ***குணவான்*** பார்க்க; see *kuṇavāṉ.*

[குணம் + அந்தன்–குணவந்தன்.]

குணவல்லபை *kuṇa-vallabai,* பெ.(n.) அதிவிடயம்; Indian atees (சா.அக.).

[குணம் + வல்லபை.]

குணவாக்கு *kuṇa-vākku,* பெ.(n.) சிறப்பாயமைந்த பண்பு; peculiar characters.

[குணம் + வாக்கு.]

குணவாகடம் *kuṇa-vā-kaḍam,* பெ.(n.) மருந்தின் தன்மை, நோய்க் குறிகளைப் பற்றிக் கூறும் ஒரு மருத்துவ நூல்; a medical treatise on the symptoms of diseases. *"பேர்பெறுங் குணவாகடஞ் சோதித்து" (அறப். சத்.51).*

[குணம் + வாகடம்.]

குணவாகு *kuṇa-vāgu,* பெ.(n.) பண்பின் இயல்பு; natural disposition (சா.அக.).

[குணம் + வாகு.]

குணவாகுபெயர் *kuṇa-v-āgu-peyar,* பெ.(n.) பண்புப் பெயர் பண்பிக்கு ஆகி வருவது; noun literally signifying abstract quality used figuratively to denote the concrete object having that quality, as; நீலஞ்சூடினாள்.

[குணம் + ஆகுபெயர்.]

நீலஞ்சூடினாள் என்பதில் நீலம் என்னும் பண்புப்பெயர் நீலமலருக்கு ஆகிவந்தது.

குணவாயில் *kuṇavāyil,* பெ.(n.) கீழ்த்திசை.

[குணக்கு + வாயில்.]

குணவான் *kuṇavāṉ,* பெ.(n.) நற்குணமுள்ளவன்; man of noble character.

[குணம் + ஆன்.]

குணவிலக்கணம் *kuṇa-v-ilakkaṇam,* பெ.(n.) நோயின் பண்பைப் பற்றிய நூல்; a treatise on the nature and symptom and peculiar to a disease (சா.அக.).

[குணம் + இலக்கணம்.]

குணவியன் *kuṇaviyaṉ,* பெ.(n.) மாணிக்க வகையு ளொன்று; a kind of ruby (S.I.I.ii,78).

[குணம் → குணவியன்.]

குணவிரதம் *kuṇa-viradam,* பெ.(n.) பெரு நோன்பிற்கு (மகா விரதத்திற்கு) அடுத்தபடியாகக் கொள்ளும் ஒரு சைன நோன்பு (சீவக.2818,உரை); vow of secondary importance.

[குணம் + விரதம்.]

குணவீரபண்டிதர் *kuṇa-vīra-p-paṇḍitar,* பெ(n.) 13-ஆம் நூற்றாண்டிலிருந்த நேமிநாத நூலாசிரியர்; the author of *Nēminātam* who lived in the 13th century.

[குணம் + வீரம் + பண்டிதர்.]

குணவேற்றுமை *kuna-vērrumai,* பெ.(n.) ஆறாம்வேற்றுமை (தொல்.எழுத்.216, உரை.); genitive case

[குணம் + வேற்றுமை.]

குணன் *kunan,* பெ.(n.) 1. குணமுள்ளவன்; person possessing attributes, qualities used usually in compounds as. எண்குணன். 2. புழு; worm.

[குணம் + அன்.]

குணனம் *kunanam,* பெ.(n.) எண்வகைக் கணிதத்துள் ஒன்றாகிய பெருக்கல் (திவா.) ; multiplication, one of *atta-kanidam.*

[குணல் → குணலம் → குணனம்.]

குணனியம் *kunaniyam,* பெ.(n.) பெருக்கற்படுந்தொகை; multiplicand.

[குணல் → குணலியம் → குணனிம்.]

குணாக்கரநியாயம் *kunākkara-niyāyam,* பெ.(n.) மரம், புத்தகம் முதலியவற்றில் புழுவின் அரிப்பு எழுத்தாதல் போலத் தற்செயலாக நேர்வதைக் குறிக்கும் நெறி (நுண்பொருள்மாலை.); illustration of letters formed by chance by worm-mark on wood, leaf of a book, etc., to denote any fortuitous or chance occurence.

[குணை(புழு) + அக்கரம் (அட்சரம்) + நியாயம்.]

குணாகுணம்[1] *kunākunam,* பெ.(n.) நன்மையும் தீமையும்; good and evil, merit and defect.

[குணம் + அகுணம்.]

குணாகுணம்[2] *kunākunam,* பெ.(n.) நோயின் இயல்வு இயலாமைகள் (யாழ்.அக.); curability or otherwise of a disease.

[குணம் + அகுணம்.]

குணாகுணவிளக்கம் *kunākuna-vilakkam,* பெ.(n.) நோயின் பண்பையும் மாறுபாட்டையும் கூறும் நூல்; a book which tells the nature of a disease with its changes (சா.அக.).

[குணம் +அகுணம் + விளக்கம்.]

குணாகுணா *kunākunā,* பெ.(n.) குணுகுணு, மூக்கின் வழியாய்ப் பேசல்; speaking through the nose (சா.அக.). **குணுக்கல்** பார்க்க; see *kunukkal.*

[குணுகுணு → குண, குணா.]

குணாசகம் *kunāšāgam,* பெ.(n.) சிறுகாஞ்சொறி; small alimbing nettle (சா.அக.).

[குணல்(வளைவு) → குனப் + சகம், குணாசகம் (கொ.வ.).]

குணாட்டம் *kunattam,* பெ.(n.) ஒருவகை வரிக்கூத்து (சிலப்.3:13,உரை.); a kind of masquerade dance.

[குணல் → குணலாட்டம் + குணாட்டம்.]

குணாதிசயம் *kunādišayam,* பெ.(n.) பண்புச் சிறப்பு; excellence of character, qualities, predominent characteristics.

[குணம் + அதிசயம்.]

குணாதிதம் *kunādidam,* பெ.(n.) குணங் கடந்தது; that which is absolute, above all attributes as referring to God.

[குணம் (அதைத்தல்) + அதிதம்.]

குணாது *kunātu,* பெ.(n.) கிழக்கிலுள்ளது; that which is in the east. *"குணாஅது கரைபொரு தொடுகடல்"(புறநா.6:3).*

[குணம் (கிழக்கு) – குணாது.]

குணாம்பி *kunāmbi,* பெ.(n.) கோமாளி; ludicrous, comical, droll fellow, buffoon.

ம. குணாம்பி

[குள் → குண → குணம்பி → குணாம்பி (குழப்புபவன், நகையாட்டு செய்பவன்).]

குணாம்பு[1]-தல் *kuṇāmbu-,* 5 செ.கு.வி.(v.i.) பகடி பேசுதல்; to speak insultingly, to taunt, to use invective, irony, sarcasm.

ம. குணாப்பிக்குக

[குள் → குண → குணம்பு → குணாம்பு.]

குணாம்பு[2] *kuṇāmbu,* பெ.(n.) பகடி; merry talk, drollery, idle joke.

[குள் → குண → குணம்பு → குணாம்பு.]

குணாலம்[1] *kuṇālam,* பெ.(n.) ஒருவகை மகிழ்ச்சிக் கூத்து; riotous dancing. *"குணாலடித் திரிமினோ" (திவ்.பெரியாழ்.4:6.9).* 2. வீரத்தால் முழக்கமிடுகை; warrior's shout of trimph. *"குணாலமிடு சூரன்" (திருப்பு.185).*

[குணல் → குணலம் → குணாலம் (வளைந்தாடுதல்.]

குணாலயம்[2] *kumālayam,* பெ.(n.) ஒரு பறவை; a bird. *"காகங் குணாலஞ் சிலம்புமே"(கம்பரா. ஊர் தேடு. 151).*

[குணலம் → குணாலம்.]

குணாலயன் *kuṇālayaṉ,* பெ.(n.) குணங்களுக்கு இருப்பிடமானவன்; one who is the abode of all virtues.

[குணம் + ஆலயன்.]

குணாலை *kuṇālai,* பெ.(n.) **குணலை** (சிலப்.3:13 உரை, பக். 89) பார்க்க; see *kuṇalai.*

[குணலை → குயாலை.]

குணாளன் *kuṇāḷaṉ,* பெ.(n.)நற்குணமிக்கவன்; person of noble character. *"ரட்சிக்குங் குணாளனே" (கவிகுஞ்.10).*

[குணன் → குணாளன்.]

குணானுபவம் *kuṇāṉubavam,* பெ.(n.) பண்பின் நுகர்ச்சி; experience of nature as of diseases (சா.அக.).

[குணம் + அனுபவம் (குணநுகர்ச்சி).]

குணி[1] *kuṇi,* 1. பண்பி; object, as possessing attributes; குணத்தின் பெயர் குணிமேல் நின்றது (குறள்,53,உரை). 2. நற்குணமுடையவன்; one endowed with good qualities.

[குணம் → குணி.]

குணி[2] *kuṇi,* பெ.(n.) 1. முடமானது (சூடா.); that which is lame. 2. சொத்தைக் கையன்; person with a withered hand, useless arm. *"கஞ்சன் குணி கூனன்"(சைவச.ஆசா.10).*

[குள் →குண → குணி.]

குணி[3]-த்தல் *kuṇi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கணித்தல்; to estimate calculate, compute, reckon. *"அவர்குழுக் குணிக்கின்" (கந்தபு. அசுரர்தோ.25).* 2. ஆய்தல் (ஆலோசித்தல்); to reflect, consider. *"கொணரும்வகை யாவதெனக் குணிக்கும் வேலை" (கம்பரா.திருவவ.38).* 3. வரையறுத்தல் (திவா.); to determine, define, limit. 4. பெருக்குதல்; to multiply.

[குழித்தல் = பெருக்குதல். குழி→குணி.]

குணி[4] *kuṇi,* பெ.(n.) வில் (யாழ்.அக.); bow.

[குள் + குணி.]

குணிக்கரி-த்தல் *kuṇikkari-,* 4 செ.கு.வி.(v.i.) பெருக்கல்; multiplicate.

[குழி→குணி + கரி.]

குணிக்காரம் *kuṇi-k-kāram,* பெ.(n.) பெருக்கல் (யாழ்.அக.); multiplication.

[குணகு → குணிகு → குணிக்காரம்.]

குணிதம் *kunidam,* பெ.(n.) 1. பெருக்கி வந்த தொகை; product of multiplication. 2. மடங்கு; fold, as in two-fold. *"இவற்றி னிருகுணிதஞ் செய்திடுக" (சைவச.பொது.16).*

[குழி → குணி → குணிதம்.]

குணிப்பானவன் *kunippānavan,* பெ.(n.) நன்கு மதிக்கற்பாடுடையவன்; a respected person.

[குணிப்பு + ஆனவன்.]

குணிப்பு *kunippu,* பெ.(n.) 1. அளவு; estimate, reckoning, *"சேனையின் குணிப்பி லாமையும்" (கம்பரா.பிணிவீ.23).* 2. ஆராய்ச்சி; investigation, consideration. *"குணிப்பின்றி...... பணித்த பிரான்" (திருநூற்.23).* 3. மதிப்பு; esteem regard குணிப்பான மனிதன் (இ.வ.).

[குழி → குணி → குணிப்பு]

குணிப்பெயர் *kuni-p-peyar,* பெ.(n.) பண்பியைக் காட்டும் பெயர்ச்சொல்; concrete noun, dist fr. kuna-p-peyar as கரியன்.

[குணம் → குணி + பெயர்.]

குணில் *kunil,* பெ.(n.) 1. குறுந்தடி; short - stick, cudgel. *"கரும்பு குணிலா மாங்கனி யுதிர்க்கும்" (ஐங்குறு.87).* 2. பறையடிக்கும் கடிப்பு; drum stick *"குணில்பாய் முரசி னிரங்கு மருவி" (புறநா.143:9).* 3. கவண் (பிங்.); sling.

[குள் → குணல் → குணில் (வளைவானது).]

குணிறு *kuniru,* பெ.(n.) தடிக்கம்பு; stick. *"பிடித்தாயமா மடப்பாவைநீள், குணிற்றால் விடா தடித்தேகவே" (நூற்றெட்டுத்.திருப்புகழ்.12).*

[குள் → குணில் → குணிறு.]

குணு *kunu,* பெ.(n.) 1. வளைவு ; bend. 2. புழு (அக.நி.); worm, meggot.

[குள் (வளைவு) → குணு.]

குணுக்கம் *kunukkam,* பெ.(n.) வருத்தம் (யாழ்.அக.); suffering, distress.

[குள் → குணு → குணுக்கம்.]

குணுக்கன் *kunukkan,* பெ.(n.) மூக்காற் பேசுபவன் (யாழ்.அக.); one who talks through his nose.

[குணுக்கு + அன்.]

குணுக்கு[1]-தல் *kunukku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. வளைத்தல்; to bend. 2. நுணுக்குதல்; to powder.

[குள் → குணு → குணுக்குதல்.]

குணுக்கு[2] *kunukku,* பெ.(n.) 1. கடிப்பிணை என்னும் காதணி (பிங்.) ; an ear - ornament. 2. செவி வடித் தற்கு இடும் குதம்பை (சினேந்.109, உரை); ring of lead or brass suspended in the lobe of the ear to stretch it. 3. மீன்வலையின் ஈயக்குண்டு; lead for a fish-net. 4. வெள்ளி; silver. 5. பணியாரவகை; a kind of sweet meat.

ம. குணுக்கு

[குள் → குணுக்கு.]

காது வளர்க்கும் போது அணிவது குதம்பையும், வளர்த்தபின் அணிவது குழையும் கடிப்பிணையுமாகும். குதம்பை இன்று குணுக்கு என வழங்குகின்றது (பண்.நா.ப.64).



குணுக்கு

குணுக்குத்தடி *kuṇukku-t-taḍi,* பெ.(n.) இரும்புப் பூணிட்ட கனத்த கழி; club or heavy stick with an iron ferrule.

[குணுக்கு + தடி.]

குணுகினி *kuṇugiṇi,* பெ.(n.) நோய்க் குறுமி (கிருமி)க் கொல்லி; a remedy which expels worms from animal bodies (சா.அக.).

[குணுகு → குணுகினி.]

குணுகு-தல் *kuṇugu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கொஞ்சுதல்; to caress, prattle, talk pleasantly. *"குணுகியிட்டுள பொருள் பறித்து"* *(திருப்பு.676).* 2.வளைதல்; to bend.

க. குணுகு

[குள் → குணு → குணுகு..]

குணுகுணு-த்தல் *kuṇu-kuṇu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. மூக்காற்பேசுதல்; to speak through the nose. 2. முணுமுணுத்தல்; to whine, murmur, grumble. .

ம. குணுகுணுக்குக; க. கொணகு; து. குணுகுணு, குணுகுட்டு, குனகுன

[குணுகுணு = ஒலிக்குறிப்பு. ஒ.நோ. முணுமுணு.]

குணுகுணெனல் *kuṇu-kuṇeṉal,* பெ.(n.) முணுமுணுத்தற்குறிப்பு; onom. expr. signifying whimpering, whining.

[குணுகுணு + எனல்.]

குணுங்கர் *kuṇṅgar,* பெ.(n.) 1. இழிந்தோர்; base, vile, persons. 2. புலையர்; low caste men *"கவ்வித்தோ றின்னுங் குணுங்கர்நாய்"* *(நாலடி,322).* 3. தோற்கருவியாளர் (திவா.); drummers. 4. குயிலுவர் (சூடா.); lute-players.

[குணுங்கு → குணுங்கர்.]

குணுங்கலூர்வெட்டு *kuṇuṅgalūr-veṭṭu,* பெ.(n.) பழையநாணயவகை (பணவிடு.32); an ancient coin.

[குணுங்கலூர் + வெட்டு.]

குணுங்கு[1]-தல் *kuṇuṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) வருந்துதல் (யாழ்.அக.).; to suffer; to be in distress.

[குள் → குணு → குணுங்கு.]

குணுங்கு[2] *kuṇuṅgu,* பெ.(n.) 1. பேய் (உரி.நி.); devil, goblin. 2. கொச்சை நாற்றம்; smell of cattle, buffer,etc. *"வெண்ணெ யளைந்த குணுங்கும்"* *(திவ்.பெரியாழ்.2.4:1).*

ம. குணுக்குமணம்

[குள் → குணு → குணுக்கு.]

குணேட்டம் *kuṇēṭṭam,* பெ.(n.) அதிவிடயம் என்னும் மருந்துச் சரக்கு; a bazzar drug called Indan ateas (சா.அக.).

[குள் → குணட்டம் → குணேட்டம்.]

குணேடகம் *kuṇēḍagam,* பெ.(n.) **குணேட்டம்** பார்க்க; see *kuṇēṭṭam.*

[குள் → குணேட்டம் → குணேடகம்.]

குணைவண்டு *kuṇai-vaṇḍu,* பெ.(n.) வண்டு வகை; a kind of beetle.

[குள் → குணை + வண்டு.]

குத்தகை *kuttagai,* பெ.(n.) 1. நிலக்குத்தகை ஒப்பந்தம்; contract of lease. *"பொழில் குத்தகை யாத் தந்தீர்"* *(குமர.பிர.திருவாரூர்.27).* 2. குத்தகைத் தொகை; lease amount.

தெ.து. குத்த க.guttige ம. குத்தக

[கொத்து → குத்து → குத்தகை.]

குத்தகைக்கடை-த்தல் *kuttagaikkaḍai-,* 4 செ.குன்றாவி. (v.t.) குத்தகைக்குக் கொடுத்தல்; to let out, farm, lease out, as land.

[குத்தகைக்கு + அடை-.]

குத்தகைக்காரன் *kuttakai-k-kāraṉ,* பெ.(n.) குத்தகை வாங்குபவன்; contractor, lessee.

[குத்தகை + காரன்.]

குத்தகைச்சரக்கு *kuttagai-c-carakku,* பெ.(n.) ஒப்பந்தம் செய்த சரக்கு; goods secured by contract.

[குத்தகை + சரக்கு.]

குத்தகைச்சீட்டு *kuttagai-c-cīṭṭu,* பெ.(n.) குத்தகை ஆவணம்; lease deed.

[குத்தகை + சீட்டு.]

குத்தகைதாரன் *kuttagai-dāraṉ,* பெ.(n.) ***குத்தகைக் காரன்*** பார்க்க; see *kuttagai-k-kāraṉ.*

[குத்தகை + தாரன்.]

குத்தகைப்பொருள் *kuttagai-p-poruḷ,* பெ.(n.) குத்தகை ஒப்பந்தப்படி கட்டவேண்டிய பொருள்; money payable by a lessee for the lease.

[குத்தகை + பொருள்.]

குத்தகைமாறுதல் *kuttagai-māṟudal,* பெ.(n.) குத்தகைக் காலம் முடிவு பெறுகை; expiry of the period of lease.

[குத்தகை + மாறுதல்.]

குத்தகையெடு–த்தல் *kuttagai-y-eḍu-,* 4 செ.குன்றாவி.(v.t.) குத்தகைக்கு வாங்குதல்; to obtain a contract of lease.

[குத்தகை + எடு.]

குத்தசி *kuttaśi,* பெ.(n.) உயர் முத்து; superior solid pearls (சா.அக.).

[குத்தச்சி → குத்தசி → குரு – ஒளி.]

குத்தம் *kuttam,* பெ.(n.) எருது (பிங்.); bull.

[குட்டம் + குத்தம்.]

குத்தரசம் *kuttaraśam,* பெ.(n.) பெருங்காயம் (மூ.அ.); asafoetida.

[குய்த்தல் + அசம் → குய்த்தலசம் → குய்த்தரசம்.]

குத்தல்[1] *kuttal,* பெ.(n.) 1. உடம்பின் உள்நோவு; internal pain, aching, throbbing. உடம்பிற் குத்தலுங் குடைச்சலும் பொறுக்க முடியவில்லை (உ.வ.). 2. மனம் நோகச் செய்கை; hitting, wounding. அவன் பேச்சு எப்போதும் குத்தல்தான் (உ.வ.). 3. தெருவிற்கு எதிராக வீடு அமைந்திருப்பது முதலிய குற்றம்; inauspicious position, as of a house opposite to a street, a well opposite to a doorway. 4. நீர்க்குத்தலான இடம்; land or site exposed to the dash of water-currents. 5. ***குத்தலரிசி*** (இந்துபாக.54) பார்க்க; see *kuttal-ariśi.*

ம. குத்தல்; **து**. குத்தட, குத்தாட; **கோத.** குத்ல்; பட. குத்தலு

[குத்து → குத்தல்.]

குத்தல்[2] *kuttal,* பெ.(n.) கொடுக்கை (அக.நி.); giving.

[குல் → குத்து.]

குத்தலம் *kuttalam,* பெ.(n.) முக்குருந்து; wild lime (சா.அக.).

[குற்றலம் → குத்தலம்.]

குத்தலரிசி *kuttal-ariśi,* பெ.(n.) குற்றித்தீட்டிய அரிசி; husked rice. *"குத்தலரிசி இருநாழியும்" (S.I.I.III,96).*

[குத்தல் + அரிசி.]

குத்தலை *kuttalai,* பெ.(n.) மேட்டுப்பாங்கான இடத்தில் விளையும் ஒரு வகை நெல்; paddy growing on high ground.

ம. குத்தல

[குத்து → குத்தலை.]

குத்தவை–த்தல் *kutta-vai-,* 4 செ.கு.வி.(v.i.) குந்துதல்; to sit on the heels.

[குந்து → குத்து → குத்த + வை.]

குத்தவைத்தல் *kuttavaittal,* பெ.(n.) புட்டம் நிலத்திற் படியுமாறு உட்கார்தல் (நெல்லை); a kind of sitting position.

[குத்து → குத்த + வைத்தல்.]

குத்தன் *kuttaṉ,* பெ.(n.) 1. காப்பவன்; protector. *"விசுவ குத்தனாகி" (சேதுபு.சேதுயாத்.13).* 2. வைசியர் பட்டப்பெயர்; a Vaiśya title. *"அரதன குத்த னென்னும்..... பெருங்குடி வணிகன்" (செவ் வந்திப்பு.தாயான.8).* 3. குப்த குல அரசன் (கலிங்.319, புதுப்.); king of the Gupta family.

[காப்பன் → குப்பன் > Skt Gupta > → குத்தன்.]

குத்தாகம் *kuttāgam,* பெ.(n.) 1. ஓர் அடிக்குள் வளர்வதும், சளி, காய்ச்சலுக்கு மருந்தாகும் தன்மையுடையதுமான குட்டிவிளா எனும் சிறிய பூடு; it's a small plant of the earonia genus about 1ft hight which cures cold and fever (சா.அக.). 2. மருந்துச் செடி; herbaclous plant.

[குத்து → குத்தகம் → குத்தநாகம்.]

குத்தாங்கல் *kuttāṅ-gal,* பெ.(n.) செங்குத்தாக வைக்கும் கல் அல்லது செங்கல்; stone or brick laid upright on edge.

[குத்து + ஆம் + கல்.]

குத்தாணி *kuttāṇi,* பெ.(n.) மரக்கைப்பிடியமைந்த நீண்ட ஊசி வகை; a long needle with a wooden handle.

ம. குத்தாணி

[குத்து + ஆணி.]

குத்தாமணக்கு *kuttāmaṇakku,* பெ.(n.) உரலா மணக்கு; species of castor-plant.

[குத்து + ஆமணக்கு.]

குத்தாமணி *kuttāmaṇi,* பெ.(n.) உத்தாமணி; hedge - twiner.

[கொத்து → குத்து + ஆமணி.]

குத்தாமற்குத்து-தல் *kuttāmaṟ-kuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. குறிப்பாகக் குற்றத்தைச் சொல்லிக் காட்டுதல்; to make a covert, sarcastic hit at a person. 2. காயம்படாமற் குத்துதல்; causing contusion without intlicting apparant injury (சா.அக.).

[குத்தாமல் + குத்து.]

குத்தார்க்கு *kuttārkku,* பெ.(n.) குத்தூசியால் வாங்கித் தைக்கும் பனைமட்டைநார்; palmyra with or card used for stitching with *kuttūśi.*

[குத்து + ஆர்க்கு. ஈர்க்கு → ஆர்க்கு.]

குத்தாலம் *kuttālam,* பெ.(n.) திருவாத்தி (மலை.); holy mountain ebony.

[குத்து + ஆலம்]

குத்தாலா *kuttāla,* பெ.(n.) கடுகுச்சிவலை (மலை.); Christmas rose.

[குற்று + ஆல் – குற்றால் → குற்றாலா → குத்தாலா.]

குத்தாவகம் *kuttāvagam,* பெ.(n.) சணல்; hemp, flas (சா.அக.).

[குறு → குற்று + ஆவகம் – குற்றாவகம் – குத்தாவகம்.]

குத்தாளை *kuttāḷai,* பெ.(n.) வானவாரியாக (மழையின் உதவியால் மட்டும்) விளையும் நெல் வகை (G.T.J.D. 1.95); a paddy growing only with the help of rain.

[குறு + தாள் – குற்றாள் → குத்தாள் → குத்தாளை.]

குத்தி[1] *kutti,* பெ.(n.) ***குற்றி*** பார்க்க; see *kuṟṟi*

[குற்றி → குத்தி.]

குத்தி[2] *kutti,* பெ.(n.) 1. கோணி மூட்டையினின்றும் அரிசி முதலியவற்றைக் குத்தியெடுக்குங் குத்தூசி; iron probe to test the contents of a sack, as of

grain, sugar, etc. 2. கலப்பைக்கூர் (செந்.4:212); coulter of a plough.

மறுவ. முட்டைக்குத்தூசி

[குத்து + குத்தி]

குத்தி[3] *kutti,* பெ.(n.) மனம், மெய், மொழி ஆகிய முப்புலனடக்கம்; restraint, as in thought, speech, or deed. *"குற்றம் விட்டார் குத்திமூன் றுடையார்" (திருநூற்.75).*

[குள் - குத்து (அடக்குதல்) → குத்தி]

குத்தி[4] *kutti,* பெ.(n.) 1. குப்பி; bottle. *"குத்தியி லரக்குங் கள்ளும்" (குற்றா.குற.118:3).* 2. எண்ணெய் வைத்தற்குதவும் சிறுகுடுவை; cruet, vial for oil or ointment.

[குறு → குற்றி → குத்தி]

குத்தி[5] *kutti,* பெ.(n.) மண் (சூடா.); earth, ground, soil.

[கொத்து → கொத்தி → குத்தி]

குத்தி[6] *kutti,* பெ.(n.) மாறுபாடு; wrangle. *"குத்திபடும் வாதுபொரு ளொத்த மருங்கினாள்" (காளத்.உலா,427).*

[குள் → குத்து → குத்தி]

குத்திக்காட்டு-தல் *kutti-k-kāttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ஒருவன் குற்றத்தைச் சுட்டிக் காட்டி அவன் மனத்தைப் புண்படச் செய்தல்; to wound one's feelings by bluntly pointing out his weakness.

[குத்தி + காட்டு]

குத்திக்கொல்லன் *kutti-k-kollaṉ,* பெ.(n.) படையாளனாய்க் கருவூலங் கொண்டு செல்பவன்; a person with the *cinkāni* bow employed to carry treasure.

தெ. golla.

[குத்தி + கொல்லன்]

குத்திச்சாரித்தல் *kutti-c-cari-,* 4 செ.குன்றாவி. (v.t.) வயிற்றில் குத்திக் குடலை வெளிப்படுத்தல்; bringing out the bowels or entrails by stabbing in the abdomen (சா.அக.).

[குத்தி + சரி]

குத்திச்செருப்பு *kutti-c-ceruppu,* பெ.(n.) குதியிற் கனமுள்ள செருப்பு; shoes with thick soles.

[குத்தி + செருப்பு]

குத்திச்சேவகன் *kutti-c-cēvagaṉ,* பெ.(n.) படைகலம் ஏந்தி கருவூலப் பணம் எடுத்துச் செல்லப் பாதுகாப்பு அளிக்கும் பணியாளன்; a person armed with weapon employed to carry treasure.

[குத்தி + சேவகன்]

குத்திடி *kuttiḍi,* பெ.(n.) 1. கடல்மீன்வகை; a genus of sea-fish. 2. பொன்னிறங் கொண்ட கடல் மீன்வகை; a sea-fish, more or less golden, attaining 20 inch in length.

[குத்தி → குத்திடி]



குத்திடி.

குத்திப்பாய்ச்சு-தல் *kutti-p-pāyccu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கட்டடத்தின் சந்துகளிற் சல்லிச் சுண்ணாம்பினாற் வலுப்படுத்துதல் (கட்டட.நாமா.); to underpin.

[குத்தி + பாய்ச்சு]

குத்திப்பிடுங்கு-தல் *kutti-p-pidungu-,* 5 செ.கு.வி. (v.i.) கக்கல் உணர்வு உண்டாதல்; to have a tendency to vomit. *சோற்றைக் கண்டால் அவனுக்குக் குத்திப் பிடுங்குகிறது (கொ.வ.).*

[குத்தி + பிடுங்கு.]

குத்திப்பேசு-தல் *kutti-p-pēšu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நோவுண்டாம்படி ஒருவரைச் சுட்டிப் பேசுதல்; to make a cutting remark by using wounding words.

[குத்தி + பேசு.]

குத்தியள-த்தல் *kutti-y-aḷa-,* 3 செ.குன்றாவி.(v.t.) அளவுக் கருவியைத் தவசத்தில் பாய்ச்சியளத்தல்; to measure by diving the measure deep into the grain (கொ.வ.).

[குத்தி + அள.]

குத்தியிருமல் *kutti-y-irumal,* பெ.(n.) புகைந்து இருமும் இருமல்; coughing often due to irritation (சா.அக.).

[குத்தி + இருமல்.]

குத்தியோட்டம் *kutti-y-ōṭṭam,* பெ.(n.) இரண்டு விலாப் பக்கங்களிலும் கூரான கம்பிகளைக் குத்திக் கொண்டு கோயிலை வலம்வரும் ஒரு நேர்வு; fulfilment of a vow by going round a temple with sharp spikes thrust on the sides (இ.வ.).

ம. குத்தியோட்டம்

[குத்தி + ஓட்டம்.]

குத்திரக்காரன் *kuttira-k-kāraṉ,* பெ.(n.) வஞ்சகன்; decitful, crafty fellow.

[குத்திரம் + காரன்.]

குத்திரப்பேச்சு *kuttira-p-pēccu,* பெ.(n.) இகழ்ந்துரைக்கும் சுடுசொல்; sarcastic language, cutting speech.

[குத்திரம் + பேச்சு.]

குத்திரம்[1] *kuttiram,* பெ.(n.) 1. வஞ்சகம் (திவா.); deceit, guile, craftiness. 2. இழிவு; vilensss, baseness *"குத்திரமெய்ப் புற்றகத்து" (தாயு.எந்நாட். அன்புநிலை.4).* 3. ஏளனச்சொல்; sarcasam, irony, cutting speech or allusion, insinuation. 4. குரூரம்; cruelty, inhumanity.

ம. குத்திரம்

[குத்து → குத்திலம் → குத்திரம் (இ.வ.).]

குத்திரம்[2] *kuttiram,* பெ.(n.) மலை (பிங்.); hill, mountain.

[குன்று → குற்று → குற்றிரம் → குத்திரம் (கொ.வ.).]

குத்திரம்[3] *kuttiram,* பெ.(n.) பொய் (யாழ்.அக.); falsehood.

[குள் (வளைவு-பொய்) → குட்டிரம் → குத்திரம்.]

குத்திரவித்தை *kuttira-vittai,* பெ.(n.) 1. தந்திரம்; craftiness, subtlety, knavery. 2. கரும்வித்தை; sorcery, black magic.

[குத்திரம் + வித்தை.]

குத்திருமல் *kuttirumal,* பெ.(n.) கக்குவானிருமல்; whooping cough.

[குத்து + இருமல்.]

குத்திலை *kuttilai,* பெ.(n.) தொன்னை; cup made of leaf (இ.வ.);a container made of stitched leaves.

ம. குத்தில

[குத்து + இலை.]

குத்திவை-த்தல் *kutti-vai,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஊற்றுதல்; to pour. விளக்கில் எண்ணெய் ஊற்றி வைத்தல். (உ.வ.). 2. நிறுத்திவைத்தல்; to put right to street. மூட்டையைக் குத்திவை (உ.வ.).

[குத்தி + வை.]

குத்தீட்டி *kuttīṭṭi* பெ.(n.) ஈட்டி வகை; poniard.

[குத்து + ஈட்டி.]

குத்தீட்டி

குத்து[1]-தல் *kuttu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. ஊசி முதலியவற்றால் துளையிடுதல்; to puncture, pierce, bore, perforate. *"உன்னைக் காதுகுத்த" (திவ்.பெரியாழ்.2,3,1).* 2. ஊசியாற் குத்துதல்; to stab, wound. 3. தைத்தல்; to sew. *"பூம்புன லுரையும் புரையக் குத்தி" (பெருங்.வத்தவ.12:48).* 4. கொம்பினால் முட்டுதல்; to gore *"வைவாய் மருப்பினான் மாறாது குத்தலின்" (கலித்.106:12).* 5. முட்டியினாற் குத்துதல், இடித்தல்; to strike with the fist, cuff, buffet, box. *"குத்துமோதை" (கம்பரா. வாலிவ.43).* 6. புள்ளிகுத்துதல்; to insert punctuation marks, to draw a line of dots. 7. முத்திரை குத்துதல்; to stamp, impress. 8. உலக்கையால் இடித்தல்; to pound as in mortar. 9. துப்பாக்கி முதலியன கெட்டித்தல்; to ram down, as in a gun (W.). 10. பறித்தல்; to pick off, pluck, as young coconuts. குரும்பை குத்தினான் (யாழ்ப்.). 11. களைதல் (பிங்.); to remove. 12. பறவை கொத்துதல்; to peck, strike with beak, as a stork, crow. 13. தின்னுதல்; to feed on, pick up, as a bird. *"கானக்கோழி கதிர்குத்த" (பொருந.222).* 14. ஊன்றுதல்; to plant, set, fix in the ground. *"பூந்தலைக் குந்தம் குத்தி" (முல்லைப்.41).* 15. செங்கல் முதலியவற்றைச் செங்குத்தாக வைத்தல்; to set on edge, as bricks in arching terracing. கல்லைக் குத்திக் கட்டு (உ.வ.). 16. கிண்டுதல்; to dig, break up, hollow out *"வையை கொதித்த கண்கரை குத்தி" (திருவிளை. விடை.10).* 17. சுடுசொற் சொல்லுதல்; to make cutting remarks; to use wounding words. அவனை அடிக்கடி குத்தாதே (உ.வ.). 18. சிறுக வார்த்தல்; to pour out as a liquid, in small quantities (கொ.வ.). 19. வருத்துதல்; to afflict, injure. அவன் செய்த பாவம் அவனைக் குத்துகிறது (உ.வ.). 20. தடைசெய்தல்; to thwart, defeat, as a design, to appose, as a measure or scheme.

ம. குத்துக; **க.,** பட. குத்து; **தெ.** குத்து, க்ருத்து; **து.** குத்துனி; **கோத., துட.** குத்; **குட.** குத்த்; **கூ.** குத; **குவி.** குத்தினை; **பிரா.** குத்திங்

[குள் → குத்து.]

குத்து[2]-தல் *kuttu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. தலை முதலியன குத்துநோவெடுத்தல்; to pain, ache, as the head. 2. எதிர்க்கெடுத்தல்; to puke, vomit, belch up. உண்ட சோறு நெஞ்சிற் குத்துகிறது (உ.வ.). 3. உறைமோர் ஊற்றுதல்; to pour buttermilk for curdling. *பாலில் உறைமோர் குத்திவை.*

[குல் → குத்து.]

குத்து[3]-தல் *kuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. துளித் துளியாய் விடுதல்; pouring in drops as into the ear or eye. 2. எண்ணெய் குத்தல்; letting oil in drops. 3. கத்தியாற் குத்தல்; stabing with a knife (சா.அக.).

[குல் → குத்து.]

குத்து[3] *kuttu,* பெ.(n.) 1. கைமுட்டியால் தாக்கும் இடி; blow with the fist, cuff, buffet, box. *"கைக்குத்தது படலும்" (கம்பரா.முதற்போ.176).* 2. ஈட்டி முதலிய வற்றால் தாக்குகை; thrust, stab, puncture, prick, incision, goading. 3. உரலிற்குத்துகை; pounding as in a mark. 4. புள்ளி; dot, point, stop, punctuation mark. 5. நோவு; acute pain, twing, ache. *"தலைகுத்துத் தீர்வு சாத்தற்கு" (வள்ளுவமா.11).* 6. பிடி; handful. ஒருகுத்துச் சோறு (உ.வ.). 7. செங்குத்து; perpendicularity, steepness. 8.

தெரு முதலியவற்றின் பாய்ச்சல்; inauspicious position as of a house opposite to a street, or a well opposite to a doorway.

ம. குத்து

[குல் → குத்து.]

குத்து *kuttu,* பெ.(n.) சணல்; sunn hemp.

[குள் → குத்து.]

குத்துக்கட்டை *kuttu-k-kaṭṭai,* பெ.(n.) ஒன்றைத் தாங்குவதற்கு நட்டு நிறுத்தப்படும் கட்டை; log of wood planted, as a prop.

[குத்து + கட்டை.]

குத்துக்கண்டங்கத்தரி *kuttu-k-kaṇḍaṅkattari,* பெ.(n.) கொத்துக் கொத்தாக முளைக்குங் காட்டு கண்டங்கத்தரி; cluster brinjal (சா.அக.).

[குத்து + கண்டங்கத்தரி.]

குத்துக்கம்பி *kuttu-k-kambi,* பெ.(n.) காது முதலியன குத்துங் கம்பி; wire used to pierce the ear or nose.

[குத்து + கம்பி.]

குத்துக்கம்பு *kuttu-k-kambu,* பெ.(n.) நுனி கூர்மையான கழி; stick with a sharp end.

ம. குத்துக்கம்பு

[குத்து + கம்பு]

குத்துக்கரணம் *kuttu-k-karaṇam,* பெ.(n.) குட்டிக் கரணம்; somersault (W.)

[குட்டிக்கரணம் → குத்துக்கரணம்.]

குத்துக்கரந்தை *kuttu-k-karandai,* பெ.(n.) செடிவகை; a species of fleabane.

[குத்து + கரந்தை.]

குத்துக்கல் *kuttu-k-kal,* பெ.(n.) 1. செங்குத்தான கல்; stone standing on edge. 2. செங்குத்தாக வைத்துக் கட்டுஞ் செங்கல்; bricks placed on edge, as in arching, terracing. 3. ஏரிநீரின் ஆழத்தைக் காட்டும் அளவுகல்; stone marking the depth of water in a tank.

ம. குத்துகல்லு

[குத்து + கல்.]

குத்துக்கழி *kuttu-k-kaḻi,* பெ.(n.) கட்டை வண்டியின் பாரில் இருபக்கத்திலும் நடும் கழி; short stout stokes planted on either side of a topless cart.

[குத்து + கழி.]

குத்துக்காயம் *kuttu-k-kāyam,* பெ.(n.) ஆயுதங் கொண்டு குத்துவதனால் உண்டாகிய புண்; incised wound, stab.

[குத்து + காயம்.]

குத்துக்காரி *kuttu-k-kāri,* பெ.(n.) கூலிக்கு நெல் முதலியன குற்றுபவள்; woman whose work is to pound paddy,lime etc.

[குத்து + காரி]

குத்துக்காரை[1] *kuttu-k-kārai,* பெ.(n.) காரைச் செடி வகை; a small species of *kārai* shrub.

[குத்து + காரை]

குத்துக்காரை[2] *kuttu-k-kārai,* பெ.(n.) குற்றிய கலவைச் சுண்ணாம்பு; mortar mixed and pounded.

[குத்து + காரை]

குத்துக்கால் *kuttu-k-kāl,* பெ.(n.) 1. தாங்குகால் (C.E.M.) ; upright stand of a frame, as of a car, side post; support, as of a roof. 2. நெசவுத் தறியின் ஓர் உறுப்பு (M.M.41.); upright post of a loom. 3. தடை; obstruction, impediment, hindranece. *"பணி குத்துக்காற்படாது செய்விப்பது" (T.A.S. i,6).*

[குத்து + கால்]

குத்துக்காலிடு-தல் *kuttu-k-kāl-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) காலைக் குத்திட்டு உட்காருதல்; to sit upright with folded legs.

[குத்து + கால் + இடு.]

குத்துக்காற்சம்மட்டி *kuttu-k-kāṟ-cam-maṭṭi,* பெ.(n.) செடிவகை; a plant, Indigofera pancifolia.

[குத்து + கால் + சம்மட்டி.]

குத்துக்காற்சிமிட்டி *kuttu-k-kāṟ-cimiṭṭi,* பெ.(n.) கீல்வாதம்; முழங்கால் வளி முதலிய வாதவலிக்குப் பயன்படுத்தும் ஒரு பச்சிலை; a plant useful for arthritic and rheumatic complaints (சா.அக.).

[குத்து + கால் + சிமிட்டி.]

குத்துக்காற்பயறு *kuttu-k-kāṟ-payaṟu,* பெ.(n.) உளுத்தம் பயறு; black gram (சா.அக.).

[குத்துக்கால் + பயறு.]

குத்துக்குடைச்சல் *kuttu-k-kuḍaiccal,* பெ.(n.) வளியால் (வாயுவால்) உண்டாகும் நோவு; pinching or shooting moving pain as from rheumatism.

[குத்து + குடைச்சல்.]

குத்துக்குத்தாக முளை-த்தல்; *kuttu-kuttāka-muḷai-,* 4 செ.கு.வி. (n.) கொத்துக் கொத்தாக முளைத்தல்; growing in clusters (சா.அக.).

[குத்துகுத்தாக + முளை.]

குத்துக்குநில்-தல் (குத்துக்குநிற்றல்) *kuttu-kku-nil-,* 14 செ.கு.வி.(v.i.) 1. எதிர்த்து நிற்றல்; to buffet and oppose, to contend, to contest hotly. *உண்பான் உடுப்பான் சிவப்பிராமணன் குத்துக்கு நிற்பான் வீரமுட்டி.* 2. வாதிடுதல்; to haggle, as in purchases.

[குத்துக்கு + நில்.]

குத்துக்குமிளன் *kuttu-kumiḷaṉ,* பெ.(n.) கண்ணில் கெட்ட சவ்வுச் சதையை வளர்ப்பிக்கும் ஒரு கடைக்கண் நோய்; a disease of the corner or angle of the eye developing a membraneous growth (சா.அக.).

[குத்து + (குமிழன்) குமிளன்.]

குத்துக் குளம்பு *kuttu-k-kuḷambu,* பெ.(n.) குதிரை முதலிய விலங்கின் நெட்டான குளம்பு; hoof of a horse or an ox, slightly vertical as indicative of its high speed in running.

[குத்து + குளம்பு.]

குத்துக்கூலி *kuttu-k-kūli,* பெ.(n.) நெல் முதலியவை குற்றுவதற்குக் கொடுக்குங் கூலி; wages for husking paddy.

ம. குத்துகூலி

[குத்து + கூலி.]

குத்துக்கொம்பு *kuttu-k-kombu,* பெ.(n.) விலங்கின் நேர்கொம்பு; straight, erect horn of animal.

[குத்து + கொம்பு.]

குத்துக்கோடரி *kuttu-k-kōḍari,* பெ.(n.) குத்திவெட்டுங் கோடரி; axe.

[குத்து + கோடரி.]

குத்துக்கோரை *kuttu-k-kōrai,* பெ.(n.) கோரை வகை; wet-land sedge.

[கொத்து → குத்து + கோரை.]

குத்துக்கோல் *kuttu-k-kōl,* பெ.(n.) 1. தாற்றுக் கோல்; goad. 2. பரிக்கோல் (திருக்கோ.111, உரை); elephant hook. 3. முனையிற் கூரிய இரும்புள்ள கோல் (சிலப்.16:142. அரும்.); pike-staff.

ம. குத்துக்கோல்

[குத்து + கோல்.]

குத்துச்சண்டை *kuttu-c-caṇḍai,* பெ.(n.) ***குத்துப்போர்*** பார்க்க; see *kuttu-p-pōr.*

[குத்து + சண்டை.]

குத்துச்செடி *kuttu-c-ceḍi,* பெ.(n.) சிறுசெடி; low shrub.

[கொத்து → குத்து + செடி.]

குத்துண்(ணு)-தல் *kuttuṉ-,* 5 செ.கு.வி.(v.i.) செங்குத்தாக நிற்றல்; to stand upright. *"இறுவரை போலக் குத்துண்டு நிற்கும் இருகரை" (பரிபா.7,உரை.).*

[குத்து+ உண் .]

குத்துணி[1] *kuttuṇi,* பெ.(n.) 1.குத்துப்பட்டவன்; one who has been stabbed. 2. இழிவுபட்டவன்; a scorn to persons, despised person.

[குத்து + உணி – குத்துணி.]

குத்துணி[2] *kuttuṇi,* பெ.(n.) பட்டுகலந்த துணிவகை; (G.Tj.D.118); a cloth woven with a silk and cotton woof.

Mhr. khutani.

[குத்து → குத்துணி.]

குத்துணி[3] *kuttuṇi,* பெ.(n.) ஆடைவகை (யாழ்.அக.); a kind of cloth.

[குத்து + உணி → குத்துணி.]

குத்துத்திராய் *kuttu-t-tiray,* பெ.(n.) கீரைவகை (M.M.902); wild Indian chick weed edible herb.

[குத்து + திராய்.]

குத்துப்பகன்றை *kuttu-p-pagaṉṟai,* பெ.(n.) 1. குத்துச் சீந்தில்; a species of moon creeper. 2. ஒரு பகன்றைச் செடி; a species of bind-weed (சா. அக.).

[குத்து + பகன்றை.]

குத்துப்பசளை *kuttu-p-pasalai,* பெ.(n.) கொத்துப் பசளை; heart-leaved malabar night shae.

[குத்து + பசளை.]

குத்துப்பலா *kuttu-p-palā,* பெ.(n.) குட்டைப் பலாமரம்; a species of stunted jack. It is capable of turning milk into curd (சா.அக.). இது பாலைத் தயிராக மாற்றும்.

[குத்து + பலா.]

குத்துப்பழி *kuttu-p-paḻi,* பெ.(n.) பெருஞ்சண்டை; violent quarrel.

[குத்து + பழி.]

குத்துப்பன்னீர்[1] *kuttu-p-paṉṉīr,* பெ.(n.) குத்தாக முளைக்கும் பன்னீர்ச் செடி; dew flower plant (growing in cluster) (சா.அக.).

[குத்து + பன்னீர்.]

குத்துப்பன்னீர்[2] *kuttu-p-paṉṉīr,* பெ.(n.) மரவகை (யாழ்.அக.); a kind of tree.

[குத்து + பன்னீர்.]

குத்துப்பாடு *kuttu-p-pāḍu,* பெ.(n.) 1. பிறர் மனத்தைத் துன்புறுத்துகை; insinuation, covert insuelt. 2. குற்றம்; fault, defect. அந்த வேலைக்குக் குத்துப்பாடு சொல்லுகிறான் (உ.வ.).

ம. குத்துபாடு

[குத்து + பாடு.]

குத்துப்பாரை *kuttu-p-pārai,* பெ.(n.) குத்தப் பயன்படுத்தும் கடப்பாரை; crow bar used for digging.

க. குத்துவாரெ

[குத்து + பாரை.]

குத்துப்பாலாடை *kuttu-p-pālāḍai,* பெ.(n.) குட்டையாக வளரும் பலா மரம்; a species of stunted jack (சா.அக.).

[குத்து + பாலாடை.]

குத்துப்பாறை *kuttu-p-pāṟai,* பெ.(n.) 1. செங்குத் தான பாறை; steep rock. 2. நெற்குற்றும் பாறை; shelf of rock where paddy is pounded (இ.வ.). 3. மலைப்பக்கத்திலுள்ள செங்குத்தான கற்குவியல்; small perpendicular heap of stones in the vicinity of a rock.

ம. குத்துபாற

[குத்து + பாறை.]

குத்துப்பிராய் *kuttupirāi,* பெ.(n.) கும்பலாய் வளரும் ஒரு வகைப் பிராய்; cluster pirai (சா.அக.).

[குத்து + பிராய்.]

குத்துப்புரை *kuttu-p-purai,* பெ.(n.) நெற்குற்றும் இடம்; a shed where paddy is pounded.

ம. குத்துபுர

[குத்து + புரை.]

குத்துப்புள் *kuttu-p-pul,* பெ.(n.) கிட்டிப்புள் செங்குத்தாய் விழும் இடம்; the place where the pul in the game of tip-cat falls on edge when struck (J).

[கிட்டிப்புள் → குட்டிப்புள் → குத்துப்புள் (கொ.வ.).]

குத்துப்பூகியம் *kuttu-p-pūgiyam,* பெ.(n.) பாவட்டை; Indian pavetta (சா.அக.).

[குத்து + பூகியம்.]

குத்துப்போர் *kuttu-p-pōr,* பெ.(n.) 1. செங்குத்தாக வைக்குங் கதிர்ச்சூடு; the first layer of sheaves in a stack, placed with ears uppermost. 2. குத்துச்சண்டை; boxing, fisticuffs. 3. தீராப் பகை; violentenmity. அவ்விரு குடும்பத்துக்கும் எப்பொழுதும் குத்துப்போர்தான் (உ.வ.).

ம. குத்துபோர்

[குத்து + போர்.]

குத்துமதிப்பாய் *kuttu-madippāy,* (வி.எ.) (adv.). ஓர் அளவாய்; approximately. குத்து மதிப்பாய் அதன் விலையைச் சொல் (உ.வ.).

[குத்து + மதிப்பு + ஆய்.]

குத்துமதிப்பு *kuttumāthi-p-pu,* பெ.(n.) தோராயமாகக் குறிப்பிடும்அளவு; an estimate by guess.

ம. குத்துமதிப்பு

[குத்து + மதிப்பு]

குத்துமானம் *kuttu-māṉam,* பெ.(n.) கட்டட வளைவுக்கு (கமானுக்கு) மேல்குத்தாக வைக்கும் செங்கல் வேலை; brick-work just above an arch with bricks placed on edge.

[குத்து + மானம்.]

குத்துமி *kuttumi,* பெ.(n.) தவிடு சலிக்கப்பெறாத உமி; husk with bran separated from rice by pounding.

[குத்து + உமி.]

குத்துமுள் *kuttumul,* பெ.(n.) குதிரைமுள்; spur.

ம. குத்துமுள்ளு

[குத்து + முள்.]

குத்துயிர்கொலையுயிர் *kuttuyir-kolaiyuyir-,* பெ.(n.) கத்திக் குத்தினால் ஏற்பட்ட அஞ்சத்தகு நிலைமை; an endangered condition of life in a case of stabbing condition of life and death (சா.அக.).

[குற்றுயிர் → குத்துயிர் + கொலையுயிர்.]

குத்துவல்லயம் *kuttuvallayam,* பெ.(n.) கையிற் கொண்டு குத்துதற்கு உதவும் ஈட்டி; hand javelin.

[குத்து + வல்லயம்.]

குத்துவலி *kuttu-vali,* பெ.(n.) இசிவுநோவு; shooting, pinching pain. தேகமெல்லாம் குத்துவலி யாயிருக்கிறது (உ.வ.).

[குத்து + வலி. வலி = வலிப்பு.]

குத்துவலிப்பிடிப்பு *kuttuvali-p-piḍippu,* பெ.(n.) மேகத்தினால் உடம்பின் மூட்டு அல்லது பொருத்து களில் அழற்சி கண்டு இறுகி அசைக்கவொட்டாமற் செய்யும் ஓர் வூதை (வாத) நோய்; acute articular rheumatism frequently producing ankylosis of the joints (சா.அக.).

[குத்துவலி + பிடிப்பு.]

குத்துவலை *kuttu-valai,* பெ.(n.) மீன்பிடிக்கும் வலை வகையுள் ஒன்று (பர.); a fishing-net.

ம. குத்துவல

குத்துவா *kuttuvā,* பெ.(n.) கடல்மீன்வகை; a herring, golden, glossed with purple.

[குத்துவாய் → குத்துவா (கொ.வ.).]

குத்துவாகை *kuttuvāgai,* பெ.(n.) நிலவாரை; east indian senna (சா.அக.).

[குத்து+வாகை.]

குத்துவாதம் *kuttuvādam,* பெ.(n.) ***குத்தூதை*** பார்க்க; see *kuttūdai.*

[குத்து + வாதம்.]

குத்துவாதை *kuttu-vādai,* பெ.(n.) பசிவருத்தம்; pain of hunger. *"குத்துவாதை மிக நலிந்து" (உத்தரா.இராவணன் பிறப்.18).*

[குத்து + வாதை.]

குத்துவாமீன் *kuttuvā-mīṉ,* பெ.(n.) ***குத்துவா*** பார்க்க; see *kuttuvā.*

[குத்துவாய் + மீன் – குத்துவாய் மீன் → குத்துவா மீன்.]

குத்துவாய்[1] *kuttu-vāy,* பெ.(n.) கடிவாய்; the seat of bite. 2. வெட்டுவாய்; the mouth of an incised wound (சா.அக.).

[குத்து + வாய்.]

குத்துவாய்[2] *kuttuvāy,* பெ.(n.) பூச்சி முதலியவற்றின் கடிவாய் (யாழ்.அக.); spot where a scorpion has stung or an insect has bitten.

[குத்து + வாய்.]

குத்துவாள் *kuttuvāl,* பெ.(n.) உடைவாள்; poniard, dagger.

[குத்து + வாள்.]

குத்துவான் *kuttuvāṉ,* பெ.(n.) ஊசி, அச்சங் காரணமாக இரவில் வழங்கும் பெயர்; needle, the word being used only at nights from a superstitious fear.

[குத்து → குத்துவான். அச்சுறுத்தும் நோக்கில் இடப்படும் பெயர்.]

குத்துவிளக்கு[1] *kuttuviḷa-k-ku,* பெ.(n.) 1. கூரான அடிமுனையை நிலத்தில் குத்தி நிலையாக நிறுத்தும் விளக்கு; standing brass lamp. *"குத்து விளக்கெரிய" (திவ்.திருப்பா.19).* 2. பாதமும், தண்டும் அகலமாக அமைந்த மாழை விளக்கு (குத்திட நிற்கும் விளக்கு); standing brass lamp. *"தொண்டைமானார் வார்ப்பித்துக் குடுத்த திருக் குத்துவிளக்கு இரண்டில்" (தெ.கல்.தொ.7கல்93).*

ம. குத்துவிளக்கு; க. குத்துவெளகு.

[குத்து + விளக்கு.]



குத்துவிளக்கு

குத்துவெட்டு *kuttuveṭṭu,* பெ.(n.) 1. சண்டையிற் படும் காயங்கள்; stabs and cuts, as in fighting with deadly weapons. 2. தீராப்பகை; violent enmity. அவனுக்கும் இவனுக்கும் குத்து வெட்டாயிருக்கிறது (உ.வ.). 3. எழுத்துக் கிறுக்கு; dots and strokes, as erasures. 4. நாணயம் முதலிய வற்றில் படும் பழுது; blemishes, as in coins from wear and tear (கொ.வ.).

[குத்து + வெட்டு.]

குத்துளி *kuttuḷi,* பெ.(n.) துளை உண்டாக்கப் பயன்படுத்தும் ஒரு வகை உளி; a kind of chrel used to make holes.

ம. குத்துளி

[குத்து + உளி.]

குத்துளைச்சல் *kuttuḷai-c-cal,* பெ.(n.) பூச்சி யாலுண்டாகும் காதுவலி;ear ache or acute pain in the ear due to some microbes (சா.அக.).

[குத்து + உளைச்சல்.]

குத்துறுத்தல் *kutturuttal,* பெ.(n.) தைத்தல்;sewing.

[குத்து + உறுத்தல்.]

குத்துனாம்பழம் *kuttunāmpaḻam,* பெ.(n.) பேரீச்சம்பழம்; wild date fruit (சா.அக.).

[கொத்து → கொத்தனம் → குத்தனம் + பழம் – குத்தனாம் பழம்.]

ஒ.நோ.வித்து–தெ. வித்தனம்.

குத்துனி *kuttuṉi,* பெ.(n.) ***குத்துணி*** பார்க்க; see *kuttuṇi* (G.Tr. 2.118).

[குத்து + உண் – குத்துண் → குத்துணி →குத்துனி.]

குத்தூசி *kuttūši,* பெ.(n.) 1. குத்தித் தைக்கும் ஊசிவகை; a pricker, bradawl. 2. கூரைவேயும் ஊசி; long needle used for thatching or hedging. 3. கோணி மூட்டைகளில் நெல் முதலியவற்றைக் குத்தியெடுக்கும் கருவி; testing needle for thrusting into a sack of grain and bringing out a few grains as a specimen.

ம. குத்துசூசி; த. ஊசி > skt. sūci

[குத்து + ஊசி.]

குத்தூதை *kuttūdai,* பெ.(n.) ஊதை மிகுந்து உடம்பு நொந்து, சயித்தியமும் ஒக்கக் கூடி எரிச்சலையும் குத்தலையும் உண்டாக்கும் ஒரு நோய்; a kind of acute rheumatism due to the aggravated condition of vatha (wind) it is marked by bodily pain, burning sensation and piercing pain in the affected parts (சா.அக.).

[குத்து + ஊதை.]

குத்தெனவிழு–தல் *kuttenaviḻu-,* 2 செ.கு.வி.(v.i.) 1. தலைகீழாய் விழுதல்; to fall headlong. 2. செங்குத்தாக விழுதல்; to fall on edge or in a perpendicular position.

[குத்து + என + விழு.]

குத்தோக்காளம் *kuttō-k-kāḷam,* பெ.(n.) வயிற்றுப் புரட்டலோடு வரும் கக்கல்; vomiting attended with twisting pain in stomach.

[குத்து + ஒக்காளம்.]

குதக்கு–தல் *kuda-k-ku-,* 5 செ.குன்றாவி.(v.t.) மெல்லுதல்; to turn about edibles in the mouth munch.

[உதப்பு→ குதப்பு→ குதக்க.]

குதக்கேடு[1] *kudakkēḍu-,* பெ.(n.) மூலநோய்; piles.

[குதம் + கேடு.]

குதக்கேடு[2] *kuda-k-kēḍu,* பெ.(n.) சீர்கேடு (யாழ்.அக.); ruin; degeneration.

[குதை + குதம் + கேடு.]

குதகீலம் *kuda-kīlam,* பெ.(n.) மூலநோய்; piles, hemorrhoids.

[குதம் + கீலம்.]

குதட்டு–தல் *kudaṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1.***குதப்பு–தல்*** பார்க்க; see *kudapu-*."குமுதவாய் குதட்டிப் பழங்கொடத்தை" *(கல்லா.49).* 2. குழறிப் பேசுதல்; to babble, prattle "*தீஞ்சொல்.... குதட்டியே*" *(பெரியபு.கண்ணப்.22).*

[குது → குதட்டு.]

குதண்டகம் *kudaṇḍagam,* பெ.(n.) ஆதொண்டை (சா.அக.);thorny creeper.

[குதண்டம் → குதண்டகம்.]

குதநாயகம் *kudanāyagam,* பெ.(n.) பெருமருந்து; Indian birth-wort (சா.அக.).

[குதம் + நாயகம்.]

குதநெகிழ்ச்சி *kuda-negilcci,* பெ.(n.) அண்டு தள்ளுகை ; prolapsus.

[குதம் + நெகிழ்ச்சி.]

குதப்பன் *kudappan,* பெ.(n.) சவரியாற்செய்த தேய்ப்புக்கருவி (பெரிய.24); coir brush.

[குது + குதப்பன்.]

குதப்பு-தல் *kudappu-,* 5 செ.குன்றாவி.(v.t.) மெல்லுதல்; to turn about food in the mouth, munch.

[உதப்பு → குதப்பு.]

குதப்பூரிகம் *kudappūrigam,* பெ.(n.) சம்பு நாவல்; large fruit jaumoon (சா.அக.).

[குதுப்பு → குதுப்பூரி → குதுப்பூரிகம் → குதப்பூரிகம்.]

குதப்பை *kudappai,* பெ.(n.) மலக்குடலின் உட்சவ்விலுண்டாகும் பை; sacciform muscous membrane of the rectum. 2. குதப்பைப் பிணி; sacciform disease of the anus (சா.அக.).

[குது → குதுப்பு → குதப்பை.]

குதபம் *kudapam,* பெ.(n.) 1. பதினைந்தாகப் பகுக்கப்பட்ட பகற்காலத்தின் எட்டாம் பாகம் (சங்.அக.); midday, the eighth of the 15 divisions of the daytime. 2. தருப்பை (மூ.அ.); darbha grass.

[குத்து → குத்துவம் → குத்துபம் → குதபம் (கொ.வ.).]

குதபன் *kutapan,* பெ.(n.) 1. சூரியன்; Sun. 2. தீ; fire (யாழ்.அக.).

[குல் (எரிதல்) → குதவன் → குதபன்.]

குதபாகம் *kudapāgam,* பெ.(n.) குழந்தைகளுக்கு எருவாயில் ஏற்படும் சீழ்ஒழுக்கு; suppuration in the anal region of the child (சா.அக.).

[குதம் + பாகம்.]

குதம்[1] *kudam,* பெ.(n.) வேள்வி; homa, oblation *'குதஞ்செய்யு மங்கி' (திருமந்.423).*

[குத்து → குத்தும் → குதம் (தருப்பைப்புல் கொண்டு செய்யும் வேள்வி.]

குதம்[2] *kudam,* பெ.(n.) தருப்பை (மலை.); darba grass.

[குத்து → குத்தம் → குதம் (குத்துப்புல்).]

குதம்[3] *kudam,* பெ.(n.). மலங்கழியும் வாயில்; anus. *"இலிங்கத் தொருகா லைங்காற் குதத்தில்" (காசிக. இல்லொழுக். 19).*

தெ. குத்த

[குல் (துளை) குத்து → குத்தம் → குதம்.]

குதம்[4] *kudam,* பெ.(n.) தும்மல்; sneeze. *"கோவின் குதமது நாசம்" (செகராச. யாத்திரை.22: சங்.அக.).*

[குது → குதம்.]

குதம்[5] *kudam,* பெ.(n.) வெங்காயம் (மலை.); onion.

[குது → குதம்.]

குதம்பு[1]**-தல்** *kudambu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. துணியை நீரில் அலசுதல் ; to wash cloth gently in water, causing splash. 2. பனம்பழத்தின் தோலை அலசுதல்; to wash the fibre skin or other parts of palmyra fruit in order to get the pulp.

[குது → குதும்பு → குதம்பு.]

குதம்பு[2]**-தல்** *kudambu-,* 15 செ.கு.வி.(v.i.) 1. கொதித்தல்; to boil up, to bubble up, as boiling water. 2. வெகுளியடைதல்; to get angry, furious.

[குது → குதும்பு → குதம்பு.]

குதம்பை[1] *kudambai,* பெ.(n.) 1. காது பெருக்கு வதற்காக இடும் ஓலை, சீலை முதலியவற்றின் சுருள்; role of palmyra leaves or cloth worn in the ear-lobe to widen the perforation. *"சீலைக் குதம்பை யொருகாது" (திவ்.பெரியாழ்.3.3:1).* 2. காதணிவகை;

a kind of ear-ring. *"திருக் குதம்பை யொன்று பொன் இருகழஞ்சே எட்டு மஞ்சாடி"* *(S.I.I.II,143)*.3. காதில் குதம்பை அணிந்த பெண்; lady wearing kudambai ear-ring.

[குதம்பு → குதம்பை.]

குதம்பை² *kudampai,* பெ.(n.) பூடு வகை (யாழ்.அக.); a shrub. 2. பெண்; women.

[குடம்பு → குதம்பு → குதம்பை. குதம்பை = காதில் குதம்பை அணிந்தவள்).]

குதம்பைச்சித்தர் *kudambai-c-cittar* பெ.(n.) தம் பெயரால் ஒரு சிறு நூல் இயற்றிய ஒரு சித்தர்; a cittar, author of a small work named after him.

[குதம்பை + சித்தர்.]

காதில் குதம்பை அணிந்த பெண்ணைக் குதம்பாய் என விளித்துப் பாடும் நூலியற்றியதால் குதம்பைச் சித்தர் எனப் பெயர் பெற்றார்.

குதமூலம் *kuda-mūlam,* பெ.(n.) எருவாயில் உண்டாகும் முளைமூலம், இதனின்று சீழும் இரத்தமும் ஒழுகும்; small round tumour situated at the verge of anus and attended with the discharge of pus and blood (சா.அக.).

[குதம் + மூலம்.]

குதயந்திரம் *kuda-yandiram,* பெ.(n.) எருவாயைச் சோதிப்பதற்காகவும், கார மருந்திடவும் பயன்படும் ஒரு கருவி; an instrument containing two apertures, one for seeing the interior of the rectum and the other for applying an alkali (சா.அக.).

[குதம் + யந்திரம்.]

குதர்¹-தல் *kudar-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கோதியெடுத்தல்; to peck, at, stroke. *"சேவல்... மென்பூக்குதர் செம்மலூரன்"* *(திருக்கோ.369).* 2. அடியோடு எடுத்தல்; to lift up, as a stone, to throw up, as clouds on a furrow. *"திண்கோட்டின் வண்ணப் புற்றங்குதர்ந்து"* *(திருக்கோ .346).* 3. குதர்க்கவாதம் பண்ணுதல் (இனி.நாற்.12); to argue perversly.

[குது → குதர்.]

குதர்² *kudar,* பெ.(n.) பிரிவு; separation.

[குது → குதர்.]

குதர்க்கக்காரன் *kudarkka-k-kāraṉ,* பெ.(n.) வேண்டுமென்றே வழக்காடுபவன்; frivolous disputant, sophist; disputatious person.

[குதர்க்கம் + காரன்.]

குதர்க்கம் *kudarkkam,* பெ.(n.) 1. வேண்டுமென்றே புரியும் வழக்கு; fallacious, captious argument, sophistry. *"கோதுறுங் குதர்க்க மென்றே கோர வீரவாளி"* *(பிரபோத.34,22).* 2. குந்தகம்; impediment in business, embarrassment.

[குது → குதுர் → குதுர்க்கம் → குதர்க்கம்.]

குதர்க்கி *kudarkki,* பெ.(n.) வீண்பேச்சு பேசுபவன்; frivolous disputant, sophist.

[குதுர்க்கம் → குதர்க்கம்.]

குதர்செல்(லு)-தல் *kudar-cel-,* 13 செ.கு.வி.(v.i.) நெறிதவறிச் செல்லுதல்; to deviate from the right course, miss the way. *"குதர்சென்று கொள்ளாத கூர்மை"* *(இனி.நாற்.12).*

[குது → குதுர் → குதர் + செல்.]

குதல்(லு)-தல் *kudal-,* 13 செ.குன்றாவி. (v.t.) 1. குத்தல் ; to prick, pierce. 2. சினத்தல்; to dig up and scatter.

[குல் → குத்து → குதல்.]

குதலை *kudalai,* பெ.(n.) மழலைச் சொல்; lisps, prattle of children. *"இதழ்குவித்துப் பணித்த குதலையுந் தெரியாது"* *(கல்லா.5).* 2.இனியமொழி; soft talk, pleasant speech, as of young girls. *"குதலைச் செவ்வாய்க் குறுந்தொடி மகளிர்"* *(சிலப்.30:114).* 3. அறிவில்லான் (திவா.); simpleton, ignorant fellow.

[ஒருகா. குழறு → குதரு → குதலை.]

குதலைமை *kudalaimai,* பெ.(n.) 1. பொருள் விளங்காமை (திருக்கோ.140,உரை); indistinctness as in child's prattle. 2. தளர்ச்சி; failure of strength;

straitened circumstances. *"குதலைமை தந்தைக்கட் டோன்றின்" (நாலடி.197).*

[குழறு → குதரு → குதலு → குதலை → குதலைமை.]

குதவளையம் *kuḍa-vaḷaiyam,* பெ.(n.) எருவாயைச் சுருக்கும் வண்ணம் வாய்ந்த வளையம்; circular or ring like muscles which close the external orifice of the anus (சா.அக.).

[குதம் → வளையம்.]

குதவாய் *kuḍavāy,* பெ.(n.) எருவாய்; anal orifice (சா.அக.).

[குதம் → வாய்.]

குதற்கம்மல் *kuḍaṟ-kammal,* பெ.(n.) ஒரு வகைக் கண்ணோய்; an eye disease (சா.அக.).

[குத்தல் + கம்மல் – குத்தற்கம்மல் → குதற்கம்மல்.]

குதற்று *kudaṟṟu,* பெ.(n.) நெறி தவறுகை; missing the way, deviating from the right course. *"குதற்று வல்லசுரர்கள் கூற்றம்" (திவ். திருவாய். 10,1:6).*

[குதறு → குதற்று.]

குதறாதி *kudaṟādi,* பெ.(n.) புளி; tamarind (சா.அக.).

[குதல் + ஆதி – குதலாதி → குதறாதி.]

குதறு[1]-தல் *kudaṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. சிதறுதல்; to dig up and scatter, to tear up; to scratch up and scatter, as fowls, to spill out. 2. கிண்டுதல்; to stir up, loosen, grub up, as earth about plants.

[குதல் → குதறு.]

குதறு[2]-தல் *kudaṟu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நெறி தவறுதல் (திவ்.திருவாய்.10.1:6.அரும்.); to deviate from the right course, to go astray, to miss the way. 2. புண் மிகுதல்; to be blistered, covered with sores. 3. குலைதல்; to become loose, rough, daranged, dishevelled, as the hair, to be disturbed, inflamed; as the eyes (W.).

[குதல் → குதறு.]

குதனு *kuḍaṉu,* பெ.(n.) அழகில்லாத உடம்பு; body with disagreable appearance (சா.அக.).

[குதல் → குதனு.]

குதனை *kudaṉai,* பெ.(n.) ***குதனைக்கேடு*** பார்க்க; see *kudaṉai-k-kēḍu.*

[குதல் → குதனை.]

குதனைக்கேடு *kudaṉai-k-kēḍu,* பெ.(n.) 1. புறக்கணிப்பு (அலட்சியப்போக்கு); negligence, slovenliness. 2. துப்புரவின்மை; filthiness. 3. திறமையின்மை; want of dexteritty, clumsiness, awkwardness.

[குதல் → குதனை + கேடு.]

குதாங்குரம் *kudāṅguram,* பெ.(n.) மூலமுளை; piles.

[குதம் → அங்குரம் (முளை) – குதங்குரம் – குதாங்குரம் (கொ.வ.).]

குதாம்பு[1] *kudāmbu,* பெ.(n.) பண்டசாலை; godown.

[குடாப்பு → குடாம்பு → குதாம்பு.]

குதாம்பு[2] *kutāmpu,* பெ.(n.) அரிசி குத்தும் யந்திரசாலை; rice mill.

[குத்து → குத்தாம்பு → குதாம்பு.]

குதாவடை *kudāvaḍai,* பெ.(n.)***குதாவிடை*** பார்க்க; see *kudāviḍai*

[குதாவிடை → குதாவடை.]

குதாவிடை *kudāviḍai,* பெ.(n.) 1. அலங்கோலம்; embarrassment, dislocation in business. *"காரியம் குதாவிடையாயிருக்கிறது" (ய.).* 2. காலச் சுணக்கம்; delay.

[குதிரா + இடை – குதிராவிடை → குதாவிடை.]

குதானன் *kudāṉaṉ,* பெ.(n.) தாளி; convolvulus creeper; american bindweed (சா.அக.).

[குத்து → குத்தன் → குத்தனன் → குதானன்.]

குதி[1]-த்தல் *kudi-*, 4 செ.கு.வி.(v.i.) 1. பாய்தல் (திவா.); to jump, leap, spring, bound. 2. நீர் முதலியன எழும்பிவிழுதல்; to splash, as water, to spurt out. *"மலர் தேன் குதிக்க" (தஞ்சைவா.67).* 3. கூத்தாடுதல்; to dance with joy, frolic. 4. செருக்குக் கொள்ளுதல்; to be hautghy, arrogant. அதிகமாகக் குதிக்கிறான் (உ.வ.).

[குது → குதி.]

குதி[2]-த்தல் *kudit-*, 4 செ.குன்றாவி.(v.t.) கடந்து விடுதல்; to leap over; overcome, escape from. *"கூற்றங் குதித்தலுங் கைகூடும்" (குறள். 269).*

[குது → குதி.]

குதி[3] *kudi*, பெ.(n.) 1. குதிப்பு; jump, leap. ஒரு குதி குதித்தான்(உ.வ.). 2. குதிங்கால்;heel of the foot. *"குதிபந்தி னிரம்பு பேரெழில் வாய்ந்திடில்" (காசிக. மகளிர்.10).*

[குது → குதி.]

குதி[4] *kudi*, பெ.(n.) முயற்சி (யாழ்.அக.); endeavour.

[குல் → குது → குதி.]

குதி[5]-தல் *kudi*, 4 செ.குன்றாவி.(v.t.) காலைத் தளைதல்; to bind, as the legs of animals.

[குல் → குத்து → குதி.]

குதிக்கள்ளன் *kudi-k-kallan*, பெ.(n.) குதிப் பிளவை (M.L.) ; boil or abscess on the heel.

[குதி + கள்ளன்.]

குதிக்கால் *kudi-k-kāl*, பெ.(n.) ***குதிங்கால்*** பார்க்க;see *kudi-ṅ-kāl.*

[குதி + கால்.]

குதிக்கால் மேகப்புடை *kudikkālmēga-p-puḍai*, பெ.(n.) மேகத்தினால் குதிகால் எலும்பு வளர்ந்து பிதுங்கிக் காணல்; exostoses on the heal due to gonorrheal infection (சா.அக.).

[குதிக்கால் + மேகம் + புடை.]

குதிக்கால்வலி *kudi-k-kālvali*, பெ.(n.) குதிக்கால் நோவு; pain in the heel. 2. குதிக்கால் அழுந்த வைக்கும்போது தோன்றும் வலி; pain caused by pressure on the heel (சா.அக.).

[குதிக்கால் + வலி.]

குதிக்கால்வாதம் *kudi-k-kālvādam*, பெ.(n.) ***குதிக்காலூதை*** பார்க்க; see *kudi-k-kāl-udai.*

[குதிக்கால் + வாதம்.]

குதிக்கால்விரணம் *kudi-k-kālviraṇam*, பெ.(n.) குதிக்காலிற் காணும் புண்; ulcertation of the heel (சா.அக.).

[குதிக்கால் + விரணம்.]

குதிக்கால்வெட்டி *kudi-k-kālveṭṭi*, பெ.(n.) ஏமாற்றுக்காரன்; cheat, deceiver (நெல்லை.).

[குதி + கால் + வெட்டி.]

குதிக்கால்வெடிப்பு *kudi-k-kālveḍippu*, பெ.(n.) குதிகாலிற் பித்தம் அல்லது பனியினாற் காணும் வெடிப்பு; crack of the heel due to bilious condition or frost-bite (சா.அக.).

[குதிகால் + வெடிப்பு.]

குதிக்காலிசிவு *kudi-k-kāliśivu*, பெ.(n.) குதிகாலிற் காணும் இசிவு வலி; cramp in the heels (சா.அக.).

[குதிக்கால் + இசிவு.]

குதிக்காலூதை *kudi-k-kālūdai*, பெ.(n.) ஊன்றுவதற்கு முடியாமல் நோய் கொள்ளும் ஓர் ஊதை நோய்; a disease which unable one to rest on the heel due to neurolgic pain (சா.அக.).

[குதிக்கால் + ஊதை (வாதம்).]

குதிகள்ளான் *kudi-kallān*, பெ.(n.) ***குதிக்கள்ளன்*** பார்க்க;see *kudi-k-kallan.*

[குதிக்கள்ளன் → குதிகள்ளான்.]

குதிகாளான் *kudikāḷāṉ,* பெ.(n.) குதிக்காலி லுண்டாகும் காளானைப் போன்ற கழலை; a tumour in the heel resembling fungus (சா.அக.).

[குதிக்கால் → குதிகாளன்.]

குதிகொள்(ளு)–தல் *kudi-koḷ-,* 6 செ.கு.வி.(v.i.) 1. குதித்தல்; to jump. 2. பெருகுதல்; to increase. 3. பொலிவொடு விளங்குதல்; to be resplendent.

[குத்து → குதி + கொள்.]

குதிங்கால் *kudiṅkāl,* பெ.(n.) உள்ளங்காலின் பின்பகுதி; heel of the foot.

[குதி + கால் = குதிக்கால் → குதிங்கால்.]

குதிங்காற்சிப்பி *kudiṅkāṟcippi,* பெ.(n.) குதிக்கா லெலும்பு; heel bone.

[குதி + கால் = குதிக்கால் → குதிங்கல் + சிப்பி.]

குதிச்சந்து *kudi-c-candu,* பெ.(n.) உடலில் நாடி இயங்கும் பத்து இடங்களுள் ஒன்று; one of the ten places in the human body slected for feeling the pulsation (சா.அக.).

[குதி+ சந்து.]

குதிப்பனிகம் *kudi-p-paṉigam,* பெ.(n.) பலாவினிச் செடி அல்லது பலா வீழி; an unidentified plant (சா.அக.).

[குதி+ பனிகம்.]

குதிப்பிளவை *kudi-p-piḷavai,* பெ.(n.) குதிக்காலில் உண்டாகும் புற்றுநோய்; cancer of the heel (சா.அக.).

[குதி + பிளவை.]

குதிப்பு *kudippu,* பெ.(n.) 1. குதிக்கை; leaping, jumping. 2. கருவங்கொள்கை; haughtiness, arrogance. 3. சுதும்பு என்னும் மீன்; milk-fish.

[குதி → குதிப்பு.]

குதிப்புண் *kudi-p-puṇ,* பெ.(n.) குதிக்காலில் வரும் புண், கட்டி, பிளவை முதலியன; a common name for wound or sore, abscess, ulceration carbuncle, etc. of the heel (சா.அக.).

[குதி + புண்.]

குதிப்புற்று *kudi-p-puṟṟu,* பெ.(n.) குதிக்காலிற் காணும் புற்று; cancer of the heel (சா.அக.).

[குதி + புற்று.]

குதிமுள் *kudi-muḷ,* பெ.(n.) குதிரைமுள் ; spur.

[குதி+ முள்.]

குதியன் *kudiyaṉ,* பெ.(n.) 1. குதிப்பு; jump. 2. அதிமிதி பண்ணுகை; ostentatious.

மறுவ. குதிப்பு.

[குதி → குதியன்.]

குதியாணி *kudi-y-āṇi,* பெ.(n.) குதிக்காலில் உண்டாகும் புண்ணாணி; corn on the heel.

[குதி+ ஆணி.]

குதிர்[1] *kudir,* பெ.(n.) 1. ஒருவகை மரம்; a low shrub with sharp axillary spines. *"கரிகுதிர் மாரத்த கான வாழ்க்கை" (அகநா.75).* 2. நெல் முதலிய தவசங்கள் வைக்கும் கூடு; large earthern receptacle for storing grain. *"காப்பதற்கோர் குதிர்பண்ணி" (ஞானவா.மித்தை.11).*

க. குதிர்

[குது – குதுர் → குதிர்.]

குதிர்–தல் *kudir-,* 4 செ.கு.வி.(v.i.) தீர்மானப்படுதல்; to be settled, determined, fixed up. வீட்டின் விலை குதிர்ந்தது(உ.வ.).

தெ. குடுரு

[குது → குதுர் → குதிர்.]

குதிர்ப்பாடு *kudir-p-pāḍu,* பெ.(n.) தீர்மானப் படுகை; settlement, arrangement.

தெ. குடுரு பாகு

[குதர் → குதிர் + பாடு.]

குதிரம் *kudiram,* பெ.(n.) 35 கழஞ்சளவுள்ள எரியணம் (கருப்பூரம்) (கணக்கதி.); 35 kaḷañju of camphor.

[குதிர் → குதிரம்.]

குதிரி *kudiri,* பெ.(n.) அடங்காதவள்; unruly, reftractory woman, virago. *"குதிரியாய் மடலூர்துமே" (திவ்.திருவாய்.5,3,9).*

[குதிர் → குதிரி.]

குதிரை[1] *kudirai,* பெ.(n.) 1. பரி; horse *"குதிரை யுள்ளாணினை" (தொல்.பொருள்.623).* 2. கயிறு முறுக்கு கருவி; twisting, stick for making rope, timber-frame for twisting cable. 3. யாழின் ஓர் உறுப்பு; (mus) bridge of a stringed instrument. 4. துப்பாக்கியின் உறுப்பு; cock of a gun, hammer in the lock of a fire-arm. 5. ***குதிரைத் தறி*** பார்க்க; see *kudirai-t-taṟi.* 6. பீப்பாய் முதலியன தாங்கும் சட்டம்; crate for casks. 7. ***குதிரைமரம்*** பார்க்க; gymnastic horse-bar 8. ஊர்க்குருவி (மூ.அ.); sparrow.9.அதியமானுக்குரிய குதிரை மலை (புறநா.168); a mountain which belonged to the ancient atiyamāṉ.

க. குதுரே

[குதி → குதிரை.]

kudirai, a horse; Can. *kudur-e*, probably from *kudi*, to leap. Comp.Sans. *ghoṭa*, a horse. The Dravidian languages have borrowed *ghōṭa*, from Sans. (in Tamil gôram, *gôḍagam*), said to be from *ghuṭ*, to retaliate; but *kudirai* is regarded as an underived, indigenous Dravidian word. It is possible, however, that the two words are ultimately related. (C.G.D.F.L. Pg.584).

குதிரை[2] *kudirai,* பெ.(n.) நீர்ப்போக்கைத் திருப்புதற்காக அமைக்கும் மரத்தாலான தடுப்பு; a wooden contrivance to divert the course of water. *"துங்கக்கரைக் குதிரை" (பெருந்தொ.1588).*

[குதி → குதிரை.]

குதிரைக்கயிறு *kudirai-k-kayiṟu,* பெ.(n.) குதிரை யின் வாய்வடம்; halter of a horse.

[குதிரை + கயிறு.]

குதிரைக்கலணை *kudirai-k-kalaṇai,* பெ.(n.) குதிரைச் சேணம் (பிங்.); horse - saddle.

[குதிரை + கலணை.]

குதிரைக்கவிசனை *kudirai-k-kavicaṉai,* பெ.(n.) குதிரையுடுப்பு (யாழ்.அக.); accoutrements of a horse.

[குதிரை + (கவி) கவிசனை.]

குதிரைக்காசு *kudirai-k-kāšu,* பெ.(n.) 1. குதிரை யுருப் பதிக்கப் பெற்ற நாணயவகை; coin bearing the impression of a horse. 2. ***குதிரைப் பவுன்*** பார்க்க; see *kudirai-p-pavuṉ.*

[குதிரை + காசு.]

குதிரைக்காரன் *kudirai-k-kāraṉ,* பெ.(n.) 1. குதிரையைப் பாதுகாப்போன்; horse-keeper, groom. 2. குதிரை வைத்திருப்பவன்;a man who has horse or horses. 3. குதிரைவீரன்; mounted warrior. 4. திப்புசுல்தான் காலத்தில் கொள்ளை யடித்து வந்த குதிரைவீரன் (I.M.P.Tj.579) ; plundering trooper, cavalier of the time of Tippusultan.

க.,கு. துரெயவ, குதிரைகார.

[குதிரை + காரன்.]

குதிரைக்காரன்கலகம் *kudirai-k-kāraṉ-kalagam,* பெ.(n.) ஐதர் முதலியோர் குதிரைப்படைகொண்டு அடித்த கொள்ளை; the cavalry raid of Haidar etc.

[குதிரை + காரன் + கலகம்.]

குதிரைக்கால் *kudirai-k-kāl,* பெ.(n.) சதுரவடிவ அமைப்பில் குதிரை வடிவம் பின்னங்கால்களில் நின்று முன்னங்கால்களை உயர்த்திய தோற்ற முடன் அமைக்கப்பட்ட தூண் (கம்.வழக்.); kind of column.

[குதிரை + கால்.]

குதிரைக்காலிரும்பு *kudirai-k-kāl-irumbu,* பெ.(n.) தேய்ந்த பரட்டுப்பூண், லாடம்; worn out horse shoe (சா.அக.).

[குதிரை + கால் + இரும்பு.]

குதிரைக்காலூதை *kudirai-k-kālūdai,* பெ.(n.) குதி ஊதை, கால் ஊன்றமுடியாமல் வலிகாணும் ஒரு ஊதை; a disease which unable one to rest on the heel, owingto excessive pain (சா.அக.). ***குதிரைகாலூதை*** பார்க்க; see *kudirā-k-kāl-ūdai*

[குதிரைக்கால் + வாதம்.]

குதிரைக்காவல் *kudirai-k-kāval,* பெ.(n.) குதிரையைக் காத்தல்; tending horses.

ம. குதிரெகாவலு, குதிரெகாபு.

[குதிரை + காவல்.]

குதிரைக்காற்சுண்டுவாதம் *kudirai-k-kār̲šuṇḍu-vādam,* பெ.(n.) ***குதிரை வலி*** பார்க்க;see *kudirai vali*.

[குதிரை + கால் + சுண்டு + வாதம் (வலி).]

குதிரைக்குளம்படி[1] *kudirai-k-kuḷambaḍi,* பெ.(n.) ***நீர்ச்சேம்பு*** (பதார்த்த.288) பார்க்க; arrow-head.

[குதிரை + குளம்பு + அடி.]

குதிரைக்குளம்படி[2] *kudirai-k-kuḷambaṭi,* பெ.(n.) கொடி வகை; goat's-foot creeper.

[குதிரை + குளம்பு + அடி.]

குதிரைக்குளம்பன் *kudirai-k-kuḷampaṉ,* பெ.(n.) ஒருவகைப் பொற்காசு (யாழ்.அக.); a kind of gold coin.

[குதிரை + குளம்பன்.]

குதிரைக்குளம்பு *kudirai-k-kuḷambu,* பெ.(n.) 1. குதிரையின் குரம்; horse's hoof. 2. ***குதிரைக் குளம்படி*** பார்க்க;see *kudirai-k-kuḷambaḍi.*

[குதிரை + குளம்பு.]

குதிரைக்கொத்திவாலி *kudirai-k-kotti-vāli,* பெ.(n.) தவசவகை; a kind of grain, penicum frumentaceum.

[குதிரை + கொத்து + வாலி.]

குதிரைக்கொம்பு *kudirai-k-kombu,* பெ.(n.) கிடைத்தற்கரியது; anything non-existent or impossible of attainment, as a horse's horn. துன்பத்திற் குதவும் நண்பர்கள் குதிரைக் கொம்பானார்கள் (உ.வ.).

க. குதுரெயகொம்பு

[குதிரை + கொம்பு.]

உலகில் இல்லாதது, கிடைத்தற்கரியது எனும் பொருள் சுட்டியது.

குதிரைக்கொல்லி *kudirai-k-kolli,* பெ.(n.)***குதிரை வாலிப்பூ*** பார்க்க; see *kudiraivālipū,* purple-wreath.

[குதிரை + கொல்லி.]

குதிரைக்கோப்பு *kudirai-k-kōppu,* பெ.(n.) சேணம்; horse-trappings.

[குதிரை + கோப்பு.]

குதிரைக்கௌசனை *kudirai-k-kaušaṉai,* பெ.(n.) குதிரைக்கு மேலிடும் அழகு போர்வை; horse-cloth, caparison.

[குதிரை + கௌசனை.]

குதிரைகொடுத்தல் *kudirai-koḍuttal,* பெ.(n.) சிறுவர் விளையாட்டில் வென்றோரைத் தோற்றோர் முதுகிற் சுமக்கை; the penalty of the defeated person carrying the victor on his back, in children's play (யாழ்.அக.).

[குதிரை + கொடுத்தல்.]

குதிரைச்சம்மட்டி *kudirai-c-cammaṭṭi,* பெ.(n.) குதிரைச் சாட்டை; horse-whip.

[குதிரை + சம்மட்டி. சவட்டு→ சமட்டு→ சம்மட்டு → சம்மட்டி.]

குதிரைச்சயம் *kudirai-c-cayam,* பெ.(n.) குதிரைக்கு வரும் ஈளை நோய்; glanders, a disease of horses.

[குதிரை + சயம்.]

குதிரைச்சவரன் *kudirai-c-cavaran,* பெ.(n.) **குதிரைப்பவுன்** பார்க்க; see *kudirai-p-pavun.*

[குதிரை + சவரன்.]

குதிரைச்சாணி *kudirai-c-cāṇi,* பெ.(n.) 1. குதிரைக்காரன்; horse keeper. 2. குதிரை மருத்துவன்; horse doctor.

[குதிரை + சாணி.]

குதிரைச்சாலி *kuḍirai-c-cāli,* பெ.(n.) துயிலிக் கீரை; a kind of greens (சா.அக.).

[குதிரை + சாலி.]

குதிரைச்சீட்டு *kudirai-c-ciṭṭu,* பெ.(n.) குதிரைப் பந்தயச் சீட்டு; lottery ticket in horse-races.

[குதிரை + சீட்டு.]

குதிரைச்செட்டி *kudirai-c-ceṭṭi,* பெ.(n.) குதிரை வணிகன்; horse-dealer. *"திரு முன்னின்றி கூறுவான் குதிரைச்செட்டி"* *(திருவாலவா.28,62).*

[குதிரை + செட்டி.]

குதிரைச்செவி *kudirai-c-cevi,* பெ.(n.) 1. குதிரைக் காதைப் போன்ற இலையுடைய ஓர் கள்ளி; a kind of spurge tree, the leaf of which resembles the horse's ear. 2. குங்கிலிய மரம்; indian dammer (சா.அக.).

[குதிரை + செவி.]

குதிரைச் சேவகன் *kudirai-c-cēvagan,* பெ.(n.) குதிரைவீரன்; cavalier. *"குதிரைச் சேவகனாகிய கொள்கையும்"* *(திருவாச.2, வரி.45).*

[குதிரை + சேவகன்.]

குதிரைச்சேவிதம் *kudirai-c-cevidam,* பெ.(n.) சடைத்தும்பை; a kind of leucas (சா.அக.).

[குதிரை + சேவிதம்.]

குதிரைத்தறி *kudirai-t-taṟi,* பெ.(n.) நீருடைப்பை அடைத்தற்கு வைக்கோல் முதலியவற்றோடு நிறுத்தும் மரச்சட்டம்; wooden contrivance stuffed with grass and straw to close up a breach in an embankment. *"படுங்குருதிக் கடும்புனலை யடைக்கப்பாய்ந்த பலகுதிரைத் தறிபோன்ற"* *(கலிங்.புது.463).*

[குதிரை + தறி.]

குதிரைத்தேர்வு *kudirai-t-tērvu,* பெ.(n.) 1. குதிரை யேற்றம்; horse manship. 2. குதிரையியல்பை யறியும் விச்சை; science dealing with horses and its nature.

[குதிரை + தேர்வு.]

குதிரைநடை *kudirainaḍai,* பெ.(n.) குதிரை யோட்டத்தின் விரைவுநிலை; pace of a horse.

மறுவ. குதிரைப்பாய்ச்சல்

[குதிரை + நடை.]

குதிரைநம்பிரான் *kudirai-namirāṉ,* பெ.(n.) கோயில் ஊர்வலத்திருமேனி சுமக்கும் குதிரை ஊர்தி (வைணவ.); wooden horse used as a vehicle for carrying idols.

[குதிரை + நம் + (பெருமான்) பிரான்.]

குதிரைநோய் *kudirai-nōy,* பெ.(n.) 1. குதிரைக்குக் காணும் நோய்; disease of horse of general. 2. மனிதருக்குக் காணும் குதிரை நோய்; a mild form of glanders seen in man and contracted from horses (சா.அக.).

[குதிரை + நோய்.]

குதிரைப்பசலை *kudirai-p-paśalai,* பெ.(n.) ஒரு வகைப் பசலை; a kind of spinach (சா.அக.).

[குதிரை + பசலை.]

குதிரைப்பசிரி *kudirai-p-paširi,* பெ.(n.) சாரணை வகை; dog milk greens.

[குதிரை + பசிரி.]

குதிரைப்பட்டை *kudirai-p-paṭṭai,* பெ.(n.) 1. மேற். கூரை தாங்கும் கட்டை; beam placed underneath the roof of a house to support the tiles (இ.வ.). 2. கூரையின் ஒடு நழுவாமலிருக்கும்படி அடுக்கிய ஒட்டின் முகப்பில் பட்டையாகப் பூசப்படும் சாந்து; thick construction of lime at the edge of a tiled roof prevent tiles from slipping.

[குதிரை + பட்டை.]

குதிரைப்படை *kudirai-p-paḍai,* பெ.(n.) நால்வகைப் படையுள் ஒன்று (சூடா.); cavalry, as one of the four-fold division of an army.

[குதிரை + படை.]

குதிரைப்பந்தயம் *kudirai-p-pandayam,* பெ.(n.) குதிரைகளை ஒடவிட்டு அதன்மேல் பணம் கட்டி விளையாடும் பந்தய விளையாட்டு; horse-race.

[குதிரை + பந்தயம்.]

குதிரைப்பந்தி *kudirai-p-pandi,* பெ.(n.) 1. குதிரை நிரை; row of horses. 2. குதிரை கட்டும்கொட்டில் (லாயம்); horse stable.

மறுவ. குதிரைநிரை

[குதிரை + பந்தி.]

குதிரைப்பந்தித்தேவை *kudirai-p-pandi-t-tēvai,* பெ.(n.) குதிரைகளைக் கட்டும் கொட்டில் பராமரிப்புக்காகப் பெறும் வரி (கல்.க.சொ.அ.க.); a kind of tax.

[குதிரை + பந்தி + தேவை.]

குதிரைப்பரிட்சை *kudirai-p-pariṭcai,* பெ.(n.) ***குதிரைத்தேர்வு*** பார்க்க;see *kudirai-t-tērvu.*

[குதிரை + பரிட்சை.]

குதிரைப்பல்லன் *kudirai-p-pallaṉ,* பெ.(n.) ***வெள்ளைப்பூண்டு (மூ.அ.)*** பார்க்க; garlilc.

[குதிரை + பல்லன்.]

குதிரைப்பல்லி *kudirai-p-palli,* பெ.(n.) பெரிய பல்லையுடைய பெண்; a woman having large teeth (சா.அக.).

மறுவ. மாட்டுப்பல்

[குதிரை + பல்லி.]

குதிரைப்பவுன் *kudirai-p-pavuṉ,* பெ.(n.) குதிரை முத்திரை கொண்ட பொன்னாணயம்; sovereign bearing the stamp of a horse on one side.

[குதிரை + பவுன்.]

குதிரைப்பற்செய்நஞ்சு *kudirai-p-paṟ-ceynañju,* பெ.(n.) கனிம செய்நஞ்சு வகை (மூ.அ.); a mineral poison, one of 32.

[குதிரை + பல் + செய் + நஞ்சு.]

குதிரைப்பாடாணம் *kudirai-p-pāḍāṇam,* பெ.(n.) குதிரைப்பற்பாடாணம் எனும் செய்நஞ்சு (வை.மூ.); a mineral poison.

[குதிரை + பாடாணம்.]

குதிரைப்பாய்ச்சல் *kudirai-p-pāyccal,* பெ.(n.) பாய்ந்து செல்லும் குதிரையின் கதி; gallop of a horse.

[குதிரை + பாய்ச்சல்.]

குதிரைப்பிடுக்கன் *kudirai-p-piḍukkaṉ,* பெ.(n.) பீநாறி மரம் (மூ.அ.); field tree.

[குதிரை + பிடுக்கன்.]

குதிரைமசாலி *kudirai-maśāli,* பெ.(n.) மரவகை; a kind of tree.

[குதிரை + மசாலி.]

குதிரைமசாலை *kudirai-maśālai,* பெ.(n.) குதிரை மருந்து; mash, a mixture, of certain ingredients used as a tonic or medicine for horses.

[குதிரை + மசாலை.]

குதிரைமட்டம் *kudirai-maṭṭam,* பெ.(n.) வேக முள்ள குட்டைக்குதிரை; a fleet-footed pony, (w.).

[குதிரை + மட்டம்.]

குதிரைமரம் *kudirai-maram,* பெ.(n.) 1. உடற் பயிற்சிக்குரிய தாண்டுமரம்; gymnastic horse-bar. 2. ***குதிரைத்தறி*** பார்க்க (கொ.வ.); see *kudiraittaṟi.* 3. மதகு கதவு (யாழ்.அக.); sluice gate. 4. நெசவிற் பாவு தாங்குதற்குரிய மரச்சட்டம்; wooden frame, shaped like the letter 'X' and fixed to the ground to support the warp stretched out.

[குதிரை + மரம்.]

குதிரைமறம் *kudirai-maṟam,* பெ.(n.) போர்க் குதிரையின் திறப்பாட்டைக் கூறும் புறத்துறை (பு.வெ.77); theme describing the prowess of a war-horse.

[குதிரை + மறம்.]

குதிரைமறி *kudirai-maṟi,* பெ.(n.) 1. குதிரைக்குட்டி; filly. 2. பெட்டைக் குதிரை; mare.

[குதிரை + மறி.]

குதிரைமால் *kudirai-māl,* பெ.(n.) அரண் மனையைச் சார்ந்த குதிரைக் கொட்டகை; royal stable.

[குதிரை + மால்.]

குதிரைமாற்று[1]-தல் *kudirai-māṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) கெடிதோறும் குதிரைகளை மாற்றிக் கொள்ளுதல்; to relieve horses by relays.

[குதிரை + மாற்று.]

குதிரைமாற்று[2] *kudirai-māṟṟu,* பெ.(n.) குதிரை முத்திரையிட்ட நாணயவகை; a coin with horse-emblem "காசாயமான குதிரை மாற்றுக்கு" (S.I.I.iv.134).

[குதிரை + மாற்று.]

குதிரைமாறி *kudirai-māṟi,* பெ.(n.) 1. குதிரை விற்பவன்; petty horse-dealer. 2. ஏமாற்றுவேலை செய்பவன்; one who works in an underhand manner.

[குதிரை + மாறி.]

குதிரைமீன்[1] *kudirai-mīṉ,* பெ.(n.) குழாய் மீன்; pipe fish (சா.அக.).

[குதிரை + மீன்.]

குதிரைமீன்[2] *kudirai -mīṉ,* பெ.(n.) மீன்வகை; a kind of fish. *"குதிரைமீனோ டானைமீன்" (குருகூர்ப். பக்.7).*

[குதிரை + மீன்.]



குதிரைமீன்

குதிரைமுகம் *kudirai-mugam,* பெ.(n.) 1. முழந் தாளெலும்பு; tibia, shin bone. 2. குளத்தின் கரைக் கட்டிற்கு வலியாகும் முட்டுக்கட்டடம்; prop of an embankment.

[குதிரை + முகம்.]

குதிரைமுகவோடம் *kudirai-muga-vōḍam,* பெ.(n.) குதிரையின் உருவை முகப்பிற் கொண்ட தோணி (சிலப்.13:176,உரை); boat with a horse shaped prow.

[குதிரை + முகம் + ஓடம்.]

குதிரைமுள் *kudirai-muḷ,* பெ.(n.) குதிரையை விரைவுப்படுத்துதற்கு ஏறுவோர் காலில் இட்டுக் கொள்ளும் முட்கருவி; spur used by a horsemen.

[குதிரை + முள்.]

குதிரையடி *kudirai-aḍi,* பெ.(n.) சதுரங்க விளை யாட்டில் குதிரை செல்லும் வழி; knight's move in the game of chess.

[குதிரை + அடி.]

குதிரையடிப்பச்சிலை *kudirai-y-aḍi-p-pa-c-cilai,* பெ.(n.) குதிரைக்குளம்படியிலை, நீர்ச்சேம்பு ; arrow-head (சா.அக.).

[குதிரை + அடி+ பச்சிலை.]

இதன் இலைகளை வீக்கங்களுக்குக் கட்டுவர்.

குதிரையாட்டம் *kudirai-yāṭṭam,* பெ.(n.) பொய்க்கால் குதிரையாட்டம்; a kind of dance using the effigy of a horse.

ம. குதிரயாட்டம்

[குதிரை + ஆட்டம்.]

குதிரையாளி *kudirai-y-āḷi,* பெ.(n.) 1. குதிரை ஏறி நடத்துவோன்; horseman. 2. வைரவன்; Bhairava.

[குதிரை + ஆளி.]

குதிரையிராவுத்தன் *kudirai-y-irāvuttaṉ,* பெ.(n.) குதிரைவீரன்; cavalier, trooper, equestrian *"கொன்றை மாலைக் குதிரையிராவுத்தன்" (திருவாலவா.46,28.).*

[குதிரை + இராவுத்தன்.]

குதிரையிழைப்புளி *kudirai-y-iḻaippuḷi,* பெ.(n.) இழைப்புளிவகை (கட்டட.நாமா.); a kind of jointers.

[குதிரை + இழைப்பு + உளி.]

குதிரையுடலன் *kudirai-y-uḍalaṉ,* பெ.(n.) குதிரை யுடல் போலும் உடலுள்ள காளைமாடு; bull that has its belly pulled up straight and narrow, as that of a horse.

[குதிரை + உடலன்.]

குதிரையேற்றம் *kudirai-y-ēṟṟam,* பெ.(n.) குதிரை யேறி நடத்தும் (வித்தை); (பதார்த்த.1452); horse-manship.

[குதிரை + ஏற்றம்.]

குதிரையேறு-தல் *kudirai-y-ēṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.). 1. குதிரை மேலேறிச் செலுத்துதல்; to mount a horse. 2. சிறுவர்கள் பச்சைக்குதிரை விளையாடுதல்; to play leap-frog. 3. பிறரைக் கீழ்ப்படுத்தி அடக்கியாளுதல்; to ride roughshod, domineer அவனைக் குதிரையேறுகிறான் (உ.வ.).

[குதிரை + ஏறு.]

குதிரைவடிப்போர் *kudirai-vaḍippōr*, பெ.(n.) குதிரை நடத்துவோர் (திவா.); horse-drivers.

[குதிரை + வடிப்போர்.]

குதிரைவண்டி *kudiraivaṇḍi*, பெ.(n.) குதிரையைப் பூட்டி ஒட்டும் வண்டி;a carriage drawn by horse.

ம. குதிரவண்டி; க. குதுரெகாடி.

[குதிரை + வண்டி.]

குதிரைவரி *kudirai-vari*, பெ.(n.) வரிவகை; a tax (S.I.I.iv.79).

[குதிரை + வரி.]

குதிரைவலி *kudirai-vali*, பெ.(n.) பெண்களுக்குப் பேறு காலத்தில் உண்டாகும் பெருவலி;excessive labour pains.

[குதிரை + வலி.]

குதிரைவலிப்பு *kudirai-valippu*, பெ.(n.) குதிரை யின் காற்சுண்டுவாதம் வலிப்பு (M.CM.D (1887).249); a horse disease attended with quivering in the legs.

ம. குதிரவலி

[குதிரை + வலிப்பு.]

குதிரைவாய்க்கருவி *kudiraivāy-k-k-karuvi*, பெ.(n.) கடிவாளம்; bridle of a horse.

[குதிரை + வாய் + கருவி.]

குதிரைவாரப்பட்டடை *kudirai-vāra-p-paṭṭai*, பெ.(n.) வீட்டுக்கூரை இறவாணத்தின் கூடல்வாய்மரம்; hip-rafter in sloping roofs.

[குதிரை + வாரம் + பட்டடை.]

குதிரைவால் *kudiraivāl*, பெ.(n.) 1. குதிரையின் வால்; the tail of a horse. 2. ஒரு வகைக் கொடி;the horse-tail creeper.

ம. குதிரவால்

[குதிரை + வால்.]

குதிரைவாலி *kudirai-vāli*, பெ.(n.) 1. ஒருவகைப் புன்செய்ப்பயிர்; poor man's horse-tail millet. 2. குதிரைவாலிப்பூ; purple wreath. 3. ஒருவகை நெல்; a kind of paddy.

ம. குதிரவாலி

[குதிரை + வாலி.]

குதிரைவாலிக்கியாழம் *kudirai-vāli-k-kiyāḻam*, பெ.(n.) குதிரைவாலிப் புல் அல்லது பூவினின்று இறங்குங் கியாழம் (சா.அக.); decoction prepared from horse tail grass or purple wrath.

[குதிரைவாலி + கியாழம்.]

குதிரைவாலிகம் *kudirai-vāligam*, பெ.(n.) 1. கொடிப்பாசி; moss creeping upon water. 2. கோரைப்புல்; horay grass (சா.அக.).

[குதிரை + வாலிகம்.]

குதிரைவாலிச்சம்பா *kudirai-vāli-c-cambā*, பெ.(n.) சம்பா நெல்வகை; a kind of paddy, like horse tail millet.

ம. குதிரவாலி

[குதிரை + வாலி + சம்பா.]

குதிரைவாலிச்சாமை *kudirai-vāli-c-cāmai* பெ.(n.) 1. ஒரு வகைச் சாமை; horse tail millet. 2. ஒட்டுப்புல்; sticking grass (சா.அக.).

[குதிரை + வாலி + சாமை.]

குதிரைவாலிப்புல் *kudirai-vāli-p-pul,* பெ.(n.) புல்வகை; a species of grass.

ம. குதிரவால்ப்புல்

மறுவ. குதிரைவாற்றல்

[குதிரை + வாலி + புல்.]

குதிரைவாலிப்பூ *kudirai-vāli-p-pū,* பெ.(n.) கொடிவகையுள் ஒன்று; purple wreath.

[குதிரை + வாலி + பூ.]

குதிரைவிசிகயிறு *kudirai-viši-kayiṟu,* பெ.(n.) குதிரைமரத்தை நிலைப்பட நிறுத்துதற்குக் கட்டும் கயிறு ; rope for fixing the kudirai-maram in position.

[குதிரை + விசி + கயிறு.]

குதிரைவிட்டை *kudirai-viṭṭai,* பெ.(n.) குதிரைச் சாணி; horse dung (சா.அக.).

[குதிரை + விட்டை.]

குதிரைவிடு–தல் *kudirai-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. குதிரையைச் சாரியாக விடுதல்; to set off in a gallop or trot. 2. குதிரைப்பந்தயம் விடுதல்; to compete in a horse race.

[குதிரை + விடு–.]

குதிரைவிலாடம் *kudirai-vilāḍam,* பெ.(n.) வரிவகை; a tax (M.E.R.86 of 1928-9).

[குதிரை + இலாடம்.]

குதிரைவீரர் *kudirai-vīrar,* பெ.(n.) குதிரைப் படையாளர்; cavalry, troopers cavaliers.

[குதிரை + வீரர்.]

குதிரைவையாளிவீதி *kudirai-vaiyāḷi-vīdi,* பெ.(n.) குதிரை செலுத்தற்குரிய செண்டுவெளி (சூடா.); the place where horses are trained in different kinds of exercise.

[குதிரை + வையாளி + வீதி.]

குதிவாதம் *kudivādam* பெ.(n.) **குதிவூதை** பார்க்க; see *kudi-v-ūdai.*

[குதில் + வாதம்.]

குதிவூதை *kudi-v-ūdai,* பெ.(n.) குதிங்கால் ஊதை; neuralgiac pain in the heels.

[குதில் + ஊதை.]

குது *kudi-v-ūdai,* பெ.(n.) மகிழ்ச்சி; joy.

[குல் + குது.]

குதுகம் *kudugam,* பெ.(n.) விருப்பம் (யாழ்.அக.); desire, longing.

[குல் → குது → குதுகம்.]

குதுகலம் *kudukalam* பெ.(n.) **குதூகலம்** பார்க்க; see *kudūkalam. "குதுகலம்பொங்க" (தணிகைப்பு. பிரமன்.சிருட்.83).*

[குதூகலம் → குதுகலம்.]

குதுகலி–த்தல் *kudukali-,* 4 செ.கு.வி.(v.i.) 1. களிப்பு உண்டாக்குதல்; to make joyful. *"குதுகலித் தாவியை யாகுலஞ் செய்யும்" (திவ்.நாய்ச்.5:7).*

[குதூகலி → குதுகல.]

குதுகலிப்பு *kudu-kalippu,* பெ.(n.) மகிழ்ச்சி; ecstasy, joyfulness, rapture.

[குதுகலி → குதுகலிப்பு.]

குதுகுது¹–த்தல் *kudu-kudu-,* 4 செ.குன்றாவி.(v.t.) ஆசைப்படுதல்; to desire eagarly. *"நாற்றங் குது குதுப்ப" (பரிபா.20,13).*

[குது + குது.]

குதுகுது²–த்தல் *kudu-kudu-,* 4 செ.கு.வி.(v.i.) குளிரால் நடுங்குதல்; to shiver from cold.

[குது + குது.]

குதுகுதுப்பு *kudu-kuduppu,* பெ.(n.) 1. ஆவல்; desire, eagarness. *"குதுகுதுப்பின்றி நின்று" (திருவாச.6:34).* 2. குளிரால் நடுங்குகை; shivering with cold.

[குது + குதுப்பு.]

குதுகுதெனல் *kudu-kudenal,* பெ.(n.) குளிர்சுரக் குறிப்பு; expr. signifying feverishness attended with shivering.

[குது + குது + எனல்.]

குதுகுலம் *kudugulam,* பெ.(n.) ***குதூகலம்*** பார்க்க; see *kudūgalam. "குதுகுலத் துளவின் றாமம்" (அரிசமய. பதுமை. 103).*

[குது + குலம்.]

குதுகுலி-த்தல் *kudukuli-,* 14 செ.கு.வி.(v.i.) 1. மிகுகளி கொள்ளுதல் (யாழ்.அக.); to be rapturous; to be enthusiastic. 2. மகிழ்ச்சி மிகுதியால் பூரித்தல் (யாழ்.அக.); to swell with joy. *"இளங்கொங்கை குதுகுலிப்ப" (திவ்.பெரியாழ்.3,6,2).*

[குது + (கலி) குலி.]

குதும்பகர் *kudumbagar,* பெ.(n.) தும்பை (மலை.); bilter toom-bay.

[குதும்பு → குதும்பகர்.]

குதும்பை *kudumbai,* பெ.(n.) மூக்கொற்றிப் பூ; Indian dantana indico.

[குதும்பு → குதும்பை.]

குதுவை *kuduvai,* பெ.(n.) கொதுவை ; mortage.

தெ. குதுவ

[கொதுவை → குதுவை.]

குதூகலம்[1] *kudūkalam,* பெ.(n.) அகக்களிப்பு; joy, delight, rapture.

[குது + ஆகுலம் - குதாகுலம் → குதூகலம்.]

குதூகலம்[2] *kudūgalam,* பெ.(n.) ***குதுகம்*** பார்க்க (யாழ்.அக.); see *kudugam.*

[குல் → குது → குதுகல் → குதுகலம் → குதூகலம்.]

குதூகலி-த்தல் *kudūkali-,* 4 செ.கு.வி.(v.i.) அகமகிழ்தல்; to rejoice, to delight in. *"அருளின் மூழ்கிக் குதூகலித் தாடுதலோடும்" (கந்தபு. வீரவாகு.51).*

[குதூகலம் → குதூகலி.]

குதூணகம் *kudūṇagam,* பெ.(n.) கண்ணொய்களு ளொன்று (யாழ்.அக.); a disease of the eye.

[குத்துண் → குத்துணகம் → குதூணகம்.]

குதூனகம் *kudūnagam,* பெ.(n.) குழந்தை களுக்குக் காணும் ஒரு கண்ணோய்; an eye, disease common in children (சா.அக.).

[குது + (ஊனம்) ஊனகம் - குதூனகம்.]

குதேட்டி *kudēṭṭi,* பெ.(n.) மயிலடிக்குருந்து; peacock's-foot tree.

[குத்தட்டி → குதேட்டி.]

குதை[1] *kudai,* பெ.(n.) 1. விற்குதை; notch at the end of a bow to secure the loop of a bow string. *"குதைவரிச் சிலைநுதல்" (கம்பரா.நகர.49).* 2. அம்பினடி (சங்.அக.); notch at the feather, end of an arrow. 3. அம்பு; arrow. *"குதை யொன்றினைத் துரந்தே" (கந்தபு.அக்கினி.85).* 4. அணிகலனின் பூட்டு; bow, loop, running not, button or clasp of a bracelet. 5. முயற்சி; effort. *"கொண்ட குதை மாறாதே" (ஈடு,6:10,2).*

[குது - குதை.]

குதை[2]**-த்தல்** *kudai-,* 4 செ.கு.வி.(v.i.) விற்குதையில் நாணைப்பூட்டுதல்; to fasten the bow-string at the notch. *"குதைக்கின்றன நிமிர்வெஞ்சிலை" (கம்பரா. இராவணன்வ.46).*

[குது → குதை.]

குதை³–தல் *kuḍai-,* 3 செ.கு.வி.(v.i.) செலுத்துதல்; to discharge, propel. *"குதைந்தவார் பகழி வேடன்" (பிரமோத்.17,12).*

[குது → குதை.]

குதை⁴–தல் *kuḍai-,* 2 செ.கு.வி.(v.i.) தடுமாறச் செய்தல்; to cause bewilderment, embarrassment *"குதையும் வினையாவி தீர்ந்தேன்" (திவ்.இயற். நான்மு.81).*

[குது → குதை.]

குதை⁵ *kuḍai-,* பெ.(n.) பசி (அக.நி.); hunger.

[குது → குதை.]

குதை⁶–தல் *kuḍai,* 2 செ.குன்றாவி.(v.t.) துளையிடுதல்; to perforate.

[குல் → குத்து → குதை.]

குதைச்சு *kuḍaiccu,* பெ.(n.) 1. சொக்காயில் பொத்தானிடும் துளை; button-hole. 2. தாலியுரு வகை; a pendant in tāli, representing the navatāli.

[குல் → குத்து → குதை → குதைச்சு.]

குதைபோடு–தல் *kuḍai-pōḍu-,* 19 செ.கு.வி. (v.i.) முடிச்சுப் போடுதல்; to button, to fasten as with a button.

[குதை + போடு.]

குதைமணி *kuḍai-maṇi,* பெ.(n.) கொக்கிவகை; a kind of hook, button.

[குதை + மணி.]

குதைமுடிச்சு *kuḍai-muḍiccu,* பெ.(n.) சுருக்கு முடிச்சு; button of a running knot or noose.

[குதை + முடிச்சு.]

குதையாணி *kuḍai-y-āṇi,* பெ.(n.) சுரையாணி; fastening pin or bolt in jewellry.

[குதை + ஆணி.]

குந்தக்கம்¹ *kundakkam,* பெ.(n.) **குந்தகம்** பார்க்க; see *kundagam.*

[குந்தகம் → குந்தக்கம்.]

குந்தக்கம்² *kundakkam,* பெ.(n.) 1. குந்தகம், குழப்பம்; confusion. 2. குண்டக்கம், கோள்; back-biting.

[குந்தகம் → குந்தக்கம்.]

குந்தக்குந்தம் *kunda-k-kundam,* பெ.(n.) புனுகு; civet (சா.அக.).

[குந்தம் + குந்தம்.]

குந்தகத்தசைநார் *kundaga-t-tašai-nār,* பெ.(n.) தடைப்படுத்தும் தசைநார்; obturator ligament (சா.அக.).

[குந்தகம் + தசை + நார்.]

குந்தகம்¹ *kundagam,* பெ.(n.) 1. தடை; obstrucle, obstacle. 2. குறைந்த விலை; low price.

க. குந்தகமு; **தெ.** குந்தகமு.

தெ. குந்தகமு; **க.** குந்தகமு; மராட்; குந்த

[குல் → குந்து → குந்தகம்.]

குந்தகம்² *kundagam,* பெ.(n.) குங்கிலியம்; Indian olibanum (சா.அக.).

[குல் → குந்து → குந்தகம்.]

குந்தகன் *kundagaṉ,* பெ.(n.) கீழ்மகன்; low, mean, fellow. *"குந்தகனாமிந்தக் குறியுடையான்" (பஞ்ச.திருமுக.690).*

[குண்டகன் + குந்தகன்.]

குந்தணை *kundaṇai,* பெ.(n.) எண்ணெய் காய்ச்சும் போது, காய்ச்சும் கலம் சிதையுமாயின் அதிலுள்ள எண்ணெய் வீணாகாமற் காத்தற்பொருட்டு, அப் பாத்திரத்திற்கு ஆதாரமாய் வைக்கப்படும் இரும்பு அண்டா (தைலவ. பாயி.19); special iron cauldron holding the vessel in which medicinal oil is pre-

pared and serving as receptacle if the vessel gives way.

[குந்து + அணை. குந்து = பழுது, தீது. அணை = தடை, தடுப்பு.]

எண்ணெய் மருந்து (கிருதம்) காய்ச்சும் பொழுது, ஏனம் விரிந்து பழுதுண்டாகக் கூடுமெனக் கருதி, அதற்குத் துணையாக, எண்ணெய் முடியும் வரையில் பொருந்தியிருக்கும் படி வைக்கும் ஓர் ஏனம். இது மருந்து எண்ணெய் ஏனத்தின் வயிறு மட்டும் கொள்ளும்படியாக அமைந்து அடிப்பாகத்தில் கரி நெருப்பின் புகையானது வெளியே போகும்படி துளை ஏற்படுத்தி, வட்டமாயுள்ள அடிகளமைத்து அண்டாவைப்போல் இரும்பினாற் செய்யப்பட்டது (சா.அக.).

குந்தந்தள்ளுகை *kundan-taḷḷugai,* பெ.(n.) கண்ணிற் குந்தநோய் விழுகை; staphy-loma.

[குந்தம் + தள்ளுகை.]

குந்தம்[1] *kundam,* பெ.(n.) குதிரை; horse "வெற்றிசேர் குந்தம்" (திருவிளை.நரிபரி.106).

[குருவிந்தம் → குந்தம்.]

குந்தம்[2] *kundam,* பெ.(n.) 1. கற்செய்நஞ்சு; mineral poison. 2. நான்கு பலங்கொண்ட ஒரு நிறை (தைலவ.தைல.100); a standard weight 4 *palam.*

[குல் → குந்து → குந்தம்.]

குந்தம்[3] *kundam,* பெ.(n.) வைக்கோற்படப்பு; hay stack.

[குது → குந்து → குந்தம்.]

குந்தம்[4] *kundam,* பெ.(n.) 1. கண்ணோய்வகை (மூ.அ.); tulercle on the cornea of the eye, staphyloma. 2. துன்பந்தருவது; that which gives distress. "மெய்குந்தமாக" (திவ்.இயற்.4:79).

[குந்து → குந்தம்.]

குந்தம்[5] *kundam,* பெ.(n.) 1. எறிகோல்; javelin for throwing; barbed dart. "வைவா ளிருஞ்சிலை குந்தம்" (சீவக.1678). 2. வேல்; spear, lance. "குந்தமலியும் புரவியான்" (பு.வெ.4:7). 3. குத்துக் கோல்; pike, stake. "பூந்தலைக் குந்தங்குத்தி" (முல்லைப்.41). 4. தீப்பந்தம்; torch.

ம. குந்தம்; தெ. குந்தமு.

Skt. kunta

[குல் → குத்து → குந்து → குந்தம்.]

குந்தம்[6] *kundam,* பெ.(n.) 1. குபேரனது ஒன்பான் நிதியங்களுள் ஒன்று; one of the nine treasures of Kubera. 2. குந்துருக்கம் ; Konkany resin.

[குருந்து → குந்து → குந்தம்.]

குந்தம்[7] *kundam,* பெ.(n.) 1. குருந்த மரம்; wild lime. 2. கள்; toddy. 3. ஓர் மல்லிகை; a kind jasmine. 4. குங்கிலியம்; Indian olibanum. 5. அலரி; fragrant oleander. 6.குதிரை; horse. 7. கவளம்; handful, quantity.

[குருந்தம் → குந்தம்.]

குந்தம்புறப்படல் *kundam-puṟappaḍal,* பெ.(n.) கண் விழியில் கொப்புளம் உண்டாதல்; the rising of a tubercle in the eye, protrusion of the eye-ball (சா.அக.).

[குந்தம் + புறப்படல்.]

குந்தம்பூ *kundampū,* பெ.(n.) கண்ணிலுண்டாகும் பூ; cataract in the eye (சா.அக.).

[குந்தம் + பூ.]

குந்தமம் *kundamam,* பெ.(n.) பூனை (யாழ்.அக.); cat.

[குந்து + அம்மை – குந்தம்மை → குந்தமம்.]

குந்தரை-த்தல் *kuntarai,* 4 செ.குன்றாவி.(v.i.) வீணாயிருத்தல் (யாழ்.அக.); to sit idly.

[குந்து + அரை (உட்கார்ந்து பொழுதுபோக்குதல்.]

குந்தலகீடி *kundala-kīḍi*, பெ.(n.) பெருங்குடலில் வளரும் ஓர் நீண்ட நாகப்பூச்சி; long thread - worm inhabiting the large intestines (சா.அக.).

[குந்தலம் + கீடி. வ. க்ரீட > த. கீடி.]

குந்தலவராளி *kundala-varaḷi*, பெ.(n.) ஒரு பண் வகை (இராகம்) இசை (பரத.இராக.55); a musical mode.

[குந்தலம் + வராளி.]

குந்தவை *kundavai*, பெ.(n.) சோழப்பேரரசன் முதல் இராசராசனின் தமக்கையாரின் பெயர்; name of elder sister of the great Chōḷa Emperor, Rājarājan-I. "ஸ்ரீ ராஜராஜதேவர் திருத்தமக்கையார் வல்லவரையர் வந்தியத்வேதர் மகாதேவியார் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் எழுந்தருளுவித்த திருமேனிகள்" (S.I.I.ii.6).

[குந்தம் = நறுமணமிக்க குண்டுமல்லிகை. குண்டு → குந்து → குந்தம் + அவ்வை. குந்தவ்வை → குந்தவை. குண்டு மல்லிகை மலரின் பெயரமைந்த பெண்.]

குந்தவை சிநாலயத்துத் தேவர் *kundavai-ginālayattu-t-tēvar*, பெ.(n.) முதல் இராசராசனின் தமைக்கையாரும் வல்லவரையன் வந்தியத்தேவரின் தேவியாருமாகிய குந்தவையாரின் பெயரால் கட்டப்பட்ட சமணதெய்வக் கோயிலெழுந்தருளியுள்ள தீர்த்தங்கரர் (தெ.கல்.தொ.2.2கல்.43); one of holy person, Arhat.

[குந்தவை + சிநாலயம் + அத்து + தேவர்.]

குந்தளம் *kundaḷam*, பெ.(n.) 1. பெண்டிர் தலை மயிர்; woman's hair. *"சந்தமலி குந்தளநன் மாதினொடு" (தேவா.107:1).* 2.மயிர்க்குழற்சி(பிங்.); hair crinkles curls. 3. குழற்கொத்து (பிங்.); woman's locks. 4. சாளுக்கியர் நாடு; country of the chālucкyas.

ம. குந்தளம்; க. கூதலு; தெ. குந்தலமு.

skt. kuntala

[கூதளம் → குந்தளம்].

குந்தளர் *kundaḷar*, பெ.(n.) குந்தள நாட்டில் ஆட்சிபுரிந்த சாளுக்கிய வேந்தர்; chālukyas, as rulers of Kundaḷam *"குந்தளரைக் கூடற் சங்கமத்து வென்ற" (கலிங்.193,புதுப்.).*

[குந்தளம் → குந்தளர்.]

குந்தளை *kundaḷai*, பெ.(n.) மருந்து எண்ணெய்ப் ஏனம் வைக்கும் புரிமணை; a stand or seat made of straw for kepping medicated oil pots, any round wooden base for keeping pots (சா.அக.).

[குந்து + குந்தளை.]

குந்தன் *kundaṉ*, பெ.(n.) 1. திருமால்; viṣṇu *"வல்வினை மாய்த்தறஞ் செய் குந்தன்றன்னை" (திவ்.திருவாய்.7,9:7).* 2. தூய தன்மையுடையவன்; holy person. *"வண்டீங் கவிசெய்குந்தன்" (திவ்.திருவாய்.7.9.7).*

[குந்து → குந்தன்.]

குந்தனக்காரன் *kundaṉa-k-kāraṉ*, பெ.(n.) ஒன்பான் மணிகளை அணிகலன்களில் பதிப்போன்; one who enchases or sets precious stones.

[குந்தனம் + காரன்.]

குந்தனம் *kundaṉam*, பெ.(n.) 1. ஒன்பான் மணிகளை அணிகலன்களில் பதிக்குமிடம்; inter-space for enchasing or setting gems in jewel. *"குந்தனத்தி லழுத்தின..... ரத்தினங்கள்" (திவ். திருநெடுந்.வியா.பக்.17).* 2. தங்கம் (சங்.அக.); gold, fine gold.

[குந்து → குந்தனம்.]

குந்தாங்குச்சி *kundāṅ-kucci*, பெ.(n.) சிறுவர்கள் நொண்டியாடித் தொடும் விளையாட்டு; game in which a player hops on one foot in order to touch or catch any of the other players within bounds.

[குந்தம் + குச்சி – குந்தாங்குச்சி.]

குந்தாடு-தல் *kundāḍu-*, 5 செ.கு.வி.(v.i.) நொண்டிக் கொண்டு விளையாடுதல்;to play hopping on one foot (கோவை.).

[குந்து + ஆடு.]

குந்தாணி[1] *kundāṇi,* பெ.(n.) 1. பேருரல்; large mortar. *குந்தாணி போல் இருக்கிறாள் (உ.வ.).* 2.உரலின் வாய்க்கூடு (இந்துபாக.44); protective ring placed over a mortar to prevent the grain from scattering.

[குண்டு + ஆணி – குண்டாணி → குந்தாணி. 'ஆணி' சொல்லாக்க ஈறு.]



குந்தாணி

குந்தாணி[2] *kundāṇi,* பெ.(n.) கண்ணோய்வகை; an eye disease.

[குந்தம் + ஆணி.]

குந்தாணிக்கொடி *kundāṇi-k-koḍi,* கொடிவகை; mortar-flower bindweed.

[குந்தாணி + கொடி.]

குந்தாணிப்பீரங்கி *kundāṇi-p-pīrangi,* பெ.(n.) வெடிகுண்டுளை மேலெறிந்துவீசும் உரல் வடிவான பீரங்கி; mortar for throwing shells at high angles.

[குந்தாணி + பீரங்கி.]

குந்தாலம்[1] *kundālam,* பெ.(n.) ***குந்தாலி***[1] பார்க்க; see *kundāli.*

[குந்தாலி → குந்தாலம்.]

குந்தாலம்[2] *kundālam,* பெ.(n.) புள்வகை (யாழ்.அக.); a kind of bird.

[குந்து → குந்தாலம்.]

குந்தாலி *kundāli,* பெ.(n.) 1. குத்தித் தோண்டும் கருவி வகை; pick-axe with one prong. pick-axe *"குந்தாலிக்கும் பாரை வலிது" (திருமந்.2909).* 2. *கணிச்சி (பு.வெ.9:38,உரை);* battle-axe.

ம. குந்தாலி; **க.** குத்தா, குத்தலி, குத்லி; **தெ., பட.,** குட. குத்திலி; **து.** குத்தலி, குத்தொலி; **கோத.** குதய்; **மா.**க்வாதலி.

Skt. kuddāla

[குத்து → குந்து → குந்தாலி.]

குந்தாளி[1] *kuntāli,* பெ.(n.) ***குந்தாலி***[1] பார்க்க; see *kundāli*[1].

[குந்தாலி → குந்தாளி.]

குந்தாளி[2]**–த்தல்** *kuntāḷi,* 4 செ.கு.வி.(v.i.) 1. களித்துக் கூத்தாடல்; to leap for joy. 2. முன்னங் காலைப் பதியவைத்து நடத்தல்; to tread on one's toes, to walk on tiptoe. 3.குதிப்பதற்கு முயற்சி செய்தல்; to attempt to leap.

ம. குந்தாளிக்குக

[கொந்தளி → குந்தாளி.]

குந்தி[1] *kundi,* பெ.(n.) கள் (திவா.); toddy.

[குத்தி → குந்தி.]

குந்தி[2] *kundi,* பெ.(n.) பாண்டு மனைவியருள் மூத்தாள் (பாரத); Kundi, the first wife of *Pāṇḍu.*

[குள் → குந்து → குந்தி = குள்ளமானவள்.]

குந்திகறையோன் *kundi-kaṟaiyōṉ,* பெ.(n.) பச்சோந்தி; green lizard (சா.அக.).

[ஒருகா. குந்தி + (கரைவோன்) கறையோன்.]

குந்திநட–த்தல் *kundi-naḍa-,* 3 செ.கு.வி.(v.i.) முன்னங்காலை மாத்திரம் ஊன்றி நடத்தல்; to walk on tiptoe.

ம. குந்திநட

[குந்து → குந்தி + நட.]

குந்திநில்–தல் (குந்தி நிற்றல்) *kundi-nil-*, 14 செ.கு.வி. (v.i.) 1. ஒற்றைக் காலால் நிற்றல் (பிங்.); to stand on one leg. 2. முன்னங்காலால் நிற்றல்; to stand on tiptoe.

[குந்தி + நில்.]

குந்தியடித்தல் *kundi-y-adittal*, பெ.(n.) நொண்டி யடித்தல் என்னும் விளையாட்டு (யாழ்.அக.); a game.

[குந்து → குந்தி + அடி.]

குந்திரம்[1] *kundiram*, பெ.(n.) ஒரு பறவை; a bird (சா.அக.). 2. தென்னை; coconut tree.

[குந்து → குந்திரம்.]

குந்திரம்[2] *kundiram*, பெ.(n.) புல்வகை (யாழ்.அக.); a kind of grass.

[குந்து → குந்திரம்.]

குந்திரா *kundirā*, பெ.(n.) ***குந்திராத்தீவு*** பார்க்க; see *kundirāttivu.*

[குந்திராத்தீவு → குந்திரா.]

குந்திராத்தீவு *kunthirā-t-tivu*, பெ.(n.) மாலத்தீவு; Maldive Islands.

[குந்திரம் (தென்னை) + தீவு.]

குந்திராத்தோணி *kundirā-t-tōṇi*, பெ.(n.) மாலத் தீவார் தென்னை மரத்தாற் செய்யும் படகு; canore in the Maldives constructed wholly from the coconut tree.

[குந்திரம் + தோணி. குந்திரம் = தென்னை.]

குந்திவை–த்தல் *kundi-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) முன்னங்காலை மட்டும் ஊன்றி நடத்தல்; to walk on tiptoe. *"நெட்டடி குந்தி வைத்து" (பிரபோத.11:17).*

[குந்தி + வை.]

குந்து[1]**–தல்** *kundu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. இரு காலையும் ஊன்றி வைத்து உட்காருதல்; to sit on the heels with legs folded upright. 2. உட்காருதல்; to sit, squat. 3. முன்னங்கால்களை மட்டும் ஊன்றி நிற்றல்; to stand on tiptoe. *"குந்தியுறித் தயி ருண்டவர்" (பாரத. கிருட்.199).* 4. நொண்டி நடத்தல்; to hop on one leg. *"அடியொன்று கடிதோட்டிக் குந்தி வந்தனன்" (கம்பரா. கும்பக.348).* 5. வளைதல்; to bend, as a bow. *"குந்து வன்னெடுஞ் சிலைமுதற் படைகளும்" (கம்பரா. பிரமாத்.56).*

ம. குந்திக்குக

[குல் → குள் → குந்து.]

குந்து[2] *kundu*, பெ.(n.) 1. உட்காருகை; sitting on the heels, squatting. 2. திண்ணையொட்டு; pial or raised floor of a verandah used as a seat. 3. நொண்டுகை; hopping.

I.sid, sed; **A.S.** sitt; **E.** sit; **Goth.** sit; **ON.**siti; **OHG.** sizz; **Skt.** sad.

[குல் – குள் – குந்து.]

குந்து[3]**–தல்** *kundu-*, 5 செ.கு.வி.(v.i.) தவறுதல்; to fail, to miss. *"குந்தாவருந் தீமை" (திவ்.திருவாய். 2.6:1).*

[குல் → குள் → குந்து.]

குந்து[4] *kundu*, பெ.(n.) 1. பழத்தின் சிம்பு; fibre in fruits or roots. 2. கூந்தல்; hair.

[குருத்து → குந்து.]

குந்து[5] *kundu*, பெ.(n.) எலி; mouse, rat (சா.அக.).

[குத்து → குந்து.]

குந்து[6] *kundu*, பெ.(n.) தீர்த்தங்கரருள் ஒருவர் (ஸ்ரீபுராணம்.); a *tirttankara.*

[குல் → குள் → குந்து.]

குந்துக்கால் *kundu-k-kāl*, பெ.(n.) இராமேசுவரம் அருகிலிருந்த பழைய முகவைத் துறைமுகம்; old mugavai-t-turaimugam near to Rameshwaram.

[குன்று → குந்து + கால்.]

குந்துகால் *kundu-kāl,* பெ.(n.) 1. முன்புற மட்டும் ஊன்றிய கால்; tiptoe. 2. குந்தியிருக்கை; squatting, sitting on the heels. 3. தாங்கி நடக்கும் கால், நொண்டிக்கால்; a limping or lame leg.

ம. குந்துகால்

[குந்து + கால்.]

குந்துகாலன் *kundu-kālaṉ,* பெ.(n.) 1. முன்கால்களால் நடப்பவன்; one who walks with raised heels (கொ.வ.). 2. காலை இழுத்து நடப்பவன்; one who hobbles or limps.

[குந்து + காலன்.]

குந்துகாலி *kundu-kāli,* பெ.(n.) முன்னங்காலால் நடப்பவள்; a woman walking on tip-toe (சா.அக.).

[குந்து + காலி.]

குந்துகாலி *kundu-kali,* பெ.(n.) அடிவலுவற்ற மரம் (யாழ்.அக.); post which is weak at the base.

[குள் → குந்து → காலி.]

குந்துத்தடி *kundu-t-taḍi,* பெ.(n.) பனைநார் உரிக்கும் முட்கருவி; stick with several prongs or forks to extract fibre from the palmyra.

[குந்து + தடி.]

குந்துதிண்ணை *kundu-tiṇṇai,* பெ.(n.) ஒட்டுத் திண்ணை; a small platform or pial adjoining a verandah used as a seat.

[குந்து + திண்ணை.]

குந்துப்பு *kundu-p-pu,* பெ.(n.) ஒற்றைக் காலால் நடந்தாடும் சிறுவர் விளையாட்டு; a boy's game of hopping on one leg.

[குந்து → குந்துப்பு.]

குந்துமணி *kundumaṇi,* பெ.(n.) குன்றிமணி பார்க்க; see *kunṟimaṇi.*

[குன்றிமணி → குந்துமணி (கொ.வ.).]

குந்துரு *kunduru,* பெ.(n.) **குந்துருக்கம்** பார்க்க; see *kundurukkam.*

[குந்துருக்கம் → குந்துரு.]

குந்துருக்கம் *kundurakkam,* பெ.(n.) 1. மேல் நாட்டுச் சாம்பிராணி; salai tree (மலை.). 2. வெள்ளைக் குங்கிலியம்; Konkany resin.

[குந்துள் → குந்துருக்கம்.]

குந்துருக்கன் *kundurukkaṉ,* பெ.(n.) கருங் குங்கிலியம்; black hammer (சா.அக.).

[குந்துருக்கம் → குந்துருக்கன்.]

குந்தேசிகம் *kundēsigam,* பெ.(n.) கோபுரக்கள்ளி; a kind of spurge tree (சா.அக.).

[குந்து + ஊசி – குத்தூசி → குந்தேசி – குந்தேசிகம்.]

குப்பக்காட்டான் *kuppa-k-kāṭṭāṉ,* பெ.(n.) நாட்டுப்புறத்தான்; rustic, boor.

[குப்பம் + காட்டான்.]

குப்பக்காடு *kuppa-k-kāḍu,* பெ.(n.) பட்டிக்காடு; rural parts, village with straggling huts.

[குப்பம் + காடு.]

குப்பங்குடியேற்று–தல் *kuppaṅ-kudi-yēṟṟu,* 5 செ.கு.வி. (v.i.) சிற்றூர் உண்டாக்குதல்; to establish a kuppam or petty village.

[குப்பம் + குடி + ஏற்று.]

குப்பக்கூளி *kuppa-k-kūḷi,* பெ.(n.) பூரான், செய்யான்; a venomous centipede (சா.அக.).

[குப்பை + கூளி.]

குப்படம் *kuppaḍam,* பெ.(n.) களத்தில் நெல்லடித்த பிறகு நிலக்கிழாருக்குக் கொடுக்கப்படும் விளைச்சலின் பாகம்; the portion of the produce of the lands in a village, given to the mirasdar after the grain is threshed.

[குப்பை → குப்படம்.]

குப்பத்தம் *kuppattam,* பெ.(n.) நில உரிமையாளருக் குரிய துண்டு வாரம்; mirasdar's share of the produce or yield.

தெ. குப்பத்தமு

[குப்பம் → குப்பத்தம்.]

குப்பதம் *kuppadam,* பெ.(n.) பூனைக்காலி; cow hage (சா.அக.).

[குப்பை → குப்பத்தம் → குப்பதம்.]

குப்பம்[1] *kuppam,* பெ.(n.) 1. ஊர் (திவா.); village. 2. செம்படவர் முதலியோர் வாழும் சிற்றூர்; small village of fishermen and other low caste people. 3.காடு (பிங்.); jungle. 4. அச்சி நாட்டு நாணயம்; a coin from Acheen.

[குழு → கும்பு → குப்பு → குப்பம்.]

குப்பம்[2] *kuppam,* பெ.(n.) 1. கூட்டம்; multitude *'குப்ப மந்திரங்களெல்லாம்' (குற்றா.தல.கவுற்சன.8).* 2. குவியல்; heap (நெல்லை.).

க.குப்பெ; தெ.குப்ப.

[குழு → கும்பு → குப்பு → குப்பம்.]

குப்பம்[3] *kuppam,* பெ.(n.) திடர் (யாழ்.அக.); mount raised earth.

[குல் → குப்பு → குப்பம்.]

குப்பமரம் *kuppa-maram,* பெ.(n.) நெசவுக்கருவி வகை; vertical peg with a hole to fit in the rounded centre in the left end of the web beam.

[குப்பு + மரம்.]

குப்பமன்னி *kuppamanni,* பெ.(n.) குப்பைமேனி; rubblish plant (சா.அக.).

[குப்பை + மன்னி – குப்பைமன்னி → குப்பமன்னி.]

குப்பல் *kuppal,* பெ.(n.) 1. குவியல்; heap, as of manure. 2. மேடு (திவா.); high ground, mound. 3. கூட்டம்; multitude, company.

[குழு → கும்பு → குப்பு → குப்பல்.]

குப்பல்விளையாட்டு *kuppal-viḷaiyāṭṭu,* பெ.(n.) பிள்ளைகளின் விளையாட்டு வகை; a children's play in sand.

[குப்பல் + விளையாட்டு.]

குப்பலை[1] *kuppalai,* பெ.(n.) ***குப்பளை*** பார்க்க; see *kuppaḷai*

[குப்பல் → குப்பலை.]

குப்பலை[2] *kuppalai,* பெ.(n.) செடிவகை (யாழ்.அக.); a shrub.

[குல் → குப்பு → குப்பலை.]

குப்பளை *kuppaḷai,* பெ.(n.) வெதுப்படக்கி; Indian birth wort (சா.அக.).

[குப்பல் → குப்பளை.]

குப்பன் *kuppaṉ,* பெ.(n.) முன்னிரண்டு குழந்தை களுந்தவறியபின் பிறக்கும் மூன்றாம் மகனுக்கு இடும் பெயர்; name given to the son born after the death of the first two children.

[குப்பை → குப்பன்.]

தொடர்ந்து பிறந்த குழந்தை இறக்காம லிருக்க, குப்பையில் கிடத்தி எடுத்துக் குப்பன் எனப் பெயரிட்டால் எமன் குழந்தை உயிரைக் கவர மாட்டான் எனும் நாட்டுப்புற நம்பிக்கையில் ஆண் குழந்தைகளுக்கு இடப்படும் பெயர்.

குப்பா *kuppā,* பெ.(n.) மீன்கள் வந்து விழும்படி தூரிவலையிற் சேர்த்துள்ள பை; the bag forming part of a shore-net.

தெ. குப்பாசமு

[குள் → குல் → குப்பு → குப்பாயம் → குப்பா (கொ.வ.).]

குப்பாசம் *kuppāsam,* பெ.(n.) 1. மெய்ச்சட்டை; coat, bodice, jacket, cuirass. *"குப்பாசமிட்டுக் குறுக்கே*

கவசமிட்டு" (தமிழ்நா.192). 2.பாம்புச் சட்டை; slough, cast-off skin of serpent. *"பாம்பு குப்பாசங் கழற்றின பொழுது" (சி.சி.பாயி.பக்.42).*

க. கபசெ; **தெ.** குப்பசமு

[குப்பாயம் → குப்பாசம்.]

குப்பாசிவிதை *kuppāši-vitai,* பெ.(n.) சிறு சீமை துத்தி விதை; maroh mallow (சா.அக.).

[குப்பாசி + விதை.]

குப்பாமணி *kuppāmaṇi,* பெ.(n.) குப்பைமேனி; rubbish plant (சா.அக.).

ம. குப்பமேனி

[குப்பைமேனி → குப்பைமன்னி → குப்பாமணி (கொ.வ.).]

குப்பாயம் *kuppāyam,* பெ.(n.) 1. சட்டை; jacket, coat *"வெங்கணோக்கிற் குப்பாய மிலேச்சனை" (சீவக.431).* 2. மெய்ச்சட்டை; bodic.

ம. குப்பாயம்; **க., பட.** குப்பச; **தெ.** குப்பாசமு.

Skt. kūrpāsa; **Pkt.** kuppāsa.

[குள் → குவ் → குப்பு → குப்பாயம்.]

குப்பான் *kuppāṉ,* பெ.(n.) மூடன்; fool.

[குப்பை → குப்பான்.]

குப்பி[1] *kuppi,* பெ.(n.) 1. ஒருவகைக் குடுவை (புறநா.56,உரை.).; vial, flask, bottle. 2. கடைக் குச்சு; an ornament worn on hair-tuft. *"குருகை யூரார் தந்த குப்பியுந் தொங்கலும்" (குற்றா.குற.124).* 3. குப்பிக் கடுக்கன்; ear-ring of a particular shape. 4. சிமிழ்; jewel case. *"குப்பியில் மாணிக்கம் போலே" (ஈடு,1.8:5).* 5. வைரவகை; a species of diamond *"குருவிந்த மூன்றுங் குப்பி மூன்றும்" (S.I.I.II.429).* 6. யாழின் முறுக்காணி; adjusting screw of a lute. 7. மாட்டுக்கொம்பு முதலியவற்றிற் செருகும் பூண்; ferrule at the end of a scabbard, on the horn of an ox, on the tusk of an elephant on the end of a pestle, cover on the spout of a kettle. 8. சாணி; cowdung. மார்கழி மாதத்தில் சிறுமியர் குப்பிமுட்டைத் தட்டுவார்கள்.

ம. குப்பி; **க., து.** குப்பி; **தெ.**குப்பெ.

H.kuppī; **Pali., Pkt.** kūppa; **L.**cuppa; **It.** coppa; **F.** coupe; **A.S.,E.** heap; **G.** haufe.

[கொப்பி → குப்பி.]

குப்பி[2] *kuppi,* பெ.(n.) சங்கங்குப்பி (தைலவ.தைல. 125); smooth volkameria.

[சங்கங்குப்பி → குப்பி.]

குப்பி[3] *kuppi,* பெ.(n.) முன்னிரண்டு குழந்தைகளுந் தவறியபின் பிறக்கும் மூன்றாம் மகளுக்கு இடும் பெயர்; name given to the daughter born after the death of the first two children.

[குப்பை → குப்பி.]

குப்பிக்கடுக்கன் *kuppi-k-kaḍukkaṉ,* பெ.(n.) ஒருவகைக் கடுக்கன்; a kind of ear-ring.

[குப்பி + கடுக்கண்.]

குப்பிக்கல் *kuppi-k-kal,* பெ.(n.) குப்பி செய்வதற்காக பயன்படுத்தும் கல்; a species of glass of which fling was formerly an ingredient, used for making bottle etc. (சா.அக.).

ம. குப்பிக்கல்லு

[குப்பி + கல்.]

குப்பிக்குட்சமைந்தகன்னி *kuppi-k-kutcamainda-kaṉṉi,* பெ.(n.) ஐம்புட்செய் நஞ்சு; a prepared arsenic (w.).

[குப்பி – குப்பிக்குள் + சமைந்த + கன்னி.]

குப்பிக்கெந்தம் *kuppi-k-kendam,* பெ.(n.) வீட்டின் பின்புறமும் தோட்டங்களிலும் தானாக வளரும் ஒரு கீரைச்செடி; rubbish plant which grows largily in the backyards and gardens of the houses (சா.அக.).

மறுவ. குப்பைமேனி

[குப்பி + கெந்தம். கந்தம் → கெந்தம்.]

குப்பிக்கேற்றல் *kuppikkērral,* தொ.பெ.(vbl.n.) 1. புடம் போடுவதற்காக மருந்தைப் புட்டியி லடைத்தல்; securing medicine in a bottle for purposes of calcination. 2. புடம் போட்டபின் மருந்தை புட்டியிலடைத்தல்; filling in a bottle as medicine ofter calcination (சா.அக.).

[குப்பிக்கு + ஏற்றல்.]

குப்பிச்சரக்கு *kuppi-c-carakku,* பெ.(n.) குப்பியில் வைத்து நீற்றிய சிந்தூர வகை; medicinal powder prepared in bottles.

[குப்பி + சரக்கு.]

குப்பிச்சாரம் *kuppi-c-cāram,* பெ.(n.) காசிச் சாரம்; mineral salt.

[குப்பி + சாரம்.]

குப்பிச்சுக்கு *kuppi-c-cukku,* பெ.(n.) பொடி செய்து புட்டியில் அடைத்த சுக்குத் தூள்; powdered dried ginger secured in a bottle (சா.அக.).

[குப்பி + சுக்கு.]

குப்பிச்செந்தூரம் *kuppi-c-cendūram,* பெ.(n.) துப்புரவு செய்த இரசத்தை மற்ற மருந்துகளோடு கூட்டி அரைத்துக் காசிக் குப்பியில் வைத்து முறைப்படி சீலை மண் செய்து, வாலுகா எந்திரத்தில் வைத்து எரிக்க, மேற்பக்கத்தில் படிந்திருக்கக் காணும் சிவப்புச் செந்தூரம். (இரசப்பதங்கம்); sulbimate of mercury (சா.அக.).

[குப்பி + செந்தூரம்.]

குப்பித்தைலம் *kuppi-t-tailam,* பெ.(n.) நெற் குவியலிற் பல திங்களாகப் புதைத்து வைத்து வேகமாற்றி தைலம்; medicinal oil seasoned by being buried in paddy for several months.

[குப்பி + தைலம்.]

குப்பிப்பூ *kuppi-p-pū,* பெ.(n.) குரா; bottle flower tree (சா.அக.).

[குப்பி + பூ.]

குப்பிப்பொங்கல் *kuppi-p-pongal,* பெ.(n.) சுறவ (தை) மாதம் முதல் நாளில் குப்பியெருவை யெரித்துப் பொங்கல் சமைத்து உண்ணும் சிறுமியரின் பண்டிகை; feast observed by Hindu girls on the first day of the month of Tai when they prepare pongal using kuppi cakes as fuel.

[குப்பி + பொங்கல்.]

குப்பிமா *kuppi-mā,* பெ.(n.) மாக்கல் (சங்.அக.); soap-stone.

[குப்பி + மா.]

குப்பிமுடி-த்தல் *kuppi-mudi,* 4 செ.கு.வி.(v.i.) சடைக்குச்சு என்னும் அணியைக் கூந்தலில் வைத்துப் பின்னுதல்; to fasten the *caḍaikkuccu* ornament in the hair-tuft.

[குப்பி + முடி.]

குப்பிமுறை *kuppi-murai,* பெ.(n.) பதங்கமுறை; the process of sublimation (சா.அக.).

[குப்பி + முறை.]

குப்பியசாலை *kuppiyaśālai,* பெ.(n.) பித்தளைப் பாத்திரஞ் செய்யும் இடம் (யாழ்.அக.); braziery.

[குப்பியம் + சாலை.]

குப்பியம்[1] *kuppiyam,* பெ.(n.) 1. பொன், வெள்ளி யல்லாத மற்ற மாழை; metals other than gold and

silver. 2. இழிந்த மாழை; inferior or base metal. 3. வங்க மணல்; lead mixed with sand, lead ore (சா.அக.).

[குப்பி → குப்பியம்.]

குப்பியம்[2] *kuppiyam*, பெ.(n.) பொன் வெள்ளி யொழிந்த மாழை (உலோகம்) (யாழ்.அக.); base metal; metal other than silver and gold.

[குப்பி → குப்பியம் (குப்பி அல்லது குடுவைகளில் காய்ச்சும் கலப்பட மாழை).]

குப்பியலரி *kuppi-y-alari*, பெ.(n.) ஈழத்தலரி; pagoda-tree.

[குப்பி + அலரி.]

குப்பிராட்டி *kuppi-rāṭṭi*, பெ.(n.) சிறுபெண்கள் தட்டும் வறட்டி; small cow-dung cakes, prepared by young girls.

[குப்பி + வறட்டி (குப்பி = சிறிய).]

குப்பிராட்டிப்பொங்கல் *kuppirāṭṭi-p-poṅgal*, பெ.(n.) தைத்திங்களில் சிறுமியரின் குப்பிப் பொங்கல்; a festivity observed by girls in the month of tai.

[குப்பி + வறட்டி →குப்பிராட்டி + பொங்கல்.]

குப்பிலவணம் *kuppi-lavaṇam*, பெ.(n.) வளையலுப்பு; a mineral salt.

[குப்பி + லவணம்.]

குப்பிவயிரம் *kuppi-vayiram*, பெ.(n.) வயிர வகை; a species of diamond. *"குப்பி வயிரம் இருபத்தாறும் பளிங்கு வயிரம் நாலும்"* (S.I.I.II.431).

[குப்பி + வயிரம்.]

குப்பிவைப்பு[1] *kuppivaippu*, பெ.(n.) 1. ஒரு வேதியியல் முறை; process of chemical preparation in an alembic; a kind of sublimation. 2. வேதிச் சரக்கு; materials for chemical preparation.

[குப்பி + வைப்பு.]

குப்புகுப்பெனல் *kuppu-kuppenal*, பெ.(n.) தீ முதலியன மூண்டெழும்போது உண்டாகும் ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying jerking, effervescing, bubbling, crackling noise, as of flames, etc.

[குப்பு + குப்பு + எனல்.]

குப்புசம் *kuppušam*, பெ.(n.) புன்கு; puṅgam tree (சா.அக.).

[குப்புயம் → குப்புசம்.]

குப்புழாய் *kuppuḻāy*, பெ.(n.) **குப்புழை** பார்க்க; see *kuppuḻai*.

[குப்புழை → குப்புழாய்.]

குப்புழை *kuppuḻai*, பெ.(n.) கால்நடைகட்கு உணவாகும் இலைகளையுடைய கொடிவகை; a creeper whose leaves serve as food for cattle.

ம. குப்புழ

[குப்பூழ் → குப்புழை.]

குப்புளா *kuppuḷā*, பெ.(n.) மீன்வகை *"மயிந்தன் குப்புளாவுடன் (பறாளை.பள்ளு.74)*; a kind of fish.

[குப்பு → குப்புளா (சிறியது).]

குப்புற்றுக் கொள்(ளு)-தல் *kuppuṟṟu-k-koḷḷu-*, 7 செ.குன்றாவி. (v.t.) குழந்தைகள் மூன்றாம் மாதத்தில் கவிழ்ந்து கொள்ளுதல்; turning or lying with the face downwards as children do in the third month (சா.அக.).

[குப்புறு → குப்புற்று + கொள்-.]

குப்புறக்கவிழ்-த்தல் *kuppuṟa-k-kaviḻttal*, 4 செ.கு.வி (v.i.) தலைகீழாய்க் கவிழ்த்தல்; turning upside down (சா.அக.).

[குப்புற → குப்புறம் + கவிழ்-.]

குப்புறக்கிட-த்தல் *kuppuṟa-k-kiḍa-*, 3 செ.கு.வி. (v.i.) கவிழ்ந்து கிடத்தல்; to lie prone or face downwards.

[குப்புற → குப்புறம் + கிட-.]

குப்புறப்பிடி-த்தல் *kuppuṟa-p-piḍi-*, 4 செ.கு.வி. (v.i.) முகம் கவிழும்படிப் பிடித்தல்; holding anything with the face down-ward (சா.அக.).

[குப்புற → கும்புறம் + பிடி.]

குப்புறல் *kuppuṟal*, பெ.(n.) குப்புறப்படுத்தல்; lying upon the belly (சா.அக.).

[குப்புறு → குப்புறல்.]

குப்புறவிழு-தல் *kuppuṟa-viḻu-*, 2 செ.கு.வி.(v.i.) தலைகவிழ விழுதல்; to trip and fall forward, to fall flat. on the face.

[குப்புற + விழு-.]

குப்புறு[1]-தல் *kuppuṟu-*, 20 செ.குன்றாவி.(v.i.) கடத்தல்; to traverse, cross. *"குப்புறற் கருமை யாலக் குலவரைச் சாரல் வைகி"' (கம்பரா. வரைக்.35).*

[குப்பு + உறு-.]

குப்புறு[2]-தல் *kuppuṟu-*, 20 செ.கு.வி.(v.i.) 1. பாய்ந்து கடத்தல்; to spring or leap across, *"குறுமுனி குடித்த வேலை குப்புறுங் கொள்கைத் தாதல்" (கம்பரா.கடறா.15).* 2. தலைகவிழ விழுதல்; to fall headlong. *"கதிரவனும்... குடபாற் கடலிற் குப்புற்றான்"* 3. தலைகுனிதல்; to hang one's face downs (செ.அக.)

Fin. kompastua; **Es.** kumistada; **Q.** kumpay.

[கவிழ்ப்பு → கப்பு → குப்பு + உறு-.]

குப்பெனல் *kuppeṉal*, பெ.(n.) திடீரெனல்; expr. signifying suddenness.

[குப்பு + எனல்-.]

குப்பை[1] *kuppai*, பெ.(n.) 1. குவியல்; collection, heap. *"உப்பின் பெருங்குப்பை நீர்படியி னில்லாகும்" (திரிகடு.83).* 2. கூட்டம்; clump, group. *"ஆம்பலங் குப்பையை" (கல்லா. 43,28).* - *"குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை" (பொருந.244).* 4. செத்தை; sweepings, rubbish, refuse. 5. மேடு (சூடா.); mound, high ground. 6. மலம்; dung, excrement, ordure. *குப்பை எடுக்கிறவன் (இ.வ.).*

ம. குப்ப; **க.** குப்பெ, குப்பெ, கொப்பல்; **தெ.** குப்பம்; **து.** குப்பெ, குப்பெ, கிப்பெ; **கோத.** கிபம்; **துட.** கிப்; **கொலா.** குப்பகல் (ஒன்று சேர்த்தல்); **கூய்.** குப் (குன்று); **பர்.** குப்பம் (மேடு); **கோண்.** குப்பம்; **குரு.** கொப்பனா; **மால்.** கவொபம்; **பட.** குப்பெ

A.S., OE., E. heap; **O.S.** hop; **ME.** heep; **Du.** hoop; **Icel.** hopr; **Dan.** hob; **Swed.** hop; **G.** haufe; **OHG.** hwfo; **R.** kupa; **Lith.** kaupas.

[குவி → குவிப்பு → குப்பு → குப்பை.]

kupp-ei, sweepings, refuse, dung, a dung-heap. Comp. kopros, dung, dirt, a farm-yard (C.G.D.F.L. Pg.593).

குப்பை[2] *kuppai*, பெ.(n.) சதகுப்பை (தைலவ. தைல.24); dill.

[கும்பு → குப்பு → குப்பை.]

குப்பைக்காட்சி *kuppai-k-kāṭci*, பெ.(n.) பறையர் நத்தத்திற்குரிய நிலவரி (நெல்லை.); ground rent payable by parayās for putting up huts on the lands.

ம. குப்பக்காழ்ச

[குப்பை + காட்சி.]

குப்பைக்கார்த்திகை *kuppai-k-kārttikai*, பெ.(n.) பிற்கார்த்திகை; the day following kārttikai festival, when lamps are lit.

[குப்பு → குப்பை + கார்த்திகை.]

குப்பைக்காரன் *kuppai-k-kāraṉ*, பெ.(n.) குப்பை வாருவோன்; street -sweeper, scavenger.

[குப்பை + காரன்.]

குப்பைக்காலன் *kuppai-k-kālaṉ,* பெ.(n.) ஆகூழ்க் காலுடையவன்; auspicious person, one who brings good fortune, even as he comes, *"ஒருவன் செய்தது வாய்த்துவரப் புக்கவாறே அவன் குப்பைக் காலன் காண்.... என்னக்கடவது" (ஈடு,7.9:9).*

[குப்பை = செல்வம். குப்பை + காலன்.]

குப்பைக்கீரை *kuppai-k-kīrai,* பெ.(n.) 1. குள்ளத் தண்டுக் கீரை; a weed of cotton soils. 2. அறைக் கீரை; a vigorous pot herb much esteemed.

ம. குப்பக்கீர

[குப்பை + கீரை.]

குப்பைக்குடையாள் *kuppai-k-kuḍaiyāḷ,* பெ.(n.) சிறுகீரை; field spinach (சா.அக.).

[குப்பை + குடையாள்.]

குப்பைக்குழி *kuppai-k-kuḻi,* பெ.(n.) குப்பைகளைப் போடும் குழி; a pit to collect rubbish and sweepings.

ம. குப்பக்குழி

[குப்பை + குழி.]

குப்பைக்கூடை *kuppai-k-kūḍai,* பெ.(n.) குப்பை களைப் போடப் பயன்படுத்தும் கூடை; dust bin made up of wicter basket.

[குப்பை + கூடை.]

குப்பைக்கூளம் *kuppai-k-kūḷam,* பெ.(n.) செத்தை முதலியன; sweepings, rubbish.

[குப்பை + கூளம். மரபிணைமொழி.]

குப்பைகிளர்-த்தல் *kuppai-kiḷar-,* 14 செ.கு.வி. (v.i.) **குப்பைகிளை...** பார்க்க; see *kuppaikiḷai. "குப்பை கிளர்த்தன்ன செல்வத்தை" (திவ். திருவாய்.3.9:5).*

[குப்பை + கிளர்.]

குப்பைகிளறு-தல் *kuppai-kiḷaṟu-,* 5 செ.கு.வி. (v.i.) **குப்பைகிளை-,** பார்க்க; see *kuppaikiḷai.*

[குப்பை + கிளறு.]

குப்பைகிளை-த்தல் *kuppai-kiḷai-,* 4 செ.கு.வி.(v.i.) குப்பையைக் கிண்டுதல்; to scratch up a heap of refuse, as a hen. *"குப்பை கிளைப்போவாக் கோழிபோல்" (நாலடி. 341).* 2. குற்றம் வெளிப் படுவதற்குத் துருவித் துருவி உசாவுதல்; to enquire into for exposing unsavoury details.

[குப்பை + கிளை.]

குப்பைகொளுத்தி *kuppai-k-koḷutti,* பெ.(n.) குப்பைகளைக் கொளுத்திச் சாம்பலாக்கும்படி பயன்படுத்தும் அடுப்பு அல்லது எந்திரம்; shut in fire for burning waste material, a furnace for burning rubbish to ashes (சா.அக.).

[குப்பை + கொளுத்தி.]

குப்பைச்சம்பா *kuppai-c-campā,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[குப்பை + (சும்பு) சம்பா.]

குப்பைத்தொட்டி *kuppai-t-toṭṭi,* பெ.(n.) குப்பைகளைப் போட பயன்படுத்தும் தொட்டி; dust bin.

[குப்பை + தொட்டி.]

குப்பைநோய் *kuppai-nōy,* பெ.(n.) குதிரைகளுக்கு வரும் ஒருவகை நோய்; a disease attackig horses (சா.அக.).

[குப்பை + நோய்.]

குப்பைப்பருத்தி *kuppai-p-parutti,* பெ.(n.) உப்பம் பருத்திவகை; a species of cotton.

[குப்பை + பருத்தி.]

குப்பைமஞ்சள் *kuppai-mañcal*, பெ.(n.) 1. இழிந்த மஞ்சள்; an inferior kind of turmeric. 2. குரங்கு மஞ்சள்; monkey turmeric (சா.அக.).

[குப்பை + மஞ்சள்.]

குப்பைமன்னி *kuppai-manni*, பெ.(n.) 1. குப்பை மேனிக்கீரை; Indian acalypha.

[குப்பை + மன்னி.]

குப்பைமுள்ளி *kuppai-mulli*, பெ.(n.) சிவப்புமுள்ளிக் கீரை; red prickly-spinach (சா.அக.).

[குப்பை + முள்ளி.]

குப்பைமூலிகை *kuppai-mūligai*, பெ.(n.) முடக் கொத்தான்; palsy curer (சா.அக.).

[குப்பை + மூலிகை.]

குப்பைமேடு *kuppai-mēḍu*, பெ.(n.) கூளக்குவியல் (பிங்.); dung hill; heap of sweepings, of rubbish.

[குப்பை + மேடு.]

குப்பைமேனி *kuppai-mēni*, பெ.(n.) குப்பையில் வளரும் ஒரு வகைக் கீரை; indian acalypha.

ம. குப்பமேனி; **க.** குப்பை, குப்பெகிட; **தெ.** குப்பி, குப்பெண்டசெடு.

[குப்பை + (மன்னி) மேனி.]

குப்பைமேனிமெழுகு *kuppai-mēni-meḷugu*, பெ.(n.) குப்பைமேனியை மற்றச் சரக்குகளோடு சேர்த்துச் செய்யும் மெழுகு; a wax like preparation from rubbish plant mixed with other ingredients (சா.அக.).

[குப்பைமேனி + மெழுகு.]

குப்பையலரி *kuppai-y-alari*, பெ.(n.) ஈழத்தலரி; pagoda tree (சா.அக.).

[குப்பை + அலரி.]

குப்பையன் *kuppaiyan*, பெ.(n.) அழுக்கடைந்தவன்; slovenly person, used in contempt.

[குப்பை + அன்.]

குப்பையெரு *kuppai-y-eru*, பெ.(n.) நாட்டெரு; country manure.

[குப்பை + எரு.]

குப்பைவாரி *kuppai-vāri*, பெ.(n.) குப்பை வாருவோன்; scavenger. 2. செத்தை கூட்டுங் கருவி; stiff broom made of withes or bamboo, rake.

[குப்பை + வாரி.]

குப்பைவை-த்தல் *kuppai-vai*, 4 செ.கு.வி.(v.i.) பயிர்களுக்கு உரம்போடுதல்; to manure with sweepings, rubbish, refuse.

[குப்பை + வை.]

குபிலன் *kupilan*, பெ.(n.) அரசன் (யாழ்.அக.); king.

[குவை → குவி → குவிரன் → குபிலன்.]

குபினன் *kupinan*, பெ.(n.) வலைஞன் (யாழ்.அக.); fisherman.

[குப்பினி (வலை) → கும்பினன் + குபினன்.]

குபினி *kupini*, பெ.(n.) மீன்பிடிக்கும் வலைவகை (யாழ்.அக.); a kind of fishing net.

[குப்பினி → குபினி.]

குபீரெனல் *kubīrenal*, பெ.(n.) வேகமாதற் குறிப்பு; onom, expr. signifying burning fiercely, rushing suddenly, flowing, forcibly. gushing out in streams. *"ஆலயத்துளிருந்து குபீர் குபீரென" (திருப்பு.296).*

[குபீர் + எனல்.]

குபீலெனல் *kubīlenal*, பெ.(n.) ***குபீரெனல்*** பார்க்க; see *kubīrenal*.

[குபீலெனல் → குபீரெனல்.]

குபேரன் *kubēran*, பெ.(n.) எட்டுத் திக்குப் பாலகருள் வடதிசைக்கு உரியவனும் நிதியின் கிழவனும், இயக்கர்களுக்குத் தலைவனுமான தேவன்; Kubēra

the god of wealth, lord of Yaksas, regent of the North *"ஒருவனோ குபேரனின்னோ டுடன் பிறந்தவர்கள்"* (கம்பரா.சூர்ப்.53). 2. பணக்காரன்; rich man. *"வாக்கினால் குபேர னாக்கினான்"* (தமிழ்நா.206). 3. சந்திரன்; moon. *"சூரன்' குலத்தோர் குபேரன் குலத்தோர்"* (பாரத. இராச.116).

[குப்பை → செல்வம். குப்பை → குப்பையன் → குப்பரன் → குபேரன்.]

குபேரிகை *kubērigai,* பெ.(n.) வட்டத்திருப்பி (தைலவ.தைல.4); sickle leaf.

[குப்பிரிகை → குபேரிகை.]

கும்பக்குடம் *kumba-k-kuḍam,* பெ.(n.) 1. தேரின் உறுப்புக்களுளொன்று; dome of a temple car. 2. கரகம்; decorated water pot carried in procession.

[கும்பம் + குடம்.]

கும்பக்குடம்

கும்பகயம் *kumbakayam,* பெ.(n.) பேய்த்தேற்றா; a bitter veriety of clearing nut (சா.அக.).

[கும்பம் + காயம்.]

கும்பகருணன் *kumbakaruṇaṉ* பெ.(n.) 1. இராவணன் தம்பியருள் ஒருவன்; kumba karuna, younger brother of Rāvaṇa, as pot-eared. *"கும்பகருணனுந் தோற்று முனக்கே பெருந்துயில் தான் தந்தானோ"* (திவ். திருப்பா.10). 2. பெருந் தூக்கமுள்ளவன்; sound sleeper (கொ.வ.).

[கும்பம் + கருணன். கும்பகருணன் = குடம் போன்ற காதுடையவன்.]

Skt. karna > *த. கருணன்.*

கும்பகாமாலை *kumbakāmālai,* பெ.(n.) காமாலை நோய் வகை; a kind of jaundice (சா.அக.).

[கும்பம் + காமாலை.]

கும்பகாரம் *kumbakāram,* பெ.(n.) 1. கண்ணுக்கு வலிவையும், இரப்பைகளுக்கு அழகையும் கொடுக்கும் அஞ்சனம்; a mineral substance (antimony) used as collyrium to strengethen the eyes and beauty the lashes. (சா.அக.).

மறுவ. கும்பகாரிகை

[கும்பம் + (காரிகை)காரம்.]

கும்பகாரி[1] *kumbakāri,* பெ.(n.) சிவப்பு நஞ்சு; red arsenic (சா.அக.).

[கும்பம் + காரி.]

கும்பகாரி[2] *kumbakāri,* பெ.(n.) 1. மண்பாண்டம் செய்பவள் (யாழ்.அக.); potter woman. 2. கண்ணிலிடும் மைவகை; a kind of collyrium. 3. செம்பாடாணம் எனும் செய்நஞ்சு; a mineral poison.

[கும்பம் + காரி.]

கும்பகாரிகை *kumbakārigai,* பெ.(n.) கண்ணுக் கிடும் மருந்து; collyrium for the eyes (சா.அக.).

[கும்பம் + காரிகை.]

கும்பங்கம் *kumbaṅgam,* பெ.(n.) கருங்கழுகு, கருங்கூளி; black eagle, it is so called probably of its body resembling a pot in shape (சா.அக.).

[கும்பம் + அங்கம்.]

கும்பசரம் *kumbaśaram,* பெ.(n.) சிவதை; Indian jalap (சா.அக.).

[கும்பம் + சரம்.]

கும்பசாதி *kumbacādi,* பெ.(n.) பெண்களின் நாலுவகைச் சாதிகளில் ஒன்றாகிய சங்கினி சாதி; one of the four clases of women characterised according to their lust (சா.அக.).

[கும்பம் + சாதி.]

கும்பசீனிதம் *kumbacinidam,* பெ.(n.) பீநாறிச் சங்கு; smooth volkameria (சா.அக.).

[கும்பம் + சீனிதம்.]

கும்பதும்பி *kumbatumbi,* பெ.(n.) குடத்தைப் போன்ற சுரைக்காய்; a large round gourd resembling a pot (சா.அக.).

[கும்பம் + தும்பி.]

கும்பந்தம் *kumbandam,* பெ.(n.) வெண் கருங்காலி; whitish black wood (சா.அக.).

[கும்பம் → கும்பன் → கும்பந்தம். கும்பல் = சாம்பல் நிறம்.]

கும்பநாயறு *kumbanāyaṟu,* பெ.(n.) கும்பஞாயிறு, மாசிமாதம் கும்பராசியில் கதிரவன் நிற்கும் நிலை (கல்.க.சொ.அ.மு.).

[கும்பம் + (ஞாயிறு) நாயிறு (கொ.வ.).]

கும்பநீர் *kumbanīr,* பெ.(n.) குடத்துத் தண்ணீர்; water contained in a drinking pot (சா.அக.).

[கும்பம் + நீர்.]

கும்பப்புடம் *kumba-p-puḍam,* பெ.(n.) ஒரு பானையில் 40 துளைகளிட்டு, அதில் பாதிவரை அடுப்புக்கரியால் நிரப்பி, அதன்மீது மருந்தை வைத்து, அப்பானை வாயை மடக்கால் மூடி சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பில் ஏற்றி, அப்பானையின் மடக்கு மீது நெருப்பையிட்டு, மூன்று நாள்கள் அடுப்பில் வைத்து எரிக்கும் ஒரு முறை; a process of calcination in which a large round pot, containing 40 holes at the bottom, is half-filled with charcoal, over, which is placed the required medicine. The lid of the pot is then covered with the dish, then hermitically sealed by luting the joint with clay and then getting it dried this apparatus is placed on an oven and heated for three days continuously (சா.அக.).

[கும்பம்+புடம்.]

கும்பப்பூ *kumba-p-pū,* பெ.(n.) கும்ப (மாசி) மாதத்து அறுவடையாகும் பாசன விளைச்சல்; crop harvested in the month of māci.

[கும்பம் (மாசிமாதம்) + பூ.]

கும்பம்[1] *kumbam,* பெ.(n.) 1. குவிந்து திரண்டிருக்கும் கலம்; earthen pot, jar. 2. கும்பவடிவான மேற்கட்டிடம்; dome. 3. கும்பம் போன்ற யானை மண்டை; forntal glob of an elephant's forehead. "கும்பத்தின் கரியைக் கோண்மா கொன்றென (கம்பரா. இரணியன்வ. 125). 4. கும்பவோரை; Aquarius, constellation of the zodiac. 5. கும்பமாதம்; the eleventh Indian month. 6. நெற்றி; forehead. 7. இருபுயங்களுக்கும் இடையிலுள்ள முதுகின் மேற்பக்கம்; upper part of the back between the shoulders.

[கும் → கும்பு → கும்பம்.]

கும்பம்[2] *kumbam,* பெ.(n.) 1. குவியல்; heap. 2. நூறுகோடி (திவா.); a thousand million.

[குமு → கும்பு → கும்பம்.]

கும்பம்[3] *kumbam,* பெ.(n.) ஒரு சிற்றூரின் காற்பங்கு அளவுள்ள பகுதி (சுக்கிரநீதி.27); hamlet, one-fourth the size of a kirāmam.

[குமு → கும்பு → கும்பம்.]

கும்பம் செய்தல் *kumbamceydal,* பெ.(n.) பிணத்தைப் புதைத்தல்; burying the dead.

[கும்பம் + செய்தல். கும்பம் = தாழி.]

கும்பம்பாலை *kumbam-pālai,* பெ.(n.) கோபுர முதலியற்றின்மேல் வைக்கும் ஒப்பனைக் கலசம்; pitcher-shaped finial as of a tower.

[கும்பம் + சாலை.]

கும்பமாதி *kumbamādi,* பெ.(n.) சிவதை; Indian jalap (சா.அக.).

[கும்பம்+ஆதி.]

கும்பமாமுனி *kumbamāmuṉi,* பெ.(n.) கும்பமுனி, அகத்தியர்; the sage agastya (சா.அக.).

மறுவ. அகத்தியர்

[கும்பம்+மா +முனி.]

குடமலை முனிவனாகிய அகத்தியனைக் குடமலையில் இருந்தவனாகக் கருதுவதே மரபு. வடவர் இதனையுணராது குடத்தில் (கும்பத்தில்) பிறந்தவன் என்று புனைந்துரைக்கும் தொல்கதை ஒரு கட்டுக் கதையாகும்.

கும்பமீன் *kumba-mīṉ,* பெ.(n.) கடல் நத்தை; sea snail with a fissure in the shell, at the bottom portion (சா.அக.).

[கும்பம்+மீன்.]

கும்பமுத்திரை *kumba-muttirai,* பெ.(n.) வழிபாட்டு முத்திரை வகை (சைவாநுட்.வி.12); a hand-pose, in worship.

[கும்பம் + முத்திரை.]

கும்பமூர்த்தன் *kumba-mūrttaṉ,* பெ.(n.) மாந்தரை நோயால் பீடிக்கச் செய்வதாகக் கருதப்பட்ட பேய்; a demon believed to cause diseases in human beings (சா.அக.).

[கும்பம்+மூர்த்தன்.]

கும்பரேகை *kumpa-rēkai,* பெ.(n.) கைவரை வகை (திருவாரூர்.குற.Ms.); a line in palm of hand.

[கும்பம் + (வரைகை) ரேகை.]

கும்பல்[1] *kumbal,* பெ.(n.) 1. குவியல்; heap. 2. திரள்; clump, cluster, tuft. 3. கூட்டம்; company, crowd, collection, group, mass. *"கும்பலா வொருமிக்கக் கூட்டி" (இராமநா. உயுத்.33).*

[கும் →கும்பு →கும்பல்.]

கும்பல்[2] *kumbal,* பெ.(n.) ***கும்பனாற்றம்*** பார்க்க; see *kumbaṉāṟṟam.*

[கும்பு →கும்பல்.]

கும்பலக்கொடி *kumbala-k-koḍi,* பெ.(n.) ***குமிழ்*** பார்க்க; see *kumiḻ.*

மறுவ. குமிழங்கொடி

[கும்பளக்கொடி →கும்பலக்கொடி.]

கும்பலடி-த்தல் *kumbalaḍi,* செ.கு.வி.(v.i.) 1. கும்ப வாசனையடித்தல்; flavour of being over-boiled. 2. சுடு நாற்றம் வீசுதல்; throwing scorched small, smell of over burnt.

கும்பலம் *kumbalam,* பெ.(n.) 1. குடத்தைப் போன்ற பூசணி; pumpkin so called because of its resemblance of water pot. 2. சிறு குமிழ்; bell-vervain (சா.அக.).

[கும்பல் →கும்பலம்.]

கும்பலிகம் *kumbaligam,* பெ.(n.) மூலாதாரம்; the lowest centre in the pelvic region of the human body (சா.அக.).

[கும்பல் →கும்பலிகம்.]

கும்பவாதம் *kumba-vādam,* பெ.(n.) தோள், கை மிக வலித்து, கன்னமும் கண்ணும் கடுத்து, தலையில் துடிப்புண்டாகி, வாயுக் கோளாறடைந்து, தொப்புளின் கீழ் வலி காணும் ஓர் ஊதை நோய்; a kind of rheumatisn with in the shoulder and arms,

inflammation of cheeks and eyes, tremor of the head, flatulent disorders and colicky pain below the navel (சா.அக.).

[கும்பம்+வாதம்.]

கும்பளக்கொடி *kumbaḷa-k-koḍi,* பெ.(n.) குமிழங்கொடி; kashmeretree (சா.அக.).

[கும்பளம் (பூசணி)+கொடி.]

கும்பற்காடு *kumbaṟkāḍu,* பெ.(n.). அடர்ந்த காடு; thick forest.

[கும்பல்+காடு.]

கும்பற்சாதம் *kumbaṟ-cādam,* பெ.(n.) 1. புகை சூழ்ந்த அன்னம்; smoked rice. 2. தீய்ந்த சாதம்; charred boiled rice (சா.அக.).

[கும்பல்+சாதம்.]

கும்பன் *kumbaṉ,* பெ.(n.) 1. ஓர் அரக்கன்; a rākšasa. 2. இழிந்தவன்; libertine.

[குல் → கும்பு (எரிதல், வேதல்) → கும்பன்.]

கும்பனாற்றம் *kumba-ṉāṟṟam,* பெ.(n.) தீய்ந்து போன உணவிலுண்டாகும் நாற்றம்; smell of charred rice, due to insufficient water for boiling (கொ.வ.).

[கும்பல்+நாற்றம்.]

கும்பா *kumbā,* பெ.(n.) உண்கலவகை; shaped silver or brass vessel. "கொப்பரை கிடாரநற் கும்பா" (பிரபோத.11:31).

[கும்பு→கும்பா.]

கும்பாகாரம் *kumbāgāram,* பெ.(n.) காட்டுக்கோழி; jungle fowl (சா.அக.).

[கும்பம் + (ஆகரம்) ஆகாரம்.]

கும்பாசம் *kumbāšam,* பெ.(n.) பவளக்கொடி; coral reef.

கும்பாசாரம் *kumbāšāram,* பெ.(n.) *கும்பாரம்*[1] பார்க்க; see *kumbāram.*

[கூம்பு → கும்பு + ஆசாரம்.]

கும்பாதிரி[1] *kumbādiri,* பெ.(n.) பெரிய மரவகை; lac tree.

[கும்பம் + (அத்திரி) ஆதிரி.]

கும்பாதிரி[2] *kumbādiri,* பெ.(n.) அறிவுத்தந்தை; god father, sponser.

[கும்பம் + (அத்திரி) ஆதிரி.]

கும்பாரம்[1] *kumbāram,* பெ.(n.) அம்பாரம்; heap, pile.

[கும்பு → கும்பாரம்.]

கும்பாரம்[2] *kumbāram,* பெ.(n.) கும்பம் (யாழ்.அக.); pot.

[கும்பு → கும்பாரம் (ஆரம்ப சொல்லாக்க ஈறு).]

கும்பாளை *kumbāḷai,* பெ.(n.) மழையை நம்பியே விளையும் நெல்வகை(G.TJ.D.95); a paddy growing solely with the help of rain.

[கும்பளம் → கும்பாளை.]

கும்பி[1] *kumbi,* பெ.(n.) 1. சேறு (பிங்.); mud, mire or slough emitting stinking smell. 2. சுடுசாம்பல்; hot ashes.

தெ. கும்பி

[கும்பு → கும்பி.]

கும்பி[2] *kumbi,* பெ.(n.) வயிறு; belly. *"ஒருசாண் கும்பிதூர்க்கின்ற கொடியரால்" (பிரபோத. 11:13).*

[கும்பு → கும்பி.]

கும்பி[3] *kumbi,* பெ.(n.) யானை(திவா.); elephant.

[கும்பு → கும்பி.]

கும்பி[4] *kumbi,* பெ.(n.) 1. ***கும்பிபாகம்*** பார்க்க; see *kumbibagam "கும்பிநரகர்கள் (திவ்.திருவாய். 3,7,8.).* 2. நரகம் (திவா.); hell.

[கும்பு → கும்பி.]

கும்பி[5] *kumbi,* பெ.(n.) குவியல்(வின்.); heap

[கும்பு → கும்பி.]

கும்பி[6]**-த்தல்** *kumbi-,*4 செ.கு.வி.(v.i.) ஒக முறையில் மூச்சடக்குதல்; to hold or suppress the breath, suspend respiration, as a yōgi. "உட்கும்பித்து வாங்கவே" (திருமந்.572).

[கும்பு → கும்பி.]

கும்பி[7] *kumbi,* பெ.(n.) மரவகை; carey's myrtle bloom.

[கும்பு → கும்பி.]

கும்பி[8] *kumbi,* பெ.(n.) கும்பவோரை (கும்பராசி) (யாழ்.அக.); the zodiacal sign aquarius.

[கும்பம் → கும்பி.]

கும்பி[9] *kumbi,* பெ.(n.) மட்பாண்டம் (யாழ்.அக.); earthen vessel.

[கும்பம் → கும்பி.]

கும்பி[10] *kumbi,* பெ.(n.) தீ (யாழ்.அக.); fire.

[குல் → கும்பு (வேதல், எரிதல்) → கும்பி.]

கும்பி எருசாணி *kumbiyerucāṇi,* பெ.(n.) எரிக்கப்பட்ட உமியின் சாம்பல், மாட்டுச்சாணம் (உழ.நெ.க.அக.);ash of husk or cowding.

[கும்பி + எரு + சாணி.]

கும்பிகபிடகம் *kumbiga-piḍagam,* பெ.(n.) ஒரு கண்நோய்;an eye diesease (சா.அக.).

மறுவ. கும்பிகம்

[கும்பிகம் + பிடகம்.]

கும்பிகம் *kumbigam,* பெ.(n.) நீலோற்பல விதை; seeds of blue Indian water lily. 2. பெருங்குமிழ். 3. ஆண்குறி; male genital. 4. ஒரு பூடு; a plant. 5. கண்ணிமை ஓரத்தில் குருக்கள் எழும்புவதனால் உண்டாகும் வீக்கம்; swelling of the eye-lids, due to the number of boils (சா.அக.).

[கும்பு → கும்பிகம்.]

கும்பிகவேது *kumbiga-vēdu,* பெ.(n.) வேது பிடித்தல்; treatment by vapour (சா.அக.).

[கும்பு→ கும்பிகம்+வேது.]

கும்பிகா *kumbigā,* பெ.(n.) நாவற் கொட்டையைப் போன்ற ஒருவிதக் கல் பரு; a black wart resembling the stone or the seed of jambolin fruit in shape. 2. கழற்கொடி; bonduc-nut-creeper. 3. வெண்பாதிரி; white trumpet flower. 4. ஆகாச தாமரை; sky lotus (சா.அக.).

[கும்பிக்காய் → கும்பிகா.]

கும்பிகை *kumbigai,* பெ.(n.) வாத்தியவகை (கம்பரா. பிமாத். 5); a kind of drum.

[கும்பிடு + அரி.]

கும்பிட்டுக்கட்டு-தல் *kumbiṭṭu-k-kaṭṭu-* 5 செ.குன்றாவி.(v.t.) தழுவிக்கொள்ளுதல் (யாழ்.அக.); to enfold in a close embrace.

[கும்பு + இடு → கும்பிடு + கட்டு.]

கும்பிடரி *kumbidari,* பெ.(n.) பயிரிடுவோர் நிலக்கிழார்க்கேனும், ஆலயத்திற்கேனும் காணிக்கையாக்கும் கதிர்க்கட்டு; bundle of sheaves presented by the ryot to the chief of a village or to the temple, as a mark of respect (இ.வ.).

[கும்பிடு + அரி.]

கும்பிடானை *kumbiḍāṉai,* பெ.(n.) பிண்டம்; foetus (சா.அக.).

[கும்பி+ (இடுவன் → இடான்) இடானை. கம்பி = வயிறு.]

கும்பிடு[1]-தல் *kumbidu-,* 17 செ.குன்றாவி.(v.t.) 1. கைகுவித்து வணங்குதல்; to join hands in worship, to make obeisance with the hands joined and raised. *"தலையினாற் கும்பிட்டுக் கூத்துமாடி" (தேவா. 727,3).* 2. கெஞ்சுதல்; to beg, solicit, entreat (இ.வ.).

Fin. kumartua; **Mordvin.** koma; **Es.** kummardada; **Hanti.** kumatali; **Mong.** kumri; **Jap.** kubomi.

[கூப்பு → கூம்பு + இடு = கும்பிடு.]

கும்பிடு[2] *kumbidu,* பெ.(n.) வணக்கம்; worship, obesisance with hands joined. *"நான் கும்பிடும்போ தரைக்கும்பிடாதலால்" (தாயு. கருணா. 6).*

[கூப்பு → கூம்பு + இடு = கும்பிடு.]

கும்பிடுகல் *kumbiḍu-kal,* பெ.(n.) பிண்டக்கல்; white lime stone. a secret term used in alchemy (சா.அக.).

[கும்பி+இடு+கல். கும்பி = வயிறு.]

கும்பிடுகள்ளன் *kumbidukaḷḷaṉ,* பெ.(n.) வணக்கங்காட்டும் வஞ்சன்; servile, hypocrite, cringing dissembles.

[கும்பிடு + கள்ளன்.]

கும்பிடுகற்சுண்ணம் *kumbiḍu-kaṟ-cuṇṇam,* பெ.(n.) சுந்தரானந்தர் நூலிற் கூறியுள்ள வழலைச் சுண்ணம்; an alchamical compound of calcium referred to (Sandaranandhar's) work on Tamil medicine (சா.அக.).

[கும்பிடு + கல் + சுண்ணம்.]

கும்பிடுகிளிஞ்சில் *kumbidu-kiḷñgil,* பெ.(n.) கிளிஞ்சில் வகை; a species of cokee, a bivalve shell.

[கும்பிடு + கிளிஞ்சில்.]

கும்பிடுசட்டி *kumbidu-caṭṭi,* பெ.(n.) 1. கணப்புச் சட்டி; chafing-dish or portable furnace. 2. தட்டார் நெருப்பு வைக்கும் சட்டி; potsherd in which fire is kept by goldsmiths.

[கும்பி + இடு + சட்டி.]

கும்பிடுபூச்சி *kumbidu-pūcci,* பெ.(n.) முன்னங் கால்களைக் கூட்டிக் கும்பிடுவதுபோல் தோன்றும் ஒருவகை இலைப்பூச்சி; praying wisect, as holding its auterior legs in a manner suggesting hands clasped in prayer (யாழ்ப்.)..

[கும்பிடு + பூச்சி.]

கும்பிடுபோடு-தல் *kumbidu-pōdu-,* 19 செ.கு.வி.(v.t.) கைகுவித்து வணங்குதல்; to worship with joined hands.

[கும்பிடு + போடு.]

கும்பித்திரு-த்தல் *kumbittiru-,* 4 செ.கு.வி.(v.i.) ஊழ்க (சமாதி) நிலையிலிருத்தல்; being in a state in which the individuals consciousnes gets fused and is lost in the transcendental. 2. மூச்சற்றிருத்தல்; being in a state of trance or suspended animation (சா.அக.).

[கும்பு → கும்பி → கும்பித்து + இரு.]

கும்பித்துப்போ–தல் *kumbittup-pō,* 8 செ.கு.வி. (v.i.) ஊழ்க (சமாதி) புக வேண்டித் தம்பித்தல்; causing respiration to cease so as to enter samadhi. 2. மூச்சொடுக்கி நிற்றல்; being in a state of breathlessness (சா.அக.).

[கும்பி → கும்பித்து + போ.]

கும்பிநாசம் *kumbinasam-,* பெ.(n.) பாம்பு(பிங்.); snake.

[கும்பி + நசம்.]

கும்பிநாசி *kumbi-nāci,* பெ.(n.) குடத்தைப் போன்ற மூக்கு; jar nose (சா.அக.).

[கும்பம் → கும்பி + நாசி. நாசி → நாசி.]

கும்பிநாற்றம் *kumbinārram-,* பெ.(n.) **கும்பநாற்றம்** பார்க்க; see *kumbanārram.*

[கும்பு (கும்பல்) → கும்பி + நாற்றம்.]

கும்பிப்போ–தல் *kumbi-p-pō,* 8 செ.கு.வி.(v.i.) புகைசூழல்; being clouded with smoke when charred or over burnt (சா.அக.).

[கும்பி + போ.]

கும்பிபாகம் *kumbi-bāgam,* பெ.(n.) ஏழுநகரத்துள் ஒன்றானதும் பாவஞ்செய்தவரைக் குயச் சூளையிற் சுடுவதுபோல் வாட்டுவதுமாகிய நரகம்; a hell in which the wicked are baked as if in potter's kiln, one of *elu-naragam.* *"கும்பிபாக நரகத்திடைக் குளிப்ப" (காசிக. சிவசன்மாவை.310).*

[கும்பி + பாகம்.]

கும்பிமுகம் *kumbi-mugam,* பெ.(n.) நெருப்பைப் போற் சிவந்த புண்;a red inflamed wound. 2. ஒரு சிவந்த நச்சுப்பூச்சி; a kind of red venomous insect (சா.அக.).

[கும்பி + முகம்.]

கும்பியழித்தல் *kumbi-y-alittal,* பெ.(n.) ஒரு விளையாட்டு (யாழ்.அக.); a game.

[கும்பி + அழித்தல்.]

கும்பிரச்சரு *kumbiraccaru,* பெ.(n.) பேரிலாழும்; bile of cobra snake (சா.அக.).

[கும்பிலம் + (சுரு) சரு.]

கும்பிலம் *kumbilam,* பெ.(n.) அகாலத்தில் பிறந்த குழந்தை; child begotton in undue season. 2. கரு முற்றாத குழந்தை; a child of an imperfect pregnation. 2. ஒரு மீன்; a kind of fish called gilt head. 4. முதலை; crocodile (சா.அக.).

[கும்பு → கும்பிலம்.]

கும்பிலன் *kumbilan,* பெ.(n.) திருடன் (யாழ்.அக.); house-breaker, thief.

[கும்பு → கும்பில் (கழிவு) → கும்பிலன்.]

கும்பீரம் *kum biram,* பெ.(n.) **கும்பீலம்** பார்க்க; see *kumbilam.*

[கும்பீலம் → கும்பீரம்.]

கும்பீலம்[1] *kumbīlam,* பெ.(n.) யானையையும் விழுங்கக்கூடிய பெரிய முதலை; a tramendously big crocodile capable of devouring even an elephant (சா.அக.).

[கும்பம் → கும்பிலம் → கும்பீலம்.]

கும்பீலம்[2] *kumbīlam,* பெ.(n.) முதலை (யாழ்.அக.); crocodile.

[கும்பில் (கழிவு) → கும்பீலம்.]

கும்பு[1]**–தல்** *kumpu-,* 5 செ.கு.வி.(v.i.) சமைத்த உணவு தீய்ந்துபோதல்; to become overburnt, charred, smoked, as food when boiled with insufficient water.

[கும் → கும்பு.]

கும்பு²–தல் *kumpu-*, 5 செ.கு.வி.(v.i.) திரள், குழு; crowd, collection, group.

தெ. கும்பு; **க.** கும்பா.

[கும் → கும்பு.]

கும்புளிக்காய் *kumbuḷi-k-kāi,* பெ.(n.) தீவுப்பகுதியில் விளையும் பருத்த தேங்காய்; a round big coconut in the Isands of Andaman and Nicobars (சா.அக.).

[கும்பளம்→கும்புளி+காய். கும்பளம் = பூசணி.]

கும்பை¹ *kumbai,* பெ.(n.) 1. சிறுமரம்; White emetic nut. 2. பெருங்கம்பளிமரம்; Broad gardenia. 3. திக்காமல்லிகை; Dikmali gum-plant.

[கும்பு → கும்பை.]

கும்பை² *kumbai,* பெ.(n.) சேரி; settlement, especially of Pañcamas.

தெ. கொம்ப

[கும்பு → கும்பை.]

கும்பை³ *kumbai,* பெ.(n.) குடம் (யாழ்.அக.); pot.

[கும்பம் → கும்பை.]

கும்பை⁴ *kumbai,* பெ.(n.) வேசி (யாழ்.அக.); prostitute.

[கும்பில் → கும்பிலி → கும்பை.]

கும்பை⁵ *kumbai,* பெ.(n.) 1. ஓமகுண்டத்தின் வேதிகை (யாழ்.அக.); enclosure round a sacrificial pit. 2. குடும்பம்; family.

க. கொம்பெ

[குழு → கும்பு → கும்பை.]

கும்பை⁶ *kumbai,* பெ.(n.) வாழைவகை (யாழ்.அக.); a kind of plantain.

[கும் → கும்பு (கொத்து) → கும்பை.]

கும்பைப்பிசின் *kumbai-p-piśin,* பெ.(n.) கும்பை மரத்தின் பிசின்; combly resin (சா.அக.).

[கும்பை + பிசின்.]

கும்பைமரம் *kumbai-maram,* பெ.(n.) கம்பிப் பிசின்; combly resin tree. It yields a yellow gum which is anti-spasmodic and insecticide (சா.அக.).

[கும்பை + மரம்.]

கும்மட்டம்¹ *kummaṭṭam,* பெ.(n.) ஒருவகைச் சிறுபறை; a small drum.

தெ. கும்மெட்ட

[கும் → கும்மட்டம்.]

கும்மட்டம்² *kummaṭṭam,* பெ.(n.) 1. காகிதத்தாலான கூட்டுவிளக்கு; globe lights made of paper, chinese lantern. 2. விமானக்கூண்டு; cupola, dome. 3. கட்டடவளைவு; arch, vault, arched roof.

[கும் + மட்டம்.]

கும்மட்டி¹ *kummaṭṭi,* பெ.(n.) 1. கும்மாளம், குதிக்கை; romping, jumping. 2. கும்மாளமடித்து ஆடுங் கூத்து; a rustic dance.

[கும் → கும்மு → கும்மட்டி.]

கும்மட்டி² *kummaṭṭi,* பெ.(n.) ***கும்மட்டம்¹*** பார்க்க; see *kummaṭṭam.*

[கும்மட்டம் → கும்மட்டி.]

கும்மட்டி³ *kummaṭṭi,* பெ.(n.) நெருப்புவைக்குஞ் சட்டி (திவ்.திருக்குறுந். 5, வ்யா); chafing-dish.

தெ. கும்பட்டி; **க.** கும்பட்டி.

[கும் → கும் → கும்மட்டி.]

கும்மட்டி⁴ *kummaṭṭi,* பெ.(n.) ***கொம்மட்டி*** பார்க்க (பதார்த்த.700); a small water-melon. see *kommaṭṭi*

[கொம்மட்டி → கும்மட்டி.]

கும்மட்டி[5] *kummaṭṭi,* பெ.(n.) 1.ஆற்றுத் தும்மட்டி; bitter apple. 2. சர்க்கரைக் கொம்மட்டி; sweet water melon. 3. கம்மாளர் நெருப்புச் சட்டி; chafing-dish especially of goldsmith (சா.அக.).

[ஒரு கா: கும்மல் + சட்டி – கும்மட்டி.]

கும்மட்டிக்கீரை *kummaṭṭi-k-kīrai,* பெ.(n.) ஒருவகைக் கறிக்கீரை; a kind of vegetable green (சா.அக.).

[கும்பு→ கும்பல்→கும்மல் + சட்டி – கும்மல்சட்டி→ கும்மட்டி + கீரை.]

கும்மட்டிகுத்து–தல் *kummaṭṭi-kuttu-,* 5 செ.கு.வி. (v.i.) குதித்து விளையாடுதல்; to jump and romp about.

[கும்மட்டி + குத்து.]

கும்மல்[1] *kummal,* பெ.(n.) ஆடையை நனைத்து நெம்புகை; washing cloth by plunging it into water and pressing it with hands.

[குல் → கும்மு → கும்மல்.]

கும்மல்[2] *kummal,* பெ.(n.) ***கும்பல்*** பார்க்க; see *kumbal.*

[குழுமு → கும்மு → கும்மல்.]

கும்மல்[3] *kummal,* பெ.(n.) அரிசி, உப்பு, காய்கறி முதலிய பொருள்களின் குவியல்; heap of vegetables. சந்தையில் காய்கறிகளைக் கும்மல் கும்மலாகக் குவித்து வைத்திருப்பார்கள். (உ.வ.).

[குழுமு → கும்மு → கும்மல்.]

கும்மல்[4] *kummal,* பெ.(n.) அரிவாள்; sickle.

[குல் → குய் → கும் → கும்மல்.]

கும்மலி[1]**–த்தல்** *kummali-,* 4 செ.கு.வி.(v.i.) விளையாடுதல்; to revel, sport, flutter. *"குருகினங் கூடியாங்கே கும்மலித் திறகுலர்த்தி" (தேவா.511,8).*

[கும் → கும்மலி.]

கும்மலி[2] *kummali,* பெ.(n.) பருத்தவள்; corpulent, stout woman.

[குள் → கும் → கும்மலி.]

கும்மாயம் *kummāyam,* பெ.(n.) 1. குழையச் சமைத்த பருப்பு *'பயற்றுத்தன்மை கெடாது கும்மாய மியற்றி (மணி.27,185)*; well-boiled dhal. 2. சுண்ணாம்பு; lime, mortar.

[குய் (சுடுதல்) → கும் → கும்மாயம்.]

கும்மாளங்கொட்டு–தல் *kummāḷaṅ-koṭṭu-,* செ.கு.வி.(v.i.) குதித்து விளையாடுதல்; to jump and move sportively.

[கும்மாளம் + கொட்டு.]

கும்மாளம் *kummāḷam,* பெ.(n.) 1. குதித்து விளையாடுகை; jumping, romping, moving sportively, as children, claves, etc. 2. குதித்தாடும் ஓர் அநாகரிகக்கூத்து; a rustic dance.

[குள் → கும் → கும்மாளம்.]

கும்மாளி[1]**–த்தல்** *kummāḷi-,* 4 செ.கு.வி.(v.i.) மனநோயின் விளைவாகக் குதித்தல், கை கொட்டல், தன்னை உயர்வாகப் பேசிக்கொள்ளல்; mild form of mania in which the symptoms are manifested under the form of gaiety or sport, as jumping, clapping hands and indulging in other agreeable hallucinations (சா.அக.).

[கும்மல் → கும்மாளி →கும்மாளி.]

கும்மாளி[2] *kummāḷi,* பெ.(n.) கும்மாளம் (யாழ்.அக.); romp; jumping about.

[கும்மாளம் → கும்மாளி.]

கும்மி *kummi,* பெ.(n.) 1. மகளிர் கை கொட்டிப் பாடியாடும் விளையாட்டு; dance with clapping of hands to time and singing, especially among girls. 2. கும்மிப்பாட்டு; poem composed in a adapted to *kummi* dance.

[கொம்மை → கொம்மி → கும்மி.]

கும்மியடி–த்தல் *kummi-y-aṭi-,* 4 செ.கு.வி.(v.i.) பாடிக் கொண்டு கைகொட்டியாடுதல்; to play the *kummi* dance.

[கும்மி + அடி.]

கும்மிருட்டு[1] *kummiruṭṭu,* பெ.(n.) செறி விருட்டு;pitch darkness, intense darkness.

ம. குற்றாக்குற்றிருட்டு

[கும் + இருட்டு. கும் = நெருக்கம், செறிவு ஆகியன குறிக்கும் ஒலிக்குறிப்புச் சொல்.]

கும்மிருட்டு[2] *kummiruṭṭu,* பெ.(n.) காரிருள்; cimmerian, thick darkness.

[கும் + இருட்டு.]

கும்மு–தல் *kummu-,* 5 செ.கு.வி.(v.i.) கைகூடுதல், உண்டாதல்; to happen, occur. *"பண்டுநினைத்த பருவங் கும்முதடி" (கனம் கிருஷ்ணையர், கீர்த்.4).*

[குல் → கும்மு.]

கும்மெனல்[1] *kummenal,* பெ.(n.) இருளடர்ச்சி, காதடைப்பு முதலியவற்றைக் கூறுமிடத்துவரும் குறிப்பு; onom. expr. signifying being over whelmed, as by excessive darknessï or being confused, as by a sound in the ears when partly filled with water. *"கொண்டைமலரே கும்கும்கும் என்னக் கோயம்புத்தூர்நாடி நடந்துவா பின்கூடி" (நாடோடிப் பாட்டு).*

[கும்மு → கும்மெனல் – ஒலிக்குறிப்பு.]

கும்மெனல்[2] *kummenal,* பெ.(n.) மணம் வீசுதல்;to diffuseodor. *"கொண்டைமலரே கும்கும்கும் என்னக் கோயம்புத்தூர்நாடி நடந்துவா பின்கூடி" (நாடோடிப் பாட்டு).*

[கும்மு → கும்மெனல்.]

குமக்கி *kumakki,* பெ.(n.) கடுகுரோகிணி; black hellebore (சா.அக.);

[கும் → குமக்கி.]

குமஞ்சம் *kumañjam,* பெ.(n.) 1. பறங்கிச்சாம்பி ராணி; salai tree. 2. நறும்புகை; frankincense.

[கும் + குமஞ்சம்.]

குமஞ்சான்[1] *kumañjāṉ,* பெ.(n.) 1. ஆண் குமஞ்சான் அல்லது குங்கிலியம்; male frankincerse. 2. பெண்குமஞ்சான் அல்லது சாம்பிராணி; female frankincense. 3. நறுமணப் புகை வகை; different varieties of incense. 4. பறங்கிச் சாம்பிராணி; banzam in (சா.அக.).

[கும்மல் → குமைதல் → குமைந்தான் → குமஞ்சான்.]

குமஞ்சான்[2] *kumañjāṉ,* பெ.(n.) ***குமஞ்சம்*** பார்க்க; see *kumañjam.*

[குமஞ்சம் → குமஞ்சான்.]

குமஞ்சி *kumañji,* பெ.(n.) ஆந்தை; owl (சா.அக.).

[கும் → கும்மந்தி → கும்மஞ்சி → குமஞ்சி.]

குமஞை *kumañai,* பெ.(n.) ஆந்தை; owl (சா.அக.).

[குமஞ்சி → குமஞை.]

குமட்டி *kumaṭṭi,* பெ.(n.) சுரைக்கொடி; bottle gourd creeper. 2. காட்டுப் பூவம்; eye-balltree (சா.அக.).

[கும் → கும்மந்தி → குமைந்தான் → குமஞ்சான்.]

குமட்டிக்காளான் *kumaṭṭi-kāḷāṉ,* பெ.(n.) மரக்காளான்; mushrooms growing on trees (சா.அக.).

[குமட்டி + காளான்.]

குமட்டிக்கீரை *kumaṭṭi-k-kīrai,* பெ.(n.) ஒருவகைக் கறிக்கீரை; a kind of vegetable green (சா.அக.).

[கும்மட்டி → குமட்டி + கீரை.]

குமட்டிக்கொண்டிரு–த்தல் *kumaṭṭi-k-koṇḍiru-,* 3 செ.கு.வி.(v.i.) ஒக்காளித்திருத்தல்; being nausecous (சா.அக.).

[கும் → குமட்டு → குமட்டி + கொண்டிரு–.]

குமட்டு-தல் *kumattu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. வாயால் எடுத்தல்; to have vomiting sensation, keck. 2. நிறையவுண்டு தெவிட்டுதல்; to retch from over-eating. "பொழிந்த மாநிலம் புற்றாக் குமட்டிய புனிற்றா" (கம்பரா. கார்கா.47).

குமட்டு²-தல் *kumattu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கக்குதல்; to vomit, eject. "வடவை குமட்டி யெதிரெடுத்து வயங்குஞ் சூலப்படை" (காசிக. வயிர.22). 2. அருவருத்தல்; to loathe, detest; to feel repugnant about.

[கும் → குமட்டு.]

குமட்டு³ *kumattu,* பெ.(n.) அருவருப்பினால் உண்டாகும் கக்கல்; vomiting with loathing, kecking. அதை உண்டதும் ஒருகுமட்டுக் குமட்டியது.

[கும் → குமட்டு.]

குமட்டுகை *kumattugai,* பெ.(n.) குமட்டுதல்; a sudden feeling of nausea (சா.அக.).

[குமட்டு→குமட்டுகை.]

குமட்டூர்க்கண்ணனார் *kumattūr-k-kannanār,* பெ.(n.) பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தினை இயற்றிய புலவர்; the author of the second ten of *patirru-p-pattu.*

[குமட்டூர் + கண்ணன் + ஆர்.]

குமடு *kumadu,* பெ.(n.) கன்னம்; cheek.

[கும் → குமடு.]

குமடெறிவான் *kumaterivān,* பெ.(n.) கருப்பூரவகை (சிலப்.14,109,உரை.); a kind of camphor.

[குமடு → எறிவான்.]

குமண்டை *kumandai,* பெ.(n.) 1. ஒருவகை மகிழ்ச்சிக்கூத்து; a dance of delight, merry dance. *"இட்டகுமண்டைய பேய்... உகளித்தனவே" (பாரத.பதினாறாம்.51).* 2. செருக்குமேலிட்டுச் செய்யும் செயல்; head strong haughty deed. *"தக்கனார் கொண்ட வேள்விக் குமண்டையது கெட" (தேவா.441,5).*

[கும் → குமள் → குமண்டை.]

குமண்டையிடு-தல் *kumandai-y-idu,* 20 செ.கு.வி. (v.i.) 1. மகிழ்ச்சியாற் குதித்தல்; to cut capers; to leap for joy. 2. நிறையவுண்டு தெவிட்டுதல் (யாழ்.அக.); to retch from over-eating.

[கும் → குமள் → குமண்டை + இடு.]

குமணதனுசாதி *kumana-tanu-šādi,* பெ.(n.) இச்சையின் அடிப்படையில் பிரித்திருக்கும் ஆண் சாதி நான்கு வகையுள் ஒன்று; one of the four classes of men divided according the lust (சா.அக.).

[குமணம் + தனு + சாதி.]

குமணன் *kumanan,* பெ.(n.) தன்தலையை வெட்டி அதனை விரும்பிய தம்பி கையிற் கொடுத்து வேண்டியபொருளைப் பெறுமாறு தன்னிடம் இரந்த புலவனுக்குத் தன் வாளையீந்த ஒரு பெருவள்ளல் (புறநா.164); an ancient chief, who was so liberal as to give away his sword to a needy poet for cutting his head off and taking it over to his brother who had set a price on it.

[கும்→கும்மல்→குமள்→குமளம்(மென்மை, இளமை, இனிமை) →குமணம் →குமணன் (இனிய பண்பினன்). குமளம் பார்க்க see kumaļam]

குமம் *kumam,* பெ.(n.) கூட்டம்; Arabian costus (சா.அக.).

[கும்→ குமம்.]

குமர் *kumar,* பெ.(n.) 1. கன்னிமை; virginity. *"குமரிருக்குஞ் சசிபோல்வாள் (குற்றா.தல. தருமசாமி.47).* 2. கன்னி; virgin; grown-up unmarried girl. 3. அழியாத்தன்மை; impregnability, unsullied condition. *"குமருறப் பிணித்த பைம்பொற்கொடி" (பாரத.இந்திரப்.32)*

[கும் → குமர்.]

குமரக்கிரியை *kumara-k-kiriyai,* பெ.(n.) சிரித்தல், சிறுநீர்க்குடித்தல், தரையைக் குத்தல், கல் பொறுக்கல் முதலிய குணங்களை யுண்டாக்கும் ஓர் அரத்தப் பிரமை; a state of unsound mind manifesting such tendencies as laughing drinking urine, striking with the feet on the ground gathering pebbles etc.,

[குமரம் + கிரியை.]

குமரகச்சாணம் *kumara-kaccāṇam,* பெ.(n.) பழைய வரிவகை; an ancient tax (S.I.I.iii,115).

[குமரகம் + சாணம்.]

குமரகண்டம் *kumara-kaṇṭam,* பெ.(n.) ஒருவகை வலிப்பு; epileptic fits attended with violent convulsions. *"குமரகண்ட வலிப்புவருஞ் சிலநேரம்" (தனிப்பா.i,264,2).*

[குமரம் + கண்டம்.]

குமரகண்டவலி *kumara kaṇḍavali,* பெ.(n.) ஓர்வகை இழுப்பு அல்லது தணுப்பினால் (சிலேட்டுமத்தால்) பிறந்து, காய்ச்சல், தலைவலி கண்டு, முன் கழுத்தையும், முகத்தையும் முறுக்கித் தோளின் பக்கம் வைத்தல் தாடை, கண், செவி, உதடு இவற்றை கோணச் செய்தல் முதலிய குறிகளோடு காணும் வலிப்புநோய்; a kind of epilipte form fits marked by fever and head ache altended with violent convulsions when neck and face are distorted to one side of the shoulder thereby twisting the face especially chin, eyes and ears. It is due to concerted action of the deranged vaycu(gas) (சா.அக.).

[குமுறல் → குமரல் + கண்டம் + வலி. கண்டம் = தீங்கு, வலி = வலிப்பு.]

குமரகண்டன் *kumara-kaṇḍaṉ,* பெ.(n.) **குமர கண்டம்** பார்க்க; see *kumara-kaṇṭam.* *"குமரகண்டன் முதலியன விடும்பையினைப் பெருக்கும்" (சேதுபு.துராசார.35).*

[குமரம் + கண்டன்.]

குமரகமூலி *kumaraga-mūli,* பெ.(n.) கோழிக்கால் கீரை,புதினாக் கீரை; Indian pepper mint (சா.அக.).

[குமரகன் + மூலி. குமரகன் = கோழி.]

குமரகன் *kumaragaṉ,* பெ.(n.) 1. கோழி; fowl. 2. சேவல்; cock.

[குமரன் (முருகன்) → குமரகன் (முருகனின் கொடியான சேவல்).]

குமரகன் பூடு *kumaragaṉ-pūḍu,* பெ.(n.) கோழிக்கால் பூடு; plant resembling the leg of fowl (சா.அக.).

[குமரகன் + பூடு.]

குமரகன் பெண்டிர் *kumaragaṉ-peṇḍir-,* பெ.(n.) வள்ளிக்கொடி; sweet potato creeper (சா.அக.).

[குமரகன் + பெண்டிர்.]

குமரகுருபரர் *kumara-kuru-parar,* பெ.(n.) நீதிநெறி விளக்கம் முதலிய சிற்றிலக்கியங்கள் இயற்றியவரும் பதினேழாம் நூற்றாண்டில் விளங்கியவருமான ஆசிரியர்; the author of nīti-neṟi-viḷakkam and other poems, 17th c.

[குமரன் + குரு + பரர்.]

குமரகோட்டம் *kumara-koṭṭam,* பெ.(n.) கச்சியிலுள்ள முருகக்கடவுள் கோயில் ; a shrine in conjeevaram sacred to Skanda. *"குமரகோட்டம்வாழ்றுமாமுகப்பிரான்" (கந்தபு.கடவுள்.18)*

[குமரன் + கோட்டம்.]

குமரதண்டம் *kumara-taṇṭam,* பெ.(n.) குமரக் கடவுளைப் படைத்தலைவராகக் கொண்ட தேவர்படை; army of gods under Skanda's command. *"குமரதண்டம் புகுந்தீண்டிய வெள்ளம்" (திவ்.திருப்பள்ளி.6).*

[குமரன் + தண்டம்.]

குமரப்பாரை *kumarappārai,* பெ.(n.) பெரிய கடல்மீன்வகை (M.M.668); horse mackerel, glossy green, attaining 5 ft. in length.

[குமரம் + பாரை.]

குமரப்பிள்ளை *kumara-p-pillai,* பெ.(n.) குமரி; virgin (சா.அக.).

[குமர் + பிள்ளை.]

குமரம்[1] *kumaram,* பெ.(n.) கொம்பில்லாத விலங்கு (சூடா.); hornless animal.

[கும் → குமர் → குமரம்.]

குமரம்[2] *kumaram,* பெ.(n.) பழங்காலத்திலிருந் ததாகச் சிலர் கருதுகின்ற ஓர் தமிழ் இலக்கண நூல்; a fictitious work on tamil grammer believed to have perished.

[குமரன் → குமரம்.]

குமரமூக்கன் *kumara-mūkkan,* பெ.(n.) கொம் பேறிமூக்கன்; krait.

[கொம்பேறிமூக்கன் → குமரமூக்கன்.]

குமரலண்டம் *kumara-landam,* பெ.(n.) பிடுக்கில் இரைச்சலிடும் ஒருவகை அண்டநோய்; reducible hernia (சா.அக.).

[குமுறல் →குமுரல் +அண்டம்.]

குமரவலி *kumaravali,* பெ.(n.) காக்கைவலிப்பு நோய் வகை (திருப்பு.176,புதுப்.); a kind of epileptic fit.

[குமரம் + வலி.]

குமரவேள் *kumara-vēl,* பெ.(n.) முருகக் கடவுள் ; Skanda *"வலவனை... குமரவேள் முன்னருய்த்தான்" (கந்தபு.ஏமகூட.6).*

[குமரன் + வேள்.]

குமரன் *kumaran,* பெ.(n.) 1. இளைஞன்; young man, youth. *"இருந்த குலக்குமரர்தமை . . . பருக நோக்கி" (கம்பரா.மிதிலைக்.157).* 2. புதல்வன்; son. *"வாசவற்காகிய குமரன்" (பாரத. பதின்மூன்.191).* 3. முருகன்; Skanda, as son of Śiva. *"குன்று தோறாடிய குமரற் போற்றுவாம்" (கந்தபு. கடவுள்.16).* 4. வைரவன் (சூடா.); Bhairava.

[கும் → குமர் → குமரன்.]

குமரனேறும் பச்சிலை *kumaran-ērum-pa-c-cilai,* பெ.(n.) மயிற்சிகைப் பூடு; peacock's crest (சா.அக.).

[குமரன் (முருகன்) + ஏறும் + பச்சிலை.]

குமரனேறும் புள் *kumaran-ērumpul,* பெ.(n.) மயில்; pea-cock (சா.அக.).

[குமரன் + ஏறும் + புள் (பறவை).]

குமரி[1] *kumari,* பெ.(n.) 1. கன்னி; virgin, maid. *"குமரிமணஞ் செய்துகொண்டு" (திவ். பெரியாழ்.3.8:3).* 2. பருவமடைந்த பெண்; grown-up unmarried girl. 3. புதல்வி; daughter. *"தக்கனீன்ற ... குமரியான" (கந்தபு.பாயி.57).* 4. கொற்றவை; durgā. *"விழிநுதற் குமரி (சிலப்.11,214).* 5. **குமரியாறு** ; a river. *"வடவேங்கடந் தென் குமரி (தொல்.பாயி.).* 6. குமரி முனை; Cape Comorin. 7. கன்னிக் குமரிக்கடல் நீர்; sacred waters at cape Comorin. *"தென்றிசைக்குமரி யாடிய வருவோள்" (மணி.13,7).* 8. அழிவின்மை; perpetual youthhood, uncorrupt, unspoilt condition. *"குமரிக் கூட்டிற் கொழும் பல்லுணவு" (சிலப்.10, 123).* 9. கற்றாழை (திவா.); aloe.

[கும் → குமர் → குமரி.]

குமரிருட்டு (குமரியிருட்டு) குமரிவாழை என்பன இளமையையும், குமரி வேட்டம் குமரிப்போர் என்பன முதல் நிகழ்ச்சியையும், குமரிப்படை, குமரிமதில் என்பன அழியா நிலைமையையும் உணர்த்தும்.

குமர், குமரன், குமரி என்னும் சொற்கட்குத்

திரண்ட இளமை என்பதே அடிப்படை பொருள். ஒ.நோ. முருகு = இளமை. முருகு = முருகன், இளைஞன், குமரன் வள்ளிமணாளன், குறிஞ்சி நிலத் தெய்வம்.

வடமொழியாளர், குமரகுமரியரை ஆரியத் தெய்வமாகவும், அவர் பெயரை ஆரியச்சொல்லாகவுங் காட்டல் வேண்டி, குமரன் என்பதைக் குமார என்றும் குமரி என்பதைக் குமாரீ என்றும், ஈற்றயலுயிர் நீட்டி, மகன் மகள் என்று முறையே பொருள் குறித்து, குமார என்பதைக் கு + மார என்று சிதைத்து, எளிதில் இறப்பது (easily dying) என்று பொருட்கரணியங் கூறுவர்.

குமரன் குமரி என்னுஞ் சொற்கட்குத் தமிழில் இளைஞன், இளைஞை என்றேயன்றி, மகன், மகள் என்னும் பொருளில்லை. இவ்விரு சொற்கட்கும் 'கும்' என்பதே மூலம் என்றும், ஆரியத்தொன்மக் கதைப்படி முருகன் சிவனுக்கு மகன் எனினும், காளி அவனுக்கு மகளாகாள் என்றும் எளிதிலிறப்பது குழப்பருவத்திலும், கிழப்பருவத்திலுமன்றி மழப்பருவத்திலில்லையென்றும் அறிதல் வேண்டும்.

மணமாகாத இளைஞனையும் இளைஞையையும் செல்வன், செல்வி என்று அடை கொடுத்துப் பெயர் குறிப்பது, குமரன், குமரி என்பன வடசொல்லென்னும் அறியாமையை அடிப்படையாகக் கொண்டது. செல்வன் செல்வி என்று மணமக்களைக் குறிப்பதே மரபாதலால், Master, Miss என்னும் அடைகளை இனிக் குமரன் குமரி என்றே தமிழிற் குறிக்க.

(குமர் → குமரி (செல்வி.'78,ஏப்ரல், பக்.407))

குமரி[2] *kumari,* பெ.(n.) மலைநிலத்துச் செய்யும் வேளாண்மை; cultivation in hills.

[குய் → கும் → குமரி.]

குமரிக்கடல் *kumari-k-kaḍal,* பெ.(n.) குமரி யருகிலுள்ள கடல் (சிலப்.8,1, உரை); sea near *Kumari.*

[குமரி + கடல்.]

குமரிக்கண்டம் *kumari-kanḍam,* பெ.(n.) தென்கடலில் மூழ்கி விட்டதாகக் கருதப்படும் தமிழர் வாழ்ந்த நிலப்பகுதி; land submerged in the Indian Ocean where ancient Tamils suposed to have lived for a long period. *"மெய்ந்நெறி சேர்வது குமரிகண்டம்" (கந்தபு.அண்டகோ.47).*

[குமரி + கண்டம்.]

குமரிக்கருப்பிணி *kumari-k-karuppiṇi,* பெ.(n.) சிறுபெண்ணாயிருக்கும் போதே கருப்பமடையும் பெண்; a young pregnant girl (சா.அக.).

மறுவ. குமரிக்கருவத்தி, குமரிக்கருவாளி

[குமரி + கருப்பிணி.]

குமரிக்கற்றாழை *kumari-k-kaṟṟāḻai,* பெ.(n.) 1. சோற்றுக்கற்றாழை; aloe pulp. 2. செங்கற்றாழை; red aloe (சா.அக.).

[குமரி + கற்றாழை.]

குமரிக்காமம் *kumari-k-kāmam,* பெ.(n.) பெண்ணின் நாதம்; sexual discharge in women. semen muliebre. *"கொள்ளடா கொள்ளடா குமரிக்காமம். கொண்டவனே உயிர்பிழைப்பான் மற்றோன் சாவான்" (பூரணசந்திரோதயம்) (சா.அக.).*

[குமரி + காமம்.]

குமரிக்கோடு *kumari-k-kōṭu,* பெ.(n.) குமரிக்கடற் பக்கத்திருந்த ஒரு மலை; a mountain or banks of a river said to have existed near *Kumari.* "குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள" (சிலப்.11:20).

[குமரி + கோடு.]

குமரிகற்பம் *kumari-kaṟpam,* பெ.(n.) 1. சோற்றுக் கற்றாழையிற் கொள்ளும் காயகற்ப மருந்து; medicine taken along with aloe-pulp for rejuvenation. 2. பெண்ணின் நாதத்தோடு மருந்தைச் சேர்த்துக் கொள்ளும் காயகற்ப மருந்து; a rejuvenating medicine in which the female vaginal secretion forms

the ingredient amongst other drugs used for the purpose (சா.அக.).

[குமரி + கற்பம். கற்பம் = கலுவத்தில் (கல்வம்) இட்டரைத்த மருந்து.]

குமரிகாசம் *kumari-kācam,* பெ.(n.) கண்ணுக் கேற்படும் ஒருவகைக் காசநோய் ; cataract of the eyes. It is marked by a bluish-white appearance like contrusion, intolerable pain and irritation, muco purulent discharge, piercing pain in the iris. As a result of deranged vayu (humour) It is also characterised by dilatation of the pupil, swelling due to the collection of morbid fluid in the eye and impaired vision (சா.அக.).

[குமுறுல்→குமரல்→குமரி+காசம்.]

இதனால் கண்கள் கலங்கித் தாங்க முடியாத கடுப்புடன் வலியுண்டாகிப் பீளை சேர்ந்து, நடு விழியில் குத்தலும், அதனுடன் கண்ணில் வலியுங் கொண்டு கண்மணி பெருத்து வீங்கித் திரண்டு நீர் கோத்துக் கொண்டு பார்வைக்குக் கெடுதி நேரிடும்.

குமரிச்சாறு *kumari-c-cāṟu,* பெ.(n.) கற்றாழைச் சாறு; aloe juice.

[குமரி + சாறு.]

குமரிச்சீவன் *kumari-c-cīvaṉ,* பெ.(n.) புத்திரச் சீவிப் பூடு; childs amulet tree (சா.அக.).

[குமரி + சீவன்.]

குமரிச்சுறா *kumari-c-cuṟā,* பெ.(n.) 15 அடி நீளமுள்ள குரங்கன்சுறாமீன் (M.M.851); zebra shark, tawny, attaining 15 ft. in length.

[குமரி + சுறா.]

குமரிச்சேர்ப்பன் *kumari-c-cērppaṉ,* பெ.(n.) குமரித்துறைக்குரிய பாண்டியன் (திவா.); the pandya king, as lord of cape comorin.

[குமரி + சேர்ப்பன்.]

குமரிச்சோறு *kumari-c-cōṟu,* பெ.(n.) கற்றாழைச் சோறு; aloe pulp (சா.அக.).

[குமரி + சோறு.]

குமரிஞாழல் *kumari-ñāḻal,* பெ.(n.) 1. மல்லிகை; jasmine. 2. சங்கம் பூ; cinnamon.

[குமரி + ஞாழல்.]

குமரித்துறை *kumari-t-tuṟai,* பெ.(n.) கன்னியாகுமரி நீர்த்துறை; the bathing-ghat at Cape Comorin. *"பொருநைத்துறையொடு குமரித் துறையவள் புதுநீராடுகவே" (மீனாட்.பிள்ளைத்.நீராடற்.10).*

[குமரி + துறை.]

குமரித்தெய்வம் *kumari-t-teyvam,* பெ.(n.) கன்னியாகுமரித் தெய்வம்; the goddess Kumari at Cape Comorin.

[குமரி + தெய்வம்.]

குமரித்தைலம் *kumari-t-tailam,* பெ.(n.) சோற்றுக் கற்றாழையை முதன்மையாகக் கொண்டு உண்டாக்கும் மருந்து எண்ணெய்; a medicated oil prepared with aloe as a chief - ingredients along with other drugs which is used for anointing the head (சா.அக.).

மறுவ. குமரியெண்ணெய்

[குமரி + தைலம்.]

குமரிதபோதம் *kumaridapōdam,* பெ.(n.) துயில் நிலை; the highest degree or state of the soul in which yogis attain entire quiescence (சா.அக.).

[குமரி + இத + போதம்.]

குமரிநாதம் *kumari-nādam,* பெ.(n.) குமரிக் காமம்; sexual discharge in women.

[குமரி + நாதம்.]

குமரிநாதம் என்பதற்கு மாதவிலக்குக் குருதி எனப் பிற மருத்துவ அகரமுதலிகளில் குறிக்கப் பட்டிருப்பது தவறு என மருத்துவர் சாம்பசிவம் பிள்ளை தெளிவாக்கியிருக்கிறார்.

குமரிநீர் *kumari-nīr,* பெ.(n.) 1. பெண்ணின் காமக்கனைநீர் (குமரிக்காமம்);sexual discharge in women. 2. கற்றாழை நீர்; aloe juice. 3. வெடியுப்புச் செய்நீர்; nitric acid. 4. சிறுமியின் சிறுநீர்; girl's urine (சா.அக.).

[குமரி + நீர்.]

குமரிநீலி *kumari-nīli,* பெ.(n.) குமரி நஞ்சு; a kind of prepared arsenic (சா.அக.).

[குமரி + நீலி.]

குமரிப்பகவதி *kumari-p-pagavadi,* பெ.(n.) ***குமரித்தெய்வம்*** பார்க்க; see *kumari-t-teyvam.*

[குமரி + பகவதி.]

குமரிப்படை *kumari-p-padai,* பெ.(n.) அழியாச்சேனை; invincible army. *"குமரிப்படைதழீ இய" (புறநா.294).*

[குமரி + படை.]

குமரிப்பருவம் *kumari-p-paruvam,* பெ.(n.) கருத்தரித்தற்குரிய பருவம், பருவகாலம்; the reproductive period of a woman's life (சா.அக.).

[குமரி + பருவம்.]

குமரிப்பால் *kumari-p-pāl,* பெ.(n.) 1.குமரிச்சாறு; aloe juice. 2. பருவப் பெண்ணின் முலைப்பால்; the breast milk of a young woman (சா.அக.).

[குமரி + பால்.]

குமரிப்பூ *kumari-p-pū,* பெ.(n.) இளம் பெண்ணின் மாதவிலக்கு அரத்தம்;the menstrual blood of a virgin girl (சா.அக.).

[குமரி + பூ.]

குமரிப்போர் *kumari-p-pōr,* பெ.(n.) கன்னிப்போர்; first military engagement of a prince. *"குமரிப்போருள் . . . கொன்றதன்றே" (சீவக.806).*

[குமரி + போர்.]

குமரி மஞ்சணத்தி *kumari-mañjanatti,* பெ.(n.) பூசு மஞ்சள்; Indian saffron (சா.அக.).

[குமரி + மஞ்சணத்தி.]

குமரிமடல் *kumari-madal,* பெ.(n.) கற்றாழை மடல் (சா.அக.); leaf of aloe.

[குமரி + மடல்.]

குமரிமணி *kumari-mani,* பெ.(n.) பருவப் பெண்ணின் நோனி (யோனிலிங்கம்); the small elongated organ or elitoris of a young woman (சா.அக.).

[குமரி + மணி.]

குமரிமதில் *kumari-madil,* பெ.(n.) அழியாக்கோட்டை (சீவக.336); pregnable fortress.

[குமரி + மதில்.]

குமரிமூ-த்தல் *kumari-mū-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கன்னிகையாகவேயிருந்து மூப்படைதல்; to live and die as a virgin; to live one's days in virginity. *"குமரிமூத்தவக் கொடுங்குழை நல்லாள்" (மணிமே.22:143);* pregnable fortress. 2. பயனின்றிக் கழிதல்; to be wasted, to lie fruitless. *"குமரி மூத்தவென் பாத்திரம்" (மணிமே.14:77).*

[குமரி + மூத்தல்.]

குமரிமூலம் *kumarimūlam,* பெ.(n.) கற்றாழை வேர்; aloe root (சா.அக.).

[குமரி + மூலம்.]

குமரியச்சரம் *kumariya-c-caram,* பெ.(n.) குழந்தை களுக்கு அழிற்சியினால் நாக்குக் கொப்புளிக் காமலே தடித்து, வெடித்து, சுரங்காய்ந்து, அரத்த

மாய் வயிற்றுப் போக்குடன் கக்கலையும் உண்டாக்கும் ஒரு நோய்; a kind of stomatitis due to alimentary disorder. It is marked by swollen tongue, fissure from inflammation without ulceration, fever, dysentery and vomiting (சா.அக.).

[குமரி + அச்சரம்.]

குமரியன்னம் *kumari-y-aṉṉam,* பெ.(n.) குமரிச்சோறு,கற்றாழைச் சோறு; aloe pulp (சா.அக.).

[குமரி + அன்னம்.]

குமரியாடு-தல் *kumari-y-āḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கன்னியாகுமரி நீரில் நீராடி தென்புலத்தார் கடன் முதலியவை செய்தல்; to perform sacred ablutions at cape comorin. *"தென்றிசைக் குமரியாடிய வருவோன்" (மணி.13,7).* 2. கன்னியோடு மருவுதல்; to copulate with a virgin. *"சிந்தை நலிகின்ற திருநீர்க் குமரியாட" (சீவக.2020).*

[குமரி + ஆடு.]

குமரியாறு *kumari-y-āṟu,* பெ.(n.) தமிழகத்துக்குத் தெற்கெல்லையாய்க் கடலாற் கொள்ளப்பட்டதாகக் கூறப்படுங் கன்னியாறு; the kumari river mentioned in Tamil literature as having been once the southern boundary of the Tamil land, and afterwards submerged in the Indian ocean. *"குமரியாறும் பனைநாட்டோடு கெடுவதற்கு முன்னையது" (தொல்.பொ.649, உரை).*

[குமரி + ஆறு.]

குமரியிசை *kumari-y-iśai,* பெ.(n.) பேரீச்சம் பழம்; wild date fruit (சா.அக.).

[குமரி + இசை.]

குமரியிருட்டு *kumari-y-iruṭṭu,* பெ.(n.) கன்னி யிருட்டு; darkness just before dawn.

[குமரி + இருட்டு.]

குமரிரு-த்தல் *kumar-iru,* 3 செ.கு.வி.(v.i.) வீணே கழிதல்; to pass away unused; to be wasted. *"ஆத்மகுணங்கள் குமரிருந்துபோமித்தனை" (ஈடு,2.8:1).*

[கும்மல் → குமல் → குமர் + இரு.]

குமரிலிங்கம் *kumaril-iṅgam,* பெ.(n.) பெண்ணின் நோனி; clitoris of a young woman (சா.அக.).

மறுவ. குமரிமணி

[குமரி + லிங்கம்.]

குமரிவளி *kumari-vaḷi,* பெ.(n.) ஒரு காற்றுப் பிடிப்பு; a kind of windy humour (சா.அக.).

[குமரி + வளி.]

குமரிவாழை *kumari-vāḻai,* பெ.(n.) ஈனாத இளவாழை; young plantain that has not yet yielded. *"குமரிவாழையின் குருத்தகம் விரித்து" (சிலப்.16:42).*

[குமரி + வாழை.]

குமரேசசதகம் *kumarēśa-śadagam,* பெ.(n.) குமரேசனை முன்னிலைப்படுத்திக் குருபாததாசர் இயற்றிய சதகநூல்; ethical poem of 100 stanzas addressing kumarēcaṉ,bykuru-pāta-tācar.

[குமரேசர் + சதகம்.]

குமல் *kumal,* பெ.(n.) அரிவாள் (அக.நி.); sickle.

[கும்மல் → குமல்.]

குமலி *kumali,* பெ.(n.) துளசி; holy basil (சா.அக.).

[கும் → குமலி.]

குமளம் *kumaḷam,* பெ.(n.) 1. மென்மை;softness. 2. இளமை;youthfulness. 3. இனிமை; sweetness. 4. நறுமணம்; fragrance.

Guj. *kumaḷa*

[கும் → கும்மு கும்மளம் குமளம்.]

த- குமளம் > skt. kōmaḷa.

குமளம்பாசு *kumaḷambāśu,* பெ.(n.) இரண்டடி நீளமுள்ள கடல்மீன்வகை; tawnyfish, bluish, attaining 2 ft. in length.

[குமளம் + பாசு.]

குமனீம் *kumanīm,* பெ.(n.) 1. பறங்கிச் சாம்பிராணி; Indian resin. 2. குங்குலியம்; saul dammer. 3. சாம் பிராணி; frankincemse (சா.அக.).

[கும்மல் → கும்மலம் → கும்மலிம் →குமனீம் (கொ.வ.).]

குமாரகம் *kumāragam,* பெ.(n.) ஒருவகை ஈயம்; a kind of lead. 2. மாவிலங்கம்; lingam tree. 3. பத்து, பன்னிரண்டு அகவைப் பெண்; a girl of 10 or 12 years. 4. கற்பழியாப்பெண்; a chaste woman. 5. இரட்டை மல்லிகை; double flowered jasmine (சா.அக.).

[கும் → குமல் →குமரம் → குமாரகம்.]

குமாரகாலம் *kumāra-kālam,* பெ.(n.) குமரப் பருவம்; the period of youth. "குமாரகால நிறைவுற வுய்த்து" (பெருங்.நரவாண.8,44).

[குமரம் → குமாரம் + காலம்.]

குமாரசுவாமி *kumāra-šuvāmi,* பெ.(n.) முருகக் கடவுள்; Skanda, as the son of šiva. *"நக்கீரனாரால் உரைகண்டு குமாரசுவாமியாற் கேட்கப்பட்டதென்க" (இறை.1,உரை,பக்.8).*

[குமரன் + சுவாமி.]

குமாரசுவாமியம் *kumāra-šuvāmiyam,* பெ.(n.) நல்லூர்க் குமாரசுவாமிதேசிகர் இயற்றிய ஒரு சோதிடநூல்; a treatise in astrology by *nallūr-k-kumāracuvāmi-dēšigar.*

[குமார் + சுவாமியம்.]

குமாரத்தி *kumāratti,* பெ.(n.) மகள்; daughter.

[குமாரன் → குமாரத்தி.]

குமாரதந்திரம்[1] *kumāra-tandiram,* பெ.(n.) முருகக்கடவுளின் வழிபாட்டு நெறியைத் தெரிவிக்கும் ஆகமம்; an agama in sanskrit dealing with skanda and his worship. *"குமாரதந்திர நெறிப்படி . . . பூசனை புரிந்தனர்" (கந்தபு.மீட்சி.24).*

[குமாரன் + தந்திரம்.]

குமாரதந்திரம்[2] *kumāratandiram,* பெ.(n.) இராவணன் (கோகர்ணத்தில்) தவம் செய்து இயற்றிய ஓர் மருத்துவ நூல் (வடமொழியில் மொழிபெயர்க்கப்பட்ட ஆயுள் வேதத்தின் ஒரு பாகம்); one of the divisions of Ayurvēda in to sanskrit originally written by Ravana (சா.அக.).

[குமாரம் + தந்திரம்.]

குமாரதெய்வம் *kumāra-deyvam,* பெ.(n.) **குமாரசுவாமி** பார்க்க; see *kumāra-šuvami. "அவன் குமாரதெய்வம்" (இறை.1, உரை, பக்.7).*

[குமாரன் + தெய்வம்.]

குமாரப்பல்லக்கு *kumāra-p-pallakku,* பெ.(n.) சிறுபல்லக்கு; small palankeen.

[குமரன் → குமாரன் + பல்லக்கு.]

குமாரப்பாறை *kumāra-p-pārai,* பெ.(n.) 5 அடி நீளமுள்ள ஒரு கடல்மீன்; a kind of horse mackerel, its length is about 5 feet (சா.அக.).

[குமாரம் + பாறை.]

குமாரபிருத்தியம் *kumāra-piruttiyam,* பெ.(n.) குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் வரும் நோய்களின் காரணம், குறி, குணம், முறை முதலியவற்றைப் பற்றிக் கூறும் ஆறு மருத்துவ நூல்கள்; 6 books in Ayurveda, which tells the diseases peculiar to infants and women. It contains etymology, symptomatology etc (சா.அக.).

[குமாரம் + பிருத்தியம்.]

குமாரம் *kumāram,* பெ.(n.) உருக்கி ஓடவிட்ட பொன் (யாழ்.அக.); gold melted and refined.

[குமர் → குமாரம்.]

குமாரமடைப்பள்ளி *kumāra-madai-p-palli,* பெ.(n.) அரச குமரர்க்குச் சமையல் செய்தோரது

மரபில்வந்தவர்கள்; a sub-caste of *maṭai-p-paḷḷi* who got their name from their ancestors having been cooks of princes.

[குமரர் → குமாரர் + மடை + பள்ளி.]

குமாரவாகனம் *kumāra-vāgaṉam,* பெ.(n.) 1.மயில்; peacock. 2. யானை; elephant (சா.அக.).

[குமாரன் + வாகனம்.]

குமாரவிருத்தியை *kumāra-viruttiyai,* பெ.(n.) மருத்துவச்சி; mid-wife (சா.அக.).

[குமாரம் + விருத்தியை.]

குமாரன் *kumāraṉ,* பெ.(n.) 1. புதல்வன்; son. 2. இளைஞன்; young man. 3. முருகக்கடவுள்; Skanda, as son of Śiva. "கோயில்செல்லுபு குமார னிருந்தான்" (கந்தபு.குமார.16).

[குமரன் → குமாரன்.]

குமாரி *kumāri,* பெ.(n.) 1.புதல்வி; daughter. 2. காளி; *kāli* 3. அழியா இளமையினள்; woman of perpectual youth ever in the prime of life. *"அமர்செய் கயற்கட் குமாரியைக் காக்க" (மீனாட்.பிள்ளைத்காப்பு. 4).* 4. தங்கத்தைக் கரைக்குமோர் கரைப்பான்; solvent of gold (W.).

[கும் → குமரி → குமாரி.]

குமாரிகா *kumārikā,* பெ.(n.) காய்ப்பாகல்.

[குமரி + பாய் = குமாரிக்காய் → குமாரிகா.]

குமாரிகை *kumārigai,* பெ.(n.) பத்துமுதல் பன்னிரண்டு அகவைப் பெண்; a girl of 10-12 years (சா.அக.).

[குமரி → குமாரி + கை.]

குமி[1]-தல் *kumi-,* 2 செ.கு.வி.(v.i.) திரளுதல்; to accumulate, to be heaped up, to crowd (கொ.வ.).

[கும் → குமி-.]

குமி[2]-த்தல் *kumi-,* 4 செ.குன்றாவி. (v.t.) திரளச் செய்தல்; to accumulate, heap up, to gather.

[கும் → குமி-.]

குமி[3]-த்தல் *kumi-,* 4 செ.குன்றாவி. (v.t.) அரிசி முதலியவற்றை அதிகமாகக் குற்றுதல்; to cover-pound, as rice.

[குமி → குமி-த்தல்.]

குமிகை *kumigai,* பெ.(n.) முதிராத எள்ளு (பிங்.); immature sesamum. 2. வெள்ளெள்ளு (மலை.); white sesamum.

[கும் → குமிகை.]

குமிகைச் சோளம் *kumigai-c-cōḷam,* பெ.(n.) வெண்சோளம்; white guinea-corn (சா.அக.).

[குமிகை + சோளம்.]

குமிட்டி-த்தல் *kumiṭṭi-,* 4 செ.கு.வி.(v.i.) குமிழ் போலாதல்; to swell, form as a tumour.

[குமிழ் → குமிட்டித்தல்.]

குமிட்டிக்கல் *kumiṭṭi-k-kal,* பெ.(n.) கற்கிட்டம்; over burnt brick (சா.அக.).

[குமிட்டி + கல்.]

குமிட்டிக்காய் *kumiṭṭi-k-kāy,* பெ.(n.) கறிக்குமிட்டி; a vegetable variety of kumaṭṭi (சா.அக.).

மறுவ. கல்யாணபூசணி

[கும்மட்டி → குமட்டி → குமிட்டி + காய்.]

குமிட்டிமாதுளை *kumiṭṭi-māduḷai,* பெ.(n.) கொம்மட்டி மாதுளை; melon lime-citrus (சா.அக.).

மறுவ. சீதளை

[கொம்மட்டி → குமட்டி + மாதுளை.]

குமிட்டில் *kumiṭṭil,* பெ.(n.) ஒரு கீரை; a vegetable green (சா.அக.).

[குமிட்டி → குமிட்டில்.]

குமிட்டு *kumittu,* பெ.(n.) குவியல் (யாழ்.அக.); heap.

[கும் → குமிழ் → குமிட்டு.]

குமிடக்கல் *kumida-k-kal,* பெ.(n.) கிட்டம்; iron dross (W).

[குமிடம் + கல்.]

குமிடு *kumidu,* பெ.(n.) குன்று; hill. "காடுங் குமிடு மிடமாக" (பாடு.போற்றி.).

[கும் → குமி → குமிடு.]

குமிண்சிரிப்பு *kumin-cirip-pu,* பெ.(n.) புன்சிரிப்பு; gentle smile. *"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்" (தேவா.11.4).*

[குமிழ் + சிரிப்பு = குமிண் சிரிப்பு.]

குமிண்டி *kumindi,* பெ.(n.) கீரைவகை; a kind of greens. *"குமிண்டியும் பண்ணையும் கூட முளைக்கின்ற" (தனிப்பா.1, 142,38).*

[குமுள் → குமுழ் → குமுண் → குமிண். குமுழ் = ஒருவகை மணம் வீசுதல்மட்டிக்கீரை.]

குமிதம் *kumidam,* பெ.(n.) தேக்குமரம்; teak wood; Indian oak (சா.அக.).

[கும்மு → கும்மிதம் → குமிதம் (திரண்டது).]

குமிலம் *kumilam,* பெ.(n.) பேரொலி (பிங்.); uproar, tumult, great noise, roar, acclamation shout.

[குமுல் → குமில் → குமிலம்.]

குமிலயம் *kumilayam,* பெ.(n.) குப்பைமேனி. இது குப்பையில் வளரும் ஒருவகைக் கீரை; rubbish plant. It is common in indian gardens and backyards of houses (சா.அக.).

மறுவ. மயிலக்கீரை

[குமிலி → குமிலியம் → குமிலயம்.]

குமிலவோதை *kumila-v-ōdai,* பெ.(n.) பேராரவாரம்; tremendous noise, uproar. *"சாப நாணாறு குமிலவோதை" (இரகு. யாக.87).*

[குமுல் → குமில் → குமிலம் + ஓதை.]

குமிலி *kumili-,* பெ.(n.) துளசி; sacred basil.

[குமுல் → குமில் → குமிலி.]

குமிழ்[1]-த்தல் *kumil-,* 4 செ.கு.வி.(v.i.) 1. குமிழி யிடுதல்; to grow into a conical shape, to be spherical, globular, to form in to bubble. *"செழுங்குருதி கொழித்திழிந்து குமிழித்தெறிய" (திவ்.பெரியாழ். 4:8,7).* 2. மயிர்சிலிர்த்தல்; to stand on end, as hair, to horripilate.

[கும் → குமிழ் → குமிழ்த்தல்.]

குமிழ்[2]-த்தல் *kumil,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. ஒலிக்கச் செய்தல்; to cause to sound. *"அதிர்முக முடைய வலம்புரி குமிழ்த்து" (திவ்.பெரியாழ். 4:7,3).* 2. கொழித்தல் (தைலவ. வைத்திய.12); to winnow.

[கும் → குமிழ்.]

குமிழ்[1] *kumil,* பெ.(n.) 1. நீர்க்குமிழி (பிங்.); water bubble. 2. உருண்டு திரண்ட வடிவம்; knob, as of wooden sandals, stud, pommel, anything round or convex, as the head of a nail. 3. எருத்தின் திமில்; hump of an ox. 4. உள்ளங்கால் வீக்கம்; swelling in the sole of the foot.

[கும் → குமிழ்.]

குமிழ்[2] *kumil,* பெ.(n.) 1. நிலக்குமிழ்; small cashmere tree. 2. பெருங்குமிழ் (தொல்.எழுத்.386);

coomp teak. 3. நீரைச் வடிக்கும் செடிவகை; mucilaginous shrub that yields water. 4. நாணல் (மலை.); kaus, a large and coarse grass.

[கும் → கும்மு (திரள்தல்) →குமுல் →குமில்→ குமிழ்.]

குமிழ்—தல் *kumil-*, 4 செ.கு.வி.(v.i.) சித்திரவேலை செதுக்கப்படுதல்; to be embossed or worked in relief. மரத்திற் குமிழ்ந்த யானை.

[குமி → குமிழ்.]

குமிழ்க்கட்டை *kumil-k-kattai*, பெ.(n.) பாதக்குறடு; knobbed or studded wooden sandlas.

[குமிழ் + கட்டை.]

குமிழ்க்கொடி *kumil-k-kodi*, பெ.(n.) நிலக்குமிழ்; small cashmere tree.

[குமிழ் + கொடி.]

குமிழ்குமிழ்—த்தல் *kumil-kumil-*, 4 செ.குன்றாவி. (v.t.) பிறர்க்குத் தோன்றாமல் மறைத்தல்; to hide from others, hush. *"கோட்டமின் முற்றங் குமிழ் குமிழ்த் துரைப்ப" (பெருங். உஞ்சைக் 34:184).*

[குமிழ் +குமிழ்.]

குமிழ்நோய் *kumil-nōy*, பெ.(n.) குமிழ்போற் படலத்தைப் புடைப்பிக்கும் கண்ணோய் (சீவரட். 270); tubercle in the cornea of the eye.

[குமிழ் + நோய்.]

குமிழ்ப்பிடி *kumil-p-pidi*, பெ.(n.) கதவு முதலியவற்றில் தைத்த குமிழ்க் கைப்பிடி; rounded handle, knob (கொ.வ.).

[குமிழ் + பிடி.]

குமிழ்ப்பு *kumilppu*, பெ.(n.) 1. குமிழெழுகை; bubbling up. 2. மயிர்ச்சிலிர்ப்பு (உரி.நி.); hairs standing on end, horripilation. 3. கொழிக்கை (தைலவ. வைத்திய.12); winnowing.

[குமிழ் → குமிழ்ப்பு.]

குமிழ்மிட்டான் *kumul-mittān*, பெ.(n.) தண்ணீர் மிட்டான்; water root (சா.அக.).

[குமிழ் + (மிட்டான்) → மிட்டான்.]

குமிழ்ரோகம் *kumil-rōgam*, பெ.(n.) **குமிழ்நோய்** பார்க்க; see *kumilnōy.*

[குமிழ் + ரோகம்.]

குமிழ்வண்டு *kumil-vandu*, பெ.(n.) வண்டு வகை; carpenter bee (வின்.).

[குமிழ் + வண்டு.]

குமிழகம் *kumilagam*, பெ.(n.) குமிழ் மரம்; kashmere commonly found in Himalayas, Nilgris in the east and west coasts including Malabar (சா.அக.).

மறுவ. குமிழ், கும்பிடுதேக்கு, குமிழங்கொடி.

[குமிழ் + அகம்.]

இது இமாலயம், நீலகிரி மலையாளம் ஆகிய இடங்களில் வளரும். இதன் நிழல் உடம்பிற்கு நன்மையைத் தரும்.

குமிழஞ்சுளுந்து *kumilañ-cūlundu*, பெ.(n.) குமிழங்கழியில் ஏற்றும் தீப்பந்தம் (சங்.அக); torches made of tamil sticks.

[குமிழ் → குமிழம் + சுளுந்து. சுள் = எரிதல். சுள்→ சுளுந்து.]

குமிழஞ்சூழ் *kumilañ-cūl*, பெ.(n.) **குமிழஞ்சுளுந்து** பார்க்க; see *kumilañ-culundu.*

[குமிழஞ்சுளுந்து → குமிழஞ்சூழ்.]

குமிழம் *kumilam*, பெ.(n.) குமிழ மரம்; a tree of teak variety.

மறுவ. குமிழகம், கும்பிடுதேக்கு, குமிழம், குமிழ்.

[குமிழ் → குமிழம்.]

குமிழம்



குங்குமப்பூ

குடசப் பாலை

குப்பைமேனி

குமிழன் *kumiḻaṉ,* பெ.(n.) ***குமிழம்*** பார்க்க; see *kumiḻam.*

[குமிழ் → குமிழன்.]

வகைகள்: நிலக்குமிழ், பெருங்குமிழ் (சா.அக.).

குமிழாணி *kumiḻāṇi,* பெ.(n.) 1. தலையிற் குமிழ் கொண்ட ஆணி; stud nail (C.E.M.). 2. ***குமிழ்ப்பிடி*** பார்க்க;see *kumiḻ-p-piḍi.*

[குமிழ் + ஆணி.]

குமிழி[1] *kumiḻi,* பெ.(n.) நீர் முதலியவற்றிலெழுங் குமிழி; bubble. *"குமிழிவிட் டுமிழ் குருதி" (சீவக. 2239).* 2. பாதக் குறட்டின் குமிழ்; boss, knob, as of wooden sandals. 3. ஊற்றுவாய்; spring, as the source of a stream. *"கிண்ணகத்தில் குமிழிக் கீழே சாவிபோமா போலே" (ஈடு,5:3,7).*

[கும் → குமிழ் → குமிழி.]

குமிழி[2] *kumiḻi,* பெ.(n.) ***கீழ்க்குமிழி*** பார்க்க; see (S.I.I.iii,411).

[குமிழ் → குமிழி.]

குமிழி-த்தல் *kumiḻi-,* 4 செ.கு.வி.(v.i.) குமிழி கொள்ளுதல்; to bubble, to rise in bubbles, in pustules.

[குமிழி → குமிழித்தல்.]

குமிழி நீருண்(ணு)-தல் *kumiḻi-nīruṇṇu-,* 12 செ.கு.வி.(v.i.) ஒரு பொருளில் ஆழங்காற்பட்டுக் கிடத்தல்; lit., to dive deep causing bubbles, to dive deep into a subject. *"கிடாம்பியாச்சானோடு அல்லாதாரோடு வாசியறக் குமிழ் நீருண்டது"* (ஈடு, 10:6,1).

[குமிழ் → குமிழி + நீருண்-.]

குமிளம் *kumiḷam,* பெ.(n.) கடைக்கண்ணின் வெள்விழியில் குமிழ்போல் கொப்புளத்தை உண்டாக்கும் ஒரு கண்ணோய்; a tubercle on the white or sclerotic coat of the eye (சா.அக.).

[குமிழ் → குமிள் → குமிளம்.]

குமிளா *kumiḷā,* பெ.(n.) மீன்வகை; a kind of fish. *"கீளி குமிளா மாசினி" (பறாளை.பள்ளு.74).*

[குமிள் → குமிளா.]

குமிளி[1] *kumiḷi,* பெ.(n.) நீர்க்குமிழி; bubble on water (சா.அக.).

[கும் → குமிள் → குமிளி.]

குமிளி[2] *kumiḷi,* பெ.(n.) குப்பி; bottle.

[குமிழ் → குமிள் + குமிளி.]

குமிளிக்கண் *kumiḷi-k-kaṇ,* பெ.(n.) குருக்கள் எழும்பிய கண்; eye marked by vesicles (சா.அக.).

[குமிளி + கண்.]

குமிளிபாய்-தல் *kumiḷipāy-,* 2 செ.கு.வி.(v.i.) நீர்க்குமிழியைப் போல் எழும்பல்; rising like bubbles (சா.அக.).

[குமிளி + பாய்-.]

குமிறு-தல் *kumiṟu-,* 5 செ.கு.வி.(v.i.) ஒலித்தல் (சூடா.); to resound, roar.

[கும் → குமிறு-.]

குமின்குமினெனல் *kumiṉ-kumiṉ-eṉal,* பெ.(n.) சிலம்பு முதலிய அணிகலன்களின் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying tinkling sound, as of anklets. *"மின்னனார் குமின் குமின்னலங்காரம் பெற நடஞ்செய்" (கம்பரந்.6).*

[குமின் + குமின் + எனல்.]

குமு *kumu,* 4 செ.கு.வி.(v.i.) 1. பெருகுதல், பரவுதல்; to spread. 2. உடைதல், இடிதல்; to be broken, into pieces to fall down and perish.

[கும் → குமு.]

குமுக்கு[1] *kumukku,* பெ.(n.) 1. மொத்தம்; whole, total, lump, gross, wholesale. பண்டங்களை யெல்லாம் குமுக்காய் வாங்கினான் (உ.வ.). 2. பெருந்தொகை; lion's share; large number; considerable quantity. 3. கூட்டம்; band, clan, crowd, party (இ.வ.).

[கும்→குமு→முக்கு.]

குமுக்கு[2] *kumukku,* பெ.(n.) உதவி; aid, help, assistance. *"குமுக்குப்பண்ண"(வின்.)*

[கும்→குமுக்கு.]

குமுக்கு[3] *kumukku,* பெ.(n.) கமுக்கம்; secrecy.

மறுவ. கமுக்கம், மந்தணம், உள்ளாளம்.

[கமுக்கு→ குமுக்கு.]

குமுக்கு[1]**-தல்** *kumukku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. ஊமைக்காயம் படக் கையாற் குத்தல்; to beat with fists, pommel. 2. ஆடை கும்முதல்; to wash cloth by wetting and gently presshing it with hands; துணியைச் சற்று குமுக்கு (உ.வ.).

தெ. குமுகு

[கும் → கும்மு → குமுக்கு.]

குமுகம் *kumugam,* பெ.(n.) 1. பன்றி; hog. 2. பிரப்பங் கொடி; cane creeper, water-rattan (சா.அக.).

[கும் → கும்மு → கும்முகம்→குமுகம் (திரட்சி).]

குமுகுமு-த்தல் *kumu-kumu-,* 4 செ.கு.வி.(v.i.) மணம் மிக வீசுதல்; to spread fragrance, to send whiffs of odour. *"பசுமஞ்சள் குமுகுமுக்க" (அழகர்கல.10).*

[கும் → குமு + குமு. கும் = பெருகு, பரவு.]

குமுகுமெனல் *kumukumenal,* பெ.(n.) 1. பேரொலிக்குறிப்பு; onam. expr. signifying uproar. *"குடமுழ வாண னீராயிரங் கரங்கொண்டு குமுகுமெனவே முழக்க" (திருப்போ. சந்.பிள்ளைத். சிறுபறை.2).* 2. மணம் வீசுதற் குறிப்பு; expr. signifying sending out whiffs of odour. *"மணந்தான் குமுகுமென் றடிக்கவில்லை" (தனிப்பா. 1,389,44).*

[குமு + குமு + எனல்.]

குமுங்கு-தல் *kumungu-,* 5 செ.கு.வி.(v.i.) மசிதல்; to mash. *"உரலிற் குமுங்க விடித்து" (தைலவ.தைல.49);* 2. உள்ளாக இறங்குதல்; to sink, as a building. கட்டடம் குமுங்கி விட்டது (கொ.வ.).

[கும் → குமு.]

குமுடக்கனிவழி *kumuda-k-kani-vali,* பெ.(n.) முட்டைச் சிலந்தி; an ulcer of the size of an egg, an egg shaped veneral boil (சா.அக.).

[குமுடம் + கனி + (முழி) வழி.]

குமுதகம்[1] *kumudagam,* பெ.(n.) கட்டடத்தின் எழுதகவகை; a kind of moulding (W).

[குமு → குமுது → குமுதகம்.]

குமுதகம்[2] *kumudagam,* பெ.(n.) 1.செவ்வாம்பல்; red lily. 2. தருப்பை; sacrificial grass. 3. வெள்ளி; silver. 4. வெள்ளைநஞ்சு; a white arsenic (சா.அக.).

[குமு → குமுதம் → குமுதகம்.]

குமுதபத்திரம் *kumuda-pattiram,* பெ.(n.) பெருங்குமிழ் (சா.அக.);coomb teak.

[குமுதம் + பத்திரம்.]

குமுதச் சிலந்தி *kumuda-c-cilandi,* பெ.(n.) கொப்புளமாகாமல் சீழ் வடியும் புண்வகை

(சீவரட்.352); a kind of ulcer.

[குமுதம் + சிலந்தி.]

குமுதநண்பன் *kumuda-nanbaṉ*, பெ.(n.) நிலவு (அல்லிப் பூவிற்குத் தலைவன்); lit., lord of the water lily, moon. *"காமக் கருத்தாக் குமுதநாதன் கங்குல் வரக்கண்டும்" (தனிப்பா.1: 334,40)*

மறுவ. குமுதநாதன்

[குமுதம் + நண்பன்.]

குமுதப்படை[1] *kumuda-p-paḍai*, பெ.(n.) 1. கோயிற்கருவறையின் வெளிப்புற மதிலில் வேலைப்பாடமைந்த அடிப்பகுதி; decorated part at the bottom of the wall of the inner sanctuary of a Hindu-temple. *"குமுதப் படையிலே கல்வெட்டிக் கொடுத்தபடி" (S.I.I.I, 138).* 2. **குமுதம்[1]** பார்க்க;see *kumudam.*

[குமுதம் + படை.]

குமுதப்படை[2] *kumuda-p-paḍai*, பெ.(n.) கருங்கற் கோயில் கட்டடத்தில், அடிப்படைத் தளவரிசை மட்டத்தின் மேல், கீழ்நோக்கிய இதழ்களாக அமைக்கப்பெறும் சிற்ப வரி; floral decoration of the temple. *"இறையனார் கோயில் திருஅக்கிய மண்டபம் முன்பு திருக்கற்செய்து நின்ற குமுதப்படை மேல் – கல்லடிப்" (தெ.கல். தொ.1 கல்561).*

[குமுதம் + படை.]

குமுதபதிமங்கை *kumudapadi-mangai*, பெ.(n.) செவ்வல்லி; red-indian water lily (சா.அக.).

[குமுதம் + பதி + மங்கை.]

குமுதம்[1] *kumudam*, பெ.(n.) கருப்பூரம் (யாழ்.அக.); camphor.

[கும் → குமுதம்.]

குமுதம்[2] *kumudam*, பெ.(n.) 1. வெள்ளாம்பல் (திவா.); esculent white water-lily. 2. செவ்வாம்பல்; red Indian water-lily. *"துவரித மலர்வன குமுதம்" (கம்பரா.நாட்டுப்.43).* 3.திசை யானை; elephant at the south west quarter, one of asta-tik-kašam. 4. வெள்ளைச் செய்ந்நஞ்சு; a mineral poison. 5. கற்செய்நஞ்சு; prepared arsenic. 6. ஒரு படைப் பிரிவு; a block of army. 9 யானையும் 9 தேரும், 27 குதிரையும், 45 காலாள்களும் கொண்ட படை (பிங்.); an army consisting of 9 elephants, 9 choriots, 27 norses, and 45 infantry. 7. பல்லாயிரமம் அக்குரோணி கொண்ட சேனைத் தொகை (பிங்.); an army consisting of several thousands of akkuroni. 8. மிகுதி; abundance, as of produce, largeness, as of income (J). 9. கட்டடத்தின் எழுதகவகை; (arch.) a kind of moulding (w). 10. கருவிழியில் உண்டாகும் ஒருவகை நோய்; a disease of the pupil of the eye.

[கும் → குமு (தோன்றுதல், பெருகுதல்) → குமுது → குமுதம்.]

குமுதம்[3] *kumudam*, பெ.(n.) அடுப்பு (திவா.); oven, stove.

தெ.,க. கும்படி; க. கும்படை.

[குய் → கும் → கும்மு (வேதல், எரிதல்) → குமுது → குமுதம்.]

குமுதம்[4] *kumudam*, பெ.(n.) பேரொலி; uproar, confusion. *"கதறிமிகு குமுதமிடு பரசமயம்" (திருப்பு.948).*

[கும் → குமு (பெருகுதல்) → கும்முது → குமுது → குமுதம்.]

குமுதம்[5] *kumudam*, பெ.(n.) தருப்பைப் புல் (பிங்.); sacrificial darbha grass.

[கும் → கும்மு → குமு → குமுது → குமுதம்.]

குமுதிகை *kumudigai*, பெ.(n.) பூசணி; sweet pumpkin (சா.அக.).

[கும் → கும்மு → கும்முதிகை → குமுதிகை.]

குமுதிசை *kumudisai,* பெ.(n.) மணம் வீசும் மரம்; a fragrant tree (சா.அக.).

[கும்→ கும்மு + திகை – கும்முதிகை →குமுதிசை. திகு (திகழ்) → திகைதல் = தெளிதல் விளங்குதல் மணம் வீசுதல். இது உங்களுக்கு விளங்கியதா என்பதை இது உங்களுக்குத் திகைஞ்சுதா என வழங்குவது நாட்டுப்புற வழக்கு.]

குமுதிப்பனை *kumudi-p-panai,* பெ.(n.) கிச்சிலிப்பனை; Malayan sago palm.

[குமுது→ குமுதி + பனை.]

குமுது *kumudu,* பெ.(n.) 1. பெருக்கம், வளர்ச்சி; largeness, growth. 2. தோற்றம்; appearance.

[கும்→ கும்மு→ கும்முது→ குமுது.]

குமுதை[1] *kumudai,* பெ.(n.) 1. குமிழ்மரவகை; coomb teak. 2. பூடுவகை (யாழ்.அக.); a shrub.

[குமுது → குமுதை.]

குமுதை[2] *kumudai,* பெ.(n.) ஒரு மரம்; a tree. 2. கல் நஞ்சு; a kind of native arsenic (சா.அக.).

[குமுது→ குமுதை.]

குமுந்தம் *kumundam,* பெ.(n.) கற்செய் நஞ்சு (மூ.அ.); mineral poison.

[குமுல்→ குமுந்தம்.]

குமுல் *kumul,* 5 செ.கு.வி.(v.i.) 1. வேதல்;to boil 2. எரிதல்; to burn.

[கும்→ குமு→ குமுல்.]

குமுலி *kumuli,* பெ.(n.)1. துளசி; sacred basil (வின்.).2. பெருந்தும்பை; large leucas (சா.அக.).

[கும்→கும்மு→குமுல்→குமிலி.ஒ.நோ. குமலி, குமிலி]

குமுலு *kumulu-,* 5 செ.கு.வி.(v.i.)1. உள்ளுக்குள் நீடித்து வேதல், உட்கொதித்தல்; to boil inernally.2.வெந்து அழிதல்; to get spoiled by over boiling. 3. அழிந்து போதல்; to get ruined.

[குமுல்→ குமிலு.]

குமுறக்காய்-தல் *kumura-k-kāy-,* 2 செ.கு.வி.(v.i.) நன்றாகக் காய்தல்; to be boiling hot, as oil heated to a high degree, to boil up (இ.வ.).

[குமுல்→ குமுறல்→குமுற + காய்–.]

குமுறக்காய்ச்சு-தல் *kumura-k-kāiccu-,* 5 செ.கு.வி.(v.i.) கொதிக்கும்படி மிகுந்த தீயிட்டுக் காய்ச்சுதல்; heating any liquid to boiling point (சா.அக.).

[குமுற + காய்ச்சு–.]

குமுறப்பிழி-தல் *kumura-p-pili-,* 2 செ.கு.வி.(v.i.) இறுகப்பிழிதல்; to press out hard, as juice (இ.வ.).

[குமுற + பிழி–.]

குமுறல் *kumural,* பெ.(n.) பேரொலி (திவா.) roaring, rumbling, resounding.

[குமுறு→ குமுறல்.]

குமுறலண்டம் *kumural-andam,* பெ.(n.) அண்ட ஊதை வகை (சீவரட்.112); rupture, hernia.

[குமுறல் + அண்டம்.]

குமுறவிடி-த்தல் *kumura-vidi-,* 4 செ.குன்றாவி. (v.t.) நெல் முதலியவற்றை நன்கு இடித்தல்; to pound, comminucate forcibley in a mortar, as grain.

[குமுறு→ குமுற + இடி–.]

குமுறவெரி-த்தல் *kumura-v-eri-,* 4 செ.குன்றாவி. (v.t.) எரித்தல்; heating or boiling anything to a great heat (சா.அக.).

[குமுற + எரி–.]

குமுறு-தல் *kumuṟu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. அதிரொலி செய்தல்; to resound, to trumpet, as an elephant, to bellow, to rumble, crash, as thunder. *"குத்திடக் குமுறிப் பாயும்" (கம்பரா. வரைக்.34).* 2. கலப்போசை யெழுதல்; to have confused, uproar. *"குமுறுமோசை விழவு" (திவ்.திருவாய்.6:5,2).* 3. மனத்தினுள்ளேயே வருந்துதல்; to burst with distress. *"கண்கணீர் மல்க நின்று நின்று குமுறுமே" (திவ்.திருவாய். 6:5,1).* 4. பீரிடுதல்; to gush out, as milk from the breast. *"வெம்முலை குமுறு பாலுக" (கம்பரா. பள்ளி.118).* 5. கொதித்தல்; to effervesce, bubble up, as in boiling.

[கும் → குமுறு-.]

குமேதகம் *kumēdagam,* பெ.(n.) நீர்ச்சுருக்கு; difficulty in passing urine attended with the pain and a sense of heat (சா.அக.).

[கும்மு + உதகம் – கும்முதகம் → குமேதகம்.]

குமேரு *kumēru,* பெ.(n.) பேய், பிசாசுகளுக்கு இருப்பிடமான ஞாலத் தென்முனை (துருவம்); south pole as the region of demons.

[குமுல் → குமிறு → குமேறு → குமேரு.]

தென்கடல் வளாகத்துக் குமரிக் கண்டத்தின் படிப்படியான அழிவு காரணமாக தென்திசையும் தென்முனையும் அஞ்சத்தக்கனவாயின.

குமை¹-தல் *kumai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. குழைய வேதல்; to be over-boiled, to be boiled soft to a mash, as greens. சோறு குமையச் சமைத்தாள் (உ.வ.). 2. குழம்புதல்; to be mixed up. எல்லாம் ஒன்றாய்க் குமைந்து கிடக்கின்றன (உ.வ.). 3. வெப்பத்தாற் புழுங்குதல்; to be hot, sultry. 4. கண்முதலியன இறுகிக்கொள்ளுதல்; to close together, as the eyelids from heat in the system (வின்.). 5. சோர்தல்; to faint, droop, as one in a swoon. 6. அழிதல்; to be destroyed. 7. வருந்துதல்; to distressed, worried. *"கொசுகு கடியாலுங் குமைந்தோம்" (தமிழ்நா.259).*

[கும் → குமை.]

குமை²-த்தல் *kumai-,* 18 செ.குன்றாவி.(v.t.) 1. துவைத்தல்; to tread down, tread out into a mash. *"கூற்றைக் குரை கழலா லன்று குமைத்தார் போலும்" (தேவா.44:6).* 2. உரலில் வைத்து இடித்தல்; to beat or pound in a mortar.3. குழைய வேகச் செய்தல்; to over-boil, boil soft, reduce to a mash by boiling.4. வருந்துதல்; to annoy, afflct, vex. *"ஆவி திகைக்க வைவர் குமைக்கும் சிற்றின்பம்" (திவ்.திருவாய். 6:9,9).* 5. அழித்தல்;to destroy. *"வெளிற்றறி விரண்டுங் குமைப்ப" (தணிகைப்பு.விநா.காப்பு.2).*

[கும் → குமை.]

குமை³ *kumai,* பெ.(n.) 1. அழிவு; destruction, ruin. *"குமைத்தொழில் புரிந்த வீரர்" (கம்பரா. பிரமாத்.23).* 2. துன்பம்; trouble, distress. *"ஐவராற் குமைதீற்றி" (திவ்.திருவாய். 7:1,1).* 3. அடி; blow, stroke, lash. *"குமை தின்பர்கள்" (திவ். திருவாய்.4:1,2).* 4. அழுக்குத்துணி முதலியன இடும்பெட்டி; clothes-basket (இ.வ.).

[கும் → குமை.]

குமை *kumai,* பெ.(n.) பவளம் முத்து நீங்கலாக மற்ற வயிர வகைமணிகளை நிறுப்பதற்குதவுஞ் சிறு எடை (சுக்கிரநீதி,188); smallest weight used in weighing precious stones other than corals and pearls, being the weight of a linseed.

[கும் → குமை.]

குமைஞ்சான் *kumaiñjāṉ,* பெ.(n.) 1. ஆண் குமஞ்சான், குங்கிலியம்; male frankincense. 2. பெண் குமஞ்சான் அல்லது சாம்பிராணி; female

frankincense. 3. நறும்புகை வகை; different varieties of incense. 4. பறங்கிச் சாம்பிராணி; benzamin (சா.அக.).

[குமை →குமைந்தான் → குமைஞ்சான்.]

குமைதின்(னு)—தல் *kumai-tiṉ-,* 13 செ.கு.வி.(v.i.) அடியுண்ணுதல்; to suffer, thrashing. *"கானகம் போய்க் குமை தின்பர்கள்" (திவ்.திருவாய்.4:1,2).*

[குமை + தின்–.]

குய்¹–தல் *kuy,* 2 செ.கு.வி. (v.i.) வேதல், எரிதல்; to bron, to boil. *"குய்ப்புகை கிமழ" (அக. நா.).*

[குல் →குய்.]

குய்²–தல் *kuy,* 2 செ.கு.வி. (v.i.) 1. துளைத்தல்; to make hole. 2. குத்துதல்; to pierce. *"குய்ப்புகை கிமழ" (அக. நா.).*

[குல் →குய்.]

குய்³–தல் *kuy,* பெ.(n.) 1. தாளிப்பு; seasoning with spices. *"கமழ்குய் யடிசில்" (புறநா.10).* 2. தாளித்த கறி; spicy, seasoned curry. *"பொரியுங் குய்யும் வறைகளு நிவந்த வாசம்" (சீவக.2971).* 3. நறும்புகை (பிங்.); burnt odours, insense, odorous smoke. 4. சாம்பிராணி (தைலவ.தைல.94); frankincense.

[குல் →குள் → குய் (எரிதல், வேதல்).]

குய்மனத்தாளர் *kuy-maṉattāḷar,* பெ.(n.) ஏய்ப்பாளர்; deceitful persons. *"குய்மனத்தாளர் குறைப்பிணங் காட்டி" (பெருங்.இலாவண.19:57).*

[குய் + மனம் + அத்து + ஆளர். 'அத்து' சாரியை.]

குய்யகர் *kuyyagar,* பெ.(n.) தொன்மக் கதைகளில் குபேரன் நிதியைக் காவல்புரியும் தேவ கூட்டத்தார்; a class of demi gods in the service of Kubera to whose custody his treasures are comitted asper puranas.

[குய் →குய்யகன் → குய்யகர்.]

குய்யகோடகம் *kuyyakōḍagam,* பெ.(n.) கோவணம்; a piece of cloth worn in the loins to cover the genital (சா.அக.).

[குய்யம் (குதம) + கோடகம்.]

குய்யதீபகம் *kuyya-dībagam,* பெ.(n.) மின்மினிப் பூச்சி; fire fly (சா.அக.).

[குய் →குய்ய + தீபகம்.]

குய்யதீயகம் *kuyya-dīagam,* பெ.(n.) மின்மினி (யாழ்.அக.); fire-fly.

[குய் = எரிதல், குய் → குய்ய + தீயகம்.]

குய்யப்பால் *kuyya-p-pāl,* பெ.(n.) முலைப்பால்; woman's breast milk (சா.அக.).

[குய்யம் + பால் (குய்யம் = உட்டுளை, பால் சுரக்கும் நுண்துளை, மார்பகம்).]

குய்யப்பத்திரம் *kuyya-p-patiram,* பெ.(n.) அரசிலை; leaf of peepul tree (சா.அக.).

[குய்யம் + பத்திரம். குய்யம் = துளை, துளையுள்ள மடி, முதுகு, இடுப்பின் கீழ்ப்பகுதி.]

குய்யப்புண் *kuyya-p-puṇ,* பெ.(n.) 1. மலவாய்ப்புண்; ulcer of the anus. 2. ஆண்குறிப்புண்; ulceration of the penis. 3. பெண்குறிப்புண்; pudendal ulcer. 4. ஆண் பெண் இருவருக்கும் குறியில் வரும் புண்; ulceration of the male and female genitals (சா.அக.).

[குள் → குய் → குய்யம் + புண். குய்யம் = குழி, உட்டுளை.]

குய்யபீதம் *kuyya-pīdam,* பெ.(n.) எட்டி மரம்; nux-vomica tree (சா.அக.).

மறுவ. குய்ய பீசகம்.

[குய்யம் + பீதம். பேதம் →பீதம்.]

குய்யபுட்பகம் *kuyya-putpagam,* பெ.(n.) மகிழமரம்; monkey face flowered tree. 2. அத்திமரம்; fig tree soalled from the hidden blossom (சா.அக.).

[குய்யம் + புட்பகம்.]

குய்யபேதி *kuyya-pēdi,* பெ.(n.) மலவாய் வழியாய் ஏற்படும் கழிவு; discharge of foeces from the anus (சா.அக.).

[குய்யம் (துளை, மலவாய்) பிள் →பேள்→ பேதி.]

குய்யம் *kuyyam,* பெ.(n.) 1. மறைவானது (சூடா.); that which is secret, mystical, hidden, private. 2. பெண்குறி; genetive organ especially of women. *"மென்துகிற் குய்யத் தடம் படிந்து" (சூளா.சீய.49).* 3. குதம் (பிங்.); anus. 4. ஏமாற்று, ஏய்ப்பு (வஞ்சகம்); dissimilation, deceitfulness hypocirsy. *"நட்பிடைக் குய்யம் வைத்தான்" (சீவக.358).*

[குள் →குய் (துளை, பொய், மறைவு)→ குய்யம்.]

குய்யமல்லிகம் *kuyya-malligam,* பெ.(n.) அழிஞ்சில்; alangium (சா.அக.).

மறுவ. அங்கோலம்

[குய்யம் + மல்லிகம்.]

குய்யன் *kuyyan,* பெ.(n.) குயவன்; potter.

[குய் (சுடுதல்) →குய்யம் → குய்யன்.]

குய்யோ முறையோவெனல் *kuyyō-muraiyō-v-enal,* பெ.(n.) கூச்சலோடு முறையிடுதற் குறிப்பு; onom, expr. signifying loud complaint.

[குய்யோ + முறையோ + எனல்.]

குயக்கணக்கு *kuyya-k-kanakku,* பெ.(n.) 1. தவறான கணக்கு; wrong, clumsy reckoning pottering in calculation. 2. குயவரில் கணக்குப் பார்க்கும் ஒருவகையினர்; a sub-sect among potters, as doing the duties of an accountant.

[குய்யன் + கணக்கு.]

குயக்கருவி *kuya-k-karuvi,* பெ.(n.) 1. குயவர் பயன்படுத்தும் கருவி; potter's imlements.

[குயவன் + கருவி.]

குயக்கலத்தி *kuya-k-kalatti,* பெ.(n.) 1. மண் பாண்டவோடு; a piece of an earthenpot. 2. மண் பாண்டம்; earthenpot or vessel.

[குயம் + கலத்தி.]

குயக்கலம் *kuya-k-kalam,* பெ.(n.) குசக்கலம், மட்பாண்டம்; potter's vessel. 2. ஒரு நூல் (நன்.274,மயிலை); a treatise.

[குயம் + கலம்.]

குயக்காணம் *kuya-k-kānam,* பெ.(n.) 1. குயவர் செலுத்திவந்த பழையவரி (S.I.I.II.509); tax on potters.

[குயவன் + காணம்.]

குயக்கால் *kuya-k-kāl,* பெ.(n.) மட்பாண்டம் செய்யும் சக்கரம்; potter's wheel.

[குயம் + கால்.]

குயக்காலம் *kuya-k-kālam,* பெ.(n.) நிலக்கடம்பு (மலை.); common cadamba.

[குயக்கால் + அம் – குயக்காலம்.]

குயக்குண்டு *kuya-k-kundu,* பெ.(n.) குயவர் மண்ணெடுக்குங் குழி; pit where from clay is taken by potters to make pots (கொ.வ.).

[குயம் + குண்டு. குண்டு = குழி, பள்ளம்.]

குயக்குழாய் *kuya-k-kulāy,* பெ.(n.) சுடு மண்ணாலான குழாய்; brick tube.

[குயவன் + குழாய்.]

குயத்தி *kuyatti,* பெ.(n.) குயக்குடிப்பெண்; female potter. *"சக்கரந் தான்சுழற்றத் தகுங்குயத்தி" (சிவப்.பிரபந்.பிஷாடன.6).*

[குயவன்–குயத்தி.]

குயத்தினலகை *kuyattin-alagai,* பெ.(n.) நிலவாகை (மலை.); Tinnevelly senna.

[குயம் = அரிவாள். குயம்+அத்து+இன்+அலகை (அலகு→அலகை) 'அத்து', 'இன்' சாரியை. அரிவாள்முனை போன்ற செடி.]

குயபாசியம் *kuya-pāciyam,* பெ.(n.) பீநாறிச் சங்கு; smooth, volkameria (சா.அக.).

[குயம் + பாசியம்.]

குயபேதி *kuyapēdi,* பெ.(n.) ***குய்யபேதி*** பார்க்க; see *kuyyapēdi*.

[குய்யபேதி → குயபேதி.]

குயம்[1] *kuyam,* பெ.(n.) 1. அரிவாள்; sickle, reaping-hook, curved knife. *"கொடுவாய்க் குயத்து" (சிலப்.16:30).* 2. முடிமழிப்பாளன் கத்தி; razor. *"அருங்குயந் தான்களைந்து" (சீவக.2500).* 3. குயக்குடி; potter caste.

[குல்→குய்→குயம்.]

குயம்[2] *kuyam,* பெ.(n.) இளமை (திவா.); juvenility, youth.

[குழ → குய → குயம்.]

குயம்[3] *kuyam,* பெ.(n.) முலை; women's breast. *"குச்சிலிய மாதர் குயமும்" (தனிப்பா.ii, 75,190).*

[குல் → குய் → குயம். குய் = துளை. குயம் = நுண்ணிய பால் சுரப்புத் துளையுள்ள மார்பகம்.]

குயம்[4] *kuyam,* பெ.(n.) தருப்பை; sacrificial darbha grass.

[குல் (முள், கூர்மை) → குய் → குயம்.]

குயம்பிக்கடி *kuyambi-k-kadi,* பெ.(n.) சுரை; bottle gourd (சா.அக.).

[குயம் → குயம்பு + கடம் – குயம்புக்கடம் → குயம்பிக்கடி (கொ.வ.).]

உட்டுளையும் குடம் போன்ற வடிவமும் கொண்ட சுரைக்காய்.

குயமயக்கு *kuya-mayakku,* பெ.(n.) தாறுமாறு; disorder, lack of method.

[குயம்[1] + மயக்கு.]

குயமாதுகம் *kuya-mādugam,* பெ.(n.) கடுக்காய்; Indian galnut (சா.அக.).

[குயம்[1] + (மதுகம்) மாதுகம்.]

குயல் *kuyal,* பெ.(n.) தேர்ச்சி, திறமை; skill, talent.

[குள் = கூர்மை. குள் → குய் → குயல்.]

குயலன் *kuyalan,* பெ.(n.) தேர்ந்தவன்; man of great skill, dexterity. *"வஞ்சக் குயலர்க்கென்றுங் கரவனாம்" (தேவா.406,4).*

[குயல் → குயலன்.]

குயவரி *kuya-vari,* பெ.(n.) வரிப்புலி (அரிவாள் போன்ற வரிகளையுடையது); tiger, as having sickle-shaped stripes. *"வேழங் குயவரி கோட்பிழைத்து" (திணைமாலை.25).*

[குயம் + வரி.]

குயவன்[1] *kuyavan,* பெ.(n.) மட்பாண்டம் வனைபவன்; potter. *"திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்" (தேவா.736:1).*

மறுவ. குய்யன்

[குய் (சுடுதல், எரித்தல்) → குய்யம் → குய்யன் → குய்யவன் → குயவன் (சுடுபவன்). பசு மட்பாண்டங்களைச் சூளையிலிட்டுச் சுடும் தொழில் செய்வதால் பெற்ற பெயர்.]

குயவன்[2] *kuyavaṉ,* பெ.(.) மறைபொருளானவன்; God, the invisible. *"யானோர் குயவன்" (சிவப்.பிரபந்.பிட்சாடன.6).*

[குய்யம் → குயவன்.]

குயவன்மனை *kuyavaṉ-maṉai,* பெ.(n.) மட்பாண்டம் வனைய உதவும் சக்கரத்தின் அடிக்கட்டை; foot of a potter's wheel.

[குயவன் + மனை.]

குயவு *kuyavu,* பெ.(n.)1. தேர் (பிங்.); car, chariot. 2. கோங்கிலவு மரம்; false tragacanth.

[குள் (கூர்மை)→குய்→ குயவு (கூர்மையான தேர் மொட்டு).]

குயா *kuya,* பெ.(n.) கோங்கு (பிங்.) ; false tragacanth.

மறுவ. குயவு, குயாகம்.

[குயவு → குயா.]

குயாகம் *kuyāgam,* பெ.(n.) குயா, கோங்கிலவு; false tragacanth (சா.அக.).

[குயவு → குயா→குயாகம்.]

குயிமாவதி *kuyimā-vadi,* பெ.(n.) கொக்கிறகு; stork's feather (சா.அக.).

[குயிமம் + அவதி.]

குயில்(லு)-தல் *kuyil-,* 8 செ.குன்றாவி.(v.t.) 1. சொல்லுதல்; to utter, tell. *"பொய் குயிலினுஞ் சோம்பினும்" (சிவப்.பிரபந்.நிரஞ்.18).* 2. கூவுதல் (சூடா.); to call, whoop, halloo.

[குயில் → குயில்லு-.]

குயில்(லு)-தல் *kuyil-,* 13 செ.கு.வி.(v.i.) 1. செய்தல்; to make, execute, shape, construct. 2. நெய்தல்; to weave. *"ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்" (தொல்.சொல்.74,உரை).* 3. பின்னுதல்; to plait, braid, in twine (வின்.). 4. துளைத்தல் (பிங்.); to bore, perforate, tunnel. *"குன்று குயின்றன்ன வோங்குநிலை வாயில்" (நெடுநல்.88).* 5. மணி முதலியவை பதித்தல்; to encase, set, as precious stones. *"சுடர்மணியின் பத்திகுயின்றிட்ட பழுப்பேணியில்" (கந்தபு. வள்ளி.50).*

[குயில் → குயில்(லு).]

குயில்[3]**(லு)-தல்** *kuyil-.* 15 செ.கு.வி.(v.i.) நடைபெறுதல்; to take place. *"தெய்வ நடன மெதிர்குயில" (தணிகைப்பு.அகத்திய.83).* 2. செறிதல் (திவா.); to be thick, close, crowded. 3. இசைக்கருவி ஒலித்தல்; to sound, play. *"வீணை குழலொடு குயில" (சீவக.1255).*

[குயில் → குயில்(லு).]

குயில்[4] *kuyil,* பெ.(n.) 1. சொல் (திவா.) word. 2. குயில் பறவை (திவா.); koel, Indian cuckoo.

தெ. குக்கின்; **க.** குகில்; **ம.** குயில்; **மகாராட்.** கொய்ல.

[கூ → கூவு → கூயு →குயி →குயில்(கூவுவது).]



குயில்

குயில்[5] *kuyil,* பெ.(n.) துளை (பிங்.); hole, perforation.

[குல் (துளை)→ குய்→ குயில்.]

குயில்[6] *kuyil,* பெ.(n.) மேகம் (சூடா.); cloud.

[குள் → குய் → குயில். குள் = கூடுதல், திரளுதல்.]

குயில்கூவு-தல் *kuyil-kūvu-,* 5 செ.கு.வி.(v.i.) கண்ணுக்கினிதாய்த் தோன்றுதல் (யாழ்ப்.); to present a pleasing, thriving aspect, as a field with luxuriant crop (யாழ்ப்.). அவனுக்கென்ன? தொட்டதெல்லாம் குயில் கூவுகிறது (உ.வ.).

[குயில் + கூவு-.]

பச்சைப்பசேலென இருக்கும் பூஞ்சோலையில் அல்லது பொதும்பரில் குயில் மகிழ்ந்து கூவும் எனும் கருத்தில் செழிப்பைச் சுட்டும் மரபுத் தொடராயிற்று.

குயில்மொழி *kuyil-moḻi,* பெ.(n.) *அதிமதுரம்* பார்க்க (சா.அக.);see *adimaduram.*

[குயில் + (முழி) மொழி.]

குயிலண்டம் *kuyil-aṇḍam,* பெ.(n.) துரிஞ்சில்; bat. 2. குயில் முட்டை; egg of Indian cuckoo (சா.அக.).

[குயில் + அண்டம்.]

குயிலமோதி *kuyilamōti,* பெ.(n.)அதிமதுர; liquorice (சா.அக.).

[குயில் + (முழி →மொழி) மோதி.]

குயிலல் *kuyilal,* பெ.(n.) துளைத்தல்; boring, perforating (சா.அக.).

[குய் →குயில் → குயிலல்.]

குயிலாயம்[1] *kuyil-āyam,* பெ.(n.) பறவைக்கூடு; bird's nest. 2. சுவருள் அறை; niche in a wall.

[குயில் + ஆலயம் - குயிலாலயம் → குயிலாயம். ஆலயம் - சுற்றுச் சுவர் அமைந்த வளமனை அல்லது கோயில்.]

குயிலாயம்[2] *kuyilāyam,* பெ.(n.) மட்கலம் வனையும் கூடம்; pottery, potter's workshop.

[குய் = சுடுதல். குய்தகுயில் →குயிலாயம். மட்பாண்டம் சுடும் சூளை சார்ந்த இடம்.]

குயிலுவக்கருவி *kuyilu-k-karuvi,* பெ.(n.) இசைக்கருவிகள்; musical instruments with accompaniments. *"கூடிய குயிலுவக் கருவிகண்மே டுயின்று" (மணி.7,45).*

[குயில் = இசைத்தல், பாடுதல். குயில் → குயிலுவம் (இசைக்கப்படுவது).]

குயிலுவத்தொழில் *kuyiluva-t-toḻil,* **குயிலுவம்** (பிங்.) பார்க்க; see *kuyiluvam.*

[குயிலுவம் + தொழில்.]

குயிலுவம் *kuyili-vam,* பெ.(n.) வாச்சியங்கள் வாசிக்கை (திவா.); playing on stringed musical instruments, drums, tabrets, clarionets, horns.

[குயிலல் = பாடுதல், இசைத்தல். குயில் → குயிலுவம் (இசைக்கப் பயன்படுவது).]

குயிலுவர் *kuyiluvar,* பெ.(n.) வாச்சியம் வாசிப்போர்; players on string instruments, drums, tablets, clarionets horns. *"பயிறொழிற் குயிலுவர் நிற்ப" (சிலப்.5, 52.அரும்.)*

[குயில் → குயிலல் =பாடுதல், இசைத்தல். குயிலுவர் = இசைக்கருவி இயக்குபவர்.]

குயிற்கண்பப்பளி *kuyiṟ-kaṇ-papaḷi,* பெ.(n.) சேலைவகை; a kind of saree.

[குயில் + கண் + பப்பளி.]

குயிற்கண்மணி *kuyiṟ-kaṇ-maṇi,* பெ.(n.) வயிர மணி வகை (சௌகந்திகப்பதுமராகம்) (யாழ்.அக.); a kind of topaz.

குயில் + கண்மணி]

குயிற்று[1]**-தல்** *kuyiṟṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) சொல்லுதல்; to tell, say, utter, to lay down, as rules. *"சுமார்த்தத்திற் குயிற்றுபல கருமத்தும்" (விநாயகபு.73,24).*

[குய் → குயில் → குயிற்று. குயிலல் = பேசுதல், ஒலித்தல்.]

குயில் வகைகள்


கருங்குயில்
புள்ளிக்குயில்
கள்ளிக் குயில்
சுடலைக்குயில்
கொண்டைக் குயில்
அக்கா குயில்
இரட்டைவாலன் குயில்
காக்கா குயில்
வரிக்குயில்

குயிற்று[2]**—தல்** *kuyiṟṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. செய்தல்; to make, construct, form, perform. "*அருநடங் குயிற்று மாதி வானவனே*" *(பதினொ.பட்டினத். கோயினான்.32).* 2. மணி பதித்தல்; to encase, set, as gems. "*மணியொடு வயிரங் குயிற்றிய*" *(சிலப்.5:147).*

[குள்→ குய் → குயில்→குயிற்று. குள் = கூடுதல், சேர்தல்.]

குயின்[1] *kuyiṉ,* பெ.(n.) மேகம்; cloud. "*குயினென் கிளவிடயிதுயகை யாகும்*" *(தொல்.எழுத்து.235).*

[குள்→ குய்→ குயின். குள் = கூடுதல், திரளுதல்.]

குயின்[2] *kyyiṉ,* பெ.(n.) செயல் (இலக்.வி.126,உரை); deed, work.

[குல் →குள்→ குய்→ குயின்.]

குயின்மூக்கெலும்பு *kuyiṉ-mūkkelembu,* பெ.(n.) முதுகின் அடியெலும்பு (இங்.வை.4); coccyx, as resembling the koel's beak.

[குயில் + மூக்கு + எலும்பு.]

குயின்மொழி *kuyiṉ-moḻi,* பெ.(n.) 1. இன்மொழி; soft, sweet words, like the notes of the koel. 2. அதிமதுரம் (மலை.); liquorice.

[குயில் +மொழி.]

குயினர் *kuyiṉar,* பெ.(n.) மணிகள் துளையிடுவோர்; those who polish and perforate gems. "*திருமணி குயினரும்*" *(மதுரைக்.511).* 2. தையற்காரர் (பிங்.); tailor.

[குயில் → குயிலு + நர் → குயினர்.]

குயீ *kuyī,* பெ.(n.) ஒருவகை நாடி; a kind of artery (சா.அக.).

[குய் குயி→ குயீ (கொ.வ.).]

குரக்களி—த்தல் *kurakkaḷi-,* செ.கு.வி.(v.i.) ***குரக்குவலி*** பார்க்க; see *kurakkuvali.*

[குரக்கு + வலித்தல் → குரக்குவலித்தல் → குரக்களித்தல்.]

குரக்கன்சாறு—தல் *kurakkaṉ-cāṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. கேழ்வரகு விதைத்த பின் வயலைக் கிளறிக் கொடுத்தல்; to hoe in *kurakkaṉ* grain lightly after sowing. 2. கேழ்வரகு விதைத்தல்; to sow *kurakkaṉ.*

[குரக்கன் + சாறு—.]

குரக்கு *kurakku,* பெ.(n.) குரங்கு; monkey.

[குரங்கு → குரக்கு (வலித்தல் திரிபு).]

குரக்கு ஊதை *kurakku-ūdai,* பெ.(n.) குரக்குவலி; spasmodi affection. "*குரக்குவாதம் பிடித்து வலித்து*" *(கலிங்.138, புதுப்.).*

[குரக்கு + ஊதை]

குரக்குக்கால்கை *kurakku-kāl,* பெ.(n.) குளிர் அல்லது வலுவின்மையால் குரக்கு வாங்கும் கால்கை; limbs affected with cramps due to cold or weakness (சா.அக.).

[குரக்கு +கால்கை.]

குரக்குகை *kurakku-k-kai,* பெ.(n.) குரக்குவலி (வாதம்) பிடித்த கை; arms affected by cramps due to weakness, cold, etc., "*குரக்குக் கைகொடு சூழ் து ழாவி*" *(ஈடு.9:2,4).*

[குரக்கு + கை.]

குரக்குவலி—த்தல் *kurakku-vali-,* 4 செ.கு.வி.(v.i.) குரக்குவலி உண்டாதல்; to suffer from *kurakkuvali* (கொ.வ.).

[குரங்கு + வலி.]

குரக்குவலி *kurakkuvali,* பெ.(n.) கைகால்களில் வரும் ஒருவகை வலிப்பு; pain in limbs attended with shivering, spasmodic affection.

[குரங்குவலி → குரக்குவலி.]

குரக்குவாதம் *kuraku-vādam,* பெ.(n.) **குரக்குவலி** பார்க்க; see *kurakkuvali.* *"குரக்குவாதம் பிடித்து வலித்து" (கலிங்.138, புதுப்.).*

[குரக்கு + வாதம்.]

குரக்கொளி *kurakkoli,* பெ.(n.) **குரக்குவலி** பார்க்க; see *kurakkuvali-,* *"கைகால் குரக்கொளி வாங்குகிறது" (இழி.)*

[குரக்குவலி→குரக்களி → குரக்கொளி.]

குரகதம் *kuragadam,* பெ.(n.) 1. குதிரை; horse. *"குரகதமுகம்புரை குலைக ழேங்கிய........ வாழை" (கந்தபு.வரைபுனை,9).* 2. குதிரைப்பற் செய்நஞ்சு (மூ.அக.); a mineral poison.

[குரகு → குரகதம்.]

குரகம் *kuragam,* பெ.(n.) 1. மைனாப்புள்; common myna, starling. 2. நீர்வாழ் பறவைப் பொது; aquatic birds.

Ag.,OF. grue (crane); OHG., OS. krano, OE. cran; E. crane.

[குரகு → குரகம் (வினை).]

குரகுமஞ்சள் *kuragumañjal,* பெ.(n.) சாப்பிராவிரை; arnotto.

[குரு → குரகு → மஞ்சள்.]

குரங்ககம் *kurańkakam,* பெ.(n.) ஓர் அவரை; a kind of bean (சா.அக.).

[குரங்குதல் = வளைதல். குரங்கு → குரங்ககம்.]

குரங்கதம் *kurańkadam,* பெ.(n.) மான்; deer (சா.அக.).

[குரகு → குரங்கு → குரங்கதம்.]

குரங்கம்[1] *kurańgam,* பெ.(n.) எட்டி (மூ.அ.); strychnine tree.

[குரங்கு → குரங்கம்.]

குரங்கம்[2] *kurańgam,* பெ.(n.) 1. மான்; deer, antelope. 2. விலங்கு; quadruped, beast.

[குரகு = ஒலிக் குறிப்பு குரகு → குரங்கு → குரங்கம்.]

குரங்கம்[3] *kurańgam,* பெ.(n.) மலைக்கொன்றை; darjeeling red cedar.

[குறங்கு → குரங்கம்.]

குரங்கன்[1] *kurańgaṉ,* பெ.(n.) குரங்கு போலக் குறும்புத்தனம் செய்பவன்; mischievous fellow, as a monkey.

[குரங்கு → குரங்கன்.]

குரங்கன்[2] *kurańgaṉ,* பெ.(n.) **குரங்கம்** (மலை.) பார்க்க;see *kurańgam.*

[குரங்கு → குரங்கம் → குரங்கன்.]

குரங்கன்சுறா *kurańgaṉ-śuṟā,* பெ.(n.) 1. சுறாமீன் வகை; zebra shark' tawny with spots, attaining 15ft in length. 2. ஒருவகைக் கடல்மீன்; fawn coloured shark, grey (M.M.850).

ம. குரங்கன்

[குரங்கு → குரங்கன் + சுறா.]



குரங்கன்சுறா

குரங்காட்டம் *kurangāṭṭam,* பெ.(n.) குரங்கின் கூத்து; apish tricks, anties. அவனைக் குரங் காட்டம் ஆட்டிவைக்கிறான் (உ.வ.).

[குரங்கு + ஆட்டம்.]

குரங்காட்டி *kurangāṭṭi,* பெ.(n.) குரங்கை ஆடச் செய்து வித்தை காட்டி வாழ்வோன்; one who lives by exibiting monkey.

[குரங்கு + ஆட்டி.]

குரங்கி *kurangi,* பெ.(n.) நிலவு (பிங்.); lit., on having antelop spote moon. மான்போன்ற கறையையுடையவன்(உ.வ.).

[குரங்கு + குரங்கி.]

குரங்கிலை *kurangilai,* பெ.(n.) முசுமுசுக்கை இலை; leaf of musumusukkai, leaf of bristle bryony (சா.அக.).

[குரங்கு + இலை.]

குரங்கு[1]-தல் *kurangu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. வளைதல்; to bend, incline. *"பாடினாள்... இலைப்பொழில் குரங்கின"(சீவக.719).* 2. தொங்குதல்; to hang down, dangle. *"குரங்குளைப் பரிமா" (திருவிளை.மெய்க்கா.16).* 3. தங்குதல்; to repose, rest, lie. *"நிகள மூழ்கிக் கோட்டத்துக் குரங்க" (சீவக.262).* 4.குறைதல்; to diminish. *"குரங்கா வாற்ற லெம்பியோ தேய்ந்தான்"(கம்பரா.பாசப்.5).* 5. இரங்குதல் (சது.); to frelent, grieve, feel sorry. 6. தாழ்தல்; to droop, wither. *"சடப்பட்டுக் குரங்கி வெந்தது (சீவக.719)".*

[குல் → குர → குரங்கு = குரங்குதல் = குன்றுதல் = வளைதல்.]

குரங்கு[2] *kurangu,* பெ.(n.) 1.வளைவு; bending, inclining. *"குரங்கமை யுடுத்த மரம்பயிலடுக்கத்து" (சிலப்.10,157).* 2. வானரம்; monkey, ape. *"குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறை" (மணி.5,37).* 3. முசுமுசுக்கை (மலை.); bristly, bryony. 4. கொக்கி (கொ.வ.); hook, clasp, like in jewelry.

ம. குரங்ஙு; **க.** கொரங்கு, குரங்கி, கோடக; **தெ.** கோதி, கோந்தி, கோமதி; **து.** கொடங்ச, கொடங்சு, குரங்க; **பட.** கொரங்கு; **துட.**கவரக்; **கோத.** கொர்க்.

[குல் → குர → குரங்கு = குரங்கு = வளைவு.]

குரங்கு[3]-தல் *kuranku-,* 5 செ.குன்றாவி.(v.t.) வளைத்தல்; to bend. *"தென்னிலங்கை சாரங்கமே குரங்காச்சாதித்தான்" (மான்விடு.7).*

[குல் → குர → குரங்கு.]

குரங்குக்கல் *kurangu-k-kal,* பெ.(n.) சுவரில் உத்தரம், விட்டம் தாங்க அடியிற் பதிக்கப்படும் கல் (மது.வழக்.);stone to support the beam of a roof.

[குரங்கு + கல்.]

குரங்குக்கா *kurankuku-k-kā,* பெ.(n.) முசு முசுக்கை; leaf of bristle brynory (சா.அக.).

மறுவ. குரங்கிலை

[குல் → குர → குரங்கு + (காய்) கா.]

குரங்குக்காய் *kurangu-k-kāi,* பெ.(n.) விளாங்காய்; wood apple (சா.அ க.).

[குல்→குர→குரங்கு + காய்.]

குரங்குக்கை *kurangu-k-kai,* பெ.(n.) சூப்பிய கை; the wasting of the muscles of the hand, Ape-hand (சா.அக.).

[குரங்கு + கை. குரங்குதல் = குன்றல், குறைதல், சூம்பிப் போதல்.]

குரங்குக்கொடி *kurangu-k-kodi,* பெ.(n.) ஆனைத்திப்பிலி; monkey creeper (சா.அக.).

[குரங்கு + கொடி.]

குரங்குகடியன் *kuraṅgukaḍiyaṉ,* பெ.(n.) குரங்காலேனும், அணிலாலேனும் முனையிற் தீண்டப்பட்டு பழுதுற்ற தேங்காய்; a coconut, injured at the top, as by monkey or squirrel (யாழ்ப்.).

[குரங்கு + கடியன்.]

குரங்குச்சத்துவம் *kuraṅgu-c-cattuvam,* பெ.(n.) பெண்களின் பத்து மெய்ப்பாடு(சத்துவம்)களுள் ஒன்று (கொக்கோ.4:27); the natural disposition of a woman, classed under the monkey type, one of pattucattuvam.

[குரங்கு + சத்துவம்.]

குரங்குச்சம்பந்தம் *kuraṅgu-c-cambandam,* பெ.(n.) குரங்குப்பிடி முறைமை; the principle of monkey's grasp.

[குரங்கு + சம்பந்தம்.]

குரங்குச்சேட்டை *kuraṅgu-c-cēṭṭai,* பெ.(n.) குறும்பு செய்கை; mean, monkeyish tricks, Apish mischief.

[குரங்கு + சேட்டை த. கெடு > செடு → சேடு → சேட்டை.]

குரங்குச்சொறி *kuraṅguc-c-ōṟi,* பெ.(n.) பூனைக்காலி; monkey's itch (சா.அக.).

[குரங்கு + (சொற்றி) சொறி.]

குரங்குண்டகி *kuraṅguṇḍagi,* பெ.(n.) மலை நாரத்தை; trifoliate, winged lime (சா.அக.).

[குரங்கு + உண்டகி–குரங்குண்டகி (வளைவுண்டது, வளைவுற்றது).]

குரங்குத்தாழ்ப்பாள் *kuraṅgu-t-tāḻppāḷ,* பெ.(n.) கொக்கித் தாழ்ப்பாள்; door hook.

[குரங்கு + தாழ்ப்பாள்.]

குரங்குதின்னி *kuraṅgu-tiṉṉi,* பெ.(n.) கருங் குரங்குகளைத் தின்பவராகிய கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைகளில் வாழுமோர் இன மக்கள்; A aboriginal tribe in the hills of Coimbatore, as eaters of the black monkey.

[குரங்கு + தின்னி.]

குரங்குநாபி *kuraṅgunābi,* பெ.(n.) மான்மணத்தி (கஸ்தூரி); a strong scented substance found in a bag attached to the belly of the deer just above the navel (சா.அக.).

[குரங்கு +(நாவி) நாபி.]

குரங்குப்பட்டை *kuraṅgu-p-paṭṭai,* பெ.(n.) கூரை யோடுகள் கலைந்து போகாதபடி முகட்டிலிருந்து அடிவரையிற் கட்டும் சுண்ணாம்புப் பட்டை; long narrow construction of lime running parallel from the top to the base of the roof to prevent the tiles from being dislodged.

[குரங்கு + பட்டை.]

குரங்குப்பலா *kuraṅgu-p-palā,* பெ.(n.) சிறுபலா; small jack (சா.அக.).

[குரங்கு + பலா.]

குரங்குப்பிடி *kuraṅgu-p-piḍi,* பெ.(n.) 1. விடாப்பிடி; lit. grasp of a monkey, firm grasp. 2. ஒட்டாரம் (பிடிவாதம்); doggedness, stubborness, pertinacity, obstinacy.

[குரங்கு + பிடி.]

குரங்குப்புத்தி *kuraṅgu-p-putti,* பெ.(n.) நிலையற்ற மனப்பாங்கு; roving tendency, unsteadiness.

[குரங்கு + (புலம் → புந்தி) புத்தி.]

குரங்குமச்சு *kuraṅgu-maccu,* பெ.(n.) கூரையின் கீழ் அமைக்கும் மச்சு; loft under the thathed roof of a house (இ.வ.).

[குரங்கு + மச்சு.]

குரங்கு வகைகள்



முசுக் குரங்கு



கருங்கலைக் குரங்கு

ஊகைக் குரங்கு



மந்திக் குரங்கு

குரங்கு மஞ்சணத்தி *kuraṅgumañjaṇatti,* பெ.(n.) ஒரு வகை நுணா; a kind of dying mulberry (சா.அக.).

[குரங்கு + மஞ்சணத்தி.]

குரங்குமஞ்சணாறி *kuraṅgu-mañjaṇāṟi,* பெ.(n.) ஒருவகைச் சிறுமரம்; kamela.

[குரங்கு + மஞ்சல் + நாறி.]

குரங்குமஞ்சள் *kuraṅgumañjaḷ,* பெ.(n.) ஒருவகை மஞ்சள்; west coast turmeric.

[குரங்கு + மஞ்சள்.]

குரங்குமுரசு *kuraṇgu-murašu,* பெ.(n.) இரு குரங்கின் கை அதாவது முசுமுசுக்கை; bristle bryony (சா.அக.).

[குரங்கு + முரசு.]

குரங்குமூஞ்சி *kuraṅgu-mūñji,* பெ.(n.) 1. அழகில்லா முகம்; monkey face, ugly face. 2. **குரங்கு மஞ்சணாறி** பார்க்க; see *kuraṅgu mañjaṇāṟi.*

[குரங்கு + (முகம்) மூஞ்சி.]

குரங்குமூஞ்சிக்காய் *kuraṅgu-mūñji-k-kāy,* பெ.(n.) முகப்பிற் சிவந்த மாங்காய்; red-faced mango fruit (இ.வ.).

[குரங்கு + மூஞ்சி + காய்.]

குரங்கு மூஞ்சிப்பாலை *kuraṅgumuñji-p-pālai,* பெ.(n.) கணுப்பாலை; monkey face paulay (சா.அக.).

[குரங்கு + மூஞ்சி + பாலை.]

குரங்குமூஞ்சிப்பூ *kuraṅgumūñji-p-pū,* பெ.(n.) மகிழம்பூ மரம்; ape face flower (சா.அக.).

[குரங்கு + மூஞ்சி + பூ.]

குரங்குமூஞ்சிமரம் *kuraṅgumūñji-maram,* பெ.(n.) கபிலப்பொடி மரம்; monkey face tree (சா.அக.).

[குரங்கு + மூஞ்சி + மரம்.]

குரங்குவலி *kuraṅguvali,* பெ.(n.) **குரக்குவலி** பார்க்க; see *kurakkuvali.*

[குரக்குவலி + குரங்குவலி.]

குரச்சை *kuraccai,* பெ.(n.) **குரசு** (பிங்.) பார்க்க;see *kurašu.*

[குரசு → குரச்சை.]

குரசு *kurašu,* பெ.(n.) குதிரைக் குளம்பு (பிங்.); horse's hoof.

[குல் → குர → குரசு (வளைவு, வட்டம்).]

குரஞ்சனம் *kurañjaṉam,* பெ.(n.) வெண்காரம்; borax (சா.அக.).

[குல்→குர→ குரஞ்சனம்.]

குரடன் *kuraḍaṉ,* பெ.(n.) சக்கிலியன் (யாழ்.அக.); cobbler.

[குரடு + குரடன்.]

குரண்டகம் *kuraṇḍagam,* பெ.(n.) 1. மருதோன்றி; henna with green flowers. 2. பெருங்குறிஞ்சி (பிங்.); a species of conehead. 3.பழுப்புநிறம்; yellowish red colour. 4. ஓதம்; hydrocele. 5 மஞ்சள் வாடாமல்லிகை; yellow amaranth.

ம. குறிஞ்ஞி; **க.** கொரடெ, கோரடெ, கோரண்ட, கோரண்டி,கோரண்டெ; **தெ.** கோரண்ட, கோராட் **து.** கோரண்மெ, கோரடெட்.

Skt. kurunta, kuruṇṭaka; **Pkt.** koriṇta.

[குரல் = கொத்து. குரல் → குரள்→ குரண்டு → குரண்டகம்.]

குரண்டநாசி *kurandanāci,* பெ.(n.) பருத்திச்செடி; countery cotton plant (சா.அக.).

[குரண்ட + நாசி (நாளி → நாசி).]

குரண்டம்[1] *kurandam,* பெ.(n.) **குரண்டகம்** பார்க்க;see *kurandagam.*

[குறல் →குரள் → குரண்டு → குரண்டகம்.]

குரண்டம்[2] *kurandam,* பெ.(n.) கொக்குவகை (திவா.); Indian crane.

[குல் →குர (வளைவு)→ குரண்டு→ குரண்டம்.]

குரண்டி *kurandi,* பெ.(n.) செடிவகை; a shrub.

[குரண்டு → குரண்டி.]

குரணம் *kuranam,* பெ.(n.) முயற்சி; effort, perseverance.

[குல் → குரு → குரணம்.]

குரத்தம் *kurattam,* பெ.(n.) ஆரவாரம் (சது.) noise, clamour, uproar.

[குல் → குர → குரல் → குரற்று → குரற்றம் → குரத்தம்]

குரத்தி *kuratti,* பெ.(n.) 1. குருவின் மனைவி; wife of a preceptor or priest. *"குரத்தியை நினைத்த நெஞ்சை" (திருவிளை.அங்கம்.19).* 2. குருவின் பதவியை ஏற்றிருப்பவள்; precepress priestess. 3. தலைவி (திவா.); mistress lady of the house.

[குரவன் → குரத்தி.]

குரத்திகள் *kurattigal,* பெ.(n.) சமணப்பெண் துறவியர்; ஆங்கிலம் சமணப்பெண் ஆசிரியை; female ascetic of jain order. *"ஸ்ரீ திருமலைக் குரத்திகள் மாணாக்கன்" (கழுகுமலைக் கல்வெட்டுகள்).*

[குரத்தி + கள்.]

குரந்திகம் *kurandigam,* பெ.(n.) செந்நாயுருவி; red Indian purr (சா.அக.).

[குல் → குரு = செந்நிறம். குரு → குர→ குரந்து →குரந்திகம்.]

குரப்பம் *kurappam,* பெ.(n.) குதிரை தேய்க்கும் கருவி; curry comb.

தெ.கொரப்பழு; **க.**கொரப்ப; **ம.**குரப்ப

[குல் → குரப்பு → குரப்பம்.]

குரப்புல் *kurappul,* பெ.(n.) தருப்பைப்புல்; sacrificial grass (சா.அ க.).

[குல் → குர → குரல் + புல் – குரற்புல் → குரப்புல்.]

குரப்புவெட்டி *kurappuvetti,* பெ.(n.) வரிவகை; a tax (S.I.I.viii,322).

[குரப்பு + வெட்டி.]

குரப்பூலிகம் *kurappūligam,* பெ.(n.) சரக் கொன்றை; Indian laburnam (சா.அக.).

[குரப்பு + ஊலிகம்.]

குரம்[1] *kuram,* பெ.(n.) 1. தருப்பை; dharba grass. 2. **பாகல்** பார்க்க; balsam bear.

[குல் → குர→ குரம்.]

குரம்[2] *kuram,* பெ.(n.) குதிரைக் குளம்பு; horse's hoof. *"குரந்தரு விசையினீர் மொண்டு" (இரகு.இரகுவுற்.56).* 2. பசு (திவா.); cow.

[குல் → குர → (குரசு)→ குரம் (வளைவு).]

குரம்பி *kurambi,* பெ.(n.) 1. அணைக்கட்டு; artificial bank, dam, couseway, bund. 2. ஆற்றினின்று பாசனக் கால்களுக்கு நீரைத் திருப்பும் அணை; dam of sand, brushwood, loose stones, etc., running out from the banks of a river diagonally for a dis-

tance upstream, to turn the water into an irrigation channel. 3. வரப்பு; ridge in a paddy field or garden. *"மாநீர்க் குரம்பெலாம் செம்பொன்" (கம்பரா.நாட்டுப்.2).* 4. எல்லை; boundary, limit. *"குரம்பெழுந்து குற்றங் கொண்டேறார்" (நாலடி.153).*

[குல் → குர → குரம்பு.]

குரம்பை[1] *kurambai,* பெ.(n.) 1. சிறுகுடில்; small hut, hovel, shed. *"இலைவேய் குரம்பை" (மதுரைக். 310).* 2. பறவைக்கூடு; birds nest. 3. உடல்; body. *"பொருந்திய குரம்பை தன்னைப் பொருளெனக் கருத வேண்டா" (தேவா.488,1).* 4. தவசக் கூடு (தானியக்கூடு); granary, store house for grain. *"நெற்குவை குரம்பையி னிரப்பு வித்தனர்" (கந்தபு. நாட்டு.26).*

ம. குரவு; **க.** கொம்பெ; **தெ.** கொம்ப.

[குல்→ குர → குரம்பு → குரம்பை.]

குரம்பை[2] *kurambai,* பெ.(n.) இசைவகை; a melody type.

[குரம்பு → குரம்பை.]

குரமடம் *kuramaḍam,* பெ.(n.) பெருங்காயம்; asafoetida.

[குல் → குரு + (மட்டு) மட்டம் → குரமட்டம் → குரமடம்]

குரமாலிகம் *kuramāligam,* பெ.(n.) பாதிரி; trumpet flower tree (சா.அக.).

[குரல் → குரம் + ஊலிகம் - குறமூலிகம் → குரமாலிகம்.]

குரமுளை *kura-muḷai,* பெ.(n.) வித்தினின்று தோன்றும் முளை; shoot, sprout.

[குரு + முளை → குரமுளை.]

குரமேலனிகம் *kuramōṇigam,* பெ.(n.) கோழிக்காற் பூடு;fowl's legplant (சா.அக.).

மறுவ. குமரகன்பூடு

[குறமூலிகம் → குரமேனிகம் (பாதிரிப்பூ போன்றது.]

குரரம் *kuraram,* பெ.(n.) 1. ஒரு பூடு; plant. 2. பெண் பருந்து; a female hawk or eagle. 3. பெண்ணாடு; ewe, sheep. (சா.அக.).

[குரல் = (கொத்து, திரட்சி) திரண்ட பெண். குரல் → குரலம் → குரரம் (கொ.வ.).]

குரரி *kurari,* பெ.(n.) பறவைவகை; a kind of bird. "வானிற் சிறுகுரரி நின்றொதுங்கி" (விறலிவிடு.5).

[குரலி → குரரி.]

குரல்[1] *kural,* பெ.(n.) 1. கதிர்; cornear, spike. *"வரகி னிருங்குரல்" (மதுரைக்.272).* 2. பூங் கொத்து; flower cluster. *"கமழ்குரற் றுழாய்" (பதிற்றுப்.31,8).* 3.ஒன்றோடொன்றற்குள்ள சேர்க்கை; link, tie, band. *"குரலமை யொருகாழ்" (கலித்.54:7).* 4. தினை, வாழை முதலியவற்றின் தோகை; stalk, sheath of millet or plantain. *"பருஉக்குரற் சிறுதினை" (புறநா.168:6).* 5. தினை (மலை.); Italian millet. 6. ***பாதிரி*** (மலை.) பார்க்க; see *pātiri.*

ம.குரல்; **க.**கொரலெ; **தெ.** கொர்ரலு; **து.**கொரலு.

E. Craw, the threat of fowle; **Dan.** kroe, **G.** hragen, **Scot.** craog, Sans. kreeva, the neck **E.** crop, **A.S**. crop, **Dut.** crop the craw of a bird.

[குல் → குர → குரல் (கொத்து).]

குரல்[2] *kural,* பெ.(n.) 1. பெண்டிர் தலை முடி (பிங்.); woman's hair. *"நல்லார் குரனாற்றம்" (கலித்.88).* 2. மகளிர் குழல் முடிக்கும் ஐவகையுள் ஒன்று (த.வெ. 9,35, உரை.); one of the five modes in which a woman dresses her hair. 3. பறவையின் இறகு (திவா.); feather, plumage.

[குல் → குர → குரல்(காத்து, திரள்).]

குரல்[3] kural, பெ.(n.) 1. பேச்சொலி; voice. *"சேவல் மயிற்பெடைக்குப் பேசும் சிறுகுரல் கேட்டு" (நளவெண்.சுயம்வ.41).* 2. மொழி; word. *"யாவருந் தண்குரல் கேட்ப" (கலித்.142:9).* 3. குரல்வளம்; tone in singing. *"காமன் காமுறப்படுங் குரறுகுமிது" (சீவக.1218).* 4. ஏழிசையுள் முதலாவது (திவா.); first note of the Indian gainut. 5. மிடறு; throat, wind pipe. *"மணிக்குர லறுத்து" (குறுந்.263).* 6. ஓசை; sound. *"இடிகுரன் முரசு" (கம்பரா.எழுச்சி.1).* 7. கிண்கிணிமாலை (பிங்.); string of jingling bells.

ம.குரல்; **க.**கொரல், கொரள்; **தெ.** குர்ம, கொண்டு; **து.**குரல், குரெலு; **குட.** கொர; **கோண்.** குர்ங்கா; **பிரா.** குட் (தொண்டை).

[குல் → குரு (தோன்றுதல், ஒலித்தல்) → குர → குரல்.]

kur-al, **Tam.** noise, voice; root *kur,* to make a noise. Comp. Sans. *kar,* to shout; *gar,* to sound. Possibly the **Tam.** *kôri,* the *gallus gallinaceous,* is connected with *kur;* and if so, the word *gallus* itself will appear to be related to *kôri, gallus* being instead of *garrus;* comp. *garrulus.* The ultimate root of the **Tam.** *kur* appears to be *ku,* to sound (probably a mimetic word), as in *ku-y-il,* the Indian cuckoo (C.G.D.F.L. Pg.584).

குரல்[4] *kural,* பெ.(n.) 1. கற்றை; dense mass. *"குரற் கூந்தல்" (கலித்.72:20).* 2. யாழ் நரம்பு; string of a lute. 3. எழுத்து; letter.

[குரு → குரல்.]

குரல்குளிறு–தல் *kural-kaḻiru-,* 16 செ.கு.வி.(v.i.) யாழ் முதலியவற்றில் சுருதி கலைதல்; to jar, to in disharmony, as instruments out of tune.

[குரல் + குளிறு.]

குரல்கம்மல் *kuralkammal,* பெ.(n.) குரல்வளையில் உள்ளீரம் வறண்டு பேசமுடியாமல் கம்மிய பேச்சையுண்டாக்கும் ஒரு தொண்டை நோய்; a disease of the larynx due to dryness (சா.அக.).

[குரல் + கம்மல்.]

குரல்கம்மு–தல் *kuralkammu,* 5 செ.கு.வி.(v.i.) குரல் வறண்டு பேசமுடியாமல் இடர்ப்படுதல்; to inconvenience to speak because od dryness in the larynx(சா.அக.).

[குரல் + கம்மு.]

குரல்காட்டு–தல் *kural-kāṭṭu,* 5 செ.கு.வி.(v.i.) 1. அழைத்தற்பொருட்டு குறிப்பொலி காட்டுதல்; to call a person by hemming and hawking. 2. பறவை யொலித்தல்; to crow, as a cock, to screech, as an owl. 3. பெருங்கூச்சலிடுதல்; to cry aloud, whoop, roar, bellow.

[குரல் + காட்டு–.]

குரல் திரிபு *kural-tiribu,* பெ.(n.) குரலிசையில் செய்யப்படும் குரல்நிலை வேறுபாடு (கிரகபேதம்); modulation of tonal differences in vocal music.

[குரல் + திரிபு.]

குரல் நிலை சுருதி பெட்டியில் உள்ள குறிப்பிட்ட ஒரு நிலைக்கேற்ப குரலை நிறுத்திக்கொண்டு பாடாமல் வெவ்வேறு குரல் நிலைகளில் பாடும் திறமை குரல்திரிபு எனப்படும். இதனை வடமொழியாளர் கிரகபேதம் என்பர். பழந்தமிழரின் இசைக்கலை வளர்ச்சி நுட்பத்திற்கும் திட்பத்திற்கும் குரல்திரிபு சான்று பகர்வதாகும்.

குரல்நெரி–த்தல் *kuralneri,* 4 செ.குன்றாவி.(v.t.) தொண்டையை அழுத்திக் குரல்வளை முறியும்படிச் செய்தல்; fracturing the throat by pressing the anterior part of the neck (சா.அக.).

[குரல் + நெரித்தல்.]

குரல்பாய்ச்சு–தல் *kural-pāyccu-,* 5 செ.கு.வி.(v.i.) அழுகையின் குரல் நீட்டுதல்; to prolong the voice unrestrainedly in wailing (இ.வ.).

[குரல் + பாய்ச்சு–.]

குரல்மாற்றம் *kural-māṟṟam,* பெ.(n.) வேற்றுக்குரல்; change of voice in the throat due to the affection of the larynix (சா.அக.).

[குரல் + மாற்றம்.]

குரல்வளை *kuralvaḷai,* பெ.(n.) மிடற்றின் உறுப்பு; Adam's apple, projection of the thyroid cartilage of the larynx. *"மணிக்காற் குரல் வளைக் கழுத்தில்" (பெருங்.மகத.14:55).*

[குரல் + வளை.]

குரல்வளைத்தபம் *kuralvaḷai-t-tabam,* பெ.(n.) குரல்வளைக் கேற்படும் அழற்சி; affection of the larynx. 2. தொண்டைப்புண்; an acute type of inflammation of the larynx (சா.அக.). ***குரல்வளை யழற்சி*** பார்க்க; see *kuralvalai-y-aḷarcc*

[குரல்வளை + (தாபனம்) தபம்.]

குரல்வளை நெரித்தல் *kuralvaḷai-neṟittal,* பெ.(n.) தொண்டையை அமுக்கல்; squeezing the throat (சா.அக.).

[குரல் + வளை + நெரித்தல்.]

குரல்வளைநோய் *kuralvaḷai-nōy,* பெ.(n.) குரல்வளைக்கேற்படும் நோய்கள்; diseases in general of the larynx (சா.அக.).

[குரல்வளை + நோய்.]

குரல்வளைமுருந்து *kuralvaḷai-murundu,* பெ.(n.) வட்டவடிவிலான குரல் வளையிலுள்ள இளயெலும்பு; ring like cartilage of the larynx (சா.அக.).

[குரல்வளை+ முருந்து.]

குரல்வளையழற்சி *kuralvaḷai-y-aḷaṟci,* பெ.(n.) குரல்வளையில் ஏற்படும். ஒவ்வாமை; inflammation of larynx (சா.அக.).

[குரல்வளை + அழற்சி.]

குரல்வளையறு-த்தல் *kuralvaḷai-y-aṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. பேச்சின் ஒலியை குணபடுத்த வேண்டிச் குரல் வளையில் அறுவைச் சிகிச்சை செய்தல்; an operation for opening the larynx for purposes of curing voice-defect. 2. மருந்தினால் குரல்வளையைத் தூய்மைப்படுத்துதல்; curing voice defects by application of medicine (சா.அக.).

[குரல் + வளை + அறுத்தல்.]

குரல்வளையறுத்துக்கொள்ளல் *kuralvaḷai-yaṟuttukkoḷḷal,* தெ.பெ..(v.b.l.n.) தற்கொலை புரிதல்; committing suicide by cutting the throat (சா.அக.).

[குரல்வளை + அறுத்து + கொள்ளல்.]

குரல்வளையிசிவு *kuralvaḷai-y-iśivu,* பெ.(n.) தொண்டை ஊதையினால் மிடற்றிலுண்டாகும் இசிவு; a pulling sensation in the trachea (சா.அக.).

[குரல்உளை + இசிவு.]

குரல்வாங்கு-தல் *kuralvāṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) குரலெடுத்துப்பாடுதல்; to raise the voice in music.

மறுவ. குரலெடு, குரல்விடு.

[குரல் + வாங்கு.]

குரல்விடு-தல் *kural-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) ***குரலெடுத்தல்*** பார்க்க; see *kuralḍu.*

[குரல் + விடு.]

குரலடைப்பு *kural-aḍaippu,* பெ.(n.) 1. குரல் கம்முகை; hoarseness. 2. பேசமுடியறாமற்போகை; loss of speech.

[குரல் + அடைப்பு.]

குரலதிர்ச்சி *kural-adircci*, பெ.(n.) குரலசைவு; vocal vibration (சா.அக.).

[குரல் + அதிர்ச்சி.]

குரலி *kurali*, பெ.(n.) 1. தொண்டைக் குழி; glottis. 2. பாதிரி மரம்; trumpet flower tree (சா.அக.).

[குரல் + குரலி.]

குரலிசைக்குறியீடு *kurališai-k-kuriyīdu*, பெ.(n.) பழந்தமிழிசையில் ஏழிசை ஒலிப்புச் சுரங்களான சரிகமபதநி என்னும் இசைநிரல் (சரளிவரிசை); sa, ri, ga, ma, pa, dha, ni the seven musical basic tones of ancient Tamil music system.

[குரலிசை + குறியீடு.]

குறிப்பிட்ட ஏழு பறவை விலங்கினங்களின் ஓசையை அடிபொற்றி ஒலிப்பு ஒப்புமை கருதி நெருங்கிய எழுத்தொலிப்பாக ஏழிசைக்கு இடப்பட்ட குறியீடுகள் குரலிசைக் குறியீடுகள் எனப்பட்டன. குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழனுள் கைக்கிளைக்குரிய 'க' ஓசை பெருநாரையின் குரலோசையைக் குறிக்கும். ஆரியர் வருகைக்குப் பின் இசைநூல்கள் இதனைக் குதிரையின் கனைப்பொலி யாகக் குறிப்பிட்டிருப்பது ஏற்புடையதன்று.

பிற்காலத்தில் கருநாடக இசையென்று பெயர் பெற்ற பழந்தமிழிசையில் ஏழிசையின் (குரலிசையின்) குறியீடுகள் ச, ரி, க, ம, ப, த, நி என்றே இருந்தன என்பதைப் பின்வரும் சிகண்டியாரின் பஞ்சமரபு நூற்பாவிலிருந்தும் அறியலாம்.

சரிகம பதநியென் றேழெழுத்தாற் றானம்
வரிபரந்த கண்ணினாய் வைத்துத் - தெரிவரிய
ஏழிசையுந் தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்குஞ்
சூழ்முதலாம் சுத்தத் துளை.

மேற்கண்ட இசைக் குறியீடுகளுக்கு முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று பெயர் சூட்டப்பட்டன. மேல்கட்டையில் (மேல் ஸ்தாயி) பாடுவதைத் தாரத்தாயி என்று இன்றும் கூறுகின்றனர். இதில் ஏழாவது பெயர் தாரம் ஆளப்படுதல் காண்க. குரல் என்பது வண்டின் ஒரு சீரான குரலை (ச) குறித்தது. துத்தம் என்பது கிளியைக் குறித்த தத்தை என்ற சொல்லின் திரிபாய் கிளியின் ஓசையைக் (ரி) குறித்தது. கைக்கிளை என்பது கூட்டமாகவோ துணைப் பறவையுடனோ காணப்படாமல் தனித்து காணப்பட்டு, கனைப்பதுபோல் ஓசையெழுப்பும் பெருநாரைப் பறவையின் ஓசையைக் (க) குறித்தது. உழை என்பது உட்டுளையுடைய துதிக்கையை உயர்த்தி எழுப்பும் யானையின் மென்மை கலந்த (ம) பிளிறல் ஓசையைக் குறித்தது. இளி என்பது அசை நடை மயில் அடங்கி அகவும் இடைவிட்ட (ப) அகவலோசையைக் குறித்தது (இளிதல் - தாழ்தல், அடங்குதல்). விளரி என்பது கன்றினை நினைந்து இனிமையாய்க் கதறும் மாட்டின் (த) குரலோசையைக் குறித்தது (விளர்தல் - கதறல்). தாரம் என்னும் நீட்சி குறித்த சொல் ஒரே ஓசையை மீண்டும் மீண்டும் நீட்டித்தொலிக்கும் ஆட்டின் குரலோசையைக் (நி) குறித்தது.

இனி, இக்காலத்தில் சரிகமபதநி என்பனவற்றி லுள்ள ஸ, க, த என்னும் ஒலிப்புகள் தமிழில் இல்லை என்பார் கூற்றும் ஏற்கத்தக்கதன்று. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே நம் முன்னோர் தமிழில் மயங்கா மரபின் எழுத்துகளைக் காட்டியுள்ளனர். ஸ தமிழ் ஒலிப்பன்று. க, த, மொழியிடையிலும், ஈற்றிலும் மெல்லொலி பெறும் மாற்றொலிகள் (allophone). எழுத்துகளுக்கு இசையில் மாத்திரை அளவே உரிய அளபாவதால் 'அலகு' எனப்படும். தமிழ் வல்லெழுத்துகளைப் பொருத்தவரை பிறங்கொலி (voiced : ka → ga) போன்றவை எத்தகைய பொருள் மாற்றமும் தருவனவல்ல; வெறும் மாற்றொலியன்களே (allophone) ஆகும்.

மாத்திரை அளவும்கூட பறவை விலங்குகளின் ஒலி ஒப்புமை கருதியே சரிகமபதநி எனக் குரலின் குறியீடுகளாகப் பழந்தமிழில் அமைக்கப்பட்டன. இதனை அறியாமல் இவற்றை வடமொழிச் சார்பு உடையன என்று கூறுவது முற்றிலும் அறியாமையால் நேர்ந்த தவறு எனலாம்.

குரலிராவம் *kuralirāvam*, பெ.(n.) எதிரொலி பாயும் குரலோசை; vocal resonance (சா.அக.).

[குரல் + இராவம்.]

குரலிசைக் குறியீடுகள்

குரலின்மை *kuralinmai,* பெ.(n.) குளிர்ச்சியால் தொண்டை கம்மல்; harsh rough, grating voice, when the throat is affected with cold (சா.அக.).

[குரல் + இன்மை.]

குரலினம் *kural-inam,* பெ.(n.) கழுதை; ass, so called from its hoarse voice (சா.அக.).

[குரல் + ஈனம்.(அருவருப்பான குரலோசை கொண்டது).]

குரலுறுப்பு *kural-uruppu,* பெ.(n.) ஓசையின் உறுப்பு; organ of voice, larynx (சா.அக.).

[குரல் + உறுப்பு.]

குரலெடு-த்தல் *kuraledu-,* 4 செ.கு.வி.(v.i.) குரலை மேலே எடுத்து நிறுத்துதல்; to lift up the voice, ascend the musical scale, maintain a high pitch in singing.

மறுவ. குரல்வாங்கு, குரல்விடு

[குரல் + எடு-.]

குரவகம் *kuravakam,* பெ.(n.) 1. ***வாடாக்குறிஞ்சி*** (பிங்.); a plant whose flower does not change colour in withering. 2. மருதோன்றி (மலை.); henna.

[குல் → குரல் → குரவகம்.]

குரவகி *kuravagi,* பெ.(n.) 1. கோழிக்கீரை; cock's greens. 2. குறிஞ்சா; scammony swallow wort (சா.அக.).

[குரவு → குரவகி.]

குரவடிகள் *kuravadikal,* பெ.(n.) சமண ஆசிரியத்துறவியர் *"ஸ்ரீ திருநறுங் கொண்ட பலதேவக் குரவடிகள் மாணாக்கர் கனகவீர அடிகள்" (கழுகுமலைக் கல்வெட்டு) (கல்.அக.).*

[குரவு + அடிகள்.]

குரவம் *kuravam,* பெ.(n.) 1. குரா; common bottle flower. *"பல குரவ மழுனகுவன" (சூளா.தூது.2).* 2. பேரீந்து (மலை.); date palm. 3. கோட்டம் (சூடா.); putchock, fragrant root of the costum plant.

[குரா → குரவம்.]

குரவம்பாவை *kuravam-pāvai,* பெ.(n.) பாவையின் வடிவுடைய குரவம்பூ; common bottle-flower blossom, as shapded like a doll. *"குரவம் பாவை கொப்புளித்து" (சீவக.2690).*

[குரவம் + பாவை. குரு → குரவம்.]

குரவன் *kuravan,* பெ.(n.) அரசன், ஆசிரியன், தாய், தந்தை, தமையன் என்ற ஐங்குரவருள் ஒருவர்; elderly person, qualified by age, family connection, respectability, knowledge or authority to give advice and exercise control, any of aiṅ-kuravan. *"நிகிரில் குரவரிவர்" (ஆசாரக்.17).* 2. அமைச்சர் (பிங்.); minister. 3. அயன் (திவா.); brahma, as the father of all.

[குரு → குருவன் → குரவன்.]

குரவிகம் *kuravikam,* பெ.(n.) பேரீஞ்சு; wild date palm (சா.அக.).

[குரவு → குரவிகம்.]

குரவிகா *kuravikā,* பெ.(n.) புல்லாமணக்கு; a plant resembling castor plant (சா.அக.).

[குரு → குருவு → குரவிகம் → குரவிகா.]

குரவிளிம்பு *kuravilimbu,* பெ.(n.) பிடரி எலும்பையும் பித்திகை எலும்பையும் இணைக்கும் சுருக்கு விளிம்பு;lamboid suture which unites the occipital and the parietal bones (சா.அக.).

[குர + விளிம்பு.]

குரவு[1] *kuravu,* பெ.(n.) *குரா* பார்க்க; see kurā. *"குரவுவார் குழன்மடவாள்" (திருவாச.5,17).*

ஒ.நோ. குரா.

[குல் → குர → குரவு.]

குரவு[2] *kuravu,* பெ.(n.) ஆசிரியத்தன்மை; office of a guru. *"அருந்தமிழ்க் குரவு பூண்ட" (காஞ்சிப்பு.கடவுள்வா.9).*

[குரு → குருவு → குரவு.]

குரவு[3] *kuravu,* பெ.(n.) நறுமணம்; fragrant smell (சா. அக.).

[குரு → குருவு → குரவு.]

குரவு[4] *kuravu,* பெ.(n.) நறுமணம் (யாழ்.அக.); fragrance.

[குல் → குரு → குரவு.]

குரவுநிறமணி *kuravu-nira-mani,* பெ.(n.) கோவரங்கப் வயிரமணி (பதுமராகம்) வகை (யாழ்.அக.); a kind of topaz.

[குரு → குரவு + நிறம் + மணி.]

குரவை *kuravai,* பெ.(n.) 1. முல்லை அல்லது குறிஞ்சிநில மகளிர் தம்முட் கைகோத்தாடும் கூத்துவகை; dance in a circle prevalent among the women of sylvan or hill tracts. *"ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை" (சிலப்.).* 2. மகளிர், விழா நாள்களில் நாவாற் குழறி இடும் மகிழ்ச்சியொலி; chorus of shrill sound madeby women by wagging the tongue, uttered on festive occassions. 3. கடல்; sea. *"பவத்தின் பரவைக் குரவையை............ கடப்பரிதால்" (வைராக.தீப.18).*

E. chorus, L. chorus. G. choros, orig. a dance in a ring. cf. of. E. coracle, a small oval rowboat. W. carwgt-corwg. anything round. Gael. eurach, a wicker-boat.

ஒ.நோ. குலவை. ம. குரவ.

[குலவை → குரவை, குலவையிடுதல், குலடிவயிட்டு ஆடுதல்.]

குரவைக்கூத்து *kuravai-k-kūttu,* பெ.(n.) *குரவை*[1] பார்க்க (சிலப்.3,12,உரை);see *kuravai.*

[குரவை + கூத்து.]

குரவைத்திகிரி *kuravai-t-tigiri,* பெ.(n.) ஆண்துடரி என்னும் மூலிகை (சா.அக.); a shrub-useful in kidney diseasses.

மறுவ: விரகச் செடி

[குரவை + திகிரி.]

குரவைப்பறை *kuravai-p-parai,* பெ.(n.) ஒருவகைக் குறிஞ்சிப் பறை (இறை.1,17,உரை); a drum of the hilly tracts.

[குரவை + பறை.]

குரவையிடு–தல் *kuravai-y-idu-,* 20 செ.கு.வி.(v.i.) நாவாற் குழறி மகிழ்ச்சியொலி செய்தல்; to utter in chorus a shrill sound by wagging the tongue as done by women on festive and religious occasions (இ.வ.).

[குலவை → குரவை + இடு.]

குரற்கந்து *kurarkandu,* பெ.(n.) சர்க்கரை அல்லது தேன் சேர்த்துப் பக்குவப்படுத்திய பனிநீர்ப்பூ ரோசாப்பூ; a confection of rose prepared in sugar or honey (சா.அக.).

மறுவ. குல்கந்து

[குரல் + கந்து. குரலை வலுப்படுத்துவது.]

குரற்கம்மல் *kurar-kammal,* பெ.(n.) குரல்வளையில் உள்ளீரம் வறண்டு பேசமுடியாமல், கம்மிய பேச்சையுண்டாக்கும் ஒரு தொண்டைநோய்; a dis-

ease of the larynx due to dryness and the inablity to ta!k except with hoarse voice (சா.அக.).

[குரல் + கம்மல்.]

குரற்கனப்பு *kurarkanappu*, பெ.(n.) குளிர்ச்சியால் தொண்டை கம்மல்; harsh, rough, grating voice, as when the throat is affected with cold (சா.அக.). இது காற்றுக் கோளாறினாலும் அதிகக் கூச்சலிடுவதாலும் உண்டாகி, குரல்வளையில் தங்கிப் பேச்சொலியை மாற்றும்.

[குரல் + கனைப்பு.]

குரற்செப்பு *kurarceppu*, பெ.(n.) குரள்வளை; glottis (சா.அக.).

மறுவ: குரல்வளை

[குரல் + செப்பு.]

குரனாசனி *kuranāsani*, பெ.(n.) குரலோசையைக் கெடுக்கும் உணவு வகை முதலியன; food substances that affect the voice of the throat (சா.அக.).

[குரல் + நாசனி.]

குரா *kurā*, பெ.(n.) வெள்வெட்கி (குராமரம்) மரம்; common bortle flower. *"குராநற் செழும்போது கொண்டு"* (திவ். இயற் 2, 31).

[குரல் →குரவு → குரா.]

குராசானிப்பூடு *kurāsāni-p-pūdu*, பெ.(n.) ஓர் ஓமப்பூடு; a plant (சா.அக.).

[குராசானி + பூடு – குராசானி – ஊர்ப்பெயர்.]

குராதர் *kurādar*, பெ.(n.) குணதத்துவ அதிபர் எண்மரில் ஒருவர் (சி.சி.8,2, மறைஞா); (Saiva) one of the eight ruling chiefs of *gunatattuvam*.

[குரு + ஆதர் – குராதர்.]

குராமரம் *kurāmaram*, பெ.(n.) வறண்ட நிலத்தில் வளர்வதும், படகு செய்வதற்குப் பயன்படுவதுமான ஒருவகைமரம்; common bottle flower tree. It is very common in ceylon where fishing boats are made of its wood (சா.அக.).

மறுவ: வெள்வெட்சி

[குரவு → குரா + மரம்.]

குரால் *kurāl*, பெ.(n.) 1. புகர்நிறம் (திவா.); dim, tawny colour. 2. பசு; cow. *"குஞ்சர மெண்கு குராலரி யேனம்"* (சேதுபு.மங்கல.27). 3. கோட்டான்; a kind of owl. *"பலவூண் பொருந்திய குராலின் குரலும்"* (மணிமே.6,76).

[குரு → குரால்.]

குராற்பசு *kurārpasu*, பெ.(n.) கபிலைநிறப் பசு; tawny cow. *"குராற் பசுவைக் கொன்றான் பாவத்தை"* (S.I.I.iii,121.).

[குரு → குரால் + பசு (பசு=பெற்றம்).]

குரிச்சி கட்டல் *kuriccikattal*, பெ.(n.) கைகளால் முடக்கல்; persistent, and organic contracture of a joint in certain diseases such as small box rheumatism attended with veneral disease (சா.அக.).

[குரிச்சி + கட்டல்.]

குரிசில் *kurisil*, பெ.(n.) 1. பெருமையிற் சிறந்தோன் (திவா.); person of dignity, illustrious person. 2. வள்ளல்; philanthropist, benefactor. *"குரிசினீ நல்க யாங் கொள்ளும் பரிசில்"* (பு.வெ.9,5). 3. தலைவன்; lord, chief. *"போர்மிகு பொருந குரிசிலென"* (திருமுரு.276).

*[குரு → குருசில் → குரிசில்.]

குரிஞ்சி *kuriñci,* பெ.(n.) 1. ஈந்து; wild date-palm. 2. குரிங்கை; cone head. 3. மருதோன்றி; common-nail dye. 4. செம்முள்ளி; throny nail dye. 5. வேங்கை; common vengai. 6. வைரமணி; chalcedony (சா.அக.).

[குரு → குருஞ்சி → குரிஞ்சி.]

குரிந்தை *kurindai,* பெ.(n.) 1. குருக்கத்தி (மலை.); common delight of the woods. 2. சிறுகுறிஞ்சா; small Indian pecauanha.

[குரு → குருந்தை → குரிந்தை.]

குரிவியாலன் *kuriviyālaṉ,* பெ.(n.) ஆலமரவகை; a common avenue-fig having stout air-roots.

ம. குர்யாலு

[குரு → குருவி → குரிவி + துலன்.]

குரீஇ *kurī,* பெ.(n.) 1. குருவி; small bird. *"குன்றத் திறுத்த குரீஇயினம்" (புறநா.19).* 2. பறவை (பிங்.); bird.

[குல் →குறு→ குறுகு →குருவி→குரீஇ.]

குரிஇப்பூளை *kurii-p-pūḷai,* பெ.(n.) ***சிறுதுளை*** பார்க்க;see *siṟutuḷai. "குரீஇப்பூளை குறு நறுங்கண் ணி" (குறிஞ்சிப்72),* wolly caper.

[குரீஇ→பூளை.]

குரீரம் *kurīram,* பெ.(n.) புணர்ச்சி, இணலாடுதல்; copulation (சா.அக.).

[குரீஇ→ குரீஇலம் (குருவியின் செயல்) →குரீரம்.]

குரு[1]–த்தல் *kuṟu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. தோன்றுதல்; to appear. *"அதினின்று மொருபுருடன் குருத்தான்" (விநாயகபு.72,4).* 2. வேர்க்குரு உண்டாதல்; to break out, as prickly heat.

[குல் (தோன்றல் கருத்து) → குரு.]

குரு[2]–த்தல் *kuru-,* 4 செ.கு.வி.(v.i.) வெகுளியடைதல்; to be indignant, enraged.

[குல் → குரு.]

குரு[3] *kuru,* பெ.(n.) 1. அம்மை முதலிய கொப்புளங் காணும் நோய்; postule, blister, any eruptive, disease, as small-pox, measles. *"வெப்பு நோயுங் குருவுந் தொடர" (சிலப்.உரைபெறு கட்டுரை).* 2. புண்; boil, sore. *"கிருமி குருவின் மிளிர்த்தத்து" (திவ்.* இயற். திருவிருத்.48). 4. வேர்க்குரு (பிங்.); prickly heat. 4. புளகம்; horripilation. *"மயிர்க்கண் குருக்கொண்டு" (அரிச்.பு.விவாக.288).* 5. கொட்டை; nut. *"பலாவின் குரு" (இ.வ.).*

[குல் → குரு.]

குரு[4] *kuru,* பெ.(n.) 1. ஒளி; brilliance, lustre, effulgence. குருமணித்தாலி (தொல். சொல்.303, உரை.); 2. முத்துக்குற்றங்களில் ஒன்று; a flaw in pearls. *"குருவும் சுப்பிரமும் உட்பட முத்து" (S.I.I.II, 81).* 3. துரிசு (மூ.அ.); blue vitriol. 4. மாழைகளைச் சிதைக்கும் சிந்தூரம்; (Alch.) philospher's powder, a compound of various metals. 5. இதளியம்; mercury. 6. பலண்டுறுகம் என்னும் செய்ந்நஞ்சு; a mineral poison.

[குல் → குரு.]

குரு[5] *kuru,* பெ.(n.) 1. அறிவாசிரியன்; spiritual preceptor. *"பீதகவாடைப் பிரானார் பிரமகுரு வாகி வந்து" (திவ்.பெரியாழ்.5:2,8).* 2. ஆசிரியன் (சூடா.); teacher. 3. ஐங்கரணன் (புரோகிதன்); family priest. *"குருவின் வாசகங் கொண்டு கொற்றவன்" (கம்பரா.கையடை.16).* 4. தந்தை; father. *"குருமொழி சிரத்திற் றாங்கினான்" (காஞ்சிப்பு.இரேணு.11).* 5. அரசன் (பிங்.); king. 6.வியாழன் (திவா.); the planet jupiter, as the priest of the gods (தேவகுரு.) 7. பூசநாள்; the 8th nakšatra (விதாந. பஞ்சாங்க.18). 8. கடினத்தன்மை; heaviness,

weight. *"பசுமட் குருஉத் திரள் போல" (புறநா.32).* 9. பருமன்; largeness (வின்.). 10. பெருமை (உரி.நி.); eminence, excellence, exaltedness. 11. நெடில்; long vowel. 12. நெடிலும், நெடிலொற்றும், குறிலொற்றுமாகிய அசைகள் (வீரசோ.யாப்.26) (pros.); a syllabic instant. 13. இரண்டு மாத்திரையின் அளவு (அக.நி.); (mus.) quantity of a long note. 14. எட்டு எழுத்துக்காலங் கொண்ட தாள அங்கவகை (பரத.தாள.35) (Mus.); a variety of *angam* which consists of eight *aksarakālam.*

[குல் → குரு.]

குரு[6] *kuru,* பெ.(n.) 1. குருகுலத் தலைவன்; a prince of the lunar race after whom his family was called *kuru-kulam. "குருவுமக குலத்திலங் குரித்தான்" (பாரத.குருகுல.31).* 2. குருநிலப்பகுதி; a certain continent. 3. குருக் கொடிவழியினர் ஆண்ட நாடு (சூடா.); the country of the Kurus, one of 56 *tēcam.*

[குல் → குரு.]

குரு[7]**–த்தல்** *kuru-,* 4 செ.கு.வி.(v.i.) நிறம்பெறுதல்; to glisten. *"குருக்குங் கலாமதிக் கூற்றம்" (சங்கர.அந்.32).*

[குல் → குரு.]

குருக்கக் காய்ச்சல் *kurukka-k-kāiccal,* 8 செ.குன்றாவி. (v.t.) சுண்டக் காய்ச்சுதல்; boiling down as to become thick and consistent (சா.அக.).

[குறுக்க → குருக்க + காய்ச்சல்.]

குருக்கஞ்செடி *kurukkañcedi,* பெ.(n.) பிரமதண்டு; yellow thistle (சா.அக.).

[குரு → குருக்கம் + செடி.]

குருக்கண் *kurukkaṇ,* பெ.(n.) 1. குருட்டுக் கண்; blind eye with eruptions or vesicles. 2. பெண் முலை; woman's breast. 3. ஞானக்கண்; eye of wisdom, third eye (சா.அக.).

[குல் (துளை) → குரு + கண்.]

குருக்கத்தி[1] *kurukatti,* பெ.(n.) மாதவிக்கொடி; common delight of the woods. *"குடந்தைக் கிடந்த கோவே குருக்கத்திப்பூச் சூட்ட வாராய்" (திவ்.பெரியாழ்.2:7,7).*

[குல் → குரு → குருக்கன் → குருக்கத்தி.]

குருக்கத்தி[2] *kurukkatti,* பெ.(n.) கல்லால்; white fig.

[குரு → குருக்கத்தி.]

குருக்கத்தியெண்ணெய் *kurukkatti-y-eṇṇei,* பெ.(n.) வசந்த கால மல்லிகை எண்ணெய்; oil of spring creeper (சா.அக.).

[குருக்கத்தி + எண்ணெய்.]

குருக்கம் *kurukkam,* பெ.(n.) குறுக்கு, இடுப்பு; hip (சா.அக.).

[குறுக்கு → குறுக்கம் → குருக்கம்.]

குருக்கல் *kurukkal,* பெ.(n.) 1. குருவுண்டாதல்; breaking out of prickly heat. 2. அம்மைக் குருவெழும்பல்; rising of pocks as in small-pox (சா.அக.).

[குல் → குரு → குருத்தல் → குருக்கல்.]

குருக்கள்[1] *kuru-k-kaḷ,* பெ.(n.) 1. ஆசிரியன் (சீவக.கடவுள்வா.1,உரை); priests. 2. சிவன் கோயிலிற் பூசனை புரியும் ஆரியச்சிவனியர்; officiating Brahman priests in *śiva* temples (கொ.வ.). 3. பார்ப்பனரல்லாத சைவர்க்குக் காரியங்கள் செய்விக்கும் சைவ வேளாளர்; *śaiva vēlāla* priests who ministered to non-Brahmins.

[குல் → கள்.]

குருக்கள்[2] *kurukkaḷ,* பெ.(n.) நூற்றுவர் கௌரவர்; Kauravas as descendants of Kuru. *"குருக்கள் தமக்குப் படைத்தலைவரை வகுத்தது" (தொல். பொருள்.72, உரை,ப.231).*

[குல் → கள். குரு – ஒரு மரபினத்தின் பெயர்.]

குருக்கன் *kurukkan*, பெ.(n.) காகச் செய்நஞ்சு (சங்.அக.); a prepared arsenic.

[குரு → குருக்கன்.]

குருக்காணிக்கை *kuru-k-kāṇikkai*, பெ.(n.) வேதபாடம் படித்து முடித்தபின் சீடன் தன் ஆசிரியனுக்குக் காணிக்கை தருதல்; to present to a guru by his pupil after completing his vēdic studies under him.

[குரு+ காணிக்கை.]

குருக்காதி *kurukkādi*, பெ.(n.) குரு மருந்துகள் முடிக்கப் பயன்படும் சரக்குகள்; the ingredients necessary for preparation of quintessential medicines (சா.அக.).

[குரு → குருக்கம் + ஆதி.]

குருக்காரம் *kurukkāram*, பெ.(n.) காரக்குரு; any substance added to a metal etc. (சா.அக.).

[குரு + காரம்.]

குருக்கி *kurukki*, பெ.(n.) முழங்காற்கு மேல் வீக்கங் காணும் குதிரைநோய்வகை (அசுவசா.111); a disease of the horse is which there is swelling just above the knees.

[குருக்கு → குருக்கி.]

குருக்கிடை *kurukkiḍai*, பெ.(n.) குருக்கிடை நூல் அல்லது குருமருந்து முறையைச் சொல்லும் நூல்; a treatise on the preparation of quite essential medicines or salt used in alchemy (சா.அக.).

[குரு + இடை]

குருக்கிலை *kurukkilai*, பெ.(n.) பிரமதண்டின் இலை; prickly poppy (சா.அக.).

[குருக்கு + இலை]

குருக்கு[1] *kurukku*, பெ.(n.) பிரமதண்டுச் செடி; prickly poppy. உன்வீட்டிலே எருக்கும் குருக்கும் முளைக்க (உ.வ.).

மறுவ. பிரண்டை

[குரு → குருக்கு.]

குருக்கு[2] *kururkku*, பெ.(n.) இளம்பனை முதலியவை நெருங்கிய தோப்பு; plantation thick with young palm trees (இ.வ.).

[குல் → குரு → குருக்கு.]

குருக்கு[3] *kurukku*, பெ.(n.) நெருஞ்சி; cowthorn.

[குல் → குரு → குருக்க.]

குருக்குத்தி *kurukutti*, பெ.(n.) 1. **குருக்கு** பார்க்க;see *kurukku*. 2. பயிரில் விழும் நோய் வகை; a disease causing blight to growing grain.

[குருக்கு → குருக்கத்தி]

குருக்குப்பால் *kurukku-p-pāl*, பெ.(n.) கண் வலிக்குப் பயன்படும் பிரம்மதண்டுச் செடியின் மஞ்சள் பால்; the yellow juice of prickly poppy, used in opthamalmia (சா.அக.).

[குருக்கு + பால்.]

குருக்கொடு–த்தல் *kuru-k-koḍu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. கோயிற்பூசை புரிதல்; to offer puja in temples. *"குருக்கொடுக்கும் நம்பிமா ரென்றிருந் தோம்" (தமிழ்நா.216).* 2. கொடுமை செய்யத் தூண்டுதல்; to incite, commonly to evil deeds (வின்.).

[குரு + கொடு.]

குருக்கொள்(ளு)–தல் *kuru-k-koḷ-*, 16 செ.கு.வி. (v.i.) குருவின் தன்மையை மேற்கொள்ளுதல்; to arrogate the function of a teacher. *"இராசநீதி குருக்கொண்டு முதிர்ந்தனையோ" (பாரத. சூதுபோர்.241).*

[குரு + கொள்.]

குருகடம் *kurukaḍam*, பெ.(n.) அரத்தத்திலிருக்கும் அணுவுறுப்பு; blood corpuscle (சா.அக.).

[குரு → கடம்.]

குருகண்டகம் *kuru-kaṇḍagam*, பெ.(n.) முருங்கை; horse radish. 2. கண்டகச்சிலை காகிக் கருகில் கண்டகி என்னும் நதியில் கிடைக்கும் பூசைக்குரிய கல்(சா.அக.);worshipable stone obtained from kandaki viva in north india.

[குரு + கண்டகம்.]

குருகு வகைகள்



குருகன்வெட்டு *kurukaṉ-veṭṭu,* பெ.(n.) பழைய நாணயவகை (பணவிடு.135); an ancient coin.

[குருகன் + வெட்டு.]

குருகாரம் *kurukāram,* பெ.(n.) பொரி காரம்; borax. 2. குரு முறைக்குப் பயன்படுத்தும் கார மருந்து; an alkaloid used for preparing a universal medicine known as philospher's powder (சா.அக.).

[குரு + காரம்.]

குருகிதம் *kurukidam,* பெ.(n.) முருந்துகளிலிருந்து எடுக்கும் ஒரு பொருள்; a peculiar substance obtained from cartilages (சா.அக.).

[குரு →குருகு → குருகிதம்.]

குருகிலை[1] *kurukilai,* பெ.(n.) குருக்கிலை; leaves of erythrina (சா.அக.).

[குருக்கு → குருக்கு+ இலை.]

குருகிலை[2] *kurugilai,* பெ.(n.) ஒருவகை மரம்; a tree. *"பெய்ய முழங்கத் தளிர்க்குங் குருநிலை" (நான்மணி.37).*

[குருகு + இலை.]

குருகிற்றாளி *kurukiṟṟāḷi,* பெ.(n.) ஒருவகைக் கிழங்கு; a kind of root.

[குருகு → குருகில் + தாளி.]

குருகு[1] *kurugu,* பெ.(n.) 1. விலங்கு முதலியவற்றின் இளமை (சூடா.); young, as of an animal. 2. குட்டி; young of a beast. *"சிங்கக் குருகு" (திவ். திருப்பா.1,வ்யா).* 3. குருத்து; pith, as of tree or elephant's tusk. *"குருகு பறியா நீளிரும் பனைமிசை" (பரிபா.2,43). "ஆளிநன்மான் .... வேழத்து வெண்கோடு வாங்கிக் குருத்தருந்தும்" (அகநா.381).* 4. வெண்மை (திவா.); whiteness. 5. பறவை (சூடா.); bird. 6. தாரை; heron, stork, crane. *"வான்பறைக் குருகி னெடுவரி பொற்ப" (பதிற்றுப். 83,2).* 7. கோழி (பிங்.);hen. 8. அன்றில்; the *aṉṟil* bird. *"குருகுபெயர்க் குன்றம்" (மணிமே.5,13).* 9. மூலநாள் (திவா.); the 19th naksatra 10. துருத்தி வைத்தூதும் கொல்லுலை மூக்கு; hole in the centre of the smith's forge for the nozzle of the bellows. *"ஊதுலைக் குருகி னுயிர்த்தனர்" (சிலப்.4:59).* 11. கைவளை; bracelet, armlet. *"கைகுவி பிடித்துக் குருகணி செறித்த" (கல்லா.44:22).* 12. குருக்கத்தி; common delight of the woods. *"குருகுந் தளவமும்" (சிலப்.13:155).* 13. கல்லால் வகை; white fig. 14. இடைச் சங்க நூல்களுள் ஒன்று (இறை.உரை.); a poem of the Middle Sangam.

[குரு→ குருகு (இளமை, மென்மை).]

குருகு[2] *kurugu,* பெ.(n.) கூழைக்கடா இனப்பறவை; grey pelican. *"அகன்கழி சிறகுளர்த்தும் பாரல்வாய்ச் சிறுகுருகே" (சம்பந்தர்.தேவா.321–5)*

மறுவ. கூழைக்கடா, வண்டானம்.

Fin. kurki; **Es.** kurg; **Mordvin.** kargo; **Tungusic.** karav; **Jap.** kari.

[குருகு - கொல்லன் உலைமூக்கு, உலைத்துருத்தி, உலைமூக்கு போன்ற மூக்குடைய பறவை, உலைத்துருத்தி போன்று வாயின்கீழ் தோற்பை உடைமையும் ஒப்பு நோக்கத்தக்கது.]

குருகு வகைகள் : 1. குருகு 2. கருங்கால் வெண்குருகு 3. வெள்ளாங்குருகு 4. சிறுவெள்ளாங்குருகு 5. பெருங்குருகு.



குருகு

குருகுக்கிழங்கு *kurugu-k-kiḷaṅgu,* பெ.(n.) உண்ணுதற்குரிய இளங்கிழங்கு; very young yams or other edible roots (வின்.).

[குருகு + கிழங்கு.]

குருகுணம் *kurukuṇam,* பெ.(n.) எளிதில் செரிமானம் ஆகாமல் வயிறு, குடல்களுக்கு துன்பத்தை உண்டுபண்ணும் வன்மையான பொருள்களின் பண்பு; the nature of any substance that could not be easily digestible or one that gives trouble to the disgestive organs such as, the stomach, and the intestines. 2. மென்மை யான குணம்; sterling quality (சா.அக.).

[குரு + குணம்.]

குருகுபெயர்க் குன்றம் *kurugupeyar-k-kuṇḏram,* பெ.(n.) ***கிரவுஞ்சமலை*** பார்க்க; see *kiravuñja-malai,* a mountain. *"குருகு பெயர்க் குன்றங் கொன்றோன்" (மணிமே.5:13).*

[குருகு + பெயர் + குன்றம்.]

குருகுமண் *kuruguman,* பெ.(n.) வெள்ளைமண்; white earth.

[குருகு + மண்.]

குருகுமணல் *kurugumaṇal,* பெ.(n.) வெண்பொடி மணல்; fine white sand.

[குரு + மணல்.]

குருகுரகம் *kurukuragam,* பெ.(n.) குருகுரு ஒலிப்பு; gurgling sound (சா.அக.).

[குரு + குரு → குருகுரு → குருகுரகம்.]

குருகுரம் *kurukuram,* பெ.(n.) சதையைத் துளைக்கும் புழு; a worm burrowing into the skin (சா.அக.).

[குல் → குரு + குரம்.]

குருகுரு[1]–த்தல் *kurukuru-,* 16 செ.கு.வி.(v.i.) வேர்க்குரு உண்டாதல்; to breat out, as prickly heat.

[குருத்தல் - உண்டாதல். குரு → குருகுருத்தல்.]

குருகுரு[2]–த்தல் *kurukuru-,* 16 செ.கு.வி.(v.i.) 1. நமைத்தல்; to itch and tingle. 2. நெஞ்சை உறுத்துதல்; to rankle in one's mind. அவன் பேசியது நெஞ்சில் குருகுருக்கிறது (உ.வ.).

[குல் → குடு → குரு.]

குருகுரு[3] *kurukuru,* பெ.(n.) தொண்டையில் கொப்புளிக்கும் ஓசை; gurgling sound as in throat etc. (சா.அக.).

[குலு + குலு → குறு + குறு → குரு + குரு.]

குருகுலம்[1] *kurukulam,* பெ.(n.) குருவின்கொடி வழியினர்; the Kurudynasty. *"குருகுலத்துவ ரியற்கை நன்று" (பாரத.கிருட்டிண.118).*

[குரு + குலம்.]

குருகுலம்[2] *kurukulam,* பெ.(n.) குருவின் வாழ் விடம்; residence or home of a guru.

[குரு + குலம்.]

குருகுலவாசம் *kuru-gula-vāsam,* பெ.(n.) கல்வியின் பொருட்டு மாணாக்கன் ஆசிரியன் மனையில் வாழ்கை; residence or life of a pupil in the guru's home.

[குருகுலம் + வாசம்.]

குருகுளிகை *kurukuḷigai,* பெ.(n.) பெருமை வாய்ந்த குளிகை; reputed pill (சா.அக.).

[குரு (மேன்மை) + குளிகை.]

குருகூர் *kurugūr,* பெ.(n.) சடகோபர் பிறந்த ஊராகிய ஆழ்வார் திருநகரி; Alvar Tirunagari, the birth-place of šaḍaGopar in Thoothukkudi district. *"குருகூர்ச் சடகோபன் சொல்" (திவ். திருவாய்.1:1,11).*

மறுவ. குருகை

[குருகு + ஊர்.]

குருகூர் நம்பி *kurugūr-nambi,* பெ.(n.) ***சடகோபர்*** பார்க்க (இலக்.வி.900,உரை);see *šadagōhar.*

[குருகூர் + நம்பி.]

குருகை *kurugai,* பெ.(n.) ***குருகூர்*** பார்க்க; *kurugūr* town *"குருகைக் கோன் சடகோபன் சொல்"* *(திவ்.திருவாய்.3:6,11).*

[குருகு → குருகை.]

குருங்கடியாள் *kuruṅkaḍiyāḷ,* பெ.(n.) தாளகம்; orpiment (சா.அக.).

[குரு → குரும + கடியாள்.]

குருங்காடகம் *kuruṅkāḍagam,* பெ.(n.) மூக்கு, கண், காது, தொண்டை ஆக இந் நான்கு துளை களும் கூடுமிடம்; the place of union of the four cavities viz. nose, eyes, ears and throat (சா.அக.).

[குரும் + (கூடகம்) காடகம்.]

குருங்காடை *kuruṇkāḍai,* பெ.(n.) உயர்ந்த காடை; a superior kind of quail (சா.அக.).

[குரும் + காடை.]

குருச்சாரகம் *kuruccāragam,* பெ.(n.) இருள்விடு செடி; a plant (சா.அக.).

[குரு + (சாலகம்) சாரகம்.]

குருச்சி[1] *kurucci,* பெ.(n.) ***குரிச்சி*** பார்க்க; see *kuricci.*

[குரு → குருச்சி.]

குருச்சி[2] *kurušci,* பெ.(n.) சீனக்காரம்; alum (வின்.).

[குரு → குருச்சி.]

குருச்சுண்ணம் *kuru-c-cuṇṇam,* பெ.(n.) முப்பு; the mystic three salts used in alchemy. It is the quintessence salt prepared by a secret process (சா.அக.).

[குரு + சுண்ணம்.]

குருச்சோவிருத்தம் *kuru-c-cō-viruttam,* பெ.(n.) நெட்டி தளம்; an unknown plant (சா.அக.).

[குரு + சோ + இருத்தம்.]

குருசகம் *kurušagam,* பெ.(n.) வெண்தோன்றி; skyroot (சா.அக.).

[குருசு → குருசகம்.]

குருசம் *kurušam,* பெ.(n.) வெண்டோன்றி (மலை.); Malabar glory lily.

[குரு → குருசம்.]

குருசாமி *kurušami,* பெ.(n.) 1. குருவின் நெஞ்சிற் குகந்தவன்; the most revered of masters, chief of preceptors. 2. ***குருநாதன்*** பார்க்க; see *kuru-nādaṉ.*

[குரு + சாமி.]

குருசாரம் *kurušāram,* பெ.(n.) பொடிகாரம்; an alkaline powder. 2. சிவசாரம்; an alkaloid preparation as opposed to. *சத்தி சாரம்* (சா.அக.).

[குரு + சாரம்.]

குருசித்தன் *kurušittaṉ,* பெ.(n.) இதளிய (இரசவாத) முறைகளில் வல்லோனாகிய சித்தன்; a šiddha skilled in alchemy. 2. சித்தர்களிற் சிறந்தோன் அதாவது அகத்திய முனி; saga Agastya, the chief of the šiddhar's school (சா.அக.).

[குரு + சித்தன்.]

குருசில் *kurušil,* பெ.(n.) ***குரிசில்*** பார்க்க;see *kuricil.* *"போர்மிகு குருசில்" (பதிற்றுப்.31:36).*

[குரு + குருசில்.]

குருசுரம் *kurušuram,* பெ.(n.) உடம்பிற் றினைபோல் குருக்களை எழுப்பும் ஒருவகைக் காய்ச்சல்; an acute fever characterised by crop of pustules of the size of millet seeds (சா.அக.).

மறுவ. நாய்முள் காய்ச்சல்

[குரு + சுரம்.]

குருசூரியன் *kuru-šūriyaṉ,* பெ.(n.) வைரம்; diamond (சா.அக.).

[குரு + சூரியன்.]

குருசெயநீர் *kuru-šeyanīr,* பெ.(n.) பூ நீருப்பு செயநீர்; a strong pungent fluid prepared by exposing to nights dew a mixture in which the efforescent salt of the soil of the fuller's earth forms the chief-ingredients (சா.அக.).

[குரு + செயநீர்.]

குருசேவை *kuru-sēvai,* பெ.(n.) ஆசிரியனை வழிபடுகை; service to a guru, of four kinds viz; ஆத்தம் அங்கம், தானம், சற்பாவம். *"அதிகாரி செயும் குருசேவையினை" (வேதா.ஆ.11).*

[குரு + சேவை.]

குருஞ்சூல் *kuruñjūl,* பெ.(n.) அகச்சூலி; (சா.அக.).

[குரு → குரும் + சூல்.]

குருட்டடி *kuruṭṭaḍi,* பெ.(n.) சற்றும் நினைத்துப் பார்க்காமல் (யோசனையில்லாது) அடிக்கும் அடி; indiscrimenate unthinking beating (சா.அக.).

[குருடு + அடி.]

குருட்டாட்டம் *kuruṭṭāṭṭam,* பெ.(n.) கண்மூடித்தனமான செய்கை; blind, ineffective act, as the blind leading the blind. *"குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடி" (திருமந்.1680).*

[குருட்டு + ஆட்டம்.]

குருட்டீ *kuruṭṭī,* பெ.(n.) 1. மாடு முதலியவற்றின் மேல் தங்கும் ஒரு வகை ஈ; gad-fly, horse fly. 2. இருட்டிற்கண் தெரியாத ஒரு வகை ஈ; a kind of fly that cannot see in the night.

[குருடு + ஈ.]

குருட்டுக்கண் *kuruṭṭuk-kaṇ,* பெ.(n.) பார்வையில்லாக் கண்; blind eye (சா.அக.).

[குருடு + கண்.]

குருட்டுக்கண்ணாடி *kuruṭṭu-k-kaṇṇāḍi,* பெ.(n.) முகந்தெரியாத கண்ணாடி; unserviceable looking-glass, mirror that has lost its reflective power.

[குருடு + கண்ணாடி.]

குருட்டுக்கல் *kuruṭṭu-k-kal,* பெ.(n.) ஒளிமங்கின மணி; turbid or dim gem (வின்.).

ம. குருட்டுக்கல்லு

[குருடு + கல்.]

குருட்டுக்கிரகம் *kuruṭṭu-k-kiragam,* பெ.(n.) குழந்தைகளுக்குக் காணும் கோள்நிலைக் குற்றம்; a morbid condition in children due to the mal-influence of a particular planet perhaps venus (சா.அக.).

[குருடு + கிரகம்.]

குருட்டுக்கொக்கு *kuruṭṭu-k-kokku,* பெ.(n.) நொள்ளை மடையான் என்ற கொக்கு; blind heron, squident-eyed (M.M.640).

தெ. குட்டிக்கொங்க

[குருடு + கொக்கு.]

குருட்டுச்சாயம் *kuruṭṭu-c-cāyam,* பெ.(n.) மங்கலான சாயம்; faint colours in dyeing.

[குருடு + சாயம்.]

குருட்டுத்தனம் *kuruṭṭu-t-taṉam,* பெ.(n.) 1. குருட்டுத்தனம்;blindness. 2.கண்மூடித்தனம்; foolishness, recklessness (கொ.வ.).

க. குருடதன; தெ. குட்டிதன.

[குருட்டு + தனம்.]

குருட்டுத்தீர்ப்பு *kuruṭṭu-t-tīrppu,* பெ.(n.) அறிவில்லாத தீர்மானம்; undiscerning judgement.

[குருடு + தீர்ப்பு.]

குருட்டுநாள் *kuruttu-nāḷ*, பெ.(n.) செவ்வாயும் சனியும் (சோதிட.சிந்.ப.36); Tuesday and Saturday, as being considered blind.

ம. குருட்டுநாள்

[குருடு+ நாள்.]

குருட்டுநியாயம் *kuruttuniyāyam*, பெ.(n.) ***குருட்டு வழக்கு*** பார்க்க; see *kuruttu-vaḷakku.*

[குருட்டு + நியாயம்.(நயன்→ நயம்→ நாயம் > வ. நியாயம்).]

குருட்டுநோய் *kuruttu-nōy*, பெ.(n.) 1. காரணம் தெரியாத நோய்; diseases for which no causes could be assigned. 2. கண்குருடு; blindness (சா.அக.).

[குருட்டு + நோய்.]

குருட்டுப்பக்கம் *kuruttu-p-pakkam*, பெ.(n.) அச்சடிச் சேலையின் மங்கலான பக்கம்; reverse side of printed cloth, as the blind side (இ.வ.).

[குருடு + பக்கம்.]

குருட்டுப்பணம் *kuruttu-p-paṉam*, பெ.(n.) தேய்ந்த நாணயம்; worn out coin (கொ.வ.).

[குருடு → குருட்டு + பணம்.]

குருட்டுப்பத்தி *kuruttu-patti-*, பெ.(n.) மூடப்பத்தி; blind faith, superstition.

[குருட்டு + பத்தி.]

குருட்டுப்பலகை *kuruttu-p-palagai*, பெ.(n.) அழுக்கடைந்த எழுதுபலகை; dirty slate (இ.வ.).

[குருட்டு + பலகை.]

குருட்டுப்பனங்காய் *kuruttu-p-paṉaṅ-kāy*, பெ.(n.) உள்ளீடற்ற பனங்காய்; pulpless palmyra fruit (இ.வ.).

[குருட்டு + பனங்காய்.]

குருட்டுப்பாடம் *kuruttu-p-pāḍam*, பெ.(n.) பொருளுணர்ச்சியில்லாமற் செய்யும் மனப்பாடம்; lesson blindly committed to memory without regard to the meaning, anything learnt by rote.

[குருட்டு + பாடம்.]

குருட்டுப்பாலை *kuruttu-p-pālai*, பெ.(n.) நந்தியாவட்டம்; eye flower (சா.அக.).

[குருட்டு + பாலை.]

குருட்டுப்பாவலி *kuruttu-p-pāvali*, பெ.(n.) ஒருவகைக் காதணி; ear ornament worn in the tragus.

[குருடு + பாவலி.]

குருட்டுமருத்துவம் *kuruttu-maruttuvam*, பெ.(n.) கண்மூடித்தனமாய்ச் செய்யும் மருத்துவம்; the blind procedure and practice of a quack (சா.அக.).

[குருடு + மருத்துவம்.]

குருட்டுமருத்துவன் *kuruttumaruttuvaṉ*, பெ.(n.) நூலின் முறை தெரியாத மருத்துவன்; one who practices medicine, without the knowedge of science (சா.அக.).

[குருட்டு + மருத்துவன்.]

குருட்டுமாசு *kuruttu-māśu*, பெ.(n.) ஓடி மறைக்கும் முகில் மேகம்; blinding mist.

[குருடு + மாசு.]

குருட்டுமுத்து *kuruttu-muthu*, பெ.(n.) மங்கலான முத்து; dim lustreless pearl.

[குருட்டு + முத்து.]

குருட்டுமை *kuruttu-mai*, பெ.(n.) எழுத்துத் தெரியாத மசி; pale ink.

*[குருடு + மை.]

குருட்டுயோகம் *kuruttu-yōgam*, பெ.(n.) முயற்சி யின்றிச் செல்வமுண்டாதற்கு காரணமான ஒகம்; fluke, stroke, of fortune. ***குருட்டு ஒகம்*** பார்க்க

[குருடு(ஒகம்) + யோகம்.]

குருட்டுவவ்வால் *kuruttu-vavvāl*, பெ.(n.) பகலிற் கண்தெரியாத வாவல்வகை (M.M.156); bat, as blind at daytime.

[குருடு + வாவல் → வவ்வால். வாவுதல் = தாவுதல்.]

குருட்டுவழி *kuruttuvaḻi*, பெ.(n.) கண்மூடித்தன மான முறை; blind procedure.

ம. குருட்டுவழி

[குருடு + வழி.]

குருட்டுவளம் *kuruttu-vaḷam*, பெ.(n.) பார்வைக்குப் படாத புடவையின் உட்புறம்; inner side of a cloth or garment opp. to *pārvai-vaḷam*.

[குருடு + வளம்.]

குருட்டுவைத்தியம் *kurutt-vaittiyam*, பெ.(n.) ***குருட்டு மருத்துவம்*** பார்க்க; see *kuruttu-maruttuvam*.

[குருட்டு + வைத்தியம்.]

குருட்டுவைத்தியன் *kurutt-vaittiyaṉ*, பெ.(n.) ***குருட்டு மருத்துவன்*** பார்க்க; see *kuruttu-maruttuvaṉ*.

[குருட்டு + வைத்தியன்.]

குருட்டுவௌவால் *kuruttu-vavvāl*, பெ.(n.) ***குருட்டுவவ்வால்*** பார்க்க; see *kuruttuvavvāl*.

வகைகள்: 1. சிறகுநீண்டோன் 2. வெண் வயிற்றோன் 3. கருந் தாடியன் 4. உதடுசுருங்கி (சா.அக.).

[குருடு + வௌவால்.]

குருட்டெலி *kurutteli*, பெ.(n.) கடித்தால் நச்சு உண்டாக்கும் ஒருவித எலி; a kind of rat, the bite of which is considered poisonous (சா.அக.).

[குருடு + எலி.]

குருட்டெழுத்து *kurutteḻuttu*, பெ.(n.) மங்கலான எழுத்து; indistinct script or letter (வின்.).

ம. குருட்டெழுத்து

[குருடு + எழுத்து]

குருடகம் *kuruḍagam*, பெ.(n.) கல்லுப்பனை; (சா.அக.); a kind of palmyra.

[குருடு → குருடகம்.]

குருடகா *kuruḍgā*, பெ.(n.) உத்தாமணி; (சா.அக.).

[கருடகம் → குருடகா.]

குருடன் *kuruḍaṉ*, பெ.(n.) 1. கண்ணில்லாதவன்; blind man. *"ஏதிலா ரிற்கட் குருடனாய்" (நாலடி.58)*. 2. சுக்கிரன்(அக.நி.); venus. 3 பிறவிக் குருடனாகிய திருதராட்டிரன்; dirutharāttiraṉ, as congenitally blind.

ம. குருடன்; க. குருட, குட்ட, குரட; தெ.குட்டி, க்ருட்டி; து. குருடெ, குர்டெ, குர்ட; கோத. குர்ட்ண்; மால. க்வொட்ரி; பட. குருட.

[குருடு + அன்.]

குருடனாசனி *kuruḍanāśaṉi*, பெ.(n.) கஞ்சாங் கோரை; white basil (சா.அக.).

[குருடு + நாசினி.]

குருடி *kuruḍi*, பெ.(n.) கண்ணில்லாதவள்; blind woman.

ம.,க., பட. குருடி.

[குருடு → குருடி.]

குருடு[1] *kuruḍu*, பெ.(n.). 1. பார்வையின்மை; blindness, absence of vision. *"கூனுங் குருடும்" (தமிழ்நா.58)*. 2. ஒளியின்மை; dimness in gems opacity. 3. ஆடை முதலியவற்றின் குருட்டுப்பக்கம்; the wrong side of a cloth, unfinished, unpolished, undressed side of a thing (வின்.). 4. மூடன்; blind ignorant fellow used in contempt.

ம.,க., பட. குருடு; **தெ.** குட்டி, க்ருட்டு; **து.** குருடு, குர்டு; **கோத.** குர்ட்; **நா.** குட்டி.

kuru-ḍu, blindness, blind: ultimate base *kuru* (like kira, the ultimate base of *kiraḍu*, old). Comp. Persian *kūr;* Kurd *kor;* Ossete *kurm,* blind (C.G.D.F.L. Pg.593).

[குல் → குரு(கருமை) → குருள் → குருடு.]

குருடு[2] *kuruḍu,* பெ.(n.) 1. காதின் வெளிப்புறத்துள்ள செவிள்; tragus. 2. ***குருட்டுப் பாவலி*** பார்க்க;see *kuruṭṭu-p-pāvali.*

[குல் (வளைவு) → குரு → குருள் → குருடு.]

குருத்தடை-த்தல் *kuruttaḍai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. நெல் முதலிய பயிர்கள் குருத்து விடாதிருத்தல்; to be stunted, as grain, putting forth no new leaves. 2. கதிர் பொதிநிரம்புதல்; to be big with sprouts (இ.வ.).

[குருத்து + அடை-.]

குருத்தம் *kuruttam,* பெ.(n.) வெள்ளியைப் போன்ற ஒரு மாழை (உலோகம்); a metal resembling silver (சா.அக.).

[குரு → குருத்தம்.]

குருத்தாமரை *kuru-t-tāmarai,* பெ.(n.) ஆகாசத் தாமரை; sky lotus (சா.அக.).

[குரு + தாமரை.]

குருத்தானம் *kuruttāṉam,* பெ.(n.) கோயில்களில் அருச்சனை செய்யும் குருக்கள் பணி;post of a priest. *"குருக்கள் வரந்தரும் பெருமாளுக்கு குருஸ்தானமாக" (தெ.கல்.தொ.12.கல்.222).*

[குரு + தானம். தானம் = இடம்.]

குருத்திருத்தல் *kuru-t-tiruttal,* பெ.(n.) வேர்க்குரு கொள்ளல்; breaking out of the prickly heat (சா.அக.).

[குருத்து + இருத்தல்.]

குருத்திலை *kuru-t-tilai,* பெ.(n.) பனை, தென்னை, ஈச்சை முதலியவற்றின் இளவோலை; the tender and unexpande leaves of palm trees such as palmyra, coconut, date etc. (சா.அக.).

[குருத்து + இலை.]

குருத்திறகு *kuruttiṟagu,* பெ.(n.) மெல்லிய உள்ளிறகு; soft feathers, down.

[குருத்து + இறகு.]

குருத்து *kuruttu,* பெ.(n.) 1. மரம் முதலியவற்றின் குருத்து; sprout, white tender leaves of a tree, shoots of grain and leguminous plants. *"குருத்திற் கரும்புதின்றற்றே" (நாலடி.211).* 2. காதுக் குருத்து; tender part of the internal ear, tympanum. 3. தந்தம், மூளை யிவற்றின் குருத்து; pith, as of elephant's tusk, brain matter. 4. வெண்மை (பிங்.); whiteness. 5. இளமை; tenderness.

[குல் (முளைத்தல்) → குரு → குருத்து.]

குருத்துக்கக்கு-தல் *kuruttu-k-kakku-,* 15 செ.கு.வி.(v.i.) 1. தவசக் குருத்துப் பிரிந்து அழிவுறுதல்; to part from the roots and perish, as tender shoots of grain by early flooding.

[குருத்து + கக்கு.]

குருத்துக்குழந்தை *kuruttu-k-kuḻandai,* பெ.(n.) அப்பொழுது பிறந்த குழந்தை; just born baby (சா.அக.).

[குருத்து + குழந்தை.]

குருத்துத்தாளி *kuruttu-t-tāḷi,* பெ.(n.) சிறுதாளி; hairy leaved creemy white bind weed (சா.அக.).

[குருத்து + தாளி.]

குருத்துப்பூச்சி *kuruttu-p-pūcci,* பெ.(n.) சோளப் பயிரை யழிக்கும் பூச்சிவகை; a pest that damages maize (இ.வ.).

[குருத்து + பூச்சி.]

குருத்துமணல் *kuruttu-maṇal,* பெ.(n.) பொடி மணல்; fine sand.

[குருத்து + மணல்.]

குருத்துவக்கறி *kuruttuva-k-kaṟi,* பெ.(n.) எளிதில் செரிமானம் ஆகாத புலால் அல்லது காய்; vegetable or animal food not easily digestible. 2. அதிகம் காற்றை உண்டு பண்ணும் மாவுப் பண்டம்; any substance in food promoting flatulency,starchy food (சா.அக.).

[குருத்துவம் + கறி.]

குருத்துவம் *kuruttuvam,* பெ.(n.) 1. குருவின் தன்மை; state of a guru, priesthood. 2. பெருமை; honour, nobility. *"குருத்துவமான மனத்தின்" (ஞானவா.சித்.3).* 3. உடலின் நிறை; heaviness of a body, gravity. 4. நன்றி; gratitude *"குருத்துவங் கெட்டவன்" (இ.வ.).*

[குரு + குருத்துவம்.]

குருத்துவாங்கு-தல் *kuruttu-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) குருத்து விடுதல்; to shoot forth ears. பயிர் குருத்து வாங்குகிறது (உ.வ.).

[குருத்து + வாங்கு-.]

குருத்துவிடு-தல் *kuruttu-viḍu-,* 5 செ.கு.வி. (v.t.) பனை முதலியவற்றில் புது வோலை கிளம்பல்; shooting of new leaves (சா.அக.).

[குருத்து + விடு-.]

குருத்துவேலன் *kuruttu-vēlaṉ,* பெ.(n.) முள்வேல்; thorn babool (சா.அக.).

[குருத்து + வேல் + அன்.]

குருத்தெலும்பு *kuruttelumbu,* பெ.(n.) இளவெலும்பு; cartilage.

[குருத்து + எலும்பு.]

குருத்தோலை *kuruttōlai,* பெ.(n.) பனை முதலியவற்றின் குருத்தாயுள்ள ஒலை; young, tender, unexpanded palm leaf.

ம. குருத்தோலா

[குருத்து + ஒலை.]

குருத்தோலை ஞாயிறு *kuruttōlai-ñāyiṟu,* பெ.(n.) ஞாயிறன்று கிறித்துநாதர் எருசலேம் நகர்க்குள் வெற்றி முழக்கத்துடன் நுழைந்ததைக் கொண்டாடும் கிறித்தவத் திருநாள்; Palm Sunday, the Sunday next before Easter, in commemoration of Christ's triumphal entry into Jerusalem (கிறித்.).

[குருத்தோலை + ஞாயிறு.]

குருத்தோலைப் பெருநாள் *kuruttōlai-p-perunāḷ,* பெ.(n.) ***குருத்தோலை ஞாயிறு*** பார்க்க; see *kuruttōlai-ñāyiṟu.*

[குருத்தோலை + பெருநாள்.]

குருதட்சிணை *kurutaṭciṇai,* பெ.(n.) ***குருக்காணிக்கை*** பார்க்க;see *kurukkāṇikkai.*

[குரு + காணிக்கை.]

குருதாளகம் *kuru-tāḷagam,* பெ.(n.) தாளகத்தைக் கொண்டு தயாரித்த குருமருந்து; a quintessence derived from orpiment by the process of calcination (சா.அக.).

மறுவ. தாளகக்குரு

[குரு + தாளகம்.]

குருதி *kurudi,* பெ.(n.) 1. அரத்தம் (திவா.); blood. 2. சிவப்பு ; red. *"குருதித் துகிலின் னுறையை" (சீவக.926).* 3. செவ்வாய் (திவா.); Mars. 4. மூளை; brain. ஒ.நோ.குருத்து

ம.குருதி

Aust. kruwe.

[குல் → குரு(சிவப்பு) → குருதி.]

குருதிக்காகிதம் *kuruti-k-kāgidam,* பெ.(n.) சருக்கரைக் கிழங்கு; ground sugar root (சா.அக.)

[குருதி + (காய்த்தம்) காயிதம் → காகிதம்.]

குருதிக்காந்தள் *kurudi-k-kāndaḷ,* பெ.(n.) ***செங்காந்தள்*** பார்க்க (*சீவக.1651,உரை*); malabar glory lily.

[குருதி + காந்தள்.]

குருதிக்குருகடம் *kuruti-k-kurugaḍam,* பெ.(n.) அரத்தத்திலுள்ள சிறு நுண் அணுத்துகள்; corpuscles in the blood (சா.அக.).

[குருதி + (குருகளம்) குருகடம்.]

குருதிக்குழி *kuruti-k-kuḻi,* பெ.(n.) அரத்தம் சொரியும் நோனித்துளை; the vagina of a woman serving as a channal for discharge of menstrual blood. 2. இருதயம்; heart containing blood (சா.அக.).

[குருதி + குழி.]

குருதிக்கூத்தன் *kurudi-k-kūttaṉ,* பெ.(n.) சிவப்புக் கூத்தன் குதம்பை; a red variety of கூத்தன் குதம்பை (சா.அக.).

[குருதி + கூத்தன்.]

குருதிசாலம் *kurudiśālam,* பெ.(n.) அரத்த உயிரணு; blood cell (சா.அக.).

[குருதி + சாலம்.]

குருதிசிந்தல் *kurudiśindal,* பெ.(n.) அரத்தம் சொரிதல்; shedding blood (சா.அக.).

[குருதி + சிந்தல்.]

குருதிப்பலி *kurudi-p-pali,* பெ.(n.) வீரன் தன் அரத்தத்தைக் கொற்றவைக்குக் கொடுக்கும் பலி (தொல்.பொருள். 59,உரை.); oblation in which a warrior makes an offering of his own blood to Durga.

[குருதி + பலி.]

குருதிப்புனல் *kurudi-p-puṉal,* அரத்தம்; blood. *"விழுந்து கொழுங்குருதிப் புனலென்று" (கலிங். புதுப்.156).*

ம.குருதிப்புனல்

[குருதி + புனல்.]

குருதிமாநக்கி *kurudi-mā-nakki,* பெ.(n.) அரத்தத்தை உறிஞ்சும் அட்டை; leech sucking blood (சா.அக.).

[குருதி + மா + நக்கி.]

குருதியூட்டு-தல் *kurudi-yūṭṭu-,* 15 செ.கு.வி.(v.i.) விலங்குகளை உயிர்ப்பலி கொடுத்தல்; lit, to feed with blood to offer animal sacrifice.

[குருதி + ஊட்டு.]

குருதிரோகம் *kurudi-rōgam,* பெ.(n.) அரத்தக் கதிப்பு, சோகை, அரத்த வேகம், அரத்தத்தைப் பற்றிய நோய்கள்; diseases relating to blood such as plethora (சா.அக.).

[குருதி + ரோகம்.]

குருதிவாரம் *kurudivāram,* பெ.(n.) செவ்வாய்க்கிழமை; Tuesday. *"புதியசீலை.......... குருதிவாரந் தனக்குக் கொஞ்ச நாளிற் கிழியும்" (அறப்.சத.61).*

[குருதி + வாரம். வாரம் = கிழமை.]

குருது[1] *kurudu,* பெ.(n.) தவசங்களைக் கொட்டி வைக்கும் குதிர்; receptacle for storing grain, granary.

[குதிர் → குருது.]

குருது[2] *kurudu,* பெ.(n.) நெய் (மூ.அ.); clarified butter, ghee.

*[குல் → குரு → குருது.]

குருதுபலம் *kurudu-palam,* பெ.(n.) மணப்பொருள்; Arabian costus (சா.அக.).

[குருது + பலம்.]

குருதோன்றல் *kuru-tōṉṟal,* பெ.(n.) அம்மை வார்த்தல்; appearance of pustules in small pox, chicken pox, measles etc., 2. குருவைக் கனவில் காணல்; appearance of a quru or spiritual teacher in the dream (சா.அக.).

[குரு + தோன்றல்.]

குருந்தக்கல்[1] *kurunda-k-kal,* பெ.(n.) **குருவிந்தக்கல்** பார்க்க;see *kuruvindakkal.*

[குருந்தம் + கல்.]

குருந்தக்கல்[2] *kurunta-k-kal,* பெ.(n.) குருந்தமரம்; a tree. 2. ஒரு வகை மாணிக்கம்; a kind of ruby. 3. குருவிந்தக் கல்; a variety of corundam net to diamond, distunguished for its extreme hardness. 4. வச்சிரக்கல்; diamond speat (சா.அக.).

[குருந்தம் + கல்.]

குருந்தகம் *kurundagam,* பெ.(n.) மயில்; pea-cock (சா.அக.).

[குருந்து → குருந்தகம்.]

குருந்தம்[1] *kurundam,* பெ.(n.) **குருந்தக்கல்** பார்க்க; see *kurunda-k-kal.*

[குருவிந்தக்கல் → குருந்தக்கல்.]

குருந்தம்[2] *kurundam,* பெ.(n.) **குருந்து**[2] பார்க்க; see *kurundu.* *"குருந்தமொன் றொசித்தா னொடுஞ் சென்று" (திவ். பெரியாழ். 4:4,7).*

[குருந்து → குருந்தம்.]

குருந்தம்பொடி *kurundam-podi,* பெ.(n.) குருந்தக் கற்பொடி; emery powder.

[குருந்தம் + பொடி.]

குருந்தான் *kurundāṉ,* பெ.(n.) காட்டெலுமிச்சை; wild lime tree (சா.அக.).

[குரு → குருந்தான்.]

குருந்து[1] *kurundu,* பெ.(n.) 1. வெண்குருத்து (பிங்.); white tender leaf, tender shoots. 2. குழந்தை; infant.

[குருத்து → குருந்து.]

குருந்து[2] *kurundu,* பெ.(n.) புனவெலுமிச்சை (பிங்.); wild lime. 2. காட்டெலுமிச்சை வகை; a species of wild lime. 3. ஒருவகைச் சிறுமரம்; a species of wild lime. 4. குருக்கத்தி (பிங்.); common delight of the woods.

[குரு → குருந்து.]

குருந்து[3] *kurundu,* பெ.(n.) **குருந்தக்கல்** பார்க்க; see *kurunda-k-kal.*

[குரு → குருந்து.]

குருந்து[4] *kurundu,* பெ.(n.) குருந்தமரம்; wild lime tree. இது பலவகைப்படும்; the following are the different kinds.

[குரு → குருந்து.]

வகைகள் : 1. செங்குருத்து 2. காட்டுக் குருந்து 3. மலைக் குருந்து 4. மாந்தக்குருந்து 5. மயிலடிக் குருந்து 6. பெருங் குருந்து 7. பேய்க் குருந்து 8. மூவிலைக் குருந்து (சா.அக.).

[குரு → குருந்து.]

குருந்துழாய் *kuruntuḷāi,* பெ.(n.) சிறுதுளசி; small leaved basil (சா.அக.).

[குரு → குரும் + துழாய்.]

குருந்தூதிகம் *kuruntūtigam,* பெ.(n.) புன்னை மரம்; Alexandrian laurel (சா.அக.).

[குரும் + துதிகம்.]

குருந்தை[1] *kurundai,* பெ.(n.) குறிஞ்சா மரம்; common delight of the woods (சா.அக.).

[குரு → குருந்து → குருந்தை.]

குருந்தை[2] *kurundai,* பெ.(n.) நாகமல்லி; broad-leaved jasmine.

[குரு → குருந்தை.]

குருநகாரிலம் *kuru-nagārilam,* பெ.(n.) விழிப்பு நிலை (சாக்கிரம்); walking state one of the stations of the soul (சா.அக.).

[குருநாகம் → குருநாகரிலம்.]

குருநகை *kuru-nagai,* பெ.(n.) புன்சிரிப்பு; smile. *"குருநகையி னந்தி மகிழ்கொள்ள" (தணிகைப்பு. நந்திப்பு.7).*

[குரு + நகை.]

குருநடைகொள்ளல் *kurunaḍaikoḷḷal,* பெ.(n.) 1. குருவழியைப் பின்பற்றுதல்; following the footsteps of a guru or spiritual teacher. 2. இரா உணவு முடிந்தவுடன், உறங்குவதற்கு முன் சிறுநடையாக 100 அடியாவது உலாவுதல்; walking about a shor distance of at least 100 ft. soon after night meals and just before retiring to bed (சா.அக.).

[குரு + நடை + கொள்ளல்.]

குருநமச்சிவாயர் *kuru-namaccivāyar,* பெ.(n.) 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்துவரும் அண்ணா மலை வெண்பாவை இயற்றியவருமாகிய ஒரு துறவி; a saint and poet, the author of Annamalai venba who lived in16th century.

[குரு + நமச்சிவாயர்.]

குருநாகம் *kuru-nāgam,* பெ.(n.) நாகத்தினால் செய்த குருபற்பம்; the highly concentrated extract of zinc. 2. நாகப்பாம்பிலுயர்ந்தது; king of cobras (சா.அக.).

[குரு + நாகம்.]

குருநாடி *kuru-nāḍi,* பெ.(n.) 1. நாடி கொண்டு நோயியல்பு அறியும் வகைகளை உணர்த்தும் ஒரு மருத்துவநூல்; a treatise dealing with the dragnosis of disease by feeling the pulse. 2. தேவ குருவின் அருளால் இயற்றப் பெற்றதாகக் கூறும் ஆரூட நூல்; a treatise on augury believed to be inspired by Brhaspathi.

[குரு + நாடி.]

குருநாடு *kuru-nādu,* பெ.(n.) குருவின் கொடி வழியினர் ஆண்ட நாடு; the country of the Kurus.

[குரு + நாடு.]

குருநாத்தகடு *kurunā-t-tagaḍu,* பெ.(n.) ஒளியுள்ள ஒருவகை மெல்லிய வண்ணத் தகடு; foliated tinsel.

[குறு + நாகம் + தகடு.]

குருநாதன் *kuru-nādan,* பெ.(n.) 1. பேராசான் (பரமகுரு); exalted guru, great master . 2. தம் தந்தையாகிய சிவபெருமானுக்கு ஓம் என்னும் எழுத்தின் தன்மையை ஒருமுறை உணர்த்திய முருகக்கடவுள்; Skanda, as having once intiated his father šiva into the mystic explanation of (pranavam) 'om'. *"முகமாறுடைக் குருநாதன்" (கந்தரலங்.71).*

*[குரு + நாதன்.]

குருநாப்பட்டை *kuru-nā-p-paṭṭai,* பெ.(n.) ***குருநாத்தககடு*** பார்க்க; see *kuru-nā-ttagaḍu*

[குறுமை + நாகம் + பட்டை.]

குருநாள் *kuru-nāḷ,* பெ.(n.) அறிவன் கிழமை (வியாழக்கிழமை); Thursday as Jupiter's day (தேவகுருவுக்குரியது). 2. ***பூசம்*** (பிங்.) பார்க்க; the 8th *naksatra.*

[குரு + நாள்.]

குருநிந்தை *kuru-nindai,* பெ.(n.) ஐம்பெரும் கரிசு (பாதகம்) களுள் ஒன்றாகிய குருவைப் பழித்தல்; dissrespect towards or speaking ill of, one's guru. one of *aimperum-pātagam.*

[குரு + நிந்தை.]

குருநிலம் *kuru-nilam,* பெ.(n.) குருகொடிவழியினர் நாடு; country of the Kurus. *"குருநிலத்திற் பாதி யினிக் கொடாதிருத்தால்" (பாரத. கிருட்டிண.7).*

[குரு + நிலம்.]

குருநூல் *kuru-nūl,* பெ.(n.) முதன்மையான நூல்; original work. 2. மேன்மையான நூல்; a reputed work. 3. குரு மருந்து முறைகளைப் பற்றிக் கூறும் மருத்துவநூல்; a medical work on the principles and preparation of quintessence salts (சா.அக.).

[குரு + நூல்.]

குருநெய்ப்பு கொள்-ளல் *kuru-neyppu-koḷ-,* செ.கு.வி.(v.i.) சிறுசிரங்கு சீழ் கொள்ளல்; supperation of pustules. 2. அம்மைப்பால் கொள்ளல்; pustules maturing in to small-pox. (சா.அக.).

[குரு + நெய்ப்பு + கொள்ளல்.]

குருநோய் *kuru-nōy,* பெ.(n.) அம்மை முதலிய கொப்புளங் காணும் நோய் (சிலப்.உரைபெறு.1); eruptive disease, as small pox.

[குரு + நோய்.]

குருப்பட்டம் *kuru-p-pattam,* பெ.(n.) கிறித்தவ குருவுக்குக் கொடுத்தற்குரிய பட்டம்; title of an ordained Christian minister (கிறித்.).

[குரு + பட்டம்.]

குருப்பட்டுக்கறுப்பு *kuru-paṭṭu-k-kaṟuppu,* பெ.(n.) கல்லாடத்தில் சொல்லியுள்ள ஒரு கறுப்புக் குருமருந்து; a black universal medicine described in a Tamil medical treatise known as "Kallādam". 2. பட்டுக் கொளுத்திய சாம்பல்; ashes of burnt silk (சா.அக.).

[குரு = மருந்து. குரு + பட்டு + கறுப்பு. பட்டுத் துணியைக் கொளுத்திய சாம்பல், சாம்பல் நிறமாயிருத்தலால் பட்டு கறுப்பு என்று வந்தது.]

குருப்பி-த்தல் *kuruppi-,* 7 செ.கு.வி.(v.i.) பருவுண்டாதல்; to break out, as pimples.

ம. குருப்பு

[குரு → குருப்பி.]

குருப்பியம் *kuruppiyam,* பெ.(n.) துத்தநாகம்; zinc (சா.அக.).

[குரு → குருப்பியம்.]

குருப்பிரசாதம் *kuru-p-prasādam,* பெ.(n.) 1. குருவின் அருள்; favour, grace, blessing of the guru. 2. குருவுண்ட உணவின் எச்சம்; leavings of a guru's food.

[குரு + பிரசாதம். குருவருள் பார்க்க; see kuru-v-aruḷ.]

குருப்பு *kuruppu,* பெ.(n.) பரு; pimples, pustule.

தெ. குருப்பு.

[குரு → குருப்பு.]

குருப்புகை *kuru-p-pugai,* பெ.(n.) நறுமணப்புகை; a very fragrants smoke (சா.அக.).

[குரு + புகை.]

குருப்பூச்சி *kuru-p-pūcci,* பெ.(n.) புள்ளியொடு கூடிய குளவி வகை; a kind of spotted wasp (வின்.).

[குரு + பூச்சி.]

குருபக்குவம் *kuru-pakkuvam,* பெ.(n.) சிறுதும்பி அல்லது சிறுதும்பை; small laucas. It is so called from its use in calcination of metals (சா.அக.).

[குரு + பக்குவம்.]

குருபடாதி *kurupaḍādi,* பெ.(n.) புனுகு; civet (சா.அக.).

[குரு + படாதி.]

குருபண்ணல் *kuru-paṇṇal,* பெ.(n.) பொடி செய்தல்; powdering. 2. குருமுடித்தல்; the art of finding or preparing a universal remedy for curing all ailments (சா.அக.).

[குரு + பண்ணல்.]

குருபத்தி *kuru-patti,* பெ.(n.) குருவினிடம் கொள்ளும் அன்பு; reverence towards guru.

[குரு + பத்தி. வற்று – பத்தி.]

குருபத்திரம் *kuru-pattiram,* பெ.(n.) 1. துத்தநாகம்; zinc. 2. புளியமரம்; tamarind tree. 3. சிறிய இலை; small leaf. 4. மேன்மையான இரும்பு அதாவது காந்தம்; magnet (சா.அக.).

[குரு + பத்திரம்.]

குருபதம் *kuru-padam,* பெ.(n.) பூநீறு; the efflorescent salt gathered from the soil of fuller's earth. 2. ஐந்திலை நொச்சி (சா.அக.); five lead chaste tree.

[குரு + பதம்.]

குருபரம்பரை *kuru parambarai,* பெ.(n.) 1. (ஆசாரிய பரம்பரை) ஆசிரியப் பரம்பரை; regular succession of gurus. 2. 'ஆழ்வாராசாரியர்களின்' வரலாறு கூறும் நூல்; a hagiology of Alvārs and Acharyas.

[குரு + பரம்பரை.]

குருபரவுணி *kuruparavuṇi,* பெ.(n.) காட்டா மணக்கு; croton plant (சா.அக.).

[குரு + பரல் + (உளி) உணி. சிவந்த வித்து உடையது.]

குருபரன் *kurubaraṉ,* பெ.(n.) முருகன் குருவிற் கெல்லாம் சிறந்த குரு; great, supreme guru. *"மெய்த்தவ நிலைமைத் தாய குருபரன்" (இரகு. இந்துமதி.87).*

[குரு + பரன்.]

குருபற்பம் *kurubaṟpam,* பெ.(n.) அனைத்து வகை மருந்துகள் செய்யப் பயன்படுத்தும் மருத்துவ முப்பு; in medicine quintessense of the three salt ingredients for preparing all kinds of medicines. 2. எல்லா நோய்களையும் குணப்படுத்தும் மருந்து; all healing drugs. 3. வாதமுப்பு; a universal medicine for transmuting lesser metals into gold (சா.அக.).

[குரு + பற்பம்.]

குருபன்னி *kuru-panni,* பெ.(n.) குருவின் மனைவி; wife of a guru.

[குரு + (பத்தினி) பன்னி. Skt. patni (மனைவி.).]

குருபாகம் *kuru-pāgam,* பெ.(n.) குருமூலமாய்க் கற்பிக்கப்பட்ட முறை; the method or process inspired by a guru (teacher). 2. குருமருந்தை முடிக்கும் முறை; the method of preparing an all healing drug (சா.அக.).

[குரு + பாகம்.]

குருபாததாசர் *kuru-pāda-dāšar,* பெ.(n.) குமரேச சதகம் இயற்றிய ஆசிரியர்; the author of Kumarēša-catagam.

[குறு + பாதம் + தாசர்.]

குருபாரம்பரியம் *kuru-pāramparíyam,* பெ.(n) ஆசாரிய பரம்பரை; regular succession of gurus.

[குரு + பாரம்பரியம்.]

குருபீடம் *kuru-pīdam,* பெ.(n.) குருவினது இடம்; seat or office of a guru.

[குரு + பீடம். பீடு = பெருமை, பீடு – பீடம்.]

குருபுறப்படல் *kuru-purappadal,* பெ.(n.) குரு வெழும்பல்; the breaking out of pimples, pustules etc upon the skin as rash, vesicles etc. accompanying a disease. 2. அம்மை கொள்ளல்; being attacked with small-pox (சா.அக.).

[குரு + புறப்படல்.]

குருபூசை *kuru-pūšai,* பெ.(n.) மறைந்த குருவின் இறந்தநாளில் ஆண்டுதோறும் சைவ மடங்களில், சிவனடியார்க்குச் செய்யும் உணவளிப்புடன், அக் குருவிற்குச் செய்யும் சிறு வழிபாடு; annual worship of deceased guru on the day of his death, often accompanied with feeding of devotees, chiefly in šaiva mutts.

[குரு + பூசை.]

குரும்பட்டி *kurumpatti,* பெ.(n.) தென்னை, பனைகளின் குரும்பை; immature coconuts or palmyra nuts.

[குரும்பை → குரும்பட்டி.]

குரும்பவரை *kurumbavarai,* பெ.(n.) வெள்ளை யவரை; white bean (சா.அக.).

[குரும்பு + அவரை.]

குரும்பவன் *kurumbavan,* பெ.(n.) நிலப்பனை; ground palm (சா.அக.).

[குரும் → குரும்பு → குரும்பவன்.]

குரும்பி[1] *kurumbi,* பெ.(n.) புற்றாஞ்சோறு; comb of white ant's nest. *"பாம்புறை புற்றிற் குரும்பி யேய்க்கும்" (பெரும்பாண்.277).*

[குரு → குரும்பு → குரும்பி.]

குரும்பி[2] *kurumbi,* பெ.(n.) தென்னம் பூவினின்றும் காய்க்கும் தேங்காயின் ஆரம்பநிலை (உழ.நெ.க. அக.); the stage of fruit buds of coconut.

[குரு → குரும்பி.]

குரும்பிகம் *kurumbigam,* பெ.(n.) ஒரு பூடு; stooing toombay flower plant. (சா.அக.).

[குரும்பி → குரும்பிகம்.]

குரும்பை[1] *kurumbai,* பெ.(n.) 1. தெங்கு, பனை களின் இளங்காய்; immature coconuts or palmyra nuts; fruit buds. *"இரும்பனையின் குரும்பி நீரும்" (புறநா.24,2).* 2. இளநீர்; tender coconut. *"குன்றுங் குரும்பையும் வெறுத்தநின் னிளமுலை" (கல்லா.52).* 3. குரும்பி (புற்றாஞ்சோறு); comb of white ants nest. 4. பெருங்குரும்பை (தைலவ. தைல.24); bow-string hemp.

[குரு → குரும்பை.]

குரும்பை *kurumbai,* பெ.(n.) காதினுள் திரளும் குறும்பி; ear-wax (இ.வ.).

[குரு → குரும்பை.]

குருமகன் *kuru-magan*, பெ.(n.) 1. குரு; priest. *"எங்குருமக னிருந்தோ னவன்பால்" (மணி.16;64).* 2. குருவின் மகன்; priest's son.

[குரு + மகன்.]

குருமணல் *kuru-manal*, பெ.(n.) 1. வெள்ளி மணல்; white sand or silver ore. 2. நுண்ணிய மணல்; fine sand (சா.அக.).

[குரு + மணல்.]

குருமணி *kuru-mani*, பெ.(n.) குருவிற் சிறந்த குரு; exalted guru, highly esteemed guru, as a gem among gurus. *"குருமணி தன்றாள்வாழ்க" (திருவாச.1,3).*

[குரு + மணி.]

குருமம் *kurumam*, பெ.(n.) மலையிலுப்பை; oval mohwah. 2. காட்டிலுப்பை; wild mohwah (சா.அக.).

[குரு → குருமம்.]

குருமருந்து *kuru-marundu*, பெ.(n.) மருத்துவத்தில் எல்லாவகை நோய்களைக் கண்டிக்கவும், உடம்பைப் பொன் போலாக்கவும், வாதத்தில் இரும்பு, செம்பு முதலிய இழிந்த உலோகங்களைப் பொன்னாக மாற்றவும் சக்தி வாய்ந்த முதன்மையான மருந்து; a universal medicine of high potent, which cures, not only all diseases of the systems, but also transmuting inferior metals such as iron, copper etc. into gold (சா.அக.).

[குரு + மருந்து.]

குருமலை *kuru-malai*, பெ.(n.) சாமிமலை (கழ.தமி.அக.); Swamimalai.

[குரு + மலை.]

குருமன் *kuruman*, பெ.(n.) ஒருசார் விலங்கு பறவைகளின் இளமைப்பெயர்; the young of certain animals and birds. குட்டிகுருமன் (உ.வ.).

[குரு → குருமன்.]

குருமாத்திரை *kuru-māttirai*, பெ.(n.) நோய்க்காகக் குழந்தைகளுக்கு முலைப்பாலில் இழைத்துக் கொடுக்கும் மான்மணத்தி (கத்தூரி) மாத்திரை; musk pills macerated in women's breast milk and given for indigestion to children. 2. உயர்ந்த மாத்திரை; superior pill. 3. சிறுமாத்திரை; small pill (சா.அக.).

[குரு + மாத்திரை.]

குருமான் *kurumān*, பெ.(n.) **குருமன்** பார்க்க; see *kuruman*.

[குல் → குரு → குருமான்.]

குருமி-த்தல் *kurumi-*, 4 செ.கு.வி.(v.i.) பேரொலி செய்தல்; to make a crash, as a ship dashing against a rock. *"குருமித்து மதலை பொங்கி" (சீவக.521).*

[குல் → குரு → குருமி.]

குருமிளகு *kurumilagu*, பெ.(n.) நல்ல மிளகு; superior pepper.

[குரு[5] + மிளகு.]

குருமுகறன் *kuru-mukaran*, பெ.(n.) குருமுகன்; one having face pilted with small pox (சா.அக.).

[குரு + முகறன்.]

குருமுகறன் *kuru-mukaran*, பெ.(n.) **குருமுஞ்சி** பார்க்க; see *kurumūñci*.

[குரு (வேர்க்குரு) + முகறன்.]

குருமுடி-த்தல் *kuru-mudi-*, 1 செ.கு.வி.(v.i.) மாழைகளை (உலோகம்) நீற்றுதற்குதவும் மருந்து செய்தல் (யாழ்.அக.); to make a prepara tion helpful for calcining metals.

[குரு + முடி-.]

குருமுத்து *kuru-muttu*, பெ.(n.) சிவந்த புள்ளி களுடன் விளைந்த முத்து; pearl with red spots.

[குரு + முத்து.]

முத்திற்கமைந்த குற்றங்களுள் இது ஒன்றாகும் (கல்.க.சொ.அமு).

குருமுப்பு *kuru-muppu,* பெ.(n.) பூநீறு முப்பு; an alchamical preparation called muppu of ancient Siddhars supposed to have been in practice in the Dravidian period by which metals were transmitted into gold, all diseases were redically cured, and life prolonged by rejuvenation (சா.அக.).

[குரு + முப்பு.]

குருமுனி *kurumuṉi,* பெ.(n.) ***அகத்தியர்*** பார்க்க (சா.அக.); see *agattiyar.*

[குரு + முனி.]

குருமுனியழகி *kuru-muṉi-y-aḻagi,* பெ.(n.) ***ஊர்க்கள்ளி*** பார்க்க (சா.அக.); see *ūrkkaḷḷi.*

[குரு + முனி + அழகு.]

குருமூஞ்சி *kuru-mūñji,* பெ.(n.) அம்மை வடுவுள்ள முகத்தவன்–ள்; one having face pitted with small pox.

மறுவ. குருமுகன், குருமுகறன்

[குரு + மூஞ்சி.]

குருமூர்த்தம் *kuru-mūrttam,* பெ.(n.) குருவாக ஒத வந்த கடவுட் திருமேனி; (தனிப்பா.II.246II,581); manifestation of god in the form of a guru to his devotees.

*[குரு + மூர்த்தம். **குருத்திருமேனி** பார்க்க; kuru-t-tirumēṉi]*

குருமூர்த்தி *kuru-mūrtti,* பெ.(n.) 1. குரு; guru. 2. தென்முகக்கடவுள் பார்க்க; see *tenmuga-k-kaḍavuḷ.*

[குரு + மூர்த்தி.]

குருமூலி[1] *kuru-mūli,* பெ.(n.) காற்றுப்பிடிப்பு மருத்துவம் (ஓகம்), காயகற்பம் இவற்றிற்கு உதவும் தென்பொதிகையிலுள்ள மூலிகைகள். இவற்றை உட்கொள்ள ஆணவம் அடங்கி, ஞானப்பாலூறும். இது மானிடர்க்குக் கிட்டாது; rare drugs useful in yoga rejuvenations. They kill pride and inprove wisdom, they are not procurable for ordinary human beings (சா.அக.).

[குரு + மூலி.]

குருமூலி[2] *kuru-mūli,* பெ.(n.) கஞ்சா; gunjah. 2. பொற்றலை கையாந்தகரை; mary - gold verbesena (சா.அக.).

[குரு + மூலி (ஆதி).]

குருமெழுகு *kuru-meḻugu,* பெ.(n.) எலியிலிருந்து செய்யப்படும் ஒரு நஞ்சு மெழுகு; a wax like medicine prepared from rats bone.

[குரு + மெழுகு.]

குருமை[1] *kurumai,* பெ.(n.) நிறம் (தொல்.சொல்.303); lustre, brightness.

[குரு → குருமை.]

குருமை[2] *kurumai,* பெ.(n.) பெருமை; dignity, superiority. *"குருமை யெய்திய குணநிலை" (சீவக.2748).*

[குரு → குருமை.]

குருமை[2] *kurumai,* பெ.(n.) 1. நிறம்; lustre. 2. சிறந்த மந்திரத்திற்குப் பயன்படும் மை; a superior kind of black paint used in magic. 3. பெருமை; greatness (சா.அக.).

[குரு + மை.]

குருலிங்கம் *kuru-liṅgam,* பெ.(n.) ஆறுவகை சிவத்திருமேனிகளுள் ஒன்று (சித்.சிகா.201); a form of Siva, one of satvita-linkam.

[குரு+ இலிங்கம்.]

குருவகம் *kuru-v-agam,* பெ.(n.) வெண்சிவப்பு (யாழ்.அக.); pink.

[குரு → குருவகம்.]

குருவங்கம் *kuru-vaṅgam,* பெ.(n.) வங்கக்குரு; lead quintessence. 2. வெள்ளீயம்; tin (சா.அக.).

[குரு + வங்கம்.]

குருவடிம்பம் *kuru-vaḍimbam,* பெ.(n.) நெல்லிப் பருப்பு; the kernel of Indian gooseberry (சா.அக.).

[குரு + வடிம்பு + அம்.]

குருவண்டு[1] *kuru-vaṇḍu,* பெ.(n.) முப்புக்குரு; a secret name for philospher's powder (சா.அக.).

[குரு + வண்டு.]

குருவண்டு[2] *kuru-vaṇḍu,* பெ.(n.) புள்ளியுள்ள குளவி வகை; a kind of spotted wasp. வகைகள் : 1. அறுபுள்ளிவண்டு – beetle or wasp with six spot on its back. 2. கொளுஞ்சியடி வண்டு – beetle found under wild indigo tree. 3. குழிவண்டு – beetle found under the earth. 4. நீருக்குள் சுழலும் வண்டு – beetle found whirling in water. 5. எரி வண்டு – teline fly or blistering beetle. 6. துவரைச் செடிவண்டு – beetle found in the dholl plant. 7. கழுதை வண்டு – another variety of beetle (சா.அக.).

[குரு + வண்டு.]

குருவண்டுப்பு *kuru-vaṇḍuppu,* பெ.(n.) ஒரு வகைக் கல்லுப்பு; a kind of sea-salt. 2. முப்புக்குரு. (சா.அக.).

[குரு + வண்டு + உப்பு.]

குருவமண் *kuruva-maṉ,* பெ.(n.) இளகிய மண்; soft earth (கூவநூல்.) (கட்.தொ.வரி).

[குரு → குருவம் + மண்.]

குருவரகு *kuru-varagu,* பெ.(n.) வரகுவகை (விவசா.நூன்மு.4.); a kind of ragi.

[குரு + வரகு.]

குருவரசன் *kuru-v-arašaṉ,* பெ.(n.) மயில்துத்தம்; blue vitriol, copper sulphate (சா.அக.).

[குரு + அரசன்.]

குருவரன் *kuruvaraṉ,* பெ.(n.) குருபரன்; *kurubaran.* *"குருவரனிடத் துரைத்தான்" (திருவாலவா.1:2).*

[குரு + பரன் – குருபரன் → குருவரன் (கொ.வ.).]

குருவரிக்கற்றாழை *kuru-vari-k-kaṟṟāḻai,* பெ.(n.) வரிக்கற்றாழை; striped aloe, so called probably for its usefulness in calcination (சா.அக.).

[குரு + வரி + கற்றாழை.]

குருவருடம் *kuru-varuḍam,* பெ.(n.) ஒன்பது வருடங்களுள் ஒன்று; one of nava-varudam.

[குரு + வருடம்.]

குருவன் *kuruvaṉ,* பெ.(n.) குரு; priest. *"வானோர் குருவனே போற்றி" (திருவாச.5:68).*

[குரு → குருவன்.]

குருவாக்கம் *kuru-v-ākkam,* பெ.(n.) 1.குரு மருந்தைக் கொண்டு முடித்த ஊதை (வாத)ப் பொன்; gold obtained by employing the universal powder for purposes of transmutations. 2. மாற்று உயர்ந்த பொன்; alchemical gold beyond the standared test. This concentrated gold when added to silver in fusion can easily convert the whole mass into gold. 3. தங்கச்செம்பு; concentrated gold (சா.அக.).

[குரு + ஆக்கம்.]

குருவாக்காலி *kuruvākkāli,* பெ.(n.) பூனைக்காலி; cowhage plant (சா.அக.).

[குருவாக்கம் + காலி.]

குருவாக்கி *kuru-v-ākki,* பெ.(n.) பெரிய அம்மை; a kind of small-pox in which the scabs fall off.

[குரு + ஆக்கி.]

குருவாக்கு *kuru-vākku,* பெ.(n.) குருமொழி; word or command of guru.

[குரு + வாக்கு.]

குருவாயரி-தல் *kuruvāyari,* 2 செ.குன்றாவி.(v.t.) பொடியாகக் கத்தியால் துணித்தல்; cutting into slices with a knife (சா.அக.).

[குரு + ஆய் + அரிதல்.]

குருவார்-த்தல் *kuruvār-,* 4 செ.கு.வி.(v.i.) அம்மை வார்த்தல்; getting on, being attakked with small-pox (சா.அக.).

[குரு + வார்.]

குருவாரம் *kuru-vāram,* பெ.(n.) வியாழக்கிழமை; Thursday, as a Jupiter's day.

[குரு + வாரம்.]

குருவால் *kuru-v-āl,* பெ.(n.) இத்தி; white fig.

[குரு + ஆல்.]

குருவாளி *kuru-v-āḷi,* பெ.(n.) குருமருந்தைச் செய்து முடிப்போன்; one who is skilled in preparing an all healing drug or panacea (சா.அக.).

[குரு + ஆளி.]

குருவி[1] *kuruvi,* பெ.(n.) பறவை வகை; small bird. *"குருவிசேர் வரை" (சீவக. 2237).*

[குல் → குரு → குருவி.]

வகைகள்: 1. தூக்கணாங் குருவி 2. Indian tailor. கருங்குருவி - black sparrow. 3. சிட்டுக்குருவி - small sparrow. 4. ஊர்க்குருவி - village sparrow. 5. அடைக்கலாங் குருவி - house sparrow. 6. மலைக் குருவி - hill sparrow. 7. மஞ்சட் குருவி - weaver bird. 8. கள்ளிக் குருவி - white headed balbler. 9. பீக்குருவி - dung bird. 10. தாசிரிக் குருவி - southern scumitar bird. 11. தச்சன் குருவி - carpenter bird 12. வானம்பாடிக்குருவி - indian skylarh. 13. மைனாக்குருவி - indian starling. 14. கட்டலாங் குருவி - bee eater. 15. காவல் குருவி - Indian hoopoe or hood hood. 16. சீமைக் காவல் குருவி - European hoopoe. 17. சூரைக் குருவி - cholum bird. 18. விசிறிக்குருவி - white browed fan tail. 19. மீன்கொத்திக் குருவி - king fisher. 20. தவிட்டுக் குருவி - sparrow of the colour of bran. 21. வாலாட்டிக் குருவி - wag tail bird (சா.அக.).

குருவி[2] *kuruvi,* பெ.(n.) 1. மூலநாள் (அக.நி.). ஒ.நோ. குருகு ; the 19th nakšatra. 2. ***குன்றி*** (மலை.) பார்க்க; see *kunṛi*

[குரு (சிவப்பு) → குருவி.]

குருவிக்கண் *kuruvi-k-kaṇ,* பெ.(n.) 1. சிறுகண்; small eyes. 2. சிறுதுளை; small hole, eyelet.

[குருவி + கண்.]

குருவிக்கல் *kuruvi-k-kal,* பெ.(n.) ஒருவகைச் செம்மண்; red soil (இ.வ.).

[குருவி + கல்.]

குருவிக்கார் *kuruvi-k-kār,* பெ.(n.) கார்நெல்வகை; a small kind of black paddy (w.).

[குருவி + கார்.]

குருவிக்காரன் *kuruvi-k-kāraṉ,* பெ.(n.) 1. குருவி பிடிப்போன்; bird-catcher, bird fancier. 2. மறைந் திருந்து குருவிகளைப் போல ஒலி செய்து குருவிபிடிக்கும் ஒருவகைக் குடியினன்; a class of bird-catcher, who docoy birds by concealing themselves and successfully imitating their cries.

[குருவி + காரன்.]

குருவிக்குடல் *kuruvi-k-kuḍal,* பெ.(n.) அடிக்கடி உண்டாகும் உணவு விருப்பம்; frequent craving for food as the result of eating too little at a time (w.).

[குருவி + குடல்.]

குருவிக்கூடு *kuruvi-k-kūḍu,* பெ.(n.) குருவிகட்டும் கூடு; small bird's nest.

[குருவி + கூடு.]

குருவி வகைகள்



அடைக்கலாங்குருவி



மைனாக் குருவி

தையற்சிட்டுக் குருவி

வானம்பாடிக் குருவி



மீன் கொத்திக் குருவி



வாலாட்டிக் குருவி

விசிறிக் குருவி

சிட்டுக் குருவி

குருவிக்கொழுந்து *kuruvi-k-kolundu,* பெ.(n.) குன்றிமணி இலைக்கொழுந்து; tender leaves of crab's eye plant (சா.அக.).

[குருவி + கொழுந்து.]

குருவிகம் *kuruvigam,* பெ.(n.) குன்றிமணி, குன்றிக்கொட்டை; the legume of this creeper consists of 4-6 seeds, which are roundish and polished (சா.அக.).

[குறு → குரு → குருவிகம்.]

குருவிச்சி[1] *kuruvicci,* பெ.(n.) புல்லுருவி; a parasitic plant. 2. பேராமுட்டி; fragrant sticky mallow.

மறுவ. குருவிச்சை

[குரு (விச்சக) → விச்சி.]

குருவிச்சி வகைகள் 1. முள்ளுக்குருவிச்சி; prickly ivory wood. 2. பட்டைக்குருவிரசு அல்லது காட்டு வெற்றிலை; rough ivory. 3. வெள்ளைக் குருவிச்சி; white or gray ivory woods. 4. ஈட்டிமுனைக் குருவிச்சி; lance leaved ivory wood. 5. அண்டக் குருவிச்சி; oval leaved ivory wood. 6. வானிலைக் குருவிச்சி; saw leaved ivory wood (சா.அக.).

[குரு → குருவித்தி → குருவிச்சி.]

குருவிச்சி[2] *kuruvicci,* பெ.(n.) ***குருவிச்சை*** பார்க்க; see *kuruviccai.*

[குருவிச்சை → குருவிச்சி.]

குருவிச்சை *kuru-viccai,* பெ.(n.) 1. குருவிஞ்சி; 2. ஒருவகை மரம்; ovate-leaved ivory wood. 3. புல்லுருவி; a semi-parasite.

[குரு → குருவிச்சை.]

குருவிஞ்சி *kuruviñji,* பெ.(n.) 1. பேராமுட்டி; pink-tinged white sticky mallow. 2. ***குருவிப்பூண்டு*** பார்க்க; see *kuruvi-pōṇḍu.*

[குரு + இஞ்சி.]

குருவிட்டம் *kuruviṭṭam,* பெ.(n.) சுண்டைக்காய்; unarmed night shade (சா.அக.).

[குரு → குருவித்தம் → குருவிட்டம்.]

குருவித்தம் *kuru-vittam,* பெ.(n.) ஒரு பலம் பொன்; gold weighing one palam (சா.அக.).

[குரு + வித்தம்.]

குருவித்தலை *kuruvi-t-talai,* பெ.(n.) 1. சிறிய தலை; small head. 2. வில்லாளிகட்குப் பாதுகாவலா யமையும் ஞாயில் என்னும் மதிலுறுப்பு (சிலப்.15:217, உரை); inner mound of a fortification, as a protection for bowmen.

[குருவி + தலை.]

குருவித்தலைப்பாக்கு *kuruvi-t-talai-p-pākku,* பெ.(n.) பாக்கு வகை; a kind of arecanut.

[குருவி + தலை + பாக்கு.]

குருவித்தலைப்பாகல் *kuruvi-t-talai-p-pāgal,* பெ.(n.) மிதிபாகல்; small balsam pear.

[குருவி + தலை + பாகல்.]

குருவித்தலைப்பாகை *kuruvi-t-talai-p-pāgai,* பெ.(n.) சிறிய தலைக்குட்டை; small turban.

[குருவி + தலை + பாகை.]

குருவித்தலையன் *kuruvi-t-talaiyaṉ,* பெ.(n.) பேதை; an idiot having a very small head. (சா.அக.).

[குருவி + தலையன்.]

குருவித்திருக்கை *kuruvi-t-tirukkai,* பெ.(n.) கடல்மீன்வகை; ray, greenish, brown, disk about twice as wide as long, tail three times as long as disk.

[குருவி + திருக்கை.]

குருவித்தேங்காய் *kuruvi-t-teṅgāy,* பெ.(n.) 1. சிறு தேங்காய்; small coconut. 2. ஒருவகைமரம்; a kind of tree.

[குருவி + தேங்காய்.]

குருவிதம் *kuruvitam,* பெ.(n.) பெருமுத்தக் காசு, பெருங்கோரைக் கிழங்கு; a big variety of *kōray* root (சா.அக.).

[குரு → குருவிதம்.]

குருவிந்தக்கல் *kuruvinda-k-kal,* பெ.(n.) 1. குருவிந்தம்; ruby. 2. சாளைக்கல் செய்வதற்குதவும் ஒருவகைக்கல்; grey flint, emery. 3. காவிக்கல்; red ochre. *"இரத்தின மறியாதா னொருவன் குருவிந்தக் கல்லோ டொக்கும் இது என்றால்" (ஈடு.3:1,2).*

[குருவிந்தம் + கல்.]

குருவிந்தகம் *kuruvindagam,* பெ.(n.) காட்டு மொச்சை; a wild variety of bean (சா.அக.).

[குருவிந்தம் → குருவிந்தகம்.]

குருவிந்தகன் *kuruvindagaṉ,* பெ.(n.) கோரைக் கிழங்கு; *kōray* root (சா.அக.).

[குருவிந்தம் → குருவிந்தகன்.]

குருவிந்தம் *kuruvindam,* பெ.(n.) 1. தரக்குறைவான மாணிக்க வகை (சிலப்.14:186,உரை); inferior kind of ruby. 2. குன்றி; crab's eye. 3. வாற்கோதுமை மணி; a corn of barley. 4. சாதிலிங்கம்; vermilion. 5. முத்தக்காசு; straight sedge.

[குரு → குருவி → குருவிந்தம்.]

குருவிந்துநாதம் *kuru-vintu-nādam,* பெ.(n.) மூன்று மாதத்தைய கருப்பிண்டக் கரு; the essence extracted from a three month's old foetus (சா.அக.).

[குரு + விந்து + நாதம்.]

குருவிப்பசி *kuruvi-p-paśi,* பெ.(n.) சிறுகச் சிறுக சாப்பிடுவதால் அதிகம் உண்டாகும் பசி; frequent experience of hunger due to eating a very small quantity (சா.அக.).

[குருவி + பசி.]

குருவிப்பாக்கு *kuruvi-p-pākku,* பெ.(n.) ***குருவித்தலைப் பாக்கு*** பார்க்க; see *kuruvittalai-p-pākku.*

[குருவி + பாக்கு.]

குருவிப்பாகல் *kuruvi-p-pāgal,* பெ.(n.) ***குருவித் தலைப்பாகல்*** பார்க்க; see *kuruvittalai-p-pāgal.*

[குருவித்தலை → குருவி + பாகல்.]

குருவிப்பூண்டு *kuruvippūṇḍu,* பெ.(n.) சிற்றாமுட்டி; white small flowered rose mallow (சா.அக.).

[குருவி + பூண்டு.]

குருவிப்பேத்தை *kuruvi-p-pēttai,* பெ.(n.) கடல் மீன்வகை; a sea-fish, greenish, attaining 1 ft. in length.

[குருவி + பேத்தை.]

குருவிபோகம் *kuruvi-pōgam,* பெ.(n.) குருவியைப் போல் அடிக்கடி மாதரைப் புணர்தல்; having coition with a woman very frequently like sparrow (சா.அக.).

[குருவி + போகம்.]

குருவிமீன் *kuruvi-mīṉ,* பெ.(n.) குருவிக்கு இரையான சிறிய மீன்; a greenish sea-fish (சா.அக.).

[குருவி + மீன்.]

குருவியால் *kuruvi-yāl,* பெ.(n.) ***கித்தி*** பார்க்க (சா.அக.); see *kitti.*

[குருவி + ஆல்.]

குருவியினம் *kuruviyiṉam,* பெ.(n.) குருவியைச் சேர்ந்த குலம்; birds of the sparrow kind (சா.அக.).

[குருவி + இனம்.]

குருவியுணவு *kuruvi-y-uṇavu,* பெ.(n.) குறைந்த அளவாகக் கொள்ளும் சாப்பாடு; food taken in small quantity (சா.அக.).

[குருவி + உணவு.]

குருவிரசு *kuru-virašu,* பெ.(n.) 1. ஆசாதிமரம்; ivory wood. 2. ***பட்டை விரசா*** பார்க்க; see *paṭṭai-viraša.*

[குரு + விரசு.]

குருவிரத்தம் *kuruvi-rattam,* பெ.(n.) மிகச் சிவப்பு அரத்தம்; bright red blood (சா.அக.).

[குருவி + அரத்தம்.]

குருவிரிஞ்சி *kuru-viriñji,* பெ.(n.) மாதவிடாய்ச் சீலை; menstrual blood cloth (சா.அக.).

[குரு + விரிஞ்சி.]

குருவிலேகியம் *kuruvi-lēgiyam,* பெ.(n.) ஊர்க் குருவி, அடைக்கலாங் குருவி அல்லது சிட்டுக் குருவி இவற்றைக் கொண்டு தயாரிக்கும் இளகம். இது பெண் போகவிச்சையை அதிகரிக் கும்; electuary prepared with the flesh of village house or small sparrow as a chief ingredients amongst other bazzar drugs. It is considered as aphrodisiac (சா.அக.).

[குருவி + (இளகியம்) லேகியம்.]

குருவிவாய் *kuruvi-vāy,* பெ.(n.) மிகச் சிறிய வாய்; a very small mouth (சா.அக.).

[குருவி + வாய்.]

குருவிவாலன் *kuruvi-vālaṉ,* பெ.(n.) பெருநெல் வகை; a large kind of bearded paddy.

[குருவி + வாலன்.]

குருவிவேர் *kuruvi-vēr,* பெ.(n.) 1. ஒரு வாசனை வேர்; a fregrant root. 2. வெட்டிவேர்; khus-khus root (சா.அக.).

[குருவி + வேர்.]

குருவினி *kuruviṉi,* பெ.(n.) சூலி; a pregnant woman (சா.அக.).

[குரு → குருவினி.]

குருவிச்சம்வேர் *kuru-viccam-vēr,* பெ.(n.) பேரீந்தின் வேர்; root of date tree (சா.அக.).

[குரு + ஈச்சம் + வேர்.]

குருவீடு *kuru-vīḍu,* பெ.(n.) நஞ்சுக் கொடி; umbilical cord (சா.அக.).

[குரு + வீடு.]

குருவுக்காதி[1] *kuruvukkādi,* பெ.(n.) பச்சைக் கற்பூரம் (மூ.க.); crude camphor.

[குருவுக்கு + ஆதி.]

குருவுக்காதி[2] *kuruvukkādi,* பெ.(n.) குருமருந்து செய்ய உதவியாக உள்ள பொருள்கள்; in alchamy.

[குருவுக்கு + ஆதி.]

1. பச்சைக் கற்பூரம்; crude camphor. 2. வசநாபி; aconite. 3. வேதை செந்தூரம்; a red oxide used in alchamy. 4. கற்பூரம்; camphor cinnamomum.

குருவுப்பு *kuru-v-uppu,* பெ.(n.) பிண்ட உப்புச் செயநீர்; a strong alkaline liquid prepared from the salt extracted from the foetus. 2. முப்பு; the sacred three salts (சா.அக.).

[குரு + உப்பு.]

குருவுபதேசம் *kuru-v-ubatēšam,* பெ.(n.) போதனை; spiritual inspiration (சா.அக.). ***குருமொழி*** பார்க்க; see *kuru-moḻi*

மறுவ. ஆசான் அறவுரை, குருமொழி.

[குரு + உபதேசம்.]

குருவெழும்பல் *kuru-v-elumbal,* பெ.(n.) சிறு சிரங்கு உண்டாதல்; rising of eruptions or formation of pustules, vesicles etc (சா.அக.).

[குரு + எழும்பல்.]

குருவெள்ளிமதியோகம் *kuru-velli-madi-y-ōgam,* பெ.(n.) பிறப்பியத்தில் வியாழன் வெள்ளி நிலவு மூவரும் ஓர் ஓரையிலிருப்பதாலுண்டாந் நல் வாய்ப்பு (யாழ்.அக.); an ausicious combination of Juiter, Venus and Moon in the same zodiacal house in a horoscope.

[குரு+ வெள்ளி + மதி + ஓகம்.]

குருவெறும்பு *kuru-v-erumbu,* பெ.(n.) முசிறு என்னும் பெரிய சிவப்பெறும்பு; large red ant.

[குரு[5] + உறும்பு.]

குருவேர் *kuruvēr,* பெ.(n.) ***குருவிவேர்*** பார்க்க; see *kuruvi-vēr.*

[குரு + வேர்.]

குருவை *kuruvai,* பெ.(n.) ஒரு மட்ட நெல்; an inferior variety of paddy. 2. குருங்கத்தலை மீன்; small scianea (சா.அக.).

[குறு → குறுவை → குருவை.]

குருவைக்குமரி *kuruvai-k-kumari,* பெ.(n.) சிறு கற்றாழை; small Indian aloe (சா.அக.).

[குறுவை → குருவை + குமரி.]

குருவைநெல் *kuruvai-nel,* பெ.(n.) ஒரு மட்ட நெல்; there are different kinds of inferior paddy that comes from Tirunelveli and Thanjavur. வகைகள் 1. அறுபதாங் குறுவை2. கருங்குருவை; 3. கற் குருவை; stone crop yielding hard rice difficult for digestion. 4. மட்டக் குருவை; coarse paddy. 5. மைக்குருவை; jet black paddy. 6. செங்குருவை; red crop and so on (சா.அக.).

[குரு – குருவை – குறுவை → குருவை + நெல். (குரு – சிவப்பு.]

குருவைப்பூசல் *kuruvai-p-pūšal,* பெ.(n.) முப்பூவைப் பூசுதல்; a metal which is intended for transmutation will be coated with quintessence of three salts (சா.அக.).

[குறுவை → குருவை + பூசல் (பூசுதல்).]

குருவையரிசி *kuruvaiyariši,* பெ.(n. நெல்லின் அரிசி; rice from *kuruvai* paddy (சா.அக.).

[குருவை + அரிசி.]

குருள்[1] *kurul,* பெ.(n.) 1. பெண்டிர் தலைமயிர் (பிங்.); womans's hair. 2. நெற்றியின் மயிர்ச்சுருள்; curl, lock of hair, especially on the forehead, love lock.

LG.,Du.,OF. krul; **G.**krol; **O.E.**crol, crul; **E.** curl.

[குல் (குத்தல், துளை, இருள் – கருமை. கல் → குரு → குருள்.]

குருள்(ளு)[2]–தல் *kurul-,* 7 செ.கு.வி.(v.i.) சுருளாதல்; to curl. *"குருண்ட வார்குழல்" (திருவிசை. திருவாலி.1:3).*

Fin. kāria; **Es.** kāvida; **Q.** kuru; **Kuruk.** kūrnā.

[குல் → குரு → குருள்.]

குருளை *kurulai,* பெ.(n.) 1. நாய், பன்றி, புலி, முயல், நரி முதலிய ஒருசார் விலங்கின் இளமை (தொல்.பொருள்.564–565); animals like dog, hog, tiger, rabbit, wolf etc. young of certain animals. 2. பாம்பின் குட்டி; young of a snake. *"சிறுவெள் ளரவினவ் வரிக் குருளை" (குறுந்.119).* 3. குழந்தை; child. *"அருட்குருவாங் குருளை" (சி.சி.பரபக்.*

பாயிரம்.4). 4. ஆமை (மூ.அ.); tortoise.

E. girl, female child, **ME.** gule, girle, gerle; **LG.** gor, child; **COD., O.G**, gor, a child.

[குல் → குரு → குருள் → குருளை.]

குரூஉக்கனி *kuru-v-ūkkaṉi,* பெ.(n.) கோட்டை மதிலில் அமைக்கப்பட்டிருக்கும் துளை; a hole made in the fort wall, through which they can see the enemies and attack them.

[குரூஉ + கனி.]

குரூஉப்புகை *kurū-p-pugai,* பெ.(n.) மணமுள்ள புகை (திவா.); savoury smoke.

[குரூஉ + புகை.]

குரை[1]–த்தல் *kurai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. ஆரவாரித்தல்; to jubilate, shout. *"குவவுக் குரையிருக்கை" (பதிற்றுப்.84:20).* 2. குலைத்தல்; to bark, as a dog. *"ஞாளி குரைதருமே" (திருக்கோ.175).*

E. blare, neigh, crow; **A.S.** hnoegan; **Icel.** hneggja, **Scot.** nicher.**Fin.** karjua, kalijua; **Es.** karjuda; **Komi.** gorsini.

[குரு → குரை.]

குரை[2] *kurai,* பெ.(n.) ஒலி; noise, roar, shout. *"நுரைத்தலைக் குரைப்புனல்" (பொருந.240).*

[குரு → குரை.]

குரை[3] *kurai,* பெ.(n.) 1. பெருமை (ஈடு.4:9,9); augustness, majesty. 2. பரப்பு (ஈடு.4:3,6); expanse.

[குரம் → குரு → குரை.]

குரை[4] *kurai,* (இடை.) (part.) 1. ஓர் அசைநிலை (தொல்.சொல்.274); an expletive. 2.இசைநிறை (தொல்.சொல்.274); additional syllable added for the sake of metre.

[குரு → குரை]

குரை[5] *kurai,* பெ.(n.) குதிரை (உரி.நி.); horse. ஒ.நோ.குரா.

[குதிரை → குரை (இடைக்குறை).]

குரைப்பு *kuraippu,* பெ.(n.) ஓசை; noise. *"உங்காரக் குரைப்பினால்" (சேதுபு.தேவிபுர.47).*

[குரு → குரை → குரைப்பு.]

குரைமுகன் *kurai-mugaṉ,* பெ.(n.) நாய் (பிங்.); barking-mouthed dog.

[குரை + முகன்.]

குரைய *kuraiya,* (இடை.) (part.) ஓர் அசைநிலை; an expletive. *"கெடலருங் குரைய கொற்றம்" (சீவக.1914).*

[குரு → குரை → குரைய.]

குரோசகம் *kurōśagam,* பெ.(n.) துருக்கியிலுள்ள குராசன் என்னும் ஊரில் விளையும் ஓமம்; black henbane.

[குராசன் → குரோசகம்.]

குரோசம் *kurōsam,* பெ.(n.) 1. ***குரலோசை*** பார்க்க; see *kuralōsai.* 2¼ மைல் கொண்ட தொலைவு; Indian leaque, kOs = about 2¼ miles = 2000 தண்டம். 2. கூப்பிடுதூரம் (திவா.); distance of a call.

[குரல் + ஓசை → குரலோசை → குரோசை → குரோசம். குரலோசை பார்க்க; see kuratosa.]

குரோசியம் *kurōśiam,* பெ.(n.) நவரை வாழை; a species of plantain (சா.அக.).

[குராசன் → குரோசியம்.]

குரோட்டம் *kurōṭṭam,* பெ.(n.) நரி (பிங்.); jackal. 2. பன்றி; hog.

[குருட்டம் → குரோட்டம்.]

குரோட்டன் *kurōṭṭaṉ,* பெ.(n.) ஆண் நரி; male of a fox. he-jackal (சா.அக.).

[குரு → குருட்டன் → குரோட்டன்.]

குரோட்டா *kurōṭṭā,* பெ.(n.) ***குரோட்டம் (சூடா.)*** பார்க்க; see *kuroṭṭam.*

[குரோட்டம் → குரோட்டா.]

குரோட்டு *kurōṭṭu,* பெ.(n.) பன்றி; hog (சா.அக.).

[குரோட்டம் → குரோட்டு.]

குரோடம் *kurōḍam,* பெ.(n.) பன்றி (பிங்.); hog. 2. முட்பன்றி; porcupine (சா.அக.).

[குரோட்டம் → குரோடம்.]

***குல்**[1] *kul,* வேர்.(v.r.) (முன்மைக் கருத்து) 1. முற்படுதல்; to move forward, to go forward. 2. அசைதல்; to move the body in a graceful and affected manner. 3. மேலெழும்புதல், உயர்தல்; to go up. 4. வளர்தல்; to grow. 5. விரைதல்; to go fast, hasten. 6. மிகுதிப்படுதல்; to become excess. 7. பரவுதல்; to spread.

த. குலுங்கு; **தெ.** குலுகு (அசைதல்); **குவி.** குலு (பரவுதல்), க்லை (தவசம் அடிக்கும் அகன்ற களம்); **கோத.** குல்க் (அசைத்தல்).

[உல் → குல்.]

***குல்**[2] *kul,* வேர்.(v.r.) (தோன்றல் கருத்து) 1. தோன்றுதல்; to orginate, to appear. 2. முளைத்தல்; to spout. 3. மென்மைப்படுதல்; to become thin. 4. இளமையாதல், அழகாதல்; to become, young, beautiful. 5. பெரிதாதல்; to grow big. 6. மேலெழும்புதல்; to rise. 7. குதித்தல்; to jump.

பட. குல்லுமாடு (அடையாளம் வெளிப்படுதல்); **த.** குல் → குன்னி (குஞ்சு); நன்னி குன்னி (சின்னஞ் சிறியவை), இளங்குழந்தைகள். **து.** குல்ல ஆபுனி (எல்லோருக்கும் தெரியும்படி வெளிப்படுத்துதல்).

[உல் → குல்.]

***குல்**[3] *kul,* வேர்.(v.r.) (பொருந்துதல் கருத்து) 1. பொருந்துதல்; to fit, to fix. 2. அளத்தல்; to measure. 3. எண்ணுதல்; to count. 4. சேர்த்தல், கூடுதல்; to join, to collect. 5. திரளுதல், குவிதல்; to ammulate, to heap. 6. குழுமுதல்; to assemble.

த. குல் → குலவு → குலம் → குழு → குடும்பு → குடும்பம் → குலை → கொலு. **கோத.** கில் (எலும்பு) பொருத்து, கதவுப் பொருத்து); **கொலா.** குல் (எண்ணிக்கை எண்ணுதல்; குல்ல் (அளத்தல்); **பர்.** குலுன்; (கைப்பிடி = கத்தியொடு பொருந்தியது).

[உல் → குல்.]

***குல்**[4] *kul,* வேர்.(v.r.) (நெருங்குதல் கருத்து) 1. நெருங்குதல்; to go near, to approach. 2. தொடுதல்; to touch.3. உராய்தல்; rub. 4. எரிதல்; to burn. 5. சிவத்தல்; to become red. 6. உலர்தல்; to dry. 7. ஒளிர்தல்; to brighten. 8. வெண்மை; white.

த. குல் → கொல் → கொல்லன். **பிராகு.** குலி (அச்சம்) **க.,தெ.** குல்லு (பேரிரைச்சல்); **க.** குலி (கொலையாளி), குலுகு (நோய்); குல்மெ (கொல்லன் உலை); கீல் (குத்தும் ஆணி, ஆப்பு) **மால்.** கல்கெ (கடித்தல்).

[உல் → குல்.]

***குல்**[5] *kul,* வேர்.(v.r.) (குத்துதல் கருத்து) 1. குத்துதல்; to pierce. 2. தோண்டுதல்; to dig. 3. துளைத்தல்; to make a hole, bore. 4. ஊடுருவுதல்; to penetrate.

த. குல் → கொல். **மா.க.** கொல்.

[உல் → குல்.]

***குல்**[6] *kul,* வேர்.(v.r.) (தாக்குதல் கருத்து) 1. அடித்தல்; to strike. 2. முழக்குதல், ஒசையெழுப்புதல்; to make noise. 3. தாக்குதல், வெட்டுதல்; to attack, to cut. 4. கொல்லுதல்; to kill. 5. துன்புறுத்துதல்; to trouble, to annoy. 6. அச்சுறுத்துதல்; to frighten. 7. கெடுத்தல், அழித்தல்; to ruin, destroy.

குல் → கொல் → கொல்லன். **பிராகு.** குலி (அச்சம்) **க. தெ.** குல்லு (பேரிரைச்சல்); **க.** குலி (கொலையாளி) குலுகு (நோய்) குல்மெ (கொல்லன் உலை), கீல் (குத்தும் ஆணி ஆப்பு) **மால்.** கல்கெ (கடித்தல்).

[உல் → குல்.]

***குல்**[7] *kul,* வேர்.(v.r.) (வளைதல் கருத்து) 1. வளைதல்; to bend. 2. சுற்றுதல், உலாவுதல்; to go round. 3. சுழலல்; to rotate. 4. வட்டமாதல்; to become round.

த. குலுக்கை (வட்டமான குதிர்); **க.** கோல்; **தெ.** கொலமு; **ம.** கோலம் (வட்டப்படகு); **பாலி.** குல்ல (படகு); **கொண்.** கல (இலைக்கலம்); **குவி.** கலி; **ம.** க.லெ. (**த.** கலம்).

[உல் → குல்.]

***குல்**[8] *kul,* வேர்.(v.r.) (உள்ளொடுங்கல் கருத்து) 1. உள்ளொடுங்குதல்; to become lean, to emaciate. 2. சிறிதாதல்; to become small in size. 3. தாழ்தல், கீழிறங்குதல்; to come down, to alight. 4. உள்ளடங்குதல்; to be inside. 5. ஒளிதல், மறைதல்; to hide, conceal. குல் → குள் → குளித்தல் (மூழ்குதல்).

[உல் → குல்.]

***குல்**[9] *kul,* வேர்.(v.r.) (கருமைக் கருத்து) 1. குழி; pit. 2. இருள்; darkness. 3. கருமை; blackness.

குரு. கூல் (வயிறு); **மா.** கொலி (வயிறு); **பிராகு.** கோல் (வயிறு). **து.க.,** கல்லி (பின்னிய பை).

[உல் → குல்.]

குல்மம் *kulmam,* பெ.(n.) ***குலுமம்*** பார்க்க; see *kulmam.*

[குலுமம் → குல்மம்.]

குல்லகம் *kullagam,* பெ.(n.) வறுமை; poverty.

"குல்லக வேடங் கொண்ட வள்ளல்" (யசோதர.1:23).

[குல் → குல்லம் → குல்லகம்.]

குல்லம் *kullam,* பெ.(n.) முறம்; winnowing basket, fan for sifting or winnowing, fanner.

[குல் → குல்லம்.]

குல்லரி *kullari,* பெ.(n.) இலந்தை பார்க்க; see ilandai jujube tree.

ஒ.நோ.குல்வலி.

[குல் + வரி – குல்வரி → குல்லரி.]

குல்லாக்கட்டை *kullā-k-kaṭṭai,* பெ.(n.) தொப்பிக் கட்டை ; post set up in shallow water to indicate the existence of channel.

மறுவ. தொப்பிக்கட்டை

[குல்லாய் + கட்டை.]

குல்லாய் *kullāy,* பெ. (n.) 1. தலைக்கு அணியும் தொப்பி; cap. 2. பாய்மரம்; mart.

U. kulāh

[குல் (வளைவு), மரம் → குல் → குல்லாய்.]

த. குல்லாய் > **U.** kulāh

குல்லாய்தோணி *kullāy-tōṉi,* பெ. (n.) பாய்மரம் பொருத்திய தோணி; a boat with a mart.

U. kulāh

[குல் (வளைவு), மரம் → குல் → குல்லாய்.]

குல்லாய்ப்போடு–தல் *kullāy-p-pōdu-,* 20 செ.கு.வி. (v.t.) ஏமாற்றுதல்; lit., to cap me, to cajole, coax. 2. ***குல்லாய்ப்போடுதல்*** பார்க்க; see *kullāy-pōdu.*

[குல்லாய் → குல்லா + போடு.]

குல்லான் *kullāṉ,* பெ.(n.) தோண்டுதற்குரிய கூர்மையான முளை; sharp pointed stake for digging (J.)

[குல்லம் + ஆணி – குல்லாணி → குல்லான்.]

குல்லி *kulli,* பெ.(n.) ஒருவகைப் பூடு; a kind of shrub (j.).

[குல் → குல்லி.]

குல்லியம் *kulliyam,* பெ.(n.) ஆலோசனை (யாழ்.அக.); counsel.

[குல் → குல்லியம்.]

குல்லை[1] *kullai,* பெ.(n.) 1. புனத்துளசி (பிங்.) ; wild basil. 2. துளசி (திவா.) ; sacred basil. 3. வெட்சி (பிங்.) ; scarlet ixora. 4. கஞ்சா (அக.நி.) ; Indian hemp.

[குல் → குல்லி → குல்லை.]

குல்லை[2] *kullai,* பெ.(n.) ஏய்ப்பு; deceit. *"குல்லைத் திருடரைநீ கூடாதே" (தெய்வச்.விறலிவிடு.356).*

[குல் → குல்லை.]

குல்லை[3] *kullai,* பெ.(n.) நாய்த்துளசி; white basil.

[குல் → குல்லை.]

குல்வலி *kulvali,* பெ.(n.) இலந்தை (மலை.) ; jujube tree.

[குல் + வரி – குல்வரி → குல்வலி.]

குலக்காய் *kulakkāy,* பெ.(n.) சாதிக்காய் (தைலவ.தைல.35); nutmeg.

[குல் → குல்லம் + காய் – குல்லாக்காய் → குலக்காய்.]

குலக்கு *kulakku,* பெ.(n.) இலை, பூ, பழம் முதலியவற்றின் சிறுகொத்து; small cluster or bunch, of fruits, flowers and leaves (யாழ்ப்.).

[குல் → குலை → குலக்கு.]

குலக்கொடி *kula-k-kodi,* பெ.(n.) நற்குலத்துப் பெண்; woman of noble birth. *"வையை யென்ற பொய்யாக் குலக்கொடி" (சிலப்.13:170).*

[குலம் + கொடி.]

குலக்கொழுந்து *kula-k-koḻundu,* பெ.(n.) குலத்தை விளங்கச் செய்பவன்–ள்; one who brings glory to one's family *"இராமா னுசனெனுங் குலக்கொழுந்தே" (திவ்.இராமானுச.60).*

[குலம் + கொழுந்து.]

குலகம் *kulagam,* பெ.(n.) 1. கருந்தும்பை; black toom-bay indica. 2. பேய்ப்புடல் (கழ.தமி.அக.); devils snake gourd.

[குல் → குலகம்.]

குலகலகன் *kula-kalagaṉ,* பெ.(n.) குலம் முதலிய வற்றோடு கலகஞ் செய்து தொலைப்பவன்; one who fights and overthrows a family or sect. *"பரசமய குலகலக சிவசமய குலதிலக" (திருச்செந். பிள்.தாலப்.9.).*

[குலம் + கலகன்.]

குலகாயம்[1] *kula-kāyam,* பெ.(n.) குலவொழுக்கம்; rules or customs of caste or tribe. *இச்செயல் உனக்குக் குலகாயமா?*

[குலம் + காயம்.]

குலகாயம்[2] *kula-kāyam,* பெ.(n.) பேய்ப்புடல் (மலை.); wild snake-gourd.

[குல் → குலகம் → குலகாயம்.]

குலகாலம் *kula-kālam,* பெ.(n.) நிலக்கடம்பு (மலை.); a plant.

[குலம் + காலம்.]

குலகாலன் *kula-kālaṉ,* பெ.(n.) குலத்தை அழிப்பவன்; one who ruins a family or tribe. *"அசுரர் குலகாலா" (திருப்பு.634).*

[குலம் + காலன்.]

குலகிரி *kula-kiri,* பெ.(n.) எண்குலமலை (பிங்.); chief mountain ranges in jambu-duipa.

மறுவ. குலபருவதம்

[குலம் + கிரி.]

குலகுரு *kula-guru,* பெ.(n.) குலத்திற்குரிய ஆசிரியன், குரு; family guru.

[குலம் + குரு.]

குலங்கிழார்கள் *kulaṇkiḻārgaḷ,* பெ.(n.) கோயில் பணிகளை நடத்தும் பொறுப்பாளர்கள், அர்ச்சகர் கள்; priests who are responsible for the conduct of temple activities. *"திருவக்கரை மகாதேவர் கோயில்காணி உடைய குலங்கிழவன் பற்பநாபந் திருவேங்கடவன்" (தெ.கல்.தொ. XVII. கல்206.) "திருவல்லிக்கேணி குலங்கிழார்கள்" (கல்வெட்டு வெளியீட்டுத் தொகுதி.8.கல்.29) (கல்.க.சொ. அ.மு.).*

[குலம் = கோயில். குலம் + கிழார்கள். கோயிலைத் தேவகுலம், தேகுலம் என வழங்குதலும் உண்டு.]

குலங்கூறு[1]-தல் *kulaṅkūṟu-,* 1. செ.கு.வி.(v.i.) 1. உயர்குடிப் பிறப்பைப் பாராட்டுதல்; to boast of high birth.

[குலம் + கூறுதல்.]

குலங்கூறு-தல் *kulaṅ-kūru-,* 11 செ.கு.வி.(v.t.) பிறன் குலத்தை இழித்துக் கூறுதல்; to belittle wit one, as of low perentage.

[குலம் + கூறுதல்.]

குலங்கெட்டவன் *kulaṉ-keṭṭavaṉ,* பெ.(n.) சாதியொழுக்கம் தவறியவன்; one who has disgraced his birth.

[குலம் + கெட்டவன்.]

குலச்சவ்வு *kula-c-cavvu,* பெ.(n.) தலைப் புலால்; the scalp, the skin of the top of the head (சா.அக.).

[குலம் + சவ்வு.]

குலச்சிறைநாயனார் *kula-c-ciṟai-nāyaṉār,* பெ.(n.) கூன் பாண்டியனது அமைச்சரும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் காலத்தவரும், நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவருமாகிய அடியார் (பெரியபு.); a canonized šaiva saint minister of *kūṉpāṅdiya,* and contemporary of Thiru ñāṉa-campanthamūrthy nāyaṉār, one of 63.

[குலம் + சிறை + நாயனார். குலச்சிறை = கோயில் குளம்.]

குலசங்கு *kulaśaṅgu,* பெ.(n.) முட்சங்கு; a species of conch with thorn-like points (சா.அக.).

[குலம் + சங்கு.]

குலசங்குலம் *kulaśaṅgulam,* பெ.(n.) நத்தைச்சூரி; bristly button weed (சா.அக.).

[குலம் + சங்குலம்.]

குலசம் *kulaśam,* பெ.(n.) செவ்வந்தி; Indian chamomile (சா.அக.).

[குல் → குலசம்.]

குலசன் *kulaśaṉ,* பெ.(n.) நற்குலத்தோன்; man of respectable family.

[குலம் + அத்து + அன் – குலத்தன் → குலச்சன் → குலசன்.]

குலசேகரப்பெருமாள் *kula-šēgara-p-perumāḷ,* பெ.(n.) சேரமன்னரும் பெருமாள் திருமொழி இயற்றியவரும் ஆழ்வார் பன்னிருவருள் ஒருவருமாகிய அடியாள்; a Chera king, on of the 12 canonized vaišṇava saint, who was the author of *Perumal Thirumoḻi.*

[குலசேகரன் + பெருமாள்.]

குலசேகரன் *kula-sēgaraṉ,* பெ.(n.) 1. குலத்தின் புகழ்மிக்கவன்; illustrious person of a family. 2. குலசேகரப் பெருமாள்; a Chera king. *"சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகாமணியே" (திவ்.பெருமாள். தனியன்.).*

[குலம் + சேகரன்.]

குலசேகரன்படி *kulaśēgaraṉ-padi,* பெ.(n.) திருமால் கோயிலின் கருவறை வாயிற்படியைக் குறிக்கும் பெயர்; the stone step at the entrance to the sanctuary of a Vishnu temple.

[குலம் + சேகரன் + படி.]

குலசேகராழ்வார் *kulasēgarāḻvār,* பெ.(n.) **குலசேகரப் பெருமாள்** பார்க்க; see *kulasēgara-p-perumāḷ.*

[குலசேகரன் + ஆழ்வார்.]

குலஞ்செப்புதல் *kulañ-ceppu-,* 15 செ.கு.வி.(v.i.) தன் குலப்பெருமை கூறுதல்; to boast of one's family or birth.

[குலம் + செப்புதல்.]

குலஞ்செய்-தல் *kulaṉ-cey-,* 1 செ.கு.வி.(v.i.) குலத்தை நிலைநிறுத்துதல்; to found a family *"குலஞ்செய்த குமரர்" (சீவக.2915).*

[குலம் + செய்-.]

குலட்டம் *kulaṭṭam,* பெ.(n.) கருநீலக்கல், நீலாஞ்சனக்கல்; a blue stone used in medicine, and applied as collyrium to the eye and an astringent of sores (சா.அக.).

[குலட்டு → குலட்டம்.]

குலட்டு *kulaṭṭu,* பெ.(n.) பழக்குலை; bunch of fruit. (சா.அக.).

ஒ.நோ. குலக்கு

[குலை → குலைத்து → குலட்டு.]

குலடி *kulaḍi,* பெ.(n.) ஒருவகைச் சிவப்பு செய்நஞ்சு (யாழ்.அக.); a kind of red mineral poison.

[குலடு → குலடி.]

குலடு *kulaḍu,* பெ.(n.) குலப்பெருமை அழிப்பவள்; unchart women.

[குலடு → குலடி.]

குலடை *kulaḍai,* பெ.(n.) கற்பொழுக்கங் கெட்டவள் (யாழ்.அக.); unchaste, fallen woman.

[குலடு → குலடி → குலடை.]

குலத்தம்[1] *kulattam,* பெ.(n.) கணுக்கால்; ankle. 2. கொள்ளு; horse gram (சா.அக.).

[குல் → குலத்தம்.]

குலத்தம்பயறு *kulattam-payaṟu,* பெ.(n.) மொச்சைக் காய்; Indian bean (சா.அக.).

[குலத்தம் + பயறு.]

குலத்தி *kulatti,* பெ.(n.) இலந்தை (சா.அக.); jujube.

[குலத்தம் → குலத்தி.]

குலத்திகம் *kulattigam,* பெ.(n.) மொச்சைக்காய்; Indian bean (சா.அக.).

[குலத்தி → குலத்திகம்.]

குலத்திகாலன் *kulatti-kālaṉ,* பெ.(n.) இடுகொள் (சா.அக.); four leaved cassia.

[குலத்தி + காலன்.]

குலத்திகை *kulattigai,* பெ.(n.) காட்டுக்கொள் (சா.அக.); wild horse gram.

[குலத்தி → குலத்திகை.]

குலதருமம் *kula-tarumam,* பெ.(n.) குல வொழுக்கம்; time-honoured custom observed by a family or caste.

*[குலம் + தருமம். **குலவொழுக்கம்** பார்க்க; see kulavoḻukkam.]*

குலதனம் *kula-taṉam,* பெ.(n.) மேலான செல்வம், மதிப்பமைந்த செல்வம்; *"பலதனத்தொடு நிறை குலத்தனக் குவையும்" முதல் இராசேந்திரன் மெய்க்கீர்த்தி) (கல்.க.சொ.அ.மு.).*

[குலம் + தனம்.]

குலதிலகன் *kula-tilagaṉ,* பெ.(n.) குலத்திற் சிறந்து விளங்குபவன்; one who adorns a family. *"சிவசமய குலதிலக தாலோ தாலேலோ" (திருச்செந்.பிள். தாலப்.9).* **குலக்கொழுந்து** பார்க்க; see *kula-k-koḻundu.*

[குலம் + திலகன்.]

குலதெய்வம் *kulateivam,* பெ.(n.) ஒரு குலத்தார் வழிவழியாக வழிபட்டுவருங் கடவுள்; family deity *"நினையாந் தொழத்தக்க குலதேவதையாய் வழிபட்டு" (சிவப்.பிரபந்.பிள்.சிற்றிற்.6).*

[குலம் + தெய்வம்.]

குலந்தம் *kulandam,* பெ.(n.) கொள்ளு; horse gram (சா.அக.).

[குல் (வளைவு) → குலந்தம்.]

குலந்தெரி-த்தல் *kulan-teri-,* 4 செ.கு.வி. (v.i.) குலப்பழி தூற்றுதல்; to dwell on another's parentage commonly in ridicule.

[குலம் + தெரித்தல். தெரித்தல் = சொல்லுதல்.]

குலப்பகம் *kulappagam,* பெ.(n.) கக்குவான்; whooping cough. 2. செம்புமணல்; copper ore (சா.அக.).

[குலப்பு → குலப்பகம்.]

குலப்பகை *kula-p-pagai,* பெ.(n.) 1.வழிவழியாக உள்ள இனப்பகை; inbred malice or hatred, as between tribes prepetuated from generation to generation. 2. பூனையெலிகளுக்கு உள்ளது போன்ற இயற்கைப் பகை; natural enmity between different species, as cats and rats.

[குலம் + பகை.]

குலப்பம்[1] *kulappam,* பெ.(n.) செப்புமணல்; sand containing copper.

[குலப்பு → குலப்பம்.]

குலப்பம்[2] *kulappam,* பெ.(n.) கக்குவான் இருமல்; whooping cough.

[குலை → குலைப்பம். ஒ.நோ.குலைப்பன்.]

குலப்பரத்தை *kula-p-parattai,* பெ.(n.) ஒருவற்கே உரிமை பூண்டொழுகும் பரத்தையர் குலத்தவள் (நம்பியகப்.113); woman of the courtesan class, who remains faithful to a single person. 2. கணிகையர் குலத்தவர்; courtesan by birth.

[குலம் + பரத்தை.]

குலப்பன் *kulappan,* பெ.(n.) குயவன்; potter.

[குலாளன் → குலப்பன் → குலப்பன் (கொ.வ.).]

குலப்பெயர் *kula-p-peyar,* பெ.(n.) குலம்பற்றி வழங்கும் பெயர்; caste names. *"பார்ப்பா ரரசர் வணிகர் வேளாளரெனப் பாற்பாடு நாற்பெயர் குலப்பெய ராகும்" (பன்னிருபா.144).*

[குலம் + பெயர்.]

குலபதி *kulapadi,* பெ.(n.) குலத்துக்குத் தலைவன்; head of a family, caste or tribe. *"முதுகவரைக் குலபதியாய்" (திவ்.பெரியதி.6:6,7).* 2. 10,000 மாணவர்க்கு உணவு முதலியன அளித்துக் கல்வி கற்பிக்கும் ஆசிரியன்; the teacher who feeds 10,000 pupils and instructs them.

[குலம் + பதி.]

குலம் *kulam,* பெ.(n.) 1. குடி; family,lineage. *"குலந்தாங்கு சாதிக ணாலினும்" (திவ்.திருவாய். 3:7,9).* 2. உயர்குலம்; noble lineage, high birth. *"குலம் வேண்டின் வேண்டுக யார்க்கும் பணிவு" (குறள்,960).* 3. சாதி; caste, tribe, nation. *"குலனுங் குடிமையும்" (நான்மணி.82).* 4. மகன்; son. *"குலத்தொடுங் கோற லெண்ணி" (சீவக.261).* 5.இனம் (உரி.நி.); class, sort, species, genus. 6. குழு; community. "பிரபந்த குலம்" 7. கூட்டம்; her, block, school, collecton assemblage. *"மாளிகைக் குலந் துகைத்து" (தணிகைப்பு. சீபரி.373).* 8. வீடு (பிங்.); house, abode. 9. அரண் மனை (திவா.); royal place. 10. கோயில்; temple. *"நீலவனக் குலமனந்தம்" (இரகு.நகர.46).* 11. இரேவதி என்னும் இருபத்தியேழாம் விண்மீன்; the 27th naksatra part of pisces. 12. நன்மை; goodness, benevolence. *"குலதெய்வமே" (திருக்கோ. 29).* 13. அழகு (ஆ.நி.); beauty. 14. மலை; mountain. *"நீலஞ்செய் குலத்தையும்" (இரகு.சீதைவ.32).* 15. மூங்கில்; bamboo. *"தலமிசை யுயர் குலத்தைச் சார்ந்து" (திருவாலவா. நாட்டுச்.4).*

Fin. kyla; **Es.** kūla; **Hung.** gore; **Mong.** kyi (familyclan); **Turk.** kūl, kil; **Jap.** gara; **Q.** kailla.

[குல் (வளைவு, சூழ்தல் → குலம்.]

குலம்பம் *kulambam,* பெ.(n.) செம்பு மணல்; copper ore (சா.அக.).

[குலம்பு → குலம்பம்.]

குலம்பா *kulambā,* பெ.(n.) பேய்ச்சுரை (மலை.); wild bottle gourd.

[குலம்பை → குலம்பா.]

குலம்புகுந்தவன் *kulam-puguntavaṉ,* பெ.(n.) சாதி மாறியவன்; one who has mingled with persons of a different caste, a term of reproach.

[குலம் + புகுந்தவன்.]

குலம்பெயர்-தல் *kulam-peyar-,* 3 செ.கு.வி.(v.i.) மாறுபாடடைதல்; to change for the better or the worse, as a tree in transplanting, to improve or degenerate (யாழ்ப்.).

[குலம் + பெயர்.]

குலமகள் *kulamagaḷ,* பெ.(n.) நற்குடியிற் பிறந்தவள்; woman of good family, of noble birth. *"குலமகடன் குலமகனை" (கலிங்.223).*

[குலம் + மகள்.]

குலமகன் *kula-magaṉ,* பெ.(n.) 1. நற்குடியிற் பிறந்தோன்; man of good family, of noble birth. 2. குலத்திற் பிறந்த மகன்; legitimate son. *"குலமகடன் குலமகன்" (கலிங்.223).*

[குலம் + மகன்.]

குலமணி *kula-maṇi,* பெ.(n.) 1. உயர்வகை மணிக்கல் (சாதிரத்தினம்); superior, genuine gem. 2. ***குலத்திற் சிறந்தோன்*** பார்க்க; see *kulattir-cirandōṉ.*

[குலம் + மணி.]

குலமதம் *kula-madam,* பெ.(n.) உயர்குடிப்பிறப்பால் தோன்றுஞ் செருக்கு; pride of birth.

[குலம் + மதம்.]

குலமரியாதை *kula-mariyādai,* பெ.(n.) குலத்தின் ஒழுங்கு; propriety of conduct, established rule or custom of a family.

மறுவ. குலமதிப்பு

[குலம் + மரியாதை.]

குலமருது *kula-marudu,* பெ.(n.) ஒரு வகை மருது; a kind of murudah tree (சா.அக.).

[குலம் + மருது.]

குலமருது *kula-marudu,* பெ.(n.) வெள்ளைமருது; flowering mardah.

[குலம் + மருது.]

குலமாரி *kula-māri,* பெ.(n.) சிற்றூர்த் தெய்வம்; a village goddess.

[குலம் + மாரி.]

குலமீன் *kula-mīṉ,* பெ.(n.) உயர்ந்த மீன்; high class fish. 2. உண்பதற்குத் தகுந்த மீன்; fish of a superior class fit for eating (சா.அக.). 3. அருந்ததி; Arundadi. *"குலமீ னருகிய கற்பும்" (கல்லா.73,1).*

[குலம் + மீன்.]

குலமுதல் *kula-mudal,* பெ.(n.) 1. கொடிவழியின் மூலகாரணன்; first ancestor, founder of a family. *"தென்னர் குலமுதல்" (சிலப்.4:22).* 2.மகன்; son. *"குலமுதலைக் கொண்டொளித்த லன்றி" (பு.வெ. 10:6).* 3. குலதெய்வம்; family god. *"மலையுரை கடவுள் குலமுதல் வழுத்தி" (ஐங்குறு.259).*

[குலம் + முதல்.]

குலமுதற்பாலை *kula-mudar-pālai,* பெ.(n.) பண்வகை (சிலப்.13:109, உரை).; a musical node.

[குலம் + முதல் + பாலை.]

குலமுள்ளோன் *kulam-uḷḷōṉ,* பெ.(n.) நற்குடிப் பிறந்தவன் (திவா.); man of good family, of noble birth.

[குலம் + உள்ளோன்.]

குலமுறை *kula-muṟai,* பெ.(n.) 1. கொடிவழி வரலாறு (பரம்பரை); genealogy. *"குலமுறை கிளத்து படலம்"* (கம்பரா.). 2. கொடிவழியாய் வந்த குல வழக்கம்; custom of a family handed down by tradition. *குலமுறையை அனுசரிப்பதே அழகு (கொ.வ.).*

[குலம் + முறை.]

குலவரி *kula-vari,* பெ.(n.) 1. சந்தனம் ; sandal wood. 2. செஞ்சந்தனம் ; red sandal.

[குலம் + வரி.]

குலவருத்தனை *kula-varuttaṉai,* பெ.(n.) சிற்றூர் அலுவலர் குடிகளிடமிருந்தும் அரசுக்கு வரி செலுத்துபவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளும் பொருள்; the perquisites of village officers, paid by farmers and by those who pay land revenue to Government.

[குலம் + வருத்தனை.]

குலவரை *kula-varai,* பெ.(n.) 1. எண்குல மலை (அட்டகுல பருவதம்) (திவா.); chief mountain ranges of Jambu-dvipa. 2. மேன்மையான மலை; lofty mountain. *"அக்குலவரைச் சாரல் வைகி" (கம்பரா.வரைக்.35).* 3. நாகம்; mineralized zinc. 4. மந்தாரச்சிலை (சங்.அக.); a black stone.

[குலம் + வரை.]

குலவலி *kulavali,* பெ.(n.) இலந்தை (சா.அக.); jujube.

[குலவல்லி → குலவலி.]

குலவல்லி *kula-valli,* பெ.(n.) இலந்தை (சா.அக.);

[குலம் + வல்லி.]

குலவள்ளிநெல் *kulavaḷḷi-nel,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[குலம் + வள்ளி + நெல்.]

குலவன் *kulavaṉ,* பெ.(n.) உயர்குலத்திற் பிறந்தவன்; person of noble birth 'பனிக்கதிர்க் குலவன் பயந்தருள் பாவையை' (கல்லா.10).

[குலம் → குலவன்.]

குலவாரம் *kula-vāram,* பெ.(n.) செவ்வாய்க் கிழமை, வெள்ளிக் கிழமை; Tuesday,Friday (சோ.க.சொ. அ.மு.).

[குலம் + வாரம்.]

குலவாழை *kula-vālai,* பெ.(n.) 1. 7 அல்லது 8 திங்களில் விளையும் ஒருவகைச் சம்பா நெல்; a sub species of Camba paddy, taking 7 to 8 months to mature. 2. ஒருவகைப் பிசின் மரம்; a species of gamboge. 3. சிறந்த வாழை; superior kind of plantain (சா.அக.).

[குலம் + வாழை.]

குலவிச்சை *kula-viccai,* பெ.(n.) **குலவித்தை** பார்க்க; see *kula-vittai. "குலவிச்சை கல்லாமற் பாகம்படும்" (பழமொ.6).*

[குலம் + வித்தை → விச்சை.]

குலவித்தை *kula-vittai,* பெ.(n.) குலத்தில் வழி வழியாய் வரும் கலையறிவு (வித்தை); knowledge, learning, art, handed down in a family.

[குலம் + வித்தை.]

குலவிரி *kulaviri,* பெ.(n.) சந்தன மரம்; sandal tree (சா.அக.)

[குலம் + விரி.]

குலவிருது *kula-virudu,* பெ.(n.) 1. குலத்திற்குரிய பட்டம்; title, insigma peculiar to family. 2. கொடி முதலிய விருது; standard, banner. 3. குலப் பிறப்பால் தோன்றும் சிறப்புப் பண்பு; peculiarity or propensity in an individual which is a family trait (வின்.).

[குலம் + விருது.]

குலவிளக்கு *kula-viḷakku,* பெ.(n.) குலத்தை விளங்கச் செய்பவன்-ள்; shining light of a family. *"கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே குல விளக்கே"* *(திவ்.திருப்பா.17).*

[குலம் + விளக்கு.]

குலவு[1]-தல் *kulavu-,* 9 செ.கு.வி.(v.i.) 1. விளங்குதல்; to shine, gleam to be conspicuous. *"குலவு கோலத்த கொடிநெடு மாடங்கள்"* *(தேவா.794.7).* 2. மகிழ்ச்சி கொள்ளுதல்; to rejoice. *"பாரிடங் குலவிச் செல்ல"* *(கந்தபு.தாரக.18).* 3. உலாவுதல்; to walk, move about. *"எமதன்னையை நினைத்தே குலவினனோ"* *(சிவரக.விசயை.14).* ஒ.நோ.உலவு 4. நெருங்கியுறவாடுதல்; to be on very intimate terms. *அவனோடு குலவுகிறான்* 5. தங்குதல்; to lie, remain. *"பாற்கடலில் குலவுகின்றதோர் பொருளெலாம்"* *(கந்தபு.குமார.4).* 6. வளைதல்; to bend, curve. *"குலவுச்சினைப் பூக்கொய்து"* *(புறநா.11:4).* 7. குவிதல்; to lie heaped, as sand. *"குலவு மணல்"* *(ஐங்குறு.153).*

[குல் → குல → குலவு.]

குலவு[2] *kulavu-,* பெ.(n.) வளைவு; bend, curve. *"குலவுக் கொடுஞ்சிலை"* *(பு.வெ.1:10).*

E. curve, a bend; **L.** curvus, crooked.

[குல் → குலவு.]

குலவுகாசம் *kulavu-kāšam,* பெ.(n.) நாணல் (மலை.) ; kaus.

[குலவு + காசம்.]

குலவேல் *kula-vēl,* பெ.(n.) கஞ்சாங்கோரை (சா.அக.); hoary basil.

[குலம் + வேலி.]

குலவேளை *kula-vēḷai,* பெ.(n.) நல்வேளை (தைலவ.தைல.100); a sticky plant growing in waste places.

[குலம் + வேளை.]

குலவை *kulavai,* பெ.(n.) பண்டிகை நாள்களில் மகளிர் நாவாற் குழறியிடும் மகிழ்வொலி; ululation chorus of shrill sounds made by women by wagging the tongue, uttered on festive occassions (G.Tn.D.135).

[குரவை → குலவை.]

குலனி *kulaṉi,* பெ.(n.) செவ்வந்தி; Indian chaomile (சா.அக.).

[குல் → குலனி.]

குலா *kulā,* பெ.(n.) மகிழ்ச்சி; joy, delight, exultation. *"நிலாவிரி முற்றத்துக் குலவோ டேறி"* *(பெருங்.வத்தவ.12,14).*

[குலவு → குலா.]

குலாகலம் *kulākalam,* பெ.(n.) ஒரு பூடு; a plant. 2. நாய்கள் சிறுநீர் கழிக்கும் முன் முகரும் பூடு; a plant which dogs are fond of smelling before they expell urine (சா.அக.).

[குலவு → குலா + கலம்.]

குலாகுலவாரம் *kulā-kula-vāram,* பெ.(n.) அறிவன் கிழமை; Wednesday. (சோ.க. சொ.அ.மு.).

[குலம் + குலம் + வாரம்.]

குலாங்குலி *kulāṅ-kuli,* பெ.(n.) காவட்டம் புல் (மலை.); citromella grass.

[குலா + அங்குலி.]

குலாமல்லி *kulā-malli,* பெ.(n.) முட்செவ்வந்தி; rose flower. 2. வைத்திய முப்பு; a quintessence salt used in medicine (சா.அக.).

[குலவு → குலா + மல்லி.]

குலாமல்லிச்சுண்ணம் *kulāmalli-c-cuṇṇam,* பெ.(n.) குடற்சுண்ணம். நஞ்சுக் கொடியினின்று தயாரிக்கப்படும் ஒருவகைச் சுண்ண மருந்து; an alkaline prepared from the navel cord of children (சா.அக.).

[குலாமல்லி + சுண்ணாம்.]

குலாயம் *kulāyam,* பெ.(n.) 1. பறவை கட்டுங் கூடு; bird's nest. *"சேனந் தனது குலாயந்தனில்" (கைவல்ய.சத்.124).* 2.மக்களாற் செய்யப்படும் பறவைக்கூடு; bird's cage.

[குலா → குலாயம்.]

குலாரி *kulāri,* பெ.(n.) ஒருவகை வண்டி; charriot, Indian coach.

க.கொலாரு; ம. குலால்; தெ. கொல்லாபண்டி;

[குள் → கொள் → கொள்ளாரி → குலாரி.]

குலாலம் *kulālam,* பெ.(n.) காட்டுச்சேவல்; wild cock. 2. ஒரு ஆந்தை; owl. 3. ஒரு பூடு; a plant. 4. நீலாஞ்சனக் கல்; a blue stone applied as a collyrium to the eyes (சா.அக.).

[குலம் → குலாலம்.]

குலாலன் *kulālaṉ,* பெ.(n.) குயவன்; potter. *"குலாலற் கேற்பப் பெருங்குய மருளி" (பெருங். வத்தவ.9,48).*

[குலவு → குலாவு → குலாள் → குலாளன் → குலாலன்.]

குலாவு[1]**-தல்** *kulāvu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. அங்கு மிங்கும் நடத்தல்; to walk or move about, haunt. 2. நட்பாடுதல்; to be on intimate terms, to be friends. *அவனோடு அதிகமாகக் குலாவுகிறான்.* 3. விளங்குதல்; to shine, to be conspicuous. 4. மகிழ்தல்; to rejoice, exult, delight. 5. நிலை பெறுதல்; to settle, rest. *"பூந்துகில்.... புகைகூடி..... குலாய கொள்கைத்தே" (சீவக.1007).*

[குலவு → குலாவுதல்.]

குலாவு[2]**-தல்** *kulāvu-,* 5 செ.குன்றாவி.(v.t.) கொண்டாடுதல் (பிங்.); to admire, praise, extol.

[குலவு → குலாவு.]

குலாவு[3]**-தல்** *kulāvu-,* செ.கு.வி.(v.i.) வளைதல்; to be bent, curved. *"குலாவணங்கு வில்லெயினர் கோன்" (யாப்.வி.22).*

[குல் → குலவு → குலாவு.]

குலி *kuli,* பெ. (n.) கண்டங்கத்தரி; prickly night - shade (சா.அக.).

[குல் → குலி.]

குலிக்கம் *kulikkam,* பெ.(n.) இலுப்பை; bassia (சா.அக.).

[குல் → குலுக்கு → குலுக்கம் → குலிக்கம்.]

குலிகச்செப்பு *kulika-c-ceppu,* பெ.(n.) சாதிலிங்கம் செப்பு; vexmillion box. *"குலிகச் செப்பன கொம்மை வரிமுலை" (சீவக.641).*

[குலிகம் + செப்பு.]

குலிகம்[1] *kuligam,* பெ.(n.) 1. சாதிலிங்கம்; vermilion. *"பொருங்குலிக மப்பியன" (கம்பரா. வரைக்.25).* 2. சிவப்பு (திவா.); redness.

[குலிக்கம் → குலிகம்.]

குலிகம்[2] *kulikam,* பெ.(n.) இருப்பை (பிங்.); south Indian mahua.

[குலிக்கம் → குலிகம்.]

குலிங்கம் *kuliṅgam,* பெ.(n.) 1. ஒரு நாடு; name of a country. *"தேமரு வலங்காத குவிலங்கரில்" (பாரத.பத்தாம்.27).* 2. ஊர்க்குருவி (சூடா.); sparrow. 3. தீங்கு செய்யலாகாது என்று மற்ற உயிர்கட்குப் போதித்துத் தான் தீங்கிழைக்கும் ஒரு பறவை. (வேதாரணிய சுக்கீவ.40); a fabulous bird which preaches good behaviour, but itself persists in evil doing.

[குல் → குலி → குலிங்கம்.]

குலிசக்குகை *kuliša-k-kugai,* பெ.(n.) அதிக வெப்பத்தைத் தாங்கக் கூடிய பாத்திரம்; crucible made to stand high temperature (சா.அக.).

[குலிச + குகை (குகை = பாத்திரம்).]

குலிசநாயகம் *kuliša-nāyagam,* பெ.(n.) ஒரு லீலை; a kind of coitus (சா.அக.).

[குலிசம் + நாயகம்.]

குலிசபாணி *kulica-pāṇi,* பெ.(n.) 1. இந்திரன்; Indra, as armed with thunde bolt. "தெவ்வடு தீறற் குலிசபாணி" (திருக்காளத்.பு.53:25). (வைரத்தா லாகிய ஆயுதத்தைக் கையிலுடையவன்).

[குலிசம் + பாணி.]

குலிசம்[1] *kulišam,* பெ.(n.) வைரத்தாலாகிய ஆயுதம்; Indra's thunderbolt. *"குலிசத் தமரர்கோன்" (கம்பரா.நகர.4).* 2. வைரம்; diamond. *"வெயில் விடு குலிச கேயூரங்கள்" (திருப்போ.சந். திருப்பள்.9).*

[குல் (குத்துதல்) → குலிசம்.]

குலிசம்[2] *kulišam,* பெ.(n.) 1. கற்பரிச் செய்நஞ்சு; a mineral poison. 2. **இருப்பை (மலை.)** பார்க்க; see *iruppai* 3. **வன்னி (மலை.)** பார்க்க; see vaṇṇi, Indian mesquit.

[குல் → குலிசம்.]

குலிசல் *kulišal,* பெ.(n.) நாகச்செய்ந்நஞ்சு; a mineral poison.

[குல் → குலி →குலிசல்.]

குலிசவேறு *kulica-v-ēṟu,* பெ.(n.) வைரத்தா லாகிய ஆயுதம்; Indra's thunderbolt. *"குலிச வேற்றா லற்றசிறை" (பெரியபு.திருஞான.1015).*

[குலிசம் → குலிசன்.]

குலிசன்[1] *kulicaṉ,* பெ.(n.) இந்திரன்; Indra, as armed with kulišan (குலிசத்தை யுடையவன்.). 2.கற்பரிச் செய்ந்நஞ்சு (சங்.அக.); a mineral poison.

[குலிசம் → குலிசன்.]

குலிசி *kuliši,* பெ.(n.) குலிசத்தையுடைய இந்திரன்; Indra, as armed with kulišan. *"நேமியோ குலிசியோ" (கம்பரா.பிணிவீ.70).*

[குலிசம் → குலிசி.]

குலிஞ்சன் *kuliñjaṉ,* பெ.(n.) உயர்குலத்தோன் (திவா.); man of noble birth.

[குலத்தன் → குலஞ்சன் →குலிஞ்சன் (கொ.வ.).]

குலிஞன் *kuliñaṉ,* பெ.(n.) உயர்குலத்தோன்; man of noble birth.

[குலிஞ்சன் → குலிஞன்.]

குலிந்தம் *kulindam,* பெ.(n.) குளிந்தம் என்னும் நாடு (சது.); an ancient.

[குளிந்தம் → குலிந்தம்.]

குலிரம் *kuliram,* பெ.(n.) 1. நண்டு; crab. 2.புற்று நோய்; cancer (சா.அக.).

[குல் → குலிர் → குலிரம்.]

குலிரவம் *kuliravam,* பெ.(n.) கழலை; புற்றுப் போல் வளரக்கூடிய ஓர் கட்டி; an internal abscess or tumour (சா.அக.).

[குலிர் → குலிரவம்.]

குலிலி *kulili,* பெ.(n.) வீரமுழக்கொலி; shout of triumph, etc., as on a battle field. *"குலிலியிட்ட களத்தில்" (திருப்பு.271).*

[குல் → குலில் → குலி.]

குலிவம் *kulivam,* பெ.(n.) இலுப்பை; mahua tree. 2. வன்னி வயிரம்; core of vanni tree.

[குல் → குலி → குலிவம்.]

குலின் *kuliṉ,* பெ.(n.) காசித்தும்பை; balsam flower (சா.அக.).

[குல் → குலின்.]

குலீரம் *kulīram,* பெ.(n.) பனைமரம்; palmyra tree (சா.அக.).

[குல் → குலிர் → குலிரம் → குலீரம்.]

குலுக்கம் *kulukkam,* பெ.(n.) ஒருவகைப் பறவை; an unknown bird (சா.அக.).

[குல் → குலுக்கு → குலுக்கம்.]

குலுக்கி *kulukki,* பெ.(n.) பிலுக்குபவள்; gay, dressy, mincing woman.

தெ. குலுக்கலாடி

[குலுக்கு → குலுக்கி.]

குலுக்கு-தல் *kulukku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. அசைத்தல்; to shake, as a vessel, a palanquin, *to shake up and down, to agitate, to shake together in a mass.* *"நெடுவரை குலுக்கிய குலத்தோளை" (கம்பரா.ஊர்தேடு.* 209). 2. குலுங்கச் செய்து கலத்தல்; to mix by shaking together, as in a bottle.

[குலுங்கு → குலுக்கு.]

குலுக்கு[2] *kulukku,* பெ.(n.) 1. அசைப்பு; shake, jolt. 2.பிலுக்கு; affected gestures, foppish airs.

தெ. குலுக்கு, குலு; **க.** குலுக்கு.

[குலுங்கு → குலுக்கு.]

குலுக்குக்காரி *kulukku-k-kāri,* பெ.(n.) பிலுக்குபவள்; gay, dressy, mincing woman.

[குலுக்கு + காரி.]

குலுக்குச்சீட்டு *kulukku-c-cīṭṭu,* பெ.(n.) சீட்டு களைக் குலுக்கிப்போட்டு எடுத்தவருக்குத் தொகை கொடுக்குஞ் சீட்டு வகை; chit-fund conducted on basis of casting lots.

[குலுக்கு + சீட்டு.]

குலுக்கெனல் *kulikkenal,* பெ.(n.) சிரித்தற்குறிப்பு; onom. expr. signifying laughter. *குலுக்கென்று நகைத்தான்.*

[குலுக்கு + எனல்.]

குலுக்கை *kulukkai,* பெ.(n.) குதிர்; circular earthen bin for storing grain (இ.வ.).

[குலுக்கு → குலுக்கை.]

குலுகம் *kulugam,* பெ.(n.) நாக்கில் படிந்த வெண்படலம்; the fur of the tongue. It is a coating seen upon the tongue in various diseases (சா.அக.).

[குல் → குலுகம்.]

குலுகுலு-த்தல் *kulukulu-,* 2 செ.கு.வி.(v.i.) 1. குறுகுறுவென்று செல்லுதல்; to creep or crawl noisily, as vermin in a basket. *பாம்பு பெட்டிக் குள்ளே குலுகுலுக்கென்றது.* 2. குடுகுடென் றொலித்தல்; to make a buzzing sound, as anything in the ear. காதுக்குள் ஏதோ குலுகுலுக் கின்றது.

[குரு + குரு.]

குலுகுலுப்பு *kulu-kuluppu,* பெ.(n.) தினவு; itching (சா.அக.).

[குலு + குலு. குறுகுலு → குலுகுலுப்பு.]

குலுங்கு-தல் *kuluṅgu-,* 8 செ.கு.வி.(v.i.) 1. அசைதல்; to be shaken, agitated. *"கொங்கை குலுங்கநின் றுந்தீபற" (திருவாச.14:11);* shudder, quake with fear. 3. நிறைதல்; to abound, to be full. *அந்த மரம் குலுங்கக் காய்த்திருக்கிறது.*

[குல் → குலு → குலுங்கு.]

குலுங்குடை-த்தல் *kuluṇ-guḍai-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஏலத்தொகையை ஏறவொட்டாமல் தடுத்தல்; to conspire together against the rise of prices at an auction.

[குலுங்கை + உடை.]

குலுத்தம் *kuluttam,* பெ.(n.) கொள்ளு (திவா.); horse gram.

[குலு → குலுத்தம்.]

குலுத்திகா *kuluttigā,* பெ.(n.) **கருங்கொள்ளு** பார்க்க; see *karuṅkoḷḷu.*

[குலுத்திகை → குலுத்திகா.]

குலுப்பை *kuluppai,* பெ.(n.) தானியம் சேமித்து வைப்பதற்கான உறைவடிவக் களஞ்சியம் (கட்.தொ.வரி.); circular earthern fin for grain.

மறுவ. குலுக்கை. *[குலு → குலுப்பை.]*

குலுமம் *kulumam,* பெ.(n.) 1. மண்ணீரல், மலக்குடல் முதலியவற்றின் பெருக்கத்தால் உண்டாகும் வயிற்றுநோய் வகை; chornic enlargement of the spleen; grandular enlargement in the abdomen, as of the mesentric gland. 2. 45 காலாட்களும், 27 குதிரைகளும், 9 தேர்களும், 9 யானைகளும் அடங்கிய படைப்பிரிவு (சூடா.); a division of an army consisting of 45 foot, 27 horses, 9 chariots and 9 elephants.

[குல் → குலு → குலுமம்.]

குலுமமூலம் *kulima-mūlam,* பெ.(n.) இஞ்சி (மலை.); Jamaica ginger.

[குலுமம் + மூலம்.]

குலுமை *kulumai,* பெ.(n.) **குலுக்கை** பார்க்க (இ.வ.); see *kulukkai.*

[குலு → குலுமை.]

குலை-தல் *kulai-,* 1 செ.கு.வி.(v.i.) 1. அவிழ்தல்; to become loose; to be dishevelled, unravelled. *"கொண்டை குலைந்து போயிற்று."* 2. கலைதல்; to disperse, as a crowd, to scatter. *"கூட்டம் குலைந்தது."* 3. நிலைகெடுதல்; to be deranged, disordered, upset, thrown into confusion. *"கோளி பங்கய மூழ்கக் குலைந்தவால்" (கம்பரா. வரைக்.621).* 4. மனங்குழைதல்; to lose one's heart become melted, softened. *"முளரிமொட்டென்று குலையுங் காமக்குருடர்க்கு" (பட்டினத்.திருப்பா. கஞ்சித்தரு.அடி.233).* 5. நடுங்குதல்; to trumble, shudder, quiver, shiver. *"வேழம் எதிரக் குலைவரால்" (இரகு.நகர.56).* 6. அழிதல்; to be annihilated, destroyed, put an end to. *"உலகெலாங் குலைந்தன்று" (கந்தபு.திருநகரப்.11).* 7. கோபக்குறி காட்டுதல் (பிங்.); to show signs of anger.

[குலை → குலைதல்.]

குலை[2]-த்தல் *kulai-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. அவிழ்த்தல்; to untie, loosen, dishevel. 2. பிரித்தல்; to rake down as a scaffolding, to remove, as the decorations of a car after festival. 3. தாறுமாறாக்குதல்; to derange, disturb. 4. அழித்தல்; to destroy, ruin, to violate, as chastity. 5. வீரத்தைக் குறைத்துப் பேசல்; to dishearten, discourage, disconcert. 6. அசைத்தல்; to shake agitate.

[குலை → குலைத்தல்.]

குலை[2]-த்தல் *kulai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. நாய் குலைத்தல்; to bark, as a dog. 2. குழறிப்பேசுதல்; to talk inchoerently and confusedly (கொ.வ.).

[குல் → குலை.]

குலை[3]-த்தல் *kulai-,* 4 செ.குன்றாவி (v.i.) குலையாக ஈனுதல்; to shoot forth in a bunch, as a plantain. *"முல்லை குலைத்தனகாண்" (திணை மாலை.112).*

[குலை → குலைத்தல்.]

குலை[4] *kulai,* பெ.(n.) 1. கொத்து; cluster, bunch as of fruits, flowers. *"நீடுகுலைக் காந்தள்" (பெரும்பாண்.371).* 2. ஈரற்குலை முதலியன; viscera in the abdomen,intestines. *"வீரர் குலைகளற்றி" (அரிச்.4,வேட்டஞ்.48).*

[குல் → குலை.]

குலை[5] *kulai,* பெ.(n.) 1. செய்கரை; artificial bank, ridge, dam. *"நீரைக் கொடுவந்து.... குலை செய்து

தகையவொண் ணாதபடி" (திவ்.திருமாலை. 24.வியா.). 2. பாலம்; bridge, causeway. *"குலை கட்டி மறுகரை யதனாலேறி" (திவ்.பெருமாள்.10:7).*

[குல் → குலை.]

குலை[6] *kulai,* பெ.(n.) 1. வில்லின் குதை (பிங்.); notch in a bow to keep the string in check. 2. நாண்; bow string. *"குலையிழி பறியாச் சாபத்து" (பதிற்றுப்.24:12).*

[குல் → குலை.]

குலைக்கட்டி *kulai-k-katti,* பெ.(n.) மண்ணீரல் பெரியதாக வீங்குதல்; enlargement of the spleen (சா.அக.).

[குலை + கட்டி.]

குலைக்கல் *kulai-k-kal,* பெ.(n.) கோரோசனை; bezoar (w.).

[குலை + கல்.]

குலைக்கால் *kulai-k-kāl,* பெ.(n.) முடவாட்டுக்கால்; coral stone. 2. ஒருவகை மரம்; an unknown tree (சா.அக.).

[குலை + கால்.]

குலைகுலை-தல் *kulai-kulai-,* 4 செ.கு.வி.(v.i.) பதறுதல்; to tremble; to be agitated greatly, as at sad news, to be in a state of trepidation. *"உள்ளங் குலைகுலைந்து" (சீகாளத்.4, கன்னி.124).*

[குலை + குலை.]

குலைச்சல் *kulaiccal,* பெ.(n.) அழிவு; destruction, ruin (இ.வ.).

[குலைத்தல் → குலைச்சல்.]

குலைசூலை *kulai-šūlai,* பெ.(n.) ஈரற் குலையில் உண்டாகும் ஒரு குத்தல் நோய்; a disease of the liver. 2. நெஞ்சுவலி; chest ache (சா.அக.).

[குலை + சூலை.]

குலைஞ்சி *kulaiñji,* பெ.(n.) பனஞ்செறும்பு; palmyra spathe.

[குலை → குலைஞ்சி.]

குலைத்துக்காட்டு-தல் *kulaittu-k-kāttu-,* 11 செ.கு.வி. (v.i.) 1. குலைத்து அறிவித்தல்; to give notice, warm, as dogs by barking. 2. பூத பைசாசங்களின் வரவைக் கருநாய் குறிப்பிடுதல்; to point out demons in times of epidemics, as black dogs whose sight is supposed to be especially keen.

[குலைத்து + காட்டு-.]

குலைதள்ளு-தல் *kulai-tallu-,* 7 செ.கு.வி.(v.i.) குலையாக ஈனுதல்; to shoot forth in clustors, bunches, as fruits, flowers, etc (கொ.வ.).

[குலை + தள்ளு-.]

குலைதறி *kulai-ttari,* பெ.(n.) குலையை ஒரே வெட்டாக வெட்டுகை; cutting of a bunch of fruits at one stroke (w.).

[குலை + தறி.]

குலைநெரியற்றேங்காய் *kulai-neriyarrēngāy,* பெ.(n.) குலை நெருக்கத்தால் சிறுகிய தேங்காய்; coconut not developed to its full size on account of pressure in the bunch.

[குலை + நெரியல் + தேங்காய்.]

குலைநோய் *kulai-nōy,* பெ.(n.) **குலையெரிவு** பார்க்க; see *kulai-y-erivu.*

[குலை + நோய்.]

குலைப்பதைப்பு *kulai-p-padaippu,* பெ.(n.) நெஞ்சுத் துடிப்பு; palpitation of the heart. 2. பயம், குளிர் இவற்றால் ஈரற்குலை காணும் நடுக்கம்; a trembling movement of the internal organs, due to nervous anxiety, fear, cold or other causes (சா.அக.).

[குலை + பதைப்பு.]

குலைப்பரு *kulai-p-paru,* பெ.(n.) குலையிலுண்டாகும் பரு; a tumour or other swelling in the viscera (சா.அக.).

[குலை + பரு.]

குலைப்பன் *kulaippaṉ,* பெ.(n.) 1. குளிர்காய்ச்சல்; shivering fits in fever, rigor. 2. கக்குவான்; whooping cough.

[குலை → குலைப்பன்.]

குலைப்பு[1] *kulaippu,* பெ.(n.) நடுக்குவாதம்; shivering fits. *"முயலகன் குலைப்பொடு" (திருப்பு.252).*

[குலை → குலைப்பு.]

குலைப்பு[2] *kulaippu,* பெ.(n.) குரைக்கை; barking, snarling (கொ.வ.).

[குலை → குலைப்பு.]

குலைப்புநடுக்குவாதம் *kulaippu-naḍukku-vādam,* பெ.(n.) shaking palsy. 2. நடுக்குவலி; shivering fits. 3. குரைக்கை; bark.

[குலைப்பு + நடுக்கு + வாதம்.]

குலைபடுவன் *kulai-paḍuvaṉ,* பெ.(n.) ஈரற்குலைப் புண்; tumours, ulcers, in liver or lungs.

[குலை + படுவன்.]

குலைபிடித்தல் *kulai-p-piḍital,* 4 செ.வி. (v.t.) குலையை இழுத்துப் பிடிக்கும் ஒரு நோய்; spasm of any of the visceral organs (சா.அக.).

[குலை + பிடி–.]

குலைபோடு–தல் *kulai-podu-,* 5 செ.கு.வி.(v.i.) ***குலைதள்ளுதல்*** பார்க்க; see *kulai-taḷḷutal.*

[குலை + போடு–.]

குலைமரம் *kulai-maram,* பெ.(n.) இடலை மரம்; iḍalai.

[குலை + மரம்.]

குலைமுட்டி *kulai-mutti,* பெ.(n.) குலையெரிவு பார்க்க; see *kulai-y-erivu*

[குலை + (முட்டு) முட்டி.]

குலைமுட்டிநோய் *kulai-mutti-nōy,* பெ.(n.) மூச்சுப்பை இறுகுவதனால் மூச்சுத் திணறும்படி செய்யும் கால்நடைகளுக்கு வரும் நோய்; a disease in caltle marked by congestion of the lungs with hard breathing (சா.அக.).

[குலை + முட்டி + நோய்.]

குலையாத்திரம் *kulai-y-āthiram,* பெ.(n.) தீராப்பசி; insatiable appetite, craving for food.

[குலை + ஆத்திரம்.]

குலையிலுதை–த்தல் *kulaiyilutai-,* 4 செ.கு.வி. (v.i.) வயிற்றிலுதைத்தல்; kicking in the pit of the stomach (சா.அக.).

[குலையில் + உதை–.]

குலையுயிர் *kulai-y-uyir,* பெ.(n.) இருதயத்தை விட்டுப் பிரியும் உயிர்; life expected to leave the heart, life in danger. குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்தான் (சா.அக.).

[குலை + உயிர்.]

குலையெரிவு[1] *kulai-y-erivu,* பெ.(n.) மார்பெரிச்சல் (ஆங்.மருத்.); heart burn, irritation in the chest.

[குலை + எரிவு.]

குலையெரிவு[2] *kulai-y-erivu,* பெ.(n.) செரியாமையினால் நெஞ்செரிச்சலையுண்டாக்கும் ஒரு நோய்; heart burning arising from dyspepsia. 2. வயிற்றில் ஏற்படும் ஒரு குழப்பம்; an uneasy or painful sensation in the stomach (சா.அக.).

[குலை + எரிவு.]

குலையோடே *kulai-y-ōdē,* பெ.எ.(adv.) முழுதும்; wholly without exception, root and branch *"கொத்தோடே குலையோ" (கொ.வ.).*

[குலை + ஒடு + ஏ.]

குலைவட்டம் *kulai-vaṭṭam,* பெ.(n.) 1. அம்புக் குதை; notch at the end of an arrow. *"குலைவட்டக் குருதியம்பு" (சீவக.2184).*

[குலை + வட்டம்.]

குலைவயிறு *kulai-vayiṟu,* பெ.(n.) ஈரலடி; the bottom portion of the liver, adjoining the stomach (சா.அக.).

[குலை + வயிறு.]

குலைவளி *kulai-vaḷi,* பெ.(n.) வளிநோய் வகை; poricarditis.

[குலை + வளி.]

குலைவற்றல் *kulai-vaṟṟal,* பெ.(n.) ஈரற்குலை வற்றுதல்; atrophy of the liver. ஈரல் குலை வற்றக் கத்தினேன் (சா.அக.).

[குலை + வற்றல்.]

குலைவாயு *kulai-vāyu,* பெ.(n.) ***குலைவளி*** பார்க்க; see *kuḷaivaḷi.*

[குலை + வாயு.]

குலைவாழை *kulai-vāḻai,* பெ.(n.) ஒருவகை வாழை; a species of plantain. *"குலைவாழை பழுத்த" (சீவக.1191).*

[குலை + வாழை.]

குலைவெட்டி *kulaiveṭṭi,* பெ.(n.) வரிவகை; a tax. *"குலைவெட்டியும் குரப்புவெட்டியும்" (S.I.I.viii.322).*

[குலை + வெட்டி.]

குலைநோய் *kulai-nōy,* பெ.(n.) ஈரல்நோய்; liver complaint.

[குலை + நோய்.]

குலைவியாதி *kulai-viyati,* பெ.(n.) ***குலைநோய்*** பார்க்க; see *kuḷainōy.*

[குலை + வியாதி.]

குலைவிலை *kulai-vilai,* பெ.(n.) மரத்திலிருக்கும் போதே பனங்காய்க் குலையை விற்கை; sale of palmyra fruits while on the tree.

[குலை + விலை.]

குலோத்துங்கசோழனுலா *kulōttunga-cōḻaṉ-ulā,* பெ.(n.) பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஆண்ட இரண்டாங் குலோத்துங்க சோழன்மேல் ஒட்டக் கூத்தர் பாடிய உலாச் சிற்றிலக்கியம்; a poem on the cholā king kulōttungā II by Kūttar, 12th C.

[குலோத்துங்க சோழன் + உலா.]

குலோத்துங்கன் *kulōthuṅgaṉ,* பெ.(n.) 1. குலத்திற் சிறந்தவன்; eminent person of a family. 2. சோழவரசர்கள் சிலர் பூண்ட பெயர்; name of some Chola kings (Ins.)

[குலம் + உத்துங்கன்.]

குலோமம் *kulōmam,* பெ.(n.) 1. பக்கவிலாவின் சவ்வு; costal membrance. 2. வலது பக்கத்துப் கீழ்ப் பகுதியில் குடித்த நீர், இறங்கி நிற்குமிடம்; that portion at the bottom of the stomach on the right side where the water drunk collects. (சா.அக.).

[குலை → குலைமம் → குலோமம்.]

குலோமன் *kulōmaṉ,* பெ.(n.) வலது நுரையீரல்; the right lung (சா.அக.).

[குலை → குலைமம் → குலோமம் → குலோமன்.]

குலோமி *kulōmi,* பெ.(n.) வெள்ளறுகு (மலை.); small chiretta, white doob grass.

[குல் → குலமி → குலோமி.]

குவங்கம் *kuvangam,* பெ.(n.) 1. ஈயம்; lead. 2. காரீயம்; black lead (சா.அக.).

[குருவங்கம் → குவங்கம்.]

குவங்கியா *kuvangiyā,* பெ.(n.) ஈயத்தண்டுச் செடி, கிண்டல் கொடி (சா.அக.); a creeper.

[குருவங்கியம் → குவங்கியா.]

குவசிவேம்பின்பட்டை *kuvaši-vēmbiṉ-paṭṭai,* பெ.(n.) மலை வேம்பின் பட்டை; bark of quassia (சா.அக.).

[குவடு → குவட்டு → குவத்து → குவச்சி → குவேசி → குவேம்பின்பட்டை.]

குவட்டிடைக்குச்சு *kuvaṭṭiḍai-k-kuccu,* பெ.(n.) தாம்பூரச்சிகை; an unknown plant with alchemical virtues (சா.அக.).

[குவட்டு + இடை + குச்சு.]

குவட்டிலுதித்தோன் *kuvaṭṭil-udittōṉ,* பெ.(n.) தங்கத்தைக் கரைக்கும் வேதிப்பொருள்; a mineral - solvent of gold.

[குவடு → குவட்டில் + உதித்தோன்.]

குவட்டிலுறுசாமை *kuvaṭṭiluṟušāmai,* பெ.(n.) கலைச் செம்பு (சா.அக.).

[குவட்டில் + உறு + சாமை.]

குவட்டிற்புளிதம் *kuvaṭir-puḷidam,* பெ.(n.) சுங்கச் செய்ந்நஞ்சு; a mineral poison.

[குவட்டில் + புளிதம்.]

குவட்டினியம் *kuvaṭṭiṉiyam,* பெ.(n.) நீலாஞ்சனக் கல்; sulphuret of antimony (சா.அக.).

[குவடு → குவட்டு + இன் + ஈயம்.]

குவட்டினுறு கண்ணி *kuvaṭṭiṉūṟukaṇṇi,* பெ.(n.) கோவைக் கொடி; Indian creeper (சா.அக.).

[குவட்டின் + உறு + கண்ணி.]

குவட்டுக்கல் *kuvaṭṭu-k-kal,* பெ.(n.) மலையில் மேயும் ஆடுகளின் மணத்தி (கோரோசனை); bezoar found in sheep feeding in mountains (W.).

[குவடு → குவட்டு + கல்.]

குவட்டுக்கூர்மை *kuvaṭṭu-k-kūrmai,* பெ.(n.) தொட்டிச் செய்ந்நஞ்சு; a mineral poison.

[குவடு → குவட்டு + கூர்மை.]

குவட்டுநுண்முலைச்சி *kuvaṭṭu-nuṉ-mulaicci,* பெ.(n.) ***குவட்டு முலைச்சி*** பார்க்க; see *kuvaṭṭu mulaicci.*

[குவடு → குவட்டு.]

குவட்டுமுலைச்சி *kuvaṭṭu-mulaicci,* பெ.(n.) தங்கத்தைக் கரைக்கும் ஒரு வேதிப் பொருள் (யாழ்.அக.); a mineral solvent of gold.

[குவட்டு + முலைச்சி.]

குவடு *kuvaḍu,* பெ.(n.) 1.திரட்சி (பிங்.); roundness, rotundity anything round. 2. மலை (திவா.); mountain hill. 3. குன்று (பிங்.); hillock. 4. மலையுச்சி (திவா.); top of a hill, peak. 5. மரக் கிளை (பிங்.); branch of a tree. 6. சங்கச் செய்நஞ்சு (சங். அக.); a mineral poison.

ம. குவடு ஒ.நோ.குவவு.

[குவி → குவ்வு → குவடு.]

குவடுறு *kuvaḍuṟu,* பெ.(n.) ***கலைச் செம்பு*** (சா.அக.) பார்க்க;see *kalaiccembu.*

[குவடு + உறு.]

குவம் *kuvam,* பெ.(n.) ஆம்பல் (மலை.); water-lily.

[கூவம் → குவம்.]

குவரம் *kuvaram,*பெ.(n.) துவர்ப்பு; astringence (சா.அக.).

[துவர் → குவர் → குவரம்.]

குவரி *kuvari,* பெ.(n.) வாலுளுவை (சா.அக.);black oil tree.

[குவர் → குவரி.]

குவரிகுண்டல் *kuvarikuṇḍal,*பெ.(n.) வாலுளுவை (மலை.); black oil tree.

[குவரி + குண்டல்.]

குவரியா *kuvariyā,*பெ.(n.) பூனைக்காலி; cowhage plant (சா.அக.).

[குவரி → குவரியா.]

குவலகம் *kuvalagam,* பெ.(n.) நெய்தற் பூ; white Indian water lily (சா.அக.).

[குவலி → குவலிகம் → குவலகம்.]

குவலந்தம் *kuvalandam,*பெ.(n.) செங்கழுநீர்; red Indian water - lily (சா.அக.).

[குவலி → குவலந்தம்.]

குவலம் *kuvalam,* பெ.(n.) ஒருவகைச் செய்நஞ்சு; a mineral poison.

[குவு → குவல் → குவலம்.]

குவலமயம் *kuvala-mayam,* பெ.(n.) மருவு; organy, an aromatic shrub (சா.அக.).

[குவலம் + அயம்.]

குவலயாபீடம் *kuvalayāpiḍam,*பெ.(n.) கம்சன் கண்ணனைக் கொல்லும்படி ஏவிய யானை; the elephant which *kamsā* despatched against *krishnā.* *"கூற்றமென்னமேற் றூண்டினன் குவலயாபீடம்"* *(பாகவத.11, கஞ்சனைக்.14).*

[குவலயம் + பீடம்.]

குவலி *kuvali,*பெ.(n.) இலந்தை (சூடா.) ; jujubetree.

[குவல் → குவலி.]

குவலிடம் *kuvaliḍam,*பெ.(n.) ஊர் (சது.); village.

[குவவு → குவலிடம்.]

குவலியம் *kuvalayam,* பெ.(n.) 1. நெய்தல் (திவா.); white Indian water-lily. 2. கருங்குவளை; blue nelumbu. *"குவலியத்திருமலர்" (சூடா.).* 3. செங்குவளை; purple Indian water-lily (W).

[குவலி → குவலியம்.]

குவலை *kuvalai,*பெ.(n.) 1. கஞ்சா (மலை.); Indian hemp. 2. துளசி (மலை.); sacred-basil.

[குவல் → குவலை.]

குவலையன் *kuvalaiyaṉ,* பெ.(n.) துரிசு; blue vitriol.

[குவலை + அன்.]

குவவு-தல் *kuvavu-,* 10 செ.கு.வி. (v.i.) குவிதல் (சூடா.); to be piled up. 2. குவித்தல்; to heap up, gather. *"காட்டகத் தமிர்துங் காண்வரக் குவவி" (சீவக.2110).*

[குல் → குள் → குவ் → குவவு.]

குவவு[2] *kuvavu.* பெ.(n.) 1. திரட்சி; roundness, fullness, plumpness. *"ஓங்கு மணற் குவவுத் தாழை" (புறநா.24).* 2. குவியல் (பிங்.); heap, pile. 3. கூட்டம்; assemblage, collection, clump, group army (பதிற்றுப் 84,20). 4. ஒன்றோடொன்று பிணைகை; intertwining. *"குவவுக்குர லேனல்" (மலைபடு.108).* 5. பெருமை (சூடா.); greatness, largeness. 6. நிலவுகம் (சது.); earth. 7. மேடு; mound, hillock (W).

[குல் → குள் → குவ் → குவவு.]

குவளச்சி *kuvaḷacci,* பெ.(n.) புற்றாஞ்சோறு (யாழ்.அக.); comb of white ant's nest.

[குவள் → குவளச்சி.]

குவளம் *kuvaḷam,* பெ.(n.) வில்வம்; bael tree (சா.அக.).

[குவள் + குவளம்.]

குவளை[1] *kuvaḷai,* பெ.(n.) 1. கருங்குவளை; blue nelumbo. *"குவளை.... கொடிச்சி கண்போன் மலர்தலும்" (ஐங்குறு.299).* 2.செங்கழுநீர் ; purple Indian water-lily. *"விளக்கிட்டன்ன கடிகமழ் குவளை" (சீவக.256).* 3. ஒரு பேரெண்; a large number. *"நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும் நுதலிய செய்குறியீட்டம்" (பரிபா.2:13).*

[குவள் → குவளை.]

குவளை[2] *kuvaḷai,* பெ.(n.) 1. அணிகளில் மணி பதிக்குங்குழி; socket or bed for a gem in a jewel. 2. அக்கமணி முதலியன பதிக்குங் கடுக்கண் குவளை; socket in an ear ring for insetting *rudrākša* or other bead.3.மகளிர் கழுத்தணிகளில் ஒன்று; a neck ornament (இ.வ.). 4. கண்குழி; socket of the eye. 5. கண்ணின் மேலிமை;eyelid. 6. கண்ணின் மூக்கடி மூலை; inner corner of the eye (இ.வ.). 7. ஒருவகைப் பாத்திரம்; wide-mouthed vessel, cup. 8. பாத்திரத்தின் விளிம்பு; brim of a vessel.

[குவள் → குவளை.]

குவளைக் கடுக்கண் *kuvaḷai-k-kaḍukkaṉ,* பெ.(n.) மணியழுத்தின கடுக்கண்வகை; ear-ring with a bead or gem enchased in it.

[குவளை + கடுக்கன்.]

குவளைக்காசம் *kuvaḷai-k-kāsam,* பெ.(n.) புருவம் வலித்து குத்தலுண்டாகிக் கனத்து, கடைக்கண் வீங்கி பார்வை நீலநிறமடைந்து தலைவலி உண்டாகி, வெளிவிழியைச் சுற்றி சிறு முளைகள் எழும்பும் ஓர் கண்ணோய்; a disease of the eyes characterised by the following symptoms viz pain in the eyebrows, piercing pain and heaviness of the eye, swelling of the angle of the eye, blue tint in the lens, head-ache, and small vesicle on the white of the eye (சா.அக.).

[குவளை + காசம்.]

குவளைத்தாரான் *kuvaḷai-t-tārāṉ,* பெ.(n.) தருமன் (சூடா.); lit., one who wears kuvalai garland.

[குவளை + தாரான். குவளை = மாலையணிந்தவன்.]

குவளைமலை *kuvaḷaimalai,* பெ.(n.) காரீய மலை; mountain containing black lead-ore (சா.அக.).

[குவளை + மலை.]

குவளைமாலையர் *kuvaḷai-mālaiyar,* பெ.(n.) வேளாளர் (குவளை மாலையணிந்தோர்); lit., those who wear kuvalai garland (வின்.).

[குவளை + மாலையர்.]

குவளையச்சு *kuvaḷai-y-accu,* பெ.(n.) கடுக்கனில் குவளை அமைத்தற்குரிய அச்சு; mould for making the kuvalai of an ear-ring.

[குவளை + அச்சு.]

குவளையெலும்பு *kuvaḷaiyelumbu,* பெ.(n.) கண்குழி முன்பாக இருக்கும் எலும்பு; socket bone of the eye (சா.அக.).

[குவலை + எலும்பு.]

குவளைவிப்புருத்தி *kuvaḷaivi-p-purutti,* பெ.(n.) 1.இமை கனத்து, கடைக்கண் குத்தல், சீழ்வடிதல், தினவெடுத்தல், கண்ணுறுத்தல், விழிக்க வொட்டாமை, கண் சிவந்து எரிதல் முதலிய குணங்களைக் காட்டும் நோய்; disease of the eye lids accompanies by thickeing of the lids, pain in the corner of the eye, muco-prulent discharge intching, irritation, inablity to open the eyes. 2. இடுப்பு, முழங்கால், கைகள், விலா, நெஞ்சு, முதுகு. இவ்விடங்களில் வலியுண்டாகி, குதத்தில் குத்தலை உண்டாக்கி சீழ் ஒழுகும் ஒரு கோப்பு; a disease marked by pain in the groin, the limbs

chest and in the anus attended with discharge of pus (சா.அக.).

[குவளை + விப்புருத்தி.]

குவளைவீக்கம் *kuvaḷai-vīkkam,* பெ.(n.) கண் குவளை வீக்கம்; swelling over the socket of the eye. 2. இமை வீக்கம்; swelling of the eye-lid (சா.அக.).

[குவளை + வீக்கம்.]

குவா *kuvā,* பெ.(n.) ஆரொட்டி ; east Indian arrowroot.

[குவவு + குவா.]

குவாக்குவாவெனல் *kuva-k-kuvā-v-eṉal,* பெ.(n.) அறைக்குழந்தையின் அழுகைக் குறிப்பு; onom. expr. signigying squalling crying, as a new-born infant.

[குவா + குவா + எனல்.]

குவாகம்[1] *kuvāgam,* பெ.(n.) கமுகு (மலை.); Arecapalm.

[கமுகு → கமுகம் → குவாகம் (கொ.வ.).]

குவாகம்[2] *kuvāgam,* பெ.(n.) ஒரு வகைப் பிசின் மரம்; lignum-vitae.

[குவ்வு → குவ்வகம் → குவாகம்.]

குவாகு *kuvāgu,* பெ.(n.) பேராமல்லி; large tubed jasmine (சா.அக.).

[குவவு → குவாகு.]

குவாகுலம் *kuvākulam,* பெ.(n.) **ஒட்டகம்** (சா.அக.) பார்க்க; see *oṭṭagam.*

[குவாகு → குவாகிலம் (குவாகுமரம் போல் நெட்டையானது).]

குவாசகம் *kuvāśagam,* பெ.(n.) பூனை முட்குறண்டி; a thorny shrub (சா.அக.).

[குவ்வு + சாகம்.]

குவாசவம் *kuvāśavam,* பெ.(n.) மணித்தக்காளி; black-berried solanum (சா.அக.).

[குவ்வு + ஆசவம்.]

குவசியாசக்கை *kuvaśiyācakkai,* பெ.(n.) ஒரு மரத்தின் கசப்புச் சக்கை; the bark of quassiar (சா.அக.).

[குவச்சியம் + சக்கை.]

குவாட்சுக்கல் *kuvāṭccukal,* பெ.(n.) படிகக்கல்; a name given to the purer variety of silica such as rock crystal etc (சா.அக.).

[குவாட்டி + கல் – குவாட்டிக்கல் → குவாட்சுக்கல் (கொ.வ.).]

குவாட்டி *kuvāṭṭi,* பெ.(n.) ஒரு வகைச் சிப்பி; oyster.

[கவை → கவைத்தி → கவாட்டி → குவாட்டி.]

குவாதநூல் *kuvāda-nūl,* பெ.(n.) வடமொழியில் எழுதப்பெற்ற ஒரு மூலிகை நிகண்டு; a herbal dixtionary in sanskrit (சா.அக.).

[குவாதம் + நூல். மருந்துச் சாறுகள் காய்ச்சி வடிப்பது தொடர்பான நூல்).]

குவாதம்[1] *kuvādam,* பெ.(n.) கியாழம் (தைலவ. தைல.114); decoction, extract.

[குய் + ஓதம் – குயோதம் → குயாதம் → குவாதம்.]

குவாதம்[2] *kuvādam,* பெ.(n.) வீண்பேச்சு; captious argument, perverse talk.

[குறு + வாதம் – குறுவாதம் → குவாதம்.]

குவாதி *kuvādi,* பெ.(n.) கொதிக்க வைக்கப் பயன்படுத்தும் பாண்டம்; boiling pot (சா.அக.).

[குய் + ஆதி – குயாதி → குவாதி.]

குவாதிகம் *kuvādigam,* பெ.(n.) பால் சேர்ந்த கியாழம்; a decoction made with milk (சா.அக.).

[குய்யாதி → குய்யாதிகம் → குயாதிகம் → குவாதிகம்.]

குவாதிகத்திரவம் *kuvādiga-t-tiravam,* பெ.(n.) சாராயம்; a spiritious liquor.

[குவாதிகம் + திரவம்.]

குவாதிதம் *kuvādidam* பெ.(n.) மஞ்சள், பெருங் காயம், பால் இவைகள் சேர்ந்த கியாழம்; a decoction prepared with turmeric, asafoetida and milk. 2. தேன் சேர்ந்த மது; a spiritious liquor prepared with honey (சா.அக.).

[குவாதிகம் → குவாதிதம்.]

குவாது *kuvādu,* பெ.(n.) வீண்பேச்சு; fallacious argument. *"அசடு மாதர் குவாதுசொல் கேடிகள்" (திருப்பு. 479).*

[குறு + வாது. குறுவாது → குவாது.]

குவாயு *kuvāyu,* பெ.(n.)1. நோயாளியின் உடம்பி னின்று வீசும் நச்சுக் காற்று; a volatile deletrious principle arising from the bodies of the sick. 2.நச்சுக் காய்ச்சல்; malaria (சா.அக.).

[குல் → குறு → வாயு.]

குவால் *kuvāl,* பெ.(n.) 1. குவியல் (பிங்.); heap, pile. 2. கூட்டம்; collection, group. *"மரகதக் குவாஅன் மாமணிப் பிறக்கம்" (திருவாச.3.1:24).* 3.மேடு (திவா.); mound, hillock. 4. மிகுதி; abundance, excess. *'இத்தையே திருவுள்ளத்திலே குவாலாகக் கொண்டு' (ஈடு.2.7:3).* 5. நெற்போர் (திவா.); heap of threshed paddy.

[குவை → குவால்.]

குவி[1]-தல் *kuvi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கூம்புதல்; to close, as flowers by night. *"குவிந்த வண்குமுதங் களே" (கம்பரா. கைகேசி.53).* 2.வாயினாற் கூடுதல்; to assume a circular form, as the lips in kissing or in pronouncing labial vowels. *"மணித்துவர் வாயிதழைக் குவித்து விரித்தழுது" (திருச்செந். பிள்ளைத்.வாரணைப்.5).* 3. நெருங்கக் கூடுதல் (திவா.); to crowd,press as people, as sand grain, to become conical.). 4. குவியலாதல்; to be piled up formed in heaps, as sand, grain, to become conecal. 5. உருண்டு திரளுதல்; to become round globular. *"மேருவிற் குவிந்த தோளான்" (கம்பரா.நிகும்ப.92).* 6. கூடுதல்; to be accumulated, stored up, hoarded as treasure. வேண்டிய பணம் குவிந்து விட்டது.7. சுருங்குதல்; to contract decrease. *"குவிதலுடன் விரிதலற்று" (தாயு.சின் மயா.8).* 8. ஒருமுகப்படுதல்; to coverage, to be concentrated, as the mind, to be absorbed, as in contemplation. மனம் கடவுளின் வழிபாட்டிற் குவிந்துள்ளது.

[குல் → குள் → குவ்வு → குவி.]

குவி[2]-த்தல் *kuvi-,*4 செ.குன்றாவி.(v.t.) 1.கும்பலாக்குதல்; to heap up, to pile up, concially. 2. தொகுத்தல்; to accumulate, hoard up, as treasure. *"கத்திக் குவித்த பல்புத்தகத்தீர்" (அஷ்டப். திருவேங்கடத்-33).* 3. கைகூப்புதல்; to join hands, as in prayer. *"இரு கரங்குவித்து" (தாயு. பொருள்வன.11).* 4. கூம்பச்செய்தல்; to close, as a flower. கதிரவனின் கதிர்கள் குவளை மலரைக் குவித்தன. 5.சுருக்குதல் (வின்.); to draw in as the sun its rays in setting. 6. உதடுகளைக் கூட்டுதல்; to round the lips, as in kissing or in pronouncing 'u' or or 'U'. *"துவர் வாயிதழைக் குவித்து விரித்தழுது" (திருச்செந்.பிள்ளைத். வாராணைப்.5).*

[குல் → குள் → குவ்வு → குவி.]

குவி[3] *kuvi,* பெ.(n.) சுவர்; wall. *"உயர்ந்த மட்டுங் குவிவைக்கு மொட்டர்க்கும்" (தனிப்பா.ii,131,331).*

[குவை → குவி. குவை - நீரில் பிசைந்து உருட்டிய மண் திரளை.]

குவிந்தமனம் *kuvinda-manam,* பெ.(n.) ஒடுங்கிய மனம்; mind brought to a common centre, concentrated mind (சா.அக.).

[குவி → குவிந்த + மனம்.]

குவிமாடம் *kuvi-mādam,* பெ.(n.) நெடுநிலை மாடங்களில் இறுதி மாடம்; upper storey of the building.

[குவி + மாடம் = உச்சிக் குவிந்த மேல் மாடம்.]

குவிமுட்கருவி *kuvi-muṭ-karuvi,* பெ.(n.) யானையை அடக்கும் ஓர் ஆயுதம்; a kind of elephant goad. *"குவிமுட் கருவியும் கோணமும்" (மணி.18,163).*

[குவி + முள் + கருவி.]

குவியல் *kuviyal,* பெ.(n.) குவித்திருப்பது; heap, pile.

[குவி + குவியல்.]

குவியாடி *kuviyādi,* பெ.(n.) குவிந்த கண்ணாடி வில்லை; concave lens (சா.அக.).

[குவி + ஆடி.]

குவிரம் *kuviram,* பெ.(n.) காடு; forest (சா.அக.).

[கவி → குவி → குவிரம்.]

குவில் *kuvil,* பெ.(n.) 1. அறுக்கை (சது.); reaping, curting. 2. கைப்பிடியளவுள்ள கதிர்க்கொத்து (வின்.); handful of reaped grain in stalks.

[கிள் → கிவ் → கிவுல் → குவில்.]

குவிவு *kuvivu,* பெ.(n.) 1. குவியல்; heap, councical pile, accumulation. 2. கும்பவடிவு (வின்.); conicalness, anything conical in shape.

[குல் → குள் → குவ் → குவி → குவிவு.]

குவேலம் *kuvēlam,* பெ.(n.) ஆம்பல் (சா.அக.);lily.

[குவலி → குவேலம்.]

குவேலயம் *kuvēlayam,* பெ.(n.) ஆம்பல் (சா.அக.); lily.

[குவலி → குவலயம் → குவேலயம்.]

குவை *kuvai,* பெ.(n.) 1. குவியல் (திவா.); heap, conical. 2. குப்பைமேடு (திவா.); dunghill. 3. தொகுதி; collection accumulation, crowd, shoal, row. *"சிரக்குவை நெளித்தான்" (கம்பரா. மாரீச.04).* 4. கண்ணின் வெண்படலத்தில் உண்டாகும் நோய்வகை (சீவரட்.); a disease of the sclerotic or the white of the eye.

[குல் → குள் → குவ் → குவ்வு → குவை.]

குவை[2] *kuvai,* பெ.(n.) பொன்னுருக்கும் குகை; crucible, melting-pot. *"இருந்தைக் குவை யொத்தன" (தணிகைப்பு. திருநாட்டுப்.63).*

ம. குவ

[குகை → குவை.]

குவையெழுச்சி *kuvai-y-eḻucci,* பெ.(n.) கண்ணின் வெள்விழியில் உளுந்தைப் போல் சதை உண்டாகித் துன்புறுத்தும் ஓர் கண் நோய்; a malignant growth of flesh of the size of a black-gram on the white of the eye (சா.அக.).

[குவை + எழுச்சி. குவை = திரட்சி, தட்டி.]

குழ *kuḻa,* பெ.எ. (adj.) இளமையான; young tender. *"மழவும் குழவும் இளமைப்பொருள" (தொல்.சொல்.312).*

[குல் → குள் → குழ.]

குழக்குக்குழக்கெனல் *kuḻakku-k-kuḻa-k-keṉal,* பெ.(n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு (வின்.); onom. expr. signifying, rumbling sound. 2. வலியற்றுத் தொங்குதற் குறிப்பு; hanging loose, as arms with feebleness.

[குழக்கு + குழக்கு + எனல்.]

குழக்குமழக்கெனல் *kuḻakkumaḻa-k-keṉal,* பெ.(n.) தடித்துப் பருத்தற்குறிப்பு; expr. signifying being fleshy and rounded, plump. அந்தக் குழந்தை குழக்குமழக்கென்றிருக்கின்றது.

[குழக்கு + மழக்கு + எனல்.]

குழகயம் *kuḻakayam,* பெ.(n.) மனோரஞ்சிதம்; cupids plant (சா.அக.).

[குழகு → குழகயம்.]

குழகன் *kulagan,* பெ.(n.) 1. இளையோன்; youth *"நின்மணக் குழகன்" (திருவிளை.திருமண.44).* 2. அழகன்; beautiful person. *"கொட்கப் பெயர்க்குங் குழகன" (திருவாச.3,12).* 3. முருகக் கடவுள் (பிங்.); skandā. 4. பிறர்க்கு இணங்குபவன்; person of yielding or accommodating nature. *"குறவை கோத்த குழகனை" (திவ்.திருவாய்.3,6,3).*

[குழ → குழகு → குழகன்.]

குழகு *kulagu,* பெ.(n.) 1. இளமைச் செவ்வி; youthfulness. *"கொம்மைக் குழகாடுங் கோலவரை மார்பர்" (சீவக.2790).* 2. அழகு; beauty. *"கொன்றை சூடிக் குழகாக... விளையாடும்" (தேவா.468).* 3. குழந்தை; infant. *"குழகென வெடுத்துகந்தவுமை" (திருப்பு.106).*

[குழ → குழகு → குழகன்.]

குழகு-தல் *kulagu-,*6 செ.கு.வி. (v.i.) 1. கொஞ்சி விளையாடுதல்; to prattle playfully. *"கிளியோடுங் குழகேலே" (திவ்.திருவாய்.6,2,5).* 2.கவர்தல்; to coax, wheedle. *"குழகியெங்கள் குழமணன் கொண்டு" (திவ்.திருவாய்.6,2,6).*

[குழ → குழகு.]

குழகுழ-த்தல் *kula-kula-,* 4 செ.கு.வி.(v.i.) 1. நெகிழ்ந்திருத்தல்; to be mashy, pulpy. 2. மன உறுதியறுதல்; to be timid, to be chicken hearted.

[குழ → குழகு.]

குழகுழத்தபுண் *kulakulatta-pun,* பெ.(n.) அழுகின புண்; putrid sore-ulcer (சா.அக.).

[குழ + குழத்த + புண்.]

குழகுழவெனல் *kula-kula-v-enal,* பெ.(n.) இளகியிருக்கும் குறிப்பு; expr. signifying sliminess, softness as of *kūl.*

[குழ + குழ + எனல்.]

குழங்கல் *kulangal,* பெ.(n.) கழுத்திலணியும் மாலை வகை; a kind of garland for the neck. *"குழங்கன் மாலை..... மார்பீர்" (சீவக.743).*

[குழ → குழங்கு → குழங்கல்.]

குழச்சி *kulacci,* பெ.(n.) பவளப் புற்று நஞ்சு; a kind of prepared arsenic. 2. சேர்ந்தாடு பாவைச் செடி; an unknown plant (சா.அக.).

[குழ → குழச்சி.]

குழந்தை *kulandai,* பெ.(n.) 1. கைப்பிள்ளை; infant, baby, suckling. *"குழந்தையை உயிர்த்த மலடிக்கு" (கம்பரா.உருக்கா.65).* 2.இளமைப்பருவம்; childhood, tender age. *"குழந்தை வெண்மதி" (கம்பரா.உர்தேடு.209).*

ம. குழந்த; **க.**கொணசு; **தெ.**கொடுகு (மகன்); கொண்டிகா; **து.**கொரை (சிறிய) **கொலா.** கொச்சை; **நா.**கொச்ச; **பர்.**கொச்; **கூ.**கோடு.

ME.,E. child; **OE.** cild; **Gothr.** kilthei, womb

Fin. kakara; **Komi.** kaga; **Gondi.** koko; **Mong.** caxa; **Q.** kaka; **Jap.** kaka.

[குழ + குழந்தை.]

1. கருத்துக் குழந்தை 2. அறைக் குழந்தை 3. முலையுண் குழந்தை 4. கைக்குழந்தை அல்லது இடுக்குப் பிள்ளை 5. விளை யாட்டுக் குழந்தை 6. வயதுக் குழந்தை 7. பச்சைக் குழந்தை 8. சப்பாணிக் குழந்தை 9. தேரைக் குழந்தை 10. இரட்டைக் குழந்தை 11. சவலைக் குழந்தை 12. அழிகுழந்தை 13. சாக் குழந்தை 14. தூயலைக் குழந்தை 15. பேய்க்குழந்தை 16. கன்னிக் குழந்தை 17. தலைச்சன் குழந்தை 18. இடைச்சன் குழந்தை 19. நிறைவுக் குழந்தை 20. வயிற்றுக் குழந்தை.

குழந்தைகுஞ்சு *kulandai-kuñcu,* பெ.(n.) **குழந்தை குட்டி** பார்க்க; see *kulandaikutti.*

[குழந்தை + குஞ்சு.]

குழந்தைகுட்டி *kulandai-kutti,* பெ.(n.) பல அகவை யினரான குழந்தைகள்; children varying in age. அவனுக்குக் குழந்தை குட்டி அதிகம் (கொ.வ.).

[குழந்தை + குட்டி.]

குழந்தைகுட்டிக்காரன் *kulandai-kutti-k-kāraṉ,* பெ.(n.) பெரிய குடும்பமுடையவன்; man with a large family (கொ.வ.).

[குழந்தை + குட்டிக்காரன்.]

குழந்தைச்சாமி *kulandai-c-cāmi,* பெ.(n.) முருகக் கடவுள் (குழந்தைத் தெய்வம்); lit., child-god, skanda.

[குழந்தை + சாமி.]

குழந்தைநீர் *kulandai-nīr,* பெ.(n.) இளநீர் (தைலவ.); milk of the tender coconut.

[குழ → குழந்தை + நீர்.]

குழந்தைப்பசி *kulandai-p-paši,* பெ.(n.) அடிக்கடி உண்டாகும் பசி; hunger occuring in a short duration of time (சா.அக.).

[குழந்தை + பசி.]

குழந்தைப்புத்தி *kulandai-p-putti,* பெ.(n.) சிறு பிள்ளையறிவு; childishness, puerility, youthful undiscretion.

[குழந்தை + புத்தி.]

குழந்தைமதக்கனி *kulandai-madakkaṉi,* பெ.(n.) நிலத் துளசி; holy basil (சா.அக.).

[குழந்தை + (மணக்கனி) மதக்கனி.]

குழந்தையறை *kulandai-y-arai,* பெ.(n.) 1. குழந்தை களைக் காப்பாற்றி வளர்க்குமிடம்; a place where children are nursed and taken care of. 2. குழந்தையைப் பெற்ற அறை; lying in room (சா.அக.).

[குழந்தை + இசிவு.]

குழந்தையிசிவு *kulandai-y-iśivu,* பெ.(n.) தெற்கித்திக் கணை; an affection in children characterised by contraction of inter-coastal muscles (சா.அக.).

[குழந்தை + இசிவு.]

குழநெல்லி *kulanelli,* பெ.(n.) மிகுதியாகப் பழுத்த நெல்லி; over riped gooseberry (சா.அக.).

[குழ + நெல்லி.]

குழப்படி *kulappadi,* பெ.(n.) குழப்பம்; confusion, disturbance (கொ.வ.).

[குழப்பம் → குழப்படி.]

குழப்படிகாரன் *kulappadi-kāraṉ,* பெ.(n.) 1. சண்டை செய்வோன்; quarrelsome person. 2. கலகஞ்செய்வோன்; rioter. 3. குறும்பன்; mischievous fellow.

[குழம்பு + அடி + காரன்.]

குழப்பம் *kulappam,* பெ.(n.) 1. தாறுமாறு; confusion, muddle, disorder, embroilment. 2. மனக் கலக்கம்; perturbation, agitation, bewilderment, indecision. 3. கலகம்; disturtance, quarrel, commotion, tumult. 4. அரசகலகம்; sedition, insurection, rebellion. 5. கொந்தளிப்பு (வின்.); squall, storm, hurricane, boisterousness of the weather or sea.

ம. குழப்பம்; க. கொழும்ப

[குழம்பு → குழப்பு → குழப்பம்.]

குழப்பன் *kulappaṉ,* பெ.(n.) கலகக்காரன் (யாழ்.அக.); quarrelsome fellow, anarchist.

[குழப்பு → குழப்பன்.]

குழப்பு[1]-தல் *kulappu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கலக்குதல்; to mix, stir. *"சேறெலாங் குழப்பி" (காஞ்சிப்.நாட்டுப்.74).* 2. பிறழ்வித்தல்; to confuse, disturb, derange. *"நடுக்குழப்பிய நா" (குற்றா.தல. கவுற்சன.53).* 3. வியப்படையச் செய்தல்; to bewil-

der, perplex. *"கடிமனை தொறுங் குழப்பி"* *(திருவாலவா.13,9).* 4. மனத்தைக் கலக்குதல்; to disconcert, trouble, vex, annoy; to cause doubt, hesitation. 2. காரியக் கேடாக்குதல்; to frustrate, as a design, to interrupt, to hinder, to spoil, as a business. 6. குழப்பிப்பேசுதல்; to prevaricate, shuffle, evade questions.

ம. குழப்புக

[குழம்பு → குழப்பு-.]

குழப்பு² *kuḷappu,* பெ.(n.) 1. நீர்மங்களைக் கலக்குதல்; mixing liquids of different consistency, mixing powders with liquids. 2. கலக்க முண்டாக்குகை; agitating, confusing.

[குழம்பு → குழப்பு.]

குழம்பல் *kuḷambal,* பெ.(n.) 1. கலங்குகை; perturbation. 2. குழம்பான பொருள்; anything of a thick consistency.

[குள் + குழ → குழம்பு → குழம்பல்.]

குழம்பாய்க் காய்ச்சுதல் *kuḷampāy-k-kāy-c-cudal,* 12 செ.கு.வி.(v.t.) குழம்பாயிருக்கும்படிக் காய்ச்சுதல்; boiling down to a thick consistence (சா.அக.).

[குழம்பு + ஆய் + காய்ச்சுதல்.]

குழம்பு¹-தல் *kuḷampu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கலங்குதல்; to become mixed, to be stirred up, mingled, as liquides of different consistency, as powders with liquids. 2. மனங்கலங்குதல்; to be disconcerted, troubled, confused. அவன் குழம்பி நிற்கிறான். 3.நிலைகுலைதல்; to be disturbed, agitated, to be boisterous, as the sea.

ம. குழம்புக

[குள் → குழ → குழம்பு.]

குழம்பு² *kuḷambu,* பெ.(n.) 1. குழம்பான பொருள்; mixture, liquid of thick consistency, as sandal paste. *"சந்தனக் குழம்பும்" (திவ்.இயற்.2:76).* 2. காய்கறிக் குழம்பு (பிங்.); thickened curry broth. 3. குழைசேறு (வின்.); mud, slime, macerated earth.

ம. குழம்பு

[குள் → குழ → குழம்பு.]

குழம்புகறி *kuḷambu-kaṟi,* பெ.(n.) 1. குழம்பிலிட்ட கறி; vegetable or meat boiled in sauce. 2. குழம்பிற்குப் பயன்படும் காய்கறி; vegetable or meat used in the preparation of sause. 3. குழம் பாகச் செய்த கறி; curry sauce (சா.அக.).

[குழம்பு + காய்ச்சுதல்.]

குழம்பு காய்ச்சுதல் *kuḷambu-kāyccudal,* 12 செ.குன்றாவி. (v.t.) குழம்பு காய்ச்சுதல்; preparing sauce for use in food (சா.அக.).

[குழம்பு + காய்ச்சுதல்.]

குழம்பு கூட்டல் *kuḷambu-k-kūṭṭal,* பெ.(n.) குழம் புக்காக வேண்டிய பொருள்களை ஒன்றாகக் கலத்தல்; mixing up curry stuffs for preparing sauce (சா.அக.).

[குழம்பு + கூட்டல்.]

குழம்புசாதி *kuḷambu-cādi,* பெ.(n.) நன்மை தீமை கலப்பில் உண்டாவதாகக் கருதப்படும் மாந்தப் பிறவி அல்லது விலங்குப்பிறவி (திவ்.திருச்சந்த.16); birth as man or animal, attributed to the joint effect of pāpa and *punya.*

[குழம்பு + சாதி.]

குழம்புத்தான் *kuḷambu-t-tāṉ,* பெ.(n.) குழம்பிலிட்டு வெந்த காய்கறித் துண்டு; vegetable cut up and boiled soft in curry broth.

[குழம்பு + தான். தாள் → தாண் → தான் (கொ.வ.)]

குழம்புத்தாள் *kulambuttāl*, பெ.(n.) குழம்பில் வெந்த காய்கறித் துண்டு; vegetables or meat boiled in curry broth (சா.அக.).

[குழம்பு + தாள். தாள் = குழம்பு வைத்த ஏனத்தில் அடியில் தங்கிய காய்களின் துண்டு.]

குழம்புதாளித்தல் *kulambutāḷittal*, பெ.(n.) கறிக்குழம்பிற் கறி மசாலையிட்டுத் தாளித்தல்; seasoning sauce with condiments for use food (சா.அக.).

[குழம்பு → தாளித்தல்.]

குழம்புப்பாகு *kulambu-p-pāgu*, பெ.(n.) தடித்த பாகு; thick syrub (சா.அக.).

[குழம்பு + பாகு.]

குழம்புப்பால் *kulambu-p-pāl*, பெ.(n.) வற்றக் காய்ச்சிய பால்; milk thicked by boiling.

[குழம்பு + பால்.]

குழம்புபதம் *kulambu-padam*, பெ.(n.) மருந்தெண்ணெய்ப் பதங்களுளொன்று; a stage in the preparation of medicinal oil, one of *maruntenney-p-padam*.

[குழம்பு + பதம்.]

குழம்புவடகம் *kulambu-vadagam*, பெ.(n.) கறி தாளிக்கும் வடகம்; curry condiments consisting of pulses onion, mustard curry leaf garlic etc. grounded together, made into balls or cakes and then dried in the sun. It is used for seasoning curry preparation (சா.அக.).

[குழம்பு + வற்றல்.]

குழம்புவற்றல் *kulambu-varral*, பெ.(n.) குழம்பிற்கு உபயோகப்படும் மீன், கறி, காய்; dried fish or mutton or dried vegetable used for preparing sauce (சா.அக.).

[குழம்பு + வற்றல்.]

குழம்புவை-த்தல் *kulambu-vai-*, 4 செ.கு.வி.(v.i.) 1. குழம்பு காய்ச்சுதல்; to make thick curry. 2. குழம்பு வடிவான மருந்து காய்ச்சுதல்; to make liquid medicine of a thick consistency.

[குழம்பு + வைத்தல்.]

குழமகன் *kuḷa-magan*, பெ.(n.) 1. இளம் பருவமுள்ள தலைவன்; youthful-hero, as of a poem. *"குழமகனைக் கலிவெண்பாக் கொண்டு..... விளங்க வுரைத்தாங்கு" (இலக்.வி.858).* 2. மாதர்கள் குழமகனைப் புகழ்ந்து கூறும் ஒரு சிற்றிலக்கியம் (தொ.283); A poetic composition in which women extol the worth of a youthful hero. 3. மரப்பாவை; wodden doll. *"உத்திரியம் பட்டுங் குழமகன்றனக்கு நல்கி" (பாரத.நிறைமீ. 136).*

[குழ + மகன்.]

குழமணம் *kuḷa-manam*, பெ.(n.) பாவைக்குச் செய்யும் திருமணம் (பிங்.); marriage of dolls.

[குழ + மணம்.]

குழமணன் *kuḷamanan*, பெ.(n.) மரப்பாவை; wooden doll. *"எங்கள் குழமணன் கொண்டு" (திவ். திருவாய். 6:2:6).*

[குழமணம் → குழமணன்.]

குழமணிதூரம் *kuḷamaniḍūram*, பெ.(n.) வென்றவர் தம்மீது இரங்குமாறு பாடிக் கொண்டு தோற்றவர் ஆடும் ஒருவகை கூத்து (திவ்.பெரியதி. 10.3); a dance by the vanquished, accompanied with singing to excite the pity of the victors.

[குழமணி + தூரம். குழமணி = பாவை, பதுமை, பாவைக்கூத்து. தோல் → தோரம் → தூரம் (தோற்பாவை).]

குழல்(லு)-தல் *kuḷal-*, 14 செ.கு.வி.(v.i.) 1.சுருளுதல்; to curl. *"கடைகுழன்ற கருங்குழல்கள்" (சீவக.164).* 2. சுருட்டி முடிக்கப்படுதல் (வின்.); to be folded back into a roll or tried in a lock, as the hair of women in *kuḷal*.

[குழை → குழல்.]

குழல்[2] *kuḷal*, பெ.(n.) 1. மயிர்க்குழற்சி; curling hair. *"குழலுடைச் சிகழிகை" (சீவக.1092).* 2. ஐம்பாலுள் சுருட்டி முடிக்கப்படுவது; woman's hair dressed by coiling and tying up behind in a roll one of *aim-pāl.* 3. மயிர் (பிங்.); woman hair.

[குழை → குழல்.]

குழல்[3] *kuḷal*, பெ.(n.) 1. துளையுடைய பொருள் (திவா.); any tube-shaped thing. 2. இசைக்குழல் (சூடா.); flute, pipe. 3. குழலிசை; music of the pipe. *"குழலினிதி யாழினிதென்ப" (குறள்.66).* 4. உட்டுளை; tubularity, hollowness. *"குழற்கா லரவிந்தங் கூம்ப" (தமிழ்நா.63).* 5. ஒருவகைக் கழுத்தணி; a kind of neck ornament (இ.வ.). 6.மீன்வகை; milk-fish, brilliant glossy blue, attaining 3 or 4 ft. in length. *"வறற்குழற் ஆட்டின்" (சிறுபாண்.163).* 7. கடல்மீன்வகை; a sea-fish, bluish, attaining several feet in length.

[குள் → குழ → குழல்.]



குழல்

குழல்[4] *kuḷal*, பெ.(n.) துமிக்கி; gun. *"கொட்டமிடும் புலியைக் குண்டுதுன்றுங் குழலால்" (கூளப்ப.90).*

[குள் → குழல்.]

குழல்சுடு-தல் *kuḷal-cuḍu-*, 4 செ.கு.வி.(v.i.) துப்பாக்கி சுடுதல்; to fire a gun.

[குழல் → சுடு.]

குழல்மாது *kuḷalmādu*, பெ.(n.) கரிசலாங்கண்ணி; eclipse plant (சா.அக.).

[குழல் → மாது.]

குழல்விசை *kuḷalvišai*, பெ.(n.) அரத்தக் குழாயின் இழுப்பு; tension of a blood vessel (சா.அக.).

[குழல் + விசை.]

குழல்விரணம் *kuḷalviraṇam*, பெ.(n.) இரத்தக் குழலுக்கு ஏற்படும் விரணப்புண்; ulceration of blood vessels (சா.அக.).

[குழல் + இரணம். குழற்புண் பார்க்க; see kuḷaṟpuṇ]

குழல்விருத்தி *kuḷal-virutti*, பெ.(n.) குழலூது வோர்க்கும் கொடுக்கும் சலுகை; rent-free lands assigned to pipers of a village (இ.வ.).

[குழல் + விருத்தி.]

குழல்விழு-தல் *kuḷal-viḷu-*, 3 செ.கு.வி.(v.i.) துளை யுண்டாதல்; to form a hollow, as within a horn.

[குழல் + விழுதல்.]

குழல்விளக்கம் *kuḷal-viḷakkam*, பெ.(n.) குழலைப் பற்றிய விவரம்; description of a vessel (சா.அக.).

[குழல் + விளக்கம்.]

குழலப்பம் *kuḷalappam*, பெ.(n.) பிட்டு; a sweet cylinderical confection prepared from rice flour (சா.அக.).

மறுவ. குழல்பிட்டு

[குழல் + அப்பம்.]

குழலற்றகோளம் *kuḷalaṟṟakōḷam*, பெ.(n.) 1. குழாய் இல்லாத கோளம்; ductless gland. 2. ஊரலற்ற கோளம்; a gland like body, without any known secretory function (சா.அக.).

[குழல் + அற்ற + கோளம்.]

குழலாதொண்டை *kuḷalātoṇḍai,* பெ.(n.) ஒருவகை ஆதொண்டை, காத்தொட்டி, கற்ப வகையிலொன்று; caper shrub. It is classified as one of the drugs used in rejuvenation (சா.அக.).

[குழல் + ஆத்தொண்டை.]

குழலாள்பால் *kuḷalāḷ-pāl,* பெ.(n.) முலைப்பால்; woman's breast milk (சா.அக.).

[குழலாள் + பால்.]

குழலிசிவு *kuḷaliśivu,* பெ.(n.) அரத்தக் குழாயின் இசிவுவலி; spasm of a vessel (சா.அக.).

[குழல் + இசிவு.]

குழலிதச்சம் *kuḷalitaccam,* பெ.(n.) சிறுகுறிஞ்சா; small Indians specacuanha (சா.அக.).

[குழல் + தச்சம்.]

குழலூதி *kuḷalūdi,* பெ.(n.) குழல் வாசிப்பவன்; one who plays flute.

ம. குழலூதி

[குழல் + ஊதி.]

குழலொடுக்கம் *kuḷaloḍukkam,* பெ.(n.) குழல் சுருக்கம்; construction o f a vessel (சா.அக.).

[குழல் + ஒடுக்கம்.]

குழலோன் *kuḷalōṉ,* பெ.(n.) வேய்ங்குழல் ஊதுபவன்; one who plays on an aerophone (flutist, a trumpetch etc.) flute player. *"வழுவின் றிசைக்கும் குழலோன் நானும்" (சிலப்.3,69).*

ம. குழல்காரன்

[குழல் → குழலோன்.]

குழவல்லம் *kuḷavallam,* பெ.(n.) முருங்கை; drum stick tree (சா.அக.).

[குழ + வல்லம்.]

குழவி[1] *kuḷavi,* பெ.(n.) 1. கைக்குழந்தை; infant. babe. *"ஈன்ற குழவி முகங்கண் டிரங்கி" (மணி.11,114).* 2. ஒருசார் விலங்கின் பிள்ளைப் பெயர் (தொல்.பொ.575); young of certain animals, viz. யானை, பசு, எருமை, கடமை, மரை, குரங்கு, முசு, ஊரகம். 3. புல்மர முதலிய ஓரறிவுயிரின் இளமைப் பெயர்; young of the vegetable kingdom. *"வீழில் தாழைக் குழவி" (தொல்.பொ.579,உரை).*

[குள் → குழ → குழவி.]

குழவி[2] *kuḷavi,* பெ.(n.) அம்மி கல்லுரல்களின் அரைக்குங்கல்; the roller of ammi and kallural, grinding pestle. *"புரையறு குழவியின்..... அரைக்குநர்" (பரிபா.10,83).*

[குள் →குழ → குழவி .]

குழவி[3] *kuḷavi,* பெ.(n.) பெருமை (யாழ்.அக.); greatness.

[குழு → குழுவி → குழவி.]

குழவிக்கல் *kuḷavi-k-kal,* பெ.(n.) **குழவி**[2] பார்க்க; see *kuḷavi.*

[குழவி + கல்.]

குழவிகொள்பவர் *kuḷavi-koḷbavar,* பெ.(n.) குழந்தையை வளர்ப்பவர்; those who bring up a child. *"குழவிகொள்பவரினோம்புமதி" (புறநா.5).*

[குழவி + கொள்பவர்.]

குழவிஞாயிறு *kuḷavi-ñāyiṟu,* பெ.(n.) எழுஞாயிறு (தொல்.பொ.579,உரை); rising sun.

[குழவி + ஞாயிறு.]

குழவித்தாய் *kuḷavi-t-tāi,* பெ.(n.) 1. மிளகரணை; lopez rool. 2. குழந்தையின் தாய்; mother of a child. 3. கடுக்காய்; indian galnut supposed to protect children like mother (சா.அக.).

[குழவி + தாய்.]

குழவித்திங்கள் *kuḻavi-t-tiṅgaḷ,* பெ.(n.) இளநிலா (அல்) பிறைநிலா (தொல்.பொ.759,உரை); crescent moon.

[குழவி + திங்கள்.]

குழவிதோசம் *kuḻavidōšam,* பெ.(n.) குழந்தைக்குக் காணும் பலவகை குற்றப்பாடுகள் (தோசங்கள்); different kinds of morbid affection in children from various causes (சா.அக.).

மறுவ. குழந்தை நலி, குழந்தை நைப்பு.

[குழவி + தோசம். Skt. Dōsa>த.தோசம்.]

குழவிப்பாம்பு *kuḻavi-p-pāmbu,* பெ.(n.) குழிமீன்; congereel.

[குழவி + பாம்பு.]

குழவிப்பிண்டம் *kuḻavi-p-piṇḍam,* பெ.(n.) 1. இளங்கருப்பிண்டம்; tender factus, the young of an animal in its earliest stage of development (சா.அக.).

[குழவி + பிண்டம்.]

குழவிழைப்புளி *kuḻa-v-iḻaippuḷi,* பெ.(n.) இழைப் புளி வகை; a kind of smoothing plane.

[குழைவு + இழைப்புளி. குழை விழைப்புளி → குழவிழைப்புளி.]

குழவு *kuḻavu,* பெ.(n.) இளமை (தொல்.சொல்.312); young, tender age juvenility.

[குழ → குழவு.]

குழவுண்டை *kuḻavuṇḍai,* பெ.(n.) ஒரு வகைக் கொழுக்கட்டை; a kind of sweet puff or light pastery (சா.அக.).

[குழ + (உருண்டை) உண்டை.]

குழற்கொத்து *kuḻaṟkottu,* பெ.(n.) 1. கூந்தற்கற்றை (பிங்.); tuff of a woman's hair. 2. செயற்கைமுடி; false hair for dressing the head.

[குழல் + கொத்து.]

குழற்கொப்புளம் *kuḻaṟ-koppuḷam,* பெ.(n.) உடம்பின் குழலுள் காணும் கொப்புளம்; an ulcer on the walls of a vessel (சா.அக.).

[குழல் + கொப்புளம்.]

குழற்சவ்வு *kuḻaṟ-cavvu,* பெ.(n.) உடம்பினுள் இருக்கும் குழாயின் சவ்வு; tubular membrane (சா.அக.).

[குழல் + சவ்வு.]

குழற்சி *kuḻaṟci,* பெ.(n.) 1. சுருண்டிருக்கை (சீவக. 1092,உரை); curling as of woman's hair. 2. சுருட்டி முடிக்கும் கொண்டை (பின்.); roll or lock hair tied behind.

[குழல் → குழற்சி.]

குழற்சிகை *kuḻaṟcigai,* பெ.(n.) தலைமயிர்; hair of the head. *"குழற் சிகைக் கோதை சூட்டி" (சீவக.252).*

[குழல் + சிகை.]

குழற்சுருக்கம் *kuḻaṟcurukkam,* பெ.(n.) குருதி குழலுக்கேற்படும் சுருக்கம்; constriction or narrowing of a vessel (சா.அக.).

[குழல் + சுருக்கம்.]

குழற்சேதனம் *kuḻaṟcēdaṉam,* பெ.(n.) குருதிக் குழலைக் கத்தியால் அறுத்தல் அல்லது பிளத்தல்; the dissection of a blood vessel (சா.அக.).

[குழல் + சேதனம்.]

குழற்பிசகு *kuḻaṟpišagu,* பெ.(n.) உடம்பினுள் குருதிக் குழல் நழுகல்; displacement of a vessel in the body (சா.அக.).

[குழல் + பிசகு.]

குழற்பிட்டு *kuḻaṟ-piṭṭu,* பெ.(n.) மூங்கிற்குழலில் வைத்து அவிக்கும் பிட்டு; a kind of soft pastry steamed in the hellow of a bamboo piece.

[குழல் + பிட்டு.]

குழற்றடை *kularradai,* பெ.(n.) குருதி குழலியக்கத் தடை; obstructions to a vessel (சா.அக.).

[குழல் + தடை.]

குழற்றிறப்பு *kularrirappu,* பெ.(n.) துளையுள்ள திறவுகோல் (சாவி); key with a hole.

[குழல் + திறப்பு.]

குழற்று-தல் *kularru,* 5 செ.கு.வி.(v.i.) குழறி யொலித்தல்; to make incoherent or indistrict sounds, as when affected with strong emotion. *"குரவையிற் குழற்றுவாரும்" (கம்பரா. ஊர்தேடு. 188).*

[குழறு → குழற்று.]

குழறு-தல் *kularu-,* 15 செ.கு.வி.(v.i.) 1. பேச்சுத் தெளிவின்றித் தடுமாறுதல்; to babble, as an infant to talk indistinctly, to gabble. *"வாய் குழறா" (திருவாச.21,10).* 2. கூவுதல்; to cry, as a bird; to crow, as a cock. *"கூகை நன்பகற் குழற" (பட்டினப்.268).* 3. கலத்தல்; to mingle, to be mixed up. *"இருடாரகை குழறிற்றென்ன.... மலர் மயிர் சொருகி" (கோயிற்பு.பதஞ்.14).* 4. கேடுதருதல்; to cause ruin, destruction. *"குழறிய கொடுவினை யிலரே" (தேவா.249,7).*

[குழல் → குழறு.]

குழறுபடை *kularu-padai,* பெ.(n.) 1. சொற்றடு மாற்றம்; incoherent talk. 2. தாறுமாறு; confusion, as in business.

[குழறு + படு – படை.]

குழாஅல் *kulāl,* பெ.(n.) கூடுகை; gathering flocking together. *"நாரை..... மரத்தொறுந் குழாஅலின்" (பதிற்றுப்.29).*

[குழுவு → குழா → குழாஅல்.]

குழாங் கொண்டாடு-தல் *kulāń-kondādu-,* 12 செ.கு.வி.(v.i.) நெருங்கி உறவாடுதல்; to move closely or on intimate terms (இ.வ.).

[குழாம் + கொண்டாடு.]

குழாம் *kalām,* பெ.(n.) 1. கூட்டம்; herd, flock, swarm, shoal. *"மயிற்குழாத்தொடும் போடுகு மன்னம்" (கந்தபு.திருநகரப்.31).* 2. சபை; society, company, association. *"சான்றோர் குழாஅத்து" (குறள்.840).*

[குழு → குழுவம் → குழாம்.]

குழாம்பல் *kulāmbal,* பெ.(n.) குழம்பியிறுகிய பொருள்; any liquid of a thick consistency, as curry, mud.

[குழம்பல் → குழாம்பல்.]

குழாய்[1] *kulāy,* பெ.(n.) 1. துளையுடைய பொருள் (பிங்.); tube, pipe. 2. துளை; tubular cavity, hollow.

[குள் → குழை → குழாய்.]

குழாய்[2] *kulāy,* 1. வாயு தண்ணீர் ஆவி முதலியவை களைக் கொண்டு வரப் பயன்படுத்தும் உள்துளைக் கருவி; hollow cylindrical tube of wood, metal, etc. for the conveyance of gas, water, vapour etc. 2. உடம்பினுள் உள்ள தாரை, கால்வாய் முதலிய உட்டுளைக் கருவி; a tublar organ, passage, canal or vessel in an animal body often preceded by a defining word as mention below.

குழாய் வகைகள்: 1.காற்றுக்குழாய் 2. சுவாசக் குழாய் 3. இரத்தக் குழாய் 4. கேள்விக்குழாய் 5. கரு விழிக்குழாய் 6. கருப்பைக்குழாய் 7. நாதக்குழாய் 8. சிறுநீர்க்குழாய் 9. அன்னாசக்குழாய் 10. உதரக்குழாய் 11.ஊட்டுங்குழாய் 12. இணைக்குங்குழாய் 13.ஊதுகுழாய் 14. மூங்கிற் குழாய் 15. பீச்சுக் குழாய் 16. சோதனைக் குழாய் (சா.அக.).

[குள் → குழை → குழாய்.]

குழாய்க்கந்தகம் *kuḷāy-k-kandagam,* பெ.(n.) வாணக் கந்தகம்; roll or stick sulphur (சா.அக.).

[குழாய் + கந்தகம்]

குழாய்க்கிணறு *kuḷay-k-kiṉaṟu,* பெ.(n.) குழாயிறக்கி உண்டாக்கிய கிணறு; Artesian well, 'be-well.

[குழாய் + கிணறு]

குழாய்ப்பிட்டு *kuḷāy-p-piṭṭu,* பெ.(n.) குழற்பிட்டு; a kind of soft pastry.

[குழல் → குழாய் + பிட்டு]

குழாய்மீன் *kuḷāy-mīṉ,* பெ.(n.) குழல்மீன்; pipe fish (சா.அக.).

[குழாய் + மீன்]

குழல்

குழாய்மூங்கில் *kuḷāy-mūṅgil,* பெ.(n.) உள்ளே தொளையுள்ள மூங்கில்; common bamboo.

[குழாய் + மூங்கில்]

குழாயிரும்பு *kuḷā-y-irumbu,* பெ.(n.) உருக்கி அச்சில் வார்த்த இரும்பு; cast iron (சா.அக.).

[குழாய் + இரும்பு]

குழாயோடு *kuḷā-y-ōḍu,* பெ.(n.) உட்குழலாயுள்ள ஒருவகை ஓடு; kind of tublar tile.

[குழாய் + ஓடு]

குழி¹-தல் *kuḷi-,* 4 செ.கு.வி.(v.i.) உட்குழிவாதல்; to be hollowed out, as a hole, a pit, acanity; to sink,hollow. *"குழிந்தாழ்ந்த கண்ணவாய்" (நாலடி.49).*

ம. குழியுக; க. குழி; கெ. க்ரொய்யு, க்ரொய்யி.

Fin. kaivä; **Es.** kaeva; **Mari.** koem; **Turk.** kazy; **Q.** gaywi.

[குழி → குழிதல்.]

குழி²-த்தல் *kuḷi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. குழியாக்குதல்; to form pits, hollows, cavities, to sink, excavate. *"குழித்து நிற்பது நீர்" (நான்மணி.30).* 2. செதுக்குதல்; to inscribe, engrave. *"குழித்த மோதிரம்" (கலித்.84,உரை.).*

ம. குழிக்குக; க. குழி; து. குரைபுனி, குரெபினி, கொரெபுனி, கொரைபினி; தெ. க்ரொச்சு, க்ரெச்சு.

[குழி → குழித்தல்.]

குழி³ *kuḷi,* பெ.(n.) 1. பள்ளம் (திவா.); pit, hole, hollow, cavity, dimple, depression, excavation. 2. நீர்நிலை (பிங்.); tank, pond. 3. கிணறு (திவா.); well. 4. வயிறு (அக.நி.); stomach. 5. பட்டைக் கிடங்கு; cavity at the bottom of a well. 6. பாத்தி; garden bed, irrigated portion of a garden. *"இன்சொற்குழியின்' (நான்மணி.16).* 7. ஓர் எண்ணின் வருக்கம்; square of a number. 8. சதுர அடி (இ.வ.); square foot. 9. கனவடி (இ.வ.); cubic foot. 10. பன்னீரடிச் சதுரக்குழி; twelve feet square in land measure. 11. 144 சதுரஅடி முதல் 576 சதுர அடிவரை பற்பல இடங்களில் வெவ்வேறாய் வழங்கும் ஒரு நிலவளவு; a land measure varying in different places from 144 sq.ft to 576 sq.fr. 12. 33 அங்குலங் கொண்ட தச்சுக்கோலின் சதுர நிலவளவை; a unit of square measurement for building sites the square of a *tacca-k-kōl* of 33 in. (G.Tn.D.239). 13. உடம்பினுள்ளாவது, அதன் உறுப்பினுள்ளாவது ஏற்படும் குழி, அவ்விடத்தைப் பொறுத்தே பெயர் பெறும்; hollow space or place with in the body or in one of its organs.

[குல் → குள் → குழி.]

E. hole; **A.S.** hol; **Dut.** hol; **Dan.** hul; **G.** hohl; **Gk.** koilos; **E.** hollow.

குழி வகைகள்: 1. வயிற்றினுட் குழி 2. பல் லிடைக்குழி 3. *பிண்டக்குழி* பார்க்க 4. அம்மைக்குழி 5. நாசிக்குழி 6. உதரக்குழி 7. செவிக்குழி 8.புண்குழி 9. கன்னக்குழி 10. இரத்தக்குழி 11. சோற்றுக்குழி 12. கசக்குழி இரத்தம் சொரியும் குழி 13.கபாலக்குழி 14. அக்குட்குழி 15. *பெருங்குழி* பார்க்க எண்.12. 16. வாய்க்குழி 17. இடைக்குழி 18. மார்புக்குழி 19. நாபிக்குழி 20. கண்குழி 21. கருப்பக்குழி அல்லது கருக்குழி 22. உச்சிக்குழி 23. கைக்குழி 24. நாற்றக்குழி 25. ஊறற்குழி 26. படுகுழி 27. ஊற்றுக்குழி 28. பிரேதக்குழி 29. புடக்குழி 30. நெற்புடக்குழி 31. சமாதிக்குழி (சா.அக.).

குழிக்கண் *kuḻi-k-kaṇ,* பெ.(n.) பெ.(n.) குழிவான கண்; sunken eye.

க. குழிகண், குணிகண்ணு, குளிகண்ணு, குளிகண்.

[குழி + கண்.]

குழிக்கண்ணன் *kuḻi-k-kaṇṇaṉ* பெ.(n.) குழிந்த கண்ணுள்ளவன்; a sunken eyed man.

ம. குழிகண்ணன், குழிக்கண்ணன்.

[குழி + கண்ணன்.]

குழிக்கண்ணி *kuḻi-k-kaṇṇi,* பெ.(n.) குழிவான கண்ணுள்ளவள்; woman with sunken eyes. *"பெருகு குழிக்கண்ணி செங்கண்ணி" (பரத.ஒழிபி. 39).*

ம. குழிகண்ணி, குழிக்கண்ணி.

[குழி + கண்ணி.]

குழிக்கணக்கு *kuḻi-k-kaṇakku,* பெ.(n.) ஒருவகை நிலவளவை; square measure of land.

ம. குழிக்கணக்கு

[குழி + கணக்கு.]

குழிக்கல் *kuḻi-k-kal,* பெ.(n.) ***குழியம்மி*** பார்க்க; see *kūḻi-y-ammi.*

[குழி + கல்.]

குழிக்கலம் *kuḻi-k-kalam,* பெ.(n.) குழிவாயுள்ள ஏனம்; a basin or pot with a deep hollow.

[குழி + கலம்.]

குழிக்கிட்டி *kuḻi-k-kiṭṭi,* பெ.(n.) கிட்டி விளையாட்டு; the game of tip-cat.

[குழி + கிட்டி.]

குழிக்குத்து *kuḻi-k-kuttu,* பெ.(n.) செடி முதலிய வற்றைப் பிடுங்கி நடுங்குழி; pit made for transplantation.

[குழி + குத்து.]

குழிங்கை *kuḻiṅgai,* பெ.(n.) உள்ளங்கை (இ.வ.); palm of the hand.

[குழியும் + கை – குழியுங்கை → குழிங்கை.]

குழிச்சட்டி *kuḻi-c-caṭṭi,* பெ.(n.) 1. பணியாரஞ்சுடும் குழியுள்ள மண்சட்டி; earthen pan with hollow cavities for frying cakes. 2. ஆழமான மண்சட்டி; a hollow earthern cooking pot (சா.அக.).

ம. குழிகலம்

[குழி + சட்டி.]

குழிச்சிலந்தி[1] *kuḻi-c-cilandi,* பெ.(n.) குழிவிழும் ஒரு சிலந்திப்புண்; any sore or ulcer with a hole or cavity (சா.அக.).

[குழி + சிலந்தி.]

குழிச்சிலந்தி[2] *kuḻi-c-cilandi,* பெ.(n.) சிலந்திவகை; a species of spider.

[குழி + சிலந்தி.]

குழிசி *kuḷiśi,* பெ.(n.) 1. பானை; pot, cooking vessel. *"சோறடு குழிசி" (பெரும்பாண்.366).* 2. மிடா (திவா.); large pot. 3. சக்கரத்தின் குடம்; hub of a wheel. *"கூடுளி முகம்பொரக் குழிசி மாண்டன" (சீவக.2229).*

[குழி → குழித்தி → குழிசி.]

குழிசீலை *kuḷi-śīlai,* பெ.(n.) கோவணம் (இ.வ.); a narrow piece of cloth wornover the privities, loin-cloth.

ம. குழிச்சீலை

[கிழி → குழி + சீலை.]

குழிசோதனை *kuḷi-sōdaṉai,* பெ.(n.) விளைந்த வயலில் குழியளவுள்ள இடத்தில் வளர்ந்த கதிரை அறுத்தளந்து விளைவு மொத்தத்தை மதிப்பீடு செய்தல் (இ.வ.); estimation of the total produce of a field from that of a single *kuḷi* harvested.

[குழி + சோதனை.]

குழித்தட்டு *kuḷi-t-taṭṭu,* பெ.(n.) தாம்பாளவகை; a kind of plate or salver (S.I.I.iii.295).

[குழி + தட்டு.]

குழித்தருப்பணம் *kuḷi-t-taruppaṇam,* பெ.(n.) இறந்த நாள் முதல் பத்தாம் நாள் முடிய இறந்தவர் பொருட்டு நட்ட கல்லுள்ள குழியில் செய்யும் நீர்க்கடன்; libation offered to the deceased, for ten days from the day of death in a pit in which is placed a stone representing the deceased.

[குழி + தருப்பணம்.]

குழித்தளிகை *kuḷi-t-taḷigai,* பெ.(n.) கோவிலிற் கறிகள் கன்னல் முதலியவற்றோடு இடும் படையல்; boiled rice and relish, offered to gods in temples.

[குழி + தளிகை.]

குழித்தாமரை *kuḷi-t-tāmarai,* பெ.(n.) கொட்டைப் பாசி (மலை.); root lees nelumbo, floating in tanks and ditches.

ம. குழித்தாமர

[குழி + தாமரை.]

குழித்தாழி *kuḷi-t-tāḻi,* பெ.(n.) கால்நடைகளுக்கு நீர் கொடுக்க பயன்படுத்தும் திண்மையான ஏனம்; a large earthern vessel used to water cattle.

ம. குழித்தாளி

[குழி + தாளி.]

குழித்தி *kuḷitti,* பெ.(n.) ***குழித்தாழி*** பார்க்க; see *kuḷi-t-tāḻi*

மறுவ. குழிதாழி

[குழி → குழித்தி.]

குழித்தைலம் *kuḷi-t-tailam,* பெ.(n.) குடத்தில் மூலிகைகளை நிரப்பி எரித்து வடிக்கும் தைலம்; lit., pit oil extracted by burying and heating the pot containing medicinal herbs. *"காந்தட் கிழங்கை குழித்தைலமாக இறக்கி" (இராசவைத். 96,உரை).*

[குழி + தைலம்.]

குழிதந்தம் *kuḷi-tandam,* பெ.(n.) நகம்; nail (சா.அக.).

[குழி + தந்தம்.]

குழிதாழி *kuḷi-tāḻi,* பெ.(n.) பூத்தொட்டி; flower pot.

[குழி + தாழி.]

குழிதிற-த்தல் *kuḷi-tiṟa-,* 3 செ.கு.வி.(v.i.) சில விழாக்களின் முடிவில் தீயில் நடந்து சென்று நேர்ந்து கொண்டதை நிறைவேற்றுவதற்காகக் குழிகளில் தழல் பரப்பி வைத்தல்; to open the sacred fire pit with appropriate ceremonies, as in muharram feast.

[குழி + திறத்தல்.]

குழிந்தம் *kuḻindam,* பெ.(n.) நகம்; nail (சா.அக.).

[குழி → குழிந்தம்.]

குழிந்திரு-த்தல் *kuḻindiru-,* 3 செ.கு.வி.(v.i.) குழியாயிருத்தல்; being hollow like a cavity (சா.அக.).

[குழிந்து → இருத்தல்.]

குழிந்தெடு-த்தல் *kuḻindeḍu-,* 4 செ.குன்றாவி.(v.t.) ஆராய்ந்து பார்த்தல்; to scrutinize, dive deep, to be very inquistive about.

[குழிந்து + எடுத்தல்.]

குழிநரி *kuḻi-nari,* பெ.(n.) 1.குள்ளநரி; jackal. *"காயும் சிந்தைக் குழிநரிக் கள்ளத்தான்" (குற்றா. தல.வேடன்வலம்.13).* 2.மணலிற் குழி செய்து கொண்டு அதனுள் விழும் எறும்பு முதலியவற்றை உணவாகக் கொள்ளும் சிறுபூச்சி; ant-lion, neuropterous insect the larva of which makes in the sand a pit-fall to capture ants.

ம. குழிநரி

[குழி + நரி.]

குழிநரி *kuḻi-nari,* பெ.(n.) ***குழிப்பன்றி*** பார்க்க; see *kuḻi-paṉṟi.*

[குழி + நரி.]

குழிநாவல் *kuḻi-nāval,* பெ.(n.) நாவல் மரவகை; common, myrtle.

[குழி + நாவல்.]

குழிப்பணம் *kuḻi-p-paṇam,* பெ.(n.) 18ஆம் நூற்றாண்டில் மதுரைப் பகுதியில் வழங்கிவந்த ஒருவகை நாணயம்; a Madura coin, current in the 18th c (I.M.P. Mr.3-A).

[குழி + பணம்.]

குழிப்பணியாரம் *kuḻi-p-paṇi-y-āram,* பெ.(n.) பணியாரவகை; a kind of cake.

[குழி + பணியாரம்.]

குழிப்பறங்கிக்காய் *kuḻi-p-paṟaṅgi-k-kāy,* பெ.(n.) கோடைப் பூசணி (பதார்த்.699); a species of pumpkin.

[குழி + பறங்கி + காய்.]

குழிப்பறை *kuḻi-p-paṟai,* பெ.(n.) பழங்குடி இனத்தாரின் குடிப்பெயர் (வின்.); a kind of scheduled class people.

[குழி + பறை.]

குழிப்பன்றி *kuḻi-p-paṉṟi,* பெ.(n.) பூச்சிவகை; ant-lion.

[குழி + பன்றி.]

குழிப்பன்னா *kuḻi-p-paṉṉā,* பெ.(n.) கடல்மீன்கள்; species of sea-fish, (a) brownish-red, attaining more than 21/2 ft. in length (b) greyish, attaining 16. in length, (c) silvery-grey, attaining 9 in. length.

[குழி + பன்னா.]

குழிப்பாடி *kuḻi-p-pāḍi,* பெ.(n.) குழிப்பாடி என்னும் ஊரில் நெய்த துணிவகைகள் (தொல்.சொல். 116,உரை); cloth made in town of *kuḻi-p-pāḍi.*

[குழி + பாடி – குழிப்பாடி (இடவாகுபெயர்)]

குழிப்பாம்பு *kuḻi-p-pāmbu,* பெ.(n.) ***குழிமீன்*** பார்க்க; see *kuḻimīṉ.*

[குழி + பாம்பு.]

குழிப்பாறை *kuḻi-p-pāṟai,* பெ. (n.) பாறைமீன்வகை; a kind of *pāṟai* fish.

[குழி + பாறை.]

குழிப்பிள்ளை *kuḻi-p-piḷḷai,* பெ.(n.) ஆழத்தில் நடுந்தென்னங்கன்று; young coconut tree planted deep.

[குழி + பிள்ளை.]

குழிப்பு *kuḻippu,* பெ.(n.) 1. குழி செய்கை; forming pits, hollows. 2. தாழ்வு; depression. 3. செய்யுட் சந்த வகை; a peculiar harmonic rythem in verse, as *"அணியுடன்ற பரி பரியுடண்ற கரி கரியுடன்ற கொடி".*

[குழி → குழிப்பு.]

குழிப்புண் *kuḻi-p-puṉ,* பெ.(n.) 1. குழிவிழுந்த புண்; ulcer in which holes are formed. *"கானா வாழைக்கு முலைக்கண் குழிப்பு ணாறிவிடும்" (பதார்த்த.365).* 2. வாய்ப்புண் (இ.வ.); inflammation in the mouth.

[குழி + புண்.]

குழிப்பூதரம் *kuḻippūdaram,* பெ.(n.) மீனைமரம்; a kind of tree (சா.அக.).

[குழி + பூதரம்.]

குழிப்பூப்புடம் *kuḻippū-p-puḍam,* பெ.(n.) முப் பூப்புடங்களுள் மருந்தைக் குழியில் வைத்து எடுக்கும் புடவகை; calcining medicine by putting it into a closed pit or hole for some time, one of *mu-p-pū-p-puṭam.*

[குழிப்பூ + புடம்.]

குழிப்பெருக்கம் *kuḻi-p-perukkam,* பெ.(n.) ***குழி மாற்று*** பார்க்க; see *kuḻimāṟṟu.*

மறுவ. குழிமாற்று

ம. குழிப்பெருக்கம்

[குழி + பெருக்கம்.]

குழிபறி–த்தல் *kuḻi-paṟi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. குழி தோண்டுதல்; to dig a pit. *"குழிபறித்தரக்கரோடு மல்லரை யிருத்தி" (பாரத.இருட்.179).* 2. சூழ்ச்சிக் கலந்துரையாடிப் (சதியாலோசனை செய்து) பிறர்க்குத் தீங்கு செய்ய முயலுதல்; to try to ruin, undermine.

[குழி + பறி–.]

குழிபறி–தல் *kuḻi-paṟi,* 4 செ.கு.வி.(v.i.) பள்ளம் விழுதல் (யாழ்.அக.); to become hollow; to be full of its or ruts.

[குழி + பறி.]

குழிமாடம் *kuḻi-māḍam-,* பெ.(n.) சவக்குழிக்கு மேல் கட்டப்படும் கட்டடம்; a tomb.

ம. குழிமாடம்

[குழி + மாடம்.]

குழிமாத்தி *kuḻimātti,* பெ.(n.) மலை வேம்பு; Indian mahogany (சா.அக.).

[குழி + (மரத்தி) மாத்தி.]

குழிமாந்தம் *kuḻi-māndam,* பெ–(n) உச்சியில் குழிவிழுமாறு தோன்றும் மாந்தநோய் வகை (சீவரட்); a child's disease in which the fontanel of the head sinks.

[குழி + மாந்தம்.]

குழிமாற்று *kuḻi-māṟṟu,* பெ.(n.) 1. வருக்க வாய்பாடு; table of squares. 2. பெருக்கல் வாய்ப்பாடு; multiplication table.

மறுவ. குழிப்பெருக்கம்

[குழி + மாற்று.]

குழிமாறு–தல் *kuḻi-māṟu-,* 8 செ.குன்றாவி. (v.t.) 1. வருக்கித்தல் (வின்.); to square. 2. பெருக்குதல்; to multiply.

[குழி + மாறு.]

குழிமாறு-தல் *kuḻi-māṟu,* 5 செ.குன்றாவி. (v.t.) குழியை நிரப்பிப் பரப்பாக்குதல் (யாழ்.அக.); to level up.

[குழி + மாறு.]

குழிமி *kuḻimi,* பெ.(n.) 1. மதகு; sliuce. 2. பாத்திரத்தின் மூக்கு; spout of a vessel.

[குழி → குழிமி.]

குழிமிட்டான் *kuḻimiṭṭāṉ,* பெ.(n.) 1. நத்தைச்சூரி நாணல் வகை (மலை.); bristly button weed. 2. தண்ணீர் விட்டான் கிழங்குக் கொடி; a common climber with many thick fleshy roots. 3. செடிவகை; rough basil.

[குழிமி → குழிமிட்டான்.]

குழிமீட்டான் *kuḻi-mīṭṭāṉ,* பெ.(n.) ***குழிமிட்டான் (பதார்த்த.295)*** பார்க்க; see *kuḻimiṭṭāṉ.*

[குழி + மீட்டான்.]

குழிமீண்டான் *kuḻi-mīṇḍāṉ,* பெ.(n.) உயிர் போனதாக நினைத்துக் குழியில் வைத்துப் பின்னர், எடுத்த பிள்ளை; child which with a view to avert its premature death is treated as dead, placed in a grave and then taken back.

[குழி + மீண்டான்.]

குழிமீன் *kuḻi-mīṉ,* பெ.(n.) பாம்பு வடிவான மீன்வகை; congereel, olive, attaining more than 10ft. in length.

[குழி + மீன்.]

குழிமுசடி *kuḻimusāḍi,* பெ.(n.) மீன் கொல்லி; fish killer (சா.அக.).

[குழி + (மூயடி) முசடி.]

குழிமுயல் *kuḻimuyal,* பெ.(n.) முயல்வகை; rabbit.

ம. குழிமுயல்

[குழி + முயல்.]

குழிமுயல்வளை *kuḻimuyal-vaḷai,* பெ.(n.) சீமை முயல் வசிக்குமிடம்; cony burrow (சா.அக.).

[குழி + முயல் + வளை.]

குழியச்சு *kuḻi-y-accu,* பெ.(n.) பொன்மணி உருவாக்கும் அச்சு; mould for making gold beads.

[குழி + அச்சு.]

குழியடிச்சான் *kuḻi-y-aḍiccāṉ,* பெ.(n.) ஆவணி புரட்டாசி மாதங்களில் விதைக்கப்பெற்று நான்கு மாதங்களில் விளையும் நெல்வகை (இ.வ.); a course paddy sown in āvani-puraṭṭāci maturing in four months.

[குழி + அடிச்சான்.]

குழியடுப்பு *kuḻi-y-aḍuppu,* பெ.(n.) தரையைத் தோண்டி உருவாக்கும் அடுப்பு; an oven dig out in the earth.

ம. குழியடுப்பு

[குழி → குழித்தி.]

குழியம் *kuḻiyam,* பெ.(n.) 1. திரள்வடிவு (திவா.); globular, round shape. 2. நறுமண உருண்டை (14,171 அரும்.); perfume ball.

[குழி → குழியம்.]

குழியம்மி *kuḻi-y-ammi,* பெ.(n.) மருந்தரைக்கும் கலுவம்; a kind of hollow stone mortar used for macerating medicines.

ம. குழியம்மி

[குழி + அம்மி.]

குழியல் *kuḻiyal,* பெ.(n.) 1. மாழையாற் செய்யப்பட்ட ஒருவகைக் குழிவான ஏனம்; a kind of hollow metallic vessel. 2. அகப்பை; a ladle, spoon.

ம. குழியல்

[குழி → குழியல்.]

குழியவிடு-தல் *kuḻi-y-aviḍu-,* 3 செ.குன்றாவி. (v.t.) பொன்னைக் குழியுண்டாம்படி அச்சிடுதல்; to form the halves of hollow gold beads to be afterwards soldered together, in jewellery.

[குழி - குழியவிடு.]

குழியானை *kuḻiyāṉai,* பெ.(n.) ***குழிநரி*** பார்க்க;see *kuḻinari.*

மறுவ. குழிநரி

ம. குழியான

[குழி + யானை.]

குழியில் விழு-தல் *kuḻiyilviḻu-,* 3 செ.கு.வி.(v.i.) தீநெறிப்படுதல்; lit; to fall into a pit; to fall in to evil ways, vice.

[குழி + இல் + விழு.]

குழியில் வை-த்தல் *kuḻiyilvai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1.பிணத்தைப் புதைத்தல்; burrying as the dead. 2. மருந்தப் புடக்குழியில் வைத்தல்; placing a medicine in a pit for purposes of calcinations (சா.அக.).

[குழி + வை.]

குழியுரல் *kuḻiyural,* பெ.(n.) 1. தரையில் பதிக்கப்பட்ட உரல்; a mortar which is fixed in the ground.

ம. குழியுரல்

[குழி + உரல்.]

குழிவண்டு *kuḻivaṇḍu,* பெ.(n.) குழியில் வசிக்கும் வண்டு; beetle living in holes under ground (சா.அக.).

[குழி + வண்டு.]

குழிவயிறு *kuḻi-vayiṟu,* பெ.(n.) 1.வயிறு; belly. 2. கருக்குழி; womb.3. பள்ளம்; cavity or depression.4. புடமிடும் குழி; a pit of varied depth intended for calcination. (சா.அக.).

[குழி + வயிறு.]

குழிவரியேற்று-தல் *kuḻi-vari-y-ēṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) அரசிறையிடுதல் (S.I.I.iii,12); to levy land tax.

[குழி + வரி + ஏற்று.]

குழிவாழை *kuḻi-vāḻai,* பெ.(n.) வாழைவகை; a species of plantain.

[குழி + வாழை.]

குழிவாளை *kuḻivāḷai,* பெ.(n.) குழிவிழும் ஒரு தோல் நோய் (கிரந்தி)ப்புண்; a kind of syphilitic ulcer with a cavity or depression in the centre (சா.அக.).

[குழி + வாளை.]

குழிவித்து வை-த்தல் *kuḻivittu-vai-,* 3 செ.கு.வி. (v.i.) உழவு காலில் கொஞ்சங் கொஞ்சமாக விதையையிட்டுப் புழுதி மண்ணையிட்டு மூடி வைத்தல்; to as the land is furrowed, and cover it with dust.

[குழி → குழிவி →குழிவித்து + வை.]

குழிவு *kuḻivu,* பெ.(n.) 1. குழிந்திருக்கை; hollowness, depression. 2. மாணிக்கக் குற்றங்களுள் ஒன்று; a flaw in ruby. *"மாணிக்கம் குழிவும் பிரகாரமும்" (S.I.I.ii,81).*

ம. குழிவு

[குழி →குழிவு.]

குழிவெட்டி *kuḻi-veṭṭi,* பெ.(n.) பிணக்குழி தோண்டுபவன்; grave digger.

[குழி + வெட்டி.]

குழிவெட்டு *kuḻiveṭṭu,* பெ.(n.) வயல் நிலத்தைச் சமப்படுத்த மேட்டை வெட்டும் வெட்டு; digging in a field for the purpose of levelling it.

[குழி + வெட்டு.]

குழிவேர் *kuḻivēr,* பெ.(n.) நிலத்துக்குள் புதைந்த வேர்; root burried under the earth (சா.அக.).

[குழி + வேர்.]

குழு[1] *kuḷu,* பெ.(n.) 1. மக்கட்கூட்டம் (திவா.); class, society, band, assembly. 2. பெண்கள் கூட்டம் (பிங்.); assembly or gathering of women. 3. ஆடு முதலியவற்றின் கூட்டம்; flock, herd, swarm, shoal. 4. தொகுதி; bundle, heap. *"இந்தனக் குழுவை"* *(ஞானா.63.11).*

ம. குழு

[குல் → குள் →குழு.]

குழு[2] *kuḷu,* பெ.(n.) 1. சூழ்ச்சி, தந்திரம்; ingenuity. 2. தந்திரமான சொல்; shrewd utterance. 3. திறமையான சொல்; wit, witty, expression.

[குல் → குள் → குழு.]

குழு[3] *kuḷu,* பெ.(n.) அடங்காமை (யாழ்.அக.); intractability.

[குல் → குல்லு → குறு → குறுவன் → குழு.]

குழுக்கடா *kuḷu-k-kaḍā,* பெ.(n.) காட்டெருமை; wild buffalo (சா.அ க.).

[குழு + கடா.]

குழுக்காலி *kuḷu-k-kāli,* பெ.(n.) கட்டுக்கடங்காமற் கொழுத்திருக்கும் மந்தைமாடு (இ.வ.); well shaped intractable bull in a herd.

[குழு + காலி.]

குழுக்கூலி *kuḷu-k-kūli,* பெ.(n.) களவு போனதை மீட்டுக் கொடுப்பதற்காகப் பொருட்குரியவர் கொடுக்கும் பொருளில் இடைநின்று அச் செயலுக்கு உதவிய சிற்றூர்க் காவற்காரனுக்குரிய பங்கு; share of money paid to the village watchman for acting as intermediary and restoring the stolen property of to the owner.

[குழு + கூலி.]

குழுக்கெண்டை *kuḷu-k-keṇḍai,* பெ.(n.) வால் மீன் (மீன்பிடி.சொ.தொ.);a kind of fish.

[குழு + கெண்டை.]

குழுதாடி *kuḷu-tāḍi,* பெ.(n.) ***குழுதாழி*** பார்க்க; see *kuḷutāḻi*

[குழு + (தாழி) தாடி.]

குழுதாழி *kuḷu-tāḻi,* பெ.(n.) 1. குழுதாழி, மாட்டுத் தொட்டி; cattle trough, made of clay and burnt. 2. ***குழுதாழி*** பார்க்க; see *kuḷutāḻi.*

மறுவ. குழித்தி

[குழு → குழு + தாழி.]

குழுதி *kuḷudi,* பெ.(n.) கிரகப்பூச்சி; a kind of insect (சா.அக.).

[குழு → குழுதி.]

குழுப்படை *kuḷu-p-paḍai,* பெ.(n.) அரசனால் அமர்த்தப்பட்ட தலைவனையுடைய படை (சுக்கிரநீதி,303); forces under the command of a general appointed by the king.

[குழு + படை.]

குழும்பு[1] *kuḷumbu,* பெ.(n.) குழி; pit. *"ஆழ்ந்த குழும்பிற் றிருமணி கிளர" (மதுரைக் 273).*

[குழு → குழும்பு.]

குழும்பு[2] *kuḷumbu,* பெ.(n.) திரள்; herd, flock, swarm, crowd. *"களிற்றுக் குழும்பின்" (மதுரைக்.24).*

[குழு → குழும்பு.]

குழுமல் *kuḷumal,* பெ.(n.) 1. கூடுகை; assembling, crowding. *"விண்ணவர் யாவரும் குழுமலுற்று" (கந்தபு.தேவகிரி.21).* 2.கூட்டம் (பிங்.); assembly, crowd.

[குழு → குழுமல்.]

குழுமு-தல் *kuḷumu-,* 7 செ.கு.வி.(v.i.) 1. கூடுதல்; to collect in large numbers, as men, animals. *"மாத ரெண்ணிலார் குழுமி" (காஞ்சிப்பு. பன்னிரு.134).* 2. கலத்தல்; to gather together, mix. *"கொன் றையும் துளவ மும் குழுமத் தொடுத்த" (சிலப்.12, உரைப்பாட்டு மடைக்குப்பின் செய்யுள்.10).* 3. கூடி முழங்குதல்; to roar in company, as tigers. *"கூட்டுறை வயமாப்புலியொடு குழும" (மதுரைக். 677).*

ம. குழுமுக

Fin. kummuta; Es. kummuda; Hanti. kump; Hung. hab; Jap. kabi.

[குழு → குழுமுதல்.]

குழுமுரல் *kuḷu-mural,* பெ.(n.) ஒருவகை முரல் மீன்; a species of thick needle-fish.

[குழு → குழுமுறல்.]

குழுமேதி *kuḷumēdi,* பெ.(n.) காட்டெருமை; wild buffalo (சா.அக.).

[குழு + மோதி. போத்து →மோத்து →மோதி →மேதி.]

குழுமை *kuḷumai,* பெ.(n.) ஒற்றுமை, ஒன்று பாட்டுணர்வு; integrity colesion.

[குழு →குழுமை.]

குழுமைக்கட்டி *kuḷumai-k-katti,* பெ.(n.) 1. உமிழ்நீர்ச் சுரப்பியில் எரிச்சலை உண்டுபண்ணி, கழுத்தைச் சுற்றி வீக்கங் காணும் ஒரு நோய்; a disease consisting of inflammation of the salivary glands with swelling along its neck. 2. குளுமக் (சைத்திய) கட்டி; a tumour or swelling of the tonsils from cold (சா.அக.).

[குளுமை →குழுமை + கட்டி.]

குழுவல் *kuḷuval,* பெ.(n.) 1. கூடுகை; crowding, assembling. *"குமரரு மங்கைமாருங் குழுவலால்" (கம்பரா.வரைக்.28).* 2.கூட்டம்; crowd, assembly.

[குழு → குழுவல்.]

குழுவன்[1] *kuḷuvaṉ,* பெ.(n.) *குளுவன் (சங்.அக.)* பார்க்க;see *kuḷuvaṉ*

[குழு → குழுவன்.]

குழுவன்[2] *kuḷuvaṉ,* பெ.(n.) சொற்கேளாதவன் (யாழ்.அக.); intractable person.

[குறுவன் → குழுவன்.]

குழுவு-தல் *kuḷuvu-,* 6 செ.கு.வி. (v.i.) 1. கூடுதல்; to assemble in large numbers, to crowd. *"மள்ளர் குழீஇய விழவினானும்" (குறுந்.31).* 2. கலத்தல்; to associate, mingle. *"இகலில ரெஃகு டையார் தம்முட் குழீஇம்" (நாலடி.137).*

[குழு - குழுவு.]

குழூஉ *kuḷūu,* பெ.(n.) கூட்டம்; class, assembly, crowd. *"சாதிகுழூஉ" (நன்.211).*

[குழுவு → குழூஉ.]

குழூஉக்குறி *kuḷū-ukkuṟi,* பெ.(n.) 1. சிற்சில கூட்டத்தார்க்குள் வழங்கும் குறிப்பு மொழி (நன்.267); conventional term, peculiar to a society or profession one of three *tagudi-vaḷakku.*

[குழூஉ + குறி.]

குழூஉநிலை *kuḷū-u-nilai,* பெ.(n.) கோபுரமுதலிய கட்டடத்தின் தளநிலைகள்; series of stories in a building. *"குழூஉநிலைப் புதவின்" (பதிற்றுப்.53.16).*

[குழூஉ + நிலை.]

குழூஉப்பெயர் *kuḷū-uppeyar,* பெ.(n.) கூட்டம் பற்றி வரும் பெயர்ச்சொல்; collective noun. *"சாதிகுழூஉப்பெயர்" (நன்.211).*

[குழூஉ + பெயர்.]

குழை[1]—தல் *kuḷai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. இளகுபதமாதல்; to become soft, mashy 6, pulpy, as well-cooked *'குழையச் சமைத்த பகுப்பு' (திவ். பெரியாழ்.3, 1,3.வ்யா).* 2. மனமிளகுதல்; to melt, become tender as the mind. *"தொண்டரினம் குழையாத் தொழும்" (பதினொ.பட்டினத். திருவே.28).* 3.சோறு அளிதல்; to be overboiled, as rice. 4. நெருங்கி உறவாடுதல்; to be in close intimacy, to be hand in glove with. குழைந்து பரிமாறுகிறார்கள். 5. வளைதல்; to be bent, as a bow. *"திண்சிலை குழைய" (சூளா.அரசியற்.319).* 6. வாடுதல்; to fade, languish become spoilt, as flowers or twigs. *"மோப்பக்குழையும் அனிச்சம்" (குறள்.90).* 7. துவளுதல்; to wave, as a flag, to sway to and fro. *"குழைந்த நுண்ணிடை" (கம்பரா.சித்திர.9).* 8. தளர்தல்; to be tired to be weighed down *"கோதைசூழ் கொம்பிற் குழைந்து" (பு.வெ.12, பெண்பாற்.14).* 9. வருந்துதல்; to be troubled. *"மகளிர் குழைகின்ற குழைவை" (கம்பரா. பிரமாத்.31).*

ம. குழயுக; **க.** கொழெ; **தெ.** க்ருள்ளு; **து.** குறையுனி, குரைவுனி, குரிவுனி, குரியுனி; **துட.** க்வஸ்; **கோத.** கொள்வு, குத்; **குரு.** கொச்ச்னா.

Fin. kura; **Es.** kura; **Q.** kurpa.

[குழை → குழைதல்.]

குழை[2]—த்தல் *kuḷai-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. குழையச் செய்தல்; to macerate, mas, reduce to fult, pulp make soft by mixing with water. சோற்றைக் குழைத்து விட்டாள். 2. மருந்துப் பொடியை தேன் முதலியனவிட்டுக் கலத்தல்; to mix, as powder with a liquid. 3. கலக்கப் பண்ணுதல்; to melt and blend in union, fuse. *"உன்னையென்னுள்ளே குழைத்தவெம் மைந்தா" (திவ்.திருவாய.2,6,9).* 4. தழையச் செய்தல்; to cause sprout or shoot forth. *"மழை குடக்கோ்பு குழைத்த சிறுகோல்"(நற்.140).* 5.திரட்டுதல்; to gather in a lump, as boiled rice. *"கருணை யாற் குழைக்கும் கைகள்" (சீவக.257).* 6.இளகுவித்தல்; to cause to melt. *"அத் தன்மெய் குழைத்தநங்கை" (கந்தபு.மேரு.16).* 7. வளைத்தல்; to bend, as a bow. *"பொன் வரை குழைத்து" (சூடாமபு. பிரமவிஷ்.உல).* 8. அசைத்தல்; to wave, as the chowry fan. to wag, as a dog its tail. *"குழைக்கின்ற கவரியின்றி" (கம்பரா.நகர்தீ.21).*

[குழை → குழைத்தல்.]

குழை[3] *kuḷai,* பெ.(n.) 1. தளிர்; tender leaf, sprout, shoot. *"பொலங்கு ழையுழிஞை" (புறநா.50).* 2. சேறு (திவா.); soft mud, mire. 3. துளை; hole. *'கோடிநுண் டுகிலுங் குழையும் (சீவக.1369).* 4. குழல் (பிங்.); tube, pipe. 5. சங்கு(பிங்.); conch. 6. காது; ear. *'மணித்தோடுங் குழையிலாட' (அஷ்டப் சீரங்க நாயகி.ஊச.3).* 7. குண்டலம்; a kind of ear-ring. *'மின்னுக் குழையும் பொற்றோடும்' (சீவக.1658).* 8. வானம் (பிங்.); sky. 9. காடு (பிங்.); jungle. 10. நெய்தல்; indian water lily.

க. கொளசி; **ம.** குழ.

[குழ → குழை.]

குழை[4] *kuḷai,* பெ.(n.) 1. மயிர்; hair. 2. தளிர்; tender leaf, foliage. 3. நெய்தல்; white indian water lily. 4. துளை; hole. 5. காடு; jungle. 6. காது; ear. 7. வானம், ஆகாயம்; sky. 8. குழாய்; tube (சா.அக.).

Fin. kurva; **Es.** kõrv; **Komi.** kõr; **Mong.** xulki; **Turk.** kulak, kulka; **O.Jap.** kura.

[குள் → குழ → குழை.]

குழைக்கடி—த்தல் *kuḷai-k-kaḍi,* 4 செ.குன்றாவி.(v.t.) குழையடித்தல் (யாழ்.அக.); to effect a cure by magic, passing a handful of neem twigs over the patient's body.

[குழைக்கு + அடி.]

குழைக்காட்டான் *kuḷai-k-kāṭṭāṉ,* பெ.(n.) நாட்டுப் புறத்தான்; rustic, boor.

[குழைக்காடு → குழைக்காட்டான்.]

குழைகறி *kuḷai-kaṟi,* பெ.(n.) குழைந்தகறி; vegetable curry softened by boiling.

[குழை + கறி.]

குழைகுழை-த்தல் *kuḻai-kuḻai-,* 4 செ.கு.வி.(v.i.) குழம்பிக்கிடத்தல்; to be confused. *"குழைகுழைத்த கல்வியினுங் கேள்வியினுங் கல்லாமை குணமே" (தண்டலை.83).*

[குழை + குழைத்தல்.]

குழைச்சரக்கு *kuḻai-c-carakku,* பெ.(n.) 1.சார மற்ற பண்டம்; worthless stuff. *"குழைச்சரக்கே யாகிலும் விடவொண்ணாத" (திவ். திருப்பா.4. வ்யா.).* 2. காக்கப்படும் பொருள்; that which is protected preserved. *"நாங்கள் உனக்குக் குழைச் சரக் கானபடி" (திவ். திருப்பா.10,வ்யா).*

[குழை + சரக்கு.]

குழைச்சல் *kuḻaiccal,* பெ.(n.) வணக்கங்காட்டுகை (கொ.வ.); obsequiousness servility.

[குழை → குழைச்சல்.]

குழைச்சாந்து *kuḻai-c-cāndu,* பெ.(n.) கட்டடம் பூசுதற்கு உதவும் கலவைச்சாந்து; softended mortar, as used in rough plastering.

[குழை + சாந்து.]

குழைச்சான் *kuḻaiccāṉ,*பெ.(n.) எப்பொழுதும் குழைந்து பணிந்து நிற்பவன், அடிமைக் குண முள்ளவன்; slavery person.

[குழை → குழைச்சான்.]

குழைச்சான் கொட்டுக் கொட்டு-தல் *kuḻaiccāṉ koṭṭu-k-koṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) அடிமை போல் வணக்கவொடுக்கமாய் நடத்தல்; to behave in a servile or obseduious manner.

[குழைச்சான் + கொட்டு + கொட்டுதல்.]

குழைச்சி[1] *kuḻaicci,* பெ.(n.) புற்றாஞ்சோறு (சங்.அக.); comb of white ant's nest.

[குழை → குழைச்சி.]

குழைச்சி[2] *kuḻaicci,* பெ.(n.) **குழைச்சு** பார்க்க;see *kuḻaiccu.*

[குழை → குழைச்சி.]

குழைச்சி[3] *kuḻaicci,* பெ.(n.) மண்வெட்டியின் காம்பு (முகவை);handle of spade.

[குழை → குழைச்சி.]

குழைச்சு *kuḻaiccu,* பெ.(n.) 1. கயிற்றுச் சுருக்கு; loop, noose in a string or cord. 2. முடிச்சு; tie, knot. 3. உடம்பிலுள்ள எலும்பின் சந்து; joint of the body, especially the socket joint of the shoulder or thigh. 4. ஆயுதக் குளசு; eye or socket of a hoe, adze, etc.

[குழை → குழைச்சு.]

குழைச்சுப்படு-தல் *kuḻaiccu-p-paḍu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. சுருக்கிப்படுதல்;to be coiled, looped, as a rope. 2. சிக்குப்படுதல்; to be knotted, tangled.

[குழைச்சு + படுதல்.]

குழைச்சு மண்வெட்டி *kuḻaiccu-maṉ-veṭṭi,* பெ.(n.) மண்வெட்டிவகை; hoe with a socket for the handle.

[குழைச்சு + மண்வெட்டி.]

குழைச்சுவிடு-தல் *kuḻaiccu-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. உடல்மூட்டு விடுதல்; to be disjointed, dislocated. 2. மண்வெட்டியின் காது முறிதல்; to be broken, as the socket of hoe.

[குழைச்சு + விடுதல்.]

குழைசேறு *kuḻai-cēṟu,* பெ.(n.) கலங்கற்சேறு (திவா.); softmire, slime.

[குழை + சேறு.]

குழைந்தசோறு *kuḷainda-cōṟu,* பெ.(n.) அதிகமாக வெந்து குழைந்த சோறு; over boiled rice (சா.அக.).

[குழை → குழைந்த + சோறு.]

குழைந்தநீர் *kuḷaindanīr,* பெ.(n.) இளநீர்; water of tender coconut (சா.அக.).

[குழை → குழைந்த + நீர்.]

குழைந்தபதம் *kuḷainda-padam,* பெ.(n.) அழிந்த பதம்; over boiled condition (சா.அக.).

[குழை → குழைந்த + பதம்.]

குழைந்தவன்னம் *kuḷainda-vaṉṉam,* பெ.(n.) குழைந்தசோறு; over boiled rice. (சா.அக.).

[குழைந்த + வன்னம். வரைநெல் → வன்ன → வன்னம் (மூங்கிலரிசிச் சோறு).]

குழைநாற்றம் *kuḷai-nāṟṟam,* பெ.(n.) அழுகிய இலைநாற்றம்; rotten smell of a leaf (சா.அக.).

[குழை + நாற்றம்.]

குழைப்பாசி *kuḷai-p-pāši,* பெ.(n.) இலைப்பாசி; large leaved moss (சா.அக.).

[குழை + பாசி.]

குழைபிடி-த்தல் *kuḷaipiḍi-,* 4 செ.கு.வி.(v.i.) ஒரு செயலைத் தடைசெய்தல்; lit., to hold a bough, to obstruct an affair.

[குழை + பிடித்தல்.]

குழைமறைவு *kuḷai-maṟaivu,* பெ.(n.) 1. பார்வையை மேற்செல்ல விடாது தடுக்கும் தழையின் செறிவு; dense foliage, shrubbery or trees, as intercepting vision. 2. மறைந்து ஒதுங்குகை; skulking, evading.

[குழை + மறைவு.]

குழைமுகப்புரிசை *kuḷaimuga-p-purišai,* பெ.(n.) அந்தப்புரம்; lit., the apartment guarded by women. women's apartment in a palace,harem zenana. *“குழைமுகப் புரிசையும் குரிசிறானகப்பட” (சீவக.275).*

[குழைமுகம் + புரிசை.]

குழைமுகம் *kuḷai-mugam,* பெ.(n.) கட்டட அமைப்பு வகை; a type of building construction.

[குழை + முகம்.]

குழையடி-த்தல் *kuḷai-y-aḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. வேப்பிலையால் உடம்பில் அடித்து மந்திரித்து நோய் தீர்த்தல்; to effect a magic cure by passing a handful of neem twigs over the body. 2. வயப்படுத்த சூழ்வினை (தந்திரஞ்) செய்தல்; to wheedle, use artful means to secure a selfish interest. 3. தழையை உரமாக இடுதல்; to apply green manure to paddy fields.

[குழை + அடித்தல்.]

குழையல் *kuḷaiyal,* பெ.(n.) குழைந்தபொருள்; that which is mashed or softened, as over boiledrice குழையற் சோறு (உ.வ.).

[குழை → குழையில்.]

குழையவடி-த்தல் *kuḷaiya-vaḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) சிறிது இளக்கமாகச் சோறு வடித்தல்; boiling down rice so as to be soft when eating (சா.அக.).

[குழை → குழைய+ வடி.]

குழையற்கறி *kuḷaiyaṟ-kaṟi,* பெ.(n.) 1. குழைய வெந்தகறி; mashy or pulpy curry. 2. அதிகமாக வெந்தகறி; curry overboiled.

[குழையல் + கறி.]

குழையற்பனாட்டு *kulaiyar-panāṭṭu,* பெ.(n.) பனம்பழச்சாற்றின் இறுகல்; juice of palmyra fruits, dried in to a jelly.

[கழையல் + பனாட்டு.]

குழையாணி *kuḷai-y-āṇi,* பெ.(n.) கொண்டையாணி; stub-nail.

[குழை + ஆணி.]

குழையுரம் *kulai-y-uram,* பெ.(n.) மரக்குழையாகிய உரம்; green manure.

[குழை + உரம். குழை = இலை, தழை.]

குழைவாயிரு-த்தல் *kulai-vāyiru-,* 3 செ.கு.வி. (v.i.) 1. மெதுவாயிருத்தல்; being soft (சா.அக.). 2. மென்மையாகவும் பக்குவமாகவும் நடந்து கொள்ளுதல்; to behave gently and obediently.

[குழைவு + ஆய் + இரு.]

குழைவு *kulaivu,* பெ.(n.) 1. நெகிழ்கை (சூடா.); mashy condition. 2. இரக்கம்; tenderness of mind, pity. *"கொடுமை தலைக்கொண்டு சற்றுங் குறைவிலாமல்" (சிவரக.சித்திரகேது.1).* 3. வாடுகை; fading, languishing. *"கொடி போலுருவாள் குழைவுற்றனளோ" (சிவரக. கணபதிவந்.4).*

[குழை → குழைவு.]

குழைவு *kulaivu,* பெ.(n.) 1. அணைவு; embrace. 2. கலப்பு; mixture, combination. 3. வளைவு; bend.

[குள் → குழை → குழைவு.]

குழைவுசீனி *kulaivu-šini,* பெ.(n.) வெள்ளைச் சருக்கரை; refined, white sugar.

[குழைவு + சீனி.]

குழைவுதிரணை *kulaivu-tiranai,* பெ.(n.) வளைவாகவுள்ள திரணை (கட்டட.நாமா.); cordon work.

[குழைவு + திரணை.]

குழைவுப்பலமுனை *kulaivu-p-palamunai,* பெ.(n.) வளைவான பகுதிகளில் கல்லிழைக்கப் பயன்படும் பலமுனை உளிவகை (மது.வழ.) (கட்.தொ.வரி.);a kind of chisel.

[குழைவு + பல + முனை.]

குழைவுளி *kulai-v-uli,* பெ.(n.) உளிவகை (C.E.M.); socket chisel.

[குழைவு → குள்ள + குடை.]

குள்ளக்கார் *kuḷḷakkār,* பெ.(n.) குள்ளம், சித்திரைக்கடப்பு என்னும் நெல்; a kind of paddy.

[குள்ளம் + கார்.]

குள்ளக்குடைச்சல் *kulla-k-kudaiccal,* பெ.(n.) ஆழ்ந்தவலி; deep seated pain (சா.அக.).

[குள்ள + குடைச்சல்.]

குள்ளக்குடை-தல் *kulla-k-kudai-,* 3 செ.கு.வி. (v.i.) நீருள் மிகவும் குடைந்து மூழ்குதல் (அகநா.63, உரை); to dive deep, plunge.

[குள்+ குடைச்சல்.]

குள்ளக்குளிர்-தல் *kull-k-kulir-,* 3 செ.கு.வி.(v.i.) மிகக் குளிர்ந்திருத்தல்; to be intensely cool and refreshing. *"குள்ளக்குளிரக்குடைந்து நீராடாதோ" (திவ்.திருப்பா.13).*

[குள்ளம் + குளிர்தல்.]

குள்ளக்குறுகவிரு-த்தல் *kulla-k-kuruga-viru-,* 3 செ.கு.வி.(v.i.) மிகக்குட்டையாக இருத்தல்; to be very short dwarf-fish.

[குள்ளம் + குறுக + இருத்தல்.]

குள்ளக்கெண்டை *kulla-k-kendai,* பெ.(n.) குறுங்கெண்டை மீன்வகை; carp, silvery, small.

[குள்ளம் + கெண்டை.]

குள்ளக்கேழ்வரகு *kuḷḷā-k-kēḻvaragu,* பெ.(n.) மூன்று மாதத்தில் விளையும் கேழ்வரகுப் பயிரில் ஒரு வகை (உ.ழ.நெ.க.அக.);a kind of *rāgi* crop.

[குள்ளம் + கேழ்வரகு.]

குள்ளத்தண்டுக்கீரை *kuḷḷa-t-taṇḍu-k-kīrai,* பெ.(n.) குப்பைக்கீரை; a weed of cotton soils.

[குள்ளம் + தண்டு + கீரை.]

குள்ளத்தாரா *kuḷḷat-tārā,* பெ.(n.) ஒருவகைச் சிறுவாத்து; a species of short duck.

[குள்ளம் + தாரா.]

குள்ளநரி *kuḷḷanari,* பெ.(n.) நரிவகை; jackal.

Fin. kettu; **Karel.** kettu; **Jap.** kitsune; **Tulu.** kudige.

[குள்ளம் + நரி.]



குள்ளநரி

குள்ளநரிக்குசு *kuḷḷanari-k-kušū,* பெ.(n.) திகைப் பூச்சி; an insect causing perplexity of mind when touched or otherwise come in contact with it. (சா.அக.).

[குள்ளநரி + குசு.]

குள்ளப்புடலை *kuḷḷa-p-puḍalai,* பெ.(n.) குள்ளப் புடலங்காய்; a short or stunted snake-gourd (சா.அக.).

[குள்ளம் + புடலை.]

குள்ளம் *kuḷḷam,* பெ.(n.) 1. குறள்; shortness in stature, dwarfishness. 2. கொடுமை; wickedness, cruelty (W.) 3.தந்திரம்; craft, cunning.

க. குள்ளு

[குள் → குள்ளம்.]

குள்ளம்பாய்-தல் *kuḷḷam-pāy,* 3 செ.கு.வி.(v.i.) 1. குறுகிக் கொண்டு வருதல்; to become shorter and shorter. 2. பிறர் அறிய முடியாதபடி தந்திர மாயிருத்தல்; to be crafty and cunning beyond detection. கள்ளனுக்குள் குள்ளம் பாய்தல்.

[குள்ளம் + பாய்தல்.]

குள்ளல் *kuḷḷal,* பெ.(n.) குள்ளம்; shortness in stature, dwarfishness.

[குள் + அல் – குள்ளல்.]

குள்ளவண்டு *kuḷḷavaṇḍu,* பெ.(n.) 1. சிறுகரு வண்டு; small black bee. 2. செயலில் விரைவுள்ளவன்; prompt and deligent person. one who is swift and business like.

[குள்ளம் + வண்டு.]

குள்ளவாளை *kuḷḷa-vāḷai,* பெ.(n.) ***குழிவாளை*** பார்க்க; see *kuḻi-vāḷai.*

[குள்ளம் + வாளை.]

குள்ளன் *kuḷḷaṉ,* பெ.(n.) 1. குறளன்; short, under-sized man, dwarf. 2. தந்திரக்காரன்; artful, cunning fellow.

ம.குள்ளன்; **க.,பட.**குள்ள; **கோத.**குள்ளன்.

[குள் + அன்.]

குள்ளன்கம்பு *kuḷḷaṉkambu,* பெ.(n.) அரிசிக்கம்பு; a short species of kambu.

[குள்ளன் + கம்பு.]

குள்ளாரால் *kuḷḷārāl,* பெ.(n.) ***சேற்றாரால்*** பார்க்க; see *cēṟṟārāl.*

[குள்ளம் + ஆரால்.]

குள்ளி *kulli,* பெ.(n.) குள்ளமானவள்; a short-statured woman.

ம., து., பட. குள்ளி.

[கள் → குள்ளி.]

குள்ளிக்கோழிமீன் *kulli-k-kōlimīṉ,* பெ.(n.) பவளக் குன்றுகளிலும் பவளச்செடி நிறைந்த கடல் ஓரங்களிலும் அகப்படும் ஒரு வகை வண்ணாத்தி மீன்; a smalll sturgeon fish found usually in coral reefs on the sea-coasts (சா.அக.).

[குள்ளி + கோழி + மீன்.]

குள்ளிதாச்சான் *kullitāccāṉ,* பெ.(n.) குளியிடிச்சான், நெல்வகை; a kind of paddy.

[குள்ளி + தாச்சான்.]

குள்ளிமல்லிகை *kulli-malligai,* பெ.(n.) ஒரு வகை மல்லிகை, சிறு மல்லிகை; very small jasmine (சா.அக.).

[குள்ளி + மல்லிகை.]

குள்ளிருமல் *kullirumal,* பெ.(n.) கக்கிருமல்; whooping-cough.

[குள் + இருமல். குள் – ஒலிக்குறிப்பு.]

குளக்கட்டியெனல் *kula-k-katti-y-eṉal,* பெ.(n.) ஊறுதியற்றுத் தளர்தலை யுணர்த்தும் குறிப்பு; expr. signigying the falling of anything infirm or loosely set, as the head of an infant.

[குளக்கட்டி + எனல். 'குளக்கட்டி' ஒலிக்குறிப்புச் சொல்.]

குளக்கட்டு *kula-k-kattu,* பெ.(n.) 1. குளத்தின் கரையைக் கட்டுகை; constructing the bund of a tank. 2. குளத்திற்குக் கட்டப்பட்ட கரை; artificial bund of a tank.

[குளம் + கட்டு.]

குளக்கடவு *kula-k-kadavu* பெ.(n.) குளத்தில் இறங்கிக் குளிக்கும் படித்துறை; a bathing ghat.

மறுவ. படித்துறை

ம. குளக்கடவு

[குளம் + கடவு.]

குளக்கமலம் *kula-k-kamalam,* பெ.(n.) வைப்பரி தாரம்; a prepared orpiment (சா.அக.).

[குள் → குள + கமலம்.]

குளக்கன் *kulakkaṉ,* பெ.(n.) மீன்வகை; a kind of fish. *"பறவையுறவி குளக்கன்றோகை" (பறாளை. பள்ளு.15).*

[குள் → குளக்கன்.]

குளக்கால் *kulak-kāl,* பெ.(n.) குளத்துக்கு நீர்வரும் வாய்க்கால்; fedding channel of a tank.

[குளம் + கால்.]

குளக்கிழாத்தி *kulakkilātti,* பெ.(n.) ஒரு ஆற்றுமீன் (மீன்.பிடி.சொ.தொ.); a river fish.

[குளம் + கிளாத்தி.]

குளக்கீழ் *kula-k-kil,* பெ.(n.) குளத்தின் மதகை யடுத்துள்ள வயல்; field in front of the sluice gate of a tank.

[குளம் + கீழ்.]

குளக்குத்தல் *kula-k-kuttal,* பெ.(n.) குளத்தை அடுத்திருப்பதால் மனைகட்கு உண்டாகும் கேடு; insecurity to a house from its proximity to a tank.

[குளம் + குத்தல்.]

குளக்குரிமையாசான் *kulakkurimai-y-āšāṉ,* பெ.(n.) செம்பருந்து; red kite (சா.அக.).

[குளம் + கு + உரிமை + ஆசான்.]

குளக்குருவி *kula-k-kuruvi,* பெ.(n.) 1. நண்டு; crab living in tanks. 2. ஆற்று நண்டு; rivier crab. (சா.அக.).

[குளம் + குருவி.]

குளக்கெழுத்தி *kuḷa-k-keḻutti,* பெ.(n.) 1. ஆற்று மீன் வகை; large river-fish, silvery, attaining more than 4 ft. in length. 2. மீன்வகை; cat-fish.

[குளம் + கெழுத்தி.]

குளக்கொட்டி *kuḷa-k-koṭṭi,* பெ.(n.) ஒருவகை நீர்ப் பூடு; a tankplant.

[குளம் + கொட்டி.]

குளக்கொட்டு *kuḷa-k-koṭṭu,* பெ.(n.) களைக் கொட்டு; kind of small hoe or spade for cutting weeds.

[குள்ள → குள + கொட்டு.]

குளக்கோரை *kuḷa-k-kōrai,* பெ.(n.) பெட்டிக் கோரை ; a glabrous rush like sedge.

[குளம் + கோரை.]

குளகபயம் *kuḷagapayam,* பெ.(n.) 1. முட்துளசி; prickly basil. 2. சுணையுள்ள துளசி; bristly or sharp basil (சா.அக.).

[குள் → குளக + பயம்.]

குளகம்[1] *kuḷagam,* பெ.(n.) 1. மரக்கால் (பிங்.); standard grain measure. 2. ஆழாக்கு; dry or liquid measure 1/8 *nāḻi* (V.).

ம. குளகம்; **க.**கொளக; **தெ.**கொல; **பட.**கோக.

[குளகு → குளகம்.]

குளகம்[2] *kuḷagam,* பெ.(n.) பல பாடல்கள் ஒருவினை கொள்ளும் அமைதி (தண்டி.3); combination of three or more stanzas having single finite verb, dist. fr. muttakam.

ம. குளகம்

[குளகு → குளகம்.]

குளகம்[3] *kuḷagam,* பெ.(n.) குற்றெழுத்துத் தொடர்ந்த செய்யுள் (பிங்.); a poem consisting only of short sounds.

[குள் → குள்ளகம் → குளகம்.]

குளகம்[4] *kuḷagam,* பெ.(n.) **குராம்** பார்க்க; see *kurām.*

[குள் → குளகம்.]

குளகறி *kuḷa-kari,* பெ.(n.) வெஞ்சனவகை (பணவிடு.275); a relish.

[குளகு + கறி.]

குளகன் *kuḷagaṉ,* பெ.(n.) இளமையோன்; youth. *"குளகன் வந்துழி" (கந்தபு.குமார.1).*

[குழகன் → குளகன்.]

குளகு *kuḷagu,* பெ.(n.) 1. விலங்கின் இலையுணவு; herbs, grass, anything that serves as food for herbivorous animals. *'வாரணமுன்குளகருந்தி' (கலித்.42).* 2. குறிஞ்சி நில மகளிர் உடையாகக் கொள்ளும் தழை; foliage,sewing as clothes for women of the hill tract. *"குளகரைச் சுற்றியி குறமடந்தையர்" (காசிக.44:16).* 3. இலைக்கறி; greens, porherbs.

ஒ.நோ.குழை.

Fin. kiltti; **FD.** killi; **Koraga.** killi (small); **Mong.** kili.

[குள் → குளகு.]

குளகுள-த்தல் *kuḷa-kuḷa-,* 4 செ.கு.வி.(v.i.) நெகிழ்ந்திருத்தல்; to grow soft, as jaggery, to become pulpy, to be loosely set.

[குள + குள.]

குளகுளத்தபுண் *kuḷakuḷatta-puṇ,* பெ.(n.) அழுகிய புண்; putrid or rolton sore (சா.அக.).

[குள + குள – குளகுள → குளகுளத்த புண்.]

குளகுளவெனல் *kuḷa-kuḷa-v-eṉal,* பெ.(n.) குளகுளெ என்னும் ஒலிகுறிப்பு; onom. expr. குளகுளவென்று கொதிக்கிறது.

[குள + குள + எனல்.]

குளகுளெனல் *kuḷa-kuḷeṉal,* பெ.(n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying gurgling sound, as water when boiled. 2. நெகிழ்ந் திருக்கை; growing soft, as jaggery, becoming pulpy.

[குள + குள + எனல்.]

குளங்கரை *kuḷaṅkarai,* பெ.(n.) தடாகத்தின் கரை (சீவக.1488,உரை.); bank or bund of a tank.

[குளம் + கரை.]

குளங்காந்தம் *kuḷaṅgāndam,* பெ.(n.) நச்சுப் பாலை; a kind of milky plant, used as an antidote to snake pite (சா.அக.).

[குள் + அம் + காந்தம்.]

குளங்கி *kuḷaṅgi,* பெ.(n.) குன்றி; snake fruit (சா.அக.).

[குள் → குள்ளங்கி → குளங்கி.]

குளங்கோவை *kuḷaṅgōvai,* பெ.(n.) நீர்ப்பிடியில் உண்டாகும் குளநெல் சாகுபடி; cultivation in the bed of a tank.

[குளம் + கோவை.]

குளச்சம்பு *kuḷa-c-cambu,* பெ.(n.) பத்தியத்திற்கு உதவும் குளத்து நத்தை; tank snail useful in diet (சா.அக.).

[குளம் + சம்பு.]

குளச்சிப்பி *kuḷaccippi,* பெ.(n.) குளத்திலகப்படும் சிப்பி; oyester shell found in tanks (சா.அக.).

[குளம் + சிப்பி.]

குளச்சு *kuḷaccu,* பெ.(n.) ***குழைச்சு*** பார்க்க; see *kuḻaiccu.*

[குழைச்சு → குளச்சு.]

குளச்செந்நெல் *kuḷa-c-cennel,* பெ.(n.) ***குளநெல்*** பார்க்க; see *kuḷanel.*

[குளம் + செந்நெல்.]

குளச்சேம்பு *kuḷa-c-cēmbu,* பெ.(n.) ஒருவகைச் சேம்பு; a kind of colocasia.

ம. குளச்சேம்பு

[குளம் + சேம்பு.]

குளசு *kuḷašu,* பெ.(n.) ***குழைச்சு*** பார்க்க; see *kuḻaiccu.*

[குழைச்சு → குளசு.]

குளஞ்சி *kuḷañci,* பெ.(n.) கிச்சிலி ; sylhet orange.

[கொழுஞ்சி → குளஞ்சி.]

குளத்தடி *kuḷattaḍi,* பெ.(n.) குளத்தருகிலுள்ள வயல்; paddy field adjoining a tank.

ம. களத்தடி

[குளம் + அத்து + அடி.]

குளத்தாங்கரை[1] *kuḷattāṅ-karai,* பெ.(n.) குளத்தின் கரை; bank or bund of a tank.

ம. குளங்கரை

[குளம் + அத்து + கரை.]

குளத்தாங்கரை[2] *kuḷattāṅ-karai,* பெ.(n.) ***குளத் தங்கரை*** பார்க்க; see *kuḷattaṅkarai*

[குளம் + அத்து + கரை.]

குளத்தி *kuḷatti,* பெ.(n.) நாறு கரந்தை; Indian- globe thistle. 2. சிவகரந்தை; ceylon toolsy (சா.அக.).

[குள்ளம் → குளம் → குளத்தி (சிறியது).]

குளத்தியா *kuḷattiyā*, பெ.(n.) கொடி முந்திரி வகை; grapes (சா.அக.).

[குளத்தி (சிறியது) → குளத்தியாள் → குளத்தியா.]

குளத்தில் நிற்கும்துளசி *kuḷattil-niṟkum-tuḷaši*, பெ.(n.) அரத்த மண்டலிப்பூடு (சா.அக.); a herb.

[குளத்தில் + நிற்கும் + துளசி.]

குளத்திலமர்ந்த மரத்தி *kuḷattil-amarnda maratti*, பெ.(n.) நாக சிங்கி; a tree supposed to be found growing in tanks (சா.அக.).

[குளத்தில் + அமர்ந்த + மரத்தி.]

குளத்துக்கடவு *kuḷattu-k-kaḍavu* பெ.(n.) குளத்தில் இறங்கிக் குளிக்க ஏதுவாக அமைந்த இடம்; a bathing ghat.

ம. குளக்கடவு

[குளம் +அத்து + கடவு.]

குளத்துக்கிழங்கு *kuḷattu-k-kiḻaṅgu*, பெ.(n.) குளத்தில் முளைக்குங் கொட்டிக் கிழங்கு; small bulbous root of an aquatic plant (சா.அக.).

[குளத்து + கிழங்கு.]

குளத்துக்குப்போ—தல் *kuḷattukku-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) மலங்கழித்தல் (கொ.வ.); lit., to go to a tank, to go to a stool, evacuate.

[குளம் + அத்து + கு + போதல்.]

குளத்துக்குருவி *kuḷattu-k-kuruvi*, பெ.(n.) **குள நண்டு** பார்க்க; see *kuḷanaṇḍu*.

[குளம் + அத்து + குருவி.]

குளத்துக்குள் உருத்திராக்கம் *kuḷattukuḷ-uruttirākkam*, பெ.(n.) நத்தை; snail (சா.அக.).

[குளம் + அத்து + கு + உள் + உத்திராக்கம்.]

குளத்துக்குள் குறத்தி *kuḷattukkuḷ-kuṟatti*, பெ.(n.) 1. நீரறளி; water gannaire. 2. வல்லாரை; Indian penny-wort (சா.அக.).

[குளம் + அத்து + கு + உள் + குறத்தி.]

குளத்துக்கொக்கு *kuḷattu-k-kokku* பெ.(n.) ஒரு வகைப் பறவை; the pond-heron.

ம. குளக்கொக்கு

[குளம் + அத்து. கொக்கு.]

குளத்துக்கோரை *kuḷattu-k-kōrai*, பெ.(n.) குளத்தில் முளைக்கும் கோரைப்புல்; a species of sedge - grass found in tanks (சா.அக.).

[குளத்து + கோரை.]

குளத்துக்கோழி *kuḷattu-k-kōḻi*, பெ.(n.) நீரில் வாழும் ஒருவகைப் பறவை; the water fowl.

ம. குளக்கோழி

[குளம் + அத்து + கோழி.]



குளத்துக்கோழி

குளத்துச்சிப்பி *kuḷattu-c-cippi*, பெ.(n.) கிளிஞ்சில்; bi-valve shell (சா. அக.).

[குளத்து + சிப்பி.]

குளத்துத்திடல் *kuḷattu-t-tiḍal*, பெ.(n.) கிளிஞ்சில்; bi-valve shell so called from its being found on or collected from tank beds (சா.அக.).

[குளத்து + திடல்.]

குளத்துநீர் *kuḷattu-nīr,* பெ.(n.) வாத நோயை உண்டுபண்ணும் குளத்துத் தண்ணீர்; tank water promoting rheumatism (சா.அக.).

[குளம் + அத்து + நீர்.]

குளத்துப்படி *kuḷattu-p-paḍi,* பெ.(n.) குளத்தில் இறங்கி வருவதற்கு ஏதுவாக அமைக்கப்படும் படிக்கட்டு; the paved steps of a pond.

ம. குளப்புட, குளப்படவு.

[குளம் + அத்து + படி.]

குளத்துமுட்டை *kuḷattu-muṭṭai,* பெ.(n.) காய்ந்த எரு; dried cow dung found in grazing plains or maidans (சா.அக.).

[குளத்து + முட்டை.]

குளத்துள்வாய் *kuḷattuḷvāy,* பெ.(n.) 1. குளத்தின் உள்ளிடம்; bed of a tank. 2. குளத்தின் மடையருகில் ஆழ்ந்துள்ள உள்ளிடம்; deep part of a tank near the flood gate (W.).

[குளத்து + உள் + வாய்.]

குளத்தோண்டி *kuḷattōṇḍi,* பெ.(n.) 1. குளம் தோண்டும் தொழிலாளி; one who makes a living by digging wells, ponds, etc. 2. அழிக்கும் வேலை செய்பவன்; one who ruins.

[குளம் + தோண்டி.]

குளநண்டு *kuḷanaṇḍu,* பெ.(n.) நண்டு வகை; pond crab.

[குளம் +நண்டு.]



குளநண்டு

குளநாவல் *kuḷanāval,* பெ.(n.) குளத்தில் வசிக்கும் நண்டு; pond crab (சா.அக.).

[குளம் + நாவல்.]

குளநெல் *kuḷanel,* பெ.(n.) குளத்தின் நீர்ப்பிடியில் தானாக விளையும் நெல்; wild rice, growing, spontaneously in the bed of a tank. *"மெல்விரல் மெலியக் கொய்த குளநெல்லும்" (சீவக.355).*

ம. குளப்பாண்டி

[குளம் + நெல்.]

குளநெல்லி *kuḷanelli,* பெ.(n.) குளத்து நீரால் பயிராகும் நெல்; paddy growing in ponds without cultivation (சா.அக.).

[குளம் + (நெல்) நெல்லி]

குளப்பச்சை *kuḷa-p-paccai,* பெ.(n.) குளத்தின் வடிவாகக் கையில் ஊசியால் குத்தியெழுதும் பச்சைக்குத்து; tattoo on the arm in the shape of a tank.

[குளம் + பச்சை.]

குளப்படி *kuḷappaḍi,* பெ.(n.) 1. குளம்பு படிந்த சுவடு; hoof-marks. *"குளப்பிடி நீருமளப்பருந் தன்மைப் பிரளய சலதியும்" (பதினொ. திருவிடைம. 7).* 2. குளம்புச் சுவட்டில் தேங்கிய நீர்; puddles in hook-marks. *"அவர்கள் வியசனம் குளப்படி யென்னும்படி" (அஷ்டாதச.தத்வத்.ஈசு.11).*

[குளம்பு + அடி – குளம்படி – குளப்படி.]

குளப்படிக் கோரை *kuḷappaḍi-k-kōrai,* பெ.(n.) குளக்கரையில் உண்டாகும் கோரை வகை; a sedge growing on the banks of a tank.

[குளம் + படி + கோரை.]

குளப்படுகை *kuḷa-p-paḍugai,* பெ.(n.) குளத்துக்கு அருகில் உள்ள நிலம்; lands adjacent to tanks.

[குளம் + படுகை.]

குளப்பண்ணை *kuḷappaṇṇai,* பெ.(n.) காட்டுக் கொளுஞ்சி; orange tree (சா.அக.).

[குள்ள → குள + பண்ணை.]

குளப்பயறு *kuḷappayaṟu,* பெ.(n.) பயறுவகை; a kind of pulse.

[குளம் + பயறு.]

குளப்பற்றுநெல் *kuḷa-p-paṟṟu-nel,* பெ.(n.) ***குளநெல்*** பார்க்க; see *kuḷanel*

[குளம் + பற்று + நெல்.]

குளப்பறிப்பு *kuḷa-p-paṟippu,* பெ.(n.) ஏரியின் வெட்டுக் கிடங்கு; hollow dug out in the bed of a tank. *"குளமும் குளப்பறியும் உட்பட்ட நிலத்தில்" (கல்வெட்.).*

[குளம் + பறிப்பு.]

குளப்பாகல் *kuḷa-p-pāgal,* பெ.(n.) மிதிபாகல் ; balsam pear.

[குளம் + பாகல்.]

குளப்பாடு *kuḷa-p-pāḍu,* பெ.(n.) ***குளப்படுகை*** பார்க்க; see *kuḷa-p-paḍugai.*

ம. குளப்பாடு

[குளம் + பாடு.]

குளப்பாலை இலை *kuḷappālai-yilai,* பெ.(n.) கசப்பு வெட்பாலை இலை; leaves of bilter cleander (சா.அக.).

[குடசப்பாலை → குடப்பாலை → குளப்பாலை + இலை.]

குளப்பாலை *kuḷa-p-pālai,* பெ.(n.) குடசப்பாலை; (பதார்த்த.234); conessibark.

[குடசப்பாலை → குளப்பாலை.]

குளப்புக்கூறுகொள்(ளு)-தல் *kuḷappu-k-kūṟu-koḷ-,*16செ.குன்றா.வி.(v.i.) பெருந்துன்பமுறுத்துதல்; lit, to trample with hoofs, to cause, great missery *"திருமாலாற் குளப்புக் கூறு கொளப்பட்டு" (திவ். நாய்ச்.13,6).*

[குளம்பு → குளப்பு.]

குளப்புரவு *kuḷa-p-puravu,* பெ.(n.) குளத்தின் நீர்பாய்ந்து சாகுபடியாகத் தகுந்த நிலம்; the whole extent of land irrigable under a tank.

ம. குளப்புரவு

[குளம் + புரவு.]

குளப்பூ *kuḷappū,* பெ.(n.) ஓர் வகை முட்செவ்வந்தி; damask persian rose (சா.அக.).

[குளம் + பூ.]

குளப்பொருக்கு *kuḷa-p-porukku,* பெ.(n.) ஏரிக்குள் உண்டாகும் கரம்பைமண்; chapped mud in a tnak, used for mannure.

[குளம் + பொருக்கு.]

குளபாகம் *kuḷabāgam,* பெ.(n.) மிக அழகானச் செய்யுள் நடை; lit., sugar-like style easy flowing style of composition.

[குளம் + பாகம்.]

குளம் *kuḷam,* பெ.(n.) 1. தடாகம் (பிங்.); tank, pond, reservoir. 2. ஏரி; lake. ***"குளக்கீழ் விளைந்த....... வெண்ணெல்" (புறநா.33,5).*** 3. சிலை, மார்கழி (பரிபா.11,76உரை.); the month of *mārkaḻi* 4. நெற்றி; forhead. ***"திருக்குள முளைத்த கட்டாமரை" (கல்லா.31,9).***

ம.குளம்; க.கொலி, கொளகெ., கொண; தெ.கொலனு, கொலகு, கொலகுவு; து.குள, கொள; பட.கொள; பிரா.கும்பு; Skt. kūla.

kūla, a pond. Cl. (p.456) and Gt. (p.521) refer the word to **D.** *kōla* 2 (*kula*), which may be right. They think *kōla* or *kula* comes from T., M. *kuli*, to bathe; this is wrong, as *kōla* means "a hold, a reservoir" (of *kōḷ*, etfc.; cf. *kula* **2**, *kuḷu*). *kūla* might also be referred to *d. kuḷi* 1 and 2 ; *cf.* Sk. *cuḍâ*, a small well, and *cuṇṭi*, etc (No.150) (K.K.E.D.XXVI).

[குள் → குளம்.]

குளம்² *kuḷam*, பெ.(n.) 1. சருக்கரை (திவா.); sugar. 2. வெல்லம் (சூடா.); jaggery.

[உள் → குள் → குளம்.]

குளம்படி *kuḷampaḍi*, பெ.(n.) குதிரை, ஆடு, மாடு, கழுதை முதலியவற்றின் பாதம்; the hoofs of horse, sheep, cattle, ass etc. (சா.அக.).

[குளம்பு + அடி.]

குளம்பல் *kuḷambal*, பெ.(n.) சந்தனக் குழம்பு; semi solid sandal paste (சா.அக.).

[குளம்பு → குளம்பல்.]

குளம்பழுகல் *kuḷambaḷugal*, பெ.(n.) கால்நடையின் குளம்பு நோய்வகை (கால்.வி.132); foot-rot, ulcer in the feet of sheep and goats.

[குளம்பு + அழுகல்.]

குளம்பாசி *kuḷambāsi*, பெ.(n.) குளத்தில் மீன் பிடிக்கும் உரிமை; fishing right in a tank.

[குளம் + பாசி.]

குளம்பு *kuḷambu*, பெ.(n.) ஒருவகை விலங்குகளின் காலடி; hoof of an animal. *"வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகள" (புறநா.15).*

ம.குளம்பு; க.கொளக, கொளகு, கொணகு; கோத.கொள்க; பட.கோகு.

[குள் → குளம்பு.]

குளம்புக்களிம்பு *kuḷambu-k-kaḷimbu*, பெ.(n.) குளம்பிலிடும் பூச்சு மருந்து (கால்.வி.132); ointment for hoof.

[குளம்பு + களிம்பு.]

குளம்புகிள்ளு-தல் *kuḷambukiḷḷu-*, 15 செ.கு.வி. (v.i.) கன்றின் குளம்பு முனையைச்சீவுதல்; to clip off the edge of a calf's hoof as soon as it is born.

[குளம்பு + கிள்ளுதல்.]

குளம்புச் சிலந்தி *kuḷambu-c-cilandi*, பெ.(n.) கால்நடைகளின் குளம்பிலுண்டாகும் சிலந்தி வகை (கால்.வி.132)|; foul, a hoof disease.

[குளம்பு + சிலந்தி.]

குளம்புச்சீவல் *kuḷambu-c-cīval*, பெ.(n.) துண்டு துண்டாக சீவியெடுத்த கொம்பு; thin slices pared of hoofs (சா.அக.).

[குளம்பு + சீவல்.]

குளம்வளா *kuḷamvaḷā*, பெ.(n.) குளப்பரப்பு; area of the tank.

[குளம் (வளவு) வளா.]

குளமச்சம் *kuḷamaccam*, பெ.(n.) கோரை; sedge grass (சா.அக.).

[குளம் + மச்சம்.]

குளமருது *kuḷamarudu*, பெ.(n.) ஆற்று மருது, நீர் மருது; narrow leaved myrolaban of Travancore (சா.அக.).

ம. குளமருது

[குளம் + மருது.]

குளமழி-தல் *kuḷam-aḻi-*, 3 செ.கு.வி.(v.i.) மீன் பிடிக்கும்படி குளம் நீர் வற்றுதல்; to have the water in a tank considerabley reduced to allow easy fishing.

[குளம் + அழிதல்.]

குளமீன் *kuḷamīṉ,* பெ.(n.) குளத்துமீன்; tank fish which is useful in cases of fever and dropsy (சா.அக.).

[குளம் + மீன்.]

குளமூடிகம் *kuḷa-mūḍigam,* பெ.(n.) தொடரிச் செடி; an unknown plant supposed to possess magic virtue (சா.அக.).

[குளம் + ஊடிகம்.]

குளவஞ்சி *kuḷavañji,* பெ.(n.) வஞ்சிக்கொடி; slender rattan (சா.அக.).

[குளம் + வஞ்சி.]

குளவட்டை *kuḷavaṭṭai,* பெ.(n.) நீரட்டை; small kind of leech.

ம. குளயட்ட

[குளம் + வட்டை.]

குளவடம்பு *kuḷavaḍambu,* பெ.(n.) குளத்தி லுண்டாகுங் கொடிவகை; a creeper in tanks.

[குளம் + அடம்பு.]

குளவடை *kuḷa-v-aḍai,* பெ.(n.) பழைய ஏரிவரி; an ancient tax on tanks (S.I.I.ii.247).

[குளம் + அடை.]

குளவடைக்கடமை *kuḷavaḍai-k-kaḍamai,* பெ.(n.) ஏரிக்குளங்களைப் பராமரிப்பதற்கு உரியதாகப் பெறும்வரி (கல்.க.சொ.அக.).

[குளம் + அடை + கடமை.]

குளவரகு *kuḷavaragu,* பெ.(n.) வரகுவகை; tank millet.

[குளம் + வரகு.]

குளவல்லிமா *kuḷavallimā,* பெ.(n.) தழுதாழை; wind killer (சா.அக.).

[குளம் + வல்லி (மாய்) மா.]

குளவாழை *kuḷavāḻai,* பெ.(n.) ஆடவை மடங்கல் (ஆனி, ஆவணி) மாதங்களில் விதைக்கப் பெற்று ஆறுமாதத்திற் பயிராகும் குளநெல்வகை; a coarse tank-paddy, sown in āni-āvaṇi, maturing in six months.

[குளம் + வாழை.]

குளவாழை *kuḷavāḻai,* பெ.(n.) ஒரு மட்ட நெல்; a coarse paddy grown in tank bed. 2. புளி, மாங்காய்; narrow medium leaved gambogo (சா.அக.).

[குளம் + வாழை.]

குளவி *kuḷavi,* பெ.(n.) 1. கொட்டுமியல்புள்ள ஈ வகை; wasp, clay-building fly. *"சுற்றுங் கடுங்குளவிச் சூரைத் தூறு"* *(தனிப்பா.107,44).* 2.வண்டுவகை; carpenter bee. 3. காட்டு மல்லிகை; wild jasmine. *"காந்தை குளவி கடிகமழ் கலிமா"* *(குறிஞ்சிப்.76).* 4.மலைமல்லிகை வகை; indian cork. *"கூதளங்க கவினிய குளவி"* *(புறநா.168,12).* 5.பச்சிலைமரம் ; mysore gamboge.

ம.குளவி; க.கொளவி.

[குள் → குள்ளகம் → குளகம்.]

குளவி

குளவிக்கூடு *kuḷavi-k-kūḍu,* பெ.(n.) குளவி கட்டிய கூடு, தேனில் குழைத்துக் கொடுக்க வாந்தியை நிறுத்தும்; wasps nest, when mixed with honey stops vomitting (சா.அக.).

[குளவி + கூடு.]

குளவிக்கூண்டுக் கருக்கு *kuḷavi-k-kūṇḍu-k-karukku,* பெ.(n.) குளவிக் கூட்டின் களிமண்ணை நீரில் போட்டு இறக்கிய கியாழம்; the decoction prepared from the clay of the wasp which arrests hiccough (சா.அக.).

[குளவி + கூண்டு + கருக்கு.]

குளவிக்கொட்டு *kuḷavi-k-koṭṭu,* பெ.(n.) குளவி கடித்தல்; the sting of a wasp (சா.அக.).

[குளவி + கொட்டு.]

குளவித்தேன் *kuḷavi-t-tēṉ,* பெ.(n.) குளவி கட்டுந் தேன்; honey extracted from bee hive (சா.அக.).

[குளவி + தேன்.]

குளவிதைப்பு *kuḷa-vidaippu,* பெ.(n.) குளநெற் சாகுபடி; sowring in a tank bed.

[குளம் + விதைப்பு.]

குளவிந்தம் *kuḷavindam,* பெ.(n.) மருந்தாக உதவும் மஞ்சள்வகை; a kind of turmeric, used medicinally.

[குளம் + விந்தம்.]

குளவிமண் *kuḷavimaṇ,* பெ.(n.) குளவிக் கூட்டு மண்; mud in a warsp's nest.

[குளவி + மண்.]

குளவிமெழுகு *kuḷavimeḻugu,* பெ.(n.) குளவிக் கூட்டின் மெழுகு; bees wax (சா.அக.).

[குளவி + மெழுகு.]

குளவுரி *kuḷavuri,* பெ.(n.) சந்தனம்; sandal wood (சா.அக.).

[குள + உரி.]

குளவெட்டு *kuḷa-veṭṭu,* பெ.(n.) 1. ஏரியைப் பழுது பார்த்தல்; tank repair. 2. ஏரி பழுது பார்த்தலுக்குக் குடிகள் செலுத்தும் வரி; a cess paid by the ryots to the land-holders on account of tank repair.

[குளம் + வெட்டு.]

குளவெட்டுமானியம் *kuḷa-veṭṭu-māṉiyam,* பெ.(n.) ஏரிவெட்டுக்கு ஆள் அமர்த்த விடப்படும் சலுகை நிலம்; inam granted for the service of procuring workmen for tank repair.

[குளவெட்டு + மானியம்.]

குளவெள்ளரி *kuḷa-veḷḷari,* பெ.(n.) ஏரியின் உள்வாயில் விளையும் வெள்ளரி; cucumbers raised in tank beds.

[குளம் + வெள்ளரி.]

குளறி *kuḷaṟi,* பெ.(n.) முகைப்புல்; couch-grass (சா.அக.).

[குளறு → குளறி.]

குளறிப்பேசு-தல் *kuḷaṟippēšu,* 12 செ.குன்றாவி (v.t.) தடுமாறிப் பேசுதல்; indistinctness in utterance especially due to cleft palate (சா.அக.).

[குளறு → குளறி + பேசு.]

குளறியடி-த்தல் *kuḷaṟi-yaḍi-,* 4 செ.கு.வி.(v.i.) மார்பில் அடித்தழுதல்; to wail and beat the breasts in mourning.

[குளறி + அடித்தல்.]

குளறு-தல் *kuḷaṟu-,* 6 செ.கு.வி.(v.i.) அச்சம் முதலியவற்றால் மொழி தடுமாறுதல்; to stammer through fear, anger, confussion of mind. 2. நரிமுதலியன ஊளையிடுதல்; to howl, yell, make a hideous noise, as jackals.

ம. குளறுக

[குழறு → குளறு.]

குளறு-தல் *kuḷaṟu-*, 11 செ.குன்றாவி.(v.t.)1. தடுமாறிப்பேசுதல்; to falter to stumble in one's speech *"பயனின் மொழிகள் குளறாமுன்" (சிவப். பிரபந்.வெங்கைக்கலம்96).* 2. கெடுத்தல்; to spoil காரியத்தைக் குளறாதே.

[குழறு → குளறு.]

குளறுபடி *kuḷaṟu-paḍi*, பெ.(n.) *குழறுபடை* பார்க்க; see *kuḷaṟupaḍai*

[குளறு + படி.]

குளறுபடை *kuḷaṟu-paḍai*, பெ.(n.) 1. சொல் தடுமாற்றம்;incoherent talk. 2. குழப்பம்;confusion. *"நானாளெக் குளறுபடை புடைபெயர்த்திடவும்" (தாயு.மௌன.5).*

[குழறு → குளறு + படை.]

குளறுவாய் *kuḷaṟuvāi*, பெ.(n.) நாக்குக் குளறும் வாய்; mouth with faltering tongue. 2. குளறிப் பேசல்; defective utterances (சா.அக.).

[குழறு → குளறு + வாய்.]

குளாம்பல் *kuḷambal*, பெ.(n.) குளத்தில் தோன்றும் ஆம்பல் (நன்.256,மயிலை.); water-lily.

[குளம் + ஆம்பல்.]

குளி[1]-த்தல் *kuḷi-*, 4 செ.கு.வி.(v.i.) 1. நீராடுதல்; to bathe. *"களிப்பர் குளிப்பர்" (பரிபா.6:103).* 2. கழுத்துவரை குளித்தல்;to wash one's body up to the neck. 3. மாதவிலக்குக் குளியல்; to take purificatory bath after menstruation. *அவள் குளித்து நான்கு மாதம் ஆயிற்று (கொ.வ.).* 4. தைத்தல்; to pierce, as an arrow. *"கூர்ங்கணை குளிப்ப" (பு.வெ.10, சிறப்பிற்,10,கொளு.).* 5. அழுந்துதல்; to press against. *"மென்கொங்கை யென் னங்கத் திடைக்குளிப்ப" (திருக்கோ.351).* 6.வலிய உட்புகுதல்; to enter the thick of a fight *"கடற்படை குளிப்ப மண்டி" (புறநா.6).* 7. மறைதல்; to hide, conceal oneself. *"யானறித லஞ்சிக் குளித்து" (கலித்.98).* 8. தோல்வியுறுதல்; to be defeated. *"மீன் குளிக்குங் கற்பின்" (சீவக.2141).*

ம. குளி

[உள் → குள் → குளி.]

குளி[2]-த்தல் *kuḷi-*, பெ.(n.) 4 செ.குன்றாவி.(v.t) முத்துகளை மூழ்கியெடுத்தல்; to dive for pearls. *"பணிலம் பலகுளிக்கோ" (திருக்கோ.63).*

[உள் → குள் → குளி.]

குளி[3] *kuḷi*, பெ.(n.) குளியல்; bath, ablution. *"இது எத்தனை குளிக்கு நிற்கும்" (ஈடு.4: 5,1).* 2. முத்துக் குளி; diving, as for pearls or chanks.

ம. குளி

[உள் → குள் → குளி.]

குளிககாலம் *kuḷiga-kālam*, பெ.(n.) திருமணச் சடங்குகளுக்கு மங்கலமானதும், இறப்புச் சடங்குகளுக்கு அமங்கலமானதும் ஒவ்வொரு நாளும் குளிகன் தோன்றும் நேரத்திலிருந்து 3 3/4 நாழிகை வரை உள்ளதுமான காலம்; the period of time in each day extending to an hour and half from the rising of kulikan or kulikai considered auspicious for marriage ceremonies and inauspicious for funeral ceremonies.

மறுவ. குளிகைக்காலம்

[குளிகன் + காலம்.]

குளிகன் என்பது காணாக் கோள்களுள் ஒன்று. அதற்குரிய காலத்தைக் குளிகன்காலம் அல்லது, குளிகக்காலம் என்பதே பொருந்தும். குளிகைக்காலம் என்பது தவறு. குளிகை என்பது உருண்டையான மாத்திரையைக் குறிப்பதாகும்.

குளிகம் *kuḷigam,* பெ.(n.) மருந்தின் பொது; medicine in general (சா.அக.).

[குளி → குளிகம்.]

குளிகன் *kuḷigaṉ,* பெ.(n.) 1. எண்பெரு நாகத் தொன்று; a divine serpent, one of *astamānāgam* *"குளிகாதி... வெங்கணாகம்" (கம்பரா. நாகபா.62).* 2. காணாக் கோள்களுள் ஒன்று; name of an invisible planet.

[குளி → குளிகன்.]

குளிகாரன் *kuḷigāraṉ,* பெ.(n.) முத்துக்குளிப்பவன்; diver for pearls or chanks.

[குளி + காரன்.]

குளிகுளி-த்தல் *kuḷi-kuḷi-,* 4 செ.கு.வி.(v.i.) பிள்ளை பெறல்; to be delivered of a child.

[குளி → குளித்தல்.]

குளிகை[1] *kuḷigai,* பெ.(n.) 1. மாத்திரை; pill. 2. மந்திர வலிமையுள்ள மாத்திரை; magic pill supposed to have supernatural powers *"குளிகையிட்டுப் பொன்னாக்குவன்" (திருமந்.2709).*

[குள் → குளி → குளிகை (உருண்டை).]

குளிகை[2] *kuḷigai,* பெ.(n.) ***குளிகன்காலம்*** பார்க்க; see *kuḷigaṉkālam.*

[குளிகன் → குளிகை.]

குளிகைக்கட்டு *kuḷigai-k-kaṭṭu,* பெ.(n.) 1. பாவு கீறிச் சுற்றப்படும் முன், சிறு நூலால் சில குளிகைகள் சேர்த்துக் கட்டப்படுவது; fastening some globules with thread while fixing warp. 2. தறியில் சில குளிகைகள் சேர்ந்து இழைகள் நீட்டிக் கட்டும் கலணைக் கோலுடன் சேர்த்துக் கட்டப்படும் கட்டு; fastening some globules when attaching warp thread to loom.

[குளிகை + கட்டு.]

குளிகைக்கலை *kuḷigai-k-kalai,* பெ.(n.) உயிர் வளியை இட மூக்குத்துளை வழியாகச் செலுத்தும் நிலவுக் (சந்திர)கலை; the vital air (prāṇ) passing through the left nostril (சா.அக.).

[குளிகை + கலை.]

குளிகைக்காலம் *kuḷigai-k-kālam,* பெ.(n.) ***குளிககாலம்*** பார்க்க; see *kuḷigakālam.*

[குளிகன் + காலம் → குளிகைக்காலம் → குளிகைக்காலம்]

குளிகைகட்டுக்கயிறு *kuḷigai-kaṭṭu-k-kayiṟu,* பெ.(n.) கட்டு கட்டும் இடங்களில் பயன்படுத்தப் படும் இருவகையான கயிறுகள்; two kinds of strings used to make knobs when fastening poles etc. (உழ.நெ.க.அக.). 2. குளிகை கட்டிய பிறகு உயிர் கொடுத்தல்; the process of consolidating mercury into a pill and then animating it. (சா.அக.).

[குளிகை + கட்டு + கயிறு.]

குளிகைகட்டு-தல் *kuḷigai-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. மாத்திரை செய்தல்; to make pills. 2. சித்திக் குளிகையை உடலில் கட்டிக் கொள்ளுதல்; to fasten a magical pill on the body, either as an amulet against poisonous bites or as a means to attain supernatural power such as flying through the air.

[குளிகை + கட்டு.]

குளிகைகூட்டு-தல் *kuḷigai-kūṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) குளிகையாகச் செய்தல்; making into a pill (சா.அக.).

[குளிகை + கூட்டு-.]

குளிகைகோடிடல் *kuḷigai-kōḍiḍal,* பெ.(n.) குளிகைக்கு உறையிடல்; giving a coating to pills (சா.அக.).

[குளிகை + கோடிடல்.]

குளிகைசித்தர் *kuḷigai-śittar,* பெ.(n.) சித்தரில் தேர்ந்தோர்; skilled men amongst Śiddhars, who

could perform miracles. 2. இதளிய (இரச)க் குளிகையைக் கொண்டு வானம் பாயும் சித்தர்கள்; Šiddhar's skilled in or capable of flying in the sky with the aid of animated mercurial pill (சா.அக.).

[குளிகை + சித்தர்.]

குளிகைசித்தி *kuḷigai-šitti,* பெ.(n.) இரசகுளிகை முதலியவற்றாற் கூடியதாகக் கருதும் வானுலாவும் வல்லமை; the power of flying in the air believed to be acquired by means of mercurial pills.

[குளிகை + சித்தி.]

குளிகைப்போக்கு *kuḷigai-pōkku,* பெ.(n.) சத்துத் தீர்ந்த குளிகையின் தன்மை, வேகம், வலி முதலியன; the nature, force, or power etc. of an animated mercurial pill (சா.அக.).

[குளிகை + போக்கு.]

குளிகைபாடம் *kuḷigai-pāḍam,* பெ.(n.) இதளிய (இரச)க் குளிகையைச் செய்யும் முறைகளையும் அதற்குச் சாரணை கொடுக்கும் விதிகளையும் பற்றிய நூல்; a treatise on the method of preparing mercury pills and the principles to be observed in giving life to then. 2. இதளிய (இரச)க் குளிகை இட்ட சாரணை; animation imparted to mercury pill (சா.அக.).

[குளிகை + பாடம்.]

குளிகைபோடல் *kuḷigai-pōḍal,* பெ.(n.) இதளிய (இரச)க் குளிகையை வாயிலடக்கிக் கொள்ளுதல்; securing a mercurial pill in the mouth. 2. அபினி உட்கொள்ளல்; swallowing opium pill (சா.அக.).

[குளிகை + போடல்.]

குளிகைமணி *kuḷigai-maṇi,* பெ.(n.) இதளியமணி (இரசமணி); mercurial pill (சா.அக.).

[குளிகை + மணி.]

குளிகையந்திரம் *kuḷigai-yandiram,* பெ.(n.) மருந்து மாத்திரைகள் செய்யுமோர் கருவி; a machine for preparing pills (சா.அக.).

[குளிகை + இயந்திரம்.]

குளிகையாட்டல் *kuḷigai-yāṭṭal,* பெ.(n.) மாத்திரை செய்தல்; making or preparing pills (சா.அக.).

[குளிகை + ஆட்டல்.]

குளிகையாடல் *kuḷigai-yāḍal,* பெ.(n.) சத்துத் தீர்ந்த இதளிய (இரச)க் குளிகையை வாயிலடக்கிக் கொண்டு வானத்தில் காற்றினூடே பறத்தல்; flying in the atmosphere or aerial region by securing in the mouth the animated mercurial pill. 2. அண்டம் பாய்தல்; flying in the etheric region from one planet to another with the aid of mercurial pill (சா.அக.).

[குளிகை + ஆடல்.]

குளிகையிடு-தல் *kuḷigai-y-iḍu,* 20 செ.கு.வி.(v.i.) சித்திக் குளிகையை உடம்பைக் கீறி உட்புகுத்துதல்; to insert a pill in an incision made in the body in order to counter act the influence of poisonous bites or to communicate supernatural power.

[குளிகை + இடு-.]

குளிகையோட்டம் *kuḷigai-y-ōṭṭam,* பெ.(n.) குளிகையின் வேகம்; the dynamic force or power of mercury pill (சா.அக.).

[குளிகை + ஓட்டம்.]

குளிகைவேகம் *kuḷigai-vēgam,* பெ.(n.) குளிகையின் வேகம்; the dynamic force or power of mercury pill (சா.அக.).

[குளிகை + வேகம்.]

குளிகைவேதை *kuḷigai-vēdai,* பெ.(n.) இதளிய (இரச)க் குளிகையைக் கொண்டு செய்யும் வேதிமுறை; the art of making gold with the aid of consolidated mercurial pill (சா.அக.).

[குளிகை + வேதை.]

குளிகோமணம் *kuḷi-kōmaṇam,* பெ.(n.) நீர்ச்சீலை; a kind of loin-cloth.

[குளி + (கோவணம்) கோமணம்.]

குளிசங்கட்டல் *kuḷišaṅ-kaṭṭal,* பெ.(n.) கோள் (கிரக) குற்றங்களை நீக்கம் செய்ய வேண்டி தாயத்து மந்திரித்துக் குழந்தை அல்லது பெண்களுக்கு உடம்பில் கட்டுதல்; tying an amulet to a child or woman after performing necessary ceremonial rites and chanting of mastrams so as to be free from morbid affections (சா.அக.).

[குளிசம் + கட்டல்.]

குளிசங்கு *kuḷi-šaṅgu,* பெ.(n.) நீரூட் குளித் தெடுத்த சங்கு; chank obtained by diving (W).

[குளி + சங்கு.]

குளிசம்[1] *kuḷišam,* பெ.(n.) 1. பாதுகாப்பிற்காகக் கட்டிக் கொள்ளும் ஒருவகைத் தகடு; amulet (G.Sm.D.I.J. 145). 2. காப்புக் கட்டிற்குரிய மெல்லிய மாழைத்தகடு; thin piece of metal with magical characters worn as a charm against evil spirits or disease. 3. பாம்பாட்டிகள், நஞ்சு இறக்குவோர் முதலானோர் கையில் காப்பிற்காகக் கட்டிக் கொள்ளும் வேர்; root tied round the finger of a snake-charmer or poison charmer, as an amulet. 4. சில மூலிகைகள் நன்றாகப் பயன்படுவதற்கு மந்திரமாகச் செய்யும் காப்பு; magical rites for securing the full medicinal efficacy of certain plants.

[குள் → குளி → குளிசம்.]

குளிசம்[2] *kuḷišam,* பெ.(n.) ***குளிகை*** பார்க்க (இ.வ.); see *kuḷigai*

[குள் → குளி → குளிசம்.]

குளிசம்[3] *kuḷišam,* பெ.(n.) வளையம் (யாழ்.அக.); ring.

[குளிகை → குளிசம்.]

குளிசமாடல் *kuḷiša-māḍal,* பெ.(n.) மந்திரித்துத் தகடு எழுதிக் கட்டல்; tying a talisman or as amulet after necessary incantations. It is done in the case of persons suffering from diseases or from the evil influence of demons, devils or other spirits (சா.அக.).

[குளிசம் + ஆடல்.]

குளிசிங்கி *kuḷi-šiṅgi,* பெ.(n.) பேச்சினால் வயப்படுத்துகை; coaxing.

குளிசீலை *kuḷi-šilai,* பெ.(n.) கோவணம் (கொ.வ.); loin cloth.

[குளி + சீலை.]

குளித்தல் *kuḷittal,* பெ.(n.) நீராடல் ; having a bath, which removes lethargy bodily heat, sense of fatigue etc. 2. சூதகமாதல்; menstruating (சா.அக.).

[குளி → குளித்தல்.]

குளித்தாமரை *kuḷi-t-tāmarai,* பெ.(n.) ஆகாயத் தாமரை; a herbal plant (சா.அக.).

[குளிர்+ தாமரை–குளிர்தாமரை→ குளித்தாமரை (கொ.வா).]

குளித்திப்பூடு *kuḷitti-p-pūḍu,* பெ.(n.) இதன் இலைகள் வீக்கங்களுக்குக் கட்டப் பயன்படும் பூண்டு; arrow head, its leaves are applied to swelling (சா.அக.).

மறுவ. குதிலைக்குளம்படி

[குளித்தி + பூடு.]

குளிதுறை *kuḷi-turai,* பெ.(n.) குளியல்துறை; bathing ghat. *"குளிதுறையிற் சிதடனார்க்கு வலம்புரியின் மணி கிடைத்தவாறு"* (குற்றா.தல. திருமால்.84).

*[குளி + துறை.]

குளிப்பச்சை *kuḷi-p-paccai,* பெ.(n.) ஆற்றுப் பச்சைக் கல்; a green stone.

[குளி + பச்சை.]

குளிப்பாட்டு¹-தல் *kuḷippāṭṭu-,* 5 செ.குன்றாவி (v.t.) நீராட்டுதல்; to bath or wash. *"பொருநைநீர் குளிப்பாட்டி" (காஞ்சிப்பு.தழுவ.288).*

[குளிப்பு + ஆட்டு-.]

குளிப்பாட்டு²-தல் *kuḷippāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) புகழ்ந்து வயப்படுத்துதல்; to win over, by flattery.

[குளிப்பு + ஆட்டு-.]

குளிப்பிடப்பாறு *kuḷippiḍa-p-pāṟu,* பெ.(n.) முத்துக் குளிக்குந் துறை; the banks of a pearl or chank fishery.

[குளிப்பு + இடம் + பாறு. (பாறு = அகன்ற இடம், கரையோரக் கடற்பகுதி).]

குளிப்பித்தல் *kuḷippittal,* பெ.(n.) நீராடச் செய்வித்தல்; causing to bathe (சா.அக.).

[குளி → குளிப்பித்தல்.]

குளிப்பு *kuḷippu,* பெ.(n.) நீராடுகை; washing, bathing.

[குளி → குளிப்பு.]

குளிமீட்டான் *kuḷi-miṭṭāṉ,* பெ.(n.) 1. நத்தைச் சூரி; bristly button-weed. 2.தண்ணீர்விட்டான் கிழங்கு; water root (சா.அக.).

[குளி → குளிமீட்டான்.]

குளியம்¹ *kuḷiyam,* பெ.(n.) வேங்கைப்புலி (அக.நி.); man-eater.

மறுவ. வரிப்புலி

[குளி → குளியம் (உருட்சி, திரட்சி, வலிமை).]

குளியம்² *kuḷiyam,* பெ.(n.) 1. உருண்டை (அக.நி.); ball, globe. 2. மருந்து (பிங்.); medicine.

[குளி → குளியம் (உருட்சி, திரட்சி.]

குளியல் *kuḷiyal,* பெ.(n.) நீராடுகை; bathing *"காலை மாலைக் குளியல்" (பதார்த்த. 1307, தலைப்பு.).*

[குளி → குளியல்.]

குளியலாட்டல் *kuḷiyal-āṭṭal,* பெ.(n.) நீராட்டல்; giving a bath (சா.அக.).

[குளியல் + ஆட்டல்.]

குளியாமலிரு-த்தல் *kuliyāmal-iru-,* 2 செ.கு.வி. (v.i.) கருப்பமாயிருத்தல் (கொ.வ.); lit., to be without menstrual bath, to be pregnant.

[குளியாமல் + இரு-.]

குளியாள் *kuḷi-y-āḷ,* பெ.(n.) முத்துக் குளிப்போன்; pearler, chank diver.

[குளி + ஆள்.]

குளியிடிச்சான் *kuli-y-iḍiccāṉ,* பெ.(n.) நெல்வகை (விவசா. நூான்.2)); a kind of paddy.

[குளி + (இடித்தான்) இடிச்சான்.]

குளியோடு-தல் *kuḷi-y-ōḍu-,* 5 செ.கு.வி.(v.i.) முத்துச்சிப்பி முதலியவை எடுத்தற்காகக் குளித்தல்; to dive for pearls or chanks.

[குளி + ஓடு-.]

குளிர்¹-தல் *kuḷir-,* 2 செ.கு.வி.(v.i.) 1. பனிக்காற்று உறைத்தல்; to feel cold, chilly, as breeze. *குளிர்வாடை.* 2. குளிர்ச்சியுறுதல்; to be cool, refreshing. *"சிங்கி குளிர்ந்துங் கொலும்" (நீதிநெறி.59).* 3. உடம்பு சில்லிடுதல்; to get numbed, as in death. 4. கண்முதலிய பொறிகளுக்கு இனியதாதல்; to be pleasant to the sense of touch, sight or hearing. *"என்புறக் குளிரு

நெஞ்சுருகும்" (கம்பரா.விபீடண.21). 5. கருணையால் முகங்கனிதல்; to be benignant, as the countenance. 6. ஆறுதலடைதல்; to be consoled, conforted; to be satisfied. *இப்போதுதான் என் மனம் குளிர்ந்தது.* 7.சின்னம்மை முதலியவற்றால் இறத்தல்; to die, as of an epidemic like smallpox. *குழந்தை அம்மை போட்டுக் குளிர்ந்து போயிற்று (இவ.).*

ம. குளிர்; **க.** குளிர்.

[குள் → குளி → குளிர்.]

குளிர்[2]–தல் *kuḷir-,* 2 செ.கு.வி. (v.i.) தங்குதல்; to seat, rest. *"குளிரு மரப்பலகை" (சீவக.1782).*

[குள்→குளி→குளிர்.]

குளிர்[3] *kuḷir,* பெ.(n.) 1. குளிர்ச்சி (திவா.); coldness, chilliness. 2. சுரக்குளிர்; ague, cold fits. 3. பனிக் காற்று (திவா.); dewy chill blast. 4. நடுக்கம்; shivering, trembling, shuddering, as with fear. *என்னைக் கண்டால் அவனுக்குக் குளிர்தான்.* 5. வெண்குடை (சூடா.); white umbrella. 6. மீனொழுங்கு (சூடா.); shoal, school of fish.

து. குளிர்பு; **பட.** கொரவு.

[குள் → குளி → குளி–.]

குளிர்[4] *kuḷir,* பெ.(n.) தங்குகை (சூடா.); seating, resting.

[குள் → குளி → குளிர்.]

குளிர்[5] *kuḷir,* பெ.(n.) 1. குடமுழவு (திவா.); kettle-drum. 2. கிளிகடி கருவி; contrivance to scare away parrots. *"தட்டையும் குளிரும்" (குறிஞ்சிப். 43).* 3. கவண் (பிங்.); sling.

ம. குளிர்; **க.** குளிர்.

[குளிறு → குளிர் (குளிறு = ஒலி, ஒலித்தல்.)]

குளிர்[6] *kuḷir,* பெ.(n.) 1. மழு (சூடா.); battle-axe. 2. சூலம்; trident. 3. அரிவாள்; sickle. *"குளிர்புரை கொடுங்காய்" (மலைபடு.110).* 4. இலைமூக்கரி கத்தி (திவா.); knife for cutting the stems of leaves.

[குள் → குளி → குளிர்.]

குளிர்[7] *kuḷir,* பெ.(n.) 1. நண்டு (பிங்.); crab, lobster. 2. கடக ஓரை (ராசி) (திவா.); cancer, a sign of the zodiac. 3. கடகத்திங்கள் (ஆடிமாதம்) (தைலவ.பாயி); the month Āḍi.

[குளி → குளிர்.]

குளிர்காணல் *kuḷir-kāṇal,* பெ.(n.) 1. குளிர்ச்சி தாக்குகை; being affected with cold. 2. உடம்பு நோயாற் சில்லிடுகை (வின்.); becoming cold, as the body in serious illness.

[குளிர் + காணல்.]

குளிர்காந்தி *kuḷir-kāndi,* பெ.(n.) நிலவுக் (சந்திர) காந்தி; a flowering plant that turns towards the moon (சா.அக.).

[குளிர் + காந்தி.]

குளிர்காய்–தல் *kuḷir-kāy-,* 2 செ.கு.வி.(v.i.) குளிர் வருத்தாதபடி வெப்பம் பிடித்தல்; to bask in the sun, to warm oneself.

[குளிர் + காய்–.]

குளிர்காய்ச்சல் *kuḷir-kāyccal-,* பெ. (n.) குளிரொடு தோன்றும் காய்ச்சல் நோய் (பதார்த்த. 842); ague fever attended with chill.

மறுவ. குளிர்ச்சுரம்

[குளிர் + காய்ச்சல்.]

குளிர்காலம் *kuḷir-kālam,* பெ.(n.) பனிக்காலம்; cold season.

[குளிர் + காலம்.]

குளிர்காற்று *kuḷir-kāṟṟu,* பெ.(n.) கூதற்காற்று; cold wind. குளிர்காற்றைப் பொறுக்க முடிய வில்லை (உ.வ.).

[குளிர் + காற்று.]

குளிர்குளிர்ந்துபோ-தல் *kuḷir-kuḷirndu-pō-,* 8 செ.கு.வி.(v.i.) 1. குளிர்ச்சியால் உடல் விறைத்துப் போதல்; to be benumbed of cold. 2. உடம்பு சில்லிடுதல்; to become cold, as a dying person.

[குளிர் + குளிர்ந்து+ போ-.]

குளிர்குளிரல் *kuḷir-kuḷiral,* பெ.(n.) குளிரால் விறைத்தல்; being benumbled with cold. 2. சில்லிடுதல்; being attacked with chillness of the extremities, as a dying person in cholera (சா.அக.).

[குளிர் + குளிரல்.]

குளிர்கொள்ளல் *kuḷir-koḷḷal,* பெ.(n.) 1. தணுப்புறல், சீதளமடைதல்; becoming chill. 2. குளிரால் வருந்தல்; suffering from cold (சா.அக.).

[குளிர் + கொள்ளல்.]

குளிர்கோணிகம் *kuḷir-kōṇigam,* பெ.(n.) பூளைச் செடி; woolly herb (சா.அக.).

[குளிர் + கோணிகம்.]

குளிர்ச்சி *kuḷircci,* பெ.(n.) 1. குளிர்மை; coolness, cold, coldness. 2. மனங்குளிரச் செய்தல் (சீவக.1810, உரை); the act of cooling, refreshing with cordials, fans, etc. 3. இனிமையானது; that which is sweet, gratifying or pleasing. 2. மரத்துப் போய்ச் சில்லிடுகை; numbness, frigidity, as in death. உடம்பில் குளிர்ச்சி கண்டுவிட்டது (உ.வ.).

[குளிர் → குளிர்ச்சி.]

குளிர்ச்சித்தைலம் *kuḷircci-t-tailam,* பெ.(n.) சந்தனாதியைப் போல் தலைக்குக் குளிர்ச்சியை உண்டாக்கும் மருந்து எண்ணெய்; medicated oil affording cooling effects to the brain, as sandal wood oil (சா.அக.).

[குளிர்ச்சி + தைலம்.]

குளிர்ச்சிப்பாண்டம் *kuḷircci-p-pāṇḍam,* பெ.(n.) குளிர்ச்சி தரும் பொருள்; cooling substance (சா.அக.).

[குளிர்ச்சி + பாண்டம்.]

குளிர்ச்சிமருந்து *kuḷircci-marundu,* பெ.(n.) வெப்பத்தைக் குறைக்கும் மருந்து; cooling medicine.

[குளிர்ச்சி + மருந்து.]

குளிர்ச்சியாயிரு-த்தல் *kuḷirccіyāy-iru-,* 4 செ.கு.வி.(v.i.) 1. சில்லென இருத்தல்; being cool. 2. குளிர்ச்சியை உணர்தல்; to feel refreshing (சா.அக.).

[குளிர்ச்சி + ஆய் + இருத்தல்.]

குளிர்சுரம் *kuḷir-šuram,* பெ.(n.) ***குளிர்காய்ச்சல்*** பார்க்க; see *kuḷir-kāyccal.*

[குளிர் + சுரம்.]

குளிர்த்தி[1] *kuḷirtti,* பெ.(n.) குளிர்ச்சி; coolness 'நாற்றங் குளிர்த்தி மென்மைகளைக் கொண்டு' (ஈடு,1.2:2).

[குளிர்ச்சி → குளிர்த்தி.]

குளிர்த்தி[2] *kuḷirtti,* பெ.(n.) பூசை வகை (யாழ்.அக.); a kind of propitiation.

[குளிர் → குளிர்த்தி.]

குளிர்த்திக் குடிநீர் *kuḷirtti-k-kuḍinīr,* பெ.(n.) தாகத்திற்கு அருந்தும் குளிர்ந்த நீர்; cool drink (சா.அக.).

மறுவ. தண்ணருந்தம்

[குளிர்த்தி + குடிநீர்.]

குளிர்த்திப்பூண்டு *kuḷirtti-p-pūṇḍu,* பெ.(n.) இலைகளை வீக்கங்களுக்குக் கட்ட உதவும் நீர்ச்சேம்பு; arrow head (சா.அக.).

மறுவ. குளித்திப்பூடு, குதிரைக் குளம்படி.

[குளிர்த்தி + பூண்டு.]

குளிர்தாமரை *kuḷir-tāmarai,* பெ.(n.) ஆகாயத் தாமரை; flotting lotus, sky lotus (சா.அக.).

[குளிர் + தாமரை.]

குளிர்திகா *kuḷirtiga,* பெ.(n.) கருங்கொள்; (சா.அக.); black horse gram .

[குளிர்த்திகை → குளிர்திகா (கொ.வ.)]

குளிர்தேசம் *kuḷir-dēšam,* பெ.(n.) ***குளிர்நாடு*** பார்க்க; see *kuḷir-nāḍu.*

[குளிர் + தேசம்.]

குளிர்ந்த அரத்தம் *kuḷirnda-arattam,* பெ.(n.) உறைந்த குருதி; clotted blood (சா.அக.).

[குளிர்ந்த + அரத்தம்.]

குளிர்ந்தகுரல் *kuḷirnda-kural,* பெ.(n.) இனிய குரல்வளம்; pleasant or delectable voice, as in singing.

[குளிர்ந்த + குரல்.]

குளிர்ந்தகொள்ளி[1] *kuḷirnda-koḷḷi,* பெ.(n.) ஏய்ப்புக் கள்ளன் (நயவஞ்சகன்); lit, exiguous extinguish ed fire-brand, honey tongued villain, person with a fair exterior but a foul interior. 2. வெளிக்கு அமைதியாகவும், உள்ளே கொடுமையாகவும் உள்ள பெண்; a mischievous woman apearing mild but cruel in her activities (சா.அக.)

[குளிர்ந்த + கொள்ளி.]

குளிர்ந்தநிறம் *kulirnda-niṟam,* பெ.(n.) கண்ணுக் கினிய நிறம்; agreeable, pleasant, fine colour.

[குளிர்ந்த + நிறம்.]

குளிர்ந்த நீர் *kuḷirnda-nīr,* பெ.(n.) 1. பச்சைத் தண்ணீர்; cold water. 2. சுடவைத்து ஆறின நீர்; water cooled after boiling. 3. ஒன்பான் மணிகளி லுள்ள நீரோட்டம்; fine glittering in gems (S.I.I. II,451)

[குளிர்ந்த + நீர்.]

குளிர்ந்த பார்வை *kuḷirnda-pārvai,* பெ.(n.) இனிய நோக்கம்; benignant look, lookfull of sweetness.

[குளிர்ந்த + பார்வை.]

குளிர்ந்த பேச்சு *kuḷirnda-pēccu,* பெ.(n.) இனிய பேச்சு; sweet words, pleasant, comforting, soothing words.

[குளிர்ந்த + பேச்சு.]

குளிர்ந்தமணம் *kuḷirnda-maṇam,* பெ.(n.) நறுமணம்; fragrant smell (சா.அக.).

[குளிர்ந்த + மணம்.]

குளிர்ந்தமனம் *kuḷirnda-manam,* பெ.(n.) இரக்கமுள்ள நெஞ்சம்; kind, benevolent, heart.

[குளிர்ந்த + மனம்.]

குளிர்ந்தமுகம் *kuḷirnda-mugam,* பெ.(n.) அருள் விளங்கும் முகம்; benignant countenance.

[குளிர்ந்த + முகம்.]

குளிர்ந்துகிட–த்தல் *kuḷirndu-kiḍa-,* 3 செ.கு.வி. (v.i.) 1. சூடாறியிருத்தல்; to become-cool, as water after boiling. 2. கைகால் சில்லிடுதல்; to become cold, as a dying person. 3. இறத்தல்; to die, used euphemistically.

[குளிர்ந்து + கிடத்தல்.]

குளிர்ந்துபோதல் *kuḷirndu-pō-,* பெ.(n.) சில்லிட்டுப் போதல்; getting cold and stiff just before death.

[குளிர்ந்து + போதல்.]

குளிர்ந்து வருதல் *kuḷirndu-varudal,* பெ.(n.) காய்ச்சல் கொள்ளுதல்; feeling feverish (சா.அக.).

[குளிர்ந்து + வருதல்.]

குளிர்நடுக்கம் *kuḷir-naḍukkam,* பெ.(n.) குளிரால் ஏற்படும் நடுக்கம்; shivering from cold (சா.அக.).

[குளிர் + நடுக்கம்.]

குளிர்நாடு *kuḷir-nāḍu,* பெ.(n.) குளிர்ச்சி மிகுந்த நாடு; cold country.

[குளிர் + நாடு.]

குளிர்நாவல் *kuḷir-nāval,* பெ.(n.) தேவ நாவல்மரம்; a kind of superior jaumoon tree (சா.அக.).

[குளிர் + நாவல்.]

குளிர்ப்பித்தல் *kuḷir-p-pittal,* 4 செ.குன்றாவி(v.t.) தண்ணீர், நறுமணப் பொருள் முதலியவற்றால் குளிர்ச்சி செய்தல்; refresing with water, perfumes etc. 2. உடம்பின் சூடு போக்கல்; allaying the heat in the system (சா.அக.).

[குளிர் → குளிர்ப்பி]

குளிர்ப்பு *kuḷirppu,* பெ.(n.) ***குளிர்மை*** பார்க்க; see. *kuḷirmai.*

[குளிர் → குளிர்ப்பு.]

குளிர்மை *kuḷirmai,* பெ.(n.) 1. குளிர்ச்சி; coolness. 2. அன்பு; kindness, benevolence. அவர்கள் குளிர்மையில்லாதவர்கள் (உ.வ.).

ம. குளிர்ம்ம

[குளிர் → குளிர்மை.]

குளிர்மைக்கட்டி *kuḷirmai-k-kaṭṭi,* பெ.(n.) பொன்னுக்கு வீங்கி; mumps.

[குளிர்மை + கட்டி.]

குளிர்மை கொள்(ளு)தல் *kuḷirmai-koḷḷu-,* 16 செ.கு.வி. (v.i.) நடுங்குதல்; to shiver.

[குளிர்மை + கொள்ளுதல்.]

குளிர்விடு-தல் *kuḷir-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) அச்சம் நீங்குதல்; to be freed from fear. அவனுக்கு குளிர்விட்டுப் போயிற்று (உ.வ.).

[குளிர் + விடு-.]

குளிர்வீக்கம் *kuḷir-vīkkam,* பெ.(n.) குளிரா லேற்படும் வீக்கம்; inflammation or swelling caused in cold weather (சா.அக.).

[குளிர் + வீக்கம்.]

குளிரநோக்கு-தல் *kuḷira-nōkku-,* 5 செ.கு.வி. (v.i.) அருளோடு பார்த்தல்; to cast a gracious look on. *"திருக்கண்களாலே குளிர நோக்கி" (ஈடு,1.10:10).*

[குளிர + நோக்கு.]

குளிரப்பண்ணல் *kuḷira-p-paṇṇal,* பெ.(n.) குளிர்ச்சியடையும்படி செய்தல்; cooling, refreshing (சா.அக.).

[குளிர + பண்ணல்.]

குளிரம் *kuḷiram,* பெ.(n.) நண்டு (சூடா.); crab (சா.அக.).

மறுவ. குளிர்

[குள் → குளி (சேற்றில் ஒளிதல்) குளிர் → குளிரம்.]

குளிரவை-த்தல் *kuḷira-vai,* 4 செ.குன்றாவி.(v.t.) விளக்கை அணைத்தல்; to put out, extinguish, as a light. விளக்கைக் குளிரவை (இ.வ.).

[குளிர் → குளிர + வை.]

குளிரி[1] *kuḷiri,* பெ.(n.)1. பீலிக் குஞ்சம் (பிங்.); fan made of peacock's feathers. 2. நீர்ச்சேம்பு;arrow head, aquatic plant.

[குளிர் → குளிரி (குளிர்ச்சித்தருவது).]

குளிரி[2] *kuḷiri,* பெ.(n.) குடமுழவு; kettle drum. *குளிரிப் புடைப்பொலி (தஞ்சைவா.73).*

[குளிறு → குளிரி.]

குளிரிக்குடம் *kuḷiri-k-kuḍam,* பெ.(n.) பன்னீர்க்குப்பி (திவ்.நாய்ச்.7:4 வியா.); rose-water bottle.

[குளிர + பண்ணல்.]

குளிவை *kuḷivai,* பெ.(n.) ***குளுவை*** பார்க்க; see *kuḷuvai. "குளிவையும் புதாவும்" (பெருங்.உஞ்சைக். 51,70).*

[குளுவை → குளிவை. குளுவை = நீர்ப்பறவை.]

குளிறு[1]-தல் *kuḷiṟu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. ஒலித்தல் (திவா.); to sound, rattle.

[குளிர் → குளிறு-தல்.]

குளிறு[2] *kuḷiṟu,* பெ.(n.) 1. ஒலி (சூடா.); sound, rattling noise. 2. குடமுழவு; kettle drum. 3. எறும்பு; ant.

[குளிர் → குளிறு.]

குளிறு[3] *kuḷiṟu,* பெ.(n.) நண்டு; crab. *"எழுகுளிறு மிதித்த வொரு பழம் போல" (குறுந்.24).*

[குளி (சேற்றில் மறைதல்) → குளிர் → குளிறு.]

குளுகுளு-த்தல் *kuḷukuḷu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. செழித்து வளர்தல்; to grow luxuriantly. *பயிர்கள் குளுகுளுத்திருக்கின்றன.* 2. சோகை பற்றுதல்; to become pale, sallow, wan, bloated, as in jaundice; to become weak through morbid state of the body. 3. அழுகிப்போதல்; to become rotten, putrid, as fruits.

[குளு + குளு-]

குளுகுளுப்பை *kuḷu-kuḷu-p-pai,* பெ.(n.) காமாலை நோய்; the state of being pale and bloated in countenance, a kind of jaundice.

[குளு + குளுப்பை.]

குளுகுளெனல் *kuḷu-kuḷeṉal,* பெ.(n.) கொதித்தற்குறிப்பு; onom. expr. of boiling. *"பார்ப்பான் குண்டிகை யிருந்த நீரும் குளுகுளு கொதித்ததன்றே" (கம்ப. வருணனை.61).*

[குளு + குளு + எனல்.]

குளுத்தியெண்ணெய் *kuḷutti-y-eṇṇey,* பெ.(n.) சூடுதணிக்கும் மருந்தெண்ணெய்; a cooling medicine in the form of oil.

[குளிர்ச்சி → குளுத்தி + எண்ணெய்.]

குளுந்தண்ணீர் *kuḷun-daṇṇīr,* பெ.(n.) முளைத் தண்ணீர் (உழ.நெ.க.அக.). watering the seeds to sprout.

[குளு → குளுந்தண்ணீர்.]

குளுந்தை *kuḷundai,* பெ.(n.) கொள் போன்ற மான்மணத்தி வகை (பதார்த்த.1081); musk that resembles horse gram, one of 5 kinds of kasturi.

[கொள் → குளு → குளுந்தை.]

குளுப்பை *kuḷuppai,* பெ.(n.) நோயால் முகம் ஊதுகை; being bloated, as the face in jaundice.

[குளு → குளுப்பை.]

குளுப்பைதட்டு-தல் *kuḷuppai-taṭṭu,* 5 செ.கு.வி. (v.i.) நோயால் முகம் ஊதித் தோன்றுதல்; to become bloated as the face in jaundice அவன் முகம் குளுப்பை தட்டியிருக்கிறது (உ.வ.).

[குளுப்பை + தட்டு-.]

குளுப்பை பாய்-தல் *kuḷup-pai-pāy-,* 2 செ.கு.வி (v.i.) நோயால் கன்னம் கதித்தல்; becoming turgid through disease as the cheeks (சா.அக.).

[குளுப்பை + பாய்தல்.]

குளுப்பைமுகம் *kuḷuppai-mugam,* பெ.(n.) அதைத்த முகம்; bloated face (சா.அக.).

[குளுப்பை + முகம்.]

குளும்பாறை *kuḷum-bāṟai,* பெ.(n.) ஒருவகைக் கடல்மீன்; horse mackerel, greenish, attaining 28 in. in length.

[குளு → குளும்பாறை.]

குளுமி *kuḷumi,* பெ.(n.) மதகு (P.T.L.); sluice.

[குள் → குளுமி]

குளுமை *kuḷumai,* பெ.(n.) குளிர்ச்சி; coldness, chillness.

Fin. kylma; **Es.** kulm; **Mordvin.** kelma; **Mong.** kolmy; **Jap.** shimo; **Q.** culi.

[குளிர்மை → குளுமை.]

குளுமைகொள்ளல் *kuḷumai-koḷḷal,* பெ.(n.) நீர் கொள்ளுதல்; catching cold (சா.அக.).

[குளுமை + கொள்ளல்.]

குளுமைமூலம் *kuḷumai-mūlam,* பெ.(n.) இஞ்சி; ginger (சா.அக.).

[குளுமை + மூலம்.]

குளுவன் *kuḷuvan,* பெ.(n.) குறவனுடைய பாங்கன்; a fowler's attendant. *"குளுவச்சிங்கன் வந்தான்" (குற்றா.குற.792.9).*

மறுவ. குழுவன்

[குளு → குளுவை → குளுவன். (குளுவைப் பறவை வேட்டைக்குத் துணையானவன்.]

குளுவை *kuḷuvai,* பெ.(n.) ஊரற் பறவை (சிலப்.10:117,உரை); a water-bird.

[குளு → குளுவை (சிறிய பறவை).]

குளூரி *kuḷūri,* பெ.(n.) குளிரி, நீர்ச்சேம்பு; water archer (சா.அக.).

[குளிரி → குளூரி (கொ.வ.)]

குளைச்சக்கரம் *kuḷai-c-cakkaram,* பெ.(n.) ஒடு (சங்.அக.); tile.

[குள் → குளை + சக்கரம். ஒருகா. குளைச்சக்கரம்.]

குளைச்சு *kuḷaiccu,* பெ.(n.) நாலிலொன்று; one-fourth.

[குள் → குளை → குளைச்சு.]

குளைஞ்சி *kuḷaiñji,* பெ.(n.) வஞ்சிக்கொடி; slender rattan (சா.அக.).

[குள் → குளை → குளைஞ்சி.]

குளையாள் *kuḷaiyāḷ,* பெ.(n.) பெண் காமக்களை; secretion from ovary in women (சா.அக.).

[குள் → குளை → குளையாள்.]

குற்சலை *kuṟcalai,* பெ.(n.) அவுரி; indigo plant (சா.அக.).

[குறு + சாலை - குறுசாலை → குற்சலை (கொ.வ.).]

குற்பகம் *kuṟpagam,* பெ.(n.) நாணல் (மலை.); kaus, a large and coarse grass.

[குற்று + பூகம் - குற்றுப்பூகம் → குற்பகம் (கொ.வ).]

குற்பம் *kuṟpam,* பெ.(n.) பரடு; ankle (சா.அக.).

[குல் (பொருந்து)→ குல்பு → குற்பு → குற்பம்.]

குற்பாதம் *kuṟ-pādam,* பெ.(n.) குறண்டிக்கால்; குறைந்த கால்; club-foot (சா.அக.).

[குறு → குறை + பாதம் - குறைபாதம் → குற்பாதம். (கொ.வ).]

குற்றங்காட்டு-தல் *kuṟṟaṅ-kāṭṭu,* 5 செ.கு.வி.(v.i.) குற்றத்தை எடுத்துச் சொல்லுதல்; to expose faults.

[குற்றம் + காட்டு-.]

குற்றங்காண்(ணு)-தல் *kuṟṟaṅ-kāṇ-,* 5 செ.கு.வி. (v.i.) தவறு கண்டுபிடித்தல்; to find fault, pick holes.

[குற்றம் + காணு-.]

குற்றச்சாட்டு *kuṟṟa-c-cāṭṭu,* பெ.(n.) குற்றவாளியாக்குதல்; to accusation, charge.

[குற்றம் + சாட்டுதல்.]

குற்றஞ்சாட்டு-தல் *kuṟṟañ-cāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***குற்றஞ்சுமத்து-தல்*** பார்க்க; see *kuṟṟañ-cumattu-.*

[குற்றம் + சாட்டு.]

குற்றஞ்சுமத்து-தல் *kuṟṟañ-cumattu-,* 5 செ.குன்றாவி.(v.t.) ஒருவன்மீது குற்றத்தை ஏற்றுதல்;

nate.

[குற்றம் + சுமத்து-.]

குற்றத்தண்டம் *kuṟṟa-t-taṇḍam,*பெ.(n.) செய்த குற்றத்திற்குரிய தண்டனை; penalty (I.M.P.N.A. 341:2).

[குற்றம் + தண்டம்.]

குற்றந்தீர்-த்தல் *kuṟṟantīr-,* 4 செ.குன்றாவி. (v.t.) துப்புரவு செய்தல்; cleaning the impurities as from metals and metallic compounds (சா.அக.).

[குற்றம் + தீர்-.]

குற்றப்படு-தல் *kuṟṟap-paḍu-,* 5 செ.கு.வி.(v.i.) குற்றத்திற்கு உள்ளாதல்; to be in fault, be guilty. *"குடிக்குற்றப்பட்டாரை" (சிலப். 14:146,உரை).*

[குற்றம் + படுதல்.]

குற்றப்படுத்து-தல் *kuṟṟap-paḍuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) குற்றம் ஆக்குதல்; to defile, befoul, pollute.

ம. குற்றப்படுத்துக

[குற்றம் + படுத்து. 'படு' த.வி. 'படுத்து' பி.வி.]

குற்றப்பத்திரம் *kuṟṟa-p-pattiram,*பெ.(n.) குற்றச் சாட்டு ஏடு (குற்றப்பத்திரிகை); charge sheet.

[குற்றம் + பத்திரம்.]

குற்றப்பாட்டேடு *kuṟṟa-p-pāṭṭēḍu,*பெ.(n.) முறை மன்றத்தில் ஒருவன் மீது குற்றத்தின் விவரங் காட்டிப் படிக்கப்படும் ஆவணம்; charge sheet.

[குற்றம் + பாடு + ஏடு.]

குற்றப்பாடு *kuṟṟa-p-pāḍu,*பெ.(n.) 1. குற்றத்திற்கு உட்படுகை; being in fault, being accused. 2. குற்றம்; fault, crime.

ம. குற்றப்பாடு

[குற்றம் + (படு) பாடு.]

குற்றப்பிடிப்பு *kuṟṟa-p-piṭippu,* பெ.(n.) குற்றங் களைத் தெரிந்தெடுக்கை; censorship.

[குற்றம் + பிடிப்பு.]

குற்றம்[1] *kuṟṟam,* பெ.(n.) 1. பிழை; fault, moral or physical blemish, defect, flaw, error. *"ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்" (குறள்.190).* 2. பழி; reproach, stigma, blame. *"குற்றமின் முனிவரும்" (கந்தபு. வரைபுனை.218).* 3. துன்பம்; pain, distress. *"குடும்பத்தைக் குற்ற மறைப்பான்" (குறள், 1029).* 4. அங்கக்குறை; bodily deformity. உறுப்புக் குற்றமுள்ளவன். 5. தீங்கு; crime, offence. *"கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென்" (கந்தரலங்.76).* 6. தெய்வத்தின் சினம் முதலியவற்றிற்குக் காரண மான தீட்டு; impurity, ceremonial or moral defilement, as cause of offence to the deity. 7. தண்டம்; penalty, mulcting, fine. குற்றமிறுத்தல்.

ம. குற்றம்; க. கொரதெ, குத்த; **தெ.** கொரத; **குட.** கொரு, கொரவு; **துட.** க்வர்; **கோத.** கொர்வ்.

[குல் → குறு → குற்றம்.]

குற்றம்[2] *kuṟṟam,* பெ.(n.) 1. துப்புரவின்மை, குப்படை (அசுத்தம்); impurities; 2. களங்கம்; stain, blemish. 2. குறைவு; defect, fault; 4. துன்பம்; distress; 5. தீட்டு; defilement; 6. நோய்; disease. 7. கோள்குற்றம்; morbid affectious. 8. முக்குற்றம் – காமம், வெகுளி, மயக்கம்; three kinds of guilt, lust, wrath and confusion; 9. ஐங்குற்றம்; the five unbecoming behaviours in a person. 1. கொட்டாவி; yawning, gaping. 2. நெட்டை; knacking with the fingers or in walking. 3. குறட்டை; snoring. 4. கூன் கிடை; lying shrivelled. 5. தூங்கி விழுதல்; nodding in drowsiness (சா.அக.).

[குல் → குறு → குற்றம்.]

குற்றம்பாராட்டு-தல் *kuṟṟam-pārāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) பிறர் குற்றத்தை மிகுதிப்படுத்துதல்; to exaggerate one's faults, dwell too much upon one's faults, magnify guilt.

[குற்றம் + பாராட்டு-.]

குற்றம்போடு—தல் *kurram-pōḍu-,* 7 செ.கு.வி. (v.i.) தண்டம் விதித்தல் (வின்.); to impase fine, mulct.

[குற்றம் + போடு–.]

குற்றல் *kurral,* பெ.(n.) 1. நெரித்தல்; creeking. 2. பறித்தல்; plucking (சா.அக.). *"வித்துக்குற் றுண்ணா விழுப்பம் மிக வினிதே" (இனி.நா.).*

[குற்று → குற்றல்.]

குற்றவாளி *kurravāḷi,* பெ.(n.) குற்றஞ்செய்தோன்; delinquent, offender, culprit, criminal. 2. குற்றஞ் சாட்டப்பட்டவன்; (legal) accused person.

ம. குற்றவாளி

[குற்றம் + ஆள் → ஆளி.]

குற்றவீடு *kurra-viḍu,* பெ.(n.) காமம், வெகுளி முதலிய குற்றங்கள் நீங்குகை; faultlessness, sinlessness, suppression of human passions. *"குற்றவீடெய்தி" (மணிமே. 26:51).*

[குற்றம் + விடு → வீடு.]

குற்றவுணர்வு *kurra-vuṇarvu,* பெ.(n.) தவறு இழைத்ததால் அல்லது தவறு இழைத்ததாக நினைத்துக் கொள்வதால் உண்டாகும் மனநிலை;guilt complex.

[குற்றம் + உணர்வு.]

குற்றாக்குரவையர் *kurrā-k-kuravaiyar,* பெ.(n.) ஆண்குழந்தைகளுக்குக் காதுகுத்துதல் சடங்கை முந்நூல் அணிவிக்கும்வரை செய்யாதிருக்கும் ஒருசார் பார்ப்பன வகுப்பினர்; a sect of Tamil speaking Brahmins who postpone the ear-boring ceremony of their boys till *munnūl* (upanaya nam).

[குற்றா + குரவையர். குல + ஐயர் - குலவையர் → குரவையர்.]

குற்றாய் *kurrāy,* பெ.(n.) மீன் வகை; a kind of fish.

ம. குற்றால்

[குற்றால் → குற்றாய்.]

குற்றால் *kurrāl,* பெ.(n.) மீன் வகை; a kind of fish.

ம. குற்றால்

[குறு → குற்றால்.]

குற்றாலகம் *kurrālagam,* பெ.(n.) மலையாறு; mountain river. (சா.அ க.).

[குன்று + ஆலி (குளிர்நீர், பனிநீர்)– குன்றாலி → குற்றாலி → குற்றாலகம்.]

குற்றாலம்[1] *kurrālam,* பெ.(n.) அருவியால் பெயர் பெற்றதும் உடல் நலத்திற்கேற்றதும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளதுமான ஒரு சிவத்தலம்; a village in Tinnavelly district, sacred of Siva and famous for its waterfalls, a sanatorium. *"குற்றாலத்துறை கூத்தன்" (தேவா.1181. உற்றா.).*

மறுவ. குற்றாலம்

[குன்று (குற்று) + (ஆலி)ஆலம் → குற்றாலம் (குளிர்ந்த மலையருவி).]

குட்டையான ஆலமரம் (குறு + ஆலம்) என்னும் பொருளில் குற்றாலம் எனப் பெயர் வந்ததாகக் கூறுவர். எனினும் குளிர்ந்த மலையருவிக்குக் குற்றாலகம் (ஆலி = பனிநீர்) எனப் பண்டுதொட்டே பெயர் வழங்கியுள்ளது கருதத்தக்கது.

குற்றாலம்[2] *kurrālam,* பெ.(n.) ஆடவை (ஆனி) முதல் கன்னி (புரட்டாசி) வரையுள்ள மாதங்களில் விதைக்கப் பெற்று ஐந்து மாதத்தில் விளையும் ஒரு வகை நெல்; a kind of paddy, sown between *Āni,* and *Puraṭṭāsi* maturing on five months.

ம. குற்றாலன்

[குற்றி + நெல் – குற்றிநெல் → குற்றால் → குற்றாலம்.]

குற்றி[1] *kurri,* பெ.(n.) மரக்கட்டை; stump, slab, stack, block, log. *"கொல்லை யிரும்புனத்துக் குற்றி யடைந்த புல்" (நாலடி. 178).*

ம. குற்றி; **க.** குசி; **து.** குத்தி; **பர்.** குச்சி; **கோண்.** குத்திய

[குறு → குற்றி.]

குற்றி[2] *kuṟṟi*, பெ.(n.) வாய் குறுகிய சிறு ஏனவகை; a kind of small narrow-necked vessel. *"சுண்ணக் குற்றியும்" (பெருங். உஞ்சைக். 38:168).*

[குறு → குற்றி.]

குற்றிசை[1] *kuṟṟišai*, பெ.(n.) 1. குறுகிய சந்தம் (வின்.); short metre in *viruttam* verse, opp. to *neṭṭišai.*

[குறு + இசை. குறு = குறுமை, சிறுமை.]

குற்றிசை[2] *kuṟṟišai*, பெ.(n.) தலைவன் தன் மனைவியோடு இறுதிக்காலம் வரையில் வாழாமல் துறவு வாழ்க்கை மேற்கொள்ளும் குறுகிய புகழ் தக்கதன்று என்று கூறும் புறத்துறை (பு.வெ.12, இருபாற்.17); (puṟap.) theme describing the impropriety of the hero of a poem in neglecting his wife seeking fame and name by leading a saintly life.

[குறு + இசை – குற்றிசை. இசை = புகழ்.]

வாழ்நாள் வரையில் கூடி வாழ்வதற்காக அமைந்த வாழ்க்கைத் துணைவியாகிய மனைவியை, துறவு மேற்கொண்டு புகழ் பெறுவதற்காக விட்டு நீங்குவதும் தவறு என்று இடித்து அறம் கூறுவது குற்றிசை என்னும் துறையாம். எக்காரணத்தைக் கொண்டும் மனைவியைப் பிரிவது அறங்கண் மாறுவதாகக் கருதப்பட்டது. இதனை

"பொற்றார் அகலம் புல்லிய மகளிர்க்கு அற்றாங் கொழுகா தறங்கண் மாறின்று" (பு.வெ.12.கொளு.36)

என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறும். காண்மாறுதல் = மறுத்தல்.

உரையாசிரியர் இதனை மேலும் விளக்கும் முகத்தான், 'குற்றிசை - குறுகிய புகழ். அஃதாவது காமஞ் சான்ற கடைக் கோட்காலை ஏமஞ் சான்ற மக்களொடும் மனைவியொடுமிருந்து சிறந்தது பயிற்றாது பிறர் முற்றத் துறந்தார் என்று புகழும் சிறு புகழையே விரும்பி அறங்கண் மாறிக் கற்புடை இல்லாளைக் கைவிடுவாரும் உளராகளின், அக்குறுகிய புகழைப் பழித்துக் கூறலின், இது குற்றிசை எனப்பட்டது' என்று கூறுகின்றார். குற்றிசை என்னும் துறைப்பொருள் உணராது சென்னைப் பல்கலைக்கழக அகராதி 'தலைவன் மனைவியைப் புறக்கணித்து அறநெறிப்பிறழ்ந்து ஒழுகுவதைக் கூறும் புறத்துறை என்று கூறியிருப்பது பொருள் விளக்கம் போதாதது.

இக்கருத்தினை மேற்கோள் பாடல் தெளிவு படுத்துகிறது.

"கரிய பெருந்தடங்கண் வெள்வளைக்கை யாளை
மரிய கழிகேண்மை மைந்த - தெரியின்
விளிந்தாங் கொழியினும் விட்டகலார் தம்மைத்
தெளிந்தாரில் தீர்வது தீது".

(பு.வெ.கொளு.36 மேற்கோள்.)

மனைவியை நீத்துத் துறவறம் மேற்கொள்வது அறமாகாது; புகழுமாகாது. அதைப் புகழ் என்று சொல்வதாயின் மிகச்சிறிய புகழே! குற்றிசையாகிய அச்சிறிய புகழைவிட மனைவியைப் பிரியாது வாழ்வதே முற்றிசை என்னும் பெரும் புகழைத் தரும். இதுவே தமிழ் மரபு. இதனைத் தொல்காப்பியரும்

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

(தொல்.பொருள்.கற்பு.51)

என்று கூறுகின்றார்.

முதுமைக் காலத்துத் துறவு மேற்கொள்வதாயினும் வாழ்க்கைத் துணைவர் இருவரும் துறவு மேற்கொள்ள வேண்டும் என்பதே மரபு.

குற்றிப்பிராய் *kuṟṟi-p-pirāy*, பெ.(n.) குற்றிப்பலா; stunted jack (சா.அக.).

[குறு→குற்றி + பிராய், பலா → பிலா → பிரா → பிராய் (கொ.வ.).]

குற்றிமரம் *kuṟṟi-maram*, பெ.(n.) கோக்காலி மரம்; plank placed in a house parallel to a wall as a support for utensils.

[குற்றி + மரம்.]

குற்றியலிகரம் *kuṟṟiya-ligaram*, பெ.(n.) சார்பெழுத் துகளுள் ஒன்றாய், அரைமாத்திரையாகக் குறுகிய இகரம் (தொல். எழுத்து.2); shortend 'இ' having only half a *māttirai* as in words கேண்மியா, நாகியாது, one of *šārbeḻuttu.*

[குறு + இயல் + இகரம்.]

குற்றியலுகரம் *kuṟṟiya-lugaram*, பெ.(n.) சார் பெழுத்துகளுள் ஒன்றாய்ப் பெரும்பாலும் மொழி களின் ஈற்றில், அரைமாத்திரையாய்க் குறுகி

வரும் உகரம்; shortened 'உ' having only half of a *mattirai* found generally at the end of words, one of *cārbeluttu* (தொல்.எழுத் 'உ';2).

மறுவ. குற்றுகரம்

[குறு + இயல் + உகரம்.]

குற்றிருமல் *kurrirumal,* பெ.(n.) சிணுக்கிருமல்; whooping cough. 2. மென்மையான இருமல்; slight cough (சா.அக.).

[குறு + இருமல்.]

குற்றிவிளா *kurri-vilā,* பெ.(n.) நாய்விளா; dog wood apple (சா.அக.).

[குறு → குற்றி + விளா.]

குற்று¹-தல் *kurru-,* 5 செ.குன்றாவி (v.t.) 1. இடித்தல் (சூடா.); to pound. 2. தாக்குதல்; to strike, hit, butt. *"மூரற் பகுவாயிற் குற்றா நிற்கும் சிலவரை" (கந்தபு.சிங்கமு.139).* 3. நெரித்தல்; to crush, as lice. 4. ஊடுருவிக் குத்துதல்; to punch, prick, pierce.

[குல் → குறு → குற்று.]

குற்று² *kurru,* பெ.(n.) உள்ளே பாயும்படியான குத்தல்; puncture (சா.அக.).

[குல் → குறு → குற்று.]

குற்றுக்காயம் *kurru-k-kāyam,* பெ.(n.) கூரான கத்தி அல்லது வேறு விதக் கருவியால் துளையுறும் படிக்குத்துவதினால் ஏற்பட்ட காயம்; wound caused by pricking or piercing with a knife or other pointed instrument (சா.அக.).

[குற்று + காயம்.]

குற்றுகரம் *kurrugaram,* பெ.(n.) **குற்றியலுகரம்** பார்க்க; see *kurriya-lugaram (தொல்.எழுத்.45, உரை.).*

[குறு + உகரம்.]

குற்றுடைவாள் *kurrudaivāl,* பெ.(n.) சுரிகை; small poniard. *"குற்றுடை வாள் ஆசுங் கண்டமும் பொன் கட்டிற்று" (S.I.I.II,185).*

[குறு + உடை + வாள்.]

குற்றுநெல் *kurru-nel,* பெ.(n.) நெற்குற்றுதற்கு ஏற்பட்ட ஒரு பழைய வரி; cess paid for pounding paddy (I.M.P.cg.1000).

[குற்று + நெல்.]

குற்றுமி *kurrumi,* பெ.(n.) குற்றிநீக்கிய உமி (வின்.); broken husk.

[குற்று + உமி.]

குற்றுயிர் *kurruyir,* பெ.(n.) 1. குறையுயிர்; state of being half - dead . 2. குற்றெழுத்து ; short vowel *"குற்றுயி ரளபி னீறாம்" (நன்.108).*

[குறுமை + உயிர்.]

குற்றுவாகை *kurru-vāgai,* பெ.(n.) சிறுவாகை; stinted or mall sirissa (சா.அக.).

[குறு → குற்று + வாகை.]

குற்றுவாய் *kurru-vāy,* பெ.(n.) கடல்மீன் வகை; a herring, golden glossed with purple fish.

மறுவ. குத்துவாய்

[குற்று + வாய்.]

குற்றுழிஞை *kurruliñai,* பெ.(n.) பகைவரது கோட்டை மதிலின்மேல் வீரன் ஒருவன் தனியனாகவே நின்று தன் திறல் பெருமையைக் காட்டுவது கூறும் புறத்துறை (பு.வெ.6,13); (Purap) theme of a warrior standing on the enemy's fortification all alone and displaying his valour and prowess.

[குறு + உழிஞை.]

குற்றூசி *kurrūsi,* பெ.(n.) உடம்பில் குத்தும் ஊசி; injection needle (சா.அக.).

[குறு + ஊசி.]

குற்றெழுத்து *kurreluttu,* பெ.(n.) ஒரு மாத்திரையுள்ள உயிரெழுத்து (தொல்.எழுத்து.3.); short vowel.

ம. குற்றெழுத்து

[குறு + எழுத்து.]

குற்றேத்தம் *kuṟṟēttam* பெ.(n.) ஆறு, பெருங்கால், குளம், ஏரி ஆகியவற்றின் கரையில் குத்திட்டு நிறுத்திய மரத்தின்வழி நீர் இறைக்க அமைக்கப் பெறும் ஏற்றம்; a well sweep or picottah set near water source for irrigational purpose. *'இவ்வாய்க்கால்கள் கன்னியர் குறங்கறுத்துக் குத்தவும் விலங்கடைக்கவும் குற்றேத்தம் பண்ணவும் – பெறாதாகவும்' (பெரியலெய்டன் செப்பேடுகள்).*

மறுவ. குற்றேற்றம்

[குறு + ஏற்றம் – குற்றேற்றம் → குற்றேத்தம்.]

குற்றேல் *kuṟṟēl,* பெ.(n.) குற்றேவல்; menial service. *"குலங்கெழு குமரரைக் குற்றே லருளி" (பெருங்.உஞ்சைக். 32,15).*

[குறு + ஏவல் – குற்றேவல் → குற்றேல் (கொ.வ.). குற்றேவல் பார்க்க; see kuṟṟēval.]

குற்றேவல் *kuṟṟēval,* பெ.(n.) பணிவிடை; menial service. *"குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது" (திவ்.திருப்பா.29).*

[குறு + ஏவல் – குற்றேவல்.]

குற்றேற்றம் *kuṟṟēṟṟam,* பெ.(n.) சிறு ஏற்றம்; small picottah *(தெ.இ.கல்.தொ.1:151).*

[குறு + ஏவல் – குற்றேவல்.]

குற்றொற்று *kuṟṟoṟṟu,* பெ.(n.) குற்றெழுத்தின் பின்வரும் மெய்யெழுத்து; (Gram.) consonant succeeding a short vowel.

[குறுமை + ஒற்று – குற்றொற்று.]

குற[1]–த்தல் *kuṟa-,* 4 செ.குன்றாவி.(v.t.) வெளிப் படுத்துதல்; to emit, give out. *"கொந்தக் குழலைக் குறந்த புழுகட்டி" (திவ். பெரியாழ். 2.5:8).*

[குல் → குறு → குற]

குற[2]–த்தல் *kuṟa-,* 4 செ.குன்றாவி.(v.t.) வார்த்தல்; to pour. *"புண்ணிலே புளியைக் கறந்திட்டால் கரிக்குமாபோலே" (திவ். பெரியாழ். 2.9:1, வியா. பக்.451).*

[குல் → குற]

குறக்கம் *kuṟakkam,* பெ.(n.) நாணல்; bulrush. (சா.அக.).

[குற → குறக்கம்.]

குறக்கூத்து *kuṟa-k-kūttu,* பெ.(n.) குறவராடுங் கூத்து; dance of *kuṟavar.*

[குறம் + கூத்து.]

குறக்கெஞ்சு *kuṟa-k-keñju,* பெ.(n.) குற்றஞ்செய்த குறவன் கெஞ்சுஞ்செயல்; cringing attitude of *kuṟavaṉ.*

[குறம் + கெஞ்சு.]

குறகுளம் *kuṟakuḷam,* பெ.(n.) வெள்ளிலோத்திரம்; the lodh tree (சா.அக.).

[குறகு → குறகுளம்.]

குறங்கறு–த்தல் *kuṟaṅgaṟu-,* 4 செ.கு.வி.(v.i.) கால்வாயினின்று வேறு தனிக்கால் பிரித்தல்; to branch out, as channels. *"கண்ணன் வாய் நின்றும் இவ்வூர் நிலத்தாறே குறங்கறுத்துப் புறவூர்க்கு நீர் பாயும் வாய்க்காலும்" (S.I.I.ii.57,13).*

[குறங்கு + அறு–.]

குறங்கன் *kuṟaṅgaṉ,* பெ.(n.) மலைக்கொன்றை (L); shingle tree.

[குறங்கு + அன்.]

குறங்கு[1] *kuṟaṅgu,* பெ.(n.) 1. தொடை; thigh. *"செறிந்த குறங்கின்.... அஃதை" (அகநா.96).* 2. கிளைக்கால்; branch channel. (S.I.I.ii, 352). 3. கொக்கி; clasp, catch link.

[குறு → குற → குறங்கு (ஒ.நோ. உறு → உற → உறங்கு).]

குறங்கு[2] *kuṟaṅgu,* பெ.(n.) மலையடிவாரம்; foot of a mountain. *"கட்டி க் குறங்கைக் குறங்காலு மோதி" (தக்கயாகப்.540).*

[குல் → குற → குறங்கு]

குறங்குச்சம்பா *kuraṅgu-c-campā,* பெ.(n.) கட்டைச்செம்பாளை நெல்; a kind of coarse *campā* paddy.

[குறங்கு + சம்பா.]

குறங்குசெறி *kuraṅgu-šeri,* பெ.(n.) தொடையணி; ornament for the thigh *"குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்து" (சிலப். 6:86).*

[குறங்கு + செறி.]

குறங்கொட்டி *kuraṅ-koṭṭi,* பெ.(n.) துலா முதலிய வற்றோடு இணைக்கும் மரக்கட்டை; short piece or strip of wood tied to the end of a well-sweep, to a rafter or to the broken leg of a chair.

[குறங்கு + ஒட்டி.]

குறங்கொன்றகம் *kuraṅ-konragam,* பெ.(n.) பெருங்கோரைக் கிழங்கு; the root of a big variety of *kōray* grass (சா.அக.).

மறுவ. பெருமுத்தக்காசு

[குறும் + கொன்றகம்.]

குறச்சாதனை *kura-c-cādanai,* பெ.(n.) குற்றஞ் செய்த குறவனைப் போற் செய்யும் வன்செயல்; stubborn inflexible nature, as of a *kuravan.*

[குறம் + சாதனை.]

குறஞ்சால் *kurañjāl,* பெ.(n.) குறையுழவுடைய நிலம் (யாழ்.அக.); land partially ploughed.

[குறும் + சால் – குறுஞ்சால் → குறஞ்சால்.]

குறஞ்சி *kurañji,* பெ.(n.) 1. மருதோன்றி (மலை.) ; henna. 2. செம்முள்ளி (மலை.) ; common yellow nail dye. 3. ஈந்து (மலை.); date palm.

[குறிஞ்சி → குறஞ்சி.]

குறட்டரியம் *kura-ṭ-ṭariyam,* பெ.(n.) குறையை மெல்ல வெளியிடுகை; complaint, murmur, expression of dissatisfaction or discontent. *அவன் குறட்டரியம் பண்ணுகிறான் (இ.வ.).*

[குறு → குறட்டு + அரியம்.]

குறட்டாழிசை *kura-ṭ-ṭāḻišai,* பெ.(n.) நாற்சீரின் மிக்க சீர்களால் வரும் அடியிரண்டாய் ஈற்றடி குறைந்து வருவனவும் வேற்றுத்தளை தட்டுக் குறள் வெண்பாவிற் சிதைந்து வருவனவுமாகிய பாவினம் (காரிகை, செய். 9,உரை); verse of two unequal lines, of five or more feet, the second line being always shorter than the others.

[குறள் + தாழிசை.]

குறட்டிழுப்பு *kura-ṭ-ṭiḻuppu,* பெ.(n.) ***குறட்டுவலி*** பார்க்க;see *kuraṭṭuvali.*

[குறள் → குறட்டு + இழுப்பு.]

குறட்டின்கண் *kuraṭṭinkaṇ,* பெ.(n.) குறட்டின் துளை; fenestrum or opening of forceps (சா.அக.).

[குறடு + இன் + கண்.]

குறட்டுக்கம்பு *kuraṭṭu-k-kambu,* பெ.(n.) தலைப்பக்கத்தில் குமிழுள்ள கம்பு; cane with head. *"முரட்டும் குறட்டுக் கம்பாலே யடிபடிவோ" (குரு.கூர்ப்.8.).*

[குறடு +கம்பு]

குறட்டுச்சுவர் *kuraṭṭu-c-cuvar,* பெ.(n.) மண்தாங்கிச் சுவர் (CEM); retaining wall.

[குறடு + சுவர்.]

குறட்டுச்செருப்பு *kuraṭṭu-c-ceruppu,* பெ.(n.) பெருவிரலில் மாட்டத்தக்க மோதிரமுள்ள செருப்பு; a kind of sandals with a loop to admit the great toe.

[குறடு + செருப்பு.]

குறட்டுப்பாக்குவெட்டி *kuraṭṭu-p-pākku-veṭṭi,* பெ.(n.) பாக்குவெட்டி வகை; arecanut - cracker with a forked mouth.

[குறடு + பாக்கு + வெட்டி.]

குறட்டுவலி *kuraṭṭu-vali,* பெ.(n.) உடல் நலிவாற் காணும் இழுப்பு; a spasmodic painful contraction of the limb or muscle through weakness (சா.அக.).

மறுவ. குறட்டிழுப்பு

[குறடு + வலி.]

குறட்டுவாங்கல் *kurattu-vāṅgal,* பெ.(n.) குறட்டு வலியை நீக்குதல்; curing cramps (சா.அக.).

[குறடு → குறட்டு + வாங்கல்.]

குறட்டுவாதம் *kurattu-vādam,* பெ.(n.) வலிப்பு நோய்வகை; a kind of spasm, convulsion.

[குறட்டு + வாதம்.]

குறட்டெழுதகம் *kuratt-eludagam,* பெ.(n.) வாசல் நிலையில் அமைந்த அழகிய மரவேலை (கட்.தொ.வரி); a kind of nice wood work on door frame.

[குறடு → குறட்டு + எழுதகம்.]

குறட்டை[1] *kurattai,* பெ.(n.) 1. சவரிக்கொடி; bitter snake gourd. 2. காக்கணங்கொவ்வை; mussel shell creeper. 3. எலிவகை; a kind of rat.

[குறடு → குறட்டை.]

குறட்டை[2] *kurattai,* பெ.(n.) உறக்கத்தில் மூச்சு விடும் ஒலி; snoring, snorting. *"கோட்டுவாயோடி வடியக குறட்டைவிட்டு" (இராமநா.உயுத்.32).*

Fin. korista; **Es.** koriseda; **Q.** jorjuy.

[குல் → குறட்டு → குறட்டை.]

குறட்டைவிடல் *kurattai-vidal,* பெ.(n.) தூக்கத்தில் விடும் ஒலி மூச்சு; breathing with a rough, hoarse noise in sleep (சா.அக.).

[குறட்டை + விடல்.]

குறட்பா *kuratpā,* பெ.(n.) குறள்வெண்பா; kural venbā, a two line metre in Tamil prosody. *"வள்ளுவனா ரோது குறட்பா" (வள்ளுவமா.43).*

[குறள் + பா.]

குறடா *kuradā,* பெ.(n.) குதிரைச் சவுக்கு; horse whip.

க.கொரடா

[குறடு → குறடா (கொ.வ.).]

குறடு[1] *kuradu,* பெ.(n.) 1. கம்மியரது பற்றுக்குறடு; pincers, tongs, forceps. *"கொட்டி யுண்பாரும் குறடுபோற் கைவிடுவர்" (நாலடி.208).* 2. சுவடி தூக்குங் கயிற்றுக் குறடு; satchel-pin, hook for hanging up school boy's *ōla* books. 3. நண்டு; crab. 4. பாதக்குறடு (யாழ்.அக.); sandals.

தெ.கொரடு

[குறு → குறள் → குறடு (வளைந்தது).]



குறடு

குறடு[2] *kuradu,* பெ.(n.) 1. மரத்துண்டு; small block or clump of wood. *"சந்தன மென்குறடு" (வாக்குண்.28).* 2. பலகை (சூடா.);plank, board. 3. இறைச்சி கொத்தும் பட்டடை மரம்; block for cutting meat. *"ஊனமர் குறடு போல" (சீவக. 2281).* 4. தேர் முதலியவற்றின் அச்சுக் கோக்கும் இடம்; axle-box of a cart. *"நோன்குறட் டாரஞ் சூழ்ந்த.... நேமி" (சிறுபாண்.252).* 5. சந்தனக் கல்; grinding-stone for preparing sandal perfume. *"செழுமலைக் குறடுரிஞ்சிச் செய்ய சந்தனத்தின்" (சேதுபு. திருநாட்.26).*

ம. குரடு; **க., தெ., பட.** கொறடு; .

Fin. kurkihirsi; **Q.** kurku.

[குறு → குறள் → குறடு (குட்டையானது, சிறியது).]

குறடு[3] *kuradu,* பெ.(n.) 1. திண்ணையொட்டு; edge of a veranda, extension of varandah. 2. திண்ணை (பிங்.); raised floor or verandah, pial; pedestal. 3. சுவர் முதலியவற்றிலுள்ள எழுதகம்; cornice on a wall or column. 4. பறை வகை; a kind of drum. *"கும்பிகை திமிலை செண்டை குறடு" (கம்பரா. பிரமாத்.5).*

ம. குரண்டி; க. கொரட; தெ., து. கொறடு.

[குறள் → குறடு (சிறியது).]

குறண்டல் *kurandal,* பெ.(n.) 1. குரக்குவலி; cramps. 2. இசிவுண்டாதல்; being attacked with convulsion (சா.அக.).

[குறண்டு → குறண்டல்.]

குறண்டல்வாதம் *kurandal-vādam,* பெ.(n.) ஒருவகை வலிப்புநோய்; (j.) a kind of rheumatic affection attended with spasms.

[குறண்டல் + வாதம்.]

குறண்டற்கிழவன் *kurandar-kilavan,* பெ.(n.) கூனற்கிழவன் (j.); hunch-backed old man.

[குறண்டல் + கிழவன்.]

குறண்டற்சுறுக்கம் *kurandar-curukkam,* பெ.(n.) குழுப்பு வலி; spasmodic contraction (சா.அக.).

[குறண்டல் + சுறுக்கம்.]

குறண்டற்பனங்கிழங்கு *kurandar -panan-kilangu,* பெ.(n.) சுருங்கிய அல்லது சுருண்டு வளைந்துள்ள பனங்கிழங்கு; palmyra root withered and bent (சா.அக.).

[குறண்டல் + பனங்கிழங்கு.]

குறண்டி[1] *kurandi,* பெ.(n.) செவ்வழிப் பண்வகை (பிங்.); a secondary melody-type of the *ševvali* class.

[குறண்டு → குறண்டி (குறைப்பண்வகை)]

குறண்டி[2] *kurandi,* பெ.(n.) 1. முட்செடி வகை; a thorny shrub. 2. தூண்டில் முள்; barb of fish hook.

[குறு → குறண்டு → குறண்டி.]

குறண்டிப்பிடி-த்தல் *kurandi-p-pidi-,* 4 செ.கு.வி. (v.i.) மிகவும் கருமியாய் இருத்தல்; to be close fisted, grasping, miserly.

[குறண்டி + பிடி-.]

குறண்டிப்போ-தல் *kurandi-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) கூனலாதல்; to grow crooked, to be bent, hunch-backet.

[குறண்டி + போ-.]

குறண்டிவளையம் *kurandi-valaiyam,* பெ.(n.) தொட்டிற் சங்கிலி மாட்டும் வளையம்; double hooks, fixed to a roof beam for hanging a cradle.

[குறண்டி + வளையம்.]

குறண்டினகால் *kurandinakāl,* பெ.(n.) குறைந்த கால்; club foot. 2. சப்பைக்கால்; short and distorted foot, of congenital origin (சா.அக.).

[குறண்டி + கால் → குறண்டினகால்.]

குறண்டு-தல் *kurandu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. வளைதல்; to be crooked or bent, as horns, fingers, limbs, fruits. 2. வலிப்பு கொள்ளுதல்; to be convulsed, to have spasms. 3. சுருண்டு கொள்ளுதல்; to coil up, as a small reptile.

[குறடு → குறண்டு.]

குறத்தனம் *kurattanam,* பெ.(n.) பாசாங்கு; pretence, dissimulation.

[குறம் + தனம்.]

குறத்தி[1] *kuratti,* பெ.(n.) குறிஞ்சிநிலப் பெண்(இறை.1, உரை.); woman of the hilly tract. 2. குறச்சாதிப் பெண்; woman of the *kurava* tribe.

[குறம் → குறத்தி.]

குறத்தி[2] *kuratti,* பெ.(n.) 1. நிலப்பனை (மலை.); a ground palmplant common in sandy tracts.

மறுவ. குறத்திகை, குறத்திகா.

[குறம் → குறத்தி.]

குறத்தி

குறத்திகம் *kurattigam,* பெ.(n.) குடசப்பாலை (சா.அக.); a kind of plant.

[குறம் → குறத்திகம்.]

குறத்திகள் *kurattigaḷ,* பெ.(n.) 1. ***குரத்திகள்*** பார்க்க; see *kurattigaḷ.* 2. சமணப்பெண் துறவியர்; female ascetics of Jain order. *"ஸ்ரீதிருமலைக் குறத்திகள் மாணாக்கன் ஏனாதி குத்தனஞ் சாத்திச் செய்வித்த படிமம்" (தெ.கல்.தொ.5.கல். 370) (கல்.க.சொ.அக.).*

[குரவன் (ஆசிரியன்) → குரத்தி + கள் – குரத்திகள் → குறத்திகள் (கொ.வ.).]

குறத்திகா *kurattigā,* பெ.(n.) ***குறத்திகை*** பார்க்க; see *kurattigai.*

[குறத்திகை → குறத்திகா.]

குறத்திகை *kurattigai,* பெ.(n.) நிலப்பனை; ground palm (சா.அக.).

[குன்றம்→குறம்→குறத்தி→குறத்திகை.]

குறத்திப்பாசி *kuratti-p-pāśi,* பெ.(n.) வெண்மையும் உருட்சியுமான காய்களையுடைய புல்வகை (M.M.669); job's tears, a small coarse grass, having large, round, white, shining fruits.

மறுவ. பூனாச்சிப்புல் (சா.அக.).

[குறத்தி + பாசி.]

குறத்திப்பாட்டு *kuratti-p-pāṭṭu,* பெ.(n.) தலைவிக்கு அவளது காதல் பற்றி குறத்தி குறி சொல்வதாகக் கூறும் ஒரு வகைச் சிற்றிலக்கியம் (தொன்.வி.283); a poem in which a *kurava* woman is represented as describing to a maiden her fortune in her love affair.

[குறத்தி + பாட்டு.]

குறத்திமுலைப்பால் *kuratti-mulai-p-pāl,* பெ.(n.) தேன்; honey (சா.அக.).

[குறத்தி + முலை + பால். குறத்திமுலை = மலைமுகடு.]

குறப்பாசாங்கு *kura-p-pāśāṅgu,* பெ.(n.) குற்றஞ் செய்த குறவன் ஒன்றும் அறியாதவன்போல் காட்டும் போலி நடிப்பு; pretended simplicity or feigned innocense, as the trick of a *kuravar.*

[குறம் + பாசாங்கு.]

குறம் *kuram,* பெ.(n.) 1. குறக்குடி; *kurava* tribe. 2. குறத்தி சொல்லும் குறி (சங்.அக.); palmistry, fortune-telling. 3. குறவர் கூற்றாக வரும் கலம்பக வுறுப்புள் ஒன்று; a theme in Kalampagam as representing the speech of *kuravaṉ.* *"தவங்குற மறம் பாண்" (இலக்.வி.812).* 4. ***குறத்திப்பாட்டு*** பார்க்க; see *kuratti-p-pāṭṭu.* மீனாட்சியம்மை குறம்.

[குன்று → குன்றம் → குறம்.]

குறம்படை *kuram-padai,* பெ.(n.) கோட்டை; fort. குறம்படை மழவர் (அக.நா.35).

[குறம் + படை.]

குறமகளிளவெயினி *kura-magaḷ-iḷa-veyiṉi,* பெ.(n.) புறநானூற்றில் 157 ஆம் பாடலியற்றியவரும் குறச்சாதியினருமான ஒரு பெண்பாற்புலவர்; a *Kurava* poetess who composed the 157th stanza in *Puranāṉūṟu.*

[குறமகள் + இளவெயினி.]

குறவஞ்சி *kuravañji,* பெ.(n.) 1. குறிசொல்லும் குறமகள்; woman of the kurava tribe; fortune-teller. 2. குறத்திப்பாட்டு; a kindof dramatic poem.

[குறம் + வஞ்சி → குறவஞ்சி.]

குறவணவன் *kuravaṇavaṉ,* பெ.(n.) எருக்குவியலில் தோன்றும் வெண்புழு (யாழ்ப்.); large white grub found in dung heaps.

[குறு (வெள்) + வெண்வன் – குறுவணவன்.]

குறவம் *kuravam,* பெ.(n.) கோட்டம் என்னும் நறுமண வேர்; Arabian costus (சா.அக.).

[குழு→குழுவம்→ குறவம் (கொ.வ.).]

குறவழக்கு *kura-vaḻakku,* பெ.(n.) 1. தீரா வழக்கு; complicated, involved lawsuit. 2. வலக்காரமாய்

ஒட்டாரம் பிடித்து (பிடிவாதமாய்) மேற்கொள்ளும் முறையற்ற வழக்கு; lawless contention obstinately maintained.

[குறம் + வழக்கு.]

குறவன் *kuṟavaṉ,* பெ.(n.) 1. குறிஞ்சிநில மகன்; inhabitant of the hilly tract. *"குறவரு மருளுங் குன்றத்து" (மலைபடு. 275).* 2. பாலைநிலமகன் (பிங்.); in habitant of the desert tract. 3. வலை வைத்தல், பாம்பு பிடித்தல், கூடைமுடைதல், குறி சொல்லுதல் முதலிய தொழில்கள் செய்யும் குடியினன்; *kuṟava,* a caste of fowlers, snake catchers, basket-makers and fortune-tellers. 4. பாசாங்கு பண்ணுகிறவன்; pretended cringing hypocrite. 3. இதளியம் (மூ.அக.); mercury, quicksilver.

[குன்றம் → குறம் + அன் → குறவன்.]

குறவாணர் *kuṟa-vāṇar,* பெ.(n.) மலைக்குறவர்; the kuṟava tribe of the mountain. *"முடிந்த பொழுதிற் குறவாணர்" (திவ்.இயற்,3,89).*

[குன்றம் → குறம் + (வாழ்நர்) வாணர்.]

குறவான் *kuṟavāṉ,* பெ.(n.) ஒருவகைக் கடல்மீன்; a sea fish known as file or trigger fish (சா.அக.).

[குறவன்→குறவான்.]



குறவான்

குறவி *kuṟavi,* பெ.(n.) குறக்குடிப் பெண்; a woman of *kuṟava* caste, fem.of *kuṟavaṉ.* *"குறவிதோண் மணந்த செல்வக் குமரவேள்" (தேவா.758:3).*

[குறவன் → குறவி (பெண்பால்).]

குறவிளிம்பு *kuṟa-viḷimbu,* பெ.(n.) மண்டைப் பொருத்து; lamboidal suture (சா.அக.).

[குறம் + விளிம்பு.]

குறவை[1] *kuṟavai,* பெ.(n.) பத்தியத்திற்கு உதவும் குறவைமீன்; spotted doke, It is useful in diet.

வகைகள்: 1. பெருங்குறவை 2. கற்குறவை 3. கருங் குறவை 4. மணியாங் குறவை 5. பறக்குறவை (சா.அக.).

[குறம் + வை → குறவை.]

குறழ்-தல் *kuṟaḻ-,* 2 செ.கு.வி. (v.i.) குனிதல் (வழூஉப்பொருள்); to stoop, bend low. *"அவனாங்கே பாராக் குறழா" (கலித். 65:10).*

[குழறு → குழறா →குறழா (குறழ்) – சொல்வழு.]

'குழறா' என்பது எழுதுவோரால் 'குறழா' எனப் பிறழ எழுதப்பட்டு அதற்குக் குனிதல் என்னும் பொருளும் நச்சினியார்க்கினியரால் தரப்பட்டுள்ளது. குறழ்தல் என்னும் சொல் பண்டை இலக்கியத்தில் யாண்டும் 'குனிதல்' என்னும் பொருளில் பயின்றிலது. இச்சொல்லும் பொருளும் தவற்று வடிவினவாம். கலித்தொகையில் (65:10) 'குறழா' எனும் சொல் 'குழறா' எனத் திருத்தப்படல் வேண்டும்.

குறள்[1] *kuṟaḷ,* பெ.(n.) தமிழ் மறையாகிய திருக்குறள்; Tirukkuṟaḷ, the sacred book of the Tamils. *"உலகெலாங் கொள்ள மொழிந்தார் குறள்" (வள்ளுவமா.33).*

[குறு → குறள்]

குறள்[2] *kuṟaḷ,* பெ.(n.) பாதிரி; trumpet flower tree (சா.அக.).

[குறு → குறள்]

குறள்[3] *kuṟaḷ,* பெ.(n.) 1. குறுமை; shortness, dwarfishness. *"குண்டைக் குறட்பூதம்" (தேவா. 944:1).* 2. ஈரடி உயரமுள்ள குள்ளன்; dwarf, about 2ft. high-dist, fr.*cindu.* *"தேரை நடப்பன போற் குறள்" (சீவக.631).* 3. பூதம் (பிங்.); imp, goblin. 4. சிறுமை; smallness. *"வரகின் குறளவிழ்ச் சொன்றி" (பெரும்பாண். 193).* 5. குறளடி; short venbā

(இலக்.வி.730:270). 6. *குறள் வெண்பா* (இலக்.வி.730);see *kuralvenba*.

[குறு → குறள்.]

குறள்செய் *kuralcei*, பெ.(n.) குறுகிய நன்செய் நிலம், புன்செய் நிலத்தின் ஊடே வெட்டி அமைக்கப் படும் நன்செய்நிலம்; area of irrigated field formed amidst dry land.

[குறள் + செய்.]

குறள்வெண் செந்துறை *kural-ven-sendurai*, பெ.(n.) குறள் வெண்பாவினினமாக, எவ்வகைச் சீர்தளையடிகளாலும் செம்மையாகிய ஓசையும் பொருளுமுடையதாய்த் தம்முள் அளவொத்த இரண்டடியால் வரும் செந்துறை;a *sendurai* metre of *kural venbā* type of prosody comprising of various components and combination of syllabic cir ad talai with rythmic stanzas. *"கொன்றைவேந்தன் செல்வனடியினை என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே" (கொன்றை. காப்பு).*

[குறள் + வெண் + செந்துறை.]

குறள்வெண்பா *kural-venba*, பெ.(n.) முதலடி நாற்சீரும், இரண்டாமடி முச்சீருமாகி வரும் ஈரடி வெண்பா (இலக்.வி.730,உரை); distich of *venbā metre*, the first line consisting of four and the second of three *cir*.

[குறள் + வெண்பா.]

குறளடி *kural-adi*, பெ.(n.) இருசீரான் வரும் அடி (இலக்.வி.719); a line consisting of two *cir*.

[குறள் + அடி.]

குறளடி வஞ்சிப்பா *kural-adi-vañji-p-pā*, பெ.(n.) குறளடியால் மூன்றுமுதற் பலவடி கொண்டு தனிச் சொல்லும் சுரிதகமும் பெற்றுவரும் வஞ்சிப்பா (காரிகை.செய்.24); a kind of *vañji* verse consisting of three or more lines of *kuraladi*, with a detached foot and *agavarcuridagam*.

[குறள் + அடி + வஞ்சி + பா.]

குறளன் *kuralan*, பெ.(n.) 1. குள்ளன்; short person, dwarf. 2. வாமனனாக உருவெடுத்த திருமால்; Visnu, as a dwarf.

ம. குறளன்

[குறள் → குறளன்.]

குறளி[1] *kurali*, பெ.(n.) 1. குறியவள்; dwarfish woman. *"ஒருதொழில் செய்யுங் குறளி வந்து" (சீவக. 1653, உரை).* 2. குறளிப்பிசாசு; dwarf goblin. *"வாயிலிடிக்குது குறளி யம்மே" (குற்றா.குற.71).* 3. குறளிவித்தை;trick of a dwarf goblin. 4. கற்பிழந்தவள் (சூடா.); unchaste woman.

[குறள்→ குறளி.]

குறளி[2] *kurali*, பெ.(n.) குறும்பன்; mischievous person.

[குறள் → குறளி.]

குறளிக்கூத்து *kurali-k-kūttu*, பெ.(n.) குறும்புச் செயல்கள்; mischievous devilish act.

[குறளி + கூத்து.]

குறளிப்பந்தம் *kurali-p-pandam*, பெ.(n.) குறளிப் பேயால் வீடு கொளுத்த இடப்படுவதாகக் கருதப்படும் தீப்பந்தம்; burning ball of rags supposed to be used by the *kurali* devil to set fire to houses.

[குறளி + பந்தம்.]

குறளிப்பிசாசு *kurali-p-piśāśu*, பெ.(n.) மாயவித்தை செய்யும் பேய்வகை; dwarf-demon supposed to revel in black magic performances.

[குறளி + பிசாசு.]

குறளிவித்தை *kurali-vittai*, பெ.(n.) குறளியின் உதவியாற் செய்யப்படும் மாயவித்தை; magical tricks, legerdemain, as aided by the *kurali* devil.

[குறளி + வித்தை.]

குறளை *kuṟaḷai,* பெ.(n.) 1. கோட்சொல்; calumny, aspersion, backbiting. *"பொய்யே குறளை கடுஞ் சொல் பயனில் சொல்லென" (மணிமே.30:68).* 2. வறுமை; poverty, adversity. *"குறளை யுணட்பளவு தோன்றும்" (திரிகடு.37).* 3.நிந்தனை; sarcastic expressions, censure, reproach. 4. குள்ளம்; dwarfishness.

[குறு → குறள் → குறளை.]

குறாவிப்போதல் *kuṟāvi-p-pōdal,* பெ.(n.)1. மெலிதல்; growing lean. 2. ஒடுங்குதல்; being reduced (சா.அக.).

[குறாவு → குறாவி + போ.]

குறாவு—தல் *kuṟāvu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. வாடுதல்; to sink, as the spirit by disappointment, hunger; to droop, as plants by drought. 2. ஒடுங்குதல் (யாழ்.அக.); to shrink, contract, recede. 3. மெலிதல் (யாழ்.அக.); to become reduced, lean, as a person, animal. 4. புண் ஆறி வடுவாதல்; to heal, as a sore, cicatrice.

[குறு → குறுகு → குறுவு → குறாவு.]

குறாள் *kuṟāḷ,* பெ.(n.) 1. கன்னி; virgin. 2. பெண் ஆட்டுக்குட்டி; Ewe lamb.

[குறு + ஆள்.]

குறி[1]—த்தல் *kuṟi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. கருதுதல்; to design, intend, contemplate, consider, think. *"கொலைகுறித் தன்ன மாலை" (அகநா.364).* 2. ஊழ்கம் செய்தல்; to meditate. *"ஞானியர்தாங் குறியெட்டக் கரத்தார்" (அட்டப். திருவேங்கடமா. 57).* 3. வரையறுத்தல் (பிங்.); to determine, ascertain. 4. கோடு வரைதல்; to draw, as a line. *'புழுக்குறித்தது எழுத்தானாற் போல' (ஈடு,2.4:3).* 5. குறித்துக் கொள்ளுதல்; to note down, to make the first draft in writing, to sketch an outline in painting, to trace. இந்நூலின் அரும்பதங்களைக் குறிக்க. 6. சுட்டுதல்; to refer to, denote, suggest, specify. 6. பற்றுதல்; to pertain, relate to, *எதைக் குறித்துப் பேசினாய்?"*8. இலக்கு வைத்தல்; to aim at, as in shooting. *"வெய்யோன் குறித்தெறி பிறங்கல்" (கந்தபு.கயமுகன்வ.38).* 9. அடைதல்; to reach, attach oneself to. *"குரவன் பதத்தைக் குறித்து" (சைவச. பொது.125).* 10. பாவித்தல்; to regard, fancy. *"குறித்துச் சிவனெனக் கோபுரத்தை" (சைவச.பொது.126).* 11. சொல்லுதல்; to narrate briefly, tell. *"உற்றதுங் குறித்தான்" (கம்பரா.அகலிகை.41).* 12. முன்னறி வித்தல்; to foretell, predict, forebode. தீச்சகுனம் பொல்லாங்கைக் குறிக்கும். 13. ஊதியொலித்தல்; to blow, as a conch; to sound *"வலம்புரி குறித்து" (பாரத. பதினேழாம்.12).*

ம., க. குறி; தெ.,கு. குறி.

[குல் → குறு→ குறி.]

குறி[2] *kuṟi,* பெ.(n.) 1. அடையாளம் (பிங்.); mark, sign, stamp, emblem. 2. இலக்கு; aim, mark to shoot at. *"சூரிய குணத்தார் குறிநின்றவன்" (தேவா. 356:3).* 3. குறியிடம் (தொல்.பொருள்.130); (Akab.) secret appointment by lovers. 4. நினைத்த இடம்; goal, destination. *"சென்று மீளாக்குறி" (கம்பரா. கடிமண.49).* 5. நோக்கம்; motive, intention. 6. குறிப்பு; suggestion,hint, insinuation. 7.மதக்கொள்கை; doctrine. *"குறிபலவுங் கொளுவினார்" (பெரியபு.திருநா.38).* 8. முன்னறிந்து கூறும் தன்மை; omen, presage, prognostic. *"குறியிறைப் புதல்வரோடு" (குறுந்.394).* 9. கூட்டம், சபை; assembly, village council. *"மத்யஸ்தரைக் கொண்டு குறிகூட்டி" (சோழவமி.55).* 10. தடவை; turn, occasion. *"ஒருகுறி கேட்போன்" (நன்.42).* 11. காலம்; time, days, season, as in, இக்குறி—now-a-days. 12. ஒழுக்கம்; character, principle of conduct. 13. ஆண்குறி அல்லது பெண்குறி; generative organ. 14. அடி; stripes, lashes.15. இலக்கணம்; definition, accurate description. *"குறியறிந் தோரே" (தொல்.பொருள்.47).*

[குல் → குறு→ குறி.]

குறி[3] *kuṟi* பெ.(n.) குறியாடு; a sheep.

Fin. karista; FD. karoo; Mong. xuray.

[குறு → குறி.]

குறி[4] *kuri* பெ.(n.) உணர்தல், தெளிதல் என்னும் இரு வகையில் நோயின் தன்மை அறிவிக்கும் சின்னங்கள்; symptoms of diseases they are of two kinds subjective and objective (சா.அக.).

[குல் → குறு → குறி.]

குறி[5] *kuri* பெ.(n.) அளவு "ஸர்வேஸ்வரனுக்கும் கைக்குறி யாப்பை வாங்குவது இங்கேயிறே" (ஈடு.1,4,6); measure.

[குல் → குறி.]

குறிக்கடை *kurikkadai* பெ.(n.) குறி, அளவுகோல்; measure.

[குறிக்கு + அடை - குறிக்கடை.]

குறிக்கொட்டாங்கச்சி *kuri-k-kottāṅkacci* பெ.(n.) குறி வைத்தலுக்குரிய தேங்காய்க் கண்மூடி அளவு (உழ.நெ.க. அக.);coconut shell used as a marker.

[குறி + கொட்டாங்கச்சி (கொட்டான்காய் + சில்).]

குறிக்கொள்(ளு)[1]**-தல்** *kuri-k-kol-*, 16 செ.குன்றா.வி (v.t.) 1. கைக்கொள்ளுதல்; to grasp, seize, hold. *"கோது படலில்ல குறிக்கொண்டு" (சீவக. 499).* 2. மனத்துக் கொள்ளுதல்; to comprehend, understand. *"ஏத்த நில்லா குறிக்கொண்மினிடரே" (திவ்.திருவாய்.8:6,6).* 3. கவனித்துப் பாதுகாத்தல்; to guard carefully. *"பறவை யரையா வுறகல் பள்ளியறை குறிக்கொண்மின்" (திவ்.பெரியாழ். 5:2,9).* 4. ஒன்றையே குறியாகப் பற்றுதல்; to fix the mind steadily on one subject, to concentrate. *"குறிக்கொள் ஞானங்களால்" (திவ்.திருவாய், 2:3,8).*

க. குறிக்கொள்

[குறி + கொள்.]

குறிக்கொள்(ளு)[2]**-தல்** *kuri-k-kol-*, 16 செ.கு.வி.(v.i.) மேன்மைப் படுதல் ; to be remarkable, distinguised.

[குறி + கொள்.]

குறிக்கொள்வோன் *kuri-k-kolvōn*, பெ.(n.) ஒன்றையே இடைவிடாது சிந்திப்பவன் (பிங்.); one who sets his heart on one pursuit or object, one who concentrates his attention on one thing.

[குறி + கொள்வோன்.]

குறிக்கோள் *kuri-k-kōl*, பெ.(n.) 1. மனவொருமை (திவா.); single-minded devotion, concentration. 2. நினைவில் வைக்கை (திவா.); cherishing in memory, remembering. *"குறிக்கோட் டகையது கொள்கெனத் தந்தேன்" (சிலப். 30:63).* 3. அறியுந் திறம்; comprehension or power of understanding. *"என்றுணரும் குறிக்கோ ளில்லா" (கம்பரா.சூர்ப். 140).* 4. உயர்ந்த கருதுகோள்; ideal. *"குறிக்கோளி லாது கெட்டேன்" (தேவா. 632:9).* 5. நல்லுணர்வு; wisdom, good sense, sagacity. *"கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோளொன் றிலாமையினால்" (திவ்.பெரியதி. 1:9,3).* 6. யாழ் மிடற்றுதலிற் கருத்தோடு செய்ய வேண்டிய பண்ணல் முதலிய தொழில்கள்; acts needed to play upon a violin properly, numbering-8, viz, பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு. 7. மேன்மைப்பாடு (வின்.); the state of being distinguished or illustrious.

[குறி + கொள் – குறிக்கொள் → குறிக்கோள்.]

குறிகண்டுநோதல் *kuri-kandu-nōdal*, பெ.(n.) பிள்ளைப்பேற்றின்போது (பிரசவத்தில்) பனிக்குடமுடைந்து நோய் காணுதல்; commencement of labour after the discharge of liquor amni.2. வீங்கி வலித்தல்; pain from swelling (சா.அக.).

[குறி + கண்டு + நோதல்.]

குறிகண்டுவடித்தல் *kuri-kandu-vadittal*, பெ.(n.) மருந்து, எண்ணெய் முதலியவற்றைப் பதம் பார்த்து இறுத்தல்; filtering at the proper stage as medicated oil etc. during their preparation (சா.அக.).

[குறி + கண்டு + வடித்தல்.]

குறிகாண்(ணு)-தல் *kuri-kāṇ-,* 12 செ.கு.வி.(v.i.) 1. அறிகுறி தோன்றுதல்; to appear, as symptoms, signs. 2. குறிப்பிடுதல்; to forebode, betoken, typify. 3. பிள்ளைப் பேற்றுக்குரிய குறி தோன்றுதல்; to have slight discharge at or before the presentation at child birth.

[குறி + காண்.]

குறிகாரன் *kuri-kāraṉ,* பெ.(n.) 1. குறிப்பாக அடிப்பவன்; good marksman. 2. குறி சொல்வோன்; sooth sayer, diviner.

[குறி + காரன்.]

குறிகூடு-தல் *kuri-kūḍu-,* 12 செ.கு.வி.(v.i.) நோக்கம் நிறைவேறுதல்; to realise,achieve, as an object *"கும்பிடவே குறிகூடும்" (தேவா. 314:5).*

[குறி + கூடு-.]

குறிகூறுபவன் *kuri-kūrubavaṉ,* பெ.(n.) குறி சொல்வோன்; sooth sayer (சா.அக.).

மறுவ. குறிகாரன்

[குறி + கூறுபவன்.]

குறிகெட்டவன் *kuri-keṭṭavaṉ,* பெ.(n.) நெறி யற்றவன்; dishonest, shameless, unprincipled man.

[குறி + கெட்டவன்.]

குறிகேள்-தல் (குறிகேட்டல்) 4 செ.கு.வி.(v.i.) 1. குறிசொல்லுமாறு குறிசொல்பவனை வினாவுதல்; to consult a fortune-teller, diviner. 2. குறிகாரன் சொல்வதைச் செவிமடுத்தல்; to hear what the diviner foresays.

[குறி + கேள்-.]

குறிகோள் *kurikōl,* பெ.(n.) 1. மெய்யறிவு; wisdom. 2. மனவொருமை; concentration of mind (சா.அக.).

[குறி + கோள் (வினைத்தொகை) குறிகோள் - மனத்துட் கொண்ட கோட்பாடு]

குறிச்சி[1] *kuricci,* பெ.(n.) 1. குறிஞ்சி நிலத்தூர்; village in the hilly tract. *"குறிச்சி புக்க மான்போலவும்" (இறை.1, உரை). 2. ஊர் (திவா.);* village.

ம. குறிச்சி க.குறிகை.

[குறிஞ்சி → குறிச்சி (வலித்தல் திரிவு).]

குறிச்சி[2] *kuricci,* பெ.(n.) குழந்தைக்கு வருங் குத்திருமலுக்கு காப்பாக (இரட்சையாக)க் கட்டும் ஓலைச்சுருள்; an *ōla* amulet tied to a child's waist and believed to ward off attacks of whooping cough.

[குறி → குறிச்சி.]

குறிச்சிப்பி *kuri-c-cippi,* பெ.(n.) சிப்பிமுத்து; oyster -pearl (சா.அக.).

[குறி + சிப்பி.]

குறிச்சூத்திரம் *kuri-c-cūttiram,* பெ.(n.) ஒரு நூலிற் பயின்றுவரும் குறியீடுகளைத் தெரிவிக்கின்ற நூற்பா (தமி.இல.க.சொ. அக.); sutra mentioning technical terms in a work.

[குறி + சூத்திரம்.]

குறிசாடு-தல் *kuri-sāḍu,* 19 செ.கு.வி.(v.i.) 1. குறி தவறாது துப்பாக்கியாற் சுடுதல்; to shoot with out missing the mark. 2. மாட்டுக்குச் சூடு இடுதல் (வின்.); to brand marks upon cattle.

[குறி + சாடு-.]

குறிசாற்றல் *kuri-sāṟṟal,* பெ.(n.) கொம்பை ஊதிச் சிற்றூர் அவையைக் கூட்டுதல்; convening a meeting of the village assembly by blowing a horn.

மறுவ. சங்கூதல்

[குறி + சாற்றல்.]

குறிசொல்(லு)-தல் *kuri-śol-,* 8 செ.கு.வி.(v.i.) ஒருவரது ஆகூழ் முதலியவற்றைப் பற்றிக்

குறிபார்த்துக் கூறுதல்; to tell one's fortune, to divine.

[குறி + சொல்-.]

குறிசொல்வோன் *kuṟi-šolvōṉ,* பெ.(n.) 1. மந்திரக் காரன்;magician foretelling events. 2. ஆருடம் சொல்வோன்; fortune teller. 3. சேவல்; cock, fowl (சா.அக.).

[குறி + சொல்வோன்.]

குறிஞ்சா[1] *kuṟiñjā,* பெ.(n.) 1. குருக்கத்தி; common delight of the woods. 2. பெருங்குறிஞ்சா; a species of scammony swallow wort. 3.நஞ்சறுப்பான்; Indian ipecacunha. 4. குடசப் பாலை; green wax-flower. 5. குறிஞ்சி நிலத்தில் விளையும் பூடு; any plant growing on inferior hilly soil.

[குறிஞ்சி → குறிஞ்சா.]

குறிஞ்சா வகைகள் : 1. சிறுகுறிஞ்சா 2. பெருங்குறிஞ்சா 3. கருங்குறிஞ்சா 4. நீர்க்குறிஞ்சா 5. மலைவண்ணக்குறிஞ்சா 6. பவளக் குறிஞ்சா 7. எருமைக் குறிஞ்சா 8. சுனைக் குறிஞ்சா 9. அழகுக்குறிஞ்சா 10. வாணக் குறிஞ்சா (சா.அக.).

[குறிஞ்சி → குறிஞ்சா.]

குறிஞ்சி[1] *kuṟiñji,* பெ.(n.) 1. ஐவகை நிலத்துள் ஒன்றாகிய மலையும் மலைசார்ந்த நிலமும்; hilly tract, one of five kinds of *nilam.* 2. குறிஞ்சிப் பண்; a specific melody-type. *"குறிஞ்சி பாடி" (திருமுருகு.239).* 3. புணர்தலாகிய உரிப்பொருள்; clandestine union of lovers assigned by poetic convention to the hilly tract. *"குறிஞ்சி சான்ற... மலை" (மதுரைக். 300).* 4. குறிஞ்சிப்பாட்டு ; a poem. *"கோல்குறிஞ்சி பட்டினப்பாலை" (பத்துப்பா. தனிப்பா.).* 5. மருதோன்றி (மலை.); henna. 6. பெருங்குறிஞ்சி ; a species of conehead. 7. சிறுகுறிஞ்சி ; a species of conehead. 8. செம் முள்ளி (சூடா.); thorny nail dye. 9. பூடுவகை; conehead, shrub. 10. மரவகை; square branched conehead. 11. ஈந்து (மலை.); dwarf wild date palm.

[குன்றம் → குறம்→ குறும்பு → குறிஞ்சி.]

குறிஞ்சி[2] *kuṟiñji,* பெ.(n.) குறிஞ்சிப்பூ; *kuṟiñji* flower. *"கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந்.3).*

மறுவ. குறிஞ்சிப்பூ, குறிஞ்சிமலர்.

ம. குறிஞ்ஞி

[குன்றம்→குறம் → குறஞ்சி→ குறிஞ்சி.]

குறிஞ்சி மலர்களுள் ஐம்பது வகைகள் உள்ளன. இவை, வெண்மை, பொன்மை, செம்மை, நீலம், செந்நீலம் என்னும் ஐந்து நிறங்களில் மிகுதியாகப் பூப்பதால் ஐவண்ணக் குறிஞ்சி எனப்படும். இவற்றுள் செந்நீலக் குறிஞ்சி எனப்படும் வாடாக் குறிஞ்சி பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் இயல்புடையது. மூன்றாண்டுக்கு ஒருமுற்றையும் ஆண்டுக்கு ஒருமுறையும் பூக்கும் வகைகளும் உள்ளன.

வகைகள்: 1. செங்குறிஞ்சி 2. மஞ்சட் குறிஞ்சி 3. வாடாக் குறிஞ்சி 4. வெண்குறிஞ்சி 5. கருங்குறிஞ்சி 6. சின்னக்குறிஞ்சி 7. பெருங் குறிஞ்சி 8. காட்டுக்குறிஞ்சி 9. மேக வண்ணக் குறிஞ்சி 10. மோர்க் குறிஞ்சி 11. பவளக்குறிஞ்சி அல்லது சீனப்பூ 12. சிறுகுறிஞ்சி 13. கெட்டிக் குறிஞ்சி (சா.அக.).

குறிஞ்சிக்கருப்பொருள் *kuṟiñji-k-karu-p-poruḷ,* பெ.(n.) குறிஞ்சி நிலத்தின் தன்மையும் குணமும்; nature and properties peculiar to a hilly tract and its soil (சா.அக.).

[குறிஞ்சி + கருப்பொருள்.]

குறிஞ்சிக்கல் *kuruñji-k-kal,* பெ.(n.) மலையில் உள்ள சுக்கான் கல்; mountain lime stone (சா.அக.).

[குறிஞ்சி + கல்.]

குறிஞ்சிக்கிழவன் *kuṟiñci-k-kiḻavaṉ,* பெ.(n.) குறிஞ்சிநிலத்துத் தெய்வமான முருகக் கடவுள் (பிங்.); Murugan, as the god of the hilly tracts.

மறுவ. குறிஞ்சிக் கிறைவன், குறிஞ்சிமன்.

[குறிஞ்சி + கிழவன்.]

குறிஞ்சிக்கிறைவன் *kuṟiñji-k-kiṟaivaṉ,* பெ.(n.) ***குறிஞ்சிக் கிழவன்*** (பிங்.); பார்க்க; see *kuṟiñji-k-kiḻavaṉ.*

[குறிஞ்சிக்கு + இறைவன்.]

குறிஞ்சி வகைகள்

வெண்குறிஞ்சி
குறிஞ்சி மலர் வகைகளுள் ஒன்று.

நீலக்குறிஞ்சி

செந்நீலக்குறிஞ்சி

ஐம்பது வகைக் குறிஞ்சி மலர்களுள் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைப் பூக்கும் செந்நீலக் குறிஞ்சி மலர் வெயில் படும்போது இளஞ்சிவப்பாக ஒளிரும் (படம் 1994).

குறிஞ்சித்திணை *kuriñjittiṉai,* பெ.(n.) ஐவகை நிலத்துள் ஒன்றாகிய மலையும் மலையைச் சார்ந்த இடமும்; hilly tract..

[குறிஞ்சி + திணை]

குறிஞ்சித்தினை *kuriñji-t-tiṉai,* பெ.(n.) மலைப் பகுதியில் விளையும் தினை; millet growing in hilly tracts (சா.அக.).

[குறிஞ்சி + தினை.]

குறிஞ்சிநீர் *kuriñji-nir,* பெ.(n.) மலைத் தண்ணீர்; mountain water. 2. சுனை நீர்; hill spring water (சா.அக.).

[குறிஞ்சி + நீர்.]

குறிஞ்சிப்பண் *kuriñji-p-paṉ,* பெ.(n.) நால்வகைப் பெரும்பண்களுள் ஒன்று (பிங்.); one of the four melody - types.

மறுவ. குறிஞ்சியாழ்

[குறிஞ்சி + பண்.]

குறிஞ்சிப்பறவை *kuriñji-p-paravai,* பெ.(n.) மலைப் பகுதியில் வாழும் நாட்டு மயில், கிளி முதலிய பறவைகள்; birds peculiar to hilly tracts as pea-cock, parrot etc. (சா.அக.).

[குறிஞ்சி + பறவை.]

குறிஞ்சிப்பறை *kuriñji-p-parai,* பெ.(n.) குறிஞ்சி நிலத்துக்குரிய தொண்டகப்பறை; a kind of drum peculiar to *kuruñji.*

[குறிஞ்சி + பறை.]

குறிஞ்சிப்பாட்டு *kuriñji-p-pāttu,* பெ.(n.) பத்துப் பாட்டுள் ஒன்றானதும், தலைவியின் வேற்றுமை கண்டு வருந்திய செவிலிக்குப் பாங்கி அறத்தொடு நிற்குங் கூற்றாகக் கபிலர் பாடியதுமான செய்யுள்; a poem in *Pattu-p-pāttu,* by Kabilar treating of the tactful way in which the confidante communicates to the foster mother, the heroine's love affair.

[குறிஞ்சி + பாட்டு.]

குறிஞ்சிப்புள் *kuriñji-p-puḷ,* பெ.(n.) குறிஞ்சிப் பறவை; hilly birds like pea-cock, parrots etc. (சா.அக.).

[குறிஞ்சி + புள்.]

குறிஞ்சிப்பூ *kuriñji-p-pū,* பெ.(n.) குறிஞ்சி நிலத்துப்பூ; flowers peculiar to hilly regions. 2. கார்த்திகைப் பூ (சா.அக.);flowers of plough-root plant.

[குறிஞ்சி + பூ.]

குறிஞ்சிமரம் *kuriñji-maram,* பெ.(n.) குறிஞ்சி நிலத்தில் முளைக்கும் சந்தனமரம், வேங்கை, அகில், தேக்கு முதலியன; trees in general growing in hilly tracts such as kino, east Indian kino, sandal wood tree, eagle wood, teak etc. (சா.அக.).

குறிஞ்சிமன் *kuriñji-maṉ,* பெ.(n.) ***குறிஞ்சிக் கிழவன்*** பார்க்க(திவா.); see *kuriñji-k-kiḻavaṉ.*

[குறிஞ்சி + மன்.]

குறிஞ்சியாழ் *kuriñji-yāḻ,* பெ.(n.) ***குறிஞ்சிப்பண் (பிங்.)*** பார்க்க; see *kuriñji-p-paṉ.*

மறுவ. குறிஞ்சிப்பண்

[குறிஞ்சி + யாழ்.]

குறிஞ்சியாழ்த்திறம் *kuriñji-yāḻ-t-tiram,* பெ.(n.) குறைந்த சுரங்கள் கொண்ட எண்வகைக் குறிஞ்சிப்பண் (திவா.); secondary melody-type of the *kuriñji* class played on a reduced scale, of which there are 8, viz. நைவளம், காந்தாரம், படுமலை, பஞ்சுரம், மருள், அயிர்ப்பு, அரற்று, செந்திறம்.

[குறிஞ்சி + யாழ் + திறம். (திறம் = ஐந்து சுரங்களைக் கொண்ட பண்வகை).]

குறிஞ்சியுணவு *kuriñji-y-uṇavu,* பெ.(n.) குறிஞ்சி நிலமக்கள் கொள்ளும் உணவாகிய கிழங்கு, தினை, தேன், மூங்கிலரிசி முதலியன; articles of food or staple food for those living in hilly tracts as bulbous roots, millet, honey, bamboo rice etc. (சா.அக.).

[குறிஞ்சி + உணவு.]

குறிஞ்சியுரிப்பொருள் *kuriñji-y-uri-p-porul*, பெ.(n.) குறிஞ்சிநில மக்களின் காம ஒழுக்கம்; the essential characteristics of lovers in sexual inter course, the subject matter of *kuriñji* poetry (சா.அக.).

[குறிஞ்சி + உரிப்பொருள்.]

குறிஞ்சில் *kuriñjil*, பெ.(n.) தொட்டிச் செய்ந்நஞ்சு (மூ.அக.); a prepared arsenic.

[குறிஞ்சி + இல் – குறிஞ்சில்.]

குறிஞ்சிலி *kuriñjili*, பெ.(n.) காதில் அணிதற்குரிய பூவகை; a kind of flower worn as an ear-ornament. *"காதிடைக் குற்றமில் குறிஞ்சிலிக் கொத்தும்" (திருவாலவா.54:20).*

[குறிஞ்சி → குறிஞ்சில் → குறிஞ்சிலி.]

குறிஞ்சிலைக்கல் *kuriñcilai-k-kal*, பெ.(n.) ஈரக்கல் (வின்.); red stone.

[குறும் + சிலை + கல்.]

குறிஞ்சிவேந்தன் *kuriñji-vēndan*, பெ.(n.) ***குறிஞ்சிக் கிழவன் (சூடா.)*** பார்க்க; see *kuriñji-k-kilavan*.

[குறிஞ்சி + வேந்தன்.]

குறிஞன் *kuriñan*, பெ.(n.) வறியன் (அக.நி.); poor person.

[குறு → குறிஞன்.]

குறித்தகள்ளன் *kuritta-kallan*, பெ.(n.) பேர் பெற்ற பழந்திருடன்; notorious robber or thief.

[குறித்த + கள்ளன்.]

குறித்தழை-த்தல் *kurittalai-*, 4 செ.குன்றாவி.(v.t.) 1. கூட்டத்திலுள்ள ஒருவனைக் குறிப்பிட்டழைத் தல்; to call or beckon one out of an assembly. 2. பாதுகாக்கும்படி அழைத்தல்; to call upon one for protection. 3. நேரில் வந்து காட்சி தரும்படி தேவதையைப் பேராலழைத்தல்; to invoke a deity by name to appear.

[குறித்து + அழை-.]

குறித்து *kurittu*, வி.எ. (adv.) தொடர்புற்று நோக்கி; with the intention of; towards.

[குறி → குறித்து-.]

குறிநட்டு *kurinattu*, பெ.(n.) கணுக்கால் எலும்பு; ankle bone (சா.அக.).

[குதிநாட்டு → குறிநாட்டு → குறிநட்டு (கொ.வ.).]

குறிநிலையணி *kuri-nilai-y-ani*, பெ.(n.) ஒரு பொருளைப் புகழும் சொற்களால் குறித்தற்குத் தகுதியாகிய பிறிதொரு பொருளையும் சொல்லும் அணி (அணியி.73); a figure of speech in which an object worth knowing is referred to by association in the course of extolling a different object.

[குறி + நிலை + அணி.]

குறிநோய் *kuri-nōy*, பெ.(n.) ஆண்குறி அல்லது பெண்குறி நோய்; disease of the male or female genital.

[குறி + நோய்.]

குறிப்பறி-தல் *kurippari-*, 2 செ.கு.வி.(v.i.) நோக்கமறிதல்; to take the clue, to guess one's intentions. *"குறிப்பறிந்து காலங்கருதி" (குறள்.696).*

[குறிப்பு+ அறி-.]

குறிப்பாளி *kurippāli*, பெ.(n.) உய்த்துணர்பவன்; person of quick discernment, one who shrewdly reads hints and signs.

[குறிப்பு + ஆளி.]

குறிப்பி-த்தல் *kurippi-*, பி.வி. (caus.) குறிப்பினால் நினைப்பூட்டுதல்; to remind, call to mind by sign or hint.

[குறி → குறிப்பி-.]

குறிப்பிடம் *kurippidam*, பெ.(n.) 1. குறித்த இடம்; ppointed place, the place of assignation. 2. சுருக்கம் (யாழ்.அக.); summary, compendium, epitome. 3. கிறித்து பட்ட பாடுகளைக் காட்டும்

படிமம் (R.C.); image representing the sufferings of Chirst 4. வினாவிடையாயமைந்த சமய அறிவுறூஉ நூல் (கிறித்து); Catechism.

[குறிப்பு + இடம்.]

குறிப்பிடைச்சொல் *kurip-pidai-c-col,* பெ.(n.) ஆங்கிலத்தில் ஒரு பொருளைச் சுட்டிக்காட்ட உதவும் உரிச்சொல்வகை; demonstrative.

[குறிப்பு + இடைச்சொல்.]

குறிப்பு[1] *kurippu,* பெ.(n.) 1. உள்ளக்கருத்து; intention, inmost thought, real purpose or motive. *"இனியென் திருக்குறிப்பே" (திவ்.பெரியாழ்.5:4:1).* 2. பொறியானன்றி மனத்தாற் குறித்துணரப் படுவது (தொல்.சொல்.297,சேனா); object of mental apprehension dist, fr.*panbu.* 3. ஒன்பது வகைச் சுவைகளில் உண்டாகும் மனநிலை (சிலப். 3:13 உரை) (Rhet.); mental response to the nine sentiments. 4. மனவொருமை (பிங்.); concentration of thought. 5. குறிப்பறிதல், இங்கிதம்; internal emotion attended with external gestures. *"குறிப்பறிந்து" (குறள்.696).* 6. சைகை; gesture, significant look or word. *"உணர்த்தியே குறிப்பால்" (கந்தபு.கணங்கள்.29).* 7. பிறர் கருதியதனைக் காணவல்ல கூரிய அறிவு;capacity to read into the minds of others, sharp, penetrative intellect. *"குறிப்பிற் குறிப்புணரா வாயின்" (குறள்.705).* 8. சுருக்கம்; summary, abstract.ம. குறிப்பு. 9. ஓசை, நிறம் முதலிய பொருளைக் குறிப்பது; work suggestive of sound or colour etc. *"வினையே குறிப்பே யிசையே பண்பே" (தொல்.சொல்.260).* 10. வெளிப்படையாகவின்றிப் பொருளுணர்த்துஞ் சொல்; (Gram.) that which is implied or understood, opp. to *veli-p-padai* *"இன்ன பிறவுங் குறிப்பிற் றருமொழி" (நன்.269).* 11. அடையாளம்; mark, sign (க.குறிப்பு). 12. கைக் குறிப்புப் புத்தகம்; memorandum. 13. நாட்குறிப்பு; journal, in book-keeping. 14. பிறப்புக்குறிப்பு; horosope. 15. சிறப்பியல்பு; description, distinguishing marks or characteristics. 16. குறிப்புக் குறியீடு; symbolic terms abbreviations, shorthand writing. 17. இலக்கு (சங்.அக.); aim, mark, target. 18. ஐந்து கந்தங்களுள் ஐம்பொறிகளும் மனமுமாகிய ஆறன் தொகுதி (Buddh); mind and the five senses, as elements of a being. one of *pañja-kantam. "உருவ நுகர்ச்சி குறிப்பே பாவனை" (மணிமே.30:189).* 19. ஓவியத்தில் ஒருவகைக் குறிப்பு; sketch in painting, outlines, tracings (வின்.).

[குறி → குறிப்பு.]

குறிப்பு[2] *kurippu,* பெ.(n.) சான்று, எடுத்துக்காட்டு; example, illustration. *"இது திருமந்திரார்த் தானுஸந்தானத்திற்குக் குறிப்பாக அப்புள்ளார் அருளிச் செய்த விரகு" (ரஹஸ்ய.153).*

[குறி → குறிப்பு.]

குறிப்புக்கட்டை *kurippu-k-kattai,* பெ.(n.) ஏதத்தை (ஆபத்தை)க் காட்ட நீரில் நடும் மரம்; a post or block at a ford to indicate danger from quicksand etc.

[குறிப்பு + கட்டை.]

குறிப்புக்காரன் *kurippu-k-kāran,* பெ.(n.) ***குறிகாரன்,*** பார்க்க; see *kurikāran.*

[குறிப்பு + காரன்.]

குறிப்புச்சொல் *kurippu-c-col,* பெ.(n.) சொல்லுவோன் குறிப்பினால் நேர்பொருளன்றி வேறு பொருளை உணர்த்தும் சொல் (குறள்,711,உரை); (Gram.) word indicating a meaning by implication.

மறுவ. குறிப்பு நிலை, குறிப்புமொழி.

[குறிப்பு + சொல்.]

குறிப்புத்தொழில் *kuri-p-pu-tolil,* பெ.(n.) குறிப்பாகச் செய்யும் செய்கை; significant gesture. *"இவள்செய்த இக்குறிப்புத் தொழிலால்" (பரிபா. 12:90–92,உரை).*

[குறிப்பு + தொழில்.]

குறிப்புநிலை *kurippu-nilai,* பெ.(n.) ***குறிப்புச்சொல்,*** (நன்.460–.மயிலை.) பார்க்க; see *kurippu-c-col.*

[குறிப்பு + நிலை.]

குறிப்புப்பெயரெச்சம் *kuṟi-p-pu-p-peya-reccam,* பெ.(n.) செயலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டாத பெயரெச்சம்; (Gram.) relative participle of an appellative verb.

[குறிப்பு + பெயர் + எச்சம்.]

குறிப்புப்பொருள் *kuṟippu-p-poruḷ,* பெ.(n.) குறிப்பாலுணரப்படும் பொருள் (நன்.259,விருத்.) (Gram.); implied meaning.

[குறிப்பு + பொருள்.]

குறிப்புமுற்று *kuṟippu-muṟṟu,* பெ.(n.) குறிப்பு ***வினைமுற்று*** (நன்.351) பார்க்க; see *kuṟippu-viṉai-muṟṟu.*

[குறிப்பு + முற்று.]

குறிப்புமொழி *kuṟippu-moḻi,* பெ.(n.) ***குறிப்புச் சொல்*** பார்க்க; see *kuṟippu-c-col.* *"எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப் பொருட்புறத்ததுவே குறிப்புமொழி யென்ப" (தொல்.பொருள்.491).*

[குறிப்பு + மொழி.]

குறிப்புருவகம் *kuṟippuruvagam,* பெ.(n.) குறிப்பினாற் பெறப்படும் உருவகவணி (குறள்,1030, உரை); implied metaphor.

[குறிப்பு + உருவகம்.]

குறிப்புவமை *kuṟippuvamai,* பெ.(n.) குறிப்பாலுணரப்படும் உவமையணி (தொல்.பொருள். 278,உரை); (Rhet.) implied simile, metaphor.

[குறிப்பு + உவமை.]

குறிப்புவினை *kuṟippu-viṉai,* பெ.(n.) பொருட்பெயர், இடப்பெயர் முதலியவற்றின் அடியாகப் பிறந்து செயலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டாமல் வினைத் தன்மையைக் கொண்டுள்ள சொல் (நன்.321.உரை); (Gram); appellative verb.

[குறிப்பு + வினை.]

குறிப்புவினைமுற்று *kuṟippu-viṉai-muṟṟu,* பெ.(n.) ***குறிப்புவினை*** பார்க்க (வின்.323,உரை.); see *kuṟippuviṉai.*

மறுவ. குறிப்புமுற்று

[குறிப்பு + வினை + முற்று.]

குறிப்புவினையாலணையும் பெயர் *kuṟippu-viṉaiyāl-aṉaiyam-peyar,* பெ.(n.) முன்பு குறிப்பு வினையாய்ப் பின்பு பொருள்களைக் குறித்தற்கு வரும் பெயர் (நன்.321.விருத்.) (Gram.) appellative verb declined as a noun, as பண்டைச் செல்வனைக் கண்டேன்.

[குறிப்பு + வினை + ஆல் + அணையும் + பெயர்.]

குறிப்புவினையெச்சம் *kuṟippu-viṉai-y-eccam,* பெ.(n.) தொழில் காலங்களைக் குறிப்பாகக் காட்டும் வினையெச்சம் (நன்.342,உரை); (Gram.) verbal participle of an appellative verb.

[குறிப்பு + வினை + எச்சம்.]

குறிப்புற்று *kuṟi-p-puṟṟu,* பெ.(n.) ஆண் பெண் குறியில் மேக நோய்த் தொடர்பாய் ஏற்படும் புற்றுப்புண்; hard industrated or infecting sore or ulcer on the genital of a male or female arising from the veneral causes (சா.அக.).

[குறிப்பு + புற்று.]

குறிப்பெச்சம் *kuṟippeccam,* பெ.(n.) கூறிய சொற்களைக் கொண்டு அவற்றின் கருத்தாகக் கொள்ளும் பொருள் (குறள்.411, உரை); suggested sense.

[குறிப்பு + எச்சம்.]

குறிப்பெழுத்து *kuṟippeḻuttu,* பெ.(n.) சுருக்கெழுத்து; abbreviation, contraction of names, words, etc. as எ—று for என்றவாறு.

[குறிப்பு + எழுத்து.]

குறிப்பெழுது—தல் *kuṟippeḻudu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கருத்துச் செய்திக்குறிப்பு எழுதுதல்; to write memoranda, notes, index, etc. 2. பிறப்புக்

குறிப்பெழுதுதல்; to note down the date, hour, etc., of a child's birth. 3. பேரேட்டில் எழுதுவதன் முன்னர் கணக்கைக் குறிப்புப் புத்தகத்தில் எழுதுதல்; to make entries in day book.

[குறிப்பு + எழுது-.]

குறிப்பேடு *kurippēḍu,* பெ.(n.) 1. நாள்தோறும் வரவு செலவுக் கணக்குகளைப் பதியும் புத்தகம்; day-book, the items of which are transferred to ledger. 2. நினைவுக் குறிப்பேடு; memorandum book.

[குறிப்பு + ஏடு.]

குறிப்போலை *kurippōlai,* பெ.(n.) 1.கணக்குக் குறிப்பு எழுதிய ஓலை; old record of a child's birth, for casting its nativity.

[குறிப்பு + ஓலை.]

குறிபார்-த்தல் *kuri-pār-,* 4 செ.கு.வி.(v.i.) 1. நிமித்தம் பார்த்தல்; to observe signs, omens. 2. நன்மை தீமைகளைக் குறிபார்த்துச் சொல்லுதல்; to tell fortunes. 3. இலக்குப் பார்த்தல்; to aim at a mark.

[குறி + பார்-.]

குறிபிழை-த்தல் *kuri-pilai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. இலக்குத் தவறுதல்; to miss the mark, as in shooting. 2. மழைக்குறி தோன்றியும் மழை பெய்யாது விடுதல்; to fail, as signs of rain.

[குறி + பிழை-.]

குறிபோடு-தல் *kuri-pōḍu-,* 19 செ.கு.வி.(v.i.) 1. அடையாளம் இடுதல்; to mark, sign. 2. எண்ணுதற்குக் கோடு இடுதல்; to make marks for helping calculation.

[குறி + போடு-.]

குறிமோசம் *kuri-mōsam,* பெ.(n.) தவசக்குவிய லிலிருந்து சிறிதளவு திருடிக்கொண்டு பின்பு அக்குவியலில் திருட்டுக்குறி இடுவது (W.G.); a fraudulent mark put upon a stock of grain after removing a portion of it clandestinely.

[குறி + மோசம்.]

குறியன் *kuriyan,* பெ.(n.) 1. மடையான் பறவை; paddy bird. 2. நாரை; crane (சா.அக.).

[குறு → குறி→ குறியான்.]

குறியிடம் *kuri-y-iḍam,* பெ.(n.) தலைவனும் தலைவியும் கூடுதற்குக் குறித்த இடம்; (Akap.) place of assignation by lovers, tryst.

[குறி + இடம்.]

குறியிடையீடு *kuri-y-iḍai-īḍu,* பெ.(n.) தலைவனும் தலைவியும் குறித்தவிடத்துக் கூடாதவாறு நேரும் இடையூறு (நம்பியகப்.155); (Akap.) obstacles preventing lovers from meeting at the place of assignation

[குறி + இடையீடு.]

குறியீடு *kuri-y-īḍu,* பெ.(n.) குறியாக இட்டாளும் பெயர்; name given to a thing or concept, technical term. *"அளபெடை யென்னும் குறியீடே" (நன்.91,விருத்.).*

[குறி + ஈடு.]

குறியெதிர்ப்பு *kurie-y-edirppu,* பெ.(n.) அளவு குறித்து வாங்கி வாங்கியவாறே எதிர்கொடுப்பது; exact return of things borrowed. *"மற்றெல்லாங் குறியெதிர்ப்பை நீர துடைத்து" (குறள்.221).*

[குறி + எதிர்ப்பு.]

குறியோன் *kuriyōn,* பெ.(n.) 1. குள்ளன்; person of short stature. 2. அகத்தியன்; Agastya, as short *"குறியோ னிருந்த மலைபயில் வார்தமிழ்" (தஞ்சைவா.109).*

ம. குறியவன்

[குறி → குறியோன்.]

குறில் *kūril,* பெ.(n.) 1. குற்றெழுத்து (நன்.64) (Gram.) short vowel, opp. to *nedil.* 2. குறுமை; shortness, dwarfishness. *"குறினெடி லளவு சான்ற கூளியும்" (கந்தபு. விண்குடி. 44).*

[குறு → குறில்.]

குறிலவணம் *kurilavaṇam,* பெ.(n.) சோற்றுப்பு; common salt (சா.அக.).

[குறு→ குறி + லவணம்.]

குறிவில்லு *kurivillu* பெ.(n.) பழுவெலும்பு; rib-bone (சா.அக.).

[குறி + (எல்லு) வில்லு.]

குறு[1]-தல் *kuṟu-,* 8 செ.குன்றாவி (v.t.) 1. பறித்தல்; to pluck. *"பூக்குற் றெய்திய புனலணி யூரன்" (ஐங்குறு. 23).* 2. மேலிழுத்து வாங்குதல்; to pull up. *"கயிறுகுறு முகவை" (பதிற்றுப். 22:14).* 3. ஒழித்தல்; to abandon, leave off, give up. *"இச்சைமற் றாச்சிரயங் குற்றோன்" (ஞானா. 61,19).* 4. நெல் முதலியன குற்றுதல்; to pound in a mortar, husk. *"வெதிர்நெற் குறுவாம்" (கலித். 42).*

[குல் → குறு]

குறு[2]-த்தல் *kuṟu-,* 4 செ.கு.வி.(v.i.) அளவிற் குறுகுதல்; to become short; to contract, diminish, shrink

தெ., க., ம. குறு.

[குல் → குறு]

குறுக்கடி *kuṟuk-kaḍi,* பெ.(n.) 1. குறுக்கு வழிப்பாதை; short cut. 2. நேர்வழியாலன்றிக் குறுக்கே புகுந்து செய்யுஞ்செயல்; anything done by way of short cut or in a compendious method. 3. ஒழுங்கற்ற பேச்சு; short, abrupt speech, unreasoned talk. குறுக்கடியாய்ப் பேசுகிறான் (உ.வ.).

[குறுக்கு + அடி.]

குறுக்கம்[1] *kuṟukkam,* பெ.(n.) 1. குறுகிய நிலை; shortness. 'ஐ' ஔக் குறுக்கம்' (நன். 99). 2. சுருக்கம்; abridgement, albreviation, contraction, epitome, summary. 3. 3/4 முதல் 7 ஏக்கர் வரை பலவிடங்களில் பல்வேறு வகையாக வழங்கும் புன்செய் அளவு வகை; measure of dry land varying in different parts of Tamil country from 3/4 acre to 7 acres (R.F.). 4. கௌரி செய்நஞ்சு; a prepared arsenic.

[குறுகு → குறுக்கம்.]

குறுக்கம்[2] *kuṟukkam,* பெ.(n.) 1. சுருக்கம்; reduction. 2. கௌரி நஞ்சு; a native arsenic (சா.அக.).

[குல் → குறு → குறுக்கம்.]

குறுக்கல் *kuṟu-k-kal,* பெ.(n.) 1. குறைக்கை; reduction, contraction. 2. நெடிலைக் குறிலாக்குஞ் செய்யுள் திரிபு (நன். 155); (Gram.) shortening a long vowel.

[குறுக்கு → குறுக்கல்.]

குறுக்களவு *kuṟu-k-kaḷavu,* பெ.(n.) குறுக்குத் தூரம்; measurement across, diameter. *அந்த வீட்டின் குறுக்களவு என்ன?*

[குறுக்கு + அளவு.]

குறுக்கன் *kuṟukkaṉ,* பெ.(n.) 1. குள்ளநரி; jackal. 2. கேழ்வரகு; ragi (சா.அக.).

[குறு → குறுக்கு → குறுக்கன்.]

குறுக்கி *kuṟukki,* பெ.(n.) நாறும், நாதம்; ovarian secretion in woman (சா.அக.).

[குல் → குறு → குறுக்கி.]

குறுக்கிடு-தல் *kuṟukkiḍu-,* 18 செ.கு.வி.(v.i.) 1. குறுக்கே செல்லுதல்; to pass across, as animals of bad omen. *பூனை குறுக்கிட்டது.* 2. பிறர் செயலில் தலையிடுதல்; to interfere in another's affair. 3. தடையாக எதிர்ப்படுதல்; to crossthe path of, to intervene. *"மீன்களைக் குறுக்கிட்டு மறித்துப் படுக்கும் வலையை யுடைய பரதவர்" (சிலப்.6:142, உரை).*

[குறுக்கு + இடு-.]

குறுக்கிணைப்பு *kuṟukkiṇaippu,* பெ.(n.) ஒரு மரத்தை மற்றொரு மரத்தின் குறுக்கு வாட்டத்தில் இணைக்கும் இணைப்பு (தச்.பொறி.);a wooden piece fixed cross-wise.

[குறுக்கு + இணைப்பு.]

குறுக்கீடு *kuṟu-k-kīḍu,* பெ.(n.) குறுக்கிடுகை; crossing, intervention, interference.

[குறுக்கிடு → குறுக்கீடு.]

குறுக்கு[1]-தல் *kuṟukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. குறையச் செய்தல்; to shorten, curtail, reduce, contract, lessen, retrench. செலவைக் குறுக்க வேண்டும். 2. சுருக்குதல்;to abbreviate, abridge, epitomise, abstract. அந்நூலைக் குறுக்கி யெழுதுக. 3. நெருங்கச் செய்தல்; to cause to draw near, to bring within easy reach. *"திருநாவாய் குறுக்கும்வகை யுண்டுகொலோ" (திவ். திருவாய். 9:8:1).*

ம. குறுக்குக; **க.** கொரெ; **து.** குந்தாவுனி; **கோத.,** **துட.** குர்க்.

[குறுகு → குறுக்கு.]

குறுக்கு[2]-தல் *kuṟukku-,* 5 செ.கு.வி.(v.i.) அண்மையாதல்; to be near, close by. *'திருநாவாய் எத்தனையிடம் போகுமென்று எதிரே வருகின்றார் சிலரைக் கேட்டருள குறுக்கும் என்றார்களாய்' (ஈடு, 9.8:1).*

[குறுகு → குறுக்கு.]

குறுக்கு[3] *kuṟukku,* பெ.(n.) 1. நெடுமைக்கு மாறான அகலம்; transverseness, breadth. 2. குறுக்களவு; diameter. *"நெடுமையுங் குறுக்கு நூற்றெட் டங்குலம்" (காசிக. சிவ. அக.17).* 3. குறுமை; shortness of distance. *"நீண்ட நெடுமையும் அகலக் குறுக்கும் காட்டா" (தாயு. சிதம்பர. 13).* 4. சுருக்கம்; contraction. 5. மாறு; opposition, objection, hindrance. *அவன் எதற்குங் குறுக்குப் பேசுகிறவன்.* 6. இடுப்பு; hips, lions. *குறுக்கு வலிக்கிறது.*

ம. குறுக்கு

Fin. kesi(centre,middle); **Es.** kesk; **Q.** kuskan.

[குறுகு → குறுக்கு.]

குறுக்குக்கட்டு *kuṟukku-k-kaṭṭu,* பெ.(n.) பெட்டி முதலியவற்றைக் குறுக்காகக் கயிற்றாற் கட்டும் கட்டு; tying transversely or crosswise, as in fastening a case. 2. மகளிர் நீராடும்போது மார்புக்கு மேலே கட்டும் சேலைக்கட்டு; tying a cloth a little above the breasts and around the body, as women while bathing.

[குறுக்கு + கட்டு.]

குறுக்குக்கால் *kuṟukku-k-kāl,* பெ.(n.) நடக்கும் போது கால்கள் குறுக்காகப்படும் குற்றம்; cross-leg deformity.

[குறுக்கு + கால்.]

குறுக்குக்கிளை *kuṟukku-k-kiḷai,* பெ.(n.) பக்கக்கிளை; lateral branch.

[குறுக்கு + கிளை.]

குறுக்குக்கேள்வி *kuṟuku-k-kēḷvi,* பெ.(n.) 1. முறைமன்ற வழக்கில் சான்றாளியை மடக்கிக் கேட்கும் கேள்வி; cross-questioning, cross-examination. 2. ஒழுங்கற்ற கேள்வி; irrelevant question, perverse question. 3. இருவர் வினாவிக் கொண்டிருக்க இடையில் பிறனொருவன் கேட்கும் கேள்வி; question by way of interruption or intrusion.

[குறுக்கு + கேள்வி.]

குறுக்குச்சட்டம் *kuṟukku-c-caṭṭam,* பெ.(n.) 1. குறுக்காகப் போடும் சட்டம்; cross piece in a frame. 2. கூரையின் குறுக்குக் கட்டை; brace to connect a pair of rafters. 3. குறுக்காக இடும் உத்தரம்; cross beam.

[குறுக்கு + சட்டம்.]

குறுக்குச்சார் *kuṟukku-c-cār,* பெ.(n.) வீட்டின் குறுக்கிடம் (யாழ்ப்.); short or cross side of a house, raised floor on either side of the shorter wall of a house.

[குறுக்கு + சார்.]

குறுக்குச்சால் *kuṟukku-c-cāl,* பெ.(n.) முதலில் உழவு செய்யப்பட்ட திசைக்குக் குறுக்காக மறு உழவு செய்தல். (உழ.நெ.க.அக); cross ploughing.

[குறுக்கு + சால்.]

குறுக்குச்சாலோட்டு-தல் *kuṟukku-c-cāl-ōṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) தன்னலங் கருதிப் பிறர் செயலில் இடையிடுதல், ஊடு விழுதல்; lit; to run a furrow transversely, to interfere with another's work for gaining one's own ends.

[குறுக்கு + சால் + ஓட்டு-.]

குறுக்குச்சுவர் *kurukku-c-cuvar,* பெ.(n.) பாகஞ் செய்து கொண்ட மனையில் எல்லை குறித்தற்குக் குறுக்கே இடும் (C.E.M.) சுவர்; partition-wall.

[குறுக்கு + சுவர்.]

குறுக்குச்சூத்திரம் *kuṟukku-c-cūttiram,* பெ.(n.) குறுக்கு நூற்பா (வின்.); formula, brief comprehensive rule, theorem, expressing the shortest method of performing a calculation.

[குறுக்கு + சூத்திரம். குறுக்கு நூற்பா பார்க்க; see kuṟukku-nūṟpā.]

குறுக்குத்தசைநார் *kuṟukku-t-tasai-nār,* பெ.(n.) குறுக்கே ஓடும் தசைநார்; transverse muscular fibre (சா.அக.).

[குறுக்கு + தசை + நார்.]

குறுக்குத்தெரு *kuṟukku-t-teru,* பெ.(n.) பெரிய தெருவிலிருந்து பிரிந்து செல்லும் சிறிய தெரு (பொ.வழக்.);side street cutting across big street.

[குறுக்கு + தெரு.]

குறுக்குநிமிர்-தல் *kuṟukku-nimir-,* 2 செ.கு.வி.(v.i.) 1. அளவுக்கு மிஞ்சி வேலை வாங்குதல்; to have one's powers over taxed, to be overworked. 2. சோம்பேறியாதல்; to grow lazy. வேலை யில்லாமல் குறுக்கு நிமிர்ந்துவிட்டான்.

[குறுக்கு + நிமிர்-.]

குறுக்குநூற்பா *kuṟukku-nūṟpā,* பெ.(n.) கணிதத்தில் சுருக்கமாய் அறிதற்கு ஏற்ற வழியைத் தெரிவிக்கும் நூற்பா; formula, brief comprehensive rule, theorem, expressing the shortest method of performing a calculation.

மறுவ. குறுக்குச் சூத்திரம்

[குறுக்கு + நூல் + பா.]

குறுக்குநோய் *kuṟukku-nōy,* பெ.(n.) இடுப்புநோய்; hip pain. 2. சந்துப்பிடிப்பு; hip gout (சா.அக.).

[குறுக்கு + நோய்.]

குறுக்குப்பாடு *kuṟukku-p-pāḍu,* பெ.(n.) குறுக்கான பக்கம்; transverse direction.

[குறுக்கு + பாடு.]

குறுக்குப்பாதை *kuṟukku-p-pādai,* பெ.(n.) குறுக்கு வழி; short cut.

[குறுக்கு + பாதை.]

குறுக்குப்பிண்டம் *kuṟukku-p-pinḍam,* பெ.(n.) பேறு (பிரசவ) காலத்தில் கருப்பத்தில் குறுக்காய்ப் பாய்ந்த குழந்தை; any abnormal presentation requiring the manual turning of the foetus in delivery (சா.அக.).

[குறுக்கு + பிண்டம்.]

குறுக்குப்பிறப்பு *kuṟukku-p-piṟappu,* பெ.(n.) இருகுல (சாதி)ப் பிறப்பு; a person or an animal produced from a male or female of different race or castes or different breeds (சா.அக.).

[குறுக்கு + பிறப்பு.]

குறுக்குப்புத்தி *kuṟukku-p-putti,* பெ.(n.) கோணலறிவு; cross-grained mentality.

[குறுக்கு + புத்தி.]

குறுக்கும்நெடுக்கும் *kuṟukkum-neḍukkum,* பெ.(n.) இங்குமங்கும்; lit.lengthwise and breathwise, here and there.

[குறுக்கும் + நெடுக்கும்.]

குறுக்குமறுக்கு *kuṟukku-maṟukku,* பெ.(n.) குறுக்கே மறுத்துப் பேசுகை; interrupting a person when he is speaking and contradicting him. *"மணியக்காரன் கணக்குப் பார்க்கிறதும் அதற்குக் கோவில்குருக்கள் குறுக்குமறுக்குச் சொல்வதும்!" (தாசில்.தார்நா.27).*

[குறுக்கு + மறுக்கு.]

குறுக்குமறுக்கும் *kuṟukku-maṟukkum* வி.எ. (adv.) **குறுக்குநெடுக்கும்** பார்க்க; see *kuṟukkum-neḍukkum.*

[குறுக்கும் + மறுக்கும்.]

குறுக்குவரி *kuṟukku-vari,* பெ.(n.) ஒரு சதுரத்தின் அல்லது நீட்டத்தின் குறக்காகச் செல்லும் கோடு (இ.வ.); diagonal.

[குறுக்கு + வரி.]

குறுக்குவலி[1]-த்தல் *kuṟukku-vali-,* 4 செ.கு.வி.(v.i.) பேறுகால வேதனைப்படுதல்; to suffer from labour-pains.

[குறுக்கு + வலி-.]

குறுக்குவலி[2] *kuṟukku-vali,* பெ.(n.) இடுப்புவலி; labour pain (சா.அக.).

[குறுக்கு + வலி.]

குறுக்குவழி *kuṟukkuvaḻi,* பெ.(n.) 1. குறுக்குப் பாதை; short way. 2. கோணல்வழி; crooked way, path of evil.

ம. குறுக்குவழி

[குறுக்கு + வழி.]

குறுக்குவாதம் *kuṟukku-vādām,* பெ.(n.) இடுப்பு ஊதை நோய் (வாதம்); pain in the loin due to aggravated vayu in the system (சா.அக.).

[குறுக்கு + வாதம்.]

குறுக்குவிசாரணை *kuṟukku-viśāraṇai,* பெ.(n.) முறைமன்ற வழக்கில் சான்றாளியை மடக்கிக் கேட்கும் கேள்வி; cross examination.

மறுவ. குறுக்குக்கோட்பாடு, குறுக்கு உசாவல், குறுக்கு உசாவணை, குறுக்கு வினா.

[குறுக்கு + விசாரணை. **குறுக்கு உசாவல்** பார்க்க; see *kuṟukku-uśāval.*]

குறுக்குவிட்டத்தூலக்கட்டு *kuṟukku-viṭṭat-tūlak-kaṭṭu,* பெ.(n.) கூரையின் மேற்கோப்பு அமைப்புகளுள் ஒருவகை (கட்.தொ.வரி.);a kind of shape of top of thatched roof.

[குறுக்கு + விட்டம் + தூலம் + கட்டு.]

குறுக்குவிட்டம் *kuṟukku-viṭṭam,* பெ.(n.) அச்சுமரத்தின் மேற்பகுதிக்குக் கீழுள்ள சட்டம் (உழ.நெ.ச.அக.);a cross bar cutting across the axis.

[குறுக்கு + விட்டம்.]

குறுக்குவினா *kuṟukku-viṉā* பெ.(n.) குறுக்குக் கேள்வி; cross examination.

[குறுக்கு + வினா.]

குறுக்குவெட்டுத்தோற்றம் *kuṟukku-veṭṭut-tōṟṟam,* பெ.(n.) கட்டடக் குறுக்குவெட்டு அமைப்பினை விளக்கும் வரைபடம் (பொ.வழக்.) (கட்.தொ.வரி.); transverse view shown in building plan.

[குறுக்கு + வெட்டு + தோற்றம்.]

குறுக்கெலும்பு *kuṟukkelumbu,* பெ.(n.) இடுப் பெலும்பு; hip bone (சா.அக.).

[குறுக்கு + எலும்பு.]

குறுக்கே *kuṟukkē,* வி.எ. (adv.) 1. இடையே; crosswise, transversely, athwart, across. பூனை குறுக்கே போயிற்று (உ.வ.). 2. நடுவில்; between, in the middle. பெரியோர்கள் பேசுகையில் குறுக்கே பேசலாகாது (உ.வ.). 3. எதிராக; in opposition to. நான் சொல்வதற்கெல்லாம் அவன் உறுக்கே சொல்லுகிறான் (உ.வ.).

ம. குறுக்கனெ

[குறுக்கு + ஏ.]

குறுக்கேநில்-தல் (குறுக்கே நிற்றல்) *kuṟukkē-nildal,*5 செ.கு.வி.(v.i.) இடையூறாக இருத்தல்; to be obstructive, to be a hindrance. காரியம் முடிய வொட்டாமல் அவன் குறுக்கே நிற்கிறான் (உ.வ.).

[குறுக்கே + நில்.]

குறுக்கேமடக்கு-தல் *kuṟukkē-maḍakku-,* 1. இடையிற்பேசி வாயடக்குதல்; to interrupt rudely and refute; interrupt and silence one by a curt reply. 2. ஒரு பொருளை நினைத்துக்கொண் டிருக்கும் பொழுது மயங்க அடித்தல்; to create confusion in the mind of a person while he is thinking out a question.

[குறுக்கே + மடக்கு-.]

குறுக்கேமுறி[1]-த்தல் *kuṟukkē-muṟi,* 4 செ.குன்றாவி.(v.t.) ஒரு செயலை இடையே விட்டொழித்தல்; to break off in the middle of a business, to leave a work unfinished.

[குறுக்கு + ஏ + முறி-.]

குறுக்கேமுறி[2]-த்தல் *kuṟukkē-muṟi,* 4 செ.குன்றாவி. (v.t.) வெறுப்பால் கூட்டத்தினின்று இடையே பிரிதல்; to leave a company in displeasure.

[குறுக்கு + ஏ + முறி-.]

குறுக்கே விழு-தல் *kuṟukkē-viḻu-,* 2 செ.கு.வி. (v.i.) ஒரு செயலின் இடையே தலையிடுதல்; to interfere, meddle.

[குறுக்கே + விழு-.]

குறுக்கேற்றமாய் *kuṟukkēṟṟamāy,* வி.எ.(adv.) பொருத்தமில்லாமல்; irreleventły at a tangent.

[குறுக்கு + ஏற்றமாய்.]

குறுக்கை[1] *kuṟukkai,* பெ.(n.) அட்டவீரட்டங்களுள் ஒன்றானதும் சிவபிரான் காமனை எரித்ததுமான சோழநாட்டுத்தலம்; a shrine in *Tañjāvūr* district where Siva burnt *kāmaṉ* to ashes one of *aṭṭa-viraṭṭam* "குறுக்கைவீ ரட்டனாரே" (தேவா. 191:1).

[குறுக்கு → குறுக்கை.]

குறுக்கை[2] *kuṟu-k-kai,* பெ.(n.) 1. புலி (பெருங். இலாவாண. 18,18.அரும்); tiger. 2. உடைவாள்; dagger, poniard. *"குறுக்கை புக்க கொளுவமை கச்சையன்" (பெருங். இலாவாண. 18:18).* 3. சுருங்கிய கை; withered handy (ச.அக.).

[குறு + கை - குறுங்கை → குறிக்கை.]

குறுக்கையர் *kuṟukkaiyar,* பெ.(n.) வேளாள மரபில் திருநாவுக்கரசு நாயனார் பிறந்த குடியைச் சார்ந்தவர்; member of the family in the *Vēḷāḷa* caste to which *Thirunāvukkarasar* belonged, *"வேளாண் குலத்தின் கண் வரும் பெருமைக் குறுக்கையர்தங் குடி விளங்கும்" (பெரியபு. திருநாவுக்.15).*

[குறுக்கை + அர். குறுக்கை = புலி.]

குறுகக்காய்ச்சு-தல் *kuṟuga-k-kāyccu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சுண்டக்காய்ச்சுதல் (யாழ்ப்.); to boil down a liquid.

[குறுகு → குறுக...]

குறுகநறுக்கல் *kuṟuga-naṟukkal,* பெ.(n.) பொடியாய் நறுக்குதல்; crushing into small pieces (சா.அக.).

[குறுக + நறுக்கல்.]

குறுகப்பிடி-த்தல் *kuṟuga-p-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. சுருக்குதல்; to make short; to curtail; as expenses; to retrench, to shorten, as a story. 2. கிட்டப்பிடித்தல்; to hold near or close to.

[குறுக + பிடி-.]

குறுகல் *kurugal,* பெ.(n.) 1. குறைதல்; growing short in stature through old age as in கூனிக்குறுகல். 2. குறுகுதல்; decreasing. (சா.அக.). 3. குறுகிய பொருள் (வின்.); that which is short, dwarfish, stunted.

[குறுகு → குறுகல்.]

குறுகல்முத்து *kurugal-muttu,* பெ.(n.) இரட்டை முத்து; double pearl.

[குறுகல் + முத்து.]

குறுகலர் *kurugalar,* பெ.(n.) பகைவர்; enemies, foes. *"குறுகல ரூர்" (திருக்கோ. 13).*

[குறுகு + அல் + அர்.]

குறுகவரிதல் *kuruga-v-aridal,* 2 செ.குன்றாவி. (v.t.) பொடியாய் கத்தி கொண்டு அரிதல்; cutting into very small or minuite pieces (சா.அக.).

[குறுக + அரிதல்.]

குறுகவிடி–த்தல் *kuruga-v-idittal,* 4 செ.கு.வி.(v.i.) தூளாகும் படி செய்தல்; reducing to fine powder.

[குறுக + இடி–.]

குறுகன்னி *kuru-kanni,* பெ.(n.) சிறுதுவரை; a small kind of dholl (சா.அக.).

[குறு + கன்னி.]

குறுகாதவர் *kurugātavar,* பெ.(n.) பகைவர்; enemies. *"குறுகாதவரூர்.... சரத்தாற் செற்றவன்" (தேவா. 169:1).*

மறுவ. குறுகலர், குறுகார்.

[குறுகு + ஆ (எதிர்மறைப் பின்னொட்டு) + த் + அ + அர்.]

குறுகார் *kurugār,* பெ.(n.) பகைவர்; enemies. *"குறுகார் தடந்தோ ளிரண்டுந் துணிந்து" (பாரத. முதற்போ.29).*

[குறுகு + ஆ + ஆர்.]

குறுகு[1]–தல் *kurugu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. குள்ள மாதல்; to grow short, stumpy, dwarfish. *"குறுகுறுகென விருத்தி" (கந்தபு. திருக்குற்றாலப். 15).* 2. சிறுகுதல்; to shrink, contract; to be reduced; to decrease, diminish, decline. *"உரைகுறுக நிமிர்கீர்த்தி" (கம்பரா. குலமுறை.4).* 3. மாத்திரை குறைதல்; (Gram.). to be shortened as a long vowel. *"இடைப்படிற் குறுகு மிடனுமா ருண்டே" (தொல். எழுத்து. 37).*

[குல் → குறு → குறுகு.]

குறுகு[2]–தல் *kurugu-,* 5 செ.கு.வி.(v.i.) அணுகுதல்; to approach, draw near. *"இளங்கோ வேந்தனி ருப்பிடங் குறுகி" (மணிமே. 18:42).*

[குல் → குறு → குறுகுதல்.]

குறுகு[3] *kurugu,* பெ.(n.) குறிஞ்சா; clustered gaertnera (சா.அக.).

[குறு → குறுகு.]

குறுகுதாளி *kurugu-tāli,* பெ.(n.) சிறுதாளி (மலை.); hairy-leaved creamy-white bind weed.

[குறுகு + தாளி.]

குறுகுறு–த்தல் *kuru-kuru-,* 4 செ.கு.வி.(v.i.) 1. வெறுப்புத் தோன்ற முணுமுணுத்தல்; to mutter in displeasure, murmur. 2. மனம் உறுத்திக் கொண்டிருத்தல்; to be pricked by conscience. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் (பழ.). 3. அச்சம் உறுத்திக்கொண்டிருத்தல்; to be perturbed by fear of detection. 4. தினவுறுதல்; to feel an itching or irritating sensation, as in the ear, in a sore. காது குறுகுறுக்கிறது (உ.வ.).

ம. குறுகுறுக்குக; க. குர்ருகுர்ரு.

[குல் → குறு–.]

குறுகுறுநட–த்தல் *kuru-kuru-nada-,* 3 செ.கு.வி. (v.i.) குறுகக் குறுக நட ந்து செல்லுதல்; to wobble with short steps, as a child. *"குறுகுறு நடந்து சிறுகை நீட்டி" (புறநா. 188).*

[குறு + குறு + நட–. குறுகுறு – இரட்டைக்கிளவி ஒலிக்குறிப்பு.]

குறுகுறுப்பு[1] *kuru-kuruppu,* பெ.(n.) 1. விருப்ப மின்மை தோன்ற முருமுருக்கை; muttering in displeasure. 2. குறட்டை; snoring, stertorous breathing. **தெ.** குர்ர்ரு. 3. அச்சக்குறி காட்டுகை; showing, signs of perturbation with fear.4. சுறுசுறுப்பு; briskness, bustling activity.

[குறுகுறு → குறுகுறுப்பு.]

குறுகுறுப்பு[2] *kuru-kuruppu,* பெ.(n.) கண்டத்திலும், மார்பிலும் கோழை கட்டுவதால் உண்டாகும் சத்தம்; an abnormal rattling noise in the ear (சா.அக.).

[குறுகுறு → குறுகுறுப்பு.]

குறுகுறுப்பை *kuru-kuruppai,* பெ.(n.) குறட்டை (வின்.); snoring, stertorous breathing.

[குறுகுறுப்பு → குறுகுறுப்பை.]

குறுகுறென்றிழுத்தல் *kurukuren-riluttal,* பெ.(n.) சாகுங்காலத்தில் தொண்டையில் கோழை கட்டியிழுத்தல்; ratling noise due to obstruction of phlegm in the throat of dying persons (சா.அக.).

[குறுகுறு + என்று + இழுத்தல். குறுகுறு - ஒலிக்குறிப்பு.]

குறுகுறென்று விழி—த்தல் *kuru-kurenru-vili-* 4 செ.கு.வி.(v.i.) திருட்டுவிழி விழித்தல்; to have a look of fear, a thievish look. புதுத்திருடன் குறுகுறென்று விழிக்கிறான் (உ.வ.).

[குறுகுறு + என்று + விழி-.]

குறுகுறெனல் *kuru-kurenal,* பெ.(n.) 1. விரைவுக் குறிப்பு; onom, expr. signifying (or) showing signs of haste. *அவன் குறுகுறென்று நடக்கிறான்.* 2. தினவுக் குறிப்பு; tingling, as in the ears, a sore. *காது குறுகுறென்கிறது.* 3. சினக்குறிப்பு; muttering in displeasure. 4. அச்சக்குறிப்பு; being perturbed with fear. *புலியைக் கண்டால் மனம் குறுகுறென்கிறது.* 5. சுறுசுறுப்பாயிருத்தற் குறிப்பு; being brisk and active. குழந்தை குறுகுறு வென்றிருக்கிறது (உ.வ).

[குறுகுறு + எனல்.]

குறுகூலி *kurukūli,* பெ.(n.) நெல்லைக் குற்றி அரிசி யாக்குதற்குரிய கூலி; wages given for pounding and dehusking paddy. *"குறுகூலி நெல் நாடுரியும்" (தெ.கல்.தொ. 5, கல் 642, 693) (நன்.400 மயிலை).*

மறுவ. குறுங்கூலி

[குல் → குறு + கூலி. குறுதல் = குற்றுதல்.]

குறுங்கண்[1] *kurun-kan,* பெ.(n.) பலகணி, சாளரம்; a kind of lattice-window, with small apertious *"குறுங்க ணடைக்குங் கூதிர்க் காலையும்" (சிலப். 14: 101).*

மறுவ. பலகணி, மான்கண், காலதர்.

[குறு → குறும் + கண்.]

குறுங்கண்[2] *kurun-kan,* பெ.(n.) நெருங்கின கணுவுடையது; that which is closely jointed, knotty. *"குறுங்கண்ணான பசு மஞ்சளை" (திவ்.பெரியாழ். 1.1:6, வ்யா.பக்.14).*

[குறும் + கண்.]

குறுங்கண்ணி *kuru-n-kanni,* பெ.(n.) முடியில் அணியும் மாலை; wreath for the tuft. *"குழவித் திங்களைக் குறுங்கண்ணியாக வுடைய" (இறை. களவி. 1,உரை).*

[குறும் + கண்ணி.]

குறுங்கணக்கு *kurunkanakku,* பெ.(n.) உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டுமாகிய முதலெழுத்து; basic letters of the Tamil alphabet,

viz., 12 vowels and 18 consonants, opp. to *nedun-kaṇakku*.

ம. குறுங்கணக்கு (குறுகிய அல்லது எளிய கணக்கு)

[குறுமை + கணக்கு.]

குறுங்கருசம் *kuṟuṅ-karušam,* பெ.(n.) வீச்சுவலி; clonic spasm (சா.அக.).

[குறும் + கருசம்.]

குறுங்கலி[1] *kuṟuṅ-kali,* பெ.(n.) பாலையாழ்த் திறத்தொன்று (திவா.); an ancient melody type of the *pālai* class.

[குறுமை + கலி.]

குறுங்கலி[2] *kuṟuṅkali,* பெ.(n.) மனைவியைக் கைவிட்டுப் பிறமகளிரை நயக்கும் காமம் கெடுமாறு அறிவுரைக்கும் புறத்துறை; *(Puṟap)* theme of addressing a hero with a view to turn him away from his illicit loves.

[குறும் + கலி. கலி = கேடு. குறு = சிறுமை.]

ஒருவன் மனத்தெழுந்த சிறுமைக் குணம் கெடக் கூறுதலின் இது குறுங்கலி எனப்பட்டது. இதனை "நறிருங் கூந்தல் மகளிரை நயப்ப வேறுபடு வேட்கை வீயக் கூறின்று" (பு.வெ.12.கொளு.87) என்னும் நூற்பாவாலும் அறியலாம். இதனை விளக்கும் மேற்கோள் செய்யுள் :

"பண்ணவாம் தீஞ்சொல் பவளத் துவர்ச் செவ்வாய்ப்
பெண்ணவாம் பேரல்குற் பெய்வளை - கண்ணவாம்
நன்னலம் பீடூப்ப நல்கார் விடுவதோ
தொன்னலம் உண்டார் தொடர்பு".
(பு.வெ.12.கொளு.87 மேற்கோள்.)

குற்றிசையும் குறுங்கலியும் அகப்பொருட் துறைகளாயினும் அன்பின் ஐந்திணையைத் தழுவாது அறநெறி பிறழ்ந்த வாழ்க்கை முறைகளாதலின் பெருந் திணைக்குரியனவாகிப் புறத்திணை சார்ந்தனவாயின. அதனால் இவை புறப்பொருள் வெண்பாமாலையில் இடம் பெற்றன.

தமிழர் பண்பாட்டில் திருமண வாழ்க்கை என்பது, இளமை நலம் நுகரவும் மகப்பேற்றுக்கும் மட்டுமாக அமைந்ததன்று. உண்மையான அன்பு நீரோட்டத்திற்கு அகலை என்னும் அணைக்கட்டுகள் இல்லை. காதல் என்பது உயிரன்பு; உயிருக்கப்பாலும் நீடிப்பது; உயிரோடு உயிர் இணைந்து பல பிறப்பிலும் வேர் கொண்டு விழுது வீழ்ப்பது. அதனால் தான் அன்பு முதிர்ந்து அறமாகக் கனியும் காதல் வாழ்க்கை இல்லறம் எனப்பட்டது. தமிழர் பண்பாட்டில் இல்லற வாழ்க்கை உடல் நுகர்வு மட்டும் நோக்காமல் உயிர் நுகர்வைப் பெரிதாக நோக்கியது. மனைவியை நீத்துக் கணவன் துறவு மேற்கொள்ளும் பௌத்த நெறியும் செல்வன் அல்லது அரசன் பல மனைவியரைக் கொள்ளலாம் என்னும் சமண இலக்கிய நெறியும் தமிழ்ச் சான்றோரால் ஏற்கப்படவில்லை. இராமகிருட்டிணரும் சாரதா தேவியும் போல இருவரும் துறவு மேற்கொள்வது மறுக்கப்படவு மில்லை.

குறுங்கலித்தொகை *kuṟuṅ-kali-t-togai,* பெ.(n.) கலித்தொகை (புறநா. முகவுரை.); an ancient Tamil classic.

[குறும் + கலி + தொகை. பாலையாழ்த்திறத்தில் அமைந்த குறுங்கலித் துறை சார்ந்த பாடல் தொகுதி யாகலாம்.]

குறுங்கற்றலை *kuṟuṅ-kaṟṟalai,* பெ.(n.) கடல்மீன் வகை; a sea fish, silvery-grey, attaining 1ft. in length.

[குறுமை + கல் + தலை.]

குறுங்காடு *kuṟuṅ-kāḍu,* பெ.(n.) சிறுகாடு; thicket, small forest or jungle, copse, underwood. *"குறுங்காட் டின்னகை மனையோள்" (ஐங்குறு. 410).*

ம. குறுங்காடு

[குறுமை + காடு.]

குறுங்கார் *kuṟuṅ-kār,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[குறும் + கார்.]

குறுங்காலெலி *kuṟuṅ-kāleli,* பெ.(n.) எலிவகை (வின்.); a rat.

[குறும் + கால் + எலி.]

குறுங்கின்னரி *kuṟuṅ-kiṉṉri,* பெ.(n.) வெண்கலம் (யாழ்.அக.); bell metal.

[குறுமை + கின்னரி.]

குறுங்குடியாள் *kuru-ṅ-kuḍi-y-āḷ,* பெ.(n.) தாளகம் (மூ.அக.); yellow sulphuret of arsenic.

[குறும் + குடி + ஆள்.]

குறுங்கூலி *kuruṅ-kūli,* பெ.(n.) நெல் முதலியன குற்றுங் கூலி (நன். 400. மயிலை); husking wages.

பழவ. குறுகூலி

[குறும் + கூலி. குறுதல் = குற்றுதல்.]

குறுங்கெண்டை *kuruṅ-keṇḍai,* பெ.(n.) 1. நன்னீரில் வாழும் மீன்வகை; a fresh water fish, silvery, attaining 5 inches in length. 2. ஆற்று மீன்வகை; a small river-fish, silvery.

[குறும் + கெண்டை.]

குறுங்கொள்ளி *kuruṅ-koḷḷi,* பெ.(n.) ஒரு பகுதி எரிந்து போன கொள்ளிக்கட்டை, குறைக் கொள்ளி; fire brand partially consumed.

[குறுமை + கொள்ளி.]

குறுங்கோல் *kuruṅ-kōl,* பெ.(n.) 1. சிறிய கோல்; a tiny rod, small stick. *"குறுங்கோ லெறிந்த நெடுஞ் செவிக் குறுமுயல்" (புறநா. 339).* 2. ஒரு நீட்டலளவைக் கோல்; a yard-measure.

ம. குறுங்கோல்

[குறும் + கோல்.]

குறுஞ்சம்பா *kuruñjambā,* பெ.(n.) சம்பா நெல் வகை; a sub-species of *cambā,* paddy. *"குறுஞ் சம்பா பித்தங் குடியிருக்கச் செய்யும்" (பதார்த்த. 812).*

[குறும் + சம்பா.]

குறுஞ்சாண்காடை *kuruñ-cāṇkāḍai,* பெ.(n.) குறுகிய சாண் நீளமுள்ள காடை; short quail about a span in length (சா.அக.).

[குறும் + சாண் + காடை.]

குறுஞ்சாண்காடை

குறுஞ்சாலி *kuruñjāli,* பெ.(n.) இளமரம்; young tree (சா.அக.).

[குறும் + சாலி.]

குறுஞ்சாலிகை *kuruñjāligai,* பெ.(n.) சாலிமரம்; arrow thorn tree (சா.அக.).

[குறும் + சாலிகை.]

குறுஞ்சிரிப்பு *kuruñ-cirippu,* பெ.(n.) புன்சிரிப்பு; smile.

[குறும் + சிரிப்பு.]

குறுஞ்சிலைக்கல் *kuruñ-cilai-k-kal,* பெ.(n.) ஈரக்கல் (சங்.அக.); red stone.

[குறும் + சிலை + கல்.]

குறுஞ்சீட்டு *kuru-ñ-cīṭṭu,* பெ.(n.) குடத்தில் இட்டுக் குலுக்கியெடுக்கும் சீட்டு; chits cast into a pot and taken at random.

[குறும் + சீட்டு.]

குறுஞ்சீர்வண்ணம் *kuruñ-cīr-vaṇṇam,* பெ.(n.) குற்றெழுத்துப் பயின்றுவரும் சந்தம் (தொல். பொருள்.533); (Pros.) a rhythem effect by using only short syllables.

[குறும் + சீர் + வண்ணம்.]

குறுஞ்சுருட்டை *kuruñ-curuṭṭai,* பெ.(n.) சுருட்டைப் பாம்பிற் சிறிய இனவகை; variety of echis carinata, short carpet snake, as being the smallest.

[குறும் + சுருட்டை.]

குறுஞ்சூலி *kuruñ-cūli* பெ.(n.) ஒருவகைப் பூடு (நன். 259, மயிலை.); a kind of shrub.

[குறும் + சூலி.]

குறுணல் *kuruṇal,* பெ.(n.) குறுநொய் (வின்.); broken rice, bruished grain, grit.

[குறுநொய் → குறுணை → குறுணல்.]

குறுணி *kuruṇi,* பெ.(n.) எட்டுப்படி கொண்ட தவச அளவு; a grain measure = 1 *marakkāl* or 8 measures (ங).

[குறு → குறுணி.]

குறுணிப்பாடு *kuruṇi-p-pāḍu,* பெ.(n.) குறுணி விதைப்பாடுள்ள நிலம்; land requring one *kuruṇi* of paddy to sow it.

[குறுணி + பாடு.]

குறுணை *kuruṇai,* பெ.(n.) குறுநொய்; broken rice, grit.

மறுவ. குறுநொய், குருணல்

[குறு + நொய்.]

குறுத்தவன் *kuruttavaṉ,* பெ.(n.) குள்ளன் (யாழ்.அக.); dwarf.

[குறு → குறுத்தவன்.]

குறுந்தட்டி *kurun-taṭṭi,* பெ.(n.) குறுந்தொட்டிச்செடி; a plant (சா.அக.).

[குறுந்தோட்டி → குறுந்தட்டி.]

குறுந்தடி *kurun-taḍi,* பெ.(n.) 1. சிறிய கழி (திவா.); short stick. *"கோழிவெண் முட்டைக் கென் செய்வ தெந்தாய் குறுந்தடி" (திவ். பெரியதி. 10: 9,7).* 2. பறையடிக்குங்கோல்; drum stick. *'கன்றைக் குறுந்தடியாக் கொண்டு' (சிலப். 17, பாட்டு, 1, உரை.).* 3. தாங்குதூண்; supporting pillar.

ம. குறுந்தடி

[குறும் + தடி.]

குறுந்தடிப்பு *kurun-taḍippu,* பெ.(n.) சிறிய தடிப்பு; small raised patches on the surface of the skin (சா.அக.).

[குறும் + தடிப்பு.]

குறுந்தறி *kuru-n-tari,* பெ.(n.) 1. அணிவகையாகச் செய்யப்பெற்ற கற்றூண் (போதிகை); ornamental capital of a column or pillar. 2. சிறு முளை; stake. 3. உத்தரத்தைத் தாங்கும்படி சுவரோடு ஒட்டித் தூண்போல் எழுப்பிய கட்டடம்; blocks built in a wall to support timbers.

[குறும் + தறி.]

குறுந்தாள்[1] *kuru-n-tāḷ,* பெ.(n.) குறுகிய படிக்கட்டு; narrow steps. *"குறுந்தாள் ஞாயில்" (பதிற்றுப். 71: 12).*

[குறும் + தாள்.]

குறுந்தாள்[2] *kuruntāḷ,* பெ.(n.) சிற்றடி; small step (சா.அக.).

[குறும் + தாள்.]

குறுந்தாளி *kuru-n-tāḷi,* பெ.(n.) சிறுதாளி ; hairy leaved creamy-white bind weed.

[குறும் + தாளி.]

குறுந்திரட்டு *kuru-n-tiraṭṭu,* பெ.(n.) தத்துவராயர் தொகுத்த ஒரு வேதாந்த நூல்; an anthology by *Tattuva-rāyar,* treating of *Vēdānta,* dist-fr. *Peru-n-tiraṭṭu.*

ம. குறுந்திரட்டு (கணக்குச் சுருக்கம்)

[குறும் + திரட்டு.]

குறுந்துழாய் *kuru-n-tuḻāy,* பெ.(n.) குறுந்துளசி (மலை.); a small species of basil.

மறுவ. குறுந்துளசி

[குறுமை + துழாய்.]

குறுந்துளசி *kuruṉ-tuḷasi,* பெ.(n.) சிறுதுளசி (மலை.); a small species of basil.

[குறும் + துளசி.]

குறுந்தேங்காய் *kuṟuṉ-tēṅgāy,* பெ.(n.) சிறு தேங்காய் போல் தோற்றமளிக்கும் ஒருவகைப் பழம்; a fruit resembling a small coconut.

[குறும் + தேங்காய்.]

குறுந்தை *kuṟundai,* பெ.(n.) பூவன் வாழை; royal banana (சா.அக.).

[குறு → குறுந்தை.]

குறுந்தொகை *kuṟu-n-togai,* பெ.(n.) அகப் பொருளைப் பற்றியதும் அகவற்பாக்கள் 402 கொண்டு பூரிக்கோ என்பவரால் தொகுக்கப் பெற்றதும், எட்டுத் தொகையில் சேர்ந்ததுமாகிய ஒரு நூல்; an ancient anthology of Tamil stanzas 402 in number, compiled by *Pūrikō* treating of *aga-p-poruḷ,* one of *eṭṭu-t-togai.* *"நற்றிணை நல்ல குறுந்தொகை"* *(புறநா. முகவுரை. ப.1).*

[குறும் + தொகை.]

குறுந்தொகை நானூறு *kuṟu-n-togai-nāṉūṟu,* பெ.(n.) ***குறுந்தொகை*** பார்க்க (இறை.பாயி.பக்.5); see *kuṟuntogai.*

[குறுந்தொகை + நானூறு.]

குறுந்தொட்டி *kuṟu-n-toṭṭi,* பெ.(n.) 1. சிற்றாமுட்டி; rose-coloured sticky mallow. 2. சிறுகாஞ்சொறி (மலை.); small climbing nettle.

ம. குறுந்தோட்டி

[குறும் + தொட்டி.]

குறுந்தொடி *kuṟu-n-todi,* பெ.(n.) சிறு வளையலைப் பூண்ட பெண்; maiden wearing small bracelets. *"தொடலைக் குறுந்தொடி" (குறள், 1135).*

[குறும் + தொடி.]

குறுந்தோட்டி *kuṟuṉ-tōṭṭi,* பெ.(n.) சிறிய அங்குசம்; short goad, dist, fr. *neḍu-n-tōṭṭi.* *'குறுந்தோட்டி யையும் நெடுந்தோட்டியையும் தம்மிற் பிணைத்து' (சீவக, 1835, உரை).*

[குறும் + தோட்டி.]

குறுநகை *kuṟu-nagai,* பெ.(n.) புன்சிரிப்பு; smile. *"குருபரன்.... குறுநகை கொண்டு கூறும்" (பிரபுலிங். வசவண்ணர்கதி, 30).*

[குறுமை + நகை.]

குறுநடை *kuṟu-naḍai,* பெ.(n.) குழந்தை நடை; child's walk. 2. சிறுக அடி வைத்து நடக்கும் தளர் நடை; a short walk with a short pace, as of children for pleasure (சா.அக.). *"குதலைச் செவ்வாய் குறுநடைப் புதல்வர்க்கு" (மணிமே.7:57).*

[குறு + நடை.]

குறுநடைகொள்ளல் *kuṟunaḍai-koḷḷal,* பெ.(n.) நோயாளிகள் அல்லது நலிந்தோர் (பலவீனர்கள்) சிறுக அடி வைத்து சிறிது தொலைவு செல்லல்; taking a short walk with a short pace, as of patients or convalescents (சா.அக.)

[குறு + நடை + கொள்ளல்.]

குறுநண்டுக்கால்வெட்டு *kuṟunaṇḍu-k-kālveṭṭu,* பெ.(n.) பழைய நாணய வகை (பணவிடு.136); an ancient coin.

[குறு + நண்டுக்கால் + வெட்டு.]

குறுநணி *kuṟu-naṇi,* பெ.(n.) மிக்க அணிமை; close proximity. *"நம்முட் குறுநணி காண்குவ தாக" (புறநா. 209:15).*

[குறுமை + (நண்ணு) நணி.]

குறுநர் *kuṟunar,* பெ.(n.) களை முதலியன பறிப்போர்; pluckers, as of weeds. *"குறுந ரிட்ட குவளை" (சிலப். 10:86).*

[குறு (பறித்தல்) → குறுநர்.]

குறுநரி *kuru-nari,* பெ.(n.) குள்ளநரி; fox. *"ஏதில் குறுநரி பட்டற்றால்" (கலித்.65).*

ம. குறுநரி

[குறு + நரி.]

குறுநறுங்கண்ணி *kuru-naru-n-kanni,* பெ.(n.) குன்றிமணிப்பூ ; crab's eye flower. *"குரீஇப் பூளை குறுநறுங் கண்ணி" (குறிஞ்சிப். 72).*

மறுவ. குன்றிப்பூ

ம. குறுநறுங்கண்ணி

[குறும் + நறும் + கண்ணி.]

குறுநாத்தகடு *kuru-nā-t-tagadu,* பெ.(n.) பொன் போல் ஒளிரும் மெல்லிய தகடு; foliated tinsel.

மறுவ. குறுந்தகடு

[குறு + நாகம் + தகடு - குறுநாகத்தகடு → குறுநாத்தகடு. நாகம் = துத்தநாகம்.]

குறுநாப்பட்டை *kuru-nā-p-pattai,* பெ.(n.) ***குறுநாத் தகடு*** பார்க்க; see *kurunāt-tagadu.*

[குறு + நாகம் + பட்டை]

குறுநிகழ்ச்சி *kuru-nigalcci,* பெ.(n.) ஏழுசெங்கழு நீரிதழை ஒரு குறட்டிலடுக்கி வலுவுள்ளவன் ஒருவன் மிகவும் கூரியதோருளி வைத்துக் கூடமிட்டுப் புடைத்தால் ஆறாம் புரையற்று, ஏழாம் புரையிற் செல்லுதற்கு வேண்டும் மிக நுண்ணிய அளவுள்ள காலம்; short duration of time taken by a sharp chisel to pass from the sixth lotus leaf to the seventh in a bunch of seven lotus leaves placed on a stone when the chisel is forcibly thrust into it by a strong man, opp to *nedunigalcci.* ***"கணிகமெனுங் குறுநிகழ்ச்சியும்" (மணிமே.27:191).***

[குறுமை + நிகழ்ச்சி.]

குறுநிலமன்னன் *kuru-nila-mannan,* பெ.(n.) சிற்றரசன் (பிங்.); petty, tributary chief.

ம. குறுநிலமன்னன்

[குறுநிலம் + மன்னன்.]

குறுநிலைவழக்கு *kuru-nilai-valakku,* பெ.(n.) குழூஉக்குறி வழக்கு (நேமி.சொல்.10,உரை); terms peculiar to any class; conventional terms.

[குறுநிலை + வழக்கு.]

குறுநெளிப்பு *kuru-nelippu,* பெ.(n.) போலிப்பு நகையாட்டுக்காக (கேலியாக) உடலை நெளித்துக் காட்டுகை (யாழ்.); affected twisting of the body, as in mimicry.

[குறு + நெளிப்பு.]

குறுநெறி *kuru-neri,* பெ.(n.) குறுகிய மயிர் நெறிப்பு; wave of curls of hair. *"குறுநெறிக் கொண்ட கூந்தல்" (பெரும்பாண்.162).*

ம. குறுநிற

[குறு + நெறி.]

குறுநை *kuru-nai,* பெ.(n.) ***குறுநொய்*** பார்க்க; see *kurunoy.*

[குறுநொய்→குறுநை.]

குறுநொய் *kuru-noy,* பெ.(n.) அரிசி முதலிய வற்றின் சிறுநொய்; broken rice, bruised grain, grit.

மறுவ. குருணை

[குறு + நொய்.]

குறுநோவு *kuru-nōvu,* பெ.(n.) உடலின் கழிவு; bodily secretiod (சா.அக.).

[குறு + நோவு.]

குறுப்பாலை *kuruppālai,* பெ.(n.) 1. சிறுபாலை; small paulay of the mimusops genus. 2. புத்திர சீவி; grey barked nageia (சா.அக.).

[குறு + பாலை.]

குறுப்பி *kuruppi,* பெ.(n.) பொன்னிமிளை; ஒரு pyrites (சா.அக.).

[குறு → குறுப்பி.]

குறுப்பிகம் *kuruppigam,* வெண்கொய்யா; white guava (சா.அக.).

[குறு → குறுப்பிகம்.]

குறும்படி *kuru-m-padi,* பெ.(n.) வாசற்படி; threshold, sill. *நிலையும் குறும்படியும் (இ.வ.).*

[குறும் + படி.]

குறும்படை *kurum-padai,* பெ.(n.) கோட்டை; fort *"குறும்படை மழவர்" (அகநா.35).*

[குறும்பு + அடை.]

குறும்பர் *kurumbar,* பெ.(n.) 1. குறுநிலமன்னர்; petty chieftains. *"குறும்பருங் குழீஇய" (பெருங். உஞ்சைக். 43: 55).* 2.ஒரு பழமையான குடியினர்; an aboriginal tribe. 3. வேடர்; hunters, those who live by chase. *"கோண்டரு குறும்பர் வெம்போர்" (சீவக. 1079).* 4. இடையருள் முரட்டுக் கம்பளி நெய்யும் ஒரு பிரிவினர்; a caste of shepherds who weave coarse blankets. 5. பள்ளருள் ஒரு பிரிவினர் (G.J.D.i.90); a subdivision of the *Palla* caste.

ம. குறும்பன்; க. குறுப; தெ. குருப; து. குருபி.

[குறும்பு → குறும்பர். குறும்பு = சிறுகுன்றம், காடு, வலிய கோட்டை.]

குறும்பர் கோட்டம் *kurumbar-kottam,* பெ.(n.) குறும்பரின் கோட்டை(வின்.); stronghold of the *Kurumbas.*

[குறும்பர் + கோட்டம்.]

குறும்பலா *kurum-pala,* பெ.(n.) 1. ஒருவகைக் கூழைப்பலாமரம்; a kind of short jack tree. 2. திருக்குற்றாலத்திலுள்ள சிவாலயம்; Siva shrine at *Thirukkurralam. "குறும்பலா மேவிய கொல்லேற் றண்ணல்" (தேவா. 911:11).*

[குறும் + பலா.]

குறும்பறை *kuru-m-parai,* பெ.(n.) பறவைப்பேடு; hen, female of the feathered kind as probably short in stature. *"குறும்பறை யசைஇ" (புறநா. 67:9)*

[குறும் + பறை.]

குறும்பன் *kurumban,* பெ.(n.) 1. குறும்பு; mischief. 2. குறும்புக்காரன்;mischief maker.

ம. குறும்பன்; க. குறும்புகார.

[குறும்பு + அன்.]

குறும்பனைநாடு *kurum-panai-nadu,* பெ.(n.) முற்காலத்தில் குமரிக்குத் தெற்கே கடல் கொள்ளப்பட்ட தமிழ்நாட்டுப் பகுதிகளுள் ஒன்று; an ancient province of the Tamil land believed to have been submerged by sea of kumari. *'ஏழ்குறும்பனை நாடும்' (சிலப். 8.1 உரை.)*

[குறும் + பனை + நாடு.]

குறும்பாட்டம் *kurumbattam,* பெ.(n.) குறும்புத்தனம்; vileness, wickedness, mischievousness.

[குறும்பு + ஆட்டம்.]

குறும்பாடு[1] *kurumbadu,* பெ.(n.) குறும்பாட்டம்; wickedness. *"குறும்பாட்டையு மோதிடும்" (அழகர் கல.41).*

[குறும்பு + ஆடு.]

குறும்பாடு[2] *kurumbadu,* பெ.(n.) ஒருவகை ஆடு; short, woolly sheep with twisted horns. *"குறும்பாட்டை மோதிடும்" (அழகர்கல.41).*

[குறும்பு (குன்றம்) + ஆடு.]

குறும்பி *kurumbi,* பெ.(n.) 1. காதுள் அழுக்கு; ear wax. *"உள்ளுங் குறும்பி யொழுகுங் காதை" (பட்டினத். திருப்பா. கச்சித்திருவகவல், வரி 37).* 2. மலம், சிறுநீர் முதலியன. excretion of the body, as urine and faeces *"குறும்பி யூர்வதோர் கூட்டகத் திட்டு" (தேவா. 370:6).*

ம. குரும்பி

[குல் → குறு → குறும்பு → குறும்பி.]

குறும்பிடி *kuṟum-piḍi,* பெ.(n.) 1. சிறுகைப்பிடி; a very short handle. 2. உடைவாள்; short scimitar. *"குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடி" (மதுரைக் 637).*

[குறும் + பிடி.]

குறும்பி முடங்கு-தல் *kuṟumbi-muḍaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) காதில் அழுக்குச் சேர்தல்; collection of the ear-wax. (சா.அக.).

[குறும்பி + முடங்கு-.]

குறும்பிவாங்கி *kuṟumbi-vāṅgi,* பெ.(n.) காதுக் குறும்பி எடுக்குங் கருவி; ear pick.

[குறும்பி + வாங்கி.]

குறும்பிவாங்கு-தல் *kuṟumbivāṅgu-,*5 செ.குன்றாவி. (v.t.) காது அழுக்கை நீக்கல்; cleaning the dirt of the ear (சா.அக.).

[குறும்பி + வாங்கு-.]

குறும்பின்மை *kuṟumbiṉmai,* பெ(n.) துன்பம் விளைக்கும் குறும்பரசர் இல்லாமையாகிய நாட்டமைதிவகை (பிங்.); freedom from petty troublesome chieftains, as promoting the prosperity of a state.

[குறும்பு + இன்மை.]

குறும்பு[1] *kuṟumbu,* பெ.(n.) 1. குன்றம்; hill. 2. பாலை நிலத்தூர் (பிங்.); village in a desert tract.

[குன்றம் → குறம் → குறும்பு.]

குறும்பு[2] *kuṟumbu,* பெ.(n.) 1. ஊர் (திவா.); village. 2. குறுநிலமன்னர்; petty chieftains. *"குறும் படைந்த வரண்" (புறநா. 97).* 3. பகைவர்; enemy. *"இருட்குறும் பெறியும் வெய்யோன்" (கூர்மபு. பதிக. 10).* 4. அரண்; stronghold. *"குறும்பல் குறும்பிற் றதும்ப வைகி" (புறநா. 177).* 5. வலிமை; strength, power. *"அரவுக் குறும்பெறிந்த சிறுகட் டீர்வை" (மலைபடு. 504).* 6. தென்னாட்டிலுள்ள தொன்மையான மக்களுள் ஒரு பிரிவினர்; a class of tribes supposed to form a part of the aborigines of South India, divided into. காட்டுக்குறும்பு, நாட்டுக்குறும்பு. 9. போர்; battle, fight, war.

[குல் → குறு (குற்றுதல், தாக்குதல், வலிமை) → குறும்பு.]

குறும்பு[3] *kuṟumbu,* பெ.(n.) 1. போக்கிரித் தனம்;wickedness. 2. நையாண்டி, வசை;mischief. 3. தொல்லை; obstinacy. 4. துடுக்குத்தனம்; insolvence.

ம., க. குறும்பு

[குறு → குறும்பு.]

குறும்பு[4] *kuṟumbu,* பெ.(n.) 1. சிறிய துணுக்கு; small pieces, as tobacco. *"புகையிலைக் குறும்பு" (இ.வ.).* 2. அழுக்கு; dirt.

ம. குறும்பல்

[குல் → குறு → குறும்பு.]

குறும்புக்காரன் *kuṟumbu-k-kāraṉ,* பெ.(n.) குறும்பு செய்பவன்; mischief maker.

க. குறும்பு கார

[குறும்பு + காரன்.]

குறும்புத்தனம் *kuṟumbu-t-taṉam,* பெ.(n.) குறும்பு செய்தல்; wickedness, mischief.

[குறும்பு + தனம்.]

குறும்புவன்னியன் *kuṟumbu-vaṉṉiyaṉ,* பெ.(n.) வன்னியருள் ஒருவகையார் (வின்.); a sub-caste of *Vaṉṉiya* tribe.

[குறும்பு + வன்னியன்.]

குறும்புழை *kuṟum-puḻai,* பெ.(n.) சிறிய வாயில்; trap-door, small entrance. *"குறும்புழை போயினன்" (பெருங். உஞ்சைக். 36: 371).*

[குறுமை + புழை.]

குறும்புள் *kurum-pul,* பெ.(n.) காடை; quail (சா.அக.).

[குறும் + புள்.]

குறும்பூழ் *kurum-pūl,* பெ.(n.) பெ.(n.) காடை; quail *"குறும்பூழ்போற் கொழுங்கான் முகை சுமந்தன" (சீவக. 1651).*

[குறுமை + பூழ்.]

குறும்பெறி-தல் *kurum-beri-,* 2 செ.குன்றாவி. (v.t.) காவலோடு இருந்த பகைவரின் சிற்றூரினை அழித்தல், தொல்லை தரும் பகைக்குழுவினை அழித்தல்; to destroy the settlement of the enemy, to destroy enemy force. *"காவேரிக்கு வடகரையில் கஞ்சனூரகத்திலே விட்டுக் கொடு இருந்த குறும்பெறிந்து நிரைகொண்ட ஆடும், மாடும் எருமையும் கிடாவும்" (தெ.இ.கல்.தொ.VIII: 284:6,7).*

[குறும்பு + எறி-.]

குறும்பொறி *kurum-pori,* பெ.(n.) ஒட்டியாணம் girdle; sash. *"குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்" (திருமுருக. 213).*

[குறும் + பொறி.]

குறும்பொறை *kurum-porai,* பெ.(n.) 1. சிறுமலை (பிங்.); hillock. *"வரையக நண்ணிக் குறும்பொறை நாடி" (பதிற்றுப். 74:7).* 2. குறிஞ்சிநிலம் (பிங்.); the hilly tract. 3. குறிஞ்சிநிலத்தூர் (பிங்.); town in a hilly tract. 4. காடு; forest, jungle *"குருந்தவிழ் குறும்பொறை" (நற். 321).*

[குறும் + பொறை. பொறை = கற்பாங்கான மலை.]

குறும்பொறைநாடன் *kurum-porai-nādan,* பெ.(n.) முல்லைநிலத் தலைவன் (இறை. 1,18); chief of the Sylvan tract.

[குறும்பொறை + நாடன்.]

குறும்போக்கு *kuru-m-pokku,* பெ.(n.) யாழ் மீட்டும் முறைகளுள் ஒன்று (சீவக. 657, உரை.); a mode of playing on the lute.

[குறும் + போக்கு.]

குறும்போது *kurum-pōdu,* பெ.(n.) மலரும் பருவமுள்ள அரும்பு (பெருங். இலாவாண. 15,21); bud about to blossom.

[குறும் + போது.]

குறும்விரியன் *kurum-viriyan,* பெ.(n.) குட்டையான விரியன்; short viper of the viperidae genus (சா.அக.).

[குறும் + விரியன்.]



குறும்விரியன்

குறுமக்கள் *kuru-makkal,* பெ.(n.) சிறுபிள்ளைகள் (சூடா.); children, youngsters.

மறுவ. குறுமாக்கள்

ம. குறுமர், குறுமாரு.

[குறுமை + மக்கள்.]

குறுமகள் *kuru-magal,* பெ.(n.) 1. இளம்பெண்; girl, young woman. *"வண்டிமிர் சுடர்நுதற் குறுமகள்" (ஐங்குறு. 254).* 2.மனைவி; wife. *"மெல்லியற் குறுமகள்" (புறநா. 196:14).*

[குறுமை + மகள்.]

குறுமடல் *kuru-madal,* பெ.(n.) திருநீறு வைக்கும் சிறிய மடல்; small receptacle for sacred ashes. *"குறுமடல் ஒன்று பொன் இருபதின் கழஞ்சரை" (S.I.I. II, 144).*

[குறும் + மடல்.]

குறுமண்பூமி *kuruman-būmi,* பெ.(n.) இளகிய மண்தன்மையுடைய நிலம் (கட்.தொ.வரி.);ground with fine loose soil.

[குறு + மண் + பூமி.]

குறுமணல் *kuru-manal,* பெ.(n.) வெள்ளி கலந்த மணல்; sand containing minute particles of silver.

[குறும் + மணல்.]

குறுமல் *kurumal,* பெ.(n.) பொடி (பிங்.); powder.

ம. குறும்பல்

[குறு → குறுமு → குறுமல்.]

குறுமாக்கள் *kuru-mākkal,* பெ.(n.) சிறு பிள்ளைகள்; children. *"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்" (புறநா.94).*

மறுவ. குறுமக்கள்

ம. குறுமார், குறுமாரு.

[குறுமை + மாக்கள்.]

குறுமாந்தம் *kuru-māndam,* பெ.(n.) குழந்தை நோய்வகை (ஆங்.மருந்.); croup.

[குறும் + மாந்தம்.]

குறுமாடி *kuru-mādi,* பெ.(n.) வீட்டின் முகட்டுறுப்பு (கட்.தொ.வரி.); portico.

[குறு + மாடி.]

குறு மீன் *kuru-mīn,* பெ.(n.) பொடி மீன்; small fish (அயிரை) (சா.அக .).

ம. குறுமீன்

[குறு + மீன்.]

குறுமுட்டன் *kuru-muttan,* பெ.(n.) முரடன் (வின்.); one daringly insolent, brute, savage.

[குறுமுட்டு → குருமுட்டன்.]

குறுமுட்டான வேலை *kuru-muttāna-vēlai,* பெ.(n.) வேண்டிய கருவிகளின்றிச் சுருக்கமாகச் செய்யப்படும் வேலை; work on a very small scale with insufficient materials.

[குறுமுட்டு + ஆன + வேலை.]

குறுமுட்டு *kuru-muttu,* பெ.(n.) 1. அளவு கடந்த செருக்கு; gross insolence, impertinence. 2. ஒரு தொழிலைச் செய்யாமலே சுணக்கமாயிருந்து இறுதியில் முடித்தற்கு விரையும் விரைவு; great urgency, as for business put off until the last moment. 3. ஒடுக்கம்; narrowness, closeness. 4. வலுக்கட்டாயம்; coercion, compulsion. 5. திடீரென்று எதிர்ப்படுகை; sudden encounter, as at a corner.

[குறு + முட்டு.]

குறுமுடிகுடி *kuru-mudi-kudi,* பெ.(n.) சிற்றரசுரிமையுடைய குலம்; family of petty chiefs. *'குறுமுடி குடிப்பிறந்தோர் முதலியோருமாய்' (தொல். பொருள்.50. உரை.).*

[குறு + முடி + குடி.]

குறுமுத்து *kuru-muttu,* பெ.(n.) பிறப்பிலேயே வடிவில் சிறியதாக அமைந்த முத்து; a diminutive pearl. *"ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாத புஷ்பமாக அட்டித் திருவடி தொழுத ஒப்பு முத்தும், குறுமுத்தும்" (தெ.கல்.தொ.2. கல்.59).*

[குறு + முத்து.]

குறுமுயல் *kuru-muyal,* பெ.(n.) ***குழிமுயல்*** பார்க்க; see *kuli-muyal.*

[குறு + முயல்.]

குறுமுள்ளி *kuru-mulli,* பெ.(n.) கொட்டைக்களா; small sweet thorn (சா.அக.).

[குறு + முள்ளி.]

குறுமுறுவல் *kuru-muruval,* பெ.(n.) புன்சிரிப்பு; smile.

[குறு + முறுவல்.]

குறுமுனி *kuṟu-muṉi,* பெ.(n.) குறுமுனிவன் அகத்தியன்; sage Agattiya. *"அகப்பொரு ளமுதினைக் குறுமுனி தேறவும்" (கல்லா. 62:20).*

ம. குறுமுனி

[குறு + முனி.]

குறுமுனிவன் *kuṟu-muṉivaṉ,* பெ.(n.) அகத்தியன் (குறுகிய வடிவுடையவன்); lit. dwarfish sage, Agastya. *"படிநேர் நிறுவவரு குறுமுனிவன்" (சேதுபு. நாட்டுப்.1).*

[குறு + முனிவன்.]

குறுமூச்சு *kuṟu-mūccu,* பெ.(n.) திணறின மூச்சு (இ.வ.); hard breathing.

[குறு + மூச்சு.]

குறுமை *kuṟumai,* பெ.(n.) 1. குறுகிய தன்மை; shortness, brevity, conciseness. *"குறுமையாய் நெடுமையாகி" (கர்சிக.ஓங்காரவிலிங். 22).* 2. குள்ளம்; dwarfishness, low stature. 3. குறைவு; defectiveness, imperfection. *"ஒருதான் மண்டிய குறுமையும்" (தொல். பொருள். 67).* 4. அண்மை (பட்டினப்.28); nearness, closeness, proximity.

ம. குறும்; க. குறுசு; தெ. கொர, கொறுவ; து. கொறதெ; கோத. கொர்வ்; துட. க்வர்சில்; குட. கொறு, கொறவு.

[குறு + மை.]

குறுமொழி *kuṟu-moḻi,* பெ.(n.) கொச்சை வழக்கு; slang.

[குறு + மொழி.]

குறுமொழிக்கோட்டி *kuṟu-moḻi-k-kōṭṭi,* பெ.(n.) பிறரை இகழ்ந்து நகையாடுதலையே பொழுது போக்காகவுடைய கீழ்மக்கள்கூட்டம்; band of riff-raffs who spend their time in mocking and reviling others. *"குறுமொழிக் கோட்டி நெடு நகைபுக்கு" (சிலப். 16:64).*

[குறு + மொழி + கோட்டி.]

குறுவஞ்சி *kuṟu-vañji,* பெ.(n.) படையெடுத்து வந்த பெருவேந்தனுக்குச் சிறுவேந்தன் பணிந்து திறை கொடுத்துத் தன் குடிகளைப் புரக்கும் புறத்துறை (பு.வெ.3,17); (Purap.) theme of a petty king securing the welfare of his kingdom by paying tri bute to an invading monarch.

[குறு + வஞ்சி.]

குறுவட்டம் *kuṟu-vaṭṭam,* பெ.(n.) குறுக்களவு (கணக்கதி); diameter.

[குறு + வட்டம்.]

குறுவளை *kuṟu-vaḷai,* பெ.(n.) கடல்மீன்வகை; a sea-fish, greenish.

ம. குறுவல

[குறு + வளை.]

குறுவா *kuṟuvā,* பெ.(n.) வரிக்கற்றலை மீன்; a sea-fish.

[குறு + வாய் – குறுவாய் → குறுவா.]

குறுவால் *kuṟu-vāl,* பெ.(n.) இச்சி மரம்; joined ovate leaved fig.

[குறு + ஆல்.]

குறுவாழ்க்கை *kuṟu-vāḻkkai,* பெ.(n.) 1.ஏழைமை (திவா.); poverty. 2. சின்னஞ்சிறு கால இன்பம்; short-lived enjoyment.

[குறுமை + வாழ்க்கை.]

குறுவியர் *kuṟu-viyar,* பெ.(n.) குறுவேர்வை; slight perspiration. *"குறுவியர் பொடித்த கோலவாண் முகத்தள்" (மணிமே. 18:40).*

[குறு + வியர்.]

குறுவிரியன் *kuru-viriyaṉ,* பெ.(n.) விரியன் பாம்பிற் சிறியவகை (M.M.); short viper.

[குறு + விரியன்.]

குறுவிலை *kuru-vilai,* பெ.(n.) பண்டங்கள் விலைக்கு அரிதாகக் கிடைத்தல் (வின்.); scarcity, dearth.

[குறு + விலை.]

குறுவிழிக்கொள்[1] (ளு)-தல் *kuru-viḻi-k-koḷ,* 21 செ.கு.வி.(v.i.) இதழ்குவிதல்; to close, as eye-lids, flowers. *"குவளை யஞ்சிக் குறுவிழிக் கொள்ளும் வாட்கண்" (சீவக. 2998).*

[குறு + விழி + கொள்.]

குறுவிழிக்கொள்[2](ளு)-தல் *kuru-viḻi-k-koḷ-,* 21 செ.கு.வி.(v.i.) அரைக்கண்ணாற் பார்த்தல் ; to see with eyes half-closed. *"குறுவிழிக் கொண்டு வந்தார் போனார் நிழலாட்டம் பார்த்துக் கொண்டு கிடக்கையாலே"(திவ்.பெரியாழ்.2:5:3, வ்யா.பக். 340).*

[குறு + விழி + கொள்.]

குறுவிழிவிழி-த்தல் *kuru-viḻi-viḻi-,* 4 செ.கு.வி. (v.i.) வெகுளி, அச்சம் முதலியவற்றால் வெறித்துப் பார்த்தல்; to stare, look intently through anger or fear.

[குறு+ விழி-.]

குறுவீற்று *kuru-vīṟṟu,* பெ.(n.) அடுத்தடுத்து ஈனும் பசு; cow that calves frequently.

[குறு + ஈற்று. ஈன் → ஈன்று → ஈற்று.]

குறுவெண்பாட்டு *kuru-veṇ-pāṭṭu,* பெ.(n.) இரண்டடியானும் மூன்றடியானும் வரும் அளவடிக்குரிய பாட்டு (இளம்.தொல்.செய்.114). (உரை.சொ.களஞ்.); verse with stanza each of two or three lines.

[குறு + வெண் + பாட்டு.]

குறுவெறும்பு *kuru-v-eṟumbu,* பெ.(n.) பெரிய சிவப்பெறும்பு; a large red ant (சா.அக.).

[குறு + எறும்பு. குறு - சிவப்பு.]

குறுவேர் *kuru-vēr,* பெ.(n.) ஒருவகை நறுமணவேர்(M.M.225); black cuscus grass.

[குறு + வேர்.]

குறுவேர்வை *kuru-vērvai,* பெ.(n.) அச்சம் முதலியவற்றால் சிறிதாகத் தோன்றும் வியர்வை; slight perspiration through fear or any strong emotion. *"முகங் குறுவேர் பொடித்த வாறும்" (திருவாச. 6:57).*

[குறு + வேர்வை.]

குறுவை *kuruvai,* பெ.(n.) 1. விடை மாதத்தில் (வைகாசியில்) விதைத்து இரண்டு மாதத்தில் அறுவடையாகும் கறுப்பு நெல்வகை; a dark species of paddy sown in vaikāci, and reaped in two months. 2. மூன்று மாதத்தில் பயிராகும் ஒருவகைச் செந்நெல்; an inferior reddish paddy, maturing in three months.

ம. குறுவ, குர்வ்வ.

[குறு → குறுவை.]

குறுவைக்கிளையான் *kuruvai-k-kiḷaiyāṉ,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy. *"மட்டுப்படாத குறுவைக்கிளையான்" (நெல்விடு.180).*

[குறுவை + கு + இளையான்.]

குறுவைநோவு *kuruvai-nōvu,* பெ.(n.) கால்நடைகட்குத் தொண்டையில் உண்டாகும் நோய்வகை; malignant sore throat, a disease of cattle.

[குறுவை + நோவு.]

குறுவைமிளகாய்நெல் *kuruvai-miḷagāy-nel,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[குறுவை + மிளகாய் + நெல்.]

குறை[1]-தல் *kuṟai-,* 2 செ.கு.வி.(v.i.) 1. சிறுகுதல்; to diminish, decrease, wane, divindle, decline. *"மன்னுயிர் கண்முற்று நாடொறுங் குறைந்த*

வன்றே" *(கந்தபுமேரு.28).* 2. மதிப்பு, இடம், பொருள், ஏவல் முதலியவற்றால் தாழ்தல்; to be reduced, in value, in estimation, in circum-stances,in rank *அவன் பெருமை குறைந்து விட்டது.* 3. பற்றாமற் போதல்; to be wanting, to prove insufficient, to be short,in weight, measure, or number. பொருள் வாங்கக் கையிற் பணம் குறைவாயுள்ளது. 4. அரைகுறையாதல்; to be inperfect, unfinished, defective, deficient. இதுகுறை வேலை. 5. விலையேறும்படி பண்டம் அருகுதல்; to be dear, difficult of attainment, scarce. 6. எழுத்துக் கெடுதல்; (Gram.) to be dropped, elided, as a letter. *"ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே"* *(நன்.156).* 7. வருத்தி உயிரொடுங்குதல்; to droop in affliction. *"கணவன் குறையக் குறைவாள்"* *(கம்பரா. நகர்நீங்.53).* 8. குறைவுற்று வருந்துதல்; to languish from worries. *"நாளுமிகும் பணிசெய்து குறைந்தடையு நன்னாளில்"* *(பெரியபு. திருநாவு. 45).* 9. துணிவு குன்றுதல்; to lose courage. *"அரிகுரலோசை யஞ்சி.... ஆனை குறையு மனமாகி"* *(தேவா. 883:9).* 10. வெட்டப்படுதல்; to be cut off. *"கையுறிற் கால்குறையும்"* (நாலடி. 84). 11. தோல்வியுறுதல்; to suffer, defeat. *"எத்தனை போரிடைக் குறைந்தான்"* *(கம்பரா. யுத். மந்திரப் 112).* 12.அழிதல்; to be ruined, destroyed. *"அன்னார் குறைவது சரதம்"* *(கம்பரா. நிந்தனை, 56).*

Fin. kerita; **EO.** kere; **Mordvin.** ker; **Hung.** ker; **Mong.** kerei; **Q.** guru.

[குறை → குறைதல்.]

குறை²-த்தல் *kuṟai-*, 4 செ.குன்றாவி (v.i.) 1. சுருக்குதல்; to lessen, shorten, curtail. செலவைக் குறைத்தான். 2. தறித்தல்; to cut, fell, hew down, *"மாந்தர் குறைக்குந் தனையும் குளிர் நிழலைத் தந்து மறைக்குமாங் கண்டீர் மரம்"* *(வாக்குண்.30).* 3. அறுத்தல்; to reap, as a crop. *"கதிர்ச்சாலி குறைக்குநர்"* *(காஞ்சிப்பு. இருபத்.60).* 4. அராவுதல்; to file. *"இருப்பரங் குறைத்திடும் எஃகவேல்"* *(கந்தபு. கடவுள் 12.).* 5. முகத்தல்; to draw, as water. *'மேகந்தான் அதனைக் குறைத்து அதன்கட் பெய்யாது விடுமாயின்'* (குறள்.17, உரை).

[குறை → குறைத்தல்.]

குறை³ *kuṟai*, பெ.(n.) 1. குறைபாடு; deficiency, imperfection, want, default. *"குறைதவிர் நிலைமையாற் குயிற்றுஞ் சாலையுள்"* *(கந்தபு. வரைபுனை.20).* 2. குற்றம்; fault, defect, flaw. *"என்பாற் குறையை நினைந்து மறாது"* *(தஞ்சைவா. 388).* 3.வறுமை (பிங்.); indigence, poverty. 4. எஞ்சியது; complement, balance, arrears, remainder. *"நிறைதவத்தின் குறை முடித்து"* *(கம்பரா. சூர்ப்ப. 114).* 5. மனக்குறை; dissatisfaction, grievance. *"என்னகுறை நமக்கே"* *(திவ்.திருவாய். 6:4,1).* 6.நேர்த்திக்கடன்; vow requiring fulfilment. *திருப்பதிக்குக் குறை செலுத்தப்போனேன்.* 7. இன்றியமையாப் பொருள்; that which is indispensable. *"வினைக்குறை தீர்ந்தாரின்"* *(குறள். 612).* 8. காரியம்; business that has to be done. *"கொற்றநீ கொடுக்கல் வேண்டுங் குறையென"* *(சீவக.1647).* 9. வேண்டுகோள்; request. *"எம்மனந் தெளியக் காட்டுதல் குறையென"* *(பெருங். மகத. 5.37).* 10. வேண்டுவது; needs *"உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறின்"* *(குறள்,680).* 11. துண்டம்; piece, section. *"கருப்புக் குறையும்"* *(சேதுபு. முத்தீர்.18).* 12. ஆற்றிடைக் குறை; small isle, ait in a river. *"குறையெலாஞ் சோலை"* *(கம்பரா. பூக்கொய்.2).* 13. சொல்லின் எழுத்துக் குறை; (Gram.) omission of a letter, as syncope, apocope, aphaeresis. *'கடைக்குறை'* *(நன்.156).* 14. ஆறாம்வேற்றுமை; (Gram). genitive case. *"விளிகுறை யிரண்டையும் விட்ட வேற்றுமை கள்"* *(இலக். கொத். 14).* 15. உண்ணுவதற்குப் பக்குவப்படுத்திய தசை; piece of flesh, as prepared for table. *"வல்லோனட்ட பல்லூன் கொழுங்குறை"* *(பெரும்பாண். 472).* 16. ஒரு தாக்குடைய மிடற்றுப்பாடல் வகை; a kind of vocal music. *"நிறைகுறை தோன்ற"* *(பரிபா. 17:18).* 17. அரசிறை (வின்.); tribute, revenue.

க.கொறெ; தெ.கொடி.

குறைக்கருமம் *kuṟai-k-karumam*, பெ.(n.) முடியாது எஞ்சிய செயல்; unfinished part of a business, affair etc. *"உறுகுறைக் கருமம் உள்ளக மருங்கின்"* *(பெருங். இலாவாண. 10:27).*

[குறை + கருமம்.]

குறைக்காரியம் *kuṟai-k-kāriyam,* பெ.(n.) காரியத்தின் முடியாத பகுதி; unfinished part of business, affair, etc. அரைகுறையாய் இருக்கும் காரியம் (உ.வ.).

[குறை + காரியம்.]

குறைக்கொள்ளி *kuṟai-k-koḷḷi,* பெ.(n.) 1. பாதி வெந்த கட்டை; fire - brand partially consumed. 2. வீடுகளில் தீவைப்பதாகக் கருதப்படும் ஒருவகைப் பேய் (இ.வ.); imp that is believed to set fire to houses.

[குறை + கொள்ளி.]

குறைகண் *kuṟai-kaṇ,* பெ.(n.) குறைந்த பார்வை; short sight (சா.அக.).

[குறை + கண்.]

குறைகண்ணுறங்கு *kuṟai-kaṇṇuṟaṅgu,* 5 செ.கு.வி. (v.i.) 1. கண் செருகல்; sleeping slightly. 2. அரைக்கண் தூக்கங் கொள்ளல்; being half a sleep, sleeping with eyes partially closed.

[குறை + கண் + உறங்கு.]

குறைகரகரப்பு *kuṟai-karakarappu,* பெ.(n.) கரகரவென மெதுவாய்க் கேட்கும் ஓசை; a low creaching noise (சா.அக.).

[குறை + கரகரப்பு.]

குறைகால் *kuṟai-kāl,* பெ.(n.) அங்கப்பழுதுள்ள கால்; defective leg (சா.அக.).

[குறை + கால்.]

குறைகுடம் *kuṟai-kuḍam,* பெ.(n.) கல்வி கேள்விகளால் நிரம்பாதோன்; lit, a pot half-filled with water. A self conceited person, lacking in sound education and good manners, opp. to *niṟai-kuḍam.* அவன் ஒரு குறைகுடம்.

[குறை + குடம்.]

குறைகை *kuṟai-gai,* பெ.(n.) ஊனப்பட்ட சிறுகை; deformed short arm (சா.அக.).

[குறை + கை.]

குறைகொள்(ளு)-தல் *kuṟai-koḷ-,* 11 செ.கு.வி. (v.i.) 1. மனக்குறையைப் பாராட்டுதல்; to take a thing amiss; to be piqued; to feel aggrieved; to complain. 2. தன் குறையைக் கூறிக்கொள்ளுதல்; to represent one's wants needs. *"மந்திரி குறைகொண் டிரப்ப" (பெருங். மகத. 21:124).*

[குறை + கொள்ளு-.]

குறைகோள் *kuṟai-kōḷ,* பெ.(n.) இரத்தல் (சூடா.); begging, petitioning, mendicancy.

[குறை + கோள்.]

குறைச்சல் *kuṟaiccal,* பெ.(n.) 1. குறைவு; deficiency, scarcity, as of an article; curtailment. அவனுக்குச் செலவு குறைச்சல் (உ.வ.). 2. இழிவு; discredit, disparagement. என்னைப்பற்றிக் குறைச்சலாய்ப் பேசினான் (உ.வ.).

[குறை → குறைச்சல்.]

குறைச்சால் *kuṟai-c-cāl,* பெ.(n.) உழவு நிலத்தில் சாலோடாத இடம் (வின்.); balk in ploughing.

[குறை + சால்.]

குறைச்சிஃறாழிசைக் கொச்சகம் *kuṟaiccik-ṟāḻiśai-k-kōccagam,* பெ.(n.) ஈற்றடி குறைந்து சில தாழிசைகளால் வருவது; a kind of *koccagam.*

[குறை + சில் + தாழிசை + கொச்சகம்.]

குறைசெய்-தல் *kuṟai-śey-,* 1 செ.குன்றாவி (v.t.) 1. மதிப்புத் தாழ்வு பண்ணுதல்; to treat with disres pect. 2. வெட்டுதல்; to cut off, disfigure by cutting off. *"எனைச் செங்கை தீண்டிக் குறைசெய்து போவதுவோ" (கந்தபு. அசமுகிபுலம்.10).*

[குறை + செய்-.]

குறைசொல்(லு)-தல் *kuṟai-śol-,* 6 செ.கு.வி.(v.i.) 1. மனத்திலுள்ள குறையைப் பிறர் அறியக் கூறுதல்; to complain, state grievances, pray for redress,

express, dissatisfaction. 2.தனக்கு வேண்டுவனவற்றைச் சொல்லிக் கொள்ளுதல்; to represent one's wants. 3. குற்றஞ்சாட்டுதல்; to charge with fault, censure, criiticise, blame.

[குறை + சொல்லு-.]

குறைஞ்சால் *kurai-ñ-cāl,* பெ.(n.) ***குறைச்சால்*** பார்க்க (யாழ்.அக.) ; see *kurai-c-cāl.*

[குறைசால் → குறைஞ்சால் (கொ.வ.).]

குறைத்தலை *kurai-t-talai,* பெ.(n.) தலையில்லாத பிணம்; headless body, belived to dance on the battle field. *"குரங்குபட மேதினி குறைத்தலை பட" (கம்பரா. யுத்த மந்திரப். 61).*

[குறை + தலை.]

குறைதீர்¹-தல் *kurai-tīr-,* 2 செ.கு.வி.(v.i.) 1. மனக் குறை நீங்குதல்; to have wants supplied, to be satisfied. *"குறைதீர்ந்த கொடையே பகையைப் யுறவாக்கும்" (காஞ்சிப்பு. புராணவர.15).*

[குறை + தீர்-.]

குறைதீர்²-த்தல் *kurai-tīr-,* 4 செ.கு.வி.(v.i.) 1. வேண்டியவற்றை உதவுதல்; to supply, as one's wants or needs; to satisfy. 2. கடமையைச் செய்து முடித்தல்; to fulfil, as an obligation.

[குறை + தீர்.]

குறைநய-த்தல் *kurai-naya-,* 3 செ.கு.வி.(v.i.) குறை தீர்க்க வேண்டுதல்; request to redress grivances. *"கொலைவேற் கண்ணணி குறை நயந்தது" (திருக்கோ. 158, கொளு).*

[குறை + நய.]

செ.அக. முதலியில் குறை நயத்தலைக் குறை நேர்தலாகக் குறித்திருப்பது தவறு.

குறைநரம்பு *kurai-narambu,* பெ.(n.) குறைந்த சுரமுள்ள யாழ்த்திறம் (திவா.); lit, lute with less than the normal number of strings. A musical mode deficient in notes, opp. to *niṟainarambu.*

[குறை + நரம்பு.]

குறைநாடோன் *kurai-nāḍōṉ,* பெ.(n.) கருநொச்சி (சா.அக.); willow leaved justicia.

[குறை + (நாடன்) நாடோன்.]

குறைநாள் *kurai-nāḷ,* பெ.(n.) நாள், மாதம், ஆண்டு, வாழ்நாள் இவற்றில் மீதியிருக்குங் காலம்; ramaining portion of the day, month, year or life-time. குறைநாளும் கழிக்க வேணும் (உ.வ.).

[குறை + நாள்.]

குறைநிறை *kurai-niṟai,* பெ.(n.) 1. ஏற்றமும் குறைவும்; defect and excess. 2. குடும்பத்திலுள் நலந்தீங்குகள்; domestic wants and comforts.

[குறை + நிறை.]

குறைநேர்-தல் *kurai-nēr-,* 2 செ.கு.வி.(v.i.) குறையை நீக்க உடன்படுதல்; to consent to make up one's wants. *"முனியுமக் குறைநேர்ந்தான்" (பாரத. சம்ப.10).*

[குறை + நேர்-.]

குறைநோக்கு *kurai-nōkku,* பெ.(n.) குறைந்த பார்வை; short sight (சா.அக.).

[குறை + நோக்கு-.]

குறைநோய் *kurai-nōy* பெ.(n.) குட்டநோய்; leprosy, as eating away one's limbs.

[குறை + நோய்.]

குறைநோய்ப்புண் *kurai-nōy-p-puṇ* பெ.(n.) பெருநோயிற் காணும் அழிபுண்; rottlen or putrid ulcers in leprosy (சா.அக.).

[குறை + நோய் + புண்.]

குறைப்பக்கம் *kurai-p-pakkam,* பெ.(n.) தேய்பிறைநாள்; dark fortnight, period of waning moon. *"குவைசேரவுற்று வருங் குறைபக்கச் சதுர்த்தசி பின்" (விதாந. பஞ்சாங்க.26).*

[குறை + பக்கம். த. பக்கம்>Skt. paksa.]

குறைப்பஃறாழிசைக் கொச்சகம் *kuṟai-p-pakṟāḻišai-k-koccagam,* பெ.(n.) ஈற்றடி குறைந்து பல தாழிசைகளால் வருவது; a kind of koccagam.

[குறை + பல் + தாழிசை + கொச்சகம்.]

குறைப்பட்டவர் *kuṟai-p-paṭṭavar,* பெ.(n.) குடும்பத்தில் நேர்ந்த இறப்பு முதலிய நிகழ்வுகளால் துன்பப்பட்டவர்; lit., persons bereaved of their near relations. Persons who have suffered great affection.

[குறை + பட்டவர்.]

குறைப்பட்டவள் *kuṟai-p-paṭṭavaḷ,* பெ.(n.) கைம்பெண்; widow.

[குறை + பட்டவள்.]

குறைப்படு—தல் *kuṟai-p-paḍu,* 20 செ.கு.வி.(v.i.) மனக்குறையுறுதல்; to be displeased, discontented. *"குறைப்பட்டுக் கொண்டிருக்கிறான்" (பெருங்.இலாவாண. 19:7).*

[குறை + படுதல்.]

குறைப்பிண்டம் *kuṟai-p-piṇḍam,* பெ.(n.) முதிர்ச்சியடையாத பிண்டம்; undeveloped or immature foetus; 2. காலத்திற்கு முன்னதாகவே வெளிவரும் பிண்டம்; foetus coming out before the full term or the time of maturity (சா.அக.).

[குறை + பிண்டம்.]

குறைப்பிணம் *kuṟai-p-piṇam,* பெ.(n.) அரை குறையாய் எரிந்து கிடக்கும் பிணம்; half-burnt corpse. *"கும்மணத்தாளர் குறைப்பிணங் காட்டி" (பெருங். இலாவாண. 19:7).*

[குறை + பிணம்.]

குறைப்பிள்ளை *kuṟai-p-piḷḷai,* பெ.(n.) பருவம் நிரம்புமுன் பெற்ற கருப்பிண்டம்; undeveloped foetus delivered before time. *அவள் குறைப்பிள்ளை பெற்றாள்.*

[குறை + பிள்ளை.]

குறைப்பேர் *kuṟai-p-pēr,* பெ.(n.) 1. மற்றவர்; other persons, rest, as of a company. *நீ வந்தாயே, குறைப் பேரெல்லாம் எங்கே? (உ.வ.).* 2. சுருக்கிக் கூறும் இயற்பெயர்; abbreviated name, as *kiṭṭu* for Krishnan.

[குறை + பேர்.]

குறைப்பொழுது *kuṟai-p-poḻudu,* பெ.(n.) 1. செல்ல வேண்டிய காலம்; unexpired portion of time. 2. காலக்குறைவு; the remaining portion of the day, month, year, etc.,

[குறை + பொழுது.]

குறைப்போக்கு *kuṟai-p-pōkku,* பெ.(n.) மாதவிடாய்க் காலத்தில் பெண்களுக்குக் காணும் குறைவான குருதி; scanty discharge in menstruation (சா.அக.).

[குறை + போக்கு.]

குறைபடு[1]—தல் *kuṟai-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. குறைவாதல்; to be wanting, to diminish, to become scarce. 2. துணிபடுதல்; to be broken into pieces, to be shivered into fragments. *"நீர்கல் குறைபட வெறிந்து" (பரிபா. 20).*

[குறை + படுதல்.]

குறைபடு[2]—த்தல் *kuṟai-paḍu-,* 4 செ.கு.வி.(v.i.) குறைவுண்டாக்குதல்; to fail in rendering what is due, to cause deficiency.

[குறை + படு-.]

குறைபடு[3]—த்தல் *kuṟai-paḍu-,* 4 செ.குன்றாவி (v.t.) 1. முகத்தல்; to draw up, as water by the clouds. *"கடல்குறைபடுத்தநீர்" (பரிபா. 20).* 2. மதிப்புக் குறைவுண்டாக்குதல்; to put one to shame.

[குறை + படு-.]

குறைபாடு *kuṟai-pāḍu,* பெ.(n.) 1. குறைவு; deficiency, defect. *"ஈசன் பூசை யியற்றினேன் குறைபாடின்றி" (பிரபோத். 17,19).* 2. மனக்குறை; want, need, discontent.

[குறைபடு → குறைபாடு.]

குறைமகன் *kuṟai-magaṉ,* பெ.(n.) நிலைமை யிழந்தவன்; one who has lost his status in life. *"செல்வ நீத்த குறைமகன்" (பெருங். இலாவாண. 8,32).*

[குறை + மகன்.]

குறைமதி *kuṟai-madi,* பெ.(n.) தேய்பிறை; waning moon. *"குறைமதி நீரோ நின்பேராற்றல்' (கந்தபு. அசமுகிபு.11).*

[குறை + மதி. மதி = நிலவு.]

குறைமாதக்கருப்பம் *kuṟai-māda-k-karuppam,* பெ.(n.) பத்து மாதமும் (40 வாரம்) கடவாத கருப்பம்; the period of pregnancy, in which the full term of 40 weeks is not completed (சா.அக.).

[குறை + மாதம் + கருப்பம்.]

குறைமாதக்காரி *kuṟai-māda-k-kāri,* பெ.(n.) மாத அளவு நிரம்புமுன் பிள்ளை ஈன்றவள்; woman who has given birth to a child prematurely.

[குறை + மாதம் + காரி.]

குறைமாதப்பிள்ளை *kuṟai-māda-p-piḷḷai,* பெ.(n.) மாத அளவு நிரம்பு முன் பிறந்த பிள்ளை; child born prematurely.

[குறை + மாதம் + பிள்ளை.]

குறைமாதம் *kuṟai-mādam,* பெ.(n.) 1. மாதத்தின் மீதி; remaining part of the month. 2. கருமுற்றிப் பேற்றிற்குரிய கால அளவிற் குறைவுபட்ட மாதம்; deficiency in the period required for the full development of foetus, as in premature delivery.

[குறை + மாதம்.]

குறையணி கொள்(ளு)-தல் *kuṟai-y-aṇi-koḷ-,* 16 செ.கு.வி.(v.i.) அரைகுறையாக ஒப்பனை செய்து கொள்ளுதல்; to be imperfectly dressed or adorned. *"குறையணி கொண்ட வாறே" (சீவக. 2537).*

[குறையணி + கொள்ளு-.]

குறையரவு *kuṟai-y-aravu,* பெ.(n.) குட்டையான பாம்புவகை; a kind of serpent, as being short. *"குறையரவு தீண்டி" (சீவக. 1271).*

[குறை + அரவு.]

குறையலாளி *kuṟaiyal-āḷi,* பெ.(n.) திருமங்கை மன்னன்; *Thirumaṅgai-ālvār,* as the chief of *Kuṟaiyal. "மங்கையர் கோன் குறையலாளி" (திவ். பெரியதி. 4,4,10).*

[குறையல் + ஆளி.]

குறையவை *kuṟai-y-avai,* பெ.(n.) அறிவு குணங்களாற் குறைவுபட்டார் கூடிய அவையம் (யாப்.வி.96,515); assembly of inferiors, opp. to *niṟai-y-avai.*

[குறை + அவை.]

குறையறு[1]-தல் *kuṟai-y-aṟu-,* 2 செ.கு.வி.(v.i.) மனக்குறை நீங்குதல்; to be freed from wants, anxiety etc.

[குறை + அறுதல்.]

குறையறு[2]-த்தல் *kuṟai-y-aṟu-,* 4 செ.குன்றாவி (v.t.) குறைநீங்கக் கொடுத்தல்; to bestow liberally and free one from wants anxiety, etc. *'சோறுந் தண்ணீரும் குறையறுத்துக் கொண் டிருக்குமா போலே' (ஈடு, 9.3:1).*

[குறை + அறு-.]

குறையாக்கேள்வி *kuṟaiyā-k-kēḷvi,* பெ.(n.) நிரம்பிய அறிவு; perfect learning, sound erudition. *"குறையாக் கேள்வி மாடலன்" (சிலப். 28:111).*

[குறை + ஆ + கேள்வி. ஆ - எதிர்மறைப் பின்னொட்டு.]

குறையிர– த்தல் *kuṟai-y-ira-*, 3 செ.குன்றாவி. (v.t.) தன் குறைகூறி வேண்டுதல்; to beg, supplicate, petition for one's wants. *"மாலைக் குறையிரந்து" (திவ். இயற்.2:17).*

[குறை + இரத்தல்.]

குறையுடல் *kuṟai-y-uḍal*, பெ.(n.) தலையில்லாத உடல்; headless body believed to dance on the battle field. *"குறையுடலும் கும்பிட்டு நிற்கு மாலோ" (கலிங். 97).*

[குறை + உடல்.]

குறையுணவு *kuṟai-y-uṇavu*, பெ.(n.) 1. பத்திய உணவு; food restricted by diet. 2. அற்ப உணவு; simple food. 3. பசி தீர்க்காத குறைந்த உணவு; food not ordinarily satisfying hunger. 4. துறவியர் கொள்ளும் ஒருவேளை உணவு; yogi's diet. 5. கெடுதியான உணவு; faulty diet such as indigestible food etc. (சா.அக.).

[குறை + உணவு.]

குறையுறவு *kuṟai-y-uṟavu*, பெ.(n.) மனக்குறை கொண்டிருக்கை; being in distress. *"தோழியிடைச் சென்று...... பின்னும் குறையுறவு தோன்ற நின்று" (திருக்கோ. 90,அவ.).*

[குறை + உறவு.]

குறையுறு–தல் *kuṟai-y-uṟu*, 18 செ.குன்றாவி (v.t.) குறைகூறி வேண்டுதல்; to beg, entreat, supplicate for one's wants. *"இரந்து குறையுற்ற கிழவனை" (தொல். பொருள். 237).*

[குறை + உறு–.]

குறையொற்றுமை உருவகம் *kuṟai-y-oṟṟumai-uruvagam*, பெ.(n.) உருவகத்திலோர் குறை தோன்றச் சொல்வது; metaphor with one component modified. நெற்றி விழியில்லாச் சங்கரன் (கழ.தமி.அக.).

[குறை + ஒற்றுமை + உருவகம்.]

குறைவங்கம் *kuṟai-vaṅgam*, பெ.(n.) குறையுறுப்பு; defective organ (சா. அக.).

[குறைவு + அங்கம்.]

குறைவயிறு *kuṟai-vayiṟu*, பெ.(n.) 1. உணவு குறைவாகக் கொண்ட வயிறு; stomach partially filled with food. 2. அரைவயிறு; half filled belly. *அரைவயிறு குறை வயிறாக உண்பவன் (கொ.வ.).*

[குறை + வயிறு.]

குறைவறு–த்தல் *kuṟaivaṟu-*, 4 செ.குன்றாவி. (v.t.) ***குறைதீர்*** பார்க்க (பெரியபு.கழறிற்.95); see *kuṟaitīr.*

[குறை + தீர்.]

குறைவறுப்பு *kuṟai-v-aṟuppu*, பெ.(n.) 1. அரண்மனைக்குரிய பண்டச்சுமை; head-load of articles, intended for the palace. *"குறைவறுப்பு எடுக்கவும்" (S.I.I.vi.29).* 2. மதிப்புரவாக அனுப்பும் பண்டங்கள்; supplies made, as to a superior. (பெரியபு.திருஞான.1072).

[குறைவு + அறுப்பு.]

குறைவாளர் *kuṟai-v-āḷar*, பெ.(n.) குறையுடைய வர்; persons in want. *"மாதா பிதாக்கள் ப்ரஜைகளில் குறைவாளர் பக்கலிலேயிறே இரங்குவது" (ஈடு. 4:5,8).*

[குறைவு + ஆளர்.]

குறைவிரல் *kuṟai-viral*, பெ.(n.) 1. குட்ட நோயால் குறைந்த விரல்; mutilated digit in leprosy. 2. விரற் பழுது; short deformed fingers (சா.அக.).

[குறை + விரல்.]

குறைவிரிவு *kuṟai-virivu*, பெ.(n.) 1. முழுவதும் விரியாதது; partial distension as of cellular membrane. 2. முழுவதும் பூக்காதது; not fully blossomed (சா.அக.).

[குறை + விரிவு.]

குறைவில் *kurai-vil,* பெ.(n.) வானவில்; rainbow. *"வானத்துக் குறைவி லேய்ப்ப" (பெரும்பாண். 292).*

[குறை + வில்.]

குறைவிலறிவுடைமை *kuraivil-arivudaimai,* பெ.(n.) குறைவில்லாத அறிவைக் கொண்டிருத்த லாகிய இறைவன் எண்குணத்துள் ஒன்று (பிங்.); possession of unlimited wisdom, one of God's eight attributes.

[குறைவு + இல் + அறிவுடைமை.]

குறைவு *kuraivu,* பெ.(n.) 1. குறைபாடு; lack, want, deficiency, dearth, limit *"நாடக நடித்ததோ குறைவில்லை" (தாயு. எங்குநிறை.5).* 2. குற்றம்; defect, default. 3. குறைந்த அளவுள்ளது; little, small, quantity. 4. ஏழ்மை (திவா.); indigence, poverty. 5. காரியபலன்; use, value, profit. *"மாறாளன் கவராத மணிமாமை குறைவிலமே" (திவ். திருவாய். 4:8,1).*

[குறை → குறைவு.]

குறைவுபடு-தல் *kuraivu-padu,* 20 செ.குன்றாவி (v.t.) குறைவாக விருத்தல்; falling short (சா.அக.).

[குறை → குறைவு.]

குறைவேண்டுநர் *kurai-vēndunar,* பெ.(n.) நன்மையான செயல்களை விரும்புவோர்; persons petitioning for their wants. *"முறைவேண்டுநர்க்கும் குறைவேண்டு நர்க்கும்" (பெரும்பாண். 443).*

[குறை + வேண்டுநர்.]

குறோக்கை *kurokkai,* பெ.(n.) குறட்டை; snoring. *"குரங்கு குத்தி கொண்டு குறோக்கை கத்தி" (ஒழிவி. யோக.10).*

மறுவ. குறட்டை

தெ. குரக

[குறக்கு (ஒலிக்குறிப்பு) → குறக்கை → குறோக்கை. குறக்கை பார்க்க; see kurakkai]

குறோட்டை *kurōttai,* பெ.(n.) 1. காக்கணம்; mussell shell creeper. 2. பீச்சு விளாத்தி; a species of wood-apple tree giving out fetid smell.

[குறட்டை → குறோட்டை.]

குன்பாண்டு *kun-pāndu,* பெ.(n.) வெண்பாதிரி; white trumpet flower (சா.அக.).

[குல் + பாண்டு – குல்பாண்டு → குன்பாண்டு. பாண்டு = வெண்மை.]

குன்மக்கட்டி *kunma-k-katti,* பெ.(n.) வயிற்றில் உண்டாகும் ஒருவகைக் கட்டி; glandular enlargement in the abdomen, tumour.

[குன்மம் + கட்டி.]

குன்மக்கழிச்சல் *kunmakkaliccal,* பெ.(n.) செரியாமையினால் ஏற்படும் கழிச்சால்; diarrhoea due to indigestion (சா.அக.).

[குல் → குன்மம் + கழிச்சல்.]

குன்மக்காசம் *kunma-k-kāsam,* பெ.(n.) குன்ம நோயினால் ஏற்பட்ட காசநோய்; *kāsam* arising due to dyspepsia(சா.அக.).

[குன்மம் + காசம்.]

குன்மக்காமாலை *kunmak-kāmālai,* பெ.(n.) குன்ம நோயினால் உண்டான காமாலை; jaundice connected with dyspepsia due to obstruction of the liver (சா.அக.).

[குன்மம் + காமாலை.]

குன்மக்குடோரி *kunma-k-kudōri,* பெ.(n.) குன்மத்தைப் போக்க வல்ல ஒருவகை நீர்ப்பூடு (பதார்த்த. 244); a water-plant capable of curing chronic dyspepsia.

[குன்மம் + (கோடாலி) குடோரி.]

குன்மக்கோடாலி *kunma-k-kōdāli,* பெ.(n.) மரத்தைக் கோடாலி கொண்டு வேரறப் பிளப்பது போல், உடம்பிலுள்ள நோயை வேரறக் களைந்து குணமாக்கும் மருந்து; a medicine capable of curing radically diseases in the system in the same way as a tree is uprooted with an axe severing all connections with the ground (சா.அக.).

[குல் + குன்மம் + கோடாலி.]

குன்மக்கோளாறு *kuṉma-k-kōḷāṟu,* பெ.(n.) செரியாமையினால் ஏற்படும் குற்றங்கள்; dyspeptic disorders (சா.அக.).

[குன்மம் + கோளாறு.]

குன்மச்சூலை *kuṉma-c-cūlai,* பெ.(n.) குன்மத்தினால் வயிற்றில் உண்டாகும் குத்தல் நோய்; colicky pain in the abdomen experienced in case of dyspepsia.

[குன்மம் + சூலை.]

குன்மச்சூலை *kuṉma-c-cūlai,* பெ.(n.) **குன்மம்**[1] பார்க்க (இங்.வை.); see *kuṉmam*[1].

[குன்மம் + சூலை.]

குன்மத்தலைவலி *kuṉma-t-talaivali,* பெ.(n.) குடல் ஈரல் போன்ற உறுப்புகள், குன்மக் கோளாறடை வதினால் ஏற்படும் தலைவலி; head-ache arising from the derangment of the stomach, bowel or liver due to dyspepsia (சா.அக.).

[குன்மம் + தலைவலி.]

குன்மத்தைப்போக்கி *kuṉmattai-p-pōkki,* பெ.(n. மான்செவிக் கள்ளி; leafy tree-spurge. It is so called from its virtue of curing dyspepsia (சா.அக.).

[குன்மம் + அத்து + ஐ + போக்கி.]

குன்மப்போக்கு *kuṉma-p-pōkku,* பெ.(n.) குன்மத்தினால் உண்டாகும் வயிற்றுப்போக்கு; diarrhoea due to indigestion (சா.அக.).

[குல் : கூடுதல் கருத்துவேர். குல் → தண்டு → குன்மம்.]

குன்மம்[1] *kuṉmam,* பெ.(n.) செரிமானமின்மை, வயிற்றுவலி முதலியன காணும் வயிற்றுநோய் (சீவரட்.); chronic dyspepsia; glandular enlargement in the abdomen, as of the mesenteric gland, causing indigestion, colic and emaciation. 2. 9 யானை, 9 தேர், 27 குதிரை, 45 காலாள்கள் கொண்ட படைவகுப்பு (சூடா.); a division of an army consisting of elephants, 9 chariots, 27 horses and 45 foot soldiers. 3. அடர்ந்த தூறு (சூடா.)l; dense thicket, bush.

[குல் (குத்தல், வலி) → குன்மம்.]

குன்மம்[2] *kuṉmam,* பெ.(n.) 1. புரளச் செய்தல்; causing to roll. 2. உள்கட்டி; internal tumour. 3. அடி வயிற்றுக் கட்டி; abdominal tumour (சா.அக.).

[குல் → குல்மு → குன்மு → குன்மம்.]

குன்மம்[3] *kuṉmam,* பெ.(n.) பித்தம் அதிகரித்து, செரியாமையினால் ஏப்பத்தோடு வலியை உண்டாக்கும் ஒரு நோய்; dyspepsia arising from chronic enlargement of the spleen.

[குல் (குத்தல், வலி) → குன்மம்.]

வகைகள் : 1. எரிகுன்மம்௭௨. வலி குன்மம் 3. சத்தி குன்மம் 4. காசகுன்மம் 5. தொந்தகுன்மம் 6. கன்னிகுன்மம்; 7. வாய்நீர் குன்மம் 8. புரட்டு குன்மம் 9.பித்த குன்மம் 10. வாதகுன்மம் 11. சிலேட்டும குன்மம் 12. கரிக் குன்மம் 13. புளிப்புக் குன்மம் (சா.அக.).

குன்மை *kuṉmai,* பெ.(n.) சிறுகாஞ்சொறி; small climbing nettle (சா.அக.).

[குல் → குன்மு → குன்மம்.]

குன்றக்கூற்றம் *kuṉṟa-k-kūṟṟam,* பெ.(n.) திருச்சிராப்பள்ளி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் நடுநாட்டின் தென் எல்லைப் பகுதியில் குன்றம் என்னும் ஊரைத் தலைநகரமாகக் கொண்டுள்ள கூற்றமாகும் (கல்.க.சொ.அ.மு.); name of a *kūṟṟam* in *uḍayāpālayam* taluk.

[குன்றம் + கூற்றம்.]

குன்றக்கூறல் *kuṉṟa-k-kūṟal,* பெ.(n.) பத்துவகை நூற்குற்றங்களுள் கூற வேண்டியதைக் குறைவு படச் சொல்லுகையாகிய குற்றம் (தொல். பொருள். 664); incomplete statement, a defect in composition one of ten *nūṟ-kuṟṟam.*

[குன்றுதல் : குறைதல். குன்று → குன்ற + கூறல்.]

குன்றகத்தலை அறு-த்தல் *kuṉṟaga-t-talai-aṟu,* 4 செ.குன்றாவி. (v.t.) பெரிய தலையைத் தானே அறுத்தல்; *“ஸ்ரீகம்பருமற்கு யாண்டு இருபதாவது – படாரிக்கு நவகண்டங் குடுத்து குன்றகத்தலை அறுத்துப் பிடலிகைமேல் வைத்தானுக்கு திருவான் மூர் ஊரார் வைத்த பரிசாவது” (தெ.கல்.தொ.12, கல்.106) (செங்கம் நடுகல்).*

[குன்றகம் + தலை + அறு-.]

செஞ்சோற்றுக் கடன் தப்பாமல் தன் அரசனுக்கு வெற்றி வேண்டி வீரன் தன்னைத் தானே பலியிடல். இச்செயலை, புறப்பொருள் வெண்பாமாலை வாகையுள் - அவிப்பலி என்று சிறப்பித்துக் கூறும். தமிழகத்தில் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள செங்கம் நடுகற் பொறிப்பு இதனைப் புலப்படுத்தும்.

குன்றபலம் *kuṉṟa-palam,* பெ.(n.) ஒருவகைக் கருந்தினை; a kind of black millet (சா.அக.).

[குன்று + பலம் (தவசம்) – குன்றபலம்.]

குன்றம் *kuṉṟam,* பெ.(n.) மலை; hill, mountain. *“பொதியிற் குன்றத்துக் கற்கால் கொண்டு” (சிலப். 25:122).*

[குன்று → குன்றம்.]

குன்றர் *kuṉṟar,* பெ.(n.) குன்றவாணர்; hill tribes *“குன்றர் முழங்குங் குரவை” (திருக்கோ. 127).*

[குன்று + அர் – குன்றர்.]

குன்றல் *kuṉṟal,* பெ.(n.) 1. குறைகை; diminishing, decreasing. 2. கெடுதல் விகாரம் (Gram.); elision, omission. *“மெய்பிறி தாதல் மிகுதல் குன்ற லென்று” (தொல். எழுத்து. 109).*

[குன்று → குன்றல்.]

குன்றவர் *kuṉṟavar,* பெ.(n.) ***குன்றவாணர்*** (திவா.) பார்க்க; see *kuṉṟavāṇar.*

ம. குன்னவன்

[குன்று → குன்றவர்.]

குன்றவாணர் *kuṉṟa-vāṇar,* பெ.(n.) குறிஞ்சிநில மக்கள்; mountaineers, inhabitants of the hilly tract. *“இருங்குன்ற வாண ரிளங்கொடியே” (திருக்கோ. 15).*

[குன்றம் + வாணர்.]

குன்றவில்லி *kuṉṟa-villi,* பெ.(n.) சிவன் (திவா.); Šiva, as having Mt. *Mēru* for his bow. *மேரு மலையை வில்லாகக் கொண்டவன்.*

[குன்றம் + வில்லி.]

குன்றாவாடை *kuṉṟā-vāḍai,* பெ.(n.) வடகீழ்க் காற்று; north-east wind.

[குன்று + ஆ + வாடை. ஆ – எதிர்மறை.]

குன்றி[1]-த்தல் *kuṉṟi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. குன்று போல் குவித்தல், ஒன்றாகக் கூட்டுதல்; to heap up, make a lump of, to hill. 2. வளர்தல்; to be increased, grow (சேரா.நா.).3. குன்றிமணி வளர்தல்; to be increased, grow (சேரா.நா.).

ம. குன்னிக்குக

[குல் → குன் → குன்றி.]

குன்றி[2] *kuṉṟi-,* பெ.(n.) 1. குன்றிச் செடி; crab's eye creeper. 2. ***குன்றிமணி[1]*** பார்க்க;see *kuṉṟimaṇi[1].* 3. ***குன்றிமணி[3]*** பார்க்க;see *kuṉṟimaṇi[3].* *"குன்றுவ குன்றி யனைய செயின்" (குறள்.965).* 4. மனோ சிலை (வின்.); a mineral poison.

[குல் → குன்று → குன்றி.]

குன்றிநிறக் கண்ணன் *kuṉṟi-niṟa-k-kaṇṇaṉ,* பெ.(n.) 1. குன்றிமணி போற்சிவந்த கண்ணுடையவன்; one whose eyes are as red as the *kuṉṟi.* 2. சிவந்த கண்களையுடைய காட்டுப்பன்றி; Indian wild hog.

[குன்றி + நிறம் + கண்ணன்]

குன்றிநேசி *kuṉṟi-nēši,* பெ.(n.) வீட்டுப்பல்லி; house lizard (சா.அக.).

[குன்றி + நேசி.]

குன்றிப்பிரமாணம் *kuṉṟi-p-piramāṇam,* பெ.(n.) குன்றிமணியளவு; as big as crab's eye.

மறுவ. குன்றியளவு

[*குன்றி + பிரமாணம். **குன்றியளவு** பார்க்க; see kuṉṟi-y-aḷavu.*]

குன்றிப்போ-தல் *kuṉṟi-p-pō-,* 8 செ.கு.வி.(v.i.) மெலிவுறல்; being emaciated, as through disease or mental worry (சா.அக.).

[*குன்று → குன்றி + போ-.*]

குன்றிபோல்செடிச்சி *kuṉṟi-pōl-ceḍicci,* பெ.(n.) தொழுகண்ணிச் செடி; a medicinal plant resembling liquorice plant (சா.அக.).

இது குன்றிச் செடியைப் போலிருப்பதால் இப்பெயர் பெற்றது.

குன்றிமணி *kuṉṟi-maṇi,* பெ.(n.) 1. குன்றிச் செடியின் சிவப்பு வித்து; the red seed or crab's eye. 2. ***குன்றி***[1] பார்க்க;see *kuṉṟi*[1].3. 4 நெல் அல்லது 1/2 மஞ்சாடி எடையுள்ள பொன் நிறுக்கும் நிறைவகை (கணக்கதி.); a standard weight for gold = paddy grains = 2 gr. troy = *mañjaḍi* = 1/12 pagoda. 4.அதிமதுரம்; liquorice.

[*குன்றி + மணி.*]

குன்றிமணிச்சம்பா *kuṉṟi-maṇi-c-cambā,* பெ.(n.) செந்நிறமுள்ள சம்பா நெல்வகை (பதார்த்த. 319); a kind of reddish *cambā-paḍḍy.*

[*குன்றி + மணி + சம்பா.*]

குன்றிமேனி *kuṉṟi-mēṉi,* பெ.(n.) நிழல்பட்டால் தலை கவிழ்ந்திருக்கும் ஒரு பூடு; an unknown plant having a peculiar virtue of drooping when shade falls on it (சா.அக.).

[*குன்றி + மேனி.*]

குன்றியலுகரம் *kuṉṟiya-lugaram,* பெ.(n.) குற்றியலுகரம்; shortened 'u' *"குடுதுறு வென்னுங் குன்றிய லுகரமொடு" (நன். 331).*

[*குன்று + இயல் + உகரம்.*]

குன்றிவேர் *kuṉṟi-vēr,* பெ.(n.) அதிமதுரம் (தைலவ. தைல. 4); liquorice root.

[*குன்றி + வேர்.*]

குன்று[1]**-தல்** *kuṉṟu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. குறைதல்; to decrease, diminish, become reduced. 2. அழிவடைதல்; to be ruined. *"குன்றா முது குன்றுடையான்" (சிவப். பிரபந். பிக்ஷாட.2).* 3. நிலை கெடுதல்; to fall from high position. *"குன்றின் அனையாரும் குன்றுவர்" (குறள், 965).* 4. எழுத்துக் கெடுதல் (தொல்.எழுத்து.109) (Gram.); to be omitted, as a letter. 5. வாடுதல்; to droop, languish to be dispirited. *அவன் துயரத்தால் மனங் குன்றினான்.* 6. வளர்ச்சி யறுதல்; to become stunted to be arrested in growth. சிறுகன்றுகளின் முதுகிற் கையை வைத்தாற் குன்றிவிடும் (இ.வ.).

ம. குன்னுக; க., தெ. குந்து; து. குந்துனி; குட. கொறு; கோத. குர்க்; துட. குறக்; கூ. கோக்; பட. குக்கு.

[*குல் → குன்று.*]

குன்று[2] *kuṉṟu,* பெ.(n.) 1. குறைவு (சூடா.); deficiency. 2. சிறுமலை; hill. *"குன்றுமலை நாடுகாடு" (புறநா. 17).* 3. மலை (திவா.); mountain. 4. சிறுகுவடு (திருக்கோ. 95, உரை); hill top. 5. சதய விண்மீன் (பிங்.); the 24th nakstra.

ம. குன்னு; க., தெ., குற. கொண்ட; குட. குந்தி; பர். கொந்தி; கோண். குறு.

Fin. kunnas; Es. kangar; Q. kancha.

[*குல் → குன்று.*]

குன்றுகூப்பிடு-தல் *kuṉṟu-kūppiḍu-,* 20 செ.கு.வி.(v.i.) குன்றானது எதிரொலி செய்யுமாறு கூவி விளையாடுதல்; to rouse the echoes of the hill by shouting in play.

[*குன்று + கூப்பிடு-.*]

குன்றுபயன் *kuṉṟu-payaṉ,* பெ.(n.) களவொழுக்கம்; clandestine union, as of lovers. *"கொள்ளாரிக் குன்றுபயன்" (பரிபா. 9:26).*

[*குன்று + பயன்.*]

குன்றுமுத்துக்கொடி *kuṉṟu-muttu-k-koḍi*, பெ.(n.) கொடிவகை (விவசா.6); a creeper.

[குன்று + முத்துக்கொடி.]

குன்றுவர் *kuṉṟuvar*, பெ.(n.) 1. குறிஞ்சிநிலமக்கள் (தொல். பொருள். 20, உரை); people of the hilly tract, mountaineers. 2. பழனிமலையிற் பயிரிட்டு வாழும் ஓர் இனத்தார்; name of the principal cultivating caste on the Palani hills.

[குன்று → குன்றுவர். குன்று → குன்றவர் என்பதே மரபு. எனினும் குன்று → குன்றுவர் என்பது குன்றவர் என்னும் பொருளில் வழக்கூன்றிய இடவழக்கு.]

குன்றுவாடை *kuṉṟu-vāḍai*, பெ.(n.) வடமேல் காற்று;north west wind dist. fr. *kunṟā-vāḍai* (கடல்வ).

[குன்று + வாடை.]

குன்றெறிந்தோன் *kuṉṟerindōṉ*, பெ.(n.) முருகக் கடவுள் (பிங்.); lit., one who clove a mountain with his lance. *குன்றத்தைத் தனது வேலால் எறிந்தவன்.*

[குன்று + எறிந்தோன்.]

குன்றைத்தான் *kuṉṟaittāṉ*, பெ.(n.) துரிசு; blue vitriol (சா.அக.).

[குன்று → குன்றைத்தான்.]

குன்றை வில்லாக்கினோன் *kuṉṟai-villākkiṉōṉ*, பெ.(n.) துரிசு (சங்.அக.); blue vitriol.

[குன்றை + வில்லாக்கினோன்.]

குன்னம் *kuṉṉam*, பெ.(n.) 1. மதிப்புக்குறைவு; disgrace, dishonour. *"இங்கே யொருத்திநா னிருந்ததே பெருங்குன்னம்"* (இராமநா.). 2. பழி; scandal. *"கன்னிமேலே யெறிந்தாற் குன்னஞ் சொல்வாரோ"* (இராமநா. உயுத். 82).

[குல் → குன்னம்.]

குன்னல் *kuṉṉal*, பெ.(n.) சளி சுரத்தோடு மாட்டுக்கு வரும் நோய்; a cattle disease with cold and fever.

[குல் → குன் → குன்னல்.]

குன்னாங்குருச்சியாக *kuṉṉāṅ-kurucci-y-āga*, பெ.(adv.) ஏகாந்தமாக; privately, secretly. *"இது தன்னைக் குன்னாங்குருச்சியாக வன்றிக்கே எல்லாருமறியும்படி ப்ரஹுித்தமாகச் சொன்னேன்"* (திவ்.பெரியாழ்.2.2:5, வியா.பக்.259).

[குன்னா + குருச்சியாக.]

குன்னா-த்தல் *kuṉṉā-*, 6 செ.கு.வி.(v.i.) குளிரால் உடம்பு கூனிப் போதல் (நெடுநெல்.9, உரை); to shrink and crouch with cold, to contract limbs and look small.

[குல் → குன்னு → குன்னா-.]

குன்னான் *kuṉṉāṉ*, பெ.(n.) ஒரு வகை எலி; a kind of rat.

[குல்→குன்→ குன்னான்.]

குன்னி *kuṉṉi*, பெ.(n.) குன்றிமணி; crabis eye, jewellers lead (சா.அக.).

மறுவ. குண்டுமணி

Fin. kovyt; **Es.** kebi; **Hung.** keves; **Mong.** gopi; **Jap.** kuwashii. **O.Jap.** kupasi.

[குல் → குன் → குன்றி→குன்னி (கொ.வ.).]

குனக்காசிகம் *kuṉa-k-kāsigam*, பெ.(n.) கடைச் சரக்குகளைச் சேர்த்து செய்யும் ஒரு மருந்து; a medicine prepared by bazar drug (சா.அக.).

[குனம் + காசிகம்.]

குனகம் *kuṉagam*, பெ.(n.) நகங்கறுத்துக் கெட்டி யாகி விடுதல்; a condition of nail in which it is discoloured and becomes hard (சா.அக.).

[குல் → குன் → குனகம்.]

குனகு-தல் *kuṉagu-*, 5 செ.கு.வி.(v.i.) கொஞ்சிப் பேசுதல்; to prattle sweetly. *"குனகியல ருடனிருந்து"* (திருப்பு. 20).

[குல் → குன் → குனகு.]

குனட்டம் *kuṉaṭṭam,* பெ.(n.) ***அதிவிடையம்*** (மலை.) பார்க்க; see *adividayam*

[குனட்டு → குனட்டம்.]

குனடி *kuṉaḍi,* பெ.(n.) நேப்பாளத்திருந்து வரும் ஒரு கடைச்சரக்கு; a bazar drug exported from Nepal (சா.அக.).

[குல் → குன் → குனடி.]

குனாவகம் *kuṉāvagam,* பெ.(n.) கூத்தன் குதம்பை; pointed leaved hog weed (சா.அக.).

[குல் → குன் → குனவு → குனவகம் → குனாவகம்.]

குனி-தல் *kuṉi-,* 2 செ.கு.வி.(v.i.) 1 வளைதல்; to bend, as a bow. *"குனிவளர் சிலை" (சீவக. 486).* 2. வணங்குதல் (சூடா.); to bow, make obeisance. 3. தாழ்தல் (சூடா.); to stoop; to descend low. *"குனிந்த வூசலிற் கொடிச்சி" (கம்பரா. சித்திர. 24).* 4. வீழ்தல்; to fall, as in battle. *"குஞ்சரங் குனிய நூறி" (சீவக. 2293).* 5. இரங்குதல் (சது.); to pity, commiserate, relent.

ம.குனி; க.குனி; தெ.குங்கு.

[குல் → குன் → குனி. குல் : வளைதல்.]

குனி¹-த்தல் *kuṉi,* 4 செ.குன்றாவி. (v.t.) வளைத்தல்; to bend, curve. *"குனித்த புருவமும்" (தேவா.11:4).*

[குனி → குனித்தல்.]

குனி²-த்தல் *kuṉi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஆடுதல்; to dance. *"அன்பரென் பூடுருகக் குனிக்கும் பாம்பலங் காரப்பரன்" (திருக்கோ.11).* 2.குரல் நடுங்குதல்; to quaver, quiver, shake, as the voice in singing.

[குனி → குனித்தல்.]

குனி³ *kuṉi,* பெ.(n.) 1. வளைகை; curvature *"குனிகொள் பாக வெண்மதி" (சீவக. 704).* 2. வில் (சதுர.); bow.

[குல் → குன் → குனி.]

குனிப்பம் *kuṉippam,* பெ.(n.) ஆடல்; dance. *"கொம்பனைய மாதர் குனிப்பமிட" (சொக்க. உலா.73).*

[குனி → குனிப்பம்.]

குனிப்பாய்ப்பார்-த்தல் *kuṉippāy-p-pār-,* 4 செ.கு.வி. (v.i.) கவனமாய் உற்றுப்பார்த்தல்; looking with special attention (சா.அக.).

[குனிப்பு + ஆய் + பார்-.]

குனிப்பு¹ *kuṉippu,* பெ.(n.) வளைகை; bending.

[குனி → குனிப்பு.]

குனிப்பு² *kuṉippu,* பெ.(n.) 1. ஆடல்; dance. *"ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையானுக்கே" (திருவாச. 10:3);* 2. கூத்துவகை (பிங்.); a kind of dance.

[குல்→குனி → குனிப்பு.]

குனிவி-த்தல் *kuṉivi-,* பி.வி.(cas.v.) வளைத்தல்; to bend. *"கொன்படைத் தகுனிவிற் குனிவித்தே" (கந்தபு.தாரக.122).*

[குனி→ குனிவி]

குனுகு-தல் *kuṉugu-,* 5 செ.கு.வி.(v.i.) **குனகு** பார்க்க; see *kuṉagu.*

[குனகு→ குனுகு]

குனை *kuṉai,* பெ.(n.) கூர்மையான பக்கம்; the sharp point or tip of a thing. *"பிரம்பின் குனை படலால்" (அஷ்டப். திருவரங்.மா.88).*

[குல்→குனை]

குனைப்புல் *kuṉai-p-pul,* பெ.(n.) மேம்புல்; the tip of grass (சா.அக.).

*[குனை + புல்.]

கூ[1] *kū,* பெ.(n.) உயிர்மெய் எழுத்து; the syllable formed by adding back long vowel (u) to the velar voiceless stop (k), one of the secondary alphabet of the Tamil language.

[க் + ஊ –கூ]

கூ[2] *kū,* பெ.(n.) புவி; earth. *"கூநின் றளந்த குறளென்ப" (வள்ளுவமா. 14.).*

ம.,க. கூ

[ஒருகா. குவலயம்→குவயம்→குவை→கூ.]

கூ[3] *kū,* பெ.(n.) 1. குயில் கூவும் ஒலி; cooing, as of koel. 2. கூவிளம் வாய்ப்பாட்டில் நேரசையைக் குறிக்கும் எழுத்து; a letter of *kūviḷam* tables, *nērašai.* 3. கூக்குரல் (முறையீட்டொலி); piteous cry. 4. ஒரு பெண் பேய் (த.சொ.அக.); female devil.

[கூ = விளிக்குரல், ஒலிக்குறிப்பு, பேசிரைச்சல், அரற்றும் பெண்பேய்.]

கூ[4] *kū,* பெ.(n.) கூழ்; porridge.

[கூழ்→ கூ (கொ.வ.).]

கூ[5] *kū,* பெ.(n.) 1. உடற்கழிவு (மலம்) (த.சொ.அக.); excretion of the body. 2. உடற்கழிவை வெளியேற்றுவகை (மலங்கழிக்கை) (யாழ்.அக.); evacuating, passing stools.

[கூளம்→ கூள்→ கூ.]

கூஉய் *kūuy,* வி.எ.(adv.) 1. கூவியெனப் பொருள்படும் அளபெடுத்த தெரிநிலை வினையெச்சம்; elongated adverb denoting the meaning "having beckoned". *"நம்பி தன்னைக் கூஉய்க் கொணர்மி னென்றான்" (சீவக. 1282).*

[கூவு →கூவி→ கூஉய்.]

கூக்குரல்[1] *kū-k-kural,* பெ.(n.) 1. பேரொலி; shout, outcry, uproar, clamour. *"நும்மேங்கு கூக்குரல் கேட்டுமே" (திவ்.திருவாய்.9,5,3).* 2. குறைதீர்க்க வேண்டி முறையிடும் ஒலி; Piteous cry, as in seeking redress.

[கூவு + குரல் – கூவுகுரல் → கூக்குரல்.]

கூக்குரல்[2] *kū-k-kural,* பெ.(n.) 1. குழந்தைகள் கத்துவது போன்ற கூவென்னும் ஒலி; cry, as of children or koel. *"குழவி யேங்கிய கூஉக் குரல் கேட்டு" (மணிமே.13,17).*

[கூவு + குரல் – கூவுகுரல் → கூக்குரல்.]

கூக்கேட்டல் *kū-k-kēṭṭal,* பெ.(n.) ஏவல் கேட்கை; lit., responding to a call, waiting one's command, serving. *"நாடொரு வழித்தாய்க் கூக்கேட்ப" (பு.வெ.6:31).*

[கூ + கேட்டல்.]

கூகத்தாள் *kūgattāḷ,* பெ.(n.) புன்னை; common *puṉṉai* (சா.அக.).

[கூகம் (மறைவு, நிழல்) → கூகத்தாள்.]

கூகம்[1] *kūgam,* பெ.(n.) மறைவு, உன்னிப்பு, மந்தணம்; the state of being hidden, disguised, secret. கூகமாய்ச் சொன்னான் (நெல்லை.).

கூகம்[2] *kūgam,* பெ.(n.) 1.கோட்டான் (Poṇḍ.); rock horned-owl. 2. ஆந்தை (யாழ்.அக.); owl.

[கூ → கூகம். கூ = கூவுதல்.]

கூகமானம் *kūga-māṉam,* பெ.(n.) மறைபொருள் (யாழ்.அக.); hidden or secret thing.

[ஊகம் →கூகம் → மானம்.]

கூகனகம் *kūgaṉagam,* பெ.(n.) இழிவழக்கு (யாழ்.அக.); indecent language.

[கூகனம் → கூகனகம்.]

கூகனம் *kūgaṉam,* பெ.(n.) 1. மறைந்த பொருளுடைய சொல் (வின்.); a term of hidden significance. 2. இழிவழக்கு, கீழ்த்தரமான மொழி; indecent term. 3. மாய்மாலம் (யாழ்.அக.); pretence deceit.

[கூகல்→கூகலம் → கூகனம்.]

கூகாகம் *kū-kāgam* பெ.(n.) கமுகு (மலை.); Areca-palm.

[கா – கூ(உயரம்) + (கமுகு → காகு) காகம்.]

கூகாரி *kūgāri,* பெ.(n.) காக்கை; crow (சா.அக.).

[கூ (கூவு) + காரி (சனி).]

கூகாவெனல் *kū-kā-v-eṉal,* பெ.(n.) 1. பேரொலிக் குறிப்பு; bawling, screeching. *"கூகாவென வென்கிளை கூடியழ"* (கந்தரனு.11). 2. முறையிடு தற்குறிப்பு; complaining, lamenting.

[கூ + கா + எனல்.]

கூகு *kūgu,* பெ.(n.) எட்டு அகவைப் பெண்; eight years old girl.

[குழ → குழகு → கூகு.]

கூகூ *kū-kū,* பெ.(n.) 1. ஒலிக்குறிப்பு வகையு ளொன்று; onom. clamour, outcry. *"ஏற்றெழுந்த கூகூவொலித் திரள்" (காஞ்சிப்பு. அரிசாப.4).* 2. அச்சப்பொருள் தரும் ஓர் இடைச்சொல் (த.சொ.அக.);particle denoting fear.

[கூ + கூ.]

கூகூவெனல் *kū-kū-v-eṉal,* பெ.(n.) ***கூகாவெனல்*** பார்க்க; see *kū-kā-v-eṉal. "நல்லடிக் கன்பாகா தவரெனக் கூகூவென்று" (வெங்கைக்கோ. 210).*

[கூ + கூ + எனல்.]

கூகை[1] *kūgai,* பெ.(n.) 1. கோட்டான்; rock horned-owl. *"கோழி கூகை யாயிரண் டல்லவை" (தொல். பொருள்.மரபு.56).* 2. குரங்கு முகமும் மஞ்சள் நிறமும் உடைய ஆந்தை; barn owl. *கூகைகள் குரலெழுப்பும் பாழ்மண்டபம்.* 3. ஒருவகைப் பருந்து; a species of kite (சா.அக.).

ம. கூமன்; **க.** கூகி, கூகெ, கூம்பெ; **தெ.** கூம்பி, கூம்பு; **து.** கும்ம, கூகெ; **பட.** கும்ம; **கொலா.** கூபு; **பர்.** குஞ்ஞி; **கூ.** குஞ்சி.

Skt. ghūka; **Mar.** ghubaḍ.

[கூவல் → கூகு → கூகை.]

சாகப் போகின்றவரை கூப்பிடும் பறவை என்பது பழங்காலக் கருத்து.



கூகை

கூகை[2] *kūgai,* பெ.(n.) கூவைச் செடி; east Indian arrow root. *"கூகையுங் கோட்டமும் ..... பரந்து"* (சீவக. 1905). *"சாவோப் பயிருங் கூகையின் குரலும்" (மணிமே.6:75).*

[கூவை → கூகை]

கூகைக்கட்டு *kūgai-k-k-kaṭṭu,* பெ.(n.) கூகை போல முகத்தை வீங்கச் செய்யும் 'பொன்னுக்கு வீங்கி' என்னும் புட்டாளம்மைக்கட்டு; mumps, as making the face look like an owl.

மறுவ. பொன்னுக்கு வீங்கி, புட்டாளம்மை, கூகை நீர்க்கட்டி, கூகைவீக்கம்.

[கூகை + கட்டு]

கூகைக்கிழங்கு *kūgai-k-kiḻaṅgu,* பெ.(n.) ***கூகை நீறு*** பார்க்க; see *kūgai-nīṟu* (சா.அக.).

[கூகை + கிழங்கு.]

கூகைக்கோழியார் *kūgai-k-kōḻiyār,* பெ.(n.) புறநானூறு 364 ஆம் பாடலைப் பாடிய புலவர்; Sangam poet.

[கூகை + கோழி + ஆர்.]

கூகைகுழறு—தல் *kūgai-kuḻaṟu-,* 5 செ.கு.வி.(v.i.) ஆந்தை அலறுதல்; to hoot, as an owl.

[கூகை + குழறு-.]

கூகைதாளி *kūgai-tāḷi,* பெ.(n.) 1. தாளி வகையைச் சார்ந்ததும், தொட்டிகளில் வைத்துப் பயிர் செய்வதும், கழிச்சல், வாந்தி இவற்றை உண்டாக்கு வதுமான தேவதாளி; a kind of the convolvulus genus. If is an emetic and purgative; and can cure piles, leprosy etc. 2. நுரைபீர்க்கு; snack luffa (சா.அக.).

[கூவை→கூகை + தாளி.]

கூகைநீர் *kūgai-nīr,* பெ.(n.) கூகைக்கிழங்குச் சாறு; the juice of arrow root plant (சா.அக.).

[கூகை + நீர்.]

கூகைநீர்க்கட்டி *kūgai-nīr-k-kaṭṭi,* பெ.(n.) ***கூகைக்கட்டு*** (வின்.) பார்க்க; see *kūgai-k-kaṭṭu.*

[கூகை + நீர் + கட்டு.]

கூகைநீலி *kūgai-nīli,* பெ.(n.) கொடிச்சிணுங்கி; a kind of sensitive creeper (சா.அக.).

[கூகை + நீலி]

கூகைநீறு *kūgai-nīṟu,* பெ.(n.) கூவைக் கிழங்கின் மாவு; arrow-root flour. *"கூகை நீற்றால் ... மார்புநோ யண்டுமோ" (பதார்த்த. 1013).*

[கூகை + (நூறு) நீறு.]

கூகைநீறு வகைகள்: 1. சிவப்புக்கூவை 2. பெருங்கூவை 3. மலையிஞ்சிக்கூவை 4. சினக்கூவை 5. மலைக் கூவை 6. மரவள்ளிக்கிழங்கு 7. மஞ்சள் மர வள்ளிக் கிழங்கு 8. சீமை மரவள்ளிக்கிழங்கு (சா.அக.).

கூகைமஞ்சள் *kūgai-mañjaḷ,* பெ.(n.) மலை வசம்பு (L.); sweet costus.

[கூகை + மஞ்சள்.]

கூகைவீக்கம் *kūgai-vīkkam,* பெ.(n.) ***கூகைக்கட்டு*** (வின்.) பார்க்க; see *kūgai-k-kaṭṭu.*

மறுவ. புட்டாளம்மை, பொன்னுக்கு வீங்கி.

[கூகை + வீக்கம்]

கூச்சக்கண் *kūcca-k-kaṇ,* பெ.(n.) கூசுங்கண்; tender eyes or eyes sensitive to light (சா.அக.).

[கூசும் + கண்.]

கூச்சக்காரன் *kūcca-k-kāraṉ,* பெ.(n.) 1. வெட்கப் படுபவன்; shy, bashful, person. 2. உடற் கூச்சமுள்ளவன்; ticklish person.

[கூச்சம் + காரன்]

கூச்சங்காட்டு—தல் *kūccaṅ-kāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) உடற்கூச்சம் உண்டாக்குதல்; to tickle, titillate.

[கூச்சம் + காட்டு-.]

கூச்சத்தம் *kūccattam,* பெ.(n.) கூக்குரல் (யாழ்.அக.); out cry.

[கூ + சத்தம்.]

கூச்சப்பார்வை *kūcca-p-pārvai,* பெ.(n.) மந்தப் பார்வை; sight dimmed by light (சா.அக.).

[கூச்சம் + பார்வை.]

கூச்சம்[1] *kūccam,* பெ.(n.) 1. நாணுகை; shyness, bashfulness, modesty, delicacy, shame. *"கைதொழூஉங் கூச்சங் களைந்து"* (சைவச. ஆசாரிய. 68). 2. உடல் கூசுகை; ticklishness. 3. கண், பல் முதலியன கூசுகை; delicacy, as of on eye; unpleasant tingling, as of a tooth. 4. அக்குட் கூச்சம்; titilation. 5. மனமெழாமை; hesitating, shrinking. அந்தக் கொடியவனது வீட்டிற் புகக் கூச்சம் உண்டாயிற்று (உ.வ.). 6. அச்சத் தாலுண்டாகும் நடுக்கம்; tremulousness; timidity, fear. அவனைப் பார்க்கும் போதே கூச்சமெடுக் கிறது (உ.வ.). 7. அச்சம்; fear *"கூச்சமாது ஷிகமென்று கூட்டமாட்டார்" (போ.நிக.568).*

[கூச → கூச்சம்.]

கூச்சம்[2] *kūccam,* பெ.(n.) 1. கட்டடத்திற்கு உதவும் சிறு மரக்கட்டை (இ.வ.); small-sized post, used in building. 2. தருப்பைப்புல்; sacrifical grass.

க. கூசுஇ கூச; **தெ.** கூசமு, குஞ்ச; **து.** குச்சி, குச்ச.

கூச்சமயிர் *kūcca-mayir,* பெ.(n.) சிலிர்த்த மயிர்; erectile hairs (சா. அக.).

[கூச்சம் + மயிர்]

கூச்சல் *kūccal,* பெ.(n.) 1. பேரொலி; outcry, clamour, hue and cry. 2. கக்கல் (வாந்தி), வயிற்றுப்போக்கு (இ.வ.); epidemic cholera.

ம. கூச்சல்

[கூவு → கூச்சல்.]

கூச்சி *kūcci,* பெ.(n.) விளாம்பழத்தின் சதைப் பற்று (வின்.); the pulp of the fruit of wood-apple.

ம. கூஞ்ஞு, கூஞ்ஞி, கூஞ்ஞை; **து.** கூஞ்சி, கூஞ்சி.

[கூசு → கூச்சி.]

கூச்சிதம் *kūccidam,* பெ.(n.) 1. **கூச்சிரம்** (வின்.) பார்க்க; see *kūcciram.* 2. நிலக்கடம்பு (சா.அக.); ground cadamba.

[கூச்சிரம் → கூச்சிதம்.]

கூச்சிரம் *kūcciram,* பெ.(n.) வெண்கடம்பு (மலை.); seaside, Indian oak or common Indian oak.

[கூச்சு → கூச்சிரம்.]

கூச்சிலகம் *kūccilagam,* பெ.(n.) கோப்பிரண்டை; a kind of adamantine creeper (சா.அக.).

[குச்சு → கூச்சில் → கூச்சிலகம்.]

கூச்சு[1] *kūccu,* பெ.(n.) கூரிய முனை; sharp point, cone shaped point as in developed abscess.

தெ. கூசி

[கூ → கூச்சு.]

கூச்சு[2] *kūccu,* பெ.(n.) 1. மயிர்ப்புளகம்; horripilation. *"மயிர்க் கூச்சுமறா"* (திவ்.பெரியாழ்.5:3:5). 2. விசைப்பிசின்; India rubber (சா.அக.).

[குச்சு → கூச்சு.]

கூச்சுத்தலை *kūccu-t-talai,* பெ.(n.) கோபுரத்தலை; steeple - head (சா.அக.).

[கூச்சு[1] + தலை.]

கூசம்[1] *kūšam,* பெ.(n.) கூச்சம்; shyness. *"பேசுமின் கூசமின்றி"* (திவ். திருவாய். 10:2:4).

[கூசு → கூசம்.]

கூசம்[2] *kūšam,* பெ.(n.) கொங்கை (யாழ்.); female breast.

[கூச்சு[1] → கூசம்.]

கூசல்[1] *kūšal,* பெ.(n.) 1. நாணம், கூச்சம்; shyness. *"பேசிமா் கூச லின்றி"* (திருவாலவா. 27:72). 2. மனங்குலைகை (பிங்.); perplexity, confusion. 3. அச்சம் (திவா.); fear. *"கூசலின்றிக் குற்றேவல் கொண்டனரோ"* (கந்தபு.மேரு.71).

ம. கூசல்

[கூசு → கூசல்.]

கூசல்[2] *kūšal,* பெ.(n.) கூச்சல், பேரொலி; outcry, clamour.

[கூவு → கூசல்.]

கூசனம் *kūšaṉam,* பெ.(n.) மதியாமை (யாழ்.அக.); nonchalance.

[கூசல் → கூசனம்.]

கூசாக்கல் *kūša-k-kal,* பெ.(n.) சிற்பம் முதலிய வேலைக்குப் பயன்படுத்தாத கல் (இ.வ.); undressed stone.

[கூச்சு → கூசா + கல்.]

கூசான்மலி *kūšanmali,* பெ.(n.) பட்டுநூல் மரம்; silk-worm tree; Indian mulberry tree.

[கூசான் + மலி]

கூசி *kūši,* பெ.(n.) கரிக்கோல் (எழுதுகோல்) (யாழ்.அக.); pencil.

[கூச்சு¹ → கூசு → கூசி.]

கூசிக்கரி *kūši-k-kari,* பெ.(n.) காரீயக் கல்; black lead (சா.அக.).

[கூசி + கரி.]

கூசிகை *kūšigai,* பெ.(n.) கரிக்கோல் (எழுதுகோல்); pencil.

[கூசி → கூசிகை]

கூசிதம் *kūšidam,* பெ.(n.) 1. பறவைகளின் ஒலி (யாழ்.அக.); bird's cry. 2. ஓசை (த.சொ.அக.); sound.

[கூச்சு¹ → கூசு → கூசி.]

கூசிப்பார்-த்தல் *kūši-p-pār-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ***கூசிவிழி*** பார்க்க; see *kūšivili.* 2. அரைக் கண்ணால் பார்த்தல்; looking with half-closed eyes.

[கூசி + பார்-.]

கூசிவிழி-த்தல் *kūši-vili-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கண் கூச்சத்துடன் நோக்குதல்; to look with dazzled eyes. 2. அருளுடன் பார்த்தல் (வின்.); to look with eyes of grace.

[கூசி + விழி.]

கூசுகண்¹ *kūšukan* பெ. (n.) 1. ***கூசிவிழி-த்தல்*** பார்க்க; see *kūšivili-.*

[கூசு → கண்.]

கூசுகண்² *kūšu-kan,* பெ.(n.) இடுங்கிப் பார்க்கும்படி செய்யும் கண்ணோய் வகை (வின்.); a kind of near-sightedness, causing one to keep the eyes nearly shut.

[கூசு → கண்.]

கூசு¹-தல் *kūšu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நாணுதல்; to be shy, bashful. *"அச்சமுங் கொண்டு கூசி" (திருவிளை. திருநாட். 31).* 2. உடல் கூச்சங் கொள்ளுதல்; to be ticklish. 3. கண், பல் முதலின கூசுதல்; to be tender, weak, sensitive, as an eye, a limb; to be set on edge, as a tooth. *"காணக்கண் கூசுதே" (தனிப்பா.).*

ம. கூசுக

[கூ → கூசு.]

கூசு²-தல் *kūšu-,* 5 செ.கு.வி.(v.i.) 1.அஞ்சிப் பின் வாங்குதல்; to recoil, shrink back as from fear. *"கூசின வல்ல பேச நாணின" (கம்பரா. பால பூக்கொய். 6).* 2. நிலைகுலைதல் (பிங்.); to be routed as on army.

[கூ → கூசு.]

கூசுமாண்டர் *kūšumāṇḍār,* பெ.(n.) நிரைய (நரக) வுலகின் தலைவர்; lord of hells. *"கூசுமாண்டர் முப்பத்திரண்டு நரகங்களுக்கும் அதிபதியாய்" (சி.போ.பா.2:3, பக்.204).*

[கூசு + மாண்டர்.]

கூட்டக்கட்டு *kūṭṭa-k-kaṭṭu,* பெ.(n.) ஒற்றுமையோடு உதவக் கூடிய சுற்றத்தாரின் கட்டுப்பாடு; ties of blood, the bond of union among relations.

[கூட்டம் + கட்டு.]

கூட்டக்கலகம் *kūṭṭa-k-kalagam,* பெ.(n.) மாந்தர் கூட்டமிட்டு விளைக்கும் கலகம்; riot.

[கூட்டம் + கலகம்.]

கூட்டக்கொள்ளை *kūṭṭa-k-koḷḷai,* பெ.(n.) கூட்டமாகச் சேர்ந்து புரியுங் கொள்ளை; dacoity.

ம. கூட்டக்கவர்ச்ச

[கூட்டம் + கொள்ளை.]

கூட்டச்சாலை *kūṭṭa-c-cālai,* பெ.(n.) நிழற்சாலை, இரு பக்கங்களிலுமுள்ள மரநெருக்கத்தால் நிழல் செறிந்த பாதை (வின்.); public road shaded with thickly grown trees on its sides, avenue.

மறுவ. நிழற்சாலை

[கூட்டம் + சாலை.]

கூட்டடி *kūttadi,* பெ.(n.) அளத்தில் உப்பைக் குவியலாக இட்டிருக்கும் இடம்; place in a salt-pan where salt is heaped up.

[கூட்டம் + அடி.]

கூட்டத்தார் *kūttattār,* பெ.(n.) 1. பழங்குடியைச் சார்ந்த ஒரு வகுப்பினர்; members of a tribe. 2. குழுகாயத்தின் ஒரு பிரிவினர்; members of a society.

[கூட்டம் → கூட்டத்தார்.]

கூட்டநாட்டம் *kūtta-nāttam,* பெ.(n.) மாந்தர் கூடுதற்குரிய நிலைமை; possibility of people gathering.

[கூட்டம் + நாட்டம்.]

கூட்டப்பிராய் *kūtta-p-pirāi,* பெ.(n.) குற்றிப்பலா; stunted jack (சா.அக.).

[கூட்டம் + பிராய்.]

கூட்டம்[1] *kūttam,* பெ.(n.) 1. கூடுகை; union, combination, meeting. 2. திரள் (திவா.); crowd, flock, clump, swarm, group. 3. மந்தை; herd. 4. அவை (பிங்.); association, society, assembly, confederation. *"கூட்டம் பாவையு மன்னவன் றொண்டு செய் கூட்டம்" (கந்தபு.திருநகர.44).* 5. இனத்தார்; kindred, relations, tribe. 6. நட்பினர் (சூடா.); friends, companions.

ம. கூட்டம்; க., து., பட. கூட; தெ. கூடமு; கோத., துட. கூட்ம்; குட. கூடி.

[கூடு → கூட்டம்]

கூட்டம்[2] *kūttam,* பெ.(n.). 1. வகை (வின்.); class, kind, series, set, species, genus. 2. *கூட்டவணி* (திவா.) பார்க்க; see *kūtta-v-ani.* 3. போர் (திவா.); battle, fighting. 4. மெய்யுறு புணர்ச்சி; copulation, sexual intercourse. *"எல்வளையாள் கூட்டம் புணராமல்" (பு. வெ. 11, ஆண்பாற்,8).* 5. மிகுதி (வின்.); abundance, numerousness. 6. பிண்ணாக்கு (அக. நி.); oil-cake.

ம. கூட்டம்; க., து., பட. கூட; தெ.கூடமு; கோத., துட. கூட்ம்; குட. கூடி.

[கூடு → கூட்டம்.]

கூட்டம்[3] *kūttam,* பெ.(n.) மலையுச்சி (பிங்.); summit of mountain, peak.

[கூடு → கூட்டம்.]

கூட்டமாமூலி *kūttamāmūli,* பெ.(n.) ஆயிரத்தெட்டு மூலி; a classification consisting of a group 1008 plants or herbs (சா.அக.).

[கூட்டம் + ஆ (ஆயிரம்) + மூலி.]

கூட்டமை[1]**-தல்** *kūttamai-,* 2 செ.கு.வி.(v.i.) பலவகை உறுப்புகளும் சேர்ந்தமைதல்; to be mixed, as the ingredients of sandal paste, to be set in order, as the different parts of a musical instrument. *"கூட்டமை வனப்பிற் கோடபதிக் குரல்" (பெருங். வத்தவ. 3:123).*

[கூட்டு + அமை-.]

கூட்டமை[2] *kūttamai,* பெ.(n.) காய்கறியமுது (பிங்.); cooked vegetable food.

[கூட்டு + அமை.]

கூட்டமைதீ *kūttamai-ti,* பெ.(n.) திருமணத்தின் போது கூட்டும் வேள்வித்தீ; sacrificial fire at the wedding ceremony. *"கூட்டமை தீமுதற் குறையா நெறிமையின்" (பெருங். வத்தவ. 17:113).*

[கூட்டு + அமை + தீ.]

கூட்டமைவு *kūttamaivu,* பெ.(n.) கூடியிருக்கை; residing together. *"அவளொடு பின் கூட்டமைவும்" (பெருங். இலாவாண. 17,16).*

[கூட்டு + அமைவு.]

கூட்டர் *kūttar,* பெ.(n.) 1. தோழர்; companions. 2. இனத்தார்; members of the same clan or tribe. *"உன் கூட்டரா மரக்கர்" (கம்பரா. சடாயுவு. 84).*

ம. கூட்டர்

[கூட்டு → கூட்டார்.]

கூட்டரக்கு *kūttarakku,* பெ.(n.) செவ்வரக்கு; *"கூட்டரக் கெறிந்த பஞ்சின்" (சீவக. 1166).*

[கூட்டு + அரக்கு.]

கூட்டரவு *kūttaravu,* பெ.(n.) 1. கூடுகை; uniting, joining. 2. உடனுறைகை; association, acquaintance. *"போதமிக்கவர் கூட்டரவு" (ஞானவா. முமுட். 25).* 3. பொருட்கூட்டம் (வின்.); collection aggregate, series. 4. சேர்க்கை; combination, union. *"இவற்றின் கூட்டரவின் ஒருணர்வுண்டாம்" (சி.போ.பா.அவையடக். ப.36).*

[கூடு → கூட்டு +அரவு.]

கூட்டரளி *kūttarali,* பெ.(n.) பார்க்க ***இரட்டையலரி*** (சா.அக.);see *irattai-y-alari.*

[கூட்டு +அரளி.]

கூட்டரிசி *kūttariši,* பெ.(n.) கறியிற் கூட்டுவதற்கு அரைத்த அரிசிமா (யாழ்.அக.); rice flour used in preparing curry.

[கூடு → கூட்டு +அரிசி.]

கூட்டல் *kūttal,* பெ.(n.) 1. கூடுகை, இணைகை; uniting, joining. 2. வலிய அரசனது துணையைத் தேடுகை; seeking the alliance of powerful kings. *"கூடினாரைப் பிரித்தல் கூட்டல்" (பு.வெ.9,37,உரை.).* 3. எண்களை ஒன்றோடொன்று கூட்டுதலாகிய கணிதவகை; addition (Arith.).

ம. கூட்டல்

[கூடு → கூட்டல்.]

கூட்டவணி *kūtta-v-ani,* பெ.(n.) ஒரு காலத்தி லுண்டாகும் பல தொழில்களின் கூட்டத்தைக் கூறுவதாகவேனும், தனித்தனியே தொழிலை விளைத்தற்குரிய பல காரணங்களை ஒன்று கூடியதால் ஒரு தொழில் பிறப்பதாகக் கூறுவதாக வேனும் வரும் அணிவகை; (அணியி.55) a figure of speech which consists in enumerating together various actions or causes associated with some common object or result.

[கூட்டம் + அணி.]

கூட்டவியல் *kūttaviyal,* பெ.(n.) காய்கறிகள், தயிர் முதலியவற்றால் செய்யப்படும் ஒருவகை கூட்டுக்கறி; a kind of curry in semiliquid form made of vegetables, curd etc.

[கூட்டு + அவியல்.]

கூட்டற்றவன் *kūttarravan,* பெ.(n.) 1. சேரத்தகாதவன் (வின்.); one unfit for company. 2. ஒன்றுக்கும் பயனற்றவன்; useless person. 3. இனத்தினின்று விலக்குண்டவன்; outcaste excommunicated person.

[கூட்டு + அற்றவன்.]

கூட்டாக்கு-தல் *kūttākku-,* 5 செ.குன்றாவி (v.t.) பொருட்படுத்துதல் (திருநெல்.); to take into account, to mind.

[கூட்டு + ஆக்கு.]

கூட்டாக்குழப்பம் *kūttā-k-kulappam,* பெ.(n.) தாறுமாறு (வின்.); confusion of things, disorder.

[கூட்டா + குழப்பம்.]

கூட்டாஞ்சோறு *kūttāñ-jōru,* பெ.(n.) 1. கூடியுண்ணும் உணவு (இ.வ.); common meal, as at a picnic. 2. காய்கறிகளைச் சேர்த்துப் பொங்கிய சோறு (நெ.வ.); rice boiled with vegetables. ஆடிப்பெருக்கு நாளன்று கூட்டாஞ்சோறு உண்டோம் (உ.வ.).

[கூட்டு + ஆம் + சோறு.]

கூட்டாணி *kūṭṭāṇi,* பெ.(n.) மரப்பலகை முதலியவற்றை இணைக்கும் ஆணி; nail for joining two or more pieces of wood.

[கூடு → கூட்டு + அணி.]

கூட்டாளன் *kūṭṭāḷaṉ,* பெ.(n.) ***கூட்டாளி*** பார்க்க; see *kūṭṭāḷi.* *"கூட்டாளா சிவகாமக் கொடிக் கிசைந்த கொழுநா" (அருட்பா. vi, அருள்வி. 14).*

ம. கூட்டாள்

[கூட்டு + ஆளன்.]

கூட்டாளி *kūṭṭāḷi,* பெ.(n.) 1. நண்பன்; associate, companion. 2.பங்காளி; partner in trade, co-partner. 3. பணவணிக முகவர்; agent of money lending business. 4. உடனொத்தவன்; equal compeer. *என் கூட்டாளியானால் அக்காரியம் எளிதில் முடியும்.* 4. இணையி லொன்று (வின்.); fellow, one of a pair, as oxen, horses.

ம. கூட்டக்காரன்

[கூட்டு + ஆளி.]

கூட்டிக்கட்டு-தல் *kūṭṭi-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. சேர்த்துக் கட்டுதல்; to gather and tie together. 2. பிறர்நிலத்தைத் தன்னதாகச் சேர்த்துக் கொள்ளுதல்; to encroach on another's land.

[கூட்டு→ கூட்டி + கட்டு]

கூட்டிக்கொடு-த்தல் *kūṭṭi-k-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. முன்னிருந்ததோடு சேர்த்துக் கொடுத்தல்; to give more, increase, add to. 2. பெண்களைப் பரத்தமைக்குக் கூட்டிவிடுதல்; to play the pimp, pander.

[கூட்டி + கொடு.]

கூட்டிக்கொள்ளு-தல் *kūṭṭi-k-koḷḷu-,* 16 செ.குன்றாவி. (v.t.) 1. கூட்டமுதலியவற்றில் சேர்த்துக் கொள்ளுதல்; to take, admit one as into society, company etc. 2. மருந்து உணவு முதலியவற்றில் வேண்டும் பொருள்களைச் சேர்த்தல்; to add ingredients, as in medicine food, etc. 3. உணவு உட்கொள்ளுதல்; to take in, as food. இன்று என்ன கூட்டிக் கொண்டாய்? (உ.வ.).

[கூட்டி + கொள்.]

கூட்டிப்பிடி-த்தல் *kūṭṭi-p-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. சேர்த்துப்பற்றுதல்; to hold together, as by the hand. 2. பிறர்க்குரிய நிலத்தைத் தன்னதாக்குதல் (வின்.); to encroach upon, as another's lands. 3. துணி முதலியவற்றை அதிகமாக அளப்பதற்கு இழுத்துப்பிடித்தல் (வின்.);to grasp too much, as in measuring cloth. 4. ஒருவனை மன்னித்து ஏற்றுக்கொள்ளுதல் (இ.வ.); to receive and treat with kindness, as a repenting prodigal.

[கூட்டி + பிடி.]

கூட்டிப்பேசமுடியாமை *kūṭṭi-p-pēśa-muḍiyāmai,* பெ.(n.) சொற்களைச் சேர்த்துத் தொடர்ச்சியாகப் பேசக்கூடாமை; inablity to arrange words into sentences synthetically (சா.அக.).

[கூட்டி + பேச + முடியாமை.]

கூட்டிப்போ-தல் *kūṭṭi-p-pō-,* 15 செ.குன்றாவி. (v.t.) கூட அழைத்துக்கொண்டு செல்லுதல்; to take along.

[கூட்டி + போ.]

கூட்டிமுடி-த்தல் *kūṭṭi-muḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கூந்தல் முதலியவற்றைச் சேர்த்துக் கட்டுதல்; to gather and tie, as hair. 2. முற்றுவித்தல்; to accomplish, achieve.

[கூட்டி + முடி.]

கூட்டியுரை-த்தல் *kūṭṭi-y-urai-,* 4 செ.குன்றாவி (v.t.) ஒரு சொல்லை மற்றோரிடத்தும் சேர்த்துப் பொருள் கூறுதல் (புறநா. 140, உரை .); to construe a sentence by imparting into it a word or phrase from a neighbouring passage.

[கூட்டி + உரை.]

கூட்டிவிடு—தல் *kūṭṭi-viḍu-,* 20 செ.குன்றாவி.(v.t.) 1. கூட்டியனுப்புதல்; to send one along with another. 2. ***கூட்டிக்கொடுத்தல்*** பார்க்க; see *kūṭṭi-k-koḍu-.* 3. ***கூட்டிவை*** பார்க்க; see *kūṭṭi-vai-.*

[கூட்டி + விடு-.]

கூட்டிவிழுங்கல் *kūṭṭiviḻuṅgal,* ஒன்றுசேர்த்து விழுங்குதல்; swallowing after collecting the fragments in the mouth (சா.அக.).

[கூட்டி + விழுங்கல்.]

கூட்டிவை—த்தல் *kūṭṭivai-,* 4 செ.குன்றாவி (v.t.) 1. சேர்த்து வைத்தல்; to accumulate, lay up, hoard. 2. வேண்டியன புரிந்து நன்மை செய்தல்; to bless with success, to bestow prosperity on one. கடவுள் உனக்குக் கூட்டி வைப்பார். 3. மாறுபட்டாரை இணங்கி யொன்றுபடச் செய்தல்; to effect reconciliation, as between hostile parties.

[கூட்டி + வை-.]

கூட்டு[1]—தல் *kūṭṭu-,* 5 செ.குன்றாவி(v.t.) 1. இணைத்தல்; to unite, join, combine, connect. *"திருவடிக்கட் கூட்டினை" (திவ்.திருவாய்.4:9,9).* 2. கலத்தல்; to compound, mingle, mix, amalga mate. 3. அதிகப்படுத்துதல்; to increase *பேசியதற்குமேல் வட்டி கூட்டித்தர வேண்டும்.* 4. தொகை கூட்டுதல்; to add, sum up. 5. அவை கூட்டுதல்; to convene, convoke, as an assembly. 6. துடைப்பத்தாற் பெருக்குதல்; to gather up with a broom. 7. முடித்தல்; to finish. *"கூறுமாக்கதை கூட்டுமுன்" (பிரமோத். 22–23).*

ம. கூட்டுக

[கூடு → கூட்டு.]

கூட்டு[2]—தல் *kūṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) சீழ் முதலியன உண்டாதல் (யாழ்ப்.); to form, as pus.

[கூடு → கூட்டு.]

கூட்டு[3]—தல் *kūṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) அருளுரை வழங்குதல்; to teach. *"உஜ்ஜீவிக்க வாராயென்று தம் திருவுள்ளத்தோடே கூட்டுகிறார்"* (ஈடு. 1:1,1).

[கூடு → கூட்டு.]

கூட்டு[4] *kūṭṭu,* பெ.(n.) 1. ஓரினமான பொருள்; persons or things of the same class. *"மனுஷ்யர்களுக்குக் கூட்டல்லர்" (ஈடு. 9:8,9)* 2. நட்பு; companionship, fellowship, friendship. *"அம்புக்குங் காலனுக்கு மென்ன கூட்டா!" (இராமநா.உயுத்.31).* 3. துணை; assistance, help *"கூட்டொருவரையும் வேண்டா" (கம்பரா. வாலிவ.81)* 4. உறவு (வின்.); relationship, consanguinity. 5. ***கூட்டு வாணிகம் (கொ.வ.)*** பார்க்க; see *kūṭṭu-vāṇigam.* 6. திரள்; horde, throng. *"கொடியணிதேர் கூட்டணங்கும் போழ்தின்" (பு.வெ.10, பொதுவியற்.2).* 7. பிறன்மனை சேர்தல்; illicit intercourse. 8. ஒப்புமை; likeness, comparison. *"மடங்கல் கூட்டுற வெழுந்தெரி வெகுளியான்" (கம்பரா. அதிகாய.).*

[கூடு →கூட்டு]

கூட்டு[5] *kūṭṭu,* பெ.(n.) 1. கலப்பு; compound, mixture. 2. கறி உசிலை; curry stuffs ground together. 3. கூட்டுக்கறி; curry boiled in semiliquid form. 4. நீராற் பதப்பட்ட மண்திரள்; clod, lump of moist clay. *"கூட்டுற முறுக்கிவிட்ட குயமகன் றிகிரி போல"* (சீவக. 786). 5. வண்டி முதலியவற்றின் சக்கரத்துக்கும் இடும் மை (சீவக.786);grease applied to wheels and carts etc.

ம. கூட்டு

[கூடு →கூட்டு]

கூட்டு[6] *kūṭṭu,* பெ.(n.) பொருள் மிகுதி; plenty, abundance. *"புணர்கூட் டுண்ட.... சிறப்பின்" (மதுரைக். 762).* 2. திறை; tribute. *"தார்மன்னருங் கூட் டளப்ப" (பு.வெ. 8,29).* 3. அரையிற் கட்டுந் துகிலாகிய அரைஞாண்; strip of cloth used as a waist-band *"கூட்டு மகப்படக் கோவண நெய்து"* (பதினொ.

நம்பியாண்.திருத்தொண்டர் திருவந்.80) 4. வீட்டின் மேற்கோப்பு, கீழ்க்கோப்பு முதலியன (இ.வ.); roof-frame, etc., of a house.

[கூடு → கூட்டு.]

கூட்டுக்கச்சவடம் *kūttu-k-kacca-vadam,* பெ.(n.) ***கூட்டு வாணிகம்*** பார்க்க; see *kūttu-vāṇigam.*

[கூட்டு + கச்சவடம்.]

கூட்டுக்கணக்கு[1] *kūttu-k-kaṇakku,* பெ.(n.) கூட்டல்; addition.

[கூட்டு + கணக்கு.]

கூட்டுக்கணக்கு[2] *kūttu-k-kaṇakku,* பெ.(n.) 1. பலர் ஒன்று சேர்ந்து வரவுசெலவு செய்யுங் கணக்கு; joint account. 2. கூட்டு வணிகக் கணக்கு (இ.வ.); partnership account.

[கூட்டு + கணக்கு.]

கூட்டுக்கலவை *kūttu-k-kalavai,* பெ.(n.) பல மருந்துகளைக் கூட்டிக் கலந்தது; compound mixture (சா.அக.).

[கூட்டு + கலவை.]

கூட்டுக்கறி *kūttu-k-kaṟi,* பெ.(n.) 1. காய்கறியும் பருப்புங் கலந்து செய்த கறியுணவு; a vegetable curry in semiliquid form. *"கூட்டுக்கறியி லே கலந்த பேராசை" (அருட்பா.VI, அவாவறு.4).*

[கூட்டு + கறி.]

கூட்டுக்காரன் *kūttu-k-kāraṉ* பெ.(n.) கூட்டாளி; partner, associate.

ம. கூட்டுக்காரன்

[கூட்டு + காரன்.]

கூட்டுக்கால் *kūttu-k-kāl,* பெ.(n.) பாய்ந்தோடுகை; gallop *குதிரை கூட்டுக்காலிற் செல்லுகிறது இ.வ.).*

[கூட்டு + கால்.]

கூட்டுக்கால்கட்டு-தல் *kūttu-k-kāl-kattu,* 5 செ.கு.வி. (v.i.) 1. விலங்கின் முன்னங்கால்களைக் கூட்டிக் கட்டுதல்; to tie a beast's fore-legs together. 2. வலியற்ற தூணிற்கு முட்டுக்கொடுத்தல் (இ.வ.); to set up an additional prop as a support to a weak pillar.

[கூட்டு + கால் + கட்டு.]

கூட்டுக்கீரை *kūttu-k-kīrai,* பெ.(n.) கலவைக்கீரை (Pond.); edible greens, mixed together and cooked as a dish.

[கூட்டு + கீரை.]

கூட்டுக்குடிநீர் *kūttu-k-kuḍi-nīr,* பெ.(n.) பலவகை மருந்து சேர்ந்த கருக்கு (கியாழம்) அல்லது பழுகு சாறு; a mixture of medicine taken in (சா.அக.).

[கூட்டு + குடி + நீர்.]

கூட்டுக்குடும்பம் *kūttu-k-kuḍumbam,* பெ.(n.) பிரிவினையாகாத தனிப்பெருங் குடும்பம் (இ.வ.); joint family.

ம. கூட்டுகுடும்பம்

[கூட்டு + குடும்பம்.]

கூட்டுக்குளிகை *kūttu-k-kuḷikai,* பெ.(n.) பல மருந்துகள் சேர்ந்த மாத்திரை; a compound pill (சா.அக.).

[கூட்டு + குளிகை.]

கூட்டுக்கூட்டு-தல் *kūttu-k-kūttu-,* 5 செ.கு.வி. (v.i.) சந்தனத்தில் நறுமணஞ்சேர்த்தல் (இ.வ.); to mix scents in preparing sandal paste.

[கூட்டு + கூட்டு.]

கூட்டுச்சரக்கு *kūttu-c-carakku,* பெ.(n.) மருந்தில் சேர்க்க வேண்டிய கடைச்சரக்குகள்; bazar drugs that are necessary to drugs to be added (சா.அக.).

[கூட்டு + சரக்கு.]

கூட்டுச்சீட்டு *kūttu-c-cīttu,* பெ.(n.) பலர் ஒருங்குசேர்ந்து குறித்த தவணைகளில் பணங்கட்டி, ஏலமூலமாகவோ, குலுக்குச்சீட்டு மூலமாகவோ உறுதிசெய்யப்பட்டவருக்கு ஒரே தொகையாகக் கொடுக்கும் சீட்டுவகை; association chit-fund where the amount of the bid or the sum total of the premia is paid periodically either to be lowest bidder or to one whose name is decided casting lots.

[கூட்டு + சீட்டு.]

கூட்டுண்டாக்கு-தல் *kūttundā-k-ku-,* 5 செ.குன்றாவி. (v.t.) கூடும்படிசெய்தல்; effecting a union (சா.அக.).

[கூட்டு + உண்டாக்கு.]

கூட்டுண்டாகல் *kūttundāgal,* பெ.(n.) கலவி செய்தல்; having copulation. 2. கலவியேற்படல்; the happening or occurence of a sexual act. (சா.அக.).

[கூட்டு + உண்டாகல்.]

கூட்டுண்(ணு)[1]-தல் *kūttun(n)-,* 12 செ.குன்றாவி. (v.t.) 1. கூடியுண்ணுதல்; to dine together, as at a feast. *"வரிவண்டு பண்ணலங் கூட்டுண்ணும் (பு. வெ.9:49).* 2. முழுமையாகக் கலவியின்பம் நுகர்தல்; to enjoy to the full. *"என்னுண்ணலங் கூட்டுண்டான்" (பு.வெ. 9:49).*

[கூட்டு + உண்-.]

கூட்டுண்(ணு)[2]-தல் *kūttun(n)-,* 12 செ.குன்றாவி. (v.i.) 1. திறைகொள்ளுதல்; to accept tribute. *"கொடித்திண்டே மன்னராற் கூட்டுண்டு வாழ்வார்" (பழ. 266).* 2.கலவி செய்தல்; to have sexual intercourse *"கூட்டுண்டு நீங்கிய .... கண்ணன்" (திவ். திருவாய். 9:5.7).*

[கூட்டு + உண்-.]

கூட்டுத்தட்டு *kūttu-t-tattu,* பெ.(n.) கறிக்குரிய குழம்புப் பொடிகள் வைக்கும் பல அறை களையுடைய தட்டு (வின்.); tray with a set of compartments for holding curry powders.

[கூட்டு + தட்டு.]

கூட்டுநீர் *kūttu-nīr,* பெ.(n.) மருந்து கலந்த நீர்; lotion (சா.அக.).

[கூட்டு + நீர்.]

கூட்டுப்பங்கு *kūttu-p-pangu,* பெ.(n.) வாணிகத்தில் சேர்ந்துகொள்ளும் பங்கு (இ.வ.); share in a partnership concern.

[கூட்டு + பங்கு.]

கூட்டுப்படகு *kūttu-p-padagu,* பெ.(n.) 16, பயணிகள்வரை செல்லுதற்கோ, மூன்று முதல் 7 கல்லெடை (டன்) பொருள்களை யேற்றுவதற்கோ பயன்படுவதும், மேற்கூடுள்ளதுமான தோணிவகை (M.M.915); boats provided with movable tops, to carry about 16 passengers or cargo varying from 3 to 7 tons.

[கூட்டு + படகு.]

கூட்டுப்படை *kūttu-p-padai,* பெ.(n.) துணைப்படை (ஈடு. 10:3.5); auxiliary force.

[கூட்டு + படை.]

கூட்டுப்பயிர் *kūttu-p-payir,* பெ.(n.) பிறருடன் சேர்ந்து செய்யும் வேளாண்தொழில் (இ.வ.); joint cultivation.

[கூட்டு + பயிர்.]

கூட்டுப்பல்லக்கு *kūttu-p-pallakku,* பெ.(n.) செருகு கதவுள்ள பல்லக்கு; palan quin with sliding doors.

[கூட்டு + பல்லக்கு .]

கூட்டுப்புழு *kūttu-p-pulu,* பெ.(n.) முத்தோன்றிப் புழு (திரியவதாரப் புழு). இது கூட்டைப் பின்னிக் கொண்டு அதனுள் அசையாமற் சிலநாள் வரை இரைகொள்ளாமல் இருந்து பூச்சியாக மாறும்; an insect or moth which assumes the state of metamorphosis before changing from the larva, to the winged state (சா.அக.).

[கூட்டு +புழு.]

கூட்டுமரம் *kūttu-maram,* பெ.(n.) பாய்மரத்தைச் சார்ந்த மரம் (Pond.); mast.

[கூட்டு + மரம்.]

கூட்டுமருந்து *kūṭṭu-marundu,* பெ.(n.) கலவை மருந்து; a compound of different ingredients blended together (சா.அக.)

[கூட்டு + மருந்து.]

கூட்டுமா *kūṭṭu-mā,* பெ.(n.) கறியிற் சேர்க்கும் மா (இ.வ.); flour used in curry.

[கூட்டு + மா.]

கூட்டுமாறு *kūṭṭu-māṟu,* பெ.(n.) விளக்குமாறு (இ.வ.); broom.

[கூட்டு + மாறு.]

கூட்டுமூட்டு *kūṭṭu-mūṭṭu,* பெ.(n.) 1. ஒரு செயலைச் செய்வதற்குப் பலருங் கூடுகை (வின்.); combination and co-operation of persons for effecting an object. 2. சூழ்ச்சி செய்யுமுன் கூடும் ஆய்வுக்கூட்டம்; league, confederacy, conspiraey. 3. பழிப்புரை; slander, aspersion calumny.

[கூட்டு + மூட்டு.]

கூட்டுவட்டி *kūṭṭu-vaṭṭi,* பெ.(n.) கடாவு வட்டி (இ.வ.); compound interest.

[கூட்டு + வட்டி]

கூட்டுவண்டி *kūṭṭu-vaṇḍi,* பெ.(n.) மேற்கூடுள்ள வண்டி (இ.வ.); cart with hood or curved top, opp. to *moṭṭai-vaṇḍi.*

[கூண்டு → கூட்டு + வண்டி]



கூட்டுவண்டி

கூட்டுவருக்கம் *kūṭṭu-varukkam,* பெ.(n.) நறுமண மருந்து எண்ணெயின் கலவை; a mixture of several odoriferous ointments (சா.அக.).

[கூட்டு + வருக்கம்.]

கூட்டுவாணிகம் *kūṭṭu-vāṇigam,* பெ.(n.) பலர் கூடிச் செய்யும் வணிகம்; joint concern, partnership in trade.

[கூட்டு + வாணிகம்]

கூட்டுவாய் *kūṭṭu-vāy,* பெ.(n.) செம்பு, ஏனம் முதலியவற்றின் பொருத்து (இ.வ.); dove-tail joint in a metal vessel, etc.

[கூட்டு + வாய்.]

கூட்டுவான் *kūṭṭu-vāṉ,* பெ.(n.) 1. கறியிற் கூட்டப்படும் கறியமுது வகைகள் (இ.வ.).; condiments. 2. கறி; curry.

ம. கூட்டான், கூட்டுவான்; க. கூடு.

[கூட்டு → கூட்டுவான்]

கூட்டுவிரல் *kūṭṭu-viral,* பெ.(n.) ஒன்றுசேர்ந்த விரல்கள்; toes or fingers united by a membrane (சா.அக.).

[கூட்டு + விரல்.]

கூட்டுறவாக்கல் *kūṭṭuṟavākkal,* பெ.(n.) மருந்துகள் ஒன்றோடொன்று கலக்கும்படி வேதியியற் கூட்டாகச் செய்தல்; causing medicines to combine chemically (சா.அக.).

[கூட்டு + உறவாக்கல்]

கூட்டுறவினியக்கம் *kūṭṭuṟaviṉiyakkam,* பெ.(n.) கூட்டுறவுத் தொடர்பால் ஒன்றுக்கேற்படும் இயக்கத்தினால் மற்றவை தானாகவே இயங்கு நிலைமை; the coincident movement voluntarily taking place in others, when the primary one is affected (சா.அக.).

[கூட்டுறவின் + இயக்கம்.]

கூட்டுறவு[1] *kūttur̤avu*, பெ.(n.) 1. நெருங்கிய உறவு; intimate connection. *"கொள்ளை வினைக் கூட்டுறவால்" (அருட்பா, VI, அருள்விள.84).* 2. நட்பு; friendship,alliance.

[கூட்டு + உறவு.]

கூட்டுறவு[2] *kūttur̤avu*, பெ.(n.) ஒற்றுமையாய் வேலைசெய்கை (Mod.); co-operation.

[கூட்டு + உறவு.]



கூட்டுறவு

கூட்டுறவுக்கழகம் *kūttur̤avu-k-kalagam*, பெ.(n.) பலர் இணைந்து செயற்படும் கூட்டமைப்பு (mod.); co-operative society.

[கூட்டுறவு + கழகம்.]

கூட்டுறவு முறைமை *kūttur̤avu-mur̤aimai*, பெ.(n.) இயற்பியல் அல்லது வேதியல் முறைப்படி மாற்றம் அடையும் முறைமை; the system of chemical or al-chemical combination (சா.அக.).

[கூட்டுறவு + முறைமை.]

கூட்டெழுத்து *kūtteluttu*, பெ.(n.) 1. விரைவாகக் கூட்டியெழுதும் எழுத்து; cursive writing, running hand. 2. எழுத்துகளைச் சேர்த்தெழுதும் எழுத்து; two or more letters written conjointly. 3. இரண்டு முதலாகிய மெய்கள் இணைந்த வடவெழுத்து (நன். 146, மயிலை.); conjunct consonants as க்ஷ (ks).

[கூட்டு + எழுத்து.]

கூட்டை *kūttai*, பெ.(n.) கூத்துவகையுளொன்று (அக.நி.); a kind of dance.

[கூடு → கூட்டை]

கூட்டோடு *kūttōḍu*, வி.எ. (adv.) அடியோடு; completely, root and branch. *"கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ" (திருவாச. 12:16).*

[கூடு → கூட்டு + (ஒடு) ஓடு.]

கூட்டோடுகளை-தல் *kūttōḍu-kaḷai-*, 2 செ.குன்றாவி. (v.trans) வேரற அல்லது அடியோடு நீக்கல்; uprooting or curing radically as diseases in the system (சா.அக.).

[கூட்டோடு + களைதல்.]

கூட்டோடு கைலாசம் *kūttōḍu-kailāšam*, பெ.(n.) உயிரோடு உடல் மறைதல்; disappearig or vanishing of the body with the soul (சா.அக.).

[கூட்டோடு + கைலாசம்.]

கூட்டோடுபோ-தல் *kūttōḍu-pō-*, 8 செ.கு.வி. (v.i.) உயிரோடு உடல் மறைதல்; disappearance or vanising of the body with the soul (சா.அக.).

[கூட்டோடு + போதல்.]

கூட்டோடுவிழு-தல் *kūttōḍu-viḻu*, 2 செ.கு.வி. (v.i.) மயிர் திரட்சியாய் உதிரல்; falling of the hair in patches (சா.அக.).

[கூட்டோடு + விழல்.]

கூட[1] *kūḍa*, வி.எ.(adv.) 1. உடன்; with together, with. *"கூடநின்று" (குற்றா. தல. கவுற்சன. 65).* 2. மேற்பட; more than due, more than enough, in addition to.

ம. கூடெ; க., தெ., து. கூட; பட. கோட.

[கூடு → கூட]

கூட[2] *kūḍa*, இடை. (part.) உம்மைப்பொருள் தரும் இடைச்சொல்; a particle having the force of also,

even. *"பிரியமொடு பகையாளி கூட வுறவாகுவன்"* (*குமரேச. சத. 67*).

[கூடு→ கூட.]

கூடக்கீரை *kūḍa-k-kīrai*, பெ.(n.) கலவைக்கீரை; a mixture of various greens (சா.அக.).

[கூடு→ கூட + கீரை.]

கூடகம் *kūḍagam*, பெ.(n.) வஞ்சகம்; fraud, deceit. *"கூடகத் தொழில்செய்யுங் கொடியனை"* (*குற்றாதல. கவுற்சன. 65*).

[குள்→ குடு → குடகம் → கூடகம்.]

கூடகவெலும்பு *kūḍaga-v-elumbu*, பெ.(n.) நாசியறை இரண்டின் பிற்பகுதியில் குறுக்கே இலம்பாயுள்ள தகட்டெலும்பு; the bone across the nostrils in the back of the nose (சா.அக.).

[கூடகம் + எலும்பு.]

கூடகாரம்[1] *kūḍagāram*, பெ.(n.) 1. மேன்மாடம் (இறை. 21,112); hall in the topmost floor of a house. 2.மாளிகையின் நெற்றிக் கூடு (சீவக. 2328, உரை); balcony.

மறுவ. கூடாகாரம்

[கூடம் + கரம் – கூடகரம்→ கூடகாரம்.]

கூடகாரம்[2] *kūḍagāram*, பெ.(n.) கூடம்; mansion, house. *"கூடகாரத்திற்குத் துப்பாகும்"* (*புறத்திரட்டு. 1104*).

[கூடம் + கரம் – கூடகரம்→ கூடகாரம்.]

கூடங்கம் *kūḍaṅgam*, பெ.(n.) மறைவான அங்கம்; hidden body. 2. ஆமை; tortoise (சா.அக.).

மறுவ. கூடாங்கம்

[கூடு + அங்கம்]

கூடச்சித்திரி *kūḍa-c-cittiri*, பெ.(n.) ***சதுரக்கள்ளி*** (சங்.அக.) பார்க்க; see *square spurge*.

[கூடம் + சித்திரி]

கூடசதுக்கம் *kūḍa-šadukkam*, பெ.(n.) நான்காமடியிலுள்ள எழுத்துகள் யாவும், ஏனை மூன்றடிகளுள்ளும், மறைந்து நிற்குமாறு பாடப்பெறுஞ் சித்திரகவி (தண்டி. 95); stanza of four lines in which the letters constituting the last line are all found amongst the first three lines.

[கூடம் + சதுக்கம்]

கூடசம் *kūḍašam*, பெ.(n.) வெட்பாலை; dysentary rosebery (சா.அக.).

[கூடு→ கூடசம்]

கூடசன்மலி *kūḍasaṉ-mali*, பெ.(n.) முள்ளிலவு நிரம்பிய நிரையம்; a hell abounding in thorny red silk-cotton. *"கூட சன்மலிக் கும்பியிற் றள்ளி"* (*குற்றா.தல.கவுற்சன. 65*).

[கூடம் + சன்மலி]

கூடசாரன் *kūḍasāraṉ*, பெ.(n.) மந்தணத்தூதுவன் (யாழ்.அக.); secret emissary.

[கூடு → கூடம் + (சரம்) சாரன்]

கூடசாலம் *kūḍa-šālam*, பெ.(n.) எழுநிரையத் தொன்று (சூடா.); a hell.

[கூடசன்மலி → கூடசாலம்]

கூடப்பிறத்தல் *kūḍa-p-piṟattal*, பெ.(n.) பிறவன் பிறவிமாருடன் பிறத்தல்; being born with brothers and sisters (சா.அக.).

[கூட + பிறத்தல்]

கூடப்பிறந்தவன் *kūḍa-p-piṟandavaṉ-*, பெ.(n.) உடன் பிறந்தவன்; brother.

ம. கூடப்பிறந்தவன்

[கூட + பிறந்த + அவன்]

கூடப்பிறப்பு *kūḍa-p-piṟappu,* பெ.(n.) உடன்பிறப்பு; brother or sister. 2. இரட்டைப்பிறப்பு, அதாவது ஒன்றுசேர்ந்து பிறத்தல்; being born together as twins (சா.அக.). உனக்குக் கூடப் பிறந்தவர் எத்தனையர்?

ம. கூடப்பிறப்பு

[கூட + பிறப்பு]

கூடப்பொன் *kūḍa-p-poṉ,* பெ.(n.) கலப்புப் பொன்; an alloy of gold (சா.அக.).

[கூடு → கூட + பொன்]

கூடபாகலம் *kūḍa-pāgalam,* பெ.(n.) யானைக்கு வரும் கடுஞ்சுரநோய்; bilious fever which elephants are subject to. *"கூடபாகலந்தெளிந்து மெல்லக்கயந் தெளிவுற்ற தென்ன" (பாரத. பதின்மூ.159).*

[கூடு → கூட + பாகலம்]

கூடபூரி *kūḍapūri,* பெ.(n.) ஒரு வகை நாரை; a kind of crane (சா.அக.).

[கூடு → கூட + பூரி]

கூடம்[1] *kūḍam,* பெ.(n.) 1. வீடு (பிங்.); house. 2. வீட்டின் கூடம்; drawing room, hall. 3. தாழ்வாரம் (இ.வ.); verandah. 4. யானைச்சாலை; elephant-stall. *"மதிலைநட் டமைத்ததன் பழங்கூடம்" (கல்லா. 60,22).* 5. மேலிடம்; top. *"கூடக் கூம்பு" (பெருங். உஞ்சைக். 40:72).* 6. கோபுரம் (பிங்.); temple tower. 7. அரண்மனைக் கோபுரம்; palace tower. 8.மன்றாக அமைந்த தேவகோட்டம்; open space under trees, considered as a shrine. *"கூடஞ்செய் சாரல்" (திருக்கோ. 129).*

[கூடு → கூடம்]

கூடம்[2] *kūḍam,* பெ.(n.) 1. சம்மட்டி (பிங்.); blacksmith's sledge. 2. மலையுச்சி (பிங்.); mountain peak. 3.அண்ட கோளகை (பிங்); shell supposed to envelope the world. 4. திரள் (விரி.நி); heap, multitude.

[குள்→ குடு→ கூடு → கூடம்]

கூடம்[3] *kūḍam,* பெ.(n.) 1. மறைவு (பிங்.); concealment, privacy, secrecy. 2. மறைபொருள்; secret, anything hidden, concealed, mysterious.

[குள் (மறைதல்) → குடு→ கூடு → கூடம்]

கூடம்[4] *kūḍam,* பெ.(n.) 1. ஏய்ப்பு; fraud, deception. *"கூடம் மடியோம்பு மாற்றலுடைமை" (ஏலா. 17).* 2. பொய்; false-hood, untruth. *"கூட சாட்சியார்" (வேதாரணி. நிரையவ. 18).*

[குள் (ஒளிதல்) → குடு→ கூடு → கூடம்]

கூடம்[5] *kūḍam,* பெ.(n.) இசை வாராது ஓசை மழுங்கல்; dullness of tone in lute strings. *"செம்பகை யார்ப்பே கூட மதிர்வே" (சிலப். 8:29).*

[கூடு →கூடம்]

கூடம்[6] *kūḍam,* பெ.(n.) கோளக வைப்புநஞ்சு (சங்.அக.); a mineral poison. 2. எள் (வின்.); sesame.

[குள் (சிறியது) → குடு→ கூடு → கூடம்]

கூடம்பில் *kūḍambil,* பெ.(n.) சுரை (மலை.); calabash.

[குடம் → குடம்பில்→ கூடம்பில்]

கூடமாட *kūḍa-māḍa,* வி.எ.(adv.) செயற்றுணையாய்; as a helping hand. *"கூடமாடக் கொஞ்சம் நின்று வேலை செய்" (இ.வ.).*

[கூடு → கூட + மாட (எதுகை மரபிணைச் சொல்).]

கூடல்[1] *kūḍal,* பெ.(n.) 1. பொருந்துகை (உரி.நி.); joining, uniting. 2. புணர்ச்சி; sexual union. *"கூடற்கட் சென்றதென் னெஞ்சு" (குறள், 1284).* 3. ஆறு கடலில் கலக்குமிடம்; mouth of a river. *"மலியோதத் தொலி கூடல்" (பட்டினப்.98.).* 4.ஆறுகள் ஒன்றோடொன்று கூடுமிட ம்; confluence of rivers. 5. தேடுகை (பிங்.); seeking. 6. தலைவனைப் பிரிந்த மகளிர் அவன் வரும் நிலையறிதற் பொருட்டுத்

தரையில் சுழிக்குஞ் சுழிக்குறி (அகப்.); loops drawn on sand by a love-lorn lady for divining the safe arrival of her lord. *"வசுதேவர்தங் கோமகன் வரிற் கூடிடு கூடலே" (திவ்.நாய்ச்.3).*

ம. கூடல்

[கூடு → கூடல்]

கூடல்[2] *kūḍal,* பெ.(n.) 1. மதுரை; Madurai *"கூடனெடுங் கொடி யெழவே" (கலித். 31.).* 2. அடர்த்தியான தோப்பு; thick grove, commonly of palmyras.*"செயலைக் கூடலே" (இரகு.தேனுவந். 70).*

[கூடு → கூடல்]

கூடல்கிழான் *kūḍal-kiḻāṉ,* பெ.(n.) வேளாளர் குடிகளுள் ஒருவகை (சேக்கிழார். 4:12); a sub-sect of the *vēḷāḷa* caste.

[கூடல் + கிழான்]

கூடல்சரம் *kūḍal-šaram,* பெ.(n.) இரண்டு கைமரங்களின் இணைப்பு (செங்.வழக்); joint of two wooden rafters.

[கூடல் + சரம்]

கூடல்நாரத்தை *kūḍal-nārattai,* பெ.(n.) கடார நாரத்தை; lemon citron (சா.அக.); a kind of *nārattai.*

[கூடல் + நாரத்தை]

கூடல் வளைத்தல் *kūḍal-vaḷaittal,* பெ.(n.) மகளிர் விளையாட்டில் ஒன்று (சா.அக.);a game of young girls.

[கூடல் + வளைத்தல்]

கூடல்வாசரம் *kūḍal-vāsaram,* பெ.(n.) ஒடுவேய்ந்த வீட்டில் பக்கவாட்டில் வரும் மரச்சட்டம் (செங். வழக்) (கட்.தொ.வரி.); wooden frame used to support tailes in tiled roof

[கூடல் + (வாய்ச்சரம்) வாசலம்]

கூடல்வாய் *kūḍal-vāy,* பெ.(n.) கூரையின் சேர்க்கை மூலை(இ.வ.); hip of a roof.

[கூடல் + வாய்]

கூடல்வாயோடு *kūḍal-vāy-ōḍu,* பெ.(n.) கூடல்வாய் மூலையை மூட உதவும் ஓடு (C.E.M.); gutter tiles used to cover hip of a roof.

[கூடல் + வாய் + ஓடு]

கூடலர் *kūḍalar,* பெ.(n.) **கூடாதார்** பார்க்க; see *kūḍādār. "கூடலர் குடர்மாலை சூட்டி" (பு.வெ.2:9,கொளு).*

ம. கூடலர்

[கூடு + அல் + அர்]

கூடலி-த்தல் *kūḍali-,* 4 செ.கு.வி.(v.i.) கிளர்ந்து வளைதல்; to over hang, as the eye brows *"குறுபெயர்ப் புருவங் கூடலிப்ப" (திவ்.பெரியாழ். 3: 6,8).*

[கூடல் → கூடலி]

கூடலிழை-த்தல் *kūḍal-iḻai-,* 4 செ.கு.வி.(v.i.) கூடற்சுழி வரைதல்; to draw *kūḍal* on sand. *"நீடலந் துறையிற் கூடலிழைத்து" (திருக்கோ. 186).*

[கூடல் + இழை]

கூடலூர்கிழார் *kūḍalūr-kiḻār,* பெ.(n.) முதுமொழிக்காஞ்சி இயற்றியவரும், ஐங்குறுநூறு தொகுத்தவருமான புலவர்; the poet who composed *mudumoḻi-k-kāñji* and compiled *Aiṅguṟu-ṉūṟu.*

[கூடலூர் + கிழார்]

கூடவிமானம் *kūḍa-vimāṉam,* பெ.(n.) சதுரமான அடித்தளமுள்ள மேற்கட்டு (விமானம்) (பொ.வழக்) (கட்.தொ.வரி.); temple tower with a square base.

[கூடல் + விமானம்]

கூடற்குறி *kūḍaṟ-kuṟi,* பெ.(n.) தலைமகன் பிரிந்துழித் தலைவி பார்க்குங் குறி; divination resorted by heroine when seperated from her lover.

[கூடல் + குறி]

கூடற்கோ *kūḍaṟcō,* பெ.(n.) பாண்டியன்; any king of the Pandiya dynasty (இரு.நூ. அக).

[கூடல் + கோ]

கூடற்கோமான்[1] *kūḍaṟ-kōmāṉ,* பெ.(n.) பாண்டியன் (திவா.); *Pāṇḍya* the king of Madura.

[கூடல் + கோமான்]

கூடற்சுரை *kūḍaṟ-curai,* பெ.(n.) பேய்ச்சுரை; false calabash (சா.அ க.).

[கூடல் + சுரை]

கூடற்பற்றை *kūḍaṟ-paṟṟai,* பெ.(n.) புதர் (யாழ்ப்.); thicket.

[கூடல் + பற்றை]

கூடற்றெய்வம் *kūḍaṟ-ṟeyvam,* பெ.(n.) கூடற்சுழிக்குரிய பெண் தெய்வம் (திருக்கோ. 180, உரை.); the deity of *kūḍalcuḻi.*

[கூடல் + தெய்வம்]

கூடனை *kūḍaṉai,* பெ.(n.) பீலிக்கண் (யாழ்.அக.); eye of pea-cock feather.

[கூடு → கூடனை]

கூடா-தல் *kūḍā,* 6 செ.கு.வி.(v.i.) 1. உயிர் நீங்கிய வெற்றுடம்பாதல்; becoming a lifeless body. 2. இறத்தல்; dying. *"கூடலான் கூடா யினான்" (சிலப். 20:2 வெண்.).*

[கூடு + ஆதல்]

கூடாக்கு[1] *kūḍākku,* பெ.(n.) **குடாக்கு** (வின்.) பார்க்க; see *kuḍākku.* ball of tobacco etc. used in hookah.

[கூடு + ஆக்கு]

கூடாக்கு[2] *kūḍākku,* பெ.(n.) உக்கா புகையிலை; tobacco used in hookah. (சா.அக.).

[கூடு → கூடாக்கு]

கூடாகாரம் *kūḍāgāram,* பெ.(n.) மேல்வீடு (யாழ்.அக.); upper storey.

[கூடம் + கரம் – கூடகரம் → கூடாகாரம்.]

கூடாங்கம் *kūḍāṅgam,* பெ.(n.) ஆமை (யாழ்.அக); tortoise.

[கூடு + அங்கம்]

கூடாதார் *kūḍādār,* பெ.(n.) **கூடார்** பார்க்க; see *kūḍār. "கூடாதா ர் சேனை" (சினேந். 379).*

[கூடு + ஆ + த் + ஆர். 'ஆ' எ.ம.இ.நி. 'த்' சாரியை.]

கூடாநட்பு *kūḍā-naṭpu,* பெ.(n.) அகத்தாற் கூடாது புறத்தாற் கூடியொழுகும் நட்பு (குறள். அதி.83); insincere and unreal friendship.

[கூடா (து) + நட்பு]

கூடாப்பெண் *kūḍā-p-peṇ* பெ(n.) கலவியறியாக் கன்னி; a woman who has no carnal knowledge of man (சா.அக.).

[கூடு → கூடா(த) + பெண்]

கூடாமகளிர் *kūḍā-magaḷir,* பெ.(n.) புணரக்கூடாத அல்லது தகாத பெண்கள்; women unfit to visit and they are classified.

[கூடா + மகளிர்]

கூடாமையணி *kūḍāmai-aṇi,* பெ.(n.) அணிவகையு ளொன்று (அணியி.36); figure of speech in which an impossibility is predicated to have occurred.

[கூடாமை + அணி]

கூடார் *kūḍār,* பெ.(n.) பகைவர்; enemies, foes. *"கூடா ரரணெரி கூட " (திருக்கோ. 161).*

மறுவ. கூடாதார்

[கூடு + ஆ + ஆர். 'ஆ' எ.ம.இ.நி. புணர்ந்து கெட்டது.]

கூடார்த்தம் *kūḍārttam,* பெ.(n.) மறைந்து கிடக்குங் கருத்து; hidden meaning. *"தாம் உபதேசித்தருளிய கூடார்த்தத்தை வெளியிடலாகா தென்று சொல்லியிருந்தும்" (திவ்யசூரி.213).*

[கூடா (த) (கிடைக்காத) + அர்த்தம்.]

கூடாரக்கட்டில் *kūḍāra-k-kaṭṭil,* பெ.(n.) மூடுகட்டில் (யாழ்ப்.); bed with tent and curtains.

[கூடா ரம் + கட்டில்]

கூடாரப்பண்டி *kūḍāra-p-paṇḍi,* பெ.(n.) ***கூடார வண்டி*** (சிலப். 6,120. அரும்.) பார்க்க; see *kūḍāra vaṇḍi.*

[கூடாரம் + (வண்டி) பண்டி]

கூடாரப்பண்டிகை *kūḍāra-paṇḍigai,* பெ.(n.) கிறித்துவம் கொண்டாடும் திருநாள் (கிறித்.); feast of tabernacles.

[கூடா ரம் + பண்டிகை]

கூடாரப்பல்லக்கு *kūḍāra-p-pallakku,* பெ.(n.) மூடுபல்லக்கு (யாழ்.அக.); closed palanquin.

[கூடாரம் + பல்லக்கு]

கூடாரம்[1] *kūḍāram,* பெ.(n.) 1. கூம்பு வடிவான கூரையையுடைய குடில், படவீடு, படுக்கை; tent pavilion, tabernacle, booth, awning, tent covering for a bed. 2. வண்டிக்கூடு (இ.வ.); hood covering of a cart.

ம. கூடாரம்; **க., து., பட.** கூடார; **தெ.** கூடாரமு.

skt. kuṭaru

[கூடு → கூடாரம்]

கூடாரம்[2] *kūḍāram,* பெ.(n.) மாளிகையின் உப்பரிகை; balcony of the palace. *"கூடார மாடமயில் போல" (சீவக. 2328).*

[கூடு → கூடாரம்]

கூடாரம் போடு-தல் *kūḍāram-pōḍu-,* 19 செ.கு.வி.(v.i.) 1. படவீடு அமைதல்; to pitch a tent. 2. வண்டிக்கு மேற்கூடு இடுதல் (இ.வ.); to put a covering or hooded top over a cart.

[கூடாரம் + போடு]

கூடாரமாடம் *kūḍāra-māḍam,* பெ.(n.) கோபுர உறுப்புகளுள் ஒன்று (கட்.தொ.வரி.); a detail on temple towers.

[கூடாரம் + மாடம்]

கூடாரவண்டி *kūḍāra-vaṇḍi,* பெ.(n.) மேற்கூடுள்ள வண்டி (இ.வ.); cart with hooded top.

[கூடாரம் + வண்டி]

கூடாவியற்கை *kūḍā-v-iyaṟkai,* பெ.(n.) பெண்களைப் புணருவதற்கு ஆண்மையற்ற தனம்; functional impotency. (சா.அக.).

[கூடா (த) + இயற்கை]

கூடாவுவமை *kūḍa-v-uvumai,* பெ.(n.) ஒரு பொருட்கு இயல்பில்லாதவற்றை உள்ளதாகச் சொல்லி, அதனை ஒன்றற் குவமையாக்கி உரைப்பது; a simile in which the comparison is made with a thing having only a hypothetical existence (இரு.நூ.அக.). (எ.கா.) *"காமுகர்க்குத் தண் மதியந் தீக்கால்வ போலும்".*

மறுவ. மருட்கை உவமை

[கூடா (த) + உவமை]

கூடாவெலும்பு *kūḍā-v-elumbu,* பெ.(n.) பொருந்தாத எலும்பு; a bone which does not unite (சா.அக.).

[கூடா (த) + எலும்பு]

கூடாவொழுக்கம் *kūḍā-voḻukkam,* பெ.(n.) தகாத ஒழுக்கம் (குறள், அதி.28); improper or immoral conduct, as in appropriate to one's mode of life.

[கூடா (த) + ஒழுக்கம்]

கூடிநாடித்திரி-தல் *kūḍi-nāḍi-t-tiri-,* 2 செ.கு.வி. (v.i.) பிறருடன் விடாது சேர்ந்திருத்தல்; to be always in the company of.

[கூடி + நாடி + திரி]

கூடியமட்டும் *kūḍiya-mattum,* வி.எ.(adv.) ***கூடியவரை*** பார்க்க; see *kūḍiya-varai.*

[கூடிய + மட்டும்]

கூடியவரை *kūḍiya-varai,* பெ.(n.) இயன்றவரை (கொ.வ.); as far as possible, as much as one is able, to the utmost.

[கூடிய + வரை]

கூடியற்பெயர் *kūḍiyar-peyar,* பெ.(n.) கூட்டத்தைக் குறிக்கும் பெயர் (நேமி.சொல். 31); collective noun.

[கூடு + இயல் + பெயர்]

கூடியாடு-தல் *kūḍiyāḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கூடிச்சேர்ந்து ஆடுதல்; to dance or dally together. 2. சேர்ந்து பணியாற்றுதல்; to mingle with, come in touch with, work in company with.

ம. கூடியாடுக

[கூடு +ஆடு]

கூடியிருக்கை[1] *kūḍi-y-irukkai,* பெ.(n.) புணர்ச்சியாயிருத்தல்; being in the act of copulation (சா.அக.).

[கூடு → கூடி + இருக்கை]

கூடியிருக்கை[2] *kūḍi-y-irukkai,* பெ.(n.) 1. இணையர் (கணவன் மனைவி) வாழ்க்கை; living as husband and wife. 2. ஒன்றாக வாழுகை; living together.

[கூடு → கூடி + இருக்கை]

கூடிவா-தல் (கூடிவருதல்) *kūḍi-vā-,(kūḍi-varu,)* 18 செ.கு.வி.(v.i.) 1. சேர்ந்து வருதல்; to accompany, to move in company. 2. கைகூடி வருதல்; to succeed, be prosperous, as in an undertaking. 3. மிகுதியாதல்; to increase. அவனுக்கு நாளுக்கு நாள் பொருள் கூடிவருகிறது (கொ.வ.).

[கூடி + வரு (வா)]

கூடினரைப்பிரி-த்தல் *kūḍiṉarai-p-piri-,* 4 செ.குன்றாவி.(v.t.) பகையரசர்களைத் தம்முட் பிளவுண்டாக்கிப் பிரிக்கை (பு.வெ. 9,37.உரை.); separating enemy-kings by creating dissensions between them.

[கூடி →கூடு →கூடின + அவர் + ஐ + பிரி]

கூடு[1]**-தல்** *kūḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. ஒன்று சேர்தல்; to come together, join, meet, to become one as rivers. *"அங்கை மலர்கூடத் தலைமேற் குவித்தருளி".* 2. திரளுதல்; to collect, crowd together, assemble, congregate, muster. *"கூடிய வண்டினங்காள்"* (திவ். திருவாய். 6:8,3). 3. பொருந்துதல் (திவா.); to combine, coalesce, reunite, as broken bones. 4. கிடைத்தல்; to be available. *"உவமை இவ்வுலகிற் கூடுமோ"* (கம்பரா. உருக்கா.44). 5. இயலுதல்; to be possible, practicable, attainable. *"ஈவது கூடா வெல்லை"* (கந்தபு. மேரு. 20). 6. நேரிடுதல்; to come, to pass, to happen. *"திருவாறன்விளை கைதொழக் கூடுங் கொலோ" (திவ்.திருவாய்.7:103.).* 7. இணங்குதல்; to become reconciled, pacified, conciliated. 8. தகுதியாதல்; to be fit, suitable, appropriate, proper, decent, expedient. 9. தொகை சேர்தல்; to accumulate, to be hoarded, stored up. 10. மிகுதியாதல், வீங்குதல்; to abound, swell, increase. *"உள்ளங் கூடின துயரம்" (கந்தபு. காமத. 97).* 11. தொடங்குதல் (வின்.); to commence, be-

gin. 12. கைகூடுதல்; to be achieved. 13. உடன் படுதல்; to agree, consent. *"கொன்றிடக் கூடாதுள்ளம்" (திருவாலவா. 1:15).*

ம. கூடுக; **க., தெ.,** பட., **கொலா.** கூடு; **கோத., துட., கூ.** கூட்.

[குல்→குள்→கூடு]

கூடு[2]—தல் *kūḍu-,* 5 செ.குன்றாவி (v.t.) 1. ஒன்றுகூடி அன்பு பாராட்டுதல், நட்பாயிருத்தல்; to associate or be friend. *"கூடிப்பிரியேல்" (ஆத்திசூடி).* 2. புணர்தல்; to cohabit. *"கொம்மைத் துணை மென்முலை யண்ணலைக்கூட" (கந்தபு. மகாசத். 17).* 3.அடைதல்; to reach,arrive at.*"நகரங் கூடினான்" (பிரமோத். 13:64).*

[குல்→ குள்→கூடு]

கூடு[3] *kūḍu,* பெ.(n.) 1. பறவை முதலியவற்றின் கூடு (திவா.); nest, bird-cage, coop, hive, cocoon, shell. 2. விலங்குக் கூடு; pen, sty, kennel, cage for animals. *"கூடார் புலியும்" (சீவக. 2328).* 3. நெற் கூடு; receptacle for grain. 4. உருண்டு திரண்டு கூடு போலுள்ளது; hollow, globular or prismatical as a balloon, as the lamp of a light house. 5. கட்டடத்தின் முகடு (கட்டடக்); dome, cupola. 6. ஆயுதம் முதலியவற்றின் உறை; quiver, sheath, case, envelope. *"கோறுவக்கும் கூடுகுறைந்த கொடுமதனை" (சிலப்.பிர.வெங்கைக் கலம்.93).* 7. மைக்கூடு; small receptacle, as an ink stand. 8. வண்டிக்கூடு; covering or top of a cart. 9. துரப்பணக் கூடு; top of the drill for boring holes.

ம. கூடு; **க., தெ., து.,** பட. கூடு; **குட.** கூடி; **கோத., துட.** கூட்; **கோண்., பர்.** கூட; **கட.** கூடெ; **கூ.** கிரேந்நு; **குவி.** கூத.

[குல்→குள்→ கூடு]

கூடு[4] *kūḍu,* பெ.(n.) 1. மீன்பறி; basket for catching fish. 2. சான்றாளர் கூண்டு; witness box. 3. கழுந்துக்கூடு (வின்.); mortise groove, in carpentry. 4. உடம்பு; body, as the sheath, encasing the soul. *"கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே" (தேவா. 376:2).*

[குல்→ குள்→ கூடு]

கூடு[5] *kūḍu-,* பெ.(n.) வயிறு; stomach. *"உண்டுழியெங் கூடாரப் போதுங்கொல்" (கலிங். 217).*

[குள்→கூடு]

கூடுகொம்பன் *kūḍu-kombaṉ,* பெ.(n.) முனைப்பகுதி தம்முட்கூடிய கொம்புகளுள்ள மாடு (வின்.); ox whose horns almost meet at the points.

[கூடி+ கொம்பன்]

கூடுங்கொடிச்சி *kūḍuṅ-koḍicci,* பெ.(n.) தொழுகண்ணி; telegraph plant (சா.அக.).

[கூடும்+ கொடிச்சி]

கூடுதல்[1] *kūḍu,* பெ.(n.) 1. மிகுதி, அதிகம்; excess. அவனுக்கு கூடுதலாகவே கொடுத்திருக்கிறது (உ.வ.). 2. வெற்றி; sucess. அவனுக்கு எல்லாம் கூடுதலாயிருக்கிறது (உ.வ.).

[கூடு → கூடுதல்]

கூடுதல்[2] *kūḍudal,* பெ.(n.) 1. மொத்தம் (இ.வ.); total. 2. பெருமம் மேலெல்லை; maximum. *கூடுதல் எட்டணா கூலி கிடைக்கும்.*

[கூடு → கூடுதல்]

கூடுதலை *kūḍudalai,* பெ.(n.) அறச்சாலை (இ.வ.); an asylum.

[கூடு + தலை (இடம்)]

கூடுபூரி—த்தல் *kūḍu-pūri-,* 4 செ.குன்றாவி (v.t.) நிரப்புதல்; to fill up, stuff. அதிருஷ்டத்துக்குத் தாரித்ரயத்தைக் கூடுபூரித்த இத்தனை (திவ். திருமாலை. 6. வியா.33).

[கூடு + பூரி]

கூடுவாய் *kūḍu-vāy,* பெ.(n.) இரண்டு மரச்சட்டங்கள் பொருந்தும் இடம்;joint of two wooden pieces.*கூடுவாய் சரிபார்த்துப் பொருத்து— வழக்கு. (தச்சு.தொ.வரி).*

[கூடு + வாய்]

கூடுவாய்மூலை *kūḍuvāy-mūlai,* பெ.(n.) மேற்கூரையிணையும் மூலை; the ridge of a roof.

[கூடு + வாய் + மூலை]

கூடுவிட்டுக்கூடுபாய்-தல் *kūḍu-viṭṭu-k-kūḍu-pāy-,* 2 செ.கு.வி.(v.i.) தன்னுயிரை மற்றொரு உடலிற்கு மாற்றிக் கொள்ளும் மந்திரக்கலை; the magic art of leaving one's own body and entering another body at will.

[கூடு + விட்டு + கூடு + பாய்]

கூடுவிட்டுப்போ-தல் *kūḍu-viṭṭu-p-pō-,* 8 செ.குன்றாவி. (v.i.) இறத்தல்; dying (சா.அக.).

[கூடு + விட்டு + போ.]

கூடுவிடு-தல் *kūḍu-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. இறத்தல்; to die. lit., to leave the body. *"கூடுவிட்டிங் காவிதான் போயினபின்"* *(நல்வழி, 22).* 2. எலும்பு தோன்ற இளைத்தல்; being to be reduced to a skeleton as in wasting diseases. அவனுடைய மார்பு கூடுவிட்டிருக்கிறது (உ.வ.).

[கூடு + விடு]

கூடுவிழு-தல் *kūḍu-viḻu-,* 2 செ.கு.வி.(v.i.) 1. இறத்தல் (யாழ். அக.); to die. 2. ஆணிச்சிதல் விழுதல்; droping off the polypus in the anus. 3. நோயின் வேர் கழலுதல்; being rooted out as diseases.

[கூடு + விடு]

கூடுவை-த்தல் *kūḍu-vai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. ஆணிச்சிதல் காய்ந்து சவ்வுபற்றுதல் (யாழ்.அக.); to begin to heal, after the dropping of the core of an ulcer. 2.நோய் வேர்வைத்துப் பலத்தல் (யாழ்.அக.); to become critical, as the conditiion of a patient. 3. புண் புரையோடுதல் (இ.வ.); to form a running sore.

[கூடு + வை]

கூடை[1] *kūḍai,* பெ.(n.) 1. பிரம்பு முதலியவற்றாற் பின்னப்படும் பெட்டி; basket made of rattan, ōla or bamboo. 2. மழைநீர் படாதபடி உடல்மேல் இட்டுக்கொள்ளும் சம்பைக் கொங்காணி; palm-leaf cover worn over the person as a protection from rain.

ம. கூட; க. கூடெ, கூட; தெ. கூட; து. பட. கூடெ; **கோத.,** துட. கூட்; **கோண்.** கூல.

Fin. kaha; **Jap.** katama; **Gondi.** kūca.

[கூடு + கூடை]

கூடை[2] *kūḍai,* பெ.(n.) 1. முத்திரைக்கை வகை (சிலப். 3:20); a kind of hand-pose. 2. ***கூடைப்பாடல்*** பார்க்க; see *kūḍai-p-pāḍal.*

[கூடு + கூடை]

கூடைக்காரன் *kūḍai-k-karaṉ,* பெ.(n.) 1. கூடையிற் காய்கறி விற்போன்; one who sells vegetables, carrying them in a basket. 2. கூடையிற் பண்டமெடுத்து வரும் கூலிக்காரன்; coolie with a basket for carrying goods.

[கூடை + காரன்]

கூடைக்குத்தகை *kūḍai-k-kuttagai,* பெ.(n.) மதிப்பாகத் தீர்மானிக்கும் குத்தகை (C.G.); lit. lease by the basket. Rental fixed on a rough estimate.

[கூடை + குத்தகை]

கூடைச்சோறு *kūḍai-c-cōṟu,* பெ.(n.) திருமணத்தில் மண உறவினர் (சம்பந்திகள்) தம் வீடு செல்லும்பொழுது அவர்களுக்கு பெண் வீட்டார் அனுப்பும் சிற்றுணா (இ.வ.); basketfuls of food and dainties presented by the bride's people to the bridegroom's party when the latter depart homeward.

[கூடை + சோறு]

கூடைப்பணியாரம் *kūḍai-p-paṉiyāram,* பெ.(n.) திருமணத்தில் மணையிலுள்ள மாப்பிள்ளைக்கு முன் கூடைகளில் வைக்கும் தின்பண்டம் (இ.வ.); basketfull of confections presented to the bridegroom by the bride's people at the time of marriage.

[கூடை + பணியாரம்]

கூடைப்பாடல் *kūḍai-p-pāḍal,* பெ.(n.) சொற்செறிவும் இசைச்செறிவுமுடைய பாடல் (சிலப்.3:67, உரை); a song which combines wealth of words with richness of melody.

[கூடை + பாடல்]

கூடையன் *kūḍaiyaṉ,* பெ.(n.) பருத்தவன் (யாழ்.அக.); corpulent person.

[கூடை + அன்]

கூண்டடுப்பு *kūṇḍaḍuppu,* பெ.(n.) அனலடுப்பு (இந்துபாக.67); *analaḍuppu* covered brick over.

[கூண்டு + அடுப்பு]

கூண்டா-தல் *kūṇḍā-,* 8 செ.கு.வி.(v.i.) மயிர் சிக்குப்படுதல்; to get matted or interlocked, as the hair.

[கூண்டு + ஆ(கு)]

கூண்டு *kūṇḍu,* பெ.(n.) கூடு; nest.

[குள் → குண்டு → கூண்டு → கூடு]

கூண்டு-தல் *kūṇḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கூடுதல்; to accrue, to be added., *"கூண்ட வெட்டாதாள்" (அழகியநம்பியுள.90).* 2. குழுமுதல் (இ.வ.); to assemble.

[குள் → குண்டு → கூண்டு]

கூண்டுப்புழு *kūṇḍu-puḻu,* பெ.(n.) புழுவகை; chrysalis.

[கூண்டு+ புழு]

கூண்டெலும்பு *kūṇḍelumbu,* பெ.(n.) rib bone. 2. உடம்பின் கோவை எலும்பு; skeleton (சா.அக.).

[கூண்டு + எலும்பு]

கூத்தக்காணி *kūtta-k-kāṇi,* பெ.(n.) கோயில் திருவிழா நாளில் கூத்தாடும் குழுவினர்க்கு அளிக்கப்பெறும் இறையிலி நிலம்; land gifted to those who stage dramas in temple festivals. திருநாளுக்குக் கூத்தாடுகைக்குக் காணியாக அளிக்கப்பெறும் நிலம் (புதுக்.கல். 139). (கல்.க.சொ.அ.மு.).

[கூத்தன் + காணி.]

கூத்தச்சாக்கையன் *kūtta-c-cākkaiyaṉ,* பெ.(n.) கூத்து நிகழ்த்தும் சாக்கையர் குலத்தான்; a person of *cākkaiya* caste whose profession is dancing and acting. *"கொட்டிச்சேதம்.... ..... பறையூர்க் கூத்தச் சாக்கைய னாடலின்" (சிலப். 28:77).*

[கூத்தன் + சாக்கையன்.]

கூத்தநூல் *kūtta-nūl,* பெ.(n.) ஆடற்கலை முத்திரை பற்றிய நூல் (சீவக. 124, உரை.); treatise on gesticulation in dancing.

[கூத்து + நூல் – கூத்துநூல் → கூத்தநூல். 'அ' ஈறு ஆறன் உருபு. ஒ.நோ. (ஆறன் உருபு 'அது' என்பதன் ஈற்றுக்குறை.]

கூத்தப்பள்ளி *kūtta-p-paḷḷi,* பெ.(n.) அரண் மனையைச் சார்ந்த நாடகவரங்கு (இறை.21, ப. 112.); theatre hall attached to a palace.

[கூத்து + பள்ளி.]

கூத்தம்பலம் *kūttambalam,* பெ.(n.) வளைக்கை பிடித்தாடுதற்குரிய கோயிலரங்கு (T.A. S.II.143); theatre hall in temple.

[கூத்து + அம்பலம்.]

கூத்தர் *kūttar,* பெ.(n.) கூத்து நடிப்போர்; actors, dancers. *"கூத்தரும் பாணரும்" (தொல். பொருள்.91).*

[கூத்து + அர்.]

கூத்தராற்றுப்படை *kūttarāṟṟu-p-paḍai,* பெ.(n.) பரிசில் பெறச் செல்லும் கூத்தனைப் பரிசில் பெற்றவன், ஒரு தலைவனிடம் ஆற்றுப்படுத்தும் புறத்துறை (பு.வெ.9: 29); theme of a dancer, himself a recipient of unstinted favours at the hands of a king or chieftain, directing and exhorting his brother in the profession to avail himself of the

royal bounty. 2. பத்துப்பாட்டினுள் பத்தாவதாகிய மலைபடுகடாம் (தொலை. சொல். 462, சேனா.); the tenth poem of the *Pattu-p-pāṭṭu*.

[கூத்தர் + ஆற்று + படை.]

கூத்தரிசி *kūttariśi,* பெ.(n.) கைக்குத்தலரிசி; hand pounded rice as distinguished from milled rice. It is a corrupt form for *kuttalariśi* (சா.அக.).

[குற்று + அரிசி – குற்றரிசி → கூத்தரிஇ (கொ.வ.).]

குத்தரிசிக்காரி *kuttariśi-k-kāri,* பெ.(n.) அரிசி குற்றி விற்பவள் (வின்.); woman who pounds and sells rice.

[குத்து + அரிசி + காரி.]

இதனைக் கூத்தரிசிக்காரி என வின்சுலோ அகரமுதலி குறித்திருப்பது தவறு.

கூத்தவாதி *kūttavāti,* பெ.(n.) சிவனார் வேம்பு; Shiva's neem (சா.அக.).

[கூத்த(ன்) + ஆதி.]

கூத்தறுப்பு *kūttaṟuppu,* பெ.(n.) பிறர் பயிரைத் திருட்டுத்தனமாக அறுத்துக்கொண்டு போகை (இ.வ.); clandestine removal of crops.

[கூத்து (விளையாட்டு) + அறுப்பு.]

கூத்தன் *kūttaṉ,* பெ.(n.) 1. நாட்டியக்காரன்; dancer, actor. *"குழியும்ப ரேத்துமெங் கூத்தன்"* (திருக்கோ. 135). 2. ஆதன் (ஆன்ம) வாழ்வாகிய பெருநாடகத்தை நடத்துவிப்பவன்; lit. the stage manager who enacts the great drama of life, soul, spirit. *"கூத்தன் புறப்பட்டக்கால்" (நாலடி. 26).* 3. சிவன்; Śiva, *"சிற்றம்பலத்து மாணிக்கக் கூத்தன்" (திருக்கோ. 23).* 4. ஒட்டக்கூத்தர்; *oṭṭak-kūttar,* the famous poet. *"கூத்தன் கவிச்சக்கரவர்த்தி வாழியே" (தக்கயாகப்பரணி, முடிவு).* 5. துரிசு (சங்.அக.); suplhate of copper.

[கூத்து → கூத்தன்.]

கூத்தன் குதம்பை *kūttaṉ-kudambai,* பெ.(n.) மூக்கொற்றி; pointed-leaved hogweed.

[கூத்தன் + குதம்பை.]

கூத்தன்செம்பு *kūttaṉ-śempu,* பெ.(n.) துரிசுச் செம்பு; copper extracted from blue vitriol (சா.அக.).

[கூத்தன் + செம்பு.]

கூத்தனம் *kūttaṉam,* பெ.(n.) தில்லை மரம்; tiger's milk tree (சா.அ க.).

[கூத்து → கூத்தனம்.]

கூத்தாட்டு *kūttāṭṭu,* பெ.(n.) நடிப்பு; dancing, acting on the stage. *"கூத்தாட் டவைக்குழாத் தற்றே" (குறள். 332).*

[கூத்து + ஆட்டு.]

கூத்தாடி *kūttāḍi,* பெ.(n.) 1. நாட்டியக்காரன்; dancer, player, actor *"கூத்தாடிப் பையலுக்கோ"* (தனிப்பா. II. 7,14). 2. கழைக்கூத்தன்; pole dancer, acrobat. 3. மனம்போனபடி நடப்பவன்; reckless, self willed, unprincipled person.

[கூத்து + ஆடி.]

கூத்தாடிச்சி *kūttāḍicci,* பெ.(n.) 1. கூத்து நடிப்பவள்; dancing-girl. 2. அடங்காது ஒலமிட்டுத் திரிபவள் (இ.வ.); boisterous, unruly woman.

[கூத்து + ஆடிச்சி.]

கூத்தாடு-தல் *kūttāḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நடித்தல் (சிலப். 12, ப.319); to dance, act on the stage. 2. மகிழ்ச்சி மிகுதல் (வின்.); to be elacted with success, etc. 3. செழித்திருத்தல்; to prosper, thrive. அவ்வீட்டில் செல்வம் கூத்தாடுகிறது. 4. வலிந்து வேண்டுதல்; to importune, persistently request. தனக்கு அது வேண்டுமென்று கூத்தாடுகிறான் (உ.வ.).

ம. கூத்தாடுக; **க., து.** கூதாடு.

[கூத்து + ஆடு.]

கூத்தாடுசன்னி *kūttāḍu-caṉṉi,* பெ.(n.) 1. கூத்தாடச் செய்யும் வலிப்பு நோய் (சன்னி); dancing mania. 2. பருவப் பெண்களுக்கு காணும் ஒருவகை சூலக வலிப்பு; dancing chorea (சா.அக.).

[கூத்தாடு + சன்னி.]

கூத்தாண்டவர் *kūttāṇḍavar,* பெ.(n.) சிற்றூர்ச் சிறுதெய்வம் (இ.வ.); a village deity.

[கூத்து + ஆண்டவர்.]

குறிப்பாகப் பேடுகளும் அலிகளும் வழிபடும் சிற்றூர்த் தெய்வமாகக் கருதப்படுகிறது.

கூத்தி *kūtti,* பெ.(n.) 1. நாடகக்கணிகை (திவா.); female actor, dancer, dancing. 2. விலைமகள் (கொ.வ.); courtesan, prostitute. 3. வைப்பாட்டி; concubine, kept mistress. *"நட்டணைசேர் கூத்திமா ரோடு" (பணவிடு.225).*

[கூத்து → கூத்தி.]

கூத்திக்கள்ளன் *kūtti-k-kaḷḷaṉ,* பெ.(n.) கூத்திகளோடு மிகவும் உறவாடுபவன் (இ.வ.); whoremonger.

[கூத்தி + கள்ளன்.]

கூத்தியார் *kūttiyār,* பெ.(n.) வைப்பாட்டி (கொ.வ.); concubine, kept mistress.

[கூத்து→கூத்தி + ஆர்.]

கூத்து *kūttu,* பெ.(n.) 1. நளிநயம், நடனம்; dance, dancing. *"ஆடுதுங் கூத்தே" (திவ். திருவாய், 1:5).* அல்லியம், கொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை என்னும் பதினொருவகைக் கூத்து; divine dances, eleven in number. viz alliyam, *koṭṭi, kūdai, kudam, paṇdaraṅgam, mal, tuḍi, kaḍaiyam, pēḍu, marakkāl, pāvai. "கொட்டியிவை காண் பதினோர் கூத்து" (சிலப். 3:14, உரை.).* 3. நாடகம்; dramatic performance, action. *"பிறவி மாமாயக் கூத்தினையே" (திவ். திருவாய் 8:4,11).* 4.விந்தைச் செயல்; strange event or incident. அங்கே ஏதாவது கூத்து நடக்கும் (உ.வ.). 5. கேலிக்கூத்து; roll or ludicrous action, as a pantomime. 6. குழப்பம்; confusion. 7. நாடகம் பற்றியமைந்த ஒரு கடைக்கழக நூல் (இறை.1 ப.5); a treatise of the last Sangam, on the art of dancing.

ம., க. கூத்து; துட. கூத்.

skt. kūrdda

[குல் → குத்து → கூத்து (பலவகைகளில் கால் குத்திட்டு ஆடுவது).]

கூத்துக்களரி *kūttu-k-kaḷari,* பெ.(n.) நாடகச்சாலை; play-house, theatre.

[கூத்து + களரி.]

கூத்துக்காரன் *kūttu-kāraṉ,* பெ.(n.) 1. கூத்தாடு வோன்; actor, dancer. 2. கூத்தாட்டுவோன் (வின்.); dancing-master. 3. நகையாடி (வின்.); buffoon, mimic, comical person.

ம. கூத்துகாரன்

[கூத்து + காரன்]

கூத்துப்பண்ணு-தல் *kūttu-p-paṇṇu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. வேடிக்கைபண்ணுதல்; to make fun, to do a droll or funny action. 2. குழப்பஞ்செய்தல் (வின்.); to confound, derange.

[கூத்து + பண்ணு.]

கூத்துப்பாட்டு *kūttu-p-pāṭṭu,* பெ.(n.) நாடகப்பாடல் (வின்.); songs sung in dancing and dramatic performances.

[கூத்து + பாட்டு]

கூத்துப்பொட்டல் *kūttu-p-poṭṭal,* பெ.(n.) நாடகவெளி; maiden or the open space for dramatic performances.

[கூத்து + பொட்டல்]

கூத்துவிடு-தல் *kūttu-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. நாடகக் கதை மாந்தரை அவைக்கு அறிவித்தல்

(வின்.); to introduce the actors in a play. 2. வேடிக்கை செய்தல் (யாழ்ப்.); to say something odd or droll, to do a funny or humorous thing to amuse an audience.3. தெருக்கூத்து நடத்துதல்; to arrange for a street play.

[கூத்து + விடு.]

கூத்துள் படுவோன் *kūttuḷ-paḍuvōṉ*, பெ.(n.) ஆடலாசிரியன்; one who teaches dancing. *"கூத்துள் படுவோன் காட்டிய முறைமையின்.... இருங்கல நல்கி" (சிலப். 26:125).*

[கூத்து + உள்படு + (ஆன்) ஒன்.]

கூதம் *kūdam*, பெ.(n.) 1. குதம்; anus. 2. தூதுவளை; three lobed night shade. 3. வெள்ளரிக்காய்; cucumber.

[குள் → குது → குதம்.]

கூதல் *kūdaḷ*, பெ.(n.) 1. குளிர்; sensation of cold, chillness. *"கூர்மழை போற் பனிக்கூதல்" (திவ். பெருமாள். 6:1).* 2. காய்ச்சற் குளிர் (வின்.); chills before intermittent fever.

[குது → குதல் → கூதல்.]

கூதல்விறை-த்தல் *kūdal-viṟai-*, 4 செ.கு.வி.(v.i.) குளிரினால் விறைத்தல்; being stiffened with cold. (சா.அக.).

[கூதல் + விறை-.]

கூதளச்சான் *kūtaḷaccāṉ*, பெ.(n.) பெருங்கோரை; a kind of *kōray* grass (சா.அக.).

[குதள் → கூதள் + அச்சன்.]

கூதளம் *kūdaḷam*, பெ.(n.) 1. தூதுவளை (மலை.); three-lobed night shade. 2. **கூதாளி** பார்க்க; see *kūdāḷi*. *"கூதளங் கவினிய குளவிமுன்றி"* (புறநா. 168,12). 3. வெள்ளரி; mottled melon.

[கூதள் → கூதளம்.]

கூதற்காய்-தல் *kūdaṟ-kāy-*, 2 செ.கு.வி.(v.i.) குளிர்காய்தல் (இ.வ.); t o warm oneself.

[கூதல் + காய்]

கூதற்காற்று *kūdaṟ-kāṟṟu*, பெ.(n.) சில்லென்று அடிக்குங் குளிர்காற்று ; chill breeze in cold weather (சா.அக.)

[கூதல் + காற்று.]

கூதறை *kūdaṟai*, பெ.(n.) 1. இழிந்தது (இ.வ.); that which is mean, base, vulgar. 2. இழிந்த குணமுடையவன்-ள்; base, vulgar, disreputable. *"மாண்ட மனமுடைய ராகாத கூதறைகள்" (பழ.106).* 3. கிழியல் (சங். அக.); mutilation.

[குள் → குது → கூது → கூதறை.]

கூதாரி *kūdāri*, பெ.(n.) வெள்ளரி (மலை.); mottled melon.

[கூதல் → கூதாரி.]

கூதாளம் *kūdāḷam*, பெ.(n.) **கூதாளி** (திவா.) பார்க்க; see *kūdāḷi*.

[கூதளம் → கூதாளம்.]

கூதாளி *kūdāḷi*, பெ.(n.) 1. செடிவகை (திவா.); convolvulus. 2. தூதுவளை (வின்.); three lobed night shade.

[கூதளம் → கூதாளி.]

கூதி *kūdi*, பெ.(n.) பெண்குறி; pudendum muliebre.

மறுவ. துள், பூக்கு, புண்டை.

ம.,து. கூதி

[குள் (துளை) → குத்து → கூதி.]

கூதிர் *kūdir*, பெ.(n.) 1. பனிக்காற்று (பிங்.); chill wind. 2. காற்று (பிங்.); wind. 3. சாரற் காலமெனப்படும் துலை (ஐப்பசி) நளி (கார்த்திகை) மாதங்கள் (தொல். பொருள். 6); autumn, the months of *Aippaśi* and *Kārttigai*, one of six seasons. 4. குளிர் (வின்.); sensation of cold.

[கூதல் → கூதிர்.]

கூதிர்ப்பாசறை *kūdir-p-pāśarai,* பெ.(n.) போர்மேற் சென்ற அரசன் கூதிர்காலத்தில் தங்கும் படைவீடு (தொல். பொருள்.76); winter encampment of a king waging war.

[கூதல் → கூதிர் + பாசறை.]

கூதை *kūdai,* பெ.(n.) காற்று (திவா.); wind.

[ஊதை → கூதை]

கூதைசெய்தல் *kūdai-cey-,* 1 செ.குன்றாவி (v.t.) காதை மூளியாக்குதல்; to mutilate the ear. *"காது செய்வான் கூதை செய்து" (திவ். திருவாய். 9:1.9).*

[கூதை + செய்.]

கூந்தல்[1] *kūndal,* பெ.(n.) 1. பெண்டிர் தலைமயிர் (பிங்.); long flowing tresses of a woman. 2. மயிற்றோகை; peacock's tail. *"கூந்தன் மென்மயில்" (கம்பரா.சித்திரகூட.31).* 3. குதிரைப் பிடரிமயிர்; horse's mane. *"கூந்தற் குதிரை" (கலித். 163: 53).* 4. யானைக் கழுத்து மயிர்; hair of an elephant's neck. *"கூந்தலம் பிடியின்" (நைடத. அன்.தூது.23).* 5.குதிரை; horse. *"கூந்த லென்னும் பெயரொடு" (பரிபா. 3:31).*

ம. கூந்தல்; **க.** கூதல்; **து.** கூசல்.

skt. kūndala

[குல் → குய் → குய்ந்தல் (கருமை) → கூந்தல்]

கூந்தல்[2] *kūndal,* பெ.(n.) கேசியென்னும் அரக்கன்; an *Aśura* slain by *Krishnan.* *"கூந்த லெரிசினங் கொன்றோய்" (பரி.பா.3:31).*

[கூந்தன் → கூந்தல்]

கூந்தல்[3] *kūndal,* பெ.(n.) 1. தலையிடம்; head, as of plants. *"கூந்த லேந்திய கமுகங் காய்க்குலை" (சீவக. 2403).* 2. **கூந்தற்பனை** (வின்.) பார்க்க; see *kūndar-panai,* jaggery palm. 3. கமுகு பனை இவற்றின் ஓலை (வின்.); leaves of palmyra and areca palms. 4. விழாக்காலங்களில் வாயிலை அழகுபடுத்தும் குருத்தோலைத் தோரணம் (யாழ்ப்.); tender coconut leaves formed into festoons and used to decorate arched portals on festive occasions. 5. கமுகங்குலைக் கூந்தல் (வின்.); spathe of arecanut trees. 6. பூ முதலியவற்றின் மெல்லியதோர் உறுப்பு; filaments, treads, fibres, fringes. 7. குதிரைவாற்சாமை (தைலெ.தைல.17); horse-tails millet.

[கூந்தல் = கூந்தல் போன்றது, கூந்தல் உள்ள இடம்]

கூந்தல்[4] *kūndal,* பெ.(n.) காரைக்குட்டிமீன்; seafish, pale, dull-read, attaining 1ft. in length.

[குந்தல் → கூந்தல்]

கூந்தல்[5] *kūndal,* பெ.(n.) 1. தேங்காயை மூடியிருக்கும் நார் (திருநெல்.); the fibrous covering of coconut. 2. கமுகு (அகி.நி.); areca palm.

[கூந்தல்[1] + கூந்தல்[3].]

கூந்தல்கொள்(ளு)-தல் *kūndal-kol-,* 16 செ.கு.வி. (v.i.) மகளிரைத் தழுவுதல்; lit., to lay hold of a woman's tresses, to embrace a woman. *"யாரிவனெங் கூந்தல் கொள்வான்" (கலித். 89).*

[கூந்தல் + கொள்-.]

கூந்தல்சேகம் *kūndal-śēkam* பெ.(n.) தென்னை மரத்தின் மட்டை; the stem of coconut leaves (சா.அக.).

[கூந்தல் + சேகம்]

கூந்தல்தொடு-தல் *kūndal-todu-,* 20 செ.கு.வி.(v.i.) **கூந்தல்கொள்(ளு)-தல்** பார்க்க; see *kūndal-kol-,* *"பூங்கோதை வேண்டேங் கூந்தல் தொடேம்" (சீவக. 1229).*

[கூந்தல் + தொடு-.]

கூந்தல்மாரி *kūndalmāri,* பெ.(n.) தேவதாரு; deccani deodar (சா.அக .).

[கூந்தல் + மாரி.]

கூந்தல்முள்ளி *kūndal-muḷḷi,* பெ.(n.) நீண்ட முட்களையுடைய ஒருவகை முள்ளி; a thishts with long thorns (சா.அக.).

[கூந்தல் + முள்ளி.]

கூந்தல்வேல் *kūndal-vēl* பெ.(n.) ஒருவகை வேலமரம்; சாலி; elephant thorn (சா.அக.).

[கூந்தல் + வேல்.]

கூந்தலழகி *kūndalaḻagi,* பெ.(n.) ஒரு மரம்(சா.அக.); a tree.

[கூந்தல் + அழகி.]

கூந்தலறுகு *kūndalaṟugu,* பெ.(n.) அறுகம் புல்வகை (வின்.); hairy-grass.

[கூந்தல் + அறுகு.]

கூந்தலாற்று—தல் *kūndal-āṟṟu-,* 5 செ.கு.வி.(v.i.) ஈரமயிரைக் கோதி உலர்த்துதல்; to loosen and dry one's hair after bathing.

[கூந்தல் + ஆற்று.]

கூந்தலெழில் மாணிக்கம் *kūndaleḻil-māṇikkam* பெ.(n.) மயிர்மாணிக்கம்; morning mallow (சா.அக.).

[கூந்தல் + எழில் + மாணிக்கம்.]

கூந்தளம்பாவை *kūndaḷam-pāvai,* பெ.(n.) பூவகை; convolvulus flower. *"காந்தமணி கூந்தளம் பாவை நீண்டு" (சீவக.1671).*

[கூந்தல் + அம் + பாவை.]

கூந்தற்கணவாய் *kūndaṟ-kaṇavāy,* பெ.(n.) மீன்வகை (வின்.); a species of cuttlefish.

[கூந்தல் + கணவாய்.]

கூந்தற்கமுகு *kūndaṟ-kamugu,* பெ.(n.) 1. கமுகு வகை(பிங்.); Areca palm. 2. தாளிப்பனை (இராட்.); talipot palm.

[கூந்தல் + கமுகு.]

கூந்தற்பனை *kūndaṟ-paṉai,* பெ.(n.) 1.தாளிப்பனை (பிங்.); talipot palm. 2. திப்பிலிப்பனை; jaggery palm.

[கூந்தல் + பனை.]

கூந்தற்பனைக்கள் *kūndaṟ-paṉai-k-kaḷ,* பெ.(n.) கூந்தற்பனையின் பாளையினின்று எடுக்கும் கள்; toddy extracted from the spathe of the blastered sag tree (சா.அக.).

[கூந்தல் + பனை + கள்.]

இதனைப் புளிக்க வைத்து வாலையிலிட்டுக் காய்ச்சி ஒரு வித வெறிநீர் இறக்கலாம். இதை மருந்தில் பயன்படுத்துவர். இது மலச்சிக்கலைப் போக்கும். இக்கள்ளைக் காய்ச்சி எடுக்கும் வெல்லம் கூந்தல் வெல்லம்.

கூந்தற்பனைச்சாராயம் *kūndaṟ-paṉai-c-cārāyam,* பெ.(n.) ***கூந்தற்பனைக்கள்*** பார்க்க; see *kūndaṟ-panai-k-kaḷ.*

[கூந்தற்பனை + சாராயம்.]

கூந்தற்பனைவெல்லம் *kūndaṟ-paṉai-vellam,* பெ.(n.) கூந்தற்பனையின் சாற்றினின்று எடுக்கும் வெல்லம்; jaggery obtained from the sap of basta-rd sags tree (சா.அக.).

[கூந்தற்பனை + வெல்லம்.]

கூந்தற்பாசி *kūndaṟ-pāši,* பொ.(n.) நீர்ப்பூடுவகை (யாழ்.அக.); trailing moss.

[கூந்தல் + பாசி.]

கூந்தற்பூகம் *kūndaṟ-pūgam,* பெ.(n.) ***கூந்தற் கமுகு***[1] பார்க்க; see *kūndaṟ-kamugu.*

[கூந்தல் + பூகம்.]

கூந்தன்மா *kūndaṉ-mā*, பெ.(n.) குதிரை; horse. *"கூந்தன்மாவென்று கண்டார் சொல்லும்படி"* (பரிபா. 3.31, உரை.).

[கூந்தல் = பிடரி மயிர். கூந்தல் + மா.]

கூந்தாலம் *kūndālam*, பெ.(n.) ***கூந்தாலி*** பார்க்க; see *kūndāli*.

[கொந்து → குந்தாலம் → கூந்தாலம்.]

கூந்தாலி *kūndāli*, பெ.(n.) கடப்பாரை (வின்.); crow-bar, pick-axe.

ம. குந்தாலி

[கொந்து → கொந்தாலி → கூந்தாலி.]



கூந்தாலி

கூந்தியாவுழுந்து *kūndiyā-vuḷundu*, பெ.(n.) உழுந்துவகையு ளொன்று (நாஞ்சி.); a kind of black-gram.

[கொத்து → கொந்து → கொந்தியம் → கூந்தியம் + உழுந்து.]

கூந்து *kūndu*, பெ.(n.) ***கூந்தல்***[3,4] பார்க்க; see *kūndal*. *"கூந்திளம் பிடி" (சூளா. நாட்டு. 19).*

[குல் → கூல் → கூந்து.]

கூப்பாடு[1] *kūppāḍu*, பெ.(n.) பேரொலி; great noise, up roar (சா.அக.). மெதுவாகப் பேசுவதை விட்டு ஏன் கூப்பாடு போடுகிறாய்? (உ.வ.).

[கூ[3] + பாடு – கூப்பாடு.]

கூப்பாடு[2] *kūppāḍu*, பெ.(n.) 1. கூப்பிடுகை; call, summoning. 2. பேரொலி; clamour, great noise.

ம. கூப்பாடு

[கூ + பாடு – கூப்பாடு.]

கூப்பாடுதூரம் *kūppāḍu-tūram*, பெ.(n.) ***கூப்பிடு தூரம்*** பார்க்க; see *kūppiḍu-tūram*.

[கூப்பாடு + தூரம்.]

கூப்பிடாரொட்டி *kūppiḍāroṭṭi*, பெ.(n.) கரு நொச்சி (சா.அக.); a plant.

[கூப்பு + இடர் + ஒட்டி – கூப்பிடாரொட்டி.]

கூப்பிடு[1]–தல் *kūppiḍu-*, 9 செ.குன்றாவி(v.t.) 1. அழைத்தல்; to call, call by name, summon. 2. வரவழைத்தல்; to invite.

Fin. kutsua; **Hunti.** kutta; **Lap.** goccot; **Jap.** kuch; **Q.** jotokay.

[கூவு → கூவிடு → கூப்பிடு.]

கூப்பிடு[2]–தல் *kūppiḍu-*, 19 செ.கு.வி.(v.i.) 1. அச்சம், துயரம் முதலியவற்றாற் கத்துதல்; to call out, cry out, halloo, shriek. 2. உதவி வேண்டிக் கரைதல்; cry for help.

ம. கூப்பிடுக

[கூவு → கூவிடு → கூப்பிடு.]

கூப்பிடு[3]–தல் *kūppiḍu-*, 20 செ.குன்றாவி.(v.i.) தொழுதற்குக் கைகுவித்தல்; to join hands in worship. *"கூப்பிட்டேன் சொல்கைதனை"* (தனிப்பா.II, 98,251).

[கூ + இடு – கூவிடு → கூப்பிடு.]

கூப்பிடு[4] *kūppiḍu*, பெ.(n.) 1. முறையீடு; calling for aid supplication. *"எழுந்தன ளமரர் கூப்பிட்டால்" (உத்தரரா. வரையெடு.77).* 2. கூப்பிடு தொலைவு; calling distance *"கூப்பிடு கடக்குங் கூர்நல லம்பின்" (மலைபடு. 421).*

[கூப்பிடு[1] → கூப்பிடு[4]]

கூப்பிடுதூரம் *kūppiḍu-tūram,* பெ.(n.) ***கூப்பிடு தொலைவு*** பார்க்க; see *kuppiḍu-tolaivu.*

[கூப்பிடு + தூரம்.]

கூப்பிடுதொலைவு *kūppiḍu-tolaivu,* பெ.(n.) கூப்பீடு, ஒரு குரோசவளவு (திவா.); lit., the distance at which a shout can be heard Indian league. ஒருவன் கூப்பிட்டாற் பிறன் கேட்குந்தொலைவு.

மறுவ. கூப்பிடுதொலைவு

[கூப்பிடு + தொலைவு.]

எண்சாண் கோல் ஐந்நூறு கொண்ட தொலைவு ஒரு கூப்பீடு (குரோசம்) எனப்படும்.

கூப்பிடுவான் *kūppiḍuvāṉ,* பெ.(n.) கதறிக் கொண்டே இறக்கச் செய்வதாகிய ஆட்டுநோய் (யாழ்ப்.); a kind of lung disease especially among goats, causing continuous bleating and sudden death.

[கூவிடு → கூப்பிடு → கூப்பிடுவான்.]

கூப்பில் *kūppil,* பெ.(n.) பூசுணைக்காய்; pumpkin (சா.அக.).

மறுவ. கும்பளம்

[கும்பு → கூம்பு → கூப்பில்.]

கூப்பீடு *kūppīḍu,* பெ.(n.) 1. கூப்பாடு; call, whoop. *"வருந்திக் கூப்பிடுங் கூப்பீட்டைக் கேட்கவும்"* (புறநா.44, உரை). 2. கூப்பிடுதூரம்; calling distance. *"முழநான்குகோல் அக்கோலைஞ்ஞூறு கூப்பீடு" (வீரசோ.யாப்.33,உரை).*

[கூப்பிடு → கூப்பீடு.]

கூப்பு[1]-தல் *kūppu-,* 18 செ.குன்றாவி.(v.t.) 1. கைகுவித்தல்; to join hands as in worship. *"வாளொடுங் கோலொடுங் கூப்பு" (சீவக. 430).* 2. குவித்தல்; to heap up, as sand or grain. *"கூப்பிய கனக மாலையால்" (சீவக. 913).* 3.சுருக்குதல்; to close, contract, shut in, as an umbrella, to withdraw, draw in, as the sun his rays. *சூரியன் கிரணங்களைக் கூப்பிட்டுக் கொண்டு மறைந்தான் (வின்.).*

ம. கூப்புக

[குவிப்பு → கூப்பு.]

கூப்பு *kūppu,* பெ.(n.) குவியச் செய்கை; joining hands as in worship. *"என் கைகூப்புச் செய்கையே" (திவ். திருவாய். 4:3,2).*

[குவி → குவிப்பு → கூப்பு.]

கூப்புரம் *kūppuram,* பெ.(n.) ***கூப்புறம்*** பார்க்க; see *kūppuṟam.*

[குவி + புறம் – குவிபுறம் → கூப்புறம் (கொ.வ.).]

கூப்புறம் *kūppuṟam,* பெ.(n.) முழங்கை; elbow (சா.அக.).

[குவி + புறம் – குவிபுறம் → கூப்புறம் (கொ.வ.).]

கூபகம்[1] *kūbagam,* பெ.(n.) இடுப்பிலுள்ள எலும்புக் கூட்டின் குழிவிடம் (இங்.வை.13); pelvis.

[குள் → குவ் → கூவல் → கூவகம் → கூபகம்.]

கூபகம்[2] *kūbagam,* பெ.(n.) மலைநாட்டிற் கொல்லத்தைத் தலைநகராகக் கொண்ட ஒரு நாடு; name of a country whose capital was Quilon. *"கூபக மிரட்ட மொட்டம்" (பாரத. படை.19) (T.A.S.II.16).*

[கூவல் → கூபம் (பள்ளம், பள்ளத்தாக்கு) → கூபகம்.]

கூபம் *kūbam,* பெ.(n.) 1. கிணறு; well. 2. ஊற்றுக் குழி; spring (சா.அக.).

[கூவல் → கூவம் → கூபம்.]

கூபரம் *kūbaram,* பெ.(n.) முழங்கை; elbow.

[கூப்புறம் → கூபரம் (கொ.வ.).]

கூம்பல் *kūmbal,* பெ.(n.) குமிழுமரம் (திவா.); coomb teak.

ம. கூம்பன்

[கூம்பு → கூம்பல்.]

கூம்பு[1]-தல் *kūmbu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. குவிதல்; to close, to shut, as a flower *"செய்ய கமல மலர்கூம்ப" (நைடத. சந்திரோ.2).* 2. ஒடுங்குதல், சுருங்குதல் (சூடா.); to contract, shrink. 3. ஊக்கங் குறைதல்; to lose courage, zeal or enthusiasm. *"வடவர் வாடக் குடவர் கூம்ப" (பட்டினப். 276).* 4. சேறு (வின்.); mud. கூம்பினிற் புதைத்த கல் (W.).

ம. கூம்புக

[குவி → கும்பு → கூம்பு.]

கூம்பு[2] *kūmbu,* பெ.(n.) 1. பாய்மரம்; mast of a vessel. *"கூம்புமுதன் முறிய வீங்குபிணி யவிழ்ந்து" (மணிமே. 4.30).* 2. தேர்மொட்டு (திவா.); cone shaped pinnacle of a chariot. 3. பூமொட்டு; bud. *"தாழைக் கூம்பவிழ்ந்த வொண்பூ"* (ஐந்.ஐம்.49).

[குழும்பு → கும்பு → கூம்பு.]

கூம்பூரணம் *kūmbūraṇam* பெ.(n.) கொள்ளுக் காய்வேளை; purple wild indigo (சா.அக.).

[கூம்பு + பூரணம்.]

கூமம் *kūmam,* பெ.(n.) நீர்நிலை (யாழ்.அக.); pond, pool.

[கூவல் → கூபம் → கூமம் (கொ.வ.).]

கூமரை *kūmarai,* பெ.(n.) ***காட்டிலவு*** (மலை.) பார்க்க; see *kāṭṭilavu.*

[கூம்பு + உறை - கூம்புறை → கூவுரை → கூமரை (கொ.வ.).]

கூமா *kūmā,* பெ.(n.) ***கூவமா*** (யாழ்ப்.) பார்க்க; see *kūvamā.*

[கூவமா → கூமா.]

கூமுட்டாள் *kūmuṭṭāḷ,* பெ.(n.) பெருமூடன் (இ.வ.); stupid, fool, a term of abuse.

மறுவ. கூமுட்டை, கூழ்முட்டை

[கூழ் + முட்டை + ஆள். கெட்டுப்போன முட்டை போன்று பயன்படாத ஆள்.]

கூமுட்டை *kūmuṭṭai,* பெ.(n.) ***கூழ்முட்டை*** (இழி.வ.) பார்க்க; see *kūḻ-muṭṭai.*

[கூழ்முட்டை → கூமுட்டை.]

கூர்[1]-தல் *kūr-,* 16 செ.கு.வி.(v.i.) 1. மிகுதல்; to be abundant, excessive. *"பெருவறங் கூர்ந்த கானம்" (பெரும்பாண். 23).* 2. விருப்பங்கொள்ளுதல்; to covet hanker after. *"எங்கையர் தோள் கூடினான்பின் பெரிது கூர்ந்து" (திணைமாலை. 124).* 3. வளைதல்; to bend. *"மெய்கூர்ந்த பனியொடு" (கலித். 31:6).* 4. அளவு குறைதல், குன்னாத்தல் (நெடுநல், 9 உரை); to contract with cold.

[குல் → கூடல் → கூழ். குல் = கூடுதல் கருத்து வேர் மிகுதல், மேற்செல்லுதல், வளைதல், சுருங்கல் பொருள்களில் விரிந்தது.]

கூர்-த்தல் *kūr-,* 12 செ.கு.வி.(v.i.) 1. மிகுதல்; to be abundant, excessive. *"கூர்ப்புங் கழிவு முள்ளது சிறக்கும்"*(தொல்.சொல். 314). 2. கூர்மையாதல்; to be sharp, as the edge or point of an instrument *"கூர்க்குநன் மூவிலைவேல்" (தேவா.367:8).* 3. அறிவு நுட்பமாதல்; to be keen, acute, penetrating, as the intellect. 4. உவர்த்தல்; to be saltish, brackish. *"மென்று றைப்புனல் கூர்ப்புறக் கடலேறி"* (தணிகைப்பு. திருநாட்.164). 5. சினத்தல்; to be enraged, become furious. *"கூர்த்துநாய் கவ்விக் கொளக்கண்டும்" (நாலடி.70).*

[குல் → கூல் → கூர்.]

கூர்[3] *kūr,* பெ.(n.) 1. மிகுதி; exuberance, abundance. *"கூரி லாண்மைச் சிறியேன்" (புறநா.75:4).* 2. கூர்மை; sharpness, as of a point or edge. *"கூர்வேற் கோன்"* (திவ்.பெரியாழ்.4:2,7). 3. கூர்மை

யுள்ள நுனி (இ.வ.); pointed edge. 4. குயவன் சக்கரத்தைத் தாங்கும் ஓர் உறுப்பு; the stand or support of a potter's wheel. *"கூரினை யிழந்து போய்க் குலாலன் சக்கர நீர்மைய தானது"* (கந்தபு. தாரக.136). 5. இலையின் நடுநரம்பு (யாழ்ப்.); fibre, leaf rib, as of the neem. 6. கதிர்க்கூர் (வின்.); awn, beard of grain. 7. கதவுக்குடுமி; projecting pivots on which a door swings. 8. காரம்(வின்.); pungency. 9. குத்துப்பாடான பேச்சு; cutting or sarcastic speech.

Fin. karki; **Es.** kark; **Mong.** gurca.

[குல் → கூல் → கூர்.]

kūr, a sharp point. Comp. HEB. *kūr*, to pierce, to bore; SANS. *khur*, to cut.

கூர்[4] *kūr*, பெ.எ.(adj.) 1. மிக்க; intense, excessive *"கூரிருட் பிழம்பே" (நைடத.மாலை. 11).* 2. சிறந்த; fine *"கூர்ஞ்செக்கரே"* (திருக்கோ. 346).

[குல் → கூல் → கூர்.]

கூர்க்கறுப்பன் *kūr-k-kaṟuppaṉ*, பெ.(n.) உயர்ந்த நெல்வகை (வின்.); a kind of bearded paddy of superior quality.

[கூர் + கறுப்பன். (கறுப்பன் = தாடியுடைய கறுப்பன் தெய்வம்).]

கூர்கெட்டுப்போ-தல் *kūr-keṭṭu-pō-*, 8 செ.குன்றாவி (v.t.) அறிவு மழுங்குதல்; becoming dull witted through old age (சா.அக.). கூர்கெட்டவனாயிருக்காதே.

[கூர் + கெட்டு + போ-.]

கூர்கெடல் *kūr-keḍal*, பெ. (n.) அறிவு மழுங்கல்; becoming dullwitted (சா.அக.).

[கூர் + கெடல்.]

கூர்கெடு-தல் *kūr-keḍu-*, 20 செ.கு.வி.(v.i.) 1. நுனி மழுங்குதல்; to become blunt, dull, to lose point, as a tool. 2. அறிவு மழுங்குதல்; to become dull-witted, to lose one's sharpness of intellect, as in old age.

[கூர் + கெடு.]

கூர்கேவு *kūr-kēvu*, பெ.(n.) ***வெண்கடுகு*** (மலை.) பார்க்க; see *veṉ-kaḍugu.*

[கூர் + கேவு. கடுகு → கடுவு → கேவு (கொ.வ.).]

கூர்ங்கண் *kūr-ṅ-kaṇ*, பெ.(n.) ஊடுருவிப் பார்க்குங் கண்; sharp, piercing eyes.

[கூர் → கூர்ம் + கண்.]

கூர்ச்சகம் *kūr-c-cagam*, பெ.(n.) பல்லுக்குச்சி (யாழ்.அக.); tooth brush.

[கூர் + (சாகம்) சகம்.]

கூர்ச்சசேகரம் *kūrccacēgaram*, பெ.(n.) தென்னை மரம்; coconut tree (சா.அக.).

[கூர் → கூர்த்த (உயரமான) → கூர்ச்ச + சேகரம். செம் + கேரம் - செங்கேரம் → சேகரம் (தென்னை).]

கூர்ச்சம்[1] *kūrccam*, பெ.(n.) கட்டடத்திற்கு உதவுஞ் சிறுகால் (இ.வ.); small-sized post used in building.

[கூர் → கூர்த்தம் (நெடுங்கழி) → கூர்ச்சம் (கொ.வ.).]

கூர்ச்சம்[2] *kūrccam*, பெ.(n.) 1. தருப்பை (பிங்.); darbha grass. 2. மறை (வேதக்)க் கருமங்களிற் பயன்படுத்தும் தருப்பைக் கொத்து; bundle of darbha grass used in ceremonies and sacrifices *"கோலும் புல்லும் ஒரு கையிற் கூர்ச்சமும்" (தேவா.497:8).*

[கூர் → கூர்த்தம் (நெடும்புல்) → கூர்ச்சம்.]

கூர்ச்சரம் *kūrccaram*, பெ.(n.) 1. குச்சர மாநிலம்; Gujarat state. 2. ஐம்பத்தாறு நாடுகளுளொன்று; (திருவேங்.சத.97); Gujarat, one of 56 ancient countries.

Gur, Gujjar, Gujari, Gurjar

[குச்சரம் → கூச்சரம்: குச்சரம் = ஆலமரம். அம்மரத்தின் கீழ் நடந்த குச்சரர் வாணிகம், வணிகரின் குடிப்பெயர், வணிகரால் பெயர் பெற்ற நிலப்பகுதி.]

கூர்ச்சரி *kūrccari,* பெ.(n.) பண்வகையு ளொன்று (பரத.இராக.56); a specific melody-type.

[குச்சம் → குச்சரி = இடுப்பில் கட்டிக் கொள்ளும் மணி, அம் மணியோசைக்கு ஏற்ப ஆடும் ஆடல்.]

கூர்ச்சாரம் *kūrccāram,* பெ.(n.) சிவச்சாரம் (சா.அக.); sivacāram.

[கூர் + சாரம்.]

கூர்ச்சி[1] *kūrcci,* பெ.(n.) ***குருச்சி***[1] பார்க்க; see *kurucci.*

[குருச்சி → கூர்ச்சி.]

கூர்ச்சி[2] *kūrcci,* பெ.(n.) கூர்மை; sharpness, keenness, pointedness. *"கூர்ச்சிவா யரவம் வீழ்த்தி" (குற்றா.தல.கவுற்.10).*

[கூர் → கூர்ச்சி.]

கூர்ச்சிகை *kūrccigai,* பெ.(n.) 1. பூவரும்பு; flower-bud. 2. ஊசி; needle (சா.அக.). 3. தூரிகை கரிக்கோல் (எழுதுகோல்) (யாழ்.அக.); pencil, painter's brush.

[கூர் → கூர்ச்சி → கூர்ச்சிகை.]

கூர்ச்சு *kūrccu,* பெ.(n.) ***1. கூர்ச்சி***[2] பார்க்க; see *kūrcci*[2] 2. கூரிய முளை; pointed stick, stake. *கூர்ச்சுக் கட்டையாய்ப் போயிற்று (இ.வ.).*

[கூர் → கூர்ச்சு.]

கூர்ச்சுக்குல்லா *kūrccu-k-kullā,* பெ.(n.) நெடுங்குல்லா (வின்.); conical shaped cap.

[கூர்ச்சு + குல்லா.]

கூர்சீவியபாக்கு *kūr-šiviya-pākku,* பெ.(n.) இழைத்த பாக்குச் சீவல்; scraped betel nut (சா.அக.).

[கூர் + சீவிய + பாக்கு.]

கூர்சீவு[1]**-தல்** *kūr-šivu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கூராக்குதல்; to sharpen, make pointed. 2. சீவுதல்; to scrape, slice of as areca nut. *கூர்சீவின பாக்கு (இ.வ.).*

[கூர் + சீவு.]

கூர்சீவு[2]**-தல்** *kūr-šivu-,* 10 செ.கு.வி. (v.i.) 2. கொம்பு சீவுதல்; to sharper the horn of an ox to pierce the opponent. 2. பகை மூட்டுதல் (இ.வ.); to incite, as to a quarrel.

[கூர் + சீவு-.]

கூர்த்தல் *kūrttal,* பெ.(n.) மிகுதியாதல்; being excessive. 2. உவர்த்தல்; being saltish (சா.அக.).

[கூர் → கூர்த்தல்.]

கூர்த்தலை *kūr-t-talai,* பெ.(n.) 1. கூர்மையான தலை; cone head, tower head. 2. உள்ளங்கால், உள்ளங்கையின் மேற்பாகம்; the upper part of the palm of the hand and the sole of the feet (சா.அக.).

[கூர் + தலை.]

கூர்த்திகை *kūrttigai,* பெ.(n.) 1. மட்டிப்படைக்கலம் (திவா.); a weapon shaped like a sledge - hammer. 2. படைக்கலம்; arms, weapons.

[கூர் + திகை.]

கூர்துளைஇணைப்பு *kūr-tuḷai-eṉaippu,* பெ.(n.) இழைத்த இரு சட்டங்களிலும் 'நல்புறம்' வரைந்து இணைக்கும் இணைப்பு (தச்.தொ.வரி.); a mode of joining two wooden frames in joinery.

*[கூர் + துளை + இணைப்பு.]

கூர்ந்த பஞ்சமம் *kūrnda-pañjamam,* பெ.(n.) மருதயாழ்த்திற வகை (பிங்.); an ancient secondary melody type of Marudam class.

[கூர் → கூர்ந்த + பஞ்சமம்.]

கூர்நாடி *kūr-nāḍi,* பெ.(n.) கடு (துரித) நாடி; sharp pulses (சா.அக.).

[கூர் → கூர்ந்த + பஞ்சமம்.]

கூர்ப்பகழி *kūr-p-pagaḻi,* பெ.(n.) 1. கனிம நஞ்சு (சங்.அக.); a mineral poison. 2. கூரான அம்பு; sharp arrow.

[கூர் + பகழி.]

கூர்ப்படைதறை *kūrppaḍaitaṟai,* பெ.(n.) கீழ்க்காய் நெல்லி; small leaved feather foil (சா.அக.).

[கீழ்ப்படு + (அத்துறு) அத்துறை – கீழ்ப்படைத்துறை → கூர்ப்படைதறை (கொ.வ.).]

கூர்ப்பம் *kūrppam,* பெ.(n.) புருவநடு; middle of the eye-brows (சா.அக.).

[கூர் → கூர்ப்பம்.]

கூர்ப்பரம் *kūrpparam,* பெ.(n.) முழங்கை (பிங்.); elbow.

[கீழ் + புறம் – கீழ்ப்புறம் → கூர்ப்பரம் (கொ.வ.).]

கூர்ப்பிஞ்சு *kūr-p-piñju,* பெ.(n.) மிதிபாகற் பிஞ்சு; ground bitter gourd creeper (சா.அக.).

[கூர் + பிஞ்சு.]

கூர்ப்பிடு-தல் *kūrppiḍu-,* 20 செ.கு.வி.(v.i.) தீட்டிக் கூர்மையாக்குதல்; to sharpen, as a tool. *"படையைக் கூர்ப்பிடுத லோடும்" (சீவக. 2303).*

[கூர் → கூர்ப்பு (கூர்மை) + இடு.]

கூர்ப்பு *kūrppu,* பெ.(n.) 1. உள்ளது சிறந்து மிகுகை (தொல்.சொல்.314); abundance, excess, improvement. 2. கூர்மை; sharpness, pointedness. *"கூர்ப்புக் கொண்டகட் கொடிச்சியர்"* (கந்தபு. திருநாட்டு.45). 3. அறிவுக்கூர்மை; keenness of perception, acuteness of intellect *"கூர்ப்பில்லா மனுடனும்"* (சூடா.11:132). 4. உவர்ப்பு; brackishness, saltness.

ம. கூர்ப்பு; **க.,து.**கூர்பு

[கூர் → கூர்ப்பு.]

கூர்மக்கருடமூலி *kūrma-k-karuḍa-mūli,* பெ.(n.) வெள்ளை நாயுருவி; a white species of *nāyuruvi* (சா.அக.).

[கூர்மம் + கருடன் + மூலி.]

கூர்மக்கை *kūrma-k-kai,* பெ.(n.) பெருவிரலை நீட்டி மற்றை விரல்களை வளைத்துக் கீழ்நோக்கிப் பிடிக்கும் நாட்டிய முத்திரைக் கை (பரத.பாவ.39); gesticulation in dancing, in which the thumb is held straight and the other fingers are bent and pointed downwards.

[கூர்மம் + கை.]

கூர்மகன்னியான் *kūrma-k-kaṉṉiyāṉ,* பெ.(n.) சிவனார் வேம்பு; šhiva's neem (சா.அக.).

[கூர் → கூர்மம் + (கண்ணி) கன்னி + ஆன்.]

கூர்மச்சக்கரம் *kūrma-c-cakkaram,* பெ.(n.) ஓவியப்பா வகையுளொன்று (யாப்.வி.497); a kind of *cittirakavi.*

[கூர்மம் + சக்கரம். கூர்மம் = ஆமை.]

கூர்மத்தானம் *kūrma-t-tāṉam,* பெ.(n.) சம்மணம் அல்லது கால்மேல் கால் போட்டு உட்காருகை; a posture with folded legs (சா.அக.).

[கூர்மமம் + தானம்.]

கூர்மத்தோடு *kūrmattōḍu,* பெ.(n.) ஆமையோடு; the shell of a turtle (சா.அக.).

[கூர்மம் + அத்து + ஓடு.]

கூர்மபுத்தி *kūrma-putti,* பெ.(n.) நுண்ணிய அறிவு; keen intellect (சா.அக.).

[கூர்மம் + புத்தி. புலம் → புந்தி → புத்தி.]

கூர்மம் *kūrmam,* பெ.(n.) ஆமை; tortoise.

மறுவ. ஆமை, யாமை

[குல் (வளைதல், தாழ்தல், பின்வாங்குதல்) கூல் → கூர் → கூர்மம். (கால்களை உள்ளிழுத்துக் கொள்வது. ஒ.நோ. கூர்மிகை (பின்முனை வளைந்த வீணை).]

கூர்மமகோதரம் *kūrma-magōdaram,* பெ.(n.) காற்றுத் திரட்சியால் வயிற்றில் கட்டியைப்போல் வீக்கங் கண்டு, சோறு செல்லாமல் ஆமைபோல் வயிறு விம்மி இரைச்சலை உண்டாக்கும் ஒருவகை நோய்; a kind of abdominal dropry, swelling or enlargement of the abdomen resembling, the shape of a turtle (சா.அக.).

*[கூர்மம் + மகோதரம். **ஆமைவயிறு** பார்க்க; see āmaivayiṟu.]*

கூர்மமுனிமுறிப்பு *kūrma-muni-muṟippu,* பெ.(n.) மாழைகளை (உலோகங்களை)ச் செய்வதற்கான கூர்மமுனி சொன்ன முறை; the method in the works of the sage Kurmarishi for alterning the virtues of metals for the purposes of purifying them (சா.அக.).

[கூர்மம் + முனி + முறிப்பு. கூர்மம் = நுண்ணறிவு.]

கூர்மல்லி *kūr-malli* பெ.(n.) ஊசிமல்லிகை (சா.அக.); slender jasmine.

[கூர் + மல்லி.]

கூர்மவளி *kūrma-vaḷi,* பெ.(n.) மயிர்க் கூச்செறிப்பையும், விழி இமைப்பையும் உண்டாக்கும் பத்து வளிகளில் ஒன்று; one of the ten vital airs of the system causing the hairs stand in the ends, and winking of the eye lids (சா.அக.).

மறுவ. கூர்மன்

[கூர்மம் + வளி.]

கூர்மவாயு *kūrmavāyu,* பெ.(n.) **கூர்மவளி** பார்க்க; see kūrma-vaḷi

[கூர்மம் + வாயு.]

கூர்மவிருக்கை *kūrmā-v-irukkai,* பெ.(n.) சம்மணம் அல்லது கால்மேல் கால் போட்டு உட்காருகை; a posture with folded legs (சா.அக.).

[கூர்மம் + இருக்கை.]

கூர்மாசனம் *kūrmāšaṉam,* பெ.(n.) **கூர்ம விருக்கை** பார்க்க; see kūrma-v-irukkai

[கூர்மம் + ஆசனம்.]

கூர்மிகை *kūrmigai,* பெ.(n.) வீணைவகையுளொன்று (பரத.ஒழிபி.15); a kind of lute.

[கூர்மி → கூர்மிகை.]

கூர்முக்கோணம் *kūr-mukkōṇam,* பெ.(n.) ஒவ்வொரு கோணமும் நேர்கோணத்துக்குக் குறைந்ததாயுள்ள முக்கோணம் (வின்.); acute-angled triangle.

[கூர் + முக்கோணம்.]

கூர்முள் *kūr-muḷ,* பெ.(n.) குதிரை செலுத்துங் கருவி; spurs. *"கூர்முட் பிடித்துத் தேர்மு னின்ற திசைமுகன்" (சிலப். 6:44,உரை.).*

ம. கூமுள்ளு (ஒரு மருந்துச் செடி)

[கூர் + முள்.]

கூர்மை *kūrmai,* பெ.(n.) 1. படைக்கலன் முதலிய வற்றின் கூர்; sharpness, pointedness. *"கூர்மையின் முல்லை யலைக்கு மெயிற்றாய்" (நாலடி, 287).* 2. நுண்மை (திவா.); keenness of sight, acuteness, intellect, penetration, subtlety சிறப்பு (திருக்கோ. 346,உரை); excellence, superiority. 4. கல்லுப்பு (சங்.அக.); rock-salt. 5. வெடியுப்பு (சங்.அக.); salt-petre.

ம. கூர்மை

[கூர் → கூர்மை.]

கூர்மைக்கரிவாள் *kūrmai-k-karivāḷ,* பெ.(n.) வழலை (சவர்க்காரம்) (வின்.); soap.

[கூர்மை + கரிவாள் (கரிப்புள்ளது).]

கூர்மைச்சி *kūrmaicci,* பெ.(n.) குதிரைக் காதைப் போன்ற இலையுடைய ஒரு கள்ளி; a kind of spurge tree, the leaf of which resembles the horse's ear (சா.அக.).

[கூர்மை → கூர்மைச்சி.]

கூர்மைநாரி *kūrmai-nāri,* பெ.(n.) கெந்திலவணம் என்னும் உப்புவகை; a kind of salt (சா.அக.).

[கூர்மை + நாரி.]

கூர்மைப்பார்வை *kūrmai-p-pārvai,* பெ.(n.) நுட்பமான பார்வை; sharp sight.

[கூர்மை + பார்வை.]

கூர்மைபார்[1]-த்தல் *kūrmai-pār-,* 14 செ.கு.வி.(v.i.) படைக்கலனின் கூர்மையைச் சரிபார்த்தல்; to try the sharpness of an instrument.

மறுவ. கூர்பார்

[கூர்மை + பார்.]

கூர்மைபார்[2]-த்தல் *kūrmai-pār-,* 4 செ.குன்றாவி (v.t.) ஒருவன் திறமையைத் தெரிவு செய்தல்; to test one's acuteness of intellect or ability.

மறுவ. கூர்பார்

[கூர்மை + பார்.]

கூர்மைமணல் *kūrmai-maṇal,* பெ.(n.) வெள்ளி மணல்; white sand or silver ore. 2. நுண்ணிய மணல்; fine sand.

மறுவ. நுண்மணல்

[கூர் + மணல்.]

கூர்மையில்லோன் *kūrmai-y-illōṉ,* பெ.(n.) அறிவற்றவன், மந்தன் (பிங்.); dullard, stupid person.

[கூர்மை + இல்லோன்.]

கூர்மையுப்பு *kūrmai-y-uppu,* பெ.(n.) கல்லுப்பு; salt (சா.அக.).

[கூர்மை + உப்பு.]

கூர்வலகம் *kūrvalagam,* பெ.(n.) நாணல் (சா.அக.); kaus, a large and coarse grass.

[கூர் + அலகு + அம்.]

கூர்வாங்கு-தல் *kūr-vāṅgu-,* செ.குன்றாவி. (v.t.) படைக்கலன் முதலியவற்றைக் கூர்மையாக்குதல் (இ.வ.); to sharpen the edge, whet.

[கூர் + வாங்கு.]

கூர்வாயிரும்பு *kūr-vāy-irumbu,* பெ.(n.) அரிவாள் மணை (பிங்.); knife blade fastened to a piece of wood for cutting vegetables.

மறுவ. அரிவாள்மணை

[கூர் + வாய் + இரும்பு.]

கூர்வாலி *kūr-vāli,* பெ.(n.) செம்பருந்து; red hawk (சா.அக.).

[கூர் + வாலி.]

கூர்வை *kūrvai,* பெ.(n.) கப்பலின் குறுக்குக்கட்டை (கடற்.); transom, beam across the stern post of a ship.

[கூர் + கூர்வை.]

கூரணம் *kūraṇam,* பெ.(n.) 1. ***கோடகசாலை*** (மலை.) பார்க்க;see *kōḍagaśālai.* Coromandel gendarussa. 2. பாகல் (யாழ்.அக.); balsam pear.

[கூர் → கூரணம். கூர் = பகுதி, கசப்பு மிகுதி.]

கூரம்[1] *kūram,* பெ.(n.) யாழ்; a kind of, stringed musical instrument. *"கூர நாண் குரல்" (பரிபா.19:44).*

[குல் → கூல் (வளைவு) → கூர் → கூரம்.]

கூரம்[2] *kūram,* பெ.(n.) கூரணம் (மலை.) ; very small plant.

[கூரணம் → கூரம்.]

கூரம்[3] *kūram,* பெ.(n.) 1. கொடுமை; cruelty, severity. *"கூரமிக்கவன்" (தேவா.893.5).* 2. பொறாமை (திவா.); envy. jealousy. 3. அழிவு; destruction.

[கூல் (அழித்தல், கெடுத்தல்) → கூரம். கூர் = மிகுதல், பொங்குதல், கெடுதல்.]

கூரம்பாகம் *kūrampāgam,* பெ.(n.) கோடகசாலை (சா.அக.);

[கூரம் + பாகம்.]

கூரம்பு *kūrambu,* பெ.(n.) நிரையம்; a hell. *"கூரம்பு வெம்மணல்" (ஏலா.67).*

ம. கூரம்பு

[கூர் → கூரம்பு.]

கூரரம் *kūraram,* பெ.(n.) முழங்கை; elbow (சா.அக.).

[கீழ்ப்புறம் → கூர்ப்புறம் → கூரரம் (கொ.வ).]

கூரல்[1] *kūral,* பெ.(n.) 1. பெண்களின் தலைமயிர் (பிங்.); woman's hair. 2. இறகு (பிங்.); feathers.

[குரல் (கொத்து) → கூரல்.]

கூரல்[2] *kūral,* பெ.(n.) குடலினின்று பண்ணை என்னும் கூழ்ப்பசை செய்யப் பயன்படும் மீன்வகை; a large fish from the intestines of which a glue is made. 2. பறவையிறகு; plume of bird; feather.

ம. கூரல்

[குரல் (கொத்து) → கூரல்.]

கூரறுக்கும்வாள் *kūr-arukkum-vāl,* பெ.(n.) அரம்பவகை (c.) dovetail saw.

[கூர் + அறுக்கும் + வாள்.]

கூரன்[1] *kūran,* பெ.(n.) நெல்வகை (வின்.); a bearded kind of paddy.

[கூர் → கூரன்.]

கூரன்[2] *kūran,* பெ.(n.) நாய் (பிங்.); dog.

[குக்கல் → குக்கரன் → கூரன்.]

கூரன் *kūran,* பெ.(n.) ஆண்பாற் பெயர்வகை (யாப்.வி.537); a term indicative of the masculine gender.

[கூர் + அன்.]

கூராக்கு—தல் *kūrākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) கத்தி முதலியவற்றைக் கூர்படுத்துதல்; ; to make point, shaper.

ம. கூர்ப்பிடுக

[கூர் + ஆக்கு.]

கூராணி *kūr-āṇi,* பெ.(n.) ஆணிவகை (வின்.); sharp nail or pin.

ம. கூராணி

[கூர் + ஆணி.]

கூராம்பிளாச்சு *kūrām-pilāccu,* பெ.(n.) மண் கொத்தும் மரக்கருவி (யாழ்ப்.); a kind of pointed wooden shovel for grubbing up the earth.

[கூர் + ஆம் + பிளாச்சு.]

கூரான் *kūrān,* பெ.(n.) 1. குல்லான் (யாழ்.அக.); sharp pointed stake for digging. 2. பூடுவகை; a shrub.

[குல் → கூல் → கூர் → கூரான். குல் = குத்துதல்.]

கூரியகண் *kūriya-kan,* பெ.(n.) கூர்மையான கண்; keen eye (சா.அக.).

[கூர் → கூரிய + கண்.]

கூரியபரணி *kūriya-parani,* பெ.(n.) சிறுகுறிஞ்சா; small indian ipecacuanha (சா.அக.).

[கூரிய + பரணி.]

கூரியம்[1] *kūriyam,* பெ.(n.) கை, கால்; certain parts of the body as hands, feet etc. (சா.அக.).

[கூறு → கூறியம் → கூரியம்.]

கூரியம்[2] *kūriyam,* பெ.(n.) கூர்மை (யாழ்.அக.); sharpness.

[கூர் → கூரியம்.]

கூரியவன்னி *kūriya-vaṉṉi,* பெ.(n.) கொடிவேலி (சங்.அக.); ceylon leadwood.

[கூர் → கூரி + வன்னி.]

கூரியன் *kūriyaṉ,* பெ.(n.) 1. கூர்மையுள்ளவன்; sharp, clever person *"கூரியருங் கூரியரை யல்லாரை"* (சிவதரு. பாயிர. 6). 2. அறிவன் (புதன்); mercury. *"சுக்கில பக்க மேவுங் கூரியன்" (சேதுபு. இராமனரு.87).*

[கூரி → கூரியன்.]

கூரியலவணம் *kūriya-lavaṇam,* பெ.(n.) துரிசு; blue vitriol (சா.அக.).

[கூரிய + லவணம்.]

கூரியவான் *kūriyavāṉ,* பெ.(n.) நுண்ணறிவுள்ளோன்; man of acute intelligence, genius (சா.அக.).

[கூர் → கூரியவன் → கூரியவான்.]

கூரிலவணம் *kūr-ilavaṇam,* பெ.(n.) அமரியுப்பு (வின்.); salt taken from urine.

[கூரி + லவணம்.]

கூருமி *kūrumi,* பெ.(n.) உமி மூக்கு (வின்.); sharp tip of the husk.

[கூர் + உமி – கூருமி (உமி மூடிய கூர்முனை).]

கூரெள் *kūreḷ,* பெ.(n.) எள்வகை; a variety of sesame.

[கூர் + எள்.]

கூரெள்ளெண்ணெய் *kūr-eḷḷ-eṇṇai,* பெ.(n.) கூரெள் ஆட்டிய எண்ணெய்; oil extracted from the sesamum seed (சா.அக.).

[கூர் + எள் + எண்ணெய்.]

கூரை *kūrai,* பெ.(n.) 1. இறக்கச்சரிவு; sloping roof, commonly thatched with grass or palm leaf. *"குறுங்கூரைக் குடிநாப்பண்" (பட்டினப்.81).* 2. குடில் (பு.வெ.10,முல்லைப். 9,உரை); small hut, shed, cottage.

ம. கூர; பிரா. உர (வீடு)

[கூர் → கூரை (கூர் முனை வடிவான வீட்டு முகடு, முகடு கொண்ட வீடு).]

கூரைக்கட்டு *kūrai-k-kaṭṭu,* பெ.(n.) கூரை வீடு(வின்.); thatched house.

[கூரை + கட்டு.]

கூரைக்கொட்டில் *kūrai-k-koṭṭil,* பெ.(n.) மாட்டுக்கொட்டில்; thatched cattle shed.

[கூரை + கொட்டில்.]

கூரைச்சால் *kūrai-c-cāl,* பெ.(n.) மணப்பந்தலில் வைக்குந் தண்ணீர்ச்சால் (இ.வ.); water-pot placed on a marriage dais.

[கூரை + சால்.]

கூரைத்தகடு *kūrai-t-tagaḍu,* பெ.(n.) கூரையை மூடப் பயன்படும் இரும்புத்தகடு அல்லது மாழை (உலோக)த் தகடு (கட்.தொ.வரி.); metal sheets used as roofing material.

கூரைதட்டு–தல் *kūrai-taṭṭu-,* 5 செ.கு.வி.(v;i.) ஆண்பிள்ளை பிறந்தமைபற்றி மாமனோ அல்லது மற்ற உற்றாரோ மகிழ்ச்சிக் குறியாகக் கூரை யைத் தட்டுதல் (யாழ்ப்.); to tap the roof for joy, as the uncle or other relations do when a male child is born.

[கூரை + தட்டு-.]

கூரைமானம் *kurai-māṉam,* பெ.(n.) கூரைப் பகுதியை மூடப் பயன்படும் ஓடு, புல், தகடு முதலிய பொருள்கள் (பொ.வழக்.); tiles, grass, thatch etc. used as roofing materials.

மறுவ. கூரைச்சாதனம்

[கூரை + மானம்.]

கூரையில்லாச்சுவர் *kūrai-y-illā-c-cuvar,* பெ.(n.) சவர்க்காரம்; washing soda (சா.அக.).

[கூரை + இல்லா + சுவர். மரஞ்செடி கொடி நிழலின்றிக் கட்டாந்தரையாகக் காணப்படும் (சுவம்) சவுள் நிலம்.]

கூரைவீடு *kūrai-vīḍu,* பெ.(n.) ஓலையாலேனும் புல்லாலேனும் வேய்ந்த வீடு; thatched house.

[கூரை + வீடு.]

கூல்(லு)-தல் *kūl(u),* 5 செ.கு.வி.(v.i.) 1. அழிதல்; to ruin, to destroy. 2. இடிந்து விழுதல்; to fall down.

க., தெ. கூலு

[குல் → கூல்]

கூல் *kūl,* பெ.(n.) 1. கூர்மை; sharpness. 2. நீட்சி; length.

[குல் → கூல்]

கூலக்கடை *kūla-k-kaḍai,* பெ.(n.) பலதவசக் கடை (சிலப்.14,211,உரை.); grain shop.

[கூலம் + கடை.]

இன்று கூலக்கடை வீதியில் பொன் வாங்கலாம் (நெ.வழ.)

கூலகம் *kūlagam,* பெ.(n.) கறையான் புற்று; ant hill (சா.அக.).

[குல் → கூல் → கூலகம்.]

கூலத்தாடிகம் *kūla-t-tāḍigam,* பெ.(n.) நாறு கரந்தை; sweet basil (சா.அக.).

[கூலம் + தாளிகம் – கூலத்தாளிகம் → கூலத்தாடிகம்.]

கூலம்[1] *kūlam,* பெ.(n.) மூங்கில் நெல், மணல் நெல் (ஐவனம்), நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு (சோளம்), துவரை, இறகி, எள்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, கம்பு, காராமணி, குதிரைவால் முதலிய பதினெண்வகைப் பண்டம்; grains specially of 18 kinds, viz., nel, pul, varagu, tiṉai, sāmai, iṟungu, tuvarai, īrāgi, eḷḷu, koḷḷu, payaṟu, uḷundu, avarai, kaḍalai, moccai *"கூலங்குவித்த கூல வீதியும்" (சிலப்.14:211).*

Fin. kylvä; **Karel.** kulva; **Es.** kulvata; **Hung.** koles (millet).

[குல் → கூல் (நீட்சி, கூரான கதிர்) → கூலம்.]

கூலம்[2] *kūlam,* பெ.(n.) சோறு, உணவு ; boiled rice.

[த.கூலம் >Skt. kūra. கூழ் → கூல் → கூலம்.]

கூலம்[3] *kūlam,* பெ.(n.) கடைத்தெரு; street having shops and stalls on either side, bazaar street *"விளக்கொலி பரந்த வெறிகமழ் கூலத்து" (பெருங். உஞ்சைக் 33:82).*

[கூல் → கூலம். கூலம் விற்கும் இடம், கடைத்தெரு.]

கூலம்[4] *kūlam,* பெ.(n.) பண்ணிகாரம் (பிங்.); confectionery.

[கூல் → கூலம்.]

கூலம்[5] *kūlam,* பெ.(n.) பாகல் (திவா.) ; balsam pear.

[கூல் → கூலம்.]

கூலம்[6] *kūlam,* பெ.(n.) 1. நீர்க்கரை (திவா.); bank of a river or tank, seashore. 2. வரம்பு (பிங்.); ridge in a paddy field. 3. முறை; regulation, rule. *"கூல நீங்கிய விராக்கதப் பூசுரர்" (கம்பரா.பிரமாத்.164).*

[குல் → கூல் → கூலம். கூல் = நீட்சி.]

கூலம்[7] *kūlam,* பெ.(n.) 1. மாடு, ஆன் (பசு) (பிங்.); cow. 2. மரை (வின்.); elk. 3. மான்; deer.

[கூழ் → கூழ்ம் → கூலம் (புல் மேய்வது). கூழ் = பயிர்வகை, புல்வகை.]

கூலம்[8] *kūlam,* பெ.(n.) நெல், எள்ளு, துவரை முதலியவற்றிற்கு விதிக்கும் வரி (S.I.I.I. 157); a tax on grains and pulses.

[குல் → கூல் → கூலம்.]

கூலம்[9] *kūlam,* பெ.(n.) 1. விலங்கின் வால்; tail of animals in common. 2. மந்தி; a female monkey. 3. செங்குரங்கு; red faced monkey. 4. முசு; male monkey (சா.அக.).

[கூல் (நீட்சி, வால்) → கூலம்.]

கூலவாணிகன் சாத்தனார் *kūla-vāṇigaṉ cāttaṉār,* பெ.(n.) கூலவாணிகஞ் செய்தவரும் மணிமேகலையை இயற்றியவருமான கழகப்புலவர்; the trade-poet who wrote-Maṇimēgalai. kūlavāṇigam means one who trades inprains.

[கூலம் + வாணிகன் + சாத்தன் + ஆர்.]

கூலவிந்து *kūla-vindu,* பெ(n.) காஞ்சிரை; nux vomica (சா.அக.).

[கூலம் + விந்து.]

கூலி[1] *kūli,* பெ.(n.) 1. வேலைக்குப் பெறும் ஊதியம்; wages, pay. *"முயற்சி மெய்வருத்தக் கூலிதரும்" (குறள்,619).* 2. வாடகை (வின்.); fare, hire, freight.

தெ.,து. கூலி

[கூலம் → கூலி.]

உடலுழைப்புத் தொழிலாளர் தம் உழைப்புக்கு ஈடாகத் தவசமாக (கூலமாக)ப் பெற்று வந்த ஊதியம் நாளடைவில் நாணயமாகப் பெறும் ஊதியத்தையும் குறித்தது.

கூலி[2] *kūli,* பெ.(n.) கூலிக்காரன்; worker on daily wage.

ம., க.தெ.,து.பர்.கோண. கூலி

[கூலம் – கூலி. கூலமாக ஊதியம் பெறுபவன்.]

கூலிக்காரன் *kūli-k-kāraṉ,* பெ.(n.) கூலிக்காக வேலை செய்பவன்; cooly, day-labourer.

மறுவ. கூலியாள் **ம.** கூலிக்காரன்; **க.** கூலிகார; **து.** கூலிதாயெ; **கோத.** கூலிகார்ன்; **பட.** கூலிகார

[கூலி + காரன்.]

கூலிக்குமாரடி-த்தல் *kūlikku -mār-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) மனமின்றித் தொழில் செய்தல் (கொ.வ.); lit., to beat the breasts for hire at a funeral, to work insincerely.

[கூலி + கு + மார் + அடி.]

தொடர்பில்லாத பிணத்தருகில் கூலிப்பணத்திற்காக மாரடித்து ஒப்பாரி வைத்து அழும் மகளிர் செயல் போன்ற போலித் தொழில்.

கூலிச்சேவகன் *kūli-c-cēvagaṉ,* பெ.(n.) 1. கூலிப் படையாளன் (M.E.R.262/195); mercenary soldeir. 2. கூலிக்கு வேலை செய்வோன் (திவ். அமலனாதி.5,வியா.ப.68); hired labourer.

[கூலி + சேவகன்.]

கூலிப்படை *kūli-p-paḍai,* பெ.(n.) 1. கூலிக்கு அமர்த்தும் சேனை (குறள்,762,உரை.); mercenary. 2. கூலிக்காக அமர்த்தப்படும் அடியாள்கள்; men employed to attack the enemy.

[கூலி + படை.]

கூலிப்பாடு *kūli-p-pāḍu,* பெ.(n.) ***கூலிப்பிழைப்பு*** பார்க்க; see *kūli-p-piḻaippu.*

[கூலி + பாடு. பாடு = உழைப்பு.]

கூலிப்பிழைப்பு *kūli-p-piḻaippu,* பெ.(n.) அற்றைக் கூலி பெற்று நடத்தும் வாழ்க்கை (வின்.); life of a hired labourer, making a living by day-labour.

[கூலி + பிழைப்பு.]

கூலியாள் *kūli-y-āḷ,* பெ.(n.) கூலிக்காரன்; hired labourer cooly. *"கூலியா ளாய்வன் கரை யடைப்பா ரில்லை" (திவருவாத.பு.மண்சுமந்த.28).*

மறுவ. கூலியாள்

[கூலி + ஆள்.]

கூவகர் *kūvagar,* பெ.(n.) கூபக நாட்டார்; inhabitants of Kūpaga country. *"கூவகர் சாவகர்"* (கலிங்.புதுப்.316).

மறுவ. கூபகர்

[கூவகம் → கூவகர்.]

கூவநூல் *kūva-nūl,* பெ.(n.) ***கூவனூல்*** (சங்.அக.) பார்க்க; see *kūva-ṉūl.*

[கூவல் + நூல். கூவல் = கிணறு.]

கூவம் *kūvam,* பெ.(n.) கிணறு; well. *"கூவத்தின் சிறுபுனலைக் கடலயிர்த்த தொவ்வாதோ" (கம்பரா. விபீடண.103).*

[கூவல் → கூவம்.]

கூவமா *kūvamā,* பெ.(n.) மரவகை (யாழ்ப்.); a kind of tree.

மறுவ. கூமா

[கூவல் + மா. மா = மரம்.]

கூவரகு *kū-varagu,* பெ.(n.) காட்டுவரகு (சித்.வை.); a kind of millet.

[கூழ் + வரகு – கூழ்வரகு → (கூவரகு).]

கூவல்[1] *kūval,* பெ.(n.) கூவுகை; crying aloud, bawling, crowing. *"தேவி மாரொடுங் கூவல்செய் தொழிலினர்"* (கம்பரா.சடாயுவுயிர்.31).

ம. கூகல்

[கூ → கூவு → கூவல்.]

கூவல்[2] *kūval,* பெ.(n.) 1. கிணறு; well *"கூவலன்ன விடரகம்"* (மலைபடு. 366). 2. குழி (வின்.); hollow, hole, pit.

[குல் + குள் → குவ் → குவ்வல் → கூவல்.]

கூவனூல் *kūva-ṉūl,* பெ.(n.) கிணறு வெட்டுதற் குரிய இடமுதலியவற்றை யுணர்த்தும் நூல்; science of determining sites suitable for sinking wells.

மறுவ. கூவநூல்

[கூவல் + நூல்.]

கூவனூலோர் *kūva-ṉūlōr,* பெ.(n.) கிணறுவெட்டும் கலையில் வல்லவர் (திவா.); persons skilled in science of kūvaṉūl.

[கூவல் + நூலோர்.]

கூவியர் *kūviyar,* பெ.(n.) 1. உணவு சமைப்போர் (திவா.); cooks. 2. அப்பவாணிகர்; pancake sellers *"தீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவன ருறங்க" (மதுரைக். 627).*

[குவ்வு → கூவு → கூவி (குழியப்பம்) → கூவியர்.]

கூவிரம்[1] *kūviram,* பெ.(n.) 1. வில்வம் (பிங்.); bael. 2. மலை மரவகை (குறிஞ்சிப்.66); a mountain tree.

[குவி → குவிரம் → கூவிரம்.]

கூவிரம்[2] *kūviram,* பெ.(n.) 1. தேரில் இருக்கைக்கு எதிராக நடப்பெற்று கையாற் பற்றிக்கொள்ளு தற்குப் பயன்படுவதும், தாமரை மொட்டு வடிவில் அமைந்ததுமான ஓர் உறுப்பு; ornamental stake in the form of a lotus bud, fixed in front of the seat in a chariot and held by the hand for support. *"கூவிரஞ்செறி.... தேரொடும்"* (கம்பரா.இராவ.176). 2. தேர் (பிங்.); chariot, car. 3. தேர்க்கொடி (சூடா.); streamers or banners of car. 4.தேரின் அழகு படுத்தப்பட்ட தலைப்பகுதி; decorated pinnacle of a chariot *"கூவிரத்திகிரி யூர்வோன்"* (ஞானா. 7:17).

[குவி → குவிரம் → கூவிரம்.]

கூவிரி *kūviri,* பெ.(n.) 1. தேர் மொட்டு கொண்டது கூவிரத்தை யுடையது; lit., one having *kūviram.* 2. தேர் (திவா.); chariot, car.

[கூவிரம் → கூவிரி.]

கூவிளக்குடுக்கை *kūviḷa-k-kuḍukkai,* பெ.(n.) பழக் குடுக்கை; empty shell of bael fruit (சா.அக.).

[கூவிளம் + குடுக்கை.]

கூவிளங்கனி[1] *kūviḷaṅkaṉi,* பெ.(n.) நேர் நிரை நிரை குறிக்கும் வாய்பாடு (காரிகை. உறுப்.7,உரை.); mnemonic for the metrical foot of *nēr-nirai-nirai.*

[கூவிளம் + கனி.]

கூவிளங்கனி[2] *kūviḷaṅ-kaṉi,* பெ.(n.) வில்வப்பழம்; beal fruit (riped) (சா.அக.).

[கூவிளம் + கனி.]

கூவிளங்காய் *kūviḷaṅ-kāy,* பெ.(n.) நேர்நிரை நேர் குறிக்கும் வாய்பாடு (காரிகை.உறுப்.7,உரை.); mnemonic for the metrical foot of *nēr-nirai-nēr.*

[கூவிளம் + காய்.]

கூவிளந்தண்ணிழல் *kūviḷan-taṇṇiḻal,* பெ.(n.) நேர் நிரை நேர் நிரை குறிக்கும் வாய்பாடு (காரிகை. உறுப். 8,உரை.); mnemonic for the metrical foot of *nēr-nirai-nēr-nirai.*

[கூவிளம் + தண் + நிழல்.]

கூவிளந்தண்பூ *kūviḷan-taṇ-pū,* பெ.(n.) நேர் நிரை நேர் நேர் குறிக்கும் வாய்பாடு (காரிகை. உறுப்.8, உரை.); mnemonic for the metrical foot of *nēr-nirai-nēr-nēr.*

[கூவிளம் + தண் + பூ.]

கூவிளநறுநிழல் *kūviḷa-naṟu-niḻal,* பெ.(n.) நேர் நிரை நிரை நிரை குறிக்கும் வாய்பாடு (காரிகை, உறுப்.8.உரை); mnemonic for the metrical foot of *nēr-nirai-nirai-nirai.*

[கூவிளம் + நறு + நிழல்.]

கூவிளநறும்பூ *kūviḷa-naṟum-pū,* பெ.(n.) நேர் நிரை நிரை நேர் குறிக்கும் வாய்பாடு (காரிகை. உறுப்.8, உரை); mnemonic for the metrical foot of *nēr-nirai-nirai-nēr.*

[கூவிளம் + நறும் + பூ.]

கூவிளம்[1] *kūviḷam,* பெ.(n.) 1. வில்வம் (குறிஞ்சி. 65); bael. 2. பெரியமாவிலங்கம் (L.); a species of garlic pear.

[கோ + விளம் – கோவிளம் → கூவிளம்.]

கூவிளம்[2] *kūviḷam,* பெ.(n.) நேர்நிரை குறிக்கும் வாய்பாடு (காரிகை, உறுப்.7,உரை); mnemonic for the metrical foot of *nēr-nirai.*

[கூ + விளம்.]

கூவிளம்[3] *kūvillam,* பெ.(n.) கோளகவைப்பு நஞ்சு (சங்.அக.); a mineral poison.

[கும் → கும்வு → கும்வுளம் → கூவுளம் → கூவிளம்.]

கூவிளம்பத்திரி *kūviḷam-pattiri,* பெ.(n.) வில்வ இலை; beal leaf. It is not only capable of cooling the system, but also tends to invigorate it and this is very well explained in the verses of Thirumular.

"பச்சிளங் கூவிளம் பத்திரி யுண்டிர்
நிச்சயம் சொன்னோம் நெருப்புங் குளிர்ந்திடும்
அச்சமுமில்லை அழகாந் திருமேனி
வச்சிரம் போல வந்திடும் விந்துவே" (திருமந்திரம்).

[கூவிளம் + பத்திரி.]

கூவிளமாதிகம் *kūviḷamādigam,* பெ.(n.) விளா; wood-apple tree (சா.அக.).

[கூவிளம் + ஆதிகம்.]

கூவிளி *kūviḷi,* பெ.(n.) 1. கூப்பிடும் ஓசை; long continuous roar or trumpet, as of an elephant. *"நிறையழி யானை நெடுங்கூமே விளியும்" (மணி.7:67).* 2. கூப்பிடுதொலைவு; calling distance. *"அஞ்சு கூவிளிச் சேய்த்தென்ன"* (திருவிளை. யானை.29).

[கூவு + விளி – கூவுவிளி → கூவிளி.]

கூவிளித்தல் *kūviḷittal,* பெ.(n.) உண்ணுதல்; eating (சா.அக.).

[கவ்வளித்தல் → குவ்வளித்தல் → குவளித்தல் → கூவிளித்தல்.]

கூவிளை *kūviḷai,* பெ.(n.) 1. கூவிளம்[1] (திவா.) *kūviḷam.* 2. வில்வமரம்; beal tree (சா.அக.).

[கூவிளம் → கூவிளைவு.]

கூவு[1]–தல் *kūvu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. பறவை கூவுதல்; to crow; as a cock, to scream, as peacocks to cry, as a cuckoo or birds in general. "*கூவின பூங்குயில்*" (திருவாச.20:3). 2. கதறுதல், ஒலி யெழுப்புதல்; to call out, whoop, hallow. 3. யானை முதலியன பிளிறுதல்; to trumpet, as an elephant "*கூங்கை மதமா*" (பரிபா.10:49). 4. ஒலமிடுதல்; to cry out for help. "*வந்த வீரன் கூவிய சசியை நோக்கி*" (கந்தபு.மகாகாளர்.6).

ம.கூகுக; **க.**, பட. கூகு; **தெ.** கூயு; **து.** கூகுனி; குட. கூ; **கொலா.** நா.கூக்;**பர்.** கூய், கூப்; **கோண்.** கூச்சானா; **கூ.** கூப்க; **ம.** கூக்ரெ.

[கூ → கூவு-.]

கூவு[2]–தல் *kūvu-,* 5 செ.குன்றாவி (v.t.) அழைத்தல்; to call, summon. "*மழலை முற்றாத விளஞ் சொல்லா லுன்னைக் கூவுகின்றான்*" (*திவ். பெரியாழ்.1:4,5).*

Aust. cooee.

[கூ → கூவு.]

கூவு[3] *kūvu,* பெ.(n.) வெள்ளைக் கரும்பு; white sugar-cane (சா.அக.).

[குருவு → கூவு.]

கூவுதூரம் *kūvu-tūram,* பெ.(n.) கூப்பிடு தொலைவு (இ.வ.); calling distance.

மறுவ. கூப்பிடுதொலைவு, கூவுதொலைவு.

[கூவு + தூரம்.]

கூவுவான்[1] *kūvu-vāṉ,* பெ.(n.) 1. கூவுதல் செய்வோன்; lit., that which crows. 2. சேவல்; cock.

[கூவு → கூவுவோன் → கூவுவான்.]

கூவை[1] *kūvai,* பெ.(n.) செடிவகை; East Indian arrow root "*புலவுவிற் பொலிகூவை*" (*மதுரைக்:142).*

[கூவல் (பள்ளம்) → கூவை.]

கூவை[2] *kūvai,* பெ.(n.) கூட்டம்; crowd, horde, gathering. "*விற்கூளியர் கூவை காணின்*" (*மலைபடு. 422).*

[குழு → குழுவு → கூவு → கூவை.]

கூவைக்கட்டு *kūvai-k-kaṭṭu,* பெ.(n.) பொன்னுக்கு வீங்கி, புட்டாளம்மை எனும் அம்மைநோய்; mumps (சா.அக.).

மறுவ. கூகைக்கட்டு

[கூவை + கட்டு.]

கூவைக்கார் *kūvai-k-kār,* பெ.(n.) கார் நெல்வகை (A); a kind of *kārpaddy.*

[கூவை + கார்.]

கூவைச்சம்பா *kūvai-c-cambā,* பெ.(n.) சம்பா நெல்வகை (A); a kind ofcambāpaddy.

[கூவை + சம்பா.]

கூவைநீறு[1] *kūvainīṟu,* பெ.(n.) கிழங்கின் மாவு; (சா.அக.); flour of kūvai root.

[கூவை + (நூறு) நீறு.]

கூவைநீறு[2] *kūvai-nīṟu,* பெ.(n.) **கூகை நீறு** பார்க்க; see *kūgai-nīṟu.* "*கூவை நீறுங் கொழுங்கொடிக் கவலையும்*" (*சிலப்.25:42).*

[குய் → குய்வு → குய்வுளம் → கூவுளம்.]

கூவைவல்லி *kūvai-valli,* பெ.(n.) ஒரு நோய்; an unknown disease (சா.அக.).

[கூவை + வல்லி.]

கூவைவாய்மணி *kūvai-vāi-maṇi,* பெ.(n.) பலவித மாக உண்டாகும் முத்துகள்; many kinds of pearls.

[குவவு → கூவு → கூவை + வாய் + மணி.]

கூழ்[1] *kūḻ,* பெ.(n.) மாவு முதலியவற்றால் குழையச் சமைத்த உணவுவகை (திவா.); thick gruel, porridge, semi liquid food. 2. பலவகை உணவு; food. *“கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்” (புறநா.70:7).* 3. பயிர்(திவா.); growing crop. 4. பொருள்; wealth. *“கூழுங் குடியு மொருங் கிழக்கும்” (குறள்,554).* 5. பொன் (திவா.); gold.

[கூல் (கூலம், தவசம்) → கூள் → கூழ்.]

கூழ்[2] *kūḻ,* பெ.(n.) கலக்கம்; doubt, confusion. *“தத்துவநூல் கூழற்றது” (திவ்.இராமநூச.65).*

[குல் → குள் → கூழ் → கூழ்த்தல்]

கூழ்[2]**-த்தல்** *kūḻ-,* 4 செ.குன்றாவி (v.t.) ஐயுறுதல்; to doubt, suspect *“அவனிவனென்று கூழன் மின்” (திவ்.திருவாய்.3:6,9).*

[குழத்தல் → கூழ்த்தல்]

கூழ்க்கஞ்சி *kūḻ-k-kañji,* பெ.(n.) மாவுக் கஞ்சி; porridge prepared from flour.

[கூழ் + கஞ்சி.]

கூழ்க்கெளுத்தி *kūḻ-k-keḷutti,* பெ.(n.) குள்ளக் கெளிற்று மீன்; cat fish of stunted growth (சா.அக.).

[குழை + கெளுத்தி → கூழைக்கெளுத்தி → கூழ்க் கெளுத்தி.]

கூழ்ப்பசை *kūḻ-p-pašai,* பெ.(n.) 1. கஞ்சிப்பசை; rice gruel for starching cloths. 2. மாப்பசை; paste.

[கூழ் + பசை.]

கூழ்ப்பண்டம் *kūḻ-p-paṇḍam,* பெ.(n.) சாம்பற் பூசணிக்காய், கலியாணப்பூசணி; a variety of white pumpkin (சா.அக.)

[கூழ் + பண்டம்.]

கூழ்ப்பதம் *kūḻ-p-padam,* பெ.(n.) பாம்பு (அக.நி.); snake.

[குள் → குழ் → கூழ் + பதம். கூழ் = தெளிவில்லாத, கண்ணுக்குத் தெரியாத. பதம் = பாதம், கால்.]

கூழ்ப்பு *kūḻppu,* பெ.(n.) ஐயம்; doubt, suspicion. *“எல்லை யிலாதன கூழ்ப்புச் செய்யுமத்திற நிற்க” (திவ்.திருவாய. 8,2:6).*

[குள் → குழ் → கூழ் → கூழ்ப்பு.]

கூழ்படு-தல் *kūḻ-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) கலக்க முண்டாதல், தெளிவின்றியிருத்தல்; to be confused *“செல்படை யின்றிக் கூழ்பட வறுப்ப” (பெருங்.மகத.27:31).*

[கூழ் + படு.]

கூழ்மணத்தான் *kūḻ-maṇattaṉ,* பெ.(n.) வெண் கழுகு; white coloured vulture.

மறுவ. கூழமணத்தான், கூழிச்சந்தான்

[கூழை → கூழ் + மணத்தான்.]

கூழ்முட்டை *kūḻ-muṭṭai,* பெ.(n.) கெட்டுப்போன முட்டை; addled egg.

[கூழ் + முட்டை.]

கூழ்முன்னை *kūḻ-muṉṉai,* பெ.(n.) தென்னாட்டி லுள்ள ஒரு சிறு மரவகை (மலை.); ovate leave firebrand teak of the deccan.

மறுவ. கூழாமணி

[கூழ் + முன்னை.]

கூழ்வட்டு *kūḻ-vaṭṭu,* பெ.(n.) ***கூழ்வடகம்*** பார்க்க; see *kūḻ-vaḍagam.*

[கூழ் + வட்டு. வட்டு = வட்டமாக வார்த்தது.]

கூழ்வடகம் *kūḻ-vaḍagam,* பெ.(n.) அரிசிமாக் கூழால் செய்யப்படும் வடக வற்றல்; water cakes of flour, seasoned and dried in the sun.

மறுவ. கூழ்வடாம்

[கூழ் + வடகம். (வட்டு → வட்டகம் → வடகம்.]

கூழ்வடாம் *kūḻ-vaḍām,* பெ.(n.) ***கூழ்வடகம்*** பார்க்க; see *kūḻvaḍagam.*

[கூழ்வட்டு + கூழ்வட்டகம் → கூழ்வடகம் → கூழ்வடாம்.]

கூழ்வரகு *kūḻ-varagu,* பெ.(n.) ***கேழ்வரகு*** (மலை.) பார்க்க; see *kēḻ-varagu.*

[கேழ்வரகு → கூழ்வரகு.]

கூழக்கெளுத்தி *kūḻa-k-keḷutti,* பெ.(n.) கெளுத்தி மீன்வகை; a river fish, silvery, altaining 4ft. in length.

[கூழை + கெளுத்தி – கூழைக்கெளுத்தி → கூழக் கெளுத்தி.]

கூழகம் *kūḻakam,* பெ.(n.) எள்ளு; gingelly seed (சா.அக.).

மறுவ. கூழம்

[கூழ் → கூழகம்.]

கூழங்கை *kūḻaṅ-kgai,* பெ.(n.) முடமான கை; maimed hand. *"கூழங்கைத் தம்பிரான்" (இ.வ.).*

[கூழை + கை – கூழைக்கை → கூழங்கை.]

கூழம் *kūḻam,* பெ.(n.) எள் ; sesame.

[கூழ் → கூழம் (உணவாக அமைவது).]

தரைவழியாகவும் கடல் வழியாகவும் செல்வோர் எள்ளுருண்டைகளை உணவாக எடுத்துச் செல்லுவதால் இது உணவு எனப்பட்டது.

கூழமணத்தான் *kūḻa-maṇattāṉ,* பெ.(n.) வெள்ளைக் கூளி; white coloured vulture (சா.அக.).

[கூழை → கூழ + மணத்தான்.]

கூழன்[1] *kūḻaṉ,* பெ.(n.) **1. *கூழன்பலா*** பார்க்க; see *kūḻaṉ-palā.* **2. *கூழான்*** (சங்.அக.) பார்க்க; see *kūḻāṉ.*

[கூழை → கூழன்.]

கூழன்[2] *kūḻaṉ,* பெ.(n.) தெளிந்த அறிவில்லாதவன் (பெருங்.பக்.732, நீலகேசியுரை); one devoid of clear understanding.

[கூழை + அன் – கூழையன் → கூழன்.]

கூழன்பலா *kūḻaṉ-palā,* பெ.(n.) பலாவகை (யாழ்ப்.); a kind of jack tree.

[கூழை → கூழன் + பலா. கூழை = குட்டையானது.]

கூழா[1]**-தல்** *kūḻa-,* 7 செ.கு.வி.(v.i.) சோறு குழைதல் (கொ.வ.); to be over-boiled, as rice. 2. முட்டை பதனழிதல்; to become addled, as eggs.

[கூழ் + ஆ-.]

கூழா[2] *kūḻā,* பெ.(n.) நறுவிலி (யாழ்ப்.) ; sebesten.

[கூழை → கூழா.]

கூழாங்கல்[1] *kūḻāṅ-kal,* பெ.(n.) வழவழப்பான சிறுகல் வகை; shingles, loose pebbles, especially those on the sea-shore.

[கூழை + கல் – கூழைக்கல் → கூழாங்கல்.]

கூழாங்கல் ஒட்டு-தல் *kūḻāṅ-kal-oṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சுவர்களில் அழகு வேலைக்காக சில உருண்டையான பழுப்பு மற்றும் பல வண்ணக் கற்களை ஒட்டுதல். (பொ.வழக்.) (கட்.தொ.வரி.); fixing pebbles etc. to cover walks, as a mode of decoration.

[கூழாங்கல் + ஒட்டு.]

கூழாம்பாணி *kūḻām-pāṇi,* பெ.(n.) சர்க்கரை கரைந்து கூழ் போலுள்ள நீர் (யாழ்.); treacle, molasses.

[கூழ் + ஆம் + பாணி.]

கூழாமட்டி *kūḻā-maṭṭi,* பெ.(n.) மந்த அறிவும் அச்சமும் உள்ளவன் (வின்.); dull and cowardly man.

[கூழை → கூழா + மட்டி.]

கூழாமணம் *kūḻā-maṇam,* பெ.(n.) சமையற்காரர் பயன்படுத்தும் பிடிதுணி (இ.வ.); bit of cloth or piece of gunny used by cooks.

[கூழ் + ஆமணம். ஆவணம் (சுற்றுத்துணி) → ஆமணம்.]

கூழாமணி *kūḻā-maṇi,* பெ.(n.) **கூழ்முன்னை** பார்க்க; see *kūḻ-muṉṉai.*

[கூழ்முன்னை → கூழாமணி (கொ.வ.).]

கூழாள் *kūḻ-āḷ,* பெ.(n.) உணவின் பொருட்டு எவர்க்கேனும் தன்னை எழுதிக் கொடுப்பவன்; one who sells himself for livelihood. *"கூழாட்பட்டு நின்றவர்களை" (திவ்.திருப்பல்.3).*

[கூழ் + ஆள்.]

கூழான்[1] *kūḻāṉ,* பெ.(n.) கண்டகிக்கல், கூழாங்கல் (யாழ்.அக.); salagram, a kind of stone found in the Gaṇḍagi.

[கூழை → கூழான்.]

கூழான்[2] *kūḻāṉ,* பெ.(n.) இராவணன் மீசைப்புல் (சா.அக.); a kind of grass.

[கூழை (கட்டை, தடிப்பு) → கூழான்.]

கூழிச்சந்தான் *kūḻicandāṉ,* பெ.(n.) **கூழமணத்தான்** பார்க்க; see *kūḻa-maṇattaṉ* (சா.அக.).

[கூளி → கூழி + (சந்தன்) சந்தான்.]

கூழை[1] *kūḻai,* பெ.(n.) 1. பெண்டிர் தலைமயிர்; woman's hair. *"கூழை விரித்தல்"* (தொல்.பொ. 262). 2. இறகு (திவா.); feathers, plumage. 3. மயிற் றோகை (பிங்.); peacock's tail. 4. வால்; tail. *"புன் கூழையங் குறுநரி"*

[குழை (கொத்து) → கூழை.]

கூழை[2] *kūḻai,* பெ.(n.) நடு(திவா.); middle, centre.

[உள் → குள் → கூள் → கூழ் → கூழை.]

கூழை[3] *kūḻai,* பெ.(n.) 1. குட்டையானது; that which is short. *"நாய் கூழைவாலாற் குழைக்கின்றது போல" (திவ்.திருவாய்.9:4,3).* 2. அறிவுக்குறைவு; dullness of intellect, stupidity. *"கூழைமாந்தர்தஞ் செல்கதி" (தேவா.462:9).*

[குள் → குழ் → கூழ் → கூழை.]

கூழை[4] *kūḻai,* பெ.(n.) 1. கூழைத்தொடை ; a mode of versification. *"ஈறிலி கூழை" (காரிகை, உறுப்.19).* 2. கூழைப்பாம்பு (சங்.அக.); dwarf snake.

[குள் → கூழ் → கூழை.]

கூழை[5] *kūḻai,* பெ.(n.) சேறு; mud, mire. *"கூழை பாய்வயக்" (தேவா.473:8).* 2. பொன் (அக.நி.); gold.

[குழை → கூழை.]

கூழை[6] *kūḻai,* பெ.(n.) படையின் பின்னணி; rear of an army. *"கூழைதார் கொண்டியாம் பொருதும்" (புறநா.88,J).* 2. கடைசி வரிசை; hindmost row, as of a herd of cows. *"அவன்றான்..... பிற்கூழையிலே நிற்குமாய்த்து" (ஈடு. 9:9.ப்ர).*

[குள் → கூழ் → கூழை.]

கூழை[7] *kūḻai,* பெ.(n.) முரசு (அக.நி.); drum.

[குழை → கூழை. குழை = இழைதல், அதிர்தல்.]

கூழைக்கடா *kūḻai-k-kaḍā,* பெ.(n.) நீர்வாழ் பறவை; pelican. *"கொக்கு கோழி கூழைக் கடாமுகம்" (பரத.பாவ.36).*

[கூழை + கடா.]

கூழைக்கிடா *kūḻai-k-kiḍā,* பெ.(n.) 1. நீர்வாழ் பறவை வகை; pelican, as tailless. 2. வாலில்லாத எருமைக் கடா; tailless he-buffalo.

[கூழை + (கடா) கிடா.]

கூழைக்கும்பீடு *kūḻai-k-kumbīḍu,* பொய் வணக்கம்; hypocritical, insincere obeisance.

[கூழை + (கும்பிடு) கும்பீடு.]

கூழைக்கும்பிடு போட்டு ஏமாற்றாதே

கூழைக்குரங்கு *kūḻai-k-kuraṅgu,* பெ.(n.) வாலில்லாக் குரங்கு; tailess monkey (சா.அக.).

[கூழை + குரங்கு.]

கூழைக்குறும்பு *kūḻai-k-kuṟumbu,* பெ.(n.) பிறர் அறியாமற் செய்யுங் குறும்பு; secret mischief.

[கூழை + குறும்பு.]

கூழைக்கை *kūḻai-k-kai,* பெ.(n.) குறைக்கப்பட்ட கை; maimed hand.

[கூழை + கை.]

கூழைக்கையன் *kūḻaikaiyaṉ,* பெ.(n.) குட்டைக்கை உள்ளவன்; a person with a maimed hand (சா.அக.).

[கூழை + கையன்.]

கூழைக்கொம்பன் *kūḻai-k-kombaṉ,* பெ.(n.) மழுங்கின கொம்புள்ள மாடு; ox with blunt horns.

[கூழை + கொம்பன்.]

கூழைத்தண்டுக்கீரை *kūḻai-t-taṇḍu-k-kīrai,* பெ.(n.) கீரைவகை (விவசா.4); a kind of greens.

[கூழை + தண்டு + கீரை.]

கூழைத்தனம் *kūḻai-t-taṉam,* பெ.(n.) பொய்மை வேடம் பூண்டு குழைந்து காட்டுகை; false humility, dissimulation. *"நீங்கள் கோயிற் கூழைத்தனம் அடிக்கிறபடி இதுவோ"* (திருவிருத். 99,வியா.468).

[கூழை + தனம்.]

கூழைத்தொடை *kūḻai-t-toḍai,* பெ.(n.) அளவடியுள் இறுதிச் சீர்க்கணன்றி ஒழிந்த மூன்று சீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது (இலக்.வி.723, உரை); versification which requires *mōṉai* etc., to occur in the first three feet of a four-footed line of a verse.

[கூழை + தொடை.]

கூழைநரி *kūḻai-nari,* பெ.(n.) வால் குட்டையான நரி; short tailed fox.

[கூழை + நரி.]

கூழைப்பாம்பு *kūḻai-p-pāmbu,* பெ.(n.) தலைக்கும் உடலுக்கும் இடையில் கழுத்தின்றி ஒன்றுபோல் தடித்துள்ள குள்ளமான பாம்புவகை (M.M.224); dwarf snake, whose head is not marked off from the body by constriction of neck.

[கூழை + பாம்பு.]

கூழைப்பார்வை *kūḻai-p-pārvai,* பெ.(n.) ஏமாற்றுப் பார்வை; sly look. *"இன்றுணை நாரைக் கிரை தேடிக் கூழைப் பார்வைக் கார்வயல் மேயும்" (திவ். பெரியதி.9:6,3).*

[கூழை + பார்வை.]

கூழைமுட்டை *kūḻai-muṭṭai,* பெ.(n.) அழுகின முட்டை (R.); rotten egg.

மறுவ. கூழ்முட்டை, கூமுட்டை

[குழை → கூழ் → கூழை + முட்டை.]

கூழைமை *kūḻaimai,* பெ.(n.) 1. கடமை; duties fusiners. *"கூத்தனுக் காட்பட் டிருப்ப தன்றோ நந்தம் கூழைமையே"* (தேவா.11:5). 2. குழைந்து நடக்கை; fondling, caressing. *"கொவ்வைக் கனிவாய் கொடுத்துக் கூழைமை செய்யாமே" (திவ்.பெரியாழ். 3:2,5).*

[குழை → கூழை → கூழைமை.]

கூழையன் *kūlaiyaṉ*, பெ.(n.) 1. குள்ளன்; short, stunted person. 2. முழு மடையன்; dolt, idiot.

[கூழை + அன்.]

கூழைவாலன் *kūlai-vālaṉ*, பெ.(n.) குட்டையான பாம்புவகை (M.M.224); short-tailed snake which lives underground belonging to the family of uropeltidce.

[கூழை + வாலன்.]

கூள்(ளு)-தல் *kūl-*, 16 செ.கு.வி.(v.i.) திரளுதல்; to crowd together, assemble, muster. *"கூண்டன கரிகள்" (இரகு.மீட்சி.42).*

[குள் → கூள்.]

கூளப்படை *kūḷa-p-paḍai*, பெ.(n.) பலவகையினர் கலந்த கூட்டுப்படை (ஈடு.6:6,1,அரும்); army constituted of various classes of persons.

[குள் → கூள் → கூளம் + படை.]

கூளம் *kūḷam*, பெ.(n.) 1. சண்டு; broken pieces of straw, of hemp chaff. 2. திப்பி (யாழ்.); sediment, lees, dregs, chips.

Chin. kū.

[குள → கூள் → கூளம் (கூடுவது அல்லது திரள்வது).]

கூளன் *kūḷaṉ*, பெ.(n.) பயனற்றவன்; worthless, useless person *"ஊனடி பேணாக் கூளன்" (திருப்பு. 109).*

[உள் → குள் → கூள் → கூளன்.]

கூளி[1] *kūḷi*, பெ.(n.) 1. கூட்டம் (பிங்.); company, multitude. 2. குடும்பம் (பிங்.); family. 3. படைத் தலைவன் (சூடா.); commander of an army.

[கூள் → கூளி.]

கூளி[2] *kūḷi*, பெ.(n.) 1. பேய்; devil, demon. *"கணங் கொள் கூளியொடு"* (பட்டினப் 259); dwafish malformed race of goblins constifuting the army of šiva. 2. பெருங்கழுகு (வின்.); large species of eagle.

[குல் (கொல்) → கூல் → கூளி (கொல்லுவது).]

கூளி[3] *kūḷi*, பெ.(n.) 1. குள்ளம் (அக.நி.); dwarfishness, shortness. 2. கற்பில்லாதவள் (சூடா.); unchaste woman.

[குள் → கூள் → கூளி (குட்டை, சிறுமை, இழிவு).]

கூளி[4] *kūḷi*, பெ.(n.) 1. எருது (பிங்.); ox. 2. பொலி யெருது (பிங்.); stud bull.

[கூள் (கூடுதல்) → கூளி.]

கூளிப்பனை *kūḷi-p-paṉai*, பெ.(n.) தாளிப்பனை (சங்.அக.) talipot palm.

[கூளி + பனை.]

கூளியர் *kūḷiyar*, பெ.(n.) 1. படைவீரர் (பிங்.); soldiers, warriors. 2. வேட்டுவர்; hunters, those who live by chase. *"காய்சின முன்பிற் கடுங்கட் கூளியர்" (மதுரைக். 691).* 3. வழிப்பறி செய்யும் கள்வர்; highway robbers, plunderers. *"குரங்கன்ன புன்குறுங் கூளியர்" (புறநா. 136:13).* 4. குறவர் (பிங்.); mountaineers. 5. ஏவல் செய்வோர்; attendants. *"வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்" (திருமுருகு.282).* 5. நண்பர் (சூடா.); friends.

[குள் → கூள் (கூடுதல், கூட்டம்) → கூளி → கூளியர்.]

கூற்கேவு *kūṟkēvu*, பெ.(n.) கடுகு; mustard (சா.அக.).

[கூழ் → கூல் + கு + அவி. (அவி = தாளிப்பதற்கு உதவும் கடுகு). கூற்கவி → கூற்கேவு (கொ.வ.).]

கூற்றம்[1] *kūṟṟam*, பெ.(n.) 1. பகுதி; species, class. *"கூற்றங்கள் பலவுந் தொக்க கூற்றத்தில்" (சீவக. 1143).* 2. உயிரை உடலினின்று பிரிப்பவன்; lit., one who separates soul from body. 3. எமன்; Yama. *"மாற்றருங் கூற்றம்" (தொல். பொருள்.79).* 3. அழிவுண்டாக்குவது; that which ruins, destroys. *"அல்லவை செய்வார்க் கறங்கூற்றம்"* (நான்மணி. 84). 4. பழங்காலத்தில் நாட்டின் ஒரு பகுதி; division

of a country, in ancient times. *"மிழலைக் கூற்றத்துடனே ... முத்தூற்றுக் கூற்றத்தைக் கொண்ட"* (புநறா. 24,உரை).

[கூறு → கூற்று → கூற்றம். கூறு = பங்கு.]

கூற்றம்[2] *kūṟṟam,* பெ.(n.) சொல்; word. *"அறைகின்ற கூற்றமு மொன்றே" (திருவிளை. பழியஞ்.27).*

[கூறு = பேசு. கூறு → கூற்றம்.]

கூற்றரிசி *kūṟṟariśi,* பெ.(n.) குத்தலரிசி; pounded rice. *"எற்சோறு கூ ற்றரிசி"* (Insc.).

[குற்று + அரிசி – குற்றரிசி → கூற்றரிசி.]

கூற்றன் *kūṟṟaṉ,* பெ.(n.) எமன்; the god of death. *"வெட்டுங் கடாமிசைத் தோன்றும் வெங்கூற்றன்"* (கந்தரலங் .65).

[கூறு → கூற்று → கூற்றன். உடலையும் உயிரையும் கூறுபடுத்துபவன் கூற்றன்.]

கூற்றன் கொலையோன் *kūṟṟaṉ-koiaiyōṉ,* பெ.(n.) துரிசு (சங்.அக.); blue vitriol.

[கூற்றன் + (கொலையான்) கொலையோன்.]

கூற்றன்வாய் *kūṟṟaṉ-vāy,* பெ.(n.) தலைமதகு; main sluice. *"கூற்றன்வாய்மீதே உவன்றி செய்து நீர்கொண்டு போந்து"* (S.I.I.II,521).

[கூற்றன் + வாய்.]

கூற்றிலக்கை *kūṟṟilakkai,* பெ.(n.) ஊர்ப் பொது விடத்தில் செயல் நிகழ்த்துவதற்குரியதாக இடங் கொள்ளுகைக்குச் செலுத்தும் காணிக்கை வரி; a tax paid for conducting function at the common space of a village.

[கூற்று + இலக்கை.]

கூற்று[1] *kūṟṟu,* பெ.(n.) 1. கூறுகை; utterance, declaration, proclamation. 2. மொழி, சொல்; word, speech. *"கூற்றுக் கிளியே"* (ஞானா.பாயி.1,8). 3. கூறத்தக்கது; that which is fit to be spoken. *"திருநாமங் கூறுவதே யாவர்க்குங் கூற்று"* (திவ்.இயற்.நான்.49).

[கூறு → கூற்று.]

கூற்று[2] *kūṟṟu,* பெ.(n.) 1. எமன்; Yama, the god of death. *"கூற்றுடன்று மேல்வரினும்"* (குறள், 765). 2. காலன் (பிங்.); Kāla, the chief attendant of Yama.

மறுவ. கூற்றுவன், கூற்றம்

[கூறு → கூற்று.]

கூற்றுதைத்தோன் *kūṟṟudaittōṉ,* பெ.(n.) சிவன் (எமனைக் காலால் உதைத்தவன்); lit., one who trampled Yama under foot, Siva, *"கூற்றுதைத் தார் நெல்வேலி குறுகினாரே" (பெரியபு. திருஞான.886).*

[கூற்று + உதைத்தோன்.]

கூற்றுநெல்லு *kūṟṟu-nellu,* பெ.(n.) தவசக் கடமைகளுளொன்று (S.I.V.196); a tax in grain.

[கூறு → கூற்று + நெல்லு.]

கூற்றுவநாயனார் *kūṟṟuva-nāyaṉār,* பெ.(n.) அறுபத்து மூவர் நாயன்மாருள் ஒருவர் (பெரியபு.); a cononized Saiva Saint, one of 63.

[கூற்றுவன் + நாயனார்.]

கூற்றுவன் *kūṟṟuvaṉ,* பெ.(n.) எமன்; Yama, the god of death. *"இவன் வெங்கூற்றுவன்" (நைடத. நளன்றூது.16).*

மறுவ. கூற்று, கூற்றம்.

[கூறு → கூற்று → கூற்றுவன்.]

கூற்றுவன்தங்கைச்சி *kūṟṟuvaṉ- taṅgaicci,* பெ.(n.) சிறுகீரை (சங்.அக.) amaranth.

[கூற்றுவன் + (தங்கை) தங்கைச்சி.]

கூறடை-த்தல் *kūṟaḍai-,* 4 செ.குன்றாவி.(v.i.) பகுதியாகப் பிரித்தல்; to divide into lots. *"கூறடைத்த பரிசே"* (S.I.I.I,65).

[கூறு + அடை-.]

கூறாப்பு *kūṟāppu,* பெ.(n.) கவிந்த மேகம் (திருநெல்.); gathering clouds, cloudy sky.

[குதுப்பு → குறுப்பு → கூறாப்பு (கொ.வ.).]

கூறி *kūṟi,* பெ.(n.) கறுப்பு மட்டிவாய் மீன்; black rock -cod, silvery-grey attaining 30 in length.

[குதுப்பு = திரட்சி, கூடம், குதுப்பு → குறுப்பு → கூறாப்பு (கொ.வ.).]

கூறிட்டுமொழிதல் *kūṟiṭṭu-moḻidal,* பெ.(n.) வினாக்களுக்கு ஏற்பப் பகுத்துக் கூறும் விடை; answering questions seriatim. *"கூறிட்டு மொழிதலென விளம்புவர்" (மணிமே.30:243).*

[கூறு + இட்டு + மொழிதல்.]

கூறிடு-தல் *kūṟiḍu-,* 20 செ.குன்றாவி (v.t.) 1. துண்டாக்குதல்; to cut into pieces or slices, bisect, divide. 2. பங்கிடுதல்; to distribute in portions. *"மலைந்தார்க்கு மொற்றாய்ந் துரைத்தார்க்கும்.... புலவர்க்கும்... கூறிட்டார் கொண்ட நிரை" (பு.வெ.1, 14).*

[கூறு + இடு.]

கூறியதுகூறல் *kūṟiyadu-kūṟal,* பெ.(n.) முன் மொழிந்ததனையே பயனின்றிப் பின்னும் மொழிவதாகிய நூற்குற்றம்; tautology, a defect in literary composition, one of ten *nūr-kuṟṟam. "கூறியது கூறன் மாறுகொளக் கூறல்" (தொ.பொருள்.664).*

[கூறியது + கூறல்.]

கூறியான் *kūṟiyāṉ,* பெ.(n.) பல்லக்கி லேறிச் செல்லும் செல்வனது சிறப்புப் பெயர்களை யெடுத்துக் கூறுவோனாகிய சிவியார் பிரிவினரின் தலைவன் (யாழ்ப்.); headman of the Civiyār or palanquin bearers proclaiming the titles of the person seated in it.

[கூறு → கூறியான் (கூறுபவன்).]

கூறு[1]-தல் *kūṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. சொல்லுதல்; to speak, say, declare, assert. *"கூறிய முறையின்" (தொல்.சொல்.70).* 2. விலைகூறுதல்; to cry out the price, as an auctioneer. 3. உரத்த குரலில் அறிவித்தல் (வின்.); to cry aloud. promulgate, proclaim.

Fin. kerota; **Es.** kordus; **Hung.** kerd, keres; **Mong.** gere; **Jap.** kuringoto (repeat).

[குல் → கூல் → கூறு. குல் = பொருத்து (பொருத்தமாய் சொல்).]

கூறு[2]-தல் *kūṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) கூறு செய்தல்; to divide. *"இது பண்டாரங் கூறுமாறு கூறிற்று" (குறள்.386,மணக்.).*

[குல் → கூல் → கூறு. குல் = குத்து, வெட்டு, பங்கிடு]

கூறு[3] *kūṟu,* பெ.(n.) 1. கூறுபாடு; section, division, classification. *"கூறிட்டு மொழிதல்" (மணிமே.30, 236).* 2. பங்கு; part, portion, lot, share. *"காறகூறு காய்நீரால்"* (பதார்த்த.78). 3. பிளவுபட்ட துண்டு; broken pieces of anything. *"நெஞ்சம் கூறாகி யோடாத இத்துணையே"* 4. பாதி (பிங்.); half. 5. தன்மை; properties, as of heat, effects, characteristic symptoms, as of disease நோயின் கூறு அறிந்து மருந்து கொடு (உ.வ.).

[குல் → கூல் → கூறு. குல் = குத்து, வெட்டு, பங்கிடு, பிரி.]

கூறு[4] *kūṟu,* பெ.(n.) எள் (மலை.) ; sesame.

[குல் → கூல் → கூறு.]

கூறுகம் *kūṟugam,* பெ.(n.) எள்; sesame.

[கூறு[4] → கூறுகம்.]

கூறுகாசு *kūṟu-kāśu,* பெ.(n.) பங்குத்தொகை (இ.வ.); share-money.

[கூறு + காசு.]

கூறுகிள்ளல் *kūṟu-kiḷḷal,* பெ.(n.) குழி தோண்டிக் கால்நடும்போது கடப்பாரையின் மறுமுனையால்

கம்பைச் சுற்றியுள்ள மண்ணைக் கிட்டித்தல் (நெல்லை.); ramming the earth around a pole erected in the earth.

மறுவ. கூறுகுத்துதல்

[கூறு + கிள்ளல். கிள்ளல் = கிட்டித்தல், கெட்டிப் படுத்துதல்.]

கூறுகுத்து-தல் *kūṟu-kuttu-,* 5 செ.கு.வி. (v.i.) நட்ட காலைச் சுற்றியுள்ள மண்ணைக் குத்தி வலுப்படுத்துதல்; to ram the earth around a pole, erected in the earth.

[கூறு + குத்து-.]

கூறுகெட்டுப்போ-தல் *kūṟu-keṭṭu-p-pō-,* 8செ.கு.வி. (v.i.) முதுமை காரணமாக மனத் தடுமாற்றம் ஏற்படல்; mental disorder coming on in aged person.

[கூறு + கெட்டு + போ-.]

கூறுகெடல் *kūṟu-keḍal,* பெ.(n.) கூறுகெட்டுப் போதல்; mental, disorder due to old age (சா.அக.).

[குல் → கூல் → கூறு + கெடல்.]

கூறுகொள்(ளு)¹-தல் *kūṟu-koḷ(ḷ)-,* 10 செ.குன்றாவி. (v.t.) வாயில் திணித்துக் கொள்ளுதல்; to stuff, cram. *"குழந்தை மண்ணைக் கூறு கொள்ளு கிறது" (வின்.).*

[கூறு + கொள்.]

கூறுகொள்(ளு)²-தல் *kūṟu-koḷ-,* 10 செ.குன்றாவி (v.t.) தனதுடைமையாக்கிக் கொள்ளுதல்; to appropriate. *"கூனி மருந்திட்டுக் கூறு கொண்டாள்" (விறலிவிடு.883).*

[கூறு + கொள்-.]

கூறுசட்டம் *kūṟu-caṭṭam,* பெ.(n.) நல்ல மாதுளை; sweet pomagranate (சா.அக.).

[கூறு + சட்டம்.]

கூறுசீட்டு *kūṟu-c-cīṭṭu,* பெ.(n.) பிரிவினை ஆவணம் (இ.வ.); deed of partition.

மறுவ. பாகப்பிரிவினை ஆவணம்

[கூறு + சீட்டு. கூறு = பங்கு, பாகம்.]

கூறுசெய்¹-தல் *kūṟu-cey,* 1 செ.குன்றாவி. (v.t.) 1. துண்டாக்குதல்; cut in pieces, divide. 2. பங்கிடுதல்; to distribute in portions or small quantities.

[கூறு + செய்-.]

கூறுசெய்²-தல் *kūṟu-cey-,* 1செ.கு.வி.(v.i.) மணியம் பண்ணுதல்; to exercise authority as in the assessment of taxes, etc., *"கூறு செய்த ஊரிலே குறும்பு செய்து" (அஷ்டாதச.71).*

[கூறு + செய்-.]

கூறுசெய்வான் *kūṟu-ceyvāṉ,* பெ.(n.) மணியகாரன்; lit., one who apportions, village revenue officer. *"ராஜாக்கள் ஊர்தோறுங் கூறு செய்வார்களை வைக்குமா போலே" (ஈடு.5:2,8).*

[கூறு + செய்வான். தனக்குரிய ஊர்களில் நிலவரி தண்டுபவன்.]

கூறுபடியான ஊர்கள் *kūṟu-paḍi-y-āṉa-ūrgaḷ,* பெ.(n.) பாடி காவலுக்குரியதான பங்குப்படி பிரிக்கப்பட்ட ஊர்கள்; apportionment of villages for kāval. *"குலோத்துங்கச் சோழகச் சிராயனேன் - என் கூறுபடியான ஊர்களில் இத்தேவர் தேவதானம்" (தெ.கல்.தொ.8, கல் 319) கல்.க. சொ.அ.மு.).*

[கூறு + படி + ஆன + ஊர்கள்.]

கூறுபடு-தல் *kūṟu-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) பிரிவுபடுதல்; to be divided.

[கூறு + படு-.]

கூறுபடுத்து-தல் *kūṟu-paḍuttu-,* 4 செ.குன்றாவி. (v.t.) பிரிவு செய்தல்; to divide, analyse, classify.

[கூறு + படுத்து.]

கூறுபாட்டு வேதியல் *kūrupāṭṭu-vēdiyal,* பெ.(n.) பொருள்களின் இயற்பியல் வேதியல் பகுதிகளைப் பற்றிக் கூறும் நூல்; analytical chemistry.

[கூறுபாடு → கூறுபாட்டு + இதனியம்.]

கூறுபாடல் *kūru-pādal,* பெ.(n.) வாய்ப்பாட்டு; vocal music *"கூறுபாடலுங் குழலின் பாடலும்" (கம்பரா.நாட்டுப்.56).*

மறுவ. வாய்ப்பாட்டு, குரலிசை

[கூறு + பாடல்.]

கூறுபாடு *kūru-pāḍu,* பெ.(n.) 1. பாகுபாடு; division, sub division, classification. 2. பகுதி (திவா.); portion, section. 3. தன்மை; quality, nature. *நோயின் கூறுபாடு தெரிந்து மருந்து கொடுக்க.*

[கூறு + பாடு.]

கூறுவசம் *kūru-vašam,* பெ.(n.) ஓமம்; Indian dill seed.

[கூறு + வசம்.]

கூறுவிக்குறு[1]-தல் *kūruvikkuru-,* 20 செ.குன்றாவி (v.t.) பிறரைக் கொண்டு சொல்வித்தல்; to make another speak on one's behalf. *"கொத்தவிழ் கோதையாற் கூறுவிக்குற்றது" (திருக்கோ.263, கொளு.).*

[கூறு → கூறுவிக்கு.]

கூறை *kūrai,* பெ.(n.) 1. ஆடை; cloth, cloths, garment *"அத்திட்ட கூறையரைச் சுற்றி"* (நாலடி, 281). *2.* **கூறைப்புடைவை** பார்க்க; see *kūrai-p-puḍaivai.*

[கூறை - ஊர்ப்பெயர். அவ்வூரில் நெய்த புடவை கூறை நாடு எனக் கூறுவது மரபு.]

கூறைகோட்படு-தல் *kūrai-kōṭpaḍu-,* 20 செ.கு.வி. (v.i.) ஆடையைப் பறிகொடுத்தல்; to be robbed of one's cloths. *"இக்காட்டிற் போகிற் கூறை கோட்பட்டான்" (நன்.383,மயிலை.).*

[கூறை + கோள் + படு.]

கூறைநாடு *kūrai-nāḍu,* பெ.(n.) மயிலாடுதுறைக்கு அருகில் சேலைகள் மிகுதியாக நெய்யப்படும் ஓர் ஊர்; a village near Mayilāḍutūrai noted for the manufacture of sarees.

[கூறை + நாடு.]

கூறைப்பாய் *kūrai-p-pāy,* பெ.(n.) தோணிப்பாய் (வின்.); canvas sail.

[கூறை + பாய்.]

கூறைப்புடைவை *kūrai-p-puḍaivai,* பெ.(n.) தாலி கட்டும் நேரத்திற்கு முன் மணமகளுக்கு மணமகன் வீட்டார் கொடுக்கும் சேலை; clothe presented to the bride by the bridegrooms's parents and worn by her before *tāli* is tied.

[கூறை + புடவை. கூறை = புத்தாடை, துணி, புதுப்புடவை.]

கூறைப்பை *kūrai-p-pai,* பெ.(n.) 1. துணியாற் செய்த பணப்பை; purse, made of cloth. 2. சேலை கள் வைக்கும் பை; bag for keeping sarees. *"தானே கூறைப்பையும் சுமந்து கொண்டு போய்" (ஈடு.4:1,2).*

[கூறை + பை.]

கூறையுடுத்தல் *kūrai-y-uḍuttal,* பெ.(n.) நாத்தூணார் மணமகட்குக் கூறைப்புடைவை உடுத்துகை; dressing bride with the wedding cloth by the bridegroom's sister.

[கூறை + உடுத்து-.]

கூன் *kūn,* பெ.(n.) 1. வளைவு; bend, curve. *"கூனிரும்பினிற் குறைத்து" (நைடத.நாட்டுப்.10).* 2. உடற்கூனல் (திவா.); humpon the back of the body. 3. கூனன்; hump-back. *"சிறுகுறுங் கூனுங் குறளுஞ் சென்று" (சிலப்.27:214).*

ம.,க.,துட. கூன்; தெ.,து.,பட.. கூனு;

[குல் → குன் → கூன்.]

கூன்[2] *kūṉ,* பெ.(n.) 1. நத்தை (திவா.); snail. 2. ஆந்தை (உரி.நி.); owl. 3. கொப்பரை கடாரம்; cauldron. *"குருதி சாறெனப் பாய்வது குரைகடற் கூனில்"* (கம்பரா.கிங்கர.40). 4. செய்யுளில் அளவுக்கு மேல்வரும் அசையுஞ் சீரும்; extra detached foot of a verse. *"சீர் கூனாத னேரடிக் குரித்தே" (தொல்.பொருள்.361).*

[குல் → குன் → கூன்.]

கூன்[3] *kūṉ,* பெ.(n.) ஒருவகை வளைந்த கத்தி;a kind of curved sword. கூன்மாறன் (கூன் என்னும் வாள் தாங்கிய பாண்டியன்)

[குல் → கூல் → கூன்.]

கூன்கிடை *kūṉ-kiḍai,* பெ.(n.) ஐவகை மெய்க் குற்றங்களுள் ஒன்றாகிய உடல் கூனிக்கிடக்கை (பிங்.); lying with the body disposed in a crooked posture, one of five *mey-k-kuṟṟam.*

[குல் → குன் → கூன் + கிடை.]

கூன்பாண்டியன் *kūṉ-pāṇḍiyaṉ,* பெ.(n.) திருஞானசம்பந்தர் காலத்து அரசு செய்த பாண்டியன்; the hunch backed Pāṇḍya king, who was a contemporary of Tirunāṉa-Sambandar.

[கூன் + பாண்டியன்.]

கூன்முதுகு *kūṉ-mudugu,* பெ.(n.) 1. கூனலான முதுகு; lit., back with a hunch. 2. ஆமையோடு (மூ.அக.); tortoise shell.

[கூன் + முதுகு.]

கூன்வாள் *kūṉ-vāḷ,* பெ.(n.) வளைவான வாள் (பிங்.); scimitar, sickle.

[கூன் + முதுகு.]

கூனல் *kūṉal,* பெ.(n.) வளைவு; bend, curve.

ம. கூனன்; **க.** கூன,கூன; **பட.** கூன

[கூன் → கூனல்.]

கூனலங்காய் *kūṉalaṅkāy,* பெ.(n.) புளியங்காய்; green tamarind. *"கூனலங்காய் தினையவரை" (திருவிளை.நாட்டு.42).*

[கூனல் + அம் + காய்.]

கூனற்கிழவன் *kūṉaṟkiḻavaṉ,* பெ.(n.) உடல் வளைந்த மூதாளன்; bend old man. *"கூனற்கிழவன் கொடுக்கும் பண்யமதில்" (விறலிவிடு.).*

[கூனல் + கிழவன்.]

கூனன் *kūṉaṉ,* பெ.(n.) கூனலுள்ளவன் (பிங்.); humpback.

[கூன் + அன்]

கூனன்முதுகு *kūṉaṉ-mudugu,* பெ.(n.) **கூன்முதுகு** பார்க்க; see *kūṉ-mudugu.*

[கூனல் + முதுகு.]

கூனாள் *kūṉāḷ,* பெ.(n.) கூனி (நன். 276, மயிலை.); hunch backed woman.

[கூன் + (அள்) ஆள்.]

கூனி[1] *kūṉi,* பெ.(n.) 1. கூனலுள்ளவள்; hunch-backed woman. *"கூனி தன்னொடு மணமனை புக்கு" (சிலப்.3:171).* 2. இராமபிரான் முடிசூடு தலைச் சூழ்ச்சி செய்து தடுத்த மந்தரை; Mandarai a slave of Kaikēyi, who intrigued with her mistress on the day of Rāmā's coronation and prevented it. 3. வானவில்; rainbow. *"கிழக்கில் ஆனிமாதம் கூனிபோட்டால் அறுபதுநாள் மழையில்லை" (யாழ்ப்.). 4.* **கூனியிறால்** பார்க்க; see *kūṉiyiṟāl, "கூனிகொத்தி... கொக்கிருக்கும் பண்ணை" (குற்றா.குற.94).*

ம. கூனி; **க.** ககூனி,கூனி; **தெ.** கூனிதி; **து.** கடன, கூனெ; **பட.** கூனி

[கூன் → கூனி.]

கூனி[2] *kūṉi,* பெ.(n.) மீனமாதம் (பங்குனி); Paṅguṉi, the 12th Tamil month. March-April. *"ஆனி அடிகோலாதே கூனி குடிபோகாதே"*

[கூன் → கூனி.]

கூனி[3] *kūṉi,* பெ.(n.) கொலையாளி (இ.வ.); murderer.

[குல் (கொல்) → குன் → கூனி.]

கூனிக்குயம் *kūṉi-k-kuyam,* பெ.(n.) அரிவாள் (அக்.நி.); sickle.

[கூனி (வளைந்த) + குயம். (கொய் → குய் → குயம்).]

கூனிப்பொடி *kūṉi-p-poḍi,* பெ.(n.) ***கூனியிறால்*** பார்க்க; see *kūṉi-y-iṟāl.*

[கூனி + பொடி.]

கூனிப்போ-தல் *kūṉo-p-pō-,* 7 செ.கு.வி.(v.i.) மூப்பு முதலியவற்றால் உடல் வளைதல்; to be bent with age, to stoop from infirmity.

[கூனி + போ.]

கூனியிறால் *kūṉi-y-iṟāl,* பெ.(n.) இறால்மீன்வகை (M.M.373); common shrimp, as hunch backed.

மறுவ. கூனிப்பொடி

[கூனி + இறால்.]

கூனிரும்பு *kūṉ-irumbu,* பெ.(n.) 1. வளைந்த இரும்பு; lit., curved iron. 2. அரிவாள்; sickle. *"கூனிரும்பினிற் குறைத்து" (நைடத.நாட்டுப்.10).*

[கூன் + இரும்பு.]

கூனு-தல் *kūṉu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. வளைதல்; to curve, to become crooked, to bend down. *"கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து" (பொருக. 242).* 2. முதுகு வளைதல்; to become hunch-backed.

ம. கூனுக; க. கோத., கூட. கூனு; தெ.பட.கூனு; து கூனு; கூடு;

[கூன் → கூனு.]

கூனை *kūṉai,* பெ.(n.) 1. மிடா; large earthen boiler. *"கரும்பேந்திரத் தொழுகு சாறகன் கூனையின்" (கம்பரா. ஆறுசெல்.49).* 2. நீர்ச்சால்; baling bucket *"விழுந்த பேரைக் கூனைகொண் டமிழ்த்துவார் போல்" (குற்றா.குற.28).*

[கூல் → கூன் → கூனை (வளைந்த மிடா).]

கூனைவண்டு *kūṉai-vaṇḍu,* பெ.(n.) பூச்சிவகை (இ.வ.); a kind of small insect.

[கூனை + வண்டு.]

CPL600906

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

இரண்டாம் மடலம் மூன்றாம் பாகம்

கெ - ஙௌ

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

VOLUME II - PART III

த.பி. சந்திரசேகரன், இ.ஆ.ப.
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

முனைவர். இரா. மதிவாணன்
முதன்மைப் பதிப்பாசிரியர்

செநதமிழச சொற்பிறப்பியல அகரமுதலித் திட்ட இயககக வெளியீடு
2002

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

இரண்டாம் மடலம் – மூன்றாம் பாகம்

கெ-ஙௌ

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

VOLUME II - PART III

தா. சந்திரசேகரன், இ.ஆ.ப.
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

முனைவர். இரா. மதிவாணன்
முதன்மைப்பதிப்பாசிரியர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு
2002

செ.செ.பி. அகரமுதலித்திட்ட இயக்கக வெளியீடு-6
முதற்பதிப்பு : மேழம் (சித்திரை); தி.பி. ௨௦௩௩ ஏப்ரல் 2002

(c) தமிழ்நாட்டரசு

A Comprehensive Etymological Dictionary
of the Tamil Language, Vol. II, Part-III

விலை உருபா 300/-

குறியீட்டெண் : Colon No. P.J1-J, 314" K.M4

Published by :
Directorate of Tamil Etymological
Dictionary Project,
Govt. Museum Campus,
Egmore, Chennai - 600 008.

Copies available at :
International Institute of Tamil Studies
Tharamani,
Chennai - 600 113.

Printed at :
Royapettah Stationery and
Printing and Allied Products
Producers Ind. Co-op. Society Ltd.,
26, Koya Arunaguri First Street,
Royapettah, Chennai - 600 014.

மாண்புமிகு டாக்டர் செல்வி ஜெ ஜெயலலிதா
முதலமைச்சர் தமிழ்நாடு

மு. தம்பிதுரை
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் : 24-4-2002

அணிந்துரை

'செந்தமிழ் உயர் தனிச்செம்மொழி என்னும் தகுதிப்பாட்டைப் பெற்றிருப்பது தமிழின் தொன்மையைக் காட்டுவதாய் இருக்கிறது' என்பார் டாக்டர் கால்டுவெல்.

'உலக முதன்மை, செம்மை, தூய்மை, தாய்மை, பகுத்தறிவு அடிப்படையில் பொருள்களைப் பகுத்து மெய்ப்பொருளியல் இலக்கணக் குறியீடுகள் கொண்டமை, செய்யுள் வடிவில் இலக்கியம் அமைந்தமை, பொருளிலக்கணம் உடைமை, இசையையும் நாடகத்தையும் இணைத்துக் கொண்டு முத்தமிழாய் விளங்கும் தன்மை போன்றவற்றைக் கொண்டு மக்கள்மொழியாயிருக்கும் தமிழை ஈடிணையில்லாத் தனிமொழியெனல் உண்மை நவிற்சியேயன்றி உயர்வு நவிற்சியன்று' என்பார் மொழிஞாயிறு பாவாணர்.

ஒரு மொழியின் பெருமையையும் வளமையையும் அம்மொழியின் சொல்வளத்தால் அறியலாம். அச் சொல்வளத்தைக் காட்டுவது அகரமுதலிகளே. பண்டுதொட்டு இன்றுவரையிலுமுள்ள பண்பாடு, நாகரிகம், வரலாறு ஆகியவற்றை அறியப் பெரிதும் துணையாயிருப்பது அவ்வம் மொழியிலமைந்துள்ள சொற்களே என்பது மிகையான கூற்றன்று.

தமிழில் அகரமுதலிக்கூறு தொல்காப்பியத்திலேயே கருக்கொண்டுள்ளது எனினும் இக் கூறுகள் பற்றிய கருத்துரு கி.பி. ஏழாம் நூற்றாண்டில்தான் உருக்கொண்டது; ஆயினும் முழுமையான கூறுகள் கொண்ட அகரமுதலி கி.பி. இருபதாம் நூற்றாண்டில் தான் உருவாயிற்று.

மொழியமைப்பு, இலக்கண அமைப்பு ஆகியவற்றைப் பொறுத்தவரை தொல்காப்பியத்திற்கு முன்பே இப்போதிருக்கும் அமைப்பில் தமிழ் நிலைபெற்று விட்டது. இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என மொழிநூல் அடிப்படையிலும்; செந்தமிழ், கொடுந்தமிழ் என மொழித்தூய்மை அடிப்படையிலும் பாகுபாடு கண்டுள்ளமை அக்காலத்து மொழிவளர்ச்சியின் உச்சநிலையைக் காட்டுகிறது. பொருள்பாகுபாட்டு அடிப்படையில் பொருள் குறித்ததே சொல் என்னும் சிறப்பினையுடையது. தமிழிலக்கணம், உயர்திணை என்றும் அஃறிணை என்றும் பாகுபடுத்தியுள்ளதன் மூலம் அன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் அறிவு முதிர்ச்சி நிலையை அறிந்து வியக்கிறோம். இத்தகைய சிறப்புகளை யுள்ளடக்கிய தமிழ் பிறமொழியின் துணையின்றித் தனித்தியங்கும் ஆற்றலுடைய தன்னேரில்லா மொழி என்று உலக மொழியறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

தொல்காப்பியத்திற்குப் பிறகு கடந்த ஈராயிரம் ஆண்டுக்கால இடைவெளியில் தமிழ்மொழியமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் மிகச் சிலவே. தொல்காப்பியர் காலத்திலேயே சொல்வளம் மிகுந்திருந்த மொழியின் இந்த நீண்டகால இடைவெளியிலும் மேலும் பற்பல புதிய சொற்களும், பொருள்களும் சேர்ந்துள்ளன. புதிதாக வளர்ந்துவரும் கருத்துகளைக் குறிக்கச் சொற்கள் பெருகுவதும் முன்னரே வழங்கும் சொற்களுக்குப் புதுப்பொருள்

உண்டாவதும் மொழிவளர்ச்சியில் இயல்பே, என்றாலும், பல்வேறு காரணங்களினால் பல்லாயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் வழக்கிழந்து விட்டன. சொற்களைப் பதிந்து வைக்கும் அகரமுதலி போன்ற ஊடகங்கள் இருந்திருக்குமேயானால் அவை வீழ்ந்துபடாமல் மேலும் பல உண்மைகளை உணர்த்திக் கொண்டேயிருக்கும்.

செந்தமிழ் இலக்கியங்களில் பயின்று வந்துள்ள சொற்கள் முதல் இன்றைய பேச்சு வழக்கிலுள்ள சொற்கள் வரை அனைத்தையும் உள்ளடக்கி, சொற்களின் வடிவம், பொருள், பிறப்பு போன்றவை பற்றிய தேவையான செய்திகளுடன் தொன்மையான சொற்கள், கலைச்சொற்கள், வட்டார வழக்குச் சொற்கள் என அனைத்தையும் கொண்டதாக விளங்க வேண்டும் என்னும் நோக்கத்தினைக் கொண்டது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி.

'இது சொற்பொருள் விளக்கும் சொற்களஞ்சியமாகவும், வேரும் விளக்கமும் தரும் சொற்பிறப்பு அகரமுதலியாகவும் விளங்கும் திறத்தது. தமிழின் நலங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய வரலாற்றுப் பெட்டகமாக விளங்க வேண்டும்' என்பது பாவாணரின் பெருவிருப்பமாகும். அதனை அடியொற்றிச் செல்வதே இவ்வகரமுதலி.

இதுவரை வெளிவந்துள்ள அகரமுதலியில் இடம் பெறாத சொற்களையும் சொற்பொருள்களையும் இடம் பெறச் செய்யும் செயற்பாட்டுடன் வழுவில்லாமல் பொருள் கூறும் பாங்கும், வெவ்வேறு மூலத்தினவாக விளங்கும் சொற்களைத் தனித்தனியாகப் பிரித்துக் காட்டும் தன்மையும் கொண்டது இவ்வகரமுதலி. சொற்களின் தோற்றம் வரலாறு ஆகியவற்றைக் குறிக்கும் தன்மையது என்றாலும் இது தமிழ்மொழியின் இயல்பு பற்றிய அடிப்படைத் தன்மைகளைக் காட்டும் திறத்தது.

அகரமுதலி என்பது ஒரு கருவிநூல் என்னும் உணர்வோடு கூர்ந்து நோக்கிச் செயற்படுத்த வேண்டும் என்பது மொழியறிஞர்களின் உள்ளக்கிடக்கை; மொழியார்வலர்களின் எதிர்பார்ப்பு.

தேவநேயப்பாவாணர் நூற்றாண்டில், அவரின் மொழிக் கனவுகள் நனவாக - தனித்தமிழ்ப் பற்று அனைவருக்கும் ஏற்பட - தமிழ் அரியணை ஏறிட, எங்கும் தமிழ் - எதிலும் தமிழ் - என்றும் தமிழ் என்கின்ற நோக்கம் நிறைவேறிட **மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் சீரிய தலைமையில் செம்மாந்து நடைபோடும் தமிழக அரசு முனைந்து செயலாற்றி வருகிறது.

இந்தக் காலகட்டத்தில் தமிழின் ஏற்றத்தைப் பாருக்குரைக்கும் இப்பைந்தமிழ் அகரமுதலி வெளிவருவது பெரிதும் மகிழ்ச்சி தருவதாகும். அடுத்தடுத்த மடலங்களும் தொடர்ந்து விரைவில் வெளிவரும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்னும் உறுதியோடு, இவ்வகரமுதலி வெளிவர உழைத்த அனைத்துப் பெருமக்களையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

தமிழக அரசு, தமிழ் - தமிழின - தமிழ்நாட்டு வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் தொடர்ந்து மேற்கொள்ளும் பணிகளுக்கு நல்லாதரவு தர வேண்டியது நற்றமிழ் அறிஞர்களின் பெருங்கடமையாகும்.

அன்புடன்

மு. தம்பிதுரை 24-4-2002

(மு. தமபிதுரை)

பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

தமிழ்வளர்ச்சி - பண்பாடு மற்றும்
அறநிலையத்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009

நாள் : 20-4-2002

அணிந்துரை

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னோர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்"

என்னும் தண்டியலங்காரப் பாடலின்படி ஞாலத்தொன்மொழிகளுள் தாய்மையும் தலைமையும் கொண்டது தமிழ்மொழி. நாட்டு வரலாறு, மொழி வரலாறு எழுதப்படுவதுபோல், சொற்களுக்குப் பிறப்பு மூலம் கண்டு சொல் வரலாறு விளக்கும் அகரமுதலியைச் சொற்பிறப்புஅகரமுதலி என்பர்.

உலகின் பல மொழிகளில் வெளிவந்துள்ள சொற்பிறப்பு அகரமுதலி போல் தமிழிலும் சிறந்த சொற்பிறப்பியல் அகரமுதலியைப் பன்மடலங்களாக வெளியிடும் நோக்கில் தமிழக அரசால் உருவாக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தற்போது இரண்டாம் மடலத்தின் மூன்றாம் பாகத்தை (கெ - கௌ) வெளியிடுகின்றது.

பொதுவான அகரமுதலியைவிட இது பல்லாற்றானும் வேறுபட்டது. இனச்சொல் காட்டுதல், ஒரு பொருள் குறித்த பலசொல் காட்டுதல், ஒரு பொருளின் இன வகைகள் காட்டுதல், உண்மையான வேர் மூலத்தைப் பாவாணர் நூல்களில் பொதித்த நெறிமுறைகளாலும், மரபிலக்கணம், மொழியியல் கூறுகள், இலக்கியம், வரலாறு, கல்வெட்டு, உலக வழக்கு ஆகியவற்றின் அணுகுமுறைகளாலும் கண்டறிதல், இன்றியமையாத சொற்களுக்கு அகராதிமுறையும், களஞ்சியப்பண்பும் இணைந்த அரைக்கலைக்களஞ்சியப் பாங்குடன் சிறப்புக் குறிப்புகள் தருதல் போன்றவற்றைச் சான்றாகக் கூறலாம்.

தமிழ்மொழியின் தூய்மையைப் பேணவும், தாய்மையை நிலைநாட்டவும், செவ்விய பொருளறிந்து சொற்களைத் தரமாகப் பயன்படுத்தவும், ஆராய்ச்சியாளர்க்கு மொழியியல் புதைப்பொருள்களை அகழ்ந்து இவ்வகரமுதலித் தொகுப்புகள் பெரிதும் பயன்படுவனவாம்.

தாய்மொழி வழிக்கல்வியே சிறந்தது எனும் கருத்து ஓங்கியுள்ள இக்காலத்தில் தாய்மொழியின் வெற்றி வாகைக்கும், தாய்மொழிப் பற்றுக்கும் சொல்வளம் மிகவும் இன்றியமையாதது. அத்தகைய சொல்வளக் களஞ்சியமாக இவ்வகரமுதலித் தொகுப்புகள் விளங்கும்.

எழுநிலைமாடமும் வானளாவி நின்று அப்பெயர் பெற்றது. அதன் அமைப்புத் தேரை ஒத்ததாகும்" என்று கூறி மேன்மேலும் காட்டும் நுட்பமான கருத்து விளக்கம் ஆய்வாளர்களின் நுண்மான் நுழைபுலத்தைக் காட்டுகிறது. 'கோவில்' என்ற சொல்லை எடுத்துக்காட்டி "இறைவனுக்காக எழுப்பப்படும் ஆலயத்தைக் 'கோவில்' என்பதே மரபிலக்கிணத்திற்கு ஏற்றதாகும் எனத் தக்க சான்றுகள் வழி நிறுவியிருப்பதும், காலந்தோறும் 'கோவில்' அமைப்பு எவ்வாறெல்லாம் வளர்ந்து வந்திருக்கின்றது என்பதைத் தக்க சான்றுகளோடு காண்பித்து இருப்பதும் இத்தொகுப்பின் அருமைப்பாட்டை உயர்த்துவதாகும்.

வண்ணப்படங்களின் மூலமாக கெண்டை, கெளுத்தி, கோலா மீன் வகைகளையும் ஆடற்கலையின் கையமைதிகளையும், கோழி, கொக்கின் வகைகளையும் பழங்காலத்தில் மகளிர் எத்தனை வகையான 'கொண்டை' அணியும் செய்து வந்தார்கள் என்பதையும் அறிந்து மகிழ்கின்றோம். கொடிவேலி, கொடிப்பாலை, கொள்ளுக்காய்-வேளை, கொடிவயலை என்னும் மூலிகைகளை அழகுற அச்சிட்டுக் காட்டியிருப்பதும் இவ்வகரமுதலியின் எழிற்கோலத்தை இன்னமுதாய்த் தெரிவிப்பனவாம்.

மேலும் மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் ஆராய்ச்சியை அடியொட்டியும் அவர்தம் ஆராய்ச்சிக் குறிப்புகளைப் பலவிடங்களிலும் எடுத்துக்காட்டி, சொல்விளக்கங்கள் நிறுவியிருப்பதும் பாவாணர் காட்டிய நெறியில்தான், இவ்வரகமுதலியின் ஆய்வாளர்கள் சென்றுள்ளனர் என்பதைத் தெளிவுறக் காட்டுகின்றது. சான்றாகக் 'கொற்றி' என்னும் சொல்லைக் காணலாம். சொல் விளக்கத்தில் கொற்றி-1. சிறியது; 2. குட்டி, குஞ்சு; 3. குழந்தை, பிள்ளை; 4. பூனை; இதில் பூனை என்னும் சொல்லின் மறுவடிவங்கள், இப்பூனை என்னும் சொல் திராவிடமொழிகளில் எவ்வாறு வழங்கப்படுகிறது; ஐரோப்பிய மொழிகளில் எவ்வாறு வழங்கப்படுகிறது; உலகமொழிகளில் எவ்வாறு வழங்கப்படுகிறது என்பதையெல்லாம் தெளிவாகக் காட்டியுள்ளனர்.

மேலும், பூனையின் தாயகம் தமிழகமே என்பதை, "கொற்றி = குழந்தை - இளமைப்பெயர். கன்றோடு கூடிய கறவைமாடும் கொற்றி எனப்படும். இது குற்றி (சிறிய குழந்தை) என்பதன் திரிபு. குற்றி, குஞ்சு, பிள்ளை, என்பன குழந்தையைக் குறிக்கும் இளமைப் பெயர்கள். தமிழில் இச்சொல் இறந்துபட்டது. பழஞ்சேரநாட்டுத் தமிழின் திரிபே (வடசொற்செறிந்த) மலையாளமாயினும் 'கொற்றி' என்னும் இளமைப் பெயரைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. வீட்டு வளர்ப்பு விலங்குகள் குழந்தைபோன்று கருதப்படுவதால் கிளியைப் பறக்கும்பிள்ளை என்றும் அணிற்பிள்ளையை ஓடும்பிள்ளை என்றும் பூனையை நடக்கும் பிள்ளை என்றும் வழங்கும் பழந்தமிழ்ச் சொல்லாட்சிகளை நோக்குக. பூனையைப் பிள்ளையாகக் கருதிய கரணியத்தால் தெலுங்கு மொழியில் 'பில்லி' (பிள்ளை) எனப்படுகிறது. கன்னடத்திலும் உலக மொழிகளிலும் 'கொத்தி' எனப்படுகிறது. இதனைச் சரியாகப் பகலில் கண்தெரியாத காரணத்தால் குருட்டுத்தனத்தைக் குறிக்கும் 'கொத்தை' என்ற சொல்லோடு இணைக்க வேண்டியதில்லை. கொத்தை என்பது குந்து. (குறைபாடு, ஊனம்) என்னும் சொல்லிலிருந்து குந்து --> கொந்து --> கொந்தை --> கொத்தை எனத் திரிந்து தமிழில் பார்வைக் குறைபாட்டைக் குறிக்கும் உருப்பெற்றது. "கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித்து" (தேவா. 1040,2)

மேலும், வேரும் மூலமும் காட்டப்படுவதால் புதிய சொற்கள் வேண்டுமிடத்து பல்லாயிரம் புத்தம் புதிய படைப்புச் சொற்கள் உருவாக்கிக் கொள்ளப்படச் சொற்பிறப்பியல் அகரமுதலி வழிகாட்டும். ஆதலால் மொழி வளர்ச்சிக்கு ஏனைய அகராதிகளை விட சொற்பிறப்பியல் அகரமுதலி ஆணிவேராக அமைகிறது.

சொற்பிறப்பியல் அகரமுதலி உருவாக்குவதன் வாயிலாக அம்மொழியின் சொற்பிறப்பியல் நெறிமுறைகளையும், மொழியின் முன்மை, தொன்மை, தாய்மை, தலைமை, வன்மை ஆகியவற்றையும் நன்கு அறியலாம். எந்தெந்த மொழிகளிலிருந்து சொற்கள் எந்தெந்த மொழிகளுக்குச் சென்றுள்ளன என்னும் தகவல்களையும், எக் காலகட்டத்தில் இம் மாறுதல்கள் தோன்றின, ஏன் தோன்றின என்னும் வரலாற்றுப் பின்னணிகளையும் அறியலாம்.

அவ்வகையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் இரண்டாம் மடலத்தின் மூன்றாம் பாகம் இப்போது வெளிவருகின்றது. ஒவ்வொரு சொல்லிலும், பதிப்பாசிரியர்கள், தொகுப்பாளர்கள் அனைவரின் உழைப்பும் அருமையும் தெள்ளத் தெளிவாகப் புலப்படுகின்றன. இருப்பினும் இவ்வியக்கப் பணியாளர்கள் இன்னும் விரைந்து செயற்பட்டுப் பாவாணர் எண்ணிய வண்ணம் எல்லா மடலங்களையும் அழகுற வெளிக் கொணர்வார்கள் என்று நம்புகிறேன். **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களின் ஆணையை நிறைவேற்றும் வண்ணம் இத் துறைப்பதிப்புகள் இன்னும் விரைந்து பன்மடலங்களாக வெளியிடப்படவுள்ளன. இவ்வியக்ககம் செவ்வனே நடைபெற அனைத்து உதவிகளையும் ஒருங்கே அளித்துவரும் **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களுக்கும், **மாண்புமிகு கல்வி அமைச்சர்** அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன். இந்த அரிய படைப்பினைத் தமிழுலகம் நன்கு பயன்படுத்திக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

அன்புடன்

20/4/2002

(பு.ஏ. இராமையா)

தா. சந்திரசேகரன், இ.ஆ.ப.,
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு).

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்,
அரசு அருங்காட்சியக வளாகம்,
எழும்பூர், சென்னை - 600 008.

நாள் : 18-4-2002

பதிப்புரை

தொன்மையும் தூய்மையும் சான்ற அன்னைத் தமிழின் வளர்ச்சிக்கு அடிப்படையான பணிகளில் அகரமுதலி உருவாக்குவதும் தலைசிறந்த தமிழ்ப்பணியாகும். ஆங்கில மொழியில் நூற்றுக்கணக்கான அகரமுதலிகள் வெளியிடப்பட்டிருப்பதால் ஆங்கில மொழியின் வளர்ச்சி உலக அரங்கில் உயர்ந்து நிற்கின்றது என உலக அறிஞர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

சொல்லின் பொருளை மிகத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கும், புதிய படைப்புச் சொற்களை உருவாக்குவதற்கும், மொழியாராய்ச்சியாளர்களுக்கும் மொழியைக் கற்கும் பிற மொழியாளர்களுக்கும் அறியும் வழியில் உலகில் உள்ள பல மொழிகளிலும் சொற்பிறப்பு அகரமுதலிகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்திய மொழிகளில் வடமொழி (சமஸ்கிருதம்), மராத்தி, கூர்ச்சரம் (குசராத்தி), நேபாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சொற்பிறப்பு அகரமுதலிகள் வெளிவந்துள்ளன. ஆங்கிலத்தில் மட்டும் 5 சொற்பிறப்பியல் அகரமுதலிகள் வெளிவந்துள்ளன. தமிழில் முழுமையான சொற்பிறப்பு அகரமுதலி வெளிவராத குறையை இவ்வகரமுதலித் திட்டம் நிறைவாக்குகிறது. எந்த வேரிலிருந்து எந்தச் சொல் பிறந்தது என்பதையும் பிறமொழியிலிருந்து கடன்பெற்ற சொல்லாக இருந்தால் எம்மொழிச்சொல் எவ்வாறு திரிந்தது என்பதையும், அச்சொல் அம்மொழியின் இனமொழிகளில் எவ்வாறு வழங்குகிறது என்பதையும், அச்சொல்லின் மறுவடிவங்கள் எவை என்பதையும், சொல் வடிவிலும் பொருள் வடிவிலும் எவ்வகைத் திரிபுகளையும், மாற்றங்களையும் அச்சொல் அடைந்துள்ளது என்பதையும் விரிவாக ஆராய்வது சொற்பிறப்பு அகரமுதலியின் நோக்கமெனலாம். அவ்வகையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் முதன்மடல மூன்று பாகங்களும், இரண்டாம் மடல இரண்டு பாகங்களும் வெளிவந்தபின் தற்போது இரண்டாம் மடலத்தின் மூன்றாம் பாகம் (கெ-கௌ) வெளிவருகின்றது.

அருஞ்சொல் விளக்கங்கள் :-

'கேள்வி' என்ற சொல்லுக்குத்தான் எத்தனை வகையான பொருள்கள்; இத்தொகுப்பில் 14 வகையான சொற்பொருள் நுட்பம் காட்டப்படுவதுடன், திராவிட இனமொழிகளில் அச்சொல் வழங்கும் பான்மை, 'கேள்வி' என்பதற்குரிய சொற்பொருள் விளக்கம் ஆகியன காட்டப்பட்டுள்ள பாங்கினைப் பார்க்கும்போது இத்துறை ஆய்வாளர்களின் உழைப்பின் மேன்மை புலப்படுகின்றது.

மேலும் 'கோபுரம்' என்ற சொல்லிற்குப் பாவாணர் காட்டியவாறே "கோ-அரசு, தலைமை; புரம் = உயர்வு, உயர்ந்த கட்டடம்; புரை - உயர்ச்சி, 'புரை உயர்பாகும்' (தொல்.உரி.4) வேந்தன் இருந்த உயர்ந்த எழுநிலைக் கட்டடம் முதலிற் கோபுரம் எனப்பட்டது. பின்பு கோயிலில் அமைந்த

"இன்னான் என்பது கண்ணாற்கொத்தை கல்லான் முடவன்" என்பன (தொல்.வேற்.11.இளம்.உரை) என்னும் சொல்லாட்சிகளை நோக்குக. ஐரோப்பாவில் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரை பூனை இருந்ததில்லை என்றும், அது எகிப்து நாட்டிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டதென்றும் 'Cat' என்னும் அதன் பெயர் எகிப்துச் சொல்லென்றும் மாக்சுமுல்லர் கருதினார். பூனை நீண்டகாலமாக எகிப்து நாட்டில் வளர்க்கப்பட்டு வந்தமையாலும், ஓர் எகிப்திய பெண் தெய்வம் பூனைத் தலைகொண்டிருத்தலாலும், ஐரோப்பாவிற்கு எகிப்து அண்மையிலிருப்பதாலும், அவர் கூற்றுப் பொருத்தமாகவே தோன்றுகிறது. ஆயினும் குமரி நாடே மானிடர் தோன்றியதாலும் எகிப்து நாட்டோடு நீண்டகாலமாக நீர் வாணிகமும் நில வாணிகமும் இருந்து வந்ததாலும், வெருகு (பூனை) தமிழகத்தினின்றே எகிப்துக்குச் சென்றிருத்தல் வேண்டும். அதனால் அதன் பெயரும் த்மிழ்ச் சொல்லாகவே இருத்தல் வேண்டும்" என்று பாவாணர் குறிப்பிட்டுள்ளதை ஒப்பு நோக்குக (செந்தமிழ்ச்செல்வி பக். 134-136).

பல்வகை அகரமுதலிகளிலிருந்தும், வழக்கிலிருந்தும் தமிழ்ச்சொற்களைத் தொகுத்தல் - பாவாணர் வழி விளக்கம் எழுதுதல் - அவற்றை நூலாகப் பதிப்பித்தல் ஆகிய முப்பெரும் பணிகளிலும் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் பதிப்பாசிரியர்கள், தொகுப்பாளர்கள், பணியாளர்கள் அனைவரும் மேன்மேலும் உழைத்து அடுத்தடுத்த மடலங்களையெல்லாம் விரைவில் வெளிக்கொணர அரும்பாடுபட வேண்டும் என்று அகமிக விழைகிறேன். எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ்நலம் பேணும் இச்செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்புகள் விரைந்து வெளிவருவதற்குச் செயலாணை வழங்கிச் சிறப்பிக்கின்ற **மாண்புமிகு முதல்வர்** அவர்களுக்கு இத்துறையின் பொறுப்பு இயக்குநர் என்ற முறையில் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின் வண்ணம் ஆக்கமும் ஊக்கமும் தந்து எம்மைச் செயற்படுத்தும் **மாண்புமிகு கல்வி அமைச்சர்** அவர்களுக்கும், எம் **துறைச் செயலாளர்** அவர்களுக்கும் எனது மேலான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

15-4-02

(தா. சந்திரசேகரன்)

வண்ணப்படங்களின் பட்டியல்

படத்தாள் எண்	படத்தின் பெயர்	எதிரும் பக்கம்
1	**கெண்டை வகைகள்**	16
	பருத்திக் கெண்டை	
	மோரான் கெண்டை	
	பாற் கெண்டை	
	பேரான் கெண்டை	
2	**கெளுத்திமீன் வகைகள்**	28
	பொன் கெளுத்தி	
	கானாங் கெளுத்தி	
	கோழக் கெளுத்தி	
	ஆற்றுக் கெளுத்தி	
3	**கையமைதிகள்**	102
	அருட்கை	
	ஈகைக்கை	
	கடகக்கை	
	விளிக்கை	
	மெய்ப்பொருட்கை	
	சுட்டுக்கை	
	வெருவல் கை (அச்சுறுத்தும் கை)	
	கத்திரிக்கை	
	விரிதாமரைக் கை	
	வியப்புக்கை	
	தளிர்க்கை	
	துயிற்கை	

வண்ணப்படங்களின் பட்டியல்

படத்தாள் எண்	படத்தின் பெயர்	எதிரும் பக்கம்
4	**கையமைதிகள்** அரைநிலாக்கை இருபாற்கை முத்தலை வேற்கை முட்டிக்கை சிகரக்கை நிலம் தொழுகை கிடக்கை கடியவலம் தழுவற்கை விற்கை உடுக்கைக்கை ஒறுத்தல்கை	104
5	**கொக்கு வகைகள்** குருட்டுக் கொக்கு தோசிக் கொக்கு சவதிக் கொக்கு வெண் கழுத்தி கொக்கு பறைக் கொக்கு	128
6	**கொக்கு வகைகள்** கருமூக்கன் கொக்கு பிணந்தின்னிக் கொக்கு பூங்கொக்கு கரண்டிக் கொக்கு செங்காலன்	130

வண்ணப்படங்களின் பட்டியல்

படத்தாள் எண்	படத்தின் பெயர்	எதிரும் பக்கம்
7	**கொண்டை வகைகள்**	**198**
	விடுமுடிக் கொண்டை	
	முத்துமுடிக் கொண்டை	
	வளையம்பிக் கொண்டை	
	புரிக் கொண்டை	
8	**கொம்பெருது**	**224**
	சிந்துவெளி எருது	
	கொட்டேணி	
	உச்சிக்கொம்பன்	
9	**கொன்றை**	**272**
	கொடிவேலி	
	கொடிப்பாலை	
	கொடிவயலை	
	கொள்ளுக்காய் வேளை	
10	**கோவை**	**288**
	கோட்டம்	
	கோரைக் கிழங்கு	
	கோழிக்கொண்டைப்பூ	
11	**கோடரி வகைகள் (கோடாலி வகைகள்)**	**300**
	சிறுகாம்புக் கோடரி	
	அங்குசக் கோடரி	
	பெருங்காம்புக் கோடரி	
	உள்மடிப் பெருங்கோடரி	
	தலைக் கனக் கோடரி	
	உள்மடிக் கூர்க் கோடரி	
	இருதலைக் கோடரி	

வண்ணப்படங்களின் பட்டியல்

படத்தாள் எண்	படத்தின் பெயர்	எதிரும் பக்கம்
12	**கோபுர வகைகள்**	**336**
	திருவரங்கம்	
	ஏகம்ப ஈசன்	
	ஈமவோட்டு ஈசன் (கபாலீசுவரர்)	
	தில்லைக் கூத்தர் (சிதம்பர நடராசர்)	
13	**கோபுர வகைகள்**	**340**
	திருவண்ணாமலை	
	பேரரசப் பெருமாள் (காஞ்சிவரதராசப் பெருமாள்)	
	அங்கயற்கண்ணி (மீனாட்சியம்மன்)	
	எழிற்கண்ணியம்மன் (காஞ்சி காமாட்சியம்மன்)	
14	**கோயில் வகைகள் (திராவிட கட்டடக்கலை)**	**344**
	குடிசையின் கூரை அமைப்பு (பாஞ்சாலி மண்டபம்)	
	சதுரக்கோயில் அமைப்பு	
	நீள்சதுரக் கோயில் அமைப்பு	
	நீண்ட அரையுருளை வடிவ தூங்கானை மாடக்கோயில் அமைப்பு	
	நீழல் குடையமைப்பு	
15	**கோயில் வகைகள் (திராவிட கட்டடக்கலை)**	**348**
	கரகக் கோயில் எனப்படும் தேர் அமைப்பு	
	தஞ்சைக்கோயில் (சதுரக்கோயில் அமைப்பு)	
	சிதம்பரம் கோயில் (குடிசைக்கோயில் அமைப்பு)	
	வட்டக்குடிசை அமைப்பு (சிவன் கோயில்)	
16	**கோலாமீன் வகைகள்**	**360**
	வட்டமூக்குக் கோலா	
	பறவைக் கோலா	

வண்ணப்படங்களின் பட்டியல்

படத்தாள் எண்	படத்தின் பெயர்	எதிரும் பக்கம்
	பசுங்கோலா	
	சப்பைக் கோலா	
	திருவெண் கோலா	
	பாம்புக் கோலா	
17	**கோலாமீன் வகைகள்**	362
	ஏமின் கோலா	
	மயிற்கோலா	
	பற்கோலா	
	தாய்கோலா	
	வீச்சிக் கோலா	
	வரிக்கோலா	
	கருவாலன் கோலா	
18	**கோழி வகைகள்**	372
	கருங்கோழி	
	கானாங்கோழி	
	வான் கோழி	
	வரகுக் கோழி	
	நீர்க்கோழி	
	சம்பங்கோழி	
19	**கோழி வகைகள்**	374
	நெருப்புக்கோழி	
	கிண்ணிக்கோழி	
	தாமரைக்கோழி	
	குளத்துக்கோழி	
	காட்டுக்கோழி	
	நாமக் கோழி	

நூற்றாண்டு விழா காணும்

மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர்

(7.2.1902 – 7.2.2002)



போற்றியோ ராயிரம் போற்றி மொழியுலகில்
நூற்றாண்டு கண்டநம் பாவாணர் தோன்றலுக்கு
வாழியரோ வாழிதமிழ் வாழ்விக்க நூற்றாண்டு
ஓங்குவிழா கொண்டாடும் அரசு.

பாவாணர் நூலகம் என்னும் பெயர்வைத்தார்
நாவாரப் போற்றும் புரட்சித் தலைவர்
புரட்சித் தலைவி சிறப்பித்தார் நூற்றாண்டு
அரியவிழா நாடெங்கும் கண்டு.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

கெ

கெ *ke*, பெ.(n.) பின்னண்ண ககர மெய்: 'க்' மற்றும் முன்னுயிர் 'எ' இரண்டும் இணைந்த அசை எழுத்து; the syllabic letter representing velar consonant 'க்' with front vowel 'எ'.

[க் + எ = கெ.]

கெக்கட்டம் *kekkattam*, பெ.(n.) ***கெக்களம்*** பார்க்க; see *kekkalam*. கெக்கட்டமிட்டுச் சிரிக்கிறான் (உ.வ.).

தெ. கெக்கிலி, கெக்கலு; **துட.** கெக்.

[கெக்கலி → கெக்களி → கெக்கடி → கெக்கட்டம்.]

த. கெக்கட்டம் > **Skt.** gagghatta.

கெக்கரி¹-த்தல் *kekkari-*, 4 செ.கு.வி.(v.i.) மிக மிக இனித்தல்; to taste very sweet.

[கெக்கலி → கெக்கரி.]

கெக்கரி²-த்தல் *kekkari-*, 4 செ.கு.வி.(v.i.) கொக்கரித்தல்; to cackle, cluck, as a hen.

[கொக்கரி → கெக்கரி. (ஒலிக்குறிப்புச் சொல்).]

கெக்கரி³-த்தல் *kekkari-*, 4 செ.கு.வி.(v.i.) சினத்தல்; to get angry.

[கொக்கரி → கெக்கரி.]

கெக்கரிக்காய் *kekkari-k-kāy*, பெ.(n.) முள் வெள்ளரி; kakri-melon.

க. கெக்கரிகெ (முலாம்பழவகை); **து.** சக்கர்பெ.

[கெக்கரி + காய். கள் + கரி – கக்கரி. கக்கரி → கெக்கரி.]



கெக்கரிக்காய் (கக்கரிக்காய்)

கெக்கல் *kekkal*, பெ. (n.) வாய்விட்டுச் சிரிக்கும் ஒலிக்குறிப்பு; sound denoting loud laughter.

[கெக் – ஒலிக்குறிப்பு. கெக் → கெக்கல்.]

கெக்கலி¹-த்தல் *kekkali-*, 4 செ.கு.வி.(v.i.) குஞ்சுகளைப் பருந்தின் பார்வையினின்றும் காப்பதற்காகத் தாய்க்கோழி ஒலி எழுப்புதல்; clucking of a hen to protect the chicken from the enemy.

க. கெக்கலிசு; **தெ.** கெக்கலின்சு; **E.** cackles.

[கெக் – ஒலிக்குறிப்பு இடைச்சொல். கெக் → கெக்கலி.]

கெக்கலி²-த்தல் *kekkali-*, 4 செ.கு.வி.(v.i.) 1. குலுங்கச் சிரித்தல்; to laugh violently, so that one's sides shake. 2. எளனமாகச் சிரித்தல்; to laugh in a derisive manner.

மறுவ. கேக்கலி.

ம. கெக்கலிக்குக; **க** கெக்களிசு; **தெ.** கெக்கலின்சு.

[கெக்கல் → கெக்கலி.]

கெக்கலி³ *kekkali*, பெ.(n.) இனிமை; sweetness.

ம. கிக்கிளி; **தெ.** கெக்கலி.

[கக்கம் → கக்கலி → கிக்கலி → கெக்கலி : கக்கத்தில் விரல் வைத்துச் சிரிக்கச்செய்தல். சிரித்தல் சிரிப்பினால் பெறும் இன்ப வுணர்வையும் குறித்தது.]

கெக்கலிகொட்டு-தல் *kekkali-kottu-*, 5 செ.கு.வி. (v.i.) குலுங்கக் குலுங்கச் சிரித்தல்; to laugh violently so that one's sides shake. *"கண்டவ ரெவருங் கெக்கலி கொட்டவே" (இராமநா. சுந்தா. 4).*

[கெக்கலி + கொட்டு-.]

கெக்கலிப்படு-தல் *kekkali-p-padu-*, 20 செ.கு.வி. (v.i.) ***கெக்கலி*** பார்க்க; see *kekkali-*. *"அக்களிப்போடு கெக்கலிப்பட" (சர்வச. கீர்த். 186).*

[கெக்கலி + படு-.]

கெக்கலிமூட்டு-தல் *kekkali-mūttu-*, 5 செ.கு.வி. (v.i.) சிரிப்பூட்டுதல், சிரிக்கவைத்தல்; to make one laugh.

[கிக்கலி → கெக்கலி + மூட்டு-.]

கெக்களம் *kekkaḷam* பெ.(n.) வாய்விட்டுச் சிரிக்கை; loud or open laughter.

[கெக்கலி → கெக்களி → கெக்களம் (ஒலிக்குறிப்புச் சொல்).]

கெக்களி-த்தல் *kekkaḷi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. நெளிதல்; to bend, writhe; to be twisted, distorted. 2. துருத்துதல்; to be pushed out, to protrude. 3. தோற்றுப்போதல்; to be defeated or vanquished.

[ஒருகா. கெக்கலி → கெக்களி.]

கெக்கு-தல் *kekku-,* 5 செ.கு.வி.(v.i.) கால்நடைகளை மேய்க்கும் போது ஒலி எழுப்புதல்; to shout in training cattle.

க. கெக்கு.

[கக்கு → கெக்கு (கக்குதல் போன்று அடித் தொண்டையால் ஒலியெழுப்புதல்).]

கெக்கை *kekkai,* பெ. (n.) கன்னம்; cheek.

க. கெக்கெ; **தெ.** செக்கு, செங்கெ.

[செவிப்பட்டை → செப்பட்டை → செக்கெ → கெக்கெ → கெக்கை (கொ.வ.)]

கெகராசி *kegarāśi,* பெ.(n.) செடிவகை, பூலா (மலை.); black berried feather foil.

[குவை → கிவை → கிகை + ராசி – கிகைராசி → கெகராசி (கொ.வ.).]

கெங்கபாடி *keṅgapāḍi,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Viḻuppuram Dt.

[கங்கன் + பாடி – கங்கபாடி → கெங்கபாடி (கொ.வ.).]

கெங்கரை *keṅgarai,* பெ.(n.) நீலகிரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Nīlagiri Dt.

[கங்கன் + கரை – கங்கங்கரை → கெங்கரை (கொ.வ.).]

கெங்கலு கண்டிகை *keṅgalu-kaṇḍigai,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tiruvaḷḷūr Dt.

[கங்கல் → கெங்கலு (கொ.வ.) + கண்டிகை]

கெங்காதீரம் *keṅgā-tīram,* பெ.(n.) கங்கைக்கரை; bank of Ganges. "கெங்கா தீரத்துத் தேசம்" (பெருங்.உஞ்சை.36:220).

[கங்கை → கெங்கை + தீரம் – கெங்காதீரம்.]

கெங்கை *keṅgai,* பெ.(n.) கங்கையாறு; river Ganges.

[கங்கை → கெங்கை (கொ.வ.).]

கெங்கையாடிக் குப்பம் *keṅgai-y-āḍi-k-kuppam,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tiruvaḷḷūr Dt.

[கங்கை → கெங்கை + ஆடி – கெங்கையாடி + குப்பம்.]

கெச்சக்காய் *kecca-k-kāy* பெ.(n.) 1. கழற்சிக்காய்; molucca-beans. 2. கழற்கொடி; molucca-bean-Caesalpina bonducella.

க. கெச்சகாய்; **தெ.** கட்ச்சகாய.

[கழற்சிக்காய் → கெச்சக்காய் (கொ.வ.).]

கெச்சக்காய்

கெச்சக்கீயம் *kecca-k-kīyam,* பெ.(n.) தூதுவேளை; three-lobed night-shade.

[கச்சல் → கெச்சல் + கீயம். கச்சல் = மென்மை, இளமை.]

கெச்சங்கெட்டவன் *keccaṅ-keṭṭavaṉ,* பெ.(n.) நாணமில்லாதவன்; shameless man, person void of self-respect.

[கெச்சம் + கெட்டவன் (கெச்சம் = நாணம்).]

கெச்சச்சிலந்தி *kecca-c-cilandi,* பெ.(n.) ***கெச்சைச் சிலந்தி*** பார்க்க; see *keccai-c-cilandi.*

ம. கெச்சச்சிலந்தி.

[கெச்சம் + சிலந்தி.]

கெச்சசீரம் *kecca-śīram,* பெ.(n.) முல்லை; jasmine.

[கெச்சம் → கெச்சசீரம். கெச்சம் = முல்லை.]

கெச்சட்டிகை *keccaṭṭigai,* பெ.(n.) கழுத்தணி வகை; a kind of ornament worn on the neck.

[தெ. கெச்சம் + அட்டிகை.]

கெச்சம்[1] *keccam* பெ.(n.) நாணம்; shame, sensitiveness, dread of evil.

படை. சிக்கு; **Skt.** lajja.

[சிணுங்கு → சிக்கு → சிக்கம் → கெச்சம்.]

கெச்சம்² *keccam.* பெ.(n.) 1. முல்லை (அக.நி.); wild jasmine. 2. அரசு (சங்.அக.); pipal.

[குச்சு → குச்சம் (ஊசிமுனை போன்றது) → கெச்சம்.]

கெச்சம்³ *keccam* பெ.(n.) ***கெச்சை*** பார்க்க; see *keccai.* *"பெண்க ளணிமணிக் கெச்சமடா" (குற்றா. குற. 123: 12).*

ம. கெச்ச; **க., தெ.** கச்செ; **படை.** கக்கரெ.

[கழஞ்சு → கழஞ்சம் → கச்சம் → கெச்சம்.]

கெச்சல்நாயக்கன்பட்டி *keccal-nāyakkan-paṭṭi.* பெ.(n.) சேலம் மாவட்டத்துச் சிற்றூர்: a village in Salem Dt.

[கெச்சம் → கெச்சில் → கெச்சல் + நாயக்கன் + பட்டி.]

கெச்சனா *keccanā.* பெ.(n.) கையாந்தகரை; eclipse plant.

[கெச்சம் → கெச்சனா.]

கெச்சனித்தல் *keccanittal,* தொ.பெ.(vbl.n.) 1. கூடுதல்: joining. 2. சேருதல்; uniting.

[குள் → குச்சு → குச்சனி → கெச்சனி → கெச்சனித்தல் (கொ.வ.).]

கெச்சி *kecci* பெ.(n.) பேய்த்தும்மட்டி வகை (சங்.அக.); bitter water-melon.

Skt. gavākṣi.

[கிச்சு → கெச்சு → கெச்சி.]

கெச்சிகா *keccigā.* பெ.(n.) மயிற்றலைப் பூடு; peacock crest plant.

[குச்சி → குச்சிகை → கெச்சிகா (கொ.வ.).]

கெச்சிதம் *keccidam.* பெ.(n.) 1. பெருமிதம் (இ.வ.); majestic air. 2. குணமடைந்துவருகை; improvement in health. உடம்பு கெச்சிதமாய் வருகிறது (இ.வ.). 3. முழக்கம்; roaring noise.

[கச்சிதம் → கெச்சிதம்.]

கெச்சிநடை *kecci-naḍai* பெ.(n.) ***கெச்சைநடை*** பார்க்க; see *keccai-naḍai.*

[கச்சிதம் → கெச்சித(ம்) → கெச்சி - நடை.]

கெச்சிலாபுரம் *keccilā-puram.* பெ.(n.) தூத்துக்குடி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tūttukkuḍi Dt.

[கெச்சம் → கெச்சில் + புரம்.]

கெச்சுக்கெச்செனல் *keccu-k-keccenal.* பெ.(n.) 1. கீச்சிடுதற் குறிப்பு; onom. expr. signifying chirping, as of a lizard. 2. துன்புறுத்துதற் குறிப்பு; expr. signifying teasing, harassing.

[கெச்சு + கெச்சு + எனல்.]

கெச்சுருட்டி *keccuruṭṭi,* பெ.(n.) திப்பிலி; long pepper.

[கச்சல் → கெச்சல் → கெச்சு + உருட்டி]

கெச்சை *keccai* பெ.(n.) சலங்கை; tinkling bells worn around the ankle. *"அடியிடத்தே சமைத்துக்கட்டின... கெச்சையும்" (கலித். 96, உரை).*

ம. கெச்ச; **க.** கச்சக, கெச்செ; **து.** கெச்ச, கெச்செ, கச்செ; **தெ.** கச்சியா, கச்செ; **படை.** குக்கரெ; **துட.** கிச்; **குட.** கெச்செ; **கோத.** கெச்.

[கழஞ்சு → கழஞ்சம் → கச்சம் → கெச்சம் → கெச்சை.]

கெச்சைகட்டு–தல் *keccai-k-kaṭṭu-,* 5 செ.குன்றா. வி.(v.t.) 1. நாடகம் ஆடுவதற்காகக் காலில் கச்சை கட்டுதல்; to adorn anklet for dance. 2. அணியமாதல்; (சோநா.) to get ready.

ம. கெச்சகெட்டுக.

[கெச்சை + கட்டு-.]

கெச்சைக்குதிரை *keccai-k-kudirai.* பெ.(n.) ஒலிக்கும் கெச்சை அணிந்த குதிரை; horse with anklet of tinkling bells.

[கெச்சை + குதிரை.]

கெச்சைக்கொலுசு *keccai-k-kolusu* பெ.(n.) ஒலிக்கும் முத்துகளையுடைய கொலுசு; anklet of tinkling silver bells.

[கெச்சை + கொலுசு.]

கெச்சைச்சிலந்தி *keccai-c-cilandi.* பெ.(n.) கெச்சைமணி கட்டியதுபோல் காலில் உண்டாகும் சிரங்கு; a kind of eruption on the foot (சோநா.).

ம. கெச்சச்சிலந்தி.

[கெச்சை + சிலந்தி.]

கெச்சைநடை *keccai-naḍai.* பெ.(n.) பெருமித நடை (வின்.); pompous or affected gait.

[கெச்சை + நடை.]

கெச்சைமிதி *keccai-midi,* பெ.(n.) 1. கூத்தின் விரைந்த நடை; a quick or hurried step in dancing. 2. குதிரை விரைந்துசெல்லும் நடைவகை; rapid pace of

a horse. கெச்சைப்பிதிரியிலே போ. 3. பெருமித நடை: pompous or affected gait.

[கெச்சை + அடி.]

கெசக்கன்னி *kesa-k-kanni.* பெ.(n.) 1. வெருகு (மலை.); a tuberous-rooted herb. 2. மொந்தன் வாழை; stout banana (சா.அக.).

[கச்சல் → கெசல் + கன்னி.]

கெசந்தாதி *kesandādi.* பெ.(n.) அரசமரம்; pipal tree (சா.அக.).

மறுவ. கெசாசனை.

[குச்சு → கெச்சு → கெச்சந்தல் → கெசந்தாதி (கூரிய இலையுடையது).]

கெசனிக்கீரை *kesani-k-kirai.* பெ.(n.) கூரிய இலையுடைய கீரை; a kind of greens.

[குச்சு → கெச்சு → கெச்சனி → கெசனி + கீரை.]

கெஞ்சம்பட்டி *kenjam-patti,* பெ.(n.) மதுரை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Madurai Dt.

[கெச்சம் (முல்லைக்கொடி, அரசமரம்) → கெஞ்சம் + பட்டி.]

கெஞ்சல் *kenjal,* தொ.பெ. (vbl.n.) இரக்கமான வேண்டுகோள்; imploring, pleading, entreaty. உன் கெஞ்சலுக்கு அவன் மசியமாட்டான் (உ.வ.).

ம. கெஞ்சல்.

[கெஞ்சு + அல். 'அல்' தொ.பெ.ஈறு.]

கெஞ்சி *kenji,* பெ.(n.) சீந்தில்; moon-creeper.

[கொளுஞ்சி → கொஞ்சி → கெஞ்சி.]

கெஞ்சிக்கேள்-தல் (கெஞ்சிக்கேட்டல்) *kenji-k-kel-,* 11 செ.குன்றாவி. (v.t.) பணிவான குரலுடன் வேண்டுதல்; to beg, entreat, beseech.

[கெஞ்சு + இ + கேள்.]

கெஞ்சு-தல் *kenju-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. இரந்து குறையுறுதல்; to beg humbly; to entreat, crave, beseech with supplicating gestures. *"கெஞ்சு மாதங்கமுகம் பார்த்திரங்கும்" (தனிப்பா. 1.339,50).* 2. இரக்கமாக வேண்டுதல்; to implore, to plead. உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கின்றேன். இந்த முறை மட்டும் மன்னித்து விடுங்கள் (உ.வ.).

ம. கெஞ்சுக., கிஞ்சுக; **கோத.** கென்ச்; **கோண்.** கேன்சானா; **பட.** கெஞ்சு; **மா.** க்வெகெ(கேள்).

Skt. khanj

[முனைகு → எங்கு → கெஞ்சு (கொ.வ.).]

கெஞ்சுதல் *kenjudal,* தொ.பெ. (vbl.n.) ***கெஞ்சல்*** பார்க்க; see *kenjal.*

[கெஞ்சு + தல். 'தல்' தொ.பெ.ஈறு.]

கெட்ட *ketta,* பெ.எ. (adj.) 1. அழிந்த; bad, ruined. *'கெட்ட குடியே கெடும்' (பழ.).* 2. தீமை விளைவிக்கிற; harmful. கெட்ட பழக்கத்திற்கு அடிமையாகிவிடாதே. 3. தவறான; mistaken. உனக்கு என்ன கெட்ட நேரமோ? 4. ஒழுக்கமில்லாத; evil; bad conduct. உனது கெட்ட நண்பனே இந்த நிலைக்குக் காரணம். 5. மோசமான; obnoxious. இந்தக் கெட்ட நாற்றம் எங்கிருந்து வருகிறது. 6. பதனழிந்த; spoiled. 7. அணைந்த (விளக்கு); having become extinguished (சேரநா.). 8. காணாமல் போன, இல்லாமலான; lost, absent.

ம., க., குட., து., பட. கெட்ட; **தெ.** செட்ட, செடு.

Gk. kakos; **Laos.** hai; **Ahom.** khyā; **Toungh-tem.** kay; **Talaim vmon.** hakhā; **Kūmi.** hauio; **Kungcheng bung.** cuttko; **Gyami.** hontimyā; **Basq.** gazto, cesto.

[கெடு → கெட்ட.]

கெட்ட கண் *ketta-kan,* பெ.(n.) 1. கொள்ளிக் கண்; evil eye. 2. குருட்டுக் கண்; blind eye.

[கெட்ட + கண்.]

கெட்ட காரியம் *ketta-kāriyam,* பெ.(n.) ***கெட்ட செயல்*** பார்க்க; see *ketta-seyal.*

ம. கெட்டகார்யம்.

[கெட்ட + காரியம்.]

கெட்ட காலம் *ketta-kālam,* பெ.(n.) தீய நேரம்; inauspicious time, bad time.

ம. கெடுகாலம்.

[கெட்ட + காலம்.]

கெட்டகுடி *ketta-kudi,* பெ.(n.) நன்கு வாழ்ந்து, பின் தாழ்ந்தபோன குடும்பம்; the family once rich but now poor. *'பட்ட காலிலேபடும் கெட்ட குடியே கெடும்' (பழ.).*

[கெட்ட + குடி.]

கெட்ட குடும்பம் *ketta-kudumbam,* பெ.(n.) ***கெட்ட குடி*** பார்க்க; see *ketta-kudi.*

[கெட்ட + குடும்பம்.]

கெட்டகுணம் *ketta-gunam*, பெ.(n.) தீயபண்பு; bad character, evil nature.

க. கெட்ட கொண; து. கெட்டகுண.

[கெட்ட + குணம்.]

கெட்டகேடு *ketta-kēdu*, பெ.(n.) 1. தாழ்நிலையைக் குறிக்கும் ஓர் இழிசொல்; a term of contempt implying utter degradation or destitution. நீ கெட்ட கேட்டுக்கு உனக்கு எண்ணெயும் வேண்டுமா? 2. அதிகக் கேடு; high blemish.

[கெட்ட + கேடு.]

கெட்டகோபம் *ketta-kōbam*, பெ.(n.) ***கெட்ட சினம்*** பார்க்க; see *ketta-šinam*. அவருக்குக் கெட்ட கோபம் வரும்.

[கெட்ட + கோபம்.]

கெட்டசமயம் *ketta-šamayam*, பெ.(n.) ***கெட்ட நேரம்*** பார்க்க; see *ketta-nēram*.

[கெட்ட + சமயம்.]

கெட்டசினம் *ketta-šinam* பெ.(n.) கட்டுப்படுத்த முடியாத சினம்; seething rage.

[கெட்ட + சினம்.]

கெட்டசெயல் *ketta-šeyal*, பெ.(n.) 1. அழிவைத்தரும் அல்லது இழப்பைத் தரும் செயல்; activity leading to loss, guin. 2. தீய செயல்; bad deed.

ம. கெடுகாரியம்.

[கெட்ட + செயல்.]

கெட்டணை *kettanai* பெ.(n.) இறுகும்படி கெட்டியாதல்; ramming, beating down.

[கட்டி → கெட்டி → கெட்டணை.]

கெட்டதனம் *ketta-tanam* பெ.(n.) ***கெட்ட நடத்தை*** பார்க்க; see *ketta-nadattai*.

க. கெட்டதன. கெடுகுதன; தெ. செட்டதனமு; து. கெட்டதன.

[கெடு → கெட்ட + தனம்.]

கெட்டநகம் *ketta-nagam* பெ.(n.) சொத்தை உகிர் (நகம்); bad nail.

[கெட்ட + நகம்.]

கெட்டநடத்தை[1] *ketta-nadattai*. பெ.(n.) இருமனைப் பெண்டிர்; prostitution or loose morality especially in woman.

[கெட்ட + நடத்தை.]

கெட்டநடத்தை[2] *ketta-nadattai*, பெ.(n.) தீயொழுக்கம்; bad, immoral conduct.

க., து. கெட்ட நடதெ.

[கெடு → கெட்ட + நடத்தை.]

கெட்டநடவடிக்கை *ketta-nadavadikkai*, பெ.(n.) தீய செயல்; wrong actions.

ம. கெடு நடவடிக்கை.

[கெட்ட + நடவடிக்கை.]

கெட்டநடை *ketta-nadai*, பெ.(n.) ***கெட்ட நடத்தை***[2] பார்க்க; see *ketta-nadattai*.

[கெட்ட + நடை.]

கெட்டநாக்கு *ketta-nākku*, பெ.(n.) தீய நாக்கு; evil tongue.

மறுவ. கருநாக்கு.

[கெட்ட + நாக்கு.]

கெட்டநாற்றம் *ketta-nārram*, பெ.(n.) தீய நாற்றம்; முடைநாற்றம்; bad, offensive, stench obnoxious smell.

[கெட்ட + நாற்றம்.]

நாறு → நாற்றம். பழந்தமிழில் நாற்றம் நறுமணத்தையே குறித்தது. இக்காலத்தில் இழிபொருளைக் குறிப்பதாயிற்று.

கெட்ட நிலை *ketta-nilai*, பெ.(n.) பிசகான நிலை; malposition as of intestines, uterus (சா.அக.).

[கெட்ட + நிலை.]

கெட்டநேரம் *ketta-nēram*, பெ.(n.) தீய நேரம்; bad time, inauspicious time.

[கெட்ட + நேரம்.]

கெட்டநோய் *ketta-nōy*, பெ.(n.) 1. சிக்கலான நோய்; disease attended with complications. 2. கொடிய நோய்; a malignant disease. 3. பேரிடர் (அபாயமான) நோய்; dangerous disease. 4. பிறப்புறுப்புகளில் உண்டாகும் நோய் (மேக நோய்); venereal disease. 5. உயிர் பறிக்கும் கொள்ளை நோய்கள்; diseases such as cholera, small-pox, tuberculosis, consumption, plague, etc.

மறுவ. கெட்ட வியாதி.

[கெட்ட + நோய்.]

கெட்டபல் *ketta-pal,* பெ.(n.) **1.** சொத்தைப் பல்; disintegrated tooth. 2. நச்சுப்பல்; teeth as a cause for uttering bad predictions which turn out to become true.

[கெட்ட + பல்.]

கெட்டபழக்கம் *ketta-palakkam* பெ.(n.) தீயபழக்கம்; bad habit.

து. கெட்டப்பேச, கெட்டப்பேசொ.

[கெட்ட + பழக்கம்.]

கெட்டபுத்தி *ketta-putti* பெ.(n.) ***கெட்டவறிவு*** பார்க்க; see *ketta-v-arivu.*

[கெட்ட + புத்தி.]

கெட்டபெயர் *ketta-peyar,* பெ.(n.) கண்டிக்கத் தக்க நடத்தையில் கிடைக்கும் அவப்பெயர்; bad name arising from reprehensible behaviour. உன்னால் நம் குடும்பத்துக்கே கெட்ட பெயர்.

[கெட்ட + பெயர்.]

கெட்டபேச்சு *ketta-peccu,* பெ.(n.) தீய பேச்சு; foul talk, insulting speech.

க. கெட்ட நுடி; **து.** கெட்டபாதெர; **பட.** கெட்ட மாது.

[கெடு → கெட்ட + பேச்சு.]

கெட்டபேர் *ketta-pēr,* பெ.(n.) ***கெட்ட பெயர்*** பார்க்க; see *ketta-peyar.*

[கெட்ட + பெயர் → பேர்.]

கெட்டம் *kettam,* பெ.(n.) தாடி; beard.

க., து., பட. கட்டு; **தெ.** கட்டமு.

Skt. ganda

[கட்டை - முகவாய்க்கட்டை → கட்டை → கட்டம் → கெட்டம் (கொ.வ.).]

கெட்டமனம் *ketta-manam,* பெ.(n.) தீய மனம்; bad mind.

[கெட்ட + மனம்.]

கெட்ட மூக்கு *ketta-mūkku,* பெ.(n.) மூளி மூக்கு; deformed nose.

[கெட்ட + மூக்கு.]

கெட்டரத்தம் *ketta-rattam,* பெ.(n.) தூய்மையற்ற குருதி; dark coloured blood, oozing out from a wound.

க. கெட்டரக்த; **து.** கேட் நெத்தரு; **பட.** கெட்ட நெத்தரு.

[கெட்ட + அரத்தம்.]

கெட்டலை-தல் *kettalai-,* 2 செ.கு.வி. (v.i.) நிலைகெட்டுத் திரிதல்; to go astray, lead the life of a vagabond.

[கெடு → கெட்டு + அலை-.]

கெட்டவயிறு *ketta-vayiru,* பெ.(n.) செரியாமை அல்லது வேறு காரணங்களால் கோளாறடைந்த வயிறு; disorder of stomach due to indigestion or other causes.

[கெட்ட + வயிறு.]

கெட்டவழி *ketta-vali,* பெ.(n.) தீய வழி; evil way.

க. கெடுவட்டெ, கெட்டதாரி.

[கெட்ட + வழி.]

கெட்டவள் *kettaval,* பெ.(n.) **1.** தீயொழுக்கமுள்ளவள்; a bad, immoral woman. 2. கேடு அடைந்தவள்; a woman who is ruined.

க. கெடுதி; **து.** கெட்டபசாரி; **பட.** கெட்டவ.

[கெடு → கெட்ட + அவள்.]

கெட்டவறிவு *ketta-v-arivu,* பெ.(n.) தீய வறிவு; crooked mindedness, wickedness.

ம. கெடுமதி.

[கெட்ட + அறிவு.]

கெட்டவன் *kettavan,* பெ.(n.) 1. தீயொழுக்க முள்ளவன்; a mischief maker; a bad, wicked, mean man. 2. முன்பு நன்னிலையிலிருந்து பின்னர்த் தாழ்ந்தவன்; one degraded from higher position.

க. கெடுக; **தெ.** கட்டுவாடு; **பட.** கெட்டம.

Pkt. kontha

[கெடு → கெட்ட + அவன்.]

கெட்டவாடி *ketta-vādi,* பெ.(n.) ஈரோடுமாவட்டத்துச் சிற்றூர்; a village in Erode Dt.

[கட்டி → கெட்டி + பாடி - கெட்டிபாடி → கெட்டவாடி (கொ.வ.).]

கெட்டவார்த்தை *ketta-vārttai,* பெ.(n.) திட்டுவதற்கு மட்டும் பயன்படுத்துகிற இழிசொல்; dirty obscene language. *கெட்ட வார்த்தை சொல்லியா திட்ட வேண்டும்.*

[கெட்ட + வார்த்தை.]

மறுவ. கெட்ட சொல், இழிசொல்.

கெட்டவாரி *ketta-vāri,* பெ.(n.) நெல்வகை (மதி.களா.I,6); a kind of paddy.

[கெடு → கெட்ட + வாரி.]

கெட்டவியல்பு *ketta-v-iyalbu,* பெ.(n.) தீயபண்பு; immoral character.

[கெட்ட + இயல்பு.]

கெட்டவியாதி *ketta-viyādi,* பெ.(n.) ***கெட்ட நோய்*** பார்க்க; see *ketta-nōy*

*[கெடு → கெட்ட + வியாதி. **Skt.**]*

கெட்டவிரல் *ketta-viral,* பெ.(n.) குருதியோட்டம் குறைந்து வெண்ணிறமடைந்த விரல்; dead finger.

[கெட்ட + விரல்.]

கெட்டவுடம்பு *ketta-v-udambu,* பெ.(n.) பெண் நோயினால்சீரழிந்தவுடம்பு; system degenerated by venereal or syphilitic disease.

[கெட்ட + உடம்பு.]

கெட்டவுருவம் *ketta-v-uruvam,* பெ.(n.) குற்ற முடைய உருவம்; a deformed figure, monstrous figure.

க. கெட்டொடல்.

[கெட்ட + உருவம்.]

கெட்டவெண்ணம் *ketta-v-ennam,* பெ.(n.) தீய எண்ணம்; evil, bad thought.

[கெட்ட + எண்ணம்.]

கெட்டவேலை *ketta-vēlai,* பெ.(n.) தீய பணி; an evil deed.

க., து. கெட்டகெலச.

[கெட்ட + வேலை.]

கெட்டவேளை *ketta-vēlai,* பெ.(n.) 1. தீய காலம்; inauspicious time. 2. பொல்லாங்கான காலம்; adverse time or times. 3. காலமல்லாக் காலம்; in opportune time.

[கெட்ட + வேளை.]

கெட்டழி–தல் *kettali-,* 2 செ.கு.வி. (v.i.) 1. ஆண் பெண்கள் பரத்தமையால் ஒழுக்கம் கெடுதல்; to become loose in morals. 2. வீண் செலவினால் நிலைமை கெடுதல்; to be ruined by extravagant expenditure.

[கெடு → கெட்டு + அழி–.]

கெட்டாகுளம் *kottākulam,* பெ.(n.) நெய்வேலி வட்டத்துச் சிற்றூர்; a village in Neyveli Tk.

[கட்டி → கெட்டி + குளம் – கெட்டி குளம் → கெட்டாகுளம்.]

கெட்டாகெட்டி *kettā-ketti,* பெ.(n.) ***கெட்டாரகெட்டி*** பார்க்க; see *kettāra-ketti.*

[கெட்டாரகெட்டி → கெட்டாகெட்டி.]

கெட்டாரகெட்டி *kettāra-ketti,* பெ.(n.) 1. மிகு திறன்; great ability, consummate skill. 2. வலிமை பொருந்தியவன்; person of great ability or skill.

க. கெட்டாரகெட்டி.

[கட்டாரம் → கெட்டாரம் + கெட்டி.]

கெட்டி[1]–த்தல் *ketti-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. நிலம் முதலியவற்றைக் இறுக்கப்படுத்துதல்; to harden, strengthen, make firm. 2. துமுக்கி (துப்பாக்கி) யில் மருந்திட்டுக்கெட்டிப்படுத்துதல்; charge or load a firearm.

[கட்டி → கெட்டி.]

கெட்டி[2] *ketti,* பெ.(n.) 1. உறுதி; firmness, strength, hardness, durability. 2. இறுக்கம்; denseness, as of a liquid. 3. திறமை; cleverness, ability, skill. 4. வலியவன்; man of ability or skill; clever person. 5. உரத்த குரல்; loudness, as of tone. கெட்டியாய்ப் படிக்கிறான். 6. அழுத்தம்; profundity, soundness. கெட்டிப்படிப்பு. 7. திண்மை; thickness. அழைப் பிதழைக் கெட்டித்தாளில் அச்சடிக்க வேண்டும். 8. நீடித்த தன்மையுடையது; long lasting. அவருக்கு ஆயுள் கெட்டி.

க., தெ., பட. கட்டி.

Mar. gatti.

[கட்டி → கெட்டி.]

கெட்டி[3] *ketti,* இடை.(int.) மிக நன்று; well done, bravo. "*கெட்டியையா நல்லதென்பார்*" *(பணவிடு. 19).*

[கட்டி → கெட்டி.]

கெட்டிக்கட்டடம் *ketti-k-kattadam,* பெ.(n.) கருங்கல், அல்லது செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடம்; building made of brick or stone.

[கெட்டி + கட்டடம்.]

கெட்டிக்காப்பு *ketti-k-kāppu,* பெ.(n.) வெள்ளி அல்லது தங்கத்தாலான உட்டுளை இல்லாது இறுகிய காப்பு; bracelet or anklet of solid gold or silver.

[கெட்டி + காப்பு.]



கெட்டிக்காப்பு

கா = காப்பு. தீயன அணுகாது காக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அணியப்படும் அணிகலன் காப்பு எனப்பட்டது. வீட்டு முற்றத்தில் காப்புக் கட்டுவதுபோன்றனவும் இந் நம்பிக்கையின் அடிப்படையே.

கெட்டிக்காரன் *keṭṭi-k-kāraṉ,* பெ.(n.) 1. திறமையானவன்; clever, active man. வேலையில் மிகவும் கெட்டிக்காரன் (உ.வ.). 2. துணிச்சல்மிக்கவன்; a braveman. 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும்' (பழ.).

தெ. கட்டிவாடு, கட்டுவகாடு.

[கட்டி → கெட்டி + காரன்.]

கெட்டிக்காரி *keṭṭi-k-kāri,* பெ.(n.) திறமையுள்ளவள்; capable woman.

[கட்டி → கெட்டி + காரி.]

கெட்டிக்குடல் *keṭṭi-k-kuḍal,* பெ.(n.) கழிச்சல் எளிதில் ஆகாக் கல் குடல்; hard bowels not easily moved by purgatives (சா.அக.).

[கெட்டி + குடல்.]

கெட்டிக்குரல் *keṭṭi-k-kural,* பெ.(n.) உரத்த ஒலி; loud cry (சா.அக.).

[கெட்டி + குரல்.]

கெட்டிக்கொலுசு *keṭṭi-k-kolusu,* பெ.(n.) தங்கத்தால் அல்லது வெள்ளியால் ஆன உட்டுளை இல்லாத



கெட்டிக்கொலுசு

கொலுசு; chain, bracelet or anket of solid gold or silver.

[கெட்டி + கொலுசு.]

கெட்டிச்சாயம் *keṭṭi-c-cāyam,* பெ.(n.) அழுத்தமான எளிதில் மாறாத சாயம் (உ.வ.); fast colour.

[கெட்டி + சாயம்.]

கெட்டிசாவி *keṭṭi-šāvi,* பெ.(n.) ***கெட்டித்திறவுகோல்*** பார்க்க; see *keṭṭi-t-tiṟavu-kōl.*

மறுவ. கெட்டித்திறப்பு.

[கெட்டி + சாவி.]

கெட்டிசேயூர் *keṭṭisēyūr,* பெ.(n.) ஈரோடு மாவட்டத்துச் சிற்றூர்; a village in Erode Dt.

[கட்டி → கெட்டி + சேய் + ஊர்.]

கெட்டித்தயிர் *keṭṭi-t-tayir,* பெ.(n.) உறைந்த தயிர்; curdled milk.

மறுவ. கட்டித்தயிர்.

[கெட்டி + தயிர்.]

கெட்டித்தன்மை *keṭṭi-t-taṉmai,* பெ.(n.) இறுகலான தன்மை; toughness.

[கெட்டி + தன்மை.]

கெட்டித்தனம் *keṭṭi-t-taṉam,* பெ.(n.) 1. திறமை; cleverness, dexterity, capability. 2. செட்டு; economy, thrift.

[கெட்டி + தனம்.]

கெட்டித்திறவுகோல் *keṭṭi-t-tiṟavu-kōl,* பெ.(n.) உட்டுளையில்லாத திறவுகோல்; solid key.

மறுவ. கெட்டிச்சாவி.

[கெட்டி + திறவு + கோல்.]

கெட்டித்தீர்வை *keṭṭi-t-tīrvai,* பெ.(n.) சோளம் முதலிய தவசங்கள் விளையும் நிலங்களுக்குரிய வரி (R.I.); assessment payable on lands cultivating certain superior kinds of dry grain, e.g., cholam, ragi, etc.

[கெட்டி + தீர்வை.]

கெட்டித்தேன் *keṭṭi-t-tēṉ,* பெ.(n.) இறுகிய தேன்; thick honey.

[கெட்டி + தேன்.]

கெட்டிதளவாய் *keṭṭi-taḷavāy* பெ.(n.) கட்டபொம்மு வழிமுறையில் இருபத்து நான்காவது அரசன்; twenty fourth chieftain of Kattabommu's lineage.

[கெட்டி + தளவாய்.]

கெட்டிப்படு-தல் *ketti-p-padu-*, 20 செ.கு.வி.(v.i.) இறுகுதல்; to become solid.

[கெட்டி + படு-.]

கெட்டிப்படுத்து-தல் *ketti-p-paduttu-*, 5 செ. குன்றாவி. (v.t.) 1. திடப்பொருளாக்குதல்; bring to a solid state. 2. ***கெட்டிபண்ணு-தல்***பார்க்க; see *ketti-p-pannu-*.

தெ. கட்டிசேயு.

[கெட்டி + படுத்து-.]

கெட்டிப்பணம் *ketti-p-panam*, பெ.(n.) நாணயவகை; a kind of fanam, a coin.

[கெட்டி + பணம்.]

கெட்டிப்பல் *ketti-p-pal*, பெ.(n.) இறுகிய பல்; hard or firm tooth.

[கெட்டி + பல்.]

கெட்டிப்பாகு *ketti-p-pāgu*, பெ.(n.) 1. தடித்த வெல்லம்; a thick treacle made out of jaggery. 2. சருக்கரைப் பாகு; liquid form of sugar.

[கெட்டி + பாகு.]

கெட்டிப்பிள்ளை *ketti-p-pillai-*, பெ.(n.) திறமையான இளைஞன்; talented youngster. செட்டிப்பிள்ளை கெட்டிப்பிள்ளை (பழ.).

[கெட்டி + பிள்ளை.]

கெட்டிபண்ணு-தல் *ketti-pannu-*, 5. செ.குன்றாவி. (v.t.) 1. நிலம் முதலியவற்றை உறுதியாக்குதல்; to make firm, harden. 2. மருந்துமுதலியவற்றை இறுகச் செய்தல்; to solidity, as liquid medicines.

[கெட்டி + பண்ணு-.]

கெட்டிபத்திரம் *ketti-pattiram*, பெ.(n.) விழிப்பான கேட்பாடு(சாக்கிரதையான விசாரணை); delicate enquiry.

[கெட்டி + பத்திரம்.]

கெட்டிபொம்மு *ketti-pommu*, பெ.(n.) கட்டபொம்முவினுடைய நான்காவது வழிமுறையினன்; the fourth chieftain of Kattabommu's family.

[கெட்டி + பொம்மு.]

கெட்டிமிளகு *ketti-milagu*, பெ.(n.) அழுத்தமுள்ள மிளகு; solid pepper.

[கெட்டி + மிளகு.]

கெட்டிமுலை *ketti-mulai*, பெ.(n.) 1. இறுகிய முலை; hard breast. 2. தளராத முலை; firm breast.

[கெட்டி + முலை.]

கெட்டிமூங்கில் *ketti-mūngil*, பெ.(n.) கல் மூங்கில்; a variety of bamboo.

[கெட்டி + மூங்கில்.]

கெட்டிமேதிகம் *ketti-mēdigam*, பெ.(n.) புரசு; palaus tree.

[கெட்டி + மேதிகம்.]

கெட்டிமேளம் *ketti-mēlam*, பெ.(n.) தாலி கட்டுகை முதலிய சிறப்புகள் நிகழும்போது முழக்கும் இசை முழக்கம்; simultaneous and rapid play of musical instruments at special moments, as when the *tāli* is tied at a marriage.

[கொட்டு → கொட்டி → கெட்டி + மேளம்.]

கெட்டிமோர் *ketti-mōr*, பெ.(n.) தண்ணீர் கலக்காத மோர்; unadulterated butter-milk.

[கெட்டி + மோர்.]

கெட்டியாக்கு-தல் *ketti-y-ākku-*, 5 செ.குன்றா. வி.(v.t.) இறுகச் செய்தல்; to bring firm tight.

[கெட்டி + ஆக்கு-.]

கெட்டியா-தல் *ketti-y-ā-*, 6 செ.கு.வி.(v.i.) இறுகுதல்; to become firm. முடிச்சைக் கெட்டியாகப் போடு (உ.வ.).

[கெட்டி + ஆ-.]

கெட்டியுடம்பு *ketti-y-udambu*, பெ.(n.) 1. வலுவான உடம்பு; robust body. 2. உழைப்பினால் இறுகிய உடம்பு; body hardened through labour. 3. இயல்பாகவே வலிவுள்ள உடம்பு; body naturally strong. 4. கற்ப உடம்பு; body invigorated by process of rejuvenation.

[கெட்டி + உடம்பு.]

கெட்டிவஞ்சி *ketti-vañji*, பெ.(n.) 1. வைர வஞ்சி; iron wood tree. 2. சவுக்கு; casuarina.

[கெட்டி + வஞ்சி.]

கெட்டிவராகன் *ketti-varāgan*, பெ.(n.) கட்டி வராகன்; a coin.

[கெட்டி + வராகன்.]

கெட்டிவாத்தியம் *ketti-vāttiyam*, பெ.(n.) ***கெட்டி மேளம்***பார்க்க; see *ketti-mēlam*.

[கெட்டி + வாத்தியம்.]

Skt. vādya > **த.** வாத்தியம்.

கெட்டு *keṭṭu,* பெ.(n.) பக்கக்கிளை (யாழ்ப்.); branch of a tree or bough.

தெ. செட்டு; **பட.** சில்லு.

[கிளை → சிளை → சிள்ளு → **தெ.** செட்டு → **த.** கெட்டு.]

கெட்டுப்போ-தல் *keṭṭu-p-pō-,* 8 செ.கு.வி.(v.i.) 1. அழிதல்; to perish; to be ruined. 2. நைந்துபோதல்; to wear out. 3. பதனழிதல்; to be spoiled. 4. அழுகிப் போதல்; to be rotten, to decay. 5. ஒழுக்கங்கெடுதல்; to become bad, immoral. 6. வறுமை யுறுதல்; to fall on evil days; to be reduced to straitened circumstances. அந்தக் குடும்பம் கெட்டுப்போயிற்று (உ.வ.). 7. காணாமற் போதல்; to be lost, as goods (உ.வ.).

க. கெட்டுஹோகு.

[கெடு → கெட்டு + போ-.]

கெட்டுப்போனவள் *keṭṭu-p-pōṉavaḷ,* பெ.(n.) 1. கற்பழிந்ததனால் இனத்தினின்று விலக்கப்பட்டவள்; fallen, unchaste woman. 2. பாலியல் தொழில் செய்பவள்; a woman practicing of prostitution.

[கெட்டு + போன + அவள்.]

கெட்டுவிடு-தல் *keṭṭu-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) ***கெட்டுப் போ-***[1, 2] பார்க்க; see *keṭṭu-p-pō-.*

[கெட்டு + விடு-.]

கெட்டுவை-த்தல் *keṭṭu-vai-,* 4 செ.கு.வி.(v.i.) கிளைவிடுதல் (யாழ்ப்.); to send out branches, to ramify, branch out.

[கெட்டு + வை-. கெட்டு = கிளை.]

கெட்டெண்ணம் *keṭṭeṇṇam,* பெ.(n.) ***கெடுநினைவு*** பார்க்க; see *keḍu-niṉaivu.*

[கெட்ட + எண்ணம்.]

கெட்டேன் *keṭṭēṉ,* இடை.(int.) இரக்கக்குறிப்பு; expr. meaning woe is me! *"அருளிது வாயிற் கெட்டேன் பிழைப்பரோ வரக்க ராயோர்" (கம்பரா. விபீடண. 127).*

[கெடு → கெட்டேன்.]

யாவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்னும் என் கருத்துத் தோற்றது. நான் தோற்றேன் எனும் பொருளில் கெட்டேன் என்பது வியப்புக் குறித்த இடைச்சொல்லாயிற்று.

கெட்டோடு-தல் *keṭṭōḍu-,* 5 செ.கு.வி.(v.i.) தோற்றோடுதல்; to turn away (to guest).

க. கெட்டோடு.

[கெட்டு + ஓடு-.]

கெட்டனமல்லி *keṭṭaṉa-malli,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tiruvallūr Dt.

[குட்டு → கெட்டு (மேடு) → கெட்டன + (பள்ளி) மல்லி (கொ.வ.).]

கெடகம் *keḍagam,* பெ.(n.) புறாமுட்டி; parakeet burr.

[கிடகம் → கெடகம்.]

கெடகாரனூர் *keḍakāraṉūr,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கிடை (ஆட்டுப்பட்டி) + காரன் – கிடைகாரன் → கெடகாரன் + ஊர்.]

கெடச்செய்-தல் *keḍa-c-cey-,* 1 செ.குன்றாவி.(v.t.) 1. அழித்தல்; to destroy, ruin. 2. தீயதாக்குதல், கெடுத்துவிடுதல்; to make bad, to spoil. 3. அழகு நலங்கெடுத்தல்; to deflower. 4. நோய்முதலியவற்றை நீக்குதல்; to remove, as a disease. 5. விளக்குப் போன்றவற்றை அணைத்தல்; to extinguish as a lamp.

க. கெடிசு; **பட.** கெடசு.

[கெட + செய். செய்-து.வி.]

கெடசாரம் *keḍa-šāram,* பெ.(n.) இடர், இடையூறு, இன்னல், சிக்கல்; danger, misfortune, entanglment.

ம. கெடசாரம்.

[கெட + சாரம்.]

கெடமால்கட்டை *keḍamāl-kaṭṭai* பெ.(n.) மீன் வலையின் மேற்புறம் கட்டப்பட்ட மிதப்பு; a float tied with the fishing net.

மறுவ. தலைவலைக்கட்டை, தொங்கு வலைக்கட்டை, மோம்புக்கட்டை, கடைவால் கட்டை.

[கடைவால் → கெடமால் (கொ.வ.) + கட்டை.]

கெடலணங்கு *keḍal-aṇaṅgu* பெ.(n.) தவ்வை, மூதேவி (பிங்.); the goddess of misfortune.

[கெடு → கெடல் + அணங்கு]

கெடலூழ் *keḍal-ūḻ,* பெ.(n.) தீவினை; evil fate. *"கெடலூ ழூதலின் கேட்ட பொழுதே ... ஆருணி தெளிந்து" (பெருங். மகத. 25: 168).*

[கெடு → கெடல் + ஊழ்.]

கெடவரல் *keḍavaral,* பெ.(n.) 1. மகளிர் விளையாட்டு; a woman's game. *"கெடவர லாய மொடு" (தொல். சொல். 319).* 2. மகளிர் கூட்டம் (சூடா.); gathering of women. 3. ஒளிந்தாட்டம்; hide and seek play.

Punj. keḍa

[கெடு - மறைதல், ஒளிதல். கெடு + வரல் – கெடுவரல் ஒளிந்து வெளிவருதல். ஒளிந்தாட்டம்.]

கெடவை–த்தல் *keḍa-vai-*, 4 செ.குன்றாவி.(v.t.) 1. அழித்தல்; to destroy, ruin. 2. தீயதாக்குதல்; to make bad. 3. செயலிழக்கச்செய்தல்; to do cease as a function. 4 நலிவடையச் செய்தல்; to make weak.

க. கெடிசு; **பட.** கெடுசு.

[கெட + வை–.]

கெடாரம் *keḍāram*, பெ.(n.) கடிகாரம் (யாழ்.அக.); clock.

[கடிகாரம் → கெடாரம்.]

கெடாவிளக்கு *keḍā-viḷakku* பெ.(n.) தொடர்ந்து எரியும் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு எரியுமாறு வடிவமைக்கப்பட்ட விளக்கு; a lamp kept burning perpetually or for a fixed period of time.

மறுவ. அணையா விளக்கு, அவியா விளக்கு, நந்தா விளக்கு.

ம. கெடாவிளக்கு.

[கெடு + ஆ + விளக்கு. 'ஆ' – எதிர்மறை இடைநிலை.]

கெடி¹–த்தல் *keḍi-*, 4 செ.கு.வி. (v.i.) வெருவுதல், அச்சங்கொள்ளுதல் (யாழ்.அக.); to be afraid.

[கடி → கெடி.]

கெடி² *keḍi* பெ.(n.) ஊர்; village.

[கடி - எல்லை. கடி. (எல்லை வகுத்த ஊர்).]

கெடி³ *keḍi* பெ.(n.) நிறைவேறிவரும் செயல்; business accomplished. *"கெடியாயினவுங்கெடுமே" (சினேந். 451).*

[கடி → கெடி.]

கெடி⁴ *keḍi* பெ.(n.) 1. மலைக்கோட்டை, துருக்கம்; hill fort. 2. அதிகாரஞ்செல்லுமிடம்; jurisdiction province, region under authority. 3. வல்லமை; authority, power. *"கெடிமன்னர் வணங்குந் தாளான்" (சூடா. 9:10).* 4. புகழ்; fame, glory. *"மூன்று லோகங் கெடிபெற்ற ராவணா" (இராமநா. யுத். 32).* 5. அச்சம்; terror, fright, alarm.

தெ. கடி.

[கடி → கெடி.]

கெடிமண்டு–தல் *keḍi-maṇḍu-*, 5 செ.கு.வி.(v.i.) அச்சம்மிகுதல்; to be frightened out of one's wits; to be terrified, overwhelmed with fear.

[கெடி + மண்டு–.]

கெடிமாடு *keḍi-māḍu*, பெ.(n.) நீண்ட பயணத்தின் இடையிடையே வண்டியில் மாற்றிப் பூட்டும் எருது; bullocks stationed as relays in a journey.

[கெடி + மாடு.]

கெடியன் *keḍiyaṉ* பெ.(n.) அச்சம் உண்டாக்குபவன்; cruel, hard-hearted person.

[கடியன் → கெடியன்.]

கெடியாமவிதை *keḍiyāma-vidai*, பெ.(n.) தேற்றான்கொட்டை; water clearing nut.

[கடி - வட்டமான கலம். கடி → கடியாம + விதை – கடியாம விதை → கெடியாம விதை.]

மண்பாண்டங்களைச் சுடுமுன்னர்ச் சிறிதளவே விளக்கெண்ணெய் சேர்த்த செம்மண் பூசி, அதன்மீது தேற்றாங் கொட்டையால் தேய்க்கத் தேய்க்க மண் ஏனத்தில் மெருகு ஏறும். இது மண் ஏனத்தைத் தீற்றுவதற்குப் பயன்பட்டது.

கெடியாரம் *keḍiyāram*, பெ.(n.) 1. வெண்கலம்; bell-metal. 2. வெண்கலத்தட்டு; bell-metal vessel.

[கடி - வட்டம். கடி → கடியாரம் → கெடியாரம்.]

கெடிரோகம் *keḍi-rōgam*, பெ.(n.) அச்சத்தால் ஏற்படும் நோய்; a sudden prostration or perturbation of body and mind through fear.

[கடி → கெடி + ரோகம்.]

கெடிலம்¹ *keḍilam*, பெ.(n.) 1. கடலூரையடுத்துச் செல்லும் ஓராறு; a river near Cuddalore. *"நிரம்பு கெடிலப் புனலு முடையார்" (தேவா. 949:1).* 2. ஆழமான ஓடை; deep stream.

[கடி → கடிலம் → கெடிலம். (விரைந்து ஓடும் சிற்றாறு).]

கெடிலம்² *keḍilam*, பெ.(n.) 1. குகை; den. 2. ஒடுங்கிய பாதை (வின்.); narrow passage.

[கடி → கடிலம்.]

கெடிவெட்டூர்நாயக்கர் *keḍi-veṭṭūr-nāyakkar*, பெ.(n.) நாயக்க அரசர்களுளொருவர்; a Palayagar Chieftain.

[கெடி + வெட்டூர் + நாயக்கர்.]

வீரபாண்டிய கட்டபொம்மனுடைய தாய்மாமன். வெள்ளையர் இவனை அழைத்துக் கட்டபொம்முவிடம் தூது செல்லப் பயன்படுத்தினர்.

கெடிறு *kediru,* பெ.(n.) முள்ளுள்ள மீன்வகை; a kind of fish. *"பாண்மக ளின்கெடிறு சொரிந்த வகன்பெரு வட்டி"(ஐங்குறு. 47).*

[கெளிறு → கெடிறு.]



கெடிறு

கெடு¹–தல் *kedu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. அழிதல்; to perish, to be destroyed, annihilated. *"தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க" (நாலடி. 80).* 2. பழுதாதல்; to decay, rot; to become tarnished, damaged, spoiled, to be marred, blighted, worn out. 3. வறுமையுறுதல்; to fall on evil days, to be in straitened circumstances. *'கெட்டார்க்கு உற்றார் கிளையிலுமில்லை' (பழ.).* 4. ஒழுக்கங்கெடுதல்; to degenerate, deteriorate, change for the worse morally. கெட்டுப்போனவள். 5. உருவழிதல்; to be emaciated, reduced; deformed, disfigured. அந்தச் சித்திரங் கெட்டுவிட்டது. 6. தோற்றோடுதல்; to run away defeated. 7. கெடுதல்; to be elided, dropped. *"இறுதி யிகர மெய்யொடுங் கெடுமே" (தொல். எழுத்து.240).* 'பகையாளி குடியை உறவாடி கெடு' (பழ.). 8. வழிதவறிப்போதல்; to lose one's way. *"கெடுமரக்கலம் கரை சேர்ந்தாற் போல்" (ஈடு.1:2:3).* 9. எரியும் விளக்கு, தீப் போன்றன அணைதல்; to be extinguished as lamp fire etc., 10. காய்கறி முதலியன அழுகுதல்; to purify, rot. 11. செயலிழத்தல்; cease to function, weaken. 12. தீயதாதல்; to become bad. 13. கொடியதாதல்; to become visions. 14. நோய் கவலை முதலியன அடியோடு நீங்குதல்; to be removed, as disease, sorrow.

ம. கெடுக; **க., பட.** கெடு; **தெ.** செடு; **குட.** கெட்; **து.** கெடகுனி; **கோத.** கெட்; **துட.** கொட்; **கொலா.** கிட்; **நா.** இட்; **பர்.** சிட்; **கோண்.** கரீநாநா.

Gk. kakoein.

[கள் (வெட்டுதல், நீக்குதல்) → கடு → கெடு (அழிதல்).]

கெடு²–த்தல் *kedu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. அழித்தல்; to destroy, annihilate; to squander, as wealth; to extinguish. *"திங்கள் விளங்கொளி கெடுத்து வெய்யவன் ... தோன்றினான்" (நைடத. இந்திர.1).* 'கெடுப்பதும் வாயால், படிப்பதும் வாயால்' (பழ.). 2. பழுதாக்குதல்; to damage, spoil, tarnish, blast, injure. *"கெடுத்தொழிந்தானை.... புதல்வனை" (கம்பரா. மந்தரை. 76).* 3. ஒழுக்கங்கெடுத்தல்; to corrupt, demoralize, seduce, violate. 4. குற்றமாக்குதல்; to render nugatory, as religious rites, austerities. விரதங்களையெல்லாம் தீச்செயலால் கெடுத்துக் கொண்டான். 5. செயல் தடை செய்தல்; to frustrate. என் வேலையைக் கெடுக்காதே. 'கெடுப்பாரைத் தெய்வம் கெடுக்கும்' (பழ.). 6. நீக்குதல்; to remove. *"அரந்தை கெடுத்து வரந்தரு மிவளென" (சிலப். உரைபெறு.).* 7. ஆற்றல் குறையச்செய்தல்; to weaken, make inactive. 8. நஞ்சு முதலியவற்றை முறியச் செய்தல்; to neutralize, to counteract as poison in the system. இந்த வேர் நஞ்சைக் கெடுக்கும். 9. தோற்கச் செய்தல்; to defeat, overcome. 10. காணப்பெறாது போதல்; to lose, drop, as an object by negligence. *"எற்கெடுத்திரங்கி" (மணிமே. 5:36).*

ம. கெடுக்குக.

Gk. kakoein.

[கள் (வெட்டுதல், நீக்குதல்) → கடு → கெடு (அழித்தல்).]

கெடு³ *kedu,* பெ.(n.) தவணை; term, fixed time, instalment.

ம., க., து., கடு.

[கடு → கடுவு → கெடுவு → கெடு.]

கெடு⁴ *kedu,* பெ.எ. (adj.) 1. தீய; bad. 2. அழிந்த; ruined, wasted.

ம. கெடு.

[கடு → கெடு.]

கெடு⁵ *kedu,* பெ.(n.) 1. கேடு; peril, risk. *"கெடுவின்று மறங்கெழு சோழர்" (புறநா.39: 7).* 2. ஏழைமை; poverty. *"கெடுவாக வையாது" (குறள்.117).*

[கடு → கெடு.]

கெடுகாலம் *kedu-kālam,* பெ.(n.) அழிவுகாலம்; bad times, time of ruin, drought.

ம. கெடுகாலம்.

[கெடு + காலம்.]

கெடுகிடு–தல் *kedu-kidu-,* 4 செ.கு.வி.(v.i.) கெட்டொழிதல்; to be utterly ruined, to perish.

"*வெந்துயர் கெடுகிட*" (*தேவா. 1077: 11*).

[கெடுகு + இடு – கெடுகிடு.]

கெடுகு *kedugu*, பெ.(n.) கெடுதி, தீமை; evil.

க. கெடுகு.

[கெடு + கு – கெடுகு. 'கு' பெயரீறு.]

கெடுகுறி *kedu-kuri* பெ.(n.) தீயநிமித்தம் (உ.வ.); bad sign, evil omen, portents.

[கெடு + குறி.]

கெடுசொல் *kedu-šol*, பெ.(n.) தீய பேச்சு; evil word.

க. கெடுசொல்.

[கெடு + சொல்.]

கெடுத்தம் *keduttam*, பெ.(n.) ***கெடு***[3] பார்க்க; see *kedu*.

[கெடு → கெடுத்தம்.]

கெடுத்துவிடு–தல் *keduttu-vidu-*, 8 செ.குன்றாவி. (v.t.) அழித்துவிடுதல்; to ruin, destroy.

[கெடு → கெடுத்து + விடு–. விடு – து.வி.]

கெடுத்தை *keduttai*, பெ.(n.) நச்சுத்தன்மையுள்ள முள்ளுடன் கூடிய கடல்மீன்வகை; a kind of sea fish.

[கெடு → கெடுத்தை]

கெடுத்தையுளுவை *keduttai-y-uluvai*, பெ.(n.) கடல்மீன்வகை; a kind of sea fish.

[கெடுத்தை + உளுவை]



கெடுத்தையுளுவை

கெடுதப்பல் *kedu-tappal*, பெ.(n.) மாதவிலக்கு முதலியவை காலவொழுங்கு தவறுதல்; outlasting the limited time as mensus in woman.

[கடுவு → கெடுவு → கெடு + தப்பல்.]

கெடுதல் *kedudal*, தொ.பெ. (vbl.n.) 1. அழிவு; ruin, destruction. 2. பழுது; damage, injury. 3. பேரழிவு; calamity, danger. '*கெடுதலை யுடைய மாக்கள்*' (*பெரும்பாண். 432, உரை*). 4. தீங்கு; degeneracy, vileness, evil. 5. இலக்கணத்தில் எழுத்து அல்லது அசைகெடுதல்; elision, omission "*தோன்றல் திரிதல் கெடுதல்*" (*நன். 154*).

[கெடு → கெடுதல்.]

கெடுதல்திரிபு *kedudal-tiribu*, பெ.(n.) எழுத்துக் கெடும் திரிபு (விகாரம்); elision of letter.

[கெடுதல் + திரிபு.]

கெடுதலம் *kedu-talam*, பெ.(n.) ***கெடுவிடம்*** பார்க்க; see *kedu-v-idam*.

[கெடு + தலம்.]

கெடுதலை *kedutalai*, பெ.(n.) அழிவு; ruin, destruction. *கெடுதலை பண்ணாதே.*

[கெடு → கெடுதலை.]

கெடுதி *kedudi*, பெ.(n.) 1. அழிவு; ruin, destruction. "*கிரியையி லரைமலங் கெடுதி யுற்றிடும்*" (*வள்ள. பதிபசுபாச. பாச. ஆணவ. வி. 2*). 2. இழப்பு; loss, waste, damage. "*காணாத போழ்திற் கெடுதிகளுங் காணாது*" (*சினேந். 157*). 3. இழந்த பொருள்; property or thing lost. கெடுதிவினாதல் (தஞ்சைவா. 72, தலைப்பு). 4. பேரிழப்பு; danger, peril. "*வேடராற் கெடுதிவந் துறுவன காணா*" (*உபதேசகா. சிவவிரத. 256*). 5. துன்பம்; affliction, suffering. 6. தீமை; evil, mischief. "*என்னிடையேகெடுதியிருந்த தெனினும்*" (*அருட்பா. III இரங்கன்மா. 28*).

ம. கெடுதி; **க.** கெடுக, கெடுகு, கெடகு; **தெ.** செடுகு; **கோத.** கெட்; **துட.** கொடில்; **குட.** கெடி.

[கெடு + தி – கெடுதி.]

கெடுநினைவு *kedu-ninaivu* பெ.(n.) தீய எண்ணம்; evil intention, malice.

[கெடு + நினைவு.]

கெடுப்பவள் *keduppaval*, பெ.(n.) அழிப்பவள்; a woman who destroys.

க. கெடகி, கெடிகெ, கெடுகி.

[கெடு → கெடுப்பவள்.]

கெடுப்பார் *keduppār*, பெ.(n.) அழிப்பவர், தீயவர்; those who do evil. கெடுப்பாரைத் தெய்வம் கெடுக்கும் (பழ.).

[கெடு + ப் + பார்.]

கெடுப்பினை *keduppinai,* பெ.(n.) ஈயக் கனிமம், வங்கமணல்; lead ore.

[கெடு → கெடுப்பு → கெடுப்பினை.]

கெடுபடு–தல் *kedu-padu-,* 20 செ.கு.வி.(v.i.) பேரழிவுக்கு உள்ளாதல்; to be caught in danger; to be overtaken by calamity. *'கெடுபட்டுப் போவார்... விரைந்து போதலைக் கருதுவர்' (பெரும்பாண். 432, உரை).*

[கெடு + படு–.]

கெடுபாதை *kedu-pādai,* பெ.(n.) 1. கேடுடைய வழி; dangerous path. 2. கள்வரால் தீங்குநேரும் வழிக்காவலுக்கு அரசு பெறும் வரி; cess levied for protection from thieves (S.I.I. VIII, 214).

[கெடு + பாதை.]

கெடுபிடி *kedu-pidi,* பெ.(n.) 1. தடபுடல் (உ.வ.); bustle, tumult, hubbub. 2. விதிமுறைகள், கட்டளைகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதில் காட்டப்படும் கடுமை; severity in enforcement of order, regulations. கெடுபிடியான நடவடிக்கையால் கடத்தல் குறைந்துள்ளது (உ.வ.). 3. தானாகச் செயல்பட முடியாத கட்டுப்பாடு; restriction, constraint, check. அப்பாவின் கெடுபிடியால் திரைப் படத்திற்குப் போக முடியவில்லை (உ.வ.). 4. நெருக்குதல்; compulsion. வரிதண்டலில் (வசூலில்) இப்படிக் கெடுபிடி செய்தால் மக்கள் என்ன செய்வது? (உ.வ.).

மறுவ. கடுபிடி.

தெ., க. கலிபிலி; **Mar.** gadabadi; **U.** garbar.

[கெடு + பிடி.]

கெடுபுத்தி *kedu-putti,* பெ.(n.) ***கெடுநினைவு*** பார்க்க; see *kedu-ninaivu.*

[கெடு + புத்தி.]

கெடும்பன் *kedumban,* பெ.(n.) 1. தீயவன்; wicked man. 2. பொறாமைக்காரன் (சேரநா.); jealous man.

ம. கெடும்பன்; **க.** கெடுக; **து.** கேடகெ, கடிங்கெ.

[கெடும்பு + அன்.]

கெடும்பு[1] *kedumbu,* பெ.(n.) 1. கேடு (சங்.அக.); ruin, evil. 2. பொறாமை; jealousy. 3. தீய எண்ணம்; evil intention. 4. கெட்ட மணம், அழுகியதால் ஏற்படும் மணம்; rottenness, foul smell.

ம. கெடும்பு; **க.** கெடுகு; **தெ.** செகுபு, செருகு; **து.** கெடுகு, கெடகு.

[கெடு → கெடும்பு.]

கெடும்பு[2] *kedumbu,* பெ.(n.) சற்று முரடான புன்செய்நிலத்து அரிசி; a rough type of dryland rice.

Jap. (katumbu → kempu) kome.

[கடு – கடும்பு – கெடும்பு.]

கெடுமதி *kedu-madi,* பெ.(n.) 1. ***கெடுநினைவு*** பார்க்க; see *kedu-ninaivu.* 2. தீய அறிவுரை; evil counsel. *"அரும்பொருள் கவர்வ தாகக் கெடுமதி யுரைப்பார்" (திருவாத. பு. திருப்பெருந். 90).*

[கெடு + மதி.]

கெடுவளம் *kedu-valam* பெ.(n.) வளம் குன்றிய நிலம் (சேரா.); unfertile soil.

ம. கெடுவளம்.

[கெடு + வளம்.]

கெடுவாய் *keduvāy,* பெ.(n.) இகழ்ச்சியாகச் சொல்லும் சொல்; a term of reproach. *'கெடுவாய் வகுத்த விஷயத்தி லன்றோ நாங்கள் நெஞ் சிழந்தது (ஈடு. 2.1:7).*

[கெடு → கெடுவாய்.]

கெடுவான் *keduvān,* பெ.(n.) ஓர் இகழ்ச்சி மொழி; a term of reproach. கெடுவான் சொல்வதெல்லாம் பொய். கெடுவான் கேடு நினைப்பான்.

[கெடு → கெடுவான்.]

கெடுவி *keduvi,* பெ.(n.) ஓர் இகழ்ச்சி மொழி; a term of reproach. *'கெடுவிகாள்! நானன்றோ இவ் விஷயத்துக்கு யோக்யனாய் உங்களுக்கு உபதேசிக்கும்படியானேன்' (திவ். பெரியதி. 1.1:8 வியா.ப.44).*

[கெடு (கெடுவான்) → கெடுவி.]

கெடுவிடம் *kedu-v-idam,* பெ.(n.) 1. அதிகாரத்திற்கு உட்பட்ட இடம்; jurisdiction, region under authority. 2. கள்ளர் முதலிய கொடியோர் கூடும் இடம்; notorius place, as a haunt or rendezvous of robbers.

[கெடு + இடம்.]

கெடுவு *keduvu,* பெ.(n.) தவணை; fixed time, instalment.

ம., க., து. கடு; **தெ.** கடுவு.

[கடு → கடுவு → கெடுவு.]

கெடுவை–த்தல் *kedu-vai-,* 4 செ.குன்றாவி.(v.t.) நாள் குறித்தல்; to fix a date.

[கெடு + வை–.]

கெடை *kedai,* பெ.(n.) மூங்கில் (இ.வ.); bamboo.

க. கெடெ; **தெ.** கட.

[கழை → கெழை → கெடை (கொ.வ.).]

கெடைக்கட்டு *kedai-k-kattu-,* பெ.(n.) எலும்பு முறிவுக்கு, மூங்கிற்பத்தையை வைத்துக் கட்டும் கட்டு; application of a bamboo splint in a case of fracture of bones.

[கழை → கெடை + கட்டு.]

கெடைகட்டியாடு-தல் *kedai-katti-y-ādu-,* 5 செ.கு.வி.(v.i.) கழைக்கூத்தாடுதல் (இ.வ.); to perform acrobatic feats on a bamboo pole.

[கெடை + கட்டியாடு-.]

கெண்டகாரணி *kenda-kārani,* பெ.(n.) 1. சீவக மூலி; moon creeper. 2. சிவதை; turpeth root.

[கண்டை → கெண்டை + காரணி → கெண்டகாரணி.]

கெண்டம் *kendam,* பெ.(n.) இக்கட்டான நிலை (ஆபத்து), கெடுவாய்ப்பு; critical period.

Skt. ganda

க. கண்ட; **தெ.** கண்டமு.

[கண்டம் → கெண்டம்.]

கெண்டன் *kendan,* பெ.(n.) 1. மிண்டன்; robust, stout man. 2. முரடன்; one who is rough and tough.

ம. கெண்டன்; **க.** கண்ட (வலியவன்); **தெ.** கண்டு (வலிமை).

[குண்டன் → கெண்டன்.]

கெண்டாநகரம் *kendā-nagaram,* பெ.(n.) வேலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Vēlūr Dt.

[கண்டன் (மிண்டன்) → கெண்டன் + நகரம் - கெண்டநகரம் → கெண்டாநகரம் (கொ.வ.).]

கெண்டி[1]-த்தல் *kendi-* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கடிந்து கூறுதல்; to reprove, chide. 2. முடிவு கட்டிப் பேசுதல் (வின்.); to speak with decision, precision. 3. துண்டித்தல் (திவா.); to chop, mince, slash, cut into pieces. 4. பகிர்தல் (வின்.); to divide, parcel. 5. பருத்தல்; to grow fat. ஆள் நன்றாய்க் கெண்டித்திருக்கிறான் (உ.வ.).

[கண்டி → கெண்டி.]

கெண்டி[2] *kendi,* பெ.(n.) ***கெண்டிகை*** பார்க்க; see *kendigai.* நாளதினாலே கொடுத்த பொன்னின் கெண்டி ஒன்று (S.I.I. II.3).

பட. கிண்டி.

[கெண்டிகை → கெண்டி.]

கெண்டி[3] *kendi-* பெ. (n.) வெட்டப்பட்ட துண்டு (யாழ்.அக.); portion which is cut.

[கண்டி → கெண்டி.]

கெண்டி[4] *kendi-* பெ.(n.) மூக்குள்ள செம்பு; a pot with a spout. *"நாளதினாலெய் குடுத்த பொன்னின் கெண்டி ஒன்று மேற்படி கல்லால் நிறெ இருநூற்றெண்பது" (தெ.இ.கல்.தொ.II.கல்.1) (1. இராசராசன். 2. காலம் கி.பி. 985-1014).*

[கிண்ணி → கிண்டி → கெண்டி.]

கெண்டிகானூர் *kendikānūr,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கண்டன் → கெண்டன் → கெண்டகன் → கெண்டிகான் + ஊர்.]

கெண்டிகை *kendigai,* பெ.(n.) கமண்டலம் (திவா.); pot with a spout, pitcher.

பட. கிண்டி; **Skt.** kundika.

[குண்டிகை → கண்டிகை → கெண்டிகை.]

கெண்டிச்செம்பு *kendi-c-cembu-,* பெ.(n.) மூக்குள்ள செம்புவகை; a pot with a spout.

[கெண்டி + செம்பு.]

கெண்டிச் செம்பு

கெண்டிரச்சேரி *kendira-c-cēri,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kāñjipuram Dt.

[கண்டிரன் → கெண்டிரன் + சேரி - கெண்டிரச்சேரி (கொ.வ.).]

கெண்டிவாய்[1] *kendi-vāy* பெ.(n.) ஏனத்தில் நீண்டுள்ள வாய்; the projecting mouth of a vessel. 2. கெண்டி மூக்கு; spout of a pot.

[கெண்டி + வாய்.]

கெண்டிவாய்[2] *kendi-vāy* பெ.(n.) கோடரிவெட்டு; incision or gash in which the axe works in cutting a tree.

[கெண்டி + வாய்.]

கெண்டு[1]-தல் *kendu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. தோண்டுதல்; to dig. *"கவலை கெண்டிய கல்வாய்" (குறுந். 233).* 2. அறுத்துத் தின்னுதல்; to cut and eat. *"மன்றத்துமதவிடை கெண்டி" (பெரும்பாண். 143).* 3. கிண்டுதல்; to work in, as a bee gathering honey in flowers. *"வண்டு கெண்டி மருவும் பொழில்" (தேவா.626:10).* 4. வருந்துதல்; to feel sad.

[கிண்டு → கெண்டு.]

கெண்டு[2]-தல் *kendu-,* 5 செ.கு.வி.(v.i.) வருந்துதல்; to be distressed. *"கெண்டிக் கெழுதகைமை யில்லேன் கிடந்தூட" (யாப்.வி. பக்.351).*

[கெண்டை → கெண்டு.]

கெண்டு[3] *kendu,* பெ.(n.) கெண்டைச் சதை; calf muscle.

[கெள் → கெண்டு.]

கெண்டு[4] *kendu* பெ.(n.) ***கெண்டை***[1] பார்க்க (யாழ்.அக.); see *kendai.*

[கெண்டை → கெண்டு.]

கெண்டூரம் *kendūram,* பெ.(n.) 1. ஒரு வயிற்றுப் போக்கு மருந்து; a purgative. 2. பாம்புகொல்லி (சித்.அக.); rue.

[கண்டூரம் → கெண்டூரம்.]

கெண்டை[1] *kendai,* பெ.(n.) 1. நன்னீரில் வாழும் சேல் மீன்; a fresh-water fish. *"கெண்டை போனயனத்தி" (தேவா.9:3).* 'கெண்டையைப் போட்டு விறாலை இழுக்கிறது' (பழ.). 2. கெண்டைமீன் போன்ற கணைக்கால் (சதை.); that portion of the leg from the ankle to the knee.



கெண்டை மீன்

ம. கெண்ட ; க. கெண்டெ மீன்; தெ. கண்டெ, கெண்டெ.

[கண்டு (திரட்சி) → கண்டை → கெண்டை.]

வகைகள் : 1. பருத்திக்கெண்டை, 2. மோரான் கெண்டை, 3. பாற் கெண்டை, 4. பேரான் கெண்டை.

கெண்டை[2] *kendai* பெ.(n.) 1. தோள்பட்டையின் முன்பக்கத்துச் சதை; biceps. 2. கெண்டைமீன் போன்ற கணைக்கால்; ankle, as carp-shaped. "கெண்டைத்தலணியக்கர்" (தணிகைப்பு. அகத்.488).

ம. கெண்ட; க. கண்டு (சந்து); குட. கிண்ணி; து. கண்டு; Skt. ganda, gandu

[கண்டு → கண்டை → கெண்டை.]

கெண்டை[3] *kendai,* பெ.(n.) கண்டை; gold or silver lace.

ம. கெண்ட (கழுத்தணியாகப் பயன்படும் தாயத்து).

[கண்டை → கெண்டை.]

கெண்டை[4] *kendai* பெ.(n.) வயிற்றுக் கட்டி; enlargement of spleen.

ம. கெண்ட ; குட . கெண்டெ (மண்ணீரல்).

கெண்டை[5] *kendai,* பெ.(n.) ஏளனம்; ridicule, mockery, banter.

துட. கீடி.

Skt. khandana

[கிண்டு → கிண்டை (கிண்டல்) → கெண்டை.]

கெண்டைக்கட்டி *kendai-k-katti,* பெ.(n.) வயிற்றுக் கட்டி (சீவரட்.120); enlargement of spleen.

[கெண்டை + கட்டி.]

கெண்டைக்காரல் *kendai-k-kāral,* பெ.(n.) மீன் வகை; a kind of fish. *"உருக்கமுடைய கெண்டைக் காரல்" (பறாளை.பள்ளு.16).*

[கெண்டை + காரல்.]

கெண்டைக்கால் *kendai-k-kāl* பெ.(n.) கணைக்கால்; leg from ankle to foot (calf of the leg).

[கெண்டை + கால்.]

கெண்டைக்கால் ஊதை *kendai-k-kāl-ūdai,* பெ.(n.) கெண்டைக்கால் வீங்கிக் கடுத்து வலியை உண்டாக்கும் ஓர் ஊதைநோய்; rheumatic pain or

கெண்டை வகைகள்

மோரான் கெண்டை

கன்னிமாரா (மாநில (ம) மைய) நூலகம்
அலுவலகம்
30 ஆக 2015
பெறப்பட்டது
சென்னை-600 008



பருத்திக் கெண்டை



பாற் கெண்டை



பேரான் கெண்டை

nervous complaint affecting the muscle of the calf (சா.அக.).

[கெண்டை + கால் + ஊதை.]

கெண்டைக்கால்வாதம் *kendai-k-kāl-vādam,* பெ.(n.) ***கெண்டைக்கால்ஊதை*** பார்க்க; see *kendai-k-kāl-ūdai.*

[கெண்டைக்கால் + (Skt.) வாதம்.)]

கெண்டைக்குஞ்சு *kendai-k-kuñju,* பெ.(n.) சிறிய மீன்; small carp.

[கெண்டை' + குஞ்சு.]

கெண்டைக்கெளுத்தி *kendai-k-kelutti,* பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish.

[கெண்டை + கெளுத்தி.]

கெண்டைக்கை *kendai-k-kai,* பெ.(n.) தோளின் முன் பக்கத்துச் சதை; muscle of the arm just in front of the shoulder - biceps.

[கெண்டை + கை.]

கெண்டைச்சதை *kendai-c-cadai,* பெ.(n.) கணைக் காலின் பின்புறத்துள்ள சதை; thick fleshy part of the leg behind and below the knee.

[கெண்டை + சதை.]

கெண்டைச்சதைக்கட்டி *kendai-c-cadai-k-katti,* பெ.(n.) கெண்டைச் சதையிற் காணும் கட்டி; abscess of the calf.

[கெண்டை + சதை + கட்டி.]

கெண்டைநோய் *kendai-nōy,* பெ.(n.) வயிற்றுக் கட்டியால் வரும் நோய்வகை (இராட்.); hypochondria, as caused by enlarged spleen.

[கெண்டை + நோய்.]

கெண்டைப்பீலி *kendai-p-pili,* பெ.(n.) முகப்பில் கெண்டை வடிவமைந்ததாய்க் கால்விரலில் இடும் அணிவகை; women's toe ring with face designed like carp.

[கெண்டை + பீலி.]

கெண்டைப்பொடி *kendai-p-podi,* பெ.(n.) ***கெண்டைக் குஞ்சு*** பார்க்க; see *kendai-k-kuñju.*

[கெண்டை + பொடி.]

கெண்டைபுரட்டு-தல் *kendai-purattu-,* 5 செ.கு.வி. (v.i.) பசி, நாவறட்சி முதலியவற்றால் கைகால்கள் வலித்திழுத்தல்; to have convulsions due to extreme hunger, thirst, etc. *"திண்ணையுங் கெண்டை புரட்டுங் கல்யாணத்திற் சென்றவர்க்கே" (தமிழ்நா. 190).*

[கெண்டை + புரட்டு-.]

கெண்டையேறல் *kendai-y-ēral* பெ.(n.) கைகால் குரக்கு வலித்தல்; spasm or cramps of the limbs.

[கெண்டை + ஏறல்.]

கெண்டைவலை *kendai-valai,* பெ.(n.) சிறு மீன்களைப் பிடிக்கப் பயன்படும் வலை; a small fishing net used in catching small fishes.

[கெண்டை + வலை.]

கெண்டைவாங்கு-தல் *kendai-vāngu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கைகால் குரக்கு வலித்தல்; spasm.

[கெண்டை + வாங்கு-.]

கெண்டைவாதம் *kendai-vādam* பெ.(n.) வலிப்பு நோய் வகை; rheumatic pain or spasm in the limbs.

[கெண்டை + Skt. வாதம்.]

கெண்டைவியாதி *kendai-viyādi,* பெ.(n.) ***கெண்டைநோய்*** பார்க்க; see *kendai-nōy.*

[கெண்டை + வியாதி.]

கெண்டைவிழி *kendai-vili,* பெ.(n.) அழகான கண்; beautiful eyes.

[கெண்டை + விழி.]

கெண்டைவிழுந்தநோய் *kendai-vilunda-nōy,* பெ.(n.) அச்சத்தால் ஏற்படும் கட்டியைப் போன்ற ஒரு நோய்; an affection in the hypochondriac region attended with exaggerated ideas as regards one's health-hypochondriasis.

[கெண்டை + விழுந்த + நோய்.]

கெண்டைவூதை *kendai-v-ūdai,* பெ.(n.) வலிப்பு நோய் வகை; rheumatic pain or spasm in the limbs.

[கெண்டை + ஊதை.]

கெண்ணை *kennai,* பெ.(n.) எண்ணிக்கை; computation, reckoning. *"அத்துவா சோதனை பண்ணுபித்துக் கெண்ணையில் அடங்காதாகையால்" (சித்.மரபுகண். 11)*

[கணி → கெணி → கெண்ணை (கொ.வ.).]

கெணக்கு-தல் *kenakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) நோண்டுதல், எரிச்சல்படுத்துதல்; to irritate, prove by words or deeds.

க. கெணகு; தெ. செணகு, செனுகு; து. கெணகுனி. கெண்குனி, கெனகுனி.

[கிண் → கிண்டு → கெண்டு → கெணக்கு.]

கெணிகாயம் *keṇi-kāyam,* பெ.(n.) கலியாண முருங்கை; thorny coral tree.

[கிளி → கிணி → கெணி + காயம்.]

கெணிதம் *keṇidam,* பெ.(n.) 1. எரியணம் (சூடம்); camphor. 2. வெற்றிலை; betel leaf.

[கிளிதம் → கெணிதம்.]

கெத்திடு-தல் *kettiḍu-,* 19 செ.குன்றாவி.(v.t.) சில்லுபொல்லாய் வெட்டுதல்; to chop.

[கெத்து + இடு-. செத்து → கெத்து.]

கெத்தியகன் *ketti-y-agaṉ,* பெ.(n.) மூக்கறா; a medicinal root.

[கெத்தி +அகன்.]

கெத்து[1]-தல் *kettu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கீறிப் பிளத்தல்; to split asunder by driving in and turning the hatchet. 2. நறுக்குதல்; to chop, mince, cut off. 3. செதுக்குதல்; to chisel. 4. மீன் முதலியவை அறுத்தல்; to make an incision as in fish.

க., து., பட., கெத்து; தெ. செக்கு.

[செத்து → கெத்து.]

கெத்து[2]-தல் *kettu-,* 5 செ.கு.வி.(v.i.) முட்டையிட்ட கோழி அடைகாக்கக் கத்துதல் (யாழ்ப்.); to cackle, as a hen which has laid egg and seeks to sit on it for hatching.

[கத்து → கெத்து.]

[செ.ப.க. அகரமுதலி குறிக்கும் "கோழி முதலியன கொக்கரித்தல்" என்னும் பொருள் வழுவாகும் (செ.ப.க.சீ. 19.]

கெத்து[3]-தல் *kettu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கிட்டிப்புள்ளை எற்றிவிடுதல்; to strike the stick in the game of tip-cat. 2. ஏமாற்றுதல்; to deceive, cheat. 3.பாதத்தின் முன்பகுதியை மட்டும் தரையில் ஊன்றி எம்புதல்; hop, skip.

[எத்து → கெத்து.]

கெத்து[4] *kettu,* பெ.(n.) 1. சூழ்ச்சி (தந்திரம்); wiles, tricks. *"பொருளைக் கெத்திப் பற்றி" (திருப்பு. 1074).* 2. தந்திரமான பேச்சு; evasion, equivocation.

தெ. கத்து; Mar. gataka.

[எத்து → கெத்து.]

கெத்துக்கெத்தெனல் *kettu-k-ketteṉal,* பெ.(n.) 1. கோழி முதலியன எழுப்பும் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying chirping, cackling sound as of a hen. 2. அச்சக்குறிப்பு; onom. expr. signifying pit-a-pat, palpitation of heart through fright.

க. கெத்து (நடுங்குதல்).

[கெத்து + கெத்து + எனல்.]

கெத்தை *kettai* பெ.(n.) மயிர் (சங்.அக.); hair.

[கற்றை → கத்தை → கெத்தை.]

கெதங்கெதமெனல் *kedaṅ-kedam-eṉal,* பெ.(n.) அச்சக்குறிப்பு; onom. expr. signifying palpitation of heart through fright.

[கெதம் + கெதம் + எனல்.]

கெதம் *kedam,* பெ.(n.) 1. அடைகை; reaching. 2. ஓட்டம்; movement, flow. 3. சென்றது; that which is past.

[கதம் → கெதம்.]

கெதி *kedi,* பெ.(n.) 1. நடை; motion, movement. 2. வழி; way, path. 3. விரைவு; swiftness, rapidity. 4. புகலிடம்; refuge. 5. துறக்கம்; heaven. 6. குதிரை நடை; pace of a horse. 7. உயிரெடுக்கும் பிறப்பு; stages of existence, through which the soul may pass, of which there are four. 8. நிலை; state, condition. அவன் கெதி என்னவாயிற்று? 9. ஆற்றல்; ability, means. கொடுக்கக் கெதியில்லை. 10. இயல்பு; nature, quality, character. 11. ஆகூழ் (அதிட்டம்); luck, fortune. 12. படலம்; section, chapter.

க., தெ. கதி.

[கதி → கெதி.]

கெதிகெட்டநோய் *kedi-keṭṭa-nōy,* பெ.(n.) தீரா நோய்; chronic or incurable disease.

[கதி → கெதி + கெட்ட + நோய்.]

கெதிகெட்டோடல் *kedi-keṭṭōḍal,* பெ.(n.) நோய்கள் ஆதரவு அற்று உடம்பைவிட்டகலல்; getting away completely as diseases from the body.

[கதி → கெதி + கெட்டு + ஓடல்.]

கெதிநாடி *kedi-nāḍi,* பெ.(n.) தீவிர நாடி; accelerated pulse.

[கெதி + நாடி.]

கெதை *kedai,* பெ.(n.) உப்புத்தடி; a stick made of consolidated salt which is melted and cast in a mould.

[கதை → கெதை.]

கெதைப்பஞ்சவண்ணம் *kedai-p-pañja-vaṇṇam,* பெ.(n.) 1. ஐந்துவகை நிறம்கலந்த மாத்திரைக் கோல்; a magic wand made of consolidated salt exhibiting five colours by reflection. 2. ஊதை நோய்க்குப் பயன்படும் ஒருவகைக் கட்டுப்பு; consolidated salt reflecting of five colours used for transmutation of metals into gold.

[கதை → கெதை + பஞ்ச + வண்ணம்.]

கெந்தகக்கட்டு *kendaga-k-kaṭṭu.* பெ.(n.) கெந்தகம் நெருப்புக்குப் புகைந்து ஓடாதபடி ஊதை முறையால் கந்தகத்தை நெருப்பிற் காட்டிச் செய்த கட்டிமருந்து; a lamp of sulphur consolidated by alchemical method. *"தானென்ற கந்தகமோ கட்டிற் றானால் தட்டுமுதல் தாவரமும் பொன்னே யாகும்" (கொங்.வாத.காவியம்.)*

[கெந்தகம் + கட்டு]

இது எல்லா மாழைகளையும் பொன்னாக்கும்.

கெந்தகக்களங்கு *kendaga-k-kaḷaṅgu,* பெ.(n.) போகர் எனும் சித்தர் கந்தகம், தங்கம் இவை இரண்டையும் சேர்த்துச் செய்த மருந்து; an alchemical compound of sulphur and gold prepared by Bogar, a Siddha.

[கெந்தகம் + களங்கு.]

கெந்தகநீர் *kendaga-nīr,* பெ.(n.) கெந்தகம் கரைந்த நீர்; a mineral water containing sulphur in solution, sulphur water. 2. பனிக்குடத்து நீர்; amniotic fluid.

[கந்தகம் → கெந்தகம் + நீர்.]

கெந்தகபற்பம் *kendaga-paṟpam,* பெ.(n.) நலம் நல்கும் கந்தகப் பொடி; calcined oxide of sulphur, which gives good health.

[கந்தகம் → கெந்தகம் + பற்பம்.]

கெந்தகபூமி *kendaga-būmi,* பெ.(n.) காங்கையான நிலம்; soil containing sulphur; hot climate, the heat being ascribed to sulphur in the soil.

[கந்தகம் → கெந்தகம் + பூமி.]

கெந்தகம்[1] *kendagam,* பெ.(n.) 1. கந்தகம்; sulphur. 2. அப்பிரகம்; mica.

[காந்து → காந்தகம் → கந்தகம் → கெந்தகம்.]

கெந்தகம்[2] *kendagam,* பெ.(n.) நாய்வேளை (மலை.); a sticky plant that generally grows in sandy places.

[காந்து → காந்தகம் → கெந்தகம்.]

கெந்தகம்[3] *kendagam,* பெ.(n.) ***கெண்டூரம்*** பார்க்க; see *keṇḍūram* (சி.அக.).

[கெண்டூரம் → கெந்தகம்.]

கெந்தகவண்டல் *kendaga-vaṇḍal,* பெ.(n.) நீரூற்று மணற்கந்தகம்; sulphur combined with silica found in certain springs.

[கந்தகம் → கெந்தகம் + வண்டல்.]

கெந்தகவுப்பு *kendaga-v-uppu,* பெ.(n.) கறுப்புப்பு; sodium chloride with little sulphate of iron.

[கந்தகம் → கெந்தகம் + உப்பு.]

கெந்தகவெடி *kendaga-veḍi,* பெ.(n.) பட்டாசு (இ.வ.); fire crackers.

[கெந்தகம் → கந்தகம் + வெடி.]

கெந்தகவெள்ளை *kendaga-veḷḷai,* பெ.(n.) வெண் சுண்ணக் கந்தகம்; milk sulphur obtained from the solution of calcium sulphide.

[கந்தகம் → கெந்தகம் + வெள்ளை.]

கெந்தகற்பம் *kenda-kaṟpam,* பெ.(n.) வில்வம்; bael tree.

[கந்தகம் → கெந்தகம் + கற்பம்.]

கெந்தகாயம் *kenda-gāyam,* பெ.(n.) நீர்ப்பூலா; black honey shrub.

[கந்தகம் → கெந்தகம் + காயம்.]

கெந்தகி *kendagi,* பெ.(n.) அதிமதுரம்; liquorice plant.

[கெந்தம் → கெந்தகி.]

கெந்தசடகம் *kenda-šaḍagam,* பெ.(n.) ஆமணக்கு; castor plant

[கெந்தம் + சடகம்.]

கெந்தசாமகன் *kenda-šāmagaṉ,* பெ.(n.) பேரரத்தை; greater galangal.

மறுவ. கெந்தநரணி, கெந்த நாகுலியம்.

[கெந்தம் + சாமகன்.]

கெந்தசாலி *kenda-šāli,* பெ.(n.) கெந்தசாலி நெல்; a kind of paddy. *"பெரியசெந்நெற்பிரம்புரிகெந்தசாலி" (தேவா. 700:7).*

[கெந்தம் + சாலி.]

கெந்ததாரணை *kenda-tāraṇai,* பெ.(n.) ஒன்பது வகைத்தாரணையுள் ஒன்று (திவா.Ms.); one of *nava-tāraṇai.*

[கெந்தம் + தாரணை.]

கெந்ததாளி *kendātāḷi,* பெ.(n.) 1. கந்தக மணமுள்ள தாளி; sulphur smelling bind weed of ipomaea ge-

nus. 2. வாய்ப்புண்; eruption of smell uesicles on the lips mouth, tongue and throat.

[கெந்தம் + தாளி.]

கெந்தநரணி *kenda-naraṇi,* பெ.(n.) பேரரத்தை; greater galangal.

மறுவ. கெந்தசாமகன், கெந்தநாகுலியம்.

[கெந்தம் + நரணி.]

கெந்தநாகுலியம் *kenda-nāguliyam* பெ.(n.) பேரரத்தை; greater galangal.

[கெந்தம் + நாகுலியம்.]

கெந்தப்பொடி *kenda-p-poḍi,* பெ.(n.) 1. குளிக்கப் பயன்படுத்தும் நறுமணப் பொடி; aromatic powder used in bath. 2. சொக்குப் பொடி; love powder. *"பெட்டியிலே கெந்தப்பொடி வைத்தனுப்பினாள்" (தெய்வச். விறலிவிடு. 203).*

[கந்தம் → கெந்தம் + பொடி.]

கெந்தபத்திரம் *kenda-pattiram,* பெ.(n.) 1. முன்னை; firebrand teak. 2. வில்வம்; bael tree.

[கெந்தம் + பத்திரம்.]

கெந்தபந்தம் *kenda-pandam,* பெ.(n.) கவுரிநஞ்சு; a prepared arsenic.

[கெந்தம் + பந்தம்.]

கெந்தபீசகம் *kenda-pīśagam,* பெ.(n.) காட்டுமா (சங். அக.); Cuddapah almond.

[கெந்தம் + பீசகம்.]

கெந்தபுட்பி *kenda-puṭpi,* பெ.(n.) மெருகன் கிழங்குச் செடி; a plant with a long tuberous root.

[கெந்தம் + புட்பி.]

கெந்தபூதி *kenda-pūdi,* பெ.(n.) நாய்வேளை; dog-mustard plant.

[கெந்தம் + பூதி.]

கெந்தபூதியம் *kenda-pūdiyam,* பெ.(n.) ***கெந்தபூதி*** பார்க்க; see *kenda-pūdi.*

[கெந்தம் + பூதியம்.]

கெந்தம் *kendam,* பெ.(n.) 1. மணம்; scent, odour, fragrance. 2. முகமணப்பொருள்; perfumery. 3. சந்தனம்; sandal-wood. 4. வசம்பு; sweet flag.

[கந்தம் → கெந்தம்.]

கெந்தமாஞ்சில் *kenda-māñjil,* பெ.(n.) இலாமிச்சை வேர்; Indian spikenard.

மறுவ. வெட்டிவேர்.

[கெந்தம் + மாஞ்சில்.]

கெந்தமூலம் *kenda-mūlam,* பெ.(n.) பிடங்கு நாறி; fire-brand teak.

[கெந்தம் + மூலம்.]

கெந்தமூலி *kenda-mūli,* பெ.(n.) சிறு இண்டஞ்செடி; a small species of the plant of the Mimosa genus.

[கெந்தம் + மூலி.]

கெந்தரகம் *kendaragam,* பெ.(n.) செங்கழுநீர்ப்பூ; red Indian water lily.

[கெந்தரம் → செந்தரகம்.]

கெந்தரம் *kendaram,* பெ.(n.) கார்முகில் நஞ்சு; a kind of prepared arsenic.

[காந்து → கெந்து → கெந்தரம்.]

கெந்தரி *kendari,* பெ.(n.) பொன்னிமிளை; gold pyrites.

[காந்து → கெந்து → கெந்தரி.]

கெந்தருசு *kendaruśu,* பெ.(n.) சுராலை (சாம்பிராணி); frankincense.

[காந்து → கெந்து → கெந்தருசு (கொ.வ.).]

கெந்தலவணம் *kenda-lavaṇam,* பெ.(n.) ***கெந்திலவணம்*** பார்க்க; see *kendi-lavaṇam.*

[கெந்தம் + இலவணம்.]

கெந்தவடி *kenda-vaḍi,* பெ.(n.) மணமுள்ள எண்ணெய்ப் பொருள்; odoriferous essential punguent.

[கெந்தம் + வடி.]

கெந்தவாசம் *kenda-vāśam,* பெ.(n.) மணப்பொருள்; scented perfume.

[கந்தம் → கெந்தம் + வாசம்.]

கெந்தன் *kendaṉ,* பெ.(n.) கோடகசாலை; a very small plant known as Coromandel gendarussa.

மறுவ. கெந்தணம்.

[கந்தம் → கெந்தம் → கெந்தன்.]

கெந்தா *kendā,* பெ.(n.) 1. வேளைப்பூடு; a vailay plant. 2. பேராமல்லி; a kind of jasmine. 3. ஒருமருந்துச் செடி; a medicinal plant.

[கந்தம் → கெந்தம் → கெந்தா.]

கெந்தாளி *kendāli,* பெ.(n.) செரிமானம் இன்மையால் ஏற்படும் வயிற்று நோய்; gastritis through in digestion.

[குந்து → கெந்து → கெந்தாளி.]

கெந்தி[1]-த்தல் *kendi-,* 4 செ.கு.வி.(v.i.) தத்துதல்; to hop, skip. *"கெந்தியா வுகளுங் கெண்டை" (திருவிசை.கருவூர்.பதி. 3.10).*

தெ.,க. கந்து.

[கிந்து → கெந்து → கெந்தி.]

கெந்தி[2] *kendi-,* பெ.(n.) 1. கந்தகம்; sulphur. 2. பொன்னிமிளை (சங்.அக.); gold-coloured antimony.

[காந்து → கெந்து → கெந்தி.]

கெந்திகம் *kendigam,* பெ.(n.) பாம்புகொல்லிப்பூடு; a kind of plant.

[காந்து → கெந்து → கெந்திகம்.]

கெந்திகயம் *kendikayam,* பெ.(n.) ஊசலாங் கொடி; a creeper.

[கந்தம் → கெந்தம் → கெந்தி + கயம் (காயம்).]

கெந்திகாரச்சீலை *kendi-kāra-c-cīlai,* பெ.(n.) கந்தக காரச்சீலை; a blistering plaster containing sulphur as one of its ingredients.

[கந்தகம் → கெந்தி. கெந்தி + காரம் + சீலை.]

இது குழிப் புண்ணுக்கு இட ப்படும்.

கெந்திச்செம்பு *kendi-c-cembu,* பெ.(n.) 1. புறங்கை நாறி; a plant. 2. கந்தகத்தால் செய்த ஏனம்; a vessel made of consolidated sulphur. 3. கந்தகச் செம்பு; copper extracted from sulphur.

[கெந்தி + செம்பு.]

கெந்திப்புகை *kendi-p-pugai,* பெ.(n.) கந்தகப் புகை; sulphur-fumes.

[கெந்தி + புகை. கந்தகம் → கெந்தி.]

கெந்திபரம் *kendiparam,* பெ.(n.) ஆடுதின்னாப் பாளை; a kind of plant which goat will not eat, worm-killer.

[கெந்திபாளை → கெந்திபரம்.]

கெந்திபாடாணம் *kendi-pāḍāṇam,* பெ.(n.) கந்தக நஞ்சு; mineral poison.

[கெந்தி + பாடாணம். பாஷாணம் Skt. த. பாடாணம்.]

கெந்திபாளை *kendi-pālai,* பெ.(n.) ஆடுதின்னாப் பாளை (சித்.அக.); worm killer.

[கெந்து → கெந்தி + பாளை.]

கெந்திமூலம் *kendi-mūlam,* பெ.(n.) கிச்சிலிக் கிழங்கு; orange root.

[கெந்தி + மூலம்.]

கெந்தியுப்பு *kendi-y-uppu,* பெ.(n.) கந்தகவுப்பு; sulphur.

[கெந்தி + உப்பு.]

கெந்தியுரிநஞ்சு *kendi-y-uri-nañju,* பெ.(n.) வைப்பு நஞ்சு (சித்.அக.); a prepared arsenic.

[கெந்தி + உரி + நஞ்சு.]

கெந்திரகாண்டம் *kendira-kāṇḍam,* பெ.(n.) பாகல்; bitter gourd.

[கெந்தரம் → கெந்திரம் + காண்டம்.]

கெந்திலவணம் *kendi-lavaṇam,* பெ.(n.) 1. காய்ச் சுப்பு; a salt prepared by heating a mixture of rotten eggs, sulphur and sea-salt. 2. சிவப்புப்பு; sulphur salt.

[கெந்தி + இலவணம்.]

கெந்திவாருணி *kendi-vāruṇi,* பெ.(n.) பேய்க் கொம்மட்டி; bitter apple.

மறுவ. பேய்த்தும்மட்டி.

[கெந்தி + (வாலுளி) வாருணி.]

கெந்து[1]-தல் *kendu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. தத்துதல்; to hop, skip. 2. நெளிதல் (யாழ்ப்.); to crawl or creep, as worms in a sore, to writhe, wriggle. 3. கிட்டிப் புள்ளடித்தல்; to strike the stick in the game of tip-cat. 4. ஒற்றைக் கால் ஊன்றியும் மறுகால் ஊன்ற முடியாமலும் விந்தி விந்தி நடத்தல்; walk with one leg pressed and the other leg not capable of pressing. அவன் ஒருகாலில் புண்பட்டதால் கெந்துகிறான்.

தெ.,து. கந்து.

[கெந்தி → கெந்து.]

கெந்து[2] *kendu,* பெ.(n.) ஒற்றைக்காலாற் கெந்தி யாடும் பிள்ளை விளையாட்டு; a game of children, in which each member of a side can put out any number of the other side by chasing and touching them

கெந்து

as long as he can hop continuously on one leg. 2. கிட்டிப்புள் விளையாட்டு; the game of tip-cat.

[கெந்தி → கெந்து.]

கெந்துசடகம் *kendu-šaḍagam*, பெ.(n.) ஒருவகைப் புழு; a kind of worm.

[கெந்து + சடகம்.]

கெப்பிதம் *keppidam*, பெ.(n.) நிந்தை; reproach, blasphemy, abuse.

[கவ்வை → கப்பை → கெப்பை → கெப்பிதம் (கொ.வ.).]

கெபி *kepi* பெ.(n.) 1. குகை; cave. 2. குழி; a bit. 3. வளை; a hole.

[கவி → கெவி → கெபி (கொ.வ.).]

கெம்பட்டி *kembaṭṭi*, பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[செம் + பட்டி - செம்பட்டி → கெம்பட்டி (கொ.வ.).]

கெம்பட்டிகை *kempaṭṭgai*, பெ.(n.) பதக்கம் வைத்துக் கல்லிழைத்த கழுத்தணி; ruby necklace with locket in the middle.

[கெம்பு + அட்டிகை.]

கெம்பத்து *kempattu*, பெ.(n.) பகட்டு (வின்.); pomp splendour.

[கெம்பு → கெம்பல் → கெம்பத்து.]

கெம்பநாயக்கன்பாளையம் *kembanāyakkan-pāḷaiyam*, பெ.(n.) ஈரோடு மாவட்டத்துச் சிற்றூர்; a village in Erode Dt.

[செம்பியன் → செம்பன் → கெம்பன் + நாயக்கன் + பாளையம்.]

கெம்பரை *kembarai*, பெ.(n.) 1. கூடை (யாழ்.அக.); basket. 2. நெற்கூடை; paddy basket.

க. கம்பெ; தெ. கம்ப.

[கெம்பு + அலை - கெம்பலை. சம்பு → கம்பு → கெம்பு.]

கெம்பல் *kembal*, பெ.(n.) 1. ஆரவாரம்; loud noise. 2. எழும்பல்; ascend, rise.

[கெம்பு + அல் - கெம்பல்.]

கெம்பளி–த்தல் *kembaḷi-*, 4 செ.கு.வி.(v.i.) மகிழ்வுறுதல் (யாழ்.அக.); to exult, to be merry.

[கெம்பு + அளி–.]

கெம்பளிப்பு *kembaḷippu*, பெ.(n.) 1. மகிழ்ச்சி (வின்.); exultation, mirth. 2. ஆடம்பரம்; pomp, ostentation.

[கெம்பு + அளிப்பு. கெம் = துள்ளுதல். கெம்பு = ஆரவாரித்தல்.]

கெம்பிரிக்கம்பண்ணு–தல் *kembirikkam-paṇṇu-*, 9 செ.கு.வி.(v.i.) 1. இட்டுக்கட்டிப்பேசுதல்; to concoct. 2. தம்பட்டமடித்தல்; to spread.

[கெம்பல் → கெம்பரிக்கம் → கெம்பிரிக்கம் + பண்ணு–.]

கெம்பிரசன்னி *kembira-šanni*, பெ.(n.) சிரிப்பு, வலிப்புகளுடன் கூடிய இசிவு (சன்னி); a kind of delirium highly characterised by incessant laughter, convulsion, fits, etc.

[கம்பீர → கெம்பீர + சன்னி.]

கெம்பீரம் *kembīram*, பெ.(n.) 1. ஆழம்; depth. 2. பரிமளிப்பு; shine. 3. மேன்மை; excellence. 4. வீரம்; courage. 5. வீறு; manliness. 6. ஆழ்ந்த அறிவு; profound knowldege.

[கம்பீரம் → கெம்பீரம்.]

கெம்பீரி–த்தல் *kembīri-*, 4 செ.குன்றாவி.(v.t.) வீரங்காட்டுதல் (யாழ்.அக.); to display manliness, majesty of spirit. 2. எடுப்பான குரலாற் பேசுகை; to exult, to speak in a majestic tone.

[கம்பீரி → கெம்பீரி.]

கெம்பீரியம் *kembīriyam*, பெ.(n.) 1. இளம்பிசின்; soft gum. 2. கம்பீர்பிசின்; gambier resin.

[கம்பீரி → கெம்பீரி → கெம்பீரியம். கம்பீரி தாம்பூலத்துடன் சேர்க்கும் ஒருவகைத் துவர்ப்புச் சரக்கு.]

கெம்பு[1]–தல் *kembu-*, 5 செ.கு.வி.(v.i.) கொந்தளித்தல் (வின்.); to rise, as waves; to be violent as the wind; to swell, heave, as the sea (W.). 2. அரத்தங்கொதித்தல் (வின்.); to rise up, boil, as blood in rage (W.). 3. உரத்துப்பேசுதல்; to speak loud, cry

out, clamour. 4. ஆரவாரித்தல் (வின்.); to create tumult, to rise with indignation. 5. நெம்புதல்; to lift.

[கம்பு → கெம்பு.]

கெம்பு[2] *kembu,* பெ.(n.) 1. கரும்சிவப்பு நிறக்கல் (பதுமராகம்); ruby. கெம்புத்தோடு வாங்க வேண்டும். 2. கருஞ்சிவப்பு; dark-red colour. உனக்குக் கெம்புநிறப் புடைவை அழகாக இருக்கும் (உ.வ.). 3. கருஞ்சிவப்புச் சாணைக்கல்; dark red whetstone. 4. மாணிக்க (இரத்தின)க் கல்; sardius.

க., தெ. கெம்பு.

[செம் → கெம் → கெம்பு.]

கெம்புக்கட்டிக்கல் *kembu-k-katti-k-kal,* பெ.(n.) தாழ்ந்தவகைக் குருந்தக்கல்; low quality of diamond.

[கெம்பு + கல்.]

கெம்புநீலம் *kembu-nīlam,* பெ.(n.) 1. உயர்ந்த நீலம்; superior sapphire. 2. சிவப்பு நிறமான சாணைக்கல்; red whetstone.

[கெம்பு + நீலம்.]

கெம்புமல்லிகை *kembu-malligai,* பெ.(n.) மயிர்மாணிக்கம்; cypress vine.

[கெம்பு + மல்லிகை.]

கெம்மரம்பாளையம் *kemmaram-pāḷaiyam,* பெ.(n.) கோவைமாவட்டத்துச் சிற்றூர்; a village in Kōvai Dt.

[செம்மரம் → கெம்மரம் + பாளையம்.]

கெமி–த்தல் *kemi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. போதல்; to go. "*அயல் கெமித்து*" *(இரகு. தேனுவ. 8).* 2. புணர்தல்; to copulate.

[கும் → கம் → கெம் → கெமி.]

கெமிளி–த்தல் *kemiḷi-,* 4 செ.கு.வி.(v.i.) மகிழ்தல் (கெம்பளித்தல்); to enjoy.

[குமளி → கெமளி → கெமிளி.]

கெமுதாகி *kemudāgi,* பெ.(n.) செங்கொட்டை; marking nut.

மறுவ. சேரான்கொட்டை; வண்ணத்தான்கொட்டை.

[கெம் → கெம்பு = கருஞ்சிவப்பு. கெம்பு → கெமுதாகி.]

கெய்[1] *kei,* பெ.(n.) ஒருவகை மீன் (யாழ்.அக.); a kind of fish.

[கள் → கய் → கெய்.]

கெய்[2]**–தல்** *kei,* 1 செ.குன்றாவி.(v.t.) 1. வினையாற்றுதல்; to perform, to do. 2. உருவாக்குதல், உண்டு பண்ணுதல்; to prepare, to make. 4. வேலை செய்தல், உழுதல்; to work, to till.

க. கெய், கெயி, கெயு, கெய்யு; **பட.** கீய்.

key, to do. In all the Dravidian dialects kei is hand. In Telugu kēlu is also found. The most common form of this word in Telugu is *chey-i* or *chēyi*. *The word signifying to do is almost* identical, viz., key, chey, etc.........Hungarian kēz (pronounced keis), Finnish kchēsi (root kā- *e.g.* genitive kā-an), Estain kāsi, Ostiak ket, Lappish kāt, Perimian ki, Lasian kē, Mingrelian che, Quasi-Qumuq (a Turkish dialect) kūya. Turkish kol, Mongol ghar, Tungusian gala. The Hungarian has both kar and kēz: but the former is used to signify arm, the later hand-a distinction which seems to prove that those roots, though perhaps ultimately related, have long been independent of one another. The word in the various Scythian languages signifying to do appear to stand in the same relation to the word for hand that they do in the Aryan and Dravidian languages. Comp. The Turkish kyl, to do; Mongol ki, Manchu gai, Mordvin kā. These words resemble the Aryan kar, to do, but still more closely the Dravidian ki, kē, etc. (CG.DEL.617, 618).

[கை → கய் → கெய்.]

கெர்ச்சி–த்தல் *kercci-,* 4 செ.கு.வி.(v.i.) 1. முழங்குதல்; to roar. 2. ***உரப்புதல்*** பார்க்க; see *urappu-.*

மறுவ. உரப்புதல், கருச்சித்தல்.

க. கெப், கெயி, கெயு, கெய்யு; **பட.** தீய்.

[கருச்சி → கர்ச்சி → கெர்ச்சி (கொ.வ.) வழங்காமல் தவிர்க்க வேண்டும்.]

கருச்சித்தல் என்பதே செவ்விய வடிவம்.

கெர்ச்சினை *kerccinai,* பெ.(n.) 1. அரிமாவின் முழக்கம்; roar of lion. 2. முழக்கம்; roar like a lion. 3. ***உரப்பல்*** பார்க்க; see *uarappal.*

மறுவ. உரப்பல், கருச்சனை.

[கருச்சி → கர்ச்சனை → கெர்ச்சனை (கொ.வ.). வழங்காமல் தவிர்த்தல் வேண்டும்.]

கருச்சனை என்பதே செவ்விய வடிவம்.

கெர்ப்பீகரி–த்தல் *kerppikari-,* 4 செ.கு.வி.(v.i.) கருவாய் மாறுதல்; to form into an embryo. "*சுத்தசடமான சுக்கிலங் கெர்ப்பீகரித்து*" *(சொரூபசாரம், 61).*

[கருப்பம் → கெர்ப்பம் + கரி (கொ.வ.).]

கொரட்டுக்கொரட்டெனல் *kerattu-k-kerattenal,* பெ.(n.) சளி முதலியவற்றால் அல்லற்பட்டு விடும் மூச்சின் ஒலிக்குறிப்பு; onom. expression signifying hoarse sound or rattle, as in hard or difficult breathing.

[காள் → கரட்டு → கொரட்டு + கொரட்டெனல்.]

கொரடி *keradi,* பெ.(n.) 1. சிலம்பம்; a kind of martial art. 2. புரட்டு; deceit, falsehood. 'கொரடி கற்றவன் இடறி விழுந்தால் அதுவும் ஒரு வரிசை என்பான்' (பழ.).

[காடி → கொரடி (கொ.வ.).]

கெரி-த்தல் *keri-,* 4 செ.கு.வி. (v.i.) 1. உப்புச்சுவை மிகுதல்; to become salty, to irritate. 2. சிறு எரிச்சல்; to irritate as in the eyes on contact with external malter.

[கரி → கெரி.]

கெரிகோடி அள்ளி *kerikōdi-alli,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharumapuri Dt.

[த. சிறை (ஏரி) > க. கெரெ > கெரி + கோடி + (பள்ளி) அள்ளி.]

கெரிட்டம் *kerittam,* பெ.(n.) சினம்; angry, annoyed.

[கரி → கெரி → கெரிட்டம்.]

கெருகம் *kerugam,* பெ.(n.) கோரைக்கிழங்கு; fragrant tuber or root of koray.

[கருக்கு → கெருக்கு → கெருகம்.]

கெருகம்பாக்கம் *kerugam-bākkam,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tiruvallūar Dt.

[குருகு → கெருகு + அம் + பாக்கம்.]

கெருடக்கல் *keruda-k-kal,* பெ.(n.) 1. நஞ்சுக்கரசன்; king of poisons. 2. கருடன் தலைக்குள்ளிருப்பதாகக் கருதப்படும் கல்; a concretion said to be in the head of Brahminy kite.

[கெருடன் + கல்.]

கெருடக்காய் *keruda-k-kāy,* பெ.(n.) 1. நத்தைச்சூரி; bristly button weed. 2. தண்ணீர்விட்டான் கிழங்கு; water root.

[கருடன் → கெருடன் + காய்.]

கெருடக்கொடி *keruda-k-kodi,* பெ.(n.) 1. கருஞ் சீந்தில்; a black variety of moon-creeper. 2. தலைச் சுருள் வள்ளி; a creeper.

[கருடன் → கெருடன் → கொடி.]

கெருடத்தொட்டி *keruda-t-totti,* பெ.(n.) காக்கை கொல்லிவிதை; a kind of seed to kill crows (சா.அக.).

[கருடன் → கெருடன் + தொட்டி.]

கெருடப்பச்சை *keruda p-paccai,* பெ.(n.) படிகக்கல்; pearl-aquamarina (சா.அக.).

[கருடப்பச்சை → கெருடப்பச்சை.]

கெருடமுகம் *keruda-mugam,* பெ.(n.) மாடுகளின் முகம்மட்டும் வெண்மையாயிருக்கை (பெரியமாட்.15); being white in the nose only, as cattle.

[கருடன் → கெருடன் + முகம்.]

கெருடன் *kerudan* பெ.(n.) 1. வெண்மையும் செம்மையும் கலந்த பருந்து; white headed kite, bird. 2. மாலவன் ஊர்தி; vehicle of Viṣṇu.

[கருடன் → கெருடன்.]

கெருடி *kerudi,* பெ.(n.) 1. சிலம்பம்; fencing. "*கெருடிகட்டி யளவிலா மைந்தர்க் கூட்டி*" (*திருவாலவா. 35:4*). 2. கரடிக்கூடம்; fencing school.

மறுவ. கொரடி.

க. கருடி; தெ. கரிடி; து. கரொடி.

[கரடி → கொரடி → கெருடி.]

கெருமத்தம் *kerumattam,* பெ.(n.) பறவை; bird.

[கருமத்தம் → கெருமத்தம் (கொ.வ.).]

கெருவம் *keruvam,* பெ.(n.) செருக்கு, தன்முனைப்பு (ஆணவம்); haughtiness, arrogance. "*கெருவமுட னகந்தை யுள்ளார்*" (*தண்டலை. 92*).

[கருவம் → கெருவம் (கொ.வ.).]

கெருவிதன் *keruvidan,* பெ.(n.) செருக்குடையவன் (கருவமுடையவன்); proud person. "*நடமாடுகனபத கெருவிதா*" (*திருப்பு. 132*).

[கருவம் + அன் – கருவன் → கருவிதன் → கெருவிதன்.]

கெல்-தல் *kel-,* 13 செ.கு.வி. (v.i.) புறப்படுதல், போதல்; to go.

Fin. kulkea (to go, to walk); **Est.** kulgeda; **Hung.** kel; **Mong.** yulyu; **Turk.** gelmek (to come); **J.** kuru; Q. chullai.

[குல் → கெல்.]

கெல்லு-தல் *kellu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கல்லுதல்; to dig out as a hole. "*கிணறு கெல்ல*" (*தனிப்பா. 2. 140, 356*) 2. வயிற்றை அரித்துவிடுதல் (யாழ்ப்.); to irritate or corrode and waste the stomach, as excessive stimulus. 3. கிண்டுதல்; to stir. 4. தோண்டுதல்;

கெளுத்திமீன் வகைகள்

பெறப்பட்டது
சென்னை-600 008



பொன் கெளுத்தி



கானாங் கெளுத்தி



கோழக் கெளுத்தி

ஆற்றுக் கெளுத்தி

to dig up; to pluck, uproot. மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பதுபோல் (உ.வ.).

[தில் → கெல் → கெல்லு.]

கெல்லுகம்பு *kellu-kambu,* பெ.(n.) கல்லுகொம்பு; stake for digging the earth.

[கல்லுகொம்பு → கெல்லுகம்பு.]

கெல்லுவி-த்தல் *kelluvi-,* பி.வி.(caus.v.) தோற்றுவித்தல்; cause to make. *"மல்லாபுரத்தில் புதிதாகக் கெல்லுவித்த இராமானுசன் கால்வாய்க்கும் திருவிடை யாட்டம் ஏரி கால்வாய்க்கும்" (திருப்.கல். தொ.2, கல்.134-3).*

[கெல்லு → கெல்லுவி.]

கெலமங்கலம் *kelamaṅgalam,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கீழ் → கீழ + மங்கலம் – கீழமங்கலம் > க. கெலமங்கலம்.]

கெலி[1]-த்தல் *keli-,* 4 செ.குன்றாவி.(v.t.) வெல்லுதல்; to conquer, overcome.

க., து. கெல்; **தெ.** கெலுசு.

[கலி → கெலி.]

கெலி[2]-த்தல் *keli-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஆசை கொள்ளுதல்; to desire eagerly, feel a craving for. 2. அச்சங்கொள்ளுதல்; to be struck with terror; to start with fear.

[கலி → கெலி.]

கெலி[3] *keli,* பெ.(n.) ஆசை (யாழ்ப்.); eagerness; greediness, insatiable desire for food.

[கலி → கெலி.]

கெலி[4] *keli,* பெ.(n.) பெரும் அச்சம்; terror, extreme fear.

[கிலி → கெலி.]

கெலி[5] *keli,* பெ.(n.) பெருவயிறு (யாழ்.அக.); pot-belly.

[கலி → கெலி.]

கெலிக்கடி *keli-k-kaḍi,* பெ.(n.) வைப்பு நஞ்சு; a mineral poison.

[கலி → கெலி + கடி.]

கெலிசு *keliśu,* பெ.(n.) ***கெளிசு*** (யாழ்ப்.) பார்க்க; see *keḷiśu.*

[கெலி → கெலிசு.]

கெலிப்பு *kelippu,* பெ.(n.) 1. வெற்றி; winning, success, victory. 2. மகிழ்ச்சி; joy, happiness. 3. அச்சம்; fear. 4. ஆசை; desire, wish.

ம. கெலிப்பு; **க.** கெலுவு; **குட.** கெல்லு; **தெ.** கெலுபு, கெல்பு; **து.** கெல்பு, கெலுபு; **நா.** கெல்லு; **கொலா.** கெல்.

[வெல் → கெல் → கெலி → கெலிப்பு.]

கெலுழன் *keluḻan,* பெ.(n.) கருடன்; kite. *"கெலுழனோ நந்த னென்னா" (சீவக. 1926).*

[கலுழன் → கெலுழன்.]

கெவ்வியம் *kevviyam,* பெ.(n.) நாய்வேளை (மலை.); a sticky plant that grows in sandy places.

[கவ்வு → கெவ்வு + அம் = கெவ்வியம்.]

கெவரி *kevari,* பெ.(n.) வெள்ளைக்காக்கணம்; a kind of creeper with large white flowers and black fruit that turns red when ripe.

மறுவ. காக்கணங்கோவை, கருவிளை, காக்கட்டான்.

கெவரிகம் *kevarigam,* பெ.(n.) பல்லிப்பூடு; lizzard plant.

[கவுளி → கெவளி → கெவரிகம்.]

கெவலிகபூடு *kevaliga-p-pūḍu,* பெ.(n.) கொல்லைப் பல்லி (சித்.அக.); a flowering parasitic plant.

[கவுளி → கெவளி → கெவலி → கெவலிகம் + பூடு.]

கெவி *kevi,* பெ.(n.) 1. பள்ளம்; depth, deep valley. 2. குகை; cave, cavern. *"புவிதாவுங் கெவிதாவும்" (இராமநா. உயுத். 95. பக்.391).*

தெ., க. கவி (gavi).

[கவி → கெவி.]

கெவிடு *keviḍu,* பெ.(n.) 1. மந்திரக்கூடு (அட்சரக்கூடு) (யாழ்.அக.); case for talisman. 2. எழுத்துப் பலகையின் அறை; compartments of a type case.

[கவுள் → கவுடு → கெவிடு.]

கெவியூதி *keviyūdi,* பெ.(n.) நாலரைக் கல் (மைல்) தொலைவு; a distance of 2 Indian leagues = 4½ miles. *"குரோச மிரட்டி சேர்ந்தது கெவியூதி" (தணிகைப்பு. அகத். 443.).*

[காவதம் → கெவியூதி (கொ.வ.)]

கெவுடு *kevuḍu,* பெ.(n.) பொன் அல்லது வெள்ளிக் குவளைக்குள் வைத்துக் கட்டிக் கையில் அல்லது கழுத்தில் அணிந்து கொள்ளும் அக்கமணி (உருத்திராக்கம்); rudrāksa bead enclosed in gold or silver case and tied on the arm or neck, as a badge, amulet or charm.

[குவி → குவிர் → குவிரு → கெவுரு → கெவுடு.]

கெவுரா *kevurā,* பெ.(n.) துளசி (மலை.); basil, a sacred plant for Vaisṇavites.

மறுவ. கெவுராசிகம்.

[கவிர் → கெவுரா]

கெவுரிகாரம் *kevurikāram,* பெ.(n.) ஞாழல்; a tree (சா.அக.).

[குவி → குவிர் → குவிரி → கெவுரி → கெவுரிகாரம் (கொ.வ.).]

கெவுரிசங்கம் *kevuri-šaṅgam* பெ.(n.) 1. சிவனியர் (சைவர்கள்) மாலையாக அணியும் ஒருவகைக் கொட்டை; double rudrāksa bead.

[குவி → குவிர் → குவிரி → கெவுரி + சங்கம்.]

கெவுரியாதியம் *kevuri-y-ādiyam,* பெ.(n.) பறங்கிப்பட்டை; China rod (சா.அக.).

[கவுரி → கெவுரி + ஆதியம்.]

கெவுளா *kevuḷā,* பெ.(n.) ஒரு மணமுடைய நெய்மம்; an aromatic substance.

கெவுளி[1] *kevuḷi,* பெ.(n.) பல்லி; lizard.

[கவுளி → கெவுளி.]

கெவுளி[2] *kevuḷi,* பெ.(n.) 1. மஞ்சள் நிறமான காய்கள் உண்டாகும் தென்னைவகை (வின்.); a species of coconut-palm bearing yellowish fruit. 2. சிவந்த சங்கு; a reddish sea shell conch.

[கேளி = தெங்கு (வின்.); கேளி → கெவுளி.]

கெவுளிச்செவ்விளை *kevuḷi-c-cevviḷai,* பெ.(n.) ஒரு வகைத் தெங்கு; a kind of coconut.

[கேளி = தெங்கு; கேளி → கெவுளி + செவ்விளை.]

கெவுளிசாத்திரம்[1] *kevuḷi-šāttiram,* பெ.(n.) பல்லியின் ஒலிக்குப் பலன் கூறும் நூல்; a scientific treatise dwelling on the chirps of Lizzard.

[கவுளி → கெவுளி + சாத்திரம்.]

கெவுளிசாத்திரம்[2] *kevuḷi-šāttiram,* பெ.(n.) 1. மந்திரக்கூடு (அட்சரக் கூடு) (யாழ்.அக.); case for talisman. 2. எழுத்துப் பலகையின் அறை; compartments of a type case.

[கவுளி → கெவுளி + சாத்திரம்.]

கெவுளிபாத்திரம் *kevuḷi-pāttiram,* பெ.(n.) 1. ஒரு வகைத் தென்னை; a kind of coconut. 2. பிச்சை எடுக்கும் தேங்காய் ஓடு; coconut-shell for taking alms.

[கெவுளி + பாத்திரம்.]

கெவுனம் *kevuṉam,* பெ.(n.) காக்காய்ப்பொன் (சங்.அக.); mica.

[கனவு → கவுனம் → கெவுனம்.]

கெவுனி *kevuṉi,* பெ.(n.) கோட்டைவாயில் (இ.வ.); city gate, a gate of a fort, castle.

மறுவ. கவுனி.

தெ. கவினி.

[கவாடம் → கவானி → கவுனி.]

கெழி *keḻi,* பெ.(n.) நட்பு; friendship. *"ஒருவன் கெழியின்மை கேட்டா லறிக"* *(நான்மணி. 63).*

ம. கெழி; க. கெளெ.

[கெழுவு → கெழி.]

கெழீ இயிலர் *keḻī-y-ilar,* பெ.(n.) விருப்பமில்லார் (மணக்குடவர்); one who does not like. *"வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார் வீழப் படாஅர் எனின்"* *(குறள். 1194).*

[கெழு → கெழி → கெழீ + இலர்.]

கெழீ இயிலார் *keḻī-i-ilār,* பெ.(n.) நன்மை யடையாதவர்; one who has not benefited. *"பெரியாரைச் சார்ந்து கெழீயிலார் இல்"* *(பழ.257).*

[கெழீஇ → (அல்லர்) → அலார்.]

கெழீ இயிலி *keḻī-i-y-ili,* பெ.(n.) பகைவன் (தொல். சொல்.57, உரை); enemy, as one not on amicable terms.

[கெழு → கெழி → கெழீ + இலி.]

கெழீ இயின்மை *keḻī-i-y-iṉmai,* பெ.(n.) ***கெழீஇயிலி*** பார்க்க; see *keḻīyili.* *"கண்டறிவார் போலார் கெழீஇயின்மைசெய்வாரைப்பண்டறிவார் போலாது"* *(பழ. 140:1).*

[கெழீஇ + இன்மை.]

கெழீ இயினர் *keḻī-i-y-iṉar,* பெ.(n.) சுற்றத்தார்; relatives. *"கேளல்கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்"* *(அகம். 93:2).*

[கெழீஇ + இனர்.]

கெழு[1]**–தல்** *keḻu,* 2 செ.கு.வி.(v.i.) 1. அடர்தல், செறிதல், நெருக்கமாதல்; to become tense, crowded. 2. இறுக்கமாதல்; to get tightened.

Fin. kirea (tight, tense); kiristaa (to tighten); **Kere.** kirei; **Est.** kiristada; **Mordvin.** kirems; **Q.** qiruy-firuy.

[குல் → கெல் → கெழு.]

கெழு[2] *kelu,* பெ.(n.) 1. ஒரு சாரியை; an euphonic increment. *"உம்முங்கெழுவுமுளப்படப்பிறவும் (தொல். எழுத்து. 481).* 2. நிறம்; colour. "குருவுந்கெழுவுநிறனா கும்மே" (தொல்.சொல். 303). 2. இடைச்சொல்; participle. *"வேல்கெழுதடக்கை".*

[குல் → கெல் → கெழு.]

கெழு[3] *kelu,* பெ.(n.) 1. நிறம்; colour. *"குருவுங் கெழுவு நிறனா கும்மே" (தொல்.சொல். 303).* 2. அதிக ஒளி; brightness, luminosity, brilliance.

[குல் → கெல் → கெழு.]

கெழு[4] *kelu,* பெ.(n.) குணகம்; coefficient (Maths).

[குல் → குழு → கெழு.]

கெழுத்தை *keluttai,* பெ.(n.) நஞ்சுடைய முட்களைக் கொண்ட ஒருவகை மீன்; a kind of poisonous thorny fish.

[கள் → கழு → கெழு → கெழுத்தை.]

கெழுதகை *kelutagai,* பெ.(n.) ***கெழுதகைமை*** பார்க்க; see *kelutagaimai. "கிள்ளி வளவனொடு கெழுதகை வேண்டி" (மணிமே.25:14).*

[கெழு + தகை.]

கெழுதகைமை *kelutagaimai,* பெ.(n.) உரிமை; right, intimacy. *"கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை" (குறள். 808).*

[கெழுதகை → கெழுதகைமை.]

கெழுமல் *kelumal,* பெ.(n.) 1. முளைத்தல்; germination. 2. அமைதல்; formulation. 3. கற்றல்; studying. 4. நிறைதல்; becoming full.

[குள் → கெழு → கெழுமல்.]

கெழுமு[1]-தல் *kelumu-,* 22 செ.கு.வி.(v.i.) 1. நிறைதல்; to become full, plenteous, abundant. *"கெழுமி யெங்கணுமாய்க் கிளரொளிச் சடையனை" (வள்ள. சத்தியஞான. பதிபியல், 9).* 2. முதிர்தல்; to become ripe. *'கெழுமுதல் ஈண்டு முற்றுதலை யுணர்த்திற்று' (மலைபடு. 114, உரை).* 3. முளைத்தல் (அக.நி.); to spring up, shoot forth (அக.நி.). 4. பாலுணர்ச்சி கொள்ளுதல்; to be affected with lust. *"கிரிகையை நினைந்துடல் கெழுமி" (பாரத. குருகு. 104).*

[குள் → கெழு → கெழுமு (மு.தா.40).]

கெழுமு[2]-தல் *kelumu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. பொருந்துதல்; to attain, join, unite. *"தேரோடத் துகள்கெழுமி" (பட்டினப். 47.)* 2. கிட்டுதல்; to approach. *"ஒன்னாதார் படைகெழுமி" (பு.வெ. 3:12, கொளு).* 3. கற்றல் (திவா.); to learn, practise.

[குள் → குழு → கெழு → கெழுவு → கெழுமு (மு.தா. 40).]

கெழுமை[1] *kelumai,* பெ.(n.) 1. முளைக்குகை; germinating. 2. வளமை; opulence. 3. நிறம்; colour. 4. ஒளி; brightness, shine.

[குள் → கெழு → கெழுமல்.]

கெழுவ *keluva,* இடை. (part.) ஓர் உவமவுருபு; a term denoting comparison (தொல்.பொருள். 286, உரை.).

[குல் → குழுவு → கெழுவு.]

கெழுவல் *keluval,* பெ.(n.) 1. தழுவுதல்; embracing. 2. நிறைதல்; become full.

[கெழு → கெழுவல்.]

கெழுவு[1]-தல் *keluvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. பொருந்துதல்; to unite, to embrace. *"மங்கை யைக் கெழுவின யோகினர்" (தேவா. 951:5).* 2. நிறைதல்; to be full. *"கெழுவிய காதலையென் றெமதுள்ளம்" (தணிகைப்பு. களவு. 530).* 3. மயங்குதல் (சூடா.); to be confused, deluded (சூடா.). 4. பற்றுக்கொள்ளுதல் (சூடா.); to be attached, as the mind to earthly things (சூடா.).

[குள் → கெழு → கெழுவு.]

கெழுவு[2] *keluvu,* பெ.(n.) நட்பு; friendship. *"கேளிர் மணவின் கெழுவு மிதுவோ" (பரிபா. 8:63).*

[குள் → குழு → கெழு → கெழுவு.]

கெளபள்ளி *kelapalli,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கேளன் + பள்ளி – கேளன்பள்ளி → கெளபள்ளி.]

கெளி-த்தல் *keli-,* 4 செ.கு.வி.(v.i.) நெளிந்துபோதல் (யாழ்.அக.); to wriggle, crawl, as a worm.

Skt. gal.

[குல் → கெல் → கெளி.]

கெளித்தி *kelitti-,* பெ.(n.) கெளிற்றுமீன், நன்னீர் உள்ள இடங்களில் வாழும் மீன்; a river fish.

[கெளிறு → கெளிற்றி → கெளித்தி.]

கெளிச்சாறு *keḷi-c-cāṟu*, பெ.(n.) நிலத்துளசி; ground basil (சா.அக.).

[கெளி → சாறு.]

கெளிசு *keḷišu*, பெ.(n.) 1. காமாலை வீக்கம்; swelling in jaundice. 2. பாண்டு; dropsy (சா.அக.). 3. முகம் வயிறுகளிற் காணும் வீக்கம் (யாழ்ப்.); bloatedness, as of the face or stomach.

[குல் → கெல் → கெள் → கெளிசு.]

கெளிசுபற்று-தல் *keḷišu-paṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) முகம் முதலியன வீங்குதல் (யாழ்.அக.); to be bloated, as the face or stomach.

[கெளிசு + பற்று-.]

கெளித்திப்பச்சை *keḷitti-p-paccai*, பெ.(n.) பச்சை எரியணம் (கற்பூரம்); crude camphor (சா.அக.).

[கெளித்தி + பச்சை.]

கெளிதம் *keḷidam*, பெ.(n.) பெருங்கல் (சது.); large stone.

Skt. galita.

[குல் → கெல் → கெள் → கெளிதம்.]

கெளிப்பு *keḷippu*, பெ.(n.) 1. வளைவு; bend. 2. நெளிவு; twist.

[குல் → கெல் → கெள் → கெளிப்பு.]

கெளிர்ச்சல்லியம் *keḷir-c-calliyam*, பெ.(n.) மீனெலும்பு (வின்.); fish bone.

[கெளிறு + சல்லியம்.]

கெளிற்றுமுள்ளி *keḷiṟṟu-muḷḷi*, பெ.(n.) கெளிற்று மீனைப்பிடித்தற்குரிய தூண்டில் (இ.வ.); tackle used in catching *keḷiṟṟu-mīṉ*.

[கெளிறு + முள்ளி.]

கெளிறு *keḷiṟu*, பெ.(n.) ***கெளுத்தி*** பார்க்க; see *keḷutti*. *"கேவேடராகிக் கெளிறதுபடுத்தும்" (திருவாச. 2:17).*

[குள் → கெள் → கெளிறு.]

கெளுசி சந்தனம் *keḷuši-šandaṉam*, பெ.(n.) பேய்ப் புடல்; devil's gourd.

[கெளிசு → கெளிசி + சந்தனம்.]

கெளுத்தி *keḷutti*, பெ.(n.) 1. எட்டங்குல நீளமுள்ள கெளிற்றுமீன்; fiddler-keḷiṟu, silvery or golden, attaining 8 in. in length. 2. நன்னீரில் வாழும் மீன்வகை; a fresh-water fish, brownish attaining considerable size. 3. பதினெட்டு விரல் நீளமுள்ள மீன்வகை; a fresh-water fish-bird, bluish-brown, attaining 18 in. in length. 4. தேளிமீன்; scorpion-fish, leaden, attaining more than 1 ft. in length.



கெளுத்தி மீன்

ம. கென்னலு.

[கெளிறு → கெளுத்தி.]

வகைகள் : 1. பொன் கெளுத்தி, 2. கானாங் கெளுத்தி, 3. கோழக் கெளுத்தி, 4. ஆற்றுக் கெளுத்தி.

கெளுத்திபிலாச்சை *keḷutti-pilāccai*, பெ.(n.) கெளுத்திபோலத் தோற்றமுள்ள ஒருவகை மீன்; a kind of fish like *keḷutti*.

[கெளுத்தி + பிலாச்சை]

கெளுத்திப்பூண்டு *keḷutti-p-pūṇḍu*, பெ.(n.) மீனெரிஞ்சான் செடி; a species of rattlewort (சா.அக.).

[கெளுத்தி + பூண்டு.]

கெற்சி *keṟci*, பெ.(n.) சிறுவழுதலை (சங்.அக.); Indian nightshade.

[கில் → கில்சி → கெற்சி.]

கெற்பக்கல் *keṟpakkal*, பெ.(n.) கருப்பையில் காணப்படும் கல்; a mole which has undergone calcareous degeneration in the womb. (சா.அக.).

[கருப்பம் + கல் – கருப்பக்கல் – கெற்பக்கல் (கொ.வ.).]

கெற்பக்கழலை *keṟpa-k-kaḻalai*, பெ.(n.) கருக் கலைவாலுண்டாகும் சதைக் கட்டி; a fleshy mass occurring due to degeneration (சா.அக.).

[கருப்பம் → கெற்பம் (கொ.வ.) + கழலை – கெற்பக்கழலை.]

கெற்பக்காய்ச்சல் *keṟpa-k-kāyccal*, பெ.(n.) பெண் கருவுற்றிருக்கும்போது உண்டாகும் சுரம்; fever occuring in woman during pregnancy.

[கருப்பம் → கெற்பம் + காய்ச்சல் – கெற்பக்காய்ச்சல்.]

கெற்பக்கிராணி *kerpa-k-kirāṇi*, பெ.(n.) பேறு காலத்தில் உண்டாகும் நோயிலிருந்து விடுபடல்; relief found by pregnant woman from diarrhoea (சா.அக.).

[கருப்பம் → கெற்பம் + கிராணி.]

கெற்பக்குருவிந்தம் *kerpa-k-kuruvindam*, பெ.(n.) சாதிலிங்கம்; vermilion (சா.அக.).

[கருப்பம் → கெற்பம் + குருவிந்தம்.]

கெற்பக்குவளை *kerpa-k-kuvaḷai*, பெ.(n.) கருப்பை; uterus (சா.அக.).

[கருப்பை + குவளை – கருப்பைக்குவளை → கெற்பக்குவளை (கொ.வ.).]

கெற்பக்கொழுப்பு *kerpa-k-koḻuppu*, பெ.(n.) பொய்க்கற்பத்தில் காணப்படும் அடிவயிற்றின் கொழுப்பு; accumulation of fat in the abdominal wall found in cases of false pregnancy (சா.அக.).

[கருப்பம் → கெற்பம் + கொழுப்பு.]

கெற்பக்கோள் *kerpa-k-kōḷ*, பெ.(n.) 1. கருப்பங் கொள் தன்மை; the state of being pregnant. 2. கருப்பத்தின் குற்றங்கள்; disorders of pregnancy (சா.அக.).

[கருப்பம் → கெற்பம் + கோள்.]

கெற்பக்கோளிலக்கணம் *kerpa-k-kōḷ-ilakkaṇam*, பெ.(n.) கருப்பைக் கோளாறுபற்றிய நூல்; a treatise on diseases of the uterus and disorders of pregnancy (சா.அக.).

[கருப்பம் → கெற்பம் + கோள் + இலக்கணம்.]

கெற்பச்சதைக்கழலை *kerpa-c-cadai-k-kaḻalai*, பெ.(n.) 1. கருப்பையில் காணப்படும் அரத்தத் திரள்; a blood mole in the womb. 2. சிதைவுண்ட கருச்சதை போற் காணப்படல்; a mole formed by dead ovum assuming a flesh like appearance in the womb (சா.அக.).

[கருப்பம் → கெற்பம் + சதை + கழலை.]

கெற்பச்சன்னி *kerpa-c-caṉṉi*, பெ.(n.) கருவுற்ற பெண்களைத் தாக்கும் இசிவு (சன்னி); delirium attacking a pregnant woman (சா.அக.).

[கருப்பம் → கெற்பம் + சன்னி.]

கெற்பச்சூடு *kerpa-c-cūḍu*, பெ.(n.) கற்பக் குழந்தையைத்தாக்கும்சூட்டுநோய்; congenital heat affecting children while in the womb (சா.அக.).

[கருப்பம் → கெற்பம் + சூடு.]

கெற்பச்சூரை *kerpa-c-cūrai*, பெ.(n.) கருவுற்ற பெண்களுக்குக் காணும் சூலைநோய்; darting pain in the abdomen occuring to pregnant women (சா.அக.).

[கருப்பம் → கெற்பம் + சூரை.]

கெற்பநாசம் *kerpa-nāšam*, பெ.(n.) கருச்சிதைவு; abortion (சா.அக.).

[கருப்பம் → கெற்பம்; நசி → நாசம்; கெற்பம் + நாசம்.]

கெற்பநாசினி *kerpa-nāšiṉi*, பெ.(n.) கருவைக் கரைக்கும் மருந்து; medicinal agents responsible for causing abortion (சா.அக.).

[கெற்பம் + நாசினி.]

கெற்பப்புழு *kerpa-p-puḻu*, பெ.(n.) கருத்தரிப்பதைத் தடுக்கும் மலட்டுப்புழு; germs in the uterus destructive to conception (சா.அக.). **கருப்பப்புழு** பார்க்க; see *karuppa-p-puḻu*.

[கருப்பம் → கெற்பம் + புழு.]

கெற்பம் *kerpam*, பெ.(n.) பெண்ணின் கருப்பையில் கரு உண்டாதல்; ovum formed in woman's uterus with the help of male sperm.

[கரு = கருப்பம், குருத்தல் = தோன்றுதல்; குரு → கரு → கருப்பம். கரு = சூல், பீள், முட்டை, சேய், குட்டி. வடமொழியாளர் க்ரு (விளி) என்றும் grabh = grah (பற்று) என்றும் மூலங்காட்டு வது பொருந்தாது (வ.மொ.வர.ப.108).]

கெற்பம்கீழ்வீழ்தல் *kerpam-kīḻ-vīḻdal*, பெ.(n.) குழந்தை பிறத்தல்; delivery of child (சா.அக.).

[கருப்பம் → கெற்பம் + கீழ் + வீழ்தல்.]

கெற்பவெட்டை *kerpa-veṭṭai*, பெ.(n.) குழந்தையைத் தாக்கும் தாய்தந்தையரின் பால்வினை நோய்; venereal or syphilitic tints of congenital origin in children.

[கருப்பம் → கெற்பம் + வெட்டை.]

கெற்பாச்சன் *kerpā-c-cāṉ*, பெ.(n.) பெருவழுதலை; a big variety of brinjal plant.

[கில் (வன்மை) + சி – கிற்சி → கெற்சி + (பெருத்தான்) பாச்சான்.]

கெற்பிணி *kerpiṇi*, பெ.(n.) கருவுற்ற பெண்; a pregnant woman (சா.அக.).

[கருப்பிணி → கெற்பிணி (கொ.வ.).]

கெற்பி²–த்தல் *kerpi-*, 4 செ.கு.வி. (v.i.) கருவுறல்; getting pregnant.

[கரு → கருப்பி → கெற்பி (கொ.வ.).]

கெற்பிரி–தல் *kerpiri-,* 4 செ.கு.வி. (v.i.) பற்றியெரிதல் (யாழ்.அக.); to blaze.

[கிற்பு → கெற்பு (வலிமை) + எரி – கெற்பெரி → கெற்பிரி (கொ.வ.).]

கெற்பு *kerpu,* பெ.(n.) 1. வலிமை; strength. 2. திறன்; power. 3. மெய்ப்பொருள்; philosophy.

ம. கெல்பு.

[கிற்பு → கெற்பு.]

கெற்போட்டம் *kerpōttam,* பெ.(n.) தென்திசை நோக்கி நகரும் முகில்; southern passage of clouds.

[கருப்பம் → கெற்பம் + ஓட்டம்.]

கெனகாரி *kenagāri* பெ.(n.) முன்னை; spiny fire-brand teak.

[கனம் → கெனம் + காரி.]

கே

கே *kē,* பெ. (n.) ககர வல்லொற்றின் மேல் (க்) 'ஏகார' உயிரேறிப்பிறந்த ஓர் உயிர்மெய்யெழுத்து; the syllabic letter representing velar consonant 'க்' with the vowel 'ஏ'.

[க் + ஏ – கே.]

கேக்களி–த்தல் *kēkkali-,* 4 செ.கு.வி. (v.i.) ***கெக்களி*** பார்க்க; see *kekkali.*

[கெக்களி → கேக்களி.]

கேக்குப்பூடு *kēkku-p-pūdu,* பெ.(n.) சேய்மை (சீமைச்) சீரகம்; caraway plant (சா.அக.).

மறுவ. கரவிப்பூடு.

[கேக்கு + பூடு.]

கேக்குவிதை *kēkku-vidai,* பெ.(n.) சேய்மைச் சோம்பு; caraway seed (சா.அக.).

[கேக்கு + விதை.]

கேக்கை *kēkkai,* பெ.(n.) தாழை; screw-pine-tree.

மறுவ. கேக்கைசி.

[கேதகை → கேக்கை.]

கேகம் *kēgam,* பெ.(n.) வீடு (யாழ்.அக.); house.

[கருவகம் (உள்வீடு) → கிருகம் → கேகம்.]

அரசனின் மந்திரச்சுற்றம் கூடும் நெடுமாடத்தைக் கருமாளிகை என்றும், இறைவன் எழுந்தருளிய கோயிலகத்தைக் கருவறை என்றும், உள்மண்டபத்தைக் கருவரங்கம் என்றும் கூறுதலை ஒப்பிட்டு நோக்குக. கருவகம் என்னும் தமிழ்ச்சொல்லே வடமொழியில் கிருகம் என்றும் வட இந்திய மொழிகளில் கர் (gar) என்றும் திரிந்தது.

கேகயப்புள் *kēkaya-p-pul,* பெ.(n.) இசையுணரும் அசுணப்பறவை; a bird believed to possess an extremely delicate sense of music.

[கேகயம் + புள் (பறவை).]

இப் பறவையைக் கொல்ல நினைப்பவர், முதலில் யாழை மீட்டிப் பின்பு செவியில் ஏற்கவொண்ணாத பறையை முழக்கிக் கொல்வர் என்பது நற்றிணை 304ஆம் பாடலின் உரைக்குறிப்பு.

கேகயம்[1] *kēgayam,* பெ.(n.) மயில் (திவா.); peacock. *"கேகய நவில்வன" (கம்பரா.நாட்டு.49).*

[கெக்கலி → கேக்கை → கேகயம் (கெக்கலிக்கும் பறவை).]

கேகயம்[2] *kēgayam,* பெ.(n.) 1. பண்டைய ஐம்பத்தாறு நாடுகளுள் ஒன்றானதும், சிந்து நாட்டிற் கருகிலுள்ளதுமான நாடு; the country bordering on Sindh, one of 56 countries. *"மணிமுடிக் கேகயத் தரசன்" (பெருங்.மகத.16:9).* 2. பண்வகை (சூடா.); a musical mode. 3. கவுரிச் செய்நஞ்சு (யாழ்.அக.); a prepared arsenic. 4. ***கேகயப்புள்*** பார்க்க; see *kēgaya-p-pul.*

[கேகயம்[1] → கேகயம்[2].]

கேகயம்[3] *kēgayam,* பெ.(n.) மகிழம்விதை; seeds of ape-flower tree (சா.அக.).

[கேதகம் → கேகயம்.]

கேகயம்[4] *kēgayam,* பெ.(n.) 1. வளைவு; bend. 2. வில் (அக.நி.); bow.

Pkt. kēya; **Ma.** ketana.

[கவை → கேவு → கேகம் → கேகயம்.]

கேகயன் *kēkayan,* பெ.(n.) கேகயம் என்னும் நாட்டை ஆண்ட மன்னன்; a king who ruled the nation *kēgayam.*

[கேகயம் → கேகாரன்.]

கேகரம் *kēgaram,* பெ.(n.) கடைக்கண் பார்வை; side glance (சா.அக.).

Pan. kairā; **Ass.** ker, rā, kērā; **H., Mar.** kaira.

[கேக்கை → கேகரம்.]

கேகரன் *kēgaran,* பெ.(n.) ஓரக்கண்ணன்; squint-eyed man (சா.அக.).

[கேக்கை → கேகரம் → கேகரன்.]

கேகலன் *kēgalaṉ*, பெ.(n.) கூத்தாடி; rope dancer.

Skt. ke-kala.

து.கேகபாடுனி.

[களி → கேளி → கேளிகளி → கேகலன் (கொ.வ.).]

கேகி *kēgi*, பெ.(n.) மயில்; peacock (சா.அக.).

தெ.கேகி.

மறுவ. கேகயம்.

[கெக்களி → கேகளி → கேகி.]

கேகுந்தகம் *kēgundagam*, பெ.(n.) கொழுக்கட்டை; a kind of rice cake or puff (சா.அக.).

மறுவ. கேகுந்தம்.

[கேவு → கேவுந்தம் → கேகுந்தம் → கேகுந்தகம்.]

கேகுந்தம் *kēgundam*, பெ.(n.) கொழுக்கட்டை; puff (சா.அக.).

[கேவு → கேவுந்தம் → கேகுந்தம் வடஇந்திய மொழிகளில் gēhu கோதுமை எனப் பொருள்படும்.]

கேகை *kēgai*, பெ.(n.) மயிற்குரலின் அகவலோசை; screech of a pea-cock (சா.அக.).

மறுவ. கேகம்.

Skt. keka; **Pkt.** kekā, **H.** kehā.

[கேக்கை (ஒலிக்குறிப்பு) → கேகை.]

கேசக்கினம் *kēša-k-kiṉam*, பெ.(n.) 1. தலை வழுக்கை; morbid baldness. 2. மயிர் உதிர்தல்; falling off of the hair (சா.அக.).

[கேசம் + (கீனம்) கினம்.]

கேசகம் *kēšagam*, பெ.(n.) 1. ஒருவகைக் கிழங்கு; a kind of root. 2. அத்தி; fig tree (சா.அக.).

[கதி → கெதி → கேதி → கேதிகம் → கேசிகம் → கேசகம்.]

கேசகாரம் *kēšagāram*, பெ.(n.) ஒருவகைக் கரும்பு; a kind of sugarcane (சா.அக.). 2. குதிரையைத் தேய்க்குமொரு இரும்புக் கருவி; wire brush to molish the horses.

[செய் → கெய் → கேயம் → கேசம் + கேசகாரம்.]

கேசதத்து *kēša-tattu*, பெ.(n.) தகரை என்னும் மூலிகை; ring-worm plant (சா.அக.).

[கதி → கெதி → கேதம் → கேசம் + (தந்து) தத்து.]

கேசதம் *kēšadam*, பெ.(n.) கையாந்தகரை; eclipse plant (சா.அக.).

மறுவ. கரிசலாங்கண்ணி, கரிசாலை, கேசதாரகம்.

Skt. kesa-da.

[கதி → கெதி → கேதம் → கேசம் → கேசதம்.]

கேசதமனி *kēša-tamaṉi*, பெ.(n.) வன்னிமரம்; vanni tree also called Arjuna's penance tree (சா.அக.).

[கதி → கெதி → கேதம் → கேசம் + தமனி.]

கேசதாரகம் *kēša-tāragam*, பெ.(n.) கரிசலாங் கண்ணி; eclipse plant.

[கதி → கெதி → கேதம் → கேசம் + (தாரம்) தாரகம்.]

கேசநாளம் *kēša-nāḷam*, பெ.(n.) நுண்ணிய அரத்தக் குழாய்; a blood tube resembling a hair.

[கேசம் + நாளம்.]

கேசம்[1] *kēšam*, பெ.(n.) 1. மக்கள் தலைமயிர்; human hair. *"குறையிவட் குண்டேற் கேசங் குறைத்தற்கு" (பெருங்.வத்தவ.14:29).* 2. விலங்கின் மயிர் (பிங்.); hair of animals.

Skt. kēša; **Pali**., Pkt. kēsa; **Pr.** iš-kk (mustache); **Dm.** kyēc; **Gaw.** kheš.

[கதித்தல் = தோன்றுதல், முளைத்தல். கதி → கெதி → கேதம் → கேசம். ஒ.நோ. கேசருகம் = புல். கேசிரி = புளியாரைக் கீரை.]

கேசம்[2] *kēšam*, பெ.(n.) யானைத் திப்பிலி; elephant pepper.

[கேசம்[1] → கேசம்[2].]

கேசமதனி *kēšamadaṉi*, பெ.(n.) வன்னிமரம்; suma tree (சா.அக.).

[கேசம் + (மரம் → மரன் → (மரனி) மதனி.]

கேசமாமுட்டி *kēšamāmuṭṭi*, பெ.(n.) எட்டி; nux-vomica (சா.அக.).

[கதி → கெதி → கேதம் → கேசம் + (ஆம் + எட்டி.) மாமுட்டி.]

கேசமுட்டி *kēšamuṭṭi*, பெ.(n.) வேப்பமரம்; margosa tree (சா.அக.).

[கதி → கெதி → கேதம் → கேசம் + (உற்றி → உத்தி) உட்டி.]

கேசமோரிகம் *kēšam-ōrigam*, பெ.(n.) பிள்ளை மருது; flowering murdah (சா.அக.).

[கதி (தோன்றுதல்) → கெதி → கேதம் → கேசம் + ஓரிகம்.]

கேசரத்துப்பு *kēšarattuppu*, பெ.(n.) கல்லுப்பு; sea-salt (சா.அக.).

[கதி(தோன்றுதல்) → கெதி → கேதம் → கேசம் → கேசரம் + அத்து + உப்பு.]

கேசரம்[1] *kēšaram,* பெ.(n.) 1. பூந்தாது (திவா.); filaments of a flower, stamens. 2. மகிழமரம் (பிங்.); pointed-leaved ape-flower. 3. குங்குமப்பூ; saffron.

மறுவ. பூங்கூந்தல்.

Skt., Pali., Pkt. kēsara; **Mar.**, Guj., H., **Nep.** kesar; **Sinh.** kēsara.

[சகித்தல் - தோன்றுதல், முளைத்தல். கதி → கெதி → கேதம் → கேதரம் → கேசரம்.]

கேசரம்[2] *kēšaram,* பெ.(n.) 1. பெருங்காயம் (யாழ்.அக.); asafoetida. 2. வெங்காயம்; onion. 3. சிறுநாகப்பூ; ironwood of Ceylon. 4. புன்னை; alexandrian. 5. பெருங்குறிஞ்சி; conehead.

[கதி (தோன்றுதல்) → கெதி → கேதம் → கேதரம் → கேசரம்.]

கேசரம்[3] *kēšaram,* பெ.(n.) தலைமுடி; hair.

Skt. kēsarin; **Pali.** kēsarin-maned (of a lion); Pkt. kēsari; **Sind.** kehari; Pan. kéhar, kehrī (lion, tiger); Guj. kesri; **Mar.** kēsar; **Sinh.** kēsarā; **H.** kehari.

[கதி (தோன்றுதல், முளைத்தல்) → கெதி → கேதம் → கேதரம் → கேசரம்.]

கேசரம்பாய்-தல் *kēšaram-pāy-,* 2 செ.கு.வி. (v.i.) இதளியக் குளிகையின் உதவியால், சித்தர்கள் விண்ணில் விரைவாகச் செல்லுதல்; flying in the mid-air region by Šiddhars with the aid of animated mercurial pills (சா.அக.).

[கேசரம் + பாய்-.]

கேசரமாதியம் *kēšaram-ādiyam,* பெ.(n.) புல்லுருவி; a parasitic plant.

[கதி → கதி → கேதம் → கேதரம் → கேசரம் + ஆதியம்.]

கேசரமாருதம் *kēšara-mārudam,* பெ.(n.) விசும்பினடுவே பரவியுள்ள காற்று; air of the mid-sky (சா.அக.).

[கே + சரம் + மாருதம்.]

கேசரமுடையன் *kēšaram-udaiyan,* பெ.(n.) சீந்தில்; moon-creeper (சா.அக.).

[கேசரம் + உடையான்.]

கேசரர் *kēšarar,* பெ.(n.) வானவர்; those who move in the aerial regions. *Vidhyādhar* as a class of demigods. *"கேசர னெனப்போம் விசும்பிடை" (பாரத.குருகுல.104).*

[ககனம் (விசும்பு) + சரர் - ககனசரர் - கேனசரர் → கேசரர் (கொ.வ.).]

கேசரவரம் *kēšara-varam,* பெ.(n.) 1. குங்குமம்; red paint. 2. குங்குமப்பூ; European saffron. 3. நாயுருவி; Indian burr. 4. கொம்மட்டிமாதுளை; a kind of citron (சா.அக.).

[கேசரம் + வரம்.]

கேசரி *kēšari,* பெ.(n.) 1. வானிற் பறக்குங் கலை; the art of flying in the sky. 2. கணியத்திற் கூறப்படும் ஒருவகைப் பேறு (யோகம் 3); a kind of good luck. *"நீர்தருமாழ்ந் தெழிலோர் விசைகேசரி நிகழ் பொன்னாள்" (சேதுபு.சடாதி.7).*

[ககனம் + சரம் - ககனசரம் - கேனசரம் - கேசரம் - கேசரி.]

கேசரிக்கரு *kēšari-k-karu,* பெ.(n.) பிண்டம்; foetus (சா.அக.).

[கேசரி + கரு.]

கேசரிகம்[1] *kēšarigam,* பெ.(n.) 1. நாயுருவி; Indian burr. 2. அரிமா; lion. 3. குதிரை; horse. 4. நாதம்; fuller's earth. 5. பெருங்காயம்; asafoetida (சா.அக.).

[கேசரம் → கேசரிகம்.]

கேசரிகம்[2] *kēšarigam,* பெ.(n.) புதர்க்காடுகளில் வளரும் நாயுருவி; Indian burr growing in hedges and thickets.

[கேசரி + கேசரிகம்.]

கேசரிமங்கலம் *kēšari-mangalam,* பெ.(n.) கோவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kovai Dt.

[கேசரி + மங்கலம்.]

கேசரிமுத்திரை *kēšari-muttirai,* பெ.(n.) உள் நாக்கைத் தொடும்படி நாக்கு நுனியைக் கொண்டு செய்யும் ஓகவகை; a *yōgic* posture in which tne tip of the tongue is turned inward to touch the uvula.

[கேசரி + முத்திரை.]

கேசரிவித்தை *kē-šari-vittai,* பெ.(n.) வானில் பறத்தல்; the art of flying in the sky (சா.அக.).

[கே + சரி + வித்தை.]

கேசரிவேந்தன் *kēšari-vēndan,* பெ.(n.) இதளியம்; mercury.

[கேசரி + வேந்தன்.]

கேசரின் *kēšarin,* பெ.(n.) 1. நீலோற்பலவிதை; seeds of blue Indian-lily. 2. சிறுநாகப்பூ; Ceylon iron-wood. 3. கடாரநாரத்தை; citron tree. 4. செம்முருங்கைப் பூ; mooringa with red flower.

[கேசரி – கேசரின்.]

கேசருகம் *kēšarugam,* பெ.(n.) புல்; grass (சா.அக.).

[கேசரம் → கேசருகம்.]

கேசரை *kēšarai,* பெ.(n.) பருத்திச் செடி; cotton plant (சா.அக.).

[கேசரம் → கேசரை.]

கேசவந்து *kēšavandu,* பெ.(n.) வன்னிமரம்; vanni tree (சா.அக.).

மறுவ. கேசதமணி.

[கேசதந்து → கேசவந்து.]

கேசவம் *kēšavam,* பெ.(n.) 1. நறுமணம்; sweet scent. 2. பெண்வண்டு; beetle (female). 3. ஒரு பூடு; நீலோற்பல விதை; seed of blue Indian-lily. 4. நிறைமயிர்; fullness of hair. 5. பேய்; devil.

மறுவ. கேசதமணி.

[கேசம் → கேசவம்.]

கேசவர் *kēšavar,* பெ.(n.) வெள்ளைக் காக்கணங் கொடி; white mussell creeper (சா.அக.).

[கசவம் → கசவர் → கேசவர்.]

கேசவை *kēšavai,* பெ.(n.) உண்ணத் தகுந்த வேரினைக் கொண்ட ஒருவகைச் செடி; a plant with an esculent root, Colocasia antiquorum.

க. கேசு, கேசவெ.

kēcuka, kēmuka, kacu, kacvi, a plant with an esculant root, Arun colocasia etc. D. kēsu etc. K.K.E.D.XXII.

கேசாதிபாதமாலை *kēšādi-pāda-mālai,* பெ.(n.) கலிவெண்பாவால் ஒருவரை, முடிமுதலாக, அடிவரை வண்ணித்துப் பாடும் ஒருவகைச் சிற்றிலக்கியம் (இலக்.வி.871); a poem in *kali-veṇbā* describing a person from head to foot.

மறுவ. கேசாதிபாதம்.

*[கதி → கெதிகயம் (அடுப்பு) – கேயம் → கேசம் + ஆதி + பாதம் + மாலை. **முடியடிமாலை** பார்க்க; see mudi-y-adi-mālai.]*

கேசாந்தம் *kēšāndam,* பெ.(n.) மயிர் களைந்து செய்யுமோர் சடங்கு; a ritual ceremony by shaving off the head.

[கேசம் + அந்தம்.]

கேசாரசம் *kēsārašam,* பெ.(n.) ஒருவகை நாரத்தை; bitter orange (சா.அக.).

[கேசாரம் + ரசம்.]

கேசாரி *kēsāri,* பெ.(n.) குதிரையின் பிடரிமயிர்; horse's mane. *'பலவாகிய கேசாரியையுடைய குதிரைகள்' (நெடுநல்.93, உரை).*

[கேசம் + ஆரி.]

கேசியா *kēšiya,* பெ.(n.) தாழை; fragrant screw-pine (சா.அக.).

[கேதம் → கேசம் → கேசியா]

கேசிரி *kēširi,* பெ.(n.) புளியாரைக்கீரை; Indian sorrel (சா.அக.).

[கேசம் → கேசரி.]

கேசினி *kēšiṇi,* பெ.(n.) சங்கங்குப்பி; smooth volkameria (சா.அக.).

[கேசி → கேசினி.]

கேசீ *kēšī,* பெ.(n.) அவுரிச்செடி; Indigo plant (சா.அக.).

[கேசம் → கேசீ.]

கேசுகம் *kēsugam,* பெ.(n.) ஒருவகைக் கிழங்கு; an edible root (சா.அக.).

[கேஞ்சலிகை → கேஞ்சுகம் → கேசகம்.]

கேஞ்சலிகை *kēñjaligai,* பெ.(n.) 1. ஒருவகைக் கிழங்கு; a kind of root (சா.அக.). 2. செடிவகை; a plant.

[காஞ்சலி → காஞ்சலிகை → கேஞ்சலிகை)]

கேட்காவொலி *kēṭkāvoli,* பெ.(n.) ***கேளாவொலி*** பார்க்க; see *kēḷā-v-oli.*

[கேட்கா (த) + ஒலி.]

கேட்கு-தல் *kēṭku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. ஆராய்தல்; to scrutinise. 2. கேட்டல்; to listen. 3. தரச் சொல்லுதல்; order to give. 4. வினாவல்; to question; enquire.

[கேள் + கு → கேட்கு.]

கேட்குநர் *kēṭkunar,* பெ.(n.) கேட்பவர்; hearer, audience "சொல்லுந போலவும் கேட்குந போலவும்" (தொல்.பொருள்.513).

[கேள் + கு + நர்.]

கேட்கும்விடை *kēṭkum-viḍai,* பெ.(n.) வினாவும் விடை; a reply in question form. என்னா லாகுமோ?

[கேள் + உம் + விடை = கேட்கும் விடை.]

கேட்கை *kēṭkai*, பெ.(n.) கேள்வி; hearing.

[கேள் + கை – கேட்கை.]

கேட்டல் *kēṭṭal*, 3 தொ.பெ.(vbl.n.) 1. இரத்தல்; to beg; entreat. 2. செவிகொடுத்தல்; to hear. இவன் எதையும் செவி கொடுத்துக் கேட்கமாட்டான். 3. வினாவல்; to question. 4. வேண்டுதல்; to request. 5. செய்தல்; to do.

[கேள் → கேட்டல்.]

கேட்டவாய்க்கேட்டல் *kēṭṭa-vāi-k-kēṭṭal*, தொ.பெ.(vbl.n.) பலர் சொல்லுவதைக் கேட்டல்; to hear through many.

[கேள் → கேட்ட + வாய் + கேட்டல்.]

கேட்டவிவு *kēṭṭavivu*, பெ.(n.) செயல்கள் (கருமங்கள்) சில கெட்டும் சில கெடாமலும் நிற்கும் நிலை; condition in which fruits of certain karmas are destroyed and of some others are made innocuous. *"கேட்டிற் கேட்ட விவுதன்கண்"* *(மேருமந்.790).*

[கேடு → கேட்டு + அவிவு.]

கேட்டி[1] *kēṭṭi*, பெ.(n.) ஓர் ஏவல்வினை; imparative verb. *"மாது கேட்டியிம் மடவரல் விதர்ப்பர்கோன் புதல்வி"* *(நைடத.வீம.6.).*

[கேள் → கேட்டி]

கேட்டி[2] *kēṭṭi*, பெ.(n.) தாற்றுக்கோல்; staff or rod for driving oxen, ox-goad.

கேட்டி

மறுவ. கேட்டித்தடி, மிலாறு, தாற்றுக்குச்சி.

[கிட்டி → கேட்டி.]

கேட்டிக்கம்பு *kēṭṭi-k-kambu*, பெ.(n.) ***கேட்டி*** பார்க்க; see *kēṭṭi*.

[கேட்டி + கம்பு.]

கேட்டிகும் *kēṭṭigum*, வி.எ.(adv.) கேட்டேம்; that which is heard themselves. *"மலர்பறி யாவெனக் கேட்டிகும்"* *(பதிற்றுப்.52).*

[கேள் (கேட்டு) + இகும் – கேட்டிகும்]

கேட்டிசின் *kēṭṭisiṉ*, இடை(part.) 1. கேட்டேன்; asked *"பிறர்பிறர் கூறவழிக் கேட்டிசினே"* *(புறநா.150).* 2. கேட்பாயாக; ask for. "அடுபோ ரண்ணல் கேட்டிசின் வாழி" (மதுரைக். 208) (த.மொ.அக.).

[கேள் → கேட்டல் → கேட்டிசின்.]

கேட்டீரே *kēṭṭīrē*, வியப்.இடை (int.) அசைநிலைச் சொல் (தொல்.சொல்.425, உரை); expression meaning hark, inviting attention.

[கேள் → கேட்டீர் → கேட்டீரே.]

கேட்டுக்கொள்(ளு)-தல் *kēṭṭu-k-koḷ(ḷu)-*, 10 செ.குன்றாவி.(v.t.) 1. செவிக்குப் புலனாக்குதல்; to hear, listen to. 2. வேண்டிக்கொள்ளுதல்; to beg, beseech, request earnestly. அமைதி காக்கக் கூட்டத்தினரைக் கேட்டுக்கொண்டார்.

[கேள் → கேட்டு + கொள்-.]

கேட்டுப்போ-தல் *kēṭṭu-pō-*, 8 செ.கு.வி. (v.i.) செயல்கள் (காரியங்கள்) கெடுதல்; to fail, as a business. 2. முறிதல்; to break. வண்டியச்சுக் கேட்டுப் போயிற்று. 3. சாதல்; to be dead.

[கெடு → கேடு + போ-.]

கேட்டுமுட்டு *kēṭṭu-muṭṭu*, பெ.(n.) புறச்சமயத் தோரைப்பற்றிக் கேள்விப்பட்டதனால் அமணர்மேற் கொள்ளுந்தீட்டு; defilement assumed by Samanas on hearing about heretics. *"கேட்டுமுட்டியானுமென் றியம்பி"* *(பெரியபு. திருஞான. 684).*

[கேட்டு + முட்டு.]

கேட்டை[1] *kēṭṭai*, பெ.(n.) 1. பதினெட்டாவதுவிண்மீன்; the 18th star, part of scorpio. 2. மூதேவி; goddess of misfortune. 3. ஒரு நாள்; a day. *"அவிட்டம் விளக்குப் பதங்கேட்டை"* *(விதான.குணாகுண.ப.).*

ம. கேட்ட.

Skt. jyesta.

[ஏ → ஏண் → ஏட்டை → கேட்டை.]

கேட்டை[2] *kēṭṭai*, வியப்.இடை. (int.) ஓர் அசைநிலை (தொல்.சொல்.426); expression meaning hark, inviting attention.

[கேள் → கேட்டை.]

கேட்டொறும் *kēṭṭoṟum*, கு.வி.எ. (adv.) கேட்கும் பொழுதெல்லாம்; whenever one hears. *"தண்கடற் படுதிரை கேட்டொறும்"* *(ஐங்குறு. 107).*

*[கேள் + தொறும்.]

கேட்பவர் *kēṭpavar,* பெ.(n.) 1. வினாவுவோன், விடைகோருபவன், வேண்டுபவன்; he who asks, he who enquires. 2. பொறுப்புள்ளவன்; a responsible person, a master.

க. கேளுவவனு; து. கேணுநாயெ; பட. கேப்பம.

[கேள் + ப் + அவர்.]

கேட்பி-த்தல் *kēṭpi-,* 4 செ.குன்றாவி.(v.t.) திருப்பதிக முதலியன விண்ணப்பஞ் செய்தல்; to recite, as before a person. *"நாவ லூரர்தம் முன்பு நன்மை விளங்கக் கேட்பித்தார்" (பெரியபு. கழறிற்.69).*

[கேள் → கேட்பி.]

கேட்பு *kēṭpu,* பெ.(n.) 1. காதால் கேட்டல்; hearing. 2. வினா எழுப்புதல்; to ask a question. 3. ஏலம் கேட்டல்; biding in an auction.

ம. கேள்ப்பு.

[கேள் → கேட்பு.]

கேட்புக்காசோலை *kēṭpu-k-kāšōlai,* பெ.(n.) பிறர் உடனடியாகப் பணம் மாற்றிக்கொள்ளத் தகுந்த வகையில் ஒருவர் வங்கியில் பணத்தைச் செலுத்திப் பெறும் படிவம்; demand draft issued in banks encashable on presentation.

மறுவ. வரைவோலை; கேட்போலை.

[கேட்பு + காசோலை.]

கேட்புத்தொகை *ketpu-t-togai,* பெ.(n.) ஏலமிடுபவரால் குறிக்கப்படும் குறைந்த ஏலத்தொகை; lowest acceptable selling price fixed by the auctioner.

[கேட்பு + தொகை.]

கேட்போர் *kēṭpōr,* பெ.(n.) 1. அவைக்களத்துத் தலைமை ஏற்று அரங்கேறும் நூலைக் கேட்பவர்; the presiding member of a learned assembly listening to a new literary work that came up for approval. *"யார்கேட்டாரெனின்... உருத்திரசருமன் என்பது" (இறை. 1, 4).* 2. நூல் கேட்டற்குத் தகுதியுடைய மாணாக்கர் (நன். 47); students properly qualified to study a certain book. 3. இன்னார் கூற இன்னார் அதனைக்கேட்டாரென்னும் அகப்பாட்டுறுப்பு (இறை. 56, உரை); listeners, as distinct from speakers. 4. கேட்பதற்குரியவர்; those who ask or are entitled to ask, guardian.

ம. கேள்ப்போர்.

[கேள் → கேட்போர்.]

கேடககோளம் *kēḍaga-kōḷam,* பெ.(n.) நிணநீர் ஊற்று; thyroid gland (சா.அக.).

மறுவ. கேடயகோளம்.

[கேடகம் + கோளம்.]

கேடகசாரி *kēḍaga-šāri,* பெ.(n.) கழுதை; ass (சா.அக.).

[கேடகம் + சாரி.]

கேடகசீரம் *kēḍaga-šīram,* பெ.(n.) சிறுசீரகம்; a small variety of cumin seed (சா.அக.).

[கேடகம் + சீரம்.]

கேடகம்[1] *kēḍagam,* பெ.(n.) 1. வட்டமான பரிசை; shield, buckler. *"கேடகம் வெயில்வீச" (கம்பரா. கடிமண. 33).* 2. மலைகள் அடுத்துள்ள ஊர் (திவா.); village in the midst of hills. 3. பாசறை (பிங்.); encampment. 4. *கேடயம்*[2] (பிங்.) பார்க்க; see *kēḍayam.* 5. பலகை; plank.

[கோடு → கோடகம் → கேடகம்.]

கேடகம்[2] *kēḍagam,* பெ.(n.) 1. புறாமுட்டி; parakeet bur. 2. தாழை; screw-pine (சா.அக.).

[கேதம் → கேடம் → கேடகம்.]

கேடகமுருந்து *kēḍaga-murundu,* பெ.(n.) தொண்டைக் குரல்வளையின் முருந்து; thyroid cartilage (சா.அக.).

[கேடகம் + முருந்து.]

கேடம்[1] *kēḍam,* பெ.(n.) 1. மலைகள் அடுத்துள்ள ஊர் (சூடா.); village in the midst of hills (கூடா). 2. மலை செறிந்த வூர்; hilly village in the midst.

Skt. kheta.

[கோடு = மலை, கோடகம் → கேடகம் → கேடம்.]

கேடம்[2] *kēḍam,* பெ.(n.) 1. கிளி; parrot. 2. ஆறு; river (அக.நி.).

[கிள் → கேடம்.]

கேடயக்கோளம் *kēḍaya-k-kōḷam,* பெ.(n.) மூச்சுக்குழலின் இருபக்கங்களிலுமுள்ள, உடல் வளர்ச்சியைஉண்டுபண்ணும்தைராய்டுஎனும்சுரப்பி; thyroid.

[கேடயம் + கோளம்.]

கேடயப்பட்டி *kēḍaya-p-paṭṭi,* பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Pudukkōṭṭai Dt.

[கேடயம் + பட்டி.]

கேடயம்[1] *kēḍayam,* பெ.(n.) போரிடும்போது பிறர் அம்பு படாதவாறு தடுக்கும் வட்டமான தட்டு; shield, buckler used in person to person combat.



கேடயம்

[கோடு (வளைவு) → கோடகம் → கேடயம்.]

கேடயம்[2] *kēḍayam,* பெ.(n.) 1. பெற்ற வெற்றி, புரிந்த சாதனை முதலிய செய்தி பொறித்த, தட்டு வடிவ அழகிய பரிசு; a memanto in the form of shield, awarded to a winner or one who has done something meritorious. 2. திருவாசியோடு கூடியதாய்க் கோயில் தெய்வத் திருவுருவை எழுந்தருளப் பண்ணுதற்கு உதவும் தோளுக்கினியான் என்னும் சட்டகம்; light rectangular frame with a solid aureole, used for carrying idols.

Skt. khetaka.

[கிடுகு - இணைத்துக் கோத்து. கிடுகு → கேடகம் → கேடயம்.]

கேடரி *kēḍari,* பெ.(n.) 1. கந்தகம்; sulphur. 2.பொன்னிமிளை; gold coloured pyrites. 3.நெல்லிக்காய்க் கந்தகம்; crystaline pieces of sulphur like alum. 4.செவ்வரளி; red-oleander(சா.அக).

[கெடு → கேடு → கேடரி.]

கேடன் *kēḍan,* பெ.(n.) 1.கேடுடையவன்; ruined, miserable man. *"வினைக்கேடனேன்" (திருவாச.30:3).* 2. அழிப்பவன்; he who ruins. *"வினைக்கேடா" (திருவாச. 34:1).* அவன் ஒரு குடிகேடன் (உ.வ

ம. கேடன் (தீயவன்); **து.** கேடிங்கெ.

[கேடு → கேடன்].

பெரும்பாலும் கூட்டுச் சொல்லில் பயன்படுத்தப்படும்.

கேடி *kēḍi* பெ.(n.) 1. பழைய திருடன்; known depredator, old offender. 2. அழிப்பவள்; she who ruins, usually in compounds as, குடிகேடி, சீர்கேடி.

ஆங்கிலத்தில் known delinquent என்பதன் சுருக்கம் KD; தமிழ்க் கேடி ஆங்கிலக் KD-யின் ஒலிபெயர்ப்பு அன்று.

[கேடு → கேடி.]

கேடிக்கை *kēḍikkai,* பெ.(n.) கேளிக்கை; entertainment.

[கேளிக்கை → கேடிக்கை.]

கேடில்லாவுவகை *kēḍillā-v-uvagai* பெ.(n.) பேருவகை; imperishable joy (சா.அக.).

[கேடு + இல்லா + உவகை.]

கேடிலி *kēḍili,* பெ.(n.) அழிவில்லாதவன்-ள்; the imperishable one. *"கேடிலியை நாடுமவர் கேடிலாரே" (தேவா. 682:1).*

[கேடு + இலி.]

கேடிலுவகை *kēḍil-uvagai,* பெ. (n.) துறக்கம்; liberation, salvation, heaven.

[கேடில் + உவகை.]

கேடு[1] *kēḍu,* பெ.(n.) 1. அழிவு; ruin, destruction, annihilation. *"கேடில் விழுச்செல்வம்" (குறள். 400).* 2. இழப்பு; loss, waste, damage. *"ஊர்தி குடையுதய முன்றிற் கடுங்கோட்கள் - சேரவுற்றிற்குச் சென்றேழி - னேராகக் காணுமேற் கேடு" (சினேந். நட்ட.15).* 3. வறுமை; adversity, indigence, destitution. *"கேட்டினு முண்டோ ருறுதி" (குறள். 796).* 4. குற்றம்; defect. 5. தொல்லை; trouble, problem. 6. இறப்பு; death. *"பிணிபிறவி கேடென்று" (தேவா.935).* 7. தீமை; evil, injury. *"கிள்ளைபோன் மொழியார்க் கெல்லாங்கேடுசூழ்கின்றே னன்றே" (கம்பரா. மாரீச. 77).* 8. கெடுதல் திரிபு (விகாரம்); elision, omission. *"வந்த னகரந் திரிந்துழி நண்ணுங் கேடே" (நன்.210).* 9. அழகின்மை; ugliness, deformity.

ம., க., து., பட. கேடு; **தெ.** சேடு; **குட.** கெடி; **கோத.** கெட்; **துட.** கொட்.

[கெடு → கேடு.]

கேடு[2] *kēḍu,* பெ.(n.) களங்கம்; blemish, damage to fame, honour. *நிறுவனத்தின் நற்பெயருக்குக் கேடு விளைவிக்கலாமா?* கெடுவான் கேடு நினைப்பான் (பழ.).

[கெடு → கேடு.]

கேடுகாலம் *kēḍu-kālam,* பெ.(n.) அழிவுறுங் காலம்; bad times.

ம.கெடுகாலம்; **க.,** பட., கோடுகால; **து.** கேட்கால. கேட்காலொ.

[கேடு + காலம்.]

கேடுகெட்டவள் *kēḍu-keṭṭavaḷ,* பெ.(n.) கீழ்த்தரமானவள்; wretched women. இந்தக் கேடு கெட்டவளுக்கு, நீங்கள் உதவலாமா? (உ.வ.).

[கேடு + கெட்டவள்.]

கேடுகெட்டவன் *kēḍu-keṭṭavaṉ,* பெ.(n.) நிலைமை யழிந்தவன்; ruined, despicable person. அந்தக் கேடு கெட்டவனை நம்பி, இந்தச் செயலில் இறங்க முடியுமா? (உ.வ.).

[கேடு + கெட்டவன்.]

கேடுநினை-த்தல் *kēḍu-niṉai-,* 4 செ.குன்றாவி. (v.t.) பிறருக்குத் தீமை ஏற்பட எண்ணுதல்; to think ill of others, to have the intention of harming others.

து. கேடு பகெபுனி.

[கேடு + நினை.]

கேடுபாடு *kēḍu-pāḍu,* பெ.(n.) 1. அழிவு; destruction, ruin. 2. வறுமைநிலை; adverse circumstances.

[கேடு + பாடு.]

கேடையம் *kēḍaiyam,* பெ.(n.) ***கேடயம்*** பார்க்க; see *kēḍayam.*

[கேடயம் → கேடையம்.]

கேண்டு *kēṇḍu,* பெ.(n.) ***கேண்டுகம்*** பார்க்க; see *kēṇḍugam.*

[கெண்டு → கெண்டு → கேண்டு.]

கேண்டுகம் *kēṇḍugam,* பெ.(n.) பந்து; anything rolled as ball.

[செண்டு → கெண்டு → கேண்டு → கேண்டுகம்.]

கேண்மை[1] *kēṇmai,* பெ.(n.) 1. நட்பு; friendship, intimacy. *"வெறுமின் வினைதீயார் கேண்மை"* (நாலடி. *172).* 2. கண்ணோட்டம் (திவா.); kindness, favour, benevolence. 3. உறவு; relationship. *"பழங்கேண்மை கண்டறியா தேன்போல்" (கலித். 39: 39).* 4. வழக்கு; practice, usage. *"கிளைஞரி னெய்தாக் கேண்மையு முடைத்தே" (நம்பியகப். 56).*

[குள் → கெள் → கேள் → கேண்மை.]

கேண்மை[2] *kēṇmai,* பெ.(n.) 1. கேள்வி; hearing. 2. கேள்வியறிவு; knowledge by hearing.

து. கேண்மெ.

[கேள் → கேண்மை.]

கேணம் *kēṇam,* பெ.(n.) செழிப்பு (யாழ்.அக.); flourishing, state of fertility.

[கள் → கணம் → கேணம்.]

கேணி[1] *kēṇi,* பெ.(n.) 1. சிறுகுளம்; small tank (தொல். சொல். 400, உரை). 2. கிணறு (திவா.); well. 3. அகழி (திவா.); ditch, trench.

க., ம. கேணி; **து.** கணி.

Skt. khan.

[குள் → குணி → கேணி.]

கேணி[2] *kēṇi,* பெ.(n.) தொட்டில்; cradle.

[குள் → குணி → கேணி.]

கேணிகா *kēṇigā,* பெ.(n.) முல்லை; a kind of jasmine (சா.அக.).

[குணிகம் → கேணிகா.]

கேணிப்பட்டு *kēṇi-p-paṭṭu,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கேணி + பட்டு.]

கேத்தனூர் *kēttaṉūr,* பெ.(n.) கோவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kōvai Dt.

[கேத்தன் + ஊர்.]

கேத்தி *kētti,* பெ.(n.) நீலகிரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Nilagiri Dt.

[கேத்தன் + ஊர் - கேத்தனூர் → கேத்தி (கொ.வ.).]

கேத்திரிகன் *kēttirigaṉ,* பெ.(n.) ஆதன் (ஆன்மா) (ஞானா.கட்.30); soul.

கேத்தை *kēttai,* பெ.(n.) தாழை; fragrant screw-pine (சா.அக.).

[கேதாம் → கேத்தை]

கேதகம் *kēdagam,* பெ.(n.) தாழை; fragrant screw-pine (சா.அக.).

மறுவ. கேதகை.

Pali. kētaki; **Pkt.** kēaya; **Pan.** keurā; **Ori.** keurā; **H.** keurā, kewrā; **Guj.** kevra; **Mar.** kevda.

[கேதம் - கேதகம்.]

கேதகி *kēdagi,* பெ.(n.) 1. ஆற்றுமருந்து; healing balm. 2. தாழை; fragrant screw-pine (சா.அக.). 3. தலையணிகலன்; ornament worn on the head.

மறுவ. கேதகை, கேதகம், கேத்தை.

[கேதகம் → கேதகி.]

கேதகிப்பூ *kētagi-p-pū*, பெ.(n.) 1. தாழம்பூ; flower of fragrant screw-pine.

[கேதகி + பூ.]

கேதகை *kēdagai*, பெ.(n.) 1. கதிர்நுனிப் பூந்துகள் (மகரந்தம்); pollen of the flower. 2. கதிர் நுனிப் பூந்துகள் இழை (மகரந்தகேசரம்); stem of a flower where pollen is stored.

[கதி → கெதி → கேதகை.]

கேதம் *kēdam*, பெ.(n.) 1. இளைப்பு; exhausion. *"கேதம் பையத் தணித்தான்" (பாரத.சம்.48).* 2. துன்பம்; affliction *"கேதங் கெடுத்தென்னை யாண்டருளும்" (திருவாச.43).* 3. குற்றம்; blemish (சா.அக.).

[கதம் → கேதம்.]

கேதம்கேட்கு-தல் *kēdam-kēṭku-*, 5 செ.குன்றாவி. (v.t.) இழவுத் துயரத்தைக் கேட்டாற்றுவித்தல்; to condole a death.

[கேவுதல் = விக்கி அழுதல். கேதம் + கேள்.]

கேதரம் *kēdaram*, பெ.(n.) 1. மயில்; pea-cock. 2. மலை; mountain. 3. பனி (இமய) மலையின் ஒரு பாகம்; a part of the Himalayas. 4. தண்ணீர் விட்டான் கிழங்கு; water root (சா.அக.).

[கதி → கெதி → கேதம் → கேதரம்.]

கேதல்[1] *kēdal*, பெ.(n.) அழைக்கை (பிங்.); calling, inviting.

[கேது → கேதல்.]

கேதல்[2] *kēdal*, பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish.

[கேது → கேதல்; கேது = சிவப்பு.]

கேதவைக்கொடி *kēdavai-k-koḍi*, பெ.(n.) கும்மட்டி; a kind of melon, water melon plant.

[கேதவை + கொடி.]

கேதன் *kēdaṉ*, பெ.(n.) காமன் (அக.நி.); Kāma, the god of love.

[கெமு → கெமுந்தன் → கேதன்]

கேதாண்டபட்டி *kēdāṇḍa-paṭṭi*, பெ.(n.) வேலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Velur Dt.

[கேத்தன் + அண்டன் – கேத்தண்டன் → கேதாண்டன் + பட்டி.]

கேதாரநாட்டை *kēdāra-nāṭṭai*, பெ.(n.) பண்வகை (யாழ்.அக.); a tune.

[செய் = விளைநிலம். பண்படுத்தப்பட்ட நிலம். செய் → கெய் + தாரம் – கெய்தாரம் – கேதாரம் (பண்படுத்தப்பட்ட நிலை, செவ்விய பண் வகை. கேதாரம் + நாட்டை.]

கேதாரம் *kēdāram*, பெ.(n.) உழுத நிலம், விளைநிலம்; field.

Skt. kēdāra. kēdāra, a field. This is related to D. key. It might even be distined as keyda (or kēda, worked, tilled, fr, D. key, Tbh. āra (or āḷa), and mean "tilled ground" K.K.E.D. XXVI.

Pali. kēdāra (irrigated field); Pkt. kēāra; **La.** kiārā (large plot in a field); **Pan.** keārā, kiārā (bed in a field or garden); **kuma.** kero. kyāri (bed of creeping plants etc., ground near a house).

கேதாளி *kēdāḷi*, பெ.(n.) குறிஞ்சி யாழ்த்திறத்துள் ஒன்று (பிங்.); a melody-type of the *kurinji* class.

[கெக்கலி → கேகலி → கேசம் + தாளி – கேகதாளி → கேதாளி.]

கேது[1]**-தல்** *kēdu-*, 5 செ.குன்றாவி. (v.t.) கதறி யழைத்தல் (பிங்.); to cry aloud from pain or grief. *"கெடுவதிம் மனிதர் வாழ்க்கை காண்டொறுங் கேது கின்றேன்" (தேவா. 702: 1).*

[கேவு → கேது.]

கேது[2] *kēdu*, பெ.(n.) ஒன்பது கோள்களுள் ஒன்று; the descending node caudraconis, one of the nine *kiragam*.

[செவ் → செய் → சேய் → சே → சேது = சிவப்பு. சேதா = சிவலைப்பசு, சேதாம்பல் = செவ்வாம்பல். சேது → கேது = செம்பாம்பு வடிவினதாகச் சொல்லப்படும் ஒன்பதாங்கோள். கேது > Skt. kēty. வட.வர. 130.131.]

கேதுச்சிலாங்கனம் *kēdu-c-cilāṅgaṉam*, பெ.(n.) ஒன்பான் மணிகளுள் ஒன்று (புட்பராகம்); topaz (சா.அக.).

மறுவ. கேதுசிலாங்கனம், கேதுஞானம்.

[கது → கிது → கேது + சிலாங்கன்.]

கேதுரு *kēduru*, பெ.(n.) 1. ஒரு நறுமண மரம்; a fragrant tree known as cedar of Lebanon. 2. கேக்கு விதை (சீமைச்சோம்பு); caraway seed (சா.அக.).

[கதி → கெதி → கேது → கேதுரு.]

கேந்தி *kēndi*, பெ.(n.) 1. அடங்காக் காமம்; inordinate sexual desire. 2. சினம்; anger, wrath.

[காந்து + கேந்து → கேந்தி.]

கேந்திகம் *kēndigam.* பெ.(n.) புன்கமரம்: pungu tree (சா.அக.).

மறுவ. புங்குதம்.

[கேந்து → கேந்திகம்]

கேந்திகா *kēndigā.* பெ.(n.) புளிச் சிறுகீரை; sour greens (சா.அக.).

[கேந்தி → கேந்திகா.]

கேந்திதம் *kēndidam.* பெ.(n.) புன்கு (சித்.அக.); Indian beech.

[கேந்து → கேந்திதம்.]

கேந்திரம் *kēndiram,* பெ.(n.) 1. உதயம்; origin. 2.பிறப்போரையிலிருந்து ஒன்று, நான்கு, ஏழு அல்லது பத்தாமிடம்; the places 1,4,7,10 in the rasikattam in astrology. 3.வட்டத்தின் நடுமையம்; centre of a circle. 4. முதன்மை; important.

[கதி → கெதி → கெந்து → கேந்திரம்.]

கேந்திரவள்ளி *kēndira-valli,* பெ.(n.) கண்ணழகு கொடி; a kind of creeper (சா.அக.).

[கெந்து → கெந்திதம் → கேந்திரம் + வள்ளி.]

கேந்திரி[1]**–த்தல்** *kēndiri-,* 4 செ.கு.வி. (v.i.) நிற்றல், வட்ட நடுவில் நிற்றல்; to stand at the centre of the circle.

[கேந்திரம் → கேந்திரி.]

கேந்திரி[2]**–த்தல்** *kēndiri-,* 4 செ.கு.வி.(v.i.) கோள் (கிரகம்) கேந்திரம் பெற்று நிற்றல்; to be in one of the houses in kēndiram, as a kiragam. *"பொன்னவன் கேந்திரித்த புனிதலக் கினத்தில்" (திருவிளை. உக்கிர.25).*

[கேந்திரம் → கேந்திரி.]

கேந்துகம் *kēndugam,* பெ.(n.) 1. வெள்ளத்தி மரம்; white fig tree. 2. தவளை; frog (சா.அக.).

[கேந்து → கேந்துகம்.]

கேந்துகயம் *kēndu-kayam,* பெ.(n.) மான் மணத்தியலரி; a kind of olender herb (சா.அக.).

[கேந்து + கயம்.]

கேந்துமுறியம் *kēndu-muriyam,* பெ.(n.) நாய் வேளை; a sticky plant that generally grows in sandy places.

[கேந்து + முறியம்.]

கேநாயம் *kēnāyam,* பெ.(n.) கோயில் பணிகளுள் ஒன்று; a service of the temple. *"ஸ்ரீமாகேவரக் கண்காணி செய்வோர்களுக்கும் கேநாயம் செய்வானுக்கும்" (தென்.க.தொ.2. 354–1).*

[கேபநயம் → கேநாயம்]

கேப்பை *kēppai.* பெ.(n.) 1.கேழ்வரகு; ragi. 2. குரக்கன்; a kind of millet.

[கேழ் → கேப்பை.]

கேப்பைக்களி *kēppai-k-kali,* பெ.(n.) ***கேழ்வரகு களி*** பார்க்க; see *kēl-varagu-kali.*

[கேப்பை + களி.]

கேப்பைமாடு *kēppai-mādu,* பெ.(n.) அதிகப் பால் தரும் உயர்வகை மாட்டுஇனம்; a variety of high yielding cow.

[கேப்பை + மாடு.]

கேமாச்சி *kēmācci,* பெ.(n.) வெள்ளைக் காக்கணம்; white flowered-mussell shell creeper.

[கேமச்சி → கேமாச்சி.]

கேயம்[1] *kēyam,* பெ.(n.) 1. கௌரி நஞ்சு; a kind of arsenic. 2. அகழ்; a ditch, a moat (சா.அக.).

[கயம் → கேயம்.]

கேயம்[2] *kēyam,* பெ.(n.) 1. இசைத்தற் குரியது; that which is fit to be sung, played on musical instruments. 2. இசைப்பாட்டு (திவா.); song, hymn, lyric.

[கா → காயம் → கேயம்.]

கேயன் *kēyan,* பெ.(n.) 1. பாடுவோன்; singer. 2.இசைப்பாட்டு; a melody, tune song.

[காயம் → கேயம் → கேயன்.]

கேயிகம் *kēyigam,* பெ.(n.) 1. செங்கல்; bricks (சா.அக.). 2. காவிக்கல்; red ochre.

[சவ் → சே → கெ → கேயிகம்.]

கேயூரம் *kēyūram,* பெ.(n.) தோளணி; a shoulder ornament; an epaulet. *"புதுவயிரக் கேயூரம் பூட்டி" (ஏகாம்.உலா,64).*

மறுவ. வாகுவளையம்.

ம. கய்யுற (கையுறை) Pali. kāyūra; Pkt. kēūra; Sinh. keyura.

[கை + ஊரம் → கையூரம் → கேயூரம்.]

கேயெனல் *kē-y-enal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onam. expr. signifying shouting.

[கே + எனல்.]

கேரண்டம் *kēraṇḍam*, பெ.(n.) 1. காக்கை; crow. 2. நீர்ப்பறவை; water-bird.

[கரண்டம் → கெரண்டம் → கேரண்டம்.]

கேரலி *kērali*, பெ.(n.) ஒரு நெல்வகை; a kind of paddy (சா.அக.).

[கரல் → கெரலி → கேரலி.]

கேரளபுரம் *kēraḷapuram*, பெ.(n.) குமரிமாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[சேரலம் → கேரளம் + புரம்.]

கேரளம்[1] *kēraḷam*, பெ.(n.) 1. தமிழ்நாட்டை ஒட்டி மேற்கே அமைந்துள்ள இந்திய மாநிலம்; an Indian state west of Tamil Nadu. 2. இந்தியாவின் பண்டைய 56 நாடுகளில் ஒன்று; one of 56 lands of ancient India (திருவேங்.சத.97). 3. மலையாள மொழி; Malayāḷam language.

[சேரல் → கேரல் → கேரளம்.]

கேரளம்[2] *kēraḷam*, பெ.(n.) வாய்விளங்கம்; common windberry.

[கெரள் → கெரளம் → கேரளம்.]

கேரளர் *kēraḷar*, பெ.(n.) கேரளமாநிலத்து மக்கள்; people of Kerala state. *"பூஞ்சாப வெற்றிக்கொடிக் கேரளர் பொன்னிநாடர்" (பாரத. வெளிப்பர்.21).*

[சாரல் → சேரல் → சேரலன் → கேரளன் → கேரளர்.]

கேரளர் (சேரர்), சோழர், பாண்டியர் என்ற மூவரும் ஒன்றிற் றோன்றிய உடன்பிறப்புகளென்றும், நாகரிகம் தோன்றி வளர்ந்த பெருமையுடைய தென்னிந்தியாவின் திருநெல்வேலியிலமைந்த தண்பொருநை ஆற்றங் கரையிலுள்ள கொற்கையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அரசமரபினரென்றும், பிற்காலத்தில் இவர்கள் பிளவுண்டு 'பாண்டியன்' அங்கேயே தங்க, மற்ற இருவரில் 'கேரளர்' மேற்கேயும் 'சோழர்' வடக்கேயும் அரசமைத்துக்கொண்டனர்என்றும் தமிழ்நாட்டில்வழங்கும் உள்நாட்டு மரபுரை (பழங்கதை) கூறுகிறது. (ப.210) (ஆதாரம் - சங்ககாலச் சிறப்புப் பெயர்கள்).

கேரளன் *kēraḷaṉ*, பெ.(n.) சேரன்; the Cēra.

[சேரலன் → கேரளன். சாரல் → சேரல் → சேரலன் → சேரன். மலையாரணைக் குறிக்கும் குறும்பு என்னும் சொற்போல். சேரல் என்பதும் இடவாகு பெயராய் அரசனை உணர்த்தும் (ப.த.நா.ப.முன்.20). சேரல் → சேரலன் → கேரளன்.]

மேற்புறமாயினும் கீழ்ப்புறமாயினும், சேரநாடு முழுவதும் பெரும்பாலும் மேற்குத் தொடர்ச்சி கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் அடிவாரச் சரிவே. மலை யடிவாரம், சாரல் எனப்படும். *"சாரல் நாட செவ்வியை யாகுமதி" (குறுந். 18:2). "சாரல்நாட நடுநாள்" (குறுந்.9), "சாரல்நாட நீவாலாறே" (குறுந். 141:8)* என்பன மலைப்பக்கநாட்டைச்சாரல்நாடு எனக் கூறுதல் காண்க.

கேரளாந்தகன்வாயில் *kēraḷāndagaṉ-vāyil*, பெ.(n.) தஞ்சைப் பெரிய கோயில் முதல் கோபுரத் தோரண வாயிலின் பெயர் (பிற்.சோழ.வர. சதாசிவ. ப.125) name of main entrance of Thanjavur Siva temple *[கேரளன் + அந்தகன் + வாயில் – கேரளாந்தகன் வாயில்.]*

கேரளி *kēraḷi*, பெ.(n.) கேரளத்தில் விளையும் நெல்; a kind of paddy.

[கேரளம் → கேரளி.]

கேரளை *keṟaḷai*, பெ.(n.) இசைப்பாட்டு; a melody song (சா.அக.).

[கெரளை → கேரளை.]

கேரிசுபண்ணு–தல் *kērišu-paṇṇu-*, 5 செ.குன்றா வி.(v.t.) கடை முதலியவற்றைக் கணக்கு முடித்து மூடுதல் (நாட்டுக்கோட்டைச் செட்டி); to close or wind up.

[கரிசு → கேரிசு + பண்ணு. கரிசு = கருத்தாகச் செய்யும் பணி.]

கேரு–தல் *kēru-*, 4 செ.கு.வி.(v.i.) 1. முட்டையிடக் கத்துதல்; to cluck as hen about to lay egg. 2. குரல் கம்மிப்பேசுதல்; to speak in a low voice. 3. தொண்டை கட்டுவதனால்வருந்திமூச்சுவிடுதல்; to breathe with effort as from phlegm in the throat. 4. திகைத்தல்; to be bashful diffident, confused (சா.அக.).

தெ., பட. கேரு.

[கெர் – ஒலிக்குறிப்பு. கெர் → கெரு → கேரு.]

கேரைக்குட்டி *kērai-k-kuṭṭi*, பெ.(n.) சிறு கடல்மீன் வகை; a kind of small sea fish.

[கேரை + குட்டி.]

கேலகன் *kēlagaṉ*, பெ.(n.) 1. கழைக்கூத்தாடி; pole dancer. 2. வாள்மேல் நடனமாடுவோன்; sword dancer.

[கேலகன் → கேலகன்.]

கேலம் *kēlam*, பெ.(n.) 1. மகளிர் விளையாட்டு; a women's play. 2. பகடி (பரிகாசம்); joke (த.சொ.அக.).

[களி → கேளி → கேளம் → கேலம்.]

கேலளம் *kēlaḷam*, பெ.(n.) 1. தெங்கு; coconut tree. 2. கேளி, செந்தெங்கு; a kind of coconut.

மறுவ. கேளிகம்.

[கேழ் (சிவப்பு) – கேழிகம் → கேளிகம் → கேலளம்.]

கேலி *kēli,* பெ.(n.) 1. விளையாட்டுப் பேச்சு; fun, jest, joke. 2. பகடி, ஏளனம் (பரிகாசம்); ridicule derision, mockery. 3. விகடம்; buffoonery, mimicry.

[களி → கேளி → கேலி (கொ.வ.).]

கேலிக்காரன் *kēli-k-kāraṉ,* பெ.(n.) 1. ஒருவர் அல்லதுஒன்றைப்போல நடித்துக்காட்டுபவன்; jester, buffoon, mimic. 2. ஏளனஞ்செய்பவன்; one who ridicules, scoffer.

[கேலி → கேலிக்காரன்.]

கேலிக்கூத்து *kēli-k-kūttu,* பெ.(n.) 1. பொருளற்றதாகச் செய்து சிரிக்கும் அளவிற்குத் தாழ்த்திவிடும் செயல்; farce, mockery, travesty. அவன் செயல் கேலிக்கூத்தாக முடிந்தது. 2. அளவுக்கதிகமான கோமாளித்தனம்; clownish nature, farce. *நாடகம் நகைச்சுவையாக இருக்க வேண்டுமே தவிரக் கேலிக்கூத்தாக இருக்கக் கூடாது.*

[கேலி + கூத்து.]

கேலிகம் *kēligam,* பெ.(n.) 1. தெங்கு; coconut tree. 2. சீந்தில் ; moon-creeper (சா.அக.). 3. அசோகம் (மலை.); Indian mast tree.

[கேலி → கேலிகம்.]

கேலிச்சித்திரம் *kēli-c-cittiram,* பெ.(n.) 1. ஒரு செய்தியைப் பகடியாக வெளிப்படுத்தும் ஓவியம்; caricature. 2. கருத்துப்படம்; cartoon.

*[கேலி + சித்திரம். **பகடி ஓவியம்** பார்க்க; see pagaḍi ōviyam.]*

கேலிச்சிரிப்பு *kēli-c-cirippu,* பெ.(n.) பொருளற்ற ஏளனச் சிரிப்பு; laugh with travesty.

[கேலி + சிரிப்பு.]

கேலிசீலம் *kēli-šīlam,* பெ.(n.) கம்பம்புல்; millet plant (சா.அக.).

[கேலி + சீலம்.]

கேலிசெய்—தல் *kēli-šei-,* 1 செ.குன்றாவி. (v.t.) பொருளற்றதாகச் செய்து சிரிப்புக்கு உள்ளாக்குதல். to make a travesty, mockery. உன் நடத்தை சட்டத்தையே கேலிசெய்வதாக இருக்கிறது.

[கேலி + செய்-.]

கேலிப்பேச்சு *kēli-p-pēccu,* பெ.(n.) வேடிக்கையாக, ஏளனமாகப் பேசுதல்; talk of fun, joke.

[கேலி + பேச்சு.]

கேலிமாலி *kēli-māli,* பெ.(n.) பகடி, ஏளனம் (யாழ்.அக.); ridicule.

[கேலிமாலி. எதுகை நோக்கிய மரபிணைச் சொல்.]

கேலை *kēlai,* பெ.(n.) தீக்கொழுந்து; flame.

[கில் (கிச்சு) → கெல் → கேலை.]

கேவகா *kēvagā,* பெ.(n.) 1. பிள்ளைத்தாய்ச்சிக்கொடி; an unknown creeper. 2. நஞ்சுக்கொடி; umblical cord.

[கவ்வு → கேவு → கேவகா (கொ.வ.).]

கேவசட்டையரம் *kēvašaṭṭai-y-aram,* பெ.(n.) ஒருவகை அரம் (C.E.M.); a curved file, half-round file.

[கேவசட்டை + அரம்.]

கேவணம்[1] *kēvaṇam,* பெ.(n.) மணிபதிக்கும்குழி; bed or socket for a gem. *'திருவடிக்காறை பொன்னின் பட்டைமேற் குண்டும் கேவணமும் வைத்து விளக்கிற்று' (தெ.கல்.தொ.2.2.கல். 51). 'மத்தக மணியொடு வயிரங் கட்டிய பத்திக் கேவணப் பசும்பொற்குடைச்சூற்சித்திரச்சிலம்பு' (சிலப். 16:117-8, உரை).*

[கவ்வு → கவ்வணம் → கேவணம்.]

கேவணம்[2] *kēvaṇam,* பெ.(n.) பொன்னணிகளில் முத்துகள் இரத்தினக் கற்களைப் பதிப்பதற் கேற்ற வகையில் தனித்தனியே செய்து பற்றவைக்கப்பெறும் பொற்குழிப்புகள்; a bed or socket for gems in ornaments. *"திருவடிக்கைக்காறை பொன்னின் பட்டைமேற் குண்டும் கேவணமும் வைத்து விளக்கிற்று" (SII.II.51-175, p.207).*

[கவ்வு → கவ்வணம் → கேவணம்.]

கேவரம் *kēvaram,* பெ.(n.) வெள்ளைக் காக்கணம்; white mussel (சா.அக.).

[கவ்வு → கவ்வரம் → கேவரம்.]

கேவல்[1] *kēval,* பெ.(n.) 1. ஒருவகை இழுப்புவலி; a kind of spasmodic pain. 2. விக்கல் போன்ற அழுகைபொலி; sobbing. அறையிலிருந்து கேவலும் விசும்பலும் கேட்டன (கிரி.).

[கவல் → கேவல்.]

கேவல்[2] *kēval,* பெ.(n.) வள்ளிக்கொடி (மலை.); five-leaved yam.

[கூவல் → கேவல்.]

கேவலக்கிடை *kēvala-k-kiḍai,* பெ.(n.) 1. ஆணவத்தால் மறைப்புண்டு செயல்திறம் குறைந்து செயலற்றுக்கிடக்கும் ஆதனின் (ஆன்மா) நிலை; disembodied inactive condition of the soul enevloped in *āṇava,* the inherent darkness. 2. படுத்தபடுக்கையாய் இருத்தல்; being confined to bed by age.

[கேவலம் + கிடை.]

கேவலக்கிழவன் *kēvala-k-kiḻavaṉ,* பெ.(n.) அருகக்கடவுள்; Arhat, as enjoying the supreme bliss. "தோமறு கேவலக் கிழவன் மூதெயில் போல்" (சீவக.856).

[கேவலம் + கிழவன். கேவலம் = மேன்மை, உயர்வு, முற்றறிவு.]

கேவலகும்பகம் *kēvala-kumbagam,* பெ.(n.) ஒருங்கே மூச்சுத் தேக்கல்; compelete suppression of breath. 2. கும்பகத்தில் (ஆன்ம) நிலை; condition of the embodied soul in the suppression of breath.

[கேவலம் + கும்பகம்.]

கேவலசரீரம் *kēvala-šarīram,* பெ.(n.) இளைத்த உடம்பு; emaciated body (சா.அக.).

[கேவலம் + சரீரம்.]

கேவலசைதனியம் *kēvala-cāitaniyam,* பெ.(n.) ஆதன் அறிவமாக (ஞான சொரூபம்) உள்ள நிலை; condition of soul when it becomes one with the supreme knowledge. *'கேவல சைதந்யமாகிய ஆத்மாவினிடம்' (சித். சிகா. 191:2, உரை).*

[கேவலம் + சைதன்யம் → சதனியம். (சைதன்யம் = சமணக்கோயில்).]

கேவலசொப்பனம் *kēvala-šoppaṉam,* பெ.(n.) ஆதன், தன்முனைப்புக் காரிருளால் மறைப்புண் டிருக்கும்பொழுதும் நிலையாகி அதன்கணின்று மீளும்பொழுதும் ஆதன் நிற்கும் நிலைகளுள் ஒன்றாகிய கனவு; the *šoppaṉam* condition of the embodied soul on its way to, and from, *kēvalak-kiḍai.*

[குவ்வல் → கேவல் → கேவலம் + சொப்பனம்.]

கேவலஞானம் *kēvala-ñāṉam,* பெ.(n.) முக்கால அறிவு; perfect knowledge, knowledge of the past, present and future. *'கேவல ஞானத்துக்கு முன்காணுங் காட்சியை' (சீவக.3081, உரை).*

Skt. *kēvalañāna.*

[குவ்வல் → கேவல் → கேவலம் + ஞானம்.]

கேவலப்படு[1]-தல் *kēvala-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. இளைத்தல்; emaciating 2. மெலிதல்; becoming thin (சா.அக.).

[கீழ்வு → கீவு → கேவு → கேவலம் + படு-.]

கேவலப்படுத்து[2]-தல் *kēvala-p-paḍuttu-,* 5 செ.குன்றாவி.(v.t.) மதிப்புக் குறையுமாறு செய்தல்; to disgrace, dishonour.

[கீழ்வு → கீவு → கேவு → கேவலம் + படுத்து-.]

கேவலப்பொருள் *kēvala-p-poruḷ,* பெ.(n.) முழுமுதற் கடவுள்; the supreme Being, as the one without a second. *'கேவலப் பொருளையே பாவித்தல் வேண்டுதலான்' (குறள், 358, உரை).*

[குவவு → குவவில் → கேவல் → கேவலம் + பொருள்.]

கேவலம்[1] *kēvalam,* பெ.(n.) 1. தனிமை (சூடா.); singleness, solitariness, isolation. 2. இணையற்றது; uniqueness. 3. வீடுபேறு (பிங்.); final emancipation, supreme bliss. 4. ***கேவல ஞானம்*** பார்க்க; see *kēvala-ñāṉam.* 5. சிறியது; that which is insignificant, common. *"கேவ மல்ல விப்போர்" (பாரத. பதின்மூ. 100).* 6. தாழ்நிலை; low status, meanness; அவன் மிகக் கேவலமானவன் (உ.வ.). 7. மானக் குறைவு; disgrace, dishonour. அவரைக் கேவலம் பண்ணினான் (உ.வ.). 8. இழிவு; humilation.

ம. கேவலம்.

Pali., Pkt. kēvala; Kt. kyūra; **Dm.** kyewal; **Paš.** kēwala; **Phal.** khilēi; **OGuj.** kēvalaum; **Guj.** kēval.

[குவவு → குவவல் → கேவல் → கேவலம்.]

கேவலம்[2] *kēvalam,* பெ.(n.) உயர்வு, மேன்மை; greatness, excellence.

[குவி → குவை → கூவை → கேவல் → கேவலம்.]

கேவலம் என்னும் சொல் உயர்வு மேன்மை வீடுபேறு போன்ற உயர்பொருள்களிலும் இழிவு தாழ்வு அவமதிப்பு என்னும் இழிபொருள்களிலும் இருவேறுபட்ட முரண் பொருள்களில் வழங்கி வருகின்றது. தவ ஆற்றல் பெற்ற முனிவர்களைக் கேவலிகள் என்பார்கள். வீடுபேற்றிற்கு உரிய காட்சியறிவு கேவலஞானம் எனப்படும்.

குவி, குவை என்னும் சொற்கள் ஒன்றாகத் திரளுதல் பெருகுதல் மேம்படுதல் என்று பொருள்படும். குவை – கூவை எனத் திரியும். [கூவைக்கிழங்கு = பெரிய கிழங்கு] (கூவுதல் பெரிதாக ஒலியெழுப்புதல்.) குவை, கூவை, கூவல், கூவன், கூவலம் – கேவலம் = பெருமை, உயர்வு, மேன்மை.

கேவலம்[3] *kēvalam,* பெ.(n.) தாழ்வு, இழிவு; low status, dishonour, humiliation.

[கீழ் → கீழ்வு → கேவு → கேவலம்.]

இனி, தாழ்வு என்னும் பொருளில் வழங்கும் கேவலம் என்னும் சொல் கீழ், கீழ்வு, கீவு, கீவல், கீவலம், கேவலம் எனத் திரிந்ததாகும்.

வெருவு–வெருவல், பார்வு–பார்வல் என்றாற்போன்று கீழ்வு – கீழ்வல், கீவல் என்பனவும் 'அல்' ஈற்று தொழிற்பெயர் ஆகும். ஒரே சொல் இருவேறுபட்ட முரண் தருவதாயின் அவை வெவ்வேறு வினையடிகளில் பிறந்தவை ஆதல்வேண்டும் என்பது சொற்பிறப்பு நெறிமுறைகளில் ஒன்று.

கேவலமாய்க்கிடத்தல் *kēvalamāy-k-kiḍa-*, தொ.பெ. (vbl.n.) பேரிடர்நோயால் கிடத்தல்; lying dangerous ill (சா.அக.).

[கேவலமாய் + கிடத்தல்–.]

கேவலமாயிளை–த்தல் *kēvalamāy-iḷai-*, 4 செ.கு.வி.(v.t.) மிகவும் இளைத்தல்; becoming very feeble (சா.அக.).

[கேவலமாய் + இளை–.]

கேவலமானவன் *kevalam-āṉavaṉ*, பெ.(n.) இழிந்தவன்; loafer (சா.அக.).

[கேவலம் + ஆனவன்.]

கேவலவுணர்வு *kēvala-v-uṇarvu*, பெ.(n.) உயர் அறிவு (பரஞானம்); (குறள், 352, உரை). knowledge of the supreme truth.

[கேவலம் + உணர்வு.]

கேவலன் *kēvalaṉ*, பெ.(n.) 1. வீடுபேறு அடைய முயல்பவன்; one who attempts to obtain final emancipation. *"கேவலன்.... யாவதாத்மபாவி அசரீரியாய்க் கொண்டு திரிவானொருவன்" (அஷ்டாதச. அர்த்தபஞ்.26).* 2. எளியவன்; ordinary man, average person. *"ஆசிரியன் கேவல னல்லன்" (திருவாலவா. 15:11).*

ம. கேவலன்.

[கேவலம் → கேவலன்.]

கேவலி *kēvali*, பெ.(n.) முற்றறிவினன்; person possessing perfect knowledge. *"முதற்பொருள் கேட்டார்க் குரைக்குமெங் கேவலியே" (திருநூற்.10).*

[கேவலம் → கேவலி.]

கேவலி[2] *kēvali*, பெ.(n.) வள்ளிக்கொடி (மூ.அக.); five leaved yam.

[கை + வல்லி – கைவல்லி → கேவலி.]

கேவலிகா *kēvaligā*, பெ.(n.) பிளவுச் சீரகம்; a kind of cummin seed (சா.அக.).

[கவலிகம் → கவலிகா → கேவலிகா (கொ.வ.).]

கேவிகேவியழு–தல் *kēvi-kēvi-y-aḻu*, 2 செ.கு.வி.(v.t.) கடும் துயரத்தால் மூச்சையடக்கி வெளிப்படுமாறு போல விம்மியழுதல்; to weap, to be grieved or vexed.

[கேவி + கேவி + அழு–.]

கேவு[1]**–தல்** *kēvu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. மூச்சுத்திணறல்; to breath heavily, to breath with difficulty as in whooping cough. 2. செறுமி அழுதல்; to cry of a child seeking breath. 3. மூச்சுத் திக்காடல்; to gasp for breath (சா.அக.).

ம. கேவுக.

[கவ்வு → கெவவு → கேவு.]

கேவு[2] *kēvu*, பெ.(n.) வெண்கடுகு; white mustard (சா.அக.).

[கவு → கேவு.]

கேவு[3] *kēvu-*, பெ. (n.) 1. செந்நெல்; red paddy. 2. சிவப்பரிசி; red rice.

க. ரீகவு.

[கவ்வு → கெவவு → கேவு.]

கேவுநீர் *kēvunīr*, பெ.(n.) கீழ்நீர்; underground water.

து. கெவுநீர்.

[கசிவு → கேவு + நீர்.]

கேவுரா *kēvurā*, பெ.(n.) 1. கடுகு; mustard. 2. கேழ்வரகு; ragi (சா.அக.).

[கவு → கேவு → கேவுரம் → கேவுரா.]

கேவேடன் *kēvēḍaṉ*, பெ.(n.) மீன்வலைஞன்; fisher man *"கேவேட னாகிக் கெளிறது படுத்தும்" (திருவாச.2:17).*

[கே + வேடன்.]

கேழ் *kēḻ*, பெ.(n.) 1. ஒளி (பிங்.); light. *"நயங்கேழ் பெருவள நல்குநல் லூர்" (தஞ்சைவா.392).* 2. நிறம்; bright colour, hue. *"ஒண்கேழ் நூற்றித ழலரின்" (புறநா.27).* 3. ஒப்பு; comparison, equality, *"கேழே வரையுமில்லோன்" (திருக்கோ.269).*

Chin. Cār; **E.** colour; **Am.eng.** col-or; **ME.** colur, colour. **OF.** colur, colour.

[கெழு → கேழ்]

கேழ்பவர் *kēḻbavar*, பெ.(n.) நன்மையுடையார்; blessed persons. *"ஒருவர் நம்போல் வருங் கேழ்பவ ருளரே" (திருவிருத்.45).*

[கேழ் → கேழ்பவர்.]

கேழ்பு *kēḻbu,* பெ.(n.) நன்மை (திருவிருத்.45, அரும்.); blessing.

[கேழ் → கேழ்பு.]

கேழ்வரகு *kēḻ-varagu,* பெ.(n.) கேப்பை (பதார்த்த.1394); ragi, a millet - Eleusine coracana.



கேழ்வரகு

[கேழ் - சிவப்பு. கேழ்+வரகு.]

கேழ்வரகுகளி *kēḻvaragukaḷi,* பெ.(n.) கேழ்வரகு மாவினால் செய்யப்படும் களி; porridge or dough made up of ragi powder.

[கேழ்வரகு + களி.]

கேழ்விமுதலிகள் *kēḻvi-mudaligaḷ,* பெ.(n.) அரசரின் வாய்மொழி ஆணைகளை நேரில் கேட்டு ஓலையில் எழுதும் அதிகாரி; officer who hears the order direct from the king. *"இப்படிக்கு வாணவரையன் எழுத்து கேழ்விமுதலிகளில் சிங்களராயர் எழுத்து" (SII.XII.235-11, p.148).*

[கேள்விமுதலி → கேழ்விமுதலி (கொ.வ.).]

கேழல் *kēḻal,* பெ.(n.) 1. நிறம்; bright colour, hue. *"செங்கேழற் றாமரை" (பதினொ. திருக்கைலா உலா, அரிவை,1).* 2. மண்ணைத் தோண்டும் ஆண்பன்றி; hog, boar, swine. *"செந்நாய். . . . கேழல் பார்க்கும் வெஞ்சுரக் கவலை" (ஐங்குறு.323).* 3.குளநெல்; wild rice. *"நீர்விளை கேழலும்" (சீவக.1422).* 4. யானை; elephant.

[கேழ் → கேழல்.]

கேழற்பன்றி *kēḻar-panri,* பெ.(n.) ஆண்பன்றி; boar.

[கேழல் + பன்றி.]

கேழற்பன்றி என்பதனைக் களிற்றுப் பன்றி என்றுஞ் சொல்லுப' [தொல்.பொருள்.589,உரை].



கேழற்பன்றி

கேள்[1]–தல் (கேட்டல்) *kēḷ-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. செவிக்குப் புலனாக்குதல்; to hear, hearken, listen to. *"சொல்லுந போலவுங் கேட்குந போலவும்" (தொல்.பொருள்.513).* 2. பாடங் கேட்டல்; to learn, be instructed in. *"ஒருகுறிகேட்போன்" (நன்.பொது.42).* 3. வினாதல்; to ask, inquire, question, catechise. 4. ஆராய்தல்; to investigate. *'களவுபோனமைஎங்ஙனே என்று கேட்டு' (Insc.) (சோழவ.66).* 5. வேண்டுதல்; to request, solicit, crave. படிக்கப் புத்தகம் தருமாறு கேட்டான் (உ.வ.). 6. கேள்விப்படுதல்; to be informed of. *"தருதி நீயெனக் கேட்டேன்" (பாரத.கன்ன.238).* 7. உரிமை கொண்டாடிக் கொடுக்கச் சொல்லுதல்; to require, demand, claim. 8. தண்டித்தல்; to avenge, punish.; தீயரைத் தெய்வங் கேட்கும் (உ.வ.) 9. நோய் முதலியன நீக்குதல்; to effect a remedy, cure, as medicine. *"செயச்செயவூறு கேளாது... அரவுகான்ற வேகம் மிக்கிட்ட தன்றே" (சீவக.127).* 10. விலை கேட்டல்; to bid, offer, inquire the price of; 11. ஏற்றுக்கொள்ளுதல்; to accept, agree to. *"கேட்டார்ப் பிணிக்கு தகையவாய்" (குறள்,643).* 12. பொறுத்தல்; to tolerate, brook. *"கேளா ராயர் குலத்தவ ரிப்பழி" (திவ்.பெரியாழ்.3,1:8).*

ம. கோள்க்குக; **க., குட., கோத.,** துட. கோள்; **து.** கேணுனி; பட. கே; **கொலா.** கெல்.

kēḷ. to hear, comp; **Latin.** aus-cul-to, to hear, to listen; also the gruk klu-ō, to hear; Welsh clyw, hearing; Irish. clusas, to ear; **Lithuanian** klau, to hear; **Latin** clu-o, to be called (C.G.D.F.L. 593).

[கிள் → கேள்.]

கேள்[2]–தல் *kēḷ-,* 12 செ.கு.வி.(v.i.) 1. தணிதல்; to come under the control of; to be cured. வாதநோய் அந்த மருந்துக்குக் கேட்கும் (உ.வ.). 2. கீழ்ப்படிதல்; to obey, be submissive, docile. பொல்லாத மனங் கேளாது (உ.வ.). 3. ஒலி எட்டுதல்; to be heard, as a call; to reach, as a sound. குண்டுபோட்டால் இங்கே கேட்கும் (உ.வ.). 4. செவிப்புலனுணர்வைப் பெறுதல்; to have

perception by the ear. அவனுக்குக் காது கேட்கும். 5. அனுமதி பெறுதல்; to get permission. *"கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி"* *(நாலடி.30).*

Irish. cluas. **Fin.** kerjata; **Est.** kerjata; **Komi.** korui; **Hung.** ker; **Mung.** gori.

[கிள் → கேள்.]

கேள்[3] *kēḷ,* பெ.(n.) 1. உறவு; kindred, relations. *"தன் கேளலறச் சென்றான்" (நாலடி.29).* 2. நட்பு; friendship. 3. நண்பன்; friend, companion (திவா.). *"கேளன்றிக் கொன்றாரே கேளாகி" (தொல். பொருள். 72,உரை).* 4. கணவன்; husband. *"அவளுந்தன் கேட்குச் சொன்னாள்" (சீவக.1052).*

ம. கேள்.

[குள் → கெள் → கேள்.]

கேள்வன் *kēḷvaṉ,* பெ.(n.) 1. கணவன்; husband. *"தன் கேள்வனை யெங்கணா வென்னா வினைந் தேங்கி" (சிலப்.18:33).* 2. தலைவன்; master, lord. 3. நண்பன், தோழன் (திவா.); companion, comrade, friend.

ம. கேளன்; க. கேள.

[கேள் → கேள்வன்.]

கேள்வி[1] *kēḷvi,* பெ.(n.) 1. கேட்கை; hearing. 2. வினா; question. ஆசிரியர் மாணவனைக் கேள்வி கேட்டார் (உ.வ.). 3. நூற்பொருள் முதலிய கேட்கை; taking lessons, as in literature; listening to words of wisdom. *"கேள்வியாற் றோட்கப் படாத செவி" (குறள்,418).* 4. கல்வி (திவா.); learning. *"ஆய்ந்தமைந்த கேள்வி யறிவுடையா ரெஞ்ஞான்றும்" (நாலடி.7).* 5. ஒலி; sound. *"எழுதாக் கேள்வியுங் கேள்வி" (ஞானா. பாயி.5:5).* 6. மறை (வேதம்); Veda. *"கெடுவில் கேள்வியு ணடுவா குதலும்" (பரிபா. 2:25).* 7. நூல்; treatise. *"கேள்விக டுறைபோய்" (சீவக.2386).* 8. சொல்; word. *"ஏனோர் கேள்வியுங் கேள்வி" (ஞானா. பாயி.5,6).* 9. அறிக்கை (உ.வ.); report. 10. அலர் (வதந்தி); rumour, hearsay. 11. காது (திவா.); ear, organ of hearing. *"நட்போடு கேள்வியூடு நாடுவார்" (சேதுபு. இராமநா.76).* 12. உசாவுதல்; hearing in trial of a case, judicial inquiry. 13. ஏலம் முதலியன கேட்கை; bid, offer. 14. இசைக்குறிப்பு; pitch of a tune, keynote. *"கிளை யாய்ந்து பண்ணிய கேள்வியாழ்ப் பாணனும்" (பு.வெ.7:18).* 15. யாழ் (அக.நி.); lute.

ம. கேள்வி; க. கேளிகெ, கேள்விகெ; து. கேளி; கோத. கேள்வ்ய் (சொல், பேச்சு); துட. கேள்வ்.

[கேள் → கேள்வி.]

கேள்வி என்பது காதால் கேட்கப்படும் கேள்வி அறிவைக் குறிக்கும் சொல். இதே பொருளில் திருவள்ளுவரும் கேள்வி எனும் அதிகாரம் அமைத்துள்ளார். ஆயின் வாயால் உசாவுதலாகிய வினாப்பொருளிலும் 'கேள்வி கேட்டான்' என வழங்கி வருகிறது. செவிப் புலனுக்குரிய வினைச்சொல், வாய்ப்புலனுக்குரிய வினைச்சொல் ஆக வேறுபட்டு மக்களிடையே வழங்குவதைப் பொருட்பாட்டுப் புடைப் பெயர்ச்சி என்பார்கள்.

கிள் - கிட்டு என்னும் சொற்கள் நெருங்குதல் சேர்தல் எனப் பொருள் பெறும்.

கிள் - கெள் (கெளு) - கேள் = காதுக்கு எட்டுதல், காதிற் சேர்தல்.

கேள் - கேள்வி = காதால் கேட்கப்படும் செய்தி.

சில அடிவினைகள் தன்வினைப் பொருளிலும், பிறவினைப்பொருளிலும் வழங்கும். கேள் என்னும் சொல் காதிற் சேர்தல் என்றும் காதில் சேர்த்தல் என்றும் பொருள்படத் தக்க அடிவினைச் சொல். 'நீ அவனைக் கேள்' என்ற விடத்து 'அவன் காதில் சேர்த்து' எனும் பிறவினைப் பொருளில் மற்றொருவரின் காதில் சேர்த்தற்குக் காரணமாகிய பேசுதல் (வினவுதல்) எனும் வினையையும் குறித்தது. இதனால் காதில் சேர்தல், செவிக் கொள்ளுதல் என்னும் பொருளில் செவிப்புலனின் வினையைக் குறித்த கேள் என்னும் சொல் பிறர் செவியில் ஒரு செய்தியைச் சேர்த்தற்குக் காரணமான வாய்ப்புலனின் செய்கையாகிய பேசுதலையும் குறிப்பதாயிற்று. ஆதலின் கேள் என்னும் அடிவினை செவி கொள்வதாகிய செவிப்புலனின் செயலையே குறித்த முதல்வினை என்பதும் நாளடைவில் வாய்ப்புலனின் செய்கையையும் குறித்த வழிவினையாயிற்று என்பதும் புலப்படும்.

வினவுதல் என்ற சொல்லும் தெலுங்கில் காதால் கேட்பதையும், தமிழில் வாயால் வினவுதலையும் குறித்து வழங்கி வருவது கேள் என்னும் சொல்லின் வழக்காற்றலின் வினை போன்றதாகும்.

கேள்விக்கச்சேரி *kēḷvi-k-kaccēri,* பெ.(n.) வரி தண்டுஞ் சாலை.(நாஞ்.); revenue office.

[கேள்வி + கச்சேரி.]

கேள்விக்கடுதாசி *kēḷvi-k-kaḍudāśi,* பெ.(n.) 1. முறைமன்றத்தில் கொடுக்கும் எழுத்துமூலமான விண்ணப்பம்; written application to a court of justice. 2. ஒப்பந்தப் புள்ளி; tender proposal in writing.

[கேள்வி + கடுதாசி.]

கேள்விக்காரர் *kēḷvi-k-kārar,* பெ.(n.) 1. ஏலங் கேட்போர்; bidders at an auction. 2. விலைகேட்போர்; person who tenders proposals at a purchase. 3. பணிக்கு விண்ணப்பஞ் செய்வோர்; applicants for a post. 4. வழக்கில் வாதி (யாழ்.அக.); plaintiff.

[கேள்வி + காரர்]

கேள்விக்குழாய் *kēḷvi-k-kuḻāy,* பெ.(n.) செவிப்புலன் இழந்தோர் பயன்படுத்தும் குழாய்; a.

small coiled tube worn at the ear to assist the hearing.

[கேள்வி + குழாய்.]

கேள்விக்குறி *kēlvi-k-kuri*, பெ.(n.) 1. கேள்விச் சொற்றொடர் என்பதைக் காட்ட இடப்படும் கொக்கி வடிவக் குறி; question mark. 2.கேள்வியை உள்ளடக்கிய முகக்குறி; gesture expressive of the desire to know. நானிருந்த சூழலைப்பார்த்துவிட்டுக் கேள்விக்குறியோடு என்னை நோக்கினார் (உ.வ.). 3.தொக்கி நிற்கும் ஐயம்; question in one's mind. குறித்த காலத்தில் திட்டம் முடிவடையுமா? என்பது கேள்விக்குறியாக இருக்கிறது (உ.வ.).

[கேள்வி + குறி.]

கேள்விக்குறைவு *kelvi-k-kuraivu*, பெ.(n.) காது கேளாமை; dullness of hearing.

[கேள்வி + குறைவு. குள் → கெள்.]

கேள்விகேட்பாடு *kēlvi-kēt-pādu*, பெ.(n.) 1. ஒழுங்குமுறை; regularity. 2.முறையான நாட்டாண்மை (நீதி நிருவாகம்); moral control, administration of justice. ஊரில் கேள்விகேட்பாடு இல்லை.

மறுவ. கேள்விமுறை.

[கேள்வி + கேட்பாடு.]

கேள்விகொடு-த்தல் *kēlvi-kodu-*, 4 செ.கு.வி.(v.i.) செவிகொடுத்தல்; to have inclination to hear.

[கேள்வி + கொடு-.]

கேள்விகொடுவை *kēlvi-koduvai*, பெ.(n.) குடுவை என்னும் ஒருவகைச் சீட்டாட்டம்; (G.Sm.D.I.i.iii.) a game at cards.

[கேள்வி + கொடுவை.]

கேள்விகொள்(ளு)-தல் *kēlvi-kol(lu)-*, 13 செ.குன்றாவி.(v.t.) ஐயங்கொண்டுகேட்டல்; to question by way of clearing doubts. *சர்வேசுவரனைக் கேள்வி கொள்ள வேண்டாதபடி* (ஈடு.1.5:3).

[கேள்வி + கொள்(ளு)-.]

கேள்விச்சாட்சியம் *kēlvi-c-cātciyam*, பெ.(n.) கேள்விப்பட்டதாகக் கூறும்சான்று (சாட்சியம்); hearsay evidence.

[கேள்வி + சாட்சியம்.]

கேள்விச்செல்வம் *kēlvi-c-celvam*, பெ.(n.) செவிவழி எய்திய அறிவுப்பெருக்கம்; knowledge acquired by audio education or scholarly lectures.

[கேள்வி + செல்வம்.]

கேள்விச்செவியன் *kēlvi-c-ceviyan*, பெ.(n.) கேள்வியுற்றதை யெல்லாம் நம்புவோன்; one who readily believes hearsay reports, credulous person. கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான் (உ.வ.).

[கேள்வி + செவியன்.]

கேள்விஞானம் *kēlvi-ñānam*, பெ.(n.) செவி வழியாய்ப்பெறும் அறிவு; knowledge gained through observation by hearing.

[கேள்வி + ஞானம்]

கேள்வித்தாரை *kēlvi-t-tārai*, பெ.(n.) காதின் குழாய் வழி; auditory canal (சா.அக.).

[கேள்வி (காது) + தாரை.]

கேள்வித்தாள் *kēlvi-t-tāl*, பெ.(n.) தேர்வுகளுக்கான வினாத்தாள்; question paper.

[கேள்வி + தாள்.]

கேள்வித்தானம் *kēlvi-t-tānam*, பெ.(n.) பிறப்பியத்தில் ஒருவன் பிறந்த நல்லோரைக்கு இரண்டு அல்லது மூன்றாமிடம் (சங்.அக.); the 2nd or 3rd house from the ascendant.

[கேள்வி + தானம்.]

கேள்வித்துளை *kēlvi-t-tulai*, பெ.(n.) காதினுள் ஆனக சவ்வு வரைக்கும் $1^1/_4$ அங்குலம் நீண்டு சற்றுச் சரிவாக உள்நோக்கி நடுவில் வளைந்தும் ஒடுங்கியுமுள்ள ஒரு குழாய்ப்பாதை; a designation of the internal ear consisting of a series of cavities such as vestibule etc. at the semi-circular canals upto the cavity of the tympanum (சா.அக.).

[கேள்வி + துளை.]

கேள்விநரம்பு *kēlvi-narambu*, பெ.(n.) கேட்பதற்குக் காரணியமான நரம்பு; auditory nerve.

[கேள்வி + நரம்பு.]

கேள்விநேரம் *kēlvi-nēram*, பெ.(n.) சட்டப் பேரவையில் உறுப்பினர்களின் கேள்விகளுக்காக ஒதுக்கப்படும் நேரம்; question hour of an Assembly etc.

[கேள்வி + நேரம்]

கேள்விப்படு-தல் *kēlvi-p-padu-*, 18 செ.குன்றாவி. (v.t.) பிறர் வாய்மூலமாகச் செய்தி தெரிந்து கொள்ளுதல்; to learn through others, to learn by hearsay.

[கேள்வி + படு-.]

கேள்விப்பத்திரம் *kēḷvi-p-pattiram,* பெ.(n.) 1. எழுத்துமூலமான விண்ணப்பம் (யாழ்ப்.); request, application, petition in writing. 2.மன்றாட்டு மடல்; letter of supplication.

[கேள்வி + பத்திரம்.]

கேள்விப்பந்தர் *kēḷvi-p-pandar,* பெ.(n.) பலர் கூடி நூல்கள் கேட்பதற்காக அமைக்கப்பட்ட பந்தல்; pandal for discussion of Šastras. "*கீத சாலையுங் கேள்விப் பந்தரும்*" *(பெருங்.இலாவாண.7:131).*

[கேள்வி + பந்தல் → பந்தர்.]

கேள்விமகமை *kēḷvi-magamai,* பெ.(n.) வரிவகை (M.E.R.585 of 1926); a tax.

[கேள்வி + மகமை.]

கேள்விமுதலி *kēḷvi-mudali,* பெ.(n.) அரசன் கூறுவதைக் கேட்கும் அலுவலர், திருவாய்க்கேள்வி; officer who hears the commands of a king and transfers them to others.

[கேள்வி + முதலி.]

கேள்விமுறை *kēḷvi-muṟai,* பெ.(n.) 1. ***கேள்வி கேட்பாடு*** பார்க்க; see *kēḷvi-kēṭpāḍu.* 2. தவறு களைச் சுட்டிக்காட்டிக் கண்டிக்க வழி; means of administration to check and control. *பணம்பிடுங்கும் பள்ளிகட்குக் கேள்விமுறை கிடையாதா?*

[கேள்வி + முறை.]

கேள்விமூலம் *kēḷvi-mūlam,* பெ.(n.) 1. கேட்பதற்கு மூலமானது; tympanum the source of hearing. 2. செவி; ear.

[கேள்வி + மூலம்.]

கேள்வியந்திரம் *kēḷvi-yandiram,* பெ.(n.) கேளார்க்குக் கேட்கும்படி செய்யும் காதுக்கருவி; an instrument or device enabling the deaf to hear more distinctly (சா.அக.).

[கேள்வி + எந்திரம்.]

கேள்வியருத்தாபத்தி *kēḷvi-y-aruttapatti,* பெ.(n.) ஒருவன் வீட்டில் இல்லை என்பதைக் கேட்டவன், வேறு இடத்தில் அவன் இருக்கிறான் என்று உணர்ந்துகொள்வது போல் வரும் நிலை; implication from a statement heard dist.fr.kāṇ-arruttapatti. "*அகத்தினி லையுறு தேவதத்தனெனிலிருப்பனவன் வேறோரிடத்திலெனத் தெரிந்தறிதல்... கேள்வியருத்தாபத்தி*" *(வேதா.சூ.22).*

[கேள்வி + அருத்தாபத்தி.]

கேள்வியறல் *kēḷvi-y-aṟal,* பெ.(n.) காது கேளாது போதல்; becoming deaf.

[கேள்வி + அறல்.]

கேள்வியறிவு *kēḷvi-y-aṟivu,* பெ.(n.) 1.கேட்கு முணர்ச்சி; the sense of hearing 2. கேள்வியினா லுண்டான அறிவு; knowledge derived from hearing (சா.அக.).

[கேள்வி + அறிவு.]

கேள்வியா–தல் *kēḷvi-y-ā-,* 6 செ.கு.வி (v.i.) கேள்வியால் தெரியவருதல்; to be heard reported, to reach the ears, as news.

[கேள்வி + ஆ–.]

கேள்வியாட்டம் *kēḷvi-y-āṭṭam,* பெ.(n.) சீட்டாட்ட வகை (உ.வ.); an adaptation of bezique, a game at cards.

[கேள்வி + ஆட்டம்.]

கேள்வியுள்ளோன் *kēḷvi-y-uḷḷōṉ,* பெ.(n.) 1. கல்வி கேள்வியுள்ளவன்; a man of great culture; learned man. 2. அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய இவற்றின் கேள்விகளில் தெரிவு பெற்றவன்; an expert on all questions concerning virtue, wealth, domestic pleasure and heavenly bliss.

[கேள்வி + உள்ளோன்.]

கேள்வியேற்றல் *kēḷvi-y-ēṟṟal,* பெ.(n.) காது கேளாமைக்குச் சிகிச்சையளித்தல்; improving the sense of hearing (சா.அக.).

[கேள்வி + ஏற்றல்.]

கேள்விவரி *kēḷvi-vari,* பெ.(n.) அரசன் கட்டளைகளைப் பதியும் பதிவேடு (T.A.S.I.165); register of royal commands.

ம. கேள்வி வரி.

[கேள்வி + வரி.]

கேள்வை *kēḷvai,* பெ.(n.) பெருவிலையில் பொருண் மதிப்பறிந்து கேட்டல்; asking rate by knowing the prime cost of the materials.

[கேள்வி → கேள்வை.]

கேளந்தலூர் *kēḷandalūr,* பெ.(n.) திருவள்ளுவர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvalluvar Dt.

[கேளன் + நந்தல் + ஊர் – கேளநந்தலூர் → கேளந்தலூர்.]

கேளம்பாக்கம் *kēḷam-bākkam,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[கேளன் + பாக்கம் – கேளம்பாக்கம்.]

கேளல்கேளிர் *kēḷal-kēḷir,* பெ.(n.) நொதுமலர், பகையும் நட்பு மில்லாத அயலார்; those who are neither friends nor enemies. neutrals. *"கேளல்கேளிர் கெழீஇயினொ ரொழுகவும்" (அகநா.93).*

[கேள் + அல் + கேளிர்.]

கேளலர் *kēḷalar,* பெ.(n.) பகைவர்; enemies.

[கேள் + அல் + அர்.]

கேளவர்பந்தம் *kēḷavar-bandam,* பெ.(n.) கடலாத்தி; falcate trumpet (சா.அக.).

மறுவ. கேள்விபந்தம்.

[கேளவர் + பந்தம்.]

கேளன் *kēḷaṉ* பெ.(n.) தோழன்; friend, companion.

ம. கேளன்; **க.** கேள.

[கேள் + அன்.]

கேளா *kēḷā,* கு.வி.எ.(adv.) ஒருபயனுமின்றி (சூடா.); to no purpose, vainly.

[கேள் + ஆ.]

கேளாக்கேள்வி *kēḷā-k-kēḷvi,* பெ.(n.) ***கேளாத கேள்வி*** பார்க்க; see *kēḷāda-kēḷvi.*

[கேளாதகேள்வி → கேளாக் கேள்வி.]

கேளாதகேள்வி *kēḷāda-kēḷvi,* பெ.(n.) கேட்கக் கூடாததைக் கேட்கும் வினா; question not to be asked, indecent, unbecoming lauguage.

மறுவ. கேளாக்கேள்வி.

[கேளாத + கேள்வி.]

கேளாதவன் *kēḷādavaṉ,* பெ.(n.) காது கேளாதவன்; deaf man.

[கேளாத + அவன்.]

கேளாமை *kēḷāmai,* பெ.(n.) கீழ்ப்படியாமை; disobedience.

[கேள் + ஆ + மை.]

கேளார் *kēḷār,* பெ.(n.) 1. பகைவர்; enemies, foes *"கேளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல்" (குறள்,64).* 2. காது கேளாதவர்; deaf persons. *"காணார் கேளார்" (மணிமே.13:111).*

மறுவ. செவிடர்.

ம. கேளார்

[கேள் + ஆ + ஆர்.]

கேளாவொலி *kēḷā-v-oli,* பெ.(n.) மாந்தக் காதினால் உணரப்பட முடியாததும், புதிய இயற்பியற்கருவிகளால் பதிவுசெய்யக்கூடியதுமான ஒலி; ultra sound.

[கேள் + ஆ + ஒலி.]

கேளான் *kēḷāṉ,* பெ.(n.) செவிடன்; deaf man.

மறுவ. செவிடன்.

[கேள் + ஆ + ஆன்.]

கேளி[1] *kēḷi,* பெ.(n.) மகளிர் விளையாட்டு; women's sport. *"மலர்கொய் கேளி" (இரகு.இந்தும.9).*

ம. கேளி (விளையாட்டு); **Skt.** keli.

[களி → கேளி.]

கேளி[2] *kēḷi,* பெ.(n.) செம்மஞ்சள்நிறத் தென்னைவகை (பதார்த்த.65); Brahman coconut.

ம. கேளி.

Skt. narikela.

[கேழ் : செந்நிறம். கேழ் → கேள் → கேளி (செவ்விளநீர்).]

கேளி[3] *kēḷi,* பெ.(n.) 1. அறிவிப்பு, கேட்பித்தல்; announcement. 2. பறையறைந்து தெரிவித்தல்; announcement by beating drum. 3. புகழ்; fame.

ம., து. கேளி.

[கேள் → கேளி.]

கேளிக்கை *kēḷikkai,* பெ.(n.) 1. மகளிர் விளையாட்டு; women's sport. 2. மகளிர் நடனம் (உரி.நி.); dancing of women. 3. பொழுதுபோக்கு; entertainment. இரவுக் கேளிக்கைகள் இல்லாத நகருண்டா? (உ.வ.).

ம. கேளிக்க.

Skt. kelikā.

[கேளி → கேளிக்கை.]

கேளிக்கைத்தண்டல் *kēḷikkai-t-taṇḍal,* பெ.(n.) ***கேளிக்கைவரி*** பார்க்க; see *kēḷikkai-vari.*

[கேளிக்கை + தண்டல்.]

கேளிக்கைவரி *kēḷikkai-vari,* பெ.(n.) அரசால், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு உரிய அனுமதிக் கட்டணத்தோடு சேர்த்து வாங்கப்படும் வரி; entertainment tax imposed by the Government.

[கேளிக்கை + வரி.]

கேளிகா *kēḷigā*, பெ.(n.) 1. தென்னை; coconut tree. 2.செவ்விளநீர்; half-ripe coconut of reddish colour (சா.அக.).

[கேளீர் → கேளிகா.]

கேளிகி *kēḷgi*, பெ.(n.) புளிப்பிரண்டை; sour adamantine creeper (சா.அக.).

[கேழ் → கேளி → கேளிகி.]

கேளிதம் *kēḷidam*, பெ.(n.) பெருங்கல் (பிங்.); boulder, rock.

Skt. galita.

[கோளி → கேளி → கேளிதம்.]

கேளிர் *kēḷir*, பெ.(n.) 1.நண்பர்; friends. *"கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி" (பொருந.74).* 2.சுற்றத்தார்; relation. *"யாதும்ஊரேயாவரும்கேளிர்" (புறநா.162).* 3. கணவர்; husband.

[கேள் → கேளிர்.]

கேளியிளநீர் *keli-y-ilanir*, பெ.(n.) செவ்விள நீர்; half-ripe coconut of reddish colour.

[கேளீர் + இளநீர்.]

கேளூர் *kēḷūr*, பெ.(n.) திருவண்ணாமலை மாவட்டத் துச் சிற்றூர்; a village in Thiruvannamalai Dt.

[கேளன் + ஊர் – கேளனூர் → கேளூர்.]

கேளையாடு *kēḷai-yāḍu*, பெ.(n.) ஒருவகை வெள்ளாடு; a kind of goat.

கேளையாடு

[கேளி (விளையாட்டு) → கேளை + ஆடு.]

விருதுநகர் உய்வகத்தில் [சரணாலயம்] பாதுகாக்கப் படும் ஒருவகை காட்டாடு.

கேளையூர் *kēḷai-y-ūr*, பெ.(n.) சேலம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Salem Dt.

[கேளன் → கேளை + ஊர்.]

கேளொலி *kēḷ-oli*, பெ.(n.) செவிப்புலனாகும் ஒலி (அறி.க.); sonic.

[கேள் + ஒலி.]

கேறு—தல் *kēru-*, 5 செ.குன்றாவி.(v.t.) புடைத்தல்; to winnow.

ம. சேறுக; க. கேறு; தெ. செருகு; கொலா., நா. கேடு; பர். கேட்; கட. கேய்; பட. கேரு.

[ஏல் → கேல் → கேறு.]

கேனங்கொண்டவன் *kēṉaṅ-koṇḍavaṉ*, பெ.(n.) மனநிலைக் கேடன்; a lunatic.

[கேனம் + கொண்டவன்.]

கேனம் *kēṉam*, பெ.(n.) மனநோய் (பைத்தியம்); craziness, insanity.

[கவல் → கவலம் → கவனம் → கேனம்.]

கேனவாயன் *kēṉa-vāyaṉ*, பெ.(n.) பேதை (உ.வ.); lit. the open-mouthed; simpleton, fool.

மறுவ. இளித்தவாயன்.

[கேனம் + வாயன்.]

கேனன் *kēṉaṉ*, பெ.(n.) மனநோயினன் (உ.வ.); crazy fellow.

[கேனம் → கேனன்.]

கேனாரவெள்பு *kēnāra-v-eṉbu*, பெ.(n.) மண்டை யோட்டின் (கபாலத்தின்) இருபக்கத்தின் கீழ்ப் பகுதிகள்; temporal bones (சா.அக.).

[கீழ் → கீழார → கீணார + என்பு → கேனாரவென்பு (கொ.வ.).]

கேனிப்பட்டு *kēṉi-p-paṭṭu*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கேனன் → கேனி + பட்டு.]

கை

கை *kai*, பெ.(n.) 'க்' என்னும் அடியண்ண மெய்யொலியும் 'ஐ' என்னும் கூட்டுயிரொலியும் இணைந்த மெய்யெழுத்து; the syllable formed by adding the diphthong 'ai' to consonant, velar voiceless stop 'k'.

[க் + ஐ – கை.]

கை¹—தல் *kai-*, 1 செ.குன்றாவி. (v.t.) செய்தல்; to do; to work, to act. கைநேர்த்தி (செய்நேர்த்தி).

மறுவ. கெய், செய்.

[குல் → குய் → கய் → கெய் → கை.]

கை[2]-த்தல் *kai-*, 4 செ.கு.வி. (v.i) 1. கசத்தல்; to be bitter, astringent, unpleasant. *"தேனும் புளித்தறக் கைத்ததுவே"* *(கந்தரலங்.6).* 2. உப்புக் கரித்தல்; to be saltish to the taste. உப்புமிகுதியானதால் தெளிசாறு கைக்கிறது (உ.வ.).

ம. கைக்குக; தெ. காரு; கோத. கய்ள்; பட. கய்.

[கள் → கய் → கய → கச → கசப்பு. கய் → கை.]

கை[3]-த்தல் *kai-*, 4 செ.கு.வி.(v.i) நைந்து வருந்துதல்; to be deeply afflicted. *"கைத்தன ளுள்ளம்" (கம்பரா. மாயாசன. 30).*

[குழை → குழ → கழ. கச → கசங்கு. கச → கய → கை]

கை[4]-த்தல் *kai-*, 4 செ.குன்றாவி.(v.t.) 1. சினத்தல் *"மருவலரைக் கைக்கும்" (தஞ்சைவா.423);* to dislike; to be angry with; to hate. 2. அலைத்தல்; to vex, trouble, harass, torment.

[குல் = எரிதல். குல் → குய் → கய் → கை.]

கை[5]-த்தல் *kai-*, 11 செ.குன்றாவி. (v.t.) செலுத்துதல்; to produce, as a sound; to propel, shoot, as an arrow. *"சிலம்பிரங்கு மின்குரல் கைத்தெடுத்தலின்" (சீவக.2683).*

[குல் – தோன்றுதல், முற்செலவுக் கருத்துவேர். குல் – குய் → கய் → கை.]

கை[6]-த்தல் *kai-*, 11 செ.குன்றாவி.(v.t.) ஒப்பனை செய்தல் (அலங்கரித்தல்); to adorn, decorate. *"மடமொழி யோருங் கைஇ மெல்லிதி னொதுங்கி" (மதுரைக்.419).*

[குல் – கூடுதல் கருத்துவேர். குல் – கெல் → கெய் (செய்தல்) → கை.]

கை[7] *kai*, பெ.(n.) 1. தோள்பட்டையிலிருந்து தொங்கும் நீண்ட மாந்தவுறுப்பு, கரம்; the human forelimb from shoulder to hand, arm. *"அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே" (தொல்.எழுத்து. 315).* 2. மணிக்கட்டிற்குக் கீழுள்ள மாந்தவுறுப்பு; hand. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை (பழ.). கைப்புண்ணுக்குக் கண்ணாடியா? (பழ.). 3. யானைத் தும்பிக்கை; elephant's trunk. *"தூங்குகையா னோங்குநடைய" (புறநா.22).* 4. கதிரவனின் ஒளிக்கற்றை; ray, as of sun. *"செங்கை நீட்டித் தினகரன் தோன்றலும்" (திருவிளை. விடை. 20).* 5. நாட்டிய நளிக்கை (சிலப். 3:18, உரை); hand-pose in dancing. 6. சட்டையின் கை; sleeve of a garment. முழுக்கைச் சட்டை (உ.வ.).

ம. கை, கய்யி; க. கய், கயி, கய்யி, கெய்; தெ. செயி; து., பட., இரு., கோண. கை; கோத. கெய்; து. கொள்; எருக. கயி, கி; குட. கை, கீய், கய்; கூ. கசு; குவி. கேயு, கேசு; நா. கீ; குரு. கியு; மால. கெகெ; பர். கெய்; கட., கொலா. கி.

[குல் – கூடுதல் கருத்துவேர். குல் → குய் → கய் (செய்தல்) → கெய் = செய். செய் → கெய் → கை.]

கை யென்னும் பெயர், செய் என்னும் வடிவில் குமரி நாட்டில் வழங்கியிருத்தல் வேண்டும் செல்வி. 435 (1974)

தமிழ் 'செய்' எனும் வடிவம் கன்னடம், குடகு, துளு, கோத்தம், துடவம், படகு, கொலாமி, கடபா, கோண்டி, கொண்டா, கூய், குவி, பிராகுவி ஆகிய மொழிகளில் கை, கெய், gey, giy, கீ எனும் வடிவங்களில் ஆட்சி பெற்றுள்ளது.

மாந்தக்கை போன்றிருக்கும் தும்பிக்கையும் கை எனப்பட்டது. ஒளிக்கற்றையைக் கதிரவனின் கையாக உருவகப்படுத்தியுரைப்பதால் அதுவும் கை எனலாயிற்று.

kai-hand: all Dravidian dialects. Telugu has in addition cēlu and chey-i or chēy-i.

The harder form is probably the more ancient; hence the words we have to compare with corresponding words in other languages are key, to do, and kei, hand. It cannot be doubted that these words were originally identical, like kar, to do, and kar-a hand in Sanskrit. Key would naturally become kei, of which we see an appropriate instance in gei-du, having done, in colloquial Canarese, which is the shape of the order and more classical gey-du has taken. Though it seems certain that these words were originally identical it does not seem quite so clear which of the two meanings to do or the hand, was the original one. It would be very natural to call the hand the doer; on the other hand; 'to do' is a abstract word, which cannot well have come into use until a large number of doings and doers had been provided with special names. Some word for hand would be required at a much earlier stage, and it is conceivable that to do meant first of all to use the hand (C.G.D.F.L.582).

கை[8] *kai*, பெ.(n.) 1. ஐந்து என்னும் எண்ணிக்கையைக் குறிக்குஞ் சொல்; a word signifying number five. மாம்பழம் ஒரு கை போடு (உ.வ.). 2. செங்கல் முதலியவற்றை எண்ணும் ஓரளவு (கொ.வ.) group, set, as in counting bricks, dry dung cakes. உடைந்த கல்லிற்கு ஈடாக ஒருகை போடு (உ.வ.) 3. கையளவு; handful. கையளவு மனத்தில் கடலளவு ஆசை வைத்தான் (பழ.) ஒரு கை உப்புக் கொடு (உ.வ.).

[கை[7] → கை[8]]

செங்கல் முதலியன இவ்விரண்டாய் எண்ணப் படுவதும், பழம் போன்றன பப்பத்தாகவோ ஐவைந் தாகவோ எண்ணப்படுவதும், தவசம் போன்றன இணைந்த இருகை நிறைந்த அளவையும், உப்புப் பருப்புப் போன்றன ஒரு கை நிறைந்த அளவையும் 'கை' குறிக்கும்.

கைவிரலைக்கொண்டே மாந்தன் எண்ணிப் பழகினமையால் 'கை' என்னும்சொல் ஐந்து என்னும்பொருளில் வழங்கலாயிற்று. இரண்டு கைகளால் செங்கல் போன்றவை இவ்விரண்டாய் எடுக்கும் தோதுபற்றியே 'கை' இரண்டு எனும் எண்ணிக்கையில் ஆளப்பெற்றது.

600907

கை[9] *kai,* பெ.(n.) 1. பக்கம்; side, right or left. *"இருகையு மிரைத்துமொய்த்தார்" (கம்பரா.கைகேசி.83).* 2. கட்சி, பிரிவு; faction, party. நேற்றுவரை நம்முடன் இருந்தவர் இன்று எதிர் கையில் சேர்ந்துவிட்டார் (உ.வ.). 3. சிறகு; wings of a bird. *"கோழி கைத்தலத்தைக் கொட்டி" (அரிச்சந்.விவா.195).* 3. இடம் (சூடா.); place. 4. கிளை, துணை; branch; tributary.

[கை[7] → கை[9].]

494.811321 SEN.2-3

மாந்த உறுப்பான 'கை' உடலின் ஒரு பக்கத்தைக் குறிக்கும் வகையின் அடிப்படையில், 'கை' பக்கப் பொருளில் விரிந்தது; பக்கங்களில் இருப்பதால் சிறகும் கை எனப்பட்டது.

கை[10] *kai,* பெ.(n.) 1. கைப்பிடி; handle, as of an axe. *"நெடுங்கை நவியம்பாய்தலின்" (புறநா. 36:7).* 2. கைமரம்; rafter. *"கால்தொடுத் திருகை யேற்றி" (தேவா. 838:4).* 3. விசிறிக்காம்பு; handle, as of a fan. *"மணிக்கையாலவட்டம்" (பெருங்.உஞ்சைக்.34:217).* 4. தொடர்வண்டியின் கைகாட்டி (கொ.வ.); semaphore. 5. நாற்காலியில் கை வைக்கும் சட்டம்; a rail or support for the arm on a chair. கையொடிந்த நாற்காலி (உ.வ.). 6. முழம்; elmeasure.

Fin. kasi, kandj; **Est.** kasi; **Hung.** kez; **Mong.** katyl (to lead by hand); **Jap.** kata; **Q.** kucus (elbow, elmeasure).

[கை[7] → கை[10].]

கை[11] *kai,* பெ.(n.) முள்; thorn.

[கள் (முள்) → கய் → கை. ஒ.நோ. கைதை (முள்ளுள்ள தாழை).]

கை[12] *kai,* பெ.(n.) கைப்பொருள்; money on hand. "அவரன்பும் கையற்ற கண்ணே யறும்" (நாலடி.371).

[குய் → கெய் → கய் → கை.]

கை இடவாகுபெயராய்ப் பணத்தை (கைப் பொருளை)க் குறித்தது.

கை[13] *kai,* பெ.(n.) 1. செய்யத்தக்கது; that which is fit to be done. "கையறியாமை யுடைத்தே" (குறள்,925). 2. ஒப்பனை (பிங்.); decoration, dressing.

க. கை, கெய்.

[க. கய் → கெய் → கை.]

கை[14] *kai,* பெ.(n.) 1. சிறுமை; littleness, smallness, hardiness. *"கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காரறி வாளர்" (நாலடி.311).* 2. தங்கை (பிங்.); younger sister.

[குய் → நெய் → கை.]

கை சிறியதாக இருத்தலின் சிறுமைப் பொருள் தந்தது.

கை[15] *kai,* பெ.(n.) 1. ஆற்றல்; strength, ability. யாரிடம் உன் கை காட்டுகிறாய்? (உ.வ.) 'கை உண்டாவது கற்றவர்களுக்கு ஆமே' (பழ.). 2. ஆள்; hands, workmen, assistants. சீட்டாட்டத்திற்கு ஒரு கை குறைகிறது (உ.வ.).

[கை[1] → கை[14].]

கைதல் – செய்தல் செயலுக்குரிய ஆற்றலையும் குறித்தது.

கை[16] *kai,* பெ.(n.) 1. ஒழுங்கு; row, line. கையமை விளக்கம் (முல்லைப்.49); 2. முறை, தடவை; turn. 3. உலகவொழுக்கம்; custom, usage, way of the world. 4. பழக்கம்; habit. அது அவருக்குக் கைவந்த கலை (உ.வ.).

க. கை, கய், கெய்.

[கை[14] – கை[15].]

CPL600907

செயல் திறனின் நோக்கமும் விளைவும் ஒழுங்கின் பாற்பட்டவையாதலின் ஒழுங்கைக் குறித்தது.

கை[17] *kai,* பெ.(n.) குற்றம்; fault, blemish (அக.நி.). *"கைசெய்தூண் மாலை யவர்"* (குறள்,).

து. கைனெ (இழிமகள்).

[கை[2] – கை[16]. கை = கசப்பு, குற்றம்.]

கை[18] *kai,* பெ.(n.) செல்வாக்குள்ளவன்; man of high influence. அவன் பெரிய கை. அவனிடம் பகை வேண்டா (உ.வ.).

[கை[14] → கை[17].]

கை[19] *kai,* இடை. (part.) 1. குறுமைப் பொருள் முன்னொட்டு; diminutive prefix. 2. சிறுமைப்பொருள் பின்னொட்டு; diminutive suffix. குடிகை, கன்னிகை (வேர்.கட்.161). 3. உடைமைப்பொருளீறு; possessive suffix. 4. தொழிற்பெயரீறு; suffix at the end of verbal nouns. செய்கை, வருகை. 5. வினையுடன் சேர்ந்துவரும் முன்னொட்டு; auxiliary prefix to verbs as in கையிகந்து. *[கை[14] → கை[19]]*

கை[20] *kai,* இடை. (part.) ஏழனுருபுள் ஒன்று; a locative ending. *"செவிலி கையென் புதல்வனை நோக்கி" (அகநா. 26:18).*

[கை[7] → கை[20]. (இடப்பொருள் குறித்தது.)]

கைஅம்பு *kai-ambu*, பெ.(n.) கைக்கணை; small arrow.

[கை[13] + அம்பு.]

கை ஒப்பிதம் *kai-oppidam*, பெ.(n.) ஒப்புகைக்கான கையொப்பம்; signature *(கொ.நா.ஆ.வ.35 ப.132).*

[கை + ஒப்பிதம்.]

கைஓலை கட்டோலை *kai-ōlai-kaṭṭōlai*, பெ.(n.) படி ஓலை; copy of document on hand *(கொ.நா.ஆ.வ.58 ப.247).*

[கை + ஓலை + கட்டு + ஓலை.]

கைக்கட்டி *kai-k-kaṭṭi*, பெ.(n.) 1. கையுறை (சூடா.); gloves. 2. அக்குட்புண் (இ.வ.); boil or tumour in the arm-pit. 3. ஓர் அணிகலன்; an ornament. 4. கைச்சட்டை; hand of shirt.

[கை + கட்டி.]

கைக்கட்டு *kai-k-kaṭṭu*, பெ.(n.) புண், எலும்பு முறிவு, காயம் முதலியவற்றைக் கருதிக் கைக்கிடும் கட்டு; bandage for the arm in cases of wounds, fractures or other injuries (சா.அக.). 2. கையில் அணியும் அணிகலன்; an ornament for the arms.

ம. கய்க்கெட்டு; **க.** கெய்கட்டு; **து.** கைகட்டு.

[கை + கட்டு.]

கைக்கட்டு[4]-தல் *kai-k-kaṭṭu-*, 4 செ.கு.வி.(v.i.) இடக்கையை வலப்பக்கமாகவும், வலக்கையை இடப்பக்கமாகவும் மடக்கிக்கொண்டு வணக்கங் காட்டுதல்; to fold the hands in reverence, obedience, etc. *"தாம்என்முன்னே கைக்கட்டிக் கொண்டு நின்றார்" (திவ்.திருநெடுந்.21,188,வியா.).*

[கை + கட்டு-.]

கைக்கட்டுபவளம் *kai-k-kaṭṭu-pavaḷam*, பெ.(n.) பவளத்தாலான ஒருவகைக் கையணி (பர.); coral bracelet.

[கை + கட்டு + பவளம்.]

கைக்கடகம் *kai-k-kaḍagam*, பெ.(n.) கையில் அணியும் கடகம்; a hand bracelet.

க. கைகடக; **து.** ககிடக.

[கை + கட்டு + பவளம்.]

கைக்கடன் *kai-k-kaḍaṉ*, பெ.(n.) 1. ஒப்பந்தமுறியோ வட்டியோ இல்லாமல் குறுகிய காலத்தில் திருப்பித்தரும் வகையில் கடனாகப் பெறும் பொருள்கள் அல்லது பணம்; a temporary loan of articles or money without bond or interest. 2. கடப்பாடு; obligation, duty. *"உம்முடைய கைக்கடன்றா னுயிர்காக்கக் கடவீர்" (கம்பரா. கும்பகர்.355).*

மறுவ. கைமாற்றுக்கடன்.

க. கைகட, கெய்கட; **து.** கைகட.

[கை + கடன்.]

கைக்கடன்தீர்-த்தல் *kai-k-kaḍaṉ-tīr-*, 4 செ. குன்றாவி.(v.t.) பெற்ற கடனை அடைத்தல்; to clear it or return a loans.

க. கெய்கடதீரிசு.

[கைக்கடன் + தீர்.]

கைக்கடனாற்றல் *kai-k-kaḍaṉ-āṟṟal*, பெ.(n.) உதவிபுரிதலாகிய வேளாண் மாந்தரியல்பு (சூடா.); rendering assistance, helping, obliging, mentioned as a characteristic of the Velalas.

[கை + கடன் + ஆற்றல்.]

கைக்கடனாற்று-தல் *kai-k-kaḍan-āṟṟu-*, 5 செ.கு.வி.(v.i.) உறுதியின்றி நம்பிக்கை கொடுத்தல்; to assure without any trust.

[கை + கடன் + ஆற்று-.]

கைக்கடியாரம் *kai-k-kaḍiyāram*, பெ.(n.) கையிலெடுத்தாளும் சிறு கடியாரம்; wrist watch.

[கை + கடியாரம்.]

கைக்கடுதாசி *kai-k-kaḍudāśi*, பெ.(n.) ***கைச்சீட்டு*** பார்க்க; see *kai-c-cīṭṭu.*

[கை + கடுதாசி.]

கைக்கணக்கு[1] *kai-k-kaṇakku*, பெ.(n.) 1. கணக்குக் குறிக்கப்பெறும் சிற்றேடு; memorandum of accounts. கையைக்கொண்டு எண்ணப்படும் கணக்கு. 2. சான்றுச் சீட்டு (யாழ்.அக.); receipt. 3. ஒருறுதி; an assurance.

ம. கைக்கணக்கு.

[கண் + அக்கு - கணக்கு. கை + கணக்கு.]

கைக்கணக்குமுதல் *kai-k-kaṇakku-mudal*, பெ.(n.) பழைய வரிவகை. (S.I.I.VI,33); a kind of ancient tax.

[கை + கணக்கு + முதல்.]

கைக்கணிசம் *kai-k-kaṇiśam*, பெ.(n.) கையால் மதிக்கும் மதிப்பு; estimation of weight or quantity by the hand.

[கை + கணிசம்.]

கைக்கணை *kai-k-kaṇai*, பெ.(n.) ***கைஅம்பு*** பார்க்க; see *kai-ambu*.

[கை + கணை.]

கைக்கத்தி[1] *kai-k-katti,* பெ.(n.) சிறு கத்தி; pocket knife, small knife.

க. கெய்கத்தி; து. கயிகத்தி.

[கை + கத்தி. கை = சிறுமை.]

கைக்கத்தி[2] *kai-k-katti,* பெ.(n.) விரலால் எடுத்துக் கொண்டு அறுக்குங் கத்தி; a surgeon's knife (சா.அக.).

ம. கைக்கத்தி.

[கை + கத்தி.]

கைக்கத்திரிகை *kai-k-kattirigai,* பெ.(n.) மயிர் வெட்டுங் கருவி; shears, clipping instrument. *'கைக்கத்திரிகையிட்டு நறுக்கின தலையாட்டத்தை யுடையபரிகள்'(பு.வெ.3:10,உரை).*

[கை + கத்திரிகை.]

கைக்கதவு *kai-k-kadavu,* பெ.(n.) சிறு நுழைகதவு; trapdoor. *"கைக்கதவும்தாழ்திறக்கக் காண்கிலேன்" (நெல்விடு.431).*

[கை + கதவு. கடவு → கதவு]

கைக்கரடு *kai-k-karadu,* பெ.(n.) முன்கையும் முழங்கையும் இணையும் பொருத்து (வின்.); wrist.

மறுவ. மணிக்கட்டு.

[கை + கரடு. கரண் = திரட்சி, முருடு. கரண் → கரடு]

கைக்கரண்டி *kai-k-karandi,* பெ.(n.) சிறு கரண்டி; small-spoon, tea-spoon.

து. கயிசமுட்டு.

[கை +கரண்டி. கரள் → கரண் → கரண்டு →கரண்டி]

கைக்கரணம் *kai-k-karanam,* பெ.(n.) 1. கைச்சாடை (நெல்லை); sign, as of dumb show. 2. கொத்துக் கரண்டிவகை (இ.வ.); a small trowel.

மறுவ. கைச்சாடை.

[கை + கரணம்.]

கைக்கரணை[1] *kai-k-karanai,* பெ.(n.) கொத்தனார் கைக்கரண்டி ; a mason's tool.



கைக்கரணை

[கை + கரணை.]

கைக்கரணை[2] *kai-k-karanai,* பெ.(n.) கையில் உண்டாகும் ஒருவகைச் சிலந்தி (இ.வ.); whitlow.

[கை+கரணை. கரள் → கரணை = மேல்தோல்சமனற்றும் உரிய நிறமாற்றம் காணப்படுதல்.]

கைக்கரத்தை *kai-k-karattai,* பெ.(n.) ஆள் இழுப்பு வண்டி (யாழ்ப்.); rickshaw.

Fr. carte.

[கை + கரத்தை. கரு → கரத்தை = ஒற்றைமாட்டுவண்டி. கைக்கரத்தை = கையால் இழுக்கும் வண்டி.]

கைக்கல் *kai-k-kal,* பெ.(n.) தட்டாங்கல்விளையாட்டில் தரையில் கற்களை வைத்தபின் கையில் எஞ்சியிருக்கும் ஒற்றைக்கல்; the single stone which is in hand after keeping the remaining stones on ground in one of girls lay with stones.

மறுவ. ஆட்சிக்கல்.

[கை + கல்.]

விளையாட்டின் தொடக்கத்தில் விளையாட்டுக் கற்கள் மேலெறிந்து பிடிக்கப்படுவதால் அக் கல்லைக் கைக்கல் என்பர்.

கைக்கவளம் *kai-k-kavalam,* பெ.(n.) ஒருமுறை கையால் எடுத்து வாயிடும் அளவு உணவு; so much food as is taken with the fingers and put into the mouth.

க. கெய்துத்து.

[கை + கவளம்.]

கைக்கவசம் *kai-k-kavasam,* பெ.(n.) கையுறை; gloves.

மறுவ. கையுறை.

[கை + கவசம்.]

கைக்கவளம் *kai-k-kavalam,* பெ.(n.) ஒருமுறை வாயில்போடக் கையால் எடுக்கும் அளவு உணவு; so much food as is taken with the fingers and put into the mouth.

க. கெய்துத்து.

[கை + கவளம்.]

கைக்கழுத்து *kai-k-kaluttu,* பெ.(n.) முன்கை மணிக்கட்டு; wrist. *"திருக் கைக்கழுத்தின் வளையில்" (S.I.I.IV,81).*

மறுவ. மணிக்கட்டு, கைக்காடு.

[கை + கழுத்து.]

கைக்கறுப்பு *kai-k-kaṟuppu,* பெ.(n.) உள்ளங்கை கறுக்கும்ஒருவகைத்தோல்நோய்(பால்வினைநோய்); a venereal affection by which the palm is rendered black.

[கை + கறுப்பு.]

கைக்காசு *kai-k-kāšu,* பெ.(n.) 1.கையிலுள்ள காசு; cash on hand. 2. முதலீடு (மூலதனம்) கைக்காசிற்கு இழப்பில்லாமல் வணிகம் நடத்து.

[கை + காசு.]

கைக்காணம் *kai-k-kāṇam,* பெ.(n.) கையூட்டு (இ.வ.); bribe.

மறுவ. கையூட்டு.

ம. கைக்கரணம்.

[கை + காணம். காணம் = பழங்காலக் காசு.]

கைக்காணி *kai-k-kāṇi,* பெ.(n.) காணிக்கை, கொடை; present, gift. *'இடப விலச்சனையைக் கைக் காணியாக இட்டு' (கலித். 82:12, உரை).*

ம. கய்க்காணம்.

[கை + காணி.]

கைக்காணிக்கை *kai-k-kāṇikkai,* பெ.(n.) 1.கையால் அளிக்கும் காணிக்கை; present given with hand. 2. பெரியோர், மேலானோர், ஆகியோரைக் காணும் காணிக்கை; present given to elders and respected ones on the occassion of a visit or an offering to God while visiting a temple.

க. கெய்காணிகெ.

[கை + காணிக்கை.]

கைக்காப்பு *kai-k-kāppu,* பெ.(n.) கையிலணியுங் காப்பு; wristlet, bracelet.

க. கெய்கட்டு.

[கை + காப்பு.]

கைக்காய் *kai-kāy,* பெ.(n.) சதுரங்கம் போன்ற ஆட்டங்களில் ஆடுவதற்காகக் கையில் வைத்திருக்கும் காய்; a die cat chess etc. that is in one's hand.

க. கெய்குதுரெ.

[கை + காய்.]

கைக்காய்ச்சல் *kai-k-kāiccal,* பெ.(n.) கையில் உண்டாகும் ஒருவகை எரிச்சல்; a burning sensation in hand.

[கை + காய்ச்சல்.]

கைக்காரன்[1] *kai-k-kāraṉ,* 1. உதவுபவன்; one who helps others. 2. பணக்காரன்; rich man.

க. கெய்ருடக

[கை + காரன்.]

கைக்காரன்[2] *kai-k-kāraṉ,* பெ.(n.) 1. வல்லாளன்; man of ability or skill. 2. செல்வன் (இ.வ.); wealthy person.

ம. கய்க்காரன், கைக்காரன்; **க.** கெய்ருடக.

[கை + காரன்.]

கைக்காரன்[3] *kai-k-karaṉ,* பெ.(n.) 1. சூழ்ச்சியாளன்; a man of invention, sagacious person. 2. ஏமாற்றுபவன்; deceiver.

க. கெய்கார.

[கை + காரன்.]

கைஎன்பது செயல்திறம் என்னும் பொருளது அதன் எதிர்மறையாவது இது.

கைக்காரியம் *kai-k-kāriyam,* பெ.(n.) கைவேலை (உ.வ.); work on hand, immediate engagement.

[கை + காரியம்.]

கைக்காளவாய் *kai-k-kāḷavāy,* பெ.(n.) சுண்ணாம்பு சுடுவதற்குக் கிணறுபோலக் கட்டப்பட்ட காளவாய் (கட்டட.நாமா.9); a kind of lime kiln.

[கை + காளவாய்.]

கைக்காறை *kai-k-kāṟai,* பெ.(n.) ஒருவகைக் கையணி; bracelet, arm-ring. *'திருக்கைக்காறை பொன்று' (S.I.I.II. 144).*

[கை + காறை.]

கைக்கிட்டி *kai-k-kiṭṭi,* பெ.(n.) கைகளிலிட்டு இறுக்குங் கோல் (வின்.); instrument of torture for the hand.

[கை + கிட்டி.]

கைக்கிரியை *kai-k-kiriyai,* பெ.(n.) கையினாற் செய்யும் வேலை; the work done with hand, manual labour.

[கை + கிரியை.]

கைக்கிளவர் *kai-k-kiḷavar,* பெ.(n.) ***கைக்கோளர்*** பார்க்க; see *kai-k-kōḷar.*

மறுவ. கைக்குளர், கைக்கொளவர்.

[கை + கிளவர் (கொ.வ.).]

கைக்கிளவன் *kai-k-kiḷavaṉ*, பெ.(n.) ***கைக்கோளன்*** (இ.வ.) பார்க்க; see *kai-k-kōḷaṉ.*

[கை + கிளவன் (கொ.வ.).]

கை=சிறுமைப்பொருள்முன்னொட்டு.கிளை=ஒழுக்கம்.கை + கிளை.

கைக்கிளை *kai-k-kiḷai,* பெ.(n.) 1. ஒருதலைக் காமம்; unreciprocated sexual love, as one sided. *"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்" (தொல்.பொருள் அகத்.1).* 2. ஐந்து விருத்தச் செய்யுளில் ஒருதலைக் காமத்தைப்பற்றிக் கூறும் சிற்றிலக்கியம் (இலக்.வி.827); poem in five viruttam verses treating of unrecipocated love. 3. ஏழிசையுள் மூன்றாவதாகிய காந்தாரப்பண் (திவா.); the third note of the gamut one of seven isai. 4. ***மருட்பா*** பார்க்க; see *marutpā,* a kind of verse. *"கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளோடு" (தொல்.பொருள்.430).*

கை - சிறுமைப் பொருள் முன்னொட்டு. கிளை = ஒழுக்கம்.

[கை + கிளை + திணை.]

கைக்கிளையாவது, ஆடவன் பெண்டு ஆகிய இருவருள்ளும் ஒருவருக்கே காதல் இருப்பது. இது ஒருதலைக் காமம். கை என்பது பக்கம். கிளை என்பது நேயம். ஆகவே கைக்கிளை என்பது ஒருதலைக் காதல் [தமிழர் திருமணம் 28].

கைக்கிளைத்திணை *kai-k-kiḷai-t-tiṇai,* பெ.(n.) கைக்கிளையைப்பற்றிக் கூறும் திணை (தொல். பொருள்.1, உரை); theme treating of *kai-k-kiḷai.*

[கை + கிளை + திணை.]

கைக்கிளைமருட்பா *kai-k-kiḷai-marutpā,* பெ.(n.) மருட்பாவகை (பாப்பா.132); a kind of verse.

[கை + கிளை + மருட்பா.]

கைக்கீறல் *kai-k-kīṟal,* பெ.(n.) ***கைக்கீறு*** பார்க்க; see *kai-k-kīṟu.*

[கை + கீறல்.]

கைக்கீறு *kai-k-kīṟu,* பெ.(n.) தற்குறிக் கீற்று; signature mark made by an illiterate person.

ம. கைக்கீறு.

[கை + கீறு.]

கைக்குக்கீழ் *kai-k-ku-k-kīḻ,* வி.எ.(adv.) பிறரது ஆளுகைக்கு உட்பட்டு; under (another) control or authority, the state of being at (another) disposition.

க. கெய்கெளகெ.

[கை + கு + கீழ்.]

கைக்குட்டை[1] *kai-k-kuṭṭai,* பெ.(n.) சிறுதுண்டு; handkerchief.

க. கெய்பாவட, கெய்வட்ட.

[கை + குட்டை (கை – சிறுமைப்பொருள் முன்னொட்டு).]

கைக்குட்டை[2] *kai-k-kuṭṭai,* பெ.(n.) இரண்டு மணிக்கட்டுகளையும் பிணைக்கும் கயிறு அல்லது தொடரி (சங்கிலி); handcuff.

மறுவ. கைவிலங்கு, கைக்களை.

[கை + குட்டை.]

கைக்குடை *kai-k-kuḍai,* பெ.(n.) சிறுகுடை; parasol, small umbrella. *"அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும்" (அறநெறி.43).*

[கை + குடை. (கை – சிறுமைப்பொருள் முன்னொட்டு).]

கைக்குத்தலரிசி *kai-k-kuttal-arisi,* பெ.(n.) நெல்லை உரலிலிட்டு உலக்கையால் குத்தி ஆக்கப்படும் அரிசி; rice got by pounding paddy with pestle in mortar.

[கை + குத்தல் + அரிசி.]

கைக்குத்து *kai-t-kuttu,* பெ.(n.) கைமுட்டியால் தாக்குகை; blow with the fist cuff in boxing. *"கைக்குத்தது படலும்" (கம்பரா.முதற்போ.176).*

ம. கைக்குத்து.

[கை + குத்து.]

கைக்குதல் *kaikkudal,* தொ.பெ.(vbl.n.) கசத்தல்; being bitter (சா.அக.).

[கை → கைக்கு.]

கைக்குதவு-தல் *kaikkudavu-,* 5 செ.கு.வி. (v.i.) ஏற்றபொழுதிற் பொருள் வகையாலோ வினை வகையாலோ உதவிசெய்தல்; to be opportunely useful, to be of timely help.

[கைக்கு + உதவு-.]

கைக்குந்தாலி *kai-k-kundāli,* பெ.(n.) சிறுகுந்தாலி; a small hoe.

க. கெய்குத்தலி; பட. கைகுத்தலி.

[கை + குந்தாலி.]

கைக்குநீர்கொள்(ளு)-தல் *kaikku-nīr-koḷ(ḷu)-,* 16 செ.கு.வி.(v.i.) சிறுநீர் விடுதல் (யாழ்.அக.); lit. to take

water for washing hands, while going to pass urine (used euphemistically).

ம. கைக்கினி கொள்ளுக.

[கைக்கு + நீர் + கொள்(ளு)-.]

கைக்குமெய்க்குமில்லாமை *kaikkumaikkum-illāmai,* பெ.(n.) உண்ணவும் உடுக்கவுமில்லாத நிலை; the struggle of existence for food and cloth.

[கைக்கும் + மெய்க்கும் + இல்லாமை.]

கைக்குவா-தல் (கைக்கு வருதல்) *kaikku-vā-,* 18 செ.கு.வி. (v.i.) 1. கையிற் கிட்டுதல்; to come to hand. 2. மகன் தந்தைக்கு உதவியாய் வருவது போல், பயன் உள்ளதாக இருத்தல், உதவி செய்தல்; to become useful or afford assistance, as a grown up son to his father.

க. கெய்செபரு.

[கைக்கு + வா-.]

கைக்குழந்தை *kai-k-kuḻandai* பெ.(n.) 1. இடுப்புப் பிள்ளை; small baby. 2. சிறுகுழந்தை; infant.

ம. கைக்குஞ்ஞு; க. கெய்கூசு ; பட. கைகூசு.

[கை + குழந்தை. (கை - சிறுமைப் பொருள் முன்னொட்டு).]

கைக்குழவி[1] *kai-k-kuḻavi,* பெ.(n.) ***கைக்குழந்தை*** பார்க்க; see *kai-k-kuḻandai.* *"மூர்த்திகைக் குழவியே போல் முதற்புரி யாடல்" (கந்தபு. திருவவ. 114).*

[கை + குழவி.]

கைக்குழவி[2] *kai-k-kuḻavi,* பெ.(n.) சிறிய அம்மிக் குழவி; small macerating stone.

[கை + குழவி.]

கைக்குழி *kai-k-kuḻi,* பெ.(n.) அக்குள், கமுக்கட்டு; the arm-pit.

ம. கப்க்குழி (கைக்கூடு): க. கங்குள்; தெ. சங்கலு; து. கிதுகில்; பட. கக்குவ.

[கை + குழி.]

கைக்குழித்தாமரை *kai-k-kuḻi-t-tāmarai,* பெ.(n.) அக்குளில் தோன்றும் புண்வகை (யாழ்.அக.); a tumour in the arm-pit (செ.அக.).

[கை + குழி + தாமரை.]

கைக்குழைச்சு *kai-k-kuḻaiccu* பெ.(n.) மணிக்கட்டு (இ.வ.); wrist (செ.அக.).

[கை + குழைச்சு.]

கைக்குள்[1] *kaikkuḷ,* பெ.(n.) 1. உடனே (யாழ்.அக.); immediately. 2. சடுதி; quick (செ.அக.).

[கை + கு + உள்.]

கைக்குள்[2] *kaikkuḷ,* பெ.(n.) கட்டுப்பாடு; control, obedience. என் கைக்குள்ளேயே வளர்ந்தவன்.

[கை + உள்.]

கைக்குள்போடு-தல் *kaikuḷ-pōḍu-,* 19 செ. குன்றாவி. (v.t.) தன்வயப்படுத்துதல்; to gain one to his side (சா.அக.).

[கைக்குள் + போடு-.]

கைக்குள்வளர்-தல் *kaikkuḷ-vaḷar-,* 2 செ.கு.வி. (v.i.) ஒருவர் பொறுப்பில் வளர்தல்; to grow in one's custody. என் கைக்குள் வளர்ந்தவன் என்னையே எதிர்க்கின்றான்.

[கைக்குள் + வளர்-.]

கைக்குள்ளா-தல் *kaikkuḷḷādal,* பெ.(n.) 1. வெற்றி பெறல்; gaining success. 2. வயப்படுத்துதல்; winning (சா.அக.).

[கைக்குள் + ஆதல். ஆதல் - து.வி.]

கைக்குளசு *kai-k-kuḷasu,* பெ.(n.) ***கைக்குழைச்சு*** பார்க்க; see *kai-k-kuḻaiccu.*

[குழைச்சு → குளசு. கை + குளசு.]

கைக்குளர் *kaikkuḷar* பெ.(n.) கைக்கோளர்; a class of weavers.

மறுவ. கைக்குளர்; கைக்கொளவர்.

[கை + கோளர் → குளர்.]

கைக்குற்றம் *kai-k-kuṟṟam,* பெ.(n.) 1. கைத்தவறு; slip of the hand. 2. சிறுபிழை; lapse, slight, accidental mistake.

ம. கைக்குற்றம்; க. கெய்தப்பு.

[கை + குற்றம்.]

கைக்குறி *kai-k-kuṟi,* பெ.(n.) 1. வாழ்வின் போக்கினைக் குறிப்பதாகக் கருதும் கைவரி (இரேகை); lines on the palms as indicating one's career or course of life. 2. கையளவு; handful *'கைக்குறியாப்பை வாங்குவது' (ஈடு. 1,4:6).*

[கை + குறி.]

கைக்குறிப்பு *kai-k-kuṟippu,* பெ.(n.) நினைவுக் குறிப்பு; written record, memorandum (செ.அக.).

ம. கைக்குறிப்பு; க. கெய்காகத; து. கயிகன்னெ.

*[கை + குறிப்பு.]

கைக்குறிப்பேடு *kai-k-kurippēdu,* பெ.(n.) 1. அற்றைக்குறிப்பேடு; rough day book. 2. வருவாய்த்துறையினரின் நாட்குறிப்பு; ittah book of the Revenue official.

[கை + குறிப்பு + ஏடு.]

கைக்குன்று *kai-k-kunru,* பெ.(n.) யானை; elephant (சா.அக).



கைக்குன்று

[கை + குன்று.]

கைக்கூச்சம் *kai-k-kūccam,* பெ.(n.) ஈயாமை, இவறற்றனம் (கஞ்சத்தனம்) (இ.வ.); miserliness.

[கை + கூச்சம்.]

கைக்கூட்டம் *kai-k-kūttam,* பெ.(n.) அணிவகுப்புக் கூட்டம்; battle array. *"கைக்கூட்ட மிட்டாற்போலே என்னவுமாம்" (திங்.பெரியாழ்.5:2:1, வியா.) (செ.அக.).*

[கை + கூட்டம்.]

கைக்கூட்டன் *kai-k-kūttan,* பெ.(n.) காவற்காரன்; watchman, warder, prison guard. *'ராஜபுத்ரனைச் சிறையிலே இட்டுவைத்தால் கைக்கூட்டனுக்குப் பாலுஞ் சோறும் இடுவாரைப் போல' (ஈடு,7,10:8).*

[கை + கூட்டன்.]

கைக்கூலி[1] *kai-k-kūli,* பெ.(n.) 1. அற்றைக்கூலி; daily wages. 2. கையிலே கொடுக்கும் விலைப்பொருள்; cash payment. *'கைக்கூலி கொடுத்துக் கொள்ள வேண்டும்" (ஈடு,4,6:1).* 3. கையூட்டு; bribe, glove-money.

ம. கைக்கூலி; **க.** கைகூலி, கெய்கூலி.

[கை + கூலி.]

கைக்கூலி[2] *kai-k-kūli,* பெ.(n.) 1. மணமகளுக்குப் பெண்வீட்டார் கொடுக்கும் தொகை (வின்.); money paid by the parents of the bride to the bridegroom. 2. கையூட்டு; bribe. *"கைக்கூலி தான்வாங்கு காலறுவான்" (தனிப்பா.1,108:47).*

ம. கய்க்கூலி; **க.** கெய்கூலி.

[கை + கூலி.]

கைக்கூலிக்காரன் *kai-k-kūli-k-kāran,* பெ.(n.) நாட்கூலிக்குப் பணி செய்பவன்; a day labourer.

க. கெய்கூலிகார.

[கை + கூலி + காரன்.]

கைக்கெளிமை *kaikkelimai,* பெ.(n.) உள்ளீடற்று எடையில்லாத மென்மை (இலேசு); lightness.

[கை + கு + எளிமை.]

கைக்கேடு *kai-k-kēdu,* பெ.(n.) 1. கீழறுப்பு; treachery. 2. எதிர்பாராது நேர்ந்த கேடு; unintentional error, accidental loss.

[கை + கேடு.]

கைக்கேடுபோ-தல் *kai-k-kēdu-po-,* 8 செ.கு.வி. (v.i) பிறர் சூழ்ச்சிக்குட்பட்டுக் கேடு அடைதல்; to run risk or loss unawares by another's deception.

[கை + கேடு + போ-.]

கைக்கை *kaikkai,* பெ.(n.) 1. கசப்பு; bitter. 2. வெறுப்பு; aversion.

[கை + கை.]

கைக்கொட்டை[1] *kai-k-kottai,* பெ.(n.) கைத்திண்டு (வின்.); pillow cushion for the arm (செ.அக.).

மறுவ. கைத்திரண்டு.

[கை + கொட்டை.]

கைக்கொடு-த்தல் *kai-k-kodu-,* 4 செ.கு.வி. (v.i.) ***கைகொடு*** பார்க்க see *kai-kodu. "நற்சவையிற் கைக்கொடுத்தல் சாலவு முன்னினிதே" (இனி.நாற்.2).*

[கை + கொடு-.]

கைக்கொள்(ளு)[1]**-தல்** *kai-k-kol(lu)-,* 13 செ. குன்றாவி.(v.t.) 1. கையில் எடுத்துக் கொள்ளுதல்; to take in hand, take up, occupy, have in charge. *"கணவிர மாலை கைக்கொண் டென்ன" (மணிமே. 5:48).* 2. பேணிக் கொள்ளுதல்; to observe; to practise; to maintain. அறத்தைக் கைக்கொண்டு நடக்கிறார்கள். 3. ஏற்றுக் கொள்ளுதல், ஒப்புக் கொள்ளுதல், மேற் கொள்ளுதல்; to accept, adopt, admit. *'சொன்னவார்த்தை ஆப்தமென்ற கைக் கொள்ள வேண்டும்படி' (ஈடு.4:7,பிர.).* 4. கவர்தல்; to seize, grasp. *"கணநிரை கைக்கொண்டு" (பு.வெ.1:9).* 5. வளைத்துக் கொள்ளுதல்; to surround. *"கண்ணுதலோ னிருமருங்கு மொன்றாகக் கைக் கொண்டார்" (கோயிற்பு.பதஞ்.18).*

ம. கய்க்கொள்ளுக, கைக்கொள்ளுக; க. கெய்கொள்; தெ. கைகொனு.

[கை + கொள்.]

கைக்கொள்(ளு)²-தல் *kai-k-koḷ(ḷu)-,* 13 செ. குன்றாவி.(v.t.) 1. ஏற்றுச் செயற்படுத்துதல்; to undertake. *"மதுராந்தக ப்ரஹ்மாதிராஜர் கைக்கொண்டு இரட்சித்தமையில்" (S.I.I. VII, 308).* 2. உரிமை யாக்குதல்; to make one's own. 'தெருவைக் கைக்கொண்டு நின்றார்' (சீவக.457, உரை).

[கை + கொள்(ளு)-.]

கைக்கொள்³ *kaikkoḷ,* பெ.(n.) தலைவன் தலைவி யரின் களவுகற்பொழுக்கங்கள் (தொல்.பொருள்.498, உரை); life of hero and heroin through clandestine union or arranged marriage.

[கை + கொள்]

கைக்கொளவர் *kai-k-koḷavar,* பெ.(n.) 1. அரசனைச் சூழ்ந்து பாதுகாக்கும் பொறுப்பேற்ற படைமறவர்; special body guards of the king in the army. 2. நெசவாளர்; weaver.

[கை + (கொளுவர்) கொளவர்.]

அரசனைப் பாதுகாக்கும் பொறுப்பைக் கையில் கொண்டவர்.

கைக்கொளவன் *kai-k-koḷavaṉ,* பெ.(n.) போரில் அரசனைப் பாதுகாக்கும் மெய்காப்பு மறவன்; a soldier who takes the responsibility of guarding the royal king.

மறுவ. கைக்கோளன்.

[கை + (கொளுவன்) கொளவன்.]

கைக்கோட்சேனாதிபதி *kai-k-kōṭ-cēṉādipadi,* பெ.(n.) மண்வெட்டி; a spade, a hoe.

ம. கய்க்கோட்டு.

[கை + கோட்டு + சேனாதிபதி.]

கைக்கோட்டு *kai-k-kōṭṭu,* பெ.(n.) மண்வெட்டி; a spade, a hoe.



கைக்கோட்டு

ம. கய்க்கோட்டு.

[கை + (கொட்டு) கோட்டு.]

கைக்கோட்டை *kai-k-koṭṭai,* பெ.(n.) யானை; elephant.

[கை + (கோடு) கோட்டை.]

கைக்கோடரி *kai-k-kōḍari,* பெ.(n.) சிறு கோடரி; hatchet, small axe, hand axe.

ம. கைக்கோடாலி; க. கெய்கொடலி, கைகோட்லி; தெ. செயிகொட்டலி; பட. கைகொடலி.

[கை + கோடரி.]

கைக்கோரணி *kai-k-kōraṇi,* பெ.(n.) 1. கைச்சாடை (வின்.); signs with the hands, as of a dumb person or a dying man (சா.அக.).

[கை + கோரணி. குறள் → குரண் → குரணி → கோரணி (கொ.வ.).]

கைக்கோரணி காட்டு-தல் *kai-k-kōraṇi-kāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) இறக்குந்தறுவாயிலிருத்தல் (இ.வ.); to be at the point of death.

[கை + கோரணி + காட்டு-.]

கைக்கோல்¹ *kai-k-kōl,* பெ.(n.) 1. ஊன்றுகோல்; staff, walking stick. *"தன்கைக்கோலம்மனைக்கோலாகிய ஞான்று" (நாலடி. 14).* 2. பற்றுக் கொடிறு; goldsmith's pincers. *"கைக்கோற் கொல்லன்" (சிலப். 16:108).*

ம. கைக்கோல்; க. கெய்கோலு.

[கை + கோல்.]

கைக்கோல்² *kai-k-kōl,* பெ.(n.) செங்கோல்; sceptre. *"எழுமேதி னிக்குங் கைக்கோல் செலுத்துங் குலோத்துங்கன்" (குலோத். கோ. 391).*

[கை + கோல்.]

கைக்கோலிளையர் *kai-k-kōl-iḷaiyar,* பெ.(n.) கையில் கோல் பிடித்துக் காவற்றொழில் புரிவோர்; watchmen, guards, as holding a staff. *"காவற் றொழிலொடு கைக்கோ லிளையரும்" (பெருங். உஞ்சைக். 57:70).*

[கை + கோல் + இளையர்.]

கைக்கோள் *kai-k-kōḷ,* பெ.(n.) கைப்பற்றிக் கொள்ளுதல்; seizure.

[கை + கோள்.]

கைக்கோள்முதலி *kai-k-kōḷ-mudali,* பெ.(n.) கைக்கோளக் குடியினரின் தலைவர்; chief of the *Kaikkōḷa* caste. *"கைக்கோளர்க்கும் கைக்கோள்*

முதலிகளுக்கும் உள்ள மனையும்" (தெ.இ.கல்.தொ:I:121)

[கைக்கோள் + முதலி.]

கைக்கோளப்படை *kai-k-kōḷa-p-paḍai*, பெ.(n.) சோழர் சிறப்புடைப்படை; special army of *Cōḷās*.

[கைக்கோள் + படை.]

"ஸ்ரீ ராஜராஜ தேவர், கைக்கோளப்படை பிரந்தகந் தெரிஞ்ச கைக்கோளரும் சூத்திரசோழந் தெரிஞ்ச கைக்கோளரும் பாண்டிய குலாசநித் தெரிஞ்ச கைக்கோளரும்" (தெ.கல்.தொ.4.கல்.391) நான்கு வகைகளைக் கொண்ட இப் படைப் பிரிவு முதல் இராசராசன் ஆட்சியில் சிறந்த படைப்பிரிவாக இருந்ததாம். (கல்.அக.).

கைக்கோளர்[1] *kai-k-kōḷar*, பெ.(n.) ***கைக்கோளன்*** பார்க்க; see *kai-kōḷaṉ*.

கைக்கோளர்[2] *kai-k-kōḷar*, பெ.(n.) நெசவுத்தொழில் செய்வோர்; weavers community. *"கங்கநல்லூர் கைக்கோளருங்"* (ஆவ. 2 கட். 11 ப.24).

[கை + கோளர்.]

கைக்கோளர்[3] *kai-k-kōḷar*, பெ.(n.) நெசவாளர்; weavers.

[கை + கோள் + ஆர்.]

கைக்கோளர்[4] *kai-k-kōḷar*, பெ.(n.) அரசரின் படைப்பிரிவில் வரி தண்டுவதற்காகத் தேர்ந்தெடுத்த படைமக்கள்; selected people in the administration for collection of tax using mild power. *"இரட்டித்துவந்த பொன் 30 தண்டப் போந்த சமரகேசரித் தெரிந்த கைக்கோளர் தண்டிப் பொன் கொண்ரு வருக வென்று இராஜராஜ மாராயர் கடையீடு வரக்காட்ட" (SII.XXII.Pt.1, 27-5 p.21).*

[கை + கோள் + அர்.]

கைக்கோளன் *kai-k-kōḷaṉ*, பெ.(n.) 1. போர்க் காலத்தில் அரசனைச் சூழ நின்று பாதுகாக்கும் பொறுப்பேற்றுச் சூளுரைக்கும் சிறப்புப் படைமறவன்; special army men who function as reliable body-guards of the king. 2. இன்று பெரும்பாலும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒரு தமிழ்க்குடியினன்; a caste, now mostly weavers, found in all districts.

ம. கய்க்கோளன்; தெ. கைகோல.

[கைக்கொளவன் → கைக்கோளன்.]

கைக்கோளன்காடி *kai-k-kōḷaṉ-kāḍi*, பெ.(n.) 1. நெசவுக்காரர் ஆக்கும் அரிசிக்காடி; fermented liquid prepared from boiled rice and used by weavers for yarns. 2. ஆறு மாதத்திய காடி; fermented liquid six months old (சா.அக.).

[கைக்கோளன் + காடி.]

கைகட்டிநில்(-தல்) (கைகட்டிநிற்றல்) *kai-kaṭṭi-nil-*, 14 செ.கு.வி.(v.i.) கைகளைக் கட்டிக்கொண்டு வணங்கி நிற்றல்; to stand submissively with folded arms.

[கை + கட்டி + நில்-.]

கைகட்டு *kai-kaṭṭu*, பெ.(n.) கூலியாள்களின் சேர்க்கைக் கூட்டம் (இ.வ.); batch, as of workmen.

[கை + கட்டு-.]

கைகட-த்தல் *kai-kaḍa-*, 3 செ.கு.வி. (v.i) 1. வயப் படாமல் மீறுதல்; to pass beyond one's control. *'நின்னைக்கைகடந்துநின்னுண்கண்களே,எனக்குச் சொல்ல லுறுவதொரு காரியம்' (குறள். 1271,உரை).* 2. கைக்கு எட்டாமற்போதல்; to escape; to pass out of one's hands; to pass beyond one's reach. *"தோண் முயங்கிடாது.... கைகடக்க விட்டிருந்து" (கம்பரா.கார்மு. 54).*

[கை + கட-.]

கைகடந்தபோகம் *kai-kaḍanda-bōgam*, பெ.(n.) மிகுதியான காமம்; too much of indulgence in sexual intercourse (சா.அக.).

[கை + கடந்த + போகம்.]

கைகடி-த்தல் *kai-kaḍi-*, 4 செ.குன்றாவி.(v.t.) கைமுதலுக்கு இழப்பு நேர்தல்; to loss (of capital in hand).

ம. கைகடிக்குக.

[கை + கடி.]

கைகடை-தல் *kai-kaḍai-*, 12 செ.குன்றாவி.(v.t.) கையால் கடைதல்; to churn or stir about with the hands.

க. கெய்கடெ.

[கை + கடை-.]

கைகண்ட[1] *kai-kaṇḍa*, கு.பெ.எ.(adj.) தேர்ந்த; skilled. *அவர் இந்தத் தொழிலில் கைகண்டவர் (சா.அக.).*

[கை + கண்ட.]

கைகண்ட[2] *kai-kaṇḍa*, கு.பெ.எ.(adj.) நின்ற மதியுடைய, நற்றிறமிக்க; immediately useful, efficacious. *"தீவினைக் கருக்கெடும்மிது கைகண்ட யோகமே (தேவா. 927:5).*

[கை + கண்ட.]

கைகண்டசாரம் *kai-kaṇḍa-šāram*, பெ.(n.) 1. நவச் சாரம்; chloride of ammonium. 2. கைகண்ட பலன்; the result in hand immediate benefit.

[கை + கண்ட + சாரம்.]

கைகண்டது *kaikaṇḍadu*, பெ.(n.) 1. படிப்பினையால் சிறந்ததெனக் கொள்ளப்பட்டது; that which is found usually efficacious after experience. *"சான்றோர் புகழும்வெருகெண்ணெய்தவறாதிதுகைகண்டோம் நாம்" (பராச சேகரம்.) (சா.அக.).* 2. ***கைகூடு-தல்*** பார்க்க; see *kai-kūḍu-*. 3. தோன்றினது; that which appeared.

[கை + கண்டது.]

கைகண்டபணி *kai-kaṇḍa-paṇi*, பெ.(n.) பழக்கப்பட்ட பணி, தேர்ச்சி பெற்ற பணி; work which is known to a person or to which a person is accustomed.

க. கெய்கண்ட கெலச.

[கைகண்ட + பணி.]

கைகண்டபயன் *kai-kaṇḍa-payaṉ*, பெ.(n.) நடைமுறையில் உறுதிப்படுத்தப்பட்ட பயன்; established benefit.

[கைகண்ட + பயன்.]

கைகண்டபரிகாரி *kai-kaṇḍa-parigāri*, பெ.(n.) பட்டறிவு மிக்க மருத்துவன்; an experienced physician (சா.அக.).

[கை + கண்ட + பரிகாரி.]

கைகண்டபலன் *kai-kaṇḍa-palaṉ*, பெ.(n.) ***கைகண்டபயன்*** பார்க்க; see *kai-kaṇḍa-payaṉ*.

[கை + கண்ட + பலன்.]

கைகண்டமருந்து *kai-kaṇḍa-marundu*, பெ.(n.) 1. நோய் நீக்கும் மருந்து; the medicine which cures a disease. 2. கைதேர்ந்த மருந்து; a medicine the virtues of which are tried. 3. நோய்க்குரிய மருந்து; the medicine which exerts a special action in the prevention and cure of a disease (சா.அக.).

[கை + கண்ட + மருந்து.]

கைகண்டமுறை *kai-kaṇḍa-murai*, பெ.(n.) நுகர்ச்சியால் தெளிந்த முறை; an efficient method determined by experience (சா.அக.).

[கை + கண்ட + முறை.]

கைகண்டயோகம் *kai-kaṇḍa-yōgam* பெ.(n.) வழக்கத்தால் நலம் உள்ளதெனத் தெரிந்த மருந்து; any medicine found by trial to possess peculiar efficacy in the cure of a particular disease. *"கைகண்ட யோகந் தடவர் தீரும்" (திவ்.நாய்ச்.12:5).*

[கை + கண்ட + யோகம்.]

கைகண்டவள் *kai-kaṇḍavaḷ*, பெ.(n.) பரத்தை; prostitute (சா.அக.).

[கை + கண்டவள்.]

கைகண்டவேலை[1] *kai-kaṇḍa-vēlai*, பெ.(n.) ***கைகண்டபணி*** பார்க்க; see *kai-kaṇḍa-paṇi*.

க. கெய்கண்ட கெலச.

[கை + கண்ட + வேலை.]

கைகண்டவேலை[2] *kai-kaṇḍa-vēlai*, பெ.(n.) ஒருவருக்கு நன்கு தெரிந்த அல்லது பழக்கப்பட்ட வேலை; work which is known to a person or to which a person is accustomed.

க. கெய்கண்ட கெலச

[கை + கண்ட + வேலை.]

கைகம் *kaigam* பெ.(n.) வக்கிராந்தி செய் (வைப்பு) நஞ்சு (யாழ்.அக.); a mineral poison.

[கச → கயி → கை → கைகம்.]

கைகயன் *kaikayaṉ*, பெ.(n.) 1. கேகயநாட்டு மன்னன்; king of Kegaya. *"கைகயன் மகள் விழுந்தரற்ற" (கம்பரா.கிளைகண்டு.40).* 2. கேகய நாட்டைச் சார்ந்தவன்; inhabitant of Kegaya. *"கைகயர் வேந்தன்" (கம்பரா.எழுச்.64).*

[கேகயன் → கைகயன்.]

கைகர-த்தல் *kai-kara-*, 3 செ.குன்றாவி. (v.t.) ஒளித்தல்; to hide, conceal. *"சான்றவர் கைகரப்ப" (பழ.242).*

[கை + கர-.]

கைகல-த்தல் *kai-kala-*, 3 செ.கு.வி. (v.i.) 1. கூடுதல்; to unite, join. *"ஆசையிற் கைகலந்து" (திருப்பு.296).* 2. நெருங்கிப் பொருதல்; to engage in a hand-to-hand fight. *"மதன் படையுங் கைகலக்குந் தானே" (தனிப்பா. 1, 326, 24).*

[கை + கல-.]

கைகவி-த்தல் *kai-kavi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கைக்குறியால் அடக்குதல்; to check as by gesture. *'மற்று அவனைக் கைகவித்து' (பாரத வெண்.*

34,உரை). 2. புகலிடம்கொடுத்தல்; to protect. *"அஞ்சேலென்று கைகவியாய்" (திவ். பெரியாழ். 5,3:7).*

[கை + கவி–.]

கைகழி—தல் *kai-kaḻi-,* 3 செ.கு.வி.(v.i.) எல்லை கடத்தல்; to go beyond, exceed the bounds, overstep the limits to go beyond the hand, etc. *"அப்ராப்தமானதிலே கைகழியப் போய்" (ஈடு,4,6:8).*

க. கெய்கழி.

[கை + கழி–.]

கைகழுவிவிடு—தல் *kai-kaḻuvi-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) முடியாதென்று மறுத்தல்; to refuse, to rescue. *சாகுந்தறுவாயிலிருந்த ஒரு நோயாளியை மருத்துவர் கைகழுவி விட்டார் (இ.வ.).*

[கை + கழுவி + விடு–.]

கைகழுவு[1]—தல் *kai-kaḻuvu-,* 5 செ.கு.வி. (v.i.) கையலம்புதல்; to wash the hands.

க. கெய்தொளெ; பட. கைதோகு.

[கை + கழுவு–.]

கைகழுவு[2]—தல் *kai-kaḻuvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. விட்டுவிடுதல்; to relinguish, abandon. 2. பொறுப்பை நீக்கிக்கொள்ளுதல்; to avoid one's responsibility.

[கை + கழுவு–.]

கைகளத்தூர் *kaikaḷattūr,* பெ.(n.) பெரம்பலூர் மாவட்டச் சிற்றூர்; a village in Perambalur Dt.

[கை (சிறு) + களத்தூர்.]

கைகாசு *kai-kāšu,* பெ.(n.) ***கைக்காசு*** பார்க்க; see *kai-k-kāšu.*

[கை + காசு]

கைகாட்டி *kai-kāṭṭi* பெ.(n.) 1. ***கைகாட்டிமரம்*** பார்க்க; see *kai-kāṭṭi-maram.* 2. மாமியாரிடத்தில் மருமகள் கைகாட்டியல்லது வாயாற்பேசுதல் கூடா தென்னும் வழக்கத்தையுடைய ஒருசார் கணக்க வகுப்பினர் (இ.வ.); A caste of accountants, so called from their custom of prohibiting a daughter-in-law, to communicate with her mother-in-law except by signs.

ம. கைகாட்டி.

[கை + காட்டி.]

கைகாட்டிமரம் *kai-kāṭṭi-maram,* பெ.(n.) ஊர்களுக்குச் செல்லும் வழி சொல்லி அடையாளங் குறிக்கும் மரம்; sign board, semaphore.



கைகாட்டிமரம்

[கை + காட்டி + மரம்.]

கைகாட்டிவிடு—தல் *kai-kāṭṭ-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. தொழிலைப் பழக்கிக் கொடுத்தல்; to train a person. 2. தான் பொறுப்பேற்காமல் வேறொருவரைக் காட்டிவிடுதல்; to guide one to seek help from some one else.

[கை + காட்டி + விடு–.]

கைகாட்டு[1]—தல் *kai-kāṭṭu-,* 5. செ.கு.வி (v.i.) 1. சைகை காட்டுதல்; to make signs with the hand. *"பேதையார் கைகாட்டும் பொன்னும்" (நாலடி.328).* 2. நாட்டியத்தில் தொழிற்கை பிடித்தல்; to gesticulate with hands as dancing girls. 3. கொடியசைத்து அடையாளங் காட்டுதல் (உ.வ.); to wave the flag, as in railway stations. 4. நோய் அறிய, நாடி பார்க்கக் கையைக் காட்டுதல்; to show hand in order that the physician feels the pulse and diagnoses disease.

ம. கை காட்டுக; க. கெய்தோரு.

[கை + காட்டு–.]

கைகாட்டு[2]—தல் *kai-kāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) திறமை காட்டுதல்; to exhibit (the power of) one's strength. யாரிடத்தில் கைகாட்டுகிறாய் (உ.வ.).

க. கெய்தோறு.

[கை + காட்டு–.]

கைகாட்டு[3]—தல் *kai-kāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. சிறிது கொடுத்தல்; to give a little. *"ஐயமும் பிச்சையு மாந்தனையுங் கைகாட்டி" (திவ். திருப்பா.2).* 2. வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கொடுத்தல்; to enable one to earn his livelihood. 3. இறைவனுக்குப் படைத்தல்; to offer to God. 4. கையூட்டுக் கொடுத்தல் (இ.வ); to bribe.

[கை + காட்டு–.]

கைகாட்டு⁴—தல் *kai-kāṭṭu-*, 5 செ.கு.வி.(v.i) ***கை காட்டிவிடு—தல்*** பார்க்க; see *kāi-kāṭṭi-viḍu-*.

[கை + காட்டு-.]

கைகாட்டு⁵ *kaikāṭṭu*, பெ.(n.) கைச்சைகை; gesture with hands. *"கடவுணீ யுணர்த்துவதுங் கைகாட்டு" (தாயு.கல்லாலின்.1).*

[கை + காட்டு.]

கைகாண்(ணு)¹—தல் *kai-kāṇ(ṇu)-*, 16 செ.குன்றாவி.(v.t.) பட்டறிவின் வாயிலாக அறிதல்; to find out by experience. *"மருந்துகை கண்டேன்" (பெரியபு. கண்ணப்.181).*

[கை + காண்(ணு)-.]

கைகாண்(ணு)²—தல் *kai-kāṇ(ṇu)-*, 12 செ.கு.வி.(v.i.) 1. மெய்ப்பித்தல் (யாழ்ப்.அக.); to prove. 2. நிறைவேறுதல்; to complete.

[கை + காண்(ணு)-.]

கைகாய்த்து—தல் *kai-kāyttu-*, பி.வி.2 (caus.) எரியச் செய்தல்; to burn. *"காடுகை காய்த்திய நீடுநா ளிருக்கை" (பதிற்றுப்.82:9).*

[கை + காய்த்து-.]

கைகாய்ப்பு *kai-kāyppu*, பெ. (n.) கடும் உழைப்பில் உள்ளங்கையில் ஏற்படும் தோல் தடிப்பு; hardening of skin in palm due to hard work.

[கை + காய்ப்பு.]

கைகாரன் *kaikāraṉ*, பெ.(n.) ***கைக்காரன்*** பார்க்க; see *kai-k-kāraṉ*.

[கை + காரன்.]

கைகால்கரணைவிழல் *kai-kāl-karaṇai-viḻal*, பெ.(n.) கைகால் பருத்ததனால் அல்லது வீங்குவதால் மடிப்பு விழுதல்; formation of folds in the cutaneous portion of the limbs from corpulency or swelling (சா.அக.).

[கைகால் + கரணை + விழல்.]

கைகால்நடுக்கம் *kai-kāl-naḍukkam*, பெ.(n.) 1. கைகால் இவற்றில் காணப்படும் நடுக்கம்; shivering of the limbs. 2. குழந்தை அல்லது வலுவில்லார்க்கு ஏற்படும் நடுக்கம்; inability to keep the fingers and toes free from continued motion as in convalescents or children (சா.அக.).

[கைகால் + நடுக்கம்.]

கைகால்பிடி—த்தல் *kai-kal-piḍi-*, 4 செ.கு.வி.(v.i.) வெந்நீரிட்டுக் கைகால்களைத் தடவிப் பிடித்து, பலவாறு திருப்பி நெட்டி முறித்தல்; to press and rub over the limbs at the same time bending and racking the joints especially when giving a hot bath (சா.அக.).

[கைகால் + பிடி-.]

கைகால்முடக்கு *kai-kāl-muḍakku*, பெ.(n.) 1. கைகால் மரத்து நீட்டவும் மடக்கவும் முடியாமற்போகும் ஒருவகை ஊதை (வாத) நோய்; a kind of rheumatic affection of the limbs arising from undue pressure exerted in the nervous system due to forcible throwing of stones, bending of bows etc. (சா.அக.).

[கை + கால் + முடக்கு.]

கைகால்முரடுகட்டு—தல் *kai-kāl-muraḍu-kaṭṭu-*, 5 செ.குன்றாவி.(v.t.) முழங்கை முழங்கால் ஆகியவை திருப்ப முடியாது கரடு கட்டுதல்; the hardening or stiffening of a joint such as the elbow or knee in which there is no rotatary movement (சா.அக).

[கைகால் + முரடு + கட்டு-.]

கைகால்முறுக்கு—தல் *kai-kāl-murukku-*, 8 செ.குன்றாவி.(v.t.) 1. கைகால்களைப் பலவாறு திருப்புதல்; twisting the limbs in various ways for the purpose of stimulating the circulation of blood. 2. ***கைகால் பிடித்தல்*** பார்க்க; see *kai-kāl-piḍi*.

[கை + கால் + முறுக்கு-.]

கைகால் வலி *kai-kāl-vali*, பெ.(n.) கைகால் குத்தல் அல்லது குடைச்சல்; intense pricking or boring pain in the extremities (சா.அக.).

[கை + கால் + வலி.]

கைகால் வழங்காமை *kai-kāl-vaḻaṅgāmai*, பெ.(n.) 1. கைகால் பயன்படாதிருத்தல்; the state of being incapable of using hands and feet. 2. கைகால் செயல் இழத்தல்; deadening, or loss of motion and sensation of the limbs through paralytic attack (சா.அக.).

[கை + கால் + வழங்காமை.]

கைகால்வற்று—தல் *kai-kāl-vaṟṟu-*, 5 செ.கு.வி.(v.i.) கைகால் சூம்புதல்; atrophy of the limbs (சா.அக.).

[கை + கால் + வற்று-.]

கைகால்வாங்கு—தல் *kai-kāl-vāṅgu-*, 5 செ.குன்றாவி.(v.t.) கைகால் நீக்குதல்; amputation of the limbs (சா.அக).

[கை + கால் + வாங்கு-.]

கைகால்விழு–தல் *kai-kāl-viḻu-,* 2 செ.கு.வி. (v.i.) கைகால் உணர்ச்சி அசைவு ஆகியவை இல்லாமற் போதல்; to lose motion and sensation of the limbs through paralytic attack (சா.அக.).

[கைகால் + விழு–.]

கைகால்வீங்கு–தல் *kai-kal-vīṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. கைகால் பொதுவாக வீங்கிக் கொள்ளுதல்; to swell, of the limbs ordinarily from a disease. 2. சாவுக்குறி அடையாளமாகப் புறங்கை புறங்கால் வீங்குதல்; to swell, of in-steps, back of the palm indicating fatal termination.

[கை + கால் + வீங்கு–.]

கைகால்வெடிப்பு *kai-kāl-veḍippu,* பெ.(n.) கைகால்களில் ஏற்படும் வெடிப்பு; crack or fissure of the extremities through bilious disorders or frost bite (சா.அக.).

[கைகால் + வெடிப்பு.]

கைகாலசதி *kai-kāl-aśādi,* பெ.(n.) வலுக்குறை வினால் உண்டாகும்கைகாலுளைச்சல்; exhaution of the limbs through weakness (சா.அக.).

[கை + கால் + அசதி.]

கைகாலடி–த்தல் *kai-kāl-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) பக்கவூதையால் கை கால் உணர்ச்சியறல்; to be attacked with paralysis of the limbs (சா.அக.).

[கை + கால் + அடி –.]

கைகாலதிர்ச்சி *kai-kāl-adirćci,* பெ.(n.) கைகால் நடுக்கம்; trembling of hand and leg (சா.அக.).

[கை + கால் + அதிர்ச்சி.]

கைகாலயர்–தல் *kai-kāl-ayar-,* 2 செ.கு.வி. (v.i.) கைகால் கனத்து, திமிர்த்து ஓய்தல்; heavy becoming and benumbed as hands and feet (சா.அக.).

[கை + கால் + அயர் –.]

கைகாலழற்சி *kai-kāl-aḻarci,* பெ.(n.) கைகாலெரிவு; burning of the extremities (சா.அக.).

[கை + கால் + அழற்சி.]

கைகாலாட்டு–தல் *kai-kāl-āṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கைகாலசைத்தல்; to move hands and legs. 2. சோம்பி இருக்காமல் ஏதாவது பணி செய்தல்; to do some work instead being lazy (சா.அக.).

[கை + கால் + ஆட்டு–.]

கைகாலிற்றுவிழல் *kai-kāl-iṟṟu-viḻal,* தொ.பெ. (vbl.n.) குட்ட நோயால் கைகால் இற்றுவிழல்; dropping off of the digits in leprosy (சா.அக.).

[கை + கால் + இற்று + விழல்.]

கைகாலுதறு–தல் *kai-kal-udaṟu-,* 5 செ.கு.வி. (v.t.) கைகால் நடுங்குதல்; to shiver as the hands and feet (சா.அக.).

[கை + கால் + உதறு–.]

கைகாலுதை–த்தல் *kai-kāl-udai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கால், கை வலிப்புக் கண்டு கையையும் காலையும் உதைத்துக் கொள்ளுதல்; to move the hands and feet alternatively or in quick succession due to convulsions as epilepsy. 2. குழந்தைகள் கிடக்கும்போது கையையும் காலையும் உதைத்துக் கொள்ளல்; to move hands and feet spontaneously as by children when lying (சா.அக.).

[கை + கால் + உதை–.]

கைகாலுளைச்சல் *kaikāl-uḷaiccal,* பெ.(n.) கைகால் குடைச்சல்; boring pain of the limbs experienced in rheumatism or other nervous affections (சா.அக.).

[கை + கால் + உளைச்சல்.]

கைகாலுறுப்பு *kai-kāl-uṟuppu,* பெ.(n.) சேர்க்கை உறுப்பு; a jointed and divisible part of the limbs, appendages of the limbs (சா.அக.).

[கை + கால் + உறுப்பு.]

கைகாலூது–தல் *kai-kāl-ūdu-,* 5 செ.கு.வி. (v.i.) கைகால் வீக்கம்கொள்ளல் அல்லது பருத்தல்; to swell or enlarge abnormal by referring to extremities (சா.அக.).

[கை + கால் + ஊது–. உல் → ஊல் → ஊது]

கைகாலூனம் *kai-kāl-ūnam* பெ.(n.) கைகால் நொண்டி; defective formation of limbs (சா.அக.).

[கை + கால் + ஊனம்.]

கைகாலெரிச்சல் *kai-kāl-ericcal* பெ.(n.) 1. கை காலெரிவு; burning of the extremities 2. பித்த வெரிச்சல்; burning sensation of the palm and the sole from biliousness (சா.அக.).

[கை + கால் + எரிச்சல்.]

கைகாலோய்ச்சல் *kai-kāl-ōyccal,* பெ.(n.) வலு வின்மையால் காணும் கைகால் அசதி; exhaution of the limbs through weakness (சா.அக.).

[கை + கால்+ ஓய்ச்சல்.]

கைகாலோய்–தல் *kai-kāl-ōy-,* 2 செ.கு.வி.(v.i.) கைகால் கனத்து மரத்துப் போதல்; hands and feet becoming heavy and benumbed (சா.அக.).

[கை + கால் + ஓய்–.]

கைகாவல்[1] *kai-kāval,* பெ.(n.) 1. இன்றியமையாத நேரத்திற்பயன்படுத்தப்படும்பொருள்கள் (இ.வ.); that which is useful in emergency as medicines, provisions and weapons. 2. கையுதவி; a ready or necessary help (சா.அக.). 3. காத்தல்; protection, guard.

ம. கைகாவல்.

[கை + காவல்.]

கைகாவல்[2] *kai-kāval,* பெ.(n.) வேண்டியதற்குமேல் ஒன்றுஇருப்பிலிருப்பு; something excess in possession more than the actual requirement.

[கை + காவல்.]

கைகாற்கழுவல் *kai-kāṟ-kaḻuval,* பெ.(n.) கைகால்களைத் தண்ணீரால் கழுவுதல்; washing hands and feet (சா.அக.).

[கை + கால் + கழுவல்.]

கைகாற்காந்து–தல் *kai-kāṟ-kāndu-,* 5 செ.கு.வி. (v.i.) கைகால்களில் காணும் சூடு; glowing of heat experienced due to high temperature (சா.அக.).

[கை + கால் + காந்து–.]

கைகாற்குடைச்சல் *kaikāṟ-kuḍaiccal.* பெ.(n.) 1 கைகால் குடைதல்; aching of the limbs. 2. கை கால்களுக்கேற்படும்ஊதைக்குடைச்சல்; rheumatic pain of the limbs (சா.அக.).

[கை + கால் + குடைச்சல்.]

கைகாற்குத்தல் *kai-kār-kuttal,* தொ.பெ.(vbl.n.) கைகால்களில் உண்டாகும் குத்தல் வலி; excruciating or piercing pain experienced in wounds, ulcers or other injuries inflicated in the limbs (சா.அக.).

[கை + கால் + குத்தல்.]

கைகாற்குறண்டு–தல் *kaikāṟ-kuraṇḍu-,* 5 செ.கு.வி.(v.i.) கைகால் வெலவெலத்தல்; being convulsed in the hands and feet (சா.அக.).

[கை + கால் + குறண்டு–.]

கைகாற்சந்துளைவு *kai-kāṟ-šanduḷaivu,* பெ.(n.) 1. கைகாற் குடைதல்; aching of the limbs. 2. கை கால்களுக்கு ஏற்படும் ஊதை(வாத)க் குடைச்சல்; rheumatic pain of the limbs (சா.அக.).

[கை + கால் + சந்து + உளைவு.]

கைகாற்சில்லிடு–தல் *kai-kāṟ-cilliḍu-,* 18 செ.கு.வி. (v.i.) கைகால் குளிர்ச்சியடைதல்; getting chillness of extremities which is a premonitory symptom of death (சா.அக.).

[கை + கால் + சில்லிடு–.]

கைகாற்சுத்திசெய்–தல் *kai-kāṟ-šutti-cey-,* 1 செ.குன்றாவி.(v.t.) மருந்துநீர் அல்லது கருக்கினால் கைகாலைக் கழுவுதல்; cleaning of hands and feet with a lotion or other disinfectants, sterlization of hands and feet. 2. மரபு கோட்பாட்டின்படி (ஐதிகம்) தூய்மைசெய்தல்; ceremonial cleaning of hands and feet (சா.அக.).

[கை + கால் + சுத்தி + செய்–.]

கைகாற்சுரப்பு *kaikāṟ-curappu,* பெ.(n.) கைகால் வீக்கம்; swelling of the limbs (சா.அக.).

[கைகால் + சுரப்பு.]

கைகாற்சுரவை *kaikāṟ-šuravai,* பெ.(n.) கைகால் வீக்கம்; swelling of the limbs (சா.அக.).

[கை + கால் + சுரவை.]

கைகாற்செத்துப்போ–தல் *kaikāṟ-cettu-p-pō-,* 8 செ.கு.வி.(v.i.) 1. கைகால் ஓய்ச்சல்; exhausion of the limbs. 2. கைகால் உணர்ச்சியற்றுப் போதல்; loss of motion and sensation of the limbs (சா.அக.).

[கை + கால் + செத்து + போ–.]

கைகாற்பிடி–த்தல் *kai-kāṟ-piḍi-* 4 செ.குன்றாவி. (v.t.) வெந்நீரால் கைக்கால்களை வருடிப் பிடித்துப் பலவாறு திருப்பி நெட்டிமுறித்தல்; pressing and rubbing over the limbs at the same time bending and racking the joints especially when giving a hot bath (சா.அக.).

[கை + கால் + பிடி –.]

கைகாற்பிடிப்பு *kai-kāṟ-piḍippu,* பெ.(n.) 1. கைகால் அசையமுடியாமல்செய்யும்ஊதை(வாத)நோய்; a kind of arthritis marked by inability to stretch or bend the joints due to stiffening of the limbs (சா.அக.).

[கை + கால் + பிடிப்பு.]

கைகாற்றிமிர் *kai-kāṟṟimir,* பெ.(n.) கைகால்களில் ஏற்படும் திமிர்; numbness of the limbs (சா.அக.).

[கை + கால் + திமிர்.]

கைகீழ் *kai-kīḻ,* பெ.(n.) கையமைச்சல்; dependency, subordination as of servant.

[கை + கீழ்.]

கைக்குத்தலரிசி *kai-kuttal-ariśi,* பெ.(n.) கையால் குத்தியமுனை முறியாத அரிசி; rice obtained by hand pounding.

[கை + குத்தல் + அரிசி.]

நெல்லை ஆலையில் இட்டு அரைத்து அரிசியாக்காமல் உரலிலிட்டு உலக்கையால் குத்தி எடுக்கும் அரிசி.

கைகுலுக்கு—தல் *kai-kulukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) மகிழ்ச்சிக் குறியாக ஒருவர் கையை ஒருவர் பிடித்து அசைத்தல்; to shake hands.

[கை + குலுக்கு-.]

கைகுவி[1]—த்தல் *kai-kuvi-,* 4 செ.குன்றாவி. (v.t.) கைகூப்புதல்; to greet with one's palms joined together in front of the chest.

மறுவ. கைகூப்பு; கைமுகிழ்.

[கை + குவி-]

கைகுவி[2]—த்தல் *kai-kuvi-,* 4 செ.கு.வி.(v.i.) கொம்மை கொட்டுதல் (யாழ்.அக.); to clap hands and dance.

[கை + குவி-.]

கைகுளிர *kai-kulira,* கு.வி.எ (adv.) தாராளமாய்; liberally, freely. *கைகுளிரக் கொடுத்தான்.*

[கை + குளிர.]

கைகுறண்டு—தல் *kai-kurandu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. வலிப்பு நோயினால் கை மடங்குதல் (வின்.); to be affected by spasms in the hands; to be cramped in the hands. 2. இவறத் (கஞ்சத்) தனமாயிருத்தல்; to be stingy, parsimonious, close-fisted.

[கை + குறண்டு-.]

கைகுறுகிநில்—தல்(நிற்றல்) *kai-kurugi-nil-,* ***கைகட்டிநில்—தல்(நிற்றல்)*** பார்க்க; see *kaikatti-nil-.*

[கை + குறுகி + நில்-.]

கைகூசு—தல் *kai-kūśu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. அச்சத்தால் அல்லது வெட்கத்தால் பின்னடைதல் (வின்.); to shrink, draw back, shrink out of fear or reserve. 2. இவறன்மை(கஞ்சத்தனம்) கொள்ளுதல்; to be stingy, parsimonious.

[கை + கூசு-.]

கைகூட்டு—தல் *kai-kūttu-,* 5 செ.குன்றாவி.(v.t.) ***கைகூப்பு*** பார்க்க; see *kai-kūppu.* *"வணங்கித் தன் கை கூட்டினளாகி" (பெருங்.வத்தவ.13:34:35).*

[கை + கூட்டு-.]

கைகூடு[1]—தல் *kai-kūdu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. எடுத்த பணியில் வெற்றியடைதல்; to succeed, prosper. *காரியங் கைகூடிற்று.*

க. கெய்கூடு.

[கை + கூடு-.]

கைகூடு[2]—தல் *kai-kūdu-,* 5 செ.கு.வி.(v.i.) கிட்டுதல்; to approach, draw near. *"கடுங்களிறு கண்கனலக் கைகூடி" (பு.வெ.7:12).*

[கை + கூடு-.]

கைகூப்பி *kai-kūppi,* பெ.(n.) சிப்பி; bi-value shell (சா.அக.).

மறுவ. கும்பிடுகிளிஞ்சல்.

[கை + கூப்பி.]

கைகூப்பியதுபோன்றவடிவம் பெற்றமையால் இப் பெயர் பெற்றிருக்கலாம்.

கைகூப்பு[1]—தல் *kai-kūppu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கையைக் குவித்துக் கும்பிடுதல் (சூடா.); to worship, adore, as by raising joined hands (செ.அக.). 2. கொப்பி கொட்டல்; to clap hands in kummi dance.

ம. கைகூப்புக.

[கை + கூப்பு-.]

கைகூப்பு[2]—தல் *kai-kūppu-,* 5 செ.கு.வி.(v.i.) ***கைகுவி—தல்*** (யாழ்.அக.) பார்க்க; see *kai-kuvi-* (செ.அக.).

[கை + கூப்பு-.]

கைகூப்பு[3] *kai-kūppu,* பெ.(n.) 1. கைகுவித்து வணங்குகை; worshipping with joined hands. *"எண் கைகூப்புச் செய்கையே" (திவ்.திருவாய். 4,3:2).* 2. அடிமுதல் கூப்பிய கைவரையுள்ள அளவு (வின்.); distance from the feet to the tip of the fingers of the hands joined and raised above the head.

[கை + கூப்பு.]

கைகேசி[1] *kaikēśi* பெ.(n.) கரிசலாங்கண்ணி; eclipse plant (சா.அக.).

[கை + (கசி)) கேசி.]

கைகேசி[2] *kaikēśi,* பெ.(n.) கேகயவரசன் மகளும் தசரதன் மனைவியருள் ஒருத்தியும் பரதன் தாயுமானவள்; daughter of the king of *Kēgaya*, one of the wife of Dasarada and mother of Bharata.

"உனைப்பயந்த கைகேசி தன்சொற் கேட்டு" (திவ்.பெருமாள்.9:1).

[கேகயன் → கைகேசி.]

கைகேசி³ *kaikēši,* பெ.(n.) கையாந்தகரை; a herb.

மறுவ. கைவீசி.

[கைவீசி – கைகேசி.]

கைகேயி *kaikeyi,* பெ.(n.) ***கைகேசி²*** பார்க்க; see *kaikēši. "கைகேயி நினைந்த கருத்திதுவோ". (கம்பரா.பிராட்டிகளங்.15).*

கைகொட்டிச்சிரி–த்தல் *kai-kotti-ciri-,* 4 செ.கு.வி. (v.i.) ஏளனமாய்ச் சிரித்தல்; to laugh derisively.

ம. கைகொட்டிச் சிரிக்குக.

[கை + கொட்டி + சிரி–.]

கைகொட்டு¹–தல் *kai-kottu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கைகளைத் தட்டுதல்; to clap the hands, as in ridicule or applause. *"கைகட்டி வாய்பொத்திநிற்பாரைக் கண்டே கைகொட்டிச் சிரிக்கின்றீர்" (அருட்பா. VI. உறுதி.9).*

ம. கைகொட்டுக; **க.** கெய்கட்டு.

[கை + கொட்டு–.]

கைகொட்டு²–தல் *kai-kottu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. உள்ளங்கைகள் இரண்டை ஒன்றோடொன்று சேருமாறு அடித்து ஒலி உண்டாக்குதல்; to clap; applause by clapping the hands. 2. எள்ளி நகையாடுதல்; to ridicule, laugh at derisively.

ம. கைகொட்டுக.

[கை + கொட்டு–.]

கைகொடு¹–த்தல் *kai-kodu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. உதவிசெய்தல்; to lend a hand in aid or succour, render assistance. *"உற்றுழியுங் கைகொடுக்கும்" (நீதிநெறி.2).* 2. ***கைலாகுகொடு–த்தல்*** பார்க்க; see *kailāgu-kodu-. "விடையார்க்குங் கைகொடுக்குந் தொழில்பூண்டான்" (குற்றா.தல. யானைபூசித்த. 18:40).*

ம. கைகொடுக்குக; **க.** கெய்கொடு.

[கை + கொடு–.]

கைகொடு²–த்தல் *kai-kodu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ***கைகுலுக்கு–தல்*** (யாழ்.அக.) பார்க்க; see *kai-kulukku-.* 2. கையடித்து உறுதி கூறுதல்; to strike hands as in concluding a bargain.

ம. கைகொடுக்குக.

[கை + கொடு–.]

கைகொடு³–த்தல் *kai-kodu-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஏமாற்றுதல்; to deceive.

மறுவ. கடுக்காய்கொடு.

க. கெய்கொடு.

[கை + கொடு–.]

கைகோ–த்தல் *kai-kō-,* 4 செ.கு.வி. (v.i.) 1. தோளோடு தோள் பின்னுதல்; to take another's arm, to be arm to arm. 2. கைபிணைதல் (சிலப்.5:70, உரை); to clasp one another's hands, join hands. 3. நட்புச்செய்தல்; to make friends with. *"வஞ்சகக் காரர்கள் கைகோவாமல் நற்குணத்தார் கைகோத்து நான்றிரிவது" (தாயு. எந்நாட். அன்பர்நெறி, 2).* 4. சண்டைபிடித்தல் (உ.வ.); to start fighting, to come to blows.

[கை + கோ–.]

கைகோட்சேனாதிபதி *kaikōtcēnādipadi,* பெ.(n.) அரசரின் மெய்காவற்படைத் தலைவர்; chief of the bodyguard unit of the king. *"திருநெல்வேலிகைகோட் சேனாதிபதிகளோம்" (தெ.இ.க. தொ.5 க.417).*

[கைகோள் + சேனை + அதிபதி.]

கைகோத்தாடு–தல் *kai-kōttādu-,* 5 செ.கு.வி. (v.i.) குரவையாடுதல்; to dance the rural dance of females.

[கைகோத்து + ஆடு–.]

கைகோர்–த்தல் *kaikōr-,* 4 செ.கு.வி. (v.i.) ***கைகோ–த்தல்*** பார்க்க; see *kai-kō-.*

[கைகோ → கைகோர்–த்தல்.]

கைகோலு–தல் *kai-kōlu-,* 5 செ.கு.வி. (vi) 1. முயலுதல்; to make effort, to attempt. 2. தொடங்குதல் (இ.வ.); to make a beginning.

[கை + கோல் – கைகோல் → கைகோலு.]

கைகோலு²–தல் *kai-kōlu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. சூளுரைத்தல், உறுதியேற்றல்; to resolve, determine, to swear. *"கைகோலிஞாலமளந்து" (திவ்.இயற்.2.47).* 2. ***கைகூப்பு*** பார்க்க; see *kai-kūppu.*

[கை + கோலு–.]

கைகோவை *kai-kōvai,* பெ.(n.) பொற்கொல்லர் தொழிலினொன்று (யாழ்.அக.); a process in goldsmith craft.

[கை + கோவை.]

கைகோள் *kai-kōl,* பெ.(n.) 1. தலைவியரின் களவு கற்பொழுக்கங்கள் (தொல்.பொருள்.498, உரை); con-

duct of lovers, comprising of clandestine intercourse as well as subsequent wedding life (Akap.). 2. சோரப் புணர்ச்சி; illicit intercourse with a female (சா.அக.).

[கை +கோள்.]

கைங்கரியம் *kainkariyam,* பெ.(n.) பணிவிடை; service, employment of a servant.

Skt. kainkarya.

கைச்சங்கம் *kai-c-cangam,* பெ.(n.) நாகரவண்டு, நத்தை (யாழ்.அக); snail.

[கை + சங்கம்.]

கைச்சங்கிலி *kai-c-cangili* பெ.(n.) கைவிலங்கு; handcuff, chain, a shackle.

ம. கைச்சங்ஙல; க. கைகோள.

[கை + சங்கிலி.]

கைச்சட்டம் *kai-c-cattam,* பெ.(n.) கூரையின் குறுக்குச் சட்டம் (வின்.); cross piece for rafters.

மறுவ. கைவிட்டம்.

[கை + சட்டம்.]

கைச்சட்டை *kai-c-cattai,* பெ.(n.) 1. அரைச்சட்டை; short-sleeved shirt, bodice. 2. கையுறை; gloves.

[கை + சட்டை.]

கைச்சம் *kaiccam,* பெ.(n.) ஆணை; order. *"இப்பரிசு கைச்சம் செய்தோம் சபையோம்"(SII.XIV.78-4 p.50).*

[கை → கைச்சம்.]

கைச்சம்பிரதாயம் *kaiccambiradāyam,* பெ.(n.) கைச்சித்திரம் (யாழ்.அக.); dexterity of hand, skill in manual labour.

[கை + (வ.) சம்பிரதாயம்.]

கைச்சரக்கு *kai-c-carakku,* பெ.(n.) கற்பித்துக் கூறுவது, இட்டுக்கட்டிச் சொல்வது; fabricated reports, exaggerations. நடந்ததைக் கூறாமல் கைச்சரக்கைச் சேர்த்துக் கதைவிடலாமா? (உ.வ.).

[கை + சரக்கு.]

கைச்சரசம் *kai-c-carašam,* பெ.(n.) 1. ஆண் பெண்ணைத் தொட்டு விளையாடும் விளையாட்டு; wanton sport, dallying. 2. கைச்சேட்டை; ungraceful gestures with the hand. 3. நகையாட்டு; joking by action. மாப்பிள்ளை என்னிடம் கைச்சரசம் வேண்டா (உ.வ.).

மறுவ. கைச்சேட்டை, கைக்குறும்பு.

[கை + சரசம்.]

கைச்சரடு[1] *kai-c-caraḍu,* பெ.(n.) ***கைச்சாடு*** (பதிற்றுப்.19, உரை) பார்க்க; see *kai-c-cāḍu.*

[கை + சரடு.]

கைச்சரி *kai-c-cari,* பெ.(n.) கைவளை; a kind of arm-ring, bracelet.

[கைச்செறி → கைச்சரி.]

காப்புக்கு மேற்பகுதியில் கையில் அணியப்படும் சரிகை என்னும் அணிகலன். இது மேலே பருத்தும் கீழே சிறுத்தும் சிறு குழாய் வடிவில் இருக்கும்; பொன்னினா லானது.

கைச்சல் *kaiccal,* பெ.(n.) 1. வெறுப்பு (யாழ்.அக.); dislike. 2. கைப்பு, கசப்பு; bitterness.

[கள் → கை → கைச்சல்.]

கைச்சவளம் *kai-c-cavalam,* பெ.(n.) குத்தீட்டி, கையீட்டி (பு.வெ.10, சிறப்பிற்.10, உரை); a kind of hand lance, spear.

[கை + சவளம். சவளம் = குத்தாயுதம்]

கைச்சற்றிராய் *kaiccarriräy,* பெ.(n.) திராய் வகைகளுளொன்று (வின்.); a kind of chickweed, as bitter, mollugo.

[கைச்சல் + திராய்.]

கைச்சற்றோடை *kaiccarrōḍai,* பெ.(n.) ***கைச்சனாரத்தை*** (வின்.) பார்க்க; see *kaiccanārattai.*

மறுவ. புளி நாரத்தை.

[கைச்சல்+ தோடை. தோடை = எலுமிச்சை, ஆரஞ்சு போன்ற காய்கள் காய்க்கும் செடிவகை. புளிப்பின் மிகுதியால் கசப்புத்தன்மை கொண்டதால் இப் பெயர் பெற்றதாம்.]

கைச்சனம் *kaiccanam,* பெ.(n.) புளிநரளை (சித்.அக.); bristly trifoliate vine.

[கய் → கை + சனம். சனம் = இனம் (வின்.).]

கைச்சனாரத்தை *kaiccanārattai,* பெ.(n.) புளிநாரத்தை (மலை.); bitter orange.

[கைச்சல் + நாரத்தை.]

கைச்சாடு *kai-c-cāḍu,* பெ.(n.) கையுறை; gloves. *தொழின் மாட்சிமைப்பட்ட கைச்சாட்டை இறுகக்கட்டி (கலித்.7, உரை).* மின்வலர் கைச்சாடின்றிப் பணிசெய்ய இயலாது (உ.வ.). 2. குத்துச் சண்டையில் கையில் அணியும் திண்ணுறை; gloves for wrestling.

மறுவ. கையுறை.

க. கெய்சீல; படு. கய்சீர.

[கை + சாடு. தோடு → தாடு → சாடு.]

கைச்சாடை *kai-c-cāḍai*, பெ.(n.) கையால் காட்டும் மனக்குறிப்பு; significant movement of hand to evoke a response or convey intention.

[கை + சாடை.]

கைச்சாத்து *kai-c-cāttu*, பெ. (n.) 1. கையெழுத்து; signature. *"தந்தைதன் தந்தைதான் வேறெழுது கைச்சாத்து"* *(பெரியபு.தடுத்தாட்.61).* 2. பொருட்பட்டி; invoice, list of goods with the vendor's signature. 3. பற்றுச்சீட்டு; receipt for land tax paid, acknowledgement of payment.

ம. கைச்சார்த்து.

[கை + சாத்து. சாற்று → சாத்து = சொல்லுகை.]

கைச்சாது *kai-c-cādu*, பெ.(n.) 1. பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு; receipt *"குண்டிகையில் இட்டு கைச்சாதுக் கொள்ள"* *(SII. VI. 57-4 p.32).*

[கை + (சாத்து) சாது (கொ.வ.).]

கைச்சாய்ப்பு *kai-c-cāyppu*, பெ.(n.) சாய்மானம் (யாழ்.அக.); back, as of a chair, anything to lean on.

[கை + சாய்ப்பு.]

கைச்சார்பு *kai-c-cārbu*, பெ.(n.) ***கைச்சாய்ப்பு*** பார்க்க; see *kai-c-cāyppu.*

[கை + சார்பு.]

கைச்சால் *kai-c-cāl*, பெ.(n.) நீரிறைக்குங் கைவாளி (வின்.); hand bucket.

[கை + சால். சால் = நீரிறைக்குங் கலம்.]

கைச்சாளை *kai-c-cāḷai*, பெ.(n.) வளாகச் சுவரில் வைக்கப்பட்டிருக்கும்பதிவின் மீதுள்ள கூரை; the roof (கட்.தொ.).

[கை + சாளை.]

கைச்சி[1] *kaicci*, பெ.(n.) கமுகு (மலை.); areca-nut palm.

கைச்சி[2] *kaicci*, பெ.(n.) 1. சிரட்டை; coconut shell, half of a dried palmyra nut. 2. ஊமற்கச்சி; snail.

[கை = சிறியது. கை → கைச்சி.]

கைச்சிட்டா *kai-c-ciṭṭā*, பெ.(n.) அன்றாடக்குறிப்பேடு (இ.வ.); rough day-book. ***கைக்குறிப்பேடு*** பார்க்க; see *kai-k-kurippēḍu.*

[கை + சிட்டா. U. ciṭṭāh > த. சிட்டா.]

கைச்சித்தி *kai-c-citti*, பெ.(n.) ***கைப்பேறு*** பார்க்க; see *kai-p-pēṟu.*

[கை + சித்தி. சித்தி = நலம், வெற்றி.]

கைச்சித்திரம் *kai-c-cittiram*, பெ.(n.) 1. தொழிற்றிறமை; dexterity of hand, skill in manual labour, in fine arts. இவருடைய கைச்சித்திரம் எண்ணி மகிழத்தக்கது (உ.வ.). 2. கைநளினம்; sleight of hand.

[கை + சித்திரம்.]

கைச்சிமிட்டு *kai-c-cimiṭṭu*, பெ.(n.) 1. கமுக்கமாக (இரகசியமாக)க் கைகாட்டுங் குறிப்பு; secret gesture or sign with the hand. 2. கைத்திறன்; sleight of hand.

[கை + சிமிட்டு. சிமிட்டு = கள்ளவேலை. சிமிழ்த்து → சிமிட்டு.]

கைச்சிறை *kai-c-ciṟai*, பெ.(n.) 1. கையகத்தது; that which is in one's hand or possession, as property. *"கைச்சிறையான வநேகமும் விழுங்கப்பட்டு"* *(திருப்பு.579).* 2. பணயமாக வைக்கப்பட்ட ஆள்; hostage.

ம. கைச்சிற; க. கெய்சிறெ.

[கை + சிறை.]

கைச்சின்னம் *kai-c-cinnam*, பெ.(n.) தேவாரம் பெற்ற சிவப்பதிகளில் ஒன்று; one of Šiva temples on which there are hymns in *Tēvāram.*

[கை + சின்னம். சின்னம் = அடையாளம்.]

இந்நாளில் இவ்வூர் கச்சனம் என வழங்கப் பெறுகிறது; நாகை மாவட்டத்தில் எட்டுக்குடிக்கருகில் உள்ளது.

கைச்சீட்டு *kai-c-ciṭṭu*, பெ.(n.) 1. கையாலெழுதிய குறிப்புச்சீட்டு; written acknowledgement, any short memorandum in writting. 2. கடன்முறி; a bond.

ம. கய்ச்சீட்டு, கைச்சீட்டு; க. கெய்காகத, கெய்சீட்டு.

[கை + சீட்டு.]

கைச்சீப்பு *kai-c-cīppu*, பெ.(n.) தோட்பட்டையெலும்பு (வின்.); scapula, shoulder blade.

ம. கைசீட்டு.

[கை + சீப்பு. சீப்பு = விலா எலும்பு (வின்.).]

கைச்சுடர் *kai-c-cuḍar*, பெ.(n.) சிறுவிளக்கு; a small lamp.

க. கெய்சொடர்.

[கை + சுடர்.]

கைச்சுத்தம் *kai-c-cuttam,* பெ.(n.) ***கைத்தூய்மை*** பார்க்க; *see kai-t-tūymai.*

[கை + சுத்தம்.]

கைச்சுத்தி *kai-c-cutti,* பெ.(n.) ***கைச்சுத்தியல்*** பார்க்க; see *kai-c-cuttiyal.*

[கை + சுத்தி.]

கைச்சுத்தியல் *kai-c-cuttiyal,* பெ.(n.) சுத்தியல்வகை; தட்டார் பயன்படுத்துஞ் சுத்தியல் வகை (C.E.M.); small hammer for working in gold.



கைச்சுத்தியல்

[கை + சுத்தி + அல். (அல் = தொழிற்பெயர் ஈறு. ஒ.நோ. பட்டியல். செதுத்தல் → செத்துதல் = அடித்தல், தாக்குதல். செத்து → (சொத்து) சுத்து.]

கைச்சுரிகை *kai-c-curigai,* பெ.(n.) உடைவாள் (சீவக. 558, உரை); dagger.

[கை + சுரிகை.]

கைச்சுருக்க *kai-c-curakka,* வி.எ.(adv.) விரைவாய்; quick, hastily. கைச்சுருக்கக் கடைக்குப் போய்வா.

[கை + சுருக்க.]

கைச்சுருக்கு[1]–தல் *kai-c-curukku-,* 3 செ.கு.வி.(v.i.) ***கைகுறுக்கு*** பார்க்க; see *kay-kuṟukku.*

[கை + சுருக்கு–.]

கைச்சுருக்கு[2] *kai-c-curukku,* பெ.(n.) 1. கைத்திறன்; expertness, dexterity of hand in any craft or excercise. 2. கையிறுக்கம்; stinginess, close fistedness.

ம. கைச்சுறுக்கு.

[கை + சுருக்கு.]

கைசுருங்கு–தல் *kai-c-curuṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) செலவு குறைதல்; to be cut down expenses.

[கை + சுருங்கு–.]

கைச்சுருள் *kai-c-curuḷ,* பெ.(n.) 1. திருமணத்தில் நாகவல்லிக்கு முன்னும் மற்றும் சில நற்செயல் நிகழ்வுகளிலும் மணமக்களுக்குக் கொடுக்கும் வெற்றிலைச்சுருள்; roll of betel leaves offered to bride and bridegroom when going to bathe on the day of marriage and on similar auspicious occasions. 2. மணமக்களுக்குத் தம்பலத்தோடு (தாம்பூலத்தோடு) கொடுக்கும் பணம்; a wedding gift of money presented with roll of betel leaves.

மறுவ. இலைப்பணம், இலைவயம், கும்பிடுபணம்.

[கை + சுருள்.]

கையில் கொடுக்கும் வெற்றிலைச் சுருளுக்கு வழங்கிய இப்பெயர் அச்சுருளோடு கொடுக்கும் பணத்திற்கும் வழங்கியது. இலைக்குள் [வெற்றிலை] வைத்துத் தந்தது இலைவயம் – இலவசம் ஆயிற்று.

கைச்சுவடி *kai-c-cuvaḍi,* பெ.(n.) ***கையேடு*** பார்க்க; see *kai-y-ēḍu.*

மறுவ. கையேடு.

[கை + சுவடி.]

கைச்சுழி *kai-c-cuḷi,* பெ.(n.) விதைக்கும்போது விதைகள் ஒன்றுகூடி விழுகை (யாழ்ப்.); falling in handfuls, as seeds in sowing.

[கை + சுழி.]

கைச்சுழிப்படு–தல் *kai-c-cuḷi-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) சரியாக விதையாமையால் பயிர் ஓரிடத்துக் குவிந்துவளர்தல் (யாழ்ப்.); to grow in clumps, as grain sown by untrained hands.

[கைச்சுழி + படு–.]

கைச்சுழியா–தல் *kai-c-cuḷi-y-ā-,* 6 செ.கு.வி.(v.i.) ***கைச்சுழிப்படு–தல்,*** (யாழ்ப்.) பார்க்க; see *kai-c-cuḷi-p-paḍu-.*

[கை + சுழி + ஆ–.]

கைச்சுறுக்கு *kai-c-cuṟukku,* பெ.(n.) ***கைச்சுருக்கு[2]*** பார்க்க; see *kai-c-curukku.*

[கை + சுறுக்கு.]

கைச்சூடு[1] *kai-c-cūḍu,* பெ.(n.) 1. கையைத் தேய்த்தல், தீக்காய்தல் முதலியவற்றால் உண்டாகுஞ் சூடு (வின்.); heat produced in the hand by friction or by holding it to the fire. 2. கை பொறுக்கக்கூடிய சூடு; bearable heat. கைச்சூடு பதமாக எண்ணெய் காய்ச்சித் தலைக்குத் தேய் (உ.வ.).

ம. கைச்சூடு.

[கை + சூடு.]

கைச்சூடு[2] *kai-c-cūḍu,* பெ.(n.) கதிரறுப்பவர் களுக்குக் கொடுக்கும் அரிக்கட்டு (யாழ்ப்.); sheaf given to reapers.

[கை + சூடு. சூடு - விளைந்த கதிர்.]

கைச்செட்டு *kai-c-ceṭṭu,* பெ.(n.) 1. சிக்கனம் (யாழ். அக.); thrift, economy. புதிதாக வந்த மருமகளின் கைச்செட்டு மாமியாருக்கு மிகவும் பிடித்துவிட்டது (உ.வ.). 2. சில்லறை வணிகம் (யாழ். அக.); retail trading.

[கை + செட்டு.]

கைச்செட்டை *kai-c-ceṭṭai,* பெ.(n.) ***கைச்சீப்பு*** பார்க்க; see *kai-c-cīppu.*

[கை + செட்டை.]

கைச்செய்கை *kai-c-ceygai,* பெ.(n.) வயல் முதலியவற்றில் செய்யுங் கைவேலை (வின்.); manual labour in field or garden.

[கை + செய்கை.]

கைச்செலவு *kai-c-celavu,* பெ.(n.) 1. சொந்தச் செலவு; personal expense. கைச்செலவுக்குக்கூடக் காசில்லை (உ.வ.). 2. சில்லறைச்செலவு; sundry expenses. கைச்செலவுக்கு இவ்வளவுபணமா? (உ.வ.).

ம. கைச்செலவு; **க.** கைகாசு; **பட.** கைசெலவு.

[கை + செலவு.]

கைச்செறி *kai-c-ceṟi,* பெ.(n.) 1. தோலினாற் செய்த கையுறை; gloves made of leather. *"காற்செறி நாணெறிகைச்செறிகட்டி"* (*பெரியபு. கண்ணப்ப. 60*). 2. கையில் அணியும் அணிகலன்; ornament worn on hand.

[கை + செறி.]

கைச்சேட்டை *kai-c-cēṭṭai,* பெ.(n.) கையாற் செய்யுங் குறும்புச் செயல்; mischievous acts of the hand.

[கை + சேட்டை.]

கைச்சைகை *kai-c-caigai,* பெ.(n.) 1. கையால்காட்டுங் குறிப்பு; sign made by the hand. 2. கையொப்பம் (இ.வ.); signature.

மறுவ. கைச்சாடை.

க. கெய்மாட, கெய்சன்னெ; **பட.** கைசன்னிய.

[கை + சைகை.]

கைச்சொடுக்கு[1] *kai-c-coḍukku,* பெ.(n.) கைப்பெருவிரலையும் நடுவிரலையும் ஒன்றோடொன்று உராய்ந்து உண்டாக்கும் ஓசை; a snap with the fingers.

க. கெய்கொடுகு.

[கை + சொடுக்கு.]

கைச்சொடுக்கு[2]**–தல்** *kai-c-coḍukku-,* 5 செ. குன்றாவி. (v.t.) விரல்களை நெட்டியெடுத்தல்; to snap with the fingers.

க. கெய்கொடுங்கு

[கை + சொடுக்கு.]

கைச்சோர்வு *kai-c-cōrvu,* பெ.(n.) 1. இழுப்புநோய் போன்றவற்றால் கை உணர்வற்றுப் போதல்; loss of sensation in hand or the arm though paralysis. 2. வன்முறைத் தாக்குதலால் கைதளர்ந்து போதல்; disablement effected by violence (சா.அக.).

[கை + சோர்வு.]

கைச்சோரம் *kai-c-cōram,* பெ.(n.) ***கச்சோரம்*** (தைலவ.தைல.77) பார்க்க; see *kaccōram.*

[கை + சோரம்.]

கைச்சோலம்[1] *kai-c-cōlam,* பெ.(n.) கிச்சிலிக் கிழங்கு; an aromatic root (சா.அக.).

[கை - சிறிய. கை + சோலம். சுல்லம் → சோலம்.]

கைச்சோலம்[2] *kai-c-cōlam,* பெ.(n.) ஒருவகை ஏனம்; a kind of metal vessel. *"வெண்கலக் கைச் சோலமொன்று"* (*S.I.I.II.408,9*).

[கை - சிறிய. கை + சோலம்.]

கைச்சோலம்[3] *kaiccōlam,* பெ.(n.) இறைவன் வழிபாட்டிற்குரிய ஏனங்களுள் ஒன்று; a vessel for worship. *"மேற்படி நிறை கைச்சோலம் ஒன்று"* (*SII.V.521-7, p.212*).

[கச்சோலம் → கைச்சோலம்.]

கைசகர் *kai-šagar,* பெ.(n.) வன்னியர் (அக.நி.); persons of the *Vanniya* caste.

[கை + சகர். சாகு - வேளாண்மை, உழவுத்தொழில். சாகு → சாகர் → சகர்.]

கைசருவு–தல் *kai-šaruvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. எதிர்த்தல் (யாழ்ப்.); to attack, assault. 2. திருடுதல்; to pilfer, steal. 3. தகாதமுறையில் பெண்களிடம் நடந்துகொள்ளுதல் (இ.வ.); to commit indecent assault, as on a woman. கைசருவிய இவனுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் (உ.வ.).

[கை + சருவு-.]

கைசலி–த்தல் *kai-šali-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கையோய்தல்; to be tired, exhausted, wearied, as the arms in swimming carrying a burden, etc. *"வேதாவும் கைசலித்து விட்டானே" (பட்டினத். திருப்பா.பொது.ப.172).* 2. வறுமையுறுதல் ; to be reduced to poverty, to be in straitened circumstances.

[கை + சலி–.]

கைசளை–த்தல் *kai-caḷai-,* 4 செ.கு.வி.(v.i.) ***கைசலி–த்தல்.*** பார்க்க; see *kai-šali-.*

[கை + சளை–.]

கைசா *kaišā,* பெ.(n.) இரு கழஞ்சு கொண்ட நிறை (கணக்கதி. 7:8).; a weight = 2 *kaḻañju.*

ம. கைசு (¼ பலம்)

Mar. kaich

[கஃசு → கைசா (கொ.வ.).]

கைசிகம் *kaišigam,* பெ.(n.) 1. பண்வகையுளொன்று (பரத.இராக.56); a musical mode. 2. இசை; music.

[கைசெய் → கைசிகம்]

கைசியம் *kaišiyam,* பெ.(n.) மயிர் (யாழ்.அக.); hair.

[கேசம் → கைசியம்.]

கைசிகன் *kaišigam,* பெ.(n.) நம்பாடுவான் (திவ்.திருமாலை.33, வியா.ப.202); the devotee Nampāduvāṉ who sang in the kaišiga melody.

[கைசிகம் → கைசிகன்.]

கைசு *kaišu,* பெ.(n.) காற்பலம்; one-fourth of a palam. *"சர்க்கரையமுது போது கைசாக" (S.I.I. II.70:14).*

[கஃசு → கைசு (கொ.வ.).]

கைசெய்[1]–தல் *kai-šey-,* 1 செ.கு.வி.(v.i.) 1. தொழில் செய்தல்; to do manual labour, work with one's hands. *"நும்மெய் வருத்திக் கைசெய் துய்ம்மினோ" (திவ்.திருவாய்.3,9:6).* 2. அழகு படுத்துதல்; to adorn, decorate, trick out. *"மானிட மகளிர்க்கு.... கைசெய்து பிறப்பிக்கும் அழகு" (திருமுருகு.17,உரை).* 3. உதவி செய்தல் (ஈடு.4,8:7); to assist.

பட. கைமாடு.

[கை + செய்–.]

கைசெய்[2]–தல் *kai-cey-,* 1 செ.குன்றாவி.(v.t.) 1. நடத்துதல்; to conduct. *"பாரதங் கைசெய்த" (திவ்.பெரியாழ்.2,1:1).* 2. பழக்குதல்; to domesticate.

Fin. kesy (to tame, domesticate)

[கை + செய்–.]

கைசெய்[3]–தல் *kai-cey-,* 2 செ.கு.வி.(v.i.) அறுவை மருத்துவம் செய்தல் (நாஞ்.); to make a surgical operation.

[கை + செய்–.]

கைசேர்–தல் *kai-šēr-,* 2 செ.குன்றாவி.(v.t.) ஒன்று சேர்தல்; to join (the hand) (ஒரு) கை சேர்ந்த பின் ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது.

க. கெய்சேரு.

[கை + சேர்–.]

கைசோர்–தல் *kai-šōr-,* 2 செ.கு.வி.(v.i.) 1. கைதளர்ந்து விழுதல்; to be loosened from the hand, to fell. 2. ***கைசலி*** பார்க்க; see *kai-šali-.*

க. கெய்சோல்.

[கை + சோர்–.]

கைசோர்ந்துபோ–தல் *kai-šōrndu-pō-,* 8 செ.கு.வி. (v.i.) 1. கைவிட்டுப் போதல்; to slip out of one's hands; to be lost. 2 வறுமைநிலை அடைதல்; to become poor.

[கை + சோர்ந்து + போ–.]

கைஞ்ஞானம் *kai-ñ-ñāṉam,* பெ.(n.) சிற்றறிவு (அற்ப) அறிவு; shallow, superficial knowledge. *"கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காரறி வாளர்" (நாலடி.311).*

[கை + ஞானம். கை = சிறிய.]

கைத்தகம் *kai-t-tagam,* பெ.(n.) தாழை; fragrant screw-pine. 2. எட்டி; nux-vomica (சா.அக.).

[கை (கசப்பு) → கைத்தகம்.]

கைத்தகோடரம் *kaitta-kōḍaram,* பெ.(n.) எட்டி (மலை.) nux-vomica.

[கைத்த (கசப்பான) + கோடரம்.]

கைத்தட்டு *kai-t-taṭṭu,* பெ.(n.) குவளை அல்லது ஏனம்; a small cup or basin.

க. கெய்பட்லு.

[கை + தட்டு.]

கைத்தடி[1] *kai-t-taḍi,* பெ.(n.) 1. ஊன்றுகோல்; walking-stick. *"ஒரு கைத்தடி கொண்டடிக்கவோ வலியிலேன்" (அருட்பா.5.தெய்வமணி.31).* 2. சிறுதடி; short stick.

க. கயிகம்ப, கெய்கோலு; து. கயிகம்ப; பட. கைதடி.

[கை + தடி.]

கைத்தடி[2] *kai-t-taḍi,* பெ.(n.) 1. சொத்துரிமைப் பங்கீட்டு ஆவணம்; partition deed. 2. தற்குறிக்கீற்று; mark of signature made by an illiterate person.

ம. கைத்தடி.

[கை + தடி. கைத்தடி = ஊன்றுகோல்போல் பாதுகாப்பான ஆவணம் அல்லது கையெழுத்து.]

கைத்தடி[3] *kai-t-taḍi,* பெ.(n.) கையாள்; man employed to execute one's unlawful wishes. அவருக்குக் கைத்தடியாக இருப்பதில் இவனுக்கு வெட்கமில்லையே!

[கை + தடி.]

கையுடன் இருக்கும் தடியைப்போல் ஒருவன் பின் சென்றொழுகும் தன்மை கொண்டோன் கைத்தடி எனப்பட்டான்.

கைத்தடிப்படி *kai-t-taḍippaḍi,* பெ.(n.) 1. ***கையிழப்பு*** பார்க்க; see *kai-y-iḻappu.* 2. ஊன்றுகோல்; crutch.

து. கைத்தண்டா.

கைத்தண்டம் *kai-t-taṇḍam,* பெ.(n.) 1. ***கையிழப்பு*** பார்க்க; see *kai-y-iḻappu.* 2. ஊன்றுகோல்; crutch.

து. கைத்தண்டா.

[கை + தண்டம்.]

கைத்தண்டலம் *kai-t-taṇḍalam,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[கை (சிறு) + தண்டலம்.]

கைத்தண்டு *kai-t-taṇḍu,* பெ.(n.) 1. கைத்தடி; hand stick. 2. ஒக(யோக)த் தண்டு; resting rod used by ascetics in yoga.

[கை + தண்டு.]

கைத்தப்பு *kai-t-tappu,* பெ.(n.) ***கைக்குற்றம்*** பார்க்க; see *kai-k-kuṟṟam.*

ம. கைத்தப்பு; க. கெய்தப்பு.

[கை + தப்பு.]

கைத்தபழம் *kaitta-paḻam,* பெ.(n.) சோற்றுக் கற்றாழைப் பால்; the juice of aloe-pulp (சா.அக.).

[கை → கைத்த + பழம்.]

கைத்தரவு *kai-t-taravu,* பெ.(n.) வரவு வைத்த கைச்சாத்து. *"கார்தோறும் குடுத்து இவர் கையால் தரவு கொள்வோமாகவும்" (தெ.இ.க. தொ.5 க.415).*

[கை + தரவு.]

கைத்தராசு *kai-t-tarāsu,* பெ.(n.) சிறு நிறைகோல் (தராசு); small balance used for weighing precious metals and stones.

[கை + தராசு.]

கைத்தல்[1] *kaittal,* தொ.பெ.(vbl.n.) 1. கசத்தல்; tasting bitter. 2. களிம்பேறல்; forming verdigris (சா.அக.). 3. அலைத்தல்; torment. 4. சினத்தல்; to get angry. 5. வெறுத்தல்; to hate.

[கை → கைத்தல்.]

கைத்தல்[2] *kaittal,* பெ.(n.) அணி செய்தல் (அலங்கரித்தல்); to decorate.

[கை → கைத்தல். கை = அழகு.]

கைத்தல்[3] *kaittal,* பெ.(n.) கறிவகை; a kind of vegetable curry. "கரியல் பொடித்தூவல் கைத்தல்" (சரவண.பணவிடு.,274).

[கை → கைத்தல்.]

கைத்தலம்[1] *kai-t-talam,* பெ.(n.) உள்ளங்கைப் பகுதி; palm of the hand, metacarpus. *"கைத்தலமொத்தா" (பெருங்.வத்தவ. 14:71).*



கைத்தலமும் முக அளவும்

க. கெய்தள

[கை + தலம்.]

கைத்தலம்[2] *kai-t-talam,* பெ.(n.) ***கைத்தலைப்பூண்டு*** பார்க்க; see *kaittalai-p-pūṇḍu.*

[கைத்தலை → கைத்தலம்.]

கைத்தலம்பால் *kai-t-talam-pāl,* பெ.(n.) கன்றில்லாமல் கறக்கும் ஆவின் பால்; cow's milk drawn without the aid of a calf (சா.அக.).

ம. கைத்தலம்.

[கை + தலம் + பால்.]

கைத்தலைப்பூண்டு *kai-t-talai-p-pūṇḍu,* பெ.(n.) சிற்றெழுத்தாணிப் பூடு (சித்.அக.); a variety of style plant.

[கைத்தலை + பூண்டு.]

கைத்தவறு *kai-t-tavaṟu,* பெ.(n.) ***கைக்குற்றம்*** பார்க்க; see *kai-k-kuṟṟam.*

க. கெய்தப்பு

[கை + தவறு.]

கைத்தளம் *kai-t-taḷam,* பெ.(n.) கேடய வகை (சீவக.1561, உரை.); a kind of shield.

[கை + தளம்.]

கைத்தளை *kai-t-taḷai,* பெ.(n.) இருகைகளையும் பிணைத்துக் கட்டும்படியாக அமைந்த, சிறு தொடரி (சங்கிலி)யால் இணைக்கப்பட்ட, மாழையாலான இருவட்டங்களைக் கொண்ட கருவி; handcuff. *"கைத்தளை நீக்கி யென்முன் காட்டு" (பட்டினத்.பொது.42).*

மறுவ. கைவிலங்கு.

ம. கைத்தள.

[கை + தளை.]

கைத்தா *kaittā,* பெ.(n.) ***காட்டாமணக்கு*** (மலை.) பார்க்க; see *kāṭṭāmaṇakku.*

[கை + தாள் – கைத்தாள் → கைத்தா.]

கைத்தாக்கு *kai-t-tākku,* பெ.(n.) 1. கையினால் கொடுத்த குத்து; a blow dealt with the hand. 2. கையினால் குத்துகை; pounding with the hand as rice (சா.அக.).

[கை + தாக்கு.]

கைத்தாங்கல் *kai-t-tāṅgal,* பெ.(n.) கையால் தாங்கி நிற்கை; supporting a person or thing by the arms. மருத்துவமனையிலிருந்து ஒரு நோயாளியைக் கைத்தாங்கலாக அழைத்து வந்தனர் (இ.வ.).

ம. கைத்தாங்ஙு.

[கை + தாங்கல்.]

கைத்தாமணக்கு *kaittāmaṇakku,* பெ.(n.) காட்டாமணி (சித்.அக.); Malabar nut.

[கைத்த + ஆமணக்கு.]

கைத்தாய் *kai-t-tāy,* பெ.(n.) 1. தூக்கி வளர்த்த தாய்; nurse. 2. செவிலித்தாய்; wet-nurse. 3. வளர்ப்புத்தாய்; foster-mother (சா.அக.).

[கை + தாய்.]

கைத்தாயர் *kai-t-tāyar,* பெ.(n.) ***கைத்தாய்*** பார்க்க; see *kaithaay.* "ஓர் உயிரைத் தருகின்ற போதிருகைத்தாயர் தம்பால் வருகின்ற நண்பு" (திருமந்.459).

கைத்தாராளம் *kai-t-tārāḷam,* பெ.(n.) பெருந்தன்மை, வள்ளன்மை; open-handedness, liberality.

க. கெய்தொட்டது.

[கை + தாராளம்.]

கைத்தாள் *kai-t-tāḷ,* பெ.(n.) 1. திறவுகோல்; key. *"கைத்தாள் கொண்டாருந் திறந்தறிவா ரில்லை" (திருமந்.2604).* 2. கையாலிடுந் தாழ்ப்பாள்; bolt. 3. ***கைத்தாழ்*** பார்க்க; see *kai-t-taḷ.*

க.கெய்தாழு.

[கை + தாழ் → கைத்தாள்.]

கைத்தாழ் *kai-t-taḷ,* பெ.(n.) திறவுகோல்; key.

[கை + தாழ்.]

இதனைக் கைத்தால் என்பது கொச்சைவழக்கு.

கைத்தாளம் *kai-t-tāḷam,* பெ.(n.) 1. தாளக்கருவி; cymbals. *"கொக்கரை கைத்தாள மொந்தை" (தேவா.965:7).* 2. கையாற் போடுந் தாளம்; beating time with the hand. *"செத்தவ ரெழுவ ரென்று கைத்தாளம் போடு" (அருட்பா.vi, நாமாவ.161).*



கைத்தாளம்

ம.கைத்தாளம்; க., து. கைதாள; தெ.கைதாளமு.

[கை + தாளம்.]

கைத்திட்டம் *kai-t-tiṭṭam,* பெ.(n.) 1. கைமதிப்பு; rough estimation of the weight or measure of a thing by the hand. கைத்திட்டமாக உப்புப்போடு (உ.வ.). 2. அறுதியிட்ட கையிருப்புத் தொகை; balance struck in accounts, balance in hand.

[கை + திட்டம்.]

கைத்திண்டு *kai-t-tiṇḍu,* பெ.(n.) கைக்கு வைத்துக் கொள்ளும் சாய்வுத் திண்டு; a pillow to lean on.

[கை + திண்டு.]

கைத்திரி *kai-t-tiri,* பெ.(n.) இடக்கை என்னுந் தோற்கருவி; a small drum. *"குழையுடற் றளைவிரி கைத்திரி கறங்க" (கல்லா.8:12).*

[கை + திரி.]

கைத்திறன் *kai-t-tiṟaṉ,* பெ.(n.) கைக்குணம்; the virtue or efficacy of the hand. 2. பயிற்சி; practice. 3. பட்டறிவு; experience.

து. கய்யெட்டெ.

[கை + திறன்.]

கைத்தீட்டு[1] *kai-t-tīṭṭu,* பெ.(n.) ஆவணம் (T.A.S.); document, deed, record of gift. *மணற்குடி யூரோம் கைத்தீட்டு.*

ம. கைத்தீட்டு.

[கை + (தீற்று) தீட்டு.]

கைத்தீட்டு[2] *kai-t-tīṭṭu,* பெ.(n.) நேரில் கையெழுத்திட்டு எழுதிக் கொடுத்த உறுதிச் சீட்டு. *"பஞ்சவந் பிரமராயர்க்கு நாங்கள் கைத்தீட்டு இட்டுக் குடுத்த" (ஆவ.10-17-2 பக்.42-4)* (கி.பி.1072).

[கை + தீட்டு.]

கைத்தீபம் *kai-t-tībam,* பெ.(n.) 1. ***கைத்தீவட்டி*** (பிங்.) பார்க்க; see *kai-t-tīvaṭṭi* 2. கைவிளக்கு; small, hand-lamp. *கைவிளக்கை வைத்துக்கொண்டு கிணற்றில் விழுவார்களா? (பழ.).*

க. கெய்தீவிகெ.

[கை + தீபம்.]

கைத்தீவட்டி *kai-t-tīvaṭṭi,* பெ.(n.) சிறு தீவட்டி; small torch.

[கை + தீவட்டி.]

கைத்தீவர்த்தி *kai-t-tīvartti,* பெ.(n.) கைத்தீவட்டி (வின்.) பார்க்க; see *kai-t-tīvaṭṭi.*

[கை + தீவர்த்தி.]

கைத்தீற்றி *kai-t-tīṟṟi,* பெ.(n.) கையால் ஊட்டும் தீனி; food given to calves, lambs, kids, etc. by hand, food for infants.

மறுவ. கைத்தீனி.

ம. கைத்தீற்றி.

[கை + தீற்றி.]

கைத்தீன் *kai-t-tīṉ,* பெ.(n.) கையில் வைத்து ஊட்டும் உணவு (வின்.); food given to calves, lambs, kids, etc., by hand, food for infants.

ம. கைத்தீற்றி.

[கை + தீன்.]

கைத்து[1] *kaittu,* பெ.(n.) செல்வம்; lit., that which is in hand, gold, riches, wealth. *"கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்மின்" (நாலடி.19).*

[கையகத்தது → கைத்து.]

கைத்து[2] *kaittu,* பெ.(n.) வெறுப்பு (சூடா.); abhorrence.

[கை (தவறு) கசப்பு → கைத்து.]

கைத்துடுக்கு *kai-t-tuḍukku,* பெ.(n.) கையால் அடித்தல் போன்று செய்யுந் தீய பழக்கம்; bad habit of the hand, as fighting, pilfering etc. கைத்துடுக்கால் சீரழிபவர்கள் மிகுதி (உ.வ.).

க. கெய்துடுகு.

[கை + துடுக்கு.]

கைத்துடுப்பு *kai-t-tuḍuppu,* பெ.(n.) 1. கூழ் முதலியன துழாவுங் கருவி ; small ladle used in stirring liquid food. *"கைத்துடுப்பால் .... துழாவித் துழாவிக் கொள்ளீரே" (கலிங்.537).* 2. படகு வலிக்குஞ் சிறிய தண்டு; small oar.

[கை + துடுப்பு.]

கைத்துண்டு *kai-t-tuṇḍu,* பெ.(n.) 1. கைக்குட்டை; hand kerchief. 2. கைமரம்; pair of rafters framed together with a joint at one end.

ம. கைத்துகில்.

[கை + துண்டு.]

கைத்துணிகரம் *kai-t-tuṇigaram,* பெ.(n.) ***கைத்துணிச்சல்*** பார்க்க; see *kai-t-tuṇiccal.*

[கை + துணிகரம்.]

கைத்துணிச்சல் *kai-t-tuṇccal,* பெ.(n.) துணிந்த செய்கை (இ.வ.); act of daring.

[கை + துணிச்சல்.]

கைத்துணை[1] *kai-t-tuṇai,* பெ.(n.) உதவியாள்; a helpmate.

க. கெய்குடக.

[கை + துணை.]

கைத்துணை[2] *kai-t-tuṇai,* பெ.(n.) உதவி, துணைமை; help, assistance.

க. செய்தநரவு.

[கை + துணை.]

கைத்துப்பாக்கி *kai-t-tuppākki,* பெ.(n.) ***கைத்துமுக்கி*** பார்க்க; see *kai-t-tumukki.*

மறுவ. கைத்துமிக்கி.

ம. கைத்தோக்கு.

[கை + துப்பாக்கி.]

கைத்துப்போ-தல் *kaittu-p-pō-,* 8 செ.கு.வி.(v.i.) களிம்பேறல்; forming verdigris (சா.அக.).

[கைத்து + போ-.]

கைத்துமுக்கி *kai-t-tumukki,* பெ.(n.) 1. கைத்துவக்கு, கைத்துப் பாக்கி; hand pistal.

[கை + துமுக்கி.]

கைத்துருவுமணை *kai-t-turuvu-manai,* பெ.(n.) சிறு துருவுமணை; nut scraper.

[கை + துருவு + மணை.]

கைத்துவக்கு[1] *kai-t-tuvakku,* பெ.(n.) ***கைத்துமுக்கி*** (துப்பாக்கி) பார்க்க; see *kai-t-tumukki.*

[கை + துவக்கு.]

கைத்துவக்கு[2] *kai-t-tuvakku,* பெ.(n.) சிறு தொடரி (சங்கிலி); a small chain.

[கை + துவக்கு.]

கைத்தூக்கு[2] *kai-t-tūkku,* பெ.(n.) கையினால் எடுக்கக் கூடிய ஒரு தூக்களவு; so much weight as can be lifted by hand.

[கை + தூக்கு. தூக்கு - 16 சேர் கொண்ட எடையளவு.]

கைத்தூண்[1] *kai-t-tūṇ,* பெ.(n.) சிறுதூண்; small pillar.

[கை + தூண்.]

கைத்தூண்[2] *kaittūṇ,* பெ.(n.) பிறர் கையால் உண்கை; accepting food from another's hands. *"கடவ தன்றுநின் கைத்தூண் வாழ்க்கை"* *(சிலப். 15:57).*

[கைத்து + ஊண்.]

கைத்தூய்மை *kai-t-tūimai,* பெ.(n.) 1. களவு செய்யாமை; not to cover other's property. 2. கையூட்டுப் பெறாமை; non-taking of bribes. 3. திருத்தமான கைத்தொழில்; fine workmanship.

[கை + தூய்மை.]

கைத்தேக்கு *kai-t-tēkku,* பெ.(n.) சிறுதேக்கு; fire-creeper (சா.அக.).

[கை + தேக்கு.]

கைத்தேங்காய் *kai-t-tēṅgāy,* பெ.(n.) புத்தாண்டு நாளன்று தேங்காயை உருட்டியாடும் விளையாட்டு வகை (வின்.); a new year's game in which coconuts are rolled forcibly one against another and broken.

[கை + தேங்காய்.]

கைத்தொண்டு *kai-t-toṇḍu,* பெ.(n.) 1. கையினாற் செய்யும் கோயிற் பணிவிடை; manual service in temple. *"காசுவாசியுடன் பெற்றார் கைத்தொண்டாகு மடிமையினால்"* *(பெரியபு. திருநாவுக். 260).* 2. குற்றேவல்; menial service.

மறுவ. கைப்பணி.

[கை + தொண்டு.]

கைத்தொழில் *kai-t-toḻil,* பெ.(n.) 1. கையாற் செய்யும் வேலை; manual art, industries, handicrafts. *"கைத்தொழி லமைத்தபின்"* *(பெருங். இலாவாண. 10:91).* 2. பெண்களது கைத்திறனை வெளிக் காட்டும் ஐவகைத் தொழில்; the five skilled accomplishments of women. *இலை எழுதுதல், கிள்ளல், பூத்தொடுத்தல், யாழ் மீட்டுதல் போன்றவை பெண்கள் கைத்திறன் காட்டும் ஐவகைத் தொழில்கள் எனப் பண்டைக் காலத்தில் கருதப்பட்டது*

ம. கைத்தொழில்.

[கை + தொழில்.]

கைத்தொழும்பு *kai-t-toḻumbu,* பெ.(n.) கைத் தொண்டு (யாழ்.அக.); manual service.

[கை + தொழும்பு.]

கைத்தோணி *kai-t-tōṇi,* பெ.(n.) கையினால் இயக்கும் ஒருவகை மரக்கலம்; a kind of wooden boat which is propelled by hands.

[கை + தோணி.]

கைதகம் *kaidagam,* பெ.(n.) தாழம்பூ; fragrant screw-pine (சா.அக.).

[கை → கைது → கைதகம்.]

கைதட்டிப்பண்டாரம் *kai-taṭṭi-p-paṇḍāram,* பெ.(n.) வாய் திறவாது, கைதட்டி இரந்துண்ணும் சைவப் பண்டாரம் (இ.வ.); a Śaiva mendicant who wanders about mutely, clapping hands for alms.

[கை + தட்டி + பண்டாரம்.]

கைதட்டிப்போடு-தல் *kai-taṭṭi-p-pōḍu-*, 19 செ.குன்றாவி. (v.t.) நீக்கிவிடுதல் (வின்.); to forsake, give up.

[கை + தட்டி + போடு-.]

கைதட்டிவை-த்தல் *kai-taṭṭi-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) பூப்படையாப் பெண்ணைப் பூப்பெய்தியவளாகக் கொண்டு உரிய நிகழ்வுகள் செய்தல்; to perform the rites connected with puberty to any immature girl.

[கைதட்டி + வை-.]

கைதட்டு[1]-தல் *kai-taṭṭu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. வியப்பு, வெறுப்பு, நகைப்பு முதலியவற்றின் குறியாகக் கைகொட்டுதல்; to clap or strike hands together in token of defiance, triumph, derision, admiration etc. *"கைதட்டி வெண்ணகை செய்வர் கண்டாய்" (அருட்பா.II, புறமொழிக்.10).* 2. புலையரும் வீட்டுவிலக்கான பெண்களும் ஒதுங்கிச் செல்வதற்காகக் கையைத் தட்டுதல்; to warn off, as an outcaste pulayas, a woman in menstruation etc. 3. ***கையடி*** பார்க்க; see *kai-y-aḍi-*. 4. ***கைதப்பு-தல்(வின்.)*** பார்க்க; see *kai-tappu-*.

க.கெய்தட்டு; படு. கைதட்டு.

[கை + தட்டு-.]

கைதட்டு[2]-தல் *kai-taṭṭu-*, 5 செ.கு.வி.(v.i.) பூப்பு எய்துதல் (இ.வ.); to attain puberty, to be in menses, as signified by clapping of hands.

[கை + தட்டு-.]

கைதட்டு[3]-தல் *kai-taṭṭu-*, பெ.(n.) கைகொட்டுதல்; clapping the hands.

க. கெய்சப்பளி; படு. கைசப்படெ.

[கை + தட்டு-.]

கைதப்பு-தல் *kai-tappu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. கையினின்று தவறிப்போதல்; to slip from the hand, as a thing, to escape or get out of control, as a person or animal. *"கானவர் வலையிற் பட்டுக் கைதப்பி யோடும்" (கைவல்.தத்து.13).* 2. இலக்குத் தவறுதல்; to miss the mark.

க. கெய்தப்பு; படு. கைதப்பு.

[கை + தப்பு-.]

கைதரு-தல் *kai-taru-*, 2 செ.கு.வி.(v.i.) 1. இடங்கொடுத்தல்; to give a hold. 2. உதவுதல்; to help. 3. கைகூடுதல்; to materialize.

[கை + தரு-.]

கைதல் *kaidal*, பெ.(n.) தாழை; fragrant screw-pine. *"கைதல் சூழ்கழிக் கானல்" (தேவா.532:2).*

ம.கைத; க.கேதகெ, கேதிகை; தெ., கே. தகி; து.கேதை, கேதயி, கேதாயி.

Skt. ketaka.

[கை → கைதல்.]

கைதலைவை-த்தல் *kai-talai-vai-*, 4 செ.கு.வி.(v.i.) பெருந்துயரடைதல் (கையைத்தலைமீதுவைத்தல்); lit., to place the hand on the head; to mourn, lament, grieve. *"கறைகெழு குடிகள் கைதலை வைப்ப" (சிலப்.4:9).*

[கை + தலை + வை-.]

கைதவம்[1] *kai-davam*, பெ.(n.) 1. ஏய்ப்பு, வஞ்சம்; cunning, craftiness. *"மைதவழ் கண்ணி கைதவந் திருப்பா" (பெருங்.மகத.15:18).* 2. பொய்; falsehood. *"கைதவம் புகலேன்" (கந்தபு. வரவுகேள்.4).* 3. துன்பம்; affliction, suffering. *"கைதவமே செய்யு மதுவின்களி" (பிரமோத். சிவராத்திரி.17).*

ம. கைதவம்.

[கை → கைத்து → கைத்துவம் → கைதவம்.]

கைதவம்[2] *kai-davam*, பெ.(n.) மிகுபுகழ்; great eulogy, praise, panegyric.

[கை + தவம். கைமேல் பயன் கண்ட தவமுயற்சி, புகழ்.]

கைதவறு-தல் *kai-tavaṟu-*, 5 செ.கு.வி.(v.i.) 1 ***கைதப்பு-.*** பார்க்க; see *kai-tappu.* 2. கைப்பிழையாதல்; to err or commit a mistake by a slip of the hand. 3. தொலைந்து போதல்; to be lost. என் புத்தகம் கைதவறிவிட்டது (உ.வ.). 4. இறத்தல்; to die. குழந்தை கைதவறிவிட்டது.

[கை + தவறு-.]

கைதவன்[1] *kaidavaṉ*, பெ.(n.) 1. பாண்டியன்; Pāṇḍya king. *"கைதவனுஞ் சொன்னான்" (பெரியபு. திருஞான.749).* 2. பாண்டியனின் பட்டப் பெயர்களிலொன்று; one of the title of Pāṇḍia kings.

மறுவ. பாண்டியன், செழியன், கூடற்கோமான், தென்னவன், வேம்பின்றாரோன், வழுதி, குமரிச்சேர்ப்பன், வைகைத்துறைவன், மாறன், பொதியவெற்பன், மீனவன்.

[கைதவம் → கைதவன் (மிகுபுகழ் உடையவன்.]

கைதவன்[2] *kaidavaṉ*, பெ.(n.) ஏய்ப்பவன், வஞ்சகன்; deceitful, cunning person. *"கைதவனாமிக் கானவனேயோ" (திருவிளை.பழியஞ்.28).*

*[கைதவம் → கைதவன்.]

கைதவன்[3] *kaidavaṉ,* பெ.(n.) திருமாலாற் கொல்லப்பட்ட ஓர் அசுரன்; an Aśura slain by Viṣṇu. *"மதுகைடவரும் வயிறுருக மாண்டார்" (திவ்.இயற். 3:66).*

[கை - கைதவன்.]

கைதவை *kaidavai,* பெ.(n.) கொற்றவை (துர்க்கை) (யாழ்.அக.); Durga.

[கொற்றவை → கொதவை → கைதவை.]

கைதழுவு-தல் *kai-taḻuvu-,* 5 செ.கு.வி.(v.i.) கைகோத்தல்; to clasp hand in hand. *"தொடர்ந்து கைதழீஇ நடந்து" (பெருங்.உஞ்சைக்.41:110).*

[கை + தழுவு-.]

கைதளர்-தல் *kai-taḷar-,* 2 செ.கு.வி.(v.i.) 1. கையின் வலிமை அல்லது ஆற்றல் இழத்தல்; to lose the use or power of one's hand. 2. தோற்றுப் போதல்; to be defeated. 3. வறுமை; to be in reduced circumstances.

க. கெய்கெடு.

[கை + தளர்-.]

கைதா-தல் (கைதருதல்) *kai-tā-,* 18 செ.கு.வி.(v.i.) 1. வறுமை, இடுக்கண் முதலியவற்றில் உதவி புரிதல்; to render help, save, rescue, as from poverty, danger, etc. *"காவலனார் பெருங்கருணை கைதந்தபடி யென்று" (பெரியபு.திருஞான.1118).* 2. உறுதி கொடுத்தல்; to give assurance. *"எய்தவல்லையேற்கு கைதருக" (பாரத. குருகுல. 44).* 3. மணம்புரிதல்; to marry. *"கோதையா லுறவு கொண்டு கைதரல் குறித்த கோமகன்" (பாரத.குருகுல.131).* 4. மிகுதல்; to increase. *"உவகை கைதர" (கம்பரா.மீட்சி.268).*

[கை + தா-.]

கைதாங்கி *kai-tāṅgi,* பெ.(n.) கைப்பிடி (யாழ்.அக.); handle.

[கை + தாங்கி.]

கைதாங்கியடி-த்தல் *kai-tāṅgi-y-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மெதுவாயடித்தல் (இ.வ.); to beat or strike gently. 2. ஓங்கி வலுவாயடித்தல்; to strike forcibly.

[கை + தாங்கி + அடி-.]

கைதாங்கியுழு-தல் *kai-tāṅgi-uḻu-,* 5 செ.கு.வி.(v.i.) மேலாக உழுதல் (வின்.); to plough lightly.

[கை + தாங்கி + உழு-.]

கைதாங்கு-தல் *kai-tāṅgu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கைதாங்கல் கொடுத்தல்; to support one by the arm. 2. அழிவெய்தாமற் காத்தல்; to save from ruin.

[கை + தாங்கு-.]

கைதாரம் *kai-tāram,* பெ.(n.) செந்நெல்; red paddy (சா.அக.).

தாரம் = அரும்பண்டம்.

[கை + தாரம்.]

பொதுவான நெல்வகையினின்று வேறுபட்டிருப்பதாலும் எங்கும் எளிதில் கிடைக்காததாலும் இப் பெயர் பெற்றிருக்கலாம்.

கைதாரிகம் *kai-tārigam,* பெ.(n.) வயல்வெளி; paddy field.

[கை + தாருகம். கைதாருகம் → கைதாரிகம்.]

கைதாழ்-தல் *kai-tāḻ-,* 2 செ.கு.வி.(v.i.) செல்வநிலை குன்றுதல் (இ.வ.); to reduced in circumstances.

[கை + தாழ்.]

கைதிகம் *kaidigam,* பெ.(n.) 1. மலை எலுமிச்சை; hill lime. 2. கசப்பு நாரத்தை; bitter mountain lime.

[கை = கசப்பு. கை → கைதிகம்.]

கைதிகா *kaidi-gā,* பெ.(n.) புட்டரிசி; a kind of Rangoon rice (சா.அக.).

[கை (கசப்பு) → கைதிகா.]

கைதிட்டம் *kai-tiṭṭam,* பெ.(n.) 1. செம்மையாக அழகுபடுத்துகை; exquisite adornment. *"கைதிட்டமாக வருபவளே" (தனிப்பா.2, 163:404).* 2. ***கைத்திட்டம்*** பார்க்க; see *kai-t-tiṭṭam.*

[கை + திட்டம்.]

கைதிருந்து-தல் *kai-tirundu-,* 5 செ.கு.வி.(v.i.) கையெழுத்து நேர்த்தியாதல்; to be trained, as the hand in writing.

[கை + திருந்து-.]

கைதீண்டு-தல் *kai-tīṇḍu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. அடித்தல்; to beat. 2. முறைகேடாகப் பெண்டிரை அணுகுதல்; to commit indecent assault on a woman.

[கை + தீண்டு-.]

கைதுடை-த்தல் *kai-tuḍai-,* 4 செ.குன்றாவி.(v.t) விட்டொழிதல்; to give up for good; to forsake, abandon. *"எமைக் கைதுடைத் தேகவும்" (கம்பரா. நகர்நீ.159).*

[கை + துடை-.]

கைதூக்கல் *kai-t-tūkkal,* பெ.(n.) 1. உதவுகை; help, 2. ஒப்புகை; acceptance.

[கை + தூக்கல்.]

கைதூக்கிவிடு-தல் *kai-tūkki-vidu-,* 5 செ.கு.வி. (v.t.) 1. ***கைதூக்கு-தல்*** பார்க்க; see *kai-tūkku-*. 2. கூட்டத்தின் நடுவில் கையைப் பிடித்து வெளியே இழுத்துவிடுதல் (கொ.வ.); to drag out one by the hand from an assembly or crowd.

[கை + தூக்கிவிடு-.]

கைதூக்கு[1]-தல் *kai-t-tūkku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கையை உயர்த்துதல்; to raise the hand. 2. இசைவு தெரிவித்தல்; to record agreement or approval.

ம. கைபொக்கு.

[கை + தூக்கு-.]

கைதூக்கு[2]-தல் *kai-tūkku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. வறுமையில் வருந்துவோர், நீரில் அழுந்துவோர் முதலியோரைக் காத்தல்; to lend a helping hand, to save from ruin; to rescue from sinking. 2. ஏற்றுக்கொள்ளுதற் குறியாகக் கையை உயர்த்துதல்; to hold up the hand to record agreement or approval. 3. விடுதலையாக்கல்; to get released, freed. 4. காப்பாற்றுதல்; to save.

ம. கைபொக்குக.

[கை + தூக்கு-.]

கைதூவாமை[1] *kai-tūvāmai,* பெ.(n.) 1. கையொழியாமை (திவா.); incessant, unceasing work. 2. ஒழியா வொழுக்கம்; moral conduct of departing from a right course.

மறுவ. கையொழியாமை.

[கை + தூவு + ஆ + மை. 'ஆ' எ.ம.இ.நி.]

கைதூவாமை[2] *kai-tūvāmai,* பெ.(n.) படைக் கலன்களுள் ஒன்று, கைவிடாப்படை (அக.நி.); a kind of weapon.

[கை + தூவாமை.]

கைதூவு[1]-தல் *kai-tūvu-,* 5 செ.கு.வி.(v.i.) கையொழிதல்; to have rest or leisure, as from one's activities. *"புலவற் களியொடு..... கை தூவலை"* *(கலித்.50).*

[கை + தூவு-.]

கைதூவு[2] *kai-tūvu,* பெ.(n.) செயலற்றிருக்கை; rest or leisure from work. *"நனிவிருந் தயருங் கைதூ வின்மையின்"* *(நற்.280).*

[கை + தூவு-.]

கைதேர்-தல் *kai-tēr-,* 2 செ.குன்றாவி.(v.t.) திறமை யடைதல்; to become an adept.

[கை + தேர்-.]

கைதேர்ந்தவன் *kai-tērndavan-,* பெ.(n.) திறமையாளன்; adept, expert.

[கை + தேர்ந்தவன்.]

கைதை[1] *kaidai,* பெ.(n.) தாழை; fragrant screw-pine. *"கைதையம் படப்பை"* *(அகநா.100:18).*

ம. கைதா.

[கள் : முள். கள் → கய் → கை (கைது) கைதை : முள்ளுள்ள தாழை (வட.வர.131) கைதை > Skt. kaitaka.]

கைதை[2] *kaidai,* பெ.(n.) எட்டி; nux vomicca.

[கை → கைத்து → கைதை.]

கைதை[3] *kaidai,* பெ.(n.) வயல் (பிங்.); paddy field.

Skt. kēdāra.

[செய் → கை → கைதை (கொ.வ.).]

கைதைச்சுரிகையன் *kaidai-c-curigaiyan,* பெ.(n.) தாழையை வாளாக உடைய காமன் (பிங்.); lit., one having screw-pine for his weapon: Kama, the god of love.

மறுவ. காமன்.

[கைதை + சூரி → சுரி + கையன் - கைதைசுரி கையன். (கொ.வ.).]

தாழையை வாளாக உடையவனாதலால் இப் பெயர் பெற்றிருக்கலாம்.

கைதொடல்[1] *kai-todal,* பெ.(n.) 1. உண்கை (பிங்.); taking food, eating. 2. உணவு; food as taken by the hand. *"கைதொடல்கண்படை வெய்துறுபெரும்பயம்"* *(ஞானா.35).* 3. சிறிதுண்ணல்; eating a small quantity.

[கை + தொடல்.]

கைதொடல்[2] *kai-todal,* பெ.(n.) திருமணம் (யாழ்.அக.); marriage.

[கை + தொடல்.]

கைதொடன் *kai-todan,* பெ.(n.) 1. உதவிசெய்வோன்; one who helps or serves. *"தூசித்தலையிலவர்களே கைதொடராய்"* *(ஈடு.4,4:1).* 2. அறிவாற்றலுடன் செயலைச் செய்வோன்; one who does an act intelli-

gently. *"ஜநநிபக்கல் அபராதத்திற் கை தொடனாயிருக்க" (ஈடு.6,10:10).*

[கை + தொடு + அன்.]

கைதொடு[1]–தல் *kai-todu-*, 20 செ.குன்றாவி.(v.t.) 1. கையினால்மெய்தீண்டுதல்; to touch with the hand. *"சக்கரவர்த்தித் திருமகன் இத்தைக் கை தொட்டுச் சிட்சித்து" (ஈடு.4,2:8).* 2. சூளுரைத்தல்; to lift one's hand, in oath to swear. 3. உண்ணுதல் (பிங்.); to eat. 4. தொடங்குதல்; to commence, begin, enter upon. அவன் கை தொட்ட நிகழ்வு (காரியம்) நல்லதே (உ.வ.). 5. மணஞ் செய்தல் (வின்.); to marry.

[கை + தொடு–.]

கைதொடு[2]–த்தல் *kai-todu-*, 17 செ.குன்றாவி.(v.t.) 1. திருமணஞ் செய்துவைத்தல் (வின்.); to marry, join hands in marriage.

[கை + தொடு–.]

கைதொடுமானம் *kai-todu-mānam*, பெ.(n.) உதவி; help, support. *"தன் வெறுமையைக் கை தொடுமானமாகக் கொண்டு" (ஈடு.6,10:8).*

[கை + தொடு – மானம்.]

கைதொழு–தல் *kai-tolu-*, 1 செ.குன்றாவி.(v.t.) 1. வணங்குதல்; to adore, worship as with hands joined. *"காதலி தன்னொடு கைதொழு தெடுத்து" (மணிமே.13:20).* 2. கும்பிடுவதற்காகக் கையைத் தலைமேல் உயர்த்துதல்; to lift up the hands above the head, as in adoration or worship. *"கைதொழூஉப் பரவி" (திருமுருகு.252).*

[கை + தொழு–.]

கைதோணி *kai-tōni*, பெ.(n.) ஒருவகைப் பூடு; a kind of an unknown herb (சா.அக.).

[கை + தோணி.]

நீர்வளமுள்ள இடங்களில் வளரும் பூண்டாணதால் இப் பெயர் பெற்றிருக்கலாம்.

கைதோய்வு *kai-tōyvu*, பெ.(n.) கையால் எட்டிப்பிடிக்கக் கூடிய நிலை; being within hand's reach. *"கைதோய் வன்ன கார்மழைத் தொழுதி" (மலைபடு.362).*

[கை + தோய்வு.]

கைந்தலை *kaintalai*, பெ.(n.) 1. கைம்பெண், கணவனை இழந்தவள்; widow. *"கைந்தலைவிரைந்து நோக்குந் தக்கபே ரன்பையும்" (திருவாலவா.41:28).*

[கைம்(மை) + தலை.]

கைந்நட்டம் *kai-n-nattam*, பெ.(n.) ***கையிழப்பு*** பார்க்க; see *kai-y-ilappu*.

[கை + நட்டம்.]

கைந்நலம் *kai-n-nalam*, பெ.(n.) கன்றிறந்தபின் பால் கொடுக்கும் மாடு; cow that milks after having lost its calf.

[கை + நலம்.]

கைந்நவில் *kai-n-navil*, பெ.(n.) கைத்தொழில்; handicrafts.

[கை + நவில்.]

கைந்நவிலாளர் *kai-n-navilālar*, பெ.(n.) கை வினைஞர், கையால் தொழில் செய்யப் பழகியவர்; handicrafts men. *"கைந்நவி லாளர் காடெறிந்து" (பெருங். உஞ்சைக். 46:66).*

[கை + நவிலாளர்.]

கைந்நறுக்கு *kai-n-narukku*, பெ.(n.) கையுறுதி; firmness, stability.

[கை + நறுக்கு.]

கைந்நன்றி *kai-n-nanri*, பெ.(n.) செய்நன்றி; gratitude, benefits done.

[கை + நன்றி.]

கைந்நாகம் *kai-n-nāgam*, பெ.(n.) யானை; elephant, as having a trunk. *"கைந்நாகம்..... கடல்வந்த தோர்காட்சி" (கம்பரா.கடறாவு.40).*

[கை + நாகம்.]

கைந்நாடிபார்–த்தல் *kai-n-nādi-pār-*, 4 செ.குன்றாவி.(v.t.) நாடியோட்டம் பார்த்தல்; to observe the blood circulation in hand by feeling the pulse.

[கைந்நாடி + பார்–.]

கைந்நிதானம் *kai-n-nidānam*, பெ.(n.) கையில் நிறை முதலியவற்றை மதிப்பிடுகை (உ.வ.); estimation of weight, etc. by the hand.

ம. கைநிதானம்.

[கை + நிதானம்.]

கைந்நிலை[1] *kai-n-nilai*, பெ.(n.) பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுளொன்றும், அகப்பொருள் பற்றியதும், புல்லங்காடர் என்ற புலவரியற்றியதுமான நூல்; an ancient love poem by, *Pullankādar*, one of *Padinenkilkkanakku*. *"நாலடி நான்மணி.......... கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு" (தனிப்பா.).*

[கை + நிலை.]

கைந்நிலை[2] *kai-n-nilai,* பெ.(n.) பாசறை (தக்கயாகப்ப.274); military camp.

ம. கைநில.

[கை + நிலை.]

கைந்நிறுத்து-தல் *kai-n-niruttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. நிலைநிறுத்துதல்; to establish. *"காப்புக்கைந் நிறுத்த வல்வேற் கோசர்" (அகநா.113).* 2. அடக்குதல்; to subdue, conquer. *"காமங்கைந்நிறுக் கல்லாது" (அகநா.198).*

[கை + நிறுத்து-.]

கைந்நிறை *kai-n-nirai,* பெ.(n.) சீராக அடுக்குதல்; to be nicely arranged.

க. கெய்நிறெ.

[கை + நிறை.]

கைந்நீட்டு[1] *kai-n-nittu,* பெ.(n.) கைப்பிடி; handle, haft. *தமது கிடுகைக் காம்புடனே கைந்நீட்டுச் செறிக்கவும் (புறநா.98,உரை).*

ம. கைநாட.

[கை + நீட்டு.]

கைந்நீட்டு[2]**-தல்** *kai-n-nittu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கையைநீட்டுதல்; to stretch out the hand. 2. இரத்தல்; to beg, pray for gift or charity. 3. திருடுதல்; to steal, pilfer. 4. கையூட்டு வாங்குதல்; to accept bribe.

ம. கைநீட்டுக; **க.** கெய்நீடு.

[கை + நீட்டு-.]

கைந்நீட்டு[3] *kai-n-nittu,* பெ.(n.) கைப்பிடி; handle, haft. *தமது கிடுகைக் காம்புடனே கைந்நீட்டுச் செறிக்கவும் (புறநா.98,உரை).*

ம. கைநாட.

[கை + நீட்டு.]

கைந்நீவு-தல் *kai-n-nivu-,* 5 செ.குன்றாவி.(v.t.) அவமதித்துக் கடத்தல்; to defy, disregard. *"மதமாக் கொடுந்தோட்டி கைந்நீவி" (பரிபா.10:49).*

[கை + நீவு.]

கைந்நூல்[1] *kai-n-nūl,* பெ.(n.) கையிற் கட்டும் காப்பு நாண்; ceremonial thread worn on the wrist. *"கைந்நூல் யாவாம்" (குறுந்.218).*

[கை + நூல்.]

பண்டைத் தமிழரின் கைந்நூல் கட்டும் வழக்கம் வடபுலத்தில் ரக்ஷா பந்தன் என மருவி வழங்கலாயிற்று.

கைந்நூல்[2] *kai-n-nūl,* பெ.(n.) கையால் நூற்ற நூல் (கதர்நூல்); hand spun thread. காந்தியடிகள் எப்பொழுதும் கைந்நூலாடையே அணிவார் (உ.வ.).

[கை + நூல்.]

கைந்நெகிழ்-தல் *kai-n-negil-,* 2 செ.கு.வி.(v.i.) கையிலிருந்து நழுவி விழுதல்; to slip down from the hand.

[கை + நெகிழ்-.]

கைந்நொடி[1] *kai-n-nodi,* பெ.(n.) 1. ஒலியுண்டாக்க இருவிரல்களை அழுத்தி எடுத்தல்; a snap with the fingers. 2. கையை நொடிக்கும் நேரம்; a unit of time marked by a snap of the finger. *மாந்தருடை கண்ணிமையுங் கைந்நொடியும் (நன்.99,மயிலை.).*

க. கெய்சிடுகு.

[கை + நொடி.]

கைந்நொடி[2]**-த்தல்** *kai-n-nodi,* 4 செ.குன்றாவி.(v.t.) விரலை நொடித்தல்; to snap the finger.

ம. கைநொடிக்குக, கைஞொடிக்குக; **க.** கெய்நொடு.

[கை + நொடி -.]

கைநட்டம் *kai-nattam,* பெ.(n.) ***கையிழப்பு*** பார்க்க; see *kai-y-ilappu.*

ம. கைநழ்டம்.

***Skt.** nasta > **த.** நட்டம்.*

கைநடுக்கம் *kai-nadukkam,* பெ.(n.) மூப்பு, அச்சம் முதலியவற்றால் கைநடுங்குகை; tremulousness of the hand through age, nervousness, etc. (செ.அக.).

[கை + நடுக்கம்.]

கைநம்பிக்கை *kai-nambikkai,* பெ.(n.) 1. கையடித்து உறுதிமொழி கூறுகை; giving or striking the hand in token of a promise or assurance. 2. கைக்கடன்; temporary oral loan. கை நம்பிக்கை யாகக் கொடு (செ.அக.).

து. கைநம்பிகெ.

[கை + நம்பிக்கை.]

கைநலப்பால் *kai-nala-p-pāl,* பெ.(n.) கன்றின் உதவியின்றிக்கையாற்கறக்கும்பால் (யாழ்.அக.); milk drawn by the hand without the help of the calf.

[கை + நலம் + பால்.]

கைநலம்[1] *kai-nalam,* பெ.(n.) வாய்ப்பான உள்ளங்கைக் கோடு (அஸ்தரேகை) அமைந்தவர் மருத்துவத் தொழிலில் கைதொட்டவுடன் குணமாகும் தன்மை; (In palmistry) the curing or healing power of diseases due to peculiar line or curing marks in the palm of one's hand, lucky hand (சா.அக.).

[கை + நலம்.]

கைநலம்[2] *kai-nalam,* பெ.(n.) 1. கைராசி; auspiciousness of one's hand supposed to produce the desired end. 2. ***கைநலப்பால்*** (யாழ்.அக.) பார்க்க; see *kai-nala-p-pāl.*

[கை + நலம்.]

கைநறுக்கு *kai-narukku,* பெ.(n.) ***கைச்சீட்டு*** பார்க்க; see *kai-c-cīṭṭu.*

[கை + நறுக்கு.]

கைநன்றி *kai-naṉṟi,* பெ.(n.) செய்ந்நன்றி (யாழ்.அக.); gratitude.

[கை + நன்றி.]

கைநனை-த்தல் *kai-naṉai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. பிறர் வீட்டில் உணவு கொள்ளுதல்; to partake of food in another's house. 2. சாவு வீட்டில் உண்ணுதல்; to partake of food in a deseased person's house. *துக்க வீட்டில் கைநனைக்காமல் போகலாமா? (நெல்லை.).*

[கை + நனை-.]

உணவு கொள்வதற்கு முன்னும் உண்டபின்னும் நீரால் கையைக் கழுவும் பண்பாட்டுப் பழக்கத்தின் அடிப்படையில் கைநனைத்தல் உண்ணுதலைக் குறித்தது.

கைநாட்டு[1]**-தல்** *kai-nāṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கையெழுத்திடுதல்; to affix or put one's signature, as in a bond. 2. தற்குறிக் கீறல்; an illiterate person making his mark in token of his signature.

[கை + நாட்டு. நட்டு → நாட்டு. நாட்டுதல் = நிறுவுதல், நிலைநிறுத்தம் படைக்கல், எழுதுதல்.]

கைநாட்டு[2] *kai-nāṭṭu,* பெ.(n.) 1. கையெழுத்து; signature. *"கோவலனார் கைநாட்டைக் கொற்றவனுந் தான்பார்த்து" (கோவ.க.25).* 2. எழுத்தறிவு அற்றவன்; an illiterate person.

க. கெய்றுது.

மறுவ. கைக்கீறு.

[கை + நாட்டு.]

கைநாட்டுப் பேர்வழி *kai-nāṭṭu-p-pērvaḻi,* பெ.(n.) படிப்பறிவற்றவன்; ignorant. *இவன் ஒரு கைநாட்டுப் பேர்வழி. எதைப் பேசியும் பயனில்லை (உ.வ.).*

மறுவ. தற்குறி.

[கைநாட்டு + பேர்வழி.]

கைநாடி *kai-nāḍi,* பெ.(n.) 1. மணிக்கட்டில் துடிக்கும் குருதி நாடி; the pulse felt at the wrist. 2. கையில் ஓடும் நாடி; arteries of the arm (சா.அக.).

[கை + நாடி. நாளி → நாடி.]

கைநிமிர்-தல் *kai-nimir-,* 2 செ.கு.வி.(v.i.) அகவையாகி (வயதாகி) வளர்தல்; to grow up to adolescence. *கைநிமிர்ந்த பிள்ளை இருக்கும் போது உனக்கென்ன கவலை (நெல்லை).*

[கை + நிமிர்-.]

கைநிமிர்த்தாதனம் *kai-nimirttādaṉam,* பெ.(n.) இருக்கை (ஆசன) வகையுளொன்று (தத்துவப். 108, உரை); a yogic posture.

[கை + நிமிர்த்து + ஆதனம்.]

கைநிரை *kai-nirai,* பெ.(n.) ஓலைகளால் செய்த தடுப்புத்திரை, நிரைச்சல்; screen of plaited palm leaves. *"கைநிரைகட்டிக் கொண்டிருக்கிறநாளிலே" (ஈடு. 4,6:6).*

[கை + நிரை. கை = ஒழுங்கு.]

கைநிலை *kai-nilai,* பெ.(n.) வீரர்கள் தங்குதற்குப் பாசறையில் தனித்தனியே அமைக்கப்பட்ட குடிசை (பு.வெ.4:7, உரை); soldiers lines, military quarters in a camp.

[கை + நிலை. கை = திறமை, திறமைமிக்க மறவர்.]

கைநிறக்கல் *kai-niṟa-k-kal,* பெ.(n.) செம்பாறைக்கல்; gravel stone (சா.அக.).

[கை + நிறம் + கல்.]

கைநிறம் *kai-niṟam,* பெ.(n.) வெண்கலம்; bell-metal (சா.அக.).

[கை + நிறம்.]

கைநிறை *kai-niṟai,* பெ.(n.) கையால் தூக்கி மதிக்கும் நிறை; estimation of the weight of a thing by lifting it in hand.

மறுவ. கைமதிப்பு.

[கை + நிறை.]

கைநீட்டம் *kai-nīṭṭam,* பெ.(n.) 1. கொடை (இ.வ.); presents, gift, donation. 2. அன்றன்று கடை திறந்தவுடன் முதன்முதலாக விற்கும் பண்டத்திற்கு வாங்கும்

முதற்பணம்; first cash payment received for the first article sold after opening the shop for the day.

ம. கைநீட்டம்.

[கை + நீட்டம்.]

கைநீட்டல் *kai-nīṭṭal,* பெ.(n.) அடித்தல்; striking. ***கைநீட்டு²–தல்*** பார்க்க; see kai-nīṭṭu-.

[கை + நீட்டல்.]

கைநீட்டு¹–தல் *kai-nīṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கையை நீட்டுதல்; to stretch out the hand. 2. இரத்தல்; to beg, pray for gift or charity. 3. திருடுதல்; to steal, pilfer. 4. கையூட்டு வாங்குதல்; to accept bribe.

ம. கைநீட்டுக; க. கெய்நீடு.

[கை + நீட்டு–.]

கைநீட்டு²–தல் *kai-nīṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. அடிக்கக் கையோங்குதல்; to lift one's hand against another. 2. இழவு வினாவுதல் (விசாரித்தல்); to condole.

ம. கைநீட்டுக.

[கை + நீட்டு–.]

கைநீளம் *kai-nīḷam,* பெ.(n.) 1. தாராளம் (இ.வ.); liberality. 2. திருடுங்குணம் ; thievish tendency. 3. அடிக்குங் குணம் ; show of power, disposition to strike.

ம. கைநீளம்.

[கை + நீளம்.]

கைநீளு–தல் *kai-nīḷu-,* 16 செ.கு.வி.(v.i.) 1. கொடுத்தல்; to give. *"கைநீண்ட தயரதன்"* *(கம்பரா.).* 2. அடித்தல்; to beat. *இனிக் கண்டபடி கைநீளுதல் கூடாது.* 3. திருடுதல்; to steal. *எல்லா விடங்களிலும் கை நீண்டதால் அவனது பெயர் கெட்டுப் போனது (உ.வ.).*

[கை + நீளு. நீள் → நீளு.]

கையை நீட்டிச் செய்யும் வினைகளானதால் இப் பெயர்பெற்றதாம்.

கைநுணுக்கம் *kai-nuṇukkam,* பெ.(n.) 1. அழகான வேலைப்பாடு; fine workmanship. 2. இவறற்றனம் (கஞ்சத்தனம்); close-fistedness.

[கை + நுணுக்கம்.]

கையினால் நுணுகிச் செய்யும் வேலை.

கைநெகிழ்–தல் *kai-negil-,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. கைதவற விடுதல்; to let slip. *"மெள்ள மெள்ளக் கைநெகிழ விட்டாய்"* *(தாயு.பராபர.334).*

[கை + நெகிழ்–.]

கைநெசவு *kai-nešavu,* பெ.(n.) 1. சிறுநெசவுத்தறி; a small loom. 2. கையால் நெய்யும் தறி; a loom that is marked by hand.

க. கெய்மக்க.

[கை + நெசவு.]

கைநெரி–த்தல் *kai-neri-,* 4 செ.குன்றாவி.(v.t.) துக்கம் அச்சம் முதலியவற்றால் கையை நெரித்தல்; to wring one's hands in grief, fear, etc. *"மந்தி எழுந்தெழுந்து கைநெரிக்கும் ஈங்கோயே"* *(ஈங்கோய்.).*

[கை + நெரி–.]

கைநெல்லி *kai-nelli,* பெ.(n.) உள்ளே இருக்கும் நிறத்தையே புறத்திலும் காட்டும் நெல்லிக்கனி; *nelli* fruit which is transparent as a crystal for clarity. *"தோற்றர வடிக்குங் கைநெல்லி போலெனல்"* *(மணிமே.29:83).*

மறுவ. அங்கையுள் நெல்லி, உள்ளங்கை நெல்லிக்கனி, உள்ளகங்காண்நெல்லி.

[அங்கை → கை + நெல்லி.]

அகம் + காண் + நெல்லி - அகங்காண் நெல்லி - அங்கைநெல்லி - கைநெல்லி எனத் திரிந்தது. உள்ளே இருக்கும் நிறமே புறத்தும் காணப்படுதலால் அகங்காண் நெல்லி எனப் பெயர் பெற்றது. உள்ளங்கை நெல்லி என்பது பொருட் பொருத்தமற்றது.

கைநொடி–த்தல் *kai-nodi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. பெருவிரல் நடுவிரல் இரண்டும் கொண்டு (கைவிரலால்) ஒலியுண்டாக்குதல்; to snap the fingers. 2. செல்வநிலைமை கெடுதல்; to be reduced in circumstances, to become poor, destitute. செட்டியார் கைநொடித்துப் போனார் (இ.வ.).

ம. கைநொடிக்குக, கைஞொடிக்குக.

[கை + நொடி –.]

கைநொடுநொடு–த்தல் *kai-nodu-nodu-,* 4 செ.கு.வி. (v.i.) கண்டவெல்லாவற்றையுங் கையால் தொடுதல் (யாழ்.அக.); to be restless of hand and touch everything near about.

[கை + நொடுநொடு–.]

கைநோட்டம் *kai-nōṭṭam,* பெ.(n.) 1. கையினாற் குறிப்புணர்த்தல் (சாடை) (இ.வ.); sign or gesture made by hand. 2. கைவேலைத்திறம்; manual skill. 3. கையால் அளவிடும் மதிப்பு; estimation by hand.

ம.கைநோட்டம்; **து.**கைநோட.

[கை + நோட்டம்.]

கைப்பக்கம் *kai-p-pakkam,* பெ.(n) கு.வி.எ. (adv.) அருகில் (இ.வ.); very close, near at hand. அவன் என் கைப்பக்கம் இருந்தான் (உ.வ.).

[கை + பக்கம்.]

கைப்பகர்ப்பு *kai-p-pagarppu,* பெ.(n.) இசைவின்றிப் பெற்றுக்கொண்ட படி (இ.வ.); unauthorised copy, as of a document filed in court.

[கை + பகர்ப்பு.]

கைப்பகற்றல் *kaippagarral,* பெ.(n.) மனக்கசப்பைப் போக்கல்; removing the bitterness from a substance (சா.அக.). அண்ணன் தம்பியிடம் கைப்பகற்றல் நண்பர்கள் கடமையாகும்.

[கை → கைப்பு + அகற்றல்.]

கைப்பங்கொட்டை *kaippaṅ-koṭṭai,* பெ.(n.) ஒருவகை மரம்; a variety of tree.

[கை → கைப்பு + அம் + கொட்டை.]

எட்டிக் கொட்டையைப் போன்று மும்மடங்கு நச்சுத்தன்மையுடையதும், வெண்ணிறப்பூக்களைக் கொண்டதும், மருத்துவத்திற்குப் பயன்படுவதுமான இம் மரம் பிலிப்பைன்சு நாட்டில் அதிகம் காணப்படுகிறது.

கைப்பட்டை *kai-p-paṭṭai,* பெ.(n.) 1. தோட்பட்டை; shoulder blade. 2. கைமரம் தாங்கும் சட்டம் (இ.வ.); sleeper, joist to support a superstructure. 3. நீர்முகக்கும் சிறுபட்டை (வின்.); small *ōla* bucket.

[கை + பட்டை.]

கைப்பட *kai-p-paḍa,* கு.வி.எ.(adv.) சொந்தக் கையெழுத்தாக; in one's own hand writting. அதைத் தட்டச்சுக்குக் கொடுக்காமல், ஏன் கைப்பட எழுதிக் கொடுத்தாய்? (உ.வ.).

ம. கய்பட, கைப்பட.

[கை + பட. படு → பட.]

கைப்படு[1]**–தல்** *kai-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) கைவயமாதல்; to fall into one's hands. *"ஒள்வாட னொன்னார்கைப்பட்டக்கால்" (நாலடி.129).*

[கை + படு-.]

கைப்படு[2]**–தல்** *kai-p-paḍu-,* 17 செ.குன்றாவி. (v.t.); 1. தொடுதல்; to meet, 2. பார்த்தல்; find. *"புனைசெய் கோல் வளையைக் கைப்படுதி" (சீவக.1600).*

[கை + படு-.]

கைப்படு[3]**–த்தல்** *kai-p-paḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. கைப்பற்றுதல்; to seize, take hold of, acquire. *"கடல்சூழ் வையங் கைப்படுத்தான்" (சீவக. 1058).* 2. தெளிதல்; to find out, discover. *"நின் .... மாயப் பரத்தைமை..... கைப்படுத்தேன்" (கலித்.98).*

[கை + படு-.]

கைப்படை *kai-p-paḍai,* பெ.(n.) 1. படைக்கலம், ஆயுதம்; weapons. *"வென்றிக் கைப்படை நவின்ற வெம்போர்" (சூளா.சீய.128).* 2. மணியாசுப் பலகை (இ.வ.); mason's smoothing plane.

[கை + படை.]

கைப்பண்டம் *kai-p-paṇḍam,* பெ.(n.) கையிலுள்ள பொருள்; things in hand. கைப்பண்டம் கருணைக் கிழங்கு (உ.வ.).

[கை + பண்டம்.]

கைப்பணம்[1] *kai-p-paṇam,* பெ.(n.) 1. கையிலுள்ள தொகை; cash in hand. 2. சொந்தப்பணம்; one's own money. கைப்பணம் போட்டு அந்தப் பொத்தகத்தை அச்சிட்டார். 3. வணிகத்தில் கடனின்றிக் கைமேற் கொடுக்கும் பணம் (யாழ்.அக.); cash-payment for purchase.

மறுவ. ரொக்கம்.

ம. கைப்பணம்; **க.** கெய்கண்டு.

[கை + பணம்.]

கைப்பணம்[2] *kai-p-paṇam,* பெ.(n.) முதலீடு (மூலதனம்); capital.

[கை + பணம்.]

கைப்பணி *kai-p-paṇi,* பெ.(n.) 1. கல்தச்சர் (சிற்பர்) கருவிகளுள் ஒன்று; a kind of instrument used by menial stone cutters. 2. கைத்தொண்டு; manual service in the temple of deity. 3. மணியாசுப்பலகை; polishing board used by the mason. 4. முடவன் தவழ்வதற்குக் கொள்ளும் கைப்பிடி; hand hold for lame persons who have to crawl.

ம.கைப்பணி

[கை + பணி.]

கைப்பத்து *kai-p-pattu,* பெ.(n.) விளக்கக் (விவர) குறிப்பு; statement, report, detailed account, particulars.

[கை + பற்று – கைப்பற்று → கைப்பத்து.]

கைப்பதட்டம் *kai-p-padaṭṭam,* பெ.(n.) **கைப்பதற்றம்** பார்க்க; see *kai-p-padarram.*

[கை+பதற்றம்–கைப்பதற்றம்–கைப்பதட்டம்(கொ.வ.).]

கைப்பதம் *kai-p-padam,* பெ.(n.) 1. அடுதலில், மருந்து தருதலில் தனித்திறம்; special skill in cooking or compounding medicine. அடுவதில் அவர் கைப்பதம் யார்க்கும் வராது (உ.வ.).

தெ. கயிபதமு.

[கை + பதம்.]

கைப்பதர் *kai-p-padar,* பெ.(n.) களவு, கொலை, கொள்ளை முதலிய பழிச்செயல்கள்; mean acts such as stealing, murder and robbery. 'வாய்ப்பதர் கைப்பதர் சிசுப்பதர் வாழாது' (இ.வ.).

[கை (சிறுமை, இழிவு) + பதர்.]

கைப்பதற்றம் *kai-p-padarram,* பெ.(n.) 1. பதற்றத்தில் கைபதறுகை; tremulousness of the hand as in haste. 2. திருடுங்குணம் (வின்.); thievishness (செ.அக.).

[கை + பதற்றம் – கைப்பதற்றம்.]

கைப்பதிவு *kai-p-padivu,* பெ.(n.) ***கையொப்பம்*** பார்க்க; see *kai-y-oppam.*

ம. கைப்பதிவு.

[கை + பதிவு.]

கைப்பந்தம் *kai-p-pandam,* பெ.(n.) கைத்தீவட்டி; flambeau, hand torch.

[கை + பந்தம்.]

கைப்பந்து *kai-p-pandu,* பெ.(n.) எறிந்து பிடிக்கும் பந்து விளையாட்டு; hand ball.

[கை + பந்து.]

கைப்பயிர் *kai-p-payir,* பெ.(n.) இளம்பயிர்; young crop.

[கை + பயிர். கை - இளமை குறித்த முன்னொட்டு.]

கைப்பயில் *kai-p-payil,* பெ.(n.) 1. கையால் குறிப்புணர்த்துகை (வின்.); beckoning with the hand, hand language, as of dumb persons. 2. கைவரைவு நூல்; palmistry.

[கை + பயில்.]

கைப்பரிசு[1] *kai-p-parisu,* பெ.(n) 1. சிறுதெப்பம்; small raft. *"கைப்பரிசு காரர்போ லறிவான வங்கமுங் கைவிட்டு"* (தாயு. தேசோ.2).

[கை + பரிசு.]

கைப்பரிசு[2] *kai-p-parisu,* பெ.(n.) கையூட்டு (இ.வ.); bribe.

[கை + பரிசு.]

நல்லெண்ணத்தில் சிறப்புச் செய்யக் கையில் கொடுக்கும் பொருளைக் குறித்து, பின்னர் தவறான எண்ணத்தில் கொடுப்பதையும் குறிக்க வழங்கியது.

கைப்பரிட்சை *kai-p-paritcai,* பெ.(n.) ***கைப்பழக்கம்[1]*** பார்க்க; see *kai-p-palakkam* (சா.அக.).

[கை + பரிட்சை.]

கைப்பழக்கம்[1] *kai-p-palakkam,* பெ.(n.) நாடி பார்த்தல்; feeling the pulse.

[கை + பழக்கம்.]

கைப்பழக்கம்[2] *kai-p-palakkam,* பெ.(n.) பட்டறிவால் பெறும் திறம்; manual skill acquired by practice. *"சித்திரமும் கைப்பழக்கம்" (தனிப்பா. 1:91:5).*

ம. கைப்பழக்கம்.

[கை + பழக்கம்.]

கைப்பள்ளம் *kai-p-pallam,* பெ.(n.) உள்ளங்கைக் குழி; hollow of the hand.

க. கெய்கொப்பெ

[கை + பள்ளம்.]

கைப்பற்றம் *kai-p-parram,* பெ.(n) 1. கைப்பிடி; handle. 2. கைத்தாங்கல்; supporting a person or thing by the hands.

மறுவ. கைத்தாங்கல்.

[கை + பற்றம்.]

கைப்பற்று[1]-தல் *kai-p-parru-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. திருமணம் செய்தல்; to marry. 2. கைவயத்திலொடுக்குதல்; to restrain with hands. 3. வாங்குதல்; to purchase. 4. உரிமைப்படுத்திக் கொள்; to annex.

[கை + பற்று-.]

கைப்பற்று[2]-தல் *kai-p-parru-,* 5 செ.குன்றாவி.(v.t.) கையிற் கொள்ளுதல்; to apply the hand, or lay hold of, with vehimence or eagerness. *"கைப்பற்றிய விற்கொடு" (கந்தபு. காம.35).* 2. கவர்ந்து கொள்ளுதல்; to seize eagerly or by force.

ம. கைப்பற்றுக; க. கெய்துடுகு; து. கைபட்டு.

Fin. kaapala (to capture); **Est.** kaabata; **Hung.** kap; **Mong.** xabuci; **Q.** hapi

[கை + பற்று-.]

கைப்பற்று[3]-தல் *kaipparru-,* 15 செ.கு.வி.(v.i.) 1. கைதூக்குதல்; to uphold, to save from ruin.

[கை + பற்று-.]

கைப்பற்று[4] *kai-p-parru*, பெ.(n) ஆம்புடை (சாதனம்); means. *தான்தோன்றியான கைப்பற்றடியாக வந்தொன்றல்ல (ஈடு.9,4:9).*

[கை + பற்று.]

கைப்பற்று[5] *kai-p-parru*. பெ.(n.) 1. கைத்தாங்கல்; supporting a person by the arms. 2. கையிற் பெற்றுக்கொண்ட தொகை; money received on hand. 3. உரிமை நல்கை; land held rent free. *"இளமண்டியம் என்கிற கிராமத்தை அவர்களுக்குக் கைப்பற்றாக விடுவித்து" (குரு.பரம்.234).*

ம. கைப்பற்று.

[கை + பற்று.]

கைப்பற்றுநிலம் *kai-p-parru-nilam*. பெ.(n) நீண்ட காலம் ஆளுகையிலிருக்கும் நிலம்; land acquired by darkhast or by prescription.

[கைப்பற்று + நிலம்.]

கைப்பற்றுப்பாத்தியம் *kaipparru -p-pāttiyam*, பெ.(n.) கைப்பற்றுரிமை; right to land acquired by prescription.

Skt. pattiyam > *த. பாத்தியம்.*

[கைப்பற்று + பாத்தியம்.]

கைப்பறை *kai-p-parai*, பெ.(n.) சிறு பறை; a hand-drum.

க. கெய்பறெ.

[கை + பறை.]

கைப்பறையன் *kai-p-paraian*, பெ.(n.) சிறுபறையை அடிப்பவன்; a drummer who beats a small drum with his hand or stick.

க. கெய்பறெக.

[கை + பறையன்.]

கைப்பாகம் *kai-p-pāgam*, பெ.(n.) ***கைப்பதம்***பார்க்க; see *kai-p-padam*. பதமறிந்து மருந்து, சமையல் முதலியன பக்குவம் செய்யும் திறம்; skill in cooking, skill in compounding medicine.

ம. கைபாகம்

[கை + பாகம்.]

கைப்பாடு[1] *kai-p-pāḍu*, பெ.(n.) கையிழப்பு; loss in trade or otherwise.

[கை + பாடு.]

கைப்பாடு[2] *kai-p-pāḍu*, பெ.(n.) 1. உடைமை, உடைமைப்பொருள்; possession. 2. கைவயம் உள்ள பொருள்; possession, subjection. 3. கைப்பதிவு; impression of the hand. 4. கையிழப்பு (சேர.நா.); loss from one's own hand.

ம. கைப்பாடு.

[கை + பாடு. படு → பாடு.]

கைப்பாடு[3] *kai-p-pāḍu*. பெ.(n.) உடலுழைப்பு; manual labour, toil by hand.

[கை + பாடு. பாடு = வேலை, பிடிக்கை.]

கைப்பாடுபடு-தல் *kaippāḍu-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) அரும்பாடுபட்டு உழைத்தல்; to work with the hand, toil, labour hard. *அவன் கைப்பாடுபட்டு முன்னுக்கு வந்தான் (உ.வ.).*

[கைப்பாடு + படு-.]

கைப்பாணி *kai-p-pāṇi*, பெ.(n.) 1. ***கைப்பணி***பார்க்க; see *kai-p-paṇi*. 2. மணியாசுப் பலகை; mason's smoothing plane. 'கைப்பாணியிட்டு மெழுக்கு வாசியிலே பிரமிக்கும்படி' (ஈடு.5;1:5). 3. முடவன் தவழ்வதற்குக் கொள்ளும் கைப்பிடி; hand hold for lame persons who have to crawl. *'முடவனாய்க் கைப்பாணி கொண்டு தவழ்வா னொருவன்' (பழ.16,உரை).*

ம. கைப்பாணி

[கை + (பணி) பாணி.]

கைப்பாணிப்பு *kai-p-pāṇippu*, பெ.(n.) பொருளைக் கையில் எடுத்து நிறுத்திடும் மதிப்பு; estimating the weight of anything by hand.

[கை + பாணிப்பு.]

கைப்பாத்திரம் *kai-p-pāttiram*, பெ.(n.) ***கையேனம்*** பார்க்க ; see *kai-y-ēṉam*.

[கை + பாத்திரம். பாத்திரம் = கொள்கலன்.]

கைப்பாதி *kai-p-pādi*, பெ.(n.) இரண்டாய்ப் பிளப்பதிற் சிறுபாதி; a small portion in division.

[கை + பாதி.]

கைப்பால் *kai-p-pāl*, பெ.(n.) வாங்குவோர் எதிரில் கறவாமல் முன்னரே கறந்து கொண்டு வந்து விற்கும் பால்; milk not milked in the presence of the buyer, but brought by the milkman in his can.

[கை + பால்.]

கைப்பாலை *kai-p-pālai*, பெ.(n.) வெட்பாலை; Tellicherry bark (சா.அக.).

[கை + பாலை.]

கைப்பான் *kaippāṉ*, பெ.(n.) 1. பாகல்; spiked bitter cucumber. 2. கசப்பு மருந்து; bitter medicine. 3. கசக்கக் கூடிய பொருள்; any substance that is bitter (சா.அக.).

[கய் → கை → கைப்பான்.]

கைப்பான்கொட்டை *kaippāṉ-koṭṭai*, பெ.(n.) ***கைப்பங்கொட்டை*** பார்க்க; see *kaippaṅ-koṭṭai* (சா.அக.).

[கய் → கை → கைப்பான் + கொட்டை.]

கைப்பிச்சை *kai-p-piccai*, பெ.(n.) களத்தில் கொடுக்கும்பிச்சை (R.T.); handful of grain given in charity at the threshing floor.

[கை + பிச்சை.]

கைப்பிசகு *kai-p-piśagu*, பெ.(n.) ***கைக்குற்றம்*** பார்க்க; see *kai-k-kuṟṟam*.

[கை + பிசகு. பிழை → பிசகு.]

கைப்பிடி[1]-த்தல் *kai-p-piḍi-*, 4 செ.கு.வி.(v.i.) 1 உறுதியாகப் பிடித்தல்; to seize with hand, grasp, firmly. *"இம்முறைகைப்பிடித்தல்" (தணிகைப்பு.அகத். 415)*. 2. மணம் புரிதல்; to marry. *"கண்ணாலங் கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான்" (திவ்.நாய்ச்.11:9)*.

[கை + பிடி-.]

கைப்பிடி[2] *kai-p-piḍi*, பெ.(n.) 1. கையாற் பிடிக்கை; grasp, grip of the hand. 2. ஆயுதம் முதலியவற்றின் பிடி; handle, as of a tool, ear, as of a pitcher. 3. படிக்கட்டு முதலியவற்றின் பக்கங்களில் கையாற் பிடித்துச் செல்ல அமைக்கும் சுவர், சட்டம் முதலியன; hand rail, rail of a ship, parapet of a house. 4. திருமணம்; marriage. *"கைப்பிடிநாயகன்" (பட்டினத். திருவே. மாலை.3)*. 5. உலக்கை; pestle. 6. பிடியளவு; a handful.

ம.கைப்பிடி, கய்பிடி; **க.**கெய்பிடி, கைபிடி; **தெ.**செயிபிடி; **து.**கைபுடி.

[கை + பிடி.]

கைப்பிடி[3] *kai-p-piḍi*, பெ.(n.) பிடியளவு; handful.

மறுவ.குத்து.

[கை + பிடி.]

கைப்பிடிக்கணையாழி *kai-p-piḍi-k-kaṇai-y-āḻi*, பெ.(n.) திருமணத்தின்போது மாப்பிள்ளைக்குப் பெண்வீட்டார் கொடுக்கும் கணையாழி ; ring presented to the bridegroom by the bride's parents in a marriage.

[கைப்பிடி + கணையாழி.]

கைப்பிடிகாப்பு *kai-p-piḍi-kāppu*, பெ.(n) 1. நெருங்கிய நட்பு; close friendship, mental confidence. 2. அணுக்கமான (அந்தரங்கமான) ஆள்; confidential servant.

[கை + பிடி + காப்பு.]

கைப்பிடிச்சக்கை *kai-p-piḍi-c-cakkai*, பெ.(n.) தேய்ப்புவேலைக்குப்பயன்படும்மரப்பலகை; a wooden plank used for masonry polishing work.



கைப்பிடிச்சக்கை

[கை + பிடி + சக்கை.]

இது நான்கு முதல் ஆறு அங்குல அளவுள்ளதாய் இருக்கும்.

கைப்பிடிச்சட்டம் *kai-p-piḍi-c-caṭṭam*, பெ.(n.) படிக்கட்டில் கைப்பிடி இணைக்கப்பட்ட சட்டம்; hand rail on the sides of a stair-case, banisters.

[கை + பிடி + சட்டம்.]

கைப்பிடிச்சுருள் *kai-p-piḍi-c-curuḷ*, பெ.(n.) மணநிகழ்வில், மணமகளுடைய தந்தையால் மணமக்களின் விரல்களைச் சேர்த்துக் கட்டின பட்டையை அவிழ்த்ததற்காக, மணமகளின் பிறவனுக்குத் (சகோதரனுக்கு) தரும் பணப் பரிசு (G.Tn.D.136); present to the bride's brother when he unties the silk tied by the bride's father uniting the fingers of the bride and bridegroom.

[கை + பிடி + சுருள். பணவளத்திற்கேற்பக் கைப்பிடிச்சுருள் மாறுபடும்.]

கைப்பிடிச்சுவர் *kai-p-piḍi-c-cuvar*, பெ.(n.) 1. மொட்டை மாடி, படிக்கட்டு, பாலம் முதலியவற்றின் பக்கங்களில்கையாற்பிடித்துக்கொண்டுசெல்லுமாறு அமைக்கப்பட்ட உயரக் குறைவான சுவர் (C.E.M.);

wall similar to railings on both the side of staircase, bridge, etc., parapet wall. 2. சிறு சுவர்; small wall.

க. கெய்பிடிகோடெ.

[கைப்பிடி + சுவர்.]

கைப்பிடிச் செங்கல் *kaippiḍi-c-ceṅgal,* பெ.(n.) வரிசையாக நின்றுகொண்டு கைக்குக் கை மாறும் பொருள்; act of passing on a thing by hand in a row. கிடக்கின்ற விறகு கட்டைகளைக் கைப்பிடிச் செங்கலாய் உள்ளே அடுங்குங்கள் (நெல்லை.).

[கைப்பிடி + செங்கல்.]

கட்டடக் கூலித் தொழிலாளர் கைக்குக்கை செங்கல் மாற்றுவது போன்று பொருள்களை வரிசையாக மாற்றுதல்.

கைப்பிடிமடி *kaippiḍi-maḍi,* பெ.(n.) 1. மீன்தங்கும் சிறிய வலைப்பை; small netted bag for fishing. 2. வலைப்பையின் முன்பகுதி (மீனவ.); front side of the netted bag.

[கைப்பிடி + மடி.]

கைப்பிடிமோதிரம் *kaippiḍi-mōdiram,* பெ.(n.) ***கைப்பிடிக் கணையாழி*** பார்க்க see *kai-p-piḍi-k-kaṇai-y-āḻi.*

[கைப்பிடி + மோதிரம்.]

கைப்பிடியாய்ப்பிடி-த்தல் *kai-p-piḍyai-p-piḍi-,* 4 செ.குன்றா.வி. (v.t.) கையுங் களவுமாய்ப் பிடித்தல்; to catch a thief red handed, to detect a fraud even in the act of perpetration.

[கைப்பிடி + பிடி-.]

கைப்பிடிவாள் *kai-p-piḍi-vāḷ,* பெ.(n.) 1. கைவாள்; small sword (சூடா.). 2. கை அரம்பம்; hand saw.

மறுவ. கைவாள்.

[கைப்பிடி + வாள்.]

கைப்பிடிவேலி *kaippiḍi-vēli,* பெ.(n.) கோயில் கட்டட அடித்தள வரிசை அமைப்பினுள் ஒரு பகுதி; a part of a foundation structure of a temple.

[கைப்பிடி + வேலி.]

கைப்பிணக்கிடு-தல் *kai-p-piṇakkiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) கைகோத்தல்; to hold the hands of another in one's own hands. *"அவர்களோடே கைப்பிணக்கிடுகை முதலான இவன் செய்யும் விஷமங்கள் வாசாம கோசர மாகையாலே" (திவ். பெரியாழ். 2:7:4, வியா. ப. 395).*

[கை + பிணக்கு + இடு-.]

கைப்பிணி *kai-p-piṇi,* பெ.(n.) கையால் தழுவுகை; embracing.

[கை + பிணை – கைப்பிணை → கைப்பிணி.]

கைப்பிணை *kai-p-piṇai,* பெ.(n.) 1. காக்கும்படி கையில் ஒப்படைக்கப்பட்ட பொருள் அல்லது மாந்தர்; person or thing entrusted to one's care, trust. 2. வேண்டுங் காலங்களில் குற்றவாளி தவறாமல் வருவதற்கு முறை(நீதி)மன்றம் அமர்த்தும் பிணையம்; bail or security demanded by the court to ensure the appearance of the accused when summoned.

[கை + பிணை.]

கைப்பிழி *kai-p-piḻi,* பெ.(n.) கையால் பிழியப்பட்டது; that which is squeezed.

Fin. kapsata (to squeeze); Mong. xabci; Q. gapi.

[கை + பிழி.]

கைப்பிழை[1] *kai-p-piḻai,* பெ.(n.) ***கைக்குற்றம்*** பார்க்க; see *kai-k-kuṟṟam.*

ம. கய்பிழ.

[கை + பிழை.]

கைப்பிழை[2] *kai-p-piḻai,* பெ.(n.) கவனக்குறைவால் நிகழ்ந்த குற்றச்செயல்; mistake due to carelessness. *"பள்ளிசெல்வன் இவ்வூரிருக்கும் பள்ள வேணாட்டரையனைக் கைப்பிழையாலெய்து செத்தமையில்" (SII. Vol. VII. 68-12).*

க. கெய்தப்பு.

[கை + பிழை.]

கைப்பிழைபுகு-தல் *kaippiḻai-pugu-,* 2 செ.கு.வி. (v.i.) 1. கைத்தவறு நேர்தல்; to occur by slip of hand. *"சம்புபுரத்திருக்கும் பள்ளிசெல்வன் இவ்வூரிருக்கும் பள்ளி வேணாட்டராயனைக் கைப் பிழையால் எய்து செத்தமையில் நாட்டவரும் சம்புவரையரும் கூடி இவன் வேணாட்டரையனுக்காகச் சாக வேண்டாம். கைப்பிழை புகுந்தது" (S.I.I. Vol. VII, 68.).*

[கைப்பிழை + புகு-.]

கைப்பிள்ளை *kai-p-piḷḷai,* பெ.(n.) கைக்குழந்தை; baby in arms. வேலைக்காரிக்குக் கைப்பிள்ளை சாக்கு (பழ.). வயிற்றுப் பிள்ளையை நம்பி, கைப்பிள்ளையை விட்டதுபோல் (பழ.).

[கை + பிள்ளை.]

கைப்பிள்ளைக்காரி *kai-p-piḷḷaikkāri,* பெ.(n.) கைக்குழந்தை வைத்திருப்பவள்; woman having new born baby.

[கை + பிள்ளை + காரி.]

கைப்பு[1] *kaippu*, பெ.(n.) 1. அறுசுவையினொன்றான கசப்பு; one among the six flavours. 2. கசப்புப்பண்டம்; bitterness. 3. வெறுப்பு; dislike, aversion.

ம. கைப்பு.

Russ. gōrik.

[கை → கைப்பு.]

கைப்பு[2] *kaippu*, பெ.(n.) ஆடுதின்னாப்பாளை; worm-killer.

[கை → கைப்பு.]

கைப்புக்கந்தம் *kaippu-k-kandam*, பெ.(n.) கசப்புச் சரக்கு; aromatic drugs with a bitter taste (சா.அக.).

[கைப்பு + கந்தம்.]

கைப்புக்கெண்டை *kaippu-k-keṇḍai*, பெ.(n.) கருங்கெண்டை மீன்; bitter carp (சா.அக.).



கைப்புக்கெண்டை

[கைப்பு + கெண்டை.]

கைப்புச்சரக்கு *kaippu-c-carakku*, பெ.(n.) கசப்பு மருந்துச் சரக்கு; any medicinal agent having a bitter taste (சா.அக.).

[கைப்பு + சரக்கு.]

கைப்புச்சீந்தில் *kaippu-c-cīndil*, பெ.(n.) சீந்தில்; a kind of medicinal creeper.

[கைப்பு + சீந்தில்.]

கைப்புட்டில் *kai-p-puṭṭil*, பெ.(n.) கைவிரலுறை; armoured glove, glove (யாழ்.அக.).

[கை + புட்டில்.]

புட்டில் - கூடை. கூடை போன்ற அமைப்பையுடையதால் இப் பெயர் பெற்றது.

கைப்புடை[1] *kai-p-puḍai*, பெ.(n.) ***கைப்புட்டில்*** பார்க்க; see *kai-p-puṭṭil*.

[கை + புடை.]

கைப்புடை[2] *kai-p-puḍai*, பெ.(n.) அம்பின் இருபுறமும் இறைமுள் உள்ள கீழ்ப்பகுதி; the lower, feathered part of an arrow (கருநா.).

க. கெய்பொடெ.

[கை + புடை.]

கைப்புடை[3] *kai-p-puḍai*, பெ.(n.) கைக்கட்டி; boil or obscess in hand.

[கை + புடை.]

கைப்புடை[4] *kai-p-puḍai*, பெ.(n.) 1. வாயிற்காவலர் தங்குமிடம்; guard's room. *'தங்கள் கைப்புடை களிலே இருத்தி' (ஈடு.10,9:9).* 2. அருகு; nearness. *"வெண்மதிக் கைப்புடை வியாழம் போல" (பெருங். இலாவாண.19:92).*

து. கைபுடெ.

[கை + புடை.]

கைப்புண் *kai-p-puṇ*, பெ.(n.) 1. உள்ளங்கைப்புண்; any sore or ulcer in the palm (சா.அக.). *கைப்புண்ணுக்குக் கண்ணாடியா? (பழ.).* 2. தெளிவாகத் தெரிவது; anything clear to eyes.

ம. கய்யில் புண்ணு; பட. கையுண்ணு.

[கை + புண்.]

கைப்புண்ணியம் *kai-p-puṇṇiyam*, பெ.(n.) 1. பெருந்தன்மை, தயாளம்; benevolence, liberality. 2. கையமைவு (கைராசி); luckiness of one's hand.

ம. கைப்புண்ணியம்.

மறுவ. கைப்பேறு, கைவாக்கு, கைப்பாங்கு (கைராசி) கைப்பேறு.

[கை + புண்ணியம்.]

கைப்புத்துவர்ப்பு *kaippu-t-tuvarppu*, பெ.(n.) கசப்போடு கூடிய துவர்ப்பு; bitter drugs with markedly astringent taste (சா.அக.).

[கைப்பு + துவர்ப்பு.]

கைப்புநீர் *kaippu-nīr*, பெ.(n.) 1. உப்புத்தண்ணீர்; brackish water (சா.அக.). 2. கசப்புநீர்; water bitter in taste. 3. உப்புநீரின் வண்டல்; brine remaining after salt has been derived from it in salt works.

[கைப்பு + நீர்.]

கைப்புப்பட்டை *kaippu-p-paṭṭai*, பெ.(n.) ஒருவகை மரத்தின் கசப்புப்பட்டை; bitter bark of a tree (சா.அக.).

[கைப்பு + பட்டை.]

கைப்புப்பண்டம் *kaippu-p-paṇḍam,* பெ.(n.) கசப்புத் தின்பண்டம்; any bitter substance (சா.அக.).

[கைப்பு + பண்டம்.]

கைப்புப் பீர்க்கு *kaippu-p-pīrkku,* பெ.(n.) கசப்புப் பீர்க்கு; bitter gourd (சா.அக.).

[கைப்பு + பீர்க்கு.]

கைப்புப்புல் *kaippu-p-pul,* பெ.(n.) கசத்தம்புல்; bitter grass (சா.அக.).

[கைப்பு + புல்.]

கைப்புமருந்து *kaippu-marundu,* பெ.(n.) கசப்பு மருந்து; bitter medicine (சா.அக.).

[கைப்பு + மருந்து.]

கைப்புமாறல் *kaippu-māṟal,* பெ.(n.) 1. கசப்பு மாறுதல்; change of bitterness (சா.அக.). 2. மருந்துணாக்கொள்ளும்போது கசப்புப்பண்டங்களை விலக்கல்; abstaining from taking bitter substances when on diet.

[கைப்பு + மாறல்.]

கைப்புமானோன் *kaippumāṉōṉ,* பெ.(n.) ஒருவகைச் செய்நஞ்சு; a kind of arsenic.

[கைப்பு + உம் + ஆனோன்.]

கைப்புயம் *kai-p-puyam,* பெ.(n.) ***கைப்பட்டை*** பார்க்க; see *kai-p-paṭṭai.*

[கை + புயம்.]

கைப்புரட்டு *kai-p-puraṭṭu,* பெ.(n.) கைத்திறமையால் செய்து காட்டும் ஏமாற்று வேலை; illusionary acts performed by the sleight of the hand. 2. கைமாற்று; short loan by way of accommodation.

[கை + புரட்டு.]

கைப்புலி *kai-p-puli,* பெ.(n.) யானை; elephant. lit., tiger with a hand elephant.

[கை + புலி.]

கைப்புவலியுறுத்தி *kaippu-vali-y-uṟutti,* பெ.(n.) வலிமையை உண்டாக்கும் கசப்பு மருந்து; bitter tonic (சா.அக.).

[கைப்பு + வலி + உறுத்தி.]

கைப்புவாதுமை *kaippu-vādumai,* பெ.(n.) கசப்பு வாதுமைக் கொட்டை; bitter almond (சா.அக.).

[கைப்பு + வாதுமை.]

கைப்புவெட்பாலை *kaippu-veṭpālai,* பெ.(n.) கசப்பு வெட்பாலை; bitter oleander (சா.அக.).

[கைப்பு + வெட்பாலை – கைப்பு வெட்பாலை.]

கைப்புவேம்பு *kaippu-vēmbu,* பெ.(n.) நிலவேம்பு; king of bitters, Justicia Paniculata (சா.அக.).

[கைப்பு + வேம்பு.]

கைப்பூட்டு[1] *kai-p-pūṭṭu,* பெ.(n.) சிறிய பூட்டு; small lock.

ம. கைப்பூட்டு

[கை + பூட்டு.]

கைப்பூட்டு[2] *kai-p-pūṭṭu,* பெ.(n.) 1. மல்லரின் கைப்பிடி; hand-grip in wrestling. 2. தோட் பொருத்து; shoulder joint.

ம. கைப்பூட்டு.

[கை + பூட்டு.]

கைப்பெட்டகம் *kai-p-pēṭṭagam,* பெ.(n.) ***கைப் பெட்டி*** பார்க்க; see *kai-p-pēṭṭi.*

ம. கைப்பெட்டகம்; **க.** கைபெட்டிக.

[கை + பெட்டகம்.]

கைப்பெட்டி *kai-p-pēṭṭi,* பெ.(n.) சிறுபெட்டி; small box.

ம. கைபெட்டி, கய்பெட்டி; **க.** கைபெட்டிகெ, கெய்பெட்டிகெ; **தெ.** சேபெட்டெ; **பட.** கைப்பெட்டி.

[கை + பெட்டி.]

கைப்பேறிப்புளி *kaippēṟi-p-puḷi,* பெ.(n.) காட்டெலுமிச்சை; Indian wild lime (சா.அக.).

[கைப்பு + ஏறி + புளி.]

கைப்பேறு *kai-p-pēṟu,* பெ.(n.) மருத்துவக் குணம் உண்டாவதாகக் கருதப்படும் தன்மை; success or skill in medical treatment.

மறுவ. கைராசி.

[கை + பேறு.]

கைப்பை *kai-p-pai,* பெ.(n.) 1. சொந்தச் செலவிற்காகப் பணம் வைக்கும் பை; a purse or bundle of money for one's use. 2. சிறுபை; a small bag.

க. கெய்கண்டு, கெய்சீல; **பட.** கைசீர, கய்சீர.

[கை + பை.]

கைப்பொட்டு *kai-p-poṭṭu,* பெ.(n.) ஒருவகை அணி; a kind of an ornament. *"திருக்கைப் பொட்டு ஒன்று"* (S.I.I.II,80,7).

[கை + பொட்டு.]

கைப்பொருள் *kai-p-poruḷ*, பெ.(n.) கையிலுள்ள பொருள்; cash in hand, property in possession. *"கைப்பொருள் போகூழாற் றோன்றும் மடி" (குறள்.371).*

மறுவ. கைம்முதல்.

ம. கைப்பொருள்; க. கெய்கண்டு.

[கை + பொருள்.]

கைப்பொல்லம் *kai-p-pollam*, பெ.(n.) சிறுதுண்டு (யாழ்.அக.); small piece.

[கை + பொல்லம்.]

கைப்பொலி *kai-p-poli*, பெ.(n.) கையாலள்ளும்பொலி; a handful of winnowed corn in the heap.

[கை + பொலி.]

கைப்பொழுது *kai-p-poḻudu*, பெ.(n.) கதிரவன் தோன்றும் போதும் மறையும் போதும் நிலவுலகுக்குமேல் கைம்முழ வுயரத்திலிருப்பதாகத் தோன்றும் சிறு நேரம் (வின்.); the time during which the rising or setting sun is just above the horizon. கைப்பொழுதாயும் காட்டுக்குப் போகலையா? கைப்பொழுது இருக்கவே வேலையை ஏறக்கட்டி விட்டாயா? (உ.வ.).

[கை + பொழுது.]

கைப்பொறுப்பாய் *kai-p-poṟuppāy*, கு.வி.எ.(adv.) 1. பொறுப்பாய், அக்கறையாய்; with full responsibility, earnestly. 2. ஊக்கம் தளராமல்; diligently.

[கை + பொறுப்பாய்.]

கைப்பொறுப்பு *kai-p-poṟuppu*, பெ.(n.) 1. வணிகம் முதலியவற்றில் செலவு இழப்பு முதலியவை தன் பொறுப்பு ஆகுகை; monetary or financial responsibility. 2. இழப்பு; loss. 3. தன் பொறுப்பு; self responsibility.

[கை + பொறுப்பு.]

கைபடி–தல் *kai-paḍi-*, 4 செ.கு.வி.(v.i.) தொழிலிற் கைதிருந்துதல்; to acquire ease and skill in manual art and craft. *"கைபடியத் திருமகளைப் படைத்திவளைப் படைத்தனன்" (தனிப்பா.1, 147:48)*

[கை + படி–.]

கைபதறு–தல் *kai-padaṟu-*, 8 செ.கு.வி.(v.i.) பதற்றப்படுதல்; to be in a hurry. *"காரியவசத்தினர்கள் கைபதறல் செய்யார்" (பிரபோத. 5:24).*

[கை + பதறு–.]

கைபதில் *kai-padil*, பெ.(n.) ***கைமாற்று*** பார்க்க; see *kai-māṟṟu*.

து. கைபத்லு.

[கை + பதில்.]

கைபரி–தல் *kai-pari-*, 4 செ.கு.வி.(v.i.) ஒழுங்கு குலைதல்; to fall into disorder. *"கார்மழை முன்பிற் கைபரிந்து" (பதிற்றுப்.83:1).*

[கை + பரி–.]

கைபரிமாறு[1]–தல் *kai-parimāṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. தூய்மை கெடும்படி தொடுதல்; to pollute or make unclean by touch. 2. கற்பை யழித்தல்; to violate the chastity of a woman. 3. கவர்தல், எடுத்துக்கொள்ளுதல்; to missappropriate, to embezzle.

[கை + பரிமாறு–.]

கைபரிமாறு[2]–தல் *kai-parimāṟu-*, 5 செ.கு.வி.(v.i.) அடிபிடிசண்டையிடுதல்; to fight, exchange blows.

[கை + பரிமாறு–.]

கைபலிதம் *kai-palidam*, பெ.(n.) கைவரியால் (அஸ்த ரேகையால்) மருத்துவத்தொழிலில் கைதொட்டவுடன் குணமாகும் தன்மை; the curing power of diseases due to peculiar link (சா.அக.).

[கை + பலிதம்.]

கைபறி–தல் *kai-paṟi-*, 4 செ.குன்றாவி. (v.t.) கை தவறுதல் (வின்.) (செ.அக.); to slip, as a hold, to slip or fall out of the hands.

[கை + பறி–.]

கைபாகம் *kai-pāgam*, பெ.(n.) 1. கைம்முறை; the skill of hand in compounding medicines as opposed to ceypāgam. 2. வீட்டுமருந்து; household medicine. 3. மருத்துவமுறைசாரா மருத்துவம் (பண்டுவம்); non-medicinal treatment. 4. சமையல்பாகம்; skill in cooking (சா.அக.).

[கை + பாகம்.]

கைபார்[1]–த்தல் *kai-pār-*, 4 செ.கு.வி.(v.i.) 1. கைந்நாடி பார்த்தல்; to feel the pulse of. 2. கைவரை (இரேகை) பார்த்தல்; to read the line of the palm. 3. உதவி நாடுதல்; to seek the help of. ஏழைகள் செல்வரின் கைபார்த்து வாழ வேண்டி யிருக்கிறது (உ.வ.).

[கை + பார்–.]

கைபார்[2]–த்தல் *kai-pār-*, 4 செ.குன்றாவி.(v.t.) 1. பழுதுபார்த்தல் (யாழ்ப்.); to make repairs. 2. வணிகச்

சரக்குகளைச் சரிபார்த்தல்; to examine goods, as a trader. 3.பொருள்களைத் தரம் பிரித்தல்; to divide according to quality or standard.

[கை + பார். கை - ஒழுங்கு.]

கைபாரமாய்ப் பொடித்தல் *kai-pāramāy-p-poḍittal,* தொ.பெ.(vbl.n.) கையின் வலிவு கொண்டளவில் அழுத்திப்பொடி செய்தல்; pulverising by exerting as much pressure as possible with the hand (சா.அக.).

[கை + பாரமாய் + பொடித்தல்,]

கைபிசை—தல் *kai-pišai-,* 4 செ.கு.வி.(v.i.) செய்வ தறியாது திகைத்தல்; lit., to wring the hands, to be in a fix, to be in deep affliction.

[கை + பிசை—.]

கைபிடி[1]—த்தல் *kai-piḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) கைக்கொள்ளுதல்; to take on hand, entertain, cherish. *"கைபிடித்து விடுதற் குரியதோ" (அரிச்சந். நகர்நீ.123).*

க. கெய்விடி, கெய்பிடி.

[கை + பிடி.]

கைபிடி[2]—த்தல் *kai-piḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) மணம் செய்தல்; to marry. கைபிடித்த நாள் முதலாய் அவளைக் கண்கலங்காமல் காத்து வருகிறேன் (உ.வ.).

[கை + பிடி—.]

கைபிடி[3] *kai-piḍi,* பெ.(n.) 1. ***கைப்பிடி*** பார்க்க; see *kai-p-piḍi.* 2. கையிற் பெற்றுக்கொண்ட பொருள்; money or thing received on hand. *'இவ்வாடு திருவுண்ணாழிகையுடையார் கைபிடி' (S.I.I.III.107).*

[கை + பிடி—.]

கைபிடித்துப் பார்—த்தல் *kai-piḍittu-p-pār-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. நாடித்துடிப்பை அறிதல்; to feeling the pulse of a patient. 2. உள்ளங்கை வரியை ஆய்தல்; to read the lines of the palm. 3. வல்லமையை ஆய்தல்; to try one's ability or strength (சா.அக.).

[கை + பிடித்து + பார்—.]

கைபிடிபத்திரம்[1] *kai-piḍi-pattiram,* பெ.(n.) ***கைபிடியாவணம்*** பார்க்க; see *kai-piḍi-y-āvaṇam.*

[கைபிடி + பத்திரம்.]

கைபிடிபத்திரம்[2] *kai-piḍi-pattiram,* பெ.(n.) ***கைபிடிகாப்பு*** பார்க்க; see *kai-piḍi-kāppu.*

[கைபிடி + பத்திரம்.]

கைபிடியாவணம் *kai-piḍi-y-āvaṇam,* பெ.(n.) வைப்பு நிதி, வைப்புப்பொருள்; wealth well secured or guarded.

[கைபிடி + ஆவணம்.]

கைபிழைபாடு *kai-piḻai-pāḍu,* பெ.(n) ***கைப்பிழை*** (வின்.) பார்க்க; see *kai-p-piḻai.*

[கைபிழை + பாடு.]

கைபின்வளைவு *kai-piṉ-vaḷaivu,* பெ.(n.) பிறக்கும் பொழுதே கையின் பக்கமாக வளைந்திருக்கும் ஒருவகை முடம்; backward deviation of the hand from the time of birth (சா.அக.).

[கை + பின் + வளைவு.]

கைபுகு—தல் *kai-pugu-,* 21 செ.கு.வி. (v.i.) 1. வயப் படுதல்; to come with in one's reach or grasp. *"திருமந்திரங் கைபுகுந்தவாறே ஈசுவரன் கைபுகும்" (ஸ்ரீவசன.97).* 2. ஒருவன் பேரிலிருந்த ஆவணம் பிறனொருவன் பேருக்கு மாறுதல்; to be assigned, to be made over, as a document. இது கைபுகுந்த ஆவணம் (பத்திரம்) (இ.வ.).

க. கெய்வொகு, கெய்புகு.

[கை + புகு—.]

கைபுடை—த்தல் *kai-p-puḍai-,* 4 செ.குன்றாவி.(v.t.) கைதட்டுதல்; to strike one's hand on. *"காணுநர் கைபுடைத் திரங்க" (பதிற்றுப்.19).*

[கை + புடை—.]

கைபுனை[1]—தல் *kai-puṉai-,* 2 செ.குன்றாவி.(v.t.) 1. அழகுபடுத்துதல்; to adorn, decorate. *"கைபுனைந்த பூமலி சேக்கை" (பு.வெ.12, பெண்பாற்.4).* 2. பூத்தொடுத்தல் (வின்.); to string as flowers.

க. கெய்கெய்; **தெ.** கைசேய்.

[கை + புனை—.]

கைபுனை[2] *kai-puṉai,* பெ.(n.) 1. பூத்தொடுக்கை (சது.); stringing as flowers. *"கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு" (திருமுருகு.).*

[கை + புனை.]

கைபூசு—தல் *kai-pūšu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. உண்ட கையைக் கழுவுதல்; to wash the hand after meals. *"மறையோ ரினிதருந்திக் கைபூசி" (கூர்மபு. தென்புலத்.9).*

[கை + பூசு—.]

கைபோ[1]–தல் *kai-pō-,* 8 செ.கு.வி.(v.i.) முற்றும் வல்லவனாதல்; to attain thorough mastery. *"ஓவியத்துறை கைபோய வொருவனை" (நைடத. அன்.கண்.6).*

[கை + போ–.]

கைபோ[2]–தல் *kai-pō-,* 8 செ.குன்றாவி.(v.t.) கடந்து செல்லுதல்; to overstep, pass beyond, exceed the limits. *"நிறையெனுஞ் சிறையைக் கைபோய்" (சீவக.710).*

[கை + போ–.]

கைபோட்டிழு–த்தல் *kai-pōṭṭiḻu-,* 4 செ.குன்றாவி. (v.t.)கையை உள்ளேவிட்டு இழுத்துவெளிப்படுத்தல்; pulling out by inserting one's hand as a child from the womb (சா.அக.).

[கை + போட்டு + இழு–.]

கைபோடு–தல் *kai-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. கை வைத்தல்; to put or apply the hand. 2. கை கொடுத்து உறுதி தருதல் (இ.வ.); to confirm a promise by offering the hand. 3. தொழிலேற்கத் தொடங்குதல்; to undertake a business. *'வேலையில் இன்னுங் கைபோடவில்லை' (வின்.).* 4. பிறரறியாமல் கைகளைத் துணியால் மறைத்துக் கொண்டு கைக்குறிப்பால் விலை பேசுதல் (உ.வ.); to consult secretly about the price of a thing by making signs with hands under cover. 4. காமவெறியோடு தொடுதல் (இ.வ.); to commit indecent assalt on a woman.

க. கெய்காகு.

[கை + போடு–.]

கைம்பெண் *kaim-peṇ,* பெ.(n.) ***கைம்பெண்டாட்டி*** பார்க்க; see *kaim-peṇḍāṭṭi.*

[கை + பெண்.]

கைம்பெண்கூறு *kaimpeṇ-kūṟu,* பெ.(n.) ஆண் வழித்தோன்றலில்லாத கணவனையிழந்தாளுக்குக் குடும்பச்சொத்திலிருந்துகொடுக்கும்வாழ்க்கைப்படி (சீவனாம்சம்) (இ.வ.); allowance, out of family funds, made to a son's widow for maintenance.

[கைம்பெண் + கூறு.]

கைம்பெண்சாதி *kaim-peṇšādi,* பெ.(n.) கைம்பெண்; widow.

[கைம்பெண் + சாதி.]

கைம்பெண்டாட்டி *kaim-peṇḍāṭṭi,* பெ.(n.) கணவனை இழந்தவள் (விதவை); widow.

மறுவ. கைம்மை, கைனி, கலங்கழி, மடக்கை.

[கைம்(மை) + பெண்டாட்டி.]

கைம்பெண்ணுடை *kaim-peṇ-uḍai,* பெ.(n.) கணவனை இழந்த பெண் உடுத்தத் தக்க உடை; a dress of a widow.

[கைம்பெண் + உடை.]

கைம்பெண்மணம் *kaim-peṇ-maṇam,* பெ.(n.) கணவனையிழந்தவளை மணத்தல்; marring a widow.

[கைம்பெண் + மணம்.]

மணமகள் நிலைபற்றி, தமிழ் மணங்கள் 1. கன்னி மணம், 2. கட்டுப்பட்ட மணம், 3. கைம்பெண்மணம் என முத்திறப்படும். இவற்றுள் பின்னவை யிரண்டும் இழந்தோர் மணமாகவும் இடைத்தரத்தோர் மணமாகவும் இருந்து வந்திருக்கின்றன (தமிழர் திருமணம்,28).

கைம்மகவு *kai-m-magavu,* பெ.(n.) பச்சிளங் குழந்தை ; babe in arms. *"கைம்மகவொடுங் காதலவரொடும்" (பரிபா.15:47).*

மறுவ. கைப்பிள்ளை, கைக்குப்பிள்ளை, கைக்குழந்தை, இளம்பிள்ளை.

க. கைம்மொகு; **தெ.** செய்பிட்ட.

[கை + மகவு.]

கைம்மட்டம் *kai-maṭṭam,* பெ.(n.) 1. கைமதிப்பீடு, கைமட்டு; level fixed by hand. 2. கொத்தன் கைமட்டம் பார்க்க உதவும் கருவி (ரசமட்டம்); hand level used to see level by the mason.

மறுவ. கைமட்டு, கைமதியம்.

[கை + மட்டம்.]

கைம்மடல் *kai-m-maḍal,* பெ.(n) தோட்பட்டை (யாழ்.அக.); scapula, shoulder blade. 2. கைச்சீப்பு; comb.

[கை + மடல்.]

கைம்மணி *kai-m-maṇi,* பெ.(n.) 1. பூசையில் வழங்கும் சிறுமணி; hand bell used in worship. *"கைம்மணிச் சீரன்றிச் சீரறியா" (தமிழ்வா.102).* 2. கைத்தாளம்; cong used in temple. 3. கோல் கொண்டடிக்கும் வட்ட மணிவகை (சேமக்கலம்); cymbals.

மறுவ. படலிகை, பரந்தவட்டம்.

க. கெய்கண்டெ

*[கை + மணி.]

கைம்மதம் *kai-m-madam,* பெ.(n.) யானையின் துதிக்கையினின்றுவெளியேறும்மதநீர் (திவா.); exudation from the trunk of an elephant in rut.

[கை + மதம்.]

கைம்மதியம் *kai-m-madiyam,* பெ.(n.) கைமட்டு; level fixed by hand.

[கை + மதியம் (மதிப்பீடு).]

கைம்மயக்கம் *kai-m-mayakkam,* பெ.(n.) இன்ப மயக்கம்; fascination, infatutation. *"திரிகண்ண ரானவர் செய்தகைம்மயக்கமோ" (குற்றா.குற.70:26).*

[கை + மயக்கம்.]

கைம்மயக்கு *kai-m-mayakku,* பெ.(n.) 1. ***கைம் மயக்கம்***பார்க்க; see *kai-m-mayakkam.* 2. ஒருவசிய மருந்து;

[கை + மயக்கு.]

கைம்மரம் *kai-m-maram,* பெ.(n.) வீட்டின் பாய்ச்சு மரம்; one of the sloping beams of the house, rafter.



கைம்மரம்

[கை + மரம்.]

கைம்மருந்து *kai-m-marundu,* பெ.(n) 1. கையிலுள்ள மயக்கு (வசிய) மருந்து; medicine for infatuation kept always on hand for use. *"அவன் கைம்மருந்தான் மெய்ம்மறந்துதிரிகின்றாபோ" (தனிப்பா.1.323:18).* 2. தான் பயன்படுத்திப் பயன் அடைந்த (அனுபவப்பட்ட) மருந்து (வின்.); simple medicine prepared from one's own experience. 3. கணவனைத் தன் வயமாக்கப் பெண்டிர் பயன்படுத்தும் மருந்து; specifics administered by wives to keep their husbands from straying. 4. மருத்துவரின்றித் தாமே செய்து கொடுக்கு மருந்து; self prepared medicine without doctor.

து. கயிமர்த்.

[கை + மருந்து.]

கைம்மலை *kai-m-malai,* பெ.(n) மலை போன்றது, கையை உடைய யானை (அக.நி.); lit., mountain with a hand, elephant.

[கை + மலை.]

கைம்மறதி *kai-m-maradi,* பெ.(n) நினைவுதவறுகை; forgetfulness, as of a place where a thing was kept. தமிழர் வரலாறு என்ற பாவாணரின் நூலை கைமறதியாக எங்கோ வைத்துவிட்டேன் (உ.வ.). 2. அயர்ச்சி; forgetfulness.

[கை + மறதி.]

கைம்மறி-த்தல் *kai-m-mari-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கையால் தடுத்தல்; to check or resist with the fore-arm. 2. கைகவித்து விலக்குதல்; to wave the open hand as a sign of disapproval. *"கைம்மறித்த காந்த ளந்தோ தகாதெனவே" (சீவக.1227).*

[கை + மறி-.]

கைம்மறை[1] *kai-m-marai,* பெ.(n.) கையால் மறைத்தல்; hiding through hands.

[கை + மறை.]

கைம்மா *kai-m-mā,* பெ.(n.) துதிக்கையை உடைய விலங்கு, யானை; elephant, an animal with a trunk. *"பொலம்படைக் கைம்மாவை" (பரிபா.11:52).*

மறுவ. கைக்குன்று, கைம்மலை, உம்பல், உவா, ஓங்கல், கரி, கள்வன், கறையடி, குஞ்சரம், தும்பி, நால்வாய், புகர்முகம், புழைக்கை (பூட்கை), பெருமா, பொங்கடி, யானை (ஏனை), வழுவை, வாரணம், வேழம், கைப்புலி.

[கை + மா - கைம்மா.]

கைம்மாட்டாங்கானா-தல் *kai-m-mattāṅgāṉā-,* 6 செ.கு.வி.(v.i.) கையெழுத்து இடுவதற்கு ஆகமாட்டாதவனாக இருத்தல்; one who becomes unfit to put his own signature. *"இது பற்ற முடையான் கைம்மாட்டாங் கானமைக்கு, இவை பற்றமுடையான இவை தாண்டான் எழுத்து" (தெ.கல்.தொ.5 கல்.985) (கல்.அக.).*

[கை + மாட்டாங்கான் (மாட்டாமை) + ஆதல்.]

கைம்மாட்டாங்கு *kai-m-mättāṅgu,* பெ.(n.) தற்குறி; mark. *"ஆளுடையானும் கைம்மாட்டாங் கானமைக்கும்" (S.I.I. VIII, 406).*

[கை + மாட்டாங்கு (மாட்டாமை, இயலாமை, கையால் எழுதத் தெரியாமை).]

கைம்மாய்ச்சி *kai-m-māyccı,* பெ.(n.) கைவிலங்கு (யாழ். அக.); handcuff.

மறுவ. கைமாச்சி, கைமாச்சு.

[கை + மாய்ச்சி (மாய்ச்சி - பூட்டுவிலங்கு.]

கைம்மாயம் *kai-m-māyam,* பெ.(n.) ***கைமயக்கு*** பார்க்க; see *kai-mayakku.*

[கை + மாயம்.]

கைம்மாற்று *kai-m-māṟṟu-,* பெ.(n.) சிறிய கடன் தொகை; hand loan (of money). கைமாற்றாக வாங்கிய பணத்தை மறுநாளே திரும்பக் கொடுத்து விட்டேன் (நெல்.வழ.).

க. கெய்பதலு.

[கை + மாற்று.]

கைம்மாறு[1]—தல் *kai-m-māṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1.மேற்கொள்ளுதல்; to assume, partake, usurp. *"களிற்றியல் கைம்மாறுவார்" (பரிபா.9:50).*

து. கயிமாருனி.

[கை + மாறு—.]

கைம்மாறு[2] *kai-m-māṟu,* பெ.(n.) 1. பகரம் (பதிலி); substitute, exchange. *"கைம்மாறா நோயும்பசலையுந் தந்து" (குறள். 1183).* 2. செய்த உதவிக்குச் செய்யும் நன்றி; recompense, return. *"கைம்மாறு வேண்டா கடப்பாடு" (குறள்.211).*

[கை + மாறு. கையினது மறுசெய்கை, அதேபோன்ற மாற்றுச் செய்கை.]

கைம்மாறுவெற்றிலை *kai-m-maṟu-veṟṟilai,* பெ.(n.) ஒருவகை வெற்றிலை; a kind of betel leaf (சா.அக.).

மறுவ. கம்மாறு வெற்றிலை.

[கய் → கைம் + மாறு + வெற்றிலை.]

கைம்மிகல் *kai-m-migal,* பெ.(n.) ***கைமிகுதல்*** பார்க்க; see *kai-migu-.*

[கை + மிகல்.]

கைம்மிகு—தல் *kai-m-migu-,* 21 செ.கு.வி.(v.i.) 1. அன்பு, துன்பம், நோய் போன்றவை அளவு கடத்தல்; to exceed the limit, to be beyond sufferance, as love, sorrow, disease. *"காப்புக் கைம்மிகுதல்" (தொல்.பொருள்.214).* 2. இனக் கட்டுப்பாட்டிற்கு மாறுபட்டு ஒழுகுதல்; to violate the caste rules. *"கைம்மிக னலிதல்" (தொல். பொருள்.260).*

[கை + மிகு—.]

கைம்மிடிப்பு *kai-m-miḍippu,* பெ.(n.) கையிலொன்று மில்லாமை; nothing in hand.

[கை + மிடிப்பு.]

கைம்மீறு—தல் *kai-m-mīṟu-,* 5 செ.கு.வி.(v.i.) அளவுக்கு மிஞ்சுதல்; to exceed, transgress. கடன் பட்டவரின் வாழ்க்கை கைம்மீறிப்போய்விட்டது (உ.வ.).

து. கைமீரு.

[கை + மீறு.]

கைம்மீன் *kai-m-mīṉ,* பெ.(n.) பதின்மூன்றாவது விண்மீன் (அத்தம்); the 13th naksatra.

[கை + மீன்.]

கைம்முகிழ்—த்தல் *kai-m-mugiḻ-,* 4 செ.கு.வி.(v.i.) கடவுள் வழிபாடு வணக்கம் முதலியவற்றில் கையைக் கூப்புதல் (உ.வ.); to join or unite the palms of the hand, as in salute, prayer, etc.

து., பட.கைமுகி.

[கை + முகிழ்—.]

கைம்முட்டு *kai-m-muṭṭu-,* பெ.(n.) ***கைம்மிடிப்பு*** பார்க்க; see *kai-m-miḍippu.*

[கை + முட்டு.]

கைம்முடக்கம் *kai-m-muḍakkam,* பெ.(n) மூட்டு வினைக்கேடு; lameness.

[கை + முடக்கம்.]

கைம்முடிப்பு *kai-m-muḍippu,* பெ.(n.) முடிப்புப் பணம்; wrapped money, bundled cash.

[கை + முடிப்பு.]

கைம்முதல் *kai-m-mudal,* பெ.(n.) 1.வணிகம் முதலியவற்றிற்கு வைத்த கைப்பொருள்; business capital investment. 2. கையில் இருக்கும் பணம்; cash in hand, savings, ready money. *"கைம்முதற்கு நட்டமில்லை" (பணவிடு.241).* 3.விலைமதிப்புமிக்க பொருள்; cash, valuables. *"கைம்முதல் கொடுத்தனர்" (உபதேச கா. சிவத்துரோ.72).* 4. முறை (சாதனம்); means. *'ஒரு கைம்முத லின்றிக்கே யிருக்க' (ஈடு,4,7:9).*

ம. கைமுதல்.

[கை + முதல் – கைமுதல் → கைம்முதல்.]

கைம்முற்று—தல் *kai-m-muṟṟu-,* 6 செ.கு.வி.(v.i.) முடிவு பெறுதல்; to be finished, exhausted. *"கைம்முற் றலநின் புகழே" (புறநா.53:8).*

[கை + முற்று—.]

கைம்முறி—தல் *kai-m-muṟi-,* 2 செ.கு.வி. (v.i.) ஏற்ற துணை இல்லாது போதல்; devoid of companion.

[கை + முறி—.]

கைம்முறை *kai-m-muṟai,* பெ.(n.) ஆடல் (நர்த்தனம்); dance. *"நின்று பண்ணுங் கைம்முறை தப்பா" (சரவண.பணவிடு.417).*

[கை + முறை.]

கைம்மூலம் *kai-m-mūlam,* பெ.(n.) 1.அக்குள்; arm pit. 2. கன்று செத்த பின்பு கறக்கும் பால்; milk drawn after the death of calf. 3. கையினடி; back arm. 4. முகாந்திரம்; *cause, reason.*

[கை + மூலம்.]

கைம்மெய்காட்டு-தல் *kai-m-mei-kāṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) அபிநயங்காட்டல்; to indicate passion.

[கை + மெய் + காட்டு-.]

கைம்மேல் *kai-mēl,* வி.எ.(adv.) ***கைமேலே*** பார்க்க; see *kai-mēlē.*

[கை + மேல்.]

கைம்மேற்பணம் *kai-m-mēṟ-paṇam,* பெ.(n.) உடனே கையிற் கொடுக்கும் பணம்; cash on hand.

[கை + மேல் + பணம்.]

கைம்மை[1] *kai-m-mai,* பெ.(n.) 1.காதலனைப் பிரிந்திருக்குந் தனிமை; love-lorn condition. *"கைம்மையா லொண்கலையும்... தோற்றவர்கள்" (பதினொ. ஆளு. திருவுலா. 128).* 2. கணவனை யிழந்த நிலைமை; widowhood. *"கருந்தடங் கண்ணி கைம்மை கூறின்று" (பு.வெ.10, சிறப்பிற். 4, கொளு).* 3. கணவனை இழந்தவள் (விதவை); widow. *"ஓர் கைம்மையைக் கலத்த னோக்கி" (நைடத. கலிதோன்று.9).*

[கை → கைம்மை.]

கைம்மை[2] *kai-m-mai,* பெ.(n.) 1.சிறுமை; discomfiture, degradation, ignominy. *"கைம்மை கொள்ளேல் காஞ்சன" (மணிமே.20:122).* 2. அறி வின்மை; ignorance. *"கைம்மையி னானின் கழல் பர வாது" (பதினொ. ஆளு. திருவந்.18).* 3. பொய்; lie. *"கைம்மை சொல்லி" (திவ். திருவாய். 5:1:1).*

[கை + மை.]

கைம்மை பெற்றோன் *kaimmai-peṟṟōṉ,* பெ.(n.) கைம்பெண்ணிடம் பிறந்தவன் (சூடா.); one born of a widow.

[கைம்மை + பெற்றோன்]

கைம்மை வினை *kaimmai-viṉai,* பெ.(n.) கையால் வேலை செய்யும் திறம்; manual skill. *"கைம்மை வினையினில் வேறுவேறு கறியமு தாக்கி" (பெரியபு. இளையான்குடி. 22).*

[கை → கைம்மை + வினை.]

கைம்மோசம் *kai-m-mōśam,* பெ.(n.) செய்கைப் பிழை; error, omission.

[கை + மோசம்.]

கைமகவு *kai-magavu,* பெ.(n.) ***கைப்பிள்ளை*** பார்க்க; see *kai-p-piḷḷai.*

[கை + மகவு.]

கைமட்டம் *kai-maṭṭam,* பெ.(n.) 1.***கைமதிப்பு*** பார்க்க; see *kai-madippu.* 2. கைப்பழக்கம் (வின்.); precision of hand acquired by practice. 3. கொத்தன் மட்டம் பார்ப்பதற்கு உதவுங் கருவி (இ.வ.); a mason's implement for level-testing. 4. தரைமட்டத்திலிருந்து தாழவிட்ட கை நுனி வரையிலுள்ள உயரம்; height up to the tips of the hanging arms. கைமட்டத்துக்குச் சுவரை உயர்த்து (உ.வ.).

[கை + மட்டம்.]

கைமட்டு *kai-maṭṭu,* பெ.(n.) ***கைமதிப்பு*** (வின்.) பார்க்க; see *kai-madippu.*

[கை + மட்டு.]

கைம்மடங்கு-தல் *kai-madaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) வாளாவிருத்தல்; laziness, not doing anywork. *"உழவினார் கைம்மடங்கின் இல்லை" (குறள்.1036).*

கைமடிப்பு *kai-maḍippu,* பெ.(n.) கீழறுப்பு, ஏமாற்று (வஞ்சகச்செயல்) (வின்.); cheating, duplicity.

[கை + மடிப்பு.]

கைமண்டை *kai-maṇḍai,* பெ.(n.) 1.நீர் முதலியன ஏற்பதற்கு ஏனம்போல் குவித்துக் கொள்ளுங் கை; hands held like a bowl. *குழந்தைக்குப் பாலைக் கைமண்டை வைத்துப் புகட்டு (உ.வ.).*

[கை + மண்டை. மொந்தை → மந்தை → மண்டை.]

கைமணி *kai-maṇi,* பெ.(n.) பூசை போன்றவற்றில் பயன்படுத்தும் சிறிய மணி; a kind of small bell. *"கைமணி ஓரணை நிறை ஐம்பத்தெண்பலம்" (S.I.I.V.521:10).*

ம. கைமணி.

[கை + மணி.]

கைமதிப்பு *kai-madippu,* பெ.(n.) 1.கையால் தூக்கி மதிக்கும் மதிப்பு; estimating weight by hand. 2. தோராய மதிப்பு (இ.வ.); rough estimation.

ம. கைமதிப்பு.

[கை + மதிப்பு.]

கைமதியம் *kai-madiyam,* பெ.(n.) ***கைமதிப்பு*** (யாழ்.அக.) பார்க்க; see *kai-madippu.*

[கை + மதி + அம். அம். சொ.ஆ.ஈறு. ஒ.நோ: தேக்கம்.]

கைமதில் *kai-madil,* பெ.(n.) உயரம் குறைந்த மதில்; a low wall.

ம. கைமதில்.

[கை + மதில்]

கைமயக்கு *kai-mayakku,* பெ.(n.) வசிய மருந்து (இ.வ.); a preparation of drugs for keeping a person under fascination.

[கை + மயக்கு.]

கைமரம் *kai-maram,* பெ.(n.) 1. வீட்டுக்கூரையின் மரச்சட்டம் அல்லது நெற்றிச்சரம்; rafter of roof. 2. உழுத வயலைச் சமமாக்கப் பயன்படுத்தும் பலகை; a short leveling plank used in paddy fields.

ம. கைமரம்.

[கை + மரம்.]

கைமருத்துவம் *kai-maruttuvam,* பெ.(n.) 1.பட்டறிவு மருத்துவம்; practice of medicine through experience. 2. வீட்டு மருத்துவம்; home treatment. 3.கைப்பாகம்; palliative treatment. 4. எல்லோருக்கும் தெரிந்த மருத்துவம்; medical treatment known to everybody, well known medical treatment.

க. கெய்கரண.

[கை + மருத்துவம்.]

கைமருந்து *kai-marundu,* பெ.(n.) 1.அணியம் செய்து கையிலிருக்கும் மருந்து ; prepared medicine on hand. 2. கைமுறையாற் செய்த மருந்து; medicine prepared by experience. 3. கைக்கிடு மருந்து; medicine applied to hand or arm (சா.அக.).

[கை + மருந்து.]

கைமலம் *kai-malam,* பெ.(n.) 1. கன்றிறந்த பின் பால் கொடுக்கும் மாடு (இ.வ.); cow that milks after having lost its calf (செ.அக.). 2. ***கைம்மூலம்*** பார்க்க; see *kai-m-mūlam.*

[கை + மூலம் – கைமூலம் → கைமலம் (கொ.வ.).]

கைமலிவு *kai-malivu,* பெ.(n.) விலைநயம்; cheapness. கைமலிவு பார்த்து வாங்கு (இ.வ.).

[கை + மலிவு.]

கைமறதி *kai-maradi,* பெ.(n.) ***கைத்தவறு*** பார்க்க (வின்.); see *kai-t-tavaṟu.*

[கை + மறதி.]

கைமறி–தல் *kai-maṟi-,* 4 செ.கு.வி.(v.i.) ***கைமாறு¹–தல்*** பார்க்க; see *kai-māṟu-*

[கை + மறி–.]

கைமறு–த்தல் *kai-maṟu-,* 4 செ.குன்றாவி. (v.t.) கொடுக்க மறுத்தல்; to refuse to give, deny.

[கை + மறு–.]

கைமறை *kai-maṟai,* பெ.(n.) விதைத்தபின் விதை உள்ளடங்க உழும் மேலுழவு (யாழ்ப்.); ploughing after sowing, to cover the seed.

[கை + மறை.]

கைமறைப்பு *kai-maṟaippu,* பெ.(n.) மருந்து அணியமாக்குதலில் ஏற்படும் அற்றம்; secrecy in the preparation of medicine (சா.அக.).

[கை + மறைப்பு.]

கைமாட்டாதார் *kai-māṭṭādār,* பெ.(n.) வேலை செய்ய இயலாதவர்; incapable or incompetent persons; maimed, disabled or weak persons. *"கைமாட்டாதார்... நரகமென்ற பகல்வர்" (பிரபோத.13:10).*

[கை + மாட்டாதார்.]

கைமாட்டிக்கொள்(ளு)–தல் *kai-māṭṭi-k-kol(lu)-,* 12 செ.கு.வி.(v.i.) அகப்பட்டுக் கொள்ளுதல்; to get entangled, to be caught.

[கை + மாட்டிக்கொள்(ளு)–.]

கைமாட்டு–தல் *kai-māṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) ***கைமாட்டிக்கொள்(ளு)–தல்*** பார்க்க; see *kai-māṭṭi-k-ko(lu)-.*

[கை + மாட்டு.]

கைமாயம் *kai-māyam,* பெ.(n.) 1.கையினாற் செய்யும் மாயவித்தை; magic, sleight of hand. 2. திறன்மிகு திருட்டு (வின்.); dexterous stealing.

ம. கைமாயம்.

[கை + மாயம்.]

கைமாயவித்தை *kai-māya-vittai,* பெ.(n.) செய்ய முடியாத செயலைச் செய்வதாகச் சொல்லிச் செய்யுந் தொழில் (Pond.); jugglery.

[கை + மாய + வித்தை.]

கைமார் *kai-mār,* பெ.(n.) முழம் என்னும் நீட்டல் அளவு; elmeasure.

Fin. kyynārā(elmeasure); **Est.** kuunar; **Mordvin.** kener; **Hung.** konyok; **Jap.** kuneru; **Q.** kanay.

[கை + மார்.]

மார் என்பது கைகளையும் அகன்ற பக்கவாக்கில் நீட்டிய அளவு. ஒரு முழம் என்பது முழங்கை முதல் நடுவிரல் நுனி வரையிலான அளவைக் குறிப்பதாகலின் முழங்கை யளவினதாகிய மார் என்னும் பொருளில் கைமார் என இடவழக்குச் சொல்லாயிற்று.

கைமாற்றம் *kai-māṟṟam,* பெ.(n.) ***கைமாற்று*** பார்க்க; see *kai-māṟṟu-.*

ம. கைமாற்றம்.

[கை + மாற்றம்.]

கைமாற்றம்பிள்ளை *kai-māṟṟam-piḷḷai,* பெ.(n.) கைமாற்றுக்கடன் கணக்குப் பார்க்கும் பணியாளன் (இ.வ.); accountant in charge of call-loans.

[கை + மாற்றம் + பிள்ளை.]

கைமாற்று[1]–தல் *kai-māṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1.ஆளை வேலையினின்று முறைமாற்றுதல் (வின்.); to relieve, as persons in work, by relays. 2. பண்டமாற்றுச் செய்தல்; to barter, exchange. 3. விற்றல் (இ.வ.); to sell, dispose of.

[கை + மாற்று–.]

கைமாற்று[2] *kai-māṟṟu,* பெ.(n.) 1. சிறிய கடன் தொகை, கைக்கடன்; short loan without bond for a given time. கைமாற்றாகக் கொஞ்சம் பணம் கொடு. 2. ஒருவர் வயம் இருந்தது மற்றொருவர் வயம் ஆதல்; changing of hands ownership. 3. கையை மாற்றி மாற்றி நீரிற் போட்டு நீந்தும் நீச்சல் (இ.வ.); swimming with alternate overarm stroke. 4. பண்டமாற்று (இ.வ.); barter, exchange. 5. விற்பனை (இ.வ.); sale.

க. கெய்பதலு.

[கை + மாற்று.]

கைமாற்றுக்கடன் *kai-māṟṟu-k-kaḍaṉ,* பெ(n.) ***கைக்கடன்*** பார்க்க; see *kai-k-kaḍaṉ.*

[கை + மாற்று + கடன்.]

கைமாறாட்டம் *kai-māṟāṭṭam,* பெ.(n.) 1.கைத் தவறு; slip of the hand. 2. கைவன்மையாற் செய்யும் ஏமாற்றம்; juggling with hand, deception practised by sleight of hand.

[கை + மாறாட்டம்.]

கைமாறாப்பு *kai-māṟāppu,* பெ.(n.) கைகளை மாற்றி மார்போடு சேர்த்துத் தோள்மேல் வைக்கை; folding of arms cross-wise against the breast, the right hand touching the left shoulder and the left hand the right (shoulder) one.

[கை + மாறாப்பு.]

கைமாறு[1]–தல் *kai-māṟu-,* 11 செ.கு.வி.(v.i.) ஒருவருரிமை இன்னொருவருக்கு மாறுதல்; to transfer one's right to another.

[கை + மாறு–.]

கைமாறு[2]–தல் *kai-māṟu-,* 5 செ.கு.வி.(v.i.) 1.ஒருவர் கையினின்றும் மற்றொருவர் கைக்குச் செல்லுதல்; to change hands, as a thing when sold. இந்த வீடு எத்தனை கைமாறியிருக்கிறது என்கிறீர்கள். 2. வேலையாள்கள் முறைமாறுதல்; to be relieved in work, as by relays. 3. ஒழுக்கத்தைக் கைவிடுதல்; to change one's conduct. *"கடிதகன்று கைமாறி" (கலித். 65).* 4. கட்சி மாறுதல்; to change sides, leave one party and join other.

ம. கைமறியுக, கைமாறுக.

[கை +மாறு–.]

கைமாறு[2] *kai-māṟu,* பெ.(n.) 1. ***கைம்மாறு*** பார்க்க; see *kai-m-māṟu.* 2. ***கைம்மாற்று*** பார்க்க; see *kai-m-māṟṟu.*

[கை + மாறு.]

கைமிகு[1]–தல் *kai-migu,* 2 செ.கு.வி.(v.i.) 1. அளவு கடத்தல்; to go beyond. 2. மிகுதியாதல்; to become exessive. 3. தடுக்க முடியாததாதல்; to become uncontrollable.

க. கெய்மிகு.

[கை + மிகு–.]

கைமிஞ்சு[1]–தல் *kai-miñju-,* 5 செ.கு.வி.(v.i.) 1.வரம்பு மீறுதல்; to overstep or transgress the limits, to go beyond bounds. *"போனா ளெனைவிட்டுக் கைமிஞ்சியே" (தனிப்பா.2. 138:351).* 2. பிறரோடு சண்டை செய்ய முற்படுதல்; to be disposed to fight; to be aggressive.

க. கெய்மிஞ்சு.

[கை + மிஞ்சு–.]

கைமிஞ்சு[2]–தல் *kai-miñju-,* 5 செ.கு.வி.(v.i.) 1.நோய் கட்டுப்படாமை; turning of disease beyond cure. 2. அடித்தல்; striking. 3. அளவுக்குமேல் சேர்த்தல்;

adding beyond the normal quantity as salt, tamarind or chilli to a sauce (சா.அக.).

[கை + மிஞ்சு-.]

கைமிடுக்கு *kai-miḍukku,* பெ.(n.) 1. கைத்தேர்ச்சி; dexterity, skill, speedy execution. 2. படைத்திறன்; might of arms, strength (சேரநா.). 3. திறமை; ability. *என் கைமிடுக்காலே யறிந்து சொல்லுகிறேன் (உ.வ.).*

ம. கைமிடுக்கு.

[கை + மிடுக்கு.]

கைமுகம் *kai-mugam,* பெ.(n.) உடலைவிட்டு உயிர்போகும் கதிகளுள் ஒன்று (சீவக.948, உரை); (Jaina.) a mode of the passage of the soul when it leaves the body.

கைமுகிழ்-தல் *kai-mugiḻ-,* 4 செ.கு.வி.(v.i.) இரு கைகளைக் கூட்டி வணங்குதல்; to join hands out of respect, to salute, to pray to god.

க. கைமுகி; து. கயிமுகிழனி; பட. கைமொகெ.

[கை + முட்டி.]

கைமுட்டி *kai-muṭṭi,* பெ.(n.) 1. விரல் மடக்கியுள்ள கை; clenched fist. 2. முட்டிப்போர்;boxing with the fist.

து. கய்தமுட்டெ.

[கை + முட்டி.]

கைமுட்டு[1] *kai-muṭṭu,* பெ.(n.) 1.விரற்கணு; knuckle. 2. முழங்கைச் சந்து; elbow joint.

ம. கைமுட்டு

[கை + முட்டு.]

கைமுட்டு[2] *kai-muṭṭu,* பெ.(n.) ***கைமுடக்கம்*** பார்க்க; see *kai-muḍakkam.*

[கை + முட்டு.]

கைமுடக்கம் *kai-muḍakkam,* பெ.(n.) செய்கைக்குக் கை பயன்படாமை; inablity to use the hand, as from paralysis. 2. பண முட்டுப்பாடு; straitened circumstances, severe straits.

[கை + முடக்கம்.]

கைமுடக்கு *kai-muḍakku,* பெ.(n.) கைநொண்டி; lame of hand. *கைமுடக்கு நோய் வந்தமையால் நலிந்து போனான் (உ.வ.).*

[கை + முடக்கு - கைமுடக்கு.]

கைமுடக்குவாதம் *kai-muḍakku-vādam,* பெ.(n.) கைகளை அசைக்கவும், நீட்டவும் முடியாமற் செய்யும் ஒருவகை நோய்; a kind of rheumatism affecting the joints of the arm or hand due to the aggravated condition of vayu which prevails in the arm (சா.அக.).

[கை + முடக்கு + நோய்.]

கைமுடம் *kai-muḍam,* பெ.(n.) 1. கைநொண்டி; lame of hand. 2. திருகிய கை; a deformity of the hand in which it is twisted out of shape or position (சா.அக.)

[கை + முடம். முட → முடம்.]

கைமுடிப்பு *kai-muḍippu,* பெ.(n.) 1.கைப்பொருள்; cash or property in possession, savings. 2. கட்டுச்சோறு; food for a journey.

[கை + முடிப்பு.]

கைமுடை[1] *kai-muḍai,* பெ.(n.) ***கைமுடக்கம்***[2] பார்க்க; see *kai-muḍakkam.*

[கைமுடக்கம் → கைமுடை.]

கைமுடை[2] *kai-muḍai,* பெ.(n.) செலவுக்குப் பணத்தட்டுப்பாடு; straitened circumstances, severe straits.

[கை + முடை.]

கைமுடைஞ்சல்[1] *kai-muḍaiñjal,* பெ.(n.) 1.கை இளைத்தல் அல்லது சூம்பல்; atrophsy of hand. 2.***கைமுடக்கம்***[2] பார்க்க; see *kai-muḍakkam.* கைமுடைஞ்சலுக்குப் பணம் தேவைப்படுகிறது (உ.வ.).

[முட → முடை → முடைஞ்சல். கை + முடைஞ்சல்.]

கைமுடைஞ்சல்[2] *kai-muḍaiñjal,* பெ.(n.) ***கைமுடை*** பார்க்க; see *kai-muḍai,*

[கை + முடைஞ்சல்.]

கைமுறி-தல் *kai-muṟi-,* 2 செ.குன்றாவி. (v.t.) கை தற்செயலாய் ஒடிதல்; to fracture of arm or hand occurring accidentally (சா.அக.).

[கை + முறி-.]

கைமுறை *kai-muṟai,* பெ.(n.) 1. மருந்து செய்யும் வழக்க முறை; the practice of making medicine without a regular medical education but chiefly relying on experience of observation; empirical method (சா.அக.). *பாட்டி மருத்துவம் என்பது நம் முன்னோர் கைமுறையாகச் செய்து வந்த பயனுள்ள*

மருத்துவ முறையாகும். 2. விளையாட்டு முதலியவற்றில் மாறிமாறி வரும் முறை; one's turn as in play.

[கை + முறை.]

கைமுதல் *kai-mudal,* பெ.(n.) ***கைம்முதல்*** பார்க்க; see *kai-m-mudal.*

ம. கைமுதல்

[கை + முதல்.]

கைமுதிகஞாயம் *kai-mudiga-ñāyam,* பெ.(n.) அதுவே அப்படியானால் மற்றதனைப்பற்றிக் கூறுவதேன் என்னும் வாதநெறி; illustration of arguing a posteriori. *"குழறுபடை கைமுதிக நியாயத்தான் இனிது விளங்கும்" (சித். மரபுகண்: 21).*

[கை + (முதுக்கு) முதிக + ஞாயம். முதுக்கு - அறிவு]

கைமுதிர்-தல் *kai-mudir-,* 2 செ.கு.வி.(v.t.) இளமைப் பருவம் நிரம்புதல் (இ.வ.); to be grown up.

[கை + முதிர்-.]

கைமுந்து[1]-தல் *kai-mundu-,* 5 செ.கு.வி.(v.i.) ***கைமிஞ்சு-தல்*** பார்க்க; see *kai-miñju-.*

[கை + முந்து-.]

கைமுந்து[2]-தல் *kai-mundu-,* 5 செ.குன்றாவி.(v.t.) திருடுதல்; to steal, pilfer. *அவன் கைமுந்துந் தன்மையன்.*

[கை + முந்து-.]

கைமுழம் *kai-muḻam,* பெ.(n.) முழங்கை நீளமுள்ள அளவு; length of fore-arm. மூன்று கைம்முழம் மல்லிகைப்பூ வாங்கி வந்தேன் (உ.வ.).

க. கெய்மாரு.

[கை + முழம்.]

கைமுளி *kai-muḷi,* பெ.(n.) மணிக்கட்டிலுள்ள எலும்பு; (R) wrist-bone.

[கை + முளி.]

கைமுறி *kai-muṟi,* பெ.(n.) 1. ஓலைத்துண்டு; a piece of palm leaf . 2. ஓலைச்சீட்டு; note on a piece of palm leaf.

ம. கைமுறி (குறிப்பு).

[கை + முறி.]

கைமுறுக்கு *kai-muṟukku,* பெ.(n.) கையால் பிழிந்து திரித்துச் சுட்டெடுக்கும் கார முறுக்கு; a kind of snack made of rice flour using fingers to give the shape of screw like twisting.

[கை + முறுக்கு.]

கைமுறை[1] *kai-muṟai,* பெ.(n.) 1.விளையாட்டு முதலியவற்றில் மாறி மாறி வரும் முறை; one's turn, as in play.

[கை + முறை.]

கைமுறை[2] *kai-muṟai,* பெ.(n.) மருந்து செய்யும் பட்டறிவு முறை; empirical method of preparing medicine.

[கை + முறை.]

கைமுறை மருந்து *kaimuṟai-maṟundu,* பெ.(n.) 1.பழக்கத்தால் செய்த மருந்து; medicine prepared from experience. 2. சாதனைப் பழக்கத்தாற் செய்த மருந்து; medicine based on habitual preparation (சா.அக.).

[கைமுறை + மருந்து.]

கைமுறை வேதியியல் *kaimuṟai-vēdiyiyal,* பெ.(n.) செய்முறை (சோதனை) வகையைக் கூறும் வேதியியல் நூல்; a book on practical chemistry (சா.அக.).

[கைமுறை + வேதியியல்.]

கைமுனை[1] *kai-muṉai,* பெ.(n.) கையின் நுனிப்பகுதி; the point of the hand.

க. கெய்துகி.

[கை + முனை.]

கைமுனை[2] *kai-muṉai,* பெ.(n.) கைவிரலின் முன் பகுதி; the point of the hand.

க. கெய்துகி.

[கை + முனை.]

கைமூட்டு *kai-mūṭṭu,* பெ.(n.) தோட்பொருத்து; shoulder-joint.

ம. கைமூட்டு.

[கை + மூட்டு.]

கைமூலம்[1] *kai-mūlam,* பெ.(n.) கமுக்கட்டு (பிங்.); armpit.

[கை + மூலம்.]

கைமூலம்[2] *kai-mūlam,* பெ.(n.) ***கைராசி*** பார்க்க; see *kai-rāśi.*

[கை + மூலம்.]

கைமூலம்[3] *kai-mūlam,* பெ.(n.) கன்றிழந்த கறவைமாடு; milch cow, that has lost its calf.

[கை + மூலம்.]

கைமெய்காட்டு-தல் *kai-mei-kāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) மெய்ப்பாடு தோன்ற உறுப்பசைவு காட்டல் (அபிநயங்காட்டுதல்); to make gesticulations.

[கை + மெய் + காட்டு-.]

கைமெய்யாய் *kai-mei-y-āy* வி.எ.(adv.) கையும் களவுமாய் (இ.வ.); in the very act of crime, red-handed.

[கை + மெய் + ஆய்.]

கைமேசு *kai-mēsu,* பெ.(n.) கைவிரலுறை; gloves.

[கை + மேசு.]

கைமேலே *kai-mēlē,* வி.எ.(adv.) உடன்கையில்; in quick return, immediately. கைமேலே பயன் கிடைத்தது (உ.வ.).

கைமேற்பணம் *kai-mēṟ-paṇam,* பெ.(n.) பொருளின் விற்பனை முதலியவற்றுக்காக உடன் கையிற் கொடுக்கும் பணம்; ready money, cash payment.

[கைமேல் + பணம்.]

கைமோசம் *kai-mōšam,* பெ.(n.) ***கைக்கேடு*** பார்க்க; see *kai-k-kēḍu.*

ம. கைமோசம்

[கை + மோசம்.]

கைமோசம்போ-தல் *kai-mōšam-pō-,* 8 செ.கு.வி.(v.i.) ***கைக்கேடுபோ-தல்*** பார்க்க; see *kai-k-kēḍu-po-.*

[கைமோசம் + போ-.]

கையகப்படு[1]**-தல்** *kai-y-agappaḍu-,* 20 செ.கு.வி.(v.i.) வயப்படுதல்; to come under one's control. *"மாநிலங் கையகப் படுவது பொய்யா காதே" (புறநா.58).*

[கையகம் + படு-.]

கையகப்படு[2]**-த்தல்** *kai-y-agappaḍu-,* 20 செ.குன்றாவி. (v.t.) 1. ஒப்புக் கொடுத்தல்; சிக்கப் பண்ணுதல்; to entangle 3. பிடித்தல்; to hold, control. 4. கைக்குட்சேருதல்; to hold within hands.

[கையகம் + படு-.]

கையகப்படுத்து-தல் *kai-y-agappaḍuttu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. தன்வயப்படுத்துதல்; to get possession of, to inveigle, entice. 2. காட்டிக் கொடுத்தல்; to betray (செ.அக.). 4. சிக்க வைத்தல்; to entangle (கழ.தமி.அக.).

[கையகம் + படுத்து-.]

கையகல்(லு)-தல் *kai-y-agal(lu)-,* 7 செ.கு.வி. (v.i.) விட்டு நீங்குதல்; to separate from, depart from.

[கை + அகல்(லு)-.]

கையகலக்கரை *kai-y-agala-k-karai,* பெ.(n.) சேலை வேட்டி போன்றவற்றின் நீளவாக்கு ஓர விளிம்பில் உள்ள கை அகலத்தில் உள்ள வண்ணக் கரை; border of a cloth or saree to the breadth equal to that of a palm.

[கை + அகலம் + கரை.]

கையகலம் *kai-y-agalam,* பெ.(n.) மிகச் சிறிய; very small, hand breadth.

ம. கையகலம்.

[கை + அகலம்.]

கையசதி *kai-y-asadi,* பெ.(n.) கைகடுப்பு; fatigue in the hand.

[கை + அசதி.]

கையசதிவாதம் *kai-y-asadi-vādam,* பெ.(n.) கைகடுத்து, பிடரி நரம்பை யிழுத்து வலியை உண்டாக்கும் ஒருவகை ஊதைநோய்; an affection of cold marked by severe pain of the arm and spasmotic contraction of the nape (சா.அக.).

[கை + அசதி + வாதம்.]

கையடக்கஅகரமுதலி *kai-y-aḍakka-agara mudali,* பெ.(n.) கையடக்கமாக ஆளும் வகையில் அச்சிட்ட அகரமுதலி; a packet dictionary.

[கை + அடக்கம் + அகரமுதலி.]

கையடக்கப்பதிப்பு *kai-y-aḍakka-p-padippu,* பெ.(n.) சிறிய அளவிலான நூற்பதிப்பு; a small size publication of a book.

[கை + அடக்கம் + பதிப்பு.]

கையடக்கம்[1] *kai-y-aḍakkam,* பெ.(n.) கைக்கு நொய்தானது; handy one.

ம. கையடக்கம்.

[கை + அடக்கம்.]

கையடக்கம்[2] *kai-y-aḍakkam,* பெ.(n.) 1.கைக்குள் அடங்குகை; being handy. 2. கைக்குள் அடங்கக் கூடிய பொருள்; anything handy or portable. 3. சேமித்து வைக்கப்பட்ட பொருள்; money laid by, savings. 4. ஒளித்து வைக்கப்பட்ட பொருள்; that which is concealed.

ம. கையடக்கம்.

[கை + அடக்கம்.]

கையடம் *kai-y-aḍam,* பெ.(n.) கையடர் எழுதிய ஒரு நூல்; book written by *kaiyaḍar.*

[கையடர் → கையடம்.]

கையடர் *kaiyaḍar,* பெ.(n.) கையடம் என்ற நூலின் ஆசிரியர்; an author of the book *Kaiyaḍam.*

[கையடன் → கையடர்.]

கையடி[1]**-த்தல்** *kai-y-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1.விலைக்கு விற்றல்; to sell. *என் வண்டியை எப்படியாவது கையடிக்கப் பார்க்கிறேன் (உ.வ.).*

[கை + அடி-.]

கையடி[2]**-த்தல்** *kai-y-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. கை தட்டிப் பறித்தல், ஏமாற்றுதல்; to deceive, to cheat. 2. ***கைபோடு-தல்*** பார்க்க; see *kai-pōḍu-.* 3. கைவேலை செய்தல்; to work with the hand, to do manual labour.

[கை + அடி-]

கையடி[3]**-த்தல்** *kai-y-aḍi-,* 4 செ.கு.வி.(v.i.) ஒப்புறுதி அளித்தலைக் காட்டும் வகையில் மற்றவரின் உள்ளங்கையில் அடித்தல்; to manifest approbation by striking the palm of another's hand, to agree, to assent (வழ.சொ.அக.). உறுதி (சத்தியம்) சொல்வார், தலையில் கைவைத்தல், துணிமேல் கைவைத்தல். புத்தகத்தின்மேல் கைவைத்தல், தாங்கள் மதிக்கும் பொருள்மேல் கைவைத்தல் எனப் பலவகையால் சொல்வதுண்டு. "*அவ்வாறே கையடித்தலும் வந்ததாம்*" என்ற பரிபாடல் வரியையும் இங்கு ஒப்புநோக்கலாம்.

க. கெய்வொய். கெய்பொய்.

[கை + அடி-.]

கையடி[4] *kai-y-aḍi,* பெ.(n.) களத்தில் கையாலடித்த நெல்மணி (தவசம்); grain threshed by hand on the threshing floor (G.Sm.D.I.i, 210).

[கை + அடி.]

நெற்கதிரினைக் கையால் அடித்துப் பெற்ற நெல்லைக் கையடி நெல். அடிநெல் என்றும் கையால் அடித்த பிறகு குவித்த நெல்லைப் போரடி நெல் என்றும் வழங்குவது வழக்காம்.

கையடிப்படு[1]**-தல்** *kai-y-aḍi-p-paḍu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஒரு பொருள் பல கைகளில் கடந்து செல்லுதல்; to pass through many hands, as a current coin. 2. கைக்குட்படுதல்; to obtain in hand.

[கை + அடிபடு-.]

கையடிப்படு[2]**-தல்** *kai-y-aḍippaḍu-,* 5 செ. குன்றாவி.(v.t.) ஆட்சிக்குட்படுத்துதல்; to have control over, rule.

[கையடி + படு-.]

கையடியுண்(ணு)-தல் *kai-y-aḍi-y-uṇ(ṇu)-,* 12 செ.கு.வி.(v.i.) ஈடுபடுதல்; to be absorbed, engrossed. '*இங்கு இவன் நீர்மையிலே கையடியுண்டிருக் கையாலே*' *(ஈடு,9:9:பிர.).*

[கையடி + உண்-.]

கையடு-த்தல் *kai-y-aḍu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1.***கையடைத்தல்*** பார்க்க; see *kai-y-aḍai-.* "*அடைக்கல நினக்கென வவன்வயிற் கையடுத்து*" *(பெருங்.மகத.23:49).* 2. அடைக்கலம் புகுதல் (உ.வ.); to take refuge in.

[கை + அடு-.]

கையடுப்பு *kai-y-aḍuppu,* பெ.(n.) கையால் எடுத்துச் செல்லத்தகும் சிற்றடுப்பு; small portable oven.

[கை + அடுப்பு.]

கையடை[1]**-த்தல்** *kai-y-aḍai-,* 4 செ.குன்றாவி.(v.t.) ஒப்படைத்தல்; to give charge to.

[கை + அடை-.]

கையடை[2] *kai-y-aḍai,* பெ.(n.) 1.அடைக்கலம்; refuge. 2. காக்குமாறு ஒப்படைத்த பொருள்; a thing which was handed over for safe keeping. 3. கடனைத் தீர்; to pay off or discharge a debt (கழ.த.அக.).

[கை + அடை.]

கையடை[3] *kai-y-aḍai,* பெ.(n.) 1.பிறர் கையில் ஒப்புவிக்கை; entrusting, depositing. 2. காக்கு மாறு ஒப்பித்த பொருள்; trust, deposit. "*கையடை யாகுமென்னு... ... காட்டுங் காலை*" *(கம்பரா. வாலிவ. 151).* 3. கையூட்டு (இ.வ.); bribe.

[கை + அடை.]

கையடைப்பு *kai-y-aḍaippu,* பெ.(n.) கைவசமான பொருள்; that which is kept under one's charge

or control. *நெஞ்சும் இவள்தனக்குக் கையடைப் பாகையாலே (ஈடு, 2,4:3) (செ.அக.).*

[கை + அடைப்பு.]

கையணி *kai-y-aṇi,* பெ.(n.) கைக்கு அணியும் அணிகலன்கள்; ornaments for the hand.

க. கெய்தொடிகெ.

[கை + அணி.]

கையம் *kaiyam,* பெ.(n.) 1.நீர் (அக.நி.); water. 2. கடல்; sea.

[கயம் → கையம்.]

கையம்பாய் *kai-y-ambāy,* கு.வி.எ.(adv.) 1. கையிலுள்ள அம்புபோலக் கிடைத்தற்கு எளிதாய்; like an arrow in the hand, ready at hand, easily available. 2. உறுதியாய்; unmistakably, most certainly.

[கை + அம்பு + ஆய்.]

கையம்பு[1] *kai-y-ambu,* பெ.(n.) சிறு அம்பு; small arrow.

ம. கையம்பு.

[கை + அம்பு.]

கையம்பு[2] *kai-y-ambu,* பெ.(n.) 1.உறுதி; firmness, strength. 2. நம்பிக்கை; trust.

[கை + அம்பு.]

கையமர்-த்தல் *kai-y-amar-,* 3 செ.கு.வி.(v.i.) அமர்ந்திருக்கக் குறிப்புக்காட்டல்; to give a sign, to remain peaceful hint to sit, by hands.

[கை + அமர்-.]

கையமர்த்து-தல் *kai-y-amarttu-,* 3 செ.குன்றாவி. (v.t.) 1. கையாற் குறிப்புக் காட்டி ஒலியடங்கச் செய்தல்; to silence, as an audience, by a show of hand. 2. கையால் குறிப்புக்காட்டி அவையோரை அமரச் செய்தல்; to motion a person or an assembly to be seated. 3. அடக்கி ஆளுதல்; to keep under proper control, as children. **சிறுபிள்ளைகளைக் கையமர்த்திக்கொண்டு போவது எளிதான செயலன்று (இ.வ.).** 4. ஒப்பாரியில் அழுகையை நிறுத்தச் செய்தல்; to stop weeping in lamentation. நீண்ட நேரமாக அழுபவளைக் கையமர்த்து (உ.வ.).

[கை + அமர்த்து-.]

கையமை-த்தல் *kai-y-amai-,* 3 செ.கு.வி.(v.i.) ***கையமர்த்தல்*** பார்க்க; see *kai-y-amar-.*

[கை + அமை-.]

கையமைதி *kai-y-amai-,* பெ.(n.) கைவிரல்களை நீட்டுதல், மடக்குதல், கூட்டுதல், விலக்குதல், குவித்தல் ஆகிய ஐந்து நிலைகளின் அடிப்படையில் தன் எண்ணத்தைப் புறத்தே வெளியிடுவதற்குக் காட்டும் நாட்டிய மெய்ப்பாட்டுக் குறிப்பு நிலைகள்; five types of hand and finger positions in dance posture of the ancient traditional art of dancing of the Tamils.

[கை + அமைதி.]

கையமைதிகளுள் 24 வகை தொழிற்கைகளும் 4 வகை எழிற்கைகளும் அடங்கும். 1. அருட்கை, 2. ஈகைக்கை, 3. கடகக்கை, 4. விளிக்கை, 5. மெய்பொருள் விளக்கக்கை, 6. சுட்டுக் கை 7. அச்சுறுத்தும் கை, 8. கத்திரிக்கை, 9. விரிதாமரைக்கை, 10. வியப்புக்கை, 11. தளிர்க்கை, 12. துயிற்கை, 13. அரைநிலாக்கை, 14. இருபாற்கை, 15. முத்தலைவேற்கை, 16. முட்டிக்கை, 17. சிகரக்கை, 18. நிலம் தொழுகை, 19. கிடக்கை, 20. கடியவலம், 21. தழுவற்கை, 22. விற்கை, 23. உடுக்கைக் கை, 24. ஒறுத்தல் கை.

கையமைவு *kai-y-amaivu,* பெ.(n.) சிலர் கைக்குள்ளதாகக் கருதப்படும் சிறப்புத்தன்மை (கைராசி); merit or luckiness of hand.

[கை + அமைவு.]

கையயர்-தல் *kai-y-ayar-,* 2 செ.கு.வி.(v.i.) 1.சோர்வடைதல்; to get tired. 2. நிலைமை தாழ்தல்; to be reduced in circumstances.

[கை + அயர்-.]

கையர் *kaiyar,* பெ.(n.) 1.கீழ்மக்கள் (திவா.); mean, despicable persons. 2. கள்ளர்; thieves. *"கைவந்தவா செய்யுங் கையர்" (திருநூற். 94).* 3. ஏமாற்றுபவர் (வஞ்சகர்); deceivers, cheats (தொல். சொல். 400, உரை). 4. மூடர்; ignorant persons. *"ஓராக் கையர்கள் தம்மைத் தாமே காதலித்து" (சிவதரு. பலவிசிட். 41).*

[கை + அர்.]

கையரம் *kai-y-aram,* பெ.(n.) அராவுவதற்குரிய சிறு எஃகு கருவி; hand file.

[கை + அரம்.]

கையரம்பம் *kai-y-arambam,* பெ.(n.) சிறு ஈர்வாள்; hand saw.

[கை + அரம்பம்.]

கையராயர் *kaiyarāyar,* பெ.(n.) கள்ளர்குடிப் பட்டப்பெயர்களுள் ஒன்று (கள்ளர் சரித்.ப.98); a caste title of Kaḷḷars.

[கையன் + அரையர்.]

கையமைதிகள்

அருட்கை

ஈகைக்கை

கடகக்கை

விளிக்கை

மெய்ப்பொருட்கை

சுட்டுக்கை

வெருவல் கை (அச்சுறுத்தும் கை)

கத்திரிக்கை

விரிதாமரைக் கை

வியப்புக்கை

தளிர்க்கை



துயிற்கை

கையரி[1]–த்தல் *kai-y-ari-*, 4 செ.கு.வி. (v.t.) 1.கையில் *தினவெடுத்தல்*; to itch at hand. 2. அல்வழியில் பொருள் தேட முயலுதல்; to take effort to get things in improper way.

[கை + அரி–.]

கையரி[2] *kai-y-ari,* பெ.(n.) தேடல் (அக.நி.); seeking, searching.

[கை + அரி – கையரி.]

கையரிக்கொள்(ளு)–தல் *kai-y-ari-k-kol((lu)-*, 10 செ.குன்றாவி.(v.t.) 1. தேடுதல் (திவா.); to seek, search for. 2. வாரி அரித்துக் கொள்ளுதல்; to gather, sweep up. *"காடு கையரிக் கொண்டு" (சீவக. 30).*

[கையரி + கொள்(ளு)–.]

கையரியம் *kai-y-ariyam,* பெ.(n.) இரும்பு (மூ.அக.); iron.

[கை + அரியம்.]

கையரிவாள் *kai-y-ari-vāl,* பெ.(n.) சிற்றரிவாள்; small sickle.



கையரிவாள்

மறுவ. கருக்கறுவாள்.

[கை + அரிவாள்.]

கையல்லது *kai-y-alladu,* பெ.(n.) தகாதது, கடிபட்ட; that which is unbecoming. *"காதன்மை கையல்ல தன்கட் செயல்" (குறள். 832).*

[கை + அல்லது.]

கையலகு *kai-y-alagu,* பெ.(n.) கைமரம்; rafter *"உத்தரமுதலியன பயில அவற்றின் மேலே பளிக்குக் கையலகாலே கைபரப்பி" (சீவக. 593, உரை).*

ம. கைலகு.

[கை + அலகு.]

கையலப்பு *kai-y-alappu.* பெ.(n.) 1.கையசைத்து நடத்தலிற் காணப்பெறும் நளினம்; a kind of zest in a walk. *"காதோரங் கொண்டைக்காரி கையலப்பில் கெட்டிக்காரி" (நா.பா.).* 2. ஒருவித அழகு; a kind of beauty.

[கை + அலப்பு.]

கையலம்பு–தல் *kai-y-alambu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கையைக் கழுவுதல்; to wash the hand. 2. விலக்கி விடுதல்; to avert.

[கை + அலம்பு–.]

கையலு–த்தல் *kai-y-alu-*, 4 செ.கு.வி.(v.i.) ***கையயர்[2]–தல்*** பார்க்க; see *kai-y-ayar-*.

[கை + அலு–.]

கையலை–த்தல் *kai-y-alai-*, 4 செ.குன்றாவி. (v.t.) துன்புறுத்துதல்; to trouble, harass, torment. *"கையலைத் தோடுமோர் களிமகற் காண்மின்" (பெருங். உஞ்சைக். 40:98).*

கொ.வ. கையலப்பு.

[கை + அலை–.]

கையழி–தல் *kai-y-ali-*, 2 செ.கு.வி.(v.i.) செயலறுதல்; to be disabled, to be broken-hearted. *"கையழிந்து புலவர் வாடிய பசிய ராகி" (புறநா.240)*

[கை + அழி–.]

கையளவு *kai-y-alavu,* பெ.(n.) மிகச் சிறு அளவு; a small measure. கையளவு இடமிருந்தால் அவன் கற்பனை வானளவு சென்றுவிடும் (உ.வ.).

[கை + அளவு.]

கையளி–த்தல் *kai-y-ali-*, 4 செ.குன்றாவி.(v.t.) ***கையடை–த்தல்*** பார்க்க; see *kai-y-adai-* (செ.அக.).

[கை + அளி–.]

கையளிப்பு *kai-y-alippu,* பெ.(n.) பிறரிடம் ஒப்பிக்கை (Pond.); handing over, as charge or possession.

[கை + அளிப்பு.]

கையற *kai-y-ara,* கு.வி.எ. (adv.) முற்றும்; utterly. *"இவன் கையற நசிக்கின்ற காலத்து" (நீலகேசி. 187, உரை).*

[கை + அற.]

கையறக்கொள்(ளு)–தல் *kai-y-ara-k-kol((lu)-*, 10 செ.குன்றாவி.(v.t.) முழுத்தொகையினையும் பெற்றுக்கொள்ளுதல்; to receive full amount.

"விலைப்பொருள் இந்நாளிலே கையிலே கையறக் கொண்டு" (தெ.க.கல்.தொ.V. 433).

[கை + அற + கொள்.]

கையறம்[1] *kai-y-aram*, பெ.(n.) இரங்கற்பா; elegy. "கம்பன் பேரிற் பாடிய கையறம்" (தமிழ்நா. 92).

மறுவ. வசைக்கவி.

[கை + அறம்.]

கையறம்[2] *kai-y-aram*, பெ.(n.) பெருந்துன்பம்; great distress. "வாளமர்கட் கையறமாம்" (பாரதவெண். 176).

[கை + அறம்.]

கையறல் *kai-y-aral*, பெ.(n.) ***கையறவு*** பார்க்க; see *kai-y-aravu*.

[கை + அறல்.]

கையறல் *kai-y-aral*, பெ.(n.) 1.ஒழுக்கமின்மை; indecency. 2.செயலின்மை; powerlessness. 3. இரத்தல்; begging.

மறுவ. கையறவு.

[கை + அறல்.]

கையறல்விலக்கு *kaiyaral-vilakku*, பெ.(n.) ஓரணிகாரம்; a kind of decoration. அது கையறு தலைக் காட்டி விலக்குவது (உ.வ.).

[கையறல் + விலக்கு.]

கையறவு *kai-y-aravu*, பெ.(n.) 1.செயலற்ற நிலை; state of utter prostration, helplessness. "வாராள் காயசண் டிகையெனக் கையற வெய்தி" (மணிமே. 20:26). 2. இறப்பு; death. "கையற வுரைத்துக் கை சோர்ந் தன்று" (பு.வெ.10. சிறப்பிற். 14, கொளு). 3. துன்பம், பெருந்துயர்; affliction, sorrow, disaster. "யான்பட்ட கையறவு காணாயோ" (கம்பரா. சூர்ப். 107). 4. ஊடல்; love quarrel. "கையறவு வட்டித்து" (பரிபா.10:33). 5. ஏழ்மை; impecuniosity, poverty. "பிறர்கை யறவு தான்நா ணுதலும்" (புறநா.157:2). 6. ஒழுக்கமின்மை (வின்.); immorality.

[கை + அறவு.]

கையறி-தல் *kai-y-ari-*, 2 செ.கு.வி.(v.i.) 1.பழக்க மாதல்; to become trained or adept. 2. செய்யுமுறைமை அறிதல்; to know how to do things; to be discreet and knowing. "கையறியாப் பேதை" (குறள். 836).

மறுவ. கையறல்.

[கை + அறி-.]

கையறிந்தவன் *kai-y-arindavan*, பெ.(n.) 1. நாடி பார்க்க அறிந்தவன்; one who is skilled in examining pulse. 2. தேர்ந்த மருத்துவன்; an experienced physician (சா.அக.).

[கை + அறிந்தவன்.]

கையறியாமை *kai-y-ariyāmai*, பெ.(n.) செய்வ தறியாமை; helplessness. "கையறியாமை உடைத்தே" (குறள்.925).

[கை + அறியாமை.]

கையறு-தல் *kai-y-aru-*, 20 செ.கு.வி.(v.i.) 1.செயலற்றுப் போதல்; to be laid prostrate, be overcome, as with pity. "காணா வுயிர்க்குங் கையற் றேங்கி" (மணிமே.3:89). 2. மானமழிதல்; to be broken hearted. "கையற் றின்ன லெய்தலும்" (ஞானா. 31:22). 3. அளவு கடத்தல்; to exceed limits. "காப்பின் கடுமை கையற வரினும்" (தொல். பொருள்.114). 4. மீட்சி யரிதாதல்; to be irremediable, overwhelming. "கையறு துன்பங் காட்டினுங் காட்டும்" (சிலப். 10:71). 5. இறத்தல்; to die. "காதி மலைந்தே கையற்றார்" (பாரத. பதினாறாம்.2). 6. ஒழுக்கம் நீங்குதல்; to become immoral.

[கை + அறு-.]

கையறுகிளவி *kai-y-aru-kilavi*, பெ.(n.) தாய் துஞ்சாமை நாய் துஞ்சாமை முதலாய காப்பு மிகுதி சொல்லி வரவு விலக்குதலைக் கூறும் அகத்துறை (அகப்.), (களவியல்.99.); theme describing the obstacles to the hero visiting the heroine.

[கையறு + கிளவி.]

கையறுத்துக்கொள்(ளு)-தல் *kai-y-aruttu-k-kol(lu)-*, 16 செ.கு.வி.(v.i.) பொருள் இழப்பு ஏற்படுதல் (இ.வ.); to suffer loss of money or materials.

[கையறுத்து + கொள்(ளு)-.]

கையறுதி *kai-y-arudi*, பெ.(n.) 1.அறுதியாக விற்கை (வின்.); outright sale. 2. முற்றும் கைவிட்டு நீக்குகை (வின்.); quitting finally; relinguishing entirely, as one's claim or right. 3. ***கையுறுதி***[2] பார்க்க; see *kai-y-urudi* (செ.அக.).

[கை + அறுதி.]

கையறுதியாய்விடல் *kai-y-arudiyāy-vidal*, பெ.(n.) தீராதன கைவிடுதல்; giving up as incurable; giving up all hopes (சா.அக.).

[கை + அறுதியாய் + விடல்.]

கையமைதிகள்

அரைநிலாக்கை

இருபாற்கை

முத்தலை வேற்கை



முட்டிக்கை

சிகரக்கை

நிலம் தொழுகை

கிடக்கை

கடியவலம்



தழுவற்கை

விற்கை

உடுக்கைக்கை

ஒறுத்தல்கை

கையறுநிலை *kai-y-aṟunilai,* பெ.(n.) 1.தலைவனேனும் தலைவியேனும் இறந்தமைக்கு அவர் ஆயத்தார் முதலானோர் செயலற்று மிக வருந்தியதைக் கூறும் புறத்துறை; theme describing the utter helplessness of dependents at the death of a chief or his wife. "*கழிந்தோர் தேஎத் தழிபட ருறீஇ, ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்*" *(தொல். பொருள். 79).* 2. கையறுநிலை பற்றிய சிற்றிலக்கியம் (வின்.); a poem on *kai-aṟunilai.*

[கையறு + நிலை.]

வாட்போரில் இறந்த மன்னனைக் கண்டு யாழ்ப்பாணரும் சுற்றத்தாரும் அவன் பட்ட பாட்டைக் கூறி இரங்கிப் பாடப்பெற்ற இலக்கியம்.

கையறை[1] *kai-y-aṟai,* பெ.(n.) ***கையாறு**[2]* பார்க்க; see *kai-y-āṟu.* "*கலன் மாய்த்தவர் கையறை போல்*" *(தணிகைப்பு. களவு. 104).*

மறுவ. கையறவு, கையறல்.

[கை + அறை.]

கையறை[2] *kai-y-aṟai,* பெ.(n.) ***கையாறு**[3]* (சூடா.) பார்க்க; see *kai-y-āṟu* (செ.அக.).

கையறை[3] *kai-y-aṟai,* பெ.(n.) சிறிய பொருள் வைப்பறை (இ.வ.); small store-room, as in a temple (செ.அக.).

[கை + அறை. கை = சிறிய.]

கையாக்கம் *kai-y-ākkam,* பெ.(n.) கைபடுவதனால் உண்டாவதாகக் கருதும் நன்மை; luckiness associated with one's hand. அவன் கையாக்க முள்ளவன் (இ.வ.).

மறுவ. கைராசி

[கை + ஆக்கம்.]

கையாட்சி *kai-y-āṭci,* பெ.(n.) 1.கைப்பழக்கம்; constant use and practice. 2. தொழில்; profession, occupation. "*ஆலயத்தின் களவு கையாட்சியான்*" *(குற்றா. தல. மந்தமா. 90).* 3. ஒருவன் வசமானது; that which is on hand or in one's possession and enjoyment. 4. பட்டறிவினால் நன்மையெனத் தெளிந்தது (வின்.); that which has been proved good by experience (செ.அக.).

[கை + ஆட்சி.]

கையாட்சி மருந்து *kai-y-āṭci-marundu,* பெ.(n.) கைதேர்ந்த மருந்து; approved medicine efficacious drug (சா.அக.).

[கை + ஆட்சி + மருந்து.]

கையாடல் *kai-y-āḍal,* பெ.(n.) 1. பயன்படுத்துகை; administration, usage. 2. திருட்டு; theft. 3.நம்பிக்கைக்கு மாறாகப் பிறர் பொருளைக் கவர்ந்து கொள்ளுதல்; misappropriation. அரசு பணத்தைக் கையாடல் செய்த அலுவலருக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனை (உ.வ.).

[கை + ஆடல்.]

கையாடு[1]**-தல்** *kai-y-āḍu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. பயன் படுத்துதல்; administering as medicine. 2. நம்பிக்கைக்கு மாறாகப் பிறர் பொருளைக் கவர்ந்து கொள்ளுதல்; misappropriation of funds (சா.அக.).

[கை + ஆடு-.]

கையாடு[2]**-தல்** *kai-y-āḍu-,* 5 செ.கு.வி.(v.i.) முதுமையின் அறிகுறியாகக் கை நடுங்குதல்; shivering of hands due to old age.

[கை + ஆடு.]

கையாடு[3]**-தல்** *kai-y-āḍu-,* 5 செ.கு.வி.(v.i.) ***கையாள்(ளு)-தல்*** பார்க்க; see *kai-y-āḷ(ḷu)-,*

ம. கையாடு.

[கை + ஆடு-.]

கையாண்ட மருந்து *kai-y-āṇḍa-marundu,* பெ.(n.) நோய்க்குக் கொடுத்து ஆய்ந்த மருந்து; tried medicine (சா.அக.). மஞ்சட்காமாலைக்குக் கீழ்வாய் நெல்லி கைகண்ட மருந்தாகும் (உ.வ.).

[கை + ஆண்ட + மருந்து.]

கையாணி *kai-y-āṇi,* பெ.(n.) கைமரத்திற் சட்டத்தை யிறக்கும் ஆணி; rafter-nail (C.E.M.)

[கை + ஆணி.]

கையாந்தகரை *kaiyāndagarai,* பெ.(n.) கரிசலாங்கண்ணி (பிங்.); a plant growing in wet places, Eclipta alba (செ.அக.).

[கய்யாந்தகரை → கையாந்தகரை.]

கையாந்தகரை

கையாப்பலகை *kaiyā-p-palagai,* பெ.(n.) வள்ளத்தின் குறுக்குவாட்டில் இடப்படும் பலகைகளில் ஒன்று; one of the cross planks used in wooden boat.

[கையாம் + பலகை.]

கையாப்புடை *kai-y-āppuḍai,* பெ.(n.) மரவகை (L.); white Australian teak tree.

Malay. kāyūputi.

[கையா + புடை.]

கையாயிரத்தன் *kai-y-āirattaṉ,* பெ.(n.) வாணாசுரன்; an enemy of the Aryans who has thousand arms.

[கை + ஆயிரம் + அத்து + அன்.]

கையார *kai-y-āra,* கு.வி.எ.(adv.) கைக்குப் பொந்திகையாக (திருப்தியாக); to the satisfaction of one's hand, liberally, in large quantities.

ம. கையார; **க.** கையாரெ; **து.,பட.**கய்யார.

[கை + ஆர.]

கையால்முகந்துடை-த்தல்; *kaiyāl-mugan-tuḍai-*, 4 செ.குன்றாவி. (v.t.) பறவைக் குற்றத்தால் குழந்தைகள் நோயுற்றபோது அடிக்கடி கையினால் முகத்தைத் தேய்த்துக் கொள்ளுதல்; rubbing of the face with the hands, as children do in morbid diathesis (சா.அக.).

[கை + ஆல் + முகம் + துடை-.]

கையாலா-தல் *kaiyāl-ā-,* 6 செ.கு.வி.(v.i.) செய்யும் ஆற்றல் பெறுதல்; to be able to work or accomplish (செ.அக.). உன் கையால் ஆகுமா? (உ.வ.).

க. கெய்லாகு.

[கை + ஆல் + ஆகு-.]

கையாலாகாதவன் *kaiyāl-āgādavaṉ,* பெ.(n.) எவ்வேலையும் செய்யத் திறமையற்றவன்; an incapable or incompetent person. *கையாலாகாதவனுக்குக் கருக்கரிவாள் பத்து வேண்டுமா. (பழ.).*

[கையால் + ஆகாதவன்.]

கையாலேபாணி-த்தல் *kaiyāl-e-pāṇi-,* 4 செ.குன்றாவி.(v.t.) கையால் தூக்கிப்பார்த்து நிறையறிதல் (இ.வ.); to estimate the weight of a thing by hand.

[கையாலே + பாணி-.]

கையாள்[1] *kai-y-āḷ,* பெ.(n.) குறிப்பறிந்து செய்பவன்; one who does by taking the cue (வழ.சொ.அக.).

ம. கையாள்; **து.** கையாளு; **பட.** கைஆ.

[கை + ஆள்.]

கையாள்[2] *kai-y-āḷ,* பெ.(n.) 1. குற்றேவல் செய்வோன்; trustworthy servant, waiter, menial servant. *"உனக்குக் கையாளாய் உன் இசைவு பார்த்து" (அஷ்டாதச. முமுட்சுப். சரம. 26).* 2. உதவி செய்வோன் (உ.வ.); helping hand. (செ.அக.).

ம. கய்யாள்; **க., து.** கையாளு; **பட.** கைஆ.

[கை + ஆள்.]

கையாள்(ளு)[3]**-தல்** *kai-y-āḷ(ḷu),* 10 செ.குன்றாவி. (v.t.) 1.கையிலெடுத்து ஆளுதல்; to handle, use. 2. வழக்கத்துக்குக் கொண்டு வருதல்; to bring into vogue or practice, to make constant use of. 3. வல்லந்தமாகக் கவர்தல்; to usurp, misappropriate. 4. கற்பழித்தல்; to violate a woman's chastity.

ம. கய்யாளுக, கையாளுக.

[கை + ஆள்(ளு)-.]

கையாளி *kai-y-āḷi,* பெ.(n.) 1.திறலோன்; a good hand, skillful person. 2. கொடியன், கயவன்; wicked man. 3. பாசாங்கு செய்பவன்; hypocrite, dissembler, pretender (யாழ்.அக.).

க. கய்யாலி; **தெ.** கயாலி.

[கை + ஆள் + இ.]

'இ'.சொல்லாக்க ஈறு. **ஒ.நோ.** மலையாளி, தொழிலாளி.

கையாளி-த்தல் *kai-y-āḷi-,* செ.குன்றாவி.(v.t.) ஒப்படைத்தல்; to hand over, as charge or possession. "கிராமத்தார்வசம் கையாளிக் கையில்"(T.A.S.V:150).

கையாளு-தல் *kai-y-āḷu-,* செ.கு.வி. (v.i.) எடுத்துப் பயன்கொள்ளல்; to adopt, use, handle.

[கை + ஆள்(ளு)-.]

கையாற்சா-தல் *kaiyāṟ-ćā-,* 19 செ.கு.வி.(v.i.) ஒருவரால் கொல்லப்படுதல்; being killed by one (சா.அக.).

[கையால் + சா-.]

கையாற்றல் *kai-y-āṟṟal,* பெ.(n.) **கைவலிமை** பார்க்க; see *kai-valimai*.

[கை + ஆற்றல்.]

கையாற்றி *kai-y-āṟṟi,* பெ.(n.)1.தொழிலுக்கு உதவுகை; relieving or aiding in manual labour. 2. இளைப்பாறல்; relief or rest from work. *நீ வருவாயானால் எனக்குக் கையாற்றியாயிருக்கும்.* 3. ஆறுதல்; consolation. 4. உதவி; help.

[கை + ஆற்றி.]

கையாற்று-தல் *kai-y-āṟṟu-,* 9 செ.கு.வி.(v.i.) 1. அடைதல்; to attain, reach. 2. மாற்றுதல்; to change. 3. இளைப்பாற்றுதல்; to relieve, console.

[கை + ஆற்று-.]

கையாறு[1]-தல் *kai-y-āṟu-,* 8 செ.குன்றாவி. (v.t.) உதவி செய்து இளைப்பாறச் செய்தல்; to give or offer relief as by a subsitute.

[கை + ஆறு-.]

கையாறு[2]-தல் *kai-y-āṟu-,* 5 செ.கு.வி.(v.i.) இளைப்பாறுதல்; to rest a while from work. *"பண்ணுமயன் கையாறவும்" (பட்டினத். திருப்பா. பொது. திருவை.).*

[கை + ஆறு-.]

கையாறு[3] *kai-y-āṟu,* பெ.(n.) 1. செயலறுகை; state of utter prostration, helplessness. 2. துன்பம்; distress, affliction, suffering. *"கலக்கத்தைக் கையாறாக் கொள்ளாதா மேல்" (குறள். 627).*

[கை + ஆறு.]

கையாறு[4] *kai-y-āṟu,* பெ.(n.) ஒழுக்கநெறி; conduct, behaviour. *"இடுதுனி கையாறா" (பரிபா. 8:78).*

[கை + ஆறு.]

கையாறு[5] *kai-y-āṟu,* பெ.(n.) 1. வரலாறு; history. 2. சிற்றாறு; small river. *"அண்ணா நாட்டு எல்லையில் திருந்தி கையாற்றை அடைத்து ஏரியும் வெட்டி தூம்பும் இட்டு"* (தெ.கல்.தொ8.கல்.83).

[கை + ஆறு.]

கையான் *kai-y-āṉ,* பெ.(n.) 1.***கையாந்தகரை*** பார்க்க; see *kaiyāntagarai.* 2. கொடிகையான்; creeper eclipse. 3. பொற்றலைக் கையான்; Mari-gold (சா.அக.).

ம. கய்யன்யம்.

[கை → கையான்.]

கையானீர் *kai-y-āṉir,* பெ.(n.) கரிசலாங்கண்ணிச் சாறு; the juice of the bee plant (சா.அக.).

[கையான் + நீர்.]

கையிக-த்தல் *kai-y-iga-,* 3 செ.கு.வி.(v.i.) 1. அளவுக்கு மேற்படுதல்; to exceed the limits. *"கையிகந்த தண்டமும்" (குறள். 567).* 2. மீறுதல்; to get beyond one's control. *"கரப்பினும் கையிகந்து" (குறள். 1271).* 3. அகன்று நிற்றல்; to stand away. 4. ஒழுங்குதப்புதல்; to derail from rightful conduct or behaviour. 5. கடத்தல்; to smuggle.

[கை + இக-.]

கையிசுவாதம் *kai-y-iśu-vādam,* பெ.(n.) தோளில் மிக்க குடைச்சலை உண்டாக்கும் ஊதைநோய்; a kind of rheumatism characterised by pain all over body, numbness of certain parts and pain in the shoulders (சா.அக.).

[கை + இசு + வாதம்.]

கையிசை-தல் *ka-y-iśai-,* 2 செ.கு.வி.(v.i.) மனம் இணங்குதல்; to agree, assent. *"காஞ்சன மாலை கையிசைந்து" (பெருங். உஞ்சைப். 44:150).*

[கை + இசை-.]

கையிடு-தல் *kai-y-iḍu,* 20 செ.கு.வி.(v.i.) 1. கையைத் தொய்த்தல்; to dip one's hands. *'நெய்யிலே கையிட வல்லாரார்' (ஈடு,6,1:5).* 2. காரியத்திற் புகல்; to undertake, engage in. 3. ஒரு தொழிலில் வேண்டாது தலையிடுதல்; to meddle, interfere officiously. 4. நேர்ப்படுதல்; to put in order.

[கை + இடு-.]

கையிடை *kai-y-iḍai,* பெ.(n.) கையூட்டு (உ.வ.); bribe, hush - money.

[கை + இடை.]

கையிணக்கம் *kai-y-iṇakkam,* பெ.(n.) 1.பொருத்தம்; fitness, suitability, complete agreement. 2. ***கையடக்கம்[2]*** பார்க்க; see *kai-y-aḍakkam.* 3. கைகலந்து சண்டையிடுகை; boxing.4. வைப்பாட்டி வைக்கை; keeping a mistress or concubine. 5. போர் செய்கை; struggling, agitating.

ம. கையிணக்கம்.

[கை + இணக்கம்.]

கையிணக்கமாதல் *kai-y-iṇakkam-ādal,* பெ.(n.) கைவயமாதல்; submitting to one's pursuasion (சா.அக.).

[கை + இணக்கம் + ஆதல்.]

கையிருப்பு[1] *kai-y-iruppu,* பெ.(n.) செங்குவளைப்பூ; red Indian water lily (சா.அக.).

[கை + இருப்பு.]

கையிருப்பு[2] *kai-y-iruppu,* பெ.(n.) 1.இருப்புத் திட்டம்; money on hand, cash balance of an account. 2. கைப்பணம்; cash on hand. 3. உணவுப் பொருள் முதலியவற்றின் இருப்பு; stock-account.

[கை + இருப்பு.]

கையில் *kaiyil,* பெ.(n.) தேங்காயில் பாதி; one - half of the coconut (சா.அக.).

ம. கையில்.

[கயில் → கையில்.]

கையில் பிடிக்க முடியாமை *kai-y-il-pidikka-mudiyāmai,* பெ.(n.) அளவிடவியலாத மகிழ்ச்சி; immense joy. தேர்விலே வெற்றி பெற்றதும் கையிலே பிடிக்க முடியலே (நெல்லை.)

[கை + இல் + பிடிக்க + முடியாமை.]

கையிலாகாதவன் *kaiyil-āgādavaṉ,* பெ.(n.) ***கையாலாகாதவன்*** பார்க்க; see *kaiyāl-āgādavaṉ.* *"கையிலாகாதவன் போலக் கண்டோர் பழிக்க" (இராமநா. ஆரணி. 24).*

[கையால் + ஆகாதவன்.]

கையிலி *kai-y-ili,* பெ.(n.) கை இல்லாதவன்; lame of hand (சா.அக.).

[கை + இலி. இ – பண்புகுறித்த ஈறு.]

கையிழ–த்தல் *kai-y-iḻa-,* 2 செ.கு.வி.(v.i.) காணாமற் போதல், பயன் குறைந்து உள்ளதும் குறைவது; to be lost, to lose capital and the profit there of.

[கை + இழ–.]

கையிழப்பு *kai-y-iḻappu-* பெ.(n.) 1. கையில் உள்ளதை இழக்கை; loss of anything on hand. 2. கைமுதலுக்கு ஏற்படும் இழப்பு; loss of capital in trade.

[கை + இழப்பு.]

கையிளகு–தல் *kai-y-iḷagu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கைப்பிடிப்பு நெகிழ்தல்; to become slack in hand-grip. 2. தாராளமாதல்; to be liberal, bountiful. 3. கொடுக்கச் சம்மதித்தல்; to agree to give.

[கை + இளகு–.]

கையிளை–த்தல் *kai-y-iḷai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. ***கைசலி–த்தல்*** பார்க்க; see *kai-šali-.* 2. செல்வநிலை குன்றுதல்; to be reduced in circumstances.

[கை + இளை–.]

கையிற்கனி *kaiyiṟ-kaṉi,* பெ.(n.) நெல்லிக்காய்; gooseberry (சா.அக.).

[கையில் + கனி.]

கையிற்சாதல் *kaiyiṟ-sādal,* பெ.(n.) ஒருவர் கையில் தாங்கப்பட்ட நிலையில் இறத்தல்; dying while resting on one's hand (சா.அக.).

[கையில் + சாதல்.]

கையிறக்கம் *kai-y-iṟakkam,* பெ.(n.) 1. சீட்டு விளையாட்டில் முதலில் சீட்டை இறக்குகை; first serve in a game of cards. 2. செல்வநிலை குன்றுகை; reverse of fortune. 3. கைவிட்டிறங்குதல்; to get down from hand.

[கை + இறக்கம்.]

கையிறக்கு–தல் *kai-y-iṟakku-,* 5 செ.கு.வி.(v.i.) தொடர்வண்டி (இரயில்) வர அடையாளமாகக் கைகாட்டியைக் கீழிறக்குதல்; lowering of arm of train signal.

[கை + இறக்கு–.]

கையிறுக்கம் *kai-y-iṟukkam,* பெ.(n.) 1. சிக்கனம்; thrift. 2. உதவாத இயல்பு, இவறன்மை, கஞ்சத்தனம்; miserliness.

மறுவ. இவறன்மை. கஞ்சத்தனம். ஈயாமாரித்தனம்.

[கை + இறுக்கம்.]

கையிறை *kai-y-iṟai,* பெ.(n.) 1. ***கைரேகை*** பார்க்க; see *kai-rēgai.* 2. கைவிரலின் இடுக்கு; crotch of the fingers.

[கை + இறை.]

கையீடு *kai-y-īḍu,* பெ.(n.) பணம் செலுத்துகை; receipt for remittance. "பதினெட்டாவது தியதி கையீடு ஒன்றினால் காசு" (S.I.I. IV. 134).

ம. கையீடு.

[கை + ஈடு. இடு → ஈடு.]

கையுங்கணக்கும் *kaiyuṅ-kaṇakkum,* பெ.(n.) வரையறை; limit, bound. *அங்கே வந்த பட்டத்துக்குக் கையும் கணக்குமில்லை* (கொ.).

[கையும் + கணக்கும்.]

கையுங்களவுமாய் *kaiyuṅ-kaḷavum-āy,* பெ(n.) ***கைமெய்யாய்*** பார்க்க; see *kai-mei-yāi.*

[கையும் + களவும் + ஆய்.]

கையுடன் *kai-y-uḍaṉ,* வி.எ.(adv.) ***1.கையோடு*** பார்க்க; see *kai-y-ōḍu.* 2. உடனே; at once, immediately.

[கை + உடன்.]

கையுடை *kai-y-uḍai,* பெ.(n.) கையாப்பு, கைக்கவசம்; boxing gloves.

மறுவ. கையாப்பு, கையுறை.

ம. கய்யுற.

[கை + உடை.]

கையுண்(ணு)—தல் *kai-y-uṇ(ṇu)-,* 13 செ.கு.வி.(v.i.) பிறர் கைபார்த்து உண்டு வாழ்தல்; to live a dependent life. *"சான்றவர் கையுண்டுங் கூறுவர் மெய்" (பழ. 83).*

[கை + உண்(ணு)-.]

கையுதயம் *kai-y-udayam,* பெ.(n.) பிள்ளைப்பேற்றின்போது குழந்தையின் கை வெளிப்படல் (சா.அக.); emergence of hand at child birth.

[கை + உதயம்.]

கையுதவி *kai-y-udavi,* பெ.(n.) 1. சமையத்தில் உதவும் உதவி; timely help. 2. துணையான உதவிப் பொருள்; ready or necessary help as a friend, a weapon. 3. சிற்றுதவி; trifling aid or assistance. 4. கையூட்டு; bribe. 5. ஆளுதவி; provision of helping hands.

க. கெய்நெரவு; **பட.** கைநெர.

[கை + உதவி.]

கையுதிர்க்கோடல் *kai-y-udir-k-kōḍal,* பெ.(n.) விட்டு விலகும்படி கையசைத்துக் குறிப்பிடுகை; waving one's hand as a signal to quit or go away. *"காண மிலியென கையுதிர்க் கோடலும்" (மணிமே. 16:10).*

[கை + உதிர் + கோடல்.]

கையுபகாரம் *kai-y-ubagāram,* பெ.(n.) ***1.கையுதவி*** பார்க்க; see *kai-y-udavi.* 2. ஒத்தாசை; help.

[கை + உபகாரம்.]

கையுமெய்யுமாய் *kaiyu-meiyum-āi,* வி.எ.(adv.) ***கைமெய்யாய்*** பார்க்க; see *kai-mei-y-āy.*

[கையும் + மெய்யும் + ஆய்.]

கையுயர்—தல் *kai-y-uyar-,* 4 செ.கு.வி.(v.i.) ***கையோங்கு[1,2]—தல்*** பார்க்க; see *kai-y-ōṅgu-.*

[கை + உயர்-.]

கையுயர்த்து—தல் *kai-y-uyarttu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. ***கையோங்கு—தல்*** பார்க்க; see *kai-y-ōṅgu.* 2. ***கையெடு—த்தல்*** பார்க்க; see *kai-y-ēḍu-.*

[கை + உயர்த்து-.]

கையுருவிச்சுவர் *kai-y-uruvi-c-cuvar,* பெ.(n.) கைப்பிடிச்சுவர் (புதுக்.கல்.213); parapet wall.

[கை + உருவி + சுவர்.]

கையுரொக்கம் *kai-y-yurokkam,* பெ.(n.) கைவயத்திலிருக்கும் பணம்; ready cash.

மறுவ. கைப்பணம், கைக்காசு.

[கை + உரொக்கம்.]

கையுழற்றி *kai-y-uḻaṟṟi,* பெ.(n.) கைநடுக்கம்; spasms in the arms.

[கை + உழற்றி.]

கையுழைப்பு *kai-y-uḻaippu,* பெ.(n.) 1.வேலை; toil. 2. உடலுழைப்பு (மீன்.பிடி.தொ.); manual labour.

[கை + உழைப்பு.]

கையுளி *kai-y-uḷi* பெ.(n.) சற்றொப்ப இரண்டு விரலம் (அங்குலம்) அகலம் கொண்ட உளி; a chisel of about two inches in width.

கையுளி

ம. கையுளி(பட்டையுளி); **து.** கயிஉளி.

[கை + உளி.]

கையுறு[1]—தல் *kai-y-uṟu-,* 20 செ.கு.வி.(v.i.) கைவயமாகக் கிடைத்தல்; to come to hand, to be received, to attain. *"வானகம் கையுறினும்" (நாலடி. 300).*

கையுறு²–தல் *kai-y-uṟu-,* 20 செ.குன்றாவி.(v.t.) தீண்டுதல்; to approach, have intercourse with. *"பூப்பு மகளிர் கையுறாப் பொருட்டே" (திவா. பண்பு பற்றிய.).*

[கை + உறு–.]

கையுறு³–தல் *kai-y-uṟu-,* 20 செ.குன்றாவி.(v.i.) 1. கைக்கொள்ளுதல்; to hold. 2. பகுத்தல்; to divide. *"நீங்கலாக நின்ற பல மரங்களோடும் ஆடுபடுத்தும் பிடிலிகை வாரி அரைக்கால் பொன்னுக்குக் கீழ்ப்பட்ட பொன்னும் இக் கோயில் சிவப் பிராமணர்கள் கையுற்று தாங்கள் அநுபவித்து" (தெ.கல்.தொ. 7 கல். 801.).*

[கை + உறு–.]

கையுறுதி *kai-y-uṟudi,* பெ.(n.) 1.கடனுக்கு வைக்கப்படும் ஈடு; security deposited for loan. 2. கையடித்து விலையுறுதி செய்கை; completing a bargain by striking hands. 3. அட்டவணை; table. 4. வாய்மொழி உறுதி; oral assurance.

[கை + உறுதி.]

கையுறை¹ *kai-y-uṟai,* பெ.(n.) 1.காணிக்கைப் பொருள்; offerings, presents from an inferior to a superior, visiting presents. *"மையறு சிறப்பிற் கையுறை யேந்தி" (சிலப். 8:22).* 2. மொய்ப்பணம்; marriage presents. 3. தலைவிக்கு அன்பு பாராட்டித் தலைவன் கொடுக்கும் தழை முதலிய நன்கொடை (தஞ்சைவா. 97 தலைப்பு); customary love-token consisting of a bunch of tender leaves. *4.* ***கையுடை*** பார்க்க; see *kai-y-uḍai.* 5. கையூட்டு; bribe.

ம. கையுற; **க.** கெய்சில.

[கை + உறை.]

கையுறை² *kai-y-uṟai,* பெ.(n.) விரல்களைத் தனித்தனியாக நுழைத்து மணிக்கட்டு வரையில் மாட்டிக்கொள்ளும் காப்பு உறை; a glove.

மறுவ. கைச்சாடு.

க. கெய்சீல.

[கை + உறை.]

கையுறையெழுது–தல் *kai-y-uṟai-y-eḻudu-,* 5 செ. கு.வி.(v.i.) திருமணம் முதலிய விழாக்களில் மொய்க்கணக்கெழுதுதல்; to make a list of presents made on marriage or other occasions. *"கையுறை யெழுதினர்" (சீவக. 829).*

[கை + உறை + எழுது–.]

கையூக்கம் *kai-y-ūkkam,* பெ.(n.) ***கையூற்றம்*** பார்க்க; see *kai-y-ūṟṟam* (செ.அக.).

[கை + ஊக்கம்.]

கையூக்கு *kai-y-ūkku,* பெ.(n.) ***கையூற்றம்*** பார்க்க; see *kai-y-ūṟṟam.*

[கை + ஊக்கு.]

கையூட்டு *kai-y-ūṭṭu,* பெ.(n.) நேர்மைக்குப் புறம்பாகச் செயற்பட வேண்டியோ, நேர்மையாகச் சட்டபூர்வமாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாட்டை மேற்கொள்ளாமலிருப்பதற்கோ கொடுக்கப்படும் பணம் அல்லது பொருள் (லஞ்சம்); bribe, illegal gratification, hush-money. *"எப்பேர்ப்பட்ட கையூட்டுங் கொண்டான்" (சோழவமி. 53).*

[கை + ஊட்டு.]

கையூழ் *kai-y-ūḻ,* பெ.(n.) வண்ணத்திற் செய்த பாடலெல்லாம் இன்பமாகயாழிற் பாடுதல் (உறை.சொ.5); to play music melodiously.

[கை + ஊழ்.]

கையூற்றம் *kai-y-ūṟṟam,* பெ.(n.) கையின் வலிமை, வல்லமை; strength of the arm, skill.

ம. கையூற்றம்.

[கை + ஊற்றம்.]

கையூறல் *kai-y-ūṟal,* பெ.(n.) வெள்ளையினால் கையிற் காணும் ஊறல் நோய்; venereal itching of the palm (செ.அக.).

[கை + ஊறல்.]

கையூனம் *kai-y-ūṉam,* பெ.(n.) கை பழுது; privation of hand or arm (செ.அக.).

[கை + ஊனம்.]

கையெடு¹–த்தல் *kai-y-eḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கையைத் தூக்குதல்; to raise hands. 2. கும்பிடுதல்; to salute, as a mark of respect. *"அவன் எவரையும் கையெடுப்பதில்லை" (செ.அக.).* காந்தியண்ணலைச் சுடுமுன் நாதுராம் விநாயக கோட்சே அவரைக் கையெடுத்துக் கும்பிட்டான்.

[கை + எடு–.]

கையெடு²–த்தல் *kai-y-eḍu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கையை நீக்குதல்; to withdraw the hand. தேள் கொட்டுமுன் கையெடுத்துக் கொண்டான் (உ.வ.). 2. ***கைவாங்கு–தல்*** பார்க்க; see *kai-vāṅgu-.*

க. கெய்தெகெ.

[கை + எடு–.]

கையெடு³–த்தல் *kai-y-eḍu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. இரத்தல்; to beg, entreat, supplicate. 2. தேர்ந்தெடுப்பு முதலியவற்றில் கையுயர்த்தித் தம் கருத்தை உணர்த்துதல் (Mod.); to vote by raising hands (செ.அக.).

[கை + எடு–.]

கையெடுப்பு *kai-y-eḍuppu,* பெ.(n.) கையை யுயர்த்தி நிற்கும் ஒருவனது உயரத்தினளவு; the height of a man with his arms raised up right, as used in indicating the depth of water in a well, tank, etc. *அந்தக் குளத்தில் கையெடுப்பு நீர் இருக்கிறது (உ.வ.).*

[கை + எடுப்பு.]

கையெண்ணெய் *kai-y-eṇṇey,* பெ.(n.) கையால் பிழிந்து பெறப்பட்ட எண்ணெய்; oil extracted by hand (not by mill).

மறுவ. விளக்கெண்ணெய்.

க. கெய்யெண்ணெ.

[கை + எண்ணெய்.]

கையெரிவு *kai-y-erivu-,* பெ.(n.) பித்தத்தினால் உண்டாகும் உள்ளங்கை எரிச்சல்; burning of the palm due to bilious causes (சா. அக.).

[கை + எரிவு.]

கையெழுத்து *kai-y-eḻuttu,* பெ.(n.) 1. கையாலெழுதும் எழுத்து; hand writing. *“நீரி லெழுதுங் கையெழுத் தென்றும்” (அருட்பா. தெய்வமணி. 17). கையெழுத்து நல்லாயிருந்தா போதுமா, தலையெழுத்தும் நல்லா இருக்கணுமே (உ.வ.).* 2. கையொப்பம்; signature, initial. 3. உடன்படிக்கை; written agreement. *“சதுர்வேதி மங்கலத்து சபையோம் கையெழுத்து” (S.I.I.II,103).* 4. ***கைவரி*** பார்க்க; see *kai-vari* (செ.அக.). 5. தன் பேரெழுத்து; name of an individual signed on letter on document. சிலர் கையெழுத்து முத்துப்போல் அழகாக இருக்கும் (உ.வ.).

ம. கய்யக்ஷரம், கையெழுத்து; **க.** கெய்பரக.

[கை + எழுத்து.]

கையெழுத்துப்படி *kai-y-eḻuttu-p-paḍi,* பெ.(n.) கையாலெழுதிய நூற்படி மூலம்; manuscript. சில நூற்றாண்டுகளுக்கு முன் எழுதிய தமிழ் நூல்களின் மூலக் கையெழுத்துப்படிக் கூடக் கிட்டவில்லை.

[கை + எழுத்து + படி.]

கையெழுத்துப்பிரதி *kai-y-eḻuttu-p-piradi,* பெ.(n.) ***கையெழுத்துப்படி*** பார்க்க; see *kaiy-eḻuttu-p-paḍi*

[கை + எழுத்து + பிரதி.]

கையெழுத்துப்போடு–தல் *kai-y-eḻuttu-p-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) கையொப்பமிடுதல்; to sign one's name, affix one's signature or initial (செ.அக.).

[கை + எழுத்து + போடு–.]

கையெழுத்து மறையும் நேரம் *kai-y-eḻuttu-maṟaiyum-nēram,* பெ. (n.) அந்தி மயங்கும் நேரம்; twilight. கையெழுத்து மறையும் நேரமாயிற்று. இன்னும் கன்றுகாலிகள் பட்டியில் வந்து அடையவில்லை (உ.வ.).

[கை + எழுத்து + மறையும் + நேரம்.]

கையெழுத்துவை–த்தல் *kai-y-eḻuttu-vai-,* 4 செ.கு.வி. (v.t) ***கையெழுத்துப் போடு–தல்*** பார்க்க; see *kai-y-eḻuttu-p-pōḍu-* (செ. அக.).

[கை + எழுத்து + வை–.]

கையெறி–தல் *kai-y-eṟi-,* 2 செ.கு.வி.(v.t.) 1. கை கொட்டுதல்; to clap hands. *“கையெறிந்து நக்கார்” (சீவக. 582).* 2. உறுதி கூறிக் கையடித்தல்; to take a vow or to swear by striking hands. *“சென்றங்குப் பாரதங் கையெறிந் தானுக்கு” (திவ். பெரியாழ். 2:6:4).* 3. சினத்தாற் கைவீசுதல் (இ.வ.); to flourish the hands in anger (செ. அக.).

[கை + எறி–.]

கையெறி காலெறி *kai-y-eṟi-kāl-eṟi,* பெ.(n.) வலிப்பினால் கைகால்களை உதைத்துக் கொள்ளுதல்; alternate contraction of arms and legs through convulsion; clonic spasm or convulsion of the limbs (சா. அக.).

[கை + எறி + கால் + எறி.]

கையெறிகுண்டு *kai-y-eṟi-guṇḍu,* பெ.(n.) கையால் வீசி வெடிக்கச் செய்யும் குண்டு; hand grenade.

[கை + எறி + குண்டு.]

கையேடு *kai-y-ēḍu,* பெ.(n.) 1. சிறிய ஏட்டுப் புத்தகம் (தொல். பொருள். 1, இளம்.); small book, handbook. 2. நாள்வழிக் கணக்கு; day-book, journal. 3. நாள்வழிக் கணக்கில் ஏற்றுதற்கு அவ்வப்போது எழுதி வைக்கும் குறிப்புப் புத்தகம் (இ.வ.); rough day-book, waste-book. 4. பெருஞ் செலவிற்கு விவரங் காட்டுந் தனிக் கணக்குப் புத்தகம்; memorandum of account containing details of major items of expense. கையேட்டிலுள்ள குறிப்புகள் பேரேட்டிற்குச் செல்ல வேண்டும் (உ.வ.).

மறுவ. கைச்சுவடி.

ம. கையேடு.

[கை + ஏடு.]

கையேந்தி *kai-y-ēndi,* பெ.(n.) இரப்போன் (வின்.); beggar (செ. அக.).

[கை + ஏந்தி.]

கையேந்து-தல் *kai-y-ēndu-,* 9 செ.குன்றாவி. (v.t.) 1. கையை யேந்துதல்; to hold out hands. 2. இரத்தல்; to beg.

[கை + ஏந்து-.]

கையேல்-தல் [கையேற்றல்] *kai-y-ēl-,* 14 செ.கு.வி. (v.i.) 1. ***கையேந்து*** - பார்க்க; see *kai-y-ēndu-. "மென்காந்தள் கையேற்கு மிழலை யாமே" (தேவா. 575: 4).* 2. செயல் பொறுப்பை ஏற்று நடத்தல்; to undertake, shoulder responsibility (செ. அக.).

[கை + ஏல்-.]

கையேற்பு[1] *kai-y-ērpu,* பெ.(n.) 1. பெறுகை; taking, receiving. 2. இரக்கை; begging. 3. களப்பிச்சை வாங்குகை (வின்.); receiving alms at the threshing floor. 4. ஒரு தொழிலை ஏற்றுக்கொள்ளுகை (இ.வ.); undertaking a job (செ. அக.).

[கை + ஏற்பு.]

கையேற்பு[2] *kai-y-ērpu,* பெ.(n.) 1. வரிவகை (I.M.P. Cg. 524); a tax (செ. அக.). 2. கைப்பிச்சை; begging for alms.

[கை + ஏற்பு.]

கையேற்றம் *kai-y-ērram,* பெ.(n.) செல்வப் பெருக்கான நிலை; state of prosperity (செ. அக.). இப்போது அவன் கையேற்றமாய் உள்ளான் (உ.வ.).

[கை + ஏற்றம்.]

கையேறல் *kai-y-ēral,* பெ.(n.) நடுத்தரமான முத்து (யாழ். அக.); pearl of medium size or quality (செ.அக.).

[கை + ஏறல்.]

கையேறு-தல் *kai-y-ēru-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கையிற் கிடைத்தல்; to reach one's hand; to come to hand, as a payment or bribe. *இன்னும் பணங் கையேறவில்லை.* 2. ***கைமாறு***[1] பார்க்க; see *kai-māru* (செ. அக.).

[கை + ஏறு-.]

கையேனம் *kai-y-ēnam,* பெ.(n.) சிறு ஏனம், சிறு கொள்கலன்; small vessel.

[கை + ஏனம்.]

கையை *kaiyai,* பெ.(n.) தங்கை (பிங்.) younger sister.

[கை + ஐ.]

கையைக்கடி-த்தல் *kaiyai-k-kadi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. எதிர்பார்த்தற்குமேல் செலவாதல்; lit., to bite the hand, to exceed the allotted amount. 2. இழப்பு ஏற்படுதல்; to entail loss (செ.அக.). திருமணச் செலவு கையைக் கடித்துவிட்டது.

[கையை + கடி-.]

கையைக் குறுக்கு-தல் *kaiyai-k-kurukku-,* 5 செ.கு.வி. (v.i.) 1. செலவைக் குறைத்தல்; to retrench or cut down expenses. 2. இவறன்மை (கஞ்சத்தனம்) செய்தல்; to be close-fisted; to give sparingly (செ.அக.).

[கையை + குறுக்கு-.]

கையைப்பிடி-த்தல் *kaiyai-p-pidi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கையைப் பற்றுதல்; to hold the hand. 2. திருமணஞ் செய்தல்; to marry. 3. ***கையைப் பிடித்திழு-த்தல்*** பார்க்க; see *kaiyai-p-pidittilu-.*

[கையை + பிடி-.]

கையைப்பிடித்திழு-த்தல் *kaiyai-p-pidittilu-,* 4 செ.குன்றாவி.(v.t.) தீயநோக்கத்தோடு ஒருத்தியைக் கைப்பற்றி யழைத்தல்; to solicit illegitimately the favours of a woman through drawing her by her hands (செ. அக.).

[கையை + பிடித்து + இழு-.]

கையொட்டி *kai-y-otti,* பெ.(n.) சிறுகுழந்தை (இ.வ.); a babe in arms, nursling (செ. அக.).

மறுவ. கைக்குழந்தை.

[கை + ஒட்டி.]

கையொட்டுக்கால் *kai-y-ottu-k-kāl,* பெ.(n.) கருப்பூரவகை (சிலப். 14:109, உரை); a kind of camphor (செ.அக.).

[கை + ஒட்டு + கால்.]

கையொடிந்ததா-தல் *kai-odin-dadāl,* 4 செ.கு.வி.(v.i.) பிரிவு;separation. அவன் இல்லாதது கையொடிந்தது போல இருக்கிறது (நெல்.வழ.).

[கை + ஒடிந்தது + ஆ-.]

கையொடுகாவலாய் *kai-y-odu-kāvalāy,* கு.வி.எ. (adv.) தக்க நேரத்திற்குப் பயன்படுவதாய் (கொ.வ.); as a help in emergencies (செ. அக.).

[கையொடு + காவலாய்.]

கையொத்து–தல் *kai-y-ottu-* 4 செ.கு.வி.(v.i.) வழிபாடு செய்தல்; to join the hands together in worship. *"கையொத்து செல்லுங்கோள்" (ஈடு. 6, 1:5) (செ.அக.).*

[கை + ஒற்று→ ஒத்து.]

கையொப்பம் *kai-y-oppam,* பெ.(n.) 1. கையால் தன் பெயரெழுதிய ஒப்புகை; signature. 2. கீறற் கையெழுத்து, mark made in place of signature by illiterate persons. 3. கையெழுத்துச் செய்யப்பட்ட தொகை (சந்தா); subscribed amount (செ. அக.).

ம. கைப்பதிவு; க. கெய்குறுது.

[கை + ஒப்பம்.]

கையொப்பமிடு–தல் *kai-y-oppam-idu-,* 20 செ. கு.வி.(v.i.) ***கையெடுத்திடு–தல்*** பார்க்க; see *kai-y-eduttidu-.*

[கையொப்பம் + இடு–.]

கையொலி[1] *kai-y-oli,* பெ.(n.) கைகளால் எழுப்பும் ஒலி; sound made while clapping. *கோயில்களில் சண்டிகேசுவரருக்கு நூலைப் போட்டு, கையொலி செய்தல் வேண்டும் (உ.வ.).*

[கை + ஒலி.]

கையொலி[2] *kai-y-oli,* பெ.(n.) பெரும்பாலும் ஐந்து முழமுள்ளதும் திருமேனிகட்குச் சாத்துவதுமான சிறிய ஆடை; small cloth, usually five cubits long, with which idols are clothed. *"கையொலியைத் தலையிலே கட்டுகிறதும்" (கோயிலொ.) (செ. அக.).*

[கை + ஒலி. ஒலியல் = ஆடை.]

கையொலியல் *kai-y-oliyal,* பெ.(n.) ***கையொலி*** (தொல். பொருள்.1, இளம்.) பார்க்க; see *kai-y-oli* (செ.அக.).

[கை + ஒலியல்.]

கையொழி–தல் *kai-y-oli-,* 2 செ.கு.வி. (v.i.) 1. ***கைதூவு–தல்*** பார்க்க; see *kai-tūvu-.* *"எண்ணிய கருமஞ் செய்தற்கு யான் கையொழியேன்" (குறள், 1021, உரை).* 2. கைவேலை நீங்குதல் (கொ. வ.); to be free from work or engagement (செ. அக.).

ம. கையொழியுக; து. கயிவொடுங்கெலுனி.

[கை + ஒழி–.]

கையொழியாமை *kai-y-oliyāmai,* பெ.(n.) 1. முயற்சி நீங்காமை (திவா.); state of ceaseless activity; 2. ஓய்வின்மை; want of leisure; 3. நீங்கா நிறை ஒழுக்கம்; perfect conduct.

மறுவ. ஒழியா வொழுக்கம்.

[கை + ஒழியாமை.]

கையொழுக்கம் *kai-y-olukkam,* பெ.(n.) வேறுபாடின்றி ஒரே வகையாக யொழுகுந் தன்மை (வின்.); unvarying course of conduct, perseverance (செ. அக.). 2. ஒழுக்கம்; conduct.

[கை + ஒழுக்கம்.]

கையொற்றி *kai-y-orri,* பெ.(n.) 1. அமர்த்தாணை ஆவண எழுத்தரால் எழுதப்பெறாமல் வைக்கப்படும் ஒற்றி (வின்.); mortgage of lands without reference to a notary public. 2. பதிவு செய்யப்படாத ஒற்றி; a mortgage transaction not evidenced by registration (செ. அக.).

ம. கையொற்றி.

[கை + ஒற்றி.]

கையொறுப்பு *kai-y-oruppu,* பெ.(n.) 1. சிக்கனச் செலவு (யாழ். அக.); thrift. 2. இச்சையடக்குகை; self-denial (செ.அக.). 2. கையுறுதியில் வைக்கப் பட்ட காணியீடு; security deposited to obtain a loan.

[கை + ஒறுப்பு.]

கையோங்கு[1]–தல் *kai-y-ōngu-,* 5 செ. குன்றாவி. (v.t.) அடித்தல்; to strike. பிள்ளைகளைக் கையோங்கலாகாது (உ.வ.).

[கை + ஓங்கு–.]

கையோங்கு[2]–தல் *kai-y-ōngu-,* 8 செ.கு.வி. (v.i.) 1. மேன்மைப்படுதல்; to grow in prosperity; to be prosperous. அவனுக்கு இப்போது கையோங்குங் காலம் (உ.வ.). 2. செழித்தோங்குதல் (வின்.); to be luxuriant in growth, as tree. 3. வெற்றியடைதல்; to gain victory.

ம. கையோங்குக.

[கை + ஓங்கு–.]

ஆட்டம், போர், பொருள் முதலியவற்றின் வெற்றிக்கும் உயர்ச்சிக்கும் இடமாகச் சொல்லப் படுவதால் இச் சொல் வழக்குச் சொல்லாயிற்று.

கையோட்டம் *kai-y-ōttam,* பெ.(n.) 1. எழுதுதல் முதலிய வேலைகளிற் கை விரைவு; dexterity of hand; speed or ease, as in writing. 2. செல்வ நிலை; affluent circumstances (செ. அக.).

[கை + ஓட்டம்.]

கையோடழை–த்தல் *kaiyōdalai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. உடனே வருமாறு அழைத்தல்; ask to come at

once. திருமண உறுதி செய்யும் பொருட்டுத் தங்களை அம்மா கையோடழைத்துவரச் சொன்னார் (உ.வ.).

[கை + ஒடு + அழை-.]

கையோடாமை *kai-y-ōḍāmai,* பெ.(n.) திடீர் உணர்வில் செயற்பட முடியாத நிலை; stage of inactiveness. அதிர்ச்சியில் அவனுக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை (உ.வ.).

[கை + ஓடாமை.]

கையோடு[1]-தல் *kai-y-ōḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. வேகமாக எழுதுதல்; to write a fast hand, write quickly. *"கையோட வல்லவர்... எழுதினும்" (அருட்பா.1. திருவருள். 10).* 2. ஒரு தொழிலில் மனஞ் செல்லுதல்; to be inclined to a task.

[கை + ஓடு-.]

கையோடு[2] *kai-y-ōḍu,* கு.வி.எ. (adv.) 1. உடன்; with, together with. கையோடு கூட்டிவா. 2. அணியமாக; at hand, ready. மருந்து கையோடு இருக்க வேண்டும். 3. உடனடியாக, காலந் தாழ்த்தாது; immediately, without delay. *சொன்னதுங் கையோடே போனேன் (செ.அக.).*

ம. கையோடெ.

[கை + ஒடு.]

கையோடுகையாய் *kai-y-ōḍu-kai-y-āy,* வி.எ.(adv.) 1. செயலுடன் செயலாக; along with the work on hand. கையோடு கையாய் இச் செயலையும் முடித்துவிடு. 2. ***கையோடு[3]*** பார்க்க; see *kai-y-ōḍu[3]*.

[கையோடு + கை + ஆய்.]

கையோடே *kaiyōḍē,* கு.வி.எ.(adv.) ***கையோடு*** பார்க்க; see *kai-y-ōḍu* (செ. அக.).

[கை + ஓடே.]

கையோலை *kai-y-ōlai,* பெ.(n.) ***கைமுறி*** பார்க்க; see *kai-muṟi* (செ. அக.). 2. கையுறுதி; security deposited for loan.

ம. கையோல.

[கை + ஓலை.]

கையோலைசெய்-தல் *kai-y-ōlai-cey-,* 1 செ. குன்றாவி.(v.t.). தீர்மானித்தல், உறுதி செய்தல்; to determine, settle, confirm. *"கவிழ்ந்திருந்து கையோலை செய்து கொடுக்கிறார்" (ஈடு,2,9:4) (செ.அக.).*

[கை + ஓலை + செய்-.]

கைராசி *kai-rāśi,* பெ.(n.) ***கையாக்கம்*** பார்க்க; see *kai-y-ākkam*.

[கை + ராசி.]

கைராட்டு *kai-rāṭṭu,* பெ.(n.) கையால் நூல் நூற்கும் எந்திரம்; spinning wheel (செ. அக.).



கைராட்டு

மறுவ. கைராட்டை, கைராட்டினம்

ம. கைராட்டு; க. கைராடெ; தெ. சேதிராட்னமு.

[கை + இறாட்டு → இராட்டு.]

கைரேகை *kai-rēgai,* பெ.(n.) ***கைவரை*** பார்க்க; see *kai-varai.*

கை + ரேகை. ஏகை (சிலப்.). ஏகை - கீற்று, ஏகை - ரேகை என வடமொழியில் திரிந்தது (ஏகைக்கணியம்). ***கைவரி*** பார்க்க; see *kai-vari.*

மறுவ. கையேகை, கைவரை, கைவரி.

[கை + ரேகை.]

கைரேகை நூல் *kai-rēgai-nūl,* பெ.(n.) கைவரி கணியம்; palmistry (சா. அக.).

மறுவ. கைவரிக்கணியம்.

[கை + ரேகை + நூல்.]

கைரொக்கம் *kai-rokkam,* பெ.(n.) ***கைம்முதல்*** பார்க்க; see *kai-m-mudal.*

[கை + ரொக்கம்.]

கைல் *kail,* பெ.(n.) பிடரி; back of the neck; nape. (சா. அக.)

[உல் → குல் → கில் → கைல்.]

கைலஞ்சம் *kai-lañjam,* பெ.(n.) ***கையூட்டு*** பார்க்க; see *kai-y-ūṭṭu.*

[கை + லஞ்சம்.]

கைலாகு *kai-lāgu*, பெ.(n.) ***கைத்தாங்கல்*** பார்க்க; see kaittangal.

மறுவ. கைலாகுகொடுத்தல்.

[கை + லாகு.]

கைலாகுகொடு-த்தல் *kai-lāgu-kodu-*, 1 செ.கு.வி.(v.t.) அரசர் துறவியர் போன்ற மேன்மையர் நடக்கும்பொழுது மதிப்புரவாக அவர் கைகளைத் தாங்குதல்; to support by the arms, as a king or other great personage while walking, as a mark of respect. 2. உடல் வலிவற்றவரைக் கைகொடுத்துத் தாங்குதல்; to hold by the arms, as a weak man (செ. அக.).

[கை + லாகு + கொடுத்தல்.]

கைலாகை *kai-lāgai*, பெ.(n.) ***கைலாகு*** (யாழ். அக.) பார்க்க; see *kai-lāgu*.

[கை + லாகை.]

கைலாசநாதன் *kailāśa-nādan*, பெ.(n.) சிவன்; "*Siva, as the Lord of Mount Kailas.*

[கைலாசம் + நாதன்.]

கைலாசநாயனார் *kailāśa-nāyanār*, பெ.(n.) சட்டைமுனி என்னும் சித்தரின் மறுபெயர்; a Šiddha named Sattamuni (சா.அக.).

கைலாசம் *kailāśam*, பெ.(n.) ***கைலாயம்*** பார்க்க; see *kailāyam.*

[கைலாயம் → கைலாசம்.]

கைலாச மந்திரன் *kailāśa-māndiran*, பெ.(n.) சிவன்; Lord Šiva.

[கைலாசம் + (மந்திரம்) மந்திரன்.]

கைலாத்து[1] *kailāttu*, பெ. (n.) சாரமற்றது; juiceless, a thing of no avail.

[கையால் + அற்றது → கையாலற்றது → கைலாத்து (கொ.வ.).]

கைலாய சுந்தரர் *kailāya-śundarar*, பெ.(n.) ***கைலாசநாதன்*** பார்க்க; see *kailāśa-nādan*

[கைலாயம் + சுந்தரர்.]

கைலாயதேகம் *kailāya-tēgam*, பெ.(n.) 1. கற்பதேகம்; rejuvenated system of body. 2. இறவா உடல்; immortal body.

[கைலாயம் + தேகம்.]

கைலாயம் *kailāyam*, பெ. (n.) எண்வகைக் குன்றுகளில் ஒன்றும் சிவன் வாழ்விடமாகக் கருதப்படுவதுமான ஒருமலை; Kailas, supposed to be the abode of Šiva, one of Asta-kula parvadam (செ.அக.).

[கயில் (உச்சி, முகடு) + ஆயம் – கயிலாயம் (உயர்ந்த உச்சிகளைக் கொண்டமலை).]

கைலாய மேருகலை *kailāya-mēru-kalai*, பெ.(n.) வலது மூக்குத்துளை வழியாகச் செல்லும் மூச்சுக்காற்று; the vital air passing through the right nostril (சா.அக.).

மறுவ. சூரியகலை.

[கைலாயம் + மேரு + கலை.]

கைலி *kaili*, பெ. (n.) ***கையொலி*** பார்க்க; see *kai-y-oli.* "*அழகிய மணவாளப் பெருமாள் சாத்தியருளின கைலியில்" (கோயிலொ. 30) (செ. அக.).*

[கையொலி → கைலி.]

கைலேசு *kai-lēšu*, பெ. (n.) கைக்குட்டை (நாஞ்.); hand kerchief (செ. அக.).

[கை + லேசு. (கை - குறுமை, ஒலியல் → ஒலிசு → லேசு = உடை).]

கைலை *kailai*, பெ.(n.) ***கைலாயம்*** (திவா.) பார்க்க; see *kailāyam* (செ. அக.).

[கைலாயம் → கைலை. மரூஉ.]

கைலைக்கலம்பகம் *kailai-k-kalambagam*, பெ. (n.) குமரகுருபரரால் பதினேழாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சிற்றிலக்கிய நூல்; a treatise composed by kummaragurubarar during 17th Century.

[கைலை + கலம்பகம்.]

கைலைமூர்த்தி *kailai-mūrtti*, பெ.(n.) அண்ட சுண்ணம்; calcined compound (சா.அக.).

[கைலை + மூர்த்தி.]

கைலைவெளி *kailai-veli*, பெ.(n.) மூளை; brain (சா.அக.)

[கைலை + வெளி.]

கைவசம் *kai-vaśam*, பெ.(n.) ***கைவயம்*** பார்க்க; see *kai-vayam.*

க. கெய்வச.

[கை + (வயம்) வசம்.]

கைவட்டகை *kai-vattagai*, பெ.(n.) சிறிய உண்கலன்; a kind of metal vessel. "*கை வட்டகை யொன்று" (S.I.I.II, 418, 81) (செ.அக.).*

ம. கைவட்டகை.

[கை + வட்டகை.]

கைவட்டணை *kai-vattanai,* பெ. (n.) நாட்டியத்தில் கையாற் செய்யும் முத்திரை (*சீவக.1257, உரை*); hand pose in dancing.

[கை + வட்டணை.]

கைவட்டி *kai-vatti,* பெ.(n.) சிறிய ஒலைப்பெட்டி; small *ola* basket (செ. அக.).

[கைவட்டி : கடக்ப்பெட்டி. வடு → வட்டு → வட்டி : வட்டமானது, உருண்டையானது.]

கைவட்டில் *kai-vattil,* பெ. (n.) ***கைவட்டி*** பார்க்க; see *kai-vatti.*

[கை + (வட்டு→வட்டி) வட்டில்.]

கைவண்டி *kai-vandi,* பெ. (n.) 1. கையால் இழுக்கும் வண்டி; hand-cart, barrow, trundle. 2. தள்ளு வண்டி; perambulator.

ம. கைவண்டி; க. கைபண்டி; தெ. செய்பண்டி.

[கை + வண்டி.]

கைவண்டில் *kai-vandil,* பெ.(n.) ***கைவண்டி*** பார்க்க; see *kai-vandi.*

[கை + வண்டில். வண்டி → வண்டில்.]

கைவண்ணம் *kai-vannam,* பெ.(n.) கைத்திறன் – ஆற்றல்; power of the hand, talent. *"கைவண்ணம் அங்குக் கண்டேன்" (கம்பரா.பால.481).*

[கை + வண்ணம்.]

கைவந்தகலை *kai-vanda-kalai,* பெ. (n.) செய்து செய்து பழகிய முதிர்ந்த நிலை; handy technique. பாவேந்தர் பாரதிதாசனார்க்குத் தமிழ்ப்பா, கைவந்த கலையாகத் திகழ்ந்தது (உ.வ.).

[கை + வந்த + கலை.]

கைவந்தவன் *kai-vandavan,* பெ.(n.) பழகித் தேர்ந்தவன்; a practised hand. *வித்தை கை வந்தவன் (செ.அக.).*

[கை + வந்தவன்.]

கைவந்தி *kai-vandi,* பெ.(n.) தோளின் கீழாகக் கையில் அணியப்படும் ஓரணி; bracelet worn on the arm just below the shoulder. *"விளக்க முற்றிய கைவந்தி யினையும்" (மதுரைக். 415, உரை).*

[கை + வந்தி.]

கைவயம்[1] *kai-vayam,* பெ.(n.) கையிலிருக்கும் பொருள்; matter on hand. புலவர் குழந்தையின் திருக்குறள் உரை என் கைவயமில்லையே (உ.வ.).

[கை + வயம்.]

கைவயம்[2] *kai-vayam,* பெ.(n.) 1. கையிருப்பு; actual possession. 2. கையிருப்பு; charge. 3. அடைக் கலம், கையடை; custody. அவள் இப்போது உன் கைவயமாய் ஆகிவிட்டாள் (உ.வ.).

ம. கைவசம்; க., து., கைவச.

[கை + வயம்.]

கைவர்த்தம் *kaivarttam* பெ.(n.) கோரைக்கிழங்கு; corai root (சா. அக.).

[கை + வருத்தம் (வட்டம், வளைவு) – கைவருத்தம்→ கைவர்த்தம்.]

கைவர்த்தர் *kai-varttar,* பெ.(n.) பல்லக்குத் தூக்கிகள் (ஈடு.); palanquin bearers (செ. அக.).

[கைவரு → கைவருத்தர் → கைவர்த்தர் (திறனாளர்).]

கைவரப்பு *kai-varappu,* பெ.(n.) குறுங்காலிகமாக இட்ட சிறு மண்ணணை (இ.வ.); temporary earthen bank (செ. அக.). கைவரப்பு எவ்வளவு நேரம் நிற்கும்.

[கை + வரப்பு.]

கைவரல் *kai-varal,* பெ.(n.) 1. அறுவை மருத்துவம் செய்வதில் தேர்ச்சியடைந்திருத்தல்; being an expert in performing a manual work as operation (சா. அக.). 2. கைப்பழக்கம்; manual skill acquired by practice.

[கை + வரல்.]

கைவரி *kai-vari,* பெ.(n.) ***கைவரை*** பார்க்க; see *kai-varai.*

[கைவரை → கைவரி.]

கைவரிக்கணியம் *kaivari-k-kaniyam,* பெ.(n.) கைவரி (கைரேகை)களை உற்று நோக்கி வருங்காலம் உரைக்கும் குறிநூல்; palmistry.

மறுவ. கைரேகை நூல், கைரேகை சாத்திரம்.

[கை + வரி + கணியம்.]

கைவரிகை *kai-varigai,* பெ.(n.) ***கைவரை*** பார்க்க; see *kai-varai.*

[கைவரை → கைவரிகை.]

கைவரிசை *kai-varišai,* பெ.(n.) 1. திறமை (கொ.வ.); strength, prowess. இறுதியில் அவன் தன் கைவரிசையைக் காட்டிவிட்டான். 2. கொடை (இ.வ.); liberality. 3. *சீட்டாட்டத்தில்* முதலில் *சீட்டை* இறக்கும் உரிமை; right to serve first in a game of cards (செ.அக.).

[கை + வரிசை.]

கைவருடல் *kai-varudal,* 7 செ.கு.வி.(v.t.) கையால் தடவுதல்; to massage.

[கை + வருடல்]

கைவரை[1] *kai-varai,* பெ.(n.) அகங்கையில் உள்ள கோடுகள்; lines on the palm.

மறுவ. கைவரி, கைரேகை.

[கை + வரை]

கைவரை[2] *kai-varai,* பெ.(n.) 1. கையெழுத்து; hand-writing. 2. கையொப்பம்; signature.

க. கெய்பரக.

[கை + வரை]

கைவரை[3] *kai-varai,* பெ.(n.) கையால் எழுதியது; hand-writing.

க. கெய்பெரக; படட. கைபரெ.

[கை + வரை]

கைவரைச்சம்பா *kai-varai-c-cambā,* பெ.(n.) சம்பா நெல்வகையுளொன்று (பதார்த்த. 803); a kind of cambā paddy (செ.அக.).

[கை + வரை + சம்பா.]

கைவல்யம் *kaivalyam,* பெ.(n.) ***கைவல்லியம்*** பார்க்க; see *kaivalliyam* (செ. அக.).

[கைவல்லியம் → கைவல்யம்.]

கைவல்லபம் *kai-vallabam,* பெ. (n.) 1. தோள் வலிமை; power or strength of arm. 2. தொழில் செய்கைத்திறம்; dexterity of hand, skill in handicraft (செ. அக.).

[கை + (வல்லம்) → வல்லவம் → வல்லபம்.]

கைவல்லயம் *kai-vallayam,* பெ. (n.) கைத்திறமை, ஆற்றல்; talent.

[கை + (ஒல் → வல்) வல்லயம்.]

கைவல்லர் *kai-vallār-,* பெ.(n.) திறமையானவர்; adept.

[கை + வல்லர்.]

கைவல்லவம் *kai-vallavam,* பெ. (n.) ***கைவல்லயம்*** பார்க்க; see *kai-vallayam.*

[கை + (ஒல் → வல் → வல்லயம்) வல்லவம்.]

திறமையையும் ஆற்றலையும் குறித்த வல்லவம் எனும் தமிழ்ச்சொல் வடமொழியில் வல்லபம் எனத் திரிந்தது.

கைவல்லிய நவநீதம் *kai-valliya-navanidam,* பெ.(n.) தாண்டவராய அடிகள் தமிழ்ச் செய்யுளில் இயற்றிய ஓர் இரண்டன்மை நெறிநூல்; an Advaita treatise in Tamil by Tandavaraya swami (செ.அக.).

[கை + (வல்லயம்) வல்லியம் + நவநீதம்.]

கைவல்லியம்[1] *kai-valliyam,* பெ.(n.) 1. ஒன்றான தன்மை; absolute oneness, perfect isolation. *"நிர்விஷய கைவல்லமாநிஷ்கள" (தாயு. கருணா.1.).* 2. துறக்கம் (திவா.); final emancipation. 3. பயன் (அனுகூலம்) (இ.வ.); success, gain. 4. நூற்றெட்டு மறைமங் (உபநிடதம்) களிலொன்று; an Upanishad, one of 108 (செ.அக.), 5. கைகூடுகை; achieving object. 6. தனிமை; solitude.

[கை + (ஒல் → வல்) வல்லயம் (வல்லியம்). கை தனிமை, உயர்வு.]

கைவல்லியம்[2] *kai-valliyam,* பெ.(n.) வீடுபேறு; eternal emancipation. 2. வெற்றி; success. 3. உடலிலிருந்து உயிரைப் பிரித்தல்; separation of the soul from matter. 4. எல்லாப் பற்றுகளினின்றும் விலகி, மறுபிறப்பு அறுத்தும் நிற்றல்; perfect isolation (சா.அக.).

[கை + (வல்லயம்) வல்லியம். கைஒல்லுதல் : கைச்சேர்தல், பெறுதல். ஒல் → வல். கைவல்லியம் பெறத்தக்க வீடுபேறு.]

கைவல்லியமா-தல் *kai-valliyam-ā-,* 2 செ.கு.வி, (v.i.) வாய்த்தல்; being successful (சா. அக.).

[கை + வல்லியம் + ஆ-.]

கைவல்லோர் *kai-vallōr* பெ.(n.) கைப்பழக்க முள்ளோர்; adeptat handiwork.

[கை + வல்லோர்.]

கைவலச்செல்வன் *kaivala-c-celvaṉ,* பெ.(n.) அருகன் (துறக்கமா செல்வத்தை யுடையவன்); Arhat, as one possessing the wealth of final emancipation. *"கருமக்கடம் கடந்த கைவலச் செல்வன்" (சீவக. 274).*

[கைவலம் + செல்வன்.]

கைவலம் *kai-valam,* பெ.(n.) துறக்கம்; final emancipation. *"இவை விடுத்தறானே யடையுங் கைவலம்" (பிரபோத.42:15). (செ.அக.).* 2. கைந் நலம்; luck associated with one's hand.

[கை + (ஒல்→வல்→வல்லயம்) வலம்.]

கைவலி-தல் *kai-vali-,* 2 செ. குன்றாவி. (v.t.) கைகடந்து போதல்; to get out of control, to disobey. *"சிறுமா னிவணம்மைக் கைவலிந்து" (திவ்.திருவாய். 6:5:7).*

[கை + வலி-.]

கைவலிப்பு *kai-valippu,* பெ.(n.) கைக்குக் காணும் குரக்குவலி; cramp in the hand (சா.அக.). 2. கைக்கடுப்பு; irritation in the hand.

[கை + வலம்.]

கைவலிமை *kai-valimai,* பெ.(n.) கையின் ஆற்றல்; the power of the hand.

க. கெய்பல.

[கை + வலிமை]

கைவலை *kai-valai,* பெ.(n.) சிறுவலை; small casting-net.

[கை + வலை.]

கைவழக்கம் *kai-valakkam* பெ.(n.) 1. கையின் கொடைக்குணம்; liberality, munificence. திருக்கை வழக்கம். 2. ***கைவிளக்கம்*** [2] பார்க்க; see *kai-vilakkam.* 3. கோயிலில் பூசகர் முதலியோருக்கு உரிய உரிமை; perquisites of the priest or servant of a temple. 4. ஈமக்கடனாற்றிய பின்பு குடிமக்கள் ஐவர்க்குக் கொடுக்கும் பணம் முதலியன (யாழ்.); money and other gifts to five of the *kudimakkal* on the day after the funeral ceremony.

ம. கைவழக்கம்; பட. கைபழக்க.

[கை + வழக்கம்.]

கைவழங்காமலிருத்தல் *kai-valankāmal-iruttal,* பெ.(n.) கை முடமாயிருத்தல்; being lame of hand (சா.அக.).

[கை + வழங்காமல் + இருத்தல்.]

கைவழங்காமை *kai-valangāmai,* பெ.(n.) கை பயன்பாடற்றுப் போதல்; being unable to use the hand (சா. அக.).

மறுவ. விளங்காமை.

[கை + வழங்காமை.]

கைவழங்கு[1]–தல் *kai-valangu-,* 8 செ. குன்றாவி. (v.t.) கொடுத்தல்; to give (செ. அக.).

[கை + வழங்கு–.]

கைவழங்கு[2]–தல் *kai-valangu-,* 10 செ. கு. வி. (v.i.) ***கையடி–[1],*** பார்க்க; see *kai-y-adi-.* *"வெஞ்சமர் விளைக்கவே கைவழங்குகென" (பாரத. கிருட்.120).*

[கை + வழங்கு–.]

கைவழம் *ka-ivalam,* வழங்குங் கைப்பக்கம்; being able to use the hand or arm.

[கை + வழம்.]

கைவழி[1] *kai-vali,* பெ. (n.) 1. யாழ்; lute, as an instrument held in the hand. *"கைவழி மருங்கின் செவ்வழி பண்ணி" (புறநா. 149:3) (செ. அக.).*

[கை + வழி (கையிலிருப்பது).]

கைவழி[2] *kai-vali,* பெ. (n.) 1. ஒருவன் கைவசமாக அனுப்பிய பொருள்; that which is sent by a person. 2. ஆள்; individual, person. 3. ***கைராசி*** (இ.வ.) பார்க்க; see *kai-rāśi* (செ.அக.).

[கை + வழி.]

கைவழி[3] *kai-vali,* பெ.(n.) 1. ஒற்றையடிப்பாதை (இ.வ.); foot-path. 2. சிறு கிளையாறு; small branch of a river (செ. அக.).

ம. கைவழி.

[கை + வழி.]

கைவழி[4] *kai-vali,* பெ.(n.) தெய்வத் திருமேனிக்குச் சாற்றும் சிற்றாடை; small cloth, usu. 5 cubits. long, with which idols are clothed.

[கை + வழி.]

கைவழித்தமண் *kai-valitta-man,* பெ.(n.) நுண்ணிய களிமண்; fine clay, sticking to the hands of potter (சா. அக.).

[கை + வழித்த + மண்.]

கைவளச்சம்பா *kai-vala-c-cambā,* பெ.(n.) நிறமும் இனிமையுமுள்ள சம்பா நெல்வகை (வின்.); a species of cambā paddy with bright colour and pleasant taste.

[கை + வளம் + சம்பா.]

கைவளப்பம் *kai-valappam,* பெ.(n.) கொடை; bounty. *'கைவளப்பத்தையுடைய தலைவன்' (பெரும்பாண். 420, உரை).*

[கை + வளப்பம்.]

கைவளம் *kai-valam,* பெ.(n.) 1. ***கைராசி*** பார்க்க; see *kai-rāśi.* 2. கைப்பொருள்; property on hand. 3. செழிப்பு; fertility, luxuriance, richness of soil. *"கைவளமான தேசம்" (இ.வ.).* 4. கைத்தொழிலின் திறம்; skill in workmanship. *"கண்டோர் மருளக் கைவளங் காட்டி" (பெருங். இலாவாண.4:194) (செ.அக.).*

[கை + வளம்.]

கைவளர்[1]–தல் *kai-valar-,* 2 செ.கு.வி. (v.i.) 1. போற்றப்பட்டு வளர்தல்; to be carefully tended. *"கைவளர் மயில னாளை" (கம்பரா. கோலங். 18).*

2. பழக்கமுறுதல்; to be accustomed, habituated, experienced. *"விஷயாந்தரங்களிலே கைவளருகிற கரணங்களை" (அஷ்பாதச. ப. 22).*

ம. கைவளருக.

[கை + வளர்–.]

கைவளர்[2]–தல் *kai-valar-*, 2 செ.கு.வி.(v.i.) பரவுதல்; to spread. *"சேனையொடு கைவளர்ந்து சென்றது" (பு.வெ.6:5). "கன்னிசூழ் நாட்டிற் கயலாணை கைவளர" (S.I.I.V. 155).*

[கை + வளர்–.]

கைவளாக்கை *kaivaḷākkai*, பெ.(n.) ஏழு முள்ளுக்கொடி (சா.அக.); thorny creeper.

[கைவளம் = செழிப்பு. அக்கு = முள். கைவளம் + (அக்கு) அக்கை – கைவளக்கை.]

கைவளை[1] *kai-vaḷai*, பெ.(n.) 1. கைத்தொடி (பிங்.); bangle worn on hand or bangle bracelet. *"கைவளை திருத்துபு கடைக்கண் நோக்கினாள்" (கம்ப.இராம.).* 2. தோள்வளை; an arm-ring. 3.மேற்கூரையைத் தாங்குமாறு சுவர் முதலியவற்றி லமைக்குஞ் சட்டம்; wall-plate, horizontal beam upon a wall or upon projecting corbels, supporting the ends of other beams or roof-trusses (செ. அக.). 4. கூகம்; the state of being hidden. 3. சிறுவளை; small bangle. 6. மருதோன்றி; a flowering shrub. 7. வளையல்; bangle.

கை வளை (தொடி)

ம. கைவள; க. கெய்பளெ; படு. கைபே.

[கை + வளை.]

கைவளை[2] *kai-vaḷai*, பெ.(n.) மருதோன்றி; a herb used to colour the hands and feet of girls.

[மரு = நிறம். மரு + தோன்றி. கை = சிறிய. வேளை = வேளைச்செடிவகை. கை + வளை – கைவேளை – கைவளை (கொ.வ.).]

கைவளை[3] *kai-vaḷai*, பெ.(n.) 1. சிறியபொந்து; a small hole. 2. கமுக்கம், மறைவு; the state of being hidden. 3. சிறுவளை; small bangle. 4. வளையல்; bangle.

[கை + வளை.]

கைவளையல் *kai-vaḷaiyal*, பெ.(n.) கைக்கிடும் வட்டவடிவ அணிகலன்; bangle.

[கை + வளையல். வளை → வளையல் = வட்ட வடிவமானது.]

கைவற்று–தல் *kai-vaṟṟu-*, 6 செ.கு. வி. (v.i.) 1. பொருளின்றி நிலைமை தாழ்தல்; to become reduced in circumstances. 2. கையிற் பொருளறுதல்; to be empty handed (செ. அக.).

[கை + வற்று–.]

கைவறட்டி *kai-vaṟṭṭi*, பெ.(n.) கையால் தட்டின வறட்டி; cow dung cake formed by hand.

[கை + வறட்டி.]

கைவறள்(ளு)–தல் *kai-vaṟaḷ(ḷu)-*, 16 செ.கு.வி. (v.i.) ***கைவற்று–தல்*** பார்க்க; see *kai-vaṟṟu-* (செ.அக.).

[கை + வறள்(ளு)–.]

கைவறுண்டி[1] *kai-vaṟuṇḍi*, பெ.(n.) சீமை மிளகாய்; ***காந்தாரி மிளகாய்*** பார்க்க; see *kāndāri-milagāy* (சா.அக.).

[சேய்மை → சீமை + மிளகாய்.. கை + வறுண்டி.]

கைவறுண்டி[2] *kai-vaṟuṇḍi*, பெ.(n.) 1. சீனமிளகாய் (சித். அக.); a species of chillies plant (செ. அக.). 2. சீனிவெடி; chinese cracker. 3. சீனி அவரைக்காய் (கொத்தவரங்காய் – சென்னை வழக்கு); a beans like vegetable.

[சின்ன → சீன (சிறிய) மிளகாய். கை + வறுண்டி.]

கைவன்மை *kai-vaṉmai*, பெ.(n.) ***கைவல்லவம்*** பார்க்க; see *kai-vallavam* (செ. அக.).

[கை + வன்மை.]

கைவா[1]–தல் (கைவருதல்) *kai-vā-*, 18 செ.கு.வி. (v.i.) 1. தேர்ச்சி பெறுதல்; to become proficient, expert. *"வேத தாற்பரியங் கைவந்திருக்கு மவர்கள்" (ஈடு, 10,1:2).* 2. ஒருங்கே நிகழ்தல்; to happen together. *"காட்டிய பத்துங் கைவரு மெனினே" (நம்பியகப். 36).* 3. கைகூடுதல்; to be successful, attained. *"இந்தப் பாவனை கைவாரா தாகில்" (சி.சி. 8:34, மறைஞா.) (செ. அக.).*

[கை + வா–.]

கைவா²-தல் (கைவருதல்) *kai-vā-*, 18 செ.கு.வி. (v.i.) ஒன்றைச் செய்யக் கையெழுதல்; to be disposed to do a thing. அடிக்கக் கைவர வில்லை (உ.வ.)

[கை + வா-.]

கைவா³-தல்(வருதல்) *kaivā(varu-)*,18 செ.கு.வி. (v.t.) செய்நேர்த்தியாதல்; *to be accomplished.* பாவாணருக்குச் சொல்லாய்வு கைவந்த கலையாயிற்றே (உ.வ.).

[கை + (வரு) வா-.]

கைவாக்கு *kai-vākku*, பெ.(n.) 1. ***கைவாகு*** பார்க்க; see *kai-vāgu* (செ.அக.). 2. ***கைவழக்கம்*** பார்க்க; see *kai-vālakkam.*

ம. கைவாக்கு.

[கை + வாக்கு.]

கைவாகு *kai-vāgu*, பெ.(n.) 1. ***கைராசி*** (இ.வ.) பார்க்க; see *kai-rāsi.* 2. கையால் ஆளுதற்கு உரிய நிலை; being ready to hand (செ. அக.). சமைத்தற்குரிய பொருளைக் கைவாகாக வைத்துக் கொண்டால் சமையலே எளிதாக இருக்கும் (உ.வ.).

[கை + வாகு.]

கைவாங்கியுண்(ணு)-தல் *kai-vāngi-y-un(nu)-*, 5 செ.குன்றாவி. (v.t.) நிறைய உண்ணுதல் (இ.வ.); to eat in large qunatities (செ. அக.).

[கை + வாங்கி + உண்(ணு)-.]

கைவாங்கு¹-தல் *kai-vāngu-*, 7 செ.கு.வி.(v.i.) நீங்குதல்; to withdraw. *"இரட்சணத்தினின்றும் கைவாங்கினாயோ" (திவ். திருநெடுந். 16:128, வியா).*

[கை + வாங்கு-.]

கைவாங்கு²-தல் *kai-vāngu-*,5 செ. குன்றாவி. (v.t.). கையை வெட்டுதல்; to cut off the hand, to amputate (செ. அக.).

ம. கைவாங்நுக.

[கை + வாங்கு-.]

கைவாசி *kai-vāsi*, பெ.(n.) ***கைராசி*** பார்க்க; see *kai-rāsi* (செ. அக.).

ம. கைவாசி.

[கை + (வயம் →வாசி) வாசி.]

கைவாட்சம்பா *kai-vāt-cambā*, பெ.(n.) நெல்வகை (யாழ். அக.); a kind of paddy (செ. அக.).

[கை + வாள் + சம்பா.]

கைவாய்க்கால் *kai-vāykkāl*, பெ.(n.) சிறுகால்வாய் (தொல். பொருள். 1. இளம்.); small channel branching out from the main one (செ.அக.).

[கை + வாய்க்கால்.]

கைவாய்ச்சி *kai-vāycci*, பெ.(n.) சிறு வாய்ச்சிக் கருவி (வின்.); a small adze (செ. அக.).

க. கெய்வாசி.

[கை + வாய்ச்சி.]

கைவாய்ப்பு *kai-vāyppu*, பெ.(n.) ***கைமாற்று¹*** பார்க்க; see *kai-māṟṟu. மூன்று உருபா கைவாய்ப்பாய் வாங்கியிருக்கிறேன் (இ.வ.) (செ.அக.).*

ம. கைவாய்ப.

[கை + வாய்ப்பு.]

கைவாரங்கொள்(ளு)-தல் *kai-vārangol(lu)-*, 2 செ.கு.வி. (v.i.) 1. அதிகாரத் தோரணை கொள்ளுதல்; to assume authority. 2. கூத்தை நிறுத்தும் பொருட்டுக் கையை உயரவெடுத்து வீசுதல் (ஒழிவி. பொது. 1, உரை) (செ.அக.); to wave the hand to stop the folk dance drama.

க. கெய்வாரிசு (புகழ்தல்).

[கை + வாரம் + கொள்(ளு)-.]

கைவாரம்¹ *kai-vāram*, பெ.(n.) 1. கைதூக்கிக் கூறும் வாழ்த்து; *benediction, encomium, praise pronounced with raised hands. "புறப்பட்டருளின வுடனே ஜயசப்தங்களாலே கைவாரம் பண்ணு கிறதும்" (கோயிலொ. 89).* 2. பனங்கிழங்கு உண்டாக்குதல் முதலியவற்றுக்குக் கொடுக்குங் கூலி (யாழ்ப்.); wage in kind for pressing pulp of palmyra fruits or preparing palmyra roots. 3. சரிவாரம்; equal division of a crop. 4. வயிர முதலியவற்றின் முனை; edge, as of a diamond (செ.அக.).

க. கெய்வார; **தெ.** கைவாரமு.

[கை + வாரம்.]

கைவாரம்² *kai-vāram*, பெ.(n.) 1. வேளாண்மையில் உழைப்புக்குரிய பங்கு (யாழ். அக.); cultivator's share of the produce for his tilling and manuring the soil (செ.அக.). களத்தடி நிலத்தை கைவாரமாகக் கொடுத்துள்ளேன் (உ.வ.).

[கை + வாரம்.]

கைவாரிகள் *kaivārigaḷ,* பெ.(n.) நின்றேத்துவார் (சிலப்.5:48, அருள்.); panegyrists of a king whose duty is to praise standing with raised hands.

தெ. கைவாரி.

[கைவாரம் → கைவாரி + கள்.]

கைவாள் *kai-vāḷ,* பெ.(n.) 1. கையரம்பம் (இ.வ.); hand saw. 2. சிறுவாள் (தொல். பொருள். 1, இளம்.) short sword (செ.அக.). 3. சிறுகத்தி; a grass-knife, sickle.



கைவாள்

ம. கைவாள்; க. கெய்பாளு; படை. கைபாளு.

[கை + வாள்.]

கைவாளப்பை *kai-vāḷa-p-pai,* பெ.(n.) ***கைவாளை*** பார்க்க; see *kai-vāḷai.* *"பாக்கிட்ட கைவாளப் பையும்" (விறலிவிடு. 661) (செ. அக.).*

ம. கைவாளச்சஞ்சி.

[கை + வாளப்பை.]

கைவாளம் *kai-vāḷam,* பெ.(n.) ***கைவாளை*** பார்க்க; see *kai-vāḷai.* *"தொங்கிய கைவாளமென்று தூக்கி" (விறலிவிடு. 809).*

[கை + (வாளை) வாளம்.]

கைவாளரம் *kai-vāḷ-aram,* பெ.(n.) சிறிய அரவகை (C.E.M.); hand saw-file.

[கை + வாள் + அரம்.]

கைவாளை[1] *kai-vāḷai,* பெ.(n.) அடைப்பை, வெற்றிலைப்பை; pouch with a wrapper, betel pouch. *"தம்முடைய கைவாளையிலேயிருந்த தீர்த்தவிக்கிரகத்தை" (குருபரம். 571. பன்னீ.).*

ம. கைவாளசஞ்சி.

[கை + வாளை.]

கைவாளை[2] *kai-vāḷai,* பெ.(n.) புடைவை வகை (யாழ்.அக.); a kind of saree.

[கை + வாளை.]

கைவாளைப்பை *kai-vāḷai-p-pai,* பெ.(n.) ***கைவாளை***[1] பார்க்க; see *kai-vāḷai* (செ.அக.).

ம. கைவாளச்சஞ்சி.

[கை + வாளை + பை.]

கைவாளைவட்டுவம் *kai-vāḷai-vaṭṭuvam,* பெ.(n.) ***கைவாளை***[1] பார்க்க; see *kai-vāḷai* (செ.அக.).

[கை + வாளை + வட்டுவம் (பை அல்லது சிறு பெட்டி).]

கைவாறு *kai-vāṟu,* பெ.(n.) 1. தக்கசமையம் (யாழ்ப்.); suitable opportunity. 2. ***கைலாகு*** பார்க்க; see *kai-lāgu* (செ.அக.). 3. கைதூக்கு; giving a hand.

[கை + வாறு.]

கைவிசை *kai-viśai* பெ.(n.) 1. ***கைமுறை*** பார்க்க; see *kai-muṟai.* 2. கைவிடல்; droping, forsake. 3. நீங்கல்; removal.

[கை + விசை.]

கைவிஞ்சு-தல் *kai-viñju-* 5 செ.கு.வி. (v.i.). அளவுகடத்தல், to exceed the limit. *"கைவிஞ்சி மோகமுற" (திருவாய். நூற். 62). (செ. அக.).*

[கை + விஞ்சு-.]

கைவிட்டம் *kai-viṭṭam,* பெ.(n.) வீட்டின் குறுக்கு விட்டம் (கொ. வ.); cross-piece, cross-beam, brace connecting two rafters (செ. அக.).

[கை + விட்டம்.]

கைவிடல் *kai-viḍal,* பெ.(n.) நோய் நீங்காதென மருந்து கொடுக்காது விட்டகலல்; abandoning a patient without prescribing medicines (சா.அக.).

[கை + விடல்.]

கைவிடாப்படை *kai-viḍā-p-paḍai,* பெ.(n.) வாள் போன்ற கைப்படை (பிங்.); hand-weapon, weapon held in hand, dist. for *kai-viḍu-paḍai* (செ. அக.).

[கை + விடா + படை.]

கைவிடு[1]**-தல்** *kai-viḍu-,* 18 செ. குன்றாவி. (v.t.) 1. பிடிதளர்தல்; to let loose (one's own or another's) hand. 2. விட்டொழிதல்; to forsake, abandon, desert, as dependents; to shun, eschew, as passions. *"பெரியோர் கண்டு கைவிட்ட மயல்" (நாலடி. 43)* (செ.அக.). 3. தள்ளிப் போடுதல்; to postpone.

ம. கைவிடுக; க. கைபிடு, கெய்பிடு; தெ. செய்விடுசட; பட. கைபுடு.

[கை + விடு-.]

கைவிடு²–தல் *kai-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) கொப்புவிடுதல்; branch out.

[கை + விடுதல்.]

கைவிடுங்குறி *kai-viḍuṅ-kuṟi* பெ.(n.) குணமடைதல் அரிது எனும் அறிகுறி; symptom of incurability. 2. சாவுக் குறி; symptoms of collapse. 3. பெண்குறியில் கை விட்டறியும் கருப்பக்குறி; diagnosis of pregnancy by a finger inserted into the vagina (சா. அக.).

[கை + விடும் + குறி.]

கைவிடுபடை *kai-viḍu-paḍai,* பெ. (n.) அம்புப்படை (பிங்.); missile weapon, as an arrow, dist. fr. *kai-viḍā-p-paḍai* (செ. அக.). 2. கைப்படை, அம்பு; arrow.

[கை + விடு + படை.]

கைவிடு படை அம்பு போன்றன. கைவிடாப் படை வாள் போன்றன.

கைவிடுமாற்றம் *kai-viḍu-māṟṟam,* பெ.(n.) கருவுயிர்ப்பின் போது பெண்குறிக்குள் விரலையிட்டுக் குழந்தை இருக்கும் நிலையை மாறச் செய்தல்; conversion performed by the hand introduced into the uterus. 2. கருப்பைக்குள் கையை விட்டுக் குழந்தையைத் திருப்பி வெளிப்படச் செய்தல்; the manual turning of the child in delivery (சா. அக.).

[கை + விடும் + மாற்றம்.]

கைவிதிர்–த்தல் *kai-vidir-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மறுப்பு; to shake one's hands in denial. *"இனித்தவிர் விச்சையெனக் கைவிதிர்த் தலுமே" (கலிங். 160).* 2. அச்சத்தைக் காட்டுதற்காகக் கையை அசைத்தல்; to shake one's hands to show fear. *"அடியார் சூழ்ந்து கைவிதிர்க் கொண்டு" (திருவாலவா.37:39).* 3. வியப்பினை வெளிப்படுத்துதற்குக் கையை அசைத்தல்; to shake one's hand in surprise. *"வியந்துகை விதிர்ப்ப" (சீவக. 2366).* 4. புகழ்ச்சியைக் கவருமுகத்தான் கையை அசைத்தல்; to shake one's hand in praise. *"அங்கை விதிர்த்தாங் கரசவை புகழ" (பெருங். உஞ்சைக். 32:58).*

[கை + விதிர்-.]

கைவிதை¹ *kai-vidai,* பெ.(n.) ***வெந்தயம்*** (மலை.) பார்க்க; see *vendayam.* (செ. அக.).

[கை + விதை.]

கைவிதை² *kai-vidai,* பெ.(n.) நாற்றைப் பெயர்த்து நடுகையின்றி விதைத்தபடியே பயிர்செய்கை (இ.வ.); cultivation without the process of transplantation.

[கை + விதை.]

கைவிதைப்பு *kai-vidaippu,* பெ.(n.) 1. புழுதி விதைப்பு (இ.வ.); sowing in dry earth (செ. அக.). 2. கொருக்கலப்பையில் விதை போடாமல் நேரடியாக விதைகளைக் கையிலெடுத்து நிலத்தில் வீசி விதைத்தல்; to sow seeds with hand.

[கை + விதைப்பு.]

கைவிரசு¹ *kai-viraśu,* பெ.(n.) ***கைவிரைவு*** பார்க்க; see *kai-viraivu* (செ. அக.).

து. கைவிரசு.

[கை + (விரவு) → விரசு-.]

கைவிரசு *kai-viraśu,* பெ.(n.) சீட்டாட்டத்தில் கை வரிசைப்படி சீட்டை இறக்குகை; to deal card as per turn.

[கை + விரசு.]

கைவிரட்டி *kai-viraṭṭi* பெ.(n.) கையால் தட்டின வறட்டி; by hand cow dung cake (சா. அக). ***கைவறட்டி*** பார்க்க; see *kaivaraṭṭi.*

[கை + (வறட்டி) விரட்டி.]

கைவிரல் *kai-viral,* பெ.(n.) கையின் நுனிப்பகுதியில் அமைந்துள்ள ஐந்து உறுப்புகளுள் ஒன்று; one of the five terminal parts of the hand, finger.

க. கெய்வெரள், கெய்பெரல்; பட. கைபெரலு.

[கை + விரல்.]

கைவிரற்சந்து *kai-viraṟ-candu,* பெ.(n.) கைவிரலின் இடுக்கு; crotch of the fingers (சா. அக.).

[கை + விரல் + சந்து.]

கைவிரி–த்தல் *kai-viri-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. இரத்தற் பொருட்டுக் கையை நீட்டுதல்; to stretch out the hands in begging. *"கைவிரித் தெவரளித் தாலும் நன்றெனை வேற்ற வளநிதி" (பிரமோத். 6:54).* 2. தன்னால் இயலாமை குறிப்பித்தல்; to indicate one's inability, disappointment (செ. அக.).

க. கெய்யொட்டு.

[கை + விரி-.]

கைவிரிதவம் *kai-viri-tavam,* பெ.(n.) செந்நாக தாளி (சித். அக.); a red cobra creeper.

[கை + விரிதவம்.]

கைவிரைச்சம்பா *kai-virai-c-cambā,* பெ.(n.) கைவளச்சம்பா; a species of cambā-paddy (செ.அக.).

[கை + விரை + சம்பா.]

கைவிரைவு *kai-viraivu,* பெ.(n.) கையினால் விரைந்து தொழில் செய்யுந்தன்மை; quickness of hand, as in suffling cards.

[கை + விரைவு.]

கைவிலக்கம் *kai-vilakkam,* பெ.(n.) மகளிர் தீட்டு; the menstrual discharge of females (சா. அக.).

[கை + விலக்கம். எதையும் தொடலாகாது என்னும் வழக்கம்.]

கைவிலக்கமாதல் *kai-vilakkam-ādal* பெ.(n.) தீட்டாதல்; being on monthly course (சா. அக.).

[கை + விலக்கம் + ஆதல்.]

கைவிலக்கு *kai-vilakku,* பெ.(n.) 1. களப்பிச்சை கொடுத்து இரவலர்களை அனுப்புகை; sending away beggars from the threshing floor after giving them alms. 2. கதிரவனின் ஒளிக்கற்றை கண்ணிற் படாதபடி கையால் மறைக்கை; shading the eyes from the sun with the hand (செ. அக.).

[கை + விலக்கு.]

கைவிலங்கு *kai-vilaṅgu,* பெ.(n.) இரண்டு மணிக்கட்டுகளையும் பிணைக்கும் கயிறு அல்லது தொடரி (சங்கிலி); manacles, handcuffs (செ. அக.).

மறுவ. கைத்தளை, கைக்குட்டை.

ம. கைவிலங்ங.

[கை + விலங்கு.]

கைவிலை[1] *kai-vilai,* பெ.(n.) மொத்த விலை, பண விலை: cash -price (செ. அக.). 2. கைப்பணத்திற்கு விற்றல்: to sell for ready-money.

ம. கைவில; து. கைபிலெ; பட. கைபெலெ.

[கை - விலை]

கைவிலை[2] *kai-vilai,* பெ.(n.) அப்போதைய விலை; current price. "பிடாகை தோறும் கைவிலைப் படிக்கு நாழிடாறும் தாவெழுதவும்" (S.I.I.VIII. 139). (செ. அகு.).

[கை - விலை]

கைவிழல் *kai-viḻal,* பெ.(n.) பக்கச் (பாரிச) காற்றால் கை உணர்ச்சியற்றுப் போதல்; paralysis of an arm (சா. அக.).

[கை + விழல்.]

கைவிழுது *kai-viḻudu,* பெ.(n.) கடலில் ஆழங் குறைவாயுள்ள இடங்களில் ஆழத்தை அறிய உதவுங்கயிறு (M. Navi. 71); hand lead-line, used for sounding small depths in the sea.

[கை + விழுது.]

கைவிளக்கம் *kai-viḷakkam,* பெ.(n.) 1. தொழிலின் திறமை; dexterity, workmanship. 2. *கைப்பாங்கு* பார்க்க; see *kai-p-pāṅgu. அவன் கைவிளக்க மில்லாதவன் (செ. அக.).*

மறுவ. கைப்பாங்கு, கைராசி.

[கை + விளக்கம்.]

கைவிளக்கு *kai-viḷakku,* பெ.(n.) சிறுவிளக்கு; hand lamp, small portable lamp. *"கைவிளக் கேந்தி" (சீவக. 1542).* 2. ஒளிர்விளக்கு; bright lamp.

ம. கைவிளக்கு; க. கெய்தீவிகெ.

[கை + விளக்கு.]

கைவிளங்காமை *kai-viḷaṅgāmai,* பெ.(n.) கைசெயற்படாகை; inability to use the hand.

மறுவ. கைமுடக்கு, கைமுடக்கம்.

[கை + விளங்காமை.]

கைவிளி[1] *kai-viḷi,* பெ.(n.) கையால் உதட்டை மடித்து ஊதியெழுப்பும் சீழ்க்கையொலி; whistle produced by applying the hand to the lips. *"மறவ ரழைத்த கைவிளி" (சேதுபு. சங்கரபா. 7.) (செ. அக.).*

மறுவ. சீழ்க்கை.

[கை + விளி.]

கைவிளி[2] *kai-viḷi,* பெ.(n.) கைதட்டியேனும் குறியீடுகள் (சமிஞ்ஞை) செய்தேனும் அழைக்கை (பெரியபு. கண்ணப்ப. 72); calling one's attention by clapping hands or making signs (செ. அக.).

[கை + விளி.]

கைவிறிசு *kai-viṟisu,* பெ.(n.) ஒருவகை வாணவெடி (யாழ்ப்.); hand-rocket, a kind of fire-work.

[கை + விறிசு.]

கைவினை *kai-viṉai,* பெ. (n.) ***கைவேலை*** பார்க்க; see *kai-vēlai.* *"வித்தக ரியற்றிய.... கைவினைச் சித்திரம்" (மணிமே. 19:5).(செ.அக.).*

[கை + வினை.]

கைவினைக்குடி *kai-viṉṉai-k-kuḍi,* பெ.(n.) கைத்தொழில் வேலை செய்யும் இனத்தோர்; artisan class. *"உழவுகுடி கைவினைக் குடி காசாயக் குடியிற் கொள்ளும்" (S.I.I.V. 95).*

[கை + வினை + குடி.]

கைவினைஞன் *kai-viṉaiñaṉ,* பெ. (n.) 1. தொழிலாளி; artisan, mechanic, workman (செ.அக.). 2. கம்மாளர்; carpenter, blacksmith. 3. செய்கை வல்லோர்; dynamic person, experts.

[கை + வினைஞன்.]

கைவினைத்திறன் *kai-viṉai-t-tiṟaṉ,* பெ.(n.) ***கைவேலை*** பார்க்க; see *kai-vēlai.*

[கை + வினை + திறன்.]

கைவீச்சன் *kai-viccaṉ,* பெ.(n.) பணிகார வகை (யாழ். அக.); a sweet cake (செ. அக.).

[கை + வீச்சன்.]

கைவீச்சு[1] *kai-viccu,* பெ.(n.) 1. கைவீசுகை; swing or free motion of the arms, as in walking. *"கைவீச்சொன்றே பெறு மைம்பது பொன்" (தனிப்பா.2,132:334).* 2. கையிருப்புத் தொகை (வின்.); cash on hand. 3. கைத்திறம்; strength, ability. *"அரக்கன் கைவீச்சு" (**இராமநா. பாலகா.5**).* 4. மிகுகொடை; grand donation. 5. **ஐந்து; five.** பழம் இரண்டு கைவீச்சு வாங்கி வா **(உ.வ.).**

ம. கைவீச்சு.

[கை + வீச்சு.]

கைவீச்சு[2] *kai-viccu,* பெ.(n.) **அடி (யாழ். அக.); blow,** stroke with the hand (செ. அக.).

[கை + வீச்சு.]

கைவீசி *kai-viśi,* பெ.(n.) ***கையாந்தகரை*** (சு. வைர.181) பார்க்க; see *kaiyāntagarai.*

[கை + வீசி.]

கைவீசியிலை *kai-viśi-y-ilai,* பெ.(n.) கரிசலாங் கண்ணி; eclipse (சா. அக.).

[கை + வீசி + இலை.]

கைவீசு-தல் *kai-viśu-,* 7 செ.குன்றாவி.(v.t.) 1. கையை முன்னும் பின்னும் அசைத்தல்; to sway or wave the arms to and fro. 2. சண்டைக்கு அணியமாகும் போது கை வீசுதல்; to wave the hand when beginning to fight. 3. சைகை காட்டும் பொருட்டு கைவீசுதல்; to wave the hand for giving a sign.

க. கெய்வீசு, கெய்பீசு; **பட.** கைபீசு.

[கை + வீசு-.]

கைவீடு *kai-vīḍu,* பெ.(n.) விட்டு நீங்குகை (குறள். 799, உரை); desertion, forsaking **(செ. அக.).**

[கை + வீடு. விடு → வீடு.]

கைவீணை *kai-vīṇai,* பெ.(n.) நரப்புக் கருவி வகையுளொன்று; a kind of lute. ***"கைவீணை முழங்க" (கொண்டல்விடு. 511) (செ.அக.).***



கைவீணை

[கை + வீணை.]

கைவீழ்-தல் *kai-vīḻ-,* 2 செ.கு.வி.(v.i.) கையின் பயன் அல்லது ஆற்றல் அறுதல்; to lose the use or power of one's hands.

க. கெய்கெடு; **பட.** கைசோலு.

[கை + வீழ்-.]

கைவெள்ளை *kai-veḷḷai,* பெ.(n.) கையின் தோலை வெளுக்கச் செய்யும் ஒருவகை வெள்ளை (மேக) நோய்; leucoderma of the hand (சா. அக.).

ம. கைவெள்ள (உள்ளங்கை).

[கை + வெள்ளை.]

கைவேகம் *kai-vēgam,* 1. ***கைவிரைவு*** பார்க்க; see *kai-viraivu* (செ. அக.). 2. கைவிசை; hand speed, dexterity, talent.

ம. கைவேகம்; **க.** கெய்தவக, கெய்வேக.

[கை + வேகம்.]

கைவேட்டு *kai-vēṭṭu,* பெ.(n.) இடிகொம்பு (இ.வ.); small mortars set on a pole and used in pyrotechny.

[கை + வேட்டு.]

கைவேல் *kai-vēl,* பெ.(n.) கப்பணம்; dart, javelin. *“கைவேல் களிற்றொடு போக்கி” (குறள். 774). (செ.அக.).*

[கை + வேல்.]

ஐகாரக் குறுக்கம் மொழி முதற்கண் ஒன்றரை மாத்திரையாயும், ஏனைய இடங்களில் ஒரு மாத்திரையாயும் குறுகுமென்றுணர்க. அவ்வாறு கொள்ளாக்கால் கய்வேல் களிற்றொடு என வரும் இலக்கியம் இலக்கணம் இன்றாய் முடியும் – இலப்பிரபம்.

கைவேலி *kaivēli,* பெ.(n.) காஞ்சிமாவட்டத்துச் சிற்றூர்; a village in kāñjipuram Dt.

[கைதை (தாழை) → கை + வேலி (நிலம்).]

கைவேலை *kai-vēlai,* பெ.(n.) 1. கைத்தொழில்; manual labour, handicraft. 2. கைத்தொழிற்றிறம்; workmanship. 3. கையாற்செய்தது; work done with one's own hand, work performed by the hand (செ. அக.).

ம. கைவேல; **க.,பட.** கைகெலச; **து.** கைவாடு.

Norw. handling.

[கை + வேலை]

கைவேலைப்பாடு *kai-vēlai-p-pāḍu,* பெ.(n.) கைத்தொழிற்றிறம்; handicraft, workmanship.

[கை + வேலைப்பாடு.]

கைவை¹–த்தல் *kai-vai-,* பெ.(n.) 1. கற்பழித்தல்; seducing (சா.அக.). 2. ஏற்படுதல்; to happening. 3.தொடுதல்; to feel by touch.

[கை + வை–.]

கைவை²–த்தல் *kai-vai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கையால் தொட்டுச் செய்தல்; to touch, handle, deal with. 2. உட்புகுதல்; to enter, as on a disquisition. *“பகவத் விஷயத்திற் கைவைத்தார்” (ஈடு, 6:2, பிர.).* 3. திருடுதல் (கொ.வ.); to steal, embezzle.4. கைவைத்து, குரு தூய்மையாக்குதல்; to consecrate by laying hands on (Chr.).

ம. கைவய்க்குக; **க.** கெய்யிக்கு; **பட.** கையிக்கு.

[கை + வை–.]

கைவை³–த்தல் *kai-vai-,* 18 செ. குன்றாவி. (v.i.) 1. அடித்தல்; to beat, belabour. 2. கற்பழித்தல் (இழி. வ.); to seduce, as a woman.

[கை + வை–.]

கைவைத்தியம் *kai-vaittiyam,* பெ.(n.) ***கைமருத்துவம்*** பார்க்க; see *kai-maruttuvam.*

[கை + வைத்தியம்.]

கைனி¹ *kaiṉi,* பெ. (n.) கைம்பெண் (திவா.); widow (செ.அக.).

[கை (தனிமை). கைனி (தனித்திருப்பவள், கணவனை இழந்தவள்).]

கைனி² *kaiṉi,* பெ. (n.) *1.* ***அத்தம்*** (பிங்.) பார்க்க; see *attam.* 2. பதின்மூன்றாவது விண்மீன் (கை எனும் நாண்மீன்); (செ. அக.). கைம்மீன்; the 13th naksatra.

[கை → கைனி. கைனி = கையின் இயல்புடையது.]

கொ

கொ *ko,* பெ.(n.) கொகரம்; தமிழ் நெடுங்கணக்கில் அடியண்ண எடுத்தொலிப்பில்லா வல்லின முதல்மெய்யும் (க்), பத்தாம் உயிரெழுத்தாகிய அரையங்காப்பு இதழ் குவிவுப் பின்னண்ண இடை உயிர்க்குறிலாகிய 'ஒ'கரமும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the syllable formed by adding the back middle lax rounded vowel 'o', to the first consonant of Tamil alphabet, velar voiceless stop 'k'.

[க் + ஒ – கொ.]

கொக்கட்டி¹ *ko-k-kaṭṭi,* பெ.(n.) மஞ்சள் நாங்குப்பூடு; xanthochymus (சா.அக.).

[கொக்கு → கொக்கட்டி.]

கொக்கட்டி² *kokkaṭṭi,* பெ.(n.) குறுகிவளைந்த பனங்கிழங்கு (யாழ்ப்.); short and slightly crooked plamyra roots.

மறுவ: குறண்டற் பனங்கிழங்கு.

[கொள்→கொட்கு→ கொக்கு. கொக்கட்டி = (குறுகி) வளைந்த பனங்கிழங்கு. (வட.வர.6)]

கொக்கட்டிச்சோலை *kokkaṭṭi-c-cōlai* பெ.(n.) ஈழவளநாட்டில் மட்டக்களப்பிலுள்ள ஓர் ஊர்; a village at Mattakalappu in Sri Lanka.

[கொக்கட்டி + சோலை.]

கொக்கரசன்பேட்டை *kokkarasaṉ-pēṭṭai,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Cuddalore Dt.

[கொக்கரசன் + பேட்டை.]

கொக்கரந்தாங்கல் *kokkaran-dāṅgal,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kāñjipuram Dt.

[கொக்கரன் + தாங்கல் = ஏரி.]

கொக்கரன்கோட்டை *kokkaraṉ-kōṭṭai,* பெ.(n.) இராமநாதபுர மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanadapuram Dt.

[கொக்கரன் + கோட்டை.]

கொக்கரி[1]-த்தல் *kokkari-,* 4 செ.கு.வி. (v.i) 1. ஆரவாரித்தல்; to shout in triumph, to vaunt. *"கொக்கரித் தலகை சுற்ற" (கலிங்.150.).* 2. கோழி முதலியன கூவுதல்; to cluck, as hen; to cackle, as goose; to chuckle as crow. *"எருவை கூடிக் கொக்கரித்திட" (இரகு. மீட்சிப். 47.).*

ம. கொக்ரய்க்குக; **க.**கொக்கரிசு; **தெ.** கொக்கரின்சு.

Fin. kokka (puhe)(joke, joking); **Mong.** gokir; **Jap.** kokkei; **Q.** chavkay.

[கொக் – ஒலிக்குறிப்பு. கொக் + கரி. கரு → கரி (செய்தல்).]

கொக்கரி[2] *kokkari,* பெ.(n.) இன்னிய (வாச்சிய) வகை; a kind of musical instrument. *"கொக்கரி கிடுபிடி கொட்ட" (வள்ளி. கதை. Ms.).*

[கெக்கல் (முழங்குதல்) → கொக்கரி.]

கொக்கரி[3] *kokkari,* பெ.(n.) முழக்கம்; shouting, vaunting. *"குருதி குடிகாளி கொக்கரிசெய்" (திருப்பு. 179.).*

[கொக் + கரி[1] → கொக்கரி[2].]

கொக்கரி[4] *kokkari,* பெ.(n.) முன் வளைந்த கொம்புள்ள மாடு; the cow which has horn like hook.

[கொள்கு → கொட்கு → கொக்கு + அரி.]

கொக்கரிகம் *kokkarigam.* பெ.(n.) எழுத்தாணிப்பூடு (சா.அக.); style plant.

மறுவ. எழுத்தாணிக்கூர். எழுத்தாணிப் பச்சிலை. எழுத்தாணிப் பச்சை. கடற்கொழுப்பை.

[கொக்கல் → கொக்கலிகம் → கொக்கரிகம்.]

கொக்கரிப்பு *kokkarippu.* பெ.(n.) 1. தற்சிறப்பு; vociferation என் வீழ்ச்சியைப் பார்த்துக் கொக்கரிக்கிறான் (உ.வ.). 2. பறவையொலி; cackle (சா.அக.).

[கொக்கரி → கொக்கரிப்பு.]

கொக்கரை *kokkarai,* பெ.(n.) 1. வளைவு (இ.வ.); crookedness, deformity. 2. வைக்கோலெடுக்குங் கருவி (இ.வ.); rake. 3. வலம்புரிச் சங்கு (திவா.); chank with spiral turning to the right. 4. இசைக் கருவி வகை; a kind of musical instrument. *"தாளமலி கொக்கரை" (தேவா. 1141:7).* 5. வில் (அக.நி.); bow. 6. பாம்பு (அக.நி.); snake. 7. வலை (அக.நி.); net. 8. தாழை, பனை, தெங்கு முதலியவற்றின் வற்றியுலர்ந்த இளமடல் (யாழ்ப்.); dried integument of the palmyra flower.

மறுவ. கொக்கறை.

ம. கொக்கர.

[கொள் → கொட்கு. கொட்குதல் = சுற்றுதல், திரிதல். கொட்கு → கொக்கி. கொட்கு → கொக்கு = வளைந்த கழுத்துள்ள பறவை. கொட்கு → கொக்கரை = வளைவு.]

கொக்கரையுடும்பு *kokkarai-y-uḍumbu,* பெ.(n.) வற்றிய மடல் போன்ற உருவுடைய உடும்பு; lizard of the varanus species, as resembling a dried integument.

[கொக்கரை + உடும்பு.]

கொக்கல் *kokkal,* பெ.(n.) வளைவு; curvature.

[கொள் → கொட்கு → கொக்கு → கொக்கல்.]

கொக்கலகு *ko-k-kalagu,* பெ.(n.) 1. வளைந்த மூக்கு; a curved hook. 2. கொக்கு மூக்கு; beak of crane (சா.அக.).

[கொக்கு + அலகு.]

கொக்கவாலி *kokkavāli,* பெ.(n.) புளியாத்தி; sour mountain ebony (சா.அக.)

[கொக்கு + வாலி – கொக்குவாலி → கொக்கவாலி.]

கொக்களப்பி *kokkaḷappi,* பெ.(n.) மதுரை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Madurai Dt.

[கொக்கு + அளப்பி.]

ஒருகா. சங்கஞ்செடி மிகுந்த நிலப்பகுதியாகலாம்.

கொக்காகை *kokkāgai,* பெ.(n.) சங்கஞ்செடி; mistletoe berry thorn (சா.அக.).

[கொக்கு + (சாகை) ஆகை.]

கொக்காட்டம் *kokkāṭṭam.* பெ.(n.) 1. கொக்கரித்து ஆடும் ஆட்டம்; merriment with dance. 2.மிகுதியும் ஆட்டிப் படைக்கும் இயல்பு; arrogance. அவன் கொக்காட்டம் போடுவது ஒன்றும் சரியில்லை (நெல்லை.).

[கொக்கரி + ஆட்டம் - கொக்கரியாட்டம் → கொக்காட்டம்.]

கொக்காட்டல் *kokkāṭṭal,* பெ.(n.) சீராட்டுகை (யாழ்.அக.); fondling.

[கொக்கரி + ஆட்டல் - கொக்கரியாட்டல் → கொக்காட்டல்.]

கொக்காட்டல் *kokkāṭṭal,* பெ.(n.) ஆட்டிப் படைத்தல்; to harass, annoy.

[கொக்கி + ஆட்டல் - கொக்காட்டல்.]

கொக்காட்டி *kokkāṭṭi,* பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Sivagangai Dt.

[கொக்கு + பட்டி- கொக்குப்பட்டி → கொக்கட்டி → கொக்காட்டி.]

கொக்காடி *kokkāḍi,* பெ.(n.) இராமநாதபுர மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanadapuram Dt.

[கொக்கு + பாடி- கொக்குப்பாடி → கொக்காடி.]

கொக்காம்பாளை *kokkam-pāḷai,* பெ.(n.) ஓர் பூடு; an unknown shrub (சா.அக.).

[கொக்கு + ஆம் + பாளை.]

கொக்காமணி *kokkāmaṇi,* பெ.(n.) மணிவகை; a kind of bead. *"வக்காமணி கொக்காமணி வாங்கலையோ ஆயாளோ"* (நாட்டுப்.).

[கொக்குமணி → கொக்காமணி.]

கொக்காரப்பட்டி *kokkāra-p-paṭṭi,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கொக்கல் : வளைவு, வளைவான மேடு. கொக்கல் + பட்டி - கொக்கல்பட்டி → கொக்கரப்பட்டி → கொக்காரப்பட்டி.]

கொக்கான்[1] *kokkāṉ,* பெ.(n.) ஒரு மரம்; a tree (சா.அக.).

[கொக்கு → கொக்கான்.]

கொக்கான்[2] *kokkāṉ,* பெ.(n.) ஏழு கூழாங் கற்களைக் கொண்டு ஆடும் மகளிர் விளையாட்டு வகை (யாழ்ப்.); a game played by girls with seven pebbles.

[கொக்கு → கொக்கான்.]

கொக்கான்வெட்டு-தல் *kokkāṉ-veṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) கொக்கான் விளையாடுதல் (வின்.); to play with pebbles, as girls.

[கொக்கான் + வெட்டு-.]

கொக்கி[1] *kokki,* பெ.(n.) 1.தேள்கெண்டை; scorpion goby. 2. உளுவை; river goby (சா.அக.).

[கொள் → கொட்கு. கொட்குதல் = சுற்றுதல், திரிதல். கொட்கு → கொக்கு = வளைந்த கழுத்துள்ள நீர்ப்பறவை. கொட்கி → கொக்கி = வளைந்த மாட்டி (வ.மொ.வ.6).]

கொக்கி[2] *kokki,* பெ.(n.) 1.கொளுவி; hook, clasp, as of a necklace or ear ring. 2. துறட்டி நுனியிற் செருகும் இருப்புக்கருவி (இ.வ.); hooked knife attached to a long bamboo, for cutting leaves and twigs. 3. சுமைதூக்கப் பயன்படுத்தும் கூரிய வளைவான கம்பி பொருத்தப்பட்ட கருவி; a hook-like device with a handle to hold. 4. கேள்விக்குறி; question mark. புரியாத இடங்களில் கொக்கி போட்டுவை. 5. தையல் எந்திரத்தில் நூலினை இழுத்துவிடும் கொழுப்போல் வளைந்துள்ள பாகம்; the hook that pulls the thread in a sewing machine.

A.S. hoe, hooc; **Du.** hock, haak; **Ice.** haki; **Gr.** haken; **Ohgr.** hako; **Lowgr.** hake; **E.** hook; **Fin.** kokka (hook), **Est.** kook; **Hung.** kajko; **Mong.** glygle; **Jap.** kagi. **Indones**. kaitān; **ME.** kok; **Ice.** haki; **Dan.** hage; **Swed.** hake **Gr.** haken; **A.S.** haca.

ம. கொக்கி; **க.** கொக்கெ, கொக்கி, கொங்கி; **தெ.** கொக்கி, கொக்கெமு; **து.** கொக்கெ, கொங்கி; **கோத.** கொக்ய; **துட.** க்விக்ய்; **பட.** கொக்கி; **நா.** கொங்கி (வளைந்த குந்தாலி).

[கொள்கு → கொட்கு → கொட்கி → கொக்கி.]

கொக்கிக்கயிறு *kokki-k-kayiṟu,* பெ.(n.) தூண்டில்முள் கோக்கப்பட்ட நீளக் கயிறு; a long rope attached with a fish hook.

[கொள் → கொள்கு → கொக்கி + கயிறு.]

கொக்கிக்கல் *kokki-k-kal,* பெ.(n.)தாழ்வாரம் கட்டுவதற்காகப் பயன்படுத்தும் வளைந்த கல்; a curved stone use in the construction of a verandah.

[கொக்கி + கல்.]

கொக்கித்தாழ்ப்பாள் *kokki-t-tāḻppāḷ,* தாழ்ப்பாள் வகைகளிலொன்று; a kind of latch.

[கொக்கி + தாழ்ப்பாள்.]

கொக்கிப்புழு *kokki-p-puḻu,* பெ.(n.) குடலில் காணப்படும் நுண்ணுயிரி வகை; hook-worm in intestine.

ம. கொக்கப்புழு, கொக்கோப்புழு; **க.** கொக்கெகுளு; **தெ.** கொக்கெபுறகு.

[கொக்கி + புழு.]

கொக்கிப்பூட்டு *kokki-p-pūṭṭu,* பெ.(n.) அணிகலனி லமைந்த பூட்டு (வின்.); lock of a clasp in an ornament.

[கொக்கி + பூட்டு.]

கொக்கிமுள்ளு *kokki-muḷḷu,* பெ.(n.) காட்டு முள்ளுக்கத்தரி.(L.); hedge caper.

[கொக்கி + முள்ளு.]

கொக்கியெலும்பு *kokki-y-elumbu,* பெ.(n.) மணிக்கட்டின் எலும்பு; bone of the wrist.

[கொக்கி + எலும்பு.]

கொக்கில் *kokkil,* பெ.(n.) அணிகலனில் அமைந்துள்ள கொக்குவாய்; hook of a clasp.

[கொக்கு → கொக்கி → கொக்கில்.]

கொக்கிலிமேடு *kokkili-mēḍu,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kāñjipuram Dt.

[கொக்கில் → கொக்கிலி + மேடு.]

கொக்கிலை *kokkilai,* பெ.(n.) கொக்கு மூக்கைப் போன்ற இலைப்பூடு; lance leaved wind (சா.அக.).

[கொக்கு + இலை.]

கொக்கிவாய் *kokki-vāy,* பெ.(n.) ***கொக்குவாய்*** பார்க்க;see *kokku-vāy. "கொக்கிவாய் முத்தார மாகச் செய்து" (சிலப். 6:101. அரும்.).*

[கொக்கி + வாய்.]

கொக்கிறகு *kokkiṟagu,* பெ.(n.) வெள்ளை மந்தாரை (புட்ப.5); taper-pointed mountain ebony.

[கொக்கு + இறகு.]

வடிவிலும் நிறத்திலும் அளவிலும் கொக்கிறகை ஒத்திருப்பதால் அப் பெயர் பெற்றது (தமிழர் மதம்.87).

கொக்கிறகு மந்தாரை *kokkiṟagu-mandārai,* பெ.(n.) கொக்குமந்தாரை (M.M. 521.); taper-pointed mountain ebony.

[கொக்கு + இறகு + மந்தாரை.]

கொக்கு[1] *kokku,* பெ.(n.) 1.பறவைவகை; common crane. *"பைங்காற் கொக்கின்" (புறநா. 342).* 2. கரிய மூக்குடைய கொக்குவகை; 'சித்திரத்துக் கொக்கே ரத்தினத்தைக் கக்கு' (பழ.). stork. 3. நெல்லுண்ணும் கொக்குவகை; paddy-bird.

மறுவ. மடையான்.

ம. கொக்கு; **க.** கொக்கரெ, கொக்கு; **தெ.** கொக்கர, கொங்க, கொக்கராயி; **து.** கொர்ங்கு; **எரு.** கொக்கு; **துட.** கொச்க்; **கோண்.** கொருகு; **கூ.** கொக்கொ; **கொலா.** கொங்க; **பர்.** கொக்கல்; **பிரா.** காகூர். **Pkt**.kokkai; **Skt.** kaṅka; **Sinh.** koka.



கொக்கு

Fin. kokko, kotka (eagle); **Est.** kotkas, kokas; **komi.** kuc.

[கொள் → கொட்கு → கொட்குதல் = சுற்றுதல், திரிதல். கொட்கு → கொக்கு = வளைந்த கழுத்துள்ள நீர்ப்பறவை. (வ.மொ.வ.6).]

வகைகள் : 1. குருட்டுக் கொக்கு. 2. தேசிக் கொக்கு. 3. சவதிக் கொக்கு. 4. வெண்கழுத்தி. 5. பறைக்கொக்கு. 6. கருமூக்கன். 7. பிணந்தின்னிக் கொக்கு. 8. பூங்கொக்கு. 9. கரண்டி மூக்கன். 10. செங்காலன்.

கொக்கு[2] *kokku,* பெ.(n.) மாமரம்; mango tree. *'துளு மாமரத்தைக் கொக்கென்பது' (தொல். சொல். 400, உரை).*

து. கொக்கு.

[குளகு (அழகிய இளந்தழை) → குக்கு → கொக்கு.]

கொக்கு[3] *kokku,* பெ.(n.) செந்நாய் (பிங்.); wild dog.

தெ. குக்க; **Skt.** kōka.

[குக்கல் →கொக்கு.]

கொக்கு[4] *kokku,* பெ.(n.) குதிரை(பிங்.); horse.

[கொங்கு → கொக்கு.]

கொக்கு[5] *kokku,* பெ.(n.)1. குருகு (மூல) விண்மீன்; mula naksatra. *"கொக்குச்சோதி" (விதான குணாகுண.12).* 2. வெண்மை; white.

[குல் → குக்கு → கொக்கு. கொக்கு= வளைந்த அல்லது வட்டமான ஓடுபாதையில் ஓட்டப் பயிற்சி பெற்ற குதிரை.]

கொக்கு[6] *kokku,* பெ.(n.) பறவையின் அலகு; beak or bill of a bird.

கொக்கு வகைகள்
தோசிக் கொக்கு
சவதிக் கொக்கு
பறைக் கொக்கு
செங்காலன்
குருட்டுக் கொக்கு

ம., க. கொக்கு; து. கொக்கு, கொக்காயி, கோகாயி; குட. கொக்கி.

[கொட்கு → கொக்கு.]

கொக்குக்கல் *kokku-k-kal,* பெ.(n.) சிலைமான் கல், மாந்தளிர்க்கல் (வின்.); agate.

[குல் → குக்கு → கொக்கு.]

கொக்குக்கால் *kokku-k-kāl,* பெ.(n.) 1.ஒரு நீர்ப்பூண்டு; an aquatic plant. 2. நீண்ட கால்; long leg (சா.அக.).

[கொக்கு+கால்]

கொக்குக்காலன் *kokku-k-kālaṉ* பெ.(n.) நீண்ட கால்களையுடையவன்; one with an abnormally long leg (சா.அக.).

[கொக்கு + காலன். கால் + அன் = காலன். 'அன்' ஆ.பா.ஈறு.]

கொக்குக்காலி *kokku-k-kāli,* பெ.(n.) 1. மாமரம்; mango tree. 2. செந்நாய்; red wild dog. 3. குதிரை; horse (சா.அக.).

[கொக்கு + காலி.]

கொக்குச்சத்தகம் *kokku-c-cattagam,* பெ.(n.) அலக்கரிவாள்; hook-shaped blade attached to a pole.

[கொக்கு (வளைவு) + அரிவாள்.]

கொக்குச்சம்பா *kokku-c-camba,* பெ.(n.) சம்பா நெல்வகை; a kind of *camba* paddy.

[கொக்கு + சம்பா.]

கொக்குச்சாறு *kokku-c-cāṟu,* பெ.(n.) கொக்குக் கறியினின்று அணியம் செய்த சாறு; soup extracted from the flesh of heron (சா.அக.).

[கொக்கு + சாறு.]

கொக்குடம் *kokudam,* பெ.(n.) நச்சுவித்துகளைக் கொண்ட மரம்; strychnos, nux, vomica, tree (சா.அக.).

மறுவ. எட்டிமரம்.

[கொக்குள் → கொக்குளம் → கொக்குடம்.]

கொக்குநடை *kokku-naḍai,* பெ.(n.) கொக்கு நடப்பதுபோல் அசைந்தசைந்து நடக்கும் நடை; walk as of a crane.

[கொக்கு + நடை.]

கொக்குநீர் *kokku-nīr,* பெ.(n.) கழுதையின் சிறுநீர்; ass's urine (சா.அக.).

[கொக்கு + நீர்.]

கொக்குநோய் *kokku-nōy,* பெ.(n.) ஆட்டுக்குக் காணும் எரிநோய்; a disease among sheep, highly infectious (சா.அக.).

[கொக்கு + நோய்.]

கொக்குநோவு *kokku-nōvu,* பெ.(n.) 1.நெல்நோய் வகை; a blight affecting paddy. 2. ஆடுகட்குக் காணும் எரிநோவு (M.C.M. D.249.); a contagious disease among sheep. 3. கோழிகளுக்கு ஏற்படும் கழிச்சல் நோய்; a contagious disease among hens.

[கொக்கு + நோவு.]

கொக்குப்பதரி *kokkup-padari,* பெ.(n.) இலந்தை; jujube tree (சா.அக.).

[கொக்கு + (புதரி) பதரி.]

கொக்குமட்டி *kokku-maṭṭi-,* பெ.(n.) 1.சிப்பிவகை (வின்.); cockle. 2. சங்கு; conch. 3. நத்தைக்கூடு; cockle shell.

[கொக்கு + மட்டி.]

கொக்குமணி *kokku-maṇi,* பெ.(n.) கொக்கா மணி; a kind of bead. *"வக்காமணி கொக்கு மணிகளையும்" (மதி. கள. II, 139).*

[கொக்கு + மணி.]

கொக்குமந்தாரை *kokku-mandārai,* பெ.(n.) 1.வெள்ளை மந்தாரை; taper pointed mountain ebony. 2. புடைவை வகை (கொ.வ.); a kind of woman's cloth.

ம. கொக்குமந்தாரம், கொங்ஙுமந்தாரம்.

[கொக்கு + மந்தாரை.]

கொக்குமீன் *kokku-mīn,* பெ.(n.) ஊசிக்கழுத்தி மீன் (M.M.203.); long-nosed fish.

[கொக்கு + மீன்.]



கொக்குமீன்

கொக்குமுக்காடு *kokku-mukkāḍu,* பெ.(n.) 1. கொக்கைப் போலக் கூனிக் குறுகி முக்காடு போடுகை; veiling oneself adopting a crowling. 2. மிளகாய், கத்தரிச்செடிகள் நட்ட மறுநாள் இருக்கும் தன்மை; the look of chilly brinjal plants the day after they are transplanted.

[கொக்கு + முக்காடு.]

கொக்குமுட்டை *kokku-muṭṭai,* பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Pudukkōṭṭai* Dt.

[கொக்கு + (முட்டம்) முட்டை.]

கொக்குமுத்து *kokku-muttu,* பெ.(n.) கொக்கின் கண்டத்தில் பிறப்பதாகச் சொல்லப்படும் ஒரு வெண்முத்து; a white pearl-like concretion said to be formed in the neck of a stork (சா.அக.).

[கொக்கு + முத்து.]

கொக்குமுள்ளு *kokku-muḷḷu,* பெ.(n.) தொடரி; prickly burr-thorn (சா.அக.).

[கொக்கு + முள்ளு.]

கொக்குமூக்கன் *kokku-mūkkaṉ,* பெ.(n.) நீண்டு வளைந்த மூக்குடையவன்; one who has a long hook - nose.

[கொக்கு + மூக்கன்.]

கொக்குமூக்கு *kokku-mūkku,* பெ.(n.) வளைந்த மூக்கு; hook-nose; aquiline nose (சா.அக.).

[கொக்கு + மூக்கு.]

கொக்குமேனி *kokku-mēṉi,* பெ.(n.) 1.தில்லை மரம்; tiger's milk tree. 2. எடை குறைந்த உடல்; slight body (சா.அக.).

[கொக்கு + மேனி.]

கொக்குவம் *kokkuvam,* பெ.(n.) ***கொக்கோகம்*** பார்க்க; see *kokkōgam.* *"மையறு கொக்குவம் பரதமலி கணிதஞ் சத்தம்" (வள்ள. சுருதி. பாயி.9).*

Skt. kokkōha.

[கொக்குவகன் → கொக்குவம்.]

கொக்குவகன் என்பவரால் இயற்றப்பட்ட ரதி ரகசியம் என்னும் நூல்.

கொக்குவாய் *kokku-vāy,* பெ.(n.) அணிகலனில் உள்ள படுகண்ணியிற் செருகும் பூட்டு; the hook of a clasp in an ornament held by the *paḍukaṇṇi* *"கொக்குவாய் ஒன்றும்" (S.I.I.II,396.150).*

[கொக்கு + வாய்.]

கொக்கூறப்பூடு *kokkuṟa-p-pūḍu,* பெ.(n.) நெருஞ்சில்; caltrops tribulus terrestrics (சா.அக.)

[கொக்கல் → கொக்கறை + (பூண்டு) பூடு.]

கொக்கேறி *kokkēṟi,* பெ.(n.) நெட்டி (L.); solapith.

[கொக்கு + ஏறி.]

கொக்கை *kokkai,* பெ.(n.) ***கொக்கி*** பார்க்க; see *kokki.*

பட. கொக்கெ.

[கொள் → கொட்கு → கொக்கை.]

கொக்கைக்கல் *kokkai-k-kal,* பெ.(n.) ஆட்டுக்காற் கல் (வின்.); coral stone.

[கொக்கை + கல்.]

கொக்கைச்சத்தகம் *kokkai-c-cattagam,* பெ.(n.) ஒருவகைச் சிறுகத்தி (வின்.); small bill hook.

[கொக்கை + சத்தகம்.]

கொக்கைச்சால் *kokkai-c-cāl,* பெ.(n.) உழவுச்சால் படாத தரை (யாழ்ப்.); balk in ploughing.

[கொக்கை + சால். ஒருகா. பொக்கை → கொக்கை.]

கொக்கோகம் *kokkōgam,* பெ.(n.) வரகுணராம பாண்டியனால் வடமொழியினின்றும் மொழி பெயர்க்கப்பட்ட ஒரு காமநூல்; a treatise on erotics translated from Sanskrit by Varaguṇarāma Pāṇḍiyaṉ.

மறுவ. கொக்குவம்.

[கொக்குவகன் – கொக்குவகம் → கொக்கோகம்.]

கொக்குவகனால் இயற்றப்பட்ட நூல். இது முதலில் தமிழில் எழுதப்பட்டு வடமொழியாக்கம் பெற்றதென்றும் அதன் பின்னர் வடமொழியிலிருந்து தமிழாக்கம் பெற்றதென்றும் கூறுவர். கொக்குவகன் என்னும் பெயரே தமிழாயிருத்தல் காண்க.

கொக்கோடு[1] *kokkōḍu,* பெ.(n.) கோயில் மேல் தளத்தை மேவப் பயன்படும் ஒருவகைச் சிறிய ஓடு; a kind of small printed tile used for roofing temples.

மறுவ. கூரோடு.

ம. கொக்கோடு.

[கொக்கு + ஓடு.]

கொக்கோடு[2] *kokkōḍu,* பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[கொக்கு + கோடு – கொக்குக்கோடு → கொக்கோடு]

கொக்கு வகைகள்

பிணந்தின்னிக் கொக்கு

பூங்கொக்கு

வெண் கழுத்திக் கொக்கு

கருமூக்கன் கொக்கு

கரண்டிக் கொக்கு

கொக்கோவெனல் *kokkō-v-enal,* பெ.(n.) ஒர் ஒலிக்குறிப்பு; onom. expr. of cackling, clucking.

[கொக்கோ + எனல்.]

கொகராஞ்சி *kogarāñji,* பெ.(n.) கணவாய் மீனின் முதுகு ஒடு (பரத. கலைச்.சொ.அக.); back of the skeleton of kanava fish.

கொகுடி *kogudi,* பெ.(n.) முல்லைக்கொடிவகை; a variety of jasmine creeper. *"குவிமுகையன கொகுடி" (சூளா. தூது. 4).*

Persi. yāsemin, yāsmin; **E.** jasmine; **M.Fr.** jasmin; **Cotta.** jessemin; **It.** gesmino; **Sp.** jazmin; **Fr.** yasmin.

[கொக்கு → கொக்குள் → கொக்குளி → கொகுளி → கொகுடி.]

கொகுடிக்கோயில் *kogudi-k-kōyil,* பெ.(n.) கோயில் கூடக (விமான) அமைப்புகளுள் ஒன்று; a kind of shrine in temple.

[கொகுடி + கோயில். கொகுடிக்கோயில் (கொகுடி என்னும் முல்லைக் கொடியின் சிற்ப வேலைப்பாடு அமைந்த கோயில்).]

கொங்கடி *kongadi,* பெ.(n.) 1. மழைக்காலத்தில் குடைபோல் பயன்படுத்தும் ஒலையால் முடைந்த கூர்ங்கூடை; a rain cover made of ruds and leaves. 2. தலையில் கவித்துக் கொள்ளும் உள்மடித்த சாக்குத்துணி; a tucked in gunny bag used as a raincoat.

கொங்கடி

மறுவ. கொங்கணி, சம்மங்கூடு.

[கொங்கு - வளைவு, கொங்கு → கொங்கடி.]

கொங்கணக்கத்தி *kongana-k-katti,* பெ.(n.) வளைந்த அமைப்புடைய ஒருவகைக் கத்தி; a kind of curved knife.

ம. கொங்கணம் கத்தி; **து.** கொங்கணகத்தி.

[கொங்கணம் + கத்தி.]

கொங்கணநாயனார் *kongana-nāyanār,* பெ.(n.) பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுளொருவர் (சிற்.அக.); a poet of fifteenth century.

[கொங்கணம் + நாயன் + ஆர்.]

கொங்கணம்[1] *konganam,* பெ.(n.) 1.மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கும், அரபிக்கடலுக்குக் கிழக்கும், கூர்ச்சரத்திற்குத் தெற்கும், கோவாவுக்கு வடக்குமாக உள்ளதும், ஐம்பத்தாறு நாடுகளுள் ஒன்றுமான நாடு (நன்.272. மயிலை.); Konkan, the low country of Western India between the ghats and the Arabian sea extending from Goa to Gujarat, one of 56 Nādu. 2. தமிழ் நூல்களிற் கூறப்படும் பதினெட்டு மொழிகளுள் ஒன்று (திவா.); language of *Kongan,* one of 18 languages referred to in Tamil works.

ம. கொங்கணம்; **க., தெ., து.** கொங்கண.

கொங்கணம் > **Skt.** Kōnkaṇa.

[கொண்கானம் → கொங்கணம்.]

கொங்கணம்[2] *konganam,* பெ.(n.) வளைந்த தன்மை; the state of being curved.

[கொங்கு + அணம். அணம் - சொல்லாக்க ஈறு.]

கொங்கணர்[1] *konganar,* பெ.(n.) 1.கொங்கண நாட்டார்; inhabitants of *Kongan.* 2. பண்டைத் தமிழ்ச் சித்தருள் ஒருவர்; an ancient Tamil Šiddha.

ம. கொங்கணன்.

[கொங்கணம் → கொங்கணர்.]

கொங்கணர்[2] *konganar,* பெ.(n.) கன்னட நாட்டின் மங்களூர்ப் பகுதியினர்; people around Mangalore state. "கோசலர் சிங்களர் தெலுங்கர்" (S.I.I. XXVI, 37-9, p.28).

[கொங்கணம் → கொங்கணர்.]

கொங்கணர்[3] *konganar,* பெ.(n.) கள்ளர்குடிப் பட்டப்பெயர்களுள் ஒன்று (கள்ளர் சரித்.ப.98); a caste title of Kallars.

[கொங்கணம் + அர்.]

கொங்கணவர் *konganavar,* பெ.(n.) ***கொங்கணர்*** பார்க்க; see *konganar.* *கொக் கென்று நினைத்தாயோ கொங்கணவா? (தனிப்பா.)*

[கொங்கணம் →கொங்கணவர்.]

கொங்கணவன் *konganavan,* பெ.(n.) நாகரிகமில்லாதவன்; uncivilised person.

[கொங்கணன் → கொங்கணவன்.]

கொங்கணி[1] *kongani,* பெ.(n.) கொங்கண நாட்டான்; inhabitant of Konganam.

ம., க. கொங்கணி.

[கொங்கணம் → கொங்கணி.]

கொங்கணி[2] *kongani,* பெ.(n.) மழையைத் தடுக்கத் தலையிற் கவிக்கும் நீண்டு உள்வளைந்த சம்பங்கூடை அல்லது அதைப் போன்ற பாதுகாப்பு அமைப்பு; a covering against rain made of camban reeds, palm leaf or grass, etc.

மறுவ. கொங்காடை, கொங்கடி, கொங்காணி.

[கொங்கு + அணி – கொங்கணி (வளைத்து மூடிய அணி).]

கொங்கணிப்பூண்டு *kongani-p-pūṇḍu,* பெ.(n.) பயிரின் களையாகிய பூண்டுச்செடி (இ.வ.); a kind of weed.

[கொங்கணி + பூண்டு.]

கொங்கணியான் *konganiyān,* பெ.(n.) மீன்வகை (யாழ். அக.); a kind of fish.

[கொங்கணி → கொங்கணியான்.]

கொங்கணையன் *konganaiyan,* பெ.(n.) பழிச்சொல்; a term of abuse.

[கொங்கு → கொங்கணவன் → கொங்கணையன்.]

கொங்கம் *kongam,* பெ.(n.) 1. **கொங்கு** பார்க்க; see *Kongu* a portion of the Tamil country. 2. கோளக வைப்பு நஞ்சு; a mineral poison.

[கொங்கு → கொங்கம்.]

கொங்கம்பட்டி *kongam-paṭṭi,* பெ.(n.) மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் உள்ள திருமணி முத்தாற்றை ஒட்டி அமைந்துள்ள ஊர்; a village situated near Thirumanimutharu river in Melur Taluk Madurai Dt.

[கொங்கன் + பட்டி – கொங்கன்பட்டி → கொங்கம்பட்டி]

கொங்கம்பாளையம் *kongam-pāḷaiyam,* பெ.(n.) ஈரோடு மாவட்டத்துச் சிற்றூர்; a village in Erode Dt.

[கொங்கம் + பாளையம்.]

கொங்கமுடி *kongamuḍi,* பெ.(n.) தலையின் ஒரு பக்கத்தில் கொண்டை அமையுமாறு முடியப்பட்ட மகளிர் தலைமுடி; a particular hair-do of woman, mode of tying the hair on one side of the head.

ம. கொங்கமுடி.

[கொங்கு + முடி.]

கொங்கர்கோமான் *kongar-kōmān,* பெ.(n.) கொங்குநாட்டை வென்ற மன்னர்கள் சூடிக் கொண்ட பட்டம்; chieftain of *Kongu* country.

[கொங்கர் + கோமான்.]

கொங்கரத்தி *kongaratti,* பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Sivagangai Dt.

[கொங்கு + ஆரத்தி.]

கொங்கரம் *kongaram,* பெ.(n.) வளைகை; bending.

தெ. கொங்கர.

[கொங்கு → கொங்கரம்.]

கொங்கராயர் *kongarāyar,* பெ.(n.) தென்னார்க் காட்டு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம், கொங்க ராய பாளையத்திலுள்ள, உடையாரினத்தைச் சார்ந்த பாளையக்காரர்களின் பட்டப்பெயர்; title of Poligars of the *Udaiyār* caste, probably from *Kongarāya Pāḷaiyam* in *Kalla-kuricci* taluk of Villupuram Dt. 2. கள்ளர்குடிப் பட்டப்பெயர் களுளொன்று (தஞ்.); a caste title of Kaḷḷars.

[கொங்கம் + இராயர்.]

கொங்கராயனூர் *konga-rāyan-ūr,* பெ.(n.) கோவை மாவட்டத்தில் அமைந்த ஊர்; a village situated in Coimbattur Dt.

[கொங்குராயன் + ஊர்.]

கொங்குதேசச் சிற்றரசர்களுள் ஒருவரான கொங்குராயர் ஆண்டமையால் இப் பெயர் பெற்றதாம்.

கொங்கரி *kongari,* பெ.(n.) ஏல அரிசி (மலை.); cardamom.

[கொங்கு + அரிசி.]

கொங்கரையர் *kongaraiyar,* பெ.(n.) கள்ளர்குடிப் பட்டப்பெயர்களுள் ஒன்று (கள்ளர் சரித்.ப.98); a caste title of Kaḷḷars.

[கொங்கு + அரையர்.]

கொங்கல் நகரம் *kongal-nagaram,* பெ.(n.) கோவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kovai Dt.

[கொங்கல் + நகரம்.]

கொங்கவேம்பு *koṅga-vēmbu,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கொங்கன் + வேம்பு.]

கொங்களம் *koṅgaḷam,* பெ.(n.) கொங்கண மொழி (யாழ். அக.); language of the Koṅgan country.

[கொண்கானம் → கொங்கணம் → கொங்களம் (கொ.வ.).]

கொங்கன் *koṅgaṉ,* பெ.(n.) 1.கொங்கநாட்டான்; inhabitant of the Koṅgu country. *"ஒளிறுவாட் கொங்கர்" (குறுந். 393).* 2. சேரன் (திவா.) Cēra king.

ம. கொங்ஙன்; க. கொங்க; து. கொங்கெ.

கொங்கன்குளம் *koṅgaṉ-kuḷam,* பெ.(n.) திருநெல்வேலி மாவட்டம் இராசபாளையத்திற்கு அருகேயுள்ள ஒரு சிற்றூர்; a village near Rajapalayam in Tirunelveli Dt.

[கொங்கன் + குளம்.]

கொங்கன் என்னும் சிற்றரசன் இவ் ஊரில் வெட்டிய குளமொன்று அமைந்திருந்ததாகவும் அதன் அடிப்படையில் இப் பெயர் வழங்கி வருவதாகவும் கருதப் படுகிறது.

கொங்கனேந்தல் *koṅgaṉ-ēndal,* பெ.(n.) சிற்றூரொன்றின் பெயர்; a name of a village.

[கொங்கன் + ஏந்தல் (ஏரி).]

கொங்காடை *koṅgāḍai,* பெ.(n.) கொங்குநாட்டில் மழை காலத்தில் மடித்துத் தலையில் கவிழ்த்துக் கொள்ளும் துப்பட்டி அல்லது சாக்குத்துணி; coarse cloth or sack which is used to protect the head from rain in Koṅgu country.

[கொங்கு + ஆடை – கொங்காடை.]

கொங்காணி *koṅgāṇi,* பெ.(n.) மழையைத் தாங்க உடலிற் கவிக்கும் சம்பங்கூடை; covering against rain, made of palm leaf, grass or reeds.

மறுவ. கொங்கூடி, கொங்காடை.

[கொங்கு → கொங்காணி.]

கொங்காரதி *koṅgāradi,* பெ.(n.) பிடங்குநாறி என்னும் தேக்குமரம்; fire - brand teak (சா.அக.).

[குங்கு → கொங்கு → கொங்காரதி.]

கொங்காரம் *koṅgāram,* பெ.(n.) குங்குமமரம்; a species of fragrant tree.

[குங்கு → கொங்கு → கொங்காரம்.]

கொங்கார மாசுக்கீரை *koṅgāra-māśu-k-kīrai,* பெ.(n.) பிண்ணாக்குக் கீரை (சித்.அக.); a herb.

[கொங்கர் + மசியல் + கீரை – கொங்கர்மசியல் கீரை → கொங்காரமாசிக்கீரை (கொ.வ.).]

கொங்காழி *koṅgāḻi,* பெ.(n.) இரண்டு நாழியும் ஒரு உரியும் (2½ நாழி) கொண்ட ஒரு தவச அளவு; a measure of grain which contains two and a half standard *nāḻis.*

ம. கொங்காழி.

[கொங்கு + ஆழி.]

கொங்காளம் *koṅgāḷam,* பெ.(n.) பதினெண் மொழிகளுள் ஒன்று; one among the eighteen languages. (இரு.நா.).

மறுவ. கொங்கணம்.

[கொங்கு → கொங்காளம்.]

கொங்காளன் *koṅgāḷaṉ,* பெ.(n.) குதிரைவகை (அசுவசா.151.); a breed of horses probably of the Koṅgu country.

[கொங்கு → கொங்காளன்.]

கொங்கான்[1] *koṅgāṉ,* பெ.(n.) கொங்கணன்; a man of Koṅgāṇam.

[கொங்கு + ஆன்.]

கொங்கான்[2] *koṅgāṉ,* பெ.(n.) அறிவிலி; ignorant person.

[கொங்கன் → கொங்கான்.]

கொங்கி *koṅgi,* பெ.(n.) நாரை; crane (சா.அக.).

[கொங்கு → கொங்கி.]

கொங்கிணிமுள்ளு *koṅgiṇi-muḷḷu,* பெ.(n.) காட்டுச்சோளம்; wild sage (சா.அக.).

[கொங்கிணி + முள்ளு.]

கொங்கிலவு *koṅgilavu,* பெ.(n.) 1. கோங்கிலவு; dipterocarp dammer. 2. முள்ளிலவு; red cotton tree. 3. தணக்கு; odal tree. 4.கள்ளிச்சாரம்; mordant of *kaḷḷi* tree (சா.அக.).

[கொங்கு + இலவு.]

கொங்கிளங்கோசர் *koṅgiḷaṅ-kōśar,* பெ.(n.) கொங்குநாட்டில் குடியேறிய கோசர்; Kōśar immigrants into Koṅgu country.

[கொங்கு + இளம் + கோசர்.]

கொங்கிற்பொன் *koṅgiṟ-poṉ,* பெ.(n.) கொங்கு நாட்டுப் பொற்காசு; gold coin of Koṅgu country.

"கொங்கிற் பன்னு துலைப்பசும் பொன்" (பெரியபு. இடங்கழி.செப்.3), (கல்.அக.).

[கொங்கில் + பொன்.]

கொங்கு[1] *kongu,* பெ.(n.) 1. கோவை, ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி மாவட்டங்களும் எருமையூர் (மைசூர்)ச் சீமையின் ஒரு பகுதியுமாக அடங்கிய தமிழ்நாட்டுப் பகுதி; the Tamil country comprising the districts of Coimbatore, Erode, Salem, Namakkal and Dharmapuri and portion of Mysore. *கொங்கிளங் கோசர் (சிலப். உரைபெறு.2).* 2. பூந்தாது; farina, pollen of flowers. *"கொங்குமுதிர் நறுவழை" (குறிஞ்சிப். 83).* 3. நறுமணம்; fragrance, odour. *"கொங்கு விம்முபூங் கோதை மாதரார்" (சீவக. 2680).* 4. தேன்; honey. *"கொங்குகவர்....சேவல்" (சிறுபாண்.184).* 5. கள் (பிங்.); toddy. 6. கருஞ்சுரை (மலை.); a dark kind of bottle - gourd. 7. புறத்தோல்; husk.

ம. கொங்nு; **க.** கொங்கு; **து.** கொஙக; **கோத.** கொங்க்; **துட.** க்விக்.

[குங்கு → கொங்கு.]

கொங்கு[2] *kongu,* பெ.(n.) 1. வளைந்த தன்மை; the state of being bent, crooked, etc. 2. குழப்பம்; confusion. 3. ஒழுங்கின்மை; irregular.

க. கொங்கு; **தெ.** கொங்கி, கொங்கா; **து.** கொங்கு; பட. கொக்கு (வளைவு).

[குல் → குள் → குங்கு → கொங்கு.]

கொங்கு[3] *kongu,* பெ.(n.) மலையின் சரிவுப் பகுதி; slopes of mountain.

ம. கொஙnு; **க.** கொங்கு; **து.** கொங்க; **கோத.** கொங்க்.

[குல் → குள் → குங்கு → கொங்கு.]

கொங்குகா *konguga,* பெ.(n.) பிரவொட்டி; an unknown black magic plant used for invoking or adjusting a demon (சா.அக.).

[கொங்கு + கா.]

கொங்குகி *kongugi,* பெ.(n.) கருஞ்சுரை; hedge - caper (சா.அக.).

[கருஞ்சுரை → கங்குரி → கொங்குகி.]

இது பூதங்களை அழைப்பிக்கும் மூலி என்பர்.

கொங்குகிர் *kongugir,* பெ.(n.) வளைந்த உகிர், பறவையின் கூருகிர்; a bent nail or claw.

க. கொங்குகுர்.

[கொங்கு + உகிர்.]

கொங்குசீர் *kongu-śir,* பெ.(n.) கொங்கர் பின்பற்றும் சடங்கு; a rite among *Kongu* people.

[கொங்கு + சீர்.]

கொங்குடையாம்பாளையம் *kongudaiyam-palaiyam,* பெ.(n.) சிற்றூர்ப் பெயர்; name of a village.

[கொங்கு + உடையான் + பாளையம்.]

கொங்குத்தரம் *kongu-t-taram,* பெ.(n.) காங்கேயத்து மூவகை எருதுகளைப் பிரிக்கும் பகுப்பாகும்; the *Kangeyam* bull.

[கொங்கு + தரம்.]

கொங்குநாடு *kongu-nadu,* பெ.(n.) பண்டைய தமிழகத்திலிருந்த நாடுகளிலொன்று; a country in ancient Tamil nadu.

[கொங்கு + நாடு.]

ம. கொங்ஙுநாடு, கொங்ஙநாடு, கொங்கர் நாடு; **க.** கொங்கு; **து.** கொங்க; **கோத.** கொங்க்.

இன்றைய கோயம்புத்தூர், ஈரோடு, சேலம் மாவட்டங்களடங்கிய நிலப்பகுதி. இதைப்பற்றிய பாடல்களையும் கொங்கு மண்டல சதகத்தையும் கொண்டு பார்க்கும்போது மேற்கே வெள்ளிமலையும், கிழக்கே சேர்வராயன் மலை பச்சைமலை, கொல்லி மலை ஆகிய மலைகளையும், வடக்கே தலைமலை பிளிகிரிரங்கன் மலைகளையும், தெற்கே பழனி மலையையும் கொண்ட நிலவெளியாகும்.

கொங்குமுட்டி *kongu-mutti,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanadhapuram Dt.

[கொங்கு + முட்டி.]

கொங்குமுளை *kongu-mulai,* பெ.(n.) பழைய நாணய வகை (பணவிடு.132); an ancient coin.

[கொங்கு + (மிளை) முளை.]

கொங்குரான்வயல் *konguran-vayal,* பெ.(n.) புதுவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Puduvai Dt.

[கொங்கரையன் → கொங்குரான் + வயல்.]

கொங்குரை *kongurai,* பெ.(n.) மாற்றுயர்ந்த பொன்; gold of Kongu, the quality of which is high "கொங்குரை யாற்றிலிட்டு" (மதுரைக்க. 74)

[கொங்கு → கொங்குரை.]

கொங்குவஞ்சி *koṅgu-vañji,* பெ.(n.) கருவூர்; Karuvoor in Koṅgu.

[கொங்கு + வஞ்சி.]

கொங்குவேண்மாக்கதை *koṅguvēṇ-mākkadai,* பெ.(n.) கொங்குவேள் இயற்றிய பெருங்கதை என்னும் இலக்கியம்; a Tamil literary work by Koṅguvēḷ.

[கொங்குவேள் + மாக்கதை.]

கொங்குவேள் *koṅgu-vēḷ,* பெ.(n.) பெருங்கதை யென்னுந் தமிழ்ப்பாவியம் (காவியம்) இயற்றிய ஆசிரியர்; author of the Tamil classical work as Peruṅgadai. *"கொங்குவேள் மாக்கதையைக் கூறேம்" (சீவக. முகவுரை,13).*

[கொங்கு + வேள்.]

கொங்குவேளாளர் *koṅgu-vēḷāḷar,* பெ.(n.) கொங்குநாட்டு வேளாளர்; Velalas of the *Koṅgu* country.

[கொங்கு + வேளாளர்.]

கொங்கூர் *koṅgūr,* பெ.(n.) பல்லடம் வட்டம் கொழுமம் அருகிலுள்ள ஊர்; a place near Koḷumam in Palladam taluk in Coimbatore Dt. *"இட்ட நிலம் கொங்கூர்க் குளத்துக் கீழைத்தூம்பில்" (S.I.I.V.273:9).*

[கொங்கு + ஊர்.]

கொங்கெழு சிவாலயம் *koṅgeḻu-śivālayam,* பெ.(n.) கொங்குநாட்டில் உள்ள தேவாரப் பாடல்பெற்ற ஏழு சிவன் கோயில்கள். *"திருமுடி பெற்றுக்கொண்டு கொங்கெழு சிவாலயமும் சேவித்து" (கொங்கு நாட்டு சமுதாய ஆவணங்கள், கொங்கு காணியான பட்டயம். 3).*

[கொங்கு + ஏழு (எழு) + சிவன் + ஆலயம்.]

கொங்கை *koṅgai,* பெ.(n.) 1.முலை; woman's breast. *"கொங்கை முன்றிற் குங்கும மெழுதாள்" (சிலப்.4:49).* 2. மரத்தின் முருடு (வின்.); protuberances or knots of a tree. 3. கம்புத் தவசத்தின் உமி (இ.வ.); kambu husk. 4. மரக்கிளை ; branch of a tree. வடக்கே போற கொங்கையை வெட்டு (நெல்.வழ.).

ம. கொங்க; க. கொங்கெ; கூ. கன்குடி.

[கொம்பு → கொங்கு → கொங்கை.] (தமி.வ.219)

கொங்கைக்கட்டி *koṅgai-k-kaṭṭi,* பெ.(n.) முலைக் கட்டி; mammary abscess (சா.அக.).

[கொங்கை + கட்டி.]

கொங்கைக்குத்தல் *koṅgai-k-kuttal,* பெ.(n.) முலையின் கோளத்திற் காணும் குத்தல் வலி; pain in the mammary gland (சா.அக.).

[கொங்கை + குத்தல்.]

கொங்கைக்கோளம் *koṅgai-k-kōḷam,* பெ.(n.) பால் சுரக்கும் கோளம்; lactogenic gland (சா.அக.).

[கொங்கை + கோளம்.]

கொங்கைநீர் *koṅgai-nīr,* பெ.(n.) முலைப்பால்; woman's breast milk (சா.அக.).

[கொங்கை +நீர்.]

கொங்கைப்பால் *koṅgai-p-pāl,* பெ.(n.) பெண் முலைப்பால்; woman's breast milk (சா.அக.).

[கொங்கை + பால்.]

கொங்கைபவனி *koṅgai-bavaṉi,* பெ.(n.) சுழல் வண்டு; a beetle whirling in water (சா.அக.).

[கங்கை → கொங்கை + பவனி.]

கொங்கைவலி *koṅgai-vali,* பெ.(n.) முலையுள் வலி; pain in the mamma (சா.அக.).

[கொங்கை + வலி.]

கொங்கைவிம்மு-தல் *koṅgai-vimmu-,* 5 செ.கு.வி.(v.i.) காமவிச்சையால் பெண்கள் முலை இறுகிப் பருத்தல்; to becoming distended and rigid as woman's brests by a force acting from sexual desire (சா.அக.).

[கொங்கை + விம்மு-.]

கொச்சக்கயிறு *kocca-k-kayiṟu,* பெ.(n.) தெங்கின் கதம்பை நாரால் செய்யப்படுங் கயிறு; rope made of coconut fibre.

ம. கொச்சம் (சிறிய இழைக்கயிறு).

[கொச்சம் + கயிறு.]

கொச்சகக் கலிப்பா *koccaga-k-kalippā,* பெ.(n.) தரவு, தரவிணை, சிஃறாழிசை, பஃறாழிசை, மயங்கிசை என்னும் ஐம்பிரிவுடைய கலிப்பாவகை (யாப். வி.81); a species of *Kali* verse, of five varieties, viz., *taravu, taraviṇai, cikṟāḻiśai pakṟāḻiśai, mayaṅgiśai.*

[கொச்சகம் + கலிப்பா.]

கொச்சகம்[1] *koccagam,* பெ.(n.) ***கொச்சகக் கலிப்பா*** (காரிகை. செய்.12.) பார்க்க; see *koccaga-k-kalippā.* 2. ஆடையுள் ஒருவழிக் கொய்தடுக்கிக் கட்டுவது (தொல்.பொருள்.433, உரை); ornamental

pleating of a cloth when worn. 3. அம்போதரங்க வுறுப்புகளுள் ஒன்று (தொல். பொருள்.464); one of the elements of *ambōdarangam*. 4. பரிபாட லுறுப்புகளுள் ஒன்று (தொல்.பொருள்.433); one of the elements of *Paripāḍal*.

ம. கொச்சகம்.

[கொய்சு → கொச்சு → கொச்சகம்.]

கொச்சகம்[2] *koccagam*, பெ.(n.) ***கொச்சை***[1] பார்க்க; see *koccai*. சிறப்பில்லாததனை ஒரு சாரார் கொச்சையென்றும் கொச்சக மென்றும் வழங்குவர் (யாப்.வி.79).

[கொச்சு → கொச்சகம்.]

கொச்சகவொருபோகு *koccaga-v-oru-pōgu*, பெ.(n.) "கலிப்பாவின் வகைகளுள் ஒன்று" (தொல்.பொருள்.செய்யுள்.143); a kind of kalippā.

[கொச்சகம் + ஒரு + போகு.]

தரவு முதலான உறுப்புகளுள், தரவின்றித் தாழிசை முதலிய உறுப்புகள் பெற்றும், தாழிசையின்றித் தரவு முதலியன உடைத்தாகியும், எண்ணாகிய உறுப்புகளை இடையிட்டுத் தனிச்சொல் வாரா தொழியினும்; சுரிதகமின்றித் தரவு தானே நிமிர்ந்தொழுகி முடியினும்; ஒத்தாழிசையின் யாக்கப்பட்ட யாப்பினும் அதற்குரித்தாக ஓதப்பட்ட கடவுள் வாழ்த்துப் பொருண்மையின்றிக் காமப் பொருளாக வருவதுமாகிய ஒருவகைக் கலிப்பா.

கொச்சங்காய் *koccangāy*, பெ.(n.) தென்னையின் இளங்காய்; undeveloped coconut fruit.

ம. கொச்சங்ங.

[கொச்சு + அம் + காய்.]

கொச்சம்[1] *koccam*, பெ.(n.) ***கொச்சக்கயிறு*** பார்க்க; see *kocca-k-kayiṟu*.

ம. கொச்சம் (சிறிய இழைக்கயிறு).

[கொச்சு → கொச்சம்.]

கொச்சம்[2] *koccam*, பெ.(n.) பீர்க்கு; luffa gourd (சா.அக.).

[கொச்சு → கொச்சம்.]

கொச்சம்[3] *koccam*, பெ.(n.) கரையையொட்டி எழும் இருவேறு அலைகட் கிடைப்பட்ட நீர்ப்பகுதி; plain water surface between two waves near shore.

[கொச்சு → கொச்சம்.]

கொச்சம்[4] *koccam*, பெ.(n.) சிறியது, கடைப்பட்டது; that which is small, inferior.

ம. கொச்சம்.

[கொச்சு + அம்.]

கொச்சவாடை *koccavāḍai*, பெ.(n.) இறைச்சி நாற்றம்; foul smell.

ம. கொச்சம்.

[குழை → குழைச்சு → கொச்சு → கொச்சல் + வாடை.]

கொச்சன் *koccaṉ*, பெ.(n.) சிறுபையன்; young boy.

ம. கொச்சன்.

[கொச்சு → கொச்சன்.]

கொச்சாம்பாறை *koccām-pāṟai*, பெ.(n.) சிறிய பாறைமீன்வகை;a kind of fish.

[கொச்சம் + பாறை – கொச்சம்பாறை → கொச்சாம் பாறை.]

கொச்சாளை *koccāḷai*, பெ.(n.) மீன்வகை (வின்.); a kind of fish.

[கொச்சு → கொச்சாளை.]

கொச்சாறு *koccāṟu*, பெ.(n.) சிறிய ஆறு; a small river, brook.

ம. கொச்சாறு.

[கொச்சு + ஆறு.]

கொச்சி[1] *kocci*, பெ.(n.) 1. கொச்சிநாடு; (an erstwhile state in Kerala) Cochin state. 2.கொச்சிநகர்; Cochin town. 3. பூண்டின் முதற்பெயர்; plant's first term as கொச்சிமிளகாய் etc. 4. மும்முறை வைத்த சவ்வீர வைப்பு; mercury chloride sublimated three times formerly in Cochin state (சா.அக.).

[கொச்சு → கொச்சி.]

கொச்சி[2] *kocci*, பெ.(n.) விளாம்பழத்தின் உள்ளீடு (வின்.); pulp of the wood apple.

[குச்சில் → குச்சி → கொச்சி.]

கொச்சி[3] *kocci*, பெ.(n.) ***ஊசிமிளகாய்*** (மலை.) பார்க்க; see *ūsimiḷagāy*

மறுவ. கொச்சி மிளகாய்.

[குச்சி → கொச்சி.]

கொச்சி[4] *kocci*, பெ.(n.) நெருப்பு (அக.நி.); fire.

ம. கொச்சி; க. குச்சு (கொதிக்கவை).

[கிச்சு → கொச்சு → கொச்சி.]

கொச்சி[5] *kocci,* பெ.(n.) இளங்கொட்டங்காய்ச்சில் (யாழ்ப்.); dry shell of a young coconut after the kernel is taken out.

[காய் + சில் – காய்ச்சில் → கச்சில் → கொச்சி.]

கொச்சிக்கடா *kocci-k-kaḍā,* பெ.(n.) ஒருவகை ஆடு; a species of goat.

[கொச்சி + கடா.]

கொச்சிக்காய் *kocci-k-kāy,* பெ.(n.) ஊசி மிளகாய்; sharp chilli.

[கொச்சி + காய்.]

கொச்சிக்குழந்தை *kocci-k-kuḻandai,* பெ.(n.) ஒருவகை வைப்பு நஞ்சு; a prepared arsenic.

[கொச்சி + குழந்தை]

கொச்சித்தமரத்தை *kocci-t-tamarattai,* பெ.(n.) புளிச்சக்காய் அல்லது புளிமா; sour bilimby (சா.அக.).

[கொச்சி + தமரத்தை.]

கொச்சிநாய் *kocci-nāy,* பெ.(n.) கொச்சியி லிருந்து வரும் சிறுநாயினம் (இ.வ.); a small species of dog from Cochin.

[கொச்சி + நாய்.]

கொச்சிநீலப்பூச்சி *kocci-nīla-p-pūcci,* பெ.(n.) கொச்சியில் உண்டாகும் ஒருவித நீலப்பூச்சி; Cochineal insect (சா.அக.).

[கொச்சி + நீலம் + பூச்சி.]

கொச்சிப்பன்னீர் *kocci-p-paṉṉīr,* பெ.(n.) கொச்சியில் வடிக்கும் பன்னீர்; rose-water distilled in olden days in Cochin (சா.அக.).

[கொச்சி + பன்னீர்.]

கொச்சிப்புத்தன் *kocci-p-puttaṉ,* பெ.(n.) பணத்தில் 5/16 பாகம் கொண்ட பழைய நாணயம்; an old coin worth 5/16 *paṇam.*

ம. கொச்சிப்புத்தன்.

[கொச்சி + புத்தன் (புதியது).]

கொச்சிபேதம் *kocci-pēdam,* பெ.(n.) குறட்டைப் பழத்திலுள்ள தசைப்பற்று; the pulp of the fruit of *kuṟaṭṭai* (சா.அக.).

[கொச்சி + பேதம்.]

கொச்சிமஞ்சள் *kocci-mañjaḷ,* பெ.(n.) மஞ்சள் வகை (வின்.); wild turmeric.

[கொச்சி + மஞ்சள்.]

கொச்சிமஞ்சாடி *kocci-mañjāḍi,* குன்றிமணி; crab's eye (சா.அக.).

[கொச்சி + மஞ்சாடி.]

கொச்சிமிளகாய் *kocci-miḷagāy,* பெ.(n.) ஊசிமிளகாய் (M.M.170); small variety of chilli.

[கொச்சி + மிளகாய்.]

கொச்சிமிளகு *kocci-miḷagu,* பெ.(n.) கொச்சி நாட்டுக் கெட்டிமிளகு; solid pepper of Cochin (சா.அக.).

மறுவ. குருமிளகு.

[கொச்சி + மிளகு.]

கொச்சியேலம் *kocci-y-ēlam,* பெ.(n.) கொச்சி நாட்டு ஏலம்; Cochin cardamom (சா.அக.).

[கொச்சி + ஏலம்.]

கொச்சில் *koccil,* பெ.(n.) சிறிய பழம்; small fruit.

ம. கொச்சில்.

[கொச்சு → கொச்சில்.]

கொச்சிலித்தி *kocci-litti,* பெ.(n.) ஒருவகைச் சிற்றிலைப் புல்; ring worm killer (சா.அக.).

ம. கொச்சிளச்சிப்புல்லு.

[கொச்சு + இலைச்சி – கொச்சிலைச்சி, கொச்சிலித்தி (கொச்சு : சிறிய.) (கொ.வ.)]

கொச்சிலித்திப்புல் *koccilitti-p-pul,* பெ.(n.) மேகப் படைப் போக்கும் புல்வகை (M.M.229); ring-worm killer.

[கொச்சிலித்தி + புல்.]

கொச்சிவீரம் *kocci-vīram,* பெ.(n.) மும்முறைப் பதனிட்ட சவ்வீரவைப்பு; corrosive sublimate prepard formerly in Cochin, three times (சா.அக.).

[கொச்சி + வீரம்.]

கொச்சு[1]**–தல்** *koccu,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. வெட்டுதல்; to cut. 2. துண்டாக்குதல்; to cut into pieces.

க. கொச்சு.

[குச்சு → கொச்சு.]

கொச்சு[2] *koccu,* பெ.(n.) குஞ்சம் (கோவிலொ.97); tassel.

[குச்சு → கொச்சு.]

கொச்சு[3] *koccu,* பெ.(n.) கத்தரிக்காய், மாங்காய் முதலியவற்றில் புளி, மிளகாய், உப்பு முதலிய வற்றைச் சேர்த்துப் பக்குவப்படுத்திய குழம்புவகை; a thick mess of boiled brinjals, mangoes, etc., seasoned with tamarind, chillies, salt, etc.

மறுவ. கொத்சு.

க. கொச்சு (gojju)

[கொச்சுதல் : சிறிதாதல், சுண்டுதல். குச்சு → கொச்சு.]

கொச்சு[4] *koccu,* பெ.எ. (adj.) சிறிய; small, young. கொச்சுப் பையன் (இ.வ.) 2. இளைய; junior. 3.சுருங்கிய; brief, short. 4. இழிந்த, தாழ்வான; low, base, mean.

ம. கொச்சு; **க., தெ.** குச்சு; **து.** குசு.

[குல் → குள் → குச்சு → கொச்சு.]

கொச்சுகொச்செனல் *koccukoccenal,* பெ.(n.) சிறு மீன்கள் எழுப்பும் ஒலி; sound produced by small fish.

[கொச்சு + கொச்சு + எனல்.]

கொச்சை[1] *koccai,* பெ.(n.) 1.கழிவு; meanness, despicableness. *"கொச்சை மானுடர்" (கம்பரா. யுத்.மந்திரப். 101).* 2. இழிந்தவன்; mean despicable person. *"கொச்சைத் துன்மதி" (கம்பரா.யுத். மந்திரப்.112).* 3. ***கொச்சைச் சொல்*** பார்க்க; see *koccai-c-col.* 4. ***கொச்சைநாற்றம்***[2] பார்க்க; see *koccai-nāṟṟam.* 5.இழிமை; vulgarity. *இப் படத்தில் கொச்சையான காட்சிகள் இடம்பெற்றுள்ளன (உ.வ.).*

[கழி → கழிச்சு → கச்சு → கொச்சு → கொச்சை.]

கொச்சை[2] *koccai,* பெ.(n.) சீர்காழி; *Šīrkāḻi,* "கொச்சை *வேந்தன்" (தேவா.1035:11).*

[காழி → காழிச்செ → கழிச்செ → கொச்சை.]

கொச்சை[3] *koccai,* பெ.(n.) 1.ஆடு (திவா.); sheep 2.வெள்ளாடு (திவா.); goat.

[கச்சை → கொச்சை.]

கொச்சைக்கயிறு *koccai-k-kayiṟu,* பெ.(n.) ***கொச்சக்கயிறு*** (இ.வ.) பார்க்க; see *kocca-k-kayiṟu.*

[கொச்சை + கயிறு.]

கொச்சைச்சொல் *koccai-c-col,* பெ.(n.) 1.திருந்தாப்பேச்சு; lisping, rustic or unrefined speech. 2. இழிசொல்; vulgar language.

[கொச்சை + சொல்.]

கொச்சைநாற்றம் *koccai-nāṟṟam,* பெ.(n.) 1.ஆட்டுப்பால் நாற்றம்; smell of sheep's milk. 2. பால், தாய்ப்பால் முதலியவற்றின் முடைநாற்றம்; offensive smell of milk, mother's milk, etc. 3. மீன் அழுகுவதால் உண்டாகும் நாற்றம்; stench or smell from rotten fish.

மறுவ. மொச்சை நாற்றம், கொச்சை வீச்சம், கொச்சைவாடை.

[கொச்சை + நாற்றம்.]

கொச்சைப்படுத்து-தல் *koccai-p-paḍuttu-,* 5 செ.கு.வி.(v.t.) இழிவுபடுத்துதல்; vulgarize.

[கொச்சை + படுத்து-.]

கொச்சைப்பழக்கம் *koccai-p-paḻakkam,* பெ.(n.) 1. கெட்ட பழக்கம்; bad habbit. 2. கீழ்மையான சேர்க்கை; low association (சா.அக.).

[கொச்சை + பழக்கம்.]

கொச்சைப்பால் *koccai-p-pāl,* பெ.(n.) வெள்ளாட்டுப்பால்; goat's milk (சா.அக.).

[கொச்சை + பால்.]

கொச்சைப்பேச்சு *kocci-p-pēccu,* பெ.(n.) திருந்தாத பேச்சு; barbarous or vulgar speech (சா.அக.).

[கொச்சை + பேச்சு.]

கொச்சைமீன் *koccai-mīṉ,* மீனுக்குண்டாவதோர் வாடை; the smell of fish.

[கொச்சை + மீன்.]

கொச்சைமுனி *koccai-muṉi,* பெ.(n.) சீர்காழியில் பிறந்த திருஞானசம்பந்தர்; Tiruñāṉa-šambandar, as born in Šīrkāḻi. *"சிட்டர்புகழ் கொச்சைமுனி" (திருவாலவா. 38:1).*

[கொச்சை + முனி.]

கொச்சைமொழி *koccai-moḻi,* பெ.(n.) இழிந்தசொல்; vulgar language. இப்படத்தில் கொச்சையான உரையாடல்கள் இடம்பெற்றுள்ளன (உ.வ.).

[கொச்சை + மொழி.]

கொச்சையர் *koccaiyar,* பெ.(n.) 1.இடையர்; cowherds, sheepherds. *"கொச்சையர் மனையி லிடைச்சியர்" (திருப்பு. 255).* 2.இளையார்; young persons. *"கொச்சைய ரெண்மர்கள்" (திருமந்.1394).*

[கொச்சை → கொச்சையர்.]

கொச்சைரோசனை *koccai-rōšaṉai*, பெ.(n.) வெள்ளாட்டு வயிற்றிலிருந் தெடுக்கும் மணத்தி; goats bezoar.

[கொச்சை + ரோசனை.]

கொச்சைவயம் *koccai-vayam*, பெ.(n.) சீர்காழி; *širkāḻi*. *"கொடியோடு கொச்சைவயமே" (தேவா.124:1).*

[கொச்சை + வயம்.]

கொசக்காரன் *koša-k-kāraṉ*, பெ.(n.) உரிமை யாவணத்தார் (இ.வ.); paṭṭādār, land owner.

கொசகம் *košagam*, பெ.(n.) ***கொய்சகம்*** பார்க்க; see *koyšagam*.

[கொய்சகம் → கொசகம்.]

கொசப்பட்டு *koša-p-paṭṭu*, பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்த ஒரு சிற்றூர்; a village in kāñjipuram Dt.

மறுவ. கொசப்பூர் (த.நா.ஊர்.பெ.)

[குயவர் + பட்டு - குயவர்பட்டு. கொசவர் + பட்டு - கொசவர்பட்டு → கொசப்பட்டு]

மட்பாண்டத் தொழில் செய்யும் குயவர் அதிகம் வாழ்ந்தமையால் இப் பெயர் பெற்றதாம்.

கொசமசக்கு *koša-mašakku*, பெ.(n.) ***குசமசக்கு*** பார்க்க; see *kuša-mašakku*. ஏமாற்றுவது, தெரியாமல் ஏமாற்றுவது; என்னமோ கொசமசக்கு நடந்து போச்சி (நெல்லை).

[குசமசக்கு → கொசமசக்கி.]

கொசர் *košar*, பெ.(n.) ***குசர்*** பார்க்க; see *kušar*.

[குசர் → கொசர்.]

கொசலி *košali*, பெ.(n.) 1. ***குசலை*** பார்க்க; see *kušalai*. 2. கட்டட எழுதகவேலையின் மறுபெயர்; cornice work.

மறுவ. கொசவேலை.

[குசலை → கொசலி.]

கொசலை *košalai*, பெ.(n.) ***குசலை*** பார்க்க; see *kušalai*.

[குசலை → கொசலை.]

கொசவம் *košavam*, பெ.(n.) ***கொய்சகம்*** (கொ.வ.) பார்க்க; see *koysagam*.

[கொய்சகம் → கொசகம் → கொசவம்.]

கொசவம்பாளையம் *košavam-pāḷaiyam*, பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[குயவன் → கொசவன் + பாளையம்.]

கொசவேலை *koša-vēlai*, பெ.(n.) கட்டட எழுதக வேலை; cornice work.

[குசலை → கொசலை → கொச + வேலை.]

கொசாம் *košām*, பெ.(n.) ***கொய்சகம்*** பார்க்க; see *koy-šagam*.

[கொய்சகம் → கொசாம்.]

கொசான் *košāṉ*, பெ.(n.) ***கொய்சகம்*** பார்க்க; see *koyšagam*.

[கொய்சகம் → கொசான் (கொ.வ.)]

கொசிகம் *košigam*, பெ.(n.) ஆடை (அக.நி.); cloth.

[கோசிகம் → கொசிகம்.]

கொசு[1] *košu*, பெ.(n.) கச்சம் (வின்.); loose inner end or corner of a cloth brought between the legs and tucked in behind.

[கொதுகு → கொது → கொசு.]

கொசு[2] *košu*, பெ.(n.) 1.பெருங்கொதுகு; mosquito, gnat. 'கொசுக்கு அஞ்சி குடிபோகிறதா' (பழ.). 2. சிறுகொதுகு (கொ.வ.); eyefly which gathers in clusters on hanging threads.

மறுவ. கொதுகு, கொசுகு, கொசுகான்.

[கொத்து → கொத்துகு → கொதுகு → கொசுகு → கொசு.]

கொசுக்கட்டை *košu-k-kaṭṭai*, பெ.(n.) நுண்ணிச் சிறை என்னும் குருவி (யாழ்.அக.); a very small bird.

[கொசு + கட்டை.]

கொசுக்கடி *košu-k-kaḍi*, பெ.(n.) கொசுவினால் உண்டான கடி; mosquito bite (சா.அக.).

[கொசு + கடி.]

கொசுக்குடி *košu-k-kuḍi*, பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanada puram Dt.

[கோசு → கொசு + குடி.]

கொசுகம் *košugam*, பெ.(n.) ***கொய்சகம்*** பார்க்க; see *koyšagam*.

[கொய்சகம் → கொசுகம்.]

கொசுகாந்தேன் *košugāndēṉ,* பெ.(n.) ***கொசுத்தேன்*** (யாழ்ப்.) பார்க்க; see *košu-t-tēṉ.*

[கொதுகு → கொசுகு + ஆம் + தேன்.]

கொசுகு *košugu,* பெ.(n.) ***கொசு***[2] பார்க்க; see *košu.* *"எறிபுனல் சாம்பர் கரியுமி கொசுகு ஈ யென்புதீ மெய்திடம்" (காசிக. 40:17).*

[கொதுகு → கொசுகு.]

கொசுகுதலை *košugu-talai,* பெ.(n.) நெல்வகை (A.); a kind of paddy.

[கொசுகு + தலை.]

கொசுத்திராவகம் *košu-t-tirāvagam,* பெ.(n.) கொசுமுட்டையினின்று அணியமாகும் ஒருவகை நீர்மம்; a fluid, probably referring to a serum prepared from the eggs of mosquitoes (சா.அக.).

மறுவ. கொசுநீர்மம்.

[கொசு + திராவகம் (ஏரிநீர்).]

கொசுத்தேன் *košu-t-tēṉ,* பெ.(n.) சிறுகொசு வினங்கள் சேர்த்து வைக்குந் தேன் (வின்.); honey gathered and accumulated by eyeflies.

[கொசு + தேன்.]

கொசுத்தேனி *košu-t-tēṉi,* பெ.(n.) சிறு தேனீவகை (M.M. 870.); mosquito bee.

[கொசு + தேனீ.]

கொசுமிளகாய் *košu-milagāy* பெ.(n.) ஊசி மிளகாய்; bird-pepper

[கொசு + மிளகாய்.]

கொசுமூட்டம் *košu-mūṭṭam,* பெ.(n.) கொசுக் களைப் போக்குதற்கு மூட்டும் புகை (வின்.); smoke to drive off mosquitoes.

[கொசு + மூட்டம்]

கொசுமுட்டை *košu-muṭṭai,* பெ.(n.) கொசு இடும் முட்டை; egg of mosquitoes.

[கொசு + முட்டை.]

கொசுமெழுகு *košu-meḻugu,* கொசுத்தேனீக் கூட்டிலிருக்கும் மெழுகு; wax collected by mosquito bee (சா.அக.).

[கொசு + மெழுகு.]

கொசுவத்தி *košu-vatti,* பெ.(n.) கொசுக்களை விரட்டும் வேதிப்பொருள்களால் செய்யப்பட்ட சுருள்; mosquito coil; a coil that produces smoke to keep off mosquitoes.

[கொசு + வத்தி.]

கொசுவம் *košuvam,* பெ.(n.) ***கொய்சகம்*** (கொ.வ.) பார்க்க; see *koyšagam* (சா.அக.).

[கொய்சகம் → கொசுவம்.]

கொசுவலை *košu-valai,* பெ.(n.) கொசுவராமல் தடுக்கும் வலை; mosquito-net, mosquito-curtain.

ம. கொதுவேல.

[கொசு + வலை.]

கொசுவு-தல் *košuvu-,* 12 செ.குன்றாவி.(v.t.) ஆடையைக் கொய்து அடுக்கிச் செருகுதல் (கொ.வ.); to plait, gather into folds by using finger, as the end of a cloth when wearing. *எப்படிக் கொசுவ வேண்டுமென்று சொல்லித்தாருங்கள் (உ.வ.).*

கொசுவுதல்

[கொய்சு → கொசுவு.]

கொசுவுள்ளான் *košu-v-uḷḷāṉ,* பெ.(n.) சிறிய உள்ளான்வகை; small snipe. *"கொசுவுள்ளான் றன்கறியை" (பதார்த்த. 884).*



கொசுஉள்ளான்

[கொசு + உள்ளான்.]

கொஞ்சக்குலம் *koñja-k-kulam,* பெ.(n.) தாழ்ந்த குலம்; inferior caste. *"கொஞ்சக் குலமல்லவோ" (வள்ளி.கதை.Ms.).*

[கொஞ்சம் + குலம்.]

கொஞ்சங்கொஞ்சமாய் *koñjaṅ-koñjam-āy,* வி.எ.(adv.) சிறிது சிறிதாய் (கொ.வ.); little by little, by degrees.

தெ. கொஞ்செமு கொஞ்செமுகா.

[கொஞ்சம் + கொஞ்சம் + ஆய்.]

கொஞ்சத்தனம் *koñja-t-taṉam,* பெ.(n.) எளிமை; sorry plight, pitiable condition, meanness. *"கொஞ்சத் தனத்தை யறிந்து" (குற்றா.குற.112:1).*

[கஞ்சம் → கொஞ்சம் + தனம்.]

கொஞ்சநஞ்சம் *koñja-nañjam,* பெ.(n.) மிகச் சிறிதளவு; a little, very small quantity. கொஞ்ச நஞ்ச மிருந்ததையும் கொடுத்துவிட்டான் (உ.வ.).

[கொஞ்சம் + நஞ்சம்.]

கொஞ்சநேரம் *koñja-nēram,* பெ.(n.) சிறிது பொழுது; a short time (சா.அக.).

[கொஞ்சம் + நேரம்.]

கொஞ்சப்படு-த்தல் *koñja-p-paḍu-,* பெ.(n.) ***கொஞ்சப்படுத்து-தல்*** பார்க்க.see *koñja-p-paḍuttu.*

[கொஞ்சம் + படு-.]

கொஞ்சப்படுத்து-தல் *koñja-p-paḍuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. இழிவுபடுத்துதல்; to slight, disregard, treat with contempt. 2. குறை படுத்துதல்; decreasing.

[கொஞ்சம் + படுத்து-.]

கொஞ்சப்பேர் *koñja-p-pēr,* பெ.(n.) 1.புகழின்மை (யாழ்ப்.); ill-fame, bad reputation. 2. சிலர்; a few persons.

[கொஞ்சம் + பேர்.]

கொஞ்சப்பொழுது *koñja-p-poḻudu,* பெ.(n.) குறையாயுள்; short life (சா.அக.).

[கொஞ்சம் + பொழுது.]

கொஞ்சம்[1] *koñjam,* பெ.(n.) 1.சிறிது; little, small quantity. *"கொஞ்சந்தங் கின்பந்தந்து" (திருப்பு.609).* 2. சிறிய அளவு; a bit. *உணவில் கொஞ்சம் உப்பு அதிகமாகிவிட்டது.* 3. எளிமை; simplicity.

தெ. கொஞ்செமு, கொஞ்சயமு.

[குஞ்சு = சிறியது, பறவைக்குஞ்சு. குஞ்சு → குஞ்சி = சிறியது, பறவைக்குஞ்சி. குஞ்சிப்பெட்டி = சிறுபெட்டி. குஞ்சியப்பன் = சிற்றப்பன். குஞ்சு → குஞ்சன் = சிறியவன், குறளன். குஞ்சு → கொஞ்சு → கொஞ்சம் → கிஞ்சும் = சிறிது. கிஞ்சும் > கிஞ்சித் (வ.) (வ.மொ.வ.131).]

கொஞ்சம்[2] *koñjam,* பெ.(n.) அருள்கூர்ந்து; requesting a little co-operation; please. நான் தேர்வுக்குப் படிக்கவேண்டும்; கொஞ்சம் பேசாமல் இருக்கிறீர்களா? (உ.வ.).

[கொஞ்சு → கொஞ்சம்.]

கொஞ்சமாக்கு-தல் *koñjam-ākkudal,* 5 செ. குன்றாவி.(v.t.) குறைத்தல்; to decrease (சா.அக.).

[கொஞ்சம் + ஆக்கு-.]

கொஞ்சல் *koñjal,* பெ.(n.) 1. மழலைச்சொல் (திவா.); childish prattle. 2. இன்பந்தரு மினிய பேச்சு; amorous talk. *"வஞ்சிமீர் கொஞ்சும் வாயிதழே"* (தனிப்பா. இரண். 375.). 3. செல்லங் கொஞ்சுகை; fondling, caressing.

[கொஞ்சு → கொஞ்சல்.]

கொஞ்சவிலக்கம் *koñja-vilakkam,* பெ.(n.) சிறிதாக வரும் விடாய்ச் சூதகநீர் (M.L.); scanty menses.

[கொஞ்சம் + விலக்கம்.]

கொஞ்சன் *koñjaṉ,* பெ.(n.) இழிமகன்; mean person. *"வஞ்சன் கொஞ்சன்" (திருப்பு.609).*

[கொஞ்சம் → கொஞ்சன்.]

கொஞ்சி *koñji,* பெ.(n.) 1.காட்டுக்கொளுஞ்சி; opal orange. 2. சீமைக்கொளுஞ்சி; China-box. 3.பூவை மரம்; gum-lac tree.

மறுவ. கிஞ்ஞா, கொஞ்சி வஞ்சி.

[கொளுஞ்சி → கொஞ்சி.]

கொஞ்சு[1]**-தல்** *koñju-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1.மழலை பேசுதல்; to lisp, to prattle, as children. *"கொஞ்சிய வுன்சொற் கேட்டு" (உத்தரரா. சம்புவ.21).* 2. இன்பமாய்ப் பேசுதல்; to talk softly or amorously, as young women. 3. செல்லங்கொஞ்சுதல்; to fondle, caress. 4. முத்தமிடுதல் (யாழ்ப்.); to kiss. 5. இனிதாய் ஒலித்தல்; to sound sweetly. *"செம்மணி வெயில்வரு சிலம்பு கொஞ்சவே" (பாரத. அருச்சுனன்றவ. 148).*

ம. கொஞ்சுக; **க.** கொச்சு; **து.** கொச்சுனி.

Fin. keha (to praise, to talk); **Est.** kehelda; **Hung.** kegy; **Jap.** kuchia; **Q.** quichua, keshua.

[குஞ்சு → கொஞ்சு.]

கொஞ்சு[2] *konju,* பெ.(n.) மீன்வகையுளொன்று; a kind of fish.

ம. கொஞ்சு.

[குஞ்சு → கொஞ்சு.]

கொஞ்சுகிளி *konju-kili,* பெ.(n.) குதலை பேசுங் கிளி; lisping parrot.

[கொஞ்சு + கிளி.]

கொஞ்சுகுதிரை *konju-kudirai,* பெ.(n.) மென்னடையுள்ள குதிரை; horse whose pace is easy.

[கொஞ்சு + குதிரை.]

கொஞ்சுநடை *konju-nadai,* பெ.(n.) மெதுவான நடை (வின்.); easy pace.

[கொஞ்சு + நடை.]

கொட்கு—தல் *kotku-,* 5 செ.கு.வி.(v.i.) 1.சுழலுதல்; to whirl round. *"வளிவலங் கொட்கு மாதிரம்" (மணிமே. 12:91).* 2.சூழவருதல்; to move in an orbit, revolve. "காலுண வாகச் சுடரொடு கொட்கும்" (புறநா.43). 3.திரிதல்; to roam, wander. *"கொடும்புலி கொட்கும் வழி" (சிறுபஞ்.80).* 4.வெளிப்படுதல்; to be revealed, to come to view. *"கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை" (குறள்.663).*

[கொள் → கொட்கு.]

கொட்டக்கச்சி *kotta-k- kacci,* பெ.(n.) ***கொட்டங்கச்சி*** பார்க்க; see *kottān-kacci.*

மறுவ. கொட்டாங்கச்சி, கொட்டாஞ்சி.

[கொட்டான் + காய் + சில் – கொட்டாங்காய்ச்சில் → கொட்டாங்கச்சி → கொட்டக்கச்சி.]

கொட்டக்கவிச்சிவிளை *kotta-k-kavicci-vilai,* பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[கொட்டம் + கவிச்சி + விளை.]

கொட்டக்காரன்[1] *kottakkāran,* பெ.(n.) 1. திப்பிலி; long pepper. 2. தீய கண்ணுடையோன்; one who has evil eyes.

[கொட்டம் + காரன்.]

கொட்டக்காரன்[2] *kotta-k-karan,* பெ.(n.) 1. அடாபிடிக்காரன் (வின்.); mischievous person. 2. காரல் மீன்வகை; a kind of fish.

[கொட்டம் (திமிர்) + காரன்.]

கொட்டக்காவல் *kotta-k- kāval,* பெ.(n.) சிற்றூரொன்றின் பெயர்; a name of a village.

[கொட்டம் + காவல்.]

கொட்டக்குடி *kotta-k-kudi,* பெ.(n.) தேனி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Theni Dt.

[கொட்டன் + குடி.]

கொட்டக்குடிகீழ்ப்பாத்தி *kotta-k-kudi-kilppātti,* பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Sivagangai Dt.

[கொட்டன் + குடி + கீழ்ப்பாத்தி.]

கொட்டகச்சி *kotta-kacci,* பெ.(n.) 1. சிரட்டை (யாழ்.அக.); coconut shell. 2. ***கொட்டாங் காய்ச்சில்*** பார்க்க; see *kottān-kāyccil.*

மறுவ. கொட்டாங்கச்சி, கொட்டாஞ்சி, கொட்டாங் காய்ச்சி.

[கொட்டான் (வித்து) + காய் + சில் – கொட்டாங்காய்ச்சில் → கொட்டாங்கச்சி → கொட்டகச்சி (கொ.வ.).]

கொட்டகம்[1] *kottagam,* பெ.(n.) ***கொட்டகை*** (வின்.) பார்க்க; see *kottagai.*

மறுவ. கொட்டாய்.

[கொள் → கொட்டு → கொட்டகம்.]

கொட்டகம்[2] *kottagam,* பெ.(n.) சிற்றில்; house, built by children. ஊரில், பெண்களாய்க் கொட்டகமெடுத்து விளையாடித் திரிகிறவர்களுடைய (திவ்.பெரியாழ். 1,29, வியா. ப.48).

[கொட்டில் → கொட்டகம்.]

கொட்டகாரம்[1] *kottagāram,* பெ.(n.) நெல்முதலிய பண்டம் வைக்கும் அறை; store-room; granary. *"நெற்கூட்டி னிரைசெறிந்த புரிபலவா நிலைக் கொட்ட காரத்தில்" (பெரியபு.இடங்கழி.7).*

[கொட்டகம் → கொட்டகாரம்.]

கொட்டகாரம்[2] *kottagāram,* பெ.(n.) 1. அரண்மனை இல்லாத ஊரில் மன்னர் தங்கும் மண்டபம்; building with a large hall where the king takes rest. 2. நெற்களஞ்சியம், சரக்கறை; a granaray, a store house.

ம. கொட்டகாரம்.

[கொட்டகம் → கொட்டகாரம்.]

கொட்டகை *kottagai,* பெ.(n.) 1. பந்தல்வகை; shed with sloping roofs. 2. ஆநிரைக் கொட்டில்; cow-shed. 3. திருமணப்பந்தல்; marriage pandal. "*கொட்டகைத் தூண்போற் காலிலங்க*" (*குற்றா.குற.84.4*).

மறுவ. கொட்டாய்.

ம. கொட்டக, கொட்ட; **க.** கொட்டகெ, கொடிகெ, கொட்டிகெ; **தெ.** கொட்டுமு; **ப.** கொட்டகெ.

[கொட்டு → கொட்டம் = வட்டமான தொழு, நூற்குங் கொட்டை. கொட்டு → கொட்டகை = சாய்ப்புப்பந்தல் (வ.மொ.வ.6).]

கொட்டங்கச்சி *kottankacci,* பெ.(n.) தேங்காய் ஒடு; empty shell of a coconut.

[கொட்டாங்கச்சி → கொட்டங்கச்சி.]

கொட்டங்கரை *kottankarai,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கொட்டன் + கரை.]

கொட்டங்காய் *kottangay,* பெ.(n.) தேங்காய் (மூ.அக.); coconut.

[கொட்டை (நெற்று) + காய்.]

கொட்டங்காய்ச்சி *kottan-kaycci,* பெ.(n.) தேங்காய் ஓட்டின் ஒருபகுதி; portion of a coconut shell.

ம. கோட்டாங்கச்சி.

[கொட்டான் (நெற்று, கொட்டை) + காய் + சில் – கொட்டான்காய்ச்சில் → கொட்டாங்காய்ச்சி (கொ.வ.).]

கொட்டங்கைச்சி *kottan-kaicci,* பெ.(n.) ***கொட்டாங்காய்ச்சி*** பார்க்க; see *kottan-kayccі.*

[கொட்டான் + காய் + சி – கொட்டான்காய்ச்சி → கொட்டாங்காய்ச்சி → கொட்டாங்கச்சி.]

கொட்டச்சேடு *kotta-c-cedu,* பெ.(n.) சேலம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Salem Dt.

[கொட்டன் + தோடு (சிற்றோடை) – கொட்டத்தோடு → கொட்டச்சேடு (கொ.வ.).]

கொட்டடி[1]–த்தல் *kottadi-,* 4 செ.குன்றாவி. (v.t.) மத்தளம் போன்றவற்றை அடித்தல்; to beat the drum.

[கொட்டு + அடி-.]

கொட்டடி[2]–த்தல் *kottadi-,* 4 செ.கு.வி. (v.i.) மறைபொருளை ஊரறியப் பரப்புதல்; to spread a secret. இதைப்போய்க் கொட்டடிக்கலாமா?

[கொட்டு + அடி-.]

கொட்டடி[3] *kottadi,* பெ.(n.) 1.சமையல் முதலிய வற்றிற்கு உதவும் அறை; room, as kitchen, store-room. 2. மாட்டுக்கொட்டில்; cattle-shed. 3.சிறைச் சாலை அறை; prisoner's cell. 4. நெல் கொட்டி விற்குமிடம்; paddy selling place, shed.

[கொட்டில் + அடி – கொட்டிலடி → கொட்டடி.]

O.E., E. cote; **AS.** cot, cote, cyte; **Du.** kot; **Ice.** kot, **Gr.** koth; **Wel.** cuet.

கொட்டடி[4] *kottadi,* பெ.(n.) பூவேலைப்பாடுகள் அச்சிடப்பட்ட சேலைவகை; a variety of printed sarees.

[கொட்டு + அடி – கொட்டடி + சேலை.]

சதுர அமைப்பில் கோட்டுக் கட்டங்கள் உள்ள புடவை கொட்டடிச்சேலை எனப்பட்டது.

கொட்டடியாசாமி *kottadi-y-asami,* பெ.(n.) கரடிக்கூடத்தில் பயின்ற வல்லாளன் (இ.வ.); gymnast, athlete trained in the Muhammadan methods of bodily exercise, as practiced in a *karadikkudam.*

[கொட்டடி + ஆசாமி.]

கொட்டடியாத்தூர் *kottadi-y-attur,* பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Sivagangai Dt.

[கொட்டடி+ (ஆற்றூர்) ஆத்தூர் – கொட்டியாத்தூர்.]

கொட்டடைப்பன் *kottadaippan,* பெ.(n.) மாட்டுநோய் வகை (பெரியமாட்.62); a disease of cattle.

[கொட்டு + அடைப்பன்.]

கொட்டணக்காரி *kottana-k-kari,* பெ.(n.) கூலிக்கு நெற்குத்துபவள் (இ.வ.); woman who lives by rice-pounding.

ம. கொட்டணக்காரி.

[கொட்டு (குத்து) → கொட்டணம் + காரி.]

கொட்டணச்சோறு *kottana-c-coru,* பெ.(n.) தவிடு நீங்காத அரிசிச் சோறு; rice prepared from unbranned rice.

ம. கொட்டணச் சோறு.

[கொட்டணம் + சோறு.]

கொட்டணம் *kottanam,* பெ.(n.) 1. தவிடுநீங்காத அரிசி; unbranned rice. 2. தவிடு நீங்காத அரிசிச் சோறு; cooked unbranned rice. 3. தவிடு

சேதப்படாமல் நெற்குத்துகை; pounding or husking paddy, husking in such a manner as the bran is not lost.. 4.பஞ்சு கொட்டுகை (இ.வ.); carding.

ம. கொட்டணம்; **க.** கொட்டண; **தெ.** கொட்டணமு; **குரு.** கொட்னா; **மா.** க்வொடெ; **Pali.** *kottana.*

[கொட்டு + அணம். கொட்டுதல் = இடித்தல், குத்துதல். அணம் = சொல்லாக்க ஈறு.]

கொட்டணை *kottaṇai,* பெ.(n.) சதுப்புநிலத்தில் வளரும் ஒருவகைப் பூடு (வின்.); a herb growing in marshy places.

மறுவ. கொட்டணைக்காய்.

[கொட்டு + அணம் → அணை.]

கொட்டத்திரட்சி *kotta-t-tiratci,* பெ.(n.) திராய் மலை; mountain containing impure zinc or sphelter (சா.அக.).

[கொட்டம் + திரட்சி.]

கொட்டம்[1] *kottam,* பெ.(n.) 1.இறுமாப்பு; superciliousness, arrogance. *"வேடர் கொட்டம தடங்க"* (தாயு.சிற்சு.4). 2.குறும்பு; mischievousness. கொட்டக்காரன் (உ.வ.) 3.கடுகடுப்பு (இ.வ.); petulance. 4.முழக்கம்; roaring, trumpeting. *"கொட்ட மிடுங்கெசம்"* (இராமநா.பாலகா.18). 5.பொல்லாங்கு; evil, vice, evilness. 6. நீர் முதலியன ஒழுகுகை; flowing, pouring. *"கொடுங்காற் குண்டிகைக் கொட்டம் ஏய்ப்ப"* (பெருங். உஞ்சைக் 43:130).

[குல் → குலவு. குலவுதல் = வளைதல். குல → குள் → குளம் = வளைந்த நெற்றி, வெல்ல வுருண்டை. குல் → குர் → குரங்கு. குரங்குதல் = வளைதல். குல் → குன் → குனி. குனிதல் = வளைதல், உடம்பு வளைதல். குல் → குள் → கொள் = வளைந்த காயுள்ள பயற்றுவகை, சாய்த்து உள்ளீட்டை வீழ்த்துதல். கொட்டு → கொட்டம் = வட்டமான தொழு, நூற்குங் கொட்டை (வே.க.164).]

கொட்டம்[2] *kottam,* பெ.(n.) 1. மாட்டுத்தொழுவம்; cattle-shed; எருது நினைத்தவிடத்திற் கொட்டங் கட்டுவார்களா? 2. மூங்கிற் கொட்டு; cattle shed of bamboo.

ம. கொட்ட; **குட.** கொட்டி.

Skt. gōstha

[கொள் → கொட்டு → கொட்டம்.]

கொட்டம்[3] *kottam,* பெ.(n.) ஒருவகை நறுமணப் பொருள்; costus root. *"கொட்டமே கமழும்... மொய்குழல்"* (சீவக. 2575).

ம. கொட்டம்.

[கோட்டம் → கொட்டம்.]

கொட்டம்[4] *kottam,* பெ.(n.) மாடுகளுக்கு மருந்து, நீர் முதலியன கொடுக்கும் மூங்கிற் குழாய் (இ.வ.); a hollow piece of bamboo for orally administering medicine, water etc. to cattle.

மறுவ. கத்துக்குழாய்.

ம. கொட்டமு, **க.** கொட்ட, தொட்ட;**தெ.** தொட்டமு.

[கொள் → கொடு → கொட்டம்.]

கொட்டம்[5] *kottam,* பெ.(n.) சிறிய ஓலைப் பெட்டி; small ōla basket. *"கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவும்"* (சிறுபாண்.166).

ம. கொட்டம்.

[கொட்டம் → கோட்டம்.]

கொட்டம்[6] *kottam,* பெ.(n.) வீடு; house. *"ஒரு கொட்டம் ஒழிச்சுக் குடுத்துருங்கோ"* (எங்களூர்.47).

[கொட்புல் → கொட்டம்.]

கொட்டமடக்கி *kottam-adakki-,* பெ.(n.) குதிரைப் படையை எதிர்கொண்டடக்கியவர்; *"வைகை வளநடையின் கொட்ட மடக்கி"* (சேது.செப்.1-12).

[கொட்டம் + அடக்கி.]

கொட்டமடி-த்தல் *kottam-adi-,* 4 செ.கு.வி.(v.i.) மனம்போனபடி குறும்புசெய்தல்; to be mischievous or turbulent, as an unruly boy.

[கொட்டம் + அடி-.]

கொட்டமலழகி *kottamalalagi,* பெ.(n.) **ஆவிரை** பார்க்க; see *āvirai.*

[கோட்டு + அழல் + அழகி.]

கொட்டமுடிச்சு *kotta-mudiccu,* பெ.(n.) வடமுடிச்சு; knot at the end of a rope.

[கோடு → கொட்டம் + முடிச்சு.]

கொட்டமுத்துப்போடு-தல் *kotta-muttu-pōdu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. எதிரியை அழித்தல்; (எதிரி கோட்டையை அழித்து ஆமணக்கு முத்து விதைத்தல்) to ruin the fort of the enemy and sow the useless seeds. நாம் இருக்கிற நிலையறிச்சில்லே பய கொட்டமுத்து போடுவின் (நெல்லை). 2. பெரியம்மை நோய்காணுதல்; to be affected with small pox.

[கொட்டை + முத்து + போடு-.]

கொட்டமேடு *kotta-mēdu-,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kāñjipuram Dt.

[கொட்டன் + மேடு.]

கொட்டரை *kottarai,* பெ.(n.) பெரம்பலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Perambalur Dt.

[கொட்டன் + (தலை) தரை – கொட்டந்தரை → கொட்டரை.]

கொட்டல் *kottal,* பெ.(n.) 1. கொட்டுதல்; stinging as of scorpion. 2. கைதட்டல்; clapping hands. 3. அடித்தல்; to hammer, beat. 4. அப்புதல்; to stick, clap as with the hand (சா.அக.).

[கொட்டு + அல்.]

கொட்டவாக்கம் *kotta-vākkam,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kāñjipuram Dt.

[கொட்டம் + (பாக்கம்) வாக்கம் – கொட்டவாக்கம்.]

கொட்டவாடி *kotta-vādi,* பெ.(n.) சேலம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Salem Dt.

[கொட்டம் + (பாடி) வாடி.]

கொட்டவாயன் *kotta-vāyaṉ,* பெ.(n.) ஒரு கடல் மீன் வகை; a kind of sea fish.

[கொட்டம் + வாயன்.]

கொட்டவி *kottavi,* பெ.(n.) உடலில் ஆடையில்லாப் பெண்; a naked woman (சா.அக.).

[கட்டவிழி → கொட்டவி.]

கொட்டவிடல் *kotta-vidal,* பெ.(n.) தேன்குளவி போன்றவற்றை விட்டுப் பல தடவையும் கொட்டும்படி செய்தல்; the flogging of a part with repeated stings of a scorpion or wasp (சா.அக.).

[கொட்டம் + விடல்.]

கொட்டறை *kottarai,* பெ.(n.) ***கொட்டடி*** (வின்.) பார்க்க; see *kottadi.*

ம. கொட்டற.

Mar. kotthāra; **U.** kōtari.

[கொட்டு + அறை.]

கொட்டன் *kottaṉ,* பெ.(n.) 1. கொட்டாப்புளி (யாழ்ப்.); mallet. 2. பருத்த–வன்–வள்–து; fat man or woman or animal. 3. நெற்கள முதலியவற்றிற் பயன்படுத்தும் தேங்காய்; coconut, as used at the threshing-floor.

[கொட்டு → கொட்டன்.]

கொட்டன்கட்டை *kottaṉ-kattai,* பெ.(n.) கொட்டாப்புளி (யாழ்ப்.); mallet.

[கொட்டன் + கட்டை.]

கொட்டன்பொல்லு *kottaṉ-pollu,* பெ.(n.) குறும்பொல்லு, பருத்தியில் கொட்டை நீக்குவதற்காக அடிக்கப் பயன்படும் கோல்; a stick, a cane.

[கொட்டான் = வித்து நீக்காத பருத்தி. பொல்லு = சிறுகோல். கொட்டான் + பொல்லு.]

கொட்டாக்குளம் *kottā-k-kulam,* பெ.(n.) திருநெல்வேலி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tirunelvēli Dt.

[கொட்டன் + குளம் – கொட்டன்குளம் → கொட்டாக்குளம்]

கொட்டாகை *kottā-kai,* பெ.(n.) கொட்டில் (யாழ்.அக.); shed.

[கொட்டதை → கொட்டாகை.]

கொட்டாங்கச்சி *kottāṅ-kacci,* பெ.(n.) 1. தேங்காய் ஓட்டின் ஒரு பகுதி; portion of a part of coconut shell. 2. ***கொட்டம்***[1] பார்க்க; see *kottam.*

ம. கோட்டாங்கச்சி.

[கொட்டான் + காய் + சில்.]

கொட்டாங்கச்சித்தாட்டுப்பத்திரி *kottāṅ-kacci-t-tāttu-p-pattiri,* பெ.(n.) சேலைவகை; a kind of saree.

[கொட்டாங்கச்சி + தாட்டு + பத்திரி.]

கொட்டாங்கரந்தை *kottāṅ-karandai,* பெ.(n.) ***கொட்டைக்கரந்தை*** (யாழ்.அக.) பார்க்க; see *kottai-k-karandai.*

[கொட்டை → கொட்டா + கரந்தை.]

கொட்டாங்காய்ச்சில் *kottāṅ-kāy-c-cil,* பெ.(n.) தேங்காய் ஓடு; coconut shell.

[கொட்டான் + காய் + சில் (ஓடு).]

கொட்டாங்குழல் *kottāṅ-kulal,* பெ.(n.) கொருக் கலப்பையில் விதைபோடும் பகுதியில் முப்பிரிவாகச் செல்லும் குழாய்; sowing three way implement attached to the plough.

[கோடு → கோட்டம் → கொட்டம் + குழல்.]

கொட்டாங்கோரை *kottāṅ-kōrai,* பெ.(n.) கோரைவகை; a kind of sedge.

[கொட்டான் + கோரை.]

கொட்டாங்கோரை

கொட்டாஞ்சி *koṭṭāñji*, பெ.(n.) 1. ஒருவகைப் பழம்; a kind of fruit. 2.தேங்காய் ஓடு; coconut shell (சா.அக.).

[கொட்டு → கொட்டாஞ்சி.]

கொட்டாட்டு[1] *koṭṭāṭṭu*, பெ.(n.) மத்தளத்தின் தாள இன்னோசைக்கேற்ப ஆடும் ஆட்டம்; dance performed according to beat of mattaḷam.

[கொட்டு + ஆட்டு.]

கொட்டாட்டு[2] *koṭṭāṭṭu*, பெ.(n.) ஊர்ப்பறை அல்லது போர்ப்பறையின் முழக்கோசைக்கேற்ப ஆடும் ஆட்டம்; dance performed according to the beat of local drum or war drum.

[கொட்டு + ஆட்டு.]

கொட்டாட்டுப்பாட்டு *koṭṭāṭṭu-p-pāṭṭu*, பெ.(n.) கொட்டுமுழக்கோடு பாடும் பாட்டு; a dance with music and drums.

[கொட்டு + ஆட்டு + பாட்டு.]

கொட்டாணிமறவன் *koṭṭāṇi-maṟavaṉ*, பெ.(n.) மறவருள் ஓர் இனத்தார்; (E.T.); a subsect of *Maṟavās*.

[கொட்டாணி + மறவன்.]

கொட்டாத்திருக்கை *koṭṭā-t-tirukkai*, பெ.(n.) வலிய பற்களைக் கொண்ட திருக்கை மீன்வகை; sting ray.

[கொட்டா + திருக்கை.]

கொட்டாநத்தம் *koṭṭā-nattam*, பெ.(n.) திண்டுக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dindukkal Dt.

[கொட்டான் + நத்தம்.]

கொட்டாப்பி-த்தல் *koṭṭāppi-*, 4 செ.குன்றாவி. (v.t.) மக்கள் அல்லது விலங்குகள் உண்ணுதல் (யாழ்ப்.); to eat, as men or beasts.

[கொட்டு + ஆப்பு - கொட்டாப்பு (விழுங்குதல்) → கொட்டாப்பி.]

கொட்டாப்பிடி *koṭṭā-p-piḍi*, பெ.(n.) ***கொட்டாப் புளி*** பார்க்க; see *koṭṭā-p-puḷi*.

[கொட்டாப்பு + உளி - கொட்டாப்புளி → கொட்டாப்பிடி (கொ.வ.).]

கொட்டாப்பு *kōṭṭāppu*, பெ.(n.) 1. கொட்டுதல், அடித்தல்; to beat. 2. இடித்துக்கெட்டிப்படுத்துதல்; solidification of loose soil of the ground floor in construction. தரைத்தளத்தில் கொட்டாப்பு வேலை நடக்கிறது (உ.வ.).

[கொட்டு + ஆப்பு (சொல்லாக்க ஈறு).]

கொட்டாப்புளி *koṭṭā-p-puḷi*, பெ.(n.) உளிமேல் அடிக்கும் கருவி; beater, wooden mallet.

[கொட்டாப்பு + உளி.]

கொட்டாப்பெட்டி *koṭṭā-p-peṭṭi*, பெ.(n.) ***கொட்டைப்பெட்டி*** பார்க்க; see *koṭṭai-p-peṭṭi*.

[கொட்டைப்பெட்டி → கொட்டாப்பெட்டி.]

கொட்டாபி-த்தல் *koṭṭāpi-*, 4 செ.குன்றாவி.(v.t.) உண்ணுதல்; to eat.

[கொட்டாவி → கொட்டாபி.]

கொட்டாம்பட்டி *koṭṭām-paṭṭi*, பெ.(n.) மதுரை மாவட்டத்திலுள்ள பறம்புமலையைப் பின்னணியாகக் கொண்டு பாலாற்றுக்கருகே அமைந்த ஓர் ஊர்; a village situated at the foot of the Parambu hill and near Pālāṟu river in Madurai Dt.

[கொட்டம் + பட்டி - கொட்டம்பட்டி → கொட்டாம்பட்டி]

கொட்டாமட்டை *koṭṭā-maṭṭai*, பெ.(n.) ஓலையை இளைதாயிருக்கும் பொழுது வெட்டிவிடுவதால், நார் நிரம்பி இறுகியிருக்கும் பனைமட்டையின் அடிப்பகுதி (யாழ்ப்.); stem of a palmyra leaf grown fibrous and tough from the leaf being cut off when young.

[கொட்டு + ஆம் + மட்டை.]

கொட்டாமத்தகி *koṭṭā-mattagi*, பெ.(n.) மருளூமத்தை; burr-weed (சா.அக.).

[கொட்டை + (ஊமத்தை) ஊமத்தகி.]

கொட்டாய் *koṭṭāy*, பெ.(n.) ***கொட்டகை*** பார்க்க; see *koṭṭagai*.

கொட்டாரப்புலி *koṭṭāra-p-puli*, பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Sivagangai Dt.

[கொட்டாரம் + புலி.]

கொட்டாரம்[1] *koṭṭāram*, பெ.(n.) 1.தவசக் களஞ்சியம்; granary. *"படைக்கலக் கொட்டிலும்*



கொட்டாரம்

புடைக்கொட் டாரமும்" (பெருங்.மகத.14:19). 2. நெல் முதலிய தவசம் குத்துமிடம்; place where paddy or other grains are husked. 3. யானைக்கூடம் (இ.வ.); elephant stall. 4.அரண்மனை (இ.வ.); palace. 5.அரண்மனை முதலியவற்றின் தலை வாயில் (வின்.); principal entrance of a palace etc., porch. 6. கோபுரவாயில்; entrance of a temple. 7. உப்புக் கொட்டி வைக்குமிடம்; salt depot. 8. தீவனப் படைப்பு, களம், குப்பைக்குழி இவை ஒருசேர அமைந்த இடம்; a place around threshing floor.

ம. கொட்டாரம், கோட்டகாரம்.

Skt. *kōsthāgāra.*

[கொட்டகாரம் → கொட்டாரம்.]

கொட்டாரம்[2] *koṭṭāram,* பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[கொட்டம் → கொட்டாரம்.]

கொட்டாவி *koṭṭāvi,* பெ.(n.) மயக்கம், களைப்பு ஆகியவற்றின் காரணமாக வாயைத் திறந்து உள்ளிழுத்து வெளிவரும் காற்று (திவ்.பெரியாழ். 1:4:6); yawning. கொட்டாவி கொள்கின்றான்.

ம. கொட்டாவி, கோட்டாவி.

[கொட்டு + ஆவி]

கொட்டாவிக்கால் *koṭṭāvi-k-kāl,* பெ.(n.) கொட்டாவியை எழுப்பும் தேவதத்தன் என்னும் பத்துவகைக் காற்றிலொன்று; one of the ten vital airs, which is exhaled in yawning (சா.அக.).

[கொட்டாவி + கால் (காற்று).]

கொட்டாவிச்சுரம் *koṭṭāvi-c-curam,* பெ.(n.) கொட்டாவி முதலியவற்றோடு கூடிய சுரநோய் வகை (சீவரட்.48.); a fever attended with yawning and hiccoughing.

[கொட்டாவி + சுரம்]

கொட்டாவிப்பித்தம் *koṭṭāvi-p-pittam,* பெ.(n.) ஒருவகைப் பித்தநோய்; a kind of bilious disease marked by frequent yawning (சா.அக.).

[கொட்டாவி + பித்தம்.]

கொட்டாவிவிட்டிறுக்கி *koṭṭāvi-viṭṭiṟukki,* பெ.(n.) ***நாயுருவி*** (மலை.) பார்க்க; see *nāyuruvi* a plant growing in hedges and thickets.

[கொட்டாவி + விட்டு + இறுக்கி.]

கொட்டாவிவிடு-தல் *koṭṭāvi-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. மயக்கம், களைப்பு ஆகியவற்றின் காரணமாக வாயைத் திறந்து காற்றை உள்ளிழுக்கும் நெட்டுயிர்ப்பு; yawning. 2. இறத்தல் (கொ.வ.); to die, suffer the last gasp, used in jest. 3. களைத்துப்போதல் (இ.வ.); to be fatigued or exhausted, as by work.

[கொட்டாவி + விடு-.]

கொட்டாறா *koṭṭāṟā,* பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish.

[கொட்டு + ஆறா.]

கொட்டாறு *koṭṭāṟu,* பெ.(n.) உப்பளம் (W.G.); salt pan.

[கொட்டு + ஆறு]

கொட்டான்[1] *koṭṭāṉ,* பெ.(n.) கொட்டை நீக்காத பருத்தி; cotton with seed. கொட்டான் பத்துப் பொதி ஆயிற்று (நெல்லை.). கொல்லன் கொடுத்த கதிர் இருக்கு, கொட்டான் விளையக் காடிருக்கு நூறுவயசு வரை நூற்றுப் பிழைச்சுக்கம்மா (நாட்டுப்பா.)

த. கொட்டான் > E. cotton.

[கொட்டை → கொட்டான் (கொட்டையுள்ள பகுதி).]

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் கொட்டையோடு உள்ள பருத்தியை ஏற்றுமதி செய்தனர். இப் பருத்தி கொட்டான் எனப்பட்டது. இதுவே ஆங்கிலத்தில் cotton ஆயிற்று.

கொட்டான்[2] *koṭṭāṉ,* பெ.(n.) ***கொட்டன்***[1] (யாழ்ப்.) பார்க்க; see *koṭṭaṉ*(f.).

Gk. kampsa.

[கொட்டன் → கொட்டான்.]

கொட்டான்[3] *koṭṭāṉ,* பெ.(n.) சிறிய ஓலைப்பெட்டி; small ōlā basket.

[குட்டான் → கொட்டான்.]

கொட்டான்[4] *koṭṭāṉ,* பெ.(n.) 1. கொட்டை நீக்காத பஞ்சு; cotton crop with seed. 2. நூற்பதற்கு அணியம் செய்த பஞ்சு; spining cotton.

[கொட்டை → கொட்டான்.]

த. கொட்டான் > E. cotton.

கொட்டி[1] *koṭṭi,* பெ.(n.) நீர்க்கொடிவகை; an aquatic plant. *"கொட்டியு மாம்பலு நெய்தலும்" (வாக்குண். 17).* ஒருவகைக் கிழங்கு; a kind of root.

ம. கொட்டி.

[கொட்டு → கொட்டி.]

கொட்டி[2] *kotti* பெ.(n.) ***கொடுகொட்டி*** பார்க்க (சிலப்.3.14, உரை); see *kodu-kotti*. 2. தாளம் (இசை.); time measure. *"கொட்டி யளந்தமையாப் பாடலும்" (திரிகடு.57).*

ம. கொட்டி.

[கொட்டு → கொட்டி (பறைகொட்டி ஆடும் ஆட்டம்).]

கொட்டி[3] *kotti* பெ.(n.) 1. கோபுரவாயில்; tower gate in temple. 2.வாயில் (அக.நி.); gate.

ம. கொட்டி, **Skt.** kōttāra.

[கொட்டில் → கொட்டி.]

கொட்டி[4] *kotti* பெ.(n.) கூட்டம் (அக.நி.); assembly, gathering.

[கோட்டி → கொட்டி.]

கொட்டி[5] *kotti* பெ.(n.) செம்புகொட்டி; a tinker.

ம. கொட்டவன்.

[கொட்டு → கொட்டி.]

கொட்டி[6] *kotti* பெ.(n.) 1. முரசு அறைபவன்; a drummer. 2. சுத்தி; a hammers.

ம. கொட்டி.

[கொட்டு → கொட்டி.]

கொட்டி[7] *kotti* பெ.(n.) மலடி; barrien woman.

மறுவ. கொட்டு.

க.,தெ. கொட்டி.

[கொட்டி = கொட்டி என்னும் நீர்க்கொடி. இது காய்த்துக் கனிதராதது போன்று பிள்ளைப்பேறு வாய்க்காத பெண்ணும் கொட்டி எனப்பட்டாள்.]

கொட்டிக்காகம் *kotti-k-kāgam,* பெ.(n.) கழி முகத்தில் பறந்தலைந்து மீனை உணவாகக் கொள்ளும் ஒருவகைக் காகம்; a kind of crow, inhabitant of lagoons, which takes fish as food.

[கொட்டி + காகம்.]

கொட்டிக்கொடு-த்தல் *kotti-k-kodu-,* 4 செ. குன்றாவி.(v.t.) 1.அதிகமாகக் கொடுத்தல்; to give liberally. 2. அடிக்கடி கண்டித்தல் (இ.வ.); to check or rebuke constantly.

[கொட்டி + கொடு-.]

கொட்டிக்கொள்(ளு)-தல் *kotti-k-kol(l)u-,* 16 செ.குன்றாவி.(v.t.) 1.நிரம்ப உண்ணுதல்; to gulp down in large quantities. 2. மேற்போட்டுக் கொள்ளுதல்; to take the responsibility of; to draw down upon oneself, as the consequence of an act. என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதே (உ.வ.).

[கொட்டி + கொள்(ளு)-.]

கொட்டிக்கொள்ளல் *kotti-k-kollal,* பெ.(n.) 1. தகடா யடித்தல்; beating into a sheet. 2. உண்ணுதல்; eating (சா.அக.).

[கொட்டி + கொள்ளல்.]

கொட்டிக்கோரை *kotti-k-kōrai,* பெ.(n.) ஒரு வகைக் கோரை; a kind of sedge - grass.

மறுவ. கொட்டாங்கோரை.

[கொட்டி + கோரை.]

கொட்டிச்சாந்து *kotti-c-cāndu,* பெ.(n.) ஒரு கடைப்பொருள்; a bazaar drug (சா.அக.).

[கொட்டி + சாந்து.]

கொட்டிச்சேதம் *kotti-c-cēdam,* பெ(n.) ***கொடு கொட்டி*** பார்க்க; see *kodu-kotti.* *"இமையவ னாடிய கொட்டிச் சேதம்" (சிலப்.28:75).*

மறுவ. கொடுகொட்டு.

ம. கொட்டிச்சேதம்.

[கொட்டி + சேதம்.]

கொட்டிச்சேதம் என்பது கொடு கொட்டி ஆடலின் மறுபெயர். சேதம் என்பது விலக்குறுப்புகள் பதினான்கனுள் ஒன்று. ஆரியம் தமிழ் எனச் சேதம் இருவகைப்படும்.

ஆரியம் தமிழெனுச் சீர்நட மிரண்டினும்
ஆதிக் கதையை யவற்றிற் கொப்பச்
சேதித் திடுவது சேதமென்றாகும்
(சிலப்.3:13 உரை).

கொட்டிட்டை *kottittai,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் கருவிலி என்னும் பாடல்பெற்ற இடத்திலுள்ள சிவன்கோயில்; the shrine of Šiva in Karuvili in Tanjāvūr Dt. *"கருவிலிக் கொட் டிட்டை யுறைவான் கழல் கூடுமே" (தேவா. 602:1).*

[கொட்டில்→ கொட்டி + இட்டிடை கொட்டியிட்டிடை → கொட்டிட்டை.]

கொட்டித்தலை-த்தல் *kotti-t-talai-,* 5 செ. குன்றாவி.(v.t.) சிதறடித்தல்; to scatter, disperse.

[கொட்டி + தலை-.]

கொட்டிப்பேசு–தல் *koṭṭi-p-pēsu-,* 5 செ.குன்றாவி. (v.t.) குத்திப்பேசுதல் (இ.வ.); to sting with cutting remarks.

[கொட்டு + பேசு-.]

கொட்டிமத்தளம் *koṭṭi-mattaḷam,* பெ.(n.) பெரிய மத்தளம்; big drum. *"கொட்டி மத்தளம் வாசிப்பான்" (S.I.I.II.254).*

[கொட்டி + மத்தளம்.]

கொட்டிமம் *koṭṭimam,* பெ.(n.) செந்நகரப்பட்டை; the fragrant bark of olive linden tree (சா.அக.).

[கொட்டி → கொட்டிமம்.]

கொட்டியப்பூச்சி[1] *koṭṭia-p-pūcci,* பெ.(n.) ஒரு வரிவகை; a tax.

[கொட்டியம் + பூச்சி.]

கொட்டியப்பூச்சி[2] *koṭṭia-p-pūcci,* பெ.(n.) பயிரையழிக்கும் ஒருவகைப் புழு; a kind of worm, in crops.

[கொட்டியம் + பூச்சி.]

கொட்டியம் *koṭṭiyam,* பெ.(n.) 1.எருது (சூடா.); bull, ox. 2. பொதிமாட்டுத் திரள் (வின்.); herd or pack-bullocks.

ம. கொட்டியம்; **Skt.** gōstha.

[கோடு → கோட்டியம் (கொம்புள்ளது) → கொட்டியம்.]

கொட்டியம்பலம் *koṭṭi-y-ambalam,* பெ.(n.) முகடு வேய்ந்த வாசல் நடை (நாஞ்.); a gate with a small roofing at the top.

[கொட்டி + அம்பலம்.]

கொட்டியாம்பூண்டி *koṭṭiyām-pūṇḍi,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villupuram Dt.

[கொட்டியான் + பூண்டி (நீர்நிலை).]

கொட்டியான் *koṭṭiyāṉ,* பெ.(n.) 1.சுமைகாரன் (இ.வ.); carrier. 2. பயிரில்விழும் நோய்வகை; a blight affecting growing paddy. 3.கெடுதியை உண்டுபண்ணுவது; that which brings disaster. அந்த ஊருக்கு அவன் குடியிருக்கப்போனது ஒரு கொட்டியான் விழுந்தது போலாயிற்று (இ.வ.).

[கொட்டு → கொட்டியான். கொட்டுதல் = தாக்குதல்.]

கொட்டில் *koṭṭil,* பெ.(n.) 1.மாட்டுக்கொட்டம்; cow-stall. *"ஏறு கட்டிய கொட்டி லரங்கமே" (தனிப்பா.1.88,174).* 2. வில்வித்தை பயிற்றுவிக்கு மிடம்; school for archery. *"கல்லூரி நற் கொட்டிலா" (சீவக.995).* 3. கொட்டகை; shed. *"கொட்டில் விளங்குதேர் புக்கதன்றே" (சீவக.471).* 4. சிறுகுடில்; hut. *"பன்னூறாயிரம் பாடிக் கொட்டிலும்" (பெருங். உஞ்சை. 43:199).*

ம. கொட்டில்; **க.** கொட்டிகெ; **தெ.** கொட்டாமு; **து.** கொட்ய; **குட.** கொட்டி; **பட.** கொட்டகெ; Pkt.gōttha.

[குள் → கொள் → கொட்டி = வளைவு, சுழற்சி, சுற்றுகை. கொள் → கொட்டு = வட்டமான நெற்கூடு. கொட்டு → கொட்டில் = வட்டமான தொழுவம் (வ.மொ.வ.5) (வே.க.165).]

கொட்டிலம் *koṭṭilam,* பெ.(n.) கோட்டம்; Arabian costus (சா.அக.).

[கொட்டில் + அம்.]

கொட்டிலாம்சல்லி *koṭṭilām-calli,* பெ.(n.) முன்னோர் பயன்படுத்திய ஒரு செம்பு நாணயம்; a copper coin current in ancient days (சா.அக.).

[கொட்டில் + அம் + சல்லி.]

கொட்டிவாக்கங்குப்பம் *koṭṭivākkaṅ-kuppam,* பெ.(n.) உப்பங்கழியில் மீன்தொழில் செய்வோர் வாழும் ஊர்; a village of fishermen.

[கொட்டிவாக்கம் + குப்பம்.]

கொட்டிவாக்கம் *koṭṭi-vākkam,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் அமைந்த ஓர் ஊர்; a village situated in Madurantagam Taluk in Kañjipuram Dt.

[கொட்டி + வாக்கம்.]

இவ் வூரில் கொட்டி என்னும் நீர்நிலைக் கொடிவகை அதிகம் வளர்ந்து வந்தமையால் இப் பெயர் பெற்றிருக்கலாம்.

கொட்டு[1]**–தல்** *koṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1.மத்தளங் கொட்டுதல்; to beat, as a drum, a tambourine. *"மத்தளங் கொட்ட" (திவ். நாய்ச். 6:6).* 2. கம்மியர் சம்மட்டியால் அடித்தல்; striking with hammer as blacksmiths. *"கொட்டுவினைக் கொட்டிலும்" (பெருங்.மகத.4:16).* 3. கையால் தட்டுதல்; to clap, strike with the palms. *"கொட்டி னான்றோள்" (கம்பரா.சம்புமா.18).* 4. பஞ்சரைத்தல்; to card out, as cotton. *"கொட்டிய பஞ்சுபோல்" (இராமநா. அயோத்.5).* 5.நெற்குத்துதல்; to pound as paddy. *"கொட்டி வீழுமி குத்தல்" (பிரபுலிங். சித்தரா.9).* 6.அடித்தல்; to strike, beat. 7. தேள், குளவி முதலியன கொட்டுதல்; to sting, as a scorpion, a wasp. *"கருங்குளவி கொட்டும்" (அரிச். பு. நகர்நீங்.41).* 'திருடனைத் தேள் கொட்டினது போல' (பழ.). 8.சொரிதல்; to pour forth, shower down.

shed. 9. கூடை, சாக்கு முதலியவற்றி னின்றும், பண்டங்களைக் கவிழ்த்தல்; to cast out or empty the contents of a basket or sack as grain, sand. 10. பொருள்களைக் கலத்தில் ஒருசேர இடுதல்; to throw or cast into a vessel. 11.அப்புதல்; to be-smear, as sandal or other fragrant paste. *"பூங்கேழ்த் தேய்வை... இளமுலை கொட்டி" (திருமுருகு. 35).* 12.விழுதல்; fall off. 13. குவித்தல்; pile up. 14. இமைத்தல்; bat. கொட்டாது பார்க்கிறான்.

ம. கொட்டுக; **க.** கொட்டண (உமியைத் தட்டுதல்); **தெ.** கொட்டு; **து.** கொடபுணி; **கோத.** கொட்க; **துட.** க்விட்க; **கோண்.** கொட்ட்; **பர்.** கொட்ட; **குரு.** கொட்னா; **மா.** க்வொடெ; **குட.** கொட்ட.

[கொள் → கொட்டு.] (வே.க.164).

கொட்டு²–தல் *koṭṭu-*,5 செ.கு.வி. (v.i.) 1.அறைந்து கொள்ளுதல்; to beat, as upon the breast. *"கைகளான் முலைமேற் கொட்டி" (கம்பரா. இராவணன்சோக. 44.)* 2. பல்லிசொல்லுதல்; to chirp, as a lizard. *"கொட்டாய் பல்லிக்குட்டி" (திவ்.பெரியதி. 10,10:4).* 3.உதிர்தல்; to drop, as leaves; to fall of, as hair. *மயிரெல்லாம் கொட்டிப் போயிற்று (இ.வ.).*

[கொள் → கொட்டு.]

கொட்டு³ *koṭṭu*,பெ.(n.) 1.அடி; beat, stroke. 2. மத்தளம் அல்லது மேளத்தினது அடிப்பு; drum-beat. *"மள்ளர் கொட்டின் மஞ்ஞை யாலும்" (ஐங்குறு.371).* 3.வாச்சியம்; drum, tomtom, tabour. *"பதினோ ராடலும் பாட்டுங் கொட்டும்" (சிலப்.3:14).* 4.தாளத்தில் அரை மாத்திரைக் காலம் (சிலப்.3:16, உரை); a duration of time measure consisting of half a *māttirai*. 5.தேள் முதலிய கொட்டுகை; stinging. 6.சொரிகை; pouring, throwing, emptying. 7.கத்துதல்; chirp as a lizard. பல்லி கொட்டும் ஓசை கேட்கிறது (உ.வ.). 8. மேளம் அல்லது தவுல்; musical instrument, drum.

ம. கோட்டு (அகழ்வதற்குப் பயன்படும் ஒரு கருவி); **க.** குறு (மண் திருப்புதல்); **தெ.** கோராடு; **து.** கோர் (அகழ்தல்).

Pkt. koṭṭana.

[குட்டு → கொட்டு. குட்டுதல் : முட்டியால் தலையைத் தாக்குதல். கொட்டுதல் : முட்டியால் ஒன்றைத் தாக்குதல்.]

குச்சியினால் பறையை அடித்தல், சுத்தியலால் ஒன்றைத் தட்டுதல். கொட்டுப்பிடி, செம்புகொட்டி முதலிய பெயர்களை நோக்குக (மு.தா.88).

கொட்டு⁴ *koṭṭu*. பெ.(n.) 1. தோண்டுகருவி வகை (பழ.388. உரை); hoe with short handle, weeding-hoe. 2.மண்வெட்டி; spade. *"யான்கல்லுங் கொட்டைப் பறித்தார்" (பெரியபு.தண்டி.16).* 3.உடம்பு; body. *உயிர் அங்கே, கொட்டு இங்கே (வின்.).* 4.நெற்கூடு (பழ.388, உரை); granary. 5.பிரப்பங்கூடை (இ.வ.); basket made of rattan. 6. பனந்துண்டு (யாழ்ப்.); trunk of a palmyra tree. 7. கிணற்றுக்கட்டு; parapet wall of well.

ம. கோட்டு; **து.** கொட்டு; **பர்.**, **கட.** கொடல்.

[குள் → கொள் → கொட்டு, கொட்டுதல் : கொள்கலத்தைச் சாய்த்து உள்ளீட்டை வீழ்த்துதல். கொள் → கொட்டி : வளைவு, சுழற்சி, சுற்றுகை. கொள் → கொட்டு : வட்டமான நெற்கூடு.]

கொட்டு⁵ *koṭṭu*, பெ.(n.) மலடி (இ.வ.); barren woman.

மறுவ. கொட்டுச் சிறுக்கி.

க., **பட.** கொட்டி; **து.** கொட்டு.

கொட்டுக்கலியாணம் *koṭṭu-kaliyāṇam*, பெ.(n.) கைம்பெண் அல்லது மணவிலக்குப் பெற்ற பெண்ணுக்கு மேளத்தோடு செய்யும் மறுமணம்; remarriage of a widow or a divorced woman cele brated with tom tom, among certain castes (as distinct from கட்டுத்தாலி - the same without tom tom.

[கொட்டு + கலியாணம்.]

கொட்டுக்கன்னார் *koṭṭu-k-kaṉṉār*, பெ.(n.) செம்படிக்குங் கன்னார் (வின்.); braziers who work by beating plates into shape and not by casting.

[கொட்டு + கன்னார்.]

கொட்டுக்காரன் *koṭṭu-k-kāraṉ*, பெ.(n.) 1.மத்தளம் முதலிய தாளக் கருவிகளை இயக்குபவன் (இ.வ.); drummer. 2. மேளம் வாசிக்கும் இனத்தவர்; a caste of drummers.

[கொட்டு + காரன்.]

கொட்டுக்கிடாரம் *koṭṭu-k-kiṭāram*, பெ.(n.) பெரிய கொப்பரை (வின்.); large boiler of beaten brass.

[கொட்டு + கிடாரம்.]

கொட்டுக்கிணறு *koṭṭu-k-kiṇaṟu*, பெ.(n.) பனந்துண்டுகளை வைத்துக் கட்டிய கிணறு (யாழ்ப்.); a well, walled with hollow palmyra trunks.

[கொட்டு + கிணறு.]

கொட்டுக்குடவை *koṭṭu-k-kuṭavai*, பெ.(n.) உடுக்கைபோல் வடிவமைந்த ஏனம் (இ.வ.); a kettle - shaped vessel.

[கொட்டு + குடவை.]

கொட்டுக்கூடை *kottu-k-kūdai,* பெ.(n.) 1.கிண்ணவடிவான கூடை (வின்.); a cup-shaped basket. 2.கூடைபோன்ற வடிவுள்ள மாழையிலான ஏனம் (இ.வ.); a basket-shaped metal vessel. 3. வெண்கலத்தாலான சிறு உண்கலம்; a vessel made of bell metal. 4. சென்னாக்கூனியை அளந்தறிதற்குரிய சிறு கூடை; a small basket to measure the fish (மீ.பிடி.தொ.அக.).

[கொட்டு + கூடை.]

கொட்டுக்கோல் *kottu-k-kōl,* பெ.(n.) மேளம் முதலிய தாளக் கருவிகளை அடிக்கப் பயன் படுத்தும் கோல்; stick used for drumming, drum-stick.

ம. கொட்டுக்கோல், கொட்டுகம்பு.

[கொட்டு +கோல்]

கொட்டுச்சீட்டு *kottu-c-cittu,* பெ.(n.) குலுக்கி யெடுக்கும் சீட்டு (இ.வ.); a chit transaction in which the prize at each instalment is determined by the drawing of lots, dist. fr. *ēlaccittu.*

[கொட்டு +சீட்டு]

கொட்டுச்செத்தல் *kottu-c-cettal-,* பெ.(n.) அறக்காய்ந்த தேங்காய் (யாழ்.அக.); fully dried coconut.

[கொட்டு +செத்தல். கொட்டை → கொட்டு. செத்தல் : நெற்று.]

கொட்டுச்செம்பு *kottu-c-cembu,* பெ.(n.) தகடடித்துச் செய்த தாமிரச் செம்பு (வின்.); a copper pot made by beating plates into shape.

[கொட்டு + செம்பு.]

கொட்டுத்தட்டு *kottu-t-tattu,* பெ.(n.) மத்தளத்தின் வலந்தரையின் நடுப்பகுதி; the central part of right hand side of the music instrument mirudangam.

[கொட்டு + தட்டு.]

கொட்டுப்படாதவன் *kottu-p-padādavan-,* பெ.(n.) ஏச்சு வாங்காதவன், வடுப்படாதவன் (இ.வ.); one of unblemished character.

[கொட்டு + படாதவன்.]

கொட்டுப்பனை *kottu-p-panai,* பெ.(n.) தறிக்கப்பட்ட பனையினடி; chopped root of a palm.

[கொட்டு + பனை.]

கொட்டுப்பிடி *kottu-p-pidi,* பெ.(n.) கொட்டாப்புளி; wooden mallet. *"கொட்டுப்பிடி போலுங் கூனும்" (சீவக.2798).*

குட்டு → கொட்டு.

[கொட்டு + பிடி.]

கொட்டுப்பித்தளை *kottu-p-pittalai,* பெ.(n.) கொட்டுவேலை செய்ய உதவும் பித்தளை; brass for the (work) use of smith.

[கொட்டு + பித்தளை.]

கொட்டுப்புரி *kottu-p-puri,* பெ.(n.) சிறுதுடைப்ப வகை; a kind of small broom; brush.

[கொட்டு + புரி.]

கொட்டுப்பூசல் *kottu-p-pūšal,* பெ.(n.) சிறு சண்டை; street fight. "ஊரழிஞ்சி தொறுக்கொள்ள கொட்டுப்பூசல் போய்" (ஆவ.6–4, ப.16). (செங்கம் நடுகல். 971/57).

[கொட்டு (பறைமுழக்கம்) + பூசல்.]

கொட்டுமண் *kottu-man,* பெ.(n.) எடுத்துக் கொண்டுவந்து இடும் மண்; loose earth thrown to improve land, repair a road, etc., dist. fr. *nilai-man.*

மறுவ. போடுமண்.

[கொட்டு + மண்.]

கொட்டுமண்வெட்டி *kottu-man-vetti,* பெ.(n.) மண்வெட்டி வகைகளுள் ஒன்று; a kind of hoe, spade.

[கொட்டு + மண் + வெட்டி.]

கொட்டுமம்பட்டி *kottumampatti,* பெ.(n.) தேய்ந்த மண்வெட்டி; blunt spade.

[கொட்டு + (மண்வெட்டி) மம்பட்டி (கொ.வ.).]

கொட்டுமுழக்கு *kottu-mulakku,* பெ.(n.) விழாக்காலைப். இன்னிசை முழக்கம்; sounding of drums and pipes on festive occasions.

[கொட்டு + முழக்கு.]

கொட்டுமுறி *kottu-muri,* பெ.(n.) உயர்ந்த பித்தளை வகை (வின்.); a superior kind of brass.

[கொட்டு + முறி.]

கொட்டுமேளம் *kottu-mēlam,* பெ.(n.) 1. பறை, தாரை, தப்பட்டை முதலான இசைக் கருவிகள்; drums and pipes.2. முறையான திருமணம்; legal marriage. கொட்டுமேளமா கட்டுதாலியா? (உ.வ.).

[கொட்டு + மேளம்.]

கொட்டுரசம் *kottu-rašam,* பெ.(n.) பருப்பிடாத சாறு; a kind of pepper-water prepared without dhall. மறுவ. கொட்டுச்சாறு.

[கொட்டு + ரசம்.]

கொட்டுவலை *kottu-valai,* பெ.(n.) நீண்ட மீன்வலை; long fishing net.

[கொட்டு + வலை.]

கொட்டுவாய் *kottu-vāy,* பெ.(n.) 1.தேள் முதலியவை கொட்டின இடம்; the spot stung by a scorpion or other poisonous insects. *கொட்டுவாயில் மருந்தைப்போடு.* 2.நெருக்கடி யான நேரம்; nick of time. கொட்டுவாயில் வந்து கேட்கிறான் (உ.வ.).

[கொட்டு + வாய்.]

கொட்டுவான்[1] *kottuvān,* பெ.(n.)1. கொட்டாப்புளி; mallet. கொட்டுவானால் அடித்துத் தகரத்தைச் சமனாக்கு. 2. தேள் முதலியவை; scorpion. கொட்டுவான் கொட்டியதால் வலி தாங்க முடியவில்லை. 3 புற்செதுக்குங் கருவிவகை; hoe with a long handle.

[கொட்டு → கொட்டுவான்.]

கொட்டுவான்[2] *kottuvān,* பெ.(n.) கொட்டுக் கன்னான்; brazier who works by beating plates into shape. *நெளிந்த குடத்தைச் கொட்டுவானிடம் கொடுத்துச் சரிசெய் (உ.வ.).*

[கொட்டு → கொட்டுவான்.]

கொட்டுவிடக்காலி *kottuvida-k-kāli,* காலினால் கொட்டும் செங்குளவி; a red species of wasp having its sting in its legs (சா.அக.).

[கொட்டு + விடம் + க்காலி.]

கொட்டுவிடம் *kottu-vidam,* பெ.(n.) தேள் கொட்டலால் ஏற்பட்ட நஞ்சு; poison due to scorpion sting (சா.அக.).

[கொட்டு + விடம்.]

கொட்டுவிரியன்பாம்பு *kottu-viriyan-pāmbu,* பெ.(n.) ஆழ்கடலில் வாழும் ஒருவகைப் பாம்பு; a kind of snake living in deep sea.

[கொட்டு + விரியன் + பாம்பு]

கொட்டுவேலை[1] *kottu-vēlai,* பெ.(n.) கொட்டுக் கன்னார் வேலை (வின்.) beaten work, dist. fr. *vārppuvēlai.*

ம. கொட்டுபணி.

[கொட்டு + வேலை.]

கொட்டுவேலை[2] *kottu-vēlai,* பெ.(n.) துணியில் அச்சடித்தல்; print on cloth (சிற்பரத்.முன்.ப.9).

[கொட்டு + வேலை.]

கொட்டுளு *kottulu,* பெ.(n.) ஊமைச்சி மீன்; trunk fish.

ம. கொட்டுள்.

[கொட்டு + உளு.]

கொட்டெரிச்சல் *kottericcal,* பெ.(n.) 1. கொட்டு வதனா லுண்டாகும் எரிவு; burning sensation due to stinging by a scorpion (சா.அக.).

[கொட்டு + எரிச்சல்.]

கொட்டேணி *kottēni,* பெ.(n.) பன்மாடிக்கட்டடம் கட்டுவோர் ஆழ்துளைக் கற்காறை அடிமானம் இடுதற்காகப் பயன்படுத்தும் எந்திர ஏணி இடிப்புப் பொறி; pile driver used to lay pile foundation for multistoreyed buildings.

[கொட்டுதல் = இடித்தல், ஏணி = ஏணி போன்ற இயந்திரம். கொட்டு + ஏணி.]

கொட்டை[1] *kottai,* பெ.(n.) 1.விதை (பிங்.); seed of any kind not enclosed in chaff or husk, nut, stone, kernel. 2. விதைக்கொட்டை; testicles. 3.தாமரைக்கொட்டை; pericarp of the lotus flower. *"தாமரை வள்ளிதழ் பொதிந்த கொட்டை போல" (பெருங். உஞ்சைக். 38:258).* 4.பலாபூசணிகளின் பிஞ்சு (கொ.வ.); fruit bud of the jack; very small green pumpkin. 5. உருண்டை வடிவம்; large rounded form, as in writing. கொட்டையெழுத்து.

ம. கொட்ட; க., து. கொட்டெ; தெ. குலிடி; பட. கொட்டெ; குரு. கொடா.

[குள் → கொள் → கோள் → கோளம் = வட்டம், உருண்டை. கொள் → கொட்டு → கொட்டை(வே.க.165.) (ஒ.நோ. 173.)]

கொட்டை[2] *kottai,* பெ.(n.) 1. தங்கத்தாலான மகளிர் தலையணி வகை; a gold ornament for women's hair. 2. கிடுகுதாங்குங் கால் முதலியவற்றின் தலைப்பகுதி; head of a pole used as a prop. *"மணிபுனை செம்பொற் கொட்டை" (சீவக.113).* 3.யானையின் தலையணிச் சிறப்பு; an ornament for elephant 4. சும்மாடு (வின்.); pad for the head in carrying a load. 5. சிறு தலையணை; small round pillow, cushion. *"பஞ்சின் நெட்டணை யருகா க் கொட்டைகள் பரப்பி" (பதினொ. திருவிடைம. மும்.19).*

[கொள் → கொட்டு → கொட்டை.]

கொட்டை[3] *kottai,* பெ.(n.) 1.**கொட்டையிலந்தை** பார்க்க; see *kottai-y-ilandai.* 2. **ஆமணக்கு** பார்க்க; see *āmaṇakku.* 3. **கொட்டைக்கரந்தை** (மலை.) பார்க்க; see *kottai-k-karandai.*

[கொள் → கொட்டு → கொட்டை.]

கொட்டை[4] *kottai,* பெ.(n.) 1.பாதக்குறட்டின் குமிழ்; knob of wooden sandals. *"பவழக் கொட்டை பொற் செருப் பேற்றி" (பெருங். மகத.22:202).* 2. ஆடைத்தும்பினை அழகுபடுத்துதற்காகத் திரள முடிந்த முடிச்சு; knots made of warp threads at the end of a cloth, as ornament, etc. *"கொட்டைக் கரைய பட்டுடை நல்கி" (பொருந.155).* 3.ஆடைத் தும்பு (பொருந.155,உரை.); warp threads at the end of the cloth, hanging loosely and not made into knots.

[கோடு → கொடு → கொட்டை.]

கொட்டை[5] *kottai,* பெ.(n.) 1.நூற்குங் கதிரின் கொட்டை; base of a hand-spindle. கப்பல் ஓடிப் பட்ட கடன் கொட்டை நூற்றா விடியும் (பழ.). 2. பஞ்சுச்சுருள்; rolls of cotton prepared for spinning. *"கொட்டைத் தலைப்பால் கொடுத்து" (திவ். பெரியாழ். 3,5:1).* 3. காதுவளர்க்குந் திரி (இ.வ.); plug or tent of cloth to widen the ear-holes for jewels; 4. மகளிர் காதணிவகை (பிங்.); a kind of ear-ornament for women.

[கொள் → கொடு → கொட்டை.]

கொட்டை[6] *kottai,* பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish.

[கொள் → கொடு → கொட்டை.]

கொட்டை[7] *kottai,* பெ.(n.) நெல்வகை (தண்.கன.பன்.ப.62); a kind of paddy.

[குள் →குடு (வளைவு, வட்டம்) கொடு → கொட்டை = தடிப்பான நெல்வகை.]

கொட்டைக்கச்சி *kottai-k-kacci,* பெ.(n.) **கொட்டாங்காய்ச்சில்** பார்க்க; see *kottāṅ-kāy-c-cil.*

[கொட்டான் + காய் + சில் – கொட்டாங்காய்ச்சில் கொட்டைக்கச்சி (கொ.வ.).]

கொட்டைக்கட்டு-தல் *kottai-k-kattu-,* 5 செ.கு.வி. (v.i.) 1.இலுப்பைக்காய் வைத்துச் சூதாடுதல் (வின்.); to gamble with mahua seeds. 2. நாய்ப்புலி யென்னும் ஆட்டத்திற் புலியைக் கட்டுதல் (இ.வ.); to checkmate the tiger in the game of *nāyppuli.*

[கொட்டை + கட்டு-.]

கொட்டைக்கரந்தை *kottai-k-karandai,* பெ.(n.) செடிவகை; Indian globe - thistle.

[கொட்டை + கரந்தை.]

கொட்டைக்களா *kottai-k-kaḷā,* பெ.(n.) ஒரு வகைத் தணக்கு; whirling nut (சா.அக.).

[கொட்டை + களா.]

கொட்டைக்காய் *kottai-k-kāy,* பெ.(n.) 1. விதைகள் பெருத்தும் நிறைந்தும் உள்ள காய்; fruit, the seeds or stones of which are disproportionately large or numerous. 2. காய்ந்து சுருங்கிய பொருள்; a shrunk and dried object.

[கொட்டை + காய்.]

கொட்டைக்காய்ச்சி *kottai-k-kāycci,* பெ.(n.) தசைப்பற்று அதிகமின்றிக் கொட்டை பருத்துள்ள காய்காய்க்கும் மாமரம்; a species of mango yielding fruits of large stones with a small quantity of pulp.

[கொட்டை + காய்ச்சி.]

கொட்டைக்கூலி *kottai-k-kūli,* பெ.(n.) வரி வகை; a tax (SII.VIII. 139).

[கொட்டை + கூலி.]

கொட்டைக்கையில் *kottai-k-kaiyil,* பெ.(n.) கொட்டங்காய்ச்சில் (யாழ்ப்.); portion of coconut shell.

மறுவ. கொட்டாஞ்சி, கொட்டாங்கச்சி (தஞ்.வ.).

[கொட்டை + (காய் + சில்) கயில்.]

கொட்டைக்காலி *kottai-k-kāli,* பெ.(n.) **கொட்டைச் சேம்பு** பார்க்க; see *kottai-c-cēmbu.*

ம. கொட்டக்காலி.

[கொட்டை + காலி.]

கொட்டைக்கொடி *kottai-k-kodi,* பெ.(n.) ஆண் கருவுயிர்மக் கொடி; spermatic cord (சா.அக.).

[கொட்டை + கொடி.]

கொட்டைச்செத்தல் *kottai-c-cettal,* பெ.(n.) **கொட்டைத் தேங்காய்** (யாழ்ப்.) பார்க்க; see *kottai-t-teṅgāy.*

[கொட்டை + செத்தல்.]

கொட்டைச்சேம்பு *kottai-c-cēmbu,* பெ.(n.) ஒருவகைச் சேம்பு; a kind of caladium.

ம. கொட்டச்சேம்பு.

[கொட்டை + சேம்பு.]

கொட்டைசுடு-தல் *kottai-cudu-*, 17 செ.குன்றாவி. (v.t.) முந்திரிக்கொட்டைகளைத் தீயிலிட்டு எடுத்தல்; to fry the cashewnut.

[கொட்டை + சுடு-.]

கொட்டைசெத்தவன் *kottai-cettavan*, பெ.(n.) கையாலாகாதவன் (கொ.வ.); lit. an emasculated person, coward, nerveless man.

[கொட்டை + செத்தவன்.]

கொட்டைத்தணக்கு *kottai-t-tanakku*, பெ.(n.) தணக்குவகை (L); whirling-nut.

[கொட்டை + தணக்கு.]

கொட்டைத்தேங்காய் *kottai-t-tēngāy*, பெ.(n.) கொப்பரைத் தேங்காய் (யாழ்ப்.); dry coconut in which the kernel rattles.

ம. கொட்டத்தேங்ங.

[கொட்டை + தேங்காய்.]

கொர்ட்டைதாழ்த்து-தல் *kottai-tālttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) பழக்கொட்டையை நிலத்தில் விதைத்தல் (வின்.); to plant fruit-stones.

[கொட்டை + தாழ்த்து-.]

கொட்டைநண்டு *kottai-nandu*, பெ.(n.) முதுகில் முள்ளுடைய கடல்நண்டு; a kind of sea crab which has thorn on the back.

[கொட்டை + நண்டு.]

கொட்டைநாகம் *kottai-nāgam*, பெ.(n.) நாவல் மரவகை (L.); jamoon plum.

[கொட்டை + நாகம்.]

கொட்டைநாவல் *kottai-nāval*, பெ.(n.) ***கொட்டை நாகம்*** (யாழ்ப்) பார்க்க; see *kottai-nāgam*.

மறுவ. நரிநாவல், சிறுநாவல்.

[கொட்டை + நாவல்.]

கொட்டைநாளம் *kottai-nālam*, பெ.(n.) ***கொட்டைக் கரந்தை*** பார்க்க; see *kottai-k-karandai* (சா.அக.).

[கொட்டை + நாளம்.]

கொட்டைநூல்-தல் (கொட்டைநூற்றல்) *kottai-nūl-*, 9 செ.குன்றாவி.(v.t.) 1. பஞ்சுநூற்றல்; to spin cotton; கப்பலோடிப் பட்ட கடன், கொட்டை நூற்றுத் தீருமோ? 2. பயனற்ற வேலை செய்தல் (உ.வ.); to be engaged in an unprofitable work. 3. வீண்காலம் போக்குதல் (உ.வ.); to waste or idle away one's time.

[கொட்டை + நூல்.]

கொட்டைநெய் *kottai-ney*, பெ.(n.) சிற்றாமணக் கெண்ணெய்; oil from small castor seeds (சா.அக.).

[கொட்டை + நெய்.]

கொட்டைப்பயறு *kottai-p-payaru*, பெ.(n.) மணற்பாங்கான நிலத்தில் புரட்டாசியில் விதைத்து நான்கு மாதங்களில் விளையும் பயறுவகை (M.M. 329.); a kind of pulse raised in sandy soil, sown in *Purattāši* and maturing in four months.

[கொட்டை + பயறு.]

கொட்டைப்பருந்து *kottai-p-parundu*, பெ.(n.) பருந்து வகை; black kite.

[கொட்டை + பருந்து.]

கொட்டைப்பருப்பு *kottai-p-paruppu*, பெ.(n.) கொட்டைப்பயறுள்ளிருக்கும் பருப்பு; kernel inside the nut (சா.அக.).

[கொட்டை + பருப்பு]

கொட்டைப்பனை *kottai-p-panai*, பெ.(n.) தாளிப்பனை; talipot palm (சா.அக.).

[கொட்டை + பனை.]

கொட்டைப்பாக்கன்ஏந்தல் *kottai-p-pākkan-ēndal*, பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Pudukkottai Dt.

[கொட்டை + பாக்கன் + ஏந்தல் (ஏரி).]

கொட்டைப்பாக்கு *kottai-p-pākku*, பெ.(n.) வேகவைக்காமல் உணக்கிய முழுப்பாக்கு; areca-nut dried without boiling, raw areca-nut. *"கொட்டைப்பாக் கென்றுரைக்கிற் கோணழுமலம் போம்"(பதார்த்த. 1437).*

ம. கொட்டப்பாக்கு, கொட்டடய்க்க.

[கொட்டை + பாக்கு.]

கொட்டைப்பாக்குத்தலை *kottai-p-pākku-t-talai*, பெ.(n.) மிகச் சிறிய தலை; an abnormally small head - microceaphalus. cf. மாங்காய்த்தலை.

[கொட்டைப்பாக்கு + தலை.]

கொட்டைப்பாக்குத்தலைப்பா *kottai-p-pākku-t-talai-p-pā*, பெ.(n.) குஞ்சுத்தலைப்பா (யாழ்.அக.); a kind of turban.

[கொட்டை + பாக்கு + தலைப்பா.]

கொட்டைப்பாசம் *kottai-p-pāšam,* பெ.(n.) குளிர்தாமரை; floating lotus (சா.அக.).

[கொட்டை + பாசம்.]

கொட்டைப்பாசி *kottai-p-pāši,* பெ.(n.) நீர்ப்பாசி வகை; a kind of moss. *'கொட்டைப் பாசியின் வேரையொத்த சிதரின சீரையை' (பெரும்பாண். 468, உரை).*

[கொட்டை + பாசி.]

கொட்டைப்பாய் *kottai-p-pāy,* பெ.(n.) முரட்டுப் பாய்; a rough or dry mat.

ம. கொட்டப்பாய.

[கொட்டை + பாய்.]

கொட்டைப்பாலை *kottai-p-pālai,* பெ.(n.) ***கொட்டைக் கரந்தை*** பார்க்க; see *kottai-k-karandai* (சா.அக.).

[கொட்டை + பாலை.]

கொட்டைப்புளி *kottai-p-puli,* பெ.(n.) விதை யெடுக்காத புளி; pulp of tamarind fruits with the seeds.

[கொட்டை + புளி.]

கொட்டைப்பூவரசு *kottai-p-pūvarašu,* பெ.(n.) கொட்டை முதிர்ந்த காய்கள் காய்க்கும் பூவரசு; portia tree yielding fruit of matured seeds (சா.அக.).

[கொட்டை + பூவரசு.]

கொட்டைப்பெட்டி *kottai-p-petti,* பெ.(n.) 1. (தாம்பூலப்) பெட்டி (வின்.); betel-box, basket for betel, areca-nuts. 2. நெசவுக்குரிய பஞ்சுச்சுருள் வைக்கும் பெட்டி; basket for cotton yarn. 3. பனைநாராற் செய்த சிறுபெட்டி வகை; a small basket of palmyra leaves or fibres.

[கொட்டை + பெட்டி.]

கொட்டைப்பை *kottai-p-pai,* பெ.(n.) 1. விதைப் பை; testicle sac. 2. விதையைக் கவர்ந்துகொண் டிருக்கும் பை; a pouch investing the testicle (சா.அக.).

[கொட்டை + பை.]

கொட்டைபரப்பு-தல் *kottai-parappu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பகைவரது நாட்டை அழித்துத் தரைமட்டமாக்குதல்; to destroy completely, raze to the ground, as an enemy's town. *"திரிபுரஞ் சுட்டுக் கொட்டை பரப்புங் குரிசில்" (திருப்பு.).*

மறுவ. கொட்டைமுத்து விதைத்தல்.

[கொட்டை + பரப்பு-.]

கொட்டைபருத்தல் *kottai-p-paruttal,* பெ.(n.) விதை பெரிதாதல்; enlargement of the testicles (சா.அக.).

[கொட்டை + பருத்தல்.]

கொட்டைபற்றுதல் *kottai-parrudal,* பெ.(n.) ***கொட்டைபிடித்தல்*** பார்க்க; see *kottai-pidittal.*

[கொட்டை + பற்றுதல்.]

கொட்டைபிசைதல் *kottai-p-pišai-,* பெ.(n.) 1. விதையைப் பிசைதல்; squeezing the testicles. 2. ஒருவகைக் கொலை; a mode of causing death (சா.அக.).

[கொட்டை + பிசை.]

கொட்டைபிடித்தல் *kottai-piḍittal,* பெ.(n.) பிஞ்சுகளுக்குக் கொட்டை பிடித்தல்; embryonic formation of nut in an immature fruit (சா.அக.).

[கொட்டை + பிடித்தல்.]

கொட்டைபோடு-தல் *kottai-pōdu-,* 19 செ.குன்றாவி. (v.t.) 1. விதை விதைத்தல்; to sow seeds in garden - beds. 2. பலாமரம் முதலியன பிஞ்சுவிடுதல் (இ.வ.); to shoot forth fruit-buds, as the jack-tree. 3. தொழில் முதலியவற்றில் பழக்கப்படுதல் (கொ.வ.); to be experienced, as in a profession. 4. இறத்தல் (இ.வ.); to die.

[கொட்டை + போடு-.]

கொட்டைமறைவு *kottai-maraivu,* பெ.(n.) விதை பிடுக்கினுள்ளிறங்காமல் வயிற்றினுள்ளே மறைந்து நிற்றல்; concealment of the testicles within the abdomen (சா.அக.).

[கொட்டை + மறைவு.]

கொட்டைமுத்து *kottai-muttu,* பெ.(n.) ஆமணக்கு முத்து; the seed of the castor plant.

மறுவ. சிற்றாமணக்கு விதை (மலை.)

[கொட்டை + முத்து.]

கொட்டைமுத்தூற்று-தல் *kottai-muttūrru-,* 5 செ.கு.வி.(v.i.) ஆமணக்கு விதையிலிருந்து எண்ணெயெடுத்தல்; extracting oil from castor seed by boiling process (சா.அக.).

[கொட்டைமுத்து + ஊற்று-.]

கொட்டைமுத்தெண்ணெய் *kottai-muttenney;* பெ.(n.) விளக்கெண்ணெய்; castor oil (சா.அக.).

[கொட்டை + முத்து + எண்ணெய்.]

கொட்டைமுதல் *kottai-mudal,* பெ.(n.) 1. கைமுதல்; initial capital of a business. 2. விதைத்தல்; to sow seed.

மறுவ. விதைமுதல்.

[கொட்டை+முதல்.]

கொட்டைமுதிர்ச்சி *kottai-mudircci,* பெ.(n.) பழத்தினுள்ளிருக்கும் விதை முதிர்ந்து பெரிதாதல்; maturity of the nut in a fruit (சா.அக.).

[கொட்டை + முதிர்ச்சி.]

கொட்டைமுந்திரி *kottai-mundiri,* பெ.(n.) மரவகை; cashewnut tree.

[கொட்டை + முந்திரி.]

கொட்டைமுந்திரிகை *kottai-mundirigai,* பெ.(n.) முந்திரியின் பருப்பு; cashewnut.

[கொட்டை+முந்திரிகை.]

கொட்டைமூலம் *kottai-mūlam,* பெ.(n.) கொட்டிக் கிழங்கு; a kind of cyprus root (சா.அக.).

[கொட்டை+மூலம்.]

கொட்டையடி-த்தல் *kottai-y-adi-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஆடு மாடுகளுக்கு விதையடித்தல்; castration as in bulls (சா.அக.).

[கொட்டை + அடி-.]

கொட்டையடித்தவன் *kottai-y-adittavan,* பெ.(n.) விதையெடுக்கப்பட்டவன்; one in whom the testicles have been removed (சா.அக.).

[கொட்டை + அடித்தவன்.]

கொட்டையரைஞாண் *kottai-y-araiñān,* பெ.(n.) குழந்தையணிவகை (பெரியபு.சிறுத்.60); a child's ornament.

[கொட்டை + அரைஞாண்.]

கொட்டையவரை *kottai-y-avarai,* பெ.(n.) முதிர்ந்த அவரை; matured bean in which the seed portion alone is edible (சா.அக.).

[கொட்டை + அவரை.]

கொட்டையழுகு-தல் *kottai-y-alugu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. பழத்தினுள் கொட்டை அழுகுதல்; rotten condition of the nut inside a fruit. 2. பெண்நோயால் ஆண்விதை அழுகல்; putrid state of the testicles from venereal disease (சா.அக.).

[கொட்டை + அழுகு-.]

கொட்டையாண்டார் *kottai-y-āndār,* பெ.(n.) ***கோட்டையாண்டார்*** பார்க்க; see *kōttai-y-āndār.*

[கோட்டை → கொட்டை + ஆண்டார்.]

கொட்டையிடு-தல் *kottai-y-idu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. ***கொட்டைபோடு-,*** பார்க்க ; see *kottai-pōdu-,* 2. பஞ்சுச்சுருள் செய்தல் (வின்.); to prepare cotton roll.

[கொட்டை + இடு-.]

கொட்டையிலந்தை *kottai-y-ilandai,* பெ.(n.) இலந்தை மரவகை (L.); woody, fruited jujube.

[கொட்டை + இலந்தை.]

கொட்டையிலாப்பழம் *kottai-y-ilā-p-palam,* பெ.(n.) 1. விதையில்லாத பழம்; seedless fruit. 2. விதையில்லாத பிடுக்கு; indicating scrotum deprived of testicles which lie concealed in the abdomen (சா.அக.).

[கொட்டை + இல்லா + பழம்.]

கொட்டையிலாமுந்திரி *kottai-y-ilā-mundiri,* பெ.(n.) விதையில்லாக் கொடிமுந்திரி (திராட்சை); seedless raisin (சா.அக.).

மறுவ. கிசுமிசுப்பழம்.

[கொட்டை + இல்லா + முந்திரி.]

கொட்டையிலான் *kottai-y-ilān,* பெ.(n.) விதை யில்லான்; one deprived of testicles (சா.அக.).

[கொட்டை + இல்லான்.]

கொட்டையிலை *kottai-y-ilai,* பெ.(n.) ***கொட்டைக் கரந்தை*** (சங்.அக.) பார்க்க; see *kottai-k-karandai.*

[கொட்டை + இலை.]

கொட்டையீனம் *kottai-y-īnam,* பெ.(n.) விதை பிடுக்கினுள் இறங்காமை; a condition in which the testicles have not descended into the scrotum (சா.அக.) (கொ.வ.).

[கொட்டை + ஊனம் - கொட்டையூனம் → கொட்டையீனம்.]

கொட்டையீனன் *kottai-y-īnan,* பெ.(n.) பிடுக்கில் கீழிறங்காது மேலேறி நிற்கும் விதையுள்ளவன்; one in whom the testicles fails to descend into the scrotum (சா.அக.).

[கொட்டை + (ஊனன்) ஈனன்.]

கொட்டையூர் *kottai-y-ūr,* பெ.(n.) தஞ்சைமாவட்டம், கும்பகோணம் அருகே அமைந்துள்ள ஓர் ஊர்; a village situated near Kumbakonam in Thanjavur Dt.

[கொட்டை + ஊர்.]

ஆமணக்குக் கொட்டை மிகுதியாக விளைந்துள்ளமையால் இப் பெயர் பெற்றதாம். அவ்வூரில் அமைந்துள்ள திருக்கோயிலின் காவஷ் [தல] மரம் ஆமணக்குச் செடி. சிவக் கொழுந்து தேசிகர் வாழ்ந்த ஊர் என்பது குறிப்பிடத்தக்கது [த.நா.ஊ.பெ.].

கொட்டையெடு-த்தல் *kottai-y-edu-,* 4 செ. குன்றாவி.(v.t.) 1. பேடியாக்கல்; making effeminate by depriving virility - emasculating (சா.அக.). 2. முந்திரி மரத்தினின்று கொட்டைகளை எடுத்தல்; to reap the cashewnut. 3. புளிபோன்ற பழங்களிலிருந்து கொட்டையை நீக்குதல்; to remove the nut as of tamarind.

[கொட்டை + எடு-.]

கொட்டைவலி *kottai-vali,* பெ.(n.) விதையில் ஏற்படும் வலி; pain of the testicles (சா.அக.).

[கொட்டை + வலி.]

கொட்டைவாங்கு-தல் *kottai-vāngu-,* 5 செ. குன்றாவி. (v.t.) ஆடு மாடுகளுக்கு விதையடித்தல்; castration (சா.அக.).

[கொட்டை + வாங்கு-.]

கொட்டைவாழை *kottai-vālai,* பெ.(n.) கொட்டை மிகுந்திருத்தலால் உண்ண உதவாத கனியுடைய வாழை வகை (இ.வ.); a kind of plantain yielding stony fruit, not edible.

[கொட்டை + வாழை.]

கொட்டைவீக்கம் *kottai-vikkam,* பெ.(n.) விதை பருத்துக் காணல்; enlargement of the testicles (சா.அக.).

[கொட்டை + வீக்கம்.]

கொட்பாட்டன் *kot-pāttan,* பெ.(n.) ***கொள்ளுப் பாட்டன்*** பார்க்க; see *kollu-p-pāttan.*

[கொள் + பாட்டன் → கொட்பாட்டன்.]

கொட்பு[1] *kotpu,* பெ.(n.) 1. சுழற்சி; whirling, revolving. *"கொட்புறு கலினப் பாய்மா"* (கம்பரா. மிதிலை. 13). 2. சுற்றித்திரிகை (திவா.); wandering, rambling, going about. 3. மனச்சுழற்சி (சீவக. 540, உரை); perturbation, agitation. 4. நிலையின்மை; inconstancy, instability. *"கொட்பின்றி யொல்லும்வா யூன்றும் நிலை"* (குறள், 789). 5. வளைவு (வின்.); curve, bend.

[கொள் → கொட்பு.]

கொட்பு[2] *kotpu,* பெ.(n.) கருத்து; intention, idea. *"கூட வைக்கும் கொட்பின ளாகி"* (மணிமே. 21, 77).

[கொள் → கொட்பு.]

கொட்பூ *kotpū,* பெ.(n.) ஒருவகைக் காதணி (கல்.அக.); ear jewel.

[கொள் → கொட்பு.]

இது மேற்காதில் அணியப்படும் பூ வடிவினதான காதணி.

கொட்பேரன் *kot-pēran,* பெ.(n.) ***கொள்ளுப்பேரன்*** பார்க்க; see *kollu-p-pēran. "பிரமதேவனுக்குக் கொட்பேரன்" (இராமநா. ஆரணி. 19).*

[கொள்ளுப்பேரன் → கொட்பேரன்.]

கொடகம் *kodagam,* பெ.(n.) ***குறிஞ்சா*** (L.) பார்க்க; see *kuriñjā.*

[குடகம் → கொடகம்.]

கொடகன் *kodagan,* பெ.(n.) ஒரு புளி; Malabar gamboge (சா.அக.).

[கோட்டகன் → கொடகன்.]

கொடகு *kodagu,* பெ.(n.) குடகுமொழி, கருநாடக மாநிலம் குடகு மாவட்டத்தில் 80,000 மக்கள் பேசிவரும் திருந்திய திராவிட மொழி; a Dravidian language spoken by 80,000 people in Coorg Dt. of Karnataka State.

[குடகு → கொடகு (கொ.வ.).]

கொடகுத்துவா *koda-kuttuvā,* பெ.(n.) ***கோடகத்துவா*** பார்க்க; see *kōda-kattuvā.*

[கோடு + கத்துவாய் – கோடகத்துவாய் → கோடகத்துவா → கொடகத்துவா (கொ.வ.)]

கொடகொடப்பு *koda-kodappu,* பெ.(n.) ஒலிக் குறிப்புச் சொல்; onom.expression.

[கொட + கொடப்பு.]

கொடட்டி *kodatti,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanada puram Dt.

[கோடு + (பட்டி) அட்டி → கோடட்டி → கொடட்டி.]

கொடப்பட்டினம் *koda-p-pattinam,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[குட → கொட + பட்டினம்.]

கொடமநல்லூர் *kodama-nallūr,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvallur Dt.

[குடவன் → குடமன் → கொடமன் + நல்லூர்.]

கொடமாண்டப்பட்டி *kodamānda-p-patti,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[குட → கொட + மாண்டன் + பட்டி.]

கொடரிச்சட்டி *kodari-c-catti,* பெ.(n.) எழுத்தாணி போன்ற பூவுள்ள ஒருவகைப் பூண்டு; style plant, having a style - like flower (சா.அக.).

மறுவ: கொடரி, எழுத்தாணிக்கூர், எழுத்தாணிப் பூண்டு, எழுத்தாணிப் பச்சிலை, எழுத்தாணிப் பச்சை, கடற்கொழுப்பை.

[கோடரி → கொடரி + சட்டி.]

கொடலி *kodali,* பெ.(n.) பிறந்தமேனி; nudity (சா.அக.).

[கோடி = ஆடை. கோடி + இலி – கோடிலி → கொடலி.]

கொடவப்புரசு *kodava-p-purašu,* பெ.(n.) குடவப் புரசு; East Indian stain wood (சா.அக.).

மறுவ. கரும்புரசு.

[குடவம் + புரசு.]

கொடவர் *kodavar,* பெ.(n.) கோயிற் கொத்துகளுள் ஒரு பிரிவினர்; a class of temple - servants *"கொடவர் கொடுவா ளெடுப்பார்" (கோயிலொ. 44).*

[குடவர் → கொடவர்.]

கொடவண்டி *koda-vandi,* பெ.(n.) வண்டி குடை சாய்கை; to be upset as a cart, to be overturned. கொடவண்டி தூக்கிப் போட்டு அவனுக்குப் பெரிய காயம் (நெல்லை.).

[குடை (குடைசாய்ந்த) → கொட + வண்டி (கொ.வ.).]

கொடவாகம் *koda-vāgam,* பெ.(n.) வெண் தோன்றி; November flower plant (சா.அக.).

மறுவ. கொசாலகம்.

[குடவாகம் → கொடவாகம்.]

கொடவான் *kodavān,* பெ.(n.) கொத்துமல்லியைத் தாக்கும் ஒருவகை நோய்; a disease attacking coriander plant.

[கொடுவன் → கொடவான்.]

கொடவிளாகம் *koda-vilāgam,* பெ.(n.) நாகைச் சிற்றூர்; a village in Nagai Dt.

[குட → கொட + விளாகம்.]

கொடா *kodā,* பெ.(n.) நச்சுவித்துகளைக் கொண்ட மரம்; nux - vomica tree (சா.அக.).

மறுவ. எட்டி.

[கொடு → கொடவு → கொடா.]

கொடாக்கண்டன் *kodā-k-kandan,* பெ.(n.) சிறிதும் ஈயாத இவறன் (கொ.வ.); confirmed miser, as stubborn in refusing to give, opp. to *vidākkandan* (சா.அக.).

[கொடா(த) + கண்டன்.]

கொடாரி *kodāri,* பெ.(n.) கோடரி; axe. *"கிளையைச் சாடுங் கொடாரியின் காம்பு போன்றாய்"* (பிரபோத. 2, 28).

[கோடரி → கொடாரி.]

கொடாவி *kodāvi,* பெ.(n.) நாயுருவி; Indian - burr (சா.அக.).

[கொறுவி → கொடுவி → கொடாவி.]

கொடி[1] *kodi,* பெ.(n.) 1. படர்கொடி; creeper, climber, *"நுடங்குகொடி மருங்கின்" (பெருங். உஞ்சைக். 41: 80).* 2. ***சித்திரமூலம்*** (மூ.அக.) பார்க்க; see *cittira-mūlam.* 3. ஆடை உலர்த்துங் கொடி; clothes - line, clothes post. 4. கொப்பூழ்க் கொடி; umbilical cord.

ம., தெ., து., குட. கொடி; **க.** குடி; **கோத.** கொட்ய்; **கோண்.** கொட்டி; **மா.** க்வொரு; **பட.** குடி.

[கொடு → கொடி = வளைந்து படரும் நிலைத்திணை வகை (வ.மொ.வர.7.) (வே.க.167).]

கொடி[2] *kodi,* பெ.(n.) 1. மகளிர் கழுத்தணி வகை; gold string or chain for women's neck. *"மென்றோட் கொடியென" (பெருங். உஞ்சைக். 41:71).* 2. அரை ஞாண் (S.I.I.II, 5); gold or silver thread worn round a person's waist. 3. ஏற்றத்தின் கோல் அல்லது கயிறு (வின்.); rope or pole of a well - sweep. 4. கண்வரி முதலியன (வின்.); fine streaks of red capillary veins, as in the eye.

[கொடு → கொடி.]

கொடி[3] *koḍi,* பெ.(n.) 1. ஒழுங்கு; orderliness. *"கருங்கொடிப் புருவம்"* (சீவக. 658). 2. நீளம்; length. *"பழன வெதிரின் கொடிப்பிணை யலளே"* (ஐங்குறு. 91.). 3. சிறு கிளைவாய்க்கால் (இ.வ.); a small branch channel. 4. ஏரியிலிருந்து வழியும் நீரைக் கொண்டு செல்லும் வாய்க்கால் (W.G.); a channel for carrying off the surplus water of a reservoir.

[கொடு → கொடி.]

கொடி[4] *koḍi,* பெ.(n.) 1. துணிக்கொடி, பதாகை; banner, flag, standard, streamer. *"கொடியுங் கவரியும்"* (பெருங். உஞ்சை. 57:57.). 2. காற்றாடி (யாழ்ப்.); kite, paper-kite. 3. காலக்கொடி என்னும் ஓகம்; Yama's ensign, an inauspicious yoga. *"பிரம தண்டங் கொடியென்று பொல்லா யோகங்கள்" (விதான. குணாகுண. 34).* 4. காக்கை; crow. *"நல சேட்டைக் குலக்கொடியே" (திருக்கோ. 235).* 5. கீழ்த்திசை; east. *"கொடிக்கொண்ட கோடையால்" (கலித். 150:15).* 6. கொடியடுப்பு; side - oven. கொடி யெரிகிறதா? 7. பறவை (அவிட்டம்) என்னும் 23ஆவது உடு; the 23rd *naksatra.*

[கொடு → கொடி.]

கொடி[5] *koḍi,* பெ.(n.) கட்டுகயிறாகப் பயன்படுத்தும் நாற்றுச் சோளப்பயிர் அல்லது நனையப் போட்ட கேப்பைத் தாள்; stalk of certain crops used to bind the bundle.

[குல் → குள் → குடு → கொடு → கொடி.]

கொடிக்கச்சி *koḍi-k-kacci,* பெ.(n.) கழற்சிக் கொட்டைச் செடி அல்லது கெச்சக்காய்ச் செடி; eagle stone creeper or nicker tree (சா.அக.).

[கொடி + கச்சி.]

கொடிக்கச்சீருகம் *koḍikka-c-cīrugam,* பெ.(n.) பொடுதலை; creeping vervain (சா.அக.).

[கொடி + கச்சீருகம்.]

கொடிக்கத்தரி *koḍi-k-kattari,* பெ.(n.) நீண்ட கத்தரிக்காய்; a species of long brinjal. cf. கண்டங்கத்தரி (சா.அக.).

[கொடி + கத்தரி.]

கொடிக்கப்பல் *koḍi-k-kappal,* பெ.(n.) கொடிகட்டிய சிறுமரக்கலம் (இ.வ); galley or cruiser flying a pennon.

ம. கொடிக்கப்பல்.

[கொடி + கப்பல்.]

கொடிக்கம்பம் *koḍi-k-kambam,* பெ.(n.) கோயில்களின் முன்புறம் கொடியேற்றுவதற்காக நடும் மரம்; flag staff in a temple. *"திருக்கொடிக் கம்பத்திலே" (கோயிலொ. 73).*

மறுவ. கொடிமரம்.

[கொடி + கம்பம்.]

கொடிக்கயிறு[1] *koḍi-k-kayiṟu,* பெ.(n.) 1.வீணாத் தண்டின் நடுவில் ஓடும் கயிறு போன்ற அமைப்பு; the cord-like structure passing through the spinal channel and extending from the brain. 2. இடுப்பில் கட்டிக்கொண்டு மீன்பிடி வலையினை இழுக்க உதவும் கயிறு; the rope used for pulling out the fishing net by tying with hip (மீ.பிடி.தொ.).

[கொடி + கயிறு.]

கொடிக்கயிறு[2] *koḍi-k-kayiṟu,* பெ.(n.) 1. முறுக் கேறின கயிறு; well-twined rope. *"கொடிக் கயிற் றொடுங் கொணர்ந்தனர்" (உபதேசகா. சிவநாம. 155.).* 2. கொடியாகக் கட்டுங்கயிறு; rope used as a clothes-line. 3. கொடியேற்ற, இறக்கப் பயன்படும் கயிறு; rope used to hoist or lower flags.

ம. கொடிக்கயிறு.

[கொடி + கயிறு.]

கொடிக்கருக்கு *koḍi-k-karukku,* பெ.(n.) வாயில் நிலைகள், தூண்கள் போன்றவற்றில் செய்யப்படும் சிற்பவேலைப்பாடு; decorative workmanship of architectural things in pillars and door frames (சா.அக.).

கொடிக்கருக்கு

[கொடி + கருக்கு.]

கொடிக்கருணை *koḍi-k-karuṇai,* பெ.(n.) கருணை வகை (இ.வ.); a tuberous-rooted plant.

[கொடி + கருணை.]

கொடிக்கரும்பு *koḍi-k-karumbu,* பெ.(n.) நேராக வளர்ந்த கரும்பு; straight sugarcane. "*கொடிக்கரும் புடுத்த வேலி*" (சீவக. 1184).

[கொடி + கரும்பு.]

கொடிக்கருவேல் *koḍi-k-karuvēl,* பெ.(n.) கருவேலன் கொடி; babool creeper (சா.அக.).

[கொடி + கருவேல்.]

கொடிக்கல் *koḍi-k-kal,* பெ.(n.) சர்க்கரைவள்ளி; sweet potato creeper - Dioscorea sative (சா.அக.).

[கொடி + கல்.]

கொடிக்கவி *koḍi-k-kavi,* பெ.(n.) தில்லையிலுள்ள கோயிலிற் கொடியேறும்படி உமாபதி சிவாசாரி யாரால் இயற்றப்பெற்றதும், மெய்கண்டசாத்திரம் பதினான்கனுள் ஒன்றுமான சைவ சமய நூல்; a short treatise on the šaiva-siddhanda philosophy, by Umāpati-šivaccariyar, one of 14 Mey-kaṇḍa-cāttiram q.v., believed to have been composed for raising the temple flag at Chidambaram.

[கொடி + கவி.]

கொடிக்கழல் *koḍi-k-kaḻal,* பெ.(n.) ***கழற்சி*** பார்க்க; see *kaḻarci.*

ம. கொடிக்கழல்.

[கொடி + கழல்.]

கொடிக்கழற்சி *koḍi-k-kaḻarcci,* பெ.(n.) கழற்சிக் கொடி; a creeper of two spicies.

மறுவ. கழற்கொடி.

[கொடி + கழற்சி.]

கொடிக்கள்ளி *koḍi-k-kaḷḷi,* பெ.(n.) 1. கொடிவகை; moon-creeper. 2. கள்ளிவகை; beak-flowered creeping milk-hedge. "*கொடிக்கள்ளிப் பாலுக்குக் கூறு*" *(பதார்த்த. 124).*

[கொடி + கள்ளி.]

கொடிக்காக்கட்டான் *koḍi-k-kākkaṭṭāṉ,* பெ.(n.) காக்கட்டான் வகை; sky-blue bindweed.

[கொடி + காக்கட்டான்.]

கொடிக்காசரை *koḍi-k-kāšarai,* பெ.(n.) கொடிக் காசரை; a kind of edible greens (சா.அக.).

[கொடி + காசரை.]

கொடிக்காசினி *koḍi-k-kāšiṉi,* பெ.(n.) 1. மல்லிகை; Arabian jasmine. 2. படர்மல்லிகை; large - flowered jasmine (சா.அக.).

[கொடி + காசினி.]

கொடிக்காய் *koḍi-k-kāy,* பெ.(n.) கொடிகளில் காய்க்கும் மருத்துவத்திற்குரிய காய்கள்; the vegetables useful to medicine. கீழ்க்காணும் கொடிகளில் காய்க்கும் காய்கள்.

[கொடி + காய்.]

வகைகள்: 1. கலியாணப் பூசணிக்காய். 2. பறங்கிக் காய். 3. குமட்டிக்காய். 4. சுரைக்காய். 5. வெள்ளரிக்காய். 6. கொட்டையவரைக்காய். 7. மொச்சைக்காய். 8. பீர்க்கங்காய். 9. புடலங்காய். 10. பாகற்காய். 11. அதளங்காய். 12. தூதுளங்காய். 13. கொடிவழுதுளங் காய். 14. பயற்றங்காய். 15. கோவைக்காய். 16. மிளகுகாய் (சா.அக.).

கொடிக்கால்[1] *koḍi-k-kāl,* பெ.(n.) 1. வெற்றிலைக் கொடி படருங் கொம்பு (வின்.); stake or stick set to support the betel creeper. 2. வெற்றிலை (மலை.); betel. 3. வெற்றிலைத்தோட்டம்; betel garden. 4. காய்கறித்தோட்டம் (இ.வ.); vegetable garden. 5. கொடிக்கம்பம்; flagstaff of a temple. "*கோயிலின் முன்னுற்ற கொடிக்காலை*" *(தனிப்பா. 1:361:98).*

ம. கொடிக்கால்.

[கொடி + கால்.]

கொடிக்கால்[2] *koḍi-k-kāl,* பெ.(n.) வெற்றிலை பயிரிடும் நிலம்; land where betal is grown. "*அக்கவி மூலையில் கொடிக்கால் கிணறும்*" *(நத்தம். ஆய்வேடு. ப.174–24).*

[கொடி + கால்.]

கொடிக்கால்கத்தரி *koḍikkāl-kattari,* பெ.(n.) 1. கருங்கொடிக் கத்தரி; a species of black brinjal. 2. வெற்றிலைத் தோட்டத்தில் பயிராகும் கத்தரி; brinjal cultivated in betel-vine yard (சா.அக.).

[கொடிக்கால் + கத்தரி.]

கொடிக்கால்மரம் *koḍikkāl-maram,* பெ.(n.) அகத்திமரம்; sesbane tree (சா.அக.).

[கொடிக்கால் + மரம்.]

கொடிக்கால்மூலை *koḍikkāl-mūlai,* பெ.(n.) 1. வெற்றிலைத் தோட்டமுள்ள திசை; lit., betel-garden quarter. 2. ஊரின் வடமேற்கு மூலை; the north-west corner of a village. கொடிக்கால் மூலையில் மின்னினால் உறுதியாய் மழைவரும் (இ.வ.).

[கொடிக்கால் + மூலை.]

கொடிக்கால்வேளாளன் *koḍi-k-kāl-vēḷāḷaṉ,* பெ.(n.) கொடிக்காற் பயிர் செய்யும் வேளாள

cultivating betel.

[கொடிக்கால் + வேளாளன்.]

கொடிக்காற்கீரை *koḍikkāṟ-kīrai,* பெ.(n.) அகத்திக்கீரை; sesbane leaves used as edible greens (சா.அக.).

[கொடிக்கால் + கீரை.]

கொடிக்கிழங்கு *koḍi-k-kiḻaṅgu,* பெ.(n.) கொடியின் அடியில் விளையும் கிழங்கின் வகை; the several varieties of medicinal and esculent bulbous roots under the stem of creepers.

[கொடி + கிழங்கு.]

கொடிக்கிழங்கு வகைகள்: 1. சீந்திற் கிழங்கு 2. கருடன் கிழங்கு 3. கூகைக்கிழங்கு 4. புளிநரளைக் கிழங்கு 5. மாகாளிக்கிழங்கு 6. தண்ணீர்விட்டான் கிழங்கு 7. தாமரைக் கிழங்கு 8. செவ்வல்லிக்கிழங்கு 9. நெய்தற் கிழங்கு 10. செங்கழுநீர்க்கிழங்கு; 11. கொட்டிக்கிழங்கு 12. பூமி சருக்கரைக் கிழங்கு 13. சருக்கரைவள்ளிக்கிழங்கு 14.கருணைக் கிழங்கு 15. நிலப்பனைக் கிழங்கு 16. மரவள்ளிக்கிழங்கு (சா.அக.).

கொடிக்கிழிவு *koḍi-k-kiḻivu,* பெ.(n.) பெண்கள் கொடி மூலத்தில் கருவுயிர்த்தலால் உண்டாகும் பிளவு; laceration of the perineum (சா.அக.).

[கொடி + கிழிவு.]

கொடிக்குலி *koḍi-k-kuli,* பெ.(n.) நூலாஞ்செடி; common cherry nutmeg (சா.அக.).

[கொடி + குலி.]

கொடிக்குளம் *koḍi-k-kuḷam,* பெ.(n.) மதுரைத் தெற்கு மாவட்டத்தில் அமைந்த ஓர் ஊர்; a village situated south of Madurai.

[கோடி + குளம் – கோடிக்குளம் → கொடிக்குளம்.]

ஆனைமலையின் ஒரு கோடியில் இவ்வூர் அமைந்திருப்பதால் முதலில் கோடிக்குளம் என்று பெயர்பெற்று நாளடைவில் கொடிக்குளம் என மருவி வந்ததாம் (த.நா.ஊ.பெ.).

கொடிக்குறிஞ்சா *koḍi-k-kuṟiñjā,* பெ.(n.) சிறு குறிஞ்சா; small Indian ipecacuanha; a climber (சா.அக.).

[கொடி + குறிஞ்சா.]

கொடிக்கூடை *koḍi-k-kūḍai,* பெ.(n.) 1. நாணற் கூடை (வின்.); wicker-basket. 2. கட்டுக் கொடியாலான கூடை; a basket made of binding creeper.

[கொடி + கூடை.]

கொடிக்கூந்தல் *koḍi-k-kūndal,* பெ.(n.) 1. கொடிகளில் மயிர்க்கூந்தல் போலிருக்கும் ஒரு திரட்சி; a slender turining growth by which a plant attaches itself to something for support. 2. அம்மையார் கூந்தல்; sister's thread.

மறுவ. கொடியார் கூந்தல்.

[கொடி + கூந்தல்.]

கொடிக்கெண்டை *koḍi-k-keṇḍai,* பெ.(n.) ஒரு வகைக் கெண்டைமீன்; a kind of fish (மீ.பிடி.தொ.).

[கொடி + கெண்டை.]

கொடிக்கையான் *koḍi-k-kaiyāṉ,* பெ.(n.) கையாந்தகரை வகை (வின்.); a plant growing in wet places.

[கொடி + கையான்.]

கொடிக்கொத்தான்[1] *koḍi-k-kottāṉ,* பெ.(n.) 1. முடக்கொத்தான்; palsy curer. 2. கொத்தான்; green thread creeper (சா.அக.).

[கொடி + கொத்தான்.]

கொடிக்கொத்தான்[2] *koḍi-k-kottāṉ,* பெ.(n.) ***கொற்றான்*** பார்க்க; see *koṟṟāṉ.*

[கொடி + கொத்தான்.]

கொடிகட்டிநில்-தல்(கொடிகட்டி நிற்றல்) *koḍi-kaṭṭi-nil-,* 14 செ.கு.வி.(vi.) 1. ***கொடிகட்டு***[1,2] பார்க்க; see *koḍi-kaṭṭu-.* 2. உறுதிப்பாட்டுடன் முயற்சியை மேற்கொள்ளுதல்; to set about a thing with the utmost zeal and promptness. 3. நோயாளி முதலியோர் கயிற்றைப் பிடித்துக்கொண்டு நிற்றல் (யாழ்ப்.); to stand by, holding a rope attached to a beam, as a woman in labour, a sick person etc.

[கொடிகட்டி + நில்-.]

கொடிகட்டிப்பற-த்தல் *koḍi-kaṭṭi-p-paṟa-,* 3 செ.கு.வி. (v.i.) மிகுந்த செல்வாக்கோடு வாழ்தல்; to live in great prosperity, flourish.

[கொடி + கட்டி + பற-.]

கொடிகட்டிவாழ்-தல் *koḍi-kaṭṭi-vāḻ-,* 3 செ.கு.வி. (v.i.) மிகுந்த செல்வ வாழ்க்கையில் இருத்தல் (கொ.வ.); to live in great prosperity.

[கொடிகட்டி + வாழ்-.]

கொடிகட்டு-தல் *koḍi-kaṭṭu-,* 5 செ.கு.வி (v.i.) 1. ***கொடியெடுத்தல்,*** பார்க்க; see *koḍi-y-eḍu-,* 2. போருக்குவருதல்; to declare hostility,

challenge. 3. ***கொடியேற்று-தல்,*** பார்க்க; see *kodi-y-ērru-*.

[கொடி + கட்டு-.]

கொடிகம் *kodigam,* பெ.(n.) ஒருவகை வெந்தயம்; horse-shoe fenugreek (சா.அக.).

[கொடு → கொடுகம் → கொடிகம்.]

கொடிகிழிதல் *kodi-kili-,* பெ.(n.) கருவுயிர்த்தலில் பெண்களுக்குக் கொடிமூலம் பிளத்தல்; laceration of the perineum (சா.அக.).

[கொடி + கிழி-.]

கொடிங்கியம் *kodiṅgiyam,* பெ.(n.) கோவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kovai Dt.

[கொடிங்கு → கொடிங்கியம்.]

கொடிச்சண்பகம் *kodi-c-canbagam,* பெ.(n.) ***கொடிச்சம்பங்கி*** (வின்.) பார்க்க; see *kodi-c-cambaṅgi.*

[கொடி + சண்பகம்.]

கொடிச்சம்பங்கி *kodi-c-cambaṅgi,* பெ.(n.) கொடிவகை; creeper champak.

மறுவ. காமப்பூ.

[கொடி + சம்பங்கி.]

கொடிச்சல்லிமூலம் *kodi-c-calli-mūlam,* பெ.(n.) 1. நஞ்சுக்கொடி; umbilical cord. 2. குடல்; intestines (சா.அக.).

[கொடி + சல்லி + மூலம்.]

கொடிச்சாறு *kodi-c-cāru,* பெ.(n.) 1. சிறுபிள்ளையின் சிறுநீர்; boy's or girl's urine. 2. மாதவிலக்கு; menstrual blood. 3. பெண் காமநீர்; semen muliebre (சா.அக.).

[கொடி + சாறு.]

கொடிச்சி[1] *kodicci,* பெ.(n.) 1. தண்ணீரைக் கட்டும் கொடி; water bounding plant. 2. காவட்டம்புல்; citronella grass. 3. சித்திரமூலம்; Ceylon leadwort. 4. புற்றாஞ்சோறு; burrow of white-ants. 5. இரத்த நஞ்சு; a poisonous substance in blood. 6. குண்டு மணி; crab's eye. 7. மூவிலைக் குருந்து; three-leaved spring creeper. 8. குறிஞ்சி நிலத்துப் பெண்; a woman inhabiting a hilly tract. *"கொடிச்சி காக்கும் பெருங்குர லேனல்"* *(ஐங்குறு. 296).* 9. கன்னம்; cheek. 10. தாடை; jaw. 11. வெண்மை; whiteness (சா.அக.).

[கொடி → கொடிச்சி.]

கொடிச்சி[2] *kodicci,* பெ.(n.) 1. குறிஞ்சிநிலத்துப் பெண்; woman of the hilly tract. 2. ***கொடுவேலி*** (மலை.) பார்க்க; see *kodu-vēli,* Ceylon leadwort. 3. ***காமாட்சிப்புல்***[2] பார்க்க; see *kāmātci-p-pul* (வே.க.167.).

ம., தெ., து. கொடி.

[கொடி → கொடித்தி → கொடிச்சி (கொடி : நுனி, மலை முகடு).]

கொடிச்சி[3] *kodicci,* பெ.(n.) கொடிறு (சங்.அக.); jaws, mandibles.

[கொடி → கொடிச்சி]

கொடிச்சி[4] *kodicci,* பெ.(n.) ***கொடிச்சை*** பார்க்க; see *kodiccai.*

[கொடி → கொடிச்சி]

கொடிச்சிங்கேரி *kodi-c-ciṅgēri,* பெ.(n.) கருடக் கொடி (சித்.அக.); Indian birthwort.

[கொடி + சிங்கேரி.]

கொடிச்சித்தாமரை *kodicci-t-tāmarai,* பெ.(n.) நீலத்தாமரை (சித்.அக.); blue nelumbo.

[கொடிச்சி + தாமரை.]

கொடிச்சிதம் *kodiccidam,* பெ.(n.) கொடிவேல்; American sumech (சா.அக.).

[கொடிச்சி → கொடிச்சிதம்.]

கொடிச்சியர் *kodicciyar,* பெ.(n.) குறிஞ்சிநிலப் பெண்கள்; women in the land of forecters, mountainers.

[கொடிச்சி + அர்.]

கொடிச்சிவால் *kodicci-vāl,* பெ.(n.) நுனி வெண்மையான பசுவின் வால் (யாழ்ப்.); cow's tail white at the tip.

[கொடிச்சி + வால்]

கொடிச்சிவாலி *kodicci-vāli,* பெ.(n.) நுனி வெளுத்த வாலுள்ள பசு (யாழ்ப்.); cow with tail white at the tip.

[கொடிச்சி + வாலி.]

கொடிச்சீத்தல் *koḍi-c-cīttal,* பெ.(n.) கொடிவேல்; American sumach (சா.அக.).

[கொடி + சீத்தல்.]

கொடிச்சீத்தா *koḍi-c-cīttā,* பெ.(n.) சீத்தாக்கொடி; custard apple creeper (சா.அக.).

[கொடி + சீத்தா.]

கொடிச்சீலை *koḍi-c-cīlai,* பெ.(n.) 1. கொடியின் செண்டா; pennon, flag. 2. சித்திரப்படாம்; variegated painted cloth. 3. துகிற்கொடி; flag, banner as a badge of honour.

மறுவ. விருதுக்கொடி.

[கொடி + சீலை.]

கொடிச்சூரை *koḍi-c-cūrai,* பெ.(n.) சூரைவகை (வின்.); creeper species of jujube.

[கொடி + சூரை.]

கொடிச்செங்கழற்சி *koḍi-c-ceṅgaḻarci,* பெ.(n.) சிவப்புக் கழற்சிக்கொடி; red bondue creeper (சா.அக).

[கொடி + செம்மை + கழற்சி.]

கொடிச்சேணி *koḍi-c-cēṇi,* பெ.(n.) பெருந்தக்காளி; cape gooseberry (சா.அக).

[கொடி + சேணி.]

கொடிச்சை *koḍiccai,* பெ.(n.) 1. கன்னம்; cheek. 2. தாடை; jaw.

ம. கொடிஞ்ஞ.

[கொடி → கொடிச்சை]

கொடிசிலடக்கல் *koḍišil-aḍakkal,* பெ.(n.) வாயிலடக்கல்; holding in the mouth as a pill (சா.அக.)

[கொடிறு → கொடிசு + இல் + அடக்கல்.]

கொடிசு *koḍišu,* பெ.(n.) கொடிறு; the joint of the jaw-bones (சா.அக.).

[கொடிறு→ கொடிசு (கொ.வ.).]

கொடிசுற்றிப்பிற—த்தல் *koḍi-šurri-p-pira-,* 3 செ.கு.வி. (v.i.) பெற்றோர்க்கும் தாய் மாமனுக்கும் தீங்குவிளைதற்கு அறிகுறியாகத் தொப்பூழ்க்கொடி சுற்றிக்கொண்டு குழந்தை பிறத்தல் (உ.வ.); to be born, as a child, with umbilical cord, around the neck, deemed ominous to parents and maternal uncle.

[கொடி + சுற்றி + பிற—.]

கொடிசுற்று—தல் *koḍi-curru-,* 5 செ.கு.வி (v.i.) தொப்பூழ்க்கொடி குழந்தையைச் சுற்றிக்கொள்ளுதல்; umblical cord encircling the child.

[கொடி + சுற்று—.]

கொடிசை *koḍišai,* பெ.(n.) 1. கன்னம்; cheek. 2. நரம்பு; nerve.

மறுவ. துப்பு.

[கொடிறு → கொடிசு → கொடிசை.]

கொடிஞ்சி *koḍiñji,* பெ.(n.) 1. கைக்குதவியாகத் தேர்த்தட்டின் முன்னே நடப்பட்டுத் தாமரைப்பூ வடிவுள்ள அழகு பொதிந்த உறுப்பு; ornamental staff in the form of a lotus, fixed in front of the seat in a chariot and held by the hand as support. *"மணித்தேர்க் கொடிஞ்சி கையாற் பற்றி"* (மணிமே. 4:48.). 2. தேர்; car, chariot. *"கொய்யுளை கொடிஞ்சி குஞ்சரம்"* *(ஞானா. 7:18).*

[கொடி - நுனி, முகடு. கொடி → கொடிஞ்சி (தேர் மொட்டு).]

கொடிஞ்சில் *koḍiñjil,* பெ.(n.) **கொடிஞ்சிற்பலகை** பார்க்க; see *koḍiñjir-palagai,*

[கொடி → கொடிஞ்சில்.]

கொடிஞ்சிலடி—த்தல் *koḍiñjil-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) கொடிஞ்சிற் பலகையால் ஆற்றுக்கால் தோண்டுதல்; to dredge a river - channel with a shovel.

[கொடிஞ்சில் + அடி—.]

கொடிஞ்சிற்பலகை *koḍiñjir-palagai,* பெ.(n.) எருதுகளைக் கொண்டு ஆற்றுக்கால் தோண்டும் பலகை; large wooden shovel or scoop for dredging river-channels.

[கொடிஞ்சில் + பலகை.]

கொடிஞாழல் *koḍi-ñāḻal,* பெ.(n.) மயிர்க்கொன்றை; Barbados flower fence (சா.அக).

[கொடி + ஞாழல்.]

கொடித்தக்காளி *koḍi-t-takkāḷi,* பெ.(n.) தென்னமெரிக்க நாட்டைச் சார்ந்த தக்காளிவகை (மு.அக.); tomato, pailing plant introduced from South America.

ம. கொடித்தக்காளி.

[கொடி + தக்காளி.]

கொடித்தட்டு[1] *kodi-t-tattu-,* பெ.(n.) காற்றாடிச் சண்டை (வின்.); competition with two kites to see which cuts the other's string.

[கொடி + தட்டு.]

கொடித்தட்டு[2]**–தல்** *kodi-t-tattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நல்லபாம்பு கடித்தல்; to bite, as of cobra.

[கொடி + தட்டுதல். கொடி அசைந்துபடுதல், கொடிபோன்ற பாம்புகடித்தல்]

மொழித்துறையில் அவர் [தமிழர்] நாகரிகம் அடைந்திருப்பது போன்று பண்பாடும் அடைந்திருந்தனர். ஒன்றிற்கு இரண்டிற்குப் போதலை இடக்கரடக்கல் என்றும், சாதலைப் பெரும்பிறிது என்றும் நல்லபாம்பு கடித்தலைக் கொடித்தட்டல் என்றும் மங்கலவழக்காயும் கூறிவந்தனர் [பண். தமி. பண். நா.106].

கொடித்தடக்கி *kodi-t-tadakki,* பெ.(n.) 1. மரவகை (மூ.அக.); a tree. 2. நாய்க்காலின் மேல்விரல் (யாழ்.அக.); small projection near the toes of a dog.

[கொடி + தடக்கி.]

கொடித்தடம் *kodi-t-tadam,* பெ.(n.) ஒற்றையடிப் பாதை (இ.வ.); footpath.

[கொடி + தடம்.]

கொடித்தடுக்கல் *kodi-t-tadukkal,* பெ.(n.) பாம்பு தீண்டல்; to bite as of cobra.

[கொடி+ தடுக்கல்.]

கொடித்தடை *kodi-t-tadai,* பெ.(n.) 1. கொடியால் உண்டாகுந் தடை; lit., prohibition by a stage. 2. கொடியேற்றியுள்ள திருவிழாக்காலத்தில் ஊர் விட்டு ஊர்செல்லக் கூடாதென்னுங் காப்புத்தடை; prohibition against travel during a temple-festival.

[கொடி + தடை.]

கொடித்தண்டு *kodi-t-tandu,* பெ.(n.) ***கொடிக்கம்பம்*** பார்க்க; see *kodi-k-kambam, 'கருடப்புள் ளெழுதிய கொடித்தண்டு' (சிலப். 11:136, உரை).*

[கொடி + தண்டு.]

கொடித்தம்பட்டன் *kodi-t-tambattan,* பெ.(n.) வாளவரை வகை; fat - podded sword-bean.

[கொடி + தம்பட்டன்.]

கொடித்தம்பம் *kodi-t-tambam,* பெ.(n.) கொடி கட்டுந் தறி; a post for tying a flag.

[கொடி + தம்பம்.]

கொடித்தரம் *kodi-t-taram,* பெ.(n.) 1. கதிரவன் தோன்றும்போது அல்லது மறையும்போது வானுச்சியில் தோன்றும் எட்டாம் நாள் நிலவு (வின்.); the waxing or waning moon in the 8th, sometimes also in the 7th or 9th phase, when it is in the meridian at sunrise or sunset.

[கொடி + தரம்.]

கொடித்தாலி *kodi-t-tali,* பெ.(n.) ***சரட்டுத்தாலி*** (இ.வ.) பார்க்க; see *carattu-t-tali.*

[கொடி + தாலி]

கொடித்தி *kodi-t-ti,* பெ.(n.) ***கொடிச்சி***[4] (தைலவ. தைல.17) பார்க்க; see *kodicci.*

[கொடிச்சி → கொடித்தி. கொடித்தி என்னும் சொல்லை கொடித்தீ என செ.அக. குறிப்பது தவறு.]

கொடித்திப்பிலி *kodi-t-tippili,* பெ.(n.) 1. திப்பிலிக் கொடி; pepper creeper. 2. சிறுதிப்பிலி; a small variety of pepper (சா.அக).

[கொடி + திப்பிலி.]

கொடித்திருப்பாடகம் *kodi-t-tiru-p-pādagam,* பெ.(n.) ஒருவகைக் காலணி; a kind of shoe.

[கொடி + திரு + பாடகம்]

கொடித்திரும்பு–தல் *kodi-t-tirumbu-,* 5 செ.கு.வி. (v.i.) கோள்கள் வானுச்சியைக் கடத்தல்; to pass the meridian, as the sun or other heavenly body. *"கொடித்திரும்பின உடனே"* (யாழ்ப்.).

[கொடி + திரும்பு-.]

கொடித்தீ *kodi-t-ti,* பெ.(n.) சித்திரமூலம்; Ceylon leadwort (சா.அக.).

மறுவ. கொடிச்சி.

[கொடித்து → கொடித்தி → கொடித்தீ (கொ.வ.).]

கொடித்துத்தி *kodi-t-tutti,* பெ.(n.) சிறுதுத்திவகை (வின்.); membranous carpelled evening - mallow.

[கொடி + துத்தி.]

கொடித்தூண் *kodi-t-tūn,* பெ.(n.) கொடியோடும் வீணாத்தண்டு; the vertebaral column through which the spinal cord passes (சா.அக.).

[கொடி + தூண்.]

கொடித்தோட்டம் *kodi-t-tōttam,* பெ.(n.) மிளகு அல்லது வெற்றிலைத் தோட்டம்; pepper or betel grove.

ம. கொடித்தோட்டம்.

[கொடி + தோட்டம்.]

கொடித்தோதிகம் *kodi-t-tōdigam*, பெ.(n.) நீராரை; pseudoferuns marselia qudri-folia (சா.அக.).

[கொடி + தோதிகம்.]

கொடிதினம் *kodidinam*, பெ.(n.) ***கொடிநாள்*** பார்க்க; see *kodi-nāl*.

[கொடி + தினம்.]

கொடிது *kodidu*, பெ.(n.) கொடியது; that which is virulent, harsh. *"வறுமைகொடிது"*.

[கொடியது → கொடிது.]

கொடிதூக்கு-தல் *kodi-tūkku-*, 5 செ.குன்றாவி. (v.t.) புணர்ச்சிக்காக உடையை உயர்த்துதல்; to lift a woman's cloth for the purpose of sexual inter course.

[கொடி + தூக்கு]

கொடிநஞ்சுமாவு *kodi-nañju-māvu*, பெ.(n.) நஞ்சுக்கொடி; umbilical cord (சா.அக.).

[கொடி + நஞ்சு.]

கொடிநடு *kodi-nadu*, பெ.(n.) கொடிக்கயிற்றின் நடுவே ஓடுவதாகச் சொல்லப்பட்ட ஓர் காணா பாதை; a subtte passage supposed to be running in the centre of the spinal cord (சா.அக.).

[கொடி + நடு.]

கொடிநரம்பு *kodi-narambu*, பெ.(n.) 1. மேலேழும்பிக் காணும் உடம்பின் பச்சை நரம்பு; veins seen prominent by raised above the surface of the body. 2. உடம்பில் கொடியைப்போற் படர்ந்து காணும் நரம்பின் கூட்டம்; spinal nerves with their ramifications extending to several parts of the body. 3. உடம்பின் நடுப்பாகத்தில் இதயம், வயிறு, அடிவயிற்றுப்பகுதி ஆகியவற்றில் வலைபோற் காணப்படும் நரம்புக் கூட்டம்; the great net-work of nerves or veins upon the heart, about the stomach and other abdominal viscera (சா.அக.).

[கொடி + நரம்பு.]

கொடிநாட்டியழை-த்தல் *kodi-nātti-y-alai-*, 4 செ.கு.வி (v.i.) உயிர்ப்பிழைக்க கையை நீட்டிச் செய்கை மூலம் உதவி வேண்டுதல்; ask for some help by showing hands to save the life (மீ.பிடி.தொ.).

[கொடி + நாட்டி + அழை-.]

கொடிநாய் *kodi-nāy*, பெ.(n.) சோணங்கி நாய் (வின்.); grey-hound.

[கொடி + நாய்.]

கொடிநாரத்தன் *kodi-nārattan*, பெ.(n.) ***கொடி நாரத்தை*** (அ.வை.ர.1667) பார்க்க; see *kodi-nārattai*.

[கொடி + நாரத்தன்.]

கொடிநாரத்தை *kodi-nārattai*, பெ.(n.) நாரத்தை வகை (சித்.அக.); a kind of citron.

[கொடி + நாரத்தை.]

கொடிநாவல் *kodi-nāval*, பெ.(n.) நாவல் வகை (வின்.); species of jambolanum.

[கொடி + நாவல்.]

கொடிநாள் *kodi-nāl*, பெ.(n.) முன்னாள் படைவீரர் மேம்பாட்டிற்காக நிதி திரட்டும் வகையில் குறிப்பிட்ட நாள்; flag day, observed to raise funds for ex-service men.

[கொடி + நாள்.]

முன்னாள் படைவீரர்களுக்கெனக் குறிப்பிடப்பட்ட முத்திரை அச்சிடப்பட்ட முத்திரைத்தாள், துணி முதலியன விற்கப்படும் நாள்.

கொடிநாளம் *kodi-nālam*, பெ.(n.) 1. பச்சை நரம்பு; vein. 2. காரிரத்தக்குழாய்களடங்கிய வலைபோன்ற கூட்டம்; a great net-work of veins (சா.அக.).

[கொடி + நாளம்.]

கொடிநிம்பியம் *kodi-nimbiyam*, பெ.(n.) வேர்க்கடலை; ground nut (சா.அக.).

[கொடி + நிம்பியம்]

கொடிநிலை *kodi-nilai*, பெ.(n.) 1. கடவுளர்தம் கொடிகளுள் ஒன்றனோடு அரசன் கொடியை உவமித்துப் புகழும் புறத்துறை (பு.வெ. 9,36); theme eulogising the king's flag as resembling that of Brahmā, Visnu or Šiva. 2. கீழ்த்திசையில் நிலையாக எழுஞ்சூரியன்; the sun regularly rising in the east. *"கொடிநிலை கந்தழி வள்ளி"* (தொல். பொருள். 88).

[கொடி = உச்சி. நுனிமேல் கதிரவனை உச்சிக்கிறான் என்பதை ஒப்பு நோக்குக. கொடி + நிலை.]

கொடிநெட்டி *kodi-netti,* பெ.(n.) ***நீர்ச்சுண்டி*** (மலை.); பார்க்க; see *nir-c-cundi,* water mimosa.

[கொடி + நெட்டி.]

கொடிநெல்லி *kodi-nelli,* பெ.(n.) படர்நெல்லி; gooseberry creeper (சா.அக.).

[கொடி + நெல்லி.]

ஒரு காயசித்தி மூலி. சூதத்தை மணியாகப் பண்ணும்.

கொடிநெல்வாயல் *kodi-nel-vāyal,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tiruvallur Dt.

[கொடிநெல்லி → கொடிநெல் + வாயல்]

கொடிநேத்திரிகம் *kodi-nēttirigam,* பெ.(n.) பெருங்குன்றிமணி; a big variety of red bead vine (சா.அக.).

[கொடி + நேத்திரிகம் (நேத்திரிகம் – வ.மொ. (விழி போல்) இருப்பதால் இப் பெயர் பெற்றிருக்கலாம்.]

கொடிநை *kodinai,* பெ.(n.) சுண்டி; water mimosa (சா.அக.).

[கொடி → கொடிநை.]

கொடிப்பசலை *kodi-p-pašalai,* பெ.(n.) 1. மஞ்சட்செம்முள்ளி; common yellow nail-dye. 2. பசலைக்கொடி; spinach creeper. 3. சிறுபசலை; small - leaved Indian spinach (சா.அக.).

[கொடி + பசலை.]

கொடிப்பசளை *kodi-p-pašalai,* பெ.(n.) ***கொடிப் பசலை*** (இ.வ.) பார்க்க; see *kodi-p-pašalai.*

[கொடி + (பசலை) பசளை.]

கொடிப்பட்டை *kodi-p-pattai,* பெ.(n.) நீரிறைக்கும் ஓலைப்பட்டை (வின்.); *ōla*-bucket.

[கொடி + பட்டை.]

கொடிப்படை *kodi-p-padai,* பெ.(n.) சேனையின் முன்னணிப்படை; front rank of an army, van. *"கொடிப்படை போக்கிப் படிப்படை நிறீஇ" (பெருங். மகத. 24:39).*

மறுவ. தூசிப்படை (தூசு : துணிக்கொடி)

[கொடி + படை.]

கொடிப்பந்தர் *kodi-p-pandar,* பெ.(n.) கொடிகள் படர்ந்த பந்தல்; a power or shady retreat made of interwining creepers. *"எழுநிலை மாடமு மிடுகு கொடிப்பந்தரும்" (பெருங். இலாவாண. 15:11).*

[கொடி + (பந்தல்) பந்தர்.]

கொடிப்பயறு *kodi-p-payaru,* பெ.(n.) பயறுவகை (வின்.); a kind of pulse that puts forth tendrils.

[கொடி + பயறு.]

கொடிப்பலாசம் *kodi-p-palāšam,* பெ.(n.) கொடி முருக்கம்; species of palaus climber - Butea superba (சா.அக.).

[கொடி + பலாசம்.]

கொடிப்பவழம் *kodi-p-pavalam,* பெ.(n.) ***பவழம்*** பார்க்க; see *pavalam. "கொளுவொடு படாஅக் கொடிப்பவ ழத்து"* (பெருங். இலாவாண. 2:127).

[கொடி + பவழம்.]

கொடிப்பவளம் *kodi-p-pavalam,* பெ.(n.) பவளக்கொடி; brittle epidermis of the stem of coral.

[கொடி + பவளம்.]

கொடிப்பவுத்திரம் *kodi-p-pavuttiram,* பெ.(n.) குதத்திற்கும் குய்யத்திற்கும் நடுவே கொடிபோல் நீளமாக ஓடும் ஒருவகை மூலநோய்; a kind of fistula or opening near the line of perinellu communicating with the anus or rectum; a fistula through the premium into the anus (சா.அக.).

[கொடி + பவுத்திரம்.]

கொடிப்பாகல் *kodi-p-pāgal,* பெ.(n.) கொடியில் விளையும் பாகற்காய்; spiked bitter cucumber - Momondica charantia (சா.அக.).

[கொடி + பாகல்.]

கொடிப்பாசி *kodi-p-pāši,* பெ.(n.) நீர்ப்பாசிவகை (M.M. 668.); a kind of moss creeping upon water.

மறுவ. சுனைப்பாசி.

[கொடி + பாசி.]

கொடிப்பாசூரி *kodi-p-pāšūri,* பெ.(n.) நத்தைச்சூரி; bristly button weed (சா.அக.).

[கொடி + பாசூரி.]

கொடிப்பாதை *kodi-p-pādai,* பெ.(n.) ***கொடித்தடம்*** (இ.வ.) பார்க்க; see *kodi-t-tadam.*

[கொடி + பாதை.]

கொடிப்பாலை *koḍi-p-pālai,* பெ.(n.) 1. பாலைவகை (L.); greenwax-flower. 2. பாலையாழ்த்திறவகை (திவா.); an ancient secondary melody - type of the *pālai* class.

ம. கொடிப்பால.

[கொடி + பாலை.]

கொடிப்பாவை *koḍi-p-pāvai,* பெ.(n.) 1. ***காட்டுக் கொடி*** பார்க்க; see *kāṭṭu-k-koḍi.* 2. கொடியைப் போன்ற பெண்; a girl slender and wring like a creeper (சா.அக.).

[கொடி + பாவை.]

கொடிப்பிணை *koḍi-p-piṇai,* பெ.(n.) வங்கமணல் (யாழ். அக.); lead ore.

[கொடி + பிணை.]

கொடிப்பிணையல் *koḍi-p-piṇaiyal,* பெ.(n.) நீளப் புனையும் மாலைவகை; a kind of garland.

[கொடி + பிணையல்.]

கொடிப்பிரட்டி *koḍi-p-piraṭṭi,* பெ.(n.) ஒருவகைச் செடி; an unidentified plant (சா.அக.).

[கொடி + பிரட்டி.]

கொடிப்பிரண்டை *koḍi-p-piraṇḍai,* பெ.(n.) பிரண்டைக் கொடி; adamant creeper (சா.அக.).

[கொடி + பிரண்டை.]

கொடிப்பிள்ளை *koḍi-p-piḷḷai,* பெ.(n.) 1. காக்கைக் குஞ்சு; the young of a crow. 2. பள்ளையாடு; a dwarf goat. 3. கொடிசுற்றிப் பிறந்த பிள்ளை; child born with navel-cord round its neck (சா.அக.).

[கொடி + பிள்ளை.]

கொடிப்புங்கு *koḍi-p-puṅgu,* பெ.(n.) ***கொடிப்புன்கு*** பார்க்க; see *koḍi-p-puṉgu.*

[கொடி + புன்கு – கொடிப்புன்கு → கொடிப்புங்கு.]

கொடிப்புடவை *koḍi-p-puḍavai,* பெ.(n.) அறுதலி (விதவை)க்கு முதலாண்டுப் பயன்பாட்டிற்கெனச் சுற்றத்தார் கொடியிலிடும் புதுச்சேலை; new cloth which relatives of a *aṟudali* place on a clothes-line for use during the first year of her widowhood.

[கொடி + புடவை.]

கொடிப்புல் *koḍi-p-pul,* பெ.(n.) ***அறுகு*** பார்க்க; see *aṟugu.* *"கொடிப்புல் லென்று கறிப்பான்"* (சீவக. 932).

மறுவ. கொடியறுகு.

[கொடி + புல்.]

கொடிப்புலி *koḍi-p-puli,* பெ.(n.) நீண்ட வேங்கைப் புலி; a long and thin tiger; a tiger of an extended body resembling a grey-hound (சா.அக.).

[கொடி + புலி.]

கொடிப்புன்கு *koḍi-p-puṉgu,* பெ.(n.) கொடிவகை (L.) hog creeper.

மறுவ. சுரபுன்கு.

[கொடி + புன்கு.]

கொடிப்பூ *koḍi-p-pū,* பெ.(n.) நால்வகைப் பூக்களுட் கொடிகளிற் பூப்பது; flower of creepers, one of *nāl-vagaippū.* *"சின்னப்பூ வணிந்துங் கொடிப்பூக் கொய்தும்"* (பெருங். இலாவாண. 12:130).

[கொடி + பூ.]

கொடிப்பூகம் *koḍi-p-pūgam,* பெ.(n.) காமப்பூ; creeper champauk (சா.அக.).

மறுவ. கொடிச்சம்பங்கி.

[கொடி + பூகம்.]

கொடிப்பூளை *koḍi-p-pūḷai,* பெ.(n.) பூளைக்கொடி; a species of climbing woolplant - Aerua seandens (சா.அக.).

[கொடி + பூளை.]

கொடிப்பை *koḍi-p-pai,* பெ.(n.) 1. பொன்னாங் கண்ணி; sessile plant. 2. ஒரு மீன்; a fish (சா.அக.).

மறுவ. கொடுப்பை.

கொடிபடர்-தல் *koḍi-paḍar-,* 3 செ.கு.வி.(v.i.) கொடி சூழ்தல்; spreading of creeper (சா.அக.).

[கொடி + படர்-.]

கொடிபிடி-த்தல் *koḍi-piḍi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. வேலை நிறுத்தம் மேற்கொள்ளல்; to go on strike. 2. முரணாகச் செயல்படுதல்; to act perversely.

[கொடி + பிடி-.]

கொடிபிள-த்தல் *koḍi-piḷa-,* 4 செ.கு.வி.(v.i.) ***கொடிகிழி-தல்*** பார்க்க; see *koḍi-kiḻi-*

[கொடி + பிள-.]

கொடிபோடு-தல் *koḍi-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) போருக்கு அழைக்கவேணும் வெற்றி குறிக்க

வேனும் கொடி நாட்டுதல்; to hoist a flag as a challenge or signal of victory. 2. உறுதியா யிருத்தல்; to be determined. 3. தன்னதாக்க வழிபண்ணுதல் (யாழ்.அக.); to device ways and means of appropriating.

[கொடி + போடு-.]

கொடிமங்கலம் *kodi-mangalam,* பெ.(n.) மதுரை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Madurai Dt.

[கொடி + மங்கலம்.]

கொடிமணி *kodi-mani,* பெ.(n.) 1. மணிக்குடல்; mesentery retaining the intestines and their appendages. 2. ***கொடிமாதுளை*** பார்க்க (சா.அக.); see *kodi-mādulai.*

[கொடி + மணி.]

கொடிமந்தாரை *kodi-mandārai,* பெ.(n.) மந்தாரைக் கொடி; climbing mountain ebony (சா.அக.).

[கொடி + மந்தாரை.]

கொடிமப்பு *kodi-mappu,* பெ.(n.) கொடிபோன்று நீளமாகக் காட்சி தரும் மேகம்; a cloud in the shape of creeper.

மறுவ. கொடிமேகம்.

[கொடி + மப்பு.]

கொடிமரம் *kodi-maram,* பெ.(n.) 1. கொடியைக் கட்டுவதற்காக நடப்படும் மரம்; a flag-staff. 2. கோவில் கொடிமரம்; flag-staff in a temple.



கொடிமரம்

ம. கொடிமரம்; து.கொடிமர; பட. கொடிமொர.

[கொடி + மரம்.]

கொடிமல்லிகை *kodi-malligai,* பெ.(n.) 1. மல்லிகை (பிங்.); Arabian jasmine. 2. சாதிமல்லிகை (L.); large flowered jasmine.

[கொடி + மல்லிகை.]

கொடிமாசிகள் *kodi-māšigal,* பெ.(n.) நிலையற் றோடும் மேகங்கள் (வின்.); flitting clouds.

[கொடி + மாசி.]

கொடிமாடு *kodi-mādu,* பெ.(n.) 1. நீண்டு தளர்ந்த மாடு (வின்.); bullock, lank and long. 2. கதிரடித்த வைக்கோலில் ஒட்டியுள்ள நெல்மணிகளை அறவே நீக்க மாடுகளைப் பக்கவாட்டில் இணைத்துச் சுற்றிவரச் செய்தலில் (கிடாவடி) வலக்கைப்பக்கம் முதலில் நிற்கும் மாட்டின் பெயர்; the bullock on the right most end of team of bullocks used to go round & round for threshing out the remaining grains from the straw from which most of the paddy has been threshed out by hand.

[கொடி + மாடு.]

கொடிமாதளத்தி *kodi-mādalatti,* பெ.(n.) வேளை; *vēlay* (சா.அக.).

[கொடி + மாதளத்தி.]

கொடிமாதுளை *kodi-mādulai,* பெ.(n.) 1. துரிஞ்சி மாதுளை; creeping anaur. 2. கொம்மட்டி மாதுளை; pomegranate lime.

[கொடி + மாதுளை.]

கொடிமாதுளைச்சோறு *kodi-mādulai-c-cōru,* பெ.(n.) கொடிமாதுளையின் உட்சதைப்பற்று; the pulp of creeper of pomegranate lime (சா.அக.).

[கொடி + மாதுளை + சோறு.]

கொடிமாமரம் *kodi-māmaram,* பெ.(n.) தரையோடு படர்ந்திருக்கும் ஒட்டு மாமரம்; graft mango tree (சா.அக.).

[கொடி + மரம்.]

கொடிமின் *kodi-min,* பெ.(n.) ***கொடிமின்னல்*** பார்க்க; see *kodi-minnal.*

[கொடி + மின்.]

கொடிமின்னல் *kodi-minnal,* பெ.(n.) கொடிபோல் வீசி ஒளிரும் மின்னல்; extended streak of lightning.

[கொடி + மின்னல்.]

கொடிமின்னை *kodi-minnai,* பெ.(n.) மூக்குத்திக் கொடி; pointed leaved hogweed - Boerhaavia rependa alias B. Verticillata (சா.அக.).

[கொடி + மின்னை.]

கொடிமுடி *kodi-mudi,* பெ.(n.) கிளைகள் பிணைத் திருக்கும் செடிவகை (வின்.); a shrub with intertwined branches.

[கொடி + முடி.]

கொடிமுடிந்தவழக்கு *kodi-mudinda-valakku,* பெ.(n.) ஓயாத சிக்கல் வழக்கு (இ.வ.); intricate, never - ending dispute.

[கொடி + முடிந்த + வழக்கு.]

கொடிமுடிபருவதம் *kodi-mudi-paruvadam,* பெ.(n.) வெள்ளிமலை; mountain containing silver ore (சா.அக.).

[கொடி + முடி + பருவதம்.]

கொடிமுடியன் *kodi-mudiyan,* பெ.(n.) ***கொம்பேறி மூக்கன்*** (யாழ்ப்.) பார்க்க; see *komberi-mūkkan.*

[கொடி + முடி +அன். அன் – சொ. ஆ.ஈறு]

கொடிமுடிவாயில் *kodimudi-vāyil,* பெ.(n.) அறமன்றம்; court of justice.

[கொடிமுடி + வாயில்.]

கொடிமுண்டி *kodi-mundi,* பெ.(n.) 1. கொடிமுந்திரி; a kind of grape plant. 2. கொட்டைக்களா; false wild jujube (சா. அக.).

[கொடி + முந்தி – கொடிமுந்தி → கொடிமுண்டி.]

கொடிமுதன்மருந்து *kodi-mudan-marundu,* பெ.(n.) 1.சமூலம்; herbaceous creeper as a whole. 2. பெண்ணின் முதல் தீட்டு; the blood in first menstruation. 3. தலைச்சன் பிள்ளை நச்சுக்கொடி யினின்று தயாரிக்கும் ஓர் சுண்ண மருந்து; a calcium compound prepared from the navel - cord of a first born child (சா.அக.).

[கொடி + முதல் + மருந்து.]

கொடிமுந்திரி *kodi-mundiri,* பெ.(n.) திராட்சை (பதார்த்த.762); grape vine.

ம. கொடிமுந்திரி.

[கொடி + முந்திரி.]

கொடிமுந்திரிகை *kodi-mundirigai* பெ.(n.) ***கொடி முந்திரி*** பார்க்க; see *kodi-mundiri.*

[கொடி + முந்திரிகை.]

கொடிமுரிதம் *kodi-muridam,* பெ.(n.) நேர்வாளம்; croton plant (சா.அக.).

[கொடி + முரிதம்.]

கொடிமுருக்கம் *kodi-murukkam,* பெ.(n.) கொடிப் பலாசம்; a species of palaus climber (சா.அக.).

[கொடி + முருக்கம்.]

கொடிமுல்லை *kodi-mullai,* பெ.(n.) ஊசிமுல்லை (சா.அக.); eared jasmine.

[கொடி + முல்லை.]

கொடிமுறுக்கு *kodi-murukku,* பெ.(n.) நன்றாக ஏறின முறுக்கு (இ.வ.); inextricable twist, as of a twine.

[கொடி + முறுக்கு.]

கொடிமுன்னிகம் *kodi-munnigam,* பெ.(n.) கொடிமுல்லை; eared jasmine.

[கொடி + முள் + இகம் – கொடிமுள்ளிகம் → கொடி முண்ணிகம் → கொடிமுன்னிகம்.]

கொடிமுன்னை *kodi-munnai,* பெ.(n.) மூக்குத்திக் கொடி (L.); pointed leaved hogweed.

[கொடி + முன்னை.]

கொடிமூக்கு *kodi-mūkku,* பெ.(n.) நீண்ட மூக்கு; long slender nose. *"ஒழுகுபொற் கொடிமூக்கும்"* (சீவக.165).

[கொடி + மூக்கு.]

கொடிமூகாக்கினி *kodi-mūgā-k-kini,* பெ.(n.) நெல்லி; gooseberry tree Phyllanthus emblica (சா.அக.).

[கொடி + முகம் + அக்கினி – கொடிமூகாக்கினி (கொ.வ.).]

கொடிமூட்டு[1]–தல் *kodi-mūttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பெண்கள் கருவுயிர்த்தலில் கிழிந்த கொடி மூலத்தைத் தைத்தல்; suturing the torn or lacerated portion of the perineum during child birth; plastic surgery of the perineum (சா.அக.).

[கொடி + மூட்டு–.]

கொடிமூட்டு[2] *kodi-mūttu,* பெ.(n.) கொடிமூலத்தின் தையல்; suture of the perineum (சா.அக.).

[கொடி + மூட்டு.]

கொடிமூலக்கழலை *kodi-mūla-k-kalalai,* பெ.(n.) குதத்திற்கும் குய்யத்திற்கும் நடுவிலுண்டாகும் கழலை; any tumour in the perineum (சா.அக.).

[கொடி + மூலம் + கழலை.]

கொடிமூலம் *kodi-mūlam,* பெ.(n.) 1.நஞ்சுக்கொடி; umbilical cord. 2. வழலை; fuller's earth. 3. கொடியின் அடிவேர்; root of creeper. 4. மரத்தின் மேல் படர்ந்த கொடி; creeper on a tree.

5. குதத்திற்கும் குய்யத்திற்கும் நடுவே கொடியின் இரு பக்கமுள்ள சதைப்பகுதி; the space or area between the anus and the genital organs, perineum. 6. கொடியின் கிழங்கு; the root of a creeper. 7. கொடிக்கயிற்றின் பிறப்பு; the beginning of the spinal cord in the sacral region (சா.அக.).

[கொடி + மூலம்.]

கொடிமூலி *kodi-mūli,* பெ.(n.) 1. சிவப்புச் சித்திர மூலம்; rosy flowered leadwort. 2. மூலிகைக் கொடிகள்; medicinal creepers (சா.அக.).

[கொடி + மூலி.]

கொடிய *koḍiya,* பெ.எ.(adj.) கடுமையான, கொடுமையான; terrible, cruel, severe, intense.

ம. கொடிய.

[கொடு → கொடிய.]

கொடியகடுந்தீ *koḍiya-kaḍunti,* பெ.(n.) 1. கொடிவேலி; leadwort. 2. புடத்திற்குப் போடும் காடாக்கினி; conflagration of fire or great fire used in calcination (சா.அக.).

[கொடிய + கடும் + தீ.]

கொடியகற்பி *koḍiya-kaṟpi,* பெ.(n.) கற்ப மூலிகையான நீலஞ்சோதி எனும் திருகுகள்ளி வேர்; root of twisted milk spurge (சா.அக.).

[கொடிய + கற்பி.]

கொடியசுரம் *koḍiya-šuram,* பெ.(n.) 1. வெப்பக் காய்ச்சல்; thermic fever. 2. கடுமையான காய்ச்சல்; high degree of fever (சா.அக.).

[கொடிய + சுரம்.]

கொடியடுப்பு *koḍi-y-aḍuppu,* பெ.(n.) 1. அடுப்புப் புகை; a kind of domestic oven. 2. பக்க அடுப்பு; side-oven.

ம. கொடியடுப்பு.



கொடியடுப்பு

[கொடி + அடுப்பு.]

கொடியணிவட்டம் *koḍi-y-aṇi-vaṭṭam,* பெ.(n.) சுவர்த்தூணில் அமைக்கப்படும் அழகு அணி; a kind of decoration made in wall pillars.

[கொடி + அணி + வட்டம்.]

கொடியத்தி *koḍi-y-atti,* பெ.(n.) **நீரத்தி** (மலை.) பார்க்க; see *nir-atti.*

[கொடி + அத்தி.]

கொடியதகம் *koḍi-y-adagam,* பெ.(n.) கொடிவேலி சித்திரமூலம்; Plumbago genus (சா.அக.).

[கொடி + அதகம்.]

கொடியந்தம் *koḍi-y-andam,* பெ.(n.) வீணாத்தண்டு வழியாய் மூளையில் போய் ஒடுங்கும் கொடிக் கயிற்றின் முடிவு. the terminal portion of the spinal cord running through the vertebral column and connecting with brain (சா.அக.).

[கொடி + அந்தம்.]

கொடியநிறக்குன்னி *koḍiyaniṟa-k-kuṉṉi,* பெ.(n.) கருநொச்சி; black *notci* (சா.அக.).

[கொடிய + நிறம் + குன்னி.]

கொடியபீசம் *koḍiya-pišam,* பெ.(n.) சீதாங்க நஞ்சு; a mineral poison (சா.அக.).

[கொடிய + பீசம்.]

கொடியமன்னன் *koḍiya-maṉṉaṉ,* பெ.(n.) **கோடாசொரி வைப்புநஞ்சு** (யாழ்.அக.) பார்க்க; see *kōḍāsori-vaippu-nañju.*

[கொடிய + மன்னன்.]

கொடியரசு *koḍi-y-arašu,* பெ.(n.) 1. அரசுவகை; wild pipal. 2. **அவரை** (மலை.) பார்க்க; see *avarai.*

[கொடி + அரசு.]

கொடியராகு *koḍiya-rāgu,* பெ.(n.) கோமேதகம் (யாழ்.அக.); cinnamon stone, a species of garnet.

[கொடிய + ராகு.]

கொடியவர் *koḍiyavar,* பெ.(n.) கொடுமையான குணங்களையுடையவர்; one who is harsh (குறள், 550. பரிமே.) (உரை சொ. 2).

ம. கொடியவன்.

[கொடு → கொடியவர்.]

கொடியவருக்கை *kodiya-varukkai,* பெ.(n.) பெருந்தும்பை; bitter leucus (சா.அக.).

[கொடிய + வருக்கை.]

கொடியவரை *kodi-y-avarai,* பெ.(n.) அவரை; country bean creeper-Dolichos albus (சா.அக.).

[கொடி + அவரை.]

கொடியவியாதி *kodiya-viyādi,* பெ.(n.) ***கொடிய நோய்*** பார்க்க ; see *kodiya-nōy.*

[கொடிய + வியாதி.]

கொடியவீரன் *kodiya-viran,* பெ.(n.) ***கோடாசொரி வைப்புநஞ்சு*** (வின்.) பார்க்க; see *kōdāsori-vaippu-nañju.*

[கொடிய + வீரன்.]

கொடியழிஞ்சில் *kodi-y-aliñjil,* பெ.(n.) கூடவழிஞ்சில்; alangiam creeper.

மறுவ. கூடவழிஞ்சில்.

[கொடி + அழிஞ்சில்.]

கொடியறுகு *kodi-y-arugu,* பெ.(n.) அறுகுவகை; a species of Bermuda grass.

[கொடி + அறுகு.]

கொடியன்[1] *kodiyan,* பெ.(n.) தீயன் (சூடா.); cruel man.

[கொடுமை → கொடியன்.]

கொடியன்[2] *kodiyan,* பெ.(n.) செங்கோள் (கேது) (சூடா.); the descending node.

[கொடுமை → கொடியன்.]

கொடியனல்ராகு *kodiyanal-rāgu,* பெ.(n.) கோமேதகம்; sardonyx (சா.அக.).

[கொடியனல் + ராகு.]

கொடியாச்சி *kodi-y-ācci,* பெ.(n.) பிள்ளைத் தாய்ச்சிக் கொடி; an unknown plant, probably a creeper useful to pregnant woman (சா.அக.).

[கொடி + ஆய்ச்சி.]

கொடியாடு *kodi-y-ādu,* பெ.(n.) ஆண்டிற் கொருமுறை ஒரு குட்டி ஈனும் நீண்ட காலுள்ள ஆடு; long legged goat which annually begets one kid, opp. to *palladu.* *"கொடியாடு நற்கறியாம்" (பதார்த்த. 845.).*

மறுவ: வெள்ளாடு.

[கொடி + ஆடு.]

கொடியாட்டுக்கறியை அதிகாலையில் சமைத்துச் சாப்பிட இடுப்புவலி, ஈளை, வெட்டைச் சூடு போகும் எனச் சா.அக. கூறும்.

கொடியாடை *kodi-y-ādai,* பெ.(n.) ***கொடிச்சீலை*** பார்க்க; see *kodi-c-cilai.* *"கொடியாடை முதலானது களைத் தைக்கிறதும்"* (கோவிலொ. 94).

ம. கொடியாட.

[கொடி + ஆடை.]

கொடியாந்தரம் *kodi-y-āndaram,* பெ.(n.) கொடுமை; cruelty.

[கொடிய + அந்தரம்.]

கொடியாம்பல் *kodi-y-āmbal,* பெ.(n.) 1. ஆம்பல் கொடி; Indian water lily. 2. நீராம்பல் என்னும் ஒரு வகைப் பாண்டு நோய்; a kind of ascites (சா.அக.).

[கொடி + ஆம்பல்.]

கொடியார்கூந்தல் *kodiyār-kūndal,* பெ.(n.) கொடியார் கூந்தலெனும் பூண்டுவகை; a kind of plant called *kodiyār-kūndal.*

மறுவ. அம்மையார் கூந்தல்.

[கொடியார் (பெண்டிர்) + கூந்தல்.]

கொடியால் *kodi-y-āl,* பெ.(n.) ஆலமரவகை (வின்.); a kind of banyan.

[கொடி + ஆல்.]

கொடியாலம் *kodi-y-ālam,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்தில் காவிரித் தென்கரையில் அமைந்த பண்டைய ஊர்; a village in *Thanjāvūr* Dt. *"தென்கரைராச கம்பீர வளநாட்டுக் கொடியாலம் ஊர் ஒன்று" (தெ.இ.கல்.329, 2).*

[கொடி + ஆலம்.]

கொடியாள்[1] *kodi-y-āl,* பெ.(n.) கொடி போன்ற பெண்; slender and beautiful lady as a vine. *"கொடியாளை.... மருமானுக் கருள்செய்ய"* (சீவக. 1057).

ம. கொடியாள்.

[கொடி → கொடியாள்.]

கொடியாள்[2] *kodiyāl,* பெ.(n.) கொடுமையானவள்; cruel woman. *"உள்ளமுங் கோடிய கொடியாள்"* (கம்பரா. மந்தரை.81).

ம. கொடியாள்.

[கொடுமை → கொடியாள்.]

கொடியாள்கூந்தல் *kodiyāḷ-kūndal,* பெ.(n.) ***கொடியார்கூந்தல்*** (வின்.) பார்க்க; see *koḍiyār-kūndal*.

[கொடியாள்[1] + கூந்தல்.]

கொடியாளம் *koḍi-y-āḷam,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கொடியாலம் →கொடியாளம்]

கொடியாளன் *koḍi-y-āḷaṉ,* பெ.(n.) கோடா கௌரி செய்நஞ்சு; a kind of prepared arsenic (சா.அக.).

[கொடு → கொடி + ஆளன்.]

கொடியான் *koḍiyāṉ,* பெ.(n.) கொடுமையானவன்; cruel man. *"கொடியான் வருமென்று குலாவுவதோ" (கம்பரா. உருக்காட்டு.9).*

[கொடியன்[1] → கொடியான்.]

கொடியிடை *koḍi-y-iḍai,* பெ.(n.) சிற்றிடை; slim waist, or loins (suggestive of slender shapeliness of a female).

ம. கொடியிட, கொடிநடுவு.

[கொடி + இடை.]

கொடியிலஞ்சு *koḍiyil-añju,* பெ.(n.) கொடியில் காய்க்கின்ற கறிகள் ஐந்து; creeper vegetables fruits. *"அடைக்காயமுது இலையமுது கொம்பில் அஞ்சு கொடியில் அஞ்சுமுதல் கறியமுதும்" (S.I.I.XXIV.412).*

[கொடி + இல் + (ஐந்து) அஞ்சு.]

கொடியிலந்தை *koḍi-y-ilandai,* பெ.(n.) இலந்தை வகை (வின்.); a spreading shrub.

[கொடி + இலந்தை.]

கொடியிலாஞ்சு *koḍi-y-ilāñju,* பெ.(n.) கொடியில் காய்க்கின்ற கறிகள் ஐந்து; creeper vegetable fruits five.

[கொடி + இலாஞ்சு.]

கொடியிலை[1] *koḍi-y-ilai,* பெ.(n.) மருந்துக்குப் பயன்படும் இலை வகைகள் (பதார்த்த குண சிந்தாமணியிற் சொல்லியுள்ளவை); creeper leaves useful in medicine as laid down in Tamil Materia medica viz.

[கொடி + இலை.]

வகைகள்: 1. தூதுளையிலை, 2. பறங்கியிலை, 3. சுரையிலை, 4. பேய்ச்சுரையிலை, 5. பாகலிலை, 6. அவரையிலை, 7. காராமணியிலை, 8. கொடிக் குறிஞ்சாவிலை, 9. கறிவேப்பிலை, 10. ஊசிப்பாலை யிலை, 11. கோவையிலை, 12. முசுமுசுக்கையிலை, 13. கோழி யவரையிலை, 14. முயற்காதிலை, 15. கழற்சி யிலை, 16. வெண் கழற்சியிலை, 17. வரிக்கும்மட்டியிலை, 18. சிறு பூனைக் காலியிலை, 19. வேலிப்பருத்தியிலை, 20. துராயிலை, 21. செந்துராய் இலை, 22. நச்சு மூங்கிலிலை, 23. சதாப்பிலை, 24. கடற்பாலையிலை, 25. நொச்சியிலை, 26. தழுதாழையிலை.

கொடியிலை[2] *koḍi-y-ilai,* பெ.(n.) வாழையிலையின் நுனிப்பகுதி; the tip of the plantain leaf (சேரநா.).

ம. கொடியில.

[கொடி + இலை.]

கொடியிறக்கம் *koḍi-y-iṟakkam,* பெ.(n.) முடிவு பண்ணுதல் (யாழ்.அக.); concluding, finishing.

[கொடி + இறக்கம்.]

கொடியிறக்கு[1]-தல் *koḍi-y-iṟakku-,* 5 செ. குன்றாவி.(v.t.) முடிவு பண்ணுதல்; to conclude.

ம. கொடியிறக்குக.

[கொடி + இறக்கு-.]

கொடியிறக்கு[2]-தல் *koḍi-y-iṟakku-,* 5 செ. குன்றாவி.(v.t.) 1. ஏற்றின கொடியைத் தாழ்த்துதல்; to strike or lower a flag. 2. திருவிழா முடிவாகக் கொடியைக் கீழிறக்கிவிடுதல்; to take down the temple flag, as indicating the close of a festival. 3. காற்றாடியை இறக்குதல் (யாழ்ப்.); to pull or haul down a kite.

[கொடி + இறக்கு-.]

கொடியீச்சு *koḍi-y-īccu,* பெ.(n.) ***சவ்வரிசி*** பார்க்க; see *cavvarişi*.

[கொடி + ஈச்சு.]

கொடியீச்சை *koḍi-īccai,* பெ.(n.) ***சீமையீச்சை***; common Indian fern.

[கொடி + ஈச்சை.]

கொடியீசு *koḍi-yīšu,* பெ(n.) ***கொடியீச்சை*** பார்க்க; see *koḍi-yīccai* (சா.அக.).

[கொடி + ஈசு.]

கொடியூசிதம் *kodi-y-ūšidam,* பெ.(n.) பச்சைத் திப்பிலி; green plant of long pepper (சா.அக.).

[கொடி + ஊசிதம்.]

கொடியூமத்தை *kodi-y-ūmattai,* பெ.(n.) ஊமத்தைக் கொடி; datura creeper (சா.அக.).

[கொடி + ஊமத்தை.]

கொடியூர் *kodi-y-ūr,* பெ.(n.) திருவண்ணாமலை அருகே அமைந்துள்ள சிற்றூர்; a small village near Thiruvannāmalai.

[கொடி + ஊர்.]

ஆரல் விளக்கணி (கார்த்திகைத்தீபம்) விழாவிற் குரிய கொடியினை இவ் வூரிலிருந்து எடுத்துச் செல்வதால் இவ் வூர் கொடியூர் எனப் பெயர் பெற்றதாம்.

கொடியெடு-த்தல் *kodi-y-edu-,* 4 செ.கு.வி. (v.i.) அறைகூவுகை, வெற்றி என்பவற்றின் அறிகுறியாகக் கொடி பிடித்தல்; to raise the standard as a signal of a challenge or victory. *"நுண்கலை நீத்த நீந்திக் கொடியெடுத் தவர்க்கு நல்கு"* (சீவக. 291).

[கொடி + எடு-.]

கொடியெலுமிச்சை *kodi-y-elumiccai,* பெ.(n.) எலுமிச்சை வகை (பதார்த்த. 678.); Italian lemon.

[கொடி + எலுமிச்சை.]

கொடியேற்றம் *kodi-y-ēṟṟam,* பெ.(n.) திருவிழாத் தொடக்கத்தில் கொடிமரத்தில் கொடியை யுயர்த்துகை; hoisting a flag in the temple at the commencement of a periodical festival.

ம. கொடியேற்றம்.

[கொடி + ஏற்றம்.]

கொடியேற்று[1]-தல் *kodi-y-ēṟṟu-,* 5 செ.கு.வி.(v.i.) திருவிழாத் தொடக்கத்தில் கொடியை உயர்த்துதல்; to hoist a flag in a temple indicating the beginning of a periodical festival. *"திருக்கொடி யேற்று நான்று" (S.I.I. II, 125).*

ம. கொடியேற்றுக.

[கொடி+ ஏற்று-.]

கொடியேற்று[2] *kodi-y-ēṟṟu,* பெ.(n.) **கொடியேற்றம்** பார்க்க; see *kodi-y-ēṟṟam. "காமன்கொடி யேற்றென வியப்ப" (குமர. பிர. முத்துக். 77).*

[கொடி + ஏற்று.]

கொடியேறு *kodi-y-ēṟu,* பெ.(n.) திருவிழாத் தொடங்குவதைக் குறிக்கக் கொடியேறுதல்; the flag to be hoisted in temples as an indication of festival.

ம. கொடியேறுக.

[கொடி + ஏறு.]

கொடியொட்டி *kodi-y-otti,* பெ.(n.) கருப்பையை அடுத்து ஒட்டிக்கொண்டிருக்கும் நஞ்சுக்கொடியின் சதைப் பாகம்; that part of the placenta which comes next to uterine wall (சா.அக.).

[கொடி + ஒட்டி.]

கொடியோடு-தல் *kodi-y-ōdu-,* 5 செ.கு.வி. (v.i.) 1.கொடியுண்டாகிப் படர்தல் (இ.வ.); to shoot forth tendrils. 2. கை அல்லது கண் வரைவு (ரேகை) நீளுதல்; to be marked with long-lines as palm; to be marked with fine red capillary streaks, as eyes, etc., 3. இறக்குங்காலத்தில் மூச்சு இழைதல்; to be feeble, as breath at the time of death.

[கொடி + ஓடு-.]

கொடியோன்[1] *kodiyōṉ,* பெ.(n.) தீயவன்; cruel man. *"கொடியோர்த் தெறுதலும்"* (புறநா. 29:9).

ம. கொடியோன்.

[கொடு (கொடுமை) → கொடியோன்.]

கொடியோன்[2] *kodiyōṉ,* பெ.(n.) 1. **கற்றாழை** (மலை.) பார்க்க; see *kaṟṟālai.* 2. கறிப்புடோல்; vegetable gourd or snake gourd. 3. கற்பூரம்; champor. 4. வீரம்; corrosive sublimate.

[கொடி → கொடியோன்.]

கொடிலி *kodili* பெ.(n.) விட்டில்பூச்சி; kokra laurel (சா.அக.).

[கூடு + இல்லி – கூடில்லி → கொடில்லி → கொடிலி (கொ.வ).]

கொடிவகை *kodi-vagai,* பெ.(n.) கொடி; creeper.

[கொள் → கொடு → கொடி. கொள் = பற்று.]

கொடிவங்கம் *kodi-vaṅgam,* பெ.(n.) வங்கமணல்; lead ore (சா.அக.).

[கொடி + வங்கம்.]

கொடிவசலி *kodi-vašali,* பெ.(n.) நல்ல பாலை; green - wax flower (சா.அக.).

மறுவ. கொடிப்பாலை.

[கொடி + வசலி.]

கொடிவசலை *koḍi-vaśalai,* பெ.(n.) 1. மஞ்சட் செம்முள்ளி; common yellow nail-dye-Barberia prionitis. 2. பசலைக்கொடி; spimach creeper. 3. சிறுபசலை; small leaved Indian spinach (சா.அக.).

மறுவ. கொடிப்பசலை.

ம. கொடிவசள.

[கொடி + (பசலை) வசலை.]

கொடிவஞ்சி *koḍi-vañji,* பெ.(n.) வஞ்சிக்கொடி; slender rattan (சா.அக.).

[கொடி + வஞ்சி.]

கொடிவட்டக்கல் *koḍi-vaṭṭa-k-kal,* பெ.(n.) நஞ்சுக் கொடியில் உண்டாகும் கல் அல்லது மணலைப் போன்ற திரட்சி; calcareous or sabulus deposits contained in the placenta (சா.அக்.)

[கொடி + வட்டம் + கல்.]

கொடிவட்டப்பிறை *koḍi-vaṭṭa-p-piṟai,* பெ.(n.) கருவில் இரட்டைப் பிள்ளை உண்டாகியிருக்கும் போது சில வேளை ஏற்படும் பிறையைப் போன்ற கொடி; a crescentic form of placenta, sometimes occuring in twin pregnancy (சா.அக.).

[கொடி + வட்டம் + பிறை.]

கொடிவட்டம் *koḍi-vaṭṭam,* பெ.(n.) நஞ்சுக்கொடி கருப்பையில் ஒட்டிக்கொண்டிருக்கும் வட்டப்பகுதி; the round, flat organ within the uterus which establishes communication between the mother and child by means of the umbilical cord - Placenta (சா.அக.).

[கொடி + வட்டம்.]

கொடிவடாகிகம் *koḍi-vaḍākigam,* பெ.(n.) காமப்பூ; creeper champauk (சா.அக.).

[கொடி + (வளங்கம் (பிறை) → வடங்கம்) வடாகிகம்.]

கொடிவயலை *koḍi-vayalai,* பெ.(n.) ***கொடிப் பசலை*** பார்க்க; see *koḍi-p-paśalai.*

[கொடி + (வசலை) வயலை.]

கொடிவலசை *koḍi-valaśai-,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tiruvallur Dt.

[கொடி + வலசை.]

கொடிவலி[1]–த்தல் *koḍi-vali-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1.காற்றாடிக் கயிற்றை இழுத்தல்; to draw in the string of a kite. 2. வளார்களைச் செடியினின்றும் எடுத்தல்; to draw out a withe for use.

[கொடி + வலி–.]

கொடிவலி[2] *koḍi-vali,* பெ.(n.) குதத்திற்கும் குய்யத்திற்கும் இடையே பெண்களுக்குக் காணும் வலி; a chronic rupture in females between the rectum and the vagina - perineal rupture (சா.அக.).

[கொடி + வலி.]

கொடிவலை *koḍi-valai,* பெ. (n.) இரண்டு தூண்களை இணைக்கும் சிறிய உத்தரம்; a cross beam which connects two pillars (கட்.தொ.)

[கொடி + வலை.]

கொடிவழி *koḍi-vaḻi,* பெ.(n.) 1.ஒற்றையடிப்பாதை (இ.வ.); foot-path. 2. குடிவழி; genealogical tree.

[கொடி + வழி.]

கொடிவழித்தீர்த்தம் *koḍi-vaḻi-t-tīrttam,* பெ.(n.) திருப்பதி மலையிலுள்ள ஒரு நல்வினைச் சுனை; a sacred spring on Tirupati hills. *'கொடிவழித் தீர்த்த முதலிய மிக்க... வேங்கடம்' (சிலப். 11:41, உரை).*

[கொடி + வழி + தீர்த்தம்.]

கொடிவழுதலை *koḍi-vaḻutalai,* பெ.(n.) வழுதுணைவகை (யாழ். அக.); a kind of night shade.

[கொடி + வழுதலை.]

கொடிவாகனன் *koḍi-vāganaṉ,* பெ.(n.) காக்கையை ஊர்தியாகக் கொண்ட (சனி) காரிக்கோள்; Planetary god šani with crow in his standard.

[கொடி + வாகனன்.]

கொடிவிசி *koḍi-viśi,* பெ.(n.) வட்டமான கட்டுநார்; round ligament (சா.அக.).

[கொடி + விசி. விசி = கட்டு.]

கொடிவிடு–தல் *koḍi-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. ***கொடியோடு[1]–,*** பார்க்க; see *koḍi-y-ōḍu-,* 2. மிகுதியாதல்; to increase, shoot up. *"காமங் கொடிவிட" (பரிபா. 6:103).*

[கொடு + விடு–.]

கொடிவிதை *koḍi-vidai,* பெ.(n.) மோதிரக்கண்ணி; climbing flax (சா.அக.).

[கொடி + விதை.]

கொடிவிரியன் *koḍi-viriyaṉ,* பெ.(n.) செவ்விரியன்; red viper (சா.அக.).

[கொடி + விரியன்.]

கொடிவிரை *kodi-virai,* பெ.(n.) கொடிச்சணல்; creeping falsah; climbing flax (சா.அக.).

[கொடி + விரை.]

கொடிவீசு-தல் *kodi-visu-,* 15 செ.கு.வி.(v.i.) ***கொடியோடு***[1] பார்க்க; see *kodi-y-ōdu-.*

[கொடி + வீசு-.]

கொடிவீடு *kodi-vidu-,* பெ.(n.) படர்கொடிகளால் அமைந்த வீடு (பெருங். உதயணன்சரித். ப. 199); arbour, summer - house.

[கொடி + வீடு.]

கொடிவேம்பு *kodi-vēmbu,* பெ.(n.) கொடியாகப் படர்ந்த வேம்பு; margosa creeper (சா.அக.).

[கொடி + வேம்பு.]

கொடிவேர் *kodi-vēr,* பெ.(n.) 1. தலைச்சன் பிள்ளை; the first- born child of a woman. 2. கொடியின்வேர்; the root of a creeper. 3. ***கொடிவேலி*** பார்க்க;see *kodi-vēli.* 4. நஞ்சுக்கொடி வட்டம்; placenta (சா.அக.).

[கொடி + வேர்.]

கொடுவேரி *kodu-vēri,* பெ.(n.) ***கொடுவேலி*** பார்க்க; see *kodu-vēli* (வேளாண்.கலை.அக.).

[கொடு + வேரி.]

கொடிவேல் *kodi-vēl,* பெ.(n.) வேலன்கொடி; acacia creeper (சா.அக.).

[கொடி + வேல்.]

கொடிவேலம் *kodi-vēlam,* பெ.(n.) 1. முள்ளில்லாத வேல்; American sumach. 2. ஒருவகைப் பெரிய நீண்ட கத்தரிக்காய்; a variety of large and long shapped brinjal (சா.அக.).

[கொடி + வேல் (அம் – சொ.ஆ.ஈறு).]

கொடிவேலன் *kodi-vēlan,* பெ.(n.) ***திவிதிவி*** பார்க்க; see *divi-divi.*

[கொடி + வேலன்.]

கொடிவேலி *kodi-vēli,* பெ.(n.) 1. ***கொடுவேலி*** பார்க்க; see *kodu-vēli.* 2. கொடு வேலி வகை (L.); rosy flowered leadwort.

மறுவ. சித்திரமூலம்.

[கொடுவேலி → கொடிவேலி.]

கொடிற்றுக்கோல் *kodirru-k-kōl,* பெ.(n.) செங்கல் முதலியவற்றைப் பெயர்த்தெடுப்பதற்குக் கள்வர் பயன்படுத்துங்கருவி (சிலப்.16:142, உரை); jemmy, crow-bar, one of the implements of a burglar for removing stones from a wall.

[கொடிறு + கோல்.]

கொடிற்றுச்சன்னி *kodirru-c-canni,* பெ.(n.) பற்கள் பூட்டிக்கொள்ளும்படி செய்யும் நரப்பிசிவு வகை; lock-jaw, tetanus.

[கொடிறு + சன்னி.]

கொடிறு[1] *kodiru,* பெ.(n.) 1. கதுப்பு; cheek, jaw. *"கொடிறுடைக்குங் கூன்கையர்" (குறள். 1077).* 2. யானை மதச்சுவடு (பிங்.); marks of elephant's must. 3. குறடு; pincers. *"கொடிறும் பேதையுங் கொண்டது விடா" (திருவாச. 4:63).*

[கொடு → கொடிறு.]

கொடிறு[2] *kodiru,* பெ.(n.) எட்டாவது கோள், மீன், பூசம்; eigth naksatra pūšam.

[கொடு→ கொடிறு (குறடு).]

கொடு[1]**-த்தல்** *kodu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1.ஈதல்; to give, grant, supply. *"கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க்கு" (குறள்,1005).* 2.பெற்றெடுத்தல்; to bring forth. *"பார்வதி யேழுலகுங் கொடுத்தாள்" (பிரமோத். 9:61).* 3. பங்கிடுதல்; to divide, distribute, as a sum of money. இந்தத் தொகையைப் பத்துப்பேருக்குக் கொடு (இ.வ.). 4. விற்றல்; to sell. *"தில்லைமுன்றிற் கொடுக்கோ வளை" (திருக்கோ. 63).* 5. உடன்படுதல்; to allow, permit. *"மலரன்றி மிதிப்பக் கொடான்" (திருக்கோ. 303).* 6. சாகக் கொடுத்தல்; to lose by death, as giving to Yama. *"நீபயந்த கோட்டானைத் தானே கொடு" (தனிப்பா. 1,35:68).* 7. திட்டுதல்; to abuse roundly. நன்றாய்க் கொடுத்தாளா? வேணும், வேணும் (இ.வ.). 8. அடித்தல்; to belabour, thrash.

[கொள் → கொடு.]

கொடு[2] *kodu-,* து.வி. (aux.v.) ஒரு துணை வினை; an auxilary verb, as in. சொல்லிக்கொடு, முடித்துக்கொடு.

[கொள் → கொடு.]

கொடு[3] *kodu,* பெ.(n.) 1. வளைந்த; crooked. 2. கொடிய; violent. 3. கோணல்; crookedness (சா.அக.).

[கொள் → கொடு.]

kodu **Tam. Mal.** fierce, extreme, rough, lit., crooked - e.g., *kodukku,* **Tam.** The claws of the crab; *kodi-il,* **Mal.** pincers comp. **Sans.** kut, crooked (DGDFL.584).

கொடு[4]–த்தல் *kodu-,* பெ.(n.) 1.பறிகொடுத்தல்; losing by death. 2. மருந்து கொடுத்தல்; administering or giving internally as medicine. 3. கொடுத்தல்; (in alchemy) nourishing a metal in fusion with cross-powders (சா.அக.).

[கொள் → கொடு.]

கொடுக்கல்வாங்கல்[1] *kodukkal-vāṅgal,* பெ.(n.) பணங் கொடுத்து வாங்குகை (உ.வ.), வட்டித் தொழில்; money transactions, lending and borrowing.

[கொடுக்கல் + வாங்கல்.]

கொடுக்கல்வாங்கல்[2] *kodukkal-vāṅgal,* பெ.(n.) பெண் கொடுத்துவாங்குகை, எதிர் பெண் எடுத்தல்; to take bride in exchange.

[கொடுக்கல் + வாங்கல்.]

கொடுக்கறு–த்தல் *kodukkaṟu-,* 4 செ.குன்றாவி. (v.t.)(தேட்கொடுக்கை நறுக்குதல்) குறும்புத் தனத்தை அடக்குதல்; to break down one's mischievous tendency. lit. to cut off the sting of a scorpion .

[கொடுக்கு + அறு–.]

கொடுக்கறுவாள் *kodukkaṟuvāḷ-,* பெ.(n.) ஒருவகை அறுவாள்; a kind of knife.

[கொடு - கொடுக்கு (வளைவு) + அறுவாள்.]

கொடுக்கறுவாள்

கொடுக்கன்[1] *kodukkaṉ,* பெ.(n.) தேள்வகை (யாழ்ப்.); a kind of scorpion (வே.க. 166).

[கொடு → கொடுக்கன்.]

கொடுக்கன்[2] *kodukkaṉ,* பெ.(n.) மகன்; son. வயிர மேகனார் கொடுக்கன் சிற்றன்புலியூர் நாடன்(S.I.I.-VII, 32).

தெ. கொடுக்கு

[த. குழகன் → தெ. கொடுக்கு. குழகன் → குடகன் → கொடுக்கன்.]

கொடுக்காடுபிடிக்கை *kodukkādu-pidikkai,* பெ.(n.) ***கொழுத்தாடு பிடிக்கை*** பார்க்க; see *koluttādu-pidikkai.*

[கொடுக்கு + ஆடு + பிடிக்கை.]

கொடுக்காய் *kodu-k-kāy,* பெ.(n.) ***கொடுக்காய்ப் புளி*** பார்க்க; see *kodukkāy-p-puli.*

[கொடு + காய்.]

கொடுக்காய்ப்புளி *kodukkāy-p-puli,* பெ.(n.) மரவகை; Manilla tamarind.

[கொடுக்காய் + புளி. கொடு = வளைவு, கொடுக்காய் = வளைந்தகாய்.]

கொடுக்கான் *kodukkāṉ,* பெ.(n.) 1. நட்டுவாய்க் காலி; black lobster mouthed - legged scorpion (சா.அக.). 2. தேள்; scorpion.

[கொடுக்கன் → கொடுக்கான்.]

கொடுக்கிலை *kodukkilai,* பெ.(n.) 1. தேட்கொடுக்கி யிலை; leaf of scorpion plant. 2. தேள்கொடுக்கி; scorpion plant. 3. வயற்கொடுக்கி; field scorpion plant (சா.அக.).

[கொடுக்கு + இலை.]

கொடுக்கு[1] *kodukku,* பெ.(n.) 1. கவர்; divarication of branches 2. பின் (கோவணம்); back-lap.

[குள் → கொடு → கொடுக்கு.]

கொடுக்கு[2]–தல் *kodukku-,* 18 செ.கு.வி.(v.i.), ***கொடு[1]–த்தல்*** பார்க்க; see *kodu-.*

[கொடு → கொடுகு.]

கொடுக்கு[3]–தல் *kodukku-,* 5 செ.கு.வி.(v.i.) நடுக்குதல் (இ.வ.); to cause one to shudder.

[கொடு → கொடுகு → கொடுக்கு.]

கொடுக்கு[4] *kodukku,* பெ.(n.) 1.தேள் முதலிய வற்றின் கொட்டும் உறுப்பு; sting of a wasp, hornet, scorpion. தேளுக்குக் கொடுக்கிலே நஞ்சு, தேவடியாளுக்கு உடம்பிலே நஞ்சு (பழ). 2. நண்டு முதலியவற்றின் இடுக்கிக் கால் (உ.வ.); claws of a crab, lobster. 3. குறும்பன், தீக்குணப் பையன்; mischievous lad. 4. ஆடை முதலியவற்றிற் கட்டிவிடுந் தொங்கல்; ornamental hangings or ends of cloth in wear. *"கச்சை புனைந்ததிலே விட்டான் பெருங் கொடுக்கு"* (திருவாலவா.30:9).

5. மூலத்தாறு; cloth passed between the legs and tucked up behind.

[கொடு → கொடுக்கு.]

கொடுக்கு[5] *koḍukku,* பெ.(n.) மகன் (இ.வ.); son.

[த. குழகன்; தெ. கொடுக்கு.]

கொடுக்குக்கட்டிநில்-தல் (நிற்றல்) *koḍukku-k-katti-nil-,* 14 செ.கு.வி.(v.i.) 1.விடாப்பிடியா யிருத்தல்; to stand with a firm resolve; to be resolute or determined 2. ஊக்கமாயிருத்தல்; to be earnestly engaged, as in an enterprise.

[கொடுக்குக்கட்டி + நில்.]

கொடுக்குப்பிடி-த்தல் *koḍukku-p-piḍi-,* 18 செ.குன்றாவி. (v.t.) ஒருவனை விடாது ஊழியன் போன்று, பின்தொடர்ந்து திரிதல்; to act as a person's satellite or underling.

[கொடுக்கு + பிடி-.]

கொடுக்குமால் *koḍukku-māl,* பெ.(.n.) கலத்தின் முன்பகுதியில் காப்புக்காக அமைக்கப்பட்ட முக்கோணம் போன்ற காப்புப் பகுதி; jib, triangular portion of the boat or ship.

[கொடுக்கு + மால்.]

கொடுக்கூர் *koḍukkūr,* பெ.(n.) சேரநாட்டில் புகழ் பெற்ற ஊர்களிலொன்று; a famous village in *Cēra* kingdom.

[கொடுக்கு + ஊர்.]

கொடுக்கூர்ப்போர் *koḍukkūr-p-pōr,* பெ.(n.) சேரன் செங்குட்டுவன் செய்த போர்களில் குறிப்பிடத்தக்கது; site of a remarkable battle waged by *Cēraṉ Šeṅguṭṭuvaṉ* and Pandiya etc., kings.

[கொடுக்கூர் + போர்]

சேரன் செங்குட்டுவன் கொங்கர் செங்களத்தே நடந்த போரில் தன்னை எதிர்த்த கொங்கர், சோழர், பாண்டியர் ஆகியோரை வென்றதாக இளங்கோவடி களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொடுகணி *koḍu-kaṇi,* பெ.(n.) 1.சிற்றாமுட்டி; rose coloured sticky mallow. 2. சிறுகாஞ்சொறி; small climbing nettle. 3. காட்டெலுமிச்சை; wild lime (சா.அக.).

[கொடு + (கள்) கணி]

கொடுகிலை *koḍugilai-.* பெ.(n.) நகுதலிலை; common cherry nutmeg.

[கொடுகு + இலை.]

கொடுகு[1]-தல் *koḍugu-,* 5 செ.கு.வி.(v.i.) 1.குளிரால் நடுங்குதல் (இ.வ.); to shrink or shiver with cold. 2. பற்கூசுதல்; to have the teeth set on edge (மு.தா.84.). பற்கொடுகுதல் அதிகமா யிருக்கிறது (உ.வ.).

ம. கோடுக.

[குள் → குடு → கொடு → கொடுகு.]

கொடுகு[2]-தல் *koḍugu-,* 10 செ.கு.வி.(v.i.) கொடுமையாதல்; to be cruel, ruthless. *"கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்" (தேவா. 918:1).*

[கொடு → கொடுகு.]

கொடுகொட்டி *koḍu-koṭṭi,* பெ.(n.) 1. பதினோராடல் களுள், முப்புரம் எரித்தஞான்று சிவனாடிய கூத்து; Šiva's dance on the destruction of Tiripuram, one of 11 *kūttu. "இமையவ னாடிய கொடுகொட்டி யாடலும்" (சிலப். 6:43).* 2. ஒருவகைப் பறை; a kind of drum. *"குடமுழவங் கொடுகொட்டி குழலு மோங்க" (தேவா. 225:2).*

[கொடுங்கொட்டி → கொடுகொட்டி (நச்.).]

எண்திசையும் தீ எரியக்கண்டு இரங்காது கைகொட்டி நின்று ஆடுதலிற் கொடுமை யுடைத்தாதல் நோக்கி கொடுகொட்டி என்று பெயராயிற்று [அடியார்க். சிலப். 6:43].

கொடுங்கொட்டி கொடுகொட்டி எனத்திரிபுற்றது. எல்லாவற்றையும் அழித்து நின்று ஆடுதலின் கொடுங்கொட்டி என்றார். கொட்டுவது கொட்டி. கொட்டப்படும் இசைக்கருவிகளின் பாடலுக்கு இசைந்தனவும் ஆடலுக்கு இசைந்தனவும் என இருவகைப்படும். இங்கு கொட்டி என்பது ஆடலுக்கு இசைந்த கைகொட்டு ஓசையைக் குறித்தது. கொடுகொட்டி ஆடலைக் கொட்டிச் சேதம் எனவும் கூறுவர்.

கொடுகொடு-த்தல் *koḍukoḍu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. குளிரால் நடுங்குதல்; to shiver or tremble with cold. 2. சடுதிப்படுதல் (இ.வ.);to be hasty.

[குடுகுடு → கொடுகொடு.]

கொடுங்கண் *koḍuṅ-kaṇ,* பெ.(n.) தீமை விளை விக்கும் பார்வை (இ.வ.); evil-eye.

[கொடும் + கண்.]

கொடுங்கரி *koḍuṅ-kari,* பெ.(n.) பொய்ச்சாட்சி (யாழ். அக.); false witness.

[கொடுமை + கரி.]

கொடுங்களூர் *koḍuṅgaḷūr,* பெ.(n.) சேர அரசர்களது தலைநகரம்; *Koḍuṅgaḷūr,* the

capital of the *Cēra* kings who ruled *Cēranāḍu.*

ம.கொடுங்ஙல்லூா்,கொடுங்ஙுல்லூா், கொடுங்ஙொல் லூா், கொடுங்ஙோளூா்

[கொடும் + (கோளூர்) களூர்.]

கொடுங்காய் *koḍuṅ-kāy,* பெ.(n.) வெள்ளரி; lit., crooked fruit cucumber. *"வாள்வரிக் கொடுங் காய்" (சிலப். 16:25).*

[கொடுமை + காய். மகாடு = வளைவு.]

கொடுங்காரம் *koḍuṅkāram,* பெ.(n.) 1.தாலம்பச் செய்நஞ்சு; a kind of arsenic. 2.கொடிய காரம்; strong alkali (சா.அக.).

[கொடுமை + காரம்.]

கொடுங்காரல் *koḍuṅ-kāral,* பெ.(n.) காரல்மீன்; a small kind of fish (மீன்.பிடி.தொ.).

[கொடும் + காரல்.]

கொடுங்கால்[1] *koḍuṅ-kāl,* பெ.(n.) 1. உள்வளைந்த கால்; inner arched post, pillar. 2. கோயில் மண்டபத் தூண்களில் போதிகையைத் தாங்கும் சிறிய அமைப்புடைய தூண் (கட்.தொ.); a small curved plank which connects the pillars and entablature.

[கொடும் + கால்.]

கொடுங்கால்[2] *koḍuṅkāl,* பெ.(n.) ஈன்றவுடன் எழுந்து நிற்கும் கன்றின் வளைந்த முன்கால்; bent foreleg of the calf.

[கொடும் + கால்.]

கொடுங்காலம் *koḍuṅ-kālam,* பெ.(n.) கொடுமையான காலம்; a time of death, scarcity, drought, general suffering - oppression, cruelly.

[கொடுமை + காலம்.]

கொடுங்காறல் *koḍuṅ-kāṟal,* பெ.(n.) சுதுப்பு நாங்காறல் மீன்; horse-mackerel (செ.அக.).

[கொடும் + காறல்.]

கொடுங்கீறு *koḍuṅ-kīṟu,* பெ.(n.) கிழிந்த கீற்று; palm frond mat which is torn.

[கொடும் + கீறு.]

கொடுங்கு-தல் *koḍuṅgu-,* 11 செ.கு.வி.(v.i.) ***கொடுகு-தல்*** பார்க்க; see *koḍugu-.*

[கொடுகு → கொடுங்கு.]

கொடுங்குழை *koḍuṅ-kuḻai,* பெ.(n.) வளைந்த காதணி; twisted ear-ornament, one of sixteen kinds of ear-ornament.

[கொடு + குழை.]

கொடுங்குளம் *koḍuṅkuḷam,* பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[கொடும் + குளம்.]

கொடுங்குன்றம் *koḍuṅ-kuṉṟam,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பிரான்மலை (தேவா.); Pirāṉmalai, a hill and a town in the Ramanathapuram Dt.

[கொடும் + குன்றம்.]

கொடுங்கூற்று *koḍuṅ-kūṟṟu,* பெ.(n.) கொடிய நமன்; god of death, Yama.

[கொடும் + கூற்று.]

கொடுங்கை *koḍuṅ-gai,* பெ.(n.) 1.மடித்த கை; folded arm. *"மன்னர் மன்னவன் கொடுங்கைமேற் றுயின்றனள்" (நைடத. கான்புகு. 21).* 2. வீடு முதலியவற்றின் வெளிப்புறம் நீண்டு வளைந்துள்ள உறுப்பு; curved cornice or projection on the sides or front of a building, car, etc. *"மரகதக் கொடுங்கை சுற்றமைய வைத்தனன்" (தணிகைப்பு. வள். 12).* 3. கொடுமை (யாழ்ப்.); severity, harshness, oppression.



கொடுங்கை

[கொடும் + கை.]

கொடுங்கைத்தாடி *koḍuṅgai-t-tāḍi,* பெ.(n.) நீண்டு வளைந்த தாடி (வின்.); a long, rounded beard.

[கொடுங்கை + தாடி.]

கொடுங்கையூர் *koḍuṅgai-y-ūr,* பெ.(n.) சென்னை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Chennai Dt.

[கொடுங்கை + ஊர்.]

கொடுங்கொடிச்சிலை *koḍuṅkoḍi-c-cilai,* பெ.(n.) மஞ்சட்கல்; yellow ochre.

[கொடும் + கொடி + சிலை.]

கொடுங்கோடாசூரி *koḍuṅ-kōḍā-šūri,* பெ.(n.) அகத்தியர் செய்த நஞ்சுமுறிநூல்; a treatise on poisons with their antidotes and treatment compiled by Agastiya (சா.அக.).

[கொடும் + கோடா + சூரி.]

கொடுங்கோபிச்சிலை *koḍuṅ-kōpi-c-cilai,* பெ.(n.) 1. ஒருவகை மஞ்சள்நிறக் கல் (வின்.); a kind of yellow stone. 2. சுண்ணாம்புக்கல்; lime-stone.

[கொடுங்கோபி + சிலை.]

கொடுங்கோல் *koḍuṅ-kōl,* பெ.(n.) முறை (நீதி) தவறிய அரசாட்சி (lit., curved sceptre); unjust or unrighteous rule, despotic government, tyranny opp. to *Ceṅgōl.* "கொடுங்கோ லுண்டுகொல்" (சிலப்.23:111).

[கொடுமை + கோல்.]

செம்மை நேர்மை; கொடுமை வளைவு; முறை தவறிய ஆட்சி கொடுங்கோல்.

கொடுங்கோவையுருக்கி *koḍuṅ-kōvai-y-urukki,* பெ.(n.) சத்திசாரணை; spreading hogweed (சா.அக.).

[கொடுங்கோவை + உருக்கி.]

கொடுங்கோள் *koḍuṅ-kōḷ,* பெ.(n.) புறம்பே வசைகூறல், speak reproachfully behind the back, back biting.

[கொடும் + கோள்.]

கொடுங்கோளூர்[1] *koḍuṅ-kōḷūr,* பெ.(n.) 1. சேர நாட்டிலிருந்த ஒரு பழைய தலைநகரம்; a capital city in *Cēra* kingdom. 2. கழறிற்றறிவார் என்னும் சேரநாட்டு மன்னரான சிவனடியாரின் தலைநகரம்; capital city of the šaiva saint and king of the *cēra* country.

[கடும் + கோ - கடுங்கோ + வேள் + ஊர் - கடுங்கோவேளூர் → கொடுங்கோவேளூர் → கொடுங்கோளூர் (கொ.வ.). கடுங்கோ என்பது சேரர்களின் இயற்பெயர். இதில் அகரமுதல் கொகர முதலாகத் திரிந்ததால் கடுங்கோ → கொடுங்கோ எனத் திரிந்தது. இருங்கோவேள் என்பது இருங்கோள் எனத் திரிந்தது போன்று கொடுங்கோவேள் →கொடுங்கோள் + ஊர் எனத் திரிந்தது.]

மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள சேரமாணின் தலைநகர். இப்பொழுது கொடுங்கலூர் எனப்படுகிறது.

கொடுங்கோளூர்[2] *koḍuṅ-kōḷūr,* பெ.(n.) கேரள மாநிலத்தில் பகவதியம்மனைக் கண்ணகியாக வழிபடும் ஊர்; a place in *Kērala* where Bhagavadi is worshipped as Kaṇṇagi. (சதாசிவ பண்டாரத்தாரின் பிற்காலச் சோழர் வரலாறு ப.106).

[கொடும் + கோளூர்.]

கொடுங்கோன்மை *koḍuṅ-kōṉmai,* பெ.(n.) செங்கோன்மையின் கோடுதல் தன்மை (நேர்மையற்ற ஆட்சி); unrighteous rule. opp. to *ceṅgōṉmai.*

கொடுசூரி *koḍu-šūri,* பெ.(n.) ***கொடுசூலி*** பார்க்க; see *koḍu-šūli.*

[கொடு + சூலி →சூரி.]

கொடுசூலி *koḍu-šūli,* பெ.(n.) கடுஞ்சினத்தள்; cruel, wicked woman, as *Kāḷi.*

[கொடு + சூலி → சூரி.]

கொடுசூலித்தனம் *koḍu-šuli-t-taṉam,* பெ.(n.) மிக்க கடுஞ்சினத்தன்மை (உ.வ.); extreme wickedness or cruelty applied to women.

[கொடுஞ்சூலி + தனம்.]

கொடுஞ்சி *koḍuñji,* பெ.(n.) ***கொடிஞ்சி*** பார்க்க; see *koḍiñji,* *"பூண்ட பொன்னுகக் கொடுஞ்சி.... கடுஞ்செல லாழித் திண்டேர்"* (பெருங். உஞ்சைக். 48:15).

[கொடி → கொடிஞ்சி → கொடுஞ்சி.]

கொடுஞ்சுரம் *koḍuñ-curam,* பெ.(n.) 1. நஞ்சுச்சுரம்; malignant fever. 2. கடுங்காய்ச்சல்; high degree of fever (சா.அக.).

[கொடும் + சுரம்.]

கொடுஞ்சூரி *koḍuñ-jūri,* பெ.(n.) 1. கொடியவன்; wickedman. 2. ***கொடுசூரி*** (வின்.) பார்க்க; see *koḍu-šūri.*

[கொடுமை + சூரி.]

கொடுஞ்சொல் *koḍuñ-col,* பெ.(n.) வன்சொல்; rude language harsh speech.

[கொடு → கொடும் + சொல்.]

கொடுஞ்சொறி *koḍuñ-coṟi,* பெ.(n.) விலங்குகளுக்குக் காணுஞ் சொறிநோய்வகை; mango, scab or itch in animals.

[கொடும் + சொறி.]

கொடு—த்தல் *kodu-,* 4 செ.கு.வி.(v.i.) ஈதல்; to give, to gift, to grant.

[கொள் → கொடு.]

கொடுத்தலும் பலவகைப்படும். அவை, வழக்கத்திற் கொடுத்தல், உரிமையிற் கொடுத்தல், அச்சத்தில் கொடுத்தல், பாவனையிற் கொடுத்தல், உவகையிற் கொடுத்தல், வெகுளியிற் கொடுத்தல், அவலத்தில் கொடுத்தல் முதலியன [ஆறு. நன். 298] [வரை.சொ.க.].

கொடுத்துவை[1]—த்தல் *koduttu-vai-,* 4 செ. குன்றாவி.(v.t.) 1. நம்பிக்கையாய் ஒருவரிடம் பொருளை வைத்தல்; to entrust or charge with. 2. எதிர்பாராத வாய்ப்புப் பெறுதல்; to get unexpected chance. குபேரன் பட்டணம் கொள்ளையானாலும் கொடுத்து வைக்காதவனுக்கு ஏதுமில்லை (பழ).

[கொடுத்து + வை-.]

கொடுத்துவை[2]—த்தல் *koduttu-vai-,* 4 செ.கு.வி. (v.i.) முற்பயனால் உதவுதல்; to be lucky. *உன்னைத் திருமணம் செய்து கொள்ள அவனுக்குக் கொடுத்து வைக்கவில்லை.*

[கொடுத்து + வை.]

கொடுத்துவைத்தது *koduttu-vaittadu,* பெ.(n.) நற்பேறு; luck.

[கொடுத்து + வைத்தது.]

கொடுத்துவைத்தவன் *koduttu-vaittavan,* பெ.(n.) நற்பேறு அடைபவன்; lucky person.

[கொடுத்து + வைத்தவன்.]

கொடுதலை *kodutalai,* பெ.(n.) பணம் முதலியன செலுத்துகை (இ.வ.); giving paying.

[கொடு + தலை]

கொடுதலைமடிப்பு *kodutalai-madippu,* பெ.(n.) ***கொடுமுடிச்சு*** பார்க்க; see *kodu-mudiccu.*

[கொடுதலை + மடிப்பு.]

கொடுதலைமுடிச்சு *kodutalai-mudiccu,* பெ.(n.) ***கொடுமுடிச்சு[1]*** பார்க்க; see *kodu-mudiccu.*

[கொடுதலை + முடிச்சு.]

கொடுதலைவிற்பூட்டு *kodutalai-virpūttu,* பெ.(n.) ***கொடுதலை முடிச்சு*** பார்க்க; see *kodutalai-mudiccu.*

[கொடுதலை + விற்பூட்டு.]

கொடுதி *kodudi,* பெ.(n.) 1. மரவாணி (யாழ்ப்.); peg for fastening a tenon in a mortise. 2. மடிப்புத் தொழில்; folding work (இரு.நூ.).

ம. கொடுதி.

[கொடு → கொடுதி.]

கொடுந்தமிழ் *kodun-tamil,* பெ.(n.) செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்திருக்கும் நிலங்களில் வழங்கும் தமிழ்மொழி (நன்.273, உரை); Tamil dialects current in regions surrounding *Centamilnādu.*

ம. கொடுந்தமிழ்.

[கொள் (கொண்.) கொடு = வளைவு, வளைவான. கொடும் + தமிழ் – கொடுந்தமிழ் = செந்தமிழினின்று திரிந்த தமிழ். (வ.மொ.வ.7.).]

இலக்கணம் நிரம்பிய சிறந்த செப்பமான தமிழ் செந்தமிழ். அது திரிந்தது கொடுந்தமிழ். செம்மை நேர்மை, கொடுமை வளைவு, செங்கோல், கொடுங்கோல் என்னுஞ் சொற்களை நோக்குக.

கொடுந்தமிழ்நாடு *kodun-tamil-nādu,* பெ.(n.) கொடுந்தமிழ் பேசப்படுவனவாகிய தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேணாடு, பூழி, பன்றி, அருவா, அருவாவடதலை, சீதம், மலாடு, புனனாடு என்னும் பன்னிருநிலங்கள் (நன். 273, உரை); (தொல்.சொல் 400. சேனா.); regions where *kodun-tamil* is spoken, 12 in number, viz., *Ten-pāndi, Kuttam, Kudam, Karka, Vēnādu, Pūli, Panri, Aruvā, Aruvā-Vadatalai, Cīdam, Malādu, Punanādu,* Cenavaraiyar giving *Pongar-nādu* and Olinadu, instead of *Venādu* and *Punanādu.*

[கொடுந்தமிழ் + நாடு.]

தொல்காப்பியர் காலத்தில் இவையெல்லாம் செந்தமிழ் நிலமே. பிற்காலத்தில் செந்தமிழ் நிலப்பரப்பு மிகச் சுருங்கிய பின்னர் இப் பன்னிரண்டும் கொடுந்தமிழ்நாடு எனக் கணக்கிடப்பட்டன – பாவாணர் [தமிழ் வரலாறு 1967 ப.46].

கொடுந்தலை *kodun-talai,* பெ.(n.) வளைந்த தலை.

[கொடு → கொடும் + தலை.]

கொடுந்தலைப்பாறை *kodun-talai-p-pārai,* பெ.(n.) கொடிய பார்வையுடைய பாறைமீன்; a kind of fish having wild sight (மீன்.பிடி.தொ.).

[கொடும் + தலை + பாறை.]

கொடுந்தலைப்பொருவா *kodun-talai-p-poruvā,* பெ.(n.) அறுவிரல் நீளமும், பொன்மை கலந்த வெண்ணிறமும் உள்ள கடல்மீன்வகை; anchovy, a sea-fish, silvery, tinged with gold, attaining 6 inches in length.

[கொடும் + தலை + பொருவா.]

கொடுந்தறி *kodun-tari,* பெ.(n.) வளைந்த முளைக்கோல்; curved marking stick. *"செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச் சிலம்பி வானூல்" (நெடுநல்.58).*

[கொடும் + தறி.]

கொடுந்தாள் *kodun-tāl,* பெ.(n.) கோடியிருந்த தாள்; bended leg. கொடுந்தாள் அலவன்.

[கொடும் + தாள்.]

கொடுந்திண்ணை *kodun-tinnai,* பெ.(n.) சுற்றுத்திண்ணை; a curved raised floor or veranda either out side or inside of the house (கட்.தொ.).

[கொடும் + திண்ணை.]

கொடுந்துயர் *kodun-tuyar,* பெ.(n.) மிக்க துயரமாகிய இறப்பு; death. *"குரவர்க் குற்ற கொடுந்துயர் கேட்டு" (மணிமே.3:18).*

[கொடுமை + துயர்.]

கொடுந்துன்பம் *kodun-tunbam,* பெ.(n.) 1. தாங்க வொண்ணாத் துயரம்; unbearable suffering. 2. புண்ணால் ஏற்பட்ட பெருந்துன்பம்; grievous hurt (சா.அக.).

[கொடும் + துன்பம்.]

கொடுந்தொழில் *kodun-tolil* பெ.(n.) கொடுமை யான செய்கை; cruel deed.

[கொடுமை + தொழில்.]

கொடுந்தொழிலாளன் *kodun-tolil-ālan,* பெ.(n.) 1.கொடுஞ்செய்கையுள்ளவன்; lit. one given to cruel deeds. 2. எமன்; Yama *"கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்ப" (மணிமே. 6:100).*

[கொடும் + தொழிலாளன்.]

கொடுநஞ்சு *kodu-nañju,* பெ.(n.) 1.கொல்லுந் தன்மையுள்ள நஞ்சு; fatal poison, venom. 2. வெள்ளை வைப்புநஞ்சு. (வின்.); a mineral poison.

[கொடு → கொடும் + நஞ்சு.]

கொடுநா *kodu-nā,* பெ.(n.) சித்திரமூலம் என்னும் மூலிகை; leadwort (சா.அக.).

மறுவ. கொடுவேலி.

[கொடு + (நாவி) → நா.]

கொடுநாக்கு *kodu-nākku,* பெ.(n.) கருநாக்கு; vile tongue *(karunākku).*

[கொடு + நாக்கு.]

கொடுநாக்கெறி-தல் *kodu-nākkeri-,* 2 செ.கு.வி. (v.i.) நாக்கைச் சப்புக்கொட்டல்; to beat the tongue against the palate.

[கொடு + நாக்கு + எறி-.]

கொடுநாவி *kodu-nāvi,* பெ.(n.) கொடுவேலி, சித்திரமூலம்; plumbago genus.

[கொடு + நாவி.]

இது மூவகைப்படும்; மருத்துவக் குணம் உடையது [சா.அக.].

கொடுநீபம் *kodu-nībam,* பெ.(n.) மஞ்சட் கடம்பு; yellow cadamba (சா.அக.).

[கொடு + நீபம்.]

கொடுநீர் *kodu-nīr,* பெ.(n.) கழுதையின் சிறுநீர்; ass's urine (சா.அக.).

[கொடு + நீர்.]

கொடுநுகம் *kodu-nugam,* பெ.(n.) 1.நுகத்தடி; yoke. *"கொடுநுக நுழைந்த கணைக்கா லத்திரி" (அகநா. 350).* 2. கலப்பை; plough. 3. ***மகம்*** பார்க்க; see *magam.*

[கொடு + நுகம்.]

கொடுநோய் *kodu-nōy,* பெ.(n.) மாட்டுநோய் வகை; a disease of cattle.

[கொடு + நோய்.]

கொடுப்பக்குழி *koduppa-k-kuli,* பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[கொடுப்பு + குழி - கொடுப்புக்குழி → கொடுப்பக்குழி.]

கொடுப்பரளை *kodu-p-paralai,* பெ.(n.) வாய்நோய் வகை; a disease of the mouth.

[கொடு + பரளை.]

கொடுப்பனவு *kodu-p-panavu,* பெ.(n.) 1.கொடுக்குந்தன்மை; 2. பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தல்; giving a girl in marriage. 3. கொடுக்க வேண்டிய தொகை; amount to be paid.

[கொடு + பனவு.]

கொடுப்பனை *kodu-p-panai,* பெ.(n.) ***கொடுப் பனவு*** பார்க்க; see *kodu-p-panavu.*

[கொடு + பனை.]

கொடுப்பினை *koḍuppiṉai*, பெ.(n.) 1. நற்பேறு, கொடுத்து வைத்தது; luck. *எங்களுடைய கொடுப்பினை அவ்வளவுதான்.* 2. கொள்வினை கொடுப்பினை; giving and taking girl in marriage.

[கொடுப்பு → கொடுப்பினை.]

கொடுப்பு[1] *koḍuppu*, பெ.(n.) 1.கதுப்பு; jaw including cheek (சா.அக). 2. கடைவாய்; region in the mouth near molar teeth.

[கொள் (கொண்) → கொடு = வளைவு, வளைவான. கொடு → கொடுப்பு = குறடுபோன்ற கதுப்பு (அலகு) (வ.மொ.வ.1)

கொடுப்பு[2] *koḍuppu*, பெ.(n.) 1.கொடுக்கை; giving. 2. விளையாட்டாக அடிக்கை (வின்.); playful dealing of blows.

ம. கொடுப்பு.

[கொடு → கொடுப்பு.]

கொடுப்புப்பல் *koḍuppu-p-pal*, பெ.(n.) 1.மெல்லும் பல்; molar teeth. 2. கடைவாய்ப் பல்; grinders (சா.அக.).

[கொடு → கொடுப்பு + பல்.]

கொடுப்புப்பீறி *koḍuppu-p-pīṟi*, பெ.(n.) கன்னத் திற்கும் தாடைக்கும் இடையே யுண்டாகும் ஒரு சிலந்தி; cancer arising between the cheeck and the jaw (சா.அக.).

[கொடு → கொடுப்பு + பீறி.]

கொடுப்புலியார் *koḍu-p-puliyār*, பெ.(n.) கள்ளர்குடிப் பட்டப்பெயர்களுள் ஒன்று (கள்ளர் சரித்.ப.98); a caste title of Kaḷḷars.

[கொடும் + புலி + ஆர். கொடும்புலி → கொடுப்புலி.]

கொடுப்பை *koḍuppai*, பெ.(n.) பொன்னாங்காணி (மலை.); sessile plant, a plant, growing in damp places.

ம. கொடுப்பை.

[கொடுப்பு → கொடுப்பை.]

கொடுப்பைத்தைலம் *koḍuppai-t-tailam*, பெ.(n.) பொன்னாங்கண்ணித் தைலம்; medicated oil prepared with sessile plant as chief ingredient (சா.அக.).

மறுவ. கொடுபைநெய்.

[கொடுப்பை + தைலம்.]

இது மூளைக்குக் குளிர்ச்சியைத் தரும்.

கொடுப்பைநெய் *koḍuppai-ney*, பெ.(n.) பொன்னாங்கண்ணி நெய்; a medicated ghee prepared with dry sessile plant mixed with other ingredients (சா.அக.).

மறுவ. கொடுபைக்கிருதம்.

[கொடுப்பை + நெய்.]

கொடுபச்சை *koḍu-paccai*, பெ.(n.) 1.பொன்னாங் கண்ணி; sessile plant. 2. ஒருவகை மீன்; a fish (சா.அக.).

[கொடு + பச்சை.]

கொடுபடு-தல் *koḍu-paḍu-*, 20 செ.கு.வி.(v.i.) கடன் முதலியன செலுத்தப்படுதல்; to be discharged or paid, as a debt, to be returned, as borrowed article.

[கொடு + படு-. படு - து.வி.]

கொடுபாடு *koḍu-pāḍu*, பெ.(n.) ***கொடுதலை*** (இ.வ.) பார்க்க; see *koḍu-talai*.

[கொடு + பாடு.]

கொடுபோ-தல் *koḍu-pō-*, 8 செ.குன்றாவி.(v.t.) கொண்டு செல்லுதல்; to carry. *"தன்பொருள் கொடுபோந் தென்ன" (கந்தபு. ஆற்று.30).*

[கொடு + போ-.]

கொடும்பகல் *koḍum-pagal*, பெ.(n.) நண்பகல் (இ.வ.); mid-day.

[கொடும் + பகல்.]

கொடும்பறை *koḍum-paṟai*, பெ.(n.) கண்கள் வளைந்த பறை; a drum with a curved central spot. *"கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்தும்" (மதுரைக்.523).*

[கொடும் + பறை.]

கொடும்பனி *koḍum-paṉi*, பெ.(n.) கடும்பனி; severe cold, frost.

[கொடும் + பனி.]

கொடும்பனிக்காலம் *koḍum-paṉi-k-kālam*, பெ.(n.) பனி மிகுந்துள்ள கும்ப, மீன மாதங்கள் (பிங்.); the months of Māśi and Paṅguṉi, season of heavy dews.

[கொடும் + பனி + காலம்.]

கொடும்பாடன் *koḍum-pāḍaṉ*, பெ.(n.) கொடியவன்; cruel man. ***"கண்ணறையன்***

கொடும்பாட னென்றுரைக்க வேண்டா" (தேவா. 670:9).

[கொடும்பாடு → கொடும்பாடன்.]

கொடும்பாடு *kodum-pāḍu,* பெ.(n.) 1. கொடுமை, துன்பம்; cruelty, severity, hardship. *"கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை" (சிலப். 15:1121).* 2. மாறுபாடு; perversit. *"கொடும்பா டறியற்க வெம்மறிவு" (பரிபா.2:76).*

[கொடுமை + பாடு – கொடும்பாடு.]

கொடும்பாதகம் *kodum-pādagam,* பெ.(n.) 1. அல்நயன், அறக்கேடு (அநீதி); injustice. 2. கொடிய ஏய்ப்பு (வஞ்சனை) deceit.

[கொடும் + பாதகம்.]

கொடும்பாவி[1] *kodum-pāvi,* பெ.(n.) 1.கொடுஞ் செயற்காரன்; heinous sinner. *"பயமெனுமோர் கொடும்பாவிப் பயலே" (அருட்பா,vi. தான் பெற்ற.17).* "கொடும்பாவியானாலும் கொண்ட மாமியார் வேண்டும்" – பழ. 2. எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் தெருவில் இழுத்துச் சென்று எரிக்கும் உருவம்; effigy (as a protest.). கொடுமைக் காரனுக்குக் கொடும்பாவி எரித் தார்கள் (உ.வ.).

[கொடும் + பாவி.]

கொடும்பாவி[2] *kodum-pāvi,* பெ.(n.) பஞ்ச முதலியன உண்டான காலங்களில் அவை தீரும்படி, ஊர்த்தெருக்களிற் கட்டியிழுத்துக் கொளுத் தப்படும் வைக்கோலுருவம் (உ.வ.); straw effigy representing the most heinous sinner, dragged through the village streets in time of drought and then burnt to expiate public crime and bring rain.

[கொடுமை + பாவி – கொடும்பாவி.]

கொடும்பாவை *kodum-pāvai,* பெ.(n.) ***கொடும்பாவி***[2] பார்க்க; see *kodum-pāvi.*

[கொள் → கொடு → கொடுமை → கொடும் + பாவை.]

கொடும்பாளூர் *kodum-pāḷūr,* பெ.(n.) புதுக்கோட்டைச் சீமையில் உள்ள வரலாற்றுப் புகழ்மிக்க ஒரூர்; a village in *Puḍukkōṭṭai* state noted for its historical interest. *"கோனாட்டுக் கொடிநகரங் கொடும்பாளூர்" (பெரியபு. இடங்கழி.).*

[கொடும்பை (குளம், நீர்நிலை) + ஆளூர் கொடும்பையாளூர் → கொடும்பாளூர்.]

பெரிய நீர்நிலைகள் அமைந்திருந்தமையால் பிற்காலத்தில் கொடும்பாளூர் என்றும் வழங்கி இருக்கலாம். கி.பி.768–815 –இல் பராந்தக நெடுஞ்செழியனால் எழுதப்பட்ட வேள்விக்குடிச் செப்பேட்டில் 'கொடும்பாளூர்' என்று குறிப்பிட்டுள்ளதை ஒப்பு நோக்கலாம்.

கொடும்பாளூர் அரையர் *kōḍumbāḷūr-araiyar,* பெ.(n.) கள்ளர்குடிப் பட்டப்பெயர்களுள் ஒன்று (கள்ளர்சரித்.ப.98); a caste title of Kallars.

[கொடும்பாளூர் + அரையர்.]

கொடும்பு[1] *kodumbu,* பெ.(n.) கொடுமை; cruelty, severity.

[கொள் → (கொண்) கொடு = வளைவு, வளைவான. கொடு → கொடுமை = வளைவு, தீமை, கடுமை. கொடு → கொடும்பு = கொடுமை.]

கொடும்பு[2] *kodumbu,* பெ.(n.) 1.சிம்பு; small fibrous rising on a surface of thread or string. *'வெண்சிறு கடுகளவும் கொடும்பில்லை யாம்படி தீற்றி' (மலைபடு. 24, உரை).* 2. தவிட்டுப்பொடி (இ.வ.); bran. 3. முறுக்கு மிகுதியான கயிறு; highly twisted rope (மீன்.பிடி.தொ.).

[கொடு → கொடும்பு.]

கொடும்புராயர் *kodumburāyar,* பெ.(n.) ***கொடும்பாளூர் அரையர்*** பார்க்க; see *koḍumpāḷūr-araiyar.*

[கொடும்பை → கொடும்பு + அரையர்.]

கொடும்புரி *kodum-puri,* பெ.(n.) 1. ***கொடி முறுக்கு*** பார்க்க; see *kodi-murukku.* 2. கடுஞ்சூழ்ச்சி (வின்.); deep-laid plot.

[கொடும் + புரி.]

கொடும்புலி *kodum-puli,* பெ.(n.) 1. அரிமா (சிங்கம்) (உரி.நி.); lion. 2. மடங்கல் (சிங்கராசி); leo, a constellation of the zodiac.

[கொடும் + புலி.]

கொடும்பேதி *kodumpēdi,* பெ.(n.) 1. மச்சமுனி யென்னும் சித்தன் வசமிருந்த ஒரு கவன குளிகை; animated mercurial pill in possession of a šiddha named Maccamuni, for flying in the sky. 2. கொடிய வயிற்றுப்போக்கு; diarrhoea of virulent type; violent purging. 3. கக்கல் கழிச்சல்; cholera (சா.அக.).

[கொடும் + பேதி.]

கொடும்பை[1] *kodumbai,* பெ.(n.) 1. நீர்வீழ்ச்சி (அக.நி.); waterfall. 2. குன்றம் (அக.நி.); bill, hil-lock. 3. குளம் (அக.நி.); tank. 4. தூம்பு (சது.); gutter, drain. 5. தாம்பு (அக.நி.); rope,halter.

6. பச்சிலைப்பூடுவகை (அக.நி.); a kind of evergreen shrub with medicinal properties.

[குடும்பு + கொடும்பு → கொடும்பை.]

கொடும்பை² *kodumbai,* பெ.(n.) 1. ***கொடும் பாளூர்*** பார்க்க; see *kodumbālūr.* *"கொடும்பை நெடுங்குளக் கோட்டகம்"* *(சிலப். 11:71).* 2. ஒரு பச்சிலை; a medicineal green leaf.

[கொடும்பு → கொடும்பை.]

கொடும்பைத்தியம் *kodum-paittiyam,* பெ.(n.) 1.கொடிய கிறுக்கு; dangerous lunacy; extreme insanity. 2. ஊறு செய்யும் கிறுக்கு; insanity leading to acts of violence (சா.அக.).

[கொடும் + பைத்தியம்.]

கொடும்பைப்பட்டி *kodumbai-p-patti,* பெ.(n.) கரூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Erode Dt.

[கொடும்பை + பட்டி.]

கொடும்போக்கு *kodum-pōkku,* பெ.(n.) வீட்டிற்குத் திரும்பிவருங்கருத்தின்றி வெளியேறுகை (இ.வ.); departure, as from home, with no intention of returning.

[கொடும் + போக்கு.]

கொடுமச்சேறு *kodumaccēru,* பெ.(n.) கடலடிச்சேறு; mire in the bottom of the sea (மீன்.பிடி.தொ.).

[கொடும் + அடிச்சேறு - கொடுமடிச்சேறு → கொடுமச்சேறு.]

கொடுமடி *kodu-madi,* பெ.(n.) பண்டம் இடுதற்காக வளைத்துக் கட்டிய மடி; cloth at the waist folded to hold things, as in a bag. *"கொடுமடி யுடையர் கோற்கைக் கோவலர்"* *(அகநா. 54:10).*

[கொடு + மடி.]

கொடுமணம் *kodu-manam,* பெ.(n.) அணிகலன் களுக்குப் பேர்பெற்ற பழையதோர் ஊர்; an ancient town noted for manufacture of jewellery. *"கொடுமணம் பட்ட வினைமா ணருங்கலம்"* *(பதிற்றுப். 74).*

[கொடு + மணம்.]

கொடுவூர், கொடூர் என்பன கொடையளிக்கப்பட்ட ஊர்களின் பெயர்கள். கொடுமணம் என்பது திருமணக் கொடையாக வழங்கப்பட்ட ஊராகலாம்.

கொடுமணல் *kodu-manal,* பெ.(n.) ஈரோடு மாவட்டத்துச் சிற்றூர்; a village in Erode Dt.

[கொடு + மணல்.]

கொடு= வளைந்த. ஆற்றங்கரையின் வளைந்த மணல் மேட்டருகில் அமைந்த ஊராகலாம்.

கொடுமரம் *kodu-maram,* பெ.(n.) 1.வில்; bow. *"கொடுமரந் தேய்த்தார்"* *(கலித். 12).* 2. சிலை (தனு)யோரை (சூடா.); Sagittarius, a constellation of the zodiac. 3. ஏணிப்பழு; rung of a ladder. *"கொடுமரம் பற்றி நெட்டிதண் பொலிந்தும்"* *(கல்லா. 22:98).*

[கொடு + மரம். கொள் → (கொண்) → கொடு = வளைவு.]

கொடுமலையாளம் *kodu-malai-y-ālam,* பெ.(n.) 1.அரிதிற் பொருள்படும் மலையாள மொழிவகை; a Malaiyalam dialect considered difficult to be understood. 2. கொடுமலையாளம் பேசும் மலையாள நாட்டுப் பகுதி; that part of Malabar where Kodumalaiyālam is spoken. *"கொடுமலை யாளக் குடியிருப் புடையோன்"* *(மனோன். பாயி.).*

[கொடு + மலையாளம் → கொடுமலையாளம் எளிதில் விளங்காத பழமலையாளம் (மலையாள் + அம்).]

கொடுமன் *koduman,* பெ.(n.) 1. சரிவு, சாரல்; slope. 2. கொடுமைக்காரன்; wicked person.

[கொடு + அன் - கொடுவன் → கொடுமன்.]

கொடுமனூர் *koduman-ūr,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kadalur Dt.

[கொடுமன் (சரிவு, சாரல்) + ஊர்.]

கொடுமுடி *kodu-mudi,* பெ.(n.) 1.மலையுச்சி; summit of a mountain, peak. 2. உப்பரிகை; terrace or top of a mansion. *"கோடுயர் மாடத்துக் கொடுமுடி"* *(பெருங்.மகத.8:15).* 3. ***பாண்டிக் கொடுமுடி*** பார்க்க; see *Pāndi-k-kodumudi.*

[கொடு + முடி.]

கொடுமுடிச்சு *kodu-mudiccu,* பெ.(n.) 1.அவிழ்க்க முடியாத முடிச்சு; hard, inextricable knot. 2. கேடு சூழும் சூழ்ச்சி; malignant plot, vile conspiracy.

[கொடு + முடிச்சு.]

கொடுமுடிந்த வழக்கு *kodu-mudinda-valakku,* பெ.(n.) ***கொடிமுடிந்த வழக்கு*** பார்க்க; *kodi-mudinda-valakku.*

[கொடி → கொடு + முடிந்த + வழக்கு.]

கொடுமுடிப்பூடு *kodumudi-p-pūdu,* பெ.(n.) கோபுரங்களில் வளர்ந்துள்ள செடிவகை; plants growing in vimanas of temple (சா.அக.).

[கொடுமுடி + பூடு.]

கொடுமுண்டி *kodu-mundi,* பெ.(n.) சொத்தைக் களா (L.); bushy roundish - leaved sweet thorn.

[கொடு + முண்டி.]

கொடுமுறுக்கு *kodu-murukku,* பெ.(n.) 1. நூலின் மிகச் சுற்றியேறிய முறுக்கு; inextricable twisting of strands or inextricable knots in a string. 2. சிம்பு(பத்துப்.ப. 607, கீழ்க்குறிப்பு); small fibrous risings on the smooth surface of a string.

[கொடு + முறுக்கு.]

கொடுமூலி *kodu-mūli,* பெ.(n.) செங்கொடிவேலி; a runnig plant whose root is a powerful caustic; rose coloured leaved-wort (சா.அக.).

[கொடு + மூலி.]

கொடுமூலை *kodu-mūlai,* பெ.(n.) எளிதில் அறிந்து செல்லக்கூடாத மூலையிடம் (இ.வ.); out-of the way corner.

[கொடு + மூலை.]

கொடுமை[1] *kodumai,* பெ.(n.) 1.மாந்தத் தன்மையற்ற கொடுஞ்செயல்; cruelty, tyranny. inhumanity. *"கொடுமைபல செய்தன" (தேவா. 945:1).* 2. கடுமை (கந்தபு. பார்.6);severity, harshness. 3. முருட்டுத் தன்மை; roughness, uncouthness. 4. தீமை; vileness, wickedness. *"கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்ப" (கம்பரா. மந்திரப். 1).* 5. வேண்டா வார்த்தை (அக.நி.); harsh words, slander.

ம.கொடும.

[கொடு → கொடுமை.]

கொடுமை[2] *kodumai,* பெ.(n.) 1.வளைவு (சிலப். 11: 20.); crookedness, obliquity. 2 மனக்கோட்டம்; partiality. *"கொடுமையுஞ் செம்மையும்" (பரிபா. 4 : 50).* 3. ஒருபாற்கோடுதல் (நீதிதவறுதல்); injustice. *"கொடியோர் கொடுமை" (தொல்.பொருள். 147).* 4. கரிசு, பாவம் (இ.வ.); sin. 5. வக்கிராந்த வைப்பு நஞ்சு (சங்.அக.); a mineral poison.

[கொள் → கொண் → கொடு → கொடுமை.]

அறனழியப் பிறரைச் சூழும் சூழ்ச்சி [தொல். பொருள். 270, இளம்.] கேடுசூழ நினையும் தீவினையுள்ளம் [தொல். பொருள். 257, பேரா.] [உரை.சொ.க.].

கொடுமைசொல்(லு)-தல் *kodumai-col(lu)-,* 8 செ.குன்றாவி.(v.t.) தீமை பயக்கும் கொடுஞ் சொற்களைக் கூறுதல் (கொ.வ.); to speak harsh or cruel words.

[கொடுமை + சொல்-.]

கொடுமைத்தானம் *kodumai-t-tānam,* பெ.(n.) பிறப்போரைக்கு எட்டாமிடம் (சங்.அக.); the eigth house from the ascendant.

[கொடுமை + தானம். தானம் = இடம்.]

கொடுவரி *kodu-vari,* பெ.(n.) வளைந்த வரிகளை யுடைய புலி; lit., that which has curved stripes, tiger. *"கொடுவரி வழங்குங் கோடுயர் நெடுவரை" (புறநா. 135:1).*

மறுவ. வேங்கை, வரிப்புலி, கொடுவாய்.

[கொடு(வளைந்த).+ வரி]

கொடுவலை *kodu-valai,* பெ.(n.) ஒருவகை மீன் வலை; a kind of fishing net (பரத.கலை. சொ.அக).

[கொடு + வலை.]

கொடுவா[1]**-தல் (கொடுவருதல்)** *kodu-vā-,* 15 செ.குன்றாவி.(v.t.) கொண்டுவருதல்; to bring. *"கொடுவருதி ரிரதமெனக் கூற லோடும்" (கந்தபு. தாரக. 31).*

[கொண்டு → கொடு + வா-.]

கொடுவா[2] *koduvā,* பெ.(n.) ஒருவகைமீன்; a kind of fish.

[கொடு → கொடுவாய்]

கொடுவாக்குட்டி *koduvā-k-kutti,* பெ.(n.) சிறு கொடுவா மீன்; a kind of small fish (மீன்.பிடி.தொ.).

[கொடுவாய் + குட்டி →கொடுவாக்குட்டி]

கொடுவாஞ்சி *kodu-vāñji,* பெ.(n.) கொட்டாஞ்சி; *Kottāñji,* which see (சா.அக.).

[கொடு + வாஞ்சி.]

கொடுவாத்திருக்கை *koduvāt-tirukkai,* பெ.(n.) ஒருவகைத்திருக்கை மீன்; a kind of fish.

[கொடு + வாய் + திருக்கை.]



கொடுவாத்திருக்கை

கொடுவாய்[1] *kodu-vay,* பெ.(n.) 1.வாள் முதலியவற்றின் வளைந்த வாய்; curved or bent edge, as of a bill-hook. *"கொடுவாய்க் குயத்து" (சிலப். 16:30).* 2. குறளை (பிங்.); tale-bearing, back-biting. 3. பழிச்சொல்; reproach. *"கன்னிகா காமியெனுங் கொடுவாய்" (சீகாழித். கொச்சை.31).* 4. ஐந்தடி நீளமும் சாம்பல் நிறமும் உள்ள மீன்வகை (M.M.195.); cockup, grey, attaining 5ft. in length. 5. புலிவகை (இ.வ.); a species of tiger. 6. தூங்கும்போது வழியும் எச்சில்; saliva flowing out of mouth during sleep.

[கொடு (வளைந்த) + வாய்.]

கொடுவாய்[2] *kodu-vāy,* பெ.(n.) ***கோடைவாய்*** பார்க்க; see *kōdai-vāy.*

[கொடுமை + வாய்.]

கொடுவாய்[3] *kodu-vāy,* பெ.(n.) ***கொட்டுவாய்*** பார்க்க; see *kottu-vāi.*

[கொட்டு → கொடு + வாய்.]

கொடுவாய்[4] *kodu-vāy,* பெ.(n.) ஈரோடு மாவட்டத்துச் சிற்றூர்; a village in Erode Dt.

[கொடு + வாவல் – கொடுவாவல் →கொடுவாவு → கொடுவாய்.]

கொடுவாய்க்கத்தி *kodu-vāi-k-katti,* பெ.(n.) வளைந்த கத்தி; curved knife.

[கொடுவாள் + கத்தி – கொடுவாள்கத்தி → கொடுவாய்க்கத்தி.]

கொடுவாயிரும்பு *kodu-vāy-irumbu,* பெ.(n.) தூண்டில் முதலியவற்றிலுள்ள இரும்புக் கொக்கி; iron hook, as of an angle. *"கொடுவா யிரும்பின் கோளிரை துற்றி" (அகநா. 36:2).*

[கொடு (வளைந்த) + வாய் + இரும்பு.]

கொடுவால்முறுக்கு–தல் *koduvāl-murukku-,* 5 செ.குன்றாவி.(v.t.) வண்டியில் பூட்டிய மாட்டின் வாலை விரைவாகச் செல்வதற்காக முறுக்குதல்; to twist the tail of the ox to drive it fast.

[கொடுவால் + முறுக்கு-.]

கொடுவாவல் *kodu-v-vāval,* பெ.(n.) ***கொடுவாய்***[4] பார்க்க; see *kodu-vāy.*

[கொடு + வாவல்.]

கொடுவாள் *kodu-vāl,* பெ.(n.) 1.அரிவாள்; amputating knife, bill-hook, sickle. 2. மழு; battle axe. *"வலக்கை யஞ்சுடர்க் கொடுவாள் பிடித்தோள்" (சிலப். 23:8).*

[கொடு + வாள்.]

கொடுவாளை *kodu-vālai,* பெ.(n.) 1. ஓர் ஆற்று மீன்; a river fish Indian perch. 2. பனையேறி மீன்; nayar fish - lates fish (சா.அக.).

[கொடு+வாளை.]

கொடுவிலார்பட்டி *kodu-vilār-patti,* பெ.(n.) தேனி மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Tēni* Dt.

[கொடு + வி(ல்)லார் + பட்டி.]

கொடுவிழுதை *kodu-viludai,* பெ.(n.) பெருநெல் வகை (இ.வ.); a kind of paddy.

[கொடு+விழுதை.]

கொடுவினை *kodu-vinai,* பெ.(n.) முற்பிறவியில் செய்த தீவினை; evil deeds of former births. *"கொடுவினையா ரென்றும் குறுகாவடி" (தேவா. 969:2).*

[கொடு + வினை.]

கொடுவூர் *kodu-v-ūr,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village donated in olden days in Ramanadhapuram Dt.

[கொடு + ஊர் – கொடுவூர் (கொடையளித்த ஊர்).]

கொடுவேரி *kodu-vēri,* பெ.(n.) ***கொடுவேலி*** பார்க்க; see *kodu-vēli. "செங்கொடு வேரி தேமா மணிச்சிகை" (குறிஞ்சிப்.64).*

ம. கொடுவேரி.

[கொடு + (வேலி) வேரி.]

கொடுவேலி *kodu-vēli,* பெ(n.) சித்திரமூலம் என்னும் கொடி (மலை.); Ceylon leadwort, climber.

மறுவ. அகனாதி, அணிஞ்சகம், அணிஞ்சில், அதிகநாறி, அதிபநிங்கி, அரி, அருணவேலி, அழல், அழற்கூடி, அனல், அனலம், ஆங்காரசத்தி, ஆண்கொடிவேலி, ஆதிமகாமூலி, இலதை வன்னி, உக்கன், உடல்வேதிச்சி, உதகவன், உதங்கன், உமிழ்நீர்பெருக்கி, எழுநா, ஒலிகைச்செடி, கனலி, காணீலம், காரிகை, காரிமை, காரீமை, காவிக்கருப்பி, கானலிந்தரின்கொடி, கூரியவன்னி, கொடிச்சி, கொடிவேர், கொடிவேலி, கொடுவேரி, கோணுங்காகிலம், கோமுச்சிரவல்லி, சத்தி, சதாவேதா, சதாவேதை, சாத்துவாதி, சித்தர்மூலம், சித்திமூலம், சித்திரக்கொடி, சித்திரகம், சிலைமண், சிவம், செருக்கன், சோதி காந்தம், தணலாகினி, தணலாற்றி, தபனகம், தமரகி, தழல், தழற்கொடி, தாகம், திகனாதி, திசைநாச்செடி, துவயாக்கினி, நடக்கையறிவாள், நெருப்புமூலி,

பகப்பாதி, பாடினம், மகந்தம், வங்கி, வச்சகாரம், வசகம், வசங்கம், வஞ்சகாரம், வறாளம், வன்னி, வனமா, வாளகச்சிகை, வெண்கொடிமூலம்.

[கொடு + வேலி.]

கொடுவை *koḍuvai,* பெ.(n.) கெட்டவியல்பு; wickedness. *'கொடுவைப் பசுக்களை' (ஈடு. 4, 8:4).*

[கொடு → கொடுகு. கொடுகுதல் = கொடிதாதல். கொடு → கொடுவை = தீயதன்மை.(வ.மொ.வ.).]

கொடூர் *koḍūr,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvallur Dt.

[கொடு + ஊர் - கொடுவூர் → கொடூர் (கொடையளித்த ஊர்).]

கொடூரம் *koḍūram,* பெ.(n.) கொடுமை; cruelty, severity, harshness.

[கொடு → கொடுரம் → கொடூரம்.]

கொடை[1] *koḍai,* பெ.(n.) உயிர், உடம்பு, உறுப்பு முதலிய எல்லாப் பொருளும் கொடுக்கை (தொல். பொருள். 257); the act of gift as of life body and parts of body.

[கொடு → கொடை]

கொடை[2] *koḍai,* பெ.(n.) 1. ஈகை; giving away, as a gift, donation. *"இல்லான் கொடையே கொடைப்பயன்" (நாலடி. 65).* இலுப்பை சக்கரைக் கொடையாம் துரைகள் மெச்சின நடையாம் (பழ). 2. கைக்கொண்ட நிரையை, இரவலர்க்கு வரையாது கொடுக்கும் புறத்துறை; Puram theme of a king distributing liberally to the poor the enemy's cattle captured by him. *"உண்டாட்டுக் கொடையென" (தொல். பொருள்.58).* 3. சிற்றூர்த் தெய்வத்திற்கு மூன்று நாள் செய்யும் திருவிழா (G.M.D.I. 117); three day festival of a village deity. 4. வசவு, திட்டு, அடி, round abuse, round blows. அவள் கொடுத்த கொடை ஏழுசன்மத்திற்குப் போதும். 5. அடி; round blows.

[கொடு → கொடை.]

கொடைக்கடம் *koḍai-k-kaḍam,* பெ.(n.) கொடையாகிய கடமை; charity - giving considered a duty. *"கொடைக் கடம்பூண் கொள்கை யனாகி" (பெருங்.நரவாண.8:43).*

[கொடை + (கடன்) → கொடை.]

கொடைக்கானல் *koḍai-k-kāṉal,* பெ.(n.) பழனி மலைத் தொடரின் தென்பால் 7000 அடிக்குமேல் உயரமுள்ள மலைப்பகுதி; the southern ridge of the Palani Hills, more than 7,000 ft. high. 2. கோடைக்கானல் மலையின் உச்சியில் குளிர்ச்சிக் காகத் தங்கும் ஒரு மலைநகர்; a sanatorium at the top of *Kōḍaikkāṉal.*

[கோடைக்கானல் → கொடைக்கானல்.]

கோடைக்காற்று வீசும் மேற்குத் திசை கோடை எனப்படும். கோடைக்கானல் என்பது மேற்கு மலைக்காடு எனப் பொருள்படும். கானல் = சோலை, அடர்ந்த காடு.

கொடைக்கை *koḍa-k-kai,* பெ.(n.) வீட்டின்முகடு; ridge of a roof.

[கொடு → கொடை + கை.]

கொடைசாலி *koḍai-šāli,* பெ.(n.) ஈகையாளன்; a liberal man, banefactor.

[கொடை + சாலி. ஒருகா. கொடையாளி → கொடைசாலி (கொ.வ.).]

கொடைத்தம்பம் *koḍai-t-tambam,* பெ.(n.) ஈகத்திற்கு அறிகுறியாக நாட்டு தம்பம்; pillar commemorating one's munificence.

[கொடை + தம்பம்.]

கொடைநம்பிகள் *koḍai-nambigaḷ,* பெ.(n.) திருவாய்மொழிக்கு "மனத்தாலும் வாயாலும்" என்னுந் தனியனைப் பாடியவர்; a *Vaiṣṇavite* poet who contributed eulogical preface to one of *Tiruvāimoḻi* hymns.

[கொடை + நம்பிகள்.]

கொடைநேர்[1]**-தல்** *koḍai-nēr-,* 2 செ.குன்றாவி. (v.t.) மகளை மணம் செய்துகொடுக்க உடன்படுதல்; to agree to give one's daughter in marriage (இ.வ.). *"ஆர்வுற் றெமர்கொடை நேர்ந்தார்" (கலித். 104:75).*

[கொடு → கொடை + நேர்தல்.]

கொடைநேர்[2]**-தல்** *koḍai-nēr-,* 2 செ.கு.வி.(v.i.) சிறுதெய்வத்திற்கு விழா எடுக்கத் தீர்மானித்தல்; to promise or mentally resolve the celebration of a festive worship to a deity.

[கொடு → கொடை + நேர்தல்.]

கொடைப்பணக்காரன் *koḍai-p-paṇakkāraṉ,* பெ.(n.) மிகுந்த செல்வமுள்ளவன்; man of great wealth.

[கொடை + பணக்காரன்.]

கொடைப்பொருள் *koḍai-p-poruḷ,* பெ.(n.) கொடுக்கப்படும் பொருள்; material that is gifted.

[கொடை + பொருள்.]

கொண்டைபோடு-தல் *kondai-pōdu-,* 19 செ.கு.வி.(v.i.) கல்வியறிவின்மை, நாகரிக மின்மையைக் குறித்தல்; indicative of an illiterate and uncultured person. இதையெல்லாம் கொண்டை போட்ட ஆளைப்பார்த்துச் சொல் (உ.வ.).

[கொண்டை + போடு-.]

கொடைமடம் *kodai-madam,* பெ.(n.) வரை யின்றிக் கொடுக்கை (இ.வ.); unrestricted munificence. *"கொடைமடம் படுத லல்லது" (புறநா. 142:5).*

[கொடை + மடம். கொடைமடம் = கொடுப்பதில் நேரும் அறியாமையின் வெளிப்பாடு.]

யாருக்கு எது எப்போது எக்காரணத்திற்காகத் தருதல் வேண்டும் என்று ஆய்ந்து நோக்காமல், பரிவும் அன்பும் மட்டுமே கருதி உடனே கேட்டதைத் தருதலும், கேளாமலே அதன் பின்விளைவு நோக்காமல் தருதலும் கொடைமடம் எனப்படும்.

கொடைமடம்படு-தல் *kodai-madam-padu-,* 20 செ.கு.வி. (v.i.) ***கொடைமடம்*** பார்க்க; see *kodai madam.*

[கொடை + மடம் + படு.]

கொடைமுடி *kodai-mudi,* பெ.(n.) சரக்கொன்றை; Indian laburnum.

[குடை → கொடை + முடி.]

கொடைமை *kodaimai,* பெ.(n.) கொடைத்தொழில்; munificence *"கொடுத்த லெய்திய கொடையமை யானும்" (தொல்.பொருள்.63).*

[கொடு → கொடைமை.]

கொடையாளன் *kodai-y-ālaṉ,* பெ.(n.) ஈகையுள்ளவன்; munificent person (இ.வ.) *"கோலக்கா மேவுங் கொடையாளா" (அருட்பா. i. விண்ணப். 16).*

[கொடை + ஆளன்.]

கொடையாளி *kodai-y-āli,* பெ.(n.) ***கொடையாளன்*** பார்க்க; see *kodai-y-ālaṉ.*

[கொடை + ஆளி. ஒ.நோ. பாட்டாளி.]

கொடையெதிர்-தல் *kodai-y-edir-,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. கொடுத்தலை மேற்கொள்ளுதல் (இ.வ.); to make a gift offering. *"குத்தொக வரூஉங் கொடை யெதிர் கிளவி" (தொல்.சொல். 99. இளம்.).* 2. கொடுப்பதனை யேற்றல் (இ.வ.); to accept or receive. *"கொடையெதிர் கிளவியெனக் கொள்வோ னாகவும்" (இலக்.கொத்.ப.5).*

[கொடை + எதிர்.]

கொடையோன் *kodaiyōṉ,* பெ.(n.) ***கொடை யாளன்*** (பிங்.) பார்க்க; see *kodai-y-ālaṉ.*

[கொடையான் → கொடையோன்.]

கொடைவஞ்சி *kodai-vañji,* பெ.(n.) போரில் வென்றுகொண்ட பொருளைப் பாடிய பாணர்க்கு அரசன் பரிசாக அளிப்பதைக் கூறும் புறத்துறை (பு.வெ.3,16); (Purap.) theme of a king liberally rewarding his panegyrists with the spoils of war.

[கொடை + வஞ்சி.]

கொடைவினா *kodai-viṉā,* பெ.(n.) 1. கொடுக்கும் நோக்கத்தோடு கேட்கும் வினா; a question implying willingness to give as Has he no dress?. 2. அறுவகை வினாக்களிலொன்று; one of the six kinds of interrogation. 'சாத்தற்கு ஆடை யில்லையோ என்பது கொடைவினா' (நன்.385, உரை).

[கொடை + வினா.]

கொடைவீரம் *kodai-viram,* பெ.(n.) மிகு கொடையினா லுண்டாகும் வீரம்; heroism, magnanimity created by the exercise of munificence.

[கொடை + வீரம்.]

கொண்கன் *koṉgaṉ,* பெ.(n.) 1. கணவன்; husband. 2. தலைவன்; hero, leader. 3. நெய்தனிலத் தலைவன் (திவா.); hero of maritime tract.

[கொள்கு → கொண்கு + அன்.]

கொண்காகிதம் *koṉkāgidam,* பெ.(n.) முயற்புல்; hare's tail grass (சா.அக.).

மறுவ. மூகைப்புல்.

கொண்கானம்[1] *koṉ-kāṉam,* பெ.(n.) மலை யொன்றின் பெயர்; a name of a mountain. *"பொன்படு கொண்கான நன்னன்" (நற்.391) (புறநா.154,உரை).*

[கொண்மூ (மேகம்) → கொண் + கானம்.]

கொண்கானம்[2] *koṉ-kāṉam,* பெ.(n.) ஒரு மலை; Mt. Konkaṉa. *"பொன்படு கொண்கான நன்னன்" (நற்.391).*

[கொண்மூ (மேகம்) → கொண் + கானம்.]

கொண்ட[1] *koṇḍa,* வி.எ.(adv.) 1. எடுக்கப்பட்ட; having taken. 2. வாங்கப்பட்ட; received. 3. விலைக்கு வாங்கப்பட்ட; purchased.

ம. கொண்ட.

[கொள் → கொண் → கொண்ட.]

கொண்ட[2] *konḍa,* இடை.(part.) ஓர் உவமச்சொல்; a word denoting comparison. *"யாழ்கொண்ட விமிழிசை" (கலித்.29:17).*

[கொள் → கொண்ட.]

கொண்டக்கரை *konḍa-k-karai,* பெ.(n.) சிறுகரை; small bund.

[கொண்டம் + கரை.]

கொண்டக்காரர் *konḍa-k-kārar,* பெ.(n.) பரதவ இனத்தாருள் ஒரு பிரிவினர்; a sub caste of fishermen.

[கொண்டை + காரர்.]

கொண்டக்கிரி *konḍa-k-kiri,* பெ.(n.) ஒருவகைப் பண் (யாழ்.அக.); a kind of musical mode.

[கொண்டைக்கிரி → கொண்டக்கிரி.]

மேகராகக் குறிஞ்சியின் ஒருவகையாகலாம்.

கொண்டகம்புகு-தல் *konḍagam-pugu-,* 21 செ.கு.வி. (v.i.) பெருந்திணைத் துறைகளு ளொன்று; one of the themes in love poetry which explains the lust. *"கண்டுகளித்துக் கயலுண்கண் நீர்மல்கக் கொண்டகம் புக்காள் கொடியன்னாள்" (பு.வெ.12:3).*

[கொண் + அகம் + புகு-.]

கொண்டகரை *konḍa-karai,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tiruvallur Dt.

[கொண்டன் + கரை.]

கொண்டகாரிகுப்பம் *konḍakāri-kuppam,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[கொண்டன் + காரி + குப்பம்.]

கொண்டகி *konḍagi,* பெ.(n.) நச்சுவித்துகளைக் கொண்ட மரம்; strychnos nux-vomica (சா.அக.).

[கள் → கண்டு→ கண்டகி → கொண்டகி.]

கொண்டகுண்டம் *konḍa-kunḍam,* பெ.(n.) ***கொண்டகி*** பார்க்க; see *konḍagi.*

[கண்டு →கண்ட + குண்டம் - கண்டகுண்டம் → கொண்டகுண்டம்.]

கொண்டகுளம் *konḍa-kuḷam,* பெ.(n.) எட்டிமரம் (மலை.); with a piosonous and very bitter fruit.

[கள் → கண்ட + குளம் → கொண்டகுளம்.]

கொண்டங்கி *konḍaṅgi,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[கொண்டன் + அங்கி. அணங்கு → அணங்கி → அங்கி.]

கொண்டங்குறவான் *konḍaṅkuṟavāṉ,* பெ.(n.) வெண்மை கலந்த சிவப்பு வரியையுடைய ஒரு வகைக் கடல்மீன்; a sea-fish with white and red stripes (சா.அக.).

[கண்டங்கறையன் → கொண்டங்குறவான்.]

கொண்டச்சானி *konḍa-c-cāṉi,* பெ.(n.) நஞ்சறுப்பான்; a medicinal creeper.

[கண்டம் + சாலி - கண்டசாலி →கொண்டச்சானி.]

கொண்டச்சானிக்கிழங்கு *konḍa-c-cāṉi-k-kiḻaṅgu,* பெ.(n.) நஞ்சறுக்கும் கிழங்குவகை; root of above creeper.

[கண்டம் → சாலி + கிழங்கு.]

கொண்டசமுத்திரம் *konḍa-samuttiram,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Viḻuppuram Dt.

த. கடலன் > **Skt.** samuttiram.

[கொண்டன் + சமுத்திரம்.]

இவ்வூரின் பழைய பெயர் கொண்டன்கடலனூர்.

கொண்டசிரம் *konḍa-śiram,* பெ.(n.) 1. கடற்கரையிலுள்ள தாழை; sea-weed. 2. செந்தாழை; false tragacanth (சா.அக.).

மறு. 1. கொந்தாழை.

[கண்டல் + சிரம் - கொண்டசிரம்.]

கொண்டஞ்சேரி *konḍañ-cēri,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tiruvallur Dt.

[கொண்டன் + சேரி.]

கொண்டடை[1]**-தல்** *konḍaḍai-,* 2 செ.குன்றாவி. (v.t.) பகுதிபகுதியாகக் கூரைவேய்தல்; to cover the sloping roof (with *ōlās*) in part by part (கட்.தொ.).

[கொண்டு (பகுதியாகக் கொண்டு) +அடை-.]

கொண்டடை[2] *konḍaḍai,* பெ.(n.) கூரைவேயும் போது பகுதி பகுதியாகக் கட்டப்படும் ஒரு பகுதி; a portion tied at the time of covering the roof with *ōlās* (கட்.தொ.).

[கொண்டு (பகுதியாகக் கொண்டு) + அடை.]

கொண்டதும்பை *konḍa-tumbai,* பெ.(n.) மலைத் தும்பை; stooping toombay (சா.அக.).

மறுவ. கவிழ்தும்பை.

[கொண்டை + தும்பை.]

கொண்டப்பநாயக்கன்பட்டி *koṇḍappa-nāyakkaṉ-paṭṭi,* பெ.(n.) சேலம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Salem Dt.

[கொண்டப்பன் + நாயக்கன் + பட்டி.]

கொண்டப்பனை[1] *koṇḍa-p-paṉai,* பெ.(n.) பனை மடலில் தீ மூட்டும் விழா; a festival of fire using palm leaves.

மறுவ. காந்தம்பனை, சூந்தற்பனை.

[குண்டம் → கொண்டம் + பனை.]

கொண்டப்பனை[2] *koṇḍa-p-paṉai,* பெ.(n.) 1. ஈர்ப்புப் பனை; hill arecanut palm. 2. மலைப்பனை; hill toddy palm. 3. குடைப்பனை; umbrella palm (சா.அக.).

[கொண்டை + பனை.]

கொண்டபாகம் *koṇḍa-pāgam,* பெ.(n.) 1. நிறை சுமை; full weight. 2. பொறுக்கக்கூடிய சுமை; weight which one could bear (சா.அக.).

[குண்டைபாகம் → கொண்டபாகம்.]

கொண்டபாடு *koṇḍa-pāḍu,* பெ.(n.) கோட்பாடு; opinion, belief. 'நெறியன்றி ஒருவர் தம்மை மனத்தின்கட் கொண்டக்கால் அக்கொண்ட பாட்டினின்றும் மீட்டுத் தெருட்டுதல்' (பழ.37, உரை).

[கொண்ட + பாடு.]

கொண்டபாரம் *koṇḍa-pāram,* பெ.(n.) நிறை சுமை; full load (யாழ்.அக.).

[கொள் → கொண்ட (நிறைந்த) + பாரம்.]

கொண்டபாளையம் *koṇḍa-pāḷaiyam,* பெ.(n.) ஊர்ப்பெயர்; name of a place.

[கொண்டன் + பாளையம்.]

கொண்டம்[1] *koṇḍam,* பெ.(n.) குறிஞ்சா; an edible and medicinal creeper.

[குண்டம் → கொண்டம்.]

கொண்டம்[2] *koṇḍam,* பெ.(n.) மேட்டுநிலத்தில் பாய்ச்சுதற்காகத் தேக்கிய நீர்நிலை; small reservoir formed by damming a river or channel for irrigating field on a high level.

[குண்டம் → கொண்டம்.]

கொண்டம்பட்டி *koṇḍam-paṭṭi,* பெ.(n.) கோவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kovai Dt.

[கொண்டன் + பட்டி.]

கொண்டமங்கலம் *koṇḍa-maṅgalam,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[கொண்டன் + மங்கலம்.]

கொண்டமாந்தம் *koṇḍa-māndam,* பெ.(n.) குழந்தைகளுக்குண்டாகும் ஒருவகை மாந்த நோய்; indigestion in children due to derangement of the three humours in the system (சா.அக.).

[கண்டல் → கொண்டல் → கொண்ட + மாந்தம்.]

கொண்டயனேரி *koṇḍaya-ṉēri,* பெ.(n.) சிவகங்கை வட்டத்தில் சோழபுரம் கோயிலுக்கு வழங்கப்பட்ட ஏரி; a lake donated to the temple, at Cholapuram in Sivagangai Dt. *"துடையனூர் முட்டத்து திருச்சேலூரும் அமண்புரத்தூரும் கொண்டைய னேரியும்" (S.I.I. XXVI.526).*

[கொண்டயன் + ஏரி.]

கொண்டராங்கி கீரனூர் *koṇḍarāṅgi-kīraṉūr,* பெ.(n.) திண்டுக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dindukkal Dt.

[கண்டீரக்கோ → கண்டிரங்கோ → கொண்டரங்கோ. கொண்டராங்கி + கீரனூர்.]

கொண்டல்[1] *koṇḍal,* பெ.(n.) 1.கொள்ளுகை; taking. *"உணங்கற் றலையிற் பலிகொண்ட லென்னே" (தேவா. 614:5).* 2. மேகம் (இ.வ.); cloud. *"கொண்டல் வண்ணா குடக்கூத்தா" (திவ். திருவாய்.8:5,6).* 3. மழை (ஞான. 43:14, உரை); rain. 4. மேழவோரை, மேடராசி (சாதகசிந். காலநிக. 24); aries a constellation of the zodiac. 5.***கொண்டற் கல்*** பார்க்க; see *koṇḍaṟ-kall*(சங்.அக.). 6. மகளிர் விளையாட்டுவகை; a girls' game.

[கொள் → கொண்டு → கொண்டல்.]

கொண்டல்[2] *koṇḍal,* பெ.(n.) 1. கீழ்காற்று (இ.வ.); east wind. *"கொண்டன் மாமழை பொழிந்த.... துளி" (புறநா. 34:22).* 2. காற்று (பிங்.); wind. 3. கிழக்கு; east.

[குள் → குணக்கு (கிழக்கு) → குண்டல் → கொண்டல்.]

கொண்டல்[3] *koṇḍal,* பெ.(n.) 1. மந்தாரச்சிலை; black - stone species (mineral). 2. நெருப்பு; fire (சா.அக.).

[கொள் → கொண்டு → கொண்டல்.]

நீரை முகந்துகொள்வதால் மேகத்தையும் எதையும் பற்றிக்கொள்வதால் தீயையும் குறித்தது.

கொண்டல்தொவகரை *koṇḍal-tovakarai,* பெ.(n.) கிழக்கிலிருந்து மேற்காய்ச் செல்லும் கடல்

நீரோட்டம்; under water current in sea which passes from east to west (மீன்.பிடி.தொ.).

[கொண்டல் → (தொகுவரை) தொவகரை (கொ.வ.).]

கொண்டல்நீர் *kondal-nir*, பெ.(n.) கிழக்கிலிருந்து மேற்காய் வரும் கடல்நீரோட்டம்; under water current in sea that passes from east to west (மீன்.பிடி.தொ.).

[கொண்டல் + நீர்.]

கொண்டல்மிதி-த்தல் *kondalmidi-*, 4 செ. குன்றாவி. (v.t.) தீ மிதித்தல்; fire walking (யாழ்.அக.).

[கொண்டல் + மிதி. கொண்டல் = நெருப்பு. கொண்டல்[3] பார்க்க; see kondal[3].]

கொண்டல்மேனி *kondal-mēni*, பெ.(n.) நீலத் தாமரை; blue lotus (சா.அக.).

[கொண்டல் + மேனி.]

கொண்டல்வண்ணன் *kondal-vannan*, பெ.(n.) மேகநிறமுடையவன்; Visnu as the cloud-coloured. "*கொண்டல் வண்ணனை*" (*திவ். அமலனாதி. 10*).

[கொண்டல் + வண்ணன்.]

கொண்டலடித்தல் *kondal-adi*, பெ.(n.) மகளிர் விளையாட்டிலொன்று; a kind of woman's play.

[கொண்டல் + அடித்தல்.]

கொண்டலவ்வம் *kondalavvam*, பெ.(n.) இலவங்கப்பட்டை (சா.அக.); wild cinnamon, cassia lignia or cassia bark.

[கொண்டை + இலவங்கம் - கொண்டையிலவங்கம் → கொண்டலவ்வம்.]

கொண்டலாங்குப்பம் *kondalān-kuppam*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கொண்டலான் + குப்பம்.]

கொண்டலாத்தி[1] *kondalātti*, பெ.(n.) 1. கொண்டையை அசைக்கும் ஒரு குருவி; mountain bulbul with crest erected at will. 2. சிவப்புக் கொண்டலாத்தி; red-whiskered bulbul. 3. கொண்டைக் குருவி; crested bird. 4. புழுக்கொத்தி; a large kind of crested bird (சா.அக.).



கொண்டலாத்தி

[கொண்டை + கிளாறு → கொண்டைலாறு → கொண்டலாத்தி (கொ.வ.).]

கொண்டலாத்தி[2] *kondalātti*, பெ.(n.) கொண்டைக் கிளாத்தி என்னும் மீன்வகை; a kind of fish.

ம. கொண்டலாத்த; தெ. கொண்டலாடி.

[கொண்டை + (கிளாத்தி) லாத்தி → கொண்டைலாத்தி → கொண்டலாத்தி (கொ.வ.).]

கொண்டலுப்பு *kondal-uppu*, பெ.(n.) கறுப்புப்பு; black salt (சா.அக.).

[கொண்டல் + உப்பு.]

கொண்டலை *kondalai*, பெ.(n.) 1. கொண்டல் மரம்; sea side Indian oak. 2. ***சமுத்திரக் கடம்பு*** பார்க்க; see *šamuttira-k-kadambu*.

[கொண்டல் → கொண்டலை.]

கொண்டவலை *konda-valai*, பெ.(n.) ***கொண்டை வலை*** பார்க்க; see *kondai-valai*.

மறுவ. இருவலை.

[கொண்டை → கொண்டவலை (கொ.வ.).]

கொண்டவன் *kondavan*, பெ.(n.) 1. பொருளைப் பெற்றுக்கொண்டவன்; one who receives the material. 2. கணவன்; husband. கொண்டவன் தன்பக்கம் இருந்தால் கூரையேறிச் சண்டை யிடலாம் (பழ).

ம. கொண்டவன்; பட. கொண்டம.

[கொள் → கொண்டு → கொண்டவன்.]

கொண்டவன் கொடுத்தவன் *kondavan koduttavan*, பெ.(n.) ***கொண்டான் கொடுத்தான்*** பார்க்க; see *kondān-koduttān*.

[கொண்டவன்+ கொடுத்தவன்.]

கொண்டவாக்கம் *konda-vākkam*, பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[கொண்டன் + (பாக்கம்) வாக்கம்.]

கொண்டவாகை *konda-vāgai*, பெ.(n.) கொண்டைவாகை பார்க்க; see *kondai-vāgai*.

[கொண்டைவாகை → கொண்டவாகை (கொ.வ.).]

கொண்டற்கல் *kondar-kal,* பெ.(n.) ***கொண்டற் சிலை*** பார்க்க; see *kondar-cilai* (சா.அக.).

[கொண்டல்+ கல்.]

கொண்டற்சிலை *kondar-cilai,* பெ.(n.) மந்தாரச் ***சீலை***; a species of black stone (mineral) thought capable of converting camphor into copper (சா.அக.).

[கொண்டல் + சிலை.]

இதனால் கற்பூரம் செம்பாகும் எனக் கருதினர்.

கொண்டற்பகை *kondar-pagai,* பெ.(n.) காற்று; wind, air as enemy of clouds or rain (சா.அக.).

[கொண்டல் + பகை.]

கொண்டா *kondā,* பெ.(n.) ஆந்திரப்பிரதேசம் விசாகப்பட்டிணம், திரு (ஸ்ரீ)காகுளம் மாவட்டங்களில் 40000 பழங்குடிமக்கள் பேசும் திராவிட மொழி. கூயி, கூவி மொழிகளுடன் தொடர்புடையது. a Dravidian language spoken by tribals in Višakapattinam, SriKakulam districts of Andhra Pradesh.

[குன்று > தெ. கொண்டா (மலை, மலைவாழ் மக்களின் மொழி)]

இந்தக் "கொண்டா" மொழிபற்றிக் காண்க: Sanford B. Steever(Ed.) The Dravidian Languages; 1998, London, Routledge see Ch.IX (pp.241-269): "Konda" by Bh. Krishnamurthi and Brett A. Bentham.

கொண்டாச்சான் *kondāccān,* பெ.(n.) ***ஒட்டை மரம்*** பார்க்க; see *ottai-maram.*

[குண்டு → கொண்டு + ஆச்சான்.]

கொண்டாட்டக்காரன் *kondātta-k-kāran,* பெ.(n.) 1. மகிழ்ச்சியுள்ளவன்; cheerful man. 2. தோழன்; companion.

[கொண்டாட்டம் + காரன்.]

கொண்டாட்டம்[1] *kondāttam,* பெ.(n.) 1.பொழுது போக்கு; pastime. 2. சிறப்பு நிகழ்ச்சி; celebration. விடுதலைநாள் கொண்டாட்டம். 3. திருவிழா; festival. கடை கெட்ட மூளிக்குக் கோபம் கொண்டாட்டம் (பழ).

ம. கொண்டாட்டம்; க., து. கொண்டாட; தெ. கொண்டாட்மு.

[கொள் → கொண் → கொண்டு + ஆட்டம். ஆடு → ஆட்டம். (ஏதையேனும் கையில் கொண்டு அல்லது வெற்றி கொண்டு ஆடுதல்).]

கொண்டாட்டம்[2] *kondāttam,* பெ.(n.) 1. கொண்டாட்டு; joy. *'காதலன் கொண்டாட்டத்தாலே களித்து' (சீவக. 229,உரை).* 2. களிப்பு; delight.

[கொண்டு + ஆட்டம்.]

மகிழ்ச்சிக்குரிய இனிய நினைவை அல்லது நிகழ்ச்சியை மனத்துட் கொண்டு ஆடுதல். ஒன்றனை அல்லது ஒருவரைத் தலைமேற் கொண்டு ஆடுதல்.

கொண்டாட்டு *kondāttu,* பெ.(n.) 1. கொள்கை; policy. 2. சீராட்டு; civilities, great attention to a guest. 3. பாராட்டல்; praise, appreciation, fond ling, caressing. *"கொண்டாட்டும் குலம்புனைவும்" (திவ்.திருவாய்.4,9:3).*

[கொண்டு + ஆட்டு.]

கொண்டாடல் *kondādal,* பெ.(n.) 1. கொண்டாடுதல்; celebrate. 2. பேயாடல்; dancing through the influence of devils (சா.அக.).

[கொண்டு + ஆடல்.]

கொண்டாடு-தல் *kondādu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. கூடிக்குலவுதல்; to enjoy a person's society. 2.பாராட்டுதல் (இ.வ.); to praise. *"கொண்டாடுதல் புரியாவரு தக்கன்" (தேவா.908:9).* 3. விழா முதலியன கொண்டாடுதல்; celebrating a festival. 4. பலர் அறியும்படி தெரிவித்தல்; claim; சொத்துக்கு உரிமை கொண்டாட வந்துவிட்டான் (உ.வ.).

ம. கொண்டாடுக; க.,தெ.,து.கொண்டாடு ; துட. கொண்டார்.

[கொண்டு + ஆடு-.]

கொண்டாபுரம் *kondā-puram,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tiruvallur Dt.

[கொண்டான் + புரம்.]

கொண்டாரணியம் *kondāraniyam,* பெ.(n.) நுழைய முடியாத பெருங்காடு; thick impenetrable forest. *"கொண்டாரணியமான இடம்".*

[கள் → (முள்) → கண்டு → கொண்டு + ஆரணியம். ஆரணியம் : காடு → அரண் → அரணியம் → ஆரணியம்.]

கொண்டாழி *kondāli,* பெ.(n.) நிலத்தின் பெயர்; name of a land. இறையிழிச்சின நிலம் தேவதானம் கொண்டாழி என்னும் பழம்படி நிலம் ஐஞ்சும் (S.I.I. XXII, 389).

[ஒருகா. கொண்டன் + வாழி.]

கொண்டான்[1] *kondāṉ,* பெ.(n.) 1.***கொண்டவன்*** பார்க்க (இ.வ.);see *kondavaṉ.* *"கொண்டானிற் றுன்னிய கேளிர் பிறரில்லை" (நான்மணி.56).* 2. ***கொண்டல்*** பார்க்க; see *kondal.* 3. ஒரு விளையாட்டு; a kind of play.

[கொண்டவன் → கொண்டான்.]

கொண்டான்[2] *kondāṉ,* பெ.(n.) தமிழை இழித்துக்கூறிய குயக்கொண்டான்; *kuya-k-kōṇḍāṉ,* who under estimated Tamil by making false remarks.

*[குயக்கொண்டான் → கொண்டான் (முதற்குறை) **கொண்டான்மார்** பார்க்க; see kondāṉmār.]*

கொண்டான்கொடுத்தான் *kondāṉ-koduttāṉ,* பெ.(n.) கொண்டுங் கொடுத்தும் மணத்தொடர்பு செய்தோர்; persons who have entered into matrimonial alliance by the marriage of their sons and daughters in exchange.

மறுவ. விழைவர் (சம்பந்தி), உறவாடி.

[கொண்டவன் + கொடுத்தவன் → கொண்டான் கொடுத்தான்.]

பழ : 'கொண்டானும் கொடுத்தானும் ஒண்ணு; இந்தக் கலியாணத்தைக் கூட்டி வைத்தவன் வாயில் மண்ணு'.

கொண்டான்மார் *kōṇḍāṉ-mār,* பெ.(n.) 1. காட்டிக் கொடுப்பவர்; இரண்டகர்; traitors. 2. நம்பவைத்து ஏய்ப்பவர்கள்; cheats, deceivers. 3. இரண்டகம் செய்வோர்; betrayers; treacherous people.

மறுவ. ஐந்தாம்படை, இரண்டகர், காட்டிக்கொடுப்பவர், கோடரிக்காம்பு, கருங்காலி.

[குயக்கொண்டான் → கொண்டான் + மார் - கொண்டான்மார் (முதற்குறை).]

குயக்கொண்டான் என்பவன் தமிழனாய் இருந்தும் தமிழ்மீதும் தமிழினத்தின் மீதும் சிறிதும் பற்றும் பரிவும் இல்லாமலும் தமிழ் வரலாறு தமிழர் வரலாறு ஆகியவற்றின் உண்மை நிலைகளை யுணராமலும் '''ஆரியம் நன்று தமிழ் தீது'' என முற்றிலும் வேண்டுமென்றே உண்மைக்குப் புறம்பாகத் தமிழைத் தாழ்த்தியுரைத்தான். தமிழுக்கும் தமிழினத்துக்கும் இரண்டகம் செய்தான். நன்றி கெட்ட இவன் பெயரை, நன்றி கெட்டுத் தன்னினத்தைத் தானே காட்டிக் கொடுக்கும் அனைவர்க்கும் ஆள்வது வழக்கமாயிற்று. இவன் ஒரு குயக்கொண்டான் என்றும் பேசலாயினர். இதன் பலர்பால் வடிவம் கொண்டான்மார்.

குயக்கொண்டானின் இழிசெயலை,

"ஆரியம் நன்று தமிழ்தீது என்றுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானை"

என்னும் வெண்பாவாலும் அறியலாம்.

கொண்டானடித்தல் *kondāṉadittal,* பெ.(n.) ஒருவகை விளையாட்டு; a kind of game. *"கொண்ட னடிக்கிறாக்" (நந்தனார் சரித்திரம்).*

[கொண்டான் + அடித்தல்]

கொண்டானடி-த்தல் *kondāṉ-adi-,* 4 செ.கு.வி. (v.i.) மகிழ்ச்சியால் தடுத்தாடுதல்; to dance in merriment. *"பேயெழும்பி யெழும்பிக் கொண்டா னடிக்க" (இராமநா. உயுத்.78).*

[கொண்டான் + அடி-.]

கொண்டி[1] *kondi,* பெ.(n.) 1.பிறர் பொருளைக் கொள்ளுகை; getting possession of somebody else's property. *"நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்" (மதுரைக்.583).* 2. களவு; theft. *"கொண்டி யிலே பிடியுண்டு" (ஈடு.7,7:2).* 3. கொள்ளை; plunder. *"கொண்டியும் பெரிதென" (புறநா.78:6.).*

ம. கொண்டி,கொள்ள; **க.**கொள்ளெ; **தெ.**கொல்ல.

[கொள் → கொண் → கொண்டி (வே.க.166).]

கொண்டி[2] *kondi,* பெ.(n.) கப்பம்; tribute. *"கொண்டி வேண்டுவ னாயின்" (புறநா.51:6).*

மறுவ. திறை.

[கொள் → கொண்டி (வே.க.199).]

கொண்டி[3] *kondi,* பெ.(n.) 1. மிகுதி; abundance. *"கொண்டி யுண்டித் தொண்டையோர்" (பெரும் பாண்.454).* 2. அடங்காத-வன்-வள்-து; haughty person or animal. *"கொண்டி யாயினவா றென்றன் கோதையே" (தேவா.710:73.).* 3. பரத்தை; prostitute. *"வீழ்ந்த கொண்டி மல்லன் மார்பு மடுத்தனள்" (நற்.174).*

தெ. தொண்டி.

[கொள் → கொண்டி.]

கொண்டி[4] *kondi,* பெ.(n.) 1. கதவுக் குடுமி; corner pin of a door on which it swings. 2. சங்கிலி மாட்டும் இரும்பு; clamp, cleat of a door lock. 3. ஏர்க்கொழு மாட்டும் ஆணி; the pin that holds the share to the plough. 4. கொக்கி; a hook. 5. கழுத்தணி, வளையல் போன்றவற்றில் இணைக்கும் வளைந்த பகுதி; the clasp or hook of a chain or bracelet.

க., தெ., து., பட. கெண்டி; பர். கொண்டு.

[கொள் → கொண்டி.]

கொண்டி[5] *koṇḍi,* பெ.(n.) ஒருவகை மகளிர் விளையாட்டு; a kind of play of girls.

[கொண்டல் → கொண்டி.]

கொண்டி[6] *koṇḍi,* பெ.(n.) உணவு; food. *"கட்கொண்டிக் குடிப்பாக்கத்து" (மதுரைக்.137).*

[கொள் → கொண்டி.]

கொண்டி[7] *koṇḍi,* பெ.(n.) 1. மனவருத்தம்; grievance. உனக்கு அவன்மீது என்ன கொண்டி? இப்படிப் பேசுகிறாயே? 2. பகைமை; ill-feeling. *கொண்டியினால் ஒன்றுங் கூறவில்லை.* 3. புறங்கூறுகை; tale-bearing, back-biting.

[கொண்டியம் → கொண்டி.]

கொண்டிக்கடுக்கன் *koṇḍi-k-kaḍukkaṉ,* பெ.(n.) காதணிவகை; a kind of ear-ring.

[கொண்டி + கடுக்கன்.]

கொண்டிக்கதவு *koṇḍi-k-kadavu,* பெ.(n.) குடுமிக்கதவு; door that turns on projecting pins at the corners.

[கொண்டி + கதவு.]

கொண்டிக்கல் *koṇḍi-k-kal,* பெ.(n.) தாழ்வாரம் அமைக்கச் சுவரில் பொருத்தப்படும் கல்; a stone fixed to the wall to form a sloped roof (சா.அக.).

[கொண்டி + கல்.]

கொண்டிக்காரன்பட்டி *koṇḍikkāraṉ-paṭṭi,* பெ.(n.) தேனி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Theni Dt.

[கொண்டிக்காரன் + பட்டி.]

கொண்டிக்காவல் *koṇḍi-k-kāval,* பெ.(n.) ஊர்ப்பொதுவிலிருந்து புன்செய் புறம்போக்கு களுக்குப் போடப்படும் காவல்; a guarding system for the dry waste land of the village for which expenses are met by it own fund.

[கொண்டி + காவல்.]

கொண்டி என்பது பகைவர் நாட்டிலிருந்து கொள்ளையடித்து வந்த பொருள்களைக் குறிக்கும். அவற்றைக் காப்பது பொதுக்கடமையானது போன்று ஊர்ப்பொது நிலைதைக் காப்பதும் அதே சொல்லால் அழைக்கப்படுவதாயிற்று.

கொண்டிச்செட்டிப்பட்டி *koṇḍi-c-ceṭṭi-p-paṭṭi,* பெ.(n.) நாமக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Namakkal Dt.

[கொண்டி + செட்டி + பட்டி.]

கொண்டிசொல்(லு)-தல் *koṇḍi-šol(lu)-,* 8 செ. குன்றாவி.(v.t.) ***கொண்டிபேசு-தல்*** பார்க்க; see *koṇḍi-p-pēšu-.*

[கொண்டி + சொல்(லு)-.]

கொண்டித்தனம் *koṇḍi-t-taṉam,* பெ.(n.) அடங்காத தன்மை; insubordination.

[கொண்டி + தனம்.]

கொண்டித்தொட்டி *koṇḍi-t-toṭṭi,* பெ.(n.) ***கொண்டித்தொழு*** பார்க்க; see *koṇḍit-t-toḻu.*

[கொண்டி + தொட்டி.]

கொண்டிப்பணம் *koṇḍi-p-paṇam,* பெ.(n.) ஆடுமாடுகள் பட்டி மேய்தலுக்கு இடும் தண்டம்; fine imposed for graying cattle in prohibited area (வின்.).

[கொண்டி + பணம்.]

கொண்டிப்பாறை *koṇḍi-p-pāṟai,* பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish.

[கொண்டி + பாறை.]

கொண்டிபேசு-தல் *koṇḍi-pēšu-,* 5 செ. குன்றாவி. (v.t.) 1. பகைமையால் கொடுமை பேசுதல்; speak ill of any one out of ill-feeling. 2. கோட்சொல்லுதல்; to tell tales. 3. குறை கூறுதல்; to point out one's defect. 4. குற்றம் சுமத்திப் பேசுதல்; to accuse.

[கொண்டி + பேசு-.]

கொண்டிமகளிர் *koṇḍi-magaḷir,* பெ.(n.) 1.சிறை பிடிக்கப்பட்ட மகளிர் (இ.வ.); captive women. *"கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி" (பட்டினப். 246).* 2. பரத்தையர் (இ.வ.); prostitutes. *"வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிரை" (மணிமே. 18:109).*

[கொண்டி + மகளிர்.]

கொண்டிமாடு *koṇḍi-māḍu,* பெ.(n.) பட்டிமாடு; stray cattle.

[கொண்டி + மாடு.]

கொண்டிமேய்-தல் *kondi-mēy-*, 2 செ.கு.வி.(v.i.) பட்டி மேய்தல்; to graze stealthily in prohibited areas.

[கொண்டி + மேய்-.]

கொண்டியம் *kondiyam*, பெ.(n.) 1. குறளை; calumny, back - biting (பிங்.) 2. புறங்கூறல்; asperse, slander. 3. பொய்ச்சொல்; falsehood, lie.

க. கொண்டெய; **தெ.** கொண்டெமு.

[கொள் → கொண்டி (வளைவு) → கொண்டியம்.]

கொண்டியாரம் *kondi-y-āram*, பெ.(n.) 1. நிந்தை மொழி; invective. 2. பிறர் செயலில் தலையிடுகை; meddling. 3. செருக்கு; haughtiness. 4. சிறப்பு; elegance.

ம.கொண்டியாரம்; **க.** கொண்டய; **தெ.** கொண்டெமு.

[கொண்டி +ஆரம் (சொல்லாக்க ஈறு).]

கொண்டியோட்டி *kondi-y-ōtti*, பெ.(n.) கொண்டித் தொழுவுக்குப் பட்டிமாட்டைச் செலுத்துவோன்; (G.T.D.i.241) impounder of stray cattle.

[கொண்டி + ஓட்டி.]

கொண்டிரு-த்தல் *kondiru-*, 2 செ.குன்றாவி. (v.t.) ஒத்திருத்தல்; look like. குழந்தை யாரைக் கொண்டிருக்கிறது அம்மாவையா? அப்பாவையா? (உ.வ.).

[கொண்டு + இரு-.]

கொண்டிலாத்தி *kondilātti*, பெ.(n.) ***கொண்டலாத்தி*** பார்க்க; see *kondalātti*.

மறுவ. கொண்டைக் கிளர்த்தி, கொண்டிலான்.

[கொண்டைலாத்தி → கொண்டலாத்தி → கொண்டிலாத்தி (கொ.வ.).]

கொண்டிலான் *kondilān*, பெ.(n.) ***கொண்டலாத்தி*** பார்க்க; see *kondalātti*.

ம. கொண்டிலான்; **தெ.** கொண்டலாடி.

[கொண்டை → கொண்டில் + ஆன்.]

கொண்டின்னி *kondinni*, பெ.(n.) தும்பை (சங்.அக.); black gaub.

[கொண்டி : தேள்கொடுக்கு, நஞ்சு. கொண்டி + தின்னி (நஞ்சு முறிப்பது).]

கொண்டு[1] *kondu*, பெ.(n.) 1. முதல்; from beginning with. *"அடியிற்கொண்டு முடிகாறும்" (இறை. 3:45).* 2. குறித்து (இ.வ.); towards, in the direction of. *"குடதிசைக் கொண்டு" (சிலப். 10:34).*

[கொள் → கொண்டு.]

கொண்டு[2] *kondu*, இடை.(part.) 1. மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு (பி.வி.6, உரை); a sign of the instrumental case. வாள்கொண்டு மரத்தை அறுத்தார்கள். 2. அசைநிலை; expletive. *"எனக்குமுன் றனக்குங் கொண்டு" (திருவிளை. நரிபரி. 83).*

ம., து. கொண்டு.

[கொள் → கொண்டு.]

கொண்டுகட்டுவணிகம் *kondu-kattu-vanigam*, பெ.(n.) பண்டங்களை மலிந்தபோது வாங்கிக் கட்டி, விலையேறின காலத்தில் விற்கை; trading in articles bought cheap in retail and stored up awaiting a favourable market.

[கொண்டு + கட்டு + வணிகம்.]

கொண்டுகடவோம் *kondu-kadavōm*, வி. (v.) கைக்கொண்டு செலுத்துவோம்; to pay at own risk. *"இப் பொன்கொண்டு கடவோம்" (தெ.கல். தொ.12. கல்.71).*

[கொள் → கொண்டு + கடவு + ஓம் (ஓம் : தன்மைப் பன்மை ஈறு).]

கொண்டுகண்மாறு-தல் *kondu-kan-māru-*, 5 செ.குன்றாவி. (v.t.) நட்புக்கொண்டு புறக்கணித்தல் (இ.வ.); to make friends and then ignore. *"கொண்டுகண் மாறல் கொடுமையிற் றுவ்வாது" (முது. காஞ்.37).*

[கொண்டு + கண் + மாறு.]

கொண்டுகூட்டல் *kondu-kūttal*, பெ.(n.) மருந்துப்பொருள்களை நன்கு அறிந்து அதன் பின் பயன்படுத்துதல் அல்லது சேர்த்தல்; using or mixing up ingredients after studying the drug well (சா.அக.).

[கொண்டு + கூட்டல்.]

கொண்டுகூட்டு *kondu-kūttu*, பெ.(n.) 1. எண் வகைப் பொருள்கோளுள் செய்யுளின் அடிகள் பலவற்றிலும் உள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்றவிடத்தில் எடுத்துக் கூட்டிப் பொருள் கொள்ளு முறை; mode of construing a stanza in which words are appropriately transposed to arrive at the proper meaning, one of eight *porul-kōl*

"கோப்புடை மொழிகளை ஏற்புழி யிசைப்பது கொண்டு கூட்டே" (நன். 418). 2. உடன்படு; accept.

[கொண்டு + கூட்டு.]

தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட
பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
யஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்

என்னும் பாடலுள் வங்கத்துச் சென்றார்வரின். அஞ்சனத்தன்ன பைங்கூந்தல் உடையாளது மாமேனி மேல் தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட கோழி வெண் முட்டை யுடைத்தன்ன பசலை தணிவாம் எனக் கூட்டுவது கொண்டுகூட்டாம்.

கொண்டுகூற்று *kondu-kūṟṟu,* பெ.(n.) அயலார் நேரிற் சொல்வதாகக் கூறும் மொழி (இ.வ.); direct speech. 'கொண்டுகூற்றாகக் கூறப்படுவனவும்' (தொல்.பொருள்.115, உரை).

[கொண்டு + கூற்று.]

கொண்டுகொடு-த்தல் *kondu-kodu-,* 4 செ. குன்றாவி.(v.t.) பெண்ணைக் கொண்டுங் கொடுத்தும் மணவுறவு கொள்ளுதல்; to give and take in marriage as a girl.

[கொண்டு + கொடு-.]

கொண்டுகொடுப்பனை *kondu-koduppaṇai,* பெ.(n.) பெண்ணைக் கொண்டுங் கொடுத்துஞ் செய்யும் திருமண வுறவு; giving and taking a girl in marriage in exchange,.

மறுவ. எதிர்பெண்.

[கொண்டு + கொடுப்பனை.]

கொண்டுகொடுப்பு *kondu-koduppu,* பெ.(n.) ***கொண்டு கொடுப்பனை*** பார்க்கவும்; see *kondu-koduppaṇai.*

[கொண்டு + கொடுப்பு.]

கொண்டுசெலுத்து-தல் *kondu-šeluttu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. தடைபல கடந்து செயலை முடிவுவரை நடத்துதல்; carry to completion though with difficulty, to succeed against odds. 2. ஆளுவம் செய்தல் (நிருவகித்தல்); to be able to manage.

[கொண்டு + செலுத்து-.]

கொண்டுணி *konduṇi,* பெ.(n.) கோட் சொல்வோன்; slanderer.

மறுவ. குண்டுணி.

[கொள் → கோள் → கொண்டு → கொண்டுணி.]

கொண்டுதலைக்கழிதல் *kondu-talai-k-kaḻidal,* பெ.(n.) தலைவன் தலைவியை உடன்கொண்டு போதலைக் கூறும் அகத்துறை; theme describing the elopement of the hero with his lady-love (தொல்.பொருள்.).

[கொண்டு + தலை + கழிதல்.]

கொண்டுநடத்து-தல் *kondu-nadattu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ***கொண்டுசெலுத்து-தல்*** பார்க்க; *kondu-šeluttu-.* 2. கொடுக்கல் வாங்கல்; to do banking business.

[கொண்டு + நடத்து-.]

கொண்டுநிலை *kondu-nilai,* பெ.(n.) குரவைக் கூத்தில் தலைவனது வரைவு வேண்டிப் பாடும்பாட்டு (இ.வ.); Kuravai song praying for the hero's union in wedlock with the heroine. *"என்றியாங் கொண்டு நிலைபாடி யாடுங் குரவையை" (சிலப் : 24. இறுதிப்பாட்டுமடை.)*

மறுவ. திருமணம், மன்றல், மணம், வரைவு, கலியாணம்.

[கொண்டு + நிலை.]

கொண்டுநிலைக்கூற்று *kondu-nilai-k-kūṟṟu,* பெ.(n.) இகந்துபடாமல் தலைமகனைத் தாங்கிக் கூறுந் தோழியின் சொல்; words of encouragement by the heroine's maid, dissuading the hero from desperate action. 'இதனைக் கொண்டுநிலைக் கூற்றென்று சொல்வது' (இறை. 9, உரை).

[கொண்டு + நிலை + கூற்று.]

கொண்டுநிலைகூறல் *kondu-nilai-kūṟal,* பெ.(n.) மடல் விலக்கிற்குரிய கிளவிகளு ளொன்று (அகப்.9,26); words dissuading a hero from serious action.

[கொண்டு + நிலை + கூறல்.]

கொண்டுபோ-தல் *kondu-pō-,* 8 செ.குன்றாவி. (v.t.) 1. எடுத்துக்கொண்டு செல்லுதல்; to carry. *"கொண்டுபோவான் வந்து நின்றார்" (திவ். பெரியாழ். 2, 2:7).* 2. அழைத்துச் செல்லுதல்; to lead escoort. குருடனை வெளியிற் கொண்டுபோய் விடு.

3. கவர்ந்து செல்லுதல்; to carry away (இ.வ.). *"செங்கண்மால் தான் கொண்டு போனான்" (திவ். பெரியாழ்.3, 8:4).* 4. நடத்துதல்; to conduct. நூலாசிரியர் கதையை விறுவிறுப்பாகக் கொண்டு போயிருக்கிறார். 5. நெறிப்படுத்துதல்; to direct. திரைக்கதையை எப்படிக் கொண்டுபோவதென்று தெரியாமல் இயக்குநர் திணறி இருக்கிறார் (உ.வ.).

[கொண்டு + போ-.]

கொண்டுமிஞ்சு-தல் *kondu-minju-,* 5.செ. குன்றாவி.(v.t.) மிகு வரவு; excess income. 'கொண்டு மிஞ்சிப் போச்சி கொடுக்கல் வாங்க லாச்சி' (கோமாளிப்பாட்டு).

[கொண்டு + மிஞ்சு-.]

கொண்டுமுதல் *kondu-mudal,* பெ.(n.) வணிக மூலதனம்; business capital.

மறுவ. கொள்முதல்.

[கொள் → கொண்டு + முதல்.]

கொண்டுமொழி-தல் *kondu-moli-,* 2 செ. குன்றாவி.(v.t.) அயலார் சொல்லை அவர் சொல்வதாகவே எடுத்துக் கூறல்; to report a person's speech in direct form.

[கொண்டு + மொழி-.]

கொண்டுலங்கம் *kondulangam,* பெ.(n.) பேராமுட்டி; fragrant pavonia (சா.அக.).

[கொண்டல் + அங்கம்.]

கொண்டுவந்தவள் *kondu-vandaval,* பெ.(n.) அதிகமாகச் சீர் கொண்டுவந்த மருமகள்; the daughter-in-law who brought more money. கொண்டுவந்தவளாக இருப்பதால் மாமியாரைத் திட்டுவதா? (உ.வ.).

[கொண்டு + வந்தவள்.]

கொண்டுவரு-தல் *kondu-varu-,* 15 செ. குன்றாவி. (v.t.) 1. அழைத்து வருதல்; to bring as of a man. நோயாளியை முன்னரே என்னிடம் கொண்டு வந்திருக்கலாம். 2. எடுத்து வருதல் (உ.வ.); to bring, as of a thing. நான் சொன்ன பொத்தகங்களைக் கொண்டுவந்தாயா?. 3. தீர்மானத்தை முன் வைத்தல்; to bring a motion to an assembly. எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானம் தோற்றுப்போயிற்று (உ.வ.). 4. சட்ட முன்வரைவை அறிமுகப்படுத்துதல்; to bring a bill before the assembly.

[கொண்டு + வரு-.]

கொண்டுவலை *kondu-valai,* பெ.(n.) மீன்பிடி வலை வகையுளொன்று; a kind of fishing net.

[கொண்டு + வலை.]

கொண்டுவில்-தல் (கொண்டுவிற்றல்) *kondu-vil-,* 9 செ.குன்றாவி. (v.t.) 1. அப்போதைக்கப்போது வணிகத்திற்காகப் பண்டங்களை வாங்கி விற்றல்; to carry on a petty trade by buying and selling things every now and then. *"கொண்டு விற்றல் கூலித்தொழில்" (தணிகைப்பு. அகத். 197).* 2. பணவணிகம் முதலியவை செய்தல்; to carry-on money lending business.

[கொண்டு + வில்-.]

கொண்டுவிலை *kondu-vilai,* பெ.(n.) பண வணிகம் முதலியன; money-lending business, trade etc.

[கொண்டு + விலை.]

கொண்டுவிற்றல் *kondu-virral,* பெ.(n.) போட்டி வணிகம், எதிர்ச் செட்டு; competition in trade; buying and selling again directly at a small profit.

[கொண்டு + விற்றல்.]

கொண்டூர் *kondūr,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kadalur Dt.

[குண்டு (குளம்) → கொண்டு + ஊர்.]

கொண்டேசன் *kondēsan,* பெ.(n.) சுக்கு (மூ.அக.); dry ginger.

[குன்று + உச்சல் → குன்றுச்சல் → குண்டச்சல் → கொண்டோசன் → கொண்டேசன் (கொ.வ.).]

கொண்டோசனக்கிழங்கு *kondōsana-k-kilangu,* பெ.(n.) திப்பிலி மூலம்; root of long-pepper (சா.அக.).

[குன்று + உச்சல் → குன்றுச்சல் → குண்டச்சல் → கொண்டோசன் + கிழங்கு.]

இது நறுமணமாகவும், சிவப்பாகவும் இருக்கும்.

கொண்டை[1] *kondai,* பெ.(n.) 1. பெண்களின் ஐம்பான்முடியுள் கூந்தலைத் திரளாகச் சேர்த்துக் கட்டும் முடிவகை; tuft dressing of hair in large coil on the head, one of *aimpānmudi* of ladies. குடல் கூழுக்கு அழுகிறதாம்; கொண்டை பூவுக்கு அழுகிறதாம் (பழ). 2. சொருக்கு; dressing of hair by turning up and folding. 3. குழந்தைகளுக்கு உச்சிக்கொண்டை கட்டப் பயன்படும் நார்வளையம்; fibre ring used in dressing the hair of child. 4. பறவைச்சூட்டு; crest of a bird. 5. ஆணி, பம்பரம் முதலியனவற்றின் குமிழ்த்தலை; head, as of a nail, round top. 6. திமில்; hump.

தெ. கொண்டெ; **ம.** கொண்ட; **க.** கொண்டே, கொண்டெ; **து.,** குட., பட. கொண்டே; **கோத.** கொண்ட்; **துட.** க்விட்; **பிரா.** கண்ட்.

[குள் → குண்டு → கொண்டை.]

வகைகள்: 1. இடுமுடிக் கொண்டை, 2. முத்துமுடிக் கொண்டை, 3. வளையம்புக் கொண்டை, 4. புரிக்கொண்டை, 5. கூட்டுக்கொண்டை.

கொண்டை[2] *kondai,* பெ.(n.) இலந்தை; the jujube, a thorny tree yielding a small fruit like the mulberry.

[குண்டை → கொண்டை.]

கொண்டை[3] *kondai,* பெ.(n.) திமில்; hump (தஞ்சை.).

[குள் → குண்டு → கொண்டை.]

கொண்டை ஆறு *kondai-āru,* பெ.(n.) திண்டுக்கல் மாவட்டம் பழனிமலைப் பகுதியில் உள்ள ஆறு; a river in Palani hill area.

[குண்டை → கொண்டை + ஆறு.]

கொண்டைக்கட்டி *kondai-k-katti,* பெ.(n.) வேளாளருள் ஒருவகை; a group of agriculturists.

மறுவ. கொண்டைக்கட்டி வேளாளர்.

[கொண்டை + கட்டி.]

கொண்டைக்கடலை *kondai-k-kadalai,* பெ.(n.) கடலை; Bengal gram (சா.அக.).

[கொண்டை + கடலை.]

கொண்டைக்கரிச்சான் *kondai-k-kariccān,* பெ.(n.) உச்சிச் சூட்டுள்ள கரிக்குருவி வகை; hair crested king-crow.

[கொண்டை + கரிச்சான்.]

கொண்டைக்காரன் *kondai-k-kāran,* பெ.(n.) 1.தலைமயிரைத் திரளாக முடித்துக் கட்டியவன்; one who wears his hair in a knot. 2. மென்மை யுடையவன்; respectable person. 3. செருக்குடை யவன்; haughty man.

[கொண்டை + காரன்.]

கொண்டைக்காரி *kondai-k-kāri,* பெ.(n.) மயிர்க் கொண்டையிட்ட பெண்; a woman having a tuft of hair tied into a coiled knot (சா.அக.).

[கொண்டை + காரி.]

கொண்டைக்கிரி *kondai-k-kiri,* பெ.(n.) முல்லை நிலப் பண்வகை (பிங்.); a secondary melody-type of the mullai class.

[கொண்டை + கிரி. ஒருகா. கொண்டைஆகிரி.]

கொண்டைக்கிருட்டி *kondai-k-kirutti,* பெ.(n.) கொண்டையை அசைக்கும் ஒரு குருவி; mountain bulbul with crust erected at will (சா.அக.).

[கொண்டை + (கிளர்த்தி) கிருட்டி.]

கொண்டைக்கிலாத்தி *kondai-k-kilātti,* பெ.(n.) ***கொண்டைக்கிளர்த்தி*** பார்க்க; see *kondai-k-kilartti.*

[கொண்டை + (கிளர்த்தி) கிலாத்தி.]

கொண்டைக்கிளர்த்தி *kondai-k-kilartti,* பெ.(n.) கொண்டையை அசைக்கும் குருவி; mountain bulbul which shakes crust at will.

[கொண்டை + கிளர்த்தி.]

கொண்டைக்கிளாறு *kondai-k-kilāru,* பெ.(n.) ***கொண்டைகிளர்த்தி*** பார்க்க (சா.அக.); see *kondai -kilartti.*

[கொண்டை + (கிளர்த்தி) கிளாறு.]

கொண்டைக்கிளிஞ்சான் *kondai-k-kilinjān,* பெ.(n.) ஒருவகைக் கடல்மீன்; a kind of sea-fish.

[கொண்டை + கிளிஞ்சான்.]

கொண்டைக்குச்சு *kondai-k-kuccu,* பெ.(n.) 1. சடைக்குச்சு; a hair-ornament with pendants. 2. கொண்டையில் செருகும் ஊசிவகை;ornamented hair-pin.

[கொண்டை + குச்சு.]

கொண்டக்குலாத்தி *konda-k-kulātti,* பெ.(n.) ***கொண்டடைக் கிளர்த்தி*** பார்க்க; see *kondai kilartti. "கொண்டைக் குலாத்தியும் மாடப் புறாவும்" (குற்றா.குற. 87:2).*

[கொண்டை + (கிளர்த்தி) குலாத்தி.]

கொண்டைக்கோல் *kondai-k-kōl,* பெ.(n.) 1.தலையிற் கொண்டையுள்ள கழி; a staff with a knob at its head. 2. ஆழத்திற்கு அறிகுறியாக நீரிடையில் நடுங்கோல்; a post planted to indicate the depth of water. *'ஆழங்காலிலே இழிந்து அமிழ்ந்துவார் அவ்விடத்தே கொண்டைக்கோல் நாட்டு மாபோலே' (ஈடு,10,7:1).* 3. மகிழ்ச்சி காரணமாக உயர்த்தி யசைக்கும் ஆடை கட்டிய கோல்; a staff with cloth uplifted and flourished as a sign of joy. *"கொண்டைக் கோலொடு குணலை யிட்டார்" (கோயிற்பு. இரணிய. 130).* 4. எல்லை குறிக்கும் கோல்; boundary post. அளக்கும் பிரதேசத்துக்கு கொண்டைக்கோல் நாட்டுகிறார் (திவ். திருநெடுந். 5 விலா.).

[கொண்டை + கோல்.]

அலுவலகம்
30 ஆக 20
சென்னை-60

கொண்டை வகைகள்

விடுமுடிக் கொண்டை

முத்துமுடிக் கொண்டை

வளையம்பிக் கொண்டை

புரிக் கொண்டை



கூட்டுமுடிக் கொண்டை

கொண்டைகட்டிமறவன் *kondaikatti-maravan,* பெ.(n.) மறவர் வகை; a sub-sect of Maravar caste.

[கொண்டை + கட்டி + மறவன்.]

கொண்டைகட்டிவேளாளர் *kondaikatti-vēlālar,* பெ.(n.) திருமணத்திற் கொண்டையாகத் தலை மயிரை முடிக்கும் வேளாளவகையினர்; a sub-sect of Velalas who put up the hair in a peculiar fashion during marriage.

மறுவ. கொண்டைகட்டி.

[கொண்டை + கட்டி + வேளாளர்.]

கொண்டை குலைந்துபோ-தல் *kondai-kulaindu pō-,* 8 செ.கு.வி.(v.i.) அவமானப்படுதல்; to suffer loss of honour.

[கொண்டை + குலைந்து + போ-.]

கொண்டைச்சாணி *kondai-c-cāni,* பெ.(n.) 1.நஞ்சறுப்பான்; a creeper used as an antidote for poison. 2. நாய்ப்பாலை; Indian ipecacuanha. 3. கழுதைப்பாலை; common Indian ipecacuanka (சா.அக.).

மறுவ. கழுதைப்பாலை, கொண்டைச்சீனிக் கிழங்கு, கொண்டைச்சாணிக் கிழங்கு.

[கொண்டை (சீனி) + சாணி.]

கொண்டைச்சுத்தியல் *kondai-c-cuttiyal,* பெ.(n.) தட்டார் கருவிகளுள் ஒன்று; goldsmith's or braziers hammer.

[கொண்டை + சுத்தியல்.]

கொண்டைத்தலை *kondai-t-talai,* பெ.(n.) மயிர்முடித் தலை; head with a hair knot.

[கொண்டை + தலை.]

கொண்டைத்திருகி *kondai-t-tirugi,* பெ.(n.) கதவுக்குடுமி செருகுந்துளை; hole in the sill into which the corner pin of a door is fitted (கட்.தொ.).

[கொண்டை + திருகி.]

கொண்டைத்திருகு *kondai-t-tirugu,* பெ.(n.) மகளிர் தலையிலணியும் செவ்வந்திப்பூ வடிவிலான தாகிய திருகாணிவகை; ornament for hair in the shape of a chrysanthemum flower with a spiral wire underneath, worn by women.

[கொண்டை + திருகு.]

கொண்டைத்தும்பை *kondai-t-tumbai,* பெ.(n.) கவிழ்தும்பை; stooping tommbay.

மறுவ. மலைத்தும்பை.

[கொண்டை + தும்பை.]

கொண்டைத்துலா *kondai-t-tulā,* பெ.(n.) கயிறு நழுவிவிடாதபடி கொண்டை கட்டிய துலாவகை; picottah with a crest-like projection at the end to prevent the rope from slipping.

[கொண்டை + துலா.]

கொண்டைப்புல் *kondai-p-pul,* பெ.(n.) மயிற் கொண்டைப்புல்; trail grass (சா.அக.).

ம. கொண்டப்புல்.

[கொண்டை + புல்.]

கொண்டைப்பூ *kondai-p-pū,* பெ.(n.) ***கொண்டைத் திருகு*** பார்க்க; see *kondai-t-tirugu.*

ம. கொண்டைப்பூ.

[கொண்டை + பூ.]

கொண்டைமார்சா *kondai-māršā,* பெ.(n.) கரைப்பரப்பினின்று ஆழக் கடல்நோக்கிச் செல்லும் கடலலை; wave moving from coast towards the deep sea.

[கொண்டை (கிழக்கு) + மார்சா.]

கிழக்கு நோக்கிய அலை என்பதேயாம். மார்தல் = நீளுதல், ஓங்குதல்.

கொண்டைமாறு *kondai-māru,* பெ.(n.) 1. கொண்டை போன்ற அடிப்பக்கமுடைய வளார்; twigs of a shrub with knob-like root. 2. மரத்தின் உச்சியிலிருந்தெடுக்கும் சிறுசுள்ளி; twigs gathered from the top-most part of the trees. 3. கொண்டையுள்ள விளக்குமாறு; a kind of broom with a knob-like handle.

[கொண்டை + மாறு.]

கொண்டைமுசு *kondai-mušu,* பெ.(n.) பெரிய கருங்குரங்கு வகை; a large black-faced monkey.

மறுவ. கொண்டை முசுடு, கொண்டைமுசுறு, முசாண்டலம், முசுகோத்தி.

[கொண்டை + முசு.]

கொண்டைமுசுறு *kondai-mušuru,* பெ.(n.) ***கொண்டைமுசு*** பார்க்க; see *kondai-mušu.*

மறுவ. கொண்டை முகிறு, கொண்டை முசுடு.

[கொண்டை + (முசு) முசுறு.]

கொண்டைமுடி-தல் *kondai-mudi-,* 2 செ.குன்றாவி.(v.t.) 1. ஏமாற்றுதல்; to deceive. 2. அணியுறக் கூந்தலை அள்ளி முடித்தல்; to tie the hair knot.

[கொண்டை + முடி-.]

கொண்டைமேற்காற்றடிக்க *kondaimēr-kāṟṟadikka,* வி.எ. (adv.) (தலைமயிரின்மேல் காற்று வீசும்படி) மகிழ்ச்சியாக; the breeze playing about the tuft. *'கொண்டைமேல் காற்றடிக்கத் திரியப் பெறாதே' (திருவிருத். 23: வியா. ப. 150).*

[கொண்டை + மேல் + காற்று + அடிக்க.]

கொண்டையங்கோட்டை மறவன் *kondaiyan-kōṭṭai-maṟavan,* பெ.(n.) ***கொண்டைகட்டி மறவன்*** பார்க்க; see *kondai-katti-maravan.*

[கொண்டை + அம் + கோட்டை + மறவன்.]

கொண்டையடுப்பு *kondai-y-aduppu,* பெ.(n.) சூட்டடுப்பு; a kind of domestic oven.

[கொண்டை + அடுப்பு.]

கொண்டையம் *kondayam,* பெ.(n.) 1. உச்சி; top. 2. மலைமுகடு; hill top. கொண்டையத்தில் ஏறாதே (உ.வ.). 3. வீட்டின் முகடு, கூரையின் உச்சி; top of the thatched house.

[கொள் → கொண்டு → கொண்டையம் (முடிச்சு).]

கொண்டையழகி *kondai-y-alagi,* பெ.(n.) கூந்தழலகி; a woman with flowing hairs long enough to be dressed into a large coil, which adds to her beauty (சா.அக.).

[கொண்டை + அழகி.]

கொண்டையன் *kondaiyan,* பெ.(n.) உச்சிக் கொண்டையுள்ள பருந்துவகை; a species of crested kite.

[கொண்டை → கொண்டையன்.]

கொண்டையாணி *kondai-y-āni,* பெ.(n.) 1. மேற் கொண்டையுள்ள ஆணி; nail with round head stud. 2. கடையாணி; axle pin of a wheel.

[கொண்டை + ஆணி.]

கொண்டையூசி *kondai-y-ūsi,* பெ.(n.) 1. குண்டூசி; pin. 2. கொண்டை அவிழாதபடி செருகும் கம்பி; hair-pin to keep the hair intact.

[கொண்டை + ஊசி.]

கொண்டையூசிவளைவு *kondai-y-ūsi-valaivu,* பெ.(n.) கொண்டைஊசி வளைவு; hair-pin bend.



கொண்டைஊசி வளைவு

[கொண்டை + ஊசி + வளைவு.]

கொண்டைலாத்தி *kondailātti,* பெ.(n.) ***கொண்டைக்கிளர்த்தி*** பார்க்க; see *kondai-k-kilartti.*

[கொண்டை + (கிளர்த்தி) லாத்தி.]

கொண்டைவலை *kondai-valai,* பெ.(n.) அலைவாயிலிருந்து வீசி மீனைப் பிடிக்கும் ஒருவகை வலை; a kind of shore-net used in catching sea-fish.

[கொண்டை + வலை.]

கொண்டைவலைப்பு *kondai-valaippu,* பெ.(n.) நேர்தொலைவாய் மீன் வலைக்கை; fishing from due distance.

[கொண்டை + வலைப்பு.]

கொண்டைவாகை *kondai-vāgai,* பெ.(n.) வாகைமர வகை; doon siriss tree.

[கொண்டை + வாகை.]

கொண்டோசனை *kondōšanai,* பெ.(n.) ஒருவகை மூலிகை; a kind of medicinal plant. *"தட்டிவாக் கொண்டோசனைக் கிழங்கு" (தெய்வச். விறலிவிடு. 407).*

[கண்டு → கொண்டு → கொண்டோசனை.]

கொண்டோடி *kondōdi,* பெ.(n.) ஏற்றத்தில் துலாவையும் அதன் கொடியையும் பிணிக்குங் கயிறு (யாழ்.அக.); rope fastening the pole to the beam of the picotta.

[கொண்டு + ஓடி.]

கொண்டோன் *kondōn,* பெ.(n.) கணவன் (இ.வ.); husband. *"கொண்டோ னல்லது தெய்வமும் பேணாப் பெண்டிர்" (மணிமே. 18:101).*

ம. கொண்டோன்.

[கொண்டான் → கொண்டோன்.]

கொன்னாட்டிவிளை *konnātti-vilai,* பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanniyakumari Dt.

[கொண்ணன் + (பட்டி) அட்டி + விளை (நிலம்).]

கொண்முடிபு *kon-mudibu,* பெ.(n.) முடிந்த முடிவு (சித்தாந்தம்); well established conclusion, settled opinion or doctrine received or admitted truth.

[கொண் + முடிபு]

கொண்மூ *konmū,* பெ.(n.) 1. முகில்; cloud. "நீருடைக் கொண்மூ" (பெருங்.உஞ்சைக்.43). 2. வானம் (பிங்.) ; sky.

[கொள் → கொண்ம் → கொண்மூ (நீரை முகந்து கொண்டிருப்பது).]

கொண்மூமுத்து *konmū-muttu,* பெ.(n.) முகிலிற் பிறந்த கதிர்நிற முத்து; a pearl formed in the cloud.

[கொண்மூ + முத்து.]

வானிலிருந்து வீழ்ந்த எரிகல் அல்லது கொள்ளிக்கல்லை மேகமுத்தாகக் கருதியிருக்கலாம்.

கொணக்கலவாடி *kona-k-kala-vādi,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[குணக்கு (கிழக்கு) + கல் + பாடி – குணக்குக்கல்பாடி → குணக்கல்வாடி → குணக்கலவாடி → கொணக்கலவாடி.]

கொணக்கு-தல் *konakkku-,* 5 செ.கு.வி.(v.i.) கெடுத்தல்; to spoil. இந்தக் கலியாணத்திலே தேவையில்லாம கொணக்கிட்டாளே (நெல்லை).

கொணகொண-த்தல் *kona-kona-,* பெ.(n.) மூக்கின் வழியாய்ப் பேசல்; the nasal quality of voice (சா.அக.).

[கொண + கொண-.]

கொணங்கு[1] *konangu,* பெ.(n.) 1. குறிஞ்சா; an edible and medicinal creeper. 2. முறையற்று ஓடுகிற (பொறி) எஞ்சின் கொணங்கிப் போச்சு (நெல்லை).

[குணங்கு → கொணங்கு.]

கொணங்கு[2]**-தல்** *konangu,* 5 செ.கு.வி.(v.i.) சரியில்லாமல் போதல்; to get disordered. இயந்திரம் கொணங்கிப் போச்சு (நெல்லை).

[குணங்கு → கொணங்கு.]

கொணசில் *konašil,* பெ.(n.) கோணல்; curve.

மறுவ. கொணக்கு.

[குணகு → கொணசில்.]

கொணட்டு-தல் *konattu-,* 5 செ.கு.வி.(v.i.) பகட்டுதல்; to make show. காரியம் முடிவதற்காகக் கொணட்டுகிறான் (நெல்லை).

[குணட்டு → கொணட்டு.]

கொணமங்கலம் *konamangalam,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[குண்ணல் → கொண்ணல் → கொணல் + மங்கலம்.]

கொணமணப்பிள்ளை *konamana-p-pillai,* பெ.(n.) திருமணச் சடங்கில் பொம்மையொன்றைப் பிள்ளையாகப் பாவித்துப் பெண், மாப்பிள்ளையிடங் கொடுத்துத் திரும்பப் பெற்றுக்கொள்ளுஞ் சடங்கு; a marriage ceremony in which the bride presents the bridegroom with a doll representing a child, which he returns back to her (loc.).

[குழமணம் → கொணமனம் + பிள்ளை.]

கொணலவாடி *konalavādi,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[குண்ணல் → கொண்ணல் + பாடி – கொண்ணப்பாடி → கொணலவாடி.]

கொணலூர் *konalūr,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[குண்ணல் → கொண்ணல் + ஊர் – கொண்ணலூர் → கொணலூர்.]

கொணா-தல் (கொணர்-தல்) *konā-,* 13 செ.குன்றாவி.(v.t.) கொண்டுவருதல்; to bring. "அருந்தவனைக் கொணர்துமென" (கம்பரா. திருவவ. 38, நன்.160, மயிலை.).

[கொண்டுவா → கொணா (கொ.வ.).]

கொணாரம் *konāram,* பெ.(n.) எருமையின் உக்காரம்; bellowing of a buffalo.

மறுவ. முக்காரம், சிலைப்பு, உக்காரம்.

[குணல் → குணர் → குணாரம் → கொணாரம்.]

கொணி *koni,* பெ.(n.) மரத்திலுள்ள காய், பழம் போன்றவற்றை வீழ்த்த எறியும் தடி; a stick thrown to fall fruits etc., from trees (சேரநா.)

ம. கொணி.

[கொள் → கொண் + இ.]

கொணிகை *konigai,* பெ.(n.) ஒருவகை வரி; a kind of tax. *"திருமுக் காட்சி நல்லெருது நற்பசு கொணிகை விரிமூட்டு தறியிறை" (S.I.I.IV,415:2).*

[கொள் → கொளிகை → கொணிகை.]

கொத்தகரை *kotta-karai,* பெ.(n.) பேரரத்தை; greater galangal (சா.அக.).

ம. கொத்தச்சக்கை.

[கோ + தகரை – கோத்தகரை → கொத்தகரை.]

கொத்தகுறிக்கி *kotta-kurikki,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[த. கொல் (புதிய) > தெ. கொத்த + (த. குறிச்சி) > க. குறிக்கி.]

கொத்தங்குடி *kottan-kudi,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kadalur Dt.

[கொற்றன் → கொத்தன் + குடி.]

கொத்தச்சக்கை *kotta-c-cakkai,* பெ.(n.) பலாப்பிஞ்சு; tender jack-fruit.

[கொத்தை + சக்கை. கொத்தை : முற்றாதது.]

கொத்தட்டை *kottattai,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kadalur Dt.

[கொற்றன் → கொத்தன் + தட்டை (மேட்டுநிலம்).]

கொத்தடிமை *kottadimai,* பெ.(n.) குடும்பத்தோடு அடிமையாதல்; servitude of a family. *"கொத்தடிமை யான குடிநான் பராபரமே" (தாயு. பராபரக். 148).*

[கொத்து + அடிமை.]

கொத்தடியேந்தல் *kottadi-y-ēndal,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanadhapuram Dt.

[கொத்து + அடி + ஏந்தல் (ஏரி).]

கொத்தணி *kottani,* பெ.(n.) குன்றிமணி; a seed of a medicinal climber yielding a beautiful bean (சா.அக.).

[கொத்து + அணி.]

கொத்தப்பருத்தி *kottaa-p-parutti,* பெ.(n.) கழிவுப் பருத்தி; cotton waste.

[கழித்தல் → கத்தல் → கொத்தல் + பருத்தி.]

கொத்தப்பிரார் *kottappirār,* பெ.(n.) கள்ளர்குடிப் பட்டப்பெயர்களுள் ஒன்று (கள்ளர் சரித்.ப.98); a caste title of Kaḷḷars.

[கொற்றப்பிரியர் → கொத்தப்பிரியர்.]

கொத்தப்புள்ளி *kotta-p-puḷḷi,* பெ.(n.) திண்டுக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dindukkal Dt.

[கொற்றன் → கொத்தன் + (பள்ளி) புள்ளி (கொ.வ.).]

கொத்தம்[1] *kottam,* பெ.(n.) எல்லை (பிங்.); boundary, limit.

[கோல் → கொத்து + அம்.]

கொத்தம்[2] *kottam,* பெ.(n.) கொத்தன் வேலை, கட்டடத் தொழில்; masonry (பண்.த.நா.பண்.98).

[கொத்து → கொத்தம்.]

கொத்தம்[3] *kottam,* பெ.(n.) புதுமை; newness.

தெ. கொத்த (புதிய).

[குல் → குது → கொத்து + அம்.]

எதுவும் தோன்றியவுடன் புதுமையாயிருக்குமாதலால், தோன்றற் கருத்தில் புதுமைக் கருத்துத் தோன்றிற்று [குது] – கொத்தம் [மு.தா. 42].

கொத்தம்[4] *kottam,* பெ.(n.) கொத்துமல்லி; coriandar leaf. *"கடுகிங்கு கொத்தம் யதுரம் வசம்பு" (சரசோதி.).*

[கொத்து → கொத்தம்.]

கொத்தம்[5] *kottam,* பெ.(n.) புதிய நிலம்; new land. *"வடபாற்கெல்லை மெழுக்குப் புறத்துக்கு வடவெல்லைக் கொத்தத்துக்குத் தெற்கும்" (S.I.I. XIII.125:25).*

[கொத்து → கொத்தம்.]

கொத்தம்பரி *kottampari,* பெ.(n.) கொத்துமல்லி; a bunch of coriandar leaf (கல். அக.).

க. கொத்தம்பரி, கொத்துமிரி, கொத்தமரி.

[கொத்துமல்லி > க. கொத்துமரி → கொத்தம்பரி (கொ.வ.).]

கொத்தம்பாக்கம் *kottam-bākkam,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கொற்றன் → கொத்தன் + பாக்கம்.]

கொத்தம கண்டகம் *kottama-kandagam,* பெ.(n.) பற்பாடகம்; fever plant (சா.அக.).

[கொத்து → கொத்தமம் + கண்டகம்.]

கொத்தமங்கலம் *kotta-mangalam,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கொற்றன் → கொத்தன் + மங்கலம்.]

கொத்தமல்லி *kottamalli,* பெ.(n.) ***கொத்துமல்லி*** பார்க்க ; see *kottumalli.*

ம., தொ., பட. கொத்தமல்லி.

[கொத்து + மல்லி – கொத்துமல்லி → கொத்தமல்லி.]

கொத்தமல்லிக் கீரை *kottamalli-k-kirai,* பெ.(n.) கறிக்குதவும் பச்சைக் கொத்துமல்லியிலை; green coriander leaves used in curry (சா.அக.).

மறுவ. கொத்தமல்லித்தழை.

[கொத்து + மல்லி – கொத்தமல்லி + கீரை.]

கொத்தமல்லிச்சூரணம் *kottamalli-c-cūranam,* பெ.(n.) கொத்தமல்லி விதையைப் பொடி செய்து மற்றக் கடைப்பொருள்களுடன் சேர்த்துச் செய்த மருந்துப் பொடி; powder of coriander seeds mixed with other medicinal ingredients (சா.அக.).

[கொத்தமல்லி + சூரணம்.]

கொத்தமல்லிசூரி *kottamalli-šūri,* பெ.(n.) கொப்புளிப்பான் நோய்; chicken-pox or measles.

மறுவ. நீர்க்கொளுவன், கொத்தமல்லியம்மை.

[கொத்தமல்லி + (வைசூரி) சூரி]

கொத்தமல்லித் தைலம் *kottamalli-t-tailam,* பெ.(n.) ***கொத்தமல்லியெண்ணெய்*** பார்க்க; see *kottamalli-y-enney.*

[கொத்தமல்லி + தைலம்.]

கொத்தமல்லிமணி *kottamalli-mani,* பெ.(n.) மகளிர் கழுத்தணி வகை; a kind of necklace worn by women.

[கொத்தமல்லி + மணி.]

கொத்தமல்லியம்மை *kottamalli-y-ammai,* பெ.(n.) ***கொப்புளிப்பான்*** பார்க்க; see *koppulippān.*

ம. கொத்தமல்லியம்ம.

[கொத்தமல்லி + அம்மை.]

கொத்தமல்லியெண்ணெய் *kottamalli-y-enney,* பெ.(n.) கொத்தமல்லி விதையை வாலையிலிட்டு வடிக்கும் எண்ணெய்; a volatile oil extracted from coriander seeds (சா.அக.).

[கொத்தமல்லி + எண்ணெய்.]

கொத்தமல்லி விதை *kottamalli-vidai,* பெ.(n.) உருளரிசி; common coriander seed (சா.அக.).

[கொத்தமல்லி + விதை.]

கொத்தமுரி *kottamuri,* பெ.(n.) ***கொத்தமல்லி*** பார்க்க; see *kottamalli.* *'உருளரிசி கொத்தமுரி யென்றாற் போல' (இறை. 2, உரை).*

[கொத்து + மல்லி – கொத்துமல்லி → கொத்தமுரி.]

கொத்தயம் *kottayam,* பெ.(n.) திண்டுக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dindugul Dt.

[கொத்து + ஆயம் – கொத்தாயம் → கொத்தயம்.]

கொத்தர்குப்பம் *kottar-kuppam,* பெ.(n.) கட்டடத்தொழில் மேற்கொள்வோர் வாழும் ஊர்; a village where masons are living.

[கொத்தர் + குப்பம்.]

கட்டடத்தொழில் வல்லவர்கள் இப்பகுதியில் பெரும்பான்மையினர் வாழ்ந்தமையால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

கொத்தரல் *kottaral,* பெ.(n.) ***கொத்தறல்*** பார்க்க; see *kottaral.*

[கொத்து + (அறல்) அரல்.]

கொத்தரி–த்தல் *kottari-,* 4 செ.குன்றா.வி. (v.t.) கொத்திடுதல்; to chisel, pick. இதைக் கொத்தரித்து விடு (உ.வ.).

[கொத்து → கொத்தரி.]

கொத்தரி *kottari,* பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Sivagangai Dt.

[கொடித்தலம் → கொத்தலம் → கொத்தரி.]

கொத்தரிவாள் *kottarivāl,* பெ.(n.) அரிவாள் வகை; a kind of sickle.

[கொத்து + அரிவாள்.]

கொத்தல் *kottal,* தொ.பெ.(vbl.n.) 1. பாம்பு கடித்தல்; biting as a snake. 2. கறிகொத்துதல்; chopping as of meat. 3. பறவை மூக்கினால் மோதல்; striking with the beak as birds. *"நெடுங்கணார் தோட்கிளி கொத்தலின்" (சீகாளத். பு. நக்கீர. 30).* 4. இரை

கொத்தியெடுத்தல்; picking up grains as birds (சா.அக.). 5. தோண்டுதல்; delving, digging the ground with a spade. 6. களைகொத்தல்; to remove weeds by using hoe.

ம. கொத்தல்.

[குல் → குத்து → கொத்து → கொத்தல்.]

கொத்தல பெத்தாம்பட்டி *kottala-pettāmpaṭṭi,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கொடித்தலம் → கொத்தலம் + பெத்தன் (பெரியவன்) பட்டி.]

கொத்தலரி *kottalari,* பெ.(n.) அடுக்கலரிப்பூ; cluster oleander.

[கொத்து + அலரி.]

கொத்தவரங்காய் *kottavaraṅkāy,* பெ.(n.) கொத்தாய்க் காய்க்கும் அவரைவகைகளி லொன்று; a kind of cluster bean.

[கொத்து + அவரை + காய்.]

கொத்தவரங்காய்ப்பின்னல் *kottavaraṅ-kāy-p-pinnal,* பெ.(n.) கொத்தவரங்காய் போலக் குழந்தைகட்குப் பின்னும் பின்னல் வகை; plaiting the hair of a child in the form of a cluster bean.

[கொத்தவரங்காய் + பின்னல்.]

கொத்தவரை *kottavarai,* பெ.(n.) கொத்துக் கொத்தாகக் காய்க்கும் அவரை வகை; cluster bean.

ம. கொத்தவர.

[கொத்து + அவரை.]

கொத்தவன் *kottavan,* பெ.(n.) முடக்கற்றான்; palsy curer (சா.அக.).

[முடக்கற்றான் → கொற்றான் → கொத்தான் → கொத்தவன்.]

கொத்தவாசல் *kotta-vāšal,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kadalur Dt.

[கொற்றன் → கொத்தன் + (வாயல்) வாசல்.]

கொத்தவாஞ்சேரி *kottavāñjēri,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kadalur Dt.

[கொற்றவன் + சேரி - கொற்றவன்சேரி → கொத்தவாஞ்சேரி.]

கொத்தவாற்சாவடி *kottavāṟ-cāvaḍi,* பெ.(n.) 1. காவல்நிலையம்; police station. 2. நகர நடுவில் உணவுப் பொருள்கள் முதலியன விற்கப்படும் வணிக மையம்; central place in some towns serving as a market for provisions etc.

[கோட்டை + வாசல் - கொத்தவாசல்+ (தாவடி) சாவடி.]

கொத்தழி-தல் *kottaḻi-,* 2 செ.கு.வி. (v.i.) முற்றுமழிதல் (வின்.); to lie waste or desolate, to be in ruins.

[கொத்து (முழுவதும்) + அழி-.]

கொத்தள-த்தல் *kottaḷa-,* 2 செ.கு.வி. (v.i.) கூலியாகத் தவசங் கொடுத்தல்; to pay wages in kind, as to an artisan. *"கூலிவேலை செய்தால் கொத்தளக்குமாறு போல" (சி.சி. 2: 21. மறைஞா.).*

[கொத்து = நெற்கட்டு, கதிர்த்தாள் கட்டு (ஒரு தாள் கட்டில் உதிர்த்த தவசம்) கொத்து + அள-.]

கொத்தளம் *kottaḷam,* பெ.(n.) கோட்டை மதிலுறுப்புகளுள் ஒன்று (பிங்.); part of a rampart, bastion, defensive erection on the top of a rampart.

ம. கொத்தளம்; க. கொத்தள; தெ. கொத்தடமு, க்ரொத்தட, க்ரொத்தளமு, கொத்தள; து. கொத்தள, கொத்தல். Pāli. koṭṭaka.

[கொத்து + அளம் (சொல்லாக்க ஈறு).]

கொத்தளி *kottaḷi,* பெ.(n.) ***கொத்தளிப்பாய்*** (வின்.) பார்க்க; see *kottaḷi-p-pāy.*

[கொத்து → கொத்துளி → கொத்தளி.]

கொத்தளிப்பாய் *kottaḷi-p-pāy* பெ.(n.) புற்பாய் (பிங்.); mat made of rushes.

[கொத்தளி + பாய்.]

கொத்தளை *kottaḷai,* பெ.(n.) கூட்டமாய்த் திரியும் மீன்வகை; a kind of fish which moves as a group.

[கொத்து → கொத்தல் → கொத்தலை → கொத்தளை (கொ.வ.).]

கொத்தறுவாள் *kottaṟuvāḷ,* பெ.(n.) ஆட்டுக் கறியை அறுப்பதற்கும் கொத்துவதற்கும் பயன்படும் அறுவாள் ; knife used to choping meat.

[கொத்து + அறுவாள்.]

கொத்தன்[1] *kottan,* பெ.(n.) கட்டட வேலை செய்வோன்; mason, brick-layer (வே.க.179).

[கொத்து → கொத்தன்.]

கொத்தன்[2] *kottaṉ*, பெ.(n.) கோயிற் திறவுகோல் (சாவிக்) கொத்தினை வைத்திருக்க உரிமையுள்ள குடியினன்; an authorised man to keep the temple key bunch.

[கொத்து + அன்.]

கொத்தன்[3] *kottaṉ*, பெ.(n.) ***சவண்டிக்கொத்தன்*** பார்க்க; see *cavaṇḍi-k-kottaṉ.*

[கொத்து + அன்.]

கொத்தன்[4] *kottaṉ*, பெ.(n.) ***கொத்தச்சக்கை*** பார்க்க; see *kotta-c-cakkai.*

[ம. கொத்தச்சக்கெ (பலாப்பிஞ்சு) → கொத்தன்.]

கொத்தன்குளம்சேரி *kottaṉ-kuḷam-cēri*, பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[கொத்தன் + குளம் + சேரி.]

கொத்தனாம்பட்டி *kottaṉām-paṭṭi*, பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kadalur dt.

[கொற்றன் → கொத்தன் + பட்டி.]

கொத்தனார் *kottaṉār*, பெ.(n.) தலைமைக் கொத்தன்; head mason.

[கொத்தன் → கொத்தனார்.]

கொத்தனிக்கோட்டை *kottaṉi-k-kōṭṭai*, பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanadhapuram Dt.

[கொற்றன் → கொத்தன் + தனி + கோட்டை.]

கொத்தனூர் *kottaṉūr*, பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kadalur Dt.

[கொற்றன் → கொத்தன் + ஊர்.]

கொத்தனை *kottaṉai*, பெ.(n.) கூட்டமாகச் செல்லும் சிறுமீன் வகை; a kind of small fish living in shoals. *"கொத்தனை யுகளு நன்னீர்" (பாரத. சூதுபோர்.14).*

[கொத்து → கொத்தல் → கொத்தலை → கொத்தனை.]

கொத்தாங்கொளுஞ்சி *kottāṅ-koḷuñji*, பெ.(n.) கொழிஞ்சிவகை (பெரியமாட். 113.); a plant.

[கொற்றான் → கொத்தான் + கொளுஞ்சி.]

கொத்தாபட்டி *kottā-paṭṭi*, பெ.(n.) தேனி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Theni Dt.

[கொத்தன் + பட்டி - கொத்தன்பட்டி → கொத்தாபட்டி.]

கொத்தார்குழவி *kottār-kuḻavi*, பெ.(n.) சீவக மூலி; wild sarsaparilla (சா.அக.).

[கொத்து + ஆர் + குழவி.]

கொத்தாள் *kottāḷ*, பெ.(n.) 1. வேளாண் தொழிற் கூலியாள்; hired labourer in agricultural operations. 2. அடிமை; slave.

[கொத்து + ஆள்.]

கொத்தான்[1] *kottāṉ*, பெ.(n.) ***கொற்றான்*** பார்க்க; see *koṟṟāṉ.*

[கொற்றான் → கொத்தான்.]

கொத்தான் வகை :1.எருமைக்கொத்தான்,2. கொடிக் கொத்தான், 3. சங்கொத்தான், 4. கறிக்கொத்தான், 5. முடக் கொத்தான், 6. வேரிலாக்கொத்தான், 7. முட் கொத்தான் (சா.அக.).

கொத்தான்[2] *kottāṉ*, பெ.(n.) நத்தை (Pond.); snail.

[குழை → குழைத்து → கொத்து → கொத்தான.]

கொத்தான் இஞ்சி *kottāṉ-iñji*, பெ.(n.) பச்சை இஞ்சி; green ginger (சா.அக.).

[கொத்தான் + இஞ்சி.]

கொத்தான் சூரிகை *kottāṉ-šūrigai*, பெ.(n.) பச்சைமிளகு; green pepper (சா.அக.).

[கொத்தான் + சூரிகை.]

கொத்தான் வாகை *kottāṉ-vāgai*, பெ.(n.) வாகைவகை (பு.வெ.8: 2. கொளு, உரை); a species of sirissa.

மறுவ. வெண்கண்ணி.

[கொத்தான் + வாகை.]

கொத்தி[1] *kotti*, பெ.(n.) மீன்கொத்திப் பறவை; king-fisher (சா.அக.).

[கொத்து → கொத்தி]

கொத்தி[2] *kotti*, பெ.(n.) 1. குருட்டு விலங்கு; blind animal. 2. பூனை; cat.

மறுவ. பூசை.

E. cat; **O.E.** cattle; **M.E.** cattes; **L.L.** cattus, catta; **ONF.** chat; **O.N.** kottr; **O.H.G.** kazza.

[கொத்து → கொத்தை. கொத்தை : குருடு.]

கொத்திக்கொண்டுபோ-தல் *kotti-k-koṇḍu-pō-*, 8 செ.குன்றாவி.(v.t.) தவறவிடாமல்

கைப்பற்றுதல்; swoop away. உன் அழகிற்கு யாராவது உன்னைக் கொத்திக்கொண்டு போய்விடுவார்கள் (உ.வ.).

[கொத்தி + கொண்டு + போ-.]

கொத்திடல் *kottiḍal,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanadha puram Dt.

[கோ (அரசன்) + திடல் – கோத்திடல் → கொத்திடல்.]

கொத்தித்தின்(னு)-தல் *kotti-t-tiṉṉu-,* 14 செ. குன்றாவி. (v.t.) 1. கொத்தி யுண்ணுதல்; lit., to peck and eat. 2. மிகுதியாகத் துன்பப்படுத்துதல் (கொ.வ.); to harass, torment.

[கொத்தி + தின்(னு)-.]

கொத்திதழி *kottitaḻi,* பெ.(n.) ***சரக்கொன்றை*** பார்க்க (தைலவ.தைல. 135, 26.); see *cara-k-koṉṟai*

[கொத்து + இதழி.]

கொத்திப்பறத்து-தல் *kotti-p-paṟattu-,*5 செ. குன்றாவி. (v.t.) துன்பப்படுத்தி வெருட்டுதல்; to torment and drive off.

[கொத்து → கொத்தி + பறத்து-.]

கொத்திப்பிடுங்கு-தல் *kotti-p-piḍuṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***கொத்தித்தின்(னு)-தல்,*** பார்க்க; see *kotti-t-tiṉ(ṉu)-.*

[கொத்தி + பிடுங்கு-.]

கொத்திமங்கலம் *kotti-maṅgalam,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[கொத்தி + மங்கலம்.]

கொத்தியரி-த்தல் *kotti-y-ari-,* 4 செ.குன்றாவி. (v.t.) நாசமாக்குதல்; to destroy.

[கொத்தி + அரி-.]

கொத்தியார்கோட்டை *kottiyār-kōṭṭai,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanadhapuram Dt.

[கொற்றியார் → கொத்தியார் + கோட்டை.]

கொத்தியெடு-த்தல் *kotti-y-eḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) மூக்கால் கொத்தியெடுத்தல்; picking up grains as by fowls, pigeons etc. (சா.அக.).

[கொத்தி + எடு-.]

கொத்திலை *kottilai,* பெ.(n.) 1. நிலவேம்பு; ground neem.

மறுவ. காக்கைப்பிலை, காகோளி.

[கைத்து → கொத்து + இலை.]

கொத்து[1]-தல் *kottu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. நிலத்தைக் கிண்டுதல்; to grub up, hoe. 2. அலகால் குத்தியெடுத்தல்; to peck, as a bird. *"கழுகு கொத்திடக் களத்திடைக் கவிழ்ந்தனர்" (காசிக. தக்கன்வேள்வியை.48).* 3. குத்திக் கடித்தல்; to bite, as a snake. 4. வெட்டுதல்; to chop, hack, mince. கொல்லிமலைப் பக்கங்களில் பலாக்காய் கொத்துகிறார்கள். 5. எழுத்து முதலியன செதுக்குதல்; to carve, engrave. 6. பிளத்தல்; split; *விறகு கொத்த ஆள் கிடைக்க வில்லை (கிரி.) (வே.க. 178).* 7. அம்மி, உரல் முதலியவற்றில் கொத்துதல், உளியால் கொத்துதல்; to chisel, to chop.

ம. கொத்துக; **க.** கொத்து; **தெ.** குச்சு; **குட.** கொத்த; **துட.** க்விந்த்க்; **கோத.** கொத்ய்.

Bāli. n-getep, nu-get. **ME.** cutten, kutten; **Swed.** kuta, kota; **Ice.** kuta.

[குத்து → கொத்து.]

கொத்து[2] *kottu,* பெ.(n.) 1. கொத்துவகை; grubbing; mincing; pecking, as birds, grabbing, as fish; biting, as a serpent; gashing, engraving. 2. கொத்துவேலை; masonry, work of a mason. 3. கொத்தனது ஒரு நாள் வேலை; a day's work of a mason. 4. கொத்துவேலை செய்பவன்; a mason, dist. fr. cittu. 5. களை பறிக்கப் பயன்படும் சிறு களைக்கொட்டு (இ.வ.); a small hoe used for rooting out weeds.

[குத்து → கொத்து.]

கொத்து[3] *kottu,* பெ.(n.) 1. பூ முதலியவற்றின் குலை; bunch, cluster, collection of things of the same kind. *"கொத்துறு போது மிலைந்து" (திருவாச. 6:30).* 2 திரள்; assembly, multitude. *"அனைத்துக் கொத்துப் பரிஜனங்களும்" (குருபரம்.).* 3. குடும்பம்; family. *அவன் கொத்துக் கொடியை அறிவேன் (வின்.).* 4. ***சவண்டிக் கொத்தன்*** பார்க்க; see *cavaṇḍi-k-kottaṉ.* 5. ஆடையின் மடி (இ.வ.); a piece of cloth. 6. தவசமாகக் கொடுக்குங் கூலி (இ.வ.); wages paid in kind, as grain, etc. 7. சோறு; cooked rice. *"அரும்புக்கும் கொத்துக்கும் வந்தார்" (தனிப்பா. 1, 87: 174).* 8. கைப்பிடி அளவு; handful, as of cooked rice. ஒரு கொத்துச் சோறு கொடு (உ.வ.). 9. நாழி (யாழ்ப்.); a standard measure = about a quart. 10. ஒன்றாகச் சேர்ந்திருக்கும் நிலை;

bunch, cluster. கொத்துக் கொத்தாக மலர்கள் பூத்திருந்தன (உ.வ.). வித்தாரக் கள்ளி விறகொடிக்கப் போனாளாம் கத்தாழை முள்ளு கொத்தோட தைத்ததாம் (பழ).

ம., க. கொத்து., **தெ.** கொதரு (அதிகமாதல்).

[குத்து = திரட்சி; குத்து → கொத்து.]

guccha, guñja, gutra, a bunch, a bundle, a bunch of flowers, a cluster of blossoms, Lf.D. kottu, gutti, gudi, gon̄cal, gonci, gōne, gole, the so-called Tbhs. kuccu, koccu, and the terms S. kude, K.K.E.D.XIII.

கொத்து[4] *kottu*, பெ.(n.) ஒன்றேகால் கல்லெடைக்கு (கிலோவுக்கு)ச் சமமான அளவுகொண்ட முகத்தல் அளவை; a measure roughly equal to one and a quarter kilogram.

[குத்து → கொத்து.]

கொத்துக்கட்டி *kottu-k-katti*, பெ.(n.) மண்கட்டி (யாழ்ப்.); clods hoed up.

[கொத்து + கட்டி.]

கொத்துக்கடம்பை *kottu-k-kaḍambai*, பெ.(n.) குத்தாக வளரும் ஒரு சிறிய செடி; a small shrub growing dense, known as buttermilk leaf plant (சா.அக.).

[குத்து → கொத்து + கடம்பை.]

கொத்துக்கணக்கு[1] *kottu-k-kaṇakku*, பெ.(n.) கொடிவழிக் கணக்கு வேலை (இ.வ.); hereditary office of accountant.

[கொத்து + கணக்கு.]

கொத்துக்கணக்கு[2] *kottu-k-kaṇakku*, பெ.(n.) கொத்தன் சம்பளக் கணக்கு (இ.வ.); account of mason's wages.

[கொத்து + கணக்கு.]

கொத்துக்கத்தரி *kottu-k-kattari*, பெ.(n.) ***சுண்டை*** பார்க்க; see *šuṇḍai*.

[கொத்து + கத்தரி.]

கொத்துக்கம்பு *kottu-k-kambu*, பெ.(n.) கம்புவகை (G.Sm.D.I.I.219.); a variety of millet.

[கொத்து + கம்பு.]

கொத்துக்கரண்டி *kottu-k-karaṇḍi*, பெ.(n.) கொத்துவேலைக்குரிய அரசிலைக் கரண்டி; mason's trowel.

[கொத்து + கரண்டி.]

கொத்துக்களா *kottu-k-kaḷā*, பெ.(n.) 1. ஒரு வகைக் களா; fascicled leaved berberry. 2. மலைக் களா; Indian cranberry (சா.அக.).

[கொத்து + களா.]

கொத்துக்கறி *kottu-k-kaṟi*, பெ.(n.) சிறுசிறு துண்டுகளாக நறுக்கிய இறைச்சி; chopped meat.

[கொத்து + கறி.]

கொத்துக்காடு *kottu-k-kāḍu*, பெ.(n.) உழவினாலன்றிக் கொத்திப் பயிரிடுவதற்குரிய நிலம் (G.Sm.D.I., II, 43.); land cultivable by hoeing and not by ploughing, opp. to *uḻavukkāḍu*.

[கொத்து + காடு.]

கொத்துக்காரச்சம்மட்டி *kottu-k-kāra-c-cammatti*, பெ.(n.) ஒரு மருந்துச்செடி; a medicinal plant.

[கொத்துக்காரன் + சம்மட்டி.]

கொத்துக்காரன்[1] *kottu-k-kāraṉ*, பெ.(n.) 1. வேலையாள்களின் தலைவன் (இ.வ.); head of a company of labourers, as of those engaged in reaping. 2. ***சவண்டிக்கொத்தன்*** பார்க்க; see *cavaṇḍi-k-kottaṉ*.

[கொத்து + காரன்.]

கொத்துக்காரன்[2] *kottu-k-kāraṉ*, பெ.(n.) 1. கொத்துவேலை செய்பவன்; mason, brick layer. 2. கல்வேலை செய்பவன்; stone mason. 3. ஊர்த் தலைவன்; village head. 4. பண்ணை மேலாளர்; manager of a farm.

[கொத்து + காரன்.]

கொத்துக்காரனுளி *kottu-k-kāraṉ-uḷi*, பெ.(n.) உளிவகை; gouge (புதுவை).

[கொத்துக்காரன் + உளி]

கொத்துக்காரி *kottu-k-kāri*, பெ.(n.) கோயிலிற் கொடிவழி உரிமையுடைய நாட்டிய மங்கை (இ.வ.); dancing girl holding hereditary rights in a temple.

[கொத்து (கொத்தடிமை) + காரி.]

கொத்துக்காரை *kottu-k-kārai*, பெ.(n.) 1. பெருங்காரை; divine jasmine. 2. பூங்காரை; poisonous fruit (சா.அக.).

[கொத்து + காரை.]

கொத்துக்கிளை *kottu-k-kiḷai,* பெ.(n.) நகு தாளிலை; cherry nutmeg (சா.அக.).

[கொத்து + கிளை.]

கொத்துக்கீரை *kottu-k-kīrai,* பெ.(n.) கறிவகை (நாஞ்.); a kind of dish.

[கொத்து + கீரை.]

கொத்துக்குறடு *kottu-k-kuṟaḍu,* பெ.(n.) நண்டு; crab.

[கொத்து + குறடு.]

கொத்துக்கூலி *kottu-k-kūli,* பெ.(n.) 1. உழவுத் தொழிலின்பொருட்டுக் கொடுக்குங்கூலி; wages for various forms of agricultural work. 2. கொத்தர்க்குக் கொடுக்குங் கூலி; wage for masonry work.

[கொத்து + கூலி.]

கொத்துக்கோரை *kottu-kōrai,* பெ.(n.) கோரை வகை; wet-land sedge.

[கொத்து (தொகுதி) + கோரை.]

கொத்துக்கோவை *kottu-k-kōvai,* பெ.(n.) 1. காக்கைப் பிலை; esculent leaved false kamela. 2. காகோளி; downy-leaved false hamela (சா.அக.)

[கொத்து + கோவை.]

கொத்துங்குறடு *kottuṅ-kuṟaḍu,* பெ.(n.) 1. நண்டு (யாழ்.அக.); crab. 2. கொத்துதற்குக் குறடு போன்ற உறுப்புடையது; lit. that which has pincer-like mandibles to strike.

[கொத்தும் + குறடு.]

கொத்துங்குறையுமாய் *kottuṅ-kuṟaiyumāy,* கு.வி.எ. (adv.) அரைகுறையாய் (வின்.); in an incomplete or unfinished state.

[கொத்தும் + குறையும் + ஆய்.]

கொத்துங்கூற்றானுள்ளோன் *kottuṅ-kūṟṟān uḷḷōṉ,* பெ.(n.) நண்டு; crab (சா.அக.).

மறுவ. கொத்துங்குறடு.

[கொத்தும் + கூற்றான் + உள்ளோன்.]

கொத்துச்சட்டி *kottu-c-caṭṭi,* பெ.(n.) 1. உணவு பரிமாறப் பயன்படும் ஏன வகை (கொ.வ.); a cluster of cups, used in serving food. 2. கட்டட வேலைக்குப் பயன்படும் இருப்புச்சட்டி; small receptacle of iron sheet, used by masons for keeping mortar.

மறுவ. குத்துச்சட்டி.

[கொத்து + சட்டி.]

கொத்துச்சரப்பணி *kottu-c-cara-p-paṇi,* பெ.(n.) மகளிர் கழுத்தணிவகை; a kind of gold chain for the neck, worn by women.

[கொத்து + சரப்பணி.]

கொத்துச்சரப்பளி *kottu-c-cara-p-paḷi,* பெ.(n.) ***கொத்துச்சரப்பணி*** பார்க்க; see *kottu-c-carappaṇi.*

[கொத்து (சரப்பணி) + சரப்பளி.]

கொத்துச்சரம் *kottu-c-caram,* பெ.(n.) பொன் மணியாலாகிய மாலை (வின்.); strings of golden beads.

[கொத்து + சரம்.]

கொத்துச்சவடி *kottu-c-cavaḍi,* பெ.(n.) ***கொத்துச்சரப்பணி*** பார்க்க; see *kottu-c-carappaṇi.*

[கொத்து + சவடி.]

கொத்துணி *kottuṇi,* பெ.(n.) 1. பலர்க்குப் பொதுவான அடிமை; slave owned in common by several persons. 2. பலர்க்குப் பொதுவான தோட்டம்; garden owned by several persons.

[கொத்து + (கூட்டம், பொது) உண் – கொத்துண் → கொத்துணி.]

கொத்துத்தம்பட்டன் *kottu-t-tambaṭṭaṉ,* பெ.(n.) கொடித்தம்பட்டன்; sword-bean (சா.அக.).

[கொத்து + தம்பட்டன்]

கொத்துத்தாழ்வடம் *kottu-t-tāḻvaḍam,* பெ.(n.) பவளங்கள் இடையிட்டு முகப்பில் தங்கக் கட்டமைந்த உருத்திராக்க மாலை (இ.வ.); string of rudraksa beads inter-spersed with coral.

[கொத்து + தாழ்வடம்.]

கொத்துத்தூர்வை *kottu-t-tūrvai,* பெ.(n.) கொத்துதலாலாகுந் தரையின் இளக்கம் (யாழ்ப்.); looseness of earth caused by hoeing.

[கொத்து + தூர்வை.]

கொத்துப்பசலை *kottu-p-paśalai*, பெ.(n.) ஒரு வகைக் கீரை; a kind of green plant.

[கொத்து + பசலை. பசளை → பசலை.]

கொத்துப்பசளை *kottu-p-paśaḷai*, பெ.(n.) ***கொடிப்பசளை*** (M.M. 461.) பார்க்க; see *kodi-p-paśaḷai*.

[கொத்து + பசளை.]

கொத்துப்பணி *kottu-p-paṇi*, பெ. (n.) ***கொத்து வேலை*** பார்க்க; see *kottu-vēlai*.

ம. கொத்துப்பணி.

[கொத்து + பணி]

கொத்துப்பத்துவேலை *kottu-p-pattu-vēlai*, பெ.(n.) கோபுரம், விமானம் போன்றவற்றில் சுதை யுருவங்கள் செய்யும் வேலை; stucco structure on temple towers (கட்.தொ.).

[கொத்து + (பற்று) பத்து + வேலை.]

கொத்துப்பலகை *kottu-p-palagai*, பெ.(n.) பாத்தியில் படிந்திருக்கும் உப்பை வாருவதற்கு ஏந்தாகக் கொத்தும் பலகை; a plank used to grub up the salt to facilitate the collection of salt from salt pan (பரத. கடற். சொ.).

[கொத்து + பலகை.]

கொத்துப்பற்று—தல் *kottu-p-parru-*, 5 செ.கு.வி. (v.i.) 1. பலனடைதல் ; to reap the fruit of one's labours. 2. கூலித்தவசம் பெறுதல்; lit., to receive wages in kind.

[கொத்து + பற்று—.]

கொத்துப்பாசி *kottu-p-pāśi*, பெ.(n.) பாசிவகை யுளொன்று; a kind of moss.

[கொத்து + பாசி.]

கொத்துப்புங்கன் *kottu-p-puṅgaṉ*, பெ.(n.) 1. காய்கள் கொத்தாக விடும் புன்கு; Indian beech yielding fruits in clusters. 2. சரப்புன்கு; hog-creeper.

[கொத்து + புங்கன்.]

கொத்துப்புடல் *kottu-p-puḍal*, பெ.(n.) புடலைவகை (வின்.); a kind of snake-gourd.

[கொத்து + புடல்.]

கொத்தும்மணி *kottu-maṇi*, பெ.(n.) பல மணிகள் சேர்ந்த மணிக்கொத்து ; cluster of bells.

[கொத்து + மணி.]

கொத்துமல்லி *kottu-malli*, பெ.(n.) 1. ஒருவகைச் செடி; annual plant with aromatic fruit, coriander. 2.சம்பாரப் பண்டங்களுள் ஒன்றாகிய கொத்துமல்லி விதை ; coriander seed, used as a condiment.

ம.,தெ.,பட. கொத்துமல்லி; க. கொத்துமலி, கொத்துமிலி, கொத்தும்பரி; **Skt.** kusrumburu.

[கொத்து + மல்லி.]

கொத்துமாலை *kottu-mālai*, பெ.(n.) பல பூச்சரங்கள் சேர்த்து ஒன்றாகக் கட்டிய பூமாலை; garland of many wreaths. *'கொத்துமாலை நிறைந்த பெரிய தோளினையும்' (திருக்கோ. 391, உரை).*

[கொத்து + மாலை.]

கொத்துமானம் *kottu-māṉam*, பெ.(n.) அணிகலன்களில் நுண்ணுளியால் செய்யப்படும் அழகு வேலைப்பாடு ; fine chisel - workmanship in gold or silver.

[கொத்து + மானம்.]

கொத்துமானவேலை *kottu-māṉa-vēlai*, பெ.(n.) ***கொத்துமானம்*** பார்க்க; see *kottu-māṉam*.

[கொத்து + மானம் + வேலை.]

கொத்துமேகம் *kottu-mēgam*, பெ.(n.) கொத்துக் கொத்தாயிருக்கும் முகில்; an assemblage of clouds.

[கொத்து + மேகம்.]

கொத்துலதம் *kottuladam*, பெ.(n.) மாமரம்; mango tree.

[கொத்து + அதுலம் → கொத்ததலம் → கொத்துலதம் (கொ.வ.).]

கொத்துவசளை *kottu-vaśaḷai*, பெ.(n.) கொடிப் பசளை; heart leaved Malabar night shade (சா.அக.).

[கொத்துப்பசளை → கொத்துவசளை.]

கொத்துவலை *kottu-valai*, பெ.(n.) அறுபட்டு இருகூறான மீன்பிடி வலை; a portion of the fishing net which is cut into two pieces (மீன்.பிடி.தொ.).

[கொத்து + வலை.]

கொத்துவாய் *kottu-vāy*, பெ.(n.) வெட்டுவாய்; a long deep cut made in the flesh; an incision of considerable length particularly of flesh (சா.அக.).

[கொத்து + வாய்.]

கொத்துவால் *kottu-vāl,* பெ.(n.) தேளின் கொடுக்கைப் போன்ற கொட்டும் வால்; stinging tail as of a scorpion (சா.அக.).

[கொட்டுவால் → கொத்துவால் (கொ.வ.)]

கொத்துவான் *kottuvāṉ,* பெ.(n.) மண்வெட்டி; spade.

[கொத்து → கொத்துவான்.]

கொத்துவானம் *kottu-vāṉam,* பெ.(n.) முகில்கள் கொத்துக் கொத்தாகவுள்ள வானம் (வின்.); mackerel sky.

[கொத்து + வானம்.]

கொத்துவேலை *kottu-vēlai,* பெ.(n.) 1. உளியாற் கொத்திச் செய்யும் சித்திரவேலை; carved work, engraving, statuary. 2. கட்டட வேலை; masonry, brick laying. 3. உரல் ஆட்டுக்கல் போன்றவற்றை உளியாற் கொத்திச் செப்பனிடுதல்; shaping mortar, wetgrinder, etc.

ம. கொத்துபணி, கொத்துவேல.

[கொத்து + வேலை.]

கொத்துவேலைச்செம்பு *kottu-vēlai-c-cembu,* பெ.(n.) வேலைப்பாடுள்ள செம்பு (வின்.); a copper pot of fine workmanship.

[கொத்துவேலை + செம்பு.]

கொத்துளி *kottuḷi,* பெ.(n.) உளிவகை (Pond.) a kind of chisel.

[கொத்து + உளி.]

கொத்தை[1] *kottai,* பெ.(n.) 1. சொத்தை; rottenness. 2. ஈனம்; blot, blemish, defect. *'அவர் வமிசத்துக்குக் கொத்தையாங் காண்' (ஈடு. 5: 4: 7).* 3. நூல் முதலியவற்றின் சிம்பு; fibrous rising on cloth, scab, scale. *'கொத்தையும் நெருடுமான சீலை' (வின்.).* 4. அரைகுறை; incompleteness. *'வெந்தது கொத்தையாக வாயிலிடுமாபோலே' (ஈடு. 1,3:1).* 5. குருடன்; blind man. *"கொத்தைக்கு மூங்கர் வழி காட்டுவித்து" (தேவா. 1040:2).* 6. கரிசன்; sinner. *"கொத்தைபோ னிரயக்குழி கூடுவார்" (சிவதரு.கோபுர.271).* 7. சமய அறிவில்லாமை; spiritual ignorance. *"கொத்தை மாந்தர்" (சங்கற்ப. பாடாணவாதி சங்கற்ப. வரி,38).*

[குல் → குந்து → குத்து → கொத்தை.]

கொத்தை[2] *kottai,* பெ.(n.) குருடு; blindness. கண்ணாற் கொத்தை காலால் முடவன் (உருபு மயக்கம், உரைக்குறிப்பு).

[கொள் → கொத்து → கொத்தை.]

கொத்தைநூல் *kottai-nūl,* பெ.(n.) சிம்புவிழுந்த பருத்தி நூல் (வின்.); ill-cleaned cotton yarn.

[கொத்தை + நூல்.]

கொதக்கு *kodakku,* பெ.(n.) பயனற்ற; useless.

[குந்து → கொந்து → கொதக்கு.]

கொதகொதத்தல் *kodakodattal-,* தொ.பெ. (vbl.n.) சிரங்கு, புண் அழிதல்; putrefaction of itch, wounds, injuries, sores etc. (சா.அக.).

[கொத + கொதத்தல்.]

கொதப்பல் *kodappal,* தொ.பெ.(vbl.n.) 1. மெல்லாது வாயை அசைத்தல்; eating with the lips close. 2. மெல்லுதல்; masticating. 3. உதப்புதல்; shiffing the mouth with food (சா.அக.).

[குதப்பு → கொதப்பு + அல்.]

கொதி[1]-த்தல் *kodi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. நீர் முதலியன காய்ந்து பொங்குதல்; to boil, bubble up from heat, effervesce. *"குண்டிகை யிருந்த நீருங்... கொதித்த தன்றே" (கம்பரா. வருணனை. 61).* 2. சூடுடையதாதல்; to be heated, as the body, ground, etc. உடம்பு கொதிக்கிறது (உ.வ.). 3. சினத்தல் (பிங்.); to be infuriated, enraged, to burn with indignation. 4. வருத்தமுறுதல்; to be offended; to be distressed; to be moved with pity. அவன் செய்த தீங்கால் என் நெஞ்சு கொதிக்கிறது. 5. ஆசை மிகக் கொள்ளுதல்; to burn with desire, hanker after. அவன் உன்னைப் பார்க்கக் கொதிக்கிறான் (இ.வ.). 6. வயிறு நழுக்குதல்; to have slight diarrhoea.

ம. கொதிக்குக; **க.,** **பட.** குதி; **து.** குதி, கொதி.

[குல் → குதி → கொதி.]

கொதி[2] *kodi,* பெ.(n.) 1. நீர் முதலியவற்றின் கொதிப்பு; bubbling up, as of boiling water or oil. *"கொதியடக்கச் சிவிறி" (தைலவ. வைத்.14).* 2. வெப்பம்; heat, as of fire, weather etc. 3. உடம்பிற் காணும் காங்கை; sensation of heat, in the body. 4. காய்ச்சல்; fever. மாந்தக்கொதி; ஊதைக்கொதி (வின்.). 5. **கொதிக்கழிச்சல்** (வின்.) பார்க்க; see *kodi-k-kaliccal.* 6. சினம்; anger, rage. 7. மிகுசினம்; fierceness, as of anger. *"கொதியி*

னால்வரு காளிதன் கோபம்" (தேவா. 485: 4). 8. வருத்தம்; grief, sorrow. 9. செருக்கு; pride, arrogance. கொதியிறக்க (இ.வ.). 10. ஆசை; desire, greed. 11. தெய்வத்திற்குப் படைக்கும் சோறு (S.I.I.VII.22); food offering to the deity.

க., பட. குதி.

[குல் → குதி → கொதி.]

கொதி[3] *kodi,* பெ.(n.) இஞ்சி; ginger. *"சற்கரையமுது எண்ணூற் றிருபதின்பலமும் மிளகமுது னாழி உழக்கும் பயற்றமுது னாலு மரக்காலும் கொதி இரண்டு மரக்காலும் (திருப்.கல்.தொ.உ.எண்.134:12).*

[கொள் → கொத்தி → கொதி.]

கொதி[4] *kodi,* பெ.(n.) திருப்படையல் (பிரசாதம்); food offering to the deity (S.I.I.VII.22).

[கொதி = கொதித்தல், வேகவைத்த உணவு.]

கொதிக்கண் *kodi-k-kaṇ,* பெ.(n.) **கொடுங்கண்** பார்க்க; see *koḍuṅ-gaṇ.*

[கொதி + கண்.]

கொதிக்கவை-த்தல் *kodikka-vai-,* 4 செ. குன்றா.வி.(v.t.) 1. குழம்பு முதலியவற்றை அடுப்பில் வைத்துக் கொதிக்கும்வரை சூடேற்றல்; boiling broth or sauce to a stage till its contents are completely cooked or baked; the operation of boiling while cooking. 2. உடம்பில் பற்றுப் போடுவதற்காகக் கரைத்த மருந்துகளைக் கரண்டியி லிட்டுக் கொதிக்கும் வரை சூடுகாட்டல்; heating a solution of medicine in a big spoon to a boiling point for external application. 3. கருக்கு (கியாழம்) வற்றும்படி கொதிக்கும்வரை சூடேற்றல்; boiling down decoction till it is sufficiently reduced in quantity (சா.அக.).

க., பட. குதக.

[கொதிக்க + வை-.]

கொதிக்கழிச்சல் *kodi-k-kaḻiccal,* பெ.(n.) வெப்பத்தால் உண்டாகும் வயிற்றுப்போக்கு; diarrhoea attended with flux.

[கொதி + கழிச்சல்.]

கொதிகஞ்சி *kodi-kañji,* பெ.(n.) உலைநீரில் கொதிக்கும் அரிசியினின்று வடிக்கும் கஞ்சி; rice-water taken hot in cooking.

[கொதி + கஞ்சி.]

கொதிகருப்பஞ்சாறு *kodi-karuppañcāṟu,* பெ.(n.) கொதிக்க வைத்த கரும்பின் சாறு; boiled sugarcane juice (சா.அக.).

[கொதி + கரும்பு + அம் + சாறு.]

கொதிகருப்பநீர் *kodi-karuppa-nīr,* பெ.(n.) 1. சுட வைத்த இனிப்புக்கள் (யாழ்ப்.); heated sweet toddy. 2. பனிக்குடத்து நீர் ; amniotic fluid.

[கொதி + கருப்பநீர்.]

கொதிகலன் *kodi-kalaṉ,* பெ.(n.) நீராவி உண்டாக்கப் பயன்படுத்தும் கலன்; boiler.

[கொதி + கலன்.]

கொதிகிளம்பக்காய்ச்சல் *kodi-kiḷamba-k-kāyccal,* பெ.(n.) குமிழியெழும்பும்படி காய்ச்சுதல்; heating to the boiling point (சா.அக.).

[கொதி + கிளம்ப + காய்ச்சல்.]

கொதிகுடல் *kodi-kuḍal,* பெ.(n.) 1. பசியினால் கொதிக்கும் குடல்; bowels easily excited by hunger. 2. பசியைத் தாங்க முடியாத வயிறு; stomach incapable of bearing hunger (சா.அக.).

[கொதி + குடல்.]

கொதிகுடலன் *kodi-kuḍalaṉ,* பெ.(n.) பசி தணியாத வயிறுள்ளவன் (யாழ்ப்.); a man of insatiable appetite.

[கொதி + குடல் + அன்.]

கொதிகொதி-த்தல் *kodi-kodi-,* 4 செ.கு.வி. (v.i.) உலைப்பெய்த அரிசி முதலியவற்றினின்றும் கொதியெழும்புதல்; to bubble up, as boiling rice.

[கொதி + கொதி-.]

கொதிகொள்ளல் *kodi-koḷḷal,* பெ.(n.) 1. கொதி யுண்டாதல்; reaching the boiling point. 2. உடலின் வெக்கை; developing excessive heat in the system. 3. அரத்தக் கழிச்சலால் உடம்பு சுடுதல்; being attacked with or suffering from dysentery. 4. காய்ச்சலினால் உடம்பு காந்துதல்; generating heat from the body as in fever (சா.அக.).

[கொதி + கொள்ளல்.]

கொதிதண்ணீர் *kodi-taṇṇīr,* பெ.(n.) 1. வெந்நீர் (யாழ்.அக.); boiling water. 2. சோறு கொதிக்கும் போது வடித்த நீர்; water seethed with rice (சா.அக.).

[கொதி + தண்ணீர்.]

கொதிதைலம் *kodi-tailam,* பெ.(n.) 1. எண்ணெயில் மருந்துப் பொருள்களைக் கூட்டிக் காய்ச்சிக் கொதிக்க வைத்து இறக்கிய எண்ணெய்; medicated oil prepared by mixing up drugs in oil and then boiling it sufficiently. 2. முத்துக்கொட்டை முதலிய விதைகளை இடித்துத் தண்ணீரிற் கலந்து கொதிக்கவைப்பதனால் இறங்கும் எண்ணெய்ச் சத்து; oil extracted from castor seeds by boiling process (சா.அக.).

[கொதி + தைலம்.]

கொதிநிலை *kodi-nilai,* பெ.(n.) கொதிக்கும் வெப்ப அளவு; boiling point.

[கொதி + நிலை.]

கொதிநிலையம் *kodi-nilaiyam,* பெ.(n.) ***கொதிநிலை*** பார்க்க; see *kodi-nilai.*

[கொதி + நிலை. அம் – செல்லாக்க ஈறு.]

கொதிநீர் *kodi-nir,* பெ.(n.) கொதிக்கின்ற நீர்; boiling water (சா.அக.).

[கொதி + நீர்.]

கொதிப்படக்கி *kodippadakki,* பெ.(n.) உடம்பினுள்ள வெப்பத்தைப் போக்கும் மருந்துகள்; medicinal agents tending to soothe or allay the irritation and assuage pain (சா.அக.).

மறுவ. கொதிப்பாற்றி.

[கொதிப்பு + அடக்கி.]

கொதிப்பாற்றி *kodippārri,* பெ.(n.) வெப்பந் தணிக்கும் மருந்து (இ.வ.); sedative, palliative.

[கொதிப்பு + ஆற்றி.]

கொதிப்பி[1]–த்தல் *kodippi-,* 18 செ.குன்றாவி. (v.t.) சுடச் செய்தல்; to be boiled.

[கொதி + பி. பி – பிறவினை ஈறு.]

கொதிப்பி[2]–த்தல் *kodippi-,* 4 செ.கு.வி. (v.i.) சிற்றுணா உண்ணுதல்; to take small refreshment.

[கொதி → கொதிப்பி.]

கொதிப்பு *kodippu,* பெ.(n.) 1. பொங்குகை; boiling, bubbling up, effervesce. 2. வெப்பம்; heat. 3. காய்ச்சல்; fever. 4. சினம்; rage, anger. *"மறவன் கொதிப்புரைத்தன்று" (பு.வெ.8:27, கொளு).* 5. வயிற் றெரிச்சல்; grief, sorrow. 6. பரபரப்பு; flutter, flurried state of mind. *"கொழுநரைத் தழுவுறுங் கொதிப்பால்" (கம்பரா. இலங்கையெரி. 27).*

[கொதி → கொதிப்பு.]

கொதிப்புக்கணம் *kodippu-k-kaṇam,* பெ.(n.) கருப்பச் சூட்டினால் குழந்தைகளுக்கேற்படும் கணநோய்; mesenteric fever in children due to congenital causes (சா.அக.).

[கொதிப்பு + கணம்.]

கொதிப்புக்கொள்ளல் *kodippu-k-kollal,* பெ.(n.) 1. உடம்பு சுடுகை; getting heated in constitution. 2. கொதிக்கை; bubbling by heat. 3. சினத்தால் வெப்புக்கொள்ளல்; getting hot or violent through anger (சா.அக.).

[கொதிப்பு + கொள் + அல்.]

கொதிப்பேறல் *kodippēṟal,* பெ.(n.) 1. உடம்பில் வெப்பம் கொள்ளல்; getting heated in the system. 2. உடம்பிற் சூடு அதிகப்படல்; the system becoming increased in heat (சா.அக.).

[கொதிப்பு + ஏறல்.]

கொதிபிடி–த்தல் *kodi-piḍi-,* 4 செ.கு.வி.(v.i.) உண்ணும்போது நேர்ந்த தீக்கண் பார்வையால் உண்டி குன்றிப் போகை (இ.வ.); being affected in the appetite by the greedy eyes of a person looking on when one is taking meals.

[கொதி + பிடி–.]

கொதிபோடு–தல் *kodi-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) ***கொதி[1.5]*** பார்க்க; see *kodi[1.5].*

[கொதி + போடு–.]

கொதிமந்தம் *kodi-mandam,* பெ.(n.) வெப்பால் வரும் மந்த நோய் (யாழ்.அக.); indigestion caused by excess of heat in the system.

[கொதி + மந்தம்.]

கொதியல் *kodiyal,* பெ.(n.) 1. ***கொதிப்பு*** (வின்.) பார்க்க; see *kodippu.* 2. நெகிழ்ந்த அணிகல னுறுப்பை இறுகச் செய்யும் வேலை; the work of tightening the loose parts of an ornament.

[கொதி → கொதியல்.]

கொதியல்போடு–தல் *kodiyal-pōḍu-,*18 செ. குன்றாவி.(v.t.) நெகிழ்ந்த அணிகலனுறுப்பை இறுகச் செய்தல் (இ.வ.); to tighten the loose parts of an ornament.

*[கொதியல் + போடு–.]

கொதியன் *kodiyaṉ,* பெ.(n.) உணவில் ஆசை மிக்கவன் (இ.வ.); one who hankers after food.

[கொதி → கொதியன்.]

கொதியிறங்கு-தல் *kodi-iṟaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) செருக்குக் குறைதல்; to deminish as pride, vanity, haughtiness, anger etc.

[கொதி + இறங்கு-.]

கொதியெடு-த்தல் *kodi-y-eḍu-,* 4 செ.கு.வி.(v.i.) ***கொதியிறங்கு-தல்*** பார்க்க; see *kodi-y-iṟaṅgu-.*

[கொதி + எடு-.]

கொதியெண்ணி *kodi-y-eṇṇi,* பெ.(n.) உணவுண்ணக் காத்திருப்போன் (யாழ்.அக.); one who waits for meals.

[கொதி + எண்ணி.]

கொதியெண்ணெய் *kodi-eṇṇey,* பெ.(n.) கொதிக்க வைத்தெடுத்த மருந்தெண்ணெய் வகை; a medicinal oil, as boiled (வின்.).

[கொதி + எண்ணெய்.]

கொதியெழும்பு-தல் *kodi-y-eḻumbu-,*5 செ.கு.வி. (v.i.) 1. கொதித்தல்; to boil. 2. உட்சுரங் காய்தல்; to have a slight internal fever (சா.அக.).

[கொதி + எழும்பு-.]

கொதிவரக்காய்ச்சு-தல், *kodivara-k-kāyccu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கொதியெழும்பக் காய்ச்சுதல்; heating to the boiling point (சா.அக.).

[கொதிவர + காய்ச்சு-.]

கொதிவா-தல் *kodi-varu-,* 18 செ.கு.வி.(v.i.) ***கொதியெழும்பு-தல்*** பார்க்க; see *kodi-eḻmbu-.*

[கொதி + வா-.]

கொதிவெந்நீர் *kodi-vennīr,* பெ.(n.) கொதிக்கும் நீர்; boiling water (சா.அக.).

[கொதி + வெந்நீர்.]

கொதுக்கென்று போ-தல் *kodukkeṉṟu-pō-,* 8 செ.கு.வி. (v.i.) சூட்டால் மலத்தோடு இரத்தம் கழிதல்; the fluxing or discharging of mucus matter in stools as in dysentry or diarrhoea (சா.அக.).

[கொதுக்கு + என்று + போ-.]

கொதுக்கொதுக்கென்றுபோ-தல் *kodu-k-kodukkeṉṟu-pō-,* 8 செ.கு.வி.(v.t.) செரியாமையால் அடிக்கடி சிற்றளவு மலங்கழிதல்; having looseness of bowels, due to indigestion (சா.அக.).

மறுவ. கொதுக்கொதுக்கெனக் கொட்டல்.

[கொதுக்கு + கொதுக்கு + என்று + போ-.]

கொதுகு *koduku,* பெ.(n.) கொசு; mosquito, gnat, fly. *"கொதுகறாக் கண்ணி னோன்பிகள்" (தேவா. 381: 9).*

ம. கொதுகு.

Fin. koi; **Est.** koi; **Mari.** koje; **Mansi.** kij; **Turk.** kuja;**Kirghig.** kujo; **Kazakh.** koja; **Jap.** ka.

[கொத்து → கொது → கொதுகு.]

கொத்துவதனால் கொதுகு எனப் பெயர் பெற்றது. கொதுகு → கொசு எனத் திரிந்தது. 'கு' சொல்லாக்க ஈறு. முயலை → முயல்கு என்றும் யானையைத் தெலுங்கில் ஏனிகு என்றும் வழங்குவதுபோன்று கொத்து → கொது → கொதுகு என வழங்கினர்.

கொதுகுலசவையார் *kodu-kula-šavaiyār,* பெ.(n.) தூதர் எனப்படும் இனத்தார்; the caste of *Tūdar.* *"கொதுகுல சவையாரிற் சூரியன்" (T.A.S.).*

[கொத்து + குலம் + (அவை) சவை + ஆர்.]

கொதுகுலம் *kodu-kulam,* பெ.(n.) மழலை கொஞ்சுகை (யாழ்.அக.); lisping.

[குதுகலி → கொதுகுலம்.]

கொதுகுலவன் *kodukulavaṉ,* பெ.(n.) முந்தைய மரக்காலின் பெயர்; name of grain measure in the Tirunedungalam area in Lalkudi Tk. *"இந்நெல்லு முப்பதின் கலமும் கொதுகுலான் என்னும் மரக்காலால் நிசதம்முற்றத்து அட்டி" (S.I.I. XXVI.738:5).*

[குதுகலம் → குதுகலவன் → கொதுகுலவன்.]

கொதுகுலி-த்தல் *kodu-kuli-,* 4 செ.கு.வி.(v.i.) குழைந்துருகுதல் (யாழ்.அக.); to melt.

[குதுகலித்தல் → கொதுகுலி.]

கொதுகொது-த்தல் *kodukodu-,* 4 செ.கு.வி.(v.i.) ஒலிக்குறிப்பு; onom. expr. to throb with pain.

[கொது + கொது-.]

கொதுகொதுப்பு *kodu-koduppu,* பெ.(n.) 1. கொஞ்சமாய் உடம்பு காய்தல்; slight febrile affection. 2. சினத்தாலுண்டாகும் சூடு; heat felt in

an agitated or excited state (சா.அக.). 3. குளிரால் நடுங்குகை ; shivering with cold.

[குது → கொது + கொதுப்பு.]

கொதுகொதெனல் *kodu-kodenal,* பெ.(n.) 1. நோவெடுத்தற் குறிப்பு (வின்.); onom. expr. of throbbing, as with pain. 2. சிறு காய்ச்சற் குறிப்பு ; slight rise of temperature in the body. 3. புண் அல்லது கட்டி வீங்கிப் பழுத்திருத்தற் குறிப்பு; highly inflamed condition, as of a sore.

[கொது + கொது + எனல்.]

கொதும்பு *kodumbu,* பெ.(n.) கதம்பை நார் (இ.வ.); coconut fibre (சா.அக.).

[கோது → கதும் → கொதும்பு.]

கொதுவா *koduvā,* பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish.

[கதுவு → கதுவா → கொதுவா.]

கொதுவை[1] *koduvai,* பெ.(n.) மரத்தை உளியால் தோண்டுகை; cut made in wood with a chisel.

[கொத்து → கொத்துகை → கொதுவை.]

கொதுவை[2] *koduvai,* பெ.(n.) அடைமானம்; pledge, pawn, mortgage.

[குத்தவை → கொதுவை.]

கொதை *kodai,* பெ.(n.) மரத்தில் உளியால் தோண்டுகை; chiselling wood with chisel.

[கொத்து → கொதை.]

கொந்தக்குலம் *konda-k-kulam,* பெ.(n.) மதுரைக்கு அருகிலுள்ள கொந்தகையூரினரும் பாண்டியர் படைத்தலைவருமான பழைய வேளாள மரபினர்; the family of Vēlālas in Kondagai near Madurai, formerly commanders under the Pāṇḍiyās. *"உயர் கொந்தக் குலத்துட் டோன்றி" (திருவாலவா.39:1).*

[கொந்தகை → கொந்தகன் + குலம்.]

கொந்தகன் *kondagan,* பெ.(n.) படைத்தலைவன்; commander of an army. *"கொந்தகன் வாக்கிது" (திருவாலவா. 30:45).*

[கொந்தகை → கொந்தகன்.]

கொந்தகன்பெருங்கரை *kondagan-perunkarai,* பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Sivagangai Dt.

[கொந்தன் → கொந்தகன் + பெரும் + கரை.]

கொந்தகை *kondagai,* பெ.(n.) சிவகங்கை மாவட்டத்தில் அமைந்த ஓர் ஊர்; a village in Šivagangai Dt.

[குந்தவை → கொந்தவை + கொந்தகை]

கி.பி. 985 – 1014 காலச் சோழ மன்னரான இராசராசனின் மகள் குந்தவையின் நினைவால் இவ் வூருக்கு அப் பெயர் வழங்கி இருக்கலாம். [த.நா.ஊ.பெ.]

கொந்தம் *kondam,* பெ.(n.) மயிர்க்குழற்சி; fine wavy, dense curls of hair. *"கொந்தக் குழலை" (திவ். பெரியாழ். 2, 5:8).*

[கொந்தளம் → கொந்தம். கொந்தளம் = பெண்கள் தலைமயிர்ச் சுருள்.]

கொந்தமணி *konda-mani,* பெ.(n.) மகளிர் கழுத்தணி வகை (இ.வ.); a kind of necklace worn by women.

[கொத்து → கொந்து + மணி – கொந்தமணி.]

கொந்தமூர் *kondamūr,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கொந்தன் + ஆமூர் – கொந்தாமூர் → கொந்தமூர்.]

குந்தம் = ஒரு படைக்கலன். கையில் குந்தப் படைக்கலன் ஏந்தியவன் குந்தகன் – கொந்தகன்; கொந்தகன் → கொந்தன் + ஆமூர் – கொந்தன் ஆமூர் → கொந்தமூர் [கொ.வ.].

கொந்தரிவாள் *kondarivāl,* பெ.(n.) முட்செடிகளை வெட்டியழித்து நீக்கப் பயன்படும் அரிவாள் வகை (இ.வ.); sickle, long-handled bill-hook, as for clearing prickly-pear.

[கொந்து + அரிவாள்.]

மறுவ. கொந்தறுவாள்.

கொந்தல் *kondal,* பெ.(n.) 1. கொத்துகை; picking, nibbling. 2. பறவை முதலியவற்றாற் கொத்துப்பட்ட கனி; fruits injured by birds, reptiles, etc. 3. தணியாச் சினம் (பிங்.); wrath, fury. 4. கடுங்குளிர்; biting cold. கொந்தலிற் கொடுகிக் கிடக்கிறான் (உ.வ.). 5. போலியொழுக்கம் (ஆசாரம்); feigned orthodoxy.

[கொத்து → கொந்து → கொந்தல்.]

கொந்தல்மாங்காய் *kondal-māngāy,* பெ.(n.) சேதப்பட்ட மாங்காய் (யாழ்ப்.); mango fruit injured or stunted in growth.

[கொந்தல் + மாங்காய்.]

கொந்தவக்காய் *kondava-k-kāy,* பெ.(n.) ***கொந்தளங்காய்*** பார்க்க; see *kondalaṅgāi.*

[கொந்து+ஆவக்காய்-கொந்தாவக்காய் → கொந்தவக்காய்.]

கொந்தவர் *kondavar,* பெ.(n.) கட்டுக்கோப்பான படையினர்; diciplined warriors. *"இராசராசதேவர் படைவில்லாள் கொந்தவரில்" (கல்வெட்டு அறிக்கை – எண். 92/1895. கல்.அக.).*

[கொத்து → கொந்து → கொந்தவர்.]

கொந்தழல் *kondalal,* பெ.(n.) 1. முறுகிய தீ; raging fire. *"கொந்தழற் புண்ணொடு" (பெருங். வத்தவ. 13: 71).* 2. பெருந்தீ; great fire (சா.அக.).

ம. கொந்தழல்.

[கொந்து + அழல்.]

கொந்தழற்புண் *kondalar-pun,* பெ.(n.) பற்றி எரியும் தீச்சுட்ட புண்; extensive burns caused by a raging fire (சா.அக.).

[கொந்து + அழல் + புண்.]

கொந்தளங்காய் *kondalaṅ-gāy,* பெ.(n.) சமுத்திராப் பழம்; sea-side Indian oak (சா.அக.).

[கொந்தளம் + காய்.]

கொந்தளம்[1] *kondalam,* பெ.(n.) 1. கொந்தளங் காய்; sea-side Indian oak. 2. கல்யானை என்னும் காண்டாமிருகம்; rhinoceros. 3. சுருட்டை மயிர்; curly hair. 4. விலங்கின் குட்டி; young of an animal. 5. பெண்ணின் கூந்தல்; woman's hair. 6. மயிர்க் குழற்சி; lock of hair (சா.அக.).

ம. கொந்தளம்; **Skt.** kundala.

[கொத்து → கொந்து → கொந்தளம்.]

கொந்தளம்[2] *kondalam,* பெ.(n.) 1. குழப்பம்; confusion, turmoil. *"கொந்தள மாக்கி" (திவ். நாய்ச்.12:9).* 2. கூத்துவகை ; a kind of dance.

[கொந்தளி → கொந்தளம்.]

கொந்தளம்[3] *kondalam,* பெ.(n.) காதணி வகை; an ear-ornament. *"காதுக்குக் கொந்தளம் அணிந்து" (தமிழறி. 64).*

[கொத்து → கொந்து → கொந்தளம்.]

கொந்தளம்[4] *kondalam,* பெ.(n.) எல்லா ஏந்து (வசதி)களுமுள்ள இடம் (இ.வ.); a site with conveniences of every kind.

[ஒருகா. கொத்தளம் → கொந்தளம்.]

கொந்தளம்[5] *kondalam,* பெ.(n.) ஈரோடு மாவட்டத்துச் சிற்றூர்; a village in Erode Dt.

[கொந்து → கொந்தளம்.]

கொந்தளம்[6] *kondalam,* பெ.(n.) சாளுக்கியர் ஆண்ட நாடு (S.I.I. II, 230.); an ancient kingdom ruled by *Cāḷukyās.*

[குந்தளம் → கொந்தளம்.]

கொந்தளவரசர் *kondala-v-arašar,* பெ.(n.) மேலைச் சாளுக்கிய அரசர்; western Calukkia king. *"கொந்தள வரசர் தந்தள மிரிய" (முதற் குலோத்துங்கன் மெய்க்கீர்த்தி) (கல். அக.).*

[குந்தளம் → கொந்தளம் + அரசர்.]

கொந்தளி-த்தல் *kondali-,* 4 செ.கு.வி. (v.i.) பொங்கியெழுதல்; to be rough or boisterous; to swell, as the sea; to be stormy, tumultuous. *'திரைகள் மேல்நோக்கிக் கொந்தளித்து' (திவ்.திருவிருத். 52:292, வியா.).*

[கொதி → கொந்தளி.]

கொந்தளிப்பு *kondalippu,* பெ.(n.) 1. குழப்பம், கெற்சிதம்; emotional, upheaval. 2. மும்முரம்; excitement.

[கொதி → கொந்தளி → கொந்தளிப்பு.]

கொந்தளை[1] *kondalai,* பெ.(n.) 1. பேய்க் கொம்மட்டி; bitter apple. 2. ***கொந்தளங்காய்*** பார்க்க; see *kondalaṅgāy* (சா.அக.).

[கொந்தளம் → கொந்தளை.]

கொந்தளை[2] *kondalai,* பெ.(n.) கடற்பக்கத்து மரவகை (L.); seaside Indian oak.

[கொந்தாழை → கொந்தளை.]

கொந்தறுவாள் *kondaruvāl,* பெ.(n.) முட் செடிகளை வெட்டியழிக்க உதவும் அறுவாள்; sickle, long handled bill-hook as for clearing prickly-pear.

[கொந்து + அறுவாள்.]

கொந்தாங்கொள்ளை *kondān-kollai,* பெ.(n.) நிறைய; abundance. கொந்தாங் கொள்ளையாய்த் தின்பானுக்குக் கொட்டியழு (இ.வ.).

[கொந்து + ஆம் + கொள்ளை.]

கொந்தாலி *kondāli,* பெ.(n.) ***குந்தாலி*** (யாழ்ப்.) பார்க்க; see *kundāli.*

[குந்தாலி → கொந்தாலி.]

கொந்தாழம் *kondāḷam*, பெ.(n.) 1. கடற்கரையிலுள்ள தாழை; sea-weed. 2. செந்தாழை; false *tragacanth*. 3. ஒரு மருந்து; *a medicine*. 4. ***கொந்தாளம்*** பார்க்க; see *kondāḷam* (சா.அக.).

[கொந்து + ஆழம்.]

கொந்தாழை *kondāḷai*, பெ.(n.) கடற்றாழை (வின்.); sea-weed.

[கொத்து → கொந்து + தாழை.]

கொந்தாளம் *kondāḷam*, பெ.(n.) நஞ்சை நீக்குமோர் மூலிகை; medicinal plant used as an antidote for poison (சா.அக.).

[கொந்து + தாளம்.]

கொந்தாளி-த்தல் *kondāḷi-*, 4 செ.கு.வி. (v.i.) ***கொந்தளி-த்தல்,*** (யாழ்.அக.) பார்க்க; see *kondāḷi-*.

[கொந்தளி → கொந்தாளி.]

கொந்தி[1] *kondi*, பெ. (n.) வீட்டின் மூலைப் பகுதி (கட்.தொ.); a corner of the house.

[கொந்து → கொந்தி.]

கொந்தி[2] *kondi*, பெ.(n.) வரிக்கூத்து வகை (சிலப். 3: 13, உரை); mask, masquerade dance.

[குந்தி → கொந்தி.]

கொந்திக்காய்[1] *kondi-k-kāy*, பெ.(n.) மகளிர் கைமுட்டுக்குமேல் அணியும் அணிவகை (இ.வ.); a string of gold or coral beads worn by women above the elbow.

[கொந்தி + காய்.]

கொந்திக்காய்[2] *kondi-k-kāy*, பெ.(n.) மிடறு (இ.வ.); throat.

[கொந்தி + காய்.]

கொந்து[1]**-தல்** *kondu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கொத்துதல்; to peck, pick, mince. 2. பழம் முதலியவற்றை அலகாற் குதறுதல்; to injure fruits by pecking, gnawing. 3. அச்சுறுத்தல்; to threaten, intimidate, terrify. *"கொந்தி யிரும்பிற் பிணிப்பர் கயத்தை"* *(நான்மணி. 12)*. 4. குத்துதல்; to gore, pierce. *"கொந்தியயி லலகம்பால்" (பெரியபு. கண்ணப்.145).*

[கொத்து → கொந்து.]

கொந்து[2]**-தல்** *kondu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. ஒற்றைக் காலாற் குதித்தல்; to hop, as in a game. 2. மிகு தூய்மையும் ஒழுக்கமும் காட்டிக் கொள்ளுதல்; to pretend to be very orthodox.

[கிந்து → கொந்து-.]

கொந்து[3]**-தல்** *kondu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. எரிதல்; to burn, to be in flames. *"கொந்தழல்" (சீவக. 1499).* 2. சினம் மூளுதல் (பிங்.); to be enraged, furious, to be inflamed with anger. *"இந்தனக் குழுவைக் கொந்தழ லடூஉம்" (ஞானா. 63: 11).*

[குல் → குந்து → கொந்து.]

கொந்து[4]**-தல்** *kondu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. மகளிர் ஆட்டத்தில் மேலெறிந்த காய் விழுவதற்குள் தரையிலுள்ள காய்களை எடுத்தல்; to pick up shells, etc., from the floor before a thrown-up shell comes down, as in game played by girls. *அவள் புளியவிதையைக் கொந்தி விளையாடுகிறாள் (கொ.வ.).* 2. கொடியி லிருக்கும் ஆடையைக் கோல்கொண்டு எடுத்தல்; to remove a cloth from the clothe's line with stick.

[கொள் + து → கொந்து.]

கொந்து[5] *kondu*, பெ.(n.) 1. பூங்கொத்து; cluster of flowers. *"கொந்தா ரிளவேனில்" (சிலப். 8, வெண்பா.1).* 2. திரள்; gathering multitude. *"கொந்தினாற் பொலியும் வீதி" (இரகு. இரகுவு. 53).* 3. கொத்துமாலை; garland of many wreaths. *"கொந்தார் தடந்தோள்" (திருக்கோ. 391).* 4. பூந்தாது; pollen. *"கொந்துசொரிவன கொன்றையே" (தக்கயாகப்.62).*

[கொத்து → கொந்து.]

கொந்து[6] *kondu*, பெ.(n.) இடைப்பட்ட நிலம், பகுதி; side, region. இந்த மழை கன்னியாகுமரிக் கொந்திற் பெய்யவில்லை.

[கொத்து → கொந்து.]

கொந்துகம் *kondugam*, பெ.(n.) 1. குதிரைவாலிச் சம்பா; horse tail paddy. 2. குதிரைவாலிச் சாமை; horse tail millet. 3. குதிரைவாலிப் புல்; horse tail grass. 4. குதிரைவாலி போன்ற பூடுவகை; equisetacae family of plants (சா.அக.).

[கூந்தல் → கொந்து → கொந்துகம்.]

கொப்பகரை *koppa-karai*, பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[குப்பன் → கொப்பன் + கரை.]

கொப்பணன் *koppaṇaṉ*, பெ.(n.) கம்பணஉடையார் காலத்துக் காஞ்சிபுரத்துக் கோயிலலுவலர்; temple officer of Kanjipuram during the period of Kambana Udaiyar. *"இவை கொப்பணன் எழுத்து" (S.I.I.I:87).*

[கொப்பு + அண்ணன்.]

கொப்பம்[1] *koppam*, பெ.(n.) யானை பிடிப்பதற்காக வெட்டும் பெருங்குழி; keddah for elephants. *"கைம்மலைசெல் கொப்பத்து வீழ" (குமர. பிர. மீனாட். பிள்ளை. 11).*

[குல் → குப்பு → (கப்பல்) → கப்பம் (குழி) → கொப்பம்.]

கொப்பம்[2] *koppam*, பெ.(n.) 1. ஒரு நாடு; a country. *"பப்பரம் கொப்பம் வங்கம்" (பாரத. படை. 19).* 2. பெல்லாரி மாவட்டத்தையடுத்து நிசாம் ஆளுகைக்குட்பட்ட ஓர் ஊர்; a town in the Nizam dominious bordering Bellary district. *"கொப்பத் தொருகளிற்றாற் கொண்டோனும்" (விக்கிரம. உலா, 40).*

[குப்பம் → கொப்பம்.]

கொப்பம்[3] *koppam*, பெ.(n.) சேலம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Salem Dt.

[குப்பன் → குப்பம் → கொப்பம்.]

கொப்பயம்பட்டி *koppayam-paṭṭi*, பெ.(n.) தேனி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Theni Dt.

[குப்பையன் → கொப்பயன் + பட்டி.]

கொப்பரம் *kopparam*, பெ.(n.) 1. முழங்கை; elbow. 2. மற்போர் வகை; a mode of grappling the arms in wrestling.

ம. கொப்பரம்; **தெ.** கொப்பரமு; **Skt.** kūrpara.

[குப்பரம் → கொப்பரம்.]

கொப்பரம்பாய்ச்சு[1]**-தல்** *kopparam-pāyccu-*, 5 செ.கு.வி. (v.i.) மல்லுக்குக் கைகோத்தல் (யாழ்.அக.); to grapple an antagonist, as in wrestling.

[குப்பரம் → கொப்பரம் + பாய்ச்சு-.]

கொப்பரம் பாய்ச்சு[2]**-தல்** *kopparam-pāyccu-*, 5 செ.குன்றாவி. (v.t.) அதட்டுதல்; to upbraid, bluster.

[குப்பரம் → கொப்பரம் + பாய்ச்சு-.]

கொப்பரி *koppari*, பெ.(n.) ***கொப்பரை***[2] (பிங்.) பார்க்க; see *kopparai*.

[கொப்பரை → கொப்பரி.]

கொப்பரை[1] *kopparai*, பெ.(n.) கைப்பிடியோடு கூடிய பெரிய ஏனம்; brass or copper boiler with rings for handles, cauldron. *"கும்பம் வட்டகை கொப்பரை" (பிரபோத. 11:31).*

[கப்பரை → கொப்பரை.]

கொப்பரை[2] *kopparai*, பெ.(n.) 1. நீர் வைக்கும் ஏனம்; kettle; water jar made of brass or copper. 2. கடாரம்; boiler (சா.அக.).

ம. கொப்பர; **க** கொப்பர, காப்பரிகெ; **தெ.** கொப்பெர.

[கப்பரை → கொப்பரை.]

கொப்பரை[3] *kopparai*, பெ.(n.) நீர்வற்றிய தேங்காய்; dried coconut kernel, copra.

ம. கொப்பர, கொப்ர; **க.** கொப்பரி **தெ.** கொப்பரி, கொப்பர; **து.** கொப்பரி, கொப்பர; **பட.** கொப்பர; **U.** khōprā

[குப்பல் (உட்குழிந்தது) → கப்பல் → கப்பரை → கொப்பரை.]

கொப்பரைக்கல் *kopparai-k-kal* பெ.(n.) 1. கல் வகைகளுளொன்று; a kind of stone. 2. குறிஞ்சி நிலத்தமைந்த பாறைவகைகளு ளொன்று (சங்.தொ.); a kind of rock which is found in the hilly tracts.

[கொப்பரை + கல்.]

கொப்பரைவெட்டு *kopparai-veṭṭu*, பெ.(n.) பழைய நாணய வகை (பணவிடு. 136); an ancient coin.

[கொப்பரை + வெட்டு.]

கொப்பளம் *koppaḷam*, பெ.(n.) ***கொப்புளம்*** பார்க்க; see *koppuḷam*.

[கொப்புளம் → கொப்பளம்.]

கொப்பளி-த்தல் *koppaḷi-*, 4 செ.குன்றாவி. செ.கு.வி. (v.t. & v.i.) ***கொப்புளி-த்தல்***, பார்க்க; see *koppuḷi-*. *"புறத்திற் கழுவிக்கை கொப்பளிக்க" (சைவச. பொது. 314).* குடிக்கிறது கூழ் கொப்பளிக்கிறது பன்னீர் (பழ).

[கொப்புளி → கொப்பளி. கும்முதல் = திரளுதல், மேலெழும்புதல். கும்மு → குப்பு → குப்புள் → குப்புளித்தல் → கொப்பளித்தல்.]

கொப்பாட்டன் *koppāṭṭaṉ*, பெ.(n.) மூன்றாம் பாட்டன் (யாழ்ப்.); great-great-grandfather.

[கோ + பாட்டன் = கோப்பாட்டன் → கொப்பாட்டன்]

கொப்பாடை *koppāḍai,* பெ.(n.) அம்மைநோயில் ஒருவகை; a kind of small pox.

[கொப்பு + ஆடை.]

கொப்பாந்தேன் *koppān-dēṉ,* பெ.(n.) ***கொம்புத் தேன் (யாழ்ப்.)*** பார்க்க; see *kombu-t-tēṉ.*

[கொம்பு + ஆம் + தேன்.]

கொப்பி *koppi,* பெ.(n.) கும்மியாட்டம்; a game of young girls attended with clapping of hands, singing and dancing.

[கும்மி → கொம்மி → கொப்பி.]

கொப்பிகொட்டு-தல் *koppi-koṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) கும்மியடித்தல்; to clap hands in *kummi* dance.

[கும்மி → கொம்மி → கொப்பி + கொட்டு-.]

கொப்பிப்பொங்கல் *koppi-p-poṅgal,* பெ.(n.) குப்பிப்பொங்கல்; feast observed by Hindu girls on the first day of the month of *'Tai'.*

[கும்மி → கொம்மி → கொப்பி + பொங்கல்.]

கொப்பு[1] *koppu,* பெ.(n.) மரக்கிளை; branch of a tree.

ம. கொப்பு; **க.** கொம்பை; **தெ.** கொம்மு; **து.** கொம்பு; **குட.** கொம்பி; **நா.**கொம்ம், **கொலா.** கொம், **கோத.** கொப் **Skt.** kūrpara.

[கொம்பு → கொப்பு. (வ.மொ.வ.7).]

கொப்பு[2] *koppu,* பெ.(n.) 1. மகளிர் காதணிவகை; woman's ear ornament worn at the top of the helix, as flower-shaped. *"கொப்பிட்ட வுமைபாகர்" (தண்டலை. சத.12).* துப்பற்ற நாரிக்குக் கொப்பு அழகைப்பார் (பழ). 2. மயிர்முடி (பிங்.); chignon; coil of hair (பிங்.) 3. கொண்டை; to tie hair in a knot.

ம.,க.,தெ.,து. கொப்பு; **குட.** கொப்பும்பி.

[கொம்பு → கொப்பு (வ.மொ.வர.7).]

கொப்பு[3] *koppu,* பெ.(n.) தலைமுடியை அள்ளிச் செருகுகை; wearing the hair in a bunch.

[கொள் → கொப்பு.]

கொப்பு[4] *koppu,* பெ.(n.) 1. ஒருவகைச் சிவப்பு; a reddish colour (விறலிவிடு.713). 2. பவளத்தால் செய்யப்பட்ட காதணி; an ear ornament. *"திருக்காதில் பொன்னின் மகரம் இரண்டும் பவளத்தின் கொப்பு ஒன்றும்" (திருப்ப. கல்.தொ.1. கல்.8,2).*

[கோப்பு → கொப்பு.]

கொப்புக்குடை *koppu-k-kuḍai* பெ.(n.) கொப்பணியிலிருந்து தொங்கும் குடைவடிவான உறுப்பு; umbrella shaped pendants hanging from 'koppu' ornaments.

[கொப்பு + குடை.]

கொப்புசம்புல் *koppu-sampul,* பெ.(n.) காதணி வகை; a kind of ear ornament (தாசில்தார்நா.20).

மறுவ. கொப்புக்குடை.

[கொப்பு + சம்புல்.]

கொப்புமயிர்மாட்டி *koppu-mayir-māṭṭi,* பெ.(n.) மகளிர் கூந்தலில் மாட்டும் காதணிவகை; golden hair-hook connecting 'koppu' ornament to a strand of hair behind the ear, worn by women.

[கொப்பு + மயிர் + மாட்டி.]

கொப்புவர்ணம் *koppu-varṇam,* பெ.(n.) சேலைவகை; a kind of saree. *"கொப்பு வர்ணமாய்த் தீர்ந்த கொப்புவர்ணம்" (விறலிவிடு. 713).*

[கொப்பு + (வண்ணம்) வர்ணம்.]

கொப்புவாளி *koppu-vāḷi,* பெ.(n.) மகளிர் அணியும் வாளி என்னும் காதணி வகை; woman's ornament for the helix of the ear having a knob and a pendant.

[கொப்பு + வாளி.]

கொப்புள்[1] *koppuḷ,* பெ.(n.) உந்தி; navel. கொப்புள் கொடி அறுத்தார்கள் (உ.வ.).

[குல் → கும்மு → குப்பு → குப்புள் → கொப்புள்.]

கொப்புள்[2] *koppuḷ,* பெ.(n.) ***கொப்புளம்*** பார்க்க; see *koppuḷam. "வாதக் கொப்புளொடு வருத்தங் கொண்டகொல்" (பெருங். மகத. 8:16).*

[கொப்புள்[1] → கொப்புள்[2].]

கொப்புள்பால்இறங்கு-தல் *koppuḷpāl-iraṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) மாடு ஈனுமுன் மடி கனத்தல்;

[கொப்புள் + பால் + இறங்கு-.]

கொப்புளப்பற்று *koppuḷa-p-paṟṟu,* பெ.(n.) 1. கொப்புளத்தின்மேல் காணும் பக்கு; blister scab. 2. கொப்புளத்திற்குப் போடும் பற்று; medicinal coat over blister or boil (சா.அக.).

[கொப்புளம் + பற்று.]

கொப்புளம் *koppuḷam*, பெ.(n.) 1. குமிழி (பிங்.); bubble. 2. *சீழ் நிரம்பிய* மெல்லிய சிறு புடைப்பு; pustule; blister, vesicle, as of chicken-pox. *"கோவத் தன்ன கொப்புளம்" (பெருங். உஞ்சைக். 54:59).*

Fin. kupla (bubble, blister); **Est.** kubl; **Hung.** hupolyag; **Jap.** kobu.

[கொப்புளி → கொப்புளம்.]

கொப்புளவண்டு *koppuḷa-vaṇḍu*, பெ.(n.) எரிவண்டு; spanish fly, an insect, which strikes against the eye ball causing severe smarting. (சா.அக.).

[கொப்புளம் + வண்டு.]

கொப்புளவாதம் *koppuḷa-vādam*, பெ.(n.) வளி மற்றும் பித்தம் மிகையுள்ள பண்டங்களை உண்ணுவதால் உச்சி முதல் உள்ளங்கால் வரை உண்டாகும் கொப்புளங்கள்; lesions occuring in the skin in groups and characterised by dense eruptions all over the body arising from eating excessively articles of fare promoting acute disorders of the two humours viz. wind and bile in the system (சா.அக.).

[கொப்புளம் + வாதம்.]

கொப்புளி[1]-த்தல் *koppuḷi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. கொப்புளங் கொள்ளுதல்; to blister. *"எடுத்தடி கொப்புளிக்க" (தனிப்பா.1;146:44).* 2. நீர் முதலியவை குமிழியிட்டு வெளிவருதல்; to rise in bubbles, as water. 3. வாய் குமிழ்த்தல்; to puff out the cheeks and blow. *"செய்யவாய் கொப்புளிப்ப" (திவ்.பெரியாழ். 3, 6:8).*

[கொப்புள் → கொப்புளி.]

கொப்புளி[2]-த்தல் *koppuḷi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. நீர் முதலியவற்றால் வாயை அலசி உமிழ்தல்; to gargle, rinse. 2. நீர் முதலியவற்றை வெளிவிடுதல்; to discharge in jets. *"குருதிகொப் புளிக்கும் வேலான்" (சீவக. 1889).*

[குப்புளி → கொப்புளி.]

கொப்புளிக்குநீர் *koppuḷikku-nīr*, பெ.(n.) வாய் கொப்புளிக்கும் மருந்துநீர்; fluid preparation used for gargling (சா.அக.).

[கொப்புளிக்கும் + நீர்.]

கொப்புளிச்சுறா *koppuḷi-c-cuṟā*, பெ.(n.) சுறாமீன் வகைகளி லொன்று; a kind of shark (மீன்.பிடி.தொ.).

[கொப்புளி + சுறா.]

கொப்புளிப்பான் *koppuḷippāṉ*, பெ.(n.) அம்மை நோய் வகை; a kind of chicken-pox or measles.

[கொப்புளி → கொப்புளிப்பான்.]

கொப்புறக்கோலா *koppuṟa-k-kōlā*, பெ.(n.) பறக்குந் தன்மையுள்ள கோலாமீன்; flying fish as of *kōlā*.

[குப்புறு → கொப்புறு + கோலா.]

கொப்பூர் *koppūr*, பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvallur Dt.

[குப்பூர் → கொப்பூர்.]

கொப்பூழ் *koppūḻ*, பெ.(n.) 1. உந்தி; navel, umbilicus. *"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரை" (பரிபா. ப. 174).* 2. கொப்புளம்; boil. *"நங்கை சீறடி நீர்க்கொப் பூழி னறியன தொடர்ந்து சென்று" (கம்பரா. தைல. 53).*

[கொப்புள் → கொப்பூழ்.]

கொப்பூழ்க்கொடி *koppūḻ-k-koḍi*, பெ.(n.) 1. உந்திக் கொடி; umbilical cord, navel string, funis. 2. நஞ்சுக்கொடி; umbilical cord.

[கொப்பூழ் + கொடி.]

கொப்பூழறு-த்தல் *koppūḻ-aṟu-*, 4 செ.குன்றாவி. (v.t.) பிறந்த குழந்தையின் உந்திக் கொடியை அறுத்தல்; to cut the umbilical cord of a new born infant.

[கொப்பூழ் + அறு-.]

கொப்பெனல் *koppeṉal*, பெ.(n.) விரைவுக்குறிப்பு; onom. expr. of moving quickly, swiftly or suddenly. *கொப்பென வந்தார்கள் (வின்.).*

[குப்பு → கொப்பு + எனல்.]

கொப்பை[1] *koppai*, பெ.(n.) கல்லுப்பு; sea-salt (சா.அக.).

[கொப்பு → கொப்பை.]

கொப்பை[2] *koppai*, பெ.(n.) **கொப்பம்[2]** பார்க்க; see koppam. *"கொப்பையிற் பொருகளத்திலே" (கலிங்.191).*

[கொப்பம் → கொப்பை.]

கொம்படி-த்தல் *kombaḍi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. கொம்பால் முட்டிப் பொருதல் (யாழ்.அக.); to fight

with horns, as oxen, buffaloes, rams, goats etc. 2. மேலாண்மை செலுத்துதல்; to impose one's authority.

[கொம்பு + அடி-.]

கொம்படிப்பட்டி *kombadi-p-patti,* பெ.(n.) சேலம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Salem Dt.

[கொம்பு + அடி + பட்டி.]

கொம்பத்தாள் *kombattāl,* பெ.(n.) ***கொம்பாள்*** (வின்.) பார்க்க; see *kombāl.*

[கொம்பு + அத்து, அத்து - சாரியை. கொம்பத்து + ஆள்.]

கொம்பர் *kombar,* பெ.(n.) ***கொம்பு*** பார்க்க; see *kombu.* *"நாறு மலர்க்கொம்பர்" (சீவக. 2019).*

[கொம்பு → கொம்பர் (வே.க.168).]

கொம்பரக்கு *kombarakku,* பெ.(n.) அரக்கு வகை (தைலவ. தைல. 94, 20.); stick lac.

[கொம்பு + அரக்கு.]

கொம்பரக்குமரம் *kombarakku-maram,* பெ.(n.) கிளைகளில் அரக்கு உண்டாகும் மரம்; croton-lac tree (சா.அக.).

[கொம்பரக்கு + மரம்.]

கொம்பரண்டை *kombarandai* பெ.(n.) கட்டு மரத்தின் ஒருறுப்பு; a part of a *catamaran*

[கொம்பர் + அரண்டை.]

கொம்பரணை *kombaranai,* பெ.(n.) மர ஆணி; a wooden nail.

[கொம்பு + அரணை.]

கொம்பரி *kombari,* பெ.(n.) இலவ மரத்தி லுண்டாகும் பிசின்; gum from silk-cotton tree (சா.அக.).

[கொம்பு → கொம்புரி → கொம்பரி.]

கொம்பரை *kombarai,* பெ.(n.) மாட்டுநோய் வகை (தஞ். சர. III. 119.); a disease in cattle.

[கொம்பு → கொம்பரை.]

கொம்பளவு *kombalavu,* பெ.(n.) கொம்பை முதலிற் கொண்ட எழுத்தாகிய ளகரம் (இ.வ.); the letter la ('ள') as beginning with 'ெ'

[கொம்பு → அளவு.]

கொம்பன்[1] *kombaṉ,* பெ.(n.) வல்லாளன்; one who is proficient.

ம. கொம்பன்.

[கொம்பு + அன்.]

உனக்கென்ன கொம்பு முளைத்திருக்கிறதா என்பது உலக வழக்கு. இது தலைவேட்ட மாடும் நாகர் வழக்கத்தினின்று தோன்றியிருக்கலாம். பண்டை மூவேந்தர் முடியும் கொம்பு வடிவில் குவித்திருந்தது கவனிக்கத்தக்கது.

கொம்பன்[2] *kombaṉ,* பெ.(n.) 1. ஆண்யானை; male-elephant. 2. ஒரு நீண்ட பாகல்; a long bitter fruit of momordica genus. 3. கொம்புள்ள விலங்கு; horned animal. 4. கொம்புள்ள கெளுத்தி மீன்வகை; a kind of fish with horn (சா.அக.).



கொம்பன்

[கொம்பு → கொம்பன். கொம்பு + அன். அன் - உடைமை குறித்த ஈறு. (வே.க.168).]

கொம்பன்[3] *kombaṉ,* பெ.(n.) 1. ஒருவகை அம்மை நோய்; a kind of small-pox. 2. அம்மை அல்லது கழிச்சல் நோய்வகை; a virulent type of cholera chiefly epidemic (சா.அக.).

[கொம்பு → கொம்பன்.]

கொம்பன்[4] *kombaṉ* பெ.(n.) மகன்; son. *"உனக்கொரு கொம்பன் பிறப்பான்" என்பது குடுகுடுப்பாண்டிக் குறி கூற்று.*

[கொம்பு (-கிளை) → கொம்பன்.]

கொம்பன்ஆனை *kombaṉ-āṉai,* பெ.(n.) தந்தங்கள் உள்ள ஆண்யானை; male-elephant, tusker. *"மகராசா அவர்களும் இந்த நன்றிக்காக ஏகோசி மகராசா அவர்களுக்கு கும்பினி ஒரு கொம்பன் ஆனையும் ரொக்கமும் கொடுக் கிறோமென்று" (தஞ்.மரா.செப்.50-1-40).*

[கொம்பு + அன் + ஆனை.]

கொம்பன்கெளுத்தி *kombaṉ-keḷutti,* பெ.(n.) கொம்புள்ள கெளுத்தி மீன்; a fresh water fish.

[கொம்பன் + கெளுத்தி.]

கொம்பன்சம்பா *kombaṉ-cambā,* பெ.(n.) ஆடவை (ஆனி), கன்னி (புரட்டாசி) மாதங்களில் விதைக்கப்பட்டு 5 மாதத்தில் விளையும் சம்பா நெல்வகை (இ.வ.); a kind of cambā paddy, sown between *Āṉi* and *Puraṭṭāši,* maturing in five months.

[கொம்பன் + சம்பா.]

கொம்பன்சுறா *kombaṉ-šuṟā,* பெ.(n.) சாம்ப னிறத்துடன் 7 அடிவரை நீண்டுவளரக்கூடிய சுறாமீன் வகை (M.M. 850.); hammer-headed shark, deep grey, attaining 7 ft. in length.


கொம்பன் சுறா

[கொம்பன் + சுறா.]

கொம்பன்திருக்கை *kombaṉ-tirukkai,* பெ.(n.) நீல நிறமுள்ளதும் 18 அடிக்குமேல் வளர்வதுமான கடல் மீன்வகை; sea-devil, deep purplish, attaining 18 ft. and upwards across the disc which is twice as broad as long.

[கொம்பன் + திருக்கை.]

கொம்பன்பாகல் *kombaṉ-pāgal,* பெ.(n.) ***கொம்புப் பாகல்*** (கொ.வ.) பார்க்க; see *kombu-p-pāgal.*

[கொம்பன் + பாகல்.]

கொம்பன்பிலால் *kombaṉ-pilāl,* பெ.(n.) உருப் பருத்த மீன்வகை; a kind of fish with heavy body.

[கொம்பன் + பிலால்.]

கொம்பன்யானை *kombaṉ-yāṉai,* பெ.(n.) பெரிய. கொம்புகளுடைய யானை (இ.வ.); big tusked elephant.

ம. கொம்பனான.

[கொம்பன் + யானை.]

கொம்பனார் *kombaṉār,* பெ.(n.) கொம்புபோல் ஒல்குந் தன்மையுள்ள பெண்டிர்; women, slender and supple as the twig of a plant. *"கொம்பனார்க் கெல்லாங் கொழுந்தே" (திவ். திருப்பா. 17).*

ம. கொம்பல்.

[கொம்பு + அன்னார்.]

கொம்பாடி *kombāḍi,* பெ.(n.) மதுரை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Madurai Dt.

[கொம்பன் + பாடி – கொம்பன்பாடி → கொம்பாடி.]

கொம்பாப்பிள்ளை *kombā-p-piḷḷai,* பெ.(n.) lit., man with horns. 1. செல்வ முதலிய தகுதிகளால் உயர்ந்தவன்; man of rank or wealth, used ironically. கொம்பு முளைத்தவன்; 2. அதிகாரக் குடியிற் பிறந்தோன் (யாழ்.அக.); one born in an aristocratic family.

[கொம்பு + ஆம் + பிள்ளை.]

கொம்பாலயம் *kombālayam,* பெ.(n.) தெய்வம் தங்குவதாகக் கொண்டு பூசிக்கப்பெறும் சில மரக்கிளைகள் (இ.வ.); branches of certain trees considered as the seat of a deity and worshipped.

[கொம்பு + ஆலயம்.]

கொம்பாள் *kombāḷ,* பெ.(n.) 1. மரத்திலேறியிருந்து காவல் புரிவோன் (வின்.); man engaged in watching from a tree. 2. உளவாள் (இ.வ.); a look-out, spy.

[கொம்பு + ஆள்.]

கொம்பி[1] *kombi,* பெ.(n.) காரி (சனி); saturn, *"கொம்பி யருக்கன் குசன்" (சினேந். 198).*

[கொம்பு → கொம்பி.]

கொம்பி[2] *kombi,* பெ.(n.) வல்லாண்மை மிக்கவள்; a female who is proficient.

[கொம்பன் – ஆ.பா. கொம்பி – பெ.பா.]

கொம்பிலேயேறு–தல் *kombilē-y-ēṟu-,* 5 செ.கு.வி. (v.i.) வீண் செருக்குக் கொள்ளுதல்; to be haughty.

[கொம்பு + இல் + ஏறு–.]

கொம்பிற்கொள்கை *kombiṟ-koḷgai,* பெ.(n.) தந்தப்பூண் கட்டிய கோல்; *"கொம்பிற் கொள்கை*

ஒன்றிலத் தடவிக்கட்டின மாணிக்கம்" (தெ.இ.கல். தொ. II, கல்.11–38).

[கொம்பு + இல் + கொள்கை.]

கொம்பிறுக்கை *kombiṟukkai,* பெ.(n.) கட்டுமரத்தின் ஓர் உறுப்பு; a part in a *catamaran.*

[கொம்பு + (இருக்கை) இறுக்கை.]

கொம்பினர் *kombiṉar,* பெ.(n.) ***கொம்பனார்*** பார்க்க; see *kombaṉār.* *"குளிர்மணற் கேணியுட் கொம்பினர் படர்ந்தும்" (கல்லா.71:31).*

[கொம்பு + அன்னார் – கொம்பனார் → கொம்பினர்.]

கொம்பீரம் *kombīram,* பெ.(n.) பச்சைக் கற்பூரம்; crude camphor (சா.அக.).

[கொம்பு → கொம்பீரம்.]

கொம்பு[1]–தல் *kombu-,* 5 செ.கு.வி. (v.i.) முயலுதல் (யாழ்.அக.); to try.

[கும்பு → கொம்பு.]

கொம்பு[2]–தல் *kombu-,* 5 செ.கு.வி. (v.i.) சினத்தல்; to get angry. *"ஈசன்மேற் கொம்பி" (பஞ்ச. திருமுக. 107).*

[குண்மு → கும்மு → கொம்மு → கொம்பு.]

கொம்பு[3] *kombu,* பெ.(n.) 1. மரக்கிளை; bough, branch, twig. *"வளியெறி கொம்பின் வருந்தி" (மணிமே. 24: 86).* 2. நாற்றுமுளை (இ.வ.); seedling. 3. கோல் (Madr.); stick, staff, pole. 4. பல்லக்கு முதலியவற்றின் கொம்பு; poles of palanquin, etc. *"முற்கொம்பு தாங்கி முன்னடக்கும் ... முனிவன்" (திருவிளை. இந்திரன். 65).* 5. விலங்கின் கொம்பு; horn of an animal.குதிரை குணமறிந்து அல்லவோ தம்பிரான் கொம்பு கொடுக்க வில்லை (பழ). 6. யானை முதலியவற்றின் தந்தம்; tusk of an elephant or hog. *"யானையின் கொம்பினைப் பறித்து" (திவ். பெரியதி. 4, 2.4).* 7. ஊதுகொம்பு; horn, pipe, cornet. *'கொம்பு ஒலிப்ப' (மதுரைக்.185,உரை).* 8. நீரை வீசுங் கருவி; squirt, tube for discharging fluids in jets. *"சிவிறியுங் கொம்புஞ் சிதறு விரைநீரும்" (மணிமே. 28:10).*



கொம்பு

தெ. கொம்ம; **ம.**கொம்பு; **பட.** கொம்பு; **குட.** கொம்பி; **குவி.** கோம, கொம்ம; **கொலா.**கொம்; **துட.** கூப்.

[கொள் → கொண் → (கொண்டி). கொம்பு = வளைந்த மரக்கிளை, கிளை, கிளை போன்ற விலங்குக் கொம்பு. (வே.க.167).]

கொம்பு[4] *kombu,* பெ.(n.) 1. 'கெ', 'கோ' முதலிய எழுத்துகளில் முற்பகுதியா யமைந்திருக்கும் அடையாளக் குறிகள்; the symbol 'ெ', 'ே' in certain Tamil letters as 'கெ, கொ'. *"வரைந்திடுந் திறனடைந்த கொம்பு போல" (திருவேங். கலம். 27).* 2. ஏரிகரையின் கோடி (இ.வ.); farthest end of a tank bund.

[கொள் (கொண்பு) (எழுத்தின் கொம்பு போன்ற வரிவடிவப் பகுதி (வே.க.167).]

ஒரு சுழி பெற்று வருவது ஒற்றைக் கொம்பு என்றும் இரு சுழி பெற்று வருவது இரட்டைக் கொம்பு என்றும் வழங்கும்.

கொம்பு[5] *kombu,* பெ.(n.) கிடைக்கொம்பு, குளத்துக் கண்மாயின் தொடக்கம் அல்லது இறுதிப் பகுதியின் பெயர்; beginning or end of the canal. *சேதுபதி மன்னர்கள் செப்பேடுகள் (பக்.50, எஸ்.எம்.கமால்).*

[கொப்பு →கொம்பு.]

கொம்பு ஆசு *kombu-āšu,* பெ.(n.) தச்சரின் கருவி வகை; an implement of carpenter (உருளையைச் சரிசெய்ய உதவுவது).

[கொம்பு + ஆசு.]

கொம்புக்கட்டை *kompu-k-kaṭṭai,* பெ.(n.) கானாதடியைக் கட்டுமரத்தில் நிறுத்தப் பயன்படும் ஒருறுப்பு; a part in *catamaran* which is used to keep the *kāṉāṭaḍi* (மீன்.பிடி.தொ.).

[கொம்பு + கட்டை.]

கொம்புக்கடமை *kombu-k-kaḍamai,* பெ.(n.) மீன் படகுக்கு உரிய வரி (வின்.); tax on fishing boats.

[கொம்பு + கடமை.]

கொம்புக்கயிறு *kompu-k-kayiṟu,* பெ.(n.) 1. உப்பங்கழியில் வலைக்குமோர் வலைக்கூறு; a part of fishing net used in salt-pan (மீன்.பிடி. தொ.). 2. மாட்டின் இரு கொம்புகளைச் சுற்றிக் கட்டும்



கொம்புக்கயிறு

நெற்றிக்கயிறு; a rope for tying around the horns of a cow.

[கொம்பு + கயிறு.]

கொம்புக்கள்ளி *kombu-k-kaḷḷi,* பெ.(n.) கள்ளிவகை (L.); a variety of milk-hedge.

[கொம்பு + கள்ளி.]

கொம்புக்காரல் *kompu-k-kāral,* பெ.(n.) காரல் மீன்வகை; a kind of fish by name *kāral.*

[கொம்பு + காரல்.]

கொம்புக்காரன் *kombu-k-kāraṉ,* பெ.(n.) 1. கொம்பு இசைக் கருவி ஊதுபவன்; horn-blower. 2. கக்கற்கழிச்சலுக்குரிய தெய்வம்; cholera-deity.

ம. கொம்புகாரன்.

[கொம்பு + காரன்.]

கொம்புக்கால் *kombu-k-kāl,* பெ.(n.) 1. முகடு தாங்கும் கவட்டு மரம்; forked support for a roof-tree. 2. கொ, கோ முதலியவற்றில் உள்ள கொம்புங்காலும் (வின்.); the symbols, 'ெ', 'ே' and 'ா' as in ko, (கொ) kō (கோ).

[கொம்பு + கால்.]

கொம்புக்கெளிறு *kombu-k-keḷiṟu,* பெ.(n.) ஆறடி நீளமும் வெளிர் நீலநிறமும் உள்ளதாய் நன்னீரில் வாழும் கெளிற்று மீன்வகை; a fresh-water fish, bluish-leaden, attaining 6 ft. in length.

[கொம்பு + கெளிறு.]

கொம்புக்கெளுத்தி *kombu-k-keḷutti,* பெ.(n.) நன்னீரில் வாழும் கெளுத்திமீன்; a kind of fish living in fresh water (மீன்.பிடி.தொ.).

[கொம்பு + கெளுத்தி.]

கொம்புகன் *kombugaṉ,* பெ.(n.) நீண்ட பாகற்காய்; long balsam-pear (சா.அக.).

[கொம்பு → கொம்புகன்.]

கொம்புகாவி *kombu-kāvi,* பெ.(n.) பல்லக்குத் தூக்குவோன் (யாழ்ப்.); palanquin-bearer.

[கொம்பு + (காவு) காவி.]

கொம்புகொள்(ளு)-தல் *kombu-koḷ(ḷu)-,* 16 செ.கு.வி. (v.i.) ஆணி முதலியவற்றில் பட்டு ஆடை கிழிதல் (கொ.வ.); to be torn, as a cloth caught by a nail.

[கொம்பு + கொள்(ளு)-.]

கொம்புச்சிமிழ் *kombu-c-cimiḻ,* பெ.(n.) மருந்து வைப்பதற்காக விலங்கின் கொம்பு அல்லது தந்தத்தினாற் செய்த பரணை; a small case or box made of horn or ivory for preserving medicine (சா.அக.)

[கொம்பு + சிமிழ்.]

கொம்புச்சுத்தியல் *kombu-c-cuttiyal,* பெ.(n.) தட்டார் பயன்படுத்துஞ் சுத்தியல் வகை (இ.வ.); a kind of hammer used by gold-smiths.

[கொம்பு + சுத்தியல்.]

கொம்புச்சுழி *kombu-c-cuḻi,* பெ.(n.) 1. சுழி பார்க்க; see *cuḻi.* The circular portion in the symbol 'ெ'. 2. மாட்டின் கொம்புகளுக்கிடையேயுள்ள சுழி; circular or curved marks on the head between horns of the cow.

[கொம்பு + சுழி.]

கொம்புச்சுளை *kombu-c-cuḷai,* பெ.(n.) பருத்திக் காட்டில் மடிப்பருத்தி குவித்து வைக்குமிடம்; a place for storing cotton.

[கொம்பு + சுளை.]

கொம்புச்சொளை *kombu-c-coḷai,* பெ.(n.) பருத்திக் காட்டில் மடிப்பருத்தி குவித்து வைக்குமிடத்தில், அடையாளத்திற்காக ஒரு சுளைப்பருத்தியை ஒரு செடியின் உச்சியில் அடையாளமாக வைத்தல்; a single cotton stick kept above the heap of harverted cotton as an indication.

[கொம்பு + சொளை.]

கொம்புசாய்-தல் *kombu-śāy-,* 2 செ.கு.வி. (v.i.) கதிர்முற்றிச் சாய்தல் (வின்.); to bow down with weight, as ripe corn.

[கொம்பு + சாய்-.]

கொம்புசீவிவிடு-தல் *kombu-šivi-viḍu-,* 20 செ.குன்றாவி. (v.t.) 1. சண்டை மூட்டி விடுதல்; to incite quarrel. 2. ஆர்வப்படுத்துதல் (இ.வ.); to encourage; to egg on.

[கொம்பு + சீவி + விடு-.]

கொம்புசுற்று-தல் *kombušuṟṟu-,* 5 செ.கு.வி. விளையாட்டில் எதிரியை மடக்கி வெல்லல்; to corner and defeat oponent in sport. இவன் கொம்பு சுற்றி விளையாடுவதில் வல்லவன் (நெல்.வழ.).

[கொம்பு + (சுத்து) சுற்று.]

கொம்புத்தண்டு *kombu-t-taṇḍu,* பெ.(n.) மரக்கலத்தின் வேகத்தைக் குறைக்க அதன் முன்பகுதியில் நிற்கும் துடுப்பு; an oar, or paddle in the front, used to reduce the speed of a boat (மீன்.பிடி.தொ.).

[கொம்பு + தண்டு.]

கொம்புத்துறை *kombu-t-tuṟai,* பெ.(n.) மரம், இரும்பு போன்றவற்றைக் கொண்டு கடலில் உண்டாக்கும் துறைமுகம்; structure of iron or wood, open below running out into sea, used as landing stage.

[கொம்பு + துறை.]

கொம்புத்தேன் *kombu-t-tēṉ,* பெ.(n.) மரக் கொம்பிலுள்ள தேன்கூட்டிலிருந்து எடுக்கப்பட்ட தூய்மையான தேன் (பதார்த்த.198.); lit., honey gathered from the honey combs on the branch of a tree. pure honey.

[கொம்பு + தேன்.]

கொம்புத்தேனீ *kombu-t-tēṉī,* பெ.(n.) தேனீவகை (M.M.); tree-bee, found on the plains and low hill ranges.

[கொம்பு + தேன் + ஈ.]

கொம்புதூக்கி *kombu-tūkki,* பெ.(n.) சேலம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Salem Dt.

[கொம்பு + தூக்கி.]

கொம்புநங்கூரம் *kombu-naṅgūram,* பெ.(n.) மரக்கலத்தைக் கடலில் நிறுத்திடப் பயன்படும் ஒருறுப்பு; a kind of instrument used to anchor the boat in the sea (மீன்.பிடி.தொ.).

[கொம்பு + நங்கூரம்.]

கொம்புப்பயறு *kombu-p-payaṟu,* பெ.(n.) தவச வகை (வின்.); a kind of pulse.

[கொம்பு + பயறு.]

கொம்புப்பழம் *kombu-p-paḻam,* பெ.(n.) எலுமிச்சை; lime (சா.அக.).

[கொம்பு + பழம்.]

கொம்புப்பாகல் *kombu-p-pāgal,* பெ.(n.) நீண்ட பாகல்வகை (பதார்த்த.712); long balsam-pear, climber.

[கொம்பு + பாகல்.]

கொம்புப்பிடி *kombu-p-piḍi,* பெ.(n.) கத்தி போன்றவற்றிற்குக் கொம்பு முதலியவற்றாற் செய்த பிடி (இ.வ.); handle, as of a knife, made of horn, tusk, etc.

[கொம்பு + பிடி.]

கொம்புப்பிறை *kombu-p-piṟai,* பெ.(n.) பெரியார் சீர்திருத்த எழுத்துகள் புழக்கத்திற்கு வருமுன் ணொ, ணோ முதலிய எழுத்துகளில் இருந்த கொம்பும் பிறையும்; the symbols 'ெ' 'ே' ' ' and as in forms ணொ, ணோ (ணொ, ணோ).

[கொம்பு + பிறை.]

கொம்புப்புடல் *kombu-p-puḍal,* பெ.(n.) 1. குட்டைப் புடல் (யாழ்ப்.); short snake-gourd, climber. 2. புடல் வகை; palwal snake-gourd, extensive climber.

[கொம்பு + புடல்.]

கொம்புபடு-தல் *kombu-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) ***கொம்புகொள்-தல்*** பார்க்க; see *kombu-koḷ-.*

[கொம்பு + படு-.]

கொம்புபிடி-த்தல் *kombu-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) கொம்பையூதுதல் (வின்.); to blow a horn.

[கொம்பு + பிடி-.]

கொம்புமண்வீசு-தல் *kombumaṇ-višu-,* 5 செ.குன்றாவி.(v.t.) கொம்புகளால் மாடு தரையைப் பெயர்த்தெறிதல்; cattle plunging their horn into earth. இந்தத் தொம்பக்காளை கொம்புமண் வீசிக் கொண்டே யிருக்கும் (நெல்லை).

[கொம்புமண் + வீசு-.]

கொம்புமிளகு *kombu-miḷagu,* பெ.(n.) ஒருவகை மிளகு; a kind of pepper (சா.அக.).

[கொம்பு + மிளகு.]

கொம்பெருது

உச்சிக்கொம்பன்



கொம்பெருது

அலுவலகம்
பெறப்பட்டது

சிந்துவெளி எருது உச்சிக்கொம்பன்

எகுபது நாட்டுப் பண்டைய படகின் ஒரு முனையில் உச்சிக்கொம்பன் உருவம்.

கொட்டேணி

கொம்புமுட்டை *kombu-muṭṭai*, பெ.(n.) மரக் கொம்பிலிடும் முட்டை; eggs laid on branches of trees (சா.அக.).

[கொம்பு + முட்டை.]

கொம்புமுளை-த்தல் *kombu-muḷai-*, 4 செ.கு.வி. (v.i.) பிறர்க்கில்லாத சிறப்புண்டாயிருத்தல்; to have special merits or excellences, used ironically. அவன் கொம்பு முளைத்தவன் (உ.வ.).

[கொம்பு + முளை-.]

கொம்புவேளா *kombu-vēḷā*, பெ.(n.) தலையின் முன்பக்கத்தே கொம்புடைய வேளாமீன்; a kind of fish having horn on the fore-head (மீன்.பிடி.தொ.).

[கொம்பு + வேளா.]

கொம்பூதி[1] *kombūdi*, பெ.(n.) 1. கொம்பூதுவோன் (யாழ்ப்.); horn blower, trumpeter. 2. நத்தை (சங். அக.); snail.

ம. கொம்பூதி, கொம்புகாரன்.

[கொம்பு + ஊதி. ஊது + இ.]

கொம்பூதி[2] *kombūdi*, பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanadha puram Dt.

[கொம்பு + ஊதி.]

கொம்பெருது *komberudu*, பெ.(n.) உச்சிக் கொம்பன், ஒற்றைக்கொம்புள்ள எருதினத்தைச் சார்ந்த விலங்கு; unicorn.

மறுவ. உச்சிக்கொம்பன்.

க. ஒக்கோடு நந்தி

[கொம்பு + எருது.]

ஒரே கொம்புள்ள எருது அறப்பழங்காலத்தில் இருந்ததாகப் பழங்கதைகள் கூறுகின்றன. ஒற்றைக் கொம்புள்ள எருதிற்கு உச்சிக்கொம்பன் என்னும் பெயர் பழங்காலத்தில் வழங்கியதைச் சாம்பசிவம் பிள்ளையின் மருத்துவ அகரமுதலி எடுத்துக்காட்டுகிறது. சிந்துவெளி முத்திரைகள் பெரும்பாலானவற்றில் ஒற்றைக் கொம்பெருதின் உருவம் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இது ஒருகாலத்தில் உலகத்தில் வாழ்ந்த உயிரினமா அல்லது கற்பனை வடிவமா என்பது குறித்து அறிஞர்கள் இன்னும் எந்த முடிவுக்கும் வரவில்லை. வரலாற்றுக்கு முந்தைய அறப்பழங்காலத்திலிருந்தே ஒற்றைக் கொம்பெருது எனப்படும் உச்சிக்கொம்பன் பற்றிய கருத்து தென்னாட்டு மக்களிடமும் நிலவி வந்துள்ளது. இன்றைய கருநாடக மாநிலத்தின் மேற்குப் பகுதிகளில் வாழும் மக்கள் மாரியம்மன் கோயிலுக்கு நேர்த்திக்கடனாக தச்சர்களின் வாயிலாக ஒற்றைக்கொம்புள்ள மரப்பொம்மைகளைச் செய்து கோயில் காணிக்கை செலுத்துகிறார்கள். இத்தகைய ஒற்றைக்கொம்பு மரப்பொம்மைகளை மைசூர் பல்கலைக்கழகத்திலுள்ள ஊரக அருங்காட்சியகத்தில் [Folklore Museum] பார்வைக்கு வைத்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அணையைச் சார்ந்த காவேரிபுரத்திற்கு அருகிலுள்ள கோட்டையூர் மாரியம்மன் கோவிலில் ஆண்டுதோறும் ஆடி 18-ஆம் நாளை அடுத்து வரும் காரிக்கிழமை [சனி] அன்று 14 ஊரினர் சேர்ந்து கூட்டாகப் பொன்னேர் கட்டும் விழா நடத்துகின்றனர். அந்தப் பொன்னேரில் மாடுகளைக் பூட்டர்மல் திருமணமாகாத இரு இளைஞர்களை எருதாகப் பூட்டி, கோயிலைச்சுற்றி மூன்றுமுறை பொன்னேர் உழும் விழா நடத்துகின்றனர். பொன்னேரின் எருதுகளாகச் செயற்படும் இரு இளைஞர்களின் தலையில் ஒருவனுக்கு ஒற்றைக்கொம்புத் தலைப்பாகையும் மற்றொருவனுக்கு இரட்டைக் கொம்புத் தலைப்பாகையும் அணிவிக்கின்றனர். இந்நிகழ்ச்சி ஆண்டுதோறும் நடைபெற்று வ‿கின்றது. ஒற்றைக்கொம்பு எருதினை ஏரில் பூட்டும் வழக்கம் பண்டைய மக்களிடையே ஏதோ ஒரு காலத்தில் நிலவியதை இந்நிகழ்ச்சி நினைவூட்டுவதாகவும் அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

ஒற்றைக்கொம்புடைய விலங்கைப்பற்றிய கருத்து பிற நாடுகளிலும் பழங்காலத்திலேயே பரவியிருந்தது. எகுபது நாட்டில் கிடைத்த ஒப்பனை செய்யப்பட்ட படகு ஒன்றில், ஒருமுனையில் ஒற்றைக்கொம்புடைய விலங்கின் தலையும் மற்றொரு முனையில் இரட்டைக்கொம்புள்ள விலங்கின் தலையும் காணப்படுகின்றன. அவற்றின் முகத்தோற்றம் திருகு கொம்புடைய இரலைமான் தலையை ஒத்துள்ளது. சிந்துவெளி முத்திரையில் உள்ள உச்சிக்கொம்பனும், தமிழ்நாட்டு ஒற்றைக்கொம்பெருதும் எருதின் இனங்களாக இருப்பதால் தமிழ்நாடு முதல் சிந்துவெளி வரை ஒரே நம்பிக்கையுடைய ஒரே இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்திருக்கலாம் எனக் கருதுவதற்கு இது இடம் தருகிறது.

கொம்பேரிப்பட்டி *kombēri-p-paṭṭi*, பெ.(n.) திண்டுக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dhindukkal Dt.

[கோம்பு + ஏரி + பட்டி – கோம்பேரிப்பட்டி → கொம்பேரிப்பட்டி.]

கொம்பேறிமூக்கன் *kombēṟi-mūkkaṉ*, பெ.(n.) மரப்பாம்பு வகை (M.M.206.); tree-snake, non-poisonous.

மறுவ. கொம்பேறி, கொம்பேறிமூர்க்கன்.

[கொம்பு + ஏறி + மூக்கன்.]

கொம்பேறிமூர்க்கன் *kombēṟi-mūrkkaṉ*, பெ.(n.) **கொம்பேறி மூக்கன்** (வின்.) பார்க்க; see *kombēṟi-mūkkaṉ*.

[கொம்பேறி + மூர்க்கன்.]

கொம்பேறியேந்தல் *kombēṟi-ēndal*, பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Sivagangai Dt.

[கோம்பு + ஏறி + ஏந்தல் – கோம்பேறியேந்தல் → கொம்பேறியேந்தல்.]

கொம்மகப்பேடு *kommaga-p-pēḍu,* பெ.(n.) திருவள்ளுவர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvalluvar Dt.

[கொம்பு → கொம்பகன் + பேடு.]

கொம்மசமுத்திரம் *komma-šamuttiram,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கொம்பன் + சமுத்திரம்.]

கொம்மட்டி *kommaṭṭi,* பெ.(n.) 1. கொடிவகை (சைவச. பொது. 297.); a small water-melon, climber. 2. தும்மட்டி (M.M. 371.); country cucumber, climber. 3. நீர்முலாம்பழம்; a kind of fruit as of water-melon.

மறுவ. கொமட்டி.

[கும்மட்டி + கொம்மட்டி.]

கொம்மட்டிக்காய் *kommaṭṭi-k-kāy,* பெ.(n.) தும்மட்டிக்காய்; a kind of bryonia (சா.அக.).

[கொம்மட்டி + காய்.]

கொம்மட்டிக்கீரை *kommaṭṭi-k-kīrai,* பெ.(n.) செங்கீரை (வின்.); cockscomb greens.

[கொம்மட்டி + கீரை.]

கொம்மட்டிக்கொடி *kommaṭṭi-k-koḍi,* பெ.(n.) பேய்க்கொம்மட்டி, water-melon (சா.அக.).

[கொம்மட்டி + கொடி.]

கொம்மட்டிச் சீரகம் *kommaṭṭi-c-cīragam,* பெ.(n.) ***கருஞ்சீரகம்*** பார்க்க; see *karuñjīragam*(சா.அக.).

[கொம்மட்டி + சீரகம்.]

கொம்மட்டிச்சுரை *kommaṭṭi-c-curai,* பெ.(n.) கறிக்குரிய சுரைச்செடி வகை (வின்.); a gourd used for curry.

மறுவ. காட்டுச்சுரைக்காய்.

[கொம்மட்டி + சுரை.]

கொம்மட்டி மரம் *kommaṭṭi-maram,* பெ.(n.) கசப்பு மாதுளை; bitter pomegranate tree (சா.அக.).

[கொம்மட்டி + மரம்.]

கொம்மட்டி மாதுளை *kommaṭṭi-māduḷai,* பெ.(n.) மரவகை (சிலப். 16:25, உரை); citron, a tree.

மறுவ. கொடிமாதுளை, துரிஞ்சி.

[கொம்மட்டி + மாதுளை.]

இதனை உண்பதனால் பாடவல்ல இனிய குரலோசை உண்டாகுமாம் (சா.அக.).

கொம்மடி *kommaḍi,* பெ.(n.) கொம்மட்டிவகை; a kind of water-melon. *"சிற்றவரைக் கொம்மடிகள்" (தேசிகப். 18:4).*

[கொம்மட்டி → கொம்மடி.]

கொம்மம்பட்டு *kommam-paṭṭu,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கொம்மம் + பட்டு.]

கொம்மலகுட்டை *kommala-kuṭṭai,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கும்மலன் → கொம்மலன் + குட்டை.]

கொம்மன்தாங்கல் *kommaṉ-tāṅgal,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvallur Dt.

[கொம்மன் + தாங்கல்.]

கொம்மாதி *kommādi,* பெ.(n.) நெட்டிலிங்க மரம்; Indian mast tree (சா.அக.).

[கொம் → கொம்மாதி.]

கொம்மி[1] *kommi,* பெ.(n.) கோட்டம்; common bottle-flower (சா.அக.).

[கும்மி → கொம்மி.]

கொம்மி[2] *kommi,* பெ.(n.) ***கும்மி***[1] பார்க்க; see *kummi,* a kind of dance accompanied with singing and clapping of hands. *"மடவார் கொம்மியே பாடி" (அருட்பா, vi, மாயாவிள. 7).*

[கும்மி → கொம்மி.]

கொம்மெனல் *kom-m-eṉal,* பெ.(n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு; an imitative sound. *"கூர நாண்குரல் கொம்மென வொலிப்ப" (பரிபா. 19:44).* 2. பெருக்கக் குறிப்பு (தொல். சொல். 298, உரை); expr. denoting luxuriance. 3. விரைவுக் குறிப்பு; expr. denoting haste. *"கொம்மென வெழுந்தனள்" (கந்தபு. தெய்வயானை. 9).*

[கொம் + எனல்.]

கொம்மேடு *kommēḍu,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கொம்மை + மேடு.]

கொம்மை[1] *kommai*, பெ.(n.) 1. வட்டம் (பிங்.); circle, circularity. 2. பெருமை; largeness, bigness. *"அம்மையு மழகுங் கொம்மையொடு கழுமி" (பெருங். உஞ்சைக். 40:210).* 3. திரட்சி (சூடா.); conicalness, roundness, rotundity. 4. இளமுலை; breast of a youthful woman. *"வாரணி கொம்மை" (பரிபா. 22:30).* 5. இளமை (திவா.) youth. 6. அழகு (பிங்.); beauty. 7. மார்பு (பிங்.); breast, chest. 8. வலிமை (பிங்.); strength.

ம. கொம்ம; **க.** கொம்மெ; **தெ.** கொம்ம.

[கும் → கும்மை → கொம்மை.]

கொம்மை[2] *kommai*, பெ.(n.) 1. மேடு (பிங்.); elevated place, mound. 2. வீடு; house. உன் கொம்மையிலே போய் முடங்கிக் கொள் (இ.வ.). 3. கொத்தளம் (வின்.); rampart, bulwark.

ம. கொம்ம.

[கும்மை → கொம்மை.]

கொம்மை[3] *kommai*, பெ.(n.) 1. அடுப்புக்குமிழ் (இ.வ.); projecting knobs of an oven. 2. கதவுக் குடுமி; projecting pin of a door. 3. அழுக்குத் துணியிடும் பெட்டி; clothes-basket. 4. கை குவித்துக் கொட்டுகை (திவா.); clapping of hands, as in dancing.

ம. கொம்ம.

[கும் → கும்மி → கும்மை → கொம்மை.]

கொம்மை[4] *kommai*, பெ.(n.) 1. கொம்மட்டி (மலை.); a small water-melon, climber. 2. கன்னி (புரட்டாசி)யில் விதைத்துச் சிலை (மார்கழி)யில் அறுவடை செய்யும் கம்புவகை (G.Sm.D I, I. 219.); a variety of millet sown in *Puratāśi* and harvested in *Mārkali*. 3. சிறு கூலங்களின் உமி (பாவாணர்); chaff of minor grains like ragi. 4. சக்கையின் உதிரி; thin and immature grain in the husk, chaff.

ம. கொம்ம

Fin. kamara (surface, skini rindi crust); **Est.** kamari kammar; **Hung.** haml; **Mong.** kemi; **Tur.** kamik; **Jap.** kawa, kapa.

[குல் → கொல் → கொய → கொம் → கொம்மை.]

கொம்மைகொட்டு-தல் *kommai-kottu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. தட்டியழைத்தல்; to call a person by clapping hands; to invite. *"கூற்றத்தைக் கொம்மை கொட்டி" (சீவக. 1109).* 2. புகழ்தற் குறியாக முதுகைத் தட்டிக்கொடுத்தல்; to pat on the back, as in appreciation. *"குடங்கையாற் கொம்மை கொட்டுவ போன்றவே" (சீவக. 529).* 3. மகளிர் கைகொட்டிப் பாடியாடும் விளையாட்டு; dance with clapping of hands to time and singing, especially among girls.

[கும் → கொம் → கொம்மை. கொம்மை + கொட்டு-.]

கொமட்டு-தல் *komattu-*, 6 செ.கு.வி.(n.) 1. ஓங்கரித்தல்; to vomit. 2. ***குமட்டு-தல்*** பார்க்க; see *kumattu-*.

[குமட்டு → கொமட்டு.]

கொமடிப்பட்டு *komadi-p-pattu*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கோம்பு + அடி + பட்டு - கோம்படிப்பட்டு → கொமடிப்பட்டு]

கொமரப்பாறை *komara-p-pārai*, பெ.(n.) 1. ***கொமாரப்பாறை*** பார்க்க; see *komāra-p-pārai*. (பரத. கலை. சொ. அக.). 2. ஐந்தடி நீளமுள்ளதும் பசுமை நிறத்ததுமான கடல்மீன் வகை; horse-mackerel, glossy-green, attaining 5 ft. in length.

[கும்மாரம் → கொமாரம் + பாறை.]

கொமருகாரியம் *komaru-kāriyam*, பெ.(n.) பெண்ணின் திருமண தொடர்பான ஏற்பாடுகள்; arrangements regarding the marriage of maiden (நெல்லை.).

[குமரி → குமரு → கொமரு + காரியம் (கொ.வ.).]

இது குமரி காரியம் என்றிருத்தல் வேண்டும்.

கொமாளிப்பட்டி *komāli-p-patti*, பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கோமாளி → கொமாளி + பட்டி.]

கொய்[1]**-தல்** *koy-*, 1 செ.குன்றாவி. (v.t.) 1. பறித்தல்; to pluck, cull, as flowers. *"பனிமலர் கொய்தும் பாவை புனைந்தும்" (பெருங். இலாவாண. 19:161).* 2. அறுத்தல்; to cut, reap. *"சிறுதினை கொய்ய" (மதுரைக். 271).* 3. கத்தரித்தல்; to shear, crop, as hair; to trim, as plants, to snip off. *"கொய்தார் மன்னவன்" (பு.வெ.3:3.கொளு).* 4. தெரிந்தெடுத்தல்; to choose, select. *"பொருந்துவதொன் றெமக்குக் கொய்துரை" (கோயிற்பு. பதஞ். 54).* 5. சீலை கொய்தல்; to plait, gather into folds, as ends of a cloth. *"கோடிப் பூந்துகில் கொய்து" (பெருங். இலாவாண.5:165).* 6. சிலிர்த்தல்; to bristle, as manes of a horse. *"கொய்சுவற் புரவி" (மலைபடு. 572).*

ம. கொய்க; க. கொய், குய்; தெ. கோயு; து. கொய்பிணி, கொயிபிணி; கோத., குட.,பர்., கொய்; துட. க்விய்; கோண்; கோயியானா, கொய்தான; குவி. கொய்யலி; கூ. கோவகொய்; குரு. கொய்னா; பட., கூய்., மா. க்வொயெ.

Fin. kokea (to choose, investigate); **Kare.** kuottele; **Est.** koeta.

[குல் → குள் → கொள் → கொய் → கொய்தல் (வேக.174).]

கொய்²–தல் *koy-*, 1 செ.குன்றாவி. (v.t.) கவர்ந்து கொள்ளுதல் (ஈடு, 1,4:7); to take away.

[கொய்¹ → கொய்².]

கொய்³ *koy*, பெ.(n.) 1. எட்டரை அங்குலம் நீள முள்ளதும் நன்னீரில் வாழ்வதும் பசியநிறத்ததுமான மீன்வகை; a fresh-water fish, rifle-green, attaining 8 1/2 in. in length. *"செம்புனல் கொய்யனைத் துங் கொணரும்" (தேவா. 196:3).* 2. ஒருவகை ஆற்றுமீன்; a kind of river fish (சா.அக.).

ம. கொய்ல; U.khowai.

[குய் → கொய்.]

கொய்கை *koigai*, பெ.(n.) 1. அறுவை; reap. 2. பறிக்கை; pluck. 3. மடிக்கை; plait.

[கொய் → கொய்கை. ஒ.நோ: செய் → செய்கை.]

கொய்கைமேனி *koygai-mēṉi*, ஒருவகைத் தென்னை; a species of coconut (சா.அக.).

[கொய்கை + மேனி.]

கொய்ச்சாளை *koy-c-cāḷai*, பெ.(n.) மீன்வகை (யாழ்.அக.); a kind of fish.

[குய் → கொய் + சாளை.]

கொய்சகம்¹ *koyšagam*, பெ.(n.) ஓரங்கொய்து சுருக்கப்பட்ட உடை; puckered or tucked-up ends of a cloth, as a woman's; ornamental pleating in a woman's dress hanging from the right hip. *'கொய்சக மருங்குறச் சேர்த்தி' (கம்பரா. தேரேறு. 6).*

[கொய்து → கொய்சு → கொய்சகம் (மடித்து உடுப்பது).]

கொய்சகம்² *koyšagam*, பெ.(n.) அணிவகை; an ornament. *"செருந்திப்பூ இரண்டும் கொய்சகம் இரண்டும் உளப்பட பொன் முப்பத்திரு கழஞ்செ காலும்"* (S.I.I.V.520:17).

[கொய்து → கொய்சு → கொய்சகம்.]

கொய்சுவனம் *koyšuvaṉam*, பெ.(n.) ***கொய்சகம்*** (கொ.வ.) பார்க்க; see *koyšagam.*

[கொய்சு → கொய்சுவனம்.]

கொய்துகூட்டு–தல் *koydu-kūṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) நெறிபிடித்துக் கட்டுதல்; to develop a swelling of lymph glands or nodes.

[கொய்து + கூட்டு–.]

கொய்ப்பசிரிக்கீரை *koy-p-paširi-k-kīrai*, பெ.(n.) நீருமரி (L.); sea side Indian saltwort.

[கொய்ப்பசிரி + கீரை.]

கொய்மீன் *koy-mīṉ*, பெ.(n.) மீன்வகை; a kind of fish. *"கொய்மீன் செப்பலி" (குருகூர்ப். 20).*

[கொய் + மீன்.]

கொய்யக்காரன் *koyya-k-kāraṉ*, பெ.(n.) தேங்காய், பனங்காய் போன்றவற்றைப் பறிப்பவன்; a person authorised to pluck coconuts, arecanuts etc.,

ம. கொய்யக்காரன்.

[கொய் + அ + காரன்.]

கொய்யகச்சட்டி *koyyaga-c-caṭṭi*, பெ.(n.) விளிம்பகன்ற சட்டிவகை (வின்.); a kind of earthen pot with brim.

[கொய்யகம் + சட்டி.]

கொய்யகம் *koyyagam*, பெ.(n.) 1. ***கொய்சகம்*** பார்க்க; see *koyšagam.* 2. மண்டபத்தில் அழகுபடுத்தி மேலே தொங்கவிடப்பட்ட ஆடை; ornamental folds of cloth used as hangings in a hall. *"பசும்பொ னுடுக்கை கொய்யக மீப்பட நாற்றினர்" (உபதேசகா. சிவபுண்ணிய. 62).*

[கொய் + அகம்.]

கொய்யடி *koy-y-aḍi*, பெ.(n.) ***கொய்யடிநாரை*** (வின்.) பார்க்க; see *koyyaḍi-nārai.*

[கொய் + அடி.]

கொய்யடிநாரை *koy-y-aḍi-nārai*, வண்டானம் என்ற நாரைவகை (திவா.); pelican ibis.

[கொய்யடி + நாரை.]

கொய்யல் *koyyal*, பெ.(n.) 1. சிறியது; that which is small. 2. சிறிய மரவகை; a tree of smaller size. *"கொங்கார் கோடலொடு கொய்யல்" (பெருங். உஞ்சைக். 51:51).*

[கொய் → கொய்யல்.]

கொய்யன்விளை *koyyaṉ-viḷai*, பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[குய்யன் (குயவன்) → கொய்யன் + விளை.]

கொய்யா[1] *koyyā*, பெ.(n.) மரவகை (பதார்த்த. 744.); guava tree.

[கொய்யல் (சிறியது) → கொய்யா.]

கொய்யா[2] *koyyā*, பெ.(n.) நெய்வார் கருவிவகை (யாழ்.அக.); a weaving instrument.

[குய்யல் → கொய்யல் → கொய்யா.]

கொய்யாக்கட்டை *koyyā-k-kaṭṭai*, பெ.(n.) 1. இடுக்கிச் சட்டம்; (C.E.M.); cleat. 2. அச்சின் மீது இரண்டருகுகளிலும் வண்டிச் சட்டத்தைத் தாங்கும்படி குறுக்காக வைக்கப்படும் கட்டைகள் (இ.வ.); wooden pieces placed on either side of the axle supporting the cart-frame. 3. சாளரக் கதவை மூடப் பயன்படும் சிறிய மரத்துண்டு; a piece of wood used to close the window door.

[கொய்யல் + கட்டை.]

கொய்யாக்கம் *koyyākkam*, பெ.(n.) யுனானி மருந்துக்குப் பயன்படும் ஒரு மரம்; *a tree useful in* preparing *unāṉi* medicine.

[கொய் → கொய்யாக்கம்.]

கொய்யாக்கயிறு *koyyā-k-kayiṟu*, பெ.(n.) நெசவுக் கருவிவகை; a weaving instrument.

[கொய்யல் → கொய்யா + கயிறு.]

கொய்யாக்குறிஞ்சி *koyyā-k-kuṟiñji*, பெ.(n.) குறிஞ்சிப் பண்; tunes peculiar to hilly tracts.

[கொய்யா + குறிஞ்சி.]

கொய்யான் *koyyāṉ*, பெ.(n.) 1. மண்ணாலான பரணி (யாழ்.அக.); earthen jar. 2. பருமலையையும் பாயின் நடுப்பகுதியையும் இணைக்கும் வளைவுக் கயிறு; a rope used to connect the sail and the mast of a vessel (மீன்பிடி. தொ.).

[கொய் → கொய்யான்.]

கொய்யின்கீரை *koyyiṉ-kīrai*, பெ.(n.) அறுகீரை (கொ.வ.). அறைக்கீரை; a pot herb, a kind of edible green.

மறுவ. கொய்கீரை.

[கொய்யல் → கொய்யின் + கீரை.]

கொய்யுளை *koy-y-uḷai*, பெ.(n.) 1. குதிரைப் பிடரிமயிர்; horse's mane. *"ஐயீ ராயிரங் கொய்யுளைப் புரவியும்" (சிலப். 26:134).* 2. குதிரை; horse. *"கொய்யுளை கொடிஞ்சி குஞ்சரம்" (ஞானா. 7:18).*

[கொய் + உளை – கொய்யுளை (வெட்டிய பிடரிமயிர்).]

கொய்யோ *koyyō*, பெ.(n.) இடை. (int.). வெற்றிக் குறிப்புச் சொல் (யாழ்.அக.); an exclamation of victory.

[கொல் → கொய் → கொய்யோ. ஒ.நோ:கொல்லோ.]

கொய்யோக்கூறல் *koiyō-k-kūṟal*, வெற்றிகூறல்; to exclaim victory.

[கொய்யோ + கூறல்.]

கொய்னானிகம் *koyṉ-āṉigam*, பெ.(n.) பண்ணைக் கீரை; cock's comb greens (சா.அக.).

[கொயின் + ஆனிகம்.]

கொயிர்சேறு *koyir-śēṟu*, பெ.(n.) கடலடிச்சேறு; mire in the bottom of the sea (மீன்பிடி.தொ.).

[கயில் - அடிப்பாகம்; கயில் → கொயில் → கொயிர் + சேறு.]

கொரக்கவலி *korakka-vali*, பெ.(n.) கைகால் கோணிக் கொண்டு போதல்; limbs to get disorder. 'யப்பா; இதென்ன இந்த விரலு இப்படிக் கொரக்களிச்சிட்டுப் போகுது' (நெல்லை).

[கொரக்கம் + வலி.]

கொரக்கவாடி *korakka-vāḍi*, பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kadalur Dt.

[கோரக்கன் → கொரக்கன் + (பாடி) வாடி.]

கொரக்களி *korakkaḷi*, பெ.(n.) குறும்பு; mischievousness. *'இந்தக் கொரக்களித்தனம்தானே வேண்டாங்கறேன்' (நெல்லை).*

[குரங்கு → குரக்கு → குரக்களி → கொரக்களி.]

கொரக்கன் *korakkaṉ*, பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish.

[குரக்கன் → கொரக்கன்.]

கொரக்கூடை *kora-k-kūḍai*, பெ.(n.) உப்பிட்ட மீனை நிரல்பட வைத்தற்குரிய மூங்கிற்கூடை; a basket made of bamboo which is used to keep the salted fish in order (மீ.பிடி.தொ.).

[குரக்கன் → கொர + கூடை.]

கொரக்கை *korakkai*, பெ.(n.) குறட்டை (நீலகேசி, 375, உரை); snoring.

க. கொருக்கு.

[குர் → கொர → கொரக்கை.]

கொரகா *koraga*, பெ.(n.) கருநாடக மாநிலம் தென் கன்னடத்தில் வாழும் சுமார் 4000 மக்கள் பேசும் திராவிட மொழி; a Dravidian language spoken in South Kannada District. (The Koraga language; Linguistic Survey of India Series, Poona, 1971).

[குரகர் → கொரகா.]

கொரட்டு *koraṭṭu*, பெ.(n.) வீட்டின் முற்றம்; the court-yard in a house.

[குறடு → குறுட்டு → கொரட்டு.]

கொரட்டூர் *koraṭṭūr*, பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvallur Dt.

[கரள் → கரட்டு → கொரட்டு + ஊர்.]

கொரடா *koraḍā*, பெ.(n.) குதிரைச்சவுக்கு; horse-whip, whip, scourge.

[குறடு → கொரடா.]

கொரண்டம் *koranḍam*, பெ.(n.) குறிஞ்சி; a thorny shurb growing in mountain (சா.அக.).

[குறிஞ்சி → குறஞ்சி → குறண்டம் → கொரண்டம்.]

கொரண்டி *koranḍi*, பெ.(n.) 1. முட்குறண்டி; thorny coranday. 2. கட்டாந்தரையில் முளைக்கும் ஒரு முட்செடி; a thorny shrub which grows on barren land (சா.அக.).

[குல் → குறு → குறண்டி → கொரண்டி.]

கொரணி *koraṇi*, பெ.(n.) காட்டு வரகு; wild *varagu* (millet) (சா.அக.).

[குறம் → குறணி → கொரணி.]

கொரப்பு *korappu*, பெ.(n.) கட்டட வேலைக்குப் பயன்படும் மரவகைகளுளொன்று; a kind of tree used for building works (கட். தொ.).

[குரப்பு → கொரப்பு.]

கொரம்பாடு-தல் *koram-pāḍu-*, 12 செ.குன்றாவி. (v.t.) இரக்கம் வருமாறு மன்றாடுதல்; a sincere merciful prayer. என்ன இழவு அவன் கொரம் பாடுதான் (நெல்லை.).

[கோரி → கோரம் → கொரம் + பாடு.]

குறைபாடுதல் என்பது நெல்லையில் கொரம்பாடுதல் எனவும் வடகொங்கு பகுதிகளில் கொரமாடுதல் எனவும் திரிந்து சொச்சை வழக்குகளாயின.

கொரல்குட்டை *koral-kuṭṭai*, பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[கொரலி → கொரல் + குட்டை.]

கொரலி *korali*, பெ.(n.) 1. தினை (M.M. 893.); Italian millet. 2. வெண்தினை (M.M. 894.); white Italian millet (சா.அக.).

மறுவ. குதிரைவாலி, கோராலி.

[குதிரைவாலி → கோராலி → கொரலி.]

கொரவந்தல் *korava-nandal*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[குறவன் → கொரவன் (கொ.வ.) + நந்தல்.]

கொரவை *koravai*, பெ.(n.) **குரவை** பார்க்க; see *kuravai*.

[குரவை → கொரவை.]

கொரளன்வயல் *koraḷan-vayal*, பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Pudukkottai Dt.

[கரள் → கரளன் → கொரளன் + வயல்.]

கொரளிவித்தை *koraḷi-vittai*, பெ.(n.) குட்டிச் சாத்தன்வழிச் செய்யும் ஒரு கலை; magical tricks aided by *kuṟaḷi* devil.

மறுவ. குறளிவித்தை.

[குறளி → கொரளி + வித்தை.]

கொரளூர் *koraḷūr*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கரள் → கொரள் + ஊர்.]

கொராங்கரி *korāṅgari*, பெ.(n.) மல்லிகை; jasmine (சா.அக.).

[கூரங்கலி → கொராங்கரி.]

கொராலி *korāli*, பெ.(n.) குட்டி ஈனாத ஆடு; *sheep not calved.*

[குறையாளி → கொறாளி → கொராலி (கொ.வ.).]

கொராலு *korālu*, பெ.(n.) ஆட்டின் வகை; a kind of goat.

[குறி(கம்பளியாடு) → குறால் → கொராலு.]

கொரி *kori*, பெ.(n.) கன்றின் வாய்ப்பூட்டு (இ.வ.); muzzle of a young calf.

[கொளி → கொலி → கொரி.]

கொரிக்கடி *kori-k-kaḍi*, பெ.(n.) எழுத்தாணிப்பூடு; a plant whose flower shoots up in the form of a style.

மறுவ. கொரிக்கம், கொரிக்கலம்.

[கூரி + செடி - கூரிச்சொடி → கொரிக்கடி.]

கொரிக்கியம் *korikkiyam*, பெ.(n.) கொழிஞ்சி; the orange tree.

மறுவ. கொமுஞ்சி.

[கொழிஞ்சி → கொரிக்கி → கொரிக்கியம்.]

பூவாது காய்க்கும் மரம்.

கொரிக்கும்பல் *korikkum-pal*, பெ.(n.) முன்பல்; incisor.

[கொரிக்கும் + பல்.]

கொரிகா *korigā*, பெ.(n.) கொடுக்காய்ப் புளி; Manilla tamarind.

[கொடுக்காய் → கொரிகா.]

கொரிகை *korigai*, பெ.(n.) ***கொரிக்கடி*** பார்க்க; see *kori-k-kaḍi*.

[கூரிச்செடி → கொரிகை.]

கொரித்தலை *kori-t-talai*, பெ.(n.) நிலவேம்பு; a medicinal plant.

[கொரி + தலை.]

கொரிந்தை *korindai*, பெ.(n.) 1. காட்டுத் கத்தரிச் செடி; hedge bringal sepiaria. 2. காட்டுக் கண்டங்கத்தரி; wild Indian (சா.அக.).

[கூரி → கொரி → கொரிந்தை.]

கொரிவி *korivi*, பெ.(n.) 1. கோரன்; a kind of shrub. 2. சுளுந்துக்கட்டை; torch for traveling made of dry sticks of the shrub *kōraṉ* (சா.அக.).

[கொளுவி → கொரிவி (கொ.வ.).]

கொரு *koru*, பெ.(n.) நகையுணர்வோடு குறை பேசுகை;redicule. கொருப்பேசுறதுலே ஒண்ணும் குறைச்சலில்லே (நெல்லை).

[குறை → கொரு (கொ.வ.).]

கொருக்கந்தாங்கல் *korukkan-tāṅgal*, பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[கோரக்கன் → கொருக்கன் + தாங்கல்.]

கொருக்கலப்பை *koru-k-kalappai*, பெ.(n.) மூன்று அல்லது நான்கு பற்கள் கொண்ட கலப்பை; a plough with three or four spikes.



கொருக்கலப்பை

[கூர் → கூரு → கொரு → கொரு + கலப்பை.]

ஒவ்வொரு பல்லும் 1 1/4 அல்லது 1 1/2 அடி இடைவெளி கொண்டது. இந்தக் கலப்பையை உழுது கொண்டு போகும் போதே, வித்துக் கொட்டாணிலிருந்து பல்லுகளுக்குப் போய்ச்சேரும் குழாய் வழியாக விதைகள் விழும் அமைப்புக் கொண்டது. மாடுகளால் இழுக்கப்படுவது (பல் = கலப்பையின் உழுகிற நுனி).

கொருக்கன்தண்டலம் *korukkaṉ-taṇḍalam*, பெ.(n.) திருவள்ளுவர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tiruvalluvar Dt.

[கோரக்கன் → கொருக்கன் + தண்டலம்.]

கொருக்காப்புளி *korukkā-p-puḷi*, பெ.(n.) ***கொடுக்காய்ப்புளி*** பார்க்க; see *koḍu-k-kāy-p-puḷi*.

[கொடுக்காய் (வளைந்த காய்) → கொருக்காய் + புளி.]

கொருக்கு *korukku*, பெ.(n.) ***கொறுக்கு*** (M.L.) பார்க்க; see *koṟukku*.

[கொறுக்கு → கொருக்கு.]

கொருக்கை[1] *korukkai*, பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish.

[குரக்கன் → கொரக்கன் → கொருக்கை.]

கொருக்கை[2] *korukkai*, பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kadalur Dt.

[கொருக்கு → கொருக்கை (புல் வகை).]

கொருக்கைத்தோட்டம் *korukkai-t-tōṭṭam*, பெ.(n.) தஞ்சை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tanjai Dt.

[கொருக்கை + தோட்டம்.]

கொருடன்[1] *koruḍaṉ*, பெ.(n.) கொவ்வைக் கொடி; hedge creeper.

[குருள் → கொருள் → கொருடன்.]

கொருடன்[2] *korudan*, பெ.(n.) 1. கோவைக்கொடி; a hedge creeper. 2. கொல்லன்கோவை; a climbing shrub. 3. ***காரை*** பார்க்க; see *kārai*

[கொருடன்¹ → கொருடன்.]

கொருணர்வாசம் *korunar-vāšam*, பெ.(n.) வெண்கருங்காலி; egg fruited ebony (சா.அக.).

[குருள் → கொருண் → கொருணர் + வாசம்.]

கொருவாய் *koruvāy*, பெ.(n.) பல் உடைந்து ஓட்டையாய் இருக்கை; row of teeth with one or more gaps. பானை விளிம்பு உடைந்து கொருவாயாய்ப் போகிறது (நெல்.வழ.).

[ஒருவு : விலகியிருத்தல், இடைவெளி.ஒருவு → கொருவு]

கொருவோடு *koru-v-ōdu*, பெ.(n.) தட்டோடு (சென்னை); flat tile.

[கொரு (இடைவெளி) + ஓடு]

கொல்[1]**(லு)-தல்** *kol(l)u-*, 3 செ.கு.வி. (v.i.) 1. அலட்டல்; to tease, importune, annoy, perplex. 2. அழித்தல்; to destroy, exterminate, annihilate (இரு. நூ.).

[குல் → கொல் → கொல்(லு)-தல்.]

கொல்[2]**(லு)-தல்** *kol(lu)-*, 8 செ.குன்றாவி. 1. உயிரைப் பறித்தல்; to kill, slay, murder. *"கொன்றன்ன வின்னா செயினும்"* (குறள். 109). 2. அழித்தல்; to destroy, ruin. *"கொன்றான்காண் புரமூன்றும்"* (திருவாச. 12:16). 3. பாழாக்குதல்; to fell, cut down. "மரங்கொஃ றச்சர்" (சிலப்.5:29). 5. கதிரறுத்தல்; to reap, as the heads of grain. *'நெற்கதிரைக் கொன்று களத்திற் குவித்து'* (தொல். பொருள். 76, உரை). 6. துன்பப்படுத்துதல்; to afflict, tease. *"நின்னலங் காட்டி யெம்மைக்கொன் றாயென"* (சீவக. 642). 7. இதளியம் முதலியவற்றின் நச்சுத் தன்மையைக் கெடுத்தல்; to neutralize metallic properties by oxidation. 8. அலட்டல்; to tease.

ம. கொல்லுக; க. கொல்லு, கொலு, கொல்; தெ.,குட.,பட. கொல்லு கோத. கொல்; து. க்வல்ப்; து. கொலெ (கொலை) பிரா. கில்லிங்க் (அடித்தல்).

Fin. kallita (to hammer steel): **Kare.** kallita; **Mordvin.** kalgodo; **Q.** killai. **Dāhri.** kāti-ise; **Magar.** gnāp; **Manipuri.** hato-o; **Angami Naga.** Du-khiawe; **Nāmsāng naga.** Ri-kvāto. **Ar.** katala; **Georgian.** wklav(kl); **Jap.** korosū, koroshi. **Basq.** criotu, criokatu; **E.** kill **Mod.** killen, cullen; **OHG.** chollen, **OE.** cwellan. **Semitic. Ar.** katala.

[குல் → கொல் → கொல்லு-தல்.]

kol, to kill. comp. Russian kolyu, to stab; and especially the English kill and quell (C.G.D.F.L.593).

கொல்[3] *kol*, பெ.(n.) 1. கொலைத்தொழில்; act of killing, murdering. *"கொல்லார் மழுவாட் படையாய்"* (*தேவா. 966:1.*). 2. வருத்தம் (சூடா.); affliction. 3. கொற்றொழில்; working in iron. 4. கொல்லன்; blacksmith. 5. பூட்டு (பிங்.); lock. 6. கதவு முதலியவற்றில் தைக்கும் இரும்பு முதலியவற்றா லாகிய பட்டை (இ.வ.); brass or iron bar nailed across a door or gate.

[குல் → கொல்.]

கொல்[4] *kol*, இடை.(int.) 1. ஐயப்பொருளில் வரும் ஒரு வியப்பிடைச்சொல் ; an affix implying doubt. *"யாதுகொன் மற்றிவ் வேந்தல் பணி"* (*பெருங். உஞ்சைக். 34:70*). 2. பெரும்பாலும் செய்யுளில் வரும் ஓர் அசைநிலை (நன். 435.); an expletive, chiefly in poetry.

Fin. ko (interrogative derivative); **Kare.** ko, go; **Est.** kas; **Jap.** ka; **Q.** cu (negative interrogative enclic).

[குல் → கொல்.]

கொல்[5] *kol*, பெ.(n.) 1. இரும்பு; iron. "*மின்வெள்ளி பொன் கொல்லெனச் சொல்லும்*" (*தக்கயாகப். 550*). 2. மாழை (உலோகம்) (நாமதீப.318); metal.

[கொல் : தட்டி வடிமைத்தல். கொல்¹ → கொல்⁵.]

கொல்[6] *kol*, பெ.(n.) ஒலிக்குறிப்புச் சொல்; onom.expression.

[குல் → கொல்.]

கொல்குறும்பு *kol-kurumbu*, பெ.(n.) பாலை நிலத்தூர் (கொல்லும் வேடர் நிறைந்த சிற்றூர்) (இறை.1:18.); village in a desert tract, as inhabited by murderous tribes of hunters.

[கொல் + குறும்பு]

கொல்சட்டம் *kol-cattam*, பெ.(n.) தேர்ச்சக்கரத் தின் வெளிப்பகுதிச் சட்ட அமைப்பு (கட்.தொ.); the outer frame part of a car wheel.

[கொல் + சட்டம்]

கொல்லங்கொண்டபாண்டியன் *kollan-konda-pāndiyan*, பெ.(n.) கி.பி. 1274இல் சேரநாட்டின்மீது

படையெடுத்த குலசேகரபாண்டியனின் மறுபெயர்; another name of *Kulaśēgara-Pāṇḍiyaṉ* since he conquered Kollam.

[கொல்லம் + கொண்ட + பாண்டியன்.]

கொல்லங்கொவ்வை *kollaṅ-kovvai*, பெ.(n.) கொடிவகை (பதார்த்த. 346.); a climbing shrub.

[கொல்லம் + கொவ்வை.]

கொல்லங்கோடு *kollaṅ-kōḍu*, பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[கொல்லன் + கோடு.]

கொல்லச்சேரி *kolla-c-cēri*, பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[கொல்லன் + சேரி.]

கொல்லச்சேவகன் *kolla-c-cēvagaṉ*, பெ.(n.) கருவூலத்தில் பணிபுரியும் நம்பிக்கையான வேலையாள்; a trustworthy employee in treasury.

[கொல்லம் + சேவகன்.]

கொல்லத்தங்குறிச்சி *kollattaṅ-kuṟicci*, பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kadalur Dt.

[கொல்லத்தன் + குறிச்சி.]

கொல்லப்பட்டறை *kolla-p-paṭṭaṟai*, பெ.(n.) கொல்லன் உலைக்கூடம்; blacksmith's workshop.

[கொல்லன் + பட்டறை.]

கொல்லப்பட்டி *kolla-p-paṭṭi*, பெ.(n.) திண்டுக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dhindukkal Dt.

[கொல்லன் + பட்டி.]

கொல்லப்பாக்கம் *kolla-p-pākkam*, பெ.(n.) ***கொல்லர்பாக்கம்*** பார்க்க; see *kollar-pākkam*.

[கொல்லர் + பாக்கம்.]

கொல்லம் *kollam*, பெ.(n.) 1. கடல் கொண்டதாகக் கருதும் தென்றமிழ் நாடுகளுள் ஒன்று; an ancient division of Tamil land believed to have been submerged under sea. "*குமரி கொல்ல முதலிய பன்மலை நாடும்*" (*சிலப். 8:1. உரை*). 2. சேர நாட்டிலுள்ள ஒரு கடற்கரைப் பட்டினம்; a town on the west-coast in Kerala. 3. ***கொல்லமாண்டு*** (T.A.S. IV. 9.) பார்க்க; see *kollam-āṇḍu*.

[கொல் - நீருற்று. கொல் → கொல்லம்.]

கொல்லம்பாகல் *kollam-bāgal*, பெ.(n.) ஒருவகைப் பாகல்; a kind of bitter-gourd.

[கொல்லம் + பாகல்.]

கொல்லமருது *kolla-marudu*, பெ.(n.) கருப்பு மருது; black marudhu (சா.அக.).

[கொல்லம் + மருது.]

கொல்லமா *kolla-mā*, பெ.(n.) 1. ***கொட்டை முந்திரி*** பார்க்க; see *koṭṭai-mundiri*. 2. ***ஆனைக் குரு*** (L.) பார்க்க; see *āṉai-k-kuru*.

ம. கொல்லமாவு.

[கொல்லம் + மா.]

கொல்லமாண்டு *kollam-āṇḍu*, பெ.(n.) கி.பி.824ஆம் ஆண்டு தொடங்கித் தென்தமிழ் நாட்டிலும் கேரளத்திலும் வழங்கும் ஆண்டுமானக் கணக்கு; Kollam era which commenced in 824 A.D.

ம. கொல்லம்.

[கொல்லம் + ஆண்டு.]

கொல்லமிளகு *kolla-miḷagu*, பெ.(n.) 1. மேற்கத்தி மிளகாய்; chilly from the west coast. 2. கொல்லத்தில் விளையும் மிளகு; pepper grown in Kollam (சா.அக.).

ம. கொல்லமுளகு.

[கொல்லம் + மிளகு.]

கொல்லர் *kollar*, பெ.(n.) அரண்மனை வாயில் காப்போர்; watchmen at the entrance-gate of a palace. "*கொல்லரெனை யாரென்றா ரப்பாநான் வித்துவா னென்று சொன்னேன்*" (*விறலிவிடு. 1035*).

ம. கொல்லர்.

[கொல் - இடுப்பு, படைக்கலன்; கொல் → கொல்லர்.]

கொல்லர்பாக்கம் *kollar-pākkam*, பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு ஊர்; a village situated in Kanjipuram Dt.

[கொல்லர் + பாக்கம்.]

கொல்லுத்தொழில் செய்வோர் பெரும்பான்மையினராக வாழ்ந்தமையால் இப் பெயர் அமைந்ததாகலாம்.

கொல்லலகுப்பம் *kollala-kuppam*, பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village Tiruvallur Dt.

[கோவாளர் (ஆயர்) > தெ. கொல்லலு + குப்பம். கொல்லலுகுப்பம் →கொல்லலகுப்பம் (ஆயர் குப்பம்).]

கொல்லற்றுக்காரன் *kollaṟṟu-k-kāraṉ,* பெ.(n.) கொத்தன் (C.E.M.); brick-layer, mason.

[கொல் → கொலுவு → கொலுத்துக்காரன் → கொல்லத்துக்காரன் → கொல்லற்றுக்காரன்.]

கொல்லற்றுவேலை *kollaṟṟu-vēlai,* பெ.(n.) கொத்துவேலை; masonry.

[கொல்லற்று + வேலை – கொல்லற்றுவேலை.]

கொல்லறு *kollaṟu,* பெ.(n.) கொத்தன் கரண்டி (C.E.M.); mason's trowel.

மறுவ. கொல்லுறு.

[கொல் - கொத்துதல்; கொல்லுறு → கொல்லறு.]

கொல்லன்[1] *kollaṉ,* பெ.(n.) 1. கருமான்; blacksmith. *"மென்றோன் மிதியுலைக் கொல்லன்" (பெரும்பாண். 207).* கொல்லன் தெருவிலே ஊசி விற்கிறதா? (பழ). 2. தச்சன்; carpenter. 3. கம்மியன்; blacksmith (மு.தா. 213). கொல்லத் தெருவில் ஊசி விற்றாற் போல (பழ.)

ம. கொல்லன்; **பட.** கொல்ல; **கோத.** கொலெல்; **துட.** க்வலல்; **குட.** கொல்லெ.

[கொல் → கொல்லன்.]

கொல்லன்[2] *kollaṉ,* பெ.(n.) கருவூலக்காரன் (P.T.L.); custodian of treasury (மு.தா. 213).

தெ. கொல்லர்.

[கொல் → கொல்லன்.]

கொல்லன்ஏந்தல் *kollaṉ-ēndal,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanadhapuram Dt.

[கொல்லன் + ஏந்தல் (ஏரி).]

கொல்லன்கிட்டம் *kollaṉ-kiṭṭam,* பெ.(n.) இருப்புக்கிட்டம்; iron dross (சா.அக.).

[கொல்லன் + கிட்டம்.]

கொல்லன்குதம்பை *kollaṉ-kudambai,* பெ.(n.) பலாமி; an unknown plant (சா.அக.).

[கொல்லன் + குதம்பை.]

கொல்லன்குளம் *kollaṉ-kuḷam,* பெ.(n.) மதுரை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Madurai Dt.

[கொல்லன் + குளம்.]

கொல்லன்கூதகம் *kollaṉ-kūdagam,* பெ.(n.) பல்லிப்பூடு; lizard plant.

[கொல்லன் + கூதகம்.]

கொல்லன்கோவை *kollaṉ-kōvai,* பெ.(n.) 1. ***கொல்லங்கொவ்வை*** பார்க்க; see *kollaṅ-kovvai.* 2. ***காக்கணம்*** பார்க்க; see *kākkaṇam* (மு.தா. 213).

[கொல்லன் + கோவை.]

கொல்லன்சேரி *kollaṉ-cēri,* பெ.(n.) ***கொல்லர் பாக்கம்*** பார்க்க; see *kollar-pākkam.*

[கொல்லன் + சேரி.]

கொல்லன்பகை *kollaṉ-pagai,* பெ.(n.) அஞ்சன வைப்புநஞ்சு (மூ.அக.); a mineral poison.

[கொல்லன் + பகை.]

கொல்லன்பட்டடை *kollaṉ-paṭṭaḍai,* பெ.(n.) அடைகல் (C.G.); anvil.

[கொல்லன் + பட்டடை.]

கொல்லன்பட்டரை *kollaṉ-paṭṭarai,* பெ.(n.) ***கொல்லன்பட்டறை*** பார்க்க; see *kollaṉ-paṭṭaṟai.*

[கொல்லன் + பட்டறை.]

கொல்லன்பட்டறை *kollaṉ-paṭṭaṟai,* பெ.(n.) கொல்லன் உலைக்களம்; smithy.

மறுவ. கொல்லனுலை.

[கொல்லன் + (பட்டடை) பட்டறை. பட்டடை உள்ள இடம்.]

கொல்லன்விளை *kollaṉ-viḷai,* பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[கொல்லன் + விளை.]

கொல்லனுலை *kollāṉulai,* பெ.(n.) கொல்லனின் உலைக்களம்; blacksmith's worshop, smithy.

[கொல்லன் + உலை.]

கொல்லா *kollā,* பெ.(n.) கருவூலத்திற் பணியாற்றும் நம்பிக்கையான வேலையாள் (இ.வ.); a trust-worthy employee in public treasuries.

ம. கொல்லர்; **தெ.** கொல்லா.

[கொல்லன்[2] → கொல்லா (கொ.வ.).]

கொல்லாக்கொலை *kollā-k-kolai,* பெ.(n.) வதைத்தல் (இ.வ.); torture.

ம. கொல்லாக்கொல.

[கொல் + ஆ + கொலை. ஆ - எதிர்மறை இடைநிலை.]

கொல்லாகிகம் *kollāgigam*, பெ.(n.) செம்முள்ளி; yellow nail dye (சா.அக.).

[கொல்லங்கோவை → கொல்லங்கோகி → கொல்லலாகிகம் (கொ.வ.).]

கொல்லாநோன்பியர் *kollā-nōṉbiyar*, பெ.(n.) 1. கொல்லாமையை நோன்பாக உடையவர்; those who have vowed to abstain from killing. "கொல்லா விரதியர் நேர்நின்ற முக்கட் குருமணியே" (தாயு.பாயப்புலி நூல், 22). 2. சமணர்; Jains.

[கொல்லா + நோன்பியர்.]

கொல்லாநோன்பு *kollā-nōṉbu*, பெ.(n.) உயிர் களைக் கொல்லாமையாகிய வொழுக்கம்; vow of abstaining from killing. "கொல்லா விரதங் குவலயமெல் லாம்ஓங்க" (தாயு.பராபர.54.).

[கொல்லா + நோன்பு.]

கொல்லாப்பண்டி *kollā-p-paṇḍi*, பெ.(n.) உயர் நிலையிலுள்ளோர் ஏறிச்செல்லும் பண்டைக் காலத்துத் தேர்; a car like vehicle drawn by bullocks, used in ancient times by persons of rank.

[கொல்லி (வளைந்த மேற்கூண்டு) கொல்லா + பண்டி (வண்டி, தேர்).]

கொல்லாமறை *kollā-maṟai*, பெ.(n.) கொல்லா மையை வற்புறுத்தும் சமண மதநூல் (வின்.); Jain scriptures, as enjoining abstinence from killing.

[கொல் + ஆ + மறை.]

கொல்லாமை *kollāmai*, பெ.(n.) உயிர்க்கொலை செய்யாமை (குறள். அதி.26); abstinence from killing, as a virtue.

[கொல் + ஆ + மை.]

கொல்லாவண்டி *kollā-vaṇḍi*, பெ.(n.) ***கொல்லாப்பண்டி*** பார்க்க; see *kollā-p-paṇḍi*. 'உருவுதிரையையுடைய கொல்லா வண்டி' (சீவக. 858, உரை.).

[கொல்லி (வளைந்தமேற்கூண்டு) → கொல்லா + வண்டி.]

கொல்லாவேதம் *kollā-vēdam*, பெ.(n.) ***கொல்லாமறை*** பார்க்க; see *kollā-maṟai*.

[கொல் + ஆ + வேதம்.]

கொல்லாவேதன் *kollā-vēdaṉ*, பெ.(n.) கொல்லாவேதத்தை அருளிச் செய்தவனாகிய அருகன் (சூடா); Arhat, as the author of *kollā vēdam*.

[கொல் + ஆ + வேதன்.]

கொல்லி[1] *kolli*, பெ.(n.) 1. நெருப்பு; fire. 2. ஆட் கொல்லி; gold. 3. உயிரைக் கொல்லும் பூடு; plant which kills an animal. 4. செய்நஞ்சு; poison. 5. கொல்லும் தன்மையது; anything of a destructive nature. 6. மொழியிறுதியில் பல பூண்டின் பெயர்களைக் குறிக்கும் சொல்; a second term, it occurs in the names of different plants (சா.அக.).

[கொல் → கொல்லி.]

கொல்லி[2] *kolli*, பெ.(n.) 1. கொல்லு–பவன்–பவள்–வது; that which kills. *"சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி" (குறள். 306).* 2. கொல்லிப் பாவை; killing figure of a lady by her beauty.

[கொல் → கொல்லி (வினையாலணையும் பெயர்).]

கொல்லி[3] *kolli*, பெ.(n.) நீரூற்று; fountain.

[குல் → கொல் → கொல்லி.]

கொல்லி[4] *kolli*, பெ.(n.) வளைவு; curve, bend.

[குல் → கொல் → கொல்லி.]

கொல்லி[5] *kolli*, பெ.(n.) 1. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஒரு மலை; range of hills in Tiruciráppaḷḷi Dt. *"கொல்லி யாண்ட வல்வி லோரியும்" (புறநா. 58:5).* 2. மருதயாழ்த் திறவகை (பிங்.); an ancient secondary melody-type of the marudam class. 3. ***கொல்லிப்பாவை*** பார்க்க; see *kolli-p-pāvai*. ***"வகையமை கொல்லியின் வசையறத் துடைத்து" (பெருங். இலாவாண. 4:185)***

[கொல் → கொல்லி.]

கொல்லி[6] *kolli*, பெ.(n.) 1. மலையிடுக்கு, பள்ளத்தாக்கு; a gorge, dale, valley. 2. மூலை; nook, corner, a torraten corner. 3. வேளாளர் பாடும் ஒருவகை இசை; a kind of melody sung by farmers.

ம. கொல்லி; **க.** கொல்லி (மூலை, வளைவு); **குட.** கொல்லி, **து.** கொல்லி (பாறையில் வளைந்து செல்லும் ஓடை).

[குல் (வளைவு) → கொல் → கொல்லி.]

கொல்லிக்கிழங்கு *kolli-k-kiḻaṅgu*, பெ.(n.) கலப்பைக் கிழங்கு; plough root (சா.அக.).

மறுவ. காந்தட்கிழங்கு, கார்த்திகைக் கிழங்கு.

[கொல்லி (வளைவு) + கிழங்கு.]

இதனைச் சாப்பிட்டால் உயிரைக் கொல்லும். இதனால் இப்பெயர் பெற்றது.

கொல்லிக்கூற்றம் *kolli-k-kūṟṟam,* பெ.(n.) ***கொல்லிமலை*** பார்க்க; see *kolli-malai.*

[கொல்லி + கூற்றம்.]

கொல்லிக் கெளவாணம் *kolli-k-kauvāṇam,* பெ.(n.) முற்காலத்து வழங்கிய ஒருவகைச் சிறுபண் (திவா.); an ancient secondary melody-type.

[கொல்லி + கெளவாணம்.]

கொல்லிகம் *kolligam,* பெ.(n.) ***ஆற்று முள்ளங்கி*** பார்க்க; see *āṟṟu-muḷḷaṅgi.*

[கொல்லி → கொல்லிகம்.]

கொல்லிச்சி *kollicci,* பெ.(n.) கொல்லர்குடிப் பெண் (யாழ்.அக.); woman of the blacksmith caste.

[கொல்லி → கொல்லித்தி → கொல்லிச்சி.]

கொல்லிச்சிலம்பன் *kolli-c-cilambaṉ,* பெ.(n.) கொல்லிமலைத் தலைவனாகிய சேரன் (திவா.); lit. lord of the Kolli hills, Cēra King.

[கொல்லி + சிலம்பன்.]

கொல்லிட்டுப்போ—தல் *kolliṭṭu-p-pō-,*8 செ.கு.வி. (v.i.) ஒலியடங்குதல் (இ.வ.); to be struck dumb; to be calm and silent.

[கொல் (வளைவு, சாய்வு, அடக்கம்) + இட்டு + போ—.]

கொல்லித்திறம் *kolli-t-tiṟam,* பெ.(n.) முற்காலத்து வழங்கிய பண்வகை; an ancient secondary melody-type.

[கொல்லி + திறம்.]

கொல்லுப்பணி *kollu-p-paṇi,* பெ.(n.) கொல்லுத் தொழில் ; the job of blacksmith.

ம. கொல்லுப்பணி.

[கொல் → கொல்லு + பணி.]

கொல்லிப்பாவை *kolli-p-pāvai,* பெ.(n.) கொல்லி மலையில் தேவரால் நிறுவப்பட்டு நோக்குவோரைத் தன்வயப்படுத்தும் அணங்கு (மோகினி)ப் படிமம் (சிலப். 6: 61, உரை); woman-shaped statue in the Kolli-hills believed to have been carved by the celestials and to have the power of fascinating all those who look at it.

[கொல்லி + பாவை.]

கொல்லிமலை *kolli-malai,* பெ.(n.) சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்திலுள்ள குன்றுத்தொடரில் அமைந்துள்ள ஓர் ஊர்; a village situated at hills in Salem Dt. *"கொத்தீட் டியபுதுப் பூத்தேனும் ஊறும் குறிஞ்சியின் தேன்வைத் தீட்டிய கொல்லி மாமலை யுங்கொங்கு மண்டலமே" (கொங்கு மண்டல சதகம்).*

[கொல்லி (நீரூற்று) + மலை.]

கொல்லிமலைக்கிச்சிலி *kolli-malai-k-kiccili,* பெ.(n.) கொல்லிமலையின்மேல் விளையும் கிச்சிலிப்பழம்; orange (சா.அக.).

[கொல்லி + மலை + கிச்சிலி.]

கொல்லிமழவன் *kolli-maḻavaṉ,* பெ.(n.) கொல்லி மலையை யாண்ட அரசருள் ஒருவர்; name of a king who ruled th hill Kollimalai.

[கொல்லி + மழவன்.]

கொல்லியங்குணம் *kolliyaṅ-guṇam,* பெ.(n.) தென்னார்க்காட்டு மாவட்டம் திண்டிவனம் வட்டம் மயிலத்திற்குப் பக்கத்தில் அமைந்துள்ள ஓர் ஊர்; a village situated near Mayilam at Tindivanam taluk in Villupuram Dt.

[கொல்லி + அம் + குணம்.]

மயிலை மலைக்குரிய மறுவடிவப் பெயரான கொல்லியங் குன்றம் என்பதே நாளடைவில் கொல்லியங் குணம் என வழங்குவதாயிற்று.

கொல்லிருப்பு *kolliruppu,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kadalur Dt.

[கொல்லன் + இருப்பு - கொல்லனிருப்பு → கொல்லிருப்பு.]

கொல்லிவராடி *kolli-varāḍi,* பெ.(n.) பாலையாழ்த்திற வகை (பிங்.); an ancient secondary melody-type of the *Pālai class.*

[கொல்லி + (வராளி) வராடி.]

கொல்லிவாள் *kolli-vāḷ,* பெ.(n.) தேய்ந்த வாள்; wornout and hence useless sword.

ம. கொல்லிவாள்.

[கொல்லி (வளைவு. மழுக்கம்) + வாள்.]

கொல்லிவெற்பன் *kolli-veṟpaṉ,* பெ.(n.) ***கொல்லிச்சிலம்பன்*** (சூடா.) பார்க்க; see *kolli-c-cilambaṉ.*

[கொல்லி + வெற்பன்.]

கொல்லுக்கொலை *kollu-k-kolai,* பெ.(n.) கொடுங்கொலை; reduplication of கொலை; brutal murder. அவன் கொல்லுக் கொலைக்கு அஞ்சாதவன் (கொ.வ.).

[கொல்லு + கொலை.]

கொல்லுத்தடி *kollu-t-tadi,* பெ.(n.) கதவுச்சட்டம்; door frame (கட். தொ.).

[கொல்லு + தடி.]

கொல்லுத்தடியாணி *kollu-t-tadi-y-āṇi,* பெ.(n.) கதவில் தைக்கும் ஆணிவகை (வின்.); large nail for studding doors or gates to add to their strength.

[கொல்லு + தடி + ஆணி.]

கொல்லுத்தொழில் *kollu-t-toḻil,* பெ.(n.) ***கொல்லுப்பணி*** பார்க்க; see *kollu-p-paṇi.*

ம. கொல்லிவாள்.

[கொல்லு + தொழில்.]

கொல்லுப்பட்டறை *kollu-p-paṭṭaṟai,* பெ.(n.) ***கொல்லன்பட்டறை*** பார்க்க; see *kollaṉ-paṭṭaṟai.*

[கொல்லு + பட்டறை.]

கொல்லுப்பணி *kollu-p-paṇi,* பெ.(n.) இரும்புக் கருவிகள் செய்யும் தொழில்; the work of a black smith.

[கொல் : அடித்தல். சம்மட்டியால் அடித்தல். கொல் → கொல்லு கொல்லு + பணி.]

கொல்லுப்பலகை *kollu-p-palagai,* பெ.(n.) மண் தாங்கிப் பலகை; a board which supports the wall over a door, window (கட்.தொ.).

[கொல்லு + பலகை.]

கொல்லுமருந்து *kollu-marundu,* பெ.(n.) உயிரைக் கொல்லும் மருந்து; medicinal agents causing death (சா.அக.).

[கொல்லும் + மருந்து.]

கொல்லுமூலி *kollu-mūli,* பெ.(n.) உயிரைக் கொல்லும் மூலிகை; any herb capable of causing death (சா.அக.).

[கொல்லும் + மூலி.]

கொல்லுலை *kol-l-ulai,* பெ.(n.) கொல்லனுலை; black-smith's forge. *"கொல்லுலைக் கூடத்தி னால்" (குமர. பிர. நீதிநெறி. 14).*

[கொல் + உலை.]

கொல்லூர் *kollūr,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt

[கொல் (புதிய) + ஊர்.]

கொல்லெனல் *kol-l-eṉal,* பெ.(n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு (பிங்.); an imitative sound. 2. ஒலி யடங்குதல் குறிப்பு (இ.வ.); expr. denoting perfect calm.

[கொல் + எனல்.]

உல் → உலம்பு. உலம்புதல் : அலப்புதல். உலம்பு → அலம்பு. அலம்புதல் : ஒலித்தல். உல் → ஒல் (ஒல்லெனல்) : ஒலிக்குறிப்பு ஒல் → ஒலி. உல் → ஒல் : ஒலி, தாலாட்டு. ஒலாட்டு : தாலாட்டு. ஒல் → ஒலம் : ஒலி, ஓசை, கூவிளி உல் → குல் → குலை → குரை : ஒலி, ஆரவாரம். "நுரைத்தலைக் குரைப்புனல்" (பொருந. 240). "குவவுக் குரையிருக்கை" (பதிற்றுப். 84: 20). குல் → கொல் (கொல்லெனல்) : ஒலிக் குறிப்பு.

கொல்லேறுகோடல் *kollēṟu-kōḍal,* பெ.(n.) ஏறு தழுவல்; capture of the bull at large as a proof of bravery, by a man seeking in marriage the hand of a woman, a custom among herdsmen in ancient times.

மறுவ. ஏறுகோள், ஏறுதழுவல், மஞ்சு விரட்டு,

கொல்லேறு கோடல்

சல்லிக்கட்டு.

[கொல்லேறு + கோடல்.]

பண்டைக் காலத்தில் முல்லை நிலத்திலிருந்த ஆயரிடை, ஏறு தழுவி மணப்பதே குலமரபாக இருந்து வந்தது. ஓர் ஆயர்பாடியில் அல்லது சேரியில், ஒரு பெண் குழந்தை பிறந்தவுடன் அதன் பெயருக்கு ஒரு சேங்கன்றைப் பெற்றோர் ஒதுக்கிவைப்பர். அக் கன்றைக் காயடியாமலும், வேலையில் வயக்காமலும், கொழுத்த ஊட்டங் கொடுத்துக் கொம்பு சீவிக் கூராக்குவர். ஆண்டுதோறும், குறித்த நன்னாளில், மணப்பருவமடைந்த மங்கையர்க்குரிய காளைகளையெல்லாம் ஒரு தொழுவத்தில் அடைத்து வைத்து, ஒவ்வொன்றாகத் திறந்து விடுவர். மக்கள் ஆரவாரத்தையும் ஏறுகோட்பறை முழக்கத்தையும் கண்டும் கேட்டும், மருண்டோடும். ஒவ்வொரு கொல்லேற்றையும், மாணியரான ஆய இளைஞர் பிடித்து

அடக்கி முயல்வர். பலர் கொல்லேறுகளால் குத்திக் கொல்லப் படுவது முண்டு. ஒரு கொல்லேற்றை எவன் பிடித்தடக்கி நிறுத்துகின்றானோ அவன் அவ் ஏற்றிற்குரிய ஆய மகளை மணப்பான். இம் மணமுறை, கலித்தொகை என்னும் சங்க நூலில், முல்லைக் கலியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. வட நாட்டிற் கண்ணன் ஏழ் ஏறுதழுவி நப்பின்னையை மணந்தது இத் தமிழ் மரபே.

ஏறு தழுவல் என்னும் பண்டை வழக்கமே, இன்று கள்ளர் மறவரிடைச் 'சல்லிக்கட்டு' என்றும் ' மஞ்சுவிரட்டு' என்றும் வழங்கி வருகின்றது [தமிழர் திருமணம் பக்.19,20].

கொல்லை[1] *kollai*, பெ.(n.) 1. முல்லைநிலம்; sylvan tract. *"கொல்லை பயின்று வல்லை யோங்கிய" (பெருங். உஞ்சைக். 49:110).* 2. புன்செய் நிலம் (திவா.); dry land. 3. புறம்போக்கு (தரிசு) (அகநா. 89, உரை); uncultivated land. 4. தோட்டம் (கொ.வ.); enclosed garden, grove. 5. புழைக்கடை; backyard, open space behind and attached to a house. 6. மலங்கழிக்குமிடம்; latrine. 7. மலம்; stool. குழந்தைக்குக் கொல்லை எப்படிப் போகிறது? (இ.வ.).

மறுவ. புறக்கடை, பூந்தோட்டம், புழக்கடை, கொல்லை நிலம்.

[குல் → கொல் → கொல்லை.]

கொல்லை[2] *kollai*, பெ.(n.) வரம்பு கடந்து ஒழுகுபவ-ன்-ள்; one who transgresses conventional bounds. *"கொல்லை யென்பர்கொலோ குணமிக்கன ளென்பர்கொலோ" (திவ். திருவாய். 6:7:4).*

[குல் → கொல் → கொல்லை.]

கொல்லை[3] *kollai*, பெ.(n.) திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டத்திலுள்ள பல்லக் கொல்லை என்னும் ஊரின் முன்னாட்பெயர்; old name of the village Pallakkollai in Tiruvannamalai Dt.

[கொல் → கொல்லை.]

கொல்லைக்காடு *kollai-k-kāḍu*, பெ.(n.) புறம்போக்கு நிலம்; uncultivated land. சூதன் கொல்லையிலே மாடு மேயும் (பழ). கொல்லைக் காட்டு நரி பல்லைக் காட்டினதுபோல (பழ).

[கொல்லை + காடு.]

கொல்லைக்காரன் *kollai-k-kāraṉ*, பெ.(n.) 1. தோட்டம் வயல் முதலியவற்றில் வேலை செய்பவன் (பஞ்சதந்.); gardener, farmer, cultivator. 2. குப்பையெடுப்பவன் (உ.வ.); scavenger.

[கொல்லை + காரன்.]

கொல்லைக்கிருத்தல் *kollaikkiruttal*, பெ.(n.) ***கொல்லைக்குப்போ-தல்*** பார்க்க; see *kollaikku-p-pō-*.

[கொல்லைக்கு + இருத்தல்.]

கொல்லைக்கீரை *kollai-k-kīrai*, பெ.(n.) 1. ***குப்பைக் கீரை*** பார்க்க; see *kuppai-k-kīrai*. 2. கொல்லையில் விளையும் கீரை; greens grown in backyard of houses (சா.அக.).

[கொல்லை + கீரை.]

கொல்லைக்குப்பல்லி *kollaikku-p-palli*, பெ.(n.) ***கொல்லைப்பல்லி*** பார்க்க; see *kollai-p-palli* (சா.அக.).

[கொல்லைக்கு + பல்லி.]

கொல்லைக்குப்போ-தல் *kollaikku-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) 1. மலங்கழித்தல்; lit., to go to backyard. 2. கொல்லைப்புறஞ் செல்லுதல்; to go to stool. குழந்தை கொல்லைக்குப் போய்விட்டது (உ.வ.).

மறுவ. கொல்லைப்புறஞ் செல்லுதல், கொல்லைக் கிருத்தல்.

[கொல்லை + கு + போ-.]

கொல்லைக்கோவை *kollai-k-kōvai*, பெ.(n.) ***கொல்லன்கோவை*** பார்க்க; see *kollaṉ-kōvai* (சா.அக.).

[கொல்லை → கொல்லன் + கோவை.]

கொல்லைத்தறை *kollai-t-taṟai*, பெ.(n.) புதர்கள் நிறைந்த மேட்டுநிலம்; highland waste. *"இந்நாற் பேர் எல்லைக்கு நடுவுபட்ட கொல்லைத்தறை காடுவெட்டிக் கட்டை பறித்து மேடும் பள்ளமும் திருத்தி நீர் நிலமாக" (SII. VII. 97-13 p.40).*

[கொல்லை + (தரை) தறை.]

கொல்லைப்பயறு *kollai-p-payaṟu*, பெ.(n.) காட்டுக்கொள், வயற்பயறு (M.M. 329.); wild horse-gram, a climber.

[கொல்லை + பயறு.]

கொல்லைப்பயிர் *kollai-p-payir*, பெ.(n.) கொள், மொச்சை முதலிய மேட்டுநிலப் புன்செய்ப் பயிர்; grains of dryland such as gram, country bean etc. (சா.அக.).

[கொல்லை + பயறு.]

கொல்லைப்பல்லி *kollai-p-palli*, பெ.(n.) குடியோட்டிப் பூடு; lizard plant (சா.அக.).

மறுவ. நின்றிடத் தீய்ஞ்சான்.

[கொல்லை + பல்லி.]

[இது மந்திரவித்தை செய்யப் பயன்படும் மூலிகை என்பர்.]

கொல்லைப்புறம் *kollai-p-puṟam,* பெ.(n.) ***கொல்லை***[1] பார்க்க; see *kollai.*

[கொல்லை + புறம்.]

கொல்லைப்புறவழி *kollai-p-puṟa-vaḻi,* பெ.(n.) நேர்மையற்ற வழி; unfair means; back door.

[கொல்லை + புறம் + வழி.]

கொல்லைப் பொன்வரி *kollai-p-pon-vari,* பெ.(n.) பொன்வேலை செய்யும் தொழில்வழிக் கிடைக்கும் வருவாய்; revenue through goldsmith. "நரசிங்கராயபுரத்தில் வாசல்வழி தறிக்கடமை நெற்கடமையிலும் கொல்லை பொன்வரியிலும் சந்தை மகிமை குத்தகையிலும் இந்த ஊரை நோக்கி வரும் சகல ஆதாயத்திலும்" (திருப்.கல்.தொ.2, கல்.133–11).

[கொல்லை + பொன் + வரி.]

கொல்லைமுதிரை *kollai-mudirai,* பெ.(n.) கோதுமை; wheat (சா.அக.).

[கொல்லை + முதிரை.]

கொல்லைமை[1] *kollai-mai,* பெ.(n.) 1. கொல்லைப் பல்லிப்பூண்டைக் கொண்டு செய்யும் ஒரு மந்திர வித்தை மை; a magic done with an herbal ointment. 2. ***கொல்லைப் பல்லி*** பார்க்க; see *kollai-p-palli* (சா.அக.).

[கொல்லை + மை.]

கொல்லைமை[2] *kollai-mai,* பெ.(n.) வரம்பழிந்து ஒழுகுகை; act of transgressing or violating conventional bounds. *"ஆய்ச்சியர் தம்மொடுங் கொல்லைமை செய்து" (திவ்.திருவாய்.4:2:2).*

[கொல்லை + மை.]

கொல்லைவிளைவி–த்தல் *kollai-viḷaivi-,* பி.வி. (caus.v.) தோட்டம் பயிரிடுதல் (யாழ்ப்.); to cultivate a garden.

[கொல்லை + விளைவி–.]

கொல்லைவெளி *kollai-veḷi,* பெ.(n.) வயல்வெளி (இ.வ.); open uncultivated plots.

[கொல்லை + வெளி.]

கொல்வாத்துவிக்கி *kolvāttu-vikki,* பெ.(n.) ***ஆனைவணங்கி*** பார்க்க; see *āṉai-vaṇaṅgi.*

[கொல் + (வாட்டு) வாத்து + விக்கி.]

கொலரி *kolari,* பெ.(n.) சீரில்லாமல் விட்டுவிட்டு அடிக்கும் காற்று; disrupted flow of air.

[கொலரி + காத்து (கொ.வ.) அரி = காற்று.]

கொலாமி *kolāmi,* பெ.(n.) திருந்தாத் திராவிட மொழிகளுள் ஒன்று; one of the uncultivated languages of Dravidian family.

[குலம் → குலமி → கொலாமி.]

கொலிப்பூடு *koli-p-pūḍu,* பெ.(n.) 1. கொல்லிப் பூடு; any plant causing death. 2. ***கோலி*** பார்க்க; see *kōli.* 3. மயிர்; hair. 4. இலந்தை; jujuba. 5. உடும்பு; guana. 6. திப்பிலி; long-pepper. 7. பன்றிக்கிழங்கு; pig-root. 8. சிற்றழிஞ்சில்; acute-leaved privet. 9. புங்கன்; elliptic-leaved privet (சா.அக.).

[கொல்லி + பூடு.]

கொலு[1] *kolu,* பெ.(n.) சித்திரமூலம்; Ceylon leadwort (சா.அக.).

[கொல் → கொலு.]

கொலு[2] *kolu,* பெ.(n.) 1. ஒலக்க இருப்பு; royal presence, durbar, sitting-in-state; presence of the deity in a temple. *"இருந்திடுங் கொலுவில்" (மச்சபு. நைமிசா. 5).* 2. ஒன்பது நாள் நிகழும் (ஒன்பானிரா) கலை விழாவில் பொம்மை முதலியவற்றை அழகுடன் அமைத்தல்; decorations in a Hindu house at the time of the Navarathiri festival.

ம. கொலுச்சு; **க.** கொலசு, கொணசு, **தெ.,** **பட.** கொலுசு; **து.** கொணசு, கணசு.

[கோலு → கொலு.]

கொலுக்கூடம் *kolu-k-kūḍam,* பெ.(n.) இறைவன் அல்லது மன்னன் வீற்றிருக்கும் மண்டபம்; presence chamber, as of a deity or king. *"உயர்கொலு மண்டபத் திடையோ" (சிவரக. விசையை. 13).*

[கோலு → கொலு + கூடம்.]

கொலுசு *kolušu,* பெ.(n.) தங்கம், வெள்ளி ஆகிய மாழைகளால் செய்யப்பட்டுக் காலில் அணியும் மகளிர்அணிவகைகளுளொன்று; a kind of ornament made by metals worn around the ankle.

Fin. koliya (chain of gold or silver), kolikko (coin); **Livonian.** kol (ferrule); **Q.** qulgi (silver, coin).

[கோலு → கொலு → கொலுசு.]

கொலுப்பலகை *kolu-p-palagai,* பெ.(n.) 1. மண்தாங்கிப்பலகை; a board which supports the wall over a door, window (கட்.தொ.). 2. கதவில் அழகிற்கு அமைக்கப்படும் சட்டம்; a decorative frame work in a door.

[குல் → குல்லு → கொலு + பலகை.]

கொலுமகொண்டான் *koluma-kondān,* பெ.(n.) திண்டுக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tindukkal Dt.

[கொல்லன் → கொலுவன் → கொலுமன் + கொண்டான்.]

கொலுமண்டபம் *kolu-mandabam,* பெ.(n.) அரசவை; royal court.

ம. கொலுமண்டபம்

[கொலு (கோலு : ஒழுங்காக அமைந்த படிக்கட்டு. கோலு → கொலு (படிக்கட்டு அமைந்த அரசனின் இருக்கை) + மண்டபம்.]

கொலுவீற்றிரு-த்தல் *kolu-vīrriru-,* 3 செ.கு.வி. (v.i.) 1. கொலுமண்டபத்தில் அரசன் அரியணையில் அமர்ந்திருத்தல்; to adorn the throne as a king in the royal court. 2. திருமடத்துத் தலைவர், மடத்துக் குருபூசை விழாவில், அடியார்களும், சீடர்களும் புடைசூழ்ந்திருக்கக் கொலுமண்டபத்தில் துறவரசாக வீற்றிருத்தல்; to adorn the holy seat as a great saint.

[கொலு + வீற்று + இரு-.]

கொலுவை-த்தல் *koluvai-,* 4 செ.கு.வி.(v.i.) ஒன்பான் இரவு (நவராத்திரி) நாள்களில் வீட்டில் பொம்மைகளை அணிகளாக வைத்தல்; to decorate dolls in a Hindu house at the time of Navarathiri festival.

ம. கொலுவய்க்குக.

[கொலு + வை-.]

கொலை¹-த்தல் *kolai-,* 4 செ.கு.வி. (v.i.) குலைத்தல்; to bark as of dog.

[குலை → கொலை (கொ.வ.).]

கொலை²-தல் *kolai,* 4 செ.கு.வி. (v.i.) குலைதல்; to be disturbed, shatter.

[குலை → கொலை.]

கொலை³ *kolai,* பெ.(n.) 1. உயிர்வதை; killing, slaying, murder, assassination. *"கொலையே களவே"* *(மணிமே. 24: 125).* கொலைக்கே அஞ்சாதவன் பழிக்கு அஞ்சுவானா (பழ). 2. தீங்கு, கொடுமை; vexation, teasing, tormenting. படுகொலை. 3. பொறுத்துக் கொள்ள முடியாத அளவுக்குச் சிதைத்தல்; to damage incorrigibly; spoil. 4. கொல்லுதற்கொருப் படுகை (இளம்.தொல். பொருள்.254) (உரை. சொ.); consent to murder.

ம. கொல; க., து., பட. கொலெ; கோத. கொல்; துட. க்வல்ய்

[குல் → கொல் → கொலை.]

கொலைக்கடம்பூட்டு-தல் *kolai-k-kadam-pūttu-* 5 செ.குன்றாவி. (v.t.) கொலைத்தண்டனை நிறைவேற்றுதல்; to carry out capital sentence. *"குற்றங் காட்டிக் கொலைக்கடம் பூட்டுதும்" (பெருங். மகத. 25: 103).*

[கொலை + கடம் + பூட்டு-.]

கொலைக்களம் *kolai-k-kaḷam,* பெ.(n.) 1.கொல்லப்படும் இடம்; place of execution. *"கொலைக்களக் காதை" (சிலப். 16).* 2.கொலை நடந்த இடம் ; a place where killing was done. 3. அழிவைத் தருமிடம் ; place of destruction.

ம. கொலைக்களம்.

[கொலை + களம்.]

கொலைக்கும்பல் *kolai-k-kumbal,* பெ.(n.) 1. கொலை செய்யும் கும்பல்; gang of murderers; criminals. 2. பழிக்கு அஞ்சாத கும்பல்; a gang which will not flinch from any heinous crime.

[கொலை + கும்பல்.]

கொலைக்குற்றம் *kolai-k-kurram,* பெ.(n.) உயிர்வதை செய்தலாகிய குற்றம் (உ.வ.); offence or crime of murder.

ம. கொலைக்குற்றம்.

[கொலை + குற்றம்.]

கொலைக்கொம்பன் *kolai-k-kombaṉ,* பெ.(n.) கொல்லும் பண்புள்ள கொம்பானை; a vicious tusker.

ம. கொலைக்கொம்பன்.

[கொலை + கொம்பன்.]

கொலைகாரன் *kolaigāraṉ,* பெ.(n.) 1. கொலை செய்பவன்; murderer, assassin. 2. பழிபாவங் களுக்கு அஞ்சாதவன்; one who will not flinch from any heinous crime.

[கொலை + காரன்.]

கொலைச்சிறை *kolai-c-ciṟai,* பெ.(n.) சிறைச் சாலையில் கொலைக்குற்றம் செய்தவர்களை வைக்கும் அறை; prison-cell of criminals sentenced to death. *"கொலைச்சிறை யிருவரை" (பெருங். இலாவாண. 17:71).*

[கொலை + சிறை.]

கொலைசுற்று-தல் *kolai-šuṟṟu-,* 8 செ.கு.வி. (v.i.) கொலைப்பழி வழிவழியாகத் தொடர்தல் (உ.வ.); to be encompassed as a person or family, by the sin of murder, kill, slay.

ம. கொலைக்குற்றம்.

[கொலை + சுற்று-.]

கொலைசூழ்-தல் *kolai-šūḻ-,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. கொல்லும் வழியை நாடுதல்; to plot against a person's life. 2. ***கொலைசுற்று-தல்*** பார்க்க; see *kolai-cuṟṟu.*

[கொலை + சூழ்-.]

கொலைசூழ்ச்சி *kolai-šūḻcci,* பெ.(n.) கொல்லுவதற்காகச் செய்யப்படும் கமுக்கத் திட்டம்; conspiracy for murder.

[கொலை + சூழ்ச்சி.]

கொலைசெய்-தல் *kolai-šey-,* 1 செ.குன்றாவி. (v.i.) கொல்லுதல்; to murder.

[கொலை + செய்-.]

கொலைஞன் *kolaiñaṉ,* பெ.(n.) 1. ***கொலைகாரன்*** பார்க்க; see *kolai-gāraṉ.* *"கொலைஞ ருலையேற்றித் தீமடுப்ப" (நாலடி. 331).* 2. வேடன் (சூடா.); hunter. 3. சண்டாளன் (திவா.); candalan, one whose profession is to kill animals (செ.அக.).

[கொலை → கொலைஞன். ஒ.நோ.:கலை → கலைஞன்.]

கொலைத்தீர்ப்பு *kolai-tīrppu,* பெ.(n.) தூக்குத் தண்டனை; sentence of death.

மறுவ. கொலைத்தண்டனை.

ம. கொலத்தீர்ப்பு.

[கொலை + தீர்ப்பு.]

கொலைத்தண்டனை *kolai-t-taṇḍaṉai,* பெ.(n.) தூக்குத் தண்டனை; punishment of hanging death sentence.

மறுவ. மரணதண்டனை.

[கொலை + தண்டனை.]

கொலைநவில்(லு)-தல் *kolai-navil(lu)-,* 2 செ.கு.வி. (v.i.) கொலை செய்தல்; to commit murder. *"கொலைநவில் வேட்டுவர்" (மணிமே. 13:31).*

[கொலை + நவில்.]

கொலைநன் *kolainaṉ,* பெ.(n.) ***கொலைகாரன்*** பார்க்க; see *kolai-kāraṉ.* *"வாழுயிர்க் கூற்றமான கொலைநரை" (சீவக. 2770).*

[கொலைஞன் → கொலைநன்.]

கொலைநிலம் *kolai-nilam,* பெ.(n.) ***கொலைக் களம்*** பார்க்க; see *kolai-k-kaḷam.*

ம. கொலநிலம்.

[கொலை + நிலம்.]

கொலைநினைக்கை *kolai-niṉaikkai,* பெ.(n.) மனத்தில் தோன்றும் தீக்குண மூன்றினொன்று; one of the three bad thoughts in mind, i.e. to kill.

[கொலை + நினைக்கை.]

கொலைப்பசி *kolai-p-paši,* பெ.(n.) கடும்பசி; state of being famished. *காலையிலிருந்து கொலைப் பசியோடு இருக்கிறேன் (உ.வ.).*

[கொலை + பசி.]

கொலைப்பட்டினி *kolai-p-paṭṭiṉi,* பெ.(n.) கடுமை யான பசியின்போது எதுவும் சாப்பிடக் கிடைக்காத நிலை; state of utter starvation during extreme hunger. பல நாள்களாகக் கொலைப்பட்டினியில் இருக்கிறேன் (உ.வ.).

[கொலை + பட்டினி.]

கொலைப்பழி *kolai-p-paḻi,* பெ.(n.) ***கொலைப் பாதகம்*** பார்க்க; see *kolai-p-pādagam.*

[கொலை + பழி.]

கொலைப்பாதகம் *kolai-p-pādagam,* பெ.(n.) 1. கொலையாலுண்டான அவச்சொல் அல்லது குற்றம் (கொ.வ.); crime or sin of murder. 2. பெருந்தீச்செயல்; any heinous crime.

ம. கொலபாதகம்.

[கொலை + பாதகம் (பாதிப்பு → பாதகம்).]

கொலைப்பாதகன் *kolai-p-pādagaṉ,* பெ.(n.) கொலைக்குற்றம் போன்ற பெருந்தீங்கு செய்தவன்; one who commits murder or any other heinous crimes.

ம. கொலபாதகன், கொலபாதகி.

[கொலை + பாதகன்.]

கொலைப்பாவம் *kolai-p-pāvam,* பெ.(n.) கொலை செய்வதால் உண்டாகும் குற்றம்; sin of murder.

[கொலை + பாவம்.]

கொலைப் பைத்தியம் *kolai-p-paittiyam,* பெ.(n.) கொலை செய்வதற்கு ஆர்வம் உண்டாக்கும் பைத்தியம்; homicidal insanity; a form of mania characterised by a desire to commit murder; an insane tendency to murder (சா.அக.).

[கொலை + பைத்தியம்.]

கொலைபுரிந்தவன் *kolai-purindavaṉ,* பெ.(n.) ***கொலையாளி*** பார்க்க; see *kolai-y-āḷi.*

[கொலை + புரிந்தவன்.]

கொலைமகள் *kolai-magaḷ,* பெ.(n.) (பகைவரைக் கொன்றவள்) கொற்றவை; *Koṟṟavai,* as having slain the Asurās. *"கொலைமகள் கவினை" (பிரமோத். 7:26).*

[கொலை + மகள்.]

கொலைமரம் *kolai-maram,* பெ.(n.) கழுமரம்; a gibbet, gallows.

ம. கொலமரம்.

[கொலை + மரம்.]

கொலைமலை *kolai-malai,* பெ.(n.) கொலை செய்யும் மலைபோன்ற யானை; lit., murderous mountain elephant. *"பெருமதக் கொலைமலை" (கல்லா.4).*

[கொலை + மலை.]

கொலைமறுத்தல் *kolai-maṟu-,* பெ.(n.) கொலை செய்தல் கூடாதென்பதைப்பற்றிச் சாந்தலிங்க சுவாமிகளால் பாடப்பெற்ற நூல்; a poem by Sāndaliṅga-Šuvāmigaḷ disapproving of killing.

[கொலை + மறுத்தல்.]

கொலைமுட்டி *kolai-muṭṭi,* பெ.(n.) நுரையீரல் இறுகவும், வயிறு வீங்கவும், மூச்சுத் திணறவுஞ் செய்யும் கால்நடை நோய். (M.CM.D. 1887/249); a cattle-disease involving congestion of lungs, swelling of abdomen and difficulty in breathing.

[கொலை + முட்டி.]

கொலைமேற்கொள்-ளல் *kolai-mēṟkoḷ-,* 13 செ.குன்றாவி. (v.i.) முன்கருத்தோடு கொல்லுதல்; to murder as a duty imposed on oneself (pre-meditated murder) (சா.அக.).

[கொலை + மேற்கொள்.]

கொலையாளன் *kolai-y-āḷaṉ,* பெ.(n.) ***கொலைகாரன் (பிங்.)*** பார்க்க; see *kolai-kāraṉ.*

ம. கொலயாள்.

[கொலை + ஆள் + அன்.]

கொலையாளி *kolai-y-āḷi,* பெ.(n.) கொலைகாரன்; murderer. தேடிக் கொண்டிருந்த கொலையாளி பிடிபட்டான் (உ.வ.).

ம. கொலயாளி.

[கொலை + ஆள் + இ.]

கொலையிச்சைக் கிரகம் *kolai-y-iccai-k-kiragam,* பெ.(n.) ஒருவகைக் கோள்நோய்; a kind of mania attributed to be influence of an evil planet to which the patient is subjected (சா.அக.).

[கொலை + இச்சை + கிரகம்.]

கொலையுண்(ணு)-தல் *kolai-y-uṇ(ṇu)-,* 15 செ.கு.வி. (v.i.) கொலை செய்யப்படுதல்; to be killed, murdered.

ம. கொலபெட்டுக.

[கொலை + உண்ணு-.]

கொலையோன் *kolaiyōṉ,* பெ.(n.) துரிசு; green vitriol (சா.அக.).

[கொலையான் → கொலையோன்.]

கொலைவழக்கு *kolai-vaḻakku,* பெ.(n.) கொலையைப்பற்றிய வழக்கு; a murder-case.

[கொலை + வழக்கு.]

கொலைவன் *kolaivaṉ,* பெ.(n.) 1. ***கொலைகாரன்*** பார்க்க; see *kolai-kāraṉ. "கொலைவ னல்லையோ கொற்றவ னாயினை" (மணிமே.25: 174).* 2. வேடன்; hunter one who lives by chase. *"கொலைவர் கொடுமரந் தேய்த்தார்" (கலித். 12).* 3. சிவன் (ஊழிக்கடவுள்); Šiva, as the destroyer.

"கொலைவன் சூடிய குழவித் திங்கள்" (கலித். 103:14) (செ.அக.).

[கொலை + அன்.]

கொலைவாள் *kolai-vāḷ*, பெ.(n.) அரச ஒறுப்பை நிறைவேற்றப் பயன்படுத்தும் வாள்; sword used to execute death sentence.

[கொலை + வாள்.]

கொலைவாளை *kolai-vāḷai*, பெ.(n.) ஒருவகை நெல் (இ.வ.); a kind of paddy.

[குலை → கொலை + வாளை.]

கொலைவிழு-தல் *kolai-viḻu-*, 3 செ.குன்றா வி. (v.i.) கொல்லுதல்; to result in murder.

[கொலை + விழு-.]

கொலைவெறி *kolai-veṟi*, பெ.(n.) கொலை செய்வதற்கு விருப்பம் உண்டாக்கும் கிறுக்கு; homicidal insanity; a form of mania characterised by a desire to commit murder (சா.அக.).

[கொலை + வெறி.]

கொவ்வங்காய் *kovvaṅ-kāy*, பெ.(n.) ***கொவ்வைக்காய்*** பார்க்க; see *kovvai-k-kay*.

[கொவ்வை → கொவ்வம் + காய்.]

கொவ்வங்காய்ப்பதம் *kovvaṅ-kāy-p-padam*, பெ.(n.) ***கொவ்வைக்காய்ப்பதம்*** (யாழ்ப்.) பார்க்க; see *kovvai-k-kāy-p-padam*.

[கொவ்வை + காய் + பதம்.]

கொவ்வை *kovvai*, பெ.(n.) 1. கொவ்வைக்கொடி; a common creeper of the hedges. 2. கொவ்வைப் பழம்; red fruits of a common creeper of the hedges. "*கொவ்வைச் செவ்வாய்*" (திருவாச. 6:2).

[குவ்வை → கொவ்வை.]

கொவ்வைக்கனி *kovai-k-kaṉi*, பெ.(n.) கொவ்வைப் பழம்; riped caped fruit.

[கொவ்வை + கனி.]

கொவ்வைக்கனிமணி *kovvai-k-kaṉi-maṇi*, பெ.(n.) கோவரங்கப் பதுமராகம் (யாழ்.அக.); a kind of precious stone.

[கொவ்வை + கனி + மணி.]

கொவ்வைக்காய் *kovvai-k-kāi*, பெ.(n.) கொவ்வைச் செடியின் காய்; unriped caped fruit.

[கொவ்வை + காய்.]

கொவ்வைக்காய்ப்பதம்[1] *kovvai-k-kāy-p-padam*, பெ.(n.) இளம்பதம்; a stage at which anything is selected when it is only tender and soft (சா.அக.).

[கோவை → கொவ்வை + காய் + பதம்.]

கொவ்வைக்காய்ப்பதம்[2] *kovvai-k-kāy-p-padam*, பெ.(n.) கொவ்வைக்காய்போற் பசுமையாய் நெற்பயிரில் தோன்றும் இளம்பதம் (யாழ்ப்.); a stage in the growth of paddy when it is tender and green as a *kovvai* fruit.

[கொவ்வை + காய் + பதம்.]

கொவ்வைக்கிழங்கு *kovvai-k-kiḻaṅgu*, பெ.(n.) கோவைக்கிழங்கு; root of common creeper of the hedges (சா.அக.).

[கொவ்வை + கிழங்கு.]

கொவ்வைத்தண்டு *kovvai-t-taṇḍu*, பெ.(n.) கோவைக் கொடியின் தண்டு; the stem of Indian caper (சா.அக.).

[கொவ்வை + தண்டு.]

கொவ்வைப்பழம் *kovvai-p-paḻam*, பெ.(n.) கனிந்த சிவப்புக் கொவ்வைப் பழம்; red riped caped fruit (சா.அக.).

[கொவ்வை + பழம்.]

கொவ்வையங்கனி *kovvaiyaṅkaṉi*, பெ.(n.) ***கொவ்வைக்கனி*** பார்க்க; see *kovvai-k-kaṉi* (சா.அக.).

[கொவ்வை + அம் + கனி.]

கொவளை *kovaḷai*, பெ.(n.) ***வெள்ளைத்தகரை*** பார்க்க (L.); see *veḷḷai-t-tagarai*.

[குவளை → கொவளை (கொ.வ.).]

கொவிந்தம் *kovindam*, பெ.(n.) செம்முள்ளி; thorny nail dye.

[குருவிந்தம் → கொவிந்தம்.]

கொவிள் *kovil*, பெ.(n.) மரவகை (L.) white cutch, a tree (செ.அக.).

[குவிள் → கொவிள் (கொ.வ.).]

கொழஞ்சியப்பர் *koḻañji-appar*, பெ.(n.) சிறு தேவதை; folk deity.

[கொழஞ்சி + அப்பர்.]

கொழஞ்சியப்பரை, குழந்தையப்பர் எனக் கொள்வது ஒரு மிகைத் திருத்தமே. கொழஞ்சி மரத் தெய்வம் என்ற அடிப்படையில் அமைந்ததே இப் பெயர்.

கொழி[1]-த்தல் *koli-*, 4 செ.குன்றா.வி.(v.t.) கொப்புளித்தல்; gargling (சா.அக.).

[கொள் → கொளி → கொழி.]

கொழி[2]-த்தல் *koli-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. தெள்ளுதல்; to sift in a winnowing fan. *"குற்றபாகு கொழிப்பவர் கோள்" (கம்பரா. நாட்டுப். 29).* 2. ஒதுக்குதல்; to waft ashore, as fine sand by the waves. 3. வாருதல்; to carry or wash away, as a river or flood. *"கிரியுள வெல்லாங் கொழித்து வந்துற வணைதரும் பாலி" (கந்தபு. ஆற்றுப். 23).* 4. பொழிதல்; to emit, as rays; to send forth, as showers. *"கொடிய வெண்டிங்காள் கொழிக்கு நினது கதிர்" (நைடத. சந்திரோ.6) (செ.அக.).*

ம. கொழிக்குக; **க.,பட.** கொச்சு; **தெ.** கொடு; **கோத.** கொத்; **துட.** க்விச்; **கோண்.** கொச்சானா; **கூ.** கடோக்ல; **குவி.** கொச்சாலி; **கொலா.** கொன்சிவ்.

[குல் → குள் → கொள் → கொழு → கொழி.]

கொழி[3]-த்தல் *koli-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. குற்றங்கூறுதல்; to criticise, expose faults. *"வையங் கொழிக்கும் பழிக்கு" (சீவக. 1149).* 2. ஆராய்தல்; to test, closely examine details of evidence, facts, etc. கொழித்துக் கொளப்பட்ட நண்பி னவரை (பழ.130). 3. பாராட்டிச் சொல்லுதல்; to proclaim, publish. அவன் தன் பெருமையைக் கொழித்துக்கொண்டிருக்கிறான் (கொ.வ.).

[குல் → குள் → கொள் → கொழு → கொழி.]

கொழி[4]-த்தல் *koli-*, 4 செ.கு.வி. (v.i.) 1. எதிரொலித்தல் (பிங்.); to sound, resound. 2. மேலே கிளம்புதல்; to come to the surface to rise up. *"கடற்றினன் பொன்கொழிப்ப" (மதுரைக். 274).* 3. செழிப்புறுதல்; to be on the increase flourish. *'செல்வங் கொழிக்கிறது' (செ.அக.).*

Fin. kerata (togather. accumulate). **Kare.** kerea. **Komi.** kural; **Est.** korjata; **Mong.** xurija. **Q.** juriy

[குல் → கலி → கொலி → கொழி.]

கொழிஞ்சி *kolinji*, பெ.(n.) 1. கிச்சிலி (L.); sylhet orange, a tree. 2. ***நாரத்தை*** பார்க்க; see *nārattai*. 3. ***கொள்ளுக்காய் வேளை*** பார்க்க; see *kollu-k-kāy-vēlai*. 4. பூவாது காய்க்கும் மரம் (வின்.); tree or plants, as the figs, which bear fruit without blossoming (செ.அக.).

ம. கொழிஞ்ஞில்.

[கொழி → கொழிஞ்சி.]

கொழிதமேனி *kolita-mēni*, பெ.(n.) 1. குப்பை மேனி; Indian acalypha. 2. குறுக்கு அவரை; Goa bean (சா.அக.). 3. கோழி அவரை; sword bean (சா.அக.).

மறுவ. வாளவரை, பெருங்கோழியவரை, கோழிப் பூண்டு.

[கொழி → கொழிதம் + மேனி.]

கொழிதாகிகம் *kolitāgigam*, பெ.(n.) நாயுருவி; Indian burr (சா.அக.).

மறுவ. முள்துடரி, கொல்லன்கோவிகம், கொழிப் பாயாசம்.

[கொழிதம் → கொழிதாகிகம்.]

கொழிப்பு *kolippu*, பெ.(n.) 1. கொழிக்கை; sifting, wafting ashore. 2. செழிப்பு; prosperity. 3. குற்றம் (திவா.); fault, defect.

[கொழி → கொழிப்பு. ஒ.நோ.: செழி → செழிப்பு.]

கொழிப்பூ *koli-p-pū*, பெ.(n.) ***கொழிப்பூண்டு*** பார்க்க; see *koli-p-pūndu*.

[கொழி + (பூண்டு) பூ.]

கொழிப்பூண்டு *koli-p-pūndu*, பெ.(n.) குப்பைமேனி (மலை.); rubbish plant Indian acalypha, a shrub.

[கொழி + பூண்டு.]

கொழிபாயசம் *koli-pāyasam*, பெ.(n.) ***காஞ்சொறி*** பார்க்க; see *kāñjori*.

[குள் → கொள் → கொழி + (பாயச்சம்) பாயசம்.]

கொழிமணல் *koli-manal*, பெ.(n.) 1. சிறு மணல்; fine sand. 2. மெருகு மணல்; goldsmith's sand (சா.அக.).

[கொழி + மணல்.]

கொழியல் *koliyal*, பெ.(n.) ***கொழியலரிசி*** பார்க்க; see *koliyal-arisi*. *"நெல்லு இடிசல் கொழியல் இல்லாமல்" (கோயிலொ.62).*

ம. கொழியல்.

[கொழி → கொழியல்.]

கொழியலரிசி *koliyal-arisi*, பெ.(n.) நன்றாகக் குற்றித் தீட்டப்படாத அரிசி; ill-cleaned rice.

'குற்றாத கொழியலரிசியை' (பெரும்பாண். 275, உரை).

[கொழி → கொழியல் + அரிசி.]

கொழியால்மட்டி *koliyāl-matti,* பெ.(n.) சிவப்பு; red colour (சா.அக.).

[கொழியல் + மட்டி.]

கொழிற்பூண்டு *kolir-pūndu,* பெ.(n.) குப்பைமேனி; a kind of plant as of vermifuge; an antidote.

[கொழியல் + பூண்டு.]

கொழு[1]-த்தல் *kolu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. செழித்தல்; to prosper, flourish to be rich or fertile, as soil. *"குடிகொழுத்தக் கண்ணும்" (நாலடி. 96).* 2. உடற்கொழுப்பு மிகுதல்; to grow fat; to be plump. *"சிறுமியரெலாங் கொழுத்தே" (தனிப்பா.).* 3. குழம்பாயிருத்தல்; to be of thick consistency, as sandal paste. சந்தனத்தைக் கொழுக்கப் பூசு. 4. திமிர்கொள்ளுதல் (உ.வ.); to be saucy, impertinent, insolent. 5. மண் கொழித்தல், மதர்த்தல் (உ.வ.); to become too rich, to be productive, as land (செ.அக.).

ம. கொழுக்குக; **க.** கொர்வு, கொப்பு ; **தெ.** க்ரொச்சு, கொவ்வு; **து.** கொம்மை (கொழுப்பு) ; **கோண்.** கொர்விஞ்ச்; **கூய்.** க்ரோக ; **குவி.** கொர்வ்; **நா.** கொலா, கொரு; **கோத.** க்வள்ப்; **பிரா.** கும்பேன்.

Fin. kuu (fat); **Mari.** koja; **Hung.** haj; **Jap.** koyasu (to enrich, fatten).

[குள் → கொள் → கொழு.]

கொழு[2] *kolu,* பெ.(n.) 1. கொழுப்பு; fat. *"குடருங் கொழுவும்" (நாலடி. 46).* 2. திரண்டது; clotted, solid. 3. வழவழப்பு ; surupy, vircons.

ம. கொழு.

[கள் → கழு → கொழு.]

கொழு[3] *kolu,* பெ.(n.) 1. மாழை (உலோக)க்கோல்; bar of metal, bullion. 2. ஏர்க்காறு; plough share. 3. துளையிடும் பெரிய ஊசி; awl. *'கொழுச்சென்ற வழித் துன்னூசி யினிது செல்லுமாறுபோல' (தொல். பாயி. உரை).* 4. உழும்கருவி (வேளா.கலை.); apparatus for ploughing. "கொழுமீதில் குடிகொண்ட குடிச்செல்வம் செல்வம்" (பழ.).

ம. கொழு, கொழுவு; **க.** குழ, குழு; **து.** கொரு; **கோத.** கொவ்.

[உள் → உளு : துளைக்கும் புழு. உளுத்தல் : புழு மரத்தைத் துளைத்தல். உளு → உழு. உழுதல் : நிலத்தைக் கீறுதல். குள் → குழி → குழை → குடை. குடைதல் : துளைத்தல். குழி → கொழி → கொழு : நிலத்தைத் துளைக்கும் ஏருசி.]

கொழுக்கச்செய்-தல் *kolukka-c-cey-,*1 செ. குன்றா வி.(v.t.) வளர்த்தல்; to feed luxuriously; to pamper (சா.அக.).

[கொழுக்க + செய்-.]

கொழுக்கட்டு-தல் *kolu-k-kattu-,* 5 செ.கு.வி. (v.i.) கலப்பைக்காறு மாட்டுதல் (வின்.); to fasten the share to the plough.

[கொழு + கட்டு-.]

கொழுக்கட்டை *kolu-k-kattai,* பெ.(n.) வெல்லம் முதலியன சேர்த்து அரிசிமாவால் உருண்டை வடிவாகச் செய்யும் சிற்றுண்டிவகை; bolus-like preparation of rice flour usually with coconut scrapings, sugar, etc. கொழுக்கட்டைக்குத் தலையுமில்லை குடியனுக்கு முறையுமில்லை (பழ).

ம. கொழுக்கட்ட.

[குள் : உருண்டை; குள் → குழு → கொழு + கட்டை.]

கொழுக்கட்டைத் தேக்கு *kolu-k-kattai-t-tēkku,* பெ.(n.) போதக நாறி மரம்; fire-brand teak (சா.அக.).

[கொழுக்கட்டை + தேக்கு.]

இது மருந்துப் பொருளாகப் பயன்படுகிறது.

கொழுக்கட்டைப்புல் *kolu-k-kattai-p-pul,* பெ.(n.) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ளதும் கால் நடைகள் மேய்தற்கு உரியதுமாகிய கொழுப்புச்சத்து மிகுந்த புல்வகை; a kind of grass in Coimbatore Dt., very fattening for cattle.

[கொழு + கட்டை + புல்.]

கொழுக்கட்டைமந்தாரை *kolukkattai-mandārai,* பெ.(n.) ஒருவகை மந்தாரை; a kind of ebony (சா.அக.).

[கொழுக்கட்டை + மந்தாரை.]

கொழுக்கரி *kolu-k-kari,* பெ.(n.) கொழுந்துவிட்டு எரியக்கூடிய கரி; dense or solid charcoal capable of burning with flame (சா.அக.).

[கொழு + கரி.]

கொழுக்கு *kolukku,* பெ.(n.) கைப்பிடியுள்ள கோப்பை; cup with handle. *கொழுக்கு நிறையத் தேநீர் கொடுத்தார்கள் (கிரி.).*

[குள் → குழு → கொழு → கொழுக்கு.]

கொழுக்குத்து *kol̤u-k-kuttu,* பெ.(n.) எல்லையைக் குறிப்பதற்குப் பூமியில் நாட்டப்பட்டிருக்கும் குத்துக் கல்; (காழ்மரக்கால்) (கல்.அக.); stone mark for identifying the boundary in land, mile-stone.

[கொழு + குத்து.]

கொழுக்கொடு-த்தல் *kol̤u-k-kodu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. இளக்காரங் கொடுத்தல்; to be indulgent. 'நீ நியமியாமல் கொழுக்கொடுத்தன்றோ இப்படி இவன் தீம்பிலே தகணேற வேண்டிற்று' (திவ். பெரியாழ்.2,9:2.வியா.ப.454.) 2. பெருமையுண் டாக்குதல் (திவ்.பெரியாழ்.2,9:2, ஜீ.); to exalt.

[கொழு + கொடு-.]

கொழுக்கொம்பு *kol̤u-k-kombu,* பெ.(n.) ***கொழுகொம்பு*** பார்க்க; see *kol̤u-kombu*(வே.க. 198).

[கொள்கொம்பு → கொழுகொம்பு.]

கொழுகழுவுகாலம் *kol̤u-kal̤uvu-kālam,* பெ.(n.) உழவு முடியுங்காலம் (இ.வ.); time of the year when ploughing is finished.

[கொழு + கழுவு + காலம்.]

கொழுகொம்பு *kol̤u-kombu,* பெ.(n.) 1. கொடிகள் ஏறிப் படர்தற்கு நடும் கொம்பு; stick or pole for supporting a creeper. *"வேத நறுங்கொடி படருங் கொழுகொம்பே" (செவ்வந்திப்பு. திருமனச்ச. 9).* 2. பற்றுக்கோடு; help, support, aid. 3. மரத்தின் நடுக்கிளை; central upright branch of a tree.

[கொழு + கொம்பு.]

கொழுகொழு-த்தல் *kol̤ukol̤u-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மிகுந்த சதைப்பற்றுடன் இருத்தல்; to be chubby. *குழந்தை கொழுகொழுவென் றிருக்கிறது (உ.வ.).* 2. செல்வச்செழிப்பு மிகுதல்; to become rich, prosperous.

[கொழு + கொழு-.]

கொழுகொழுப்பு *kol̤u-kol̤uppu,* பெ.(n.) 1. செழுமை; luxuriance. 2. ஊழற்சதை; flabbiness (செ.அக.).

ம. கொழுகொழு.

[கொழு + கொழுப்பு.]

கொழுகொழுவெனல் *kol̤ukol̤u-v-enal,* பெ.(n.) உடற்கொழுப்பு மிகுதலைக் காட்டும் குறிப்பு; onom. expr. signifying growing fat.

[கொழு கொழு + எனல்.]

கொழுங்கண் *kol̤uṅkaṉ,* பெ.(n.) அருள்நோக்கு (கருணைக்கண்); sight with compassion, bene volence.

[கொழு - கொழுமை. கொழும் + கண்.]

கொழுங்காதிகம் *kol̤uṅgādigam,* பெ.(n.) பீநாறி; fetid tree-Sterculia foctida (சா.அக.).

[கொழும் + காதிகம்.]

கொழுங்கிகா *kol̤uṅgigā,* பெ.(n.) மல்லிகை; jasmine (சா.அக.).

[கொழும் + சிகை – கொழுஞ்சிகை → கொழுங்கிகா (கொ.வ.).]

கொழுங்கிரி *kol̤uṅgiri,* பெ.(n.) மல்லிகை (மலை.); jasmine.

[கொழுஞ்சிகை → கொழுஞ்சிரி → கொழுங்கிரி.]

கொழுச்சால் *kol̤u-c-cāl,* பெ.(n.) ஏர்ச்சால்; a furrow made by the plough share.

ம. கொழுச்சால்.

[கொழு + சால்.]

கொழுச்சிராய் *kol̤u-c-cirāy,* பெ.(n.) கலப்பையிற் கொழுவை இணைக்கும் மரத்துண்டு (யாழ்ப்.); piece of wood which holds the share to the plough.

[கொழு + சிராய்.]

கொழுஞ்சி *kol̤uñji,* பெ.(n.) 1. நாய்வேளை (சித்.அக.); a sticky plant. 2. கடற்கரைப் பூண்டு; shrub on the seashore.

[கொழு → கொழுஞ்சி.]

கொழுஞ்சிச்சோளம் *kol̤uñji-c-cōl̤am,* பெ.(n.) முத்துச்சோளம்; ripe millet (சா.அக.).

[கொழுஞ்சி + சோளம்.]

கொழுஞ்சிநாரத்தை *kol̤uñji-nārattai,* பெ.(n.) 1. கிச்சிலிப்பழம்; common orange. 2. நாய்வேளை; dog mustard. 3. கொள்ளுக்காய் வேளை; purple wild Indigo (சா.அக.).

மறுவ. கொழுஞ்சிப் பழம்.

[கொழுஞ்சி + நாரத்தை.]

கொழுஞ்சிப்பழம் *kol̤uñji-p-pal̤am,* பெ.(n.) 1. கிச்சிலி; common orange. 2. தித்திப்பு நாரத்தை; sweet bigarade orange. 3. கொள்ளுக் காய் வேளை; purple wild indigo (சா.அக.).

[கொழுஞ்சி + பழம்.]

கொழுஞ்சியடிவண்டு *koluñji-y-adi-vaṇḍu,* பெ.(n.) கொழுஞ்சிமரத்தின் அடியில் முளைத்திருக்கும் எருக்கஞ் செடியில் பற்றிநிற்கும் ஒருவகை வண்டு; a kind of beette frequenting the madar plant grown under the orange tree. This is very useful for preparing universal quintessence medicine (சா.அக.).

[கொழுஞ்சி + அடி + வண்டு.]

கொழுஞ்சினி *koluñjiṉi,* பெ.(n.) நாய்வேளை; dog mustard plant (சா.அக.).

[கொழுஞ்சி → கொழுஞ்சினி.]

கொழுஞ்சுடர் *koluñ-cuḍar,* பெ.(n.) துரிசு; blue vitriol (சா.அக.).

[கொழுமை + சுடர்.]

கொழுத்த[1] *kolutta,* பெ.எ. (adj.) பருத்த; fatty (சா.அக.).

[கொழு → கொழுத்த.]

கொழுத்த[2] *kolutta,* பெ.எ. (adj.) 1. மிகுந்த; huge; இன்று கொழுத்த வேட்டை கிடைத்தது (உ.வ.). 2. பெருத்த; big. வணிகம் செய்து கொழுத்த இலாபம் சம்பாதித்தான் (உ.வ.).

[கொழு → கொழுத்த.]

கொழுத்தகயல் *kolutta-kayal,* பெ.(n.) வளர்ச்சியுற்ற கெண்டைமீன்; developed carp fish (மீன்.பிடி.தொ.).

[கொழு → கொழுத்த + கயல்.]

கொழுத்தசாப்பாடு *kolutta-śāppāḍu,* பெ.(n.) உயர் உணவு; rich meals (சா.அக.).

[கொழு → கொழுத்த + சாப்பாடு.]

கொழுத்தசுண்ணாம்பு *kolutta-śuṉṉāmbu,* பெ.(n.) நீர்கலக்கும் போது, அதிக அளவில் வெப்பத்தைக் கக்கிப் பொடியாக நீற்றும் சுண்ணாம்பு; a lime stone which emits more heat when making slaked lime (கட்.தொ.).

[கொழுத்த + சுண்ணாம்பு.]

கொழுத்தட்டு-தல் *kolu-t-taṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கொழுவைக் கூர்மையாக்குதல் (வின்.); to sharpen the plough share.

[கொழு + தட்டு-.]

கொழுத்தடை *kolu-t-taḍai,* பெ.(n.) ***கொழுத் தாடை*** பார்க்க; see *kolu-t-tāḍai.*

[கொழு + தடை.]

கொழுத்தமுரல் *kolutta-mural,* பெ.(n.) ஏழு அங்குல நீளமுள்ள திருவன் கோலாமீன்; half beak, attaining 7 in. in length.

மறுவ. கொழுத்த மூரல்.

[கொழுத்த + (மூரல்)முரல்.]

கொழுத்தமூரல் *kolutta-mūral,* பெ.(n.) திருவன் கோலா மீன்; a kind of kola fish.

[கொழுத்த + மூரல்.]

கொழுத்தவன் *koluttavaṉ,* பெ.(n.) 1. அடங்காதவன்; uncontrollable person. கொழுத்தவனெல்லாம் ஒருநாள் புழுத்து நாறும்போதுதான் உணர்வான் (உ.வ.). 2. பணக்காரன்; very rich man (வழ.சொ.அக.).

[கொழு → கொழுத்தவன் (வினையா.பெ.).]

கொழுத்தவீரல் *kolutta-v-īral,* கொழுப்படைந்த ஈரல்; liver with fatty accumulation (சா.அக.).

[கொழுத்த + ஈரல்.]

கொழுத்தவுடம்பு *kolutta-v-uḍambu,* பெ.(n.) பருத்த உடம்பு; corpulent body (சா.அக.).

[கொழுத்த + உடம்பு.]

கொழுத்தாடுபிடிக்கை *koluttāḍu-piḍikkai,* பெ.(n.) நரி ஆட்டுமந்தையிற் புகுந்து பிடிப்பது போலும் விளையாட்டு; game in imitation of a fox capturing a sheep in a flock.

[கொழுத்த + ஆடு + பிடிக்கை.]

கொழுத்துப்போ-தல் *koluttu-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) கொழுப்புண்டாதல்; growing fat (சா.அக.).

[கொழுத்து + போ-.]

கொழுதம்பிநத்தம் *kolutambi-nattam,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கொழு + தம்பி + நத்தம்.]

கொழுதாடை *kolu-tāḍai,* பெ.(n.) கரும்பின் மேல் பாகம்; the top portion of sugarcane stalk (சா.அக.). அவன் கிடக்கிறான் கொழுதாடைப்பயல் (இ.வ.).

*[கழுது → கொழுது + ஆடை.]

கொழுது-தல் *kol̤udu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. குடைதல் (இ.வ.); drill through. *"கொழுதி வண்டிமிருந் தாரான்" (நைடத. சுயம்வர. 155).* 2. பறித்தல் (இ.வ.); to pluck, pick off. *"ஞாழ லஞ்சினைத் தாழிணர் கொழுதி" (நற். 106).* 3. கிழித்தல் (இ.வ.); tear. *"பௌவநீர்ச் சாய்க் கொழுதி" (கலித். 76).*

[குள் → கொள் → கொழுது → கொழுதுதல்.]

கொழுந்தரும்பு *kol̤undarumbu,* பெ.(n.) பூக்களில் முதலாக உண்டாகும் அரும்பு; the first shoot or growth in a flower; bud (சா.அக.).

[கொழுந்து + அரும்பு.]

கொழுந்தன் *kol̤undan,* பெ.(n.) 1. கணவன் (இ.வ.); husband. *"கொழுந்தா வென்றாள்" (கம்பரா. பிராட்டி. 9).* 2. கணவனுக்கு இளையவன் (உ.வ.); husband's younger brother.

[கொள் → கொழு → கொழுந்தன். கொழுந்து இளமை. கொழுந்தன் - கணவனுக்கு இளையவன்.]

கொழுந்தன்பு *kol̤undanbu,* பெ.(n.) இளகிய அன்பு (இ.வ.); doting affection. *"கொழுந்தன்பு செய்தருள் கூர" (திருமந். 280).*

[கொழுந்து + அன்பு.]

கொழுந்தனார் *kol̤undaṉār,* பெ.(n.) கணவனுடன் பிறந்தவன்; husband's brother.

[கொழுந்து → கொழுந்தன் + ஆர். கொழுந்து இளமை. கொழுந்தன் - கணவனுக்கு இளையவன்.]

கொழுந்தனூர் *kol̤undaṉūr,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tiruvallur Dt.

[கொழுந்தன் + ஊர்.]

கொழுந்தி *kol̤undi,* பெ.(n.) 1. மனைவியுடன் பிறந்தவள்; wife's sister. 2. உடன்பிறந்தவன் மனைவி (இ.வ.); brother's wife. *"எம்பி நின்றம்பி நீதோழன் மங்கை கொழுந்தி" (கம்பரா. காட்சிப். 23).* 3. ***கொழுந்தன்*** பார்க்க; see *kol̤undaṉ.*

மறுவ. கொழுந்தியாள்.

[கொழுந்து → கொழுந்தி.]

கொழுந்தியாள் *kol̤undiyāl̤,* பெ.(n.) ***கொழுந்தி*** பார்க்க; see *kol̤undi.*

ம. கொளந்தயாள்.

[கொழுந்து → கொழுந்தி + ஆள்.]

கொழுந்திராம்பட்டு *kol̤undirāmpaṭṭu,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கொழுந்திலை (வெற்றிலை) + பட்டு - கொழுந்திலைப்பட்டு → கொழுந்திராம்பட்டு (கொ.வ.).]

கொழுந்திலை *kol̤undilai,* பெ.(n.) 1. தளிர்; tender leaf. 2. தேயிலை; tea (சா.அக.).

[கொழுந்து + இலை.]

கொழுந்திலோதியம் *kol̤undi-lōdiyam,* பெ.(n.) பேரகத்தி; West Indian sesbane (சா.அக.).

[கொழுந்தி + லோதியம்.]

கொழுந்து[1]-தல் *kol̤undu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. ஒளிர்தல்; to be kindled as fire. 2. காய்ச்சப்படுதல் (இ.வ.); to be heated. *"எரியழற் கொழுந்தும் வேலுய்த் திட்டென" (இரகு. யாகப். 27).* 3. வெயிலிற் கருகுதல்; to be burnt as by the sun.

[குல் (எரிதல்) → குள் → குழு → கொழு → கொழுந்து.]

கொழுந்து[2] *kol̤undu²-,* பெ.(n.) 1. இளந்தளிர் (இ.வ.); tender leaf. *"ஏற்ப விரீஇய விலையுங் கொழுந்தும்" (பெருங்.இலாவாண.2:143).* 2. இளமை யானது; anything young. *"பிறைக்கொழுந்து" (நைடத.அன். தூது. 12).* 3. மென்மை (இ.வ.); tenderness. *"வாழை ... மடல்போலக் கொழுந்துள செவி" (சூடா. 12:150).* 4. நடுதற்குரிய பதியம்; shoot of plant cut for planting. 5.***மருக்கொழுந்து*** பார்க்க; see *maru-k-kol̤undu. "கொழுந்து செவ் வந்தி" (கந்தபு. இந்திரன். 42).* 6. வெற்றிலை; betel. 7. ஒளிர்தல் (இ.வ.); fragrance. *"அயற் கொழுந்து" (கந்தபு. இரண்டா. சூர. 359).* 8. படை முதலியவற்றின் முன்னிரை; front rank as of an army (இ.வ.). *"சேனையின் கொழுந்துபோய்க் கொடிமதின் மிதிலையி னெல்லை கூடிற்றே" (கம்பரா. எழுச்சி. 24).* 9. சாமரை முதலியவற்றின் நுனி; tips, as of a *kavari* (இ.வ.). *"கொழுந்துடைய சாமரை" (கம்பரா. கோலங். 25).*

ம. கொழுன்னு, கொளுந்து.

[குள் → கொழு → கொழுந்து (மு.தா. 40).]

கொழுந்துக்கால் *kol̤undu-k-kāl,* பெ.(n.) வெற்றிலைக் கொடிக்கு நடும் கொழுகொம்பு; stick or pole planted to support the betel creeper.

[கொழுந்து + கால்.]

கொழுந்துகிள்ளி *kol̤undu-kil̤l̤i,* பெ.(n.) நட்புப் பிரிப்பவன்; mischief-maker.

[கொழுந்து + கிள்ளி.]

மேலும் துளிர்த்துத் தளிரவிடாமல் கொழுந்துகளைக் கிள்ளிச் செடியின் வளர்ச்சி தடுப்பது போல் குடும்பம் அல்லது நாட்டின் வளர்ச்சி கெடுப்பவனும் நண்பர் உறவினர்க்குத் தீங்கு விளைவிப்பவனும் பெற்ற உருவகப்பெயர்.

கொழுந்துடைமாது *kol̤untudai-mādu*, பெ.(n.) ஒருவகைக் கள்ளி அதாவது கொம்புக்கள்ளி; any spurge of the eupborbia genus grown near a village. But it generally refers to the creeper (சா.அக.).

[கொழுந்து → கொழுந்துடை.]

கொழுந்துதல் *kol̤undudal-*, பெ.(n.) 1.வெயிலினால் கருகுதல்; being scorched. 2. கொழுந்து விட்டெரிதல்; burning with a brilliant flame. 3. பழுக்கக் காய்ச்சப்படுதல்; being heated to redness as iron in a forge (சா.அக.).

[குல் → குள் → குழு → கொழு → கொழுந்து.]

கொழுந்து நீரோட்டம் *kol̤undu-nirōttam*, பெ.(n.) ***கோலம்²*** பார்க்க; see *kōlam²*.

[கொழுந்து + நீரோட்டம்.]

கொழுந்துபதி-த்தல் *kol̤undu-padi-*, 4 செ.கு.வி. (v.i.) கிளைக்கும்படி கொடியை நடுதல்; to plant a stoloniferous stem.

[கொழுந்து + பதி.]

கொழுந்துமணல் *kol̤undu-manal*, பெ.(n.) மென் மணல்; soft sand with which goldsmiths clean jewels (சா.அக.).

[கொழுந்து + மணல்]

கொழுந்துவிடு-தல் *kol̤undu-vidu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. தளிர்விடுதல் (இ.வ.); to send forth tender shoots. *"கொழுந்துவிட் டோடிப் படரும்" (திவ். இராமானுச நூற். 61).* 2. ஒளிர்விடுதல்; to blaze up. *"கொழுந்துவிட் டெரியும் பசித்தழல்" (குசேலோ. குசேலர்மேல் கட. 52).*

[கொழுந்து + விடு.]

கொழுந்துவேர் *kol̤undu-vēr*, பெ.(n.) இளவேர்; tender and slender root (சா.அக.).

[கொழுந்து + வேர்.]

கொழுந்தொட்டி *kol̤un-totti*, பெ.(n.) புல்வகை (வின்); sucking-grass

[கொழுமை + தொட்டி.]

கொழுந்தோடு-தல் *kol̤undōdu-*, 9 பெ.(n.) ***கொழுந்துவிடு-தல்*** பார்க்க;see *kol̤undu-vidu-* (இ.வ.). *"படர்ந்துகொழுந் தோடுதென் மனப்பந்தலிலே" (தனிப்பா. ii. 137, 347).*

[கொழுந்து + ஓடு.]

கொழுநன் *kol̤unan*, பெ.(n.) 1. கணவன் (இ.வ.); husband. *"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழு தெழுவாள்" (குறள். 55).* 2. இறைவன் (சூடா.); Lord.

Fin. kosija (suitor); **Turk.** koca (husband); **Jap.** kazoku; **O.Jap.** kasumu (to take by force); **Q.** qusa (husband).

[கொள் → கொளுவு → கொழுவு → கொழுநன். கொழுவுதல் = அணைத்துக்கொள்ளல். கொழுநன் = மணந்து கொள்பவன்.]

கொழுநிழல் *kol̤u-nil̤al*, பெ.(n.) குளிர்ந்த நிழல்; cool shadow, pleasant shadow.

[கொழு + நிழல்.]

கொழுநீர் *kol̤u-nir*, பெ.(n.) 1. பெருகிய நீர் (இ.வ.); abundance of water. *"கோமுகி யென்னுங் கொழுநீ ரிலஞ்சி" (மணிமே. 11:39).* 2. மிகப் புளித்த கள்; highly fermented toddy. 3. வியர்வை (யாழ். அக.); sweat. 4. பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கரண்டியின் நுனியை நனைத்துத் தரப்படும் நீர்; water in which hot iron ladle is dipped.

[கொழு = பெருகிய. கொழு + நீர்.]

கொழுப்படை-த்தல் *kol̤uppadai-*, 4 செ.கு.வி. (v.i.) தொண்டையிற் கொழுப்படைத்தல்; obstruction of the throat by fatty tissue which renders respiration difficult (சா.அக.).

[கொழுப்பு + அடை.]

கொழுப்பமிலம் *kol̤uppamilam*, பெ.(n.) கொழுப்புப் பொருளுள்ள அமிலம்; fatty acid.

[கொழுப்பு + அமிலம்.]

கொழுப்பயன் *kol̤uppayan*, பெ.(n.) வேளாண் மையில் கிடைக்கும் வருவாய்; net income or gain in Agriculture.

[கொழுப்பு + பயன்.]

கொழுப்பழிவு *kol̤up-p-al̤ivu*, பெ.(n.) உடலில் உள்ள கொழுப்பு நீங்குகை; lypolysis.

[கொழுப்பு + அழிவு.]

கொழுப்பான *kol̤u-p-pāna*, பெ.எ.(adj.) நிணமுள்ள; lardaceous; plumpy (சா.அக.).

கொழுப்பிறக்கு-தல் *kol̤up-p-irakku-,* 9 செ. குன்றாவி.(v.t.) செருக்கடக்குதல்; to reduce one's pride.

[கொழுப்பு + இறக்கு.]

கொழுப்பு *kol̤uppu,* பெ.(n.) 1. செழிப்பு (பிங்.); richness. 2. நிணம் (பிங்.); fat. 3. தசைவளம்; plumpness. *"கழிப்புநீ ராரலொடு கொழுப்பிறாக் கொளீஇய" (பெருங். மகத. 4:42).* 4. குழம்பா யிருக்கை; thickness in consistency, as sandal paste. 5. தினவு; sauciness, impudence. 6. நிலத்தின் மதர்ப்பு; state of soil being too rich to be productive. 7. சாந்துப் பூச்சின்மேல் நுண்மையான சுதை அல்லது கெட்டியான சுதைமாக் (சிமிண்ட்) கரைசலை வைத்து அழுத்துவது; pressing the paste like substance on the already pasted area.

ம. கொழுப்பு; **க.** கொப்பு, கொர்பு; **தெ.** க்ரொவ்வு, கொவ்வு; **து.** கொம்மெ; **துட.** கோவ், க்வாள்ப்; **கோத.** க்வாள்ப்; க்ரோக; **நா.** கொரு; **பர்.** கொர்.

[குள் → குழு → கொழு → கொழுப்பு.]

கொழுப்புக்கட்டி *kol̤uppu-k-kaṭṭi,* பெ.(n.) நிணக்கழலை (இங்.வை. 306); fatty tumour.

[கொழுப்பு + கட்டி.]

கொழுப்புக்கரை-தல் *kol̤uppu-k-karai-,* 4 செ.கு.வி.(v.i.) உடலில் உள்ள கொழுப்புச் சத்துகளின் அளவு நாளுக்கு நாள் குறைதல்; deterioration of the fatty substance in the tissues; the splitting up of fat (சா.அக.).

[கொழுப்பு + கரை.]

கொழுப்புக்கல் *kol̤uppu-k-kal,* பெ.(n.) சிவப்புக் கல்வகை (வின்.); a soft red stone.

[கொழுப்பு + கல்.]

கொழுப்புக்கழலை *kol̤uppu-k-kal̤alai,* பெ.(n.) 1. கொழுப்பிருக்கும் சவ்வானது வளர்ந்து முடிச்சுப் போல் எழும்பிப் பிறகு நாளாவட்டத்தில் பெரிதாகும் ஒரு கட்டி; a tumour consisting of a mass of fatty matter enclosed in a thin capsule which, at first, resembles a knot and then developes gradually into a large swelling lipoma. 2. ***கொத்துக்கழலை*** பார்க்க;see *kottu-k-kal̤alai* 3. பிடுக்கில் உண்டாகும் கொழுப்புக் கழலை; a fatty scrotal tumour (சா.அக.).

மறுவ. கொழுப்புக் கட்டி.

[கொழுப்பு + கழலை.]

கொழுப்புக்குடல் *kol̤uppu-k-kuḍal,* பெ.(n.) ஆட்டின் சிலுப்பிக் குடல் (வின்.); a part of intestine of sheep or goats.

[கொழுப்பு + குடல்.]

கொழுப்புக்கேடு *kol̤uppu-k-kēḍu,* பெ.(n.) கொழுப்புச் சத்து அழிதல்; necrosis of the fatty tissue (சா.அக.).

மறுவ. கொழுப்புளுத்தல்.

[கொழுப்பு + கேடு.]

கொழுப்புக்கொள்(ளு)-தல் *kol̤uppu-k-kol(lu)-,* 10 செ.கு.வி. (v.i.) 1. கொழுத்தல்; getting fat. 2. கொழுப்பை இழுத்துக்கொள்ளல்; absorbing fat (சா.அக.).

[கொழுப்பு + கொள்(ளு).]

கொழுப்புச்சதை *kol̤uppu-c-cadai,* பெ.(n.) ஊழற்சதை; flabbiness.

[கொழுப்பு + சதை.]

கொழுப்புப்பிடி-த்தல் *kol̤uppu-p-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) கொழுப்புண்டாதல்; formation of fat (சா.அக.).

[கொழுப்பு + பிடி.]

கொழுப்புப்பிண்டம் *kol̤uppu-p-piṇḍam,* பெ.(n.) 1. கொழுப்புத் திரட்சிப் பிணங்கள் தண்ணீரில் நாட்படக் கிடந்து அழுகுவதாலும், ஈர மண்ணில் புதைந்து கிடப்பதாலும் உண்டாகும் மெழுகு போன்ற பூசான் படிவு; a soft, unctuous or waxy substance formed from the decomposition of dead bodies under certain circumstances as long immersion in water, burial in moist earth etc., adipocere. 2. உறைந்த கொழுப்புருண்டை; a lump of congealed fat (சா. அக.).

[கொழுப்பு + பிண்டம்.]

கொழுப்புமடி *kol̤uppu-maḍi,* பெ.(n.) பால் தராத பெருத்த மடி; fleshy udder of a cow, not yielding.

தெ. க்ரொவ்வு, கொவ்வு.

[கொழுப்பு + மடி.]

கொழுப்புமயக்கம் *kol̤uppu-mayakkam,* பெ.(n.) உடம்பில் கொழுப்பினால் உண்டாகும் மயக்கம் அல்லது மூர்ச்சை; faintness or swooning due to fat in the system (சா.அக.).

[கொழுப்பு + மயக்கம்.]

கொழுப்புமிஞ்சுதல் *koḻuppu-miñjudal,* 5 செ.குன்றாவி.(v.t.) உடம்பில் கொழுப்பு அளவுக்கு மீறிச் சேர்தல்; excessive accumulation of fat in the body - obesity (சா.அக.).

மறுவ. கொழுப்பேறல்.

[கொழுப்பு + மிஞ்சுதல்.]

கொழுப்புமூத்திரம் *koḻuppu-mūttiram,* பெ.(n.) குண்டிக்காய் நோயினால் ஏற்படும் கொழுப்புக் கலந்த சிறுநீர்; urine marked by the presence of fat in it (சா.அக.).

[கொழுப்பு + மூத்திரம்.]

கொழுப்புளு-த்தல் *koḻuppuḻu-,* 14 செ.கு.வி.(v.i.) கொழுப்புச்சத்துச் சிதைதல்; necrosis of the fatty tissue (சா.அக.).

[கொழுப்பு + உளு.]

கொழும்காகதாளி *koḻum-kāgatāḷi,* பெ.(n.) ஆச்சா; Ceylon ebony-Diospyros ebenum (சா.அக.).

[கொழு → கொழும் + காகதாளி.]

கொழும்பு *koḻumbu,* பெ.(n.) இலங்கையின் தலைநகரம் (இ.வ.); modern capital of Sri Lanka. *"கயக்காவி நாறுங் கொழும்பிற் ப்ரசண்டா" (தமிழ்நா.146).*

[கலம் + கோம்பு – கலக்கோம்பு (கப்பல் தங்கும் கடல்முகம்) கலம்பு → கொலம்பு → கொழும்பு (கொ.வ.).]

கொழும்புக்கிழங்கு *koḻumbu-k-kiḻaṅgu,* பெ.(n.) ***கொழும்புவேர்*** பார்க்க; see *koḻumbu-vēr* (யாழ்ப்.).

[கொழும்பு + கிழங்கு.]

கொழும்புக்கொட்டை *koḻumbu-k-koṭṭai,* பெ.(n.) இலங்கையிற் பயிராகும் காப்பிக்கொட்டை; Ceylon coffee.

மறுவ. கொழும்புக்கோப்பி.

[கொழும்பு + கொட்டை.]

கொழும்புக்கொட்டைக்களா *koḻumbu-k-koṭṭai-k-kaḷā,* பெ.(n.) 1. இலங்கைக் கொட்டைக்களா; Ceylon plum. 2. ***கொழும்புப்பழம்*** பார்க்க; see *koḻumbu-p-paḻam.*

[கொழும்பு + கொட்டை + களா.]

கொழும்புகா *koḻumbugā,* பெ.(n.) நன்னாரி வேர்; Indian sarsaparilla (சா.அக.).

[கொழும் + புகா (உண்ணத்தக்கது).]

கொழும்புகை *koḻum-bugai,* பெ.(n.) நறும்புகை; perfume (சா.அக).

[கொழும் + புகை.]

கொழும்புச்சவ்வரிசி *koḻumbu-c-cavvariśi,* பெ.(n.) இலங்கைப் பனையிலிருக்கும் சவ்வரிசி; Ceylon sago, a product of Ceylon sago-palm (சா.அக.).

[கொழும்பு + சவ்வரிசி.]

கொழும்புச்சாராயம் *koḻumbu-c-cārāyam,* பெ.(n.) தென்னங்கள்ளினின்று வாலையி லிட்டிறக்கிய சாராயம்; Colombo arrack distilled from the juice of coconut palm (சா.அக.).

[கொழும்பு + சாராயம்.]

கொழும்புச்சிவகரந்தை *koḻumbu-c-civa-karandai,* பெ.(n.) சுரக்கரந்தை; fever toolsy or Ceylon toolsy (சா.அக.).

[கொழும்பு + சிவகரந்தை.]

கொழும்புச்சேவகன் *koḻumbu-c-cēvagaṉ,* பெ.(n.) இலங்கையில் பயிராகும் சிற்றாமுட்டி; Ceylon pavonia (சா.அக.).

[கொழும்பு + சேவகன்.]

கொழும்புத்தேங்காய் *koḻumbu-t-tēṅgāy,* பெ.(n.) ஈழத்துத் தேங்காய்; Ceylon coconut (சா.அக.).

[கொழும்பு + தேங்காய்.]

கொழும்புத்தேயிலை *koḻumbu-t-tēyilai,* பெ.(n.) 1. இலங்கைத் தேயிலை; Ceylon tea or Indian tea. 2. கருக்குவாலி; deccany olive wood (சா.அக.).

[கொழும்பு + தேயிலை.]

கொழும்புநார்த்தை *koḻumbu-nārattai,* பெ.(n.) ஈழத்து நாரத்தை; green orange of Ceylon.

[கொழும்பு + நார்த்தை.]

கொழும்புநாவல் *koḻumbu-nāval,* பெ.(n.) வெண்ணாவல்; white jammon.

[கொழும்பு + நாவல்.]

கொழும்புப்பட்டை *koḻumbu-p-paṭṭai,* பெ.(n.) ஈழத்து இலவங்கப்பட்டை; Ceylon cinnamon.

[கொழும்பு + பட்டை.]

கொழும்புப்பழம் *koḻumbu-p-paḻam,* பெ.(n.) மோரீசு கொட்டைப் பழம் எனவும் வழங்கப்படும் ஈழத்துக் கொட்டைக்களா; Ceylon plum-flacourtia

mamontechi. It is also known as Mauritius plum. The nut of this fruit ground with turmeric is prescribed for lying in women to prevent absorption of moisture in the system.

[கொழும்பு + பழம்.]

மறுவ. மோரீசு கொட்டைப்பழம்.

இதனை மஞ்சளுடன் அரைத்துப் பூசக் கருவுயிர்த்த பெண்களுக்கு ஈரம் தங்காது. இதன் முள் அம்மைப்பால் எடுக்க உதவும்.

கொழும்புப்பனை *kolumbu-p-panai,* பெ.(n.) ஈழநாட்டுத் தாளிப் பனை; Ceylon fan tree.

[கொழும்பு + பனை.]

கொழும்புப்பாக்கு *kolumbu-p-pākku,* பெ.(n.) ***கொட்டைப்பாக்கு*** பார்க்க; see *kottai-p-pākku.*

[கொழும்பு + பாக்கு.]

கொழும்புப்பாசி *kolumbu-p-pāsi,* பெ.(n) இலங்கைக் கடற்பாசி; Ceylon moss.

[கொழும்பு + பாசி.]

கொழும்புப்பிசின் *kolumbu-p-pisin,* பெ.(n.) சோலைப் புளி; Ceylon gamboge (சா.அக.).

[கொழும்பு + பிசின்.]

கொழும்புமுல்லை *kolumbu-mullai,* பெ.(n.) நந்தியா வட்டம்; Ceylon jasmine (சா.அக.).

[கொழும்பு + முல்லை.]

கொழும்புவேர் *kolumbu-vēr,* பெ.(n.) சீனவேர்; China root.

[கொழும்பு + வேர்.]

கொழும்புவைரம் *kolumbu-vairam,* பெ.(n.) ஈழ நாட்டு வைரம் போன்ற ஒரு கல்; a mineral of Ceylon esteemed in jewellery (சா.அக.).

மறுவ. துவரைமல்லி.

[கொழும்பு + வைரம்.]

கொழுமகொண்டான் *koluma-kondān,* பெ.(n.) திண்டுக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tindukkal Dt.

[கொல்லன் → கொலுவன் → கொலுமன் → கொழுமன் + கொண்டான்.]

கொழுமடை *kolu-madai,* பெ.(n.) திருநெல்வேலி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thirunelveli Dt.

[கொழு + மடை.]

கொழுமம் *kolumam,* பெ.(n.) கோவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Kōvai* Dt.

[கொழு → கொழுமம்.]

கொழுமரம் *kolu-maram,* பெ.(n.) செம்மரம் (மலை.); Coramandal redwood.

[கொழு + மரம். கொழு - செழுமை, பருமை.]

கொழுமாமிகம் *kolu-māmigam,* பெ.(n.) பேரவுரி; a variety of Indigo plant with large leaves (சா.அக.).

[கொழும் + ஆமிகம்.]

கொழுமிச்சை *kolumiccai,* பெ.(n.) 1. நாரத்தை; bitter orange (மலை.). 2. கிச்சிலி வகை; sylhet orange.

[கொழு → கொழுமித்தை → கொழுமிச்சை.]

கொழுமீதி *kolu-midi,* பெ.(n.) அரசுவரிபோக நில உடைமையாளர் அடையும் நில வருமானம் (W.G.); net income from land after paying land Revenue.

[கொழு - ஏர், உழவு. கொழு + மீதி.]

கொழுமீன் *kolu-min,* பெ.(n.) 1. கழிமீன் வகை (இ.வ.); backwater fish. *"இருங்கழிவாய்க் கொழுமீ னுண்ட வன்னங்களே"* *(திருக்கோ.188).* 2. எண்ணெய்ச் சத்துள்ள நெத்திலி மீன்; anchovy fish.

ம. கொழுமீன்.

[கொழு + மீன்.]

கொழுமுகை *kolu-mugai,* பெ.(n.) கொழுவிய அரும்பு; fragrant tender shoot (வேளாண்.கலை).

[கொழு + முகை.]

கொழுமுதல்[1] *kolu-mudal,* பெ.(n.) மரத்தின் பருத்த அடிப்பாகம் (இ.வ.); stout stem of a tree. *"கொழு முதற் றெங்கொடு"* *(பெருங்.மகத.19:40).*

[கொழு + முதல். கொழு - திரண்ட, பருத்த. முதல் - அடிப்பகுதி]

கொழுமுதல்[2] *kolu-mudal,* பெ.(n.) நில வருவாயில் அரசு வரிபோக நிலவுரிமையாளர் பெறும் பங்கு (யாழ்.அக.); owner's share of the produce of a field after deducting the government dues.

[கொள்முதல் → கொளுமுதல் → கொழுமுதல்.]

கொழுமுறி *kolu-muri*, பெ.(n.) இளந்தளிர்; tender shoot (சா.அக.).

[கொழு + முறி.]

கொழுமை *kolumai*, பெ.(n.) 1. செழுமை (பிங்.); fertility. 2. இளமை (சிலப்.4:39); freshness. 3. அழகு (பொருந.26); beauty. 4. நிறம் (திவா.); colour. 5. குளிர்ச்சி (மதுரைக்.406); coolness.

- **Gk.** kallos, kolos.

[கொழு → கொழுமை.]

கொழுமோர் *kolu-mōr*, பெ.(n.) குழந்தைகள் திடீரென்று கொண்ட அச்சத்தைப் போக்கக் காய்ச்சிய கொழுவைத் தோய்த்துக் கொடுக்கும் மோர் (இ.வ.); buttermilk heated by thrusting a hot iron spoon into it, and given to children when affected with sudden fright.

[கொழு + மோர்.]

கொழுலாபம் *kolu-lābam*, பெ.(n.) ***கொழுப்பயன்*** பார்க்க; see *kolu-p-payan*.

மறுவ. கொழுப்பயன், கொழு ஆதாயம்.

[கொழு = ஏர், உழவு. கொழு + லாபம்.]

கொழுவடி-த்தல் *kolu-vadi-*, 4 செ.கு.வி. (v.i.) கலப்பை முனையில் பொருத்தப்படும் கொழுக் கம்பியைக் கூராக்குதல்; to make sharp the iron rod of a plough.

[கொழு + வடி-.]

கொழுவனூர் *koluvanūr*, பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Pudukkottai Dt.

[கொழுவன் + ஊர்.]

கொழுவாப்பு *kolu-v-āppu-*, பெ. (n.) கலப்பையின் கொழுக் கழன்று போகாமலிருக்க அடிக்கும் ஆப்பு; wedge used to tight plough share.

ம. கொழுவாப்பு.

[கொழு + ஆப்பு]

கொழுவாரம் *kolu-vāram*, பெ.(n.) குடியானவனுக்கு உரிய வாரம்; cultivators share of the produce. *மேல்வாரம் நீக்கிக் கொழுவாரத்தால் பூசை நடக்கும் (S.I.I.VIII.234).*

[கொழு + வாரம்.]

கொழுவாரி *kolu-vāri-*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கொழு + வாரி (விளைச்சல்).]

கொழுவிறக்கு-தல் *kolu-v-irakku-*, 4 செ. குன்றாவி.(v.t.) வேளாண்பணி தொடங்குதல்; to start agricultural activities.

ம. கொழுவிறக்குக.

[கொழு + இறக்கு-.]

கொழுவு[1] *koluvu-*, பெ.(n.) ***கொழுகொழுப்பு*** பார்க்க; see *kolu-koluppu*.

[கொழு → கொழுவு.]

கொழுவு[2]**-தல்** *koluvu-*, 5 செ.குன்றாவி.(v.t.) தொங்கவிடுதல்; to hang. *"குடையைத் தோளில் கொழுவிக் கொண்டு புறப்பட்டான்" (கிரி.).*

[கொழு → கொழுவு.]

கொழுவுகதவு *koluvu-kadavu*, பெ.(n.) கீற்கதவு; door with hinges.

[கொழுவு + கதவு.]

கொழுவுகோல் *koluvu-kōl*, பெ.(n.) கொழுகொம்பு (இ.வ.); stick or pole for supporting a creeper. *"கொழுவு கோலுறாக் கொடியென" (வரத.பாகவத. நாரசிங். 64).*

[கொழுவு + கோல்.]

கொழுவை-த்தல் *kolu-vai-*, 4 செ.கு.வி. (v.i.) ***கொழுவிறக்கு-தல்*** பார்க்க; see *kolu-v-irakku-*.

ம. கொழுவய்க்குக.

[கொழு + வை-.]

கொழை *kolai*, பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Cudalur Dt.

[குழை → கொழை.]

கொள்(ளு)[1]**-தல்** *kol(lu)-*, 10 செ.குன்றாவி. (v.t.) 1. கையில் எடுத்துக்கொள்ளுதல் (இ.வ.); to seize. *"கொண்ட வாளொடும்" (சீவக.430).* 2. பெறுதல் (இ.வ.); to receive as a gift. *"நல்லா றெனினுங் கொளறீது" (குறள்.222).* 3. விலைக்கு வாங்குதல் (இ.வ.); to buy. *"கோதையினுங் கொள்வார்" (நைடத.நகரப்.18).* அறப்படித்தவன் அங்காடி போனால் விற்கவும்மாட்டான், கொள்ளவும் மாட்டான் (பழ). 4. உரிமையாகக் கொள்ளுதல் (இ.வ.); to acquire. *"விடலையைக் காண வோடி...வீதி கொண்டார்" (சீவக.457).* 5. திருமணம் செய்தல் (இ.வ.); to marry. *"தாங்கொண்ட மனையாளை" (நாலடி.3).* 6. கவர்தல் (இ.வ.); carry off.

"மனையாளை மாற்றார் கொள" (நாலடி.3). 7. தன்னுட் கொள்ளுதல் (இ.வ.); to contain. "சிதரரிக் கண்கொண்ட நீர்" (நாலடி. 394). 8. முகத்தல் (இ.வ.); to draw in. "குணகடல் கொண்டு குடகடன் முற்றி" (மதுரைக்.238). 9. கற்றுக்கொள்ளுதல் (இ.வ.); to learn. "கொள்ளுநர் கொள்ள" (கல்லா.11:21). 10. கருதுதல் (இ.வ.); to consider. 'யார்க்குங்கொடுத் தியெனக் கொள்கின்றிலம்' (இலக்.வி.650, உரை). 11. நன்கு மதித்தல் (இ.வ.); esteem. "கொளப்பட்டே மென்றெண்ணி" (குறள். 699). 12. கொண்டாடுதல் (இ.வ.); to celebrate. "தண்பதங் கொள்ளுந் தலை நாட் போல" (சிலப்.6:160). 13. ஒப்பளித்தல் (இ.வ.); approve. "உய்ஞ்சன னிருத்தலு முலகங் கொள்ளுமோ" (கம்பரா.உருக்கா.17). 14. மேற் கொள்ளுதல் (இ.வ.); observe. "குடிப்பிறந்தார் குன்றா வொழுக்கமாக் கொண்டார்" (நாலடி.143). 15. மனம் பொறுத்தல் (தொல்.பொருள்.147, உரை, ப.658); endure. 16. ஒத்தல்; resemble (இ.வ.). "வண்டினம் யாழ்கொண்ட கொளை" (பரிபா.11:125). 17. பொருந்துதல் (இ.வ.); befit. "கொள்ளாத கொள்ளா துலகு" (குறள். 470). 18. உடலிற் காயம்படுதல்; hurt. கல்லுக் காலிற் கொண்டது.

ம. கொள்ளுக; க. கொள், கொளு, கொள்ளு; தெ. கொனு; து. கொணுனி; கோத. கொள்; துட. க்விஸ்; குட. கொள்ளு; நா. கொச; கொய்; கூ. கொட; குவி. கொர்ச்சினை; கொலா. கொச்ல; பட. கொண்ணு.

E. get; Mod. geten; ON. get; OE. gietan; L. hendere; Alb. gen; Weld. gannu.

[குல் → குள் → கொள்.]

கொள்[2] *kol-*, து.வி.(aux.v.) 1. தற்பொருட்டில் வரும் ஒரு துணைவினை; an auxilary which makes a verb reflexive as in. பிடித்துக்கொள். 2. எதிர் மறை ஏவல் ஒருமை வினையோடு சேர்க்கப்படும் ஓர் அசை (கலித்.115, உரை); an expletive added to neg.imp.sing.verb, as in அஞ்சாதே கொள்.

[குல் → குள் → கொள்.]

கொள்[3] *kol*, பெ.(n.) 1. காணம் (பிங்.); a shrub. 2. குடைவேல்; umbrella thorn-babul. "உண்ணா வர கொடு கொள்வித் தின்று" (வெ.6: 26, கொளு.). 3. முற்காலத்தில் வழங்கிய சிறு நிறையளவு (தொல். எழுத்து. 164, உரை); a small measure of weight used in ancient times.

[குல் (வளைதல்) → குள் → கொள்.]

கொள்[4] *kol*, பெ.(n.) வளைந்த காயுள்ள பயற்றுவகை; horse gram. "காயுங் கோணக்காய் சொல்லடா மைத்துனா கதையும் விடுவித்தேன் கொள்ளடா மைத்துனா" (விடுகதை). 'கொள்' என்றால் வாயைத் திறக்கிறது; கடிவாளம் என்றால் வாயை மூடுகிறதா? (பழ).

ம. கொள்; து. குடு; பட. கொள்ளு; பர். கொல்; Skt. kulatta.

மறுவ. காணம்.

[குள் → கொள் (வே.க.163).]

கொள்கலம் *kol-kalam*, பெ.(n.) 1. பண்டம் இடுங்கலம் (இ.வ.); receptacle. "இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ" (குறள். 1029). 2. பனை யோலை, மூங்கில் இவற்றால் ஆகிய கூடை; basket made of palm leaf or bamboo.

[கொள் + கலம்.]

கொள்கிரயம் *kol-kirayam*, பெ.(n.) 1. **கொள்முதல்** பார்க்க; see *kol-mudal*. 2. விலைக்குக் கொண்ட பொருள்; purchase, anything purchased.

[கொள் + கிரயம்.]

கொள்கை *kolgai*, பெ.(n.) 1. பெறுகை; taking. "பலியிடிற் கொள்கை பழுது" (சைவச. பொது.338). 2. கோட்பாடு; doctrine. "குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்றார்" (நாலடி.141). 3. செயற்பாட்டுத்திட்டம்; policy. அரசின் புதிய கல்விக் கொள்கை நன்றாக இருக்கிறது (உ.வ.). 4. நெறிமுறை; principle, tenet, doctrine. 5. நோன்பு; vow. "தாவில் கொள்கை" (திருமுருகு.89). 6. ஒழுக்கம்; conduct. "குலந்தீது கொள்கை யழிந்தக் கடை" (நான்மணி.94). 7. நிகழ்ச்சி; event. "புகுந்த கொள்கை யுடனுறைந் தறிந்தா னென்ன" (கம்பரா.முதற்போர்.132). 8. இயல்பு; quality. "கொம்பினின்று நுடங்குறு கொள்கையார்" (கம்பரா.கிளை.10). 9. செருக்கு; pride. "தங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து" (சிலப்.5:145). 10. நட்பு; fondness. 11. ஏன வகை; a kind of vessel (I.M.P.Pd.300).

[கொள் + கை.]

கொள்கைக்கண்ணோட்டம் *kolgai-k-kannōttam*, பெ.(n.) கருத்தளவில் நோக்குதல்; theoretical sense.

[கொள்கை + கண்ணோட்டம்.]

கொள்கைப்பற்று *kolgai-p-parru*, பெ.(n.) கொண்ட கோட்பாட்டின்மேல் கொண்டுள்ள பிடிப்பு; attachment to principle.

மறுவ. கொள்கைப் பிடிப்பு.

[கொள்கை + பற்று.]

கொள்கையிடம் *kolgai-y-idam*, பெ.(n.) தவச்சாலை; mutt. *"கோலங் குயின்ற கொள்கை யிடங்களும்" (மணிமே.28:67).*

[கொள்கை + இடம்.]

கொள்கொம்பு *kol-kombu*, பெ.(n.) 1. கொழுகொம்பு (இ.வ.); supporting post. *"கொள்கொம் பொடியக் கொடிவீழ்ந் ததுபோல்" (கம்பரா. சடாயுவு.130).* 2. சார்பு; dependence. 3. புகலிடம்; place of refuge, asylum.

[கொள் + கொம்பு.]

கொள்பு *kolbu*, பெ.(n.) கொள்கை; theory.

[கொள் + பு – கொள்பு (படைத். பாவாணர்).]

கொள்பொற்றி *kol-porri*, பெ.(n.) திருமேனிகட்குக் காதணியாகச் சாத்தும் பொன் அணிகலன்; gold ear ornament to be worn by idol. *"திருக்காதில் சாத்தும் கொள்பொற்றிநால்" (தெ.கல்.தொ.5. கல்.644).*

[கொள் + பொற்றி.]

கொள்முதல் *kol-mudal*, பெ.(n.) 1. வாங்கின விலை; cost price. 2. பெருமளவில் வாங்குதல்; procurement as a lot. தேவையான சருக்கரையைக் கொள்முதல் செய்ய வெளிநாடு சென்றிருக்கிறார் (உ.வ.).

[கொள் + முதல்.]

கொள்வரி *kol-vari*, பெ.(n.) நெல்லாய வகை, தவசமாகப் பெறும் வரி வகை; a tax in kind (S.I.I.IV,195).

[கொள் + வரி.]

கொள்வனவு *kol-vanavu*, பெ.(n.) 1. கொள்ளுகை; receiving, taking, borrowing, buying. 2. பெண் கொள்ளுகை; taking in marriage.

மறுவ. கொள்வினை.

[கொள்வினை → கொள்வனவு.]

கொள்வனை *kolvanai*, பெ.(n.) 1. கொள்ளுகை; buying, borrowing. 2. பெண் கொள்ளுகை; taking in marriage.

[கொள்வினை → கொள்வனை.]

கொள்வனைகொடுப்பனை *kolvanai-koduppanai*, பெ.(n.) 1. கொடுக்கல் வாங்கல்; borrowing and lending. 2. பெண்ணைக் கொடுத்துப் பெண்ணை எடுக்கும் திருமணத் தொடர்பு; giving and taking in marriage, intermarrying.

மறுவ. கொள்வினை கொடுப்பினை.

[கொள்வனை + கொடுப்பனை.]

கொள்விலை *kol-vilai*, பெ.(n.) ***கொள்முதல்*** பார்க்க; see *kol-mudal.*

[கொள் + விலை.]

கொள்விலைக்காணி *kolvilai-k-kani*, பெ.(n.) விலைக்கு வாங்கின நிலம்; land acquired by purchase.

[கொள்விலை + காணி.]

கொள்வினை *kol-vinai*, பெ.(n.) 1. கொள்ளுகை; buying, borrowing. 2. பெண் கொள்ளுகை; taking in marriage.

[கொள் + வினை.]

கொள்வினை கொடுப்பினை *kolvinai-koduppinai*, பெ.(n.) பெண் கொடுத்தோ பெண்ணெடுத்தோ செய்துகொள்ளும் உறவு; giving or taking a bride in marriage. அடுத்த ஊரில் நாங்கள் கொள்வினை கொடுப்பினை வைத்துக்கொள்வதில்லை (உ.வ.).

மறுவ. கொள்வனை கொடுப்பனை, கொண்டு கொடுத்தல்.

[கொள்வினை + கொடுப்பினை.]

கொள்வோன் *kolvon*, பெ.(n.) 1. வாங்குவோன்; buyer one who accepts anything. 2. கற்போன்; student. *"கொள்வோன் கொள்வகை யறிந்து" (நன்.பொது.36).* 3. நான்காம் வேற்றுமை; dative case. *"பலவு மறைந்தனர் கொள்வோன்" (இலக்.கொத்.36).*

[கொள் + (ஆன்) ஒன்.)]

கொள்ள *kolla*, வி.எ. (adv.) 1. இன்னும்; further on. 2. நிரம்ப; as much as required. உணவு கொள்ளக் கிடைத்தது (இ.வ.). 3. காரணப் பொருளிலேனும் காலப் பொருளிலேனுமுள்ள செயவெனெச்சத்துடன் கூடி வருந் துணைவினை; an auxiliary used, for the sake of emphasis, along with another verbal participle denoting reason or time. நான் போகக் கொள்ளக் காரியம் நடந்தது.

[கொள் + அ.]

கொள்ளட்டு *kollattu*, பெ.(n.) 1. செடிவகை; ciliate-leaved yellow horse-gram. 2. உண்ணுவதற்காகக்

சமைக்கப்பட்டது; that which is cooked for eating.

[கொள் + அட்டு. (அடு → அட்டு) அடுதல் = சமைத்தல்.]

கொள்ளத்தநல்லூர் *kollatta-nallūr,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[கொள்ளத்தன் + நல்லூர்.]

கொள்ளப்படு¹-தல் *kolla-p-padu-,* 20 செ.குன்றா வி. (v.t.) மனத்துக் கொள்ளுதல்; to take to heart. *"கொள்ளப் படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே" (திருக்கோ.87).*

[கொள் + அ + படு-.]

கொள்ளப்படு²-தல் *kolla-p-padu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. நன்கு மதிக்கப்படுதல்; to be held in esteem. *"கொளப்பட் டே மென்றெண்ணி" (குறள். 699).* 2. ஒப்பளிக்கப்படுதல்; to be approved.

[கொள் + அ + படு-.]

கொள்ளம் *kollam,* பெ.(n.) குழை சேறு; mud, slime. *"பாசடை பூத்த கொள்ளம் புகுந்து" (கல்லா.73:17), (பிங்.).*

ம. கொள்ளம்.

[குள் → கொள் → கொள்ளம்.]

கொள்ளம்பாக்கம் *kollam-bākkam,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[கொள்ளன் + பாக்கம்.]

கொள்ளம்மை *kollammai,* பெ.(n.) சுரம், பிதற்றல், மிகுகுளிர் முதலிய குணங்களுண்டாகி மூன்றாம் நாளில் தலையில் குருத்தோன்றிப் பிறகு குரு முதிர்ந்து 13ஆம் நாளில் இறங்கி, பக்குகள் உதிரும் ஓர் அம்மை; a kind of small-pox marked by eruptive fever, raving , delirium, fits etc. In this the eruptions make their appearence on the third day; and then pimples are developed to the size of horse-gram and become vesicles with watery head; and lastly they dry upon or about the 13th day when scabs fall of. cf. பயற்றம்மை (சா.அக.).

[கொள் + அம்மை.]

கொள்ளல் *kollal,* பெ.(n.) 1. உட்கொள்ளல்; taking in. 2. சாப்பிடுதல் அல்லது குடித்தல்; eating or drinking. 3. உயிர் கொள்ளல்; animation. 4. வேர் கொள்ளல்; taking root. 5. நோய் கொள்ளல்; being affected with illness; contracting a disease. 6. ஏனம் முதலியவற்றினுள்ளே அடங்குதல்; to contain in a vessel etc. 7. மனத்துக்குப் பிடித்தல்; to be contained as in a vessel, taking mind (சா.அக.).

ம. கொள்ளல் (ஏற்றுக்கொள்ளுதல், வாங்குதல்).

[கொள் + அல்.]

கொள்ளளவு *kol-alavu,* பெ.(n.) 1. பிடிக்குமளவு; as much as can be held-capacity. 2. உட்கொள்ளுமளவு; as much quantity as could be swallowed or eaten (சா.அக.).

[கொள் + அளவு.]

கொள்ளற்பாடு *kollar-pādu,* பெ.(n.) மேன்மை (யாழ்ப்.); worthiness.

[கொள்ளல் + பாடு.]

கொள்ளன் *kollan,* பெ.(n.) 1. குதிரைக் கொள்; horse-gram. 2. சிறுவிடுகொள் அல்லது பெருவிடு கொள்; an unknown plant probably referring to Indigo seed, as a collyrium in diseases of the eyes. 3. பண்டைக் காலத்து நிறைஅளவு; a small weight for weighing used in olden days. 4. கொள்ளுத் தவசம்; gram in general (சா.அக.).

[கொள் + அன்.]

கொள்ளனூர் *kollanūr,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvallur Dt.

[கொள்ளன் + ஊர்.]

கொள்ளாக்குமரி *kollā-k-kumari,* பெ.(n.) திருமணம் செய்து கொடுக்கப்படாத பெண்; un married girl. இவள் கொள்ளாக்குமரி (நெல்லை.).

[கொள்ளா + குமரி.]

கொள்ளாக்குமரி என்பதை கொள்ளாக்குமரு என்பது நெல்லை வழக்கு.

கொள்ளாக்கொள்ளி *kollā-k-kolli,* பெ.(n.) தணியாத உண்டிவிருப்ப முள்ளவன் (இ.வ.); a person with insatiable hunger for food.

[கொள்ளா(து) + கொள் + இ.]

கொள்ளாக் கொள்ளை *kollā-k-kollai,* பெ.(n.) **கொள்ளாத கொள்ளை** பார்க்க; see *kollāda-kollai.*

[கொள்ளாத + கொள்ளை.]

கொள்ளாத கொள்ளை *kollāda-kollai,* பெ.(n.) மிகுதி (யாழ்ப்.); plenty.

[கொள்ளாத + கொள்ளை.]

கொள்ளாதசிறை *kollāda-śirai,* பெ.(n.) அடிமை போல் உழைப்பவ-ன்-ள் (வின்.); slave-like, assiduous person.

[கொள்ளாத (மிகுந்த) + சிறை.]

கொள்ளாத புகழ் *kollāda-pugal,* பெ.(n.) அளவு கடந்த புகழ்; unbounded - praise.

[கொள்ளாத → கொள்ளா + புகழ்.]

கொள்ளாமை *kollāmai,* பெ.(n.) 1. மிகை; excessiveness. 2. பகை; enmity. 3. மனத்துக்குப் பிடியாமை; disagreement.

[கொள் + ஆ + மை.]

கொள்ளார்[1] *kollār,* பெ.(n.) 1. மனம் பொறாதவர்; envious person (இ.வ.). *'பொறாதாரைக் கொள்ளா ரென்பவாகலின்' (தொல்.பொருள்.147,உரை).* 2. பகைவர் (இ.வ.); enemies, foes. *"கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்" (தொல்.பொருள்.67).*

[கொள் + ஆர் - கொள்ளார். (ஆ- எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது.)]

கொள்ளார்[2] *kollār,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கொள்ளாரை → கொள்ளார்.]

கொள்ளி *kolli,* பெ.(n.) 1. ***கொள்ளிக்கட்டை*** பார்க்க; see *kolli-k-kattai.* *"புனவர் கொள்ளியில்" (ஐங்குறு. 295).* 2. நெருப்பு; fire. *"கைக்கொள் கொள்ளியர்" (நெடுநல்.8).* 3. பொறாமையும் கடுஞ்சீற்றமுள்ளவன்; jealous, quick - tempered person. 4. கலகம் மூட்டுபவன் (இ.வ.); one who kindles strife. கொள்ளி நாக்கன், வாய் திறந்தால் குடும்பம் அழிந்துவிடும் (பழ.). 5. கொள்ளி வைப்பவன், மகன் (இ.வ.); son. 6. எருமை நாக்கி (மலை.); buffalo - tongue milk hedge. கொள்ளியை இழுத்துப்போட்டால் கொதிக்கிறது அடங்கிவிடும் (பழ).

ம., பட.கொள்ளி; **க.** கொன்னி, கொன்னெ; **து.** கொள்ளி, கொல்லி; **கோத.** கொன்ய்; **து.** க்வின்ய்.

[குல் → குள் → கொள் → கொள்ளி.]

கொள்ளிஅறை *kolli-arai,* பெ.(n.) சுடுகாடு; burning ground. *"கொள்ளி அறையிற் கொளுந் தாமற் காக்கலாம்" (திருமந்.591).*

[கொள்ளி + கட்டை.]

கொள்ளிக்கட்டை *kolli-k-kattai,* பெ.(n.) எரிகட்டை; firebrand.

[கொள்ளி + கட்டை.]

கொள்ளிக்கட்டைத் தேக்கு *kolli-k-kattai-t-tekku,* பெ.(n.) பீநாறி; woolly-leaved firebrand teak (L.).

[கொள்ளிக்கட்டை + தேக்கு.]

கொள்ளிக்கட்டை நண்டு *kolli-k-kattai-nandu,* பெ.(n.) நீளுருட்டாய்த் தோன்றும் கடல் நண்டு; a kind of sea crab of cylinderical shape (மீன்.பிடி.தொ.).

[கொள்ளிக்கட்டை + நண்டு.]

கொள்ளிக்கண் *kolli-k-kan,* பெ.(n.) தீய கண்; evil eye.

[கொள்ளி + கண்.]

கொள்ளிக்கண்ணன்/கண்ணி *kolli-k-kannan/kanni,* பெ.(n.) கொடிய பார்வையை யுடையவன்/ள்; man or woman with fiery, evil eyes (சா.அக.).

[கொள்ளி + கண்ணன்.]

கொள்ளிக்கரப்பான் *kolli-k-karappān,* பெ.(n.) குழந்தைகட்கு வரும் கரப்பான்வகை; a skin disease of children characterised by the development of blobs upon different parts of the body.

[கொள்ளி + கரப்பான்.]

கொள்ளிக்கருவாடு *kolli-k-karuvādu,* பெ.(n.) ஒருவகைக் கருவாடு; a kind of salted and dried fish (பதார்த்த. 929).

[கொள்ளி + கருவாடு.]

கொள்ளிக்கன்னி *kolli-k-kanni,* பெ.(n.) வன்னி வாகை; fragrant Acacia.

மறுவ. காட்டுத்துரிஞ்சில், சிலையூஞ்சல், கருவாகை.

[கொள்ளி + கன்னி.]

கொள்ளிக்காடு *kolli-k-kādu,* பெ.(n.) தேவாரம் பெற்ற சிவப்பதிகளில் ஒன்று; a Śiva temple on which Thevaram stanzas exist.

[கொள்ளி + காடு.]

கொள்ளிக்கால் *kolli-k-kāl,* பெ.(n.) 1. ஒற்றைக் கால் வெளுத்திருத்தலாகிய குதிரைக் குற்றம்; the defect of a horse in having one of its legs white. *"நஞ்சபாதங் கொள்ளிக்கால் வெள்ளிக் கண்" (திருவாத.பு. குதிரையிட்.35).* 2. நல்வினை வயப்படாத கால்; unlucky foot. அவன் கொள்ளிக் காலுள்ளவன் (உ.வ.).

ம. கொள்ளிக்கால்.

[கொள்ளி + கால்.]

கொள்ளிக்காற் குதிரை *kollikkār-kudirai,* பெ.(n.) ஒரு கால் வெள்ளையான குதிரை; a horse having white in one leg.

[கொள்ளிக்கால் + குதிரை.]

கொள்ளிக்கிழங்கு *kolli-k-kilangu,* பெ.(n.) மரவள்ளிக் கிழங்கு; tapioca tuber.

ம. கொள்ளிக்கிழங்ஙு.

[கொள்ளி + கிழங்கு.]

கொள்ளிக்குடம் *kolli-k-kudam,* பெ.(n.) புது மட்குடம்; new terracotta water vessel. *"ஆற்றுத் தண்ணீ ரமுது தூரணி கொள்ளிக்குடத்தால் நிசதி ஒரு குடம்" (S.I.I. XIII.88-6 p.42) (கி.பி.9854).*

[கொல் → கொல்லி → கொள்ளி + குடம்.]

கொள்ளிக்கொட்டான் *kolli-k-kottān,* பெ.(n.) ***கொள்ளியெறும்பு*** பார்க்க; see *kolli-erumbu.*

[கொள்ளி + கொட்டான்.]

கொள்ளிக்கொம்பு *kolli-k-kombu,* பெ.(n.) மாட்டுக் கொம்பி லொருவகை; a kind of horn feature among cows.

[கொள்ளி + கொம்பு.]

கொம்பு முனையில் வெள்ளையிருந்தால் ஆகாது என்பர்.

கொள்ளிகை *kolligai,* பெ.(n.) ***எருமை நாக்கி*** பார்க்க; see *erumai-nākki* (சா.அக.).

[கொள் → கொள்ளிகை.]

கொள்ளிச்சட்டி *kolli-c-catti,* பெ.(n.) இறந்தவரின் உடலத்திற்குத் தீ வைக்க எடுத்துச் செல்லும் மண் சட்டி; pot containing live coal and burning sticks carried to the cremation ground for lighting the funeral pyre.

[கொள்ளி + சட்டி.]

கொள்ளிசுட்டான் *kolli-šuttān,* பெ.(n.) தீப்பட்ட புண்; injuries caused by fire, burns (சா.அக.).

[கொள்ளி + சுட்டான்.]

கொள்ளிசெருகு-தல் *kolli-šerugu-,* 5 செ.குன்றாவி. (v.i.) தீமையை யுட்படுத்துதல்; to put into trouble.

[கொள்ளி + செருகு.]

கொள்ளி சொருகு-தல் *kolli-šorugu-,* வி.(v.) 1. தீ வைத்தல்; to insert a firebrand as an incendiary in the roof of a house. 2. கேடு செய்தல்; to cause or bring about another's ruin.

[கொள்ளி + சொருகு.]

கொள்ளிடம் *kollidam,* பெ.(n.) காவிரியினின்று பிரியும் ஓர் ஆறு; a branch of *Kāvēri. "குங்குமங்க ளுந்திவருங் கொள்ளிடத்தின்" (தேவா.210:6).*

[கொள் + இடம் – கொள்ளிடம் (வெள்ளப்பெருக்கை வாங்கிக் கொள்ளும் இடமானது.]

கொள்ளித்தேள் *kolli-t-tēl,* பெ.(n.) கடுமையாகக் கொட்டும் தேள்; a kind of scorpion causing intense pain by its sting. *"வெங்கொள்ளித் தேள்போன்ற வினை" (அருட்பா.11.எழுத்தறி.28).*

[கொள்ளி + தேள்.]

கொள்ளிப்பாக்கம் *kolli-p-pākkam,* பெ.(n.) தொண்டைமண்டலத்தில் இருந்த ஊர்; *"மேற்பாலெல்லெ மணற் பாக்கத்தெல் லெயின்னும் கொள்ளிபாக்கத் தெல்லெயின் கிழக்கும்" (பல்.செ. முப்.ப.167 வ.113, காசாக்குடிச். செ.).*

[கொள்ளி + பாக்கம்.]

கொள்ளிப்பாக்கை *kolli-p-pākkai,* பெ.(n.) ஐதராபாத்துக்கு வடகிழக்கில் 45 கல் தொலைவில் உள்ள குல்பர்கா எனும் ஊர்; the present Kulburg 45 miles northeast of Hydrabad.

[கொள்ளி + (பாக்கம்) பாக்கை.]

கொள்ளிப்பிசாசு *kolli-p-pišāšu,* பெ.(n.) ***கொள்ளிப்பேய்*** பார்க்க; see *kolli-p-pēy.*

[கொள்ளி + பிசாசு.]

கொள்ளிப்புண் *kolli-p-pun,* பெ.(n.) கொள்ளியாற் சுட்ட புண்; injury or wound caused by a fire-brand, black scorched wound (சா.அக.).

மறுவ. தீப்புண்

[கொள்ளி + புண்.]

கொள்ளிப்பேய் *kolli-pēy,* பெ. (n.) தீயுடன் திரியும் எனக் கருதப்படும் பேய்; a ghost described as moving about with a burning fire brand.

ம. கொள்ளியன்.

[கொள்ளி + பேய்.]

கொள்ளிபெறு-தல் *kolli-peru-,* 20 செ.குன்றாவி. (v.t.) இறந்த தேவதாசியின் உடலை எரியூட்டக் கோயிலினின்று நெருப்புப் பெறுதல்; to take fire from

a temple for lighting the funeral pyre of a dancing - girl in temple service. *"கொள்ளி பெற்றவர்களா யிருக்கிற எம் பெருமானடியாளுக்கு" (கோயிலொ. 94.)*

[கொள்ளி + பெறு-.]

கொள்ளிபோடு-தல் *kolli-pōdu-*, 19 செ.குன்றாவி. (v.t.) ***கொள்ளிவை-த்தல்*** பார்க்க; see *kolli-vai-.*

[கொள்ளி + போடு-.]

கொள்ளிமண்டிலம் *kolli-mandilam,* பெ.(n.) ***கொள்ளிவட்டம்*** பார்க்க; see *kolli-vattam.* *"கொள்ளி மண்டிலம் போல்..... திரிந்திடுவ" (சீவக.1771).*

[கொள்ளி + மண்டிலம்.]

கொள்ளிமாலை *kolli-mālai,* பெ.(n.) பிணத்திற்கு அணியும் மாலை; wreath of flowers laid upon a corpse. *'கொள்ளி மாலையுங் கொடிபடு சூறையும்' (மணிமே.6:94,உரை).*

[கொள்ளி + மாலை.]

கொள்ளிமீன்[1] *kolli-min,* பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish.

ம. கொள்ளிக்கால்.

[கொள்ளி + மீன்.]

கொள்ளிமீன்[2] *kolli-min,* பெ.(n.) விண்மீன் கொள்ளி, எரிமீன்; meteor, shooting star.

ம. கொள்ளிமீன்.

[கொள்ளி + மீன்.]

கொள்ளி முடிவான் *kolli-mudivān,* பெ.(n.) ஓயாது தீமை தருபவன் (வழ.சொ.அக.); evil doer.

[கொள்ளி + முடிவான்.]

கொள்ளியம் *kolliyam,* பெ.(n.) 1. உமரி; marsh samphire. 2. புன்கு ; Indian beech. 3. பவழப் பூடு; gloss wort.

[கொள்ளி → கொள்ளியம்.]

கொள்ளியற்றசொத்து *kolliyarra-cottu-,* பெ.. (n.) பிள்ளை இல்லாதவனின் சொத்து; unclaimed property because of non-succession. கொள்ளித்த சொத்து (நெல்லை.).

[கொள்ளி + அற்ற + சொத்து.]

இறந்தபின் கொள்ளி வைத்து ஈமக்கடனாற்று வதற்கு வழியுரிமையாளர் இல்லாத சொத்து கொள்ளியற்ற சொத்து எனப்பட்டது.

கொள்ளியில்போ-தல் *kolliyil-pō-,* 8 செ.கு.வி. (v.i.) ***கொள்ளையிற் போ-தல்*** பார்க்க; see *kollaiyir-pō.*

[கொள்ளி + இல் + போ-.]

கொள்ளை என்பது பெருங்களவைக் குறிக்கும். கொள்ளை என்பது மிகுதிப் பொருளது. பலரை ஒருங்கே கொல்லும் கொடிய கழிச்சல் நோய். இதனால் கொள்ளை நோய் எனப்பட்டதாம்.

கொள்ளியெறும்பு *kolli-y-erumbu,* பெ.(n.) கடியால் மிக்க கடுப்பை உண்டாக்கும் சிற்றெறும்பு வகை (உ.வ.); a species of small ant causing intense pain by its bite.

[கொள்ளி + எறும்பு.]

கொள்ளிலை *kol-l-ilai,* பெ.(n.) 1. ***கொள்ளுக்காய் வேளை*** பார்க்க; see *kollu-k-kāi-vēlai* 2.கொள்ளுச் செடியின் இலை; the leaf of horse - gram plant.

[கொள் + இலை.]

கொள்ளிவட்டம் *kolli-vattam,* பெ.(n.) கொள்ளியைச் சுழற்றுதலிற் றோன்றும் வட்ட வடிவு; imaginary circle in the air caused by swinging round a firebrand. *"கறங்கோலை கொள்ளி வட்டம்" (திருமந்.2313).*

ம. கொள்ளிவட்டம்.

[கொள்ளி + வட்டம்.]

கொள்ளிவாய்க்குணங்கு *kollivāy-k-kunangu,* பெ.(n.) ***கொள்ளிவாய்ப் பிசாசு*** பார்க்க; see *kollivāy-p-pišāšu.* *"கொள்ளி வாய்க் குணங் குள்ளுதோ றிவறிய" (கல்லா.95:11).*

[கொள்ளிவாய் + குணங்கு.]

கொள்ளிவாய்ச்சர்ப்பம் *kollivāy-c-carppam,* பெ.(n.) ***கொள்ளி விரியன்*** பார்க்க; see *kolli-viriyan.*

[கொள்ளிவாய் + சர்ப்பம்.]

கொள்ளிவாய்ப்பிசாசு *kollivāy-p-pišāšu,* பெ.(n.) ***கொள்ளிவாய்ப்பேய்*** பார்க்க; see *kollivāy-p-pēy.*

ம. கொள்ளிவாய்ப்பிசாசு.

[கொள்ளிவாய் + பிசாசு.]

கொள்ளிவாய்ப்பேய் *kollivāy-p-pēy,* பெ.(n.) வாயில் நெருப்புடையதாகக் கருதப்படும் பேய்வகை;

jack-o-lantern. *"கொள்ளிவாய்ப் பேய்காக்குங் கோபுரமும்" (கலிங்.90).*

[கொள்ளிவாய் + பேய்.]

கொள்ளிவாய்விரியன் *kollivāi-viriyan,* பெ.(n.) ***கொள்ளிவிரியன்*** பார்க்க; see *kolli-viriyan.*

[கொள்ளிவாய் + விரியன்.]

கொள்ளிவாயெறும்பு *kollivāy-erumbu,* பெ.(n.) ***கொள்ளியெறும்பு*** பார்க்க; see *kolli-erumbu.*

[கொள்ளிவாய் + எறும்பு.]

கொள்ளிவால் *kolli-vāl,* பெ.(n.) நுதி (நுனி) வெள்ளை வால்; tip of the white tail.

[கொள்ளி + வால்.]

கொள்ளிவாலி *kolli-vāli,* பெ.(n.) கறுப்புடலும், வெள்ளை வாலுங் கொண்ட ஆன் (மாடு) அல்லது நாய்; cow or dog with dark body and white tail.

[கொள்ளி + வால்.]

நன்னிமித்தமும் ஆகுவழி (ராசி)யும் இல்லாத தாகக் கருதப்பட்டதால் கொள்ளிவாலி எனப்பட்டது.

கொள்ளிவாலெறும்பு *kollivāl-erumbu,* பெ.(n.) ஒருவகை எறும்பு; a kind of ant.

[கொள்ளிவால் + எறும்பு.]

கொள்ளிவிரியன் *kolli-viriyan,* பெ.(n.) விரியன் பாம்பு வகை; Russell's viper.

மறுவ. கொள்ளிவாய் விரியன்.

[கொள்ளி + விரியன்.]

கொள்ளிவீங்கு *kolli-vingu,* பெ.(n.) மாட்டுக்கு வரும் தொண்டை நோய்வகை (M.Cm.D. (1887)248); malignant sore throat of cattle.

[கொள்ளி + வீங்கு.]

கொள்ளிவை-த்தல் *kolli-vai-,* 4 செ.கு.வி.(v.) 1. நெருப்பு வைத்தல்; to set fire to. 2. பிணத்துக்கு எரிசடங்கு செய்தல்; to light the funeral pyre. 3.கேடு விளைத்தல்; ruin a family. 4. கலகமூட்டுதல்; to kindle strife.

ம. கொள்ளிவய்க்குக; **பட.** கொள்ளிபீ.

[கொள்ளி + வை-.]

கொள்ளு *kollu,* பெ.(n.) தட்டையான வெளிர்ப் பழுப்பு நிறத் தவசம்; a kind of gram, horse gram. கொள்ளு என்றால் வாய்திறக்கும் கடிவாளம் என்றால் வாய் மூடிக் கொள்ளும் (பழ).

மறுவ. காணம்.

*[கொள் → கொள்ளு. **கொள்**[2] பார்க்க.]*

கொள்ளுக்கஞ்சி *kollu-k-kañji,* பெ.(n.) கொள்ளும், அரிசியும் கலந்து வேகவைத்த கஞ்சி; a gruel or light food obtained by boiling rice and gram together.

[கொள்ளு + கஞ்சி.]

கொள்ளுக்காய் வேளை *kollu-k-kāy-vēlai,* பெ.(n.) கொழுஞ்சிச் செடி; zanzibar Indigo.

[கொள்ளு + காய் + வேளை.]

கடுப்புச் சுவையும், ஊதை, சூலை, கண்நோய், வயிற்று நோய் முதலியவற்றைத் தீர்க்கும் மருத்துவத் தன்மையும் உடைய மூலிகை.

கொள்ளுச்சாறு *kollu-c-cāru,* பெ.(n.) கொள்ளினை வேகவைத்து வடிகட்டிய சாறு; water extracted from boiled horse-gram.

[கொள்ளு + சாறு.]

கொள்ளுத்தாத்தன் *kollu-t-tāttan,* பெ.(n.) ***கொள்ளுப்பாட்டன்*** பார்க்க; see *kollu-p-pāttan.*

மறுவ. பூட்டன், கொள்ளுப்பாட்டன்.

[கொள் → கொள்ளு + தாத்தன்.]

தாத்தாவின் தந்தையை எள்ளுத்தாத்தன் என்றும் பாட்டியின் தந்தையைக் கொள்ளுத்தாத்தன் என்றும் வழங்கும் வழக்கமும் உள்ளது.

கொள்ளுத்தாத்தா *kollu-t-tātta,* பெ.(n.) ***கொள்ளுத்தாத்தன்*** பார்க்க; see *kollu-t-tāttan.*

[கொள்ளு + தாத்தன் → கொள்ளுத்தாத்தன். கொள்ளுத்தாத்தா என்னும் விளியை எழுவாயாக ஆள்வது வழு.]

கொள்ளுநர் *kollunar,* பெ.(n.) 1. கொள்வோர்; buyers. 2. கற்போர்; learners. *"கொள்ளுநர் கொள்ளக் குறையா தாதலின்" (கல்லா. 11:21).*

[கொள்ளு + நர்.]

கொள்ளுப்பாட்டன் *kollu-p-pāttan,* பெ.(n.) பாட்டனுக்குத் தந்தை; great-grand-father.

மறுவ. கொள்ளுத் தாத்தன், பூட்டன், கொப்பாட்டன்.

[கொள்ளு + பாட்டன்.]

பாட்டியின் தந்தையைக் கொள்ளுப்பாட்டன் என்றும் பாட்டனின் தந்தையை எள்ளுப்பாட்டன் என்றும் வழங்கும்

வழக்கமும் உள்ளது. பாட்டியின் தாயைக் கொள்ளுப்பாட்டி என்பதை ஒப்பிடுக.

கொள்ளுப்பாட்டி *kollu-p-pātti*, பெ.(n.) பாட்டியின் அம்மா; great-grand-mother.

மறுவ. பூட்டி.

[கொள்ளு + பாட்டி.]

பாட்டனின் தாயை எள்ளுப்பாட்டி என்றும் பாட்டியின் தாயைக் கொள்ளுப்பாட்டி என்றும் அழைப்பது மரபு. *கொள்ளுப்பேரன்* பார்க்க; see *kollu-p-pēran*.

கொள்ளுப்பூண்டு *kollu-p-pūndu*, பெ.(n.) காணம்; Madras horse-gram.

[கொள்ளு + பூண்டு.]

கொள்ளுப்பேத்தி *kollu-p-pētti*, பெ.(n.) பேரனுக்கு மகள்; great grand daughter.

[கொள்ளு + பேத்தி.]

பேத்தியின் மகளைக் கொள்ளுப்பேத்தி என்றும் பேரனின் மகளை எள்ளுப்பேத்தி என்றும் அழைப்பது மரபு.

கொள்ளுப்பேரன் *kollu-p-pēran*, பெ.(n.) பேரன் மகன்; great-grand son.

[கொள்ளு + பேரன்.]

பேரனின் மகனை எள்ளுப்பேரன் என்றும் பேத்தியின் மகனைக் கொள்ளுப்பேரன் என்றும் வழங்குதல் மரபு. மகன்வழி மகனும், பேரன்வழி மகனும் எள்ளும் நீரும் இறைத்து ஈமக்கடன் செய்தற்குரியர். மகளின் பிள்ளைகளும், பேத்தியின் பிள்ளைகளும் பிறர் மனைக்கு மருமக்கள்மாராகக் கொள்ளப்படாமையின் கொள்ளுப்பேரன். கொள்ளுப்பேத்தி என அழைத்தற் குரியராவர்.

கொள்ளுரசம் *kollu-rašam*, பெ.(n.) ***கொள்ளுச்சாறு*** பார்க்க; see *kollu-c-cāru*.

மறுவ. கொள்ளுச்சாறு.

[கொள்ளு + ரசம்.]

கொள்ளெனல் *koll-enal*, பெ.(n.) 1. பறை முதலியவற்றின் ஒலிக்குறிப்பு; (onom.expr.); signifying the sound of a drum or other musical instruments. *"கொள்ளென் குரலொடு கோட்பறை கொளீஇ" (பெருங்.வத்தவ.5:62).* 2. மிகுதிக் குறிப்பு (expr.signifying):plenty. *"கொள்ளென்று கிளர்ந் தெழுந்த பெருஞ்செல்வம்" (திவ்.திருவாய். 4. 9:4).*

[கொள் + எனல்.]

கொள்ளை *kollai*, பெ.(n.) 1. சூறை கொள்ளுகை; robbery. கொள்ளைக்குப் போனாலும் கூட்டு ஆகாது (பழ). 2. மிகுதி; plenty. *"கொள்ளைமா மதத்த நால்வாய்க் குஞ்சரம்" (பாகவ.1,5:14).* 3. கூட்டம்; crowd. *"கொள்ளை யிற்பலர் கூறலும்" (கந்தபு. விண்குடி.14).* 4. பெருவாரிநோய்; plague. 5. தடை; hindrance. அதைச் செய்ய உனக்கு என்ன கொள்ளை? 6. விலை; price. *"சில்பத வுணவின் கொள்ளை சாற்றி" (பெரும்பாண்.64).* 7. பயன்; use. *"நானிருந் தென்ன கொள்ளை" (இராமநா. பாலகா.9).*

ம., து. கொள்ள; **க.** கொள்ளெ, கொள்; **தெ.** கொல்ல; **நா.** கொச் (எடுத்தல்); **கூ.** கொட (எடுத்துச் செல்லுதல்); **கொலா.** கொச்ல (கொண்டு செல்லுதல்)

[கொள் → கொள்ளை.]

கொள்ளைஎகனை *kollai-ekanai*, பெ.(n.) மலிவு; cheap. இப்ப கத்திரிக்காய் கொள்ளை எகனை (நெல்லை.).

[கொள்ளை + எகனை. கொள்ளை = மிகுதி. எக்குதல் = உயர்தல். எக்கனை → எகனை.]

கொள்ளைக்காய்ச்சல் *kollai-k-kāyccal*, பெ.(n.) 1. பெருவாரி தொற்றுச் சுரம்; infectious epidemic fever. 2. பெருந்தடுமன்; influenza. 3. ***கோதாரிக் காய்ச்சல்*** பார்க்க; see *kōdāri-k-kāiccal*.

[கொள்ளை + காய்ச்சல்.]

கொள்ளைக்காரன் *kollai-k-kāran*, பெ.(n.) கொள்ளையடிப்பவன்; dacoit.

ம. கொள்ளைக்காரன்; **க., பட.** கொள்ளெகார.

[கொள்ளை + காரன்.]

கொள்ளைக்கூட்டம் *kollai-k-kūttam*, பெ.(n.) கொள்ளைக்காரர்களின் கூட்டம்; dacoit

ம. கொள்ளைக்காரன்; **க., பட.** கொள்ளெகார.

[கொள்ளை + காரன்.]

கொள்ளைகொடு-த்தல் *kollai-kodu-*, 4 செ.குன் றாவி. (v.t.) பறிகொடுத்தல்; to be robbed.

[கொள்ளை + கொடு-.]

கொள்ளைகொள்ளு[1]-தல் *kollai-kol(lu)-*, 7 செ.குன்றாவி. (v.t.) மக்கள் பெருவாரி நோயில் இறத்தல்; carrying away lives of people as by epidemics.

மறுவ. கொள்ளை நோய்.

[கொள்ளை + கொள்(ளு)-.]

கொள்ளைகொள்ளு²-தல் *kollai-kol(lu)-,* 16 செ.குன்றாவி. (v.t.) 1. உள்ளத்தை மிகவும் கவர்தல்; to entirely captivate the mind and heart. 2. எதிர்பாராத வகையில் எடுத்துக்கொள்ளுதல்; to be taken away unexpectedly. 'கடல் கொள்ளை கொண்ட நகரங்களுள் இதுவும் ஒன்று'. 3. கொள்ளையடித்தல்; to plunder. *'வேற்றுப் புலத்தைக்........கொள்ளைகொண்ட தொழிலை' (பு.வெ.3:15, கொளு உரை).* 4. பறித்தல்; to rob.

[கொள்ளை + கொள்(ளு)-.]

கொள்ளைசாற்று-தல் *kollai-šārru-,* 5 செ.குன்றாவி. (v.t.) ***கொள்ளையூட்டு-*** பார்க்க; see *kollai-y-ūttu-.*

[கொள்ளை + சாற்று-.]

கொள்ளைத்தலைவன் *kollai-t-talaivan,* பெ.(n.) கொள்ளைக்காரர்களின் தலைவன்; a chief of bandits.

ம. கொள்ளத்தலவன்.

[கொள்ளை + தலைவன்.]

கொள்ளைநாள் *kollai-nāl,* பெ.(n.) மிகுதியான நாள்; plenty days. 'ஒன்னையப் பார்த்துக் கொள்ளை நாளாச்சிடா!' (நெல்லை).

[கொள்ளை + நாள்.]

கொள்ளைநோய் *kollai-nōy,* பெ.(n.) பெருவாரி நோய்; epidemic.

[கொள்ளை + நோய்.]

கொள்ளைப்படை *kollai-p-padai,* பெ.(n.) 1. கொள்ளைக்காரர்களின் போர்; compaign or battle attended with pillage and loot. 2. கொள்ளையர் கூட்டம் ; a band of robbers or decoits.

ம. கொள்ளப்பட.

[கொள்ளை + படை.]

கொள்ளைபோ-தல் *kollai-pō-,* 8 செ.கு.வி.(v.i.) 1. பொருள் முதலியன பலவாறாக அழிபடுதல்; to be wasted in all ways, as wealth. *"கொள்ளை போகின்ற செல்வம்" (கம்பரா.மாரீச.77).* 2. களவு போதல்; to be plundered.

[கொள்ளை + போ-.]

கொள்ளையடி-த்தல் *kollai-y-adi-,* 4 செ. குன்றாவி. (v.t.) சூறையாடுதல்; to plunder, to rob.

ம. கொள்ளையடிக்குக.

[கொள்ளை + அடி-.]

கொள்ளையள்(ளு)-தல் *kollai-y-al(lu)-,* 5 செ. குன்றாவி. (v.t.) திருடுதல்; to rob, steal.

[கொள்ளை + அள்(ளு)-.]

கொள்ளையாடு-தல் *kollai-y-ādu-,* 5 செ. குன்றாவி. (v.t.) ***கொள்ளையடி-த்தல்*** பார்க்க; see *kollai-y-adi-. "கொள்ளை யாட்டயர் கொடியகோ லரசனை" (காஞ்சிப்பு.பன்னிரு.336).*

[கொள்ளை + ஆடு-.]

கொள்ளையிடு-தல் *kollai-idu-,* 18 செ.குன்றாவி. (v.t.) திருடுதல்; to rob, steal.

[கொள்ளை + இடு-.]

கொள்ளையிற்போ-தல் *kollaiyir-pō-,* 8 செ.கு.வி. (v.i.) கொள்ளை நோயில் இறத்தல்; being carried away in an epidemic. கொள்ளையில போக (நெல்லை).

[கொள்ளையில் + போ-.]

கொள்ளையூட்டு-தல் *kollai-y-ūttu-,* 5 செ.குன்றா வி. (v.t.) கொள்ளைகொள்ளும்படி விடுதல்; to give over to plunder. *'வேற்றுப்புலத்தைக் கொள்ளை யூட்டி' (பு.வெ.3:15,கொளு, உரை).*

[கொள்ளை + ஊட்டு-.]

கொள்ளையூதியம் *kollai-y-ūdiyam,* பெ.(n.) மிகுதியான ஊதியம், எதிர்பார்ப்புக்கு அதிகமான ஊதியம்; over gain.

[கொள்ளை + ஊதியம்.]

கொள்ளையெடு-த்தல் *kollai-edu-,* 4 செ. குன்றாவி. (v.t.) திருடுதல்; to rob.

[கொள்ளை + எடு-.]

கொள்ளைலாபம் *kollai-lābam,* பெ.(n.) ***கொள்ளையூதியம்*** பார்க்க; see *kollai-y-ūdiyam.*

ம. கொள்ளைலாபம்.

[கொள்ளை + லாபம்.]

கொள்ளைவை-த்தல் *kollai-vai-,* 4 செ.குன்றா.வி. (v.t.) ***கொள்ளையடி-த்தல்*** பார்க்க; see *kollai-y-adi-.*

[கொள்ளை + வை-.]

கொளகொள-த்தல் *kola-kola-*, 4 செ.கு.வி.(v.i.) இறுகலான தன்மை மாறி இளகிப் போதல்; to be soft and loose as an over-ripe fruit. பழம் கொள கொளத்துப் போயிற்று (உ.வ.).

[குழகுழ → கொளகொள.]

கொளகொளெனல் *kola-kolenal*, பெ.(n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு; (onom.expr.of) gurgling sound. 2. குழறுதற் குறிப்பு; speaking indistinctly and foolishly. 3. பதமாறி இளகியிருத்தற் குறிப்பு; expr. of being loose and soft as an over-ripe fruit.

[கொளகொள + எனல்.]

கொளச்சிமண்வெட்டி *kolacci-manvetti*, பெ.(n.) மண்வெட்டி வகைகளுளொன்று; a kind of spade.

[கொளச்சி + மண்வெட்டி.]

கொளஞ்சி *kolañji*, பெ.(n.) குளஞ்சி மரம்; a kind of orange tree bearing a small reddish fruit.

ம. கொளஞ்ஞில்.

[குளஞ்சி → கொளஞ்சி.]

கொளத்துக்காரர் *kolattu-k-kārar*, பெ.(n.) ***கொத்தனார்*** பார்க்க; see *kottanār*.

[கொழுத்து + காரர்.]

கொளத்துவேலை *kolattu-vēlai*, பெ.(n.) ***கொத்து வேலை*** பார்க்க; see *kottu-vēlai*.

[கொழுத்து + வேலை.]

கொளத்தூர் *kolattūr*, பெ.(n.) சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டத்தில் அமைந்துள்ள ஓர் ஊர்; a village situated in Mettur taluk in Salem Dt.

[குளம் → குளத்து + ஊர். குளத்தூர் → கொளத்தூர்.]

கொளபாத்திரம் *kola-pāttiram*, பெ.(n.) நீள் உருண்டை வடிவ ஏனம்; cylindrical drinking - vessel.

[குள் → குள (உருண்டை) → கொள + பாத்திரம்.]

கொளம்கொண்டை *kolam-kondai*, பெ.(n.) நாமக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Namakkal Dt.

[குளம் → கொளம் + கொண்டை.]

கொளமணிவாக்கம் *kolamani-vākkam*, பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvallur Dt.

[குளம் + மண்ணி + (பாக்கம்) வாக்கம் - குளமண்ணிவாக்கம் → கொளமணிவாக்கம்.]

கொளமா *kolamā*, பெ.(n.) கும்பாதிரி (L.); gum lac tree.

கொளல்வினா *kolal-vinā*, பெ.(n.) ஒரு பண்டத்தைக் கொள்ளும் நோக்கத்தோடு கேட்கும் கேள்வி (நன்.385, உரை); question implying a desire to obtain a thing. *"பயறுளதா வணிகீரென்பது கொளல்வினா" (நன்.385, உரை).*

[கொள் → கொளல் + வினா.]

கொளறு *kolaru*, பெ.(n.) கட்டடத்தொழிலாளர் பயன்படுத்தும் கரண்டி; a mason's trowel.

[கொள்ளுறு → கொளறு.]

கொளாஅல் *kolāal*, பெ.(n.) கொள்ளச் செய்கை; application, as of a grammatical rule.

[கொளல் → கொளாஅல்.]

கொளி[1]-த்தல் *koli-*, 4 செ.கு.வி.(v.i.) ***கொழி-த்தல்*** பார்க்க; see *koli-*.

[கொழி → கொளி.]

கொளி[2] *koli*, பெ.(n.) 1. கொண்டவன்; one who preserves. 2. வாங்கிக்கொண்டவன்; one who purchases or takes.

ம. கொளி.

[கொள் + இ. 'இ' உடைமை குறித்த ஈறு.]

கொளிஞ்சிப்பட்டி *koliñji-p-patti*, பெ.(n.) தேனி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Theni Dt.

[கொழிஞ்சி → கொளிஞ்சி + பட்டி.]

கொளிஞ்சிவாடி *koliñji-vādi*, பெ.(n.) கோவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kovai Dt.

[கொழிஞ்சி → கொளிஞ்சி + வாடி.]

கொளினிவலை *kolini-valai*, பெ.(n.) ***கொண்டை வலை*** பார்க்க; see *kondai-valai*.

[கொள் → கொளினி + வலை.]

கொளு[1] *kolu*, பெ.(n.) செய்யுள் முதலியவற்றின் கருத்தை விளக்கும் சொற்றொடர் (பு.வெ.); gist, as of a poem.

[கொள் → கொளு.]

கொளு[2] *ko/u,* பெ.(n.) 1. பழுவெலும்பு; rib. *"கொளுமிடை வீணாதண்டு" (ஞானா.7:14).* 2. உருவு திரையை மாட்டுங் கருவி; fastening hook of a curtain. *"கஞ்சிகைக் கொளுவொடு கயிற்று நிலை யமைத்து" (பெருங். உஞ்சைக். 58:52).*

[கொள் → கொளு.]

கொளுக்கி *ko/ukki,* பெ.(n.) 1. கொக்கி; hook. 2. கைவலை பின்னும்போது பிணைக்கப்பெறும் கொம்பு; a kind of hook like stick used for netting.

[கொளுவு → கொளுக்கி.]

கொளுகொம்பு *ko/u-kombu,* பெ.(n.) ***கொழு கொம்பு*** பார்க்க; see *ko/u-kombu. " கொளு கொம்பிலாத தனிக் கொடிபோல்" (கந்தரலங்.99).*

[கொழு → கொளு + கொம்பு.]

கொளுகொளு-த்தல் *ko/u-ko/u-,* 4 செ.கு.வி.(v.i) ***கொளகொள-த்தல்*** பார்க்க; see *ko/a-ko/a-.*

[குழகுழ → கொளுகொளு.]

கொளுஞ்சி *ko/uñji,* பெ.(n.) ***கொழிஞ்சி*** பார்க்க; see *ko/iñji.*

ம. கொளஞ்ஞில்.

[கொழிஞ்சி → கொளுஞ்சி.]

கொளுச்சொல் *ko/u-c-col,* பெ.(n.) கருத்து; theme.

[கொளு + சொல்.]

கொளுசு *ko/usu,* பெ.(n.) குழை (யாழ்.அக.); knot.

[குளைச்சு → கொளுசு.]

கொளுத்தி *ko/utti,* பெ.(n.) 1. கொளுத்துகை; burning. கடுகத்துனை நெருப்பானாலும் போரைக் கொளுத்திவிடும் (பழ). 2. அறிவு புகட்டுகை; teaching.

[கொளுத்து → கொளுத்தி. 'இ' தொ.பெ.ஈறு. ஒ.நோ. போறறு → போற்றி : போற்றுகை.]

கொளுத்து[1]**-தல்** *ko/uttu-,* 5 செ.குன்றா.வி. (v.t.) 1.கொளச்செய்தல்; to cause to hold. *'பூநாற்றத்த வாகிய புகையைக் கொளுத்தி அமைத்த ஊனையும்' (புறநா.14, உரை).* 2. விளக்குதல்; to explain. *"விதியோர் கொளுத்திய வீரிய முடையது" (பெருங்.உஞ்சைக்.38:294).* 3. அறிவுறுத்துதல்; to teach. *"சேணெறி செல்லக் கோணெறி கொளுத்தி" (பெருங்.உஞ்சைக்.58:70).* 4. வீணை முதலியன மீட்டுதல்; to play as on a lute. *"நரம்பினாய கருவியைக் கொளுத்து மாக்கள்" (சூ. ர 2:39).* 5. நாடக முதலியவற்றை நடப்பித்தல்; to cause to enact, as a drama. *"கூடிய நெறியின கொளுத்துங் காலை" (சிலப்.3:17).* 6. கண்டித்தல்; to reprove sharply. நான் அவனை நன்றாய்க் கொளுத்திவிட்டேன். 7. சண்டை மூட்டுதல் (வின்.); to instigate quarrel. 8. தூற்றுதல்; to slander.

[கொள் → கொளு → கொளுத்து-.]

கொளுத்து[2]**-தல்** *ko/uttu-,* 5 செ.கு.வி.(v.t.) 1. வெயில் கடுமையாகக் காய்தல்; to scorch as the sun. 2. வியக்கும்படி காரியம் புரிதல்; to accomplish a task admirably.

கொள்ளுதல் (கற்றுக் கொள்ளுதல், கற்றல்) → கொளுத்துதல் (பி.வி.) (கொள்ளச்செய்தல், அறிவுறுத்துதல்).

[கொள் → கொளு → கொளுந்து → கொளுத்து.]

கொளுத்து[3] *ko/uttu,* பெ.(n.) 1. உடற்சந்து; joints of the body. 2. அணிகலங்களின் பூட்டு; clasp of a jewel. 'கொளுத்துச் செறிந்த முன்கைக்கணிந்த கடகத் துடனே' (புறநா.150, உரை).

ம. கொளுத்து; **க.** கொக்கி; **தெ.** கொலிகி; **து.** கொல்துலெ, கொள்தளெ.

[கொள் → கொளு → கொளுத்து.]

கொளுத்து[4]**-தல்** *ko/uttu-,* 5 செ.குன்றாவி.(v.t.) எரித்தல்; to set fire. ஊர் முழுவதும் கொளுத்தி விட்டார்கள் (உ.வ.)

ம. கொளுத்துக; **க.** கொளிசு, கொள்ளிசு; **குட.** கொளித்.

Fin. keksia (to detect, findout); **Mong.** kagzi (to begin to flame, to blaze up).

[கொளுந்து → கொளுத்து → கொளுத்துதல்.]

கொளுந்து[1]**-தல்** *ko/undu-,* 5 செ.கு.வி.(v.i.) தீப்பற்றுதல்; to burn, as fire. *"தீக்கொளுந் தினவுந் தெரிகின்றிலர்" (கம்பரா. இலங்கையெரி.5). "கொள்ளி அறையிற் கொளுந்தாமற் காக்கலாம்" (திருமந்.591).*

[கொள் → கொளுந்து → கொளுந்து.]

கொளுந்து[2] *ko/undu,* பெ.(n.) 1. தீக்கொழுந்து; flame. 2. தீப்பந்தம்; fire ball.

[கொளு → கொளுந்து.]

கொளுமீதி *ko/umidi,* பெ.(n.) இறைகொடுத்து மிஞ்சின தவசம்; grain which remains after paying revenues.

[கொழு → கொளு + மீதி.]

கொளுமுதல் *kolu-mutal,* பெ.(n.) 1. ***கொளுமீதி*** பார்க்க; see *kolu-miti.* 2. செழிப்பு; flourishing as of crops.

[கொழு → கொளு + முதல்.]

கொளுவம் *koluvam,* பெ.(n.) கோவைத்துறை உரைநடை; prose of a *kōvai* prosody.

[கொளு → கொளுவம்.]

கொளுவல் *koluval,* பெ.(n.) 1. குடல்வலி; abdominal pain. 2. குடலிசிவு; cramp of the bowels.

[கொளுவு → கொளுவல்.]

கொளுவி *koluvi,* பெ.(n.) கொக்கி (யாழ்ப்.); clasp (j).

[கொளுவு → கொளுவி.]

கொளுவிக்கொள்(ளு)-தல் *koluvi-k-kol(lu)-,* 16 செ.கு.வி. (v.i) பின்னிக்கொள்ளுதல்; to become entangled. சங்கிலி கொளுவிக்கொண்டது.

[கொளுவு → கொளுவி + கொள்.]

கொளுவிப்பிடி[1]-த்தல் *koluvi-p-pidi-,* 4 செ. குன்றாவி. (v.t.) 1. மாட்டிவிடுதல் (வின்.); to hook in. 2. வயப்படுத்துதல் (வின்.); catch.

[கொளுவி + பிடி.]

கொளுவிப்பிடி[2]-த்தல் *koluvi-p-pidi-,* 4 செ.கு.வி. (v.i.) வழக்குத்தொடுத்தல் (r); to prosecute a law-suit (R.).

[கொளுவு → கொளுவி + பிடி.]

கொளுவியிழு-த்தல் *koluvi-y-ilu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. சண்டைக்கிழுத்தல்; to provoke a quarrel. 2. துன்பத்துக்கு உள்ளாக்குதல்; to bring one into trouble or difficulty.

[கொளுவு → கொளுவி + இழு.]

கொளுவிவிடு-தல் *koluvi-vidu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. காதணி முதலியன பூட்டுதல்; to fasten on, as ear-rings. 2. வேலையில் அமர்த்துதல்; to settle a person in office. 3. தகாத இடத்தில் மணம் புரிவித்தல்; to effect an unequal match. 4. சண்டை மூட்டுதல்; to set by the ears.

[கொளுவு → கொளுவி + விடு-.]

கொளுவு[1]-தல் *koluvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கொள்ளச் செய்தல்; to cause to hold. *"மலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ"* *(புறநா.55:1).* 2. தீமூட்டுதல்; to kindle, as fire. *"தீக் கொளுவும் விடங்க" (திருவாச.6:19).* 3. பூட்டுதல்; to clasp, hook on, lock. *"அறிவென்னுந் தாள் கொளுவி" (திவ். இயற்.3:12).* 4. தூண்டிவிடுதல்; to urge on, as a dog. *"கதநாய் கொளுவுவென்" (கலித்.144:20).* 5. அகப்படுத்துதல் (வின்.); to entangle. 6. கூட்டுச் சேர்த்தல் (யாழ்ப்.); to take into partnership. 7. செருப்பு முதலியன அணிதல்; wearing sandals etc.

[கொளு → கொளுவு.]

கொளுவு[2]-தல் *koluvu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. வேலையில் அமர்த்துதல் (வின்.); to be engaged as in an employment. 2. மனத்திற் பதித்தல் (வின்.); to make an impression as on the mind. 3. சிக்குதல் (வின்.); to be ensnared. 4. தந்திரஞ் செய்தல் (வின்.); to contrive manage by artifice or scheming. 5. குடல் தூக்கிக் கொள்ளுதல் (யாழ்ப்.); to have cramp as in the bowels; to have a stitch, as in the sides.

[கொள் → கொளுவு-.]

கொளுவு[3] *koluvu,* பெ.(n.) 1. இசிவு; cramp. 2.நெருப்பு; fire (சா.அக).

[கொள் → கொளுவு.]

கொளுவுகயிறு *koluvu-kayiru,* பெ.(n.) ஏடுகட்டும் கயிற்றின் முடிப்பு (யாழ்ப்.); loop of the tying string of an *ōla* book.

[கொளுவு + கயிறு.]

கொளுவுநிலைமொழி *koluvu-nilai-moli,* பெ.(n.) சொற்பகுதிகள் ஒன்றுடன் ஒன்று நேரடியாகச் சேர்ந்து சொல்லுண்டாகும் அமைப்புடைய மொழி; agglutinative language.

மறுவ. ஒட்டுநிலைமொழி.

[கொளுவு + நிலை + மொழி.]

கொளை[1] *kolai,* பெ.(n.) 1.பிடிப்பு; hold, as of a string in a bow. *"நாரியின் கொளை நீக்கி" (சீகாளத்.பு. சிலந்தி.57).* 2. கோட்பாடு; determination. *"கொளை தளராதவர்" (கலித்.34:17).* 3. பயன்; result. *"தெளி யெனக் கொண்டதன் கொளையன்றோ" (கலித். 132:17).* 4. இசை; melody. *"புரிநரம்பின் கொளை" (பரிபா.7:77).* 5. கைமுதலியவற்றால் தாளமிட்டு ஒற்றறுக்கை; beating time with hands or cymbals. *"கொளைபுணர் சீர்நரம்பு" (சிலப். 17, ஒன்றன் பகுதி 2).* 6. பாட்டு; song. *"படுக ணிமிழ்கொளை" (பரிபா.16:12).*

[கொள் → கொளை.]

கொளை² *koḷai,* பெ.(n) நுனி; tip, top.

E. cone, Gk. kones, fr cone; L. conus.

[குல் → குள் → குளை → கொளை.]

கொளையமை-த்தல் *koḷai-y-amai-,* 4 செ.குன்றாவி. (v.t.) நாணேற்றிடுதல்; to string the bow. "*கொடுவெஞ் சிலையைக் கொளையமைத்து*" *(சீவக. 1659).*

[கொளை + அமை-.]

கொற்கலுழி *koṟ-kaluḻi,* பெ.(n.) கஞ்சா; ganjah plant (சா.அக).

[கொல் + கலுழி.]

கொற்கை *koṟkai,* பெ.(n.) 1. தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் வட்டம் திருச்செந்தூர் அருகில் உள்ள ஓர் ஊர்; a village near Thiruchendur at Thiruvaikundam Taluk in Thuthukudi Dt. 2. தாமிர பரணி புகுமுகத்தமைந்த பழைய துறைமுகப் பட்டினம்; an ancient seaport of Pandiyans submerzed. "*கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை*" *(ஐங்குறு. 188).*

[கொல் → கொற்கு → கொற்கை.]

கொற்கைகிழான் *koṟkai-kiḻāṉ,* பெ.(n.) வேள்வி செய்து பாண்டியன் பெருவழுதியிடம் கொடை பெற்ற அந்தணர்; a Brahmin who performed yagam and got presents from *Peruvaḻudi* Pandiyan. "*பிழையாத கொற்கை கிழானற் கொற்றன கொண்ட வேள்வி*" *(பாண்டி.செப்.பத்.பக்.22.வ.35).*

[கொற்கை + கிழான்.]

கொற்கைவேந்தன் *koṟkai-vēndaṉ,* பெ.(n.) 1. பாண்டியர்களின் பெயர்களுள் ஒன்று; 2. அரிகேசரி பராக்கிரம பாண்டியனின் (கி.பி.1463) பட்டப் பெயர்களுள் ஒன்று; one of the titles of Arikēsari Parākkirama-Pāndiyaṉ (1463 A.D.). '*கொற்கை வேந்தன் பணிபவராகி யெந்நாளும் விளங்குவரே*' *(SII.XXVI.549-9 p.374).*

[கொற்கை + வேந்தன்.]

கொற்சேரி *koṟ-sēri,* பெ.(n.) கொல்லர் வாழும் இடம்; blacksmiths' quarters. "*வைகொண்ட வூசி கொற் சேரியின் விற்று*" *(திருக்கோ.386).*

[கொல் + சேரி → கொற்சேரி.]

கொற்றக்குடை *koṟṟa-k-kuḍai,* பெ.(n.) அரசக் குடை; umbrella, an emblem of royalty. "*கொற்றக் குடையும் வெற்றி வேலும்*" *(பெருங்.உஞ்சைக்.57:56).* "*காமுண்ட சுவாமியும் கொற்றக்குடை பன்மை முந்நூற்று வரும்*" *(நத்தம் ஆய்வேடு பக்.165–13).*

ம. கொற்றக்குட.

[கொற்றம் + குடை. கொற்று → கொற்றம்.]

கொற்றத்தேவி *koṟṟa-t-tēvi,* பெ.(n.) பட்டத்தரசி; queen-consort. "*கொற்றத்தேவி செற்றந் தீர்க்கும் பெற்றியர்*" *(பெருங்.வத்தவ.14:18).*

[கொற்றம் + தேவி.]

கொற்றப் பெருங்கணி *koṟṟa-p-peruṅgaṇi,* பெ.(n.) அரசக் கணியன்; state astrologer. "*வெற்றி வேந்தன் கொற்றப் பெருங்கணி*" *(பெருங். மகத.22:244).*

[கொற்றம் + பெருங்கணி.]

கொற்றம் *koṟṟam,* பெ.(n.) 1.வெற்றி; victory. "*கொற்றங் கொளக்கிடந்த தில்*" *(குறள்,583).* 2. வீரம்; bravery. "*பெரும்படைக் கொற்றம் பீடழிந்து*" *(பெருங்.மகத.3:90).* 3. வன்மை (சூடா.); strength. 4.அரசியல்; kingship. "*கொற்றங் கொண்டு கோலினி தோச்சென*" *(பெருங்.இலாவாண.5:73).*

ம. கொற்றம்.

[கொற்று → கொற்றம்]

கொற்றம்வை-த்தல் *koṟṟam-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) அரசாட்சியை ஒருவரிடம் ஒப்புவித்தல்; to entrust the government to a person. "*நீ யொருவன் மேற் கொற்றம் வைப்பின்*" *(சீவக.204).*

[கொற்றம் + வை-.]

கொற்றமுரசு *koṟṟa-murašu,* பெ.(n.) அரசுக்குரிய வெற்றி முரசு; trumpet of victory. "*கொற்ற முரசிற் கோடணை கொட்டி*" *(பெருங்.இலாவாண 11:186).*

[கொற்று → கொற்றம் + முரசு]

கொற்றலிதொட்டி *koṟṟali-toṭṭi,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[குறு + ஆலி – குற்றாலி → கொற்றலி + தொட்டி.]

கொற்றவஞ்சி *koṟṟa-vañji,* பெ.(n.)பகைவரை வாளோச்சி அழித்த அரசனது புகழைப் பெருக வுரைக்கும் புறத்துறை (பு.வெ.3:7.); theme extolling a king who destroyed his foes with his sword.

[கொற்றம் + வஞ்சி]

கொற்றவள்ளை *korra-vallai,* பெ.(n.) 1. பகைவர் நாடு கெடுவதற்கு வருந்துவதைக் கூறுமுகத்தான் அரசன் புகழைச் சொல்லும் புறத்துறை (பு.வெ.3:8); theme indirectly describing the prowess of a king by regretting that the enemy's country will be destroyed. *"குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளையும்" (தொல்.பொருள்.புறத்.8).* 2. பகைவர் நாடழிகை (திவா.); devastation of a hostile kingdom. 3. தோற்ற வேந்தன் கொடுக்குந் திறை (தொல்.பொருள். 63, உரை); tribute paid by a defeated king.

[கொற்றம் + வள்ளை.]

கொற்றவன்[1] *korravan,* பெ.(n) 1.அரசன்; king. *"குடையி னிழற் கொற்றவன்" (சீவக.2544).* 2. வெற்றியாளன்; victor. *"ஊர்கொண்ட வுயர் கொற்றவ" (மதுரைக்.88).*

ம. கொற்றவன்.

[கொற்றம் → கொற்றவன்.]

கொற்றவன்[2] *korravan,* பெ.(n.) முடக்கொற்றான்; baloon-vine.

மறுவ. முடக்கொற்றான்.

[கொற்றான் → கொற்றவன்.]

கொற்றவாயில் *korra-vāyil,* பெ.(n.) அரண்மனை வாயில்; portico at the entrance of a palace or temple. *"கொடிக் கோசம்பிக் கொற்ற வாயில்" (பெருங். மகத.27:194).*

மறுவ. ஆசாரவாசல்.

ம. கொற்றவாதில்.

[கொற்றம் + வாயில்.]

கொற்றவாயில்சேரி *korra-vāyil-cēri,* பெ.(n.) மதுரை நகருக்குள் இருந்த குடியிருப்பு; a colony in Madurai. *"அண்டநாட்டு தேவதானந் திருத்துருத்தி தேவர்க்கு மாடமதிரை கொற்றவாயிற் சேரி குன்றஞ் சுந்தரி வைத்த திருநொந்தா விளக்கு" (SII.XXIII.504-4 p.382).*

[கொற்றம் + வாயில் + சேரி.]

கொற்றவி *korravi,* பெ.(n.) அரசி; queen. *"கொற்றவி மகனை நோக்கிக் கூறினாள்" (சீவக.2609).*

ம. கொற்றவி.

[கொற்றம் → கொற்றவி.]

கொற்றவுழிஞை *korra-v-uliñai,* பெ.(n.) பகைவர் நகரைக் கைக்கொள்ளுதற் பொருட்டு அரசன் படையெடுத்துச் செல்லுதலைக் கூறும் புறத்துறை (பு.வெ.6:5); theme describing the march of a king with his army to capture the enemy's city.

[கொற்றம் + உழிஞை.]

கொற்றவை *korravai,* பெ.(n.) வெற்றிக் குரியவளாகக் கருதப்படும் துர்க்கை; Durga, as the goddess of victory. *"முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சி" (பெருங். இலாவாண.2:31).*

ம. கொற்றவை..

[கொற்றம் + அவ்வை.]

கொற்றம் = வெற்றி. அம்மை → அவ்வை = தாய். கொற்றம் + அவ்வை – கொற்றவ்வை → கொற்றவை.

காளியால் போர் வெற்றி தரப்படுவதென்று கருதி அவளைக் கொற்றவை என்றனர் [தமிழர் மதம், 34].

கொற்றவை [காளி], ஆரிய வருகைக்கு முற்பட்ட குமரி நாட்டுத் தூய தமிழ்த் தெய்வம். ஆரியர் இத் தெய்வத்திற்கு துர்கா என்னும் புதுப்பெயரை இட்டுக்கொண்டனர். காளி என்னும் பெயரைக் காலி என்று கூட்டித் திரித்துக் கொண்டனர் [வண்.மொ.வழு.44].

கொற்றவைநிலை *korravai-nilai,* பெ.(n.) காளிக்குப் பலியிட்டுப் பரவும் புறத்துறை; theme of offering sacrifice to Durga and worshipping her. *"மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த கொற்றவை நிலையும்" (தொல்.பொருள்.புறத்.4).*

[கொற்றவை + நிலை.]

கொற்றன் *korran,* பெ.(n.) 1. கொத்தன்; mason. 2. கற்றச்சன்; stone cutters;artisans.

ம. கொற்று.

[கொற்று → கொற்றன்.]

கொற்றன்புத்தூர் *korran-puttūr,* பெ.(n.) பெருவழுதிப் பாண்டியனால் வழங்கப்பட்ட வேள்விக் குடியின் கிழக்கு எல்லையாக அமைந்த ஊர்; a village, western boundary of *Vēlvikkudi.* *"அற்றம் இல்லாக் கொற்றன் புத்தூர்" (பாண்டி.செ.பத்.ப.30 வ.121 வே.கு.செ.).*

[கொற்றன் + புத்தூர்.]

கொற்றாள் *korrāl,* பெ.(n.) கல் மற்றும் மண்வேலை செய்பவ–ன்–ள்; labourer working in earth, stone etc. *"என்போலத் திருந்து கொற்றாள் கிடையாது" (திருவாலவா.30:11).*

மறுவ. சிற்றாள்.

[குறு → குற்று → கொற்று + ஆள். கொற்றாள் என்னும் சிற்றாள் எனப் பொருள்தரும். குறு → குற்று → கொற்று = சிறியது.]

கொற்றான் *koṟṟāṉ*, பெ.(n.) இலையற்ற கொடிவகை (M.M.230) ; parasitic leafless plant.

[கொற்று (நெருக்கம். புதர்) → கொற்றான்.]

கொற்றி[1] *koṟṟi*, பெ.(n.) 1. ஆவின் இளங்கன்று; the young calf of a cow. 2. கருந்தாளி; black satinwood (சா.அக). 3. இளங்கன்றுள்ள ஆன் (யாழ்.அக.); cow having a young calf.

ம. கொற்றி; **தெ.** குர்ரி.

[கொல் → கொற்று → கொற்றி.]

கொற்றி = இளமை சுட்டிய பெயர். குற்றி என்பதன் திரிபு. மறி, குறி, சென்னை, மூடி, மருக்கை, கன்று, குட்டி, பிள்ளை, பார்ப்பு, குஞ்சு, கயம், குன்னி, முன்னி, முளகு, குளகு, குழவி, மகவு போன்றன இளமைப் பெயர்கள்.

கொற்றி[2] *koṟṟi*, பெ.(n.) 1. ***கொற்றவை*** பார்க்க; see *koṟṟavai*. *“பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்நொடித் தாங்கு” (கலித்.89).* 2. ஒருவகை வரிக்கூத்து (சிலப்.3:13, உரை); a masquerade dance.

ம. கொற்றி; **தெ.** கொட்டமு.

[கொற்றம் → கொற்றி.]

கொற்றி இளமைப் பெயராதலின் கன்னி, குமரி என்பவற்றுக்கு நிகராக ஆளப்பட்டது.

கொற்றி[3] *koṟṟi*, பெ.(n.) 1. சிறியது; that which is small. 2. குட்டி, குஞ்சு; young of an animal or bird. 3. குழந்தை, பிள்ளை; child. 4. பூனை; cat.

மறுவ. பூனை, பூசை, பூஞை, பிள்ளை, கொற்றி, கொத்தி.

ம. கொற்றி; **க.** குறும்; **துட.,பட.** கொத்தி.

Asian., Rusia. kot'm, kotchka, koshka; **Myan.** (Bur), krong, cavn.

European., Mod. cat, catt, catte; **L.** catta, catus, **L.L.** cattus, catta; **It.**, gatto; **S.P.** gato; **M.L.G.** Katte; **F.** chat; **O.F.** Cat; **Bret.** Kaz; **O.H.G.** Kazza, Chazza, Chataso; **Gk.** katta, kattos; **Mod.,Gk.** gata; **E.** cat; **O.E., Mod.** cat, catt, catte; **ON.** Kottr, kattus, keta; **M.H.G.** katza, kateso, kates; **Goel.** cat; **Bre.** kaz; **Cor.** cath; **Bulg.** Kotka; **Lith.** kate; **Pro.** cat; **Pol.** kot.

Sem., Ar. Qit, tomcat, qitta, cat; **Egypt.** gak.

African.,Swa. katta, katta; **Nvb.,** kaids; **Dak.** kat; **Van.** kach; **Copt.** kath.

Chin. kichi.

[குறு → குற்று → குற்றி → கொற்றி (குழந்தை).]

கொற்றி = குழந்தை இளமைப்பெயர். கன்றோடு கூடிய கறவை மாடும் கொற்றி எனப்படும் இது குற்றி [சிறிய குழந்தை] என்பதன் திரிபு. குற்றி, குஞ்சு, பிள்ளை, என்பன குழந்தையைக் குறிக்கும் இளமைப் பெயர்கள். தமிழில் இச்சொல் இறந்துபட்டது. பழஞ்சேரநாட்டுத் தமிழின் [வடசொற்செறிந்த] திரிபே மலையாளமாயினும் கொற்றி என்னும் இளமைப் பெயரைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. வீட்டு வளர்ப்பு விலங்குகள் குழந்தை போன்று கருதப்படுவதால் கிளியைப் பறக்கும் பிள்ளை என்றும், அணிற்பிள்ளையை ஓடும் பிள்ளை என்றும், பூனையை நடக்கும் பிள்ளை என்றும், தென்னை மரத்தை நிற்கும் பிள்ளை என்றும் வழங்கும் பழந்தமிழ்ச் சொல்லாட்சிகளை நோக்குக. பூனையைப் பிள்ளையாகக் கருதிய கரணியத்தால் தெலுங்கு மொழியில் பில்லி [பிள்ளை] எனப்படுகிறது. மலையாளத்தில் 'கொற்றி' [குற்றி] எனப்படுகிறது. கன்னடத்திலும் உலக மொழிகளிலும் கொத்தி எனப்படுகிறது. இதனைச் சரியாகப் பகலில் கண் தெரியாத காரணத்தால் குருட்டுத்தனத்தைக் குறிக்கும் 'கொத்தை' என்னும் சொல்லோடு இணைக்க வேண்டியதில்லை. கொத்தை என்பது குந்து [குறைபாடு, ஊனம்] என்னும் சொல்லிலிருந்து குந்து → கொந்து → கொந்தை → கொத்தை எனத் திரிந்து தமிழில் பார்வைக் குறைபாட்டைக் குறிக்கும் சொல்லாக உருப்பெற்றது ''கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித்து'' [தேவா.1040:2].

''இன்னான் என்பது கண்ணாற் கொத்தை காலான் முடவன் என்பன [தொல்.வேற்.11.இளம்.உரை] என்னும் சொல்லாட்சிகளை நோக்குக. ஐரோப்பாவில் கி.பி.3ஆம் நூற்றாண்டுவரை பூனையிருந்ததில்லையென்றும், அது எகுபது நாட்டிலிருந்து இங்குக் கொண்டுவரப்பட்டதென்றும், cat என்னும் அதன் பெயர் எகுபதியச் சொல்லென்றும், மாக்சுமுல்லர் கருதினார். பூனை நீண்ட காலமாக எகுபது நாட்டில் வளர்க்கப்பட்டு வந்ததனாலும், ஓர் எகுபதியப் பெண் தெய்வம் பூனைத்தலை கொண்டிருந்ததனாலும், ஐரோப்பாவிற்கு எகுபது அண்மையிலிருப்பதனாலும், அவர் கூற்றுப் பொருத்தமாகவே தோன்றுகின்றது. ஆயின் குமரிநாடே மாந்தன் பிறந்தகமாதலாலும், தமிழகத்திற்கு எகுபது நாட்டொடு நீண்டகாலமாக நீர் வாணிகமும் நிலவாணிகமும் இருந்து வந்ததனாலும், வெருகு தமிழகக் குறிஞ்சி நிலக் கருப்பொருளாதலாலும், பூனை தமிழகத்தினின்றே எகுபதுக்குச் சென்றிருத்தல் வேண்டும். அதனால் அதன் பெயரும் தமிழ்ச்சொல்லாயேயிருத்தல் வேண்டும் என்று பாவாணர் குறிப்பிட்டுள்ளதை ஒப்பு நோக்குக [செந்தமிழ்ச் செல்வி: பக்.134,136].

கொற்றிக்கலை *koṟṟi-k-kalai*, பெ.(n) 1. நிலவேம்பு; ground neem.a medicinal plant Justicia paniculata. 2. கொறித்தலை; blotched-head (சா.அக.).

[கொற்றி + கலை.]

கொற்றிக்கோரை *koṟṟi-k-kōrai*, பெ.(n.) கோரை வகை; a kind of sedge.

[கொற்றி + கோரை.]

கொற்றியார் *korriyār,* பெ.(n.) 1 துளசிமாலை முதலிய சின்னங்களை யணிந்து திருமாலடியாராய்த் திரியும் பெண்துறவிகள்; a sect of Vaisnava female mendicants wearing basil garlands and other religious marks. 2. ஒரு கலம்பக வுறுப்பு; one of the constituent themes of *Kalambagam.* 3.பிள்ளைப் பேற்றின் அதிதேவதை (யாழ்ப்.); Goddess of parturition.

[கொற்றி + ஆர் – கொற்றியார்.]

கொற்றியார்பூசை *korriyār-pūšai,* பெ.(n) கருவுயிர்த்த பத்தாவது நாள் பெண்ணை முழுக்காட்டி அறையைத் தூய்மை செய்து வீட்டிற்குள் அழைத்து வந்து அன்றிரவு காட்டேரி மனநிறைவு அடையும்படி போடும் பூசை; a ceremonial offering made to the female deity named *Kātteri* responsible for parturition or child birth on the tenth day of delivery. In this the lying in room is ceremoniously cleaned and the woman is given a bath and admitted into the house. The worship is conducted purely by women only (சா.அக.).

[கொற்றி + ஆர் + பூசை.]

கொற்றியாரைவழிவிடு-தல் *korriyārai-valividu-,* 20 செ.கு.வி.(v.i.) கருவுயிர்த்த ஐந்தாம் நாள் பிள்ளைப்பேற்றின் அதிகாரத் தெய்வத்தை வழியனுப்பும் நோக்கில் கருவுயிர்த்த பெண் படுத்திருந்த பாயுடன் அவள் கொண்ட உணவின் ஒவ்வொரு வகையிலும் சிறிது எடுத்துக்கொள்ளச் சொல்லி மருத்துவச்சியை ஊருக்குப் புறத்தே போகச் செய்தல் (யாழ்ப்.); to bid farewell to the Goddess of Parturiton on the fifth day after child birth. by sending away the midwife to some open place or jungle with the mat used by the mother and morsel of each of the dishes she had tasted.

[கொற்றியார் + ஐ + வழிவிடு-.]

கொற்றியோடு *korri-y-ōdu,* பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[கொற்றி + ஒடு (ஒடை).]

கொற்றிலக்கை *korrilakkai,* பெ.(n.) 1. ஒரு பழைய வரி; an ancient tax. 2. ஆள் ஒன்றுக்கமைந்த ஊதியம்; wage for a person.

[கொற்று + இலக்கை.]

கொற்று + இலக்கை. இவ் விரு சொற்றொடர் இரண்டு பொருளில் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன. உருபும் பயனும் பெறுதற்கமைந்த தொகைநிலையில், கொற்றுக்கு உரிய ஊதியமாகும் 'இலக்கை' என்றும், பலர் கூடிச் செய்த பணியில் ஆள் ஒன்றிற்கமைந்த ஊதியம் என்றும் பொருள் தருவதோடு, ஒரு துறைக்கமைந்த பல அதிகாரிகளின் பணியாகிய கொற்றுக்கு, அதிகாரி ஒருவர்க்கு அமைந்த ஊதியமாகப் பெறுதற்கு அரசால் அனுமதிக்கப்பட்ட ஊர்களின் வரி, ஆயம், கடமை முதலிய வருவாய்களும் கொற்றிலக்கை என்னும் பெயரால் கூறப்பெறும்.

இவ்வாறாக, ஊழியத்தின் நாள் ஊதியமாகவும், அதிகாரிகள் பெறுதற்கமைந்த வரியின் பெயராகவும் கொற்றிலக்கை இடம் பெற்றுள்ளமையினைக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன.

"திருநந்தவனக் குடிகளுக்கு இலக்கைக்கும் கொற்றுக்கும் உடலான நிலம் இருபத்தைஞ்சுமா" [தெ.கல்.தொ.8, கல்.56].

"கோயில் அதிகாரி கொற்றிலக்கையும்"

"அதிகாரிப் பேறான கொற்றிலக்கையும்" [நாயக்கர் காலம்].

"அதிகாரிப் பேறான கொற்றிலக்கையும்" [தெ.கல்.தொ.17, கல்.269,532].

கொற்று[1] *korru,* பெ.(n.) தொழிலாளர் பலர் அமைந்த கூட்டம்; group of labour.

[கொத்து → கொற்று]

இத் திருநந்தவனம் செய்ய வேண்டும் பேராய் நிச்சயித்த நாயகம் பேர் ஐஞ்சும் பேர் தொண்ணூற்றைஞ்சும் ஆகப் பேர் நூறு. இதில் நாயகம் பேர் ஐவர்க்கு கொற்றுக்கு நாள் ஒன்றுக்குப் பேர் ஒன்றுக்கு முக்குறுணியாக நெல்லுக் கலனே முக்குறுணியும் புடவை முதல் ஆட்டைக்குப் பேரால் மூன்றாகக் காசு பதினைஞ்சும். பேர் தொண்ணூற்றைவர்க்கு கொற்றுக்கு நாள் ஒன்றுக்கு பேர் ஒன்றுக்கு நெல்லு பதக்காக புடவை முதல் ஆட்டைக்கு பேரால் காசு இரண்டாக காசு நூற்றுத் தொண்ணூறும் [தெ.கல்.தொ.8.கல்.55].

"திருநந்தவனப் புறமாக விலைகொண்ட நிலத்து-ஊர்பழ நிலம் ஏழு மாவும் கொற்றுக்கு உடலாகவும்"

"திருநந்தவனத்துக்கும் திருநந்தவனப்புறமாக கொற்றுக்கும் விலைகொண்ட நிலம்" [தெ.கல்.தொ.12. கல். 151] [கல் அக.].

தொழிலாளர் பலர் அமைந்த கூட்டம் [தொகுதியர், கூட்டாளர், தொழில்குழு] ஒரு தொழிலுக்கமைந்த பலர் சேர்ந்த குழுவே கொற்று எனப்பட்டது. ஒருசிலர் சேர்ந்து செய்யும் ஊழியமும் கொற்றெனவே கூறப்பெறும். கொற்றும் கொத்தும் கல்வெட்டுகளில் மயங்கக் கூறப்பெறினும் வேறுபட்ட பொருள் கொண்டனவேயாகும்.

கொற்று[2] *korru,* பெ.(n.) 1. கொற்று வேலை; masonry. *"கொற்றுள விவரில்" (திருவாலவா.30:23).* 2. கொத்தன் (உ.வ.); mason. 3. ஒரு கொத்தன் செய்யும் வேலையளவு; the measure of work turned out by a mason. இந்தச் சுவர் கட்ட எத்தனை கொற்றுச் செல்லும்?

ம. கொற்று.

[குறு → குற்று → கொற்று + ஆள். கொற்றாள் : சிற்றாள். சிற்றாள் பலர் கொண்ட குழு. அக் குழுவின் தலைவன் அக் குழுச் செய்யும் ஒருநாள் வேலை அளவு.]

கொற்று[3] *korru,* பெ.(n.) உணவு (I.M.P.S. A.109); food, means of subsistence.

[குறு → குற்று → கொற்று : கொற்றானுக்குக் கூலியாகத் தரும் உணவு.]

கொற்று[4] *korru,* பெ.(n.) தவசமாகப் பெறும் கூலி; wages in kind. *"பதினாற்கல நெல்லு கொற்று பெறுவதாகவும்" (S.I.I.v.302).*

[கொள் → கொற்று.]

கொற்று[5] *korru,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கொத்தல்; to make into tiny pieces. 2. கோதுதல்; to preen, run through.

[கொல் → கொற்று.]

கொற்றுவாய் *korru-vāy,* பெ.(n.) கல்வேலை செய்யும்போது உருவச் சிதைவு ஏற்பட உடைகை; figure getting damaged when a stone is being sculpted.

[கொற்று + வாய்.]

கொற்றுறை *korrurai,* பெ.(n.) கொல்லன் பட்டடை; blacksmith's workshop. *"கொற்றுறைக் குற்றில" (புறநா.95).*

[கொல் + துறை.]

கொற்றை *korrai,* பெ.(n.) கொத்தை; blot, blemish, defect. *"ப்ரேமத்துக்குக் கொற்றையாகையாலே" (திவ்.பெரியாழ்.2, 4:1, வியா.ப.310, அரும்).*

[குழத்தல் → குழத்து → கொத்து → கொத்தை (பழுது) → கொற்றை.]

கொறகொறப்பு *kora-korappu,* பெ.(n.) குளிர்ச்சியானால் குழந்தைகளுக்குத் தொண்டையில் அல்லது நெஞ்சில் கோழை காட்டிக் காணும் ஒலி; rale or abnormal noise either in the throat or the lungs, generally common in children affected with cold or phlegm (சா.அக.).

[குறுகுறு → கொறகொற → கொறகொறப்பு.]

கொறகொறெனல் *kora-korenal,* பெ.(n.) ***கொறகொறப்பு*** பார்க்க; see *kora-korappu.*

[கொறகொற + எனல்.]

கொறண்டல் வாதம் *korandal-vādam,* பெ.(n) ***குறண்டல் வாதம்*** பார்க்க; see *kurandal-vādam* (சா.அக.).

[குறண்டல் → கொறண்டல் + வாதம்.]

கொறவி *koravi,* பெ.(n.) கடல்மீன் வகையுளொன்று; a kind of a sea fish.

[குறவி → கொறவி.]

கொறாவு-தல் *korāvu-,* 6 செ.கு.வி. (v.i.) முகப்பொலி விழத்தல் (மீன்.பிடி.தொ.); to lose glamour.

[குறாவு → கொறாவு.]

கொறி[1]**-த்தல்** *kori-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1.பல்லாலும் அலகாலும் தவசத்தைப் பிரித்துத் தின்னுதல்; to nip off the husks of grains. *"தினைகள் கொறிப்பமுன் றாவி" (காஞ்சிப்பு. இருபத்.95).* 2. சிறிது சிறிதாகப் பொறுக்கி உண்ணுதல் (இ.வ.); to graze, to pick up food here and there, as cattle, to eat scantily. *"உடுத்திரள் பொரியிற் கொறிப்ப" (கல்லா. முருகன்துதி.).* 3. விட்டுவிட்டு ஒலித்தல் (யாழ்ப்.); to make a ticking or clucking sound. 4.அலப்புதல் (யாழ்ப்.); to chatter.

தெ. கொருகு; **க.** கொறுகு; **ம.** கொறி.

[கொறு → கொறி.]

கொறி[2] *kori,* பெ.(n.) 1. ஆடு; sheep. *"கொறியினவுணர்தம் வெள்ளங்கள்... கொன்றதிலோ" (அஷ்டப்.திருவரங். மா.32).* 2. மேழவோரை; Aries (சா.அக.). கொறியலவன் (சினேந்.71).

[குறி → கொறி.]

கொறிக்கு-தல் *korikku-,* 5 செ.குன்றாவி.(v.t.) பல்லாற்கோதுதல்; gnawing.

[கொறு → கொறிக்குதல்.]

கொறித்துப்பார்-த்தல் *korittu-p-pār-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. குத்துதற்குத் தக்கபடி காய்ந்துள்ளதா என்பதை அறிய அவித்த நெல்லை வாயிலிட்டுப் பதம்பார்த்தல்; to ascertain by tasting whether the paddy, grain that has been boiled is dry enough for the husking. 2.அகங்காரங் கொண்டு வெறித்துப் பார்த்தல்; to stare at with impudence.

[கொறித்து + பார்-.]

கொறிதலை *koritalai,* பெ.(n) நிலவேம்பு; ground neem.

[கொறி + தலை.]

கொறிப்புத்தம் *kori-p-puttam,* பெ.(n.) சருக்கரை வேம்பு; margosa tree; the bark of which is sweet to taste (சா.அக.).

[கொறி + புத்தம்.]

கொறு *koṟu,* பெ.(n.) கன்றின் வாய்ப்பூட்டு; wicket - muzzle of a calf.

மறுவ. கொரி.

[கொரி → கொறு.]

கொறுக்கச்சி *koṟu-k-kacci,* 1. நாய்வேம்பு; dog neem, same as dog mustard. 2. நிலவேம்பு; ground neem. 3. நாணல் வகை; European bamboo reed.

[குறுக்கச்சி → கொறுக்கச்சி.]

கொறுக்கச்சீரிகம் *koṟukka-c-cīrigam,* பெ.(n.) பேரவுரி; long-podded Indigo plant.

[கொறுக்கை + சீரிகம்.]

கொறுக்கம்புளி *koṟukkam-puḷi,* பெ.(n.) ***கொறுக்காய்ப்புளி*** பார்க்க; see *koṟukkāy-p-puḷi.*

[கொறுக்காய்ப்புளி → கொறுக்கம்புளி.]

கொறுக்கல் *koṟukkal,* பெ.(n.) ***கொறுக்கை*** பார்க்க (இ.வ.); see *koṟukkai.*

[கொறு → கொறுக்கல்.]

கொறுக்கா *koṟukkā,* பெ.(n.) ***கொறுக்காய்ப்புளி*** (மலை.) பார்க்க; see *koṟukkāi-p-puḷi.*

[கொடுக்காய் → கொடுக்கா → கொறுக்காய் → கொறுக்கா.]

கொறுக்காம்பட்டி *koṟukkām-paṭṭi,* பெ.(n.) சேலம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Selam Dt.

[கொறுக்கன் + பட்டி → கொறுக்காம்பட்டி.]

கொறுக்காய் *koṟukkāy,* பெ.(n.) ***கொறுக்காய்ப் புளி*** பார்க்க; see *koṟukkāy-p-puḷi.*

[கொடுக்காய் → கொறுக்காய்.]

கொறுக்காய்ப்புளி *koṟukkāy-p-puḷi,* பெ.(n.) 1. கொடுக்காய்ப்புளி; Manilla tamarind. 2. ஈழப்புளி Malabar gamboge.

[கொடுக்காய் → கொறுக்காய் + புளி.]

ஒரு சிறிய மரம். இதன் காயைப் புளியைப் போல் கறிக்குப் பயன்படுத்துவதும் உண்டு.

கொறுக்கு *koṟukku,* பெ.(n.) மேகநோய் வகை; syphilis.

தெ. கொறுக்கு.

[கொறு + கொறுக்கு.]

கொறுக்குக்கொண்டான் *koṟukku-k-koṇḍāṉ,* பெ.(n.) கொறுக்கு நோயால் பீடிக்கப்பட்டவன்; one who is suffering from chancre (சா.அக.).

[கொறுக்கு + கொண்டான்.]

கொறுக்குவலி *koṟukku-vali,* பெ.(n.) 1. குரக்குவலி; cramps. 2. வலிப்பு; epilepsy. 3. ஒரு நரம்புவலி; spasm (சா.அக.).

[குறக்கு → கொறுக்கு + வலி.]

கொறுக்கை[1] *koṟukkai,* பெ.(n.) 1. நாணல்வகை (மலை.); European bamboo reed. 2. கடல்மீன் வகை; a kind of sea fish. 3. ***கொறுக்கு*** (M.L) பார்க்க; see *koṟukku.*

[குறுக்கை → கொறுக்கை.]

கொறுக்கை[2] *koṟukkai,* பெ.(n.) குறட்டை மூச்சு; (பிங்.); snoring.

[கொறு → கொறுக்கை.]

கொறுக்கைத்தாரி *koṟukkai-t-tāri,* பெ.(n.) செங்கத்தாரி; false peacock foot tree (சா.அக.).

[கொறுக்கை + (தாலி) தாரி.]

கொறுக்கைப்புல் *koṟukkai-p-pul,* பெ(n.) நாணல்; European bamboo reed (சா.அக.).

[கொறுக்கை + புல்.]

கொறுக்கைப்புளி *koṟukkai-p-puḷi,* பெ.(n.) ***கொறுக்காய்ப்புளி*** பார்க்க; see *koṟukkāy-p-puḷi.*

மறுவ. கொறுக்கா ஈழம்புளி, கொறுக்காப்புளி.

[கொடுக்காய் → கொறுக்காய் + புளி → கொறுக் காய்ப்புளி → கொறுக்கைப்புளி.]

கொறுக்கைப்பேணி *koṟukkai-p-pēṇi,* பெ.(n.) பேய்ப்பாற்சோற்றி; a plant of the species of Indian guttapercha yielding an elastic substance (சா.அக.).

[கொறுக்கை + பேணி.]

கொறுக்கைவலி *koṟukkai-vali,* பெ.(n.) ***கொறுக்கு வலி*** பார்க்க; see *koṟukku-vali* (சா.அக.).

[கொறுக்கை + வலி.]

கொறுக்கைவிடல் *koṟukkai-viḍal,* பெ.(n.) குறட்டை விடல்; snoring (சா.அக.).

[கொறுக்கை + விடல்.]

கொறுக்கோல் *koṟu-k-kōl*, பெ.(n.) ***கொறு*** பார்க்க; see *koṟu*. *'முன்னணைக் கன்று பசுக்களோடே போனால் முலையுண்ணாமைக்குக் கொறுக்கோலென்று அதின் மூஞ்சியிலே கட்டி விடுவார்கள்' (ஈடு, 4, 8:4).*

[கொறு + கோல்.]

கொறுகொறு-த்தல் *koṟu-u-koṟu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. சினம் காட்டுதல்; to bubble with anger. *"இட்டிடை கோறு நாங்க ளெனக்கொறு கொறுப்ப" (சீவக.2040).* 2. குறட்டை விடுதல்; to snore.

தெ. கொறகொறலாடு.

கொறுகொறுப்பு *koṟu-koṟuppu*, பெ.(n.) 1. ***கொற கொறப்பு*** பார்க்க; see *koṟa-koṟappu*. 2. அலட்டுகை (யாழ்.அக.); pestering.

[கொறுகொறு → கொறுகொறுப்பு.]

கொறுகொறுவெனல் *koṟu-koṟu-v-eṉal*, பெ.(n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு; (onom. expr. signifying) roaring as the sea. *"பாற்கடல் கொறுகொறு வென்ன" (தணிகைப்பு.நாகமருள்.3).* 2. சினக்குறிப்பு (onom. expr.signifying); anger.

[கொறு + கொறு + எனல்.]

கொறுங்கை *koṟuṅgai*, பெ.(n.) நாணல் வகை; European bamboo reed.

[கொறுக்கை → கொறுங்கை.]

கொறுடு *koṟuḍu*, பெ.(n.) கன்னம் (ஈ.டு, 8, 3:4); cheek.

[கொடிறு → கொறுடு.]

கொறுவாய் *koṟuvāy*, பெ.(n.) உடைந்த விளிம்பு (நெல்லை); broken rim or edge.

மறுவ. ஒறுவாய், கதுவாய்.

[கதுவாய் → கொறுவாய்.]

கொன் *koṉ*, பெ.(n.) 1. பயனின்மை (தொல்.சொல். 256); uselessness. 2. அச்சம்; fear. *"கொன் முனை யிரவூர் போல" (குறுந்.91).*

[கொல் → கொன்.]

கொன்² *koṉ*, பெ.(n.) 1. கூர்மை; sharpness. 2. நுனி; tip. 3. காலம் (தொல்.சொல். 256); season. 4. விடியற்காலம்; dawn. *"கொன்னிளம் பரிதி" (சீவக.173).* 5. பெருமை; greatness. *"கொன்னூர் துஞ்சினு மியாந்துஞ் சலமே" (குறுந்.138).* 6. வலி (சூடா.); strength.

[குல் → கொல் (குத்துதல்) → கொன்.]

கொன்றல் *koṉṟal*, பெ.(n.) கொல்லுதல்; murder.

[கொல் → கொன்றல்.]

கொன்றன் *koṉṟaṉ*, பெ.(n.) வாழை; plantain tree (சா.அக.).

[கொல் → கொன்றன.]

கொன்றான்சாறு *koṉṟāṉ-šāṟu*, பெ.(n.) வாழைச் சாறு; the juice of plantain bark (சா.அக.).

[கொன்றன் → கொன்றான் + சாறு.]

கொன்றுண்ணி *koṉṟuṇṇi*, பெ.(n.) பிற உயிரினைக் கொன்று பிறகு உண்ணும் உயிரி; predator.

[கொன்று + உண்ணி.]

கொன்று-தல் *koṉṟu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. கொன்னிப் பேசல் அல்லது திக்கிப் பேசல்; stammering. 2. குழறிப் பேசல்; babbling. 3. குழந்தைபோற் பேசல்; prattling like child (சா.அக.).

[கொன் → கொன்று.]

கொன்றை *koṉṟai*, பெ.(n.) 1. சரக்கொன்றை; Indian laburnum. *"பொலனணி கொன்றையும்" (ஐங்குறு. 435).* 2. செங்கொன்றை; red Indian laburnum. 3. மஞ்சட்கொன்றை; siamese tree. 4. கடுக்கை மரம்; gallnut tree.

மறுவ. கொன்னை மரம்.

[கொல் → கொன்று → கொன்றை (கொத்து).]

வகைகள்: 1. சரக்கொன்றை 2. மயிற்கொன்றை 3. சிவப்புக் கொன்றை 4. கருங்கொன்றை 5. குளோப் பூக்கொன்றை 6. காட்டுக்கொன்றை 7. மஞ்சட்கொன்றை 8. வரிக்கொன்றை 9. பிரம்புக் கொன்றை 10. மலைக் கொன்றை 11. சீமைக் கொன்றை 12. இராகத்துக் கொன்றை 13. நரிக் கொன்றை 14. சிறு கொன்றை 15. செடிக் கொன்றை 16. பெருமயிற் கொன்றை 17. செழு மலர்க் கொன்றை 18. சொறிக்கொன்றை 19. எருமைக் கொன்றை 20. புலிநகக் கொன்றை 21. மந்தாரக் கொன்றை 22. பெருங்கொன்றை 23. செம்மயிற் கொன்றை 24. பொன்மயிற்கொன்றை 25. முட்கொன்றை 26. வெண் மயிற் கொன்றை 27. குண்டு பூக்கொன்றை 28. சிறு மயிற் கொன்றை 29. காக் கொன்றை 30. மல்லங் கொன்றை 31. நொச்சிக் கொன்றை 32. புளிணைக்காய் கொன்றை 33. ஈசன் தார்க் கொன்றை 34. மாம்பழக் கொன்றை 35. சூரத்துக் கொன்றை (சா.அக.).

கொன்றைக்களி *koṉṟai-k-kaḷi*, பெ.(n.) ***கொன்றைப் புளி*** பார்க்க; see *koṉṟai-p-puḷi*.

[கொன்றை + களி.]

கொன்றை

கொடிப்பாலை



கொள்ளுக்காய் வேளை

அலுவலகம்
30 ஆக 20
பெறப்பட்டது
சென்னை-600

கொடிவயலை

கொடிவேலி

கொன்றைக்காய் *konrai-k-kāy,* பெ.(n.) 1. கொன்னைக் காய்; purging cassia pod. 2. ***கொற்றைப்புளி*** பார்க்க; see *korrai-p-puli.*

[கொன்றை + காய்.]

இதனை இடித்து வடிகட்டிச் சிறிதளவு சாப்பிட மலத்தை இளக்கும். அதிகளவு சாப்பிடக் கழிச்சலாகும்.

கொன்றைக்குழல் *konrai-k-kulal,* பெ.(n.) ***கொன்றைப்பழக்குழல்*** பார்க்க; see *konrai-p-pala-k-kulal.*

[கொன்றை + குழல்]

கொன்றைசூடி[1] *konrai-šūdi,* பெ.(n.) கொன்றை மாலை சூடியவன், சிவன் (திவா.); šiva, as crowned with *konrai* flowers.

[கொன்றை + சூடி]

கொன்றைசூடி[2] *konrai-šūdi,* பெ.(n.) சிவகரந்தை; sweet basil (சா.அக.).

[கொன்றை + சூடி]

கொன்றைப்பட்டை *konrai-p-pattai,* பெ.(n.) கொன்றை மரத்தின் அடிமரத்துப் பட்டை; bark of the stem of cassia tree-cassia bark.

[கொன்றை + பட்டை]

இதை இடித்து எண்ணெயிற் குழைத்து அம்மைப் புண், வண்டுகடி, சதை வெடிப்பு முதலியவற்றுக்குப் பூசலாம் [சா.அக.].

கொன்றைப்பழக்குழல் *konrai-p-pala-k-kulal,* பெ.(n.) கொன்றைப் பழத்தைத் துளைத்துச் செய்யப்பட்ட ஊதுகுழல்; musical pipe made of the *konrai-pod.* *'கொன்றைப் பழக்குழற் கோவலர்' (சிலப்.17,பாட்டு,உரை).*

[கொன்றை + பழம் + குழல்]

கொன்றைப்புளி *konrai-p-puli,* பெ.(n.) கொன்றைக் காய்க்குள் விதையைச் சுற்றிலுமுள்ள பசை; mucilaginous pulp surrounding the seeds of cassia.

[கொன்றை + புளி]

இது மலம் இளக்கும்; வறுமைக் காலத்தில் உணவாகும். நீரிழிவை நீக்கும். பெண்களுக்குக் குல்கந்துடன் சேர்த்துக் கொடுக்க மலம் இளக்கும். குழந்தைகட்கு வயிற்றுப்பிசத்தால் காணும் வலிக்குத் தொப்புளைச் சுற்றித் தடவுதலும் உண்டு [சா.அக.].

கொன்றைப்பூ *konrai-p-pū,* பெ(n.) கொன்றை மரத்தின் பூ; cassia flowers.

[கொன்றை + பூ]

இதனைக் கியாழம் இட்டுக் கழிச்சல், சீதக்கழிச்சல் ஆகியவற்றைக் குணமாக்கலாம் [சா.அக.]. சிவனுக்குகந்த மலர்.

கொன்றைவாருதி *konrai-vārudi,* பெ.(n.) 1.ஒரு பூண்டு (மலை.); marsh-samphire. 2.பவளப்பூண்டு; species of glasswort (சா.அக.).

[கொன்றை + வாருதி]

கொன்றைவேந்தன் *konrai-vēndan,* பெ.(n.) ஒளவையார் இயற்றிய 'கொன்றை வேய்ந்த' என்று தொடங்கும் ஒரு நீதிநூல்; a short moral code in Tamil by Avvaiyār commencing with Konraiveynda.

[கொன்றை + வேய்ந்தன் – கொன்றைவேய்ந்தன் → கொன்றைவேந்தன்.]

கொன்னக்குடி *konna-k-kudi,* பெ.(n.) இராமநாத புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanadha puram Dt.

[கொன்னை + குடி.]

கொன்னக்குளம் *konna-k-kulam,* பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Sivagangai Dt.

[கொன்னை + குளம்.]

கொன்னக்கோல் *konna-k-kōl,* பெ.(n.) கச்சேரியின்போது பக்க இன்னியமாக வாயால் சொல்லப்படும் தாளம்; vocalized rhythmic beat as an accompaniment in a concert.

[கொன்னை + கோல்]

கொன்னத்தான்பட்டி *konnattān-patti,* பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Sivagangai Dt.

[கொன்னம் → கொன்னத்தான் + பட்டி.]

கொன்னாளர் *konnālar,* பெ.(n.) கரிசாளர் (பாவிகள்); sinner, contemptible person, wretch.

[கொன்னாள் + அர்]

கொன்னாளன் *konnālan,* பெ.(n.) 1.பயனற்றவன்; useless person. *"நம்மருளாக் கொன்னாளன்" (கலித்.42:18).* 2. பாழ்வினையன் (பாவி); sinner. *"வடதிசையுங் கொன்னாளர் சாலப் பலர்" (நாலடி, 243).*

[கொன் + ஆளன்.]

கொன்னி-த்தல் *konni-*, 4 செ.கு.வி. (v.i.) 1. நாத்திரும்பாதிருத்தல்; have an impediment in one's speech. 2. திக்குதல்; to stammer.

[கொன்னு → கொன்னி.]

கொன்னிப்பு *konnippu*, பெ.(n.) 1. திக்கிப் பேசுகை; stammering. 2. நோய் வகை (பரராச.i, 236); a disease.

[கொன் → கொன்னிப்பு.]

கொன்னிப்பேசு-தல் *konni-p-pēsu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. தெத்திப் பேசுதல்; to stammer. 2. குழந்தையைப் போற் பேசுதல்; prattle like a child (சா.அக.).

[கொன்னி + பேசு-.]

கொன்னு[1]-தல் *konnu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. திக்கிப் பேசுதல்; to stammer; stutter. 2. குழறுதல்; to babble. *"ஒன்னார்கள் வாய்கொன்ன" (தனிப்பா. 1.386:38).*

கொன்னு[2]-தல் *konnu-*, 5 செ.கு.வி.(v.i.) பெருமையுறுதல் (தணிகைப்பு.நாட்140); to become famous.

கொன்னெச்சன் *konneccan*, பெ.(n.) மாட்டிற் பற்றும் ஈவகை; a kind of gadfly biting cattle.

[கொன் + எச்சன்.]

கொன்னே *konnē*, கு.வி.எ.(adv.) வீணே; for no purpose.

[கொன் → கொன்னே.]

கொன்னை[1] *konnai*, பெ.(n.) 1. திக்கிப்பேசுகை; stammering. 2. குழறுகை; babbling.

ம. கொஞ்ஞு; க.,படை. கொதசு; தெ.கொதுகு

[கொன்னு→ கொன்னை.]

கொன்னை[2] *konnai*, பெ.(n.) தொன்னை (இ.வ.); cup made of leaves.

[குல் → கொல் → கொன் → கொன்னை.]

கொன்னை[3] *konnai*, பெ.(n.) ***கொன்றை*** பார்க்க; see *konrai*.

[கொன்றை → கொன்னை.]

கொன்னை[4] *konnai*, பெ.(n.) சிறிய வெற்றிலையடுக்கு; a bunch of betel leaves.

[குல் → கொல் → கொன் → கொன்னை.]

கொன்னை[5] *konnai*, பெ.(n.) இகழ்ச்சி; contempt. *"அத்துரு தாசி யாகிக் கொன்னையுற்றிடுதி" (வேதாரணி. சேடன்.7).*

[கொன் → கொன்னை.]

கொன்னைச்சொல் *konnai-c-col*, பெ.(n.) இடைநிலையாய்ப் பயன்படும் சொல் (வழ.சொ.அக.); expletive.

[கொன்னை + சொல்.]

கொன்னைத்தெங்கு *konnai-t-tengu*, பெ.(n.) 1. முடத்தெங்கு, வளைந்த தென்னை; crooked cocopalm. 2. காய்க்காத தெங்கு (நாஞ்.); barren cocoanut palm.

[கொன் → கொன்னை + தெங்கு.]

கொன்னைப்புளி *konnai-p-puli*, பெ.(n.) ***கொன்றைப்புளி*** பார்க்க; see *konrai-p-puli* (சா.அக.).

[கொன்றைப்புளி → கொன்னைப்புளி]

கொன்னையன் *konnaiyan*, பெ.(n.) திக்கிப் பேசுபவன்; a man of indistinct or inperfect anticulation.

ம. கொஞ்ஞன்.

[கொன்னை→ கொன்னையன்.]

கொன்னைவாய் *konnai-vāy*, பெ.(n.) தெத்துவாய்; defective utterance (சா.அக.).

[கொன்னை + வாய்]

கொன்னைவாயன் *konnai-vāyan*, பெ.(n.) தெத்துவாயன்; stammerer; one who makes faltering speech (சா.அக.).

[கொன்னை + வாய் + அன்]

கொனை *konai*, பெ.(n.) நுனி; tip end as of a needle. *"பிரம்பின் கொனைபடலால்" (அஷ்டப்.திருவரங். மா.89).*

[முனை → குனை → கொனை. நுனியைக் கொனை என்பது வடார்க்காட்டு வழக்கு.]

Russ. konesh; **E.** cone, a sold pointed figure; **Fr.** cone; **L.** conus; **Gr.** konos, a peak, a cone eh.E.D. E. hone; **A.S.** han; **Ice.**hein; **Skt.** cana.

கொன்னை, கொன்னையன் முதலிய சொற்கள் கொனை என்பதினின்றும் திரிந்தவையே (த.வி.43, ஒ.மொ.370).

கோ

கோ[1] *kō,* 1. ககர மெய்யும் ஒகார நெடிலும் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து; the compound of க் + ஒ. 2. ஒலிக்குறிப்பு; word imitative of sounds.

[க் + ஒ.]

கோ[2]**–த்தல்** *kō-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. மணி முதலியவற்றினூடு நூலைப் புகுத்தி இணைத்தல்; to string, as beads, flowers, *ōlā* leaves; to file; to insert; to thread, as a needle. *"கோத்தணிந்த வெற்பு மணி" (பெரியபு. மானக்கஞ்.22).* இறைச்சி தின்றாலும் எலும்பைக் ,கோத்துக் கழுத்தில் அணிகிறதா (பழ). 2. ஒழுங்கு படுத்துதல்; to compose, compile, arrange, reduce to order; to systematise. *"பார்த்துவிட மெங்கணுங் கோத்தநிலை குலையாது" (தாயு. கருணாகர.4).* 3. முறையாகக் கூறுதல்; to narrate in order; *"பூமியாண் முறையுங் கோத்தார்" (பாரத. சம்பவ.113).* 4. தொகுத்துரைத்தல்; to enumerate, recount. *"கோமின் றுழாய்முடி யாதியஞ் சோதி குணங்களே" (திவ்.திருவாய்.4, 1:7).* 5. நுணுக்கமாகக் கதை முதலியன புனைதல்; to invent, as a story, in a clever and fitting manner. 6. உடுத்துதல்; to put on, to wear. *"கோத்தகல லாடையும்" (தேவா. 509: 2).* 7. கை பிணைத்தல்; to clasp, join, interlock, as the hands. *"குரவை யாய்ச்சியரோடு கோத்ததும்" (திவ். திருவாய். 6, 4:1).* 8. ஒன்றுசேர்த்தல்; to unite, merge. *"அன்பரைக் கோத்தற விழுங்கிக் கொண்டு" (தாயு. பொருள்வ. 3).* 9. கவிந்து கொள்ளுதல்; to envelop, cover. *"வல்லிருள் கோத்தது கருங்கடல் கொள்ளை கொண்டென" (கம்பரா. இலங்கை கேள்வி.3).* 10. எதிர்த்தல்; to oppose, resist. *"கனலி கோப்பக் காரிருளுடைந்த தேபோல்" (சீவக.1290).*

[கோலு → கோர் → கோர்த்தல் → கோத்தல். கொள் = ஒன்றாகக் கொள்வது, சேர்ப்பது.]

கோ[3] *kō,* பெ.(n.) 1. ஆன் (பசு) (பிங்.); cow. 2. எருது; bull. *'ஒரு கோவை யேறி' (இலக்.வி. 907,உரை).*

Per. gāw; or grar. gāuk; **Avest.** gāush; **Tock-A.** ko, ki; **Tock-B.** ken **Mod.** key, kye; **OE.** cu; **OS.** kō; **OFris.** kū; **M.Du.** Coe; **Du.** koe; **OHG.** chuo, kuo; **MHG.** kuo; **Gr.** kuh; **Dan., Swed.** ko; **ON.** kyr; **Norw.** kyr, ko; ō; **Lett.** guous; **O.Slav.** gov; **Czech.** hovado; **Slavak.** hovādo(ox); **O.Gr.** gauk; **Avest.** gaush (ox, bull, cow); **A.s.** cyna, cū(pe)ey; **Rus.** govt.

[கோள் → கோ = கவரப்படும் 'ஆ']

பண்டைக் காலத்திற் கொள்ளைக்காரராலும் அரசராலும் பெரும்பாலும் கவரப்பட்டது 'ஆ'வே. ஊர்கொலை, ஆகோள் பூசல்மாற்றே (தொல். 1004) கோ → கோவன் → கோன்.

கோன் = இடையன் பட்டப்பெயர்.

கோன் → கோனான் = மாட்டிடையன்.

இடையன் → இடையர் = பட்டப்பெயர்.

ஒ.நோ: ஆ → ஆயன் = மாட்டிடையன், இடையன்.

OS., KO., OE., kū; E. cow; **Skt.** go. இச் சொற்கு ஆரிய மொழிகளில் மூலமில்லை. 'கோ' என்னுஞ்சொல் 'ஆ' என்னும் பொருளில் ஆரிய மொழிகளிற் பெரு வழக்காக வழங்குகின்றது. 'கோ' என்னுஞ்சொல், 'ஆ' என்னும் பொருளில் தமிழில் வழங்காமையாலும், ஆரியத்தில் வழங்குவதினாலும் அதை ஆரியச்சொல் என்று கொள்ளற்க. பசுவைக் குறிக்க 'ஆ', பெற்றம் என ஏனைய இரு சொற்கள் வழங்குவதினாலேயே 'கோ' என்னுஞ்சொல் அப் பொருளில் வழக்கற்ற தென்க [வண். மொழி. வழு. 43].

கோ[4] *kō,* பெ.(n.) 1. பேரரசர், மன்னர்மன்னன்; emperor. *"கோக்கண்ட மன்னர் குரைகடற் புக்கிலர்" (தமிழ்நா. 126).* கோவுக்கு அழகு செங்கோல் முறைமை (பழ). 2. அரசன் (பிங்.); king. 3. பெருமையிற் சிறந்தோன் (பிங்.); great man, eminent person. 4. தகப்பன்; father. *"நின்கோ வரினு மிங்கே வருக" (கலித். 116).* 5. தலைமை; leadership, domination. *"ஐவர் வந்து கோச்செய்து குமைக்க" (தேவா. 997:6).* 6. மலை; mountain. *"கோக்க டோறு மின்வாள் வீசி" (சிவப்பிர. வெங்கைக்கலம். 84).* 7. குயவன்; potter. *"மூதூர்க் கலஞ்செய் கோவே" (புறநா.256:7).* 8. தாய்; mother. 9. மேன்மை; excellence, superiority. 10. கலைவாணி; goddess of education. 11. வெளிச்சம்; light, brightness.

Chin. gōng guo; **Gr.** kuh; **Kore.** kō. **Fin.** kopea (proud, grand bold), kova (hard); **Est.** kobe (strong, hard); **Kare.** kova; **Jap.** kowai; **Q.** japaf.

க.கோவ; ம. கோ.

[கோவன் → கோன் = இடையன், இடையன் ஆடுகளைக் காப்பதுபோல் மக்களைக் காக்கும் அரசன். கோன் → கோ (பண். த. நா. பண். 112).]

கோ[5] *kō,* பெ.(n.) 1. பேரின்ப வீடு; heaven. *'உயர்கோவைத் தருகோவை' (இலக்.வி.907, உரை).* 2. விசும்பு (பிங்.); aerial region, sky. 3. நிலம் (பூமி) (பிங்.); earth 4. திசை (பிங்.); cardinal points, direction. 5. கதிர் (பிங்.); ray, beam. 6. இந்திரனின் இடிப்படைக்கலன் (வச்சிராயுதம்) (பிங்.); thunder bolt, as the weapon of Indra.

[கா → கோ (பெரியது).]

கோ[6] *kō*, பெ.(n.) 1. அம்பு (பிங்.); arrow. 2. கண்; eye. *"கோலானைக் கோவழலாற் காய்ந்தார்" (தேவா. 520:7).* 3. சொல் (பிங்.); speech, word. 4. நீர்; water. *'வருகோவைச் சூடி (இலக். வி. 907, உரை).* 5. சாறு (இரசம்); sap, juice (தைலவ.). 6. சூரியன்; sun.

[கோல் → கோ = நீட்டு.]

கோ[7] *kō*, பெ.(n.) இலந்தை (மலை.); jujube tree.

Skt. kōla.

[கோல்காய் → கோல் → கோ.]

கோ[8] *kō*, பெ.(n.) இரங்கற்குறிப்பு (சூடா.); expr. meaning alas! *'கோ' வென்று கதறினான் (இ.வ.).*

[ஓ → கோ.]

கோஇல் *kōil*, பெ.(n.) திருக்கோயில்; temple (கல். அக.).

[கோ + இல் – கோஇல்.]

இடையில் யகர வகர உடம்படுமெய் புணர்க்காமல் ஆள்வது பண்டையோர் மரபு. கோ = பெரிய எனப் பொருள்படும் குறிப்புப் பெயரெச்சம். கோஇல் = பெரியவீடு, அரசனின் அரண்மனை. இது குறிப்புப் பெயரெச்சத் தொடராதலின் விட்டிசைத்தது. எனவே உடம்படுமெய் புணர்க்கப்படவில்லை. நாளடைவில் விட்டிசை கெடாமல் யகர உடம்படுமெய் சேர்த்து ஆயிடை, மாயிருஞாலம் என வழங்கியதும் உண்டு. இருசொல்லும் ஒட்டி ஒருசொல் நீர்மைத்தாகும்போது ஆவூர், மாவிலை என 'வகர' உடம்படுமெய் பெறும். கோயில்,கோவில் பார்க்க.

கோக்கணம் *kō-k-kaṇam*, பெ.(n.) ஆனைத் திப்பிலி; elephant pepper (சா.அக.).

[கோ + கணம். கோ = பெரிய.]

கோக்கதவு *kō-k-kadavu*, பெ.(n.) பெரிய கதவு; big-door. *களத்திற்குக் கோக்கதவு கூட்டி விட்டிருக் கிறது (நாஞ்.).*

[கோ + கதவு.]

கோக்கருநந்தடக்கன் *kōkkaru-nandaḍakkaṉ*, பெ.(n.) சேரநாட்டுத் தென்பகுதியை ஆண்ட அரசருள் ஒருவன்; a king who ruled the south Travancore (சிற.பெ.அக.).

[கோ + கரு + நந்தடக்கன்.]

கோக்கலம் *kō-k-kalam*, பெ.(n.) வெண்கல ஏனம் (நாஞ்.); vessels or utensils made of bell-metal.

[கோ + கலம்.]

கோக்கள் *kō-k-kaḷ*, பெ.(n.) 1. அரசர்; king. 2. சிறந்தோர்; eminent personality. 3. பெரியோர்; elders.

[கோ + கள் (பன்மையீறு) – கோக்கள்.]

கோக்காமரம் *kōkkāmaram*, பெ.(n.) ***கோக்கால் மரம்*** பார்க்க; see *kōkkāl-maram.*

[கோலன் → கோன் → கோ.]

கோக்காரை *kō-k-kārai*, பெ.(n.) சங்கஞ்செடி; mistletoe berry thron (சா.அக.).

[கோ + காரை.]

கோக்கால்மரம் *kōkkāl-maram*, பெ.(n.) 1. கடலில் செலுத்தும் கட்டுமர வகைகளில் ஒன்று; a kind of raft or catamaran. 2. தூக்குமரம்; scaffold for execution of criminals.

[கோ + கால் – கோக்கால் + மரம் (கால் கோத்த மரம்)]

கோக்காலி *kō-k-kāli*, பெ.(n.) 1. சட்டிபானை முதலியவை வைப்பதற்குச் சுவரையொட்டி அமைக்கப்படுஞ் சட்டம் (பதிற்றுப். 43, உரை); bracket in a wall for holding pots. 2. நெட்டையானவன்; a tall person. கோக்காலி மாதிரி வளர்ந்ததுதான் மிச்சம் ஒரு கூறு கிடையாது (நெல்லை). 3. உயரமான மொட்டான்; stool for greater heights. 4. வைக்கோலை எடுக்க உதவும் வளைந்த கொம்பு; a pole fixed with a hook to handle hay etc.



கோக்காலி

[கோ + கால் + இ.]

கோக்காளை முறைமை *kōkkāḷai-muṟaimai*, பெ.(n.) 'கோ' என்பது ஆநிரையையுங் காளையையுங் குறிக்குமெனினும், அச் சொல்லுக்குப்பின் பலீவர்த்தம் என்ற சொல் வருவதானால், அது ஆநிரையையே குறிப்பதாகக் கொள்ளும் முறைமை

(திவ்.பெரியாழ். 2, 1:2. வியா.ப.210); the illustration of the meaning of '*kō*' or cattle being confined to cows' because immediately thereafter *palivartham* or bull is mentioned.

[கோ + காளை + முறைமை.]

கறவை = கறக்கும் ஆடு [மாடு, பெற்றம்]. கறவை → காவை → காவு → கோவு → கோ. கறவை என்னும் சொல் சோவியத்து மொழிகளில் 'கறவ' என்றும் ஆத்திரேலியப் பழங்குடி மொழிகளில 'கறக்' என்றும் வழங்குவதால் உலகமொழிகள் பிரிவதற்கு முன்பே கால்நடை வளர்ப்புக் காலத்தில் தமிழில் தோன்றிய சொல்லாகலாம். ஆங்கிலத்தில் கறவை – cow என வழங்குதலை ஒப்பிடுக.

கோக்கிரந்தி *kō-k-kirandi,* பெ.(n.) **கோக்கிரந்தை** பார்க்க; see *kō-k-kirandai.*

[கோ + கிரந்தி.]

கோக்கிரந்தை *kō-k-kirandai,* பெ.(n.) எருவறட்டி; cowdung cake (சா.அக.).

[கோ + கிரந்தை. கரள் → கரந்தை → (கட்டி) வ. கிரந்தை.]

கோக்கிலம் *kō-k-kilam,* பெ.(n.) 1. உயரமாய் வளர்ந்த மரம்; any tree rising to a great height; any tall majestic tree. 2. ஒரு முள்மரம்; camel tree; camel thistle.

[கோ → கோக்கு → கோக்கில் → கோக்கிலம்.]

கோக்கிழானடிகள் *kōkkiḻāṉ-aḍigaḷ,* பெ.(n.) முதல் பராந்தகச் சோழனின் பட்டத்தரசி; (பிற். சோழ. வர.சதாசிவன்.ப.57); Queen of Paranthaga Cholan.

[கோ + கிழான் + அடிகள்.]

கோக்கு *kōkku,* பெ.(n.) நூலோட்டுகை (இ.வ.); basting, tacking.

[கோ (கோத்தல்) – கோக்கு. த.கோக்கு >U. kōk.]

கோக்குஞ்சம் *kō-k-kuñjam,* பெ.(n.) அம்பறாத் தூணி; quiver.

[கோ + குஞ்சம்.]

கோக்குமாக்கு *kōkku-mākku,* பெ.(n.) புரட்டுச் செயல்; juggling. கோக்குமாக்குச் செய்யாதே (உ.வ.).

[கோக்கு மாக்கு – எதுகை நோக்கி வந்த மரபிணைச் சொல்.]

கோக்குளமுற்றனார் *kōkkuḷa-muṟṟaṉār,* பெ. (n.) கழக்கடைப் புலவருள் ஒருவர்; a poet of šangam age.

[கோ + குளம் + முற்றம் + அன் + ஆர்.]

உழவர்களின் துணைகொண்டு பரந்த நன்செய் நிலத்தை உழுவித்துண்டு வந்த வேளாண்மரபினர், அவ்வுரிமையால் பெற்ற பட்டம்தான் 'கோ' என்று நற்றிணைப் பதிப்பாசிரியர் கூறுகிறார்.

கோக்குற்றம் *kō-k-kuṟṟam,* பெ.(n.) ஆட்சியாளரிடம் எதிர்நோக்கும் இடையூறு; any hindrance anticipated from the administratiors. *"இன்னெல்லுக்கு கோக்குற்றமும், குடிக்குற்றமும் ஏரிக்குற்றமுஞ் சொல்லாதே ஆட்டாண்டு தோறும்" (SII.XXII.282-43 p.224).*

[கோ + குற்றம்.]

ஏரியில் நீரின்றியோ அல்லது வேறு காரணம் பற்றியோ, விளைச்சல் குறைவாக இருந்தாலும், உடன்வாழும் குடிமக்களால் ஏதேனும் இடைஞ்சல் ஏற்பட்டாலும், ஆளுவோரால் ஏதேனும் கோளாறுகள் நேர்ந்தாலும், கோயிலுக்குக் கொடுக்க வேண்டிய நெல்லை ஆண்டுதோறும் தடையின்றி வழங்க வேண்டு மென்பது உட்கருத்து.

கோக்கோடி *kō-k-kōḍi,* பெ.(n.) நீர்நிலை; water tank (சா.அக.).

[கோ = நீர். கோ + கோடி.]

கோக்கோதைமார்பன் *kō-k-kōdai-mārbaṉ,* பெ.(n.) சோழ அரசன்; *Cōḷa* king.

[கோ (அரசன்) + கோதை + மார்பன்.]

இயற்பெயருக்கு முன் 'கோ' என்னும் சொல் அடையாகச் சேர்ந்துள்ளது.

கோகஞ்சம்பா *kōgañ-jambā,* பெ.(n.) கல்லிடையே விளையும் சம்பாநெல்; *cambā* paddy grown in crevices of rocks or other stony places (சா.அக.).

[கோலு → கோக்கு → கோக்கன் → கோகன் + சம்பா.]

கல்லிடை நூல்கோத்தாற் போன்று வேர் விழ்த்து முளைப்பது.

கோகடம் *kōkaḍam,* பெ.(n.) முயல்வகை (யாழ்.அக.); a kind of hare.

[கோ (நீட்சி) + கடம்.]

நீண்ட காது காரணமாகப் பெற்ற பெயராகலாம்.

கோகண்டகம் *kō-kaṇḍagam,* பெ.(n.) **கோகண்டம்** பார்க்க; see *kō-gaṇḍam* (சா.அக.).

[கோ + கண்டகம்.]

கோகண்டம் *kōgaṇḍam,* பெ.(n.) 1. நெருஞ்சி; a small prostrate herb. 2. நீர்முள்ளி; cattle thorn (சா.அக.).

கோ : அம்பு, கூர்மையானது. கண்டம் : துண்டு.

[கோ + கண்டம்.]

கோகணமுள் *kōkaṇamuḷ*, பெ.(n.) ***கோகண்டம்*** பார்க்க; see *kōgaṇḍam.*

[கோகண்டம் → கோகணம் + முள்.]

கோகது *kōkadu*, பெ.(n.) காட்டுப் புறா; wood pigeon (சா.அக.).

[கோ : புறா; திசையை அறிந்து செல்வது. கோ + (கதுவாலி) கது.]

கோகதேவன் *kōka-dēvaṉ*, பெ.(n.) புறா; pigeon (சா.அக.).

[கோகது → கோகதேவன்.]

கோகந்தம் *kōkandam*, பெ.(n.) கந்தகச் செய்ந்நஞ்சு (வின்.); a sulphuric mineral poison.

[கோ + கந்தம்.]

கோகந்தான் *kōgandāṉ*, பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanadha puram Dt.

[கோகன் + அந்தை – கோகந்தை → கோகந்தான்.]

கோகநெய் *kōka-ney*, பெ.(n.) கோகம் வெண்ணெய்; mate mangosteen kokum butter tree (சா.அக.).

[கோகம் (உயரமான மரம்) + நெய்.]

ஈளை காசம், கண்டமாலை, கை கால் வெடிப்புக்கும் போடலாம். இது கோகம் பட்டர் என்றும் வழங்கப்படும். இது ஒருவகை மங்குசுதான் பழமரம். இதன் விதையில் எண்ணெய் எடுப்பதால் இப் பெயர் வந்தது (சா.அக.).

கோகம்[1] *kōgam*, பெ.(n.) 1. சக்கரவாகப் புள் ; ruddy shield-rake. *"கோகங்களெல்லைப் போதிற் றணந்திட" (இரகு. திக்குவி. 247).* 2. செந்நாய்; a species of wolf. 3. தவளை; frog. 4. பல்லி; house-lizard.

[குல் → குக்கம் (வாடியது) → கோகம்.]

கோகம்[2] *kōgam*, பெ.(n.) 1. உலர்ந்த பூ (வின்.); dried or withered flower. 2. மலைப் புளிச்சை; hill hemp bendy-Hibiscus fureatus. 3. கோகமரம்; kokum butter tree. 4. துணி; cloth (சா.அக.). 5. பேரீந்து; wild date - palm. 6. சிற்றீந்து (நாநார்த்த.); a variety of date - palm.

[கோ → கோகம்.]

கோகமுகம் *kōga-mugam*, பெ.(n.) ஓநாய் முகம்; face resembling that of wolf; wolf face (சா.அக.).

[கோகம் + முகம்.]

கோகயம் *kōkayam*, பெ.(n.) தாமரை (மலை.); lotus flower (சா.அக.).

[கோ + கயம்.]

கோகர்ணம்[1] *kō-karṇam*, பெ.(n.) 1. ***கோகழி*** பார்க்க; see *kō-kaḻi.* 2. ***கோகன்னம்***[1] பார்க்க; see *kōkaṉṉam.*

மறுவ. கோகழி.

[கோ + (கழி) கர்ணம்.]

கோகர்ணம்[2] *kōkarṇam*, பெ.(n.) ***கோகன்னம்***[2] பார்க்க; see *kōkaṉṉam.*

[கோ + கன்னம் (காது) – கோகன்னம் > Skt. gōkarnam.]

கன்னம் என்னும் காதைக் குறிக்கும் சொல் வடமொழியில் கர்ணம் எனத் திரிந்தது.

கோகர்ணவாதனம் *kōkarṇa- v-ādaṉam*, பெ.(n.) ***கோகன்னம்***[2,4] பார்க்க; see *kōgaṉṉam.*

[கோ + கர்ணம் + ஆதனம் (கோ : ஆவு, கர்ணம் : காது).]

கோகரணம் *kō-karaṇam*, பெ.(n.) 1. ***கோ கன்னம்***[2,4] பார்க்க; see *kōgaṉṉam*[2,4]. *"கசகரணங்கள் சேர்ந்த கோகரண மார்க்கம்" (திருவேங்.சத.66).* 2. ***கோகர்ணம்***[2]–2 பார்க்க; see *kōkarṇam. "கோலக் கோபுரக் கோகரணஞ் சூழா" (தேவா.1182:9).*

[கோ + கரணம்.]

கோகரந்தபுத்தூர் *kōkaranda-puttūr*, பெ.(n.) ***கோவிந்தபுத்தூர்*** பார்க்க (தஞ்சை. ஊர்.); see *kōvinda-puttūr.*

[கோகரந்த + புத்தூர்.]

கோகருணம்[1] *kō-karuṇam*, பெ.(n.) ***கோகன்னம்*** பார்க்க; see *kōkaṉṉam.*

[கோ + (கரணம்) கருணம்.]

கோகருணம்[2] *kō-karuṇam*, பெ.(n.) 1. மோதிர விரற் சாண்; span from tip of ring finger to tip of thumb. 2. மான்வகை; a kind of antelope.

[கோ + (கரணம்) கருணம்.]

கோகருணி *kō-karuṇi*, பெ.(n.) 1. பெருங் குரும்பை; the unripe fruit of palmyra. 2. எருக்கு; bow-string hemp (சா.அக.).

[கோ + கருணி.]

கோகலி *kōkali*, பெ.(n.) கடம்பு; sea side Indian oak.

[கோக்காலி → கோகலி.]

கோகலிவாழை *kōkali-vālai*, பெ.(n.) காட்டு மல்லிகை; wild jasmine.

[கோக்காலி → கோகலி + வாழை.]

கோகழி *kōkali*, பெ.(n.) திருவாவடுதுறை என்னும் சிவத்தலம்; Tiruvāvaḍudurai a Śiva shrine. *"கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க" (திருவா. 1:3).*

[கோ + கழி.]

சமணமும் பௌத்தமும் பெருகியிருந்த காலத்தில் கோவா பகுதியைச்சார்ந்த கடற்கழியிலிருந்த சிவன் கோவில் கோகழி எனப்பட்டது. கோகழி என்பதற்குப் பெரிய கழிமுகம் எனப்பொருள் நிலவியது. தொன்மங்கள் [புராணங்கள்] பெருகியபோது ஆவினது செவி [கோகர்ணம்] என்னும் பொருள் பொருத்தப்பட்டது. இக்கோவிலின் பெயரே திருவாவடுதுறைக் கோவிலுக்கும் பெயராயிற்று.

கோகழியிலிருந்த சிவத்தாணு [இலிங்கம்] சதுரத்தின் மேல் அறுகோணம் அதன்மேல் எண்கோணம் அதன்மேல் குமிழ் உருளை வடிவினது என்பர்.

கோகன்னம்[1] *kō-gannam*, பெ.(n.) 1. மலைநாட்டில் சிவன் கோயில் கொண்ட ஓர் இடம்; Śivashrine in Malabar. *"ஆவினது செவிபோல அவ்விலிங்க நிமிர்வுறலால் மேவினது கோகன்ன மெனும் பெயர்" (பிரமோத். 2:55).* 2. **கோகழி** பார்க்க; see *kō-kali*.

[கோ + கன்னம் (காது).]

கோகன்னம்[2] *kōgannam*, பெ.(n.) 1. ஆவின் காதைப்போற் காதுகளுடைய ஒருவகை மான்; a species of deer with ears resembling those of the cow. 2. மூக்குச் சட்டி; a vessel with a nozzle for pouring liquids from. 3. ஒரு பெண்பாம்பு; a female serpent (சா.அக.). 4. ஆவினை (பசுவை)ப் போலக் காதை மாத்திரம் அசைத்துக் காண்பிக்கும் ஒரு வித்தை; an art of moving or shaking the ears alone as cows do.

[கோ + கன்னம் (காது).]

கோகன்னம்[3] *kō-gannam*, பெ.(n.) ஒக விருக்கையு ளொன்று; a yogic posture. *"கோகன்னங் கேசரமேற் பாதம் (தத்துவப். 108).*

[கோ + கன்னம் (காது).]

ஆவின் காதுபோன்ற தோற்றத்தில் அமரும் ஓகவகை.

கோகனகச்சிலை *kō-gana-c-cilai*, பெ.(n.) பதுமராகக் கல்; a precious stone, jacinth, hyacinth.

[கோ + கனகம் + சிலை.]

கோகனகம் *kō-ganagam*, பெ.(n.) 1. **கோகனதம்** பார்க்க; see *kōganadam*. *"கோகனகத்தவள் கேள்வன்" (திவ். திருவாய். 9, 8:2).* 2. செந்தாமரை; red lotus. 3. செவ்வாம்பல்; red Indian water-lily. 4. செந்தும்பை; a red variety of leucas (சா.அக.).

[கோ + கனகம்.]

பொன்னிறத் தாமரை கோகனகம் எனப்பட்டது.

கோகனகை *kō-ganagai*, பெ.(n.) **கோகனதை** (திவா.) பார்க்க; see *kōganadai*.

[கோ + (கனகம்) கனதை - கோகனதை → கோகனகை.]

கோகனதத்தோன் *kōganadattōn*, பெ.(n.) **கோகனதன்** பார்க்க; see *kōganadan*. *"கோகன தத்தோன் றுண்ட மாகிய விடத்தில்" (கந்தபு. ததீசியுத். 17).*

கோகனதம் *kō-ganadam*, பெ.(n.) செந்தாமரை; red lotus. *"கோகனத முகங்காட்ட" (தேவா.575:3).*

[கோ + கனதம்.]

கோகனதன் *kō-ganadan*, பெ.(n.) தாமரையிற் பிறந்த நான்முகன்; Brahma as lotus - born. *"கோகனதன் சொற்கொண்டு" (கோயிற்பு. நடரா. 68).*

[கோ + கனதன்.]

கோகனதை *kō-ganadai*, பெ.(n.) தாமரையில் இருப்பவள் (இலக்குமி); Laksmi, as seated on the lotus. *"கோகனதை பிரியாத குழகன் போல" (சேதுபு. சேதுபந். 37).*

[கோ + (கனகம்) கனதை.]

கோகனம் *kō-ganam*, பெ.(n.) 1. கரிசலாங் கண்ணி; a plant found in wet places. 2. நிலக் கடம்பு; a plant. 3. நிலவேம்பு; ground neem.

[கோ + (கனகம்) கனம்.]

கோகாலியம் *kō-kāliyam*, பெ.(n.) ஒருவகைப் பூடு; a herbal plant (சா.அக.).

[கோ + காலியம்.]

கோகானம் *kōkānam*, பெ.(n.) வேய்ங்குழலோசை; sound produced from flute.

[கோ + கானம்.]

கோகி *kōki*, பெ.(n.) 1. தும்பைப் பூ; leucas flower. 2. விலாமிச்சு; a fragrant grass. 3. நீர்முள்ளி; water thistle (சா.அக.).

[கோகு → கோகி.]

கோகிதம் *kōkidam,* பெ.(n.) குதிங்கால் (யாழ். அக.); heel.

[கோகு → கோகிதம்.]

கோகிலநயனம் *kōkila-nayaṉam,* பெ.(n.) 1. குயில் கண்; eyes like those of the cuckoo. 2. முள்ளுக் கத்தரி; European caper. 3. நீர் முள்ளி; long-flowered nail dye (சா.அக.).

[கூவு → கூகு → கோகு → கோகிலம் + நயனம்.]

கோகிலப்பிரிய *kōgila-p-piriya,* பெ.(n.) முதனிலைப் பண்களுளொன்று (சங்.சந்.47); a primary *rāga.*

[கூவு → கூகு → கோகு → கோகிலம் + பிரிய.]

கோகிலம்[1] *kōkilam,* பெ.(n.) 1. குயில்; koel. *"இருளாநின்ற கோகிலமே" (திருக்கோ. 322).* 2. பல்லி (திவா.); wall-lizard. 3. கிளி; parrot.

[கூவு → கூகு → கோகு → கோகிலம்.]

கோகிலம்[2] *kōkilam,* பெ.(n.) குரங்கு (பிங்.); monkey.

[குறுகுகு (வளைதல்) → கோகு → கோகிலம்.]

கோகிலம்[3] *kōkilam,* பெ.(n.) 1. துளை; tube; anything tubular. 2. சிறுகுறிஞ்சான் (மலை.); small Indian ipecacuanha. 3. இலந்தை; jujube fruit tree. 4. கரி; carbon. 5. உலக்கை; long round edged heavy wooden pestle. 6. கலப்பை; plough.

[குள் → குள்கு → கோகு → கோகிலம்.]

கோகிலவாசம் *kōkila-vāśam,* பெ.(n.) குயிலுக்கு இருப்பிடமான மாமரம்; the abode of koels, mango tree.

[கோகிலம் + வாசம்.]

கோகிலவீசம் *kōkila-vīśam,* பெ.(n.) மஞ்சிட்டி (சித்.அக.); manjeet.

[கோகிலம் + வீசம்.]

கோகிலவெலி *kōkila-v-eli,* பெ.(n.) குயிலைப் போல் மேலே புள்ளிகளையுடைய எலி; a kind of rat spotted like koel (சா.அக.).

[கூவு → கூகு → கோகு → கோகிலம் + எலி.]

கோகிலா *kokilā,* பெ.(n.) சிறுகுறிஞ்சான்; small Indian ipecacuanha.

[கோகிலம் → கோகிலா. **கோகிலம்** பார்க்க; see *kōgilam* (சா.அக.).*]*

கோகிலாபுரம் *kōkilā-puram,* பெ.(n.) தேனி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Theni Dt.

[கோகிலம் + புரம்.]

கோகிலானந்தம் *kōkilāṉandam,* பெ.(n.) மாமரம் (மூ.அக.); mango tree.

[கோகிலம் + ஆனந்தம்.]

கோகிலி *kōkili,* பெ.(n.) 1. மணலிக்கீரை; sand greens. 2. மணிப் புங்கு; rusty soap-nut (சா.அக.).

[கோகுல் → கோகிலி.]

கோகினிசம்பை *kōkiṉi-śambai,* பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Sivagangai Dt.

[கோகிலி + சண்பை – கோகிலிசண்பை → கோகினி சம்பை.]

கோகு *kōgu,* பெ.(n.) 1. தோள்; shoulder. *"கொற்ற வன்றன் கோகின்மேல் வெற்றிவாளின் வீசினான்" (சூளா. அரசி. 240).* 2. ஏய்ப்பு (கபடம்); guile. *"கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டு வித்தென்னைக் கோகு செய்தாய்" (தேவா. 1040).* 3. அடைவுகேடு (ஈடு.3.5: 4); irregularity, disorder. 4. கழுதை; ass. *"வீழ்ந்து கோகிறப்புழி" (உபதேசகா. உருத்திரா. 193).*

[குல் → குகு → கோகு (வளைவு).]

கோகுகட்டு–தல் *kōgu-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) **கோகுதட்டு–தல்** பார்க்க; see *kōgu-taṭṭu-. "கோகு கட்டுண் டுழலாதார்" (திவ். திருவாய். 3, 5:4).*

[கோகு + கட்டு-.]

கோகுகம் *kōgugam,* பெ.(n.) மணிப்புங்கு; rusty soap-nut (சா.அக.).

மறுவ. கோகிலி

[கோகு → கோகுகம்.]

கோகுடி *kōgudi,* பெ.(n.) ஒருவகைப் பூ (கோகுடிப்பூ); a kind of flower. *"ஞாழன் மௌவ னறுந்தண் கோகுடி" (குறிஞ்சிப். 18).*

[கொகுடி → கோகுடி.]

கோகுத்தம் *kōguttam,* பெ.(n.) மல்லிகை (மலை.); Arabian jasmine.

[கோகுந்தம் → கோகுத்தம்.]

கோகுதட்டு–தல் *kōgu-taṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) ஆரவாரஞ் செய்தல்; to parade one's strength by

patting oneself on the shoulder. *"கோகுதட்டிடு தனஞ்சயன்." (பாரத. நிரைமீட்சி. 68).*

[கோக்கு → கோகு + தட்டு-.]

கோகுந்தம் *kōgundam,* பெ.(n.) மலைமல்லிகை; hill jasmine or wild jasmine (சா.அக.).

[கொகுந்தம் → கோகுந்தம்.]

கோகுலம்[1] *kōgulam,* பெ.(n.) கண்ணன் வளர்ந்த ஆயர்பாடி; the village where Krisṇa was brought up. *"கோகுலத் தாயன் வேட்ட" (திருச்செந். பு.18:26).*

[கோ + குலம்.]

கோகுலம்[2] *kōgulam,* பெ.(n.) குயில்; koel. *"கோகுலமாய்க் கூவுநரும்" (பரிபா. 9:65).*

மறுவ. கோகிலம்.

[கோகிலம் →கோகுலம்.]

கோகுலம்[3] *kōgulam,* பெ.(n.) துளை; tube.

மறுவ. கோகிலம்.

[கோகிலம் → கோகுலம்.]

கோகுலம்[4] *kōgulam,* பெ.(n.) ***கோகிலம்***[3] பார்க்க; see *kōgilam.*

[கோகிலம்[3] → கோகுலம்.]

கோகுலம்[5] *kōgulam,* பெ.(n.) கோயில் (நாநார்த்த.); temple.

[கோ (பெரியது) + குலம்.]

கோகுலம்[6] *kōgulam,* பெ.(n.) 1. கொட்டில்; cattle shed. 2. ஆவினங்கள்; herd of cows.

[கோ (ஆனிரை) + குலம்.]

கோகுல வாய்சகம் *kōgula-vāyšagam,* பெ.(n.) விளாம்பிசின்; the gum of wood-apple tree (சா.அக.).

[கோகு → கோகுலம் + வாய்சகம்.]

கோகுள் *kōguḷ,* பெ.(n.) மரவகை; a kind of tree. *'கோகுளிலையைக் கொண்டு' (ஈடு.7. 2:1).*

[கோகு → கோகுள்.]

கோகொட்டை *kō-koṭṭai,* பெ.(n.) மஞ்சள்நாங்கு; a species of gamboge.

[கோ + கொட்டை.]

கோகோகிழங்கு *kōkō-kiḻangu,* பெ.(n.) சேம்பு, சேப்பங்கிழங்கு; Indian kales, cocoa root (சா.அக.).

[கோகோ + கிழங்கு.]

கோகோசனம் *kō-kōšaṉam,* பெ.(n.) ஆன்மணத்தி (கோரோசனை) (மூ.அக.); bezoar.

மறுவ. கோரோசனை.

[கோ + (கோசம்) கோசனம்.]

கோகோட்டம் *kō-kōṭṭam,* பெ.(n.) ஆன்கொட்டில்; place or yard of cow.

[கோ + கோட்டம்.]

கோகோடு *kōkōḍu,* பெ.(n.) நீலகிரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Nilagiri Dt.

[கோ (உயரம்) + கோடு.]

கோகோவெனல் *kō-kō-v-eṉal,* பெ.(n.) 1. பேரொலி செய்தற்குறிப்பு; onom. expr. of crying or bawling loudly. *"கோகோவென்று வந்திருகை தலை புடைத்து" (பாரத.பதினேழாம். 254).* 2. இரக்கக் குறிப்பு; onom. expression of sympathy.

[கோகோ + எனல்.]

கோங்கண தூபம் *kōṅgaṇa-tūbam,* பெ.(n.) வெள்ளைக் குங்கிலியம்; concan resin; white dammer (சா.அக.).

[கோங்கணம் + (தூவம்) தூபம்.]

கோங்கணம் *kōṅgaṇam,* பெ.(n.) 1. ஒரு பறவை; an unknown bird. 2. ஒருவகை மீன்; a kind of fish. 3. ஒரு நாடு; a nation (சா.அக.).

[கொங்கணம் → கோங்கணம்.]

கோங்கந்தட்டம் *kōṅgan-daṭṭam,* பெ.(n.) 1. கோங்கம்பூ; flower of *kōṅgu* tree. *"கோங்கந் தட்டம் வாங்கினர் வைத்தும்" (பெருங். இலாவாண. 14:24).* 2. கோங்கம் வடிவமாகச் செய்யப்பட்ட தாம்பாளம்; a plate made like *kōṅgu* flower.

[கோங்கு + அம் + தட்டம்.]

கோங்கம்[1] *kōṅgam,* பெ.(n.) ***கோங்கிலவு*** பார்க்க; see *kōṅgilavu.* *"முறியிணர்க் கோங்கம்" (ஐங்குறு. 366).*

[கோங்கு → கோங்கம்.]

கோங்கம்[2] *kōṅgam,* பெ.(n.) நெல்லி; emblic myrobalan.

[கோரங்கம் → கோங்கம்.]

கோங்கல் *kōṅgal,* பெ.(n.) 1. நெல்லி; Indian gooseberry. 2. கோங்கிலவு; false tragacanth. 3. கோளகச் செய்நஞ்சு; a mineral poison (சா.அக.).

[கோங்கு → கோங்கல்.]

கோங்கலர் *kōṅgalar,* பெ.(n.) முற்காலத்து வழங்கிய ஒருவகைத் துகில் (சிலப். 14:108, உரை); a garment of ancient time.

[கோங்கு + அலர்.]

கோங்காடு *kōṅgāḍu,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[கோன் + காடு.]

கோங்கிமார் *kōṅgimār,* பெ.(n.) கோனார்கள் (யாதவர்கள்); sheperd community. *"எனக்கு கோங்கிமாறகள் ரெண்டு தெருவீதி கட்டடம் விட்டுக் குடுக்கவும்" (திருமலை.செப்.10/1645, பக்.35).*

[கோனன் → கோங்கி + மார்.]

கோங்கில்லம் *kōṅgillam,* பெ.(n.) கோங்கிலவு, பஞ்சுமரம்; golden silk cotton tree (சா.அக.).

[கோங்கு + இலவம் – கோங்கிலவம் → கோங்கிலவம் → கோங்கில்லம். இலவம் → இல்லம்.]

கோங்கிலவன்பட்டை *kōṅgilavaṉ-paṭṭai,* பெ.(n.) கோங்கிலவ மரத்தின் பட்டை; the bark of golden silk cotton tree or false tragacanth tree (சா.அக.).

[கோங்கு (உயரம்) + இலவம் + பட்டை.]

இது பல் நோயைப் போக்கும். கல்நாரைப் பொடியாக்கும்.

கோங்கிலவன் பிசின் *kōṅgilavaṉ-pisiṉ,* பெ.(n.) கோங்கிலவு மரத்தின் பிசின்; gum of golden silk cotton tree.

[கோங்கு + இலவு + பிசின்.]

இது வெள்ளை, சிவப்பு, கறுப்பு நிறமாக இருக்கும். சிவப்பினம் இருமலுக்கு நல்லது [சா.அக.].

கோங்கிலவன் பூ *kōṅgilavaṉ-pū,* பெ.(n.) கோங்கிலவ மரத்தின் பூ; இது ஒரு வாணாள் மூலி; flower of false tragacanth tree. It is useful in rejuvenation (சா.அக.).

[கோங்கு + இலவன் + பூ.]

கோங்கிலவு *kōṅgilavu,* பெ.(n.) இலவு மரவகை (L.); a kind of tree as of false tragacanth.

[கோங்கு (உயரம்) → கோங்கிலவு.]

கோங்கிலி *kōṅgili,* பெ.(n.) வச்சிர வேங்கை; heart-wood kino tree (சா.அக.).

[கொங்கில் → கோங்கிலி.]

கோங்கிவயல் *kōṅgi-vayal,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanatha puram Dt.

[கொழிஞ்சில் → கோஞ்சி → கோங்கி + வயல்.]

கோங்கிளங்கோசர் *kōṅgilaṅ-gōsar,* பெ.(n.) கொங்குநாட்டில் குடியேறியோர்; immigrates in *Koṅgu-nāḍu.*

[கொங்கு → கோங்கு + இளங்கோசர்.]

கோங்கு[1] *kōṅgu,* பெ.(n.) குவிந்த மொட்டுகளாய்ப் பூக்கும் மரவகை; a tree with conical flower buds. *"வேங்கை வெற்பின் விரிந்த கோங்கின் முகைவனப் பேந்திய முற்றா விளமுலை" (புறநா. 334:9–10).*

[கொங்கை → கொங்கு → கோங்கு.]

கொங்கைபோற் குவிந்த மொட்டு, அதன் மலர், அது பூக்கும் மரம் [தமி. வர. 219].

வகைகள் : 1. வெள்ளைக் கோங்கு 2. உறப்புக் கோங்கு 3. நீர்க்கோங்கு 4. கறைக்கோங்கு 5. நெடுவாற் கோங்கு 6. கருங்கோங்கு; 7. இலைக் கோங்கு.

கோங்கு[2] *kōṅgu,* பெ.(n.) 1. காங்கு; dipterocarp dammer. 2. முள்ளிலவு; red cotton tree. 3. தணக்கு; odal tree. 4. கள்ளிக் காரம்; mordant of *kaḷḷi* tree (சா.அக.).

[கொங்கு (வளைவு) → கோங்கு.]

கோங்குடிப்பட்டு *kōṅguḍi-p-paṭṭu,* பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Pudukkōṭṭai* Dt.

[கோன் + குடி + பட்டு.]

கோங்குப்பிசின் *kōṅgu-p-pisiṉ,* பெ.(n.) பலவகைக் கோங்கு மரங்களின் பிசின்; gum of golden cotton tree. It is a mixture of gums of several kinds of golden cotton trees (சா.அக.).

[கோங்கு + பிசின்.]

கோங்குப்பொன் *kōṅgu-p-poṉ,* பெ.(n.) பித்தளை; brass (சா.அக.).

[கோங்கு + பொன்.]

கோங்குமரம் *kōṅgu-maram,* பெ.(n.) உறுதியான மரவகைகளுளொன்று; a kind of strong tree.

[கோங்கு (உயரம்) + மரம்.]

பிற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் மரவகை.

கோச்சடை *kō-c-cadai,* பெ.(n.) 1. இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanathapuram Dt. 2. மதுரை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Madurai Dt.

[கோ + (சடையன்) சடை.]

கோச்சடையன்இரணதீரன் *kō-c-cadaiyan-iranatiran,* பெ.(n.) முற்காலப் பாண்டிய மன்னன்; a Pandya king. இவன் கி.பி. 674–725 வரை ஆட்சி செய்தவன்.

[கோ + சடையன் + இரணதீரன்.]

கோச்சூலி *kō-c-cūli,* பெ.(n.) சினையுற்ற மாடு; cow-in-calf, conceived cow (சா.அக.).

[கோ + சூலி.]

கோச்செங்கட்சோழ நாயனார் *kō-c-ceṅkat-cōla-nāyaṉār,* பெ.(n.) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவராகிய சோழவரசர் (பெரியபு. 4); the Cōḷa king canonized Šaiva saint, one of 63.

[கோ + செங்கண் + சோழன் + நாயனார்.]

கோச்செங்கணான் *kō-c-ceṅgaṉāṉ,* பெ.(n.) ***கோச்செங்கட் சோழ நாயனார்*** பார்க்க; see *kōcceṅgaṭ-cōḷa-nāyaṉār.* "*செம்பியன் கோச் செங்கணான் சேர்ந்த கோயில்*" *(திவ். பெரியதி. 6, 6:1).*

[கோ + (செங்கண்ணன்) செங்கணான்.]

கோச்செய்–தல் *kō-c-cey-,* 1 செ.கு.வி. (v.i.) ஆட்சி செய்தல்; to rule. "*ஐவர் வந்து கோச்செய்து சமைக்க*" *(தேவா.997:6).* "*அரசன் தன் ஆணைவழிச் செய்யும் செயல் போலச் செய்து*". "*இத் தர்மத்துள்ளார் யாவரேனும் கோச் செய்வது செய்து செலுத்த வெட்டிக் குடுத்தோம்*" *(தொ. 8. கல். 29).*

[கோ + செய்–.]

கோசக்கம் *kōšakkam,* பெ.(n.) குழப்பம் (யாழ். அக.); confusion.

[கோசு → கோசகம் → கோசக்கம் → கோன் → கோ.]

கோசக்காய் *kōša-k-kāy,* பெ.(n.) 1. சாதிக்காய்; nutmeg (சா.அக.). 2. வெள்ளரிக்காய்; cucumber. இந்தத் தடவை கோசக்காய் விளைச்சல் அதிகம் (கொங்கு.).

[கோசம் + காய்.]

கோசக்கிலம் *kōša-k-kilam,* பெ.(n.) வெண் சுண்டை; white coloured solanum (சா.அக.).

[கோசம் + கிலம்.]

கோசகசாலை *kōšaga-šālai,* பெ.(n.) ஒருவகைப் பூடு; a kind of herbal plant.

[கோசகம் + சாலை.]

கோசகம் *kōšagam,* பெ.(n.) 1. முட்டை; egg. 2. விதை; testicle. 3. குறி; symbol. 4. ஒருவகைக் கரும்பு; a kind of sugar-cane (சா.அக.).

[கோசம் → கோசகா.]

கோசகாரகம் *kōša-kāragam,* பெ.(n.) செங்கரும்பு; red sugar-cane (சா.அக.).

[கோசம் + காரகம்.]

கோசகாரம் *kōša-kāram,* பெ.(n.) 1. பட்டுப்பூச்சி; silk worm. "*கோசகாரப் புழுப்போல்*" *(ஞானவா. மனத். 22).* 2. தென்னைமரம்; coconut tree. 3. கரும்பு; sugar-cane.

[கோசம் + காரம்.]

கோசங்கம் *kō-šaṅgam,* பெ.(n.) வைகறைப் பொழுது (யாழ்.அக.); early morning, dawn.

[கோசு + அங்கம்.]

கோசந்தனம் *kō-šandaṉam,* பெ.(n.) 1. மஞ்சட் சந்தனவகை; a kind of yellow sandal-wood. 2. ஒரு நச்சு அட்டை; a venomous leech (சா.அக.).

[கோசம் → கோ + சந்தனம்.]

கோசநாசி *kōša-nāši,* பெ.(n.) 1. ஆண்குறி எழுச்சியில்லாதவன்; one who is destitute of the power of erection of the male organ. 2. அலி; eunuch (சா.அக.).

[கோசம் + நாசி.]

கோசநெறி *kōša-neri,* பெ.(n.) 1. பிடுக்கின் வீக்கம்; enlargement of the scrotum. 2. பீச நரம்பின் வீக்கம்; swelling of the spermatic cord. 3. பிடுக்கிலுள்ள நரம்புத் திரட்சி; varicosis of the scrotum. 4. ஆண் அல்லது பெண்குறியின் கோளம்; male or female sexual gland (சா.அக.).

[கோசம் + நெறி.]

கோசப்பட்டு *kōša-p-paṭṭu,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[கோசன் + பட்டு.]

கோசபலம் *kōša-palam,* பெ.(n.) 1. பெரும் பீர்க்கு; acute-angled cucumber. 2. பிடுக்கு; scrotum. 3. சாதிக்காய்; nutmeg. 4. நறுமணம்; perfume. 5. தம்பட்டை அவரை; fowls bean (சா.அக.).

[கோச + பலம்.]

கோசபீசம் *kōša-pīšam,* பெ.(n.) 1. பொன்னாக்கல் ஆய்வில் உருக்கு முகத்தில் கொடுக்கும் ஒரு மருந்துக் கலப்பு; (in alchemy) any substance or mixture (cross-powder) thrown at intervals to promote transmution when metals are in fusion. 2. பொன்னுக்கு மாற்று ஏறுவதற்காகப் பயன் படுத்துமோர் உப்புச் சரக்கு; an alkaloid used in alchemy for increasing the fineness of gold. 3. மூப்பு; a quintessence prepared from three mystic salts; 4. பிடுக்கிலுள்ள விதைகள்; testicles contained in the scrotum (சா.அக.).

[கோசம் + பீசம்.]

கோசம்[1] *kōšam,* பெ.(n.) 1. முட்டை (பிங்.); egg. 2. உறை (அக.நி.); sheath, scabbard case, receptacle. 3. ஐங்கோசம்; sheaths or cases believed to constitute the body. *"பிணங்கிய கோச பாசப் பின்னலை" (கைவல்.தத்து.10).* 4. மதிலுறுப்பு (பிங்.); a part of fortress wall. 5. ஆண்குறி; penis. *"ஐயர்தங் கோச நோக்கினர்" (கந்தபு. ததீசியுத். 54).* 6. கருப்பை; womb. *"சஞ்சலமான கோசத் தசை யினை" (பாரத. சம்பவ. 72).* 7. கருவூலம் (திவா.); treasure. 8. கருவூலச் சாலை; treasury. *"ஐம்பெருங் குழுவு மத்தி கோசமும்" (பெருங் . வத்தவ. 9:5).* 9. அகரமுதலி முதலிய புத்தகம்; treatise, book, vocabulary, dictionary. *"காப்பியக் கோசமும் கட்டிலும் பள்ளியும்" (பெருங். உஞ்சைக் 38:167).* 10. பட்டா (இ.வ.); register. 11. தொகுதி (பெருங். உஞ்சைக். 38:167, உரை); heap, bundle. 12. நடன முத்திரைக்குரிய அலிக்கை வகை; a variety of *alikkai* (சிலப். ப. 92). 13. சாதிக்காய் (மலை.); nut meg tree. 14. மகிழமரம்; ape-face flower tree.

[குள் (வட்டம்) → கொள் → கோள் → கோளம் → கோயம் → கோசம்.]

கோசம்[2] *kōšam,* பெ.(n.) அடங்கற்கணக்கு (P.T.L.); register of village lands.

[கோள் → கோளம் → கோசம்.]

கோசம்[3] *kōšam,* பெ.(n.) காளையின் அடிவயிற்றில் நீர்த்தாரையோடு தொங்கும் தோல்; skin of the gland suspending under the abdomen of a bull.

[கோள் → கோளம் → கோசம்.]

கோசம்[4] *kōšam,* பெ.(n.) தெரு (வீதி); street.

[கோள் → கோளம் → கோசம்.]

கோசம்பி *kōšambi,* பெ.(n.) கங்கைக் கரையிலுள்ள ஒரு பழைய நகரம்; an ancient city on the banks of the Ganges in the lower part of the Doab. *"கொடிக் கோசம்பி கோமகன்" (மணிமே. 15:161).*

[கோசம் → கோசம்பி.]

கோசமணி *kōša-maṇi,* பெ.(n.) பெண்குறியின் மணி; the projecting part of a female genital, clitoris (சா.அக.).

[கோசம் + மணி.]

கோசமதம்[1] *kōša-madam,* பெ.(n.) 1. யானையின் குறியினின்று வரும் மதநீர்; must from the genital organ of an elephant when it ruts. 2. காமத்தினால் ஆண் அல்லது பெண் குறியினின்று ஒழுகும் விந்து அல்லது நாதம்; seminal or ovarian discharge in man or woman from lust (சா.அக.).

[கோசம் + மதம்.]

கோசமலர் *kōša-malar,* பெ.(n.) ஆண்குறியின் முன்பாகம்; the vascular body forming the extremity of the penis-glans penis (சா.அக.).

[கோசம் + மலர்.]

கோசமாற்று-தல் *kōš-amāṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) உரிமையாவணம் முதலியவற்றில் பேர் மாற்றுதல்; to transfer patta, etc., in another's name.

[கோசம் + மாற்று.]

கோசர்[1] *kōšar,* பெ.(n.) பழைய வீரக்குடியினருள் ஒரு சாரார்; an ancient caste of warriors. *"மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்" (அகநா. 15). "இளந்தேன் கொப்புளிக்கும் நெய்தல் மலர்கள் செறிந்த வளமிக்க வயல்களையுடைய கோசர்களின் நன்னாடு" (அகநா. 113).*

கண்ணகிக்கு விழாச் செய்த கொங்கு நாட்டவர்.

கோசரபலம் *kōšara-balam,* பெ.(n.) பிறப்பு ஓரையிலிருந்து தற்காலத்தில் கோள்கள் இருக்கும் நிலையின் பலன்; influence of planets at a given

moment with reference to their relative position from the birth-*rāśi*.

[கோசரம் + பலம்.]

கோசரம்[1] *kōśaram,* பெ.(n.) 1. ஐம்பொறி மனம் இவற்றுக்குத் தொடர்பானது; object of sense, as sound, colour, etc. *"சிந்தைக்குங் கோசர மல் லன்" (திவ். திருவாய்.1, 9:6).* 2. பொறியுணர்வு; sensation, perception, range of the organs of sense. *"நயன கோசர மறைதலும்" (கம்பரா. மிதிலைக். 40).* 3. ஊர் (பிங்.); town, village. 4. குறித்த காலத்தில் கோள்கள் இருக்கும் நிலை; position of planets at a given moment. 5. ***கோசரபலம்*** பார்க்க; see *kōśara-palam.* 6. கண் வரிசை; range of the eyes (சா.அக.).

[கோ + சரம்.]

கோசரம்[2] *kōśaram,* பெ.(n.) கொடிவழி (சைவ. பொது. 331, உரை); lineage, family.

[கோ + சரம்.]

கோசரம்[3] *kōśaram,* பெ.(n.) 1. பூந்தாது (பிங்.); farina, pollen of a flower. 2. மகிழம்பூ (மலை.); pointed-leaved ape-flower.

[கேசரம் → கோசரம்.]

கோசரன் *kōśaraṉ,* பெ.(n.) துறவி; ascetic, mendicant.

[கோசரம் → கோசரன்.]

கோசரி-த்தல் *kōśari-,* 4 செ.கு.வி. (v.i.) அறிவுக்குப் புலனாதல்; to be cognizable by the senses or intellect. *"அனுபவஞான மாத்திரையின் விளங்கிச் கோசரிப்பதாயும்" (சி.போ.பா. 6:2.ப. 121. சுவாமி).*

[கோசரம் → கோசரித்தல்.]

கோசலம்[1] *kōśalam,* பெ.(n.) மாட்டின் சிறுநீர்; cow's urine. *"கோசல மோர்நா ளோர்நாள் கோமயம்" (காசிக. வியாதன்சாப. 18).*

[கோ + சலம்.]

கோசலம்[2] *kō-śalam,* பெ.(n.) 1. ஐம்பத்தாறு நாடுகளுள் ஒன்று; modern *Oudh,* one of 56 *tēśam.* *"கோசலத் திறைவ னெய்த" (சீவக.2184).* 2. தமிழ்நூல்களில் குறிக்கப்பெறும் பதினெண் மொழியுள் ஒன்று (திவா.); one of eighteen languages referred to in the ancient Tamil works.

[கோ + சாலை - கோசாலை (மாட்டுப்பட்டியுள்ள ஊர்) → கோசலம்.]

கோசலமாமூலி *kōśala-mā-mūli,* பெ.(n.) காட்டாமணக்கு; Moghul castor, purging nut, physic nut.

[கோசலர் + மா + மூலி.]

இதனைக் கரப்பான், சிரங்கு, வெட்டுக்காயம் போன்றவற்றுக்கிடலாம் (சா.அக.).

கோசலரேகை *kōśala-rēgai,* பெ.(n.) கையின் வரி (கைரேகை) வகை (திருவாரூர்.குற.Ms); a line in palm of hand.

[கோசலம் + ரேகை (வரி -வரிசை → ரேகை).]

கோசலை[1] *kōśalai,* பெ.(n.) ***கோசலம்***[2] பார்க்க; see *kōśalam.* *"வைகுறு கோசலை மன்னர் மன்னனே" (கம்பரா. திருவவ. 90).*

[கோசலம்[2] → கோசலை.]

கோசலை[2] *kōśalai,* பெ.(n.) இராமனின் தாய்; *Kausalyā,* mother of Rama. *"திருவுறப் பயந்தன டிறங்கொள் கோசலை" (கம்பரா. திருவவ. 104).*

[கோசலம் → கோசலை.]

கோசவதி *kōśavadi,* பெ.(n.) பீர்க்கு (தைலவ.); sponge-gourd.

[கோசம் → கோசவதி.]

கோசவாகாரக்கட்டி *kōśa-v-ākāra-k-kaṭṭi,* பெ.(n.) பையைப்போல் உள்ள கழலை வகை (இங்.வை.307); cystic tumour.

[கோசம் + ஆகாரம் + கட்டி.]

கோசனகம் *kōśaṉagam,* பெ.(n.) 1. கையாந்த கரை; a plant growing in marshy places. 2. நிலக் கடம்பு வகை; a kind of medicinal plant.

[கோசம் + கனகம்.]

கோசனை[1] *kōśaṉai,* பெ.(n.) ஆன்மணத்தி (கோரோசனை); bezoar taken from the intestine of the cow.

[கோரோசனை → கோசனை.]

கோசனை[2] *kōśaṉai,* பெ.(n.) பேரொலி (யாழ்.அக.); uproar, clamour (சா.அக.).

[கோரோசனை → கோசனை.]

கோசாகாரப்புழு *kōśākāra-p-puḻu,* பெ.(n.) பட்டுப்புழு; silkworm. *"பற்றறாக் கோசாகாரப் புழுப்போல்" (சொரூபசாரம்,98).*

[கோசாகாரம் + புழு.]

கோசாங்கம் *kōšāṅgam,* பெ.(n.) நாணல்; kaus.

[கோசம் → கோசாங்கம்.]

கோசாங்கோரை *kōšāṅ-kōrai,* பெ.(n.) கிழங்கு; tuberous root (சா.அக).

[கோசம் + கோரை → கோசங்கோரை → கோசாங் கோரை.]

கோசாமரம் *kōšā-maram,* பெ.(n.) 1. பயனற்ற மரம்; useless tree. 2. காட்டுமரம்; wild tree. 3. காய்க்காத மரம்; tree not yielding fruits (சா.அக).

[கோசா(த) + மரம் – கோசமரம் → கோசாமரம்.]

கோசாமி *kōšāmi,* பெ.(n.) ***கோசாயி*** பார்க்க; see *košāyi.*

[கோ + சாமி.]

கோசாயி *kōšāyi,* பெ.(n.) வடநாட்டுத் துறவியருள் ஒருவகையார்; a class of ascetics from North India.

மரா. கோசாவி → **த.** கோசாயி.

கோசாரம்[1] *kōšāram* பெ.(n.) குறித்த காலத்தில் கோள்கள் இருக்கும் நிலை; position of planets at a given moments.

[கோள் + சாரம்]

கோசாரம்[2] *kōšāram,* பெ.(n.) 1. அடங்கல்; deminish. 2. அறியத்தக்கது; worth to know. 3. மகிழமரம்; pointed leaved ape-flower tree. 4. செய்தி; matter.

[கோ + சாரம்.]

கோசாலம்[1] *kōšālam,* பெ.(n.) ***கோசாலை***[1] பார்க்க; see *kōšālai.*

[கோசாலை → கோசாலம்.]

கோசாலம்[2] *kōšālam,* பெ.(n.) அகங்கை; palm of the hand (சா.அக.).

[கோசம் → கோசலம் → கோசாலம்.]

கோசாலை[1] *kōšālai,* பெ.(n.) ஆன்கொட்டில்; cow-shed. *"ஒரு கல்தச்சன் முன்பு கோசாலை கட்டுகிற போது" (கோயிலொ.100).*

[கோ + சாலை.]

இறைவன் திருவமுது செய்தற்குப் பால்பெறுதற் குரியதாகக் கோயில்களில் வளர்க்கப் பெறும் ஆக்களமைந்த கொட்டில் (கல்.அக.).

"திருகாமக் கோட்ட முடைய பெரிய நாச்சியார் கோயிலுக்கும் பால் அமுது செய்தருளவும் பாற்போனகப் பாலுக்கும் குலோத்துங்க சோழன் திருக்கோ சாலையிடையற்கு விட்ட பசு நானாற் றொருபதினால்" (தெ.கல். தொ.8.கல்.54).

கோசாலை[2] *kōšālai,* பெ.(n.) ***கொய்சகம்*** பார்க்க; see *kōyšagām.*

[கொய் + சீலை – கொய்சீலை → கோசாலை.]

கோசாவித்திரி *kō-šāvittiri* பெ.(n.) ஆக்களைத் துதிக்கும் மந்திரம்; mantra propitiating cow. *'கோசாவித்திரி முதலிய தோத்திரங்களைச் செய்து' (சைவச. பொது.168, உரை).*

[கோ + சாவித்திரி.]

கோசாவெடு–த்தல் *kōšā-v-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) வெளிநாட்டில் பணியாற்றுதற்கு அதிகார ஆவணம் (பத்திரம்) பெறுதல்; to obtain power of attorney for acting as agent outside British India.

[கோசம் → கோசா + எடு-.]

கோசான் *kōsāṉ,* பெ. (n.) ஆண்குறி (உ.வ.); membrum virile.

[கோசம் → கோசான்.]

கோசிகம்[1] *kōšigam,* பெ.(n.) 1. பட்டாடை; silk cloth. *"கோசிகம் போல" (பெருங்.உஞ்சைக். 43:154). "கோசிகச் செம்பொ னாடை கொம்பனா ரசைத்தல் போலும்" (நைடத.இளவே.4).* 2. ஒரு பண்; a primary melody type, corresponding to Pairavi. 3. சாமவேதம் (சூடா.); *šāmavēdā.* 4. கூகை; owl. *"கூகைப்பெயர் கோசிக மென்பது" (உபதேசகா. சிவநாம.47).*

[கோசம் → கோசிகம்.]

கோசிகம்[2] *kōšigam,* பெ.(n.) 1. விலாமிச்சை வேர்; the root of a fragrant grass. 2. வெட்டிவேர்; cuscus root (சா.அக).

[கோசு → கோசிகம்.]

கோசிகன்[1] *kōšigaṉ,* பெ.(n.) விசுவாமித்திரன்; *Višuvāmitra,* as the descendant of *Kaušika.* *"கோசிகற் கொருமொழி சனகன் கூறுவான்" (கம்பரா. கார்முக.64).*

[கௌசிகன் → கோசிகன்.]

கோசிகன்[2] *kōsigaṉ*, பெ.(n.) கோவலன் காலத்தில் வாழ்ந்தவன்; a contemporary of Kovalan in Silappatikaram.

[கௌசிகன் → கோசிகன்.]

கோசிகை *kōsigai*, பெ.(n.) 1. பட்டாடை; silk cloth. *"கோசிகையாம் ... அரங்கேசர்க் கரவரசே" (அஷ்டப்.திருவரங்.மா.87).* 2. குடிக்கும் ஏனம்; drinking vessels. 3. மல்லிகைக்கொடி a variety of jasmine creeper. 4. ஆனைச் செவியடி; cow's tongue. 5. குறட்டைப்பாசி; coix millet.

[கோசி → கோசிகை.]

கோசிலம் *kōsilam*, பெ.(n.) மொச்சைவகை; a kind of bean (சா.அக.).

[கொள் (வளைவு) → கோசு → கோசிலம்.]

கோசிலேபிடித்துவா-தல் (கோசிலேபிடித்து வரு-தல்) *kōsilē-piḍittu-vā-*, 18 செ.குன்றாவி (v.t.) செ.கு.வி.(v.i.) காற்றின் ஓட்டத்தில் செல்லும்படி கப்பற் சுக்கானைத் திருப்புதல் (வின்.); to turn the rudder of a ship to facilitate sailing towards of the flow of the wind direction.

[கோசு (வளைவு) + இல் + ஏ + பிடித்து + வா-.]

கோசு[1] *kōsu*, பெ.(n.) 1. கூப்பிடு தொலைவு; a measure of distance, linear measure of Tamil Nadu 1 mile 110 feet, calling distance. *"சன்னிதிக்கு அப்புறத்தில் இரண்டு கோசு அளவிலிருக்கும் பாபவிநாசனிக்கு" (குருபரம். பன்னீ.217).* 2. இரண்டு காதம்; the distance of twenty miles.

[காதம் → காசம் → காசு → கோசு.]

கோசு[2] *kōsu*, பெ.(n.) ***கோசம்***[4] பார்க்க;see *kōsam.*

[கோசம் → கோசு.]

கோசு[3] *kōsu*, பெ.(n.) 1. தோணிப்பாயின் முன்புறக் கயிறு (வின்.); lower front rope of the sail of a boat. 2. தடவை முறை (யாழ்ப்.); turn, time. 3. தோல்வி; defeat, loss, overthrow. *அவன் இதிலே கோசுபோய் விட்டான்.* 4. காரியம்; affair, concern. *அவன் கோசுக்குப் போகாதே.* 5. பாயின் கீழ்ப்புறம்; bottom of the sail. 6.கலத்தின் ஒருபக்கம்; a side of a vessel.

[கோள் (வளைவு) → கோசு.]

கோசு[4] *kōsu*, பெ.(n.) பரணிச்செப்பு (சரபேந்திர. குறவஞ்சி.321); a kind of small perfume-box. 2.தொங்கல் (இ.வ.) ; hangings.

[கொய் → கோய் (மடிப்பு) → கோசு.]

கோசு[5] *kōsu*, பெ.(n.) கப்பலின் காற்றுப்பக்கம் (பாண்டி.); windward side of a ship.

[கால் (காற்று) → கோல் → கோய் → கோசு.]

கோசுக்கால் *kōsu-k-kāl*, பெ.(n.) 1. கீரையின் நீண்ட மெல்லிய கால் (யாழ்ப்.) ; long slender stalks of pot herbs. 2.பருமனின்றி நெடுக வளர்ந்த கால்; a leg which has grown in length without proportionate breadth.

[கோல் → கோசு + கால்.]

கோசுப்பாய் *kōsu-p-pāy*, பெ.(n.) கப்பலின் பின்புறப் பாய்; spankar, after-sail in a barque.

[கோசு[2] *+ பாய்.]*

கோசுப்பாய்மரம் *kōsu-p-pāimaram*, பெ.(n.) பெரிய பாய்மரம்; the mast of a vessel.

[கோசு + பாய்மரம்.]

கோசுப்புறம் *kōsu-p-puṟam*, பெ.(n.) மரக்கலத்தின் வலப்பக்கம் (மீன்.தொ.); right side of a wooden vessel.

[கோசு + புறம்.]

கோசுப்பெட்டி *kōsu-p-peṭṭi*, பெ. (n.) வில் வண்டி; a roofed cart.

[கோத்தல் → கோச்சுதல் (கூரையமைத்தல்) கோச்சு → கோசு + பெட்டி.]

கோசுபோ-தல் *kōsu-pō-*, 8 செ.கு.வி.(v.i.) தாழ்ச்சியாதல்; to fall low in status, to be degraded. 2. தோல்வியுறுதல்; to be defeated.

தெ. கோள் போவுட

[கோள் (வளைவு) → கோய் → கோசு + போ.]

கோசும்பரி *kōsumbari*, பெ.(n.) காய்கறிகளைப் பச்சையாகவே மசாலையிட்டு ஆக்கிய ஒருவகைப் பச்சடி; a side food which is made of raw vege tables seasoned with condiments so as to give it a relish and taken with main food to increase taste (சா.அக).

மறுவ. கோசுமலி.

க.,து. கோசும்பரி; **மரா.** கோசிம்பரி.

[கொய்து + உண்பலி – கொய்துண்பலி → கோசும்பரி.]

கோசுமந்தில் *kōsu-mandil*, பெ.(n.) படகின் பின் பக்கத்துப் பாய் தாங்கும் கட்டை; gaff lift, the spar

upon which the upper edge of a fore and aft sail is extended.

[கோசு + (மந்து) மந்தில்.]

கோசுவாரி *kosu-vāri,* பெ.(n.) பாய்மரத்தின் கீழ் புறத்தில் பாயைக் கட்டப் பயன்படும் குறுக்கு வாட்டக் கழி; the spar on which the bottom of the sail rope is fixed upon.

[கோசுவரி → கோசுவாரி.]

கோசுவிழு-தல் *kōśu-vilu-,* 2 செ.கு.வி.(v.i.) துணி வெட்டும்போது கோணிப்போதல்; zigzag cutting of the cloth by mistake.

[கோள் →கோசு + விழு.]

கோஞ்சகக்குடி *kōñjaga-k-kuḍi,* பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village n Sivagangai Dt.

[கொழிஞ்சில் → கோஞ்சல் + குடி.]

கோஞ்சணவயல் *kōñjaṇa-vayal,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanadhapuram dt.

[கொழிஞ்சில் →கொஞ்சனி →கோஞ்சணி + வயல்.]

கோட்காரன் *kōṭ-kāraṉ,* பெ.(n.) கோட்சொல்லி (வின்.); slanderer.

[கோள் + காரன்.]

கோட்கூறு *kōṭ-kūṟu,* ஓரையை (இராசியை) முப்பது வகையாகப் பிரிக்கை; division of a sign of the zodiac into 30 sections, being the number of its degrees. 2.கோள் குற்றம்; good or evil influence of the planets.

[கோள் + கூறு.]

கோட்சுரும்பு *kōṭśurumbu,* பெ.(n.) தேன் குடிக்கும் வண்டு; a kind of beetle.

[கோள் + சுரும்பு.]

கோட்சுறா *kōṭśuṟā,* பெ.(n.) கொல்லும் தலைமையுள்ள சுறாமீன்; a kind of shark which capable of taking life of human.

[கோள் + சுறா.]

கோட்சொல்லி *kōṭ-colli,* குறளை கூறுவோன் (உ.வ.); tale-bearer, slanderer.

[கோள் + சொல்லி.]

கோட்சொல்(லு)-தல் *kōṭ-col(lu)-,* 13 செ.கு.வி. (v.i.) 1. குறளை கூறுதல்; to tales-bear.

[கோள் + சொல்.]

கோட்டக்ககம் *kōṭṭakkagam,* பெ. (n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[கோடு → கோட்டு + அக்ககம்.]

கோட்டக்கரை *kōṭṭa-k-karai,* பெ. (n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[கோடு → கோட்ட + கரை.]

கோட்டக்கினி *kōṭṭakkiṉi,* பெ.(n.) வயிற்றெரிச்சல்; burning senstation in the stomach (சா.அக.).

[கோடு + அக்கினி.]

கோட்டகம்[1] *kōṭṭagam,* பெ.(n.) 1. குளக்கரை; shore, bank. *"நெடுங்குளக் கோட்டகம்"(சிலப். 11:71).* 2. பள்ளம் (சிலப். 11:71, உரை); pit, ditch. 3. ஆழமான நீர்நிலை; deep tank. *"கோட்டக நிலைப்பட்டா நிறைந்தன" (சீவக.41).* 4. குளம்; pool. *"கோட்டகத்தி னகம்புகும்"* (கந்தபு.ஆற்.35). 5. கோயில்; temple.

[கோட்டம் → கோட்டகம்.]

கோட்டகம்[2] *kōṭṭagam,* பெ.(n.) செங்கத்தாரி; false pea-cock's foot tree (சா.அக).

[கோடு → கோட்டு + அகம்.]

கோட்டகம்[3] *kōṭṭagam,* பெ.(n.) பல தெருக்கள் கூடுமிடம்; junction of the streets.

[கூடு → கூட்டு → கோட்டு + அகம்.]

கோட்டகம்[4] *kōṭṭagam,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கோடு → கோட்டு + அகம்.]

கோட்டகயப்பாக்கம் *kōṭṭakaya-p-pākkam,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[கோடு → கோட்டு + கயம் + பாக்கம்.]

கோட்டகாரம் *kōṭṭa-kāram,* பெ.(n.) நெற்களஞ்சியம்; granery. *"ஊருணி குளமுங் கரையும் ஐயன் கோயிலுந் திருமுற்றமும் கோட்டகாரமும் வெள்ளான் சுடுகாடும், புதைச் சுடுகாடும் பறைச்சேரியும்" (தெ.இ.கல்.தொ.II, கல்.-1, பகுதி-1, வரி 4).*

[கோட்டை + காரம்.]

கோவை

கோட்டம்



கோரைக் கிழங்கு

கோழிக்கொண்டைப்பூ

கோட்டகுப்பம் *kōtta-kuppam*, பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvallur Dt.

[கோடு → கோட்டு + குப்பம் → கோட்டகுப்பம்.]

கோட்டங்காவலர் *kōttaṅ-kāvalar*, பெ.(n.) சிறைக் கூடங் காப்போர்; warders of a jail. *"கோட்டங் காவலர்...இசைத்துமென் றேகி" (மணிமே.19:48).*

[கோட்டம் + காவலர்.]

கோட்டடி[1]-த்தல் *kōttaḍi-*, 4 செ.கு.வி. (v.i) தேர்வில் தோல்வியடைதல் (இ.வ.); to fail in an examination. *பத்தாம் வகுப்பில் இரண்டுமுறை கோட்டடித்து விட்டான்.*

[கோள் → கோட்டு + அடி -.]

கோட்டடி[2]-த்தல் *kōttaḍi-*, 4 செ.கு.வி. (v.i.) சீட்டாட்டத்தில் எல்லாப் பிடிகளையுந் தனியே பிடிக்க முயலுதல்; to play alone hand to win all the tricks in a card-game.

[கூட்டு → கோட்டு + அடி -.]

கோட்டந்தை *kōttandai*, பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanadhapuram Dt.

[கோடு → கோட்டு + அந்தை - கோட்டந்தை.]

கோட்டபஞ்சரம் *kōtta-pañjaram*, பெ.(n.) கோயிற் கருவறைப் புறச்சுவரில் அழகிய சிறிய கோட்டம் போன்று அமைந்த அமைப்பு; small niche on the outer wall of innermost sauctuary of the temple.

[கோட்டம் + பஞ்சரம்.]

கோட்டபேதம் *kōttabēdam*, பெ.(n.) குடலுக்குண்டான சிதைவு; waste sustained by bowels (சா.அக).

[கோட்டம் + பேதம்.]

கோட்டம்[1] *kōttam*, பெ.(n.) 1. வளைவு; bend, curve, warp, as in timber. *"மரத்தின் கனக்கோட்டந் தீர்க்குநூல்" (நன்.25).* 2. வணக்கம்; bowing in worship, adoration. *"முன்னோன் கழற்கே கோட்டந் தருநங் குருமுடி வெற்பன்" (திருக்கோ. 156).* 3. நடுநிலை திறம்புகை; partiality, as swerving from uprightness. *"கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது" (தேவா.1182:2).* 4. மனக்கோணல்; crookedness, as of mind. *"உட்கோட்ட மின்மை பெறின்" (குறள்,119).* 5.பகைமை; hatred. *"கோட்டமுற் றமர்செய" (விநாயகபு.37:3).* 6.பொறாமை (பிங்.); envy, jealousy. 7.நாடு (பிங்.); district, province. 8. மதில் சூழ்ந்த நகரம் (பிங்.); town, city. 9.வேலி சூழ்ந்த தோட்டம் (பிங்.); garden.10. கரை; shore, as of a tank. *"உயர்கோட்டத்து... வான் பொய்கை" (பட்டினப்.36).* 11. வளைந்த தண்டுள்ள யாழ் (பிங்.); lute.12. மாக்கோலம் (பிங்.); lines, figures and diagrams drawn with rice-flour on the ground on festive occasions. 13.உண்பன (பிங்.); eatables, edibles. 14. ஒருவகை மருந்து; a kind of medicine. 15. சாலை; street. *"அருஞ்சிறைக் கோட்டத் தகவயிற் புகுந்து" (மணிமே.19:133).*

ம. கோட்டம்; க. கோட; தெ. கோடி (வளைந்தது).

[குள் → கொள் → கோள் → கோடு → கோட்டம்.]

கோட்டம்[2] *kōttam*, பெ.(n.) 1. மதில் சூழ்ந்த பள்ளிப்படை அல்லது கல்லறை; cemetery. *"சுடும ணோங்கிய நெடுநிலைக் கோட்டமும்" (மணிமே.6:59).* 2. மதில் சூழ்ந்த கோயில் (இ.வ.); temple. *"கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்" (சிலப்.14:10).* 3. அரண் வேலி சூழ்ந்த பாசறை (பிங்.); camp. 4. மதில் சூழ்ந்த சிறைச்சாலை (இ.வ.); prison. *"கோன்றமர் நிகள மூழ்கிக் கோட்டத்துக் குரங்க" (சீவக.262). "ஒறுக்குந் தண்டத் துறுசிறைக் கோட்டம்" (மணிமே.19:43). 5.* இடம் (பிங்.); place. 6.கூட்டம்; assembly, meeting (வே.க.170) (சுவி.73). 7.வட்டமான ஆன்கொட்டில் (இ.வ.); cow shed. *"ஆனிரைக டன்னு கோட்டம்" (வாயுசங். பஞ்சாக்.58).* 8. ஆக்கூட்டம் (பிங்.); herd of cows. 9. குரங்கு; monkey.

க. கோணெ (அறை).

[கோ (உயர்வு) → கோடு → கோட்டம்.]

கோட்டம்[3] *kōttam*, பெ.(n.) 1. வெண்கோட்டம்; Arabian costum. 2. ஒருவகை நறுமணச் செடி; costus shrub. *"கோட்டமுங் குங்குமமும் பரந்து" (சீவக.1905).* 3. ஒருவகை நறுமணப் பண்டம்; fragrant costus shrub root. *"கடலிடைக் கோட்டந் தேய்த்துக் கழிவது" (கம்பரா.கும்பக.145).* 4. குரா மரம் (பிங்.); bottle-flower. 5. வயல்; field.

[கோடு = கொம்பு, சந்தனமரக் கிளை. கோடு → கோட்டம்.]

கோட்டம்[4] *kōttam*, பெ.(n.) 1. கடற்கொந்தளிப்பு; sea turbulance. 2. உம்பருலகம்; holy world. 3. வீணை; a stringed musical instrument. 4. வாட்டரவு; weariness, fatigue.

[குள் → குடு (ஒலித்தற் குறிப்பு) → குட்டம் → கோட்டம்.]

கோட்டம்பட்டி *kōṭṭam-paṭṭi*, பெ.(n.) கோவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kovai Dt.

[கோட்டம் + பட்டி.]

கோட்டம்பலவனார் *kōṭṭambalavāṉār*, பெ.(n.) சங்கப்புலவர்களில் ஒருவர்; one of the Śaṅgam poets.

[கோட்டம்பலம் → கோட்டம்பலவன் + ஆர்.]

நற்றிணை என்னும் நூலில் 95ஆம் பாடலை இவர் இயற்றியுள்ளார். கோட்டம்பலம் என்னும் ஊரினராதலின் கோட்டம்பலவன் எனப்பட்டார். "ஆர்" உயர்வுப்பன்மையீறு.

கோட்டமருதூர் *kōṭṭamarudūr*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கோடு → கோட்டு + மருதூர்.]

கோட்டயம் *kōṭṭayam*, பெ.(n.) 1. சேரநாட்டின் பழைய சிற்றரசுகளுள் ஒன்று; one of the ancient principalities of Kerala. 2. கேரள மாநிலத்தின் நகரங்களுளொன்று; name of a town, head-quarters of the present *kōṭṭayam* Dt.

ம. கோட்டயம்.

[கோட்டை + அகம் – கோட்டகம் → கோட்டயம்.]

கோட்டமடுகு *kōṭṭa-maḍugu*, பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கோட்டை + (மடு) மடுகு (மடுவு → மடுகு).]

கோட்டரம் *kōṭṭaram*, பெ.(n.) 1. குரங்கு; monkey. 2.பொய்மை; falsehood. 3. நீர்நிலை; pool, tank.

[கோடு (வளைவு) → கோட்டு + அரம்.]

கோட்டரவு *kōṭṭaravu*, பெ.(n.) 1. மனத்துயர் (யாழ்ப்.); distress. 2. குரங்குமனம்; mischievous mind (சா.அக).

[கோடுதல் = வளைதல், மனம் சாய்தல், வருந்துதல். கோடு + அரவு (சொல்லாக்க ஈறு).]

கோட்டவிளை *kōṭṭa-viḷai*, பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[கோடு → கோட்டு + விளை – கோட்டவிளை.]

கோட்டாக்கினி *kōṭṭākkiṉi*, பெ.(n.) வயிற்றுத் தீ; the thermal heat supposed to be in the secral region (சா.அக).

[கோடக்கினி → கோட்டாக்கினி.]

கோட்டாரப்பட்டி *kōṭṭāra-p-paṭṭi*, பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கொட்டாரம் → கோட்டாரம் + பட்டி.]

கோட்டாரம்[1] *kōṭṭāram*, பெ.(n.) 1.கிணறு; well. 2.குளம்; pond. 3. குளத்திற்கு செல்லும் படி; the stairs leading to a pond. 3.நாற்சதுரத் துரவு; square well. 4.தாமரைத்தடம்; lotus tank. 5. மரம்; tree.

ம. கோட்டாரம்.

[கோட்டகம் → கோட்டாரம்.]

கோட்டாரம்[2] *kōṭṭāram*, பெ.(n.) 1. அரண் சூழ்ந்த நகரம்; a fortified town. 2. அரண்மனை; palace. 3. தலைநகரம்; capital. 4. காவலமைந்த இடம்; a strong hold.

ம. கோட்டாரம்.

[கோட்டகம் → கோட்டம்.]

கோட்டாரன் *kōṭṭāraṉ*, பெ.(n.) 1.தீய ஒழுக்கங் கொண்டவன்; one who leads a low or infamous life. 2.காமவிருப்பமுடையவன் ; a debouched man.

ம. கோட்டாரன்.

[கோடு → கோட்டு + காரன் – கோட்டுகாரன் → கோட்டாரன் (கொ.வ.)]

கோட்டாரி *kōṭṭāri*, பெ.(n.) 1. கல்லாரை (மலை.); iron weed. 2. மலையடிவாரங்களில் அகப்படும் ஆரையைப் போன்ற ஓர் அரிய கொடி; an unknown creeper of the species of marselia said to be found very rarely at the foot of the hills (சா.அக).

[கோடு + ஆரை.]

கோட்டாலம் *kōṭṭālam*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கோடு → கோட்டு + ஆலம்.]

கோட்டாலை *kōṭṭālai*, பெ.(n.) 1. துன்பம் (திவா.); distress. 2. நகையாட்டுக் கூத்து; grotesque gestures, as of one possessed by the devil, antic. *"கூத்தாடு வாயிதென்ன கோட்டாலை" (பணவிடு.158).* 3. மூடநடத்தை; foolish behaviour. 4. களியாட்டம்; dalliance. 4. உலைவு; to get loosened. 5. நோய்; disease.

[கொடு (வளைவு) → கோடு + ஆலை – கோட்டாலை.]

கோட்டாலைக்காரன் *kōṭṭālai-k-kāraṉ,* பெ.(n.) 1.தொல்லை செய்வோன்; troublesome person. 2. பகடியாடி; buffoon, joker.

[கொடு → கோடு + ஆலை + காரன்.]

கோட்டாற்றுநிலைப்படை *kōṭṭāṟṟu-nilaippaḍai,* பெ.(n.) குலோத்துங்கன் தான் வென்ற கோட்டாற்றில் தன் படையைச் சேர்ந்த தலைவரின் கீழ் அமைத்த நிலைப்படை (பிற்.சோழ.வர. சதாசிவ. பண். பக்.288-289); a kind of army camp of the Chola king Kulothungan stationed at *Kōṭṭāṟu.*

[கோட்டாறு + நிலைப்படை.]

கோட்டாறு *kōṭṭāṟu,* பெ.(n.) குமரிமுனைக்கு வடக்கில் நாஞ்சில் நாட்டிலுள்ள ஊர்; a village in Nāñjilnāḍu north of Kumarimuṉai. "குறுகலர் *குலைய கோட்டாறு உட்பட"-முதற் குலோத்துங்கன் மெய்க்கீர்த்தி (கல்.அக.).*

[கோடு + ஆறு.]

சங்க கால வேள் ஆயின் ஆய்குடி இதுவே என்பர் மு. இராகவையங்கார் (வேளிர் வரலாறு; இரண்டாம் பதிப்பு 1916 பக். 88).

கோட்டான் *kōṭṭāṉ,* பெ.(n.) 1. கூகை (இ.வ.); rock horned owl. *"கூகையைக் கோட்டா னென்றலும்" (தொல்.பொருள்.623).* 2.கொக்கு வகை (யாழ்ப்.); a species of bittern.

ம. கோட்டான்.

[கோடு - கொம்பு, வளைவு. கோடு + ஆன் - கோட்டான். கொம்புடைமையின் கோட்டானையும் வளைந்த கழுத்துடைமையின் கொக்கையும் குறித்தது.]

கோட்டான்கறி *kōṭṭāṉ-kaṟi,* பெ.(n.) கோட்டானின் இறைச்சி; meat of hooting owl. "கொற்றவரை மயக்கும் கோட்டானின் கறி" என்பது பழமொழி (சா.அக).

[கோட்டான் + கறி]

இது நோய்களை விரட்டும். பசியையும் காட்டானைபோல் மதமும் உண்டாக்கும். மருந்து குணமுடையது.

கோட்டான்காய் *kōṭṭāṉ-kāi,* பெ.(n.) கூகைத் தேங்காய்; blughted coconut.

[கோட்டான் + காய்]

இது நோய்களை விரட்டும். பசியையும் காட்டானை போல் மதமும் உண்டாக்கும்.

கோட்டான்கோட்டான் *kōṭṭāṉ-kōṭṭāṉ,* பெ.(n.) பிள்ளைகளின் விளையாட்டு வகை (இ.வ.); a game of children.

[கோட்டான் + கோட்டான்.]

கோட்டான்திருக்கை *kōṭṭāṉ-tirukkai,* பெ.(n.) 18 அடி நீளமுள்ளதும் பச்சையும் நீலமுங் கலந்த நிறமுடையதுமான கடல்மீன் வகை; sea- devil, deep-purplish, attaining, 18 ft. and upwards across the disc which is twice as broad as long.

[கோட்டான் + திருக்கை.]

கோட்டி[1] *kōṭṭi,* பெ.(n.) 1. துன்பம் (வின்.); trouble, vexation, annoyance. 2. மூளைக்கோளாறு (வின்.); madness, insanity. *"காமக் கோட்டியால் மனங்கூசினேன்" (இராமநா. உயுத். 41).* 3. பகடி; joke, mimicry. 4. நகையாட்டுக்கூத்து; grotesque gestures, as of one possessed by the devil; actic.5. அழகு; beauty. 6. உலைவு; to get loosensed.

ம. கோட்டி.

[கோள் →கோட்டி.]

கோட்டி[2] *kōṭṭi,* பெ.(n.) 1. அவை (சபை) (இ.வ.); assembly of learned or respectable persons. *"தோமறு கோட்டியும்" (மணிமே.1:43).* 2. கூட்டம் (பிங்.); multitude, collection, class. 3. பேச்சு, அவைப்பேச்சு, சொற்பொழிவு (இ.வ.); speech, or utteranice as in an asembly. *"வீரக் கோட்டி பேசுவார்" (கம்பரா.மாயாசனகப்.13).* 4. ஒருவரோடு கூடியிருக்கை; company as of a person. *"தன்றுணைவி கோட்டியினி னீங்கி" (சீவக.1035).*

[கோடகம் → கோட்டி. கொளுத்தி → கோட்டி.]

கோட்டி[3] *kōṭṭi,* பெ.(n.) 1. கோபுரவாசல்; gateway under a temple tower. *"ஆயிழை கோட்டத் தோங்கிருங் கோட்டி யிருந்தோய்" (சிலப்.30:62).* 2. மனைவாயில் (பிங்.); door of a house.

[கோட்டம் → கோட்டி - கோட்டத்தில் உள்ளது.]

கோட்டி[4] *kōṭṭi,* பெ.(n.) கிட்டிப்புள் (இராட்.); larger stick in the game of tip-cat (R.).

ம. கோட்டி.

[கிட்டி → கொட்டி → கோட்டி.]

கோட்டி[5]**-த்தல்** *kōṭṭi-,* 4 செ.கு.வி. (v.i.) ஆரவாரித்தல்; to sound, clamour,roar.

[கூடு → கூட்டு → கூட்டி → கோட்டி.]

கோட்டிக்காரன் *kōṭṭi-k-kāraṉ*, பெ.(n.) பித்தன் (நெல்லை.); mad man.

[கோட்டி + காரன்]

கோட்டிகொள்¹(ளு)-தல் *kōṭṭi-kol(lu)-*, 16 செ.கு.வி. (v.i.) அவையில் உரையாற்றுதல்; to speak as in an assembly. *"நூலின்றிக் கோட்டி கொளல்" (குறள், 401).*

[கோட்டி + கொள்(ளு)-]

கோட்டிகொள்²(ளு)-தல் *kōṭṭi-kol(lu)-*, 10 செ.குன்றாவி. (v.t.) 1. துன்புறுத்தல்; to annoy, vex. 2. இகழ்தல்; to jeer at, banter, mock.

[கோட்டி + கொள்(ளு)-]

கோட்டிதம் *kōṭṭidam*, பெ.(n.) தோலினின்றும், அதைச் சேர்ந்த மயிர், நகங்கள், குளம்பு, கொம்பு நகம் உருவாவதற்கு அடிப்படையான வெடியகப் பொருள் முதலியவற்றினின்றும் எடுக்கப்படும் பசை; impure viscous substance obtained by boiling animal substances such as skins, hairs, nails, hoofs; keratin (சா.அக).

[கூட்டு → கூட்டி → கூட்டிதம் → கோட்டிதம்.]

கோட்டியம் *kōṭṭiyam*, பெ.(n.) 1. வியப்பு; miracle. 2. திகைப்பு; astonishment, wonder.

[கோட்டி → கோட்டியம்.]

கோட்டியாழ் *kōṭṭiyāḻ*, பெ.(n.) நால்வகை யாழி னொன்று; one among the four kinds of lutes.

மறுவ. செங்கோட்டியாழ்.

[கோடு → கோட்டி + யாழ்.]

கோட்டில்வாழ்விலங்கு *kōṭṭil-vāḻ-vilaṅgu*, பெ.(n.) கிளைகளில் உறையும் அணில், குரங்கு போன்றவை; animals living on branches of trees such as the squirrel, monkey etc.(சா.அக).

[(கோடு + இல்) கோடில் + வாழ் + விலங்கு]

கோட்டிலக்கம் *kōṭṭilakkam*, பெ.(n.) 1. வகுத்த மிச்சம்; remainder, in division. 2. ஒருவகைச் சதுரக் கணக்கு (வின்.); magic square.

[கூடு → கூட்டு → கோட்டு + இலக்கம்.]

கோட்டிறால் *kōṭṭiṟāl*, பெ.(n.) பாறைகளின் இடுக்குகளில் வாழுமோர்வகை இறால்மீன்; a kind of fish living in the gaps of rocks.

[கோடு + இறால்]

கோட்டினம் *kōṭṭiṉam*, பெ.(n.) கொம்புடைய எருமைக் கூட்டம் (இ.வ.); herd of buffaloes, as having horns. *"கோட்டினத் தாயர் மகனன்றே" (கலித்.103:33).*

[கோடு + இனம்]

கோட்டு¹-தல் *kōṭṭu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. வளைத்தல்; to bend, cause to stoop. *"நகைமுகங் கோட்டி நின்றாள்" (சீவக.1568).* 2. வளைத்து முறித்தல் (திவா.); to break. 3. சித்திரம் முதலியன எழுதுதல்; to draw picture. *"தன்னாம மேருவினுங் கோட்டி னானே" (பாரத. சிறப்புப்.19).* 4. கட்டுதல்; to build. *"ஒரு மண்டபங் கோட்டினேன்" (பாரத. வாரணா.123).*

ம. கோட்டுக.

[கோடு → கோட்டு.]

கோட்டு² *kōṭṭu*, பெ.(n.) 1. வளைவு; bend. 2. எழுதுகை; writing. 3. கட்டு; bind. 4. எருமை; buffalo.

[கோடு → கோட்டு.]

கோட்டு³ *kōṭṭu*, பெ.(n.) நெல்லரியின் தொகுதி; bundle of sheaves of paddy.

[கூடு → கூட்டு → கோட்டு.]

கோட்டுக்காறல் *kōṭṭu-k-kāṟal*, பெ.(n.) வெள்ளியைப் போல் பளபளக்கும் ஒரு வகைக் கடல்மீன்; a kind of sea-fish which shines as silver.

[கோடு + காறல்]

கோட்டுச்சம்பா *kōṭṭu-c-cambā*, பெ.(n.) விளைந்த நெல்லரியை கயிற்றால் கோடுபிடித்து அடித்த துப்புரவான முதல்தர நெல்; fine paddy obtained by threshing the reaped paddy stalk. கோட்டுச் சம்பா ஆக்கிவைத்தால் போட்டுச் சாப்பிட வருவார்கள் (பழ).

[கோடு + சம்பா.]

கோட்டுநீறு *kōṭṭu-nīṟu*, பெ.(n.) 1. கிளிஞ்சல் சுண்ணாம்பு; shell lime. 2. சங்குச் சுண்ணாம்பு; a chank lime (சா.அக).

[கோடு (சுண்ணாம்பு) + (நூறு) நீறு. நூறுதல் = அரைத்தல்.]

கோட்டுநூறு *kōṭṭu-nūṟu*, பெ.(n.) **கோட்டுநீறு** பார்க்க; see *kōṭṭu-nīṟu*. *'கோட்டு நூறும் மஞ்சளுங் கூடியவழிப் பிறந்த செவ்வண்ணம் போல' (தொல். எழுத்து. 6,உரை).*

மறுவ. கோட்டு நீறு.

[கோட்டுநீறு →கோட்டுநூறு.]

கோட்டுநோய் *kōṭṭu-nōy*, பெ.(n.) வயிற்றுநோய்; stomach disease (சா.அக).

[கோடு + நோய்]

கோட்டுப்பலகை *kōṭṭu-p-palagai*, பெ.(n.) உப்பளத்தில் உப்புவாரும் பலகை (மீனவ.); a plank used for taking salt in salt-pan.

[கோடு + பலகை]

கோட்டுப்பிடி-த்தல் *kōṭṭu-p-piḍi-*, 4 செ.கு.வி. (v.i.) நெல்லின் அரிகளை யடித்தல் (உ.வ.); to thresh the sheaves of paddy.

[கோட்டு + பிடி.]

கோட்டுப்புலி *kōṭṭu-p-puli*, பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanadhapuram Dt.

[கோடு → கோட்டு + புலி.]

கோட்டுப்பூ[1] *kōṭṭu-p-pū*, பெ.(n.) 1. மரக்கொம்பு களில் தோன்றும் பூ; flowers on the branches of a tree. *"கோட்டுப் பூப்போல மலர்ந்துபிற் கூம்பாது" (நாலடி.215).*

[கோடு + பூ]

பூக்கள் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என நால்வகைப்படும்.

கோட்டுப்பூ[2] *kōṭṭu-p-pū*, பெ.(n.) கல் தாமரை; stone lotus. 2. ஒருவகைத் தாழை; a kind of screw-pine (சா.அக).

[கோடு + பூ.]

கோட்டுமண் கொள்(ளு)-தல் *kōṭṭu-maṇ-koḷ(ḷu)*, 16 செ.கு.வி.(v.i.) மண்ணைக் கொம்பாற் குத்திப் பெயர்த்தல்; to break up earth with horns or tusks. *"கோட்டுமண் கொண்டிடந்து" (திவ். பெரியாழ். 3.3:9).*

மறுவ. கோட்டுமண்ணெடுத்தல்.

[கோடு → கோட்டு + மண் + கொள்.]

கோட்டுமலை *kōṭṭu-malai*, பெ.(n.) 1. கொம்புள்ள மலையாகிய யானை; elephant. 2. வெண்கல் மலை; hill consisting white or marble stones.

[கோடு (கொம்பு) → கோட்டு + மலை.]

கோட்டுமா *kōṭṭu-mā*, பெ.(n.) 1. யானை; ele phant. *"கோட்டுமா வழங்குங் காட்டக நெறியே" (ஐங்குறு.282).* 2. காட்டுப்பன்றி (சிலப். 15:99,அரும்.); boar. 3.எருமைக் கடா; he-buffalo. *"கோட்டுமா வூரவும்" (சிலப். 15:98).* 4. கொம்புள்ள விலங்கு; animal with tusks or horns.

[கோடு (கொம்பு) + மா.]

கோட்டுமால் *kōṭṭu-māl*, பெ.(n.) வலைகளை வைத்துக் கட்டும் பெரிய வலைப்பை (மீனவ.); a big netted bag used for keeping the fishing net.

[கூட்டு → கோட்டு + மால்.]

கோட்டுமீன் *kōṭṭu-mīṉ*, பெ.(n.) சுறா; shark. *"கோட்டுமீ னெறிந்த வுவகையர்" (நற்.49).*

[கோடு→கோட்டு + மீன்.]

கோட்டுமுத்து *kōṭṭu-muttu*, பெ.(n.) யானை மருப்பு முதலியவற்றில் உண்டாகுவதாகக் கருதப்படும் முத்து; pearls claimed to be derived from the tusk of an elephant (சா.அக).

[கோடு →கோட்டு + முத்து.]

கோட்டுமுளை *kōṭṭu-muḷai*, பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Kaḍalūr* Dt.

மறுவ. கோட்டிமுளை

[கோடு → கோட்டு + முளை.]

கோட்டுவாச்சியம் *kōṭṭu-vācciyam*, பெ.(n.) கம்பியுள்ள இசைக்கருவி; a kind of stringed musical instrument.



கோட்டுவாத்தியம்

[கோடு + வாச்சியம்.]

கோட்டுவாய் *kōṭṭu-vāy*, பெ.(n.) 1. கோடை வாய்; dribble. *"முகத்தொழுகு கோட்டு வாயு நெடுமூச்சுங் கண்டு" (இராமநா.சுந்தர.4).* 2. கொட்டாவி (இ.வ.);

yawning. 3. வாயிலிருந்து வழிந்த உமிழ்நீர் காய்ந்து உண்டாக்கிய கோடு; saliva trickling from ones mouth, dribble. *'கோட்டுவாயைக்கூடத் துடைக்காமல் வெளியே கிளம்பிவிட்டாயா?' (உ.வ.).*

ம. கோட்டுவா(ய்).

[கோட்டு + வாய்.]

கோட்டுவாய்சலம் *kōṭṭu-vāy-šalam*, பெ.(n.) வாய் ஒழுக்கு நீர்; dribbled saliva (சா.அக).

[கோடு + வாய் + சலம்.]

கோட்டுவாய்த்திருக்கை *kōṭṭuvāy-t-tirukkai*, பெ.(n.) திருக்கை மீன் வகைகளிலொன்று; a kind of fish.

[கோட்டுவாய் + திருக்கை.]

கோட்டுவாய்வடிதல் *kōṭṭuvāy-vaḍidal*, தொ.பெ.(vbl.n.) வாயினின்று நீர் ஒழுகல்; the flowing of saliva as that founded at the corners of the mouth during sleep in a patient suffering from phlegmatic fever (சா.அக).

[கோட்டுவாய் + வடி-.]

கோட்டுவான் *kōṭṭuvāṉ*, பெ.(n.) 1. கோட்டான்; rock horned owl. 2. ஒருவகை நீர்ப்பறவை (யாழ்.அக.); an aquatic bird.

[கோடு → கோட்டு + ஆன். (வகர உடம்படுமெய் இடையில் மிக்கது).]

கோட்டுறல் *kōṭṭural*, பெ.(n.) 1. வளைகை; bending. 2. எழுதுகை; writing.

[கோடு + உறல் – கோட்டுறல்.]

கோட்டுறுகன்னி *kōṭṭuṟu-kaṉṉi*, பெ.(n.) கோவை; Indian caper (சா.அக.).

[கோட்டு + உறு + கன்னி.]

கோட்டூர் *kōṭṭūr*, பெ.(n.) 1. நாகை மாவட்டம் திருத்துறைப்பூண்டியின் அருகில் அமைந்த ஓர் ஊர்; a village near *Tirutturaippūṇḍi*. 2. சென்னைக்கருகிலுள்ள ஊர்; a village near Chennai.

[கோடு → கோட்டு + ஊர் – கோட்டூர் : ஏரியூர்.]

கோடு = ஏரிக்கரை, கரையுயர்த்தப்பட்ட ஏரி. கோடு என்பது ஏரியைக் குறித்த சொல்லாதலின் ஏரியையடுத்திருக்கும் ஊர், கோடு + ஊர் – கோட்டூர் எனப்பெயர் பெற்றது.

கோட்டூர்தி *kōṭṭūrdi*, பெ.(n.) யானை மருப்பினாற் செய்த பல்லக்கு; palanquin made of elephant's tusks. *"தேவிய ரேறிய பெருங்கோட் டூர்தி" (பெருங்.உஞ்சைக்.38:180).*

[கோட்டு + ஊர்தி]

கோட்டூர்நாடு *kōṭṭūr-nāḍu*, பெ.(n.) சென்னை மாநகரில் கோட்டூரைச் சுற்றியுள்ள பண்டைய பகுதி; old habitations around the *kōṭṭūr* village of Chennai. *"ஜயங்கொண்ட சோழ மண்டலத்து புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழவளநாட்டு கோட்டூர் நாட்டுத் திருவான்மியூரில்" (செ.மா.கல். 1967–125, 6) (கி.பி.13 ஆம் நூற்றாண்டு).*

[கோடு + ஊர் – கோட்டூர் + நாடு. கோடு : ஏரிக்கரை, ஏரி. கோட்டூர் : ஏரியூர்.]

கோட்டெங்கு *kōṭṭeṅgu*, பெ.(n.) குலைகளை யுடைய தெங்கு; coconut tree bearing bunches of coconuts. *"கோட்டெங்கிற் குலைவாழை" (பட்டினப்.16).*

[கோள் + தெங்கு.]

கோட்டேரி *kōṭṭēri*, பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Kadalūr* Dt.

[கோடு →கோட்டு + ஏரி.]

கோட்டை[1] *kōṭṭai*, பெ.(n.) வட்டமான மதிலரண் (சூடா.); castle, fort, stronghold. *"தங்கிவர் பெலக்கிற்கோட்டை கொத்தளமுஞ் சதுரிலுப் பரிகையாசாரம்" (சாதகசிந்.692).* கோட்டையில் பெண் பிறந்தாலும் போட்ட புள்ளி தட்டாது (பழ).

ம. கோட்ட; **க.** கோடெ (மண்சுவர், சுவர்), கோட்ட, கோட் (நகரம், கோட்டை); **தெ.** குடி, கோட, கோமு, கோட்டார (அரணுள்ள நகரம்); **து., குட., பட.** கோடெ; **கொலா.** கொடா (சுவர்).

Indon. koṭa; **Ar.** hājiz; **Spain.** castalla; **Argentina.** castel-ar; **Itali.** castel di leva; **Mexico.** castano-s; **Chile.** castilla; **Eng.** castle acre; **Ireland.** castle har; **Scottland.** castle hay; **Wales.** castle caer-einion. **Pkt.** kuḍḍa. **Mal.** kōta.

[கோ (உயரம்) → கோடு → கோட்டை.]

கோ = உயரம். கோடு = உயரமானது, மதிற்சுவர், பக்கச்சுவர், மலைமுகடு. கோட்டை = உயர்ந்த மதிற்சுவர்களைக் கொண்ட பாதுகாப்பு அரண், பகைவர்களாலும், விலங்குகளாலும், படையெடுப்பு களாலும் எவ்விதத் தீங்கும் நேராமல் இருப்பதற்காகப் பழங்கால அரசர்கள் அரண்மனையைச் சுற்றிலும் மிக வலுவான கோட்டையை அமைத்துக் கொண்டார்கள். நகரத்தைச் சுற்றிலும்கூட கோட்டை அமைத்துக் கொள்வது உண்டு. கோட்டை வேளாளர் என்னும் அரச வேளாளர் தம் குடியிருப்புகளைச் சுற்றிலும் கோட்டை

கட்டிக் கொள்வார்கள். இதனால் தமிழர்களின் நாகரிகத்தைக் கோட்டைநாகரிகம் என்பர். மண்கோட்டைகள், செங்கற்கோட்டைகள், கற்கோட்டைகள் ஆகியவை செயற்கையாக அமைக்கப்படும் கோட்டைகளாகும். மலை மீது அமைக்கப்படும் கோட்டை மலைக்கோட்டை எனப்படும். கோட்டையைச் சுற்றி அகழியும், அகழியைச் சுற்றி மிளை என்னும் காவற்காடுகளும் அமைக்கப்படுவது தமிழர்களின் கோட்டை நாகரிகத்தின் சிறப்பியல்புகளாகும். தமிழர்களின் கோட்டை கட்டும் நாகரிகம் வடஇந்தியாவிலும் பல உலக நாகரிகங்களிலும் பரவியிருப்பதை, கோட்டை என்னும் சொல்லே பல வடிவில் திரிந்து பற்பல மொழிகளிலும் ஊடாடியிருப்பதைக் கொண்டு மெய்ப்பிக்கின்றனர். தமிழர்களின் கோட்டை நாகரிகமே பிற நாட்டாரின் படையெடுப்புகளிலிருந்து தமிழகத்தைக் காத்திருக்கிறது என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். கோயில் கட்டும் நாகரிகம் வளர்ந்த பிறகு கோட்டை கட்டும் நாகரிகம் மறையத் தொடங்கியது என்று கூறுகின்றனர்.

கோட்டை[2] *kōṭṭai*, பெ.(n.) 1. 21 மரக்கால் கொண்ட ஒரு முகத்தலளவை (G.Tn.D.I.238); measure of capacity = 21 *marakkāl* . 2. ஒரு நில அளவு (I.M.P.Tn.278) ; a land measure. 3. வட்டமான நெற்கூடு; a straw-covering with paddy stored in. *"உலவாக்கோட்டை" (திருவாலவா.50: 13).* 4. வைக்கோற் போர்; stack of straw or hay. *"வாரிக் களத்தடிக்கும் வந்துபின்பு கோட்டை புகும்" (தனிப்பா.I. 4:3).* 5. நெல்; paddy. *"அன்பனுக்குலவாத கோட்டை யளித்தவாறு கிளத்துவாம்" (திருவிளை.உலவாக்கோ.1).* 6. புளி, இலை முதலியவற்றின் கட்டு; bundle, as of tamarind, plantain leaves etc. *இலைக்கோட்டை.* 7. ஏராளம்; plenty.

ம., தெ., க., து., வ. கோட்ட.

[கோட்டம் → கோட்டை.]

கோட்டை[3] *kōṭṭai*, பெ.(n.) 1. இஞ்சி; ginger plant *"சாலவிருட் சோதக மூலந்தந்த சடநாரங் கோட்டை" (தைலவ. தைல.85).* 2. காடு (பிங்.); jungle. 3. பரிவேடம் ; halo. *"சந்திரனோர் கோட்டை கட்டிக் கொண்டிருந்த கோலமென்ன" (கொண்டல் விடு.72).* 4. பூட்டின் ஒருறுப்பு (இ.வ.); ward of a lock. 5. வீட்டின் உள்ளிடம் (பிங்.); interior of a house. 6. கவை; the fork. *[கோடு = வளைவு. கோடு → கோட்டை]*

கோட்டைஏர் *kōṭṭai-ēr*, பெ.(n.) உழுவதற்கு முன்பும் பின்பும் கலப்பையைத் தலைமாற்றிக் கொண்டு செல்கை; to carry the plough on the shoulder upside down before and after ploughing to field.

[கோட்டை + ஏர்.]

கோட்டைக்கடன் *kōṭṭai-k-kaḍaṉ*, பெ.(n.) அறுப்புக் காலத்தில் நெற்கொடுத்துத் தீர்ப்பதாகச் சொல்லி வாங்குஞ் சிறுகடன் (இ.வ.); short loan of money returnable in kind after harvest.

[கோட்டை² + கடன்.]

கோட்டைக்காடு *kōṭṭai-k-kāḍu*, பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanjipuram Dt.

[கோட்டை¹ + காடு.]

கோட்டைக்கிழங்கு *kōṭṭai-k-kiḻaṅgu*, பெ.(n.) வாழைக் கிழங்கு; plantain root (சா.அக.).

மறுவ. தாயைக் கொல்லி.

[கோட்டை + கிழங்கு.]

கோட்டைக்குழி *kōṭṭai-k-kuḻi*, பெ.(n.) கோட்டையைச்சுற்றி அமைக்கப்படும் பள்ளம்; a moat, trench.

மறுவ. அகழி.

ம. கோட்டக்குழி.

[கோட்டை + குழி.]

கோட்டைகட்டு[1]**-தல்** *kōṭṭai-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. மதிலரண் எடுத்தல்; to construct a fort. 2. பெரும் பொருள் திரட்டுதல்; to accumulate a huge fortune. 3. பரிவேடம் கொள்ளுதல்; to form a halo, as the moon.

ம. கோட்ட கெட்டுக

[கோட்டை + கட்டு-.]

கோட்டைகட்டு[2]**-தல்** *kōṭṭai-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) நெல் மணிகளைக் கோட்டையாகக் கட்டி வைத்தல் (இ.வ.); to store paddy-seeds in bundles.

[கோட்டை + கட்டு-.]

கோட்டைகட்டு[3]**-தல்** *kōṭṭai-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) கோலி விளையாடுதல்; to play with glass marbles.

[கோட்டை + கட்டு.]

குறிப்பிட்ட தொலைவிலிருந்து ஒரு கோடிட்டு, அக் கோட்டினின்று பக்கக் கோடுகளும் இட்டு இதற்கிடையில் கோலிக் குண்டுகளை இடுதல். எவரது குண்டு அந்தக் கோட்டின் அருகில் நிற்கிறதோ அவர் வெற்றி பெற்றதாகக் கருதி விளையாடும் விளையாட்டு.

கோட்டைகட்டு[4] *kōṭṭai-kaṭṭu*, பெ. (n.). படைஅணி வகுப்பினொன்று; a kind of parade.

[கோட்டை + கட்டு.]

கோட்டைகட்டு[5]-தல் *kōṭṭai-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. மனத்தில் அளவு கடந்த ஆசைகளை வளர்த்துக் கொள்ளுதல், மனக்கோட்டை கட்டுதல்; to build castles in the air, to have vain imagines. *எப்படி யெல்லாமோ வாழவேண்டு மென்று கோட்டை கட்டியிருந்தேன்.* 2. பொய்க் கதை கட்டுதல்; to invent a fictitious story.

ம. கோட்டகெட்டுக.

[கோட்டை + கட்டு-.]

கோட்டைச்சுவர் *kōṭṭai-c-cuvar*, பெ.(n.) அரண்மனைச் சுவர்; fortress, castle.

[கோட்டை + சுவர்.]

கோட்டைத்தணக்கு *kōṭṭai-t-taṇakku*, பெ.(n.) மரவகைகளு ளொன்று; a kind of tree.

[கோட்டை + தணக்கு.]

கோட்டைப்படி *kōṭṭai-p-paḍi*, பெ. (n.) கோட்டை வாயில்; gate of a fort.

ம. கோட்டப்படி.

[கோட்டை + படி.]

கோட்டைப்பணம் *kōṭṭai-p-paṇam*, பெ. (n.) கோட்டையைப் பழுது பார்க்க விதிக்கும் வரி; a tax for the repair building of forts.

ம. கோட்டப்பணம்.

[கோட்டை + பணம்.]

கோட்டைப்பப்பளி *kōṭṭai-p-pap-paḷi*, பெ.(n.) புடைவை வகை (இ.வ.); a kind of saree.

[கோட்டை + (பூப்புள்ளி) பப்பளி.]

கோட்டைப்பவுன் *kōṭṭai-p-pavuṉ*, பெ.(n.) பொன் நாணய வகை; gold sovereign with the royal arms impressed on the reverse, dist. fr. *kudiraipavuṉ.*

[கோட்டை + பவுன்.]

கோட்டைப்பூண்டி *kōṭṭai-p-pūṇḍi*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கோட்டை + பூண்டி.]

கோட்டைப்பொறி *kōṭṭai-p-poṟi*, பெ.(n.) கோட்டையில் அமைக்கப்படும் பொறி; a machine erected in the fortress.

[கோட்டை + பொறி.]

கோட்டைப்போர் *kōṭṭai-p-pōr*, பெ.(n.) வைக்கோற் போர் (யாழ்.அக.); hay-stack.

[கோட்டை + போர்.]

கோட்டைபிடி-த்தல் *kōṭṭai-piḍi-*, 4 செ.கு.வி. (v.i.) அரிய செயலைச் செய்து முடித்தல்; to accomplish a great or arduous task, usually in contempt.

[கோட்டை + பிடி.]

கோட்டைமதில் *kōṭṭai-madil*, பெ. (n.) வலிய (அரண்)மனையைச் சுற்றியமையும் சுவர்; compound wall of a palace.

ம. கோட்டமதில்.

[கோட்டை + மதில்]

கோட்டைமேடு *kōṭṭai-mēḍu*, பெ.(n.) 1. அகழிக்குப் புறம்பேயுள்ள மண்மேடு (கட்டட. நாமா.7); glacis. 2. கொள்ளிடம் ஆறு கடலுடன் கலக்குமிடத்தில் ஏற்பட்ட தீவினில் கட்டப்பட்ட கோட்டையைச் சுற்றியுள்ள மேடு; the mound around the fort constructed in an Island formed by the lagoon of *Koḷḷiḍam.*

[கோட்டை + மேடு.]

கொள்ளிடம் ஆறு கடலில் கலக்குமிடத்தில் உருவான தீவில் பதினேழாம் நூற்றாண்டில் ஒரு கோட்டை கட்டப்பட்டது. இதனைத் தீவுக் கோட்டை என்று அழைத்தனர். அதைச் சுற்றி அகழியும் அமைக்கப்பட்டு முதலைகள் வளர்க்கப்பட்டன. இக் கோட்டையை ஆங்கிலேயர்கள் 1742-ல் கைப்பற்றினர். கடலரிப்பால் கோட்டை அழிந்துபட்டது. தற்போது அக் கோட்டை இருந்த மேடுமட்டுமே தெரிவதால் கோட்டைமேடு என வழங்கப்படுகிறது.

கோட்டையடி *kōṭṭai-y-aḍi-*, பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanniyākumari Dt.

[கோட்டை + அடி.]

கோட்டையடுப்பு *kōṭṭai-y-aḍuppu*, பெ.(n.) காடியடுப்பு (உ.வ.) ; oven-trench.

[கோட்டு →கோட்டை + அடுப்பு.]

கோட்டையம்மன் *kōṭṭai-y-ammaṉ*, பெ. (n.) கன்னியாகுமரிக் கோயிலில் அமைந்த தெய்வம்; one of the deities installed at the temple in Kanniyākumari.

ம. கோட்டயம்மன்.

[கோட்டை + அம்மன்.]

கோட்டையாண்டார் *kōṭṭai-y-āṇḍār,* பெ.(n.) கள்ளர்குடிப் பட்டப்பெயர்களுள் ஒன்று (கள்ளர் சரித்.பக்.98); a caste title of Kallars.

[கோட்டை + ஆண்டார்.]

கோட்டைவடம் *kōṭṭai-vaḍam,* பெ.(n.) கவலை (கமலை)யைப் பயன்படுத்தாத நேரங்களில் கோதாயம் போட்ட நிலையில் வடத்தைச் சுற்றி வைத்தல்; keeping the rope of 'watch-lift' in circular posture when it is in not use.

[கோட்டை + வடம்.]

கோட்டைவாயில் *kōṭṭai-vāyil,* பெ.(n.) கோட்டைக்குச் செல்லும் வாயில் ; entrance of a fort.

மறுவ. கோட்டைபடி.

ம. கோட்டவாதில்.

[கோட்டை + வாயில்.]

கோட்டைவிடு-தல் *kōṭṭai-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) தவற விடுதல்; to let slip away. பணத்தை இப்படிக் கோட்டை விட்டு விட்டாயே (உ.வ.).

[கோட்டை + விடு.]

கோட்டைவிதைப்பாடு *kōṭṭai-vidai-p-pāḍu,* பெ.(n.) ஒரு கோட்டை விதை விதைக்கக் கூடிய நிலவளவு (G. Tn. D. I, 238); land measure about 1.62 acres = the extent of land which requires one *kōṭṭai* of seed for sowing.

மறுவ. கோட்டைவிரைப்பாடு.

[கோட்டை + விதைப்பாடு.]

கோட்டைவிரைப்பாடு *kōṭṭai-virai-p-pāḍu,* பெ.(n.) ***கோட்டைவிதைப்பாடு*** பார்க்க; see *kōṭṭai vidai-p-pāḍu.*

[கோட்டை + விரைப்பாடு.]

கோட்டைவெளி *kōṭṭai-veḷi,* பெ.(n.) கோட்டைக்கு வெளியிலுள்ள இடம் (G.E.M.) ; esplanade.

[கோட்டை + வெளி.]

கோட்டைவேளாளர் *kōṭṭai-vēḷāḷar,* பெ.(n.) தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டத்தில் கோட்டைக்குள் வாழ்ந்துவரும் வேளாள வகையினர்; a sect of *Vēḷāḷas* living in a fort at *Srivaikuṇḍam* in *Tuttukuḍi* Dt.

[கோட்டை + வேளாளர்.]

கோட்படு[1]-த்தல் *kōṭpaḍu-,*18 செ.குன்றாவி. (v.t.) கோளாறடையச் செய்தல்; to cause derangement or disorder in the system (சா.அக.).

[குள் (வளைவு) → கோள் + படு.]

கோட்படு[2]-தல் *kōṭpaḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. பிடிக்கப்படுதல்; to be captured. *"புலிதானே புறத்ததாகக் குட்டி கோட்படா தென்ன" (கம்பரா.சூர்ப்ப.102).* 2. அறியப்படுதல்; to be realised. *"ஞானத்தாலுங் கோட்படாப் பதமே" (கம்பரா.அனுமப்.36).* 3. வலிமை கொள்ளுதல்; become powerful. *"பனிமதக் குவடு கோட்பட் டெழுந்துறப் பாய்ந்த வாற்றால்" (இரகு. திக்குவி.225).*

[கோள் + படு → கோட்படு.]

கோட்படுபதம் *kōṭ-paḍu-padam,* பெ.(n.) 1. மாட்டுக் குளம்பு (யாழ்.அக.); hoof. 2. குளம்பின் சுவடு; hoof mark.

[கோட்படுதல் = வளைதல். கோட்படு + (பாதம்) பதம்.]

கோட்பதம் *kōṭpadam,* பெ.(n.) ***கோட்படுபதம்*** பார்க்க ; see *kōṭ-paḍu-padam.*

[கோட்படுபதம் → கோட்டுபதம்.]

கோட்பலவு *kōṭ-palavu,* பெ.(n.) குலைகளை யுடைய பலாமரம்; jack tree having bunches of jack fruit.

[கோள் + பலவு.]

கோட்பறை *kōṭ-paṟai,* பெ.(n.) செய்திகளை நகரத்தார்க்குத் தெரிவிக்கும் பறை; proclamation-drum. *"கொள்ளென் குரலொடு **கோட்பறை** கொளீஇ" (பெருங்.வத்தவ.5:62).*

[கோள் + பறை.]

கோட்பாடு[1] *kōṭ-pāḍu,* பெ.(n.) 1. கொள்கை; doctrines. 2. நடத்தை (சிலப்பதி.16, அரும்.) ; conduct. 3. கடைப்பிடிப்பு; adherence, adhesion. 4. நிலைமை; state, condition. 5. கொண்டிருக்கும் தன்மை; state of having.

[கொள் → கோள் + பாடு →கோட்பாடு.]

ஒ.நோ. ஒருமைப்பாடு, பண்பாடு.

கோட்பாடு[2] *kōṭ-pāḍu,* பெ.(n.) கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்படும் கூற்று; tenet, conclusion, thesis.

[கொள் → கோள் + பாடு.]

கோட்பு *kōṭpu,* பெ.(n.) 1. கொள்ளுகை (யாழ்.அக.); taking. 2. வலிமை; strength. *"விதியின் கோட்பால் வீடினன்" (கம்பரா.உருக்காட்.81).*

[கொள் → கோள் + பு. ('பு' சொல்லாக்க ஈறு).]

கோட்புகு-தல் *kōṭ-pugu-,* 21 செ.கு.வி.(v.i.) மரம் முதலியன பயன் கொள்ளும் பருவத்ததாதல்; to mature, as trees. *'கோட்புகாத கன்னிக்கமுகு' (சீவக.169, உரை).*

[கொள் → கோள் + புகு-.]

கோட்புலி *kōṭ-puli,* பெ.(n.) கொண்டதை விடாத புலி; the tiger which will not let go what it has caught.

[கொள் → கோள் + புலி.]

கோட்புலி நாயனார் *kōṭ-puli-nāyaṉār,* பெ.(n.) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் (பெரியபு.); a canonized Šaiva Šaint, one of 63.

[கோள் + புலி + நாயன் + ஆர். கொண்டதை விடாதபுலி → கோட்புலி.]

கோடக்ககம் *kōḍakkagam,* பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Kaṉyākumari* Dt.

[கோடன் + அக்ககம் (அக்கசாலை).]

கோடக்கன் *kōḍakkaṉ,* பெ.(n.) கொட்டைப்பாக்கு; areca-nut (சா.அக.).

[கோடு + (அடைக்காய்) அடக்கன் → கோடடக்கன் → கோடக்கன் (கொ.வ.).]

கோடக்குடி *kōḍakkuḍi,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Rāmanādhapuram* Dt.

[கோடன் + குடி.]

கோடக்குத்துவா *kōḍa-k-kuttuvā,* பெ.(n.) 1. கடல் மீன்வகை; a herring, greenish, Pellona indica. 2. குத்துவா மீன்வகை; a herring, golden, glossed with purple, Pellona brachysoma.

[கோடு + அ + குத்துவாய். 'அ' ஆறன்உருபு.]

கோடகசாலை *kōḍagaśālai,* பெ.(n.) ஒருவகைப் பூடு; a very small plant (பதார்த்த.252).

ம. கோடாசாரி.

[கோடம் → கோடகம் + சாலை.]

கோடகபாசியம் *kōḍaga-pāśiyam,* பெ. (n.). வேம்பு; neem tree (சா.அக.).

[கோடம் → கோடகம் + பாசியம்.]

கோடகம்[1] *kōḍagam,* பெ.(n.) 1. முடியுறுப்பு ஐந்தனுள் ஒன்று (திவா.); ornamental curves of a crown, one of five *muḍi-y-uṟuppu.* 2. கோபுரமாகச் (சிகரமாகச்) செய்த முடிவகை; a kind of tapering crown. *"கோடக மணிந்த கோல முடியினாய்" (சீவக.2989).* 3. பல தெருக் கூடுமிடம் (பிங்.); junction where several streets meet crossing. 4. குண்டிகை (வின்.) ; ewer.

ம. கோடகம்.

Skt. kōtaka (curve, bend).

[கோடு + அகம்.]

கோடகம்[2] *kōḍagam,* பெ.(n.) 1. குதிரை; horse. *"பச்சைக் கோடகக் காற்றை" (கல்லா.17:48).* 2. **இரலை** (அசுவதி) பார்க்க (சங்.அக.); the first star.

Skt. ghōta; **Russ.** koni; **Mal.** kuda.

[கோடு + அகம்.]

கோடகம்[3] *kōḍagam,* பெ.(n.) புதுமை (பிங்.); newness, novelty.

ம. கோடகம்.

[குடு → கொடு → கோடு (உயரம், மேன்மை) → கோடகம்.]

கோடகம்[4] *kōḍagam,* பெ.(n.) 1. சுக்கு; dry ginger. 2. செங்கருங்காலி; black catechu. 3. கோழிக்கீரை; cock's greens. 4. இலந்தை போன்ற கொடி; a creeping plant resembling jujube (சா.அக.). 5. பீர்க்கு (நாநார்த்த); spurge gourd.

Skt. ghōṭaka.

[குள் (பள்ளம், குழி, ஒடுக்கு) → குடு → கோடு → கோடகம்.]

கோடகி *kōḍagi,* பெ.(n.) நீர்மேல் நெருப்புச்செடி; water - fire plant.

[கோடங்கம் → கோடகி.]

இது இசிவு போன்ற நோய்களைப் போக்கும் (சா.அக.).

கோடங்கம் *kōḍaṅgam,* பெ.(n.) உடுக்கை மரம் அல்லது கருங்காலி; black wood-acacia catechu (சா.அக.).

மறுவ. கோடங்கி.

[கோடு + அங்கம்.]

கோடங்கி *kōḍaṅgi,* பெ.(n.) 1. உடுக்கை (தஞ்சை.); a small hand drum. 2. உடுக்கடித்துக் குறி சொல்வோன் (இ.வ.) ; soothsayer who uses the *uḍukku* drum. 3. ஒரு மரம் ; a tree.

கோடாங்கி

ம.,க. கோடங்கி; **தெ.** கோணங்கி; **து.** கோடங்கி, கோடங்யெ.

[கொடு → கோடு → கோடங்கி.]

கோடங்க மரத்தால் செய்த உடுக்கை அதனை யடிப்பவனையும் குறித்தது.

கோடங்கி பார்–த்தல் *kōḍaṅgi-pār-,* 4 செ.கு.வி. (v.i.) கோடங்கியிடம் குறி கேட்டல் (வின்.); to consult a soothsayer.

[கோடங்கி + பார்.]

கோடங்கிழங்கு *kōḍaṅ-kiḻaṅgu,* பெ.(n.) சிற்றரத்தை; lesser galangal.

[கோடு - வளைதல். கோடு + அம் – கோடம் + கிழங்கு.]

கோடங்குடி *kōḍaṅ-kuḍi,* பெ.(n.) நாகப்பட்டி னம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Nāgappaṭṭiṉam* Dt.

[கோடல் + குடி – கோடல்குடி → கோடங்குடி.]

கோடணை[1] *kōḍaṇai,* பெ.(n.) 1. சங்கின் ஒலி (திவா.); sound. 2. முழக்கம்; loud noise. *"கோடணை போக்கி" (பெருங்.உஞ்சைக்.49:85).* 3. யாழ் மீட்டல்; playing on the lute. *"குழலவன் கோடணை யறைவாம்" (சீவக.603).* 4. இசைக் கருவி; musical instrument. *"பாடிமிழ் பனித்துறைக் கோடணை யரவமும்" (பெருங்.உஞ்சைக்.41:3).* 5. ஒப்பனை (அலங்காரம்) (மணிமே.5: 94,அரும்.); decoration.

[த. கோடணை > skt. gōshana.]

[கோடு + அணை. கோடு - சங்கு.]

சங்கின் முழக்கம் கோடணை. இது skt. gōshana என வடமொழியில் திரிந்தது.

கோடணை[2] *kōḍaṇai,* பெ.(n.) கொடுமை (பிங்.); cruelty.

[கொடு → கோடு → கோடணை.]

கோடணைபோக்கு–தல் *kōḍaṇai-pōkku-,* 5 செ.கு.வி.(v.i.) பெரு முழக்கம் உண்டாகச் செய்தல்; to cause loud noise. *"கோடணை போக்கியதிர் குரன்முரசு" (பெருங்.உஞ்சைக்.49:85).*

*[கோடணை + போக்கு. **கோடணை**[1] பார்க்க; see kōḍaṇai[1].]*

கோடதகம் *kōḍadagam,* பெ.(n.) சுக்கு (சீவரட்.); dried ginger.

மறுவ. கோடதரம்.

[குள் (குழி, ஒடுக்கு) → குடு → குடுது → கோடது → கோடதகம்]

கோடதாரம் *kōḍadāram,* பெ.(n.) சுக்குநாறிப் புல்; ginger grass-paniculm repens (சா.அக.).

[கோடம் + தாரம்.]

கோடநோய் *kōḍa-nōy,* பெ.(n.) தேமல்; a skin disease.

[கோடு (சுண்ணாம்பு, வெண்மை) – கோட + நோய்.]

கோடபதி *kōḍa-padi,* பெ.(n.) 1. **கோடவதி** பார்க்க; see *kōḍa-vati.* 2. உதயணனுடைய யாழ்; the lute belonging to *Udayaṉaṉ.* *"கூட்டமை வனப்பிற் கோட பதிக்குரல்" (பெருங்.வத்தவ.3:123).*

[கோடு + பதி.]

கோடம்[1] *kōḍam,* பெ.(n.) செங்கருங்காலி (மலை.); red catechu.

ம. கோடம்.

[கோடு → கோடம்.]

கோடம்[2] *kōḍam,* பெ.(n.) 1. பேரொலி; loud noise. *"இங்கய லெழுந்த கோடம் யாது" (பாரத. பதின்மூன்.155).* 2. வெண்கலம் (சங்.அக.); bell metal.

[கோடு (சங்கு) → கோடம்.]

கோடம்[3] *kōḍam,* பெ.(n.) எல்லை (சது.); border.

[கோடி → கோடம்.]

கோடம்[4] *kōḍam,* பெ.(n.) முடியுறுப்பு ஐந்தனுள் ஒன்று; ornamental curves of a crown, one of five *muḍi-y-uṟuppu.* *"கோடங்களிலும்......... கோத்த முத்து" (S.I.I.II.87).*

[கோடகம்[1] → கோடம்[4].]

கோடம்[5] *kōḍam,* பெ.(n.) 1. சங்கு செய்நஞ்சு; a kind of white arsenic. 2. மாமரம்; mango tree. 3. வேம்பு; neem tree. 4. தவளை; frog. 5. கோசம்; penis. 6. நெல்லி; Indian gooseberry. 7. உடம் பெங்கும் தினவை உண்டாக்கும் ஒருவகைத் தேமல்; a disease of the skin attended with itching and exfoliation of the outer-skin (epidermis) (சா.அக.).

[கோடு = சங்கு, மரக்கிளை. கோடு + அம் = கோடம்.]

கோடம்[6] *kōḍam,* பெ.(n.) ஒரு கால் முடம் (நாநார்த்த.) ; person lame of one leg.

[கொடு → கோடு → கோடம்.]

கோடமாதீதம் *kōḍamādīdam,* பெ.(n.) மதகரி வேம்பு; javanese cedar of sandal neem-Cedrela toona (சா.அக.).

[கோடு → கோடம் + ஆதிதம்.]

கோடர் *kōḍar,* பெ.(n.) மலை உச்சி (சிகரம்); peak. *"கோடரி னீண்மதிற் கோட்டாறு" (இறை.23, உதா.199).*

[கோடு + அர்.]

கோடரகம் *kōḍaragam,* பெ.(n.) சதுரக்கள்ளி; square spurge uphorbia an tiquorum (சா.அக).

[கோடு - பக்கம். கோடு → கோடர் + அகம்.]

கோடரம்[1] *kōḍaram,* பெ.(n.) 1. எட்டி; a poisonous and very bitter tree. 2. உணர்ச்சி; sensation. 3. அழிஞ்சில்; sage leaved alangium. 4. சிவதை; Indian rhubarb. 5. வெண்சிவதை; white variety of rhubarbe. 6. மயிர்ச் சாந்து; an unguent used to perfume the hair (சா.அக).

[கோடு →கோடரம்.]

கோடரம்[2] *kōḍaram,* பெ.(n.) 1. மரப்பொந்து; hollow of a tree. *"அத்தருவின் கோடரத்து" (பாரத. நாடு.10).* 2. மரக்கிளை (பிங்.); branch of a tree. 3. மரம் (அக.நி.) ; tree. 4. சோலை (பிங்.); grove. 5. தேரின் மொட்டு (பிங்.) ; pinnacle of a car.

க. கோடக.

[கோடு → கோடரம்]

கோடரம்[3] *kōḍaram,* பெ.(n.) 1. குதிரை; horse. 2. குரங்கு; monkey. *"கொய்தளிர் கோதும் வாழ்க்கைக் கோடரத் துருவு கொண்டு" (கம்பரா.அட்சகுமா.4.).*

[கோடு → கோடரம்.]

கோடரவம் *kōḍaravam,* பெ.(n.) துன்பம் (இ.வ.); distress. *"பணிந்தெழுவார் தம்மனத்திற் கோடரவந் தீர்க்குமவன்" (தேவா.821:2).*

[கோடு + அரவம்.]

கோடரவாலி *kōḍara-vāli,* பெ.(n.) வேப்பமரம்; margosa tree (சா.அக).

[கோடரம் + ஆலி.]

கோடரி[1] *kōḍari,* பெ.(n.) மரத்தை பிளக்கும் கருவிவகைகளிளொன்று (பிங்.); a kind of axe, wood cutter.



கோடரி

மறுவ. கோடாலி.

ம. கோடாலி; **க.** கொடலி, கொட்லி; கொட்டலி; **தெ.** கொடரி, கொலா, கொல்லி; **மால.** கொதலி; பட. கொடலி; **கூய்.** கொட்டேலி; **Skt.** kuthāra

[கோடு →கோடரி. கோடு = மரக்கிளை. அரிதல் = அறுத்தல், வெட்டுதல். கோடரி = மரக்கிளையை வெட்டும் அல்லது பிளக்குங்கருவி.]

கோடரி வகை: 1. சிறுகாம்புக் கோடரி 2. பெருங்காம்புக் கோடரி 3. அங்குசக் கோடரி 4. உன்மடிப் பெருங்கோடரி 5. தலைக்கனக் கோடரி 6. உன்மடிக் கூர்க் கோடரி 7. இருதலைக் கோடரி.

கோடரி[2] *kōḍari,* பெ.(n.) கொற்றவை, காளி; Goddess *kāli.*

[கோட்டை + மாரி - கோட்டைமாரி → கோடரி (மரூஉ).]

கோடரி வகைகள் (கோடாலி வகைகள்)

கோடரிக்கரந்தை *kōḍari-k-karandai,* பெ.(n.) **கோடாலிக்கரந்தை** பார்க்க; see *kōḍāli-k-karandai.*

[கோடரி + கரந்தை.]

கோடரிக்காம்பு *kōḍari-k-kāmbu,* பெ.(n.) 1. கோடரியின் மரப்பிடி; the wooden handle of an axe. 2. தன் குலத்தை அழிப்பவன்; one who destroys one's own family. இந்தப் பையன் அவன் குலத்தையே அழிக்கவந்த கோடரிக்காம்பு (உ.வ.).

மறுவ: கோடாலிக்காம்பு.

ம. கோடாலிக்காம்பு; பட. கொடலிகாவு.

[கோடரி + காம்பு]

கோடரிக்கொண்டை *kōḍari-k-koṇḍai,* பெ.(n.) காம்பு கழன்ற கோடரியை நினைவூட்டும் உருவம் கொண்ட கொண்டை; a knot of hair dressing resembling a axe without handle. கோடாலிக் கொண்டைக்காரி (நெல்லை.).

மறுவ: கோடாலி.

[கோடரி + கொண்டை.]

கோடரோகம் *kōḍarōgam,* பெ.(n.) **கோடநோய்** பார்க்க; *see kōḍanōy.*

[கோடு + ரோகம்.]

கோடல்[1] *kōḍal,* பெ.(n.) 1. கொள்ளுகை; taking. *"நானம் பகர்ந்திடக் கோடல் செய்வார்" (நைடத. நகரப்.31).* 2. பாடங்கேட்கை; taking lessons from a teacher. *"கோடன் மரபே கூறுங் காலை" (நன்.40).* 3. மனத்துக் கொள்ளுகை; considering. *"கொல்லு மாற்றல ருளரெனக் கோடலுங் கொண்டாய்" (கம்பரா.உயுத்.மந்திரப்.104).* 4. மருமகள்; daughter-in-law.

தெ. கோடாலு.

[கொள் → கோடல்.]

கோடல்[2] *kōḍal,* பெ.(n.) 1. வளைவு (உரி.நி.); curving. 2.முறிக்கை (திவா.); breaking.

ம. கோடல்.

[கோடு → கோடல்.]

கோடல்[3] *kōḍal,* பெ.(n.) 1. வெண்காந்தள்; white species of Malabar glory-lily. *"கோடன் முகையோடு" (பு.வெ.8:16).* 2. வெண்கிடை (பிங்.); sola pith.

[கோடு (வெண்மை) → கோடல்]

கோடல்[4] *kōḍal,* பெ.(n.) கொம்பு இல்லாத கொடி; a creeper without a branch.

[கோடு + அல்]

கோடல்வாவி *kōḍal-vāvi,* பெ.(n.) திண்டுக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Thiṇḍukkal* Dt.

[கோடல் + வாவி.]

கோடலம் *kōḍalam,* பெ.(n.) பிறைபோல் வளைந்த மாலைவகை; a kind of garland in the shape of the crescent moon.

[கோடு → கோடலம்]

கோடலி *kōḍali,* பெ.(n.) 1. இலந்தை; jujube. 2. காட்டுக்கொடி; wild creeper. 3. கோடாலி மரம்; axe tree. 4. தெருணை; Mysore plum (சா.அக).

[குடலி → கூடலி → கோடலி.]

கோடவதி *kōḍavadi,* பெ.(n.) வீணை (திவா.); lute.

[கோடு → கோடவி → கோடவதி.]

விரவுப்பெயர் போன்று வீணையைப் பெண்பாலாக்கிக் கூறிய கூற்று.

கோடவி *kōḍavi,* பெ.(n.) காளி (துர்க்கை) (யாழ்.அக.); Durga.

[கொற்றவை → கோட்டவி → கோடவி.]

கோடற்பூசினி *kōḍaṟ-pūśiṉi,* பெ.(n.) **கோடைப் பூசனி** பார்க்க; see *koḍai-p-pūśaṉi* (சா.அக).

[கோடை + பூசனி – கோடற்பூசனி (கொ.வ.).]

கோடன்[1] *kōḍaṉ,* பெ.(n.) குயக்கோடன் என்னும் குயவன் ஒருவனின் பெயர்; name of a potter.

[கோடு → கோடன்.]

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் பேராசிரியர், மந்திரம் என்னும் சொல்லுக்குப் பொருள் கூறுங்கால் தமிழை இகழ்ந்த கோடன் என்னும் குயவன் நக்கீரரால் சவிக்கப்பட்டு இறந்தமையைச் சுட்டிக் காட்டுகிறார்.

முரணில் பொதியின் முதற் புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி – யரணியல்
ஆனந்த வேட்கையான் வேட்கோ குயக்கோடன்
ஆனந்தஞ் சேர்க சுவா.

கோடன்[2] *kōḍaṉ,* பெ.(n.) கால்நொண்டி; a lame man (சா.அக.).

[கொடு → கோடு → கோடன்.]

கோடன்சம்பா *kōḍaṉ-šambā*, பெ.(n.) வேனிற் காலத்தில் விதைக்கப் பெற்று ஐந்து மாதங்களிற் பயிராகும் சம்பாநெல் வகை (இ.வ.); *šambā* paddy sown in hot season and maturing in five months.

[கோடை → கோடன் + சம்பா.]

கோடன்நாடு *kōḍaṉ-nāḍu*, பெ.(n.) நீலகிரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Nilagiri Dt.

[கோடன் + நாடு.]

கோடா *kōḍā*, பெ.(n.) 1. சாராய வண்டல் (யாழ்ப்.); sediments of liquor. 2. பட்டைச் சாராயம்; arrack derived from bark. 3. அரக்குமண்டி; refuse of lac (சா.அக.).

[கூடு → கோடு → கோடம் → கோடா (கொ.வ.).]

கோடாக்கிழங்கு *kōḍā-k-kiḻaṅgu*, பெ.(n.) கோணக்கிழங்கு; a fragrant tuber.

[கோடாணி + கிழங்கு – கோடாகிழங்கு.]

கோடாக்குளிகை *kōḍā-k-kuḷigai*, பெ.(n.) சாராய வண்டலைக் கொண்டு செய்யும் மருந்து உருண்டை; a medicinal pill made of dregs of spirituos liquors as arrack as a chief ingredient.

[கோடா + குளிகை.]

கோடாகோடி *kōḍā-kōḍi*, பெ.(n.) 1. ***கோடானு கோடி*** பார்க்க; see *kōḍāṉu-kōḍi*. *"கொம்மை பெறுங் கோடா கோடி" (அருட்பா.i.நெஞ்சறி.85).* 2. அளவின்மை; infinite. 3. தாமரை; lotus.

ம. கோடாகோடி.

[கோடி + கோடி – கோடிகோடி → கோடாகோடி.]

கோடாங்கல் *kōḍāṅgal*, பெ.(n.) மலை உச்சிகளில் கூர்மையாகவுள்ள கற்கள்; stones of nail like projections on the summit of rocks; stones like a pyramid in shape (சா.அக.).

[கோடு + (அம்) ஆம் + கல்.]

கோடாங்கி[1] *kōḍāṅgi*, பெ.(n.)1. ***கோடங்கி*** பார்க்க; see *kōḍaṅgi*. 2. வரிக்கூத்து வகை; a masquerade dance.

ம.,க.கோடாங்கி; **தெ.** கோணங்கி; **து.** கோடங்கி, கோடங்கியெ.

[கொடு → கோடு → கோடங்கி → கோடாங்கி.]

கோடாங்கி[2] *kōḍāṅgi*, பெ.(n.) மகளிர் வரிப் புடைவை வகை (வின்.); women's striped sari.

ம. கோடாங்கி; படை. கோடிங்கெ (முரட்டுப் போர்வை).

[கோடு + அங்கி – கோடங்கி → கோடாங்கி.]

கோடாங்கிநாயக்கன்பட்டி *kōḍāṅgi-nāyakkaṉ-paṭṭi*, பெ.(n.) திண்டுக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Thinḍukkal* Dt.

[கோடாங்கி + நாயக்கன் + பட்டி.]

கோடாங்கிபட்டி *kōḍāṅgipaṭṭi*, பெ.(n.) திண்டுக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Thinḍukkal* Dt.

[கோடாங்கி + பட்டி.]

கோடாங்கிபாளையம் *kōḍāṅgi-pāḷaiyam*, பெ.(n.) கோவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kovai Dt.

[கோடாங்கி + பாளையம்.]

கோடாசரி *kōḍāšāri*, பெ.(n.) கோடகசாலை என்னும் பூண்டு வகை; coromandel gendarussa.

மறுவ. கோடகசாலை, கோடாசுழி, கோடாசூரி.

ம. கோடாசாரி.

[கோடகசாலை → கோடாசரி.]

கோடாசலம் *kōḍāšalam*, பெ.(n.) வயிற்றுப் போக்கைக் கட்டும் மருந்துவகை (பதார்த்த.1215); a medicinal pill for arresting diarrhoea.

மறுவ: கோடாசலக் குளிகை, கோடாசுழி.

ம. கோடாசாரி.

கோடாசுழி *kōḍāšuḻi*, பெ.(n.) வயிற்றுப்போக்கு மருந்து; a dose of physic (சா.அக.).

[குடல் → குடலம் → கோடலம் → கோடா + சுழி.]

கோடாசுழிமாத்திரை *kōḍāšuḻi-māttirai*, பெ.(n.) ***கோடாசலக்குளிகை*** பார்க்க; see *kōḍāšala-k-kuḷigai*.

[கோடாசுழி + மாத்திரை.]

கோடாசூரி *kōḍāšūri*, பெ.(n.) கோடகசாலை; Coromandal gendarusa.

[கோடகசாலை → கோடாசூரி.]

கோடாசொரிச் செய்நஞ்சு *kōḍāšori-c-ceynañju*, பெ.(n.) வைப்பு நஞ்சுவகை (வின்.); a prepared arsenic.

மறுவ. கோடாசொரி.

[கோடகசாலை → கோடகசொரி + செய்நஞ்சு.]

கோடாஞ்சி *kōḍāñji,* பெ.(n.) நெடுநாரைப்பூடு; fragrant cherry nut meg (சா.அக.).

ம. கோடாஞ்சி.

[கோடு → கோடாஞ்சி.]

சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலி இச்சொல்லுக்குப் பெரிய மரவகை எனப்பொருள் குறித்துள்ளது.

கோடாந்தூர் *kōḍāndūr,* பெ.(n.) கரூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Karūr* Dt.

[கோடன் + (அழுந்தூர்) ஆந்தூர்.]

கோடாந்தை *kōḍāndai,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Rāmanāda puram* Dt.

[கோடன் + ஆந்தை.]

கோடாநீர் *kōḍānīr,* பெ.(n.) தடிப்பில்லாத நீர்; fluid not thick (சா.அக.).

[கோடு → கோடா + நீர்.]

கோடாமணி *kōḍāmaṇi,* பெ.(n.) மணிகள் போன்று தேரின் விளிம்புகளில் செதுக்கப்படும் உருவம்; a figure engraved on the edges of the chariot as a bead of coral.

[கோடா + மணி.]

கோடாமை *kōḍāmai,* பெ.(n.) 1. மனக்கோட்டம் கொள்ளாமை; absence of envy or dislike. 2. கோணாமை; poise. 3. திரியாமை; of stable mind. 4. சலியாமை; untirableness. 5. ஒருதலைக் கணில்லாமை; fair and neutral outlook. *"கோடாமை சான்றோர்க் கணி" (குறள். 118).*

[கோடு + ஆ + மை. 'ஆ' எ.ம.இ.நிலை.]

கோடாய் *kōḍāy,* பெ.(n.) செவிலித்தாய்; foster mother. *"கோடாய் மடந்தையை நாட" (திருக்கோ. 235, கொளு).*

[கொள் → கோள் + தாய்.]

கோடாரி *kōḍāri,* பெ.(n.) ***கோடரி*** பார்க்க; see *kōḍari* (சங்.அக.).

[கோடரி → கோடாரி.]

கோடாரிக்காம்பு *kōḍāri-k-kāmbu,* பெ.(n.) ***கோடரிக்காம்பு*** பார்க்க; see *kōḍari-k-kāmbu.*

ம. கோடாலிக்காம்பு, கோடாலிக்கை.

[கோடு + அரி – கோடரி + காம்பு – கோடரிக்காம்பு → கோடாரிக்காம்பு]

கோடாரேந்தல் *kōḍārēndal,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Rāmanāda puram* Dt.

[கோடலம் → கோடாலம் + ஏந்தல்–கோடாலஏந்தல் →கோடாரேந்தல். ஏந்தல் = ஏரி.]

கோடாலம் *kōḍālam,* பெ.(n.) பிறைபோல் வளைந்த மாலைவகை; crescent shaped necklace, as of pearls. *"குளிர்முத்தின் கோடாலமும்" (திவ். பெரியாழ். 3.3:1).*

[கோடு → கோடாலம்.]

கோடாலி[1] *kōḍāli,* பெ.(n.) ***கோடரி*** பார்க்க; see *kōḍari.*

மறுவ. கோடரி.

ம. கோடாலி; க. கொடலி, கொட்லி; தெ. கொட்டலி; கொலா. கொல்லி; மால. கொதலி; கூய். கொட்டேலி; பட. கொடலி.

[கோடு + அரி – கோடரி → கோடாலி.]

கோடாலி[2] *kōḍāli,* பெ.(n.) சுரக்கோடாலி; a pill (சா.அக.).

[கோடரி → கோடாலி.]

[இது அகத்திய வாகடத்திற் சொல்லியுள்ள ஒரு மருந்து. இது எல்லாவகைச் சுரத்தையும் போக்கும்.]

கோடாலிக்கரந்தை *kōḍāli-k-karandai,* பெ.(n.) ***கொட்டைக்கரந்தை*** பார்க்க; see *koṭṭai-k-karandai.*

[கோடாலி + கரந்தை.]

கோடாலிக்காம்பு *kōḍāli-k-kāmbu,* பெ.(n.) ***கோடரிக்காம்பு*** பார்க்க; see *kōḍari-k-kāmbu. குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக் காம்பே.*

ம. கோடாலிக்காம்பு; பட. கொடலிகாவு.

[கோடரிக்காம்பு → கோடாலிக்காம்பு.]

கோடாலிக்குடோரி *kōḍāli-k-kuḍōri,* பெ.(n.) 1. இசிவு (சன்னி) முதலிய நோய்களைக் குணப்படுத்துவதற்குக் கீறியிடும் ஒரு மருந்துச் சரக்கு; a medicinal preparation applied to wounds in scarification as a cure for apoplexy. 2. இதள் மாற்றிய (இராச வாத) முறைப்படி மாழைகளை உருக்க வேண்டிப் பயன்படும் ஒரு மருந்து; in al-

chemy a chemical substance used for melting a metal (சா.அக.).

[கோடாலி + குடோரி : கீள் → கீறுறு (கீறு) → குடுறு → குடோரி]

கோடாலிக்கொண்டை *kōḍāli-k-koṇḍai,* பெ.(n.) ***கோடாலிமுடிச்சு*** பார்க்க; see *kōḍāli-muḍiccu.*



கோடாலிக்கொண்டை

[கோடாலி + கொண்டை.]

கோடாலிமரம் *kōḍāli-maram,* பெ.(n.) சரளமரம், அரக்க மரம்; potato plum of Mysore (சா.அக.).

[கோடரி → கோடாலி + மரம்.]

கோடாலிமுடிச்சு *kōḍāli-muḍiccu,* பெ.(n.) கூந்தலை அள்ளிச் சுருட்டிப் போட்டுக்கொள்ளும் முடிச்சு (தஞ்சை.); a casual way of knotting the hair.

மறுவ. கோடாலிக் கொண்டை.

[கோடரி → கோடாலி + முடிச்சு.]

கோடாலைக்கல் *kōḍālai-k-kal,* பெ.(n.) குடாலைக்கல் என வழங்கும் ஒருவகை மருந்துச் சரக்கு ; kind of loadstone probably manganese, one of the 126 kinds of natural substances (சா.அக.).

[கோடாலை + கல்.]

கோடாலைச்சக்கரம் *kōḍālai-c-cakkaram,* பெ.(n.) ***கோடாலைக்கல்*** பார்க்க; see *kōḍālai-k-kal* (சா.அக.).

[கோடாலை + சக்கரம்.]

கோடாவடி-த்தல் *kōḍā-v-aḍi,* 4 செ.குன்றாவி. (v.t.) பட்டைச் சாராய வண்டலை நீரிலிட்டுக் கரைத்தல் (வின்.); to dissolve the dregs of an inferior kind of arrack in water (W.).

[கோடா + அடி.]

கோடான்[1] *kōḍāṉ,* பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Śivagaṅgai Dt.

[கோடன் → கோடான்.]

கோடான்[2] *kōḍāṉ,* பெ.(n.) 1. புன்செய்ப் பொழியிலுள்ள ஒருவகைக் கிழங்குச் செடி; a kind of tuber plant. 2. கொத்துமல்லியில் தோன்றும் ஒருவகை நோய்; a kind of disease in coriander plant.

[கோடன் → கோடான்.]

கோடான்குறிச்சி *kōḍāṉ-kuṟicci,* பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Śivagaṅgai Dt.

[கோடன் → கோடான் + குறிச்சி.]

கோடானி *kōḍāṉi,* பெ.(n.) நறுமணமிக்க வேர்; fragrant coray root (சா.அக.).

[கோடு → கோடானி.]

கோடானுகோடி *kōḍāṉu-kōḍi,* பெ.(n.) பலகோடி; immense number, as a hundred billions. *"கோடானு கோடி கொடுப்பினும்" (தமிழ்நா.40).*

ம. கோடானுகோடி; கோடார்கோடி.

[கோடி + ஆன + கோடி – கோடானகோடி → கோடானுகோடி.]

கோடி[1] *kōḍi,* பெ.(n.) 1. ஆடை; cloth (பிங்.). 2. புதிய ஆடை; newly purchased cloth. *"மந்திரக் கோடி யுடுத்து" (திவ். நாய்ச்.6:3).* 3. புதுமை (சூடா.); newness.

ம. கோடி. து. கோடி (சாயம் வெளுக்காத துணி).

[கோடு → கோடி. விளிம்பில் கரை (கோடு) கட்டிய புத்தாடை.]

கோடி[2] *kōḍi,* பெ.(n.) இளமை; youthful. அவளைக் கோடியில் பார்த்தேன் மிக அழகாக இருந்தாள் (கொங்.வ).

[குழ → குட → குடு → கொடு → கோடு → கோடி.]

கோடி[3] *kōḍi,* பெ.(n.) 1.வளைவு; bend. *"முளைத் திங்கட் கோடியென" (திருவாரூ. 134).* 2. முடிமாலை; garland worn on head.

[கோடு (வளைவு) → கோடி]

கோடி[4] *kōḍi,* பெ.(n.) 1. நூறு நூறாயிரம்; crore. *"நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"*

(திருவாச.3:4). 2. எண்ணின் மிகுதி; large number. 3. தொகுதி; multitude, as of living beings. *"சீவகோடி" (கைவல். தத். 33).* 4. 64 அக்குரோணி கொண்ட பெரும்படை (பிங்.); a vast army consisting of 64 *akkurōṇi.* 5. இருபது; a score, as in counting precious stones, silks, etc. *கோடிப் பட்டின் (சீவக. 2331, உரை).* 6. வரிசை; row. *'ஆயுத கோடியிலும், ஆபரண கோடியிலும்' (ஈடு.).*

ம., க., தெ., பட., **கோண்.** கோடி, **து.** கோடி (கற்களையும் மரங்களையும் அளக்கும் ஓர் அளவு).

கோடி[5] *kōḍi,* பெ.(n.) 1. நுனி; tip, end. *"கூவலொன் றகழ்ந்தான் வில்லின் கோடியால்" (சேதுபு. இராமனரு. 95).* 2. கடலுட் செல்லுந்தரை முனை; capecalin. *கோடிக்கரை.* 3. மூலை;nook. 4. வீட்டின் புறக்கோடி (வின்.); backyard of a house. 5. விளிம்பு; edge, as of verandah; bead, as in carpentry. 6. படை (சேனை)யின் பிற்கூழை; rear of an army. *உரமுதற் கோடி யீறாயின" (குறள், 767, உரை).* 7. எல்லை; limit. *"அறிவின் கோடியார்" (கம்பரா. ஆறுசெல்.13).* 8. கலிங்கு; weir of a tank, outlet for the surplus water. *"ஏரிகோடி யோடுகிறது" (C.G.).* 9. குறிப்பு; slight hint. *கோடிகண்டால் விடுவாரோ (வின்.).* 10. சாத்திரச் சொற்போரில் மேன்மேற் கூறும் கருத்து; argument raised in a debate. 11. வயிரக் குணங்களுள் ஒன்று (சிலப். 74, 180, உரை.); a quality in diamond.

ம., க., தெ., து., பட., **கோண்.**கோடி.

[கோள் → கோடு (வளைவு, விளிம்பு, நுனி, முகடு, உயர்வு, பெருக்கம், மிகுதி) → கோடி.]

கோடி[6]**-த்தல்** *kōḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. அணிசெய்தல் (அலங்கரித்தல்); to adorn, decorate. *"கோடித் தன்ன கோடுசால் வையம்" (பெருங். இலாவாண. 8:185).* 2. அமைத்தல்; to make. "கடிமண்டபமுன் கோடிப்ப" (காஞ்சிப்பு. திருமண.4). 3. மனக் கோட்டை கட்டுதல்; to imagine, picture in mind. *"கண்ணாலங் கோடித்தது" (திவ். நாய்ச்.10:9).* 4. வேண்டுதல் (யாழ். அக.); to beseech, supplicate. 5. ஒலித்தல்; to sound.

[கொள் → கோள் → கோடு → கோடி.]

கோடிக்கரை[1] *kōḍi-k-karai,* பெ.(n.) நாகை மாவட்டம் திருமறைக்காட்டருகில் அமைந்த ஓர் ஊர்; a village situated near *Tirumaraikkāḍu* in *Nāgappaṭṭiṉam* Dt.

[கோடி + கரை.]

இதன் இலக்கியப் பெயர் தொன்முதுகுடி என்பதாகும். கோடியில் அமைந்ததாலும், கடல், ஏரி, ஆறு, குளம் இவற்றின் கரைகளில் அமைந்த ஊர்கள் போலக் கரை என்னும் பின்னொட்டு அடைவதாலும் இப்பெயர் வழங்கப்படுகிறது.

கோடிக்கரை[2] *kōḍi-k-karai,* பெ.(n.) தனுக்கோடி முதலிய தூய நீர்த்துறை; sacred sea-bathing ghats at *Kōḍikkari, Dhaṉuskōḍi,* etc.

[கோடி + கரை.]

கோடிக்கரைச்செறிவு *kōḍi-k-karai-c-ceṟivu,* பெ.(n.) குமரிமுனை புகையிலை; tobacco of Cape Comerin (சா.அக.).

[கோடிக்கரை + செறிவு.]

கோடிக்கரையான்தோணி *kōḍi-k-karaiyāṉ-tōṇi,* பெ.(n.) கோடிக்கரையிலுள்ள தோணி, அதாவது கள்ளத்தோணி; vessel at *kōḍi-k- karai.* Piratical vessel.

[கோடிக்கரை + ஆன் + தோணி.]

கோடிக்கல் *kōḍi-k-kal,* பெ.(n.) கட்டடத்தின் மூலைக்கல் (வின்.); corner stone.

ம. கோடிக்கல்.

[கோடி + கல்.]

கோடிக்காரன்[1] *kōḍi-k-kāraṉ,* பெ.(n.) கோயிற் றிருமேனிகள் ஊர்தியில் உலாவரும் போது தூக்க வருபவன்; one who carries temple idols on mounts.

மறுவ. திருவடித்தாங்கி.

[கோடி + காரன். கோடுதல் = கொள்ளுதல், சுமத்தல்.]

கோடிக்காரன்[2] *kōḍikāraṉ,* பெ.(n.) கொடுக்கல் வாங்கல் செய்யும் மார்வாரி வணிகன்; Marvari, money lender.

[கோடி + காரன்.]

கோடிக்கிளை *kōḍi-k-kiḷai,* பெ.(n.) நகுதாளியிலை; common cherry nutmeg (சா.அக.).

[கோடி + கிளை.]

கோடிக்குத்தல் *kōḍi-k-kuttal,* பெ.(n.) 1. தெருப் பாய்ச்சல்; situation of a house at the street-end, facing streetward, considered inauspicious. 2. தெருக்கோடி; corner of a street. 3. சிற்றூரின் கடைசிப்பகுதியில் அமைந்த வீடு; a house situated at the end of the small village.

[கோடி + குத்தல்.]

கோடிகச்சு *kōḍikaccu,* பெ.(n.) முகமதியரின் (இசுலாத்தின்) ஐந்து கடமைகளில் ஒன்றான மக்காவிற்குப் புனிதப் பயணம் (யாத்திரை) மேற்கொள்ளுதல்; Haj Pilgarimage. *"கோடிகச்சு செய்த பலனுமடைவா ராகவும்" (சேதுபதி மன்னர் செப்பேடுகள் எ.55-65, பக்.476).*

[கோடி + கச்சு (ஹஜ் → கச்சு.).]

கோடிகம்[1] *kōḍigam,* பெ.(n). 1. பூந்தட்டு; salver or tray for flowers. *"பூ நிறைசெய்த... கோடிகம்" (சீவக. 2707).* 2. குண்டிகை (பிங்.); ewer pot with a spout. 3. அணிகலச்செப்பு (பிங்.); jewel casket.

[கோடி → கோடிகம்.]

கோடிகம்[2] *kōḍigam,* பெ.(n.) 1. இந்திரகோபப் பூச்சி; lady's fly. 2. நுனி; tip. 3. மூலை; corner. 4. ஆடை; cloth. *"செங்கோடிகம்" (பெருங். உஞ்சைச். 57:43).* 5. சிலை; statue. 6. இளமை; youth.

[கோடு → கோடி → கோடிகம்.]

கோடிகர் *kōḍigar,* பெ.(n.) ஆடைநெய்வோர்; weaver. *"கோடிகர் வரைப்பினும்" (பெருங். இலாவாண. 8:67).*

[கோடிகம் → கோடிகர்.]

கோடிகரி-த்தல் *kōḍikari-,* 4 செ.கு.வி. (v.i.) தொகுத்துச் சொல்லுதல்; to sum up in order, systematize and summarise.

[கோடி + கரி.]

கோடிகாட்டு-தல் *kōḍi-kāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) செய்தியைப் புரிந்துகொள்ளும்படியாகக் குறிப்புக் காட்டுதல்; to hint at. கோடிகாட்டினால் போதும் புரிந்துகொள்வேன் (உ.வ.).

[கோடு → கோடி + காட்டு.]

கோடிகாண்பி-த்தல் *kōḍi-kāṇbi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. குறிப்புக்காட்டுதல்; to hint at slightly. 2. சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல்; to make one understand by hinting.

[கோடி + காண்பி.]

கோடிகாவன் *kōḍi-kāvaṉ,* பெ.(n.) கோடிக்கரை கோவிலுக்கு நிலக்கொடை கொடுத்தவன்; donar of land to *kōḍikkarai* temple. *"திருக்கோடிக் காவாகிய கண்ணமங்கலத்து ஆத்திரையன் கிழவன் கோடிகாவன் மெழுக்குப்புறம் வைத்த நிலத்துக். கீழ்பாற் கெல்லை"* (S.I.I. XIII, 125-3 pg.64).

[கோடி + காவன்.]

கோடிகோடாக்கினி *kōḍi-kōḍākkiṉi,* பெ.(n.) பேரழிவு தரும் காட்டுத்தீ; great conflagration (சா.அக.).

[கோடி + கோடாக்கினி.]

கோடிச்சிலை *kōḍi-c-cilai,* பெ.(n.) 1. 120 தமிழ் மருத்துவ இயற்கைப் பொருள்களில் ஒன்றான மஞ்சட்கல்; the yellow stone. 2. புதிய சீலை; a new sari (சா.அக.).

[கோடி + சிலை (எதிரொலிப்பது, கல்) - கோடிச்சிலை → கோடிச்சீலை.]

கோடிச்செல்வன் *kōḍi-c-celvaṉ,* பெ.(n.) மிகப்பெருஞ் செல்வன், பணக்காரன்; fabulously wealthy man, multi-millionaire.

[கோடி + செல்வன்.]

கோடிச்செல்வி *kōḍi-c-celvi,* பெ.(n.) மிகப்பெரும் பணக்காரி; fabulously wealthy woman.

[கோடி + செல்வி.]

கோடிசித்தி *kōḍi-śitti,* பெ.(n.) சேர்ந்தாடு பாவை என்னும் மருந்து; an unknown drug (சா.அக.).

[கோடு + சித்தி.]

கோடிசீமான் *kōḍi-śīmāṉ,* பெ.(n.) பெருஞ் செல்வன்; multi-millionaire.

[கோடி + சீமான்.]

கோடிஞ்சி *kōḍiñji,* பெ.(n.) கோழி; fowl, cock or hen (சா.அக.).

[கோழி → கோழிஞ்சி → கோடிஞ்சி (கொ.வ.).]

கோடிட்ட *kōḍiṭṭa,* பெ.எ.(adj.) கோடுபோட்டு விடப்பட்ட; indicated by a line.

[கோடு + இட்ட.]

கோடிட்டுக்காட்டு-தல் *kōḍiṭṭu-k-kāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) வலியுறுத்திச் சுட்டிக்காட்டுதல்; to underline, under score.

[கோடிட்டு + காட்டு.]

கோடிடு-தல் *kōḍiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) அடிக்கோடிடுதல்; to underline.

[கோடு + இடு.]

கோடித்தரை *kōḍi-t-tarai,* பெ.(n.) 1. விளை நிலமாகப் புதிதாய் வெட்டித் திருத்தப்பட்ட நிலம் (யாழ்.அக.); land newly converted and made fit for cultivation.

2. புதுச்செய்கை; new act. 3. பூண்டதரை; newly converted land, floor.

[கோடி (புதியது) + தரை.]

கோடிதம் *kōḍidam,* பெ.(n.) ஒரு முகில்; a cloud, blue sky; azure.

[சுடு → கோடு → கோடிதம்.]

கோடிதீர்த்தம் *kōḍi-tirttam,* பெ.(n.) கடலிற் குளித்தற்கரிய நற்பேறுடைய இடங்களான (புண்ணியத் தலங்கள்) தனுக்கோடி போன்ற கோடிக்கரை; sacred sea bathing ghat at *Danuskōḍi* etc.,

[கோடி + (நீர்த்தம்) தீர்த்தம்.]

கோடிதூங்கி *kōḍi-tūṅgi,* பெ.(n.) வேலையில்லாது சோம்பித்திரிபவன்-ள்; loiterer, one who hangs about other's houses.

[கோடிதூங்கு → கோடி தூங்கி.]

கோடிதூங்கு-தல் *kōḍi-tūṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மூலையில் உறங்குதல்; to sleep in a corner. 2. சோம்பித்திரிதல்; to loiter about.

[கோடி + தூங்கு.]

கோடிநீர் *kōḍi-nīr,* பெ.(n.) தண்ணீர்க்குடம்; water pot (சா.அக.).

[கோடி + நீர்.]

கோடிப்பருவம் *kōḍi-p-paruvam,* பெ.(n.) இளமைப் பருவம் (யாழ்.அக.); youth. அவனை நான் கோடியில் பார்த்த போது அழகாய் இருந்தான் (கொங்கு).

மறுவ. வாலைப்பருவம், கோடிவயது.

தெ. கோடெபருவமு.

[கோடி + பருவம்.]

கோடிப்பல்லி *kōḍi-p-palli,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharumapuri Dt.

[கோடி + (பள்ளி) பல்லி.]

கோடிப்பள்ளம் *kōḍi-p-paḷḷam,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvallur Dt.

[கோடி + பள்ளம்.]

கோடிப்பாக்கம் *kōḍi-p-pākkam,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram dt.

[கோடி + பாக்கம்.]

கோடிப்பாம்பு *kōḍi-p-pāmbu,* பெ.(n.) பழக்கப் படாத பாம்பு; wild or untamed young cobra. *"வெட்ட வெளியிலே கோடிப்பாம் பாடுமோ" (குற்றா.குற. 124:31).*

[கோடி (புதிய) + பாம்பு.]

கோடிப்பாலை *kōḍi-p-pālai,* பெ.(n.) ***கொடிப் பாலை*** (சிலப். 3:71, கீழ்க்குறிப்பு) பார்க்க; see *koḍi-p-pālai.*

[கோடி + பாலை]

கோடிப்பாளைக்கருக்கு *kōḍi-p-pāḷai-k-karukku,* பெ.(n.) மகளிரின் நெற்றிச்சுட்டி என்னும் சூளா மணிவகைகளின் முன்னமைப்பு; a frontal decoration of an ornament worn by women hanging above the forehead.



கோடிப்பாளை கருக்கு

[கோடி (இறுதி) + பாளை + கருக்கு - கோடிப்பாளைக் கருக்கு.]

பாக்குப்பாளை போன்று பூவேலைப்பாடுகள் செதுக்கப்பட்ட அணிகல வேலைப்பாடுகளை பாளைக்கருக்கு என்பர்.

கோடிப்புங்கு *kōḍi-p-puṅgu,* பெ.(n.) இராமநாதபுரம் விளத்தூர் பகுதியில் இருந்த ஒரு ஊரின் பெயர்; *'விளத்தூர் மண் கோட்டை சோளிக்குடி சிறுதவயல் கோடிப்புங்கு' (சே.செ.52-37, பக்.262).*

[கோடி + புங்கு.]

கோடிப்பூட்டு இணைப்பு *kōḍi-p-pūṭṭu-iṇaippu,* பெ.(n.) மரவேலைப்பாட்டின்போது பயன்படுத்தப் படும் ஒருவகை இணைப்பு; a kind of joint used in wooden works.

[கோடி + பூட்டு + இணைப்பு.]

கோடிபோடு-தல் *kōḍi-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) கணவன் இறந்தவுடன் கைம்பெண்ணுக்கு உறவினர்

புதுப்புடவை போடுதல்; to offer a new cloth to a widow in mourning by relations.

[கோடி + போடு-.]

கோடிம்பகம் *kōḍimbagam,* பெ.(n.) ***கோடும்பிகம்*** பார்க்க; see *kōḍumbigam* (சா.அக.).

[கோடும்பிகம் → கோடிம்பகம்.]

கோடிம்பம் *kōḍimbam,* பெ.(n.) கரும்பூசணி; sweet water melon (சா.அக.).

[கோடு + நிம்பம்.]

கோடிமட்டம் *kōḍi-maṭṭam,* பெ.(n.) சுவர்களின் கோடியைச் சரிபார்க்க உதவும் கருவி; an instrument used for the correction of the corner of a wall in masonry work.

மறுவ. மூலைமட்டம்.

[கோடு + மட்டம்.]

கோடிமுடி-தல் *kōḍi-muḍi-,* 2 செ.கு.வி. (v.i.) 1. தன்னை விருந்திற்கழைக்கும்படி மணமகன் முதலியோருடைய புதிய ஆடையில் பணம் முடிதல் (யாழ்ப்.); to tie a piece of money in the new cloth as of a bridegroom to oblige him to give an invitation to a feast. 2. ஒருவகை விளையாட்டு; a kind of play.

[கோடி + முடி-.]

கோடிமுரிதல் *kōḍi-muri,* பெ.(n.) வயிரக்குற்றம் பன்னிரண்டனுள் ஒன்று (சிலப். 14:180, உரை.); a flaw in diamonds, one of 12 vayirakkuṟṟam.

[கோடி + முரி.]

கோடிமூட்டு *kōḍi-mūṭṭu,* பெ.(n.) மரப்பலகை, சட்டம் ஆகியவை மூலைகளில் பொருந்துமாறு இணைக்கப்படும் இணைப்பு; a joint which connects the corners of the wooden planks and frames.

[கோடி + மூட்டு.]

கோடியக்கரை *kōḍiya-k-karai,* பெ.(n.) ***கோடிக்கரை*** பார்க்க; see *kōḍi-k-karai.*

[கோடி + அ + கரை.]

கோடியக்காடு *kōḍiya-k-kāḍu,* பெ.(n.) நாகை மாவட்டம் திருமறைக் காட்டிற்குத் தெற்கே உள்ள காடு; a forest situated in *Tirutturai-p-pūṇḍi* taluk in *Nāgai* Dt.

[கோடி + அ + காடு.]

கோடியம் *kōḍiyam,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Viluppuram Dt.

[கோடி → கோடியம்.]

கோடியர்[1] *kōḍiyar,* பெ.(n.) 1. கூத்தர்; professional dancers. *"கொடும்பறைக் கோடியர்" (மதுரைக். 523).* 2. நாடகர்; actors or actress.

[கோடு → கோடியர் (வளைந்தாடும் கூத்தர்).]

கோடியர்[2] *kōḍiyar,* பெ.(n.) சிவிகையின் முன்பின் முனைகளைத் தாங்கிச்செல்வோர் (யாழ்.அக.); those who carry a palanquin at its two ends. *"விழவிற் கோடியர் நீர்மை போல" (புறநா.29).*

[கோடு → கோடி → கோடியர்.]

கோடியலூர்தி *kōḍiyal-ūrdi,* பெ.(n.) யானை மருப்பினால் செய்யப்பட்ட ஊர்தி; vehicle or conveyance made of elephant's tusks. *"கோடிய லூர்தியுங் கொண்டு விசியுறுத்து" (பெருங். உஞ்சைக். 37:219).*

[கோடு + இயல் + ஊர்தி.]

கோடியன் *kōḍiyaṉ,* பெ.(n.) பல்லக்கு மற்றும் ஊர்தி சுமப்போன்; bearer of palanquin or *vāgaṉam* of an idol.

[கோடு : பல்லக்குத்தண்டு, மரம். கோடு → கோடியன்.]

கோடியிணைப்பு *kōḍi-y-iṇaippu* பெ.(n.) மரச் சட்டங்களின் கோடியில் இணைக்கும் இணைப்பு; a joint between the corners of wooden planks.

[கோடி + இணைப்பு.]

கோடியில்லாமை *kōḍi-y-illāmai,* பெ.(n.) வயிரக்குற்றம் 12-ல் ஒன்று (சிலப். 14:180, உரை); a flaw in diamonds, one of 12 vairakkuṟṟam.

[கோடி + இல்லாமை.]

கோடியுடம்பு *kōḍi-y-uḍambu,* பெ.(n.) 1. மெல்லிய உடம்பு (யாழ்ப்.); tender body. 2. இளைத்தவுடம்பு; young body.

[கொடி → கோடி + உடம்பு.]

கோடியூர் *kōḍi-y-ūr,* பெ. (n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[கோடி + ஊர்.]

கோடியெடு[1]–த்தல் *kōḍi-y-eḍu,* 4 செ.குன்றாவி. (v.t.) திரும்பச் சொல்லுதல் (ஈடு.10.3:1); to repeat.

[கோடி + எடு.]

கோடியெடு[2]–த்தல் *kōḍi-y-eḍu,* 4 செ.குன்றாவி. (v.t.) இறந்தவர் வீட்டுக்குப் புத்தாடை வாங்கிச் செல்லுதல்; to buy and carry a new cloth to deceased house.

[கோடி (புத்தாடை) + எடு.]

கோடியோடு–தல் *kōḍi-y-ōḍu-,* 5 செ.கு.வி. (v.i.) ஏரி நீர் நிரம்பிவழிதல் (C.G.); to overflow, as surplus water in a tank.

[கோடி + ஓடு.]

கோடிரம்[1] *kōḍiram,* பெ.(n.) 1. ஒரு விலங்கு; an ichneumon. 2. ஓர் பூச்சியினம்; insect coccinella of various kinds. 3. கீரி; mongoose (சா.அக.).

ம. கோடிரம்.

[கோடு → கோடிரம்.]

கோடிரம்[2] *kōḍiram,* பெ.(n.) ***கோடிரவம்*** பார்க்க; see *kōḍiravam.*

[கோடு → கோடிரம்.]

கோடிரவம் *kōḍiravam,* பெ.(n.) சதுரக்கள்ளி (மலை.); square spurge.

[கோடு → கோடிரம் → கோடிரவம்.]

கோடிலம் *kōḍilam,* பெ.(n.) 1. கோட்டம்; put chock. 2. ஒருவகை நறுமணச் செடி; a kind of fragrant plant.

[கோடு → கோடிலம்.]

கோடிவகை *kōḍi-vagai,* பெ.(n.) ஆடைவகைகள்; type of clothings.

[கோடி + வகை.]

வகைகள்: கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், கண்ணம், வடகம், பஞ்சு, இட்டு, பாகம், கோங்கலர், கோபம், குருதி, கரியல், பேடகம், பூங்காக்காழம், தூரியம், நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, குச்சலி, தேவகிரி, இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணி பொத்தி [கழ.த.அக.].

கோடிவஞ்சி *kōḍi-vañji,* பெ.(n.) சிறுகுறிஞ்சான்; small Indian ipecacuanha (சா.அக.).

[கோடி + வஞ்சி.]

கோடிவயது *kōḍi-vayadu,* பெ.(n.) 1. இளமை; youth 2. ***கோடிப்பருவம்*** பார்க்க; see *kōḍi-p-paruvam* (சா.அக.).

[கோடி + வயது.]

கோடிவளி *kōḍi-vaḷi,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvallur dt.

[கோடி + வளி.]

கோடிவெள்ளை *kōḍi-veḷḷai,* பெ.(n.) புதிய ஆடையின் முதல் வெள்ளை; first wash of new cloths.

[கோடி + வெள்ளை.]

கோடீகரி–த்தல் *kōḍi-kari,* 4 செ.குன்றாவி.(v.t.) தொகுத்துச்சொல்லுதல்; to sum up in order, systematise and summarise.

[கொள் → கோள் → கோடு (மனத்துட் கொள்ளுதல்) + கரித்தல்.]

கோடீசுவரன் *kōḍīsuvaraṉ,* பெ.(n.) ***கோடிச் செல்வன்*** பார்க்க; see *kōḍi-c-celvaṉ.*

[கோடி + ஈசுவரன்.]

கோடீசுவரி *kōḍīsuvari,* பெ.(n.) ***கோடிச்செல்வி*** பார்க்க; see *kōḍi-c-celvi.*

[கோடி + ஈசுவரி.]

கோடீரம்[1] *kōḍīram,* பெ.(n.) 1. முடி (வின்.); crest, diadem. 2. முனிவர்களின் சடை; long matted hair, as of ascetics. *"வெண்ணிலவு விரிந்த கோடீரம்" (குமர.பிர. மதுரைக். 101).* 3. மண்ணாங்கட்டியுடைக்குந் தடி முதலியன; a pole clods is used to break the clod of earth.

[கோடு (வளைவு) → கோடுரம் → கோடீரம்.]

கோடீரம்[2] *kōḍīram,* பெ.(n.) வானவில்; rain-bow.

[கோடு = வளைவு. கோடு → கோடிரம் → கோடீரம்.]

கோடு[1]–தல் *kōḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. வளைதல்; to bend, to be crooked. *"செங்கோல் கோடியோ" (மணிமே. 28:188).* 2. நெறிதவறுதல்; to go astray, deviate. *"கோடாருங் கோடிக் கடுவினைய ராகியார்ச் சார்ந்து" (நாலடி, 124).* 3. நடுநிலைமை தவறுதல்; to be partial, biassed. *"கோடாமை சான்றோர்க் கணி" (குறள்,118).* 4. வெறுப்புறுதல் (வின்.); to be displeased, aversion. 5. கோணுதல்; to bend, curve. *"கற்பிளார்கோடும் வாயினரீவார்க் கரும் பழுதுரைப்பவர்" (தணிகைப்பு. அகத்.346).*

6. சூழ்தல்; to cover, all round. 7. வட்டமாதல்; to get round. 8. எரிதல்; to burn. 9. குறாவுதல்; to mean, to be sad. 10. கொள்ளுதல்; to secure. *"தலை யிழைத்துக் கோடுமுன்" (தணிகைப்பு.வீராட்.39).*

[கோண் → கோடு.]

கோடு[2] *kōḍu,* பெ.(n.) 1. வளைவு; crookedness, flexure. 2. நடுநிலை நீங்குகை; partiality. *"கோடிறீக் கூற்றம்" (நாலடி.5).* 3. யானை, பன்றிகளின் கொம்பு; tusk. *"மத்த யானையின் கோடும்" (தேவா.39:1).* 4. விலங்கின் கொம்பு; horn. *"கோட்டிடை யாடினை கூத்து" (திவ். இயற். திருவிருத். 21).* 5. ஊதுகொம்பு; blowing-horn. *"கடுங்கட் காவலர் கொடுங்கோடு சிலைப்ப" (பெருங். உஞ்சைக். 58:25).* 6. நீர்வீசுங் கொம்பு; a horn-like contrivance used for discharging water in jets. *"நீர்மணக் கோட்டினர்" (பரிபா.6:34).* 7. மரக்கொம்பு (பிங்.); branch of a tree. 8.யாழ்த் தண்டு; body of a lute. *"மகர யாழின் வான்கோடு தழீஇ" (மணிமே.4:56).* 9. கெ, கே முதலியவற்றின் தலைப்பிலுள்ள கொம்புக் குறியீடு; symbol 'ெ', 'ே', as in கெ, கே, etc. *'விலங்கு பெற்றும் கோடு பெற்றும் புள்ளி பெற்றும்' (தொல். எழுத்து. 17, உரை).* 10. பிறைமதி; crescent moon. *"பசும்பணிக் கோடு மிலைந்தான்" (திருக்கோ. 149).* 11. சங்கு; conch, chank. *"கோடு முழங் கிமிழிசை யெடுப்பும்" (பதிற்றுப். 50:25).* 12. குலை; bunch, cluster. 13. மயிர்முடி; coil of hair. *"குரற் கூந்தற்கோடு" (கலித். 72:20).* 14. மலையுச்சி; summit of a hill, peak. *"பொற்கோட் டிமயமும்" (புறநா.2:24).* 15. மலை; mountain. *"குமரிக் கோடும்" (சிலப்.11:20).* 16. மேட்டுநிலம்; high ground, elevation. *"நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய" (மதுரைக். 286).* 17. வரி; line. 18. ஆட்டம் முதலியவற்றுக்காக வகுத்த எல்லை (தானம்); diagram, figure, as a square, circle, etc., drawn for playing games. *"கோடின்றி வட்டாடல் கொள்வ தொக்கும்" (தாயு. நினை.2).* 19. நீர்க்கரை; bank of a river, bund of a tank or well. *"குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று" (குறள்:523).* 20. குளம்; tank. *"கோடெலா நிறையக் குவளைம் மலரும்" (தேவா.425:4).* 21. காலவட்டம்; cycle of time. *"கலியுகக் கோட்டுநாள்" (T.A.S.H. O.P.S.5).* 22. வரம்பு (பிங்.); ridge, as in a field; border, limit. 23. ஆடைக்கரை; stripe, border, as of a cloth. *"கொடுந்தானைக் கோட்டழகும்" (நாலடி.131).* 24. முனை; cusp, horn, as of the crescent moon. *"கோடு கூடு மதியம்" (பதிற்றுப்.31:12).* 25. பக்கம்; side. *"கோடுய ரடுப்பு" (புறநா. 164).* 26. அரணிருக்கை (வின்.); stronghold, fortified place. 27. கட்டடச்சுவர்; wall of a building. 28. நத்தை; snail. 29. கோட்டான்; large owl. 30. சங்கம்பட்டை; bark of smooth volkameria - cleodendran inerme. 31.கிளிஞ்சில்; shell (சா.அக.). 32. சுண்ணாம்பு; lime.

தெ., க., து. கோடு; **பர்.** கோட்; **கோண்.** கோர்.

[கோண் →கோடு ஒ.நோ. பாண் →பாடு.]

கோடு[3] *kōḍu,* பெ.(n.) கொடுமை; hardship, oppression. *"கோடற வைத்த கோடாக் கொள்கையும்" (பதிற்றுப். 37:11).*

[கொள் → கொடு → கோடு.]

கோடுகடைதொழில் *kōḍu-kaḍai-tol̤il,* பெ.(n.) யானைக்கோடு முதலியவற்றைக் கடையும்தொழில்; the art of carving tusks.

[கோடு + கடை + தொழில்.]

கோடுகீறு-தல் *kōḍu-kīru-,* 5 செ.கு.வி. (v.i.) **கோடிகாண்பி** பார்க்க; see *kōḍi-kāṇbi.*

[கோடு + கீறு.]

கோடுங்கிரி *kōḍuṅgiri,* பெ.(n.) மல்லிகை; jasmine (சா.அக.).

[கோடு : புதிய. கலி : மணம். கோடும் + கலி – கோடுங்கலி → கோடுங்கிரி (கொ.வ.).]

கோடுபாடு *kōḍu-pāḍu,* பெ.(n.) மூலைமுடுக்கு; in all corners.

[கோடு + பாடு.]

கோடுபோடு-தல் *kōḍu-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) உப்பளப் பாத்தியில் படிந்த உப்புப்படிவத்தில் பலகையால் கோடுபோடுதல்; to draw lines on the surface of crystalized salt.

[கோடு + போடு.]

கோடும்பிகம் *kōḍumbigam,* பெ.(n.) தும்மட்டி; country cucumber (சா.அக.).

[கொள் → கொடு → கொடும்பி → கொடும்பிகம் → கோடும்பிகம்.]

கோடுமட்டி *kōḍu-maṭṭi,* பெ.(n.) மட்டி வகைகளு லொன்று; a kind of shell.

[கோடு + மட்டி.]

கோடுமுத்தம் *kōḍu-muttam,* பெ.(n.) சங்கிற் பிறந்த வெண்ணிற முத்து; white pearl from sea shell oyster.

[கோடு : பங்கு. கோடு + முத்தம்.]

கோடுருவகம் *kōḍuruvagam,* பெ.(n.) அத்தி; a kind of fig tree (சா.அக.).

[கோடு + உருவகம்.]

கோடுரை *kōḍurai,* பெ.(n.) சங்கஞ்செடி; a thorny kind of shrub (சா.அக.).

[கோடு → கோடுரை.]

கோடுவாய் *kōḍu-vāy,* பெ.(n.) ***கோட்டுவாய்*** பார்க்க; see *kōṭṭu-vāi* (சா.அக.).

[கோட்டுவாய் → கோடுவாய்.]

கோடை[1] *kōḍai,* பெ.(n.) 1. மேல்காற்று; west wind. *"கோடை தூற்றக் கூடிய வூழிலை"* *(ஞானா. 28:12).* 2. வேனிற்காலம் (பிங்.); summer season. 3. வெயில்; sun shine. *"வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப" (திருவாசக.3:71).* 4. கோடைப் பயிர் (இ.வ.); summer crop. 5. கோடைக்கானல்; a mountain. *"வெள்வீ வேலிக் கோடைப் பொருந" (புறநா.205:6).*

க. கோடெ; ம. கோட; பட. (தென்மேற்கு பருவமழை); கோத. கெட்; துட. க்வாட் (பருவமழை, ஆண்டு).

[கொடு → கோடு → கோடை.(குடக்கு)→கோடை.]

கோடை[2] *kōḍai,* பெ.(n.) 1. கோடற்கிழங்கு; a bulbous root grown in the summer season. 2. கரந்தை; sweet basil.

[கோடு → கோடை.]

கோடை[3] *kōḍai,* பெ.(n.) குதிரை (பிங்.); horse.

[கோடகம் → கோடை.]

கோடை[4] *kōḍai,* பெ.(n.) 1. வெண்காந்தள்; white species of Malabar glory-lily. 2. செங்காந்தள்; Malabar glorylily.

[கோடு = வெண்மை n. கோடு → கோடை.]

கோடை[5] *kōḍai,* பெ.(n.) இளமை; youth.

தெ. கோடெ (இளைஞன், இளம)

Fin. kyty (wife's brother-in-law); **Est.** kudi; **Mansi.** kil; **Mong.** kydeqy; **O.Turk.** kude; **Jap.** kata; **Q.** katac.

[கோடு → கோடை.]

கோடைக்கட்டி *kōḍai-k-kaṭṭi,* பெ.(n.) வேனிற் காலத்தில் உடம்பில் காணும் அரத்தக் கொப்புளம்; boils occuring in summer due to excessive heat of the body (சா.அக.).

மறுவ. கோடைக் கொப்புளம்.

[கோடை + கட்டி.]

கோடைக்கண்ணி *kōḍai-k-kaṇṇi,* பெ.(n.) 1. ஒரு வகை நெல்; a kind of paddy. 2. வேனிற்காலத்துப் பூ; summer flower (சா.அக.).

[கோடை + கண்ணி.]

கோடைக்காந்தள் *kōḍai-k-kāndaḷ,* பெ.(n.) வெண்காந்தள்; Malabar glory (சா.அக.).

[கோடை + காந்தள்.]

கோடைக்காந்திரம் *kōḍai-k-kāndiram,* பெ.(n.) பொழுதுவணங்கி (சூரியகாந்தி); sunflower (சா.அக.).

[கோடை + காந்திரம்.]

கோடைக்காலம் *kōḍai-k-kālam,* பெ.(n.) வேனிற் காலம்; hot weather, summer season (சா.அக.).

[கோடை + காலம்.]

கோடைக்காற்று *kōḍai-k-kāṟṟu,* பெ.(n.) 1. மேற்குக் காற்று; west wind. 2. நெருப்புக்காற்று; the hot west wind. 3. வேனிற் பருவத்தின் காற்று; breeze of summer season (சா.அக.).

ம. கோடக்காற்று; பட. கோடெதாயி.

[கோடை + காற்று.]

கோடைக்கானல் *kōḍai-k-kāṉal,* பெ.(n.) 1. பழனி மலைத் தொடரின் தென்பால் 7,000 அடிக்குமேல் உயரமுள்ள மலைப்பகுதி; the southern ridge of the Palani hills. more than 7000 ft. high. 2. கோடைக்கானல் மலையின் உச்சியில் குளிர்ச் சிக்காகத் தங்கும் ஒரு மலைநகர்; a sanatorium at the top of *Koḍaikkāṉal* hill.

[கோடை (மேற்கு) + கானல்.]

கோடைக்கிழங்கு *kōḍai-k-kiḻaṅgu,* பெ.(n.) சிற்றரத்தை (மலை.); lesser galangal.

ம. கோடக்கிழங்ங்.

மறுவ. குட்டியிடுக்கி.

[கோடை + கிழங்கு.]

கோடைக்கீரிசம் *kōḍai-k-kiriśam,* பெ.(n.) மணிப் பிரண்டை; a species of adamantine creeper (சா.அக.).

[கோடை + (கிரிச்சம்) கீரிசம்.]

கோடைக்குவாடான் *kōḍaikku-vāḍāṉ,* பெ.(n.) ஆவிரை என்னுமோர் மூலிகை (மலை.); Cassia.

[கோடை + வாடான்.]

கோடைக்குறுவை *kōḍai-k-kuṟuvai,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy. "கோடைக் குறுவை குளவாளை செங்குறுவை (நெல்விடு.179).

மறுவ. சித்திரைக்குறுவை

[கோடை + குறுவை]

கோடைக்கேப்பை *kōḍai-k-kēppai,* பெ.(n.) கேழ்வரகு வகை; a kind of ragi.

[கோடை + கேப்பை]

கோடைக்கொட்டை *kōḍai-k-kōṭṭai,* பெ.(n.) நிலக்கடலை; ground-nut, as usually a summer crop.

[கோடை + கொட்டை.]

கோடைக்கொப்புளம் *kōḍai-k-koppuḷam,* பெ.(n.) ***கோடைக்கட்டி*** பார்க்க; see *kōḍai-k-kaṭṭi* (சா.அக.).

[கோடை + கொப்புளம்.]

கோடைச்சம்பா *kōḍai-c-cambā,* பெ.(n.) வேனிற் காலத்துப் பயிராகும் சம்பாநெல்; šambā paddy grown in summer season (சா.அக.).

[கோடை + சம்பா.]

கோடைச்சவுக்கு *kōḍai-c-cavukku,* பெ.(n.) ஆற்றுச்சவுக்கு (L.); tamarisk.

[கோடை + சவுக்கு.]

கோடைச்செய்கை *kōḍai-c-ceygai,* பெ.(n.) மறுபயிருக்குக் கோடைக் காலத்தில் நிலத்தைப் பண்படுத்துகை (வின்.); preparation of land in hot season for the next crop.

[கோடை + செய்கை.]

கோடைச்சோளம் *kōḍai-c-cōḷam,* பெ.(n.) தஞ்சையில் கோடை காலத்திற் பயிரிடப்படும் சோளம்; cholam cultivated in Thanjavur area in summer.

[கோடை + சோளம்.]

கோடைத்தண்ணீர் *kōḍai-t-taṇṇīr,* பெ.(n.) 1. கள்; toddy, as a beverage in hot weather. 2. பனிக் கட்டி உருகிய தண்ணீர்; ice-water (சா.அக.).

[கோடை + தண்ணீர்.]

கோடைத்தணி *kōḍai-t-taṇi,* பெ.(n.) ஆனைத் தொண்டி; ordure tree (சா.அக.).

மறுவ. கோடைத்தொண்டி

[கோடை + (தலை) தணி]

கோடைத்தாணி *kōḍai-t-tāṇi,* பெ.(n.) ஒருவகைப் பூடு; a kind of herb as of net-veined Indian nettle (சா.அக.).

[கோடை + (தாளி) தாணி]

கோடைத்திருநாள் *kōḍai-t-tirunāḷ,* பெ.(n.) கோடைகாலத்தில் நடைபெறுகின்ற திருவிழா; a celebration in summer. *"இறையமுது நூறும் கொடைத்திருநாள் பிறபத்தில் முதல் திருநாளில்" (திருப்பதி.கல்.தொ.3.கல்7–2).*

[கோடை + திருநாள்.]

கோடைத்தொண்டி *kōḍai-t-toṇḍi,* பெ.(n.) ஆனைத் தொண்டி; ordure tree - sterculia lata (சா.அக.).

மறுவ. கோடைத்தணி

[கோடை + தொண்டி.]

கோடைப்பயிர் *kōḍai-p-payir,* பெ.(n.) 1. கோடைக்காலத்துப் பயிர்; crop raised in hot season. 2. கோடைச்சாகுபடியின் விளை பொருள்; produce of cultivation in the hot season.

ம. கோடநெல் (ஒருவகை நெல்).

[கோடை + பயிர்.]

கோடைப்பாலி *kōḍai-p-pāli,* பெ.(n.) மடச் சாம்பிராணி; Malabar mahogany (சா.அக.).

[கோடை + (பால்) பாலி]

கோடைப்புரோசனம் *kōḍai-p-purōšaṉam,* பெ.(n.) ***கோடைப்பயிர்*** பார்க்க; see *kōḍai-p-payir.*

[கோடை + புரோசனம்.]

கோடைப்பூகிகம் *kōḍai-p-pūgigam,* பெ.(n.) மஞ்சள் அந்திமல்லிகை; yellow evening jasmine (சா.அக.).

[கோடை + (போகம்) பூகிகம்]

கோடைப்பூசணி *kōḍai-p-pūšaṇi,* பெ.(n.) கோடைக்காலத்தில் காய்க்கும் பூசணிவகை; a species of pumpkin bearing fruit in hot season.

[கோடை + பூசணி]

கோடைப்போகம் *kōḍai-p-pōgam,* பெ.(n.) ***கோடைப்பயிர்*** பார்க்க; see *kōḍai-p-payir.*

[கோடை + போகம்.]

கோடைபாடியபெரும்பூதனார் *kōḍai-pāḍiya-perum-pūdaṉār,* பெ.(n.) சங்ககாலப் புலவர்களு ளொருவர்; a Sangam poet.

[கோடை (கொடைக்கானல் மலை) + பாடிய + பெரும்பூதனார்.]

இவர் பாடிய பாடல் கிடைத்திலது. அக்காலத்தில் மலை, ஊர்பற்றிப் பாடும்போது அதனை முன்பு பாடிய புலவரைக் குறிப்பிடுதல் உண்டு. அதனடியாக இவர் கோடையைப்பற்றிப் பாடியிருக்கக் கூடும். பெரும்பூதனார் என்னும் அவரின் இயற்பெயருடன் கூடி இப் பெயர் அமைந்தது எனக் கருதப்படுகிறது.

கோடைமழை *kōḍai-maḻai,* பெ.(n.) கோடை காலத்து மழை; summer rain.

ம. கோடமழ; **பட.** கோடெமே.

[கோடை + மழை.]

கோடையடிக்காரன் *kōḍai-y-aḍikkāraṉ,* பெ.(n.) ஒருவரிடத்தினின்று பிடுங்கி மற்றொருவர்க்கு ஏராளமாய்க் கொடுப்பவன்; one who is liberal at another's expense (loc.).

[கோடை + அடி + காரன்.]

கோடையடிபடு-தல் *kōḍai-y-aḍipaḍu-,* 20 செ.கு.வி (v.i.) வெய்யிலிலடிபடுதல்; to roam in hot sun.

[கோடை + அடிபடு.]

கோடையான்தோட்டம் *kōḍaiyāṉ-tōṭṭam,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thanjai Dt.

[கோடையான் + தோட்டம்.]

கோடையிடி *kōḍai-y-iḍi,* பெ.(n.) கோடைப் பருவத்து மழையிடி; thunder during rains in hot season.

[கோடை + இடி.]

கோடையெலுமிச்சை *kōḍai-y-elumiccai,* பெ.(n.) புதுச்சேரி எலுமிச்சை; Pondicherry lime (சா.அக.).

[கோடை + எலுமிச்சை.]

கோடைவாகளி *kōḍai-vāgaḷi,* பெ.(n.) சிறு செருப்படை; a low spreading plant, as a diffuse prostrate herb.

மறுவ: கோடைவாசனி.

[கோடை + வாகளி.]

இது அறுத்த வயலிலும், குளக்கரையிலும் படரும், சொறிசிரங்கு, படை முதலிய நோய்களைப் போக்கும் [சா.அக.].

கோடைவாய் *kōḍai-vāy,* பெ.(n.) வாயினின்று வடியும் நீர்; dribble.

மறுவ. கொடுவாய், கோட்டவாய்.

[கோட்டுவாய் → கோடைவாய்.]

கோண்[1] *kōṇ,* பெ.(n.) 1.வளைவு; crookedness. *"கோணார் பிறை" (திருவாசக. 16:5).* 2.கோணம்; an angle. *"முக்கோ ணிவர் தரு வட்டம்" (குற்றா.தல. பராசத்.3).* 3. மாறுபாடு; crossness of disposition. *"கோணைக் களிற்றுக் கொடித்தேர்" (சீவக. 28).* 4. கொடுங்கோன்மை (திவா.); tyranny.

ம. கோண்; **க.** கோண, கோன; **தெ.** கோணமு; **து.** கோண; **பட.** கோணெ (வளைவு).

Skt. koṇa.

[கோள் → கோண்.]

கோண்[2] *kōṇ,* பெ.(n.) நுண்ணிய பகுதி; a minute division. *"அணுவினைச் சத கூறிட்ட கோணினு முளன்" (கம்பரா.இரணிய. 124).*

[குள் → கொள் → கோள் → கோண்.]

கோண்[3] *kōṇ,* பெ.(n.) ஏனத்தின் (பாத்திரத்தின்) மூக்கு (யாழ்.அக.); spout or projecting mouth of a vessel, lip.

[குள் → கொள் → கோள் → கோண்.]

கோண்டகம் *kōṇḍagam,* பெ.(n.) நெருஞ்சில்; caltrope (சா.அக.).

[குள் → குண்டு → குண்டகம் → கோண்டகம்.]

கோண்டகு *kōṇḍagu,* பெ.(n.) குறிஞ்சான்; an edible and medicinal creeper (சா.அக.).

[குண்டகம் → கோண்டகு.]

கோண்டகை *kōṇḍagai,* பெ.(n.) கொடியரசு; a kind of tree as of ficus (சா.அக.).

[கொள் → கொண்டகை → கோண்டகை.]

கோண்டம்[1] *kōṇḍam,* பெ.(n.) ***கோண்டகம்*** பார்க்க; see *kōṇḍagam.*

[கோண்டகம் → கோண்டம்.]

கோண்டம்[2] *kōṇḍam,* பெ.(n.) குறிஞ்சாவகை (மலை.); a species of scammony swallow - wort.

[கோண்டகம் →கோண்டம்.]

கோண்டம்[3] *kōṇḍam,* பெ.(n.) 1. ***கோதண்டம்***[2] (யாழ்.அக.) பார்க்க; see *kōdaṇḍam*[2]. 2. தூக்கு; pendents, anything suspended.

[குண்டம் →கோண்டம்.]

கோண்டலன் குப்பம் *kōṇḍalaṉ-kuppam,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Villuppuram* Dt.

[கொண்டலன் →கோண்டலன் + குப்பம்.]

கோண்டன் *kōṇḍaṉ,* பெ.(n.) 1.கீழ்மகன்; loafer. 2. பெருங் கொப்பூழன்; one who has a large navel.

ம. தோண்டன்.

[குண்டன் →கோண்டன்.]

கோண்டன்கிழங்கு *kōṇḍaṉ-kiḻaṅgu,* பெ.(n.) ***கோரைக்கிழங்கு*** பார்க்க; see *kōrai-k-kiḻaṅgu.*

[கோண்டன் + கிழங்கு.]

கோண்டி *kōṇḍi,* பெ.(n.) ஆந்திர மாநிலம் (கம்மம், அடிலபாத்), சட்டிச்கார் (பச்தர்), மகாராட்டிரம் (வார்தா, நாக்பூர்), ஒரிசா மாநிலங்களில் பழங்குடி மக்களால் பேசப்பட்டு வரும் திராவிட மொழி; a Dravidian language spoken by Tribals in Andhra Pradesh, Chattisgarh, Maharashtra and Orissa.

கோண்டி பேசுவோர் இருபது இலக்கம் பேர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் இவற்றை அடுத்து அதிக மக்கள் பேசும் திராவிட மொழி கோண்டி மொழியே ஆகும்.

கோண்டூர் *kōṇḍūr,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram Dt.

[கோண்டன் (கோரைக்கிழங்கு) →கோண்டு + ஊர்.]

கோண்டை[1] *kōṇḍai,* பெ.(n.) 1. இலந்தை; jujube. 2. பாக்குமரம்; areca-nut tree.

[குண்டை → கோண்டை.]

கோண்பாய்ச்சல் *kōṇ-pāyccal,* பெ.(n.) குறுக்கிடு வழி (இ.வ.); cross-wise or slanting direction.

[குள் → கோள் → கோண் + பாய்ச்சல்.]

கோண்பு *kōṇbu,* பெ.(n.) கோணுதல்; to be bent, curved.

[கோண் → கோண்பு. ஒ.நோ. காண் → காண்பு.]

கோண்மா *kōṇ-mā,* பெ.(n.) இரைக்காகப் பிற உயிரினங்களைக் கொல்லும் புலி, அரிமா முதலியன; beast of prey, as lion, tiger etc. *"கும்பத்தின் கரியைக் கோண்மாக் கொன்றென"* (கம்பரா. இரணிய. 125).

[கோள் + மா – கோள்மா → கோண்மா.]

கோண்மா நெடுங்கோட்டனார் *kōṇmā neḍuṅkōṭṭaṉār,* பெ.(n.) கடைக்கழகப் புலவர்களி லொருவர்; one among Sangam poets.

[கோண்மா + நெடுங்கோட்டனார்.]

இவர் கடைக்கழக நூல்களில் ஒன்றான நற்றிணையின் 40ஆவது பாடலைப் பாடியுள்ளார். அப். பாடலில் வருகின்ற கோண்மா நெடுங்கோடு என்னும் சொற்றொடரிலிருந்து இப் பெயர் வழங்கப்பட் டிருக்கலாம்.

கோண்மீன் *kōṇ-mīṉ,* பெ.(n.) கோள் (கிரகம்); planet. *"வாணிற விசும்பிற் கோண்மீன்"* (சிறுபாண். 242).

[கோள் → கோண் + மீன்.]

கோண்விழு-தல் *kōṇ-viḻu-,* 2 செ.கு.வி.(v.i.) கோணலாதல் (வின்.); to become crooked, uneven.

[கோண் + விழு.]

கோணக்கண் *kōṇa-k-kaṇ,* பெ.(n.) மாறுகண்; squint.

[கோண் + அ + கண்.]

கண்களின் இருவிழிகளும் வெவ்வேறு திசை களைப் பார்ப்பது போன்ற நிலை.

கோணக்கணிதவியல் *kōṇa-k-kaṇida-v-iyal,* பெ.(n.) கோணங்களைக் கொண்டு பயிலும் கணக்கு; trigonometry.

[கோணம் + கணிதம் + இயல்.]

கோணக்கழுத்து *kōṇa-k-kaḻuttu,* பெ.(n.) 1. பிறவியில் அல்லது வலிப்பினால் வளைந்த கழுத்து; distorted neck either congenital or acquired from fits. 2. சாய்ந்த கழுத்து; wry neck (சா.அக.).

[கோணல் + கழுத்து.]

கோணக்களிகிண்டு-தல் *kōṇa-k-kaḷi-kiṇḍu-,* 5 செ.கு.வி. (v.i.) குழப்பமுண்டாதல் (நெல்லை); to

create confusion. இப்படிக் கோணக்களி கிண்டுவது நல்லதன்று (உ.வ.).

[கோணல் + களி + கிண்டு.]

கோணக்காப்பு *kōṇa-k-kāppu,* பெ.(n.) கை கால்களிலணியும் கோணல்வளை; angulated anklet or bangles.

[கோணல் + காப்பு.]

கோணக்காய் *kōṇa-k-kāy,* பெ.(n.) ***கோணற் காய்*** பார்க்க; see *kōṇaṟ-kāy* (சா.அக.).

[கோணல் + காய் – கோணற்காய் → கோணக்காய்.]

கோணக்கால் *kōṇa-k-kāl,* பெ.(n.) ***கோணற் கால்*** பார்க்க; see *kōṇaṟ-kāl* (சா.அக.).

[கோணல் + கால் – கோணற்கால் → கோணக்கால்.]

கோணக்கிணாக்கி *kōṇa-k-kiṇākki,* பெ.(n.) சிற்றரத்தை வகை (மலை.); nodding galangal.

மறுவ: கோணாக்கிணக்கி.

[கோணல் + (கிணக்கி) கிணாக்கி.]

கோணக்கீச்சான் *kōṇa-k-kiccāṉ,* பெ.(n.) உடல்வளைந்த கீச்சான் மீன்; a kind of fish having twisted body.

[கோணல் + கீச்சான்.]

கோணக்குழல் *kōṇa-k-kuḻal,* பெ.(n.) ஒருவகை வளைந்த ஊதுகுழல்; a kind of trumpet.

ம. கோணக்குழல்.

[கோண(ம்) + குழல்.]

கோணக்கூத்து *kōṇa-k-kūttu,* பெ.(n.) இழுப்பினால் குதிக்கச் செய்யும் ஒரு நோய் (சா.அக.); a disease marked by a peculiar jumping or springing motion in the patient due to clonic spasm of the muscles,saltatory spasm.

[கோணல் + கூத்து.]

கோணக்கொம்பு *kōṇa-k-kombu,* பெ.(n.) 1. வாங்கால் என்னும் ஊது கருவி; bugle - horn, wind instrument (loc.). 2. மாட்டுக் கொம்பில் ஒருவகை; a kind of cow horn.

[கோணல் + கொம்பு.]

கோணக்கொன்றை *kōṇa-k-koṉṟai,* பெ.(n.) கோணக்காய்க் கொன்றை; purging cassia (சா.அக.).

[கோணல் + கொன்றை – கோணற்கொன்றை → கோணக்கொன்றை.]

கோணக்கோணவிழு–தல் *kōṇa-k-kōṇa-viḻu-,* 2 செ.கு.வி (v.i.) வலிப்பு நோயினால் கைகால் இழுத்தல்; distortion of the limbs as in fits (சா.அக.).

[கோண + கோண + விழு-.]

கோணக்கோதயம் *kōṇa-k-kōdayam,* பெ.(n.) தகரை; ringworm plant (சா.அக.).

[கோணல் + கோதயம்.]

கோணங்கி *kōṇaṅgi,* பெ.(n.) 1. கோமாளி; clown or fool in a play, buffoon. 2. ***கோடங்கி*** பார்க்க; see *kōḍaṅgi* 3. நகைச்சுவை நாடகம்; a kind of humourous drama. 4. உடற்கோணி ஆட்டம்; a twisted dance.

[கோண் → கோணங்கி.]

கோணங்கிக்கூத்து *kōṇaṅgi-k-kūttu,* பெ.(n.) 1. கோமாளிக்கூத்து; dancing of a clown. 2. ஒழுங்கற்ற நடையுடைகள்; droll and improper conduct or dress.

[கோணங்கி + கூத்து.]

கோணங்கித்தாசரி *kōṇaṅgi-t-tāśari,* பெ.(n.) தாசரி இனத்திலுள்ள கோணங்கி; a konangi belonging to *Daśari* caste.

[கோணங்கி + தாசரி.]

கோணங்கிப்பட்டி *kōṇaṅgi-p-paṭṭi,* பெ.(n.) நாமக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Nāmakkal* Dt.

[கோணங்கி + பட்டி.]

கோணங்கிப்பல்லு *kōṇaṅgi-p-pallu,* பெ.(n.) அழகற்று நீண்டுள்ள பல் (வின்.); projecting unsightly teeth (W.).

[கோணங்கி + பல்லு. பல் →பல்லு.]

கோணங்கிப்பாட்டு *kōṇaṅgi-p-pāṭṭu,* பெ.(n.) செய்யுள் வகை; a kind of poem.

[கோணங்கி + பாட்டு.]

கோணங்கியம்மை *kōṇaṅgi-y-ammai,* பெ.(n.) உடல் உறுப்புகளைக் குறைத்து வேறுபடுத்தும் அம்மை வகை (வின்.); a kind of small pox which contracts and distorts the limbs.

[கோணங்கி + அம்மை.]

கோணத்தடி *kōṇa-t-taḍi,* பெ.(n.) அதிகாரக் குறியாகக் கொண்டு செல்லும் தடிவகை (இ.வ.); a staff with a curved head, an emblem of authority.

[கோண் → கோணல் + தடி.]

கோணத்தண்டு *kōṇa-t-taṇḍu,* பெ.(n.) 1. ஒருபுறம் வளைந்த ஆண்குறி; penis inclined to one side. 2. வாசியை மாற்றுவதற்குப் பயன்படும் ஒக தண்டு; a stick or a wooden rod with a curve at the top used by yogis, for directing vital air from the right nostril to the left and vice versa (சா.அக.).

[கோணல் + தண்டு.]

கோணத்திசை *kōṇa-t-tišai,* பெ.(n.) இருதிசைகளுக்கிடைப்பட்ட திசை; intermediate directions between two perpendicular directions.

மறுவ. மூலத்திசை.

[கோணல் + திசை – கோணத்திசை.]

கோணத்தேளி *kōṇa-t-tēḷi,* பெ.(n.) உருவமைப்பில் கோணலாய்த் தோன்றும் மீன்; a kind of fish which seems to be having twisted body.

[கோணல் + தேளி.]

கோணப்பார்வை *kōṇa-p-pārvai,* பெ.(n.) மாறு கண் (இ.வ.); squint eye.

[கோணல் + பார்வை.]

கோணப்பாறை *kōṇa-p-pāṟai,* பெ.(n.) பூம்புகாருக்கு வடகிழக்கில் கடலடியில் அமைந்திருக்கும் ஒரு பாறை; an under sea-rock situated at north east of Poompukar.

[கோணம் + பாறை.]

கோணப்புளி *kōṇa-p-puḷi,* பெ.(n.) கொடுக்காய்ப் புளி (L.); Manilla tamarind.

[கோணல் + புளி.]

கோணம்[1] *kōṇam,* பெ.(n.) 1. வளைவு (பிங்.); curve, curvature. 2. வளைந்தவாள் (பிங்.); curved sword, scimitar. 3. யானைத்தோட்டி; elephant hook. *"கோணந் தின்ற வடுவாழ் முகத்த"* (மதுரைக். 592). 4. குறுந்தெரு; narrow short lane. *"கோணமு மறுகு மெல்லாம்"* (சீவக. 615). 5. மாப்பிலாச்சை மீன் (M.M.803.); seer-fish, bluish attaining 4 ft. in length.

வ.கோண; **Skt.** koṇa **Gk.** gonia (angle); **E.** gon.

[கோண் → கோணம்.]

கோணம்[2] *kōṇam,* பெ.(n.) 1. மூலை; angle, corner. *"கோணமொத் திலங்கோர் முழத்தினின்"* (திருவாலவா.15:2). 2. **கோணத்திசை** பார்க்க; see *kōṇa-t-tišai. "வடக்கொடு கோணந்தலை செய்யார்"* (ஆசாரக். 31). 3. ஒதுக்குப்புறமான இடம் (இ.வ.); remote, obscure place. 4. வயற்காடு; a small estate.

ME.Ang-Fr. Cornere ; **ML**. corneria; **L**. cornu; **E**. corner.

[கோண் → கோணம்.]

கோணம்[3] *kōṇam,* பெ.(n.) மூக்கு (பிங்.); nose, snout, nostril.

Skt. ghoṇka.

[கோண் → கோணம்.]

கோணம்[4] *kōṇam,* பெ.(n.) குதிரை (பிங்.); horse.

Skt. ghoṇa.

[கோ → கோணம் (ஆண் குதிரை).]

கோணம்[5] *kōṇam,* பெ.(n.) 1. நிலை; perspective. 2. கண்ணோட்டம்; point of views. ஒவ்வொரு தமிழறிஞரும் அவரவர் கோணத்தில் இலக்கி யத்தை அணுகுகிறார்கள் (உ.வ.).

[கோண் → கோணம்.]

கோணமங்கலம் *kōṇa-maṅgalam,* பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Cuddalore Dt.

[கோணம் (எருமை) + மங்கலம்.]

கோணமலை *kōṇa-malai,* பெ.(n.) திரிகோணமலை; Trikōṇa-malai a place name in Sri Lanka.

மறுவ. கோணாமலை.

[கோணம் + மலை.]

கோணமுகம் *kōṇa-mugam,* பெ.(n.) ஒருபக்கம் கோணிய முகம்; face distorted to one side, as in paralysis, or in birth (சா.அக.).

[கோணல் + முகம்.]

கோணமூக்கு *kōṇa-mūkku,* பெ.(n.) பிறவியிலேயே அல்லது காயம், அடி முதலியவற்றால் ஊனமான மூக்கு; mis-shapen or ill-shaped nose by congenital or traumatic cause (சா.அக.).

மறுவ. கோணைமுகம்.

[கோணல் + மூக்கு.]

கோணயன் *kōṇayaṉ,* பெ.(n.) அறிவிலி, பயனற்றவன்; a senseless fellow, a worthless man.

ம. கோணயன்

[கோன் →கோணயன்.]

கோணல்[1] *kōṇal,* பெ.(n.) 1.வளைவு (பிங்.); wryness, obliquity, deflection. 2. கூன் (திவா.); hump, deformity. 3. மாறுபாடு (சூடா.); crookedness, as of mind. 4. மனவுளைச்சல் (உ.வ.); uneasiness of mind.

ம. கோணல்.

[கோண் → கோணல்.]

கோணல்[2] *kōṇal,* பெ.(n.) முறையற்ற போக்கு; perversity, deviation. உன்னறிவு ஏன் கோணலாகப் போகிறது? (உ.வ.).

[கோண் → கோணல்.]

கோணல்குணம் *kōṇal-kuṇam,* பெ.(n.) 1. மனத் துன்பம்; uneasiness of mind. 2. ***கோணல்*** பார்க்க; see *kōṇal* (சா.அக.).

[கோணல் + குணம்.]

கோணல்சம்பா *kōṇal-sambā,* பெ.(n.) நெல்வகை (விவசா.1); a kind of paddy.

[கோணல் + சம்பா.]

கோணல்மாணல் *kōṇal-māṇal,* பெ.(n.) 1. தாறு மாறு; crookedness, of a complex nature, difficult to set right. 2. மாறுபாடு; confused state or condition (சா.அக.).

[கோணல் + மாணல்.]

கோணல்மூஞ்சி *kōṇal-mūñji,* பெ.(n.) வெறுப்பு, சிரிப்பு முதலியவற்றைக் காட்டும் முகம் (இ.வ.); grimace, wry face expressing annoyance, etc. or meant to raise a laugh.

[கோணல் + மூஞ்சி.]

கோணல்வளைவு *kōṇal-vaḷaivu,* பெ.(n.) வளைவு வகை (கட்டட.நாமா.16); skew.

[கோணல் + வளைவு.]

கோணலயம் *kōṇalayam,* பெ.(n.) அரிவாள்; a sickle, reaping hook.

[கோணல் + அயம் (இரும்பு).]

கோணலிலை *kōṇal-ilai,* பெ.(n.) காட்டுநெல்லி; triple-nerved mercury (சா.அக.).

[கோணல் + இலை.]

கோணவட்டம்[1] *kōṇa-vaṭṭam,* பெ.(n.) கோணலா யுள்ள வட்டம்; irregular circle.

[கோணல் + வட்டம்.]

கோணவட்டம்[2] *kōṇa-vaṭṭam,* பெ.(n.) அரசவிருதுகளுள் ஒன்று; an emblem of royalty. *"கோணவட்டக் கோல முகத்த" (பெருங். மகத. 20:22).*

[கோணல் + வட்டம்.]

கோணவழக்கு *kōṇa-vaḻakku,* பெ.(n.) நேர்மை யற்ற சொற்போர்; perverse argument.

[கோணல் + வழக்கு.]

கோணவாசல் *kōṇa-vāšal,* பெ.(n.) அரண்மனை முதலியவற்றில் வளைந்து செல்லும் வாயில் (இ.வ.); gateways leading to a hall, circuitously arranged, as in a palace.

[கோணம் + வாசல்.]

கோணவாய் *kōṇa-vāy,* பெ.(n.) கோணலாயுள்ள வாய்; wry mouth.

[கோணம் + வாய்.]

கோணவாயன் *kōṇa-vāyaṉ,* பெ.(n.) பன்றி; pig.

மறுவ. பன்றி, மிறுதாறு.

[கோணல் + வாயன்.]

கோணவாளை *kōṇa-vāḷai,* பெ.(n.) வாளைமீன் வகைகளிலொன்று; a kind of fish.

[கோணல் + வாளை.]

கோணவிட்டம் *kōṇa-viṭṭam,* பெ.(n.) மூலைகளை இணைக்கும் விட்டம்; a cross beam which connects the corners.

[கோணம் + விட்டம்.]

கோணவிருட்சம் *kōṇa-viruṭšam,* பெ.(n.) கரும்பு; sugarcane (சா.அக.).

[கோல் → கோன் → கோண் → கோணம் + விருட்சம்.]

கோணவீச்சம் *kōṇa-viccam,* பெ.(n.) ஒரு புள்ளியிலிருந்து எழும் இருவேறு கோடுகளுக் கிடைய உள்ள தூரம்; amplitude of two lines starting from a particular point.

[கோணம் + வீச்சம்.]

கோணவுடம்பு *kōṇa-v-udambu,* பெ.(n.) கருவிலேயே ஒரு பக்கமாகத் திரும்பிக் கோண வடிவாய்க் காணப்படும் உடம்பு; the body of a baby in the womb which is so distorted to one side that it exhibits a ghastly appearance (சா.அ.க).

[கோணல் + உடம்பு.]

கோணவெழுச்சி *kōṇa-v-eḻucci,* பெ.(n.) உள் வளைந்த ஆண்குறியெழுச்சி; painful erection with incurvation of the penis towards the scrotum occurring in gonorrhoea (சா.அக.).

[கோணல் + எழுச்சி.]

கோணவேல் *kōṇa-vēl,* பெ.(n.) மரு என்ற முள்ளில்லாத வேல மரவகை; divi-divi tree.

மறுவ: கோணவேலன்.

[கோணல் + வேல்.]

கோணவேலன் *kōṇa-vēlaṉ,* பெ.(n.) ***கோணவேல்*** பார்க்க; see *kōṇa-vēl.*

[கோணம் + அளவு.]

கோணளவு *kōṇaḷavu,* பெ.(n.) கோணங்களின் மதிப்பீடு; angular measurement.

[கோணம் + அளவு.]

கோணற்கழுத்து *kōṇaṟ-kaḻuttu,* பெ.(n.) ***கோணக்கழுத்து*** பார்க்க; see *kōṇa-k-kaḻuttu* (சா.அக.).

[கோணல் + கழுத்து.]

கோணற்காய் *kōṇaṟ-kāy,* பெ.(n.) ***கோணை வேல்*** பார்க்க; see *kōṇai-vēl* (சா.அக.).

[கோணல் + காய்.]

கோணற்காரன் *kōṇaṟ-kāraṉ,* பெ.(n.) ஒரு மரம்; mountain snow-ball tree (சா.அக.).

[கோணல் + காரன்.]

கோணற்கால் *kōṇaṟkāl,* பெ.(n.) உள் வளைந்த கால்; bandy leg (சா.அக.).

மறுவ: கோணக்கால.

[கோணல் + கால்.]

கோணற்பாய் *kōṇaṟpāi,* பெ.(n.) சிறுமரப்பாய்; wooden mat.

[கோணல் + பாய்.]

கோணன் *kōṇaṉ,* பெ.(n.) 1. கூனன் (பிங்.); hump-back. 2. அற (நீதி)க்கேடன்; unjust, unrighteous person. *"கொடும ராதியைப் பண்ணிடுங் கோணன்" (சிவதரு. பாவ. 66).*

[கோணு → கோணன்.]

கோணன் *kōṇaṉ,* பெ.(n.) காரி (சனி); saturn.

ம. கோணன்.

[கோண் → கோணன்.]

கோணா *kōṇā* பெ.(n.) ஓர் நீலகிரிப் பூடு; Nilgiri herb elm (சா.அக.).

[கோண் → கோணா.]

கோணாக்கிணாக்கி *kōṇā-k-kiṇākki,* பெ.(n.) சிற்றரத்தை; nodding galangal (சா.அக.).

[கோணக்கிணாக்கி → கோணாக்கிணாக்கி.]

கோணாகோணம் *kōṇā-kōṇam,* பெ.(n.) கோணத்துட் கோணம் (தொல். எழுத்து. 311, உரை); angular figure within an angular figure.

[கோணம் + கோணம். கோணகோணம் → கோணாகோணம்.]

கோணாமாணாவெனல் *kōṇā-māṇā-v-eṉal,* பெ.(n.) தாறுமாறாதற் குறிப்பு; expr. signifying confusion or disorderliness.

[கோணு → கோணா + மாணா + எனல்.]

கோணாமுகம் *kōṇā-mugam,* பெ.(n.) சூழ்ந்த அகழி யிருக்கை (வின்.); a fortified capital surrounded by a ditch.

[கோள் → கோண் → கோணா + முகம்.]

கோணாய் *kōṇāy,* பெ.(n.) 1. ஓநாய்; Indian wolf. 2. ஆண் நரி; male jackal.

[கொள் → கோள் → கோண் + நாய் – கோணாய்.]

கோணாவட்டம் *kōṇā-vaṭṭam,* பெ.(n.) 1.கோணத்துள் வட்டம் (தொல். எழுத்து. 311, உரை);

circle within an angular figure. 2. அரச விருதுகளுள் ஒன்று; an emblem of royalty. *"கூந்தற் பிச்சமுங் கோணா வட்டமும்" (பெருங். உஞ்சைக். 46:62).*

[கோணம் + வட்டம் - கோணவட்டம் →கோணாவட்டம்.]

கோணாவலை *kōṇā-valai,* பெ.(n.) இறால்மீன் பிடிக்கப் பயன்படும் வலை (மீனவ.); net used for prawn fishing.

[கோணம் + வலை – கோணவலை →கோணாவலை.]

கோணி[1] *kōṇi,* பெ.(n.) அத்தி; country fig.

[கோளி → கோணி.]

கோணி[2] *kōṇi,* பெ.(n.) 1. சாக்குப்பை; sacks made of jute fibre, gunny bag, sack cloth. கோணி கொண்டது, எருது சுமந்தது (பழ). 2. எட்டு மரக்கால் கொண்ட ஓர் அளவு; a measure of capacity 2 *tūṇi = 8 marakkāl. "கோணித் தீம் பசும்பால் வாரெரித்திட்டு" (தைலவ. தைல. 135).* 3. கந்தை; tatters. 4. பதினாயிரங் கோடா கோடி; ten thousand crores of a crore. 5. இருதூணி என்னுமோ ரளவை; a measure knownas '*iru thooni*'.

மறுவ. கோணிகை, கோணிப்பை, கோணியல்.

ம. கோணி; **க., தெ., து., பட.** கோணி; **skt.** gōṇi.

[கோள் → கோளி → கோணி.]

கோணி[3] *kōṇi,* பெ.(n.) பன்றி (பிங்.); boar, hog, as having a snout.

[கோண் → கோணி.]

கோணிக்கயிறு *kōṇi-k-kayiṟu,* பெ.(n.) சாக்குத் தைக்கும் சணல்நூல் (இ.வ.); gunny twine.

ம. கோணிக்கயர்.

[கோணி + கயிறு.]

கோணிக்கவாயன் *kōṇikkavāyaṉ,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[கோணி + கவையன் – கோணிக்கவையன் → கோணக்கவாயன்.]

கோணிக்குணங்கல் *kōṇi-k-kuṇaṅgal,* பெ.(n.) மனம் தளர்தல்; getting uneasiness of mind through annoyance (சா.அக.).

[கோண் → கோணி + குணங்கல்.]

கோணிக்குறுகல் *kōṇi-k-kuṟugal,* பெ.(n.) மூப்பினால் வளைந்து சிறுத்தல்; becoming short and crooked through old age (சா.அக.).

[கோணி + குறுகல்.]

கோணிக்கொடு-த்தல் *kōṇi-k-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) மனமில்லாமற் கொடுத்தல்; to give grudgingly or with reluctance.

[கோணு + கொடு – கோணிக்கொடு.]

கோணிக்கொள்ளல் *kōṇi-k-koḷḷal,* பெ.(n.) 1. வளைந்து கொள்ளல்; being bent. 2. சினங் கொள்ளல்; getting angry. 3. பிணக்குக் கொள்ளல்; quarrelling as of lovers (சா.அக.).

[கோணி + கொள்ளல்.]

கோணிகை[1] *kōṇigai,* பெ.(n.) ***கோணி[2]*** பார்க்க; see *kōṇi[2]*.

[கோண் → கோணிகை.]

கோணிகை[2] *kōṇigai,* பெ.(n.) சிற்றூரில் ஏற்பட்டிருந்த பழைய வரிவகை (I.M.P.T.P. 234); an ancient village cess.

[கோண் → கோணிகை.]

கோணித்தட்டம்மை *kōṇi-t-taṭṭammai,* பெ.(n.) ஒருவகைத் தட்டம்மை; a kind of small - pox with elevated or raised flat patches in the body (சா.அக.).

மறுவ: கோணித்தட்டு.

[கோணி + தட்டம்மை.]

கோணித்தட்டு *kōṇi-t-taṭṭu,* பெ.(n.) ***கோணித்தட்டம்மை*** பார்க்க; see *kōṇi-t-taṭṭammai.*

[கோண் → கோணி + பட்டு.]

கோணிப்பட்டு *kōṇi-p-paṭṭu,* பெ.(n.) பட்டுவகை (S.I.I.VIII,23); a kind of silk.

[கோண் → கோணி + பட்டு.]

கோணிப்பட்டை *kōṇi-p-paṭṭai,* பெ.(n.) சாக்குத் துணி; coarse gunny-cloth.

[கோணி + பட்டை.]

கோணிப்பை *kōṇi-p-pai,* பெ.(n.) சாக்கு; coarse sack, gunny-bag.

[கோணி + பை.]

கோணிப்போ-தல் *kōṇi-p-pō-,* 5 செ.கு.வி. (v.i.) வளைதல்; to grow wry (சா.அக.).

[கோண் → கோணி + போ.]

கோணியம் *kōṇiyam,* பெ.(n.) ***கோப்பிரண்டை*** பார்க்க; see *kōppiraṇḍai.* (சா.அக.).

[கோப்பிரண்டை → கோணியம்.]

கோணியல் *kōṇiyal,* பெ.(n.) ***கோணிப்பை*** பார்க்க; see *kōṇi-p-pai.*

[கோணி → கோணியல்.]

கோணியலூசி *kōṇiyal-ūśi,* பெ.(n.) ***கோணியூசி*** பார்க்க; see *kōṇi-y-ūśi.*

[கோணி → கோணியல்.]

கோணியூசி *kōṇi-y-ūśi,* பெ.(n.) சாக்குத் தைக்கும் ஊசி; packing-needle for sewing gunny bags, bodkin.

மறுவ: கோணியலூசி.

ம. கோணிசூசி.

[கோணி + ஊசி.]

கோணீசுவரர் *kōṇiśuvarar,* பெ.(n.) திருக்கோண மாமலையிலே கோயில் கொண்டிருக்கும் இறைவன்; God at Tirikonamalai in Sri Lanka.

[கோணி + ஈசுவரன்.]

கோணு-தல் *kōṇu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. வளைதல் (பிங்.) ; to be bent, curved. 2. கோணலா யிருத்தல்; to be awry, crooked, oblique. 3. நெறி பிறழ்தல்; to deviate, swerve from the proper course. 4. முகங்கோணுதல், மாறுபடுதல் (சூடா.); to be perverse, to be changed as circumstances. 5. வெறுப்புக் கொள்ளுதல்; to have dislike or aversion. *"கோணாதே குலவி நுழைந்தனையே" (அருட்பா. 6. திருவடிப்புகழ்ச்.1:4).* 6. சாய்தல்; to incline.

ம. கோணுக.

Fin. kaantya, kaantaa (to turn), kaannos (turn); **Kari.** keanda; **Est.** kaanata; **Komi.** kezni; **Mong.** yandai.

[கோள் → கோண் → கோணு-தல்.]

கோணூசி *kōṇūśi,* பெ.(n.) ***கோணியூசி*** பார்க்க; see *kōṇi-ūśi.*

[கோண் + ஊசி.]

கோணை[1] *kōṇai,* பெ.(n.) 1. வளைவு; curvature. 2. கோணல்; crookedness. 3. கொடுமை (அக.நி.); severity, cruelty. 4. தொல்லை; difficulty, trouble. *"கோணை பெரிதுடைத்தெம் பெம்மானைக் கூறுதலே" (திவ்.திருவாய். 2,5:10).* 5. வலிமை; strength. *"கோணை யிருங்குண்டை" அட்டப். திருவேங்.மா. 58).*

[கோண் → கோணை.]

கோணை[2] *kōṇai,* பெ.(n.) அழிவின்மை (திவா.); imperishability.

[கோள் = வட்டம், நிறைவு, அழிவின்மை. கோள் → கோண் → கோணை.]

கோணைக்கத்தி *kōṇai-k-katti,* பெ.(n.) அறுவை செய்வதற்குப் பயன்படும் வளைந்த கத்தி; a curved knife used in surgery (சா.அக.).

[கோணை + கத்தி.]

கோணைக்கழுத்தன் *kōṇai-k-kaḻuttaṉ,* பெ.(n.) வளைவுள்ள கழுத்துள்ளோன்; a man of crooked neck (சா.அக.).

[கோண் → கோணை + கழுத்து + அன்.]

கோணைக்களிறு *kōṇai-k-kaḷiṟu,* பெ.(n.) வலுவுள்ள இளம்யானை; male of the elephant.

[கோணை + களிறு.]

கோணைக்குரங்கன் *kōṇai-k-kuraṅgaṉ,* பெ.(n.) சூழ்ச்சிக்குணமும் குறும்புத்தனமும் உள்ளவன்; a man of crooked and mischivous disposition (சா.அக.).

[கோணை + குரங்கு + அன்.]

கோணைத்தலைப்பாடி *kōṇai-t-talaippāḍi,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thanjai Dt.

[கோணை + தலை + பாடி.]

கோணைப்பல் *kōṇai-p-pal,* பெ.(n.) 1. ஒழுங் கில்லாமல் வளர்ந்த பல்; an irregular tooth. 2. கோரைப்பல்; canine tooth.

ம. கொம்பல்லு; பட. கோணெகல்லு.

[கோணை + பல்.]

கோணைப்பெருமான் *kōṇai-p-perumāṉ,* பெ.(n.) ஒற்றைத் திருவடிச் சிவம்; Śiva in his *Egapādādam form.*

[கோணை + பெருமான்.]

கோணைப்பேச்சு *kōṇai-p-pēccu,* பெ.(n.) அயன் மொழி (இ.வ.); foreign language.

[கோண் → கோணை + பேச்சு.]

கோணைமாதம் *kōṇai-mādam,* பெ.(n.) சிலை மாதம் (மார்கழி) (வின்.); *Mārkaḻi,* as an unpropitious month.

மறுவ. பீடை மாதம்.

[கோணை + மாதம்.]

கோணைமுகம் *kōṇai-mugam,* பெ.(n.) ***கோண முகம்*** பார்க்க; see *kōṇa-mugam* (சா.அக.).

[கோண் → கோணை + முகம்.]

கோணையன் *kōṇaiyaṉ,* பெ.(n.) தீக்குண முள்ளவன் (இ.வ.); man of crooked disposition.

[கோணை → கோணையன்.]

கோணையாராய்ச்சி *kōṇai-y-ārāycci,* பெ.(n.) தவறான ஆய்வு; perverted research.

[கோணை + ஆராய்ச்சி.]

கோணைவாயன்(கோணைவாய்ச்சி) *kōṇai-vāyaṉ,* பெ.(n.) பிறவியில் அல்லது வலிப்பினால் ஒருபக்கம் வளைந்த வாய் உள்ளவன்-ள்; man with a writhed or distorted mouth due to congenital causes or nervous affections (சா.அக.).

[கோணை + வாய் + அன்.]

கோணைவேல் *kōṇai-vēl,* பெ.(n.) முள்ளில்லாத வேல்; American sumach (சா.அக.).

மறுவ. கோணற்காய்

[கோணை + வேல்.]

கோத்தக்கொடி *kōtta-k-koḍi,* பெ.(n.) இலந்தை jujube (சா.அக.).

[கோத்தல் + கொடி.]

கோத்தகிரி *kōtta-giri,* பெ.(n.) நீலகிரி மாவட்டத்தில் அமைந்த ஓர் ஊர்; a village situated in Nilgiris District.

[கோத்தர் + கிரி – கோத்தகிரி. கேரி → கிரி]

கோத்தர்கள் வாழும் இடமாதலால் இப் பெயர் பெற்றது.

கோத்தணி *kōttaṇi,* பெ.(n.) ***கொடிமுந்திரி*** பார்க்க; see *koḍi-mundiri.*

[கொத்து + அணி – கொத்தணி → கோத்தணி.]

கோத்தணிகை *kōttaṇigai,* பெ.(n.) ***கோத்தணி*** பார்க்க; see *kōttaṇi.*

[கோத்தணி → கோத்தணிகை.]

கோத்தந்தம்[1] *kō-t-tandam* பெ.(n.) 1. மாட்டுக் கொம்பு; horn of cattle. 2. மாட்டுப்பல்; tooth of cow.

மறுவ. கோதந்தம்.

[கோ + தந்தம்.]

கோத்தபுட்பகம் *kōttaputpagam,* பெ.(n.) செம்மரம்; redwood; red cedar (சா. அக.).

[கோத்தல் + புட்பகம்.]

கோத்தம் *kōttam-,* பெ.(n.) நீலமலையில் பேசப்படும் திருந்தாத் திராவிட மொழிகளுள் ஒன்று; one of the uncultivated the Dravidian languages, which is spoken at Nilgiri hills.

[கோ → கோத்தம்.]

கோத்தமாலை *kōtta-mālai,* பெ.(n.) தொடையல்; garland.

[கோத்த + மாலை.]

கோத்தர் *kōttar,* பெ.(n.) நீல மலைவாழ் பழங்குடியினத்தவர்; Kotas a tribe on the Nilgiris District.

[கோ = மலை. கோ → கோத்தர் (மலை வாழ்நர்).]

கோத்தகிரி முதலிய ஏழு ஊர்களில் மொத்தம் சில நூறு கோத்தர் வாழ்கின்றனர். 1981–ல் 492 பேர் இருந்தனர். கோத்தர் தம் ஊர்களைக் 'கோகால்' என அழைக்கின்றனர்.

கோத்தர்மொழி *kōttar-moḻi,* பெ.(n.) ***கோத்தம்*** பார்க்க; see *kōttam.*

[கோத்தர் + மொழி]

கோத்தற்கோவை *kōttaṟ-kōvai,* பெ. (n.) காக்கைப் பாலை; esculent-leaved false kamela (சா. அக.).

[கோத்தல் + கோவை]

கோத்தனம் *kōttaṉam,* பெ.(n.) நாற்பது சரமுள்ள முத்துமாலை; pearl garland is having forty strings.

[கோ + தனம்.]

கோத்தனி *kōttaṉi,* பெ.(n.) ***கொடிமுந்திரி*** பார்க்க; see *koḍi-mundiri.*

[கோத்தணி → கோத்தனி.]

கோத்திகவாசனம் *kōttiga-v-āsaṉam,* பெ.(n.) முழந்தாளைச் சுண்டிக் குளசிரண்டில் பதியவைத்து உட்கார்ந்திருத்தல்; a posture in which the legs are folded crosswise and the inward joints of the feet made to rest in the flexure on either side (சா. அக.).

[குத்தகம் → கோத்திகம் + ஆசனம்.]

கோத்திரப்பெயர் *kōttira-p-peyar,* பெ.(n.) குடிப்பெயர் (பன்னிருபா. 146); patronymic.

[கோத்திரம் + பெயர்.]

கோத்திரம்[1] *kōttiram,* பெ.(n.) 1. தொட்டி செய் நஞ்சு; a prepared arsenic. 2. கொடிமுந்திரிகை; common grape. 3. நெட்டிப்புல்; sola pith grass. 4. மறுபிறப்பிற்குக் காரணமான தீவினை; karma determining re-birth. 5. நிலம்; earth. 6. காடு; forest. 7. குடை; umbrella (சா.அக.).

[கோ + திரம்.]

கோத்திரம்[2] *kōttiram,* பெ.(n.) 1. மரபுவழி; lineage 2. தலைமுறை; generation. 3. கால்வழி; lineage, family. *"எவ்வூரெக் கோத்திரத்தீர்" (பெருங். மகத. 6:185).*

[கொத்து → கோத்து → கோத்திரம்.]

கோத்திரம்[3] *kōttiram,* பெ.(n.) 1. மாட்டுக்கொட்டில்; protection or shelter for cows, cow-pen. cow-shed stable for cattle. 2. மாட்டுமந்தைக்குரிய முனிவரிடம் பயின்ற மாணவரைச் சுட்டும் சொல்; a word denoting the owner-cum teacher of a cow-pen, who considered to be the lineage head of a student's heritage. "கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்" 3. பிராமணரின் 49 குடிப்பிரிவுகளுள் ஒன்று; one of the 49 Gotras of Brahmins.

[கோ + திரம் – கோத்திரம். ஒ.நோ. மா + திரம் – மாத்திரம். கோ = மாடு, ஆவு, ஆன். கோத்திரம் = மாட்டு மந்தை, மாட்டுத்தொழுவம்.]

த. கோத்திரம் > **skt.** Gōtra.

மாட்டுக் கொட்டிலைக் குறித்த இச்சொல் வடமொழியில் Gōtra எனவும் Gōtraḥ எனவும் வழங்குகிறது. எந்த மாட்டுக் கொட்டிலுக்கு உரிமையுடைய முனிவரிடம் ஒரு மாணவன் பயின்றானோ அவன் அந்த முனிவரின் பெயரைத் தன் குடிப்பெயராகக் கொள்வது ஆரியரின் மரபாகும். இதனை, an affix used for forming a Patr.Li; a tribe, subdivision in Brāhman Caste 49 Gōtras are reckoned and supposed to be sprung from and named after celebrated teachers as Sanḍilya, kasyapa, Gauthama, Bharadvāja etc., என்று மாணியர் வில்லியம்சு வடமொழி அகரமுதலியில் குறிப்பிடுகிறார்.

கோத்திரம்[4] *kōttiram,* பெ.(n.) சிறுவரகு (மலை.); kora millet.

[கோத்து = மலை. கோத்து → கோத்திரம்.]

கோத்திரமின்மை *kōttira-miṉmai,* பெ.(n.) அருகன் எண்குணங்களுள் மறுபிறப்புக்குரிய வினை யில்லாமை (பிங்.); condition of being free from karma that causes re-birth, one of *arugaṉ-eṉ-kuṇam.*

[கோத்திரம் + இன்மை.]

கோத்திரி[1] *kōttiri,* பெ.(n.) 1. கொடிமுந்திரிகை; grape vine. 2. முசுமுசுக்கை; bristly bryony.

[கோத்து → கோத்திரி.]

கோத்திரி[2] *kōttiri,* பெ.(n.) மலை; mountain. *"கொங்கின் புசககோத்திரி" (திருப்பு. 1187).*

[குவடு → கோடு → கோ → கோத்து → கோத்திரி.]

கோத்திரி[3] *kōttiri*, பெ.(n.) தெய்வங்களுக்குப் படைப்பிட்டு அதன் பேரில் நாட்டும் திரி அல்லது சிறு பந்தம் (நாஞ்சில்) ; burning wick or small torch placed on an offering of cooked rice to a deity.

ம. கோத்திரி.

[கோ + திரி.]

கோத்திரிகை *kō-t-tirigai*, பெ.(n.) 1. கொடி முந்திரிகை; grape vine. 2. முசுமுசுக்கை; rough bryony (சா. அக.).

[கோத்து →கோத்திரிகை.]

கோத்திரேயம் *kōttirēyam*, பெ.(n.) வெண்பருத்தி; white cotton (சா. அக.).

கோத்திரை *kōttirai*, பெ.(n.) 1. நிலம் (பிங்.); earth. 2. மலை; mountain.

[கோ →கோத்து (மலை) →கோத்திரை.]

கோத்திழை-த்தல் *kōttiḻai-*, 4 செ.குன்றாவி.(v.t.) பாய், கூடை முதலியவற்றைப் பழுதுபார்த்தல்; to patch up a hole or rent, as in a mat, a basket.

[கோ →கோர்→கோத்து + இழை-.]

கோத்துக்கொடு-த்தல் *kōttu-k-koḍu-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. பிறருக்கு ஊசியில் நூலைக் கோத்துக் கொடுத்தல்; to thread a needle and pass it to another. 2. இருவர்க்குள் பகை யுண்டாகும்படி ஒருவர் கூற்றை மற்றவர்க்கு மாறுபடுத்திக் கூறுதல் (வின்.); to tell tales and create enmity between two persons.

[கோர் → கோத்து + கொடு-.]

கோத்தும்பி *kō-t-tumbi*, பெ.(n.) 1. அரசவண்டு; king of beetle. 2. 'கோத்தும்பீ' என்ற தொடரைப் பாட்டின் ஈறுதோறுங் கொண்ட திருவாசகப் பதிகம்; a poem in *Tiruvāšagam* with the refrain `*kōttumbi*' at the end of each verse.

[கோ + தும்பி.]

கோத்துவாங்கு[1]**-தல்** *kōttu-vāṅgu-*, 5 செ. கு.வி. (v.i.) ஆடைக்கரையை வேறு நூலில் தனியாக நெய்தல்; to weave the borders of a cloth with threads of a different colour.

கோத்துவாங்கு[2]**-தல்** *kōttu-vāṅgu-*, 5 செ. குன்றாவி. (v.t.) கோணி முதலியன தைத்தல்; to do coarse sewing as of gunny bags, mats.

[கோத்து + வாங்கு-.]

கோத்துவிடு-தல் *kōttu-viḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1.துன்பத்துக்கு உள்ளாக்குதல்; to bring into difficulties. 2. பகைமூட்டுதல் (வின்.); to show discord, create enmity.

[கோத்து + விடு-.]

கோத்தை *kōttai*, பெ.(n.) 1. பழுது; defect, blemish, flaw. *"கோத்தை யுண்டாமோ" (பரிபா. 175:5).* 2. குருடன்; a blind person. 3. பீளை; rheum. secretion from the eyes. 4. அழிம்பன்; destroyer. 5. ஆண்நரி; male jackal.

Gk. kakos.

[கோது →கோத்து →கோத்தை.]

கோத்தொட்டுண்ணப்பாலது *kōttoṭṭuṇṇa-p-pāladu*, பெ.(n.) அரசன் உரிமையுடன் பெற்று நுகர்தற்குரியதான இறைவரி கடமை முதலிய வரிவகைகள்; land revenue etc lawfully accruing to a king. *"ஊராட்சியும் வட்டி நாழியும் உள்ளிட்டுக் கோத்தொட்டுண்ணப் பால தெவ்வகைப் பட்டதும் கோக்கொள்ளாதேய் பள்ளிச் சந்தத்துக்கேய் பெறுவதாகவும்" (பெரிய லெய்டன் செப்பேடுகள்.).*

[கோ (அரசன்) + தொட்டு + உண்ணற்பாலது.]

கோதஓடைப்பட்டி *kōda-ōḍaippaṭṭi*, பெ.(n.) தேனி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Theni Dt.

[கோதன் + ஓடை + பட்டி.]

கோதகம் *kōdagam*, பெ.(n.) 1. சுக்குநாறிப் புல்; ginger grass. 2. அழிஞ்சில்; sage leaved alangium (சா.அக.).

[கோது → கோதகம்.]

கோதங்கிப்பட்டி *kōdaṅgi-p-paṭṭi*, பெ.(n.) தேனி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Theni Dt.

[கோடங்கி →கோதங்கி + பட்டி.]

கோதடி *kōdaḍi*, பெ.(n.) கப்பற் கயிற்றை உரைசாமற் காக்குங் கருவி (Naut.); chafing-gear, any material used to protect sails or rigging at points where they are exposed to friction.

[கோ + தடி.]

கோதண்டப்புலியர் *kōdaṇḍa-p-puliyar*, பெ.(n.) கள்ளர்குடிப் பட்டப்பெயர்களுள் ஒன்று (கள்ளர் சரித்.பக்.98); a caste title of Kaḷḷars.

[கோதண்டம் + புலி + அர்.]

கோதண்டபாணி *kōdanda-pāṇi,* பெ.(n.) இராமன் (வில்லை கையிற் கொண்டவன்); Rama, as having bow *Kodandam* in his hand. *"கோதண்ட பாணி குலமருகன்" (திருப்போ. சந்நிதி. மாலை, 66).*

[கோதண்டம் + தண்டம் + பாணி]

கோதண்டம்[1] *kōdaṇḍam,* பெ.(n.) 1. வில்; bow. *"கனகவரைக் கோதண்டன்" (திருப்போ. சந். தாலாட்டு காப்பு.).* 2. இராமன் வில்; the bow of Rama. 3. புருவ நடுவம்; space between eyebrows. *"அணைவரிய கோதண்ட மடைந்தருளி" (சி.சி. 9:8).*

[கோ + தண்டம்.]

கோதண்டம்[2] *kōdaṇḍam,* பெ.(n.) 1. பள்ளிச் சிறாரைத் தண்டிக்குந் தொங்கு கயிறு (உ.வ.); rope or swing suspended in old-time schools for infliction of punishment. 2. பழங்காலத்தில் பிடிபட்ட குற்றவாளியின் கைகால்களைக் கட்டி தண்டிக்க மரத்தினால் செய்யப்பட்ட ஓர் அமைப்பு; stocks in ancient time used to punish criminals (prisoners).

ம. கோதாண்டம்; **க.** கோதண்ட; **தெ.** கோதண்டமு.

[கோ + தண்டம்.]

கோதண்டவெள்ளம் *kōdanda-vellam,* பெ.(n.) ***கோதண்டவெளி*** (தக்கயாகம்.334, உரை) பார்க்க; see *kōdaṇḍa-veḷi.*

[கோதண்டம் + வெள்ளம்.]

கோதண்டவெளி *kōdaṇḍa-veḷi,* பெ.(n.) நெற்றிக் கண் (தக்கயாகப்.34, உரை.); Śiva's third eye, in the forehead.

மறுவ. கோதண்டவெள்ளம்.

[கோதண்டம் + வெளி.]

கோதண்டவேர் *kōdaṇḍa-vēr,* பெ.(n.) கணுக்கால்; ankle (சா. அக.).

[கோதண்டம் + வேர்.]

கோதண்டை *kōdaṇḍai,* பெ.(n.) சிற்றூர்ப் பெயர்; name of a village.

[கோ + தண்டலை – கோத்தண்டலை → கோதண்டை.]

கோதத்தம் *kōdattam,* பெ.(n.) 1. அரிதாரம்; yellow orpiment. 2. ஒரு வெண்தாதுவுப்பு; a white mineral substance, apparently an earthy salt (சா.அக.).

[கோ + தத்தம்]

கோதந்தம் *kōtandam,* பெ.(n.) 1. மாட்டுக்கொம்பு; horn of cattle. 2. ஆவின் பல்; cow's tooth (சா.அக.).

[கோ + தந்தம்]

கோதந்தி *kōdandi,* பெ.(n.) 1. தாடை; jaw. 2. கதுப்பு; chin. 3. கன்னம்; cheek (சா. அக.).

[கொழுது + அந்தி – கொழுதந்தி → கோதந்தி]

கோதப்பட்டி *kōdappaṭṭi,* பெ.(n.) தேனி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Theni Dt.

[கோதன் + பட்டி.]

கோதம்[1] *kōdam,* பெ.(n.) 1. பொல்லாங்கு; fault. *"கோதஞ்செய் குடர்கள்" (சீவக. 1583).* 2. சீதாங்க செய்நஞ்சு (W.); a mineral poison.

[கோது → கோதகம்]

கோதம்[2] *kōdam,* பெ.(n.) 1. சினம்; anger. *"கோதம்புரி மனத்தார்" (பிரமோத்.13:12).* 2. குற்றம்; fault; blemish. 3. வெறுப்பு; hatred aversion.

[கதம் → கொதம் → கோதம்]

கோதம்[3] *kōdam,* பெ.(n.) ***கோத்திரம்*** பார்க்க; see *kōttiram. "நீசகோதமும் நின்றுதித்திட" (மேருமந். 332).*

[கோத்திரம் → கோதம்]

கோதமன் *kōdamaṉ,* பெ.(n.) ***கௌதமன்*** பார்க்க; see *koudamaṉ. "கோதமன் காதலன் கூறன் மேயினான்" (கம்பரா. கார்முக. 11).*

[கவுதமன் → கோதமன்.]

கோதமனார் *kōdamaṉār,* பெ.(n.) கடைச்சங்கப் புலவருள் ஒருவர் (பாவலர். சரித்.); a poet in the last Tamil Academy of Sangam age.

[கோதமன் + ஆர்.]

கோதமாயவா *kōda-māyavā,* பெ.(n.) கோதுமை; wheat (சா. அக.).

[கோதுமை + யவம்.]

கோதரணி *kōdaraṇi,* பெ.(n.) ஒருவகைப் பூ; a kind of flower (சா. அக.).

[கோது + (அரளி) அரணி.]

கோதரபுட்பி *kōdara-puṭpi,* பெ.(n.) ஒரு பூடு; a plant (சா. அக.).

[கோதரம் + புட்பி.]

கோதரம் *kōdaram,* பெ.(n.) சுக்கு; dry ginger (சா.அக.).

[கோது →கோதரம்.]

கோதரவம் *kōdaravam,* பெ.(n.) 1. உடும்பு; guana. 2. ஒரு கொடிய நச்சுப்பாம்பு; a very poisonous snake (சா. அக.).

[கோது + அரவம்.]

கோதல் *kōdal,* பெ.(n.) 1. அழிந்த பண்டம்; decayed or decomposed matter or substance. 2. முத்தமிடல்; kissing. 3. எயிற்று நீர்; sucking the lips (சா. அக.).

[கொழுது →கோது →கோதல்.]

கோதலூத்து *kōdalūttu,* பெ.(n.) தேனி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Theni Dt.

[கொழிதல் →கோதல் + ஊத்து.]

கோதவாடி *kōda-vāḍi,* பெ.(n.) கோவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kovai dt.

[கோதன் + (பாடி) வாடி.]

கோதளங்காய் *kōdaḷaṅkāy,* பெ.(n.) சமுத்திராப் பழம்; common Indian oak (சா. அக.).

[கோதளம் + காய்.]

கோதனம்[1] *kōdaṉam,* பெ.(n.) 1. ஆவின்கன்று (பிங்.); calf. 2. ஆன் (பசுச்) செல்வம்; cows considered as wealth. *"மாதனம் கோதனங்கள்" (திருவாலவா. 40:4).*

மறுவ: கோதன்னம்.

[கோ + தனம்.]

கோதா[1] *kōdā,* பெ.(n.) உடும்பு; guana.

[கோது →கோதா.]

கோதா[2] *kōdā,* பெ.(n.) 1. கொம்மட்டி; small water-melon. 2. நாரத்தை; citron (சா. அக.).

ம. கோத; Skt. gōdhā.

[கோது →கோதா.]

கோதாக்கினி *kōdākkiṉi,* பெ.(n.) செழுமலர்க் கொன்றை; a flowering tree of the cassia genus.

[கோது + (அழகினி) அக்கினி.]

கோதாட்டம் *kōdāṭṭam,* பெ.(n.) ***கோதாட்டு*** பார்க்க (வின்.); see *kōdāṭṭu.*

[கொழுது →கோது + ஆட்டம்.]

கோதாட்டு[1]**-தல்** *kōdāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தீவினை முதலிய குற்றங்களைப் போக்குதல்; to cleanse or purify from sin or dirt. *"நந்தம்மைக் கோதாட்டி" (திருவாச. 7:17).* 2. சீராட்டுதல்; to caress, tend with care. *"குருவிபறவாமற் கோதாட்டி" (பட்டினத்.திருப்பா.17:8).*

[கொழுது →கோது + ஆட்டு.]

கோதாட்டு[2] *kōdāṭṭu,* பெ.(n.) 1. அழுக்கைப் போக்கித் தூய்மை செய்தல் (சா. அக.); purifying by removing the dirt. 2. வருத்துகை; vexing, ill-treatment. 3. வஞ்சிக்கை (W.); deceit, guile fraud. 4. குறும்பு விளையாட்டு; mischiveous sport. *"கோதாட்டொழி" (ஆத்திசூ.).*

மறுவ: கோதாட்டம்.

[கோது + ஆட்டு.]

கோதாணி[1] *kōdāṇi,* பெ. (n.) பெருங்குரும்பை; bow-string hemp, stemless plant (சங். அக.).

[கோது + (தாளி) தாணி.]

கோதாணி[2] *kōdāṇi,* பெ. (n.) கால்நடைகளுக்குத் தீவனம் வைக்கும் நெடுங்கூடை; a long open basket for cattle feed.

[கோது + (தாழி) தாணி.]

கோதாரணம் *kōdāraṇam,* பெ. (n.) 1. கலப்பை (யாழ்.அக.); plough. 2. மண்வெட்டி; spade, hoe.

ம. தோதாரணம்.

கோதாரி *kōdāri,* பெ. (n.) 1. கக்கல்கழிச்சல் நோய்; spasmodic cholera. 2. கொள்ளைநோய்; epidemic, pestilential disease, as small-pox, scarlet fever.

மறுவ: கோதாரிக் கழிச்சல்.

[கோது → கோதாரி.]

கோதாரிக் காய்ச்சல் *kōdāri-k-kāyccal,* பெ. (n.) பெருவாரிச் சுரம்; influenza (சா. அக.).

[கோதாரி + காய்ச்சல்.]

கோதாரிக் குரல் *kōdāri-k-kural,* பெ. (n.) கக்கல் கழிச்சல் (வாந்தி பேதிக்) குரல்; cholera-voice (சா. அக.).

[கோதாரி + குரல்.]

கோதாவரி[1] *kōdāvari,* பெ.(n.) ***கோதாவிரி*** பார்க்க; see *kōdāviri.*

மறுவ: கோதாவிரி.

[கோதாவிரி → கோதாவரி.]

கோதாவிரி *kōdāviri,* பெ.(n.) ஆந்திர மாநிலத்தில் பாயும் ஒரு பேராறு (சூடா.); the river Godavari in Andhra Pradesh. *"சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவிரி" (கம்பரா. சூர்ப்ப.1).*

[கோதை + விரி – கோதாவிரி (கோதை = பெண். விரி = விரிந்து செல்வது.).]

கோதாளை *kōdāḷai,* பெ.(n.) கப்பற்குழாயின் வாய் (Naut.); limber hole, mouth of conduit on either side of the kelson to afford a passage for water to the pump-well.

[கோ + துளை – கோதுளை → கோதாளை.]

கோதானம் *kōdāṉam,* பெ. (n.) பத்துவகைக் கொடைகளில் ஒன்றாகிய ஆ(பசு)க்கொடை; gift of a cow, one of ten gifts. அப்பன் சோற்றுக்கு அழுகிறான், பிள்ளை கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான் (பழ).

[கோ + தானம்.]

கோதி[1] *kōdi,* பெ. (n.) கோதுமை; wheat.

[கோது → கோதி.]

கோதி[2] *kōdi,* பெ. (n.) நெற்றி; forehead.

[குது → கொது → கோது → கோதி.]

கோதிகை *kōdigai,* பெ. (n.) 1. உடும்பு (தைலவ. பாயி. 57); a big lizard. 2. முதலை (யாழ். அக.); crocodile.

[கோள் → கோள்து → கோது → கோதிகை.]

கோதிமம் *kōdimam,* பெ.(n.) கோதுமை; wheat (சா. அக.).

மறுவ: கோதி, கோதமாயவா.

கோதிமுடி–த்தல் *kōdi-muḍi-,* 4 செ.கு.வி. (v.i.) மயிர்சீவிக்கட்டுதல்; to form a hair-knot.

[கோதி + முடி–]

கோதில்லாச் சாறு *kōdillā-c-cāṟu,* பெ. (n.) இலை, காம்பு, செத்தைகள் இல்லாத சாறு; juice free from leaves, strings and other rubbish (சா. அக.).

[கோது + இல்லா + சாறு.]

கோதில்லாப்புளி *kōdillā-p-puḷi,* பெ. (n.) காம்புகள் களைந்த புளி; tamarind got rid of strings and other strings (சா. அக.).

[கோது + இல்லா + புளி.]

கோது[1]**–தல்** *kōdu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. அலகால் இறகைக் குடைந்து நேராக்குதல்; to peck and adjust with the beak, as feathers. *"மயில்கோது கயிலாயம்" (தேவா. 1157: 6).* 2. மயிர்ச் சிக்கெடுத்தல்; to disentangle, as the hair, with the fingers. *"கோதிச் சிக்கின்றி முடிக்கின்ற... குழலி" (பெருந்தொ. 1323).* 3. சிறிது சிறிதாக உண்ணுதல்; to pick, as food in eating; to take in small quantities, as birds, sickly or dainty children, bashful persons. குழந்தை சோற்றைக் கோதுகிறது. 4.வெளிச் சிதறுதல்; to scatter, spill. *"கோதிக் குழம்பலைக்குங் கும்பத்தை" (நாலடி,47).* 5. ஓலையை வாருதல்; to tear in strips, as tender leaves. 6. தோண்டுதல் (யாழ்ப்.); to hollow, excavate, scoop out.

ம. கோது

[கொழுது → கோது.]

கோது[2] *kōdu,* பெ. (n.) 1. சக்கை; refuse, waste, empty kernels of grain, lees, residuum, leavings; fibre, as of a tamarind fruit, sugarcane. *"மற்றதன் கோதுபோற் போகு முடம்பு" (நாலடி, 34).* 2. பழ முதலியவற்றின் தோல்; covering, capsule, pod. *"சங்கெட்கோது" (தைலவ. தைல. 18).* 3. பூ முதலிய வற்றின் நரம்பு; fibrous structure in flowers, etc. *"கோது குலாவிய கொன்றை" (திருமந். 16).* 4. குற்றம்; fault, blemish, defect, error. *"கோதியல் காமம்" (சீவக. 223).* 5. பயனின்மை; uselessness. *"கோது செய்குணக் கோதினுட் கோதனான்" (சீவக. 240).* 6.நெறிதவறுகை; deviation,deflection.

ம. கோது.

Fin. kuori (shell, bark, husk, cortex); **Est.** koor; **Mansi.** gōr; **Jap.** kōra, kara; **Q.** fara.

[கொழுது → கோது.]

கோது[3] *kōdu,* பெ.(n.) ***கோதுகம்*** பார்க்க; see *kōdugam. "வானவர்தங் கோதா" (திவ். பெரியதி. 6.2:9).*

Mal. gandum.

[குதுகலம்→குதுகம் →கோதுகம் → கோது.]

கோதுகம்[1] *kōdugam,* பெ.(n.) உள்ளக் களிப்பு; joy, delight. *"கோதுக மியாவர் கொண்டாடுவார்" (சூளா. முத். 36).*

[குதுகலம்→குதுகம் →கோதுகம்.]

கோதுகம்[2] *kōdugam,* பெ.(n.) கச்சோலம் (சித்.அக.); long zedoary.

[கொழுது→கொழுதுகம் →கோதுகம்].

கோதுகலம் *kōdu-galam,* பெ.(n.) குதுகலம், விருப்பம்; desiser, longing. *"கோதுகலமுடைக் குட்டனேயோ" (திவ்.பெரியாழ்.2.9:6)*

மறுவ. குதுகம், குதூகலம்.

[குது→குதுகம் →குதுகலம் → கோதுகலம்.]

கோதுகுலம் *kōdu-kulam,* பெ.(n.) **கோதுகலம்** பார்க்க; see *kōdu-kalam. "கோதுகுலமுடைய பாவாய்" (திவ்.திருப்பா.8)*

[கோது + குலம்.]

கோது நரம்பு *kōdu-narambu,* பெ.(n.) செடி, இலை முதலியவற்றின் நரம்பு; filaments of plants and flowers (சா. அக.).

[கோது + நரம்பு.]

கோதுபழம் *kōdu-paḻam,* பெ.(n.) புளியம்பழம்; tamarind fruit (சா. அக.).

[கோது + பழம்.]

கோதும்பி *kōdumbi,* பெ.(n.) கோத்தும்பீ என்ற தொடரைப் பாட்டின் ஈறுதோறுங் கொண்ட திருவாசகப் பதிகம்; a poem in *Tiruvāšagam* with the refrain *kōttumbi* at the end of each verse.

[கோத்தும்பி → கோதும்பி.]

கோதும்பை *kōdumbai,* பெ.(n.) கோதுமை (உ.வ.); wheat.

[கோது → கோதும்பை.]

கோதுமம் *kōdumam,* பெ.(n.) கோதுமை (யாழ். அக.); wheat.

[கோதும்பை → கோதுமம்.]

கோதுமை *kōdumai,* பெ.(n.) ஒருவகைத் தவசம் (பதார்த்த. 827); wheat, triticum vulgare. ஏழாயிரம் பொன் பெற்ற குதிரை இறப்பைப் பிடுங்கையில், குருட்டுக் குதிரை கோதுமை ரொட்டிக்கு வீங்கினதாம் (பழ).

ம. கோதூமம்.

[கோத்தும்பை → கோதுமை.]

கோதுமைஅடை *kōdumai-aḍai,* பெ.(n.) கோதுமை அடை; bread made of wheat (சா. அக.).

[கோதுமை + அடை.]

கோதுமைக்கஞ்சி *kōdumai-k-kañji,* பெ.(n.) 1. கோதுமை நொய்யைக் கொண்டு அணியமாக்கப்படும் கஞ்சி; conjee prepared from wheat flour which is taken to check profuse menstruation. 2. வாற்கோதுமைக் கஞ்சி; barley water (சா. அக.).

[கோதுமை + கஞ்சி.]

கோதுமைக்களி *kōdumai-k-kaḷi,* பெ.(n.) கோதுமை மாவைத் தண்ணீரிலிட்டுக் கொதிக்க வைத்துக் கிண்டிய களி; pudding prepared from wheat flour by boiling it in water and stirring (சா. அக.).

[கோதுமை + களி.]

கோதுமைக்காடி *kōdumai-k-kāḍi,* பெ.(n.) கோதுமைக் கஞ்சியைப் புளிக்க வைத்து அணியமாக்கும் காடி; alcoholic fermentation of wheat conjee (சா. அக.).

[கோதுமை + காடி.]

கோதுமைக்கூழ் *kōdumai-k-kūḻ,* பெ.(n.) கோதுமை மாவு அல்லது நொய்யைக் கொண்டு அணியமாக்கப்படும் பாயசம்; wheat porridge prepared like wheat pudding, but in a liquid form (சா.அக.).

[கோதுமை + கூழ்.]

கோதுமைச்சத்து *kōdumai-c-cattu,* பெ.(n.) 1. கோதுமை துகள் (ரவா) அல்லது மாவைத் தண்ணீரி லிட்டுப் பிழிந்தெடுத்த சாறு; liquid essence of wheat pressed and filtered out from a solution of wheat gruel or flour. 2. கோதுமையில் அடங்கியுள்ள பொருள்கள்; the glutinous starchy substance etc., contained in wheat (சா. அக.).

[கோதுமை + சத்து.]

கோதுமைத்தவிடு *kōdumai-t-tavidu,* பெ.(n.) கோதுமையினின்று கழிந்த மேற்றோல்; the husk or outer coat of wheat; wheat bran.

[கோதுமை + தவிடு.]

இது சிறிதளவு மலத்தை இளக்கும். நீரிழிவுக்கும் கொடுக்கலாம். கட்டுக்கட்டவும், வறுத்து ஒத்தடம் கொடுக்கவும் பயன்படும். மார்பு வலி, வயிற்று வலி முதலியன குணமாகும் (சா. அக.).

கோதுமைநாகம் *kōdumai-nāgam,* பெ.(n.) கோதுமைத் தவசம் போன்ற புள்ளியுடைய

பாம்புவகை; a species of cobra with wheat-like patches.

[கோதுமை + நாகம்.]

கோதுமைப்பாணி *kōdumai-p-pāṇi,* பெ.(n.) கோதுமை மாவைத் தண்ணீரிலிட்டுக் கொதிக்க வைத்துக் கிண்டிய சாரம்; mucilage of starch. It is obtained by boiling wheat flour and water and constantly stirring for a few minutes (சா. அக.).

[கோதுமை + பாணி.]

கோதுமைப்பால் *kōdumai-p-pāl,* பெ.(n.) ***கோதுமைச்சத்து*** பார்க்க; see *kōdumai-c-cattu.*

[கோதுமை + பால்.]

கோதுமைமணி *kōdumai-maṇi,* பெ.(n.) 1. கோதுமைத் தவசம்; wheat grain. 2. கோதுமைத் தவசம் போன்ற பொன்மணிகளால் அமைந்த கழுத்தணி; a kind of necklace formed of wheat - like beads of gold.

[கோதுமை + மணி.]

கோதுமையரவை *kōdumai-y-aravai,* பெ.(n.) கோதுமையரிசியை உடைத்துப் பிரித்தெடுத்த நுண்ணியநொய்; fine crushed particles prepared from the heart of wheat (சா. அக.).

[கோதுமை + அரவை. அரவை→ரவை→ரவா எனத் திரிபுற்றது.]

கோதுமையரிசி *kōdumai-y-ariśi,* பெ.(n.) கோதுமையை உடைத்துப் பிரித்தெடுத்த பருத்த நொய்; large particles of crushed wheat cooked and used like rice for eating (சா. அக.).

[கோதுமை + அரிசி.]

கோதுமைரவா *kōdumai-ravā,* பெ.(n.) ***கோதுமையரவை*** பார்க்க; see *kōdumai-aravai.*

[கோதுமை + (அரவை) ரவா.]

கோதுவி-த்தல் *kōduvi-,* 4.பி.வி.(v.cau.) நீக்குவித்தல்; to remove, root out, exterminate. *"வினையாயின கோதுவித்தாய் நீறெழு" (தேவா. 1139:2).*

[கோது →கோதுவி.]

கோதுவை *kōduvai,* பெ.(n.) அடமானம்; pledge. *"மடத்துச் சொத்துக்கள் யேதேனும் கோதுவை வைக்க விக்கிரயஞ் செய்ய தானங் கொடுக்க எவ்வித சுதந்திரமும் கொள்ளக் கூடாது" (செ.மா.கல்.1967/171,18).*

[கொதுவை → கோதுவை.]

கோதூமம் *kōdūmam,* பெ.(n.) கோதுமை; wheat. *"நலம்தகு பொருள் கோதூமம்" (திருவானைக். நானவி. 25).*

[கோதுமை →கோதூமம்.]

கோதூர் *kōdūr,* பெ.(n.) நாமக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Namakkal Dt.

[கோது + ஊர்.]

கோதூளி *kōdūḷi,* பெ. (n.) வீட்டுக்குத் திரும்பி வரும் மாடுகளின் நடையால் தூளியெழுங் காலமாகிய மாலை நேரம் (பிங்.); evening, as the time when dust is raised by home returning cattle, considered auspecious.

மறுவ: கோதூளி சமயம்; கோதூளிலக்கினம்.

[கோ + தூளி.]

கோதூளிசமயம் *kōdūḷi-śamayam,* பெ.(n.) ***கோதூளி*** பார்க்க; see *kōdūḷi.*

[கோதூளி + சமயம்.]

கோதேரன் *kōtēraṉ,* பெ.(n.) காவற்காரன் (யாழ்.அக.); protector.

[கோ + தேரன் (தேர்க்காரன்).]

கோதேனுகம் *kōdēṉugam,* பெ.(n.) சதையொட்டி யிலை; the leaf of an unknown plant supposed to unite the two cut portions of flesh, as in incision (சா. அக.).

[கோ + தேனுகம்.]

கோதை[1] *kōdai,* பெ.(n.) 1. பெண்களின் தலைமயிர் (பிங்.); women's hair. 2. ஆண்டாள்; a Vaisṇava female saint. 3. பூமாலை; garland of flowers worn by women. *"கூந்தல் வேய்ந்த கோதையும்" (பெருங். உஞ்சைக். 48:77).* 4. முத்தாரம்; garland of pearls. *"கோதை சூடிப் பூண்சுமந்து" (பதிற்றுப். 88:31).* 5. ஒழுங்கு (பிங்.); order, regularity, row, series. 6. பெண்; woman, beautiful as a garland. *"நறுமலர்க் கோதைக்கு நல்லற முரைத்து" (மணிமே.பதி. 81).* 7. பேய்; goblin. *"தூரகமுகக் கோதைக்கிடை" (திருப்பு. 137).*

[கோது → கோதை.]

கோதை[2] *kōdai,* பெ. (n.) சேரர் பட்டப் பெயர்களுளொன்று; a title of the Cēra kings. *"மாவள் ஈகைக் கோதையும்" (புறநா.172: 10).*

ம. கோத.

[கோது → கோதை.]

கோதை[3] *kōdai* பெ. (n.) காற்று (பிங்.); wind.

[கூதை → கோதை.]

கோதை[4] *kōdai* பெ.(n.) 1. உடும்பு (பிங்.); guana. 2. வில்லாளர் கையிற் பூணும் தோலுறை; glove of iguana leather, worn by archers on the left fore-arm to protect it from being injured by the bowstring. *"ஊரிச் சிலையு முரட்கோதை யுங்கட்டி" (பாரதவெண். 776).* 3. மரக்காற்பறை; a cylindrical drum. *"மரக்கா லன்ன வொருவாய்க் கோதை" (கல்லா. 8).*

ம. கோத; **Skt.** gōdhā.

[கோது → கோதை.]

கோதை[5] *kōdai* பெ.(n.) கௌதமி என்னும் பழங்கால ஆற்றின் பெயர் (பிங்); name of an ancient river kaudami.

[கோது → கோதை.]

கோதைக்குடி *kōdai-k-kuḍi* பெ.(n.) இலால்குடி வட்டம், ஆலம்பாக்கத்திற்கு அருகிலிருந்த சிற்றூர்; a small village near Alambākkam in Lālguḍi taluk. *"கொங்குலாங் கோதைக்குடி உய்ய வந்தாள் தன் தம்பிரானுக்கு" (SII.XXVI.778-3 pg.564).*

[கோதை (சேரன்) + குடி.]

கோதைமங்கலம் *kōdai-maṅgalam* பெ.(n.) திண்டுக்கல் மாவட்டம் பழனியின் அருகில் அமைந்த ஓர் ஊர்; a village situated near Paḻani in Thinḍukkal Dt.

[கோதை + மங்கலம்.]

கடை ஏழு வள்ளல்களுள் ஒருவனான பேகன் தனது பரத்தை கோதை என்பவளுக்கு இலவயமாகக் கொடுத்தமையால் இப் பெயர் பெற்றதாம்.

கோதைமாதவி *kōdai-mādavi* பெ.(n.) மாலைபோலப் பூக்கும் ஒருவகைக் குருக்கத்தி; a species of *kurukkatti* (சா. அக.).

[கோதை + மாதவி.]

கோதையர் *kōdaiyar* பெ.(n.) மாதர்; women.

[கோது → கோதையர்.]

கோதையன் *kōdaiyaṉ* பெ.(n.) பயனில்லாப் பொருளைக் கூறுவோன்; man of empty words. *"எந்நாக் கோதையர்க் கூற லுண்டே" (சீவக. 3098).*

[கோது → கோதையன்.]

கோதையாள்வியான புரவுவரிநங்கை *kōdaiyāḷ-viyāṉa-puravu-vari-naṅgai* பெ.(n.) திண்டிவனம் வட்டாரத்திலுள்ள பெருமுக்கல் ஊரில் உள்ள கோயில்; temple of the Perumukkal in Tinḍivaṉam taluk. *"இக்கோயில் தேவரடிமகள் கோதையாள்வியான புரவுவரி நங்கை விநாயகப் பிள்ளையார்க்கு" (த.நா.தொ.ஆய்வு. தொடர்.எண். 114/1992 கல்.46,4).*

[கோதை + ஆள்வி + ஆன + புரவுவரி + நங்கை.]

கோதையிருப்பு *kōdai-y-iruppu* பெ.(n.) திண்டுக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thinḍukkal Dt.

[கோதை + இருப்பு.]

கோதையூர் *kōdai-y-ūr* பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in KaṉyākumariDt.

[கோதை + ஊர்.]

கோந்தச்சார் *kōndaccār* பெ.(n.) அற்பன்; an insignificant contemptible person.

[கோந்தி + சார் – கோந்திச்சார் → கோந்தச்சார். கோந்தி = குரங்கு.]

கோந்தளங்காய் *kōndaḷaṅ-gāy* பெ.(n.) 1. குறு தேங்காய்; unripe coconut. 2. சமுத்திராப்பழம்; sea-side Indian oak.

[கோந்தளம் + காய்.]

கோந்தளாகிகம் *kōndaḷāgigam* பெ.(n.) முயற்புல்; hare grass (சா. அக.).

[கோந்தளம் + ஆகிகம்.]

கோந்தனை *kōndaṉai* பெ.(n.) பேய்க் கொம்மட்டி; colocynth, climber.

[கோது → கோந்து → கோந்தனை.]

கோந்தி *kōndi* பெ.(n.) குரங்கு; monkey.

க., து., நா. கோதி; **தெ.** கோதி, க்ரோதி; **கட.** கோதி, கோந்தி.

[தெ.கோடி → கோந்தி]

கோந்திக்குணம் *kōndi-k-kuṇam* பெ.(n.) குரங்குக் குறும்பு; apishness; foolery (சா. அக.).

[கோந்தி + குணம்.]

கோந்துரு[1] *kōnduru,* பெ.(n.) 1. பூட்டனுக்குப் பாட்டன் (யாழ்ப்.); ancestor in the fifth line, great-grand father's grandfather (J.). 2. கேலி எள்ளல்; ridicule (W.).

[கொந்துள்→கோந்துள் →கோந்துரு.]

கோந்துரு[2] *kōnduru,* பெ.(n.) வஞ்சகம் (யாழ்.அக.); duplicity.

[கோது→கோந்து →கோந்துரு.]

கோந்துலா *kōndulā,* பெ.(n.) மராட்டியப் பிச்சைக்காரர் பயன்படுத்தும் பறைவகை (இ.வ.); a kind of musical drum used by Mahratta beggars.

[மரா. கோண்தல →கோந்துலா.]

கோநகர் *kō-nagar,* பெ.(n.) 1. தலைநகர்; capital city. *"கோநக ரெதிர்கொள" (சிலப்.27:255).* 2. கோயில்; temple. *"மாயோன் கோநக ரெட்டும்" (கந்தபு. திருநகரப். 88).*

[கோ + நகர்]

அரசனின் தலைநகர் அரசிருக்கை, கோநகர், படைவீடு என்னும் பெயர்களுள் ஒன்றால் அழைக்கப்பெற்றது. இவற்றுள் அரசிருக்கை என்பது அரசன் நிலையாக வாழும் நகரையே குறிக்கும். கோநகர் என்பது அரச குடும்பத்தினர் இருந்து ஆளும் நகரையும், படைவீடு என்பது படை நிறுத்தப்பெற்று அரசன், நாடுகாவல் சுற்றும்போக்கில் தங்கக்கூடிய நகரையும் குறிப்பது முண்டு [பழந்தமிழாட்சி. பக். 12 – 13].

கோநசம் *kōnaśam,* பெ.(n.) ஒருவகைப் பாம்பு (யாழ்.அக.); a kind of snake.

[கோ + (நாசம்) நசம்.]

கோநாக்கிலை *kō-nākkilai,* பெ.(n.) ஆன் நாக்கிலை; a plant, the leaves of which resemble the tongue of the cow (சா. அக.).

[கோ + நாக்கு + இலை]

கோநாகசர்ப்பம் *kōnāga-śarppam,* பெ.(n.) மிக்க வெய்யிலினாலும். அலைச்சலினாலும் அடிபட்ட பசுக்களின் மூக்கிலிருந்துண்டாகிப் பிறகு வெளிப்பட்டுத் திரிவதாகக் கருதப்பட்ட ஒருவகை நாகம்; a kind of cobra imagined to be orginating from the nostrils of the cow knocking about in the scorching sun and exhausted by fatigue (சா. அக.).

மறுவ. கோநசம்.

கோநாதன் *kō-nādaṉ,* பெ.(n.) 1. எருது; a bull (எருது). 2. இடையன்; a sheperd

[கோ + நாதன்.]

கோநாய் *kō-nāy,* பெ.(n.) 1. ஆண்நரி; male jackal. 2. ஓநாய்; wolf. *"கோநாயினம் வெருஉம் வெறுப" (பழ.292).* ஆட்டுக்கிடையிலே கோநாய் புகுந்ததுபோல் (பழ).



கோநாய்

[கோ + நாய்.]

கோநிலையம் *kō-nilayam,* பெ.(n.) அரசமனை; palace.

[கோ + நிலையம்.]

கோநீர் *kō-nīr,* பெ.(n.) ஆன் (பசு) மூத்திரம்; cow's urine (சா.அக.).

மறுவ. கோமியம்.

[கோ + நீர்.]

கோநெய் *kō-ney,* பெ.(n.) ஆன் (பசு) நெய்; cow's ghee (சா.அக.).

[கோ + நெய்.]

கோநொந்தோலி *kōnondōli,* பெ.(n.) நொந்தோலி மீன்வகையில் பெரிய மீன் (மீனவ.); a kind of big fish by name *nondōli.*

[கோ + (நெய்த்தோலி) நொந்தோலி.]

கோநோக்கம் *kō-nōkkam,* பெ.(n.) கண்டங் கத்தரி; a thorny plant which bears small yellow fruits (சா.அக.).

[கோ + (நூக்கம்) நோக்கம்.]

கோப்பதவாரம் *kō-p-pada-vāram,* பெ.(n.) அரசர்க்குரிய இறை (T.A.S.II,82.); tax due to the king.

[கோ + பதம் + வாரம்.]

கோப்பரம் *kōpparam,* பெ.(n.) உதவாக்கரை, ஒன்றுக்கும் பயன்படாதவன்; useless fellow. அவன் ஒரு கோப்பரம். ஒன்றுக்கும் பயனில்லை (நெல்லை.).

மறுவ. ஆதம் (ஆதாயம்) அற்றவன், துப்பற்றவன் விட்டேற்றி, உதவாக்கரை, கழிசடை.

[கோ = மாடு, எருது, கோ + உரம் – கோவுரம் → கோப்புரம் → கோப்பரம் (மாட்டுச்சாணம், எரு, குப்பை).]

கோப்பழி-த்தல் *kōppali-,* 4 செ.குன்றாவி.(v.t.) சீரழித்தல்; to ruin, pull down, dismantle. *"குருமாமணி யூசலைக் கோப்பழித்து" (திருக்கோ. 161).*

[கோப்பு + அழி.]

கோப்பன் *kōppaṉ,* பெ.(n.) 1. கெட்டிக்காரன்; capable person not easily bamboozled. 2. தேர்ந்த போக்கிரி; clever scoundrel.

[கோ → கோப்பன்.]

கோப்பாட்டன் *kōppāṭṭāṉ,* பெ.(n.) கொட்பாட்டன் (வின்.); grand father's father.

[கொட்பாட்டன் → கோட்பாட்டன்.]

கோப்பாண்டியன் *kō-p-pāṇḍiyaṉ,* பெ.(n.) பாண்டியன் (திவா.); Pāṇḍya, as king of kings.

[கோ + பாண்டியன்.]

கோப்பாளச்சுவர் *kōppāḷa-c-cuvar,* பெ.(n.) இருபக்க ஒட்டுச்சார்பின் மேல் முக்கோண வடிவிலமைந்த சுவர் (கட். தொ.); triangular wall on a partition wall.



கோப்பாளச்சுவர்

[கோப்பாளம் + சுவர்.]

கோப்பாளம் *kōppāḷam,* பெ.(n.) மாலியர் (வைணவர்) திருமாலின் பன்னிரு பெயர்களை ஓதி உடலிற் பன்னிரு இடங்களில் செங்குத்து முக்கீற்றாக இடும் திருமண் குறி; the Vaisnava sectarian tridental mark, worn on the person in twelve places, reciting the twelve names of Vishnu. அவன் நெற்றியில் கோப்பாளம் போட்டிருக்கிறான் (நெல்லை).

மறுவ. திருமண், நாமம்.

[கோவலன் → கோபாலன் → கோப்பாளம்.]

கோபாலன் பெயரைச் சொல்லி இட்டுக் கொள்ளும் அடையாளக் குறிமீடு கோப்பாளம் எனப்பெயர் பெற்றது.

கோப்பாளி *kōppāḷi,* பெ.(n.) 1. வரிக்கூத்துவகை (சிலப்.3:13, உரை); a masquerade dance. 2. ***கோப்பன்*** பார்க்க (loc.) see *kōppaṉ.*

[கோப்பு + ஆளி.]

கோப்பிகா *kōppigā,* பெ. (n.) புன்னை; common poon or Alexandrian laurel (சா. அக.).

[குப்பி→கோப்பி→கோப்பிகை→கோப்பிகா.]

கோப்பிடு-தல் *kōppiḍu-,* 18 செ.குன்றாவி.(v.t.) ஏற்பாடு செய்தல்; to make arrangements; to scheme. *"கூட்டுக்குளே யடைக்கக் கோப்பிட்டாள்" (விறலிவிடு. 603).*

ம. கோப்பிடுக.

[கோப்பு + இடு-.]

கோப்பியகன் *kōppiyagaṉ,* பெ.(n.) அடிமை; slave.

[கோப்பியன்→கோப்பியகன்.]

கோப்பியம் *kōppiyam,* பெ.(n.) 1. ஒளித்து வைத்தல்; keeping hidden or concealed (சா.அக.). 2. கண்ணியம்; sence of decency. 3. காத்தல்; to save, protect. 4. அடக்கம்; humility, quietness. 5. கோலம் (கழ. த. அக.); decorative designs drawn on floor. 6. மறைபொருள்; secrecy, concealment, privacy. எல்லாம் கோப்பியமாக நடக்கிறது (உ.வ.).

ம. கோப்பியம் (மந்தணம்); Skt. gōpya.

[குப்பு→கூப்பு→கோப்பு→கோப்பியம்.]

கோப்பியாதி *kōppiyādi,* பெ.(n.) ஈடு; substitute, compensatory.

[கோப்பியம் + ஆதி.]

கோப்பிரசாரபூமி *kōppiraśārabūmi,* பெ.(n.) அரசு ஆணைவழி கோயிலுக்கு விளம்பரப்படுத்திய நிலம்; land to temples notified by king. *"ஆக இந் நாற்பால் எல்லைக்கும் உட்பட்ட இருபத்தஞ்சு பாடகமும் கோப்பிரசார பூமியாரு எல்லோருக்கும் சாதாரணம் ஆதலால்" (தெ.கல். தொ.Vகல். 993:4).*

[கோ + பிரசாரம் + பூமி.]

கோப்பிரண்டை *kōppirandai,* பெ.(n.) களிப் பிரண்டை; a species of adamantine creeper. It is round and smooth and is prescribed for flatulence.

[கோ + பிரண்டை]

உருண்டையாயும், வழவழப்பாயுமிருக்கும். இது வாதை நோய்க்குப் பயன்படும்.

கோப்பிராமணர் *kō-p-pirāmaṇar,* பெ. (n.) இறைவனுக்குக் கொடை அளிக்க ஆனிரைகளைப் பேணி வந்த அந்தணர்; bhramin who took care of the cows endowed to a temple. *"அகிதம் பண்ணினாள் அவாள் கெங்கைக் கரையில் கோகஸ்த்தியும் கோப்பிராமணரையும் கொன்னை தோஷத்தில் அடைவார்கள்" (தஞ்.மரா.செப்.50, 26-43).*

[கோ + பிராமணர்.]

கோப்பு[1] *kōppu,* பெ.(n.) 1. கோக்கை; stringing, inserting, threading, adorning. 2. ஒழுங்கு; arrangement, order, method. *"விரதத்தின் கோப்பனைத்தும்" (விநாயகபு.62:15).* 3. அமைப் பழகு; beauty, as of form or construction; finish. *"ஊசலைக் கோப்பழித்து" (திருக்கோ. 161).* 4. ஒப்பனை; decoration, ornament, embellishment. *"கோப்பணி வான்றோய் குடி" (திருக்கோ. 196).* 5. கவிவு; that which covers, as a cloud, a roof; that which over-whelms, as grief. *"நீப்பருந் துயர் கோப்புக் கொள்ளலும்" (விநாயகபு.7:3).* 6. இடம்பம் (வின்.); gaudiness, showiness, parade. 7. பகிடி (வின்.); jest, sport, farce. 8. சூழ்ச்சி (உபாயம்); means, device, scheme. *"வேந்தர் பொன்னைக் கொள்ளை கொள்ளக் கள்ளியிந்தக் கோப பெடுத்தாள்" (விறலிவிடு. 421).* 9. தோள் முதலியவற்றிற் கோக்கப்படும் சுமை; bundle, pack, as taken on shoulders. *"தோட்கோப்புக் கொள்ளார்" (நாலடி.328).* 10. பணியாளர்களுக்கு அரசில் ஏற்படும் படித்தரம் (யாழ்ப்.); daily provisions allowed by kings to their officers.

ம. கோப்பு; தெ., க. கோபு; குட. கோபி (விழா); பர். கோப் (பேணுதல்).

[கோ→கோப்பு]

கோப்பு[2] *kōppu,* பெ. (n.) காய்கறிகள்; vegetables (சா. அக.).

[காய்→காய்ப்பு→காப்பு→கோப்பு]

கோப்பு[3] *kōppu,* பெ.(n.) இணைத்தொகுப்பு, பதிவு மூலங்களின் தொகுப்பு; file.

[கோ → கோப்பு 'பு' சொ.ஆ.ஈறு.]

கோப்பு[4] *kōppu,* பெ.(n.) மனையின் மேற்கூரையும் துலாக்கட்டும் சேரும் பகுதி; (கட்.தொ.); joint of roof with sub -structure.

[கோ → கோப்பு.]

கோப்பு[5] *kōppu,* பெ.(n.) 1. வணக்கம்; salution. 2. உயரம், வலிமை; hight, strength.

தெ. கோப்பு

[கூப்பு→கோப்பு.]

கோப்பு[6] *kōppu,* பெ.(n.) அணியமான நிலை; a proper and fitting nature. கம்பு அருவாளோடு கோப்பா வந்து இறங்கிட்டான் (நெல்லை.).

[கூப்பு → கோப்பு.]

கோப்புக்கயிறு *kōppu-k-kayiṟu,* பெ.(n.) இரு வேறு வலைகளை இணைக்க உதவுங் கயிறு (மீனவ.); a rope used for joining the two different nets.

[கோப்பு + கயிறு.]

கோப்புக்கூட்டு-தல் *kōppu-k-kūṭṭu-,* 5 செ. குன்றாவி.(v.t.) அணியமாதல் (இ.வ.); to make or get ready.

[கோப்பு + கூட்டு.]

கோப்புக்கொடு-த்தல் *kōppu-k-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) சமையலுக்கு வேண்டிய காய்கறிப் பொருள்களைக் கொடுத்தல்; to give or supply vegetables, curry stuffs etc. necessary for preparing food (சா. அக.).

[கோப்பு + கொடு.]

கோப்புத்தட்டு-தல் *kōppu-taṭṭudal,* தொ.பெ. (vbl.n.) கடலடிப் பாறை முகட்டிற் சிக்கிய வலையைக் குளியாள் நீக்குதல் (மீனவ.); to remove the intangle of the net on the top of the sea rock.

[கோப்பு + தட்டு-.]

கோப்புப்பட்டறை *kōppu-p-paṭṭarai,* பெ.(n.) பல உதிரிப் பொருள்களை இணைக்குமிடம்; fabrication shop.

[கோப்பு + பட்டறை.]

கோப்புப்போடு-தல் *kōppu-p-pōdu-,* 19 செ. குன்றாவி.(v.t.) மனைக்குமேற் கோப்பு அமைத்தல் (கட். தொ.); to form the top joints of a house.

[கோப்பு + போடு-.]

கோப்புமட்டம் *kōppu-mattam,* பெ.(n.) கட்டடச் சுவரின் மேல்வரி (கட். தொ.); top layer of the wall.

[கோப்பு + மட்டம்.]

கோப்புமுறை *kōppu-murai,* பெ.(n.) பொருத்தும் முறை; art or manner of fitting or arranging things. *"மூக்குங் கோடுங் கோப்புமுறை கொளீஇ" (பெருங். உஞ்சைக். 58:53).*

[கோப்பு + முறை.]

கோப்பெண்டு *kō-p-peṇḍu,* பெ.(n.) அரசன் மனைவி; queen. *"பெருங்கோப் பெண்டு மொருங் குடன் மாய்ந்தனள்" (சிலப். 25:86).*

[கோ + பெண்டு.]

கோப்பெருங்கணக்கர் *kō-p-peruṅ-kaṇakkar,* பெ.(n.) அரசு தலைமைக் கணக்கர்; chief accountants of a state. *"கோப்பெருங் கணக்கரைக் குழுவிடை விளங்க" (பெருங். நரவாண.7:122).*

[கோ + பெருங்கணக்கர்.]

கோப்பெருங்கிழவோள் *kō-p-peruṅ-kiḻavōḷ,* பெ.(n.) **கோப்பெருந்தேவி** பார்க்க; see *kō-p-peru-n-dēvi.* *"குன்றாக் கற்பினெங் கோப்பெருங் கிழவோள்" (பெருங்.இலாவாண. 11:47).*

[கோ + பெரும் + கிழவோள்.]

கோப்பெருஞ்சிங்கவேளார் *kō-p-peruñ-śiṅga-vēḷār,* பெ.(n.) நடுநாட்டு மன்னர் கோப்பெருஞ் சிங்கனின் அதிகாரி; an officer of the King of Nadu Nadu, *kōpperuñ-śiṅgaṉ.* *"கூடலூர்க் கூடலூருடையான் திருவரங்கன் பெரிய நாயனான கோப்பெருஞ்சிங்கவேளார் வைத்த திருநொந்தா விளக்கொன்றுக்கு" (SII.XII.227-6 pg.141).*

[கோ + பெருஞ்சிங்கன் + வேளார்.]

கோப்பெருஞ்சிங்கன் *kō-p-peru-ñ-śiṅgaṉ,* பெ.(n.) சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு நடுநாட்டை ஆண்ட காடவர் குல மன்னர்களில் சிறந்தவர்; a popular king of the Kāḍava dynasty who ruled from Sēndamaṅgalam on the banks of Kadilam in Naḍunāḍu (*Viḻuppuram* Dt.).

[கோ + பெருஞ்சிங்கன்.]

கோப்பெருஞ்சேரல் இரும்பொறை *kō-p-peru-ñ-jēral-irumborai,* பெ.(n.) ஒரு சேர மன்னன்; a *Cēra* king.

[கோ + பெருஞ்சேரல் + இரும்பொறை.]

கோப்பெருஞ்சோழன் *kō-p-peru-ñ-jōḻaṉ,* பெ.(n.) சோழ மன்னர்களில் ஒருவன்; a *Cōḻa* king.

[கோ + பெருஞ்சோழன்.]

உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன்; மிக்க புலமையுடையோன்; கிள்ளி வளவனுக்குப் பின் அரசுகட்டி லேறியவன். இவனுக்கு நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்னும் மக்களிருந்தனர். இவர்கள் தந்தைமீது காழ்ப்புணர்ச்சி கொண்டு தாக்க முற்பட்டபோது மனம் வருந்தி வடக்கிருந்து உயிர் நீத்தான். இவனைக் காணாமலேயே இவன்மீது நட்புக் கொண்ட பிசிராந்தையார் இவனருகில் அமர்ந்து வடக்கிருந்து உயிர் நீத்தார்.

கோப்பெருந்தேவி *kō-p-peru-n-dēvi,* பெ.(n.) பட்டத்தரசி; chief queen, queen consort. *"ஓர்த்துட னிருந்த கோப்பெருந் தேவி" (சிலப்.27:251).*

[கோ + பெருந்தேவி.]

கோப்பெருமுதியர் *kō-p-peru-mudiyar,* பெ.(n.) அரசாங்கத்தில் பட்டறிவு மிகுந்த விருத்தர்; aged and experienced counsellors in a state. *"வாணிகர்க் கறையுங் கோப்பெரு முதியர்" (பெருங். இலாவாண. 2:164).*

[கோ + பெருமுதியர்.]

கோப்பெருவேந்தன் *kō-p-peru-vēndaṉ,* பெ.(n.) அரசர்க்கரசன்; king of kings, emperor. *"கோப் பெரு வேந்தன் யாப்புறுத் தமைத்தபின்" (பெருங். மகத. 22:78).*

[கோ + பெருவேந்தன்.]

கோப்பை *kōppai,* பெ.(n.) 1. வெள்ளைக் களி மண்ணினாற் செய்த சீனக் கலம் (சா.அக); a porcelain cup manufactured in China. 2. வேலைப் பாடு கொண்ட பரிசுப் பொருள்; cup, trophy. நமது நாடு காற்பந்து போட்டியில் உலகக் கோப்பையை வென்றது (உ.வ.). 3. உண்கலம்; cup; drinking-vessel.

ம. கோப்ப; க., து. குப்பி; தெ. குப்பெ; பட. கோப்பெ.

H. kuppi; **Pali., Pkt.** kūppa; **L.** cuppa; **F.** Coupe; **E.** cup; **Port.** copa.

[கும்பம் - மட்பாண்டம். கும்பம்→கும்பி→குப்பி → கோப்பை.]

கோப்பைவெடிப்பு *kōppai-veḍippu,* பெ.(n.) மரத்தில் ஆண்டு வளைவுகள் சரியாகப் பொருந்தாமல் வெடிக்கும் வெடிப்பு (கட். தொ.); crack in joints of wooden planks.

[கோப்பை + வெடிப்பு.]

கோபக்கண்ணி *kōba-k-kaṇṇi,* பெ. (n.) 1. முண்டினி மரம்; an unknown tree. 2. கோபக் கண்ணுடையவள்; woman with an angry look (சா. அக.).

[கோபம் + கண்ணி.]

கோபக்காரன் *kōba-k-kāraṉ,* பெ.(n.) சினம் மிகுந்தவன்; irritable, hot-tempered man.

[கோபம் + காரன்.]

கோபக்காரி[1] *kōba-k-kāri,* பெ.(n.) மிகுசினமுள்ள பெண்; angry woman.

[கோபம் + காரி.]

கோபக்காரி[2] *kōba-k-kāri,* பெ.(n.) தலைச்சுருளி; Indian birth wort (சா. அக.).

[கோபம் + காரி.]

கோபக்குண்டம் *kōba-k-kuṇḍam,* பெ.(n.) எட்டி மரம்; strychnine tree.

மறுவ: கோபதிண்டம்.

[கோபம் + குண்டம்.]

கோபக்குரு *kōba-k-kuru,* பெ.(n.) வெள்ளைக் கழற்கொடி (சா. அக); white bead vine.

[கோபம் + குரு.]

கோபங்காய்ந்தோர் *kōbaṅ-kāyndōr,* பெ.(n.) (சினம் காத்தோர்) முனிவர் (பிங்.); sages, saints, as persons who have subdued their temper.

[கோபம் + காய்ந்தோர்.]

கோபங்கொள்(ளு)-தல் *kōbaṅ-koḷ(ḷu)-,* 16 செ.கு.வி. (v.i.) புண் முதலியவை உக்கிரமாதல் (யாழ்ப்.) to be inflamed, irritated, as a sore or wound, to become aggravated, as a disease, to rage, as the sea.

[கோபம் + கொள்ளு.]

கோபச்சுரம் *kōba-c-curam,* பெ.(n.) சினம் வரும்படி பித்தம் மிகுந்திருக்கும் காய்ச்சல் (சீவரட்.32); bilious fever.

[கோபம் + சுரம்.]

கோபஞ்செலுத்து-தல் *kōbañ-celuttu-,* 5 செ. கு.வி.(v.i.) சினத்தை வெளிக்காட்டுதல் (வின்.); to give vent to anger.

[கோபம் + செலுத்து.]

கோபத்தீ *kōba-t-tī,* பெ.(n.) 1. கோபத்தின் சூடு; heat arising from anger; wrath (சா. அக.). 2. உயிர்த் தீக்களுள் ஒன்றான சினம் (சூடா.); the fire of anger, one of *uyir-t-ti.*

[கோபம் + தீ.]

கோபதாபம் *kōbatāpam,* பெ.(n.) கடுஞ்சினம்; fury, rage.

[கோபம் + தாபம்.]

கோபதி *kō-padi,* பெ.(n.) 1. எருது (உரி.நி.); bull, as lord of cows. 2. தேவர்த் தலைவன் (இந்திரன்); Indra, as king of Svarga. 3. கதிரவன்; sun.

[கோ + பதி.]

கோபதிண்டம் *kōba-tiṇḍam,* பெ.(n.) ***கோபக் குண்டம்*** பார்க்க; see *kōba-k-kuṇḍam.*

[கோபக்குண்டம் → கோபதிண்டம்.]

கோபம்[1] *kōbam,* பெ.(n.) 1. சினம்; anger. 2. வெறுப்பு; dislike.

[குப்பள் = சிவப்பு. குப்பள் → குப்பளி → குப்பு → கோப்பு → கோபம் (கொ.வ.).]

Skt., Pali., kōpa; **Pkt.** kōva; **Sinh.** kov, kō.

கோபநிலைகள்: *கோபம்* சிறிது பொழுது நிற்பது; சினம் நீடித்து நிற்கும் கோபம்: *சீற்றம்* சீறியெழுங் கோபம்; *வெகுளி* அல்லது *காய்வு* அல்லது *உருத்திரம்* நெருப்புத்தன்மையுள்ள கடுங்கோபம்; *கொதிப்பு* கண் போன்ற உறவினர்க்குச் செய்யப்பட்ட கொடுமைபற்றிப் பொங்கி யெழுங் கோபம்; *எரிச்சல்* மனத்தை உறுத்துங் கோபம்; *கடுப்பு* பொறாமையோடு கூடிய கோபம்; *கறம்* அல்லது *வன்மம்* பழிவாங்குங் கோபம்; *கறுவு* தணியாக் கோபம்; *கறுப்பு* கருப்பன்முகம் கறுத்துத் தோன்றும் கோபம்; *சிவப்பு* அல்லது *செயிர்* சிவப்பன் முகம் சிவந்து தோன்றுங் கோபம்; *விளம்* நச்சுத் தன்மையான கோபம்; *வெறி* அறிவிழந்த கோபம்; *முனிவு* அல்லது *முனைவு* வெறுப்போடு கூடிய கோபம்; *கதம்* என்றும் இயல்பான கோபம்; *கனிவு* முகஞ்சுளிக்கும் கோபம்; *செற்றம்* அல்லது *செறல்* பகைவனை அழிக்கும் கோபம்; *ஊடல்* மனைவி கணவனொடு கோபித்துக் கொண்டு உரையாடாத மென்கோபம்; *புலவி* ஊடலின் வளர்ந்த நிலை; *துனி* ஊடலின் முதிர்ந்த நிலை; *சடைவு* உறவினர் குறைகூறும் அமைதியான கோபம் [சொல். கட். 49].

கோபம்[2] *kōbam,* பெ.(n.) தம்பலப் பூச்சி; cochineal. "*கொல்லை நெடுவழிக் கோபம் ஊரவும்*" *(சிறுபாண்.168).*

[குப்பள் → குப்பம் → கோபம்.]

கோபம்[3] *kōbam,* பெ.(n.) ஒருவகைத் துகில்; a kind of cloth (சிலப்.14:108 உரை).

[கோபம் = சிவப்பு, செந்நிறத்துகில்.]

கோபம்[4] *kōbam,* பெ.(n.) துத்த செய்நஞ்சு; a kind of prepared arsenic.

[கோபம்¹ → கோபம்⁴.]

கோபல் *kōbal,* பெ.(n.) இது அம்பரைப் போன்ற ஒரு போலிகடைச்சரக்கு; false amber or copal, it is fraudently sold in bazaars as a substitute for amber (சா. அக.).

[குப்பள் = சிவப்பு. குப்பள் → கோப்பல் → கோபல்.]

கோபவல்லி *kōbavalli,* பெ.(n.) 1. பெருங்குரும்பை; moorva stemless plant. 2. நன்னாரி; Indian sarsaparilla (சா. அக.).

[கோபம் (சிவப்பு) + வல்லி.]

கோபன் *kōbaṉ,* பெ.(n.) 1. இடையன்; shepherd, cowherd. 2. அதிகாரி; officer. 3. காப்போன்; guard. 4. சிவன்; Siva. *கூன் மதியர் கோபர் (தேவா.542:4).*

[கோ + கோவன் → கோபன் (கொ.வ.).]

கோபனை *kōbaṉai,* பெ.(n.) கவண் (யாழ்ப்.); sling to drive away birds etc.

[கோப்பு → கோப்பனை → கோபனை.]

கோபாக்கினி *kōbākkiṉi,* பெ.(n.) ***கோபத்தீ*** பார்க்க; see *kōba-t-ti.*

[கோபம் + அழனி – அக்கினி.]

கோபாபத்திரம் *kōbāpattiram,* பெ.(n.) ஆம்பற் கிழங்கு, கொட்டிக் கிழங்கு; esculent bulbous root of Indian water-lily (சா. அக.).

[கோபம் (சிவப்பு) + பத்திரம்.]

கோபாலகன் *kōbālagaṉ,* பெ. (n.) 1. இடையன்; shepherd; cow-herd. 2. கண்ணன்; Lord *Krisnaṉ.* *"குருந்தொசித்த கோபாலகன்" (திவ்.இயற்.3:32).*

[கோ + பாலகன்.]

கோபாலகிருட்டிணபாரதியார் *kōbāla-kiruttiṉa-bāradiyār,* பெ.(n.) பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புலவர்களுளொருவர்; "நந்தனார் சரித்திர" ஆசிரியர்; a poet of nineteenth century author of *Nandaṉār-carittiram.*

[கோபாலன் + கிருட்டிணன் + பாரதியார்.]

கோபாலசக்கரம் *kōbāla-śakkaram,* பெ.(n.) பழைய நாணய வகை (பணவிடு.145); an ancient coin.

கோபாலர்[1] *kōbālar,* பெ.(n.) 1. அரசர்; king, 2. இடையர்; shepherd, cowherd.

[கோ + பாலர்.]

கோபாலர்[2] *kōpālar,* பெ.(n.) கள்ளர்குடிப் பட்டப்பெயர்களுள் ஒன்று (கள்ளர் சரித்.பக்.98); a caste title of Kaḷḷars.

[கோவலர் → கோபாலர்.]

கோபாலம் *kōbālam,* பெ.(n.) கன்னி (புரட்டாசி) மாதத்தில் காரி (சனி)க்கிழமை தோறும் இரந்து நோற்கும் நோன்பு; a religious vow to beg on Saturdays in the month of *Purattāśi.*

[கோபாலன் → கோபாலம்.]

கோபாலன் *kōbālaṉ,* பெ.(n.) 1. இடையன்; shepherd. 2. கண்ணன்; Lord Krisna. *"கோபாலா போரேறே" (பாரத.கிருட்.34).*

Skt., Pali. gōpāla; **Pkt.** gōvāla; **Pan.** gavāl; **Nep.** gwalō; **Uri.** goāḷa; **H.** goal, gual; **Guj.** govāḷ; **Mar.** gōvāḷa, gōvḷa, govḷā; **Beng.** goyāl (cowshed).

[கோ + பாலன்.]

கோபாலி *kōbāli,* பெ.(n.) வேணுகோபாலன் உருவம் பொறிக்கப்பெற்றுச் சேலம் பகுதியில் வழங்கிய ஒரு வகை நாணயம் (G.Sm.D.I.i, 290); a fanam current in the Salem district, having the figure of Krishna with the flute.

[கோபாலன் → கோபாலி.]

கோபாவல்லி *kōbāvalli,* பெ.(n.) மருள் என்னும் சணல் வகை; lowstring hemp (சா. அக.).

[கோபம் = சிவப்பு. கோபம் + வல்லி – கோபவல்லி → கோபாவல்லி.]

கோபாவேசம் *kōbā-vēšam,* பெ.(n.) சினங்கொண்ட நிலைமை; the state of being red with anger; angry mood (சா. அக.).

[கோபம் + ஆவேசம்.]

கோபி[1]**-த்தல்** *kōbi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. சினம் கொள்ளுதல்; to be angry, indignant, offended; to take umbrage. 2. புண் முதலியன சினத்தல் (யாழ்ப்.); to be morbidly irritated; to be virulent, as an ulcer.

ம. கோபிக்குக.

[கோப்புதல் = மேலெழுப்புதல். கோப்பு → கோப்பி → கோபி = சினம் பொங்குதல்.]

கோபி²–த்தல் *kōbi-*, 4 செ.குன்றாவி.(v.t.) கடிதல்; tobe angry with, to reprove, check, reprimand.

[கோபி¹ → கோபி².]

கோபி³ *kōbi¹*, பெ.(n.) சினமுள்ளவன்; hot tempered man.

ம. கோபி.

[குப்பு → கோப்பு → கோப்பி → கோபி.]

கோபி⁴ *kōbi*, பெ.(n.) சுண்ணாம்புடன் கலந்து கட்டடங்களுக்கு வண்ணமாகப் பூசப்படும் சந்தன நிறத்திலுள்ள ஒருவகைப் பொடி; yellowish red pigment mixed with lime used for painting buildings.

[குப்பள் = சிவந்த மண், சிவப்பு. குப்பள் → குப்பி → கோபி.]

கோபி⁵ *kōbi*, பெ.(n.) 1. நன்னாரி; sarsaparilla. 2. சந்தனம்; sandal. 3. கருநொச்சி; willow-leaked justicia.

[குப்பள் = சிவந்த மண், சிவப்பு. குப்பள் →குப்பி →கோபி.]

கோபிகம் *kōbigam*, பெ.(n.) அசோகு; *aśōgā* tree (சா.அக.).

[கோபி (சிவப்பு) → கோபிகம்.]

கோபிகாவசந்தம் *kōbigā-vaśandam*, பெ.(n.) பண்வகை (இராகவகை) (பரத.இராக.102); a specific melody - type.

[கோபிகை + வசந்தம்.]

கோபிகாவி *kōbi-kāvi*, பெ.(n.) 1. ஒருவகைச் சிவந்த மஞ்சட்காவி; a kind of reddish yellow ochre. 2. பூரான் காவி; common yellow ochre.

[கோபி + காவி.]

கோபிசந்தனம் *kōbi-śandaṉam*, பெ.(n.) 1. கோபிக்கல்; yellow ochre. 2. திருமண்; yellow earth worn by *Vaisṇavites* on their forehead (சா.அக.). *"தாமரைத் திருமணியு மெய்க் கோபி சந்தனமும்" (பிரபோத.10:13).*

[கோபி + சந்தனம்.]

கோபிசாற்று–தல் *kōbi-sāṟṟu-*, 5 செ.குன்றாவி.(v.t.) ஏமாற்றுதல் (உ.வ.); to deceive.

[கோபம் = சிவப்பு. கோபம் →கோபி = செஞ்சந்தனம்.]

கோபித்தம் *kōbittam*, பெ.(n.) எருது அல்லது ஆவின் பித்தப் பையினின்று எடுத்து அணியமாக்கப்படும் மான்மணத்தி; ox bile; bile of cows - bezoar (சா.அக.).

[கோ + பித்தம்.]

கோபித்தவக்கினி *kōbitta-v-akkiṉi*, பெ.(n.) 1. அகட்டுத் தீ; gastric fire. 2. பித்தம்; bile (சா.அக.).

[கோபித்தம் + அக்கினி.]

கோபிதாரம் *kōbi-tāram*, பெ.(n.) சுரா (பிங்.); bottle-flower.

[கோபி + தாரம்.]

கோபிப்பேய்ச்சூலை *kōbi-p-pēy-c-cūlai*, பெ.(n.) பித்தம் மிகுந்து சினக்கும்போது பேய் பிடித்தவர்களைப் போல் நடுக்கங் கண்டு சூலைநோய் கொண்டவர்களைப் போல் கை, கால் வலுவற்று ஒன்றையெடுக்கவும், நடக்கவும் முடியாமற் செய்யுமோர் நிலைமை; an agitated condition or strong emotion by which one is rendered unable to handle any substance or to walk any distance, owing to the shivering of the body arising from anger. It is due to the affection of the nervous system as a result of the aggravated condition of bile in the system (சா.அக.).

[கோபி + பேய் + சூலை.]

கோபிபோடு–தல் *kōbi-pōḍu-*, 19 செ.குன்றாவி.(v.t.) ***கோபிசாற்று–தல்*** பார்க்க; see *kōbi-śāṟṟu-*.

[கோபி + போடு.]

கோபியடி–த்தல் *kōbi-y-aḍi-*, 4 செ.கு.வி.(v.i.) சுவர்க்கு மஞ்சட்காவி பூசுதல்; to brush walls with yellow-wash.

[கோபி + அடி.]

கோபினை *kōbiṉai*, பெ.(n.) சினம் (யாழ்.அக.); anger.

[கோபம் → கோபினை.]

கோபீகன் *kōbigaṉ*, பெ.(n.) கடுங்கோபமுள்ளவன்; extremely hot-tempered man. *"பொறையிலாத கோபீகன்" (திருப்பு.530).*

[கோபம் → கோபிகன் → கோபீகன்.]

கோபுரக்கல் *kōbura-k-kal*, பெ.(n.) செங்கல்; brick; red brick (சா. அக.).

[கோபுரம் + கல்.]

30 ஆகஸ்

கோபுர வகைகள்

திருவரங்கம்

ஏகம்ப ஈசன்



ஈமவோட்டு ஈசன் (கபாலீசுவரர்)

தில்லைக் கூத்தர் (சிதம்பர நடராசர்)

கோபுரக்கள்ளி *kōbura-k-kaḷḷi,* பெ.(n.) பெருங் கள்ளி; a kind of tall spurge (சா. அக.).

[கோபுரம் + கள்ளி.]

கோபுரச்சங்கு *kōbura-c-caṅgu,* பெ.(n.) கோபுர வடிவுடைய சங்கு (மீனவ.); a shell having the shape of, temple tower.

[கோபுரம் + சங்கு.]

கோபுரச்சித்தன் *kōbura-c-cittaṉ,* பெ.(n.) பொன்னாக்கும் ஆற்றல் முறைகளை இயற்றிய சித்தர்களுள் ஒருவர்; one of the Šidda's who instituted the principles of alchemy (சா.அக.).

[கோபுரம் + சித்தன்.]

கோபுரத்தலை *kōpura-t-talai,* பெ.(n.) கோபுரத்தைப்போல் அடி பருத்தும், மேற்பக்கம் கூச்சாகவும், உச்சியுயர்ந்தும் காணும் தலை; tower head - Acrocephalia, it is a deformity of the head in which its vertical diametre is increased and the top is more or less pointed like a tower (சா.அக.).

[கோபுரம் + தலை.]

கோபுரத்தும்பை *kōpura-t-tumbai,* பெ.(n.) அடுக்குத் தும்பை (மலை.); species of balsam.

[கோபுரம் + தும்பை]

கோபுரத்துமெய்காப்பான் *kōpurattu-mey-kāppāṉ,* பெ.(n.) கோயில் காவலன்; temple guard. *"கோபுரத்து மெய்காப்பான் நொருவன் இவன்னெ சாலை உண் வெண்கல நூறும் எண்ணி புகுவிக்கவு பொதவைப்பிக்கவும் கடவான்" (SII.XIX.357:67, pg.185).*

[கோபுரத்து + மெய்காப்பான்.]

கோபுரந்தாங்கி *kōburan-tāṅgi,* பெ.(n.) 1. ***கோபுரந்தாங்கிப்பதுமை*** பார்க்க; see *kōpuran-dāṅgi-p-padumai.* 2. செயற்பொறுப் பாளராய் நடிப்பவன்; one who has an immoderate sense of self- importance and thinks that on him alone everything depends. 3. பூடுவகை (M.M.95); Coro-mandel chiretta.

[கோபுரம் + தாங்கி]

கோபுரந்தாங்கிப்பதுமை *kōburan-tāṅgi-p-padumai,* பெ.(n.) கோபுரத்தைத் தாங்குவது போல, கோபுர உச்சியிலுள்ள பதுமை; figure at the top of a tower seeming to support it.

[கோபுரம் + தாங்கி + பதுமை]

கோபுரப்புடம் *kōbura-p-puḍam,* பெ.(n.) காட்டெருணவக் கோபுரம் போலக் குவித்து நிரப்பி இடும் புடம்; calcination of metals with dried cow-dung heaped like a cone.

[கோபுரம் + புடம்.]

கோபுரம்[1] *kōpuram,* பெ.(n.) நகரம் அல்லது கோயிலின் பெருவாயில் (திவா.); tower-gate of a city or temple.

கோ = அரசு, தலைமை. புரம் = உயர்வு, உயர்ந்த கட்டடம்.

புரை = உயர்ச்சி, 'புரைஉயர் பாகும்' [தொல். உரி. 4] வேந்தன் இருந்த உயர்ந்த எழுநிலைக் கட்டடம் முதலிற் கோபுரம் எனப்பட்டது: பின்பு கோயிலில் அமைந்த எழுநிலை மாடமும் வானளாவி நின்று அப் பெயர் பெற்றது. அதன் அமைப்புத் தேரை ஒத்ததாகும்.

கோபுரம் உள்ள நகர்களின் பெயர்களே, முதலில், 'புரம்' என்னும் ஈறு பெற்றன.

எ.டு. : காஞ்சிபுரம், கங்கைகொண்ட சோழபுரம். வேந்தன் தன் தலைநகரை நாற்புறமும் நோக்கவும், தொலைவிற் பகைவர் வரவைக் காணவும், பகைவர் முற்றுகையிட்டு உழிஞைப்போரை நடத்துங்கால் நொச்சிப்போரைக் கண்காணிக்கவும், அவன் அரண்மனையின்மேல் எழுநிலை கொண்ட ஓர் உயர்ந்த தேர்போன்ற கட்டடம் கட்டப்பட்டிருந்தது. அது 'புரம்' எனப்பட்டது. 'புரம்' = உயர்ந்த கட்டடமான மேன்மாடம்.

புரம் என்பது பின்பு, புரத்தைக் கொண்ட அரண்மனையையும், அதன் சூழலையும் குறித்து, அதன்பின் நகர் என்னும் சொற்போல் தலைநகர் முழுவதையும் குறித்து, நாளடைவில் நகரப் பொதுப் பெயராயிற்று. அரண்மனையிலுள்ள புரம் அரசன் இருக்கையாதலால், கோபுரம் எனப்பட்டது. கோ = அரசன், கோ இருந்த இல் கோயில் எனப்பட்டதை நோக்குக.

பகைவர் வரவு காண்டற்குக் கோபுரம் சிறந்த அமைப்பென்று கண்டபின், நகரைச் சூழ்ந்த கோட்டை மதிலினும், வாயிலிற் பெரிதாகவும் மற்ற இடங்களிற் சிறியனவாகவும் கோபுரங்கள் கட்டப்பட்டன. சிறியன கொத்தளம் எனப்பட்டன. [பண். தமி. நா.பக். 135–6]

கோ என்பது உயரமான, பெரிய எனப் பொருள் தரும். புரம் = வளைந்த சுற்றுமதில். கோபுரம் = சுற்றுச்சுவரில் உயரமாகக் கட்டப்பெற்ற நுழைவாயில் கட்டடப் பகுதி, கொடியேந்திய யானையும் தேரும் உள்நுழையும் வண்ணம் நுழைவாயில் அமைந்த உயர்ந்த மதிற்சுவர்ப்பகுதி. புரம், புரி என்பன சுற்று மதில்கள் உயர்த்திக் கட்டப்பட்ட நகரம், அரண்மனை, கோட்டை ஆகியவற்றைக் குறிக்கும். தமிழர் வரலாற்றில் அரண்மனையிலும் நகரத்தைச் சுற்றிலும் கோட்டை மதில்களில் அமைக்கப்பட்ட கோபுரங்கள், கோவில்களில் இடம்பெற்ற போது நுழைவாயில் கோபுரங்களாக உயர்த்திக் கட்டப்பெற்றன. கோபுரம் என்னும் தமிழ்ச் சொல் சமற்கிருதம் உள்ளிட்ட அனைத்து வடமொழி களிலும் இதே முறையில் வழங்கி வருகிறது. வடமொழியானர் கோபுரம் என்பதற்கு மாட்டுப்பட்டிகளில் மாடுகள் நுழைவதற்கு அமைக்கப்பட்ட வாயில் என்று கூறுவது உண்மைக் காரணம் ஆகாது. புரம் என்னும் சொல் நேரடியாக வாயில் எனப் பொருள் தராது மாட்டைக் குறிக்கும் 'கோவு' – 'கோ' என்னும் சொல்லும் தூய தமிழ்ச்சொல்லே. இச்சொல்லையும் இதே முறையில் வடமொழி

கடன் கொண்டுள்ளது. ஆதலின் வட மொழியாளர் கோபுரம் என்னும் தமிழ்ச் சொல்லை வடசொல்லாகத் திரித்து கூறுவது பொருந்தாது.

கோபுரம்[2] *kōburam,* பெ.(n.) பெருங்கோரை (நாநார்த்த.); a kind of sedge.

[கோ + புரம் = கோபுரம்.]

கோபுரவாசல் *kōbura-vāšal,* பெ.(n.) கோபுரத்தின் கீழ்நிலை; gateway under a tower.

மறுவ: கோபுரவாயில்.

[கோபுரம் + வாசல்.]

கோபுரவாயில் *kōpura-vāyil,* பெ.(n.) ***கோபுரவாசல்*** பார்க்க; see *kōpuravāšal.*

மறுவ. கோபுரவாயில்.

[கோபுரம் + வாசல்.]

கோம்பல்[1] *kōmbal,* பெ.(n.) 1. குறையாத சினம் (பிங்.); vehement anger. 2. மிகுசினம் (திவா.); rage. 3. முன்கோபம் (திவா.); hot temper.

[கோம்பு → கோம்பல்.]

கோம்பவிளை *kōmbaviḷai,* பெ.(n.) குமரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[கோம்பு + விளை.]

கோம்பறை[1] *kōmbaṟai,* பெ.(n.) பயனற்றது (யாழ்.அக.); that which is good for nothing.

[கோம்பை →கோம்பறை.]

கோம்பறை[2] *kōmbaṟai,* பெ.(n.) ஒருவகைக் கடல் மீன்; a kind of sea fish.

[கோம்பு →கோம்பறை (முக்கோண வடிவினது).]

கோம்பி *kōmbi,* பெ.(n.) 1. பச்சோந்தி (பிங்.); chameleon, 2. ஓந்திப் பொது; bloodsucker; *"கோம்பிக் கொதுங்கி மேயா மஞ்ஞை" (திருக்கோ. 21).*

[கோம்பு→கோம்பி.]

கோம்பு[1]**-தல்** *kōmbu-,* 5 செ.கு.வி (v.i.) சினத்தல் (பிங்.); to be angry, furious.

[கூம்பு→கோம்பு.]

கோம்பு[2] *kōmbu,* பெ.(n.) சினக்குறிப்பு; anger, signs of anger. *"கோம்பு படைத்த மொழிசொல் பரத்தையர்" (திருப்பு. 263).*

[கூம்பு→கோம்பு.]

கோம்பு[3] *kōmbu,* பெ.(n.) நீர்த்தேக்கப்பகுதிகளில் ஆற்றோடு வந்துசேரும் சிற்றாறு அல்லது நீர்க்கால் பள்ளச்சாய்கால்களில் நிலப்பரப்பின் உட்புகுந்து நீர் தேங்கும் கூம்பு தோற்றத்து பள்ளப் பகுதி; area of water stagnation in the low belts adjacent to the main storage of the dam. இந்த ஆண்டு கோம்பில் நீர் ஏறியதால் முழுவடையில் பயிரிடவில்லை (கொங்.வ.).

[கோத்தல்→கோ (நீர்கோத்தல்) →கோம்பு.]

கோம்புபாளையம் *kōmbu-pāḷaiyam,* பெ.(n.) கரூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Karur Dt.

[கோம்பு + பாளையம்.]

கோம்பூர் *kōmbūr,* பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கோம்பு + ஊர்.]

கோம்பை[1] *kōmbai,* பெ.(n.) 1. தேங்காய் முதலிய வற்றின் மேலோடு (தஞ்சை.); shell of a coconut or arecanut with the husk, young palmyra fruit after the edible kernel is removed. 2. அறிவிலி (தஞ்சை.); empty headed person. 3. காட்டிலுள்ள மரக்கட்டை வேலி; stockade in a forest.

ம. கோம்ப.

[குரும்பை→ கோம்பை.]

கோம்பை[2] *kōmbai,* பெ.(n.) தேனி மாவட்டத்தில் ஓர் ஊர்; a town in Theni district noted for dogs.

[கோம்பு→கோம்பை.]

கோம்பை[3] *kōmbai,* பெ.(n.) கூரை, ஓட்டு வீடுகளின் பக்கச் சுவர்களின் முக்கோண வடிவ மேற்பகுதி (கட்.தொ.); top triangular portion of side walls of tiled or thatched houses.

[கோம்பு→கோம்பை.]



கோம்பை

கோம்பைக் கலயம் *kōmbai-k-kalayam,* பெ.(n.) அடியற்ற மட்பாண்டம்; a bottomless mud-vessel.

[கோம்பை + கலயம்.]

கோம்பை நாய் *kōmpai-nāy,* பெ.(n.) கோம்பை ஊரிலுள்ளதும் காவல் புரிவதிற் சிறந்ததுமான ஒருவகைச் செந்நாய்; species of large red dogs used as watch dogs, bred in Kombai in Theni district.

[கோம்பை + நாய்.]

கோம்பைப்பட்டி *kōmabai-p-patti,* பெ.(n.) திண்டுக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dhindukkal dt.

[கோம்பை + பட்டி.]

கோம்மரை *kōmmarai,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டம் தண்டந்தோட்டம் அருகிருந்த ஊர்; a place near Thandanthottam in Thanjavur dt. *"மாத்தர கோத்திரத்து இரண்ய கேசி சூத்திரத்து கோம்மரை சுவாமிதத்தா பட்டன்" (பல்.செ.முப்.பக் 222 வ.208, தண்.தோ.செ.).*

[கோம்பரை→கோம்மரை.]

கோமக்கள்ளி *kōma-k-kalli,* பெ.(n.) சதுரக் கள்ளி; square-spurge.

[கூர்மம் + கள்ளி – கூர்மக்கள்ளி → கூமக்கள்ளி → கோமக்கள்ளி.]

கோமகள் *kō-magal,* பெ.(n.) 1. அரசி; queen. *"எங்கோமகளை யாட்டிய வந்நாள்" (சிலப். 25:161).* 2. தலைவி (பிங்.); lady in authority, mistress.

ம. கோமள்

[கோ + மகள்.]

கோமகன் *kō-magan,* பெ.(n.) 1. இளவரசன்; prince, son of a king. கோமகற் பெற்று (பெருங். நரவாண. 7:36). 2. அரசன்; king. *"கோமகன் கொற்றங் குறைவின் றோங்கி" (சிலப். 36:6).* 3. மதிப்பிற் குரியவர்; eminent person.

[கோ + மகன்.]

கோமங்கலம் *kō-mangalam,* பெ.(n.) கோவை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Kovai Dt.

[கோ + மங்கலம்.]

கோமசூரிகை *kō-maśūrigai,* பெ.(n.) கால்நடைகளுக் குண்டாகும் அம்மை; cow-pox, small pox of cattle - vaccinia (சா. அக.).

[கோமம் + சூரிகை.]

கோமட்டி *ko-matti,* பெ.(n.) தெலுங்கு வணிக வகையினர்; Telugu-speaking merchant-caste.

ம. கோமட்டி; க. கோமடி, கோமடிக; தெ. கோமடி; கூ. கோமடி, கோமடிகெ

[கோமுட்டி → கோமட்டி.]

கோமடந்தை *kō-madandai,* பெ.(n.) அரசலக்குமி, அரசி; queen, goddess of Sovereignty. *"கோமடந்தை களிகூர" (பாரத அருச்சுனன்றீர். 40).*

ம. கோமடந்த.

[கோ + மடந்தை.]

கோமடம் *kōmadam,* பெ. (n.) பெரிய மடம்; big mutt. "கஞ்சிபோசன் இராமபிரான்பட்டரூய கோமடத்து சூரியதேவபட்டரூய அத்திக்குறி நம்பிப்பிரான் பட்டரூய" (தெ.இ.கல்.தொ.6 கல்.37–16).

[கோ + மடம்.]

கோமணம் *kōmanam,* பெ.(n.) ***கோவணம்*** பார்க்க; see *kōvanam.*

மறுவ. தாய்ச்சிலை.

ம. கோமணம்; து. கோமண.

[கோமணம் →கோவணம்.]

கோமணாண்டி *kōmanāndi,* பெ.(n.) ***கோவணாண்டி*** பார்க்க; see *kōvanāndi.*

[கோவணாண்டி → கோமணாண்டி.]

கோமணிக் குன்றம் *kōmani-k-kunram,* பெ.(n.) பித்தளைக்கான கனிமங்கள் கிடைக்கும் மலை; mountain containing brass ore (சா. அக.).

[கோமணி + குன்றம்.]

கோமதம் *kōmadam,* பெ.(n.) ***கோரோசனை*** பார்க்க; see *kōrōśanai* (சா. அக.).

[கோ = மாடு. கோ + மதம்.]

கோமதி *kōmadi,* பெ.(n.) 1. பீகார் மாநிலத்து ஆறு; a river of Bihar. "ஆன கோமதி வந்தெய்து மரவம்" (கம்பரா. வேள்வி.5) 2. ஒரு தெய்வம்; a Goddess.

[கோமளத்தி →கோமதி]

கோமதை *kōmadai,* பெ.(n.) ***கோமதி*** பார்க்க; see *kōmadi.*

[கோமதி + கோமதை]

கோமம் *kōmam*, பெ.(n.) 1. ஈரல்; liver, 2. சங்கு செய்நஞ்சு; a variety of white arsenic (சா. அக.).

[கோப்பு →கோமம் (கூரானது)]

கோமம்பட்டி *kōmam-paṭṭi*, பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri dt.

[கோமம் + பட்டி.]

கோமம்பட்டு *kōmam-paṭṭu*, பெ.(n.) தருமபுரி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Dharmapuri Dt.

[கோமம் + பட்டு.]

கோமயம் *kōmayam*, பெ.(n.) 1.மாட்டுச்சாணம்; cow-dung. *"கோமயப் பூச்சிச் செய்தே" (இரகு.கடிம.79).* 2. ஆன் (பசுவின்) சிறுநீர்; cow's urine. *"இருநான்கு பஞ்சதசியேழ் இரண்டு தன்னில் வரமாகுங் கொள்கோமயம்" (சைவச. பெ.கு. 198).* 3.காடிநீர்; fermented liquid, vinegar.4.ஆ (பசு)த் தன்மை; the nature or peculiarity of a cow (சா. அக.).

[கோ + மயம்]

கோமரத்தாடி *kōmarattāḍi*, பெ.(n.) உடலில் தெய்வங்களேறுவதால் வெறியாடுபவன் (G. Tn. D.I. 109); a person who is inspired by deities and dances.

[கோ + மரம் + அத்து + ஆடி.]

கோமரம்[1] *kōmaram*, பெ.(n.) தெய்வமேறி ஆடுகை (தெய்வ ஆவேசம்) (G.Tn.D.I.109); inspiration, possession by spirits.

[ம. கோமரம் → த. கோமரம்.]

கோமரம்[2] *kōmaram*, பெ.(n.) சதுரக்கள்ளி (மலை.); square spurge.

[கூர் → கோ + மரம்]

கோமராசி *kōmarāśi*, பெ.(n.) குரங்கன்சுறா அல்லது புலிச்சுறா வென்னும் ஒருவகைக் கடல்மீன்; tiger-shark-Stegostoma tigrinum (சா. அக.).

[கோமம் + ராசி (உயிரினம்)]

கோமரி *kōmari*, பெ.(n.) ஓமம்; a species of cumin (சா.அக.).

[கூர்மலி→கூமலி→கோமரி]

கோமலகம் *kōmalagam*, பெ.(n.) தாமரை நார் நூல்; lotus thread.

மறுவ. கோபத்திரம்.

[கோமலம் →கோமலகம்]

கோமலதை *kōmaladai*, பெ.(n.) மென்மை; that which is soft.

[கோமலம் →கோமலதை]

கோமலம் *kōmalam*, பெ.(n.) 1. அழகு; beauty. 2. நீர்; water. 3. பேய்த்தேர்; a ghost (temple car) chariot, 4. மிருது; softness. 5. இளவேனில்; spring season.

[கும்→ கும்மல்→ கும்மலம் →கோமலம்]

கோமலமூலகம் *kōmala-mūlagam*, பெ.(n.) முருங்கை; drumstick tree.

[கோமலம் + மூலகம்]

கோமளம் *kōmaḷam*, பெ.(n.) 1. மென்மை; softness, tenderness. *"கோமளக் கொழுந்து" (திருவாச.5:68).* 2) இளமை; youthfullness, juvenility. *"கோமளவான் கன்றைப் புல்கி" (திவ். திருவாய். 4:4:5).* 3. அழகு (சூடா.); loveliness, beauty. *"கோமளம் பத்மராகம்" (அரிச்.நாட்டு.10).* 4.கறவை பெற்றம் (சூடா.); milch cow. 5.மாணிக்கவகை; a kind of ruby. *"மாணிக்கம்...... கோமளமும்" (S.I.I.ii,431,51).* 6. மகிழ்ச்சி; joy.

[கும்மல்→ கும்மலம் →கோமளம்]

கோமளாங்கம் *kōmaḷāṅgam*, பெ.(n.) மென்மையான வுடம்பு; tender body (சா. அக.).

[கோமளம் + அங்கம் – கோமளாங்கம்]

கோமாட்டி *kōmāṭṭi*, பெ.(n.)தலைவி; heroine, mistress. *"கவிரிதழ்க் குறக்கோ மாட்டி கணவனை" (குற்றா. தல. நூற்பயன் 49).*

[கோவன் →கோபன்→கோமம் + ஆட்டி – கோமாட்டி.]

கோமாணங்கையர் *kōmāṇaṅgaiyar*, பெ.(n.) அரசன் பெருந்தேவி; queen-in-chief in a kings harem. *"பைந்தொடிக் கோமாணங்கையர்" (பெருங். உஞ்சைக். 40:63).*

[கோமாள் + நங்கையர்.]

கோமாதாக்கள் *kō-mādākkaḷ*, பெ.(n.) நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்ற ஐவகை ஆன் (பசு)கள்; the fine 'mother cows', viz., nantai, pattirai, surabi, *śuśilai, śumaṇai*.

[கோ + மாதாக்கள்.]

கோபுர வகைகள்



அங்கயற்கண்ணி (மீனாட்சியம்மன்)



எழிற்கண்ணியம்மன் (காஞ்சி காமாட்சியம்மன்)

திருவண்ணாமலை

பேரரசப் பெருமாள் (காஞ்சிவரதராசப் பெருமாள்)

கோமாப்பு *kōmāppu*, பெ. (n.) நரிநாவல்; small jaumoon (சா. அக.).

[கோ + (மால்) மாப்பு]

கோமாபுரம் *kōmāpuram*, பெ.(n.) தஞ்சை மாவட்டத்துச் சிற்றூர், a village in Thanjai dt.

[கோமம் + புரம்.]

கோமாயு *kōmāyu*, பெ.(n.) 1. நரி; fox; jackal. 2. சிறு கலன்; small vessel.

[குறு →கோ + மாயு]

கோமார் *kōmār*, பெ.(n.) நாவல்மரம்; jamoon tree (சா. அக.).

[கோமம் + மரம் – கோமமரம்→கோமார் (கொ.வ.)]

கோமாரி *kōmāri*, பெ.(n.) மாடுகளின் கால்களிலும் வாயிலும் வரும் ஒருவகை நோய்; a kind of disease in the mouth and leg of cow.

மறுவ. கோதாரி.

[கோ (மாடு) + மாரி (நோய்).]

கோமாள் *kōmāḷ*, பெ.(n.) தலைவி; mistress. *"கோமாட் கோடிய குறிப்பின னாகி" (பெருங். மகத. 8:59).*

[கோமகள் → கோமாள்]

கோமாளம் *kōmāḷam*, பெ.(n.) *1.* ***கும்மாளம்*** குதித்து ஆடுகை; jumping, romping, as of fat bullocks. 2. கொண்டாட்டம்; celebration. 3. பகடி விளையாட்டு; a kind of fun play.

ம. கோமாளம்.

[கும்மாளம் → கோமாளம்]

கோமாளி[1]-த்தல் *kōmāḷi-*, 4 செ.கு.வி.(v.i.) கோமாளித்தனஞ் செய்தல் (பாண்டி); to play the baffoon; to indulge in drollery.

[கோமாளம் → கோமாளி.]

கோமாளி[2] *kōmāḷi*, பெ.(n.) 1. நகைச்சுவை யூட்டுபவன்; buffoon, a clown. *"நிலையிலாத கோமாளி" (திருப்பு. 530).* 2. பேதை; a simpleton.

ம. கோமாளி; **கோத.** கோமாள்ய.

[கும்மாளம் → கும்மாளி → கோமாளி.]

கோமாளித்தனம் *kōmāḷi-t-taṉam*, பெ.(n.) பேதைத்தனம்; baffoonness.

ம. கோமாளித்தனம்.

[கோமாளி + தனம்.]

கோமாளிக்குணம் *kōmāḷi-k-kuṇam*, பெ.(n.) பித்து; madness (சா. அக.).

[கோமாளி + குணம்.]

கோமாளிக்கூத்து *kōmāḷi-k-kūttu*, பெ.(n.) நகைப்பு விளைக்குஞ் செயல்; buffoonery.

[கோமாளி + கூத்து.]

கோமாளூர் *kōmāḷūr*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Villuppuram dt.

[கோமாள் + ஊர்.]

கோமான்[1] *kōmāṉ*, பெ.(n.) 1. அரசன்; king. *"வத்தவர் கோமான் வயவர் திரிதர" (பெருங். உஞ்சைக். 44:93).* 2. பெருமையிற் சிறந்தோன்; person of eminence, lord. *"கோமாற்கே நாமென்று மீளா வாளாய்" (தேவா. 1236:1).* 3. குரு (பிங்.); spiritual preceptor. 4. மூத்தோன் (திவா.); elder.

[கோ + (மகன்) மான்]

கோமான்[2] *kōmāṉ*, பெ.(n.) பன்றி; hog.

[கூர்மம்→கோமம்→ கோமான்]

கோமான்[3] *kōmāṉ*, பெ.(n.) சதுரக்கள்ளி; square spurge.

[கூர்மம்→கோமம்→ கோமான்]

கோமி *kōmi*, பெ.(n.) ***கோமதி*** பார்க்க; see *kōmadi*. *"கோமியு முறையுங் குடமூக்கிலே" (தேவா. 432:8).*

[கோமதி →கோமி]

கோமிருகம் *kōmirugam*, பெ.(n.) கத்தூரிமான்; musk deer (சா. அக.).

[கோ + மிருகம்.]

கோமிலாய் *kōmilāy*, பெ.(n.) காட்டுவிலங்கின் தன்மையன் (யாழ். அக.); rude, brutish person.

[கோமுரான்→கோமிலா(ன்)ய்.]

கோமுகம்[1] *kō-mugam*, பெ.(n.) 1. ***கோமுகா விருக்கை*** பார்க்க; see *komugā-v-irukkai*. 2. ***கோமுகி*** பார்க்க; see *kōmugi*. ஒரு விரல் உசரத்து கோமுகம் ஒன்று (S.I.I. ii. 176, 60).

[கோ + முகம்]

கோமுகம்[2] *kōmugam,* பெ.(n.) ஒருவகை இசைக் கருவி; a kind of musical instrument.

[கோ + முகம்]

கோமுகாவிருக்கை *kōmugā-v-irukkai,* பெ.(n.) கணுக்கால்களை இடுப்புச் சந்திற் சேர்க்கும் மாட்டின் முகம் போன்ற ஒக இருக்கை வகை; a yōgic posture which consists in crossing the ankles and placing them in the hip joints.

மறுவ. கோமுகாசனம்

[கோமுகம் + இருக்கை]

கோமுகி *kō-mugi,* பெ.(n.) ஆன் (பசு) முதலியவற்றின் முகமாகச் செய்யப்பட்ட நீர்விழும் வாய்; gargoyle as in the form of cows' head, projecting from a building, pedestal of a lingam etc.

மறுவ. கோமுகம், கோமுகை.

[கோ + முகி]

கோமுகை *kōmugai,* பெ.(n.) **கோமுகி** பார்க்க; see *kō-mugi.* *"ஒருமுழுங் கோமுகையோடும்" (சைவச. பொது. 505).*

[கோ + (முகி) முகை.]

கோமுச்சிரவல்லி *kōmu-c-ciravalli,* பெ.(n.) சித்திரமூலம் என்னும் கொடி (மலை.); Ceylon leadwort, climber.

மறுவ. கொடுவேலி.

[கோமுகம் + சிரவல்லி.]

கோமுட்டி[1] *kōmuṭṭi,* பெ.(n.) தெலுங்கு பேசும் வணிகர்; Telugu speaking merchant.

[கோ + முட்டி. மாட்டு மந்தைகளையுடைய செல்வன்.]

கோமுட்டி[2] *kōmuṭṭi,* பெ.(n.) பாயுடன் கூடிய மரம்; a wood along with a mat.

[கோ + முட்டி.]

கோமுட்டிக்குட்டு *kōmuṭṭ-k-kuṭṭu,* பெ.(n.) கோமுட்டிகளின் கமுக்கமான வணிகத் தரவுகள்; trade-secrets, as of a *kōmuṭṭi.*

[கோமுட்டி + குட்டு.]

கோமுட்டிச்சாட்சி *kōmuṭṭi-c-cāṭci,* பெ.(n.) வழக்காடி, எதிர்வழக்காடி இருவருக்கும் ஏற்ப உரைக்கும் சான்று (கோமுட்டி சொல்லுஞ் சான்று); evidence equally favourable to the plaintiff and defendant, evidence of ambiguous value.

[கோமுட்டி + சாட்சி.]

கோமுராச்சுறா *kōmurā-c-cuṟā,* பெ.(n.) சுறாமீன் வகைகளுளொன்று; a kind of shark fish.



கோமுராச்சுறாமீன்

[கோமுரா + சுறா.]

கோமுற்றவர் *kō-muṟṟavar,* பெ.(n.) அரசர்; king. *"கோமுற்றவர் கொள்ளுதல்" (அஷ்டாதச. ப. 71).*

[கோ + முற்று – கோமுற்று→கோமுற்றவர்.]

கோமுறியான் *kōmuṟiyāṉ,* பெ.(n.) பிலால் வகையைச் சார்ந்ததொரு கடல்மீன் (மீனவ.); a kind of sea fish as of *pilāl.*

[கோ + முறியான்.]

கோமுறை[1] *kō-muṟai,* பெ.(n.) அரசனது நெறி தவறாத ஆட்சி; just rule of a king. *"கோமுறை யன்றிப் படுபொருள் வௌவிய" (சிலப். 23:101).*

[கோ + முறை.]

கோமுறை[2] *kō-muṟai,* பெ.(n.) அரசிறை; revenue. *"நாம் கொள்ளும் கோமுறைகளுமே" (S.I.I. V.312).*

[கோ + முறை.]

கோமுறைபாடு *kōmuṟai-pāḍu,* பெ.(n.) அரசு இட்டுள்ள இறை, வரி முதலிய கட்டுப்பாடுகள்; regularisation of rate, tax levied by the Government. "இந் நான்கெல்லைக்கு உட்பட்ட நஞ்செய் புஞ்செய் பட்டடை கொடித்தோட்டம் மரவடை மாவடை மற்றும் நாங்கொள்ளும் கோமுறை பாடுகளும் மற்றும் எப்பேற்பட்ட சுவந்திரங்களும்" (SII.V. 763–6 p. 329).

[கோ + முறைபாடு.]

கோமுனி *kō-muṉi,* பெ.(n.) அரச குரு; royal sage. *"சரங்களே கொடு கோமுனி யிருக்கையோர் கூட மாக்கினான்" (கம்பரா. வேள்வி. 49).*

[கோ + முனி.]

கோமூத்திரம் *kō-mūttiram,* பெ.(n.) ஆவின் சிறுநீர்; cow's urine (சா. அக.).

[கோ + மூத்திரம்.]

முள் – [மொள்] = மோள். மோளுதல் → சிறுநீர்விடுதல். மோள் + நிரம் – [மோட்டிரம்] – மோத்திரம் → மூத்திரம். மோள் என்னும் வினையும் மோத்திரம் என்னும் பெயர்வடிவும் இன்றும் பாண்டி நாட்டில் வழங்குகிறது (வ...வர.244).

கோமூத்திரிகை[1] *kō-mūttrigai,* பெ.(n.) 1.ஒரு வகைப் புல்; a kind of yellowish brown grass. 2. ஒரு கொடி; a creeper (சா. அக.).

[கோ + (மூத்திரம்) மூத்திரிகை.]

கோமூத்திரிகை[2] *kōmūttirigai,* பெ.(n.) ஒரு செய்யுளின் முன்னிரண்டடி மேல்வரியாகவும் பின்னிரண்டடி கீழ்வரியாகவும் எழுதி அவ் விரண்டு வரியின் எழுத்துகளையும் மாட்டின் சிறுநீர்த் தாரைபோல் மாறிமாறிப் படிக்க அச் செய்யுளாகும்படி அமைத்துப் பாடும் சித்திரகவி (தண்டி. '95); verse of two lines composed in such a way that the first letter of the first, the 2nd of the 2nd, the 3rd of the first, the 4th of the 2nd, etc., when read together form the 1st line and the 1st of the 2nd, the 2nd of the 1st, the 3rd of the 2nd, the 4th of the 1st etc., form the second line.



கோமூத்திரிகை

skt. *mūttirikā.*

[கோ + (மூத்திரம்) மூத்திரிகை.]

கோமேதகத்தீவு *kōmēdaga-t-tīvu,* பெ.(n.) தொன்மங்களில் கூறப்பட்ட எழுவகைத் தீவுகளுள் ஒன்று; (சி.போ.பா.ப. 209); an annular continent mentioned in Puranas.

[கோமேதகம் + தீவு.]

கோமேதகம் *kōmēdagam,* பெ.(n.) ஒன்பான் மணிகளுளொன்று (சிலப். 14:190, உரை); sardonyx from the Himalayas and the Indus, one of nine gems.

[கோ + மேதகம். கோ + (மேதம்) மேதகம். கோ = மாடு. மேதம் = கொழுப்பு.]

மாட்டுக் கொழுப்பின் நிறம் கொண்ட மணி கோமேதகம் எனப்பட்டது. இதில் வெண்மை, வெளிர்மஞ்சள், சிவப்பு, கருநீல வகைகளும் உண்டு.

கோமேதம்[1] *kō-mēdam,* பெ.(n.) ***கோமேதகம்*** பார்க்க; see *kōmēdagam.*

[கோ + (மேதகம்) மேதம்.]

கோமேதம்[2] *kōmēdam,* பெ.(n.) ஆவின் கொழுப்பைத் தீயிலிடும் வேள்வி; cow-sacrifice. *"கோமே மிராச சூயம்" (உத்தரா.திக்குவி.117).*

[கோ + மேதம். கோ = ஆ, மாடு. மேதம் = கொழுப்பு.]

கோய் *kōy,* பெ.(n.) 1. கள் முகக்கும் ஏனம்; vessel for taking out toddy. *"ஓரிற் கோயிற் றேருமால்" (புறநா. 300).* 2. மணத்தி (பரணி)ச் செப்பு; small perfume box. *"சாந்துக்கோய் புகிய செல்வ" (சீவக. 764).* 3. தாழி (பரணி) நாள் (சங்.அக.); the second naksatra.

[கோளி→கோள் → கோய்.]

கோயக்கண் *kōya-k-kaṉ,* பெ.(n.) மாறுகண்; squint eye.

[கோய் + கண் – கோய்க்கண் →கோயக்கண்.]

கோயம்புத்தூர் *kōyamputtūr,* பெ.(n.) ***கோவன் புத்தூர்*** பார்க்க; see *kōvaṉ-puttūr.*

[கோவன் (ஆயன்) +புத்தூர் = கோவன்புத்தூர்→ கோயம்புத்தூர்.]

கோவன் என்னும் ஆயர் இனத் தலைவன் வாழ்ந்த ஊர் என்பதனால் கோவன்புத்தூர் ஆகிப் பின்னர்க் கோயம்புத்தூர் ஆயிற்று.

கோயம்பேடு *kōyam-bēḍu,* பெ.(n.) சென்னை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Chennai Dt.

[கோள் = பகைவரிடம் கொள்ளையடித்த மாடுகள். கோள்→கோ + அன் – கோயன் (மாடு மேய்ப்பவன், மாட்டு மந்தைக்காரன்.) + பேடு (மேட்டு நிலம்) → கோயம்பேடு.]

கோயமுத்தூர் *kōyamuttūr,* பெ.(n.) ***கோவன் புத்தூர்*** பார்க்க; see *kōvaṉ-puttūr.*

[கோவன் – கோயன் + புத்தூர்.]

கோயர் *kōyar,* பெ.(n.) 1. கோயன் பார்க்க; see *kōyaṉ* 2. கோசர் என்னும் வகுப்பினர்; people

known as *Kōsar*. 3. கோதாவிரிக்கரையில் வாழும் திராவிட வகுப்பினர்; a Dravidian tribal group of people in the Godaviri region of Andra Pradesh.

[கோ→ கோயன்→கோயர் (மாடு மேய்ப்பவர்).]

கோயன் *kōyan*, பெ.(n.) 1. மாடு மேய்ப்பவன், ஆயன்; a cowherd. 2. மாட்டு மந்தைக்கு உரிமை யாளன்; owner of a herd.

[கோள் : பகைவரிடம் கொள்ளையடித்த மாடுகள். கோள்→கோ + அன் – கோயன்.]

கோயா *kōyā*, பெ.(n.) ஆந்திர மாநிலத்தில் வாரங்கல், கம்மம், கோதாவரிப் பகுதிகளிலும், சட்டித்(ஸ்)கர் (பஸ்தர்), ஒரியா (கோரபட்) மாநிலங்களிலும் பழங்குடிமக்கள் இரண்டிலக்கம் பேருக்குமேல் பேசி வரும் திரவிடமொழி; a Dravidian language spoken by more than two lakhs Tribals in Andhra Pradesh (Warangal, Kammam, Godavari) etc.

[கோ : மலை. கோ → கோயன்→கோயா (மலைவாழ் நன்).]

கோயில்[1] *kōyil*, பெ.(n.) அரண்மனை; palace, residence of a king or noble man. *"கோயின் மன்னனைக் குறுகினள்" (சிலப்.20:47).*

[கோ + இல் – கோயில்.]

கோயில் எனும் சொல் தொடக்க காலத்தில் அரசனின் அரண்மனையை மட்டும் குறித்தது [கோ = அரசன், இல் = வீடு] இச் சொல் [கோ] பெரியது என்றும் பொருள்பட்டதால் பெரிய வீடு என்றும் தொடக்கத்தில் ஆளப்பட்டது. பெரிய வீடு என்று பொருள்பட்ட போது அரசன் வாழும் வீட்டைவிட, கடவுள் இருக்கும் கட்டடம் மிகப் பெரிதாக இருக்க வேண்டும் எனும் கருத்தில் கோயில்கள் அரண்மனைகளைவிட, பெரியனவாகக் கட்டப்பட்டன. இக் கருத்தில் 'கோ' [பெரிய] பெயரெச்சமாக நிற்பதால் கோயில் என்பதைச் சேர்த்து எழுதாமல் கோ இல் எனப் பிரித்து எழுதுவதும் வழக்கமாக இருந்தது. பிரித்து எழுதப்பட்ட கோ இல் என்னும் சொல்லே கல்வெட்டினும் கடவுள் ஆலயத்தைக் குறிக்கப் பயன்பட்டிருக்கிறது. இடையில் யகர வகர உடம்படுமெய்கள் சேர்க்காமல் பெயர்ச்சொற்களையும் பெயர் ஈறுகளையும் பிரித்து எழுதுவதைத் தொல்காப்பியரும் குறிப்பிட்டிருக்கிறார். நாய் என்பது நாஇ என உயிரெழுத்து இகரம் சேர்த்துத் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படுகிறது. ஐந்திராவிட மொழிகளான மராத்தி, குச்சர மொழிகளிலும் உடம்படுமெய்களான யகர வகரங்கள் சேர்க்கப்படுவதில்லை.

கோ என்னும் சொல்லுக்குத் தலைவன், அரசன், கடவுள், பெரியது என்னும் அடிப்படைப் பொருள்கள் உள்ளன. ''வாயில் வந்து கோயில் காட்ட'' எனும் சிலப்பதிகாரத் தொடரில் கோயில் என்னும் சொல் அரண்மனையையே குறித்தது. தொல்காப்பியருக்கும் முந்தைய பழங்காலத்தில் கோயில்கள் மாங்களின்கீழ் அமைந்த சிறு உருவங்களாக இருந்தன. கடவுள் கோவிலுக்கென்று கட்டடங்கள் எழுப்பப்பட்டதற்கான சான்றுகள் சிந்துவெளி நாகரிகத்தில் கூடக் கிடைக்கவில்லை. ஆதலால் கோட்டைகளோடு அமைந்த அரசன் வீடு ஒன்றே பெரிய கட்டடமாக இருந்ததால் கோயில் அரண்மனையை மட்டும் குறித்தது. மலையாள மொழியிலும் கோயில் அரண்மனையைக் குறிக்கும். கடவுள் இருக்கும் கோயிலை அம்பலம் என்பர் [பகவதி அம்பலம்]. நாளடைவில் அரண்மனையைக் குறித்த கோயில் எனும் சொல் கடவுள் ஆலயத்தையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. கடவுள் இருக்கும் ஆலயத்தைக் கோவில் என்னும் சொல்லால் வேர் பிரித்துக் காட்டுவதே இலக்கணப்படி செப்பமானதாகும். புணர்ச்சி இலக்கணப்படி,

"இ, ஈ, ஐ வழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்
உயர்வரின் உடம்படு மெய்யென் றாகும்"

– நன். 162

இதன்படி கோ + இல் = கோவில் என்றுதான் வரவேண்டும். கோயில் என்று எழுதுவது இலக்கணப்படி தவறாகிறது. அப்படியானால்

இறையன் – இறைவன்
துறையன் – துறைவன்

என்னும் சொற்கள் இருவகையாகவும் புணர்கின்றன. ஆனால் மலையன் என்பதை மலைவன் என்று சொல்ல முடியவில்லை. தலையன் தலைவன் என்ற இரண்டும் ஒரே பொருளில் வரும் என்று சொல்ல முடியாது. முனியன் முனிவன் என்பதையும் ஒரே பொருளில் கொள்ள முடியாது. கனியன் கனிவன் என்பனவும் வெவ்வேறு பொருளுடையன. ஆதலின் வகர உடம்படுமெய் வரவேண்டிய இடத்தில் யகர உடம்படுமெய் வந்தால் ஒரு நுண்ணிய பொருள் வேறுபாடு உள்ளது என்பதை மறுக்க இயலாது. ஆதலின் கோயில் என்பதில் பெரிய என்னும் பொருளில் 'கோ' பெயரெச்சமாக நின்று இடையில் விட்டிசைத்ததால் இலக்கணப்படி வகர உடம்படுமெய் வராமல் யகர உடம்படுமெய் வந்ததாகக் கொள்ள வேண்டும். இதன்படி கோவில் என்பதை ஒரு சொல் நீர்மைத்தாகக் கொண்டு, சேர்த்திசைக்க வேண்டும். 'கோயில்' என்பதை இருசொல் நீர்மைத்தான பெயரெச்சத் தொடராகக் கொண்டு 'கோஇல்' என இருசொல் போல் விட்டிசைக்க வேண்டும் என்று கொள்வதே பொருத்தமாகும்.

விட்டிசைக்காத சொற்புணர்வுகளில் பொருள் வேறுபாட்டை முதன்நிலைச் சொல்லே விளக்குகிறது. தலையன் தலைவன் எனும் விட்டிசை இல்லாத சொற்களில் நிலைமொழிச் சொல்லான தலை என்பதே பொருள் வேறுபாடு காட்டும். தலையன் என்பதில் தலையை உடையன் எனும் பொருளில் தலை + அன் எனப் பிரித்தல் வேண்டும். தலைவன் என்னும் சொல்லில் தலைமை உடையவன் என்னும் பொருளில் தலைவு + அன் எனப் பிரித்தல் வேண்டும் [தலைவு = தலைமை] சான்றாகப் பணிவு துணிவு போன்றவை பண்புப் பெயராதல் காண்க.

முனியன் முனிவன் எனும் சொற்களில் முனியன் என்பது இயற்பெயர். முனிவன் என்பதில் முனிவு என்பது நிலைமொழி ஆகிறது. [முனிவு + அன்].

இறையன், இறைவன் என்னும் சொற்களில் இறை + அன் = இறையன் எனவும், இறைவு [தலைமை] + அன் = இறைவன் எனவும் புணர்ந்தன. துறையன் துறைவன் என்னும் சொற்களில் துறை + அன் = துறையன், துறைவு [துறை மேலாண்மை] + அன் = துறைவன் எனப் புணர்ந்தன. இறைவு,

கோயில் வகைகள் (திராவிடக் கட்டடக்கலை)


குடிசையின் கூரை அமைப்பு (பாஞ்சாலி மண்டபம்)


சதுரக்கோயில் அமைப்பு


நீள்சதுரக் கோயில் அமைப்பு


நீண்ட அரையுருளை வடிவ தூங்கானை மாடக்கோயில் அமைப்பு


நீழல் குடையமைப்பு

துறைவு எனும் சொற்கள் வழக்கிழந்தன. சாஅறாகப் பண்ணைய மேலாண்மை யைக் குறித்த பண்ணாட்டு என்னும் சொல் செய்யுளில் வழக்கிழந்தாலும் கொங்குநாட்டில் இன்றும் பேச்சு வழக்கில் இருப்பதைச் சுட்டிக் காட்டலாம்.

இதன் வண்ணம் கோவு (தலைமை) + இல் = கோவில். உலகப் படைப்பிற்கே தலைவனான இறைவனின் கோவிலைச் சுட்டியது. ஆதலால் கோயில் என்பது அரண்மனையை குறிக்கவும், கோவில் என்பது இறைவனின் ஆலயத்தைக் குறிக்கவும் வழங்கிய சொற்கள் என்று கூறுவதே இலக்கணப்படி அமைவு பெறத் தக்கனவாம். இருவகையாகவும் வரலாம் எனவும் ஒன்றினை வழுவமைதியாகக் கொள்ளலாம் எனவும் கூறப்படுவன மொழிமரபின் வரையறுத்த இலக்கண மருங்கில் உகந்த வழக்காக ஏற்றுக்கொள்ளத் தக்கனவல்ல.

கோயில்[2] *kōyil*, பெ.(n.) 1. ஆலயம்; temple, sanctuary, church, chapel. *"அரும்பொருட் டனைத்தே யண்ணல் கோயில்" (பரிபா. பக்.174, செய்யுள்.2).* 2. சிதம்பரம் (தேவா.); sacred town of Chidambaram (Ciṟṟambalam). 3. திருவரங்கம்; Srirangam. *"கோயிற் பிள்ளா யிங்கே போதராயே" (திவ். பெரியாழ். 2.9:4).* 4. வீரசைவர் தரிக்கும் இலிங்கசம்புடம்; silver casket enclosing the lingam worn by Lingayats. 5. கோயிற்பற்று; parish church, parish.

மறுவ. கோவில், கோ இல், கோநகர் அம்பலம்.

ம. கோயில்; **தெ.** கோயில, கோவெல; **கோண்.** கோஅ(அரசன்); பர். கோச் (அரசன்).

[கோ + இல் – கோயில்.]

கோயில் பெயரெச்சத்தொடர்.

கோயில்[3] *kōyil*, பெ.(n.) நாற் சீர்த்தூக்கு நேர அளவு (மணிமே.2:19. உரை); a kind of time measure.

[கோயில் மணி → கோயில்.]

கோயில்கணக்கு *kōyil-kaṇakku*, பெ.(n.) ***கோயிற்கணக்கு*** பார்க்க; see *kōyiṟ-kaṇakku*. *"இப்படிக்கு கோயில் கணக்கு தப்பிலா வேளான் எழுத்து" (SII.XXVI.15-16 p.11).*

[கோயில் + கணக்கு.]

கோயில்காளை *kōyil-kāḷai*, பெ.(n.) ***கோயிற் காளை*** பார்க்க; see *koyiṟ-kāḷai*.

[கோயில் + காளை.]

கோயில்குடியான் *kōyil-kuḍiyāṉ*, பெ.(n.) துரிஞ்சில்; dark sirissa (சா. அக.).

[கோயில் + குடியான்.]

கோயில்தானத்தார் *kōyil-tāṉattār*, பெ.(n.) திருக்கோயில் வழிபாடுகள். திருவிழாக்கள். திருப் பணிக்ள் ஆகியவற்றைப் பொறுப்புடன் நிகழ்த்து வதற்கு ஊர்ச்சபையாரால் அமைக்கப்பெறும் பெருமக்கள்; a set of people asked to administer temple affairs. *"உடையார் திருக்கோபுரமடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு அருளிச் செயல்படி"* (S.I.I. XVII.130).

[கோயில் + தானம் + அத்து + ஆர்.]

கோயில்மகிமை *kōyil-magimai*, பெ.(n.) கோயில் காணிக்கை; donations to the temple.

[கோயில் + மகிமை]

கோயில்மாடு *kōyil-māḍu*, பெ.(n.) 1. கோயிற்கு விடப்பட்ட மாடு, கோயிலில் விளக்கெரிக்கத் தேவைப்படும் நெய்யை வழங்குதற்காகக் கொடையாக வழங்கப்பட்ட மாடு; cow or bull belonging to a temple. 2. பெருமாள்மாடு; trained bull taken by wandering mendicants. 3. ***கோயிற்காளை*** பார்க்க; see *kōyiṟ-kāḷai*

[கோயில் + மாடு.]

கோயில்யானை *kōyil-y-āṉai*, பெ.(n.) கோயிலில் உள்ள யானை; temple elephant.

[கோயில் + யானை.]

நிலம் விற்ற பிறகு எல்லை உறுதி செய்து ஊர் ஆட்சி மன்றத்தினர் நிலம் விற்றவர் வாங்கியவர் ஆகியவர் யானை முன் செல்லக் கற்களையும் கள்ளியையும் பயன்படுத்தி நிலத்தின் நான்கெல்லையும் உறுதி செய்வது.

கோயில்வாசி *kōyil-vāśi*, பெ.(n.) அரசர்க்குரிய இறை; taxes due to the king (S.I.I.iii, 80).

[கோயில் + வாசி.]

கோயில்வாரியம் *kōyil-vāriyam*, பெ.(n.) கோயில் மேலாண்மை அவை; managing committee of a temple. *"கோயில் வாரியம்"* (S.I.I.iii, 80).

[கோயில் + வாரியம்]

கோயில்வெண்ணி *kōyil-veṇṇi*, பெ.(n.) கரிகாற் சோழன் தன் பகைவர்களுடன் பொருது வெற்றிபெற்ற இடம்; the place where kari-kal solan has fought with his opponent and won.

மறுவ. வெண்ணிக்கூற்றம், திருவெண்ணியூர், கோயில் உண்ணி.

[கோயில் + வெண்ணி (வெண்நாவல் மரம்).]

தஞ்சை மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புடைய ஊர். கரிகாலன் சோமான் பெருஞ்சேரலாதனை வென்றவூர். வெண்ணாவல் மரத்தை வெண்ணி என்பர். வெண்ணாவல் மரம் இருந்ததால் பெற்ற பெயர்.

கோயிலக்கரமண்டபம் *kōyil-akkara-maṇḍabam,* பெ.(n.) கோயில் முன்மண்டபம்; the first mandapam in a temple. *"இக்கோயிலக்கற மண்டபத்து தளம் வட வெற்றாற்றி நித்தவினோத புரத்து அழியா நிலையில் வியாபாரிகளில் கோட்டாறுடையான முகிலன் குனிச்சாண்டார் தன்மம்" (புது.கல்.1029).*

[கோயில் + அக்காரம் + மண்டபம்.]

கோயிலகம் *kōyilagam,* பெ.(n.) கோயில் உள்ளகம்; the inner part of the temple.

[கோயில் + அகம்.]

கோயிலங்காடியார் *kōyil-aṅgāḍiyār,* பெ.(n.) தமிழ் நாட்டு வணிகக்குடிகளுள் ஒன்று; one of the business communities of Tamilnadu. *"நாட்டார் மாடையில் வகுக்கும் காணிக்கை திருத்தாயார் காணிக்கை திருமகனார் காணிக்கை பத்திவரி செட்டிகள் வாணிகள் சேனையங்காடியார் கொயிலங்காடியார்".*

[கோயில் + அங்காடியார்.]

கோயிலாஞ்சேரி *kōyilāñjēri,* பெ.(n.) சென்னை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Chennai Dt.

[கோயிலான் + சேரி.]

கோயிலாம்பாக்கம் *kōyilām-bākkam,* பெ.(n.) சென்னை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Chennai Dt.

[கோயிலான் + பாக்கம்.]

கோயிலார் *kōyilār,* பெ.(n.) கோயிற் பணியாளர்; servents of a temple (யாழ்.அக).

[கோயில் + ஆர்.]

கோயிலாழ்வார் *kōyil-āḻvār,* பெ.(n.) 1. வழிபாட்டுப் பெட்டி; box-shrine for private worship. 2. கருவறை; inner sanctuary or sanctum, sanctorum of a temple. *"கோயிலாழ்வார்க் குள்ளே பெரிய பெருமாள் கண் வளர்ந்தருளுகிறபடி" (திவ். திருமாலை. 21 வியா.76).*

மறுவ. உண்ணாழிகை.

[கோயில் + ஆழ்வார்.]

கோயிலாள் *kōyil-āḷ,* பெ.(n.) பட்டத்தரசி; crowned queen. *"தானுங் கோயிலாளும் புறம்போந்து நின்று" (பதிற்றுப். 8, பதி. இறுதி).*

[கோ + இலாள். இல்லாள் → இலாள்.]

கோயிலொழுகு *kōyil-oḻugu,* பெ.(n.) திருவரங்கத்துக் கோயிலின் வரலாறு கூறும் நூல்; a book dealing with the history, properties etc., of the Srirangam temple.

[கோயில் + ஒழுகு.]

கோயிற்கட்டணம் *kōyir-kaṭṭaṇam,* பெ.(n.) உவளகம் (அந்தப்புரம்); palace-zenana. *'பெரிய பிராட்டியார் எழுந்தருளியிருக்கிற கோயிற்கட்டணமாய்' (ஈடு.10.10:9).*

[கோயில் + கட்டணம்.]

கோயிற்கட்டி *kōyir-kaṭṭi,* பெ. (n.) உண்டைக்கட்டி; balls of cooked rice distributed in temples.

[கோயில் + கட்டி.]

கோயிற்கணக்கு[1] *kōyir-kaṇakku,* பெ.(n.) கோயிற்கணக்கன்; temple accountant. *"இக் கோயிற் கணக்குகாணியுடைய நெற்குப்பை உடையான்" (S.I.I. V, 645).*

[கோயில் + கணக்கு.]

கோயிற்கணக்கு[2] *kōyir-kaṇakku,* பெ.(n.) ஊர் தோறும் கிறித்தவரின் பிறப்பிறப்பு மற்றும் மண நிகழ்வுபற்றிப் பதியும் கோயிலிலுள்ள கணக்குப் புத்தகம் (யாழ். அக.); the Parish registry.

[கோயில் + கணக்கு.]

கோயிற்கணக்குக் காணி *kōyir-kaṇakku-k-kāṇi,* பெ.(n.) கோயில் கணக்கர் இறையிலிநிலம்; Govt. Tax free land of the temple accountant. *"திருவூறலுடையார் கோயில் கணக்குக் காணி உடைய பெருந்தூறுடையான்" (S.I.I. V. 1380 - 2 p. 500).*

[கோயில் + கணக்கு + காணி.]

கோயிற்கலஞ்செய்-தல் *kōyir-kalañjey-,* 1 செ.கு.வி.(v.i.) கோயிலிடித்தல்; to demolish a temple. *"மாந்தரைக் குழியுளுந்துதல் கோயிற் கலஞ் செய்தல்" (நீலகேசி, 540).*

[கோயில் + கு + அலம் + செய்.]

கோயிற்காலம் *kōyir-kālam,* பெ.(n.) கோயில்களில் அவ்வக் காலத்துச் செய்யப்படும் பூசை; temple worship performed at different hours of the day.

[கோயில் + காலம்.]

கோயிற்காளை *kōyir-kāḷai*, பெ.(n.) 1. கோயிலுக்கு விடப்பட்ட காளை; bull of the temple. 2. அடங்காத் தடியன்; fat and unruly fellow.

[கோயில் + காளை.]

கோயிற்கிராமம் *kōyir-kirāmam*, பெ.(n.) கோயிலுக்குச் சொந்தமான சிற்றூர்; a village belonging to a temple.

[கோயில் + (கம்மம்) கிராமம்.]

கோயிற்குட்டி *kōyir-kutti*, பெ.(n.) ***கோயிற் பிள்ளை*** பார்க்க; see *kōyir-piḷḷai*.

[கோயில் + குட்டி.]

கோயிற்குடிமை *kōyir-kuḍimai*, பெ.(n.) கோயிலுக்குரிய பணியாளர் கோயில் நிலபுலன் களில் வீடு கட்டிக்கொண்டு வாழும் உரிமை; right to erect house in temple land by the temple servant. *'கொயில் குடிமை திருஅரங்கு விரபொகம், மடஅரிசி உள்ளிட்டன தவிர்வதாகவும்' (தெ.க.தொ.8, கல்.44).*

[கோயில் + குடிமை.]

கோயிற்குடியான் *kōyir-kuḍiyāṉ*, பெ.(n.) சங்கூதும் பணிசெய்வோன்; conch-blower, a servile caste.

[கோயில் + குடியான்.]

கோயிற்குத்து *kōyir-kuttu*, பெ.(n.) கோயில் வாசலுக்கு நேராக மனையின் வாசலமைதல்; the entrance of a home kept directly opposite to the entrance of a temple.

[கோயில் + குத்து.]

கோயிற்குறுணி *kōyir-kuṟuṇi*, பெ.(n.) களத்தில் முதன்முதலாகக் கோயிலுக்குக் கொடுக்கும் குறுணியளவுள்ள தவசம்; first *kuṟuṇi* of a harvest given as an offering to the temple.

ம. கோயிற்குறுணி.

[கோயில் + குறுணி]

கோயிற்கூட்டி *kōyir-kūṭṭi*, பெ.(n.) கிறித்தவக் கோயிலைப் பெருக்கித் தூய்மை செய்பவள்; church sweeper.

[கோயில் + கூட்டி.]

கோயிற்கூழைத்தனம் *kōyir-kūḻai-t-taṉam*, பெ.(n.) அரசன் அவையிலுள்ளார் காட்டும் போலி வணக்கம்; hypocritical behaviour, characteristic of courtiers. *'நீங்கள் கோயிற் கூழைத்தனம் அடிக்கிறபடி இதுவோ!' (திவ். இயற்.திருவிருத். 90, வியா. 468).*

[கோயில் + கூழை + தனம்.]

கோயிற்கேள்வி *kōyir-kēḷvi*, பெ.(n.) கோயில் மேலாளர் (I.M.P.N.A.191); temple manager.

[கோயில் + கேள்வி. கேள்விகேட்டவர் = மேலாளர்.]

கோயிற்கொத்து *kōyir-kottu*, பெ.(n.) கோயில் அல்லது அரண்மனைப் பணியாள்கள் (M.E.R. 1923-4, p.103); temple or palace servants. *"கோயிற்கொத் தடிமைத் தாசி இருக்குமனை" (சரவண. பணவிடு.192).*

[கோயில் + கொத்து.]

கோயிற்கொள்(ளு)-தல் *kōyil-koḷ(ḷu)*-, [13] செ.குன்றாவி. (v.t.) வாழுமிடமாகக் கொள்ளுதல்; to take up abode in, inhabit. *"திருக்கடித் தானத்தைக் கோயில் கொண்டான்" (திவ். திருவாய். 8:6:5).*

[கோயில் + கொள்(ளு)-.]

கோயிற்சாந்து *kōyir-cāndu*, பெ.(n.) அரசர் பூசுதற்குரிய கலவைச் சந்தனம்; sandal-paste of superior quality, as suited to a king. *'கோயிற் சாந்தை உன்னால் ஒளிக்கப்போமோ' (திவ்.திருப்பா.10, வியா.120).*

[கோயில் + சாந்து.]

கோயிற்சுற்று *kōyir-šuṟṟu*, பெ.(n.) கோயிலை அடுத்துள்ள இடம்; vicinity or neighbourhood of a temple.

[கோயில் + சுற்று.]

கோயிற்சேரி *kōyir-šēri*, பெ.(n.) கோயிலுக்குச் சொந்தமான குடியிருப்புப் பகுதி; part of a village belonging to a temple.

[கோயில் + சேரி.]

கோயிற்படி *kōyir-paḍi*, பெ.(n.) கோயிலிற் கிடைக்கும் அன்றாடக் கட்டளை (வின்.); daily allowance for the expenditure of a temple.

[கோயில் + படி.]

கோயிற்பண்ணியர் விருத்தம் *kōyir-paṇṇiyar-viruttam*, பெ.(n.) நம்பியாண்டார் நம்பியால் இயற்றப்பெற்றுப் பதினொராந் திருமுறையுள் சேர்க்கப்பெற்றுள்ளதொரு சிற்றிலக்கியம்; a poem in *Patinōrāntirumuṟai* composed by Nambi yāṇḍār nambi.

[கோயில் + பண்ணியர் + விருத்தம்.]

கோயிற்பணிப்பெண் *kōir-paṇi-p-peṇ,* பெ.(n.) கோயிலிற் பணியாற்றும் பெண்; maid servant of the temple.

[*கோயில் + பணிப்பெண்.*]

கோயிற்பதாகை *kōyiṟ-padāgai,* பெ.(n.) சென்னை மாவட்டச் சிற்றூர்; a village in Chennai Dt.

[*கோயில் + (படாகை) பதாகை.*]

கோயிற்பாளையம் *kōyiṟ-pāḷaiyam,* பெ.(n.) ஈரோடு மாவட்டத்துச் சிற்றூர்; a village in Erode Dt.

[*கோயில் + பாளையம்.*]

கோயிற்பற்று *kōyiṟ-paṟṟu,* பெ. (n.) 1. கோயிலுக் குரிய நிலம் முதலியவை; lands, etc. belonging to a temple. 2. கிறித்தவக்கோயிலின் ஆளுகைக்குட் பட்ட ஊர்ப்பகுதி; Parish district belonging to a church.

ம. கோயிர்ப்பற்று.

[*கோயில் + பற்று.*]

கோயிற்பறவை *kōyiṟ-paṟavai,* பெ.(n.) 1. புறா; pigeon. 2. மயில்; peacock (சா. அக.).

[*கோயில் + பறவை.*]

கோயிற்பாறை *kōyiṟ-pāṟai,* பெ.(n.) பூம்புகாருக்குக் கிழக்கே 15 பாகக் கடலடியில் காணுமொரு கடற்பாறை; a sea rock at about 15 fathom depth in the sea east of Pūmpugār.

[*கோயில் + பாறை.*]

கோயிற்பிராகாரம்[1] *kōyiṟ-pirāgāram,* பெ.(n.) ***கோயிற்றிருச்சுற்று*** பார்க்க; see *kōyiṟ-ṟiruccuṟṟu.*

[*கோயில் + பிராகாரம்.*]

கோயிற்பிராகாரம்[2] *kōyiṟ-pirāgāram,* பெ.(n.) கிருத்தவக் கோயில்களில் பிணம் புதைக்குமிடம்; church yard.

[*கோயில் + பிராகாரம்.*]

கோயிற்பிள்ளை *kōyiṟ-piḷḷai,* பெ.(n.) கிறித்தவக் கோயிலின் அலுவலர்; church warden; sexton.

மறுவ. கோயிற்குட்டி.

[*கோயில் + பிள்ளை.*]

கோயிற்புரம் *kōyiṟ-puram,* பெ.(n.) குமரி மாவட் டத்துச் சிற்றூர்; a village in Kanyakumari Dt.

[*கோயில் + புரம்.*]

கோயிற்புராணம் *kōyiṟ-purāṇam,* பெ.(n.) உமாபதி சிவாச்சாரியார்(சிதம்பரம்) தில்லையின் பெருமை குறித்து இயற்றிய தொன்மநூல்; a puranam by *UmapathiŠivāccāriyār* dealing with Chidambaram.

[*கோயில் + புராணம்.*]

கோயிற்புறம் *kōyiṟ-puṟam,* பெ.(n.) கோவிலுக்குக் கொடையாக விடப்பட்ட நிலம்; land endowed to a temple.

[*கோயில் + புறம்.*]

கோயிற்புறா *kōyiṟ-puṟā,* பெ.(n.) மாடப் புறா; blue rock-pigeon.

[*கோயில் + புறா.*]

கோயிற்பூனை *kōyiṟ-pūṉai,* பெ.(n.) மதவேடதாரி (வின்.); dissembler in religion; hypocrite.

[*கோயில் + பூனை.*]

கோயிற்பெண்டுகள் *kōyiṟ-peṇḍugaḷ,* பெ.(n.) கோயில்களில் பணிபுரியும் பெண்கள்; தேவரடியார்; women working in temple. *"தன்மீஸ்வரமுடைய நாயனார் கோயில் தானத்தோம் கோயில் பெண்டுகள் மக்களும், புத்திர புத்திரரும்"* (S.I.I. VI. 254).

[*கோயில் + பெண்டுகள்.*]

கோயிற்பெருச்சாளி *kōyiṟ-peruccāḷi,* பெ.(n.) கோயிற் சொத்தைப் பறிக்க முயல்வோன்; one who misappropriates temple funds. *"உங்களப்பன் கோயிற் பெருச்சாளி" (தனிப்பா.).*

[*கோயில் + பெருச்சாளி. பெருச்சாளி = உழைப்பின்றி உண்டு கொழுப்பது. அதுபோல் கோயிற் சொத்தை உண்டு கொழுப்போன்.*]

கோயிற்றமப்பேறு *kōyiṟṟamappēṟu,* பெ.(n.) ஒருவகை வரி; a kind of tax in *nañjai* land. *"அந்தராயம் குடிமை கொயிற்றமப் பேறு நகர வினியோகம் உள்ளிட்டு வருவனவும் இந்நிலத்துக்கு தண்டாதொழியக் கடவதாகவும்" (S.I.I.XVII.287-3).*

[*கோயில் + தாமம் + பேறு.*]

கோயிற்றமர் *kōyiṟṟamar,* பெ.(n.) வழிபாடு, வரவுசெலவுக் கணக்கு, கண்காணிப்பு, தணிக்கை ஆய்வு ஆகிய அனைத்துப் பணிகளையும் நிகழ்த்தும் பூசகர்; the priest who is looking after the administration of the temple. *"அடுத்த ஆண்டைச் செலவு*

கோயில் வகைகள் (திராவிடக் கட்டடக்கலை)

அலுவலகம்

கரக் கோயில் எனப்படும் தேர் அமைப்பு

வட்டக்குடிசை அமைப்பு : சிவன் கோயில் ஆந்திர, ஒரிசா மாநில எல்லையில் கிழக்கு மலைத் தொடர்ச்சியிலுள்ள மகேந்திரகிரி மலை உச்சியில் அமைந்துள்ள பழங்கால சிவன்கோயில்.

- ***S.K. Pandian***, *1988, The Hidden Heritage.*

சிதம்பரம் கோயில் (குடிசைக்கோயில் அமைப்பு)

தஞ்சைக்கோயில் (சதுரக்கோயில் அமைப்பு)

கோயிற்றமர் தவிராமையாலும்" (தெ.க.தொ.8, கல்97).

[கோயில் + தமர்].

கோயிற்றிருச்சுற்று *kōyiṟṟiru-c-cuṟṟu,* பெ.(n.) ***கோயிற்சுற்று*** பார்க்க; see *kōyiṟ-šuṟṟu.*

[கோயில் + திரு + சுற்று.]

கோயிற்றூக்கு *kōyiṟṟūkku,* பெ.(n.) தாளவகையுள் ஒன்று (சிலப். 14:150, உரை); a variety of time-measure.

[கோயில் + தூக்கு.]

கோயின்மேரை *kōyiṉ-mērai,* பெ.(n.) கோயிலுக்குக் கொடுக்கும் விளைச்சல் பகுதி; portion of agricultural produce set apart for temple.

[கோயில் + மேரை.]

கோயின்மை *kōyiṉmai,* பெ.(n.) 1. பெருமை; royal dignity, pride, as of a king. *"அடிமை யென்னுமக் கோயின்மை யாலே" (திவ். பெரியாழ்.5.1:4).* 2.செருக்கு; arrogance, conceit. *"கொங்கை நஞ்சுண்ட கோயின்மைகொலோ" (திவ். பெரியதி. 11.1:4).*

மறுவ: கோவின்மை.

[கோயில் →கோயின்மை.]

கோயினான்மணிமாலை *kōyiṉāṉmaṇi-mālai,* பெ.(n.) சிதம்பரத்திலுள்ள சிவபெருமான்மீது பட்டினத்தடிகள் பாடியதொரு சிற்றிலக்கியம்; a poem by *Paṭṭiṉattaḍigaḷ* in praise of Šiva at Chidambaram.

[கோயில் + நான்மணி + மாலை.]

கோர்¹-த்தல் *kōr,* 4 செ.குன்றாவி. (v.t.) ***கோ-த்தல்*** பார்க்க; see *kō-.*

[கோ → கோர்]

கோர்²-த்தல் *kōr,* 4 செ.குன்றாவி.(v.t.) நூலை அல்லது நாணைத் துளைவழி துருவச் செய்தல்; to send the edge of a thread through the hole of the needle. கோர் – செங்குத்து see கோரவாரம்.

[குள் → குர் → குரு → கோர் → கோர்-த்தல்]

கோர்க்கலம் *kōr-k-kalam,* பெ.(n.) மட்கலம் (யாழ்ப்.); earthen vessel.

[கோர் + கலம்.]

கோர்க்காலி *kōrkkali,* பெ.(n.) ***கோக்காலி*** பார்க்க; see *kōkkāli.*

[கோக்காலி →கோர்க்காலி.]

கோர்கச்சா *kōrkaccā,* பெ.(n.) மீன்திரட்டி, வைத்தற்குரிய வலைப்பை; a netted bag to collect and keep the fish during the time of fishing.

[கோர் + கச்சா(வு).]

கோர்கோர் *kōr-kōr,* பெ.(n.) சிறுவர் சண்டை, சேவற் சண்டையின்போது தூண்டிவிடும் உணர்ச்சிச் சொல்லடுக்கு; a phrase used in Children's war.

[கோர் + கோர்.]

கோர்த்தம் *kōrttam,* பெ.(n.) மூளையின் பெரும் பங்கு; the superior and chief portion of the brain occupying the whole upper cavity of the skull-cerebrum (சா. அக.).

இது மண்டை ஓட்டு (கபால) அறையில் நெற்றி தொடங்கிப் பிடரி வரையிலுள்ள அகலமான பகுதி.

[கோ → கோர்த்தம்.]

கோர்த்தரம் *kōr-t-taram,* பெ.(n.) சிறு மூளை; portion of the brain which is posterior to and underlies the great cerebral mass or cerebrum - cerebellum (சா. அக.).

[கோ → கோர்த்தம்→கோர்த்தரம்.]

இது பிடரியெலும்பினது கீழ்ப்பள்ளத்துள் ளடங்கிய மூளையின் பகுதி.

கோர்வை¹ *kōrvai,* பெ.(n.) ***கோவை*** பார்க்க; see *kōvai.*

ம. கோர்வ.

[கோ→கோர்→கோர்வை.]

கோர்வை² *kōrvai,* பெ.(n.) சொற்கட்டு அமைப்பின் முடிவில் வரும் தொடர்; a phrase coming at the end of a sequence of words.

[கோ→கோர்→கோர்வை.]

கோர்வை³ *korvai,* பெ.(n.) உடற்பகுதியையும் முந்தானையையும் சேர்த்து நெய்யப்படும் சேலை; saree woven with contrasting colour border and palla.

[கோ→கோர்→கோர்வை]

கோர்வை⁴ *korvai,* பெ.(n.) அன்னவெட்டி என்னும் சோற்றுக் கரண்டி; spoon to take rice.

[கோ → கோர்→கோர்வை.]

கோர்வைப்புகையிலை *korvai-p-pugai-y-ilai,* பெ.(n.) புகையிலை அடுக்கு; tobacco leaves strung together on a line.

[கோர்வை + புகையிலை.]

கோர்வைமரம் *kōrvai-maram,* பெ.(n.) கைமரங் களின் இணைப்பு; wooden joints.

[கோர்வை + மரம்.]

கோரக்கநாதர் *kōrakka-nādar,* பெ.(n.) ஒன்பது சித்தருள் ஒருவர் (சது.); one among the nine Šiddhas.

[குரவர் → குரக்கர் → கோரக்கர் + நாதர்.]

(பாவலர் சரித்.) புலமை, மருத்துவம், இதளியம் (இரசவாதம்) மூன்றிலும் பெயருடையார் – இவர் பாடிய நூறு செய்யுள் அடங்கிய நூலுக்குக் கோரக்கர் வைப்பு என்று பெயர்.

கோரக்கர் *kōrakkar,* பெ.(n.) ***கோரக்கநாதர்*** பார்க்க; see *kōrrakka-nādar.*

[குரவர் → குரக்கர் → கோரக்கர்.]

கோரக்கர்புளி *kōrakkar-puli,* பெ.(n.) ஆனைப் புளி; பப்பரப்புளி; Korakha's tamarind, baobab (சா. அக.).

[கோரக்கர் + புளி.]

கோரக்கர் இம் மரத்தினடியே இருந்து உணர்த்தியதனால் இப் பெயர் பெற்றது.

கோரக்கர் மூலி *kōrakkar-mūli,* பெ.(n.) கஞ்சாங்குல்லை; (மூ.அ.); the drug ganja, as used by *Kōrakkar.* *"புகையென்று கோரக்கர் மூலி தன்னை" (அகத்.வல்.).*

[கோரக்கர் + மூலி.]

கோரக்கர் இம் மூலிகையை மருந்தாகச் செய்து வந்தவராம். இது குறித்தே இப் பூண்டுக்குக் கோரக்கர் மூலி எனப் பெயர் வந்திருக்கலாம் (பாவலர் சரித்.ப. 117).

கோரக்கர் வைப்பு *kōrakkar-vaippu,* பெ.(n.) கோரக்கர் எழுதிய நூல்களுள் ஒன்று, a book written by *Kōrakkar.*

[கோரக்கர் + வைப்பு]

கோரகம்[1] *kōragam,* பெ.(n.) ***கோரம்*** (வின்.) பார்க்க; see *kōram* (W.).

தெ. கோர.

[கோரம் → கோரகம்.]

கோரகம்[2] *kōragam,* பெ.(n.) அரும்பு (பிங்.); bud.

[குல் → குரவம் → குரகம் → கோரகம்.]

கோரகம்[3] *kōragam,* பெ.(n.) தக்கோலம் (நாநார்த்த); cubeb.

[குரகம் → கோரகம்.]

கோரகுப்பம் *kōrakuppam,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvallur Dt.

[கோரை + குப்பம் – கோரைக்குப்பம் → கோரகுப்பம் (கொ.வ.).]

கோரகை[1] *kōragai* பெ.(n.) 1. அகப்பை; ladle. *"கோரகைக்குட் பதிசுடுகறக்கம்" (தைலவ. பாயி. 14).* 2. புத்தத் துறவியரின் உணவு வாங்கும் ஏனம் (மணிமே.5:59, அரும்.); begging bowl of the Buddhist ascetics.

[கோர் → கோரகை (மொள்ளுவது).]

கோரகை[2] *kōragai* பெ.(n.) 1. குயில்; Indian cuckoo. 2. இளம் பூவரும்பு; bud of flower. *"புல்லி நீப்பன பூவிரி கோரகை" (சேதுபு. திருநாட்டு. 120).*

[கொள் → கோள் → கோளகை → கோரகை.]

கோரங்கம் *kōrangam,* பெ.(n.) நெல்லி (மலை.); Indian gooseberry.

மறுவ. கோரங்காமிகம்.

[குளங்கம் → கோளங்கம் → கோரகம்.]

கோரங்கி *kōrangi,* பெ.(n.) 1. சிற்றேலம் (மலை.); small cardamom. 2. பூலா; feather-foil. 3. கோரங்கி நெல்; paddy grown in Korangi (Godaveri Dist.) (சா. அக.).

[குளாங்கி → கோரங்கி.]

கோரங்கிப்பயறு *kōrangi-p-payaru,* பெ.(n.) கோதாவரி மாவட்டம் கோரங்கி நாட்டில் விளையும் பயறு; pulse or cereals cultivated in Korangi (Godaveri Dist.) (சா.அக.).

[கோரங்கி + பயறு .]

கோரங்கிமூலம் *kōrangi-mūlam,* பெ.(n.) பூலாங்கிழங்கு; bulbous root of *pūlā.*

[கோரங்கி + மூலம்]

கோரங்கியேலம் *kōrangi-y-ēlam,* பெ.(n.) சிற்றேலம்; little cardamom (சா. அக.).

[கோரங்கி + ஏலம்.]

கோரங்கிழங்கு *kōran-kilangu,* பெ.(n.) ***கோரைக்கிழங்கு*** பார்க்க, see *kōrai-k-kilangu.*

[கோரை → கோரம் + கிழங்கு.]

கோரங்கு *kōrangu*, பெ.(n.) நீர்க்கோழி; water-fowl (சா. அக.).

[கோரங்கி→கோரங்கு.]

கோரசண்டி *kōrašandi*, பெ.(n.) தலைச்சுருளிப் பூண்டு; Indian birth-wort (சா. அக.).

மறுவ. பெருமருந்துப்பூடு.

[கோரை + சண்டி – கோரைச்சண்டி →கோரசண்டி (கொ.வ.).]

கோரசம் *kōrašam*, பெ.(n.) 1. சிவல் என்னும் பறவைவகை (பிங்.); a kind of partridge. 2. கவுதாரி; grey partridge.

[குரசம்→கோரசம்.]

கோரடம் *kōradam*, பெ.(n.) கருங்காலி; a kind of ebony (சா. அக.).

[கால்→காரடம்→கோரடம்.]

கோரண்டம் *kōrandam*, பெ.(n.) 1. பெருங் குறிஞ்சி (பிங்.); a species of conehead. 2. மரு தோன்றி (வின்.); henna. 3. செம்முள்ளி (தைலவ. தைல. 10); thorny nail-dye.

மறுவ. கோரண்ணம்.

[குரண்டம்→கோரண்டம்.]

கோரண்ணம் *kōrannam*, பெ.(n.) ***கோரண்டம்*** பார்க்க; see *kōrandam* (சா. அக.).

[கோரண்டம்→கோரண்ணம்.]

கோரணப்பட்டு *kōrana-p-pattu*, பெ.(n.) கடலூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Cuddalore Dt.

[காரணை→கோரணம் + பட்டு.]

கோரணம்பட்டி *kōranampatti*, பெ.(n.) நாமக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Namakkal Dt.

[கோரணம் + பட்டி.]

கோரணி[1] *kōrani*, பெ.(n.) 1. கேலிக்கூத்து; mockery by gesture; mimicry. "*தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு*" (*பட்டினத். உடற்கூற்று வண்ணம், 3*). 2. முகஞ்சுளித்தல் (இராட்.); grimace, distortion of the countenance, as in pain or mimi cry. 3. திமிர்வாதம் (வின்.); epilepsy. 4. முணு முணுப்பு (யாழ்ப்.); captious complaint.

[குரங்கி →குரணி→கோரணி.]

கோரணி[2] *kōrani*, பெ.(n.) 1. குழப்பம், கோளாறு; confusion; "*கோரணிப் படுத்துமக் கொடிய ரோவலர்*" (இரட்சணிய.ப.81). 2. கவனத்தை வேறுவழியில் திருப்புதல் (பாண்டி); diversion of attention.

[குரளு →குரணி→கோரணி.]

கோரனைப்பூடு *kōranai-p-pūdu*, பெ.(n.) வெட்டிவேர்; khus khus root (சா. அக.).

[கோரை→கோரணை + பூடு.]

கோரதந்தம் *kōra-tandam*, பெ.(n.) 1. கோரைப்பல்; curved tusks, as of wild boars. 2. பாம்பின் நச்சுப்பல்; poisonous fang of a snake.

[கூர் →கூர →கோரம் + தந்தம்]

கோரதம் *kō-radam*, பெ.(n.) பெரும்பாலும் எருதுகளால் இழுக்கப்படும் தேர்; a car, generally drawn by oxen.

[கோ + ரதம்.]

கோரநீடு *kōranīdu*, பெ.(n.) பூனை; cat (சா. அக.).

[கோரை + (நீட்டு) நீடு – கோரைநீடு (கோரைப்புல் போன்ற மீசையுடையது).]

கோரப்பல் *kōra-p-pal*, பெ.(n.) 1) கொடுமையான, தோற்றமுடையப் பல்; ugly-looking tooth. 2. பாம்பின் நச்சுப் பல்; poisonous fang of a snake. 3. நான்கு முன்பற்களுக்கு அடுத்தபடி இரு பக்கத்திலுமுள்ள பற்கள்; the two sharp-pointed teeth in both jaws one on each side between the incisors, and grinders-canine teeth. 3.முறிந்த பல்; projecting stump of a tooth-snag tooth. 4.தெத்துப்பல்; deformed tooth (சா. அக.).

மறுவ. கோரதந்தம்.

ம. கோம்பல்லு.

[கோரை→கோரம் + பல்.]

கோரப்பிடி *kōra-p-pidi*, பெ.(n.) வறுமை போன்ற வற்றின் தப்பமுடியாத தீவிரநிலை; vice-like grip as of poverty. வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கின்றனர் (உ.வ.).

[கோரம் + பிடி]

கோரபுட்பம் *kōra-putbam*, பெ.(n.) 1. ஊமத்தம் பூ; datura flower. 2. வெண்கலம்; bell-metal, bronze (சா. அக.).

[கோரம் + புட்பம்]

கோரம்[1] *kōram*, பெ.(n.) 1. கோளகச் செய்நஞ்சு; a native arsenic. 2. ஊமத்தை; thorn apple.3. மகிழம்

விதை; seed of *makiḻa*. 4. வெப்பம்; heat. 5. கொடுமை; cruelty, severity. 6. கொடூரமானது; that which creates fear. *"நின்முகக் கமலமுங் கோரமாம்" (திருச்செந்.4:13:17).* 7. ஒரு மறைமொழி; a mantra. 8. கொடுந்தோற்றம்; that which is hideus.

[குல் → குரம் (வளைவு) →கோரம்]

கோரம்² *kōram*, 1. வளைவு; curvature. 2. புகையிலை; tobacco. 3. வட்டில்; eating dish, a hollow metallic plate. *"அமுதுடைக் கோர நீக்கி (கம்பரா.அயோத்தி.மந்திரப்.25).* 4. நரக வகை; a hell. *"கோர மதுதான் முதனரகம்" (சிவதரு. சுவர்க்க.107, நரக.).* 5. விரைவு (திவா.); swiftness, fleetness, speed. 6. சோழன் குதிரை; horse of *Cōḻā* king. *"கோரத்துக் கொப்போ கனவட்ட மம்மானை" (தனிப்பா.).*

தெ. கோர (வட்டில்) **தெ.** குர்ரமு (குதிரை).

[குல் → குரம் →கோரம்]

கோரம்³ *kōram*, பெ.(n.) அரும்பு; bud.

[குல் → குரு → கோர் → கோரம்]

கோரம்பர் *kōrambar*, பெ.(n.) கழைக்கூத்தர் (வின்.); pole-dancers.

[கோல் + அம்பர்.]

கோரம்பலம் *kōrambalam*, 1. கேளிக்கை; diversion, drollfry, amusement, bufoonery. 2. தந்திரம்; excuse, subterfuge, pretence, shift, trick. 3. வாய்ச்சண்டை; altercation, bickering. 4. உதவி; help; assist. 5. கோளாறு; disorder.

[கோரம் + அம்பலம்]

கோரம்பாய் *kōram-pāy*, பெ.(n.) ***கோரைப்பாய்*** பார்க்க; see *kōrai-p-pāy*.

[கோரைப்பாய் → கோரம்பாய் (கொ.வ.)]

கோரம்பு *kōrambu*, பெ.(n.) தீம்பு; wickedness. *"அதுவுமுன் கோரம்புக் கேற்கு மன்றே" (திவ். பெருமாள். 6:4).*

[கோரம் → கோரம்பு]

கோரமங்கலம் *kōramaṅgalam*, பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thiruvallur Dt.

[கோரை + மங்கலம்.]

கோரமரணம் *kōra-maraṇam*, பெ.(n.) வலி மிகுவிக்கும் சாவு; painful death; agonising death (சா. அக.).

[கோரம் + (மடி) மரணம்.]

கோரமூஞ்சி *kōra-mūñji*, பெ.(n.) 1. கொடுமை யான முகம்; horrible face in a monster birth. 2. சுழித்த முகம்; distortion of the countenance - grimace (சா. அக.).

[கோரம் + (முகம்) மூஞ்சி]

கோரவாதம் *kōra-vādam*, பெ.(n.) உடம்பின் நரம்புகளில் காற்றுப் பிடிப்புப் பரவிக் கீல்களைத் தளரச் செய்யுமோர் ஊதைநோய்; a kind of rheumatism (சா. அக.).

[கோரம்+ வாதம்]

கோரவாரம் *kōra-vāram*, பெ.(n.) சந்தனமரம் (யாழ்.அக.); sandal-wood tree (சா. அக.).

[கோர் (செங்குத்து உயரம்)→கோர+ வாரம்]

கோரவிருத்தி *kōra-virutti*, பெ.(n.) 1. அரக்கக் குணம்; one of the three inherent qualities of man. 2. அதிகச் சூடு; increase of heat in the system. 3. நஞ்சின் மிகுதி; excess of poison (சா.அக.).

[கோரம் + விருத்தி.]

கோரவெய்யில் *kōra-veyil*, பெ.(n.) கொடிய வெய்யில்; severe or scorching sun (சா. அக.).

[கோரம் + வெய்யில்.]

கோரன்¹ *kōraṉ*, பெ.(n.) 1. சிவன்; Lord Śiva. 2. சுளுந்துக் கட்டை; torch tree.

[குல் →குரு→கோரன்.]

கோரன்² *kōraṉ*, பெ.(n.) கொங்குவள நாட்டிலே வல்லம் என்னும் ஊரில் வாழ்ந்தவன். கொலை, களவு முதலிய தீத்தொழில்களைச் செய்து கொண்டிருந்தமையால் இப் பெயர் பெற்றிருக்கலாம். பேசுதலைக் கடைப்பிடித்துத் தனது தீத்தொழில் களையும் போக்கிக் கொண்டவன்.

[குல் →குரு→கோரன்.]

கோரா *kōrā*, பெ.(n.) 1. அழுக்கெடுக்காதது; unbleached as cotton cloth. 2. சாயம் ஏற்றாதது; undyed as silk. 3. ***கோராப்பட்டு*** பார்க்க; see *kōrā-p-paṭṭu*. 4. கரச்சி மீன்; a kind of sea-fish Pristipoma caripa. 5. பழக்கப்படாத புதிய குதிரை, காளைபோன்ற விலங்கு; untamed horse, bull etc.

[கோரம் →கோரா.]

கோராடம் *kōrādam,* பெ.(n.) பூஞ்சாந்துப் பட்டை, ஒரு கடைச்சரக்கு; a bazaar drug (சா. அக.).

[கோரடம் → கோராடம்.]

கோராதனம் *kōrā-tanam,* பெ (n.) ஒகவகை; a yogic posture (தத்துவப்.109, உரை).

[கோர் →கோராப்பு.]

கோராப்பட்டு *kōrā-p-paṭṭu,* பெ.(n.) 1. யுனானி மருத்துவத்தில் ஆண்மைப் பெருக்கத்திற்குப் பயன்படுத்தும் ஒரு கடைப்பொருள்; a bazaar drug prescribed by Unani practitioners for increasing the secretion of semen. 2. சாயம் ஏற்றாத வெண்பட்டு; undyed white silk (சா.அக.).

[கோரம் + பட்டு.]

கோராப்பு *kōrāppu,* பெ.(n.) கோரைப்புல் வடிவிலுள்ள ஒருவகைக் கடல்வாழ் பயிரி; a kind of sea plant as of bul rush.

[கோர் →கோராப்பு.]

கோராமசன்னி *kōrāmaśanni,* பெ.(n.) குழந்தைகளுக்கு உடம்பு நெருப்பைப்போற் காய்ந்து சதை குலுங்கவும், கைகால் துடிக்கவும் செய்யும் ஒரு குளிர் ஊதைநோய்; a kind of typhoid fever in children marked by fits or convulsions followed by violent agitation of muscles and limbs due to high temperature (சா. அக.).

[கோரம் →கோராமம் + சன்னி.]

கோராவாரி *kōrāvāri,* பெ.(n.) புயற்காற்று; storm, so called from its carrying dust and dirt along with it (சா.அக.).

[கோரம் →கோரா + வாரி.]

கோரான் *kōrān,* பெ.(n.) சுளுந்துக் கட்டைமரம்; torch tree (சா. அக.).

மறுவ. கோரான்கட்டை, கோரான் குச்சு, கோரான் சூள்.

[கோர் = உயரம். கோர் →கோராப்பு.]

வழிப்போக்கர்கள் இரவில் தீவட்டியாகப் பயன்படுத்துவர்] [சா. அக.].

கோரான்காவி *kōrāṉ-kāvi,* பெ.(n.) ஒருவகைக் காவி; a kind of red ochre not bright or clear (சா.அக.).

[கோரான் + காவி.]

கோரான்குச்சு *kōrāṉ-kuccu,* பெ.(n.) ***கோரான்*** பார்க்க; see *kōrāṉ*

[கோரான் + குச்சு]

கோரான்சிவப்பு *kōrāṉ-śivappu,* பெ.(n.) கம்மலான சிவப்புநிறம்; dull red colour (சா.அக.).

[கோரன் → கோரான்+ சிவப்பு.]

கோரான்சுளுந்து *kōrāṉ-śuḷundu,* பெ.(n.) ***கோரான்*** பார்க்க; see *kōrāṉ* (சா.அக.).

[கோரான் + சுளந்து]

கோரான்சூள் *kōrāṉ-sūḷ,* பெ.(n.) ***கோரான்*** பார்க்க; see *kōrāṉ* (சா. அக.).

[கோரான் + சூள்]

கோரான் வெள்ளை *kōrāṉ-veḷḷai,* பெ.(n.) கம்மலான வெள்ளை மண் வகை; a kind of dull white clay (சா. அக.).

[கோரான் + வெள்ளை]

கோரி[1]-த்தல் *kōri-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கடுமையாதல்; to become violent, to hement; to rage. *'கோரித் தொன்பது வாயிலும்.... கொளுத்த' (திருவிளை.குண்மோ.16).*

[குரு → கோர் → கோரி.]

கோரி[2] *kōri-,* பெ.(n.) மலைமகள்; Parvati. *'கோரியென் னுள்ளங் குலாவிநின் றாளே' (திரு ம;ந.1110).*

[கௌரி→கோரி]

கோரிக்கை *kōrikkai,* 1. வேண்டுகோள்; request. 2. விருப்பம்; desire. 3. மன்றாட்டம்; pray.

[கோலு→கோரு→கோரி]

கோரிகை[1] *kōrigai,* பெ.(n.) அகப்பை; wooden spoon; ladle. *"முக்கோரிகை நெய்யூற்று" (தைவல.தைல.135, வரி 137).*

[கோரகை→கோரிகை.]

கோரிகை[2] *kōrigai,* பெ.(n.) மரக்குதிரையின்மேல் வைக்கும் ஒலை நெற்கூடை (யாழ்ப்.); large *ōla* bag for grain, set on a wooden horse.

[கோர்→கோரிகை]

கோரிதம் *kōridam,* பெ.(n.) 1. துகள்; dust. 2. விள்ளல்; a piece.

[கோர்→கோரிதம்]

கோரியை *kōriyai*, பெ.(n.) ***கோரிகை¹*** பார்க்க; see *kōrigai* (சா. அக.).

[கோரிகை → கோரியை]

கோரு¹-தல் *kōru-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. வேண்டிக்கொள்ளுதல்; to request, solicit. 2. விரும்புதல்; to wish, desire. 3. நினைத்தல்; to think.

தெ., து. கோரு; **க., ம.** கோறு.

[கோது→கோரு.]

கோரு²-தல் *kōru-*, 5 செ. குன்றாவி. (v.t.) ***கோலு⁴*** பார்க்க; see *kōlu*. *கிணற்றிலிருந்து தண்ணீர் கோருகிறான் (உ.வ.).*

[கோது→கோரு.]

கோருடன் *kōrudaṉ*, பெ.(n.) ***கோரை*** பார்க்க; see *kōrai* (சா. அக.).

[கோறு→கோரு]

கோரை¹ *kōrai*, பெ.(n.) 1. ***கோரை²*** பார்க்க; see *kōrai* 2. மயிர்; hair. 3. முடி, மயிர்; lock hair (சா. அக.).

[கோல் →கோர்→கோரை]

கோரை² *kōrai*, பெ.(n.) 1. வழலை; the three mystic salts. 2. முட்டையுட் சவ்வு; the membrane covering albumen and yolk.

[கோலு → கோரை]

கோரை³ *kōrai*, பெ.(n.) 1. புல்வகை (K.R.); sedges and bulrushes. 2. ஒருவகைக் கிழங்கு; a kind of root. 3. ஒருவகைக் கடற்புல்; a kind of sea grass.

ம. கோர.

[கோர் (நீட்சி)→கோரை]

கோரை⁴ *kōrai*, பெ.(n.) காளை; bull.

[கோ→கோரை]

கோரை⁵ *kōrai*, பெ.(n.) 1. வளைவு; bend. 2. அழகில்லாதது; not beautiful, ugly.

[குல்→குலை→கூரை→கோரை]

கோரைக்காடன் *kōrai-k-kāḍaṉ*, பெ.(n.) நாங்குநேரி வட்டம் ஏர்வாடிப் பகுதியில் உள்ள பெரும் பழஞ்சியின் படைத்தலைவன்; army chief. "பெரும் பழஞ்சி இருக்கின்ற படைத்தலைவன் கொறைக் காடனுக்கு" (தெ.இ.க.தொ.14, கல்.44-20).

[கோரை + காடன்]

கோரைக்கிழங்கு *kōrai-k-kiḻaṅgu*, பெ.(n.) 1. முத்தக்காசு வகை; fragrant tuber of cyperus rotundus. 2. முத்தக்காசு; straight sedge (பதார்த்த.443).

[கோரை +கிழங்கு]

இது நறுமணம் உள்ளது. இதயம், வயிறு இவற்றிற்கு வலிவைக் கொடுக்கும். வறட்சியை உண்டாக்கும்; வியர்வையைத் தோற்றுவிக்கும். நீரைப் போக்கும்; கூந்தல் வளர்ச்சிக்குப் பயன்படும் [சா. அக.].

கோரைகிண்டி *kōrai-kiṇḍi*, பெ.(n.) ***கோரை யுள்ளான்*** பார்க்க; see *kōrai-y-uḷḷāṉ*.

மறுவ. கோரைகுத்தி.

[கோரை + கிண்டி.]

கோரைகுச்சு *kōrai-kuccu*, பெ.(n.) கொறுக்கை; European bamboo reed (loc.).

[கோரை + குச்சு.]

கோரைகுத்தி *kōrai-kutti*, பெ.(n.) ***கோரையுள் ளான்*** பார்க்க; see *kōrai-y-uḷḷāṉ*.

[கோரை + குத்தி.]

கோரைச்சம்பா *kōrai-c-cambā*, பெ.(n.) சம்பா நெல்வகை (பதார்த்த. 811); rush-paddy.

[கோரை + சம்பா]

கோரைச்சுண்ணம் *kōrai-c-cuṇṇam*, பெ.(n.) வழலைச் சுண்ணம்; the universal salt (சா. அக.).

[கோரை + சுண்ணம்]

கோரைத்தண்டு *kōrai-t-taṇḍu*, பெ.(n.) கோரைப் புல்லின் அடித்தண்டு; the tuber of cyperus or sedge grass (சா. அக.).

[கோரை + தண்டு]

கோரைநிலம் *kōrai-nilam*, பெ.(n.) கற்கரடு, கருமலை, ஆரணி, உவற்பொட்டல், களிமண்உப்பு, மண் போன்றவை கொண்டதாக இருக்கும் நிலம்; a kind of land.

[கோரை + நிலம்.]

கோரை மட்டும் வளரும் நிலம்.

கோரைப்பதி *kōrai-p-padi*, பெ.(n.) பெரும்பீர்க்கு; a large species of luffa (சா. அக.).

[கோரை + பதி]

கோரைப்பாய் *kōrai-p-pāy*, பெ.(n.) கோரைப் புல்லாற் பின்னப்பட்டப் பாய் (உ.வ.); grass mat, bulrush mat.

ம. கோரப்பாய்.

[கோரை + பாய்.]

கோரைப்புல் *kōrai-p-pul*, பெ.(n.) ***கோரை²*** பார்க்க; see *kōrai*.

ம. கோரப்புல்லு, கோரம்புல்லு.

[கோரை + புல்.]

கோரைப்புற்கிழங்கு *kōrai-p-puṟ-kiḻaṅgu*, பெ.(n.) ***கோரைக்கிழங்கு*** பார்க்க; see *kōrai-k-kiḻaṅgu*.

[கோரை + புல் + கிழங்கு.]

கோரைப்பேரிகம் *kōrai-p-pērigam*, பெ.(n.) மிசிரிப்பருப்பு, சாலா மிசிரி; salep-Salep orchid (சா.அக.).

[கோரை + பேரிகம்.]

கோரைமயிர் *kōrai-mayir*, பெ.(n.) முறைப்புள்ள நீண்ட மயிர்; long and stiff hair. கோரைமயிர் குடியைக் கெடுக்கும் (பழ.).

[கோரை + மயிர்.]

கோரைமுடி *kōrai-muḍi*, பெ.(n.) ***கோரைமயிர்*** பார்க்க; see *kōrai-mayir*.

[கோரை + முடி.]

கோரைமூஞ்சி *kōrai-mūñji* பெ.(n.) **கோரமூஞ்சி** பார்க்க; see *kōra-mūñji*

[கோரை + மூஞ்சி.]

கோரையஞ்சீலா *kōrai-y-añjīlā*, பெ.(n.) சீலாமீன் வகைகளுளொன்று; a kind of *śīlā* fish (சா.அக.).

[கோரை + அம் + சீலா.]

கோரையரிசி *kōrai-y-ariśi*, பெ.(n.) நீண்ட அரிசி; needle shaped rice (சா.அக.).

மறுவ. சிலந்தியரிசி, பூங்கோரை.

[கோரை + அரிசி.]

கோரையிறால் *kōrai-y-iṟāl*, பெ.(n.) நீண்ட மீசைகளையுடைய ஒருவகைக் கடலிறால்; sea-prawn with long - whiskers (சா.அக.).

[கோரை + இறால்.]

கோரையுள்ளான் *kōrai-y-uḷḷāṉ*, பெ.(n.) ஒருவகை நீண்ட உள்ளான் பறவை; species of long snipe.



கோரையுள்ளான்

மறுவ. கோரைகிண்டி, கோரைகுத்தி, கோரைவெட்டி.

[கோரை + உள்ளான்.]

கோரையுளுவை *kōrai-y-uḷuvai*, பெ.(n.) பழுப்பு நிறமுடைய உளுவைமீன் (மீனவ.); *uḷuvai* fish, brown in colour.



கோரையுளுவை

[கோரை + உளுவை.]

கோரையூதை *kōrai-y-ūdai*, பெ.(n.) இடுப்புக் கடுத்து நொந்து, துறட்டியைப்போல் நடுப்படத் தறித்து வலித்து நடக்கவும், நிமிரவும் முடியாது சந்து மட்டும் வலிக்கும் ஒருவகை ஊதைநோய் (யூகி. முனி. 1200); a rheumatic affection of the muscles about the loins. It is characterised by severe pain of the small of the back and piercing pain in the pelvis due to the inflammatory condition of the fibrous tissues. It is aggravated by movements of limbs often preventing the patient form walking or maintaining an erect position (சா.அக.).

[கோரை + ஊதை.]

கோரைவாதம் *kōrai-vādam*, பெ.(n.) ***கோரையூதை*** பார்க்க; see *kōrai-y-ūdai*.

[கோரை + வாதம்.]

கோரைவீரம் *kōrai-vīram*, பெ.(n.) போகர் நூலிற் சொல்லிய வண்ணம் காகத்தினிறகை கொக்கி னிறகைப்போல் வெண்மையாக்கும் திறமுடைய ஒருவகை வீரவைப்பு; a prepared compound of corrosive sublimate capable of converting the black wing of a crow into a white one resembling that of a stork (சா.அக.).

[கோரை + வீரம்.]

கோரைவெட்டி *kōrai-veṭṭi*, பெ.(n.) ***கோரையுள்ளான்*** பார்க்க; see *kōrai-y-uḷḷāṉ*.

[கோரை + வெட்டி.]

கோரோசம் *kōrōšam*, பெ.(n.) ***கோரோசனை*** பார்க்க; see *kōrōšaṉai* (சா.அக.).

மறுவ. கோவுரசனம், கோரோசனம்.

[கோரோசனை →கோரோசம்.]

கோரோசனை *kōrōšaṉai*, பெ.(n.) ஆவின் வயிற்றினின்று எடுக்கப்படும் மஞ்சணிறமுள்ள மணப்பொருள் (பதார்த்த. 1083); bezoar taken from the stomach of cows.

மறுவ. கோரோசம், கோரோசனம், மான்மணத்தி.

[கோ (மாடு) + அரிசனம் (மஞ்சள்) – கோயரிசனம் →கோரோசனம் →கோரோசனை. மாட்டின் மஞ்சள் நிறமுள்ள மணப்பொருள் மஞ்சள் நிறத்தின் ஒப்புமை நோக்கி கோயரிசனம் எனப்பட்டது. இது பிறமொழியாளரால் வடதமிழில் கோரோசனம் எனத்திரித்து வடமொழியிலும் கடன் கொள்ளப்பட்டது]

கோரோசனைக்குளிகை *kōrōšaṉai-k-kuḷigai*, பெ.(n.) குழந்தைகளுக்கேற்படும் கோழை, இருமல், சுரம், தலைவலி முதலியவற்றுக்குக் கொடுக்கும் ஒரு மாத்திரை; a pill prepared with bezoar as chief ingredient and prescribed for morbid affections in apoplexy and children's diseases such as phlegm in the chest, cough, fever, headache etc. (சா.அக.).

மறுவ. கோரோசனை மாத்திரை.

[கோரோசனை + குளிகை.]

கோரோசனைப் பாவிகம் *kōrōsaṉai-p-pāvigam*, பெ.(n.) வைப்புக் கோரோசனை; artificially prepared bezoar: false bezoar (சா.அக.).

[கோரோசனை + பாவிகம்.]

கோரோசனைப் புளிப்பு *kōrōšaṉai-p-puḷippu*, பெ.(n.) கோரோசனைத் தூள்; gallic acid occurring in the bezoar stones in the form of a powder (சா.அக.).

[கோரோசனை + புளிப்பு.]

கோரோசனைமாத்திரை *kōrōšaṉai-māttirai*, பெ.(n.) ***கோரோசனைக் குளிகை*** பார்க்க; see *kōrōšaṉai-k-kuḷigai* (சா.அக.).

[கோரோசனை + மாத்திரை.]

கோல்[1] *kōl*, பெ.(n.) 1.கழி, கம்பு; rod, stick. *"அலைக்கொரு கோறா"* *(கலித்.82:24).* கோல் ஆட குரங்கு ஆடும் (பழ). 2. மரக் கொம்பு (சூடா.); branch. 3. ஊன்றுகோல்; staff. *"கோலூன்றி"* *(நாலடி.13).* கோல் இழந்த குருடனைப் போல (பழ). 4. சித்திரந் தீட்டுங் கோல் (பிங்.); brush, pencil, as for painting *"இன்னமுது கோறோய்த்து"* *(நைடத.நளன்றூ. 89).* 5. அரசாட்சி; government. *"மன்னவன் கோற்கீழ்ப் படின்"* *(குறள்,558).* 6. முத்திரைக் கோல் (வின்.); staff or stamp for marking. 7. தீக்கடை கோல்; stick used for churning the flint stone to produce fire. *"கைக்கோ லுமிழ்ந்த வெற்படு சிறுதீ"* *(பெருங். நரவாண.8:134).* 8. பிரம்பு; cane. 9. குதிரையை முடுக்கி ஒட்டும் சவுக்கு, குதிரைச் சம்மட்டி (சூடா.); horse-whip. 10. கொழு (பிங்.); plough share. 11. அம்பு; arrow. *"ஐங்கோலை வென்றுகைக் கொண்டமுக் கோலன்"* *(திருவேங். கலம். காப்பு.3).* 12. ஈட்டி (சூடா.); spear. 13. குடைமுதலியவற்றின் காம்பு; handle, as of an umbrella. *"அருள்குடை யாக வறங்கோ லாக"* *(பரிபா.3:74).* 14. யாழின் நரம்பு; lute string. *"கோல்பொரச் சிவந்த... விரல்"* *(சீவக. 459).* 15. துலாக்கோல் (பிங்.); balance on the principle of a steel-yard, beam of scales. 16. துலைஒரை (திவா.); libra of the zodiac. 17. துலை (ஐப்பசி)த் திங்கள் (தைலவ.பாயி. 55.); the month tulai *(Aippaši).* 18. செங்கோல்; sceptre. *"வேலன்று வென்றி தருவது மன்னவன் கோலதூஉங் கோடா தெனின்"* *(குறள். 546).* 19. அளவுகோல்; measuring rod. *"கோலிடை யுலக மளத்தலின்"* *(கம்பரா. நகரப்.11).* 20. அணியின் ஒவிய வேலை; exquisite work-manship. *"வார்கோல் செறியரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர்"* *(புறநா.36:2).* 21. திரட்சி; roundness. *"கோனிற வளையினார்க்கு"* *(சீவக.209).* 22. வட்டம், உருண்டை; rotundity. 23. நெசவுக் கருவி; a kind of weaving instrument.

ம., து. கோலு; **க., பட.** கோல், கோலு; **தெ.** கோல; **கோத.** கோல்; **துட.** க்வீல்; **பர்.** கோல் (அம்பு); **குட.** கோலி;

கோண். கோலா; **கூ.** கோடு (உலக்கை); **குவி.** கோலு (உலக்கை); **கொலா.** கோலா, கோல; **கூய்.** கேரி (அம்பு).

Fin. kolka (a blunt arrow), kaari; **Est.** kolk, kaar (bow);

[குல் → குலவு. குலவுதல் = வளைதல். குலவு → குலாவு. குலுத்தல் = வளைந்த காயுள்ள கொள். குலுக்கை = உருண்டு நீண்ட குதிர். குல் → (கொல்) → கோல் = உருட்சி, திரட்சி. உருண்டு திரண்ட நீண்ட கோல்.]

கோல்[2] *kōl,* பெ.(n.) 1. மை எழுது கோல், அஞ்சனக்கோல்; pencil to paint the eye with collyrium (அக.நி.). 2. 11 அடி நீளமுள்ள நீட்டல் அளவுகோல்; a unit of linear measure of 11 feet. 3. 24 அடியுள்ள நீட்டலளவை; a unit of linear measure of 24 feet (திவ்.பெரியாழ்.3.2:6).

[கால் (நீட்சி) → கோல்.]

கோல்[3] *kōl,* பெ.(n.) 1. இலந்தை (சூடா.); jujube tree. 2. தெப்பம் (வின்.); raft, float.

[குல் → கொல் → கோல்.]

கோல்கடமான் *kōl-kaḍamāṉ,* பெ.(n.) ஒருவகை கடல்மீன்; a kind of sea fish.

[கோல் + கடமான்.]

கோல்காரன் *kōl-kāraṉ,* பெ.(n.) 1. காவற்காரன்; a watchman. 2. ஊர்க்காவலன்; a village servant.

[கோல் + காரன்.]

கோல்குடிதாங்கியார் *kōlguḍi-tāṅgiyār,* பெ.(n.) ஊரவைத் தலைவர்; village headman. *"இவ்வூர் பெருங்குளத்திலிருந்து அறுவமடையும், கோல்குடி தாங்கியார் நிலம் உட்பட மனைக்குழி நூற்றுநால் காணி" (ஆவ.98, ப.54).*

[கோல் + குடி + தாங்கியார்.]

கோல்கொடு-த்தல் *kōl-koḍu-,* 4 செ.கு.வி.(v.i.) கோலாற் கண்ணிலானை நடத்திவருதல் (வின்.); to lead the blind with a staff.

[கோல் + கொடு.]

கோல்கொள்(ளு)-தல் *kōl-koḷ(ḷu)-,* 13 செ.குன்றாவி. (v.t.) விலங்கு பூட்டிய தேர் முதலியன செலுத்துதல்; to drive, as a car drawn by horses, with a whip in hand. *"கொள்வார் கோல்கொள்ளக் கொடித்திண்டே ரேறுவோர்" (பரிபா.11:51).*

[கோல் + கொள்(ளு).]

கோல்நிறைகூலி *kōl-niṟai-kūli,* பெ. (n.) வரிவகை (S.I.I. iii, 266); a tax on articles measured by weight.

[கோல் + நிறை + கூலி.]

கோல்பிடி-த்தல் *kōl-piḍi-,* 4 செ.கு.வி.(v.i.) **கோல் கொடு-த்தல்** பார்க்க; see *kōl-koḍu-.*

[கோல் + பிடி.]

கோல்போடு-தல் *kōl-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) தண்டு வலித்தல் (தூண்டிலிடுதல்) (மீனவ.); fishing with rod.

[கோல் + போடு.]

கோல்மட்டம் *kōl-maṭṭam,* பெ.(n.) கோலுயரம், கோலளவு; staff-height, as a standard.

[கோல் + மட்டம்.]

கோல்மரம் *kōl-maram,* பெ.(n.) வண்டியின் ஏர்க்கால் மரம்; pole of a cart.

[கோல் + மரம்.]

கோல்மூலி *kōl-mūli,* பெ.(n.) இலந்தை; jujube (சா.அக.).

[கோல் + மூலி.]

கோல்வலி-த்தல் *kōl-vali-,* 4 செ.கு.வி. (v.i.) துடுப்புக்கோலால் பரிசல் தள்ளுதல்; to propel boat with oars.

[கோல் + வலி-.]

கோல்வள்ளம் *kōl-vaḷḷam,* பெ.(n.) விளிம்பு பிரம்பு கட்டின வட்டில்; a cup with ornamental brim *"மணிக்கோல் வள்ளத்தவ னேந்த" (சீவக. 2700).*

[கொள் → கோல் + வள்ளம்.]

கோல்வளை[1] *kōl-vaḷai,* பெ.(n.) 1. அழகிய வளை; beautiful ring. 2. பெண்; female.

[கோல் (அழகு) + வளை.]

கோல்வளை[2] *kōl-vaḷai,* பெ.(n.) வளைவகை; a variety of bangles. கோல்வளை, கழல் வளை, வரிவளை என்னுமாபோல (திவ்.பெரியாழ்.3.4:8, வியா. பக்.618).

[கோல் + வளை.]

கோல்விழுக்காடு *kōl-viḻukkāḍu,* பெ.(n.) தற்செயல்; chance, accident. *'கோல்விழுக் காட்டாலே பரிகாரமாயிருக்கை யன்றிக்கே' (ஈடு. 4.10:5.).*

[கோல் + விழுக்காடு.]

கோலக்கல் *kōla-k-kal*, பெ.(n.) கோலப்பொடியாக இடித்தற்குரிய (வெங்கக்) கல்; a kind of white stone powdered and used for drawing decorative figures on the floor.

[கோலம் + கல்.]

கோலக்காரன் *kōla-k-kāraṉ*, பெ.(n.) கேலிக்காரன் (இ.வ.) ; humorist, jester.

[கோலம் (புனைவு) + காரன்.]

கோலகந்தம் *kōla-kandam*, பெ.(n.) புழுக்களைக் கொல்லப் பயன்படும் ஒரு கிழங்கு; a bulbous root used for killing worms (சா.அக.).

[கோலம் + கந்தம்.]

கோலகப்பை *kōl-agappai*, பெ.(n.) நீண்ட காம்பையுடைய அகப்பை (இ.வ.) ; ladle with a long handle, as used in the preparation of large quantities of rice and curry.

[கோல் + அகப்பை.]

கோலகம் *kōlagam*, பெ.(n.) திப்பிலி (மலை.); long pepper.

[கோலம் → கோலகம்.]

கோலங்கட்டு-தல் *kōlaṅ-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) நாடகம் முதலியவற்றிற்கு வேடம் பூணுதல் (யாழ்ப்.); to put on dress as an actor, dress up for the - atricals; to put on a mask or costume.

[கோலம் + கட்டு.]

கோலங்காட்டு-தல் *kōlaṅ-kāṭṭu*, 5 செ.கு.வி. (v.i.) 1. மணமக்களை மணப்பந்தலுக்கு அழைத்துக் கொண்டு வருதல் (இ.வ.); to conduct the bride-groom and the bride to the marriage dais. 2. சாயல் கொள்ளுதல்; to represent, personify. 3. மாதிரி காட்டுதல்; to show an example.

[கோலம் + காட்டு.]

கோலங்காண்(ணு)-தல் *kōlaṅ-kāṇ(ṇu)-*, 13. செ.குன்றாவி.(v.t.) 1. ஒப்பனை செய்தல்; to adorn, beautify, decorate. *கோலங்காண் படலம் (கம்பரா.).* 2. துன்பத்திற்கு உள்ளாக்குதல்; to reduce one to a wretched condition. அவன் என்னை இக்கோலங் கண்டான் (இ.வ.).

[கோலம் + காண்(ணு).]

கோலங்கெடு-தல *kōlaṅ-keḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. அழகு கெடுதல்; to spoil the beauty. 2. சீரழிதல்; to disorder, to get deranged.

[கோலம் + கெடு.]

கோலங்கொள்(ளு)-தல் *kōlaṅ-koḷ(ḷu)-* 16 செ.கு.வி. (v.i.) 1.நிகழ்வுக்கேற்ப வேடம் பூணுதல்; to put on appropriate dress. *"கொற்றவை கோலங்கொண்டு" (பரிபா.11:100).* 2.பொய்த் தோற்றம் காட்டுதல்; to put it on. 3. மந்தாரமா யிருத்தல் (யாழ்ப்.); to assume a cloudy appear-ance.

[கோலம் + கொள்(ளு).]

கோலச்சங்கம் *kōla-c-caṅgam*, பெ.(n.) **கோலச்சங்கு** பார்க்க; see *kōla-c-caṅgu* (சா.அக.).

[கோலம் + (சங்கு) சங்கம்.]

கோலச்சங்கு *kōla-c-caṅgu*, பெ.(n.) முட்சங்கு; mistletoe berry thorn.

[கோலம் + சங்கு.]

கோலச்சாரி *kōla-c-cāri*, பெ.(n.) வேட்டுவப்பெண் கொற்றவையுருக்கொண்டு ஆடுங் கூத்து (சிலப். பதி. 73, உரை); masquerade dance by a woman of the *Vēḍar* caste disguised as Durgai.

[கோலம் + (சாலி = சான்றவள், பொருந்தியவள்) சாரி.]

கோலச்சுண்ணம் *kōla-c-cuṇṇam*, பெ.(n.) வழலைச் சுண்ணம்; (in alchemy) a prepared calcium compound.

[கோலம் + சுண்ணம்.]

கோலசிம்பி *kōla-cimbi*, பெ.(n.) பூனைப் பிடுக்கன் கொடி; cat bean.

[கோலம் + சிம்பி.]

கோலஞ்செய்வாள் *kōlañ-ceyvāḷ*, பெ.(n.) தலைவிக்கு ஒப்பனை செய்பவள் (சூடா.); lady's dressing-maid.

[கோலம் + செய்வாள்.]

கோலடி *kōlaḍi*, பெ.(n.) கையாலடித்த தவசத்தைக் குவித்துக் கோலாலடிக்கை (G.Sm. D.I.i.210); threshing of paddy and other grain with sticks, after beating them with hand.

[கோல் + அடி.]

கோலதளம் *kōla-taḷam*, பெ.(n.) **கோலந்தனா** பார்க்க (சா.அக.); see *kōlandaṉā*.

[கோலம் + தளம்.]

கோலந்தனா *kōlandanā,* பெ.(n.) ஞாழல்; a mixture of various shrubs used in perfumes and punguents such as cassia, jasmine etc. (சா.அக.).

[கோலம் = ஒப்பனை. தளம் = பொடி. கோலம் + தனம் – கோலந்தனம் →கோலந்தானா (கொ.வ.).]

கோலநகுடவேர் *kolanaguda-vēr,* பெ.(n.) அமுக்கிரா (இராசவைத்.); Indian winter cherry root.

[கோலம் + நகுடம் + வேர்.]

கோலப்பாம்பு *kōla-p-pāmbu,* பெ.(n.) ஒருவகைக் கடற்பாம்பு; a kind of sea snake (மீனவ.).

[கோலம் + பாம்பு.]

கோலப்புச்சம் *kōla-p-puccam,* பெ.(n.) ஒருவகை நாரை; a kind of crane (சா.அக.).

[கோலம் + புச்சம்.]

கோலப்பொடி *kōla-p-poḍi,* பெ. (n.) கோலமிடுதற் குதவும் அரிசிமா அல்லது ஒருவகை வெள்ளைக் கற்பொடி; rice-flour or white stone-powder used for drawing decorative figures in houses.

[கோலம் + பொடி.]

கோலம்[1] *kōlam,* பெ.(n.) 1. அழகு; beauty, gracefulness. *"கோலத் தனிக்கொம்பர்" (திருக்கோ.45).* 2. நிறம்; colour. *"கார்க்கோல மேனி யானை" (கம்பரா. கும்பக. 154).* 3. உருவம்; form, shape, external or general appearance. *மானுடக் கோலம்.* 4. தன்மை; nature. 5. வேடம்; costume, appropriate dress; attire, as worn by actors; trappings; equipment; habiliment. *"உள்வரிக் கோலத்து" (சிலப்.5:216).* 6. அணிகலன்; ornament, as jewelry. *"குறங்கிணை திரண்டன கோலம் பொறாஅ" (சிலப். 30:18).* 7. ஒப்பனை; adornment, decoration, embellishment. *"புறஞ்சுவர் கோலஞ் செய்து" (திவ்.திருமாலை.6).* கண்டதே காட்சி கொண்டதே கோலம் (பழ). 8. மா, கற்பொடி முதலியவற்றிலிடும் கோலம்; ornamental figures drawn on floor, wall or sacrificial pots with rice - flour, white stone-powder, etc. 9. சூலி (கர்ப்பிணி) களுக்குச் செய்யும் வளைகாப்புச் சடங்கு; ceremony of providing pregnant woman with bangles in fifth or seventh month after conception. 10. விளையாட்டு; play, sport. *"அல்லமன்றன் கோலமென் சொல்வேன்" (பிரபுலிங். பிரபுதே. 73).* 11. பெருந்துன்பநிலை; wretched condition.

தெ. கோலமு; **க.** கோல; **ம.** கோலம்.

[குல் →கொல் (புதியது, அழகியது) →கோல் + அம்.]

கோலம்[2] *kōlam,* பெ.(n.) 1. முயற்சி; exertion, effort. *"கோலங்கொ ளுயிர்களும்" (திவ்.திருவாய். 5.6:10).* 2. சிறு நீரோட்டம் (பிங்.); streamlet.

[குல் →கொலு →கோலு→கோலம்.]

கோலம்[3] *kōlam,* பெ.(n.) 1. பன்றி; hog, wild hog. *"கேழ றிகழ்வரக் கோலமொடு பெயரிய" (பரிபா.2:16).* 2. முள்ளம்பன்றி (திவா.); pcrcupine. 3. இலந்தை (பிங்.); jujube tree. 4. தெப்பம் (வின்.); raft.

[கால் (கருப்பு) = கோல் → கோலம்.]

கோலம்[4] *kōlam,* பெ.(n.) குரங்கு (பிங்.); monkey.

[கோல் (வளைவு) →கோலம்.]

கோலம்[5] *kōlam,* பெ.(n.) 1. பாக்கு (பிங்.); areca-nut. 2. பீர்க்கு (பிங்.); sponge-gourd.

[கோல் (நீட்சி) →கோலம்.]

கோலம்[6] *kōlam,* பெ.(n.) தக்கோலம் (மூ.அ.); cubeb.

[கோல் → கோலம்.]

கோலம்போடு–தல் *kōlam-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. சுவர், தரை முதலியவற்றில் அழகான வரியிடுதல்; to draw ornamental figures on wall or floor with rice flour or white stone powder. 2. ஒப்பனை செய்வித்தல்; to decorate. 3. கோட்ட மிடுதல்; to bend. 4.புனைந்து கொள்ளுதல், வேடமணிதல்; to wear costume.

[கோலம் + போடு.]

கோலம்வா–தல் (கோலம்வருதல்) *kōlam-vā-,* 18 செ.கு.வி.(v.i.) ஊர்வலம் வருதல் (வின்.); to go in procession.

[கோலம் + வா.]

கோலமா *kōla-mā,* பெ.(n.) ***கோலப்பொடி*** பார்க்க; see *kōla-p-poḍi.*

மறுவ. கோலமாவு, கோலப்பொடி.

[கோலம் + மா.]

கோலமாலம் *kōlamālam,* பெ.(n.) மலையாமணக்கு (மலை.); coral plant.

[கோலம் + ஆலம்.]

கோலமாவு *kōla-māvu,* பெ.(n.) ***கோலப்பொடி*** பார்க்க; see *kōla-p-poḍi.*

[கோலம் + மாவு.]

கோலமாறு-தல் *kōla-māṟu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. முன்கொண்ட தோற்றம் மாறுதல்; to change in appearance or dress. *"நகுடனுங் கோல மாறினான்" (தனிப்பா.).* 2. வேடம் புனைதல் (வின்.); to be disguised; to put on dress, as an actor.

[கோலம் + மாறு.]

கோலமிடு-தல் *kōlam-iḍu-*, 20 செ.குன்றாவி. (v.t.) ***கோலம்போடு-தல்*** *பார்க்க;* see *kōlam-pōḍu-*. *"கோலமிடுதல் குடைபிடித்தல்" (சினேந்.458).*

[கோலம் + இடு-.]

கோலமுத்தம் *kōlamuttam*, பெ.(n.) ஒருவகைப் பூடு; an unknown plant (சா.அக.).

[கோலம் + முத்தம்.]

கோலரக்கு *kōl-arakku*, பெ.(n.) கொம்பரக்கு; shel-lac.

[கோல் + அரக்கு.]

கோலரம் *kōlaram*, பெ. (n.) முளை (சது.); shoot from a seed or root.

[கோலம் → கோலரம்.]

கோலரி *kōlari*, பெ.(n.) அமுக்கிரா; amukkirā (சா.அக.).

[கோல் + அரி.]

கோலல் *kōlal*, பெ.(n.) கோலுதல்; to surround.

[கொலு →கோலு →கோலல்.]

கோலலவணம் *kōla-lavaṇam*, பெ.(n.) துரிசு (வின்.); a kind of blue vitriol.

[கோலம் + லவணம் (உப்பு).]

கோலவல்லி *kōla-valli*, பெ.(n.) கொடிவகை (யாழ்.அக.); a creeper.

[கோலம் + வல்லி.]

இதன் காய் மிளகைப்போல் இருக்கும்.

கோலவல்லீசம் *kōlavallīšam*, பெ.(n.) செவ்வியம்; common pepper (சா.அக.).

[கோலம் + (வல்லியம்) வல்லீசம்.]

கோலவுணவு *kōla-v-uṇavu*, பெ.(n.) பன்றியின் உணவாகிய கோரைக் கிழங்கு (இராசவைத்.); sedge tuber, as hog's food.

[கோலம் + உணவு. கோலம் = பன்றி.]

கோலவேர் *kōla-vēr*, பெ.(n.) நிலப்பனை (மலை.); ground palm.

[கோலம் + வேர்.]

கோலறை *kōlaṟai*, பெ.(n.) 1. கூலியாள் வேலை செய்தற்காக அளவுகோலால் அறுதி செய்து கொடுக்கப்பட்ட நிலம்; working area portioned out for each individual labourer, as determined by a measuring-rod. *"வாணிச்சிக் கிடுங் கோலறைக் கோரா ளின்றி" (திருவாலவா.30:8).* 2. குழித்தரை; a pit land.

[கோல் + அறை.]

கோலறையிடு-தல் *kōlaṟai-y-iḍu-*, 20 செ.கு.வி. (v.i.) வேலை செய்யுமிடங்களைக் கூலியாள்களுக்கு வகுத்துக் கொடுத்தல்; to measure off an area for work for different labourers. *"மனைகடொறுங் கோலறையிட்டு வேண்டி யடைப்பாயென" (திருவாலவா.30:6).*

[கோல் + அறை + இடு-.]

கோலன் *kōlaṉ*, பெ.(n.) 1. கையில் கோல் கொண்டவன்; one who is with a staff. 2. நீண்ட வடிவுடையது; a lengthy one. 3. ஒப்பனையும் புனைவும் கொண்டவன்; one who is with make up.

[கோல் + அன்.]

கோலன்வல்லி *kōlaṉ-valli*, பெ.(n.) ஆனைத் திப்பிலி; pericarps of pothos officinalis (சா.அக.).

[கோலன் + வல்லி.]

கோலன்வைப்பு *kōlaṉ-vaippu*, பெ.(n.) சிவனார் வேம்பு; Šiva's neem (சா.அக.).

[கோலன் + வைப்பு.]

கோலா[1] *kōlā*, பெ.(n.) திப்பிலி; long pepper

[கோலன் →கோலா.]

கோலா[2] *kōla*, பெ.(n.) 1. கடல்மீன். இதன் உடம்பு நீண்டும் ஒல்லியாயும், தலைக் கூச்சாகவும், எலும்பு பச்சை நிறமாயும் இருக்கும்; a kind of fish; gasfish or garpeck. It has a slender body pointed head and green bone. 2. பறக்கும் மீன்வகை (யாழ்.அக.); flying fish.

ம. கோலான்.

Fin. kala; **Est.** kala; **Mari.** kol; **Hung.** hal; **Mong.** xalima; **Jap.** karei; **Q.** calma.

[கோலன் →கோலா.]

வகைகள் : 1. வட்டமூக்குக் கோலா, 2. பறவைக் கோலா, 3. பசுங்கோலா, 4. சப்பைக் கோலா, 5. வரிக் கோலா,

கோலாமீன் வகைகள்


கோலாமீன்

6. திருவெண்கோலா, 7. பாம்புக்கோலா, 8. கருவாலன் கோலா, 9. ஏமின்கோலா, 10. மயிற்கோலா, 11. பற்கோலா, 12. தாய்க் கோலா, 13. பீச்சிக்கோலா (சா.அக.).

கோலாக்கட்டா *kōlā-k-kaṭṭā-,* பெ.(n.) 18 அங்குல நீளம் வளர்வதும் நீலமிடையிட்ட பச்சை நிறமுள்ளதுமான கடல்மீன்வகை; a sea-fish, greenish, shot with blue, attaining 18 in. in length.

[கோலன் + (கட்டு) கட்டா.]

கோலாகலம் *kōlākalam,* பெ.(n.) 1. ஆரவாரம், ஆடம்பரம்; pomposity. *"கூராரும் வேல்விழியார் கோலா கலங்க ளெல்லாம்" (பிரமோத.27:14).* 2. குசால்; gaiety, style. 3. பேரொலி; big sound. 4. விலங்கின மெழுப்புமொலி; sound produced by animals. 5. கூக்குரல்; loud and confused noise.

[கோலம் + ஆகுலம்.]

கோலாகலம்பண்(ணு)-தல் *kōlākalam-paṇ(ṇu)-,* 11.செ.கு.வி. (v.i.) ஒழுங்கீனமாக நடத்தல் (வின்.); to be disorderly, to lead a dissipated or dissolute life (சா.அக.).

[கோலாகலம் + பண்ணு.]

கோலாகலனேந்தல் *kōlākalaṉēndal,* பெ.(n.) கோரைக்கிழங்கு (இராசவைத்.); sedge tuber, as hog's food.

[கோலாகலன் : பேரொலி எழுப்பும் பன்றி. நந்து → நந்தல் (விரும்பும் உணவு). கோலாகலன் + நந்தல்.]

கோலாகாலி *kōlākāli,* பெ.(n.) ஆடம்பரமாய் நடப்பவன்-ள்; extravagant person fond of display or pomp.

[கோலாகலம் → கோலாகாலி.]

கோலாங்கூலம் *kōlāṅgūlam,* பெ.(n.) முசு; langur, a large and black kind of wild bearded ape.

[கால் → கோல் + நாங்குலம் (நாஞ்சில்). கலப்பை போல் முதுகு வளைந்த கருங்குரங்கு.]

கோலாச்சி *kōlācci,* பெ.(n.) மீன்வகை; a kind of fish.

[கோல் + ஆச்சி.]

கோலாச்சுறா *kōla-c-cuṟā,* பெ.(n.) மீன்வகை (F.L.); a kind of shark, grey or brown.

[கோலன் + சுறா.]

கோலாஞ்சி[1] *kōlāñji,* பெ.(n.) மிகு ஒப்பனை, ஆகுலம், பகட்டு (யாழ்ப்.); excessive decoration, finery in dress, style above one's rank a condition.

[கொலு → கோலு → கோலஞ்சி → கோலாஞ்சி]

கோலாஞ்சி[2] *kōlāñji,* பெ.(n.) 1. அடுக்கு; one on top of another. 2. அணியம்; ready. 3. அதிகோலம்; over graceful, over handsome.

[கொலுவுதல் : பொருத்துதல், அடுக்குதல், அழகுபடுத்துதல். கொலு → கோலு → கோலஞ்சி]

கோலாட்டப்பாட்டு *kōlāṭṭa-p-pāṭṭu,* பெ.(n.) கோலடித்து விளையாடும்போது பாடும், ஒருவகைப் பாட்டு; a kind of song in a children's play with short coloured sticks.

ம. கோலடிப்பாட்டு.

[கோலாட்டம் + பாட்டு.]

கோலாட்டம் *kōlāṭṭam,* பெ.(n.) 1. வண்ணமிட்ட கோல்களைக் கொண்டு தாளத்திற்கும் பாட்டிற்கு மிசையச் சிறார் தட்டிக் கொண்டு விளையாடும் ஒருவகை விளையாட்டு; a children's game in which they sing and dance in a ring, marking time with beats of short coloured sticks. *"செவ்வாய்ச்சியர் கோலாட்டம்" (காஞ்சிப்பு. வாணீச.54).* 2. துலை, நளி, சிலை (ஐப்பசி, கார்த்திகை, மார்கழி) மாதங்களிலொன்றில் கோலாட்டத்துடன் இளம்பெண்கள் கொண்டாடும் ஒரு விழா; a festival celebrated by girls with *kōlāṭṭam* in the months of tulai, naḷi, cilai *Aippasi, Kārtigai* or *Mārgaḻi.*

ம. கோலடி; க. கோலாட; தெ. கோலாடமு; து. கோலாட

[கோல் + ஆட்டம்.]

கோலாடி *kōl-āḍi,* பெ.(n.) அரசாணை செல்லும் இடம்; sphere of royal authority or influence. *"என் கோலாடி குறுகப்பெறா" (திவ்.பெரியாழ்.5.4:4).*

[கோல் + ஆடி.]

கோலாடு *kōl-āḍu,* பெ. (n.) ஆட்டுவகை (இ.வ.); a kind of sheep.

[கோல் + ஆடு.]

கோலாந்தி *kōlāndi,* பெ. (n.) பற்பாடகச் செடி; fever plant (சா.அக.).

[கோல் → கோலாந்தி.]

கோலாபம் *kōlābam,* பெ. (n.) சிவதை; Indian jalep (சா.அக.).

[கலாவம்→கலாபம்→கோலாபம்.]

கோலாமரம் *kōlā-maram,* பெ. (n.) கோலாமீன் பிடிக்கச் செல்லும் மரக்கலம்; a wooden vessel used for fishing of kola fish (மீனவ.).

[கோலா + மரம்.]

கோலாமாலாவெனல் *kōlā-mālā-v-eṉal,* பெ. (n.) குழப்பக் குறிப்பு; expr. denoting confusion or disorderliness. திருமணத்தைக் கோலாமாலா வென்று நடத்திவிட்டான் (இ.வ.).

[கோலாமாலா - ஒலிக்குறிப்பு. கோலா + மாலா + எனல்.]

கோலாமி *kōlāmi,* பெ.(n.) ஆந்திர (அடிலாபாத்), மராட்டிய (வார்தா) மாநிலங்களில் பழங்குடிமக்கள் பேசி வரும் திரவிட மொழி; a Dravidian language spoken by Tribals in Andhra Pradesh (Adilabad) and Maharashtra (Wardha).

மறுவ. கொலாமி.

[ஒருகா. குல →குளு →(குழு) குலுமி →கோலாமி.]

இம்மொழியைப் பலரும் கொலாமி என்றே வழங்குவர். இம்மொழிபற்றிக் காண்க: S.B. Steever(Ed.) The Dravidian Languages (London 1998): Ch. XI pp.301-7 'Kolami' by P.S. Subramanyam.

கோலாமீன் *kōlā-mīn,* பெ. (n.) 1.***கோலா*** பார்க்க; see *kōlā*. 2. பறவை மீன்; a flying fish (சா.அக.).

[கோலா + மீன்.]

கோலாரிக்கம் *kōlārikkam,* பெ.(n.) இருவரிடும் சண்டை (இராட்.); duel.

தெ. கொலாரகமு.

[கோல் + (ஆர்த்தல்) ஆரிக்கம்.]

கோலாலம் *kōlālam,* பெ. (n.) ***கோலாகலம்*** பார்க்க; see *kōlākalam.* *"கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த வாலாலம்"* (திருவாச. 12:8).

[கோலாகலம் →கோலாலம்.]

கோலாலிண்டு *kōlāliṇḍu,* பெ.(n.) ஒரு முள்ளி; Indian black berry (சா.அக.).

[கோலால் + இண்டு.]

கோலாவத்தம் *kōlā-vattam,* பெ.(n.) கீழ்க்காய் நெல்லி; a small plant with slender green main branches (சா.அக.).

[கோல் + ஆவத்தம்.]

கோலாவலை *kōlā-valai,* பெ.(n.) கோலாமீன் பிடிக்கும் வலைவகை; a kind of net generally used for fishing of kola fish.

[கோலா + வலை.]

கோலாவிதை *kōlā-vidai,* பெ. (n.) இலந்தை விதை; jujube seed (சா.அக.).

[கோலா + விதை.]

கோலாள் *kōlāḷ,* பெ.(n.) தேர்ப்பாகன்; charioteer. *"அங்கவன்றன் கோலாளைக் கொன்று" (பாரத. வெண். 799).*

[கோல் - துறட்டி (அங்குசம்). கோல் + ஆள்.]

கோலி[1] *kōli,* பெ.(n.) கூந்தல், மயிர் (சது.); hair.

[கோலு (நீட்சி) →கோலி.]

கோலி[2] *kōli,* பெ. (n.) இலந்தை (பிங்.); jujube tree (சா.அக.).

[கோல் →கோலி.]

கோலி[3] *kōli,* பெ.(n.) திப்பிலி (மலை.); long pepper.

Mhr. gōli. **தெ., ம.** கோலி (gōli); **து.** கோளி (gōli).

[கோலன் (குச்சி போன்றது) →கோலா →கோலி.]

கோலி[4] *kōli,* பெ. (n.) 1.சிற்றழிஞ்சில்; privet. 2. புன்குவகை; a species of privet.

[கோலன் →கோலி.]

கோலிக்கற்றை *kōli-k-kaṟṟai,* பெ.(n.) சாமரம் (சங்.அக.); chowry, tail of the yak.

[கோலி[1] + கற்றை.]

கோலிக்கொள்(ளு)-தல் *kōli-k-koḷ(ḷu)-,* 16 செ.குன்றாவி.(v.t.) சேர்த்துக் கொள்ளுதல் (வின்.); to gather up, amass, accumulate, as property.

[கோலி + கொள்(ளு)-. கோலுதல் - சேர்த்தல், திரட்டல்.]

கோலாமீன் வகைகள்

அலுவலகம்
30 ஆக
பெறப்பட்டது
சென்னை-600

கோலிகக்கருவி *kōliga-k-karuvi*, பெ.(n.) நெசவுக் கருவி; loom.

[கோலிகன் + கருவி.]

கோலிகம் *kōligam*, பெ. (n.) இலந்தை; jujube.

[கோலி → கோலிகம்.]

கோலிகன் *kōligaṉ*, பெ. (n.) 1. நெசவுத்தொழில் செய்பவன் (நேமிநா.எழுத்து.16,உரை); weaver. 2. கோலிகரால் நெய்யப்பட்ட ஆடை (தொல்.சொல். 114, உரை); a kind of coarse cloth, as woven by *kōligar*.

ம. கோலியன்.

[கோலி + அன். கோலுதல் = சேர்த்தல், இணைத்தல். கோலியர் = நூலிழைகளை இணைத்து துணி நெய்வோர். கோல் →கோலு →கோலியன் →கோலிவன் →கோலிகன். ககரம் சகரமாகத் திரிந்தபோது கோலியர் →சோலியர் →சாலியர் எனத் திரிந்தது.]

கோலிசம் *kōlišam*, பெ.(n.) மிளகு; black pepper-piper nigrum (சா.அக.).

[கோலி² → கோலிசம்.]

கோலிஞ்சி *kōliñji*, பெ. (n.) மலையிஞ்சி (நாஞ்சில்); a kind of ginger.

ம. கோலிஞ்சி.

[கோல் + இஞ்சி.]

கோலியப்பறை *kōliya-p-paṟai*, பெ.(n.) கோலிகப் பறையன் (W.); a division of the pariah caste who weave coarse cloth, as woven by *kōligar*.

[கோலியன் + பறை.]

கோலியடி–த்தல் *kōli-aḍi*, 4 செ.கு.வி. (v.i.) கோலி யுண்டையால் விளையாடுதல்; to play marbles.

[கோலி + அடி.]

கோலியர் *kōliyar*, பெ. (n.) நெய்வோர்; weaver.

ம. கோலிகர்.

[கோலு → கோலியர்.]

கோலியள்(ளு)–தல் *kōli-y-aḷ(ḷu)-*, 5 செ. குன்றாவி. (v.t.) வாரியெடுத்தல் (யாழ்ப்.) ; to bale, take up with a bucket, as water, or gather with a sweep of the arm, as earth, grain.

[கோலுதல் = அகலவாட்டில் இருகை சேர்த்தல்.கோலி + அள்(ளு).]

கோலியன் *kōliyaṉ*, பெ.(n.) ***கோலிகன்*** பார்க்க; see *kōligaṉ*.

ம. கோலியன்.

[கோலிகன் → கோலியன்.]

கோலிவா(ரு)தல் *kōli-vā-*, 15 செ.குன்றாவி. (v.t.) சுற்றி வருதல்; to go round, envelope, as an army.

[கோலு + வா.]

கோலிவாசி *kōli-vāši*, பெ. (n.) கரடி; bear (சா.அக.).

[கோலி (நீண்டமயிர்) + வாசி.]

கோலிளகுதல் *kōl-iḷagudal*, பெ.(n.) அரசன் சாவு, செங்கோல் தளர்ந்து முடிவுறல்; death of a king, fall of the sceptre. *'கோலிளகுதல் மங்கல மரபு' (சீவக. 2146, உரை).*

[கோ + இளகுதல்.]

கோலினிறம் *kōliṉiṟam*, பெ.(n.) அழிஞ்சில்; a medicinal tree whose root, fruit, leaves, flowers are an antidote against poison (சா.அக.).

[கோல் + நிறம்.]

கோலு[1]–தல் *kōlu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. பாத்தி முதலியன வகுத்தல்; to make, form, as beds in a garden. 2. வளைத்தல்; to enclose, envelop, encompass; to stretch round. *"நெடுங்காழ்க் கண்டங் கோலி" (முல்லைப்.44).* 3. திரட்டிவைத்தல்; to gather. *"கோலாப் பிரசமன் னாட்கு" (திருக்கோ.110).* 4. நீர்முதலியவற்றை முகந்து அள்ளுதல்; to bale, draw up, as with an *ōlai* bucket; to gather with a sweep of arm. *'கோலித் தண்ணீர் குடிக்கப்பட்ட..... குடை' (கலித்.23,உரை).* 5. விரித்தல்; to spread out. *"கணமயிறொக்கெண் ணுழையாத் தழைகோலிநின் றாலும்" (திருக்கோ. 347).* 6. தொடங்குதல்; to commence. *'பரஸ்வரூபத்தை நிரூபிக்கக் கோலி' (ஈடு,அவ.ஜீ.).* 7. உண்டாக்குதல்; to construct, compass, effect. 8. கலந்தாய்தல் (ஆலோசித்தல்); to consider, deliberate. *"முற்கோலிப் பாண்டு புத்திரர்க் கோறும்" (பாரத. நச்சுப்.3).* 9. ஒன்றுதல் (தியானித்தல்); to ponder, meditate. *"மாலைக் கோலித் திரியும்" (அஷ்டப். திருவேங்.மா.3).*

ம. கோருக.

[குல் → கொல் → கோல் → கோலு.]

கோலு[2]–தல் *kōlu-*, 9 செ.கு.வி. (v.i.) இணைதல்; to join together.

Fin. koinia, koinata (to copulate); Est. koinaba, koinida.

[குல் → கொல் → கோல் → கோலு.]

கோலுபட்டை *kōlu-paṭṭai,* பெ.(n.) இறைகூடை வகை (யாழ்ப்.); a kind of *ōla* bucket.

[கோலு + பட்டை.]

கோலுமை *kōlumai,* பெ.(n.) தொடக்கம் (வின்.); preparation, commencement.

[கோலு → கோலுமை.]

கோலெரி *kōl-eri,* பெ. (n.) விளக்குத் தண்டின்மேல் உள்ளச் சுடரொளி ; lamp on a post. *"கோலெரி கொளைநறை" (பரிபா.17:6).*

[கோல் + எரி.]

கோலெழுத்து *kōl-eḻuttu,* பெ.(n.) 1. எழுதும் பரப்பில் கீறல் அல்லது பள்ளம் விழாமல் எழுதுகோலில் மை தோய்த்து, துணி, மரப்பட்டை, மட்பானை ஆகியவற்றின் மீது எழுதும் எழுத்து; style used to write using ink or colour powder or liquid. 2. ஒப்பனைக் கோலம்; a decorative drawing. 3. மலையாள நாட்டில் வழங்கும் ஒருவகை எழுத்து (I.M.P. Trav. 93-B.); a variety of script used in Malabar.

ம. கோலழுத்து.

[கோல் + எழுத்து.]

கண்ணெழுத்து என்பது எழுதும் பரப்பில் கீறல் விழ எழுதுவது, ஓலைச் சுவடி எழுத்து போன்றது.

கோலை *kōlai,* பெ.(n.) மிளகு (தைலவ. தைல. 135, வரி. 91); black-pepper.

[கோல் → கோலை.]

கோலொற்று-தல் *kōl-oṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) அம்பு தொடுத்தல்; to shoot an arrow. *"கோலொற்றக் குனிந்த வாறே" (சீவக.797).*

[கோல் + ஒற்று.]

கோலோகம் *kō-lōgam,* பெ.(n.) ஆ(பசு)க்களுக் குரிய விண்ணுலகம்; paradise of cows as cow-world. *"கோலோகம் விட்டிழிந்து" (காசிக. விச்சுவநா.8).*

[கோல் + உலகம்.]

கோலோர் *kōlōr,* பெ.(n.) மதயானையை அடக்கி நடத்தும் குத்துக்கோற்காரர்; spearmen controlling an elephant in rut. *"கோலோர்க் கொன்று மேலோர் வீசி" (மதுரைக். 381).*

[கோல் → கோலோர்.]

கோவக்காரி *kōva-k-kāri,* பெ.(n.) தலைச்சுருளிச் செடி; Indian birth wort (சா.அக.).

[கோபக்காரி → கோவக்காரி.]

கோவக்கீச்சான் *kōva-k-kīccāṉ,* பெ.(n.) ஒருவகை கடல்மீன் (மீனவ.); a kind of sea fish.

[கோவம் + கீச்சான்.]

கோவங்கம் *kōvaṅgam,* பெ.(n.) சரகண்ட செய்நஞ்சு; a kind of native arsenic (சா.அக.).

[கோ + வங்கம்.]

கோவங்கிழங்கு *kōvaṅ-kiḻaṅgu,* பெ.(n.) **கோவைக் கிழங்கு** பார்க்க; see *kōvai-k-kiḻaṅgu* (சா.அக.).

[கொவ்வை → கோவை + கிழங்கு.]

கோவசூரி *kō-vašūri,* பெ.(n.) **கோவைசூரி** பார்க்க; see *kovai-šūri.*

[கோவைசூரி → கோவசூரி.]

கோவசை *kō-vašai,* பெ.(n.) மலட்டுமாடு; cow not calved (சா.அக.).

[கோ + வசை.]

கோவஞ்சி[1] *kō-vañji,* பெ. (n.) ஒருவகைச் சங்கு; a kind of conch.

[கோ + (வளஞ்சி) வஞ்சி.]

கோவஞ்சி[2] *kō-vañji,* பெ. (n.) மீன் வகை; a kind of fish. கோவஞ்சிக்கடியன் பொதியன் (பறாளை. பள்ளு.16).

[கோ + (வளஞ்சி) வஞ்சி.]

கோவண்டக்குறிச்சி *kōvaṇḍa-k-kuṟicci,* பெ. (n.) திருச்சிராப்பள்ளி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tiruchirappaḷḷi Dt.

[கோ + அண்டன் + குறிச்சி.]

கோவணக்குண்டியன் *kōvaṇa-k-kuṇḍiyaṉ,* பெ.(n.) கோவணாண்டி; a religious mendicant of the Šiva sect who has no clothing but the fore-lape (சா.அக.).

[கோவணம் + குண்டியன்.]

கோவணம் *kōvaṇam,* பெ.(n.) குண்டித்துணி; man's loin-cloth; fore-lape. *"துன்னம்பெய்

கோவணம்" (திருவாச.12:2). கோவணத்தில் ஒரு காசு இருந்தால் கோழி கூப்பிட பாட்டு வரும் (பழ).

மறுவ. தாச்சீலை.

ம. கோவணம்; க.,து. கோவண; தெ. கோவணமு

[கோ (கோத்தல்) + அணம்.]

கோவணவர் *kōvaṇavar,* பெ.(n.) கோயில் கண்காணிப்பாளர் (விசாரணையாளர்) (கோயிலொ,65) superintendent of a temple.

[கோ + (பணவர்) வணவர்.]

கோவணவன் *kōvaṇavaṉ,* பெ. (n.) ***கோவணன்*** பார்க்க; see *kōvaṇaṉ. "இஞ்ஞின்ற கோவணவன்" (திருவிசை. கருவூர். 46).*

[கோ + (பணவன்) வணவன்.]

கோவணன்[1] *kōvaṇaṉ,* பெ. (n.) சிவன் (சது.); śiva one with a loin-cloth fore-lape.

[கோவணம் + அன்.]

கோவணன்[2] *kō-vaṇaṉ,* பெ. (n.) வசிட்டன் (சது.); Vasista, as having *Kāmatēṉu* with him.

[கோவணம் + அன்.]

கோவணாண்டி *kōvaṇāṇḍi,* பெ.(n.) (இரந்துண்ணி) வாழும் வழிவகையற்றவன்; a begger with only a loin cloth for his clothing, destitute person.

[கோவணம் + ஆண்டி.]

கோவணி *kōvaṇi,* பெ.(n.) ஆத்தி (மூ.அ.); common mountain ebony.

[குவணி →கோவணி.]

கோவத்தக்குடி *kōvatta-k-kuḍi,* பெ.(n.) திருச்சிராப்பள்ளி மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tiruchirappaḷḷi Dt.

[கோ + அத்தன் + குடி.]

கோவத்தி *kō-vatti,* பெ.(n.) ***கோவதை*** பார்க்க; see *kō-vadai.*

[கோவதை →கோவத்தி.]

கோவதை *kō-vadai,* பெ.(n.) ஆ(பசு)க்கொலை; slaughter of cows, considered a sin. *"கொந்தலர்த்தார் மைந்தனைமுன் கோவதை செய்தார்க்கு" (பெரியபு.மனுநீதி. 34).*

[கோ + வதை.]

கோவந்தபுத்தூர் *kōvanda-puttūr,* பெ.(n.) தஞ்சை மாவட்ட ஊர்ப் பெயர்களிலொன்று; a village in Thanjavur Dt.

[கோ + வந்தன் + புத்தூர்.]

கோவம்[1] *kōvam,* பெ.(n.) கோபம்; angar. *"கோவந் தோன்றிடிற் றாயையு முயிருணுங் கொடியோர்" (கம்பரா.படைக்கா.23).*

[கோப்பு → கோப்பி → கோபி → கோவி → கோவம்]

கோவம்[2] *kōvam,* பெ.(n.) 1. தம்பலப்பூச்சி; cochineal. *"கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்" (சிறுபாண்.71).* 2. பொன்; gold.

[கோபம் →கோவம்.]

கோவர் *kōvar,* பெ. (n.) இடையர்; shepherds.

[கோ → கோவு + அர்.]

கோவர்த்தனம் *kō-varttaṉam,* பெ.(n.) இந்திரன் சினந்து விடுத்த பெருமழையைத் தடுத்து ஆநிரைகளையும் இடையர்களையும் காப்பதற்காகக் கண்ணனாற் குடையாகத் தாங்கப்பட்டதும் வடமதுரைப் பக்கத்துள்ளதுமான ஒரு மலை (திவ். பெரியாழ்.3:5:1); celebrated hill in Brindaban near Muttra lifted up and held by Krisṇā to shelter cows and cowherds from a rain storm sent by Indira.

[கோ + வர்த்தனம்.]

ஆநிரை மீட்பு நிகழ்வுற்ற இடமாதலின் இவ் வூர் இப் பெயர் ஏற்றதெனலாம்.

கோவர்த்தனர் *kō-varttaṉar,* பெ.(n.) கோவைசியர் (பிங்.); herds men (சா.அக.).

[கோ (மாடு) + வர்த்தனர்.]

கோவரகழுதை *kōvara-kaḻudai,* பெ.(n.) ***கோவேறுகழுதை*** பார்க்க; see *kōvēṟu-kaḻudai.*

[கோவேறு → கோவர + கழுதை.]

கோவல்[1] *kōval,* பெ.(n.) 1. மாட்டு மந்தை; herd, flock. 2. ஊரின் பொது மேய்ச்சலிடம்; common pasture of a village.

மறுவ. மந்தைவெளி, ஆவடி.

[கோள் = போரில் கொள்ளை கொண்ட மாடுகள். கோள் → கோ (மாடு) →கோவு + அல் – கோவல்.]

கோவல்[2] *kōval,* பெ.(n.) ***கோவலூர்*** பார்க்க; see *kōvalūr. "கோவ லிடைகழியே பற்றி" (திவ்.இயற். 1.86).*

[கோ→கோவு→கோவல்¹→கோவல்² (மாட்டு மந்தையிருந்த ஊர்)]

கோவலகணவாய் *kōvala-kaṇavāy*, பெ.(n.) கணவாய்ச்சிப்பி மீன்வகை (வின்.); a species of cuttle fish.

[கோ + வல் + கணவாய்]

கோவலர் *kōvalar*, பெ.(n.) 1. முல்லைநில மக்கள்; men of the sylvan tract, herdsmen. *"குருந்தங் கண்ணிக் கோவலர்" (ஐங்குறு. 439).* 2. இடையர்; shepherds.

[கோ→கோவு (மாடு) →கோவல் (மாட்டுமந்தை) + அர் – கோவலர்.]

கோவலராயப்பேரையன் *kōvalarāya-p-pēraiyaṉ*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டம் சம்பையில் தண்டனை பெற்ற வணிகன்; a merchant, who was punished by the guild at Jambai in Thirukkovalur taluk in Villuppuram Dt. "முடியனூரிருக்கும் பள்ளிச்சேரி அடியநம்பியான கோவலராயப் பேரையன்" (தெ.இ.க.தொ.22, கல்.67–5).

[கோவலர் + ஆயன் + பேர் + அரையன்.]

கோவலன்¹ *kōvalaṉ*, பெ.(n.) 1. மாட்டு மந்தைகளுடைய பெருஞ்செல்வன்;a rich man of cattle wealth. 2. சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன்; hero of the epic *Šilappadikāram*. *"கொண்டேத்தும் கிழமையில் கோவலன்என் பான்மன்னோ" (சிலப்).*

[கோ → கோவு→கோவல் (மாட்டு மந்தை) + அன் – கோவலன்.]

மாட்டு மந்தைகளுக்குத் தலைவன் கோவலன் எனப்பட்டான். நாளடைவில் இச் சொல் பெருஞ்செல்வன் என்னும் பொருள்பட்டதால் இப் பொருளில் சிலப்பதிகாரக் கோவலனுக்கும் காரணப்பெயராயிற்று.

கோவலன்² *kōvalaṉ*, பெ.(n.) திருமால் பெயர்களுள் ஒன்று; one of the name of Tirumāl.

[கோவலன் >Skt.gōpāla.]

கோவ்லி *kōvali*, பெ.(n.) பற்கிட்டுகை; tetanus.

[கோல்→கோ + வலி.]

கோவலூர் *kōval-ūr*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்திலுள்ளதும் பழைமையுடையதுமாகிய திருக்கோவலூர்; *Tirukkovalūr* in Viḷupuram Dt. of historic interest. *"முரண்மிகு கோவலூர் நூறி" (புறநா. 99).*

[கோவல் : மாட்டுமந்தை. கோவல் + ஊர் – கோவலூர்.]

கோவலை *kōvalai*, பெ.(n.) 1. நீரோட்டமுள்ள கழிமுகங்களில் பயன்படும் மீன்வலை; a kind of fishing net used for fishing in backwaters. 2. நீளமும் அகலமும் உள்ள பெரிய வலை (மீனவ.); big net, long and broad.

[கோ + வலை.]

கோவளம்¹ *kōvaḷam*, பெ.(n.) 1. கடற்குள் நீண்ட தரைமுனை; cape, headland. 2. தரைமுனையிலுள்ள ஊர்; town near a headland.

ம. கோவளம்; M. kōḷam.

[கோ + அளம்.]

கோவளம்² *kōvaḷam*, பெ.(n.) கோயில் முன்மண்டபத்தில் குமுதப்படைக்கு மேலுள்ள பகுதி; portion above the kumudappadai in the front mandapam. *"திரு அக்கிறமண்டபம் முன்பு திருக்கற் செய்துநின்ற குமுத படைக்குமேல் திருக்கற்சாத்த வாங்கி கோவளத்து கல்லடிப்பிக்கவும்" (SII.XVII.561 - 23 p. 236) (கி.பி.1237).*

[கோ → கோவளம்.]

கோவளை *kōvaḷai*, பெ.(n.) நரிவாழை (L.); tube-flower.

[கோ + வளை.]

கோவன் *kōvaṉ*, பெ.(n.) 1. இடையன்; herdsman. *"கோவ னிரைமீட்டனன்" (சீவக. 455).* 2. அரசன்; king. *"கோவனும் மக்களும்" (சீவக.1843).* 3. வசிட்டன் (அக.நி.); Vasitan. 4. சிவன் (அக.நி.); *Šiva.*

[கோ →கோவு (மாடு) + அன்.]

கோவன்காய் *kōvaṉ-kāy*, பெ.(n.) மலைத் தக்காளி; mountain currant tomato (சா.அக.).

[கோவன் + காய்.]

கோவன்புத்தூர் *kōvaṉ-puttūr*, பெ.(n.) கோயமுத்தூரின் முந்தைய பெயர்; early form of Coimbatore. *"பேரூர் நாட்டு கோவந்தபுத்தூரான வீரகேரள நல்லூர்ப்பால் பெருமாட்டிகள்" (SII.V.241-6 பக்.88).*

[கோவன்+ புத்தூர்–கோவன்புத்தூர்.]

கோவன்வெண்ணெய்க்கூத்தன் *kōvaṉ-veṇṇei-k-kūttaṉ*, பெ.(n.) திருமால்புரம் நகரக் கணக்கனின் பெயர்; name of the acccontant of Thirumalpuram in Velur Dt. *'இப்படிக்கு நகரக்கணக்குக் கோவன்*

வெண்ணெய்க் கூத்தன் இவை என் எழுத்து' (தெ.இ.க.தொ-22, கல்.271-18).

கோவாங்கம் *kōvāṅgam,* பெ.(n.) 1. செம்மணி; a ruby. 2. மாணிக்கத்தின் நான்காவது பிரிவு; the fourth shape of red beads.

[கோவு + அங்கம்.]

கோவாங்காட்டு மூலை *kōvāṅkāṭṭu-mūlai,* பெ.(n.) வடமேற்கு மூலை; north-western direction.

[கோவன்காடு →கோவாங்காட்டு + மூலை.]

இம்மூலையில் மின்னினால், உடனே மழை வந்து விடும். அதாவது, பூட்டிய ஏரை அவிழ்த்து வடத்தைச் சுருட்டும் முன்பு மழை வந்துவிடும் என்பது நம்பிக்கை. அதனால் இம்மூலையை வடஞ்சுருட்டி மூலை என்றும் அழைப்பர்.

கோவாங்கு *kōvāṅgu,* பெ.(n.) படிதமென்னும் மாணிக்க வகை (சிலப்.14:186, உரை); a kind of ruby.

[கோவாங்கம் →கோவாங்கு.]

கோவாங்குமணி *kōvāṅgu-maṇi,* பெ. (n.) ஒருவகை மாணிக்கம் (இரத்தினம்); a kind of ruby.

[கோவாங்கு + மணி.]

கோவைப்பழம், செங்கல், குராமலர், மஞ்சளென்னு மிவைபோன்ற நிறத்தினையுடையது.

கோவாரி *kō-vāri,* பெ.(n.) மாடுகளுக்கு வரும் அம்மை நோய்வகை; (M.Cm. D.1887, 247); rinder-pest.

[கோ + வாரி.]

கோவாலவண்டி *kōvāla-vaṇḍi,* பெ.(n.) ***கொல்லாப்பாண்டி*** பார்க்க (சிலப்.ப.199.); see *kōllā-p-pāṇḍi*

[கொல்லாப்பண்டி →கோவாலவண்டி.]

கோவி[1] *kōvi,* பெ.(n.) சினமுள்ளவன்-ள்; angry person. *"கோவி யவாவன்" (சைவச.ஆசாரக்.17).*

[கோபம் →கோபி →கோவி.]

கோவி[2] *kōvi,* பெ.(n.) இடைச்சி; shepherdess, *"கோவி நாயகன்" (திவ். பெரியதி. 2.1:4).*

[கோவன் →கோவி.]

கோவிக்கல் *kōvi-k-kal,* பெ.(n.) அரண்மனை (T.A.S.V., 205); palace.

[கோ →கோவு →கோவி + கல்.]

கோவிக்கீரை *kōvi-k-kīrai,* பெ.(n.) முட்டைக்கோசு (பாண்டி.); cabbage.

[கோவி + கீரை.]

கோவிசந்தனம் *kōvi-šandaṉam,* பெ.(n.) ***கோபி சந்தானம்*** பார்க்க; see *kōbi-šandāṉam. "கோவிசந் தனத்தினைக் கோடு நெற்றியில்" (சேதுபு. சேதுபல. 128).*

[கோபி →கோவி (சந்தனம்) + சந்தானம்.]

கோவிட்டு *kō-viṭṭu,* பெ.(n.) மாட்டுச் சாணம் (தைலவ. பாயி.41.); cowdung.

*[கோ + விட்டு. புட்டை →விட்டை → விட்டு. **கோவிட்டை** பார்க்க; see kō-viṭṭai.]*

கோவிட்டை *kō-viṭṭai,* பெ.(n.) மாட்டுச்சாணி; cow-dung (சா.அக.).

[கோ + விட்டை.]

கோவிடாணம் *kōviḍāṇam,* பெ.(n.) நளிநய முத்திரை வகை (செந். x, 424); a handpose in dance.

[கோ + விடாணம்.]

கோவித்தியர் *kōvittiyar,* பெ.(n.) முல்லைநில மகளிர் (தொல்.பொருள்.20, உரை); women of the sylvan tract, shepherdesses.

[கோவி→கோவித்தியர்.]

கோவிதன் *kōvidaṉ,* பெ.(n.) நன்குணர்ந்தோன்; expert (பகவற். 3:17).

[கோவி→கோவித்தியர்.]

கோவிதாரம் *kōvi-dāram,* பெ.(n.) 1. குரா; a kind of shrub bottle - flower. 2. காட்டாத்தி (மலை.); a species of tree whose fruit is holy, mountain ebony; fig tree (சா.அக.).

[கோவி (சிவப்பு) + தாரம்.]

கோவிதேசுவரம் *kōvidēšuvaram,* பெ.(n.) சிவனிடங்க ளாயிரத்தெட்டனு ளொன்று; one of 1008 šiva temples.

[கோவு→கோவிதன் + ஈசுவரம்.]

கோவிந்தக்கொள்ளி *kōvinda-k-koḷḷi,* பெ.(n.) கோவிந்தா சத்தமிட்டு ஏதிலி (அநாதைப்) பிணத்துக்கிடுங் கொள்ளி; burning an unclaimed corpse with cries of Govinda.

[கோவிந்தம் + கொள்ளி.]

கோவிந்தசதகம் *kōvinda-šadagam*, பெ.(n.) நாராயண பாரதியார் இயற்றியதும் ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வொரு பழமொழியைக் கொண்டு கோவிந்தனே யென்று முடியப்பெறுவதுமாகிய சதக நூல்வகை; a *šadagam* poem by *Nārāyaṇa Bārati*, each stanza explaining a proverb and ending with an address to Govinda.

[கோவிந்தன் + சதகம்.]

கோவிந்தம் *kōvindam*, பெ.(n.) செம்முள்ளி; thorny nail dye (சா.அக.).

[கோவி (சிவப்பு) → கோவிந்தம்.]

கோவிந்தம்போடு-தல் *kōvindam-pōḍu-*, 20 செ.கு.வி.(v.i.) *'கோவிந்தா'* என்று சொல்லிக் கையால் வணங்குதல் (கொ.வ.); to bow or salute uttering the name of Govinda.

[கோவிந்தம் + போடு-.]

கோவிந்தர் *kōvindar*, பெ.(n.) இடையர், முல்லைநில மக்கள் (திவா.); men of the sylvan tract, herdsmen.

[கோ → கோவு → கோவந்தர் → கோவிந்தர்.]

கோவிந்தன் *kōvindaṉ*, பெ.(n.) திருமால் (பிங்.); Visṇu.

[கோ →கோவு (மாடு) → கோவந்தன் → கோவிந்தன்.]

கோவியம் *kōviyam*, பெ.(n.) **கோவிட்டை** பார்க்க; see *kō-viṭṭai* (சா.அக.).

[கோ + (மயம் → மியம்) → வியம்.]

கோவிராசராசகேசரி *kō-v-irāša-rāša-kēšari*, பெ.(n.) முதலாம் இராசராச சோழனுடைய பட்டப்பெயர்; a title of Rajaraja I. *"ஸ்ரீ கோவிராஜ ராஜகேசரி பந்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு"* *(S.I.I.III.-15 p.23).*

[கோ + இராசன் + இராசன் + கேசரி.]

கோவில் *kō-v-il*, பெ.(n.) கடவுளின் உருவச் சிலையைக் கொண்டு எழுப்பப்படும் வழிபாட்டுக்கான கட்டடம்; temple.

ம. கோவில்; தெ. கோவிய.

*[மீகோ : தலைமை. கோ → கோவு : தலைமையான இறைவன். கோவு + இல் : கோவில். **கோயில்** பார்க்க.]*

இறைவனுக்காக எழுப்பப்படும் ஆலயத்தைக் கோவில் என்பதே மரபிலக்கணத்திற்கு ஏற்றதாகும்.

"இ, ஈ, ஐவழி யவ்வும்
ஏனை உயிர்வழி வவ்வும் ஏமுனிவ்விருமையும்
உயிர்வரின் உடம்படுமெய்யென்றாகும்"

என்ற நன்னூல் இலக்கண நெறிக்கேற்பக் கோ + இல் = கோவில் எனப் புணர்வதே பொருத்தமாகும். தமிழர்களின் கோவில் கட்டடக்கலையைத் திராவிடக் கட்டடக்கலை என இக்காலத்தில் குறிப்பிடுகின்றனர். மிகப் பழங்காலத்தில் மரங்களின்கீழ்த் தெய்வ வழிபாடு நடந்தது. அதன் பிறகு சிறுகூரை அளவில் கோயில்கள் எழுந்தன. மண்ணாலும் செங்கல்லாலும் மரத்தாலும் கோவில்கள் அமைக்கப்பட்டன. கோச்செங்கட் சோழன் எண்டோள் ஈசற்கு எழுபது மாடங்கள் கட்டினான் எனக் கூறப்படுகின்றது. அதன்பிறகு பல்லவர் காலத்தில் குகைக் கோவில்களும் கற்கோவில்களும் உருவெடுத்தன. சோழர் காலத்திலும், பாண்டியர் காலத்திலும், விசயநகர மன்னர் காலத்திலும் கற்களால் ஆன பெருங்கோவில்கள் தமிழக வரலாற்றில் தலைமையிடத்தைப் பெற்றிருந்தன. திராவிடக் கட்டடக்கலை என்பது ஆறு வகைக் கோவில் அமைப்புகளைக் கொண்டது. 1. குடிசையின் கூரை அமைப்பு; வட்டக் குடிசை அமைப்பு 2. சதுரக் கோவில் அமைப்பு 3. நீள்சதுரக் கோவில் அமைப்பு 4. நீண்ட அரை உருளை வடிவில் அமைந்த தூங்கானை மாடக் கோயில் அமைப்பு 5.நீழற்குடையமைப்பு 6. கரக்கோவில் எனப்படும் தேர் அமைப்பு. இந்த ஆறு வகை அமைப்புகளின் அடிப்படையை மாமல்லபுரத்தில் உள்ள பாண்டவர் தேர்களில் காணக்கூடும். நீழற்குடையமைப்பு என்பது ஊர்வலங்களில் இடம்பெறும் தெய்வம் அல்லது பெருமக்கள், மணமக்கள் ஆகியோர் மீது வெயிலும் மழையும் படாதவண்ணம் நடுவில் தூக்கிப் பிடித்தும் இருபுறமும் தாழப்பிடித்தும் செல்லும் செயற்கைக் குடைத் துணியமைப்பைக் குறித்தது. நீழற்குடையமைப்பு, வட்டக்குடையமைப்பு எனவும் நீள்குடையமைப்பு எனவும் மேலும் இருவகைப்படும். வட்டக் குடையமைப்பில் விரித்த குடையமைப்பு, மடித்த குடையமைப்பு, கவிழ்த்த குடஅமைப்பு என்பவை உட்பிரிவுகளாகும். ஆலயங்களைச் சுற்றி அமைந்துள்ள சுற்றாலை மதில்களில் உயரமான நுழைவாயில் கோபுரங்கள் அமைப்பதும் கருவறைக்கு மேல் குடையாப்பு [விமானம்] அமைப்பதும் நூற்றுக்கால், ஆயிரங்கால் மண்டபம் அமைப்பதும் கோவில்களில் திருக்குளங்களும், கொடிமரங்களும் அமைத்துக் கோவில் மரங்கள் [தலவிருட்சம்] வளர்ப்பதும் தென்னாட்டுக்கே உரிய வேலைப்பாடுகளும் திராவிடக் கட்டடக் கலையின் சிறப்பியல்புகளாகும். மரக்கோவில்களிலும், அரசர்களின் பெருந்தேர்களிலும் அமைந்த சிற்ப வேலைப்பாடுகள் அனைத்தும் கற்களால் கோவில் கட்டிய கற்றச்சர்களால் முழுமையாகப் பின்பற்றப்பட்டிருப்பதைத் தமிழகக் கோவில்களில் காணமுடிகிறது. மரவேலைப்பாடுகள் கல்வேலைப்பாடுகளாக வளர்ந்த வளர்ச்சியே திராவிடக் கட்டடக் கலையின் தனித்தன்மையைக் காட்டுகிறது.

இந்தியக் கோவிற் கட்டடக்கலை வல்லுநர்கள் வட இந்தியக் கோவில் கட்டுமானங்களை நாகர அமைப்பு என்றும் நடுவண் இந்திய அமைப்புகளை வேசரக் கட்டுமானங்கள் என்றும் தென்னிந்தியக் கட்டுமானங்களைத் திராவிடக் கட்டுமானங்கள் என்றும் வகைப்படுத்தி யுள்ளனர். நாகரக் கட்டுமானம் ஆரியச் சார்புடையது. வேசரக் கட்டுமானம் வடநாட்டுத் தென்னாட்டுக் கட்டுமானங்களின் கலப்பாக அமைந்தது.

ஆரியர்கள் இலைக்குடில்களில் வாழ்ந்தவர்கள். செங்கற் கட்டடம்கூடக் கட்டத் தெரியாதவர்கள். ஆதலால்

வடநாட்டுக் கோவில் கட்டுமானத்தை ஆரியச் சார்புடையது என்று சொல்வது பொருந்தாது. நகரம் என்னும் சொல்லில் இருந்து பிறந்த 'நாகர' என்னும் சொல் வடநாட்டு வணிகர்கள் வளமாக வாழ்ந்த நகரத்து வீடுகளையே குறிக்கும். ஆதலால் 'நாகர'க் கட்டுமானம் என்பது வடநாட்டு வணிகரின் வீட்டு அமைப்பு என்று கூறுவதே பொருந்தும்.

திராவிடக் கட்டடக்கலையில் சதுரக் கோவிலின் மேல்முகப்பில் அரைக்கோள வடிவில் அமைக்கப்படும் குடையாப்பு [விமானம்] வகைமையின் சதுரக்கோயில் அமைப்புமே வடநாட்டு 'நாகர'க் கோவில் அமைப்பாக வளர்ந்திருக்கிறது. தேர்களிலும், தேர்ப் பாடைகளிலும் ஒன்றன்மேல் ஒன்றாக மூங்கிலால் அல்லது மரச்சட்டங்களால் அமைக்கப்படும் மேற்கட்டுகளும் உச்சிக் குடையும் வடநாட்டு 'நாகர'க் கட்டுமானத்தில் குடைமேல் குடை அமைந்த கோவில்களாகவும் மூடிய குடைபோன்று நெடுக்குப் பள்ளங்களோடு பூரி சகன்னாதர் கோவில்போல் தொங்கும் குடைவடிவில் அமைந்த ,அமைப்புகளும் தென்னாட்டுக் கோவில் வகைமையின் திரிபுற்ற வளர்ச்சியே எனலாம். தமிழர்களின் மிகத் தொன்மையான மரபுகளின் வண்ணம் நடுகல் வழிபாடே கோவில் வழிபாடாக வளர்ந்துள்ளது என்பதை வரலாறு காட்டுகிறது. நடுகல் வழிபாடே வடபுலத்தில் அசோகர் காலத்தில் தூபி என்னும் துமிலிகளாக வளர்ந்தது. நடுகல் செதுக்கும் வழக்கம் அசோகனின் தரும சக்கரத் தூணாகவும் அரசர்களின் வெற்றித்தூணாகவும் மாறின. குகையில் வாழ்ந்த முனிவர்களுக்காக அமைக்கப்பட்ட கற்குடைவுகள் கற்கோவில்கள் அமைக்க வழிகோலின. தமிழக அரசர்களின் தேர்களையும் அரண்மனை மற்றும் கோட்டை கோபுரங்களையும் முற்றிலும் பின்பற்றி வளர்ந்தது திராவிடக் கட்டடக்கலை ஆகும். பௌத்த சமண சமயத்தினர் கலை நுணுக்கங்களில் கருத்துச் செலுத்தாதவராதலால் கட்டட மேற்கட்டு பாங்குகளை மட்டும் பின்பற்றி வடநாட்டு 'நாகர' கட்டடக் கலையை வளர்த்துக் கொண்டனர். ஆதலின் இந்தியக் கோவில் கட்டுமானத்தில் தமிழர்களின் கோவிற் கட்டுமானப் பாங்கே ஊடாடியுள்ளது என்பது உறுதிப்படுகிறது. வடமொழியில் 'மயமதம்' என்னும் கட்டடக் கலைநூல் மொழியாக்கம் செய்வதற்கு முன்பே தமிழில் ஏராளமான கட்டடக்கலை நூல்கள் இருந்தன என்பதை நூலறிபுலவர், நுணங்கு நூல் அறிந்தோர் என்னும் சொல்லாட்சிகள் நிறுவிக் காட்டுகின்றன. ***கோட்டை, கோபுரம், கோவில்*** பார்க்க. சங்ககாலத்தில் செங்கற் கோவில்கள் எழுந்தன. பல்லவர் காலத்தில் கற்கோவில் எழுந்தன. சோழர்காலத்தில் உயர்ந்த கருவறைக் கோவில்கள் எழுந்தன.

பாண்டியர் காலத்தில் நாற்புறக் கோபுரங்கள் அமைந்த கோவில்கள் எழுந்தன. விசயநகர அரசர் காலத்தில் ஆயிரங்கால், நூற்றுக்கால் மண்டபங்களும் நெடிய தூண்களில் அழகிய சிற்பங்களும், பிள்ளைக் கோவில்களும் எழுந்தன.

கோவில்கோட்டை *kō-v-il-kōṭṭai,* பெ.(n.) கி.பி.1729–ல் இன்றைய புதுக்கோட்டை வட்டத்தின் பண்டைய ஆட்சி மாகாணப் பிரிவு; administrative name of Pudukkottai region. *"நம்முடையதான குடிக்கானமு கோவில் கோட்டை மாகாணத்தைச் சேர்ந்த சிறுபனையூர்" (தஞ்.மரா.செ.5,61).*

[கோவில் + கோட்டை.]

கோவில்திருமடந்தை *kōvil-tiru-maḍandai,* பெ.(n.) வைப்பரிதாரம்; an orpiment artificially made, synthetic orpiment (சா.அக.).

[கோவில் + திருமடந்தை.]

கோவில்திருமாளம் *kōvil-tirumāḷam,* பெ.(n.) திருவாரூர் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Tiruvarur Dt.

[கோவில் + (திருவாளம்) திருமாளம்.]

கோவில்பட்டி *kōvil-paṭṭi,* பெ.(n.) தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு ஊர்; a town in Thoothukudi Dt.

[கோவில் + பட்டி.]

செண்பகவல்லி கோவில் அமைந் துள்ளமையால் இப் பெயர் பெற்றதாம்.

கோவில்வாசல் மறியல் *kōvil-vāšal-maṟiyal,* பெ.(n.) நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கோவி லலுவலரை முன்னிட்டுக் கொண்டு நடத்தும் ஊர்க்கூட்ட வகை (E.T.V,263); a form of panchayat among the *Nāṭṭukkōṭṭai* Chetties, in which the temple-manager takes the lead, dist. fr. *maḍattu-vāšal-maṟiyal.*

[கோவில் + வாசல் + மறியல்.]

கோவில்வீடு *kōvil-vīḍu,* பெ.(n.) 1. வீட்டிலமைந்த குலதெய்வங்களின் கோவில் (G.Tp. D.I. 91); a private chapel or shrine. 2. கோவிலுக்குக் கொடையாக விடப்பட்ட வீடு (இ.வ.); house given as endowment to a temple.

[கோவில் + வீடு.]

கோவில்வெண்ணி *kōvil-veṇṇi,* பெ.(n.) கரிகாலனைப் பாடிய வெண்ணிக் குயத்தியாரின் ஊர்; place of *Veṇṇikkuyattiyār* who praised *Karikālāṉ* of Sangam poet.

[கோவில் + வெண்ணி.]

கோவிலங்கு *kō-vilaṅgu,* பெ.(n.) அரிமா (சிங்கம்); lion, as king of beasts. *"கோவிலங்கு பொரவஞ்சுமோ" (பாரத. கிருட்டிண. 122).*

[கோ + விலங்கு. கோ = பெரிய, தலைமை, வலிய.]

கோவிலாழ்வார் *kōvil-āḻvār,* பெ.(n.) ***கோயிலாழ்வார்*** பார்க்க; see *kōyil-āḻvār.*

[கோவில் + ஆழ்வார்.]

கோவிற்குடியான் *kōviṟ-kuḍiyāṉ,* பெ.(n.) பதினெண்குடியுள் சங்கூதும் பணிசெய்வோன் (வின்.); conch blower, a servile caste, one of 18 *kuḍimakkaḷ.*

*[கோவில் + குடியான்.]

கோவிற்புறா *kōviṟ-puṟā*, பெ.(n.) மாடப்புறா (M.M.99); blue rock-pigeon.

[கோவில் + புறா.]

கோவிற்றுறையார் *kōviṟṟuṟaiyār*, பெ.(n.) கோயில் வேலைக்காரர்; staff or servants in a temple.

[கோவில் + துறையார்.]

கோவின்மை *kōviṉmai*, பெ.(n.) ***கோயின்மை*** பார்க்க; see *kōyiṉmai.* *'கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ' (யாழ்ப். வி. 22, உரை).*

[கோ + இன்மை.]

கோவு[1] *kōvu*, பெ.(n.) 1. ஆன், ஆவு, மாடு; cow. 2. ஆவினம்; bovine species.

[கோள் →கோ→கோவு.]

கோவு[2] *kōvu*, பெ.(n.) 1. தலைமை; leadership. 2. தலைவன்; leader, head. 3. அரசன்; king. 4. இறைவன்; God.

[கோன் → கோ → கோவு.]

கோவுகந்தம் *kōvukandam*, பெ.(n.) நச்சுப் பொருள் (யாழ்.அக.); an arsenic.

[கோவு + கந்தம்.]

கோவுரம்[1] *kō-v-uram*, பெ.(n.) 1. மாட்டுச்சாணம்; cowdung. 2. எரு, உரம்; manure. 3. குப்பை; rubbish.

மறுவ. கோப்பரம்.

ம. கோவுரம்.

[கோ + உரம்.]

கோவுரம்[2] *kōvuram*, பெ.(n.) கோபுரம்; tower.

மறுவ. கோவரம்.

[கோபுரம் → கோவுரம்.]

கோவூர் *kōvūr*, பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் வட்டம் குன்றத்தூருக்கருகி லுள்ள ஓர் ஊர்; a village near *Kundrattūr* in *Kāñjipuram* Dt. கோவூரான் திருட குண்ணத்தூரான் தண்டம் கட்டினான் (பழ).

[கோ + ஊர்.]

சுற்றுப்புற ஊர்கட்குத் தலைமையானதாக விளங்கியமையால் இப் பெயர் பெற்றிருக்கலாம்.

கோவூர்கிழார் *kōvūr-kiḻār*, பெ.(n.) கடைக்கழகப் புலவருள் ஒருவர் (புறநா.); a celebrated poet of the last *Saṅgam.*

[கோவூர் + கிழார்.]

இவர் புறநானூற்றில் 46, 68 ஆம் பாடல்களைப் பாடியுள்ளார். சிற்றூரின் நிலங்கள் அனைத்தும் ஒரு மாந்தனுக்கு உரிமைப்படின் அவ்வூர்ப்பெயருடன் கிழார் என்னும் அடை சேர்த்து வழங்குவது அக்கால மரபாகும். அவ் வடிப்படையில் கிழார் என்ற அடை சேர்ந்தது.

கோவெண்ணெய் *kō-veṇṇey*, பெ.(n.) மாட்டு வெண்ணெய்; butter from cow's milk; cow's butter (சா.அக.).

[கோ + வெண்ணெய்].

கோவெனல் *kō-v-eṉal*, பெ.(n.) 1. இரங்கற் குறிப்பு; onom. expr. of bewailing. 2. பேரொலி செய்தற் குறிப்பு (உரி.நி.); onom.expr. of making loud noise.

[கோ + எனல்.]

கோவேங்கைப் பெருங்கதவனார் *kōvēṅgai-p-peruṅkadavaṉār*, பெ.(n.) கடைக்கழகப் புலவர்களில் ஒருவர்; a *Saṅgam* poet. தொடராற் பெயர் பெற்ற புலவர். குறுந்தொகையின் 134ஆம் பாடலைப் பாடியவர்.

[கோ + வேங்கை + பெருங்கதவனார்.]

கோவேள் *kōvēḷ*, பெ.(n.) குயவர்; potters. *"இருங்கோ வேட்களுஞ் செம்பு செய்ஞ்ஞரும்" (மணிமே.28:34).*

க. கோவ.

[குய் : சுடுதல். குய் →கோ + வேள்.]

கோவேறுகழுதை *kō-v-ēṟu-kaḻudai*, பெ.(n.) கழுதைவகை (சிலப். 6:119, உரை); mule, as the mount of a king.

ம. கொவறுகழுத; க. கோநேரிகத்தெ.

[கோ : அரசன். கோ + ஏறு + கழுதை. அரசர் ஏறும் ஊர்தி.]

கோவை[1] *kōvai*, பெ.(n.) ***கோவன்புத்தூர்*** பார்க்க; see *kōvaṉ-puttūr.*

கோவை[2] *kōvai*, பெ.(n.) அன்னவெட்டியென்னும் ஏனம்; a kind of metalic vessel for taking and serving rice.

[கோரு →கோர் →கோர்வை (முகப்பது) →கோவை.]

கோவை[3] *kōvai*, பெ.(n.) 1. கோக்கை; stringing, filing, arranging. *"கோவை யார்வடக் கொழுங்கவடு"*

(கம்பரா. வரைக்.1). 2. வரிசை; series, succession, row. 3. கோத்த வடம் (பிங்.); string of ornamental beads for neck or waist. 4. ஏற்பாடு; arrangement, scheme. *"கோத்த கோவைநன் றாயினும்" (பாரத. சூது. 64).* 5. அகப்பொருட் கோவை; a kind of love poem. *"நற்றமிழ்க் கோவை யுரைசெய்த" (பிரமோத். கடவுள்.8).* 6. பழையதொரு பொன் நாணயம். (I.M.P. N.A.594); an ancient gold coin. 7. கொடி வகை; a common creeper of the hedges. *"கோவையங் கனிநே ரென்ன" (திருச்செந்.பு.8:56).* 8. படர்கொடிவகை (பதார்த்த.421); a climbing shrub.

ம. கோவ; **தெ.** க்ரோவ; **து.** கோபெ.

[கோ → கோவை.]

கோவைக்கலித்துறை *kōvai-k-kali-t-turai,* பெ.(n.) ***கட்டளைக் கலித்துறை*** பார்க்க (வீரசோ. யாப். 18, உரை); see *kaṭṭalai-k-kali-t-turai.*

[கோவை + கலித்துறை.]

கோவைக்காய் *kōvai-k-kāy,* பெ.(n.) ***கோவை*** பார்க்க; see *kōvai* (சா.அக.).

[கோவை + காய்.]

கோவைக்காய்வற்றல் *kōvai-k-kāy-vaṟṟal,* பெ.(n.) பச்சைக் கோவைக்காயை அறுத்துக் காயவைத்து எண்ணெயிலிட்டு வறுத்த பண்டம்; dried pieces of green caper which are sliced and fried in gingelly oil (சா.அக.).

[கோவை + காய் + வற்றல்.]

கோவைக்கிழங்கு *kōvai-k-kiḻaṅgu,* பெ.(n.) 1. ***கோவை***[3] பார்க்க; see *kōvai.* 2. கொல்லன் கோவைக்கிழங்கு; root of Brahminy kite caper. 3. கோவை வள்ளிக்கிழங்கு; Goa potato; Goa yam (சா.அக.).

[கோவை + கிழங்கு.]

கோவைக்கீச்சான் *kōvai-k-kīccāṉ,* பெ.(n.) கீச்சான்; a kind of sea-fish.

[கோவை + கீச்சான்.]

கோவைக்கீரை *kōvai-k-kīrai,* பெ.(n.) கோவையிலை; leaves of Indian caper.

[கோவை + கீரை.]

கோவைச்சருக்கரை *kōvai-c-carukkarai,* பெ.(n.) கோவாநாட்டுச் சருக்கரை; Goa sugar (சா.அக.).

[கோவை + சருக்கரை.]

கோவைசியர் *kō-vaiśiyar,* பெ.(n.) ஆநிரை புரந்து வாபம் வணிக வகையர்; a class of merchants whose professions were cattle raising and agriculture.

மறுவ. கோவணிகர்.

[கோ + வைசியர் (வணிகர்).]

வைசியன் என்னும் சொல் பலவிடங்களுக்குச் சென்று பொருள்களை விற்கும் வணிகனைக் குறித்தது. *vis* என்னும் வடமொழிச்சொல் புகுதலையும் குடியிருத்தலையும் குறிக்கும். உழவுத் தொழிலோடு கால்நடை மேய்த்து விற்கும் தொழில் கொண்டோர் கோவைசியர் என்றும் உழவுத் தொழிலும் வணிகமும் செய்தோர் பூவைசியர் என்றும் வணிகம்மட்டும் செய்தோர் தனவைசியர் என்றும் அறியப்பட்டனர். கோவணிகன் எனின் முற்றுந் தமிழாம்.

கோவைசூரி *kō-vaiśūri,* பெ.(n.) மாட்டு வைசூரி; cow pox.

[கோ + வைசூரி.]

கோவைத்தண்டு *kōvai-t-taṇḍu,* பெ.(n.) கோவைச்செடியின் தண்டு; leaf-stalk of Indian caper (சா.அக.).

[கோவை + தண்டு.]

கோவைத்தியன் *kō-vaittiyaṉ,* பெ.(n.) கால்நடை மருத்துவர்; a veterinary doctor who has specialised in the treatment of cows (சா.அக.).

மறுவ. கோமருத்துவன்.

[கோ + வைத்தியன்.]

கோமருத்துவன் எனின் முற்றுந்தமிழாம்.

கோவைத்துறை *kōvai-t-turai,* பெ.(n.) கோவை நூலில் அமைந்த அகப்பொருட்டுறை; theme of the stanzas in a Kovai poem. களவியலால் நடக்கும் ஒழுக்கத்தைக் கூறுவது.

[கோவை + துறை.]

கோவைப்பழம் *kōvai-p-paḻam,* பெ.(n.) கனிந்த சிவப்புக் கொவ்வைப்பழம்; red ripe caper fruit. It is eaten raw.

[கோவை + பழம்.]

கோவையாணி *kōvai-y-āṇi,* பெ.(n.) கைமரங்களை இணைக்கும் முளை (பிணை யலாணி) (வின்.); pegs for jointing rafters together.

[கோவை + ஆணி.]

கோவைவள்ளி *kōvai-valli*, பெ.(n.) சிறுவள்ளிக் கிழங்கு; Goa yam; Goa potato (சா.அக.).

[கோவை + வள்ளி]

கோழ் *kōl*, பெ.எ.(adj.) 1. வழுவழுப்பான; slippery, oily. *"வெண்பொனாற் கோழரை குயின்ற பூகம்" (திருவிளை.திருமணப்.65).* 2. செழிப்பான; thriving luxurious, rich. *"கோழிலை வாழை" (அகநா.2).* 3. கொழுப்பான; fat. *"கோழிளந் தகர்" (திருவிளை. நகரப்.79).*

[குல் → குள் → குழ் →கோழ்.]

கோழக்கெளுத்தி *kōla-k-kelutti*, பெ.(n.) கூழக் கெளுத்தி எனும் ஆற்று மீன்; a kind of river fish.

[கூழை→கோழ + கெளுத்தி]

கோழகம் *kōlagam*, பெ.(n.) ***கோழம்*** பார்க்க; see *kōlam*.

[கோழ்→ கோழம் →கோழகம்.]

கோழகூரொட்டு *kōla-kūr-ottu*, பெ.(n.) மரப்பலகைகள் கழன்றுவராமல் இணைக்கும் இணைப்பு; a kind of joint in wooden planks.

[கோழ + கூர் + ஒட்டு.]

கோழம் *kōlam*, பெ.(n.) 1. சங்கு செய்நஞ்சு; a mineral poison (யாழ்.அக.). 2. ஒரு கனிமம்; an ore.

[கோழ் → கோழம்.]

கோழம்கொடுமலை *kōlam-kodumalai*, பெ.(n.) வெண்கலமலை; a mountain containing bell-metal ore (சா.அக.).

[கோழம் + கொடுமலை.]

கோழம்பம் *kōlambam*, பெ.(n.) குழப்பம்; confusion, tumult. *"கொடீ ராகிற் கோழம்பமே" (திவ். பெரியாழ்.3.4:5).*

[குழப்பம் → கோழப்பம் → கோழம்பம்(கொ.வ.).]

கோழயர் *kōlayar*, பெ.(n.) கள்ளர்குடிப் பட்டப் பெயர்களுள் ஒன்று (கள்ளர் சரித்.பக்.98); a caste title of *Kallars*.

[கோழியர் →கோழயர்.]

கோழரை *kōl-arai*, பெ.(n.) வழுவழுப்பான மரத்தினடி; slippery tree trunk. *"கோழரை குயின்ற பூகம்" (திருவிளை. திருமணப். 65).*

[கொழுமை + அரை – கொழரை → கோழரை.]

கோழி[1] *kōli*, பெ.(n.) வீட்டிலோ அல்லது பண்ணை யிலோ முட்டைக்காகவும் இறைச்சிக்காகவும் வளர்க்கப்படும் அதிக உயரம் பறக்காத பறவை; gallinaceous fowl. *"குப்பை கிளைப் போவாக் கோழிபோல்" (நாலடி. 341).*

மறுவ. குக்குடம்.

ம. கோழி; **க.** கோழி, கோளி; **தெ.** கோடி; **து.** கோரி; **பட.** கோயி; **கோத.** கொய்; **துட.** க்விட்ய்; **குட.** கோளி; **கோண்., கொலா., நா., பர். கோர்., கூய்.** கொசு; **குவி.** கொக்கோதி; **குரு.** கோலி.

[உள் → உளு = துளைக்கும் புழு. உளுத்தல் = புழு, மரத்தைத் துளைத்தல். உளு → உழு → உழுதல் = நிலத்தைக் கீறுதல். குள் → குழி → குழை → குடை. குடைதல் = துளைத்தல். குழி → கொழு → கொழுது → கோது. கோதுதல் = குடைதல். கொழு = நிலத்தைத் துளைக்கும் ஏருசி. கொழு → கோழி = நிலத்தைக் கிளைக்கும் பறவை (தமிழ் வரலாறு, 82). கொழுதுதல் = குப்பை கிளறுதல். கொழு→கோழு → கோழி.]

கோழிவகை: 1. அறுபதாங்கோழி, 2. கருங் கோழி, 3. கானாங்கோழி, 4. சேவற்கோழி, 5. வான் கோழி, 6. பெட்டைக்கோழி, 7. காட்டுக்கோழி, 8. நீர்க் கோழி, 9. நெருப்புக்கோழி, 10. சம்பங்கோழி, 11. தாமரைக்கோழி, 12. கின்னிக் கோழி, 13. குளத்துக் கோழி, 14. வரகுக் கோழி, 15. நாமக்கோழி.

கோழி[2] *kōli*, பெ.(n.) 1. கோழி யானையை வென்ற தாகக் கூறப்படுமிடமும் சோழன் தலைநகரமுமான உறையூர்; Uraiyūr, a town near *Tiruccirāppalli*, once the capital of the *Cōlās*, where a cock is said to have conquered an elephant. *'கோழி யுயர்நிலை மாடத்து' (புறநா.67:8).*

மறுவ. உறையூர், உறந்தை, கோழியூர்.

[கோழியூர் → கோழி.]

கோழி[3] *kōli*, பெ.(n.) விட்டில் பூச்சி; moth. *"விளக்கத்திற் கோழி போன்றேன்" (தேவா. 523:5).*

மறுவ. விட்டில்.

[கோழி[1] → கோழி[3].]

கோழிப்போரில் இறப்புக்கு அஞ்சாமல் போரிட்டு மடியும் சேவலைப் போல் தீயில் அஞ்சாமல் விழுந்து சாகும் இயல்பு நோக்கி விட்டிற்பூச்சி கோழி எனப்பட்டது.

கோழி[4] *kōli*, பெ.(n.) 1. ***கோழியவரை*** பார்க்க; see *kōli-y-avarai*. 2. வெருகங்கிழங்கு (மலை.); a tuberous-rooted herb. 3. பன்றிமோந்தான் கிழங்கு (மலை.); water -nut. 4. இடலை (இ.வ.); Indian wild olive.

[கோழி[1] → கோழி[4].]

கோழி வகைகள்



வான் கோழி



கருங்கோழி

கானாங்கோழி

வரகுக் கோழி

சம்பங்கோழி

நீர்க்கோழி

கோழி[5] *kōḻi,* பெ.(n.) 1. விலங்குகளில் சிலவற்றின் பெண்ணினத்தைச் சுட்டும் உவம ஆகுபெயர்; a word denoting the feminine gender among certain animals and non-human objects. கோழிக்குதிரை, கோழிக்கழுதை (பெட்டைக் குதிரை, பெட்டைக் கழுதை).

[கீள் – கீழி – கேழி – கோழி.]

முட்டையிடும் தன்மையால் பெண்மையுணர்த்திய இச்சொல் கோழி (பெண் குதிரை) இந்தியில் Gōḍa எனத்திரிந்தது. மரஞ்செடிவகைகளில் கொழிஞ்சி, ஆலமரம், அத்தி, பெருங்குறிஞ்சா, திப்பிலி ஆகியவற்றுக்கு ஆகுபெயராயிற்று. ஆண் விலங்குகள் சேவல் எனப்படும் ''குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்'' (தொல். பொருள்.).

கோழிக்கண் *kōḻi-k-kaṇ,* பெ.(n.) குன்றிமணி; jeweller's bead.

[கோழி + கண்.]

கோழியின் கண்போன்ற வடிவத்தை ஒத்திருந்தமையால் குன்றிமணி இப் பெயர் பெற்றதாம்

கோழிக்கரணம் *kōḻi-k-karaṇam,* பெ.(n.) பத்திரை (யாழ்.அக.); a division of time.

[கோழி + கரணம்.]

கோழிக்கல் *kōḻi-k-kal,* பெ.(n.) கற்களையும் இரும்பையும் மெருகிட உதவும் ஒருவகைக் கல்; a kind of stone used to polish stone and steel.

[கோழி + கல்.]

கோழிக்காசிரைக்கீரை *kōḻi-k-kāśirai-k-kīrai,* பெ.(n.) 1. உமரிக்கீரை; sea blite. 2. ***கோழிப் பசலை*** பார்க்க; see *kōḻi-p-paśalai* (சா.அக.).

[கோழி + காசிரை + கீரை.]

கோழிக்காடை *kōḻi-k-kāḍai,* பெ.(n.) ஒருவகைக் காடை; the southern grey partridge.

கோழிக்காடை

ம. கோழிக்காட.

[கோழி + காடை.]

கோழிக்காமம் *kōḻi-k-kāmam,* பெ.(n.) ***கோழிப் புணர்ச்சி*** பார்க்க; see *kōḻi-p-puṇarcci.*

[கோழி + காமம்.]

கோழிக்காரம்[1] *kōḻi-k-kāram,* பெ.(n.) 1. கோழி மலங்கூட்டிச் செய்த மருந்துவகை; medicine in which fowl-dung is used. 2. மருந்தாக உட்கொள்ளும் கோழியாணம் (யாழ்.அக.); medicinal broth of boiled fowl. 3. கஞ்சாப்பயிருக்கு உரமாகும் கோழியெரு (வின்.); fowl-dung generally used in manuring soil for the ganja plant.

[கோழி + காரம்.]

கோழிக்காரம்[2] *kōḻi-k-kāram,* பெ.(n.) கோழிகளின் காய்ந்த கழிவு (மலம்); dried fowl-dung.

[கோழி + காரம்.]

கோழிக்கால்[1] *kōḻi-k-kāl,* பெ.(n.) கொடியரசு; wild pipal.

[கோழி + கால்.]

கோழிக்கால்[2] *kōḻi-k-kāl,* பெ.(n.) கோழியின்கால், கோழிக்கால் போன்ற அடையாளக் குறிவகை; cross-mark shaped like x, as resembling a fowl's foot.

ம. கோழிக்கால்.

[கோழி + கால்.]

கோழிக்காற்புல் *kōḻi-k-kāṟ-pul,* பெ.(n.) புல்வகை (வின்.); Deccan grass.

[கோழி + கால் + புல்.]

கோழிக்காற்பூடு *kōḻi-k-kāṟ-pūḍu,* பெ.(n.) குமரகன்பூடு; a plant, the leaves of which resemble the fowl's leg (சா.அக.).

[கோழி + கால் + பூடு.]

கோழிக்கிரணிகம் *kōḻi-k-kiraṇigam,* பெ.(n.) ***கோழித்தலைக் கந்தகம்*** பார்க்க; see *kōḻi-t-talai-k-kandagam.*

[கோழி + கிரணிகம்.]

கோழிக்கிழங்கு *kōḻi-k-kiḻaṅgu,* பெ.(n.) வெருகன் கிழங்கு; bulbous root of வெருகு (சா.அக.).

[கோழி + கிழங்கு.]

கோழிக்கிரணி *kōḻi-k-kīraṇi,* பெ.(n.) மாந்தப்புல்; citronella grass.

மறுவ. காவட்டம் புல்.

[கோழி + கிரணி.]

கோழிக்கீரை *kōḻi-k-kīrai,* பெ.(n.) பருப்புக்கீரை (பதார்த்த. 604); common purslane.

ம. கோழிச்சீர; க. கோளிகோழி; தெ. தோளிகூர.

[கோழி + கீரை.]

கோழிக்குஞ்சாணம் *kōḻi-k-kuñjāṇam,* பெ.(n.) கோழிக்குஞ்சுச் சாறு; chicken-broth (சா.அக.).

[கோழி + குஞ்சு + ஆணம்.]

கோழிக்குஞ்சு *kōḻi-k-kuñju,* பெ.(n.) இளங்கோழி; chicken (சா.அக.).

ம. கோழிக்குஞ்ஞு.

[கோழி + குஞ்சு]

கோழிக்குடாப்பு *kōḻi-k-kuḍāppu,* பெ.(n.) ***கோழிக்கூடு*** பார்க்க; see *kōḻi-k-kūḍu.*

[கோழி + குடாப்பு.]

கோழிக்குடி *kōḻi-k-kuḍi,* பெ.(n.) அசோகுமரம்; Indian mast tree.

[கோழி + குடி.]

கோழிக்குடை *kōḻi-k-kuḍai,* பெ.(n.) குடைமேற் குடை; a plant (சா.அக.).

[கோழி + குடை.]

கோழிக்குத்தி *kōḻi-k-kutti,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Thanjavore Dt.

[கோழி + குத்தி.]

கோழிக்குரல் *kōḻi-k-kural,* பெ.(n.) ***கோழிகூவு நேரம்*** பார்க்க (யாழ்.அக.); see *kōḻi-kūvu-nēram.*

[கோழி + குரல்.]

கோழிக்குறும்பான் *kōḻi-k-kuṟumbāṉ,* பெ.(n.) ***கோழிக்கீரை*** பார்க்க; see *kōḻi-k-kīrai.*

[கோழி + குறும்பான்.]

கோழிக்குறுமா *kōḻi-k-kuṟuma,* பெ.(n.) கோழிக் கறியுடன் பச்சை மிளகாய் மசாலையிட்டு அணியமாக்கப்படும் குழம்பு; a kind of stew prepared with the aid of green chilly and other curry stuffs (சா.அக.).

மறுவ. கோழிச்சாறு.

[கோழி + குறுமா.]

கோழிக்குறுமான் *kōḻi-k-kuṟumāṉ,* பெ.(n.) ***கோழிக்கீரை*** பார்க்க; see *kōḻi-k-kīrai* (சா.அக.).

மறுவ. கோழிக்குறும்பான்.

[கோழி + குறுமான்.]

கோழிக்கூடு *kōḻi-k-kūḍu,* பெ.(n.) கோழியை அடைத்து வைக்குமிடம் (உ.வ.); hen-coop, fowl-house.

ம. கோழிக்கூடு; படீ. கோயிகூடு.

[கோழி + கூடு.]

கோழிக்கூடுபழம் *kōḻi-k-kūḍu-paḻam,* பெ.(n.) கோழிக்கோட்டில் விளையும் வாழைப்பழம்; a kind of plantain fruit grown in *Kōḻi-k-kōḍu* (சா.அக.).

[கோழிக்கோடு → கோழிக்கூடு + பழம்.]

கோழிக்கூண்டு *kōḻi-k-kūṇḍu,* பெ.(n.) **கோழிக் கூடு** பார்க்க; see *kōḻi-k-kūḍu.*

[கோழி + கூண்டு.]

கோழிக்கொடி *kōḻi-k-koḍi,* பெ.(n.) ***கோழியவரை*** பார்க்க; see *kōḻi-y-avarai.*

[கோழி + கொடி.]

கோழிக்கொடியோன் *kōḻi-k-kōḍiyōṉ,* பெ.(n.) 1. கோழியைக் கொடியிற் கொண்ட முருகக்கடவுள்; one having a cock on his banner. 2. ஐயனார் (திவா.); Aiyaṉār.

ம. கோழிக்கொடியோன்.

[கோழி + கொடியோன்.]

கோழிக்கொண்டை *kōḻi-k-koṇḍai,* பெ.(n.) 1. சேவற் சூட்டுப்பண்ணைச் செடி (மலை.); cockscomb, ornamental shrub. 2. கோழியின் தலையில் வளரும் தசைப்பகுதி; a muscle part grown on the top of the head of a cock.

[கோழி + கொண்டை.]

கோழிக்கொண்டைப்பூ *kōḻi-k-koṇḍai-p-pū,* பெ.(n.) கோழியின் கொண்டையின் வடிவினதாக வுள்ள மலர்; a flower resembling the crest of a cock.

[கோழி + கொண்டை + பூ.]

கோழிகவிழ்க்கும் நேரம் *kōḻi-kaviḻkkum-nēram,* பெ.(n.) மாலைப்பொழுது (அந்தி.); the time when poultry are shut up (சா.அக.).

[கோழி + கவிழ்க்கும் + நேரம்.]

கோழிகிண்டு-தல் *kōḻi-kiṇḍu-,* 5 செ.கு.வி. (v.i.) உருத்தெரியாதபடி எழுதுதல் (உ.வ.); to scrawl, scribble.

கோழி வகைகள்

நெருப்புக்கோழி

குளத்துக்கோழி

தாமரைக்கோழி

கிண்ணிக்கோழி



காட்டுக்கோழி

நாமக் கோழி

மறுவ. கோழிக்கால் கிறுக்கல்.

[கோழி + கிண்டு.]

கோழிகூவல் *kōḻi-kūval,* பெ.(n.) ***கோழிகூவு நேரம்*** பார்க்க; see *kōḻi-kūvu-nēram.*

[கோழி + கூவல்.]

கோழிகூவுநேரம் *kōḻi-kūvu-nēram,* பெ.(n.) விடியற் காலம் (உ.வ.); day break, as the time of cock-crowing.

[கோழி + கூவு + நேரம்.]

கோழிச்சம் *kōḻiccam,* பெ.(n.) ***கோழிக்காரம்*** பார்க்க; see *kōḻi-k-kāram* (சா.அக.).

[கோழி + எச்சம் = கோழியெச்சம் → கோழிச்சம்.]

கோழிச்சாரம் *kōḻi-c-cāram,* பெ.(n.) பெரு நன்னாரி; big sarsaparilla (சா.அக.).

[கோழி + சாரம்.]

கோழிச்சாவல் *kōḻi-c-cāval,* பெ.(n.) ***கோழிச் சேவல்*** பார்க்க; see *kōḻi-c-cēval* (சா.அக.).

[கோழி + சாவல். சேவல் → சாவல் (கொ.வ.)]

கோழிச்சாறு *kōḻi-c-cāṟu,* பெ.(n.) 1. கோழி ஆணம்; fowl soup. 2. கோழிக்குஞ்சு ஆணம்; chicken - broth (சா.அக.).

[கோழி + சாறு.]

கோழிச்சிலும்பான் *kōḻi-c-cilumbāṉ,* பெ.(n.) சிறுசிலும்பான் செடி; an unknown plant (சா.அக.).

[கோழி + சிறும்பான்.]

கோழிச்சூடன் *kōḻi-c-cūḍaṉ,* பெ.(n.) ***கோழிக் கொண்டை*** பார்க்க; see *kōḻi-k-koṇḍai.*

[கோழி + சூடன்.]

கோழிச்சேபகம் *kōḻi-c-cēbagam,* பெ.(n.) ***கோழிக்கிரணி*** பார்க்க; see *kōḻi-k-kiraṇi* (சா.அக.).

[கோழி + சேபகம்.]

கோழிச்சேவல் *kōḻi-c-cēval,* பெ.(n.) ஆண்கோழி; cock. *"கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்" (சிலப். 14:10).*

[கோழி + சேவல். சேவல் →சாவல் (கொ.வ.)]

கோழித்தலைக்கந்தகம் *kōḻi-t-talai-k-kandagam,* பெ.(n.) சிவந்த கந்தகம்; red sulphur.

[கோழி + தலை + கந்தகம்.]

இது சேவல் கொண்டையைப்போல் சிவப்பாக இருக்கும். கந்தகம் சேர்ந்த ஒருமாழை [உலோகம்]. இதை வாதமுறையில் பொன் வெள்ளி செய்யப் பயன்படுத்துகின்றனர் [சா.அக.].

கோழித்தலைக்கெந்தி *kōḻi-t-talai-k-kendi,* பெ.(n.) தமிழ் முறைப்படி 32 வைப்புச் செய்நஞ்சுகளி லொன்று; according to Tamil medicine it is a prepared arsenic which is classified as one of the 32 kinds of synthetic poisons (சா.அக.).

[கோழி + தலை + கெந்தி.]

கோழித்தலைச்சூடன் *kōḻi-t-talai-c-cūḍaṉ,* பெ.(n.) ***கோழித்தலைக் கந்தகம்*** பார்க்க; see *kōḻi-t-talai-k-kandagam* (சா.அக.).

[கோழி + தலை + சூடன்.]

கோழித்தாடை *kōḻi-t-tāḍai,* பெ.(n.) கோழித் தொண்டையின்கீழ்த் தொங்கும் சதை; the fleshy excrescence hanging under the throat of the domestic fowl, wattle (சா.அக.).

[கோழி + தாடை.]

கோழித்தூக்கம் *kōḻi-t-tūkkam,* பெ.(n.) கோழியைப்போல் அடிக்கடி உறக்கம் கொண் டெழும் தூக்கம்; light sleep enabling one to wake up frequently like a cock even on slight disturbance (சா.அக.).

[கோழி + தூக்கம்.]

கோழிநூல் *kōḻi-nūl,* பெ.(n.) கோழிகளின் போர்த் தன்மையைக் கூறும் நூல் (பு.வெ. 12, வென்றிப். 6,உரை); a book describing the methods of cock-fight.

[கோழி + நூல்.]

கோழிநெஞ்சு *kōḻi-neñju,* பெ.(n.) 1. கோழிக் குடையது போன்ற நெஞ்சு; pigeon breast. 2. அச்சத்தால் நடுங்கும் மனம்; timid or agitated heart, chicken heart.

[கோழி + நெஞ்சு.]

கோழிப்பசரைக்கீரை *kōḻi-p-pašarai-k-kīrai,* பெ.(n.) ***கோழிப்பசளை*** பார்க்க; see *kōḻi-p-pašaḷai.*

[கோழிப்பசளைக்கீரை → கோழிப்பசரை (கொ.வ.) + கீரை.]

கோழிப்பசளை *kōḻi-p-pašaḷai,* பெ.(n.) உமரிக் கீரை (L.); sea-blite.

[கோழி + பசளை.]

கோழிப்பறவை *kōḻi-p-paṟavai,* பெ.(n.) கோழி பறக்கும் தொலைவு (யாழ்ப்.); short distance, distance, of a fowl's flight.

[கோழி + பறவை.]

கோழிப்பாம்பு *kōḻi-p-pāmbu,* பெ.(n.) குக்குடப் பாம்பு (மேருமந்.479, உரை); winged serpent.

[கோழி + பாம்பு.]

கோழிப்பிந்து *kōḻi-p-pindu,* பெ.(n.) கோழியின் பித்தப்பை; the gall bladder of fowl (சா.அக.).

[கோழி + (பித்து) பிந்து.]

கோழிப்பீ *kōḻi-p-pī,* பெ.(n.) கோழியெச்சம்; fowl's dung, droppings of a fowl (சா.அக.).

[கோழி + பீ.]

கோழிப்புடம் *kōḻi-p-puḍam,* பெ.(n.) குக்குடபுடம் (மூ.அ.); a mode of calcination in preparing medicine.

[கோழி + புடம்.]

கோழிப்புணர்ச்சி *kōḻi-p-puṇarcci,* பெ.(n.) சேர்க்கையில் நீடித்து நிற்காமல் எளிதில் விந்து வெளிப்படும் புணர்ச்சி; sexual intercourse not sustainable, but attended with quick discharge of semen (சா.அக.).

[கோழி + புணர்ச்சி.]

கோழிப்புரை *kōḻi-p-purai,* பெ.(n.) கோழிகளை அடைத்துவைக்கும் கூண்டு; enclosure for domestic fowls as of chicken pen.

[கோழி + புரை.]

கோழிப்புல் *kōḻi-p-pul,* பெ.(n.) ***கோழிக்காற்புல்*** பார்க்க; see *kōḻi-k-kāṟ-pul.*

[கோழி + புல்.]

கோழிப்பூ *kōḻi-p-pū,* பெ.(n.) கோழியின் தலைச்சூட்டு; cock's-comb.

[கோழி + பூ.]

கோழிப்பூண்டு *kōḻi-p-pūṇḍu,* பெ.(n.) ***கோழியவரை*** பார்க்க; see *kōḻi-y-avarai* (சா.அக.).

[கோழி + பூண்டு.]

கோழிப்போகம் *kōḻi-p-pōgam,* பெ.(n.) ***கோழிப்புணர்ச்சி*** பார்க்க; see *kōḻi-p-puṇarcci* (சா.அக.).

[கோழி + போகம்.]

கோழிப்போர்[1] *kōḻi-p-pōr,* பெ.(n.) சேவற் சண்டை; cock fight.

கோழிப்போர்

மறுவ. சேவற்போர், சேவற்சண்டை, கோழிச்சண்டை.

[கோழி + போர்.]

கோழிப்போர்[2] *kōḻi-p-pōr,* பெ.(n.) உறையூரில் நடந்த சண்டை; battle at Uraiyur. *"ராஜராஜதேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்குத் தந்த ஆட்டில் அடுத்த ஆடு நாற்பத்து நாலும் இவநெய் வைத்த காசில் குடுத்த காசு" (தெ.இ.கல்.தொ.II. கல்.24, பகுதி–1. வரி.5).*

[கோழி (உறையூர்) + போர். கோழியூர்போர் → கோழிப்போர்.]

கோழிபற்பம் *kōḻi-paṟpam,* பெ.(n.) கோழிப்புடமிட் டெடுத்த பற்பம்; white powder obtained by calcining egg (சா.அக.).

[கோழி + பற்பம்.]

கோழிமருதை *kōḻi-marudai,* பெ.(n.) கருமருது; black marutham or Negroe's olive (சா.அக.).

[கோழி + மருதை.]

கோழிமன் *kōḻi-maṉ,* பெ.(n.) உறையூர் அரசன்; king of *Uṟaiyūr.* *"கோழிமன் தொடுகழல் வீர சோழன்" (விசயராசேந்திரன் மெய்க்கீர்த்தி).*

[கோழி + மன்.]

கோழிமீன் *kōḻi-mīṉ,* பெ.(n.) பதினெட்டங்குல நீளமும் கருநிறமுமுள்ள கடல்மீன்வகை; sturgeon,



கோழிமீன்

blackfish - brown, attaining 18 in. in length.

[கோழி + மீன்.]

கோழிமீன்கல் *kōḻi-mīṉ-kal,* பெ.(n.) கோழிமீன் மேயும் கடலடிக்கல்; a rock in the sea where the small fishes are sheltered.

[கோழி + மீன் + கல்.]

கோழிமுட்டை *kōḻi-muṭṭai,* பெ.(n.) 1. கோழியின் முட்டை; hen's egg. 2. பாழ் (பூச்சியம்); cipher.

[கோழி + முட்டை.]

கோழிமுட்டைத்தைலம் *kōḻi-muṭṭai-t-tailam,* பெ.(n.) மாந்தம், வலிப்பு முதலியவற்றுக்கு மருந்தாகக் கோழிமுட்டையிலிருந்து இறக்கும் நெய் (வின்.); medicinal oil extracted from hen's eggs, used for fits, spasms etc.,

[கோழி + முட்டை + தைலம்.]

கோழிமுதுக்கெண்டை *kōḻi-mudu-k-keṇḍai,* பெ.(n.) ஒருவகைக் கெண்டைமீன்; a kind of fish.

[கோழிமுது + கெண்டை.]

கோழிமுள் *kōḻi-muḷ,* பெ.(n.) கோழிக்காலிலுள்ள கூரிய நகம்; hooked claws of a cock.

[கோழி + முள்.]

கோழிமுள்ளி *kōḻi-muḷḷi,* பெ.(n.) கழுதைமுள்ளி; holly-leaved bear's breech.

[கோழி + முள்ளி.]

கோழிமுளையான் *kōḻi-muḷaiyāṉ,* பெ.(n.) ஒரு வகைப் பூடு (யாழ்.அக.); large-flowered purslane.

[கோழி + முளையான்.]

கோழியடி-த்தல் *kōḻi-y-aḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) கோழியைக் கொல்லுதல்; to kill a fowl.

[கோழி + அடி-.]

புலால் உண்பவர் ஆடு, கோழி முதலிய உயிர் (பிராணி)களைக் கொல்வதை ஆடுகொல்லுதல், கோழி கொல்லுதல் என்னாது ஆடடித்தல், கோழியடித்தல் எனக் கூறும் வழக்கு மக்கள் குறிஞ்சி நிலையில் விலங்குகளையும் பறவைகளையும் கல்லாலும் வணரி (வளைதடி)யாலும் அடித்துக் கொன்றதை நினைவூட்டும் சொல்.கட்.க.18.

கோழியவரை *kōḻi-y-avarai,* பெ. (n.) 1. அவரை வகை (பதார்த்த.572); sword bean. 2. பெருங் கோழியவரைக் கொடி (A.); West Indian seaside-bean.

[கோழி + அவரை.]

கோழியாகக்கூவு[1]-தல் *kōḻi-y-āga-k-kūvu-,* 5 செ.கு.வி. (v.i.) ஓயாமல் அழைத்தல்; continuous call. *'கோழியாகக் கூவுகிறேன் என்னவென்று கேட்டாயா' (உ.வ.).*

[கோழி + ஆக + கூவு.]

கோழியாகக்கூவு[2]-தல் *kōḻi-y-āga-k-kūvu-,* 5 செ.கு.வி. (v.i.) மன்றாடுதல்; to crow like a cock, to entreat, importune.

[கோழி + ஆக + கூவு.]

கோழியாணம் *kōḻi-y-āṇam,* பெ.(n.) கோழிச்சாறு (வின்.); chicken broth.

[கோழி + ஆணம்.]

கோழியுள்ளான் *kōḻi-y-uḷḷāṉ,* பெ.(n.) ஒருவகை உள்ளான் (வின்.); jack snipe.



கோழியுள்ளான்

[கோழி + உள்ளான்.]

கோழியூர் *kōḻi-y-ūr,* பெ.(n.) உறையூரின் மறுபெயர்; another name of the *Cōḻās* capital Uṟaiyūr.

மறுவ. உறையூர்.

[கோழி + ஊர்.]

சோழன் தன் தலைநகர் நிறுவும் பொருட்டு யானையுடன் புறப்பட்டான். வழியில் கோழியொன்று யானையைத் தாக்கியது. யானை புறங்காட்டி நின்றது. கோழியின் நினைவாக அரசன் தன் தலைநகரை அவ்விடத்து நிறுவி அவ்வூருக்குக் கோழியூர் எனப் பெயரிட்டழைத்தான் என்று கூறுகின்றனர். இது பொருத்தமன்று.

மதங்கொண்ட யானையின் தலைமீது கோழி பலமுறை மிதித்தால் மதம் அடங்கும். இவ்வாறு யானைக்கு அஞ்சிய கோழிகள் யானையின் தலை மீது பறந்து மிதித்து மதம் அடக்கிய செய்தி, கோழியூர் எனப்பெயர் பெறக் காரணமாயிற்று. வட்டக்காட்சி (Circus) நடத்துவோர் யானை மதங்கொள்ளும்போது அடக்குவதற்கு கோழிகளை உடன் கொண்டுசெல்வது வழக்கம்.

கோழியூர்கிழார் மகனார் செழியனார் *kōḻiyūr-kiḻār-maganār-ceḻiyaṉār,* பெ.(n.) ஒரு சங்கப் புலவர்; a Sangam poet.

[கோழியூர் + கிழார் + மகனார் + செழியனார்.]

நற்றிணையில் 380ஆம் பாடலைப் பாடியவர் ஊரால் பெயர் பெற்றவர்.

கோழிவிழுங்கல் *kōḻi-viḻuṅgal,* பெ.(n.) நாணய வகை (பணவிடு.138); a coin.

[கோழி + விழுங்கல்.]

கோழிவென்றி *kōḻi-veṉṟi,* பெ.(n.) சேவலின் போர் வெற்றியைக் கூறும் புறத்துறை (பு.வெ.12, வென்றிப்.6); theme describing the victory of a cock in cock-fight.

[கோழி + வென்றி.]

கோழிவேந்தன் *kōḻi-vēndaṉ,* பெ.(n.) 1. சோழ மன்னர்களின் பட்டப்பெயர்; title of *Cōḻa* kings. 2. சோழன்; *Cōḻa* as the king of *Uṟaiyūr.*

[கோழியூர் → கோழி + வேந்தன்.]

உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்த மன்னனுக்குக் கோழி வேந்தன் எனப் பெயர் வழங்கலாயிற்று.

கோழை *kōḻai,* பெ.(n.) 1. சளி; phlegm, mucus. *"கோழை மிடறாக" (தேவா.263:1).* 2. உமிழ்நீர்; saliva. கோழைவடிதல் (உ.வ.). 3. மனத் திட்பமின்மை; bashfulness, timidity. *"கோழை மனத்தை" (திருப்பு. 366).* 4. இரக்கம் (உ.வ.); tender-heartedness. 5. மனத்திடமில்லாதவன்; bashful, timid person. *'கோழைகளா யிருப்பாரை' (ஈடு.9.3:6).* 6. சிறுபிள்ளை; child. *"பருவமுறாக் கோழை யறியுமோ" (விநாயகபு.72:132).*

ம. கோழ; க. கோளே; தெ. கோட்ஆடு (திகைப்படைதல்).

[குழ → கொழு → கோழி.]

கோழைக்கட்டு *kōḻai-k-kaṭṭu,* பெ.(n.) மூச்சுக் குழலிற் கட்டும் சளித் திரட்டு; accumulation of phlegm in the bronchial tubes.

[கோழை + கட்டு.]

கோழைத்தனம் *kōḻai-t-taṉam,* பெ.(n.) மனத் திடமின்மை; bashfulness, timidity, cowardice.

[கோழை + தனம்.]

கோழைதீர்-தல் *kōḻai-tīr-,* 4 செ.கு.வி.(v.i.) மனத்திடம் பெறுதல்; to overcome bashfullness or timidity.

[கோழை + தீர்.]

கோழைபடு-தல் *kōḻai-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) கீழ்மையடைதல்; to dwindle, decrease. *"மேழிச் செல்வங் கோழைபடாது" (கொ.வே.).*

ம. கோழெப்பெடுக.

[கோழை + படு-.]

கோழைபோக்கி *kōḻai-pōkki,* பெ.(n.) நறுந்தாளி (சங்.அக.); a fragrant convolvulus.

[கோழை + போக்கி.]

கோழையறுக்குஞ்சூரன் *kōḻai-y-aṟukkuñ-cūraṉ,* பெ.(n.) திப்பிலி (சங்.அக.); long-pepper.

[கோழை + அறுக்கும் + சூரன்.]

கோழையறுப்பான் *kōḻai-y-aṟuppāṉ,* பெ.(n.) கோழையைப் போக்கும் பூடு; vegetable expectorant, as loosening phlegm.

[கோழை + அறுப்பான்.]

கோழையன் *kōḻaiyaṉ,* பெ.(n.) மனத்திடமற்றவன்; bashful or timid person, coward.

[கோழை + அன்.]

கோழையிருமல் *kōḻai-y-irumal,* பெ.(n.) கோழையால் வரும் இருமல் (யாழ்ப்.); cough occasioned by the accumulation of phlegm.

[கோழை + இருமல்.]

கோழைவிந்து *kōḻai-vindu,* பெ.(n.) துளசி (மலை.); holy basil.

[கோழை (மென்மை) + விந்து (பிந்து) = சிறுவடிவினது.]

கோள்[1] *kōḷ,* பெ.(n.) 1. கொள்ளுகை; taking, receiving, accepting, seizing, holding, envelop-

“கோளிரு ளிருக்கை” (பரிபா.4:57). 2. துணிபு; opinion, tenet, creed, decision, determination, conclusion. “மாசற்றார் கோள்” (குறள், 646). 3. மதிப்பு; estimation, appraising, valuation. “தம்மைத்தாங் கொள்வது கோளன்று” (நாலடி, 165). 4. வலிமை (பிங்.); strength, power, ability. 5. தன்மை; quality, nature, character. “யாக்கைக்கோ ளெண்ணார்” (நாலடி.18). 6. பட்டறிவு, நுகர்ச்சி; enjoyment, experience. “என்னாருயிர் கோளுண்டே” (திவ். திருவாய். 9.6:7). 7. குறளை; calumny, aspersion, back-biting, tale-bearing. “கோட்செவிக் குறளை காற்றுட னெருப்பு” (கொ.வே.). 8. பொய் (சூடா.); falsehood. 9. இடையூறு (திவா.); impediment, obstacle, evil, vice. 10. தீமை (திவா.); 11. கொலை; killing, murder. “கோணினைக் குறித்து வந்தான்” (சீவக. 264). 12. பாம்பு (சீவக. 320, உரை); serpent. 13. நஞ்சு; poison. 14. கருங்கோள் (இராகு); ascending node. “கோள்வாய் மதியம் நெடியான் விடுத்தாங்கு” (சீவக.454). 15. வானமண்டலத்து ஓர் உறுப்பு; planet. “எல்லாக் கோளு நல்வழி நோக்க” (பெருங். இலாவாண.11:70). 16. முகில் (மேகம்); cloud. “கோளொடு குளிர்மதி வந்து வீழ்ந்தென” (சீவக.320). 17. ஒளி; brilliance, light. “முன்னைக் கோளரியே” (திவ். திருவாய்.2:6:6). 18. பரிவேடம்; halo. “மதியங் கோள்வாய் விசும்பிடை” (சீவக.1098). 19. குலை; cluster. “செழுங்கோள் வாழை” (புறநா.168:13). 20. காவட்டம்புல் (மலை.); citronella grass. 21. கொழு (திவா.); plough share.

[கொள் → கோள்.]

குல் → குள் → கூள் → கூளி = வளைந்த வாழைப்பழம். கூல் → கூண்டு = தட்டிவளைவு, வண்டிக்கூண்டு போன்ற பறவைக் கூடு, விலங்குக் கூண்டு. கூண்டு → கூடு = நெற்கூடு, கூண்டு, உறை, உள்ளீடின்மை. குள் → கொள் = வளைந்த காயுள்ள பயற்றுவகை. கொள் → கோள் = சுற்றிவரும் விண்மீன் (கிரகம்) வட.வர. முன். 5).

கோள்[2] *kōḷ,* பெ.(n.) ஒரு பாட்டினகத்துப் பொருள் கொண்டு நிற்கும் நிலை; depth of the theme in a song.

[கொள் → கோள்.]

கோள்[3] *kōḷ,* இடை.(part.) முன்னிலைப் பன்மை விகுதி; verbal ending of the second pers. pl. “புறப்பற்றுத் தள்ளுங்கோள்” (அஷ்டப்.நூற்றெட். 58).

[கள் → காள் → கோள்]

கோள்காரன் *kōḷ-kāraṉ,* பெ.(n.) ***கோள்மூட்டி*** பார்க்க; see *kōḷ-mūṭṭi.* சூதுகாரன் கையும் கோள்காரன் வாயும் சும்மாயிராது (பழ).

[கோள் + காரன்.]

கோள்குண்டனி *kōḷ-kuṇḍaṉi,* பெ.(n.) புறங் கூறுகை; tale-bearing, calumny.

[கோள் + குண்டனி.]

கோள்சொல்(லு)-தல் *kōḷ-šol(lu)-,* 13 செ.கு.வி. (v.i.) ***கோள்முடி-த்தல்*** பார்க்க; see *kōḷ-muḍi-.*

[கோள் + சொல்(லு).]

கோள்நிலை *kōḷ-nilai,* பெ.(n.) கதிரவன் குடும்பத்துக் கோள்களின் சுற்றோட்ட நிலை; solar family. “கோல்நிலை திரியின் கோள்நிலை திரியும், கோள்நிலை திரியின் மாரி வாறங் கூறும்” (புறநா.).

[கோள் + நிலை.]

கோள்முடி-த்தல் *kōḷ-muḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. புறந்தூற்றுதல்; to tell tales. 2. கோட்சொல்லி இருவருக்குள் கலகம் விளைத்தல்; to create mischief by slanderous reports.

[கொள் → கோள் + முடி-.]

கோள்மூட்டி *kōḷ-mūṭṭi,* பெ.(n.) புறங்கூறி கலகம் விளைப்பவன்; one who creates mischief by slanderous reports, a tale bearer.

மறுவ. கோள்காரன்.

[கோள் + மூட்டி.]

கோள்மூட்டு-தல் *kōḷ-mūṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) ***கோள்முடி-த்தல்*** பார்க்க; see *kōḷ-muḍi-.*

[கோள் + மூட்டு-.]

கோள்வாய் *kōḷ-vāy,* பெ.(n.) புதுப்புண்; fresh wound. 'கலந்துபிரிந்த கோள்வாய் பொறுக்க வரி தாயிருக்கும்' (ஈடு,6.2:ப்ர.).

[கோள் + வாய்.]

கோளக்கட்டி *kōḷa-k-kaṭṭi,* பெ.(n.) புண்வகை (இங்.வை. 307); glandular tumour.

[கோளம் + கட்டி.]

கோளகச்செய்நஞ்சு *kōḷaga-c-cey-nañju,* பெ.(n.) நாட்படு நஞ்சு (மூ.அக.); a mineral poison.

[கோளகம் + செய் + நஞ்சு.]

கோளகம்[1] *kōḷagam,* பெ.(n.) 1. மிளகு; common pepper. 2. திப்பிலி; long-pepper.

[கோளம் → கோளலகை = வட்டவடிவம். கோளம் → கோளகம் = (உருண்டை) மிளகு (வட.வர.5).]

கோளகம்[2] *kōḷagam,* பெ.(n.) 1. ***கோளகச் செய்நஞ்சு*** பார்க்க; see *kōḷaga-c-cey-nañju.* 2. தாளகம் (சங்.அக.); yellow sulphide of arsenic. 3. மண்டல விரியன் (பிங்.); viper.

[கோள் → கோளகம்.]

கோளகன்[1] *kōḷagaṉ,* பெ.(n.) கோளுரைப்போன்; one who tells tale against others.

[கோள் → கோளகன்.]

கோளகன்[2] *kōḷagaṉ,* பெ.(n.) கைம்பெண் (விதவை) பெற்ற மகன்; widow's son (செ.அக.).

[கோள் → கோளகன்.]

கோளகை *kōḷagai,* பெ.(n.) 1. வட்டவடிவம்; sphere, globe. *“அண்டகோளகைப் புறத்ததாய்” (கம்பரா. அகலிகைப்.60).* 2. யானைக் கிம்புரி; ornamental ring, as of an elephant's tusk. 3. மணடலிப்பாம்பு (சூடா.); a large viper. 4. உறை (வின்.); envelope, receptacle, socket.

[கோளம் → கோளகை = வட்டவடிவம், மண்டலிப் பாம்பு (வட.வர.5).]

கோளத்தசை *kōḷa-t-tasai,* பெ. (n.) ஒருவகைத் திசு; a kind of liboque muscles.

[கோளம் + தசை.]

கோளப்பாதி *kōḷa-p-pādi,* பெ.(n.) நிலவுருண்டையின் பாதிப்பகுதி; earth's hemisphere.

[கோளம் + பகுதி.]

இதனை வடமொழியாளர் கோளார்த்தம் என வழங்குவர்.

கோளம் *kōḷam,* பெ.(n.) 1. உருண்டை; ball, orb, globe. sphere. 2. விலங்குகளின் உடலில் நீரூறுந் தசைப்பற்று; gland. கோளக்கட்டி (உ.வ.).

[கொள் → கோள் → கோளம் = வட்டம், உருண்டை (வட.வர.முன். 5).]

கோளம்பம் *kōḷambam.* பெ.(n.) கோள் மறைப்பு (கிரகணம்); eclipse (சோதிட.அக.).

[அம்பல் = குவிதல். மூடுதல். மறைத்தல். கோள் + (அம்பல்) அம்பம்].

கோளயோகம் *kōḷa-yōgam,* பெ.(n.) ஓர் ஒரையில் ஏழு கோள்கள் நிற்க வரும் நல்வினை; conjunction of seven planets in one house. *“ஒருராசி தன்னிலேதா னோரேழு கோளு நிற்கி லிருமையாங் கோள யோகம்” (சாதகசிந்.2045).*

[கோள் → கோளம் + யோகம்.]

கோளரங்கம்[1] *kōḷ-araṅgam,* பெ.(n.) வான் கோள்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை விளக்கும் வகையில் ஒளிப்படம் காட்டும் ஏந்து உள்ள ஓர் அரங்கம்; கோளப்பாதி வடிவக்கூரையில் இப் படம் காட்டப்படும்; planetarium.

[கோள் + அரங்கம்.]

கோளரங்கம்[2] *kōḷ-araṅgam,* பெ.(n.) ஓரை மண்டலங்களின் விண்மீன்கள், கோள்கள் ஆகியவற்றின் வடிவங்களைப் பொருத்திக்காட்டும் கோளவடிவான விண்தோற்றக் காட்சிக்கூடம்; planetarium, domed building in which images of stars, planets, constellations etc. are projected.

[கோள் + அரங்கம்.]

கோளரி *kōḷ-ari,* பெ.(n.) அரிமா (ஆண்சிங்கம்) (பிங்.); lion.

[கோள் + அரி. கோள் = வளைவு, திரும்பு. முன்னும் பின்னும் திரும்பிப் பார்க்கும் இயல்புடையது.]

கோளரிக்கொடியோன் *kōḷari-k-koḍiyōṉ,* பெ.(n.) வீமன் (பிங்.); Bhima, as having a lion-banner.

[கோள் + அரி + கொடியோன்.]

கோளரிஞ்சான் *kōḷ-ariñjāṉ,* பெ.(n.) ஒன்பதரை அங்குல நீளமும் சாம்பல் நிறத்ததுமான ஆற்றுமீன் வகை; carp, leaden-grey, attaining 9½ in. in length.

[கோள் + அரிஞ்சான்.]

கோளவகுப்பு *kōḷa-vaguppu,* பெ.(n.) எட்டுப் பக்கத்தும் முகங்களை யுடையதாக அமைக்கும் படை வகுப்பு; octagonal disposition of an army (சுக்கி)நீதி, 339).

மறுவ. கோளவியூகம்.

[கோளம் + வகுப்பு.]

கோளவங்கம் *kōḷa-vaṅgam,* பெ.(n.) ஈயமணல் (சங்.அக.); lead ore.

[கோளம் + வங்கம்.]

கோளவியூகம் *kōḷa-viyūgam,* பெ.(n.) ***கோளவகுப்பு*** பார்க்க; see *kōḷa-vaguppu.*

[கோளம் + Skt. வியூக.]

கோளன் *kōḷaṉ,* பெ.(n.) 1. ***கோளகன்*** பார்க்க; see *kōḷagaṉ. “கோளரிருக்கு மூர்” (தனிப்பா. 1:64:127).* 2. கோளுரைப்போன்; one who tells tales. பெரு மஞ்சிகன் கோளன் (தணிகைப்பு. அகத.345).

[கோள் → கோளன்.]

கோளா *kōḷā*, பெ.(n.) 1. நறுமணப் பண்டங் கலந்ததும் இறைச்சி முதலியவற்றை உள்ளீடாகக் கொண்டதுமான ஒருவகை உண்டை யுணவு (இ.வ.); balls of minced mutton or vegetables mixed with powdered spices and fried in ghee. 2. மயக்கத்தை யுண்டுபண்ணும் கஞ்சாவுருண்டை; balls of ganja drug inducing stupor.

[கோள் → கோளா : பொரித்த உருண்டைக் கறி, மருந்துருண்டை (வ.வர.5).]

கோளாங்கல் *kōḷāṅ-kal*, பெ.(n.) 1. கூழாங்கல் (j.); pebbles. 2. பருக்கைக்கல்; small pebbles, gravel.

[குள் → கூழை + அம் + கல் – கூழாங்கல் → கோளாங்கல் (கொ.வ.).]

கோளாந்தி *kōḷāndi*, பெ.(n.) சிவகங்கை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Sivagangai Dt.

[கோளன் + அந்தை – கோளாந்தை → கோளாந்தி]

கோளாம்பி *kōḷāmbi*, பெ.(n.) படிக்கம் (இ.வ.); spitton.

[கோள் + ஆம்பி]

கோளார்த்தம் *kōḷārttam*, பெ.(n.) கோளத்தின் பாதி; earth's hemisphere.

*[கோள் + அர்த்தம். வ. **கோளப்பாதி** பார்க்க; see kōḷa-p-pādi.]*

கோளாளன் *kōḷ-āḷaṉ*, பெ.(n.) நூற்பொருள் முதலியவற்றை மறவாது உட்கொள்பவன்; a man of retentive memmory or of firm grasp. *"கோளாள னென்பான் மறவாதான்" (திரிகடு. 12).*

[கோள் + ஆளன்.]

கோளாறு[1] *kōḷ-āṟu*, பெ.(n.) 1. தாறுமாறு; dis order. 2. குற்றம்; fault. 3. சண்டை (J.); quarrel, tumult, scuffle.

[குளறு → குளாறு → கோளாறு]

கோளாறு[2] *kōḷ-āṟu*, பெ.(n.) 1. வழிவகை, வழிமுறை; means, expedient. அந்தச் செயல் முடியும்படி நான் ஒரு கோளாறு சொல்லுகிறேன் (உ.வ.). 2. இலக்கு; aim. கோளாறு பார்த்து எறிந்தேன் (உ.வ.).

மறுவ. கொள்ளாறு, வழிவகை.

[கொள் → கோள் + ஆறு – கோளாறு (கைக்கொள்ளத் தக்க வழிவகை).]

கோளி[1] *kōḷi*, பெ.(n.) 1. கொள்வோன் (சூடா.); receiver. 2. நான்காம் வேற்றுமை; dative case. *"ஒண்கோளியொடு" (வீரசோ. வேற்.1).* 3. ஆல்; banyan. 4. அத்தி (பிங்.); country fig. 5. பூவாது காய்க்கும் மரம்; tree bearing fruit without outwardly blossoming. *"கொழுமென் சினைய கோளி யுள்ளும்" (பெரும்பாண்.407).* 6. கொழுஞ்சி (பிங்.); sylhet orange.

[கொள் → கோள் → கோளி.] (வேக.199)

கோளி[2] *kōḷi*, பெ.(n.) **கோளகன்** பார்க்க (திவா.); see *kōḷagaṉ*.

[கோளன் → கோளி.]

கோளி[3] *kōḷi*, பெ.(n.) **கோளிகை** பார்க்க; see *kōḷigai*. *"குண்டேழுங் கோளியோ ராறும்" (திருக்காளத். பு. 13:30).*

[கோளிகை → கோளி.]

கோளி[4] *kōḷi*, பெ.(n.) பூவாது காய்க்கும் மரம்; any tree that bears fruit without blossoming.கோளி ஆலமரம் (உ.வ.).

[கோழி → கோளி.]

கோளிக்குடி *kōḷi-k-kudi*, பெ.(n.) மதுரை மாவட்டத்துச் சிற்றூர்; a village in Madurai Dt.

[கோளி (ஆலமரம்) + குடி.]

கோளிகை *kōḷigai*, பெ.(n.) குதிரை கழுதைகளின் பெட்டை (யாழ்.அக.); female of a horse or ass.

[கோழி → கோளி[2] → கோளிகை.]

பெட்டையைக் கோழி எனக் குறிப்பது மரபு.

கோளியம் *kōḷiyam*, பெ.(n.) துத்தி (பிங்.); country mallow.

[கோள் → கோளி → கோளியம்.]

கோளிழை–த்தல் *kōḷ-iḻai-*, 16 செ.குன்றாவி. (v.t.) கொல்லுதல்; to kill. *"குஞ்சரங் கோளிழைக்கும் பாம்பை" (திருக்கோ.21).*

[கோள் + இழை-.]

கோளுரை *kōḷ-urai*, பெ.(n.) குறளைமொழி; slanderous report. *"கோளுரைகள் பேசொணாது" (அறப். சத.8).*

[கோள் + உரை.]

கோளேசம் *kōḷēsam*, பெ.(n.) குங்குமப்பூ (மலை.); saffron.

[குளசம் → கோளேசம்.]

கோளை[1] *kōlai,* பெ.(n.) எலி (யாழ்.அக.); rat.

[கோள் → கோளை.]

கோளை[2] *kōlai,* பெ.(n.) குவளை; bowl.

[குவளை → கோளை. (கொ.வ.)]

கோளை[3] *kōlai,* பெ.(n.) 1. தோழி ; female companion. 2. கோதாவரி; the river Godavari.

[இகுளை (தோழி) →கோளை.]

கோளை[4] *kōlai,* பெ.(n.) மீன்வகை; a kind of fish. *"கோளை யாளல்" (குருகூர்ப்.7).*

[கோள் → கோளை.]

கோளைக்குத்து *kōlai-k-kuttu,* பெ.(n.) சளிக் கட்டாலுண்டாகும் நெஞ்சுக்குத்து (J.); acute throbbing pain in the chest from phlegm.

[கோழை + குத்து – கோழைக்குத்து → கோளைக்குத்து (கொ.வ.)]

கோற்கணக்குக் குழிக்கணக்கு *kōr-kaṉakku-k-kuḻi-k-kaṉakku,* பெ.(n.) கோலால் அளந்து கொள்ளப்பட்ட நிலத்தின் குழிக்கணக்கு (இ.வ.); land surveying, computing the extent of a land in *kuḻi* with a measuring rod.

[கோற்கணக்கு + குழிக்கணக்கு.]

கோற்காரன் *kōr-kāraṉ,* பெ.(n.) 1. ஊர் ஊழியக் காரன் (G.Sm.D.I.i.127); a village servant. 2. ஓடந்தள்ளுவோன் (இ.வ.); ferryman.

[கோல் + காரன்.]

கோற்குத்து *kōr-kuttu,* பெ.(n.) கோல்முனையாற் குத்தப்படும் அளவுள்ள நிலம்; bit of land coverable by the end of a staff when planted on the ground. *'ஒரு கோற்குத்துங் கொடேன்' (ஈடு.7:5 பிர.).*

[கோல் + குத்து.]

கோற்குறிப்பு *kōr-kuṟippu,* பெ.(n.) நிலவளவுக் கணக்கு (W.G.); abstract of land survey.

[கோல் + குறிப்பு.]

கோற்கூத்து *kōr-kūttu,* பெ.(n.) வரிக்கூத்துவகை; a kind of masquerade dance. *'கோத்த பறைக் குடும்பு கோற்கூத்து' (சிலப். 3:13, உரை).*

[கோல் + கூத்து.]

கோற்கூலி *kōr-kūli,* பெ.(n.) வரிவகை (தெ.இ.க.தொ.IV.30); a tax.

[கோல் + கூலி.]

கோற்கொடி[1] *kōr-koḍi,* பெ.(n.) 1. கொடிவகை (திவா.); a species of creeper. 2. சுரை (மலை.); calabash.

[கோல் + கொடி.]

கோற்கொடி[2] *kōr-koḍi,* பெ.(n.) இலந்தைவகை (பிங்.); jujube tree.

[கோல் + கொடி.]

கோற்பிரமாணம் *kōr-piramāṇam,* பெ.(n.) ஊரின் நிலவிரிவுக் கணக்கு (இ.வ.) ; statement of the whole extent of a village and its lands whether cultivated or waste.

[கோல் + பிரமாணம்.]

கோற்புழு *kōr-puḻu,* பெ.(n.) உலண்டு (பிங்.); case-worm.

[கோல் + புழு.]

கோற்றகைமாக்கள் *kōṟṟagai-mākkaḷ,* பெ.(n.) கோல்கொண்டு காக்கும் வீரர்; warriors armed with sticks. *"மிலைச்சருஞ் சிலதருங் கோற்றகை மாக்களும்" (பெருங். உஞ்சைக். 42:24).*

[கோல் + தகை + மாக்கள். தகைத்தல் - தடுத்தல்.]

கோற்றேன் *kōṟṟēṉ,* பெ.(n.) கொம்புத்தேன்; superior wild honey, as found on tree branches. 'காலனை யோலமிட வடர்த்த கோற்றேன்' (திருக்கோ.150).

[கோல் + தேன்.]

கோற்றொடி *kōṟṟoḍi,* பெ.(n.) 1. வேலைத்திறனமைந்த கைவளையல்; bangles of fine workmanship. *"கோற்றொடி மாதரொடு" (சிலப்.26:121).* 2. பெண்; woman.

[கோல் + தொடி.]

கோற்றொழில் *kōṟṟoḻil,* பெ.(n.) 1. (செங்கோல் செலுத்தி) அரசாட்சி செய்கை; rule or government of a kingdom, as symbolically expressed by sceptre-wielding. *"கோற்றொழிற் கொற்றம்" (பெருங். மகத. 23:60).* 2. அரிய வேலைப்பாடு; fine workmanship. *'கோற்றொழில் விளங்குந்தொடி (கலித்.100, உரை).*

[கோல் + தொழில்.]

கோற்றொழிலவன் *kōṟṟoḻilavaṉ,* பெ.(n.) அரசர் வாழ்கூடத்து வாசலிற் கோல்கொண்டு காவல்

செய்பவன்; guard or watchman armed with a stick, stationed at the porch of a king's palace. *"கோற்றொழி லவற்குக் கூறின னிறப" (பெருங். உஞ்சைக். 47:10).*

[கோல் + தொழில் + அவன்.]

கோற்றொழிலாளர் *kōṟṟoḻil-āḷar,* பெ.(n.) கோலைக் கையேந்தி அரசர்க்குமுன் வழி விலக்குவோர்; king's attendants armed with sticks, their duty being to disperse the crowd and clear the way for the king to pass. *"கோற்றொழி லாளர் மாற்றுமொழி இயம்ப" (பெருங். உஞ்சைக். 58:76).*

[கோல் + தொழில் + ஆளர்.]

கோறணி *kōṟaṇi,* பெ.(n.) ***கோரணி*** பார்க்க (யாழ்.அக.); see *kōraṇi.*

[கோரணி → கோறணி.]

கோறம்பு *kōṟambu,* பெ.(n.) ஒருவகை நெற்றியணி; an ancient ornament for the forehead. *"நெற்றி மேற் றிருத்திய கோறம்புந் திருக்குழலும்" (திவ். பெரியாழ். 3:4:6).*

க. கோரம்ப.

[கோலம் + பூ – கோலம்பூ → கோறம்பு.]

கோறர் *kōṟar,* பெ.(n.) கள்ளர்குடிப் பட்டப் பெயர்களுள் ஒன்று (கள்ளர் சரித்.பக்.98); a caste title of Kaḷḷars.

[கோல + அர் – கோலர் → கோறர்.]

கோறல் *kōṟal,* பெ.(n.) கொல்லுகை; killing, slaying. *"கோறல் பிறவினை யெல்லாந் தரும்" (குறள். 321).*

[கொல் →கோறு →கோறல்.]

கோறின்னல் *kōṟiṉṉal,* பெ.(n.) பல்விளக்குகை; cleaning the teeth. *"விதித்த கோறின்று" (காஞ்சிப்பு. ஒழுக். 8).*

[கோல் + தின்னல். கோல் = குச்சி – பற்குச்சி. பற்குச்சியை மென்று பல் துலக்குதல்.]

கோறுண்ணி *kōṟuṇṇi,* பெ.(n.) பிற உயிரினைக் கொன்று பிறகு உண்ணும் உயிரி; predator.

[கோறு + உண்ணி.]

கோறை *kōṟai,* பெ.(n.) 1. பழுது loc.; defect, ble mish. 2. சிராய்த்த காயம்; scratch, as on the body. 3. துளை (W.); hole, cavity, hollow, as in a tooth, in fistula. 4. மணிபதிக்குங் குவளை (W.); socket.

[குறை → கோறை.]

கோறைபடு–தல் *kōṟai-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. பழுதாதல்; to be injured, as clothes, fruits. 2. சிராய்த்த காயமுண்டாதல்; to have a scratch, as on the body.

[குறை →கோறை + படு–.]

கோறையா–தல் *kōṟai-y-ā-,* 8 செ.கு.வி.(v.i.) 1. பழுதுபடுதல்; to be injured or spoiled. 2. குழி யாதல் (யாழ்ப்.); to become hollow.

[கோறை + ஆ.]

கோறைவை–த்தல் *kōṟai-vai-,* 4 செ.கு.வி.(v.i.) ***கோறையா–தல்*** பார்க்க; see *kōṟai-y-ā-.*

[கோறை + வை.]

கோன்[1] *kōṉ,* பெ.(n.) 1. அரசன்; king. 2. தலைவன்; master, lord. *"உண்மையுமா யின்மையுமாய்க் கோனாகி" (திருவாச. 5:15).*

ம. கோன்.

[கோவன் → கோன்.]

கோன்[2] *kōṉ,* பெ.(n.) ***கோனான்*** பார்க்க (loc.); see *kōṉāṉ.*

[கோ → கோவன் → கோன்.] (வ.மொ.வ.43.)

கோன்[3] *kōṉ,* பெ.(n.) 1. ஞாயிறு ; Sun. 2. திங்கள் ; Moon. 3. வியாழன்; Jupiter (சோதிட.அக.).

[கோள் →கோ →கோன்.]

கோன்மை[1] *kōṉmai,* பெ.(n.) 1. ஆளுகை; rule savereignty. 'பாய்திரை யுலகக் கோன்மை' (உபதேசகா. சிவத்துரோ.2760). 2. அரசமுறைமை; justice (இரு.நூ.) 3. தனது சட்டங்களைத் தானே அமைத்துக்கொள்ளும் உரிமை; the right constitute their own law of the land, sovereignty.

[கோல் → கோன் + மை.]

கோன்மை என்பது ஒரு நாட்டிற்குரிய தனி யுறுப்பாகப் பண்டைக் காலத்தில் உணரப்பட்டமையால் திருவள்ளுவர் ஏனை மூன்றுறுப்புகளையும் ஆறாக வகுத்து "படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு" என்று கூறினார் (பழந்தமிழாட்சி.ப. 8).

ம. கோன்ம.

கோன்மை[2] *kōṉmai,* பெ.(n.) தலைமை; superi ority.

[கோன் → கோன்மை.]

கோனகப்பாடி *kōṉaga-p-pāḍi,* பெ.(n.) நாமக்கல் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Namakkal Dt.

[கோனகன் + பாடி.]

கோனடிதொடு-தல் *kōṉ-aḍi-toḍu-,* 12 செ.குன்றாவி. (v.t.) அரசனடிமேல் ஆணையிடுதல்; to swear upon king's feet. *"உசாவுவங் கோனடி தொட்டேன்" (கலித். 94:36).*

[கோன் + அடி + தொடு-.]

கோனாகுளம் *kōṉā-kuḷam,* பெ.(n.) இராமநாத புரம் மாவட்டத்துச் சிற்றூர்; a village in Ramanadhapuram Dt.

[கோனான் + குளம்.]

கோனாடு[1] *kō-nāḍu,* பெ.(n.) சோணாட்டு உட்பிரிவுகளுளொன்று (புறநா. 54); a division of Cōlā country.

[கோன் + நாடு.]

கோனாடு[2] *kō-nāḍu,* பெ.(n.) புதுக்கோட்டைப் பகுதியில் முற்காலத்தில் இருந்த நிலப்பரப்பு (பிற்.சோழ.வரலாறு–சதாசிவ பண்டாரம் ப.6); a region around Pudukkottai in ancient times.

[கோன் + நாடு.]

சோழநாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்த நாடு. கொடும்பாளூர் இதன் தலைநகர். இருக்குவேளிர் எனும் மரபினர் இப் பகுதியை ஆட்சி செய்தனர்.

கோனாப்பட்டு *kōṉā-p-paṭṭu,* பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டத்துச் சிற்றூர்; a village in *Pudukkōṭṭai* Dt.

[கோனான் + பட்டு.]

கோனான் *kōṉāṉ,* பெ.(n.) இடையர் பட்டப்பெயர்; title of the Idaiyar caste. *"எந்தக் கோனான்றன் கையிற் கொடுத்தானோ" (விறலிவிடு.703).*

தெ. கோனாரி.

[கோ - ஆனிரை, மாடு. கோ → கோன் → கோனான்.] *(வட.வர.43).*

கோனிச்சி *kōṉicci,* பெ.(n.) இடைச்சி (யாழ்.அக.); a woman of Idaiyar caste.

[கோனான் (ஆ.பா.) → கோனிச்சி (பெ.பா.).]

கோனிப்பூடு *kōṉ-p-pūḍu,* பெ.(n.) சணல் (சித்.அக.); Indian hemp, jute.

[கோனி + பூடு.]

கோனூர் *kōṉūr,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; a village in *Thañjāvūr* Dt.

[கோன் + ஊர்.]

கோனேரி *kōṉ-ēri,* பெ.(n.) திருப்பதியிலுள்ளதொரு பொய்கை; a sacred tank on Tirupati hills. *"கோனேரி வாழுங் குருகாய்ப் பிறப்பேனே" (திவ். பெருமாள். 4:1).*

[கொலுவுதல் - படிக்கட்டுக் கோலுதல். கொலு பொம்மைக்கொலு. கொலு → கோலு→கோனு + ஏரி (கோனேரி - படிக்கட்டுகள் அமைக்கப்பட்ட நீர்நிலை).]

கோனேரிதாசர் *kōṉēri-dāšar,* பெ.(n.) பத்தொன் பதாம் நூற்றாண்டுப் புலவர்களு ளொருவர்; a poet of nineteenth century.

[கோனேரி + தாசர்.]

கோனேரியப்ப முதலியார் *kōṉēri-y-appa-mudaliyār,* பெ.(n.) தமிழில் உபதேசகாண்டம் பாடிய ஆசிரியர்; the author of *Upadēša kāṇḍam* in Tamil.

[கோனேரி + அப்பன் + முதலியார்.]

கோனேரியப்பர் *kōṉēri-y-appar,* பெ.(n.) பன்னிரண்டாம் நூற்றாண்டுப் புலவர்களி லொருவர்; a poet of twelfth century.

[கோனேரி + அப்பர்.]

கோனை *kōṉai,* பெ.(n.) ஒலி (அக.நி.) ; sound.

[கொல் → கொன் → கோன் → கோனை.]

கோனோலை *kōṉ-ōlai,* பெ.(n.) அரசாணை எழுதப்பட்ட திருமுகம் (S.I.I.II. 351); written order of a king.

[கோ - அரசன். கோ → கோன் + ஓலை.]

கௌ

கௌ[1] *kau,* (எ) ககர மெய்யும் ஔகார நெட்டுயிரும் சேர்ந்த பின்னண்ண வல்லின உயிர்மெய் சார்பெழுத்தாகிய அசையெழுத்து; vowel consonant secondary letter, being a compound of velar consonant 'k' and vowel 'au' syllable in character.

[க் + ஔ – கௌ.]

கௌ[2] *kau,* பெ.(n.) கொள்ளு; horse-gram (மலை.).

கௌ[3] *kau*, பெ.(n.) 1. தீங்கு; evil. 2. மனவருத்தம்; distress, mental agony.

[கவ்வு →கௌ.]

கௌ[4] *kau*, பெ.(n.) காக்கை அல்லது அண்டங்காக்கை கரையும் ஒலி; caw of the crow or harsh cry of a rook.

க.கவு, கவ்வு; தெ. கௌ; த.கவ்வை.

[கவ்வை →கௌவை →கௌ.]

குறிப்பாக இது அண்டங்காக்கையின் பேரொலியையே சுட்டும்.

கௌகணம் *kaukanam*, பெ.(n.) கொங்கண நாடு; an ancient region.

[கொண்கானம் →கொகனம் →கௌகணம் (கொ.வ.)]

கௌசலை *kaušalai*, பெ.(n.) இராமன் தாய்; Rama's mother. *"மன்னுபுகழ்க் கோசலைதன் மணி வயிறு வாய்த்தவனே"* (திவ். பெருமாள்.8:1).

[கோ + சாலை – கோசாலை (மாட்டுப்பட்டி உள்ள ஊர்) → கோசலை →கோசலம் →கௌசலை.]

கௌசாம்பி *kausāmbi*, பெ.(n.) கங்கைக் கரையிலுள்ள ஒரு பழைய நகரம்; an ancient city on the bank of the Ganges in the lower part of the Doab.

[கோசம்பி (ஒரு மரம்) →கோசாம்பி →கௌசாம்பி.]

இம்மரம் வளரும் காடு. இம்மரத்தின் பூச்சாறு சிவப்பு வண்ணம் செய்து நிறமூட்டப் பயன்படும்.

கௌசிகம்[1] *kaušigam*, பெ.(n.) 1.கூகை (பிங்.); owl. 2. பட்டாடை (பிங்.);silk cloth. 3. பண்வகை (சிலப். 6:35,உரை); a primary melody-type. 4. பட்டுச்சேலை; silk saree.5. பாம்பு; snake.

[கொழு : மென்மை, நுண்மை. கொழு →கொழுது →கோது →கோதிகம் →கௌசிகம்.]

கௌசிகம்[2] *kaušigam*, பெ.(n.) 1. விளக்குத்தண்டு (பிங்.); lamp-stand. 2. கருவிகளிலொன்று; an instrument.

[கோல் →கோது (நீட்சி) →கோதிகம் →கௌசிகம்.]

கௌசிகன் *kaušigan*, பெ.(n.) 1. விசுவாமித்திரன்; Viswamittiran. *"கௌசிகன் சொல்லுவான்"* (கம்பரா. மிதிலை. 42). 2. இந்திரன் (பிங்.); Indira.

[கோசலம் → கோசியன் → கோசிகன் → கௌசிகன் (கோசல் நாட்டினன்).]

கௌசிப்பி *kaucippi*, பெ.(n.) முத்தின் மேலுள்ள கூடு; shell covering the pearl.

தெ. கௌசிப்ப.

[கவ்வு →கௌவு + சிப்பி.]

கௌசு *kausu*, பெ.(n.) முடைநாற்றம்; bad smell.

க.,தெ. கௌசு.

[கவிச்சி →கௌசு.]

கௌசுகம் *kaušugam*, பெ.(n.) 1. ஒருவகை மரம்; a kind of tree, tripterocarp dammer (மலை.). 2. ***குங்கிலியம்*** பார்க்க; see *kungiliyam*.

கௌட்டம் *kauttam*, பெ.(n.) மாட்டின் கால் நோய்; a disease affecting the legs of cattle.

தெ. கௌட்ட

[கவுட்டம் →கௌட்டம்.]

கௌடசாட்சி *kaudašatci*, பெ.(n.) பொய்ச்சாட்சி; false witness.

[கவல் →கவடு →கௌடம் + சாட்சி.]

கௌடநடை *kauda-nadai*, பெ.(n.) ***கௌடநெறி*** பார்க்க (w); see *kauda-neri*.

[கௌடம் + நடை.]

கௌடநெறி *kauda-neri*, பெ.(n.) செறிவு முதலிய வைதருப்ப நெறிக்குரிய குணங்கள் நிரம்பி வாராமல் சொற்பெருகத் தொடுக்குஞ் செய்யுணெறி; the Kauda style of poetry characterised mainly by verbosity dist. fr. *Vaidharbaneri*.

[கௌடம் : வங்கநாடு. வெல்லம் காய்ச்சுதலினால் பெயர் பெற்ற நாடு. கௌடம் + நெறி.]

கௌடம்[1] *kaudam*, பெ.(n.) 1.வங்காள நடுவில் உள்ள ஒரு நாடு; the district of Gaur, central part of Bengal extending from Vanga to the borders of Orissa. 2. ***கௌடநெறி*** பார்க்க (தண்டி.4); see *kaudaneri*.

[கருப்பட்டி – கொர்டு : கூடு (வெல்லம்) →கௌடு →கௌடம் (வெல்லம் காய்ச்சியதால் இப்பெயர் பெற்ற வங்க நாடு)]

கௌடம்[2] *kaudam*, பெ.(n.) ஒருவகைக் கொடி; a medicinal creeper.

கௌடி[1] *kaudi*, பெ.(n.) கவடி, பலகறை;

[கவடி (சோழி, பலகறை) →கௌடி.]

கௌடி[2] *kauḍi*, பெ.(n.) ஒரு பண்; a musical mode.

[கவ்வு→கவ்வுளி→கவுளி→கவுடி→கௌடி.]

கௌடி[3] *kauḍi*, பெ.(n.) 1. வழிமுறையாகக் காட்டப்படுகிறது; a sample of the thing. 2. கோலிகை (மாதிரி); specimen, illustrative or typical example.

தெ. கவுடுவு, கௌடி, கைவடி, கைவளி.

[கைவழி→கைவடி→கௌடி. கைவழி = (வழிமுறை) அதன் வழிவந்தது. வழிமுறை எனப்பொருள்பட்ட இத்தமிழ்ச்சொல் வழக்கிழந்தது.]

கௌடிபாய்-தல் *kauḍi-pāi-*, 13 செ.கு.வி.(v.i.) ஒருவகை விளையாட்டு; a kind of play.

[கவுடி →கௌடி + பாய்-.]

கௌடு *kauḍu*, பெ.(n.) கவடு, கள்ளம்;

தெ. கௌடு.

[கவல்→கவடு→கௌடு (கொ.வ.)]

கௌணப்பொருள் *kauṇa-p-poruḷ*, பெ.(n.) இலக்கண வகையாற் கொள்ளும் பொருள் (சி.சி. பாயி. 2.ஞானப்.); secondary meaning or sense of a word, metaphorical sense, opp. to. *mukkiyapporuḷ*

[கமுக்கம்→கமுணம்→கவுணம்→கௌணம் + பொருள்.]

கௌணியன் *kauṇiyaṉ*, பெ.(n.) கவுணியக் குலத்தான்; one born in the *Kauṇḍiṇya* gotra.

மறுவ. கவுணியன்.

[கோ = மாடு, ஆனிரை. கோ→கோன்→கோனியன் → கௌணியன் (கவுணியன்)→ கவுணியன் – ஆனிரை மேய்க்குடியினன்.]

ஐந்திரவிட மொழிகளான குச்சர மொழியில் கோவனி என்னும் சொல்லும் மராத்தியில் கவ்வுள என்னும் சொல்லும் கால்நடை மேய்ப்போரைக் குறித்தல் காண்க.

கௌதகம் *kaudagam*, பெ.(n.) போதிகை; capital of a pillar, wooden piece attached to a wall supporting the main beam of a house.

[கவ்வு→கவுதம்→கௌதகம்.]

கௌதபெருந்தச்சன் *kauda-peruntaccaṉ*, பெ.(n.) மாமல்லபுரத்தை உருவாக்கிய தலைமைக் கட்டுமானக் கலைஞருள் ஒருவர்; one of the chief Sthapathis, who were responsible for the rock cut caves and buildings of Mamallapuram. கௌதப் பெருந்தச்சன் என்னும் எழுத்துப் பொறிப்பு, பூஞ்சேரலை எனும் சிற்றூர்ப் புடைப்புக் கல்லில் காணப்படுகிறது.

[கோதை = பெரியவன், தலைவன். கோதை →கௌதம் + பெருந்தச்சன்.]

கௌதம்[1] *kaudam*, பெ.(n.) மீன்கொத்தி; kingfisher.

[கவ்வு →கவுதம்→கௌதம்.]

கௌதம்[2] *kaudam*, பெ.(n.) மழைநீரால் சுவர் நனையாதிருக்கச் சுவரின் உச்சியில் கட்டப்படும் கட்டட அமைப்பு (Tinn); cornice.

[கோ →கோதை (அகன்றது, பெரியது) →கௌதம்.]

கௌதமநதி *kaudama-nadi*, பெ.(n.) கௌதமை நதி: river *Kaudamai*.

[கௌதம் + நதி.]

கௌதமன் *kaudamaṉ*, பெ.(n.) 1. கவுதம புத்தன்; the Buddha. 2. ஒரு முனிவர்; an ancient saint.

[கோ→கோதை = பெரியவன், தலைவன். கோதை →கோதமன்→கௌதமன்.]

கோதை எனும் சொல் பெரிய மாலையையும் ஆற்றல் மிக்க தலைவன் எனும் பொருளில் சேர மன்னனையும் குறித்தல் காண்க.

கௌதமனார் *kaudamaṉār*, பெ.(n.) 1. தலைக் கழகப் புலவருள் ஒருவர் (தொல். பொருள். 75, உரை); a poet of the first Šangam. 2. ***கோதமன்*** பார்க்க; see *kōdamaṉ*.

[கோ→கோதை→கோதமன்→கௌதமன். கௌதமன் என்பது வடமொழியில் பெற்ற திரிபு.]

கௌதமி *kaudami*, பெ.(n.) 1. ஓர் ஆறு (பிங்.); a river. 2. கோரோசனை; bezoar - stone (W.).

[கோ→கோதை→கோதமன்→கோதமி (பெருமை மிக்கவள், பெருமைமிக்கது).]

கௌதாரி *kaudāri*, பெ.(n.) ஒரு பறவை; Indian partridge.

[கதுவாலி→கவுதாரி→கௌதாரி.]

கௌந்தி[1] *kaundi*, பெ.(n.) 1. வால்மிளகு (மலை.); cubele. 2. கடுக்காய்வேர் (மூ.அக.); chebulic myrobalan root.

[காந்து →காந்தி →கௌந்தி.]

கௌந்தி[2] *kaundi*, பெ.(n.) சைன தவப்பெண் (திவா.); female Jain ascetic.

[காந்து →காந்தி →கௌந்தி.]

கௌமாரம் *kaumāram,* பெ.(n.) 1.இளம்பருவம்; childhood. 2. முருகக்கடவுளே பரம்பொருளென்று வழிபடும் சமயம்; the religion of the Skanda as supreme being and whose followers are exclusively devoted to his worship. 3. ***கவுமாரம்*** பார்க்க; see *kavumāram.*

[குமரன்→குமரம்→கௌமாரம்]

கௌமாரி *kaumāri,* பெ.(n.) 1.தூய பெண்களுள் ஒருத்தி; one of *Catta-mādar,* the female principle of Kumara or Skanda. 2. மாகாளீ (பிங்.); Kali.

[குமரி→கௌமாரி]

கௌரம் *kauram,* பெ.(n.) 1. வெண்மை; whiteness. 2. பொன்னிறம் (சிலப். 12:67, உரை); yellow colour. 3. அச்சம்; fear. 4. தூய்மை; cleanliness. 5. தாமரை; lotus. 6. நூல்; thread. 7. பொன்; gold. 8. ***கவுரம்*** பார்க்க; see *kavuram.*

[கோடு = யானைக் கொம்பு செங்குத்தான செம்மண்மேடு. உயரம் (அச்சம்) கோடு →கோடம்→ கோரம் (கொ.வ.).]

கௌரி[1] *kauri,* பெ.(n.) 1. மலைமகள், பார்வதி; Parvati. *"பேருங் கௌரியென் றழைத்தனர்" (திருவிளை. விருத்த. 4).* 2. காளி; Kali. *"அம்பிகை மாதரி கௌரி" (அரிச். 4. துதி).* 3. எட்டு அல்லது பத்தகவைப் பெண்; young girl of 8 or 10 years. 4. பொன்னிறம் (W.); yellow colour. 5. கடுகு; mustard (மலை.). 6. கொடிவகை; bristly trifoliate vine.

[குமரி →குவரி→கௌரி]

கௌரி[2] *kauri,* பெ.(n.) 1. சோழி; small white or yellow shell, used as a coin in some parts of India (M.M.238). 2. ***கவுரி*** பார்க்க ; see *kavuri.*

[கவடி →கவரி→கௌரி]

கௌரிக்கங்கை *kauri-k-kaṅgai,* பெ.(n.) ஓர் ஆறு; a river.

[குமரி→குவரி →கௌரி + கங்கை]

கௌரிகாளை *kauri-kāḷai,* பெ.(n.) எக்காள வகை; a long brass trumpet.

[குமரி→குவரி →கௌரி + காளை.]

கௌரிகேணி *kauri-kēṇi,* பெ.(n.) 1. கொடிவகை; mussell-shell creeper. s.el.elitoria termaated typiea. 2.***வெள்ளைக் காக்கணம்*** பார்க்க (மலை.); see *veḷḷai-k-kākkaṇam.*

[குமரி→குவரி →கௌரி + கேணி.]

கௌரிசிப்பி *kauri-cippi,* பெ.(n.) வழிபாட்டுக் கலனாகப் பயன்படும் பெருஞ்சங்கு(W.); a big conch which is used as a thing to be worshipped.

[குமரி→குவரி →கௌரி + சிப்பி.]

கௌரிபாத்திரம் *kauri-pāttiram,* பெ.(n.) ***கௌரிசிப்பி*** பார்க்க; see *kauri-cippi* (W.).

[கௌரி + பாத்திரம்.]

கௌரிமைந்தன் *kauri-maindaṉ,* பெ.(n.) முருகக் கடவுள் (பிங்.); Skanda, as son of Parvati.

[குமரி→குவரி → கௌரி + மைந்தன்.]

கௌரியம் *kauriyam,* பெ.(n.) பாண்டியன் பட்டப் பெயர்; Pāṇḍiyas title. *"தவிரா வீகைக் கௌரியர் மருக" (புறநா. 3:5).*

மறுவ. குமரியர்.

[குமரி = குமரிநாடு. பாண்டியர்களில் பழைய நாடு. கடல் கொண்ட தென்னாடு. குமரி →குமரியர் →குவரியர் →கௌரியர் = பாண்டியர்.]

கௌரிவிரதம் *kauri-viradam,* பெ.(n.) ஐப்பசி மாதத்தில் கௌரியை நோக்கிப் புரியும் நோன்பு; religious observance in honour of Parvati in the month of Aippaši.

[கௌரி + விரதம்.]

கௌரு *kauru,* பெ.(n.) முதிர்வண்ணம், அழுத்தமான நிறம்; bright colour.

தெ. கௌரு, கவுரு.

[கவிர்→கவுர் →கௌரு.]

கௌவல் *kauval,* பெ.(n.) கௌவுதல்; grasp with eagerness, to seize with mouth.

[கவ்வு →கவ்வல்→கௌவல்.]

கௌவாணம் *kauvanam,* பெ.(n.) குறிஞ்சி யாழ்த்திறங்களுள் ஒன்று; an ancient secondary melody. type of the *kuriñji* classs.

[கௌளம் + வாணம் = கௌளவாணம்→ கௌவாணம்.]

கௌவாளன் *kauvāḷaṉ,* பெ.(n.) மீன்வகை; a kind of fish.

[கவ் →கௌ + ஆளன்–கௌவாளன்.]

கௌவிக்கொள்-தல் *kauvi-k-koḷ,* 16 செ. குன்றாவி. (v.t.) 1. வாயால் பற்றிக் கொள்ளுதல்; to catch by mouth. 2. கைப்பற்றிக்கொள்; to take by force.

தெ. கௌங்கிலி (வலக்காரமாகச் சேர்த்துக் கொள்ளல், அணைத்துக் கொள்ளல்)

[கவ்வு →கௌவு + கொள்–கௌவிக்கொள்.]

கௌவியம் *kauviyam,* பெ.(n.) ஆனைந்து பசுவினின்று பெறப்படும் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகிய பொருள்கள்; the five choice products of a cow. *"தீதில் கௌவியங் கூட்டுபு பிசைந்தனர்" (சூத. சிவமா. 2:23).*

*[கோ (மாடு)→கோவியம்→கவ்வியம். **கவ்வியம்** பார்க்க; see kavviyam.]*

கௌவு–தல் *kauvu-,* செ.குன்றாவி.(v.t.) 1. வாயால் பிடித்தல்; to seize with mouth, grasp with eagerness. *"கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும்" (நாலடி. 70).* 2. கவர்தல்; to absorb, engross. *"அகங் கௌவிய களிப்பெய்தி" (திருவிளை. யானை. 24).*

[கவ்வு→கௌவு]

கௌவுகண் *kauvugkan,* பெ.(n.) கீழ்ப்பார்வை; downcast furtive look. *கௌவுகண் போட்டுப் பார்க்கிறான்* (நாஞ்.).

[கவ்வு →கௌவு + கண்.]

கௌவுதடி *kauvu-tadi,* பெ.(n.) 1.கவரான கழி (அகநா. 34, உரை.); forked stick. 2. குத்துக்கோல் *(சிலப். 16, 162.அரும்.);* pike staff. 3. ***கவைக்கோல்*** பார்க்க (W.); see *kavai-k-kōl.*

[கவை→கவ்வு →கௌவு + தடி.]

கௌவை[1] *kauvai,* பெ.(n.) 1. ஒலி; sound. *"குயிற் கௌவையிற் பெரிதே" (ஐங்குறு.369).* 2. வெளிப் பாடு; disclosure. *"கற்பொடு புணர்ந்த கௌவை" (தொல். பொருள்.41).* 3. பழிச்சொல்; ill report, scandal. *"கல்லென் கௌவை யெழாஅக் காலே" (ஐங்குறு. 131).* 4. துன்பம் (பிங்.); affliction, distress. 5. கள் (பிங்.); toddy.

[கவ்வை→கௌவை.]

கௌவை[2] *kauvai,* பெ.(n.) 1.வினை; concern, business, affair. 2. எள்ளிளங்காய்; green sesamum seed. *"கௌவை போகிய கருங்கா" (மலைபடு.105).* 3. ஆயில்யம்; the nineth naksatra.

[செய் → கெய் → கய் → கவ் → கவ்வை →கௌவை.]

கௌவைமரம் *kauvai-maram,* பெ.(n.) அடைப்புக்குள் விலங்குகள் வாராமல் தடுக்குங் கட்டை; cross bar at the entrance of an enclosure to prevent animals from straying (Loc.).



கௌவைமரம்

[கவ்வு →கௌவை + மரம்.]

கௌளம் *kaulam,* பெ.(n.) இசைவகை, பண்வகை (பரத. இராக. 55); a primary melody-type.

[கவ்வு →கவ்வுளம் (செறிந்த பண் வகை) →கௌளம்.]

கௌளி[1] *kauli,* பெ.(n.) 1. பல்லி; lizard. 2. ***கவுளி*** பார்க்க; see *kavuli.*

[கவ்வு →கவ்வுளி →கவுளி →கௌளி.]

கௌளி[2] *kauli,* பெ.(n.) 1. ஒரு பண்வகை (பரத. இராக. 56); a specific melody - type. 2. நூறு வெற்றிலை கொண்ட கட்டு; bundle of 100 betel leaves.

[கவ்வு →கவ்வுளம் →கவுளம் →கௌளி (செறிந்த பண்வகை).]

கௌளிக்கட்டாயச்சொல்(லு)–தல் *kauli-k-kattāy-c-col(lu),* 8 செ.கு.வி.(v.i.) குறிசொல்லி ஏமாற்றுதல் (இ.வ.); to deceive a person by professing to foretell, to mislead by soothsaying.

[கௌளி + கட்டாயம் + சொல்.]

கௌளிக்கட்டு *kauli-k-kattu,* பெ.(n.) ***கௌளிக் காதல்*** பார்க்க; (loc.); see *kouli-k-kādal.*

[கௌளி + கட்டு.]

கௌளிக்காதல் *kauli-k-kādal,* பெ.(n.) நன்மை தீமைகளை அறிவிக்கும் பல்லி ஒலி (W.); chirp of a lizard, as presaying good or evil.

[கௌளி + காதல். கதைத்தல் (பேசுதல்) - காதல்.]

கௌளிச்சொல் *kauli-c-col,* பெ.(n.) ***கௌளிக் காதல்*** பார்க்க; see *kauli-k-kādal* (Loc.).

[கௌளி + சொல்.]

கௌளிசாத்திரம் *kauli-šāttiram,* பெ.(n.) பல்லிச் சொற்குப் பலன்கூறும் நூல்; treatise interpreting the chirps of lizards.

[கவுளி→கௌளி + சாத்திரம்.]

கௌளிபத்திரம் *kauḷi-pattiram*, பெ.(n.) வெள்ளை வெற்றிலை வகை; white betel-leaf.

[கௌளி = வெண்மை. கௌளி + பத்திரம்.]

கௌளிபாத்திரம் *kauḷipāttiram*, பெ.(n.) 1. மஞ்சள் நிறமான காய்கள் காய்க்குந் தெங்குவகை; a variety of coconut tree bearing yellow coconuts (Loc.). 2. தேங்காயோட்டினால் செய்யப்பட்டுத் துறவியர் நீர் அல்லது உணவுகொள்ளப் பயன்படுத்தும் ஏனம்; coconut shell used by ascetics as a begging bowl, water - vessel, etc.

[கௌளி = வெண்மை. கௌளி + பாத்திரம்.]

கௌனு *kauṉu*, பெ.(n.) 1. நடுப்பகுதி; middle. 2. நடுவு; centre. 3. இலைகளால் செய்த செருப்பு; a slipper made of leaves.

தெ. கவுனு, கௌனு.

[குள் → குவ் → கவ் → கவல் (பள்ளம், நடுக்குழி) → கவுல் → கவுன் (கவுள்) → கவுனு → கௌனு.]

பள்ளமான நடுப்பகுதியும், குழிந்த உள்ளங்காலுக்குப் பொருந்துமாறு பொருத்திக் கட்டிய இலைகளாலான மிதியடியும் கவுன் எனும் சொல்வடிவம் பெறலாயின.

ங

ங் *ṅ*, பெ.(n.) ஙகரத்தின் இனமெல்லெழுத்தாகிய பின்னண்ண மூக்கொலி மெய்யெழுத்து. தமிழ் நெடுங்கணக்கில் முப்பது முதலெழுத்துகளுள் ஒன்று; the velar nasal consonant related to the velar plosive by place of articulation, being one among the 30 primary alphabets of the Tamil language.

[ங் = ககரத்தின் இனமெல்லெழுத்து மெய்.]

ங[1] *ṅa*, பெ.(n.) ஙகர ஒற்று முன்னும் அகரவுயிர் பின்னுமாகப் பலுக்கப்படும் மெல்லின உயிர்மெய் யெழுத்தாகிய சார்பெழுத்து; the compound of ங்+அ, velar nasal vowel consonant being one among the secondary alphabets of the Tamil language. *"ஙப்போல் வளை" (ஆத்திசூடி).*

[ங்+அ – ங]

ஙகர உயிர்மெய்யெழுத்து வரிசையில் அனைத்து உயிர்மெய்யெழுத்துகளும் தமிழ்ச் சொல்லாட்சிகளில் இடம்பெறவில்லை. இவற்றுள் ங ஒன்றே வழக்கி லிருப்பினும் தமிழ் நெடுங்கணக்கில் உயிர்மெய் யெழுத்துகள் பதினெட்டும் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படுகின்றன. கற்பிக்குங்கால் எழுத்துக் கோவை இடைவீடு படலாகாது என்பதற்காக நெடுங் கணக்கில் பயன்பாடு நோக்காது பயிற்சி யொழுங்கு நோக்கிச் சேர்த்துக்கொள்ளப்பட்டன என மரபிலக்கண வல்லுநர் அமைதி கூறுவர். அதனாற்றான் ஔவை யாரும் பயன் கருதாது சுற்றந்தழுவ வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்த "ஙப்போல் வளை" என ஙகர வரிசைத் தழுவலை உவமைகாட்டி விளக்கினார்.

கல்லாதார் நாவில் திரிபடையும் சொற்களும், ஞாலத் தாய்மொழி காலத்திலிருந்து கிளைத்த உலகமொழிகளில் ஒலித்திரிபாகும் ஊடாட்டங்களிலும், தமிழில் பயன்கழிந்த ஙகர உயிர்மெய்யெழுத்தொலிகள் வழக்கூன்றலாம் எனும் கருத்தும் பண்டையோர் முடிபாகலாம்.

ங[2] *ṅa*, பெ.(n.) குறுணியைக் குறிக்கும் குறியீடு; symbol for a *marakkāl* or eight measures.

[ங்+அ–ங]

பண்டைய ஙகர வரிவடிவம் குறுணியைக் குறிக்கும் குறியீடாயிற்று.

கலம் என்னும் முகத்தல் அளவுக்குக் கீழளவு எண்களைத் தூணி, பதக்கு, குறுணி என்னும் வரிசையில் குறுணி மூன்றாம் அளவாக நிற்றலின் மூன்றைக் குறிக்கும். ஙகர வடிவு முகத்தல் அளவுக் குறியீடாகியிருக்கலாம்.

ஙகரம் *ṅagaram*, பெ.(n.) குறுணியளவு; (தைலவ.தைல.6); a measure of capacity = 8 *nāḻi* = 1 *kuṟuṇi*.

[ங + கரம் – ஙகரம் = ங எனும் உயிர்மெய்யெழுத்து.]

ஙகர உயிர்மெய்யெழுத்தின் வரிவடிவக் குறியீடு பழந்தமிழ்க் கணக்கு நூல்களில் குறுணியளவைக் குறிப்பதற் காக ஆளப்பட்டது. 8 நாழி – 1 குறுணி.

ஙனம் *ṅaṉam*, இடை.(part.) சுட்டெழுத்து வினா வெழுத்துகளையொட்டித் தன்மை இடம் முதலிய பொருள்களைத் தரும் இடைச்சொல்; suffix in the sense of place, manner, room, mode, ways used after the demonstrative particles அ,இ,உ,எ,யா as அங்ஙனம், etc.

[ங் + அனம் – ஙனம். 'அனம்' – 'கனம்' என்பதன் திரிபு ஈறு. அ+ஙனம்–அங்ஙனம் = அத்தன்மை. ஒ.நோ. நன்கனம்). அ+கண் – அங்கண் → அங்கணே (கொ.வ.) → அங்ஙனம் (அவ்விடம்). இவ்வாறு தன்மை, இடப்பொருள்களில் இச் சொல் ஆட்சி பெற்றது.]

இனி ஙகரம் மொழி முதலாவது குறித்து, "சுட்டியா வெகர வினாவழி யவ்வை ஒட்டி ஙவ்வு முதலா கும்மே" என நன்னூல் (106) கூறுவது கூர்ந்து நோக்கத்தக்கது. மூன்று சுட்டும் யா வினாவும் எகர வினாவுமாகிய இடைச்சொற்களின் பின், அகரத்தைச் சேர்ந்து ஙகர மெய்யும் சொல்லுக்கு முதலாகும்.

மூன்று சுட்டும் யாவினாவும் எகர வினாவுமாகிய இடைச்சொற்களின் பின் அகரத்தை யொட்டி ஙவ்வும் மொழிக்கு முதலாம்.

எ–டு. அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் எனவரும். இவற்றை அங்கு எங்கு என்றாற்போல

ஓருமொழிகள் என்றால் என்னையெனின் அஞ்ஞான்று, எஞ்ஞான்று என்பனபோலப் பிளவுபட்டு இடையே மெல்லொற்று மிக்கு வருதலின் தொடர்மொழிகளே யாமென்க.

ஙனமென்பது இடத்தினையும் தன்மை யினையும் உணர்த்தும் பலபொருள் ஒருசொல்லாய் வரினும், தனித்துவரும் தன்மையதன்றி முடவன் கோளூன்றி வந்தாற்போலச் சுட்டு வினாவாகிய இடைச்சொற்களை முன்னிட்டு வருதலான் வழி யென்றும், ஏனைய மெய்கள் போல முதலாகாமையின் அவ்வோ டென்னாது ஒட்டி என்றும் ஒருவாற்றான் முதலாதலின் இழிவுசிறப்பாக ஙவ்வுமென்று கூறினார். இங்ஙனம் கூறலான் ஙகரம் மொழிக்கு முதலாகாதென்பார்க்கு உடன்படலும் மறுத்தலுமாய்ப் பிறர்தம் மதமேற் கொண்டு களைவே யென்னும் மதம்படக் கூறினாரென்றுணர்க" எனச் சிவஞான முனிவர் நன்னூலில் உரை வகுத்துள்ளார்.

[அ + கணம் – அக்கணம் → அங்கணம் → அங்ஙனம் எனவும் அ + கண் – அக்கண் → அங்கண் → அங்ஙனம் எனவும் ககர முதற்சொற்கள் வருமொழியில் ஙகர முதற்சொற்களாகத் திரிந்திருத்தலின் ஙகரத்தைத் திரிபு முதலெழுத்து எனக் கொள்ளலாம்.]

ஙா[1] *ńā,* பெ.(n.) ஙகர ஒற்று முன்னும் ஆகாரவுயிர் பின்னுமாகப் பலுக்கப்படும் மெல்லின உயிர்மெய் யெழுத்தாகிய சார்பெழுத்து; the compound of ங்+ஆ, velar nasal vowel consonant being one among the secondary alphabets of the Tamil language.

[ங் + ஆ – ஙா.]

ஙா[2] *ńā,* பெ.(n.) 1. குழந்தையின் அழுகையொலி; weeping sound of a child. 2. குழந்தை மொழியில் பாலைக் குறிப்பால் உணர்த்தும் இங்கா என்னும் சொற்குறுக்க ஒலிப்புக் குறியீடு; symbolic sound of a child denoting the requirement of milk from mother.

[இங்கா → இங்ஙா → ஙா]

ஙாத்தாள் *ńāttāḷ,* பெ.(n.) எங்கள் ஆத்தாள் என்பதன் மரூஉ வழக்காகிய கடுங் கொச்சைச் சொல்; corrupted form of the compound word. எங்கள் + ஆத்தாள். lit. our mother.

[எங்கள் + ஆத்தாள் – ஙாத்தாள் (கொ.வ.).]

இத்தகைய கடுங்கொச்சை வழக்கு முற்றிலும் விலக்கத் தக்கது.

ஙி *ńi,* பெ.(n.) ஙகர ஒற்று முன்னும் இகரவுயிர் பின்னுமாகப் பலுக்கப்படும் மெல்லின உயிர்மெய் யெழுத்தாகிய சார்பெழுத்து; the compound of ங் + இ, velar nasal vowel consonant being one among the secondary alphabets of the Tamil language.

[ங் + இ – ஙி.]

ஙீ *ńī,* பெ.(n.) ஙகர ஒற்று முன்னும் ஈகாரவுயிர் பின்னுமாகப் பலுக்கப்படும் மெல்லின உயிர்மெய் யெழுத்தாகிய சார்பெழுத்து; the compound of ங் + ஈ, velar nasal vowel consonant being one among the secondary alphabets of the Tamil language.

[ங் + ஈ – ஙீ.]

ஙு *ńu,* பெ.(n.) ஙகர ஒற்று முன்னும் உகரவுயிர் பின்னுமாகப் பலுக்கப்படும் மெல்லின உயிர்மெய் யெழுத்தாகிய சார்பெழுத்து; the compound of ங் + உ, velar nasal vowel consonant being one among the secondary alphabets of the Tamil language.

[ங் + உ – ஙு.]

ஙூ *ńū,* பெ.(n.) ஙகர ஒற்று முன்னும் ஊகாரவுயிர் பின்னுமாகப் பலுக்கப்படும் மெல்லின உயிர்மெய் யெழுத்தாகிய சார்பெழுத்து; the compound of ங் + ஊ, velar nasal vowel consonant being one among the secondary alphabets of the Tamil language.

[ங் + ஊ – ஙூ.]

ஙெ *ńe,* பெ.(n.) ஙகர ஒற்று முன்னும் எகரவுயிர் பின்னுமாகப் பலுக்கப்படும் மெல்லின உயிர்மெய் யெழுத்தாகிய சார்பெழுத்து; the compound of ங் + எ, velar nasal vowel consonant being one among the secondary alphabets of the Tamil language.

[ங் + எ – ஙெ.]

ஙே *ńē,* பெ.(n.) ஙகர ஒற்று முன்னும் ஏகாரவுயிர் பின்னுமாகப் பலுக்கப்படும் மெல்லின உயிர்மெய் யெழுத்தாகிய சார்பெழுத்து; the compound of ங் + ஏ, velar nasal vowel consonant being one among the secondary alphabets of the Tamil language.

[ங் + ஏ – ஙே.]

ஙை *ńai,* பெ.(n.) ஙகர ஒற்று முன்னும் ஐகாரவுயிர் பின்னுமாகப் பலுக்கப்படும் மெல்லின உயிர்மெய் யெழுத்தாகிய சார்பெழுத்து; the compound of ங் + ஐ, velar nasal vowel consonant being one among the secondary alphabets of the Tamil language.

[ங் + ஐ – ஙை.]

ஙொ *ńo,* பெ.(n.) ஙகர ஒற்று முன்னும் ஒகரவுயிர் பின்னுமாகப் பலுக்கப்படும் மெல்லின உயிர்மெய் யெழுத்தாகிய சார்பெழுத்து; the compound of ங் + ஒ, velar nasal vowel consonant being one among the secondary alphabets of the Tamil language.

[ங் + ஒ – ஙொ.]

நொக்காள் *ṅokkāḷ*, பெ.(n.) உங்கள் அக்காள் என்பதன் மரூஉ வழக்காகிய கொச்சைச் சொல்; corrupted form of the compound word. உங்கள் + அக்காள். lit. your elder sister. நொக்காள் வந்தாளா? (நெல்லை.).

[உங்கள் + அக்காள் – நொக்காள் (கொ.வ.).]

இத்தகைய கடுங்கொச்சை வழக்குகள் முற்றிலும் விலக்கத்தக்கன.

நொண்ணன் *ṅoṇṇaṉ*, பெ.(n.) உங்கள் அண்ணன் என்பதன் மரூஉ வழக்காகிய கடுங் கொச்சைச் சொல்; corrupted form of the compound word. உங்கள் + அண்ணன். lit. your elder brother. நொண்ணன் எங்கே? (நெல்லை.).

[உங்கள் + அண்ணன் – நொண்ணன் (கொ.வ.).]

இத்தகைய கடுங்கொச்சை வழக்குகள் முற்றிலும் விலக்கத்தக்கன.

நொப்பன் *ṅoppaṉ*, பெ.(n.) உங்கள் அப்பன் என்பதன் மரூஉ வழக்காகிய கடுங்கொச்சைச் சொல்; corrupted form of the compound word. உங்கள் + அப்பன். lit. your father. நொப்பன் எங்கே? (நெல்லை.).

[உங்கள் + அப்பன் – நொப்பன் (கொ.வ.).]

இத்தகைய கடுங்கொச்சை வழக்குகள் முற்றிலும் விலக்கத்தக்கன.

நொம்மாள் *ṅommāḷ*, பெ.(n.) உங்கள் அம்மாள் என்பதன் மரூஉ வழக்காகிய கடுங்கொச்சைச் சொல்; corrupted form of the compound word. உங்கள் + அம்மாள். lit. your mother. நொம்மாள் எங்கே? (நெல்லை.இ.வ.).

[உங்கள் + அம்மாள் – நொம்மாள் (கொ.வ.).]

இத்தகைய கடுங்கொச்சை வழக்குகள் முற்றிலும் விலக்கத்தக்கன.

ஙோ *ṅō*, பெ.(n.) ஙகர ஒற்று முன்னும் ஓகாரவுயிர் பின்னுமாகப் பலுக்கப்படும் மெல்லின உயிர்மெய் யெழுத்தாகிய சார்பெழுத்து; the compound of ங் + ஓ, velar nasal vowel consonant being one among the secondary alphabets of the Tamil language.

[ங் + ஓ – ஙோ.]

ஙௌ *ṅau*, பெ.(n.) ஙகர ஒற்று முன்னும் ஔகாரவுயிர் பின்னுமாகப் பலுக்கப்படும் மெல்லின உயிர்மெய் யெழுத்தாகிய சார்பெழுத்து; the compound of ங் + ஔ, velar nasal vowel consonant being one among the secondary alphabets of the Tamil language.

[ங் + ஔ – ஙௌ.]

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

மூன்றாம் மடலம் - முதற் பாகம்

ச, சா

Vol. III - Part - I

பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை

தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு

2004

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

மூன்றாம் மடலம் - முதற் பாகம்

ச, சா

Vol. III - Part - I

பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை

தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மேற்பார்வையாளர்

முனைவர் **சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு

2004

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்கக வெளியீடு - 7

முதற் பதிப்பு : 2004

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. III, Part - I

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு

விலை : உருபா 300/-

குறியீட்டெண் : Colon No. P.J1-J, 314" K.M4

வெளியிட்டோர் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி-48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை - 600 040

அச்சீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி
சென்னை - 600 113

நூல் கிடைக்குமிடம் : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி
சென்னை - 600 113

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி-48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை - 600 040

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

Vol. III - Part - I

மூன்றாம் மடலம் - முதற்பாகம்

(ச முதல் சா வரை)

பதிப்புக் குழு

திரு. **பு.ஏ. இராமையா** இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை

திரு. **தா. சந்திரசேகரன்** இ.ஆ.ப.,
அரசு சிறப்புச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை
மற்றும்
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மேற்பார்வையாளர்

முனைவர் **சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

கூர்ந்தாய்வாளர்

புலவர் **த. சரவணத் தமிழன்**

தொகுப்பாளர்கள்

திரு. **முத்து. பிச்சை**
முனைவர் **மு. கண்ணன்**
முனைவர் பா. **வெற்றிச்செல்வன்**
முனைவர் **ச. செந்திலாண்டவன்**
முனைவர் **இரா.கு. ஆல்துரை** (பகுதிப்பொறுப்பாளர்)
திரு. **கா. இளமுருகு**
திரு. **ச.கி. கணேசன்** (ஓவியர்)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

ஜெ ஜெயலலிதா

முதலமைச்சர்

வாய்மையே வெல்லும்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009.

நாள் 22.12.2004

அணிந்துரை

'ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம் ஒவ்வொன்றும் உன் முன்னேற்றம்' என்னும் வைர வரியில் தமிழின் முன்னேற்றமே தமிழர் முன்னேற்றம் என்பதை எடுத்துக் காட்டினார் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்.

பாவேந்தர் பணித்தபடி, ஒல்லும் வகையில் எல்லாம் அந்த ஒண்டமிழை வளர்க்க உற்ற பணி புரியும் நற்றமிழ் அரசே தமிழ் நாடு அரசு.

காலத்தை வென்று நிற்கும் நம் கன்னித் தமிழை இந்திய அரசின் ஆட்சி மொழியாக ஆக்குவதற்கும், உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழியின் ஒப்பற்ற இலக்கியமாகவும், உலக சிந்தனையின் உச்சமாகவும் விளங்கும் திருக்குறளைத் தேசிய இலக்கியமாக ஆக்குவதற்கும், இடையறா முயற்சிகளை எடுத்து வருகிறது எனது அரசு. அனைத்து மாணவரும் தமிழைப் பயில வேண்டும் என்பதற்காக மழலையர் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை அறிவியல் தமிழைக் கற்பிக்க ஏற்பாடு செய்ததும் எனது அரசே.

வளர்ந்து வரும் அறிவியலுக்கு ஈடு கொடுக்கும் வகையிலும், இலக்கண இலக்கிய மரபுகளைப் பேணிக் காக்கும் முறையிலும் மொழியின் சொல்வளத்தை அறிந்து கொள்வதும், பெருக்குவதும் இன்றியமையாததாகும். இப் பயன்பாட்டு நோக்கில் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி' (A comprehensive Etymological Dictionary of Tamil Language) நூல்களை உருவாக்கும் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது. இப் பணியின் தனித் தன்மை கருதி, பன்மொழிப் புலமையும், ஆய்வு நுட்பமும், தமிழ்ப் புலமையும், ஒருங்கே அமையப் பெற்றிருந்த மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களை இயக்குநராகக் கொண்டு இத் திட்டம் தொடங்கப்பட்டது. பைந்தமிழ் அறிஞர் பாவாணர் அவர்கள் 'தனித் தமிழ் இயக்கம்' கண்ட மறைத்திரு மறைமலை அடிகளார் வழியில் தமிழ் ஆய்ந்து தமிழே உலக முதன்மொழி என்பதை உலகுக்கு உணர்த்தியவர் ஆவார்.

அவர் தொடங்கி வைத்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம், அருந்தமிழின் வளர்ச்சிக்கு அடிப்படையான தலையாய பணிகளில் ஒன்றாகும் என்பதைக் கருத்திற் கொண்டு எனது அரசு இத் திட்டத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. இத் திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 6 பகுதிகள் மட்டுமே முடிக்கப்பட்டிருந்தன. இவற்றில் 'அ' முதல் 'ஔ' வரையிலான எழுத்துக்களில் அமையும் சொற்கள் பற்றிய விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. தற்பொழுது 'ச' வரிசையில் மூன்று பகுதிகளும் 'த' வரிசையில் மூன்று பகுதிகளும் ஆக மேலும் 6 பகுதிகள் முடிக்கப்பட்டு வெளியிடப் பெறுவதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழோடு இந்த யுகத்தின் நான்காவது தமிழாகிய 'அறிவியல் தமிழ்' வளர, அறிவியலைத் தமிழில் கூறுவதற்கான சொற்களைக் கண்டறிய வேண்டியது இன்றியமையாததாகும். அதற்காக ஏற்கெனவே தமிழில் உள்ள சொல்வளத்தை அறியவும், புழக்கத்தில் இல்லாத சொற்களைப் புதுப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும், புதிய சொற்களை உருவாக்கவும், சொற்களின் வேர்களை ஆராய்ந்து புதியன படைக்கவும் இன்றைய தமிழ் வளர்ச்சியின் உடனடித் தேவையை நிறைவு செய்வதாக செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி நூல் மடலங்கள் அமைகின்றன.

இம் மடலங்கள் தமிழின் அழிவிலாச் சொத்தாக விளங்கும் என்பது உறுதி.

இப் பகுதிகள் வெளிவர அயராது உழைத்த அறிஞர் பெருமக்களையும், அலுவலர்களையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

வாழ்க தமிழ்!
வளர்க தமிழ்ப் பணி!

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
டாக்டர் செல்வி ஜெ ஜெயலலிதா

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

சி.வி. சண்முகம்
கல்வி மற்றும்
வணிக வரித்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை 600 009

அணிந்துரை

"ஒரு மொழிக்குட்பட்ட சொற்களை ஆராயும் சொல்லாராய்ச்சியும் பல மொழிகளை ஒப்பு நோக்கும் மொழியாராய்ச்சியும் மேனாட்டாரிடமிருந்து நாம் அறிந்தவை.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே **(தொல்.சொல்.எச்.1)**

என்று தொல்காப்பியர் காலத்திலேயே சொல்லாராய்ச்சியும் மொழியாராய்ச்சியும் ஓரளவு தமிழ்நாட்டிலிருந்ததேனும் விரிவான முறையிலும், நெறிப்பட்ட வகையிலும் சொன்னூலும் (Etymology), மொழிநூலும் (Philology) நாம் பெற்றது மேலையரிடமிருந்தே". இது, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் தம் சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் என்ற நூலைச் சேலத்திலிருந்து 1948-இல் வெளியிட்டபோது, அந்நூலில் அவரே எழுதிய முகவுரை. ஆகப் பல்லாண்டுகளாகச் சொல்லாராய்ச்சியிலேயே தம்மை ஆட்படுத்திக் கொண்டு, நுணுகி நுணுகித் துருவித் துருவிப் பார்த்ததன் தெள்ளிய வெளிப்பாடுதான் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி. அதன் வாயிலாகத் தமிழின் சொல்வளத்தை நாம் அறிகின்றோம். அத்துடன் நில்லாது தொன்றுதொட்டு இன்று வரையுமுள்ள பண்பாடு, நாகரிகம், வரலாறு ஆகியவற்றையும் அறிய முடிகிறது.

தமிழ் பிறமொழியின் கலப்பில்லாமல் தனித்தியங்கும் ஆற்றலுடைய தன்னிகரில்லா மொழி என்று உலக மொழியறிஞர்களெல்லாம் ஒப்புக் கொள்கின்றனர். செந்தமிழின் நீண்ட நெடிய சொல்வள வரலாற்றில் சொல்லும் பொருளும் பெருகியுமுள்ளன; அருகியுமுள்ளன! வழக்கிழந்த சொற்களை மீட்பதற்கும், அனைத்துச் சொற்களையும் காப்பதற்கும் அகரமுதலிகள் இன்று வழிவகுக்கின்றன.

இலக்கியச் சொல்லாட்சிகள் முதலாக இன்றைய பேச்சு வழக்குச் சொல்லாட்சிகள் ஈறாக அனைத்தையும் உள்ளடக்கிச் சொற்களின் வடிவம், பொருள், பிறப்பு போன்றவை பற்றிய தேவையான செய்திகளுடன் விளக்கமுற உரைப்பவையாக இருப்பவையே செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் மடலங்கள்.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூற்றாண்டு விழா கண்ட நம் **புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்களின் சீரிய தலைமையில் அமைந்த அரசு, அவரின் தனித்தமிழ்ப் பற்றினைப் பேணிக் காத்திடவும், அவர் காட்டிய நெறிமுறைகளின்படி அகரமுதலி மடலங்கள் வெளிவரவும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்று இந்தியாவிலேயே தலைசிறந்த முதன்மை மாநிலமாக மாற்றிடச் சூளுரைத்துச் செயற்பட்டு வரும் **புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்களின் சீரிய வழிகாட்டுதல்படி தமிழக அரசு முனைந்து பீடுநடை போடுகின்றது.

'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் எஞ்சிய பகுதிகள் யாவும் நான்காண்டுக்கால வரம்பெல்லைக்குள் வெளிக்கொணரப்படும்' எனச் சட்டப்பேரவையில் அறிவித்தபடி 'ச'கர மடலத்தின் 3 பகுதிகளும், 'த'கர மடலத்தின் 3 பகுதிகளும் இப்போது ஒருசேர வெளிவருவது, மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். முன் எப்போதும் இல்லாதவாறு 6 பகுதிகள் ஒருசேர முடிக்கப்பெற்று வெளியிடப்பெறுவது அருஞ்சாதனையே! அதற்கு முதற்காரணம் நம் **புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்களே என்பது மறுக்க முடியாத உண்மை. 6 பகுதிகள் சீரிய முறையில் வெளிவர அரும்பங்காற்றிய தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திரு. பு.ஏ. இராமையா இ.ஆ.ப., அவர்களுக்கும், அகரமுதலித் திட்டப் பொறுப்பு இயக்குநர் திரு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப., அவர்களுக்கும், அகரமுதலி மேற்பார்வையாளர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், கூர்ந்தாய்வுப் புலமையாளர்களுக்கும் மற்றும் அகரமுதலித் தொகுப்பாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுகள். இதேபோல மற்றப் பகுதிகளையும் விரைந்து முடித்து வெளியிடத் தொடர்ந்து பாடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

31.8.04

சென்னை

சி.வி. சண்முகம்
கல்வி மற்றும்
வணிக வரித்துறை அமைச்சர்

பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்

தமிழ் வளர்ச்சி-பண்பாடு
(ம) அறநிலையத்துறை
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

அணிந்துரை

**"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முன்தோன்றி மூத்த குடி"** (பு.வெ.மாலை)

என்று தமிழ்க்குடி பாராட்டப்பெறும். அவ்வகையில் எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந்தமிழணங்கின் சீரிளமைத்திறம் வியந்து தம்முடைய வாழ்நாள் பணியாகச் சொல்லாராய்ச்சியை மேற்கொண்டவர் மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள்.

முதல் மாந்தன் தோன்றிய இடம் குமரி; உலக முதன் மொழி தமிழ். என்ற கோட்பாட்டில் திளைத்து, அக்கோட்பாட்டின் அடிப்படையில் தம் ஆராய்ச்சியை அமைத்து முதன்மொழியாகிய தமிழின் சொற்பிறப்பாய்வைத் துருவித்துருவியாய்ந்து மிகத் துல்லியமாக வேர் விளக்கம் கண்டவர் பாவாணரே.

இப்பெருமகனாரைப் போலத் தனித்தமிழ் ஆய்வுக் கருத்துகளை இதுவரை எந்தவோர் அறிஞரும் வழங்கிடவில்லை; பெருஞ்சித்திரனார் கூறுவதைப்போலத் "தமிழ்த் துறைக்கு அவர் தொண்டு புதியது; தமிழர்க்கு அவர் கருத்துகள் மயக்கறுப்பன; மேனாட்டார்க்கு அவர் நூல்கள் வியப்பளிப்பன; அவர் எடுத்துக் கொண்ட முயற்சி அரியது. தொல்காப்பியர் காலத்திற்குப் பின் தமிழ் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும் ஒட்டுமொத்த முயற்சிக்குப் பாவாணர் என்றே பெயரிடலாம்". இவ்வுரைக்கு ஏதும் மறுப்புரையுண்டோ?

**"கதிர்தரு ஒளியென மொழிதரு மலையே!
முதிர்முகி லெனவே வேர்பொழி விளைவே
தமிழ்ச்சுட ரணிதலைப் பாவா ணர்தான்
தமிழ்மகள் பெறுதவப் பேரறிவாளன்!**

வேர்ச்சொல் லாய்வின் வித்தகன்! மொழியின்
போர்ப்படைத் தலைவன்! புலமைப் புதையல்!
தலைவ! நீதரும் ஒளியே பாதை
விலைமதிப் பில்லா வெற்றியைத் தருமே!"

என்றொரு பாவலர் பாடியதற்கேற்பப் பாவாணர் பெரும்புகழ் பெற்ற அமுதப்படையல்!

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி 12 மடலங்களில் 31 தொகுதிகளாக வெளியிடத் திட்டமிடப்பட்டதாகும். கடந்த 28 ஆண்டுகளில் 6 தொகுதிகள் மட்டுமே வெளிவந்துள்ள நிலையில், சுணக்கமுற்றிருந்த அகரமுதலித் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதுத்தெம்பு ஊட்டியதன்விளைவாய், எஞ்சிய 25 தொகுதிகளை நான்காண்டுக் கால வரம்பெல்லைக்குள் வெளிக்கொணரப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. அதன் வெளிப்பாடே இப்போது 'ச' மற்றும் 'த' மடலங்களின் 6 தொகுதிகள் ஒருசேர வெளிவருகின்றன. இது ஓர் அரும்பெருஞ் செயல் என்றால் மிகையாகாது.

இத்தொகுதிகளில் காட்டப்பெறும் தமிழ்ச் சொற்களின் விரிவும் விளக்கமும் நம்மை வியப்பிலாழ்த்துகின்றன. எடுத்துக்காட்டிற்கு ஒன்றிரண்டினைக் குறிப்பிட விரும்புகிறேன்.

'ச'கர மடலத்தின் முதற்பகுதியில் (ச, சா) வரும் **'சக்கரம்'** என்ற சொல்லிற்கு 27 வகையான பொருள் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாது இலக்கிய மேற்கோள்களும் வேர் விளக்கமும் அருமையாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

சருக்கு - சருக்கரம் - சக்கரம் (வே.க. 239)

அதேபோல் **'சத்தம்'** என்ற சொல்லுக்கான விளக்கமும் அருமை.

சாத்து = பண்டங்களைக் கொண்டு விற்கும் வணிகர் கூட்டம். சாத்துவண்டிக்குக் கொடுக்கும் கூலி சாத்தம் எனப்பட்டது. வண்டிச்சாத்தம் = வண்டிக்கூலி. சாத்தம் - சத்தம் ஆயிற்று.

அடுத்து, இரண்டாவது தொகுதியில் (சி-சூ), 'சிலை' என்ற சொல்லிற்குக் காட்டப்பட்டுள்ள விளக்கம் அழகுற அமைந்துள்ளது. 'சீரகம்' என்ற சொல்லிற்குப் பொருள் - வேர் விளக்கம் - விரிவுப் பொருள் காட்டியிருப்பது திகைக்க வைக்கிறது.

சீர் - சீரம் - சீரகம்

உலகில் முதன்முதலாகச் சிறந்த முறையில் சமையல் தொழில் தொடங்கியதும் அதற்குச் சீரகத்தைப் பயன்படுத்தியதும் தமிழகமே! என்பதற்குச் சான்றுகள் பல உள.

"சிறுபிள்ளை இல்லா வீடும், சீரகம் இல்லாத கறியும் செவ்வையாயிரா" என்பது தொன்று தொட்டுவரும் பழமொழி.

சீரகக்கோரை, சீரகச்சம்பா, சீரகவள்ளி என்பன ஒப்புமை பற்றிப் பெயர்பெற்ற நிலைத் திணை வகைகள். பொன்னளவையிற் சீரகம் என்பது ஓர் அளவு.

5 கடுகு = 1 சீரகம்; 5 சீரகம் = 1 நெல்

"அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுதலாகி
உளவெனப் பட்ட வொன்பதிற்றெழுத்தே
அவைதாம்
கசதப வென்றா நமவ வென்றா
அகர உகரமோ டவையென மொழிப" (தொல்.எழுத். 170)

என்னும் தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பா உரையில் கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை என்று இளம்பூரணரும், 'கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை, இவை நிறை' என்று நச்சினார்க்கினியரும் கூறியிருத்தலையும் நோக்குக.

செரி - செரியகம் - சீரகம்

என்றுமாம். வடவர் மூலம் காட்டும் வகை. ஜீரக - ஜீரண; ஜ்ரு - ஜீரண, ஜ்ரு - கிழமாக்கு, கட்டுக்குலை, கரை, செரிக்கச் செய். ஜ்ரு என்பது கிழ என்னும் தென்சொற்றிரிபே (வ. மொ. வ.153).

அடுத்து, மூன்றாம் தொகுதியில் (செ - சௌ) 'செம்பியன்' என்ற சொல்லின் பொருள் விளக்கம் சிறப்புடையதாயிருக்கின்றது. அதைப்போலச் 'செஞ்சம்' என்ற சொல்லுக்கு அளிக்கப்பட்டுள்ள பொருள் விளக்கமும் சிறப்பாயுள்ளது. செஞ்சு - செம்மை, செவ்வை, நிறைவு, செஞ்சு - செஞ்சம்.

அடுத்து, 'த்'கர மடலத்தின் முதற் தொகுதியில் (த, தா) 'தமிழ்' என்ற சொல்லுக்குக் காட்டப்பெற்றிருக்கும் விளக்கம் விரிவானதாகவும் பொருத்தமானதாகவும் நுட்பமானதாகவும் அமைந்துள்ளது. அதைப்போலத் 'தா' என்னும் சொல்லுக்கும் அருமையான விரிவான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது, 'தா' என்ற சொல் தந்தை என்பதனையும் குறிக்கும் என்று நிறுவியிருப்பது ஆராய்ச்சியாளரின் சான்றாண்மையைக் காட்டுகிறது.

அதே மடலத்தின் இரண்டாவது தொகுதியில் (தி-தூ) 'திறம்' என்ற சொல்லுக்கும், 'துடி' என்ற சொல்லுக்கும் தரப்பட்டுள்ள விளக்கங்கள் பயனுடையவையாகும்.

மூன்றாவது தொகுதியில் (தெ-தௌ), 'தெரு' என்னும் சொல்லின்கீழ், முடுக்கு சிறுசந்து; சந்து தெருவின் கிளை; தெரு சிறுவீதி; மறுகு போக்குவரத்து மிகுந்த பெருந்தெரு அல்லது வீதி; ஆவணம் கடைத்தெரு; அகலுள் அகன்ற மறுகு; சாலை பெருவழி; சந்தி மூன்று தெருக்கள் கூடுமிடம்; சதுக்கம் நான்கு தெருக்கள் கூடுமிடும் என்ற வகையில் பதிவு செய்துள்ளமை பாராட்டுக் குரியதாகும்.

அடுத்து, 'தொல்காப்பியர் காலம்' என்னும் தலைப்பின்கீழ்க் காட்டப்பட்டுள்ள சான்றுகள் ஆய்வாளர்களுக்கு மிக்கப்பயனுடையனவாகும். இந்த ஆறு தொகுதிகளிலும் தேவையான சொற்களுக்குப் பொருத்தமான பட விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருப்பதும் அழகுக்கு அழகு சேர்ப்பதாயுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டப்பணிகள் விரைந்து நடைபெற பலவகையிலும் பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களுக்கும், **மாண்புமிகு கல்வி அமைச்சர்** அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு அறிவித்தவண்ணம் 6 தொகுதிகளை ஒருசேர அணியமாக்கி வெளியிடும் பணியைச் சிரமேற்கொண்டு செவ்விய முறையில் வெளிவர அரும்பணியாற்றிய தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அரசு சிறப்புச் செயலாளரும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் **திட்டப்பொறுப்பு இயக்குநருமான திரு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும், அகரமுதலி மேற்பார்வையாளராகச் செயற்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், அகரமுதலித் திட்டப் பணியாளர்கள் மற்றும் கூர்ந்தாய்வுப் புலமையாளர்களுக்கும் எனது மனமுவந்த பாராட்டுகள். பாராட்டுகளைப் படிக்கற்களாகக் கொண்டு தொடர்ந்து நன்கு உழைத்து எஞ்சிய தொகுதிகள் அனைத்தையும் அரசு விரும்பிய வண்ணம் வெளிக்கொணர வேண்டுமென விழைகிறேன்.

சென்னை **பு.ஏ. இராமையா**

23-10-2003 **அரசு செயலாளர்**

தா. சந்திரசேகரன், இ.ஆ.ப.
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
சென்னை - 600 008

பதிப்புரை

வடமொழியும் இந்தியும் மற்றும் வடக்கிற்
படுமொழிகள் என்ற பலவும் - தடவியே
அந்தமிழே ஆதியெனுந்தேவ நேயர்தாம்
எந்தமிழர் எல்லார்க்கும் வேந்து

என்று, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் ஆய்வைக் கண்டு, அவரை நெஞ்சாரப் பாராட்டினார் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனார்.

தமிழின் பழமையான நிலையை ஞால முதன்மொழி, திராவிடத்திற்குத் தாய், ஆரியத்திற்கு மூலம் என்னும் முப்பெரும் தன்மைகளோடு வகுத்துக் கொண்டு விளக்குவார் மொழிஞாயிறு பாவாணர் அவர்கள். இயல்பாகத் தோன்றிய இயன்மொழியாகிய தமிழுக்கு

தொன்மை இயன்மை தூய்மை தாய்மை
முன்மை வியன்மை வளமை மறைமை
எண்மை இளமை இனிமை தனிமை
ஒண்மை இறைமை அம்மை செம்மை

என்னும் பதினாறு தன்மைகளும் வாய்த்துள்ளன என ஏத்திப் புகழ்ந்தவர் மொழிஞாயிறு பாவாணர் அவர்கள்.

உலகின் பழம்பெரும் மொழிகளான இலத்தீனம், கிரேக்கம், வடமொழி, ஈப்புரு, சீனம் ஆகியவற்றைக் காட்டிலும் பழமைத் தன்மைகள் பலவற்றைக் கொண்டது தமிழ் என்று உலக அறிஞர்களும் ஒப்புக் கொள்கின்றனர். கால்டுவெல் என்னும் மேலைநாட்டறிஞர், ''தமிழ் திராவிடக் குடும்ப மொழிகளுள் முதலில் திருந்திய தன்மை எய்திய மொழி; இத்தமிழ்மொழி மிகச் சிறந்த சொல்வளம் நிறைந்த மொழி; இம்மொழி ஐயத்திற்கு இடமில்லாமல் வளப்பம் மிக்க பழமையான வடிவங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது; இது திராவிடக் குடும்பத்திற்குத் தலைமை இடத்தில் வைத்தெண்ணும் தகுதிப்பாட்டினைக் கொண்டது'' என்று தம்முடைய ''திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ள திறம் எண்ணிப் பெருமைப்படத்தக்கதாம். மேலும், ''சில திராவிடக் குடும்ப மொழிகள் வட இந்தியாவில் இன்றளவும் பேச்சு மொழியாக இருப்பதையும், கிழக்கு பலுச்சித்தானத்தில் திராவிட இனமொழியான 'பிராகுவி' வழங்கி வருவதையும் கொண்டு, இந்தோ ஐரோப்பிய மொழி பேசுவோர் இந்தியாவிற்குள் வருமுன் கி.மு.2000 இறுதி வரை இந்தியா முழுமையும் திராவிட மொழி பேசப்பட்டு வந்தது. இதுவே இந்நாட்டிற்குறிய மொழியினமாகும் என்று மேனாட்டறிஞர் சார்லஸ் பிலிப் பிரௌன் கூறும் கருத்தை வலியுறுத்தும் பாவாணர், பழமையான இலக்கிய இலக்கணங்களைக் கொண்ட தமிழின் தன்மை, தென்னாட்டின் தென்கோடியில் தூய்மையுடன் வழங்குவதையும் அது வடக்கே செல்லச் செல்லத் திரிபுற்று வழங்குவதையும் வடமொழித் திரவிடம் (வடுகு), வடதிரவிடம் (பிராகிருதம்), கீழையாரியம், வேதமொழி, சமஸ்கிருதம் என்று

ஐந்நிலைப்படுவதையும் காட்டித் தமிழ் ஆரியத்திற்கு மூலம் என்னும் கோட்பாட்டினைத் தம் நூல்களில் நன்கு விளக்கிக் காட்டுகிறார்.

சொற்களுக்குரிய வேர் விளக்கம் காணுவதோடு மட்டும் நில்லாது, தமிழில் வழங்கும் அயற்சொற்களை இனம் பிரித்துக் காணும் முறையைக் காட்டிய சிறப்புக்குரியவரும் பாவாணரே. இது போன்றே அயன் மொழிச் சொற்களாகக் கருதப்பட்டு வந்தவற்றுள் பல தமிழ்ச் சொற்களாக இருப்பதன் உண்மையை உணர்த்திய மேன்மைக்கு உரியவரும் அவரே. பாவாணரது ஆய்வு நெறியைத் தழுவிச் சொற்களுக்கு வேர் விளக்கம் காட்டப்படுவதால் இயன்மொழிச் சொற்களின் மாண்பினை எடுத்துரைப்பதாக இப்பேரகரமுதலி திகழ்கிறது.

மொழியில் இருவகை மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஒன்று சிக்கனம், ஒப்புமை போன்ற அகக் காரணங்களால் நிகழ்வது. அரசியல் தாக்கம், குமுகாயப் புரட்சி, வேற்று நாட்டவர் படையெடுப்பு போன்ற புறக்காரணங்களால் நிகழ்வது மற்றொன்று. இவ்விருவகை மாற்றங்களையும் கண்டறிந்து விளக்குவதற்கு இவ்வகரமுதலி முயலுகிறது. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், பேரகரமுதலி வெளியீடுகள் வரிசையில் தற்போது மூன்றாம் மடலத்தின் முதற் பகுதி (ச-சா)யை வெளியிடுகிறது. இப்பகுதியில் அரிய சொல் விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

'சக்கரம்' என்ற சொல்லிற்கு 27 பொருள்களும், அப்பொருள்களுக்கேற்ற மேற்கோள்களும் ஏற்றவிடங்களில் கூறப்பட்டுள்ளன. வேர் விளக்கமும் பாவாணரின் வேர்ச்சொற் கட்டுரையிலிருந்து எடுத்தாளப் பெற்றுள்ளது. 'சக்கிலி' என்னும் ஓர் இனத்தைக் குறிக்கும் சொல் வரலாறு, பாவாணரின் ஒப்பியன் மொழி நூலிலிருந்து எடுத்துக்காட்டப்பெற்றுள்ளது.

சங்கின் வேர் வரலாறும், சங்கின் வகைகளும் இனிதே காட்டப்பெற்றுள. 'சட்டம்' என்ற சொல்லின் பொருள் விளக்கமும் வேர்விளக்கமும், 'சட்டை' என்ற சொல் வழக்கும் இந்த அகரமுதலிப் பகுதியில் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன. இவை மட்டுமன்றி அரிய வகை உயிரிகளின் பெயர்களும் (எ-டு: சவரிமான்). நிலைத் திணைப் பெயர்களும் (எ-டு: சாம்பல் மாவி), பாவாணர் படைத்தாண்ட சொற்களும் (எ-டு: ஆகமம் = தோன்றியம்) ஆங்காங்கே காட்டப்பெற்றுள.

பேரகரமுதலியின் எஞ்சிய மடலங்கள் யாவற்றையும் நிறைவாகவும், விரைவாகவும் கொண்டு வருதல் வேண்டுமென்னும் முனைப்பான செயலுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து எங்களை வழிநடாத்தும் **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களுக்கு எங்கள் துறையின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துறையின் சிந்தனையூக்கத்திற்கும் செயலாக்கத்திற்கும் தக்காங்கு நெறிகாட்டும் **மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செம்மலை** அவர்களுக்கும், ஒப்புரவு தரும் தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திரு. **பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,** அவர்களுக்கும் அகரமுதலி மேற்பார்வையாளராகப் பணியாற்றிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும் மிகவும் நன்றிக் கடப் பாடுடையேன். மேலும், இந்த மூன்றாம் மடல முதற்பாகம் வெளிவருவதற்கு முன்னின்றுழைத்த அனைத்து அறிஞர் பெருமக்களையும், அலுவலர்களையும் உளமாரப் பாராட்டுகிறேன்.

சென்னை **தா. சந்திரசேகரன்**
15-10-2003

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

மூன்றாம் மடலம் - முதற் பாகம்

ச, சா

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ச

ச் *c, தமிழ் நெடுங்கணக்கில் மூன்றாம் மெய்யெழுத்து;* the third consonant in Tamil, being the palatal voiceless stop.

ச *ca / ša, 'ச்'கர மெய்யும் 'அ'கர உயிரும் சேர்ந்த உயிர்மெய் யெழுத்து;* syllable formed by adding the short vowel 'a' to the consonant 'c' / 'š'.

[ச் + அ]

"சகரம் மொழி முதல் வாராதென்று கூறுவது தமிழுக்குச் சற்றும் பொருந்தாது. "அ ஐ ஔ எனும் மூன்றலங் கடையே" *(தொல். எழுத்து. மொழி. 62)* என்னும் தொல்காப்பிய நூற்பா அடிக்கு 'அவை ஔ எனும் ஒன்றலங்கடையே' என்ற பாட வேறுபாடும் உள்ளது. சக்கட்டி, சக்கை, சகடு, சகதி, சங்கு, சட்டென, சட்டம், சட்டகம், சட்டி, சட்டை, சடசட, சடை, சடைவு, சண்டி, சண்டு, சண்டை, சணல், சதுப்பு, சப்பட்டை, சப்பென்று, சப்பாணி, சப்பு, சப்பை, சம்பு, சம்மட்டி, சமட்டு, சமம், சமழ், சமை, சரடு, சரள், சரி, சருகு, சருக்கரை, சரேல்என, சல்லடை, சல்லரி, சல்லி, சலசல, சலங்கை, சலி, சவ்வு, சவம், சவர், சவை, சழக்கு, சள்ளென, சள்ளை, சளக்கென, சளி, சளை, சற்று, சறுக்கு, சன்னம் முதலிய நூற்றுக்கும் மேற்பட்ட தனித்தமிழ்ச் சொற்கள் அடிப்படையானவும் தொன்றுதொட்டனவும் இன்றியமையாதனவும் வேரூன்றினவும் சேரி வழக்கினவுமாயிருக்க, அவற்றைப் பிற்காலத்தினவென்று கொள்ளுவது பெருந்தவறாகும். சக்கை, சட்டி, சண்டு, சண்டை, சதை, சப்பு, சவி, சற்று, சறுக்கு முதலிய சொற்கள் எத்துணை எளிமையும் இயல்புமானவை என்பது சொல்லாமலே விளங்கும். சண்டு, சருகு முதலிய பல சொற்கள் சகர முதலினவாய் இருந்திருத்தல் கூடுமெனினும் சக்கு, சடாரி, சடேர், சரட்டு, சலசல, சரேல், சவ்வு, சள், சளக்கு, சளார் முதலிய ஒலிக்குறிப்புச்சொற்களும் அவற்றினடிப் பிறந்தனவும் துவக்கந்தொட்டுச் சகர முதலனவாயே இருந்திருத்தல் வேண்டும். சாப்பிடு என்னும் உலகவழக்கெளிமைச் சொல் சப்பு என்னும் மூலத்தினின்று தோன்றியதாகும். சப்பு + இடு - சப்பிடு → சாப்பிடு. சுவை என்னும் சொல்லும் சவை என்பதன் திரிபாகவே தோன்றுகின்றது. செத்தான் என்னும் இறந்தகால வினைமுற்று பண்டைக்காலத்தில் சத்தான் என்றே இருந்திருத்தல் வேண்டும்.

ஒநோ: காண் → கண்டான். நோ→ நொந்தான். நெடில் முதலான வினைப் பகுதி இறந்தகால முற்றில் முதல் குறுகும்போது இனக்குறிலாய்க் குறுகுவதே மரபு; தெலுங்கிலும் சச்சினாடு (செத்தான்) சச்சிப் போயினாடு (செத்துப் போனான்) என்றே சொல்வர். மேலும் "முழுமுதல் அரணமும்" *(தொல். பொருள். புறத். 10)*, "வருபகை பேணார் ஆரெயிலும்" *(தொல்.பொருள்.புறத். 12)*, அமைத்துக்கொண்ட தொல்காப்பியர்காலத் தமிழர், சட்டி செய்யத் தெரியாதிருந்தனர் என்பது, பெருநகைக்கு இடமானதாகும். சட்டி என்பது, சமையலுக்கு இன்றியமையாததும் எளிநிலையானதும் மறுபெயரற்றதுமான கலவகை.

"சரிசமழ்ப்புச் சட்டி சருகு சவடி
சளிசகடு சட்டை சவளி - சவிசரடு
சந்து சதங்கை சழக்காதி ஈரிடத்தும்
வந்தனவாற் சம்முதலும் வை"

என்பது நன்னூல் மயிலைநாதருரை மேற்கோள்." *(தொல். எழுத்து. மொழிமரபு. பாவாணர் அடிக்குறிப்பு).*

மொழிமுதல் சகரம் மறைவது, பலசொற்களில் உண்டென்று, இற்றை மொழியியலாளர் கருதுகின்றனர். அவ்வடிப்படையிலேயே உப்பு, ஏர் என்னும் சொற்கள் சுப்பு, சேர் என்னும் சொற்களினின்று உருவாகின எனக் கருதுகின்றனர். ஆயினும், அவை → சவை

போன்ற சொற்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது சகரச்சேர்ப்பு உண்டென்று கூறுவது பொருத்தமுறும். அமைதல் = பொருந்துதல், கூடுதல், நிலைதல். அவை = கூட்டம். அவை → சவை. ஒ.நோ.: அமை → சமை.

இவ்வாறே ஏமம் → சேமம். ஆலை → சாலை, ஏணி → சேணி, ஊசி → சூசி, ஆயிரம் → சாவிரம் (கன்னடம்) போன்றன சகரச் சேர்ப்புடன் கூடித், தமிழிலும் தமிழ் இனமொழிகளிலும் வழக்கூன்றியுள்ளன. இவை வடமொழியில் முறையே kṣēma, šālā, šrēṇi, šūcī, šahasra எனத் திரிந்துள்ளன.

ஆவம் (வில் நாண்) → Skt. cāpa (வில்); Pkt. cāv.

அரண், அரணம் (காப்பு, கோட்டை) → Skt. šaraṇa (புகலிடம்)

ஆலை, சாலை → Skt., Pkt. sālā

ஐயவி (வெண்சிறுகடுகு) → Skt. sarspa

இவ்வடிப்படையிலேயே உப்பு, ஏர் என்பன முறையே சுப்பு, சேர் என மாற்றம் பெற்றுள்ளன எனக் குறித்தல் பொருத்தமுடையதாம்.

"ஊசி என்னும் சொல் தமிழ்ச் சொல் என்பது அதன் பொருட்காரணத்தால் மட்டுமன்றி, ஊசிக்கண் (சிறுகண்), ஊசிக்களா (முள்ளுக் களா), ஊசிக்காது (நுணித்துக் கேட்குஞ்செவி), ஊசிக்காய், ஊசிக்காரர், ஊசிச்சம்பா, ஊசித் தூற்றல், ஊசிப்பாலை, ஊசிப்புழு, ஊசி மல்லிகை, ஊசிமிளகாய், ஊசி முல்லை, ஊசிவேர், குத்தூசி, துன்னூசி, தையலூசி, முதலிய பெயர் வழக்குகளாலும் அறியப்படும். மேலும் வடமொழியிலுள்ள சூசி என்னுஞ் சொல் siv (to sew) என்னும் வேரினின்று பிறந்ததாகக் காட்டப்படுவது. ஊசி என்னும் தென் சொல்லோ குத்துவது என்று பொருள் படும் உள் என்னும் வேரினின்று உள்→உளி→ உசி→ஊசி என ஒழுங்காகத் திரிந்திருப்பது" (முதா121) என்று சகரச்சேர்ப்பிற்குப் பாவாணர் காட்டும். எடுத்துக்காட்டு, தெளிவாய் இருத்தலைக் காண்க.

இற்றை மொழியியலாளர்கள் முந்து திரவிடத்தில், இடையண்ண அடைப்பொலி சகரத்திற்கும் (c) முன்னண்ண உரசொலி சகரத்திற்கும் (š) தனித்தனியான ஒலியன் இடம் கொடுக்கவேண்டியது இல்லை என்கின்றனர். இதற்கு இனமொழி இனச் சொற்களில் ஒருமொழியில் முறையாக இவற்றுள் ஒன்று ஒலியனாய் இருக்க மற்றொன்றில் இன்னொன்று இருக்கும் நிலையைக் காட்டுவர். முந்துதிரவிட (பழந் தமிழ்) இடையண்ண அடைப்பொலிச் சகரம் (c), இனமொழிகளில் முன்னண்ண உரசொலி (š), பின்னண்ண அடைப்பொலி (k), பல் அடைப்பொலி (t), பின்னண்ண உரசொலி (h) என மாறியிருக்கும் தன்மையைக் காட்டுவர்.

பழந்தமிழ் மொழிமுதல் சகரம் தமிழிலும் அதன் இனமொழிகளிலும் பல்வேறு மாற்றங்களைப் பெற்றுள்ளது. குறிப்பாக மொழி முதலிலும் மொழியிடையிலும் உயிருடன் கூடி வரும்பொழுது உரசொலி (sibilant)யாக ஒலிக்கப்படுவது பரவலாக உள்ளது. எனினும் இம் மாற்றம் பொருள் வேறுபாடு எதனையும் உருவாக்காததால் நெடுங்கணக்கில் உரசொலி சகரம் என்று தனியான ஒன்றைக் கொள்ள வேண்டிய தேவை ஏற்படவில்லை. தமிழின் இன மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளின் நெடுங் கணக்குகள் வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றியமைத்தனவாக இருப்பதால் உரசொலிச் சகரத்திற்குத் தனியான எழுத்தைக் கொண்டுள்ளன. எனினும் வெடிப்பொலிச் சகரத்திற்கும் உரசொலிச் சகரத்திற்கும் வேறுபாடு இல்லாமல் பயன்படுத்துவது அங்கும் பெரும்பான்மை. எ-டு: தெ. சூடு, சூடு (பார்.); க. சளி, சளி (குளிர்).

சஃகுல்லி *šakkulli*, பெ. (n.) சிற்றுண்டி வகை. (பிங்.); a kind of pastry or cake.

[அக்குள்ளி → அஃகுல்லி → சஃகுல்லி]

சஃகுல்லி → Skt. šaṣkulī

சக்கசேனாபதி *šakka-šēṉābadi* பெ. (n.) இலங்கை மன்னன் ஐந்தாம் காசிபனின் படைத் தலைவன்; army chief of Ceylon king Kāsibaṉ V.

[சக்கை → சக்க + சேனாதிபதி. சேனை அதிபதி → சேனாதிபதி]

கி.பி.919இல் வெள்ளூர் எனும் ஊரில் நடந்த போரில் இவன் தலைமையில் இலங்கைப் படையும் மூன்றாம் இராசசிம்மனின் பாண்டியப் படையும் சேர்ந்து சோழமன்னன் முதல் பராந்தகனிடம் போர்செய்து தோல்வி அடைந்தன (பிற். சோழ. வர. பக். 35).

சக்கட்டம்[1] *šakkaṭṭam* பெ. (n.) *1.* ஏளனம் (பரிகாசம்) (வின்.); scoff, mockery, sport; *2.* கண்டனம் (நிந்தை) (யாழ். அக.); censure.

க. சக்கந்த, சக்குளிசு, சக்குலிசு (மகிழ்வி); து. சக்கந்த; தெ. சக்கலிம்பு; E. kickle.

சக்கட்டம்[2] *šakkaṭṭam,* பெ. (n.) மயிர் (யாழ். அக.); hair.

[சள் → சள்ளு. சள்ளுதல் = சிக்கு விழுதல். சள் + கட்டம் → சட்கட்டம் → சக்கட்டம். சிக்கு விழும் தன்மையது]

சக்கட்டிசக்கட்டியெனல் *šakkaṭṭi-šakkaṭṭi-y-enal,* பெ. (n.) மென்பொருள்கள் விழும் ஒலிக்குறிப்பு; onom. expr. of repeated thud (செ.அக.).

[சக்கட்டி + சக்கட்டி + எனல்]

சக்கட்டை *šakkaṭṭai,* பெ. (n.) 1. திறமையின்மை (யாழ்ப்.); badness, unfitness, inferiority, incompetency. 2. இளப்பம்; degradation. 3. மடையன்; block head, dolt. அவன் ஒரு சக்கட்டை.

[சத்தற்றகட்டை → சக்கட்டை]

சக்கட்டை → Skt. sakaṭa

சக்கட்டையாள் *šakkaṭṭai-y-āḷ,* பெ. (n.) வலுவில்லாதவன் (யாழ்ப்.); fragile, weak person.

[சக்கட்டை + ஆள்]

சக்கடா *šakkaḍā,* பெ. (n.) சக்கடாவண்டி பார்க்க; see *šakkaḍā-vaṇḍi.*

[சக்கு → சக்கடம் → சக்கடா (வ.வ. 134)]

சகடம்[1] பார்க்க

சக்கடாவண்டி *šakkaḍā-vaṇḍi,* பெ. (n.) கட்டை வண்டி (இ.வ.); springless bullock-cart.

ம. சக்கடவண்டி, சக்கடாவண்டி; தெ. செகடாபண்டி

[சகடம் → சக்கடம் → சக்கடா + வண்டி]

சக்கரத்தின் பெயர் அதை உறுப்பாகக் கொண்ட ஊர்திக்கு ஆகி வந்தது சினையாகுபெயர்.

ஒ.நோ: வண்டி = சக்கரம், சக்கரத்தையுடைய ஊர்தி. இன்றும் கமலைவண்டி, வண்டி யுருட்டுதல் என்னும் வழக்குகளை நோக்குக.

சக்கரத்தைக் குறிக்கும் கால் என்னுஞ் சொல் வண்டியையும் குறித்தல் காண்க. 'கலத்தினுங் காலினுந் தருவன ரீட்ட' (சிலப். 2:7).



சக்கடாவண்டி

சக்கடி *šakkaḍi,* பெ. (n.) சக்கணி பார்க்க; see *šakkaṇi* "இயங்கொட்டச் சக்கடி கற்று" (திருப்பு.417).

[சக்கணி → சக்கடி]

சக்கணி *šakkaṇi,* பெ. (n.) கூத்துவகை; a kind of dance. 'சக்கணியி லோர்தருவுஞ் சாதித்து' (பணவிடு. 186).

தெ. சக்கிணி

[அக்குளு → அக்குளி → சக்குளி → சக்கணி (மகிழ்ச்சி)]

சக்கத்து *šakkattu,* பெ. (n.) நடுவில் உயர்ந்தும் இருபுறமும் சரிந்தும் சிராய்ப்புப் போன்ற தோற்றமுடன் உருவான முத்து; a kind of pearl which has bulging shape at centre and slope in either sides.

[அங்கு → சங்கு → சங்கத்து → சக்கத்து]

சக்கதேவி *šakka-dēvi,* பெ. (n.) சக்கம்மாள் பார்க்க; see *šakkammāḷ.* 'கருத்து நன்றாய்ப் பேசுது சக்கதேவி' (குற்றா.குற.71).

[இயக்கி → இசக்கி → சக்கி+ தேவி. இசக்கிதேவி → சக்கிதேவி. → சக்கதேவி. இது மக்கள் வழக்கில் ஜக்கம்மாள் என்றும் ஜக்கதேவி என்றும் திரிந்தது]

சக்கந்தம்[1] *šakkandam,* பெ. (n.) சக்கட்டம்[1] பார்க்க; see *šakkaṭṭam*[1].

க., து. சக்கந்த

[சக்கட்டம் → சக்கந்தம்]

சக்கந்தம்[2] *šakkandam,* பெ. (n.) மகிழ்ச்சி (யாழ். அக.); joy.

க., து. சக்கந்த

சக்கந்து *śakkandu,* பெ. (n.) சக்கந்தம் பார்க்க; see *śakkandam.*

[சக்கந்தம் → சக்கந்து]

சக்கப்பிரதமன் *śakka-p-piradaman,* பெ. (n.) பலாப்பழங்கொண்டு செய்யப்படும் கன்னலமுது (பாயச) வகை (நாஞ்.); a kind of sweet milk-porridge prepared from jack-fruit (செ. அக.).

ம. சக்கப்ரதமன்; து. சங்குளி, சங்குலி, தங்குளி

[சக்கை → சக்க(ம்) + பிரதமன். சக்க = பலாப்பழம். பிரதமன் = கன்னலமுது (பாயச) வகை]

Skt. pradhama → த. பிரதமன்

சக்கம்மா *śakkammā,* பெ. (n.) சக்கம்மாள் பார்க்க; see *śakkammāḷ.*

[சக்கம்மாள் → சக்கம்மா]

சக்கம்மாள் *śakkammāḷ,* பெ. (n.) 1. ஒரு பெண் தேவதை; a demoness. 2. பெண்பாற்பெயர்; female proper name (செ.அக.).

ம. சக்கி; தெ. சக்கம்; பட. சக்கி (பெண்பாற் பெயர்)

[இயக்கி → இசக்கி → சக்கி + அம்மாள் – சக்கியம்மாள் → சக்கம்மாள்]

சக்கரக்கல் *śakkara-k-kal,* பெ. (n.) திருமால் கோயிலுக்குக் கொடையாக விடப்பட்ட நிலங்களின் எல்லை குறிக்கும் திருவாழிக்கல்; boundary or demarcation - stone for lands granted to Tirumāl (Viṣṇu) temples (செ.அக.).

[சக்கரம் + கல். சக்கரம் = வட்டம், வளைவு, எல்லை]

சக்கரக்கலப்பை *śakkara-k-kalappai,* பெ. (n.) சேற்றைக் கூழாக்கும் கருவி; a kind of instrument for ploughing.

[சக்கரம் + கலப்பை]

சக்கரக்கவி *śakkara-k-kavi,* பெ. (n.) வண்டிச் சக்கரம் போன்ற சித்திரத்தில் அமையுமாறு பாடும் மிறைப்பாடல்; a fantastic metrical composition in the diagrammatic form of the cart-wheel.

[சக்கரம் + கவி]

சக்கரப்பா எனில் தமிழாம் சக்கரக்கவி நாலாரைக் கவி, ஆறாரைக் கவி, எண்ணாரைக் கவி என்றாற்போல் பல வகைப்படும்.

சக்கரக்கள்ளன் *śakkara-k-kaḷḷan,* பெ. (n.) கஞ்சன் (கருமி) (நாஞ்.); close-fisted person, miser (செ.அக.).

[சக்கரம் = ஒரு வகைச் சிறு காசு. சக்கரக்கள்ளன் = சிறுகாசும் கொடாதவன்]

சக்கரக்காரன் *śakkara-k-kāran,* பெ. (n.) செல்வன் (இ.வ.); rich man (செ.அக.).

ம. சக்கரக்காரன்

[சக்கரம் = காசு. சக்கரம் + காரன். காரன் = உடையானைக் குறிக்கும் ஈறு]

சக்கரக்குளிகை *śakkara-k-kuḷigai,* பெ. (n.) காசு (நாணய) வகை; a coin (M.E.R. 1 of 1925) (செ.அக.).

[சக்கரம் + குளிகை. குள் → குளம் → குளகம் = வெல்ல உருண்டை. குளியம் = உருண்டை. குளிகை = உருண்டை மாத்திரை. இங்கு வட்டவடிவையே உணர்த்திற்றென்க]

சக்கரக்கூடம் *śakkara-k-kūḍam,* பெ. (n.) சக்கரத்தின் நடுவில் ஆரக்கால்கள் ஒன்றுசேரும் வட்டவடிவமான பாகம்; the axis of a wheel.

ம. சக்கரக்கூடம்

[சக்கரம் + கூடம்]



சக்கரக்கூடம்

சக்கரக் கவி

நாலாரைக் கவி



ஆறாரைக் கவி



எண்ணாரைக் கவி



சக்கரக்கொடம் *šakkara-k-kodam,* பெ. (n.) சக்கரக்கூடம் பார்க்க; see *šakkara-k-kūdam.*

ம. சக்ரகூடம்

[சக்கரம் + கொடம். குள் → குட → குடம். குடம் → கொடம்]

சக்கரக்கொடி *šakkara-k-kodi,* பெ. (n.) பீர்க்கு; sponge-gourd - Luffa acutangularis (சா.அக.).

[சக்கரம் + கொடி. கொள் → (கொண்) → கொடு = வளைவு, வளைவானது. கொடு → கொடி = வளைந்து படரும் நிலைத்திணை]

சக்கரக்கோட்டம்[1] *šakkara-k-kōttam,* பெ. (n.) முதலாங் குலோத்துங்கச் சோழனால் வெல்லப்பட்டதும் நடுவண் (மத்தியப் பிரதேச) மாநிலத்தில் உள்ளதுமான ஒரு நாடு (இராச்சியம்); an ancient state in the central provinces conquered by Kulōttunga Cōla I. "விருதராச பயங்கரன் .... வென்ற சக்கரக் கோட்டத்திடை" (கலிங். 134).

[சக்கரம் + கோட்டம், கோடு = வளைவு, எல்லை. கோடு → கோட்டம் = பெரும் எல்லைப் பரப்பைக் கொண்டது]

சக்கரக்கோட்டம்[2] *šakkara-k-kōttam,* பெ. (n.) ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள, நடுவண் (மத்திய) மாவட்டத்தைச் சேர்ந்த இராசபுரத்திற்கு எட்டுக்கல் தொலைவில் உள்ளதும் முதல் இராசேந்திரனால் வெல்லப்பட்டதுமான ஊர்; an ancient state with central provinces conquered by Rajendran. "விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமும்" (முதல் இராசேந்திரன் மெய்க்கீர்த்தி).

[சக்கரம் + கோட்டம்; கோடு → கோடுதல் = வளைதல். கோட்டம், வளைவு, மதிலைச் சூழ்ந்த ஒளி, வட்டம், மதில் சூழ்ந்த கோயில், குளக்கரை, நிலப்பிரிவு]

சக்கரகாரகம் *šakkara-kāragam,* பெ. (n.) புலி தொடக்கி (மலை.); tiger-stopper.

சக்கரகுச்சம் *šakkara-kuccam,* பெ. (n.) செயலை (அசோகு) மரம்; asoka tree - Jonesia asoka (சா.அக.).

மறுவ. பிண்டி.

[சக்கரம் + குச்சம். குச்சம் = கொத்து. சுற்றிலும் கொத்துக் கொத்தாக இலைகள் உள்ள மரம்]

சக்கரகுலியம் *šakkara-kuliyam,* பெ. (n.) மலை நாட்டுப்பூடு வகை; a kind of fern found in hilly tracts (சா.அக.).

[சக்கரம் + குலியம்]

சக்கரச்சக்கரம் *šakkara-c-cakkaram,* பெ. (n.) சித்திரப்பா வகை (யாப். வி. 497); a variety of metrical composition (pros.).

[சக்கரம் + சக்கரம்]

சக்கரச்சுவாசம் *šakkara-c-cuvāšam,* பெ. (n.) சக்கரவுயிர்ப்பு பார்க்க; see *šakkara-v-uyirppu.*

ம. சக்ரசுவாசம்

[சக்கரம் + சுவாசம்]

Skt. švāsa → த. சுவாசம்

சக்கரச்சுழி *šakkara-c-culi,* பெ. (n.) நீர்ச்சுழி; whirlpool.

ம. சக்ரச்சுழி

[சக்கரம் + சுழி. சுள் → சுளி → சுழி (வி.)= வளை, உருள், சுற்று. சுழி (பெ.) = சுற்றும் பகுதி]

சக்கரச்செல்வம் *šakkara-c-celvam,* பெ. (n.) பெருஞ்செல்வம்; great wealth and prosperity, as of Indra "சக்கரச் செல்வம் பெறினும்" (நாலடி. 346).

[சக்கரம் + செல்வம். சக்கரம் = ஆணைச் சக்கரம். சக்கரச்செல்வம் = அரசுச்செல்வம்]

சக்கரசரம் *šakkara-šaram,* பெ. (n.) சருக்கரச்சரம் பார்க்க; see *šarukkara-c-caram.*

[சருக்கரம் → சக்கரம். சக்கரம் + சரம்]

சக்கரஞ்சுற்று-தல் *šakkarañ-surru-,* 5 செ.கு.வி. (v.i.) 1. சுழலுதல் (இ.வ.); to revolve, rotate, as a wheel. 2. சுற்றி விளையாடுதல் (வின்.); to whirl around in play. 3. பெரிதுந் துன்பப்படுதல்; to be in sore distress. கையிற் பணமில்லாமல் சக்கரஞ் சுற்றுகிறான் (நாஞ்.).

[சக்கரம் + சுற்று. சக்கரம் போல் சுற்றுதல். துன்பத்தில் துவளும் நிலை சக்கரஞ் சுற்றலாயிற்று. ஒ.நோ: ஆலாய்ப் பறத்தல்]

சக்கரணங்கால் *šakkaranangāl*, பெ. (n.) அட்டங்காலிடுகை; act of sitting flat and cross-legged.

க. சக்களபக்கள, சக்கலுபக்கலு, சக்கள மக்கள, சக்களமுக்கள, சக்கௌமுக்கௌ; பட. சக்கரமள்ளு

[சக்கரம் + அணை + கால்]

சக்கரத்தாபனம் *šakkara-t-tābanam*, பெ. (n.) சக்கர நிறுவு-தல் பார்க்க; see *šakkara-niruvu-*.

[சக்கரம் + தாபனம்]

Skt. šthāpana → த. தாபனம்

சக்கரத்தாழ்வார் *šakkarattālvār*, பெ. (n.) திருமாலின் சக்கரமாகக் கருதப்படும் ஆழ்வார்; Visnu's discus, considered a deity.

[சக்கரம் + அத்து + ஆழ்வார். 'அத்து' சாரியை]

சக்கரத்தீவட்டி *šakkara-t-tīvatti*, பெ. (n.) வட்டத்தீவட்டி; a kind of round torch (செ.அக.).

[சக்கரம் + தீவட்டி]

சக்கரத்துன்பம் *šakkara-t-tunbam*, பெ. (n.) ஒரு வகைத் துன்புறுத்தல் (சித்திரவதை); a mode of torture.

[சக்கரம் + துன்பம்]

சக்கரத்தேமல் *šakkara-t-tēmal*, பெ. (n.) நல்லூழைக் (அதிர்ஷ்டம்) குறிப்பதாகக் கருதப்படும் வட்டத் தேமல் (இ.வ.); round whitish spots on the body believed to indicate fortune.

ம. சக்ரப்பொரிகண்ணி

[சக்கரம் + தேமல்]

சக்கரத்தேர் *šakkara-t-tēr*, பெ. (n.) இழுப்புத் தேர் (வின்.); a wheeled car.

[சக்கரம் + தேர். தில் → திர் → (திரி) → தேர். தோளில் வைத்துத் தூக்கிச் செல்லும் பல்லக்குக்கு அடுத்த நிலை வளர்ச்சியே சக்கரம் அமைந்த தேர்]

சக்கரதரன் *šakkaradaran*, பெ. (n.) 1. திருமால்; Visnu, as discus bearer. 2. பாம்பு (யாழ்.அக.); snake, as being hooded.

[சக்கரம் + தரன். சக்கரப் படையை யுடையவன் என்னும் பொருளில் திருமால் சக்கரதரன் என அழைக்கப் பட்டார். பாம்பின் படம் சக்கரம்போல் இருப்பதால் அதுவும் சக்கரதரன் எனப்பட்டது]

சக்கரதாரி *šakkaradāri*, பெ. (n.) சக்கரதரன் பார்க்க; see *šakkaradaran*.

[சக்கரம் + தாரி]

Skt. dhārin → தாரி

சக்கரதானம் *šakkara-tānam*, பெ. (n.) முயன்று பாடுந் தாளவகை; a difficult type of tānam.

[சக்கரம் + தானம்]

சக்கரதானர் *šakkara-tānar*, பெ. (n.) சிவவுருவங்களுளொன்று (காஞ்சிப்பு. சிவபுண். 23); a manifestation of Šivan (saiva).

[சக்கரம் + தானர்]

சக்கரதிசை *šakkaradišai*, பெ. (n.) வாணாள் முடிவறியுந் திசைகளுளொன்று; the direction which gives the indication of one's end of life.

[சக்கரம் + திசை. ஒருவரது வாணாள் ஒருவட்டமாக நிறைவுறும் எனக் கருதப் பட்டதன் அடிப்படையே சக்கரம் வாணாளைக் குறித்ததென்க.]

சக்கரதீர்த்தம் *šakkara-tīrttam*, பெ. (n.) நூற்றெட்டுத் திருப்பதிகளுளொன்றாகிய திருவெள்ளறையென்னுந் தலத்தில் உள்ள நன்னீர்; the sacred water of Tiruvellarai, one of the 108 sacred temples.

[சக்கரம் + தீர்த்தம்]

Skt. tīrtha → த. தீர்த்தம்

சக்கரதேவன் *šakkara-dēvan*, பெ. (n.) கலிங்கதேச மன்னனாகிய சுருதாயுவினது இரண்டாம் புதல்வன்; the second son of Surudayu king of Kalinga country.

[சக்கர(ம்) + தேவன். தேய் → தேய்வு → தேவு = தெய்வம், தெய்வத்தன்மை. தேவு → தேவன் = கடவுள், அரசன், இயற்பெயர்]

த. தேவன் → Skt. dēva

சக்கரந்தறி-த்தல் *šakkarantaṟi-*, 4. செ.கு.வி. (v.i.) இயந்திரமாட்டல்; to rotate a mill.

[சக்கரம் + தறி-,]

சக்கரநாற்காலி *šakkara-nāṟkāli*, பெ. (n.) நடக்க முடியாதோர் இடம்விட்டு இடம் செல்லப் பயன்படுத்தும் சக்கரங்கள் பொருத்தப்பட்ட நாற்காலி; wheelchair.

[சக்கரம் + நாற்காலி]



சக்கரநாற்காலி

சக்கரநிறுவுதல் *šakkara-niṟuvudal*, பெ. (n.) *1.* பிறர் செய்த தீங்கைப் போக்க மந்திரமமைந்த சக்கரத்தைப் பதித்து வைக்கை; ceremonial setting of a plate containing mystical diagrams and letters for counteracting evil. *2.* கோயில் கருவறையின் (மூலஸ்தானத்தின்)கீழ் மந்திரத் தகட்டைப் பதித்து வைக்கை; ceremonial setting of a plate containing a mystic diagram under the 'mūlavar'.

[சக்கரம் + நிறுவுதல்]

சக்கரநோவு *šakkara-nōvu*, பெ. (n.) ஒரு வகைக் கடுநோவு (சித்திரவதை); a mode of torture.

[சக்கரம் + நோவு. சக்கரம் சுழலுவது போல் தொடர்ந்து ஏற்படும் நோவு சக்கரநோவு]

சக்கரப்பட்டி *šakkara-p-paṭṭi*, பெ. (n.) விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டத்திலுள்ள ஊர்; a village in Viḻupuram district Tiṇḍivaṉam taluk. "ஆழ்வார்தேவர்தானம் சக்கரப்பட்டி செறுவுக்கும் வடக்கும்" *(தெ. க. தொ. 7, கல். 853 - 9).*

[சக்கரம் + பட்டி. பட்டுதல் = தட்டுதல். பட்டு → பட்டி = பட்டை, மூங்கிற்பிளாச்சு, அதனாலமைந்த தொழு, தொழு இருந்த ஊர்]

சக்கரப்பட்டித்தடி *šakkara-p-paṭṭi-t-taḍi*, பெ. (n.) நீட்டல் அளவுகோல்; linear measure scale. "திருவாபரணங்களுஞ் செய்வார்களாகவு(ம்) சக்கரப்பட்டி தடி இரண்டும்" *(தெ. க. தொ. 7, கல். 392/3, பக். 251)*

[சக்கரப்பட்டி + தடி. தண்டு → தண்டி → தடி]

சக்கரப்பட்டை *šakkara-p-paṭṭai*, பெ. (n.) சக்கரத்தில் வெளிப்புற எஃகு வளையம்; steel tyre of as cart-wheel.

[சருக்கரம் → சக்கரம் + பட்டை]

சக்கரப்படை *šakkara-p-paḍai*, பெ. (n.) சக்கராயுதம் பார்க்க; see *šakkarāyudam.*

[சக்கரம் + படை]

சக்கரப்பணம் *šakkara-p-paṇam*, பெ. (n.) காசு வகை; a coin (M.E.R. 261 of 1929-30).

[சக்கரம் + பணம். சக்கரம் = வட்டவடிவு. படம் → பணம் = தகடான காசு. சக்கரப் பணம் = வட்டவடிவுடைய நாணயம்]

சக்கரப்பரிபாலனம் *šakkara-paripālaṉam*, பெ. (n.) அரசாட்சி செய்கை; governing, ruling, reigning.

[சக்கரம் + பரிபாலனம்]

Skt. paripālana → த. பரிபாலனம்

சக்கரப்பள்ளி *šakkara-p-paḷḷi*, பெ. (n.) தஞ்சை மாவட்ட ஊர்ப் பெயர்; a village in Tañjāvūr district.

[சக்கரம் + பள்ளி. பள் = பள்ளம், படுக்கை. பள் = படு. பள் → பள்ளி = படுக்கை அல்லது அறை, படுக்கும் அறையுள்ள வீடு, கோயில், அரண்மனை, ஊர்]

சக்கரப்பாடியார் *šakkara-p-pāḍiyār*, பெ. (n.) செக்கார்; oilmen. 'சக்கரப்பாடியார் குலமெய்த்தவ மாயுள்ளார்' *(திருத்.பு.50).*

[சக்கு → செக்கு → செக்கார் + பாடி + ஆர். செக்கரப்பாடியார் → சக்கரப்பாடியார்]

சக்கரப்பாத்தி *šakkara-p-pātti,* பெ. (n.) சக்கரங்கள் சென்றதால் பாதையில் உருவான சால்; wheel track (சேரநா.)

ம. சக்கரப்பாத்தி

[சக்கரம் + பாத்தி]

சக்கரப்பாதை *šakkara-p-pādai,* பெ. (n.) வண்டிப்பாதை, வண்டித்தடம்; cart road.

[சக்கரம் + பாதை. பதி → பதம் → பாதை]

சக்கரப்பிரசங்கம் *šakkara-pirasangam,* பெ. (n.) ஏரணக் குற்றங்களுளொன்றான சக்கிரகம் (நீலகேசி, 391, உரை); a defect in argumentation.

[சக்கரகம் + பிரசங்கம். சக்கரம் = வளைவு, சக்கிரகம் = வளைய வளையப் பேசுகை]

சக்கரப்புள் *šakkarappuḷ,* பெ. (n.) சகோரம்[1] பார்க்க; see *šagōram*[1].

[சக்கரம் + புள்]

சக்கரப்புளி *šakkara-p-puḷi,* பெ. (n.) இனிப்புப் புளி; sweet tamarind - Tamaridus Indicus (சா.அக.).

[சருக்கரை → சக்கரை + புளி]

சக்கரப்பொறி *šakkara-p-poṟi,* பெ. (n.) திருமாலியத்தைப் பெறுதற்கு அடையாளமாக அருட்குரவரால் வலத்தோளில் பொறிக்கப் படும் சக்கர முத்திரை; branded mark of the discus upon the right shoulder of a person, made by his preceptor at the time of his initiation into vaiṣṇavism. 'உன் சக்கரப்பொறி யொற்றிக் கொண்டு' (திவ். பெரியாழ். 5, 4, 1).

[சக்கரம் + பொறி]

சக்கரபதி[1] *šakkara-padi,* பெ. (n.) தகரை (இராட்.); foetid cassia.

மறுவ. மசகெண்ணெய்

[சக்கரம் + பதி]

சக்கரம்[4] பார்க்க

சக்கரபதி[2] *šakkara-padi,* பெ. (n.) அரசன்; the lord of a dominion, a king.

ம. சக்ரபதி

[சக்கரம் + பதி]

சக்கரபந்தம் *šakkara-bandam,* பெ. (n.) சக்கரக்கவி பார்க்க; see *šakkara-k-kavi.*

[சக்கரம் + பந்தம்]

Skt. bandha → த. பந்தம்

சக்கரபாணம் *šakkara-bāṇam,* பெ. (n.) சக்கரவாணம் பார்க்க; see *šakkara-vāṇam.*

[சக்கரம் + பாணம். வாணம் → பாணம்]

சக்கரபாணி[1] *šakkara-pāṇi,* பெ. (n.) திருமால் (சக்கரப்படையைக் கையில் உடையவன்); Tirumāl (Viṣṇu), as holding the discus in His hand. சாமவேத கீதனாய சக்ரபாணி யல்லையே (திவ். திருச்சந். 14).

[சக்கரம் + பாணி. பண் = பண்ணுதல். பண் → பாண் → பாணி = செயல் செய்கின்ற உறுப்பு. பண்ணுவது பாணி. ஒ.நோ. பெண் → பேண். செய்வது செய். செய்(தெ.) = கை. செய்(கை) → கை.]

த. பாணி → Skt. pāṇi.

சக்கரபாணி[2] *šakkara-pāṇi,* பெ. (n.) காளி; goddess Durga.

[சக்கரம் + பாணி]

த. பாணி → Skt. pāṇi

சக்கரபாணிஆச்சார் *šakkara-pāṇi-āccār,* பெ. (n.) செல்லாண்டியம்மன் சதகம் என்னும் நூலின் ஆசிரியர்; author of šellāṇḍi-yammaṉ sadagam.

[சக்கரபாணி + ஆச்சார். ஆச்சார் = ஆசிரியர். இவர் கொங்கு நாட்டிலுள்ள ஊஞ்சலூரினர் (த. பு. அக.)]

சக்கரபாணிநல்லூர் *šakkara-pāṇi-nallūr,* பெ. (n.) ஆழ்வார் திருநகரிக்கு அருகிலிருந்த செவ்விருக்கை நாட்டிலமைந்த ஓரூர்; a place name situated in Ševvirukkai nāḍu near Āḻvār Tirunagari. "செவ்விருக்கை நாட்டுச் சக்கரபாணி நல்லூர்" (தெ. க. தொ. 26. கல். 492-5).

[சக்கரபாணி + நல்லூர்]

சக்கரபுட்பி *šakkara-puṭpi,* பெ. (n.) குப்பைமேனி (மலை.); Indian acalypha.

[சக்கரம் + புட்பி. புட்பம் → புட்பி. வட்டவடிவப் பூவைக் கொண்டது.]

Skt. puṣpa → த. புட்பம்.

சக்கரம்[1] *šakkaram,* பெ. (n.) *1.* வட்டம் *(பிங்.);* circle. *2.* **உருளை** *(சூடா.);* wheel, as of a cart, car. *3.* ***குயவன் சக்கரம்;*** potter's wheel. *"சக்கரந்தான் கழற்றத்தகுங் குயத்தி" (சிவப்பிரபந். பிக்ஷாடன. 6). 4.* **சக்கரப்படை;** discus, especially of Viṣṇu; missile weapon, sharp edged and circular. *"சக்கரக்கை மன்னுயிர் முதல்வன்" (மணிமே. 13:57). 5.* ***ஆட்சிச் சக்கரம்;*** symbol of sovereignity. *"வழுக்கில் சக்கரம் வலவயி னுய்க்கும்" (பெருங். வத்தவ. 5, 106). 6.* **கோள் நிலைச் சக்கரம்;** chart showing the position of planets at one's birth; astrological diagram. *7.* **மந்திர வெழுத்தடைக்கும் தகடு;** engraved magic circles on amulets; mystical diagrams for counteracting evil influences. *'சக்கரஞ் சீர்த்தமிழ் விரகன்' (தேவா. 146. 12). 8.* ***சக்கரக்கவி*** *(தண்டி. 94)* பார்க்க; see *šakkara-k-kavi. 9.* ***சக்கரமாற்று*** *பார்க்க;* see *šakkara-māṟṟu. 10.* ***சக்கரயூகம்*** *பார்க்க;* see *šakkara-yūgam. 11.* ***பழைய காசு வகை;*** ancient silver coin formerly current in South India - $^{1}/_{16}$ gold pagoda. *"சால்பு திருவையாற்றுச் சக்கரமென்றும்" (பணவிடு. 14). 12.* ***அரையணா மதிப்புள்ளதாய் வழங்கும் மலையாளக் காசு வகை;*** a coin in Travancore nearly equal to six pies. *13.* **ஒரு தண்டனைக் கருவி** *(வின்.);* turning pillory, wheel of torture. *14.* ***சக்கரவாகப்புள்*** *(சூடா.);* ruddy goose (Anas cascara). *15.* **அரைக்கும் பொறி** *(வின்.);* grind mill. *16.* **செக்கு;** oil mill. *"தயிலவினைத் தொழின் மரபிற் சக்கரபாடித் தெருவு" (பெரியபு. கலியனா. 5). 17.* **நிலவுலகம்** *(பிங்.);* the earth. *18.* **மதில்** *(பிங்.);* fortress wall, compound wall. *19.* **கடல்** *(சூடா.);* sea. *20.* **மலை** *(சூடா.);* mountain. *21.* **பாம்பின் படம்;** hood. *22.* **பிறப்பு** *(சூடா.);* birth, transmigration of souls. *23.* **அறுபது ஆண்டு கொண்ட காலம்;** a cycle of 60 years. *24.* **பதக்கு** *(தைலவ. தைல. 14);* a measure of capacity. *25.* **பீர்க்கு** பார்க்க; see *pīrkku. 26.* **அத்தி** *(மலை.);* fig, ficus. *27.* **வாணாள்;** life time.

ம. சக்ரம்; க. சக்ர; து. சக்ர; பட. சக்கர

[சருக்கு → சருக்கரம் → சக்கரம் (வே.க. 239).]

சக்கரம் (ஆழி) → Skt. cakra

செக்கு வட்டமாயிருத்தலாலும் வட்டமாய் எள்ளாடுதலாலும் சக்கரம் எனப்பட்டது. செக்காரக் குடியைச் 'சக்கரப்பாடித் தெருவு' என்று பெரியபுராணம் கூறுதல் காண்க (வே.க. 114).

சுழிதல் = வளைதல், திருகுதல். சுழி → சழி. சழிதல் = ஒருபக்கஞ்சரிதல். சழி → சரி → சருவு. சருவுதல் = சாய்தல். சரி = வளையல் வகை. சருவு = சருக்கு. சருக்குதல் = சாய்தல், வளைதல், சறுக்குதல். சருக்கு → சருக்கம் = வட்டம், நூற்பிரிவு. L. circum = வட்டம்.

சருக்கு → சருக்கல் → சருக்கர் → சருக்கரம் → சக்கரம் = வட்டம், உருளி, குயவன் சக்கரம், சக்கரப்படை, வட்டக்காசு, சக்கரப்புள், மாநிலம், செக்கு. Gk. kuklos; E. cycle = சக்கரம்

சக்கரம் → (சக்கு) → செக்கு = எண்ணெய் ஆட்டும் வட்டமான உரல். ஒ.நோ: பரு → பெரு, சத்தான் → செத்தான், சக்கு → சக்கடம் → சக்கடா = கட்டைவண்டி. தெ. செக்கடா பண்டி. சக்ர என்னும் வடசொல் வடிவிற்கு வடமொழியாளரால் குறிக்கப்பட்டுள்ள மூலம் க்ரு (செய்) என்பதே. மா.வி. அகரமுதலி சர் (car) என்னும் சொல்லை வினாக்குறியுடன் குறித்துள்ளது. சர் = இயங்கு. இவ்விரண்டுள் முன்னதின் பொருந்தாமையையும் பின்னதின் வன்புணர்ப்புத் தன்மையையும் அறிஞர் கண்டுகொள்க. *(வ.வ. 134-135).*

நூற்கும் சக்கரம் கையினாற் சுற்றப்படுவதனால், அது கையிறாட்டு அல்லது கையிறாட்டை அல்லது கையிறாட்டினம் என்று சொல்லப்படும்.



சக்கரம்

சக்கரம்[2] *šakkaram,* பெ. (n.) *1.* **மலைமல்லிகை** *(மூ.அ);* Indian cord. *2.* **பெருமை** *(பிங்.);* greatness, majesty.

[சருக்கு → சருக்கரம் → சக்கரம்]

சக்கரம்[3] *šakkaram,* பெ. (n.) நெசவில் ஊடை நூலை மாட்டி நூல் இழைப்பதற்குரிய கருவி; pulley in a loom.

மறுவ. பூட்டுத்தலை, குச்சிராட்டினம், திருவட்டம், பூட்டை

[சருக்கு → சருக்கரம் (வட்டம்) → சக்கரம்]

இது சிறுசிறு மூங்கில் சிம்புகளால் செய்யப் பட்டது. சிம்புகளின் தலைப்பகுதி பூட்டுப் போல் கட்டுக்கட்டி வைக்கப்பட்டுள்ளமையால் இது பூட்டுதலை எனப்பட்டது. இஃது ஒரு கொம்பில் அல்லது கம்பியில் சுற்றப்படும் தன்மையுடையதனால் சொழல் (சுழல்) என்றும், சக்கரம் போன்றுள்ளதால் சக்கரம் என்றும் அழைக்கப்படுகிறது.

சக்கரம்[4] *šakkaram,* பெ. (n.) தகரைச் செடி; foetid cassia.

ம. சக்ரம்

[சருக்கு → சருக்கரம் (வட்டம்) → சக்கரம் = சக்கரத்திற்கு இடும் எண்ணெயைத் தருவது]

சக்கரமடை-த்தல் *šakkaram-aḍai-,* 4 செ.குவி. (v.i.) எந்திரத்தில் மந்திரவெழுத்து அடைத்தல் (வின்.); to inscribe letters of a mantra in a mystic diagram.

[சக்கரம் + அடை-,]

சக்கரமண்டலி *šakkara-maṇḍali,* பெ. (n.) பெரும்பாம்பு; a kind of big snake, the Python, boa constricter.

ம. சக்ர மண்டலி

[சக்கரம் + மண்டலி. மண்டு → மண்டலி, வளைந்து, வட்டமிட்டு இருக்கும் இயல்புடையது]

சக்கரமாற்று *šakkara-māṟṟu,* பெ. (n.) திருக்காழி (சீர்காழி)யின் பன்னிரு பெயர்களையுஞ் செய்யுடோறும் அமைத்து ஒரு பாடலின் இறுதியிற் கூறிய பெயரை அடுத்த பாடலின் முதலிற்கொண்டு கூறும் சம்பந்தர் தேவாரப் பதிகம். (தேவா. 145); a poem on Tirukkāḻi (Sīrkaḻi) by Saint Sampandar, where in each stanza mentions all the names of that sacred shrine and the last mentioned name in stanza begins the next stanza.

[சக்கரம் + மாற்று]

சக்கரமுடிவு *šakkaramuḍivu,* பெ. (n.) ஒருவனது வாழ்நாள் முடிவு (வின்); the close of one's life, as indicated in one's horoscope.

[சக்கரம் + முடிவு. வாழ்நாள் ஒரு வட்டமாகக் கருதப்பட்டதன் அடிப்படையில் வட்டம் நிறைவு பெறுதல் வாழ்நாள் முடிவாகக் கருதப்பட்டது]

சக்கரமூதூர் *šakkaramūdūr,* பெ. (n.) காஞ்சிபுர வட்டத்திலுள்ள சக்கரமல்லூர் என்ற ஊரின் பண்டைய பெயர்; a village in Kāñjipuram taluk "இம்மண்டலத்து தாமர்கக்கோட்டத்துத் தனியூர் சக்கரமுதூர் காணிஉடைய ஊரவர்" (தெ. க. தொ. XII க. எண். - 190, 5).

[சக்கரம் + மூதூர்]

சக்கரயானம் *šakkarayāṉam,* பெ. (n.) சக்கர வண்டி[1] பார்க்க; see *šakkara-vaṇḍi*[1] (செ.அக.).

ம. சக்ரயானம்

[சக்கரம் + யானம்]

Skt. yāṉā → த. யானம்

சக்கரயூகம் *šakkara-yūgam,* பெ. (n.) சக்கர வடிவாக அமைத்த படைவகுப்பு (சீவக. 757, உரை); circular of an army.

[சக்கரம் + யூகம்]

Skt. vyūha → த. யூகம்

சக்கரயெண்ணெய் *šakkara-yeṇṇey,* பெ. (n.) தகரைச் செடியிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்; oil extracted from the plant cassia tora.

ம. சக்ரதைலம்

[சக்கரம் + எண்ணெய்]

சக்கரம்[4] பார்க்க

சக்கரராசன் *šakkara-rāšaṉ,* பெ. (n.) சக்கரத்தாழ்வார் பார்க்க (இ.வ.); see *šakkarattāḻvār* (செ.அக.).

[சக்கர(ம்) + ராசன். அரசன் → ராசன்]

சக்கரரேகை *šakkara-rēgai,* பெ. (n.) சக்கர வரிகை பார்க்க; see *šakkara-varigai* (செ.அக.).

[சக்கரம் + ரேகை]

Skt. rēkha → த. ரேகை

சக்கரலிபி *šakkara-libi,* பெ. (n.) சக்கர வெழுத்து பார்க்க; see *šakkara-v-eluttu.*

ம. சக்ரலிபி

[சக்கரம் + லிபி]

Skt. lipi → த. லிபி

சக்கரவங்கம் *šakkara-vangam,* பெ. (n.) நாணற் கோரை; straight-sedge-cyperus pertinuis (சா.அக.).

[சக்கரம் + வங்கம். வங்கு → வங்கம் = வளைவு. வளைந்தாலும் நிமிரும் தன்மையையுடைய வங்கம் சக்கரம் என்னும் நேர்ப்பொருளை அடையாக ஏற்றது]

சக்கரவட்டம் *šakkara-vattam,* பெ. (n.) வட்டவடிவு; circular form (செ.அக.).

[சக்கரம் + வட்டம். வல் → வள் → வண்டு → வட்டு → வட்டம். வட்ட → வட்ட (பிரா.); வ்ருத்த (வ.); L. verto (turn). சக்கரவட்டம் மீமிசைச் சொல். எனினும் சக்கரத்தைப் போன்ற வட்ட வடிவம் எனப் பொருள்படவும் இடமுண்டு]

சக்கரவட்டி *šakkara-vatti,* பெ. (n.) கூட்டுவட்டி; interest upon interest, compound interest.

க. சக்கரபட்டி; தெ. சக்ரவ்ருத்தி

[சக்கரம் + வட்டி. தொடர்ந்து சுழலும் சக்கரத்தின் தன்மைபோல் முதலுடன் வட்டிசேர அதற்கும் சேர்த்து வட்டியாகும் தன்மை]

சக்கரவட்டை *šakkara-vattai,* பெ. (n.) வண்டிச் சக்கரத்தின் புறவட்டம்; the rim of a wheel.

ம. சக்ரதார

[சக்கரம் + வட்டை. வள் → வடு → வட்டை. வள் = வளைந்தது]

சக்கரவண்டி[1] *šakkara-vandi,* பெ. (n.) சக்கரத்தை உடைய வண்டி; wheeled cart.

[சக்கர(ம்) + வண்டி]

சக்கரவண்டி[2] *šakkara-vandi,* பெ. (n.) நீர் இறைக்கும் உருளையின் அச்சுமரம்; the axle-tree of a water - wheel (சேரநா).

ம. சக்ரதார

[சக்கர(ம்) + வண்டி]



சக்கரவண்டி

சக்கரவர்த்தி[1] *šakkara-vartti,* பெ. (n.) 1. பேரரசன்; emperor. "சக்கரவர்த்திகளாற் பயமுண்டெனும்" (சிலப். 15: 98 உரை) 2. திகிரி மன்னவர் (சூடா. 12, 55); any one of tikiri-mannavar (செ.அக.).

ம. சக்ரவர்த்தி

[சக்கரம் + வர்த்தி]

த. வட்டம் → Skt. vartin → த. வர்த்தி

சக்கரவர்த்தி[2] *šakkara-vartti,* பெ. (n.) குயவன்; potter.

மறுவ. வேட்கோ

க. சக்ரவர்த்தி

[சக்கரம் + வர்த்தி]

சக்கரவர்த்தி[3] *šakkara-vartti,* பெ. (n.) மற்றொருவனைப் பணியாத தனியாள் வேலை; independent work.

[சக்கரம் + வர்த்தி. மன்னவன், மன்னவன் போல் பிறர் ஆணையில்லாமல் தன் விருப்பம் போல் செய்யும் வேலை.]

சக்கரவர்த்திக்கீரை *šakkaravartti-k-kīrai,* பெ. (n.) சமையலுக்குப் பயன்படும் முளைக் கீரையைப் போன்ற ஒருவகைக் கீரை; a kind of greens.

மறுவ. கண்ணாடிக் கீரை

[சக்கரவர்த்தி + கீரை]

சக்கரவர்த்தித் திருமகன்[1] *šakkaravartti-t-tiru-magan*, பெ. (n.) *இராமன்;* Raman, as the son of the emperor Dašaratha *'சக்கரவர்த்தித் திருமகனுக்கு வில்லு கைவந்திருக்குமா போல' (ஈடு. 6, 4,2) (செ.அக.).*

[சக்கரவர்த்தி + திருமகன். சக்கரவர்த்தி = தசரதமன்னன். சக்கரவர்த்தித் திருமகன் - அவரது மகன் இராமப் பெருமான்]

சக்கரவர்த்தித் திருமகன்[2] *šakkaravartti-t-tiru-magan*, பெ. (n.) நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகிய அயோத்தியிற் கோயில் கொண்ட திருமால்; The Tirumal temple of Ayodya, one among 108 famous temples.

[சக்கரவர்த்தி + திருமகன். தசரதனின் மகன் இராமபிரான் திருமாலின் தோற்றரவமாகக் கருதப்படுவதால் அயோத்திக் கோயிலில் வீற்றிருக்கும் திருமால் சக்கரவர்த்தித் திருமகன் என அழைக்கப்பட்டார்.]

சக்கரவர்த்தினி[1] *šakkaravarttini*, பெ. (n.) *பேரரசி;* empress.

க. சக்ரவர்தினி

[சக்கரம் + வர்த்தினி]

சக்கரவர்த்தி (ஆ.பா.) - சக்கரவர்த்தினி (பெ.பா.)

Skt. vartini → த. வர்த்தினி

சக்கரவர்த்தினி[2] *šakkaravarttini*, பெ. (n.) 1. சடாமாஞ்சி (சங்.அக.); spikenard herb. 2. செம்பஞ்சு (சங்.அக.); redlac (செ.அக.).

சக்கரவரி *šakkara-vari*, பெ. (n.) சக்கரவரிகை பார்க்க; see *šakkara-varigai*.

[சக்கர(ம்) + வரி]

சக்கரவரிகை *šakkara-varigai*, பெ. (n.) ஒருவனது நல்லூழை (அதிர்ஷ்டத்தை)க் காட்ட வட்ட வடிவாகக் கையில் அமைந்த வரை; circular marks, usually on palm, believed to indicate one's fortune.

[சக்கரம் + வரிகை. வரி → வரிகை. 'கை' பெயராக்க ஈறு]

சக்கரவாகப்புள் *šakkara-vāga-p-puḷ*, பெ. (n.) வட்டவடிவினதும், இரண்டடி நீளம் உள்ளதுமான பறவை; brahminy duck; ruddy goose - cascara - rutila alias Anas ruba alias A. cascara.

க. சக்கவக்கி, சக்கவக்கி, சக்ரவாக பக்ஷி.

[சக்கரவாகம் + புள். வாளம் → வாகம்]

இணைபிரிந்ததால் வருந்துவதாகக் கூறும் பறவை வகை. இதன் தலை, கழுத்து வெளிர் மஞ்சள் நிறமாகவும், கண், பிடரி வெளிர் சாம்பல் நிறமாகவும், கழுத்து மஞ்சள் வண்ணத்தில் கருப்புக் கோடுடையதாகவும், உடம்பு மஞ்சள், கருப்பு, நீலம் கலந்த வண்ண மாகவும், மூக்கு, கால் கருப்பு வண்ணமாகவும் காணப்படும் (சா.அக.).



சக்கரவாகம் *šakkaravāgam*, பெ. (n.) 1. சக்கரவாகப்புள் பார்க்க; see *šakkara-vāga-p-puḷ*. "சக்கரவாகச் செழும் பெடைகாள்" (தணிகைப்பு. களவு. 347). 2. ஒரு பண் (இராகம்); a musical mode.

மறுவ. நேமிப்புள், சகோரம், கோகம், யானைக் குருகு, சக்கரப்புள்

ம. சக்ரகம்

[சக்கரம் + வாகம்]

வாள் → வாளம் = வாளம் (sword), வட்டம். வாளம் → வாகம். இணைபிரிந்து வருந்துவதைக் காட்டும் பண்.

சக்கரவாகாதனம் *šakkaravāgā-tanam*, பெ. (n.) ஓக (யோகாசன) வகை. (தத்துவப். 107, உரை); a yogic posture.

[சக்கரம் + வாகாதனம்]

சக்கரவாணம் *śakkara-vāṇam,* பெ. (n.) சக்கரம் போலச் சுழன்று தீப்பொறிகளைச் சிதறும் வாணம்; wheel-rocket.

ம. சக்கரவாணம்; க. சக்கரபாண; தெ. சக்கரபாணமு.

[சக்கரம் + வாணம்]

சக்கரவால் *śakkara-vāl,* பெ. (n.) ஒரு வகைக் குதிரை நோய்; ring-bone in horses *(சா.அக.).*

[சக்கர(ம்) + வால்]

சக்கரவாலை *śakkarā-vālai,* பெ. (n.) நீர்மம் (திராவகம்) காய்ச்சப் பயன்படும் வட்டமான வாலைக் குடுவை; a round distilling apparatus used for preparing acids *(சா.அக.).*

[சக்கரம் + வாலை]

சக்கரவாளக்கோட்டம் *śakkaravāḷa-k-kōṭṭam,* பெ. (n.) காவிரிப்பூம்பட்டினத்தில் நன்காட்டுப் புறத்திருந்த ஓர் இடம்; a place in the ancient city of Kāviri-p-pūm-paṭṭinam adjoining its buring-ground. 'சக்கரவாளக் கோட்ட மீங்கிதுகாண்' *(மணிமே. 6: 202).*

மறுவ. சுடுகாட்டுக் கோட்டம்

[சக்கரவாளம் + கோட்டம். கோடுதல் = வளைதல், கோடு → கோட்டம் = வளைவு, மதியைச் சூழ்ந்த ஒளி, வட்டம், மதில் சூழ்ந்த கோயில், குளக்கரை]

கோயிலைக் குறிக்கும் கோட்டம் என்னும் சொல் உல் என்னும் மூல வேரின்றும் குல் என்னும் அடிவேரினின்றும் தோன்றிய தூய தென் சொல்லாயிருப்பினும் செ.ப.அகரமுதலி அதை kōṣṭa என்று திரித்து வடசொல்லாகக் காட்டியுள்ளது.

மா.வி.அகரமுதலியில் 'கோஷ்ட்ட' என்னும் சொற்கு மூலமென வினாக்குறியுடன் ஐயுறவாகக் காட்டப்படும் சொல், to tear as under, to pinch, to force or draw art, extract, to knead, to test, examine ?. to shine-?, to gnaw, nibble, to weigh, balance என்று பொருள் குறிக்கப்பட்டுள்ள 'குஷ்' என்பதே. குஷி (வயிறு), கோச (உறை) என்பன உறவுச் சொற்களாயிருக்கலாமென்றுங் குறிக்கப் பட்டுள்ளது. அறிஞர் இதன் புரைமையைக் கண்டு கொள்க. *(வள்ளுவர் கோட்டக் கால்கோள் விழா வாழ்த்து)*

சக்கரவாளகிரி *śakkara-vāḷa-giri,* பெ. (n.) ஆழியங்குன்றம் என மணிமேகலையிற் குறிக்கப் பட்டுள்ள மலை; a mountain mentioned in Maṇimēgalai, an ancient Tamil epic.

[சக்கரவாளம் + கிரி]

Skt. giri → த. கிரி

சக்கரவாளம்[1] *śakkara-vāḷam,* பெ. (n.) *1.* உட்புறம் ஒளியும் வெளிப்புறம் இருளுங்கொண்டு நிலவுலகத்தைச் சூழ்ந்துள்ளதாகக் கருதப் படும் மலை; a mythical range of mountains encircling the orb of the earth and forming the limit of light and darkness. "சூழ்ந்து நிற்குஞ் சக்கரவாளச் சையம்" *(கந்தபு. அண்டகோ. 20).* *2.* மேரு மலையின் மூன்றாந் தாழ்வரை *(சி.போ.பா. 2,3, பக். 205);* the third slope or tier of mt. Mēru. *3.* சக்கரவாளக் கோட்டம் பார்க்க *(மணிமே. 6:183);* see *śakkravāḷa-k-kōṭṭam.* *4.* வட்டவடிவு; circular form.

ம. சக்கரவாளம்

[சக்கரம் + வாளம்]

வாள் → வாளம் = வாளம் (sword), வட்டம். வளைந்த மலைத் தொடர். (சு.வி. 16)

சக்கரவாளம்[2] *śakkara-vāḷam,* பெ. (n.) எல்லை (யாழ். அக); boundary, limit.

ம. சக்ரவாடம்

[சக்கரம் (வட்டம், வளைவு, விளிம்பு எல்லை) + வாளம்]

சக்கரவாளம்[3] *śakkaravāḷam,* பெ. (n.) சக்கரவாகப்புள் பார்க்க; see *śakkara-vāga-p-puḷ.*

[சக்கரம் + வாளம்]

சக்கரவாளிநம்பி *śakkaravāḷi-nambi,* பெ. (n.) திருவரங்கத் திருக்கோயிலுக்கு நிலம் கொடுத்தவன்; the land donar to Tiruvarangam (Srirangam) temple. "சக்கரவாளி நம்பி திருநந்த வன வாத்தலைக்கு மேற்கும்" *(தெ. க. தொ. 24, கல். 246-3).*

[சக்கரம் → சக்கரவாளி + நம்பி]

சக்கரவித்து *śakkara-vittu,* பெ. (n.) வட்டமான விதை; any round seed.

[சக்கரம் + வித்து]

சக்கரவியூகம் *šakkara-viyūgam,* பெ. (n.) சக்கர யூகம் பார்க்க; see *šakkara-yūgam* (செ.அக.).

[சக்கரம் + வியூகம்]

Skt. vyūha → த. வியூகம்

சக்கரவிருத்தி *šakkara-virutti,* பெ. (n.) சக்கரவட்டி பார்க்க (சங்.அக); see *šakkara-vaṭṭi.*

[சக்கரம் + விருத்தி]

த. வட்டம் → Skt. vṛddhi → த. விருத்தி

சக்கரவுயிர்ப்பு *šakkara-v-uyirppu,* பெ. (n.) இறப்புக்காலத்திற் போலத் திணறியெழும் மூச்சு; gasp for breath, dying breath.

[சக்கரம் + உயிர்ப்பு]

சக்கரவெழுத்து[1] *šakkara-v-eḻuttu,* பெ. (n.) இந்திய நாட்டின் பழைமையான ஒரு வகை எழுத்து; an ancient Indian script.

க. சக்ரலிபி

[சக்கரம் + எழுத்து]

தமிழ் எழுத்து கீறெழுத்தும் வட்டெழுத்தும் என இருவகைப்பட்டது. முன்னது ஓலையெழுத்து; பட்டயவெழுத்தையே வட்டெழுத்தென்ப.

எழுத்தாணிகொண்டு ஏட்டில் கீறியெழுதுவதற்கு வளைகோட்டெழுத்தும், உளி கொண்டு பட்டயத்தில் குழித்தெழுதுவதற்கு நேர்கோட்டெழுத்துமே ஏற்றவாதல் காண்க *(ப. ப. 134, 135).*

சக்கரம் வட்டவடிவைக் குறித்தலால் சக்கர வெழுத்தென்பது வட்டெழுத்தைக் குறித்த தாயிருக்கலாம்.

சக்கரவேதனை *šakkara-vēdaṉai,* பெ. (n.) ஒரு வகைத் துன்பம்; a mode of torture.

[சக்கரம் + வேதனை]

சக்கரன்[1] *šakkaraṉ,* பெ. (n.) திருமால் (யாழ்.அக.); Tirumāl (Viṣṇu).

[சக்கரம் → சக்கரன். சக்கரப்படைக் கருவியையுடையவன்]

சக்கரன்[2] *šakkaraṉ,* பெ. (n.) 1. சக்கிரன் பார்க்க (சங்.அக.); see *šakkiraṉ.* 2. பன்னிரு ஆதித்தருள் (துவாத சாதித்தருள்) ஒருவர்; Sun-god, one of tuvāta-cātittar, q.v. 'துளங்கு சக்கரன்' *(கூர்மபு. ஆதவர்ச்சிறப். 2).*

[சக்கரம் → சக்கரன்]

சக்கரன்[3] *šakkaraṉ,* பெ. (n.) மணிமலைத் தமிழ்க் கழகத்தில் தலைமைப் புலவராக இருந்து தமிழாய்வு செய்த பெரும்புலவர்; chief poet of the Maṇimalai Tamil academy.

[சக்கரம் = பெருமை. சக்கரம் → சக்கரன்]

சக்கராக்கினை *šakkarākkiṉai,* பெ. (n.) 1. உண்மைக்குப் புறம்பான தண்டனை; arbitrary punishment inflicted by a despot. 2. அரசனாணை; the decree of a monarch (செ.அக.).

[சக்கரம் + ஆக்கினை]

த. ஆணை → Skt. ājnā → த. ஆக்கினை

சக்கராகாரம் *šakkarāgāram,* பெ. (n.) வட்ட வடிவு; circle. circular form (செ.அக.).

[சக்கரம் + ஆகாரம். சக்கரம் = வட்டம். ஆகாரம் = உருவம், வடிவம்]

சக்கராங்கனம் *šakkarāṅgaṉam,* பெ. (n.) திருமாலியத்தைப் பெறுதற்கு அடையாளமாக ஒருவரது தோள்மீது சங்கு சக்கர முத்திரைகளைக் குரவர் (ஞானாசிரியர்) பொறிக்கை; branding with šaṅgu and šakkaram of Tirumāl (Viṣṇu) made by preceptor on the shoulders of a person at the time of his initiation into vaiṣṇavism (செ.அக.).

[சக்கரம் + ஆங்கனம்]

சக்கராங்கி *šakkarāṅgi,* பெ. (n.) கடுகு ரோகிணி; black hellibore - Helliborus niger (சா.அக.).

சக்கராங்கிதம் *šakkarāṅgidam,* பெ. (n.) சக்கராங்கனம் பார்க்க; see *šakkarāṅgaṉam* (செ.அக.).

[சக்கராங்கனம் → சக்கராங்கிதம்]

சக்கராடி šakkarāḍi, பெ. (n.) 1. எத்தன்; deceiver. 2. பாம்பாட்டி; snake charmer.

[சக்கரம் + ஆடி - சக்கராடி = சக்கரம் போல் படம் எடுக்க வைத்து ஆட்டுபவன், சுழன்று சுழன்று பேசி ஏமாற்றுபவன்]

சக்கராதபம் *šakkarādabam,* பெ. (n.) செம்புளி மரம்; deccany deodar - Erythroxylon monogynum.

சக்கராதிபம் *śakkarādibam,* பெ. (n.) பேரரசன் ஆணை; paramount power 'புவிச்சக்கராதிபம் உடற்சோதரர் தாங் கொண்டிருப்பவும்' *(பாரதி. பாஞ்சாலி, i, 74).*

[சக்கரம் + ஆதிபம்]

Skt. ādhipatya → த. ஆதிபம்

சக்கராபந்தம் *śakkarā-bandam,* பெ. (n.) வட்டத்துத்தி அல்லது சிறுதுத்தி; membranous-carpelled evening mallow - abutilon crispum (சா.அக.).

[சக்கரம் + பந்தம்]

சக்கராயுதத்தி *śakkarāyudatti,* பெ. (n.) காளி; goddess Durga.

ம. சக்ராயுதி

[சக்கரம் + ஆயுதம் + அத்தி. சக்கர ஆயுதத்தையுடையவள்]

சக்கராயுதம் *śakkarāyudam,* பெ. (n.) வட்ட வடிவமான படைக்கலன்; a discus-weapon.

ம., து. சக்ராயுத; க. சக்ராயுத

[சக்கரம் + ஆயுதம்]

த. சக்ராயுதம் → Skt. šakrāyudha

சக்கராயுதன் *śakkarāyudan,* பெ. (n.) திருமால் (திவா) (சக்கரப்படையுடையவன்); Tirumāl (Viṣṇu) as having the discus weapon.

ம. சக்ராயுதன்; க. சக்கராயுத

[சக்கரம் + ஆயுதன்]

சக்கராயுதன்

சக்கராயுதி *śakkarāyudi,* பெ. (n.) காளி (துர்க்கை) (பிங்.); Durgā, as having the discus weapon.

ம. சக்ராயுதி

[சக்கரம் + ஆயுதி]

சக்கராரம் *śakkarāram,* பெ. (n.) ஆரக்கால்; spoke of a wheel.

ம. சக்ராரம்

[சக்கரம் + ஆரம். ஆர் → ஆரம்]

சக்கரான்கட்டு *śakkaran-kaṭṭu,* பெ. (n.) ஒன்றாகத் தைக்கப்பட்ட இரண்டு அல்லது மூன்று சாக்கு (இ.வ.); two or three gunnies stitched together (செ.அக.).

[சக்கரம் + ஆம் + கட்டு – சக்கராங்கட்டு→ சக்கரான்கட்டு. ஒன்று சேர்த்துச் சுற்றிக் கட்டுதல்]

சக்கரை *śakkarai,* பெ. (n.) சருக்கரை1 பார்க்க; see *šarukkarai*[1].

[சருக்கரை → சர்க்கரை → சக்கரை]

சக்கரைக்கட்டி *śakkarai-k-kaṭṭi,* பெ. (n.) சருக்கரைக்கட்டி பார்க்க; see *šarukkarai-k-kaṭṭi.*

[சருக்கரைக்கட்டி → சக்கரைக்கட்டி]

சக்கரைக்கத்தி *śakkarai-k-katti,* பெ. (n.) சருக்கரைக்கத்தி பார்க்க; see *šarukkarai-k-katti.*

[சருக்கரைக்கத்தி → சக்கரைக்கத்தி]

சக்கரைக்கரண்டி *śakkarai-k-karaṇḍi,* பெ. (n.) சருக்கரைக்கரண்டி பார்க்க; see *šarukkarai-k-karaṇḍi.*

[சருக்கரைக்கரண்டி → சக்கரைக்கரண்டி]

சக்கரைக்குத்தி *śakkarai-k-kutti,* பெ. (n.) சருக்கரைக்குத்தி பார்க்க; see *šarukkarai-k-kutti.*

[சருக்கரைக்குத்தி → சர்க்கரைக்குத்தி → சக்கரைக்குத்தி]

சக்கரைக்கேளி *śakkarai-k-kēḷi,* பெ. (n.) சருக்கரைக்கேளி பார்க்க; see *šarukkarai-k-kēḷi.*

[சருக்கரைக்கேளி → சக்கரைக்கேளி]

சக்கரைச்சோறு *śakkarai-c-cōṟu,* பெ. (n.) சருக்கரைச்சோறு பார்க்க; see *šarukkarai-c-cōṟu.*

[சருக்கரைச்சோறு → சக்கரைச்சோறு. சொல் = நெல். சொல் + தி = சொன்றி. சொன்றி → சோறு]

சக்கரைநோய் *śakkarai-nōy,* பெ. (n.) நீரிழிவு நோய்; diabetes.

[சருக்கரை → சக்கரை + நோய்]

சக்கரைப்பேச்சு *śakkarai-p-pēccu,* பெ. (n.) சருக்கரைப்பேச்சு பார்க்க; see *šarukkarai-p-pēccu.*

[சருக்கரைப்பேச்சு → சக்கரைப்பேச்சு]

சக்கரைப்பொங்கல் *śakkarai-p-poṅgal,* பெ. (n.) சருக்கரைப்பொங்கல் பார்க்க; see šarukkarai-p-poṅgal.

[சருக்கரைப்பொங்கல்→ சக்கரைப்பொங்கல்]

சக்கரையமுது *šakkarai-y-amudu,* பெ. (n.) *சருக்கரையமுது பார்க்க;* see *šarukkarai-y-amudu.*

[சருக்கரையமுது→ சக்கரையமுது]

சக்கரைவள்ளி *šakkarai-valli,* பெ. (n.) *சருக்கரைவள்ளி பார்க்க;* see *šarukkarai-valli.*

ம. சக்கரவள்ளி

[சருக்கரைவள்ளி → சக்கரைவள்ளி]

சக்கல் *šakkal,* பெ. (n.) *1. மக்கல்;* rotten straw, muck. *2. சாரமற்றது;* that which is withered, shrivelled.

தெ. சக்கு

[சள் → சளக்கல் → சக்கல்]

சக்களம் *šakkalam,* பெ. (n.) தோல்; skin.

க. சக்கள

[அக்கு = எலும்பு. அளம் = செறிவு, நெருக்கம். எலும்புடன் நெருங்கியிருப்பது, எலும்பைப் போர்த்தியிருப்பது, தோல்]

சக்களவி *šakkalavi,* பெ. (n.) *1. சதுரக் கள்ளி;* square - spurge - Euphorbia antiquorum. *2. திருகுக் கள்ளியின் புல்லுருவி;* a parasite on twisted spurge - Euphorbia tirucalli.

[சதுரக்கள்ளி → சக்கள்ளி → சக்களவி]

சக்களா *šakkalā,* பெ. (n.) வாலை; the female energy worshipped in the form of an immatured girl *(சா.அக.).*

சக்களி[1]-தல் *šakkali-,* 4 செ.கு.வி. (v.i.) *தட்டையாதல் (யாழ்ப்.);* to become oblate, flattened, compressed.

ம., க. சக்கழி.

[தக்கை → சக்கை → சக்கு + அளி-.]

சக்களி[2]-தல் *šakkali-,* 4 செ.கு.வி. (v.i) *சளிதல் (யாழ். அக.);* to be fermented; to grow stale.

[சக்கழி → சக்களி]

சக்களையன் *šakkalaiyan* பெ. (n.) வீணே பொழுதைப் போக்கும் சோம்பேறி *(யாழ்ப்.);* corpulent, sluggish fellow.

[சக்களி → சக்களை + அன்]

சக்காந்தம் *šakkāndam,* பெ. (n) பகடி (பரிகாசம்); ridicule 'மின்னார்களுமே சக்காந்த முரைக்கில்" *(தனிப்பா. i, 378,22).*

[சக்கந்தம் → சக்காந்தம்.]

சக்கந்தம்[2] பார்க்க

சக்காரம் *šakkāram,* பெ. (n.) சருக்கரை போல் இனிக்கும் *தேமா;* a kind of mango.

[அக்காரம் = சருக்கரை போல் இனிக்கும் மாங்கனி அல்லது மாங்கனி வகைகளுள் ஒன்று, அக் கனிமரம். அக்காரம் → சக்காரம்]

சக்கி *šakki,* பெ. (n.) துண்டுச் சட்டம் *(உ.வ.);* any wooden piece or frame.

தெ. செக்க; பட. சக்கெ.

[தக்கை → சக்கை → சக்கி]

சக்கிமுக்கி *šakki-mukki,* பெ. (n.) *1.* நெருப்பு உண்டாக்கப் பயன்படுத்தும் கல்; a steel or flint-stone to strike fire with. *2.* தீப்பற்றும் ஓர் எஃகு; a steel for striking fire. *3.* தீப்பற்றும் கட்டை (திருவாங்கூர் மலையர்கள் பயன் படுத்துவது); a wood used for producing fire - Isora corlifolia.

மறுவ. தீத்தட்டி;

ம. சக்கிமுக்கி, சக்குமுக்கி; க. சக்கமுக்கி, சக்கமுங்கி, சகமுகி, சகமகி.

[சக்கி + முக்கி]

சக்கிமுக்கிக்கல் *šakkimukki-k-kal,* பெ. (n.) நெருப்பையுண்டாக்கப் பயன்படுத்திய ஒரு வகைக் கல்; flint-stone used for kindling fire.

மறுவ. தீத்தட்டிக்கல்.

[சக்குமுக்கி + கல்]

சக்கிமுக்கிக்குடுக்கை *šakki-mukki-k-kudukkai,* பெ. (n.) தீப்பற்றும் பஞ்சை வைத்திருக்கும் குடுக்கை; a box for keeping tinder such as, charred linen used in obtaining fire, tinder-box *(சா.அக.).*

மறுவ. தீத்தட்டிக் குடுக்கை

[சக்கிமுக்கி + குடுக்கை]

சக்கிமுக்கிதட்டு-தல் *šakki-mukki-tattu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* சக்கிமுக்கிக் கல்லைக் கொண்டு தீ வளர்த்தல்; to kindle fire with flint and steel. *2.* சண்டை மூட்டுதல் *(வின்.);* to stir up strife.

[சக்கிமுக்கி + தட்டு-,]

கற்களைத் தட்டி தீ உண்டாக்குவது போல் இருவரிடையே கலகமூட்டுதலும் சக்கிமுக்கி தட்டுதல் எனப்பட்டது.

சக்கிமுக்கிப்பஞ்சு *šakki-mukki-p-pañju,* பெ. (n.) தீப்பஞ்சு; an inflammable substance such as charred liner used for obtaining fire

with a steel and flint in olden days, tinder (சா.அக.).

[சக்கிமுக்கி + பஞ்சு]

சக்கிமுக்கிப்பை *šakki-mukki-p-pai,* பெ. (n.) சக்கிமுக்கிக்கல், சக்கிமுக்கிக்குடுக்கை, எஃகு இவை மூன்றும் அடங்கிய பை; a purse containing flint, tinder and steel (சா.அக.).

[சக்கிமுக்கி + பை. பொள் → பொய் → (பய்) → பை = உட்டுளையுடையது]

சக்கிமுக்கிபோடு-தல் *šakki-mukki-p-pōdu-,* 20 செ.கு.வி. (v.i.) சக்கிமுக்கிதட்டு-தல் பார்க்க; see *šakki-mukki-tattu-.*

[சக்கிமுக்கி + போடு-,]

சக்கிமுக்கிவளையம் *šakki-mukki-valaiyam,* பெ. (n.) சக்கிமுக்கி தட்டும் இரும்பு வளையம்; a round plate of iron used with strike a light.

மறுவ. தீத்தட்டி வளையம்.

[சக்கிமுக்கி + வளையம். வள் → வளை → வளையம்]

சக்கியம் *šakkiyam,* பெ. (n.) இயல்வது; that which is possible, practicable (செ. அக.).

[தக்கு = ஏற்றதாதல். தக்கு → சக்கு → சக்கியம் = இயல்வது]

த. சக்கியம் → Skt. śakya

சக்கியன் *šakkiyan,* பெ. (n.) நண்பன், தோழன் (இராட்.); friend.

[சக்கியம் → சக்கியன் = ஏற்புடைத் தலைவன், ஒத்தவுணர்வுள்ளவன், நண்பன்]

சக்கிரகம் *šakkiragam,* பெ. (n.) (ஏரணம்) வளைய வளையப் பேசுகை (புதுவை.); arguing in a vicious circle.

[சக்கரம் = வளைவு. சக்கரம்→ சக்கிரகம்]

சக்கரப்பிரசங்கம் பார்க்க.

சக்கிரகாசிகம் *šakkira-kāšigam,* பெ. (n.) மாசிக்காய்; oak-gall (சா.அக.).

[சக்கிரம் + காசிகம்]

சக்கிரகாரகம் *šakkira-kāragam,* பெ. (n.) சக்கரகாரகம் பார்க்க; see *šakkara-kāragam.*

சக்கிரசம் *šakkirašam,* பெ. (n.) அத்தி; fig tree-ficus glomerata (சா.அக.).

[சக்கரம் → சக்கிரம் → சக்கிரசம்]

சக்கிரநாயகம் *šakkira-nāyagam,* பெ. (n.) ஓமாலிகைகளில் ஒன்றாகிய புலியுகிர் (சங். அக.); an aromatic substance.

சக்கிரபாணி *šakkira-pāni,* பெ. (n.) 1. காளி (துர்க்கை), (சூடா.); Durgā. 2. சக்கரபாணி[1] பார்க்க; see *šakkara-pāni.*

[சக்கரம் → சக்கிரம் + பாணி. சக்கரத்தை யுடையவ-ள்-ன்; பாணி = கை. பண்ணுவது பாணி]

சக்கிரபாதம் *šakkira-pādam,* பெ. (n.) 1. உருளைகளை (சக்கரங்களை)க் கால்களாக உடைய வண்டி; cart, as having wheels for its legs. 2. வட்டமான கால்களையுடைய யானை; elephant, as having round legs.

[சக்கரம் + பாதம். பதி → பாதம் நிலத்தில் பதியும் உறுப்பு அல்லது பாகம்]

சக்கிரபுட்பி *šakkira-putpi,* பெ. (n.) சக்கரபுட்பி பார்க்க; see *šakkara-putpi.*

[சக்கரபுட்பி → சக்கிரபுட்பி]

சக்கிரபுளிச்சை *šakkira-puliccai,* பெ. (n.) செம்புளிச்சை; deccany dender-Erythroxylon monogynum (சா.அக.).

சக்கிரம் *šakkiram,* பெ. (n.) சக்கரம்[1] பார்க்க; see *šakkaram*[1]. "சோழன சக்கிரமாங் கருணாகரன்" (கலிங்.350).

[சக்கரம் → சக்கிரம்]

சக்கிரம்[1] *šakkiram,* பெ. (n.) தகரை; ringworm plant.

[சக்கரம் → சக்கிரம்]

சக்கரம்[4] பார்க்க

சக்கிரம்[2] *šakkiram,* பெ. (n.) 1. மாமரம்; mango tree. 2. பூவரசு; portia tree - Thespesia populrea (சா.அக.).

சக்கிரமண்டலி *šakkira-mandali,* பெ. (n) சக்கரமண்டலி பார்க்க; see *šakkara-mandali* (யாழ். அக.).

[சக்கரம் → சக்கிரம் + மண்டலி]

சக்கிரமாமூலி *šakkira-māmūli,* பெ. (n.) கருநொச்சி; willow-leaved justicia - Justicia gendarussa (சா. அக.).

[சக்கரம் → சக்கிரம் + மா + மூலி(கை)]

சக்கிரமுகம் *šakkira-mugam,* பெ. (n) பன்றி (யாழ். அக.); pig.

[சக்கரம் → சக்கிரம் + முகம். முகம் = முன்பக்கம், தலையின் முன்பக்கம்]

சக்கிரமுகம் = சக்கரம் போன்று வட்டவடிவ முகத்தை (வாய்ப்பகுதியை) யுடையது.

சக்கிரயானம் *šakkira-yāṉam,* பெ. (n.) சக்கரயானம் பார்க்க; see *šakkarayāṉam.*

[சக்கரம் → சக்கிரம் + யானம்]

Skt. yāṉa → த. யானம்

சக்கிரலேகை *šakkira-lēgai,* பெ. (n.) சக்கிர வரிகை பார்க்க; see *šakkara-varigai.*

[சக்கரம் + ரேகை → சக்கரரேகை → சக்கரலேகை (கொ.வ.)]

Skt. rēkha → த. ரேகை

சக்கிரவர்த்திக்கீரை *šakkira-vartti-k-kīrai,* பெ. (n.) மலமிளக்கியாகப் பயன்படும் ஒருவகைக் கீரை; a kind of edible greens - Amaranthus (சா.அக.).

[சக்கிரவர்த்தி + கீரை]

சக்கிரவாதபம் *šakkira-vādabam,* பெ. (n.) செம்புளிச்சை (மலை.); red cedar.

சக்கிரவாதம் *šakkira-vādam,* பெ. (n.) சுழல் காற்று (யாழ். அக.); whirlwind.

[சக்கரம் → சக்கிரம் + வாதம். சக்கரம் = வட்டம், உருளை, சுழற்சி]

Skt. vāta → த. வாதம்

சக்கிரவாளம் *šakkira-vāḷam,* பெ. (n.) வட்டம்; circle.

[சக்கரவாளம் → சக்கிரவாளம்]

சக்கிரவான் *šakkira-vāṉ,* பெ. (n.) வேங்கை மரம்; kino tree - Pterocarpus marsupium (சா.அக.).

சக்கிரவிருத்தி *šakkira-virutti,* பெ. (n.) சக்கரவட்டி பார்க்க; see *šakkaravaṭṭi.*

[சக்கரவிருத்தி + சக்கிரவிருத்தி]

சக்கிரன் *šakkiraṉ,* பெ. (n.) இந்திரன் (பிங்.); Indra.

[சக்கரன் → சக்கிரன். ஆணைச் சக்கரத்தை யுடையவன்]

சக்கிராங்கம் *šakkirāṅgam,* பெ. (n.) வண்டி; cart.

[சக்கரம் + அங்கம் → சக்கராங்கம் - சக்கிராங்கம். சக்கரத்தை உறுப்பாக (அங்கமாக)க் கொண்டது]

Skt. aṅka → த. அங்கம்.

சக்கிராங்கி *šakkirāṅgi,* பெ. (n.) நோய் நீக்கி (கடுரோகிணி) (தைலவ. தைல. 23); christmas rose.

[சக்கராங்கி → சக்கிராங்கி]

சக்கிராடி *šakkirāḍi,* பெ. (n.) சக்கராடி பார்க்க; see *šakkarāḍi.*

[சக்கராடி → சக்கிராடி]

சக்கிராதம் *šakkirādam,* பெ. (n.) பன்றி (மூ. அ.); pig.

[சக்கரம் → சக்கிரம் → சக்கிராதம் = வட்டமான மூக்குப் பகுதியுடையது]

சக்கிரி[1] *šakkiri,* பெ. (n.) 1. (சக்கரத்தை உடைய) அரசன் (சூடா.); king, emperor. 2. சக்கரத்தைக் கையில் கொண்டவன், திருமால் (சூடா.); Tirumāl (Viṣṇu).

மறுவ. புரவலன், பெருமான், ஏந்தல், வேந்தன், மன்னன், பொருநன், குரிசில், கோ, கொற்றவன், இறைவன், அண்ணல், தலைவன், காவலன்.

[சக்கரம் → சக்கரி → சக்கிரி]

சக்கிரி[2] *šakkiri,* பெ. (n.) சக்கரத்தால் மட்பாண்டம் செய்யும் குயவன் (பிங்.); potter.

மறுவ. கும்பகாரன், குவாலன், வேட்கோவன், மட்பகைவன்

[சக்கரம் → சக்கரி → சக்கிரி]

சக்கிரி[3] *šakkiri,* பெ. (n.) 1. செக்கான் (திவா); oil-monger, oil-grinder. 2. பாம்பு (பிங்.); snake.

[சக்கரம் → சக்கரி → சக்கிரி]

சக்கிரிகை *šakkirigai,* பெ. (n.) முழந்தாள் (யாழ். அக.); knee.

[சக்கரிகை → சக்கிரிகை. சக்கரம் போன்று அசையும் உறுப்பு]

சக்கிலி[1] *šakkili,* பெ. (n.) கண்ணில்லாதவன்; blind.

[சக்கு + இலி]

சக்கிலி[2] *šakkili,* பெ. (n.) தோல்; skin, leather.

க. சக்கலி; Mar. sāga (goat's skin, leather)

[அக்கு = எலும்பு. அளம் = செறிவு, நெருக்கம். அக்கு + அளம் → அக்களம் → சக்களம் = எலும்புடன் செறிந்து மூடியிருப்பது, தோல். சக்களம் → சக்கலி]

சக்கிலி[3] *šakkili,* பெ. (n.) சக்கிலியர் இனம்; caste of shoe-makers.

[சக்கிலி[2] → சக்கிலி. தோலைக் கொண்டு பணி செய்பவன்]

தமிழ்நாட்டில் இப்போதுள்ள சக்கிலியர் தெலுங்கராதலின் விசயநகர ஆட்சியில் அல்லது அதற்குச் சற்று முன்பு தெலுங்க நாட்டினின்று தமிழ்நாட்டிற்கு வந்தவராவர்.

அவர் வருமுன்பு, அவர் தொழிலைச் செய்து கொண்டிருந்தவர் பறம்பர் (செம்மார்) என்னும் தமிழ் வகுப்பார். இவர் பாணருள் ஒரு பிரிவார். பாணர் பறையர். பாணரும் சக்கிலியரைப் போல் மாடு தின்பவர். மாட்டுத் தோலைப் பதனிட்டு அதனாற் செருப்பு, கூனை முதலிய பொருள்களைச் செய்வது, மாடு தின்பவர்க்கே மிக இசையும். தோல் வேலை செய்பவர் கடைக் கழகக் காலத்திலேயே தமிழ்நாட்டிலிருந்தமை, தோலின் துன்னர் என்று சிலப்பதிகாரத்தில் கூறியிருப்பதால் அறியப்படும். பாணருக்குத் தையல்தொழிலு முண்டு. "பாணர்க்குச் சொல்லுவதும்.... தை...." என்று காளமேகப் புலவர் கூறியிருத்தல் காண்க. தையல் என்னும் பெயர் துணி, தோல் என்னும் இரு பொருள்களை மூட்டுவதற்கும் பொதுவாகும். துன்னம் என்னும் பெயரும் இங்ஙனமே. சக்கிலியர் பறம்பர் தொழிலை மேற்கொண்ட பின், செம்மார் பிற தொழிலை மேற்கொண்டு பெயர் மறைந்தனர். சக்கிலியருக்குச் செம்மான் என்னும் தமிழ்ப் பெயரும் சக்கிலி என்னும் தெலுங்கப் பெயரும் இன்று வழங்கி வருகின்றன. *(ஒ.மொ. முன். 33)*

சக்கிலிக்குருவி *šakkili-k-kuruvi*, பெ. (n.) **மீன் குத்திப் பறவை;** king fisher (M.M.416).

[கிச்சிலி → சிக்கலி → சக்கிலி + குருவி. குரீ → குரீஇ → குருவி]



சக்கிலிக்குருவி

சக்கிலிச்சி[1] *šakkilicci*, பெ. (n.) **சக்கிலிய இனத்துப் பெண்;** a woman of the šakkili caste (செ. அக.).

[சக்கிலியன் (ஆ.பா.) - சக்கிலிச்சி (பெ.பா.)]

சக்கிலிச்சி[2] *šakkilicci*, பெ. (n.) ஒரு வகை **எரியுப்பு (சத்திசாரம்)** (வின்.); a salt of burning and acrid nature (செ.அக.).

சக்கிலியப்பெண் *šakkiliya-p-pen*, பெ. (n.) சக்கிலிச்சி பார்க்க; see *šakkilicci*. 'சக்கிலியப் பெண்ணும் சாமைக் கதிரும் சமைஞ்சா தெரியும்' (பழ.).

[சக்கிலி + அ + பெண்]

சக்கிலியன் *šakkiliyan*, பெ. (n.) **செம்மான்;** chucklers, workers in leather (செ.அக.).

ம. சக்கிலியன்; க. சக்கள

[சக்கிலி → சக்கிலியன்]

சக்கிலி[3] பார்க்க

சக்கு[1] *šakku*, பெ. (n.) **கண்;** eye. "புரந்தர னெனுஞ் சக்கு வாயிர முடைக் களிறு" (கலிங். 175).

மறுவ. தாரை, விழி, திருக்கு, அம்பகம், கோ, நாட்டம், அக்கம்

[அஃகுதல் = சுருங்குதல், சிறியதாதல், நுணுகுதல். அஃகு → அக்கு = துண்டு, சிறியது. அக்கு → சக்கு = சிறிய உருப்பாகிய கண்]

Skt. šakṣuḥ; Pkt. šakkhū

யானையின் உருவத்தை நோக்க அதன் கண் சிறியதாதலால் சக்கு என்பது முதலில் யானைக் கண்ணைக் குறித்துப் பின் பொதுப் பெயராயிற்று.

சக்கு[2] *šakku*, பெ. (n.) **செக்கு;** a country oil-press.

ம. சக்கு; க. செக்கு; Pkt., Pali. cakka; Mar., H. cakkī

[சருக்கரம் → சருக்கு → சக்கு. இற்றைச் செகர முதற்சொற்கள் சில பண்டு சகர முதலாயிருந்தனவென்று அறிதல் வேண்டும். எ-டு: சத்தான் → செத்தான், சக்கு → செக்கு]

சக்கு[3] *šakku*, பெ. (n.) **பூஞ்சாளம்** (யாழ்ப்.); mouldiness.

தெ. சக்கு

[சருகு → சருக்கு → சக்கு]

சக்குக்கட்டு-தல் *šakku-k-kaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.i.) **பூஞ்சாளம் பூத்தல்** (யாழ்ப்.); to grow mouldly.

[சருகு → சருக்கு → சக்கு + கட்டு-,]

சக்குச்சக்கெனல் *šakku-c-cakku-enal*, பெ. (n.) **ஓர் ஒலிக்குறிப்பு** (வின்); onom. expr. signifying harsh, dissonant, dull sound, as of a muffled drum 'சக்குச் சக்கென்று பாக்குத் தின்பான் சபை மெச்ச; வீட்டிலே வந்து கடைவாயை நக்குவான் பெண்டுகள் மெச்ச' (பழ.).

[சக்கு + சக்கு + எனல்]

சக்குச்சுசியம் *šakku-c-šusiyam*, பெ. (n.) 1. **கண்மை;** collyrium for the eyes, extracted

from Amomum antorhiza; *2. தாழை;* a fragrant plant-Pandanus odaratissimus *(சா. அக.).*

சக்குத்தானம் *šakku-t-tāṉam,* பெ. (n.) தெய்வத் திருவுருவின் கண்களை நீரால் தூய்மை செய்யும் பூசைவகை (யாழ்.அக.); ceremonial washing of the eyes of a deity in a temple.

[சக்கு + தானம்]

சக்குப்பிடி-த்தல் *šakku-p-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) பூஞ்சாளம் பூத்தல் (இ.வ.); to grow mouldy.

[சருகு → சருக்கு → சக்கு + பிடி-,]

சக்குப்பூ-த்தல் *šakku-p-pū-,* 4 செ.கு.வி. சக்குப்பிடி-த்தல் பார்க்க (யாழ். அக.). see *šakku-p-piḍi-.*

[சக்கு + பூ-,]

சக்குபு *šakkupu,* பெ. (n.) கையாந்தகரை (மூ. அ.); a plant growing in wet places.

[சளசளத்தல் = சேறாயிருத்தல். சள → சளக்கு. சளக்கு → சக்கு = சேற்று நிலம். சக்கு → சக்குபு = நீர் கோத்த நிலத்தில் வளர்வது.]

சக்குவரி *šakkuvari,* பெ. (n.) ஒற்றொழித்து அடியொன்றுக்கு 14 எழுத்துகள் கொண்ட நாலடி மண்டிலம் (விருத்தம்) (வீரசோ. யாப். 33, உரை); a verse of four lines, each of them consisting of 14 letters.

Skt. śakvari

சக்கேரம் *šakkēram,* பெ. (n.) மெல்லிய தண்டும், முரட்டுத்தன்மையும் கொண்ட கரும்பு வகை; a kind of sugar cane.

[சக்கு = கண். சக்கு → சக்கேரம் = கண் போன்ற கணுக்கள் உள்ள கரும்பு]

சக்கை[1] *šakkai,* பெ. (n.) *1. உள்ளீடற்றது;* that which is hollow. *2. தட்டையானது;* that which is flat. *3. கோது, சிராய்;* refuse, as of sugarcane after pressing; rind as fibrous parts of fruits; anything wanting in solidity or strength; anything useless; *4. பட்டை;* bark. *5. இறுக்கும் தக்கை;* bark small wooden peg. *4. துமுக்கி (துப்பாக்கி)த் தக்கை* (யாழ்ப்.); wadding of a gun.

ம. சக்க; க., து., பட. சக்கெ; தெ. செக்க.

[தக்கை → சக்கை.]

சக்கை[2] *šakkai,* பெ. (n.) *1. பலா* (இ.வ.); jack. *2. காட்டுப் பலா;* jungle jack *(செ.அக.).*

ம. சக்க; க. சக; து. குச்செ; குட., பட. சக்கெ.

[தக்கை → சக்கை]

த. சக்கை → E. jack

(நீள்) வட்டவடிவம் என்னும் அடிப்படையில் சக்கரம் என்னும் சொல்லிலிருந்து சக்கை வந்திருக்கவேண்டுமெனக் குண்டற்று கருதினார். பயனற்றது, சத்தற்றது என்னும் பொருளில் வந்ததென மலையாள அகரமுதலி குறித்திருப்பதே பொருத்தமானது.

சக்கை[3] *šakkai,* பெ. (n.) தவச மணி நீக்கப்பட்ட கதிர்; grainless ear.

[தக்கை → சக்கை]

சக்கைக்கல் *šakkai-k-kal,* பெ. (n.) கற்சிறாய்; a thin split of stone.

க., பட. சக்கெ கல்லு

[சக்கை + கல்]

சக்கைக்காய் *šakkai-k-kāy,* பெ. (n.) பலாப் பழத்தின் பிஞ்சு; unripe fruit of jack fruit.

[சக்கை + காய்]

சக்கைச்சுளை *šakkai-c-cuḷai,* பெ. (n.) பலாப் பழத்திலுள்ள தசைப் பகுதி; the pulp of jack fruit.

ம. சக்கச்சுள

[சக்கை + சுளை. சுள் → சுளை = திரட்சி, திரண்ட பழச்சதைப் பகுதி]

சக்கைப்பட்டம் *šakkai-p-paṭṭam,* பெ. (n.) மாதத்தின் 14, 15ஆம் நாள்களில் செய்யும் விதைப்பு; sowing during 14th and 15th days of a month.

[சக்கை + பட்டம்]

மாதத்தின் 14, 15ஆம் நாள்களில் செய்யும் விதைப்பு போதிய விளைச்சல் தராமல் போய் விடும் என்னும் நம்பிக்கையின் அடிப்படையில் இச் சொல் அமைந்திருக்கக் கூடும்.

சக்கைப்பப்படம் *šakkai-p-pappaḍam,* பெ. (n.) சக்கையப்பளம் பார்க்க; see *šakkai-y-appaḷam.*

ம. சக்கப்பப்படம்

[சக்கை + பப்படம்]

அப்பளி → அப்பளம். அப்பளித்தல் = சமனாகத் தேய்த்தல். த. அப்பளம் → Skt. parppaṭa → த. பப்படம்.

சக்கைப்பழம் *šakkai-p-palam,* பெ. (n.) *பலாப் பழம்;* jack fruit.

ம. சக்கப்பழம்; பட. சக்கண்ணு.

[சக்கை + பழம்]



சக்கைப்பால் *šakkai-p-pāl,* பெ. (n.) *பலாப் பழத்தை வெட்டும்போது வடியும் ஒட்டும் தன்மையுள்ள வெண்மையான நீர்மம்;* the sticky exudation from the jack fruit when cut.

ம. சக்கயரக்கு

[சக்கை + பால்]

சக்கைப்புரட்டி *šakkai-p-puratti,* பெ. (n.) *களத்தில் சக்கைகளைப் புரட்டி விடவும், சென்று சேர்க்கவும் பயன்படும் கருவி;* an implement used to gather straw.

[சக்கை + புரட்டி]

சக்கைபுரட்டிவிடு-தல் *šakkai-puratti-vidu-,* 20 செ.கு.வி. (v.i.) *சக்கைபோடுபோடு-தல் பார்க்க;* see *šakkai-pōdu-pōdu-* (செ.அக.).

தெ. தெக்க

[சக்கை + புரட்டி + விடு-,]

சக்கைபோடுபோடு-தல் *šakkai-pōdu-pōdu-,* 20 செ.கு.வி & செ.குன்றாவி. (v.i.) & (v.t.) *திறமையாகச் செய்தல்* (கொ.வ.); to accomplish a task skilfully (செ.அக.).

[தக்கை → சக்கை + போடு + போடு-,]

சக்கைமடல் *šakkai-madal,* பெ. (n.) *பலாப் பழத்தின் புறத்தோல்;* the thicky thorny rind of jack fruit.

ம. சக்கமடல்

[சக்கை + மடல்]

சக்கைமரம் *šakkai-maram,* பெ. (n.) *பலா மரம்;* the jack tree.

ம. சக்கமரம்

[சக்கை + மரம்]

சக்கைமுல்லை *šakkai-mullai,* பெ. (n.) *ஒரு வகை முல்லை;* a kind of jasmine.

ம. சக்கமுல்ல; Skt. cakra malliga

[சக்கை + முல்லை. முல் → முல்லை = வெண் பூக்கொடி வகை]

சக்கைமுள் *šakkai-mul,* பெ. (n.) *பலாப் பழத்தின் புறத்தோலில் இருக்கும் முள்;* thorny projections on the rind of the jack fruit (சேரநா.)

ம. சக்கமுள்ளு

[சக்கை + முள்]

சக்கையப்பளம் *šakkai-y-appalam,* பெ. (n.) *பலாக்காயின் சுளை கொண்டு செய்யும் அப்பளம்;* a kind of pappadam - wafer prepared with the pulp of unripe jack fruit.

ம. சக்கப்பப்படம்

[சக்கை + அப்பளம். அப்பளித்தல் = சமமாகத் தேய்த்தல். அப்பளி → அப்பளம்]

சக்கையன் *šakkaiyan,* பெ. (n.) *உடல் வலியற்றுப் பருத்திருப்பவன்* (யாழ்ப்.); a stout, but weak person (செ.அக.).

ம. சக்கச்சன், சக்கமாடன்

[தக்கை → சக்கை → சக்கையன்.]

சக்கையாய் *šakkai-y-āy,* கு.வி.எ. (adv.) *மிகுதியாக;* in great measure, abundantly, excessively. *மழை சக்கையாய்ப் பெய்தது* (சா.அக.).

[சால் → சால்கு → சால்கை → சாக்கை→ சக்கை + ஆய். சாலுதல் = நிறைதல், மிகுதல், ஆய் – வி.எ. ஈறு.]

சக்கையாய்ப்பிழி[1]-தல் *šakkai-y-āy-p-pili-,* 2 செ.குன்றாவி. (v.t.) *சாறு (சத்து) முழுவதும் அறும்படி பிழிதல்;* to squeeze out the essence from a thing so completely as to leave only the refuse (சா.அக.).

[சக்கையாய் + பிழி-,]

சக்கையாய்ப்பிழி[2]-தல் *šakkai-y-āy-p-pili-,* 2 செ.குன்றாவி. (v.t.) *கடுமையாக வேலை*

வாங்குதல்; to extract hard work from, overwork, as reducing one to skeleton (செ.அக.).

[தக்கை → சக்கை + ஆய் + பிழி-,]

சக்கையெடு-த்தல் *šakkai-y-edu-*, 4 செ.குவி. (v.i) கதிரைப் பிணையிட்டுக் கூலங்கள் நீங்கிய பின் சக்கையையெடுத்தல்; to remove straws after removing grains.

[சக்கை + எடு-,]

சக்கைவாங்குவாங்கு-தல் *šakkai-vāṅgu-vāṅgu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. சக்கையாய்ப் பிழி-தல் பார்க்க; see *šakkaiyāy-p-pili-*. 2. மிகக் கடிந்து பேசுதல்; to take to task severely (செ.அக.). அவனைச் சக்கை வாங்கு வாங்கினான்.

[சக்கை + வாங்கு + வாங்கு-,]

சககாரம் *šagakāram*, பெ. (n.) தேமா (பிங்.); a kind of sweet mango.

[சக்கரை → சகக்கரை → சககாரம்]

சககிரபுட்பி *šagagira-putpi*, பெ. (n.) குப்பைமேனி; a kind of plant.

[சக்கரபுட்பி → சககிரபுட்பி]

சகச்சாரகம் *šaga-c-cāragam*, பெ. (n.) சிவப்பு நெல்; a red variety of paddy (சா.அக.).

[சிவப்பு → செகப்பு = செம்மைநிறம். செகப்பு → சகப்பு. சக + சாரகம்]

சகச்சிராட்சி *šaga-c-cirātci*, பெ. (n.); ஒருவகைப் பூடு (தைலவ. தைல. 23) a kind of plant.

சகச்சை *šagaccai*, பெ. (n.) பொன்னாங்காணி; a yellow flowered edible plant known as verbesina mary-gold (சா.அக.).

சகசம்[1] *šagašam*, பெ. (n.) 1. செம்முள்ளி; thorny nail dye-barleria prionitis. 2. நத்தைச் சூரி; bristly button weed (சா.அக.).

[சிகப்பு = செம்மை நிறம். சிகப்பு → சகப்பு → சகம் → சகசம்]

சகசம்[2] *šagašam*, பெ. (n.) 1. இயற்கை; nature. 2. சகடம்; cart.

சகசரி *šagašari*, பெ. (n.) 1. பொன்னிறங்கலந்த கரிய பூமருதோன்றி (மலை); henna. 2. வாடாக் குறிஞ்சி (திவா.); a plant of ever fresh flowers.

[சகசம் → சகசரி]

சகசா *šagašā*, பெ. (n.) சிறு குறிஞ்சா (மலை.); small Indian ipecacuanha.

சகசாகிகம் *šagašāgigam*, பெ. (n.) மிளகுத் தக்காளி; chilly takkali - Solanum melangena (சா.அக.).

சகசீலகம் *šaga-šīlagam*, பெ. (n.) முட்டைக் கோசு; cabbage (சா.அக.).

சகசோபை *šagašōbai* பெ. (n.) ஆதொண்டை; thorny caper (சா.அக.).

சகட்டடியாக *šagattadi-y-āga*, கு.வி.எ. (adv.) மொத்தமாக; by the lump, at a sweep; on an average (செ.அக).

[சவட்டு → சகட்டு → சகட்டி → சகட்டடி + ஆக]

சகட்டிலே *šagattilē*, கு.வி.எ. (adv.) சகட்டடியாக பார்க்க (கொ.வ.); see *šagattadi-y-āga* (செ. அக.).

[சகடு → சகட்டு + இலே]

சகட்டுக்கு *šagattukku*, கு.வி.எ. (adv.) சகட்டடியாக பார்க்க (கொ.வ.); see *šagattadi-y-āga* (செ.அக.).

[சகடு → சகட்டுக்கு]

சகட்டுமேனிக்கு *šagattumēnikku*, வி.எ. (adv.) எந்த வகை வேறுபாடும் பார்க்காமல், பாகுபாடு இல்லாமல், ஒட்டுமொத்தமாக; without any discretion or discrimination in a lump on, an average. என்ன ஏது என்று கேட்காமல் சகட்டுமேனிக்குப் பேசாதே.

ம. சரட்டுமேனி

[சகடம் = முழுமை, மொத்தம். சகட்டு + மேனி + கு. முழுமையாக அல்லது ஒட்டு மொத்தமாக. இனி, சகட்டு + மேனி. சகடு = சக்கரம், வண்டி. வண்டியோடும் போது அதன் சக்கரங்கள் சேறு, புழுதி, மேடு, பள்ளம், குப்பை என்று வேறுபாடு பார்க்காது செல்வதுபோல் எவ்வித வேறுபாடும் பார்க்காமல் அனைத்தையும் உள்ளடக்கியது என்னும் பொருளில் சகட்டுமேனிக்கு ஆளப்பட்டுள்ளது என்றுமாம். ஒ.நோ. கண்டமேனிக்கு]

சகட்டை *šagattai*, பெ. (n.) தமரத்தை; coromandal goose-berry (சா.அக.).

சகடக்கால் *šagadakkāl*, பெ. (n.) வண்டிச் சக்கரம்; cart-wheel; carriage-wheel. "சகடக்கால் போல வரும்" (நாலடி. 2).

[சகடம் + கால். வண்டிக்குக் காலாக இருக்கும் சக்கரம்]



சகடப்பாதை *šagaḍa-p-pādai,* பெ. (n.) **பெரும் பாதை** *(வின்);* highway, road for wheeled traffic.

[சகட + பாதை. பதி → பதம் = நிலத்திற் பதியும் காலடி. பதம் → பாதம் → பாதை = பாதம்பட்டு உண்டாகும்வழி]

ஒருவர் மட்டும் செல்லக்கூடிய அளவினதான ஒற்றையடிப்பாதையைப் (கால்பாதை) போலில்லாமல் வண்டியோடும் பாதை அகலமானதாக அமையும் தன்மை நோக்கி, சகடபாதை பெரும் பாதையைக் குறித்தது.

சகடப்பொறி *šagaḍa-p-pori,* பெ. (n.) **சக்கர வடிவான ஒரு பொறி** (சிலப். 15: 216, உரை.); a machine in the shape of a wheel, used as a weapon of defence.

[சகடம் + பொறி]

சகடபலம் *šagaḍabalam,* பெ. (n.) **நீர்க்கோழி** *(சங். அக.);* water-fowl.



சகடம்[1] *šagaḍam,* பெ. (n.) *1.* **சக்கரம்** *(சங். அக);* wheel. *2.* **வண்டி;** cart, wheeled conveyance drawn by cattle, carriage, chariot. 'பல்கதிர் முத்தார் சகடம்' *(சீவக. 363);* 3. **தேர்;** car. 'சகட சக்கரத் தாமரை நாயகன்' *(கந்தபு. காப்பு. 1)* *4.* **சகடயூகம்** பார்க்க; see *šagaḍa-yūgam.* 'சகடமாம் வெய்ய யூகமும்' *(பாரத. எட்டாம். 3).* *5.* **கிணற்றிலிருந்து நீரிறைக்கப் பயன்படும் மரவுருளை;** a wooden pulley used for drawing water from the well.

ம. சகடம், சாடு; க. சகட, சகடி, சக்கடி; தெ. செகடா; Skt. sakaṭa; H., Mar. chakaḍā; Pkt. šagaḍa.

[சக்கு → சக்கடம் → சக்கடா = கட்டை வண்டி. சக்கடம் → சகடம் = சக்கரம், வண்டி, பொது வகையான மாட்டு வண்டி, தேர் (வே.க. 240)]

வளைவுப் பொருளைக் கொண்ட வண்டி (வள் + தி) முதலாவதாக வட்டமான சக்கரத்தை யுணர்த்திப் பின்பு ஆகுபெயராய்ச் சகடத்தை உணர்த்துகின்றது. சக்கரத்தை வண்டியென்னும் வழக்கு இன்றும் தென்னாட்டிலுள்ளது. சிறுவர் களிமண்ணாற் செய்த சக்கரத்தை வண்டி என்பர். உழவர் கமலையேற்றத்தின் மேலுள்ள உருளை (pulley)யைக் கமலைவண்டி என்பர்.

சகடம்[2] *šagaḍam,* பெ. (n.) **துந்துபி** *(பிங்.);* a large drum.

[சகடு → சகடம்]

சகடை[3] பார்க்க

சகடம்[3] *šagaḍam,* பெ. (n.) **ஊர்க்குருவி** *(பிங்.)* sparrow *(செ. அக.).*

மறுவ. குருவி, அடைக்கலான்

ம. சடகம், சடக்கம்

[சகடு → சகடம். வட்டமாகப் பறக்கும் குருவி. ஒ.நோ. ஆல் → ஆலா = வட்டமிட்டுப் பறக்கும் பறவை வகை.]

சகடம்[4] *šagaḍam,* பெ. (n.) **வட்டில்** *(பிங்,);* plate; cup.

[சகடு → சகடம் - வட்டமானது]

சகடம்[5] *šagaḍam,* பெ. (n.) **தமரத்தை** *(மூ.அ.);* carambola tree *(செ.அக.).*

சகடம்[6] šagaḍam, பெ. (n.) **ஓர் ஓக (யோகம்) நிலை;** a kind of yogic posture.

[சகடு = சக்கரம், வட்டம். சகடு → சகடம்= உடலை வளைத்துச் செய்யும் ஓக நிலை]

சகடம்[7] *šagaḍam,* பெ. (n.) *1.* **முழுமையானது;** the whole in a lump. *2.* **சராசரி;** average.

ம., க. சகடு

[சகடு = வட்டம். சகடு → சகடம் = வட்டம், திரட்சி, முழுமை]

சகடம்புறா *śagaḍam-puṟā*, பெ. (n.) பச்சைப் புறாவில் ஒரு வகை; a kind of dove.

[சகடம் + புறா]

சகடமங்கலம் *śagaḍa-maṅgalam*, பெ. (n.) திருவாரூர் மாவட்டத்திலுள்ள நன்னிலத்தை உள்ளடக்கிய ஓரூர்; a village in Tiruvārūr district. "நெற்குணம், சகடமங்கலம் ராமன்நதீசுவரம் ராமனாதசுவாமி கிராமம்" *(நன்னி. க. தொ. 2. கல். 15, வரி 17).*

[சகடம் + மங்கலம்]

சகடயூகம் *śagaḍa-yūgam*, பெ. (n.) சகட வடிவாக அமைக்கப் பெறும் அணிவகுப்பு வகை; the array of an army in the shape of a car (செ.அக.).

[சகடம் + யூகம்]

சகடயோகம் *śagaḍa-yōgam*, பெ. (n.) குருவுக்கு ஆறு எட்டு பன்னிரண்டாம் வீட்டில் திங்கள் (சந்திரன்) இருத்தலால் உண்டாகும் பயன் *(சரசோ. குணாகுண. 117)*; occasional prosperity resulting from the situation of the moon in the sixth, eighth or twelth sign from jupiter *(astrol.)*.

[சகடம் + யோகம்]

த. ஓகம் → Skt. yōga → த. யோகம்

சகடாசுரன் *śakaḍāsuraṉ*, பெ. (n.) கண்ணனைக் கொல்வதற்காக கம்சனால் அனுப்பப்பட்ட ஓர் அசுரன்; a demon sent by Kamśa to kill Krisṇa (சிறப். பெ.அக.).

[சகடம் + அசுரன். இவன் தன்னுடைய ஆற்றலை ஒரு வண்டியிற் புகுத்திக் கொண்டு கண்ணனைக் கொல்லுவதற்கு நேரம் பார்த்துக் காத்திருந்ததாகவும், கண்ணன் அவ் வண்டியைக் காலால் உதைத்து அவ்வசுரனைக் கொன்றதாகவும் கதை. சுரன் = தேவன். அசுரன் = தேவனல்லாதான் தேவர்க்குப் பகைவன். 'அ' அன்மை மறுதலைப் பொருள் முன்னொட்டு]

சகடான்னம் *śagaḍāṉṉam*, பெ. (n.) தூய்மையற்ற உணவு (யாழ். அக.); bad food.

[கசடு → சகடு + அன்னம். கசடு → சகடு - முன் பின்னாக மாறிய இலக்கணப் போலி]

Skt. anna → த. அன்னம்

சகடி *śagaḍi*, பெ. (n.) வண்டி (சங்.அக.); cart.

[சகடம் → சகடு → சகடி (வே.க. 240)]

த. சகடி → Skt. śakaṭi

சகடிகை *śagaḍigai*, பெ. (n.) கைவண்டி (யாழ்.அக.); hand-cart.

[சகடு → சகடி → சகடிகை (வே.க.240)]

த. சகடிகை → Skt. śakaṭikā

சகடு[1] *śagaḍu*, பெ. (n.) 1. சக்கரம்; wheel. 2. வண்டி; cart. "பெருஞ்சகடு தேர்காட்ட" *(பெரியபு. திருநா. 6)*. 3. தேரைக் குறிக்கும் சதுரங்கக் காய்; bishop in chess.

ம. சகடு; Skt. śagaṭa

[தகடு → சகடு. சகடு என்னும் வடிவம் வடமொழியில் இல்லை (வே.க. 240)]

சகடு[2] *śagaḍu*, பெ. (n.) கசடு பார்க்க; see *kaśaḍu*.

[கசடு → சகடு]

சகடு[3] *śagaḍu*, பெ. (n.) மொத்தம்; as a whole, in a lump.

ம. சகடு; க. சகுடம்; பட. சகட்டு Skt. śagaṭa

[தகடு → சகடு = வட்டமானது. ஒரு வளைவுக்குள் இருப்பது, மொத்தமானது]

சகடை[1] *śagaḍai*, பெ. (n.) சகடு[1] பார்க்க (புறநா. 60, 8, உரை.); see *śagaḍu[1]*.

[சகடு → சகடை (வே.க. 241)]

சகடை[2] *śagaḍai*, பெ. (n.) 1. மணம்; smell. 2. வசம்பு; sweet flag - Aeorus calamus (சா.அக.).

[சகடு → சகடை]

சகடை[3] *śagaḍai*, பெ. (n.) 1. சகண்டை[1] பார்க்க; see *śagaṇḍai*. 'சகடையோ பார்த்தவன்றே' *(கம்பரா. பிரமாத்திர. 5)*. 2. இறப்பு நிகழ்வில் ஊதும் துந்துபி என்னும் இசைக்கருவி (வாச்சியம்) (வின்.); a tabret used as funerals.

[சுவள் → சவள் → சகள் → சகண்டை = வட்டமான பறை. சகண்டை → சகடை = சக்கரம், சக்கரமுள்ள வண்டி, பறை]

சகடை[4] *śagaḍai*, பெ. (n.) கிணற்றில் நீரிறைக்கப் பயன்படுத்தும் கப்பி; roller-pulley to draw



சகடை

water from well. தண்ணி மொள்ள சகடையுங் கயிறுங் கொண்டு வா.

ம. சகட

[சகடு → சகடை]

த சகடை → Skt. šakaṭa

சகடைக்கொட்டி *šagaḍai-koṭṭi,* பெ. (n.) முரசறைவோன்; drummer *(S.I.I.ii, 277).*

[சகடை[3] + கொட்டி. கொள் → கொட்டு → கொட்டி = கொட்டுபவன், அடிப்பவன்]

சகண்டை *šagaṇḍai,* பெ. (n.) 1. துந்துபி யென்னும் முரசு (பிங்.); a kind of large drum. 2. பறை (வாச்சியப்பொது) (திவா.); drum.

[சவள் → சவள் → (சகள்) → சகண்டை (மு.தா. 268.)]

சகணம்[1] *šagaṇam,* பெ. (n.) புளியாரை; Indian sorrel - Oxalis corniculata (சா.அக.).

சகணம்[2] *šagaṇam,* பெ. (n.) சாணம்; cow-dung (செ.அக.).

[சண்ணுதல் = நீக்குதல். சண் → (சாண்) → சாணம் = சாணி, மாட்டுப்பவ்வீ. சாணம் → சகணம்]

க. சகண; பட. செகணி; Skt. chagaṇa

சாணம்[1] பார்க்க

சகணம்[3] *šagaṇam,* பெ. (n.) 1. பயனற்ற பொருள்; something useless or worthless. 2. உள்ளீடற்ற தேங்காய்; an empty or seedless coconut (சேரநா.).

ம. சகணம்

[சாணம் → சகணம். சாணியை உருவகப்படுத்தி இழிபொருள் உணர்த்தும் வழக்குநோக்கி இப்பொருள்கள் ஆளப்பட்டுள்ளன]

'இந்தச் சாணிப் பயலுக்கு என்ன சொன்னாலும் ஏறாது' (உ.வ.) எனும் வழக்கைக் காண்க.

சகணவர்த்தமரோகம் *šagaṇa-arttama-rōgam* பெ. (n.) கண்ணோய் வகை (சீவரட். 246); an eye disease.

[சக்கு → சக → சகண + வர்த்தம + ரோகம்]

சகத்திராமி *šagattirāmi,* பெ. (n.) முப்பிரண்டை; triangular-stalked vine vitis (சா.அக.).

சகதாமத்தி *šagatāmatti,* பெ. (n.) தகரை (வின்.); foetid cassia.

மறுவ. சக்கரம்

சகதி[1] *šagadi,* பெ. (n.) 1. சேறு, ஈரக்குழைவான மண் (திவா.); mud; mire. 'சகதியில் கல்லை விட்டெறிந்தால் தன்துணி என்றும் அசலார் துணி என்றும் பாராது' (பழ.) 2. பொல்லாநிலம்; bog, puddle.

ம. சகதி; க. கரிய; கோத. கெத்தெ; குரு. கச்; Skt. šāda

[அள்ளுதல் = செறிதல். அள் → அள்ளல்= செறிவு, சேறு. அள்ளல் = சள்ளல். சள் → சய் → சய → சக+தி → சகதி]

சகதி[2] *šagadi,* பெ. (n.) 1. ஒற்றொழித்துப் பாதம் ஒன்றுக்குப் பன்னிரண்டு எழுத்தாய்த் தமிழில் வழங்கும் வடமொழி மண்டிலம் (விருத்தம்) (வீரசோ. யாப். 33, உரை); Sanskrit verse of four metrical lines of 12 syllables each, adopted in Tamil. 2. நிலம் (யாழ்.அக.); the earth.

[சகடம் → சகடி → சகதி]

த. சகதி → Skt. jagati

சகநாதம் *šaganādam,* பெ. (n.) துணிவகை (இ.வ.); a kind of cloth (செ.அக.).

சகம் *šagam,* பெ. (n.) 1. வெள்ளாடு; goat. 2. முயல்; hare (சா.அக.).

[தகர் → தகம் → சகம்]

சகர் *šagar,* பெ. (n.) பாம்புகொல்லி; கீரிப்பூடு; Indian snake root; snake-killer; Ophiorrhiza mungos (சா.அக.).

சகரகம் *šagaragam,* பெ. (n.) வேம்பு; margosa tree - Aza dirachta Indica (சா.அக.).

சகரஆகாரம் *šagara-āgāram,* பெ. (n.) 'சா' என்னும் எழுத்து; the letter 'šā'.

[சகரம் + ஆகாரம்]

உயிர்மெய்யெழுத்துகளுள் குறிலுக்குக் கரம் சாரியை. நெடிலுக்குத் தனிச் சாரியை இல்லை. இதனால் மெய்யையும் நெடிலையும் பிரித்து சகர ஆகாரம் எனச் சொல்லப்பெறும்.

சகரஈகாரம் *šagara-īgāram,* பெ. (n.) 'சீ' என்னும் எழுத்து; the letter 'šī'.

[சகரம் + ஈகாரம்]

சகரஊகாரம் *šagara-ūgāram,* பெ. (n.) 'சூ' என்னும் எழுத்து; the letter 'šū'.

[சகரம் + ஊகாரம்]

சகரஏகாரம் *šagara-ēgāram,* பெ. (n.) 'சே' என்னும் எழுத்து; the letter 'šē'.

[சகரம் + ஏகாரம்]

சகரஐகாரம் *šagara-aigāram,* பெ. (n.) 'சை' என்னும் எழுத்து; the letter 'šai'.

[சகரம் + ஐகாரம்]

சகரஓகாரம் *šagara-ōgāram,* பெ. (n.) 'சோ' என்னும் எழுத்து; the letter 'šō'.

[சகரம் + ஓகாரம்]

சகரச்சாரி *šagaraccāri,* பெ. (n.) சத்திசாரம் (வின்.); a salt of acid and burning taste.

சகரநீர் *šagaranīr,* பெ. (n.) கடல்; sea. 'சகரநீர் சுலாம் புவி' (பிரமோத். 13. 66).

[சக்கரம் → சகரம் + நீர். சகரம் = நிலவுலகைச் சுற்றியிருப்பது]

சாகரம்¹ பார்க்க

சகரம்¹ *šagaram,* பெ. (n.) பீர்க்கு; sponge-gourd.

[தகரம் → சகரம்]

சகரம்² *šagaram,* பெ. (n.) 'ச' என்னும் தமிழ் வண்ணமாலை எழுத்து; the letter 'ša'.

[ச+கரம். கரம் குறிற்சாரியை]

சகரம்³ *šagaram,* பெ. (n.) சாகரம்¹ பார்க்க; see *šāgaram ¹.*

[சக்கரம் → சகரம் = மண்ணுலகைச் சுற்றி இருப்பது]

சகரன் *šagaran,* பெ. (n.) முதலேழு வள்ளல்களுள் ஒருவன்; a chief famed for liberality, one of seven mutal-vallalkal (செ.அக.).

[அகரம் = மருத நிலத்தூர், ஊர். அகரம் → அகரன் → சகரன். இனி, அகலம் → அகலன் = பெருமையுடையவன். அகலன் → (அகரன்) → சகரன் என்றுமாம்]

சகரிகம் *šagarigam,* பெ. (n.) நாயுருவி (மலை.); a plant growing in hedges and thickets.

ம. சகரிகம் (ஒரு மருந்துச் செடி); Skt. śaikharika.

சகருவம் *šagaruvam,* பெ. (n.) பெருமை; celebrity.

[அகல் → அகலம் → (அகரம்) → சகரம் → சகருவம்]

சகரையாண்டு *šagarai-y-āṇṭu,* பெ. (n.) கி.பி. 78இல் தொடங்குவதும் சாலிவாகனன் பெயரால் வழங்குவதுமான ஆண்டு மானம்; Sālivāhana Era commencing from 78 A.D. (செ.அக.).

[சகரை + ஆண்டு]

சக்கரம் = ஆணைச் சக்கரம். சக்கரம் → சகரம் → சகரை - ஆண்டூழி என்றுமாம்.

சகல் *šagal,* பெ. (n.) கொதுகு; gnats, small flies (செ.அக.).

சகலகம் *šagalagam,* பெ. (n.) வெள்ளாடு; goat (யாழ்.அக.).

[சகம் → சகலகம்]

சகலபாசனம் *šakala-pāšanam,* பெ. (n.) அருகன் முக்குடையுள் ஒன்று; an umbrella of Arhat, one of *muk-kuḍai* (சூடா.).

சகலம் *šagalam,* பெ. (n.) துண்டு; piece, fragment. 'கொடிஞ்சியுஞ் சகலமுற்று' (பாரத. பதினான். 150).

[சில் → சல் → சகல் → சகலம்]

Skt. śakala

சகலமங்கலை *šagala-maṅgalai,* பெ. (n.) மலைமகள்; Parvati (யாழ். அக.).

சகலாத்தன் *šagalāttan,* பெ. (n.) அருகருள் நிகண்டவர்களால் கடவுளென்று கொள்ளப் படுபவர்; God worshipped by the Nirgrantha feet of Jains. "அனையாஞ் சகலாத்தரை" (பிரபோத. 33, 6).

[அகலன் = கடவுள். அத்தன் = அருகன். அகலன் + அத்தன் - அகலத்தன் → சகலத்தன்]

சகலாத்து *šagalāttu,* பெ. (n.) ஒருவகை கம்பளித் துணி; woollen stuff; broadcloth. "கட்டிலின் மேற்கட்டி சகலாத் தென்றும்" (விறலிவிடு. 142).

ம. சகலாத்து; U. saklat; Pkt. escarlata

[சல்லாத்து = நெருக்கமான இழை யோடாத துணி. சல்லாத்து → சகலாத்தல்]

சகலி *šagali,* பெ. (n.) ஒரு வகை மீன்; a kind of fish (செ.அக.).



சகலி மீன்

சகலிகரணம் *šagali-karaṇam,* பெ. (n.) துண்டு துண்டாக்குகை; breaking into pieces (யாழ். அக.).

[சகலி + கரணம்]

சகவம்[1] *šagavam,* பெ. (n.) பறவை வகை; a bird. (யாழ்.அக.).

[சகடம் → சகணம் → சகவம்]

சகவம்[2] *šagavam,* பெ. (n.) பெண் வாத்து; duck (சா.அக.).

[சகமம் → சகவம்]

சகளத்திருமேனி *šagaḷa-t-tirumēṉi,* பெ. (n.) சிவனது உருவவடிவம்; the body or form assumed by Śiva (செ.அக.).

[சகளம் + திருமேனி]

சகளநிட்களம் *šakaḷa-nitkalam,* 4 பெ. (n.) இலிங்கமாகிய சிவனது அருவுருவத் திருமேனி; the aspect of Śivaṉ as being with and without form, represented by the linga (சி.போ.பா. 8.1, 359).

[சகளம் + நிட்களம்]

Skt. niṣkala → த. நிட்களம்

சகளப்பாடி *šagala-p-pāḍi,* பெ. (n.) சகலன் பார்க்க; see *šagalaṉ* (செ.அக.).

[சகலப்பாடி → சகளப்பாடி]

சகளம் *šagalam,* பெ. (n.) உருவத் திருமேனி; the aspect of Śivaṉ as having form, represented by the images. 'சகளமாய் வந்ததென் றுந்தீபற' (திருவுந்தி. 1).

[சட்டம் → சடம் → சகடம் → சகளம்]

சகளவல்லகி *šagaḷa-vallagi,* பெ. (n.) வீணை வகை; a kind of lute. (பரத. ஒழி. 15).

[சகளம் + வல்லகி]

சகளன் *šagaḷaṉ,* பெ. (n.) உருவத் திருமேனி கொண்ட சிவன்; Śiva, as with form (சி.சி. 1.65. ஞானப்.).

[சகளம் → சகளன்]

சகளாதனம் *šagaḷādaṉam,* பெ. (n.) இடக் கையின் மேல் இருகாலையும் ஊன்றி அட்டணைக் காலிட்டிருக்கும் இருக்கை; a yogic posture in which a person sits cross-legged over his left hand (யாழ். அக.).

[சக்கரம் → சக்கரணம்(கால்) → சகரணம் → சகனம் → சகளாதனம்]

சகன் *šagaṉ,* பெ. (n.) சாலிவாகனன்; sāli vāhaṉa. 'சகன்காலம்' (பெருந்தொ. 956).

[அகன் = கணவன், தலைவன். அகன் → சகன்]

சகன்பன்னி *šagaṉ-paṉṉi,* பெ. (n.) அகத்தி; Sesbania grandiflora (சா.அக.).

சகன்னம் *šagaṉṉam,* பெ. (n.) உற்றுக் கேட்டல்; listening attentively.

சகனம்[1] *šagaṉam,* பெ. (n.) உடலின் பின்புறத்தில் புடைப்பாக உள்ள பகுதி, பிட்டம்; buttock, rump (செ.அக.).

[சகடம் → சகனம்]

த. சகனம் → Skt. jaghana

சகனம்[2] *šagaṉam,* பெ. (n.) பொறுமை; patience; forbearance (செ. அக.).

[அகம் → அகன் = மனம், உள்ளம். ம் → ன் (போலி). அகன் → அகனம் → சகனம் = மனத்துள் அடக்கிவைத்தல், பொறுமை]

சகனம் → Skt. sahana

சகா *šagā,* பெ. (n.) சகர் பார்க்க (மலை) see *šagar.*

மறுவ. கிரிப்பூடு

[சகர் → சகா]

சகாசகா *šagā-šagā,* பெ. (n.) ஆவாரை; tanner's cassia - Cassia auriculata (சா.அக.).

சகாடி *šagāḍi,* பெ. (n.) *சகரம்*[1] பார்க்க *(மலை);* see *šagaram (சா.அக.).*

[சகரம் → சகா → சகாடி]

சகாதம் *šagādam,* பெ. (n.) **வேம்பு;** margosa tree - Azadirachta Indica *(சா.அக.).*

சகாதி *šagādi,* பெ. (n.) *சகர்* பார்க்க; see *šagar (செ.அக.).*

[சகர் → சகா → சகாதி]

சகாதேவம் *šagā-dēvam,* பெ. (n.) **ஏலம்; ஏலக்காய்;** cardamom - Elliteria cardamomum *(சா.அக.).*

சகாமியம் *šagā-miyam,* பெ. (n.) **ஆலமரம்;** banyan tree - Ficus indica alias F. bengalensis *(சா.அக.).*

சகாரம்[1] *šagāram,* பெ. (n.) **மாமரம்;** mango tree- Mangiferus indica *(சா.அக.).*

[சக்கரை → சக்காரம் → சகாரம் = இனிப்புச் சுவையுள்ள பழத்தைத் தருவது.]

சகாரம் கனியைக் குறிப்பின் பண்பாகு பெயரும் மரத்தைக் குறிப்பின் சினையாகு பெயரும் இருமடியாகு பெயரும் ஆகும்.

சகாரம்[2] *šagāram,* பெ. (n.) **ஏச்சு** *(நாஞ்.);* abuse.

ம. சகாரம்

[சகாரி → சகாரம்]

சகாரி-த்தல் *šagāri-,* 11 செ.குன்றாவி. (v.t.) **ஏசுதல்** *(நாஞ்.);* to abuse, revile.

ம. சகாரம்

சகாவதீதம் *šagāvadīdam,* பெ. (n.) **மலை நொச்சி மரம்;** tell chaste tree - Vites altissima *(சா.அக.).*

சகியம்[1] *šagiyam,* பெ. (n.) *1.* **நிலப்பனை;** ground neem. *2.* **மஞ்சள்;** turmeric-Curcuma longa. *3.* **சேம்பு;** Indian kales - Colocasia antiguorum. *4.* **சேப்பங் கிழங்கு;** an esculent root - Caladium nymphaefolium *(சா.அக.).*

[சகடு = வளைந்தது, வளைவு. சகடு → சகடி → சகிடி → சகியம்]

சகியம்[2] *šagiyam,* பெ. (n.) **காவிரி ஆறு உருவாகும் மலை;** the mountain in Coorg where the Cauveri has its source *(செ.அக.).*

Skt. shya

சகிலாகி *šagilāgi,* பெ. (n.) **கண்டத்திப்பிலி;** Bengal long pepper - Clavica Roxburg.

சகுச்சம் *šaguccam,* பெ. (n.) **ஏழிலைப் புன்னை;** seven-leaved milky plant - Alstonia scholaris *(சா.அக.).*

சகுட்டகம் *šaguṭṭagam,* பெ. (n.) **ஆடு தீண்டாப் பாலை** *(மலை.);* worm-killer, a medicinal plant.

சகுட்டம் *šaguṭṭam,* பெ. (n.) *சகுட்டகம்* பார்க்க *(வின்.);* see *šaguṭṭagam.*

[சகுட்டகம் → சகுட்டம்]

சகுடம்[1] *šaguḍam,* பெ. (n.) **சேம்பு;** cocco 'சகுட நீரென' *(பாரத.குருகுல.14).*

[சகடம் → சகுடம்]

சகுடம்[2] *šaguḍam,* பெ. (n.) **நாய்;** dog 'சகுடம்போ லவன் மனத்திற் சசிகாமம் பிடித்தலைப்ப' *(குற்றா.தல. மந்தமா. 38).*

[சகடம் = வளைவு. சகடம் → சகுடம்]

த. சகுடம் → Skt. jakuṭa

சகுடை *šaguḍai,* பெ. (n.) **சிற்றகத்தி;** common sesbane - Sesbania aegyptiaca *(சா.அக.).*

சகுண்டக்கொடி *šaguṇḍa-k-kōḍi,* பெ. (n.) **ஊசலாங்கொடி;** a kind of medicinal creeper *(சா.அக.).*

சகுண்டகம் *šaguṇḍagam,* பெ. (n.) **முக்கிளிக் கீரை;** kind of greens - Corchorus capsularis *(சா.அக.).*

சகுண்டகா *šaguṇḍagā,* பெ. (n.) *சகுட்டகம்* பார்க்க; see *šaguṭṭagam.*

[சகுட்டகம் → சகுண்டகா]

சகுண்டிகை *šaguṇḍigai,* பெ. (n.) **பாக்குமரம்;** areca-nut *(சா.அக.).*

சகுணம் *šaguṇam,* பெ. (n.) **குணத்தோடு கூடியது;** that which has qualities or attributes. 'சாடரிய சகுணமெண' *(திருவிளை. மாணிக்கம்.66).*

[குணம் → சகுணம்]

சகுந்தம்[1] *šagundam,* பெ. (n.) *1.* **பறவை;** bird. 'சகுந்தங்க ணீள நோக்கின' *(கம்பரா. சித்திர. 43).* *2.* **கழுகு** (சூடா.); eagle. *3.* **கமுகு** (மலை.); arecapalm.

[சகடம் → சகுடம் → சகுண்டம் → சகுந்தம்]

த. சகுந்தம் → Skt. śakunta

சகுந்தம்[2] *šagundam,* பெ. (n.) **பூதம்** (அக.நி.); goblin.

சகுலகண்டம் *šagula-kaṇḍam,* பெ. (n.) **பொன் வண்ண மீன்** (புதுவை.); a kind of fish (செ.அக.).

[சகுலம் + கண்டம்]

சகுலம் *šagulam,* பெ. (n.) *1.* **மொந்தன் வாழை;** a large plantain. *2.* **வலுமிக்க மீன் அதாவது திமிங்கிலம்;** a powerful fish as whale (சா.அக.).

சகுலன் *šagulaṉ,* பெ. (n.) **ஒருவகைப் பாம்பு;** a kind of snake (சா.அக.).

சகுலாட்சகம் *šagulāṭcagam,* பெ. (n.) **பவள மறுகு;** a red species of grass - Cynoden genus (சா.அக.).

சகுலாதி *šagulādi,* பெ. (n.) கடுரோகிணி (மலை.); christmas rose (சா.அக.).

சகுலாதினி *sagulādiṉi,* பெ. (n.) சகுலாதி பார்க்க; see sagulāḍi.

[சகுலாதி → சகுலாதினி]

சகுலி[1] *šaguli,* பெ. (n.) **மீன்வகை** (வின்.); a kind of fish.

சகுலி[2] *šaguli,* பெ. (n.) **அப்பவகை;** a kind of cake. 'அங்கைச் சகுலியு நோக்கி' *(கந்தபு. சந்திரசாப. 11).*

த. சகுலி → Skt. śakulī

[அம்குல்லி → அக்குல்லி → சக்குல்லி → சகுலி]

சகுலி[3] *šaguli,* பெ. (n.) **ஒளி;** light.

[அழல் = நெருப்பு, அழல் → அழலி → அகலி → அகுலி → சகுலி]

சகுன்மம் *šaguṉmam,* பெ. (n.) காட்டுக் கரணை (M.M.414) purple stalked dragon.

சகுனம்[1] *šaguṉam,* பெ. (n.) *1.* **பறவை** (பிங்.); bird. *2.* **பறவைகள் வலமிடமாதல் முதலிய நன்மை தீமைக்குறி;** omen, as indicated by flight of birds, etc. 'நிமித்தமுஞ் சகுனமும்' *(பெருங். இலாவாண 18,39).* 'சகுனம் நன்றா யிருக்கிறதென்று பொழுதுவிடிகிற வரைக்கும் கன்னம் வைக்கலாமா?' *(பழ.)* **3. சகுனி**[1] **3** பார்க்க. (விதான. பஞ்சாங். 29, உரை); see *šaguṉi*[1]*3* (Astron.) *4.* சகோரம்[1] பார்க்க (உரி.நி.); see *šagōram.*

[சகடம் → சகணம் → சகுணம் → சகுனம் = வளைந்து அல்லது வட்டமாகப் பறக்கும் பறவை. அப்பறவையின் பறக்கும் தன்மையை வைத்துக் கணிக்கும் நிமித்தம். வடமொழியில் சகுன (śakuna) என்பதற்குப் பறவை, குறிப்பாகப் பெரிய பறவை என்னும் பொருள் கொண்டு அதற்கு மூலமாக சக் (śak) என்பதனைக் காட்டுகிறது மா.வி. அகரமுதலி. ஆற்றல் எனும் பொருள்படும் சக் என்பதற்குப் பிறவகை ஆற்றல்களே பொருத்தம். பறக்கும் தன்மையால் பெறும் பெயர் பொருத்தமில்லாமையைக் கண்டு கொள்க.

த. சகுனம் → Skt. śakuna

வல்லூறு, ஆந்தை, காகம், கரிக்குருவி, காடை முதலிய பறவைகளின் குரலையும் இயக்கத்தையும் கொண்டு, வரப்போகும் நன்மை தீமைகளைக் கணித்துக் கூறுவது சகுனம் (புள்நூல்.).

சகுனம் - பறவை. பறவையால் அறியப்படும் குறியைச் சகுனம் என்பது ஆகுபெயர்.]

சகுனம்[2] *šaguṉam,* பெ. (n.) *1.* **கிழங்கு** (பிங்.); edible or other tuberous roots. *2.* பேரரத்தை (மூ.அ.) பார்க்க; see *pērarattai.*

[சகடம் = வட்டமானது சகடம் → சகடம் → சகணம் → சகுணம் → சகுனம். உருண்டை வடிவான கிழங்கு]

சகுனி[1] *šaguṉi,* பெ. (n.) *1.* **பறவை** (பிங்.); bird. *2.* **கூகை** (யாழ்.அக.); owl. *3.* **கரணம் பதினொன்றில் இருட்பக்கத்துப் பதினான்காம் பிறையின்** (கிருட்டிணபட்சத்துச் சதுர்த்தசியின்) **பிற்பகுதியில் வருங்காலம்;** a division of time,

the latter half of the 14th day of the dark fortnight, one of 11 karaṇam.

[சகுனம் → சகுனி]

சகுனி[2] *šaguṉi,* பெ. (n.) **நிமித்தம் பார்ப்போன்** (பிங்.); augur, one who predicts future by omens.

[சகுனம் → சகுனி]

சகை *šagai,* பெ. (n.) **கரிய போளம்;** black bole or aloe.

சகோடம் *šagōḍam,* பெ. (n.) சகோடயாழ் பார்க்க (சிலப். 3. 26, உரை); see *šagōḍayāḻ.*

[சகடம் → சகோடம் (வேக. 241)]

சகோடயாழ் *šagōḍayāḻ,* பெ. (n.) 16 **நரம்பு கொண்ட யாழ்** (சிலப். 3, 26, உரை); a lute with 16 strings.

[சகோடம் + யாழ்]

நரம்புக் கருவி பல வகைப்படும். அவற்றுள் ஐந்து பெரு வழக்கானவை. அவை பேரியாழ் (21 நரம்பு), மகரயாழ் (19 நரம்பு), சகோடயாழ் (16 நரம்பு), செங்கோட்டி யாழ் (7 நரம்பு), சுரை யாழ் (1 நரம்பு) என்பன.

நரம்புக் கருவிகளெல்லாம் பண்டைக் காலத்தில் யாழ் என்றே கூறப்பட்டன. இப்போதுள்ள வீணை செங்கோட்டி யாழாக அல்லது அதன் திருத்தமாக இருத்தல் வேண்டும். செங்கோடு நேரான தண்டு. செங்கோல் என்பதை இதனொடு ஒப்பு நோக்குக (ஒ. மொ. 177).



சகோடயாழ்

சகோரக்கண்ணி *šagōra-k-kaṉṉi,* பெ. (n.) **சகோரப் பறவையின் கண் போன்ற கண்ணை யுடைய அழகானவள்;** a beautiful woman, who has beautiful eye like cakōra bird's eye.

ம., க. சகோராக்ழி

[சகோரம் + கண்ணி]

சகோரம்[1] *šagōram,* பெ. (n.) **நிலா முகிப்புள்** (பிங்.); cakōra, the Greek patridge fabled to subsist on moon beams, Caccabis graeca (செ.அக.).

ம. சம், சகோரம், சகோரகம்; க. சகோர, சகோரக.

[சகோடம் → சகோரம் (வே.க. 241)]

சகோரம் → Skt. cakra

நிலாக் கதிர்களை உணவாகக் கொண்டு வாழ்வதாகக் கருதப்படும் புள்வகை.

சகோரம்[2] *šagōram,* பெ. (n.) **செம்போத்து;** crow pheasant (செ.அக.).

மறுவ. கள்ளிக் காக்கை

[சகோடம் → சகோரம்]

செந்நிறமானதாகவும் செங்கண்ணுடையதாகவும் காக்கையைப் போன்றுமிருக்கும் ஒரு பறவை. பூச்சிகளையும் பழங்களையும் உண்டு வாழும் இப் பறவையின் அலகு காக்கையைப் போல் நீண்டிராது.



சகோரம்

சகோரம்[3] *šagōram,* பெ. (n.) **செம்பரத்தை** (மலை.); shoe flower.

[செவ் → செவு → செகு → செக்கு → செக்கம் = சிவப்பு. செக்கச்செவேர் எனல் = மிகச் சிவந்திருத்தல். செக்கம் → செக்கர் = செவ்வந்தி. செக்கல் → செக்கல் = சிவப்பு. செக்கர் → சக்கர் → சகோரம்]

சகோரம்[4] *šagōram,* பெ. (n.) **பேராந்தை** (பிங்.); a species of large owl.

[சகோடம் → சகோரம் (வே.க. 241)]

சகோரி *šagōri,* பெ. (n.) **பெண் சகோரப் பறவை;** a female cagōra bird (சேரநா.).

ம., க. சகோரி

[சகோரம் (ஆ.பா.) → சகோரி (பெ.பா.)]

சங்கக்காணிக்கை *šaṅga-k-kāṇikkai,* பெ. (n.) அவைக் (சபை) காணிக்கை (கிறித்.); congregational contribution (செ.அக.).

[சங்கம் + காணிக்கை]

சங்கக்காப்பு *šaṅga-k-kāppu,* பெ. (n.) மகளிர் கையிலணியும் சங்குவளை (மீனவ.); bracelet made of conch-shells worn by women (செ.அக.).

[சங்கு → சங்கம் + காப்பு]

சங்கக்காலம் *šaṅga-k-kālam,* பெ. (n.) கழகக் காலம் பார்க்க; see *kaḻaga-k-kālam.*

[சங்கம் + காலம்]

சங்கக்குழையன் *šaṅga-k-kuḻaiyaṉ,* பெ. (n.) சங்கினாலியன்ற காதணியை யுடையவன், சிவன்; Šivaṉ, as wearing conch-shell ear-ring ornaments. "சங்கக்குழையனைத் தென்கருவாபுரித் தாணுவை" (திருக்கருவை. கலித். 56).

[சங்க + குழையன்]

சங்கக்கூலி *šaṅga-k-kūli,* பெ. (n.) சங்கூதும் கூலி; wage for blowing conch.

[சங்கம் + கூலி]

சங்கக்கையன் *šaṅga-k-kaiyaṉ,* பெ. (n.). சங்கினைக் கையில் கொண்டவன், திருமால்; Tirumāl (Viṣṇu) as holding conch in his hand.

[சங்கம் + கையன்]

சங்கங்குப்பி *šaṅgaṅ-kuppi,* பெ. (n.) பீநாறிச் சங்கு (பதார்த்த. 257); smooth volkameria.

மறுவ. பீச்சுவிளாத்தி

ம. சங்கக்குப்பி

[சங்கம் + குப்பி]

சங்கச்செய்நஞ்சு *šaṅga-c-cey-nañju,* பெ. (n.) பிறவி செய்நஞ்சு (பாஷாணம்) வகை; a mineral poison.

[சங்கம் + செய்நஞ்சு]

சங்கச்செய்யுள் *šaṅga-c-ceyyuḷ,* பெ. (n.) கழகக் காலத்துப் பாடல்; classical poem of the saṅgam period (செ.அக.).

[சங்கம் + செய்யுள்]

பண்டைய புலவர் உரைநடை செய்யுள் என இருவகை நடையுள்ளும் செய்யுள் சிறந்த தென்று கண்டே உரைகளும் அகரமுதலி போன்ற உரிசொற்றொகுதிகளும் உட்பட எல்லாப் பனுவல்களையும் செய்யுளில் இயற்றினர் (தமி. வ. 107).

சங்கசம் *šaṅgasam,* பெ. (n.) புறா முட்டை யளவாய் சங்கில் பிறந்த முத்து; oyster pearl of the size of a pigeon egg (சா.அக.).

[சங்கு → சங்கசம்]

சங்கசுத்தம் *šaṅga-suttam,* பெ. (n.) சீமைச் செவ்வந்தி; chamomile flower - Authemis nobilis (சா.அக.).

[சங்கம் + சுத்தம்]

Skt. suddha → த. சுத்தம்

சங்கஞ்சாறு *šaṅgañ-cāṟu,* பெ. (n.) சங்கிலைச் சாறு; juice of leaves of four-spinned monetia- Azema tetracantha (சா.அக.).

[சங்கம் + சாறு]

சங்கஞ்செடி *šaṅgañ-jeḍi,* பெ. (n.) முட்சங்கஞ் செடி; mistletoe berry thorn, four-spined monetia - Azema tetracantha (சா.அக.).

[சங்கம் + செடி]

இலை சங்கு வடிவினதாக இருப்பது. சளியை நீக்கக் குழந்தைகட்கு இதன் இலைச் சாற்றைக் கொடுப்பதுண்டு.

சங்கட்டங்கெளுத்தி šaṅgaṭṭaṅ-keḷutti, பெ. (n.) கெளுத்தி மீன்வகையுள் ஒன்று; a kind of fish.

[சங்கட்டம் + கெளுத்தி]



சங்கட்டங்கெளுத்தி

சங்கட்டசதுர்த்தி *śaṅgaṭṭa-cadurtti,* பெ. (n.) பிள்ளையாரைக் குறித்து மேற்கொள்ளும் ஒரு நோன்பு; a fast observed in honour of Gaṇēśa. "சங்கட்ட சதுர்த்தி முறைமையிற் செய்து" (விநாயகபு. 47, 46).

[சங்கட்டம் + சதுர்த்தி]

சங்கட்டம் *śaṅgaṭṭam,* பெ. (n.) 1. சங்கடம்[1] பார்க்க; see *śaṅgaḍam.* "சார்ந்த லதுபெரிய சங்கட்டம்" (அருட்பா, 1, விண்ணப்பக்கலி 348). 2. உடல்நலமின்மை (வின்.); uneasiness, sickness, bodily pain. 3. இறப்புத் துன்பம் (வின்.); death thores. "அவன் வெகு சங்கட்டமாய்க் கிடக்கிறான்".

படு. சங்கட (நோய்)

[சங்கடம் → சங்கட்டம்]

சங்கடக்கண் *śaṅgaḍakkaṇ,* பெ. (n.) துன்ப மிகுதியால் கண்ணை மூடுகை; the closing of eyes as in distress.

[சங்கடம் + கண்]

சங்கடப்படலை *śaṅgaḍa-p-paḍalai,* பெ. (n.) இரும்புக்கம்பி யாலான தடைவாசல் (யாழ்ப்.); a barred gate at the entrance of a house or garden (செ.அக.).

[சங்கடம் + படலை. படர்தல் = பரவுதல். படர் → படல் = ஓலை, தட்டை, மாறு முதலியவற்றாலாகிய, கதவுபோன்ற அடைப்பு. உழுதநிலத்திற் பரம்படிக்கும் பரந்த மாறு, கண்ணிற் படரும் புரை. படல் + அம் = படலம். படல் → படலை]

சங்கடப்படு-தல் *śaṅgaḍa-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) துன்பப்படுதல் (கொ.வ.); to be in trouble; to be distressed or grieved at heart (செ.அக.).

தெ. சங்கடப்படு

[சங்கடம் + படு. 'படு' - து.வி.]

சங்கடப்பாடு *śaṅgaḍa-p-pāḍu,* பெ. (n.) துன்புறும் நிலை (கொ. வ.); state of being in trouble or distress (செ.அக.).

தெ. சங்கடப்பாடு

[சங்கடம் + பாடு. படு → பாடு]

சங்கடம்[1] *śaṅgaḍam,* பெ. (n.) 1. வருத்தம்; difficulty, trouble, straitened. "ஐவர் சங்கடம் பலவுஞ் செய்ய" (தேவா. 702, 2.). 2. ஒடுக்கவழி (யாழ்.அக.); narrow path. 3. சங்கடப்படலை பார்க்க (யாழ்.அக.); see *śaṅgaḍa-p-paḍalai.*

[சாங்கடை → சங்கடை → சங்கடம்]

சங்கடம் → Skt. saṅkaḍa.

சங்கடாட்சம் *śaṅgaḍāṭcam,* பெ. (n.) சங்கடக் கண் பார்க்க (யாழ்.அக.); see *śaṅgaḍa-k-kaṇ.*

[சங்கடம் + அட்சம்]

Skt. aṭcam → த. அட்சம்

சங்கடி *śaṅgaḍi,* பெ. (n.) கேழ்வரகுக்களி (இந்துபாக. 83); ragi porridge.

ம. சங்கிலிப்புல்லு (ஒரு வகைக் கேழ்வரகு); க. சங்கடி; தெ. சங்கடி

சங்கடை[1] *śaṅgaḍai,* பெ. (n.) சங்கடம்[1] பார்க்க; see *śaṅgaḍam*[1] (செ.அக.).

[சாங்கடை → சங்கடை]

சங்கடை[2] *śaṅgaḍai,* பெ. (n.) வாழ்நாளின் மூன்று பகுதிகளுள் கடைப்பகுதி (வின்.); the last of the three stages of a man's life (செ.அக.).

[சாங்கடை → சங்கடை]

சங்கடைப்பன் *śaṅgaḍaippaṉ,* பெ. (n.) மாட்டு நோய் வகை (மாட்டுவா. 67); a kind of cattle disease.

ம. சங்கடப்பன்

[சங்கு + அடைப்பன்]

சங்கணித்துறை *śaṅgaṇi-t-tuṟai,* பெ. (n.) ஆழ்வார்திருநகரியில் தண்பொருநையின் தென்கரை; the south bank of the river Tāmiraparaṇi at Āḻvār-tirunagari. "பொருநற் சங்கணி துறைவன்" (திவ். திருவாய். 10, 3, 11).

[சங்கணி + துறை]

சங்கத்தமிழ் *śaṅga-t-tamiḻ,* பெ. (n.) 1. கழகக் காலத்து வழங்கிய தமிழ்; classical Tamiḻ of the Saṅgam period. "சங்கத்தமிழ் மாலை முப்பதும்" (திவ். திருப்பா. 30). 2. கழகக்காலத்துத் தமிழ்நூல்; Tamil works of the saṅgam age. "சங்கத்தமிழ் மூன்றுந் தா" (நல்வழி. கடவுள் வாழ்.).

[சங்கம் + தமிழ்]

சங்கத்தார் *šaṅgattār,* பெ. (n.) 1. *அவையோர்;* members of an assembly, academy, a society, council or committee. 2. புத்த சமண சங்கத்தார் *(சீவக. 4, உரை; சிலப். 30: 32, அரும்.);* Buddhist and Jain fraternity of monks. 3. மதுரைச் சங்கப் புலவர்; the learned body of poets in Madura, in ancient times. "*சங்கத்தாரெல்லாம்*" *(திருவிளை. தருமிக்கு. 82).*

[சங்கம் + அத்து + ஆர்]

சங்கத்தாளி *šaṅga-t-tāḷi,* பெ. (n.) சாதிபத்திரி; mace or pulp of nutmeg *(சா.அக.).*

[சங்கம் + தாளி]

சங்கத்திராவகம் *šaṅga-t-tirāvagam,* பெ. (n.) *சங்கநீர்மம் பார்க்க (மூ.அக.);* see *šaṅga-nīrmam.*

[சங்கம் + திராவகம்]

சங்கத்துறவு *šaṅga-t-tuṟavu,* பெ. (n.) விருப்ப மக்களை இழந்ததினால், அவரிடம் உண்டான பற்றே துன்பக்காரணம் என்ற உணர்ச்சியில் தோன்றும் துறவு; renunciation on the death of relatives and friends, caused by the idea that attachment is the source of grief.

[சங்கம் + துறவு]

சங்கத்தூதுவளை *šaṅga-tūduvaḷai,* பெ. (n.) வெள்ளைப்பூவுடைய ஒருவகைத் தூதுவளை; a kind of three-lobed night shade with white flowers - Solanum trilobatum *(சா.அக.).*

[சங்கம் + தூதுவளை. சங்கு வெண்ணிற மானது ஆகையால் சங்கைப் போன்ற வெண்ணிறமும் சங்கெனப்பட்டது. ஒ.நோ: அக்கு = வெள்ளை, சங்கு]

இது காயச்சித்தி மூலிகைகளுள் ஒன்று

சங்கதம்[1] *šaṅgadam,* பெ. (n.) முல்லைப்பூ; evate-leaved jasmine- Jasminum augustifolium *(சா.அக.).*

[சங்கு → சங்கதம்]

சங்கதம்[2] *šaṅgadam,* பெ. (n.) 1. பொருத்தம்; appropriateness, consistency. 2. நட்பு (வின்.); acquiantance, friendship. 3. முறையீடு (வின்.); complaint.

[சங்கு → சங்கதம்]

சங்கதம் → Skt. saṅgata

சங்கதி *šaṅgadi,* பெ. (n.) 1. செய்தி; affair, news. 2. பொருள், உண்மை; matter, fact. 3. இசை வேறுபாடு; short flourishes introduced in a melody (mus.). 4. தொடர்பு; connection, relation. '*கீழ் ஒருபடி சங்கதி சொல்லிக்கொண்டு போந்தோம்*' *(ஈடு. 4, 6, பிர.).*

[செய்தி → சங்கதி]

சங்கதி → Skt. saṅgati

சங்கதூதி *šaṅgadūdi,* பெ. (n.) கூட்டிக் கொடுப்பவள் (யாழ்.அக.); procuress.

[சங்கம் + தூதி. தூது → தூதி]

சங்கதூதி → Skt. saṅga-dūti

சங்கதை *šaṅgadai,* பெ. (n.) செய்தி (இ.வ.); news (செ.அக.).

[சங்கதி → சங்கதை]

சங்கநகை *šaṅga-nagai,* பெ. (n.) நத்தை; snail.

[சங்கம் + நகை]

சங்கநனம் *šaṅga-naṉam,* பெ. (n.) நரம்பு; nerve, vein *(சா.அக.).*

சங்கநாதம் *šaṅga-nādam,* பெ. (n.) 1. சங்கவோசை; blowing sound of a conch. 2. கோயிலிற் சங்கு ஊதுதற்கு ஏற்பட்ட கொடை; inam for blowing conch in a temple (R.T.).

[சங்கம் + நாதம்]

சங்கநிதி[1] *šaṅga-nidi,* பெ. (n.) குபேரனது ஒன்பான் நிதியுள் ஒன்று; one of the nine treasures of Kubēra. "*சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து*" *(தேவா. 1230. 10).*

[சங்கம் + நிதி]

சங்கநிதி[2] *šaṅganidi,* பெ. (n.) வட்டக் கிலுகிலுப்பை (வின்); blue flowered crotalaria.

[சங்க + நிதி]

சங்கநிறக்கரந்தை *šaṅga-niṟa-k-karandai,* பெ. (n.) வெண்கரந்தை; white-flowered sweet basil - Ocimum basilicum *(சா.அக.).*

[சங்குநிறம் + கரந்தை. சங்குவின் நிறம் வெள்ளை]

சங்கநீர்மம் *śaṅga-nīrmam,* பெ. (n.) சங்குகளைக் கரைக்கக் கூடிய ஒருவகை நீர்மம்; solvent for conch or other shells, nitric acid.

[சங்கம் + நீர்மம். நீர் → நீர்மம்]

சங்கநூல் *śaṅga-nūl,* பெ. (n.) கழகக் காலத்து நூல்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்; the eight anthologies and ten idyllies of Saṅgam age.

[சங்கம் + நூல்]

சங்கப்பலகை *śaṅga-p-palagai,* பெ. (n.) தகுதியுள்ள புலவர்க்கு மட்டும் இடங்கொடுக்க கூடியதாய்ச் சிவபிரானாற் சங்கத்தார்க்கு அருளப்பெற்ற ஒரு தெய்வத்தன்மை வாய்ந்த பலகை; miraculous seat capable of accommodating only deserving scholars, believed to have been granted by Śivaṉ at Madurai to the Saṅgam poets. "சங்கப் பலகையாந் தொட்டிலேற்றி" (சீகாளத். பு. பாயி. 15).

[சங்கம் + பலகை]

சங்கப்பாடல் *śaṅga-p-pāḍal,* பெ. (n.) சங்கச் செய்யுள் பார்க்க; see *śaṅga-c-ceyyuḷ.*

[சங்கம் + பாடல்]

சங்கப்புலவர் *śaṅga-p-pulavar,* பெ. (n.) முற்காலத்தே மதுரையிலிருந்த தமிழ்ச் சங்கப் புலவோர்; the poets of the Madurai academy of ancient times (செ.அக.).

[சங்கம் + புலவர்]

சங்கப்பூ *śaṅga-p-pū,* பெ. (n.) ஞாழல்; cinnamon.

[சங்கம் + பூ]

சங்கப்பூவை *śaṅga-p-pūvai,* பெ. (n.) வெண் மலருடைய ஒரு வகைக் கொடி; a creeper with white flowers.

[சங்கம்+ பூவை. சங்கம் = வெண்ணிறம்]

சங்கபாடாணம் *śaṅga-pāḍāṇam,* பெ. (n.) சங்கச் செய்நஞ்சு பார்க்க (மூ.அ.); see *śaṅga-c-ceynañju*

[சங்கம் + பாடாணம்]

சங்கபாணி *śaṅga-pāṇi,* பெ. (n.) சங்கக் கையன் பார்க்க; see *śaṅga-k-kaiyaṉ.*

[சங்கம் + பாணி. பண் → பாணி = கை]

சங்கபாலன் *śaṅga-pālaṉ,* பெ. (n.) எண்வகை நாகத்தொன்று; a divine serpent one of aṣṭa-mā-nāgam. "சங்கபால குளிகாதி வாலெயிறு" (கம்பரா. நாகபா. 62).

[சங்கம் + பாலன்]

சங்கபீடம் *śaṅga-pīḍam,* பெ. (n.) 1. நாணல்; reed. 2. நாணற்புல்; coarse grass (சா.அக.).

[சங்க + பீடம்]

சங்கபுங்கி *śaṅgapuṅgi,* பெ. (n.) கடுரோகிணி வேர் (மலை); root of christmas rose (செ.அக.).

[சங்கம் + புங்கி]

சங்கபுட்பம் *śaṅga-puṭpam,* பெ. (n.) சங்கப்பூ பார்க்க (மலை.); see *śaṅga-p-pū.*

[சங்கம் + புட்பம்]

Skt. puṣpam → த. புட்பம்.

சங்கபுட்பி *śaṅga-puṭpi,* பெ. (n.) சங்கப்பூவை பார்க்க (விநாயகபு. 3, 57); see *śaṅga-p-pūvai.*

[சங்கம் + புட்பி]

சங்கம்[1] *śaṅgam,* பெ. (n.) 1. சங்கு; conch-shell, an instrument of sound. 'அடுதிரைச் சங்க மார்ப்ப' (சீவக. 701). 2. கைவளை; bracelet. 'சங்கங் கழல' (இறை. 39, உரை, 260) 3. நெற்றி (பிங்.); fore-head. 4. குரல்வளை; Adam's apple. 5. இலக்கங்கோடி; hundred billions or one hundred thousand crores. "நெய்தலுங் குவளையு மாம்பலுஞ் சங்கமும்" (பரிபா. 2, 13). 6. 2187 தேர்களும், 2187 யானைகளும், 6561 குதிரைகளும், 10,935 காலாட்களுமுள்ள சேனை வகை (பிங்.); a large army consisting of 2187 chariots, 2187 elephants, 6561 horses, 10,935 infantry. 7. சங்கநிதி[1] பார்க்க (மூ.அ.); see *śaṅganidi.* 8. தாலம்பாடாணம் பார்க்க; see *tālam-pāḍāṇam.* 9. சங்கபாடாணம் பார்க்க (வின்).; see *śaṅga-pāḍāṇam.* 10. வெண்ணிறம்; white colour.

[சங்கு → சங்கம்; 'அம்' பெருமைப் பொருட் பின்னொட்டாதலால் இலக்கண நெறிப்படி, சங்கம் என்பது பெருஞ் சங்கையே குறிக்கும். சங்கு என்னும் இயல்பான வடிவு வடமொழியிலின்மை, அது வடசொல்லன்மையை யுணர்த்தும் (வே.க. 241)]

சங்கம் (சங்கு) என்பது ஒவ்வொரு புரிக்கும் (வளைவிற்கும்) ஒரு பெருந்தொகையாக உரையிடல் முறையில் பேரெண்ணிக்கைப் பொருள் ஏற்பட்டது.

சங்கம்[2] *šaṅgam,* பெ. (n.) **பெருவிரல் நிமிர்ந்திருக்க ஒழிந்த நான்கு விரலும் வளைந்து இருப்பது** *(சிலப். 3: 18);* keeping the thumb straight and the rest four fingers folding, a kind of hand posture.

[சங்கு → சங்கம்]

கட்டை விரலை உயர்த்தி மற்ற விரல்களை மடக்கிக் காட்டுவது சங்கு வடிவம் போல் அமைவதைக் காணலாம்.



சங்கம்

சங்கம்[3] *šaṅgam,* பெ. (n.) **கணைக்கால்** (பிங்.) shank, part of the leg from the ankle to the knee (செ.அக.).

[சங்கு → சங்கம்]

சங்கு[4] *பார்க்க*

சங்கம்[4] *šaṅgam,* பெ. (n.) **கைக்குழி;** armpit.

[சங்கு → சங்கம்]

சங்கம்[5] šaṅgam, பெ. (n.) **சங்கஞ்செடி;** mistletoe berry thorn.

மறுவ. இசங்கு

[சங்கு → சங்கம். சங்கு போன்ற இலைகளை உடையது]

சங்கஞ்செடி *பார்க்க*

சங்கம்[6] *šaṅgam,* பெ. (n.) **நேர்மையற்றது;** crookedness. 2. **முரண்பாடானது** (கருநா.); perversiveness.

[சங்கு = வளைந்தது. சங்கு → சங்கம்]

சங்கம்[7] *šaṅgam,* பெ. (n.) **அழகு** (யாழ்.அக); beauty.

[சங்கு → சங்கம். சங்கு = வெண்மை, அழகு. இனி, சந்தம் → சங்கம் என்றுமாம்]

சங்கம்[8] *šaṅgam,* பெ. (n.) 1. **கூட்டம்;** mustering, gathering. 'சங்கமாகி வெங்கணை வீக்கமொடு' *(பெருங். மகத. 17, 38).* 2. (ஏதேனும் ஒரு நோக்கத்திற்காக) **ஒன்றாகச் சேர்ந்து ஏற்படுத்தும் கூட்டமைப்பு, அவை;** society, ssembly, council, senate, academy. 'புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்க' *(மணிமே. 7: 114).* 3. **புலவர்** (திவா.); literati, poets. 4. **பாண்டியரால் புரக்கப்பெற்று விளங்கிய தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற முச்சங்கங்கள்;** learned assemblies or academies of ancient times patronised by Pāṇḍya kings, three in number, viz., *talai-c-caṅgam, iḍai-c-caṅgam, kaḍai-c-caṅgam.* எம்மை புவந்திர்ப்பவர் சங்கமிருந்தது *(பெரியபு. மூர்த்திநா. 7).* 5. **சமண புத்தர்களின் சங்கம்;** fraternity of monks among Buddhists and Jains.

[சங்கு = பேரெண். சங்கு → சங்கம் = கூட்டம், அவை.

வடமொழியில் சங்க (saṅgha) என்னும் சொல்லை சம்+ஹன் (sam+han) என்று பிரித்து ஹன் என்பதற்கு அடித்தல், தாக்குதல் போன்ற பொருள்களையும் சம் என்பதற்கு ṛi என்னும் மூலத்தைக் காட்டிப் போதல், அசைதல், எழுதல் போன்ற பொருள்களையும் காட்டுகிறது மா.வி. அகரமுதலி. இவை இரண்டும் சேர்ந்து கூட்டப் பொருள் தராமையைக் கண்டு கொள்க.

வளைவு கருத்துடிப்படையில் தோன்றியுள்ள சங்கத்திற்கு உள்வளைதல், வட்டமாதல், வளைவுக்குள் இருக்கும் கூட்டம் என்று பொருள் கொள்ளவும் இடமுண்டு]

பழம் பாண்டி நாட்டு முத்தமிழ்க் கழகங்களும் தமக்கு முந்திய தமிழிலக்கியத்தை ஆராய்ந்து வந்ததனால், கற்றோர் பயிலும் இடத்தைக் குறித்த சங்கம் என்னும் சொல் நாளடைவில் கற்றோராக விளங்கிய புலவரையும் குறிக்கத் தலைப்பட்டது. "அவர் சங்கமிருந்து

தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரையென்ப அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரையென்ப" என்று இறையனாரகப் பொருளுரை முறையே முத்தமிழ்க் கழகங்களையும் பற்றிக் கூறுதல் காண்க.

அம் என்னும் வேர் சம் எனத்திரிந்து அந்து → சந்து, அமர் → சமர், அமை → சமை என்றாங்குப் பற்பல சொற்களைத் தோற்றுவித்துள்ளது. சம் → சம்க → சங்க என்பது வடபுலத்திரிபு என்று மொழி ஞாயிறு பாவாணர் கருதியதனால் சங்கம் என்னும் சொல்லாட்சியைத் தவிர்த்துக் கழகம் என்னும் சொல்லையே வழங்கினார்.

சங்கம்[9] *šaṅgam,* பெ. (n.) 1. சேர்க்கை (சூடா.); union, junction, contact. 2. அன்பு; friendship. love, attachment. "சங்கந்தருமுத்தி" (திருக்கோ. 85) 3. புணர்ச்சி; sexual intercourse. "சங்கமுண்கிகள்" (திருப்பு. 556). 4. சங்கமம் பார்க்க (யாழ். அக.); see *šaṅgamam.*

[சங்கு → சங்கம்]

சங்கம்[10] *šaṅgam,* பெ. (n.) சங்கமம் பார்க்க; see *šaṅgamam.* "தாபர சங்கத்தினுக்கு" (வரத. பாகவத. நாரசிங்க. 116).

[சங்கு → சங்கம்]

சங்கம்பட்டை *šaṅgam-paṭṭai,* பெ. (n.) சங்கஞ் செடியின் பட்டை; bark of the four-spined monetia (சா.அக.).

[சங்கம்[5] + பட்டை]

இப்பட்டை காய்ச்சல், சளி, ஈளை, இருமல், புழுநோய் முதலியவற்றைக் குணப்படுத்தும் தன்மையது

சங்கம்வாங்கி *šaṅgamvāṅgi,* பெ. (n.) கூட்டிக் கொடுப்போன் (வின்.); pimp.

[சங்கம் + வாங்கி. தொடர்பு ஏற்படச் செய்பவன். வாங்கு → வாங்கி]

சங்கம்வாங்கு-தல் *šaṅgam-vāṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கூட்டிக் கொடுத்தல் (வின்.); to pimp, pander (செ.அக.).

[சங்கம் + வாங்கு-,]

சங்கமங்கலம் *šaṅga-maṅgalam,* பெ. (n.) கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இருந்த செங்கம் வட்டாரத்து ஓரூர்; a place name of 7th century A.D. around Cengam area. "சிரிகங்கரை சரு சங்கமங்கலத் தெறிந்த ஞான்று" (த.நா.தொ. 1971/100, செங்கம் நடுகற்கள்).

[சங்கம் + மங்கலம்]

சங்கமங்கை *šaṅga-maṅgai,* பெ. (n.) சாக்கிய நாயனார் பிறந்த ஊர்; Cākkiyanāyanār's native village.

[சங்கம் + மங்கை. இவ் வூர் தொண்டை மண்டலத்துக் காஞ்சியை யடுத்துள்ளது]

சங்கமடைப்பள்ளி *šaṅgamaḍai-p-paḷḷi,* பெ. (n.) அமைச்சர்க்குச் சமையல் செய் மரபினராகிய இனத்தார் (யாழ்ப்.); a sub-caste of 'maḍai-p-paḷḷi' so called from their ancestors having been cooks of ministers (செ.அக.).

[சங்கம் + மடைப்பள்ளி]

சங்கமண்டபம் *šaṅga-maṇḍapam,* பெ. (n.) சங்கத்தார் வீற்றிருந்த மண்டபம்; hall where šaṅgam poets assembled. 'தெய்வப் பலகையைச் சங்க மண்டபத்திடை நடுவிட்டு' (திருவாலவா. 15:4).

[சங்கம் + மண்டபம். மண்டு → மண்டகம் = மக்கள் கூடுமிடம். மண்டகம் → மண்டபம்]

சங்கமம் *šaṅgamam,* பெ. (n.) 1. கூடுகை; meeting, union. 2. ஓர் ஆறு வேறோர் ஆற்றுடனேனும் கடலுடனேனும் கூடுமிடம்; river-mouth; confluence of rivers. "குந்தளரைக் கூடற் சங்கமத்து வென்ற" (கலிங். 193). 3. சிவனடியார் திருக்கூட்டம்; šaiva devotees, as viewed collectively. 4. கோள்கள் சேருகை (வின்.); conjunction of celestial bodies (Astron.). 5. புணர்ச்சி; sexual intercourse.

[சங்கம் → சங்கமம்]

சங்கமராயன்பேட்டை *šaṅgamarāyaṉ-pēṭṭai,* பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்த பண்டைய ஊர்; an ancient village in Tanjavoor district. "நித்ய வினோத வளநாட்டு மிலட்டூர் பற்று சங்கமராயன் பேட்டை கிராமம்" (தெ. க.தொ-5, க. 14-2-5).

[சங்கமம் + ராயன் + பேட்டை. அரையன் → ராயன்]

சங்கமருவு-தல் *šaṅgamaruvu-,* 5 செ.கு.வி. (v.i.) பண்டைத் தமிழ்ச் சங்கத்தாரது அனுமதி பெறுதல்; to be approved by the saṅgam poets,

as a literary work of merit. *'சங்க மருவிய நூல்'* *(செ.அக.).*

[சங்கம் + மருவு-,]

சங்கமன்னர் *šaṅga-mannar,* பெ. (n.) *நட்பினரான வேந்தர்;* kings in alliance. *"சங்க மன்னர்க்குத் தம்படை கூட்டி" (பெருங்மகத. 25, 41).*

[சங்கம் + மன்னர்]

சங்கமிரு-த்தல் *šaṅgam-iru-,* 3 செ.கு.வி. (v.i.) *மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராய் இருத்தல்;* to be a member of the Tamil academy at Madurai. *'அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது' (இறை. 1, 5).*

[சங்கம் + இரு-,]

சங்கமுகம்[1] *šaṅga-mugam,* பெ. (n.) *ஆறு கடலுடன் கூடுமிடம்* (சிலப். 9: 57, உரை); river-mouth.

[சங்கம் + முகம். முகம் = முன்னிடம், இடம்.]

சங்கமுகம்[2] *šaṅga-mugam,* பெ. (n.) *சங்கின் முகம்;* face of a conch. *"அற்றை நாளால் சங்கமுகம்" (தெ.க.தொ. 14, கல் - 192. 20).*

[சங்கம் + முகம். முகம் = முன் பக்கம்]

சங்கமுத்திரை *šaṅga-muttirai,* பெ. (n.) *வலக் கைப் பெருவிரனுனி சுட்டுவிரலினடியைத் தொடும் முத்திரை* (சைவச. பொது. 519); a hand-posture in religious worship in which the tip of the right thumb is placed at the root of the right forefinger, as resembling the form of a chank.

[சங்கம் + முத்திரை]

சங்கம்[2] பார்க்க



சங்கமுத்திரை

சங்கமுழி பறமமுழி சங்கிலிகை *šaṅga-muḻi-paṟama-muḻi-šaṅgiligai,* பெ. (n.) *ஏனங்களின் வகை;* a kind of copper vessel *"துக்கையென் சந்தியாதீபம் ஒன்றுக்கும் நிலங்காணி சகசரதாரை சங்கமுழி பறமமுழி சங்கிலிகை உட்பட எடை எண்பது செம்பு அழி" (புது.கல் 563/5).*

[சங்கமுழி + பறமமுழி + சங்கலிகை]

சங்கமுழுக்கு *šaṅgamuḻukku,* பெ. (n.) *1. சங்கத்தினால் இறைவனுக்குச் செய்யும் திருமுழுக்கு;* ceremonial bath of an idol with chanks filled with water. *2. ஒருவரை ஆச்சாரி யனாக்குவதற்கு இறைவன் முன்னிலையில் அவர்க்குச் சங்கினாற் செய்யும் திருமுழுக்கு;* ceremonial bath of a person in the presence of a deity with water in a chank, ordaining Him to sacred order (saiva.).

[சங்கம் + முழுக்கு]

சங்கமூலி *šaṅga-mūli,* பெ. (n.) *பீநாறிச் சங்கு;* smooth volkameria.

[சங்கம் + மூலி]

சங்கமேந்தி *šaṅgam-ēndi,* பெ. (n.) *திருமால்* (பிங்.); Tirumāl (Viṣṇu), as conch-bearer.

[சங்கம் + ஏந்தி]

சங்கரக்கழிச்சல் *šaṅgara-k-kaḻiccal,* பெ. (n.) *காய்ச்சல், இருமலுடன் ஏற்படும் செரியாக் கழிச்சல் நோய்வகை;* a form of diarrhoea arising from indigestion, and it is marked by rumbling noise in the stomach, fever, excess of phlegm in the chest etc. - sympathetic diarrhoea.

சங்கரப்பாடியார் *šaṅkara-p-pāḍiyār,* பெ. (n.) *சக்கரப்பாடியார் பார்க்க;* see *šakkara-p-pāḍiyār. "சங்கரப்பாடியான் கண்டன் மாறனான சோழேந்திர சிங்க மாயிலட்டி" (தெ.க.தொ.3. கல் 19).*

[சக்கரப்பாடியார் → சங்கரப்பாடியார்]

சங்கரன்பாடியார் *šaṅkaraṉ-pāḍiyār,* பெ. (n.) *சக்கரப்பாடியார் பார்க்க;* see *šakkara-p-pāḍiyār.*

[சக்கரப்பாடியார் → சங்கரன் பாடியார்]

சங்கராமீன் *šaṅkarā-mīṉ,* பெ. (n.) *சாவாமீன் என்னும் ஒருவகைக் கடல் மீன்;* a sea-fish known as Java fish (சா.அக.).


சங்கராமீன்

சங்கரிங்கி *šaṅgariṅgi,* பெ. (n.) கடுரோகிணி (வின்.); christmas rose, black hellibore.

[சங்கு → சங்கரிங்கி]

சங்கரேகை *šaṅga-rēgai,* பெ. (n.) சங்கவரிகை பார்க்க; see *šaṅga-varigai.* "சங்கரேகையிது சக்ரரேகையிது" (திருவாரூ. குற. MSS.) (செ. அக.).

[சங்கு → சங்க + ரேகை]

Skt. rēkha → த. ரேகை

சங்கரோகணி *šaṅga-rōgaṇi,* பெ. (n.) கடுரோகிணி; christmas rose, black hellibore (சா.அக.).

[சங்கு → சங்க + ரோகிணி]

சங்கலிக்கண் *šaṅgali-k-kaṇ,* பெ. (n.) கழுத்து அணிகலன்களில் கோர்க்கப்படும் பதக்கக் கல்; a kind of locket stone. "சங்கலிக்கண் 15 கெப்பு உள்பட" (தெ.க.தொ. 24-கல் 598-8).

[சங்கிலி → சங்கலி + கண். கல் → கள் → கண்]

சங்கலிகரணம்[1] *šaṅkalikaraṇam,* பெ. (n.) 1. பிறவிக்குல (சாதிக்) கலப்பினையுண்டாக்கு தலாகிய கரிசு (பாவம்); sin of causing admixture of castes. 'காழகந்தரு சங்கலிகரணமும்' (திருச்செந். பு. செயந்திபுர. 12). 2. முறையிலாப் புணர்ச்சி (வின்.); bestiality, sodomy. 3. உயிர்க் கொலையாகிய கரிசு; sin of killing animals.

[சங்கலி + கரணம்]

சங்கலேகை *šaṅga-lēgai,* பெ. (n.) சங்கவரிகை பார்க்க; see *šaṅga-varigai.* "சங்கலேகையும் சக்கிரலேகையும்" (சூளா. குமார. 45).

[சங்கரேகை → சங்கலேகை (கொ.வ.)]

சங்கவரிகை *šaṅga-varigai,* பெ. (n.) கையில் சங்கு போல் அமைந்த கோடுகள்; the palm line like conch.

[சங்கு + வரிகை]

கையில் சங்கவரிகை இருப்பவனை மேன்மையனாகவும் அவனைத் தெய்வப் பிறப்பினன் என்றும் கருதியதைத் தமிழ் இலக்கியங்கள் காட்டுகின்றன. அதிலும் வலம்புரிச் சங்கின் வரிகை இருப்பது தெய்வத்திற்கு நிகரானது எனக் கொள்ளப் பட்டது. சங்குவரிகையுள்ளோர் அரசு, செல்வம் ஆகியவற்றோடு இன்பமாக வாழ்வர் என்னும் நம்பிக்கை இருந்தது. வலம்புரிச் சங்கு வரிகை உடையவர்கள் கொடுக்கும் நீர் தெய்வத்தன்மையுடையது என்றும் அவ்வாறானோரிடமிருந்து பெற்ற நீரை அருந்துவது பெரும்பேறு என்றும் கருதப் பட்டது. திருமாலும் சீவகனும் வலம்புரிச் சங்குவரிகையுடையவர்கள் என்று இலக்கியங்கள் கூறுவது இதன்பால் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையைத் தெரிவிக்கிறதென்க.

சங்கவருணர் *šaṅga-varuṇar,* பெ. (n.) புறநானூறு 360ஆவது பாடலின் ஆசிரியரான கடைக்கழகப் புலவர்; a saṅgam poet, author of puṟanāṉūṟu 360.

மறுவ. நாகரியர்

[சங்கம் + வருணர்]

பெருங்காஞ்சித்துறை பாடுவதில் வல்லவர். இவர் பாடல் யாக்கை நிலையாமையைக் கூறும். இவர் தந்துமாறனைப் புறநானூறு 360இல் பாடியுள்ளார்.

சங்கவளை *šaṅga-vaḷai,* பெ. (n.) சங்கினால் செய்த வெள்வளை (பு.வெ. 12, இருபாற். 9, கொளு, உரை); white bangles or bracelets made of conch-shell.

[சங்கு → சங்கம் + வளை]

சங்கவைராக்கியம் *šaṅga-vairākkiyam,* பெ. (n.) சங்கத்துறவு பார்க்க; see *šaṅga-t-tuṟavu* (செ.அக.).

[சங்கம் + வைராக்கியம்]

Skt. vairāgya → த. வைராக்கியம்

சங்களை *šaṅgaḷai,* பெ. (n.) மணற்கேணியிற் சுற்றுக்கட்டாக அமைக்கப்படும் பலகை (யாழ்); beams or timbers for shoring up a well (செ.அக.).

[சங்கு + அளை]

சங்களைக்கிணறு *šaṅgaḷai-k-kiṉaṟu,* பெ. (n.) பலகைக்கட்டுக் கிணறு (யாழ்ப்.); well in loose soil walled with timber beams or logs of wood (செ.அக.).

[சங்களை + கிணறு]

சங்கறு-த்தல் *šaṅgaṟu-,* 4 செ. குன்றாவி. (v.t.) சங்குகளை அறுத்து வளையல் முதலியன செய்தல்; to cut conch, to make bracelets and other ornaments from conch.

[சங்கு + அறு-,]

சங்கறுப்போர் *šaṅgaṟu-p-pōr,* பெ. (n.) சங்குகளை அறுத்து வளையல் முதலியன செய்வோர் (பிங்.); chank-cutters, makers of bracelets and other ornaments from chanks.

மறுவ. வளைபோழ்நர்

[சங்கு + அறுப்போர்]

சங்கன் *šaṅgaṉ,* பெ. (n.) ஒரு சிறிய வெளவால் மீன்; a small sea fish known as bat fish of pink colour - cirrhitichthys aurues (சா. அக.).

சங்காட்டம் *šaṅgāṭṭam,* பெ. (n.) சேர்க்கை; union, intercourse. 'சங்காட்டந்தவிர்த்து' (தேவா. 655, 1).

[சங்கம் + சங்காட்டம்]

சங்காடம் *šaṅgāḍam,* பெ. (n.) சங்குவடம், ஒரு வகைப் படகு (நாஞ்.); a kind of boat (செ.அக.).

ம. சங்஛ாடம்; து. சங்கால; Skt., Pāli. *saṅghāḍa;* Port. *jangada*

[சங்குவடம் → சங்காடம்]

சங்காடு-தல் *šaṅgāḍu-,* 5 செ.கு.வி. (v.i.) சங்கினாற் புடைவை முதலியவற்றை மினுங்கச் செய்தல் (வின்.); to polish with a chank, as cloth, paper.

[சங்கு + ஆடு-,]

சங்காத்தம் *šaṅgāttam,* பெ. (n.) 1. இணக்கம்; friendship, intimacy, familiar intercourse. "பூனைக்கும் வீட்டெலிக்குஞ் சங்காத்தமுண்டோ" (தனிப்பா ii, 13, 28). 2. இருப்பிடம்; residence. "துறையூரெனுந் தலத்திற் சங்காத்தங் கொண்டிருப்பாய்" (தமிழ்நா. 62).

ம. சங்஛ாத்தம், செங்஛ாத்தம், சங்஛ாய்த்தம்

[சங்கம் → சங்காத்தம்]

சங்காதம்[1] *šaṅgādam,* பெ. (n.) 1. கூட்டம் (சி.சி. 1, 14, சிவாக்.). 2. அழிவு (வின்.); destruction or dissolution of the world. 3. ஒரு நிரயம் (நரகம்) (வின்.); a hell. 4. பாதங்களைக் கூட்டி ஐந்தடி யெடுத்து வைக்கும் நடிப்புவகை (வின்.); taking five steps forward in succession, with the feet close together.

[சங்கம் → சங்காதம்]

சங்காதம்[2] *šaṅgādam,* பெ. (n.) கூடவருவது; a thing that always goes along with another thing concomitant. "வங்காரமு .... மடந்தையரும் சங்காதமோ" (குந்தரலங். 59).

[சங்கம் → சங்காதம்]

சங்காதமணல் *šaṅgāda-maṇal,* பெ. (n.) கருமணல்; black sand.

[சங்கு + ஆ + மணல். சங்கு = வெள்ளை, ஆ - எதிர்மறை இடைநிலை, சங்கு + ஆ - சங்கா = வெள்ளைக்கு எதிரானது, கருப்பு]

சங்காதமரணம் *šaṅgāda-maraṇam,* பெ. (n.) சங்காதவிறப்பு பார்க்க; see *šaṅgāda-v-iṟappu.*

[சங்காத + மரணம்]

சங்காதவிறப்பு *šaṅgāda-v-iṟappu,* பெ.(n.) எதிர்பாராத நிகழ்ச்சியால் மக்கள் பலர் ஒரு சேர மடிகை; disastrous and unexpected death of a number of persons at a time (செ.அக.).

[சங்கு + ஆ + இறப்பு. தங்கு → சங்கு. சங்குதல் = தங்குதல், நின்றுவிடுதல். 'ஆ' - எதிர்மறை இடைநிலை. சங்கு + ஆ + (து) - சங்காத → தங்காத, எதிர்பார்க்காத]

சங்காபிடேகம் *šaṅgābiḍēgam,* பெ. (n.) சங்கமுழுக்கு பார்க்க; see *šaṅga-muḻukku.* 'சிதம்பரம் சபாநாயகம் உண்ணாழிகையில் சங்காபிடேகஞ் செய்வித்தார்கள்' (உ.வ.).

[சங்க(ம்) + அபிடேகம்]

Skt. abhiṣēka → த. அபிடேகம்

சங்காயம் *šaṅgāyam,* பெ. (n.) 1. கரும்புத் தோகைச் சருகு (இ.வ.); dried leaves of sugar-cane. 2. வயலிற் களையோடு முளைக்கும் ஆனைப்புல்; weeds growing in paddy fields, typha elephantina. "மூன்று களையும் பறித்துச் சங்காயமும் வாரின பயிர்" (ஈடு, 4, 2, ப்ர). 3. உழுந்து, துவரை முதலியவற்றின் முற்றாத

அல்லது பதரான மணி (தஞ்சை.); thin immature grain or chaff of black-gram, etc., (செ.அக.).

ம. சங்காயம் (வயலில் வளரும் ஒரு வகைப் புல்)

[சருகு + அயம் → சருகயம் → சங்காயம். அயம்= அலரி, களை]

சங்காரமுத்திரை *śaṅgāra-muttirai,* பெ. (n.) கட்டைவிரல் நிற்க மற்றை நான்கு விரல்களையும் வளைத்துச் செய்யும் சிவபூசைக்குரிய முத்திரைவகை (செந். X. 424); a hand-pose in which the thumb is kept erect and the other fingers are folded inward, assumed in the worship of Śivan (செ.அக.).

[சங்கு → சங்காரம் + முத்திரை]

சங்குக்கை பார்க்க



சங்கால்பச்சை *śaṅgāl-paccai,* பெ. (n.) செம்புக் களிம்பு; sub-acetate of copper, verdigris (சா.அக.).

[செங்கால் பச்சை → சங்கால் பச்சை]

சங்காலி *śaṅgāli,* பெ. (n.) மாசி பத்திரி; santonin wood, Artimesia Indica (சா.அக.).

சங்காளர் *śaṅgāḷar* பெ. (n.) கலவியையே நாடுபவர்; lustful presons, as prostitutes. "சங்காளர் சூது கொலைகாரர்" (திருப்பு. 748).

[சங்க(ம்) + ஆளர். ஆளர் → உடைமை குறித்த பன்மை யீறு.]

சங்கி[1]-த்தல் *śaṅgi-,* 11 செ.குன்றாவி. (v.t.) பெருமைப்படுத்துதல்; to honour, respect, regard. "சவையில் வந்திங்குளோரைச் சங்கியாதகன்ற தூதை" (பிரபோத. 25, 37).

[சங்கம் → சங்கி-,]

சங்கி[2] *śaṅgi,* பெ. (n.) தொடர்புடையது; that which is related, connected. "விஷய சங்கியாயிருக்கும் ஆணவ தர்மம்" (சி.சி. 2, 56, சிவாக்.).

[சங்கம் → சங்கி]

சங்கி[3] *śaṅgi,* பெ. (n.) 1. சிறுபூனைக்காலி; whitish passion flower - Passiflora foetida. 2. சங்கஞ் செடி; four-spined monetia (சா.அக.).

[சங்கம் → சங்கி.]

சங்கிக்கடுக்காய் *śaṅgi-k-kaḍukkāy,* பெ. (n.) உனானி மருந்தில் வழங்கும் கடுக்காய்; a species of gall-nut used in unani medicine (சா.அக.).

[சங்கி + கடுக்காய்]

சங்கிசீயம் *śaṅgi-śīyam,* பெ. (n.) உகாமரம்; tooth-brush tree - Salvadora persica (சா.அக.).

சங்கிதாதுரம் *śaṅgi-dāduram,* பெ. (n.) கிச்சிலிக் கிழங்கு; orange root - Hedysarum spicatum alias kompferia galanga (சா.அக.).

சங்கிப்பருதி *śaṅgi-p-parudi,* பெ. (n.) கடுகு ரோகிணி; christmas rose - Helleborus niger (சா.அக.).

[சங்கி + பருதி]

சங்கிப்பீடம் *śaṅgi-p-pīḍam,* பெ. (n.) நாணற் கொடி; reed - Saccharum spontaneum (சா.அக.).

[சங்கி + பீடம்]

சங்கிரகக்கூர்மை *śaṅgiraga-k-kūrmai,* பெ. (n.) கடலுப்பு (வின்.); sea-salt.

[சங்கிரகம் + கூர்மை]

சங்கிரண்டூதுவார் *śaṅgiraṇḍūduvār,* பெ. (n.) கோயிலில் பூசை செய்பவர், மந்திரம் ஓதுபவர்; temple priest. "மஞ்சள் நீராட்டவான் நிலத்தொடும் மேற்கடைய நிலன் மூன்றுமா சங்கிரன்டூதுவார் இருவரி(ா) டிகள் மார்க்கு" (தெ. க.தொ-2, கல்-2, 25).

[சங்கு + இரண்டு + ஊதுவார். இரட்டைச் சங்கை ஊதிப் பூசைசெய்பவர்]

சங்கிராகி *śaṅgirāgi,* பெ. (n.) ஓமை அதாவது மாமரம்; mango tree-Mangifera indica (சா.அக.).

சங்கிராகியம்சம்; *śaṅgirāgi-y-amsam.* பெ. (n.) *நாவல் மரம்;* jamoon tree - Eugenia jambalina (*சா.அக.*).

சங்கிலி[1] *śaṅgili,* பெ. (n.) தொடை; thigh (*சா.அக.*).

[அங்கு → சங்கு → சங்கிலி]

சங்கிலி[2] *śaṅgili,* பெ. (n.) *1.* தொடரி; chain, link. "சங்கலிபோ லீர்ப்புண்டு" (*சேதுபு. அகத். 12*). *2.* நில அளவைக்குப் பயன்படும் அளவுச் சங்கிலி (C.G.); land-measuring chain, Gunter's chain 22 yards long.). *3.* ஒரு நிலவளவு (G.Tn.D.I, 239) a superficial measure of dry land = 3.64 acres. *4.* வயிரச்சங்கலி (பொன்னில் வயிரம் பதித்தது) என்னும் அணி; a chain-ornament of gold, inset with diamonds. "சங்கிலி நுண்டொடர்" (*சிலப். 6: 99*). 5. குற்றவாளிக்குப் பூட்டும் விலங்கு; hand-cuffs, fetters.

ம. சங்கல; Skt. śṛiṅkhale.

[அங்கு → சங்கு = வளைந்தது. சங்கு → சங்கிலி. வளைந்து ஒன்றுடன் ஒன்று கோர்த்திருப்பது. சங்கிலியைக் குறிக்கும் வடமொழிச் சொல் śriṅkhale என்பதற்கு மூலம் ஐயத்திற்குரியது (derivation doubtful) என்று மா.வி. அகரமுதலி குறித்துள்ள நிலையில் சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலி சங்கிலி வடசொல் śṛiṅkhaleயிலிருந்து வந்தது எனக் காட்டியிருப்பது பொருத்தமற்றது]

சங்கிலி

சங்கிலி[3] *śaṅgili,* பெ. (n.) சங்கிலியார் பார்க்க; see *śaṅgiliyār.* "சங்கிலிக்கு மெனக்கும் பற்றாய பெருமானே" (*தேவா. 678, 11*)

[சங்கு → சங்கிலி]

சங்கிலிக்கறுப்பன் *śaṅgili-k-kaṟuppaṉ,* பெ. (n.) *சிற்றூர்த் தெய்வம்;* a minor village-deity.

[சங்கிலி + கறுப்பன்]

சங்கிலிக்காரன் *śaṅgili-k-kāraṉ,* பெ. (n.) நங்கூரச் சங்கிலி இழுபடும் கப்பலின் துளை; hawse-hole (naut.).

[சங்கிலி + காரன்]

சங்கிலிக்கோவை *śaṅgili-k-kōvai,* பெ. (n.) தொடர்ச்சியானது; arrangement, sequence, series.

[சங்கிலி + கோவை. கோர்வை → கோவை]

சங்கிலிக்குப்பம் *śaṅgili-k-kuppam,* பெ. (n.). சங்கொலிக்குப்பம் பார்க்க; see *saṅgoli-k-kuppam* (*த.ஊ.பெ.*).

[சங்கொலி + குப்பம் - சங்கொலிக் குப்பம் → சங்கிலிக்குப்பம்]

சங்கிலித்துருமம் *śaṅgili-t-turumam,* பெ. (n.) தான்றிக்காய்; fruit of devil tree - Terminalia bellerica (*சா.அக.*).

சங்கிலிப்பிரண்டை *śaṅgili-p-piraṇḍai,* பெ. (n.) பிரண்டை வகை; a species of piraṇḍai.

[சங்கிலி + பிரண்டை]

சங்கிலிப்பின்னல் *śaṅgili-p-piṉṉal,* பெ. (n.) *1.* சங்கிலியின் பின்னல் (வின்.); linking of a chain. 2. ஒருவகைத் தலைப்பின்னல்; a mode of hair braiding.

[சங்கிலி + பின்னல்]

சங்கிலிப்பூட்டு *śaṅgili-p-pūṭṭu,* பெ. (n.) *1.* சங்கிலியின் பின்னல்; linking of a chain. *2.* சங்கிலிமாட்டும் ஆணி; clasp of a chain. 3. மற்போரில் ஒருவகைப் பிடி (யாழ்ப்.); chain-hold in wrestling. *4.* பெருஞ்சிக்கல் (வின்.); intricacy.

[சங்கிலி + பூட்டு]

சங்கிலிப்பூதத்தான் *śaṅgili-p-pūdattāṉ,* பெ. (n.) சங்கிலிக்கறுப்பன் பார்க்க; see *śaṅgili-k-kaṟuppaṉ.*

[சங்கிலி + பூதத்தான். ஊதுதல் = வீங்குதல், பருத்தல். ஊது → பூது → பூதல் → பூதலி. பூதலித்தல் = பருத்தல், தடித்தல். பூது → பூதம் = பருத்தது, பருத்த பேய். பூதம் → பூதத்தான்]

சங்கிலிமண்டபம் *śaṅgili-maṇḍabam,* பெ. (n.) இணைப்பு மண்டபம் (நெல்லை.); connecting pavilion.

[சங்கிலி + மண்டபம். மண்டு → மண்டகம்= மக்கள் கூடும் கல் அல்லது காரைக்கூடம். மண்டகம் → மண்டபம். முதற்காலத்தில் கல்லாலும் பிற்காலத்தில் செங்கலாலும் மண்டபம் அமைந்தது]

தனியாக இருக்கும் அம்மன் கோயிலை மூலக் கோயிலுடன் இணைத்து நிற்பது சங்கிலி மண்டபம்!

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலுடன் காந்திமதியம்மைக் கோயிலை இணைத்து நிற்பது சங்கிலி மண்டபம்.

சங்கிலிமோதிரம் *śaṅgili-mōdiram,* பெ. (n.) 1. சிக்குமோதிரம்; finger-ring of small links. 2. கொடி கட்டும் வளையம்; ring fastened in a beam for suspending ropes.

[சங்கிலி + மோதிரம்]

சங்கிலியார் *śaṅgiliyār,* பெ. (n.) சுந்தரமூர்த்தி நாயனார் மனைவியரிருவருள் ஒருத்தி; one of the two wives of Sundara-mūrtti-nāyaṉār. "தந்தையார் பேசக் கேட்ட சங்கிலியார்" (பெரியபு. ஏயர் கோன்.211.).

சங்கிலிவட்டகை *śaṅgili-vaṭṭagai,* பெ. (n.) மாழையால் செய்து சங்கிலியாலிணைத்த கரண்டியுடன் கூடிய ஒரு விளக்கு; a kind of lamp chained with a spoon, for pouring oil.

[சங்கிலி + வட்டகை]

சங்கிலிவடம் *śaṅgili-vaḍam,* பெ. (n.) 1. சங்கிலி வடிவில் அமைந்த கழுத்தணி; a neck-ornament in the shape of a chain. 2. தேரிழுக்குஞ் சங்கிலி (வின்.); iron chain for drawing a car.

[சங்கிலி + வடம்]

சங்கிலிவலயம் *śaṅgili-valayam,* பெ. (n.) சங்கிலிவளையம் பார்க்க; see *śaṅgili-vaḷaiyam.*

[சங்கிலி + வலயம். வளையம் → வலையம்]

சங்கிலிவளையம் *śaṅgili-vaḷayam,* பெ. (n.) சங்கிலியின் உறுப்பாகவுள்ள வளையம்; links or rings of a chain.

[சங்கிலி + வளையம்]

சங்கிலிவிரியன் *śaṅgili-viriyaṉ,* பெ. (n.) சங்கிலி போன்ற வரிகளையுடைய ஒருவகைப் பாம்பு; russell's viper, as having marks like chain.

[சங்கிலி + விரியன்]



சங்கிலிவிரியன்

சங்கிலிவிளக்கு *śaṅgili-viḷakku,* பெ. (n.) 1. சங்கிலி வட்டகை பார்க்க; see *śaṅgili-vaṭṭagai.* 2. சங்கிலியில் தொங்கும் விளக்கு; a kind of bronze lamp hung on a chain.

ம. சங்ஙல விளக்கு

[சங்கிலி + விளக்கு]

சங்கிற்கூர்மை *śaṅgiṟ-kūrmai,* பெ. (n.) ஒருவகை உப்பு; a kind of salt.

சங்கின்குடியோன் *śaṅgiṉ-kuḍiyōṉ,* பெ. (n.) பொன்வண்டு (நாகரவண்டு) (யாழ்.அக.); a gold-coloured beetle.

[சங்கின் + குடியோன்.]

சங்கின்பிள்ளை *śaṅgiṉ-piḷḷai,* பெ. (n.) முத்து; pearl born of, or produced from oyster (சா.அக.).

[சங்கின் + பிள்ளை]

சங்கீதம் *śaṅgīdam,* பெ. (n.) கிச்சலிக் கிழங்கு; orange-root - Hedychium coronatium (சா.அக.).

சங்கீனி *śaṅgīṉi,* பெ. (n.) உழமண்; fuller's earth (சா.அக.).

சங்கு[1] *śaṅgu,* பெ. (n.) 1. நந்துக்கூடு; chank, conch, large convolute shell. "சங்குதங்கு தடங்கடல்" (திவ். பெரியதி. 1, 8, 1). 'சங்காயிரம் கொண்டு காசிக்குப் போனாலும் தன்பாவம் தன்னோடே' (பழ.);'சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' (பழ.) 2. ஐம்படை என்னும் அணியின் ஓர் உரு (சூடா.); a constituent of the aimpaḍai ornament. 3. சங்கவரிகை பார்க்க (திவா.);

see *šaṅga-varigai*. *4.* சங்கினால் செய்த கைவளை; shell bracelet. *5.* குரலென்னு மிசை (திவா.); a musical note. *6.* மிடறு; throat. *7.* ஒரு பேரெண்; thousand billions. "சங்குதரு நீணிதியம்" (சீவக. 493). *8.* பேரெண் கொண்ட போர்ப்படை (சூடா.); a large army. *9.* பெருவிரல் நிமிர ஒழிந்த நான்கு விரல்களும் வளைந்து நிற்கும் இணையாவினைக்கை வகை (சிலப். 3: 18 உரை); (Nāṭya. 6) gesture with one hand in which the thum is held upright while the other fingers are bent. *10.* கோழி (அக.நி.); cock. *11.* வெண்ணிறம்; white colour.

மறுவ. கோடு, சுரிமுகம், புரி, வளை, வாரணம், நந்து, வெள்ளை, ஊட்டி, பணிலம், நாரு, கம்பு, சுத்தி, தரா.

ம. சங்கு

['சுல்' வளைதற்கருத்துவேர். சுல் → சுலவு. சுலவுதல் = சுற்றுதல். சுல் → சள் → சழி. சழிதல் = உடற்சதை சரிந்து தளர்தல். சுல் → சுர் → சரு → சருவு. சருவுதல் = சாய்தல், சரிதல். சரிவு → சருகு → சருக்கு. சருக்குதல் = சாய்தல், சரிதல், வளைதல், வழுவுதல், சறுக்குதல். சருக்கு → சருக்கம் = வட்டம். சருக்கு → சக்கு → சக்கடம் → சக்கடா = கட்டைவண்டி. சக்கு → சங்கு]

உள் வளைந்துள்ள நந்துக்கூடு, சங்கு வடிவான ஐம்படைத் தாலியுரு, சங்கு வடிவான வரை, சங்கினாற் செய்த கைவளை, சங்கு போன்ற ஊட்டி என்னும் மிடற்றுறுப்பு, மிடற்றில் இயல்பாக எழும் குரல் என்னும் இசை, சங்கு வளைவுகளால் அல்லது முட்களால் ஏற்பட்ட பேரெண், பேரெண் கொண்ட போர்ப்படை, பெருவிரல் நிமிர மற்ற நால் விரல்களும் வளைந்து நிற்கும் இணையாவினைக்கை, சங்கு வடிவான தலையுடைய கோழி.

சங்கு உள் வளைந்திருப்பதால் கோடு, அரிமுகம், புரி (வலம்புரி, இடம்புரி), வளை, வாரணம் என்னும் அதன் பெயர்களெல்லாம் வளைவுக் கருத்தையே வேர்ப்பொருளாகக் கொண்டிருப்பது கவனிக்கத்தக்கது. (வே.க.241)

சங்கினால் குழந்தைகட்குப் பால் ஊட்டுவதால் அதற்கு ஊட்டி என்றும் பெயர்.

சங்கு ஒரே ஓட்டால் ஆனது; சிறிய சங்கு கடுகின் அளவும், பெரிய சங்கு ஓர் அடிக்கு மேலும் இருக்கும்.

சங்கு, சக்கரம், வில், வாள், தண்டம் என்பன திருமாலின் ஐம்படை. இவ்வைம்படை உறுப்புகளைப் பொருத்தியதும் குழந்தைகட்குக் காப்பாக அணிவதுமான தாலி ஐம்படைத் தாலி என்று சாம்பசிவம் மருத்துவ அகரமுதலி குறிப்பிடுகிறது. மேலும்,

ஏவுகணைச் சங்கு - மிக அரிதாக கிடைப்பது.

இராமேசுவரம் சங்கு - இராமேசுவரம் கடற்பகுதியில் கிடைப்பது.

இராவணன் வழி - இதுவும் இராமேசுவரம் கடற்பகுதியில் கிடைப்பது.

எழுத்தாணிச் சங்கு - நீளமாகவும் சற்றுக் கூர்மையாகவும் இருப்பது.

ஐவிரலிச் சங்கு - கையைப் போல அமைந்திருப்பது.

சப்பாத்திச் சங்கு - அகன்றதாகவும் பெரியதாகவும் இருப்பது.

இரட்டைச் சங்கு - பெரியதாக இருப்பது. திருவோட்டுச் சங்கு என்றும் இதனை அழைப்பர். இரப்போரும், சிவனிய ஆண்டிகளும் இதனைப் பயன்படுத்துவர்.

முள்ளிச் சங்கு - மேற்பரப்பில் கூரான பகுதிகள் இருப்பது.

யானை முள்ளிச் சங்கு - யானையின் தோற்றம் போன்று, பெரியதாகவும் முள்ளுள்ளதாகவும் இருப்பது.

வாழைப் பூச்சங்கு - வாழைப் பூவைப் போன்றிருப்பது.

வெள்ளையன் சங்கு - வெண்ணிறமானது.

வெள்ளைப்பூண்டுச் சங்கு - வெண்ணிறமானது.

செவ்வாயன் - சிவந்த நிறமுடையது.

சொறி சங்கு - மேற்பகுதி சொரசொரப்பாக இருப்பது.

சோழிச் சங்கு - கிளிஞ்சல் வகையைச் சார்ந்தது.

சங்கு நண்டு - நண்டு போன்ற தோற்றமுடையது.

குதிரை முள்ளிச் சங்கு - குதிரையை போன்றும் முள் உள்ளதுமானது.

குருவிச் சங்கு - குருவியைப் போன்றிருப்பது.

குழாய்ச் சங்கு - மிகவும் சிறியது.

பல்பப் பூச்சி - மிகவும் சிறியது.

பால் சங்கு - வெண்ணிறமுடையது.

பிள்ளையார் சங்கு - யானை முகத்தோற்றம் உடையது.

புறா முட்டைச் சங்கு - புறாமுட்டையைப் போன்றிருப்பது.

என்று சங்கின் வகைகளை பரதவர் கலைச் சொல்லகரமுதலி குறிப்பிடுகிறது.

சங்கு வகைகள்

1. சலஞ்சலம் - a conch - shell of super - eminent qualities - Voluta ryrum.
2. முட்சங்கு/கோலச்சங்கு - prickly chank, one with thorn - like points.
3. பட்டி அல்லது சிறு சங்கு - short chank.
4. சூற்சங்கு - chank containing or impregnated with pearls.
5. தாழஞ் சங்கு - one with a wide mouth.
6. வலம்புரிச்சங்கு - one with the spiral opening to the right; chank shell of happy convolutions.
7. இடம்புரிச்சங்கு - ordinary chank with - an opening to the left.
8. பாலடைச் சங்கு - small conch used for giving milk to children.
9. உவர்ச்சங்கு - prickly chank.
10. நீர்வாழ் சங்கு - conch - shell Turbinella rapa.
11. பாற்சங்கு - white chank.
12. பச்சைச் சங்கு அல்லது ஊது சங்கு - conch used for blowing in temples.
13. வெண்சங்கு - white dead shell.
14. கண்ணச்சங்கு - the conch worn by Tirumāl (Viṣṇu).
15. தூநீர்ச் சங்கு - sacred conch shell - Mazza rapa.
16. வரிச்சங்கு - striped conch.
17. கடற்சங்கு - a large convolute shell regarded with religious veneration - Turbinella pyrom.
18. கண்டகச்சங்கு - a thorny chank in the sacred Gandhaka river near Benares.

சங்கின் வாழ்க்கை முறையையும் அதன் பயன்பாட்டையும் பற்றித் தமிழர்கள் 3000 ஆண்டுகட்கு முன்பே அறிந்திருந்தனர். சங்கு அணிகலன் செய்வதில், வழிபாட்டில், போர்க்களத்தில் என்று தமிழர் வாழ்க்கை முறையில் பெரும்பங்கு பெற்றுள்ளது. அதுபோல் சங்கு வளமைக் குறியீடாகவும் வெற்றிக் குறியீடாகவும் கருதப்பட்டுள்ளது.

சங்கு வளையல்கள் பெண்களின் மங்கல அணிகலன்களாகக் கொள்ளப்பட்டிருந்ததையும், கணவன் மறைவிற்குப்பின் அவ் வளையல்களை உடைந்தெறிந்து கைம்மைத் தோற்றங் கொண்டிருந்ததையும் பழந்தமிழ் நூல்கள் தெரிவிக்கின்றன.

அக் காலப் பெண்கள் சங்கு வளையல்களைப் பெரிதும் விரும்பி அணிந்துள்ளனர். சங்கு வளையல் மிகுதியாக இருந்ததால் சங்கிற்கு வளை என்ற பெயரும் உருவாயிற்று. சங்கைக் கொண்டு செய்யப்பட்ட அணிகள் யாவும் வட்டமாகவே இருந்துள்ளதையும் இது குறிக்கிறது.

சில்வளை, எல்வளை, இலங்குவளை, அணி வளை, கோல்வளை, செறிவளை, நிறைவளை, நிரைவளை, வால்வளை, வாள்வளை, புரிவளை, இளவளை, உடைவளை, புணரிவளை, நீர்ப்பரப்பின்வளை, நனிமுரல்வளை, தொடிவளை, கைவளை, பவளவளை, இடுப்புணர்வளை, இடுவளை, ஒடுவளை, ஆய்வளை, வரிவளை, நல்வளை, தோள்வளை, ஈர்வளை, தொடுவளை, வலம்புரிவளை எனப் பலவகை வளையல்களைப் பற்றிய செய்திகளைக் கழக இலக்கியங்கள் மூலம் அறிகிறோம்.

சங்கு அடிபெருத்தும், நுனி சிறுத்தும் உருண்டுதிரண்டுமிருக்கும். இது வெண்மை யானது. தொல்காப்பியர் சங்கினை ஈரறிவு உயிரினமாகக் குறித்துள்ளார். "நந்தும் முரளும் ஈரறி வினவே" (தொல். பொருள். மரபு. 29).

வலம்புரிச் சங்கிலிருந்து கிடைத்த முத்துகள் மன்னனுக்குப் பரிசாகவும் திரையாகவும் அளிக்கப்பெற்றதைச் சீவகசிந்தாமணி (697, 2410, 919, 1503) தெரிவிக்கின்றது.

சங்கு[2] *śaṅgu,* பெ. (n.) சங்கஞ்செடி பார்க்க (பதார்த்த. 118.); see *śaṅgaṉ-jeḍi.*

[இசங்கு → சங்கு]

சங்கு[3] *śaṅgu,* பெ. (n.) கடுரோகிணி (மலை.); christmas rose.

சங்கு[4] *śaṅgu,* பெ. (n.) கணைக்கால்; shank.

[சங்கு¹ → சங்கு = சங்கு வடிவில் திரண்ட கெண்டைக்கால்]

சங்கு[5] *śaṅgu,* பெ. (n.) 1. முளை; stake, peg, spike. 2. நிழலால் நேரமறிவதற்காக நேராக நடப்பெறும் கோல் (வின்.); gnomon or perpendicular column for measuring the altitude of the sun by the length of its shadow. 3. மட்டிப் படைக்கலம் (திவா.); a kind of weapon "கழுக்கடை சங்கொடு .... விழுப்படையாவும்" (கந்தபு. சகத்திரவாகு. 7)

[சங்கு = வளைந்தது, கூர்மையானது. சங்கு¹ → சங்கு⁵]

சங்கு வகைகள்

சலஞ்சலம்
கண்டகச் சங்கு
உவர்ச்சங்கு
பாலாடைச் சங்கு
பாற்சங்கு
வம்புரிச்சங்கு
இடம்புரிச்சங்கு

சங்கு வகைகள்



முட்சங்கு

கடற்சங்கு

தீர்த்த சங்கு

வெண்சங்கு

சென்னை-600 008

தாழஞ்சங்கு

வரிச்சங்கு

சங்கு[6]-தல் *šaṅgu-*, 5 செ.கு.வி. (v.i) *பல்லாங்குழி ஆடுபவனுக்கு ஊதியமின்றி (இலாபமின்றி) முடிந்து விடுதல்;* to be blocked in ones turn without any gain in the game of pallāṅguḻi.

பட. பிங்கு

[தங்கு → சங்கு-,]

சங்கு[7]-தல் *šaṅgu-*, 5 செ.கு.வி. (v.i) *துணிவு அழிதல்* (வின்.); to be dispirited, lose courage.

Skt. śaṅkā

[இங்குதல் = அழுந்துதல். இங்கு → சிங்கு. சிங்குதல் = குன்றுதல், இளைத்தல், அழிதல். சிங்கு → சங்கு-,]

சங்கு[8]-தல் *šaṅgu-*, 4 செ.கு.வி. (v.i.) *குதித்தல், தாண்டுதல்;* to jump (கருநா.).

க. சங்கு

[சுல் → சல் → சன் → சங்கு-,]

சங்குக்கீரை *šaṅgu-k-kīrai*, பெ. (n.) *கீரைவகை* (சங்.அக.); a kind of greens.

[சங்கு[7] + கீரை. சங்கு வடிவான இலையைக் கொண்ட கீரை]

சங்குக்கை *šaṅgu-k-kai*, பெ. (n.) *பெருவிரல் நிமிர ஒழிந்த நான்கு விரல்களும் வளைந்து நிற்கும் இணையாவினைக்கை வகை* (சிலப். 3: 18, உரை); a gesture with one hand in which the thumb is held upright while the other fingers are bent.

[சங்கு + கை. செய் → (சை) → கை]

பெருவிரலை நிமிர்த்தி மற்ற விரல்களை வளைத்ததாக சங்கின் வடிவம் தோன்றும்

சங்குக்கொட்டான் *šaṅgu-k-koṭṭāṉ*, பெ. (n.) *சங்குகளை ஓரிடத்திலிருந்து வேரோரிடத்திற்கு எடுத்துச் செல்லப் பயன்படுத்தும் பெட்டி* (மீனவ.); box used to take conch from one place to another.

[சங்கு + கொட்டான். குட்டான் = சிறிய ஓலைப்பெட்டி. குட்டான் → கொட்டான் = ஓலைப் பெட்டி, பெட்டி]

சங்குக்கோலம் *šaṅgu-k-kōlam*, பெ. (n.) *சங்கு உருவம் அமையுமாறு போடும் கோலம்;* ornamental figures like conch, drawn on floor, wall or sacrificial pots.

[சங்கு + கோலம்.]

பெரும்பாலும் மாலிய (வைணவ சமய)த்தார் இல்லங்களில் சிலை (மார்கழி)த் திங்களில் வாயிலில் சங்குக் கோலம் போடுவர். சங்குக் கோலம் தீமைகளினின்று விடுபடவும் செல்வ வளத்தைக் கொடுக்கவும் வல்லது என்பது நம்பிக்கை.

சங்குகட்டு-தல் *šaṅgu-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) *கால்நடைகளுக்குச் சங்கு கட்டுதல்;* to tie conch to cattles.

[சங்கு + கட்டு-,]

கால்நடைகளின் கழுத்து, நெற்றி, வயிற்றுப் பகுதி ஆகியவற்றில் கருப்புக் கயிற்றில் சங்கைக் கோத்துக் கட்டித் தொங்க விடுவதுண்டு. அழகுபடுத்துவதற்கும் சில தீய விளைவை அகற்றும் என்னும் நம்பிக்கையின் அடிப்படையிலும் சங்கு கட்டுவர். மாட்டு வண்டி போன்றவற்றிலும் சங்கு கட்டுவதுண்டு.

சங்குகடை-தல் *šaṅgu-kaḍai-*, 2 செ.குன்றாவி. (v.t.) *இறக்கும் நேரத்தில் நெஞ்சில் களகளவெனும் ஓசை உண்டாதல்;* to rattle in the throat, as of dying persons.

ம. சங்குகரயுக.

[சங்கு + கடை-,]

சங்கு போன்ற ஊட்டி என்னும் மிடற்றுருப்பில் கடைதல் போன்ற ஓசை ஏற்படுதல் சங்கு கடைதல் எனப்பட்டது.

சங்குகர்ணம் *šaṅgu-karṇam*, பெ. (n.) 1. *ஒட்டகம்;* camel. 2. *கழுதை;* donkey.

[சங்கு + கர்ணம். சங்குபோன்ற காதினை உடையது]

Skt. karṇa → த. கர்ணம்.

சங்குகழித்தல் *šaṅgu-kaḻittal*, தொ. பெ. (vbl.n.) *தரங்குறைந்த சுறாக்கடி, சொரி, நண்டுக்கடி முதலிய சங்கு வகைகளைக் கழித்தல்;* separating substandard conches (மீனவ.).

[சங்கு + கழித்தல்]

சங்குகாசம் *šaṅgu-kāšam*, பெ. (n.) *கண்ணோய் வகை* (சங்.அக.); a kind of eye-disease.

[சங்கு + காசம்]

சங்குகிளரி *śaṅgu-kiḷari,* பெ. (n.) புலிநறளை; fox -grape (சா.அக.).

சங்குகுலை *śaṅgu-kulai,* பெ. (n.) ஆமை; tortoise, turtle (சா.அக.).

[சங்கு + குலை]

சங்குகுளி-த்தல் *śaṅgu-kuḷi-,* 4 செ.கு.வி. (v.i.). மூழ்கிச் சங்கெடுத்தல்; to dive for chanks.

[சங்கு[2] + குளி-,]

சங்குகுளிக்காரன் *śaṅgu-kuḷi-k-kāraṉ,* பெ. (n.) 1. கடலில் சங்கெடுப்பதற்காக முக்குளிப்போன்; one who dives for chanks. 2. சங்கெடுப்பதற்காக விடப்பட்ட வரியிலி நிலம் (R.T.); 'inam' granted for diving for chank-shells.

[சங்கு + குளி + காரன்]

சங்குச்சலாபம் *śaṅgu-c-calābam,* பெ. (n.) சங்கு குளித்தெடுக்கை; chank fishery.

[சங்கு + சலாபம். சலாபம் = முத்துக் குளிக்கை]

சங்குச்சுண்ணாம்பு *śaṅgu-c-cuṉṉāmbu,* பெ. (n.) சங்கு சுட்ட சுண்ணாம்பு; chank-lime, shell-lime.

[சங்கு[1] + சுண்ணாம்பு]

சங்குச்சுரி *śaṅgu-c-curi,* பெ. (n.) புரியாணி (யாழ்ப்); screw, as being spiral.

ம. சங்கிரி

[சங்கு[1] + சுரி]

சங்குச்சன்னி *śaṅgu-c-caṉṉi,* பெ. (n.) உடல் வெதும்பி, நாக்கு வறண்டு, வயிறு பொருமி, கக்கல், விக்கல், காதடைப்பு, திடுக்கிட்டெழுதல் முதலிய குணங்களுடன், 14 நாள் வரைக்கும் நீடித்திருக்கும் ஒருவகைக் காய்ச்சல், சன்னி; a kind of deilrium from enteric fever extending to a period of fourteen days, with characterised by aching of the limbs, parched tongue, rumbling of the stomach, vomitting, hiccough, dullness of hearing restless due to frequent and sudden rise from the bed etc. (சா.அக.).

[சங்கு + சன்னி]

சங்குச்சுண்ணாம்பு *śaṅgu-c-cuṉṉāmbu,* பெ. (n.) சங்கு சுட்ட நீறு பார்க்க; see *śaṅgu-suṭṭa-nīṟu*

[சங்கு + சுண்ணாம்பு. சுள் → சுள்ளை → சூளை. சுள் → சுண் → சுண்ணம் = நீற்றுதல், நீறு, சுண்ணாம்பு]

சங்குசக்கரக்கடுக்கன் *śaṅgu-cakkara-k-kaḍukkaṉ,* பெ. (n.) இடது காதில் சங்கின் வடிவாகவும் வலது காதில் சக்கர வடிவாகவும் திருமாலடியவர்கள் அணியும் கடுக்கன் வகை; ear-rings in the form of chank for the left ear and of a discus for the right, used by vaiṣṇavās.

[சங்கு[1] + சக்கரம் + கடுக்கன்]



சங்குசக்கரக்கடுக்கன்

சங்குசக்கரம்[1] *śaṅgu-cakkaram,* பெ. (n.) தரையிலோ கம்பியிலோ சுழலக் கூடிய சுருள் வடிவான ஒரு பட்டாசு; cracker that either spins on the floor or rotates on a metal wire when lit.

[சங்கு + சக்கரம்]



சங்குசக்கரம்

சங்குசக்கரம்[2] *śaṅgu-śakkaram,* பெ. (n.) சங்கு சக்கர முத்திரை பொறிக்கப்பட்ட ஒரு வகை அணிகலன்; a kind of ornament with the shape of the conch and discus embossed (சேரநா.).

ம. சங்குசக்ரம்

[சங்கு + சக்கரம்]

சங்குசக்கரம்[3] *šaṅgu-cakkaram,* பெ. (n.) *சங்குசக்கர வடிவான வரிகை;* conch and circle shaped palm lines.

[சங்கு + சக்கரம்]

சங்குசாரம் *šaṅgu-šāram,* பெ. (n.) *சங்கைச் சுட்டெடுக்கும் உப்பு;* an essence of salt extracted by burning and reducing chank into ashes *(சா.அக.).*

[சங்கு + சாரம்]

சங்குசிதம் *šaṅgušidam,* பெ. (n.) *சுருக்கமானது (சி.சி. 4, 36, சிவாக்.);* that which is contracted shrunk, narrowed.

[சங்கு + சிதம்]

சங்குசுட்டநீறு *šaṅgu-suṭṭa-nīṟu,* பெ. (n.) *சங்குச் சுண்ணாம்பு;* lime obtained by or delivered from, slaking conch-shell; slaked shell-lime *(சா.அக.).*

[சங்கு + சுட்ட + நீறு]

சங்குசூலை *šaṅgu-šūlai,* பெ. (n.) *ஆமை;* tortoise, turtle *(சா.அக.).*

[சங்கு + சூலை]

சங்குடம் *šaṅguḍam,* பெ. (n.) *கொத்தான்கொடி;* air-creeper - Cassytha filiformis.

சங்குணப்புல் *šaṅguṇa-p-pul,* பெ. (n.) *நான்முகப்புல்;* square - stalked grass - Saccharum spontaneum *(சா.அக.).*

சங்குத்தாபனம் *šaṅgu-t-tābanam,* பெ. (n.) *சங்கு நிலைநிறுத்தம் பார்க்க;* see *šaṅgu-nilai-niṟuttam (கட்டட).*

[சங்கு + தாபனம்]

Skt. stābana → த. *தாபனம்*

சங்குத்தாலி *šaṅgu-t-tāli,* பெ. (n.) *1. சங்கு வடிவான தாலி (வின்.);* 'tāli' with beads in imitation of chanks, one on either side. *2. சங்கினாற் செய்யப்பட்ட மகளிரணியுந் தாலி;* tāli made of shell, worn by women.

[சங்கு + தாலி]

சங்குத்தாலி வெள்ளாளர் *šaṅgu-t-tāli-veḷḷāḷar,* பெ. (n.) *சங்கினாலியன்ற தாலியை மகளிர் அணியும் வழக்குமுடைய ஒருவகை வேளாளர் (வின்);* a class of vēḷāḷas whose women wear śaṅgu-t-tāli.

[சங்கு + தாலி + வெள்ளாளர்]

சங்குத்திரி *šaṅgu-t-tiri,* பெ. (n.) *சங்கின் உட்சுழி (இ.வ.);* spiral winding in shells.

ம. *சங்குதிரி*

[சங்கு + திரி]

சங்குத்திருகி *šaṅku-t-tirugi,* பெ. (n.) *1. சங்கறுக்குங் கருவி (வின்.);* machine for sawing and cutting shells. *2. அடைத்த நெட்டித் தக்கையை இழுத்து வாங்குங் கருவி;* cork-screw *(செ.அக.).*

ம. *சங்குதிரி*

[சங்கு + திருகி]

சங்குந்தி *šaṅgundi,* பெ. (n.) *ஒருவகைக் கிலுகிலுப்பை;* rattle-wort - Crotalaria genus *(சா.அக.).*

[சங்கு → சங்குந்தி]

சங்குநகம் *šaṅgu-nagam,* பெ. (n.) *நாகுணம் என்னும் மணப்பொருள் (நாநார்த்த. 435, உரை);* nākuṇam, an aromatic substance.

[சங்கு + நகம்]

சங்குநண்டு[1] *šaṅgu-naṇḍu,* பெ. (n.) *ஒரு வகைச் சங்கு (மீனவ.);* a kind of chank.

[சங்கு + நண்டு]

சங்குநண்டு[2] *šaṅgu-naṇḍu,* பெ. (n.) *பெரிய சங்கிற்குள் வாழும் ஒருவகை நண்டு;* a crab living in the hollow of a big chank *(சா.அக.).*

[சங்கு + நண்டு]

சங்குநாதம் *šaṅgu-nādam,* பெ. (n.) *சங்கநாதம் பார்க்க;* see *šaṅga-nādam (செ.அக.).*

[சங்கு + நாதம்]

சங்குநிதி *šaṅgu-nidi,* பெ. (n.) *வட்டக் கிலுகிலுப்பை (மலை.);* blue-flowered crotalaria.

[சங்கு + நிதி]

சங்குநிலம் *šaṅgu-nilam,* பெ. (n.) *சங்குப் படுகை பார்க்க;* see *šaṅgu-p-paḍugai* (மீனவ.).

[சங்கு + நிலம்]

சங்குநிலைநிறுத்தம் *šaṅgu-nilai-niṟuttam,* பெ. (n.) *1. வீட்டின் பீடைகள் நீங்குமெனும் நம்பிக்கையில் நீர் நிரப்பிய சங்கினை 45 நாள் மந்திரித்துச் சுவரின் கீழ்ப் புதைத்தல்;* burrying under a wall a conch filled with water after doing manthra for 45 days to drive out affliction of a house. *2. புதிதாக அமைக்கும் கட்டடத்திற்கு எல்லை தெரியும்படி முளையடிக்குஞ் சங்கு;* setting up conch as peg to identity the area of new building.

[சங்கு + நிலைநிறுத்தம்]

சங்குப்பட்டினி *šaṅgu-p-paṭṭiṉi,* பெ. (n.) ஒரு வகை நோன்பு (இ.வ.); a kind of fast (செ.அக.).

[சங்கு + பட்டினி]

சங்குப்படுகை *šaṅgu-p-paḍugai,* பெ. (n.) *சங்குகள் நிறைந்திருக்கும் கடற்பகுதி* (மீனவ.); chank bed.

மறுவ. சல்லி, பிறால்

[சங்கு + படுகை]

சங்குப்பறை *šaṅgu-p-paṟai,* பெ. (n.) *சங்குப் பறையர் பார்க்க* (வின்.); see *šaṅgu-p-paṟaiyar.*

[சங்கு + பறை]

சங்குப்பறையர் *šaṅgu-p-paṟaiyar,* பெ. (n.) *இறப்புச் சடங்கில் சங்கு ஊதும் இனத்தார்;* a sub-caste whose men act as conch-blowers at funerals *(E.T.)* (செ.அக.).

[சங்கு + பறையர்]

சங்குப்பிடி *šaṅgu-p-piḍi,* பெ. (n.) வலுக்கட்டாயம் (இ.வ.); extreme compulsion (செ.அக.).

[சங்கு + பிடி. சங்கு = சங்கு வடிவான மிடற்றுறுப்பு, கழுத்து. சங்குப்பிடி = கழுத்தை நெரித்தல்]

சங்குப்புரி *šaṅgu-p-puri,* பெ. (n.) *1. சங்கின்புரி;* the spire of a conch. *2. புரியாணி;* screw. *3. சங்குப் புரிபோல் உள்ள கருவி;* a tool having spirals like a conch (செ.அக.).

[சங்கு + புரி]

புல் → புரு → புரி. புரு → புருவம் = கண்ணின் புருவம். புரிதல் = வளைதல். வலம்புரி, இடம்புரி என்னும் சங்குகளை நோக்குக.

சங்குப்பூ *šaṅgu-p-pū,* பெ. (n.) *சங்கின் முட்டைக் கூடு;* egg mass.

[சங்கு + பூ]

சங்குப்பூச்சி *šaṅgu-p-pūcci,* பெ. (n.) *சங்கினுள் இருக்கும் பூச்சி* (மீனவ.); the insect living inside conch.

[சங்கு + பூச்சி]

சங்குப்பூச்சி, இராவணன் விழி, பலகறை, சொறிசங்கு, பல்பப்பூச்சி எனப் பல வகைப்படும்

சங்குப்பூதம் *šaṅgu-p-pūdam,* பெ. (n.) கோயிற் கோபுர மேற்றளங்களில் கைகளில் சங்கு ஏந்தியவாறு அமைந்த பூத உருவம் (மீனவ.); the figure which has conch at temple tower.

[சங்கு + பூதம்]

சங்குப்பூனைமதம் *šaṅgu-p-pūṉai-madam,* பெ. (n.) *1. சவ்வாது;* zibeth. *2. புனுகு;* civet, perfume from the anal gland of a cat (சா.அக.).

[சங்குப்பூனை + மதம்]

பூனையின் கழிவுறுப்பின் அருகில் சுரக்கும் நீரிலிருந்து எடுக்கும் மணப்பொருள்.

சங்குபிடி-த்தல் *šaṅgu-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) *சங்கூது-தல் பார்க்க;* see *šaṅgūdu-,* (செ.அக.).

[சங்கு + பிடி-,]

சங்குபுட்பம் *šaṅgu-puṭpam,* பெ. (n.) *சங்கப்பூ பார்க்க;* see *šaṅga-p-pu-.*

[சங்கு + புட்பம்]

சங்குமடப்பளி *šaṅgu-maḍappaḷi,* பெ. (n.) *சங்க மடைப்பள்ளி (யாழ்ப்.) பார்க்க;* see *šaṅga-maḍai-p-paḷḷi* (செ.அக.).

[சங்கம் + மடப்பளி. மடைப்பள்ளி → மடப்பளி]

சங்குமணி *šaṅgu-maṇi,* பெ. (n.) *சங்குத் துண்டங்களால் ஆக்கப்பட்ட மணி;* beads cut out from chanks (செ.அக.).

[சங்கு + மணி. மண் → மணி = உருண்டையானது, உருண்டையான பாசி

அல்லது முத்து அல்லது ஒளிக்கல் வகை. உருண்டையான விதை அல்லது அரிசி. ஒ.நோ: மணிமாலை, தொண்மணி (நவரத்தினம்), கூலமணி, சிறுமணி (அரிசி)]

சங்குமதம் *śaṅgu-madam,* பெ. (n.) புனுகு (இவ.); civet perfume *(செஅக.)*

தெ. சங்குமதமு

[சங்கு + மதம். சங்கு = சங்குப்பூனை]

சங்குமரு *śaṅgu-maru,* பெ. (n.) வேம்பு (மலை.); neem tree.

600905

[சங்கு + மரு]

சங்குமரை *śaṅgu-marai,* பெ. (n.) சங்கின் முறுக்கு; spiral of conch.

[சங்கு + மறை]

சங்குமாத்திரை *śaṅgu-māttirai,* பெ. (n.) சங்க நீற்றினால் செய்யப்படுவதும் கண்ணோய்களுக்கு உதவுவதுமான மருந்து (சங்.அக.); a medicinal pill prepared from calcined chank, for use in eye-diseases.

494.811321 9FN.3.1

[சங்கு + மாத்திரை]

சங்குமாருதம் *śaṅgu-mārudam,* பெ. (n.) வேம்பு; margosa tree *(சாஅக.).*

[சங்கு + மாருதம்]

சங்குமால் *śaṅgu-māl,* பெ. (n.) சங்கு சேமிக்கும் கிடங்கு (மீனவ.); chank godown.

[சங்கு + மால்]

சங்குமுகம் *śaṅgu-mugam,* பெ. (n.) ஆறு கடலுடன் கலக்கும் இடம் (மீனவ.); river mouth.

[சங்கமுகம் → சங்குமுகம்]

சங்குமுத்திரை śaṅgu-muttirai, பெ. (n.) *1.* வலது கட்டைவிரல்நுனி சுட்டுவிரலின் அடியைத் தொடுதலாற் சங்கு வடிவாக அமையும் முத்திரை; a pose of the right hand in the form of a chank, the thumb touching the root of the fore-finger. *2.* திருவிதாங்கூரில் உள்ள சங்குவடிவமான அரச முத்திரை; the conch-seal of the Travancore government. (Nāñ) *(செஅக.).*

[சங்கு + முத்திரை]

சங்குமுத்து *śaṅgu-muttu,* பெ. (n.) சங்கின் முத்து; conch pearl.

[சங்கு + முத்து. முட்டு → முத்து = உருண்டையான மணி வகை]

சங்குமூடகி *śaṅgu-mūḍagi,* பெ. (n.) வெண் கீரைத் தண்டு; a white species of spinach - Amaranthus blitum *(சாஅக.).*

[சங்கு + மூடகி. சங்கு = வெண்ணிறம்]

சங்குமூர்த்தினி *śaṅgu-mūrttiṉi,* பெ. (n.) வானத்துச்சி (வின்.); zenith.

[சங்கு + மூர்த்தினி. சங்கு → சங்கை = மேன்மை. சங்கு = வெள்ளை, தூய்மை, மேன்மை, உச்சி]

சங்குமூலம் *śaṅgu-mūlam,* பெ. (n.) சங்கஞ் செடியின் வேர்; root of the four spined monetia *(சாஅக.).*

[சங்கு + மூலம்]

சங்குமோதிரம் *śaṅgu-mōdiram,* பெ. (n.) *1.* சங்கினாற் செய்த மோதிரவகை; a ring made of conch-shell. *2.* சங்கு முத்திரையுள்ள மோதிரம்; ring which has chank mark.

[சங்கு + மோதிரம். முகம் + திரை = முகத்திரை → முத்திரை. முகத்திரம் → மோதிரம் = முத்திரையுள்ள விரலணி. சங்கு முத்திரையுள்ள விரலணியும் சங்கு மோதிரம் என்றுமாம்]

சங்குருளை *śaṅguruḷai,* பெ. (n.) ஆமை (யாழ்அக.); tortoise.

மறுவ. சங்குகுலை

[சங்கு + உருளை]

சங்குலம் *śaṅgulam,* பெ. (n.) *1.* கூட்டம் *(சங்.அக.);* gathering, crowd. *2.* போர் *(யாழ்அக.);* war, battle.

[சங்கம் → சங்குலம்]

சங்குலிகம் *śaṅguligam,* பெ. (n.) இலுப்பை மரம்; honey-tree - Bassia longifolia.

சங்குலிகயுத்தம் *śaṅguliga-yuttam,* பெ. (n.) கைகலப்பு (வேதாரணி. பக். 124, குறிப்.); hand-to-hand fight.

சங்குலை *šaṅgulai*, பெ. (n.) உளி; chisel.

[சங்கு = சங்குவளை அல்லது முட்கள். சங்கு → சங்குலை]

சங்குவங்கணம் *šaṅgu-vaṅganam*, பெ. (n.) நற்சீரகம்; cummin seed - Cuminum cyminum (சா.அக.).

[சங்கு + வங்கணம்]

சங்குவடம் *šaṅgu-vaḍam*, பெ. (n.) தோணி வகை (இ.வ.); ferry-boat (செ.அக.).

ம. சங்ஙடம்

[சக்கு → சங்கு + வடம்]

CPL600908

சங்குவளலை *šaṅgu-vaḷalai*, பெ. (n.) சங்கினுள் இருக்கும் சதைப்பகுதி; fleshy part of a conch. "ஆமை தின்னி தூமை தின்னி அடைகோழி முட்டை தின்னி சங்குவளலை தின்னி - இப்போ சருவாதடா என்னோட" (நாட்டுப்பாடல்).

[சங்கு + வளலை. வழலை → வளலை]

சங்குவளை *šaṅgu-vaḷai*, பெ. (n.) சங்கினாற் செய்த வளையல்; shell bracelets. 'சங்கு வளை இறுகின இறையையுடைய' (நெடுநல். 36, உரை).

[சங்கு + வளை]

சங்குவளையல் *šaṅgu-vaḷaiyal*, பெ. (n.) சங்குவளை பார்க்க; see *šaṅgu-vaḷai*.

[சங்கு + வளையல்]

சங்குவாதம் *šaṅgu-vādam*, பெ. (n.) சங்கூதை பார்க்க; see *šaṅgūdai* (சா.அக.).

[சங்கு + வாதம்]

சங்குவிரியன் *šaṅgu-viriyan*, பெ. (n.) பாம்பு வகை (இ.வ.); a variety of snake (செ.அக.).

[சங்கு + விரியன்]

சங்குவெள்ளை *šaṅgu-veḷḷai*, பெ. (n.) 1. சங்குச் சுண்ணத்தின் காரை; mortar made of shell-lime. 2. தூயவெள்ளை; pure whiteness (செ.அக.).

[சங்கு + வெள்ளை]

சங்கூதி *šaṅgūdi*, பெ. (n.) 1. சங்கூதுவோன் (யாழ்ப்.); conch-blower. 2. வழக்குத் தீர்ப்பதற்கு ஊரவையைக் கூட்டுபவன்; convener of village committee for settling disputes. (*G.Sm.D.I.i.181*).

[சங்கு + ஊதி]

சங்கூதித்திருக்கை *šaṅgūdi-t-tirukkai*, பெ. (n.) சங்கு முழங்கினாற்போல் ஒலியெழுப்புந் திருக்கைமீன்; tirukkai fish which gives sound as blowing conch.

[சங்கூதி + திருக்கை]



சங்கூது[1]-தல் *šaṅgūdu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. கோயில் முதலியவற்றில் சங்கை ஊதுதல்; to blow a conch, as at a marriage house, a temple, etc. 2. வேலைக்களத்துக்கு ஆட்களை அழைக்க பொறியால் ஒலியெழுப்புதல்; to sound a mill-whistle. 3. சாவை அறிவிக்கச் சங்கொலி எழுப்புதல்; to blow conch as in death (செ.அக.).

[சங்கு + ஊது-,]

சங்கூது[2]-தல் *šaṅgūdu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. ஒரு செயலை இடையிலேயே முடித்து விடுதல்; to end abruptly, as a work. அவன் தன் படிப்புக்கு ஆறாம் வகுப்போடு சங்கூதிவிட்டான். 2. ஒருவரது வாணாள் முடிவுக்கு வருதல்; to come an end, as of one's life. தன் மகள் திருமணத்திற்கு முன்பே சங்கூதிவிட்டாள் (உ.வ.).

[சங்கு + ஊது-,]

சங்கூதுவோன் *šaṅgūduvōṉ*, பெ. (n.) சங்கூதி பார்க்க; see *šaṅgūdi* (செ.அக.).

[சங்கூது + ஓன்]

உழவர்க்கு வேண்டிய பொருள்களைச் செய்துதவப் பக்கத்துணையாகத் தோன்றிய

பதினெண்குடிமக்களுள் சங்கூதுவோன் (கோயிற்குடியான்) என்பதும் ஒன்று.

வண்ணான்	எண்ணெய் வணிகன்
நாவிதன்	உப்பு வாணிகன்
குயவன்	இலை வாணிகன்
தட்டான்	பள்ளி
கன்னான்	பூமாலைக்காரன்
கற்றச்சன்	பறையன்
கொல்லன்	ஓச்சன்
தச்சன்	வலையன்
பாணன்	கோயிற்குடியான் (சங்கூதுவோன்) (தமி. வ. 53)

சங்கூதை *śaṅgūdai,* பெ. (n.) வெட்டை தொடர்பான ஒருவகை முடக்கு (வாத) நோய்; a kind of rheumatism associated with gonorrhoea - Gonnorrheal rheumatism *(சா.அக.).*

[சங்கு + ஊதை]

சங்கூமச்சி *śaṅgūmacci-,* பெ. (n.) சிப்பி வகை *(வின்.);* boat-shell, a gastroped, cymbium.

[சங்கு + ஊமச்சி.]

சங்கெரி *śaṅgeri-,* பெ. (n.) புளியாரை; Indian sorrel - oxalis carniculata *(சா.அக.).*

[சங்கு → சங்கெரி]

சங்கேசுவரம் *śaṅgēsuvaram,* பெ. (n.) சிவக் கோயில்கள் (சிவத்தலங்கள்) ஆயிரத்தெட்டனுள் ஒன்று; one of the shrine of 1008 Śivan shrines.

[சங்கு + ஈசுவரம்]

சங்கேசுரம் *śaṅgēsuram,* பெ. (n.) மருளூமத்தை; head-ache plant - Xanthum strumarium *(சா.அக.).*

சங்கை[1] *śaṅgai,* பெ. (n.) *1.* வறட்சுண்டி *(யாழ்.அக.);* floating sensitive plant. *2.* சுக்கு *(வின்.);* dried ginger.

[சுல் = சுடுதற் கருத்துவேர். சுல் → சுள் → சள் → சண்டு = காய்ந்த புற்றாள், கூளம். சண்டு → சங்கு → சங்கை = சுண்டி, காய்ந்த இஞ்சி]

சங்கை → Skt. samaṅga

சங்கை[2] *śaṅgai,* பெ. (n.) மேன்மை *(யாழ்ப்.);* honour, esteem, reverence *(செ.அக.).*

[சங்கு = வெள்ளை, தூயது. சங்கு → சங்கை = தூயது, மேன்மையானது]

சங்கை[3] *śaṅgai,* பெ. (n.) *1.* எண்; number. 'சங்கை தணிக்குங் கொட்டாரம்' *(சிவதரு. சிவஞானதான. 70).* *2.* அளவு; measure, estimate.

[சங்கு = ஒரு பேரெண். சங்கு → சங்கை = எண், அளவு]

த. சங்கை → Skt. saṅkhyā

சங்கை[4] *śaṅgai,* பெ. (n.) கணைக்கால்; shank, part of the leg between the ankle and the knee. 'திரண்டு நீண்ட சங்கையும்' *(திருவிளை. உக். 35).*

[சங்கு → சங்கை = சங்கு வடிவான திரண்ட கெண்டைக்கால்]

சங்கைக்கேடு *śaṅgai-k-kēḍu,* பெ. (n.) புகழ்க்கேடு *(வின்.);* disgrace, dishonour.

ம. சங்கக்கேடு

[சங்கை = மேன்மை, புகழ். சங்கை + கேடு]

சங்கைத்தாழ்ச்சி śaṅgai-t-tālcci, பெ. (n.) புகழின்மை *(யாழ்ப்.);* disrepute *(செ.அக.).*

[சங்கை = மேன்மை. சங்கை + தாழ்ச்சி]

சங்கைமான் *śaṅgai-māṉ,* பெ. (n.) மதிப்புள்ளவன் *(வின்.);* a respectable person.

[சங்கை = மேன்மை, மதிப்பு. சங்கை + மான். மகன் → மான்]

சங்கைமூலி *śaṅgaimūli,* பெ. (n.) பெருமருந்து; Indian birth-wort - Aristolochia Indica *(சா.அக.).*

[சங்கை + மூலி]

சங்கையீனம் *śaṅgai-y-īṉam,* பெ. (n.) இழிவாகப் பேசுதல் *(வின்.);* indecency as in talk or conversation. 'அவன் சங்கையீனமாகப் பேசுகிறான்' *(செ.அக.).*

[சங்கை = மேன்மை, புகழ். சங்கை + ஈனம்]

Skt. hīna → த. ஈனம்

சங்கைவான் *śaṅgaivāṉ,* பெ. (n.) சங்கைமான் பார்க்க; see *śaṅgai-māṉ* *(செ.அக.).*

[சங்கைமான் → சங்கைவான்]

சங்கொலி *śaṅgoli,* பெ. (n.) சங்கிலிருந்து எழும் ஒலி; blowing sound of a conch.

ம. சங்கொலி, சங்குவிளி

[சங்கு + ஒலி]

சங்கொலிக்குப்பம் *šaṅgoli-k-kuppam,* பெ. (n.) கடலூர் மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Cuddalore district.

மறுவ. சங்கிலிகுப்பம்

[சங்கொலி + குப்பம்]

சங்கொலி = சங்குகளில் சிறந்த வலம்புரிச் சங்குகளின் ஒலி, சங்கொலிகுப்பம் = வலம்புரிச் சங்குகளின் ஒலி கேட்கப்படும் ஊர்.

சங்கோசா *šaṅgōsā,* பெ. (n.) விலை மதிப்புள்ள திருக்கைமீன் வகையுளொன்று (நெல்லை.); a kind of valuable tirukkai fish.

சச்சடம் *šaccadam,* பெ. (n.) தாமரை (மலை.); lotus (செ.அக.).

சச்சடி *šaccaḍi,* பெ. (n.) மக்கள் திரண்டு கூடுகை (யாழ்ப்.); crowding, thronging of people (செ.அக.).

[சந்தடி → சச்சடி]

சச்சதுரம் *šaccaduram,* பெ. (n.) சமசதுரம்; perfect square 'வீட்டுக்குச் சச்சதுரமாகக் கூரை போடு' (உ.வ.).

[சமம் + சதுரம்; சமசதுரம் → சச்சதுரம்.]

சச்சரவு *šaccaravu,* பெ. (n.) கலகம்; quarrel, disturbance (செ.அக.).

[சல் → சச் → சச்சு + அரவு]

சச்சரி *šaccari,* பெ. (n.) இசைக்கருவி (வாத்திய) வகை; a kind of drum. "கொக்கரையின் சச்சரியின் பாணியானை" (தேவா. 722, 1).

[சச் + அரி. அரி = மருதநிலப் பறை.]

த. சச்சரி → Skt. jharjhara.

சச்சரை[1] *šaccarai,* பெ. (n.) சச்சரவு பார்க்க; see *šaccaravu.*

[சச்சரவு → சச்சரை]

சச்சரை[2] *šaccarai,* பெ. (n.) பிளந்த துண்டு (நன்.273, மயிலை.); broken piece.

[அரி = துண்டம். சச் + அரி → சச்சரி = சமமான துண்டம். சச்சரி → சச்சரை = பிளந்த துண்டு.]

சச்சரை[3] *šaccarai,* பெ. (n.) சச்சரி பார்க்க (நன். 273, மயிலை.); see *šaccari.*

[சச்சரி → சச்சரை]

சச்சரை[4] *šaccarai,* பெ. (n.) சச்சரவு பார்க்க; see *šaccaravu.*

[சச்சரவு → சச்சரை]

சச்சரைப்படு-தல் *šaccarai-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) சண்டை பிடித்தல்; to engage fight.

[சச்சரை + படு-,]

சச்சவுக்கம் *šaccavukkam,* பெ. (n.) சமச் சதுரம்; exact sqare (செ.அக.).

தெ. சச்சக்கமு.

[சமச்சதுக்கம் → சச்சவுக்கம்]

சச்சனம்[1] *šaccaṉam,* பெ. (n.) நாவல்; common jaumoon - Eugenia jambolina (சா.அக.).

சச்சனம்[2] *šaccaṉam,* பெ. (n.) காவல் (யாழ். அக.); protection, watch (செ.அக.).

சச்சாயிரு[1]-த்தல் *šaccā-y-iru-,* 3 செ.கு.வி. (v.i). புகையிலை முதலியன தாழ்ந்ததாயிருத்தல். (யாழ்ப்.); to be of inferior quality, as tobacco (செ.அக.).

[சச்சு + ஆய் + இரு-,]

சச்சாயிரு[2]-த்தல் *šaccā-y-iru-,* 3 செ.கு.வி. (v.i). 1. நெருக்கமாயிருத்தல் (கொ.வ.); to be crowded. 2. குழப்பமாயிருத்தல்; to be in confusion (செ.அக.).

[சள் → சச்சு + ஆயிரு-,]

சச்சிதம் *šaccidam,* பெ. (n.) அழகுபடுத்தி வைக்கை (யாழ்.அக.); state of being fully decorated or dressed (செ.அக.).

[சச்சு + இதம்]

சச்சிதானந்தம் *šaccidāṉandam,* பெ. (n) கல்லுப்பு; insoluble rock-salt found underneath the sea (சா.அக.).

சச்சிதானந்தவெளி *šaccidāṉanda-veḷi,* பெ. (n.) சச்சிதானந்தம்[1] பார்க்க; see *šaccidanandam*[1] (செ.அக.).

[சச்சிதானந்தம் + வெளி]

சச்சு[1] *šaccu,* பெ. (n.) 1. தாழ்ந்த தரமான புகையிலை முதலியன (யாழ்ப்.); inferior quality of articles as tobacco leaves. 2. பதர் (இ.வ.); chaff (செ.அக.).

தெ. சச்சு

[சள் → சள் → சச்சு]

சச்சு[2] *šaccu,* பெ. (n.) *1.* *சந்தடி;* crowd, throng, bustle, confusion. *2.* தொல்லை (தொந்தரவு) (இ.வ.); irksomeness (செ.அக.).

[சுல் → சள் → சச் → சச்சு]

சச்சு[3] *šaccu,* பெ. (n.) பறவை மூக்கு (வின்.); birds beak.

[சுல் → சுண்டு → சொண்டு. சுல் → சல் → சல்சு → சச்சு]

சச்சு[4] *šaccu,* பெ. (n.) சிறிதளவு (கொஞ்சம்); littleness, smallness. 'சச்சில் அடங்காது' (செ.அக.).

[சற்று → சச்சு]

சச்சு[5] *šaccu,* பெ. (n.) நீர்ச்சுண்டி (மலை.); a kind of water mimosa.

[சுல் → சல் → சல்சு → சச்சு]

சச்சு[6]**-தல்** *šaccu,* 5 செ.குன்றாவி. (v.t.). அடித்தல், தட்டுதல்; to strike, to beat, to crush (கருநா.).

க. சச்சு, செச்சு, சுச்சு, சர்சு, செச்சு, தெ. சடின்சு, து, சுச்சு; பட. சச்சு.

[சல் → சல்சு → சச்சு]

சச்சுண்டி *šaccuṇḍi,* பெ. (n.) நீர்ச்சுண்டி; sensitive plant floating on water - neptunia oleracia (சா.அக.).

[சச்சு → சச்சுண்டி]

சச்சை[1] *šaccai,* பெ. (n.) சட்டை; jacket, coat (செ.அக.).

[சட்டை → சச்சை]

சச்சை[2] *šaccai,* பெ. (n.) செறிகுழம்பு; a liquid of thick consistency, as sandal paste (செ.அக.).

[அள் → சள் → சள்சை → சச்சை]

சச்சை[3] *šaccai,* பெ. (n.) சண்டை; quarrel. 'சச்சை வருமுன்னே நடவென்றான்' (தெய்வச். விறலிவிடு, 471).

[சண்டை → சச்சை]

சசகம் *šašagam,* பெ. (n.) சசம் பார்க்க (சங். அக.); see *šašam.*

[சசம் → சசகம்]

த. சசகம் → Skt. śaśaka

சசகாரம் *šasagāram,* பெ. (n.) காட்டுமா; jungle mango - Spondias mangifera (சா.அக.).

சசச்செய்தி *šaša-c-ceydi,* பெ. (n.) இல்பொருள் சான்றுக்குச் சுட்டப்படும் முயற்கொம்பு; hares horn, a term of illustrating and impossibility.

[சசம் + செய்தி]

சசசசவெனல் *šaša-šaša-v-enal,* பெ. (n.) காற்று ஒலிக்குறிப்பு; onom. expr. signifying the blowing of the wind. 'வாயுவுக்குச் சசசச வான ஒலியும்' (சி.சி. 2.65, மறைஞா.).

[சசசச + எனல்]

சசபரம் *šaša-param,* பெ. (n.) நாணல்; kaus, a large and coarse grass (செ.அக.).

[சரம் = நாணல். சரம் → சரபரம் → சயபரம் → சசபரம்]

சசம் *šašam,* பெ. (n.) முயல் (திவா.); hare, rabbit.

[செவியன் → செயன் → சயன் → சசன் → சசம்]

த. சசம் → Skt. śaśa

சசம் என்பதற்கு மா.வி. அகரமுதலியில் மூலம் காட்டப்படவில்லை. இந்தைரோப்பிய மொழிகளிலும் இதற்கு இனச்சொல் இல்லை.

சசம்பரி *šašambari,* பெ. (n.) ஆமணக்கு (மலை.); castor plant.

சசம்பிரியம் *šašam-biriyam,* பெ. (n.) *1.* வெள்ளாம்பல்; white Indian water-lily. *2.* முத்து; pearl (சா.அக.).

சசவாதம் *šaša-vādam,* பெ. (n.) முயல் ஊதை (மூ.அ.); epilepsy.

[சச(ம்) + வாதம்]

Skt. vāta → த. வாதம்

சசன் *šašan,* பெ. (n.) முயல் போன்ற இயல்பினன் (முயற் சாதியாடவன்) (கல்லா. 7, மயிலேறும். உரை); man of hare like nature one of three āḍavar-šādi.

[செவியன் = முயல். செவியன் → செயன் → செசன் → சசன்.]

சசாங்கன் *šašāṅgan,* பெ. (n.) திங்கள் (முயற்கறையுடையவன்); moon, as hare-marked (செ.அக.).

[சச(ம்) + அங்கன்]

Skt. aṅga → த. அங்கம்; அங்கம் → அங்கன்

சசாணிகம் *šašāṇigam,* பெ. (n.) நன்னாரி; Indian sarsaparilla - Hemidesmus indicus alias Periploca indica (சா.அக.).

சசாதனம் *šašādaṉam,* பெ. (n.) *1.* கழுகு; vulture. *2.* பருந்து; heron, kite (சா.அக.).

சசாபம் *šašābam,* பெ. (n.) சிறுநன்னாரி (மலை.); a kind of Indian sarasaparilla.

சசி[1] *šaši,* பெ. (n.) திங்கள் (பிங்.); moon.

[சசம் → சசி = முயல் வடிவத்தைத் தம்முள் கொண்டது]

சசி[2] *šaši,* பெ. (n.) மழை (அக.நி.); rain.

[கசி → சசி]

சசிகலை *šaši-kalai,* பெ. (n.) தேய்ந்து வளரும் இயல்புடைய திங்கள்; moon.

[சசி + கலை]

த. கலை → Skt. kalā

சசிகன்னம் *šaši-kaṉṉam,* பெ. (n.) நிலவுலகத்திற்கும் திங்களுக்குமுள்ள தொலைவு (வின்.); true distance of the moon from the earth (Astron.).

[சசி + கன்னம்]

சசிகாந்தம் šaši-kandam, பெ. (n.) திங்கள் காந்தமணி (சந்திரகாந்தமணி); moonstone, a crystal said to emit water when exposed to moonlight, as moon-beloved

[சசி + காந்தம். காந்து → காந்தம்]

சசிகேந்திரம் *šaši-kēndram,* பெ. (n.) *1.* திங்கள் வீட்டுக்கு ஒன்று நான்கு ஏழு பத்தாம் இடங்களில் இருக்கை; situation of the moon in the ascendant or in the fourth, seventh or tenth house from it. (Astrol.). *2.* திங்களின் வேறுபாடு; moon's anomaly (Astron.). (செ.அக.).

[சசி + கேந்திரம்]

Skt. kēndra → த. கேந்திரம்

சசிசேகரன் *šaši-šēgaraṉ,* பெ. (n.) சசியுடையான் பார்க்க; see *šaši-y-uḍaiyāṉ.*

[சசி + சேகரன்]

சசிதாகிகம் *šasidāgigam,* பெ. (n.) வெண் சந்தனம்; white sandal-wood - Santanum album (சா.அக.).

சசிதுருவம் *šaši-duruvam,* பெ. (n.) கோள் சாய்வு (கிராந்தி) பாதத்துக்கும் திங்கள் நிலைக்கும் ஒரு குறித்த காலத்திலிருந்து கிழக்கு மேற்கிலுள்ள சராசரி வேறுபாடு; mean longitude of the moon at epoch.

[சசி + துருவம்]

சசிதேகம் *šaši-dēgam,* பெ. (n.) திங்கள் வட்டம் (வின்.); moon's disk.

[சசி + தேகம்]

Skt. dēha → த. தேகம்.

சசிப்பிரியம் *šaši-p-piriyam,* பெ. (n.) *1.* முத்து (மூ.அ.); pearl. *2.* வெள்ளாம்பல் பார்க்க; white Indian water-lily (செ.அக.).

[சசி + பிரியம். புரியம் → பிரியம்]

சசிபுடபுத்தி *šaši-puḍa-putti,* பெ. (n.) குறித்த காலத்தில் திங்களுக்கு உரிய கதி (வின்.); true motion of the moon in a given time (Astron).

[சசி + புடபுத்தி]

சசியம்[1] *šašiyam,* பெ. (n.) *1.* பயிர் (சி.சி. 2, 58, சிவாக்.); crop. *2.* தவசம், காய்கனி முதலிய விளைபொருள் (வின்.); grain, fruit, vegetable produce.

[செய் = நிலம், புன்செய் நிலம், வயல். செய் → சய் → சசி → சசியம் = வயலில் விளையும் பயிர், விளைபொருட்கள்]

த. சசியம் → Skt. sasya

சசியம்[2] *šašiyam,* பெ. (n.) மரா (மலை.); Ceylon ebony.

[சசியம் → சசியம்]

சசியம்[3] *šašiyam,* பெ. (n.) இந்துப்பு (மூ.அ.); rock-salt.

[சசி → சசியம்]

சசியம்[4] *šašiyam,* பெ. (n.) *1.* கஞ்சா (மலை.); Indian hemp. *2.* நிலப்பனை; a plant common in sandy tracts (செ.அக.).

[சசி → சசியம்]

சசியா *šašiyā,* பெ. (n.) ஆச்சா அல்லது மரா மரம்; Ceylon ebony - Diospyros ebenum (செ.அக.).

[சசியம் → சசியா]

சசியாதிதம் *śaśi-y-ādidam,* பெ. (n.) மாசிபத்திரி; santonic wood - Artemesia Indica (சா.அக.).

சசியாதிபதி *śaśiyādipati,* பெ. (n.) ஒவ்வொரு ஆண்டிற்குமுரிய பயிர்த்தலைவர் (பஞ்சாங்.); the planet which is lord of the crops for the year (செ.அக.).

[சசியம் + அதிபதி]

சசியாதிபன் *śaśiyātipan,* பெ. (n.) சசியாதிபதி பார்க்க; see *śaśiyādipadi* (செ.அக.).

[சசியாதிபதி → சசியாதிபன்]

சசியாமி *śasiyāmi,* பெ. (n.) முயற் செவிக் கள்ளி; a kind of spurge, the leaves of which resemble the ear of a hare, probably referring to leaf spurge - Euphorbia neirifolia (சா.அக.).

[சசி → சசியாமி]

சசியுடையான் *śaśi-y-udaiyān,* பெ. (n.) திங்களைத் தலையில் அணிந்தவன், சிவன்; Śivan, as wearing the moon on His head.

[சசி + உடையவன்]

சசிவிக்கேபம் *śaśi-vikkēbam,* பெ. (n.) திங்களின் மறைப்பு காலத்தில் மேழுமாதியாக வேனும் தலையாதியாக வேனும் நிற்கும் நிலை (சூடா. உள். 441); moon's latitute during eclipse position of the moon to the north or south of the ecliptic during eclipse.

சசுபம் *śaśubam,* பெ. (n.) 1. அசோகு (மலை) பார்க்க; see Asoka tree. 2. நெட்டிலிங்கம்; mast tree (செ.அக.).

சஞ்சகாரம் *sañjagāram,* பெ. (n.) அச்சாரம்; earnest money (செ.அக.).

தெ. சஞ்சகாரமு

[அச்சு → அச்சாரம் = அடையாளமாகக் கொடுக்கும் முன்பணம். அச்சாரம் → சச்சாரம் → சஞ்சகாரம்]

சஞ்சகாரம் → Skt. satyaṅ-kāra

சஞ்சடி *sañjadi,* பெ. (n.). சந்தடி பார்க்க (யாழ். அக.); see *sandadi.*

[சந்தடி → சஞ்சடி]

சஞ்சயம் *sañjayam,* பெ. (n.) கூட்டம் (யாழ். அக.); assembly, multitude, collection.

[சங்கை [3] → சங்கியை = எண், எண்ணிக்கை; சங்கியை → சஞ்சியை → சஞ்சயம்]

த. சஞ்சயம் → Skt. saṃ-śaya

சஞ்சரி *sañjari,* பெ. (n.) தேனீ; honey-bee (சா.அக.)

மறுவ. அளி

[சல் → சல்சு → சஞ்சு = பறவை மூக்கு. சஞ்சு → சஞ்சரி = கூரிய கொடுக்கினை யுடையது]

சஞ்சரிகை *sañjarigai,* பெ. (n.) இலந்தைப் பழம்; common jujube - Zizyphus jujuba (சா.அக.).

சஞ்சலிக்கீரை *sañjali-k-kīrai,* பெ. (n.) ஒரு வகைக் கீரை; a kind of greens (சா.அக.).

[சஞ்சலி + கீரை]

சஞ்சலை *sañjalai,* பெ. (n.) திப்பிலி (சங். அக.); long pepper.

[சஞ்சலி → சஞ்சலை]

சஞ்சாங்கம் *sañjāṅgam,* பெ. (n.) பெரு முத்தக் காசு; koray root - Cyprus rotundus (சா.அக.).

சஞ்சாயம் *sañjāyam,* பெ. (n.) 1. குடிவாரம் (R.T.); portion of the produce of a field assigned to the cultivator. 2. நாட்கூலி; daily wages. 3. குத்தகைக்கு நிலத்தைவிடாமல் உரிமையாளர் தாமே பயிர் செய்தல் (வின்.); direct management of lands, fisheries, etc. by the proprietor. 4. இலவயம் (வின்.); gratuity. 5. மிகுஊதியம் (நாஞ்.); extra gain.

க. சந்தாய, சந்தாயித

[சல் + ஆயம் = சல்லாயம் → சஞ்ஞாயம்= கட்ட வேண்டியதைச் செலுத்துதல். சல் = செலுத்துதல். ஆயம் = வரி]

சஞ்சாரி *sañjāri,* பெ. (n.) பூனைக் காஞ்சொறி; cowhage plant - Tragia involucrata (சா.அக.).

[சஞ்சரி → சஞ்சாரி]

சஞ்சாவரம் *sañjāvaram,* பெ. (n.) தகரை; cassia foetid or ringworm plant - Cassia tora (சா.அக.).

சஞ்சிதிகை *šañjidigai,* பெ. (n.) இலந்தைக் கனி; jujube fruit *(சா.அக.).*

சஞ்சினி *šañjiṉi,* பெ. (n.) புளிக்கரணை; a species of soursorrel plant - Oxalis genus.

சஞ்சீவசரணியம் *šañjīva-šaraṇiyam,* பெ. (n.) பாலை; ironwood - Mimusops hexandra*(சா.அக.).*

சஞ்சீவகாசிகம் *šañjīva-kāšigam,* பெ. (n.) முசுறுப்புல்; maritime grass - Pommeruella cornucopia *(சா.அக.).*

சஞ்சீவகி *šañjīvagi,* பெ. (n.) புளியமரம்; tamarind tree - Tamarindus indicus *(சா. அக.).*

சஞ்சீவன் *šañjīvaṉ,* பெ. (n.) மாமரம் *(மலை.);* mango tree.

சஞ்சீவிக்கருணை *šañjīvi-k-karuṇai,* பெ. (n.) காட்டுக்கரணை பார்க்க; see *kāṭṭu-k-karaṇai* *(சா.அக.).*

[சஞ்சீவி+ கருணை]

சஞ்சீவிமேதி *šañjīvi-mēdi,* பெ. (n.) முடக்கற்றான்; palsy curer - Cadiospermum halicacabum *(சா.அக.).*

[சஞ்சீவி + மேதி]

சஞ்சீவினிக்குடிகம் *šañjīviṉi-k-kuḍigam,* பெ. (n.) திரிகடுகம், திரிபலை, சேங்கொட்டை ஆகியவற்றைச் சேர்த்துச் செய்து பாம்புக் கடிக்கும் காய்ச்சலுக்கும் கொடுக்கும் மாத்திரை; a pill prepared from Trikadugu viz. dried ginger, long pepper and black pepper, tripala (consisting of gall-nut, tandri-fruite and gooseberry), dhoby-nut etc. as chief ingredients and prescribed for snake-bites, typhoid fever, etc. *(சா.அக.).*

[சஞ்சீவினி + குடிகம். குளிகம் → குடிகம்]

சஞ்சு[1] *šañju,* பெ. (n.) *1.* பறவை மூக்கு; bird's beak. 'கனியிற் நீண்டுபு சஞ்சடர்த்திட' *(இரகு. குறைகூ. 31). 2.* ஆமணக்கு *(மலை.);* castor plant.

ம. சுண்டு (பறவை மூக்கு), சுண்டன் (கூரிய தோண்டு கருவி); க. சுண்டு; பர். சொண்ட். குவி. சுட (பறவைமூக்கு)

[சுல் = குத்தற்கருத்துவேர். சுல் = சுண்டு, சொண்டு = பறவை மூக்கு. சுல் → சல் → சல்சு → சச்சு = பறவை மூக்கு. சச்சு → சஞ்சு = பறவை மூக்கு, கூரிய முள்ளுள்ள ஆமணக்கு]

த. சஞ்சு → Skt. šañcu

சஞ்சு[2] *šañju,* பெ. (n.) குலப்பழக்கம் *(வின்.);* manners, customs, habits, as peculiar to individuals or castes.

க. சஞ்சு

[சல் = செல்லுதல். சல் → சல்சு → சஞ்சு = செல்லுதல், திரும்பத்திரும்பச் செல்லுதல். ஒரே வழியில் (பழக்கத்தில்) செல்லுதல், திரும்பத்திரும்ப ஒரு பழக்கத்தைக் கடைப்பிடித்தல், குலப்பழக்கம்]

சஞ்சு[3] *šañju,* பெ. (n.) சாயல் *(யாழ்ப்.);* likeness, form, shape.

[சய்யல் → சச்சல் → சச்சு → சஞ்சு]

சஞ்சுகை *šañjugai,* பெ. (n.) சஞ்சு[3] பார்க்க; see šañju *(செ.அக.).*

[சஞ்சு → சஞ்சுகை]

சஞ்சுபம் *šañjubam,* பெ. (n.) *1.* அரசர்க்குரிய விருதுகள்; paraphernalia of a king. 'சஞ்சுபவர்க்கந் தளதளென' *(பணவிடு. 75). 2.* உடைமை *(வின்.);* appurtenances.

சஞ்சுரி *šañjuri*, பெ. (n.) காஞ்சொறி; climbing nettle - Tragia involucrata *(சா.அக.).*

[காஞ்சொறி → சஞ்சுரி]

சஞ்சுவம் *šañjuvam,* பெ. (n.) சஞ்சுபம் *(வின்.)* பார்க்க; see šañjubam.

[சஞ்சு → சஞ்சுவம்]

சஞ்சேபம் *šañjēbam,* பெ. (n.) சுருக்கம்; epitome, abstract *(செ.அக.).*

[சஞ்சு → சஞ்சேபம்]

த. சஞ்சேபம் → Skt. saṅ-kṣēpa

சஞ்சேயம் *šañjēyam,* பெ. (n.) ஈட்டியது; earned things.

சஞ்சை *šañjai,* பெ. (n.) *1.* பெருமழை *(யாழ்.அக.);* heavy rain. *2.* பேரொலி; loud noise.

ஒ.நோ. க. சடி, சடிமழெ (தொடர்மழை); படை. சாடுமே (பெருமழை)

[சடசட = பேரொலியைக் குறிக்கும் ஒலிக் குறிப்புச் சொல், சடசட = மழை விழுதலைக் குறிக்கும் ஒலிக்குறிப்புச் சொல். சட → சடி → சடிசை → சஞ்சை]

த. சஞ்சை → Skt. jhañjhā

சஞ்சோளி *šañjōḷi,* பெ. (n.) *பண்வகை;* a specific melody-type *(செ.அக.).*

சட்சட்டெனல் *šaṭ-šaṭ-eṉal,* பெ. (n.); *விரைவுக் குறிப்பு;* onom. expr. signifying haste or hurry *(செ.அக.).*

பட. சடக்கன, சட்டன

[சட்சட் + எனல்]

சட்சமம் *šaṭcamam,* பெ. (n.) *வரகு;* millet *(சா.அக.).*

சட்சு *šaṭcu,* பெ. (n.) *கண் (சி.சி. 2, 61, மறைஞா.);* eye *(சா.அக.).*

[சக்கு → சட்சு]

சக்கு[1] பார்க்க.

த. சக்கு → Skt. šakṣuh.

சட்சுகி *šaṭcugi,* பெ. (n.) *இடு கொள்;* four-leaved cassia- Cassia absus *(சா.அக.).*

சட்சுசியம் *šaṭcušiyam,* பெ. (n.) *1. ஆட்டுச் செவி;* worm-killer plant - Aristolochia bracteata. *2. ஒதிய மரம்;* Indian ash tree Odina wodier. *3. தாழை;* screwpine. *4. நீர்ப்பூலா;* water-poola - Phyllanthus multiflorus *(சா.அக.).*

சட்சுப்பார்வை *šaṭcu-p-pārvai,* பெ. (n.) *கண்ணோட்டம்;* gracious look, as a mode of imitation.

[சட்சு + பார்வை]

சட்சைவேர் *šaṭcai-vēr,* பெ. (n.) *வெள்ளைக் கரும்பு;* white sugar-cane *(சா.அக.).*

[சட்சை + வேர்]

சட்ட *šaṭṭa,* கு.வி.எ. (adv.) *1. செவ்விதாக;* properly, rightly; *'சட்ட வினியுளது சத்தேகாண்' (சி.போ. 9,2). 2. முழுதும்;* entirely. *'நான் சட்டவும்மை மறக்கினும்' (தேவா. 586. 1). 3. விரைவாக;* speedily; *'சட்ட நேர்பட வந்திலாத சழக்கனேன்' (திருவாச. 30, 2).*

[சட்டு → சட்ட (மு. தா. 62)]

சட்டக்கட்டில் *šaṭṭa-k-kaṭṭil,* பெ. (n.) *பிரித்துப் பூட்டும்படி அமைந்த கட்டில் (இ.வ.);* cot with a detachable frame *(செ.அக.).*

ம. சட்டக்கட்டில்

[சட்டம் + கட்டில்]

சட்டக்கதவு *šaṭṭa-k-kadavu,* பெ. (n.) *கனத்த சட்டங்களைக் கோத்து உள்ளே மெல்லிய துண்டுப் பலகைகளால் அமைக்கப்பட்ட கதவு (இ.வ.);* penelled door *(செ.அக.).*

ம. சட்டக்கதவு

[சட்டம் + கதவு]

சட்டக்கல்லி *šaṭṭa-k-kalli,* பெ. (n.); *வல்லாளப் (சமத்காரப்) பேச்சு (வின்.);* clever but vain talk..

தெ. சழ்டகல்லி

[சட்டம் + கல்லி]

சட்டக்கல்லூரி *šaṭṭa-k-kallūri,* பெ. (n.) *சட்டக் கல்வி கற்பிக்கும் கல்லூரி;* law college.

[சட்டம் + கல்லூரி]

சட்டக்கல்வி *šaṭṭa-k-kalvi,* பெ. (n.) *சட்டப் படிப்பு;* legal education.

[சட்டம் + கல்வி]

சட்டக்கால்[1] *šaṭṭa-k-kāl,* பெ. (n.) *1. மரச்சட்டம் போல சுவரையொட்டி அமைந்த தூண்;* wooden pillar. *2. கோயில் விமான வாயிலில் சற்றுக் கூடுதலாக நீட்டித்து அமைக்கப்பட்ட கால்;* outer projection of a temple tower near its gateway.

[சட்டம் + கால்]

சட்டக்கால்[2] *šaṭṭa-k-kāl,* பெ. (n.) *கடைத் தட்டியைத் தூக்கி நிறுத்துங் கால்;* movable post in which the bazzar-screen rests. *'சட்டக்காலை வாங்கி .... நெடிய கடையை அடைத்து' (மதுரைக். 621, உரை.).*

ம. சட்டக்காலு (சட்டகத்தின் கால்)

[சட்டம் + கால்]

சட்டக்கூடு *šaṭṭa-k-kūḍu,* பெ. (n.) *சட்டகம் பார்க்க;* see *šaṭṭagam.*

ம. சட்டக்கூடு

[சட்டம் + கூடு]

சட்டகப்பை *šaṭṭaga-p-pai,* பெ. (n.) தட்டகப்பை (கொ.வ.); plate ladle (செ.அக.).

[சட்டு + அகப்பை. அகழ் → அகழ்பு → அகழ்பை → அகப்பை]

சட்டகம் *šaṭṭagam,* பெ. (n.) 1. சட்டம்; frame, framework. "சட்டகம் பொன்னிற் செய்து" (சீவக. 2523). 2. மக்களது படுக்கை (திவா.); bed, couch. 3. வடிவு (பிங்.); shape, figure, image. 4. உடல்; body. "உயிர் புகுஞ்சட்டகம்" (கல்லா. 8,1). 5. பிணம்; corpse. "சட்டகம் புகழாக் கட்டிலேற்றி" (ஞானா. 6:10.). 6. மரபு, விதி, நம்பிக்கை போன்றவற்றின் அடிப்படைக் கொள்கை; the fundamental principles of custom, law, belief, etc.

[சட்டம் → சட்டகம் (மு.தா. 119)]

சட்டகல்லி *šaṭṭakalli,* பெ. (n.) சட்டக்கல்லி பார்க்க; see *šaṭṭa-k-kalli* (செ.அக.)

[சட்டக்கல்லி → சட்டகல்லி]

சட்டகி *šaṭṭagi,* பெ. (n.) பாய்க் கோரை; koray grass used for making mats (சா.அக.).

[சட்டம் → சட்டகி]

சட்டங்கட்டு-தல் *šaṭṭaṅ-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ஏற்பாடு செய்தல் (நாஞ்.); to arrange, settle.

[சட்டம் + கட்டு-,]

சப்பரம் முகடு முதலியவற்றிற்குச் சட்டங் கட்டுதல் ஆயத்த வினையாயிருத்தலின், சட்டங்கட்டுதல் என்பது ஆயத்தஞ் செய்தல் என்று பொருள்படும்.

சட்டங்கொழி-த்தல் *šaṭṭaṅ-kōḻi-,* 4 செ.கு.வி. (v.t.) ஒழுங்கு பேசுதல் (இ.வ.); to talk glibly on punctilos and proprieties, used in contempt.

[சட்டம் + கொழி-,]

சட்டச்சவை *šaṭṭa-c-cavai,* பெ. (n.) சட்டத்தை உருவாக்கும் அரசு அவை; legislature.

ம. சட்டசபா

[சட்டம் + சவை (மு.தா. 62)]

த. அவை → சவை → சபை → Skt. sabā

சட்டசபை *šaṭṭa-šabai,* பெ. (n.) சட்டச்சவை பார்க்க; see *šaṭṭa-c-cavai.*

[சட்ட(ம்) + சபை]

சவை → சபை → Skt. šabā

சட்டத்தரணி *šaṭṭa-t-taraṇi,* பெ. (n.) வழக்கறிஞர் (யாழ்ப்.); lawyer; attorney at law.

[சட்டம் + தரணி]

E. attorney → த. தரணி

சட்டத்துறை *šaṭṭa-t-tuṟai,* பெ. (n.) சட்ட நுணுக்கங்கள் பற்றிய துறை; law department.

[சட்டம் + துறை]

சட்டதிட்டம் *šaṭṭa-tiṭṭam,* பெ. (n.) 1. சட்ட ஒழுங்கு; code or regulation. 2. உறுதிப்பாடு (வின்.); accuracy, preciseness.

[சட்டம் + திட்டம்]

ஓர் அமைப்பகத்தின் கரும நடப்பிற்குரிய விதியொழுங்கு முழுவதும் சட்டதிட்டம் எனப்படும் (மு.தா. 109).

சட்டந்தட்டு-தல் *šaṭṭan-taṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) புனுகு வழித்தல் (வின்.); to extract the unctuous substance from the dried sac in the anal pouch of the civet cat.

[சட்டம் + தட்டு-,]

சட்டந்தை-த்தல் *šaṭṭan-tai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. படம் முதலியவற்றிற்குச் சட்டஞ் சேர்த்தல்; to frame, nail on a frame. 2. வரிச்சலடித்தல்; to put on reapers for tiles (செ.அக.).

[சட்டம் + தை-,]

சட்டநம்பி *šaṭṭanambi,* பெ. (n.) 1. மாணவர் தலைவனாகிய ஆசிரியர்; teacher. 2. தலைமை மாணவன்; pupil leader.

மறுவ. சட்டாம்பிள்ளை, சட்டநம்பிப்பிள்ளை

[சட்டன் + நம்பி (மு.தா. 108)]

சட்டநாதன் *šaṭṭa-nātaṉ,* பெ. (n.) சட்டைநாதன் பார்க்க; see *šaṭṭai-nātaṉ.*

[சட்டைநாதன் → சட்டநாதன்]

சட்டநிருமாண சபை *šaṭṭa-nirumāṇa-šabai,* பெ. (n.) சட்டச்சவை பார்க்க; see *šaṭṭa-c-cavai.*

[சட்டம் + நிருமாண சபை]

சட்டநிரூபணசபை *šaṭṭa-nirūbaṇa-šabai,* பெ. (n.) சட்டச்சவை பார்க்க; see *šaṭṭa-c-cavai.*

[சட்டம் + நிரூபணசபை]

சட்டப்படி *šaṭṭa-p-paḍi,* பெ.எ. (adj.) சட்டத்திற் கேற்ப; according to law. *சட்டப்படி* செய்வது நன்மையே தரும்.

ம. சட்டப்பிடி

[சட்ட(ம்) + படி. பள் → படு → படுதல் = விழுதல். படு → படி → படிதல் = ஒன்றின் மேல் விழுதல், விழுந்து பதிதல், பதிந்து உருவம் அமைத்தல்]

நிலத்திற் பதிந்த பொருளின் வடிவம் நிலத்திலும், தாளிற் பதிந்த அச்சின் வடிவம் தாளிலும் அமைதல் காண்க.

படி = உருவம், உடம்பு. படிந்த உருவம் படிந்த பொருளை ஒத்திருத்தலால், படி என்னும் சொல் ஒப்புமைக் கருத்தை உணர்த்திற்று. அப்படி = அதுபோல்.

சட்டப்பரம்பு *šaṭṭa-p-parambu,* பெ. (n.) வயல் திருத்தும் பலகை வகை; a kind of roller for land newly ploughed, harrow, drag.

[சட்டம் + பரம்பு]

சட்டப்பல்கலைக்கழகம் *šaṭṭa-p-palkalai-kaḻagam,* பெ. (n.) சட்டக்கல்விக்கான பல்கலைக்கழகம்; law university.

[சட்டம் + பல்கலைக்கழகம்]

சட்டப்பலகை *šaṭṭa-p-palagai,* பெ. (n.) 1. சட்டம்[1] பார்க்க; see *šaṭṭam*[1]. 2. எழுதுங் கற்பலகை (இ.வ.); slate or board as enclosed in a frame. 3. வரியிழுக்குஞ் சட்டம் (வின்.); flat ruler.

[சட்டம் + பலகை]

சட்டப்பெருமக்கள்[1] *šaṭṭa-p-perumakkaḷ,* பெ. (n.) ஆளுங்கணத்தார்; (M.E.R. 498 of 1929-30) governing body, board of management.

[சட்டம் + பெருமக்கள்]

சட்டப்பெருமக்கள்[2] *šaṭṭa-p-perumakkaḷ,* பெ. (n.) வடமொழி வல்லுநர்கள்; Sanskrit pandit. 'சட்டப் பெருமக்களும் பணி மக்களும்' (பா.செப.12).

[சட்டம் + பெருமக்கள்]

சட்டப்பேரவை *šaṭṭa-p-pēravai,* பெ. (n.) குடியரசமைப்புள்ள நாட்டின் மாநிலத்தில் மக்களால் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு மாநிலத்துக்கான சட்டங்களை இயற்றும் அவை; legislative assembly of a state in the democratic country.

[சட்டம் + பேரவை]

சட்டப்பேரவைத்தலைவர் *šaṭṭa-p-pēravai-t-talaivar,* பெ. (n.) சட்டப்பேரவை உறுப்பினர்களால் பேரவையின் தலைமைப் பொறுப்புக்குத் தேர்வுசெய்யப்படுபவர்; speaker of the legislative assembly.

[சட்டம் + பேரவை + தலைவர்]

சட்டப்பேரவைஉறுப்பினர் *šaṭṭa-p-pēravai-y-uṟuppiṉar,* பெ. (n.) சட்டமன்றவுறுப்பினர் பார்க்க; see šaṭṭa-maṉṟa-v-uṟuppiṉar.

[சட்டம் + பேரவை + உறுப்பினர்]

சட்டம்[1] *šaṭṭam,* பெ. (n.) 1. படம், கண்ணாடி முதலியவற்றின் நாற்புறமுங் கோக்கப்படும் மரச்சட்டம்; wooden frame. 2. கம்பியிழுக்குங் கருவி; perforated metallic frame for drawing wire. 3. நகையின் உம்மச்சு; socket in a jewel for insetting gems. 4. எழுதும் ஓலை; ōlai used for writing. 5. உடம்பு; body. 6. எழுதுதற்குப் போலிகையாயமைந்த மேல்வரிச் சட்டம்; plan, model. 7. முறைமை (நியாய) ஏற்பாடு; rule, order, law, regulation especially written. "சட்டஞ்செய் துலகைத் திட்டஞ் செய்பவர் போல்" (புலவராற்.). 8. செப்பம்; excellence, superior quality. 9. நேர்மை; exactness, precision, accuracy, neatness, nicety, propriety. "சட்டமாய்ப் பேசி" (இராமநா. உயுத். 53). 10. அணியம் (ஆயத்தம்) (இ.வ.); readiness. 11. மாணிக்க வகை; a kind of ruby. "மாணிக்கம் சட்டமும் இலைசுனியும் ஒன்றும் உட்பட" (S.I.I. ii, 430, 32).

ம. சட்டம்; க., து., பட. சட்ட; தெ. சட்டமு; கோத. சட்ம்

[தட்டு → சட்டு → சட்டம்]

சட்டம்: மரச்சட்டம், கோடிழுக்கும் சட்டம், பலகை, நேர்மை, செப்பம், முறைமை, நயன்மையொழுங்கு, வரம்பு, நெறியீடு.

மாணவர் பார்த்து ஒழுங்காக எழுதுவதற்கு மேல் வரியில் வரையப்பட்டிருப்பது மேல்வரிச் சட்டம் எனப்படும்.

சட்டம் : படம் கண்ணாடி முதலியவற்றின் நாற்புறமுங் கோக்கப்படும் மரச்சட்டம். *சட்டக் கட்டில், சட்டக்கதவு, சட்டப் பரப்பு, சட்டவாள்* முதலியன நாற்புறமுஞ் சட்டங் கோத்தவை.

உடம்பு உயிருக்குச் சட்டம் போன்றிருப்பதால் அதுவும் சட்டம் எனப்படும் (மு.தா. 109).

சட்டம் அரசியலார் அமைத்த நெறிமுறை (law). மேல்வரிச் சட்டம் ஒருவர் தாம்

கையாளுவதற்குத் தாமே அமைத்துக் கொண்ட திட்டத் தொடரியம் (motto).

சட்டம்[2] *šaṭṭam,* பெ. (n.) *1.* புனுகுச்சட்டம்; sac or gland in the anal pouch of the civet cat. *2.* புனுகுப் பூனையின் உறுப்பிலிருந்து எடுக்கப்படும் நீர்மப் (திரவப்) பொருள்; fluid extracted from the sac of a civet cat *(செ.அக.).*

ம. சட்டம்

[சட்டு → சட்டம்]

சட்டம்பி *šaṭṭambi,* பெ. (n.) *1.* ஆசிரியர்; teacher. *2.* முதலாளி (எசமான்); master *"மணியகாரச் சட்டம்" (புலவராற்.); 3.* தலைவன்; chief.

ம. சட்டம்பி

[சட்டநம்பி → சட்டம்பி]

சட்டம்பிப்பிள்ளை *šaṭṭambi-p-piḷḷai,* பெ. (n.) சட்டாம்பிள்ளை (வின்.) பார்க்க; see šaṭṭām-piḷḷai.

[சட்டாம்பிள்ளை → சட்டம்பிப்பிள்ளை]

சட்டம்பியார் *šaṭṭambiyār,* பெ. (n.) சட்டம்பி (யாழ்ப்.) பார்க்க; see *šaṭṭambi.*

[சட்டநம்பி → சட்டம்பி → சட்டம்பியார்]

சட்டம்பிழி-தல் *šaṭṭam-biḻi-,* 2 செ.கு.வி (v.i) சட்டந்தட்டு-தல் பார்க்க; see *šaṭṭan-taṭṭu-.*

[சட்டம் + பிழி-,]

சட்டம்பிள்ளை *šaṭṭam-piḷḷai,* பெ. (n.) சட்டாம்பிள்ளை பார்க்க; see *šaṭṭām-piḷḷai.*

[சட்டநம்பிப்பிள்ளை → சட்டம்பிப் பிள்ளை → சட்டாம்பிள்ளை]

சட்டம்போடு[1]**-தல்** *šaṭṭam-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) ஆணை இடுதல்; to command *(செ.அக.).*

ம. சட்டம் பெட்டுக.

[சட்டம் + போடு-,]

சட்டம்போடு[2]**-தல்** *šaṭṭam-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) படம், கண்ணாடி முதலியவற்றின் ஓரத்தில் காப்பிடுதல்; to arrange frame for picture, mirror, etc.

[சட்டம் + போடு-,]

சட்டம் வாரு-தல் *šaṭṭam-vāru-,* 5 செ.கு.வி. (v.i.) ஓலையின் அருகுகளை அரிந்து எழுது சட்டமாக அணியஞ் செய்தல்; to remove the ribs in ōla and make it suitable for writing *(செ.அக.).*

[சட்டம் + வாரு-,]

சட்டம்வை-த்தல் *šaṭṭam-vai-,* 4 செ.கு.வி. (v.i.) சட்டம்போடு-தல் பார்க்க; see *šaṭṭām-bōḍu-.*

[சட்டம் + வை-,]

சட்டமழி-த்தல் *šaṭṭam-aḻi-,* 4 செ.கு.வி. (v.i.) ஆணை மீறுதல் *(இ.வ.);* to transgress or violate, as a law.

ம. சட்டமழி

[சட்டம் + அழி-,]

சட்டமன்றம் *šaṭṭa-maṉṟam,* பெ. (n.) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு மாநிலத்துக்கான சட்டங்களை இயற்றும் சட்டப்பேரவை; legislature.

[சட்டம் + மன்றம்]

சட்டமன்றவுறுப்பினர் *šaṭṭa-maṉṟa-v-uṟuppiṉar,* பெ. (n.) சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்; member of legislative assembly.

[சட்டமன்றம் + உறுப்பினர்]

சட்டமாக்கு-தல் *šaṭṭam-ākku-,* 5 செ.கு.வி. (v.i.) ஒரு தீர்மானத்தை எல்லோரும் பின்பற்ற வேண்டிய கட்டளையாக (விதியாக) சட்ட மன்றம் ஒப்புதல் அளித்தல்; to enact, legislate.

ம. சட்டம் ஆக்குக

[சட்டம் + ஆக்கு-,]

சட்டமிடு-தல் *šaṭṭam-iḍu-,* செ.கு.வி. (v.i.) செய்ய வேண்டிய கட்டளையைப் பணித்தல்; to dictate, to issue orders, to chalk out a plan of work. *"தானிருந்து சட்டமிடுகின்ற சமுகத்தான்" (பணவிடு. 30).*

ம. சட்டமிடுக

[சட்டம் + இடு-,]

சட்டமியற்று-தல் *šaṭṭam-iyaṟṟu-,* 5செ.கு.வி. (v.i.) சட்டமாக்கு-தல் பார்க்க; see *šaṭṭam-ākku-.*

[சட்டம் + இயற்று-,]

சட்டமுனி *šaṭṭa-muṉi,* பெ. (n.) சட்டைமுனி பார்க்க. see *šaṭṭai-muṉi.*

[சட்டைமுனி → சட்டமுனி]

சட்டமூலம் *šaṭṭa-mūlam,* பெ. (n.) சட்டமன்றம், நாடாளுமன்றம் முதலிவற்றில் ஒன்றைச்

சட்டமாகச் செய்வதற்கு உறுப்பினர்களால் அல்லது அரசால் கொண்டுவரப்படும் திட்டம் முதலியவை அடங்கிய குறிப்பு, திட்ட வரைவு; bill in a legislature or parliament.

[சட்டம் + மூலம்]

சட்டமேதை *šatta-mēdai,* பெ. (n.) சட்ட வல்லுநர் பார்க்க; see *šatta-vallunar.*

[சட்டம் + மேதை]

சட்டமேலவை *šatta-mēlavai,* பெ. (n.) மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப் படாத அவை; legislative council.

[சட்டம் + மேலவை]

சட்டமேலவையுறுப்பினர் *šatta-mēlavai-v-uruppinar,* பெ. (n.) சட்ட மேலவைக்கான உறுப்பினர்; member of legislative council.

[சட்டமேலவை + உறுப்பினர்]

சட்டர்[1] *šattar,* பெ. (n.) கொற்றவைக்கணத்தார் (வைரவர்); Bhairava.

[சட்டைநாதர் → சட்டர். சட்டையணிந்தவர்]

சட்டைநாதன் பார்க்க.

சட்டர்[2] *šattar,* பெ. (n.) வடமொழி கற்கும் மாணவர்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும்; Sanskrit students and Pandits. *"காந்தளூர் மரியாதையால் தொன்னூற்று ஐவர் சட்டர்க்கு சாலையுஞ் செய்தான்" (பா.செ.ப. 11)*

[சட்டம் → சட்டர் = மறைநூலுடன் மீமாம்சை, இலக்கணம், போன்ற பல பிரிவுகளையும் கற்றவர்]

சட்டவட்டம் *šatta-vattam,* பெ. (n.) திட்டம்; neatness, fineness, orderliness.

ம. சட்டவட்டம்

[சட்டம் + வட்டம்]

சட்டவரியோலை *šatta-vari-y-ōlai,* பெ. (n.) நெறி முறைகள் பதிந்துவைத்துள்ள பனை ஓலை (சேரநா.); palm leaves in which rules are recorded.

ம. சட்டவரியோல

[சட்டம் + வரி + ஓலை]

சட்டவல்லுநர் *šatta-vallunar,* பெ. (n.) சட்டத் தொடர்பானவற்றில் நுட்ப அறிவுடையவர்; expert in law.

[சட்டம் + வல்லுநர்]

சட்டவளை *šatta-valai,* பெ. (n.) குறுக்குச் சட்டம் (யாழ்ப்.); cross-beam connecting wall plates.

[சட்டம் + வளை]

சட்டவாங்குவளையம் *šatta-vāngu-valaiyam,* பெ. (n.) சட்டத்தில் பிணைக்கப்பட்ட இரும்பு வாங்கும், வளையங்களும் (நெல்லை.); joining ring of metalic frames.

[சட்டம் + வாங்கு + வளையம்]

சட்டவாள் *šatta-vāl,* பெ. (n.) பிடி வைத்த பெரிய அரம்பம் (யாழ்.); large saw fixed in a frame.

ம. சட்டவாள்

[தட்டை → சட்டை → சட்ட + வாள்]



சட்டவாள்

சட்ட விளக்கு *šatta-vilakku,* பெ. (n.) கோயிலில் சட்டத்தில் அமைத்து இடும் விளக்கு வரிசை (இ.வ.); rows of lamps fixed to a frame, as in a temple.

ம. சட்டவிளக்கு

[சட்டம் + விளக்கு]

சட்டறம் *šattaram,* பெ. (n.) அறநூல் (சாத்திரம்) பயிற்றுவிக்கும் நெறிமுறை; teaching the šāstras, considered as a merit. *"சாலைதொறும் பயில் சட்டறங்கள் பல்குவன" (பெரியபு. கழறிற்.3).*

[சட்டம் + அறம்]

சட்டன் *šattan,* பெ. (n.) மாணாக்கன்; scholar, student. "ஒரு சட்டனை ஒரு சட்டன் பிழைக்கப் பேசுவானாகில்" *(T.A.S.I. i, 9).*

[சட்டம் → சட்டன் (மு.தா.118.). சட்டன் = ஓலைச்சுவடி பயிலும் மாணவன்]

சட்டன் என்னும் சொல்லைச் சாத்ர (chatra) என்று திரித்து அதனையே தென்சொற்கு மூலமாகக் காட்டுவர் வடமொழியாளர்.

சட்டாம்பிள்ளை *šaṭṭām-piḷḷai*, பெ. (n.) பள்ளிக்கூட வகுப்பில் மாணாக்கர் தலைவன்; monitor of a class in school (செ.அக.).

[சட்டநம்பிப்பிள்ளை → சட்டம்பிப் பிள்ளை → சட்டாம்பிள்ளை (மு.தா. 118)]

சட்டால் *šaṭṭāl*, பெ. (n.) வில்வம் (மலை.); Indian bael.

ம. சட்டாலு

[சட்டு → சட்டால்]

சட்டாலொட்டா *šaṭṭālotṭā*, பெ. (n.) ஒரு வகைக் கடல்மீன்; a kind of sea-fish.

[சட்டை → சட்டா + லொட்டா. மோனை நோக்கி வந்த இணை மொழி]

சட்டி[1] *šaṭṭi*, பெ. (n.) 1. அகன்றவாயுள்ளதும் அடிப்பக்கம் தட்டையாகவுள்ளதுமான மட்பாண்டம்; broad mouthed flaten earthen pot. 2. மட்பாண்டம் (பெரும்பாண். 317, உரை); earthen vessel, pan. 3. சமையற்கலம்; vessel in general. "சட்டி சுட்டதடா கையை விட்டதடா" (பழ.).

ம. சட்டி; க. சட்டி, செட்டி, சடிகெ, சட்டிகெ (வாயகன்ற சிறு மட்கலம்); தெ. சட்டி (வாயகன்ற மட்கலம்); து. சட்டி; Mar. caṭaṇi, caṭaṇī; Sind. caṭiṇi

[தட்டு → சட்டு → சட்டி. ஒ.நோ: க. சட்டு, சட்ட, சட்டெ, தட்டையானது = சரிமட்டமானது; து. சட்டெ = தட்டையானது, சரிமட்டமானது]

சட்டியின் பயன்பாடு கருதி அப்பச்சட்டி, எண்ணெய்ச்சட்டி, நெய்ச்சட்டி, பூச்சட்டி, வெல்லச்சட்டி, பணியாரச்சட்டி, தீச்சட்டி என்பன போன்று குறிக்கப்படுவதும் அமைப்பு கருதி அடுக்குச்சட்டி, மிடா (சட்டி), கிணிர்ச் சட்டி (அகல் விளக்கு) என்பன போன்று குறிக்கப்படுவதும் செய்பொருள் கருதி, மண் சட்டி, கல்சட்டி, இரும்புச் சட்டி, மரச்சட்டி எனக் குறிக்கப்படுவதும் வழக்கு. சட்டி என்பது பெரியது, சிட்டி சிறியது. அகலுக்குச் சிட்டி என்னும் பெயரே பொருந்தும். நெல்லை மாவட்டத்தில் கிழிபஞ்சிட்டியென்றே சொல்வர்.

சட்டி வகைகள்

1. களிமண்சட்டி.
2. பீசலை மண்சட்டி.
3. கருப்புச்சட்டி.
4. வெண்சட்டி.
5. வெண்களிமண் சட்டி.
6. சருவச்சட்டி.
7. போகினிச்சட்டி.

சட்டி[2] *šaṭṭi*, பெ. (n.) பெரியது; that which is big. 'சட்டித் தலை' (உ.வ.).

சட்டி[3] *šaṭṭi*, பெ. (n.) தாமரை (மலை.); lotus.

[தட்டு → சட்டு → சட்டி. சட்டு = தாமரை]

சட்டி[4]**-த்தல்** *šaṭṭi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. சட்டி போலாக்குதல், அகன்றதாக்குதல், தட்டி மழுங்க வைத்தல்; to be pot like, to be flat or blunt. 2. அழித்தல்; to destroy ruin. "மாவுருவைச் சட்டித்தருளுந் தணிகையிலென் றாயே" (அருட்பா. 5, காணாப். 6). 2. கொல்லுதல் (வின்.); to kill.

ம. சட்டிக்குக

[சட்டுதல் = தட்டுதல், அடித்தல். சட்டுதல் → சட்டித்தல் = தாக்குதல், அழித்தல், கொல்லுதல்]

சட்டி[5] *šaṭṭi*, பெ. (n.) மல்லக செட்டி; a professional wrestler.

க. சட்டி; U. jeṭhī

[எட்டி → செட்டி → சட்டி]

சட்டிக்கரணை *šaṭṭi-k-karaṇai*, காறாக்கரணை; a tuberous-rooted herb.

[சட்டி + கரணை]

சட்டிக்கல்பம் *šaṭṭi-k-kalbam*, பெ. (n.) கொள்; horse-gram (சா.அக.).

சட்டிக்கிழங்கு *šaṭṭi-k-kiḻaṅgu*, பெ. (n.) உணவுக்குப் பயன்படும் ஒருவகைக் கிழங்கு; a kind of edible root.

[சட்டி + கிழங்கு]

சட்டிகை[1] *šaṭṭigai*, பெ. (n.) தாமரைப் பூ; lotus flower (சா.அக.).

[சட்டி → சட்டிகை]

சட்டிகை[2] *šaṭṭigai*, பெ. (n.) வாயகன்ற சிறு மட்கலம் (கருநா.); a small earthern pot with a broad mouth.

க. சட்டிகெ, சடிகெ

[சட்டி → சட்டிகை]

சட்டி வகைகள்

களிமண் சட்டி

பீசலை மண் சட்டி

கருப்புச் சட்டி

வெண்களிமண் சட்டி

சருவச் சட்டி



போகினிச் சட்டி

சட்டிச்சாரணை *śaṭṭi-c-cāraṇai,* பெ. (n.) சமையலுக்குப் பயன்படும் ஒருவகைக் கீரை; a kind of greens.

மறுவ. சத்திக்காரணை; சாரட்டிணை

[சட்டி + சாரணை]

சட்டிச்சோறடுவார் *śaṭṭi-c-cōṟ-aḍuvār,* பெ. (n.) உணவு சமைப்பவன்; the person who cooks food. "சட்டிச்சோறடுவாற்கும் விறகிடுவானுக்குமாக நாளொன்றினுக்கு நெல்லு குறுணி யிருநாழியாக" *(தெ. க. தொ. 14. கல். 191 : 22).*

[சட்டி + சோறு + அடுவார். சொல் → சொன்றி → சோறு. அடுதல் = சமைத்தல்]

சட்டிச்சோறு *śaṭṭi-c-cōṟu,* பெ. (n.) 1. கோயிற் பணியாளர்க்கும் சிவனடியார்க்கும் சட்டி அளவிட்டுக் கொடுக்கும் சோறு; food offerings distributed as a perquiste to temple-servants. "மகேசுவரர்க்குச் சட்டிச்சோறு ஆயிரம் கொடுக்கவும்" *(தெ.க.தொ. 4, கல். 223).* 'சொக்கனுக்குச் சட்டிச்சோறு' *(பழ.)* 2. இருநாழி அரிசி சமைத்த சோற்றின் அளவு; two nāḻi measured cooked rice.

[சட்டி + சோறு]

சட்டிசாட்டாரணை *śaṭṭi-śāṭṭāraṇai,* பெ. (n.) செடி வகை; pointed-leaved hogweed.

[சட்டி + சாட்டரணை]

சட்டிசுரண்டி *śaṭṭi-śuraṇḍi,* பெ. (n.) 1. சட்டி சுரண்டுங் கருவி; small scraping instrument for cleaning mud vessels. 2. சட்டி சுரண்டுபவர்; scullion, cook, used in contempt.

[சட்டி + சுரண்டி. சுரண்டு → சுரண்டி]

சட்டிசுரண்டு-தல் *śaṭṭi-śuraṇḍu-,* 5 செ.கு.வி. (v.i) இழிதொழில் செய்தல்; to do any menial service, used in contempt. "உனக்கென்ன வரும் சட்டி சுரண்ட வருந் தையலே" *(விறலிவிடு.).*

[சட்டி + சுரண்டு-தல். சட்டி சுரண்டுதல் = மட்பாண்டங்களைக் கழுவி வாழ்க்கை நடத்துதல், வறுமையில் வாழ்தல்.]

சட்டித்தலை *śaṭṭi-t-talai,* பெ. (n.) 1. பெருந்தலை *(வின்.)*; pot-head, big head. 2. வழுக்கைத்தலை; bald head.

ம. சட்டித்தல

[சட்டி + தலை. வடிவத்தால் பெரிய தலையையும் தோற்றத்தால் வழுக்கைத் தலையையும் குறித்தது]

சட்டித்தலைப்பாகை *śaṭṭi-t-talai-p-pāgai,* பெ. (n.) பெருந்தலைப்பாகை *(இ.வ.)*; a kind of large turban.

[சட்டி + தலைப்பாகை]

சட்டித்தலையன் *śaṭṭi-t-talaiyaṉ,* பெ. (n.) மீன்வகை; a kind of fish. "திருக்கை சட்டித் தலையன்" *(பறாளை. பள்ளு.16).*

[சட்டி + தலையன்]

சட்டித்தலையுள்ளான் *śaṭṭi-t-talai-y-uḷḷāṉ,* பெ. (n.) பெரிய தலையையுடைய உள்ளான் பறவை *(வின்.)*; large headed snipe.

[சட்டி + தலை + உள்ளான்]



சட்டித்தோசை *śaṭṭi-t-tōśai,* பெ. (n.) மண் சட்டியில் வார்த்தெடுக்கும் தோசை வகை *(இ.வ.)*; a round cake of rice-flour fried in an earthern pan.

[சட்டி + தோசை. தோய் → தோயை → தோசை]

சட்டித்தோட்டா *śaṭṭi-t-tōṭṭā,* பெ. (n.) தோட்டா இனக் கடல்மீன் *(முகவை.)*; a kind of tōṭṭā fish.

[சட்டி + தோட்டா]

சட்டித்தோணி *śaṭṭi-t-tōṇi,* பெ. (n.) தட்டையான அடிப்பக்கமுள்ள படகு *(புதுவை.)*; flat-bottomed boat.

[சட்டி + தோணி]

சட்டிப்பீரங்கி *šaṭṭi-p-pīraṅgi,* பெ. (n.) குண்டு முதலியன தொலைவிற் பாயும்படிச் செய்யும் தகரி (பீரங்கி) வகை (வின்.); mortar for throwing bombs and shells.

[சட்டி + பீரங்கி]

சட்டிப்புல் *šaṭṭi-p-pul,* பெ. (n.) புல்வகை (யாழ்ப்.); bushy kind of grass.

[சட்டி + புல்]

சட்டிபானை *šaṭṭi-pāṉai,* பெ. (n.) சமையல் முதலியவற்றிற்கு உதவும் மட்பாண்டங்கள்; pots and pans, cooking utensils, crockery (செ.அக.).

ம. சட்டிப்பான

[சட்டி + பானை. மரபிணைமொழி]

பானை = பெரிய மட்கலம். சட்டி = பானையை நோக்கச் சிறியது. சருவப்பானை, சருவச்சட்டி என்னும் வழக்குகளும், மோர்ப் பானை, நெய்ச்சட்டி என்னும் வழக்குகளும் இதனை வலியுறுத்தல் காண்க.

சட்டிமரக்கால் *šaṭṭi-marakkāl,* பெ. (n.) அகலம் மிகுதியாகவும் உயரம் குறைவாகவும் உள்ள மரக்கால்; a kind of marakkāl.

[சட்டி + மரக்கால்]

சட்டியப்பம் *šaṭṭi-y-appam,* பெ. (n.) அரிசி மாவினாற் செய்த பணியார வகை; a large cake made of rice flour (செ.அக.).

ம. சட்டியப்பம்

[சட்டி + அப்பம். மண் சட்டியிற் சுட்ட அப்பம், சட்டியப்பம்]

சட்டியாட்டு-தல் *šaṭṭi-y-āṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) சட்டியுருட்டு-தல் பார்க்க; see *šaṭṭi-y-uruṭṭu-.*

ம. சட்டிகளி, சட்டியாட்டம்

[சட்டி + ஆட்டு-,]

சட்டியுருட்டு-தல் *šaṭṭi-y-uruṭṭu-,* 5 செ.கு.வி. (v.i) 1. சூதாடுதல் (வின்.); to gamble with balls in a brass vessel. 2. வாயாலூட்டுதல் (இ.வ.); to be blatant, to bluster. 3. மட்பாண்டங்களில் வைத்திருக்கும் பொருள்களைத் திருடி உண்ணுதல் (இ.வ.); to steal and eat things stored in mud-pots. 4. சட்டிசுரண்டு-தல் பார்க்க; see *šaṭṭi-šuraṇḍu-* (செ.அக.).

[சட்டி + உருட்டு-,]

சட்டியெடு-த்தல் *šaṭṭi-y-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) இரத்தல் (கையில் சட்டியையெடுத்தல்); lit., to take pot on hand, to beg (செ.அக.).

[சட்டி + எடு-,]

சட்டியொட்டி *šaṭṭi-y-oṭṭi,* பெ. (n.) பொருவா என்னும் கடல்மீன் வகை (வின்.); sea-fish, blackish.

ம. சட்டிப்பற்றி

[சட்டி + ஒட்டி]

சட்டிவட்டு *šaṭṭi-vaṭṭu,* பெ. (n.) கப்பல் வள்ளிக் கிழங்கின் துண்டம் (யாழ்ப்.); round root of the alligator yam, which is cut out and planted as a sucker.

[சட்டி + வட்டு]

சட்டு[1]-தல் *šaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தட்டுதல்; to strike, to beat.

க. சச்சு, செச்சு

[தட்டு → சட்டு]

'சட்டு' என்பது தட்டுதலைக் குறித்த ஒரு பழந்தமிழ்ச் சொல். (மு.தா. 108)

சட்டு[2] *šaṭṭu,* பெ. (n.) அழிவு (வின்.); destruction, injury, waste.

ம. சட்டு (குற்றம், குறை, முடம்); க. சட்டு, செட்டு; தெ. செடி, செடு (பயனற்றது); து. சட்டு (முடிவு, அழிவு).

[சட்டுதல் = தட்டுதல், அடித்தல். சட்டு' - சட்டு. சட்டு-தல் பார்க்க]

சட்டு[3] *šaṭṭu,* பெ. (n.) சிக்கனம்; thrift (செ.அக.).

[செட்டு → சட்டு]

சட்டுகந்தம் *šaṭṭugandam,* பெ. (n.) வசம்பு; sweet flag (சா. அக.).

[சடகந்தம் → சட்டுகந்தம்]

சட்டுகம் *šaṭṭugam,* பெ. (n.) சட்டுவம் பார்க்க; see *šaṭṭuvam.*

ம. சட்டுகம்; க. சடுக

[சட்டுவம் → சட்டுகம்]

சட்டுப்பண்ணு[1]-தல் *šaṭṭu-p-paṇṇu-*, 5 செ. குன்றாவி. (v.t.) சட்டுப்பார்-த்தல் (வின்.) பார்க்க; see *šaṭṭu-p-pār-*.

[சட்டு + பண்ணு-,]

சட்டுப்பண்ணு[2]-தல் *šaṭṭu-p-paṇṇu-*, 5 செ.கு.வி. (v.i.) சிக்கனமாயிருத்தல்; to be thrifty (செ.அக.).

[செட்டு → சட்டு + பண்ணு-,]

சட்டுப்பார்-த்தல் *šaṭṭu-p-pār-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. அழித்தல்; to destroy, injure. 2. விழுங்குதல்; to devour, consume (செ.அக.).

[சட்டு + பார்-,]

சட்டுப்புட்டெனல் *šaṭṭu-p-puṭṭeṉal*, பெ. (n.) விரைவுக் குறிப்பு; onom. expr. signifying haste (செ.அக.).

ம. சட்டுபெட்டனு; H. jhaṭpaṭ; Mar. jaṭpaṭ, Guj. jhaṭāpaṭ; Sind. jhaṭpaṭi.

[சட்டு + புட்டு + எனல்]

சட்டுவக்கல் *šaṭṭuva-k-kal*, பெ (v.i) மடங்களுக்குக் கொடை கொடுக்கப்பட்ட நிலத்தின் எல்லையில் நடப்பெறும் சட்டுவ வடிவம் வரைந்த எல்லைக் கல் (இ.வ.); boundary stone having a ladle-mark for lands granted to a mutt.

[சட்டுவம் + கல்.]

சட்டுவச்சாதம் *šaṭṭuva-c-cādam*, பெ. (n.) சட்டுவச்சோறு பார்க்க; see *šaṭṭuva-c-cōṟu*.

[சட்டுவம் + சாதம்]

சட்டுவச்சோறு *šaṭṭuva-c-cōṟu*, பெ. (n.) திருமணத்தில் மணாளனுக்கு மணப்பெண் படைக்கும் சோறு; food served by the bride to the bridegroom for the first time at the marriage.

[சட்டுவம் + சோறு]

சட்டுவஞ்செலுத்து-தல் *šaṭṭuvañ-celuttu-*, செ.கு.வி. (v.i) 1. உணவு பரிமாறுதல்; to ladle out or serve food. 2. விருந்தோம்புதல்; to exercise hospitality (செ.அக.).

[சட்டுவம் + செலுத்து-,]

உணவு அளிப்பதற்கு உதவும் சட்டுவம், உணவு அளித்தலோடு விருந்தோம்புதலு க்கும் ஆயிற்றென்க.

சட்டுவம் *šaṭṭuvam*, பெ. (n.) 1. அகப்பை; ladle. "ஆனபல் சட்டுவ மங்கைதொ றேந்தி" (கந்தபு. திருச்செந். 4); 2. தோசை திருப்பி; metal spatula with a long handle for turning and removing a cooked cake. "சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவையறியுமோ" (சித்தர்பா.). 3. சோற்றுப் பானை கசடு நீக்குங் கருவி; spatula.

ம. சட்டுகம், சட்டகம், சட்டுவம்; க. சடுக, சட்டுக, சொடக, சட்டு; தெ. சட்டுமு, சட்டுவமு; து. சட்டுக; பட. சட்டுகோலு; கோத. சட்ய்கோல்; குட. சட்டுவ.

[சட்டு → சட்டுவம்]

சட்டெனல் *šaṭṭeṉal*, பெ. (n.) 1. விரைவுக் குறிப்பு; onom. expr. signifying, quickness. சட்டென வழல்வாய்ப் பல்பிண மருந்தீமத்து (ஞானா. 6: 12). 2. திடீரெனற் குறிப்பு; onom. expr. signifying suddenness.

ம., க., து. சட்டனெ; தெ., பட. சட்டன

[சட்டு + எனல்]

சட்டை[1] *šaṭṭai*, பெ. (n.) 1. மெய்ப்பை; jacket, coat, gown, cloak. "தேசுடைச் சட்டை சாத்தி" (திருவாலவா. 16: 19). 2. பாம்புச் சட்டை; slough of a snake. 3. யாக்கை; body, as put on by the soul or by God.

மறுவ. மெய்ப்பை, கஞ்சுறி, அஞ்சுகம், வாரணம், குப்பாயம், அங்கு, படம்

ம., தெ., து. சட்ட; க. சட்டெ, சொட்டெ

[சட்டம் → சட்டை = உடம்பு, உடம்பின் மீந்தோல், அதுபோன்ற மெய்ப்பை]

மீந்தோல் பெயர அடிபட்டவனை நோக்கி அவன் உடம்பு சட்டை சட்டையாய்க் கழன்றுவிட்டது என்றும் பாம்பு மீந்தோல் கழித்தலைச் சட்டை கழற்றுதல் என்றும் கூறுதல் காண்க (மு.தா. 109).

பழங்காலத்து மெல்லாடை, பாம்புச்சட்டை போன்றும், மூங்கிலின் உட்புற மீந்தோல் போன்றும் புகை விரிந்தாற் போன்றும் நீராவி படர்ந்தாற்போன்றும், இழையோடியது தெரியாமலும் பூந்தொழிலுடன் நுண்ணியதாய் நெய்யப்பட்டிருந்ததென்று பண்டைத் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

அரசர்க்கும் அரசியல் அதிகாரிகட்கும் அரண்மனை அலுவலர்க்குமே சட்டையணியும் உரிமையிருந்தது. சட்டை உடம்பிற்குப் பை

போன்றிருப்பதால் மெய்ப்பை என்றும் பெயர் பெறும். "ஈசனுங் கற்றுச் சொல்வோர் பின்வர விகலிற் கூடித் தேசுடைச் சட்டை சாத்தி" என்னும் பெரும்பற்றப் புலியூர் நம்பிக் கூற்றுப் பிற்காலத்ததேனும், சட்டை என்னும் சொல் முற்காலத்ததே. 'கஞ்சக மாக்கள்' என்னும் சிலப்பதிகாரச் சொற்கு "சட்டையிட்ட பிரதானிகள்" என்று அருஞ்சொல்லுரைகாரர் வரைந்திருத்தல் காண்க *(ப. ப. 44. 45)*.

சட்டை[2] *šaṭṭai,* பெ. (n.) மதிப்பு *(உவ.);* esteem, regard, honour, respect. *'அவன் யாரையுஞ் சட்டை செய்யவில்லை' (உவ.)* *'குட்டுமானம் தப்பி குசவனோடு பேசினால் சட்டையும் பண்ணான் சட்டியும் கொடான்' (பழ.).*

[சட்டம் → சட்டை]

த. *சட்டை* → Skt. šraddhā

சட்டை[3] *šaṭṭai,* பெ. (n.) *1.* ஒருவகை நிறை *(G.Sm.D.I. 1, 283);* a weight of about ten maunds. *2.* பொதி *(வின்.);* pack or sack for a beast of burden. *3.* தைவேளை *(மலை.);* species of cleome.

[சட்டம் → சட்டை]

சட்டை[4] *šaṭṭai,* பெ. (n.) தட்டை, தட்டையான பொருள்; flatness.

க. *சட்டெ, சட்டு;* பட. *சட்டெ.*

[தட்டை → சட்டை]

சட்டைக்கயிறு *šaṭṭai-k-kayiṟu* பெ. (n.) சட்டையை உடம்புடன் இறுக்கிக் கட்டுங் கயிறு; tying string of a jacket.

மறுவ. தாள்

[சட்டை + கயிறு]

சட்டைக்காரன் *šaṭṭai-k-kāraṉ,* பெ. (n.) ஐரோப்பியருக்கும் இந்தியருக்கும் பிறந்த கலப்பு இனத்தான்; Anglo-Indian.

ம. *சட்டக்காரன்;* க., து. *சட்டகார;* தெ. *சட்டகார வாடு*

[சட்டை + காரன்]

சட்டைக்காரன் = மேனாட்டார் போன்று சட்டை (கால்சட்டை, மேல்சட்டை) அணிபவன். "மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்" என வரும் முல்லைப்பாட்டு வரிகள் நம் நாட்டிற்கு வந்த யவனர் போன்ற அயல் நாட்டினரே சட்டை அணிந்திருந்ததையும் சட்டை மெய்ப்பை என அழைக்கப் பட்டதையும் காட்டுகின்றன. இச்சட்டை வகையைத் திருவாசகம் (177) குப்பாயம் என்று குறிப்பிடுகிறது. உடலில் அணிவது சட்டை (shirt) என்றும், சட்டையின் மேல் அணிவது குப்பாயம் (coat) என்றும் பாகுபடுத்தப்பெற்று வழக்கூன்றியுள்ளது.

சட்டைக்காரி *šaṭṭai-k-kāri,* பெ. (n.) சட்டைக்காரப் பெண் *(உவ.);* Anglo-Indian woman.

ம. *சட்டக்காரி*

[சட்டைக்காரன் (ஆ.பா.) – சட்டைக்காரி (பெ.பா.)]

சட்டைக்கை *šaṭṭai-k-kai,* பெ. (n.) மேற் சட்டையின் கைப் பகுதி; sleeve of a shirt.

ம. *சட்டக்கை*

[சட்டை + கை]

சட்டைகழற்று-தல் *šaṭṭai-kaḻaṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.i.) பாம்பு தோலுரித்தல்; to cast slough, as a snake.

[சட்டை + கழற்று-,]

சட்டைச்சாம்பு *šaṭṭai-c-cāmbu,* பெ. (n.) சீமைத்துணி வகை *(வின்.);* long cloth, Lancashire white cotton-shirtings.

தெ. *சாடி*

[சட்டை + சாம்பு]

சட்டைத்துணி *šaṭṭai-t-tuṇi,* பெ. (n.) சட்டை தைப்பதற்கான துணி; shirt-cloth.

[சட்டை + துணி]

சட்டைநாதன் *šaṭṭai-nādaṉ,* பெ. (n.) கொற்றவைக்கணத்தார் (சட்டையணிந்தவர்); Lord having a jacket, Bhairava *(செ.அக.).*

[சட்டை + நாதன்]

சட்டைநீக்கி *šaṭṭai-nīkki,* பெ. (n.) கருநீல நொச்சி; black-blue notchi; willow-leaved justicia - Justicia gendarussa *(சா.அக.).*

சட்டைப்புரை *šaṭṭai-p-purai,* பெ. (n.) சட்டைப்பை பார்க்க; see *šaṭṭai-p-pai.* "அபகரித்துச் சட்டைப்புரைக்குள்ளே இட்டுக் கொள்வர்" *(திவ். திருமாலை, வியா, 24, ப. 83).*

[சட்டை + புரை. புரை = துளை, அறை]

சட்டைப்பை *šaṭṭai-p-pai*, பெ. (n.) சட்டையில் அமைக்கப்படும் பை; shirt pocket.

[சட்டை + பை. பொள் → பொய் → (பய்) → பை = உட்டுளையுடையது]

சட்டைபண்ணு-தல் *šaṭṭai-paṇṇu-*, 5 செ.குன்றாவி. (v.t.) மதிப்புக் கொடுத்தல், அக்கறை காட்டுதல்; to care for, regard.

[சட்டை + பண்ணு-,]

சட்டைமுனி *šaṭṭai-muṉi*, பெ. (n.) ஓகம் (யோகம்), மருத்துவம், பொன்னாக்கம் (இரசவாதம்), மெய்ப்பொருள் (தத்துவம்), முதலியவற்றைப் பற்றிய நூல்களைப் பாடியவரும் அகத்தியரின் மாணவருமான அறிவர் (சித்தர்); a very ancient Siddhar of the Agastiyar's school of thought, author of various works on alchemy, medicine, yoga and philosophy *(சா.அக.)*.

[சட்டை + முனி. முனிதல் = சினத்தல், வெறுத்தல். முனி → முனிவு = சினம், வெறுப்பு. முனிவு → முனிவன் = உலகப் பற்றைத் துறந்த அறிவன்]

சட்டையன் *šaṭṭaiyaṉ*, பெ. (n.) திருவரங்கத் திருக்கோயிலுக்கு நிலம் கொடையாகக் கொடுத்தவன்; the land donar to Thiruvarangam temple "பெரியகோயில் நம்பிக்கு நீர்வார்த்துக் கொடுத்தேன் சட்டையனேன்". *(தெ. க. தொ. 24, கல். 157: 29)*.

[சட்டை → சட்டையன்]

சட்டோலை *šaṭṭōlai*, பெ. (n.) சட்டம் எழுதுதற்குரிய ஓலை *(யாழ். அக.)*; ola or palm-leaf fit for writing.

ம. சட்டோல

[சட்டம் + ஓலை]

சட்பதாதிதி *šaṭpadātiti*, பெ. (n.) 1. சண்பகம்; champak. 2. மாமரம்; mango tree *(சா.அக.)*.

சட்பம் *šaṭpam*, பெ. (n.) 1. இளம்புல்; tender grass. 2. அறுகு; bermuda grass *(சா.அக.)*.

[சல் → சல் → (சல்பம்) → சட்பம்]

சட்பராசி *šaṭbarāsi*, பெ. (n.) 1. அறுகம்புல்; bermuda grass - Cynodon dactylon. 2. நாணல்; reed *(சா.அக.)*.

[சட்பம் → சட்பராசி]

சடக்கடை *šaḍa-k-kaḍai*, பெ. (n.) ஒன்பது *(தைலவ.தைல 114)*; nine.

[சடம் + கடை . சடம் = உடம்பு. கடை= இடம். உடம்பிற் காணப்படும் ஒன்பது துளைகள், ஒன்பது.]

சடக்கன் *šaḍakkaṉ*, பெ. (n.) கடல்மீன் வகைகள்; sea-fish. (a.) pearly -white, attaining 18 in. in length. (b.) greyish, attaining 20 in. in length. (c.) brownish *(செ.அக.)*.

சடக்கன்வெட்டு *šaḍakkaṉ-veṭṭu*, பெ. (n.) ஒரு வகைக் காசு (நாணயம்) *(பணவிடு. 133)*; a coin.

[சடக்கன் + வெட்டு]

சடக்கினம் *šaḍakkiṉam*, பெ. (n.) ஒருவகைப் பூ; a plant - Coryza lacera *(சா.அக.)*.

சடக்கு[1] *šaḍakku*, பெ. (n.) 1. வேகம்; speed, rapidity. 'சாரிகை வந்த சடக்கு' *(ஈடு. 7.4 : 7)*. 2. செருக்கு; arrogance. 'மீனின் சடக்கு நடக்காது' *(தனிப்பா. 1, 339: 51)*.

ம. சடக்கம், சடக்கு; க. செடகு

[சட்டெனல் = விரைவைக் குறிக்கும் ஒலிக் குறிப்புச்சொல். சட்டு → சடக்கு]

சடக்கு[2] *šaḍakku*, பெ. (n.) உடல்; body. "மெய் போலிருந்து பொய்யாஞ் சடக்கை" *(தாயு. சச்சிதானந்த. 2)*.

[சடம் → சடக்கு]

சடக்குச்சடக்கெனல் *šaḍakku-c-caḍakkeṉal*, பெ. (n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. of clacking as when walking with wooden sandals *(செ.அக.)*.

[சடக்கு + சடக்கு + எனல்]

சடக்கெனல் *šaḍakkeṉal*, பெ. (n.) விரைவுக் குறிப்பு; onom. expr. signifying haste, rush. "சடக்கென............ கன்னறின்னென வேவினன்" *(திருவாலவா. 14: 4)*.

[சடக்கு + எனல்]

சடக்கேதனம் *šaḍakkēdaṉam*, பெ. (n.) முள்ளங்கி; Indian radish; garden radish *(சா.அக.)*.

சடக்கோதன் *šaḍakkōdaṉ*, பெ. (n.) வசம்பு *(மலை.)*; sweet flag.

சடகந்தம் *šada-kandam,* பெ. (n.) சடக்கோதன் பார்க்க; see *šaḍakkōdan.*

[சடம் + கந்தம்]

சடகம்[1] *šaḍagam,* பெ. (n.) *1.* ஊர்க்குருவி (சூடா.); sparrow. *2.* கரிக்குருவி; kingcrow. 'சடகமேநின்... இளம்பார்ப்பிற்கும்' (திருவாலவா. 60: 8.)

[சகடம் → சடகம் = வட்டமிட்டுப் பறக்கும் பறவை, ஊர்க்குருவி, கரிக்குருவி]

சடகம்[2] *šaḍagam,* பெ. (n.) வட்டில் (சூடா.); cup, drinking vessel.

[சகடு → சகடம் → சடகம்]

சகடம் → Skt. šaṣaka

சடகை *šaḍagai,* பெ. (n.); ஊர்க்குருவிப் பேடு; hen-sparrow (சா.அக.).

ம. சடக்க

[சகடம் → சடகம் = ஊர்க்குருவி; சடகம் → சடகை. சடகம் (ஆ.பா.) → சடகை (பெபா.)]

சடகோபதாசர் *šaḍagōba-dāšar,* பெ. (n.) அரிசமய தீபம் என்னும் நூலை இயற்றியவரும் 17ஆம் நூற்றாண்டிலிருந்தவருமாகிய ஆசிரியர்; author of the Ari-šamaya-dībam, 17th c. (செ.அக.).

[சடகோபன் + தாசர்]

Skt. dāsa → த. தாசர்

சடகோபம் *šaḍagōbam,* பெ. (n.) திருமால் கோயிலில் இறைவழிபாடு செய்பவர்களது முடியில் வைத்து அருள் வழங்குதற்கும் பிறவற்றுக்குமாக அமைக்கப்பட்டு இறைவனின் முன்பாக வைக்கப்பெற்றுள்ள திருமாலின் திருவடி நிலை; small metal head-cover on which Tirumāl(Viṣṇu)'s sandals or feet are engraved and which is placed over the head of worshippers in Tirumāl (Viṣṇu) temples. 'சடகோபஞ் சித்திக்க' (அழகர்கலம். காப்பு. 1).

[சகடம் → சடம் + கோபம்]

சடகோபம் → Skt. šaṭha-kōpa

சடகோபரந்தாதி *šaḍagōbar-andādi,* பெ. (n.) நம்மாழ்வார் மீது கம்பன் இயற்றியதாகக் கூறப்படும் ஓர் ஈறு தொடங்கி (அந்தாதி) நூல்; poem on Nammālvār said to be composed to Kamban.

[சடகோபர் + அந்தாதி]

சடகோபன் šaḍagōban, பெ. (n.) நம்மாழ்வார் (சடமென்னும் வளியை (வாயுவை) வென்றவன்); Nammālvār, a Vaiṣṇava saint, as one who subdued the evil humour šaḍam. 'குருகூர்ச்சட கோபன்' (திவ்.திருவாய். 1, 1, 1).

[சடம் + கோபன்]

சடங்கடி *šaḍaṅgaḍi,* பெ. (n.) ஏமாற்று (வஞ்சனை); deceit. "சடங்கடிக்கு வாய்த்த சளக்கா" (சரவண. பணவிடு. 36).

[சட்டம் → சடங்கு + அடி. அடி = திரும்புதல், நீக்குதல், மறுத்தல். சடங்கடி → சட்டத்திற்குப் பணியாமல் நடத்தல், ஏமாற்றுதல் (வ.வ. 335)]

சடங்கப்படு-தல் *šaḍaṅga-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) *1.* மூட்டையாகக் கட்டப்படுதல்; to be packed into a bundle. *2.* வேலையில் மூண்டிருத்தல்; to be engaged in a work or duty (செ.அக.).

[சடங்கம் + படு-,]

சடங்கப்பூட்டு *šaḍaṅga-p-pūṭṭu,* பெ. (n.) சடங்கு[2] பார்க்க (யாழ்.அக.); see *šaḍaṅgu.*

[சடங்கம் + பூட்டு]

சடங்கம்[1] *šaḍaṅgam,* பெ. (n.) *1.* வழிச் செல்கைக்கான மூட்டை; knapsack 'சடங்கத்திலே போட்டுக்கட்டு' (வின்.). *2.* வருத்தம் (வின்.); difficulty, straits, entanglement. *3.* வேலை (வின்.); work, duty.

ம. சடங்ஙம் (மற்போர் வகை)

[சடம் = பொருள். சடம் + அங்கம் = பொருள் பொதிந்த கட்டு, பயணமூட்டை]

சடங்கம்[2] *šaḍaṅgam,* பெ. (n.) ஊர்க்குருவி; house sparrow. 'இளங்களிறாயுஞ் சடங்கமாயும்' (நீலகேசி, 206, உரை, மேற்கோள்).

ம. சடகம்

[சடகம் → சடங்கம்]

த. சடங்கம் → Skt. šaṭaka

சடங்கம்போடு-தல் *šaḍaṅgam-pōḍu-,* 9 செ.குன்றாவி. (v.t.) மூட்டையாகக் கட்டுதல் (வின்.); to make up or pack into a bundle.

[சடங்கம் + போடு-,]

சடங்கயம் *šaḍaṅgayam,* பெ. (n.) வெள்ளை முத்துச்சோளம்; white maize *(சா.அக.).*

சடங்கா-தல் *šaḍaṅgā-,* 6 செ.கு.வி. (v.i.) பெண் பூப்படைதல் (இ.வ.); to arrive at puberty, as a girl.

[சடங்கு + ஆ-,]

சடங்காகு-தல் *šaḍaṅgāgu-,* 5 செ.கு.வி. (v.i.) *சடங்கா-தல்* பார்க்க; see *šaḍaṅgā-.*

[சடங்கு + ஆகு-,]

சடங்கு[1] *šaḍaṅgu,* பெ. (n.) *1.* நூன்முறை பற்றியும் வழக்கம் பற்றியும் மேற்கொள்ளும் செயற்பாடு; rite, ceremony. "மறையவன் சடங்கு காட்ட" *(கம்பரா. கிளைக. 81). 2.* முதற் பூப்புச் சடங்கு; ceremony performed at the pubescence of a girl. "சடங்கு மாதங் கழிக்கு முன்னாம்" *(தனிப்பா.1,378:21). 4.* திருமண உறவு (இ.வ.); nuptials, consummation.

ம. சடங்கு, சடங்ஙு; க. சட்டு, செட்டு (முதல் பூப்பு நீராட்டு விழாவின்போது, பெண், மஞ்சள் தடவிய கையால் சுவரைத் தொட்டு உண்டாக்கும் கையடையாளம்).

[சட்டம் → சடங்கு = மதமுறைப்படி அல்லது ஒழுக்க முறைப்படி நடைபெறும் கரணம் (மு.தா. 108)]

சடங்கு[2] *šaḍaṅgu,* பெ. (n.) குண்டுக் கட்டாய்க் கட்டும் மற்பிடிவகை; a variety of wrestler's grapple, probably forcing a person into a ball-like position. "சடங்காகப் பிடித்து உயிர்போக நெரித்துத் தொலைத்த மல்லாடலும்" *(சிலப். 6: 49, உரை).*

[சடங்கம் → சடங்கு]

சடங்குகழி-த்தல் *šaḍaṅgu-kaḻi-,* 4 செ.கு.வி. (v.i.) பெண்ணின் முதற்பூப்பிற்கான சடங்கினைச் செய்தல் (உ.வ.); to celebrate the pubescence of a girl with the prescribed ceremonies.

[சடங்கு + கழி-,]

சடங்குவீடு *šaḍaṅgu-vīḍu,* பெ. (n.) *1.* பூப்பு நீராட்டுச் சடங்கு நிகழும் வீடு (உ.வ.); the house where puberty-ceremony is performed. *2.* திருமணம் முதலிய சிறப்பு நிகழ்ச்சி நடக்கும் வீடு; the house where a ceremony is performed, as marriage *(செ.அக.).*

[சடங்கு + வீடு]

சடச்சி *šaḍacci,* பெ. (n.) *1.* பொன்னிமிளை; a mineral, Bismuth pyrites. *2.* செவ்வலரி; red oleander *(சா.அக.).*

[சடை → சடம் → சடச்சி]

சடச்சியங்கம் *šaḍacci-y-aṅgam,* பெ. (n.) கருப்புக் கொள்; black horse-gram *(சா.அக.).*

சடசடப்பு *šaḍašaḍappu,* பெ. (n.) ஈரடுக் கொலிக் குறிப்பு; onom. expr. signifying dash, etc.

மறுவ. சடசடெனல்

[சட + சடப்பு. 'பு' - பெ. ஆ. ஈறு]

சடசடவெனல் *šaḍa-šaḍa-v-eṉal,* பெ. (n.) ஒலிக்குறிப்பு; onom. expr. signifying crash, peal of repeated sound *(செ.அக.).*

[சடசட + எனல்]

சடசடெனல் *šaḍa-šaḍeṉal,* பெ. (n.) ஓர் ஒலிக் குறிப்பு; onom. expr. signifying sound of falling trees, report of a gun, rattling of stones thrown. 'சடசட விடுபெணை பழம்' *(தேவா. 515, 9).*

ம. சடசட, சடசடா; க., தெ., து. சடசட; குட. சட்; Skt. caṭacaṭā

[சடசட + எனல்]

சடத்துவம் *šaḍattuvam,* பெ. (n.) சடத்தன்மை; lifeless nature.

[சடம் → சடத்துவம்]

சடநிறம் *šaḍa-niṟam,* பெ. (n.) கருமைநிறக்கல் *(யாழ்.அக.);* a kind of blackstone.

[சடம் + நிறம்]

சடப்பால் *šaḍa-p-pāl,* பெ. (n.) முலைப்பால் *(மு.அ.);* mother's milk.

[சடம் + பால்]

சடப்பொருள் *šaḍa-p-poruḷ,* பெ. (n.) சடம்[1] பார்க்க; see *šaḍam*[1].

[சடம் + பொருள். சடப்பொருள் அழியும் இயல்பின.]

சடபம் *šaḍabam,* பெ. (n.) *1.* அறுகு; cynoden grass. *2.* புல்; grass *(சா.அக).*

[சடம் → சடபம்]

சடபதார்த்தம் *šaḍa-padārttam,* பெ. (n.) *சடம்*[1] *-1* பார்க்க; see *šaḍam*[1] *(செ.அக.).*

[சடம் + பதார்த்தம்]

சடபரதன் *šaḍa-paratan̲,* பெ. (n.) அறிவிலி போன்று திரிந்து கொண்டிருந்த ஒரு முனிவன்; a sage who was wandering about like an idiot. 'ஓதுஞ் சடபரதன்றனை யுணராதவ னிலனே' (பிரபோத. 5: 33).

[சட(ம்) + பரதன்]

சடபுட-த்தல் *šaḍapuḍa-,* 4 செ.கு.வி. (v.i.) 1. சடசடவென்னும் ஒலியுண்டாதல்; to make a crackling sound. 2. மிகுதியும் பரபரப் படைதல்; to be inordinately hasty (செ.அக.).

மறுவ. சடபுடாவெனல், சடபுடெனல்

[சட + புட-,]

சடபுடெனல் *šaḍa-puḍen̲al,* பெ. (n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. of crackling noise, etc. 2. மிகுவிரைவுக் குறிப்பு (உ.வ.); expr. signifying inordinate or feverish haste (செ.அக.).

ம. சடபுட, சடபடெ, சடபிட; க., து. சடபட; Skt. caṭapaṭa

[சட + புட + எனல்]

சடம்[1] *šaḍam,* பெ. (n.) 1. அறிவில் பொருள் (பிங்.); inanimate, lifeless matter. 2. உடல்; body. 'சடங்கொள் சீவரப் போர்வையர்' (தேவா. 805,10). 3. வயிறு; stomach.

[சட்டம் → சடம்; ஒ.நோ. பட்டம் → படம். (மு.தா. 109)]

த. சடம் → Skt. jaḍa, jala, cold, rigid, chilly; cold, frost, winter; water. D. caḷi, taṉ etc. for water D. jani might be thought of. -jaḍa, jala, senseless, stupid, apathetic, etc. i. caḷi, (jada and jala have been referred to the Indo-European languages by eminent scholars; the comparison with D. is only suggestive). (K.K.E.D. XXVI).

சடம்[2] *šaḍam,* பெ. (n.) 1. பொய் (பிங்.); falsehood, illusion. 2. ஏமாற்று (சூடா.); deception, fraud. 3. கொடுமை (பிங்.); cruelty, savageness. 4. சோம்பல் (பிங்.); idleness. 5. பிறக்கும்போது ஆதனிடம் (ஆன்மாவிடம்) மோதி அதன் நல்லறிவைக் கெடுப்பதாகக் கருதப்படும் ஒரு வகைக் காற்று; evil humour of the body that destroys the innate wisdom of the soul at birth.

[சட்டம் → சடம்]

சடம்[3] *šaḍam,* பெ. (n.) ஆறு (அக.நி.); river.

[சட்டம் → சடம்]

சடம்[4] *šaḍam,* பெ. (n.) அறியாமை; spiritual. ignorance. "சான்று வேண்டுஞ் சடத்தை யறிந்திலேன்" (மேருமந். 257.).

[சட்டம் → சடம்]

சடம்பு *šaḍambu,* பெ. (n.) சணல் (இ.வ.); sunn-hemp.

ம. சடம்பு

[சணை → சடம் → சடம்பு (மு.தா. 139)]

சடமுல்லாசம் *šaḍamullāšam,* பெ. (n.) தண்ணீர் விட்டான் கிழங்கு; water-root (சா.அக.).

சடர் *šaḍar,* பெ. (n.) அறிவில்லாதவர்; ignorant person.

[சடம் → சடன் → சடர்]

சடரச்சுவாலை *šaḍara-c-cuvālai,* பெ. (n.) சடராக்கினி பார்க்க; see *šaḍarākkin̲i.*

[சடரம் + சுவாலை]

சடரம் *šaḍaram,* பெ. (n.) வயிறு; belly. 'முடிகென்று சடரத்தை..... தமிழ்வல்ல முனி தடவலும்' (கந்தபு. வில்வலன்வாதாபிவ. 31).

[சடம் → சடர் → சடரம்]

சடரயாதனை *šaḍarayādan̲ai,* பெ. (n.) பேறுகால வலி; labour pain.

[சடம் → சடர்(வயிறு) + ஆதனை]

சடராக்கினி *šaḍarākkin̲i,* பெ. (n.) வயிற்றுத்தீ (சாடராக்கினி) (யாழ். அக.); gastric fire.

மறுவ. சடரச்சுவாலை

[சடம் → சடர் + அக்கினி]

சடராமயம் *šaḍarāmayam,* பெ. (n.) ஒரு நோய்; a disease.

[சடர் + ஆமயம்]

சடரி *šaḍari,* பெ. (n.) சிதைவு (யாழ். அக.); being broken or spoilt.

[சடம் → சடரி]

சடரூபம் *šaḍarūbam,* பெ. (n.) அறிவற்ற பொருள்; matter.

[சடம் + ரூபம்]

த. உருவம் → Skt. rūpa → த. ரூபம்

சடலட்சணம் *śaḍa-laṭcaṇam,* பெ. (n.) *சடவியல்பு பார்க்க;* see *śaḍa-v-iyalbu.*

[சட(ம்) + லட்சணம்]

Skt. lakshṇa → த. லட்சணம்

சடலபுடலம் *śaḍala-puḍalam,* பெ. (n.) **பருத்திருப்பது** *(யாழ்அக.);* that which is big and stout.

[சடலம் + புடலம். எதுகைநோக்கி வந்த மரபிணைமொழி]

சடலம் *śaḍalam,* பெ. (n.) உடல் (சூடா.); body.

[சடம் → சடலம் = உடம்பு. இது உலக வழக்கு. ஒ.நோ. படம் → படலம். சடலம் என்னும் வடிவம் வடமொழியில் இல்லை. சடலம் → சதரம் = உடம்பு (நெல்லை வழக்கு). சதரம் → சதிரம் (கொச்சைத் திரிபு) (வ.வ. 135, 136).]

வடவர் குளிர்மை என்பதை மூலக்கருத்தாக வைத்துக் குளிர், சில்லெனல், விறைப்பு, மரப்பு, அசைவின்மை, உணர்வின்மை, உணர்ச்சியின்மை, மயக்கம், திமிர், மடமை, மந்தம், உயிரின்மை, அறிவின்மை என்று முறையே பொருள் வளர்ப்பர். அறிஞர் இதன் பொருந்தாமையை அறிந்து கொள்க. குளிர்மைப் பொருளில் வரும் ஜட என்பது சளி என்னும் தென்சொல் திரிபாகலாம்.

சடலை[1] *śaḍalai,* பெ. (n.) சடலபுடலம் பார்க்க (யாழ். அக.); see *śaḍala-puḍalam..*

[சடல் → சடலை]

சடலை[2] *śaḍalai,* பெ. (n.) **வீண்செயல்;** useless act. 'இந்தச் சடலைகள் வேண்டுமோதான்' *(பாடு. 71, சந்நியாசம்).*

[சடல் → சடலை]

சடவத்து *śaḍavattu,* பெ. (n.) சடம்[1] பார்க்க; see *śaḍam*[1].

[சடம் + வத்து]

Skt. vastu → த. வத்து

சடவியல்வு śaḍaviyalvu, பெ. (n.) **தன்னையும், தலைவனையும் அறிந்திருக்கும் மாயை யாக்கையின் இயல்பு;** nature of 'māyā yākkai' which knows him and God.

[சட(ம்) + இயல்வு]

சடவுப்பு *śaḍa-v-uppu,* பெ. (n.) *1.* **ஒரு வகை உப்பு;** a kind of salt. *2.* **அமரியுப்பு;** salt from urine.

[சடம் + உப்பு]

சடவேர் *śaḍavēr,* பெ. (n.) **மல்லிகை;** jasmine *(சாஅக.).*

[சடை → சட + வேர்]

சடன் *śaḍan,* பெ. (n.) **மூடன், அறிவிலி;** fool, block head. "தேகமிறு மென்றுசடர் தேம்புவதேன்" *(தாயு. பராபரக். 181).*

[சடம் → சடன். 'ன்' – ஆ. பா. ஈறு]

சடாக்காரி *śaḍā-k-kāri,* பெ. (n.) **நீர்;** water *(சாஅக.).*

சடாகம் *śaḍagam,* பெ. (n.) **அருநெல்லி;** star goose-berry - Phyllanthus distichus *(சாஅக.).*

சடாகுடம் *śaḍākuḍam,* பெ. (n.) **சடாமுடி, சடை** (இ.நு.த.); matted hair.

[சடை→ சடா + குடம்]

த. சடை → Skt. jaḍā

சடாங்கன் *śaḍāṅgan,* பெ. (n.) **சடைமுடியை யுடையவன், சிவன்;** one who has matted hair, Śivan.

[சடை → சடா + அங்கன்; Skt. aṅga → த. அங்கம், அங்கம் → அங்கன்]

சடாடவி *śaḍāḍavi,* பெ. (n.) **அடர்ந்த முடி;** thick matted hair. 'கமலைப்பிரான் செஞ்சடாடவிதான்' *(தனிப்பா. 1. 71:141).*

[சடை → சடா + அடவி. அடு → அடர் → அடர்வி → அடவி = மரமடர்ந்த காடு. சடை யடர்ந்த முடி சடாடவி எனப்பட்டது.]

த. அடவி → Skt. aṭavi

சடாதரம் *śaḍādaram,* பெ. (n.) **அருநெல்லி;** star goose-berry *(செ.அக.).*

சடாதரன் *śaḍā-daran,* பெ. (n.) *1.* **சடை யுடையவன், சிவன்;** Śivan, as having matted hair. *2.* **வீரபத்திரன்** (பிங்.); Virabhadran.

[சடை → சடா + தரன்]

Skt. dhara → த. தரன்

சடாதரி[1] *śaḍā-dari,* பெ. (n.) **சடையை யுடையாள், மலைமகள்** (பார்வதி); Pārvadi.

[சடை → சடா + தரி]

Skt. dhari → த. தரி

சடாதரி[2] *šadā-dari,* பெ. (n.) *1. சவுரிக்கொடி;* virginian silk - Peripioca asclepidoe. *2. சவுக்கு;* whip tree - Casuariana litoralis *(சா.அக.).*

[சடை → சடா + தரி. சடை முடியைப் போன்ற நீண்ட இலைகளையுடையது.]

சடாதலிகம் *šadādaligam,* பெ. (n.) *1. மகிழமரம்;* ape-face flower - Mimusops elengi. *2. மொந்தன் வாழை;* large plantain tree *(சா.அக.).*

சடாதாரி *šadādāri,* பெ. (n.) *1. சடைமுடி உடையவன்;* a person with matted hair. *2. சிவன்;* Śivan. "தாமமே தந்து சடாதாரி நல்கானேல்" *(பதினொ. திருக்கைலா. ப. 40).* 3. வரிக்கூத்து வகை *(சிலப். 3: 13, உரை);* a masquerade dance. 4. அம்மையார் கூந்தல் *(மலை.);* Seeta's thread.

[சடை → சடா + தாரி]

Skt. dhāri → த. தாரி

சடாநாதர் *šadānādar,* பெ. (n.) *ஆனந்தத் தாண்டவபுரம் என்னும் ஊரில் திருக்கோயில் கொண்டருளிய சிவன்;* Lord Śiva of Ananda Thandavapuram.

[சடை → சடா + நாதர்]

சடாபடம் *šadāpadam,* பெ. (n.) *எருக்கு;* madar *(செ.அக.).*

சடாபலம் *šadāpalam,* பெ. (n.) பனை *(மூ.அ.);* palmyra tree.

[சடை → சடா + பலம்]

சடாபாரம் *šadā-bāram,* பெ. (n.) *சடைக்கற்றை;* heavy matted hair, as of Sanyasin *(செ.அக.).*

[சடை → சடா + பாரம்]

Skt. bhāra → த. பாரம்

சடாபூதம் *šadābūdam,* பெ. (n.) *சடாமாஞ்சில்;* Indian spikenard - Valeriana jatamansi *(சா.அக.).*

[சடை → சடா + பூதம்]

சடாமகுடப்பெருமாள் *šadā-maguda-p-perumāḷ,* பெ. (n.) *நெல்லை மாவட்டம், பெருங்குளத்தில் உள்ள திருவழுதீசுவர ஆலயத்தின் வழிபாட்டுக் கடவுள்;* presiding deity of the temple Tiruvaḻudīšvara in Peruṅgulam in Tirunelvēli district. "திருவழுதி வளநாட்டுப் பெருங்குளத்துத் திருவழுதீஸ்வரத்து ஐடாமகுடப் பெருமாளுக்கு வேண்பு நாட்டு நால்வர்" *(தெ. க. தொ. 14. கல். 59. 2).*

[சடைமகுடம் → சடாமகுடம் + பெருமாள்]

சடாமகுடம் *šadā-magudam,* பெ. (n.) *சடைமுடி;* matted hair coiled into a crown. "சடா மகுடத்திலே கங்கை யடங்கும்" *(தனிப்பா. 1, 5:23).*

[சடை → சடா + மகுடம்]

சடாமகுடன் *šadā-magudan,* பெ. (n.) சிவன்; Lord Śivan.

[சடை → சடா + மகுடன். மகுடம் → மகுடன்]

சடாமாஞ்சி *šadāmāñji,* பெ. (n.) செடி வகை *(வின்.);* spikenard herb, Nardostachys jatamansi.

மறுவ. சடாமாஞ்சில்

ம. சடாமாஞ்சி

[சடை→ சடா + மாஞ்சி]

சடாமாஞ்சில் *šadāmāñjil,* பெ. (n.) *நமத்தம் என்கிற புல்லினம்;* valarian or Indian spikenard - Valerian jatamansi *(சா.அக.).*

மறுவ. சடாசஞ்சி, சடாமாசி. பெருங்கோரைக் கிழங்கு, பெருங்கோரை

[சடை→ சடா + மாஞ்சில்]

இது ஒரு கடைச் சரக்கு; சடையுடன் இருக்கும்; சற்று மஞ்சள் சாயலான கறுப்பு நிறம் உடையது; காரம் நிறைந்தது.

சடாமுடி *šadā-mudi,* பெ. (n.) *சடாமகுடம் பார்க்க;* see *šadā-magudam.* "மின்னெறி சடாமுடி" *(நன்னெறி, காப்பு).*

[சடை → சடா + முடி]

சடாமுனி *šadā-muni,* பெ. (n.) *பேய் வகை;* a kind of demon *(செ.அக.).*

[சடை → சடா + முனி]

சடாமூலம் *šadā-mūlam,* பெ. (n.) *சடாவேரி பார்க்க;* see *šadā-vēri.*

[சடை → சடா + மூலம்]

சடாய்[1]**-த்தல்** *šadāy-,* 4 செ.கு.வி. (v.i.) செழித்தல் *(வின்.);* to grow thick, bushy, leafy.

க. சடாயுத, சடாயித, சடாய்த (மிகுதியாதல்)

[சடை → சடாய்-,]

சடாய்[2]**-த்தல்** *šadāy-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1. துமுக்கி (துப்பாக்கி) கெட்டித்தல்;* to load, as a gun. *2. அதட்டுதல்;* to rebuke, to chide.

[சடாய் → சடாய்த்தல் (வ.வ. 137)]

சடாய்[3]-த்தல் *šaḍāy-, 4* செ.கு.வி. (v.i.) பெருமிதமாய் பேசுதல்; to talk tall, to boast.

[சடாய்-[2] → சடாய்-[3]]

சடாய்[4] *šaḍāy,* பெ. (n.) சடாயு பார்க்க; see *šaḍāyu.* 'புறங்கண்ட சடாயென்பான்' (தேவா. 159, 6).

சடாயு *šaḍāyu,* பெ. (n.) இராம கதையில் கூறப்படும் ஒரு கழுகு வேந்தன் (கம்பரா.); a vulture-king who figures in Ramayana.

[சடை → சடா → சடாயு]

த. சடாயு → Skt. jaḍāyu

சடாயுபுரம் *šaḍāyu-puram,* பெ. (n.) புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுவரன் கோயில்) என்னும் திருத்தலத்தின் மறுபெயர்; one of the name of Vaittīsvaran̲ koil.

[சடை → சடா → சடாயு + புரம்]

சடார்புடாரெனல் *šaḍārbuḍār-en̲al,* பெ. (n.) விரைவை உணர்த்தும் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying hasteness.

[சடார் + புடார் + எனல்]

சடாரட்டியெனல் *šaḍār-aṭṭi-y-en̲al,* பெ. (n.) விரைவுக் குறிப்பு; onom. expr. signifying haste.

[சடார் + அட்டி + எனல்]

சடாரி[1] *šaḍāri,* பெ. (n.) 1. சடகோபன்; a Vaiṣṇava saint. 2. சடகோபம் பார்க்க; see *šaḍagōbam* (செ.அக.).

[சடை → சடாரி]

சடாரி[2] *šaḍāri,* பெ. (n.) கவசம் (சூடா.); coat of mail.

[சடை → சடா → சடாரி]

சடாரிடல் *šaḍāriḍal,* பெ. (n.) சடாரெனல் பார்க்க (வின்.); see *šaḍār-en̲al.*

மறுவ. சடாரெனல்

[சடார் + இடல்]

சடாரெனல் *šaḍār-en̲al,* பெ. (n.) 1. ஓர் ஒலிக் குறிப்பு; onom. expr. signifying crackling sound. 2. திடீரென நிகழ்வதைக் குறிக்கும் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying all at once, suddenly, used of rising or a sneezing etc.

க. சடக்கனெ

[சடார் + எனல்]

சடாலம்[1] *šaḍālam,* பெ. (n.) ஆலமரம் (சங்.அக.); banyan tree.

[சடை → சடா + ஆலம்]

த. சடாலம் → Skt. jatāla

சடாலம்[2] *šaḍālam,* பெ. (n.) தேன்கூடு (சங்.அக.); honey comb.

[சடை → சடா → சடாலம்]

சடாலு *šaḍālu,* பெ. (n.) செண்பகப்பூ; champak flower - Michelia champaca (சா.அக.).

[சடை → சடா → சடாலு]

சடாவல்லவன் *šaḍā-vallavan,* பெ. (n.) சடை முறையில் மறைப்பகுதிகளைச் சொல்வதில் வல்லவன்; one clever at reciting Vēdic texts according to jaṭā arrangement. இவன் சடாவல்லவனென்பான் (பிரபோத. 11: 5).

[சடை → சடா + வல்லவன்]

சடாவு *šaḍāvu,* பெ. (n.) ஏற்றம் (P.T.L.); ascent, increase.

H. chaṭā

[சடைத்தல் = அடர்ந்து வளர்தல். சடை→ சடா; சடாய்த்தல் = செழித்தல். அடர்ந்து வளர்தல். சடா → சடாவு = வளர்ச்சி, ஏற்றம்]

சடாவேரி *šaḍāvēri,* பெ. (n.) தண்ணீர்விட்டான்; a common climber with many thick fleshy roots (செ.அக.).

[சடை → சடா + வேரி. வேர்+இ = வேரி]

சடி *šaḍi,* பெ. (n.) 1. சடை; matted lock of hair. 2. துப்பட்டி; sheet of cloth.

[சடைத்தல் = நெருங்குதல், அடர்தல், நெருங்கிக்கிடத்தல். சடை → சடா. சடாய்த்தல் = அடர்ந்து வளர்தல். சடா→ சடி = சடை, அடர்த்தியாக நூலிழையால் நெய்த போர்வை]

சடிதி[1] *šaḍidi,* கு.வி.எ. (adv.) விரைவாக; quickly, instantly, at once. "வையமேற் சடிதி வீழ்ந்து" (சேதுபு. சீதைகுண். 20).

[சடுதி → சடிதி]

சடிதி[2] *šaḍidi,* பெ. (n.). சடிதிவு பார்க்க (வின்.); see *šaḍidivu.*

[சடி → சடிதி]

சடிதியம் *šaḍidiyam,* பெ. (n.) குறிஞ்சான்; Indian ipecacuauha - Tylophora asthamatica *(சா.அக.).*

சடிதிவு *šaḍidivu,* பெ. (n.) ஏலத்தோல் (வின்.); cardamom husk.

[சடி → சடிதிவு]

சடிபஞ்சு *šaḍipañju,* பெ. (n.) மாதுளை; pomegranate - Punica granatum *(சா.அக.).*

சடிரை *šaḍirai,* பெ. (n.) வெண்தகரை; white senna; sulphur-flowered senna - Cassia glauca *(சா.அக.).*

சடிலம்[1] *šaḍilam,* பெ. (n.) அரிமா; lion.

[சடைத்தல் = அடர்ந்து கிளைத்தல். சடை= கற்றை, இயற்கையான மயிர்க்கற்றை. சடை → சடி → சடிலம். சடிலம் = நெருக்கம், நெருங்கிய பிடரி மயிரினையுடையது]

சடிலம்[2] *šaḍilam,* பெ. (n.) 1. செறிவு (திவா.); closeness, thickness, denseness, as of hair, foliage. 2. சடை[4] பார்க்க; see *šaḍai*[4]. "வெண்பிறைச் சடிலக்கோவே" *(தாயு. சொல்லற் கரிய. 5).* 3. குதிரை (பிங்.); horse, as having a mane. 4. வேர்; root. "உத்தாமணிச் சடிலத்தோடு" *(தைலவ. தைல. 93).*

[சடு → சடி → சடிலம்]

சடிலமஞ்சில் *šaḍilamañjil,* பெ. (n.) சடாமாஞ்சில் பார்க்க; see *šaḍāmāñjil* (சா.அக).

[சடாமாஞ்சில் → சடிலமஞ்சில்]

சடிலாகியம் *šaḍilāgiyam,* பெ. (n.) மூக்கொற்றிப் பூடு; pointed-leaved hogweed *(சா.அக.).*

சடிலை *šaḍilai,* பெ. (n.) சடாமாஞ்சி (தைலவ. தைல. 14); spikenard.

[சடிலமஞ்சில் → சடிலை]

த. சடிலை → Skt. jaṭila

சடினம் *šaḍinam,* பெ. (n.) 1. வசம்பு (மலை.); sweet flag. 2. நெட்டிவேர் (மூ.அ.); root of the sola-pith.

[சடை → சடி → சடினம்.]

சடு[1] *šaḍu,* பெ. (n.) வயிறு (யாழ். அக.); belly.

[சடம் → சடு]

சடு[2] *šaḍu,* பெ. (n.) ஆய்வு; examination, inspection.

[அடுதல் = கருதுதல். அடு → சடு]

சடுக்கா *šaḍukkā,* பெ. (n.) 1. சடுக்கா வண்டி; juṭkā, a small cart. 2. விரைவு; quickness, swiftness.

[சடு → சடுக்கா (மு. தா. 62)]

சடுகுடு *šaḍuguḍu,* பெ. (n.) சிறுவர் விளையாட்டு (G.Tn.D.I. 105); a boy's game.

ம. சடுகுடு

[சடு + குடு. ஒலிக்குறிப்புச் சொல், அவ்வாறு சொல்லிக் கொண்டு ஆடும் விளையாட்டு]

ஆடுவாருள் ஒவ்வொருவனும் எதிர்க்கட்சியின் எல்லைக்குட் சென்று, சடுகுடு என்று சொல்லியாடும் ஆட்டு, சடுகுடு எனப்பட்டது. இது பாண்டி நாட்டில் குடட்டி என்றும், வடசோழ நாட்டில் பலிச்சப்பிளான் அல்லது பலீன் சடுகுடு என்றும் பெயர்பெறும். சடுகுடு என்பது தென் சோழ நாட்டிலும் கொங்கு நாட்டிலும் இதற்கு வழங்கும் பெயராம்.

ஆடுவாரெல்லாரும், உத்திகட்டிச் சமத் தொகையான இரு கட்சியாகப் பிரிந்து கொள்வர். இரு கட்சியார் இடத்திற்கும் இடையில் ஒரு குறுக்குக் கோடு கீறப்பெறும். சோழ நாட்டார் இதை உப்புக்கோடு என்பர்.

முதலாவது எந்தக் கட்சியார் பாடிவருவது என்று ஏதாவதொரு வகையில் தீர்மானிக்கப் பெறும். அங்ஙனம் தீர்மானிக்கப்பெற்ற கட்சியாருள் ஒருவன் உப்புக் கோட்டைத் தாண்டி எதிர்க்கட்சி யெல்லைக்குட் புகுந்து 'சடுகுடு சடுகுடு' என்றோ "சடுகுடு குடு குடு குடு" என்றோ 'பலீஞ் சடுகுடு' என்றோ, இடைவிடாது பாடிக்கொண்டு எதிர்க்கட்சியாருள் ஒருவனையோ, பலரையோ தொட்டுவிட்டு அவனிடமேனும் அவரிடமேனும் பிடி கொடாது தன் கட்சி எல்லைக்குள் வந்துவிட வேண்டும். அங்ஙனம் வரும்வரை பாடுவதை நிறுத்தக்கூடாது. அவனால் தொடப்பட்ட வரெல்லாம் தொலைந்துவிடுவர். அவர் ஆட்டிற் கலவாது ஒரு புறமாய்ப் போயிருத்தல் வேண்டும். அதன்பின், தொடப்பட்ட கட்சியருள் ஒருவன் இங்ஙனமே எதிர்க் கட்சியெல்லைக்குட் புகுந்து ஆடிச் செல்ல வேண்டும்.

சடுகுடு என்னும் விளையாட்டு, வெட்சிப் போரினின்று தோன்றியதாகத் தெரிகின்றது. இரு கட்சியாரும் வெட்சி மறவரும் கரந்தை மறவரும் போல்வர். இடைக்கோடு, அவ்விரு சாரார் நாட்டிற்கும் இடைப்பட்ட எல்லைப் புறம் போன்றது. 'பலிஞ்சடுகுடு' என்று பாடுவது, காளிக்குப் பலியிடுவதையும் துடி

கொட்டுவதையும் குறிப்பது. (துடிப்பறையின் சிறியவகை சடுகுடுக்கை அல்லது குடுகுடுப்பை என்று பெயர் பெற்றிருத்தல் காண்க). இரு கட்சியாரும் தத்தம் எதிர்க்கட்சியாரைப் பிடித்து நிறுத்துவது நிரை கவர்தலையும் நிரை மீட்டலையும் நிகர்ப்பது. 'பட்டுப்போதல்' என்னும் வழக்கு வெட்சிப்போரில் வீழ்ந்திறத்தலைக் குறிப்பது. (த. வி. 57-60).



சடுகுடு விளையாட்டு

சடுத்தக்காரன் *šadutta-k-kāraṉ,* பெ. (n.) கட்டாயப்படுத்துவோன் (வின்.); one who urges or compels one who is importunate.

[சடுத்தம் + காரன்]

சடுத்தம்[1] *šaduttam,* பெ. (n.) 1. போட்டி (வின்.); rivalry, competition. 2. போராட்டம்; dispute. சடுத்தத்திலே வந்து விழுந்தது. 3. பூட்கை; challenge. "ஒருவருக்கொருவர் சடுத்தம் பேசி" (இராமநா. உயுத். 16). 4. கட்டாயப்படுத்துகை (வின்.); compelling, urging, importuning, being obstinate.

[சடு → சடுத்தம்]

சடுத்தம்[2] *šaduttam,* பெ. (n.) விரைவு, உடனடித் தேவை; urgency.

[சடு → சடுதி → சடுத்தம்]

சடுத்தம்பூட்டு-தல் *šaduttam-pūṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வலக்காரமாகப் புகுத்துதல்; to thrust by force.

[சடுத்தம் + பூட்டு-,]

சடுத்தி *šadutti,* பெ. (n.) ஆய்வு (இ.வ.); examination, inspection, review, search.

[சடு → சடுத்தி]

சடுதி[1] *šadudi,* பெ. (n.) சடுத்தி பார்க்க (கொ.வ.); see *šadudi.*

[சடுத்தி → சடுதி]

சடுதி[2] *šadudi,* கு.வி.எ. (adv.) சடிதி[1] பார்க்க (கொ.வ.); see *šadidi.*

[சடு → சடுதி (முதா. 62)]

சடுதிபார்-த்தல் *šadudi-pār-,* 4 செகுன்றாவி. (v.t.) தேர்வு பண்ணுதல்; to review, muster as forces as inspect, examine accounts.

[சடுதி + பார்-,]

சடுதியாக *šadudi-yāga,* வி.எ. (adv.) விரைவாக; quickly, fast. இந்த வேலையைச் சடுதியாக முடித்துவிட்டு வீட்டுக்குப் போகலாம்.

[சடுதி + ஆக]

சடுலம்[1] *šadulam,* பெ. (n.) நடுக்கம் (யாழ்.அக.); trembling, shaking.

[சடு = விரைவு. சடு → சடுலம். தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பது. இயங்குவது போல் அசையும் நடுக்கம்]

த. சடுலம் → Skt. caṭula

சடுலம்[2] *šadulam,* பெ. (n.) சடுலை பார்க்க; see *šadulai* (செ.அக.).

[சடு = விரைவு. சடு → சடுலம் = மிக வேகமாக பாய்வது, அவ்வாறு பாயும் மின்னல்]

சடுலவாரவம் *šadula-v-āravam,* பெ. (n.) சடுலவோசை பார்க்க; see *šadula-vōšai.* "கழை முதலிய தருக்களின் சடுலவாரவ மிஞ்சி" (பாரத. காண்டவ. 25).

[சடுலம் + அரவம்]

சடுலவோசை *šadula-vōšai,* பெ. (n.) தீக்கொழுந்து முதலியவற்றின் அசைவினால் எழும் ஒலி; tremulous sound, as of leaves in a forest flames of fire, etc. "வெடித்தெழு சடுல வோசையின்" (பாரத. காண்டவ. 20).

[சடுலம் + ஓசை]

சடுலை *šadulai,* பெ. (n.) மின்னல் (யாழ்.அக.); lightning.

[சடுலம் → சடுலை]

சடை[1]**-தல்** *šadai-,* 2 செகுவி. (v.i.) 1. சோர்வடைதல் (இ.வ.); to become weary, disheartened, dispirited. 2. உள்ளடங்குதல் (வின்.); to be shut in. 3. பயிர் முதலியன நறுங்கிப் போதல், வளர்ச்சி தடைபட்டுப் போதல்; to be stunted in growth, as trees, plants.

ம. சடயுக

[சட்டு → சடை (முதா. 117)]

சடை[2]-தல் *šadai-*, 2 செ.குன்றாவி. (v.t.) *1.* ஆணி முதலியன தறைதல் (வின்.); to flatten, as the head or point of a nail by repeated blows; to clinch, rivet. *2.* தடுத்தல் (யாழ்ப்.); to stop the progress, to interrupt, arrest, check, prevent, hinder.

[(சுட்டு) → சட்டு → சடை]

சடை[3]-த்தல் *šadai-*, 4 செ.குவி. (v.i.) சடை[1] -1 பார்க்க; see *šadai*[1]-1. "கொடுக்கக் கை சடைப் பாரில்லை" (குற்றா. தல. தக்கன் வேள்விச். 80).

[சுட்டு → சட்டு → சடை → சடைதல் (மு.தா. 117)]

சடை[4]-த்தல் *šadai-*, 4 செ.குவி. (v.i.) *1.* அடர்ந்து கிளைத்தல் (யாழ்.அக.); to grow densely and luxuriantly. *2.* பெரியதாதல்; to grow big.

[சடாய் → சடை → சடைதல் (வ.வ. 138)]

சடை[5] *šadai*, பெ. (n.) *1.* நெட்டி (பிங்.); sola pith. *2.* அடைப்பு; stopper of a bottle, cork.

[சடாய் → சடை (வ.வ. 138)]

சடை[6] *šadai*, பெ. (n.) *1.* சடையாக அமைந்த மயிர்முடி; matted locks of hair. "விரிசடைப் பொறையூழ்த்து" (பரிபா. 9:5). "சடைத் தம்பிரானுக்குச் சாதம் இல்லாதபோது மொட்டைத் தம்பிரானுக்கு மோர் எங்கே கிடைக்கும்' (பழ.). *2.* பின்னிய கூந்தல் (பிங்.); plaited hair. *3.* அடர்ந்த மயிர்; bushy, shaggy or thick hair. *4.* வேர்; roots fibrous roots, as in a moss. "கடும்பழிச் சடையலைந்து" (கல்லா. 82. 3). *5.* விழுது (இலக்.அக.); aerial roots. *6.* இலாமிச்சை (தைலவ.தைல. 98); cuscus-grass. *7.* வெட்டிவேர் (தைலவ. தைல. 98); black cuscus-grass. *8.* சடாமாஞ்சி (தைலவ. தைல. 6) பார்க்க; see *šadāmāñji*. *9.* ஆறாவது விண்மீன் (பரிபா. 11:2, உரை); the sixth nakṣatra. *10.* ஆடவை ஓரை (பரிபா. 11: 2, உரை); Gemini. *11.* மறையோதும் முறைகளுள் ஒன்று; a method of recitting the Vēdā in which a pair of words is repeated thrice, one repetition being in inverted order. "சுரம்பதங் கிரமஞ் சடை" (பிரபோத. 11:4). *12.* கற்றை; thick bunch. *13.* ஆணியின் கொண்டை (யாழ்ப்.); flat head of a nail. *14.* பெரியது; which is big (செ.அக.).

மறுவ. குடிலம், வேணி, கோடீரம், பின்னல், சடிலம்

ம. சட, சட; க. சடெ, சடெ; தெ. சட; து. சடெ, செடெ; குட., பட. சடெ; கோத. செட்வ்

[சள்ளுதல் = சிக்குதல். சழிதல் = நெருங்குதல், அடர்தல், நெருங்கிக் கிடத்தல். "திங்கட் டொல்லரா கழிந்த சென்னி" (தேவா. 980: 6). சடாய்த்தல் = செழித்தல், அடர்ந்து கிளைத்தல். சடாய்→ சடை = கற்றை, இயற்கையான மயிர்க் கற்றை, கற்றையான சடைப்பின்னல். சடை = சடாய். சடைச் சம்பா, சடைச் சாமை, சடைப்பயறு, சடைப் பருத்தி, சடையவரை என்பன கற்றையான அல்லது கொத்தான பொருள்களை உணர்த்தும். சடைமுடி, சடைவிழுதல் சடையாண்டி, சடையன் என்னும் சொற்களில், சடை என்பது இயற்கையாகவோ எண்ணெய் தேய்க்காமையாலோ ஏற்படும் மயிர்க்கற்றையைக் குறிக்கும்.

வடவர் ஜட் (jaṭ) என்னும் சொல்லை மூலமாகக் காட்டுவர். அது சிக்கற் பொருளையுணர்த்துதலால் சடாய் என்பதன் திரிபே. (வ.வ. 136)]

சடை[7] *šadai*, பெ. (n.) 400 இழைகள் கொண்ட நூற்றொகுதி (செங்கை.); skein of thread.

மறுவ. சிலுப்பை

[சடாய் → சடை = கற்றை, நூற்றொகுதி]

சடைக்கஞ்சா *šadai-k-kañjā*, பெ. (n.) கஞ்சா வகை (சங்.அக.); a variety of Bengal hemp.

[சடை + கஞ்சா]

சடைக்கட்டை *šadai-k-kaṭṭai*, பெ. (n.) சடைகட்டை பார்க்க; see *šadai-kaṭṭai*.

[சடை + கட்டை]

சடைக்கணவாய் *šadai-k-kaṇavāy*, பெ. (n.) கணவாய் மீன்வகை (வின்.); a species of cuttle-fish.

[சடை + கணவாய்]

சடைக்கந்தம் *šadai-k-kandam*, பெ. (n.) *1.* வசம்பு; sweet flag. *2.* கந்தகம்; sulphur.

[சடை + கந்தம்]

சடைக்கரப்பான் *šadai-k-karappāṉ*, பெ. (n.) ஒரு வகைக் கரப்பான் நோய்; a crowded skin eruption - Strophulous confertus (சா.அக.).

[சடை + கரப்பான்]

சடைக்காந்தாரி *šadai-k-kāndāri*, பெ. (n.) காட்டுச்சாரணை பார்க்க; see *kāṭṭu-c-cāraṇai* (சா.அக.).

[சடை + காந்தாரி]

சடைக்கால் *šadai-k-kāl*, கொடிக்காற்பயிர் அழிபட்டு வரும் நிலம் (W.G.); land of an abandoned betel-garden.

[சடை[1] + கால்]

சடைக்கிரந்தி *šadai-k-kirandi*, பெ. (n.) கரப்பான் வகை (தஞ்.சர. iii. 92); a kind of eruption.

[சடை + கிரந்தி]

சடைக்குச்சு *šadai-k-kuccu*, பெ. (n.) தலை மயிரோடு பின்னித் தொங்கவிடுவதாய் இரண்டு மூன்று குச்சுக்களை உடைய அணி; hair-ornament with pendants composed of two or three small gold cups (செ.அக.).

க. சடெகுச்சு

[சடை + குச்சு]

சடைக்குச்சு

சடைக்குஞ்சம் *šadai-k-kuñjam*, பெ. (n.) சடைக்குச்சு பார்க்க (இ.வ.); see *šadai-k-kuccu*.

[சடை[6] + குஞ்சம்]

சடைக்குட்டம் *šadai-k-kuṭṭam*, பெ. (n.) யானைக் குட்டம்; a kind of leprosy with thickening of the skin (சா.அக.).

[சடை[2] + குட்டம். குள் → குட்டு → குட்டம் = குட்டை, குட்டி, விரல்களும் மூக்கும் அழுகிக் குட்டையாகும் நோய்]

த. குட்டம் → Skt. kuṣṭa

சடைக்குலம் *šadai-k-kulam*, பெ. (n.) வெள்ளைக் குந்திரிக்கம்; white dammer - Valeria indica (சா.அக.).

[சடை + குலம்]

சடைக்குழல் *šadai-k-kuḻal*, பெ. (n.) இரட்டை எருதுகளால் இழுக்கப்படும் ஏர் வகை; seed-drill or drill-plough drawn by a pair of the bullocks (செ.அக.).

[சடை + குழல். சதை → சடை]

சடைக்குறண்டி *šadai-k-kuṟaṇḍi*, பெ. (n.) சுமாலிக் குறண்டி; a species of caranday - Lepidagathis genus (சா.அக.).

[சடை + குறண்டி]

சடைக்கை *šadai-k-kai*, பெ. (n.) இலைக் கள்ளி; leaf-spurge - Euphorbia neirirfolia (சா.அக.).

[சடை + கை]

சடைக்கொடி *šadai-k-kodi*, பெ. (n.) நெட்டி; pith plant (சா.அக.).

[சடை[5] + கொடி]

சடைக்கோங்கு *šadai-k-kōṅgu*, மஞ்சட் கோங்கு (சித். அக); a species of common caung.

[சடை[4] + கோங்கு]

சடைகட்டு-தல் *šadai-kaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.i.) பின்னிய சடைமுடியைத் தூக்கிக் கட்டுதல்; to plait tresses.

க. சடெகட்டு

[சடை[6] + கட்டு]

சடைகட்டை *šadai-kaṭṭai*, பெ. (n.) மீன்பிடி வலையுடன் அடையாளத்தின் பொருட்டு கட்டப்பட்டிருக்கும் மிதவை (செங்கை); floating log tied with fishing net.

[சடை + கட்டை]

சடைச்சம்பா *šadai-c-cambā*, பெ. (n.) கற்றை கற்றையாகக் காய்க்கும் சம்பா நெல் வகை; a variety of šambā paddy bearing grains in thick clusters (செ.அக.).

ம. சடச்சம்பா

[சடை + சம்பா]

சடைச்சி *šaḍaicci,* பெ. (n.) 1. நெட்டி (மலை.); sola pith. 2. கீரிப்பூண்டு (L.); Indian snake-root. 3. புளியாரை (மூ.அ.); yellow wood-sorrel. 4. பாசிவகை (பிங்.); a kind of moss. 5. மரவகை; common Indian linden. 6. பொன்னிமிளை என்னும் செவ்வெண்மையான கல்வகை (வின்.); a mineral.

ம. சடச்சி

[சடை[5] → சடைச்சி]

சடைச்சிகை *šaḍai-c-cigai,* பெ. (n.) மீன்கொல்லி; fish-killer - Anamirta cocculus (சா.அக.).

சடைச்சிகி *šaḍai-c-cigi,* பெ. (n.) நீர்ச்சுண்டி floating sensitive plant - Neptunia oberacca (சா.அக.).

சடைச்சிகிரி *šaḍai-c-cigiri,* பெ. (n.) மிளகாய்; chilli - Capsicum fruitescens (சா.அக.).

சடைச்சிவேர் *šaḍaiccivēr,* பெ. (n.) பூடுவகை (சங். அக.); a plant - Achyranthes corymbosa.

[சடை → சடைச்சி + வேர்]

சடைச்செந்நெல் *šaḍai-c-cennel,* பெ. (n.) சடைச்சம்பா பார்க்க; see *šaḍai-c-cambā.* 'சடைச்செந்நெல் பொன்விளைக்கும்... நாடு' (நள. சுயம்வர.. 68).

[சடை + செந்நெல்]

சடைத்தும்பி *šaḍai-t-tumbi,* பெ. (n.) பெரிய தும்பி இன மீன் (மீனவ.); a large kind of tumbi (scatish) fish.

[சடை + தும்பி]

சடைத்தும்பை *šaḍai-t-tumbai,* பெ. (n.) முடித் தும்பை; a kind of leuces plant with thick set of flowers (சா.அக.).

[சடை + தும்பை]

சடைத்தேங்காய் *šaḍai-t-tēṅgāy,* பெ. (n.) நார் மிகுந்த தேங்காய் (யாழ்ப்.); coconut whose husk abounds in fibres.

[சடை + தேங்காய்]

சடைநவ்வல் *šaḍai-navval,* பெ. (n.) நரிநவ்வல் அல்லது சிறுநாவல்; ruddy black plum - Eugenia rubicunda (சா.அக.).

[சடை + நவ்வல்]

சடைநாகம் *šaḍai-nāgam,* பெ. (n.) மகளிர் தலையணி; a woman's hair-ornament (செ.அக.).

க. சடெநாகர

[சடை + நாகம். நல்லபாம்பு படம் பொறித்த பொன்னாலான, சிறுவட்ட வடிவத் தலையணி]

சடைநாங்கில் *šaḍai-nāṅgil,* பெ. (n.) பெருநாங்கில் என்னும் பெரிய இலைகளையுடைய இருள்மரம்; large-leaved ironwood - Mesua (genus) (சா.அக.).

[சடை[6] + நாங்கில்]

சடைநாய் *šaḍai-nāy,* பெ. (n.) உடலில் மயிரடர்ந்துள்ள நாய்வகை; a species of dog having shaggy hair.

[சடை[6] + நாய்]

சடைநாரை *šaḍai-nārai,* பெ. (n.) தலைப் பகுதியில் சடைபோன்ற நீண்ட இறகுகள் உடைய, செம்மஞ்சள்நிறக் கடற்பறவை (மீனவ.); reddish yellow coloured bird, which has matted hair-like portion on top of its wings.

[சடை[6] + நாரை]



சடை நாரை

சடைநெத்திலி *šaḍai-nettili,* பெ. (n.) நெத்திலி மீனிற் பெரியது (மீனவ.); big nettili fish.

[சடை[4] + நெத்திலி]

சடைப்பயறு *šaḍai-p-payaṟu,* பெ. (n.) பயறு வகை (L.); tufted green-gram.

[சடை[4] + பயறு]

சடைப்பருத்தி *šaḍai-p-parutti,* பெ. (n.) செம்மண்ணில் பயிராகும் அடுக்குப்பருத்தி (G.Sm.D.I.i,226); a superior kind of cotton raised in red loam.

க. சடெகத்தி

[சடை[4] + பருத்தி]

சடைப்பாசி *šaḍai-p-pāši,* பெ. (n.) சடைபோல் தடித்திருக்கும் பாசிவகை; a kind of moss.

[சடை[4]+ பாசி]

சடைப்பில்லை *šaḍai-p-pillai,* பெ. (n.) சடைவில்லை பார்க்க; see *šaḍai-villai.*

க. சடெபில்லை; தெ. சடபில்ல.

[சடை[6] + பில்லை]

சடைப்பின்னல் *šaḍai-p-pinnal,* பெ. (n.) ஒன்றோடொன்று நெருங்கிப்பிணைந்திருப்பது; intertwining like matted locks. 'கொடிகள் சடைப்பின்னலாகக் கிடக்கின்றன' (உ.வ.).

[சடை[6] + பின்னல்]

சடைப்புகையிலை *šaḍai-p-pugaiyilai,* பெ. (n.) இலை அதிகமாக வளரும் புகையிலை வகை; a kind of tobacco plant with thick set of leaves (சா.அக.).

[சடை[4] + புகையிலை]

சடைப்புல் *šaḍai-p-pul,* பெ. (n.) புல்வகை (M.M. 311); hairy grass.

[சடை[4] + புல்]

சடைப்பூச்சி *šaḍai-p-pūcci,* பெ. (n.) கம்பளிப் பூச்சி வகை (வின்.); a kind of caterpillar.

[சடை[6] + பூச்சி]

சடைப்பூம்பாதிரி *šaḍai-p-pūmbādiri,* பெ. (n.) மிகுதியாய்ப் பூக்கும் பாதிரிமரம்; trumpet flower tree with dense flowers - Sterlospermum chelonoides (சா.அக.).

[சடை + பூம்பாதிரி]

சடைப்பூரான் *šaḍai-p-pūrān,* பெ. (n.) பூரான் வகை; a kind of centipede.

[சடை[6] + பூரான்]

சடைப்பேய் *šaḍai-p-pēy,* பெ. (n.) சடை முடியுடைய பேய்; devil or goblin which has matted hair.

மறுவ. முனி

[சடை[6] + பேய். பேபே என்பது அச்சக் குறிப்பு. பே = அச்சம். பே → பேம் = அச்சம். பே → பேய் = அச்சம், அஞ்சபடும் ஆவி]

சடைப்பொருவா *šaḍai-p-poruvā,* பெ. (n.) ஒரு வகைக் கடல்மீன்; a kind of sea fish (மீனவ.).

[சடை + பொருவா]

சடைபற்று-தல் *šaḍai-parru-,* 5. செ.கு.வி. (v.i.) அடர்த்தியாதல் (வின்.); to become thick as of hair, leaves, etc.

[சடை[4] + பற்று-,]

சடைபின்னு-தல் *šaḍai-pinnu-,* 5 செ.கு.வி. (v.i.) தலைமயிரைப் பிரிவுகளாக்கி அவை ஒன்றுடன் ஒன்று பிணைந்து நிற்குமாறு பின்னுதல்; to plait the hair.

க. சடெபெணெ

[சடை[6] + பின்னு-,]

சடைபோட்டுக்கொள்(ளு)-தல் *šaḍai-pōṭṭu-k-koḷ-,* 13 செ.குன்றாவி. (v.t.) 1. தலைமுடியைச் சடையாக்கிக் கொள்ளுதல்; to have one's hair matted by artificial means. 2. தலைபின்னிக் கொள்ளுதல்; to have one's hair well combed and plaited.

[சடை[6] + போட்டுக்கொள்(ளு)-,]

சடைபோடு-தல் *šaḍai-p-pōḍu-,* செ.கு.வி. (v.i.) கூரைவீட்டின் முகட்டினைப் புல்லால் பின்னல்போட்டு மூடுதல்; to plait the straws on the gabled of a hut (கட்டட.).

[சடை[6] + போடு-,]

சடைமாஞ்சம் *šaḍai-māñjam,* பெ. (n.) மிளகு சாரணைக்கொடி; a creeper of Triantheme (சா.அக.).

[சடை + மாஞ்சம்]

சடைமாரியாயி *šaḍai-māri-y-āyi,* பெ. (n.) அம்மை நோய்க்குரிய பெண்தெய்வம் (M.L.); goddess of measles.

[சடை[4] + மாரியாயி. ஒ.நோ. அம்மன் = அம்மைநோய் வகை, காளி]

சடைமுடி *šaḍai-muḍi,* பெ. (n.) 1. சடை[6] 1 பார்க்க; see *šaḍai[6] 1.* 2. சடையோடு கூடிய மகுடம்;

matted hair coiled into a crown. "புன்மயிர்ச் சடைமுடிப் புலரா வுடுக்கை" *(சிலப். 25, 126).* 3. *சரக்கொன்றை (மூஅ.);* Indian laburnum.

க., தெ. சடெமுடி

[சடை⁴ + முடி]

சடைமுடியோர் *šaḍai-muḍiyōr,* பெ. (n.) **சடை முடியுடைய முனிவர்** *(பிங்.);* ascetics, as persons with matted hair.

[சடை⁴ + முடியோர்]

சடையநாயனார் *šaḍaiya-nāyaṉār,* பெ. (n.) **சுந்தரமூர்த்தி நாயனாரின் தந்தையும் அறுபத்துமூவருள் ஒருவருமான நாயனார்** *(பெரியபு.);* a canonized Šaiva saint, father of Sundaramūrtti Nāyaṉār, one of 63 Nāyaṉārs.

[சடை⁶ → சடைய + நாயனார்]

சடையப்பன் *šaḍai-y-appaṉ,* பெ. (n.) 1. **சடை முடியையுடைய அப்பன், சிவன்;** lit., the father or lord with matted hair, Šivaṉ. "அப்பார் சடையப்பன்" *(திருவாச. 8, 11).* 2. **கம்பனுக்கு உதவி யளித்தவரும் திருவெண்ணெய்நல்லூரில் வாழ்ந்தவருமான ஒரு வள்ளல்;** patron of Kambaṉ. "வாழ்வார் திருவெண்ணெய் நல்லூரச் சடையப்பன் வாழ்த்துப்பெற" *(கம்பரா. தனியன்).*

[சடை⁶ + அப்பன்]

முனிவன்கோலத்திற் சடையுடைமையால், சிவன் சடையன், சடையப்பன் என்றும் பெயர் பெற்றான்.

சடையன்² பார்க்க

சடையவர்மன் இராசராசன் சுந்தரன் *šaḍaiya-varmaṉ-irāšarāšaṉ-šundaraṉ,* பெ. (n.) **கி.பி. 1310 முதல் 1332 வரை ஆண்ட பாண்டியன்;** a Pāṇḍiya king ruled during 1310 - 1332.

[சடையவர்மன் + இராசராசன் + சுந்தரன்]

சடையவர்மன், மாறவர்மன் என்பன தலைமுறைதோறும் மாறிமாறிச் சூடிக் கொள்ளும் பாண்டியர்தம் குலப்பட்டம்.

சடையவர்மன் உடையார் சிறிவல்லபன் *šaḍaiya-varmaṉ-uḍaiyar srivallabaṉ,* பெ. (n.) **கி.பி. 1014 முதல் 1031 வரை திருநெல்வேலிப் பகுதியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த பாண்டியன்;** a Pāṇḍiyā king ruled during 1014 - 1031.

[சடையவர்மன் + உடையார் + சிறிவல்லபன்]

சடையவர்மன் குலசேகரன்- I *šaḍaiya-varmaṉ-kulašēgaraṉ-I,* பெ. (n.) **1190 முதல் 1218 வரை ஆண்ட பாண்டிய மன்னன்;** a Pāṇḍiyā king ruled during 1190 - 1218.

[சடையவர்மன் + குலசேகரன்]

சோழஅரசுக்குத் திறை செலுத்த மறுத்ததால், சோழன் குலோத்துங்கன் மதுரை மீது படையெடுத்து, குலசேகரனையும், அவன் மனைவி, மகளையும் சிறைவீடு செய்து பின்பு அடிபணிந்த பாண்டியனுக்கு அவன் நாட்டைத் திரும்ப அளித்தான். மதுரை மீனாட்சி கோயிலுக்குப் பல திருப்பணிகள் இம் மன்னன் செய்துள்ளான். சடையவர்மன் குலசேகரன் என்ற பெயரில் சிலர் ஆட்சி புரிந்துள்ளனர்.

சடையவர்மன் சிறிவல்லபன் *šaḍaiya-varmaṉ-siṟivallabaṉ,* பெ. (n.) **கி.பி. 1101 – 1124 வரை ஆட்சி புரிந்த பாண்டிய மன்னன்;** a Pāṇḍiyā king ruled during 1104 - 1124.

[சடையவர்மன் + சிறிவல்லபன்]

இம் மன்னன் தந்தை மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த இடைக்காலப் பாண்டியன் குலசேகரன்.

இப் பெயரில் பலர் பாண்டிய நாட்டை ஆண்டுள்ளனர்.

சடையவர்மன் சுந்தரன்-I *šaḍaiya-varmaṉ-sundaraṉ-I,* பெ. (n.) **கி.பி. 1250 – 1284 வரை ஆட்சி புரிந்த பாண்டிய மன்னன்;** a Pāṇḍiyā king ruled during 1250 - 1284.

சுந்தரன் போசளர்களின் படைத்தலைவனான சிங்கணனைக் கொன்றான். போசளர்களின் கண்ணனூர்க் குப்பத்தைக் கைப்பற்றினான். இலங்கை மன்னனிடம் திறை பெற்றான். கோப்பெருஞ்சிங்கனை வென்று சேந்த மங்கலத்தைப் பிடித்தான். நெல்லூரில் மற முழுக்கும் (வீராபிசேகமும்), வெற்றி முழுக்கும் (விசயாபிசேகமும்) செய்து கொண்டான். சடையவர்மன் சுந்தரன் பெயரில் ஒன்பதின்மருக்குமேல் ஆட்சி புரிந்துள்ளனர்.

சடையவர்மன் பராக்கிரமன்-I *šaḍaiya-varmaṉ-parākkiramaṉ-I,* பெ. (n.) **கி.பி. 1315 – 1334 வரை ஆட்சி புரிந்த பாண்டிய மன்னன்;** a Pāṇḍiyā king ruled during 1315 - 1334.

[சடையவர்மன் + பராக்கிரமன்]

தில்லி அரசன் அலாவுதீன் கில்சியின் படைத் தலைவன் குசுருகானையும், அவனது படைகளையும் விரட்டியதால், இவன்

"வாளால் வழி திறந்தான்" என்று அழைக்கப் பட்டான். "வாளால் வழி திறந்தான் பணம்" எனும்பெயரில் உள்ள நாணயம், இம் மன்னன் காலத்தைச் சார்ந்தது.

சடையவர்மன் விக்கிரமன்-I *šaḍaiya-varmaṉ-vikkiramaṉ-I*, பெ. (n.) கி.பி. 1241 – 1254 வரை ஆண்ட பாண்டிய மன்னன்; a Pāṇḍiyā king ruled during 1241 - 1254.

[சடையவர்மன் + விக்கிரமன்]

போசள மன்னன் வீரசோமேசுவரனின் சமகாலத்தவன். போசள மன்னனின் மேலாளுமையைப் பாண்டியர்கள் ஏற்று ஆட்சி செய்தனர். இப் பெயரில் பலர் ஆட்சி புரிந்துள்ளனர்.

சடையவர்மன் வீரன் *šaḍaiya-varmaṉ-vīraṉ*, பெ. (n.) கி.பி. 1170 – 1195 வரை ஆட்சி புரிந்த பாண்டிய மன்னன்; a Pāṇḍiyā king ruled during 1170 - 1195.

[சடையவர்மன் + வீரன்]

இப் பெயரில் பல பாண்டிய மன்னர்கள் ஆண்டுள்ளனர்.

சடையவரை *šaḍai-y-avarai*, பெ. (n.) சடை சடையாய்க் காய்க்கும் அவரை; a species of bean.

[சடை⁴ + அவரை]

சடையன்¹ *šaḍaiyaṉ*, செ. (n.) ஒரு வகை மீன்; a kind of fish (மீனவ.).

[சடை → சடையன்]

சடையன்² *šaḍaiyaṉ*, பெ. (n.) 1. சிவன் (உரி.நி.); Śivaṉ. 2. சடையநாயனாார்; a canonized Saiva saint. "என்னவனா மரனடியே யடைந்திட்ட சடையன்" (தேவா. 738. 11). 3. வெண்ணெய்நல்லூரில் வாழ்ந்தவரும், கம்பனுக்கு உதவியளித்தவருமான பெருமகன்; a patron of Kambaṉ. "வறுமை நோய்க்கு மருந்தன சடையன்" (கம்பரா. வேள்வி. 1).

ம. சடயன்

[சடை⁴ → சடையன்]

முழுமுதற்கடவுளுக்குப் பேரண்டத்தையே வடிவமாகக் கூறுவது வழக்கமாதலால், மாலையில் தோன்றும் செவ்வானம் சிவ பெருமானுக்குச் சடையாகவும், செவ்வானத்திற்கு மேலாகத் தோன்றும் பிறையையும், பனிமலையுச்சியில் பிறக்கும் கங்கையையும் அவர் தலையிலணிந்திருப்பதாகவும் உருவகித்துக் கூறினர் முன்னோர் (ஒ.மொ. 56).

சடையன்³ *šaḍaiyaṉ*, பெ. (n.) கி.பி. 863 – 911 வரை ஆண்ட பாண்டிய மன்னன்; a Pāṇḍiyā king. "தென்னாட்டுக் கோனாயின சடையந் தனிசெல்க" (பா.செ.ப.)

[சடை + அன். 'அன்' – ஆ.பா.ஈறு]

இரண்டாம் வரகுணன் என்று அழைக்கப் பட்டவன். சிறந்த சிவனடியான்.

சடையன்மூலி *šaḍaiyaṉ-mūli*, பெ. (n.) நார் அல்லது மயிரடர்ந்த பூடுகள்; any plant grown with thick set of fibres or hairs (சா.அக.).

[சடையன் + மூலி. மூல → மூலி = மருந்திற்குரிய வேர்ச்செடிகொடி]

சடையன் வீரநாராயணன் *šaḍaiyaṉ-vīra-nārāyaṇaṉ*, பெ. (n.) கி.பி. 866 – 911 வரை ஆண்ட பாண்டியமன்னன்; a Pāṇḍiyā king.

[சடையன் + வீரநாராயணன்]

முற்காலப்பாண்டிய மன்னன்.

சடையன் வீரபாண்டியன் *šaḍaiyaṉ-vīra-pāṇḍiyaṉ*, பெ. (n.) கி.பி. 938 – 959 வரை ஆண்ட பாண்டியன்; a Pāṇḍiyā king.

[சடையன் + வீரபாண்டியன்]

சடையனேரி *šaḍaiyaṉ-ēri*, பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Tañjāvūr District.

[சடையன் + ஏரி. சடையன் வெட்டிய ஏரி]

ஏரின் உதவி கொண்டு செய்யப்படும் பயிர்த் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படும் நீரைத்தேக்கி வைப்பதற்கு உருவாக்கப்படும் ஏரி. ஆழ்ந்தகன்ற நீர்நிலை.

சடையாண்டி *šaḍai-y-āṇḍi*, பெ. (n.) சடை வளர்த்த ஆண்டி; religious mendicant with matted hair.

[சடை⁶ + ஆண்டி]

சடையாணி *šaḍai-y-āṇi*, பெ. (n.) ஆணிவகை (பிங்.); flat-headed nail.

[சடை² + ஆணி]

சடையெருமை *šadai-y-erumai,* செ. (n.) மயிர் அடர்ந்த எருமை; a species of buffalo with thick hairs (சா.அக.).

[சடை + எருமை]



சடையெருமை

சடையுளுவை *šadai-y-uḷuvai,* செ. (n.) சடை போலும் நீண்ட இழைகளையுடைய உளுவை மீன் (தஞ்சை. மீனவ.); 'uḷuvai' fish which has matted hair like long strings.

[சடை + உளுவை]

சடையோன் *šadaiyōṉ,* பெ. (n.) 1. சிவன்; Śiva. "பொன்னார் சடையோன் புலியூர்" (திருக்கோ. 89). 2. சிவனின் தானைத்தலைவன் (சூடா.); Virabhadra.

ம. சடயன்

[சடை[4] → சடையோன்]

சடைராகி *šadai-rāgi,* பெ. (n.) நீண்ட விரிந்த கதிர்களைக் கொண்ட கேழ்வரகு (கோவை.); a kind of ragi.

[சடை + ராகி. இறகி → இரகி → ராகி]

சடைவாறு-தல் *šadai-vāṟu-,* 5. செ.கு.வி. (v.i.) இளைப்பாறுதல் (நெல்லை); to have rest or relief.

[சடைவு + ஆறு-,]

சடைவில்லை *šadai-villai,* பெ. (n.) தலைப் பின்னலிற் பெண்கள் செருகியணியும் தலையணி வகை; gold disc worn on the hair-plait, a woman's ornament.

[சடை[6] + வில்லை]

சடைவிழு-தல் *šadai-viḻu-,* 2 செ.கு.வி. (v.i.) 1. மயிர்ச்சடையாகப் பற்றுதல்; to get matted or entangled, grow shaggy or bushy as the hair. 2. பயன்படாது போதல்; to become useless.

[சடை[6] + விழு-,]

சடைவு *šadaivu,* பெ. (n.) 1. மனத்தளர்ச்சி; wearisomeness, depression of spirits, dejection. அவனுக்குச் சடைவு அதிகம். 2. ஆணி முதலியன தறைகை; rivetting.

ம. சடவு

[சடை[1] → சடைவு]

சடைவுதீர்-த்தல் *šadaivu-tīr-,* 4 செ.கு.வி. (v.i.) சோம்பல் முறித்தல்; to stretch or twist oneself of cast off laziness.

[சடைவு + தீர்-,]

சடைவெளவால் *šadai-vauvāl,* பெரிய வெளவால் மீன் (மீனவ.); a large portrait sea-fish.

[சடை + வெளவால்]

சண்டகி *šaṇḍagi,* பெ. (n.) பெருமுத்தக் காசு; a big variety of koray root - Cyperus pertenui (சா.அக.).

சண்டகோபி *šaṇḍa-kōbi,* பெ. (n.) கடுஞ்சினம் உடையவன்; person of violent anger. "சண்டகோபி... துருத்தேவதை" (யசோதர. 1, 14).

[சண்ட(ம்)[2] + கோபி]

த. கோபி → Skt. kōpi

சண்டதாண்டவம் *šaṇḍa-tāṇḍavam,* பெ. (n.) காளியோடு சிவன் ஆடிய கூத்து (சங்.அக.); dance of Śivaṉ with Kāḷi.

[சண்ட(ம்)[2] + தாண்டவம்]

சண்டநாயகன் *šaṇḍa-nāyagaṉ,* பெ. (n.) சண்டேசுரநாயனார்; a canonized Šaiva saint. "சண்டநாயகனுக் கருள் செய்தவன்" (தேவா. 237, 8).

[சண்ட(ம்)[2] + நாயகன்]

சண்டப்பிரசண்டம் *šaṇḍa-p-pirašaṇḍam,* பெ. (n.) 1. மிகு கடுமை; wild fierceness, extreme violence. "மண்டிவரு சண்டப் பிரசண்ட மாருதமான" (திருவேங். சத. 48). 2. ஆர்ப்பாட்டம்;

boisterousness, turbulence, often applied to persons. தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டம் செய்வான்.

[சண்டம் + பிரசண்டம். எதுகை நோக்கி வந்த இணைமொழி]

சண்டப்பிரசண்டர் *śaṇḍa-p-piraśaṇḍar*, பெ. (n.) திருமால் கோயிலுள்ள வாயிற்காப்பாளர் (M.E.R. 634 of 1919); deities guarding the inner shrine of Tirumāl (Viṣṇu) temples.

[சண்டப்பிரசண்ட(ம்) + அர்]

சண்டப்பிரசண்டன் *śaṇḍa-p-piraśaṇḍaṉ*, பெ. (n.) மிகுதியாகப் பேசுபவன்; one who talks boisterously.

[சண்டப்பிரசண்டம் → சண்டப்பிரசண்டன்]

சண்டப்பிரசண்டம் பார்க்க

சண்டப்பை *śaṇḍa-p-pai*, பெ. (n.) கருப்பம்; uterus, womb. "சண்டப்பைக்குள்ளிருந்து" (தனிப்பா. 1, 120, 4).

[அண்டப்பை → சண்டப்பை]

சண்டம்[1] *śaṇḍam*, பெ. (n.) 1. உறைப்பு; pungency. 2. எருது; ox. 3. கருப்பம்; pregnancy.

[சண்டு → சண்டம்]

சண்டம்[2] *śaṇḍam*, பெ. (n.) 1. சினம் (சங்.அக.); anger. 2. கொடுமை; fierceness. "சண்ட மன்னனைத் தாடொழுது" (சீவக. 430). 3. விரைவு (சூடா.); speed, rapidity, swiftness. 4. வலிமை; strength, power. "பல்லாயிரகோடி சண்ட தூணங்கள் போன்றன" (பாரத. காண்டவ. 38). 5. ஒருவகை நிரையம் (சிவதரு. சுவர்க்க. நரக. 108); a kind of hell.

[சள்ளெனல் = சினந்து விழுதல், சள் → சள்ளை = தொந்தரவு. சள் → சண்டு → சண்டை = சச்சரவு. சள் → சளம் = கடுஞ்சினம். சண்டு → சண்டம் = சினம், கொடுமை (வ.வ. 138)]

சண்டம்[3] *śaṇḍam*, பெ. (n.) பெருமை (அக.நி.); greatness.

[சடு → சண்டு → சண்டம்]

சண்டமற்கடி *śaṇḍa-maṟkaḍi*, பெ. (n.) பூனைக்காய்ஞ்சொறி; climbing nettle mercuty-Tragia involucrats (annebina) (சா.அக.).

சண்டமாருதம் *śaṇḍa-mārudam*, பெ. (n.) பெருங்காற்று; hurricane, wind-storm 'சண்ட "மாருதத்திற்குமுன் சருகோட்டம் போல" (பழ.).

[சண்டம்[2] + மாருதம்]

Skt. mārudha → த. மாருதம்

சண்டவேகம் *śaṇḍa-vēgam*, பெ. (n.) மிகுவிரைவு; great, excessive or headlong speed impetuosity. "தேருமெதிர் நடத்தினர் சண்ட வேகமொடு' (பாரத. பன்னிரண்டாம். 22).

[சண்டம்[2] + வேகம்]

சண்டன்[1] *śaṇḍaṉ*, பெ. (n.) 1. கடுஞ்சினத்தன்; violent-tempered person. 2. கூற்றுவன் (திவா.); Yama. "சண்டன்போ லெட்டித் தொடுமுன்" (தேவை. 70). 3. காலன் (திவா.); a messenger of Yamaṉ. 4. கதிரவன் (பிங்.); Sun, as the source of heat. 5. உருத்திரருள் ஒருவர் (சி.போ.பா.2., ப. 24); a Rudraṉ. 6. சிவன் (வின்.); Śivaṉ. 7. சண்டேசுர நாயனார்; a canonized Saiva saint. "சண்டன்றேர் பின்னூர" (தேவை. 109).

[சண்டம் → சண்டன் (வ.வ. 138)]

த. சண்டன் → Skt. caṇḍa

சண்டன்[2] *śaṇḍaṉ*, பெ. (n.) புளியமரம் (மலை.); tamarind tree.

[சள் → சண → சண்டன்]

சண்டா *śaṇḍā*, பெ. (n.) அலரி; oleander - nerium odorum (சா.அக.).

சண்டாதகம் *śaṇḍādagam*, பெ. (n.) சண்டாதம் பார்க்க; see *śaṇḍādam* (சா.அக.).

[சண்டாதம் → சண்டாதகம்]

சண்டாதம் *śaṇḍādam*, பெ. (n.) அவுரி; indigo plant - indigofera tinctoria (சா.அக.).

சண்டாளப்பேறு *śaṇḍāḷa-p-pēṟu*, பெ. (n.) வரிவகை (S.I.I.V., 139); a tax.

[சண்டாளம் + பேறு]

சண்டாளம் *śaṇḍāḷam*, பெ. (n.) 1. இழிந்ததன்மை; baseness, vileness, sinfulness. 2. பேய்; demon.

[சள்ளெனல் = சினந்து விழுதல். சள் → சள்ளை = தொல்லை. சள் → சண்டு → சண்டம் = சினம், கொடுமை. சண்டம் → சண்டாளம்]

த. சண்டாளம் → Skt. caṇḍāla

சண்டாளர் *šaṇḍāḷar,* பெ. (n.) கொலைஞர் *(திவா.);* murderer, assassin.

மறுவ. குணங்கர், வங்கர், கவுண்டர், இழிஞர், புலைஞர், கொலைஞர் (ஆ.நி.)

[சண்டாளம் → சண்டாளர்]

சண்டாளன் *šaṇḍāḷaṉ,* பெ. (n.) *1.* கொடுமை யானவன்; low, degraded man, villain, sinner. *2.* பார்ப்பனிக்கும் தொழும்பனுக்கும் (சூத்திரன்) பிறந்தவன்; person of the degraded caste, born of the brahmin woman and a sudra father. *3.* வசைமொழிக்குப் பயன்படுத்தும் சொல்; vile traitor, a term of reproach. சண்டாளன் என் பிழைப்பைக் கெடுத்துவிட்டான்.

க. சாண்டால, சண்டால; து. சண்டாலெ, சாண்டாலெ (தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவன்)

[சண்டாளம் → சண்டாளன் (வ.வ. 138]

த. சண்டாளம் → Skt. caṇḍāla

சண்டாளி *šaṇḍāḷi,* பெ. (n.) *1.* கொடியவள், கொடுமையான பெண்; low, degraded woman, sinful woman. "சண்டாளி சூர்ப்பனகை" *(தனிப்பா. 1, 95, 15).* *2.* புலைச்சி; woman of the most degraded caste.

[சண்டாளன் (ஆ.பா.) - சண்டாளி (பெ.பா.) (வ.வ. 138)]

த. சண்டாளி → Skt. caṇḍāḷi

சண்டி[1] *šaṇḍi,* பெ. (n.) சண்டித்தனம் பார்க்க; see *šaṇḍi-t-taṉam.*

க. சண்டி

[(சள்) → சண்டு → சண்டி]

சண்டி[2] *šaṇḍi,* பெ. (n.) *1.* கொடியவன்; wicked. "ஒளித்த தேதடா அடசண்டி" *(இராமநா.).* *2.* இடக்குச் செய்-பவன்-வது; any obstinate, perverse person or animal. சண்டிமாடு. 'சண்டிக்குதிரைக்கு நொண்டிச் சாக்கு' *(பழ.)* *3.* அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவர்; a canonized Šaiva saint, one of 63 Nāyaṉmārs. "அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்" *(தேவா. 736, 3).*

க. சண்டிக

[(சள்) → சண்டு → சண்டி (வ.வ. 138)]

த. சண்டி → Skt. caṇḍi

சண்டி[3] *šaṇḍi,* பெ. (n.) *1.* கொடியவள்; wicked woman. "பிணக்கிடுஞ் சண்டிகள்" *(திருப்பு. 13).* *2.* காளி (பெருஞ்சினமுள்ளவள்); Durgā, as furious.

மறுவ. கொற்றவை, அம்மை, மாயோள், காளி, அங்காளம்மை, மாரி, பிடாரி, கன்னி, குமரி, பகவதி

ம. சண்டி; க. சண்டி, சண்டெ (காளி); து. சண்டி

[(சள்) → சண்டு → சண்டி (வ.வ. 138)]

த. சண்டி → Skt. caṇḍi

சண்டி[4] *šaṇḍi,* பெ. (n.) *1.* மானமற்றவன் *(யாழ். அக.);* shameless person. *2.* ஒரு வகைச் சீமை மரம்; lettuce tree.

ம. சண்டிச்சி (கொடியவள்)

[சண்டி[1] → சண்டி[3]]

சண்டிக்கடா *šaṇḍi-k-kaḍā,* பெ. (n.) *1.* சண்டித்தனமுள்ள எருமைக்கடா; lit., stubborn he-buffalo. *2.* ஒட்டாரஞ் செய்யும் சோம்பேறி எருமைக்கடா; indolent, obstinate person. "சோம்பலொடு பெரியோர் சபைக்குட் படுத்திடுந் தூங்கலே சண்டிக்கடா" *(குமரேச. சத. 40).*

[சண்டி[1] + கடா]

எருமைக்கடாவின் சண்டித்தனத்தை அவ்வியல்புடையோன் மீது ஏற்றிக் கூறுவது.

சண்டிக்கார் *šaṇḍi-k-kār,* பெ. (n.) கார் நெல் வகை; a kind of kār paddy.

ம. சண்டிக்காடு

[சண்டி + கார்]

சண்டிக்கீரை *šaṇḍi-k-kīrai,* பெ. (n.) ஊதை நோய், இடுப்புவலி முதலியவற்றிற்கு மருந்தாகப் பயன்படும் சீமைக்கீரையினம்; lettuce - leaves of a tree which is used in cases of rheumatic complaints, gout, lumbago etc. *(சா.அக.).*

[சண்டி[4] + கீரை]

சண்டிகை *šaṇḍigai,* பெ. (n.) காளி *(பிங்.);* Durgā.

[சண்டி → சண்டிகை]

சண்டிசெய்-தல் *šaṇḍi-sey-, 1* செ.கு.வி. (v.i.) **ஒட்டாரம் செய்தல்;** to become passionate, obstinate.

க. சண்டி கொள்ளு

[சண்டி + செய்-,]

சண்டித்தனம் *šaṇḍi-t-taṉam,* பெ. (n.) ஒட்டாரம்; obstinacy, stubbornness, perversity.

ம. சண்டித்தனம், சண்டித்தரம், சண்டித்தம்; ச. சண்டிதன; தெ. சண்டிதரம்.

[சண்டி → சண்டித்தனம்]

சண்டிமாடு *šaṇḍi-māḍu,* பெ. (n.) இணக்கமாகச் செல்லாத மாடு; obstinate ox.

[சண்டி + மாடு. சளம் → சண்டு → சண்டம் = சினம், கொடுமை, சண்டன் = கடுஞ்சினத்தன், கூற்றுவன், கொடியவன். சண்டன் → சண்டி = கொடியவன், காளி, இடக்குப் பண்ணும் விலங்கு]

சண்டியர் *šaṇḍiyar,* பெ. (n.) சண்டையை மூட்டுபவன், பெரும் முரடன்; rowdy, rogue. அந்தப் பேட்டைக்கு அவன்தான் சண்டியர்.

[சண்டி → சண்டியர்]

சண்டியன் *šaṇḍiyaṉ,* பெ. (n.) பிடிவாதமுள்ள சோம்பேறி (யாழ்ப்.); obstinate, indolent person.

[சண்டி → சண்டியன்]

சண்டிலன் *šaṇḍilaṉ,* பெ. (n.) *1.* சிவன்; Šivaṉ. *2.* முடிதிருத்துவோன்; barber.

[சண்டி → சண்டிலன்]

சண்டிவாளம்[1] *šaṇḍi-vāḷam,* பெ. (n.) ஒப்பந்தத்தை நீக்கவோ ஒன்றை மீட்கவோ கொடுக்கும் பணம் (வின்.); money given to dissolve a bargain or to redeem anything.

க. சண்டிவாள

[சண்டி + வாளம்]

சண்டிவாளம்[2] *šaṇḍi-vāḷam,* பெ. (n.) கால் விலங்கு (இ.வ.); fetters for the legs.

[சண்டி' + வாளம். வள் → வாள் → வாளம் = வளைவு, வட்டம், வட்ட வடிவிலமைந்த விலங்கு]

சண்டினி *šaṇḍiṉi,* பெ. (n.) விளக்கு; lamp. "மகர பூசத்துநாள் திருமலையில் சண்டினி குடத்தபடி தம்மிட அதிரசப்படி அமுது செய்" *(திருப். க. தொ.1, கல். 230.3)*

சண்டீசர் *šaṇḍīsar,* பெ. (n.) சண்டேசுர நாயனார் பார்க்க; see *šaṇḍēšura-nāyaṉār.*

க. சண்டேச (சிவன்)

[சண்டர் + ஈசர் - சண்டேசர் → சண்டீசர்]

சண்டீனம் *šaṇḍīṉam,* பெ. (n.) பறவைகள் பறக்கும் முறை; one of the modes of flight, peculiar to birds. "சண்டீன முட்டீனம்" *(காசிக. திரிலோ. 6).*

[சண்டு + இனம்]

சண்டு[1]**-தல்** *šaṇḍu-, 5* செ.குன்றாவி. (v.t.) அளவுக்கு அதிகமாக உண்ணுதல்; to eat to excess, to be gluttonous.

[சள் → சண்டு-,]

சண்டு[2] *šaṇḍu,* பெ. (n.) *1.* பதர்; chaff. *2.* கூளம்; broken chips of spoilt straw. *3.* பயிரில் விழும் வண்டுவகை; an insect damaging growing crops. *4.* புகைபிடிக்கும் பிசினி (அபினி) உருண்டை; a preparation of opium used for smoking. *5.* எல்லையில் நடப்படும் கோல்; pole, as a boundary mark.

ம. சண்ட; க. சரட, சட்ட; பட. சண்டு; Skt. caṇḍu

[சுள் → சள் → சண்டு (வே.க. 213)]

சண்டுசருகு *šaṇḍu-sarugu,* பெ. (n.) காய்ந்த தாள்களும் இலைகளும்; dried leaves.

[சண்டு + சருகு]

மோனை நோக்கி வந்த மரபிணைமொழி. சண்டு = காய்ந்த தாளும் தோகையும்; சருகு = காய்ந்த இலை.

சண்டுசருவை *šaṇḍu-saruvai,* பெ. (n.) கடலடிக்கூலம் (முகவை.); grains of sea.

[சண்டு + சருவை]

சண்டேசுரநல்லூர் *šaṇḍēšura-nallūr,* பெ. (n.) சிதம்பரத்திற்கு அருகில் உள்ள சிற்றூரின் பண்டைய பெயர்; an ancient village near Chidambaram. "இவூர் பிடாகை சண்டேசுர நல்லூரில் குலோத்துங்க சோழயிரமாராயன்" *(தெ. க. தொ. 12: க. 151: 5-6)*

[சண்டேசுவரம் + நல்லூர்]

சண்டேசுரநாயனார் *šaṇḍēsura-nāyaṉār,* பெ. (n.) *சிவனடியார் அறுபத்து மூவருள் ஒருவர் (பெரியபு);* a canonized Šaiva saint, one of 63 Nāyaṉmārs.

[சண்டேசுவரம் + நாயனார்]

சண்டேசுரப்பெருவிலை *šaṇḍēšura-p-peruvilai,* பெ. (n.) கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை வாங்க, விற்க, மதிக்கப்படும் விலை; temple land amount. "இவ்வூர் எங்கள் பிரம்மசேத்திரம் என்றும் சண்டேசுரப் பெருவிலை கொள்ளக் கடவல்ல என்றும்" *(தெ.க. தொ. 7: க. 759:1).*

[சண்டேசு வரம் + பெருவிலை]

நிலமாவது இறைவனது பெயரிலேயே இருக்கும். அந்நிலத்தை வாங்க, விற்க உறுதிப்படும்விலை சண்டேசுரப்பெருவிலை. ஆதிசண்டேசுரப்பெருவிலை.

சண்டேசுரவாய்க்கால் *šaṇḍēšura-vāy-k-kāl,* பெ. (n.) நீர்ப்பாசன வாய்க்காலின் பெயர்; name of a irrigation channel. "இச்செயும் இதுக்குப் பாயும் சண்டேஸ்வர வாயிக்காலும் இறையிலி" *(தெ. க. தொ. 3: க. 73:24)*

[சண்டேசுவரம் + வாய்க்கால்]

சண்டை *šaṇḍai,* பெ. (n.) *1. பூசல்;* quarrel. *2. முரண்பாடு;* conflict. 3. *போர்;* war. நாடுகளுக்கிடையே நிகழும் சண்டை பேரழிவைத் தரும்.

ம. சண்ட; க. தண்டெ; தெ. தண்ட; து. சண்டெ, தண்டெ; பட. சண்டெ

சண்டை வகை: சண்டை - இருவர் செய்யும் போர்; மல் - இருவர் தம் வலிமை காட்டச் செய்யும் போர்; கலாம் - பலர் செய்யும் போர்; போர் - இரு நாட்டார் அல்லது அரசர் செய்யும் போர்; பூசல் - போர் ஆரவாரம்; சமர் - இருபடைகள் கலந்து செய்யும் போர்; ஞாட்பு செறிந்து செய்யும் போர்; மலைவு - பூச்சூடிச் செய்யும் போர்; செரு - பகைவரை அழிக்கும் போர் *(சொ.க. 55, 56).*

[சள்ளெனல் = சினந்துவிழுதல். சள் = தொல்லை. சள்ளை = தொல்லை. சள் → சண்டு → சண்டை = பூசல், போர்.]

சண்டை² *šaṇḍai,* பெ. (n.) *இசைக்கருவி வகை; (S.I.I.V. 308);* a musical instrument.

ம. சண்ட

[சள் → சண்டு → சண்டை. சள் - ஒலிக்குறிப்புச் சொல்]

சண்டைக்கப்பல் *šaṇḍai-k-kappal,* பெ. (n.) போரிடுவதற்குப் பயன்படுத்தும் கப்பல், போர்க்கப்பல்; warship, privateer.

[சண்டை + கப்பல்]

சண்டைக்காரன் *šaṉḍai-k-kāraṉ,* பெ. (n.) *1. சண்டையிடுங் குணமுள்ளவன்;* quarrelsome person. *2.* பகைவன்; enemy. அவன் என் சண்டைக்காரன் *(உ.வ.).*

ம. சண்டார் (பகைவர்); க. சகலிகண்ட

[சண்டை + காரன்]

சண்டைக்காரி *šaṉḍai-k-kāri,* பெ. (n.) *சண்டையிடும் இயல்பினள்;* a quarrlesome woman.

க. சகளிகாதி

[சண்டை + காரி]

சண்டைக்கிழு-த்தல் *šaṉḍai-k-kiḻu-,* 4 செ.குன்றாவி. (v.t.) *சண்டைபோடச் செய்தல்;* to pick a quarrel.

க. சகளதெகெ

[சண்டை + கு + இழு-]

சண்டைக்குநில்-தல் (சண்டைக்கு நிற்றல்) *šaṇḍai-k-ku-nil-,* 14 செ.கு.வி. (v.i.) *போராடுதல்;* to pick a quarrel, to fight.

[சண்டைக்கு + நில்-,]

சண்டைப்புழு *šaṇḍai-p-puḻu,* பெ. (n.) *புழுவகை (பரராச. 2, 216);* a kind of worm.

[சண்டை + புழு]

சண்டைபிடி¹-த்தல் *šaṇḍai-piḍi-,* 4. செ.கு.வி. (v.i.) *போரிடுதல்;* to quarrel, fight.

ம. சண்டபிடிக்குக

[சண்டை + பிடி-,]

சண்டைபிடி²-த்தல் *šaṇḍai-piḍi*, 4 செ. குன்றாவி. (v.t.) கடிந்துகூறுதல் (இ.வ.); to chide, rebuke.

[சண்டை + பிடி-,]

சண்டைபோடு-தல் *šaṇḍai-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) போராடுதல்; to pick quarrel, fight.

[சண்டை + போடு-,]

சண்டைமூட்டு-தல் *šaṇḍai-mūṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. சினமூட்டும் செய்திகளைக் கூறிச் சண்டைக்குத்தூண்டுதல்; to bring the news of some quarrel before others, generally as a complaint and with the purpose of rousing a quarrel. 2. இருதரப்பினர்க்கிடையே சண்டை உருவாக்குதல்; to create quarrel or fight between two parties.

[சண்டை + மூட்டு-. முள் → மூள். மூளுதல் = பொருந்துதல், கூடுதல். மூள் (த.வி.) - மூட்டு (பி.வி.)]

சண்டைமூள்(ளு)-தல் *šaṇḍai-mūḷ(ḷu)-*, 16 செ.கு.வி. (v.i.) (நாடுகளுக்கிடையே) போர் தொடங்குதல்; to start fighting, generally between two countries.

[சண்டை + மூள்-,]

சண்ணக்கடா *šaṇṇa-k-kaḍā*, பெ. (n.) 1. தின்று கொழுத்த கடா; a well-fed fat ram. 2. பொலி கடா; bull kept for covering.

ம. சண்ணக்கிடாவு

[சுண் → சண். சண்ணுதல் = புணர்தல். சண் → சண்ணம் + கடா. குல் → குள் → குழு → குழ → குட → குடம் = திரட்சி. குடத்தல் = கூடுதல், திரளுதல். குட → கட → கடா = உருண்டு திரண்ட விலங்கு (வ.வ. 137)]

சண்ணத்துருக்கவேம்பு *šaṇṇa-t-turukka-vēmbu*, பெ. (n.) செவ்வத்தை; globular flowered neem.

[சண்ணத்துருக்க + வேம்பு]

சண்ணநெல் *šaṇṇa-nel*, பெ. (n.) சன்னவரிசி தரும் நெல்; the paddy of šaṇṇarisi.

க. சண்ணநெல்லு

[சல் → சள் → சண் + நெல்]

சண்ணம் *šaṇṇam*, பெ. (n.) ஆண்குறி; penis. "சிறுச்சண்ணந் துள்ளஞ்சோர" (திவ். பெரியாழ். 1, 7, 10).

ம. சண்ண, சண்ணி; குட. சன்னெ (பிட்டம்); பட. துண்ணெ.

[சுண் → சண். சண்ணுதல் = புணர்தல். சண் → சண்ணம். சண்ணக்கடா = பொலிகடா. துளைத்தற்பொருளுள்ள šisna என்னும் சொல்லை வடவர் மூலமாகக் காட்டுவர். சுண்ணம் → Skt. šisna. (வ.வ. 137)]

சண்ணரிசி *šaṇṇariši*, பெ. (n.) சிறிய அளவு நெல்மணி, உயர்வகை அரிசி; small grained, good variety.

க. சண்ணக்கி

[சல் → சன் → சண் + அரிசி. அரி → அரிசி]

சண்ணாரம் *šaṇṇāram*, பெ. (n.) குடைசெய்யுந் தொழில் (நீலகேசி, 280); umbrella-making.

[சள் → சண் → சண்ணாரம்]

சண்ணி-த்தல் *šaṇṇi-*, 4. செ.குன்றாவி. (v.t.) 1. பூசுதல்; to smear, as with sacred ashes. "வெண்ணீறு சண்ணித்த மேனி" (தேவா. 697. 1). 2. சார்ந்திருத்தல், to dwell in, inhabit. "ஆமாத்தூர் சண்ணிப் பானை" (தேவா. 1020, 8).

[சள் → சண்ணி]

சண்ணு¹-தல் *šaṇṇu-*, 4. செ.குன்றாவி. (v.t.) 1. தாக்குதல்; to attack. "தட்டாரப் பைய லரிகர புத்ரனைச் சண்ணினானே" (தனிப்பா. 1, 223, 13). 2. நீக்குதல், to remove, cure. "கீழாநெல்லி....... காமாலைகளைச் சண்ணும்" (பதார்த்த. 300). 3. அளவுக்கு அதிகமாக உண்ணுதல்; to eat to excess, to be gluttonous. சண்ணியிழுத்தான். 4. செய்து முடித்தல்; to accomplish, execute, effect, used sarcastically. அவர் சண்ணுகிறதைப் பார்ப்போம் (உ.வ.).

[சள் → சண்ணு. சள்ளுதல் = இளகுதல்]

சண்ணு²-தல் *šaṇṇu-*, 5. செ.குன்றாவி. (v.t.) புணர்தல்; to copulate.

[சுண் → சண் → சண்ணு-, (வ.வ.139)]

சண்பகப்பாலை *šaṇbaga-p-pālai*, பெ. (n.) மரவகை (L.); common Ceylon laurel.

[சண்பகம் + பாலை]

சண்பகநாவல் *šaṇbaga-nāval*, பெ. (n.) மணமுள்ள நாவல் பழம்; a fragrant jamboon fruit - Eugenia jambosa (சா.அக.).

மறுவ. பித்திகை, சாதி, கருமுகை, மாலதி (ஆ.நி.).

[சண்பகம் + நாவல்]

சண்பகம் *šaṇbagam*, பெ. (n.) திருமால் கோயில்களில் வளர்க்கப்படும் மரவகை; campak tree. "மல்லிகை மௌவல் மணங்கமழ் சண்பகம்" (பரிபா. 12:77).

[செம் → சம் → சம்பகம் → சண்பகம்]

சம்பகம் → Skt. campaka

தேனீக்கள் மொய்க்காததும், மிகுந்த மணமுள்ளதும், மஞ்சள் மலர்களைக் கொண்டதும், 30 அடி முதல் 40 அடி வரை வளரக்கூடியதுமான இம்மரத்தின் வேர், பட்டை, பூ ஆகிய அனைத்தும் மருந்தாகப் பயன்படும் சிறப்புடையன. இதன் வகைகள்:

1 நீலமலைச் சண்பகம்; Nilgiri champak - michelia Nilagirica.

2. நாற்றச் சண்பகம்; foetid champak - mappia foetida - tomentosa.

3. காட்டுச் சண்பகம்; white champak - michelia genus.

4. சிறு சண்பகம்; a tree with small flowers.

5. நாகச்சண்பகம்; variety of champak (சா.அக.)

சண்பங்காறை *šaṇbaṅkāṟai*, பெ. (n.) சண்பகப்பூவின் வடிவிலைமைக்கப்பட்ட பொற்பூக்கள் கோத்த காறை என்னும் கழுத்தணி வகை; 'kāṟai' neck ornament which has beads designed like campaka flower. "மாணிக்கத்தின் தாலி பொன்னின் சண்பங்காறை சிறியது" (S.I.I. ii, 396, 140).

[சண்பகம் + காறை]

சண்பங்கோரை *šaṇbaṅ-gōrai*, பெ. (n.) சம்பங்கோரை (மதுரைக். 172, உரை); elephant grass.

[சண்பகம் + கோரை]

சண்பசாதிப்பிரண்டை *šaṇbasādi-p-piraṇḍai*, பெ. (n.) முப்பிரண்டை; a species of adamantine creeper having three corners or faces - Vitex genus (சா.அக.).

[சண்பகசாதி + பிரண்டை]

சண்பணி *šaṇbaṇi*, பெ. (n.) காளியின் ஏவல் பூதம்; an attendant of Kāḷi.

[சண்டி = காளி. பணி = பணிப்பெண். சண்டிபணி → சண்பணி]

சண்பு *šaṇbu*, பெ. (n.) 1. சம்பங்கோரை; elephant-grass. "சண்பமன் றூர்தர" (மதுரைக். 172.). 2. கோரைவகை; a species of sedge-grass.

[சம்பு → சண்பு]

சண்பை[1] *šaṇbai*, பெ. (n.) நெல்லை மாவட்டத்தில் தென்காசி வட்டத்திலுள்ள சண்பகக்காடாகிய திருக்குற்றாலம்; Tiruk-kuṟṟālam of Nellai district, Teṉkāsi taluk, where champak trees are more.

[சண்பகம் → சண்பை (மரூஉ.)]

சண்பகம் + அடவி (காடு) = சண்பகாடவி. இதனை சண்பகாதேவி எனத் தவறாகக் கருதி திருக்குற்றாலத்தில் அப்பெயர் தாங்கிய அம்மன்கோயில் ஒன்று எழுப்பப்பட்டுள்ளது.

சண்பை[2] *šaṇbai*, பெ. (n.) திருக்காழி (சீர்காழி); Sīrkāḻi. "சண்பைத் திகழுஞ் சம்பந்தன்" (தேவா. 436. 11).

[சண்பு → சண்பை]

சண்பை[3] *šaṇbai*, பெ. (n.) விழுப்புரம் மாவட்டம் பெண்ணையாற்றின் வடகரையில் உள்ள சம்பை என்ற ஊரின் பழைய பெயர்; an ancient village in Viḻupuram district. "வாணகப்பாடி ராசேந்திர வளநாட்டுப் பெண்ணை வடகரைச் சண்பை" (தெ.க.தொ. 22: க. 68-8).

[சண்பு → சண்பை - பாய் முடையப் பயன்படும் சண்பு விளைந்த ஊர்]

சண்பையர்கோன் *šaṇbaiyarkōṉ*, பெ. (n.) சிவனியரான திருஞானசம்பந்தர்; a šaiva saint, Tiru-ñāṉa šambandar.

[சண்பையர் + கோன்]

சண்பையர் - சண்பை என்னும் திருக்காழியில் வாழ்வோர்.

சணகம்[1] *šaṇagam*, பெ. (n.) கடலை (சங். அக.); Bengal gram.

க. சணகெ, சணங்க, சணங்கி, சணக, சணகி, சணிகி, சன்னங்கி, சாணங்கி; Skt. caṇaka

[சள் → சண் → சணம் → சணகம்]

சணகம்[2] *šaṇagam*, பெ. (n.) புளியாரை, பூடுவகை (வின்.); yello wood-sorrel.

[சள் → சண் → சணம் → சணகம்]

சணகம்[3] *šaṇagam*, பெ. (n.) சணல் (தத்துவ. 156. உரை); hemp.

[சணம் → சணகம்]

சணகி *šaṇagi*, பெ. (n.) மூங்கில்; bamboo - Bambusa arundinacea (சா.அக.).

[சணம் → சணகி]

சணச்சிச்சாரம் *šaṇacci-c-cāram*, பெ. (n.) சணகம்[2] பார்க்க; see *šaṇagam*[2] (சா.அக.).

[சணச்சி + சாரம்]

சணப்பங்கோழி *šaṇappaṅgōḻi*, பெ. (n.) கோழி வகைகளுள் ஒன்று; a kind of hen. சணப்பங் கோழி போலத் தொண தொணக்கிறான் (உ.வ.).

[சணப்பு + கோழி]

ஒரே ஓசையை, அடிக்கடி தொடர்ந்து வெளி யிடும் தன்மையால் 'அரிக்குரல்' எனப்பட்டது. இக்கோழி ஆண்பெண் இணைபிரியாது வாழும் தன்மையுடையது.



சணப்பங்கோழி

சணப்பநார் *šaṇappa-nār*, பெ. (n.) சணல்நார்; fibres of flax.

தெ. சநபநார

[சணப்பம் + நார்]

சணப்பன் *šaṇappaṉ*, பெ. (n.) சணலில் நாருரிக்கும் குலத்தான்; member of a Telugu caste whose profession was flax-dressing. சணப்பன் வீட்டுக் கோழி தானே விலங்கு மாட்டிக் கொண்டது (பழ.).

[சணப்பு → சணப்பன் (வ.வ. 139)]

சணப்பு *šaṇappu*, பெ. (n.) 1. சணல்[2] (பதார்த்த. 250) பார்க்க; see *šaṇal*. 2. கஞ்சா (M.M.); Indian hemp.

ம. சணம்பு; க. சணம்பு

[சணம்பு → சணப்பு (வ.வ. 139)]

சணப்புக்குஞ்சம் *šaṇappu-k-kuñjam*, பெ. (n.) மருள்; bowstring - hemp - Sansiviera roxburghiana (சா.அக.).

[சணப்பு + குஞ்சம்]

சணப்புப்புளிச்சை *šaṇappu-p-puḷiccai*, பெ. (n.) புளிச்சை வகை; Indian brown hemp.

[சணப்பு + புளிச்சை]

சணப்பை *šaṇappai*, பெ. (n.) சணல்[1] பார்க்க; see *šaṇal*.

[சணப்பு → சணப்பை (வ.வ. 139)]

சணம் *šaṇam*, பெ. (n.) சணல் (மூ.அ.) பார்க்க; see *šaṇal*.

[சடம் → சணல் (வ.வ. 139)]

சணம்பு *šaṇambu*, பெ. (n.) சணல்[1] பார்க்க; see *šaṇal*. "சணம்போடு பருத்தி" (காசிக. பிரமச. 14).

[சணம் → சணம்பு (வ.வ. 139)]

சணமம் *šaṇamam*, பெ. (n.) சணகம்[3] பார்க்க; see *šaṇagam* (சா.அக.).

[சணகம் → சணமம்]

சணமாலி *šaṇamāli*, பெ. (n.) இலவு; silk cotton- Bombax malabaricum (சா.அக.).

சணல்[1] *šaṇal*, பெ. (n.) பழுப்புநிற நாரினால் திரிக்கப்பட்ட சிறுகயிறு; cord made by twisting together strands of jute.

[சள் → சண் → சணல்]

சணல்[2] *šaṇal*, பெ. (n.) செடிவகை; sunn-hemp.

ம. சண, சணம்; H., Mar. saṇa; Beng., Guj., Skt. šaṇa

[சள்ளுதல் = சிக்குதல். சடாய்த்தல் = அடர்ந்துவளர்தல். சடை = நார். சடைத் தேங்காய் = நார்த்தேங்காய். சடை → சடம் → சடம்பு = நாருள்ள சணற் செடி. சடம் → சணம் = சணல். சணம் → சணம்பு = சணல். சணப்பு = சணல். சணப்பு → சணப்பை = சணல். சணம் → சணல் (வ.வ. 137)]

த. சணல் → Skt. śaṇa

சணல்நார் *šaṇal-nār,* பெ. (n.) *1.* புளிச்சைக் கீரையிலிருந்து எடுக்கும் ஒருவகை நார்; fibres taken out from sour green or chicori plant. *2.* சணப்பு; fibres of Chennai hemp (சா.அக.).

மறுவ. காசினிக்கீரை

ம. சணநாரு

[சணல் + நார்]

சணல்நூல் *šaṇal-nūl,* பெ. (n.) சணல் நாரினால் செய்த நூல்; thread made of jute fibre.

ம. சண நூல்

[சணல் + நூல்]

சணல்வலை *šaṇal-valai,* பெ. (n.) சணல் நாராலான வலைவகை; a hemp net to catch big fishes.

[சணல் + வலை]

சணல்வித்து *šaṇal-vittu,* பெ. (n.) சணலரிசி பார்க்க; see *šaṇalariši.*

ம. சணவித்து

[சணல் + வித்து]

சணலரிசி *šaṇalarisi,* பெ. (n.) *1.* சணல் செடியின் விதை; seed of jute plant. *2.* ஒரு வகை நெல்; a kind of paddy.

ம. சணயரி

[சணல் + அரிசி. அரி → அரிசி]

சணற்சரடு *šaṇaṟ-šaraḍu,* பெ. (n.) சணல்நூல் கொண்டு செய்த சரடு; cord made of jute threads.

ம. சணச்சரடு

[சணல் + சரடு]

சணற்பநார் *šaṇaṟpa-nār,* பெ. (n.) சணல்நார்; fibres of flax.

தெ. சனபநார

[சணல் → சணப்பு → சணற்ப + நார்]

சணப்பநார் பார்க்க

சணற்புரி *šaṇaṟ-puri,* பெ. (n.) சணற்கயிறு; flax cord, hempen rope.

[சணல் + புரி]

சணாய்[1]-த்தல் *šaṇāi-,* 4 செ.கு.வி. (v.i.) காமங்கொள்ளுதல்; to be inflammed with passion or lust.

[சண்ணு → சணாய்-,]

சணாய்[2] *šaṇāy,* பெ. (n.) கடலை (சங்.அக.); Bengal gram.

ம. சணாயி

[சணகம் → சணாய்]

சணாவு *šaṇāvu,* பெ. (n.) கையாந்தகரை (மலை); a plant growing in wet places - Eclipta alba.

[சள் → சதுப்பு = சேற்று நிலம். சள் → சண் → சணவு → சணாவு = நீர்கோத்த நிலத்தில் வளர்வது]

சணை-த்தல் *šaṇai-,* 4 செ.கு.வி. (v.i.) கொழுத்தல் (யாழ்ப்.); to grow luxuriant, as trees; to become stout, as persons.

[சினை → சனை → சணை-,]

சணைப்பு *šaṇaippu,* பெ. (n.) *1.* கிளைப்பு; branching. *2.* செழிப்பு; flourishing.

[சணை → சணைப்பு]

சத்தக்கட்டை *šatta-k-kaṭṭai,* பெ. (n.) குறைவான வண்டிக்கூலி முதலியன; low cartage, low hire.

[சத்தம் + கட்டை. சத்தம் = வண்டிகூலி, வாடகை]

சத்தக்காரன் *šatta-k-kāraṉ,* பெ. (n.) *1.* கூலிக்காரன்; wage earner. *2.* வண்டிக்காரன்; cart owner (சேரநா.).

ம. சத்தக்காரன்

[சத்தம் + காரன்]

சத்தக்கூலி *šatta-k-kūli,* பெ. (n.) நெல் முதலிய பொருள்களை ஓரிடத்திலிருந்து எடுத்துச் செல்வதற்கு மாட்டுவண்டிக்குரியவன் பெறும் கூலி; cartage. "நிசதம் பதின்கலமாக ஏழு நாளைக்கு எழுபதின் கலம் சத்தக் கூலியுட்பட" *(தெ.க.தொ. 19: க. 194).*

மறுவ. வண்டிச் சத்தம்

ம. சத்தக்கூலி

[சத்தம் + கூலி]

சத்தகம்[1] *šattagam,* பெ. (n.). சிறுகத்திவகை *(யாழ்ப்.);* curved knife, small bill-hook.

[சட்டு → சட்டகம் → சத்தகம்]

சத்தகம் → Skt. śastraka

சத்தங்கேள்-தல் (சத்தங்கேட்டல்) *šattaṅ-gēḷ-* 16 செகுவி. (v.i.) வண்டிவாடகை பேசுதல் (இவ.); to settle cartage.

[சத்தம் + கேள்-,]

சத்தசா *šattasā,* பெ. (n.) மகிழம்பூ; ape-face flower - Mimusops elengi *(சா.அக.).*

சத்தசாதாரணை *šattasādāraṇai,* பெ. (n.) சத்தசாரணை பார்க்க; see *šatta-šāraṇai.*

[சத்தசாரணை → சத்தசாதாரணை]

சத்தசாரணை *šattašāraṇai,* பெ. (n.) ஒரு வகை மூலிகை *(M.M.893);* a medicinal plant.

[சத்து → சத்த + சாரணை]

சத்தபேதி *šattapēdi,* பெ. (n.) கொடுக்காய்ப் புளி; Malabar tamarind - Gareinia gambogia *(சா.அக.).*

சத்தபரியாயம் *šatta-pariyāyam,* பெ. (n.) பெருவேம்பு; large neem or mountain neem - Melia composita *(சா.அக.).*

சத்தம் *šattam,* பெ. (n.) *1.* வண்டிக்கூலி; cartage. *2.* வாடகை (உ.வ.); hire. 'ஊருக்குப் போக வர வண்டிச் சத்தம் 2 உரூபாய்' *(உ.வ.).*

ம. சத்தம்

[சாத்து : பண்டங்களைக் கொண்டுவிற்கும் வணிகர் கூட்டம். சாத்து வண்டிக்குக் கொடுக்கும் கூலி சாத்தம் எனப்பட்டது. வண்டிச்சாத்தம் = வண்டிக்கூலி. சாத்தம் → சத்தம். சத்தம் = வண்டிக்கூலி]

சத்தமார்க்கம் *šatta-mārkkam,* பெ. (n.) கமுகு; areca-nut tree - Acaciacatechu *(சா.அக.).*

சத்தயோனி *šatta-yōṉi,* பெ. (n.) மலைமகள் *(கூர்மபு. திருக்கலியாண. 23);* Pārvadi.

சத்தறை *šattaṟai,* பெ. (n.) திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஊர்; a village in Tiruvaḷḷūr district.

[சாய் → சா → சத்து + அறை]

சத்தன் *šattaṉ,* பெ. (n.) *1.* ஆற்றலுள்ளவன்; able energetic person. *2.* உருவிலியான சிவன்; the formless Sivan, as the embodiment of energy. "சத்தன் வேண்டிற் றெல்லாமாஞ் சத்திதானே" *(சி.சி. 2. 76).*

[சத்து → சத்தன்]

சத்தி[1] *šatti,* பெ. (n.) *1.* ஆற்றல் *(பிங்.);* ability, power, strength, energy. *2.* சிவன் அருள்; grace of Sivan. "ஈசன்றன் சத்தி தோய" *(சி.சி. 4, 40); 3.* உமை, மலைமகள்; Pārvadi, Śivan's energy. "சத்திதன் வடிவே தென்னிற் றடையிலா ஞான மாகும்" *(சி.சி. 1, 62). 4.* வேல்; spear, dart. "தாமேற் றழுத்திய சத்தி வாங்கி" *(பெருங். மகத. 20, 63). 5.* சூலம்; trident. "வித்தகக் கைவினைச் சத்தி" *(பெருங். மகத. 14, 153). 6.* சொல்லாற்றல் (பி.வி. 18, உரை); signification of a word. *7.* கந்தகம் *(வின்.);* sulphur. *8.* நெல்லிக்காய்க் கந்தகம் *(தைலவ.தைல. 69);* myrobalan sulphur. *9.* வழலை; soap. *10.* நிமிளை *(மூ.அ);* bismuth pyrites. *11.* நீர்முள்ளி *(மலை.);* white long-flowered nail-dye. *12.* குடை; umbrella. *13.* இசைச் செய்யுள் *(அக.நி.);* a melodious verse.

[சத்து → சத்தி]

சத்தி[2] *šatti,* பெ. (n.) விருந்து; feast *(இ.வ.).*

[சொல் + தி = சொன்றி → சொந்தி → சொதி → சதி = சோறு. சதி → சத்தி = சோற்றுடன் கூடிய விருந்து]

சத்திக்குடம் *šatti-k-kuḍam,* பெ. (n.) மாளிகை மேல் வைக்கப்படும் சூலம் நாட்டிய குடம்; a metal vessel with a javelin or trident fixed in it placed on the terrace of a building. "சத்திக்குடத் தொடு தத்துற லோம்பி" *(பெருங். இலாவாண. 20, 111).*

[சத்தி + குடம்]

சத்திக்கூற்றோன் *šatti-k-kūṟṟōṉ*, பெ. (n.) நவச்சாரம் (சங்அக.); sal-ammoniac.

[சத்தி + கூற்றோன்]

சத்திக்கொடி[1] *šatti-k-koḍi*, கொம்மட்டிக் கொடி; creeper of water-melon (சா. அக.).

[சத்தி + கொடி]

சத்திக்கொடி[2] *šatti-k-koḍi*, தாடிமஞ்சம் என்னும் கொடி வகை (பிங்.); a kind of creeper.

[சத்தி + கொடி]

சத்திகம் *šattigam*, பெ. (n.) குதிரை (சது.); horse.

[அதி = மிகுந்த. அதி → அதிகம் → சதிகம் → சத்திகம் = மிகுந்த வேகத்துடன் ஓடக் கூடியது]

சத்திகர் *šattigar*, பெ. (n.) தேவதூத வகையினர் (R.C.); celestial powers.

[சத்தி → சத்திகர்]

சத்திகா *šattigā*, பெ. (n.) கொம்மட்டி; water-melon (சா.அக.).

[சத்தி → சத்திகா]

சத்திகாட்சி *šatti-kāṭci*, பெ. (n.) வலம்புரிக் கொடி; twisted-horn -helicteres isora alias isoria corylifolia (சா.அக.).

[சத்தி + காட்சி]

சத்திகீலம் *šatti-kīlam*, பெ. (n.) வீணையின் முறுக்காணி; violin's peg of stringed instrument.

[சத்தி + கீலம்]

சத்திகுருநாதன் *šatti-kurunādaṉ*, பெ. (n.) கஞ்சா (வின்.); Indian hemp.

சத்திகோணம் *šatti-kōṇam*, பெ. (n.) மலைமகளைக் குறிப்பதாக வரையும் கோணம் (சௌந்தர்ய. 11, உரை); a mystic diagram believed to represent Pārvadi.

[சத்தி + கோணம். கொள் → கோள் → கோண் → கோணம்]

சத்திச்சாரம் *šatti-c-cāram*, பெ. (n.) காந்தாரியுப்பு (வின்.); an acrid salt.

சத்திசடாமூலி *šatti-šaḍā-mūli*, சிற்றாமணக்கு; small-seeded castor plant - Ricinus communis (சாஅக.).

[சத்தி + சடாமூலி]

சத்திசாரணை *šatti-sāraṇai*, பெ. (n.) 1. காரீயத்தைப் பொடியாக்கும் மூக்கிரட்டை; spreading hog-weed - Boerhaavia repens alias B. procumbens. 2. வெள்ளைச் சாரணை; trianthema - Trianthema decandra (சாஅக.).

[சத்தி + சாரணை]

சத்திதரன் *šatti-daraṉ*, பெ. (n.) வேற்படையுடைய முருகன்; Murugan, as having javelin.

[சத்தி + தரன்]

சத்திதீபம் *šatti-dībam*, பெ. (n.) கோயில் விளக்குவகை (பரத. 4, ஒழி, பி.2, உரை); a kind of temple lamp.

[சத்தி + தீபம். தீவம் → தீபம்]

சத்திநாகம் *šatti-nāgam*, பெ. (n.) நீர்முள்ளி; water-thistle (சா. அக.).

[சத்தி + நாகம்]

சத்திநாகிதம் *šatti-nāgidam*, பெ. (n.) சங்கஞ்செடி பார்க்க; see *šaṅgañjeḍi* (சா. அக.).

சத்திநாதம் *šatti-nādam*, பெ. (n.) 1. பொன்னிறம்; golden colour. 2. பொன்னிமிளை; bismuth of a golden colour. 3. காக்காய்ப் பொன் (சங்அக.); yellow mica.

[சத்தி + நாதம்]

சத்திநாதனார் *šatti-nādaṉār*, பெ. (n.) குறுந்தொகை 119ஆவது பாடலின் ஆசிரியர்; a saṅgam poet, author of Kuṟundogai-119.

[சத்தி + நாதனார்]

சத்திநாயனார் *šatti-nāyaṉār*, பெ. (n.) அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர் (பெரியபு.); a canonized šaiva saint, one of 63.

[சத்தி + நாயனார்]

சத்திபாசம் *šatti-pāsam*, பெ. (n.) சிறு தும்பை; small leucas (சாஅக.).

[சத்தி + பாசம்]

சத்திமான் šattimāṉ, பெ. (n.) துணை வலிவு (ஆதரவு) உள்ளவன்; one endowed with power or strength. "சத்தி யனேகமாகிற் சத்திமானும் அனேகமாய்" (சி.சி. 1, 61, சிவாக்.).

[சத்தி + மான். மகன் → மான்]

சத்திமுகம் *šatti-mugam,* பெ. (n.) *அரசனின் ஆணை ஆவணம்;* royal mandate. *"சாலா போகமும் தேவதானமும் சத்திமுகமின்றி விலக்கப் பெறார்" (T.A.S. i, 9).*

ம. சத்திமுகம்

[சத்தி + முகம்]

சத்திமுத்தம் *šatti-muttam,* பெ. (n.) *சத்திமுற்றம் பார்க்க;* see *šatti-murram.*

[சத்திமுற்றம் → சத்திமுத்தம். சத்திமுற்றம் = சத்தியின் பரப்பு]

சத்தியாகிய உமையம்மை சிவனுக்கு முத்தம் கொடுத்த இடம் என்னும் பழங்கதை யடிப்படையில் பெயர் பெற்ற ஊர் என்பர்.

சத்திமுற்றம் *šatti-murram,* பெ. (n.) *சோழ நாட்டில் தேவாரப் பாடல்பெற்ற தென்கரை ஊர்களுள் பட்டீச்சுரத்தின் மேற்பாலுள்ள திருச்சத்திமுற்றமெனும் ஊர்;* a village near Pattīšvaram. *"தழற்கைத் தேவா திருச்சத்திமுற்றத் துறையும் சிவக்கொழுந்தே" (தேவா. 4, 1).*

[சத்தி + முற்றம்]

சத்தியம் *šattiyam,* பெ. (n.) *குறிஞ்சா (மூ.அ.);* a species of sammony swallow-wort.

சத்தியாசிரியன் *šatti-y-āširiyan,* பெ. (n.) *மேலைச் சாளுக்கிய நாட்டை ஆண்டவன்;* a king of Mēlai-cālukkiya.

[சத்தி + ஆசிரியன்]

சத்தியான் *šattiyān,* பெ. (n.) *முருகக் கடவுள்;* god Murugan. *"சத்தியான் றாடொழா தார்க்கு" (இன். நாற். 1).*

[சத்தி → சத்தியான் = வேற்படையையுடைய முருகன்]

சத்தியுடகூறு *šatti-y-udakūru,* பெ. (n.) *இருள் மரம்;* serpent champak - Mesua ferrea *(சா.அக.).*

சத்தியுப்பு *šatti-y-uppu,* பெ. (n.) *பூரவுப்பு (மூ.அ.);* a kind of acrid salt.

[சத்தி + உப்பு]

சத்தியுருவம் *šattiyuruvam,* பெ. (n.) *சிவனது அருள் வடிவம்;* the manifested form of Šivan's grace.

[சத்தி + உருவம். உரு → உருவம்]

சத்திரசாதி *šattira-šādi,* பெ. (n.) *சாதிபத்திரி;* mace or pulp of nutmeg - Myristica fragrans *(சா.அக.).*

சத்திரசாமம் *šattira-šāmam,* பெ. (n.) *இலந்தை;* Indian almond - Zizyphus jujubi *(சா.அக.).*

சத்திரப்பாடி *šattira-p-pādi,* பெ. (n.) *தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்;* a village in Thanjavur district.

[சத்திரம் + பாடி]

'பாடி' என்பது முல்லை நிலச் சிற்றூர். மன்னர், குறுநிலத் தலைவர் ஆகியோர் படைவீடு கொண்ட இடம், பெருநகரம்.

சத்திரபேட்சம் *šattira-pētsam,* பெ. (n.) *பேயத்தி;* devil's fig - ficus hispida *(சா.அக.).*

சத்திரம்[1] *šattiram,* பெ. (n.) *பயணிகள் தங்குமிடம் (பிங்.);* choultry, rest-house. *"சத்திர முதலான சாலைகளிலே" (சிலப். 4: 180, அரும்.).*

க. சக்ர; தெ. சத்ரமு

[சாத்து → சாத்திரம் → சத்திரம் = வழிச் செல்வோர் தங்குமிடம்]

சாத்து = வணிகர் கூட்டம். முற்காலத்தில் அயலிடச் செலவு மேற்கொண்டோர் சாத்துகள் ஆகையால் அவர்கள் தங்கிய இடம் சத்திரமாயிற்று.

சத்திரம்[2] *šattiram,* பெ. (n.) 1. *கவிழ்தும்பை;* a low annual flourishing in dry lands. 2. *தும்பை;* white dead-nettle.

சத்திராட்சி *šattirātci,* பெ. (n.) *அரத்தை (வின்.);* galangal.

[சத்திராத்தி → சத்திராட்சி]

சத்திராத்தி *šattirātti,* பெ. (n.) *அரத்தை (மலை.);* galangal.

[சத்திரத்தை → சத்திராத்தை → சத்திராத்தி]

சத்திராபாவம் *šattirā-bāvam,* பெ. (n.) *நாகமுட்டி;* frog - creeper - Tiliacora racemos *(சா.அக.).*

சத்திரி *šattiri,* பெ. (n.) *யானை (சங்.அக.);* elephant.

[சத்து → சத்திரி]

சத்திரூபம் *šatti-rūpam,* பெ. (n.) *சத்தியுருவம் பார்க்க;* see *šatti-y-uruvam.*

[சத்தி + ரூபம். உருத்தல் = தோன்றுதல். உரு = தோற்றம், வடிவம், வடிவுடைப் பொருள், உடல். உரு → உருவு → உருவம்]

த. உருவம் → Skt. rūpa → த. ரூபம்

சத்திலி *šattili*, பெ. (n.) கருப்பூரம்; camphor.

[சத்து + இலி]

சத்திவட்டம் *šatti-vaṭṭam*, பெ. (n.) விருந்தின் உணவுவகைகள் (நாஞ்.); viands of a feast.

[சத்தி² + வட்டம்]

சத்து[1] *šattu*, பெ. (n.) *1.* சாரம் (தைலவ. பாயி. 30); essence, as of medicines. *2.* அறிவு (வின்.); wisdom. *3.* மெய்யுணர்வாளன் (ஞானி); sage. *4.* நன்மை; virtue, goodness, moral excellence.

[அள் → சள் → சழி. சழிதல் = நெருங்கிக் கிடத்தல், அள்ளுதல்= செறிதல். சள் → (சண்) → சத்து = நெருக்கிப் பிழிவதால் கிடைக்கும் சாரம், நிறைந்திருக்கும் பொறியுணர்வு, அத் தன்மை கொண்டவர், அவ்வறிவால் கிடைக்கும் நன்மை.]

சத்து[2] *šattu*, பெ. (n.) *1.* கருப்பூரசிலாசத்து (சங்.அக.); a variety of gypsum. *2.* துத்தம் (பைஷஜ.86.); sulphate of zinc.

[சள் → (சண்) → சத்து]

சத்து[3] *šattu*, பெ. (n.) அமைதியாயிருக்க வழங்குங் குறிப்புச் சொல் (கோயிலொ.); onom. expr. signifying silence.

க., தெ. சத்து

சத்து[4] *šattu*, பெ. (n.) ஒரு வகைச் செய்நஞ்சு (மூ.அ.); a mineral poison.

சத்து[5] *šattu*, வி.எ. (part.) இறந்து; having died.

[சாய் → சா. சாதல் = இறத்தல். சா → சத்து. நெடில் வினைமுதல் இறந்தகால வினையில் குறுகும். ஒ.நோ. காண்→ கண்டான், கண்டு]

ša or šag-u, to die; Tel. chachu (base cha). Comp. samōiede chawe and chabbi, dead (C.G.D.F.L. 619).

சத்துக்கொடு-த்தல் *šattu-k-koḍu-*, 4 செ.கு.வி. (v.i.) வலிமையுண்டாக்குதல்; to communicate power, strength, tone.

[சத்து + கொடு-,]

சத்துகம் *šattugam*, பெ. (n.) வன்னிமரம்; Indian mesquit, Arjuna's penance tree - Prosopis spicigera (சா.அக.).

[சத்து → சத்துகம்]

சத்துச்சாரணை *šattu-c-cāraṇai*, பெ. (n.) சத்திசாரணை (யாழ். அக.) பார்க்க; see *šatti-šāraṇai*.

[சத்து + சாரணை]

சத்துணவு *šattuṇavu*, பெ. (n.) உடலுக்கு வளர்ச்சியும் வலிமையும் அளிக்கக்கூடிய சத்துள்ள பொருட்களால் சமைக்கப்பட்ட உணவு; nutritious meal. முதலமைச்சர் சத்துணவுத் திட்டம்.

[சத்து + உணவு]

சத்துப்பு *šattuppu*, பெ. (n.) கறியுப்பு (மூ.அ.); common salt.

[சத்து + உப்பு]

சத்துப்பை *šattu-p-pai*, பெ. (n.) சத்துமா முதலியன வைக்கும் பை; bag for flour of parched grain.

[சத்து + பை. பொய் → (பய்) → பை = உட்டுளையுடையது]

சத்துமத்து *šattumattu*, பெ. (n.) அடிப்படைக் காரணம் (வின்.); seed or originating principle.

[சத்து + மத்து. எதுகை நோக்கி வந்த இணைமொழி]

சத்துமா *šattu-mā*, பெ. (n.) பொரித்த அரிசியின் மா, நோன்புக் கால ஊட்ட உணவு; flour of parched grain, especially rice, generally used in time of fasting.

[சத்து + மா]

சத்துமொத்தெனல் *šattu-motteṉal*, பெ. (n.) திரும்பத் திரும்ப அடித்தலை உணர்த்தும் ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying repeated sound, as of kicking, beating, pounding grain.

[சத்து + மொத்து + எனல்]

சத்துரு *šatturu*, பெ. (n.) தண்ணீர்விட்டான் கிழங்கு; water root - Asparagus racemoses (சா.அக.).

சத்துருவாசம் *šatturu-vāsam,* பெ. (n.) *காணம் அல்லது கொள்;* horse-gram.

சத்துவக்கு *šattu-vakku,* பெ. (n.) மலை விராலி; fish poison cedar tree - Walsura piscidia *(சா.அக.).*

சத்துவகம் *šattu-vagam,* பெ. (n.) *கருவாகை;* Fragrant acacia - Mimosa marginata *(சா.அக.).*

சத்துவகர் *šattuvagar,* பெ. (n.) இறும்பூதுகளை (அற்புதங்களை) நிகழ்த்தவல்ல தேவதூதர் (R.T.); angels gifted with the power of performing miracles, a celestial order.

[சத்து → சத்துவகர்]

சத்துவகுணம் *šattuva-kuṇam,* பெ. (n.) முக்குணங்களுள் சிறந்ததாய் நற்செயல் களிலேயே நோக்கம் உண்டாக்குவதான குணம் (குறள், கடவுள். பரி.); goodness or virtue, one of mu-k-kuṇam.

[சத்து → சத்துவம் + குணம். கொள்ளுதல் = கொண்டிருத்தல், உடையனாயிருத்தல். கொள் → கொள்கை = இயல்பு. கொள் → கோள் = தன்மை. கொள் → (கொண்) → (கொணம்) → குணம் = கொண்ட தன்மை, தன்மை]

சத்துவம் *šattuvam,* பெ. (n.) *1. சாரம்;* essence, essential principle. *2.* வலிமை (சூடா.); strength, power, ability, vigour. *3. உளதாந்தன்மை;* existence.

[சத்து → சத்துவம்]

சத்துவலாகம் *šattuvalāgam,* பெ. (n.) மலை வன்னி மரம்; penance tree on hill-tops - Prosopis spicigera *(சா.அக.).*

சத்துவளையன் *šattu-vaḷaiyan,* பெ. (n.) திகைப்பூச்சி; an insect inducing perplexity of mind when coming in contact *(சா.அக.).*

மறுவ. குழியானை

[சத்து + வளையன்]

சத்துவாச்சேரி *šattuvā-c-cēri,* பெ. (n.) வேலூருக்கு அருகிலுள்ள ஊர் *(தெ. க. தொ. 1: க. 47. 22.);* name of a village in Vēlūr.

சதக்கல் *šadakkal,* பெ. (n.) சதுப்பு நிலம்; marsh, mire.

[சள் → சது → சதுப்பு. சள் → சத+கால் - சதக்கால் → சதக்கல்]

சதக்காசிதம் *šadakkāšidam,* பெ. (n.) முல்லைப் பூ; smooth jasmine - Jasminum Trichotomum *(சா.அக.).*

சதக்காரை *šadakkārai,* பெ. (n.) ஒருவகைக் காரைச் செடி; a kind of webera- Canthium genus *(சா.அக.).*

சதகம் *šadagam,* பெ. (n.) தான்றி; bellerie myrobalan.

சதகரம் *šadagaram,* பெ. (n.) *சாதிக்காய்;* nutmeg - Myristica fragrans *(சா.அக.).*

சதகுப்பி *šadakuppi,* பெ. (n.) *1.* மருந்தாகப் பயன்படும் மூலிகை (M.M. 852); dill. *2.* ஓமம் (வின்.); bishop's weed.

மறுவ. சோகிக்கீரை

[சதகுப்பை → சதகுப்பி]

சதகுப்பிசக்களவன் *šadakuppi-šakkaḷavan,* பெ. (n.) காட்டுச் சதகுப்பை என்னும் ஒரு வகைக் கடைச்சரக்கு; a wild plant akin to common dill - Anethum graveolens, a bazaar drug *(சா.அக.).*

[சதகுப்பை → சதகுப்பி + சக்களவன்]

சதகுப்புகம் *šadakuppugam,* பெ. (n.) முருங்கை; Indian horse radish - Moringa pterygosperma *(சா.அக.).*

சதகுப்பை *šadakuppai,* பெ. (n.) மென்மையான இலைகளையும் வெளிர் மஞ்சள் நிற விதைகளையும் கொண்ட ஒரு வகைச் சிறுசெடி; the medicinal herb, dill.

சதங்கை *šadangai,* பெ. (n.) *1.* கிங்கிணி; string of small metal bells. *2.* பெண்களும் குழந்தைகளும் அணிந்து கொள்ளும் ஓரணி, சலங்கை; string of small silver or gold bells, worn by children and women as an ornament for the feet or waist. "பரியகம் நூபுரம் பாடகஞ் சதங்கை" *(சிலப். 6, 84, உரை).*

மறுவ.. கிண்கிணி, சிறுமணி

ம. சதங்க

[சல் → சல → சலங்கை → சதங்கை. ஓ.நோ: கல் → கல → கலம்பு → கலம்பம் → கதம்பம். ல → த. போலி (வ.வ. 125)]

சதங்கை → Skt. sruṅkhala

சதங்கைக்கொதி *śadaṅgai-k-kodi,* பெ. (n.) உலைநீரின் ஒருவகைக் கொதிப்பு; boiling of water or liquid-food characterised by bubbling.

[சலங்கை → சதங்கை + கொதி]

சலங்கை ஒலியைப் போல் இயைபுடன் ஒலி உண்டாக்கும் கொதிப்பு.

சதங்கைத் தாமம் *śadaṅgai-t-tāmam,* பெ. (n.) ஒருவகைப் பூமாலை; a kind of garland. "மதங்கமழ் நறுமலர்ச் சதங்கைத் தாமமும்" (பெருங். மகத. 9, 45).

[சதங்கை + தாமம். தாம்பு = கயிறு. தாம்(பு) → தாமம்]

சதங்கைப்பூரம் *śadaṅgai-p-pūram,* பெ. (n.) சதங்கைப்பூரான் (வின்.) பார்க்க; see *śadaṅgai-p-pūraṉ.*

ம. சதங்கப்பூரம்

[சதங்கை + பூரம்]

சதங்கைப்பூரான் *śadaṅgai-p-pūraṉ,* பெ. (n.) பூரான் வகை; a large species of centipede.

ம. சதங்கப்பூரம்

[சதங்கை + பூரான்]

சதங்கைமாலை *śadaṅgai-mālai,* பெ. (n.) 1. ஒருவகைக் கழுத்தணி; a kind of neck-ornament. 2. மாலை வகை; a kind of garland. 3. எருது குதிரைகளின் கழுத்தணி; a string bells for the neck of cattle and horses.

ம. சதங்கமால

[சதங்கை + மாலை]



சதங்கை மாலை

சதச்சதம் *śada-c-cadam,* பெ. (n.) 1. வெண்ணாரை; white cormorant. 2. தச்சன் குருவி; wood-pecker (சா.அக.).

சதசத-த்தல் *śada-śada-,* 4 செ.கு.வி. (v.i.) ஈரப் பற்றாயிருத்தல்; to be damp, wet.

[சதசதம் = ஒலிக்குறிப்புச் சொல். சதசதம் → சதசதத்தல்]

சதசதப்பு *śadaśadappu,* பெ. (n.) மண், மணல், களிமண் முதலியவற்றில் நீர்பட்டுக் குழைவாக இருக்கும் நிலை; wetness, sogginess. இந்தச் சதசதப்பில் வெறுங்காலோடு நடந்தால் சேற்றுப்புண் வரும்.

பட. சொதசொத

[சதசதம் → சதசதப்பு. 'பு' –பெ.ஆ.ஈறு]

சதசதெனல் *śadaśadeṉal,* பெ. (n.) அழுகுதற் குறிப்பு; expr. of rotting. "சதசதென் றழுகுதுர்க்கந்த சாக்கடையான சமுசாரமதி லுழல்வனோ" (மஸ்தான். 130).

[சதசத + எனல்]

சதபருவம் *śada-paruvam,* பெ. (n.) 1. நீர்முள்ளி; blue-flowered water-thistle. 2. கறுப்பறுகு; dark panic grass - Cynodon genus (சா.அக.).

சதபுட்பம் *śada-puṭpam,* பெ. (n.) சதகுப்பி (மலை.) பார்க்க; see *śadakuppi.*

சதபுட்பி *śada-puṭpi,* பெ. (n.) சதகுப்பி (தைலவ. தைல. 59) பார்க்க; see *śadakuppi.*

சதம் *śadam,* பெ. (n.) சந்தனமரம்; sandal wood tree (சா.அக.).

[சந்தனம் → சந்தம் → சதம்]

சதமூலம் *śada-mūlam,* பெ. (n.) சதமூலி பார்க்க; see *sada-mūli* (சா.அக.)

சதமூலி *śada-mūli,* பெ. (n.) தண்ணீர்விட்டான் கிழங்கு; water-root - asparagus racemoses (சா.அக.).

[சதமூலம் → சதமூலி]

சதமூலை *śada-mūlai,* பெ. (n.) மிக ஒதுக்கமான மூலை (இ.வ.); remote corner.

சதர்ச்சி *śadarcci,* பெ. (n.) சதுரக்கள்ளி; square purge - Euphorbium antiguorum (சா.அக.).

[சதுரம் → சதுர்ச்சி → சதர்ச்சி]

சதரம் *šadaram,* பெ. (n.) சடலம் பார்க்க; see *šaḍalam.*

[சடலம் → சதரம். சதரம் கொச்சைத் திரிபாகச் சதிரம் என்றும் வழங்குகிறது.]

சதரி *šadari,* பெ. (n.) நாட்டு அதிமதுரம்; Indian or country liquorice - Abrus prešatorius *(சா.அக.).*

சதவல் *šadaval,* பெ. (n.) *1.* சதுப்புநிலம் *(சங்.அக.);* damp, swamp, marshy land. *2.* குப்பை; rubbish.

ம. சதவல்

[சத → சதவல்]

சதவீரியம் *šada-vīriyam,* பெ. (n.) வெள்ளறுகு *(மலை.);* white bermuda grass.

சதவீரு *šadavīru,* பெ. (n.) மல்லிகை *(மலை.);* Arabian jasmine.

சதவீருகம் *šada-vīrugam,* பெ. (n.) முந்திரிப் பருப்பு; cashew-nut - Anacardium occide.

சதவேலி *šadavēli,* பெ. (n.) சதாமூலம் பார்க்க; see *šadā-mūlam (சா.அக.).*

[சதாவேரி → சதாவேலி]

சதளக்காரன் *šadaḷa-k-kāraṉ,* பெ. (n.) பெருங்குடும்பக்காரன் *(இ.வ.);* man of large family.

[சதளம் + காரன்]

சதளம் *šadaḷam,* பெ. (n.) கூட்டம்; multitute. சனசதளம் *(ராட்.)*

[அதித்தல் = மிகுதல். அதி + அனம் - அதனம் = அதிகம், மிகுதி, மிகை. அதனம்→ சதனம் → சதளம்]

சதாப்பன் *šadāppaṉ,* பெ. (n.) எருக்கு; madar-plant - Caltropis gigantea *(சா.அக.).*

சதாப்பு *šadāppu,* பெ. (n.) துளசி போன்ற சிறுசெடி; a little plant.

இதன் இலை காரமும் மணமும் உடையது; இருமலைக் கண்டிக்கவும், கறி சமைக்கவும் பயன்படும்.

சதாமூலம் *šadā-mūlam,* பெ. (n.) ஒரு வகைத் தண்ணீர்விட்டான் கிழங்கு; a kind of water-root.

சதாமூலி *šadā-mūli,* பெ. (n.) ஒருவகைப் பழம்; melon fruit *(சா.அக.).*

[சதமூலி → சதாமூலி. மூல் → மூலி]

சதாரம் *šadāram,* பெ. (n.) *1.* இடி; thunderbolt. *2.* நூறுகோடி; one hundred crores.

சதாரை *šadārai,* பெ. (n.) சதுரமான ஒருவகை ஆரைக்கீரை; a kind of water plant called sweet green-Marsilea quadirfolia *(சா.அக.).*

[சதுர(ம்) + ஆரை → சதுராரை → சதாரை]

சதாவரி *šadāvari,* பெ. (n.) பாம்பு கொல்லி; plant curing snake bites *(சா.அக.).*

சதாவரிக்கிழங்கு *šadā-vari-k-kiḻaṅgu,* நிலப்பனைக் கிழங்கு; root of ground palm.

[சதாவரி + கிழங்கு]

சதாவரிக்கிழங்கு

சதாவளி *šadāvaḷi,* பெ. (n.) வெள்ளைக் காக்கணம்; white-flowered mussell - shell creeper - Clitoria ternatea *(சா.அக.).*

சதாவு-தல் *šadāvu-,* 5 செ.குன்றாவி. (v.i.) பழுதாதல்; to be shattered or broken; to be rotten; to be decayed. "அனைத்துருஞ் சதாவியிட" *(பாரத. பன்னிரண்டாம். 23)*

[சதசதப்பு → சதவு → சதாவு]

சதாவேதி *šadā-vēdi,* பெ. (n.) சுக்கான் கீரை; a kind of soursorrel - Rumex vesicarius *(சா.அக.).*

சதாவேரி *šadāvēri,* பெ. (n.) சதாமூலம் பார்க்க; see šadā-mūlam.

ம. சதவேரி

சதானம் *šadāṉam,* பெ. (n.) பருத்தி; cotton-tree-Gossypium herbaceum *(செ.அக.).*

சதி[1]-த்தல் *šadi-,11* செ. குன்றாவி. (v.t.) *அழித்தல்;* to destroy, kill. "மாயனை...... சதிப்பதே கருமம்" *(பாரத. கிருட். 178).*

[அழி → சழி → சதி-,]

சதி[2]-த்தல் *šadi-,11* செகுன்றாவி. (v.t.) ஏமாற்றுதல்; to deceive. 'சூதுகொண்டு சதிப்பதே கருமமென்றான்' *(பாரத. சூது. 24)* 2. மறைத்தல், மந்தணமாகச் செயற்படுதல்; to conceal. 3. முட்டாளாக்குதல்; to be fool, to play a wilful act of trickery, to deceive by artifices.

ம. சதிக்குக; து., குட. சதி.

[அழி → சழி → சதி]

சதி[3] *šadi,* பெ. (n.) ஏமாற்றம் (வஞ்சனை); treachery, perfidy, wiles.

ம. சதி; க. சத்தக.

[சதி[2] → சதி]

சதி[4] *šadi,* பெ. (n.) சோறு (பிங்.); cooked rice.

[சொல் + தி → சொன்றி → சொந்தி → சொதி → சதி]

சதி[5] *šadi,* பெ. (n.) தீக்கடை கோல்; fire-producing mechanism. "சதி கொண்ட சாக்கி யெரியின் வடிவாம்" *(திருமந். 1653)*

மறுவ. ஞெலிகோல்

[சுழி = சுழற்றுதல், கடைதல். சுழி → சுதி → சதி]

சதி[6] *šadi,* பெ. (n.) விரைவு; haste, speed, quickness. சதியாய் வா.

[சடுதி → சதி]

சதி[7] *šadi,* பெ. (n.) வட்டம் (பிங்.); circle, periphery.

[சுல் → சுள் → சுளி → சளி. சளிதல் = ஒரு பக்கம் சரிதல். சளி → சதி]

சதி[8] *šadi,* பெ. (n.) தாளவொத்து; agreement of time in music and dancing. "நன்மாதர் சதிபட மாநட மாடி" *(தேவா. 118, 3)*

[சுதி → சதி]

சதிக்குற்றம் *šadi-k-kuṟṟam,* பெ. (n.) ஏமாற்றிய குற்றம்; crime of deceit.

ம. சதிக்குற்றம்

[சதி + குற்றம்]

சதிகாரன் *šadikāran̲,* பெ. (n.) ஏமாற்றுபவன்; treacherous, decitful person, traitor.

ம. சதிக்காரன். தெ. சித்துலவாடு

[சதி + காரன்]

சதிகொலை *šaḍi-kolai,* பெ. (n.) படுகொலை; assassination, deliberate murder.

[சதி + கொலை]

சதிங்கி *šadiṅgi,* பெ. (n.) கப்பற்பாயின் மூலைகளைப் பாய்மரத்தின் மேலாக இழுத்துக் கட்டுதற்கு உதவுங்கருவி; clew-line.

[சழி → சதி → சதிங்கி]

சதித்திட்டம் *šadi-t-tiṭṭam,* பெ. (n.) ஏமாற்றுவதற்காகப் போடும் திட்டம்; plan to deceit, treachery.

[சதி + திட்டம்]

சதிநாகம் *šadi-nāgam,* பெ. (n.). மூங்கிலரிசி; bamboo sago-Bambusa arundinacea *(சா.அக.).*

சதிபாய்-தல் *šadi-pāy-,* 2 செ.கு.வி. (v.i.). நாட்டியமாடுதல்; to dance. "தாளத்திற் கொக்கச் சதி பாயுங் குதிரை" *(பு.வெ. 6, 18, உரை).*

[சதி[8] + பாய்-,]

சதிமகள் *šadimagaḷ,* பெ. (n.) இந்திரன் மனைவி (இந்திராணி); Indira's wife.

[சதி + மகள்]

சதியம்பு *šadiyambu,* பெ. (n.) மறை விடத்திலிருந்து விடும் அம்பு; a treacherous arrow, an arrow shot from ambush. *(சேரநா.)*

ம. சதியம்பு

[சதி + அம்பு]

சதியன் *šadiyan̲,* பெ. (n.) ஏமாற்றுப் பேர்வழி; a deceiver, cheat, crook.

ம. சதியன்

[சதி + அன்]

சதிர்[1]-த்தல் *šadir-,* 11 செ.கு.வி. (v.i.) வலிமை பெறுதல்; to gain strength or power. "அன்பனா யடியேன் சதிர்த்தேன்" *(திவ். கண்ணிநுண். 5).*

ம. சதிர்

[சதுர் → சதிர்]

சதிர்[2] *šadir,* பெ. (n.) *1.* திறமை; ability, skill, dexterit. *2.* பெருமை; greatness, excellency. "சனகன் சதிருரையாதவர்" *(பிரபோத. 5, 32).* *3.* பேறு; fortune, blessing. "மா சதிரிது பெற்று" *(திவ். திருவாய். 2, 7,1). 4.* அழகு; beauty, loveliness. "சதிரா யிருந்த ரதி" *(தனிப்பா. 8, 10, 1). 5.* நிலைமை; state, condition. "தவிர்ந்த சதிர் நினைந்தால்" *(திவ். திருவாய். 8, 10, 1).*

[சதுர் → சதிர்]

சதிர்[3] *šadir,* பெ. (n.) *1.* குறைந்த விலை; low price, cheapness. சதிராய்க் கொண்டான் *(வின்.)* *2.* செட்டு; economy, frugality.

ம. சதிர்

[சதுர் → சதிர்]

சதிர்[4] *šadir,* பெ. (n.) எல்லை *(இ.வ.);* boundary, limit.

ம. சதிர்

[சதுர் → சதிர்]

சதிர்[5] *šadir,* பெ. (n.) நடனம் (நாட்டியம்); nautch.

[சதுர் → சதிர்]

சதிர்[6] *šadir,* பெ. (n.) பெரும்பயன் அளிக்குஞ் சிறு முயற்சி *(ஈடு. 9,1,4);* slight effort which produces great results.

[சதுர் → சதிர்]

சதிர்க்கச்சேரி *šadir-k-kaccēri,* பெ. (n.) நடன அரங்கு; nautch party.

[சதிர்[2] *+ கச்சேரி]*

சதிர்க்கிராமம் *šadir-k-kirāmam,* பெ. (n.) எல்லைப்புறத்துள்ள சிற்றூர்; frontier town.

[சதிர் + கிராமம்]

சதிர்த்தேங்காய் *šadir-t-tēṅgāy,* பெ. (n.) நேர்த்திக் கடனாகவாவது கண்ணேறு கழிக்கவாவது சிதறவுடைக்கும் தேங்காய் *(இ.வ.);* coconuts thrown down and broken on special occasions in fulfilment of a vow or for averting an evil eye.

ம. சதிர்தேங்காய்

[சிதறு → சிதர் → சதிர் + தேங்காய்]

சதிர்நெல்லி *šadir-nelli,* பெ. (n.) சேலம் அருகிலுள்ள தீவட்டிப்பட்டியிலுள்ள கயிலாயமுடையார் கோயிலுக்கு இறையிலி நிலமாக வழங்கப்பட்ட சிற்றூர்; the name of a village gifted tax free to Kailāya muḍaiyār temple at Theevaṭṭipaṭṭi near Salem *(ஆவணம் 1991-5).*

[சதிர் + நெல்லி]

சதிரக்கள்ளி *šadira-k-kaḻḻi,* பெ. (n.) சதுரக்கள்ளி *(பதார்த்த. 121)* பார்க்க; see *šadura-k-kaḻḻi.*

ம. சதிரக்கள்ளி

[சதுரக்கள்ளி → சதிரக்கள்ளி]

சதிரக்கோல் *šadira-k-kōl,* பெ. (n.) நிலத்தை அளக்கப் பயன்பட்ட கோல்; land measured pole. "ஆதி.......... மகள் பேரில் சதிரக்கோலாய் ஐஞ்ஞூறு" *(தெ.க.தொ. 12, க. 228: 3).*

[சதுரம் → சதிரம் + கோல்]

சதிரம்[1] *šadiram,* பெ. (n.) கக்கரிவகை *(மலை.);* a kind of country melon.

சதிரம்[2] *šadiram,* பெ. (n.) நேர்கோணமுள்ளதும் அளவொத்த நான்கு எல்லை வரம்புடையதுமான உருவம்; square. "சதிரத்திண்ணைத் தண்பூம் பந்தர்" *(பெருங். இலாவாண, 2, 69)*

ம. சதிரம்

[சதுரம் → சதிரம்]

சதிராகூலி *šadirā-kūli,* பெ. (n.) ஆவாரை; tanner's cassia - Cassia auriculata *(சா.அக.).*

சதிராசா *šadirāsā,* பெ. (n.) பார்ப்பை அல்லது பரம்பை மரம்; suma tree - Prosopis spicigera *(சா.அக.).*

சதிராட்டம் šaḍir-āṭṭam, பெ. (n.) நடனக் காட்சி; nautch performance.

[சதிர் + ஆட்டம். ஆடு → ஆட்டம்]

சதிரி[1] *šadiri,* பெ. (n.) திறமையுடையவள்; skilful or dexterous woman. "சத்தி சதிரி" *(திருமந். 1194).*

[சதிர் → சதிரி. 'இ' – பெ. பா. ஈறு]

சதிரி[2] *šadiri,* பெ. (n.) செம்பை; sesbane- Sesbania aegyptiaca *(சா.அக.).*

சதிருக்குவா-தல் (சதிருக்குவருதல்) *šadirukku-vā-,* 18 செ.கு.வி. (v.i.) வெளிப்படையாதல்; to appear before the public, to be made public.

[சதிர்² + கு + வா-,]

சதீலிகி[1] *šadīlagi,* பெ. (n.) மூங்கில்; bamboo (சா.அக.).

சதீலிகி[2] *šadīligi,* பெ. (n.) முள்ளுக்கத்திரி; prickly brinjal - Solanum xanthocarpum (சா.அக.).

சது[1] *šadu,* இடை. (int.) ஓசையிடாதிருக்க வேண்டும் என்பதைக் குறிக்குஞ் சொல் (இவ.); an exclamation meaning silence.

சது[2] *šadu,* பெ. (n.) சதுர்[1] பார்க்க; see *sadur*[1] "சதுமுகமாகச் சேனை— தலைப்பெய்க" (சீவக. 766).

[சதுர் → சது]

சதுக்கத்தார் *šadukkattār,* பெ. (n.) ஒரு குறிப்பிட்ட நிலப்பேரெல்லைக்குள் அடங்கிய ஊர்ப்பகுதியில் வாழ்பவர் (ஐந்து வட்டத்தார், ஏழு வட்டத்தார்); residents of few hamlets which come under a larger circle "வீரவல்லி சோலை பிரான் இரமவித்த னுள்ளிட்ட சதுக்கத்தார்க்குட்பட்ட ஐஞ்சாம் பாடகம்" (தெ.க.தொ. 19. க. 222).

[சதுக்கம் + அத்து + ஆர்]

சதுக்கப்பூதம் *šadukka-p-pūdam* பெ. (n.) காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்ததாகக் கூறப்பெறும் ஒரு பூதம்; a mythical devil mention in Šilappadigāram at Kāvirippūm paṭṭinam.

[சதுக்கம் + பூதம். ஊது → பூது → பூதம் = பருத்தது, பெரியவுடம்பினைக் கொண்டது]

தெருச் சந்தியில் இருக்கும் பூதம். பொய் புனைவாளரை (வேடத்தினரை)த் தன் கையிலுள்ள கயிற்றினால் பற்றி அடித்துத் தின்னும் என்கிறது சிலம்பு.

சதுக்கப்பூதர் *šadukka-p-pūdar,* பெ. (n.) நாற்சந்திக்கண் குடிகொண்டுள்ள பூதங்கள். demons having their abode at the junction of four roads. "சதுக்கப் பூதரை வஞ்சியுட் டந்து" (சிலப். 28: 147)

[சதுக்கம் + பூதர். பூதம் → பூதர். 'ர்' – ப.பா. ஈறு]

சதுக்கம்[1] *šadukkam,* பெ. (n.) 1 நான்கின் கூட்டம்; that which consists of anything four. 2. நான்கு தெருக்கள் கூடுமிடம், நாற்சந்தி; junction where four roads meet. "சதுக்கமுஞ் சந்தியும்" (திருமுரு. 225). 3. சந்து (சூடா.); lane, narrow street. 4. மேடை (தைலவ. பாயி. 44); plat-form. 5. தலையிற் கட்டும் உருமால் (யாழ்ப்.); square cloth, large kerchief for the head. 6. நான்கு தூண்கள் கொண்ட மண்டபம்; yard, which has four pillars.

க. சதுக

[சது → சதுக்கம்]

த. சதுக்கம் → Skt. catuṣka

சதுக்கம்[2] *šadukkam,* பெ. (n.) இறந்த தலைவரின் நினைவாக எழுப்பப்படும் சதுர வடிவான மேடையுடன் கூடிய நினைவுச் சின்னம்; memorial for great leaders with a raised square. அண்ணா சதுக்கம்.

க. சதுக்கு (நான்கு தூண்களைக் கொண்ட மண்டபம்)

[சது → சதுக்கம்]

சதுக்கல் *šadukkal,* பெ. (n.) வழுக்கல்; slipperness.

[சறுக்கல் → சதுக்கல்]

சதுக்கினி *šadukkini,* பெ. (n.) இசங்கு; four-spined moratia - Azema tetracantha (சா.அக.).

[சதுர் → சதுர்க்கினி → சதுக்கினி]

சதுகம் *šadugam,* பெ. (n.) பெருங்காயம் (யாழ். அக.); asafoetida.

சதுகளவி *šadugaḷavi,* பெ. (n.) திருகுக்கள்ளியின் புல்லுருவி; a parasite grown on twisted spurge - Euphorbia tiricalli (சா.அக.).

சதுட்கம் *šaduṭkam,* பெ. (n.) நான்கு (யாழ். அக.); four.

[சதுர்க்கம் → சதுட்கம்]

சதுட்டம் šaduṭṭam, பெ. (n.) வால் மிளகு; tail-pepper - Piper cubeba (சா.அக.).

சதுட்பாதம் *šaduṭpādam,* பெ. (n.) 1. நாற்காலுள்ளது; quadruped. 2. நாய்; dog.

[சதுர்பாதம் → சதுட்பாதம். பதி → பதம் → பாதம் = நிலத்திற் பதியும் காலடி]

சதுடகம் *šadudagam,* பெ. (n.) நான்கு *(யாழ்அக.);* four.

[சதுரகம் → சதுடகம்]

சதுத்தரவு *šaduttaravu,* பெ. (n.) நன்மையளிக்கும் கட்டளை; (P.T.L. 174) favourable order.

[சத்து → சதுத்தரவு]

சதுப்பன்னி *šadu-p-panni,* பெ. (n.) ஆரை *(நாமதீப.);* ārai, an aquatic plant.

சதுப்பு *šaduppu,* பெ. (n.) சதுப்புநிலம் பார்க்க; see *šaduppu-nilam.*

ம. சதுப்பு; து. சண்டி, தண்டி (ஈரமான, நனைந்த)

[சுது → சது → சதுப்பு = சேற்றுநிலம்]

சதுப்புநிலம் *šaduppu-nilam,* பெ. (n.) சேற்று நிலம்; bog, marshy ground, swamp.

ம. சதுப்பு நிலம்

[சதுப்பு + நிலம்]

சதுப்புமான் *šaduppu-mān,* பெ. (n.) நாவலந் தீவில் (இந்தியாவில்) மட்டும் காணப்படும் மான் வகை; swamp deer.

[சதுப்பு + மான்]



சதுப்புயன் *šadu-p-puyan,* பெ. (n.) சதுர்ப்புயன் பார்க்க; see *šadur-p-puyan.* "சதுப்புயன்றாளில்" *(திவ். பெரியாழ். 4, 7, 3).*

[சதுர்ப்புயன் → சதுப்புயன்]

சதும்பை *šadumbai,* பெ. (n.) பேய்மருட்டி *(வின்.);* a very soft woolly plant.

[சது → சதும்பை]

சதுமணி *šadumani,* பெ. (n.) கழலை (தைலவ. தைல. 71); goitre.

சதுமுகன் *šadumugan,* பெ. (n.) 1. சதுர்முகன் பார்க்க; see *šadur-mugan.* "சதுமுகன் கையில்" *(திவ். பெரியாழ். 4, 7, 3).* 2. அருகன் (சூடா.); Arhat. "சங்கர னீசன் சயம்பு சதுமுகன்" *(சிலப். 10: 186)/.*

ம. சதுமுகன்

[சதுர் = நான்கு. சதுர் → சது + முகன். முகம் → முகன்]

சதுர்[1] *šadur,* பெ. (n.) 1. நான்கு; four, used only in compounds. "சதுர்முகன்" 2. நாற்கோணம்; square, tetragon. 3. நாற்புறம்; square.

க. சதுர், சதுரு, செதுரு; தெ. சதுரு; து. சதுர.

[சட்டம் → சடம் → சடல் → சதர் → சதுர் (வ.வ. 288)]

சதுரம்[1] பார்க்க

சதுர்[2] *šadur,* பெ. (n.) 1. திறமை; ability, skill. dexterity. "ஆலால முண்டா னவன் சதுர்தா னென்னேடி" *(திருவாச. 12, 8).* 2. வழிவகை; means, contrivance. "பொருடருமச் சதுரெப்படி" *(அரிச். பு. காசிகா. 18).* 3. மலிவு; cheapness. 'சதுராய் அந்தப் பண்டத்தைக் கொண்டான்' *(வின்.)*

[சதுரம் → சதுர்]

சதுர்க்கட்டு *šadur-k-kattu,* பெ. (n.) கட்டுடம்பு *(உ.வ.);* square built, well built, physique.

மறுவ. கட்டுடல்

[சதுரம் + கட்டு → சதுரக்கட்டு → சதுர்க்கட்டு]

சதுர்க்கதி *šadur-k-kadi,* பெ. (n.) ஆமை *(யாழ்.அக.);* tortoise.

[சதுர் + கதி]

சதுர்க்கோணம் *šadur-k-kōnam,* பெ. (n.) நாற் கோணமுள்ள வடிவம்; quadranglular figure, tetragon.

[சதுர் + கோணம். கோள் → கோண் → கோணம்]

சதுர்க்குணம் *šadur-k-kunam,* பெ. (n.) நாற்குணம்; four qualities.

[சதுர் + குணம். கொள் → (கொண்) → (கொணம்) → குணம்]

பெண்டிர்க்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களையும்

ஆடவர்க்கு அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் நாற்குணங்களையும் சிறப்பாகக் குறிப்பிடுவதே சதுர்க்குணமென்க.

சதுர்குணி *šadur-kuṇi,* பெ. (n.) நான்கு குணம் உடையவன்; one who has four qualities.

[சதுர்குண(ம்) + இ. 'இ' உடைமை குறித்த ஈறு]

சதுர்காணு-தல் *šadur-kāṇu-,* 16 செ.கு.வி. (v.i.) விலை மலிவாதல் (வின்.); to be cheap, to be obtained at a low price.

[சதுர் + காணு-,]

சதுர்கூலி *šadur-kūli,* பெ. (n.) ஆவிரை (மலை.); tanner's cassia.

சதுர்த்தம் *šadurttam,* பெ. (n.) 1. நான்காவது; fourth. "கூட சதுர்த்தம்" (தண்டி. 95). 2. நான்கு குரல் அளவுள்ள (சுரமுள்ள) பண். (சிலப். 13: 106, உரை).

[சதுர் → சதுர்த்தம்]

சதுர்த்தர் *šadurttar,* பெ. (n.) நான்காம் குலத்தார் (சூத்திரர்); sūdras, as the fourth caste. 'சதுர்த்தர் செய்ய பாதபங்கயத்தி லீன்றான்." (கூர்மபு. வருணாச். 11)

[சதுர் → சதுர்த்தர்]

சதுர்த்தளம் *šadur-t-taḷam,* பெ. (n.) ஆரைக்கீரை; a water plant called sweet green (சா.அக.)..

மறுவ. சதாரை

[சதுர் + தளம். சதுர வடிவ இலைகளைக் கொண்டது]

சதுர்த்தி[1] *šadurtti,* பெ. (n.) பேராமல்லி; long-tubed Arabian jasmine - Jasminum sambac (heyneana) (சா.அக.).

சதுர்த்தி[2] *šadurtti,* பெ. (n.) 1. காருவா, வெள்ளுவாவையடுத்த நான்காம் நாள்; the fourth tidi in a lunar fortnight. "விநாயக சதுர்த்தியில்" (விநாயகபு. 38, 9). 2. நான்காம் வேற்றுமை (பி.வி. 6, உரை); dative case. 3. மணம்புரிந்த நான்காம் நாளில் மேற்கொள்ளும் நோன்பு; an observance on the fourth day of wedding. "சதுர்த்தி யிருந்து கதிர்த்த காப்பொடு" (பெருங். இலாவாண. 3, 131).

ம. சதுர்த்தி; து. சதுர்தி

[சதுர் → சதுர்த்தி]

சதுர்த்தி[3] *šadurtti,* பெ. (n.) ஒருவரின் பாவன்மையை அறியக் குறிப்பாக (சமசையாக)க் கொடுக்கும் நான்காம் அடி (யாழ். அக.); line of stanza, usually the fourth or last line, set for a person to complete, as a test of his poetic skill.

[சதுர் → சதுர்த்தி]

சதுர்த்திகை *šadurttigai,* பெ. (n.). 1. காற்பலம் (தைலவ. தைல. 28); a weight = $^1/_4$ palam. 2. காருவா, வெள்ளுவாவையடுத்த நான்காம் நாள்; the fourth tidi in a lunar fortnight.

[சதுர் → சதுர்த்தி → சதுர்த்திகை]

சதுர்த்தியறை *šadurtti-y-aṟai,* பெ. (n.) திருமணத்தின் நான்காம் நாளிரவு மணமகனும் மணமகளுங் கூடியுறையும் அறை (அகநா. 86, உரை); bed-room in which consummation takes place on the forth night of marriage.

[சதுர்த்தி + அறை. அறு → அறை]

சதுர்ப்பதம் *šadur-p-padam,* பெ. (n.) சதுர்ப் பாதம் பார்க்க; see *šadur-p-pādam.* "சதுர்ப்பத நாகங் கிந்துக்கின மென்று" (விதான. பஞ்சாங்க. 28).

[சதுர் + பதம். பதி → பதம்]

சதுர்ப்பரணி *šadur-p-paraṇi,* பெ. (n.) புளியாரை; sour-sorrel - Oxalis pussilla (சா.அக.).

சதுர்ப்பலன் *šadur-p-palaṉ,* பெ. (n.). நற்பயன் (வின்.); privilege good fortune.

[சதுர் + பலன்]

சதுர்ப்பாகம் *šadur-p-pāgam,* பெ. (n.) 1. செலுத்தற்குரிய அரசிறையிற் காற்பகுதி செலுத்தித் துய்க்கும் மானிய நிலம் (C.G.93); land held on favourable tenure paying only one fourth of the revenue due to government. 2. வரியில் நாலில் ஒரு பாகத்தை அரசிடமிருந்து பெறும் இலவயம் (R.T.); a grant or alienation of one-fourth share of government revenue.

[சதுர் + பாகம். பகு → பாகு → பாகம்]

சதுர்ப்பாடு *šadur-p-pāḍu,* பெ. (n.) சதுரப்பாடு' பார்க்க; see *šadura-p-pāḍu.*

[சதுர் + பாடு. படு → பாடு]

சதுர்ப்பாதம் *šadur-p-pādam,* பெ. (n.) *சிவாகமங்களிற் கூறப்படும் தொண்டு, பூசனை, ஓகம், மெய்யறிவு (சரியை, கிரியை, யோகம், ஞானம்) என்னும் நான்கு பகுதிகள்;* four major sections of šivāgamas relating to šariyai, kiriyai, yōgam, ñāṉam.

[சதுர் + பாதம்]

சதுர்ப்புயன் *šadur-p-puyaṉ,* பெ. (n.) 1. நான்கு தோள்களையுடைய திருமால்; Tirumāl (Viṣṇu). 2. சிவன்; Šivaṉ (யாழ். அக.).

ம. சதுர்ப்புயன்

க., து., சதுர்புசு; தெ. சதுர்புசுடு.

[சதுர் + புயன்]

சதுர்ப்பேதி *šadur-p-pēdi,* பெ. (n.) சதுர்வேதி பார்க்க; see *šadur-vēdi.* 'இருபதின்மர் சதுர்ப் பேதிகளுக்குப் பிரமதேயங் கொடுப்பதற்கும்' *(S.I.I. i, 151).*

[சதுர் + பேதி. வேதி → பேதி]

சதுர்முகம் *šadur-mugam,* பெ. (n.) நான்கு முகம்; four faces. நான்முகன்.

[சதுர் + முகம்]

சதுர்முகவேதி *šadur-muga-vēdi,* பெ. (n.) *செப்புச் சதுரக்கள்ளி;* a red variety of square-spurge (சா.அக.).

[சதுர் + முகம் + வேதி. பொன்னாக்கத் (இரசவாதம்)திற்குப் பயன்படுவது]

சதுர்முகன் *šadur-mugaṉ,* பெ. (n.) 1. நான்கு முகங்களையுடைய நான்முகன்; Brahmāṉ. "சதுர் முகன் றாதையென் றுந்தீபற" *(திருவாச. 14,6).* 2. அருகன் (சூடா.) Arhat.

ம. சதுர்முகன்; க. சதுர்முக; து. சதுர்முக, சதுரானனெ.

[சதுர் + முகன். முகம் → முகன்]

திசைகளைத் தெய்வத்திற்கு முகங்களாகவும் கைகளாகவும் கூறுவது வழக்கம். அவ் வகையில் பிரம்மாவை நான்முகன் என்றது திசைபற்றியதே. எனினும் படைப்புக் கடவுளாகக் கருதப்படும் பிரம்மாவுக்கும் அவர் படைப்புகளான நால்வகைக் குலத்திற்கும் தொடர்பு கொள்வதால் குலப் பிரிவு பற்றியதாக இருக்கவும் இடமுண்டு.

சதுர்மூலி *šadur-mūli,* பெ. (n.) *பருத்தி;* herbaceous cotton (சா.அக.).

[சதுர் + மூலி. மூல் → மூலி]

சதுர்வேதம் *šadur-vēdam,* பெ. (n.) நான்கு மறைகள் (இருக்கு, எசுர், சாமம், அதர்வணம்); the four vedas viz., ṛg-vēda, yajur-vēda, sāma-vēda and atharava-vēda.

க. சதுர்வேத

[சதுர் + வேதம்]

விழித்தல் = பார்த்தல், காணுதல், அறிதல். விழி = அறிவு, ஓதி (ஞானம்) 'தேறார் விழியிலா மாந்தர்' (திருமந். 177), விழி; L. vide-vise; Skt. vid - veda ஒ.நோ. குழல் → குடல்; ஒடி → ஒசி. தமிழ் வேதம் ஆரியத்திற்கு முந்தியதாயிருப்ப தோடு, வேதப் பெயர்களே தமிழ்ச் சொற்களின் திரிபாகவுமிருக்கின்றன. *(ப. ப. 8).*

சதுர்வேதிபட்டர்கள் šadur-vēdi-paṭṭargaḷ, பெ. (n.) இருக்கு முதலானநான்மறைகளையும் முறையாகக் கற்றுச் சொல்லும் மறையவர்கள்; Brahmins who are well versed in four vedas. "ஆயிரத் தெண்பது சதுர்வேதி பட்டர்கட்குப் பிரமதேய இறையிலியாக" *(கரந்தைச் செப்பேடுகள்)*

து. சதுர்வேதி

[சதுர்வேதி + பட்டர்கள்]

சதுர்வேதிமங்கலம் *šadur-vēdi-maṅgalam,* பெ. (n.) நான்மறையிலும் ஆறு உறுப்புகளிலும் (அங்கங்களிலும்) வல்ல பார்ப்பனர்கள் (பிராமணர்கள்) வாழ்தற்கேற்ற வண்ணம் அரசர்களால் இறையிலியாகக் கொடுக்கப் பட்ட தனியூர் அல்லது சிலவூர் சேர்ந்த பகுதி; village or villages alloted to Brahmins who have well versed in vēdas and vedāṅgās by kings. 'ஐயங் கொண்ட சோழ மண்டலத்து காலியூர் கோட்டத்துத் தனியூர் உக்கலாகிய ஸ்ரீ விக்கிரமாபரண சதுர்வேதி மங்கலம்' *(தெ.க. தொ.க.3:1).*

[சதுர்வேதி + மங்கலம். மங்கு → மங்கல் → மஞ்சள் = மங்கலான நிறம். அந்நிறக் கிழங்கு. மங்கல் → மங்கலம் = மஞ்சளால் அல்லது மஞ்சள் நீரால் குளிக்கப் பெறும், நன்னிலைமை, நன்மை]

சதுரக்கம்பம் *šadura-k-kambam,* பெ. (n.) நாற்கோணமாயமைந்த தூண் வகை; (C.G.); square pillar.

[சதுரம் + கம்பம். கம்பு → கம்பம்]

சதுரக்கம்பி *šadura-k-kambi,* பெ. (n.) நான்கு பக்கமும் ஒத்த அகலமுள்ள இரும்புக் கம்பி; square iron-bar.

[சதுரம் + கம்பி]

சதுரக்கல் *šadura-k-kal,* பெ. (n) *1.* சதுர வடிவான செங்கல்; square brick. *2.* சதுர வடிவான கல்; square stone.

[சதுரம் + கல்]

சதுரக்கள்ளி *šadura-k-kaḷḷi,* பெ. (n.) கள்ளி வகை (பதார்த்த. 367); square spurge.

ம. சதுரக்கள்ளி, சதிரக்கள்ளி; க. சதரக்கள்ளி, சதுரக்கள்ளி

[சதுரம் + கள்ளி. கள்ளுதல் - வடிதல். ஒடித்தால் பால் வடியும் நிலைத்திணை. (கள்ளிப்பால்) சிலவகைக் கள்ளி முள்ளுடைமையால் அப்பெயர் பெற்றன. கள் = முள். கள் → கள்ளி = முட்புதர் வகை. சதுரக்கள்ளி. சதுரவடிவான தண்டினைக் கொண்டது.]

சதுரக்கள்ளி


சதுரக்கால் *šadura-k-kāl,* பெ. (n.) சதுரமான அமைப்புடைய கல்தூண்; square pillar (கட்ட.).

[சதுரம் + கால்]

சதுரகராதி *šadur-agarādi,* பெ. (n.) பெயர், பொருள், தொகை, தொடை என்ற நாற் பிரிவுகளுடையதாய், 18ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் இயற்றிய தமிழ் அகரமுதலி; Tamil dictionary by Beschi in the 18th c. consisting of 4 parts, viz., peyar-agarādi, poruḷ-agarādi, togai-y-agarādi, toḍai-y-agarādi.

[சதுர் + அகராதி. அகரம் + ஆதி - அகராதி]

அகராதி சொல்லடிப்படையில் வண்ண மாலை ஒழுங்கை (அகர வரிசையை) முதன்மை படுத்திச் சொற்பொருளை உணர்த்தும் அதன் அடிப்படைப் பயன்பாட்டை வழிப் பொருளாக்கிவிடுகிறது. சொல்லுக்குப் பொருள்தருவது அகரமுதலியின் முதன்மையான பயன்பாடு. வண்ணமாலை வரிசையில் அமைவது அகரமுதலியைப்படுத்துவதற்கு எளிமையாய் அமையும். ஆயின் வண்ண மாலை வரிசை அமைவது அகரமுதலிக்குக் கட்டாயம் என்று சொல்வதற்கில்லை.

தமிழில் சிதம்பர ரேவண சித்தர் தொகுத்த அகராதி நிகண்டே (கி.பி. 1594) முதன் முதலாக வண்ணமாலை வரிசையில் தொகுக்கப் பட்டது. இதிலும் முதல் எழுத்துமட்டும் வண்ணமாலை வரிசைக்குக் கொள்ளப் பட்டுள்ளது. இங்கு அகராதி, நிகண்டிற்கு அடையாக வந்துள்ளது. அகராதி பின்னர் தனிப்பெயராக வழக்கூன்றிவிட்டது. பொதிகை நிகண்டில் முதலிரு எழுத்துகள் வண்ணமாலை வரிசைக்குக் கொள்ளப் பட்டுள்ளது. 18ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு அகராதி என்னும் பெயர் பெருவழக்கெய்தியது. ஆதி தூயதென்சொல்லன்று எனக் கருதியதால் பாவாணர் அதற்கு மாறாக அகரமுதலி எனப் பெயரிட்டார்.

சதுரங்கச்சேனை *šaduraṅga-c-cēṉai,* பெ. (n.) சதுரங்கப்படை பார்க்க; see *šaduraṅga-p-paḍai.*

ம. சதுரங்கசேன; து. சதுரங்கசைனோ.

[சதுரங்க + சேனை]

சதுரங்கப்பட்டினம் *šaduraṅga-p-paṭṭinam,* பெ. (n.) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Kāñjipuram district.

மறுவ. சதுரை

[சதுரங்கம் + பட்டினம்]

இவ்வூர் பாலாறு கடலில் கலக்கும் இடத்திற்கு அருகே உள்ளது. கடற்கரை அருகே அமைந்த ஊராகையால் பட்டினம் எனப் பெயர் பெற்றது. இவ்வூர் சதுர அமைப்பில் இருந்ததால் இப் பெயர் பெற்றிருக்கலாம்.

சதுரங்கப்பலகை *šaduranga-p-palagai,* பெ. (n.) *சதுரங்கமணை பார்க்க;* see *šaduranga manai.*

ம. சதுரங்கப் பலகை

[சதுரங்கம் + பலகை]

சதுரங்கப்படை *šaduranga-p-padai,* பெ. (n.) *யானை, தேர், குதிரை, காலாள் என்னும் நான்கு பகுதிகளையுடைய படை;* a complete army consisting of four divisions, viz., elephants, chariots, cavalry and infantry.

து. சதுரங்க

[சதுரங்கம் + படை]

சதுரங்கபந்தம் *šaduranga-bandam,* பெ. (n.) *சதுரங்கக் கட்டத்தில் எழுத்துகள் முறைப்படி அமையப் பாடப்பெறும் மிறைப்பாவகை (மாறனலங். 299, உரை.);* a fantastic verse whose letters are arranged in the diagrammatic form of a chessboard.

[சதுரங்கம் + பந்தம்]

Skt. anka → த. அங்கம்

சதுரங்கம்[1] *šadurangam,* பெ. (n.) *1. சதுரங்கப் படை பார்க்க;* see *šaduranga-p-padai.* *"தனியானை முதலினவாஞ் சதுரங்க மிறந்தொழிய" (உபதேசகா. விபூதி. 54)* 2. *குறிப்பிட்ட முறைகளின் படி கறுப்பு வெள்ளைக் கட்டங்களில் காய்களை நகர்த்தி இருவர் மட்டுமே ஆடும் விளையாட்டு;* chess, as played with pieces representing the four constitutent parts of an army. "*சூது சதுரங்கம் பொருது*" *(ஈடு. 5,8,4)*

ம. சதுரங்கம், சதுரங்கக்களி; க. சதுரங்க; தெ. சதுரங்கமு

[சதுரம் → சதுரங்கம்]

64 சதுரக்கட்டங்களைக் கொண்ட பலகையில் இரண்டு அரசர்கள் தம் படைகளுடன் போரிடுவதாகக் கொண்டு, யானை, குதிரை, தேர், காலாட்களாகக் காய்களை வைத்து ஆடும் விளையாட்டு.

சதுரங்கம்[2] *šadurangam,* பெ. (n.) நாற் கோணம் *(யாழ்.அக.);* quadrilateral, quadrangle.

[சதுரம் + அங்கம்]

சதுரங்கமணை *šaduranga-manai,* பெ (n.) *சதுரங்கக் கட்டம் வரைந்த பலகை;* chess - board made of wooden plank.

[சதுரங்கம் + மணை]

சதுரங்குலம் *šadurangulam,* பெ. (n.) கொன்றை; common cassia - Catharto carpus fistula alias cassia fistula *(சா.அக.).*

சதுரச்சக்கரம் *šadura-c-cakkaram,* பெ. (n.) *சித்திரப்பா வகை (யாப்.வி.497);* a variety of metrical composition, fitted into fanciful figures.

[சதுரம் + சக்கரம்]

சதுரச்சந்தி *šadura-c-candi,* பெ. (n.) நாற்சந்தி; junction of four roads. *'சதுரச் சந்திச் சமழ்ப்பில் கலாபத்து' (பெருங். உஞ்சைக். 50, 7)*

[சதுரம்' + சந்தி. அந்து → அந்தி → சந்தி. நான்கு சாலைகள் கூடுமிடம் சதுரச் சந்தி]

சதுரச்சாகன் *šadura-c-cāgan,* பெ. (n.) தாமரை மலர்; lotus flower *(சா.அக.).*

சதுரச்சாலை *šadura-š-šālai,* பெ. (n.) நாற்சார் வீடு *(யாழ்.அக.);* quadrangular house.

[சதுரம்' + சாலை]

சதுரசிரம் *šaduraširam,* பெ. (n.) நடன மெய்ப்பாட்டு முத்திரை; a hand-pose in dancing.

[சதுரம் + சிரம்]

சதுரசுக்கிலம் *šadura-šukkilam,* பெ. (n.) வெள்ளை ஆமணக்கு; moghul castor oil plant-Jatropha curcas *(சா.அக.).*

சதுரடி *šaduradi,* பெ. (n.) சதுரவடி; square root.

[சதுரம் + அடி]

சதுரத்தூண் *šadura-t-tūn,* பெ. (n.) சதுரக்கம்பம் *பார்க்க;* see *šadura-k-kambam.*

[சதுரம் + தூண்]

சதுரப்பட்டை *šadura-p-pattai,* பெ. (n.) கூரை வேயும்போது கிடுகு, புல் முதலியவற்றைத் தட்டிச் சரிசெய்யப் பயன்படும் மரப்பலகை

(செங். வழ.); a square plank used to press braided coconut leaf, hay etc.

[சதுரம் + பட்டை]

சதுரப்பலகை[1] *šadura-p-palagai,* பெ. (n.) தச்சுத் தொழிற் கருவிகளுள் ஒன்று (குமரி.); a kind of carpenters tool.

[சதுரம் + பலகை]

சதுரப்பலகை[2] *šadura-p-palagai,* பெ. (n.) சதுரங்கமாடும் பலகை; chess-board.

ம. சதுரங்கப்பலக

[சதுரம் + பலகை]

சதுரப்பாடு[1] *šadura-p-pāḍu,* பெ. (n.) 1. திறமை; dexterity, cleverness, ability. 'சதுரப்பாடுடையார்' (குறள். 235, உரை). 2. பகுத்தறிவு, அறிவு; sagacity, discretion, wisdom. 3. உடலுழைப்பு; hard toil, bodily exertion.

[சதுரம் [3] + பாடு. படு → பாடு]

சதுரப்பாடு[2] *šadura-p-pāḍu,* பெ.. (n.) நேர்கோணமுள்ளதும், அளவொத்த நான்கு எல்லை வரம்புடையதுமான வடிவம்; square. "வட்டமுஞ் சதுரமும்" (பெருங். உஞ்சைக். 42, 29).

[சதுரம் [1] + பாடு]

சதுரப்பாலை *šadura-p-pālai,* பெ.. (n.) பாலையாழ் வகை நான்கனுள் ஒன்று (சிலப். 17, உரை, பக்.453); one of the four modes of the pālai class of melody-type.

[சதுரம் [1] + பாலை]

சதுரப்பிரண்டை *šadura-p-pirandai,* பெ.. (n.) பிரண்டை வகை (மூ.அக.); square-stalked vine.

[சதுரம் + பிரண்டை]


சதுரப்பிரண்டை

சதுரப்புளி *šadura-p-puḷi,* பெ. (n.) தமரத்தை; square tamarind - Auerrnoa carambola (சா.அக.).

மறுவ. தம்பரத்தை

[சதுரம் [1] + புளி]


சதுரப்புளி

சதுரம்[1] *šaduram,* பெ. (n.) 1. நேர்கோண முள்ளதும், அளவொத்த நான்கு எல்லை வரம்புடையதுமான உருவம்; square. "வட்டமுஞ் சதுரமும்" (பெருங். உஞ்சைக். 42, 29). 2. சதுரக்கள்ளி (மலை); square spurge. 3. நீள்சதுரவடிவம்; rectangular shape.

ம. சதுரம்; க. சதுர, சதர, சதரு, சதுரு; தெ. சதுரமு; து. சதீர், சத்ர

[சதரம் → சதுரம்]

வட்டம் என்பது போன்றே சதுரம் என்பதும் தூய தென்சொல். ஆயின், வடநூல்களில் ஆளப்பெற்றிருப்பது பற்றி, சதுரம் என்பதைப் போன்றே வட்டம் என்பதையும் வடசொல்லென வலிப்பர் வடவர். த. வட்டம் → பிரா. வட்ட. முறையைத் தலைக்கீழாய் காட்டுவர் அவர். சதுரம் என்னும் வடிவம் வடமொழியில் இல்லை.

வ. சதுர்அச்ர = நாற்கோணம்.

மேலையாரியத்தில் நான்கு என்னும் எண்ணுப் பெயர் முன்னொட்டுப் பெற்றே சதுரத்தைக் குறிக்கின்றது.

L. quatuor = four; exquadra; of esqharre; E. square.

வடமொழியில் அது பின்னொட்டுப் பெற்றுக் குறிக்கின்றது. சதுர் என்னும் பெயர் இயல்பாக நின்று நான்கு என்னும் எண்ணுப்பெயரையே உணர்த்துகின்றது. சதுரிகா, சதுஷ்க, சதுஷ்டய என்னும் வடிவங்களும்

பிற்காலத்திலேயே சதுர வடிவையும் உணர்த்தினதாகக் தெரிகின்றது.

அச்ர = கோணம், மூலை.

சதுரம் என்னும் வடிவக் கருத்து நான்மூலைச் சட்டத்தொடு மட்டுமின்றிக் கட்டடம்பொடும் தொடர்பு உடையதாகத் தெரிகின்றது.

கட்டடம்பின் அமைப்பைச் சதுர்க்கட்டு என்பது உலக வழக்கு. ஆங்கிலத்தில் square-built, a man of square frame என்று வழங்குதல் காண்க. *(வ.வ. 141, 288).*

சதுரம்[2] *šaduram*, பெ. (n.) சிறுவிரல் பின்பாக நிமிரப் பெருவிரல் அகம்வர மற்றை மூவிரல்களும் தம்முட் சேர்ந்து இறைஞ்சி நிற்கும் இணையா வினைக்கை *(சிலப். 3: 18, உரை.)*; hand pose in dancing with the little finger raised back, the thumb closed in and the other three fingers bent, one of 33 iṇaiyā-viṉaikkai.

ம. சதுரம்

[சதுர் → சதுரம்]

சதுரம்[3] *šaduram*, பெ. (n.) 1. திறமை; dexterity, cleverness, ability, 2. பகுத்தறிவு, அறிவு; sagacity, discretion, wisdom. "சதுரப்பெருமான்" *(திருவாச. 24 : 3)*/ 3. நாகரிகம் (வின்.); doecorum, polished manners.

ம., து. சதுர; தெ. சதுருடு

[சதிரம் → சதுரம்]

சதுரமாடம் *šadura-māḍam*, பெ. (n.) நான்கு பக்கமும் அளவொத்த மாடப்புரை; square niche in a wall.

ம. சதுரமாடம்

[சதுரம் + மாடம்]

சதுரமுகம் *šadura-mugam*, பெ. (n.) சதுர்முகம் பார்க்க; see *šadur-mugam*.

[சதுரம் + முகம்]

சதுரமோட்டு-தல் *šaduram-ōṭṭu-*, 5 செ.குவி. (v.i.) பரம்பு ஓட்டுதல், பரம்பால் உழுதநிலத்தைச் சமன் செய்தல்; to level ploughed land by 'Parambu'.

[சதுரம் + ஓட்டு-,]

பரம்பு = 9 அடி நீளமும் 1½ அடி அகலமும் கொண்ட பலகை *(செங்கை).*

சதுரர் *šadurar*, பெ. (n.) 1. அறிஞர்; learned person. 2. திறமுடையோர்; efficient person. 3. பேராசைக்காரர்; greedy person.

ம. சதுரன்

[சதுர் → சதுரர்]

சதுரவடி *šadura-vaḍi*, பெ. (n.) பக்கங்கள் (எதிரெதிர் பக்கங்கள்) ஒரே அளவுடைய சதுரத்தின் (சதுரம், நீள்சதுரம், சாய்சதுரம்) பரப்பைக் குறிக்கும் அலகு; square root.

மறுவ. சதுரவளவு

க. சதுரடி.

[சதுரம் + அடி]

சதுரவரம் *šadura-v-aram*, பெ. (n.) அரவகை (C.E.M.); square file.

[சதுரம் + அரம்.]

சதுரவலை *šadura-valai*, பெ. (n.) வலை வகை; a kind of net.

[சதுரம்+ வலை.]

சதுரவளவு *šadura-v-aḷavu*, பெ. (n.) அகலத்தையும் நீளத்தையும் பெருக்கி வந்த அளவு; square measure.

[சதுரம் + அளவு]

சதுரவிட்டம் *šadura-viṭṭam*, பெ. (n.) சுவர் மூலைகளை இணைக்கும் விட்டம்; beam which connects corners of a building.

[சதுரம் + விட்டம்]

சதுரவோடு *šadura-v-ōḍu*, பெ. (n.) சதுரமான தட்டையோடு; square flat tiles.

[சதுரம் + ஓடு]

சதுரன்[1] *šaduraṉ*, பெ. (n.) 1. திறமையானவன்; able, clever person. "சதுரன் பெருந்துறை யாளி" *(திருவாச. 43, 10)*; 2. நகரவாசி (பிங்.); townsman, man of polished manners.

ம. சதுரன்; து. சதுரை

[சதுரம் ³ → சதுரன்]

சதுரன்[2] *šaduraṉ*, பெ. (n.) பேராசைக்காரன் (யாழ். அக.); avaricious man.

ம. சதுரன் (ஏமாற்றுக்காரன்)

[சதுர் → சதுரன்]

சதுரன்சேரமாந்தான்குழி *šaduran̲-šēramāndān̲-kūli*, பெ. (n.) சோழர் ஆட்சியின் நில அளவைப் பெயர்; Cholā's land measure name. "ஸ்ரீ புகலூர் குளித்தாள் குழி சதுரன் சேரமாந்தான் குழி" *(தெ. க. தொ. 17: க. 624: 3)*

[சதுரன் + சேரமாந்தான் + குழி]

சதுரானனன் *šadurānanan*, பெ. (n.) நான்கு முகங்களையுடைய நான்முகன்; Brahmā. "சதுரானனனுந் திருநெடு மாலும்" *(திருக்கருவை. கலித். 11)*

[சதுரம் → சதுர் + ஆனனன்]

சதுரி-த்தல் *šaduri-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. சதுரமாக வடித்தல், நாற்கோணமாக்குதல்; to cut or make a square figure. 2. மரம் முதலியவற்றை நான்கு பட்டையாகச் செதுக்குதல்; to size wood, etc., square-wise. 3. கட்டடத்தின் அமைப்பெல்லையை நிலத்தில் வரையறுத்துக் குறித்தல்; to fix boundary lines on the ground for the erection of a new building. 4. எண்ணைக் குழியாக்குதல் (வர்க்கமாக்குதல்); to square a number.

[சதுரம் → சதுரி-]

சதுர என்னும் பெயரினின்று தோன்றிய சதுரி என்னும் வினை வடமொழியிலில்லை. சதுரித்தல் = நாற்கோணமாக்குதல், குழித்தல் (வருக்கமாக்குதல்). சரியான சதுரத்தைக் குறிக்கும் சச்சதுரம் என்னும் இரட்டித்த வடிவும் வடமொழியிலில்லை *(வ.வ. 140)*.

சதுரித்திரு-த்தல் *šadurittiru-*, 3 செ.கு.வி. (v.i.) விழிப்பாயிருத்தல் (நாஞ்சில்.); to be cautious.

[சதுர்² → சதுரித்து + இரு-,]

சதுரூடியங்கள் *šadurūḍiyaṅgaḷ*, பெ.. (n.) யானை, தேர், குதிரை, காலாள் ஆகிய நான்கு வகைப் படைகள்; the four main divisions of a king's army, viz., elephants, chariots, cavalry and infantry. "ஒப்பத் திரண்டதளமுள்ள சது ரூடியங்கள் முப்பத் திரண்டுபெற்ற மொய்ம்பனே" *(விறலிவிடு. 1086)*.

[சதுர் + ஊடியங்கள். ஊழியங்கள் → ஊடியங்கள்]

சதுரை *šadurai*, பெ. (n.) சதுரங்கப்பட்டினம் பார்க்க; see *šaduraṅga-p-paṭṭinam*.

[சதுரங்கப்பட்டினம் → சதுரை (மரூஉ.)]

சதுரோடு *šadur-ōḍu*, பெ. (n.) சதுரவோடு பார்க்க; see *šadura-v-ōḍu*.

[சதுரவோடு → சதுரோடு]

சதுவகை *šadu-vagai*, பெ. (n.) நால்வகை; four kinds. 'சதுவகை வேதமும்' *(பெருங். வத்தவ. 3: 62)*

[சதுரம் → சதுர் → சது + வகை]

சதுவல் *šaduval*, பெ. (n.) சதசதப்பு நிலம் (வின்.); swampy ground.

ம. சதவல்

[சதுக்கல் → சதுவல்.]

சதுனி *šaduni*, பெ. (n.) வௌவால்; bat.

ம. சதுனி; Skt. jatuni

[சளி → சதி → சது → சதுனி.]

துவளும் உடலமைப்பைக் கொண்ட பறவை

சதூதலம் *šadū-alam*, பெ. (n.) ஆரைக் கீரை; a kind of four-leaved marseila - Marseila quadrifolia (சா.அக.).

[சது → சதூதலம்]

சதை¹-த்தல் *šadai-*, 4 செ.கு.வி. (v.i.) சதைப்பற்றுதல் (வின்.); to grow stout or fat.

[தசை → சதை-,]

சதை²-த்தல் *šadai-*, 4 செ.கு.வி. (v.i.) நெரிதல்; to be bruised, crushed.

ம. சதயுக; க. சதெ

[சிதை → சதை-,]

சதை³-த்தல் *šadai-*, 4 செ.குன்றாவி. (v.t.) நெரித்தல்; to crush, bruise, mash "சதைத்தனன் .... தகர்த்தனன்" *(கந்தபு. காவலாளர்வதை. 21)*

ம. சதய்க்குக; க. சதகு, சதெ, சதி; தெ. சதியு; கோத. சச். (அடித்தல்); துட. தொந்தக; து. சச்சுனி.

[சிதை³ → சதை³-,]

சதை⁴ *šadai*, பெ. (n.) 1. மேல் தோலுக்குக் கீழ் எலும்பைச் சுற்றியுள்ள அரத்தமும் கொழுப்பும் நிறைந்த மென்மையான, உடலுக்கு வடிவமைப்பையும் அழகையும் தருகின்ற பகுதி; flesh muscle. 2. காய்கள் அல்லது பழங்களின் தோல் அல்லது ஓட்டுக்குக் கீழ் அமைந்திருக்கும் மென்மையான பகுதி; fleshy part of fruit. 'சதைப்பற்றுள்ள மாம்பழமாக

வாங்கி வா'. 'சதையுள்ள இடத்திலேதான் கத்தி நுழையும்' (பழ.). 3. உடைமை, செல்வம்; property. 'சதையான ஆள், அவனிடம் மோதாதே'.

ம. சத

[தசை → சதை. சதை வளப்பத்தைக் குறிக்கும் தன்மைபற்றிச் செல்வத்தையும் குறித்தது]

சதை[5] *šadai,* பெ. (n.) இணை; pair.

[சொதை → சதை (மு.தா. 192). சொதை = குழாம், கூட்டம் (மு.தா. 171)]

சதைக்கன்று-தல் *šadai-k-kaṉṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சதையில் அரத்தங் கட்டுவதால் கன்றிப் போதல்; to contuse of the skin as by blow (சா.அக.).

[சதை + கன்று-,]

சதைக்காய் *šadai-k-kāy,* பெ. (n.) காய் மட்டும் சதைப்பற்று மிகுந்து பருப்பு சிறியதாக இருப்பது; fleshy fruit which has thin kernel. 'உளுந்து பூரா சதக்காய் விழுந்து வம்பாப் போச்சி' (கோவை.).

[சதை + காய். கள் → காள் → காழ் → காய். காய்த்தல் = காய் காய்த்தல்]

சதைக்குந்தம் *šadai-k-kundam,* பெ. (n.) கரு விழியின் மேல் படரும் நோய்வகை (சீவரட்.); fleshy growth affecting the pupil of the eye.

[சதை + குந்தம்]

சதைக்குமிளம் *šadai-k-kumiḷam,* பெ. (n.) வெள்விழியில் கருத்த கொப்புளத்தை எழுப்பும் ஒருவகைக் கண்ணோய்; a disease of the eye characterised by the appearance of a black boil on the white or the sclerotic portion of the eye (சா.அக.).

[சதை + குமிளம்]

சதைக்குவை *šadai-k-kuvai,* பெ. (n.) 1. கடைக் கண்ணில் கருப்பு குன்றிமணியைப் போல் சதையை வளர்ப்பித்துத் துன்புறுத்தும் ஒரு வகைக் கண்ணோய்; a disease developing black or dark tubercle on the corner of the eye. 2. சதை வளர்ந்த வெள்விழி நோய்; a disease of the white of the eye marked by a morbid growth of flesh (சா.அக.).

[சதை + குவி – சதைக்குவி → சதைக் குவை]

சதைக்கொழுப்பு *šadai-k-koḻuppu,* பெ. (n.) 1. உடம்பில் சதையையடுத்த கொழுப்பு; the fat portion which surrounds the muscles or the flesh. 2. உடம்பு தடித்திருக்கை; fatness, stoutness. 3. தடித் தன்மை; hardihood, audacity.

[சதை + கொழுப்பு. குள் → கொழு → கொழுமை. கொழு → கொழுப்பு]

சதைகரண்டிப்பூடு *šadaikaraṇḍi-p-pūḍu,* பெ. (n.) கோடக சாலை (மூ.அ.); a small plant.

[சதைகரண்டி + பூடு]

சதைகழப்புணித்தனம் *šadai-kaḻappuṇi-t-taṉam,* பெ. (n.) சதைகழிப்புணித்தனம் பார்க்க; see *šadai-kaḻippuṇi-t-taṉam.*

[சதை + கழப்புணித்தனம். கழிப்புணித்தனம் → கழப்புணித்தனம்]

சதைகழிப்புணித்தனம் *šadai-kaḻippuṇi-t-taṉam,* பெ. (n.) சோம்பல்; slothfulness, lethargy, laziness.

[சதை + கழிப்புணித்தனம்]

சுறுசுறுப்பாக இயங்குபவரின் சதை முறுக்கேறி இறுக்கமாக இருக்கும். உழைப்பில்லாமல் இருப்போரின் உடற்சதை தளர்வுற்றிருக்கும். அவ் வகையில் சதை கழலுவது போன்று தளர்வுற்றிருக்கும் நிலை சோம்பலைக் குறித்தது.

சதைகுத்தி *šadai-kutti,* பெ. (n.) சங்கின் சதையைக் குத்தி எடுப்பதற்கு உதவும் கத்தி ((மீனவ.); knife used to take fleshy parts of conch.

[சதை + குத்தி. குத்து → குத்தி = குத்தி வெட்டும் அல்லது அறுக்குங்கருவி]



சதைக்குத்தி

சதைநிறம் *šadai-niṟam,* பெ. (n.) ஒருவகைச் செந்நிறம் (புதுவை.); carnation.

[சதை + நிறம்.]

சதைப்படர்த்தி *šadai-p-padartti,* பெ. (n.) கண்நோய் வகை (இங்.வை. 363); pterygium, a disease of the eye.

[சதை + படர்த்தி]

சதைப்படலம் *šadai-p-padalam,* பெ. (n.) கண்ணில் விழும் பூநோய் வகை (இங்.வை. 363); pannus, opacity of the cornea, usually caused by granulation of the eyelids.

[சதை + படலம். படர் → படல் → படலம்]

சதைப்பதுமம் *šadai-p-padumam,* பெ. (n.) இமையில் ஏற்படும் நோய் வகை (சீவரட்.); a disease of the eye lids.

[சதை + பதுமம்]

சதைப்பற்று[1] *šadai-p-parru,* பெ. (n.) 1. உடம்பிற் சதைப்பகுதியின் மிகுதி; corpulerey. 2. உடம்பின் ஏதாவது ஓர் உறுப்பில் மிகுதியாக வளர்ந்த சதை; fleshy growth on some organ of the body.

ம. சதப்பற்று, சதப்பற்றல்

[சதை + பற்று]

சதைப்பற்று[2]**-தல்** *šadai-p-parru-,* 5 செ.கு.வி. (v.i.) சதைப்போடு-தல் பார்க்க; see *šadai-p-pōdu-.*

ம. சதப்பற்று, சதப்பற்றல்

[சதை → பற்று-,]

சதைப்பற்று[3] *šadai-p-parru,* பெ. (n.) உடைமை (இ.வ.); property, possessions. சதைப்பற்றுக் காரணமாகவே அவன் பேச்சு பகட்டாக இருக்கிறது.

[சதை + பற்று]

சதைப்பிடிப்பு[1] *šadai-p-pidippu,* பெ. (n.) சதைப் பற்று[1] பார்க்க; see *šadai-p-parru*[1].

[சதை + பிடிப்பு]

சதைப்பிடிப்பு[2] *šadai-p-pidippu,* பெ. (n.) சதையில் ஏற்படும் வலி; pain in muscles. 'சதைப்பிடிப்பினால் இன்று வேலைக்குச் செல்லவில்லை' (உ.வ.).

[சதை + பிடிப்பு]

சதைப்பு *šadaippu,* பெ. (n.) மேல்தோல் சிதைந்ததாலுண்டாங் காயம்; bruise. "தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்தி" (இரக்ஷணிய. 100).

[சதை → சதைப்பு]

சதைப்புற்று *šadai-p-purru,* பெ. (n.) வெள்ளை விழியிற் காணும் நோய்வகை (சீவரட்.); inflammation of the cornea.

[சதை + புற்று]

சதைப்பொருத்தி *šadai-p-porutti,* பெ. (n.) நீர்ப்பூடு வகை (யாழ்.அக.); an aquatic plant.

[சதை + பொருத்தி]

சதைப்போடு-தல் *šadai-p-pōdu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. பருத்தல்; to stout. 2. குண்டாதல்; to plump. ஆடு நன்கு சதைபோட்டிருக்கு, கொழுப்பு அதிகமிருக்கும்.

[சதை + போடு-,]

சதைமுள்ளிப்பூடு *šadai-mulli-p-pūdu,* பெ. (n.) யானை நெருஞ்சில்; crow-thorn - Pedalium murex (சா.அக.).

[சதைமுள்ளி + பூடு]

சதைமூடித்தோல் *šadai-mūdi-t-tōl,* பெ. (n.) 1. தோலின் வெளிப்புறத்தை மூடியிருக்கும் மெல்லிய தோலுறை; the outer covering of the skin; scarf-skin. 2. பீத்தோல்; the epidermis (சா.அக.).

[சதை + மூடி + தோல்]

சதைமூர்க்கம் *šadai-mūrkkam,* பெ. (n.) சதை அதிகமாக வளர்ந்திருத்தலால் உண்டான தடித்தனம்; hardihood, audacity.

[தசை + மூர்க்கம்]

சதையடைப்பன் *šadai-y-adaippan,* பெ. (n.) மாடுகளுக்கு உண்டாகும் நோய் வகை (மாட்டு வா. 68); a kind of cattle disease.

[சதை + அடைப்பன். உல் → உல. உலத்தல் = காய்தல். உல் → உலை = நெருப்படுப்பு. உல் → எல் → எர் → எரி = நெருப்பு. உல் → அல் → அல → அலத்து → அலத்தி = ஒளிவிடுவது. உல் → அல் → அன் → அண் → அடை → அடைப்பன் = வெக்கை நோய்]

சதையண்டம் *šadai-y-aṇḍam,* பெ. (n.) ஆணுக்கு விதைப் பகுதியில் உண்டாகும் நோய் வகை (M.L.); scrotal elephantiasis.

[சதை + அண்டம்]

சதையம் *šadaiyam,* பெ. (n.) சதயம் பார்க்க; see *šadayam* "சதையமீன் கடவுளும்" *(பாரத. குருகுல. 72)*

[சதயம் → சதையம்]

சதையல் *šadaiyal,* பெ. (n.) மூங்கிற் பிளாச்சு *(நாஞ்.);* bamboo splits.

[சதை³ → சதையல்]

சதையழிபுண் *šadai-y-aḻi-puṇ,* பெ. (n.) தசையழுகிய நாற்றப் புண்; a gangrenous sore-Corious ulcer *(சா.அக.).*

[சதை + அழி + புண்]

சதையன்பாக்குவெட்டி *šadaiyaṉ-pākku-veṭṭi,* பெ. (n.) பாக்கைச் சீவாது நொறுக்கும் பாக்கு வெட்டி *(நாஞ்.);* crushing nut-crackers, dist. fr. veṭṭu -p- pākkuveṭṭi.

[சதையன் + பாக்குவெட்டி]

சதையிழுப்பு *šadai-y-iḻuppu,* பெ. (n.) *1.* தசையிழுத்தபடி வலிக்கும் நோய்; twitching of the muscles. *2.* குறக்கு வலி; cramp *(சா.அக.)*

[சதை + இழுப்பு]

சதையொட்டி *šadai-y-oṭṭi,* பெ. (n.) பூடுவகை *(சங்.அக.);* a plant.

[சதை³ + ஒட்டி]

சதைவலி *šadai-vali,* பெ. (n.) தசையில் வலியுண்டாக்கும் நோய் வகை (M.L.); muscular rheumatism, myalgia.

ம. சதவலி

[சதை⁴ + வலி]

சதைவளர்ச்சி *šadai-vaḷarcci,* பெ. (n.) சதை வளரும் நோய் வகை (M.L.); polypus.

[சதை + வளர்ச்சி]

சதைவளர்ப்பு *šadai-vaḷarppu,* பெ. (n.) சதைப் படர்த்தி (M.L.) பார்க்க; see *šadai-p-paḍartti.*

[சதை + வளர்ப்பு]

சதைவுகாயம் *šadaivu-kāyam,* பெ. (n.) நசுங்கலால் உண்டாகுங் காயம் (இங். வை. 311); contusion.

[சதை³ → சதைவு + காயம்]

சதைவை-த்தல் *šadai-vai-,* 4 செ.கு.வி. (v.i) சதைப்போடு-தல் பார்க்க; see *šadai-p-pōḍu-.*

[சதை + வை-,]

சதைவைத்தவள் *šadai-vaittavaḷ,* பெ. (n.) மலடானவள் (இ.வ.); a barren woman.

[சதை³ + வைத்தவள். சூல் கொள்ளாது வயிறு பருத்தவள்]

சந்தக்கவி *šanda-k-kavi,* பெ. (n.) சந்தப்பாட்டு பார்க்க; see *šanda-p-pāṭṭu.* "சொன்ன சந்தக்கவி யாவருஞ் சொல்லுவர்" *(தனிப்பா. 1, 176, 24).*

[சந்தம்⁴ + கவி]

சந்தக்குழம்பு *šanda-k-kuḻambu,* பெ. (n.) மணமூட்டிக் குழைத்த சந்தனம்; scented sandal paste. "சந்தக்குழம்பி னிலூறு கஞ்சத்தியல்பின்" *(கொக்கோ. பாயி. 5).*

[சந்தம்³ + குழம்பு]

சந்தக்குழிப்பு *šanda-k-kuḻippu,* பெ. (n.) சந்தச் செய்யுளின் ஓசை வாய்பாடு; rhythmic movement of a stanza expressed in conventional symbols.

[சந்தம் + குழிப்பு]

சந்தக்கேடு *šanda-k-kēḍu,* பெ. (n.) மாணிக்கக் குற்றங்களுள் ஒன்று; a flaw of rubies. "நீள்வெய்ய கீற்றென்ன வகைபடு குற்றம்" *(திருவாலவா. 25: 14).*

[சந்தம் + கேடு. கெடு → கேடு]

சந்தகம்¹ *šandagam,* பெ. (n.) இடியப்பம் (வின்.); a kind of pastry cooked in steam and forced like vermicelli through a mould.

தெ. சந்திக

[சந்து → சந்தகம்]

சந்தகம்² *šandagam,* பெ. (n.) மகிழ்ச்சி (யாழ். அக.); delight, joy.

சந்தகம்³ *šandagam,* பெ. (n.) சந்தனம்; sandal-wood *(சா.அக.).*

[சாந்து → சாந்தனம் = சந்தனம். சாந்து → சந்து = சந்தனமரம். சந்து → சந்துகம் → சந்தகம்]

சந்தகாரிகம் *šandagārigam*, பெ. (n.) கல்லத்தி; stone-fig - Ficus excelsa alias F.tomentosa (சா.அக.).

சந்தகெந்தம் *šanda-kendam*, பெ. (n.) வெண்கடுகு; white mustard (சா.அக.).

சந்தகை *šandagai*, பெ. (n.) இடியப்பக்குழல்; mould or colander for iḍi-y-appam.

மறுவ. சந்தகைப் பலகை

[சந்து → சந்தகை]

சந்தகைப்பணியாரம் *šandagai-p-paṇiyāram*, பெ. (n.) இடியப்பம்; a baked rice-cake forced or squeezed out from the hand-press made of wood or iron (சா.அக.)

[சந்தகை + பணியாரம்]

சந்தகைப்பலகை *šandagai-p-palagai*, பெ. (n.) 1. மாப் பண்டங்களை இழையைப் போல திரட்டுவதற்காக, வரிவரியாக ஆழமாய்ச் செதுக்கியெடுத்த பலகை; a plank containing grooves for rolling flour of wheat or other grains and then drawing out fibre-like substances as vermicelli. 2. இடியப்பக்குழல்; a wooden or iron tube full of little holes through which the rice-paste is pressed out while making a rice-cake (சா.அக).

[சந்தகை + பலகை]

சந்தடி *šandaḍi*, பெ. (n.) 1. விழா நிகழுமிடத்திலும், மாநகர வீதியிலும் பல்வேறுபட்ட மக்கள் தொழிலால் உண்டாகும் ஒலி, இரைச்சல்; bustle, stir, clamour, tumult, uproar. ஊரிலே சந்தடியடங்கவில்லை (உ.வ.). 'சந்தடிச் சாக்கிலே கந்தப்பொடி காற்பணம்' (பழ.). 2. கூட்டம்; dense crowd of people, throng. "மாதர் சந்தடியில்" (குற்றா. குற. 20).

தெ. சந்தடி

[அத்துதல் = ஒட்டுதல். அத்து → அந்து → அந்தி. அந்தித்தல் = நெருங்குதல், கூடுதல், ஒன்று சேர்தல். அந்தி → சந்தி → சந்தடி = மக்கள் கூடுதலால் ஏற்படும் ஆரவாரம், இரைச்சல்]

சந்தடைப்பன் *šandaḍaippaṉ*, பெ. (n.) மாட்டு நோய் வகை (மாட்டுவா. 69); a disease of cattle.

[சந்து/ + அடைப்பன்]

சந்தணி *šandaṇi*, பெ. (n.) சந்தனம்[1] (மலை) பார்க்க; see *šandaṉam*.

[சந்தனம் → சந்தணி]

சந்ததவாரி *šandada-vāri*, பெ. (n.) நிலாவிரை; Tinnevelly senna - Cassia augustifolia (சா.அக.).

சந்ததோரு *šanda-dōru*, பெ. (n.) நீர்முள்ளி; water-thistle - Hygraphila spinosa (சா.அக.).

சந்தநாடகம் *šanda-nāḍagam*, பெ. (n.) கருவூரார் செய்த தமிழ் மருத்துவ நூல்; a medical treatise in Tamil compiled by Karuvoorar, a Siddhar.

சந்தநாதி *šanda-nādi*, பெ. (n.) வேங்கை மரம்; kino tree - Ptero-carpus bilobus (சா.அக.).

சந்தப்பா *šanda-p-pā*, பெ. (n.) சந்தப்பாட்டு பார்க்க; see *šanda-p-pāṭṭu*. "சந்தப்பா விருத்தப்பா கலிப்பா வெண்பா" (தனிப்பா. ii, 239, 564).

[சந்தம் + பா]

சந்தப்பாட்டு *šanda-p-pāṭṭu*, பெ. (n.) 1. நான்கெழுத்து முதல் இருபத்தாறெழுத்து வரையுள்ள அடிகள் நான்கு கொண்ட பாவகை (திவா.); stanza of four lines with four to twenty-six syllables to a line. 2. ஆசிரிய மண்டிலம் பார்க்க; see *āširiya-maṇḍilam*.

[சந்தம் + பாட்டு]

சந்தப்பாணம் *šanda-p-pāṇam*, பெ. (n.) புண்கட்டிக்கு இடும் ஒருவகைக் கூட்டு மருந்து (யாழ்ப்.); a kind of salve applied to boils or tumours.

சந்தம்[1] *šandam*, பெ. (n.) 1. அழகு (சூடா.); beauty. 2. நிறம்; colour. "சந்தமேகலை யாட்கு" (திருக்கோ. 211). 3. வடிவு; shape, form. "நிமிர்ந்த தொர் சந்தமாயவனே" (தேவா. 1016, 9). 4. மகிழ்ச்சி (பிங்.); pleasure, happiness. 5. பழக்கம் (யாழ்ப்.); manners, habits.

ம. சந்தம்; க. சந்த, செந்த; தெ. சந்தமு (முறை, அழகு); து. சந்த.

[அம் = அழகு. அம் → அந்து → அந்தம். அந்தம் → சந்தம்]

கன்னடமொழியில் அந்த(ம்), சந்த(ம்) என்னும் இரண்டு சொற்களும் அழகுப் பொருள் படுவதையும் அவ்விரு சொற்களும் இணைந்து அந்தசந்த என்று இணை மொழியாக ஆளப்படுவதையும் காண்க.

சந்தம்[2] *šandam,* பெ. (n.) சந்தனம்[1] (பிங்) பார்க்க; see *šandanam.*

[சந்தனம். → சந்தம்]

சந்தம்[3] *šandam,* பெ. (n.) துளை; hole. "கன்னசந் தங்களி னிந்கவி யாப்பைக் கடாவுவனே" (தனிப்பா. 1, 171: 24).

[சந்து → சந்தம்]

சந்தம்[4] *šandam,* பெ. (n.) 1. செய்யுள் (சூடா.); stanza, verse. 2. சந்தப்பாட்டு; *šanda-p-pāttu.* "பண்பாய பகர்சந்தம்" (யாப். வி. 94, பக். 447). 3. கருத்து; opinion, view. "அவனுடைய சந்தத்தைப் பின் செல்லுமதாயிருக்கும்" (ஈடு. 11:4).

[அம் → அந்து → அந்தம் = இயைந்து செல்வது, அழகு. அந்தம் → சந்தம் = ஓசை இயைந்து செல்லும் பாவகை]

சந்தம்[5] *šandam,* பெ. (n.) கற்பரிச்செய்நஞ்சு (யாழ். அக.); a mineral poison.

சந்தமாமா *šanda-māmā,* பெ. (n.) 1. நிலவு; uncle moon. 2. தேவரடியார் தங்கள் தொழிலுக்கு உதவியாயிருப்பவனைக் குறிக்கும் சொல்; a term used by dancing girls in addressing the pimp who helps them in their profession. 3. கூத்திற் கோமாளி தன்னோடு பேசுபவரை விளித்தற்குக் கூறும் சொல்; a term used by clown on stage in addressing a person with whom he converses.

தெ. சந்தமாம; க. சந்தமாமா

[சந்தம் + மாமா]

சந்தமிக்காசு *šandamikkāšu,* பெ. (n.) பழைய காசுவகை (பணவிடு. 115); an ancient coin.

சந்தர்த்தாரை *šandar-t-tārai,* பெ. (n.) இடைவிடாத மழை (இ.வ.; incessant rain, continuous down-pour.

[சந்து + அற்ற + தாரை = சந்தற்றதாரை → சந்தர்த்தாரை. தாரை = பெருமழை]

சந்தரி *šandari,* பெ. (n.) துளசி (மலை.); basil.

சந்தவடி *šanda-vadi,* பெ. (n.) நான்கு முதல் இருபத்தாறு வரையும் உள்ள எழுத்துகளால் இயன்ற மண்டிலப்பாவின் அடி (யாப். வி. 95, பக். 455).; a metrical line in which the letters may range in number from four to twenty six.

[சந்தம் + அடி]

சந்தவாக்கு *šanda-vākku,* பெ. (n.) 1. இயற்கையான குணம்; peculiar characteristics, habits and tendencies. 2. இழிந்த பழக்கம் (யாழ்ப்.); low habits, meanness of disposition or manners, as in person of low descent.

[சொந்தம் → சந்தம் + வாக்கு]

சந்தவிருத்தம் *šanda-viruttam,* பெ. (n.) சந்தக் குழிப்பின்படி அமைந்த செய்யுள்; stanza in *viruttam* metre with a uniform rhythmic movement.

[சந்தம் + விருத்தம்]

சந்தன்[1] *šandan,* பெ. (n.) 1. வெண்சந்தனம்; white sandal - santanum album. 2. சங்கு; four-spined monetia - Azema-tetracantha (சா.அக.).

ம. சந்தனக்கட்ட

[சந்தனம் → சந்தன்]

சந்தன்[2] *šandan,* பெ. (n.) இடையெழு வள்ளல்களில் ஒருவன் (பிங்.); a liberal chief, one of seven 'idai-vallalgal'.

ம. சந்தன் (அழகன்)

சந்தனக்கட்டை *šandana-k-kattai,* பெ. (n.) அரைத்துப் பயன்படுத்தும் சந்தன மரக் கட்டை; block of sandalwood.

[சந்தனம் + கட்டை]

சந்தனக்கல் *šandana-k-kal,* பெ. (n.) சந்தனம் அரைக்கப் பயன்படுங்கல்; stone for grinding sandal.

மறுவ. சந்தனச்சாணை

ம. சந்தனக்கல்

[சந்தனம் + கல்]

சந்தனக்களி *šandana-k-kali,* பெ. (n.) சந்தனக் குழம்பு; sandal paste. "சந்தனக் களியும் பூவும்" (சீவக. 1719).

மறுவ. சந்தனக்குழம்பு

[சந்தனம் + களி]

சந்தனக்காப்பு *šandana-k-kāppu,* பெ. (n.) சந்தனத்தைக் கடவுளின் திருமேனியில் வழிபாட்டுக்காகப் பூசுகை; anointing an idol with sandal paste.

ம. சந்தனக்காப்பு

[சந்தனம் + காப்பு]

சந்தனக்கிண்ணம் *šandaṉa-k-kiṉṉam*, கரைத்த சந்தனம் வைத்தற்குரிய ஏனவகை; cup, used for distributing sandal paste.

ம. சந்தனக்கிண்ணம்

[சந்தனம்' + கிண்ணம்]

சந்தனக்கிண்ணி *šandaṉa-k-kiṉṉi*, சந்தனக் கிண்ணம் பார்க்க; see *šandaṉa-k-kiṉṉam.*

மறுவ. சந்தனக்கிண்ணம்

[சந்தனம்' + கிண்ணி]

சந்தனக்குடம் *šandaṉa-k-kuḍam*, திருவிழாக் காலங்களில் சந்தனம் கரைத்த நீர் நிறைந்த குடத்தை ஊர்வலஞ் செய்வித்து ஐயனார் முதலிய தெய்வங்கட்கும் முகமதியப் பெரியோர் கல்லறைகட்கும் செய்யும் நீராட்டு; ceremony of anointing a Hindu idol as Šāsta, or the grave of a Muhammadan saint with sandal paste, the pot containing it being carried to the place in procession.

மறுவ. சந்தனக்கூடு

ம. சந்தனக்குடம்

[சந்தனம்' + குடம். குள் → குண் → குணம் = குடம். குணம் → குடம் = உருண்ட கலம்]

சந்தனக்கும்பம் *šantaṉa-k-kumbam*, பெ. (n.) சந்தனக்கும்பா பார்க்க; see *šandaṉa-k-kumbā.*

[சந்தனம் + கும்பம்]

சந்தனக்கும்பா *šantaṉa-k-kumbā*, பெ. (n.) சந்தனம் வைக்கும் பெரிய ஏனம்; a big vessel for keeping sandal.

[சந்தனம்' + கும்பா. கும் → கும்பு → கும்பம் = உருண்டு திரண்ட கலம். கும்பம் → கும்பா]

சந்தனக்குழம்பு *šandaṉa-k-kuḻambu*, பெ. (n.) அரைத்த சந்தனக் கூட்டு; sandal paste. "வரைச் சந்தனக் குழம்பும்" (திவ். இயற். 2: 76).

மறுவ. சந்தனக்களி, சந்தனச்சோறு, சந்தனத் தேய்வை

ம. சந்தனக்குழம்பு

[சந்தனம்' + குழம்பு]

சந்தனக்குறடு *šandaṉa-k-kuṟaḍu*, பெ. (n.) 1. சந்தனக்கட்டை பார்க்க; see *šandaṉa-k-kaṭṭai.* 2. தெய்வத் திருமேனிக்குச் சந்தன நீராட்டு செய்யும் மேடை; platform where idol is anointed with sandal paste. 3. உருட்டி விழுந்த இலக்கத்தைக் கொண்டு புத்தகத்தில் குறி பார்க்குமாறு நான்கு பக்கங்களிலும் 3, 12, 10, 100 என்ற எண்கள் முறையே எழுதப் பெற்றுக் கனவடிவாயமைந்த சந்தனக்கட்டை (வின்.); cubical or oblong block of sandalwood marked with the number 3, 12, 10, 100. one of the each side, the number which turns up when it is thrown being looked for in a book for divining the future.

ம. சந்தனக்குறடு

[சந்தனம்' + குறடு. குள் → குறு → குறள் → குறண்டு. குறண்டுதல் = வளைதல், சுருண்டு கொள்ளுதல். குறள் → குறடு = வளைந்த பற்றுக்கருவி. குறடு, இங்கு இலை, தளிர் இல்லாமல், வெட்டப்பட்ட கட்டையைக் குறித்தது]

சந்தனக்குறை *šandaṉa-k-kuṟai*, பெ. (n.) மணப் பொருள்கள் சேர்த்துச் செய்யப்படும் கலவைச் சாந்தில் பயன்படுத்தும் சந்தனக்கட்டைத் துண்டு; small blocks of sandalwood used in preparing scented paste. "சந்தனக் குறையொடு சாந்திற்குரியவை" (பெருங். மகத. 17: 139).

[சந்தனம்' + குறை]

சந்தனக்கூட்டு *šandaṉa-k-kūṭṭu*, பெ. (n.) கலவைச் சந்தனம்; perfumery ground with sandal.

மறுவ. சந்தனச்சாந்து

ம. சந்தனக்கூட்டு

[சந்தனம்' + கூட்டு]

சந்தனக்கூடு *šantaṉa-k-kūḍu*, பெ. (n.) முகமதியப் பெரியவர்களுக்காக நடத்தப்படும் திருவிழாவில் சிறு தேரின் நடுவில் வைத்து எடுத்துச் செல்லும் சந்தனக் குடம்; a small pot filled with sandal paste kept in a temple chariot taken act in procession in honour of Muslim saints. நாகூர்ச் சந்தனக்கூடு திருவிழா சிறப்பாக இருக்கும்.

[சந்தனம்' + கூடு]

சந்தனக்கோரை *šandaṉa-k-kōrai,* பெ. (n.) சந்தன மணம் வீசும் கோரை வகை *(யாழ்ப்.);* a kind of fragrant sedge.

[சந்தனம் + கோரை]

சந்தனக்கோபம் *šandaṉa-k-kōbam,* பெ. (n.) ஒருவகைச் சாமை; a kind of millet - Ichnocarpus genus *(சாஅக.).*

[சந்தனம் + கோபம். சந்தன நிறமுள்ளது]

சந்தனக்கோல் *šandaṉa-k-kōl,* பெ. (n.) சந்தனக் குச்சி; stick. "சந்தனக்கோல் குறுகியவிடத்து பிரப்பங் கோலாகாது" *(தொல். எழுத்து. மொழி. 34. இளம்.).*

[சந்தனம் + கோல்]

சந்தனச்சாணை *šandaṉa-c-cāṇai,* பெ. (n.) சந்தனக்கல் பார்க்க; see šandaṉa-k-kal.

மறுவ. சந்தனக்கல்

[சந்தனம் + சாணை]

சந்தனச்சாந்து *šandaṉa-c-cāndu,* பெ. (n.) சந்தனக்கூட்டு பார்க்க; see šandaṉa-k-kūṭṭu. "சந்தனச் சாந்திட் டன்ன" *(பெருங். மகத. 7: 109).*

மறுவ. சந்தனக்கூட்டு

[சந்தனம் + சாந்து]

சந்தனச்சாரல் *šandaṉa-c-cāral,* பெ. (n.) சந்தன மரங்கள் அடர்ந்த மலைச்சரிவு; mountain slope or hilly tract noted for sandalwood trees. "சந்தனச்சாரற் பெருவரை யடுக்கத்து" *(பெருங். இலாவாண. 20: 44).*

[சந்தனம் + சாரல். சார் → சாரல் = மலைச் சரிவு, மலைப்பக்கம்]

சந்தனச்சேறு *šandaṉa-c-cēṟu,* பெ. (n.) சந்தனக் குழம்பு பார்க்க; see *šandaṉa-k-kuḻambu.* "சந்தனச்சே றாடிய மேனி" *(பரிபா. 7: 74, உரை).*

மறுவ. சந்தனக்குழம்பு

[சந்தனம் + சேறு]

பண்டைத் தமிழகத்தில் சந்தனச் சேற்றாலும், வண்ணச் சாந்தாலும் இருபாலாரும், சிறப்பாகப் பெண்டிர், மேனி முழுவதும் பல்வேறு ஓவியம் வரைந்து கொள்வதும், நிலையாயிருக்குமாறு பல்வகை உருவங்களைப் பச்சை குத்திக்கொள்வதும் பெருவழக்காய் இருந்தது.

சந்தனச்சோலை *šandaṉa-c-cōlai,* பெ. (n.) சந்தன மரங்கள் நிறைந்த சோலை; grove of sandalwood trees. "சந்தனச்சோலைப் பந்தா டுகின்றார்" *(திருக்கோ. 107).*

[சந்தனம் + சோலை]

சந்தனஞ்சாத்து-தல் *šandaṉañ-jāttu-,* 5 செ.குன்றாவி. (v.i.) *1.* கடவுள் திருமேனிக்குச் சந்தனக் காப்பிடுதல்; to anoint with sandal paste, as an idol. *2.* உடலிற் சந்தனம் பூசுதல்; to besmear the body with sandal paste.

ம. சந்தனஞ்சாத்து

[சந்தனம் + சாத்து-,]

சந்தனத்தழை *šandaṉa-t-taḻai,* பெ. (n.) சந்தன இலை; sandal leaf.

[சந்தனம் + தழை]

சந்தனத்தழை தகாதென்று மறுத்தல் போன்ற அகப்பொருட்டுறைகள் (தழை கொண்டு சேறல், தழையெதிர்தல், தழையேற்பித்தல், தழை விருப்புரைத்தல்) மக்கள் குறிஞ்சித் திணையில் தழையுடையணிந்திருந்ததைக் காட்டும்.

சந்தனத்திரணை *šandaṉa-t-tiraṇai,* பெ. (n.) சந்தனக்கட்டி *(வின்.);* lump of sandal paste.

[சந்தனம் + திரணை]

சந்தனத்திரி *šandaṉa-t-tiri,* பெ. (n.) சந்தனம் முதலிய மணப்பொருள்களால் செய்யப்படும் மணத்திரி (ஊதுவத்தி) *(யாழ்ப்.);* wick or thin stick coated with sandal or other perfumed paste for diffusing odour while buring, joss-stick.

ம. சந்தனத்திரி

[சந்தனம் + திரி]

சந்தனத்தூள் *šandaṉa-t-tūḷ,* பெ. (n.) சந்தனப் பொடி பார்க்க; see *šandaṉa-p-poḍi.*

மறுவ. சந்தனப்பொடி

[சந்தனம் + தூள். துகள் → தூள்]

சந்தனத்தேய்வை *šandaṉa-t-tēyvai,* பெ. (n.) சந்தனக்குழம்பு பார்க்க; see *šandaṉa-k-kuḻambu.* "சாதிலிங்கமுஞ் சந்தனத் தேய்வையும்" *(பெருங். உஞ்சைக், 41, 130).*

மறுவ. சந்தனக்குழம்பு

[சந்தனம் + தேய்வை. தேய் + வை. 'வை' - பெயராக்க ஈறு]

சந்தனத்தேவன்மடம் *šandaṉa-t-tēvaṉ-maḍam,* பெ. (n.) சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Sivagangai district.

[சந்தனத்தேவன் + மடம்]

சிவகங்கை மாவட்டத்தில் நாட்டரசன் கோட்டைக்கும் சிவகங்கைக்கும் இடையில் இவ்வூர் உள்ளது.

சந்தனத்தேவன் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கொள்ளைக்காரன். இருப்பவர்களிடம் எடுத்து இல்லாதவர்களுக்குக் கொடுக்கும் இயல்பினன். இவ்வியல்பின் காரணமாக இவன் பெயரில் அமைந்த ஊர் சந்தனத் தேவன் மடம் எனப் பெயர் பெற்றதாகக் கூறுவர் (தஊ.பெ.).

சந்தனதி *šandaṉadi,* பெ. (n.) வெட்டிவேர்; cuscus root - Vetivera odarata (சா. அக.).

[சந்தனம் → சந்தனதி]

சந்தனநலங்கு *šandaṉa-nalaṅgu,* பெ. (n.) திருமணத்திற்கு முன்னால் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் அவரவர் வீடுகளில், அரைத்த சந்தனம் முதலியவற்றைப் பூசி நலங்கு வைக்கின்ற சடங்கு; a ceremony prior to marriage in which 'nalaṅgu' is performed in the respective houses of the bride and bridegroom.

[சந்தனம் + நலங்கு]

சந்தனநறுநீர் *šandaṉa-naṟu-nīr,* பெ. (n.) சந்தனங் கலந்த பனிநீர்; scented rose-water mixed with sandal paste. "சந்தன நறுநீர் மண்ணுறுத் தாட்டி" (பெருங். உஞ்சைக் 34: 188)

[சந்தனம் + நறுநீர்]

சந்தனநீராட்டு *šandaṉa-nīrāṭṭu,* பெ. (n.) கடவுள் திருமேனிக்குச் சந்தனக் குழம்பால் செய்யும் நீராட்டு; anointing an idol with sandal paste.

[சந்தனம் + நீர் + ஆட்டு]

சந்தனப்பலகை *šandaṉa-p-palagai,* பெ. (n.) சந்தன மரத்தாலான மணைப் பலகை; well-polished seats made of sandal-wood. "சந்தனப் பலகையுஞ் சந்தப் பேழையும்" (பெருங். உஞ்சைக். 57: 34).

மறுவ. சந்தனப் பீடிகை

[சந்தனம் + பலகை]

சந்தனப்பில்லை[1] *šandaṉa-p-pillai,* பெ. (n.) 1. மாடுகளிற் காணப்படும் ஒருவகை மங்கல் நிறம்; light yellow colour of cattle. 2. புகர் நிறமுள்ள மாட்டு வகை; cattle having light yellow colour.

ம. சந்தனப்புல்ல

[சந்தனம் + பில்லை]

சந்தனப்பில்லை[1] *šandaṉa-p-pillai,* பெ. (n.) சந்தனவில்லை பார்க்க; see *šandaṉa-villai.*

[சந்தனம் + பில்லை. வில்லை → பில்லை]

சந்தனப்பீடிகை *šandaṉa-p-pīḍigai,* பெ. (n.) சந்தனப்பலகை பார்க்க; see *šandaṉa-p-palagai.* "சந்தனப்பீடிகைச் சார்வணை யேறி" (பெருங். உஞ்சைக். 37: 15).

மறுவ. சந்தனப்பலகை

[சந்தனம் + பீடிகை]

சந்தனப்புல்லை *šandaṉa-p-pullai,* பெ. (n.) மங்கலான மஞ்சள் நிறம் (பெரிய மாட். 13); light yellow colour, as of cattle.

மறுவ. சந்தனப்பில்லை

[சந்தனம் + புல்லை]

சந்தனப்பூச்சு *šandaṉa-p-pūccu,* பெ. (n.) உடலிற் சந்தனம் பூசுகை; smearing the body with sandal paste.

[சந்தனம் + பூச்சு. பூசு → பூச்சு]

சந்தனப்பொட்டு *šandaṉa-p-poṭṭu,* பெ. (n.) சந்தனக் குழம்பால் நெற்றியில் வைக்கும் பொட்டு; a circular mark of sandal paste, worn on the forehead.

ம., க., தெ. சந்தனப்பொட்டு

[சந்தனம் + பொட்டு]

சந்தனப்பொடி *šandaṉa-p-poḍi,* பெ. (n.) நறுமணச் சந்தனத் தூள்; sweet-scented sandalwood powder.

[சந்தனம் + பொடி]

சந்தனம்[1] *šandaṉam,* பெ. (n.) 1. சந்தனமரம்; sandalwood tree. "வெறிகமழ் சந்தனமும் வேங்கையும்" (நாலடி, 180). 2. அரைத்த சந்தனக் குழம்பு; sandal paste. "சீதச் சந்தனந் தாதோ டப்ப" (பெருங். இலாவாண. 9, 157). 'சந்தனம் தெளித்த கையாலே சாணி தெளித்தல் ஆச்சுது' (பழ.).

ME., L. sandulum

[சார் → சார்த்து → சாத்து. சாத்துதல் = பூசுதல், திருமண் காப்பிடுதல், சந்தனம் பூசுதல். சாத்து → சாந்து = சுண்ணாம்புச் சேறு, அரைத்த சந்தனம், சந்தனமரம், நெற்றிப் பொட்டுப்பசை, எட்பசை. சாந்து → சந்து = சந்தனமரம். சந்து → சந்தனம் (வே. க. 146).]

த. சந்தனம் → Skt. candana

கிழக்கிந்தியா அல்லது ஆத்திரேலியாவினின்று வந்த மணமுள்ள மரம் (scented wood esp. from E. India. or Australia) என்று எருதந்துறை அகரமுதலி குறித்திருப்பதும் இந்தைரோப்பிய மொழிகளில் சந்தனத்தைக் குறிக்க சொல் இன்மையும் சந்தனம் தென்னாட்டைச் சார்ந்த மரம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

சந்தனம்[2] *šandanam,* பெ. (n.) தேர்; car, chariot. "மணிச்சந்தனத் தேற்றியே" *(பாரத. குருகுல. 124).*

சந்தனமண்டபம் *šandana-mandapam,* பெ. (n.) சந்தனம் அரைப்பதற்காகக் கற்கள் பதித் திருக்குங் கோயில் மண்டபம்; temple-room where stones are fixed for grinding sandal.

[சந்தனம் + மண்டபம்]

சந்தனமரம் *šandana-maram,* பெ. (n.) இந்தியா முழுமையும் வளரும் மரவகை; sandal-wood tree - Santalum album.

ம. சந்தனவல்லி

[சந்தனம் + மரம்]

சந்தன மரம் 4000 அடி உயரத்தில் வளரும்; இதன் சாந்து மணமாக இருப்பதுடன் குளிர்ச்சியையும் தரும். பல நோய்களுக்கு மருந்தாகப் பயன்படும்.

வகைகள் :

1. செஞ்சந்தனம்.
2. வெண்சந்தனம்.
3. அரிச்சந்தனம்.
4. சிறு சந்தனம்.
5. கோபிச்சந்தனம்.
6. காட்டுச் சந்தனம்.
7. கருப்புச் சந்தனம் (கிருட்டிணச்சந்தனம்) (சா. அக.).

சந்தனமலை *šandana-malai,* பெ. (n.) மலேயாத் தீவிலுள்ள, மிகச் சிறந்த வகைச் சந்தன மரங்கள் வளரும் மலை; sandalwood mountain in Malaya, so called from it yielding superior sandal trees *(சா.அக.).*

ம. சந்தனகிரி

[சந்தனம் + மலை]

சந்தனமாமணி *šandana-māmani,* பெ. (n.) நறுவிலி; oblong feather-nerved sebesten.

[சந்தனம் + மாமணி]

சந்தனமிடு-தல் *šandanam-idu-,* 20 செ.கு.வி. (v.i.) அரைத்த சந்தனக் குழம்பைப் பூசுதல்; to apply sandal paste.

ம. சந்தனமிடுக

[சந்தனம் + இடு-,]

சந்தனமிழை-த்தல் *šandanam-ilai-,* 4 செகுன்றாவி. (v.t.) சந்தனம் அரைத்தல்; to grind sandal.

[சந்தனம் + இழை-,]

சந்தனமுழுக்கு *šandana-mulukku,* பெ. (n.) இறைவன் திருமேனிக்குச் சந்தனத்தில் செய்யும் முழுக்கு; anointing an idol with sandal paste.

[சந்தனம் + முழுக்கு]

சந்தனவத்தர் *šandana-v-attar,* பெ. (n.) சந்தனக் கட்டையிலிருந்து இறக்கிய நறுமணநீர்; sandal attar.

[சந்தனம் + அத்தர்]

சந்தனவிரை *šandana-virai,* பெ. (n.) தேவதாளி (L.); langsat of the Ānaimalai hills.

[சந்தனம் + விரை]

சந்தனவில்லை *šandana-villai,* பெ. (n.) சந்தன உருண்டை; sandal tablet, small cake of sandal paste.

[சந்தனம் + வில்லை]

சந்தனவுருண்டை *šandana-v-urundai,* பெ. (n.) சந்தனவில்லை பார்க்க; see *šandana-villai.*

[சந்தனம் + உருண்டை. உருள் → உருண்டை]

சந்தனவெண்ணெய் *šandana-v-ennay,* பெ. (n.) சந்தனத்தினின்று எடுக்கும் எண்ணெய்; sandal wood oil.

ம. சந்தனதைலம்

[சந்தனம் + எண்ணெய்]

சந்தனவெற்பு *šandana-verpu,* பெ. (n.) *சந்தன மரங்கள் வளரும் பொதிய மலை (திருவிளை. பழியஞ். 23);* Podiya-malai, as the mountain noted for sandal trees.

[சந்தனம் + வெற்பு]

சந்தனவேங்கை *šandana-vēṅgai,* பெ. (n.) செஞ்சந்தன மரவகை; red sanders.

[சந்தனம் + வேங்கை]

சந்தனவேம்பு *šandana-vēmbu,* பெ. (n.) கட்டட வேலைக்குப் பயன்படும் வேம்பு மரவகை (கட்டட.); kind of neem tree.

[சந்தனம் + வேம்பு]

சந்தனவேலன் *šandana-vēlan,* பெ. (n.) குடைவேல்; umbrella-thorn - Acacia planifrons *(சா. அக.).*

சந்தனவைரி *šandana-vairi,* பெ. (n.) தேவதாளி; langsat of Annamalai hill - Lansium anamallayanum *(சா. அக.).*

[சந்தனம் + வைரி]

சந்தனாகரு *šandanākaru,* பெ. (n.) சந்தன மரவகை; a kind of sandalwood. *"சந்தனா கருவின் றூபம்" (பாரத. இந்திர. 41.).*

[சந்தனம் + ஆகரு]

சந்தனாதி *šandanādi* பெ. (n.) வேங்கை மரம் *(மலை.);* Indian kino tree.

[சந்தனம் → சந்தன் + ஆதி]

சந்தனாதித்தைலம் *šandanādi-t-tailam,* பெ. (n.) சந்தனாதியெண்ணெய் பார்க்க; see *šandanādi-y-enney.*

ம. சந்தனதைலம்

[சந்தனாதி + தைலம்]

சந்தனாதியுண்டை *šandanādi-y-undai,* பெ. (n.) சந்தனம் மிகுதியாகச் சேர்த்துச் சிற்றுண்டையாகச் செய்யப்பட்ட ஒருவகை மருந்து *(வின்.);* a medicinal pill having sandal as the essential ingredient.

[சந்தனம் + ஆதி + உண்டை. உருள் → உருண்டை → உண்டை]

சந்தனாதியெண்ணெய் *šandanādi-y-enney,* பெ. (n.) சந்தனம் முதலிய மணப்பொருள்களினின்று வடிக்கும் நெய்மம்; fragrant medicated oil having sandal as the chief ingredient.

[சந்தனம் + ஆதி + எண்ணெய்]

சந்தனாபிடேகம் *šandanābidēgam,* பெ. (n.) சந்தனமுழுக்கு பார்க்க; see *šandana-mulukku.*

[சந்தனம் + அபிடேகம்]

Skt. abisēga → த. அபிடேகம்

சந்தனி *šandani,* பெ. (n.) வெண்சந்தனம்; common white sandalwood - Santanum album *(சா.அக.).*

[சந்தனம் → சந்தனி]

சந்தாடகம் *šandādagam,* பெ. (n.) வட்டக் கிலுகிலுப்பை; fox-frightener - Crotolaria verrucosa *(சா.அக.).*

சந்தாணி *šandāni,* பெ. (n.) வெங்காரம்; borax *(சா.அக.).*

சந்தாதிகம் *šandādigam,* பெ. (n.) வசம்பு; sweet-flag - Acorus calamus *(சா.அக.).*

சந்தாம்மியம் *šandāmmiyam,* பெ. (n.) அறுகு; cynodon or couch grass - Cynodon dactylon *(சா.அக.).*

சந்தாமணி *šandāmani,* பெ. (n.) எருக்கு; madar plant - Calotropis gigantea *(சா.அக.).*

சந்தாளர் *šandālar,* பெ. (n.) திரவிட மொழியாகிய மாலத்தம் மொழியைப் பேசுபவரும் இராசமகால் குன்றுகளில் வாழ்பவருமான ஓர் இனத்தவர்; Santals a tribe inhabiting the skirts of the Rajmahal hills and speaking Malto language, a north Dravidian group.

க. சந்தாள

சந்தானக்கூர்மை *šandāna-k-kūrmai,* பெ. (n.) அட்டுப்பு *(யாழ்.அக.);* salt produced by evaporation.

[சந்தானம் + கூர்மை]

சந்தானகரணி *šandāna-karani,* பெ. (n.) இலுப்பை மரம்; honey tree - Bassia longifolia *(சா.அக.).*

சந்தானகாருணி *šandāṉa-kāruṇi,* பெ. (n.) பேரறுகு; a kind of bermuda grass (சா.அக.).

சந்தானகுரவர் šandāṉa-kuravar, பெ. (n.) சிவனியக் கொண்முடிபைப் (சைவ சித்தாந்தத்தைப்) பரவச்செய்த மெய்கண்ட தேவர், அருணந்திசிவாசாரியதார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார் என்ற ஆசிரியர் நால்வர்; the four Šaiva Ācāryās who promulgated the Saiva Siddhānda philosphy, viz., Meykaṇḍa-dēvar, Aruṇandi-šivāšāriyar, Maraiñāṉa-šambandar, Umābadi-šivašāriyar, as tracing their succession from šiva.

சந்தானதீபிகை *šandāṉa-dībigai,* பெ. (n.) ஒரு கணிய நூல்; treatise on astrology.

[சந்தானம் + தீபிகை]

இதன் ஆசிரியர் இராமலிங்க முனிவர். கணியத்தில் பிள்ளைகளைப் பற்றிக் கூறும் நூல்.

சந்தானவஞ்சி *šandāṉa-vañji,* பெ. (n.) செவ்வாழை; red plantain - Musa sapientum (rubra) (சா.அக.).

சந்தானிகச்சிலந்தி *šandāṉiga-c-cilandi,* பெ. (n.) கடித்தவிடத்துத் குத்துதலையும், காயத்தையும் உண்டாக்கும் ஒருவகைச் சிலந்திப் பூச்சி; an insect like spider, developing blisters or boils attended with unbearable burning pain, when coming in contact with the body (சா.அக.).

[சந்தானிகம் + சிலந்தி]

சந்தானிகை *šandāṉigadi,* பெ. (n.) பாலேடு; cream of milk (கழ.அக.).

சந்தி[1] *šandi,* பெ. (n.) *1.* கூடுகை; meeting, union, combination. *2.* பல தெரு கூடுமிடம்; the cross roads, junction of three or more roads. "சதுக்கமுஞ் சந்தியும்" (திருமுருகு. 225). 'சந்தியிலே அடித்ததற்குச் சாட்சியா' (பழ.) *3.* இணைப்பு, இசைப்பு; joint, joining. *4.* பல பொருத்து அல்லது கணுவுள்ள மூங்கில் (பிங்.); bamboo, as having joints. *5.* நட்பாக்குகை (குறள், 633, உரை); reconciliation alliance, one of arašar-aruguṇam. *6.* தறுவாய்; crisis, critical point of time. நல்ல சந்தியில் வந்தான். *7* ஒரு பெரும்பண் (பிங்.); a primary melody-type. *8.* நாடகச்சந்தி (சிலப். 3: 13, உரை); division of a drama. *9.* வரிக் கூத்துவகை (சிலப். 3: 13, உரை); a masquerade dance.

[உத்து (ஒத்து) → அத்து. அத்துதல் = ஒட்டுதல், பொருத்தித் தைத்தல். அத்து → அந்து → அந்தி. அந்தித்தல் = 1. நெருங்குதல் "வேதமந்தித்து மறியான்" (திருவிளை. நகர. 106). 2. கூடுதல், ஒன்று சேர்தல்]

இனி, உம் → உந்து → அந்து → அந்தி என்றுமாம். இரவும் பகலும் அல்லது பகலும் இரவும் கலக்கும் இடைவேளையே கால வகையில் அந்தியெனப்பட்டது. காலையில் நிகழ்வது காலையந்தியென்றும் மாலையில் நிகழ்வது மாலையந்தியென்றும் சொல்லப் பெறும். "காலை யந்தியும் மாலை யந்தியும்" (புறம். 34).

காலையந்திக்கு முன்னந்தி, வெள்ளந்தி யென்றும், மாலையந்திக்குப் பின்னந்தி, செவ்வந்தியென்றும் பெயருண்டு. அந்தி யென்னும் பொதுச்சொல் சிறப்பாக ஆளப் பெறும்போது மாலையந்தியையே குறிக்கும் என்பது, அந்திக்கடை, அந்திக் காப்பு, அந்தி மல்லிகை, அந்திவண்ணன், அந்திவேளை முதலிய சொல் வழக்கால் அறியப்படும்.

இடவகையில் அந்தி என்பது முத்தெருக்கள் கூடுமிடத்தைக் குறிக்கும். "அந்தியுஞ் சதுக்கமும் ஆவண வீதியும்" (சிலப், 14, 213).

பிற்காலத்தில் அந்தி என்னும் சொல் சகரமெய் முன்னிடம் பெற்றுச் சந்தி என்றாயிற்று. ஒ.நோ: இளை → சிளை; உதை → சுதை; ஏண் → சேண்.

சந்தி :

1. காலை அல்லது மாலை வழிபாடு. "சந்தி செயத்தாள் விளக்க" (நள. கலிதொ.32).

2. மாலை (சூடா.) 'சந்திக்காப்பு' (உ.வ.), அந்திசந்தி = காலை மாலை

3. முத்தெருக் கூடுமிடம். "சதுக்கமுஞ் சந்தியும்" (திருமுருகு. 225)

அந்தி அல்லது சந்தி என்னுஞ் சொல் தலைக் கூடுதற் பொருளில் பண்டையிலக்கியத்தில் அருகியே வழங்கியமையாலும் சொற் புணர்ச்சியைக் குறிக்கச் சந்தி என்னும் சொல் வடமொழியிலேயே ஆளப் பெறுவதாலும், தமிழ்ப்பற்றுள்ள பெரும் புலவரும் சந்தி என்பது வடசொல்லென்றே மயங்கி வருகின்றனர். ஆயின், ஆய்ந்து பார்க்குங்கால், இதன் தென்சொல் மூலம் வெளிப்படுவது வியக்கத்தக்கதா யிருக்கின்றது.

இச் சொல் முதலில் தமிழில் வழங்கிய வடிவம் அந்து என்பதே. அந்துதல் = கூடுதல். அந்து → அந்தி = கூடியது, கூடிய நேரம் அல்லது

இடம். அந்து - சந்து (முதனிலைத் தொழிற் பெயர்) 1. பொருத்து (பிங்.), 2. உடற்பொருத்து (பிங்.), தொடைப் பொருத்து, இடுப்பு. 3. இரு பகைவர் பொருந்துதல் (ஒப்புரவாதல்) 'உயிரனையாய் சந்துபட வுரைத்தருள்" (பாரத. கிருட்டிணன்.). "நடுநின்றா ரிருவருக்குஞ் சந்து சொல்ல" (சிலப். 8: 101 உரை). 4. பலவழி கூடுமிடம். "சந்து நீவி" (மலைபடு. 393). சந்து → சந்தை = பல கடைகள் கூடுமிடம். (வ.வ.68, 69).

வடமொழியாளர் சந்தி என்னுஞ் சொல்லை ஸம்+ தி (sam + dhi) என்று பிரித்து ஸம் + தா (sam + dhā) என்றுங் கூட்டுச் சொல்லினின்று திரிப்பர். ஸம் = உடன், கூட, together, தா = (dhā) இடு, வை, to put. ஸம்தா (samdhā) = என்பது அவர் காட்டும் மூலம் (செல்வி. மே. 78, பக். 429-431).

சந்தி[2] šandi, பெ. (n.) நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் இணையும் போது ஏற்படும் மாற்றம்; the change, etc. that results when the last letter of a word combines with the first letter of the following word; sandhi (கிரியா).

[அந்து → அந்தி → சந்தி]

சந்தி என்னும் வடிவமும் ஓசையும் ஆராய்ச்சி யில்லாத் தமிழ்ப் புலவரை மயக்கலாம். இதற்கொத்த வடிவும் பொருளுமுள்ள சொற்கள், ஏனைச் சொல்முதல் மெய்களைக் கொண்டும் தமிழில் அமைந்திருத்தல் காண்க.

கும் → குத்து → கொத்து = குலை, குடும்பம், திரள். கும் → கம் → கத்து = உடற்கந்து (திவா.), மாடு பிணைக்குந் தும்பு. கத்துவான் = மாடு பிணைக்குங்கயிறு. கந்துகளம் = நெல்லும் பதருங்கலந்த களம். கந்து மங்கல் = கப்பும் மங்கலுங் கலந்த சாயம். கந்து மாறுதல் = நுகத்திற் பூட்டிய எருதுகளை வலமிடம் மாற்றிக் கட்டுதல்.

சந்தி என்னும் சொல், சொற்புணர்ச்சி என்னும் பொருளில் எவ்வகைத் தமிழ் வழக்கிலும் இதுகாறும் இடம்பெறாமற் போயினும் தெருப்புணர்ச்சி என்னும் பொருளில் சந்திக்கிழுத்தல், சந்தி சிரித்தல், சந்தியில் நிற்றல், சந்தி மறித்தல், சந்தியில் விடுதல் என்று உலக வழக்கிலும், "சந்தி மிதித்தல்" (திருவிளை. உக்கிர 27), "சதுக்கமுஞ் சந்தியும்" என்று செய்யுள் வழக்கிலும், ஊன்றி யிருத்தல் காண்க. சந்திக் கோணம் என்பது ஒரு தேருறுப்பு (பெருங். உஞ்சைக். 58: 51).

அந்து, சந்து என்னும் வினைமுதலிகள் இகரவீறு பெற்று உண்ணி, கொல்லி என்பன போல் செய்வான் பெயர்களாகிப் பின்னர் அஞ்சிக்கை, இரட்டித்தல் என்பன போல் மீண்டும் முதனிலைகளாய்ப் புடைபெயர்ந்தன என அறிக.

அந்து → சந்து; அந்து → அந்தி; சந்து → சந்தி; அந்தி → அந்திப்பு; சந்தி → சந்திப்பு (வ.வ. 70,71)

இரண்டு உருபன்கள் ஒன்று சேர்வது புணர்ச்சி. இது சந்தி என்றும் அழைக்கப்படும். அந்தித்தல் = ஒன்று சேர்தல். அந்தி → சந்தி. புணர்ச்சி, சந்தி ஆகிய இரு சொற்களும் சேர்தல் அல்லது கூடுதல் என்னும் பொருளைக் குறிக்கும் ஒரு பொருட்பன்மொழிகளாம். மூன்று தெருக்கள் கூடுமிடத்தை முச்சந்தி எனவும், நான்கு தெருக்கள் கூடுமிடத்தை நாற்சந்தி எனவும் அழைப்பதை ஒப்பு நோக்குக. சந்தியென்னும் சொல் சமற்கிருதத்திலும் மேலைநாட்டார் எழுதிய மொழியியல் நூல்களிலும் வழங்கப்படுகிறது. தமிழ்வழக்கில் புணர்ச்சியே பெரும்பான்மை.

பொருள் மயக்கத்தைத் (ambiguity) தவிர்ப் பதற்கும், உருபனமைப்புக் கட்டுப்பாடுகள் மீறுவதைத் தவிர்ப்பதற்கும், சொல்லின் எல்லையைக் (word - boundary) குறிப்பதற்கும் சந்தி வேறுபாடு உதவுகிறது.

சந்தி பெயர், வினை, இடை, உரி ஆகிய நால்வகைச் சொற்களும் நிலைமொழியாகவும் வருமொழியாகவும் நின்று சேர்க்கும் சேர்க்கையினைக் குறிக்கும்.

சந்தியை அகச்சந்தி (ஒரு சொல்லுக்குள் அமையும் சந்தி), புறச்சந்தி (ஒரு சொல்லுக்கும் இன்னொரு சொல்லுக்கும் இடையில் ஏற்படும் சந்தி) என்றும் வேற்றுமைச் சந்தி, அல்வழிச் சந்தி என்றும் பிரித்து விளக்குவர்.

"இருசொற் புணர்வது புணர்ச்சி. மொழி பொதுமக்களால் ஆக்கப் பெற்றதாகலின், அதன் புணர்ச்சியும் அவரது அமைப்பே. கவனித்தறியப்பெறாது ஏற்கெனவேயிருந்த சொற்கூட்டு நெறிமுறைகளையே, புணர்ச்சி நெறிமொழிகள் (விதிகள்) என எடுத்துக் கூறினர் இலக்கணியர். இயல்பு புணர்ச்சி, திரிபு புணர்ச்சி எனப் புணர்ச்சி இரு வகைப்படும். ஒரு வகை வேறுபாடுமின்றி இயல்பாயிருப்பது இயல்பு புணர்ச்சி. ஏதேனுமொரு வகையில் திரிவது திரிபு புணர்ச்சி. திரிதல் வேறுபடுதல். அது தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும். முன் இல்லாத எழுத்தோ அசையோ தோன்றுவது தோன்றல்; ஒரெழுத்து மற்றோரெழுத்தாக மாறுவது திரிதல்; முன்னுள்ள எழுத்தோ அசையோ மறைவது கெடுதல்.

புணர்ச்சியிற் புதிதாய்த் தோன்றும் அசை, இருசொற்களை அல்லது ஒரு சொல்லையும் ஒரு சொல் உறுப்பையும் சார்ந்து நின்று இயைப்பதால் (இசைப்பதால்) சாரியை எனப்படும்" *(தவ. 115, 116).*

வடமொழியில் சந்திகளைக் குணசந்தி, தீர்க்கசந்தி, விருத்தி சந்தி என மூவகையாகப் பிரிப்பர். அகர ஆகார இறுதியின் முன்னர் இகர ஈகாரம் வரும்போது அவை ஏகாரமாக மாறுவது குணசந்தி.

அகர ஆகாரங்கள் தம்முள் புணரும்போது ஆகாரமாகவும், இகர ஈகாரங்கள் தம்முன் புணரும்போது ஈகாரமாகவும் உகர ஊகாரங்கள் தம்முள் புணரும்போது ஊகாராமாகவும் மாறுவது தீர்க்கசந்தி.

அகரம் அல்லது ஆகாரமும் ஏகாரம் அல்லது ஐகாரமும் சேர்ந்து ஐகாரமாகத் திரிவது விருத்தி சந்தி. அகரம் அல்லது ஆகாரமும் ஓகாரம் அல்லது ஔகாரமும் சேர்ந்து ஔகாரமாக மாறுவதும் விருத்திசந்தி.

சந்தி[3] *šandi,* பெ. (n.) **பகலும் இரவும் பிரியும் அல்லது சந்திக்கும் நேரம், விடியல் அல்லது மாலைப்பொழுது;** twilight, the time just before dawn or just after sunset, dawn or dusk. இறந்தவரை நினைத்துக் காலையில் அழுவது சந்தியழுகை.

[அந்தி → சந்தி]

சந்தி[4]**-த்தல்** *šandi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. **இணைத்தல்;** to join, conjoin. "சந்தித்த கோவணத்தர்" *(தேவா. 16, 9).* 2. **எதிர்தல்;** to meet. "சந்தித்திடற் கெளிதோ விந்தவாழ்வு" *(திருக்கருவை. கலித். 75).* 3. **கண்டு கொள்ளுதல்;** to visit, have an interview with. "மயில் வாகனனைச் சந்திக்கிலேன்" *(கந்தரலங். 60).*

[உம் → உந்து → அந்து → அந்தி → சந்தி]

சந்தி[5]**-த்தல்** *šandi-,* செ.குன்றாவி. (v.t.) **எய்தல்** *(சங்.அக.);* to shoot an arrow.

[சந்து → சந்தி-,]

சந்தி[6] *šandi,* பெ. (n.) 1. **காலை உச்சி மாலை யெனப்படும் நாள் பிரிவுகளுள் ஒன்று;** one of the three divisions of the day, viz., kālai, ucci, mālai. "சந்தி யொன்றுக்குத் திருவமு தரிசி" *(S.I.I. iii, 138).* 2. **மாலை** (சூடா.); evening, dusk. 3. **வணக்கம்;** worship. "வானவர்கள் சந்திசெய்ய நின்றான்" *(திவ். அமலனாதி. 3).* 4. **திருவிழா** (கல்வெட்டு); festival. 5. **கோயிற் கட்டளை** (S.I.I. v, 92); provision for daily worship in a temple.

[அந்தி → சந்தி]

சந்தி[7] *šandi,* பெ. (n.) **பகுசொல்லுறுப்புகள் ஆறனுள் ஒன்று** (இலக்); one of constituent parts of divisible word.

[அந்தி → சந்தி]

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, வேறுபாடு (விகாரம்) ஆகிய ஆறு பகுபத வுறுப்புகளுள் சந்தி முழுச்சொல்லும் இடைச்சொல்லும் சேரும்போது அவற்றை இணைப்பதற்காக நிற்கும் எழுத்து. அது வேறுபாடு (விகாரம்) படுதலும் உண்டு.

நட + த் + த் + அன் + அன் (நடந்தனன்) என்னும் சொல்லில் 'த்' என்ற சந்தி நடந்தனன் என்பதில் ந் என வேறுபாடு (விகாரம்) பட்டமையைக் காண்க.

சந்தி[8] *šandi,* பெ. (n.) **பாடை;** bier. "சந்தியில் வைத்துக் கடமைசெய்து" *(பதினொ. காரைக் காலம். திருவால. மூத்த. 10).*

[அந்தி → சந்தி]

சந்தி[9] *šandi,* பெ. (n.) 1. **தக்க சமயம்;** favourable opportunity. "சந்தி கண்டுதான் சந்தடி விலக்க" *(பஞ்ச. திருமுக. 19).* 2. **கோயிற் காலபூசை;** worship at stated hours in a temple. "வீரபாண்டியன் சந்தி" (S.I.I. viii, 107).

[அந்தி → சந்தி]

சந்திக்கரை *šandi-k-karai,* பெ. (n.) **தெரு, ஆறு முதலியன கூடுமிடம்;** junction where several roads or rivers meet.

[சந்தி' + கரை. கடை = இடம். கடை → கரை. ஓ.நோ: அடுப்பங்கடை → அடுப்பங்கரை]

சந்திக்கறுப்பன் *šandi-k-karuppan,* பெ. (n.) **தெருச் சந்திகளில் வைத்து வணங்கும் சிறு தெய்வம்** (உ.வ.); a minor deity worshipped at the crossing of roads.

[சந்தி + கறுப்பன்]

சந்திக்காப்பு *šandi-k-kāppu,* பெ. (n.) **குழந்தைகளுக்கு அந்திப் பொழுதிற் செய்யுங் காப்புச் சடங்கு;** a mystic rite performed in the evenings for child's welfare.

[சந்தி + காப்பு]

சந்திக்காலம் *šandi-k-kālam,* பெ. (n.) மாலை நேரம்; evening dusk.

[அந்தி → சந்தி + காலம்]

சந்திக்கிழு-த்தல் *šandi-k-kilu-,* 4 செ.குன்றாவி. (v.t.) மானக்கேடு உண்டாக்கும் நோக்கத்தோடு ஒருவரின் குறைகளைப் பலரும் அறியச்செய்தல்; to expose to public (lit.), ridicule, drag somebody through the mud. 'அவனிடம் ஒழுங்காக நடந்து கொள். இல்லையேல் சந்திக்கிழுத்து மானத்தை வாங்கி விடுவான்'.

மறுவ. சந்தியிலிழு

[சந்திக்கு + இழு-,]

சந்திக்குனிப்பம் *šandi-k-kunippam,* பெ. (n.) கோயிலில் தேவரடியார் நடிக்கும் நடனம் (M.E.R. 1912, p. 127); a kind of dance by dancing girls in temple.

[சந்தி + குனிப்பம்]

சந்திக்கூத்தன் *šandi-k-kūttan,* பெ. (n.) தெருவில் நாடகம் நடத்துபவன்; street dancer. "நிவந்தஞ்செய்ய. நம் வாய்கெழ்விப்படி சந்திக்கூத்தன் திருவாளன் திருமுதுகுன்றனான விஜயராஜேந்திர ஆச்சாரியனுக்கும்" (தெ. க. தொ. 2:3, 68-1).

[சந்தி + கூத்தன்]

சந்திக்கூத்து *šandi-k-kūttu,* பெ. (n.) 1. திருவிழாவில் கோயிலின் முன்பாகப் பெண்பாலர் ஆடும் கூத்துவகை (I.M.P. pd. 389, 390); a dance performed by women in front of a temple during festivals. 2. தெருச்சந்தியில் ஆடும் ஆட்டம்; dance performed at cross roads.

[சந்தி + கூத்து]

சந்திக்கோணம் *šandi-k-kōnam,* பெ. (n.) தேருறுப்புக்களுள் ஒன்று; an ornamental piece in a chariot. "சந்திக்கோணமு மந்திர வாணியும்" (பெருங். உஞ்சை. 58: 51).

[சந்தி + கோணம். கோள் → கோணம்]

சந்திகம் *šandigam,* பெ. (n.) உடம்பில் கீல் மூட்டுகளைத் தளரச் செய்யும் ஒருவகை ஊதை நோய்; a rheumatic affection usually marked by looseness of the joints of the body (சா.அக.).

[சந்து → சந்தி → சந்திகம்]

சந்திகமாலைக்கண் *šandiga-mālai-k-kan,* பெ. (n.) மாலைப் பொழுதில் கண்பார்வையை மறைக்கும் ஒருவகைக் கண்ணோய்; a degeneration of the retina in which the vision fails at twilight or sunset; failure of vision at night or in a dimlight - Nyctalopia (சா.அக.).

[சந்திகம் + மாலைக்கண்]

சந்திகவூதை *šandiga-vūdai,* பெ. (n.) சந்திகம் பார்க்க; see *šandigam* (சா.அக.).

[சந்திகம் + ஊதை]

சந்திகெந்தம் *šandi-kendam,* பெ. (n.) கிச்சிலிக் கிழங்கு; orange root - Hedycharum spicatum (சா.அக.).

சந்திகை *šandigai,* பெ. (n.) பணிகார வகை (இந்துபாக. 59); a confection.

தெ. சந்திகா

சந்திகையுரல் *šandigai-y-ural,* பெ. (n.) சந்திகை பிழியுங் கருவி (இந்துபாக. 59); a colander for preparing sandigai.

[சந்திகை + உரல்]

சந்திசிரி-த்தல் *šandi-širi-,* 4 செ.கு.வி. (v.i.) தெருச்சந்தியில் மக்கள் பழித்தல்; to ridicule one at cross-road.

[சந்தி + சிரி-. சந்தி ஆகுபெயராய்ச் சந்தியில் உள்ள மக்களைக் குறித்தது.]

சந்திதம் *šandidam,* பெ. (n.) கோக்கப்பட்டது (இராட்.); that which is strung or combined.

[சந்தி → சந்திதம்]

சந்திப்பாடு *šandi-p-pāḍu,* பெ. (n.) தெருச் சந்தியிலுள்ள பேய்களால் ஏற்படும் கோளாறு (வின்.); mishap supposed to be caused by a demon at the junction of streets and other haunted places.

[சந்தி + பாடு. படு → பாடு]

சந்திப்பு *šandippu,* பெ. (n.) 1. எதிர்கை; meeting, visiting. 2. ஆறு, தெரு, பாதை முதலியன கூடுமிடம்; junction of rivers, streets, roads, etc., 3. இரண்டிற்கும் மேற்பட்ட தொடர் வண்டிப் பாதை இணையும் நிலையம்; railway station where more than two rail roads join.

திருச்சிராப்பள்ளிச் சந்திப்பில் உனக்காகக் காத்திருக்கிறேன். 4. பெரியோரைச் சென்று காண்கை; visiting to elders etc., 4. காணிக்கை; visiting presents. 'அரசனுக்கு என்ன சந்திப்புக் கொண்டு செல்லுகிறாய்' (வின்.).

ம. சந்திப்பு

[சந்தி → சந்திப்பு. 'பு' சொ.ஆ.ஈறு]

சந்திப்பைக்குறிக்கும் junction அல்லது juncture என்னும் ஆங்கிலச்சொல்லின் முதனிலையான join என்பதும் jungere என்னும் இலத்தீன் சொல்லின் திரிபாம். அவ் விலத்தீன் சொல் jugare என்பதன் திரிபாம். L. jugare = E. join; L. jugam = E. yoke. ஆகவே சந்திப்பைக் குறிக்கும் இலத்தீன் சொல்லும், சமற்கிருதச்சொல்லினின்று வேறுபட்ட தனிச்சொல் என்பதை அறிக (வ.வ. 70).

சந்திப்பெலியார் *šandi-p-peliyār*, பெ. (n.) கோயில்அறங்காவலர்; person incharge of the conduct of ceremonies in the temple. 'சந்திப் பெலியார் திரிபுவன மாதேவிச் சதுர் வேதிமங் கலத்து" (தெ. இ. க. தொ. 12: 58: 3).

[சந்திப்பு + பெரியார் → சந்திப்புப்பெரியார் → சந்திப்பெரியார் → சந்திப்பெலியார்].

சந்திபண்ணு-தல் *šandi-pannu-*, 5 செ.கு.வி. (v.i) காலை, உச்சி, மாலை ஆகிய வேளைகளில் வணங்குதல் (சந்தியாவந்தனஞ் செய்தல்) (சிலப். 13: 43, அரும்.); to perform morning, noon, evening prayers.

[சந்தி + பண்ணு-. அந்தி → சந்தி = கூடுமிடம், இரவும்பகலும் சேரும்பொழுது. அப் பொழுதில் செய்யும் வணக்கம், சந்தி பண்ணுதல்].

சந்திபந்தம் *šandi-pandam*, பெ. (n.) பொருத்து; joint.

[சந்தி + பந்தம்]

Skt. bandh → த. பந்தம்

சந்திமறித்தல் *šandi-marittal*, பெ. (n.) கொள்ளை நோய்க் காலங்களில் தெருச்சந்திகளிற் கொடை கொடுத்துத் தீய தெய்வங்களின் சினந்தணிக்கை; averting the displeasure of malignant deities in times of epidemics by making offerings at the cross roads.

[சந்தி + மறித்தல்]

சந்திமான் *šandimān*, பெ. (n.) இடையெழு வள்ளல்களுள் எழுவருள் ஒருவன் (பிங்.); a chief noted for his liberality, one of seven 'idai-vallalgal'.

[அந்தம் → சந்தம் = அழகு, மேன்மை. சந்தம் → சந்தி + மான். மகன் → மான். சந்திமான் = மேன்மை பொருந்தியவன்]

சந்திமிதி-த்தல் *šandi-midi*, 4 செ.கு.வி. (v.i) 1. நான்காம் மாதக் குழந்தையைத் நல்லோரையில் தெருச்சந்திக்குத் தூக்கிச் செல்லுதல்; to take a child to the cross roads in an auspicious time in its fourth month. "நாலாகு மதியிற் சந்தி மிதிப்பது நடத்தி" (திருவிளை. உக்கிர.27). 2. அம்மைநோய் நீங்கிப் பின் தெருச்சந்தியில் முதன்முதலாக வந்து மிதித்தல்; to step on the cross roads in an auspicious time, when first going out after sickness, especially small-pox

[சந்தி + மிதி-,]

சந்தியக்கரம் *šandi-y-akkaram*, பெ. (n.) இரண்டு உயிரெழுத்துகள் கூடி அமைவனவாகிய, ஐ, ஔ என்னும் கூட்டெழுத்துகள் (பி.வி. 5, உரை); diphthongs, viz., 'ai' and 'au'.

[சந்தி + அக்கரம்]

Skt. akṣara → த. அக்கரம்

அளபுவகையில்
"ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ எ(ன்) னும் அப்பால் ஏழும் ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப" (4)
என்றும், அமைப்புவகையில்
'அகர இகரம் ஐகார மாகும்' (54)
'அகர உகரம் ஔகார மாகும்' (55)
என்றும், தொல்காப்பியங் கூறுவதால், அகர இகரம் சேர்ந்து ஐகாரமும், அகரவுகரம் சேர்ந்து ஔகாரமும், புணரொலிகளாய்த் (diphthongs) தோன்றினவென அறியலாம். இகரம் உகரத்தினும் முந்தியதாதலின், இகரக் கூறுள்ள ஐகாரம், உகரக்கூறுள்ள ஔகாரத்தினும் முந்தித் தோன்றியிருத்தல் வேண்டும்.

வடநூலார் புணர்ச்சித்திரிபைப் பற்றுக் கோடாகக் கொண்டு, ஏகார ஓகாரங்களையும் புணரொலிகளாகக் கொள்வர். அக் கொள்கை தமிழுக்கு ஏற்காது. அவை மோனைத் திரிபாய் எழுந்தவையே. (த. வ. 133)

சந்தியாகாலம் *šandiyā-kālam,* பெ. (n.) சந்திக்காலம் பார்க்க; see *šandi-k-kālam.*

[அந்தி → சந்தி. சந்தி → சந்தியா + காலம்]

வடவர் காட்டும் வரலாறு வருமாறு: ஸம் + தா (dhā) - ஸந்தா. ஸம் = கூட. தா = வை, போடு (to place or put)

ஸந்தா = 1. (வி.) கூடு, ஒன்றுசேர், புணர், ஒப்புரவாகு முதலியன. 2. (பெ.) கூட்டம், சேர்க்கை, புணர்ச்சி, உடன்பாடு, கலவை முதலியவை.

ஸம் + தி (dhi) - ஸந்தி = கூட்டமுள்ளது, கூட்டம், கூடுகை, கூட்டு, இணைப்பு, சேர்க்கை, ஒன்றியம், அவை, உடன்பாடு அந்தி, புணர்ச்சி, சொற்புணர்ச்சி முதலியன.

ஸம் + த்யா (dhyā) - ஸந்த்யா = ஒன்று சேர்க்கை, கூட்டம், கூடுகை, ஒன்றியம், காலையந்தி, மாலையந்தி முதலியன.

இதினின்று அறியக் கூடியவை

1. சந்தி என்னும் தென்சொல்லும், ஸந்தா என்னும் வடசொல்லும், வெவ்வேறு மூலத்தன.

2. ஸம் என்னும் வடமொழி முன்னொட்டு கும் என்னும் தென்சொற்றிரிபு.

3. தி (dhi), த்யா (dhyā) என்னும் ஈறுகள் தா (dhā) என்னும் முதனிலையொடு தொடர்பு உடையனவல்ல. கன்னி என்பதைக் கன்யா என்று திரித்தது போல், சந்தி என்பதைச் சந்த்யா என்று திரித்திருக்கின்றனர் *(வ.வ. 69).*

சந்தியாதீபம் *šandiyā-dībam,* பெ. (n.) சந்தி விளக்கு பார்க்க; see *sandi-viḷakku.* "சந்தியாதீபம் ஐஞ்சினுக்கு நிசதம் நெய் உழக்காக" *(தெ.க.தொ 5: க. 724)*

[சந்தி → சந்தியா + தீபம். தீய்தல் = எரிதல், விளங்குதல். தீய் → தீய்வு → தீவு → தீவம் = விளக்கு. தீவம் → தீபம்]

த. தீபம் → Skt. dīpa

சந்தியாவந்தனம் *šandiyā-vandaṉam,* பெ. (n.) சந்திவணக்கம் பார்க்க; see *sandi-vaṇakkam.*

[சந்தி → சந்தியா + வந்தனம்]

Skt. vandana → த. வந்தனம்

சந்தியாவிளக்கு *šandiyā-viḷakku,* பெ. (n.) சந்தி விளக்கு பார்க்க; see *sandi-viḷakku.*

[சந்திவிளக்கு → சந்தியா விளக்கு]

சந்தியிசை *šandi-y-išai,* பெ. (n.) செய்யுட் குற்றங்களுளொன்று *(யாப்.வி.);* a defect in versification.

[சந்தி + இசை]

சந்தியில்நில்-தல் (சந்தியில் நிற்றல்) *šandiyil-nil-,* 14 செ.கு.வி. (v.i.) கிளைகளின்றித் (பற்றுக் கோடின்றித்) தெருச்சந்தியில் நிற்றல்; lit. to stand at the cross roads, to be in a forlorn condition.

[சந்தி + இல் + நில்-]

சந்தியில்போடு-தல் *šandiyil-pōḍu-,* 19 செகுன்றாவி. (v.t.) சந்தியிலிழு-த்தல் பார்க்க. see *šandiyil-iḻu-.*

[சந்தி + இல் + போடு-,]

சந்தியில்விடு-தல் *šandiyil-viḍu-,* 18 செ. குன்றாவி. (v.t.) ஒருவன் குடும்பத்தைப் போக்குப்புகலில்லாதவாறு செய்தல்; தெருச் சந்தியில் ஒருவனை விடுதல்; lit., to leave one at the cross roads, to desert, as one's family.

[சந்தி + இல் + விடு-,]

சந்தியில்வை-த்தல் *šandiyil-vai-,* 4 செ. குன்றாவி. (v.t.) சந்தியில்விடு-தல் பார்க்க; see *šandiyil-viḍu-.*

[சந்தி + இல் + வை-,]

சந்தியிலிழு-த்தல் *šandiyil-iḻu-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஒருவனது குற்றங்குறைகளை வெளிப்படுத்திப் பலர் பழிதூற்றுமாறு செய்தல்; lit., to drag one to the cross roads, to expose publically to ridicule and shame.

[சந்தி + இல் + இழு-,]

வீட்டிற்கு வெளியே நடப்பது பலருக்கும் தெரியுமாகையால் சந்தியிலிழுத்தல் என்பது குற்றங்குறைகளை வெளிப்படுத்துவதாக ஆளப்பட்டுள்ளது.

சந்தியிற்கொண்டுவா-தல் (சந்தியிற்கொண்டு வருதல்) *šandiyiṟ-koṇḍu-vā-,* 15 செ.குன்றாவி. (v.t.) சந்தியிலிழு-த்தல் பார்க்க; see *šandiyil-iḻu-.*

[சந்தி + இல் + கொண்டு + வா-,]

சந்தியெழுத்து *šandiyeḻuttu,* பெ. (n.). இரண்டு உயிரெழுத்துகள் கூடி அமைவனவாகிய ஐ, ஔ என்னும் கூட்டெழுத்துகள் *(பி.வி. 5, உரை);* diphthongs, viz 'ai' and 'au'.

[சந்தி + எழுத்து]

அகரமும், இகரமும் யகரமும் ஒத்திசைக்கும் பொழுது ஐ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும். அகரமும் உகரமும் வகரமும் ஒத்திசைக்கும்பொழுது ஔ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்.

தமிழ் உயிரெழுத்துகளுள் ஐ, ஔ இரண்டு மட்டுமே கூட்டெழுத்துகள் வடமொழியில் இவற்றுடன் ஏ, ஓ ஆகிய இரண்டும் சந்தியெழுத்துகள்.

சந்திரகம் *šandiragam,* பெ. (n.) *1.* மயிற்றோகைக் கண் *(யாழ்.அக.);* eye-like spot in a peacock's tail. *2.* மயிற்றோகை *(பிங்.);* peacock's tail. *3.* ஓலையின் உறைச்சுருள் *(விற்.);* ola envelope of an ola letter in the form of a ring. *4.* வெள்ளைமிளகு *(சங்.அக.);* white pepper. *5.* உகிர் (நகம்) *(யாழ்.அக.);* nail.

க. சந்திரிகெ; தெ. சந்திரிக

[சந்திரம் → சந்திரகம்]

சந்திரகற்கம் *šandira-kaṟkam,* பெ. (n.) பெருங் கம்பிப் பூடு; cumby resin tree - Gardenja cumbifera *(சா.அக.).*

சந்திரகாய் *šandira-kāy,* பெ. (n.) பேய்ப்புடல்; wild snake-gourd - Trichosanthus cucumerina *(சா.அக.).*

சந்திரகாயணி *šandira-kāyaṇi,* பெ. (n.) பேய்ப் பீர்க்கு; bitter luffa creeper - Luffa acutangulans *(சா.அக.).*

மறுவ. சந்திரகாயம்

சந்திரகாயம் *šandira-kāyam,* பெ. (n.) சந்திரகாயணி பார்க்க; see *šandira-kāyaṇi (சா.அக.).*

சந்திரகாவி *šandira-kāvi,* பெ. (n.) *1.* செங்காவி மண்; reddish ochre. *2.* சிவப்புச் சாய வகை; reddish colour made from the śendurukkam flower. *3.* புடைவை வகை; a kind of reddish cloth.

ம., க. சந்திரகாவி; தெ. சந்துரகாவி.

[செந்திறம் → செந்திரம் → சந்திரம் + காவி]

சந்திரகாவிச்சேலை *šandira-kāvi-c-cēlai,* பெ. (n.) ஒரு வகைப் புடைவை; a kind of reddish cloth. "சந்திர காவிச்சேலை வல்லவாட்டுக் குட்டதும்பி" *(தனிப்பா. i. 260: 1)*

[சந்திரகாவி + சேலை. சீரை → சீலை → சேலை]

சந்திரகாவியுறுமாலை *šandira-kāvi-y-uṟu-mālai,* பெ. (n.) சிவப்புச் சாயமேற்றிய கைக்குட்டை வகை *(வின்.);* kerchief dyed red.

[சந்திரகாவி + உறுமாலை]

சந்திரகாளிந்தி *šandira-kāḷindi,* பெ. (n.) சிவதை; Indian jalap - Jpomaea turpethum *(சா.அக.).*

சந்திரகிரி[1] *šandira-giri,* பெ. (n.) திண்டிவனம் வட்டத்திலுள்ள ஊர்; a village in Tiṇḍivaṉam taluk. "பெருமுக்கல் திருமலைமேல் உடைய நாயனாற்கு சந்திரகிரி துற்காதிபதியான ஏத்தப்ப நாயக்கர்" *(த.நா. தொ. ஆய்வு. தொடர் எண் 84/ 1992, கல் 1/6-2*

[சந்திரன் + கிரி]

Skt. giri → த. கிரி

சந்திரகிரி[2] *šandira-giri,* பெ. (n.) விசயநகர மன்னர் காலத்தில் திருமலைக் கோட்டத்தில் இருந்த ஊர்; an ancient village in Tirumalai-k-kōṭṭam. "சந்திரகிரியில் தேவரசர் மகனார் மல்லண்டையர்க்கு திருமலையில் தானத் தாரொம் சிலாசாசனம் பண்ணிக் குடுத்தப் படி" *(திருப்ப. கல். தொ. 1. கல் 197-2)*

[சந்திரன் + கிரி]

Skt. giri → த. கிரி

சந்திரகிரியான் *šandira-kiriyāṉ,* பெ. (n.) சந்தன நிறமுடைய மாடு; sandal colour cow.

சந்திரசேகரவாய்க்கால் *šandira-šēgara vāykkāl,* பெ. (n.) கோனேரிராசபுரம் கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலத்தின் எல்லையில் இருந்த வாய்க்கால்; a channel on one side of a land given to the temple at kōnērirajapuram. "சந்திரசேகர வாய்க்காலுக்கு வடக்கு" *(தெ.க.தொ. 26 674-10)*

[சந்திரசேகரன் + வாய்க்கால்]

சந்திரணி *šandiraṇi,* பெ. (n.) சுக்கு; dry ginger *(சா.அக.).*

சந்திரதிலகம் *šandira-tilagam,* பெ. (n.) *சந்தனம்;* sandal wood *(சா.அக.).*

[செந்திறம் → செந்திரம் → சந்திரம் + திலகம்]

Skt. tilaka → த. திலகம்

சந்திரநாகம் *šandira-nāgam,* பெ.. (n.) ஒரு மருந்துச் சரக்கு *(மூ.அ.);* a drug.

சந்திரநாடி *šandira-nāḍi,* பெ. (n.) பெண்குறி வாயினிற் படிந்திருக்கும் மெல்லிய தோல் *(இங்.வை.);* nymphae, labia.

சந்திரபரணி *šandira-paraṇi,* பெ. (n.) *கற்பூரவல்லி;* country lavendar - Anisochilus carnosus *(சா.அக.).*

சந்திரபலை *šandira-palai,* பெ. (n.) *ஏலம்;* cardamom-Ellecteria cardamomum *(சா.அக.).*

சந்திரபிரபர் *šandira-pirabar,* பெ. (n.) அமண (சமண)க்குரு இருபத்து நால்வருள் ஒருவர் *(திருக்கலம். காப்பு. உரை);* a Jaina Arhat, one of 24 tirttaṅgarar.

சந்திரபிரபை *šandira-pirabai,* பெ. (n.) *காட்டுச் சீரகம்;* wild cumin - Vernonia anthelmintica *(சா.அக.).*

[சந்திரன் + பிரபை]

Skt. prabha → த. பிரபை

சந்திரபுட்பம் *šandira-puṭpam,* பெ. (n.) *ஆணைச் சுண்டை;* hairy nightshade Solanum ferox. 2. *சீந்தில்;* moon creeper - Cocculus cordifolia *(சா.அக.).*

சந்திரபுருடம் *šandira-puruḍam,* பெ. (n.) *பிள்ளை மருது;* white murdah - Terminalia paniculana *(சா.அக.).*

சந்திரபூரம் *šandira-pūram,* பெ. (n.) பச்சைக் கருப்பூரம் *(மூ.அ.);* a superior kind of camphor.

சந்திரபூரயம் *šandira-pūrayam,* பெ. (n.) *கள்ளி முளையான்;* spurge sprout - Caralium adscerdens *(சா.அக.).*

சந்திரம் šandiram, பெ. (n.) 1. கருப்பூரம் *(மூ.அ.);* camphor, gum camphor. 2. பொன்; gold. "சுற்பம் பூரி சந்திரம் பொருவல்" *(ஞானா. 68: 15).* 3. இரவின் 15 கூறுகளுள் (முகூர்த்தங்களுள்) ஒன்பதாவது கூறு *(விதான. குணாகுண. 73, உரை);* the ninth of the 15 divisions of night. 4. மாழ்கு (மிருகசீரிடம்) *(விதான. குணாகுண. 73, உரை.);* the fifth nakṣatra. 5. நீர் *(யாழ்.அக.);* water.

சந்திரமல்லிவேர் *šandira-malli-vēr,* பெ. (n.) *கழிச்சல் (பேதிக்) கிழங்கு;* a purgative root; true jalap - Ipomaea purga *(சா.அக.).*

[சந்திரமல்லி + வேர்]

சந்திரமுத்து *šandira-muttu,* பெ. (n.) ஒருவகை *முத்து;* a kind of pearl *(சா.அக.).*

[சந்திரம் + முத்து. முள் → முட்டு → முத்து]

சந்திரமூலிகை *šandira-mūligai,* பெ. (n.) *கிச்சிலிக் கிழங்கு;* camphor root plant - Koemferia galanga *(சா.அக.).*

சந்திரலேகைச்சதுர்வேதிமங்கலம் *šandira-lēgai-c-cadur-vēdi-maṅgalam,* பெ. (n.), தஞ்சைக்கு வடமேற்கே உள்ள ஊர்; a village in Tañjāvūr district.

[சந்திரலேகை + சதுர்வேதி மங்கலம்]

இவ்வூர் இன்று செந்தலை என்று வழங்கப் படுகிறது. முத்தரையர்கள் என்னும் குறுநில மன்னர்களின் தலைநகராக இருந்தது. *(பிற்.சோ.வ. ப. 14).*

சந்திரவல்லாரி *šandira-vallāri,* பெ. (n.) *பாம்புக் கொல்லி;* commonrue Ruta graveolens *(சா.அக.).*

சந்திரவாலை *šandira-vālai,* பெ. (n.) பேரேலம் *(யாழ்.அக.);* greater cardamom.

சந்திரவிகம் *šandira-vigam,* பெ. (n.) *சிற்றேலம்;* small cardamom - Elletoria cardamomum (minor) *(சா.அக.).*

சந்திரன்தங்கச்சி *šandiraṉ-daṅgacci,* பெ. (n.) *செவ்வகத்தி;* red sesbane - Seabania grandiflora (coccinea) *(சா.அக.).*

சந்திரா *šandirā,* பெ. (n.) 1. *ஏலம்;* cardamom. 2. *காட்டுச்சீரகம்;* wild cumin seed-Vernonia anthelmintica. 3. *சீந்தில்;* moon-creeper-Cocculus cordifolia. 4. *நெய்ச்சிட்டி;* kinka oil plant - Serratula anthelmintica *(சா.அக.).*

சந்திராதம் *šandirādam,* பெ. (n.) *தாளகம்;* orpiment-yellow sulphuret of arsenic *(சா.அக.).*

சந்திராபரணம் *šandirābaraṇam,* பெ. (n.) ஒரு பழைய கணியநூல் *(சீவக. 621, உரை);* an ancient treatise on astrology.

Skt. ābharaṇa → த. ஆபரணம்

சந்திராபாலை *šandirā-pālai,* பெ. (n.) ஏலம் அல்லது சிற்றேலம்; cardamom or small cardamom *(சா.அக.).*

சந்திரிகை *šandirigai,* பெ. (n.) ஓலைச்சுருள்; roll of ōla. "காதிற் சொருகு சந்திரிகை" *(அழகர்கலம்.26).*

[சந்து + திரிகை. திரி → திரிகை = கிரித்தது, சுருள்]

சந்திரேகம் *šandirēgam,* பெ. (n.) கார்போகரிசி *(மலை.);* seed of scurfy pea.

சந்தில்[1] *šandil,* பெ. (n.) காரி (சனி) *(திவா.);* saturn.

சந்தில்[2] *šandil,* பெ. (n.) மூங்கில் *(மலை.);* bamboo.

[சந்து[1] + இல். சந்து இல்லாதது. கணுக்களால் ஆங்காங்கே அடைபட்டது.]

சந்திலகம் *šandilagam,* பெ. (n.) இந்துப்பு *(மூ.அ.);* rock-salt.

சந்திலாதகம் *šandilādagam,* பெ. (n.) மூங்கில்; bamboo - Bambusa arundinacea *(சா.அக.).*

[சந்தில் → சந்திலாதகம்]

சந்திவணக்கம் *šandi-vaṇakkam,* பெ. (n.) காலையிலும் உச்சிவேளையிலும், மாலையிலும் செய்யும் வழிபாடு; morning, noon and evening prayers.

[சந்தி + வணக்கம்]

சந்திவிக்கிரகப்பேறு *šandi-vikkiraga-p-pēṟu,* பெ. (n.) வரிவகை; a tax *(தெ. க. தொ.* ii. 115).

[சந்தி + விக்கிரகம் + பேறு]

சந்திவிளக்கு *šandi-viḷakku,* பெ. (n.) கோயிலில் மாலைக்காலத்து ஏற்றும் விளக்கு *(தெ. க. தொ.* i. 143); evening lamp in a temple.

[சந்தி + விளக்கு]

சந்திவீரப்பன் *šandi-vīrappaṉ,* பெ. (n.) ஒரு சிறுதெய்வம்; a malignant deity. "சந்தி வீரப்பன் முன்னே தாண்டினான்" *(விறலிவிடு. 895).*

[சந்தி + வீரப்பன்]

சந்திவேளை *šandi-vēḷai,* பெ. (n.) சாயுங்காலம்; evening time.

[சந்தி + வேளை]

சந்தீபம் *šandībam,* பெ. (n.) இளியின் ஐந்தாவது இசைப் பிரிவு *(பரத. இராக. 44);* a division of the fifth note of gamut.

[அய்ந்து → சய்ந்து → சந்தீபம்]

சந்து[1] *šandu,* பெ. (n.) 1. பொருத்து, மூட்டு *(பிங்.);* joint. சந்து சந்தாகப் பிய்த்துவிட்டான். 2. உடற் பொருத்து *(பிங்.);* joint of the body. "வளைந்த சந்துகளாற் பொலிந்த ...... தாள்" *(புறநா. 78, உரை).* 3. இருதொடைச் சந்தான இடுப்பு; hips.

ம. சந்து; பட., க., து., சந்து

[அந்து → சந்து. உம் → அம் → அந்து]

சந்து[2] *šandu,* பெ. (n.) 1. பலவழி கூடுமிடம்; crossing of many roads. "சந்து நீவி" *(மலைபடு. 393).* 2. முடுக்கு; narrow street, lane. 3. பிளவு; gap, cleft, crack.

மறுவ. அந்தி, கவலை, வரி, அரி, அந்தில், சந்தி, சதுக்கம்

ம. சந்து; தெ., க., து. சந்து

[அந்து → சந்து]

அமர், அமை, அமையம் என்னும் சொற்கள் போன்றே அந்து என்னும் சொல்லும் சகரம் பெற்றுச் சந்து என்றாயிற்று.

சிறுசந்து - முடுக்கு; தெருவின் கிளை - சந்து; சிறுவீதி - தெரு; போக்குவரத்து மிகுந்த பெருந்தெரு அல்லது வீதி - மறுகு; கடைத் தெரு - ஆவணம்; அகன்ற மறுகு - அகலுள்; பெருவழி (road) - சாலை.

சந்து[3] *šandu,* பெ. (n.) 1. தூது; message, errand. "சந்து பொருந்தா தெய்துமோ" *(பிரபுலிங். பிரபுதே. 49).* 2. தூதன்; messenger. "அவளைக் கொணர்வான் சந்தாகிலை" *(கந்தபு. காசிபன்பு. 6).* 3. மாறுபட்ட இருவரை ஒன்று சேர்க்கை, அமைதி, உடன்பாடு; reconciliation, peace. "உயிரனையாய் சந்துபட வுரைத்தரு ளென்றான்" *(பாரத. கிருட்டிணன்றூ. 6).* 4. தக்க தறுவாய்; opportunity.

ம., க., து. சந்து

[அந்து → சந்து]

சந்து[4] *šandu,* பெ. (n.) *சந்தன மரம்;* sandal wood tree. *"கமலங்கலந்த வேரியுஞ் சந்தும்" (திருக்கோ. 301).*

[சாந்து → சந்து (வ.வ. 148)]

சந்து[5] *šandu,* பெ. (n.) இசை; rhythm, melody *"சந்துலாந் தமிழ்" (தேவா. 797, 11).*

[அந்து → சந்து]

சந்துக்கட்டு *šandu-k-kattu,* பெ (n.) 1. செயல் நிகழுங் காலம்; period, duration. *"கிரகணச் சந்துக்கட்டு"* (C.G.) 2. நெருக்கடியான நேரம்; crisis, critical juncture.

ம., க., தெ., து. சந்து கட்டு.

[சந்து + கட்டு]

சந்துக்காறை *šandu-k-kārai,* பெ. (n.) ஒருவகைக் கைவளை *(சிலப். 6: 92, அரும்.);* a kind of bracelet.

[சந்து + காறை]

சந்துகி *šandugi,* பெ (n.) *துளசி;* holy basil - Ocimum sanctum *(சா.அக.).*

சந்துகித்தான் *šandugittān,* பெ. (n.) தூதுவளை; three-lobed nightshade - Solanum trilobatum *(சா.அக.).*

சந்துசெய்-தல் *šandu-šey-,* 1 செ.குன்றாவி. (v.t.) 1. பொருத்துதல்; to join one with another. 2. பிணங்கிய இருவரைச் சேர்த்து வைத்தல்; to mediate.

[சந்து + செய்-,]

அதியமானின் தூதுவராகத் தொண்டை மானிடம் ஔவையார் சென்றதும் (புறநா. 95). உறையூரை முற்றுகை யிட்டிருந்த சோழன் நலங்கிள்ளியையும் அடைபட்டிருந்த நெடுங் கிள்ளியையும் கோவூர்கிழார் சந்து செய்ததும் (புறநா. 45) சந்துசெய்தலுக்கு நிற்கும் பண்டை இலக்கியச் சான்றுகளாகும். சந்துசெய்தலில், தலைவன் தலைவியர் பிணக்குத் தீர்த்தலும் அடங்கும்.

சந்துசொல்(லு)-தல் *šandu-sol(lu)-,* 13 செ.கு.வி. (v.i.) பிணங்கியவரை இணைக்கத் தூதாகிச் செய்தி சொல்லுதல்; to mediate; to act as a messenger. "நடுநின்றா ரிருவருக்குஞ் சந்து சொல்ல" *(சிலப். 8: 101, உரை)*

[சந்து + சொல்-,]

சந்துடி *šandudi,* பெ. (n.) ஏலம் *(சங்.அக.);* cardamom.

சந்துநயத்தான் *šandu-nayattān,* பெ. (n.) தூதுவளை *(மலை.);* three-lobed nightshade.

சந்துபதி-தல் *šandu-padi-,* 2 செ.குன்றாவி. (v.t.) சந்துபிசை-தல் பார்க்க; see *šandu-pisai-.*

[சந்து + பதி-,]

சந்துபரணி *šandu-parani,* பெ. (n.) நேர்வாளம்; croton seed- croton tigilium *(சா.அக.).*

சந்துபலம் *šandu-palam,* பெ. (n.) வன்னிமரம்; Arjuna's penance tree - Prospis spicigera *(சா.அக.).*

சந்துபார்-த்தல் *šandu-pār-,* 4 செ.கு.வி. (v.i.) தக்க நேரம் பார்த்தல்; to watch for an opportunity, choose a fitting time.

[சந்து + பார்-,]

சந்துபிகி-தல் *šandu-pigi,* 4 செ.குன்றாவி. (v.t.) சந்துபிசை-தல் பார்க்க; see *šandu-pišai-.*

[சந்து + பிகி-,]

சந்துபிசை-தல் *šandu-pišai-,* 2 செ. குன்றாவி. (v.t.) தளவரிசை முதலியவற்றில் கல்லுக்குக் கல் இடைவெளிபடாமல் சுண்ணாம்பு முதலியன பூசுதல்; to point, as the floor.

[சந்து + பிசை-,]

சந்துபூசு-தல் *šandu-pūšu-,* 6 செ. குன்றாவி. (v.t.) சந்துபிசை-தல் பார்க்க; see *šandu-pišai-.*

[சந்து + பூசு-,]

சந்துபொதி-தல் *šandu-podi-,* 2 செ.குன்றாவி. (v.t.) சந்துபிசை-தல் பார்க்க; see *šandu-pišai-*

[சந்து + பொதி-,]

சந்துபொந்து *šandu-pondu,* பெ. (n.) 1. மூலை முடுக்கு; nook and corner. 2. பொந்துபுடைகள்; interstices.

[சந்து + பொந்து]

சந்துபோ-தல் *šandu-pō-,* 8 செ.கு.வி. (v.i.), பிணங்கியவரை இணைக்கத் தூதுபோதல்; to proceed on an embassy or errand.

[சந்து + போ-,]

சந்துபோனவன் *šandu-pōṉavaṉ,* பெ. (n.) உறுப்புக் கட்டில்லாதவன், முடவன்; maimed person, as without joints.

[சந்து + போனவன்]

சந்துமந்து *šandumandu,* பெ. (n.) 1. முடுக்கு; alley, narrow street. 2. குழப்பம்; confusion, disturbance. 3. தடுமாற்றம்; inconvenience from want of adaptation or fitting, as of joints; difficulty from multiplicity of engagements.

[சந்துபொந்து → சந்துமந்து]

சந்துமுட்டு *šandu-muṭṭu,* பெ. (n.) காலந்தவறி வரும் மாதவிலக்கு; menses at irregular intervals.

தெ., து. சந்துமுட்டு

[சந்து + முட்டு]

சந்துமுந்து *šandu-mundu,* பெ. (n.) சந்துமந்து (யாழ்ப்.) பார்க்க; see *šandu-mandu.*

[சந்துமந்து → சந்துமுந்து]

சந்துமூட்டி *šandu-mūṭṭi,* பெ. (n.) பிரண்டை; bone-setter-vitis quadrangularis (சா.அக.).

[சந்து + மூட்டி]

சந்துயிர் *šanduyir,* பெ. (n.) எலும்பு (யாழ்.அக.); bone.

[சந்து + உயிர்]

சந்துவரிதகி *šandu-varidagi,* பெ. (n.) கடுக்காய்; gall-nut, ink-nut - Terminalia chebula (சா.அக.).

சந்துவலை *šandu-valai,* பெ. (n.) வலையில் படுகிற மீனை வெளியிற் செல்லவிடாமல் தடுக்குமொரு வலைக்கூறு (மீனவ.); a part of fishing net which prevents the fishes escaping from main net.

[சந்து + வலை]

சந்துவாசல் *šandu-vāšal,* பெ. (n.) திட்டி வாசல்; postern-gate, back-door.

தெ. சந்துவாகிலி

[சந்து + வாசல்]

சந்துவாதம் *šandu-vādam,* பெ. (n.) இடுப்பு, தொடைகளில் வரும் ஊதை(வாத)நோய் (வின்.); sciatica.

க., து. சந்துவாத

[சந்து + வாதம்]

Skt. vāta → த. வாதம்

சந்துவாய்[1] *šandu-vāy,* பெ. (n.) 1. மூட்டுவாய்; joint. 2. இடைப்பிளவு (வின்); cleft, opening.

[சந்து + வாய்]

சந்துவாய்[2] *šandu-vāy,* பெ. (n.) வேட்டி, சேலை ஆகியவற்றில் ஒவ்வொன்றையும் தனித்தனியே அறுத்து எடுப்பதற்கு விடப்படும் இடைவெளி (செங்கை.); a technical word in loom.

[சந்து + வாய்]

சந்துவாயு *šandu-vāyu,* பெ. (n.) சந்துவாதம் பார்க்க; see *šandu-vādam.*

து. சந்துவாயு

[சந்து + வாயு]

சந்துவிக்கிரகப்பேறு *šandu-vikkiraga-p-peṟu,* பெ. (n.) அரசு பெறும் வரிகளுள் ஒன்று; a kind of tax. "வெட்டிப்பாட்டம் பஞ்சுபீலி சந்து விக்கிறகப் பெறு இலாஞ் சினைப்பெறு" (தெ.க தொ. 4: 348/1986).

[சந்து + விக்கிரகப்பேறு]

சந்துவிடு-தல் *šandu-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) நெக்குவிடுதல்; to crack or get disjointed.

க. சந்துவிடு

[சந்து + விடு-,]

சந்துவிப்புருதி *šandu-vippurudi,* பெ.. (n.) இடுப்பிலுண்டாகும் புற்றுநோய்க் கட்டி வகை (வின்.); cancer at the hip-joint.

[சந்து + விப்புருதி]

சந்தை *šandai,* பெ. (n.) 1. குறித்த காலங்களில் பொருள்களை விற்கவும் வாங்கவும் பலரும் கூடுமிடம்; shandy, fair, a market functioning on specified occasion. "தந்தைதாய் தாரம் மகவெனு மிவையெலாம் சந்தையிற் கூட்டம்" (தாயு. தேசோ. 3). 'சந்தை இரைச்சலிலே குடியிருந்து கெட்டேன்" 'சந்தைக் கூட்டம் கொம்மல் ஆட்டம்' (பழ.). 2. கூட்டம்; multitude, herd, flock, swarm. "தண்ணுறு நந்தனம் வண்டின் சந்தையே" (பிரபுலிங் கொக்கி. 6). 3. இருபுருவமுங் கூடுமிடம்; the mid-point between the eye-brows. "சந்தையில் வைத்துச் சமாதிசெய்" (திருமந். 1201). 4. கடைத் தெரு (யாழ்.அக.); bazar.

ம. சந்த; க. சந்தெ; து. சந்தெ, சத்தெ; பட. சத்தே; Skt. san-dhā.

[அந்து → அந்தி. அந்தித்தல் = நெருங்குதல், கூடுதல், ஒன்றுசேர்தல். அந்து → சந்து → சந்தை = பல கடைகள் கூடுமிடம். ஒ.நோ : மந்து → மந்தை]

இச் சொல் வடமொழியில் இல்லை. *சந்தைக்காரன், சந்தைக்கூட்டம், சந்தைமடம்,* சந்தைவெளி என்னும் வழக்குச் சொற்களும் 'இந்த மடம் போனாற் சந்தைமடம்', 'சரக்கு மலிந்தாற் சந்தைக்கு வரும்' என்னும் பழமொழிகளும் இச்சொல்லின் பெரு வழக்கைக் காட்டுகின்றன.

சந்தைக்கடை *šandai-k-kaḍai,* பெ. (n.) *1.* சந்தையில் இருக்கும் கடை; shop at market place. *2.* இரைச்சல்; tumult. *மாணவர்கள் சந்தைக்கடை போல் கூச்சல் போடுவது நன்றன்று (உ.வ.).*

[சந்தை + கடை]

சந்தைக்காரன் *šandai-k-kāraṉ,* பெ. (n.) *சந்தையில் பொருள் விற்போன்;* marketeer.

ம. சந்தக்காரன்.

[சந்தை + காரன்]

சந்தைக்குப்பம் *šandai-k-kuppam,* பெ. (n.) *செங்கல்பட்டு அருகில் உள்ள ஊர்;* a village near Šeṅgalpaṭṭu. *'சந்தைக்குப்பம் உள்ளவரைக் கட்டளை இடுகையில்" (தெ. க. தொ. 6:273-2)*

[சந்தை + குப்பம்]

சந்தைக்கூட்டம் *šadai-k-kūṭṭam,* பெ. (n.) பெருங் *கூட்டம்;* promiscuous crowd, as in a shandy.

ம. சந்தக்கூட்டம்; க. சந்தெகூட்ட

[சந்தை + கூட்டம்]

சந்தைகூட்டு-தல் *šandai-kūṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.i.) *பெருங்கூட்டம் கூடிப் பேராரவாரஞ் செய்தல்;* lit. to attract a large gathering, to create a hubbub. சந்தை கூட்டி மானத்தை வாங்காதே.

[சந்தை + கூட்டு-,]

சந்தைகூடு-தல் *šandai-kūḍu-,* 5 செ.குவி. (v.i.); *பொருள்களை விற்க ஓரிடத்தில் கூடுதல்;* to assemble in a particular place to sell goods. *அறிவன் (புதன்)தோறும் மாட்டுச் சந்தை கூடுகிறது (உ.வ.).*

ம. சந்தகெட்டுக; க. சந்தெகட்டு, சந்தெகூடு

[சந்தை + கூடு.]

சந்தைச்சரக்கு *šandai-c-carakku,* பெ. (n.) *சந்தையில் உள்ள விற்பனைப்பொருள்;* marketable goods.

ம. சந்தக்கூட்டம்; க. சந்தெகூட்ட

[சந்தை + சரக்கு. சர் → சரகு → சரக்கு = காய்ந்த பண்டம், வணிகப் பண்டம்]

சந்தைமுதல் *šandai-mudal,* பெ. (n.) *சந்தை வணிகரிடம் பெறும் வரி* (I.M.P. Cg. 689); market-fees collected from traders at shandy.

[சந்தை + முதல்]

சந்தையிரைச்சல் *šandai-y-iraiccal,* பெ. (n.) *சந்தையில் கூட்டத்தால் ஏற்படும் பேரொலி;* confused din, tumult, uproar, as in a fair. *சந்தையிரைச்சலிலே குடியிருந்து கெட்டேனே (பழ.).*

ம. சந்தயிரப்பு

[சந்தை + இரைச்சல்]

சந்தையேற்று-தல் *šandai-y-ēṟṟu-,* 5 செ.குவி. (v.i.) *கடைகள் அமைத்துச் சந்தை கூடச் செய்தல் (வின்.);* to set up a fair.

க. சந்தெகட்டு

[சந்தை + ஏற்று-,]

சந்தைவிலை *šandai-vilai,* பெ. (n.) *சந்தையில் பொருள் விற்கும் விலை;* market-price.

ம. சந்தவில

[சந்தை + விலை]

சந்தைவெளி *šandai-veḷi,* பெ. (n.) *சந்தை கூடும் வெளியிடம்;* open place where fairs are held.

[சந்தை + வெளி.]

சந்தோரு *šandōru,* பெ. (n.) நீர்முள்ளி; water-thistle - Hygrophila spinosa *(சா.அக.).*

சந்நசாலம் *šannasālam,* பெ. (n.) வெண்கடுகு; white mustard *(சா.அக.).*

சந்நிநாயகம் *šanni-nāyagam* பெ. (n.) *1. கருஞ்சீரகம்;* black cumin seed. *2. தும்பைப் பூடு;* leucas flower plant - Leucas aspera. *3. கரிய போளம்;* black myrrh *(சா.அக.).*

சந்நியாசிவெள்ளாடு *šanniyāši-veḷḷāḍu,* பெ. (n.) *எல்லா நிறமும் கலந்திருக்கும் வெள்ளாடு (செங்கை);* a multy colour of goat.

[சந்நியாசி + வெள்ளாடு]

சப்சப்பெனல் *šapšap-p-enal,* பெ. (n.) *1. சுவையின்மைக் குறிப்பு;* onom. expr. signifiying insipidity. *2. அதட்டல்குறிப்பு (வின்.);* rebuke, reproof. *3.* ஒலியைக் குறைத்தற் குறிப்பு *(வின்.);* silence, hush.

[சப்சப் + எனல்]

சப்பங்கி *šappaṅgi,* பெ. (n.) மந்தன் *(யாழ்ப்.);* slow, dull person.

[சப்பு → சப்பங்கி (மு. தா. 120)]

சப்பட்டை *šappaṭṭai,* பெ. (n.) *1.* தட்டை; flatness. *2. தட்டையானது;* anything flat. *3. உள்ளீடின்மை;* emptiness, hollowness. *4. பதர் (வின்.);* chaff, empty grains. *5. மடையன்;* empty, shallow person. *6. கெட்டவன்-வள்-;* bad person or thing. *7.* சிறகு; wing. *8. சப்பை[1], 6 பார்க்க;* see *šappai, 6.*

ம. சப்பட்ட; க. சப்பட்டெ, சப்படெ, சப்படி, சப்படெ; தெ. சப்ப; து. சப்படெ; கோத. சப், சபீன்ய; குட. சப்பெ; பர். சப்ரெ; பட. சப்பட்டெ; Mar. capaṭā, cāpaṭ, sāpaṭ; Skt. carpaṭa.

[சப்பு → சப்பட்டை (மு.தா.)]

சப்பட்டை தட்டையாய் இருப்பதால், உள்ளே எதுவும் இருப்பதற்கு இடமில்லை. ஆகையால் உள்ளீடின்மையும் அறிவாகிய உள்ளீடு இல்லாமல் இருப்பதால், மடையனையும், அறிவிலி கெட்டவனாக இருப்பதால் கெட்டவனையும் குறித்தது.

சப்பட்டைக்கள்ளி *šappaṭṭai-k-kaḷḷi,* பெ. (n.). *முக்கோணக் கள்ளி;* the triangular spurge *(சா.அக.).*

க. சப்படெகள்ளி

[சப்பு → சப்பட்டை + கள்ளி]

சப்பட்டைமட்டம் *šappaṭṭai-maṭṭam,* பெ. (n.) சுவரின் அடிப்படை மட்ட அளவு (கோவை.); foundation level *(கட்டட.).*

[சப்பட்டை + மட்டம்]

சப்பட்டைமூக்கு *šappaṭṭai-mūkku,* பெ. (n.). *சப்பைமூக்கு பார்க்க;* see *šappai-mūkku.*

க. சப்பட்டெ மூகு

[சப்பட்டை + மூக்கு]

சப்பட்டையரம் *šappaṭṭai-y-aram,* பெ. (n.) தட்டையான ஒருவகை அரம் (C.E.M.); flat file.

[சப்பட்டை + அரம்]

சப்பட்டையாகு-தல் *šappaṭṭai-y-āgu-,* 7 செ.கு.வி. (v.i.) *சப்பையாதல், தட்டையாதல்;* to flatten *(சா.அக.).*

க. சப்பட்டெ யாகு

[சப்பட்டை + ஆகு-,]

சப்பட்டைவாக்கு[1] *šappaṭṭai-vākku,* பெ. (n.) தட்டையான பக்கம் (வின்.); flat side, as of a plank.

[சப்பட்டை + வாக்கு]

சப்பட்டைவாக்கு[2] *šappaṭṭai-vākku,* பெ. (n.). அவையில் சொல்லத்தகாத சொல் *(நாஞ்.);* indecent talk.

[சப்பட்டை + வாக்கு. சப்பை → சப்பட்டை = தட்டையானது, உள்ளீடற்றது, அவையல் கிளவி]

சப்பட்டைவாகு *šappaṭṭai-vāgu,* பெ. (n.) *சப்பட்டைவாக்கு[1] பார்க்க;* see *šappaṭṭai-vākku.*

[சப்பட்டை வாக்கு → சப்பட்டைவாகு]

சப்படி *šappaḍi,* பெ. (n.) *1. தட்டையானது;* anything flat. "திருவொன்றிற் கட்டின வயிரஞ் சப்படியும் உருளையும்" *(தெ.க.தொ.2, 170: 35).* *2. வயிரக்குற்றங்களுள் ஒன்று (சிலப். 14: 180, உரை);* a flaw in diamonds.

க. சப்படி

[சப்பு → சப்படி. (மு. தா. 120)]

சப்பணங்கட்டு-தல் *šappaṇaṅ-gaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) *சப்பணங்கூட்டு-தல் பார்க்க;* see *šappaṇaṅ-gūṭṭu-.*

[சப்பணம் + கட்டு-,]

சப்பணங்கால் *šappaṇaṅ-gāl,* பெ. (n.) *சப்பணம் பார்க்க;* see *šappaṇam.*

[சப்பணம் + கால்]

சப்பணங்கூட்டு-தல் *šappaṇaṅ-gūṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) *அட்டணைக்காலிடுதல்;* to sit cross-legged.

[சப்பணம் + கூட்டு-,]

சப்பணங்கோலு-தல் *šappaṇaṅ-kōlu-*, 5 செ.கு.வி. (v.i.). சப்பணங்கூட்டு-தல் பார்க்க; see *šappaṇaṅ-gūṭṭu-*.

[சப்பணம் + கோலு-,]

சப்பணம் *šappaṇam*, பெ. (n.) அட்டணைக் காலிடுகை (வின்.); act of sitting flat and cross-legged.

ம. சப்பணம்

[சப்பு → சப்பணம்]

சப்பணியம் *šappaṇiyam*, பெ. (n.) இனிப்புச் சுவையுடைய தின்பண்டம் (மீனவ.); a kind of sweet meat.

[சப்பண்ணியம் → சப்பணியம். சப்பையாகச் செய்த இனிப்புச் சுவைப் பணியாரம்]

சப்பத்தி *šappatti*, பெ. (n.) ஒரு புறம் அகன்றும் மறுபுறம் குவிந்தும் சிறிது தட்டையாகவும் அமைந்த முத்துவகை; flat pearl. "கோத்தமுத்து சப்பத்தி ஒன்றும்" (தெ. க. தொ. 2, 396: 70).

[சப்பு → சப்பத்தி (மு.தா.120)]

சப்பரக்கத்தரி *šappara-k-kattari*, பெ. (n.) பந்தற் கத்தரிக்காய்; chupper brinjal - Lycopersicum esculentum (சா.அக.).

[சப்பரம் + கத்திரி]

சப்பரச்சாதியார் *šappara-c-cādiyār*, பெ. (n.) தேவாங்க இனத்தாருள் உறவினரல்லாதரோடு மணவுறவு கொள்ளும் ஒரு பிரிவுனர் (E.T.II.16); an exogamous sub-sect of Dēvāṅga caste.

[சப்பரம் + சாதியார்]

சப்பரத்தவரை *šapparattavarai*, பெ. (n.) ஒரு வகை அவரை; shed-bean, chupper bean - Cyomopsis posrolioides (சா.அக.).

[சப்பரம் + அத்து + அவரை. 'அத்து' சாரியை]

சப்பரம் šapparam, பெ. (n.) 1. மொட்டையான எடுப்புத்தேர்; conopied car-like vehicle in which idols are carried during festivals. 'சப்பரத்து முன்னே வந்தியா? பின்னே வந்தியா?' (பழ.). 2. கடவுள் திருமேனியைக் கொண்டு செல்லுதற் குரியதும் முகப்பில் கோபுரம் போன்று அழகு செய்யப்பட்டதுமான சிறு வகைத் தேர் (வின்.); a small car on wheels in which idols are carried. 3. சப்பரமஞ்சம் பார்க்க; see *šappara-mañjam*.

க., பட. சப்பரம்; து. சப்பர, சப்பர்,

[சப்பு → சப்பரம் (மு.தா. 120)]

உருளையின்றி ஒற்றைத் தட்டுள்ள சப்பை (மொட்டை)த் தேர்.

சப்பரமஞ்சம் *šappara-mañjam*, பெ. (n.) சப்பிரமஞ்சம் பார்க்க; see *šappira-mañjam* "சப்பிரமஞ்சத் தரனு முமையுந் துஞ்சி" (சிவரக.பசாசு. 16).

ம. சப்ரமஞ்சம்; க. சப்பரமஞ்ச; து. சப்பரமஞ்ச

[சப்பரம் + மஞ்சம்]

சப்பரை *šapparai*, பெ. (n.) மூடன் (ஈடு, 4. 8:8,ஜீ.); block-head, dolt.

ம. சப்பர

[சப்பு → சப்பரை (மு.தா. 120)]

சப்பரை → Skt. sambara

சப்பல்[1] *šappal*, பெ. (n.) உணவின் எச்சில் (யாழ்ப்.); refuse of food, leavings.

[சப்பு → சப்பல்]

சப்பல்[2] *šappal*, பெ. (n.) தட்டை, தட்டையானது; anything flat.

[சப்பு → சப்பல் (மு. தா. 120)]

சப்பளக்கட்டை *šappaḷa-k-kaṭṭai*, பெ. (n.) இசையுடன் கதைகூறுவோர் நான்கு விரல்களில் ஒன்றும் கட்டைவிரலில் ஒன்றுமாகக் கோத்துக் கொள்ளும், சிறு மணிகள் இணைக்கப்பட்ட தாளக்கட்டை; being held in between the fingers, pair of wooden pieces with tiny bells for marking time by the performers of religious songs.

[சப்பளம் + கட்டை (மு.தா.120)]


சப்பளக்கட்டை

சப்பளஞ்சி *šappaḷañji,* பெ. (n.) காஞ்சிபுரத்தை அடுத்துள்ள சப்பளம் என்னும் ஊரில் நெய்யும் ஆடை; cloth from Sappalam near Kanjipuram.

[சப்பளம் → சப்பளஞ்சி]

சப்பளம் *šappaḷam,* பெ. (n.) சப்பணம் பார்க்க; see *šappaṇam.*

[சப்பணம் → சப்பளம்]

சப்பளாக்கட்டை *šappaḷā-k-kaṭṭai,* பெ. (n.) சப்பளக்கட்டை பார்க்க; see *šappaḷa-k-kaṭṭai.*

ம. சப்பளாக்கட்டை, க. சப்படெ, சப்பளெ, சப்பாளெ; தெ. சப்பட்டல்; மால. சீப்ளீ

[சப்பளக்கட்டை → சப்பளாக்கட்டை]

சப்பளாம் *šappaḷām,* பெ. (n.) சப்பணம் பார்க்க; see *šappaṇam.*

[சப்பணம் → சப்பளம் → சப்பளாம்]

சப்பளி[1]-தல் *šappaḷi-,* 4 செ.கு.வி. (v.i.) சப்பையாதல், தட்டையாதல்; to flatten, to be crushed, pressed out of form; to be jammed. 'சப்பளிந்த முகம்' (உ.வ.).

க. சப்பழி, சாபளி (தட்டையானது)

[சப்பு → சப்பளி (மு.தா. 120)]

சப்பளி[2]-த்தல் *šappaḷi-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* அடியிற் சப்பையாக உட்கார்தல்; to sit flat and cross-legged. *2.* தட்டையாக்குதல்; to flatten, to make oblate.

[சப்பு → சப்பளி. (மு.தா. 120)]

சப்பளி[3] *šappaḷi,* பெ. (n.) கைகொட்டுகை; clapping the hands.

க. சப்பளி; து. சப்பளி, சப்பாள்; பட. சப்பட்டெ

[சப்பு → சப்பளி]

சப்பளித்திரு-த்தல் *šappaḷittiru-,* 3 செ.கு.வி. (v.i.) கால்மடக்கி உட்காருதல் (இ.வ.); to sit flat and cross-legged.

[சப்பளி[2] → சப்பளித்து + இரு-,]

சப்பன் *šappaṉ,* பெ. (n.) பயனற்றவன்; worthless person, good-for-nothing man.

ம. சப்பன்.

[சப்பு → சப்பன் (மு.தா.120); சப்பு = தட்டையானது, வலுவற்றது, பயனற்றது.]

சப்பாங்கு *šappāṅgu,* பெ. (n.) முள் நிறைந்த மரம்; sappan wood a thorny tree - Caesalpinia sappan (சா.அக.).

[சரம் → சரப்பாங்கு → சப்பாங்கு.]

சப்பாணி[1] *šappāṇi,* பெ. (n.) நிலத்திற் சப்பையாயிருக்கும் முடவன்; cripple, lame person.

ம. சப்பாணி, சப்பணி

[சப்பு → (சப்பளி) → சப்பாணி (மு.தா. 120)]

சப்பாணி[2] *šappāṇi,* பெ. (n.) நிலத்திற் சப்பையாய் அமர்ந்திருக்கும் முடவனைப் போல் குழந்தை அமர்ந்திருந்து கைதட்டும் நிலை; child by sitting flat and cross-legged like a lame person and clapping hands. "மதுரையில் வளர்ந்த கொடி சப்பாணி கொட்டியருளே" (மீனாட். பிள்ளைத். சப்பாணி-1), "செங்கீரைதால் சப்பாணி" (இலக். வி. 806). 'சப்பாணிக்கு நொண்டி சண்டப் பிரண்டன்' (பழ.), 'சப்பாணி மாப்பிள்ளைக்குச் சந்தொடிந்த பெண்சாதி' (பழ.).

ம. சப்பாணி. தெ. சப்பட்லு, க. சப்படி; பட. சப்படெ; கோத. சபட்; Skt. šapēṭa

[சப்பு → சப்பாணி (மு.தா. 120)]

சப்பாணிகொட்டு-தல் *šappāṇi-koṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) கை சேர்த்துக் கொட்டுதல்; to clap hands, as infants in play. "மதுரையில் வளர்ந்த கொடி சப்பாணி கொட்டி யருளே" (மீனாட். பிள்ளைத். சப்பாணி-1).

க. சப்பளெயிக்கு, சப்பளிக்கு, சப்பாளெயாக்கு, தப்பணெகுட்டு, தப்பளெகுட்டு, தப்பளிக்கு; து. சப்பளிபு, சப்பானெ தட்டு; பட. சப்படெ குட்டு

[சப்பாணி[2] + கொட்டு-,]

சப்பாணிதட்டு-தல் *šappāṇi-taṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) சப்பாணிகொட்டு-தல் பார்க்க; see *šappāṇi-koṭṭu-.*

[சப்பாணி + தட்டு-,]

சப்பாணிப்பருவம் *šappāṇi-p-paruvam,* பெ. (n.) பிள்ளைத்தமிழில் இலக்கியத்துக்கு உரிமை பூண்ட குழந்தையைக் கைகொட்டி விளையாடுமாறு வேண்டும் பருவம்; section of piḷḷai-t-tamiḻ, which describes the stage when a child begins to clap hands.

[சப்பாணி[2] + பருவம்]

சப்பாணிமாடன் *šappāṇi-māḍaṉ*, பெ. (n.) நொண்டிப்பேய் வகை (யாழ்ப்.); a demon.

[சப்பாணி + மாடன்]

சப்பாத்தி[1] *šappātti*, பெ. (n.) சப்பாத்துக்கள்ளி பார்க்க; see *šappāttu-k-kaḷḷi.*

தெ. சபாது

[சப்பாத்து → சப்பாத்தி. (மு.தா.120); வடவர் தட்டையான அப்ப (ரொட்டி) வகையைச் சப்பாத்தி என்பது கவனிக்கத் தக்கது]

சப்பாத்தி[2] *šappātti*, பெ. (n.) சப்பாத்திச்சங்கு பார்க்க; see *šappātti-c-caṅgu.*

[சப்பு → சப்பாத்தி]

சப்பாத்திக்கள் *šappātti-k-kaḷ*, பெ. (n.) கள்ளியிலிருந்து வடித்தெடுக்கும் கழிச்சல் மருந்துவகை; purgative prepared from prickly-pear.

[சப்பாத்தி + கள்]

சப்பாத்திக்கள்ளி *šappātti-k-kaḷḷi*, பெ. (n.) சப்பாத்துக்கள்ளி பார்க்க; see *šappāttu-k-kaḷḷi.*

ம. சப்பாத்திக்கள்ளி; க. சப்பாத்திகள்ளி; தெ. சப்பாது; Port. sabot.

[சப்பாத்தி + கள்ளி]



சப்பாத்திக்கள்ளி

சப்பாத்திச்சங்கு *šappātti-c-caṅgu*, பெ. (n.) அகன்று பெரியதாக இருக்கும் ஒருவகைக் கடற்சங்கு (நெல்லை.); a kind of sea conch.

[சப்பாத்தி + சங்கு]

சப்பாத்திப்பூ *šappātti-p-pū*, பெ. (n.) செம்பரத்தம் பூ; changeable rose - Hibiscus mutabilis (சா.அக.).

[சப்பாத்தி + பூ. செம்பரத்தம் → சம்பரத்தம் → சப்பரத்தம் → சப்பாத்தி]

சப்பாத்து[1] *šappāttu*, பெ. (n.) தட்டையான செருப்பு; flat shoe.

ம. சப்பாத்து; Port. Šapato.

[சப்பு → சப்பாத்து. (மு.தா.120); அகன்ற அடியுள்ளது]

சப்பாத்து[2] *šappāttu*, பெ. (n.) செம்பரத்தைச் செடி; china rose - Hibiscus rosasinensis.

ம. சப்பாத்து

[செம்பரத்தம் → சம்பரத்தம் → சப்பரத்தம் → சப்பாத்து]

சப்பாத்து[3] *šappāttu*, பெ. (n.) சப்பாத்துக்கள்ளி பார்க்க; see *šappāttu-k-kaḷḷi.*

ம. சப்பாத்து

[சப்பு → சப்பாத்து]

சப்பாத்துக்கட்டை *šappāttu-k-kaṭṭai*, பெ. (n.) கட்டையாலான காலணி; wooden sandals.

[சப்பாத்து + கட்டை]

சப்பாத்துக்கள்ளி *šappāttu-k-kaḷḷi*, பெ. (n.) 1. தட்டையான இலையுடைய கள்ளி வகை; common prickly pear. 2. மஞ்சள் நிறமுடைய பூவைக்கொண்ட கள்ளிவகை (L.); prickly-pear with yellow and crimson flowers.

ம. சப்பாத்திக்கள்ளி

[சப்பாத்து + கள்ளி. கள் → கள்ளி = முள்ளுடையது]

சப்பாத்துச்செடி *šappāttu-c-ceḍi*, பெ. (n.) செம்பரத்தம் பூச்செடியில் ஒருவகை; chinese shoe plant - Hibiscus rosasinensis (சா.அக.).

[சப்பாத்து + செடி. சப்பாத்து = தட்டையான செருப்பு. செருப்புகளுக்குக் கருப்பு நிறம் கொடுக்க இதன் பூவைக் கசக்கிப் பூசுவதால் இப் பெயர் பெற்றிருக்கலாம்.]

சப்பாத்துப்புழு *šappāttu-p-puḻu*, பெ. (n.) இந்திரக் கோபப்பூச்சி; cochineal.

தெ. சப்பாதிபுருகு

[சப்பாத்து + புழு]

சப்பாதிகம் *šappādigam*, பெ. (n.) அமலைப் பூடு எனும் நெல்லி; Indian gooseberry - Phyllanthus emblica (சா.அக.).

சப்பி[1] *šappi,* பெ. (n.) பதர் (யாழ்ப்.); chaff.

து. சப்பு

[சப்பு → சப்பி]

சப்பி[2] *šappi,* பெ. (n.) சப்பி உண்கின்றவன்; eater, who makes sucking sound while eating.

[சப்பு → சப்பி]

சப்பிக்கொடு-த்தல் *šappi-k-kodu-,* 4 செ.கு.வி. (v.i.) தாய், உணவை வாயிலிட்டுப் பதப் படுத்திக் குழந்தைக்குக் கொடுத்தல் (வின்.); to chew food and give it to a child, as a mother.

[சப்பி + கொடு-,]

சப்பிட்டுப்போ-தல் šappiṭṭu-p-pō-, 8 செ.கு.வி. (v.i.) 1. சுவையற்றுப் போதல்; to become insipid or stale. 2. ஊக்கமற்றுப் போதல்; to become disheartened.

[சப்பை → சப்பிட்டு + போ-,]

சப்பிரம் *šappiram,* பெ. (n.) சப்பரம் பார்க்க; see *šapparam.*

[சப்பரம் → சப்பிரம்]

சப்பிரமஞ்சம் *šappira-mañjam,* பெ. (n.) மேற்கட்டமைந்த கட்டில்; testered bedstead. "சப்பிரமஞ்ச கோளகைமீ திருந்து" (தனிப்பா. i, 385: 36).

[உ → உம் → உம்பர் → உப்பர் → உப்பரம் → சுப்பரம் → சப்பரம் → சப்பிரம் + மஞ்சம்]

சப்பு[1]**-தல்** *šappu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. உண்ணும் போது நாக்கினால் அல்லது உதடுகளால் 'சப்' என்று ஒலி உண்டாக்குதல்; to make sound 'sap' either with tongue or lips while eating. 2. புகையிலை மெல்லுதல்; to masticate, chew, as betel or tobacco. 3. குதப்புதல்; to mumble in eating; to munch. 4. சுவைத்து ஒன்றன் சாற்றை உறிஞ்சிக் குடித்தல்; to sip, suck

ம. சப்புக; க. சப்பரிசு, சப்படிசு, சப்பளிசு, தப்படிசு; தெ. சப்பரிஞ்சு, சப்பு; து. சப்பரிபுனி; கோத. சப்; துட. செப்; குட. சப்பெ, சபெ; நா. சவ்ல்; பர். சவ்ல், சல்; மா. சொப்ப; பட. சப்பு; Pāli. cappeti; E̲. sup

[(சுப்பு) → சப்பு. ஒன்றை மெல்லாது நாவிற்கும் அண்ணத்திற்கும் இடையில் இட்டு நெருக்கி, அதன் சாற்றை மெல்ல மெல்ல உறிஞ்சுதல் அல்லது அப்பொருளைச் சிறிது சிறிதாகக் கரைத்தல் (தமி.வ. 105)]

சப்பு[2]**-தல்** *šappu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. அதுங்குதல்; to be bent, pressed in, to become flat. ஏனம் (பாத்திரம்) சப்பிவிட்டது. 2. சுருங்குதல்; to be reduced; to subside. 'வீக்கம் சப்பிவிட்டது' (உ.வ.).

U. capṭā

[(சுப்பு) → சப்பு. சப்புதல் = அடித்தல், தட்டுதல்]

சப்பு என்பது ஒரு நெகிழ் பொருள் ஏதேனும் ஒன்றை முட்டலைக் குறிக்குஞ் சொல். சாணமும் களிமண்ணும் பழச்சதையும் போற் குழைந்த பொருள்களை, நிலத்திற் போடும் போதும், சுவரில் எறியும்போதும் சப்பு என்ற ஒலி கேட்கும். அதனால் "சப்பென்று விழுந்தது" என்பர். அவ்வொலியெழப் போடப்பட்ட குழைபொருட்கள் தட்டையான வடிவங்கொள்ளும். அதனால் சப்பு என்னும் ஒலிக்குறிப்பினின்று தட்டையாதற் கருத்து உணர்த்தும் பல சொற்கள் பிறக்கும் (மு.தா. 119).

சப்புக்கொட்டு-தல் *šappu-k-koṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. இனிப்புச்சுவை மிக்க தின்பண்டங்களைச் சுவைக்கும்போது நாக்கினால் ஒலி எழுப்பிச் சுவையின் அருமையை வெளிப்படுத்துதல்; to relish a dish or an item of food by making a click. தாத்தாவைப் பார், இனிப்பை எத்தனை அளவு சுவைத்துச் சப்புக்கொட்டிக் கொண்டு சாப்பிடுகின்றார்! 2. மீண்டும் நுகர ஆசைப் படுதல்; to nurture a desire where it is unbecoming. 'கிழவர் இளமைக்குச் சப்புக் கொட்டுகிறார் போலிருக்கிறது!' (உ.வ).

[சப்பு + கொட்டு-,]

சப்புச்சவறு *šappu-c-cavaṟu,* பெ. (n.) பயனின்றிக் கழிக்கப்பட்ட பொருள் (இ.வ.); refuse, rubbish.

ம. சப்பு; க. சப்பு, சொப்பு (பச்சை இலை); கோத. சொப் (கஞ்சிக்குப் பயன்படுத்தும் இலை); துட. தும் (மரவிலை); து., பட. சொப்பு, சொப்பு (இலை); குட. சப்பல் (இலை).

[சப்பு + சவறு. சப்பு = பயனற்றது; சப்புச்சவறு = மோனை நோக்கி வந்த இணைமொழி]

சப்புரி *šappuri,* பெ. (n.) பாவுக்குள் ஊடுருவிச் செல்லும் இழை; weaving thread.

[சப்பு + புரி]

சப்புரித்தடை *šappuri-t-tadai,* பெ. (n.) இழைகளின் தொகுப்பு; texture.

[சப்புரி + தடை]

சப்புரிப்பட்டு *šappuri-p-pattu,* பெ. (n.) பாவில் ஊடிழையாகப் பயன்படுத்துவதற்குரிய பட்டு (செங்கை.); a kind of silk cotton thread.

[சப்புரி + பட்டு]

சப்பெனல்[1] *šap-p-enal,* பெ. (n.) 1. சுவையின்மைக் குறிப்பு; onom. expr. signifying insipidity. தலைவரின் இன்றைய பேச்சு சப்பென்றிருந்தது. 2. முற்றிலும் நீங்குதலைக் குறிக்கும் ஒலிக் குறிப்பு; onom. expr. signifying complete removal. வீக்கம் சப்பென்று குறைந்துவிட்டது.

[சப்பு + எனல்]

சப்பெனல்[2] *šap-p-enal,* பெ. (n.) அடித்தல் குறிப்பு; onom. expr. signifying beating. 'சப்பென்று அறைந்து விட்டான்' (உ.வ.).

க. சப், சப்பனெ

[சப் + எனல்]

சப்பை[1] *šappai,* பெ. (n.) 1. சப்பட்டையானது; that which is flattened. 2. சுவையற்றது; that which is insipid or tasteless. 3. வலியற்றது (வின்.); that which is weak, lean, emaciated. 4. பயனற்றது; that which is useless. 'அவன் பேச்சுச் சப்பையாயிருந்தது' (உ.வ.). 5. தாழ்ந்தது (இ.வ.); that which is despicable, mean or low. 6. இடுப்பு, தோள் இவற்றின் சந்து; hips, haunch, shoulder-blade. 'சப்பை கழன்று போயிற்று' (உ.வ.).

ம. சப்ப; க.,பட., சப்பெ; தெ. சப்பு; து. சப்பு, சப்பெ

[சப்பு → சப்பு → சப்பை (மு.தா.119)]

சப்பை[2] *šappai,* பெ. (n.) 1. தேரின் சக்கரம் தரையிற் புதையாமலோடும்படி அதனடியில் இடப்படும் மரத்துண்டு; a spar of wood placed for the wheels of a car to run smooth in a sandy road. 2. வீட்டின் கூரைக்கைம்மரம்; rafter. 3. மரத்திற் பிளந்தெடுத்த துண்டு; a chip of wood.

தெ. சப்ப

[தக்கை → சக்கை → சப்பை]

சப்பை[3] *šappai,* பெ. (n.) முத்திரை; a seal.

க., து. சப்பெ; தெ. சப்ப

[சப்பு → சப்பை]

சப்பை → U. chāpā.

சப்பைக்கட்டு-தல் *šappai-k-kattu-,* 5 செ.குன்றாவி. (v.i.) சப்பைக்கட்டுக்கட்டு-தல் பார்க்க; see *šappai-k-kattu-k-kattu-.*

[சப்பை + கட்டு-,]

சப்பைக்கட்டுக்கட்டு-தல் *šappai-k-kattu-k-kattu-,* 5 செ.கு.வி. (v.i.) குற்றங்குறைகளைத் தாங்கிப் பேசுதல்; to defend and support a person, especially when his actions or words are open to criticism.

[சப்பைக்கட்டு + கட்டுதல். சப்பை = சுவையற்றது, வலுவற்றது, பயனற்றது, குற்றமுடையது]

சப்பைக்கட்டை *šappai-k-kattai,* பெ. (n.) வலைமிதவைக் கட்டை (மீனவ.); floating log of fishing net.

[சப்பை + கட்டை. சப்பை = தட்டை]

சப்பைக்கத்தலை *šappai-k-kattalai,* பெ. (n.) ஒருவகைக் கடல்மீன் (மீனவ.); a kind of sea fish.

[சப்பை + கத்தலை]

சப்பைக்கல்[1] *šappai-k-kal,* பெ. (n.) கட்டடச் சுவரில் தரணியை யொட்டி அமைந்த கல்; stone adjacent to cordon of a building (கட்டட).

[சப்பை + கல்]

சப்பைக் கோலா



சப்பையிறால்



சப்பைக் கத்தலை



சப்பையுளுவை



சப்பைத் திருக்கை

சப்பைக்கல்[2] *šappai-k-kal,* பெ. (n.) *கூலங்களை அரைப்பதற்கு உதவுங் கல்;* a flat grinding stone.

க. சப்படி

[சப்பை + கல்]

சப்பைக்கழி *šappai-k-kaḻi,* பெ. (n.) மாட்டு வண்டிப் பாரின் வலமும் இடமுமான இரு பக்க முனையொடும் மூக்கணை மரத்தொடும் பொருத்திக் கட்டும் மூங்கில் பிளாச்சு; lath of bamboo fastened in either side of driver's seat (long bar which is attached the yoke) with the front portion of a cart.

[சப்பை + கழி]

சப்பைக்காய் *šappai-k-kāy,* பெ. (n.) தட்டையான மாங்காய் முதலியன (யாழ்ப்.); flat fruit, as some mangoes.

[சப்பை + காய்]

சப்பைக்கால் *šappai-k-kāl,* பெ. (n.) வளைவான கால்; club-foot. "சப்பைக்கா லண்ணன் பெருவயிறன்" (தனிப்பா. 1, 35: 66).

[சப்பை + கால்]

சப்பைக்கோடரி *šappai-k-kōḍari,* பெ. (n.) தட்டையாய் அமைந்திருக்கும் ஒருவகைக் கோடரி; flat-axe.

க. சப்பகொடலி, சபகொடலி

[சப்பை + கோடரி. கோடு + அரி = கோடரி]



சப்பைக்கோடரி

சப்பைக்கோலா *šappai-k-kōlā,* பெ. (n.) கடல் மீன்வகை; halfbeak, sea fish, silvery, striped (செ.அக.).

[சப்பை + கோலா]

சப்பைகொட்டு-தல் *šappai-koṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) சப்புக்கொட்டுதல்; to smack the lips.

து. சப்பரிபு, சப்பலிப்பு, சப்லிப்பு

[சப்பை + கொட்டு-,]

சப்பைச்சலங்கை *šappai-c-calaṅgai,* பெ. (n.) குழந்தைகள் அணியும் சதங்கை யணிவகை (நாஞ்.); an ornament of tiny bells for children.

[சப்பை + சலங்கை]

சப்பைத்திருக்கை *šappai-t-tirukkai,* பெ. (n.) கடல்மீன் வகை; sea-fish, olive, disc twice as broad as long.

[சப்பை + திருக்கை]

சப்பைத்துணி *šappai-t-tuṇi,* பெ. (n.) மட்டமான துணி (இ.வ.); coarse or inferior cloth (செ.அக.).

ம. சப்பத்துணி

[சப்பை + துணி. சப்பை = சுவையற்றது, அழகற்றது, நேர்த்தியற்றது, மட்டமானது]

சப்பைநிலம் *šappai-nilam,* பெ. (n.) பயனற்ற பாழ்நிலம் (கொ.வ.); barren tract of land.

[சப்பை + நிலம். சப்பை = உள்ளீடற்றது, வளமற்றது.]

சப்பைநோய் *šappai-nōy,* பெ. (n.) ஈராண்டு அகவையுள்ள மாடுகளைத் தாக்கும் ஒரு வகைத் தொற்று நோய்; black quarter.

[சப்பை + நோய்]

சப்பைநோவு *šappai-nōvu,* பெ. (n.) சப்பைவீக்கம் பார்க்க; see *šappai-vīkkam* (செ.அக.).

[சப்பை + நோவு]

சப்பைப்பிடிப்பு *šappai-p-piḍippu,* பெ. (n.) இடுப்புப் பக்கத்தில் உண்டாகும் ஊதைவகை (கொ.வ.); rheumatism in the hips, hip-gout.

[சப்பை + பிடிப்பு. சப்பை = இடுப்பு]

சப்பைமூக்கன் *šappai-mūkkan̲,* பெ. (n.) தட்டையான மூக்கையுடையவன்; a flat-nosed man.

க. சப்படெ மூகினவனு

[சப்பை + மூக்கன்]

சப்பைமூக்கு *šappai-mūkku,* பெ. (n.) தட்டையான மூக்கு; flat - pug - nose.

க. சப்படெமூகு, சப்பட்டெமூகு; பட. சப்பெமூக்கு

[சப்பை + மூக்கு]

சப்பைமூஞ்சி *šappai-mūñji,* பெ. (n.) தட்டையான முகமுள்ளவன்-வள்-து (கொ.வ.); person or animal with flat or unshappy face.

[சப்பை + மூஞ்சி]

சப்பையா-தல் *šappaiyā-,* 6 செ.கு.வி. (v.i.) *1.* தட்டையாதல்; to become flattened. *2.* சுவையற்றுப் போதல்; to become insipid or tasteless. *3.* வலுக்குறைதல்; to become weak.

க. சப்பலர், சப்பலரு; து. ஆபுனி

[சப்பை + ஆ-,]

சப்பையாள் *šappaiyāḷ,* பெ. (n.) பயனற்றவன்; a worthless person.

ம. சப்பன்; து. சப்படெ

[சப்பை + ஆள்]

சப்பையிரால் *šappai-y-irāl,* பெ. (n.) கல்லிரால் மீன்; a kind of sea-lobster fish - Squash or squat lobster (சா.அக.).

[சப்பை + இரால்]

சப்பையுழுவை *šappai-y-uḻuvai,* பெ. (n.) உழுவை மீன் வகையுள் ஒன்று (மீனவ.); a kind of uḻuva fish.

[சப்பை + உழுவை]

சப்பையெலும்பு *šappai-y-elumpu,* பெ. (n.) இடுப்பெலும்பு; hip-bone (செ.அக.).

[சப்பை + எலும்பு. எல் → எலும்பு]

சப்பைவாக்கு *šappai-vākku,* பெ. (n.) சப்பட்டைவாக்கு[1] பார்க்க (இ.வ.); see *šappaṭṭai-vākku*[1].

[சப்பை + வாக்கு]

சப்பைவாய் *šappai-vāy,* பெ. (n.) உதடுகள் சிறிது உள்ளடங்கிய வாய் (கொ.வ.); mouth with lips short or shrunk.

[சப்பை + வாய்]

சப்பைவீக்கம் *šappai-vīkkam,* பெ. (n.) கால்நடை நோய்வகை; anthrax fever.

[சப்பை + வீக்கம்]

சப்பைவேலை *šappai-vēlai,* பெ. (n.) இழிவானதாகக் கருதப்படும் பணி; work of inferior quality.

து. சப்பட்கெலச

[சப்பை + வேலை]

சபகம் *šabagam,* பெ. (n.) மூங்கில்; bamboo- Bambusa arundinacea (சா. அக).

[சபம்[2] → சபகம்]

சபடம் *šabaḍam,* பெ. (n.) அறுகு; cynodon grass- Cynodon dactylon (சா.அக).

சபத்திரகம் *šabattiragam,* பெ. (n.) பெருங்கம்பிப் பூடு; large cape jasmine - Gardenia latifolia (சா.அக.).

சபதம்[1] *šabadam,* பெ. (n.) மூங்கில்; bamboo - Bambusa arundinacea (சா. அக).

[சபம்[2] → சபதம்]

சபதரி-த்தல் *šabadari-,* 11 செ.கு.வி.. (v.t.) *1.* சவதரி பார்க்க (வின்.); to acquire. *2.* ஆதரித்தல் (யாழ். அக.); to support, maintain.

[சவதரித்தல் → சபதரித்தல்]

சபதன் *šabadaṉ,* பெ. (n.) செம்பருத்தம்பூ; chinese rose mallow. hibiscusrosa - Sinensis (சா.அக.).

சபதாகிதம் *šabadā-gidam,* பெ. (n.) அடப்பன்கொடி; goat's foot creeper - ipomaea bilopus (சா. அக.).

சபதி *šabadi,* கு.வி.செ. (adv.) உடனடியில் (யாழ்.அக.); instantaneously.

Skt. sabadi

[சடுதி → சபதி]

சபம்[1] *šabam,* பெ. (n.) *1.* குதிரைக் குளம்பு; horse's hoof. *2.* ஆலமரம் முதலியவற்றின் விழுது (யாழ். அக.); aerial roots, as of banyan.

Skt. šapha

சபம்[2] *šabam,* பெ. (n.) மூங்கில் (பிங்.); bamboo.

ம. சபம்; க. சப; து. தெக்.

[ஆவம் → சாவம் → சாபம் = வில். சாபம் → சபம். இனி சவள் → சவம் → சபம் = வளையும் தன்மை கொண்டது என்றுமாம்]

சபம்[3] *šabam,* பெ. (n.) பிணம் (இ.வ.); corpse (செ. அக.).

[சவம் → சபம்]

த. சபம் → Skt. šava

சவம்[1] பார்க்க

சபலம்[1] *šabalam,* பெ. (n.) 1. இதளியம் (இரசம்); quicksilver.

[சவளுதல்= வளைதல், துவளுதல் → சவள் → சவல் → சபலம்]

சபலம்[2] *šabalam,* பெ. (n.) பாக்கு; arecanut - Acacia catechu (சா.அக.).

சபலம்[3] *šabalam,* பெ. (n.) சபலை (வின்.) பார்க்க; see *šabalai.*

Skt. šapalā

சபலா *šabalā,* பெ. (n.) திப்பிலி (மலை.); long-pepper.

சபலோத்தமா *šabalōttamā,* பெ. (n.) 1. புளி முந்திரிகை; sour grapes - Vitis vinifera. 2. புளிப்பு முந்திரிப்பழம்; sour cashew apple-ancardium occidentale (சா.அக.).

சபவலம் *šabavalam,* பெ. (n.) கழற்சிக்காய்; bonduc nut - Caesal - pinia bonducella (சா.அக.).

சபளவெலி *šabaḷa-veli,* பெ. (n.) கடித்தால் கழித்தல் (வாந்தி), மயக்கம், நீர்வேட்கை முதலியவற்றை உண்டாக்குவதும் பல வண்ணங்கள் கொண்டதுமான ஒரு வகை எலி; a species of rat with varied colours and its bite causes derangement of the three humours, vomitting, swoon; intense thirst etc. in the human system (சா.அக.).

சபாபதங்கம் *šabā-badaṅgam,* பெ. (n.) பெருங்காயம்; asafoetida - Ferula asafoetida (சா.அக.).

சபாலு *šabālu,* பெ. (n.) குறிஞ்சா; Indian ipecacuantra - Tylophora asthmatica (சா.அக).

சபாலுகம் *šabālugam,* பெ. (n.) வில்வம்; bael tree - Aegia marmelos alias Crataava marmelos (சா.அக).

சபூகவன்னிகம் *šabūga-vaṉṉigam,* பெ. (n.) தீமுறிப்பூடு; a plant counteracting the effects of fire (சா.அக.).

சபை *šabai,* பெ. (n.) 1. கூட்டம் (பிங்.); assembly, meeting, congregation, society, association. 2. அவைமண்டபம் (கொ.வ.); assembly room, public hall. 3. அம்பலம்; common meeting place. 'சபையிலே நக்கீரன் அரசிலே விற்சேரன்' (பழ.). 4. சிவபெருமான் நடனமாடுங்கூடம்; temble-halls in which Šiva performs His dance, as the kaṉaga-šabai at Chidambaram. 5. திருச்சபை; church congregation (Chr.).

[அவை → சவை → சபை. அமைதல் = நெருங்குதல், கூடுதல். அமை = கூட்டம். அமை → அவை]

த. சபை → Skt. sabha

சவை[2] பார்க்க

சபைக்கட்டு *šabai-k-kaṭṭu,* பெ. (n.) கிறித்துவ அவைக்குரிய சட்டம்; obligatory rules of a church (Chr.).

[சவை → சபை + கட்டு; கள் → கட்டு = ஒழுங்கு, முறைமை, சட்டம்.]

சபைக்காரன் *šabai-k-kāraṉ,* பெ. (n.) கிறித்துவ ஏற்பாட்டைத் தழுவியவன் (R.C.); a member of a recognised church.

[சவை → சபை + காரன். கிறித்துவக் கோயில், பலர்கூடும் சபை இடமாகக் கருதப்பட்டதால் 'சபைக்காரன்' கிறித்துவக் கோயில் உறுப்பினரைக் குறித்தது.]

சபைக்குச்சமைதல் *šabaikku-c-camaidal,* பெ. (n.) அவைக்கு ஒத்துப்போகை, அவைக்கு இசைகை; co-operation to assembly. "சருப்பேதி மங்கலத்து ஸபைக்கு ஸமைந்து கண்டேற்று" (ஆவ: 10-17:2. பக். 41).

[சபை → சபைக்கு + சமைதல்.]

சபைக்குப் புறத்தாக்கு-தல் *šabaikku-p-puṟattākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) மதத்தினின்று விலக்குதல் (R.C.); to expel or excommunicate as from a religious society.

[சபை + கு + புறத்து + ஆக்கு-. ஒரு மதத்தினர் அனைவரும் ஒரு கூட்டமாகக் கருதப்பட்டதால், சபைக்குப் புறத் தாக்குதல், மதத்திலிருந்து விலக்கிவைக்கும் பொருளில் ஆளப்பட்டது.]

சபைக்கூச்சம் *šabai-k-kūccam,* பெ. (n.) புதிதாக அவை ஏறும் ஒருவர்க்குக் கூட்டத்தினரைக் கண்டு எழும் அச்சம் அல்லது கூச்சம்; stage fright. அவனுக்கு அது முதல் மேடை, சபைக் கூச்சம் கொஞ்சமும் இல்லை (உ.வ.).

[அவை → சவை → சபை + கூச்சம். ஒ.நோ. அமர் → சமர். உருவு → உருபு.]

சபைக்கோழை *šabai-k-kōlai,* பெ. (n.) அவைக்கு நடுங்குவோன்; one who is nervous on facing an audience.

[சவை → சபை + கோழை]

சபைக்கூட்டு-தல் *šabai-k-kūṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) கூட்டங்கூட்டுதல் (கொ.வ.); to convene an assembly.

[சவை → சபை + கூட்டு-,]

சபைக்கூடு-தல் *šabai-k-kūḍu-,* 5 செ.கு.வி. (v.i.) அவை கூடுதல்; to assemble, as of committee.

[சவை → சபை + கூடு-,]

சபைத்தலைவன் *šabai-t-talaivaṉ,* பெ. (n.) அவைத்தலைவன்; president of an assembly.

[சவை → சபை + தலைவன்]

சபைநடுக்கம் *šabai-naḍukkam,* பெ. (n.) சபைக்கூச்சம் பார்க்க; see *šabai-k-kūccam.*

[சவை → சபை + நடுக்கம்]

சபைப்பிரிவினை *šabai-p-piriviṉai,* பெ. (n.) கொள்கை மாறுதலால் நேரும் திருச்சபையின் பிளவு (கிறித்.); schism, split.

[சபை + பிரிவினை]

சபைப்பொது *šabai-p-podu,* பெ. (n.) ஊரவைக்குப் பொதுவான ஒன்று; common one of the village assembly. "வடபாற் கெல்லை சபைப்பொதுவான அப்பன்குழிக்கு தெற்கு" (தெ.க.தொ. 13:99-7).

[சபை + பொது]

சபையார் *šabaiyār,* பெ. (n.) 1. மன்றத்தினர் (சங்கத்தினர்); members of an assembly or society. 2. வடமப் பிராமணருள் ஒருசாரார் (G,Tj.D.I. 78); a class of vaḍama brahmins. 3. திருச்சபையார்; members of a church (Chr.).

[சபை + ஆர். 'ஆர்' ப. பா ஈறு]

சபையார்பக்கல்கொண்டநிலம் *šabaiyār-pakkal-koṇḍa-nilam,* பெ. (n.) அவையார்க்கு ஒதுக்கப்பட்ட நிலம்; reserved land for assembly members. "ஸ்ரீ வெங்கட கொட்டத்து திருக்குடவூர்நாட்டு திருச்சசுனூர் சபையார் பக்கலும், மடமுடைய இலக்குமணநம்பிபக்கலும் பொன்குடுத்து விலைகொண்டு திருவிளக்கோயில் பெருமாளுக்கும் பொன்குடுத்து இறைஇழித்திக் கொண்ட நிலமும் சபையார்பக்கல் கொண்ட நிலமும்" (திருப்ப. க. தொ. 1. 8-4).

[சபையார் + பக்கல் + கொண்ட + நிலம்.]

சபையிருத்து-தல் *šabai-y-iruttu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. தகுதிக்குத்தக்கபடி அவையினரை உரிய இடத்தில் அமர்த்துதல் (வின்.); to seat a company properly in order of rank. 2. அவையை ஒழுங்குபடச்செய்தல்; to keep an assembly in order (செ.அக.).

[சபை + இருத்து-,]

சபையிற்சேர்-தல் *šabai-y-iṟ-šēr-,* செ.கு.வி. (v.i.) அறிவு முழுக்குப் பெற்றுக் கிறித்துவ மதத்தைத் தழுவுதல்; to become member of a church by baptism, etc. (R.C.) (செ.அக.).

[சபை + இல் + சேர். சபை மதக் கூட்டமாகக் கருதப்பட்டதால், மதத்திற் சேர்தல் மதத்தைத் தழுவுதல் பொருளில் வந்தது.]

சபையுள்ளார் *šabai-y-uḷḷār,* பெ. (n.) நாடக வரங்கில் இசைபாடுவோர் (யாழ்.அக.); band of singers in a dramatic representation.

[சவை → சபை + உள்ளார்]

சபையேறு-தல் *šabai-y-ēṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. அவைக்குமுன் வருதல்; to appear before an assembly, to appear, as a performer. 2. அரங்கேறுதல்; to be presented before a learned body for approval. 3. திருட்டு முதலிய தீவழியாற் பேரெடுத்தல் (கொ.வ.); to gain notoriety as a thief or a habitual offender.

[சவை → சபை + ஏறு-,]

சபையொழுக்கம் *šabai-y-oḻukkam,* பெ. (n.) மரியாதை முறை (இ.வ.); etiquette (செ. அக.).

[சவை → சபை + ஒழுக்கம்]

சபைவண்மை *šabai-vaṇmai,* பெ. (n.) சபை வளமை பார்க்க; see *šabai-vaḷamai* (செ.அக.).

[சவை → சபை + வண்மை]

சபைவளமை *šabai-vaḻamai,* பெ. (n.) சபைக்குரிய அதிகாரம்; the authority of public assembly (செ.அக.).

[சவை → சபை + வளமை]

சபைவழங்கல் *šabai-vaḻaṅgal,* பெ. (n.) ஊர் மன்றம் செய்யும் பொதுச் செலவினங்கள்; expenditure on common purpose incurred by the village assembly.

[சவை → சபை + வழங்கல்]

சபைவினியோகம் *šabai-viniyōgam,* பெ. (n.) சபைவழங்கல் பார்க்க; see *šabai vaḻaṅgal.* 'முன் சபை விநியோகத்துக்கு அழித்துகொண்ட பொன்" (தெ. க. தொ. 13.6.115-2).

[சபை + வினியோகம்]

Skt. viniyōga → வினியோகம்

சம்பகம்[1] *šambagam,* பெ. (n.) சண்பகமரம்; champak. "சம்பக நறும் பொழில்" (கம்பரா. தைல. 15).

[செம் → சம் → சம்பகம்]

த. சண்பகம் → Skt. campaka.

சம்பகம்[2] *šambagam,* பெ. (n.) சம்பம்[3] (இ.வ.) பார்க்க; see *šambam*[3].

[செம் = சிவப்பு. செம் → சம் → சம்பகம்= சிவப்பு, இளஞ்சிவப்பு, மஞ்சள்.]

campaka, campa, kanaka, a tree bearing a yellow fragrant flower, Michelia Campaka; its flower. Gt. (p . 518) is right in deriving campaka from D. can.l, etc., redness, golden colour, as the flower at once suggests that derivation. This is corroborated by kanaka which comes from that D. root in its form of ken, etc., (K.K.E.D XXIII).

champaka, the Michelia champaka, a tree with a yellow fragrant flower. Also jambu, the rose-apple: Drav. šembu, red (C.G.D.F.L.577).

சம்பங்கி *šambaṅgi,* பெ. (n.) 1. கொடிச் சம்பங்கி; cowslip creeper. 2. சம்பகம்[1] (மலை.) பார்க்க; see *šampagam.*

[சம்பகம் → சம்பங்கி]

சம்பங்கிக்காசு *šambaṅgi-k-kāšu,* பெ. (n.) பழைய காசு வகை (பணவிடு. 114); an ancient coin.

[சம்பங்கி + காசு]

சம்பங்கிப்பூ *šambaṅgi-p-pū,* பெ. (n.) சண்பகப்பூ; champak flower.

[சம்பங்கி + பூ]

சம்பங்கி வகை:

1. மரச்சம்பங்கி - tree champak- Michelia champaca.
2. நிலச்சம்பங்கி - ground champak.
3. அகச்சம்பங்கி - Indian champak.
4. காட்டுச்சம்பங்கி - wild champak.
5. சிறுசம்பங்கி - cananga flower tree.
6. கொடிச்சம்பங்கி - creeper champak.
7. நாகச்சம்பங்கி - white champak.

சம்பங்கிவிசிறி *šambaṅgi-viširi,* பெ. (n.) புடைவை வகை (இ.வ.); a woman's cloth.

[சம்பங்கி + விசிறி]

சம்பங்குடலை *šambaṅ-guḍalai,* பெ. (n.) சம்பங்கூடு (கொ. வ.) பார்க்க; see *šambaṅ-gūḍu.*

[சம்பம் + குடலை]

சம்பங்கூடு *šambaṅ-gūḍu,* பெ. (n.) சம்பங் கோரையாற் செய்த கொங்காணி (வின்.); a covering for the head and shoulders made of plaited sedge.

[சம்பு + அம் + கூடு. பின்னர் தென்னங் கீற்றால் செய்த கூட்டையும் குறித்தது]

சம்பங்கூடை *šambaṅ-gūḍai,* பெ. (n.) 1. சம்பங்கூடு பார்க்க; see *šambaṅ-gūḍu.* 2. சம்பங்கோரையாற் செய்த கூடை வகை (வின்.); a kind of basket made of rushes (செ.அக.).

[சம்பு + அம் + கூடை. சம்பு = சம்பங் கோரை]

சம்பங்கோரை *šambaṅ-gōrai,* பெ. (n.) கோரை வகை; elephant grass (செ.அக.).

க. சம்புகுல்லு

[சம்பு + அம் + கோரை]

சம்பங்கோழி *šambaṅ-kōḻi,* பெ. (n.) காட்டுக் கோழி (திவா.); grey jungle fowl.

மறுவ. கம்புள்

[சம்பு + அம் + கோழி. குள் → கொழு → கோழி = நிலத்தையும் குப்பையையும் கிளைக்கும் பறவை]


சம்பங்கோழி

சம்படம்[1] *šambaḍam,* பெ. (n.) கூறை (பிங்.); cloth.

மறுவ. கோடி, கோடிகம், படாம், கோசிகம், பஞ்சி, சாடி, நீவியம், சீரை, கரை, கலிங்கம், சூடி, காடிகம், புட்டம், தூசு, காழகம், வட்டம், தானை, அறுவை, அம்பரம், ஆவரணம், ஆசாரம்.

ம. சம்பட

[அம்பரம் → சம்பரம் → சம்படம்]

சம்படம்[2] *šambaḍam,* பெ. (n.) ஒரு பழைய வரி (I.M.P. Cg. 1095); an ancient tax.

[சம்புடம் → சம்படம்]

சம்படம்[3] *šambaḍam,* பெ. (n.) சோம்பல் (யாழ்ப். அக.); indolence, sluggishness.

க. சம்பு, சொம்பு

[சுப்பு → சும்பு → சம்பு → சாம்பு. சாம்புதல் = எரிதல், வாடுதல், ஒடுங்குதல், குவிதல். சும்பு → சம்பு → சம்படம்]

சம்படம் → Skt. lampaṭa

சம்படம்[4] *šambaḍam,* பெ. (n.) சம்பளம்; salary. "முற்பகுதிக்கும் செலவாகி கையிடு கொண்டு எல்லாவழி சம்படம் ஊதாகி குடுக்கும் காசாயம் பதினேழாவது ஆடிமாதம்" (தெ. க. 4: 434/1986).

[சம்பளம் → சம்படம்]

சம்பளம்[1] பார்க்க

சம்படி-த்தல் *šambaḍi-,* 4 செ.கு.வி. (v.i.) பயிர் செய்யுங்காலத்து இரண்டாமுறை உழுதல்; to plough field a second time during the season of cultivation.

[சம்பு + அடி-,]

சம்பந்தசரணாலயர் *šambanda-šaraṇālayar,* பெ. (n.) 1. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் நல்லம்மான்; maternal uncle of Tiru-ñāṉa-sambanda-mūrtti-nāyaṉār. 2. கி.பி. 16ஆம் நூற்றாண்டில் கந்தபுராணச் சுருக்கம் இயற்றிய ஆசிரியர்; the author of kanda-purāṇa-c-curukkam.

சம்பந்தர் *šambandar,* பெ. (n.) தேவாரம் பாடிய மூவருள் ஒருவரான திருஞானசம்பந்தர்; Tiru-ñāṉa-šambandar, one of the three celebrated authors of Tēvāram.

[சம்பந்தம் → சம்பந்தர்]

சம்பந்தவிளாகஞ்சேரி *šambanda-viḷāgañjēri,* பெ. (n.) திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நன்னிலத்தை உள்ளடக்கிய ஊர்; a village in Tiruvārūr district. "திருவமுதுந் திருவிளக்கும் செலுத்துவதற்குந் நிலன் சம்பந்தவிளாகஞ்சேரி நீங்கலாக நிலன்னொன்றே" (நன்னி.க. தொ. 2 கல். 2. தொ. எண். 254-26).

[சம்பந்தவிளாகம் + சேரி]

Skt. bandha → த. பந்தம்

சம்பந்தி *šambandi,* பெ. (n.) துவையல் வகை; a kind of contiment used as a relish in food.

ம. சம்மந்தி

[சம்பல் → சம்பந்தி]

சம்பம் *šambam,* பெ. (n.) எலுமிச்சை (தைலவ.); acid lime.

[சம்பு → சம்பம்]

சம்பளம்[2] பார்க்க

சம்பம்புல் *šambam-pul,* பெ. (n.) கூரை வேயப் பயன்படும் புல்வகைகளில் ஒன்று; a kind of hay used to thatch roof (கட்டட).

[சம்பு + அம் + புல்]

சம்பரம்[1] *šambaram,* பெ. (n.) நீர் (பிங்.); water.

[அம் = நீர். அம் → அம்பு = நீர், கடல். அம்பு → அம்பரம் = கடல், வாரி. அம்பரம் → சம்பரம் = நீர்.]

சம்பரம் → Skt. šambara

சம்பரம்[2] *šambaram,* பெ. (n.) ஆடை; cloth, garment.

[அம்பரம் → சம்பரம்]

சம்பரி *šambari,* பெ. (n.) நேர்வாளம் (மலை.); croton.

சம்பரித்தணக்கு *šambari-t-tanakku,* பெ. (n.) வெண்டாளி மரம் (L.) ; white catamaran tree.

[சம்பரி + தணக்கு]

சம்பல்[1] *šambal,* பெ. (n.) 1. மலிவு; cheapness. 2. விலையிறக்கம் (இ.வ.); fall in price.

[சும் → சும்பு = வாடிச்சுருங்குதல்; சும்பு → சம்பு → சம்பல்]

சம்பல்[2] *šambal,* பெ. (n.) தேங்காய், மிளகாய், புளி முதலியவற்றைச் சேர்த்து அரைத்த துவையல்; a kind of tuvaiyal. 'இடியாப்பத்திற்குச் சம்பல் நன்றாக இருக்கும்.' (இலங்.).

கூட்டுப் பொருள்களை வதக்கி அரைக்கும் துவையல்

சம்பல்[3] *šambal,* பெ. (n.) மிளகாய் வற்றல்; dried chilly pieces processed by drying.

[சும் → சம் → சம்பல்]

சம்பலச்சீரம் *šambala-c-cīram,* பெ. (n.) எருக்கம்பால்; a milk of madar plant - Calotropis giganta (சா.அக.).

[சம்பலம் + சீரம்]

சம்பலம் *šambalam,* பெ. (n.) 1. எலுமிச்சை; lime fruit - Citrus medica. 2. எருக்கு; madar plant (சா.அக.).

[சம்பு → சம்பலம்]

சம்பவை *šambavai,* பெ. (n.) கொற்றவை; goddess Pārvati. as the Šakti of Sambhu. "பகவதி சம்பவை மகிடவாகனி" (கூர்மபு. திருக்கலி. 23).

[சாம்பவை → சம்பவை]

த. சம்பவை → Skt. Šāmbhavi

சம்பளக்காரன் *šambaḷa-k-kāran,* பெ. (n.) சம்பளமாகக் கூலி பெறுபவன் (இ.வ.); salaried person, one receiving fixed periodical wages (சொ. க. 19).

[சம்பு + அளம் + காரன்]

சம்பளத்துக்கிரு-த்தல் *šambaḷa-t-tukkiru-,* 3 செ.கு.வி. (v.i.) மாதச்சம்பளத்திற்கு வேலை செய்தல் (கொ.வ.); to be engaged or serve for a salary or monthly pay (செ.அக.).

[சம்பளம் + அத்து + கு + இரு]

சம்பளந்தின்னு-தல் *šambaḷan-tin-,* 3 செ.கு.வி. (v.i.) கூலிபெறுதல்; to enjoy the benefit of a salary. சம்பளந் தின்னுவதற்கு உழைத்துத் தான் தீரவேண்டும்.

[சம்பளம் + தின்னு. துன்னு → தின்னு]

சம்பளநத்தம் *šambaḷa-nattam,* பெ. (n.) தஞ்சை மாவட்ட ஊர்; a village in Tanjavoor district.

[சம்பளம் + நத்தம். நந்து → நந்தம் → நத்தம் = மேடான நிலம். சுடுகாட்டிற்குப் போய்த் திரும்பியோர் ஒன்றுகூடி சம்பளம் வழங்கிய மேடான பகுதி, இடம் சம்பளநத்தம்]

ஊர்ப்பொதுவிடம் நத்தம் எனப்படும். பார்ப்பனர் அல்லாதார் வாழும் பகுதி என்றும் பொருள் உண்டு. மேய்ச்சல்நிலமும் அப் பெயர் பெறும். தற்போது நத்தம் என்பது, சிறுபான்மையோர் வாழும் இடத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது.

சம்பளப்பட்டி *šambaḷa-p-paṭṭi,* பெ. (n.) சம்பளக் கொடுப்பினை பற்றிய விளக்கம் அடங்கிய பொத்தகம் (இ.வ.); pay bill, acquittance roll.

[சம்பளம் + பட்டி]

சம்பளப்பிடித்தம் *šambaḷa-p-piḍittam,* பெ. (n.) 1. உரிய சம்பளத்தைக் கொடாது நிறுத்திக் கொள்கை; with holding payment of wages. 2. சம்பளக் குறைவு; deduction in wages.

[சம்பளம் + பிடித்தம்]

சம்பளம்[1] *šambaḷam,* பெ. (n.) 1. வழியுணவு (பிங்.); food for journey. 2. வழிப்பொருள் (வின்.); stock for travellors. 3. செய்த வேலைக்குப் பெறும்

கூலி; salary. "பண்பிலுக்குஞ் சம்பள மாதர்" (திருப்பு. 22). 'சம்பளம் அரைப் பணமானாலும் சளுக்கு முக்காற்பணம்' (பழ.). 4. கரை (சங்.அக.); shore, bank.

ம. சம்பளம், க. சம்பள; தெ. சம்பளமு; பட. சம்புவ

[சம்பு + அளம்]

பழங்காலத்தில் சம்பளம் கூலமும் உப்புமாகக் கொடுக்கப்பட்டது. கூலம் தானியம். (கூலமாகக் கொடுக்கப்படுவது கூலி). கூலத்திற் சிறந்தது நெல்லாதலின் நெல்வகையிற் சிறந்த சம்பாவின் பெயராலும், உப்பின் பெயராலும் சம்பளம் என்னும் பெயர் உண்டாயிற்று. சம்பும் அளமும் சேர்ந்தது சம்பளம். சம்பு என்பது சிறந்த நெல்வகைக்கும் சிறந்த கோரைவகைக்கும் பொதுப்பெயர்.

ஓங்கி வளர்ந்த சம்பாநெற்பயிரும் சம்பங் கோரையும் ஒத்ததோற்றமுடையனவா யிருத்தல் காண்க. நெல்லைக் குறிக்கும் சம்பு என்னும் பெயர் இன்று சம்பா என வழங்குகின்றது. வகரவீற்றுச் சொற்கள் ஆகார வீறு பெறுவது இயல்பே. எ.டு: கும்பு → கும்பா; தூம்பு → தூம்பா; குண்டு → குண்டா.

அளம் என்பது உப்பு. உப்பு விளைப்போர் அளவர் எனப்படுதல் காண்க.

அளம் என்னும் சொல் தன் பொருளிழந்து ஈறாக மாறியபின் உப்பைக்குறிக்க, உம்பளம் என்றொரு சொல் வேண்டியதாயிற்று. உப்பைச் சம்பளப்பகுதியாகக் கொடுக்கும் வழக்கம் நின்றுவிடவே, உம்பளம் என்னும் சொல்லும், அப்பொருளில் வழக்கு வீழ்ந்தது, மானியமாகக் கொடுக்கும் நிலத்திற்குப் பெயராக ஆளப்பட்டது. உம்பு = உப்பு.

'உப்புக்கு உழைத்தல்', 'உப்பைத்தின்னுதல்' என்னும் வழக்குகளையும். 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்னும் பழமொழியையும் நோக்குக.

"salary (soldier's pay, which was given partly in salt) wages" (English work-book, p. 90.) (சொ. க. 121).

த. சம்பளம் → Skt. šambala

சம்பளம்[2] *šambaḷam,* பெ. (n.) எலுமிச்சை (பிங்.); sour lime.

[சம்பலம் → சம்பளம்]

சம்பளம்[3] *šambaḷam,* பெ. (n.) கல்வி நிறுவனங்களில் படிப்பதற்குக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை என்ற வகையில் கட்டும் கட்டணம்; tuition fee in educational institutions. பள்ளிக்குச் சம்பளம் கட்ட இன்றே கடைசி நாள்.

[சம்பு + அளம்]

சம்பளம்[4] *šambaḷam,* பெ. (n.) செம்மறிக்கடா; he-goat.

[கம்பளம் → சம்பளம்]

சம்பளம்போடு-தல் *šambaḷam-pōḍu-,* 2 செ.கு.வி. (v.i.) 1. கூலி வரையறுத்தல்; to fix wages or salary. 2. கூலி கொடுத்தல்; to pay wages.

[சம்பளம் + போடு-,]

சம்பளவாள் *šambaḷa-v-āḷ,* பெ. (n.) கூலிக்கு அமர்த்தப்பட்ட வேலையாள்; labourer or servant on fixed salary.

[சம்பளம் + ஆள்]

சம்பளி *šambaḷi,* பெ. (n.) 1. வெற்றிலைப் பை (யாழ்ப்.); betel pouch. 2. பொருளிடும் பை (வின்.); bag, wallet (செ.அக.).

க. சம்பளிகெ; தெ. சம்பெள

[சம்பரம் = துணி. சம்பரம் → சம்பளம் → சம்பளி]

சம்பன்னகரணி *šambaṉṉa-karaṇi,* பெ. (n.) காயம் தீர்க்கும் மருந்துவகை (வின்.); a medicament that cures slashes or serious sword-cuts (செ.அக.).

[சம்பன்னம் + கரணி]

சம்பன்னம் *šambaṉṉam,* பெ. (n.) நிறைவு (யாழ்.அக.); completeness, perfection.

[அம் → அமல் = நிறைவு. அமல் → சமல் → சம்பல் → சம்பன்னம்]

அமல் பார்க்க

சம்பன்னன் *šambaṉṉaṉ,* பெ. (n.) 1. செல்வன் (சம்பத்துள்ளவன்); prosperous or wealthy man. "நரராய்ப் பிறந்து பின் சம்பன்னராய்" (பட்டினத். திருவேகம்ப. 21). 2. நிறைந்தவன்; one well endowed as with good qualities - usually last member in compound words. சகலகுண சம்பன்னன்.

[சம்பன்னம் → சம்பன்னன்]

சம்பனசாரம் *šambana-šāram,* பெ. (n.) **ஏழிலைப் பாலை;** seven leaved milky plant - Alstonia scholaris *(சா.அக.).*

சம்பா[1] *šambā,* பெ. (n.) **பூவன்வாழை (வங்காள வழக்கு);** a kind of banana (Poovan).

[சம்பு → சம்பா]

சம்பா[2] *šambā,* பெ. (n.) *1.* **பெரும்பாலும் சுறவ (தை) மாதம் அறுவடையாகும், ஐந்துமாதக் கால நெற்பயிர்;** a crop of paddy of five months duration harvested sometime in 'thai'. *'சம்பா விளைந்து சாய்ந்து கிடக்குது உண்பாரில்லாமல் ஊர்க்குருவி மேயுது' (பழ.).* *2.* **மிளகு சீரகங் கலந்து இறைவர்க்குப் படைக்கும் அமுது;** boiled rice mixed with pepper powder, cumin, etc., offered to deity in temples.

ம. சம்பா, சம்பாவு, செம்பாவு; க. சம்பெ; தெ. சம்பாவுலு

[சம் → சம்பா]

தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடைய தென்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். குறிப்பாகத் தமிழ்நாட்டு நெல்லில், செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார் என்றும் பலவகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவாரம்பூச் சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன. இவற்றோடு வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை. தமிழ்நாட்டுள்ளும், தென்னாட்டிலேயே அவை விளைகின்றன. பழங்காலத்தில் விளைந்த அளவு பொன்னும், மணியும், முத்தும், பவழமும் இன்று தென்றமிழ் நாட்டில் விளைந்து வருவது கண்கூடு *(சொ. க. 69, 70).*

சம்பா[3] *šambā,* பெ. (n.) *1.* **வட்டமாகக் கோடு கிழித்து நான்குசிப்பிகளைக் கொண்டு ஆடும் ஒருவகை விளையாட்டு;** a game with four little shells on circles drawn on board or on the ground. *2.* **ஆட்டக்காயின் தாயவகை;** one of the falls of shells in the šambā game. *3.* **நால் விரலளவு;** breadth of four fingers, hand breadth *(செ.அக.).* "மலைகிளிய நின்றாற்காலால் சம்பா அமுதுபடி னாலு மரக்காலும். இந்த திருப்போநகம் கொத்ததெருக்கைக்கு வடிதயிர் அமுதும்" *(திருப். க. தொ. 2. கல் 38-7).*

[சம்பு → சம்பா]

சம்பாக்கட்டளை *šambā-k-kaṭṭaḷai,* பெ. (n.) **கோயிலில் சம்பா நெற்சோறு கொண்டு கடவுளுக்குப் படைக்கச்செய்யும் ஏற்பாடு** (இ.வ.); provision for oblations of šambā rice in a temple.

[சம்பா + கட்டளை]

சம்பாகம்[1] *šambāgam,* பெ. (n.) **நன்றாய்ச் சமைத்தது** (வின்.); that which is properly cooked.

[சமை + பாகம் → சமைபாகம் → சம்பாகம்]

த. சம்பாகம் → Skt. sam-pāka.

சம்பாகம்[2] *šambāgam,* பெ. (n.) **நாடு** (யாழ். அக.); country.

[சம + பாகம் - சமபாகம் → சம்பாகம்]

சம்பாகம்[3] *šambāgam,* பெ. (n.) **மரவகை** (சுக்கிர நீதி. 228); a kind of tree.

[சம்பு + பாகம் - சம்புபாகம் → சம்பாகம்]

த. சம்பாகம் → Skt. sam-pāka.

சம்பாட்டம் *šambāṭṭam,* பெ. (n.) **சம்பா**[3] பார்க்க; see šambā[3].

[சம்பா + ஆட்டம்]

சம்பாடம் *šambāḍam,* பெ. (n.) **அணிகலனை அதனிடமுள்ள அரக்கு முதலியவற்றோடு நிறுக்கை** (இ.வ.) ; weighing a jewel with inlaid lac, precious stone. etc.

தெ. சம்பாடமு.

சம்பாத்தியம் *šambāttiyam,* பெ. (n.) **பொருளீட்டுகை;** acquisition, earnings.

[சம்பாரித்தல் → சம்பாரித்தம் → சம்பாரத்தியம் → சம்பாத்தியம்]

நெல்லை அறுவடை செய்தல் எனப் பொருள்படும் சம்பா அரித்தல் என்பது சம்பாரித்தல் என்றாகிப் பொருளீட்டுதலைக் குறித்தது.

சம்பாதனம் *šambādanam,* பெ. (n.) **சம்பாத்தியம்** பார்க்க; see *šambāttiyam*.

சம்பாதனை *šambādaṉai*, பெ. (n.) சம்பாத்தியம் (இ.வ.) பார்க்க; see *šambāttiyam* (செ.அக.).

[சம்பாதி → சம்பாதனை]

சம்பாதி[1]-த்தல் *šambādi-*, 4 செ.குன்றாவி. (v.t.) தேடிப் பெறுதல்; to earn, acquire, secure.

[சம்பாரி → சம்பாதி]

சம்பாத்தியம் பார்க்க

சம்பாதி[2] *šambādi*, பெ. (n.) அருணனது மூத்த புதல்வனும் சடாயுவின் தமையனுமாகிய கழுகரசன்; a vulture-king - elder son of Aruṇaṉ and brother of Jaḍāyu. "சம்பாதியிருந்த சம்பாதி வனமும்" (மணிமே. 3:54).

[சம் → சம்பாதி]

சம்பாதிபுரம் *šambādi-puram*, பெ. (n.) சம்பாதியாற் பூசிக்கப்பெற்ற புள்ளிருக்கு வேளூர் என்னுஞ் சிவத்தலம் (சங்.அக); Puḷḷirukku vēḷūr, a Siva shrine in Tañjāvūr District, named after Sampādi who worshipped Siva at this place.

மறுவ. வினைதீர்த்தான் கோயில், வைத்தீசுவரன் கோயில்

[சம்பு → சம்பாதி + புரம்]

சம்பாப்பட்டம் *šambā-p-paṭṭam*, பெ. (n.) கடக மாதத்தில் விதைத்துத் தொடங்கும் பயிர்ச் செலவு (ஆடிப் பட்டம்); cultivation season in the month of Āḍi. 2. நெல் பயிர் செய்யும் காலம்; paddy cultivation period.

[சம்பா + பட்டம்]

சம்பாபதி *šambā-padi*, பெ. (n.). 1. சம்புத் தீவைக் காவல் செய்யும் பெண்தெய்வம்; the tutelary goddess of Jambūdvīpa 'சம்பாபதிதன் னாற்ற றோன்ற' (மணிமே. 6: 190). 2. சம்பாபதியின் இருப்பிடமான காவிரிப்பூம்பட்டினம் (மணிமே. பதி. 8); Kāviri-p-pūm-paṭṭiṉam, as the abode of Šambāpadi.

[சம்பு[4] → சம்பா + பதி]

சம்பாபுரம் *šambā-puram*, பெ. (n.) அங்க நாட்டின் தலைநகரம் (யாழ்.அக.); the capital of the Aṅga country.

[சம்பா + புரம்]

ஒவ்வொரு தீவிற்கும் ஊருக்கும் ஒரு காவல் தெய்வம் இருந்தது. நாவலந்தீவிற்குச் 'சம்பாபதி' என்னும் நாவல் மகளும், மதுரைக்கு மதுராபதியும் காவல் தெய்வம். நாவல் தெய்வ இருக்கை காவிரிப்பூம் பட்டினமென்று மணிமேகலை கூறுவதால் சோழநாடு முதற்காலத்திற் பனிமலை வரை பரவியிருந்தமை உய்த்துணரப்படும் (தமி29).

சம்பாமிளகாய் *šambā-miḷagāy*, பெ. (n.) மிளகாய் வகையுள் ஒன்று (செங்கை.); a kind of chilly.

[சம்பா + மிளகாய்]

சம்பாரங்கூட்டு-தல் *šambāraṅ-kūṭṭu-*, 5 செகுவி. (v.i.) கறிக்குக் கூட்டுப் பொருள்களைச் சேர்த்தல் (இ.வ.); to mix curry stuffs.

[சம்பாரம் + கூட்டு]

சம்பாரப்பயிர்கள் *šambāra-p-payirgaḷ*, பெ. (n.) உணவுப்பொருள்களுக்கு மணமும், சுவையும் அளிக்கும் மிளகாய், இஞ்சி, மிளகு, மல்லி போன்றவை; the spices, chillies, ginger, coriander, pepper etc. which give good taste and nice odour.

[சம்பாரம் + பயிர்கள்]

சம்பாரப்புல் *šambāra-p-pul*, பெ. (n.). 1. சுக்கு நாறிப்புல்; ginger grass. 2. ஒரு மணப்புல்; any fragrant grass as kuskus etc., 3. கற்பூரப்புல்; lemon grass - Andropogen aromaticus (சா.அக.).

[சம்பாரம் + புல்]

சம்பாரப்பொடி *šambāra-p-poḍi*, பெ. (n.) கறிக் கூட்டுப் பொடி; curry powder.

[சம்பாரம் + பொடி]

சம்பாரம்[1] *šambāram*, பெ. (n.) 1. கூட்டுப்பொருள்கள்; curry-stuffs. "சம்பாரங்கனக்க விட்ட நாய்க்கறியும்" (தனிப்பா. ii, 19. 41). 2. நீர்மோர்; spiced and diluted butter milk, used as a drink.

[அம்பர் → அம்பரம் = மஞ்சள், மஞ்சள் நிறமுள்ளது. அம்பரம் → சம்பரம் = சம்பாரம்]

சம்பாரம்[2] *šambāram*, பெ. (n.) 1. மாட்டு வண்டியில் பொருட்களைத் தாங்கும் பகுதி (முகவை.); the axle portion of an bullock cart. 2. கைமரந்தாங்கி; beam supporting the rafters (கட்டட.).

[சமம் + பாரம் → சமபாரம் → சம்பாரம்]

சம்பாரவல்லி *šambāra-valli,* பெ. (n.) 1. ஒருவகைக் கொடி முந்திரி; Indian grape vine - Vitis indica. 2. காட்டுக்கொடிமுந்திரி; Indian wild grape vine - Vitis rugosa alias Vitis latifolia (சா.அக.).

[சம்பாரம் + வல்லி]

சம்பாரி[1]-த்தல் *šambāri-,* 4 செ.குன்றாவி. (v.t.) பொருளீட்டுதல்; to earn.

[சம்பா + அரி – சம்பாரி. சம்பா = நெல். அரித்தல் = அறுத்தல், நெல் அறுவடை, பின்னர் பொருளீட்டுதலுக்கு ஆயிற்று]

சம்பாரி[2] *šambāri,* பெ. (n.) 1. சம்பன் என்ற அசுரனைக் கொன்றவனாகிய, இந்திரன்; Indra, as the vanquisher of an Asura named Jambha. 2. நெருப்புக்கடவுள் (யாழ்அக.); Agni, the fire god.

[சம்பன் → சம்பாரி]

சம்பால் *šam-pāl,* பெ. (n.) பச்சடி வகை (வின்.); a kind of savoury dish or preparation.

தெ. சம்பாரு

[சம்பல்[2] → சம்பால்]

சம்பாலம் *šambālam,* பெ. (n.) ஆட்டுக்கடா (யாழ்.அக.); he-goat.

[சம்பளம்[4] → சம்பலம் → சம்பாலம்]



சம்பாலம்

சம்பாவாலுகி šambā-vālugi, பெ. (n.) வாலுளுவை; spindle tree - Celastrus paniculata (சா.அக.).

சம்பாளி *šambāḷi,* பெ. (n.) ஒருவகை நெல்; a variety of paddy.

ம. சம்பாளி.

[சம்பா[1] → சம்பாளி]

சம்பான் *šambān,* பெ. (n.) தோணி; skiff. "குரைகடலுக்கொரு சம்பானாய் வருவடிவேலா" (பஞ்ச. திருப்பு.).

Chin. san-pan

[அம் = நீர். அம் → அம்பு = நீர், நீர்நிலை, நீர்த்தொடர்பு கொண்டது. அம்பு → அம்பி → அம்பான் → சம்பான் = நீரில் செல்வது, தோணி]

சம்பானோட்டி *šambān-ōtti,* பெ. (n.) தோணி நடத்துவோன் (வின்.); master of a skiff, pilot.

[சம்பான் + ஓட்டி]

சம்பிகபாகம் *šambiga-bāgam,* பெ. (n.) கொன்றை; common cassia - Cassia fistula (சா.அக.).

சம்பிகோ *šambigō,* பெ. (n.) எலுமிச்சை; lime-Citrus medica acida (சா.அக.).

[சம்பு[6] → சம்பிகோ]

சம்பிளி *šampiḷi,* பெ. (n.) சம்பளி (யாழ்ப்.) பார்க்க; see *šambaḷi.*

[சம்பளி → சம்பிளி]

சம்பீரம்[1] *šambīram,* பெ. (n.) 1. எலுமிச்சை; lime - Citrus medica acida. 2. கிச்சிலி; jambiri orange - Citrus aurantium nobilis (jambira) (சா.அக.).

சம்பீரம்[2] *šambīram,* பெ. (n.) நாவல்; jaumoon plum.

[சம்பு[4] → சம்பீரம்]

சம்பு[4] பார்க்க.

சம்பு[1]-தல் *šambu-,* 5 செ.கு.வி. (v.i.) கூம்புதல்; to lose zeal or enthusiasm 'மனஞ் சம்பித் திரியாமல்' (தஞ்சை. சர. ii, 119).

[சும் → சம் → சம்பு. சும் = சுருங்குதல், குறுகுதல். சும் → சுண்டு = நீர்வற்றுதல், குறைதல். சும் → சும்பு = வாடிச்சுருங்குதல். சும்பு → சம்பு]

சம்பு[2]-தல் *šambu-,* 5 செ.கு.வி. (v.i.) விலை குறைதல்; to fall in price.

[சும் → சும்பு = வாடிச் சுருங்குதல், விலைக் குறைதல். சும்பு → சம்பு]

சம்பு[3] *šambu,* பெ. (n.) *சம்பங்கோரை;* elephant grass. "சம்பறுத்தார் யாக்கைக்கு" *(நல்வழி, 38).* 2. நெட்டி *(அக.நி.)* sola pith.

க. சம்பு; தெ. சம்பு, சம்ம

[சும் → சம் → சம்பு]

சம்பு[4] *šambu,* பெ. (n.) *1.* நாவல் *(பிங்.);* jaumoon plum. *2. சம்புத்தீவு;* one of the annular continents. *3.* **சம்பாதி**[2] *பார்க்க;* see *sampādi.* "சம்பு வென்பாள் சம்பாபதியினள்" *(மணிமே. பதி. 8).* *4.* **சம்புநதி** (சங். அக.) பார்க்க; see *šambu-nadi.*

மறுவ. சாட்டுலம்

[யா = கருமைக்கருத்து வேர். யாமரம் = கரிய அடிப்பகுதியை உடைய மரம். யா → யாம்பு → சாம்பு → சம்பு]

இந்தியா என்னும் நாவலம் பொழில், பழங் காலத்தில் நாவல் மரத்தால் சிறப்புற்றிருந்தமை யால், "நாவலந் தண்பொழில் நண்ணார் நடுக்குற" *(மணிமே. 22, 29)* எனப்பட்டது. 'கருங்கனி நாவல்" *(புறம். 177:1, மலை. 135).* "இருங்கனி" *(நற். 35:2)* எனக் கருமையுணர்த்தும் அடைகளுடன் வந்துள்ளமை, கருமை யடிப்படையில் நாவல் பெயர் பெற்றமை விளங்கும். 'சம்பு'வும் கருமைக்கருத்தினின்று வளர்ந்திருப்பது, அது நாவலின் ஒரு பொருட் பன்மொழியாய் விளங்குவதை, உறுதிப் படுத்துதல் காண்க.

jambu, the rose-apple; Drav. sembu, red (C.G.D.F.L. 577).

த. சம்பு → Skt. jambu

சம்பு[5] *šambu,* பெ. (n.) **சம்புகம்** (பிங்.) பார்க்க; see *šambugam.*

சம்பு[6] *šambu,* பெ. (n.) *எலுமிச்சை;* sour lime.

[சம் → சம்பு]

சம்பு[7] *šambu,* பெ. (n.) *செய்யுளும் உரை நடையும் கலந்து வரும் சிற்றிலக்கிய வகை;* a literary composition in mixed prose and verse.

[அம் → சம் → சம்பு]

த. சம்பு → Skt. šampā

சம்புகம் *šambugam,* பெ. (n.) *நரி;* fox, jackal. "பல சம்புகங்க டுதிசொல்ல" *(பாரத. வேத். 53).*

[சம்பு → சம்புகம்]

சம்புச்சயனம் *šambu-c-cayanam,* பெ. (n.) ஆல் *(மூ.அ.),* திருமாலின் படுக்கை; banyan as the couch of Tirumāl *(செ.அக.).*

[சம்பு + சயனம்]

சம்புசம்பல் *šambu-sambal,* பெ. (n.) *சதகுப்பை;* dili-seed - Anethum graveolens *(சா.அக.).*

[சம்பு → சம்பல்]

சம்புடம் *sambuḍam,* பெ. (n.) *1. சிறுசெப்பு;* small round metal casket. *2. புத்தகப்பகுதி;* volume, part of a book. *3. நாட்டியத்தில் இருக்கை ஒன்பதனுள் ஒன்று (சிலப். 8: 25);* a posture in sitting one of nine irukkai.

[செம்படம் → செம்புடம் → சம்புடம்]

சம்புத்தீவு *šambu-t-tīvu,* பெ. (n.) நாவலந்தீவு *(மணிமே. 17: 62.);* one of the annular continents.

[சம்பு + தீவு. தீர்வு → தீவு]

சம்புநதி *šambu-nadi,* பெ. (n.) மேருமலைக்கு வடக்கில் ஓடும் நதி; a river believed to flow north of mt. Mēru.

[சம்பு + நதி. சம்புச் (நாவல்)சாறு ஆறாக ஓடுகிறது என்னும் கருத்தடிப்படையில் பெற்ற பெயர்]

சம்புநாவல் *šambu-nāval,* பெ. (n.) காட்டில் வளரும் பெருநாவல் மரம்; large - fruited jaumoon or East Indian rose-apple - Eugenia jambos.

மறுவ. பன்னீர் பழமரம்.

[சம்பு + நாவல்]

இதன் பழம் சிறிய அரத்திப்பழம் (ஆப்பிள்) போலிருக்கும்; சுவை குறைந்தது. பன்னீர் மணமுடையது. இதிலிருந்து பன்னீர் எடுக்கலாம். இம் மரத்தின் பட்டை, கொட்டை முதலியவை மருத்துவக் குணமுடையன *(சா.அக.).*

சம்புப்பூசி *šambu-p-pūši,* பெ. (n.) *வரிக் கடுக்காய்;* yellow-striped gall-nut *(சா.அக.).*

சம்புப்பெட்டி *šambu-p-petti,* பெ. (n.) *மீனைச் சேர்த்து வைக்கும், சம்பங்கோரையால் முடையப்பட்ட கூடை (மீனவ.);* a kind of box made of rushes.

[சம்பு + பெட்டி. பிள் → பிளா → பிழா = வாயகன்ற ஓலைக்கொட்டான். பிள் → (பெள்) → பெட்டி]

சம்புப்பொற்சரம் *šambu-p-porcaram,* பெ. (n.) சரக்கொன்றை; common cassia - Cassia fistula *(சா. அக.).*

[சம்பு → சம்பை = செழித்து வளர்வது. சம்பு + பொற்சரம். செழிப்பான பூக்களைக் கொண்டது. ஒ.நோ: சர் = நேராக விரைந்து செல்லும் குறிப்பொலி. சர் → சரம் + கொன்றை - சரக்கொன்றை = நேர் (நீண்டு) மலர்த்தொடையாகப் பூக்கும் கொன்றை]

சம்புமலாக்கா *šambu-malākkā,* பெ. (n.) நாவல் வகை; Malay apple - Eugenia malaccensis.

[சம்பு + மலாக்கா]

சம்புராகம் *šambu-rāgam,* பெ. (n.) கொன்றை; cassia - Cassia fistula *(சா.அக.).*

[சம்பு → சம்புராகம்]

சம்புரோதம் *šambu-rōdam,* பெ. (n.) முள்வெள்ளரி; foreign cucumber - cucumis sativus *(சா.அக.).*

சம்புவராயர் *šambuvarāyar,* பெ. (n.) வன்னியர், கள்ளர்களின் பட்டப்பெயர்; a title among the vanniya and kaḷḷa caste.

சம்புவன்னி *šambu-vanni,* பெ. (n.) மரபுவழி மரம்; Arjuna's penance tree - Prosopis spicigera *(சா.அக.).*

சம்புவிரதி *šambu-viradi,* பெ. (n.) நாவல் நட்டுப் பிற மதத்தினரைச் சொற்போருக் கழைத்து வெல்ல உறுதி கொண்டவன்-ள்; religious debator who has taken the vow of challenging heretics to a disputation, by planting a branch of nāval tree. "வென்றாள் மற்றிவள் சம்புவிரதியாய்த் திரிந்தெங்கும்" *(நீலகேசி, 286).*

[சம்பு + விரதி]

சம்புளி *šambuḷi,* பெ. (n.) சம்பளி (யாழ்ப்.) பார்க்க; see *šambaḷi.*

[சம்பளி → சம்புளி]

சம்பூ *šambū,* பெ. (n.) நாவற்பழம்; jaumoon plum *(சா.அக.).*

[சம்பு → சம்பூ]

சம்பு[4] பார்க்க

சம்பூகம் *šambūgam,* பெ. (n.) 1. நாவல்; jaumoon plum. 2. நரி; jackal.

[சம்பு → சம்பூ → சம்பூகம்]

சம்பூகம் *šambūgam,* பெ. (n.) கிளிஞ்சல் வகை; a bivalue shell.

[சங்கு → சம்பு → சம்பூகம்]

சம்பூதம் *šambūdam,* பெ. (n.) பிறப்பு; birth.

சம்பூலமாலிகை *šambūla-māligai,* பெ. (n.) புது மணவாட்டிக்கும், மணவாளனுக்கும், பெண்ணின் தோழிகள் எழுதும் புதுமையான ஒப்பனை எழுத்து *(யாழ்.அக.);* a kind of fancy letter written by bride's friends to the bridegroom and bride.

சம்பை[1] *šambai,* பெ. (n.) சண்பை[1] பார்க்க; see *šaṇbai[1].*

[சண்பை → சம்பை]

சம்பை[2] *šambai,* பெ. (n.) சம்பங்கோரை; elephant grass.

[சம்பு → சம்பை]

சம்பை[3] *šambai,* பெ. (n.) 1. சம்பைச்சரக்கு பார்க்க; see *šambai-c-carakku.* 2. மீன் (நாஞ்.); fish.

[சாம்பு → சம்பை]

சம்பை[4] *šambai,* பெ. (n.) மின்னல் (பிங்); lightning.

மறுவ. சவலை, சபலை, சஞ்சாலை

சம்பை[5] *šambai,* பெ. (n.) சம்பைத்தாளம் பார்க்க; see *šambai-t-tāḷam.* "சம்பைக்கு லகுவநு துரிதந் துரிதமாம்" *(பரத. தாள. 21).*

[சம்பைதாளம் → சம்பை (மரூஉ)]

சம்பை[6] *šambai,* பெ. (n.) செழிப்பு; luxuriant growth.

[சம்பு → சம்பை]

சம்பை[7] *šambai,* பெ. (n.) கருவாடு (மீனவ.); salted and dried fish.

[சம் → சம்பு → சம்புதல் = நீர் வற்றுதல். சம் → சம்பை → சம்பை]

சம்பைக்குத்தகை *šambai-k-kuttagai,* பெ. (n.) மீன் குத்தகை (வின்.); fish lease.

[சம்பை + குத்தகை]

சம்பைக்கொங்காணி *šambai-k-koṅgāṇi,* பெ. (n.) சம்பங்கோரையாற் பின்னிய மழை தாங்கும் கூடு (வின்.); rain-proof covering made of elephant grass.

மறுவ. சம்பங்கூடு

[சம்பு[1] → சம்பை + கொங்கணி]

சம்பைச்சரக்கு *šambai-c-carakku,* பெ. (n.) 1. மட்டச்சரக்கு (வின்.); inferior or rejected goods. 2. எளிதில் அழியக்கூடிய பண்டங்கள் (இ.வ.); perishable articles.

[சம்பு → சம்பு. சம்புதல் = விலைகுறைதல். சம்பு → சம்பல் = விலையிறக்கம், மலிவு. சம்பு → சம்பை + சரக்கு]

சம்பைத்தாளம் *šambai-t-tāḷam,* பெ. (n.) எழுவகைத் தாளத்தொன்று; a variety of time-measure, one of seven-tāḷam. (செ.அக.).

[சம்பை + தாளம்]

சம்மட்டி[1] *šammaṭṭi,* பெ. (n.) 1. குதிரையோட்டுங் கருவி (பிங்.); horsewhip. 2. சுத்தியல்வகை (பிங்.); smith's large hammer, sled.

ம., பட. சம்மட்டி; க. சம்மட்டிகெ, சம்மடிகெ; தெ. சம்மெட; து. சம்மடிக; துட. சொமொட்ய்; E. hammer; AS. hamor; G. hammer; Ical. hamarr (a tool for beatings; E. smith (one who smites); Skt. sam - mardani

[சமட்டி → சம்மட்டி. சமட்டுவது சமட்டி[



சம்மட்டி

சம்மட்டி[2] *šammaṭṭi,* பெ. (n.) ஒருவகைப் பூடு; a plant (செ.அக.).

சம்மட்டிக்கூடம் *šammaṭṭi-k-kūḍam,* பெ. (n.) மாழைகளை அடித்துத் தகடாக்கும் சுத்தியல் வகை (கொ.வ.); hammer for beating metal into plates or thin leaves.

ம. சம்மட்டிக்கூடம்

[சம்மட்டி + கூடம்]

சம்மட்டிமக்கள் *šammaṭṭi-makkaḷ,* பெ. (n.) உறவினரல்லாதாரோடு மணம் புரிந்து கொள்ளும் கள்ளர் இனம் (சம்மட்டியைக் கொண்டவர்) (E.T.vi. 291); lit., hammer-men. an exogamous sect of kaḷḷar caste.

[சம்மட்டி + மக்கள்]

சம்மணங்கால் *šammaṇaṅgāl,* பெ. (n.) சம்மணம் பார்க்க; see *šammaṇam.*

து. சக்கப்ப, சக்ரமட்டெ

[சம்மணம் + கால்]

சம்மணங்கால்போடு-தல் *šammaṇaṅgāl-pōḍu-,* 20 செகுவி. (v.i.) இரு காலையும் மடக்கி நிலத்தில் உட்காருதல்; to squat down with folded legs.

து. சக்கப்ப குள்ளுனி, சக்க மக்க குள்ளுனி; பட. சக்கரமள்ளு ஆக்கி குளி

[சம்மணம் + கால் + போடு-,]

சம்மணங்கால் போடுதல்

சம்மணம் *šammaṇam,* பெ. (n.) சப்பணம் (இ.வ.); a cross-legged sitting posture. சம்மணம் போட்டுக்கொண்டு சாப்பிடு.

ம. சம்மணம்; தெ. சம்மணம்; Pkt. sammaṇa

[சப்பளி → சப்பளம் → சப்பணம் → சம்மணம் (மு.தா.120)]

சம்மாட்டி *šammāṭṭi,* பெ. (n.) 1. கட்டுமரச் சொந்தக்காரன்; owner of catamaran. 2. வள்ளத்தின் உரிமையாளன்; owner of boat. 3. மீன்பிடிகலத்தின் சொந்தக்காரன் (மீனவ.); owner of fishing vessel.

சம்மாடி *šammāḍi,* பெ. (n.) வள்ளத்தின் (படகின்) தலைவர்; leader of a boat (மீனவ.).

[சம்மாட்டி → சம்மாடி]

சம்மாணம் *šammāṇam,* பெ. (n.) சம்மணம்; squatting. 'சம்மாணங் கொட்டுமாப் போலே' (தத்துவப்பிர. 108, உரை. பக்.101).

[சம்மணம் → சம்மாணம்]

சம்மாதம் *šammādam,* பெ. (n.) 1. ஒரு பழைய வரி (I.M. P. Cg. 835); an ancient tax. 2. ஆய ஒப்பந்தம் முதலியவற்றில் அரசினரோடு வணிகர் செய்துகொள்ளும் ஒப்பந்தம் (வின்.); a contract or commutation made by a merchant with the officers of excise.

சம்மான் *šammāṉ,* பெ. (n.) தோணி (இ.வ.); skiff.

[கம் → கம்மம் → கம்மான் → சம்மான்- தோண்டிச் செய்யப்பட்டது. கம் = செய்]

சம்மானம் *šammāṉam,* பெ. (n.) சம்மான் (இ.வ.) பார்க்க; see *šammāṉ.*

[சம்மான் → சம்மானம்]

சம்மியம் *šammiyam,* பெ. (n.) கூத்தின் வகை (யாழ்.அக.); a kind of dance.

சம்மியாகம் *šammiyāgam* பெ. (n.) கொன்றை (மலை.); Indian laburnum.

சம்மெனல் *šam-m-eṉal,* பெ. (n.) இறுமாப்பு (கம்பீர)க் குறிப்பு (கொ.வ.); onom. expr. signifying majestic bearing. அவன் பல்லக்கேறிச் சம் மென்று புறப்பட்டுப் போனான் (செ.அக.).

க. சம்மனெ; பட. சம்மன

[சம் + எனல்]

சமஅகவை *šama-agavai,* பெ. (n.) ஒத்த பருவம்; equal age.

து. சமகட்டுநெல

[சமம் + அகவை]

சமக்கட்டுநிலம் *šama-k-kaṭṭu-nilam,* பெ. (n.) சமநிலம்[1] (இ.வ.) பார்க்க; see *šama-nilam*[1].

து. சமகட்டுநெல

[சமம் + கட்டு + நிலம்]

சமக்கிராமம் *šama-k-kirāmam,* பெ. (n.) 1. ஒத்த வருமானமுள்ள ஊர் (வின்.); a village having equal revenues as another. 2. அடுத்த ஊர்; neighbouring village (செ.அக.).

[சமம் + கிரமம்]

சமக்கோடு *šama-k-kōḍu,* பெ. (n.) சமமானது என்பதைக் காட்டும் சிறு இணைகோடுகள் (=); the symbol (=) which shows equal.

[சமம் + கோடு]

சமகம் *šamagam,* பெ. (n.) சிவனைப் போற்றிப் பாடும் மந்திரம்; a vēdic hymn in praise of Šiva 'நமகார் சமகம்' (சேதுபு. இராமநா.47).

[சமம் → சமகம்]

சமகரி-த்தல் *šamagari-,* 4 செ.குன்றாவி. (v.t.) அளந்து கட்டுதல்; to survey. 'ராஜராஜதேவர் பொது ஊர் சமகரிக்கிற காலத்து' (S.I.I. vi, 181).

[சம(ம்) + கரி-,]

சமகன் *šamagaṉ,* பெ. (n.) சந்துசெய்விப்போன்; middle men, one who incharge in reproachment.

[சமம் → சமகன்]

சமகன்னி *šama-kaṉṉi,* பெ. (n.) பக்குவமான பெண் (யாழ்ப்.அக.); a girl who has attained puberty.

[சமை + கன்னி - சமைகன்னி → சமகன்னி]

சமகாலம் *šama-kālam,* பெ. (n.) 1. தான் வாழும் காலம், ஒருவர் வாழ்ந்த, தோன்றிய காலம்; contemporary period. 'சமகால இலக்கியங்களைப் பாடமாக வைக்க வேண்டும்' (உ.வ.). 2. ஒரே காலம்; same period or time.

க. சமகால

[சமம் + காலம்]

சமகோணம் *šama-kōṇam,* பெ. (n.) ஒத்த கோணங்களையுடைய வடிவம் (வின்.); equiangular figure.

[சமம் + கோணம். கோண் = வளைவு, வளைந்த முனை. கோண் = கோணம்]

சமங்காலிகம் *šamaṅgāligam,* பெ. (n.) மஞ்சிட்டி; a plant, madder of Bengal - Bixa orallena (சா.அக).

சமங்கி *šamaṅgi,* பெ. (n.) சமங்கை[2] பார்க்க; see *šamaṅgai.*

சமங்கை[1] *šamaṅgai,* பெ. (n.) தொட்டாற்சுருங்கி; a sensitive plant.

சமங்கை[2] *šamaṅgai,* பெ. (n.) ஆடுதின்னாப் பாலை; Indian worm killer.

[சமங்கை[1] → சமங்கை]

த. சமங்கை → Skt. samaṅga

சமங்கை

சமச்சக்கரம் *šama-c-cakkaram,* பெ. (n.) நில நடுக்கோடு (வின்.); equator, as being equidistant from the poles.

[சமம் + சக்கரம்]

சமச்சதுரம் *šama-c-caduram,* பெ. (n.) ஒத்த அளவுள்ள நாற்கோணம்; square.

ம. சமசதுரம்; தெ. சமசதுரச்ரமு

[சமம் + சதுரம். சது → சதுர் → சதுரம்]

சமச்சாதி *šama-c-cāti,* பெ. (n.) ஒத்த இனத்தார் (இ.வ.); homogeneous race, identical caste.

ம., க. சமசாதி

[சமம் + சாதி]

சமசாதி → Skt. sama-jāti

சமசந்தத்தாண்டகம் *šamašanda-t-tāṇḍagam,* பெ. (n.) (செய்யுள்) சந்தவடியுந் தாண்டக வடியும் ஒத்து வரும் பாவினம் (யாப். வி. 94, பக். 456); variety of verse in which šandam lines and tāṇḍagam lines are balanced.

[சமம் + சந்தம் + தாண்டகம்]

சமசந்தி *šama-sandi,* பெ. (n.) இயைபு (வின்.); concord, correspondence.

[சமம் + சந்தி. அந்தி → சந்தி]

சமசந்திரன் *šama-sandiraṉ,* பெ. (n.) கோள் மறைப்பின் (கிரகணத்தின்) நடுக்காலத்தைக் காட்டும் நிரைகோடு (சாதிரஸ்புடம்) (வின்.); moon's true langitude at middle of an eclipse.

[சமம் + சந்திரன்]

சமசித்தத்துவம் *šama-šittattuvam,* பெ. (n.) எல்லாவற்றையுஞ் சமமாகக் கருதும் மனநிலை (மணிமே. 30:253, உரை); mental attitude of viewing all things alike, impartiality.

[சமம் + சித்தத்துவம்]

சமசியை *šamašiyai,* பெ. (n.) சமசை பார்க்க; see *šamašai.*

[சமசை → சமசியை]

சமசுரம் *šama-šuram,* பெ. (n.) (இசை) நடுவ இசைக் குறியீடு (மத்திமஸ்வரம்); middle note. "இளியென்னும் நரம்பு சமசுரமாக" (சிலப். 17, கூத்துள். 7, உரை).

[சமம் + சுரம்]

சமசை *šamašai,* பெ. (n.) பாடிமுடிக்கும்படி ஒருவனுக்குக் கொடுக்குங் பாவுறுப்பு; word phrase or idea proposed by one person to be incorporated in a stanza by another, as in a trial of poetic skill. "நீரோ சமசை நிலையிட்டீர்" (தனிப்பா. i, 18,30).

[சமம் → சமசை. இனி, சய்யல் → சச்சம் → சமசம் → சமசை என்றுமாம்]

சமசோடி *šama-šōḍi,* பெ. (n.) சமவிணை பார்க்க; see *šamaviṇai* (செ.அக.).

[சமம் + சோடி. சுவள் → சுவடி → சோடி = இணை]

சமஞ்சகம் *šamañjagam,* பெ. (n.) பொருத்தம்; propriety, fitness (செ.அக.).

[சமம் → சமஞ்சகம்]

சமஞ்செய்-தல் *šamañjey-,* 1 செ.குன்றாவி. (v.t.) 1. மேடுபள்ளம் அற்றதாக்குதல்; to make even. 2. தட்டையாக்குதல்: to make flat. 3. சரியளவின

தாக்குதல்; to make equal to *4.* ஒழுங்காக்குதல்: to put in order. *5.* நல்லதாக்குதல் அல்லது உரியதாக்குதல்; to make nice or proper.

க. சமமாடு, சமகொளிசு; தெ. சமமுசேயு; பட. சமமாடு

[சமம் + செய்-,]

சமட்டி[1] *šamaṭṭi,* பெ. (n.) எல்லாம்; all.

[சவட்டு → சமட்டு → சமட்டி]

சமட்டி[2] *šamaṭṭi,* பெ. (n.) தொகுதி; aggregate, total. 'வீரியமிகு சமட்டி' *(கைவல். தத்துவ. 43).*

[சவட்டு → சமட்டு → சமட்டி (ஒ.மொ.377)]

சமட்டு-தல் *šamaṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) *1.* காலால் துவைத்தல் (இ.வ.); to tread, trample. *2.* அடித்தல்; to strike.

ம. சவிட்டு; E. smite (to strike); AS. smiten; Du. smijten

[சவட்டு → சமட்டு → சமட்டுதல் (ஒ.மொ.377)]

சமட்டுச்சக்கரம் *šamaṭṭu-c-cakkaram,* பெ. (n.) மலையாளத்தில் வழங்கும் நீரிறைக்கும் பொறிவகை (இ.வ.); a mechanism for baling out water, turned by treading, used in the west coast *(செ.அக.).*

[சமட்டு + சக்கரம்]

சமட்டுப்படி *šamaṭṭu-p-paḍi,* பெ. (n.) வண்டியில் ஏறியிறங்க அமைக்கும் படி (நாஞ்); footboard in a carriage.

[சமட்டு + படி]

சமட்டுவண்டி *šamaṭṭu-vaṇḍi,* பெ. (n.) *1.* இரு கால்களால் மாறிமாறி அழுத்தி இயக்கும் வகையில் அமைந்த இரு சக்கரங்களைக் கொண்ட வண்டி; bicycle. *2.* முச் சக்கரங்களைக் கொண்ட மிதியிழுவை; cycle rickshaw.

மறுவ. மிதிவண்டி

ம. சவிட்டுவண்டி

[சமட்டு + வண்டி]

கால்களால் துவைத்தல் என்னுமடிப்படையில் சமட்டுதல் மிதிவண்டிக்கு ஆயிற்று.



சமட்டுவண்டி

சமண் *šamaṇ,* பெ. (n.) *1.* அருகமதம்; jainism. "தருக்கினாற் சமண் செய்து" *(திவ். பெரியதி. 2, 1,7).* *2.* அம்மணம்; nudity. "சமணே திரிவார்கட்கு" *(தேவா. 552, 10).*

Pkt. samaṇa

[அமண் → சமண்]

சமண்டலை *šamaṇḍalai,* பெ. (n.) சவண்டிலை (யாழ்ப்.) பார்க்க; Trincomalee red wood.

சமண்மை *šamaṇmai,* பெ. (n.) குறை (யாழ்.அக.); defect.

[சமழ்மை → சமன்மை → சமண்மை]

சமணம் *šamaṇam,* பெ. (n.) சமண் பார்க்க; see *šamaṇ.*

[அமண் → சமண் → சமணம்]

சமணர் *šamaṇar,* பெ. (n.) அருகமதத்தினர் (சைனர்); Jains. "சமணருஞ் சாக்கியரும்" *(திவ். திருவாய். 4, 10, 5).*

[அமணர் → சமணர்]

சமணர்திடல் *šamaṇar-tiḍal,* பெ. (n.) புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Pudukkōṭṭai district.

[சமணர் + திடல்]

சமணர்கள் அதிகம் வாழ்ந்த ஊர். இப் பகுதியில் காணப்படும் கல்வெட்டில் திருவெண்ணாயில் ஐஞ்ஞூற்றுவப் பெரும்பள்ளி திருத்தல மாடம் என்று குறிக்கப்பட்டுள்ளது. அதனால் அப்பகுதியில் அக்காலத்தில் ஐந்நூற்றுவப் பெரும்பள்ளி என்னும் சமணக் கோயிலும் மடமும் இருந்திருத்தல் வேண்டும். அதன் காரணமாக அப்பகுதியில் தோன்றிய ஊர் சமணர் திடல் என்று பெயர் பெற்றிருக்க வேண்டும் என்று மயிலை சீனி வேங்கடசாமி கருதுவர் *(த.ஊ.பெ.).*

சமணி *šamaṉi,* பெ. (n.) இலவு மரம் (வின்.); silk-cotton tree.

சமத்தன் *šamattaṉ,* பெ. (n.) வல்லவன்; clever, skillful person.

[சமர் → சமர்த்து → சமர்த்தன் = திறமையானவன். சமர்த்தன் → சமத்தன்]

சமத்தாதிரி *šamattādiri,* பெ. (n.) கீழ்க்காய் நெல்லி; feather-foil - Phyllauthus polyphyllus alias Pniruri (சா.அக.).

சமத்தார் *šamattār,* பெ. (n.) நாட்டின் உட்பகுதிக்குரிய அதிகாரி (C.G.); petty revenue official in charge of a sub-division.

[சமம் → சமத்தார்]

சமத்தி[1] *šamatti,* பெ. (n.) முட்பலாசு; common coral tree - Erythrina indica (சா.அக.).

சமத்தி[2] *šamatti,* பெ. (n.) கெட்டிக்காரி (கொ.வ.); clever woman (செ.அக.).

[சமத்தன் (ஆ.பா.) → சமத்தி (பெ. பா.)]

சமத்திலை *šamattilai,* பெ. (n.) பெருங் கரணை அல்லது சேனைக் கிழங்கு; elephant yam - arum campanulatum alias Otaheita salap (சா.அக.).

சமத்து[1] *šamattu,* பெ. (n.) *1.* திறமை (சிலப். 5: 74,அரும்.); ability skill, cleverness. *2.* திறமையுள்ளவன்-ள் (Brah.); clever person.

[சமர்த்து → சமத்து]

சமத்து[2] *šamattu,* பெ. (n.) நாட்டின் உட்பிரிவு (C.G.); a division of a district or taluk.

சமத்து[3] *šamattu,* பெ. (n.) தேங்காய் மட்டையினாற் செய்யப்பட்ட தூரிகை (இ.வ.); a small brush made of coconut husk.

சமத்துக்காரம் *šamattu-k-kāram,* பெ. (n.) *1.* பேச்சுத்திறமை; cleverness, skill in speaking. *2.* செய்யுணயம்; poetic charm. *3.* தோற்றம்; aspect, manifestation.

து. சமத்கார

[சமத்து + காரம்]

சமத்துக்காரன் *šamattu-k-kāraṉ,* பெ. (n.) திறமையாளன் (வின்.); a clever man.

[சமத்து + காரன்]

சமத்துத்தச்சம் *šamattu-t-taccam,* பெ. (n.) இலைக்கள்ளி; leaf spurge-Euphorbia neirifolia (சா.அக.).

சமத்துவம் *šamattuvam,* பெ. (n.) உலக மக்கள் அனைவரும் சமம் என்றும் அவர்களுக்குச் சம வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்றும் கூறும் கொள்கை; equality; egalitarianism. 'சமத்துவம் பேசுவது எளிது, கடைப்பிடிப்பது கடினம்'.

தெ. சமத்வமு

[சமம் + அத்துவம் - சமத்துவம்]

Skt. atva → த. அத்துவம்

சமதரிசனம் *šama-darisaṉam,* பெ. (n.) சமப் பார்வை பார்க்க; see *šama-p-pārvai* (செ.அக.).

[சமம் + தரிசனம்]

Skt. daršana → த. தரிசனம்

சமதலம் *šamataḷam,* பெ. (n.) சமதளம் பார்க்க (கொ.வ.); see *šama-taḷam.*

[சமதளம் → சமதலம்]

சமதலை *šama-talai,* பெ. (n.) புடைவையின் உள்தலைப்பு; inner end of a woman's cloth.

[சமம் + தலை]

சமதலைப்பு *šama-talaippu,* பெ. (n.) இரு தலைப்புகளிலும் ஒத்த கரையுள்ள புடைவை (இ.வ.); saree with ends of same pattern.

[சமம் + தலைப்பு]

சமதளம் *šama-taḷam,* பெ. (n.) மேடுபள்ளம் இல்லாமல் ஒரே சீராக இருக்கும் நிலம்; level; evenness. 'சமதளமாகப் பார்த்து வீட்டைக் கட்டு'.

[சமம் + தளம்]

சமதனம் *šamadaṉam,* பெ. (n.) *1.* மருக்காரை; common emetic nut; poison fruit - Randia dumetorum - alias R. floribunda. *2.* முள்ளம்பன்றி; porcupine (சா.அக.).

சமதாடு *šamatāḍu,* பெ. (n.) *1.* உடைவாள் (இவ.); sword, cutlass, a sword worn as an insignia of royalty. *2.* பட்டாக்கத்தி; a dagger.

ம. சமதாடு; க. சமதாடெ; தெ. சமுதாடு

[சமர் → சமர்த்து + ஆடு - சமர்த்தாடு → சமதாடு]



சமதாடு

சமதாடுக்கப்பல் *šamadāḍu-k-kappal,* பெ. (n.) நாட்டுப் புகையிலை வகை (இ.வ.); an indigenous variety of tobacco.

சமதாளம் *šamatāḷam,* பெ. (n.) ஒன்பான் தாளத்தொன்று (திவா.); a variety of time measure, one of nava taḷam.

[சமம் + தாளம்]

சமதி *šamadi,* பெ. (n.) ஒப்பு; conformity.

க. சமதெ.

[சமம் → சமதி]

சமதை *šamadai,* பெ. (n.) *1.* ஒப்பு; equality, similarity. *2.* வன்மை, மென்மை, இடைமை இம்மூன்றுஞ் சமமாகக் கலந்துவரத் தொடுக்கும் செய்யுட்குணம் (தண்டி. 17.); harmonious blending of hard, soft and medial letters in a verse, a metrical a poetic composition. *3.* நடுநிலைமை; fairness, impartiality.

க. சமதெ.

[சமம் → சமதை]

சமந்தகூடம் *šamanda-kūḍam,* பெ. (n.) இலங்கைத் தீவிலுள்ள ஒருமலை; Adam's Peak in Ceylon.

சமந்தம் *šamandam,* பெ. (n.) சமந்தகூடம் பார்க்க; see *šamanda-kūḍam.* "ஓங்குயர் சமந்தத் துச்சி மீமிசை" *(மணிமே. 11: 22).*

சமந்தன் *šamandaṉ,* பெ. (n.) சாமந்தன்[1] பார்க்க; see *šāmandaṉ*[1].

[அம் → அமை. அமைதல் = பொருந்துதல். அமை → அமைச்சன். த. அமைச்சன் → Skt. amātya அமை → சமை → சமைந்தன் → சமந்தன்]

சமந்தி *šamandi,* பெ. (n.) ஊதையடக்கி (வாதமடக்கி); wind-killer, Cleodendron phlomoides (சா.அக.).

[சமம் → சமந்தி = சமமாக்குவது, ஊதையை அடக்கிச் சமப்படுத்துவது]

சமநிலம்[1] *šama-nilam,* பெ. (n.) மேடு பள்ளமில்லாமல் சமமாக இருக்கும் நிலம்; plain country, level ground.

ம. சமநிலம்

[சமம்[2] + நிலம்]

சமநிலம்[2] *šama-nilam,* பெ. (n.) போர்க்களம் (வின்.); battle-field.

[சமர்[3] + நிலம் → சமர்நிலம் → சமநிலம். அமர் → சமர் = போர்]

சமநிலை[1] *šama-nilai,* பெ. (n.) *1.* நடுவு நிலைமை; fairness, impartiality. *2.* சரிநிகர்வு; equality. *3.* ஒப்பு; sameness. *4.* சமதை பார்க்க; see *šamadai.* *5.* நிறையொத்த நிலை; equilibrium.

[சமம்[1] + நிலை]

சமநிலை[2] *šama-nilai,* பெ. (n.) *1.* அமைதி நிலை (சாந்த நிலை); sentiment of tranquillity. 'மற்றிவ்வெட்டனோடுஞ் சமநிலைகூட்டி' *(தொல். பொருள். 251, உரை).* *2.* உள்ளச் சமநிலை; equanimity.

[சமம்[1] + நிலை]

சமநிலை[3] *šama-nilai,* பெ. (n.) *1.* ஏற்றத்தாழ்வு, வேறுபாடு ஆகியவை இல்லாத ஒப்பான நிலை; equal footing, equality. தலைவராயிருந்தாலும் தொண்டராயிருந்தாலும் சமநிலையில் வைத்துத் தான் பேசுவார். *2.* விளையாட்டுகளில் வெற்றி தோல்வியைக் கணிக்க முடியாத நிலை; draw, tie. 'நேற்றைய மட்டைப்பந்து (கிரிக்கெட்) ஆட்டம் சமநிலையில் முடிந்தது'.

ம. சமநில

[சமம்[2] + நிலை]

சமநிலை[4] *šama-nilai,* பெ. (n.) ஐவகைக் காலடிகளுள் (பாதங்களுள்) ஒன்று (சிலப். பக்.81); a pose, one of 'aivagai-p-pādam'.

[சமம்[2] + நிலை]

சமநிலையாளர் *šama-nilai-y-āḷar,* பெ. (n.) நிலை, மதிப்பு, தன்மை, அகவை போன்ற வற்றில் ஒத்த தன்மையுள்ளவர்; equal.

[சமநிலை + ஆளர்]

சமநிலைவஞ்சி *šama-nilai-vañji,* பெ. (n.) இருசீரடியால் வரும் வஞ்சிப்பாட்டு (தொல். பொருள். 354, உரை); a vanji stanza having two feat in each line.

[சமம்[2] + நிலை]

(எ-டு.) அன்னைபோ லினியாய் !
வன்னிசேர் சடையாய் !
இன்னல்சூழ் வினைதீர்!
உன்னுவா ரமுதே! (தண்டி. பக்.252)

சமநிலைவெண்பா *šama-nilai-venbā,* பெ. (n.) சவலைவெண்பா (சங். அக.) பார்க்க; see *šavalai-venbā.*

[சமநிலை[2] + வெண்பா]

சமநிறை *šama-nirai,* பெ. (n.) சமன் தூக்கிய நிலை (புதுவை); equilibrium.

[சமம் + நிறை]

சமநோக்கு *šama-nōkku,* பெ. (n.) சமப்பார்வை பார்க்க; see *šama-p-pārvai.*

[சமம் + நோக்கு]

சமப்படுத்து-தல் šama-p-paḍuttu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மேடுபள்ளத்தை நீக்கி மட்டமாக்கு; to make level. தோட்டத்தைச் சமப்படுத்த வேண்டும். 2. ஒழுங்குபடுத்து; to put in order. மழைக்குமுன் ஆற்றுக்காலைச் சமப்படுத்த வேண்டும். 3. தக்கதாக்கு, நல்லதாக்கு; to make proper or nice.

க. சமகொளிசு; பட. சமமாடு

[சமம் + படுத்து-,]

சமன்படுத்து-தல் பார்க்க

சமப்பார்வை *šama-p-pārvai,* பெ. (n.) எல்லாவற்றையும் ஒரேமாதிரியாக நோக்குகை; impartial view; a impartial attitude, considering all things alike.

தெ. சமத்ருஷ்டி

[சமம் + பார்வை]

சமப்பார்வையன் *šama-p-pārvaiyan,* பெ. (n.) பொதுநோக்குடையவன்; one who views impartially.

[சமம் + பார்வையன்]

சமப்பால் *šama-p-pāl,* பெ. (n.) வன்பாலும், மென்பாலுமின்றி இடைத்தரமாயுள்ள நிலம், முல்லை நெய்தனிலங்கள் (திவா.); sylvan or maritime tract, as mid-way between vanpāl and menpāl.

[சமம்[2] + பால்]

சமபந்தி *šama-pandi,* பெ. (n.) 1. விருந்தில் ஒரே வரிசை; same row at a feast. "சமபந்தியினோர்க்கு" (சேதுபு. தனுக்.10). 2. ஒரே பந்தியில் உணவு கொள்ளும் உரிமை; right of taking meals at the same table, commensality. 'அவனுக்குச் சமபந்தியில்லை' (உ.வ.).

[சமம்[2] + பந்தி]

சமபாகம் *šama-bāgam,* பெ. (n.) ஒத்த பங்கு; an equal share.

க. சமபாக

[சமம் + பாகம்]

சமபாதவிருத்தம் *šama-pāda-viruttam,* பெ. (n.) இசைப்பா வகை (சிலப். 6: 35, உரை); a musical composition.

[சம்பாதம் + விருத்தம்]

சமபாவு *šama-bāvu,* பெ. (n.) நெல்வகை; a kind of paddy.

ம. சம்பாவு, செம்பாவு

[சம்பு → சம்பா. ஒ.நோ: கும்பு → கும்பா, தும்பு → தும்பா. குண்டு → குண்டா. சம்பு என்பது சிறந்த நெல்வகைக்கும் சிறந்த கோரைவகைக்கும் பொதுப்பெயர். சம்பா → சம்பாவு → சமபாவு]

சமபூமி[1] *šama-būmi,* பெ. (n.) சமநிலம்[1] பார்க்க; see *šama-nilam.*

க. சமபூமி

[சமம் + பூமி]

சமபூமி[2] *šama-būmi,* பெ. (n.) போர்க்களம்; battle field.

[சமர் + பூமி - சமர்பூமி → சமபூமி]

Skt. bhūmi → த. பூமி

சமபோகம் *šama-bōgam,* பெ. (n.) சம விளைவு பார்க்க; see *šama-viḷaivu.*

[சமம் + போகம். பூ → பூகம் → போகம்]

சமம்[1] *šamam,* பெ. (n.) மனவமைதி; peace of mind. "படர்ந்ததச் சமதமப் பதாதி" (பிரபோத. 29, 27).

[உம் → அம் → சம் → சமம்]

சமம்[2] *šamam,* பெ. (n.) 1. ஒப்பு (பிங்.); likeness, similarity, equality. 2. ஒத்தபொருள்; equal or similar object. 3. நடுவுநிலை; impartiality, free from passion, fairness. "செல்சம முருக்கி" (திருமுரு. 99). 4. இரட்டையான எண்; even number. "சமநிலையாயின்" (பன்னிருபா. 140). 5. ஏற்றத்தாழ்வின்மை, ஒரே சீரான தன்மை, மாறுபாடற்ற தன்மை; evenness, levelness. 6. ஒத்த அடிகளையுடைய மண்டிலம் (விருத்தம்) (வீரசோ.யாப். 33, உரை); stanza in which all the lines have the same number of feet.

ம. சமம்; க., பட. சம; தெ. சமமு; L. similis; E. semblance, simile

[உம் → அம். அம்முதல் = பொருந்துதல். அம் → சம் → சமம் = ஒப்பு]

த. சமம் → Skt. šama

சமம்[3] *šamam,* பெ. (n.) போர்; war, battle. "ஒளிறுவா ளருஞ்சம முருக்கி" (புறநா. 382).

[உம் → அம் → சம் → சமம் (வ.வ. 142)]

ஒப்புப் பொருளிலிருந்தே பொருதற்பொருள் தோன்றும். ஒ.நோ: பொருதல் = ஒத்தல், போர்செய்தல்.

சமம்[4] *šamam,* பெ. (n.) முதுவேனில் (பிங்.); mid-summer.

[சமர் → சமரம் → சமம். சமர் = போர், சீற்றம், வெப்பம்]

சமம்பாவி-த்தல் *šamam-bāvi-,* 4 செ.குவி. (v.i.) சமமாதற்கு முயலுதல்; to emulate, vie.

[சமம்[2] + பாவி-,]

சமமழை *šama-maḻai,* பெ. (n.) நடுத்தரமான மழை; moderate rain.

[சம(ம்) + மழை]

சமமாக்கு-தல் *šamamākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) சமஞ்செய்-தல் பார்க்க; see *šamañ-jey-.*

க., பட. சமமாடு.

[சமம் + ஆக்கு-,]

சமமாகக்கருது-தல் *šamamāga-k-karudu-,* 12 செ.குன்றாவி. (v.t.) ஒன்றாகநினைத்தல்; to equate.

[சமமாக + கருது-,]

சமமாகு-தல் *šamamāgu-,* 6 செ.கு.வி. (v.i.) ஒரேயளவினதாகுதல்; to become equal.

க. சமவெழ், சமபெழ்

[சமம் + ஆகு-,]

சமமாயிரு-த்தல் *šamam-āy-iru-,* 3 செ.கு.வி. (v.i.) 1. ஒருநிகராயிருத்தல்; to equal. 2. நடுநிலையுடன் இருத்தல்; to be impartial.

[சமம் + ஆய் + இரு-,]

சமயக்கட்டு *šamaya-k-kaṭṭu,* பெ. (n.) மதக் கட்டுப்பாடு; religious obligation.

[சமயம் + கட்டு. கள் → கட்டு]

சமயக்கணக்கர் *šamaya-k-kaṇakkar,* பெ. (n.) சமயநூல் வல்லார்; exponents of various religious systems. "சமயக்கணக்கர் தந்திறங் கேட்டதும்" (மணிமே. பதி.88)

[சமயம் + கணக்கர்]

சமயக்கவடன் *šamaya-k-kavaḍan,* பெ. (n.) சமையக்கவடன் பார்க்க; see *šamaiya-k-kavaḍan.*

[சமையம் → சமயம் + கவடன்]

சமயக்காட்சியர் *šamaya-k-kāṭciyar,* பெ. (n.) மதத்தை உணர்ந்தவர்; those who are proficient in a religious system. "சமயக் காட்சிய ரன்பிற் கலந்த வின்பக் கட்டுரை" (பெருங். மகத. 18, 93).

[சமயம் + காட்சியர்]

சமயக்காரர் *šamaya-k-kārar,* பெ. (n.) மதத்தைப் பின்பற்றுபவர்; followers of a religion.

[சமயம் + காரர். 'காரர்' உடைமை குறித்த ஈறு]

சமயக்குரவர் *šamaya-k-kuravar,* பெ. (n.) மதத்தை நிலைநிறுத்திய பெரியோர்; great man who established a religion.

[சமயம் + குரவர்]

குரு → குரவன் = பெரியோன். அரசன், ஆசிரியன், தந்தை, தாய், தமையன் என்னும் ஐவரும் ஐங்குரவர் எனப்படுதலையும் இருபெற்றோரும் இருமுதுகுரவர் எனப்படுதலையும் நோக்குக.

திருநாவுக்கரசர், சுந்தரர், திருஞானசம்பந்தர், மாணிக்கர் ஆகிய நால்வரும் சமயக்குரவர் என்று சிறப்பித்துக் கூறப்பெறுவர்.

சமயக்கொள்கை *šamaya-k-kolgai,* பெ. (n.) சமயக்கோட்பாடு பார்க்க; see *šamaya-k-kōtpādu.*

[சமயம் + கொள்கை]

சமயக்கோட்பாடு *šamaya-k-kōtpādu,* பெ. (n.) மதக்கொள்கை; religious beliefs, tenets, doctrines.

[சமயம் + கோட்பாடு]

சமயகி *šamayagi,* பெ. (n.) நேர்வாளம்; croton seed-croton tigilium (சா.அக.).

சமயங்கடத்து-தல் *šamayañ-kadattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சமையங்கடத்து-தல் பார்க்க; see *šamaiyañ-kadattu-.*

[சமையம் → சமயம் + கடத்து-,]

சமயச்சந்துக்கட்டு *šamaya-c-candu-k-kaṭṭu,* பெ. (n.) சமையச்சந்துக்கட்டு பார்க்க; see *šamaiya-c-candu-k-kaṭṭu-.*

[சமயம் + சந்துக்கட்டு]

சமயசாத்திரம் *šamaya-šāttiram,* பெ. (n.) சமயநூல் பார்க்க; see *šamaya-nūl.*

[சமயம் + சாத்திரம்]

சமயத்தலைவர் *šamaya-t-talaivar,* பெ. (n.) 1. ஒரு மதத்தின் தலைவர்; head of a religion. 2. மடத்துத்தலைவர்; head of a mut.

[சமயம் + தலைவர்]

சமயத்தார் *šamayattār,* பெ. (n.) ஒரு மதத்தைச் சார்ந்தவர்; followers of a religious system. "அன்றென்ப வாறு சமயத்தார்" (வள்ளுவமா. 9).

[சமயம் + அத்து + ஆர்]

'அத்து' சாரியை. 'ஆர்' பலர்பாலீறு.

சமயதத்துவம் *šamaya-tattuvam,* பெ. (n.) சமயமெய்ப்பொருள் (மணிமே. 10: 80, உரை) பார்க்க; see *šamaya-mey-p-poruḷ.*

[சமயம் + தத்துவம்]

Skt. tatuva → த. தத்துவம்

சமயதருமம் *šamaya-darumam,* பெ. (n.) சமயமெய்ப்பொருள் பார்க்க; see *šamaya-mey-p-poruḷ.*

[சமயம் + தருமம்]

Skt. dharma → த. தருமம்

சமயதி *šamayadi,* பெ. (n.) எல்லா அடிகளும் ஒத்த அளவினதாய் வரும் இசைப்பாட்டு வகை; a metrical composition in which all the lines are of uniform length.

[சமம் → சமயத்தி → சமயதி]

சமயதிவாகரர் *šamaya-divāgarar,* பெ. (n.) நீலகேசியென்னும் சைனநூலின் உரைகாரராகிய வாமன முனிவர்; Vāmaṉa-muṉivar, commentator on Nīlakēši, a jaina work in Tamil.

[சமயம் + திவாகரர்]

சமயநிலை *šamaya-nilai,* பெ. (n.) சமயக் கோட்பாடு பார்க்க; see *šamaya-k-kōtpādu.*

[சமயம் + நிலை]

சமயநூல் *šamaya-nūl,* பெ. (n.) மதத்தைப் பற்றிய நூல்; sacred book of a religion.

[சமயம் + நூல்]

சமயநெறி *šamaya-neṟi,* பெ. (n.) மதக் கொள்கை; creed or religious system.

[சமயம் + நெறி]

சமயப்பற்று *šamaya-p-paṟṟu,* பெ. (n.) மதத்தின்மேல் ஒருவன் கொள்ளும் அன்பு; love of one's own religion.

[சமயம் + பற்று]

சமயப்பொறை *šamaya-p-poṟai,* பெ. (n.) அனைத்துச் சமயங்களிடமும் காட்டும் பொதுநோக்கு; religious tolerence.

[சமயம் + பொறை. பொறு → பொறை]

சமயப்போர் *šamaya-p-pōr,* பெ. (n.) மதத்திற்குள் ஏற்படும் சண்டை, குழப்பம், மாறுபாடு; religious controversy.

[சமயம் + போர்]

சமயப்போலி *šamaya-p-pōli,* பெ. (n.) **போலியான மதம்** (வின்.); a travesty of religion.

[சமயம் + போலி]

சமயபத்திரம் *šamaya-pattiram,* பெ. (n.) **உடன்படிக்கை ஆவணம்;** deed of agreement 'என்று பண்ணின தர்மத்தாபன சமயபத்திரம்' (தெ.க.தொ.I:84).

[சமயம் + பத்திரம்]

Skt. patra → த. பத்திரம்.

சமயபுரம் *šamaya-puram,* பெ. (n.) **திருச்சிராப்பள்ளிக்கு அருகே உள்ள ஓர் ஊர்;** a village near Tirichirappaḷḷi.

மறுவ. கண்ணபுரம், விக்கிரபுரம், மாகாளிபுரம்

[சமயம் + புரம்]

சமயபேதம் *šamaya-bēdam,* பெ. (n.) சமய வேறுபாடு பார்க்க; see *šamaya-vēṟupāḍu.*

[சமயம் + பேதம்]

Skt. bhēda → த. பேதம்

சமயபேதி *šamaya-pēdi,* பெ. (n.) **புறச் சமயத்தான்** (யாழ்.அக.); heretic, schismatic.

[சமயம் + பேதி]

Skt. bhēdin → த. பேதி

சமயபோதனை *šamaya-pōdaṉai,* பெ. (n.) *1.* **மதக் கொள்கைகளை உணர்த்துகை;** religious instruction. *2.* சமயக்கோட்பாடு பார்க்க; see *šamaya-k-kōṭpāḍu.*

[சமயம் + போதனை]

Skt. bodhana → த. போதனை

சமயம்[1] *šamayam,* பெ. (n.) *1.* **மதம்;** creed or religious system. "சாங்கிய சமயந் தாங்கிய பின்னர்" (பெருங். உஞ்சை. 36, 252). *2.* **மதநூல்** (திவா.); text-book as of a religion.

[சமை → சமையம் → சமயம்]

"மதம், சமயம் என்னும் இரு சொல்லும் ஒரு பொருளனவாயினும், தம்முள் நுண்பொருள் வேறுபாடுடையன. ஒரு தெய்வத்தை அல்லது இறைவனை மதித்து வழிபடுவது மதம்; இறைவனை இம்மையிலேனும் மறுமையி லேனும் அடைவதற்குச் சமைவது சமயம்' (த.ம.3).

சமை → சமையம் = பதனடைந்த அல்லது நுகர்ச்சிக்கேற்ற நிலை, வினைக்குத்தக்க வேளை.

சமையம் → சமயம் = ஆதன் (ஆன்மா) அல்லது மாந்தன், இறைவன் திருவடிகளை அல்லது வீட்டின்பத்தை அடையச் சமைவாகும் (தகுதியாகும்) நிலைமை; அந் நிலைக்குரிய ஒழுக்கநெறி. நேரத்தைக் குறிக்குஞ் சொல்வடிவுகளில் மகர ஐகாரமும், மதத்தைக் குறிக்குஞ் சொல்வடிவில் மகரமும், வரல் வேண்டுமென வேறுபாடறிக.

வடமொழியில் மகரமுள்ள வடிவேயுண்டு. அமையம் என்னும் மூலச்சொல்லும் அங்கில்லை. வடமொழியாளர், சமயம் என்ற தென்சொல்லை 'ஸமய' என்று திரித்தும் ஸம் + அய எனப் பிரித்தும், உடன்வருதல் (to come together) அல்லது ஒன்று சேர்தல் என்று பொருள் காட்டுவர். அங்ஙனம் காட்டிய பின்பும்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்" (குறள், 380)

என்னுந் திருவள்ளுவர் திருவாய்மொழிக் கேற்ப, அவ்வடசொல் தென்சொற்றிரிபே யாதல் காண்க.

ஸம் = உடன், கூட. அய = செல்கை, வருகை.

'அய' என்னும் சொற்கு, 'அய்' என்பதை அடியாகவும் 'இ' என்பதை வேராகவும் காட்டுவர். இ → அய் → அயன = செலவு.

தமிழில், கூடுதலைக்குறிக்கும் அடிச் சொற்களுள் 'கும்' என்பது ஒன்று.

கும்முதல் = கூடுதல், குவிதல்.

கும் → கும்மல். கும் → கும்பு → கும்பல்.

கும்மல் - L. cumulus = heap; cumulare = to heap up. E. cumulate, accumulate.

கும் → கும்ம (நிகழ்கால வினையெச்சம் - infinitive mood) = கூட, கூடுதல் = ஒன்று சேர்தல், மிகுதல்.

கூட (together) என்னும் (நிகா.) வினையெச்சம் உடன் (together, with) என்று பொருள்படும் போது, மூன்றாம் வேற்றுமை உடனிகழ்ச்சி யுருபாகவும், முன்னொட்டாகவும் (prefix) ஆளப்படும்.

எ-டு: தந்தை கூட வந்தான் = தந்தையுடன் வந்தான். கூடப்பிறந்தவன் = உடன்பிறந்தான்.

கூடுதலைக் குறிக்கும் கும் என்னும் வினைச் சொல் உ→ அ திரிபு முறைப்படி கம் என்று திரியவுஞ் செய்யும்.

"கமம் நிறைந் தியலும்" (தொல்.சொல். 355)
நிறைதல் = நிரம்புதல், மிகுதல், கூடுதல்.

cum என்னும் இலத்தீன் அடிச்சொல்லும், முன்னொட்டாகும்போது com என்று திரிந்து, வருஞ்சொன் முதலெழுத்திற்கேற்ப con, col, cor என்று ஈறுமாகும். சில எழுத்துகளுக்கு முன் co என்று ஈறு கெடவுஞ் செய்யும். இங்ஙனமே ஆங்கிலத்திலும்.

இங்ஙனம் இலத்தீனத்தில் கும் → கொம் என்றும், ஆங்கிலத்திற் கம் என்றும் திரியும் முன்னொட்டு, கிரேக்கத்தில் ஸூம் (sum) என்றும் ஸிம் (sym) என்றும், சமற்கிருதத்தில் ஸம் (sam) என்றும் திரியும். கிரேக்க முன்னொட்டும், இலத்தீன் முன்னொட்டுப் போற் பின்வரும் எழுத்திற்கேற்ப, சின் (syn), சில் (syl) என்றும் திரியும். சமற்கிருத முன்னொட்டு ஈறுகெட்டு ஸ (sa) என்றும் நிற்கும். இவற்றிற்கெல்லாம், கூட (உடன்) என்பதே பொருள்.

கூட என்பதற்கு நேரான கும்ம என்னும் தென்சொல்லே, முன்னொட்டாகிக் கும் என்று குறுகியும் கும் → கொம் → கம், கும் → ஸூம், ஸூம் → ஸூம் → ஸம் என்று திரிந்தும், ஆரிய மொழிகளில் வழங்கும் என அறிக. அதன் முதன்மெய், ஐரோப்பாவின் வடமேற்குப் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும் இயல்பாகவும், அதன் தென்கிழக்குப் பகுதியிலும் இந்தியாவிலும் ஸகரமாகத் திரிந்தும் வழங்குவதை ஊன்றி நோக்கி வரலாற்றுண்மை தெளிக.

இனி, இந்திய ஆரியத்தில் (வேத மொழியிலும் சமற்கிருதத்திலும்) செல்லுதலைக் குறிக்கும் 'இ' என்னும் வேரும் 'அய்' அடியுமாகிய வினைச் சொற்களும், உய் தென்சொல்லினின்று திரிந்தவையே.

ஊ அல்லது உ, இதழ் குவிந்தொலித்து முன்னிடத்தை அல்லது முன்னிற்பதைச் சுட்டும் முன்மைச் சுட்டு.

ஊ → ஊன் = நீ (முன்னிலையொருமைப் பெயர்)
ஊ → உ → உந்து. உந்துதல் = முன்தள்ளுதல்
உ → உய். உய்தல் = முன்செல்லுதல், செல்லுதல்
உய்த்தல் = முன் செலுத்துதல், செலுத்துதல்.
உய் → இய் → இயவு = 1. செலவு
"இடைநெறிக் கிடந்த இயவுக்கொண் மருங்கில்" (சிலப். 11:168)
2. வழி.
இயவு → இயவுள் = எல்லா வுயிர்களையும் வழி நடத்தும் இறைவன்.
இ → இயல் = செலவு
"புள்ளியற் கலிமா" (தொல்.பொருள். 184)
இயலுதல் = செல்லுதல், நடத்தல்.
"அரிவையொடு மென்மெல வியல" (ஐங். 175)
இய → இயங்கு → இயக்கு → இயக்கம்.
இயங்குதல் = செல்லுதல், நடத்தல், அசைதல்.
இய் → வ. அய். இனி, உய் என்பதும் அய் என்று திரிந்திருக்கலாம்.

தமிழ் ஆரியத்திற்கு முந்தியது என்னும் வரலாற்றுண்மையையும், மேற்காட்டிய சொல் வரலாறுகளையும், நடுநிலையாக நோக்குவார்க்கு மதம், சமயம் என்னும் இரு சொல்லும் தென்சொல்லேயென்பது, தெற்றெனத் தெரியாமற் போகாது (த.ம. 3-7).

சமயம்[2] *šamayam,* பெ. (n.) **1. உடன்படிக்கை;** agreement, contract. சமயப்பத்திரம். **2. மரபு;** established usages, convention. 'கவிசமயம்'.

[அமை → அமையம் → சமையம் → சமயம்]

சமயம்பார்-த்தல் *šamayam-pār-,* 4 செ.குன்றாவி. (v.i.) தக்க காலத்தை எதிர்ப்பார்த்திருத்தல்; to watch for a suitable opportunity. சமயம் பார்த்துப் போர் தொடுப்பது பகை நாட்டரசின் வாடிக்கை.

[சமயம் + பார்-,]

சமயமதம் *šamaya-madam,* பெ. (n.). மதவெறி; bigotry, fanaticism.

[சமயம் + மதம். மதம் = செருக்கு, வெறி]

சமயமானம் *šamaya-mānam,* பெ. (n.) **சமயப்பற்று** பார்க்க; see *šamaya-p-parru.* "சன்னியாசிக்குஞ் சாதிமானஞ் சமயமானம் விடாது" (வின்.).

[சமயம் + மானம்]

சமயமிரு-த்தல் *šamayam-iru-,* 3 செ.கு.வி. (v.i.) **ஓலக்கமிருத்தல்;** to sit in state, as a king. "பெண்சாராத தெனவே சமயமிருக்கும் மண்டபமாம்." (சீவக. 2370, உரை.)

[சமையம் → சமயம் + இரு-,]

சமயமுதல்வி *šamaya-mudalvi,* பெ. (n.) **சத்தி மதத்தின் தலைவியாகிய மலைமகள்** (பிங்.); Pārvadi, as the supreme being of the Śāktas.

[சமயம் + முதல்வி]

சமயமெய்ப்பொருள் *šamaya-mey-p-poruḷ*, பெ. (n.) மதத்தின் அடிப்படை உண்மைகள்; the fundamental doctrines of a religion.

[சமயம் + மெய்ப்பொருள்]

சமயலங்கனம் *šamaya-laṅgaṉam*, பெ. (n.) மதக் கோட்பாட்டை மீறுகை; transgression of religious principles. "சமயலங்கனமுந் தெய்வ நிந்தையுஞ் செய்தனர்" *(பெரியபு. திருநாவுக். 83).*

[சமயம் + லங்கனம்]

Skt. laṅghana → த. லங்கனம்

சமயவாசிரியர் *šamayavāširiyar*, பெ. (n.) சமயக்குரவர் பார்க்க; see *šamaya-k-kuravar.*

[சமயம் + ஆசிரியர்]

சமயவாதம் *šamaya-vādam*, பெ. (n.) மதம் பற்றிய ஏரணம்; religious disputation or controversy.

[சமயம் + வாதம்]

சமயவாதி *šamaya-vādi*, பெ. (n.). தன் மதத்தை நிறுவும் பொருட்டு வழக்காடுபவன்; exponent of a religion. "சமயவாதிக டத்த மதங்களை" *(திருவாச. 4, 52).*

[சமயம் + வாதி]

Skt. vādin → த. வாதி

சமயவாற்றல் *šamaya-v-āṟṟal*, பெ. (n.) சொல்லாற்றல் *(தொல். சொல். 1 சேனா.)*; force of a word, signification.

[சமயம் + ஆற்றல்]

சமயவிகற்பம் *šamaya-vigaṟpam*, பெ. (n.) சமய வேறுபாடு பார்க்க; see *šamaya-vēṟupāḍu.* "சலசல மிழற்றுஞ் சமய விகற்பமும்" *(பெருங். உஞ்சைக். 32, 4).*

[சமயம் + விகற்பம்]

Skt. vikalpa → த. விகற்பம்

சமயவுசிதம் *šamaya-v-ušidam*, பெ. (n.) நேரத்துக்குப் பொருத்தம்; suitability to occasion.

[சமயம் + உசிதம்]

Skt. ucita → த. உசிதம்

சமயவேறுபாடு *šamaya-vēṟupāḍu*, பெ. (n.) மத வேறுபாடு; diversity of religion.

[சமயம் + வேறுபாடு]

சமயவொழுக்கம் *šamaya-v-oḻukkam*, பெ. (n.) ஒரு சமயத்தைப் பின்பற்றும் ஒழுக்கம்; religious discipline.

[சமயம் + ஒழுக்கம்]

சமயாசமயம்[1] *šamayā-šamayam*, பெ. (n.) உரிய காலம்; proper time. சமயாசமயத்துக்கு உதவ வேண்டும்.

[சமையம் → சமயம் + சமயம். அடுக்குத்தொடர்]

சமயாசமயம்[2] *šamayā-šamayam*, பெ. (n.) தக்கதும் தகாததுமான காலங்கள்; proper and improper time. சமயாசமயந் தெரிந்து நடக்க வேண்டும்.

[சமையம் → சமயம் + அல் + சமயம்]

சமயாசாரம் *šamayā-šāram*, பெ. (n.) மதத்திற்குரிய ஒழுக்கம்; systematised religious practice, ritual.

[சமயம் + ஆசாரம்]

Skt. ācāra → த. ஆசாரம்

சமயாசாரியர் *šamayāšāriyar*, பெ. (n.) சிவனிய மதத்தை நிலைநாட்டின அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் சிவனடியார்கள்; great men who established a religion, especially the four saivaite saints, viz, Appar, Sambandar, Sundarar and Māṇikka vāšagar.

[சமயம் + ஆசாரியர். ஆசிரியர் → ஆசாரியார்]

சமயாதீதம் *šamayādītam*, பெ. (n.) சமயம் கடந்த பரம்பொருள்; the Supreme Being as transcending all religions. "சமயாதீதப் பழம்பொருளை" *(தாயு. காடுங்கரையும். 2).*

[சமயம் + அதிதம்]

Skt. atita → த. அதிதம்

சமயி *šamayi*, பெ. (n.) மதத்தைச் சார்ந்தவன்; religionist, sectarian. "தக்க சமயிகள் தந்திறங் கேட்டதும்" *(மணிமே. 28:86).*

[சமய(ம்) → சமயி]

'இ' உடைமை குறித்த ஈறு

சமயோசிதம் *šamayōšidam,* பெ. (n.) சமயவுசிதம் பார்க்க; see *šamaya-v-ušidam.*

[சமயம் + உசிதம்]

Skt. ucita → த. உசிதம்

சமர்[1] *šamar,* பெ. (n.) போர் (திவா.); war, battle, fight.

ம. சமர். Skt. šamar

[சமம் → சமர் (வ.வ. 143)]

ஒ.நோ: களம் → களர். சமம் = ஒப்பு. இனி, அமர் → சமர். அமர் என்பது சமர் என்பதன் திரிபன்று; சமர் என்பதே அமர் என்பதன் முதன்மிகையான திரிபு. ஒ.நோ: அமை → சமை. ஒப்புப் பொருளிலிருந்து பொருதல் பொருள் தோன்றும். ஒ.நோ: சமம் = ஒப்பு, போர்; பொருதல் = ஒத்தல், போர்செய்தல்.

சமர்[2]**-தல்** *šamar-,* 11 செ.கு.வி. (v.i.) பொருதல்; to fight, make war. 'சமர்க்க வல்லாயேல்" (விநாயகபு. 74, 249).

[அமர் → சமர்-,]

சமர்[3] *šamar,* பெ. (n.) சமரம்[2] பார்க்க; see *šamaram*[2].

[சம் → சமர்]

சமர்க்களம் *šamar-k-kaḷam,* பெ. (n.) போர்க்களம்; battle-field, arena.

[சமர் + களம். கள்ளுதல் = கலத்தல், கூடுதல். கள் → களம் = கூட்டம், கூடுமிடம், போர்க்களம். போரிடுவதற்காகக் கூடுமிடம். இனி, அமர்க்களம் → சமர்க்களம்]

சமர்த்தன் *šamarttaṉ,* பெ. (n.) திறமையானவன்; clever, capable man. "சமர்த்தர்த முரத்து விடுவார்" (இரகு. மீட்சி, 23). 'சமர்த்தன் பெண்சாதியும் சோரம் போவாள்' (பழ.)

[சமர் → சமர்த்து → சமர்த்தன்]

த. சமர்த்தன் → Skt. samartha

சமர்த்தாளி *šamarttāḷi,* பெ. (n.) சமர்த்தன், திறமையானவன்; clever man.

[சமர்த்து + ஆளி]

சமர்த்தி[1]**-த்தல்** *šamartti-,* 4 செ. குன்றாவி. (v.t.) பொருந்துமாறு காட்டுதல்; to justify and establish, as a theory.

[சமர் → சமர்த்தி]

சமர்த்தி[2] *šamartti-,* பெ. (n.) நிறைவு; fulness, plentitude.

[சமர் = பொருந்துதல், மிகுதல். சமர் → சமர்த்தி.]

சமர்த்தி[3] *šamartti-,* பெ. (n.) 1. வல்லவள், திறமையானவள்; clever, capable woman. 2. சமைந்த அல்லது பக்குவமடைந்த பெண்; a girl who has attained the age of puberty. 'சமர்த்தி என்ன பெற்றாள்? தலைச்சன் பெண்ணுப் பெற்றாள்' (பழ.)

[சமர் → சமர்த்தன் (ஆ.பா.) – சமர்த்தி (பெ.பா.).]

சமர்த்தி[4] šamartti-, பெ. (n.) சமசை (யாழ்.அக.) பார்க்க; see *šamašai.*

[சமர் → சமர்த்தி.]

சமர்த்து *šamarttu,* பெ. (n.) போர்த்திறமை, திறமை; ability, skill. "சமர்த்தாற்று மாற்றால்" (அரிச்.பு. இந்திர. 46). 'சமர்த்துள்ள சேவகனுக்குப் புல்லும் ஆயுதமாம்' (பழ.).

[சமர் → சமர்த்து]

த. சமர்த்து → Skt. samartha

வடவர் ஸம் + அர்த்த என்று பகுத்து, ஒத்த அல்லது தகுந்த நோக்கங் கொள்ளுதல், தகுந்த நிலைமை பெறுதல், வலிமையடைதல் என்று பொருள் பொருத்துவர் (வ.வ. 141).

போருக்கு வலிமை வேண்டுமாதலின் போரென்னும் சொல் (சமர்) வலிமை அல்லது திறமையையும் உணர்த்தும்.

சமர்நிலம் *šamar-nilam,* பெ. (n.) போர்க்களம்; battle-field.

[சமர் + நிலம்.]

சமரகேசரி *šamara-kēšari,* பெ. (n.) பெருவீரன், போரில் அரிமா போன்றவன்; a great warrior, as lion in battle. 'சமரகேசரித் தெரிஞ்ச கைக்கோளரில் கூத்தன் நிகளங்கனும்' (தெக. தொ. 5: 233).

[சமரம் + கேசரி.]

Skt. kēsarin → த. கேசரி

சமரகோலாகலநல்லூர் *šamara-kōlākala-nallūr,* பெ. (n.) காஞ்சிபுரம் வட்டத்திலிருந்த பண்டைய ஊர்; an ancient village in

Kāñjipuram taluk. "பாண்டி மண்டலத்து வீரநாராயணவள நாட்டுச் சமரகொலாகல நல்லூரர் உடையார் ஏகாம்பர நாதனுக்கும்" *(தெக. தொ. 4: 348/1986)*

[சமரம் + கோலாகல + நல்லூர்]

சமரகோலாகலன் *šamara-kōlāgalaṉ,* பெ. (n.) *சமரவிருப்பன் பார்க்க (கல்.);* see *šamara-viruppaṉ.*

[சமரம் + கோலாகலன்.]

Skt. kōlāhala → த. கோலாகலம் → கோலாகலன்

சமரங்கபூபதி *šamaraṅga-pūbadi,* பெ. (n.) *பல போரில் வென்ற அரசன்;* winner of many battle, hero of many fights.

[சமர் + அங்கம் + பூபதி.]

சமரங்கம் *šamaraṅgam,* பெ. (n.) *சமர்க்களம் பார்க்க;* see *šamar-k-kaḷam.*

[சமர் + அங்கம்]

Skt. aṅka → த. அங்கம்

சமரசம் *šamarašam,* பெ. (n.) *ஒற்றுமை;* equality, harmony, identity. "வேதாந்த சித்தாந்த சமரச சுபாவமிதுவே" *(தாயு. பரிபூரணா. 5).* 2. *நடுநிலைமை;* impartiality. 3. *சமாதானம்;* reconciliation, compromise.

[சமம் + ரசம்]

Skt. rasa → த. ரசம்

சமரசமாய் *šamarašamāy,* வி.அ. (adv.) 1. *மன நிறைவாக;* satisfactorily. *அவர்கள் வழக்கு சமரசமாய் முடிந்தது.* 2. *சமாதானமாய்;* reconciliable.

[சமரசம் + ஆய்]

சமரசர் *šamarašar,* பெ. (n.) 1. *நண்பர்;* companion, friends. 2. *ஒருபக்கம் சாயாத நடுநிலையாளர்;* impartial arbiter.

[சமரசம் → சமரசர்]

Skt. rasa → த. ரசம்

சமரதன் *šamaradaṉ,* பெ. (n.) *பிறிதொரு தேர் வீரனொடு சளைக்காமற் போர் புரியவல்ல தேர்வீரன்;* warrior in chariot who engages another warrior in an equal fight, one of four tēr-vīrar. "சமரதப் பதிகள்" *(பாரத. அணிவ. 2).*

[சமம் + ரதன்]

Skt. ratha → த. ரதம்

சமரபீரு *šamara-pīru,* பெ. (n.) *போரில் புறங்காட்டி ஓடல்;* running away from fight atter acknowledge of defeat. 'கடுமுரட் சாங்க மய்யனு முதலினர் சமரபீரு வொத்துடைய' *(முதல் இராசாதிராசன், மெய்க்கீர்த்தி).*

[சமர் → சமரபீரு]

சமரபுரி *šamara-puri,* பெ. (n.) *தொண்டை நாட்டிலுள்ள திருப்போரூர்;* Tiru-p-pōrūr in Toṇḍainādu. "சமரபுரியாய் தாலேலோ" *(திருப்போ. சந். பிள்ளைத். தாலப். 1).*

[சமரம் + புரி]

சமரம்[1] *šamaram,* பெ. (n.) *போர்;* battle, fight. "இலங்கையி லெழுந்த சமரமும்" *(சிலப். 26: 238)*

ம. சமர்; தெ. சமரமு

[சமர் → சமரம்]

த. சமரம் → Skt. śamara

இருவர் அல்லது இரு படைகள் போர் செய்யும் போது ஒன்றுகலத்தலால், கலத்தல் அல்லது ஒன்றாதற் கருத்தினின்று போர்க் கருத்துப் பிறந்தது.

எ-டு : கல → கலாம், கலகம். கைகலத்தல் = சண்டையிடுதல். பொரு = ஒத்தல், போர் செய்தல். பொரு → போர் = பொருத்து, சமர்.

இங்ஙனமே ஒப்பைக் குறிக்கும் சமம் என்னும் சொல்லினின்றும் போரைக் குறிக்கும் சொற்கள் பிறந்துள்ளன. சமம் = போர். "ஒளிறுவா ளருஞ்சம முருக்கி" *(புறம். 382).* சமம் → சமர் = போர் (திவா.).

ஒ.நோ: *களம் → களர்*

சமர்த்தல் = பொருதல். "சமர்க்க வல்லாயேல்" *(விநாயகபு. 74:249).*

போருக்கு வலிமை வேண்டுமாதலின், போர் என்னும் சொல் வலிமை அல்லது திறமையையும் உணர்த்தும்.

போர் = வலிமை. சமர்த்து = திறமை. சமர் → சமரம் = போர். "இலங்கையி லெழுந்த சமரமும்" *(சிலப். 26, 238).* சமர் → அமர் = போர் 'ஆரமர் ஓட்டலும்' *(தொல். 1006).* சமரம் → அமரம் = போர். தெ. அமரமு. அமர்த்தல் = மாறுபடுதல். "பேதைக் கமர்த்தன கண்" *(குறள், 1086)*

வடமொழியில் சமர என்னும் வடிவே உள்ளது. சமம், சமர், அமர், அமரம் என்னும் வடிவுகள் இல்லை.

வடவர் ஸமர என்னும் சொல்லை ஸம் + ரு என்று பிரித்து ஒன்றுகூடு, மாறுபடு, போர்செய் என்று பொருள் காட்டுவர் *(வ.வ. 140, 141).*

சமரம்[2] *šamaram,* பெ. (n.) முள்ளம்பன்றி (நிகண்டு); porcupine.

சமரம்[3] *šamaram,* பெ. (n.) நீண்ட மயிரும், மயிரடர்ந்த வாலும் உள்ள விலங்கு, கவரிமான்; yak. *2.* சாமரை; a kind of fly, flapper, chowry.

Skt. šamara; க. சமர

[கவரி → சவரி → சவரம் → சமரம்]

சமரசவாசனி *šamarasa-vāšani,* பெ. (n.) பாதிரி; trumpet flower - Stereosperumum chelonoides (சா.அக.).

சமரவிருப்பன் *šamara-viruppan,* பெ. (n.) போர் செய்வதில் விருப்பமுள்ளவன்; one who revels in battle.

[சமர் → சமர + விருப்பன்]

சமராத்திரம் *šamarāttiram,* பெ. (n.) சமவிரவு பார்க்க; see *šama-v-iravu.*

[சமம் + ராத்திரம்]

Skt. rātram → த. ராத்திரம்

சமரி[1] *šamari,* பெ. (n.) போருக்குரிய தெய்வமான கொற்றவை (துர்க்கை) (பிங்.); Durga, as the goddess of war.

மறுவ. அமரி, எண்டோளி, பாலைக்கிழத்தி, குமரி, சக்கரபாணி.

[அமர் = போர். அமர் → அமரி = போர்த் தெய்வமான காளி. அமரி → சமரி]

அமரி [2] பார்க்க.

சமரி[2] *šamari,* பெ. (n.) பாம்பு (யாழ்.அக.); snake.

க. சம்மளி

[அமரி = நஞ்சு. அமரி → சமரி = நஞ்சுடையது]

சமரிகம் *šamarigam,* பெ. (n.) *1.* மலையத்தி; mountain fig; downy climbing cluster fig - ficus macrocarpa. *2.* மலையகத்தி; bitter sesban (சா.அக.).

சமருகாச்சி *šamaru-kācci,* பெ. (n.) பேரீச்சம் பழம்; Arabian date fruit-phoenix dactylifera (சா.அக.).

சமரரேகை *šama-rēgai,* பெ. (n.) சமவரிகை பார்க்க; see *šama-varigai.*

[சமம் + ரேகை.]

Skt. rēkhā → த. ரேகை

சமருடச்சிவரம் *šamaruḍa-c-civaram,* பெ. (n.) வரகு; milliet - Panicum maliaceum (சா.அக.).

சமவணி *šama-v-aṇi,* பெ. (n.) ஒருவகை அணியிலக்கணம்; a kind of rhetoric.

[சமம் → அணி]

சமவயசு *šama-vayacu,* பெ. (n.) சரியகவை பார்க்க; see *šari-y-agavai* (செ.அக.).

[சமம் + வயசு]

Skt. vayas → த. வயசு

சமவயது *šama-vayadu,* பெ. (n.) சரியகவை பார்க்க; see *šari-y-agavai.*

[சமம் + வயது]

Skt. vayas → த. வயசு → வயது

சமவர்த்தி *šamavartti,* பெ. (n.) நடுநிலையில் இருப்பவன், கூற்றுவன் (யாழ்.அக.); Yama, as impartial.

மறுவ. காலன்

[சமம்+ வர்த்தி]

த. வட்டம் → Skt. vartti → த. வர்த்தி

சமவரிகை *šama-varigai,* பெ. (n.) நிலநடுக்கோடு (பூமத்தியரேகை); equatorial line.

[சமம் + வரிகை]

சமவலிமை *šama-valimai,* பெ. (n.) இணையான ஆற்றல் அல்லது திறமை; equal strength.

[சமம் + வலிமை]

சமவாசம் *šama-vāšam,* பெ. (n.) நட்பு; association. friendship. intercourse.

[சமம் + வாசம்]

சமவாதசைவம் *šama-vāda-šaivam,* பெ. (n.) முத்தி நிலையில் சிவமும் ஆன்மாவும் ஒக்குமெனக் கொள்ளும் சிவனிய வேறுபாடு (பேதம்) (சி.சி. 67. சிவஞான.); a Šaiva sect which holds that a liberated soul becomes equal to Šivan.

[சமவாதம் + சைவம்]

சமவாயம் *šama-vāyam,* பெ. (n.) ஒத்த கூட்டம் (சூடா.); assemblage, collection, aggregate.

[சமம் + ஆயம் → சமவாயம்]

சமவாயம் → Skt. sam-avāya

சமவாயிகாரணம் *šamavāyi-kāraṇam,* பெ. (n.) முதற்காரணம் (சி.சி. 1, 18 ஞானப்.); material cause.

சமவிணை *šama-v-iṇai,* பெ. (n.) சரியான இணை; proper match.

[சமம்² + இணை]

சமவிரவு *šama-v-iravu,* பெ. (n.) பகலிரவுகள் நாழிகையளவில் ஒத்த நாள் (வின்.); equinox, time when day and night are equal.

[சமம்² + இரவு]

சமவிருட்டி *šama-viruṭṭi,* பெ. (n.) சமமழை பார்க்க; see *šama-maḻai* (சா.அக.).

[சமம்² + விருட்டி]

Skt. viruṣṭi → த. விருட்டி

சமவிலை *šama-vilai,* பெ. (n.) ஏற்றமில்லாத நடுத்தர விலை (வின்.); moderate price.

[சமம்² + விலை]

சமவிளைவு *šama-viḷaivu,* பெ. (n.). இரண்டு அறுவடையிலும் ஒத்த விளைச்சல்; equal yield in the two cultivation seasons.

[சமம்² + விளைவு]

சமவுவமை *šama-v-uvamai,* பெ. (n.). சமவணி பார்க்க; see *šama-v-aṇi* (கழ.அக.).

[சமம் + உவமை]

சமவுரிமை *šama-v-urimai,* பெ. (n.) இணையான உரிமை; equal rights. பெண்ணுக்குச் சமவுரிமை தர வேண்டும் (உவ.).

[சமம் + உரிமை]

சமவெடுப்பு *šama-v-eḍuppu,* பெ. (n.) குரலும் தாளமும் ஒப்பத் தொடங்கும் எடுப்பு வகை; a variety of eḍuppu, in which the song begins on the principal beat of the time-measure.

[சமம் + எடுப்பு]

சமவெண் *šama-v-eṉ,* பெ. (n.) 2, 4, 6, 8, 10 போன்று வரும் இரட்டை எண்களின் வரிசைத் தொடர்; series of even numbers, like 2, 4, 6, 8, 10 etc.,

[சமம் + எண்]

சமவெளி *šama-veḷi,* பெ. (n.) 1. மேடு பள்ளமற்ற நிலப்பகுதி; plain. சமவெளிப்பகுதியில் வேளாண்மை நடைபெறும். 2. ஆறுகள் பாயும் நிலப்பகுதி; valley. கங்கைச் சமவெளி.

[சமம் + வெளி]

சமவேதம் *šama-vēdam,* பெ. (n.) பிறிதோடு நீக்கமின்றியிருக்கும் பொருள்; inseparably associated object. முதல்வன் .... சற்சித்தியோடு சமவேதமாய் நிற்பன் (சி.போ.சிற். 2,4).

[சமம் + வேதம்]

சமவொப்பு *šama-v-oppu,* பெ. (n.) ஒப்பு; conformity, resemblence.

[சமம் + ஒப்பு]

சமழ்¹-தல் *šamaḻ,* 4 செ.கு.வி. (v.i.) வருந்துதல்; to be distressed. தையலாய் சமழாதுரை யென்றதே (சீவக. 1000).

[சவள் → சமழ்]

சமழ்²-த்தல் *šamaḻ-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. வருந்துதல்; to grieve, to be in distress. "அம்மையிற் செய்தன விம்மை வந்து சந்தித்த பின்னைச் சமழ்ப்ப தென்னே" (தேவா. 1200, 4). 2. நாணுதல் (திவா.); to be ashamed. "முடித்தனனென்று சமழ்த்தன னோக்கி" (பெருங். மகத. 27, 186) 3. தாழ்தல்; to get worsted; to suffer in comparison. "மலர் நிறஞ் சமழ்க்கு மன்றே" (கம்பரா. நாடவி. 65).

[சமழ் → சமழ்²]

சமழ்ப்பு *šamaḻppu,* பெ. (n.) 1. வருத்தம் (சூடா.); distress. 2. நாணம், வெட்கம்; shame. "கள்வன் சமழ்ப்பு முகங்காண்மின்" (பரிபா. 20, 36). 3. சமழ்மை பார்க்க; see *samaḻmai.*

[சமழ் → சமழ்ப்பு]

சமழ்மை *šamaḻmai,* பெ. (n.) இழிவு; dishonour, disgrace. "பொங்கு நீர் ஞாலஞ் சமழ்மையாக் கொண்டு விடும்" (நாலடி, 72).

[சமழ் → சமழ்மை]

சமற்காரம் *šamarkāram,* பெ. (n.) சமத்துக்காரம் பார்க்க; see *šamattu-k-kāram* (செ.அக.).

[சமத்துக்காரம் → சமற்காரம்]

சமன்[1] *šaman,* பெ. (n.) 1. சமம்[2] பார்க்க; see *šamam*[2]. "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல்" (குறள், 118); 2. இசை நூலில் வருந் தான நிலை மூன்றனுள் ஒன்று; middle tone (mus.). "வலிவு மெலிவுஞ் சமனு மெல்லாம்" (சிலப். 2: 93). 3. பக்கம் (அக.நி.); nearness.

[சமம் → சமன்]

சமன்[2] *šaman,* பெ. (n.) கூற்றுவன் (பிங்.); Yama the god of death.

மறுவ. காலன்

[சமம் → சமன் = நடுநிலை தவறாதவன்]

சமன்கட்டு-தல் *šaman-kaṭṭu-,* 5 செ.குவி. (v.i.) 1. கயிற்றுக்கோலின் வரையில் கயிற்றை நிறுத்துதல்; to tie a cord on the mark of a steelyard for equipoising. 2. துலாக்கோலின் தட்டுகள் இரண்டும் ஓரளவில் நிற்கும்படி நிறையைச் சேர்த்தல்; to counterpoise with a like weight or quantity.

[சமன் + கட்டு-,]

சமன்சங்கலிதம் *šaman-šaṅgalidam,* பெ. (n.) சமவெண் பார்க்க; see *šama-v-eṇ.*

[சமன் + சங்கலிதம்]

Skt. saṅ-kalita → த. சங்கலிதம்.

சமன்செய்-தல் *šaman-šey-,* 1 செ.குன்றாவி. (v.t.) சமஞ்செய்-தல் பார்க்க; see *šamañ-jey-.*

[சமன் + செய்-,]

சமன்தொடர் *šaman-toḍar,* பெ. (n.) சமன்பாடு பார்க்க; see *šaman-pāḍu.*

[சமன் + தொடர்]

சமன்படுத்து-தல் *šaman-paḍuttu-,* 5 செ.குவி. (v.i.) 1. நிரவுதல், மேடுபள்ள மற்றதாக்குதல்; to equalize. 2. பண்படுத்துதல்; to make right.

[சமன் + படுத்து-,]

சமப்படுத்து-தல் பார்க்க

சமன்பாடு *šamanpāḍu,* பெ. (n.) 1. ஒன்றுக் கொன்று சமநிலையில் இருக்கும் அல்லது ஒத்துப்போகும் தன்மை; balance. கல்விக்கும் தொழில் வளர்ச்சிக்கும் சமன்பாடு இருந்தால்தான் வேலையில்லாநிலை நீங்கும்; 2. இரு அளவுகள் சமம் எனக் காட்டும் குறியீட்டு வடிவிலான கூற்று; mark of an equation; a+b= 9 என்பது ஒரு சமன்பாடு.

ம. சந்து

[சமம் → சமன் + பாடு]

சமன்மை *šamanmai,* பெ. (n.) இணையான தன்மை; equal state (செ.அக.).

[சமன் + மை. 'மை' பண். பெ. ஈறு]

சமனகாரி *šamana-gāri,* பெ. (n.) நோய்களைத் தணித்து உடலைக் குளிரும்படிச் செய்யும் மருந்து (பைஷஜ.); sedative.

[சமன் → சமனகாரி = சமன் செய்வது]

சமனப்பாளை *šamana-p-pāḷai,* பெ. (n.) பங்கம் பாலை அல்லது ஆடுதின்னாப் பாலை; worm-killer - Aristolochia Indica (சா.அக.).

[சமன் + அ + பாளை]

சமனப்பூடு *šamana-p-pūḍu,* பெ. (n.) செங்குன்றி; red bead vine - Abrus precatorius (typica) (சா.அக.).

சமனபுரி *šamana-puri,* பெ. (n.) காலனூர் (இயமபுரம்); Yama's city.

[சமம் → சமன் → சமன + புரி]

சமனம் *šamanam,* பெ (n.) 1. தணியச் செய்கை; calming, subsiding, soothing, allaying. 2. மறைப்பு (திரோபவம்) (வேதா.சூ. 47); Śiva's function of veiling, designed to keep the souls engrossed in the experiences of the world. 3. வசம்பு (மலை.); sweet flag. 4. ஆடுதின்னாப் பாலை (மலை.); worm-killer.

[சமம் → சமன் → சமனம்]

சமனாகத்தாக்கு-தல் *šamanāga-t-tākku-,* 5 செ. குன்றாவி. (v.t.) (இசை) யாழிற் பண்களை வலியவும் மெலியவுமாகத் தாக்காது அளவொத்த ஓசையெழும்படிச் செய்தல் (பரிபா. 19, 42, உரை); to produce a uniformly mellow tone on a musical instrument.

[சமம் → சமன் + ஆக + தாக்கு-,]

சமனாதம் *šamaṉādam,* பெ. (n.) உவர்மண் (வின்.); brackish soil.

[உவர் → சவர் → சமன் → சமனாதம்]

சமனி-த்தல் *šamaṉi-,* 4 செ.குன்றாவி. (v.t.) அமைதிப்படுத்துதல்; to pacify, soothe. "சமனிக்கு முறையாற் சபையெலா மடங்க" (குற்றா. குற. 48).

[சமன் → சமனி-. 'இ' வினையாக்க ஈறு]

சமனிகை *šamaṉigai,* பெ. (n.) இடுதிரை (வின்.); screen, curtain.

[சமன் → சமனிகை = சமமாகக் காட்டும் திரை]

சமனிசை *šamaṉ-išai,* பெ. (n) 1. நடு (மத்திம) விசை (பிங்.); middle tone. 2. சமநிலை[1] (வின்.) பார்க்க. see *šamanilai*[1].

[சமன் + இசை]

சமனியகரணி *šamaṉiya-karaṇi,* பெ. (n.) வெட்டுப் புண்ணையும் தழும்பையும் நீக்கும் மருந்து (பிங்.); medicament which removes scars, tumours, etc.,

[சமன் → சமனியம் + கரணி]

சமனியம் *šamaṉiyam,* பெ. (n.) பொது (சாமானியம்); generality. விசேட சமனியத் தியாதில் (ஞானா. 50, 13).

[சமம் = ஏற்றத்தாழ்வற்றது, உயர்வு தாழ்வில்லாதது. சமம் → சமன் + இயம்]

சமனிலைமருட்பா *šamaṉilai-maruṭpā,* பெ. (n.) வெண்பாவடியும் ஆசிரியப்பாவடியும் ஒத்து வரும் மருட்பா வகை (இலக்.வி. 749, உரை); variety of maruṭpā in which the lines in veṇbā and āširiyam metres are balanced.

[சமம் + நிலை + மருட்பா]

சமனிலைவஞ்சி *šamaṉilai-vañi,* பெ. (n.) சமநிலைவஞ்சி பார்க்க (தொல்.பொருள். 354, உரை); see *šamanilai-vañji.*

[சமனிலை + வஞ்சி]

சமனை *šamaṉai,* பெ. (n.) ஆதன் (ஆன்மா) பெரு (பெத்த) நிலையிலடையக் கூடிய உயர்ந்த பதவி (சிவசம. 35); highest stage in spiritual development of the soul when it is in bondage. 2. சிவை (சிவசத்தி) (சதாசிவ. 26); Šiva's šakti.

சமனொளி *šamaṉ-oḷi,* பெ. (n.) இலங்கையில் புத்தத் திருத்தலமாயுள்ள ஒரு மலை; Adam's peak in Ceylon, held sacred by Buddhists. "இலங்காதீவத்துச் சமனொளி யென்னுஞ் சிலம்பினை" (மணிமே. 28: 107).

சமாதிகம் *šamādigam,* பெ. (n.) ஊமத்தை; datura fastuosa (சா.அக.).

சமாதிமூலி *šamādi-mūli,* பெ. (n.) கருங்குன்றி; black jeweller's bead - Abrus genus (சா.அக.).

சமாது *šamādu,* பெ. (n.) 1. ஊமத்தை (மலை.); thorn apple. 2. கருவூமத்தை (L); purple stramony.

சமாயிதம் *šamāyidam,* பெ. (n.) உடன்படுகை; agreement.

[சமம் → சமாயிதம்]

சமாலம் *šamālam,* பெ.(n.) மயிற்றோகை, peacock feather. 2. விசிறி; fan.

[அம்முதல் = பொருந்துதல். அம் → அமல் = நிறைவு. அமல் → சமல் → சமாலம் = நிறைந்து இருக்கும் மயிற்றோகை, அதுபோல் இருக்கும் விசிறி]

சமாலி[1] *šamāli,* பெ. (n.) பூச்செண்டு; a kind of bouquet.

[அம் → அமல் → சமல் → சமாலி]

சமாலி[2] *šamāli,* பெ. (n.) சடைக்குறண்டி; a kind of thorny shrub - Lepidagathis scariosa (சா.அக.)

சமாலி[3]**-த்தல்** *šamāli-,* 4 செ.கு.வி. (v.i.). சமாளி-த்தல் (யாழ். அக.) பார்க்க; see *šamāḷi-*

க. சமாளிசு

[சமாளி → சமாலி-,]

சமாலுகம் šamālugam, பெ. (n.) குறிஞ்சா (மலை.); species of scammony swallowwort.

சமாளம் šamāḷam, பெ. (n.) களிப்பு (யாழ்ப்.); mirth, hilarity.

தெ. சுமாளமு

சமாளி-த்தல் *šamāḷi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. இருக்கும் ஏந்துகளைக் கொண்டு ஒன்றைத் தீர்த்தல் அல்லது ஒருவரை எதிர்கொள்ளுதல், ஈடுகொடுத்தல்; to cope with. manage, handle. அரசு, வறட்சியைச் சமாளிக்க நடவடிக்கை

எடுத்துள்ளது. 2. வெட்க உணர்வு அல்லது குற்ற உணர்வு தரக்கூடிய நிலையில் அதனின்று விடுபட முயலல்; to save oneself from the situation retrieve, gloss over. நாங்கள் நம்பாமதத்தார் என்று சொல்லிக் கொண்டிருந்த போது 'நேற்று வீட்டில் கடவுளைக் கும்பிட்டோம்' என்று பையன் சொல்லச் சமாளிக்க வேண்டியதாயிற்று.

க. சமாளிசு

[சமை(யம்) + அளி – சமையளி → சமாளி. சமையம் = தக்க காலநிலை. அளித்தல் = தகுதிபற்றிக் கொடுத்தல். சமாளித்தல் சமையம் அல்லது நேரம் பார்த்து அதற்கேற்றவாறு இயங்குதல்]

கொடுந்தமிழ் நிலங்களில் தனிச்சிறப்பாக வழங்கும் சொற்களுள் கன்னடச் சொல் சமாளி, பெருவழக்கூன்றிய திசைச்சொற்களுள் ஒன்றாகும்.

சமான்குடைஊசி šamān-kuḍai-y-ūsi, பெ. (n.) கிடுகு, புல் முதலியவற்றைக் கூரையாக வேயப் பயன்படும் ஊசி (செங்கை.); pecking-needle for tying grass etc., for roof formation of hut. etc.

[சமம் → சமன் → சமான் + குடை + ஊசி]

சமானம்[1] *šamānam*, பெ. (n.) உவமை; simile.

தெ. சமானமு

[சமம் → சமானம்]

உவமைப்படுத்துவது ஒப்புமை, அதாவது சமத்தன்மை பற்றியமைவதால் சமத்தினின்று திரிந்த சமானம் உவமைப் பொருளுக்காயிற்று என்க.

த. சமானம் → Skt. šamāna

சமானம்[2] *šamānam*, பெ. (n.) 1. ஒப்பு; likness, equality. 2. ஒத்துள்ளது; that which is equal or similar.

ம. சமானம்; தெ. சமானமு

[சமம் = ஒப்பு. சமம் → சமானம்]

த. சமானம் → Skt. samāna

சமானன்[1] *šamānan*, பெ. (n.) உண்ட உணவைச் செரிக்கச் செய்யும் ஒருவகைக் காற்று; a vital air of the body, causing digestion.

தெ. சமடு

[சமம் → சமானன் = உண்ட உணவினைச் சமம் ஆக்குவது, அதாவது ஆற்றலாக ஆக்குவது]

சமானன் → Skt. samāna

சமானன்[2] *šamānan*, பெ. (n.) ஒத்தவன், ஒப்பானவன்; person of equal rank.

[சமானம் → சமானன்]

சமானி[1]**-த்தல்** *šamāni-*, 4 செ.குன்றாவி. (v.t.). ஒப்பிட்டுக் கூறுதல்; to compare, to liken; to treat alike.

[சமானம் → சமானி-,]

சமானி[2] *šamāni*, பெ. (n.) ஒப்பானவன் (யாழ். அக.); equal.

[சமம் → சமானன் → சமானி. 'இ' உடைமை குறித்த ஈறு]

சமானியம் *šamāniyam*, பெ. (n.) பொது; general.

[சமம் → சமானம் → சமானியம்]

சமி[1]**-த்தல்** *šami-*, 4 செ.குன்றாவி. (v.t.) பொறுத்தல் (பிங்.); to endure, to forgive.

[உம்முதல் = பொருந்துதல், கூடுதல். உம் → அம். அம்முதல் = பொருந்துதல். அம் → அமை. அமைதல் = பொருந்துதல், தாங்குதல். அமை → சமை → சமி.]

சமி → Skt. kṣam

சமி[2]**-த்தல்** *šami-*, 4 செ.கு.வி. (v.i.) நடத்தல் (பிங்.); to go, walk.

[சல் → (சன்) → சனி → சமி.]

சமித்திகா *šamittigā*, பெ. (n.) கஞ்சா; an Indian hemp - Caunabis sativus (சா.அக.).

[சமித்து → சமித்திகா]

சமித்து *šamittu*, பெ. (n.) கஞ்சா (மலை.); a Indian hemp.

சமிதம்[1] *šamidam*, பெ. (n.) அமைதி; calmness, equanimity. "உள்ளார்வம் பொறை சமிதம்" (குற்றா. தல. வடவருவி. 50).

[சமம் → சமி → சமிதம்]

சமிதம்[2] *šamidam*, பெ. (n.) 1. தீ; fire; 2. போர்; war.

[சமர் → சமிர் → சமிர்தம் → சமிதம்]

சமுத்திராந்தம்

சங்கக் குப்பி



சரபுங்கன்

சடாமாஞ்சி

சதுரக்கள்ளி

சமிந்தனன் *šamindanan,* பெ. (n.) விறகு; firewood.

[சமிதம் → சமிந்தனன் = தீப்பற்றி எரிவது]

சமிப்பாகம் *šamippāgam,* பெ. (n.) வேல மரம்; acacia genus. *(சா.அக.)*

சமிபாகம் *šamibāgam,* பெ. (n.) கொன்றை *(மலை);* laburnum.

சமிரகம் *šamiragam,* பெ. (n.) உப்பறுகு; a species of Bermuda grass found grown in saline soils *(சா. அக.).*

சமிரம் *šamiram,* பெ. (n.) சிறு வன்னி; a small species of suma tree - Prosopis spicigera *(சா.அக.).*

சமிலாகி *šamilāgi* பெ. (n.) திப்பிலி *(மலை.);* long pepper.

சமிலாகிகம் *šamilāgigam,* பெ. (n.) திப்பிலி; long pepper - piper longum *(சா. அக.).*

[சமிலாகி → சமிலாகிகம்]

சமிலாதி *šamilādi* பெ. (n.) திப்பிலி வேர்; root of long - pepper *(சா. அக.).*

[சமிலாகி → சமிலாதி]

சமீலகம் *šamīlagam,* பெ. (n.) மஞ்சட் கடுக்காய்; fully - riped yellow gall - nut *(சா. அக.).*

சமுகம் *šamugam,* பெ. (n.) *1.* கூட்டம்; crowd. *2.* ஓர் இனத்தார்; a communal group.

[கும் → குமுகம் → சமுகம்]

சமுகவளை *šamuga-vaḷai,* பெ. (n.) தைவேளை; vailay plant - Cleome pentaphylla.

சமுச்சயம் *šamuccayam* பெ. (n.) தொகுதி; collection. "சமுச்சாயவுவமை" *(தண்டி. 30)*

சமுத்திராந்தம் *šamuttirāndam,* பெ. (n.) *1.* சிறுகாஞ்சொறி *(மலை.);* small climbing nettle. *2.* பருத்தி *(வின்.);* Indian cotton plant. *3.* சாதிக்காய்; nutmeg.

சமுத்திரார்த்தம் *šamuttirārttam,* பெ. (n.) சிறுநாகப்பூ *(மரவகை);* Ceylon iron - wood - Mesua ferrea (typica).

சமுதாடை *šamudāḍai,* பெ. (n.) தாள் அகலமாக இருக்கும் புகையிலை வகை; a kind of tobacco which has bigger leaves.

சமுதாய்-த்தல் *šamudāy-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1.* சமாளித்தல் *(இ.வ.);* to manage with economy. *2.* சமாதானப்படுத்துதல் *(யாழ்ப்.);* to reconcile.

[சமாளி → சமதாயி → சமுதாய்]

சமுதாயக்கிராமம் *šamudāya-k-kirāmam,* பெ. (n.) *1.* குடிகள் பொதுவாகப் பயன்படுத்தும் நிலவருவாயுள்ள ஊர் (R.T.); village held in common. *2.* நிலக்கிழாரும் குடிகளும் நிலத்தின் வருவாயைச் சரிபாதியாக துய்க்கும் ஊர் *(வின்.);* village,whose produce is divided equally between the the proprietor and the cultivators.

[சமுதாயம் + கிராமம்]

சமுதாயக்கூடம் *šamudāya-k-kūḍam,* பெ. (n.) ஊர்மக்கள் அனைவரும் பயன்படுத்தும் பொருட்டு அமைக்கப்பட்ட பொதுக்கூடம்; community hall.

[சமுதாயம் + கூடம்]

சமுதாயகாரியம் *šamudāya-kāriyam,* பெ. (n.) பொதுச்செயல் *(வின்.);* public business.

[சமுதாயம் + காரியம்]

சமுதாயச்சீர்திருத்தம் *šamudāya-c-cīrtiruttam,* பெ. (n.) குமுகாயத்தின் வழக்கவொழுக்கங்களை முன்னேற்றத்தின் பொருட்டுத் திருத்துகை *(இக்.வ.);* social reform. தந்தை பெரியார் சமுதாயச் சீர்திருத்தத்தைத் தம் வாழ்நாள் பணியாகச் செய்தார்.

[சமுதாயம் + சீர்திருத்தம்]

சமுதாயச்சோபை *šamudāya-c-cōbai,* பெ. (n.) உறுப்புகள் தனித்தனியாகவன்றி ஒருங்கு கூடுதலால் தோன்றும் அழகு *(சீவக. 1357, உரை);* beauty of an object viewed as a whole.

[சமுதாயம் + சோபை]

சமுதாயநிலம் *šamudāya-nilam,* பெ. (n.) ஊர்ப் பொதுவாக இருந்து பயன்படுத்தும் நிலம்; land held in common by the villagers.

[சமுதாயம் + நிலம்]

சமுதாயம் *šamudāyam,* பெ. (n.) *1.* மக்களின் திரள்; company, assembly. *2.* பெருந்திரள் *(சூடா.);* collection as of things. *3.* கோயில் ஆளுமை அதிகாரிகளின் கூட்டம் (I.M.P. Trav. 99); managing committee of a temple.

4. பொதுவானது; that which is public, common to all. 5. பொதுவாகவேனும் அவ்வவர்க்குரிய பங்குப்படி பிரித்தேனும் நுகரப்படும் ஊர்ப் பொதுச்சொத்து (இ.வ.); tenure by which the members of a village community hold the village lands, funds, etc. in common or by which they divide them according to their shares. 6. உடன்படிக்கை (யாழ்ப்.); mutual agreement, compromise.

[கும் → கும்மல் → குமியல் → குவியல் = குவிந்திருப்பது. கும் → கும்பு → கும்பல் = குவியல், திரள். கும்பு → குப்பு → குப்பல்= குவியல், கூட்டம். குப்பு → குப்பை = குவியல். கும்பு → கும்பை = சேரி. இச்சொற்கள் குவிதற்கருத்தோடு கூடற் கருத்தையும் கொண்டன. கும் → சம் → சம் + உத்து + ஆயம் - சமுதாயம். உம் → உத்து = பொருந்துதல். ஆயம் = கூட்டம். சம் என்னும் பொருந்துதல் கருத்துவேர் சம் → சமஸ் → சமஸ்த்து என வடசொற் திரிபெய்தியமையாகப் பாவாணர் கருதியதால் இச் சொல்லைத் தவிர்த்துக் குமுகாயம் என்னும் சொல்லைப் புனைந்து வழங்கினார்]

சமுதாயம் → Skt. sam-ud-āya

சமுப்பவம் *šamuppavam,* பெ. (n.) தைவேளை (மலை.); a sticky plant growing in sandy places.

சமுர்ப்பன்னம் *šamurppannam,* பெ. (n.) ஊசிப் பாலை; rosy-milk wort - Uystelma coculantum (சா.அக.).

சமுள் *šamul,* பெ. (n.) சவண்டலை (மலை.); Trincomalee red wood.

சமுனம் *šamunam,* பெ. (n.) தேக்கு; teak - wood - Teotona graudis (சா.அக.).

சமை[1]-தல் *šamai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. அமைதல்; to be made, constructed, formed. 2. அணியமாதல்; to get ready, to prepare. "வனஞ் செல்வதற்கே சமைந்தார்க டம்மை" (கம்பரா. நகர்நீ.143). 3. பொருத்தமாதல்; to be suitable. "என்றிவை சமையச் சொன்னான்" (கம்பரா. அங்கத. 8).

[அமை → சமை-,]

சமை[2]-தல் *šamai-,* 4 செ.குன்றாவி. (v.t.) தொடங்குதல்; to commence. "உரை செயச் சமைந்தான்" (கம்பரா. யுத்த. மந்திரப் 118).

[அமை → சமை-,]

சமை[3]-தல் *šamai-,* 2 செ.கு.வி. (v.i.) 1. நிரம்புதல்; to mature. "மலர்ந்து சமைந்த தில்லைகாண்" (திருவிருத். 68, வியா. 357) 2. பூப்பு அடைதல்; to attain puberty, as a girl. "மகள் சமையவில்லை" (தனிப்பா. 1, 389, 44). 3. புழுங்குதல்; to be sultry, hot and close. இந்தக் கூட்டத்திற் சமைந்து விடுகிறது. 4. அழிதல்; to be consumed, destroyed. "ஐவர் தலைவருஞ் சமைந்தார்" (கம்பரா. பஞ்சசே. 67).

[அமை → சமை, சமைதல் = சோறாதல், பெண்பூப்படைதல், மணஞ்செய்யத் தகுதியாதல், தகுதியாதல் (செல்வி, மே, 1978, பக். 425)]

சமை[4]-தல் *šamai-,* 2 செ.குன்றாவி (v.t.) முடித்தல்; to finish. "திருமாலையைப் பாடிச் சமைந்து" (ஈடு, 69:3).

[அமை → சமை-,]

சமை[5]-தல் *šamai-,* 2 செ.கு.வி. (v.i.) திடீரென்று ஏற்படும் அதிர்ச்சி, வியப்பு முதலியவற்றால் செயலற்ற நிலைக்கு உள்ளாதல்; to be dazed when one is shocked or taken aback. தலைவர் நேர்ச்சியில் (விபத்தில்) இறந்து விட்டார் என்று கேட்டதும் கல்லாய்ச் சமைந்து போனேன்.

[அமை → சமை-,]

சமை[6]-த்தல் *šamai-,* 4 செ. குன்றாவி (v.t.) 1. படைத்தல்; to create. "ஊர்வவெல்லாஞ் சமைக்குவென்" (கம்பரா. மிதிலை. 117). 2. செய்தல்; to do, perform. "சமைப்பது கொலையலாற் றக்க தியாவதோ" (கம்பரா. வீபீடண.41) 3. அணிய மாக்குதல்; to get ready, prepare. "நிலத்தைச் சமைத்துக் கொண்டீரேல்" (கலிங். 547).

[அமை → சமை → சமைத்தல். (செல்வி, மே, 1978, பக்.425)]

சமை[7]-த்தல் *šamai-,* 4 செ.குன்றாவி (v.t.) சமையல் செய்தல், பாகஞ் செய்தல்; to cook; "சமைக்கப் படைக்கத் தெரியாமற் போனாலும் உடைக்கக் கவிழ்க்கத் தெரியனும்" (பழ.).

ம. சமெ

[அமை → சமை-,]

சமை[8] *šamai,* பெ. (n.) ஆண்டு (பிங்.); year.

[அமை → அமைதி = நிறைவு. அமை → சமை]

சமை[9] *šamai,* பெ. (n.) சமம்[1] பார்க்க; see *šamam*[1] "உட்கரண மடக்கல் சமை" (வேதா. சூ.11).

[அமை → சமை]

சமை[10] *šamai,* பெ. (n.) பொறுமை; patience, fortitude. "சமையுளா ருணரு மெங்க டம்பிரான்" (பிரபுலிங். வசவண்ணர்க. 40).

[அமை → அமைதி = பொறுமை. அமை → சமை]
த. சமை → Skt. ksamā

சமைகடை *šamai- kaḍai,* பெ. (n.) முடிவு (யாழ்.அக.); close, end.

[சமை + கடை]

சமைந்த *šamainda,* பெ. எ. (adj.) 1. உடன் பட்ட; agreeing. 2. ஆளுமை செய்ய அமைக்கப் பெற்ற; constituting for administration. 3. திட்டப்படி அமைந்த; being according to plan. 'சமைந்த வாரியத்தார்' (தெ. 7:96) "இவை நாட்டுக்கு சமைந்த நாட்டுக் கணக்கு" (தெ.க.தொ. 7:106)

[அமை → சமை → சமைந்த]

சமைந்தவடைப்பு *šamainda-v-aḍaippu,* பெ. (n.) 1. தகுதிவாய்ந்த சான்று; proper witness. 2. செப்பேடு போன்றவற்றில் சான்றாகக் கையொப்பமிடுதற்குத் தகுதியுடையாராக அவையோரால் குறிக்கப்பட்ட ஊர்ப்பெருமக்கள்; village elders for attesting witness. "இவ்வூருக்கு சமைந்த அடைப்பு கவுணியந் திருமாலிருஞ் சோலை ஸ்ரீ கிருஷ்ண பட்டனும் ஆக இவ்வனையோம்" (தெ.க.தொ. 8:290).

[சமைந்த + அடைப்பு]

சமைப்பு[1] *šamaippu,* பெ. (n.) 1. உழைப்பு; exertion, toil. 2. ஊக்கம்; zeal, impulse.

[அமை → அமைதி = செயல். அமை → சமை → சமைப்பு]

சமைப்பு[2] *šamaippu,* பெ. (n.) முயற்சி; action, effort. "சமைப்பாற் சமர்த்தாற்று மாற்றல்" (அரிச். பு. இந்தி. 46).

[அமை → சமை → சமைப்பு]

சமைப்பு[3] *šamaippu,* பெ. (n.) அறக்கொடை (தருமக் கொடை) (S.I.I.vii.55); gift to a charity.

[அமை → சமை → சமைப்பு]

சமையக்கவடன் *šamaiya-k-kavaḍaṉ,* பெ. (n.) நேரத்திற்கேற்றபடி நடக்கும் ஏமாற்றுக்காரன் (வஞ்சகன்); a hypocrite who acts as occasion suits him; time-server.

[சமையம் + கவடன். கவை → கவடு → கவடன் = மனம் ஒன்றிச் செயல்படாதவன், இருமனத்தன், அவ்வப்போது மாறும் இயல்பினன்]
சமயக்கவடன் பார்க்க

சமையங்கடத்து-தல் *šamaiyaṅ-kaḍattu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. வீணே காலம் போக்குதல்; to while away time. 2. செயலைச் செய்து முடிக்காமல் நாள்கடத்துதல்; to be postponing.

[சமையம் + கடத்து-,]

சமையச்சந்துக்கட்டு *šamaya-c-candu-k-kaṭṭu,* பெ. (n.) நெருக்கடியான நேரம்; நெருக்கடியான காலம்; critical time; unlucky conjunction of circumstances; time of difficulty.

[சமையம் + சந்து + கட்டு]

சமையணன் *šamaiyaṇaṉ,* பெ. (n.) ஒரு (ஊர்த்) தெய்வம்; a village deity. தள்ளற வூர் காக்குஞ் சமையணனே (பஞ்ச. திருமுக. 656).

[சமை(யம்) + அணன்]

சமையத்தறுவாய் *šamaya-t-taṟuvāy,* பெ. (n.) தகுந்தகாலம்; the most proper occasions, critical junction.

[சமையம் + தறுவாய்]

சமையத்தார் *šamaiyattār,* பெ. (n.) கோயிலில் பணிபுரிவோர்; temple servants. "தேவன் மிகளோம் பதிபாதமூலத்தோமும் பட்டுடை யோமும் சமையத்தோம் மற்றும் இத்தளி பங்குடையோம்" (தெ.க.தொ. 3:236-3)

[சமையம் → சமையத்தார்]

சமையபேதம் *šamaiya-bēdam,* பெ. (n.) சமயவேறுபாடு பார்க்க; see *šamaya-vēṟupāḍu.*

[சமையம் + பேதம்]

சமையம் *šamaiyam,* பெ. (n.) 1. பதனடைந்த அல்லது நுகர்ச்சிக்கேற்ற நிலை; suitable or proper opportunity. 2. வேளை, காலம்; time. 'சமையம் வாய்த்தால் களவு செய்வான்' (பழ.) 'சமையம் வாய்த்தால் நமனையும் பலகாரம் செய்வான்' (பழ.)

ம. சமயம்; க. சமய; தெ. சமயமு; து. சமய, சமய

[உத்தல் = பொருந்துதல். உத்தி (உ+தி) = பொருத்தம், நூற்குப் பொருந்தும் முறை, விளையாட்டிற் கன்னை (கட்சி) பிரிக்க, இருவர் இணைதல்.
உத்தம் = பொருத்தம். உத்தம் = வ. யுக்த. உத்தி → வ. யுக்தி
உ → ஒ. ஒத்தல் =பொருந்துதல், போலுதல்
உ → உம். உம்முதல் = பொருந்துதல், கூடுதல், எண்ணும்மை யிடைச்சொல்லானது இதுவே. உம் → அம் = பொருந்தும் நீர், நீரோடு நீரும் நிலத்தொடு நீரும் ஆகப் பொருந்துதல் இரு வகைத்து
அம் → அமர். அமர்தல் = பொருந்துதல், அன்பால் உள்ளம் ஒன்றுதல்
அம் → அமை. அமைதல் = பொருந்துதல், அடங்கியிருத்தல், கூடுதல், நெருங்குதல், நுகர்ச்சிக் கேற்றதாதல், தக்கதாக வாய்த்தல்.
அமை → அவை = கூட்டம்.
அமை → அமையம் = பொருந்தும் நேரம், ஏற்றவேளை, தக்கசெவ்வி, வினைநிகழும் சிறுபோது. (த.ம.4)

சமை + அம் = (சமையம்) → சமயம். சமைதல் = பக்குவமாதல். பெண்டிர் பூப்படைதலையும் அரிசி சோறாதலையும் சமைதல் என்று சொல்லுவதும் பக்குவமாதல் என்னுங் கருத்துப் பற்றியே. மதம் ஆதனை வீடுபேற்றிற்குப் பக்குவப் படுத்தலால், சமயம் எனப்பட்டது. சமையம் → பக்குவமான வேளை, வேளை, சமயம் பக்குவமாக்கும் நெறி அல்லது கொள்கை. வேளையைக் குறிக்கும் சமையம் என்னும் சொல், மதத்தைக் குறித்தற்கு ஐகாரம் அகரமாயிற்று. ஒருசொல் பொருள் வேறுபடுதற்கு எழுத்து மாறுவது ஒரு சொல்லியல்நூல் நெறிமுறையாகும்.
கா: பழைமை (தொன்மை) → பழமை (புராணம்). முதலியார் → முதலியோர் நொடிப்பழமை, பழமைபேசுதல் என்னும் வழக்குகளை நோக்குக.

ஒருவினைக்குத் தகுந்த சமையம் நல்ல கருத்தில் செவ்வி என்றும், தீயகருத்தில் அற்றம் என்றும் கூறப்படுகின்றன (ஒ.மொ. 19)]

சமையம்பார்-த்தல் *šamaiyam-pār-,* 4 செ.கு.வி. (v.i.) வினைக்குத் தக்க வேளையை எதிர்பார்த்தல்; to watch for a suitable opportunity.

[சமையம் + பார்-,]

சமையமண்டபம் *šamaiya-maṇḍabam,* பெ. (n.) அரசன் காட்சியளிக்கும் மண்டபம்; audience chamber of a king. "சமைய மண்டப நிறைந்திருந்த திரிசங்கு மைந்தனை" (அரிச். பு. வேட்டஞ்செய். 16).

[சமையம் + மண்டபம்]

சமையமந்திரி *šamaiya-mandiri,* பெ. (n.) சமையவமைச்சர் பார்க்க; see *šamaiya-v-amaiccar* (தெ.க. தொ-5 க. 51 - 6 பக்-516).

[சமையம் + மந்திரி]

சமையல் *šamiyal,* பெ. (n.) 1. சமைக்கை; cooking. 2. சமைத்த உணவு; cooked food. 'சமையல் தரமாயிருந்தது' (உ.வ.).

[சமை → சமையல் (செல்வி. மே.78, பக்.425)]

சமையல்வளி *šamaiyal-vaḷi,* பெ. (n.) மிகக் குறைந்த அழுத்தத்தில் வளியாக மாறிவிடும் தன்மைகொண்ட நீர்மநிலையில் உள்ள கன்னெய், எரிபொருள்; cooking gas; liquefied petroleum gas.

[சமையல் + வளி. வள் → வளி = வளைந்தடிக்கும் காற்று, காற்றுத் தன்மையிலுள்ள எரிபொருள்]

சமையல்வாயு *šamaiyal-vāyu,* பெ. (n.) சமையல்வளி பார்க்க; see *šamaiyal-vaḷi.*

[சமையல் + வாயு]

சமையலறை *šamaiyal-aṟai,* பெ. (n.) சமையற்கட்டு பார்க்க; see *šamaiyaṟ-kaṭṭu.*

மறுவ. அடுக்களை, மடைப்பள்ளி

[சமையல் + அறை]

சமையலேனம் *šamaiyal-ēṉam,* பெ. (n.) சமைப்பதற்குப் பயன்படும் ஏனம் (பாத்திரம்); cooking vessel.

[சமையல் + ஏனம்]

சமையவேறுபாடு *šamaiya-vēṟupāḍu,* பெ. (n.) 1. காலமல்லாக் காலம், பொருத்தமற்ற காலம்; unreasonableness, inopportune moment. 2. துன்பமான காலம்; evil time.

[சமையம் + வேறுபாடு]

சமையற்கட்டு *šamaiyaṟ-kaṭṭu,* பெ. (n.) உணவு சமைக்கும் அறை, சமையலறை; kitchen.

[சமையல் + கட்டு]

சமையற்குறிப்பு *šamaiyaṟ-kuṟippu,* பெ. (n.) ஒரு குறிப்பிட்ட உணவு சமைக்கத் தரப்படும் செய்முறை விளக்கம்; recipe, tips for cooking. நேற்றுத் தொலைக்காட்சியில் சொன்ன சமையற் குறிப்பு நன்றாக இருந்தது.

[சமையல் + குறிப்பு]

சமையற்கூடம் *šamaiyaṟ-kūḍam,* பெ. (n.) சமையற்கட்டு பார்க்க; see *šamaiyaṟ-kaṭṭu.*

[சமையல் + கூடம்]

சமையசமையம்[1] *šamaiya-šamaiyam,* பெ. (n.) தக்கதும் தகாததுமான காலங்கள்; proper and improper time.

[சமை + அல் + சமையம். 'அல்' எ.ம. இடைநிலை]

சமையாசமையம்[2] *šamaiyā-šamaiyam,* பெ. (n.) உரியகாலம்; proper time. சமையா சமையத்துக் குதவ வேண்டும்.

[சமையா + சமையம்]

சமையற்சோடாஉப்பு *šamaiyaṟsōḍā-uppu,* பெ. (n.) சமைக்கும்போது பருப்பு முதலியவற்றை வேகவைப்பதற்குப் பயன்படுத்தும், ஒரு வேதியல் உப்பு; baking soda; sodium bicarbonate.

[சமையல் + சோடா + உப்பு]

சமையற்புரை *šamayaṟ-purai,* பெ. (n.) சமையற்கட்டு (இ.வ.) பார்க்க; see *šamaiyaṟ-kaṭṭu.*

[சமையல் + புரை]

சமைவு[1] *šamaivu,* பெ. (n.) நிலைமை; state, situation. "தம்பியுந் தானுநிற்பதர்யினான் சமைவீது" *(கம்பரா. அணிவ. 7).*

[சமை → சமைவு]

சமைவு[2] *šamaivu,* பெ. (n.) அழிவு; destruction. "சமைவில் வெம் மிடற்றானை" *(இரகு. குறைகூறு. 51).*

க. சமெ.

[சமை → சமைவு]

சமைவு[3] *šamaivu,* பெ. (n.) சமை[9] பார்க்க; see *šamai*[6]. "முனிவர்கள் சமைவொடும் வழிபட" *(தேவா. 35., 7).*

[சமை → சமைவு]

சய்யல் *šayyal,* பெ. (n.) சாயல்; resemblance.

[சாயல் → சய்யல்]

சய்யாளம் *šayyāḷam,* பெ. (n.) நேர்வாளம்; croton seed - Croton tiglium *(சா.அக.).*

சய்யை *šayyai,* பெ. (n.) செய்யுட் போக்கு; flow as of a stanza. பாட்டின் சய்யை நன்றாகவுள்ளது.

[இணை → சியை → சய்யை]

சய *šaya,* பெ. (n.) கழித்தல் குறி (−); minus sign (இலங்.) பத்து சய ஐந்து சமன் ஐந்து.

சயகண்டி *šayakaṇḍi,* பெ. (n.) சேகண்டி; gong. "சங்கமொடு சயகண்டி டக்கை" *(திருவேங். சத. 66).*

[சேகண்டி → சயகண்டி. குண்டு → குண்டலம் = வட்டம், வளையம். குண்டு → குண்டை = உருண்டுதிரண்ட காளை. குண்டை → கண்டை = வட்டமான அல்லது திரண்ட மணி (வட. வர. 104). கண்டை → கண்டி]

கண்டை → Skt. ghanta

சயகண்டை *šaya-kaṇḍai,* பெ. (n.) சயகண்டி பார்க்க (வின்.); see *šaya-kaṇḍi.*

[சயகண்டி → சயகண்டை]

சயகம் *šayagam,* பெ. (n.) பூவரும்பு (யாழ்.அக.); flower-bud.

[அகைதல் = தளிர்தல்; அகை → அகையம் → அகயம் → சகயம் → சயகம்]

சயதரு *šayadaru,* பெ. (n.) *பாதிரி மலர்;* trumpet flower - streos - Permum chelonoides *(சா.அக.).*

சயதாளம் *šaya-tāḷam,* பெ. (n.) ஒன்பான் தாளத்தொன்று *(திவா.);* a variety of time-measure, one of nava-tāḷam.

சயந்தகம் *šayandagam,* பெ. (n.) *சாதிலிங்கம்;* vermilion - bisul - pheret of mercury *(சா.அக.).*

சயந்தம் *šayandam,* பெ. (n.) *1.* இறந்துபட்ட ஒரு நாடகத் தமிழ்நூல்' *(சிலப். உரைப்பாயிரம்);* a Nāṭya work in Tamil, not now extent. *2.* இணைக்கை வகையுளொன்று *(சிலப். 3; 18, உரை);* arihand posture.

[சயம்² → சயந்தம்]

சயந்தமாலை *šayanda-mālai,* பெ. (n.) ஒரு *கணிய நூல் (வின்.);* an astronomical treatise in Tamiḻ.

[சயந்தம் + மாலை]

சயந்தன் *šayandaṉ,* பெ. (n.) இந்திரனின் மகன்; Indra's son. "இந்திரச் சிறுவன் சயந்த னாகென" *(சிலப். 3:119).*

சயந்தனம் *šayandaṉam,* பெ. (n.) தேர்; chariot, car. "ஆடகத் தகும்புறு சயந்தனம்" *(கம்பரா. கரன். 53).*

[அயர்தல் = தேர் செலுத்துதல். அயர் → சயர் → சயர்த்தல் → சயர்த்தனம் → சயர்ந்தனம் → சயந்தனம்]

சயந்திகம் *šayandigam,* பெ. (n.) இருவாட்சி (ஒருவகை மல்லிகை); a kind of jasmine - Jasminum sambuc flower monorae plant *(சா.அக.).*

சயநீர் *šaya-nīr,* பெ. (n.) செயநீர் (இ.வ.); medicinal preparation of lime and sal-ammoniac *(செ.அக.).*

[செய் + நீர் = செயநீர் → சயநீர்]

சயபாளம் *šayapāḷam,* பெ. (n.) நேர்வாளம்; croton seed - Croton tigilium *(சா.அக.).*

சயம்[1] *šayam,* பெ. (n.) *1.* கூட்டம் (உரி.நி.); collection, assembly. *2.* மாலை (அக.நி.); garland.

[கள் = கூடுதல். கள் → கள → கய → கயம் = பெருமை, பெரியது. கயம் → சயம்]

சயம்[3] *šayam,* பெ. (n.) *சருக்கரை (சூடா.);* sugar.

[விசயம் = கருப்பஞ்சாறு, கருப்புக்கட்டி, பாகு. பிழி → விழி → விசி → விசையம் → விசயம் → சயம்]

சயம்[3] *šayam,* பெ. (n.) ஆம்பல் (மூ.அ.); Indian water lily.

[அயம் = பள்ளம், குளம், சுனை, நீர், சேறு. அயம் → சயம் = நீர் நிலையில் வளர்வது, ஆம்பல்]

சயரிதம் *šayaridam,* பெ. (n.) தழுதாழை; wind killer - Cleodendron phlomoides *(சா.அக.).*

சயரோவரம் *šayarōvaram,* பெ. (n.) வெந்தயம்; fenugreek or dill-seed - trigonella fenugraecum *(சா.அக.).*

சயலாதி *šayalādi,* பெ. (n.) திப்பிலி; long-pepper - Piper longum *(சா.அக.).*

சயா *šayā,* பெ. (n.) *1.* வாதமடக்கி (மலை.); wind killer. *2.* கடுக்காய் (தைலவ. தைல. 125; chebulic myrobalan.

சயாகம் *šayāgam,* பெ. (n.) குறிஞ்சா; scammony swallow-wort - Secamony emetica *(சா.அக.).*

சயாலு *šayālu,* பெ. (n.) தூங்குமூஞ்சியன் (யாழ். அக.); idle or sleepy fellow.

சயிக்கம் *šayikkam,* பெ. (n.) மென்மை (யாழ். அக.); fineness, thinness. சயிக்கச் சிலை.

தெ. சைகமு

[ஐ = நுண்மை, மென்மை. ஐ → அய் → அயில் → சயில் → சயிக்கம்]

சயிக்கர் *šayikkar,* பெ. (n.) அரசு (மலை.); pipal.

சயிக்கா *šayikkā,* பெ. (n.) அரசமரம்; peepal tree - Ficus religiosa *(சா.அக.).*

[சயிக்கர் → சயிக்கா]

சயிக்காரி *šayikkāri,* பெ. (n.) bastard kino - Butea frondosa *(சா.அக.).*

சயிக்கினை *šayikkiṉai,* பெ. (n.) சைகை; significant gesture, as with hands.

[சயிக்கை → சயிக்கினை]

சயிக்கை *šayikkai,* பெ. (n.) சயிகை (இ.வ.) பார்க்க; see *šayigai.*

[செய் + கை = செய்கை → சைகை → சயிகை → சயிக்கை]

சயிகை *šayigai,* பெ. (n.) கையால் காட்டும் குறியீடு, சைகை; significant gesture, as with hands.

[செய் + கை = செய்கை → சைகை → சயிகை]

சயித்தியக்கட்டி *šayittiya-k-kaṭṭi,* பெ. (n.) தொண்டைக் கட்டி (கண்டக்கிரந்தி) (இங்.வை.); tonsilitis, quinsy.

[சயித்தியம் + கட்டி]

சயித்தியம் *šayittiyam,* பெ. (n.) 1. குளிர்ச்சி; coldness, chillness. 2. குளிர்ந்தகாலம்; cold season. "சயித்தியத்தி லம்பின் முழுகி" (உத்தரரா. இராவணன் பிற. 24). 3. ஒருநோய் (M.L.); coma.

[சனி → சயி → (சயித்தம்) → சயித்தியம்]

த. சயித்தியம் → Skt. šaitya. வடசொல் šaitya வுக்கு šita என்னும் வேர் மூலத்தைக் காட்டுகிறது மா.வி. அகரமுதலி. ஆயின் அச் சொல் நீரம் → ஈரம் → (சீரம்) → சீதம் என வடிவு பெற்றமையைக் காண்க.

சயிதகம் *šayidagam,* பெ. (n.) எருக்கு; madar plant - Calotropis gigantea (சா.அக.).

சயிந்தவம்[1] *šayindavam,* பெ. (n.) 1. குதிரை (பிங்.); horse. 2. சயிந்தவலவணம் (சூடா.); a kind of rock-salt.

சயிந்தவம்[2] *šayindavam,* பெ. (n.) தலை (சூடா.); head.

சயிரியம் *šayiriyam,* பெ. (n.) செம்முள்ளி; thorny nail-dye - barleria prionitis (சா.அக.).

[அள் = கூர்மை. அள் → அய் → அயல்= கூர்மை, கூரியபொருள். அயில் → அயிர் → சயிர் → சயிரியம்]

சயிலந்தம் *šayilandam,* பெ. (n.) சாதிலிங்கம் (மூ.அ.); vermilion.

சயினி *šayiṉi,* பெ. (n.) திப்பிலி (மலை.; long pepper.

சயூனி *šayūṉi,* பெ. (n.) சயினி (சங்.அக.) பார்க்க; see *šayiṉi.*

சயை *šayai,* பெ. (n.) முன்னை (தைலவ. தைல. 72); firebrand teak.

சர்க்கம்[1] *šarkkam,* பெ. (n.) சருக்கம் பார்க்க; see *šarukkam*[1].

[சருக்கம் → சர்க்கம்]

சர்க்கம்[2] *šarkkam,* பெ. (n.) படைப்பு; creation. "நிலவிய சர்க்கம்" (மச்சபு. நைமி. 37).

[சருக்கம் → சர்க்கம்]

த. சருக்கம் → Skt. sarga

சருக்கம்[2] பார்க்க

சர்க்கரை *šarkkarai,* பெ. (n.) சருக்கரை[1] பார்க்க; see *šarukkarai*[1].

[சருக்கம் → சருக்கரை → சர்க்கரை]

சர்க்கரைக்கதளி *šarkkarai-k-kadaḷi,* பெ. (n.) சருக்கரைக்கதளி பார்க்க; see *šarukkarai-k-kadaḷi.*

ம. சக்கரக்கதளி

[சருக்கரை → சர்க்கரை + கதளி. குதலி → கதலி = சிறுவாழைக்காய். கதலி → கதளி]

சர்க்கரைக்கிழங்கு *šarkkarai-k-kiḻaṅgu,* பெ. (n.) சருக்கரைவள்ளி பார்க்க; see *šarukkarai-vaḷḷi.*

[சருக்கரை → சர்க்கரை + கிழங்கு = சர்க்கரைக் கிழங்கு = சருக்கரை போல் இனிக்கும் கிழங்கு]

சர்க்கரைக்கேளி *šarkkarai-k-kēḷi,* பெ. (n.) சருக்கரைக்கதளி பார்க்க (இ.வ.); see *šarukkarai-k-kadaḷi.*

சர்க்கரைக்கொடி *šarkkarai-k-koḍi,* பெ. (n.) சருக்கரைக்கொடி பார்க்க (G.Sm.D.T.I, 215); see *šarukkarai-k-koḍi.*

[சருக்கரை → சர்க்கரை + கொடி. சர்க்கரை வெள்ளை நிறமுடையது. சர்க்கரை = வெள்ளை]

சர்க்கரைக்கொம்மட்டி *šarkkari-k-kommaṭṭi,* பெ. (n.) சருக்கரைக்கொம்மட்டி பார்க்க (மூ.அ.); see *šarukkarai-k-kommaṭṭi.*

ம. சக்கரக்கும்மட்டி

[சருக்கரை → சர்க்கரை + கொம்மட்டி]

சர்க்கரைநாரத்தை *šarkkarai-nārattai,* பெ. (n.) சருக்கரைநாரத்தை பார்க்க (யாழ்.அக.); see *šarukkarai-nārattai.*

[சருக்கரை → சர்க்கரை + நாரத்தை]

சர்க்கரைநோய் *šarkkarai-nōy,* பெ. (n.) நீரிழிவு நோய்; diabetes.

[சருக்கரை → சர்க்கரை + நோய். நுள் → நொள் → நோள் → நோய்]

கணையச்சுரப்பி போதிய அளவு சுரக்காததால் உண்ணும் உணவிலுள்ள சர்க்கரைப் பகுதிகளை, ஆற்றல் பொருளாக மாற்றி, உடலுறுப்புகளுக்குக் கொண்டு செல்வது குறைவதால், ஏற்படும் நோய்.

சர்க்கரைப்பயிர்கள் *šarkkarai-p-payirgaḷ,* பெ. (n.) சருக்கரை எடுக்கப் பயன்படும் கரும்பு, தென்னை, பனை, ஈந்து முதலியவை; sugar contended crops such as sugarcane, coconut, palm, datepalm.

[சருக்கரை → சர்க்கரை + பயிர்கள்]

சர்க்கரைப்பருப்பு *šarkkarai-p-paruppu,* பெ. (n.) சிற்றுண்டிவகை (பணிகாரவகை) (புதுவை.); a confectionary.

[சருக்கரை → சர்க்கரை + பருப்பு]

சர்க்கரைப்பறங்கி *šarkkarai-p-paraṅgi,* பெ. (n.) சருக்கரைப்பூசணி பார்க்க; see *šarukkari-p-pūšaṇi.*

[சர்க்கரை + பறங்கி]

சர்க்கரைப்பாகு *šarkkarai-p-pāgu,* பெ. (n.) சருக்கரைப்பாகு பார்க்க; see *šarukkarai-p-pāgu*

ம. சக்கரப்பாவு

[சருக்கரை → சர்க்கரை + பாகு]

சர்க்கரைப்பாறை *šarkkarai-p-pāṟai,* பெ. (n.) சருக்கரைப்பாறை பார்க்க; see *šarukkarai-p-pāṟai.*

ம. சக்கரப்பாற

[சருக்கரை → சர்க்கரை + பாறை]

சர்க்கரைப்பானை *šarkkarai-p-pāṉai,* பெ. (n.) சர்க்கரைப்பாகினை வைக்கும் மட்கலம்; an earthern vessel used for preserving 'šarkkarai-p-pāgu'.

ம. சர்க்கரைப்பான, சக்கரப்பாடம்

[சருக்கரை → சர்க்கரை + பானை]

சர்க்கரைப்புகையிலை *šarkkarai-p-pugaiyilai,* பெ. (n.) சருக்கரைப்புகையிலை பார்க்க; see *šarukkarai-p-pugaiyilai.*

ம. சக்கரப்புகயில

[சருக்கரை → சர்க்கரை + புகையிலை]

சர்க்கரைப்பூசணி *šarkkarai-p-pūsaṇi,* பெ. (n.) சருக்கரைப்பூசணி பார்க்க (M.M.129.); see *šarukkarai-p-pūšaṇi.*

ம. சக்கரச்சுர, சர்க்கரமத்தன்

[சருக்கரை → சர்க்கரை + பூசணி]

சர்க்கரைப்பூந்தி *šarkkarai-p-pūndi,* பெ. (n.) சருக்கரைப்பூந்தி பார்க்க (இந்துபாக.); see *šarukkarai-p-pūndi.*

[சருக்கரை → சர்க்கரை + பூந்தி]

சர்க்கரைப்பேச்சு *šarkkarai-p-pēccu,* பெ. (n.) சருக்கரைப்பேச்சு பார்க்க; see *šarukkarai-p-pēccu.*

ம. சக்கரவாக்கு

[சருக்கரை → சர்க்கரை + பேச்சு]

சர்க்கரைப்பேரி *šarkkarai-p-pēri,* பெ. (n.) சருக்கரைப்பேரி பார்க்க (இ.வ.); see *šarukkarai-p-pēri.*

[சருக்கரை → சர்க்கரை + பேரி]

E. pear → த. பேரி

சர்க்கரைப்பொங்கல் *šarkkarai-p-poṅgal,* பெ. (n.) சருக்கரைப் பொங்கல் (பதார்த்த. 1403) பார்க்க; see *šarukkarai-p-poṅgal* (செ.அக.).

ம. சக்கரச் சோறு

[சருக்கரை → சர்க்கரை + பொங்கல்]

சர்க்கரைப்பொன்னாச்சி *šarkkarai-p-poṉṉācci,* பெ. (n.) சருக்கரைப்பொன்னாச்சி பார்க்க (இ.வ.); see *šarukkari-p-poṉṉācci* (செ.அக.)

[சருக்கரை → சர்க்கரை + பொன்னாச்சி]

சர்க்கரைமா *šarkkarai-mā,* பெ. (n.) சருக்கரை மா பார்க்க; see *šarukkarai-mā.*

ம. சக்கரமாவு

[சருக்கரை → சர்க்கரை + மா]

சர்க்கரைலாடு *šarkkarai-lāḍu,* பெ. (n.) இனிப்பு வகை (இந்துபாக. 311); a kind of sweet confection.

[சருக்கரை → சர்க்கரை + லாடு]

Skt. laḍḍu → த. லட்டு → லாடு

சர்க்கரைவட்டு *šarkkarai-vaṭṭu,* பெ. (n.) சருக்கரைவட்டு பார்க்க (S.I.I. vii, 311); see *šarukkarai-vaṭṭu.*

[சருக்கரை → சர்க்கரை + வட்டு. வட்டு = வட்டமான கருப்புக்கட்டி]

சர்க்கரைவர்த்தி *šarkkarai-vartti,* பெ. (n.) பூடுவகை (வின்.); a plant - Chenopodium album. (செ.அக.)

[சருக்கரை → சர்க்கரை + வர்த்தி]

சர்க்கரைவழங்கு-தல் *šarkkarai-vaḻaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) மகிழ்ச்சிக்குறியாகச் சருக்கரை கொடுத்தல் (கொ.வ.); to distribute sugar, as a token of rejoicing.

[சருக்கரை → சர்க்கரை + வழங்கு-,]

சர்க்கரைவள்ளி *šarkkarai-vaḷḷi,* பெ. (n.) சருக்கரைவள்ளி பார்க்க; see *šarukkarai-vaḷḷi.*

ம. சக்கரவள்ளி

[சருக்கரை → சர்க்கரை + வள்ளி]

சர்க்கரைவள்ளிக்கிழங்கு *šarkkarai-vaḷḷi-k-kiḻaṅgu,* பெ. (n.) சருக்கரைவள்ளி பார்க்க; see *šarukkarai-vaḷḷi.*

ம. சக்கரவள்ளி

[சருக்கரை → சர்க்கரை + வள்ளி + கிழங்கு]

சர்க்கரைவாயன் *šarkkarai-vāyaṉ,* பெ. (n.) 1. இனிமையாகப் பேசுபவன்; one who trades in sweet words, one having sweet tongue. 2. உள்ளத்தில் உள்ளதை மறைத்து இனிமை யாகப் பேசுபவன்; one who utters pleasing but insincere words.

ம. சக்கரவாயன்

[சருக்கரை → சர்க்கரை + வாயன்]

சர்க்கரைக்கல் *šarkkarai-k-kal,* பெ. (n.) பனங்கற்கண்டு; sugar - candy from palm toddy (சேரநா.).

ம. சக்கரக்கல்லு

[சர்க்கரை + கல்]

சர்க்கரைக்கள் *šarkkarai-k-kaḷ,* பெ. (n.) சருக்கரை உண்டாக்குவதற்குப் பயன்படுத்தும் இனிப்புக்கள்; the sweet toddy from which jaggery is produced.

ம. சக்கரக்கள்ளு

[சர்க்கரை + கள்]

சர்ச்சரை[1] *šarccarai,* பெ. (n.) சருச்சரை (சூடா.); roughness, as of bark.

[சரசரப்பு → ஒலிகுறிப்புச்சொல். சரசர → சர்ச்சரை = சரசரப்பு, சரசரப்பானது]

சர்ச்சரை[2] *šarccarai,* பெ. (n.) சச்சரவு (இ.வ.); quarrel.

[சச்சரவு → சர்ச்சரை]

சர்ச்சை *šarccai,* பெ. (n.) 1. ஆராய்ச்சி; inquiry, critical study. 'சர்ச்சையில்லாமையால் செய்தி (விஷயம்) மறந்துவிட்டது' (உ.வ.). 2. சொற்போர்; discussion, debate.

Skt. šarcā

சர்ப்ப *šarppa,* ஏ.வி. (v.imp.) விரைந்து நட; run, hurry up. "ஏகுமின் சர்ப்ப வென்றான்" (திருவிளை. இந்திரன். 64).

[சர் → சர்ப்ப → விரைந்து நட என்னும் பொருளில் வந்த ஒலிக்குறிப்புச் சொல். இது முக்காலங்களிலும் புடைபெயர்ச்சி கொள்ளாமல் ஏவல்வினை வடிவத்தில் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது]

சர்ப்பக்கடி *šarppa-k-kaḍi,* பெ. (n.) பாம்புக்கடி; snake-bite.

[சர்ப்பம் + கடி]

சர்ப்பக்காவடி *šarppa-k-kāvaḍi,* பெ. (n.) கடவுள் திருமுன்பு திருமுழுக்குப்பொருளாக மாறி வியப்பு (அதிசயம்) விளைக்கக்கூடியபடி நல்லபாம்பைக் கலத்திலிட்டு எடுக்குங் காவடி; a serpent taken to a temple in a kāvaḍi under a vow, the serpent miraculously transforming into an agreeable offering in the presence of the deity.

[சர்ப்பம் + காவடி]

சர்ப்பக்காவு *šarppa-k-kāvu,* பெ. (n.) நாகங்கள் இருப்பதற்கு அமைந்த தோட்டம் (இ.வ.); serpent's grove, considered a sacred place.

[சர்ப்பம் + காவு]

சர்ப்பசயனம் *šarppa-šayanam,* பெ. (n.) திருமாலின் பாம்பணை; Viṣṇu's serpent couch.

[சர்ப்பம் + சயனம்]

Skt. šayana → த. சயனம்

சர்ப்பசாந்தி *šarppa-šānti,* பெ. (n.) குழந்தை பிறந்து இறந்திடாமல் நீண்ட ஆயுளோடு வாழவேண்டித் தாம் முற்பிறவியில் நல்ல பாம்பைக் கொன்றதனாலுண்டான தீவினையை நீக்கும் சடங்கு; rites in expiation of the sin of cobra - killing in past births, performed with a view to beget long-lived offspring.

[சர்ப்பம் + சாந்தி]

Skt. šandi → த. சாந்தி

சர்ப்பசாவம் *šarppa-šāvam,* பெ. (n.) முற்பிறப்பில் நல்லபாம்பைக் கொன்றதனால் பிறங்கடையற்றுப் போம்படி நேருஞ் சாவம்; curse of childlessness resulting from cobra killing in former births (செ.அக.).

[சர்ப்பம் + சாவம்]

சர்ப்பசிரம் *šarppa-širam,* பெ. (n.) பாம்பின் படம் போல ஐந்து விரல்களையும் நெருக்கி உள்வளைக்கும் முத்திரை(அபிநய) க்கை (பரத. பாவ.23); a hand pose which consists in joining the five fingers of a hand and blending them in the form of serpent's hood.

[சர்ப்பம் + சிரம்]

Skt. širas → த. சிரம்

சர்ப்பதட்டம் *šarppa-taṭṭam,* பெ. (n.) சர்ப்பக்கடி பார்க்க; see *šarppa-k-kaḍi.*

[சர்ப்பம் + தட்டம்]

Skt. dasta → த. தட்டம்.

சர்ப்பம் *šarppam,* பெ. (n.) 1. பாம்பு (பிங்.): snake. 'சர்ப்பத்தின் வாய்த் தவளை போல' (பழ.) 2. பகல் முழுத்தம் (முகூர்த்தம்) பதினைந்தனுள் இரண்டாவது (விதான. குணாகுண.73, உரை.); the second of 15 divisions of day.

[சர்ரெனல் = விரைந்து செல்லுதலை உணர்த்தும் ஒலிக்குறிப்புச் சொல். சர் → சருப்பம் → சர்ப்பம். மாந்தன் பார்வையினின்று மிக விரைந்து (சர்ரென்று) மறையும் இயல்பினைக் கொண்டது. sarpa ஊர்ந்து செல்லுதல் என்னும் பொருளையுடைதாக மா.வி. அகரமுதலி காட்டும். ஊர்ந்துசெல்லும் உயிரிகள் பல் இருப்பதையும், ஊர்ந்துசெல்லுதல் என்பதனைக் காட்டிலும் விரைந்து மறையும்தன்மை பொருத்தமாக இருப்பதையும் கண்டுகொள்க.]

சருப்பம் → Skt. sarpa.

சருப்பம் பார்க்க

சரக்க *šarakka,* கு.வி.எ. (adv.) விரைவாக; quickly, speedily. "சரக்க விக்கதவந் திறப்பிம்மினே" (தேவா. 843:10).

[சர் → சரக்க = ஒலிக்குறிப்புச் சொல்]

சரக்கட்டை *šara-k-kaṭṭai,* பெ. (n.) தேர் செல்லும் போது திசைதிருப்பவும் நிறுத்தவும் பயன்படும் கட்டை; log used to turn direction of a car.

[சரம் + கட்டை]



சரக்கவிழ்-த்தல் *šara-k-kaviḻ-,* 4 செ.கு.வி. (v.i.) பொய்யான செய்திகளைக் கூறுதல் (கொ.வ.); lit., to spread out one's wares to make false statements.

[சரக்கு + அவிழ்-,]

மூட்டையை அவிழ்த்துப் பொருள்களைக் காட்டுவதுடன், உள்ளத்துள் நினைத்து வைத்துள்ள பொய்ச்செய்திகளைக் காட்டுவதை, ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளதன் பேரிலேயே, "சரக்கவிழ்த்தல்" பொய்யான செய்திகளைக் கூறுவதற்கு ஆளப்பெற்றுள்ளது.

சரக்கறை *šarakkaṟai,* பெ. (n.) 1. பண்டங்கள் வைக்குமிடம்; store house. "எல்லாஞ் சாலக்கிடக்குஞ் சரக்கறையோ" (தேவா. 1198:5).

2. பொன்னறை; treasury. "சரக்கறையிற் புக்கு வேண்டு மொண்கனக மெடுத்திட்டு" *(திருவாலவா. 39:4).* **3. அணிகலன்கள் (ஆபரணங்கள்) வைக்கும் அறை** *(சிலப். 5:7, உரை.);* jewel house locker.

[சரக்கு + அறை]

சரக்காள் *šarakkāḻ,* பெ. (n.) **பொதுச்செய்தி பலவுந் தெரிந்தவன்** (கொ.வ.); a well - infomed person.

[சரக்கு + ஆள்]

சரக்கு = காய்ந்தபொருள். பொருள்கள் இருத்தல் போல், செய்திகள் பலவற்றைக் கொண்டவன் சரக்காள் எனப்பட்டான்.

சரக்காளி[1] *šarakkāḻi,* பெ. (n.) சரக்காள் பார்க்க (க.வ.); see *šarakkāḻ.*

[சரக்காள் → சரக்காளி]

சரக்காளி[2] *šarakkāḻi,* பெ. (n.) **மிகுதி;** excess. 'ரசத்தில் புளிப்புச் சரக்காளியா யிருக்கிறது' *(இவ.).*

[சரக்கு + ஆளி]

சரக்காறு *šarakkāṟu,* பெ. (n.) **அறுவகைச் சரக்குகள்;** the six kinds of drugs.

[சரக்கு + ஆறு]

ஒவ்வொரு பகுதிக்கும், வெவ்வேறு வகையான பொருள்கள் முதன்மையான பொருள்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் சில பகுதிகளின் முதன்மையான ஆறு சரக்குகளைப் பற்றிச் சாம்பசிவம் மருத்துவ அகரமுதலி குறித்துள்ளது.

(அ) வங்காள நாட்டின் அறுவகைச் சரக்குகள்:

1. இலிங்கம்; cinnabar
2. பச்சைக் கருப்பூரம்; crude camphor
3. குங்குமப்பூ,; European saffron.
4. படிகாரம்; alum.
5. சாரம்; sal ammoniac.
6. சுக்கு; dried ginger.

(ஆ) மலையாள நாட்டின் அறுவகைச் சரக்குகள்:

1. கொச்சிவீரம்; Cochin corrosive sublimate
2. மிளகு; black pepper
3. திப்பிலி,; long pepper.
4. ஏலம்; cardamon.
5. கிராம்பு; clove.
6. சிற்றரத்தை; lesser galangal.

(இ) கிழக்குக்கடற்கரையில் விளையும் அறுவகைச் சரக்குகள்:

1. கல்லுப்பு; insoluble sea - salt
2. இந்துப்பு; sindh salt
3. பொட்டிலுப்பு; nitre
4. அப்பளாகாரம்; sub-carbonate of soda
5. பலகறை; cowry
6. கடல்நுரை; sea - froth

(ஈ) வடமேற்குக் கடற்கரையில் விளையும் அறுவகைச் சரக்குகள்:

1. கோதளங்காய்; fruit of common Indian rak
2. கடுக்காய்; gallnut
3. சீயக்காய்; soap - pad
4. பொன்னங்காய்; soap - nut
5. தேற்றான்கொட்டை; water clearing nut
6. வலம்புரிக்காய்; Indian sarew tree (right)

(உ) உள்ளூரின் (அ) நமது நாட்டின் அறுவகைச் சரக்குகள்:

1. சவுரிப்பழம்; shavari fruit
2. தூதளம்பழம்; fruit of prickly shoonday
3. பிரண்டைப்பழம்; cissus fruit
4. கண்டங்கத்திரிப்பழம்; fruit of prickly brinjal
5. கோவைப்பழம்; red bitter - melon fruit
6. இந்திரகோபப்பூச்சி; leady's fly (சா. அக.)

சரக்கியங்கி *šarakkiyaṅgi,* பெ. (n.) **சரக்குந்து** பார்க்க; see *šarakkundu.*

[சரக்கு + இயங்கி]

சரக்கு *šarakku,* பெ. (n.) *1.* **வணிகப்பண்டம்;** goods, articles of merchandise. "இலச்சினை யொற்றிய தலைச்சுமைச் சரக்கினர்" *(பெருங். மகத 17,152).* 'சரக்குக் கண்ட இடத்திலே பிள்ளைக்கு அவிழ்தம் கொடுக்க நினைக்கிறது' *(பழ.).* **2. பொன்** (பிங்.); gold. **3. விரிந்த கல்வியறிவு முதலியவற்றால் ஏற்படுந் தகுதி அல்லது திறமை;** solid worth, ability. *4.* **சம்பாரச் சரக்கு முதலியன;** curry-stuffs, spices, etc. *5.* **மருந்துப் பண்டம்;** medicinal substance, especially arsenic alkalies and acids. 'சரக்குக்கண்ட இடத்திலே பிள்ளை பெறுகிறது' *(பழ.).*

ம. சரக்கு; க. சரகு, சர்கு; தெ., து. சரக்கு.

[சர் → சரகு → சரக்கு = காய்ந்தபண்டம் காய்ந்த வணிகப்பண்டம், வணிகப் பண்டம், கல்வியறிவு (வே.க.213)]

சரக்கு[2] *šarakku,* பெ. (n.) *1.* தென்னை, பனை, அரிசி, வெல்லம் முதலியவற்றிலிருந்து வடிக்கப்படும் புளிப்பேறிய மதுவகை (இ.வ.); arrack. *2.* குடிதேறல்; liquor. *3.* கள்; toddy.

[அரக்கு → சரக்கு]

இனி, குழூஉக்குறியாகப் பண்டம் என்னும் பொருள்படுஞ் சரக்கு, சாறாயம், வெறிநீர் ஆகியவற்றிற்குப் பயன்பட்டதென்றுமாம்.

சரக்கு[3] *šarakku,* பெ. (n.) முண்டைநோய் (கொ.வ.); venereal discase.

[சரக்கு² → சரக்கு = இடக்கரடக்கலாய்க் குறிக்கப்பட்டது]

சரக்குக்கட்டு-தல் *šarakku-k-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* சரக்குப்பிடி-த்தல் பார்க்க; see *šarakku-p-piḍi-.* *2.* வணிகத்துக்குப் பண்டம் அனுப்புதல்; to pack and forward merchandise. *3.* இதள் (இரசம்) முதலியவற்றை இறுக்கிக்கட்டியாகச் செய்தல்; to solidify liquids as mercury, for medicinal purposes.

[சரக்கு + கட்டு-,]

சரக்குக்கடை *šarakku-k-kaḍai,* பெ. (n.) கள்ளுக்கடை (இ.வ.); toddy-shop.

[சரக்கு + கடை]

சரக்குக்கூடம் *šarakku-k-kūḍam,* பெ. (n.) சரக்கறை பார்க்க; see *šarakkaṟai.*

[சரக்கு + கூடம்]

சரக்குச்சுண்ணம் *šarakku-c-cuṇṇam,* பெ. (n.) சவ்வீரம் (வின்.); peroxide compound of mercury, sulphur, etc.

மறுவ. வீரம்

[சரக்கு + சுண்ணம். சுள் → சுண் → சுண்ணம்]

சரக்குந்து *šarakkundu,* பெ. (n.) பண்டங்களை ஏற்றிச்செல்லும் இயங்கி; lorry.

[சரக்கு + உந்து]

சரக்குப்பண்ணு[1]**-தல்** *šarakku-p-paṇṇu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வெயிலிற் காயவைத்தல் (யாழ்ப்.); to dry in the sun.

[சரக்கு + பண்ணு. சர் → சரகு → சரக்கு = காய்ந்த பண்டம். சரக்குப் பண்ணு-தல் = பண்டத்தைக் காயவைத்து உலர்ந்ததாக (சரக்காக) ஆக்குதல்]

சரக்குப்பண்ணு[2]**-தல்** *šarakku-p-paṇṇu-,* 15 செ.குன்றாவி. (v.t.) நன்குமதித்தல் (வின்.); to regard or esteem.

[சரக்கு + பண்ணு. சர் → சரகு → சரக்கு= காய்ந்த பண்டம், பண்டம். சரக்குப் பண்ணுதல் = பண்டம் உருவாக்குதல், மதிப்புக் கூட்டுதல், நன்குமதித்தல்]

சரக்குப்பறி-த்தல் *šarakku-p-paṟi-,* 14 செ.கு.வி. (v.i.) பண்டங்களைக் கப்பலினின்று இறக்குதல்; to unload cargo. "சரக்குப் பறித்தற்குக் கடலில் நின்ற மரக்கலங்கள்" *(மதுரைக். 85, உரை.).*

[சரக்கு + பறி-,]

சரக்குப்பிடி-த்தல் *šarakku-p-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) வணிகத்துக்குப் பண்டங்களை மொத்தமாக வாங்குதல்; to buy up goods wholesale for trade. 'மண்டிக் கணக்கப்பிள்ளை சரக்குப் பிடிக்கச் சென்றுள்ளார்' (உ.வ.).

[சரக்கு + பிடி-,]

சரக்குப்புரக்கெனல் *šarakku-p-pura-k-kenal,* பெ. (n.) *1.* கிரீச்சொலி, புதுச்செருப்பொலியைக் காட்டும் ஒலிக்குறிப்பு; creaking sound as of shoes. *2.* எடுப்பான நடைக்குறிப்பு (இ.வ.); brisk, bustling walk.

[சரக்கு + புரக்கு + எனல்]

சரக்குமண்டி *šarakku-maṇḍi,* பெ. (n.) சரக்கறை, பண்டங்கள் வைக்குமிடம்; warehouse (செ.அக.).

[சரக்கு + மண்டி. மண்டுதல் = நெருங்குதல், நிறைதல், நிறைந்து கூடுதல். மண்டு → மண்டி = பொருள்கள் நிறைந்த இடம், சரக்கறை]

சரக்குமாறு-தல் *šarakku-māṟu-,* 5 செ.கு.வி. (v.i.) பண்டமாறுதல்; to barter goods.

[சரக்கு + மாறு-,]

சரக்குறடு *šara-k-kuṟaḍu,* பெ. (n.) நெருப்பில் காய்ந்து சூடான உளியைத் தட்டிக் கூராக்கப் பிடித்துக் கொள்ளப் பயன்படும் கம்மியக் கருவி; forcep.

[சரம் + குறடு]

சரக்கெனல் *šarakenal,* பெ. (n.) ஆணி, தூவல் (பேனா) முதலியவற்றாற் கீறுதல், புல்லை வேகமாக வெட்டுதல், காய்கறிகளை நறுக்குதல் ஆகியவற்றை உணர்த்தும் ஒலிக் குறிப்புச்சொல்; the sound rending, of scratching with nails or with a pen, or cutting the grass and of mincing vegetables.

க. சரக்கென

[சரக்கு + எனல்]

சரக்கேற்றிப்பறித்தல் *šarakkēṟṟi-p-paṟittal,* தொ.பெ. (vbl.n.) ஆழமில்லாத துறை முகங்களுக்கு வந்த சரக்கேற்றிய கப்பலைக் கடலில் தொலைவிலேயே நிறுத்திப் படகு மூலம் சரக்கை இறக்குதலும் ஏற்றுதலும் (மீனவ.); unloading or loading cargo.

[சரக்கு + ஏற்றி + பறித்தல்]

சரக்கேற்று-தல் *šarakkēṟṟu-,* 15 செ.குன்றாவி. (v.i.) வண்டியிலும் கப்பலிலும் வணிகப் பண்டம் ஏற்றுதல்; to load goods in carts, ships.

[சரக்கு + ஏற்று. ஏறு → ஏற்று-,]

சரக்கொட்டகை *šara-k-koṭṭagai,* பெ. (n.) பூ மாலைகளால் அழகுபடுத்தப்பட்ட கொட்டகை (இ.வ.); a pandal decorated with festoons (செ.அக.).

[சரம் + கொட்டகை. சர் → சரம் = நீண்ட அல்லது நேரான மணிக்கோவை அல்லது மலர்த்தொடை]

சரக்கொன்றை *šara-k-koṉṟai,* பெ. (n.) நேர் நேராகப் (சரஞ்சரமாகப்) பூக்கும் கொன்றை வகை (பதார்த்த. 204); Indian laburnum.

[சரம் + கொன்றை]

சரக்கொன்றைப்புளி *šara-k-koṉṟai-p-puḷi,* பெ. (n.) சரக்கொன்றைப் பழத்தின் உள்ளீடு; pulp of Indian labournam, used as medicine.

[சரக்கொன்றை + புளி]

சரகண்டம் *šara-gaṇḍam,* பெ. (n.) நில நடுக்கோட்டு (பூமத்தியரேகை)க்கும் குறிப்பிட்ட இடத்திற்குமுள்ள கோள்களின் உச்சவேறுபாடு; ascensional difference between the equator and the place in question.

[சரம் → சரகண்டம்]

த. சரகண்டம் → Skt. šarakhaṇḍa

சரகத்து *šaragattu,* பெ. (n.) எல்லை; boundary.

[சரகம் → சரகத்து]

சரகம்[1] பார்க்க

சரகதி *šaragadi,* பெ. (n.) அம்பு போற் செல்வதாகிய குதிரை (அசுவகதி) வகை; a horse's pace resembling arrow's fight, one of five ašuva-kadi.

[சரம் + கதி]

சரகம்[1] *šaragam,* பெ. (n.) 1. எல்லை; boundary. 2. நாட்டின் பகுதி; region, quarter, district.

[சுல் → (சுரு) → சரு → சருவு. சருவுதல் = சாய்தல், சரிதல். சரு → சருகு = சாய்தல், வளைதல். சரு → சருக்கம் = நூற்பிரிவு. சரு → சருகம் → சரகம் = நாட்டின் உட்பிரிவு]

சரகம்[2] *šaragam,* பெ. (n.) 1. தேனீ (பிங்.); bee. 2. வண்டு; beetle.

சரகம் → Skt. šaraghā

சரகமாதவம் *šaraga-mādavam,* பெ. (n.) முட்கிளுவை; Indian balm of Gilead - balsmodeudron berryi (சா.அக.).

சரகாண்டபாடாணம் *šaragāṇḍa-pāḍāṇam,* பெ. (n.) பிறவிச் செய்நஞ்சு (பாடாணம்) வகை (மூ.அ.); a mineral poison.

சரகாண்டம் *šaragāṇḍam,* பெ. (n.) அம்புக் கூடு (விள்.); quiver.

[சரம் + காண்டம். கள் → கண்டு → கண்டம் = பெருந்துண்டு, பெருநிலப்பிரிவு. கண்டம் → காண்டம் = நூற்பெரும்பிரிவு. அம்புத்தொகுதியை வைக்கும் கூடு.]

சரகாதி *šaragādi,* பெ. (n.) பெருமருந்து; great medicine or Indian birth - wort- aristolochia indica (சா.அக.).

சரகு *šaragu,* பெ. (n.) சருகு[1] பார்க்க; see *šarugu[1]*.

[சருகு → சரகு]

சரகுண்ணி *šaraguṇṇi,* பெ. (n.) சிறுவுண்ணி வகை (ஈடு, 1, 5, 5, ஜீ.); a species of small cattle tick.

[சரகு + உண்ணி. சர் → சர → சருகு = காய்ந்த இலை. சர் → சரகு = காய்ந்தது, சிறியது]

சரகூடம் *śara-kūḍam,* பெ. (n.) பகைவர் படைக்கலந் தாக்காதவாறு அம்பினாற் கட்டும் பந்தல் (சீவக. 1680, உரை); a pandal - like formation of arrows serving as protection from hostile weapons.

[சரம் + கூடம். கூடு → கூடம்]

சரங்கம் *śarańgam,* பெ. (n.) செய்நஞ்சு (பாடாணை) வகை (வின்.); a kind of arsenic.

சரச்சிகா *śaracciga,* பெ. (n.) குறிஞ்சா; scammony swallow-wort - Scamone ematica (சா.அக.).

சரச்சிரா *śaraccirā,* பெ. (n.) கிலுகிலுப்பை; rattle - wort - Crotalaria laburnifolia (சா.அக.).

சரச்சிறு *śaracciṟu,* பெ. (n.) குறிஞ்சா (மலை); a species of scammony swallow-wort (செ.அக.).

சரசகாரி *śarasakāri,* பெ. (n.) வண்டு கொல்லி அல்லது தேவதாரு; Himalayan deodar; worm - killer - cedrus libani (deodara).

சரசகாலினி *śarasa-kālini,* பெ. (n.) தேக்கு; teak wood - Tecona grandis (சா.அக.).

சரசச்சங்கு *śarasa-c-cańgu,* பெ. (n.) கொம்பு வடிவான சங்கு; horny conch (சா.அக.).

[சரசம் + சங்கு]

சரசசமுகம் *śarasa-samugam,* பெ. (n.) ஆசாங் கோரை; white basil - Ocimum album (சா.அக.).

சரசர-த்தல் *śaraśara-,* 12 செ.கு.வி. (v.i.) 1. சருகு முதலியவை ஒலித்தல் (வின்.); to rustle, as dry leaves. 2. தொடுதற்குச் சுரசுரவென்றிருத்தல்; to be rough of surface.

[சர சர → ஒலிக்குறிப்புச்சொல். சரசர → சரசர-த்தல்]

சரசரப்பு[1] *śaraśarappu,* பெ. (n.) ஒலிக்கை; rustling.

[சரசர → சரசரப்பு. 'பு' பெயராக்க ஈறு]

சரசரப்பு[2] *śaraśarappu,* பெ. (n.) 1. மொருமொரு வென்றிருக்கை; rustling, as of starched cloth. 2. சுரசுரப்பு; roughness of surface or edge. "உகிர்.......... சரசரப் பகன்றா லங்கவை நல்ல" (திருவிளை. வேல்வளை.37).

[சுள் → சுர் → சுர. சுரசுர → சுரசுரப்பு = முள்ளுமுள்ளாய் அல்லது சுரடுமுடாய் இருத்தல். சுரசுரப்பு → சரசரப்பு]

சரசரெனல் *śara-śareṉal,* பெ. (n.) 1. உலர்ந்த இலைகள் அசைவதை உணர்த்தும் ஒலிக்குறிப்பு; rustling, as of dry leaves. 2. விரைந்து எளிதிற் செல்லுதற்குறிப்பு; gliding along, moving quickly without resistance.

[சரசர + எனல்]

சரசாத்திரம் *śara-śāttiram,* பெ. (n.) மூக்கு (நாசி) வழியாக மூச்சு விடுவதினின்று, குறி சொல்லுவதைப் பற்றிய நூல் (கொ.வ.); art of divination by a study of respiration.

[சர + சாத்திரம். சர் → சர = நடத்தல், செல்லுதல், மூச்சுச் செல்லுதல்]

Skt. sāstra → த. சாத்திரம்

சரசொத்து *śara-śottu,* பெ. (n.) அசையும் சொத்து (C.G.) movable property.

[சரம் + சொத்து]

சரசோதிடம் *śara-śōdiḍam,* பெ. (n.) சரசாத்திரம் (கொ.வ.) பார்க்க; see *śara-sāttiram.*

[சர + சோதிடம்]

Skt. jyōtisa → த. சோதிடம்

சரஞ்சரமாய் *śarañśaramāy,* கு.வி.எ. (adv.) அடுக்கடுக்காய், வரிசைவரிசையாய்; in piles, in tiers. அவரைக்காய் சரஞ்சரமாய்த் தொங்குகிறது.

[சரம் + சரம் + ஆய்]

சரட்டட்டிகை *śaraṭṭaṭṭigai,* பெ. (n.) பொற்சரடு செய்து பட்டையாகத் தட்டப்பட்டுப் பதக்கங் கட்டிய கழுத்தணி வகை; necklace of gold threads with a padakkam pendant.

[சரடு + அட்டிகை. ஒட்டு → அட்டு → அட்டி → அட்டிகை]

சரட்டடைப்பன் *śaraṭṭaḍaippaṉ,* பெ. (n.) கால்நடை நோய்களுள் ஒன்று (மாட்டுவா. 82); a kind of cattle disease.

[சரடு + அடைப்பன்]

சரட்டுச்சரட்டெனல் *śaraṭṭu-c-caraṭṭeṉal,* பெ. (n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr.

swishing, rushing sound, as of air in motion. *2. தாராளமாய் மலங்கழிதற் குறிப்பு (யாழ்ப்.);* onom. expr. of free and easy motion without obstruction, as of stools.

[சரட்டு + சரட்டு + எனல்]

சரட்டுத்தாலி *šarattu-t-tāli,* பெ. (n.). பொன் சரட்டிற் கோத்தணியும் தாலிவகை (இ.வ.); a kind of wedding badge hung in a gold necklet.

[சரடு + தாலி]

சரட்டுப்பொருத்தம் *šarattu-p-poruttam,* பெ. (n.). திருமணப்பொருத்தங்களுள் ஒன்று; a kind of agreement in the horoscopes of the prospective bride and bridegroom.

[சரடு + பொருத்தம்]

சரட்டுமேனிக்கு *šarattu-mēṉikku,* கு.வி.எ. (adv.) சகட்டுமேனிக்கு பார்க்க; see šagattu-mēṉikku (செ.அக.).

[சகட்டுமேனிக்கு → சரட்டுமேனிக்கு]

சரட்டெனல் *šarattenal,* பெ. (n.) விரைவுக் குறிப்பு; onom. expr. of moving quickly.

[சரட்டு + எனல். சர → சரட்டு]

சரட்டை *šarattai,* பெ. (n.) 1. சிரட்டை (இ.வ.); coconut shell. 2. மீன்வகை; a fish, Malaeanthus.

ம. சிரட்ட (பெரும்பாலும் கொட்டங்காய்ச் சில்லின் கீழ்ப்பகுதி), சிரட்டி (கொட்டாங் காய்ச்சில்லின் மேற்பகுதி); குட. செரடெ; பட. கரட்டலு.

[சுர் → (சுரடு) → (சுரட்டை) → சிரட்டை = சுரடான கொட்டாங்கச்சி. சிரட்டை → சரட்டை]

சரடம்[1] *šaradam,* பெ. (n.) 1. ஓந்தி (திவா.); blood-sucker, a kind of lizard. 2. பச்சோந்தி (பிங்.); chameleon.

[சர → சரடம் = மேல்தோல் சமமில்லாமல் சுரசுரப்பாக இருப்பது.]

த. சரடம் → Skt. saraṭa

சரடம்[2] *šaradam,* பெ. (n.) குசும்பா மரம் (இலக். அக.) (திவா.); a kind of tree.

சரடு[1] *šaradu,* பெ. (n.) பொன்னால் செய்யப்பட்ட அணிகலன்களின் வலிமைக்காக, உள்ளீட்டில் பொருத்தப்படுதவற்குச் செப்புக்கம்பியால் பின்னலிட்டுச் செய்யப்பெறும் கொடி; copper twisted chain to insert inside gold necklace for making it more strength. "கோத்த சரடு நீக்கு" (தெ.க.2:2:5).

[சர → சரடு]

சரடு[2] *šaradu,* பெ. (n.) 1. முறுக்குநூல் ; twisted thread, cord twine. "மறை நான்கே வான்சரடா" (திருவாச. 12, 2). 2. பொற்கம்பியினாற் செய்த கழுத்தணி வகை; a necklet of plaited gold thread. பொன் வெள்ளி நூல்களால் ஆகிய சரடு; gold, silver or cotton thread. சரடுஞ் சட்டமு நீக்கி (S. I. I. II, 161) 4. மூக்கணாங்கயிறு (Tinn.); nose-ring of bullocks. 5. வரிசை, மலைத்தொடர் (வின்.) ; chain, as of mountains, row. 6. கைத்திறம் (தந்திரம்) (வின்.); stratagem, tricks.

ம. சரடு; க. சர; தெ. த்ராடு; கோத. சர்ட்; கொலா. தாட் (கயிறு); நா. தாட்; பட. சரடு

[சர → சரடு]

சரம்[4] பார்க்க

சரடுதிரி-த்தல் *šaradu-tiri-,* 4 செ.கு.வி. (v.i.) 1. கயிறுதிரித்தல்; to twist yarn or thread. 2. சரடுமுறுக்கு-தல் பார்க்க; see *šaradu murukku-.*

[சரடு + திரி-,]

சரடுமுறுக்கு-தல் *šaradu-murukku-,* 5 செ.கு.வி. (v.i.) 1. தீயன செய்யத் தூண்டுதல் (வின்.); to instigate. 2. ஒரு செய்தியைப் பொய்யாகக் கற்பித்து வெளியிடுதல் (இ.வ.); to invent a story and circulate.

[சரடு + முறுக்கு-,]

சரடுவிடு-தல் *šaradu-vidu-,* 20 செ.கு.வி. (v.i.). 1. பிறர் வாயிலாகத் தன் கருத்தை வெளியிடுதல்; to give out one's idea through an intermediary. 2. மறைமுகமாகப் பேசிப் பிறர் கருத்தை அறியமுயலுதல்; to sound a person's views indirectly. 3. சரடுமுறுக்கு-தல் பார்க்க; see *šaradu-murukku-* (செ.அக.).

*[சரடு + விடு-,]

சரண்[1] *šaraṉ,* பெ (n.) *சரணம்*[1] *பார்க்க;* see *šaraṇam*[1]. *"தனிச்சரண் சரணாமென" (திருவாச. 30,6).*

[அரண் → சரண்]

சரண்[2] *šaraṉ,* பெ (n.) அம்மையார் கூந்தல் (தைலவ. தைல. 14); Seeta's thread.

சரண்டம் *šaraṇḍam,* பெ (n.) பல்லி; lizard.

[சர → சரண்டம்]

சரண்புகு-தல் *šaraṉpugu-,* 2 செ.குன்றாவி. (v.t.) அடைக்கலம் புகுதல்; to take refuge in. "அருளின் வேலையைச் சரண்புகுந்தனனென" *(கம்பரா. விபீடண. 54).*

[சரம் + புகு-,]

சரணக்கமலம் *šaraṇa-k-kamalam,* பெ. (n.) அடிமலர்; lotus feet. "சரணகமலம் பூண்டார்" *(பெரியபு. அப்பூதி. 17).*

[சரணம் + கமலம்]

Skt. kamala → த. கமலம்

சரணம்[1] *šaraṇam,* பெ (n.) 1. வீடு (சங்.அக.); house. 2. மருதநிலத்து நகரம் (சூடா.); a town in agricultural tract. 3. அடைக்கலம் (பிங்.); shelter, refuge, asylum. 4. அரசு (மலை.); pipal.

[உரத்தல் = வலிமையாதல். உரம் = வலிமை. உரம் → அரம் →அரண் = வலிய காப்பு, காப்பான கோட்டை, காப்பான காடு, ஒ.நோ: பரம் → பரண். அரண்மனை = காப்பான அரசன்மாளிகை. அரண் → அரணம் = காப்பு, அந்தளகம் (கவசம்), கோட்டை, மதில், அடவி.

அரணம் → சரணம். த. அரணம் → Skt. caraṇa.

சரணம் என்னும் வடசொற்குச் சார்தல் (to lean on, rest on) *என்று பொருள்படும், "சரி" என்னும் சொல்லை மூலமாகக் காட்டுவர். அது "சார்" என்னும் தென் சொல்லின் திரிபாயிருக்கலாம் (வ.வ. 75)]*

சரணம்[2] *šaraṇam,* பெ (n.) 1. மயிற்றோகை (பிங்); peacock's tail. "பச்சைச் சரணமயில் வீரா" *(திருப்பு. 1117, புதுப்.).* 2. மயில் (யாழ்.அக.); peacock.

சரணம்[3] *šaraṇam,* பெ (n.) பாதம்; foot (பிங்.).

[சரண் = அடைக்கலம். சரண் → சரணம்]

சரணம்[4] *šaraṇam,* பெ (n.) யானைத்தோட்டி (பிங்.); elephant goad.

[சுர் → சுரி → சுரியூசி = பனையேட்டில் துளையிடும் கருவி. சுர் → சுர → சுரசுரப்பு' முட்குத்துவதுபோற் கரடுமுரடாயிருப்பது. சுர் → சுர → சுரணை = குத்தல், குத்தும் மானவுணர்ச்சி. சுர் → சர் → சரணம் = தாற்றுக்கோல்]

சரணர் *šaraṇar,* பெ (n.) வீரச்சிவனிய (சைவ)ப் பெரியோர்; devotees. "நஞ்சோம நாதன் றுதியுளுறு சரணர்" *(பிரபுலிங். துதி. 10).*

சரணவாதம் *šaraṇa-vādam,* பெ. (n.) காலிலுண்டாகும் ஊதை(வாத)ப் பிடிப்பு (யாழ்ப்.); cramp in the legs.

[சரணம் + வாதம்]

Skt. vāta → த. வாதம்

சரணாகசம் *šaraṇā-gasam,* பெ. (n.) மூக்கிரட்டை; spreading hog-weed - Boerhaavia repens (சா.அக.).

சரணாகதன் *šaraṉ-āgadaṉ,* பெ. (n.) அடைக்கலம் புகுந்தோன்; refuge.

[சரண் + ஆகதன்]

Skt. āgata → த. ஆகதன்

சரணாகதி *šaraṉ-ākadi,* பெ. (n.) அடைக்கலம் புகுகை; taking shelter, seeking refuge. "சரணாகதியாய்ச் சரண்சென் றடைந்தபின்" *(மணிமே. 30: 5).*

[சரண் + ஆகதி]

Skt. āgati → த. ஆகதி

சரணார்த்தி *šaraṉ-ārtti,* பெ. (n.) அடைக்கலந் தேடுபவன்; one who seeks shelter or refuge. "உளந்தளர்ந்து சரணார்த்தியென்று சார்ந்தார்க்கும்" *(பஞ்சதந். சந்திவிக். 123).*

[சரண் + ஆர்த்தி]

Skt. ārttin → த. ஆர்த்தி

சரணாரவிந்தம் *šaraṇāravindam,* பெ. (n.) சரணக்கமலம் பார்க்க; see *šaraṇa-k-kamalam.* "இராமானுசன் சரணாரவிந்தம்" *(திவ். இராமானுச. 1).*

[சரணம் + அரவிந்தம்]

Skt. aravinda → த. அரவிந்தம்

சரணிகம் *šaranigam,* பெ (n.) வெள்ளை காக்கணம்; white mussel shell creeper - clitorea ternatea (albiflora) (சா.அக.).

சரணியன் *šaraniyan,* பெ. (n.) காவலன்; saviour. 'சரணியனாகத் தனை நினைந்து' (அஷ்டப். அழகர். 47).

[அரண் = காப்பு. அரண் → அரணம் = காப்பு. அரணம் → சரணம் → சரணியன்]

த. சரணியன் → Skt. šaranya

சரத்தியார் *šarattiyār,* பெ. (n.) சிறிய தாய் (Brah.); father's younger brother's wife, mother's younger sister (செ.அக.).

[சிறுதாயார் → சரத்தியார்]

சரந்தொடு-த்தல் *šarandodu-,* 17 செ.குன்றாவி. (v.t.) 1. அம்பெய்தல்; to shoot arrows. 2. மிகுதியாக வைதல்; to shower abuses. அவன் மேல் சரந்தொடுக்கிறான்.

[சரம் + தொடு-,]

கூர் அம்பைப்போல் குத்தும் சொற்களால் வைதல் சரந்தொடுத்தல் எனப்பட்டது.

சரநூல் *šara-nūl,* பெ. (n.) குறி (நிமித்தம்) பார்க்கும் கலை பற்றிய நூல்; a treatise of omen.

[சரம் + நூல்]

சரப்பட்டிகை[1] *šara-p-pattigai,* பெ. (n.) கோயிற் றூண்களில் செய்யும் (முத்து மாலை போன்ற) அணிவேலை (கட்டட.); ornamental work of temple pillar.

[சரம் + பட்டிகை]

சரப்பட்டிகை[2] *šara-p-pattigai,* பெ. (n.) 1. கதவுக்கு மாற்றாக அமைக்கும் செருகு பலகை; wooden plank, used to close door ways. 2. தூண்களுக்கு நடுவில் செல்லும் பலகை (செங்கை.); tie beam.

[சரம் + பட்டிகை]

சரப்பணி *šara-p-pani,* பெ. (n.) வயிரமழுத்தின கழுத்தணி வகை (பிங்.); gold neck-chain inlaid with diamonds.

ம. சரப்பளி; க. சரப்பணி, சரபளி, சர்பளி; தெ. சரபணி, சரபிணி, சரபெணி; து. சரபளி, சரபணி, கர்பளி, சரபொளி; பட. செரபணி; கோத. சர்பெய்ள்க்

[சரம் + பணி]

சரப்பலகை[1] *šara-p-palagai,* பெ. (n.) கடைகளின் அடைப்புப் பலகை (நெல்லை); a kind of wooden shutter for shops.

[சரம் + பலகை. சரம்சரமாகப் (அடுத்தடுத்து) போடும் செருகு பலகை]

சரப்பலகை[2] *šara-p-palagai,* பெ. (n.) தூண்களுக்கு நடுவில் செல்லும் பலகை (தஞ்சை.); tie beam.

[சரம் + பலகை]

சரப்பளி *šara-p-pali,* பெ. (n.) 1. சரப்பணி பார்க்க (சிலப். 6:99, உரை); see *šara-p-pani.* 2. பொன்னால் இயன்ற கழுத்தணி வகை; gold necklet.

ம., க. சரப்பளி

[சரப்பணி → சரப்பளி]

சரப்பளிச்சம்பா *šarappali-c-cambā,* பெ. (n.) கடகம் (ஆடி), மடங்கல் (ஆவணி) மாதங்களில் விதைத்து ஆறு மாதங்களில் அறுவடையாகும் சம்பா நெல்வகை (தஞ்சை.); a šambā paddy sown in Ādi-Āvaṇi and maturing in six months.

[சரப்பளி + சம்பா]

சரப்பாளிச்சம்பா *šarappāli-c-cambā,* பெ. (n.) சரப்பளிச்சம்பா பார்க்க; see *šarappali-c-cambā.*

[சரப்பளி → சரப்பாளி + சம்பா]

சரப்புல் *šarappul,* பெ. (n.) தண்ணீரில் முளைக்கும் புல்; water grass (சா.அக.).

[சரம் + புல்]

சரப்புளி *šarappuli* பெ. (n.) 1. இரட்டை வடப் பொற்றொடரி; double chain. 2. பெண்கள் அணியும் கழுத்தணி (மீனவ.); a kind of women neck ornament.

[சரப்பளி → சரப்புளி]

சரபடி *šarapadi* பெ. (n.) *சரவடி* பார்க்க; see *šaravadi*. அந்தச் சரபடியிலே பெண் கொள்ள வேண்டும் (வின்.).

தெ. சரபடி

[சரவடி → சரபடி]

சரபம்[1] *šarabam* பெ. (n.) *1.* வரையாடு *(பிங்.)*; mountain sheep. *2.* குறும்பாடு *(யாழ். அக.)*: woolly sheep.

[சுரி → சரி = மலைச்சாரல், மலைவழி. சரி → சர → சரபம் = மலையில் வாழும் ஆடு, குறும்பாடு]

சரபம்[2] *šarabam* பெ. (n.) *சரவம்*[1] (பிங்.) பார்க்க; see *šaravam*.

[சுர் → சர் → சரம் = குத்துவது. சரம் → சரபம் = குத்தும் தன்மையுள்ள, கூரிய உகிர் உள்ள பறவை]

சரபம்[3] *šarabam* பெ. (n.) *சரவம்*[2] (பிங்.) பார்க்க; see *šaravam*[2].

[சரவம் → சரபம்]

சரபாரி *šarabāri*, பெ. (n.) கருவேல்; black acacia- Acacia arabica *(சா.அக.)*.

சரபாண்டி *šarabāndi*, பெ. (n.) *தழுதாழை மரம்;* downy glory tree - Cleodendron Phlomoides *(சா.அக.)*.

சரபிதானி *šarabidāni*, பெ. (n.) *சண்பக மலர்;* champauk flower - michelia champaca *(சா.அக.)*.

சரபுங்கு *šarapungu*, பெ. (n.) *1.* கொள்ளுக்காய் வேளை; wild indigo - Tephrosia purpurea. *2.* கொடிப்புங்கு; hog-creeper - Derris scandens *(சா.அக.)*.

மறுவ. சரபுங்கன்

சரம்[1] *šaram*, பெ. (n.) *1.* அசைவு; stirring. *2.* நடை *(பிங்.)*; moving going. *3.* இயங்குதிணை *(பிங்.)*; category of movables. *4.* மூச்சுக்காற்று; breath. *5.* சரராசி *(வானியல்.)*; one of the four signs of the zodiac. 'வில்லுஞ் செழுஞ்சரமும்' *(விதான. தீவினை. 8)*. *6.* அலைவு; restlessness, fickleness. 'மென்மைச் சரங் கொடுஞ்சரம் போற்றைப்பச் சரங் கொண்டாள்' *(திருவாலவா. 57, 31)*. *7.* சரகண்டம் (வின்.); ascensional difference *(கணியம்.)*.

[சர் = ஓர் ஒலிக்குறிப்பு. சரேரெனல் = விரைவுக் குறிப்பு. சர் → சரம் = அசைதல், நடத்தல், இயங்குதல்.]

த. சரம் → Skt. šara

சரம்[2] *šaram*, பெ. (n.) *1.* வில்லினின்று எய்யப்படும் கூரியமுனையுள்ள நேரான மெல்லிய படைக்கலம், அம்பு; pointed straight slender, missile shot from bow, arrow. 'குனிசிலைச் சரத்தால்' *(கம்பரா. வேள்வி. 9)*. *2.* ஐந்து *(தைலவ. தைல. 85.)*; five, as the number of Kāma's arrows. *3.* திப்பிலி; long-pepper. 'உபகுஞ்சிகை சரம்' *(தைலவ. தைல. 66)*. *4.* நாணல்; kaus. *5.* கொறுக்கச்சி *(பிங்.)*; European bamboo reed.

மறுவ. கணை, வாளி (பாணம்)

[சுல் = குத்தற் கருத்துவேர். சுல் → சுர் → சுரம் → சரம் = நேராகச் சென்று குத்தும் இயல்புடைய அம்பு. கூர்முனையுள்ள திப்பிலி, நாணற்புல்]

த. சரம் → Skt. śara.

சரம்[3] *šaram*, பெ. (n.) *1.* நீர்; water. 'ஒழியாச் சரமே பொழிந்து' *(சிவப். பிரபந். வெங்கைக்கலம். 84)*. *2.* மணிவடம் *(பிங்.)*; string of pearls, gems, etc. *3.* மாலை *(இ.வ.)*; wreath of flowers. *4.* கொத்து; bunch, cluster. *5.* கூரைச்சரம்; beams in a roof, rafter.

[சர் → சரம் = நீண்ட அல்லது நேரான மணிக்கோவை அல்லது மலர்த்தொடை. சரஞ்சரமாய்த் தொங்குகிறது என்னும் வழக்கை நோக்குக. சரக்கொன்றை = நேர் மலர்த்தொடையாகப் பூக்கும் கொன்றை. வடவர் காட்டும் ஸ்ரு என்னும் சொற்கு ஒழுகு, ஓடு என்பனவே பொருள் (வ.வ. 42, 43)]

நீர் பொருள் ஒரு துளையினின்று நேராக விரைந்து ஒழுகுதலை, சர் என்று பாய்கிறது என்று கூறுவது வழக்கம். ஒழுகல் நீட்சிக் கருத்தையுணர்த்தும்.

"வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையும் செய்யும்பொருள"
(தொல். 800)

சரம்[4] *šaram,* பெ. (n.) *நீர்நிலை (வின்.);* a tank, pond, lake.

[சுல் = துளைத்தற் கருத்துவேர். சுல் → (சுன்) → சுனை = உட்டுளையினின்று நீர் வருவது போன்ற நீரூற்று, நீரூற்றுள்ள பொய்கை. சுல் → (சுர்) → சுர → சுரத்தல். சுல் → (சுர்) → சுர → சுரம் → சரம்.]

சரம்[5] *šaram,* பெ. (n.) இசைச்சுரம்; musical note. 'பாடுமென்மைச் சரங்கொடு' (திருவாலவா. 57, 31).

[சர் → சரி = ஒப்புமையுடையது, இயைபைத் தருவது. சர் → சர → சரம்]

பாடும்போதும் இசைக் கருவியை மீட்டும் போதும் அடிமனையாக வைத்துக் கொள்ளும் சுரம் கேள்வியெனப்படும். இதை ச்ருதி (சுதி) என்று மொழிபெயர்த்துக் கொண்டனர் வட நூலார். ச்ரு = கேள்.

சரம்[6] *šaram,* பெ. (n.) போர் (சூடா.); war, battle, fight.

[சர் → சரி = ஒப்புமையுடையது. ஒப்புப் பொருளிலிருந்து பொருதற்பொருள் தோன்றுவது இயல்பு. ஒ.நோ. பொருதல் = ஒத்தல், போர் செய்தல். சரி → சர → சரம். இனி அமர் → சமர் → சமரம் → சரம் என்றுமாம்.]

த. சரம் → Skt. śamara

சரம்[7] *šaram,* பெ. (n.) தனிமை (பிங்.); loneliness.

[சர் → சரி. சரிதல் = நழுவுதல், பிரிந்து செல்லுதல். சரி → சர → சரம் = தனியாக இருப்பது, தனிமை.]

சரம்பரம் *šarambaram,* பெ. (n.) சரகாண்ட செய்நஞ்சு (யாழ். அக.); a mineral poison.

[சரம் → சரம்பரம்.]

சரமண்டலம் *šaramaṇḍalam,* பெ. (n.) ஓர் இசைக்கருவி; a musical instrument. "தம்புரு வீணை சரமண்டலம்" (மான்விடு. 24).

[சரம் + மண்டலம்.]

சரமண்டலி *šaramaṇḍali,* பெ. (n.) ஒரு வகைத் தேள்; a kind of scorpion (சா.அக.).

[சரம் + மண்டலி. சரம் = குத்தும் அதாவது கொட்டும் இயல்புள்ளது. மண்டு → மண்டலம் → மண்டலி = வட்டமான உறுப்புள்ள தேள்]

சரமணி *šara-maṇi,* பெ. (n.) சிறுமணிகள் கட்டிய அரைப்பட்டிகை (வின்.); waist-belt with tinkling tiny bells.

[சரம் + மணி.]

சரமரடம் *šaramaraḍam,* பெ. (n.) மரவட்டை; wood louse (சா.அக.).

சரமழை *šaramaḻai,* பெ. (n.) சரமாரி பார்க்க; see *šaramāri.* "சார்ங்க முதைத்த சரமழை போல்" (திவ். திருப்பா. 4).

[சரம் + மழை. சுல் = துளைத்தற் கருத்துவேர். சுல் → (சுர்) → சுர. சுரத்தல் = உட்டுளையினின்று ஊறுதல்போல் பால் சுரத்தல், பால் சுரத்தல்போல் மழை பொழிதல். சுல் → சுர → சர → சரம்]

சரமாரி *šara-māri,* பெ. (n.) 1. அம்புமழை; shower of arrows. "சலமாமுகில் .... சரமாரி பொழிந்த" (திவ். பெரியாழ். 3, 5, 8). 2. தொடர்ச்சி; continuity. சரமாரிக் கேள்விக்குத் திகைத்தான்.

[சரம் + மாரி. மல் → மால் = கருமை, கருமுகில், கரிய திருமால். மால் → மாரி = முகில், மழை. 'சரமாரி' உருவகம்]

சரமாரிபெய்-தல் *šaramāri-pey-,* 1 செ.கு.வி. (v.i.) அம்புமழை பெய்தல்; to shower arrows.

க. சரள்கறை

[சரம் + மாரி + பெய்-,]

சரமாரியாய் *šara-māri-y-āy,* கு.வி.எ. (adv.) இடைவிடாமல்; incessantly, as rain; eloquently as speech. 'மழை சரமாரியாய்ப் பெய்தது'. 'சரமாரியாய்ப் பேசாதே' (உ.வ.).

[சரம் + மாரி + ஆய்]

சரமாரியுப்பு *šaramāri-y-uppu,* பெ. (n.) வழலையுப்பு; a quintessence salt used in alchemy (சா.அக.).

[சரமாரி + உப்பு]

சரமாருதம் *šara-mārudam,* பெ. (n.) பேரரத்தை; greater galangal - alpinia galanga (major) (சா.அக.).

சரமாலை *šara-mālai,* பெ. (n.) தோரண மாலை (யாழ். அக.); festoon.

[சரம் + மாலை. மால் → மாலை]

சரமுல்லை *šara-mullai,* பெ. (n.) பல் (யாழ்.அக.); tooth.

[சரம் + முல்லை. 'சரமுல்லை' உருவகம்]

சரமூர்த்தி *šara-mūrtti,* பெ. (n.) சரவுருவத்தார் பார்க்க. see *šara-v-uruvattār.*

[சரம் + மூர்த்தி]

Skt. mūrti → த. மூர்த்தி

சரல் *šaral,* பெ. (n.) சரளை² (இ.வ.) பார்க்க; see *šaraḷai².*

ம. சரல்

[சரளை → சரலை → சரல்]

சரலங்கா *šaralaṅgā,* பெ. (n.) மரவகை; east Indian plum - kāḍar (செ.அக.).

சரலம் *šaralam,* பெ. (n.) 1. அறுகு; harialli grass. 2. ஒருவகை மரம்; a kind of tree.

சரலாந்தல் *šara-lāndal,* பெ. (n.) கிளைவிளக்கு வகை; lights held in chandelier.

[சர(ம்) + லாந்தல்; சரம் = சரம்சரமாக இருப்பது, நேராக இருப்பது, பக்கவாட்டில் நேராகக் கிளைகொண்டிருப்பது.]

E. lantern → த. லாந்தர் → லாந்தல்

சரலிங்கம் *šara-liṅgam,* பெ. (n.) சிவனியத் துறவி; veera saiva mendicant, jangama.

[சரம் = அசைவது, நகர்வது. சரம் + லிங்கம். இலக்கு → இலக்கம் = குறி. இலக்கம் → இலங்கம் → இலிங்கம் → லிங்கம் (கொச்சை). ஓரிடத்தில் தங்காமல் பலவிடங்களுக்குச் செல்லும் இயல்பு பற்றிச் சரலிங்கம் எனப்பட்டார்]

சரவட்டை *šara-v-aṭṭai,* பெ. (n.) கீழ்த்தரமானது (யாழ்ப்.); that which is worthless or inferior.

[சாவட்டை → சரவட்டை]

சரவடி *šara-vaḍi,* பெ. (n.) 1. தொடரும் தலைமுறை; hereditary. சரவடி சரவடியாக ஊர்க்கணக்கை அக்குடும்பம்தான் பார்க்கிறது. 2. இனம் (வின்.); a tribe, family. இவன் எங்கள் சரவடியைச் சேர்ந்தவன் (செ.அக.).

[சரம் + அடி. சர் → சரம் = நீண்டு அல்லது நேராக இருப்பது. சரவடி = தலைமுறை கடந்து நீண்ட தொடர்பினைக் கொண்டது அல்லது வழிவழியாக வந்த குழு, இனம்]

சரவணம் *šaravaṇam,* பெ. (n.) 1. நாணற்காடு (பிங்.); thicket of kaus. 2. நாணல் (பிங்.); kaus. 3. கொறுக்கை; european bamboo reed. 'ஊறுநீர்ச் சரவணத்து' (மணிமே. 18: 92.).

[சரம் → சரவணம்]

சரம்² பார்க்க

சரவம்¹ *šaravam,* பெ. (n.) 1. அரிமாவைக் கொல்லவல்லதாகக் கூறப்படும் எண்காற்புள்; fabulous eight-legged bird capable of killing lion. 2. விட்டில்; grass-hopper.

[சுர் → சர் → சரம் = குத்துவது. சரம் → சரவம் = குத்தும் தன்மையுள்ள கூரிய உகிர் உள்ள பறவை]

சரம்² பார்க்க

சரவம்² *šaravam,* பெ. (n.) ஒட்டகம்; camel.

[சுர் → சுரம் = பாலை. சுர் → சுரவம் = பாலைவனத்தில் இருப்பது]

சரவருடம் *šara-varuḍam,* பெ. (n.) சரமாரி பார்க்க; see *šaramāri.*

[சரம் + வருடம்]

Skt. varṣa (மழை) → த. வருடம்

சரவல் *šaraval,* பெ. (n.) சரவை¹ பார்க்க; see *šaravai.* 'சரவலில்லாமல் எழுதிக் கொண்டு வா' (நாஞ்.).

[சரல் → சரவல்]

சரவலி *šaravali,* பெ. (n.) வரிசை; series.

[சரம் → சரவலி]

சரவழகி *šara-v-aḻagi,* பெ. (n.) சரவாசி பார்க்க; see *šaravāsi.*

[சரம் + அழகி]

சரவன் *šaravaṉ,* பெ. (n.) அம்பெய்வோன்; bowman, as having arrows. 'புரமூன்றெரி செய்த சரவா' (தேவா. 112, 1).

[சரம் → சரவன்]

சரவாசி *šara-vāci,* பெ. (n.) குதிரைப்பல் செய்நஞ்சு (யாழ். அக.); a mineral poison.

[சரம் = நீண்ட அல்லது நேரான மணிக்கோவை. சரம் → சரவாசி]

சரவாணி *šaravāṇi,* பெ. (n.) சரவன் (யாழ்.அக.) பார்க்க; see *šaravaṉ.*

[சரம் → ஆணி. ஆளி → ஆணி]

சரவியம் *šaraviyam,* பெ. (n.) அம்பினால் எய்யும் இலக்கு (யாழ். அக.); target or aim of an arrow.

[சரம் + இயம்]

த. சரவியம் → Skt. šaravya

சரவிளக்கு *šara-viḷakku,* பெ. (n.) ஒன்றன் மேலொன்றாக அடுக்கித் தொங்கவிடும் கோயில் விளக்கு; string of lights usually hung in temples.

[சரம் + விளக்கு]



சரவிளக்கு

சரவீணை *šara-viṇai,* பெ. (n.) 1. வீணைவகை (சங்.அக.); a kind of stringed lute. 2. கருவண்டு (வீணைபோல் ஒலி செய்வது) (வின்.); black beetle, as humming like a lute.

[சரம் + வீணை. விண் → வீணை]

சரவு *šaravu,* பெ. (n.) வயலின் ஒரு பகுதி; a part of field. 'ஒரு சரவு உழவு நடந்துள்ளது'.

[சரம் → சரவு]

சரவுருவத்தார் *šara-v-uruvattār,* பெ. (n.) சிவனடியார்; šaiva devotee as a moving form of Šiva.

[சர(ம்) + உருவத்தார். உருவம் + அத்து + ஆர் – உருவத்தார். உருத்தல் = தோன்றுதல். உரு = தோற்றம், வடிவம், வடிவுடைப் பொருள், உடல். உரு → உருவு → உருவம்.]

சரவுலைத்துருத்தி *šaravulai-t-turutti,* பெ. (n.) இரட்டைத்துருத்தி; double bellowes (சா.அக.).

[சரம் + உலை + துருத்தி. துருத்துதல் = முன் தள்ளுதல். துருத்து → துருத்தி = காற்றை முன்தள்ளும் உலைக்களத் தோற் கருவி]

சரவூரகம் *šaravūragam,* பெ. (n.) கருங்கொடி; common delight of the wood - Hiptage madablota (சா.அக.).

சரவெலும்பு *šara-v-elumbu,* பெ. (n.) முன்னங் காலின் வெளிப்பக்கத்து எலும்பு; the outer and lesser bone of the lower leg (சா.அக.).

[சரம் + எலும்பு. சரம் = நேரானது, நீண்டது. எல் = ஒளி, வெண்மை. எல் → எலும்பு = வெண்மை நிறம் பொருந்தியது]

சரவை[1] *šaravai,* பெ. (n.) 1. மேல்வரிச் சட்டம் (இ.வ.); model writing in an ola copy. 2. தெளிவற்ற எழுத்து; confused, illegible writing.

[சரம் → சரவை]

சரவை[2] *šaravai,* பெ. (n.) பரும்படி; coarseness, roughness (Pond.).

[சர → சரசரப்பு = முள்ளுமுள்ளாய் அல்லது கரடுமுரடாய் இருத்தல். சர → சரவை]

சரவைக்கணிப்பு *šaravai-k-kaṇippu,* பெ. (n.) தோராய மதிப்பு; rough estimate.

[சரவை + கணிப்பு. கணி → கணிப்பு]

சரவையிடு-தல் *šaravai-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) எழுத்துப்பிழை திருத்துதல் (வின்.); to correct spelling mistakes.

[சரவை + இடு-,]

சரவையெழுத்து *šaravai-y-eḻuttu,* பெ. (n.) 1. திருத்தப்படாத முதற்படி, கரட்டுப்படி; rough copy, first draft. 2. படியெடுக்கை; copying.

[சரவை[2] + எழுத்து]

சரள் *šaraḷ,* பெ. (n.) சரளை[2] பார்க்க; see *šaraḷai*[2].

[சல் → (சுர்) → சுரம் → சரம் = குத்தும் இயல்புடையது. சர் → சரம் → சரல் → சரள் = கரட்டுமண்]

சரளங்காய் *šaraḷaṅgāy,* பெ. (n.) தாளிச பத்திரி; east Indian plum - Flacourtia cataphracta (சா.அக.).

[சரள் → சரளம் + காய்]

சரளதேவதாரம் *šaraḷa-dēvadāram,* பெ. (n.) சீமைத்தேவதாரு (தைலவ. தைல. 74, உரை); long-leaved pine.

[சரள + தேவதாரம்]

சரளம்[1] *šaraḷam,* பெ. (n.) 1. எளிமை; facility, ease. 2. தடையின்மை (யாழ்ப்.); freedom from obstruction. 3. ஒழுங்கு (சது); order, regularity. 4. சரளதேவதாரம் பார்க்க; see šaraḷa-dēvadāram. 'மாதவி சரளமெங்கும்' (பெரியபு. நாட்டு. 29).

[சரம் → சராகம் = தடை இல்லாதது. சரம் → சரகம் → சரளம்]

த. சரளம் → Skt. sarala

சரளம்[2] *šaraḷam,* பெ. (n.) சிவதை (மலை.); Indian jalap.

சரளவட்டி *šaraḷa-vaṭṭi,* பெ. (n.) 1. முதற்கு மட்டும் உரிய வட்டி (C.G.); simple interest. 2. குறைந்த வட்டி; rate of interest.

[சரளம் ' + வட்டி]

சரளாகம் *šaraḷāgam,* பெ. (n.) கருங்கொடி வேலி; black-flowered lead wort - Plumbago gluns (சா.அக.).

[கரு → கரம் = கருத்திருப்பது, நஞ்சு; கரம் → சரம் → சரள் → சரளகம் → சரளாகம்]

சரளி[1] *šaraḷi,* பெ. (n.) சரவரிசை; the seven notes of the gamut in various combinations. 'அமுதரச மொழுகு சரளிகள் பழகு சங்கீத வித்தை' (திருவேங். சத. 63).

ம., தெ. சரளி; க. சரளெ

[சரம் → சரளி]

சரளி[2] *šaraḷi,* பெ. (n.) கோழை (யாழ்ப்.); phlegm.

ம., தெ. சரளி; க. சரளெ

[சளி → சரளி]

சரளிகட்டு *šaraḷi-kaṭṭu,* பெ. (n.) சளிக்கட்டு (யாழ்ப்.); collection of phlegm in the chest.

[சளி → சரளி + கட்டு]

சரளிகட்டை *šaraḷi-kaṭṭai,* பெ. (n.) மேழியின் நுனியில் மாட்டுங்கட்டை; handle of a plough.

[சரளி + கட்டை]

சரளிப்பதம் *šaraḷi-p-padam,* பெ. (n.) பண் வரிசை இடையிட்டு வரும்படி பாடும் பாட்டு; song with the notes of the gamut accompanying.

[சரளி + பதம்]

சரளியலங்காரம் *šaraḷi-y-alaṅgāram,* பெ. (n.) (இசை) பண்வரிசைகளைப் பயிலுதற்குரிய ஒருவகை முறை (வின்.); exercising the voice in the seven notes in all their combinations.

[சரளி + அலங்காரம்]

Skt. alaṅkara → த. அலங்காரம்

சரளு *šaraḷu,* பெ. (n.) 1. சரலங்கா பார்க்க; see šaralaṅgā. 2. எருமையூர் (மைசூர்) மரவகை; potato plum of Mysore. kāḍār (செ.அக.).

சரளை[1] *šaraḷai,* பெ. (n.) தேவதாரு; deodar - erythroxylon monogynum (சா.அக.).

சரளை[2] *šaraḷai,* பெ. (n.) சிறுமணல் சேர்ந்து கெட்டியான கல்வகை (இ.வ.); gravel, laterite.

[சரள் = மணற்பாறைச்சல்லி, முரம்பு, சரள்→ சரளை]

சரளை[3] *šaraḷai-k-karkuḻi,* பெ. (n.) சரளைக் கற்கள் கிடைக்கும் குழி; gravel-pit.

[சரளை + கல் + குழி]

சரளைகட்டி-த்தல் *šaraḷai-kaṭṭi-,* 4 செ.குன்றாவி. (v.t.) சரற்கல் இடுவித்துப் பாதையைச் செம்மையாக்குதல் (C.E.M.); to metal a road.

[சரளை + கட்டி-,]

சரளைப்பாதை *šaraḷai-p-pādai,* பெ. (n.) சரளைக் கல்லிட்ட நடைபாதை; gravel walk.

[சரளை + பாதை]

சரளையிடு-தல் *šaraḷai-y-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) சரளைக் கற்களைப் பரப்புதல்; to gravel.

[சரளை + இடு-,]

சரன் *šaran*, பெ. (n.) *1.* ஒற்றன்; spy employed in a state. *2.* தூதன் *(யாழ். அக.)*; royal messenger.

[சரம் → சரன் = ஓரிடத்தில் தங்காது திரிபவன், விரைந்து செல்பவன், பலவிடங்களுக்கும் சென்று செய்தி திரட்டுபவன், ஓரிடத்துச் செய்தியைப் பிறருக்குத் தெரிவிப்பவன்]

த. சரன் → Skt. šara.

சரனகோடரம் *šaranakōdaram*, பெ. (n.) கருஞ்சிற்றகத்தி; black sesbana - Sesbania genus *(சா.அக.)*.

சரனமலம் *šaranamalam*, பெ. (n.) இலவுமரம்; silk cotton tree - Bombax malabaricum *(சா.அக.)*.

சரா *šarāi*, பெ. (n.) சராய் பார்க்க; see *šarāy* 'தலைப்பாகோ டங்கி சரா' *(கொண்டல்விடு. 677)*.

சராகம்[1] *šarāgam*, பெ. (n.) *1.* தடையின்மை; fluency. *2.* போர்; war.

[சரி → சரம் → சராகம்]

சராகம்[2] *šarāgam*, பெ. (n.) வண்டு; beetle.

[சரகம்[2] → சராகம்]

சராகம்[3] *šarāgam*, பெ. (n.) நேர்பாதை *(வின்.)*; straight road without ramifications or turnings.

[சர் → சரம் = நேராகப் பாயும் அம்பு. சரம் → சராகம்]

த. சராகம் → Skt. saraka

சராகம்[4] *šarāgam*, பெ. (n.) நாட்டின் பகுதி *(யாழ்ப்.)*; region, quarter, district.

[சரகம்[1] → சராகம்]

சராகை *šarāgai*, பெ. (n.) வட்டில் *(சது.)*; metal cup.

க. சரவிகெ; தெ. சரவெ, செரவ, செரிவி.

[சுர் → (சுரு) → சரு → சருவு. சருவுதல் = சாய்தல், சரிதல்,. சருவு → சரா → சராகை]

த. சராகை → Skt. saraka

சராங்கம்[1] *šarāngam*, பெ. (n.) *1.* நிறைவு; completeness, fulness. *2.* தடையின்மை; fluency. சராங்கமாய்ப் படித்தான்.

[சராகம்[1] → சராங்கம்]

சராங்கம்[2] *šarāngam*, பெ. (n.) நேர்மை *(வின்.)*; straightness, evenness.

[சராகம் → சராங்கம்]

சராசரம் *šaracaram*, பெ. (n.) *1.* இயங்குதிணை நிலைத்திணைப் பொருள்; the categories of movables and immovables. "அன்று சராசங்களை வைகுந்தத்தேற்றி" *(திவ். பெருமாள் 10,10)*. *2.* பேரண்டம்; the universe. "புனவமாதி சராசரம் பயந்த தாணு" *(கந்தபு. மார்க்கண். 42)*. *3.* அவுபல செய்நஞ்சு; a mineral poison.

[சர் → சரம் + அ + சரம். 'அ' மறுதலைப் பொருள் முன்னொட்டு]

சராசரி *šarāšari*, பெ. (n.) *1.* நிரலளவு (சரிவீதம்); medial estimate, average. சராசரி மக்கள் அனைவரும் படிக்கும் இயல்பினர். *2.* பொதுப்படையான மதிப்பீடு; generally prevailing rate, degree or amount.

[சரி + சரி → சரிச்சரி → சராசரி]

சராசரிமேரை *šarāšari-mērai*, பெ. (n.) விளைச்சலிற் சிற்றூர்ப் பணியாளர்க்குப் பிரித்துக் கொடுக்கும் பாகம் (W.G.); proportion of the crop set apart for a village servant.

[சராசரி + மேரை]

சராசனம்[1] *šarā-šanam*, பெ. (n.) வில்; bow. ஏற்றிய சராசனம் வணக்கி *(பாரத. வாரணாவத. 56)*.

[சர(ம்) + ஆசனம். ஆசனம் = இருக்கை. சராசனம் அம்பிற்கு இருக்கையாய் இருப்பது, வில்.]

Skt. āšana → த. ஆசனம்

சராசனம்[2] *šarā-šanam*, பெ. (n.) அரசு *(மலை.)*; pipal.

சராட்டெனல் *šarāttenal*, பெ. (n.) சரேரெனல் பார்க்க; see *šarērenal*.

[சராட்டு + எனல்]

சராடி *šarādi*, பெ. (n.) பறவை வகை *(யாழ்.அக.)*; a bird.

[சகடம் → சகடி → சரடி → சராடி]

சராடி → Skt. śarādi

சராடிகம் *šarādigam*, பெ. (n.) கருஞ்சிந்தில் கொடி; a black variety of moon creeper - menispermum genus (சா.அக.).

சராத்திரயம் *šarāttirayam*, பெ. (n.) அம்புக் கூடு (யாழ்.அக.); quiver for holding arrows.

[சரம் + திரயம்]

Skt. ā-śraya → த. திரயம்

சராய் *šarāy*, பெ. (n.) காற்சட்டை; trousers.

[சர் → சரம் = நீண்ட அல்லது நேரான மணிக்கோவை. சரம் → சராய் = நீளவாக்கில் அமையும் காற்சட்டை]

சராவம்[1] *šarāvam*, பெ. (n.) மெலிதாகவும் நீண்டதாகவும் இருப்பது; anything long and thin, as a bar, arib.

[சர் → சரம் → சராவம்]

சராவம்[2] *šarāvam*, பெ. (n.) வாயகன்ற மட்கலம், அகல்; shallow wide-mouthed earthern vessel. "பொங்கு சராவத்து நெய்த்துடுப் பெடுத்த" (பதினொ. ஆளு. 16).

[சுர் → (சுரு) → சரு → சருவு. சருவுதல் = சாய்தல், சரிதல். சருவு → சருவம் மேல் நோக்கி சரிவான சட்டி. சருவம் → சராவம்]

சராளம் *šarāḷam*, பெ. (n.) சரளம்[1] பார்க்க; see *šaraḷam*[1]. அந்த வழி சராளம்.

[சரளம் → சராளம்]

சராளி-த்தல் *šarāḷi-*, 4 செ.குன்றாவி. (v.i.) கழிச்சல் ஏற்படுதல்; to have loose motion.

[சரளம் → சராளி-,]

சரி[1]**-தல்** *šari-*, 4 செ.கு.வி. (v.i.) 1. நழுவுதல்; to slip away, slide down. சரிந்த துகில் (திருவிசை. கரு. 5, 10). 2. கீழே விழுதல்; to roll down, tumble down, stumble and fall down from a height. "சரிந்த பூவுள" (கம்பரா. அயோத். மந்திரப். 56). 3. குலைதல்; to be upset. "சாடிய வேள்வி சரிந்திட" (திருவாச. 14,5). 4. பின்னிடுதல்; to give way, yield; to be defeated as an army. "நேர் சரிந்தான் கொடிக்கோழி கொண்டான்" (திவ். திருவாய். 7, 4, 8). 5. சாதல்; to die. 6. சாய்தல்; to lean, incline, to fall to one side, decline as a heavenly body. 7. சரிவாயிருத்தல் (இ.வ.); to be aslant, to slope. 8. கூட்டமாய்ச் செல்லுதல்; to flock to a place, to go in crowd. அங்கே மக்கள் சரிகிறார்கள். (செ.அக.)

ம. சரியுக, சரிக்க (வளைத்தல்); க. சரி, சரி, சருகு; சரிகு; தெ. சரகு, சருகு; து. சரகு; கோத. சர்வ்; கொலா. சரக்; மா. சர்கெ; பட. சாரு

[சுரி → சரி (வே.க. 237)]

சரி[2]**-த்தல்** *šari-*, 4 செ.கு.வி. (v.i.) 1. சரிந்து விழச் செய்தல்; to cause to slip or roll, topple, to pour down. 2. வெட்டித் தள்ளுதல்; to cut off, as the head. "தலையைச் சரித்து" (ஈடு, 1,6,7). 3. ஒருபக்கஞ் சாயச்செய்தல்; to slant, incline.

ம. சரிப்பிக்க

[சரி → சரி-,]

சரி[3]**-த்தல்** *šari*, 4 செ.கு.வி. (v.i.) 1. செல்லுதல் (சஞ்சரித்தல்); to move about. "பரிதொறுஞ் சரித்தான்" (கம்பரா. சம்புமா. 33). 2. வாழ்தல் (வசித்தல்); to live, dwell. "காடுகளிற் சரித்தும்" (சி.சி. 10, 5).

[சுர் → சர் → சரி]

சரி[4]**-த்தல்** *šari-*, 2 செ.குன்றாவி. (v.t.) மேற் கொண்டொழுகுதல் (சங்.அக.); to practise .

சரி[5]**-த்தல்** *šari-*, 4 செ.கு.வி. (v.i.) உணவு செரித்தல் (சீரணித்தல்); to digest, to be digested.

[செரி → சரி-,]

சரி[6]**-த்தல்** *šari-*, 4 செ.கு.வி. (v.i.) அசைதல்; to move.

[சர் → சரி]

சரி → Skt. car.

சரி[7] *šari*, பெ. (n.) 1. மலைச்சாரல்; declivity, slope of a mountain. "சிங்கம் வேட்டந் திரிசரிவாய்" (திருக்கோ. 156). 2. மலைவழி; mountain way. 3. வழி; way, road. "பெருமலைகளிடைச் சரியிற் பெரும் பன்றி புனமேய்ந்து" (பெரியபு. கண்ணப்ப. 142). 4. கூட்டம் (பிங்.); crowd, flock.

தெ. சரி.

[சுரி → சரி. சரிதல் = சாய்தல், சரிவாயிருத்தல். (வே.க. 237)]

சரி[8] *šari,* பெ. (n.) **வளைவகை;** a kind of bracelet. *"சரியின் முன்கை நன்மாதர்" (தேவா. 118, 3).*

[சுரி → சரி]

சரி[9] *šari,* பெ. (n.) **நடத்தை;** conduct. *'அவனுடைய சரி நன்றாயில்லை' (உ.வ.).*

[சுரி → சரி]

சரி → Skt. caryā

சரி[10] *šari,* பெ. (n.) *1.* **ஒப்பு;** similarity. *"மதித்தழும்புக்குச் சரி" (குமரபிர.சிவகாமி. இரட். 16). 2.* **பொருத்தம்;** suitablity, agreement, exactness. *சரியான வேலையில் அவர் வந்தார். 3.* **ஒழுங்கு;** rightness, propriety, regularity. *'அவரது பேச்சு சரியில்லை' (உ.வ.). 4.* **சரியளவு;** equal measure of quantity. *தந்தைக்குச் சரியாய் பேசுவது முறையன்று. 5.* **ஒப்புதற் குறிப்பு;** a term of approbatium meaning 'yes', 'right' *எல்லாவற்றிற்கும் சரி சொல்வது தகுமா?.*

[செறி → சரி]

Skt. sadrša; Pkt. rari

சரி[11] *šari,* பெ. (n.) *1.* **ஒழுங்காக்கிய அல்லது சரிப்படுத்தப்பட்ட நிலை;** the state or condition of being adjusted. *அரசின் நிதிநிலை சரியாகிவிட்டது. 2.* **தகுதி, உரியது;** fitness, properiety, suitableness, rightness. *இப்பணிக்கு அவர்தான் சரி. 3.* **திருந்திய தன்மை, வழுவற்ற நிலை;** correctness. *4.* **ஒரு சீரான தன்மை;** evenness. *வேளாண் பணி சரியாய் நடக்கிறது. 5.* **ஒரே வகையானதன்மை, ஒரே படித்தான நிலை;** sameness. *உத்திபிரிப்பு சரியாய் அமைந்தது. 6.* **சரிநேர்த் தன்மை, பிழைபாடற்ற நிலை;** proper. *அவர் செய்ததுதான் சரி. 7.* **நேரான தன்மை, கோணலற்ற தன்மை;** straight. *பாதை வளைவு சரிசெய்தபின் போக்குவரத்து நெரிசல் இல்லை.*

[சரி' → சரி]

சரிக்கட்டு-தல் *šari-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* **ஒப்பிடுதல்** *(வின்.);* to compare, show the comparative merits. *2.* **ஒப்பச்செய்தல்;** to rectify, correct, redress. *அவரைச் சரிக்கட்டி விட்டால் வெற்றி நமக்குத்தான். 3.* **இணக்குதல்;** to placate, persuade, reconcile. *ஆசிரியரைச் சரிக்கட்டப் பெருமுயற்சி தேவைப்பட்டது. 4.* **கடனைத் தீர்த்தல்** *(வின்.);* to pay discharge. *நெல்லை விற்றுத்தான் வங்கிக்கடனைச் சரிக்கட்ட வேண்டும். 5.* **ஈடுசெய்தல்** *(வின்.).* to adjust, indemnify, reimburse. *சென்ற ஆண்டு இழப்பை இதைக் கொண்டு சரிக்கட்ட முடியாது. 6.* **முடிவு படுத்துதல்;** to finish, settle. *இயக்குநரால்தான் அலுவலகச்சிக்கலைச் சரிகட்ட முடியும். 7.* **கொல்லுதல்;** to composs one's death, kill. *கட்சிப்பேரணி என்ற பெயரில் நால்வரைச் சரிக்கட்டி விட்டனர்.*

[சரி + கட்டு-,]

சரிக்கட்டு-தல் *šari-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* **பழிவாங்குதல்** *(வின்.);* to take revenge, make reprisals. *2.* **இணக்கமாகச் செய்தல்;** to act agreeally. *"எவர்க்குஞ் சரிக்கட்டவோ வெண்ணி" (இராமநா. ஆரணி. 11). 3.* **சரிநிகர்த் தன்மையாதல்;** to make equal, to make one's equal. *4.* **உண்மையாதல்;** to prove. *"என்சொல் லப்போதல்லோ சரிக்கட்டும்" (கவிகுஞ். 5).*

[சரி + கட்டு-,]

சரிக்கோடிடு-தல் *šari-k-kōḍiḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) **சரியென்பதற்கான குறியீடு போடுதல்;** to make tick mark.

[சரி + கோடு + இடு-,]

சரிக்கோடு *šari-k-kōḍu,* பெ. (n.) **சரி என்பதனைக் காட்டும் சிறுகோடு;** tick mark (✓).

[சரி + கோடு]

சரிக்குச்சரி *šarikku-c-cari,* பெ. (n.) *1.* **நேரொப்பு (பதிலுக்குப்பதில்);** like for like, measure for measure. *2.* **பழிக்குப்பழி;** retaliation, tit for tat.

[சரிக்கு + சரி]

சரிகமபதநி *šarigamapadani,* பெ. (n.) **ஏழுவகைச் சுரம்;** the seven notes of the gamut. *சரிகமபதநிப் பாடல் (பாரத. இந்திப்பிர.42).*

[ச + ரி + க + ம + ப + நி]

ஏழிசைக்குரிய எழுத்துகள் முதற்காலத்தில் ஏழ் உயிர்நெடில்களாயிருந்தன. அவை நிறவாளத்தி என்னும் சிட்டையிசைக்கு ஏற்காமையால் ச ரி க ம ப த நி என்னும் எழுத்துகள் நாளடைவிற் கொள்ளப்பட்டன. இவை சட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிசாதம் என்னும் வட

சொற்களின் முதலெழுத்துகளாகச் சொல்லப் படுகின்றன. இக் கொள்கை மத்தியமம் பஞ்சமம் என்னும் இரண்டிற்கே ஏற்கும். சமன் பட்டடை என்னும் இரு தென்சொற்களின் முதலெழுத்துகளே ச ப என்பது சிலர் கருத்து. இவையிரண்டுமன்றி இசையின்பத்திற்கேற்ற ஏழெழுத்துகள் நாளடைவிற் பட்டறிவினின்று தெரிந்து கொள்ளப்பட்டன என்பதே பெரும்பால் தமிழிசைவாணர் கருத்தாம் (ப. ப. 115, 116).

ஏழுசுரங்களின் அடையாளவெழுத்துகளான, ச ரி க ம ப த நி என்பவை, தமிழில் ஏற்பட்ட குறிகளேயென்றும், அவை குறிக்குஞ் சொற்கள் இப்போது வழக்கிழந்துவிட்டன வென்றும், சில காரணங்காட்டிக் கூறுகின்றனர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவர்கள். இது எங்ஙனமிருப்பினும் ஆரியர் வருமுன்னமே தமிழர்க்கு இசைத்தமிழ் இருந்ததென்பதும் ஆரியர் தமிழரிடமிருந்தே இசையைக் கற்றனர் என்பதும் மட்டும் மிகத் தேற்றம். ச ரி க ம ப த நி, என்பவற்றிற்குப் பகரமாக, தமிழ்ச் சுரப் பெயர்களின் முதலெழுத்துகளையே கு, து, க, உ, இ, வி, த, என்று வைத்துக் கொள்ளினும், அன்றி வேறு இனிய இசைவான எழுத்துகளை (க ச த நி ப ம வ) வைத்துக் கொள்ளினும் ஓர் இழுக்குமில்லை (ஒ. மொ. 194, 195).

சரிகாணு[1]-தல் *šari-kāṇu-, 2* செ.கு.வி. (v.i.) நேரொத்தல் (வின்.); to be exactly equal.

[சரி + காணு-,]

சரிகாணு[2]-தல் *šari-kāṇu-,* 2 செ.கு.வி. (v.i.) *1.* சரி பார்த்தல்; to check, examine the accuracy of. கணக்கைச் சரி காணவேணும். *2.* நிறைவேற்றுதல்; to fulfil. *3.* கொல்வித்தல் (யாழ்ப்.); to bring about ones' death.

[சரி + காணு-,]

சரிகை[1] *šarigai,* பெ. (n.) கூத்தின் உறுப்பு செயற்பாடுகளுள் ஒன்று (சிலப். 3:12, உரை); a gesteculation with the limbs in dancing.

[சரி → சரிகை]

சரிகை[2] *šarigai,* பெ. (n.) ஆடைக்கரை முதலியவற்றிற் சேர்க்கப்படும் பொன் வெள்ளி இழைகள்; gold or silver thread, used as lace. "செம்பொற் சரிகை வேலையிட்டு" (தனிப்பா. 1 : 260, 1).

[சர் → சரம் = நீண்ட அல்லது நேரான மலர்க்கோவை. சரம் → சரகை → சரிகை = ஆடையோரத்தில் சரஞ்சரமாக அமைக்கப்படும் மாழை (உலோக) இழை. சரிகை → U. zari]

சரிகைக்கம்பி *šarigai-k-kambi,* பெ. (n.) ஆடையின் விளிம்புச் சரிகைக்கரை; thin laced border in a cloth (செ.அக.).

[சரிகை + கம்பி = சரிகை இழை மாழையால் ஆனதாகையால் கம்பிப் போல் இருக்கும்.]

சரிகைக்கெண்டை *šarigai-k-keṇḍai,* பெ. (n.) ஆடைக் கரையில் இடும் சரிகைப் பட்டை; cloth-border of braided lace.

[சரிகை + கெண்டை. கண்டை → கெண்டை]

சரிகைத்திம்மை *šarigai-t-timmai,* பெ. (n.) சரிகைத்திரி (இவ.) பார்க்க; see *šarigai-t-tiri.*

[சரிகை + திம்மை. திம்மை = சரிகைப்பந்து]

சரிகைத்திரி *šarigai-t-tiri,* பெ. (n.) சரிகைக் கற்றை (இ.வ.); skein of gold thread.

[சரிகை + திரி]

சரிகைப்பாண்டி *šarigai-p-pāṇḍi,* பெ. (n.) பாண்டிவிளையாட்டு வகை; a kind of hop-scotch.

[சரிகை + பாண்டி]

பாண்டிவிளையாட்டு, வட்டு என்றும், சில்லி என்றும் சில்லாக்கு என்றும் எறிகருவியாற் பெயர் பெற்றிருப்பதால் ஒருகால் பாண்டி என்பது எறிகருவிப் பெயராய் இருக்கலாம்.

பாண்டில் என்னுஞ்சொல், வட்டம் என்று பொருள்படுவதால், அதன் கடைக்குறையான பாண்டி என்பதும் அப் பொருள்படலாம்.

இருவரிசைக் கட்டங்களில் ஆடப்பெறும். இடவரிசையிற் சில்லியெறியும்போது வல வரிசை வழியாகவும், வலவரிசையிற் சில்லி யெறியும்போது, இடவரிசை வழியாகவும் செல்ல வேண்டும். இடவரிசையுச்சக் கட்டத்தில் காலூன்றிக் கொள்ளலாம் (த.வி. 101, 108).

சரிகைமலை *šarigai-malai,* பெ. (n.) குடவம் (பித்தளை) மலை (யாழ்.அக.); brass mountain.

[சரிகை + மலை.]

சரிகை செய்வதற்குப் பெரும்பாலும் குடவம் பயன்படுத்தப்பட்டதால் சரிகை குடவத்தைக் குறித்தது.

சரிகைவெள்ளி *šarigai-veḷḷi,* பெ. (n.) வெள்ளிச் சரிகையை யுருக்கியெடுத்த வெள்ளி (பதார்த்த. 82); silver obtained by melting silver-lace.

[சரிகை + வெள்ளி.]

சரிகோணம் *šari-kōṇam,* பெ. (n.). நேர்கோணம் (யாழ்.அக); right angle.

[சரி + கோணம். கோண் → கோணம் = வளைவு, மூலை]

சரிசம் *šarisam,* பெ. (n.) செயலை (அசோகு); asoka tree - Saraca Indica (சா.அக.).

சரிசமம் *šari-šamam,* பெ. (n.) சரிசமானம் பார்க்க; see *šari-šamāṉam.*

க. சரிசம

[சரி + சமம்]

சரிசமமாக்கு-தல் *šari-šamam-ākku-,* 6 செ.குன்றாவி. (v.t.) ஒப்பானதாக்கு, சீரான நிலையுடையதாக்கு; to equalize.

[சரி + சமம் + ஆக்கு-,]

சரிசமானம் *šari-šamāṉam,* பெ. (n.) நேரான ஒப்பு; exact likeness, perfect equality. அவருக்குச் சரிசமானமாய் அமர்வது முறையன்று.

[சரி + சமானம். சமம் → சமானம்]

சரிசயம் *šari-sayam,* பெ. (n.) சிறு நன்னாரி; small-leaved saraparilla; swallow-work-Hemidesmus indicus (angustifolia) (சா.அக.).

சரிசாமம் *šari-šāmam,* பெ. (n.) நள்ளிரவு (நடுச்சாமம்); midnight.

[சரி + சாமம்]

Skt. yāma → த. சாமம்

சரிசு *šaricu,* பெ. (n.) சரி^{8} (யாழ்ப்) பார்க்க; see *šari* ^{8}.

[சரி → சரிசு]

சரிசெய்-தல் *šari-sey-,* 1 செ.கு.வி. (v.i.) 1. ஒழுங்காக்குதல்; to rectify. பழுதுபட்ட கடியாரத்தைச் சரிசெய்ய வேண்டும். 2. பொருத்திக் கொள்ளுதல், தக்கவாறு அமைத்துக் கொள்ளுதல்; to adjust. நாளைய நிகழ்ச்சிக்கு அனைத்தையும் சரி செய்ய வேண்டும்.

க. சரிமாடு

[சரி + செய்-,]

சரிசொல்(லு)^{1}-தல் *šari-col-,* 8 செ.குன்றாவி. (v.t.) 1. இசைதல்; to second, support, as a motion. கேட்டதற்குச் சரி சொல்லாமல் போகிறாயே. 2. உறுதிப்படுத்துதல், மெய்ப்பித்துக் காட்டுதல்; to approve.

[சரி + சொல்லு-,]

சரிசொல்(லு)^{1}-தல் *šari-col-,* 8 செ.குன்றாவி. (v.t.) பொறுப்பேற்றல் (இ.வ.); to answer for, to become responsible.

[சரி + சொல்லு-,]

சரிணம் *šariṇam,* பெ. (n.) காட்டுத்துளசி; wild basil - Ocimum adscendenn (சா.அக.).

சரித்தான்பாண்டி *šarittāṉ-pāṇḍi,* பெ. (n.) பாண்டி விளையாட்டு வகை (இ.வ.); a kind of hop-scotch.

[சரி + தான் + பாண்டி]

பாண்டிவிளையாட்டில் கரகத்தில் அல்லது மேற்புற வெளியிற் சில்லியெறிந்து, கண்ணை மூடிக் கொண்டாவது, மேனோக்கிக் கொண்டாவது, ஒவ்வொரு கட்டத்திற் குள்ளும் ஒவ்வோர் எட்டு வைத்து நடந்து சென்று சில்லை மிதிக்க வேண்டும். ஒவ்வோர் எட்டு வைக்கும்போதும் 'சரிதானா' என்று கேட்கவேண்டும். கால்கோட்டில் படாது எட்டுச் சரியாயிருப்பின், எதிரியார் சரித்தான் என்று வழிமொழிவர். சரியில்லாவிடில் சரியில்லை என்பர். ஒவ்வொரு முறையும் சரித்தானா என்று கேட்பதால் இவ் விளையாட்டிற்குச் சரித்தான்பாண்டி என்று பெயர் ஏற்பட்டிருக்கலாம். சரித்தான் என்பதற்கு மாறாக 'அமரேசா' என்று சொல்வதும் உண்டு. அதற்கு எதிரியார் 'ரேசு' என்று வழிமொழிவர் (த.வி).

சரித்திரை *šarittirai,* பெ. (n.) புளியமரம் (மலை); tamarind.

[சரி + திரை]

சரித்து *šarittu,* பெ. (n.) ஆறு (யாழ். அக.); river.

[சல் → (சர்). சர → சரம். சரம் = நீர்நிலை. சர → சரி → சரித்து]

சரித்து → Skt. sarit

சரித்துடை *šarittuḍai,* பெ. (n.) புல்லுருவி; a parasitia plant - Loranthus (genus) (சா.அக.).

சரிதன் *šaridan,* பெ. (n.) செயலிற் சிறந்தவன்; a man of deed. "தரும னஞ்சுறு சரிதர்" (கம்பரா. அனுமப். 10).

[சரி → சரிதன்]

சரிதி *šaridi,* பெ. (n.) சரிதன் பார்க்க; see šaridan. "நரியினிற்றொகுதி யெல்லா நற்பரித் திரள்க ளாக்குஞ் சரிதி" (திருவாத. பு. குதிரை. 58).

[சரி → சரிதி]

சரி → Skt. sarit

சரிநிகர் *šari-nigar,* பெ. (n.) தன்மை, நிலை, முறை போன்றவற்றில் சமத்தன்மை; equal manner, state or condition. சொல்லாய்வில் தேவநேயர்க்குச் சரிநிகர் யார்?

க. சரிபரி

[சரி + நிகர்]

சரிநிகர்வு *šari-nigarvu,* பெ. (n.) சரிநிகர் பார்க்க; see *šarinigar.*

[சரி + நிகர்வு]

சரிப்படு-தல் *šari-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. ஏற்றதாதல்; to be agreeable or satisfactory. தாங்கள் அழைக்கும் நாளில் பொழிவுக்கு வர எனக்குச் சரிப்படும். 2. மனமொத்தல்; to suit, agree. அவனுக்கும் எனக்கும் சரிப்படாது 3. நேராதல்; to be right, proper; to come upto the mark or standard. 4. ஒப்பாதல்; to be similar. 5. முடிவுபடுதல்; to be finished, settled. செயலெல்லாம் சரிப்பட்டது

தெ. சரிபடு

[சரி + படு-,]

சரிப்படுத்து-தல் *šari-p-paḍuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சரிக்கட்டு-தல் பார்க்க; see *šari-k-kaṭṭu-* (செ.அக.).

[சரி + படுத்து-. படு (த.வி.) → படுத்து (பி.வி.)]

சரிப்பி-த்தல் *šari-p-pi-,* 4 செ.குன்றாவி. (v.t.) நடப்பித்தல்; to conduct ceremonies. "சாத்திரப் படி தப்பாமற் சரிப்பித்து" (உத்தரரா. அசுவ.).

[சரி + சரிப்பி-. சரி (த.வி.) → சரிப்பி (பி.வி.)]

சரிப்பிடி-த்தல் *šari-p-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. பிறனுடன் ஒத்துச்செல்லுதல் (வின்.); to overtake or keep even with one, as in running, learning. 2. கேடுசூழ்தல் (யாழ்ப்.); to aim at or plot another's ruin.

[சரி + பிடி-,]

சரிப்பேச்சு *šari-p-pēccu-,* பெ. (n.) இணையான பேச்சு; a word equal to uttered from arrogance.

க. சரிமாது

[சரி + பேச்சு]

சரிபம் *šaribam,* பெ. (n.) அசோகு (மலை.); asoka tree.

சரிபாசி *šari-pāsi,* பெ. (n.) சிறு நன்னாரி; country saraparilla (சா.அக.).

மறுவ. சரிசயம்

சரிபாதி *šari-pādi,* பெ. (n.) பேர்பாதி; exact half, moiety.

க. சரிபாலு

[சரி + பாதி]

சரிபார்-த்தல்[1] *šari-p-pār-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஒத்துப்பார்த்தல் (வின்.); to compare, check, as a copy with its original. இவையனைத்தும் சரிபார்த்த மெய்ப்பு.

[சரி + பார்-,]

சரிபார்-த்தல்[2] *šari-p-pār-,* 4 செ.கு.வி. & 4 குன்றாவி (v.i. & v.t.) கேடு சூழ்தல் (இ.வ.); to plot one's ruin.

[சரி + பார்-,]

சரிபொழுது[1] *šari-poḻudu,* பெ. (n.) சாயுங்காலம் (வின்.); evening (செ.அக.).

[சரி' + பொழுது]

சரிபொழுது[2] *šari-poḻudu,* பெ. (n.) 1. உரியநேரம்; exact time. 2. பகல்பொழுது; midday, noon.

மறுவ. உருமம், உச்சிப்பொழுது

க. சரிபகலு, சரிகொத்து

[சரி + பொழுது]

சரிபோ[1]-தல் *šari-pō-, 8* செ.கு.வி. (v.i.) *ஒத்தல்;* to resemble. *"தன்பெருஞ் குணப் பொறையினால் .... நிலமகட் சரிபோவான்" (உபதேசகா. சிவபுராண.11).*

[சரி + போ-,]

சரிபோ[2]-தல் *šari-pō-, 6* செ.கு.வி. (v.i.) *1. நேர் நடத்தல்;* to progress, as a game. *2. அமைதியாதல் (யாழ்ப்.);* to become reconciled, as contending parties. *3. மனப்படி நடத்தல்;* to have one's own way. *தனக்குச் சரிபோனபடி செலவழிக்கிறான் (வின்.).*

[சரி + போ-,]

சரிமணி *šari-maṇī,* பெ. (n.) *மகளிர் இடையில் அணியும் ஓரணி (திவா.);* a kind of girdle set with gems.

[சரி + மணி]

சரிமணிக்கோவை *šari-maṇi-k-kōvai,* பெ. (n.) *சரிமணி (பிங்.) பார்க்க;* see *šari-maṇi.*

[சரி + மணிக்கோவை]

சரிமதிப்பு *šari-madippu,* பெ. (n.) *உரிய மதிப்பு, பொருத்தமான மதிப்பு;* accurate value.

[சரி + மதிப்பு. மதி → மதிப்பு]

சரிமேரை *šari-mērai,* பெ. (n.) *குடிகளின் உரிமை* (R.T.); established rights or privileges of individual ryot.

[சரி + மேரை]

சரியகவை *šari-y-agavai,* பெ. (n.) *1. ஒத்த அகவை;* same age. *'பிசிராந்தையாரும் கோப்பெருஞ் சோழனும் சரியகவையினராக இருக்கலாம்'. 2. தகுந்தஅகவை;* suitable age as for marriage. *3. நடுஅகவை;* middle age.

[சரி + அகவை]

சரியம் *šariyam,* பெ. (n.) *சிறுநன்னாரி (மலை.);* a species of sarsaparilla.

Skt. śārihā

சரியற்றது *šari-y-aṟṟadu,* பெ. (n.) *ஒழுங்கற்றது;* that is improper etc. *'அவர் பேசியது சரியற்றது' (உ.வ.).*

க. சரியல்லாதது

[சரி + அற்றது]

சரியா-தல் *šari-y-ā-, 6* செ.கு.வி. (v.i.) *1. சரிவா-தல் பார்க்க;* see *šari-v-ā-. 2. முடிவுறுதல்;* to be spent, as cash, life.

க., தெ. சரியாகு

[சரி + ஆ-,]

சரியாக்கு-தல் *šari-y-ākku-, 5* செ.குன்றாவி. (v.t.) *1. ஒழுங்குபடுத்துதல்;* to make equal. *2. முரண்பாடு போன்றவற்றைத் தீர்த்துவைத்தல்;* to resolve the difference of opinion etc., *3. உரிய தாக்குதல்;* to put in a proper state, to make proper.

க. சரிகொளிசு

[சரி + ஆக்கு-,]

சரியாக *šari-y-āga,* வி.எ. (adv.) *1. தெளிவாக, குழப்பம் இல்லாமல், தவறு இல்லாமல்;* exactly, clearly; correctly. *அந்தப் பந்து சரியாக மட்டையில் பட்டுச் சென்றது. செய்வதைச் சரியாகச் செய். 2. குறையாமல்;* without wanting. *கொண்டுவந்த பொருட்கள் சரியாக இருந்தன. 3. போதுமானதாக;* just-enough, exactly. *நாள்தோறும் வீட்டுவேலை செய்வதற்குத் தான் நேரம் சரியாக இருக்கிறது. 4. ஒழுங்காக, முறையாக, நல்ல நிலைமை;* properly; all right. *எனக்கு உடல்நிலை சரியாக இல்லை. 5. கடுமையாக; நன்றாக;* soundly, harshly. *எனக்கு வந்த சினத்தில் அவனைச் சரியாகத் திட்டிவிட்டேன்.*

[சரி + ஆக-,]

சரியான *šariyāṉa,* பெ.அ. (adj.). *1. ஒழுங்கான; முறையான; தெளிவான;* proper. *அந்த நிகழ்ச்சி பற்றிச் சரியான செய்தியில்லை. 2. தகுந்த; ஏற்ற; பொருத்தமான;* proper; suitable; right. *அந்தச் செயலைச் செய்ய அவன் தான் சரியான ஆள். 3. கடுமையான; நல்ல;* extreme. *இன்றைக்குச் சரியான வெயில்.*

[சரி + ஆன]

சரியானஆள் *šari-yāṉa-āḷ,* பெ. (n.) *தகுதியான வேலையாள்;* a labourer of equal standing. *கட்டட வேலைக்குச் சரியான ஆள் தேவை.*

க. சரியாளு

[சரியான + ஆள்]

சரியானபேச்சு *šariyāṉa-pēccu,* பெ. (n.) தக்க பேச்சு; proper speech.

[சரியான + பேச்சு]

சரியானவன் *šariyāṉavaṉ,* பெ. (n.) உரிய நிலையில் இருப்பவன்; a man of equal standing or position.

க. சரியவனு; பட. சரியானம

[சரியான + அன்]

சரியிடு-தல் *šari-y-iḍu-,* 8 செ.குன்றாவி. (v.t.) படி முதலியவற்றை மூலத்தோடு ஒப்பிடுதல்; to compare, as a copy with its original (செ.அக.).

க. சரியிடு

[சரி + இடு-,]

சரியில்லாதது *šari-y-illādadu,* பெ. (n.) சரியற்றது பார்க்க; see *šari-y-aṟṟadu.*

க. சரியில்லாதது

[சரி + இல்லாதது]

சரியீடு *šari-y-īḍu,* பெ. (n.) 1. சமன்பாடு பார்க்க; see *šamaṉpāḍu.* 2. ஒத்த பருவம்; equal stage.

[சரி + ஈடு]

சரியேசரி *šari-yē-šari,* பெ. (n.) முழுமையானது, தகுதியானது, உரியது, பொருத்தமானது; very proper indeed. அன்றைய நிலையில் அவர் பேசியது சரியேசரி.

க. சரியேசரி

[சரி + ஏ + சரி. 'ஏ' தேற்றேகாரம்]

சரியை *šariyai,* பெ. (n.) சரிகை (யாழ்.அக.); lace.

[சரிகை + சரியை]

சரிவயது *šari-vayadu,* பெ. (n.) சரியகவை பார்க்க; see *šari-y-agavai.*

[சரிகை + வயது]

Skt. vayas → த. வயசு → வயது

சரிவர *šarivara,* கு.வி.எ. (adv.) 1. ஒழுங்காய்; rightly. 'இந்த வேலையைச் சரிவரச் செய்தால்தான் கூலி கிடைக்கும்'. 2. முழுதும்; wholly, completely. வரவேண்டியது சரிவர வந்துவிட்டது 3. திட்டமாய்; accurately, exactly. சரிவரப் பாகம் பிரி.

க. சரிவரெ

[சரி + வர]

சரிவல் *šari-val,* பெ. (n.) சரிவு பார்க்க (இ.வ.); see *šarivu.*

[சரி → சரிவு → சரிவல்]

சரிவளை *šari-vaḷai,* பெ. (n.) வளைவகை; a variety of bangles. (திவ். பெரியாழ். 3, 4, 8, வியா. பக். 618).

[சரி + வளை]

சரிவா-தல் (சரிவருதல்) *šari-v-ā-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நேர்வருதல்; to prove right or correct, as a mathematical problem, a prediction, an experiment. கணக்கு சரிவந்து விட்டதா? 2. சமமாதல்; to be alike equal. அவன் எனக்குச் சரிவந்தவன் (இவ.); 3. ஒத்துவருதல்; to agree, tally. 4. தீர்தல் (வின்.); to be finished, fulfilled.

[சரி + வா-,]

சரிவாரம் *šari-vāram-,* பெ. (n.) நிலச் சொந்தக்காரனும் பயிர் செய்வோனும் தமக்குள் விளைவைச் சரியாகப் பங்கிட்டுக் கொள்ளும் பாகம் (I.M.P. Sm. 92); equal division of produce between the landlord and the ryot.

[சரி → வாரம்]

சரிவீதம் *šari-vīdam,* பெ. (n.) நிரலளவு, பொதுப்படையான கணக்கீடு; medial estimate, average.

க. சரிவார

[சரி + வீதம்]

Skt. vihita → த. வீதம்

சரிவீதமேரை *šari-vīdamērai,* பெ. (n.) விளைச்சலில் சிற்றூர்ப் பணியார்க்குப் பிரித்துக் கொடுக்கும் பாகம்; proportion of the crop set apart for a village servant.

[சரிவீதம் + மேரை]

சரிவு *šarivu,* பெ. (n.) 1. சரிந்து விழுகை; sliding, rolling, slipping down. 2. சாய்வு; slope, declivity. 3. நகரம், ஆறு, எல்லை முதலியவற்றின் ஓரம் (இ.வ.); outskirts of a town; riverside; border; margin. 4. மகளிர் முன்கைகளில் அணியும் வளைவகை (இ.வ.); a kind of bracelet worn by women on the fore-arms.

ம. சரிவு; க. சரி, சறி (பள்ளத்தாக்கு); தெ. சருகுடு; து. சரி; E. slow

[சுரி → சரி → சரிவு]

சரிளப்பா *šarilappā*, பெ. (n.) வெண்கடுகு (வின்.); white mustard.

சரு *šaru*, பெ. (n.) சோறு (பிங்.); boiled rice.

படை. சரு (ஏனம்)

[சுர் → (சுரு) → சரு = சருவப்பானை, சருவப்பானையில் சமைக்கும் உணவு]

சருக்கம்[1] *šarukkam*, பெ. (n.) 1. வட்டம்; circle. 2. நூற்பிரிவு; chapter or section of a literary work. "சருக்கம் இலம்பகம் பரிச்சேத மென்னும்" (தண்டி. 7).

[சருக்கு → சருக்கம் = வட்டம், நூற்பிரிவு. ஒ.நோ: மண்டலம் = வட்டம், நூற்பிரிவு]

சருக்கம் → Skt. sarga. வடமொழியாளர் இச் சொல்லை ஸ்ருஜ் என்னும் சொல்லோடு பொருத்திக் காட்டுவர். அதற்கு விடு, எறி, வீசு, வெளிவிடு என்ற பொருள்களே உண்டு (வேக. 239).

சருக்கம்[2] *šarukkam*, பெ. (n.) படைப்பு; creation.

[சருக்கு → சருக்கம்]

சருக்கு = வட்டம், பிரிவு, பிறப்பு. பல பிறப்புகளின் ஒரு பிரிவு என்னும் நம்பிக்கையின் அடிப்படையில் சருக்கம் படைப்பை உணர்த்திற்று.

சருக்கரச்சரம் *šaru-k-kara-c-caram*, பெ. (n.) சிறிய சக்கரவடிவில் அமைந்த பொன் தகடுகளைக் கொண்ட கழுத்தணி; a necklace with wheel - shaped golden ringlets.

து. சக்கரசர, சக்கரசரோ

[சருக்கரம் + சரம்]

சருக்கரா *šaru-k-karā*, பெ. (n.) உடலின் உள்ளுறுப்புகளில் கல்போன்ற தடிப்பு அல்லது கல்லடைப்பு நோய்; calculus.

[சருக்கு → சருக்கம் = வட்டம், வட்ட வடிவில் அமைந்த சிறுகல்]

சருக்கராப்பிரபை *šarukkarā-p-pirabai*, பெ. (n.) பருக்கைக் கற்களாற் பாவப்பெற்ற நிரய (நரக) வகை (சீவக. 2817, உரை); a hell paved with pointed stones of sugar-loaf shape, one of elu-naragam.

[சருக்கரம் + பிரபை. சருக்கம் → சருக்கரம் = வட்டம், வட்ட வடிவக் கற்கள்]

சருக்கரை[1] *šarukkarai*, பெ. (n.) கரும்பு முதலியவற்றிலிருந்து உண்டாக்கப்படும் இன்பண்டம்; kinds of sweet crystalline substance prepared from various plants esp. the sugarcane, and beetroot for use to cookery, confectionary, brewing, etc. "சருக்கரை செய்யசாலித் தண்டுலம்" (சேதுபு. இராமநா. 63).

E. saccharine, sugar

[சுர் → (சுரு) → சரு → சருவு. சருவுதல் = சாய்தல், சரிதல். சருவு → சருகு. சருகுதல் = சரிதல். சருகு → சருக்கு-. சருக்குதல் = சாய்தல், சரிதல், வளைதல். சருக்கு → சருக்கம் = வட்டம். சருக்கு → சருக்கரம் → சருக்கரை = வட்டமாக வார்க்கப்பட்ட வெல்லக்கட்டி. ஒ.நோ: வட்டு = வட்டமான கருப்புக்கட்டி]

சருக்கரை → Skt. šarukkarā

வடமொழியில் சரள், சிறுகல், கூழாங்கல் கற்கண்டு என்று பொருள் தொடர்பு காட்டுவர்.

சருக்கரை பெரும்பாலும் கரும்பினின்று தான் எடுக்கப்படுகிறது. இந்தியாவில் இலுப்பைப் பூ, தென்னை, பனை, ஈஞ்சு முதலிய மரங்களினின்றும் எடுப்பதுண்டு. சப்பான், சீனா, அமெரிக்கா முதலிய நாடுகளில் மரப் பட்டைகளில் இருந்தும் சருக்கரை எடுக்கப்படுகிறது. செருமனியில் 'பீட்ரூட்' என்னும் கிழங்கிலிருந்து சருக்கரை எடுக்கப்படுகிறது.

வகைகள்

1. நாட்டுச் சருக்கரை அல்லது சிகப்புச் சருக்கரை; country sugar or brown sugar; bane sugar.
2. பூரா சருக்கரை அல்லது நவாத்துச் சருக்கரை; candy sugar.
3. கள் சருக்கரை; loaf sugar.
4. ஈரச்சருக்கரை; unrefined moist sugar.
5. வெள்ளைச் சருக்கரை, சீனச் சருக்கரை; white refined sugar, China sugar.
6. மணற் சருக்கரை; crystallised sugar.
8. சீந்திற் சருக்கரை; bitter salt extracted from moon-creeper.
8. கண்ட சருக்கரை; sugar candy.
9. கிழங்குச் சருக்கரை; sugar from beet-root.
10. கரும்புச் சருக்கரை; sugar from sugar cane; cane sugar.
11. பழச்சருக்கரை; sugar from fruits. (சா.அக.).

சருக்கரை[2] *šaru-k-karai,* பெ. (n.) வெள்ளை நிறம்; white colour. சருக்கரைக் கொடி, சருக்கரைப் பாறை.

[சருக்கரை[1] → சருக்கரை[2]]

சருக்கரை சுவைநோக்கி இனிப்புப்பொருளை உணர்த்துதற்போல அதன் (சீனி) நிறம் நோக்கி வெள்ளைப் பொருளையும் உணர்த்திற்று.

சருக்கரைக்கட்டி *šaru-k-karai-k-kaṭṭi,* பெ. (n.) வெல்ல உருண்டை; jaggary lump ball of sugar.

[சருக்கரை + கட்டி]

சருக்கரைக்கத்தி *šaru-k-karai-k-katti,* பெ. (n.) காய்ச்சிய வெல்லப்பாகினை அச்சுவார்ப்பில் சமப்படுத்துவதற்கு உதவும் கருவி; an instrument like mason's trowel used to spread molasses into jaggery moulding.

[சருக்கரை + கத்தி]



சருக்கரைக்கத்தி

சருக்கரைக்கதளி *šarukkarai-k-kadaḷi,* பெ. (n.) ஒருவகை வாழை; a variety of plantain tree.

ம. சக்கரக் கதளி

[சருக்கரை + கதளி. குதலி → கதலி = சிறுகாய் வாழை. கதலி → கதளி. சருக்கரை = இனிப்புச் சுவை]

சருக்கரைக்கரண்டி *šarukkarai-k-karaṇḍi,* பெ. (n.) காய்ச்சிய வெல்லப்பாகினை அச்சில் இடுவதற்குப் பயன்படும் கரண்டி; laddle used to put molasses into jaggery moulding.

[சருக்கரை + கரண்டி. குறண்டு → கறண்டு = தோண்டுங்கருவி. கறண்டு → கரண்டு → கரண்டி]

சருக்கரைக்கிழங்கு *šaru-k-karai-k-kiḻaṅgu,* பெ. (n.) நிலச்சருக்கரைக் கிழங்கு; ground sugar-root - Merma arenario (சா.அக.).

[சருக்கரை + கிழங்கு. சருக்கரை = இனிப்புச்சுவை.]

சருக்கரைக்குத்தி *šaru-k-karai-k-kutti,* பெ. (n.) கோணியிலுள்ள சருக்கரையை ஆராயக் குத்தியெடுக்கும் ஊசி; metalic spike to top bales and test the contents.

[சருக்கரை + குத்தி. குத்து → குத்தி = குத்தியெடுக்கப் பயன்படும் கருவி]



சருக்கரைக்குத்தி

சருக்கரைக்கேளி *šarukkarai-k-kēḷi,* பெ. (n.) சருக்கரைக்கதளி பார்க்க; see *šarukkarai-k-kadaḷi.*

மறுவ. தேன் கதலி

[சருக்கரை + கேளி. கதளி → கேளி]

சருக்கரைக்கொடி *šarukkarai-k-kodi,* பெ. (n.) வெள்ளை வெற்றிலைக்கொடி; a white variety of betel.

[சருக்கரை + கொடி]

சருக்கரைக்கொம்மட்டி *šarukkarai-k-kommaṭṭi,* பெ. (n.) பச்சை நிறமுடையதும் மேற்புறம் வழுவழுப்பானதும் சதைப்பற்றுடையதும், குளிர்ச்சியைத் தந்து நீர்வேட்கையினைப் போக்குவதுமான பழம்; musk melon - Citrullus vulgaris.

மறுவ. தட்பூசணி (தர்பூசினிப்) பழம்

[சருக்கரை + கொம்மட்டி. சருக்கரை = இனிப்புச்சுவை]

சருக்கரைக்கொழுமிச்சை *šarukkarai-k-kolumiccai,* பெ. (n.) இனிப்பு அல்லது தித்திப்பு நாரத்தை; sathghur orange - Citrus aurantium (citrina) (சா.அக.).

[சருக்கரை + கொழுமிச்சை. சருக்கரை = இனிப்புச்சுவை]

சருக்கரைச்சோறு *šarukkarai-c-cōru,* பெ. (n.) சருக்கரைப்பொங்கல் பார்க்க; see *šarukkarai-p-pongal.* (சா.அக.).

[சருக்கரை + சோறு]

சருக்கரைநாரத்தை *šarukkarai-nārattai,* பெ. (n.) நாரத்தை வகை; a kind of sweet orange.

[சருக்கரை + நாரத்தை]

சருக்கரைப்பட்டை *šarukkarai-p-paṭṭai,* பெ. (n.) வண்டிச்சக்கரத்தின் வெளிப்புறம் உள்ள இரும்புப்பட்டை; the iron streap around a wheel.

மறுவ. கட்டு

து. சக்ரபட்டி

[சக்கரம் + பட்டை. பட்டு → பட்டம் = பட்டையான தகடு. பட்டு → பட்டை = தட்டையான பொருள்]

சருக்கரைப்பாகு *šarukkarai-p-pāgu,* பெ. (n.) சருக்கரை அல்லது வெல்லம் உருவாவதற்கு முன்னுள்ள இளகிய பதம்; the inspisated liquid jaggery.

[சருக்கரை + பாகு]

சருக்கரைப்பாறை *šarukkarai-p-pārai,* பெ. (n.) வெள்ளைநிறப் பாறை; clay rock, shale (சேரநா.).

ம. சக்கப்பாற

[சருக்கரை + பாறை. சருக்கரை = சருக்கரையின் நிறம், வெள்ளை]

சருக்கரைப்புகையிலை *šarukkarai-p-pugai-y-ilai,* பெ. (n.) சில மருந்துப் பொருள்களுடன் நறுமணப் பொருள்கள் சேர்த்துச் சருக்கரைப் பாகில் குழைத்து எடுத்த புகையிலை; tobacco seasoned with jaggery syrup as spices (சேரநா.)

ம. சக்கரப் புகயில.

[சருக்கரை + புகையிலை]

சருக்கரைப்புளி *šarukkarai-p-puli,* பெ. (n.) 1. தித்திப்புப்புளியம்பழம்; sweet tamarind. 2. கொடுக்காய்ப்புளி; sweet babool - Pitheeolobium dulce (சா.அக.).

[சருக்கரை + புளி. சருக்கரை = இனிப்புச் சுவை]

சருக்கரைப்பூசியம் *šarukkarai-p-pūšiyam,* பெ. (n.) விரிசம் பழம்; assyrian plum cordia myxa (சா.அக.).

[சருக்கரை + பூசியம்]

சருக்கரைப்பூசணி *šarukkarai-p-pūšaṇi,* பெ. (n.) 1. சருக்கரைக்கொம்மட்டி; musk melon. 2. இனிப்புப் பூசணிக்காய் அல்லது பறங்கிக் காய்; squash gourd - cucurbita maxima (சா.அக.).

[சருக்கரை + பூசணி. சருக்கரை = இனிப்புச்சுவை. சுள் → சுண் → சுணை = இலை, காய் முதலியவற்றிலுள்ள சிறுமுள். பூ + சுணை = பூசுணை → பூசணி = பூ போன்ற அதாவது மிகச் சிறுமுள் போன்ற அமைப்பினைக் கொண்டது]

சருக்கரைப்பூசினி *šarukkarai-p-pūšini,* பெ. (n.) சருக்கரைப்பூசணி பார்க்க; see *šarukkarai-p-pūšini.*

[சருக்கரை + பூசினி = பூசணி → பூசனி → பூசினி.]

சருக்கரைப்பூந்தி *šarukkarai-p-pūndi,* பெ. (n.) இனிப்புப்பணியார வகை; a kind of sweet confection.

[சருக்கரை + பூந்தி]

U. பூந்தி → த. பூந்தி

சருக்கரைப்பேச்சு *šarukkarai-p-pēccu,* பெ. (n.) 1. இனிமை காட்டுஞ்சொல்; honeyed words. 2. போலிப் புகழ்ச்சி; flattery.

[சருக்கரை + பேச்சு]

சருக்கரைப்பேரி *šarukkarai-p-pēri,* பெ. (n.) பேரி வகை; a kind of pear.

[சருக்கரை + பேரி]

E. peri → த. பேரி

சருக்கரைப்பொங்கல் *šarukkarai-p-pongal,* பெ. (n.) அரிசியுடன் வெல்லம், பால், கொடி முந்திரிப் பழம், நெய் முதலியவற்றைச் சேர்த்துச் சமைத்த சோறு; a danty preparation of boiled rice mixed with jaggery, milk, dried grapes, ghee etc.

மறுவ. அக்காரவடிசில், அக்காரடலை, அக்காரடியல்

[சருக்கரை + பொங்கல்]

சருக்கரைப்பொன்னாச்சி *šarukkarai-p-ponnācci,* பெ. (n.) இனிமையாய்ப் பேசுபவள்; honey mouthed woman.

[சருக்கரை + பொன்னாச்சி]

சருக்கரைப்போளம் *šarukkarai-p-pōḷam,* பெ. (n.) வாலேந்திர போளம்; sweet myrth - Balamo dendron myrrha (சா.அக.).

[சருக்கரை + போளம்]

Skt. bōḷa → போளம்

சருக்கரைமா *šarukkarai-mā,* பெ. (n.) இனிப்புச் சுவையுடைய பழத்தைத் தரும் மாமரம்; a variety of mango tree yielding fruits as sweet as palmgur.

ம. சக்கரமாவு

[சருக்கரை + மா]

சருக்கரைமாமணி *šarukkarai-mā-maṇi,* பெ. (n.) கற்கண்டு; sugar-candy. "சருக்கரை மாமணியே....... கச்சியகம்" (யாப்.வி.62).

[சருக்கரை + மாமணி. மா + மணி → மாமணி = மாணிக்கம், மணிகளுள் சிறந்தது]

சருக்கரையமுது *šarukkarai-y-amudu,* பெ. (n.) சருக்கரைப்பொங்கல் பார்க்க; see *šarukkarai-p-pongal* (சா.அக.).

[சருக்கரை + அமுது]

சருக்கரையெலுமிச்சை *šarukkarai-y-elumiccai,* பெ. (n.) இனிப்புச் சுவையுள்ள எலுமிச்சை; sweet lime - Citrus medica - lumia (சா.அக.).

[சருக்கரை + எலுமிச்சை]

சருக்கரைவட்டு *šarukkarai-vaṭṭu,* பெ. (n.); வெல்லக்கட்டி; ball of sugar.

[சருக்கரை + வட்டு. வள் → வட்டு = வட்டமான அச்சுக் கருப்புக்கட்டி]

சருக்கரைவருணி *šarukkarai-varuṇi,* பெ. (n.) பேய்க்கரும்பு; wild-cane - Sacharum arundinaceum.

[சருக்கரை + வருணி]

சருக்கரைவள்ளி *šarukkarai-vaḷḷi,* பெ. (n.) வெளிர்ச்சிவப்பு நிறமும் மெல்லியதோலும் இனிப்புச் சுவையும் உடைய ஒருவகைக் கிழங்கு; sweet potato - Ipomaea batatas.

மறுவ. சருக்கரைக்கிழங்கு, மதுரக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, சீனிக் கிழங்கு

[சருக்கரை + வள்ளி. வள்ளி என்பது கொடி; வளைந்தது என்னும் பொருளது. வள்ளுதல் = வளைதல். வள் → வள்ளி = கொடி. ஒ.நோ. கொடு → கொடி. கொடுமை = வளைவு. கிழங்கைக் குறிப்பின், வள்ளுதல் = வளமாதல், உருண்டு திரளுதல். வள்ளி = உருண்டு திரண்ட கிழங்கு.]

சருக்கரைவள்ளிக்கிழங்கு *šarukkarai-vaḷḷi-k-kiḻangu,* பெ. (n.) சருக்கரைவள்ளி பார்க்க; see *šarukkarai-vaḷḷi.*

[சருக்கரை + வள்ளி + கிழங்கு]

சருக்கரைவாலிகம் *šarukkarai-vāligam,* பெ. (n.) விளாம்பழம்; wood apple - Feronia elephantum (சா.அக.).

[சருக்கரை + வாலிகம்]

சருக்கரைவேம்பு *šarukkarai-vēmbu,* பெ. (n.) ஒருவகை வேம்பு; a kind of neem tree - Melia azadirachta (சா.அக.).

[சருக்கரை + வேம்பு]

நூறு ஆண்டு நிறைந்த வேம்பின் பட்டை, இலை, பழம் ஆகியன எல்லாம் இனிப்புச் சுவையுடனும், மருத்துவக்குணத்துடனும் இருக்குமாம். இது காயகற்பமூலிகை. இதன் மருத்துவக் குணங்களை

"காய சித்தியாகும் கடிய சிலேட்டுமமறும்
தூய விந்து நாதமிவை சுத்தியாம் - தூயவர்க்கு
எத்திக்குங் கிட்டும் இலையருத்தில் வாயெல்லாம்
தித்திக்கும் வேம்பதையே தேடு" (சா.அக.)

என்னும் பழம்பாடல் ஒன்று குறிப்பிடுகிறது. இவ்வகை வேம்பு, மிக அரிதாகத்தான் காணப்படும்.

சருக்கால்வேலை *šarukkāl-vēlai,* பெ. (n.) தாழ்வாரத்தோடு கூடிய கட்டடம் (இ.வ.); building with verandah.

[சுர் → (சுரு) → சரு → சருவு. சருவுதல் = சாய்தல், சரிதல். சரு = சரிவாய் இருக்கும் பகுதி, சரிவாக அமையும் தாழ்வாரத்தோடு ஒட்டிய கட்டடம்]

சருக்கி *šarukki,* பெ. (n.) பாண்டி விளையாட்டு; a children's game, a variety of hop-scotch (சா.அக.).

மறுவ. வட்டு, சில்லி, சில்லாக்கு

[சருக்கு → சருக்கி = பல கட்டங்களுள்ள தாய் நிலத்திற் கீறப்பட்ட அரங்கினுள் வட்டவடிவச் சக்கைக்கல்லை நொண்டிக் காலால் சறுக்கி விளையாடுவது.]

சருக்கிருந்தஊர் *šarukkirunda-ūr* பெ. (n.) *1.* தங்கியிருந்த ஊர்; the village where (one) lived. *2.* உறவினரைப் பிரிந்திருந்த ஊர்; village where (one) lived away from (his) relatives. "வாணகோ அரைசரு மருமக்கள் பொற்றொக் கையார் சருக்கிருந்து ஊர்" *(செங்கம். நடுகற்கள்)*

[சருக்கி + இருந்து + ஊர்.]

சருக்குக்கட்டை *šarukku-k-kaṭṭai,* பெ. (n.) தேரோட்டத்தை ஒழுங்குபடுத்த தேர்க் காலிலிடும் மரக்கட்டை (நெல்லை.); wooden brake.

[சருக்கு + கட்டை]

சருக்கு-தல் *šarukku-,* 5 செ.குன்றாவி. (v.i.) சறுக்கு; to slip (செ.அக.).

ம. சர்கு; க., தெ. சருகு; பட. சாரு.

[சருவு → சருகு, சருகுதல் = சரிதல். சருகு → சருக்கு. சருக்குதல் → சாய்தல், சரிதல், வளைதல், வழுவுதல், வழுக்குதல், சறுக்குதல் (வே.க.239)]

சருக்கெனல் *šarukkenal,* பெ. (n.) விரைவுக் குறிப்பு; onom. expr. signifying quickness, haste.

[சருக்கு + எனல்.]

சருகட்டை *šarugaṭṭai,* பெ. (n.) மரவட்டை (இ.வ.); millipede.

[சருகு + அட்டை. ஒட்டு → அட்டு → அட்டை]

சருகடி-த்தல் *šarugaḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) முந்திரி மரத்தின் அடியில் கிடக்கும் இலைச் சந்தில் மறைந்து கிடக்கும் முந்திரிக் கொட்டைகளை எடுப்பதற்காகச் சிறு கோலால் அடித்தல்; to beat the leaves of cashew nut to pluck the nuts which are hidden under leaves.

[சருகு + அடி-. அடு → அடி]

சருகம்[1] *šarugam,* பெ. (n.) *1.* கடுகு; mustard. *2.* கல்லுப்பு; sea-salt (natural).

சருகம்[2] *šarugam,* பெ. (n.) மாட்டுநோய் வகையுளொன்று (இ.வ.); a disease affecting cows.

தெ. சருக

சருகரி-த்தல் *šarugari-,* 4 செகு.வி. (v.i.) பயனைத் துய்க்க இயலாமல் உழைத்தல்; to toil hard without enjoying the resultant advantage. 'மூத்தாள் சருகரிக்க இளையாள் மகிழ்கிறாள்' *(பழ.)*

[சருகு + அரி-,]

சருகரித்தல் = சருகுகளை ஒன்றாகக் கூட்டுதல். சருகுகளைக் கூட்டும் பணி மிகுதியான உழைப்பைக் கொள்ளும். உழைப்புக்குத் தகுந்தபடி சருகுகளின் சேர்க்கை இருக்காது அதனால் சருகரித்தல் பயனைத் துய்க்க இயலாமல் உழைப்பதை உணர்த்திற்று.

சருகா-தல் *šarugā-,* 6 செ.கு.வி. (v.i.) உடல் முதலியன வற்றி மெலிதல் (சருகு போல் ஆதல்); to be dried, emaciated, as body.

[சருகு + ஆ-. உலர்ந்துவற்றிய இலைபோல் உடல் மெலிதல்]

சருகாமை *šarugāmai,* பெ. (n.) ஆமைவகை(வின்.); black land-turtle.

[சருகு + ஆமை]

சருகு[1] *šarugu,* பெ. (n.) *1.* உலர்ந்து வற்றிய இலை; dried leaf. "ஒலியா லசையச் சருகெழ" *(வெங்கைக்கோ. 173). 2.* வெற்றிலை (இ.வ.); betel leaf. *3.* சிறியது; small.

க. தருகு; பட. சீக்கு

[சுல் = சுடுதற்கருத்துவேர். சுல் → சுள். சுள்ளெனல் = காய்தல், கடுமையாகச் சுடுதல். சுள் → சள் → சண்டு = காய்ந்த புற்றாள், கூளம். சுர் → சர் → சருகு = காய்ந்த இலை, வற்றியது, சிறியது (வே.க. 213)]

சருகு[2] *šarugu*, பெ. (n.) *சரி*[7], *4 (நாஞ்.) பார்க்க*; see *šari*[7], 4 *(செ.அக.).*

[சரி → சருகு]

சருகுச்சட்டி *šarugu-c-catti*, பெ. (n.) சருவம் *(இந்துபாக. 62) பார்க்க;* see *šaruvam.*

[சருவச்சட்டி → சருகுச்சட்டி]

சருகுசன்னாயம் *šarugu-šannāyam*, பெ. (n.) இலகுவான இருப்புக்கவசம் *(யாழ்ப்.);* a light coat of mail.

[சருகு + சன்னாயம். சருகு = காய்ந்தது, வற்றியது, எடை குறைந்தது, இலகுவானது]

Skt. san-hāha → த. சன்னாயாம்

சருகுசாதனம் *šarugu-sādanam*, பெ. (n.) ஓலை யாவணம் *(சாசனம்)*; ola document.

[சருகு + சாதனம். சர் → சர → சருகு = காய்ந்த இலை, ஓலை. சருகுசாதனம் = ஓலையில் எழுதப்பட்ட ஆவணம்.]

Skt. sāsaṇa → த. சாதனம்

சருகுண்ணி *šaruguṇṇi*, பெ. (n.) உண்ணிவகை; wood tick.

[சருகு + உண்ணி. சர் → சருகு = காய்ந்த இலை, வற்றியது, இலகுவானது, சிறியது. சருகுண்ணி = சிறிய பூச்சிவகை]

சருகுணி *šaruguṇi*, பெ. (n.) சருகுண்ணி பார்க்க; see *šaruguṇṇi.*

[சருகுண்ணி → சருகுணி]

சருகுதிர்-தல் *šarugudir-*, 2 செ.கு.வி. (v.i.) தோலுதிர்தல் *(வின்.);* to cast off slough, as serpent.

[சருகு + உதிர்-. சர் → சருகு = காய்ந்த இலை, மரத்தின் காய்ந்த மேற்பட்டை, மேல்தோல்.]

சருகுதிரி *šarugudiri*, பெ. (n.) அம்மை வகை *(வின்.);* a kind of small-pox.

[சருகு + உதிரி]

சருகுபித்தளை *šarugu-pittaḷai*, பெ. (n.) *1.* மெல்லிய குடவ (பித்தளை)த் தகடு; thin leaf of brass. *2.* ஓயாமற் பேசுபவன் (C.G.); talkative person, chatterbox *(செ.அக.).*

[சருகு + பித்தளை]

கனம் குறைந்த குடவத்தை (பித்தளை)த் தட்டியவுடன் ஒலி சிறிது நேரத்திற்குத் தொடர்ந்து ஒலி எழுவது போல் ஓயாமல் பேசுதல் சருகுபித்தளை எனப்பட்டது.

சருகுபுலி *šarugu-puli*, பெ. (n.) சிறுத்தை வகை *(யாழ்ப்.);* a small panther.

[சருகு + புலி. சருகு = உலர்ந்தது, வற்றியது, சிறியது.]

சருகுபுளி *šarugu-puḷi*, பெ. (n.) உலர்ந்த புளி; dried tamarind fruit.

[சருகு + புளி]

சருகுமுயல் *šarugu-muyal*, பெ. (n.) சருகுகளை உண்ணும் உக்குளான் *(யாழ்ப்.);* a kind of rabit living on dried leaves.

[சருகு + முயல்]

சருகுருட்டிமழை *šaruguruṭṭi-maḻai*, பெ. (n.) சருகு முதலியவற்றை அடித்துச் செல்லும் அளவிற்குப் பெய்யும் மழை; comparatively heavy rain which drives dried leaves etc., away by it stream.

[சருகு + உருட்டி + மழை]

சருகை *šarugai*, பெ. (n.) சரிகை *(யாழ்ப்.) பார்க்க;* see *šarigai.*

[சரிகை → சருகை]

சருகொட்டி *šarugoṭṭi*, பெ. (n.) பறவை வகை *(இ.வ.);* a kind of bird.

[சருகு → ஒட்டி]

சருச்சரை *šaruccarai*, பெ. (n.) சொரசொரப்பு; roughness, ruggedness. *"களிற்றினது சருச்சரையாற் பொலிந்த கழுத்தகத்தே" (பு.வெ. 12, பெண்பாற். 2, உரை).*

[சுள் → சுர் → சுரசு → சுரசுரப்பு = முள் முள்ளாய் அல்லது கரடுமுரடாய் இருத்தல், சுரசுர → சரசர → சருச்சரை = சுரசுரப்பு. இனி, சுர் → சுரு → சரு = சருச்சரு → சருச்சரை என்றுமாம் (வே.க. 206)]

சருசபம் *šarucabam*, பெ. (n.) வெண்கடுகு *(மலை.);* white mustard.

Skt. sarṣapa

சருணி *šaruṇi,* பெ. (n.) சருகுண்ணி பார்க்க; see *šaruguṇṇi.*

[சருகுண்ணி → சருணி]

சருத்தி *šarutti,* பெ. (n.) *1.* தேர்க்கொடி (வின்.); streamer or flag of a war. *2.* விருதுக்கொடி; distinguishing banner.

சருதோபத்திரி *šarudō-pattiri,* பெ. (n.) வேம்பு; margosa tree - Azadirachta indica (சா.அக.).

சருப்பம் *šaruppam,* பெ. (n.) கடுகு; mustard (சா.அக.).

சருப்பராச்சியம் *šaruppa-rācciyam,* பெ. (n.) சங்கங்குப்பி (மலை.); smooth volkameria.

சருப்பராசி *šaruppa-rāši,* பெ. (n.) நாணல் (மலை.); kaus.

[சல் → (சுர்) → சுரம் → சரம் = நாணல், சரம் → சருப்பம் → சருப்பராசி]

சருபம் *šarubam,* பெ. (n.) அறுகங்கட்டை; the stem of sacred grass-Agrostu linearis.

சருவச்சட்டி *šaruva-c-caṭṭi,* பெ. (n.) சருவம் பார்க்க; see *šaruvam.*

[சருவுச்சட்டி → சருவச்சட்டி]

சருவந்து *šaruvandu,* பெ. (n.) தலைக்கவசம்; helmet. "சருவந்து கைக்கொண்டு" (இரகு. திக்குவி. 232).

[சரு → சருவம் = மேல்நோக்கிச் சரிவாக உள்ள சட்டி. சரு → சருவந்து = மேல்நோக்கிச் சரிவாயுள்ள தலைக்கவசம்]

சருவப்பானை *šaruva-p-pāṉai,* பெ. (n.) சருவம் பார்க்க; see *šaruvam.*

[சருவு → சருவம் + பானை]



சருவப்பானை

சருவம் *šaruvam,* பெ. (n.) *1.* மேல்நோக்கி சரிவாக உள்ள ஏனம் (பாத்திரம்); shallow wide-mouthed vessel. *2.* சட்டுவம் (அக.நி.); spatula.

[சுர் → (சுரு) → சரு → சருவு. சருவுதல் = சாய்தல், சரிதல். சருவு → சருவல் = 1. சாய்வு. 2. சரிவான நிலம். சருவுச்சட்டி மேல் நோக்கிச் சரிவான சட்டி. சருவு → சருவம் = மேல் நோக்கிச் சரிவாகவுள்ள கலம். சருவப்பானை, சருவச்சட்டி என்னுங் கலங்கள் மேனோக்கிச் சரிவாயிருத்தலைக் காண்க (வே.க. 238)]

த. சருவம் → Skt. śarāva

சருவல்[1] *šaruval,* பெ. (n.) *1.* சாய்வு; sloping inclining. *2.* சரிவான நிலம்; slope, declivity.

[சரிவு → சருவு → சருவல்]

சருவல்[2] *šaruval,* பெ. (n.) *1.* நட்புத்தன்மை; friendly, intercourse. "சருவலொழிந்தென் மனமாம் பாங்கி பகையானால்" (அருட்பா. iv, தவ்வி வருதல்). *2.* தொந்தரவு (கொ.வ.); mischief.

[சருவு → சருவல்]

சருவானுபூதி *šaruvāṉupūdi,* பெ. (n.) பேதிக் கிழங்கு (மலை.); jalap.

சருவு[1]**-தல்** *šaruvu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* பழகுதல்; to become familiar. "என்னுள்ளே சருவியெனை யிந்நாளும் வாட்டுமிடர்" (திருப்போ. சந்நிதி. மாலை. 80). *2.* கொஞ்சிக் குலாவுதல்; to caress amorously. "அங்கவரோடு சருவியும்" (திருப்பு. 6). *3.* தொல்லைதருதல்; to do mishief. *4.* போராடுதல்; to quarrel, wrangle. "சருவிய சமயிகள்" (திருப்பு. 928).

[சுர் → (சுரு) → சரு → சருவு-,]

சருவு[2]**-தல்** *šaruvu-,* 5 செ.கு.வி. (v.i.) சரி[1] பார்க்க (வின்.); see *šari*[1].

[சுர் → (சுரு) → சரு → சருவு-,]

சருவு[3] *šaruvu,* பெ. (n.) சரிவு (வின்.); declivity, steep side of a rock.

[சரிவு → சருவு]

சருவுசட்டி *šaruvu-šaṭṭi,* பெ. (n.) சருவம் (இ.வ.) பார்க்க; see *šaruvam.*

[சருவு + சட்டி = மேல்நோக்கிச் சரிவாக உள்ள கலம் (வே.க. 238)]

சரூர் *šarūr,* பெ. (n.) *விரைவு;* promptitude, dispatch.

[சர் - விரைவுப்பொருள் தரும் ஒலிக் குறிப்பு. சர் → சரேரெனல். சர் → சரு → சரூர்]

த. சரூர் → U. zarūr

சரேரெனல் *šarēr-enal,* பெ. (n.) விரைவுக் குறிப்பு (திவா.); onom. expr. of suddenness, haste.

[சரேர் + எனல்]

சரேலச்சொரி-தல் *šarēla-c-cori-,* 2 செ.கு.வி. (v.i.) *விரைந்துகொட்டுதல்;* to fall or descend in quick succession. "மந்திபாயச் சரேலச் சொரிந்தும் முரிந்துக்க பூ" *(தேவா. 1152, 3).*

[சரேலம் + சொரி-,]

சரேலெனல் *šarēlenal,* பெ. (n.) சரேரெனல் பார்க்க; see *šarērenal.*

[சரேரெனல் → சரேலெனல்]

சரை¹-த்தல் *šarai-,* 4 செ.கு.வி. (v.i.) சிரை (இ.வ.) பார்க்க; see *širai* (செ.அக.).

[சிரை → சரை-,]

சரை² *šarai,* பெ. (n.) வாழைச்சருகு முதலியவற்றால் அமைக்கும் மூடிவகை (யாழ்ப்.); cover made of dried plantain leaves, straw or ōla.

[சரு(கு) → சரை]

சரைநெல் *šarai-nel,* பெ. (n.) நெல்வகை (A.); a kind of paddy.

[சரை + நெல்]

சரைமரம் *šarai-maram,* பெ. (n.) தூண் முதலியன செய்யப்பயன்படும் மர வகைகளுள் ஒன்று; a kind of wood.

[சரை + மரம்]

சரைமலம் *šarai-malam,* பெ. (n.) வயிரக் குற்றங்களுள் ஒன்று (சிலப். 14: 180, உரை); a flaw in diamonds.

[சரை + மலம்]

சரையாப்பி-த்தல் *šarai-yāppi-,* 4 செ.குன்றாவி. (v.t.) உள்ளே செலுத்துதல் (யாழ்.அக.); to thread in, squeeze through, pass through.

[சரை + ஆப்பி-. சுல் = குத்துதற் கருத்துவேர். சுல் → (சுர்) → சர் → சரை]

சல் *šal,* 13 செ.கு.வி. (v.i.) செல்லுதல்; to go.

குமரிக்கண்டத் தமிழில் 'சல்' என்னும் அடியும் செல்லுதல் வினையைக் குறித்திருத்தல் வேண்டும். இன்று அது அப்பொருளில் வடதிரவிட வழிப்பட்ட இந்தியில் வழங்குகின்றது *(த.வ. 77).*

சல்லக்கடுப்பு *šalla-k-kaḍuppu,* பெ. (n.) சள்ளைக்கடுப்பு (யாழ். அக.) பார்க்க; see *šaḻḻai-k-kaḍuppu.*

[சளி + கடுப்பு → சளிக்கடுப்பு → சள்ளைக் கடுப்பு → சல்லக்கடுப்பு]

சல்லக்குட்டி *šalla-k-kuṭṭi,* பெ. (n.) சிறிய வெளவால் மீன் (மீனவ.); small bat fish.

[சல்லம் + குட்டி]

சல்லகண்டம் *šallagaṇḍam,* பெ. (n.) புறா (யாழ்.அக); dove.

[சல்லம் + கண்டம்]

சல்லகம்¹ *šallagam,* பெ. (n.) 1. முள்ளம்பன்றி (சூடா.); porcupine. 2. நார் (யாழ்.அக.); fibre.

[சுல் → சல் → சல்லகம் = முள்ளுள்ளது]

த. சல்லகம் → Skt. sallaka

சல்லகம்² *šallagam,* பெ. (n.) சல்லெனவொலிக்கும் கைத்தாளம் (யாழ்.அக.); large cymbal.

[சல் = ஒலிக்குறிப்புச்சொல். சல் → சல்லகம் = சல்லென வொலிக்கும் தாளக்கருவி]

த. சல்லகம் → Skt. shallaka.

சல்லகி *šallagi,* பெ. (n.) 1. சல்லகம்¹, 1 பார்க்க. see *šallagam 1.* 2. வெள்ளைக் குங்கிலியம் (வின்); konkany resin. 3. ஆத்தி (பிங்.) common mountain ebony. 4. முள்ளிலவு (பிங்.) red flowered silk cotton. 5. தேட் கொடுக்கி (மலை) Indian turnsole.

[சுல் → சல் = குத்துதற்பொருள். சல் → சல்லகி = முள்ளுள்ளது, அல்லது முள் போன்ற வடிவமுள்ளது.]

சல்லகு *šallagu,* பெ. (n.) விளாம்பிசின்; gum of wood apple tree (சா.அக.).

சல்லடம் *šalladam,* பெ. (n.) இடுப்பினின்று அடித்தொடை வரை அணியும் காற்சட்டை; short drawers.

ம. சல்லடம்; க. சல்லண, சலண, சல்ண; தெ. சல்லடமு, செட்டி, சல்லாட; து. சல்லண; கோத. சவளம், சள்ம், சொலள, சோளம் (நீர்ச் சீலை); Pkt., Skt. caṅdhātaka; Mar., H. colṇā.

சல்லடை *šalladai,* பெ. (n.) தவசம் முதலியன சலிக்குங்கருவி; sieve (செ.அக.).

ம. சல்லட; க. சல்லடி, சல்லாட, சலடெ, சரடெ; தெ. சலட; பட. சாலி.

[சலியடை → சல்லடை]

சல் → சலி. சலித்தல் = அசைதல், மனங்கலங்குதல், சோர்வடைதல், அருவருப்புக் கொள்ளுதல், சல்லடையாற் சலித்தல் அல்லது சுளகால் (முறத்தால்) தெள்ளியெடுத்தல்.



சல்லடை

சல்லடைக்கட்டில் *šalladai-k-kattil,* பெ. (n.) மணல், சுண்ணாம்பு முதலியவற்றைச் சலிப்ப தற்குப் பயன்படும் இரும்புக்கம்பி வலையாலான கட்டில்; large sieve for litting sand, lime etc.

[சல்லடை + கட்டில்]



சல்லடைக்கட்டில்

சல்லடைக்கண் *šalladai-k-kaṇ,* பெ. (n.) சல்லடையின் துளை; hole of sieve.

[சல்லடை + கண்]

சல்லடைக்கழிவு *šalladai-k-kaḻivu,* பெ. (n) கப்பி; coarse grit.

[சல்லடை + கழிவு]

சல்லடைக்கொப்பு *šalladai-k-koppu,* பெ. (n) மகளிரணியும் காதணி வகை (வின்.); woman's jewel for the helix.

[சல்லடை + கொப்பு]

சல்லடைபோட்டுத்தேடு-தல் *šalladai-pōttu-t-tēdu-,* 5 செ.கு.வி (v.i.) ஓரிடங்கூட விடாமல் தேடுதல்; to search thoroughly. ஊர் முழுவதும் சல்லடைபோட்டுத் தேடிவிட்டேன். அவனைக் காணவில்லை.

[சல்லடை + போட்டு + தேடு-,]

சல்லடைமுருகு *šalladai-murugu,* பெ. (n.) மகளிர் காதணி வகை (இ.வ.); a kind of ear ornament.

[சல்லடை + முருகு. முள் → முரு → முருகு = வளைந்த காதணி]

சல்லபம் *šallabam,* பெ. (n.) சல்லகம்[1] 1 பார்க்க. see *šallagam*[1].

[சல்லகம் → சல்லபம்]

சல்லம்[1] *šallam,* பெ. (n.) பன்றிமுள் (யாழ்.அக.); porcupine quill.

ம. சல்லம்.

[சுல் → சல் → சல்லம் = முள், பன்றிமுள்.]

த. சல்லம் → Skt. šalalla.

சல்லகம்[1] பார்க்க

சல்லம்[2] *šallam,* பெ. (n.) நார் (யாழ்.அக.); fibre.

[சல்லகம் → சல்லம்]

சல்லம் → Skt. šalla.

சல்லம்[3] *šallam,* பெ. (n.) சிறியது; that which is small.

[சில் → சல் → சல்லம்]

சல்லம் → Skt. šalla.

சல்லரி[1]**-தல்** *šallari-,* 4 செ.குன்றாவி (v.t.) **துண்டு துண்டாக நறுக்குதல்** *(யாழ்ப்.);* to hack, cut into pieces.

[சில் → சல் + அரி]

சல்லரி[2] *šallari-,* பெ (n.) *1.* **பறைப்பொது** (திவா.); drum. *2.* **திமிலைப்பறை;** a kind of drum. "சல்லரியியாழ் முழவம்" (தேவா. 89, 2).

ம. சல்லரி; க. சல்லரி.

[சல் → சல்லரி]

சல்லரி → Skt. jhallarī

சல்லரி[3] *šallari,* பெ. (n.) **கைத்தாளம்** (வின்.) large cymbal.

[சல் → சல்லரி]

தாளக்கருவி. வெண்கலத்தினாற் செய்யப் பட்டது. சல் அல்லது சல்லரை என்னும் ஓசையுடைமையால் தாளக்கருவியிற் பெரியது சல்லரி என்றும் சிறியது சாலர் என்றும் பெயர் பெற்றன.

சல்லரி[4] *šallari,* பெ. (n.) **ஒரு வகை மணி;** bell.

['சல்' = ஒலிக்குறிப்புச் சொல். சல் → சல்லரி = சல் என்று ஒலி எழுப்புவது]

த. சல்லரி → Skt. jhallarī

சல்லரிப்பறை *šallari-p-paṟai,* பெ. (n.) **ஒருவகைப் பறை;** a kind of drum.

ம. சல்லரிப்பற

[சல்லரி + பறை.]

சல்லரி [2] பார்க்க

சல்லவட்டம் *šalla-vaṭṭam,* பெ. (n.) **கேடய வகை;** a kind of shield. "சல்லவட்ட மெனுஞ் சுளகாற் றவிடுவிடப் புடையீரே" *(கலிங். 532).*

[சல்லம் + வட்டம்]

சல்லவௌவால் *šalla-vauvāl,* பெ. (n.) **சிறிய வௌவால் மீன்** *(மீனவ.);* a small bat fish.

[சல்லம் + வௌவால்]

சல்லா[1] *šallā,* பெ. (n.) **கடல் மீன்** (நெல்லை. மீனவ.); sea fish.

சல்லா[2] *šallā,* பெ. (n.) **மெல்லிய துணிவகை;** muslin. "நடுச்சாமத்திலே சல்லாப்புடவை குளிர் தாங்குமோ" *(தனிப்பா. i, 240, 2).* *2.* **இழை நெருக்கமில்லாத் துணி;** thin mull of loose texture.

ம. சல்லா; தெ. செல்லா; க. சல்ல; து. சல்லெ.

[சல் → சல்லடை = துளையுள்ள கருவி. சல் → சல்லா = நெருக்கமில்லா இழையுடைய துணி]

சல்லாத்துக்கீரை[1] *šallāttu-k-kīrai,* பெ. (n.) **இலைக்கோசு;** cabage.

[சல்லாத்து + கீரை]

சல்லாத்துக்கீரை[2] *šallāttu-k-kīrai,* பெ. (n.) **கச்சுக்கீரை என்று வழங்கும் ஒருவகைச் சீமைக்கீரை;** garden lettuce - Lactuca scariola (சா.அக.).

[சல்லாத்து + கீரை]

வகை: 1. காட்டுச் சல்லாத்துக்கீரை; wild endive - chieorium endivia.
2. காப்பிரிச் சல்லாத்து; curled endive - chicorium intybus.

சல்லாபவுப்பு *šallāba-v-uppu,* பெ (n). **பூரணாதி யுப்பு** (மூ.அ); a ring of salt.

[சல்லாபம் + உப்பு]

சல்லாபி-த்தல் *šallābi-,* 4 செ.கு.வி (v.i.) **கலந்து பேசுதல்;** to chat, converse.

சல்லாரி[1] *šallāri,* பெ. (n.) *1.* **அலசற் சீலை** (இ.வ.); cloth of loose texture. *2.* **பயனற்றவன்;** worthless person. *3.* **வேடக்காரன்** (இ.வ..); a person with clownish dress.

[சல் → சல்லா = இழை நெருக்கமில்லாத் துணி. சல் → சல்லரி → சல்லாரி]

சல்லாரி[2] *šallāri,* பெ. (n.) சல்லரி[2] (வின்) பார்க்க; see *šallari*[2].

[சல்லரி → சல்லாரி]

சல்லாலி *šallāli,* பெ. (n.) **கோமாளியின் வண்ண ஆடைத் தொங்கல்** (வின்.); coloured strips of cloth hanging from buffoon's dress.

சல்லி[1] *šalli,* பெ. (n.) **எல்லரி** (புறநா. 152, உரை); a kind of drum.

[எல்லரி → சல்லரி → சல்லி]

சல்லி[2] *šalli,* பெ. (n.) *1.* **கல் முதலியவற்றின் உடைந்த துண்டு;** a small pieces of stone or glass. "எறிசல்லி புதுமலர்க ளாக்கினான் காண்" *(தேவா. 596,8.). 2.* **சிறிய கல்;** small chips, as of stone, rubble. *3.* **கிளிஞ்சில் முதலியவற்றின் சிற்றோடு** (வின்.); small flat shells used for lime. *4.* **சிறுகாசு** (இ.வ); small copper coin, fractional part of a larger coin, 1/12 anna. *5.* **அணிகலன் தொங்கல்** (சூடா.); short pendant in ornaments. *"முத்தாலாகிய சல்லியையும்" (மணிமே. 18:46 உரை). 6.* **மெலிந்தவுடலன்;** a thin emaciated person. *'அந்த ஆள் சல்லியாயிருப்பான்' (உ.வ.). 7.* **பொறுப்பற்றவன், இழிந்தவன்;** a mean fellow, a trifler. *8.* **துளை** *(உ.வ);* perforation, hole. *9.* பொய் *(வின்.);* false hood. *10.* போக்கிலி *(உ.வ);* villain, black guard.

ம. சல்லி; க., தெ., பட. சல்லி; து. சல்லி, சல்லி ; பா். சலுப்.

[சுள் → (சுட்டு) → சிட்டு = சிறியது, சிறு குருவி. சிட்டு → சீட்டு = ஓலை நறுக்கு. சுல் → சில் = சிறியது, துண்டு. சுல் → சல் → சல்லி = சிறியது. சிறுதுண்டு, சிறுகாசு, ஓட்டாஞ்சல்லி, சல்லிக்கல், சல்லிப்பயல், சல்லிக்கட்டு முதலிய புணை பெயர்களில் சல்லி என்பது சிறுமை குறிக்கும். (மு.தா. 129)]

சல்லி[3] *šalli,* பெ. (n.) சல்லிக்கெண்டை பார்க்க; see *šalli-k-keṇḍai.*

[சில் → சல் → சல்லி (சு.வி. 19)]

சல்லி[4] *šalli,* பெ. (n.) அதிமதுரம் (பிங்.); liquorice plant.

ம. சல்லி; து. சல்லி (ஒரு வகை நீர்ப்புல்)

சல்லி[5] *šalli,* பெ. (n.) கொய்சகவேலை (புதுவை); moulding work (Arch.).

[சில் → சல் → சல்லி (சு.வி. 19)]

சல்லிக்கட்டு *šalli-k-kaṭṭu,* பெ. (n.) முரட்டு **எருதுகளைக் கொட்டுமுழக்குடன் வெளியில் விட்டுத் துரத்தி, அவற்றினைத் தழுவிப் பிடிக்கச் செய்யும் ஒரு வீர விளையாட்டு;** bull baiting festival in which the competitors capture fierce bulls let loose on the occasion.

மறுவ. ஏறுகோள், ஏறுதழுவுதல், மஞ்சு வெருட்டு, மாடுபிடி சண்டை, எருதுபிடி, காளைப்போர்.

[சல்லி + கட்டு. சல்லி என்னும் பெயருடைய ஆயர்குல வீரனால் நடத்தப்பட்ட ஏறுதழுவல் என்னும் வீரவிளையாட்டு]

இளைஞரின் வலிமையை யறிதற்குச் சல்லிக் கட்டு-கொல்லேற்றைப் பிடித்துநிறுத்தல், அளவையாகக் கொள்ளப்பட்டது. முல்லை நிலத்திலுள்ள ஆயரும், ஏறுதழுவின இளைஞருக்கே பெண் கொடுத்தனர். இது பண்டை முல்லைநில வழக்கம்.

தமிழ்நாட்டின் தென்பாகம் சிறந்ததென்பதற்குக் கூறும் காரணங்களுள் சல்லிக்கட்டு, சிலம்பம் முதலிய மறவிளையாட்டுகள் சிறப்பாய் வழங்குதலைக் காட்டுவர்.

சல்லிக்கட்டு

சல்லிக்கயிறு *šalli-k-kayiṟu,* பெ. (n.) **தென்னை நாரினால் செய்த மெலிதான கயிறு;** a thin variety of coir thread.

ம. சல்லிக்கயிறு

[சல்லி + கயிறு]

சல்லிக்கரண்டி *šalli-k-karaṇḍi,* பெ. (n.) **துளையுள்ள ஒருவகைக் கரண்டி** (இந்துபாக. 58); a broad perforated ladle.

[சல்லி + கரண்டி]



சல்லிக்கரண்டி

சல்லிக்காசு *šalli-k-kāšu,* பெ. (n.) சல்லி² 4 பார்க்க; see *šalli*² 4 "சல்லிக்கா சொன்று முனக் கீந்தா தரிப்பவராா்" (விறலிவிடு. 211).

[சல்லி + காசு]

சல்லிக்காரன் *šalli-k-kāraṉ,* பெ. (n.) பொய்யன் (கொ.வ.); liar, hypocrite.

க. சலிக; தெ. சல்லிகாடு

[சல்லி + காரன்]

சல்லிக்கூடை *šalli-k-kūḍai,* பெ. (n.) மீனவர் பயன்படுத்தும் கூடை வகையுள் ஒன்று; a kind of basket.

[சல்லி + கூடை]



சல்லிக்கெண்டை *šalli-k-keṇḍai,* பெ. (n.) பைம்பழுப்புநிறமும், பொன்னிறக்கண்ணும் 25 பவுண்டு நிறையும் உள்ளதாய் நன்னீரில் வாழும் கெண்டைமீன் வகை; a fresh - water fish, greenish - brown, eyes golden, weighing 25 lbs. Barbus carnaticus.

[சல்லி + கெண்டை]

சல்லிக்கொடி *šalli-k-koḍi,* பெ. (n.) வையக மூலி (மூ.அ.க.); a creeper.

[சல்லி + கொடி]

சல்லிகை *šalligai,* பெ. (n.) பெரும்பறை வகை; a kind of large drum.

ம. சல்லிக.

[சல் → சல்லி → சல்லிகை]

'சல்லிகையென்பது சல்லென்ற ஓசை யுடைமையாற் பெற்ற பெயர் (சிலப். 3:27, உரை).

சல்லிசு¹ *šallišu,* பெ. எ. (adj.) எளிதான; easy, gently.

U. calis

[சில் → சல் → சல்லிசு]

சல்லிசு² *šallišu,* பெ. (n.) மிகுந்த விலையிறக்கம்; dead cheap. இன்று சந்தையில் கிழங்கு சல்லிசு.

[சில் → சல் → சல்லிசு]

சல்லித்தரை *šalli-t-tarai,* பெ. (n.) 1. கப்பிப் போட்ட தரை (முகவை.); floor treated with concrete. 2. சரளைக்கல் நிறைந்த தரை (முகவை.); gravel ground.

[சல்லிசு + தரை]

சல்லித்தீவு *šalli-t-tīvu,* பெ. (n.) நன்னீர்த்தீவை ஒட்டிய நீளுருட்டுக் கல் வளருந் தீவு (மீனவ.); an Island.

[சல்லி + தீவு. தீர்வு → தீவு]

சல்லிநிலம் *šalli-nilam,* பெ. (n.) சங்கு அதிகமாக உருவாகும் கடலடிப்படுகை; water bed where conch yields are more (மீனவ.).

[சல்லி + நிலம்]

சங்கு உருவாகும் இடம் சிறியகற்கள் மிகுதியாக நிறைந்திருக்கும் இடமாக இருப்பதால் அவ்விடம் சல்லிநிலம் என அழைக்கப்பட்டது. சேறு, மணல் உள்ள இடங்களில், சங்கு அதிகம் உருவாவதில்லை.

சல்லிப்பலகை *šalli-p-palagai,* பெ (n). கப்பலின் முகப்புப்பலகை; (Naut.); head board.

[சல்லி² + பலகை]

சல்லிப்பாட்டுமடை *šalli-p-pāṭṭu-maḍai,* பெ. (n.) சல்லிக்கற்கள் மிகுதியாகக் காணப்படும் கடற்பரப்பு (மீனவ.); sea bed where gravels are more.

[சல்லி + படு + மடை → சல்லிபாட்டு மடை. படு → பாடு → பாட்டு]

சல்லிப்பாய் *šalli-p-pāy,* பெ. (n.) ஒருவகைப் புல்லால் முடையப்பெற்ற பாய்; a kind of mat made of grass (சேரநா.).

ம. சல்லிப்பாய்

[சல்லி + பாய்]

சல்லிப்பொடி¹ *šalli-p-poḍi,* பெ. (n.) உடைந்த துண்டு (இ.வ.); small piece, fragment, broken shell.

[சல்லி + பொடி]

சல்லிப்பொடி[2] *šalli-p-poḍi,* பெ. (n.) *சிறுமீன்;* little fish.

[சல்லி + பொடி]

சல்லிப்பொதி *šalli-p-podi,* பெ. (n.) *பெரும் பொய்யன் (பொய் மூட்டை)* (வின்.); a great liar, as a bag of lies.

[சல்லி + பொதி]

சல்லிமாடு *šalli-māḍu,* பெ. (n.) *1. சல்லிக்கட்டுக் குரிய எருது;* bull trained for bull-baiting. *2. பட்டிமாடு;* stray cattle.

[சல்லி + மாடு]

சல்லிமாலை *šalli-mālai,* பெ. (n.) *பொங்கல் விழாநாள் முதலியவற்றில் மாடுகட்குக் கட்டும் மாலை;* decorative wreath for cattle at poṅgal and on occasions like šalli-k-kaṭṭu.

[சல்லி + மாலை]

சல்லிமேய்ச்சல் *šalli-mēyccal,* பெ. (n.) *புல் அல்லது கிடுகினால் வேயப்படும் கூரை வேய்ச்சல்* (மீனவ.); thatching roof with straws or braided coconut leaves.

[சல்லி + மேய்ச்சல். வேய்ச்சல் → மேய்ச்சல்]

சல்லியக்கரு *šalliya-k-karu,* பெ. (n.) *செய்வினை மருந்து வகை* (வின்.); a drug used in black magic.

[சல்லியம் + கரு]

சல்லியகரணி[1] *šalliya-garaṇi,* பெ. (n.) *படைக் கலன் தைத்த புண்ணை ஆற்றும் மருந்து* (திவா.); medicament which heals wounds caused by weapons.

[சல்லியம் + கரணி]

சல்லியகரணி[2] *šalliya-garaṇi,* பெ. (n.) *எருக்கு* (பிங்.); madar.

[சல்லியம் + கரணி]

சல்லியசயம் *šalli-ya-šayam,* பெ. (n.) *மருக்காரை;* common enaetic nut-Randia dumetorum (சா.அக.).

சல்லியடி-த்தல் *šalli-y-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.i.) *1. பொய்கூறுதல்;* to talk lies or scandals. *2. தரைக்குக் கப்பியடித்தல்;* to lay concrete.

[சல்லி + அடி]

சல்லியம்[1] *šalliyam,* பெ. (n.) *1. அம்பு* (பிங்.); arrow. *2. முள்ளம்பன்றி* (பிங்.); porcupine. *3. எலும்பு* (பிங்.); bone. *4. ஆணி;* nail. "நமதூதரறை சல்லிய நிகர்த்த" *(இரகு. திக்குவி 95).* *5. இருப்புக்கோல்;* iron rod. "சல்லியந் தளர வாங்கிற்று..... நலமலி கட்டகம்" *(ஞானா. 55:12).* *6. படைக்கல நுனி* (சங்.அக.); sharp point or head of a weapon. *7. ஈட்டி;* spear javelin. *8. தொல்லை;* disturbance. trouble, mischief. "சல்லியஞ் செய்யு மந்தத் தாடகை" *(இராமநா. பாலகா. 9).* *9. நிலத்திற்குக் கீழ் இருப்பனவற்றை அறிவிக்கும் கணியம்;* art of divining things underground. "சல்லிய காண்டம்" *(சினேந்.).* *10. மாயக்காட்சி* (வின்.); magical enchantment for warding off missile weapons; black magic. *11. கருநூலுள் ஒன்று* (வின்.); a treatise on magic.

[சுல் = குத்தற்கருத்து வேர். சுல் → சல் = கூரிய முனையுள்ளது, குத்தும் கருவி. சல் → சல்லியம் = கூரிய முனையுள்ள அம்பு, பன்றிமுள், ஆணி, இரும்புக்கோல் படைக்கல நுனி, கூரிய ஆயுதம், அது தருவது போன்ற தொல்லை.]

சல்லியம் → Skt. šalya.

சல்லியம்[2] *šalliyam,* பெ. (n.) *செஞ்சந்தனம்* (பிங்.); red sandalwood.

[சுல் → சல் → சல்லியம்]

சல்லியர்[1] *šalliyar,* பெ. (n.) *நிலத்திற்குக் கீழ் இருப்பனவற்றைத் தெரிவிக்கும் கணிய (ஆருட) வல்லோர்;* the men who knows the art of diving things underground.

[சல்லியம் → சல்லியர்]

சல்லியர்[2] *šalliyar,* பெ. (n.) *மாயக்கலையில் வல்ல இனத்தார்* (வின்.); a caste of magicians.

[சல்லியம் → சல்லியர்]

சல்லியள-த்தல் *šalli-y-aḷa-,* 3 செ.குவி. (v.i.) சல்லியடி-த்தல் பார்க்க (கொ.வ.); see *šalli-y-aḍi-*

[சல்லியம் → அள]

சல்லியன்[1] *šalliyaṉ,* பெ. (n.) *சல்லிக்காரன்* பார்க்க; see *šalli-k-kāraṉ.*

[சல்லி → சல்லியன்]

சல்லியன்[2] *šalliyaṉ,* பெ. (n.) வெள்ளி; the planet šukra. "குரவனாகிக் குறுகிய சல்லியன்" (கந்தபு. கயமுகனு. 52).

[சல்லி → சல்லியன்]

சல்லியாதேவி *šalliyā-dēvi,* பெ. (n.) ஒரு சிறுதேவதை (யாழ்.அக.); a demoness.

[சல்லியர் → சல்லியா + தேவி]

சல்லியுடை-த்தல் *šalliyuḍai-,* 4 செ.கு.வி. (v.i.) கற்களைச் சிறிய அளவினதாக உடைத்தல்; to get small stones break bigger ones 'சல்லியுடைக்கும் வேலைக்கு ஆள் தேவை' (உ.வ.).

க. சல்லிசு, சள்ளிசு, செல்லிசு. (துண்டாக்கு, வெட்டு), சல்லி ஒடெ

[சல்லி + உடை]

சல்லியூஞ்சல் *šalli-y-ūñjal,* பெ. (n.) வெள்ளை வாகை; white sirrisa - Albizzia procera (சா. அக).

[சல்லி + ஊஞ்சல்]

சல்லியூடகம் *šalli-y-ūḍagam,* பெ. (n.) வெள்ளிய கடல்மீன் வகை; sea fish, silvery.

[சல்லி + ஊடகம்]

சல்லிவெடிப்பு *šalli-veḍippu,* பெ. (n.) மரம் வெட்டப்பட்டுக் காயும்போது ஏற்படும் வெடிப்பு; cracks found in dried logs.

[சல்லி + வெடிப்பு]

சல்லிவேர் *šalli-vēr,* பெ. (n.) ஆணிவேரின் கிளையில் கொத்தாக வளரும் வேர் ; root let 'சல்லிவேரறக் கல்லிப் பறிக்கிறது' (பழ.).

[சல்லி + வேர்]

சல்லு[1]**-தல்** *šallu-,* 5 செ.கு.வி. (v.i.) நீர் தெளித்தல் (வின்.) ; to sprinkle water.

ம. சல்லுக, க. சல்லிசு; தெ. சல்லின்சு.

[சல் → சல்லு (ஒ.மொ. 145)]

சல்லு[2]**-தல்** *šallu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சல்லடையாற் சலித்தல் (வின்.); to sift.

தெ. சல்லிஞ்சு

[சல் → சல்லு]

சல்லூர் *šallūr,* பெ. (v.i.) திருமயம் வட்டம் வாழைக்குறிச்சியில் உள்ள ஓரிடம்; name of a place in Vālaikurichi in Tirumayam "செம்பியன் (வ)ழை குறி(ச்சி). சல்லூர். (1. வாழைக்குறிச்சிக் கல்.3.12).

சல்லைக்குட்டி *šallai-k-kuṭṭi,* பெ. (n.) சிறு வெளவால் மீன் (மீனவ.); small bat fish.

[சல்லி → சல்லை + குட்டி. சல்லி = சிறிய]

சல்லைவெளவால் *šallai-vauvāl,* பெ. (n.) சிறிய மீன் (தஞ்சை.மீனவ.); small fish.

[சல்லை + வெளவால்]

சல்லோபில்லோவென்றிரு-த்தல் *šallō-pillō-v-eṉṟiru-,* 3 செ.கு.வி. (v.i.) கூச்சமின்றி எளிதாகப் பழகுதல் (கொ.வ.); to move freely and familiarly.

[சல்லோ + பில்லோ + என்றிரு-,]

சலக்கடுப்பு *šala-k-kaḍuppu,* பெ. (n.) நீர்க்கடுப்பு; strangury.

[சலம் + கடுப்பு]

சலக்கண்டகம் *šala-k-kaṇḍagam,* பெ. (n.) 1. நீர்ப்பூடுவகை (யாழ்.அக.); an aquatic plant. 2. முதலை; crocodile.

[சலம் + கண்டகம். கள் → கண்டு → கண்டம் → கண்டகம்]

சலக்கண்டம் *šala-k-kaṇḍam,* பெ. (n.) 1. நீரால் வரும் இழப்பு; danger or accident from water, as inundation, drowning etc., 2. மிக வேர்வை; profuseness of perspiration. சலகண்டமாய் வேர்த்தது (வின்.).

[சலம் + கண்டம். கள் → கண்டு → கண்டம்]

சலக்கந்தி *šala-k-kandi,* பெ. (n.) சகசரபேதி (மூ.அ.); coarse red ochre.

சலக்கப்புரை *šalakka-p-purai,* பெ. (n.) 1. கழிவறை (இ.வ); latrine. 2. குளிக்கும் அறை (வின்.); bath-room.

[சலக்கம் + புரை]

சலக்கம் *šalakkam,* பெ. (n.) சலகம்[2] பார்க்க; see *šalagam*[2].

[சலகம் → சலக்கம்]

சலக்கமனை *šalakka-manai,* பெ. (n.) கழிப்பிடம் (யாழ்அக.); latrine.

[சலக்கம் + மனை]

சலக்கழிச்சல் *šala-k-kaliccal,* பெ. (n.) நீரிழிவு நோய்; diabetes.

[சலம் + கழிச்சல். கழி → கழிச்சல். 'சல்' தொ.பெ.ஈறு]

சலக்கு *šalakku,* பெ. (n.) எரியுப்பு (நவச்சாரம்) (வின்.); sal-ammoniac.

சலக்குடல் *šala-k-kudal,* பெ. (n.) சிறுநீர்ப்பை, மூத்திரப்பை; urinary bladder (செ.அக.).

[சலம் + குடல்]

சலக்கூர்மை *šala-k-kūrmai,* பெ. (n.) அமரியுப்பு (மூ.அ.); urinary salt.

[சலம் + கூர்மை]

சலக்கெனல் *šalakkenal,* பெ. (n.) தண்டை முதலான காலணிகள் அசையும்போது எழும் பரல்களின் ஓசைக்குறிப்பு; onom. expr. signifying tintling sound of bells of anket etc., "மணிவாய் திறக்கிற் சலக்கென்பவே" (திருக்கோ. 57).

[சலக்கு + எனல்]

சலக்கோவை *šala-k-kōvai,* பெ. (n.) 1. நீர்க் கோர்வை; catarrh. 2. வீக்கம்; dropsy.

[சலம் + கோவை. கோர் → கோ → கோவை]

சலகம்[1] šalagam, பெ. (n.) பொட்டுப்பூச்சி (யாழ்அக.); spider.

சலகம்[2] *šalagam,* பெ. (n.) 1. குளியல்; bath. 2. மலங்கழித்தல்; evacuation of bowels.

க. சலக; தெ. சலகமு

[சலம் → சலகம்]

சலகம்[3] *šalagam,* பெ. (n.) சங்கு; conch.

[சலம் → சலகம். நீரில் வளர்வது]

சலகற்பம் *šala-karbam,* பெ. (n.) சேறு; mud.

[சலம் + கற்பம்]

சலகன் *šalagan,* பெ. (n.) சலகன்பன்றி (வின்.); பார்க்க; see *šalagan-panri.*

[சலகு[2] → சலகன்]

சலகன்பன்றி *šalagan-panri,* பெ. (n.) விதையடித்த பன்றி (யாழ்ப்.); gelded boar.

[சலகு[2] → சலகன் + பன்றி]

சலகாமி *šala-kāmi,* பெ. (n.) நீரில் பின் வாங்காமற் செல்லுங் குதிரை (வின்.); horse that can go on water, opp. to pū-kāmi.

[சலம் + காமி]

Skt. jala-gāmi

Skt. gāmi → த. காமி.

சலகாரம் *šalagāram,* பெ. (n.) நீர்வளி; (புதுவை); hydrogen.

[சலம் + காரம்]

சலகு[1] *šalagu,* பெ. (n.) முத்துச்சிப்பி; pearl-oyster. 'சலகிற் கிடந்த முத்துக்கும்' (ஈடு, 5, 1,5).

[சலம் + சலகு]

Skt. jala-ja

சலகு[2] *šalagu,* பெ. (n.) 1. விதையடிக்கை; (யாழ்ப்.); castration, gelding. 2. படைப்பயிற்சி; (யாழ்அக.); military drill.

[சுல் → சல் → சலகு]

சலகுபிடித்-தல் *šalagu-pidi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. விதையடித்தல் (யாழ்ப்.); to castrate. 2. படைப்பயிற்சி செய்தல் (யாழ்.அக.); to practise drill.

[சலகு + பிடி-,]

சலகை[1] *šalagai,* பெ. (n.) 1. 60 முதல் 80 படியளவுள்ள ஒரு தவச (தானிய) அளவு; a grain measure = 1/3 poti or a bullock load = 60 to 80 measures. 2. சலகை விதைப்பாடுள்ள நிலம் (I.M.P.Cm.74); land sufficient in extent for sowing one šalagai of paddy.

க. சொலகெ; கெ. சலக

சலகை[2] *šalagai,* பெ. (n.) காணிக்கைப் பொருள் (வின்.); visiting presents.

[சல → சலகு → சலகை]

சலகை[3] *šalagai,* பெ. (n.). *1.* தோணி (*நீரிற் செல்வது*); boat lit., that which goes on water. *2.* தெப்பம் (*சங்.அக.*); raft.

[சலம் → சலகை]

சலகை[4] *šalagai,* பெ. (n.) வெளிப்பாடு (*யாழ்.அக.*); publicity.

[சல → சலகை]

சலகொதுகு *šala-kodugu,* பெ. (n.) நீர்க்கொதுகு (*பிங்.*); a kind of gnat infesting water.

[சலம் + கொதுகு = கொசுகு]

சலங்கல்லுமா *šalan-galluma,* பெ. (n.) காட்டுக் கோங்கு; prussicacid tree (*செ.அக.*).

சலங்கு *šalangu,* பெ. (n.) *1.* கட்டுப் படகு (*வின்.*); small boat, barge, coasting vessel. *2.* முத்துக் குளிக்கப் பயன்படும் படகு (இ.வ.); boat used for pearl-fishing (*செ.அக.*).

[சல் → சில் = சிறியது, துண்டு. சல் → சல் → சல்லி. சல் = நறுக்கு. சல் → சலங்கு = சிறுபடகு]

சலங்குக்காரன் *šalangu-k-kāran,* பெ. (n.) முத்துக்குளிப்பவன் (இ.வ.); pearl-diver.

[சலங்கு + காரன்]

சலங்குப்படகு *šalangu-p-padagu,* பெ. (n.) *சலங்கு-2 பார்க்க;* see *šalanagu-2.*

[சலங்கு + படகு]

சலங்குபறித்-தல் *šalangu-pari-,* 4 செ.கு.வி. (v.i.) கப்பற் பொருள் இறக்குதல் (*வின்.*); to unload a boat.

[சலங்கு + பறி-,]

சலங்கை *šalangai-,* பெ. (n.) சதங்கை; tiny bells attached to or used as ornaments.

ம. சலங்க, சிலங்க, செலங்க

[சதங்கை → சலங்கை. நடனத்திலும் பிற ஆட்டங்களிலும் காலில் அணியப் படுவதும் அசையும்போது ஒலியெழுப்பும் வகையில் பல சிறுமணிகள் கட்டியதுமான அணிகலன்]

சலங்கைக்காரர் *šalangai-k-karar,* பெ. (n.) செம்படவர் (இ.வ.); fishermen.

[சலங்கு + காரர் → சலங்குக்காரர் → சலங்கைக்காரர்]

சலங்கைக்கொதி *šalangai-k-kodi,* பெ. (n.) சலங்கையொலி போன்ற உலைநீரின் கொதிப்பு; boiling of water or liquid - food characterised by bubbling.

[சலங்கை + கொதி]

சலங்கைச்செடி *šalangai-c-cedi,* பெ. (n.) செடிவகை (*சங்.அக.*); a plant.

[சலங்கை + செடி]

சலங்கைப்பார் *šalangai-p-pār,* பெ. (n.) பாறை வகைகளுள் ஒன்று; a kind of rock.

[சலங்கை + பார்]

சலங்கைமணி *šalangai-mani,* பெ. (n.) சிறுமணிகள் கோத்த தோல்பட்டை; bell belt.

[சலங்கை + மணி. முள் → முட்டு → முத்து = உருண்ட கல் அல்லது விதை. முள் → (மள்) → மண் → மணி = உருண்ட கூலம் அல்லது விதை, உருண்ட பாசி. சலங்கை மணி உருண்ட பாசியோடு கூடிய மணி]



சலங்கை மணி

சலங்கைமுன்தாங்கி *šalangai-mun-tāngi,* பெ. (n.) மகளிர், காலின் இரண்டாம் விரலில் அணியும் கணையாழி; a ring worn on the second toe by women, one of ai-varnam.

[சலங்கை + முன் + தாங்கி]

சலங்கோத்தல் *šalaṅ-gōttal,* பெ. (n.) 1. நீர்கோத்தல் (வின்.); catching cold. 2. சீழ் பிடித்தல்; suppuration.

[சலம் + கோத்தல்]

சலங்கோவை *šalaṅ-kōvai,* பெ. (n.) உடலில் நீர் வைத்தலாகிய நோய்வகை (இ. வ.); dropsy.

[சலம் + கோவை. கோர் → கோ → கோவை.]

சலசண்டி *šala-saṇḍi,* பெ. (n.) வளவளவெனப் பொருளின்றிப் பேசுவோர் (மீனவ.); babble, wishy washy talk.

சலசந்தி *šala-candi,* பெ. (n.) இரண்டு கடல்களை இணைக்கும் குறுகிய நீர்ப்பகுதி (இக்.வ.); strait.

[சலம் + சந்தி]

சலசந்தி → Skt. jala + sandhi

சலசம் *šalašam,* பெ. (n.) 1. தாமரை (நீரில் மலர்வது); lit., that which is born in water; lotus, "சலசத்தியுள்...... மலர்ப்பொரியட்ட" (தேவா. 575. 6); 2. முத்து; pearl. "முத்திரண்டு வேறு தலசமே சலசமென்ன" (திருவிளை. மாணிக்க. 53). 3. பாசி (இலக்.அக.); green moss.

[சலம் + சலசம்]

சலசயனம் *šala-šayanam,* பெ. (n.) நீரிடமாகிய திருமால் படுக்கை (திவா.); bed of water, as of Tirumāl (Viṣṇu).

[சலம் + சயனம். சாய் = படுக்கை]

Skt. šayana → த. சயனம்

சலசர்ப்பிணி *šala-šarppiṇi,* பெ. (n.) நீரட்டை (நீரிற் செல்வது) (வின்.); leech as creeping in water.

[சலம் + சர்ப்பிணி]

சலசரம் *šala-šaram,* பெ. (n.) 1. மீன் (உரி. நி); fish. 2. மீன ஓரை (சூடா.); pisces of the zodiac. 3. படகு, தோணி முதலியவை (சிலப். 14:75, உரை.); rafter, boat.

[சலம் + சரம்]

சலசரிமெழுகு *šala-šari-meḻugu,* பெ. (n.) மருந்து வகை (தஞ்சை.சர.iii.76); a kind of medicine.

[சலசரி + மெழுகு]

சலசல[1] *šala-šala,* பெ. (n.) 1. ஆற்றுநீர் முதலியன அசைந்து ஓடுதலை உணர்த்தும் ஒலிக்குறிப்பு; onom. expr. of purling, as of water. "சலசல மும்மதஞ் சொரிய" (சீவக. 82). 2. உணர்ச்சிவயப்பட்டு மனம் உலைவுறுதலை உணர்த்தும் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying rustle.

ம., தெ., து. சலசல; க. சலசல

[சல + சல. இரட்டைக்கிளவி]

சலசல[2]**-த்தல்** *šala-šala-,* 4 செ.கு.வி. (v.i.) 1. சலசலவென ஒலித்தல்; to rustle "பச்சோலை சலசலத்து" (தமிழ்நா. 50). 2. ஓயாமற் பேசுதல்; to be talking incessantly.

[சலசல → சலசலத்தல்]

சலசலப்பு *šala-šalappu,* பெ. (n.) 1. நீர் ஓடும் ஓசை; the wash of flowing water. 2. குழப்பம் அல்லது எதிர்ப்பு; ripple, murmur. நான் வீட்டிற்குள் நுழைந்ததும் அங்கு ஏற்பட்ட சலசலப்பு குறைந்தது. 3. அச்சுறுத்தும் பேச்சு; threat. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது. 4. அசைவு; wavering.

[சலசல → சலசலப்பு. 'பு' பெயராக்க ஈறு]

சலசலெனல் *šala-šalenal,* பெ. (n.) 1. சருகு முதலியன அசைதலை உணர்த்தும் ஓர் ஒலிக்குறிப்பு (பிங்.); onom. expr. of rustling, as of dried leaves. 2. மழைத்தூரல் ஒலியை உணர்த்தும் ஒலிக்குறிப்பு; sounding as of drizzling rain.

[சலசல + எனல்]

சலசாதி *šala-šādi,* பெ. (n.) நீர்வாழ்வன; aquatic creature. சலசாதி யனைத்தும் (பிங். 8: 247).

[சலம் + சாதி]

சலசூசி *šala-šūši,* பெ. (n.) நீரட்டை (வின்.); leech.

[சலம் + சூசி. ஊசி → சூசி = குத்துவது]

சலசூத்திரம் *śala-śūttiram,* பெ. (n.) நீரிறைக்குங் கருவி (வின்.); water-pump, hydraulic lift.

[சலம் + சூத்திரம்]

சலசை *śalacai,* பெ. (n.) திருமகள் (சூடா.); Laksmi.

[சலம் → சலசை]

சலஞ்சலம் *śalañśalam,* பெ. (n.) வலம்புரி யாயிரஞ் சூழ்ந்த சங்கு ; a fabulous conch said to be surrounded by 1000 valampuri conches. "வலம்புரி சலஞ்சலம் வளைஇய தொத்தனள்" *(சீவக. 184).*

[சலம் + சலம்]

சலணி *śalaṇi,* பெ. (n.). வால் மிளகு (வின்.); cubeb pepper.

சலத்தம்பம் *śala-t-tambam,* பெ. (n.) சலத்தம்பனம் பார்க்க; see *śala-t-tambaṉam.*

[சலம் + தம்பம்]

Skt. tambam → த. தம்பம்

சலத்தம்பனம் *śala-t-tambaṉam,* பெ. (n.). அறுபத்து நான்கு கலையுள் நீரின் ஆற்றலை மாற்றும் கலை; art of counteracting the natural properties of water by magic, one of aṟubattunāṉgu-kalai.

[சலம் + தம்பனம்]

Skt. tambaṉam → த. தம்பனம்

சலத்திரம் *śalattiram,* பெ. (n.) ஓலைக்குடை (யாழ்அக.); umbrella of palmyra leaves.

[சலம் + திரம். நீரை, மழைநீரைத் தடுப்பது]

சலத்திரம் → Skt. jala-tra.

சலத்துவாரம் *śala-t-tuvāram,* பெ. (n.) சலத்துளை பார்க்க; see *śala-t-tuḷai.*

[சலம் + துவாரம்]

சலத்துளை *śala-t-tuḷai,* பெ. (n.) 1. சிறுநீர் வழி; urinary passage, urethra. 2. சாய்க்கடை; drain, conduit.

[சலம் + துளை]

சலத்தொல்லை *śala-t-tollai,* பெ. (n.) விரைவாக மலசலம் கழிக்க வேண்டிய கட்டாயத்தால் ஏற்படும் தொல்லை; discomfort due to urgent need to make water or void excrement.

[சலம் + தொல்லை]

சலதரங்கம் *śalataraṅgam,* பெ. (n.) 1. நீரலை; wave. 2. பல கிண்ணங்களிற் பலவளவில் நீர்வார்த்துச் சுருதியமைத்துக் கொண்டு சிறு கோலால் தட்டி இசைக்கும் ஒரு வகை இசைக்கருவி; musical cups containing varying quantities of water and played with sticks.

[சலம் + தரங்கம்]

சலதரம் *śala-daram,* பெ. (n.) 1. முகில் (நீரைத் தாங்குவது); cloud [lit, that which holds water]. "வந்ததா விச்சலதரமே" *(வெங்கைக்கோ. 411).* 2. நீர்நிலை (பிங்.) pond, lake. 3. கடல் (வின்.) ocean.

[சலம் + தரம்]

சலதளம் *śala-taḷam,* பெ. (n.) அரசு (வின்.); pipal.

Skt. śala-dala

சலதாரி *śala-tāri,* பெ. (n.) கங்கை நீரை அணிந்தவனான சிவன்; Śivaṉ, as having the Ganges in His locks. "சலதாரி மணிமிடற் றண்ணற்கு" *(பரிபா. 9,6).*

[சலம் + தாரி]

Skt. dhari → த. தாரி.

சலதாரை *śala-tārai,* பெ. (n.) சாய்க்கடை; drainage pipe, sewer, gutter.

மறுவ. அங்கணம், நாம்புவாய், புழல், சுருங்கு

க., தெ. சலதாரி

[சலம் + தாரை]

சலதி[1] *śaladi,* பெ. (n.) சலநிதி பார்க்க; see *śala-nidi.* "தமிழெனு மளப்பருஞ் சலதி தந்தவன்" *(கம்பரா. தாடகை. 38).*

[சலம் + நிதி - சலநிதி → சலதி]

சலதி[2] *śaladi,* பெ. (n.) பொய் கூறுபவர்; liar. "சலம்புணர் கொள்கைச் சலதி யொடாடி" *(சிலப். 9:69).*

[(சுல்) → சல் → சலதி (மு.தா. 263)]

சலந்தரம் *šalan-daram,* பெ. (n.) *சலதரம்-2 பார்க்க (உரிநி.); see šaladaram-2.*

[சலம் → தரம்]

சலந்தரன் *šalan-daran,* பெ. (n.) **சிவனால் மடிந்த அசுரன்;** an Asura slained by Šivan. "*சலமுடைய சலந்தரன்ற னுடறடிந்த நல்லாழி*" *(திருவாச. 12:18).*

சலந்தராரி *šalandarāri,* பெ. (n.) **சிவன் வெளிப்பாடுகளுளொன்று** *(காஞ்சிப். சிவபுண். 22.);* a manifestation of Šivan.

Skt. jalandhara.

[சலம் → சலந்தராரி]

சலந்திரட்டி *šalan-tiraṭṭi,* பெ. (n.) **கொற்றான்** *(சங்.அக.);* parasitic leafless plant.

[சலம் + திரட்டி]

சலநாட்டை *šala-nāṭṭai,* பெ. (n.) **(இசை) பண் வகை** *(பரத.102.);* a specific melody type.

சலநாட *šala-nāda,* பெ. (n.) **பண்வகை (மேள கர்த்தாக்களுளொன்று)** *(சங்.சந்.47);* a primary rāga.

[சலநாட்டை → சலநாட]

சலநிதி *šala-nidi,* பெ. (n.) **கடல்;** sea, ocean. "தகுசல நிதிநிறை தரத்த தாயினும்" *(இரகு. திக்குவி. 29).*

[சலம் + நிதி]

சலநோய் *šalanōy,* பெ. (n.) **நீரிழிவுநோய்;** diabetes.

[சலம் + நோய்]

சர்க்கரைநோய் பார்க்க

சலப்பிசாசு *šala-p-pišāšu,* பெ. (n.) *சலப்பேய் பார்க்க; see šala-p-pēy.*

[சலம் + பிசாசு]

Skt. pišāca → த. பிசாசு

சலப்பிரமேகம் *šala-p-piramēgam,* பெ. (n.) **நோய்வகை;** a kind of disease.

[சலம் + பிரமேகம்]

சலப்பிரளயம் *šala-p-piraḷayam,* பெ. (n.) **பெருவெள்ளம்;** deluge.

[சலம் + பிரளயம்]

Skt. piraḷaya → த. பிரளயம்

சலப்பூ *šalappū,* பெ. (n.) **மீன்;** fish.

[சல(ம்) + பூ]

சலப்பேய் *šalappēy,* பெ. (n.) 1. **அடிக்கடி குளித்துக் கொண்டிருக்கும்படிச் செய்யும் பேய்;** an evil spirit which causes its viction to bathe frequently. 2. **சலப்பேய் பிடித்தவன்;** person possessed by šala-p-pēy.

[சலம் + பேய்]

சலப்பை *šalappai,* பெ. (n.) **சிறுநீர்ப்பை, மூத்திரப்பை** *(வின்.);* the urinary bladder.

[சலம் + பை. பொள் → பொய் → (பய்) → பை = துளை, துளையுள்ளது. சலப்பை = நீர்ப்பை, சிறுநீர் நிரம்பிய பை]

சலபத்திரம் *šala-pattiram,* பெ. (n.) **அரசிலை** *(மூ.அ.);* pipal leaf.

[சலம் + பத்திரம்]

Skt. patra → த. பத்திரம்

சலபதி *šala-padi,* பெ. (n.) **கடலரசன், வருணன்** *(பிங்.);* Varuṇaṉ, as sea god.

[சலம் + பதி]

Skt. pati → த. பதி

சலபம் *šalabam,* பெ. (n.) **விட்டில்** *(பிங்.);* grasshopper, locust.

சலபயரோகம் *šala-paya-rōgam,* பெ. (n.) *சலவச்சநோய் பார்க்க; see šala-v-acca-nōy.*

[சலம் + பயம் + ரோகம்]

Skt. bhaya → த. பயம்; Skt. rōga → த. ரோகம்

சலபாதை *šala-pādai,* பெ. (n.) **சலத்தொல்லை** *பார்க்க; see šala-t-tollai.*

[சலம் + பாதை]

Skt. bādhā → த. பாதை

சலபுட்பம் *šala-puṭpam,* பெ. (n.) *சலப்பூ பார்க்க;* see *šala-p-pū.*

[சலம் + புட்பம்]

Skt. puṣpa → த. புட்பம்

சலம்[1] *šalam,* பெ. (n.) *1.* நீர்; water. "துவர்பல வூட்டிச் சலங்குடைவார்" *(பரிபா. 10:90).* 'சலம் நுழையாத இடத்திலே எண்ணெயும் எண்ணெய் நுழையாத இடத்தில் புகையும் நுழையும்' *(பழ.).* *2.* சீழ்நீர்; pus. *3.* சிறுநீர், மூத்திரம்; urine மலசலம்.

ம. சலம்; க., பட. கீவு (சீழ்); தெ. சீமு; கோண். குலம்; பர். குல்ச; கூய். குல் கனை

[சல சல → நீரோட்டத்தைக் குறிக்கும் ஒலிக்குறிப்புச் சொல். சல சல → சலம் = சல சல வென்று ஓடுவது, நீர்.]

த. சலம் → Skt. jala

jala, another Sanskrit word for water, is supposed to have been borrowed from the Pre-Sanskrit northern vernaculars (C.G.D.F.L. 571).

சலம்[2] *šalam,* பெ. (n.) *1.* நடுக்கம் *(உரி.நி.);* trembling quivering, wavering. *2.* அசையும் அம்புக்குறி; moving target for an arrow, one of four ilakku. "இலக்கமவை......... சலநிச் சலமெனச் சொல்வகையே" *(பாரத. வாரணா. 56).* *3.* சுழற்சி; motion, revolution as of a wheel. *(கம்பரா. இராவணன் வதை. 63).* *4.* இயங்கு திணை *(பி.வி.11);* the category of movables.

[உலம் = சுற்று, சுழற்சி. உலம் → அலம் = சுழற்சி. அலம் → சலம் = சுழற்சி, நடுக்கம், அசையும் அம்புக்குறி, இலங்குதிணை]

சலம்[3] *šalam,* பெ. (n.) *1.* தணியாச்சினம்; malice, cherished anger. "சலம்புரிதண்டு" *(பரிபா. 15:58).* *2.* சினம்; anger. "சந்திரற் குவமை சான்ற வதனத்தாள் சலத்தை நோக்கி" *(கம்பரா. மாரீச. 240).* *3.* பொய்மை; falsehood. "சலம்புணர் கொள்கை" *(சிலப். 9: 96).* *4.* ஏய்ப்பு; deception, trickery. "சலப்படையா னிரவிற் றாக்கிய தெல்லாம்" *(பரிபா. 6, 57).* *5.* சொல்லுவோனுடைய கருத்துக்கு வேறான பொருளைக் கற்பித்துக்கொண்டு பழித்துரைக்கையாகிய அழிப்பு (நிக்கிர கத்தானம்) *(பிரபோத. 42.5.);* criticism by perverting the sense of a word, ascribing to it a sense not intended by the speaker, one of the sixteen categories of Indian logic. *6.* தீயசெயல்; evil deed. "சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல்" *(குறள், 660).* *7.* மாறுபாடு; hostility, conflict. "சலம்புகன்று சுறவுக்கலித்த" *(மதுரைக். 112).* *8.* போட்டி; competition rivalry. "சலங் கொண்டு மலர் சொரியும்" *(திவ். பெரியதி. 3,9,1).* *9.* விடாப்பிடி *(வின்.);* obstinacy, tenacity. சலம்பிடிக்க. *10.* ஒரு பக்கஞ் சாய்கை; partiality. "சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்" *(சி.போ.சிற். 10,2,2).*

[உலம் → அலம் → சலம்]

த. சலம் → Skt. chala

சலம்[4] *šalam,* பெ. (n.) முள்ளம்பன்றியின் முள் *(பிங்.);* porcupine quill.

['சுல்' குத்தற் கருத்து வேர். சுல் → சல் → சலம்]

த. சலம் → Skt. šala

சலம்[5] *šalam,* பெ. (n.) இலாமிச்சை *(தைலவ. தைல. 6.);* cuscus.

Skt. šala

[சலம் → சலம்]

சலம்பம் *šalambam,* பெ. (n.) சிலம்பம் *(இ.வ.)* fencing.

[சிலம்பம் → சலம்பம்]

சலம்பல் *šalambal,* பெ. (n.) வாயரட்டை *(இ.வ.)* a vulgar chatterer.

[அல் → அல → அலம்பு → அலம்பல் = ஆரவாரம், வீண்பேச்சு. அலம்பல் → சலம்பல்]

சலம்பிடி[1]**-த்தல்** *šalam-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.i.) சலம்வை-த்தல் பார்க்க; see *šalam-vai-.*

[சலம் + பிடி]

சலம்பிடி[2]**-த்தல்** *šalam-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) விடாப்பிடி செய்தல் *(வின்.);* to be obstinate, self-willed.

[சலம்[3] + பிடி-,]

சலம்பு-தல் *šalambu-,* 5 செ.கு.வி. (v.i.) ஓயாமற் பேசுதல் *(இ.வ.);* to chatter, talk incessantly *(செ.அக.).*

*[அல் (அலை) → அலம்பு. அலம்புதல் = அலைதல், அசைத்தல், அசைந்து

ஒலித்தல். அல் → அலை → அலப்பு. அலப்புதல் = வீண்பேச்சு பேசுதல், பிதற்றுதல். அலம்பு → சலம்பு]

சலம்புரி *šalampuri,* பெ. (n.) சங்கு (யாழ்.அக.); conch.

[சலம் + புரி; வலம்புரி → சலம்புரி]

சலம்விடு-தல் *šalam-vidu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. குளிக்கப்பண்ணுதல்; to give a bath, as to a convalescent. 2. சிறுநீர்கழித்தல் (வின்.); to pass urine.

[சலம் + விடு-,]

சலம்வை-த்தல் *šalam-vai-,* 4 செ.கு.வி. (v.i.) சீழ்கோத்தல் (M.L.); to suppurate.

[சலம் + வை-,]

சலமடைப்பு *šalam-adaippu,* பெ. (n.) நீரடைப்பு (யாழ்.அக.); strangury.

[சலம் + அடைப்பு]

சலமண்டலம் *šala-mandalam,* பெ. (n.). நச்சுத்தன்மையுள்ள சிலந்தி; tarantula, a large spider.

[சலம் + மண்டலம்]

சலமண்டலி *šala-mandali,* பெ. (n.) சலமண்டலம் பார்க்க; see *šala-mandalam.*

[சலம் + மண்டலி]

சலமலம் *šala-malam,* பெ. (n.). 1. நீரும் மனிதக் கழிவும்; urinary and excrement. 2. கடற்பஞ்சு (வின்.); sponge.

[சலம் + மலம்]

சலமறிப்பு *šala-marippu,* பெ. (n.) சலமடைப்பு (வின்.) பார்க்க; see *šalam-adaippu.*

[சலம் + மறிப்பு]

சலமார்ச்சாரம் *šala-mārccāram,* பெ. (n.) நீர்ப்பூனை (மூ.அ.); otter, lutra.

[சலம் + மார்ச்சாரம்]

Skt.mārjāra → த. மார்ச்சரம்

சலமானம் *šala-mānam,* பெ. (n.) செல்லுகை (யாழ்.அக.); going, passing.

Skt. šalamāna

[செல் → சல் + மானம். 'மானம்' தொ.பெ.வி.]

சலமிடு-தல் *šalamidu-,* 20 செ.கு.வி. (v.i.) நாள்தோறும் நீருக்குப் படையல் செய்தல் (அர்க்கியங் கொடுத்தல்); to offer oblation of water, as in daily rituals or religious exercises. "கிழக்கே சலமிடுவார் தொழுகேதாரம்" (தேவா. 1154, 4).

[சலம் + இடு-,]

சலமூர்த்தி *šala-mūrtti,* பெ. (n.) உலாவரும் மூலவர் (யாழ்.அக); idol in a temple intended for procession.

[சலம் + மூர்த்தி]

Skt.mūrti → த. மூர்த்தி.

சலமேகம் *šala-mēgam,* பெ. (n.) நோய் வகை (சங்.அக.); a disease.

[சலம் + மேகம்]

சலயந்திரம் *šala-yantiram,* பெ. (n.) நீரிறைக்குங் கருவி (யாழ்.அக.); water - lift.

[சலம் + எந்திரம்]

சலரசம் *šala-rašam,* பெ. (n.) உப்பு; salt.

[சலம் + ரசம்]

Skt. raša → த. ரசம்

சலராகம் *šala-rāgam,* பெ. (n.) வெண்சிவப்பு (யாழ்.அக.); light red.

Skt. jala + rāga.

சலராசி *šala-rāši,* பெ. (n.) கடல் (பிங்.); ocean. 2. கடக மீன முதலிய ஓரை (நீரோடு தொடர்புடையது); signs of the zodiac as kadagam, mīnam, as connected with water.

[சலம் + ராசி]

Skt. rāsi → த. ராசி

சலருகம் *šala-rugam,* பெ. (n.) தாமரை (மலை.); lotus.

[சலம் + ருகம்]

Skt. ruha → த. ருகம்

சலரோகம் *šala-rōgam,* பெ. (n.) சலநோய் பார்க்க; see *šala-nōy.*

[சலம் + ரோகம்]

Skt. rōga → த. ரோகம்

சலலம் *šalalam,* பெ. (n.) முள்ளம்பன்றியின் முள் (பிங்.); porcupine quill.

[சலம் → சலலம்]

சலலி *šalali,* பெ. (n.) சலலம் (வின்.) பார்க்க; see *šalalam.*

[சலம் → சலலம் → சலலி]

சலலிங்கம் *šala-lingam,* பெ. (n.) உறுப்பி (அங்க) லிங்கம் (சைவச. பொது. 123, உரை); a small linga usually worn as a pendant.

[சலம் + லிங்கம். இலக்கம் → இலங்கம் → இலிங்கம் → லிங்கம் (கொச்சை)]

த. இலிங்கம் → Skt. linga

சலவகு *šalavagu,* பெ. (n.) இலவம்பிசின் (மூ.அ.); gum of the red-flowered silk-cotton.

சலவச்சநோய் *šalav-a-cca-nōy,* பெ. (n.). நீரினிடத்து அச்சத்தை உண்டாக்கும் நாய்க்கடி நோய் (இங்.வை.); hydrophobia, as causing dread of water.

[சல(ம்) + அச்சம் + நோய்]

சலவர் *šalavar,* பெ. (n.) நெய்தனில மக்கள் (பிங்.); inhabitants of a coastal district, as sea-faring men.

[சலம் + அர்]

சலவன்[1] *šalavan,* பெ. (n.) 1. ஏமாற்றுக்காரன்; decitful person. "சலவருட்சாலச் சலமே" (நாலடி. 188). 2. சினமுடையவன்; angry person. 3. பகைவன்; enemy. "அரக்கர்க் கெஞ்ஞான்றுஞ் சலவன்" (திவ். பெரியதி 1.5.3).

[சலம்[3] + சலவன்]

சலவன்[2] *šalavan,* பெ. (n.) சலகன்பன்றி (யாழ்ப்.) பார்க்க; see *šalagan-panri.*

[சலகன் → சலவன்]

சலவன்பன்றி *šalavan-panri,* பெ. (n.) பெண் பன்றி; sow.

[சலவன்[2] + பன்றி]

சலவாதம் *šala-vādam,* பெ. (n.) நோய்வகை (கடம்ப. பு. இலீலா. 136); a malady.

[சலம் + வாதம்]

Skt. vāta → த. வாதம்

சலவாதி[1] *šala-vādi,* பெ. (n.) 1. சினமுள்ளவன் (வின்.); angry person. 2. விடாப்பிடிக்காரன்; obstinate person.

[சலம்[3] + வாதி]

சலவாதி[2] *šala-vādi,* பெ. (n.) இறப்புச் செய்தி சொல்வோன் (வின்.); person of a servile caste employed to give information of deaths.

தெ. சலவாதி

[சலம் + வாதி]

சலவாதி[3] *šala-vādi,* பெ. (n.) சலத்தொல்லை பார்க்க; see *šala-t-tollai.*

தெ. சலவாதி

[சலம் + வாதி]

சலவாதை *šala-vādai,* பெ. (n.) சலத்தொல்லை பார்க்க; see *šala-t-tollai* (செ.அக.).

[சலபாதை → சலவாதை]

சலவாழைக்காய் *šala-vālai-k-kāy,* பெ. (n.) மீன் (நீரிலுள்ள வாழைக்காய்); lit, plantain of the waters, fish.

[சலம் → வாழைக்காய்]

சலவிட்டசாவல் *šala-vitta-šāval,* பெ. (n.) விதையடித்த சாவல்; capon.

[சலம் + விட்ட + சாவல்]

சலவியன் *šalaviyan,* பெ. (n.) சினமுள்ளவன்; angry person. "சாலுமவ் வீசன் சலவிய னாயினும் (திருமந். 182).

[சலம் + இயன்]

சலவாதி[1] பார்க்க

சலவியாளம் *šala-viyālam,* பெ. (n.) நீர்ப்பாம்பு; water-snake.

[சலம் + வியாளம்]

சலவு *šalavu,* பெ. (n.) ஆண்குறி (யாழ்.அக.); membrum virile.

[கல் → சல் → சலவு]

சலவை[1] *šalavai,* பெ. (n.) 1. ஆடை வெளுக்கை; bleaching or washing of cloth. 2. வெளுத்த துணி; washed cloth. "சலவைசேர் மருங்கில்" (குற்றா. குற. 48). 3. குளிர் (வின்.); low temperature of the body, coldness.

க. சலவெ; தெ. சலவ; து. செலவ.

[அல் → (அலை) அலம்பு = அசைத்தல். அசைந்து ஒலித்தல், அசைந்து வழிதல், கழுவுதல். அல் → சல் → சல → சலவை = வெளுத்தல். வெளுத்த துணி]

சலவை[2] *šalavai,* பெ. (n.) தொகுதியெண்களுக்குக் குறியாக இடும் உறை (வின்.); symbolic unit in kind to aid reckoning or measuring. 2. வணிகத்தில் கொள்ளும் பிசுறு (இ.வ.); anything extra obtained from a trader as a bargain.

க. சலவெ; தெ. சலக; து. செலவ.

சலவை[3] *šalavai,* பெ. (n.) நேரியல்; shawl. (தெய்வச்.விறலிவிடு. 607).

[சலகு → சலவை]

சலவைக்கல் *šalavai-k-kal,* பெ. (n.) 1. ஒரு வகை வண்ணக்கல்; marble, polished stone. 2. தாதுப் பொருள் வகை (M.M) hornblende. 3. கதிரவக் காந்தக்கல் (வின்.) jasper.

தெ. சலுப

[சலவை[1] + கல்]

சலவைநூல் *šalavai-nūl,* பெ. (n.). சலவைத் தூள் கலந்த கொதிநீரில் தோய்த்து வெண்மை யாக்கப்பட்ட நூல்; bleached thread.

[சலவை + நூல்]

சலவைப்பற்று *šalavai-p-paṟṟu,* பெ. (n.) சலவையாளர்களுக்கு அளித்த நிலம்; washerman's tax free land. "அம்மை அப்பநாயன(ர்)க்க (ச)லவைப்பற்று உலக(க)ளந்த வெள்" (தெ.க.தொ. 9).

[சலவை + பற்று]

சலவைமண் *šalavaimaṇ,* பெ. (n.) சுவரிற் பூசுதற்குரிய மண் (யாழ்.அக.); earth used for plastering walls.

[சலவை + மண்]

சலன் *šalaṉ,* பெ. (n.) கால் (பிங்.); foot, leg.

[சலம்[2] → சலன். இயங்குவதற்கு ஏந்தாக இருக்கும் கால்]

த. சலன் → Skt. šalana

சலன்சலனெனல் *šalaṉ-šalaṉeṉal,* பெ. (n.) சதங்கை முதலியவற்றின் ஒலிக்குறிப்பு; onom. expr. of tinkling sound. "சதங்கைகள் சலன்சலனென" (திருவாலவா. 28, 51).

[சலன் + சலன் + எனல்]

சலனகாலம் *šalaṉa-kālam,* பெ. (n.) துன்பக் காலம் (வின்.); times of hardship, adversity.

[சலம் → சலன் → சலனம் + காலம். கோல் → கால் = கம்பு, தூண், நீண்டு தொடரும் காலம். கால் + அம் – காலம்.]

சலனநரம்பு *šalaṉa-narambu,* பெ. (n.) சதைகளை எண்ணியபடி அசைவிக்கும் நரம்பு (இங்.வை. 28.); motor nerve.

[சலனம் + நரம்பு]

சலனம் *šalaṉam,* பெ. (n.) 1. அசைவு; moving, shaking, trembling. "மேருவின் சிகரமுஞ் சலன முற்றிட" (சிவரக. தேவிநாட்.4). 2. மனக்குழப்பம்; mental agitation. "சவலைமனச் சலனமெலாந் தீர்த்து" (அருட்பா, vi, பிரியேனென்றல். 11). 3. துன்பம்; trouble, anxiety, affliction. 4. கால் (சிவன். சூடா.); foot, leg.

[சலம்[2] → சலன் → சலனம்]

சலனன் *šalaṉaṉ,* பெ. (n.) காற்று (பிங்.); wind.

[சலம் → சலன் → சலனன் = அசைகை]

சலனை *šalaṉai,* பெ. (n.) சலனம்-3 பார்க்க; see *šalaṉam-3* "சலனை பயன் ஆனாலும்" (ஒழிவி. சத்திநி. 4.).

[சலனம் → சலனை]

சலாக்கு *šalākku,* பெ. (n.) மாழைகளிற் செய்யும் சித்திரவேலைகளுக்கு உதவுங் கருவி; burin, engraver's tool.

[சுல் → சல் → சலாக்கு]

சலாகு *šalāgu,* பெ. (n.) சலாகை[1] பார்க்க; see *šalāgai.*

[சுல் → சல் → சலாகு]

சலாகை[1] *šalāgai,* பெ. (n.) 1. சிறு எஃகூசி; needle-like tool of steel. "சலாகை நுழைந்த மணித்துளை" (மணிமே. 12:66). 2. காந்தம் (திவா.); magnet.

3. அறுவை மருத்துவக் கருவிவகை *(உவ.);* surgeon's probe. *4.* துமுக்கிச்சலாகை *(வின்.);* ramrod. *5.* சவளம் என்னும் ஆயுதம் *(பிங்.);* spear, javelin. *6.* இருப்புக்கம்பி; iron rod or stake. *7.* வரிச்சல் *(யாழ்ப்.);* lath for roofing.

[சுல் → சல் → சலாகை]

சலாகை[2] *šalāgai,* பெ. (n.) *1.* நன்மணி; a superior kind of gem. *2.* வாகுவலயம் *(சீவக. 2696, உரை);* an ornament worn on shoulders.

[சிலாகை = மேலது, உயர்ந்தது. சிலாகை → சலாகை]

சலாகை[3] *šalāgai,* பெ. (n.) பத்து விரலம் நீளமுள்ளதும், இடையே மெல்லியதும், முனைகள் கூர்மையின்றி மழுங்கியதாக வுள்ளதும், அஞ்சனமிடுவதற்கும் மருத்துவத்தில் காயத்தின் ஆழத்தை அறிவதற்கும் பயன்படுத்தும் இரும்பு, செம்பு முதலிய மாழைகளாற் செய்த நீண்ட கருவி; a surgical instrument, made of iron or copper, is about 10 in. in long, slender at the middle, blunt at the two ends, used to probe the depth and extent of wounds and applying collyrium to the eyes.

[சல் → சலம் → சலாகை = அசைதல், நீளுதல், நீண்டது]

வகைகள்

1. தூண்டில்முள் சலாகை; fish - hook.
2. கரண்டிச்சலாகை; spoon shaped.
3. ஆணிச்சலாகை; nail-shaped probe.
4. அங்குசச்சலாகை; goad probe.
5. அஞ்சனச்சலாகை; collyrium probe.
6. கருப்பச்சலாகை; roetus ortraction probe.
7. பாறைச்சலாகை; half-moon probe urethral bougie.
8. முனைமழுங்கியசலாகை; a probe with a blunt end - Blunt probe.
9. கயிறுகோர்த்தசலாகை; one with a tape near one end - eyed probe.
10. கத்தரிச்சலாகை; a probe with a long pair of scissors - scissors probe.
11. கம்பிச்சலாகை; a probe of steel wire - wire probe.
12. கருப்பஆய்வுச்சலாகை; a probe of uterina exploration.

சலாகை[4] *šalāgai,* பெ. (n.) சோழ, பாண்டியர் ஆட்சிக்காலத்தில் வழக்கில் இருந்த சிறு காசு; a small coin, which was vogue during Cōla<u>n</u> and Pāṇḍya<u>n</u> rule. "இவர் பக்கல் நாங்கள் கைக் கொண்ட சிரியக்கி பழஞ்சலாகை அச்சு பத்தும் கைக்கொண்டு இவ்வமுதுபடி செலுத்துவோமாக" *(விக்கிரம சோழன். தெ.க.தொ.4:387).*

ம. சலாக; Skt. šalākā

[சிலாகை → சலாகை = மேலானது, உயர்ந்தது, மதிப்புள்ளது]

இவ்வகைக் காசின் (நாணயத்தின்) ஒருபுறம் "இயக்கி" என்னும் பெண்தெய்வ வடிவம் பொறிக்கப்பட்டிருக்கும். அதனால் இக் காசிற்குச் "சிரி இயக்கிச் சலாகை" என்றும் பெயர் *(கட்டட).*

சலாகை[5] *šalāgai,* பெ. (n.) தட்டார்கருவி வகை; a goldsmith's tool *(செ.அக.).*

[அல் → அலவு → அலகு = பற்றுவது, வளைந்து பற்றுவது, குறடு. அலகு → சலகு → சலாகை]

சலாகை[6] *šalāgai,* பெ. (n.) நிலஅளவு; land measure. "கிறையம் பதிநஞ்சு பொன்கொடுத்து நாம் கொண்ட நிலம் சலாகை மூன்று, மூன்று சலாகைக்கும் ஆயிரம் தென்னம்பழம் போட்டு" *(தெ.க.தொ.26:212:12).*

சலாகைப்பாரை *šalāga-p-pārai,* பெ. (n.) தோண்டுதற்கு உதவும் கூர்முனையுள்ள கருவி *(வின்.);* sharp pointed implement for digging.

[சலாகை + பாரை. சுல் → சுர் → சுரி = துளை, ஏட்டில் துளையிடுங் கருவி. சுல் → சுர் → சுர → சுரம் = உட்டுளை. சுல் → சல் → சலகை → சலாகை. பகு + அர் - பகர் → பார் = பிளக்கும் நீளிய மாழைத் தண்டு]



சலாகைப்பாரை

சலாகையச்சு *šalāgai-y-accu,* பெ. (n.) காசு வகை (M.E.R. 585 of 1922); a coin.

[சலாகை + அச்சு]

சலாகையடி-த்தல் *šalāgai-y-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) வரிச்சல்சேர்த்தல் (யாழ்ப்.); to nail on laths, prepare laths.

[சலாகை + அடி-,]

சலாகையாணி *šalāgai-y-āṇi,* பெ. (n.) வரிச்சலாணி (யாழ்ப்.); lath nail.

[சலாகை + ஆணி]

சலாங்கம் *šalāṅgam,* பெ (n.) நாரை வகை (யாழ்.அக); a kind of heron.

சலாங்கு *šalāṅgu,* பெ. (n.) 1. பொய்யாப்புள் (பிங்.); rail, water-fowl. 2. கொசுகு; gnat, mosquito.

[சலம் → சலங்கு → சாலங்கு]

சலாசயம் *šalā-šayam,* பெ. (n.) 1. நீர்நிலை (நாஞ்.); reservoir. 2. சிறுநீர்ப்பை (மூத்திரப்பை); urinary bladder.

[சலம் + ஆசயம்]

சலாத்தி *šalātti,* பெ. (n.) திரைச்சீலை (யாழ்.அக.); a curtain.

சலாத்து-தல் *šalāttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) குலுக்குதல் (இ.வ.); to shake, as liquid in a vessel.

[சலம் → சலத்து → சலாத்து-,]

சலாபக்குளி *šalāba-k-kuḷi,* பெ. (n.) 1. முத்துக் குளிப்பு (வின்.); pearl-fisher, diving for pearls. 2. ஊதியமுள்ள தொழில்; profitable business, as pearl fishing.

[சலாபம் + குளி. சலம் = நீர், கடல். சலம் → சலபம் → சலாபம் = கடலில் மூழ்கி யெடுப்பது, முத்துக்குளிக்கை, ஊதியமுள்ள தொழில்]

சலாபச்சக்கரம் *šalāba-c-cakkaram,* பெ. (n.) சித்திரப்பா வகை (யாப்.வி. 497); a kind of poetic composition.

[சலாபம் + சக்கரம்]

சலாபத்துறை *šalāba-t-tuṟai,* பெ. (n.) முத்துக்குளிக்கும் துறைமுகம்; pearl fishery.

[சலாபம் + துறை]

சலாபம் *šalābam,* பெ. (n.) 1. முத்துக்குளிக்கை; pearl fishery. 'முத்தின் சலாபமும்' (S.I.I. iii, 145); 2. சலாபத்துறை பார்க்க; see *šalāba-t-tuṟai.* "துறைவாணர் குளிக்குஞ் சலாபக் குவான் முத்தும்" (மீனாட். பிள்ளைத். முத்தப். 5).

[சலம் → சலபம் → சலாபம் = கடலில் மூழ்கி முத்தெடுக்கை, முத்துக்குளிக்கும் துறை]

சலாம்பு-தல் *šalāmbu-,* 5 செ.கு.வி. (v.i.) மண்ணைவெட்டிப் புரட்டுதல் (இ.வ.); to turn the sod, as with a plough.

[அல் → அலம்பு = கலத்தல். அலம்பு → சலம்பு → சலாம்புதல்]

சலாமணி *šalāmaṇi,* பெ. (n.) சலாவணி (இ.வ.) பார்க்க; see *šalāvaṇi.*

தெ. செலாமணி

[செலாவணி → சலாவணி → சலாமணி]

சலார் *šalār,* பெ (n.) 1. விலை (யாழ்ப்.); price. 2. பணம் கொடுக்கை; cash-payment. 3. கொடை; prize, reward.

சலார்சலாரெனல் *šalār-šalār-eṉal,* பெ. (n.) 1. சலார்பிலாரெனல் பார்க்க; see *šalār-pilāreṉal.*

[சலார்சலார் + எனல்]

சலார்பிலாரெனல் *šalār-pilār-eṉal,* பெ. (n.) அணிகலன் அசைதலை உணர்த்தும் ஒலிக் குறிப்பு; onom. expr. signifying clinking as of ornaments. "தொடர் சங்கிலிகை சலார்பிலாரென்ன" (திவ். பெரியாழ். 1,7:1).

[சலார் + பிலார் + எனல்]

சலாவணி *šalāvaṇi,* பெ. (n.) 1. பணப்புழக்கம்; currency, general circulation, as of coin. 2. சாய்கால்; credit, influence. "அவர் பேச்சுக்குச் சலாவணியுண்டு" (இ.வ.).

க., து. செலாவணி; U. šalāōni.

[செலாவணி → சலாவணி]

சலி[1]-த்தல் *šali-,* 4 செ.கு.வி. (v.i.) 1. அசைதல்; to shake, to move. "நிலையினிற் சலியா நிலைமையானும்" (கல்லா. 11). 2. மனக்கலக்க மடைதல்; to be trouble in mind, distressed. "சலிக்கு மன்னையும்" (திருவிளை. விருத்த. 9). 3. சோர்தல்; to be weary, tried, to become exhausted. "மூவர்க்குஞ் சலியாத வுரனும்"

(உபதேசகா. சூராதி. 71). 4. அருவருப்புக் காட்டுதல்; to show or express disgust.

ம. சலிக்குக

[(சுல்) → சல் → சலி → சலி = தளர்தல், வருந்துதல் (மு.தா. 82)]

சலி²-த்தல் *šali-,* 4 செ.குன்றாவி. (v.t.) வெறுத்தல்; to hate, to be disgusted with. 'ஒரே வேலையைச் செய்ததனால் சலித்துப் போயிருக்கிறான்' (உ.வ.).

ம. சலிக்குக

[சுல் → சல் → சலி]

சலி³-த்தல் *šali-,* 4 செ.கு.வி. (v.i.) சினங் கொள்ளுதல்; to get angry. "சாபம்போற் சாருஞ் சலித்து" (ஏலாதி, 60).

[(சுல்) → சல் → சலி]

சலி⁴-த்தல் *šali-,* 4 செ.குன்றாவி. (v.t.) சல்லடையாற் சலித்தல்; to shift, to seperate the longer from smaller bodies with the hand, with a sieve or riddle. 'மணலைச் சலிப்பதற்குப் பெரிய சல்லடை வேண்டும்' (உ.வ.).

க. சலுசு; பட. சலிசு, சல்சு

[சல் → சலி]

சலி⁵-த்தல் šali-, 4 செ.கு.வி. (v.i.) ஒலித்தல் (வின்.); to sound.

[சல் → சலி = 'சல்' என ஒலியெழுப்புதல், ஒலித்தல். இனி சிலை (க. கெலெ) → சலை → சலி என்றுமாம்.]

சலிக்கி *šalikki,* பெ. (n.) சல்லடை (முகவை); sieve.

[சலி → சலிக்கி]

சலிகை *šaligai,* பெ. (n.) 1. செல்வாக்கு; influence of wealth or office. "ஊர்க்குஞ் சலிகை நம்மோ டொத்தவர்க்கு மெண்ணிக்கை" (விறலிவிடு. 233). 2. பழக்கமிகுதி; excessive familiarity, intimacy. "பக்கத்திலே சலிகை பாராட்டி" (விறலிவிடு. 806); indulgence, indulgent treatment. 4. ஆதரவு; patronage, protection.

க., து. சலிகெ; தெ. சலிக.

[சல் → சலிகை]

சலிகைக்காரன் *šaligai-k-kāran,* பெ. (n.) சலுகைக்காரன் பார்க்க; see *šalugai-k-kāran.*

[சலிகை + காரன்]

சலிகைக்கிராமம் *šaligai-k-kirāmam,* பெ. (n.) அரசனது நேர்பார்வையிலுள்ள ஊர் (வின்.); village under the special or immediae protection of a king.

[சலிகை + கிராமம்]

சலிதிப்பலி *šali-tippali,* பெ. (n.) நீர்த்திப்பலி (மலை.); water long pepper.

[சலம் + திப்பிலி → சலத்திப்பிலி → சலிதிப்பிலி]

சலிப்பு¹ *šalippu,* பெ. (n.) 1. வெறுப்பு; dissatisfaction, disgust. "சாரதிப் பெயரோனைச் சலிப்புறா" (கம்பரா. இராவணன் வதை. 178). 2. சோர்வு; wearness, languor.

ம. சலிப்பு

[சுல் → சல் → சலி → சலிப்பு. 'பு' தொ.பெ.ஈறு. (மு.தா. 83)]

சலிப்பு² *šalippu,* பெ. (n.) சினம்; anger.

[சல் → சலி → சலிப்பு]

சலிப்புப்பண்ணு-தல் *šalippu-p-paṇṇu-,* 5 செ.கு.வி. (v.i.) தொல்லைபண்ணுதல்; (Pond.); to give trouble.

[சலிப்பு + பண்ணு-,]

சலியடை *šali-y-aḍai,* பெ. (n.) சல்லடை; sieve.

[(சுல்) → சல் → சலி → சலியடை (மு.தா.263)]

சலியாமை *šaliyāmai,* பெ. (n.) அசையாமை; immovable or unalterable state.

[சலி + ஆ + மை; 'ஆ' எ. ம. இடைநிலை]

சலிலம் *šalilam,* பெ. (n.) நீர்; water. "வன்னி சலிலம்" (பாரத. வாரணா. 60).

[சலம் → சலலம் → சலிலம்]

சலிவன்பெரிநாரணன் *šalivan-peri-nāraṇan,* பெ. (n.) திருக்கோவலூர் அருகிலுள்ள சொரயப்பட்டு என்னும் ஏரியைக்கட்டிய தலைவன்; donor who had built the lake in Sorayappaṭṭu near Thirukkōvalūr. "ஸ்ரீசலிவன் பெரிநாரணந்" (ஆவணம் 1991-13).

[சலிவன் + பெரிநாரணன்]

சலினி *šalini,* பெ. (n.) திப்பிலி (மலை.); long-pepper.

[சலனி → சலினி]

சலு *šalu,* பெ. (n.) சிறங்கைநீர் (யாழ்.அக.); a handful of water.

[ஒருகா: ஒல்லுதல் = பொருந்துதல். ஒல் → அல் → அல்கு. அல்குதல் = பொருந்தித் தங்குதல். அல்கு → அலு → சலு = கையில் தங்கும் நீர்]

சலுக்குப்பிலுக்கெனல் *šalukku-p-pilukkenal,* பெ. (n.) சலார்பிலாரெனல் பார்க்க; see *šalār-pilārenal.*

[சலுக்கு + பிலுக்கு + எனல்]

சலுக்குமொலுக்கெனல் *šalukku-molukkenal,* பெ. (n.) தவசங்களை உலக்கையாற் குத்தும் பொழுது எழும் ஓசைக்குறிப்பு; onom. expr. of thumping sound produced by pestle when husking grain. "தந்தவுலக்கை தனை யோச்சிச் சலுக்குமொலுக்கெனக் குத்திரே" (கலிங். 513).

[சலுக்கு + மொலுக்கு + எனல்]

சலுகை *šalugai,* பெ. (n.) 1. நெறிமுறைகளைத் தளர்த்தி வழங்கப்படும் விலக்கு; concession, relief. தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் பொருட்டுப் பல சலுகைகள் வழங்கப்படுகின்றன. 2. நெறி(விதி)முறைகள் தளர்த்தப்படாத நிலையில் ஒருவர் பெறும் தனிப்பட்ட விடுதலை அல்லது உரிமம்; privilege. 'அந்த அதிகாரி அவருக்கு நெருக்கமானவர் என்பதால் அவர் அத்தனை சலுகையும் பெறுகிறார்' (உ.வ.).

[சலிகை → சலுகை]

சலுகைக்காரன் *šalugai-k-kāran,* பெ. (n.) 1. பாதுகாப்போன் (வின்.); patron, protector. 2. செல்வம் முதலியவற்றால் செருக்குடையவன் (வின்.); person arrogant from office, wealth or high connection. 3. பெருமைபடைத்தவன்; person of wealth and influence. "சலுகைக் காரர்க் காசை யானேன்" (குற்றா. குற. 42).

[சலுகை + காரன். 'காரன்' உடைமைப் பெயரீறு]

சலுகைக்குவா-(வரு)தல் *šalugai-k-ku-vā-,* 18 செ.கு.வி. (v.i.) பரிந்து பேசுதல் (வின்.); to speak on one's behalf.

[சலுகைக்கு + வா]

சலுகைகாட்டு-தல் *šalugai-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. பெருமையாய் இருத்தல் (வின்.); to carry oneself proudly, on account of office, wealth etc. 2. அதிகாரம் கொள்ளுதல்; to be dictatorial overbearing.

[சலுகை + காட்டு-,]

சலுகைசொல்(லு)-தல் *šalugai-col-,* 13 செ.கு.வி. (v.i.) பெரியோரிடத்திற் குறை வேண்டுதல் (வின்.); to apply for redress of grievances.

[சலுகை + சொல்(லு)-,]

சலுத்து *šaluttu,* பெ. (n.) பருமலையையும் பாய் மரத்தையும் சேர்த்துக்கட்டுங்கயிறு; a kind of rope used paravās.

[சலவர் → பரதவர்; பரதவர் பயன் படுத்துங்கயிறு (மீனவ.)]

சலுப்பன்[1] *šaluppan,* பெ. (n.) ஓயாமற் பேசுபவன் (இ.வ.); talkative person, chatterer.

மறுவ. அலப்பன், அலப்புணி.

ம. அலப்பன்

[சலுப்பு → சலுப்பன்]

சலுப்பன்[2] *šaluppan,* பெ. (n.) சணப்பன்; member of a caste whose profession is flax-dressing.

[சணல் → சணப்பு → சணப்பன் = சணலினிற்று நாரெடுப்போன். சணப்பன் → சலப்பன் → சலுப்பன்]

சலுப்பு[1]**-தல்** *šaluppu-,* 5 செ.கு.வி. (v.i.) உளறுதல் (இ.வ.); to prattle.

[அல் → அல → அலம்பு. அலம்பு (த.வி.) - அலப்பு (பி.வி.) அலப்புதல் = வீண்பேச்சு பேசுதல், பிதற்றுதல். அலப்பு → சலப்பு → சலுப்பு-,]

சலுப்பு[2] *šaluppu,* பெ. (n.) 1. துண்டு (யாழ்ப்.); small fragment, particle, flake. 2. நுனிக் கொம்பு (வின்.); tip of a branch.

[சுள் → (சுட்டு) → சிட்டு = சிறியது, சிறு குருவி. சுல் → சில் = சிறியது, துண்டு. சில் → சல் → சல்லி = சிறியது, துண்டு. சல் → சலு → சலுப்பு]

சலுப்பு[3] *šaluppu,* பெ. (n.) *சளிப்பிடிக்கை;* cold, catarrh.

மறுவ. தடுமண்

தெ. சலுபு

[சல் → சலம் → சலுப்பு = நீர்க்கோவை]

சவ்வரிசி *šavvariši,* பெ. (n.) சவ்வுமரத்தின் சோற்றைக் காய்ச்சிச் செய்யப்படும் பண்டம் *(பதார்த்த. 824);* sago, farinaceous and glutinous pith taken out of the stem of several species of a particular genus of palm, especially Metroxylon leave.

ம. சவ்வரிசி; க. சாவே, சம்பக்கி; தெ. சம்பு

Mar. šāga, šāgu

[சவ்வு + அரிசி]

சவ்வாயிரு-த்தல் *šavvāy-iru-,* 5 செ.கு.வி. (v.i.) பிசின் போலாதல் *(வின்.);* to be viscid, viscous.

[சவ்வு' + ஆயிரு-,]

சவ்வாவாரி *šavvā-vāri,* பெ. (n.) வள்ளத்தில் உயர்த்திய பாய் ஆடாமல் நேராகவும் விறைப்பாகவும் இருக்கும்பொருட்டுச் சேர்த்துக்கட்டப் பயன்படும் பலகை அல்லது கழி *(மீனவ.);* wooden plank or stick used to tie the sail of a country boat.

சவ்வியபலம் *šavviya-palam,* பெ. (n.) ஆனைத் திப்பிலி *(சங்.அக.);* elephant pepper.

சவ்வியம்[1] *šavviyam,* பெ. (n.) *மிளகு;* pepper.

சவ்வியம்[2] *šavviyam,* பெ. (n.) 1. *மிளகுவேர்;* root of black-pepper. 2. *செவ்வியம் பார்க்க;* see *ševviyam (சா.அக.).*

சவ்வியம்[3] *šavviyam,* பெ. (n.) *இடப்பக்கம்;* left side.

சவ்வீரம் *šavvīram,* பெ. (n.) 1. ஐம்பத்தாறு நாடுகளுள் சிந்து ஆற்றின் கழிமுகத்துக் கருகிலுள்ள நாடு; a country near the mouth of the Indus, one of 56 tēšam. *"கற்றவர் புகழ் சவ்வீரம்" (திருவிளை. நரிபரி. 106.);* 2. இதள் (இரசம்), சீனக்காரம் முதலியவற்றாற் செய்த ஒருவகை மருந்து *(வின்.):* strong medicinal compound containing quicksilver, alum, ammonia, etc., sublimated. 3. பறங்கிச் செய்நஞ்சு *(பாடாணம்):* a mineral poison. 4. காடி; vinegar *(தைலவ. தைல. 22.).*

சவ்வு[1] *šavvu,* பெ. (n.) 1. கண்முதலியவற்றின் மெல்லிய மூடுதோல்; membrane, as of the diaphragm, the eye. *'கண்ணில் சவ்வு வளர்கிறது' (உ.வ.).* 2. புண்ணின் மூடுதோல் *(வின்.);* thin scales, as on a healed wound. 3. புண்சவ்வு; proud flesh in ulcers, scirrhus formation in cancers. *"அந்தப் புண்ணில் சவ்வு வைக்கிறது" (இ.வ.).* 4. பழங்கொட்டை முதலியவற்றை மூடியுள்ள தோல் *(வின்.);* envelope round the pulp of fruit, of a bulbous root, of a bulb, seed pellicle.

ம. சவ்வு; க. சீவு

[சவ் → சவ்வு (வ.வ. 143)]

சவ்வு[2] *šavvu,* பெ. (n.) *மரவகை;* sago, fern palm, s.tr., cpycas circinalis.

[சவ் → சவ்வு]

சவ்வெடு-த்தல் *šav-v-edu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. தோலுரித்தல்; to peel off, as the skin from beans, gristly parts from meat. 2. செருக்கு (அகந்தை) முதலியவற்றை அடக்குதல் *(வின்.);* to humble one's pride, nullify one's influence.

[சவ்வு + எடு-,]

சவக்கடல் *šava-k-kaḍal,* பெ. (n.) பாலஸ்தீன நாட்டிலுள்ள ஓர் உப்பு நீரேரி *(இக்.வ.);* the dead sea in Palestine.

[சவம் + கடல்]

சவக்கம்[1] *šavakkam,* பெ. (n.). சோர்வு *(யாழ்ப்.);* faintness, exhaustion.

[சவங்கு → சவக்கம்]

சவக்கம்[2] *šavakkam,* பெ. (n.) சதுரவடிவான வயிரம்; square diamond. *"சவக்கம் இரண்டும் உட்பட (S.I.I. II,16).*

[சவுக்கம் → சவக்கம்]

சவக்களி-த்தல் *šavakkaḷi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. சுவையற்றுப்போதல் *(இ.வ.);* to be insipid, spoiled. 2. கெட்ட சுவையுடையதாயிருத்தல் *(வின்.)* to taste unpleasantly *(செ. அக.).*

[சவக்கு + அளி-,]

சவக்களை *šava-k-kaḷai,* பெ. (n.) அச்சம், துன்பம் போன்றவற்றால் பாதிக்கப்படுபவரின் பொலிவிழந்த முகத்தோற்றம்; pallor (as of

death). 'தூக்குத்தண்டனை பெற்றவன் முகம் எப்போதும் சவக்களையுடன் இருக்கும்' (உ.வ.).

[சவம் + களை. குள் → (கள்) → களை = அழகு, தோற்றம்]

சவக்காடு *ša va-k-kāḍu*, பெ. (n.) சுடுகாடு (வின்.); unenclosed burial-ground.

ம. சவப்பறம்பு

[சவம் + காடு. கடு → காடு]

சவக்காரம் *ša va-k-kāram*, பெ. (n.) சவுக்காரம்; soap (செ.அக.).

ம. சவர்க்காரம்; க. சபுகார, சபகார; தெ. சளகார; செளகார; து. சகபார, சபுகார, செளகார

[சவர் + காரம். கரித்தல் = மிகுதல். கரி → காரம் = மிகுதி]

சவக்காலை *ša va-k-kālai*, பெ. (n.) கல்லறை (யாழ்ப்.); grave yard.

[சவம் + காலை. சாலை → காலை]

சவக்கிடங்கு *ša va-k-kiḍaṅgu*, பெ. (n.) பிணங்களைக் கெடாமற் காக்கும் அறை; mortuary.

ம. சவக்கிடங்ங

[சவம் + கிடங்கு]

சவக்கிரியை *ša va-k-kiriyai*, பெ. (n.) இறுதிச் சடங்கு; funeral rites.

[சவம் + கிரியை]

சவக்குச்சவக்கெனல் *ša vakku-c-cavakkeṉal*, பெ. (n.) 1. வளைந்து கொடுத்தற்குறிப்பு (வின்.); being flexible or elastic, as a twig. 2. ஈரப்பசையாற் பதங்கெடுதற்குறிப்பு; losing crispness, as fried wafers from moisture or damp.

[சவக்கு + சவக்கு + எனல்.]

சவக்குழி *ša va-k-kuḻi*, பெ. (n.) பிணக்குழி; grave, sepulchre.

ம. சவக்குழி

[சவம் + குழி. குள் → குழி.]

சவகம் *ša vagam*, பெ. (n.) 1. கடுகு; mustard. 2. ஒருவகைச் சீமைமிளகு; moluccus pepper - piper officinarum (சா.அக.).

[சும் → சுவ். சுவ்வென்று நீரை இழுக்கிறது என்பது வழக்கு. சுவ் → சவ் → சவகம் = நீர் வற்றியது]

சவங்கட்டு-தல் *ša vaṅ-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) பிணத்தை ஆடையால் மூடி மூன்று சிறு துணிகளாற் கட்டுதல் (யாழ்ப்.); to tie up a corpse in a winding sheet with three strips of cloth.

[சவம் + கட்டு-. கள் → கட்டு]

சவங்கல் *ša vaṅgal*, பெ. (n.) 1. வலியற்றவன்-ள் (இ.வ.); feeble person; one utterly wanting in energy or spirit. 2. மானமழுங்கினவ-ன்-ள்; one impervious to ridicule; person lost to shame.

[சவங்கு + அல். 'அல்' தொ.பெ. ஈறு]

சவங்கற்பிழைப்பு *ša vaṅgaṟ-piḻaippu*, பெ. (n.) அடிமையாய்ப் பிழைக்கை (வின்.); life of servitude.

[சவங்கல் + பிழைப்பு]

சவங்கு-தல் *ša vaṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. மனந் தளர்தல்; to become dispirited, disheartened. 2. மானமழுங்கிப் போதல்; to be callous to criticism or ridicule; to be lost to shame. 3. உடல் மெலிதல்; to become lean, emaciated. 4. வீக்கம் வற்றுதல் (இ.வ.); to shrink, subside, as a boil. 5. மயங்கி வீழ்தல், மூர்ச்சைபோதல் (வின்.); to faint, droop, languish.

[சுள் → சள் → சள்ளல் = சேறு. சுள் → சள். சள்ளுதல் = இளகுதல். சள் → சளை. சளைத்தல் = தளர்தல், சோர்தல். சள் → சழு → சழுங்கு → சழுக்கம் = நெகிழ்ச்சி. சழுங்கு → சவுங்கு → சவங்கு]

சவச்சாலை *ša va-c-cālai*, பெ. (n.) கல்லறை; graveyard.

[சவம் + சாலை. சால் → சாலை = பெருங்கூடம், அகன்ற இடம்]

சவச்சேமம் *šava-c-cēmam,* பெ. (n.) 1. **பிணத்தைப் புதைக்கை;** burying a dead body. 2. **பிணத்தை இடுகாட்டிற்கு எடுக்க அணியம் பண்ணுகை;** preparation for taking a corpse to the graveyard.

[சவம் + சேமம். ஏமம் → சேமம்]

சவசவவெனல் *šava-šava-v-enal,* பெ. (n.) 1. நெருக்கற்குறிப்பு (யாழ்ப்.); onom. expr. signifying being thick, crowded, thronged. 2. பளபளப்புக் குறிப்பு; onom. expr. signifying being shiny, inflammed, as a boil.

[சவ + சவ + எனல்]

சவட்டு[1]-தல் *šavaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **வளைவாக்குதல்;** to bend, twist. அவன் காலைச் சவட்டி நடக்கிறான் (வின்.).

[சவள் → சவட்டு-,]

சவட்டு[2]-தல் *šavaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. **மெல்லுதல்;** to chew, masticate. "பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டி" (பெரும்பாண். 217). 2. விழுங்குதல் (யாழ்ப்.); to swallow down. 3. வெல்லுதல் (யாழ்ப்.); to get the better of.

[சவள் → சவட்டு]

சவட்டு[3]-தல் *šavaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. **மிதித்தல்;** to tread upon, trample. "தோகைச் செந்நெல் சவட்டி" (பெருங். மகத. 2,18). 2. **காலால் மிதித்துச் சேறு குழைத்தல்;** to mix clay etc., by treading. 3. **கதிர்களைப் பாதத்தால் மிதித்து தவசங்களைப் பிரித்தல்;** to tread out grains. 4. **அழித்தல்;** to destroy, ruin, as a town. "மூதூர் தன்னையுஞ் சவட்டி" (சீவக. 1734). 5. **கொல்லுதல்** (பிங்.); to kill. 6. **மொத்துதல், அடித்தல்;** to beat, to strike.

ம. சவிட்டுக; குட. சவட்

[சவள் → சவட்டு-,]

சவட்டுக்கால் *šavaṭṭu-k-kāl,* பெ. (n.) **கெந்துகால்;** lame leg.

[சவட்டு + கால். சவட்டுதல் = மிதித்தல். மிதிக்கும் அல்லது தத்தும் கால்]

சவட்டுக்காலன் *šavaṭṭu-k-kālaṉ,* பெ. (n.) **கெந்துகாலன்;** lame person.

[சவட்டு + காலன். கால் + அன் = காலன். சவட்டுதல் = அடித்தல், உதைத்தல். நிலத்தை உதைப்பது போல் நடக்கும் காலையுடையவன்]

சவட்டுக்கூர்மை *šavaṭṭu-k-kūrmai,* பெ. (n.) சவட்டு மண்ணுப்பு (வின்.) பார்க்க; see *šavaṭṭu maṇ-ṇ-uppu.*

[சவடு + கூர்மை. குள் → குர் → கூர் → கூர்மை]

சவட்டுநிலம் *šavaṭṭu-nilam,* பெ. (n.) **உவர்த் தரை;** saline, barren soil.

[சவடு + நிலம்.]

சவட்டுப்பு *šavaṭṭuppu,* பெ. (n.) **மண்ணின் மேற்பரப்பில் படியும் உப்பு;** the saline substance or efflorescent salt found deposited on the surface of the earth (சா.அக.).

தெ. சவுடுப்பு

[சவடு + உப்பு]

இவ்வுப்பு நிலத்தின் தன்மைக்கேற்பச் சுவையில் மாறுபடும். இதில் பலவகை உண்டு.

1. வளையலுப்பு; bangle earth or glass gall.
2. சவர்க்கார உப்பு; carbonate of soda.
3. சோற்றுப்பு; sodium chloride, common-salt.
4. உவர் மண் உப்பு; fuller's earth.
5. வெடியுப்பு; nitre etc, obtained by a simple process of lixiviation.
6. காரம்; salt impregnated with soda, sodium sulphate; any alkali salt.
7. பேதியுப்பு; magnesium sulphate.

என்பன அவற்றுள் சில.

சவட்டுமண் *šavaṭṭu-maṇ,* பெ. (n.) **உவர்மண்** (இ.வ.); fuller's earth.

[சவடு + மண்]

சவட்டுமண்ணுப்பு *šavaṭṭu-maṇ-ṇ-uppu-,* பெ. (n.) **உவர்க்கார(சோடா)வுப்புவகை** (வின்.); carbonate of soda - Sodiac carbons.

[சவடு + மண் + உப்பு]

சவட்டுவண்டி *šavattu-vandi,* பெ. (n.) மிதிவண்டி (இ.வ.); bicycle, as driven by pedalling (செ.அக.).

ம. சவிட்டுவண்டி

[சவட்டு + வண்டி. வள் → வண்டு = வளையல், வட்டமான பூச்சி. வண்டு → வண்டி = சக்கரம், சக்கரத்தையுடைய ஊர்தி]

சவட்டுவழி *šavattu-vali,* பெ. (n.) கால்பாதை; footpath (சேரநா.)

ம. சவிட்டுவழி

[சவட்டு + வழி]

சவட்டை *šavattai,* பெ. (n.) சாட்டை; cat's tail; whip. "முப்பது சவட்டைத் திண்டோரொடுத் திடா வடித்து" (மேருமந். 317).

[சவட்டு → சவட்டை]

சவடன் *šavadan,* பெ. (n.) பயனற்றவன்; worthless man. "அஞ்சுபூத மடைசிய சவடனை" (திருப்பு. 557).

[சவடு → சவடன். ஒ.நோ: செவிடு → செவிடன்]

சவடால் *šavadāl,* பெ. (n.) பகட்டு (கொ.வ.); ostentation, foppery.

[சவடன் = பயனற்றவன். சவடன் → சவடாள் = வீண் பகட்டுக் காட்டுபவன். சவடாள் → சவடால்]

த. சவடால் → U. cautāl

சவடாலடி-த்தல் *šavadāl-adi-,* 4 செ.குன்றாவி. (v.i.) 1. பகட்டு (இடம்பம்) காட்டுதல்; to be ostentatious, foppish. 2. வீண் பகட்டாரவாரம் (கருவம்) பாராட்டுதல்; to boast, brag.

[சவடால் + அடி-,]

சவடி[1] *šavadi,* பெ. (n.) 1. பொற்சரடுகளிற் கொத்தாக அமைந்த கழுத்தணிவகை (சிலப். 6, 100 உரை.); an ornament for the neck consisting of three or more gold cords. 2. பெண்கள் காதணிவகை; ear-ornament worn by women. 3. சவடியெலும்பு பார்க்க (வின்.); see *šavadi-y-elumbu.* 4. நச்சுப்பாம்பினுள் ஒருவகை (சித்தர். சிந்து.); a kind of venomous snake.

ம. சவடி.

[சவள் → சவடு. நெருங்கியிருத்தல். சவடு → சவடி = நெருங்கியிருக்கும் கொத்துகளைக் கொண்ட கழுத்தணி]

சவடி[2] *šavadi,* பெ. (n.) கடலாத்தி (L.); white - flowered fragrant trumpet tree.

[சவள் → சவணி → சவடி]

சவடிக்கடுக்கன் *šavadi-k-kadukkan,* பெ. (n.) பெரிய கடுக்கன் வகை (வின்.); a kind of large ear-ring.

ம. சவடிக்கடுக்கன்

[சவடி + கடுக்கன்]

சவடிக்கதிர் *šavadi-k-kadir,* பெ. (n.) சவடிமுள் (யாழ். அக.) பார்க்க; see *šavadi-mul.*

ம. சவடிக்கதிர்

[சவடி + கதிர்]

சவடிக்கோவை *šavadi-k-kōvai,* பெ. (n.) கழுத்தணி வகை (யாழ்ப்.); a necklace.

[சவடி + கோவை. கோர்வை → கோவை]

சவடிப்பூணூல் *šavadi-p-pūnūl,* பெ. (n.) ஒருவகைப் பொற்பூணூல்; ornamental sacred thread of gold. "இட்ட சவடிப் பூணூலும்" (சடு. 3,10:5).

[சவடி + பூணூல்]

சவடிப்பொட்டு *šavadi-p-pottu,* பெ. (n.) தாலிப்பொட்டு (வின்.); round gold appended to the 'savadi', used also as a tāli.

[சவடி + பொட்டு]

சவடிமுள் *šavadi-mul,* பெ. (n.) கம்பி பின்னுங் கருவி (யாழ்ப்.); tool for braiding wire.

ம. சவடிமுள்ளு

[சவடி + முள்]

சவடியெலும்பு *šavadi-y-elumbu,* பெ. (n.) காறையெலும்பு (யாழ்.அக.); collar bone, clavicle.

[சவடி + எலும்பு. எல் (ஒளி, வெண்மை) → எலும்பு]

சவடு *šavaḍu,* பெ. (n.) *1. உவர்மண்;* fuller's earth; earth impregnated with soda; alkalines oil. *2. வண்டல் (வின்.);* sediment. *3.* நெரிவு *(யாழ்.அக.);* crumpling.

க. சவுளு; தெ. சவுடு.

[சவர் → சவடு]

சவடுமண் *šavaḍu-maṇ,* பெ. (n.) *சவர்மண்* பார்க்க; see *šavarmaṇ.*

க. சவுளுமண்ணு

[சவர்மண் → சவடுமண்]

சவடுப்பு *šavaḍuppu,* பெ. (n.) *சவருப்பு* பார்க்க; see *šavaruppu.*

க. சவளுப்பு

[சவ்ருப்பு → சவடுப்பு]

சவண்டலை *šavaṇḍalai,* பெ. (n.) *சவண்டிலை (மூ.அ.)* பார்க்க; see *šavaṇḍilai.*

[சவண்டலை → சவண்டிலை]

சவண்டிலை *šavaṇḍilai,* பெ. (n.) *மரவகை (L.);* Trincomalee red wood.

[சவள் = நெளிதல், வளைதல். சவள் → சவண் = நெளியும்தன்மை. சவண்டிலை = நெளியுந்தன்மை கொண்ட இலையை யுடைய மரம்]

சவண்டுகொடு-த்தல் *šavaṇḍu-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.i.) ஒரு செயற்பாட்டை முடிக்கக் கருதி நெளிந்துகொடுத்தல் *(உ.வ.);* to be yielding pliant, as a person.

[சவள் → சவண்டு + கொடு-,]

சவணம் *šavaṇam,* பெ. (n.) *மாழை (உலோக)க் கம்பிகளை இழுக்க உதவும் கம்மியக்கருவி;* an instrument for drawing wire.

ம. சவண்; க. சவணிகெ; து. சவணெ.

[சவள் → சவண் → சவணம். வளைந்து பற்றுவது]

சவணி *šavaṇi,* பெ. (n.) *பலாப்பழச்சுளையைச் சுற்றியுள்ள நார்ப்பகுதி;* layers of fibrous filaments enclosing the flesh of the jackfruit *(சேரநா.).*

ம. சவணி

[சவள் → சவண் → சவணி]

சவந்தாழ்-த்தல் *šavan-tāḻ-,* 5 செ.கு.வி. (v.i.) *பிணத்தைப் புதைத்தல் (வின்.);* to inter a corpse.

[சவம் + தாழ், தாழ் = தாழ்தல், இழிதல். புதைத்தல் பொருளுக்கு ஆளப்பட்டது]

சவப்பரிசோதனை *šava-p-parišōdaṉai,* பெ. (n.) *சவவாய்வு* பார்க்க; see *šava-v-āyvu.*

[சவம் + பரிசோதனை]

Skt. parisōdhana → த. பரிசோதனை

சவப்பறம்பு *šava-p-paṟambu,* பெ. (n); இடுகாடு; burial ground *(சேரநா.).*

ம. சவப்பறம்பு

[சவம் + பறம்பு]

சவப்பெட்டி *šava-p-peṭṭi,* பெ. (n.) *(கிறித்.) பிணவடக்கப் பெட்டி;* coffin.

ம. சவப்பெட்டி

[சவம் + பெட்டி]

சவம்[1] *šavam,* பெ. (n.) *1. உயிரற்றவுடல்;* corpse, dead body, carcass. *'தவத்திற்கு ஒருவர் தமிழுக்கு இருவர் சவத்திற்கு நால்வர்' (பழ.). 2.* பேய்; devil, vampire *(செ.அக.).*

மறுவ. பிணம், அழனம், களேவரம்

ம. சவம்; க. சவ, சப; தெ. சவமு

[சாய் = சாய்தல், சாய்ந்து விழுதல். சாய் → சா → சாவு = நேராக நிற்கும் தன்மையற்ற (உயிரற்ற) உடல். சாவு → சாவம் → சவம்]

த. சவம் → Skt. šava

இறந்தவுடல் பேயாகத் திரியும் என்னும் நம்பிக்கையில், சவம் பேயைக் குறித்தது. வடவர் சூ அல்லது ச்வி என்னும் சொல்லைக் காட்டி, ஊதிப்போனது என்று பொருட் காரணங் கூறுவர்.
ச்வி = ஊது, வீங்கு

šava. šavas, a corpse (šavasāna, a cemetery, probably is the original form of šmašāna). The two words are of doubtful origin in Sk. Sk. verb šav means 'to go' and 'to alter, to change, to destroy (vikāra)'. Could the second meaning rest on the D. roots tavu, tave, savē? and can šava, šavas be derived from the Sk. verb? The second

question, it seems, is to be decided in the negative. Gt. (p.529) and C l. (p.461) think that šava is connected with D. sāy, to die, sāvu, a corpse. Sāy, to die, is say in Tu. (K.K.E.D. XXXVII)

šava, a corpse,

sava adj., relating to a dead body.

these words are said to be derived from sav, to go, but this derivation is surely much less probable than the Dravidian verbal root to die, which is šā in Tam.; chā, Mal.; šā, Can.; sei, Tuḷu; cha - chu, Tel.; Tel. infinitive, chāvaḍama. The vowel of šā is short in Telugu; and in Tamil, Malayāḷam and Canarese is short in the preterite tense, šā is undoubtedly a pure Dravidian root. Compare the Samoïede chawe, dead. Probably also the Sanskrit shei (sāyati), to waste away, and shō, to be destroyed, have some ulterier connection with it *(C.G.D.F.L. 574)*.

சவம்[2] *šavam,* பெ. (n.) விரைவு *(சது.);* speed, velocity.

[சர் → விரைவைக் குறிக்கும் ஒலிக் குறிப்புச் சொல். சர் → சரம் → சவம்]

சவம்[3] *šavam,* பெ. (n.) மூங்கில் *(பிங்.);* bamboo.

[சவள்தல் = வளைதல். சவள் → சவம் = வளையுந்தன்மை கொண்ட மூங்கில்]

சவர்[1]**-த்தல்** *šavar-,* 4 செ.கு.வி. (v.i.) உவர்த்தல்; to be brackish, as a mineral salt.

[(சுவர்) → சவர் → சவர்த்தல்]

சவர்[2] *šavar,* பெ. (n.) *1.* விளையாநிலம் *(பிங்.);* barren land. *2.* உவர் *(வின்.);* brackishness.

ம. சவர்; க. சவுளு, சவுளு; தெ. சவுரு; து. சவுள்.

[உவர் → சவர் = உப்புமிகுந்த நிலம், விளைச்சலுக்கு ஏற்றதல்லாத நிலம்]

சவர்[3] *šavar,* பெ. (n.) *1.* இழிவு; inferiority, lowness, baseness. *2.* பெண்கள் காதணிவகை; ear-ornament worn by women. *3.* சவடியெலும்பு பார்க்க; see *šavaḍi-y-elumbu. 4.* நச்சுப் பாம்பினுள் ஒருவகை *(சித்தர். சிந்து.);* a kind of venomous snake *(சுழ.அக.).*

[அவிதல் = வேதல், அழிதல், கெடுதல், அணைதல், சாதல். அவி → அவம் = அழிவு, கேடு. அவம் → சவம் → சவர் = இழிவு, தாழ்வு]

சவர்[4] *šavar,* பெ. (n.) குற்றம்; fault. "சவருடைய மனைவாழ்க்கை" *(நீலகேசி, 279.).*

[அவம் → சவம் → சவர் = இழிவு, தாழ்வு, குற்றம்]

சவர்க்கம் *šavarkkam,* பெ. (n.) கல்லுப்பு *(யாழ்.அக.);* rock-salt.

[சவர் = உவர் நிலம். சவர் → சவருகம் → சவர்க்கம்]

சவர்க்களி[1]**-த்தல்** *šavarkkaḷi-,* 4 செ.கு.வி. (v.i.) சவக்களி-த்தல்-2 பார்க்க; see *šavakkaḷi-2.*

[சவக்களி + சவர்க்களி-,]

சவர்க்களி[2]**-த்தல்** *šavarkkaḷi-,* 4 செ.கு.வி. (v.i.) உப்புச் சுவையேற்படுதல்; to yield a saline taste.

[சவர் + களி-,]

சவர்க்காரக்கட்டி *šavar-k-kāra-k-kaṭṭi,* பெ. (n.) சவர்க்காரம் பார்க்க; see *šavarkkāram.*

[சவர்க்காரம் + கட்டி]

சவர்க்காரகம் *šavar-k-kāragam,* பெ. (n.) வழலை; fuller's earth.

[சவர் + காரகம். காரம் → காரகம்]

சவர்க்காரக்குரு *šavar-k-kāra-k-kuru,* பெ. (n.) பூநீராற் செய்யப்பட்ட பொன்னாக்கி (இரசவாதம்)க்குப் பயன்படும் மருந்து; a quintessence salt used in alchemy, a calcined compound prepared from fuller's earth.

மறுவ. சவட்டுச்சுண்ணம், வழலைக்குரு

[சவர்க்காரம் + குரு]

சவர்க்காரச்சுண்ணம் *šavar-k-kāra-c-cuṇṇam,* பெ. (n.) சவர்க்காரக்குரு பார்க்க; see *šavarkkāra-k-kuru.*

[சவர்க்காரம் + சுண்ணம்]

சவர்க்காரநீர் *šavar-k-kāra-nīr,* பெ. (n.) *1.* ஐந்து மாதத் தலைக்கருவின், உப்புச்சத்தையெடுத்துப் பனியில் வைத்து உருவாக்குஞ் செய்நீர்;

a liquid of acid nature obtained by exposing to night dew the salt extracted from the first born foetus 5 month's old. *2. உழமண்ணீர்;* water impregnated with soap and forming a frothy moss.

மறுவ. ஐங்கோலச் செயநீர்

[சவர்க்காரம் + நீர்]

சவர்க்காரநுரை *šavar-k-kāra-nurai,* பெ. (n.) *சவர்க்காரத்தினாலுண்டாகும் நுரை;* foam or froth made by soap and water. கடின நீரில் சவர்க்கார நுரை வராது.

[சவர்க்காரம் + நுரை]

சவர்க்காரநொதி *šavar-k-kāra-nodi,* பெ. (n.) *சவர்க்காரநுரை பார்க்க;* see *šavar-k-kāra-nurai.*

[சவர்க்காரம் + நொதி]

சவர்க்காரப்போக்கு *šavar-k-kāra-p-pōkku,* பெ. (n.) *1. வழலையைப் போக்கிக் காரத்தை யுண்டாக்குகை;* conversion into soap effected by the combination of an alkaline base with a fatty acid. *2. பூவழலையினின்று பொன்னாக்கி (இரசவாத) முறையிற் செய்கை;* the conversion of fuller's earth so as to make it useful in the preparation of an alchemical compound.

மறுவ. சவக்காரமுறை

[சவர்க்காரம் + போக்கு]

சவர்க்காரம் *šavar-k-kāram,* பெ. (n.) *1. அழுக்கு அகற்றும் காரம்;* soap, washing soda, bleaching powder. *2. பூவழலை;* saline efforesence found in the soil of fuller's earth. *3. மருந்து வகையுளொன்று;* a prepared medicine. *4. சவர்க்காரக்குரு பார்க்க;* see *šavar-k-kāra-k-kuru.*

மறுவ. சவட்டுப்பு, வழலையுப்பு

ம. சவர்க்காரம்

[உவர் → சவர் + காரம்]

அழுக்கைப் போக்கித் தூய்மையாக இருக்கும் வழக்கம் பழந்தமிழரிடை இயல்பாக இருந்தது. 'கூழானாலும் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்னும் பழமொழி இதை உறுதிப்படுத்தக் காணலாம். உடல் அழுக்கைப் போக்கவும் உடுப்பழுக்கை நீக்கவும் முன்னர் உவர்மண் பயன்படுத்தப் பெற்றது பின்னர் உவர்மண் கலப்பாலான சவர்க்காரம் பெரு வழக்கெய்தியது.

சவர்க்காரவுண்டை *šavar-k-kāra-v-uṇḍai,* பெ. (n.) *1. உழமண் உருண்டை;* fuller's earth bolus. *2. வழலைக்கட்டி;* soap cake.

[சவர்க்காரம் + உருண்டை → உண்டை]

சவர்ச்சலம் *šavarccalam,* பெ. (n.) *1. கல்லுப்பு;* insoluble sea-salt. *2. கருப்புப்பு;* black salt.

[சவர் + சலம்]

சவர்ச்சிகாசாரம் *šavarcciga-šāram,* பெ. (n.) *சவர்ச்சிஇலவணம்;* salt petre.

சவர்த்திரை *šavar-t-tirai,* பெ. (n.) *1. உழமண்ணிலம்;* soil of fuller's earth. *2. உப்புநிலம்;* brackish soil.

மறுவ. உவர்நிலம், சவட்டுநிலம், வழலைநிலம்

[உவர் → சவர் + திரை]

சவர்நாயகம் *šavar-nāyagam,* பெ. (n.) நெல்வகை (யாழ். அக.); a kind of paddy.

சவர்நிலம் *šavar-nilam,* பெ. (n.) *சவர்த்திரை பார்க்க;* see *šavar-t-tirai.*

[உவர் → சவர் + நிலம்]

சவர்ப்பட்டை *šavar-p-paṭṭai,* பெ. (n.) *உப்புக் கரிக்கும் பட்டை;* any bark with a saline taste.

[சவர் + பட்டை]

சவர்ப்பலம் *šavar-p-palam,* பெ. (n.) *நெய்ச்சிட்டி;* ash coloured fie-bane.

சவர்ப்பு *šavarppu,* பெ. (v.i.) *உவர்ப்புச்சுவை;* one of the six tastes, astringent taste, astringency.

ம. சவர்ப்பு

[உவர் → உவர்ப்பு → சவர்ப்பு]

சவர்மண் *šavarmaṇ,* பெ. (v.i.) *உப்புத்தன்மை கொண்ட மண், உவர் மண்;* fullers earth, earth impregnated with carbonate of soda.

மறுவ. சவடு

க. சவுளுமண்ணு

[சவர் + மண்]

சவரணை *śavaraṇai,* பெ. (n.) *1.* நேர்த்தி *(வின்.);* elegance, neatness. *2.* முன்னேற்பாடு *(ஆயத்தம்) (வின்.);* preparedness, readiness. *3.* செல்வநிலை; prosperity, affluent circumstance. *'அவள் சவரணையாயிருப்பவள்' (உவ.). 4.* காப்பாற்றுகை; preservation, maintenance, protection *(செ.அக.).*

[அம் = அழகு. அம் → அமல் = நிறைவு. அமல் → அமர் → சமர் → சவர் → சவரணை]

சவரம் *śavaram,* பெ. (n.) *சாமரம்;* chowry. "அருவியை யுவமைகொள் சவரமும்" *(பாரத. பதினாறாம், 21).*

[கவரி → சவரி → சவரம்]

சவரன் *śavaran,* பெ. (n.) *1.* காடுமலைகளில் வாழும் வேடன்; mountaineer, hunter. *'சவர்சுணை வாழ்க்கைச் சவரர்' (பெருங். உஞ்சைக். 55, 68). 2.* பாலைநில மக்கள் *(திவா.);* inhabitants of the desert tract. *3.* பாலைநிலத் தலைவன் *(திவா.);* a tribal chief of the desert tract.

மறுவ. குறவன், மாகுலவன், குன்றவன், மறவன், கானவன், கொலைஞன், குருடன், பொறையிலான், எயினன், வேடன்.

[கவரி → சவரி]

த. சவரன் → Skt. Sabara

சவரி[1] *śavari,* பெ. (n.) *1.* கவரிமான் *(உரி.நி.);* yak. *2.* சாமரம் *(பிங்.);* chowry. *3.* இயற்கைக் கூந்தலுடன் இணைத்து பின்னுதற்குரிய செயற்கை மயிர்க்கற்றை; false hair used by women in toilette. *4.* தென்னைநார்; coir.

மறுவ. சீகரம், கவரி

ம. சவரி; க. சவரி, சவலி, சவுரி, சவுலி, சௌலி, சௌரி

[கவரி → சவரி]

சவரி[2] *śavari,* பெ. (n.) வேடரினப்பெண்; women of the hunting tribe. "சவரி .... தனபார பூஷண" *(திருப்பு. 1254, புதுப்.).*

[சவரன் (ஆ.பா.) → சவரி (பெ.பா.)]

சவரி[3] *śavari,* பெ. (n.) குறட்டை *(மலை.);* bitter snake-gourd.

[சவர் → சவரி]

சவரிக்கயிறு *śavari-k-kayiṟu,* பெ. (n.) தேங்காய் நாரினால் பின்னப்பட்ட கயிறு; rope made of coconut fibres.

ம. சகரிக்கயர்

[சவரி + கயிறு]

சவரிக்காய் *śavari-k-kāy,* பெ. (n.) தேங்காய்; coconut *(சேரநா.)*

ம. சகரிக்கா(ய்)

[சவரி + காய்]

சவரிக்கிழங்கு *śavari-k-kiḻaṅgu,* பெ. (n.) குறட்டைக்கிழங்கு; bulbous root of bitter snake gourd - Trichosanthes palmata *(சா.அக.).*

[சவரி + கிழங்கு]

சவரிக்கொட்டை *śavari-k-koṭṭai,* பெ. (n.) தாமரைக்கொட்டை *(இ.வ.);* pericarp of the lotus.

[சவரி + கொட்டை]

சவரிக்கொடி[1] *śavari-k-koḍi,* பெ. (n.) சவரி[3] பார்க்க; see *śavari*[3].

[சவரி + கொடி]

சவரிக்கொடி[2] *śavari-k-koḍi,* பெ. (n.) கொடியார்கூந்தல் *(மலை.);* women's thread.

மறுவ. அம்மையார்கூந்தல்

[சவரி + கொடி]

சவரிநாயகம் *śavari-nāyagam,* பெ. (n.) கையாந்தகரை *(சங்.அக.);* a plant.

[சவரி + நாயகம்]

சவரிமாங்காய் *śavari-māṅgāy,* பெ. (n.) மிகுதியாக நாருள்ள மாங்காய்; a kind of mango having too much fibres *(சேரநா.).*

ம. சவரிமாங்ங

[சவரி + மாங்காய்]

சவரிமான் *śavari-māṉ,* பெ. (n.) கவரிமான்; yak.

ம. சமரிமான், சவரி மான்

[சவரி + மான்]


சவரிமான்

சவரிமெத்தை *šavari-mettai,* பெ. (n.) 1. தென்னைநாரை அடைத்துச் செய்த மெத்தை வகை; coir mattress. 2. கால்மிதி (இ.வ.); door-mate.

[சவரி + மெத்தை]

சவரிலோத்திரம் *šavari-lōttiram,* பெ. (n.) குறட்டைப்பழம் (வின்.); pulp of the bitter snake-gourd, a powerful purgative.

[சவரி + லோத்திரம்]

Skt. lōdhra → த. லோத்திரம்

சவருப்பு *šavaruppu,* பெ. (n.) தூய்மையற்ற உவர்க்காரம்; impure soda, soda - saltpetre.

க. சவளுப்பு

[சவர் + உப்பு]

சவரேசம் *šavarēsam,* பெ. (n.) வெள்ளை வாகை;white sirissa-albizzia procera (சா.அக.).

சவலம் *šavalam,* பெ. (n.) 1. அரைக்கால் வராகன் (C.G.); a coin - 1/8 pagoda. 2. சவ்வரிசி; sago fern palm.

க., சவல, சவலி, சௌல, சௌலி; தெ. சவலமு; து. சவலோ.

[செவளம் → சவலம் = செம்பொற் காசு]

சவலை¹ *šavalai,* பெ. (n.) 1. மனக்குழப்பம்; perplexity, confusion. "சவலைக் கடலுளனாய்" (திருவாச. 11.17). 2. வருத்தம்; pain, distress. "சவலை நோன்புழந்து" (திருவிளைபாண்டியன்.48) 3. தாய்ப்பா லில்லாத குழந்தையின் மெலிவு; leanness of an infant not fed on mother's milk. "சவலைமகவோ சிறிது மறிந்திடாதே" (தண்டலை. சத. 97). 4. சவலைக்குழந்தை பார்க்க; see *šavalai-k-kuḻandai.* "சவலையாய் நாயேன் கழிந்து போவேனோ" (திருவாச. 50, 4). 5. இளமை, இளையது, முதிராதது (வின்.); tenderness, immaturity.

ம. சவல; க. சள்ளு (உள்ளீடு இல்லாதது, பயனற்றது); தெ. சவிலெ; கூய். சடு (பதர்)

[சவளுதல் = வளைதல், துவளுதல். சவள் → சவல் → சவலை = மெலிவு, தாய்ப் பாலில்லாக் குழந்தையின் மெலிவு]

சவலை² *šavalai,* பெ. (n.) 1. மின்னல்; lightning. 2. அடியளவு குறைந்தும் மிக்கும் வரும் பாட்டு (வீரசோ. யாப். 24.); stanza of irregular feet. 3. இசைப்பா வகையுள் ஒன்று (சிலப்.6:35, உரை.); a kind of musical composition.

[சவள் → சவல் → சவலை]

சவலைக்கதிர் *šavalai-k-kadir,* பெ. (n.) தவசமணி இல்லாத கதிர்; an empty grain of corn (கருநா.).

க. சள்ளுகாழு

[சவலை + கதிர்]

சவலைக்கன்று *šavalai-k-kaṉṟu,* பெ. (n.) இளங்கன்று (யாழ்ப்.); young calf.

[சவலை + கன்று]

சவலைக்குட்டி *šavalai-k-kuṭṭi,* பெ. (n.) விலங்குக் குட்டி (வின்.); young, tender animal.

[சவலை + குட்டி]

சவலைக்குழந்தை *šavalai-k-kuḻandai,* பெ. (n.) தாய்ப்பாலின்றி மெலிந்த குழந்தை; sucking child which grows lean for want of mother's milk.

ம. சவலப்பிள்ளை, சவலக்குஞ்ஞு

[சவலை + குழந்தை]

சவலைக்கொட்டு *šavalai-k-koṭṭu,* பெ. (n.) கழிச்சல் (மலம்), அடிக்கடி நெகிழ்ந்து கழிகை (இ.வ.); loose frequent motion of bowels, in children.

[சவலை + கொட்டு]

சவலைத்தினை *šavalai-t-tinai,* பெ. (n.) கருகிய தினைக்கதிர்; a blasted spike or corn (கருநா.).

க. சள்ளுதெனெ

[சவலை + தினை]

சவலைநெஞ்சம் *šavalai-neñjam,* பெ. (n.) உறுதியற்ற மனம்; weak mind. "சவலை நெஞ்சமே சிவனலா துயிர்க்குயிர் தானுமோர் துணையாமே" (வைராக். சத. 3.).

[சவலை + நெஞ்சம்]

சவலைநோய் *šavalai-nōy,* பெ. (n.) குளிக் குற்றத்தினால் உண்டாவதாகக் கருதும் குழந்தை நோய்வகை (சீவரட். 230); a child's ailment believed to be the result of kuḷi-dōsam.

[சவலை + நோய்]

சவலைப்பயிர் *šavalai-p-payir,* பெ. (n.) கதிர் வராமல் வாடிய பயிர்; plant which does not give corn.

மறுவ. சாவிய பயிர்

[சவலை + பயிர்]

சவலைப்பிள்ளை *šavalai-p-piḷḷai,* பெ. (n.) சவலைக்குழந்தை பார்க்க; see *šavalai-k-kuḻandai.*

ம. சவலப்பிள்ள

[சவலை + பிள்ளை]

சவலைப்பேச்சு *šavalai-p-pēccu,* பெ. (n.) பயனற்றபேச்சு; an empty, vain, not trust worthy word or speech (கருநா.).

க. சள்ளுமாது

[சவலை + பேச்சு]

சவலைபாய்-தல் *šavalai-pāy-,* 2 செ.கு.வி. (v.i.) தாய்ப்பாலின்றிக் குழந்தை மெலிதல் (கொ.வ.); to grow lean from want of mother's milk, as an infant.

[சவலை + பாய்-,]

சவலைமதி *šavalai-madi,* பெ. (n.) இளம் பிறை (வின்.); crescent moon.

[சவலை + மதி. சவலை = மெலிவு, சிறியது, இளமை. சவலைமதி = வளரும் நிலையுடைய மதி]

சவலைரோகம் *šavalai-rōgam,* பெ. (n.) சவலைநோய் பார்க்க; see *šavalai-nōy.*

[சவலை + ரோகம்]

Skt. rōga → த. ரோகம்

சவலைவெண்பா *šavalai-veṇbā,* பெ. (n.) தனிச்சொலின்றி இரண்டு குறள் வெண்பாக்களை இணைத்துச்செய்யும் வெண்பா (மாறனலங். 198, உரை); veṇbā composed of two kuraḷ-veṇbā without an extra detached foot in the middle.

[சவலை + வெண்பா]

சவவறை *šava-v-aṟai,* பெ. (n.) பிணக்கிடங்கு, மருத்துவமனைகளில் பிணங்களை வைப்பதற்கு ஒதுக்கப்பட்ட கட்டடம்; mortuary.

மறுவ. பிணவறை

ம. சவக்கிடங்நு

[சவம் + அறை]

சவவாய்வு *šavavāyvu,* பெ. (n.) பிணத்தை அறுத்து ஆய்கை; post-mortem, examination, autopsy.

[சவம் + ஆய்வு]

சவவுசாவு *šavavusāvu,* பெ. (n.) பிணந் தொடர்பானவற்றை உசாவுதல்; coroners inquest.

[சவம் + உசாவு]

சவவூர்தி *šava-v-ūrdi,* பெ. (n.) இடுகாட்டிற்குச் சவப்பெட்டியை ஏற்றிச் செல்லும் வண்டி, பிணவூர்தி, அமரர் ஊர்தி; hearse.

ம. சவவண்டி

[சவம் + ஊர்தி]

சவள் *šaval,* பெ. (n.) படகு தள்ளும் துடுப்பு; a kind of oar.

"தோணியைப் பாருடா ஏலேலோ
அடிப்பான் எண்டு ஏலேலோ
சவளைக் காட்டுறான் ஏலேலோ" (நாட்டுப்பாடல்)

[சுவள் → சவள்]

சுக்கான் பிடிக்கும்போதும், துடுப்பு வலிக்கும் போதும், துடுப்பு வளைந்து கொடுப்பதால்,

அது சவள் என்ற காரணப்பெயர் பெற்றது (மீனவ.).

சவள்(ளு)-தல் *šavaḷ(ḷu)-*, 16 செ.கு.வி. (v.i.) *1.* வளைதல்; to bend. *2.* துவளுதல்; to be supple, flexible, as the arms of a fencer.

ம. சவளுக, சவிளுக

[சுள் → சுளி. சுளிதல் = வளைதல். சுவள் → சவள்]

சவள்தடி *šavaḷ-taḍi,* பெ. (n.) *1.* துவளுந்தடி (வின்.); flexible stick. *2.* ஒடக்கோல்; a kind of oar.

க. சள்ளு (நீண்டதும் நெளியும் தன்மை கொண்டதுமான குச்சி அல்லது கம்பி); பட. சல்லு (நீண்ட மரக்கொம்பு)

[சவள் + தடி]

சவளக்காரர்[1] *šavaḷa-k-kārar,* பெ. (n.) *1.* மீனவருள் ஒரு பிரிவினர்; a class of fishermen. *2.* ஒடம் விடுபவன்; ferryman.

[சவளம் + காரர்]

சவளக்காரர்[2] *šavaḷa-k-kārar,* பெ. (n.) *1.* ஈட்டி பிடிக்கும் போர்வீரர்; lancers. *2.* மாழைத் தாதுகளுள்ள கனிகளில், தோண்டு கருவிகளைக் கொண்டு வேலைசெய்வோர் (வின்.); pikemen.

ம. சவளக்காரன்

[சவளம் + காரர்]

சவளச்சி *šavaḷacci,* பெ. (n.) சத்திச்சாரம் (யாழ். அக.); an acrid salt.

[சவள் + சவளச்சி. உவர் → உவள் → சவள்]

சவளசோழியம் *šavaḷa-šōḻiyam,* பெ. (n.) *1.* நாகரிகம் (யாழ். அக.); refinement, civilised condition. *2.* நிரம்பிய கல்வியறிவு; profound learning.

சவளம்[1] *šavaḷam,* பெ. (n.) குந்தம்; bearded dart or lance; pike. "அடுசவளத் தெடுத்த பொழுது" (கலிங். 424).

ம. சவளம்; க. சபள; தெ. சபளமு; E. javelin

[சுவள் → சவள் → சவளம் (முதா. 250)]

த. சவளம் → Pkt. šavvala, Skt. šarvalā

சவளம்[2] *šavaḷam,* பெ. (n.) ஒருவகை மீன் (யாழ்அக.); a kind of fish.

ம. சவளம்

[சுவள் → சவள் → சவளம்]

சவளம்[3] *šavaḷam,* பெ. (n.) சங்கச் செய்நஞ்சு (பாடாணம்) (சங்அக.); a mineral poison.

ம. சவளம்

[சுவள் → சவள் → சவளம்]

சவளம்[4] *šavaḷam,* பெ. (n.) புளியின் முற்றிய பழச்சுளை; well-developed or fully ripe condition of tamarind pulp. புளி சவளஞ் சவளமாயிருக்கிறது (இ.வ.).

[சுவள் → சவள் → சவளம்]

சவளன் *šavaḷaṉ,* பெ. (n.) வளைந்த காலுள்ளவன்; a bandy or crook - legged man (சா.அக.).

[சவள் → சவளன்]

சவளி[1] *šavaḷi,* பெ. (n.) பருத்தியிலைச் சாறு; the fresh juice of the leaves of herbachous cotten tree (சா.அக.).

[சவள் → சவளி]

சவளி[2] *šavaḷi,* பெ. (n.) சவண்ட (வளைந்த) கால்களுடைய பெண்; a bandy legged woman. (சா.அக.).

[சவளன் (ஆ.பா.) → சவளி (பெ.பா.)]

சவளி[3] *šavaḷi,* பெ. (n.) வேட்டி சீலை முதலிய துணிச்சரக்கு; cloth, piece goods (செஅக.).

மறுவ. ஆடை, துணி

ம. சவளி; க. சவளி, சவுளி, சௌளி; தெ. சவளி; து. சவளி, சவுளி, சொளி.

[சுவள் → சவள் → சவண் → சவளி]

சவண்டிருப்பதால், சவளி என்றுபெயர். சவளுதல் = துவளுதல்.

சவளி என்னும் தமிழ்ச்சொல், த்ஜவுளி என்று தெலுங்கிலும், சவுளி என்று கன்னடத்திலும் எடுப்பொலியுடன் ஒலிக்கப்படுவதாலும் தமிழிலும் அவ்வாறே இற்றைத்தமிழர் ஒலிப்பதாலும் வடசொல்லென்று தவறாகக் கருதப்படுகின்றது. வடமொழியில், இச்சொல் இல்லை.

அறுக்கப்படுவதனால் அறுவை என்றும், துணிக்கப்படுவதனால் துணியென்றும், சவண்டிருப்பதனால் சவளியென்றும், ஆடை பல பொதுப்பெயர் பெறும். சவளுதல் - துவளுதல். மென்காற்றிலும் ஆடுவது (அசைவது) ஆடை.

"சரிசமழ்ப்புச் சட்டி சருகு சவடி
சளிசகடு சட்டை சவளி - சவிசரடு
சந்து சதங்கை சழக்காதி ஈரிடத்தும்
வந்தனவாற் சம்முதலும் வை"

என்னும் மயிலைநாதர் எடுத்துக்காட்டுச் செய்யுளால், சவளி என்பது தூய தென் சொல்லாதல் அறியப்படும். (ப. ப. 43, 44).

சவளி[4] *šavaḷi,* பெ. (n.) மகளிர் அணியும் கழுத்தணி வகை; a kind of necklace for woman. "பூசாரி ராயனிட்ட பொற்சவளி" (விறலி விடு.696).

ம. சவளி

[சுவள் → சவள் → சவளி]

சவளிக்கடை *šavaḷi-k-kaḍai,* பெ. (n.) துணிக் கடை; cloth shop.

க. சவளிய மளிகெ, சவளியங்காடி

[சவளி + கடை]

சவளிக்காரன் *šavaḷi-k-kāraṉ,* பெ. (n.) துணி விற்போன்; a seller of cloth.

க. சவளிக, சவளிகார

[சவளி + காரன்]

சவளியெடு-த்தல் *šavaḷi-y-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) துணிவாங்குதல்; to buy cloths. திருமணத்திற்கான சவளி எடுத்தாகிவிட்டது? (உ.வ.).

[சவளி + எடு-,]

சவளை *šavaḷai,* பெ. (n.) வங்கமணல் (ஈயம் கலந்த மணல்) (மூ.அ.); lead sand.

ம. சவள

[சுவள் → சவள் → சவளை]

சவளைக்காரர் *šavaḷai-k-kārar,* பெ. (n.) திருநெல்வேலி மாவட்டத்தில் நெசவுத் தொழில் செய்யும் ஒரு சாதியார்; a caste of weavers in Tirunelveli district.

ம. சவளக்காரன்

[சவளி → சவளை + காரர்]

சவற்றிலை *šavaṟṟilai,* பெ. (n.) உலர்ந்த இலை; dry-leaf (சேரநா.).

ம. சவற்றில

[சவறு + இலை]

சவற்றுக்குழி *šavaṟṟu-k-kuḻi,* பெ. (n.) குப்பைக் குழி; waste-pit.

ம. சவற்றுகுழி

[சவறு + குழி]

சவறு *šavaṟu,* பெ. (n.) 1. குப்பை; rubbish, sweepings. 2. பயனற்றவன் (இ.வ.); worthless person.

ம. சவறு.

[சவடு → சவறு]

சவறுவிழு-தல் *šavaṟu-viḻu-,* 2 செ.கு.வி. (v.i.) சூல் முற்றாமல் (கருப்பம் நிரம்பாது) வெளிப் படுகை (Nāñ.); abortion (செ.அக.).

[சவறு + விழு-,]

சவனம்[1] *šavaṉam,* பெ. (n.) வேகம்; speed, quickness. "சவனத்தின் மிகுதுயர முறுவிக்க" (பாரத. பன்னிரண்டாம். 59).

[சவம் → சவனம்]

சவனம்[2] *šavaṉam,* பெ. (n.) வேள்வி; sacrifice.

[சாவு → (சாவனம்) → சவனம் = உயிர்க்கொலை (பலி) செய்யும் வேள்வி]

த. சவனம் → Skt. šavana

சவனன் *šavaṉaṉ,* பெ. (n.) வேகமுடையவன் (பிங்.); man of prompt and quick action.

Skt. savana

[சவம் → சவனம் → சவனன்]

சவாரிக்கட்டை *šavāri-k-kaṭṭai,* பெ. (n.) மரவள்ளி (இ.வ.); bitter cassava plant.

[சவாரி + கட்டை. சவரி → சவாரி = வள்ளிக் கிழங்கை நோக்க இனிப் பின்மையால் மரவள்ளி உவர்ப்புச் சுவையுடையதாகக் கருதப்பட்டது]

சவாலக்கம் *šavālakkam,* பெ. (n.) வயிரம் உண்டாகும் இடங்களிலொன்று (திருவாலவா. 25, 17.); one of the diamond - producing countries.

சவி[1] *šavi,* பெ. (n.) மிளகுக்கொடி; pepper creeper (சா.அக.).

சவி² *šavi*, பெ. (n.) *1.* **ஒளி**; light, splendour. "சவிகொள் பொன்முத்த மென்கோ" (திவ். திருவாய். 3.4.4.). *2.* **அழகு** (பிங்.); beauty. *3.* **நேர்மை** (பிங்.); rectitude, propriety, equity. *4.* **வல்லமை**; energy, strength. "அடியிடச் சவியிலாதே முடங்குவன்" (குற்றா.தல.மந்தமா.73). *5.* **சுவை** (பிங்.); taste. *6.* **செவ்வி**; freshness. "சவிமதுத் தாம மார்பின்" (சீவக. 2292). *7.* **சரமணிக்கோவை**; girdle with strings of beads or bells. "சவி மூன்று வடம் உடையன" (S.I.I. II, 210). *8.* **திருவிழா** (பிங்.); festival.

[அகைதல் = எரிதல், ஒளிவிடுதல். அகை → அகு → அகி → அவி → சவி]

அவி பார்க்க

சவி²**-த்தல்** *šavi-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* **வசை மொழிதல்**; to curse. "சவித்த முனிபாதந் தலைக்கொண்டு" (திருவிளை. வெள்ளை. 16). *2.* **திட்டுதல்**; to abuse, revile: "நீங்களே சவியுங்கோள்" (திவ். பெரியதி. வியா. அவ. பக்.12).

[சாய் → சாவு → சாவித்தல் = சாகக் கடவாய் அல்லது அழிவாய் எனக் கூறுதல். சாவி → சவி]

சவி³**-த்தல்** *šavi-*, 4 செ.குன்றாவி. (v.t.) **வழிபாடு செய்தல்**; to pray. "என் சவிப்பார் மனிசரே" (திவ். திருவாய்.3, 5,5).

சவிக்கை *šavikkai*, பெ. (n.) சுங்கச்சாவடி (வின்.); custom house (செ.அக.).

ம. சவுக்கை

[சவுக்கம் → சவுக்கை → சவிக்கை. தெரு கூடுமிடத்தில் அமைந்த சுங்கச்சாவடி]

த. சவிக்கை → U. cauki

சவிகம்¹ *šavigam*, பெ. (n.) **திப்பிலிக்கொடி**; creeper of long pepper (சா.அக.)

[சவி → சவிகம்]

சவிகம்² *šavigam*, பெ. (n.) **கொட்டைக்கரந்தை** (மலை.); Indian globe thistle.

சவிகி *šavigi*, பெ. (n.) சவுக்கை¹ (வின்.) பார்க்க; see *šavukkai*¹.

Pkt. caukka

[சதுக்கம் → சவுக்கம் → சவுக்கை → சவிக்கை → சவிகை → சவிகி.]

சவிகை¹ *šavigai*, பெ. (n.) **சவுக்கை**¹ பார்க்க; see *šavukkai*¹.

தெ. சவிகெ.

[சவுக்கை → சவிகை]

சவிகை² *šavigai*, பெ. (n.) **ஆனைத்திப்பிலி** (தைலவ. தைல. 1.); elephant-pepper.

[சவியம் → சவிகை]

சவிசங்கம் *šavišangam*, பெ. (n.) **ஒருவகை ஊதை(வாத) நோய்** (சங்.அக.); a kind of flatulency.

சவியம் *šaviyam*, பெ. (n.) **ஆனைத்திப்பிலி, கொடிவகை**; elephant-pepper, climber.

சவு-த்தல் *šavu-*, 4 செ.கு.வி. (v.i.) *1.* **விலை நயத்தல்** (வின்.); to fall in price: to become cheap. *2.* **விலைப்படாமலிருத்தல்** (வின்.); to be unsaleable, to have no demand. *3.* **அலுத்துப் போதல்** (யாழ்.அக.); to become tired. *4.* **மெலிதல்** (யாழ்.அக.); to become weak, emaciated. *5.* **விளைவு குன்றிப்போதல்** (இ.வ.); to fail, as a crop. *6.* **சுவையற்றுப்போதல்**; to fall flat as a song. பாட்டுச் சவுத்துப் போயிற்று (வின்.); *7.* **முறுமுறுப்பு அற்றுப்போதல்**; to lose crispness. 'முறுக்கு சவுத்துப்போயிற்று' (இ.வ.).

க. சவுக.

[தவுதல் = குன்றுதல், குறைதல். தவு → சவு = விலைகுறைதல், குன்றிப் போதல்]

சவுக்கடி¹ *šavukkadi*, பெ. (n.) **சாட்டையடி**; the lash, a corporal punishment.

[சவுக்கு + அடி]

சவுக்கடி² *šavukkadi*, பெ. (n.) **கடுக்கனில் உள்ள தொங்கல்** (வின்.); pendant of an ear-ring.

தெ. சௌகட்டு.

[சவுக்களி → சவுக்கடி]

சவுக்கடிக்கூடு *šavukkadi-k-kūdu*, பெ. (n.) **அணிகலனில் (ஆபரணத்தில்) மணி (இரத்தினம்) பதிக்கும் உம்மிசம்** (யாழ்ப்.); socket for gems in ornament.

[சவுக்கு + அடி + கூடு]

சவுக்கண்டி *šavukkaṇḍi,* பெ. (n.) தோப்பில் கட்டப்படும் கொட்டகை (கொ.வ.); summer-house, quadrangular shed within a garden.

[சதுக்கம் → சவுக்கம் → சவுக்கண்டி]

த. சவுக்கண்டி → U. caukkaṇdi.

சவுக்கப்பட்டை *šavukka-p-paṭṭai,* பெ. (n.) முத்துகள் கொண்டு கோக்கப்பட்ட அணிகலன்; pearl ornament. *2.* புங்கப்பட்டை; bark of Indian beech. "துலுக்காண(ம்) சவுக்கப்பட்டை" (தெ.க.தொ.24: க. 442: 3).

[சதுக்கம் → சவுக்கம் + பட்டை.பட்டு → பட்டம் = பட்டையான தகடு. பட்டு → பட்டை = தட்டையான பொருள், மரத் தண்டின் பாகத்தைச் சுற்றியுள்ள பட்டையான புறணி]

சவுக்கம் *šavukkam,* பெ. (n.) *1.* சதுரம்; square. *2.* சிறுதுண்டு; square piece of cloth; towel. *3.* இலிங்கப் பெட்டகம் (இ.வ.); small case for keeping liṅgam. *4.* தாளத்தின் விளம்பம்; slow time measure. *5.* பேச்சு முதலியவற்றில் நேர்த்தி; finesse or neatness in language. சவுக்கமாய்ப் பேசுகிறான் (உ.வ.). *6.* கற்றச்சனுடைய உளி (இ.வ.); stone cutter's chisel.

[சதுக்கம் → சவுக்கம்]

த. சவுக → Pkt. caukka

சவுக்கவர்ணம் *šavukka-varṇam,* பெ. (n.) (இசை) நடனத்திற்குரிய இசைப்பாட்டு வகை; a species of varṇam sung in dances.

[சவுக்கம் + வர்ணம்]

சவுக்களி[1] *šavukkaḷi,* பெ. (n.) *1.* காதணிவகை; a kind of ear-ring. "சற்று மறுவில்லாச் சவுக்களியும்" (பணவிடு. 243). *2.* கடுக்கனோடு சேர்க்கும் பொன் தகடு (வின்.); small gold piece appended to ear-rings. *3.* எட்டுப் புடைவை கொண்ட நீண்ட துணி (இ.வ.); a long piece of eight sarees. *4.* ஒருவகைப் புடைவை (இ.வ.); a kind of saree.

ம. சவுக்கிளி; க. சவுகளி; து. செளகளி

[சவுக்கு → சவுக்களி]

சவுக்களி[2]**-த்தல்** *šavukkaḷi-,* 4 செ.கு.வி. (v.i.) சவக்களி-த்தல், (இ.வ.) பார்க்க; see *šavakkaḷi-*

[சவக்களி → சவுக்களி]

சவுக்களிக்கடுக்கன் *šavukkaḷi-k-kaḍukkaṉ,* பெ. (n.) கடுக்கன்வகை (வின்.); ear-ring with šavukkaḷi pendant.

[சவுக்களி + கடுக்கன்]

சவுக்காக்கினை *šavukkā-k-kiṉai,* பெ. (n.) சாட்டையடித் தண்டனை (Pond.); sentence of whipping.

[சவுக்கு + ஆக்கினை]

சவுக்காரக்கல் *šavukkāra-k-kal,* பெ. (n.) ஒருவகை மாக்கல் (M.M.248); soapstone, a metamorphic rock.

[சவுக்காரம் + கல்]

சவுக்காரப்பிலுக்கு *šavukkāra-p-pilukku,* பெ. (n.) பகட்டாரவாரம் (இடம்பம்) (இ.வ.); foppery, vanity in dress.

[சவுக்காரம் + பிலுக்கு]

சவுக்காரம் *šavukkāram,* பெ. (n.) சவக்காரம் பார்க்க; see *šava-k-kāram* "தரைக்குள் வழலையெனப் பேர் வகித்த சவுக்காரம்" (பதார்த்த. 1106).

ம. சவர்க்காரம், க. சபுகார, சபகார, சவகார; தெ. செளகாரமு; து. சபகார, சபுகார செளகார

[சவர்க்காரம் → சவுக்காரம்]

த. சவுக்காரம் → Skt. yavakṣāra

சவுக்கி *šavukki,* பெ. (n.) சவிக்கை பார்க்க; see *šavikkai* (செ.அக.).

[சவிக்கை + சவுக்கி]

சவுக்கு[1] *šavukku,* பெ. (n.) உயரமாக வளரக் கூடியதும் மணற்பாங்கான நிலத்தில் பயிராகக் கூடியதுமான மரவகை; Casuarina pine (சா.அக.).

ம. சவுக்க, சவோக்கு; க சம்புக்கு, சம்பக; தெ. சம்புகு செட்டு

[சவட்டு → சவட்டை → சாட்டை. சவட்டு → சவக்கு → சவுக்கு]

சவுக்கு வகை:

1. ஆற்றுச் சவுக்கு
2. கோடைச் சவுக்கு
3. சிவப்பாற்றுச் சவுக்கு
4. சிவப்புக் கோடைச் சவுக்கு
5. சிவப்புச் சிறுசவுக்கு
6. சிறுசவுக்கு

சவுக்கு[2] *šavukku,* பெ. (n.) குதிரைச்சாட்டை; whip, horse-whip. "சவுக்கிட்டடிக்கின்ற மன்னர்க்கு" (திருவேங். சத. 46); 'ஆயிரம் பொன் பெற்ற குதிரைக்கு அரைப்பணத்துச் சவுக்கு' (பழ.).

ம. சவுக்கு; து. சபுகு

[சவட்டு → சவட்டை → சாட்டை. சவட்டு → சவக்கு → சவுக்கு]

சவுக்கு[2] *šavukku,* பெ. (n.) சவுக்கை[2] பார்க்க; see *šavukkai*[2].

[சதுக்கம் → சவுக்கம் → சவுக்கை → சவுக்கு]

த. சவுக்கு → Pkt. šavkka

சவுக்குக்கம்பம் *šavukku-k-kambam,* பெ. (n.) மிலாறு நீக்கப்பட்ட சவுக்குமரத் துண்டு; cavukku-post.

[சவுக்கு + கம்பம்]

சவுக்குநாற்று *šavukku-nāṟṟu,* பெ. (n.) சவுக்கு மரம் வளர்ப்பதற்குரிய நாற்று; šavukkai seedlings.

[சவுக்கு + நாற்று]

சவுக்குமிலாறு *šavukku-milāṟu,* பெ. (n.) சவுக்கு மரத்தின் கிளைப்பகுதி; branches of savukku.

[சவுக்கு + மிலாறு]

சவுக்கை[1] *šavukkai,* பெ. (n.) வேம்பு, ஆல், புளி போன்ற மரங்களடர்ந்த சோலையில் ஊர்ச் சபை கூடுவதற்காகக் கட்டப்பட்ட சாவடி; village assembly shed (கட்டட).

ம. சவுக்க; க. சவுக (சதுரமான துணி)

[சதுக்கம் → சதுக்கை → சவுக்கை]

சவுக்கை[2] *šavukkai,* பெ. (n.) சதுரத் திண்ணைக் கொட்டகை; square shed, raised square platform for sitting. "என்னைச் சவுக்கையில் வைத்து... வீட்டிற்குட் போய்ப் புகுந்தார்" (விறலி விடு. 112).

[சதுக்கம் → சதுக்கை → சவுக்கை]

த. சவுக்கை → Pkt. cavkka

சவுக்கை[3] *šavukkai,* பெ. (n.) 1. காவலிடம்; station of a guard or watchman, police station (R.F.). 2. காவற்கூடம்; lock-up (R.F.). 3. சுங்கச் சாவடி; custom-house (R.F.).

[சதுக்கம் → சதுக்கை → சவுக்கை. தெருச் சந்திப் பகுதியில் சுங்கச்சாவடி அமைத்தலை குறித்த இச்சொல் காலப்போக்கில், காவலிடம், காவற்கூடம் ஆகியவற்றையும் குறித்தது]

சவுக்கை → U. cavuku

சவுக்கை[4] *šavukkai,* பெ. (n.) விலைமலிவு (வின்.); cheapness.

ம. சவுக்கல்; க. சவுக; தெ. சௌக; Mar. šavanga

[தவு → சவு. சவு → சவுக்கை]

சவுக்கை[5] *šavukkai,* பெ. (n.) சவுக்கு[1] பார்க்க; see *šavukku*[1].

[சவுக்கு[1] → சவுக்கை]

சவுக்கைதார் *šavukkai-dār,* பெ. (n.) சவுக்கையிலிருக்கும் பணியாளர்; officer in a šavukkai.

[சவுக்கை + தார்]

U. dār → த. தார்

சவுக்கைமேடை *šavukkai-mēḍai,* பெ. (n.) சவுக்கை[2] பார்க்க; see *šavukkai*[2].

[சவுக்கை + மேடை]

சவுகந்தி *šavugandi,* பெ. (n.) வசம்பு (மலை.); sweet flag.

[சௌகந்தம் → சவகந்தம் → சவுகந்தி]

சவுங்கல் *šavuṅgal,* பெ. (n.) சவங்கல் பார்க்க; see *šavaṅgal.* "சன்னை தெரியாதோ சவுங்கலே" (விறலிவிடு. 762).

[சவங்கு → சவங்கல் → சவுங்கல்]

சவுங்கு-தல் *šavuṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) மயங்கி விழுதல் (மூர்ச்சையாதல்); to faint, droop.

[சவங்கு → சவுங்கு]

சவுசயம் *šavušayam,* பெ. (n.) முருக்குமரம் (மலை.); Indian coral tree.

சவுட்டுநிலம் *šavuṭṭu-nilam,* பெ. (n.) சவுர்நிலம் பார்க்க (செங்கை.); see *šavur-nilam.*

[சவர் → சவடு → சவுடு + நிலம்]

சவுட்டுமிதி-த்தல் *šavuṭṭu-midi-,* 4 செ.குன்றாவி. (v.t.) உப்பு விளைச்சலுக்காக உழவு செய்த பின்னர் வயலில் கிடக்கும் சிறுசிறு கட்டிகளை மிதித்தல் (மீனவ.); to break clods into pieces.

[சவுட்டு + மிதி-,]

சவுடு *šavuḍu,* பெ. (n.) *சவடு (வின்.);* sediment.

தெ. *சவுடு;* க. *சவுளு*

[சவடு → சவுடு]

சவுண்டிகன் *šavuṇḍigaṉ,* பெ. (n.) *கள் விற்போன் (சௌண்டிகன்) (வின்.);* vendor of spirituous liquors.

Skt. sauṇḍika

சவுத்தி *šavutti,* பெ. (n.) *சதுர்த்தி (இ.வ.);* fourth day of a lunar fortnight.

Pkt. šavutthī; Skt. Caturthī

[சதுரம் → சதுர்த்தி → சவுத்தி]

சவுத்து *šavuttu,* பெ. (n.) *முன்வகை;* manner, method. *"இவற்றுணோக்குஞ் சவுத்தறிவான்" (சினேந். பாயி. 4).*

தெ. சவது

சவுதம்[1] *šavudam,* பெ. (n.) *1. விலைமலிவு (இ.வ.);* lowness of market price, cheapness. *2. விற்பனையாகாமல் கட்டுக்கிடையாக இருக்கும் பொருள் (வின்.);* old stock of goods lying unsold. *3. சோர்வு (யாழ்ப்.);* tiresomeness fatigue, as of mind. *4. இளைப்பு (யாழ்ப்.);* weakness, emaciation.

[சம்புதல் = விலைகுறைதல். சம்பு → சம்பல் = விலையிறக்கம், மலிவு. சம்பு → சவு → சவுதம்]

சவுதம்[2] *šavudam,* பெ. (n.) *1. நாட்டியத்தின் நடன (கதி) வகை;* a mode of dancing (Nāṭya). *"சவுத விகற்பமுங் காட்டி" (குற்றா. தல. தருமசாமி. 55). 2. சவுக்கம்–4 பார்க்க* (Mus.); see *šavukkam-4.*

Pkt. saukka

சவுதரி-த்தல் *šavudari-,* 4 *செ.குன்றாவி.* (v.t.) *1. சவதரி–த்தல் (யாழ்.அக.) பார்க்க;* see *šavadari. 2. பாதுகாத்தல், காப்பாற்றுதல்;* to support, maintain.

[சவதரி → சவுதரி–,]

சவுதாரிப்பாய் *šavudāri-p-pāy,* பெ. (n.) *முரட்டுக்கோரையால் நெய்யப்பட்ட பாய் (இ.வ.);* a kind of coarse mat.

[சவுதாரி + பாய்]

சவுநாகம் *šavunāgam,* பெ. (n.) *கையாந்தகரை (மலை.);* a plant.

சவுமம் *šavumam,* பெ. (n.) *சிற்ப நூல் முப்பத்திரண்டனுள் ஒன்று;* one of the treatise on architecture.

.**சவுர்நிலம்** *šavur-nilam,* பெ. (n.) *களர்நிலம் (செங்கை);* alkaline earth; saline soil.

[சவர் → சவுர் + நிலம்]

சவுரி[1] *šavuri,* பெ. (n.) *திருமால் (சூடா.);* Tirumāl.

[சவரி → சவுரி]

சவுரி[2] *šavuri,* பெ. (n.) *கள்வன் (சூடா.);* thief, robber.

[கவர் → கவரி → சவரி → சவுரி]

சவுரி[3] *šavuri,* பெ. (n.) *குறட்டை (தைலவ.தைல. 133);* bitter snake-gourd.

[சவர் → சவரி → சவுரி]

சவுரிக்கயிறு *šavuri-k-kayiṟu,* பெ. (n.) *தென்னைநார்க் கயிறு (வின்.);* cord of coconut fibre.

[சவரி' + கயிறு]

சவுரியம்[1] *šavuriyam,* பெ. (n.) *களவு (சூடா.);* theft, robbery.

[கவர் → சவர் → சவுர் → சவுரியம்]

சவுல் *šavul,* பெ. (n.) *ஆ (பசு), குதிரை முதலியன சினைப்படுகை (வின்.);* pregnancy of cows, mares, etc.

[சூல் → சவுல்]

சவுல்மண் *šavul-maṇ,* பெ. (n.) *வெண்மை கலந்த சதுப்புமண் (தருமபுரி);* a kind of soil, marsh.

க. சவுள் (உவர்ப்பு)

[சவுள் → சவுல் + மண்]

சவுள் *šavuḷ,* பெ. (n.) *கழிவு உப்பினை வெட்டி அள்ளுதற்கேதுவான மண்வெட்டி போன்ற கருவி (மீனவ.);* a kind of hoe, shovel.

[சவள் → சவள் → சவுள்]

சவள் பார்க்க

சவுளி *šavuḷi*, பெ. (n.) சவளி³ பார்க்க; see *šavaḷi*³. "கலைச்சவுளித் தலைக்குலவி" (திருப்பு. 123).

து. சவுளி

[சவளி → சவுளி]

சவை¹-த்தல் *šavai-*, 4 செ.குன்றாவி. (v.t.) மெல்லுதல்; to chew, munch. 2. குழந்தை தாய்ப்பாலைச் சப்புதல் (இ.வ.); to suck mother's milk.

ம. சவய்க்குக; தெ. சப்பு; குட. சவெ; நா. சவச்; பர். சவல்; மா. சொப்யெ.

[அசைத்தல் = கூறுபடுத்துதல், அறுத்தல். அசை → சசை → சவை. சவை = மெல்லுதல், மென்று உண்ணுதல், தாய்ப் பாலை உறிஞ்சிக் குடித்தல்]

சவை² *šavai*, பெ. (n.) 1. மாந்தர் கூட்டம் (பிங்.); assembly of men 2. அறிஞர் கூட்டம்; assembly of learned men. "சவைநடுவே நீட்டோலை வாசியா நின்றான்" (மூதுரை. 137). 3. கற்றறிந்தோர் (திவா.); learned persons.

[அமைதல் = பொருந்துதல், கூடுதல். அமை = கூட்டம். (முதனிலைத் தொழிலாகு பெயர்). அமை → அவை. அவை → சவை. ஒ.நோ: அமர் → சமர். அமை → சமை. சவை → சபை. ஒ.நோ: உருவு → உருபு. செய்வவர் → செய்பவர். சபையென்னும் தென்சொல்லே வட மொழியிற் சபா (sabhā) என்னுஞ்சொல்லிற்கு மூலமாகும். வடமொழியிற் கூறும் வேர்ப்பொருள் விளங்குவது (பிரகாசிப்பது). விளக்கத்தோடு கூடியது என்பதே. ஸ = கூட, பா (bhā) = விளங்கு, ஒளிர் (பிரகாசி, to shine) / பா என்பது பால் (வெண்மை, ஒளி) என்பதன் கடைக் குறையாகவுமிருக்கலாம்]

காலஞ்சென்ற சு.கு. சட்டர்சி அதைமறுத்து, 'sib' என்னும் தியூத்தானிய அல்லது செருமானியச்சொல்லினின்று ஸபா என்னுஞ் சொல் திரிந்ததாகக் கூறினார். ஆயின், 'sib' என்பது உடன்பிறந்தாருள் ஒருவரைக் குறிக்குஞ் சொல்லாதலால், அது பொருந்தாது. ஆகவே அவை என்பதை மூலச்சொல்லாகக் கொள்வதே பொருத்தமாம் (செல்வி. 78. பக். 425)

சவை³ *šavai*, பெ. (n.) ஆடவை ஓரை (மிதுன ராசி) (உரி.நி.); gemini of the zodiac.

[அவை → சவை]

சவைக்கக்கொடு-த்தல் *šavaikka-k-koḍu-*, 4 செ.குன்றாவி. (v.t.) முலையூட்டுதல் (இ.வ.); to give suck to.

[சவைக்க + கொடு-,]

சவைக்கோழை *šavai-k-kōḻai*, பெ. (n.) கோழை (இ.வ.); one who is nervous in company or assembly.

[சவை + கோழை]

சவைமகள் *šavai-magaḷ*, பெ. (n.) சவை³ பார்க்க (பிங்.); see *šavai*³.

[சவை + மகள்]

சவையரம் *šavai-y-aram*, பெ. (n.) ஒருவகை அரம் (C.E.M.); a kind of file.

[சவை + அரம்]

சவையல் *šavaiyal*, பெ. (n.) பொழுதுபோக்கு (இ.வ.); amusement, diversion.

[அவை → சவை → சவையல்]

சவையார் *šavaiyār*, பெ. (n.) 1. ஊரவையோர் (S.I.I. 11, 132); members of a village council. 2. பிராமணரில் ஒரு பிரிவினர் (G.Tj.D.I.78) a sect of Brahmins.

[அவை → சவை → சவையார்]

பழந்தமிழகத்தில் ஒவ்வோர் (ஆள்நில) ஊரிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சவை இருந்தது. அச்சவையார்க்கு ஆளுங்கணம் என்றும் கணப்பெருமக்கள் என்றும் வாரியப் பெருமக்கள் என்றும் கணவாரியப் பெருமக்கள் என்றும் பெயர்.

சவைவாரியர் *šavai-vāriar*, பெ. (n.) ஊரவையின் ஆளுங்கூட்டத்தார் (I.M.P. Tn. 29.); managing committee of a village assembly.

[சவை + வாரியர்]

பழந்தமிழகத்தில் ஊர்ச்சபையானது ஊராட்சி பற்றிய பல்வேறு காரியங்களைக் கவனித்தற்குப் பல்வேறு வாரியமாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வாரியம் என்பது மேற்பார்வை அல்லது மேலாண்மை. ஊரைப்பற்றிய பொதுக் காரியங்களையும் அறமுறை, குற்றத்தீர்ப்பு முதலியவற்றையும் கவனிப்பது ஆட்டை வாரியம் (சம்வத்சாரவாரியம்); தோட்டம், தோப்பு, புன்செய் முதலியவற்றைக் கவனிப்பது தோட்டவாரியம்; நன்செய்களைக் கவனிப்பது கழனிவாரியம்; ஏரி, குளம், ஆறு

முதலிய நீர்நிலைகளைக் கவனிப்பது ஏரி வாரியம்; ஏரி, குளங்களிலுள்ள கலிங்குகளையும் மதகுகளையுங் கவனிப்பது கலிங்குவாரியம்; ஊரில் வழங்கும் காசு (நாணயங்)களை நோட்டஞ் செய்து, நற்காசுகளையே செலாவணியாக்குவது பொன் வாரியம்; ஊர்ச்சபைக் கணக்குகளைக் கவனிப்பது கணக்குவாரியம்; பஞ்சகாலத்திற் பயன்படும் படி வளமைக்காலத்தில் உணவுப் பொருள்களைத் தொகுத்து வைப்பது பஞ்சவாரவாரியம் (பஞ்சவாரியம்); ஊரிலும் அக்கம்பக்கத்திலு முள்ள பெருவழிகளைக் கவனிப்பது தடிவழிவாரியம்; ஊரிலுள்ள குடும்புகளைக் கவனிப்பது குடும்புவாரியம்.

இவற்றுள் சில வாரியங்கள் பலவூர்களி லில்லை.

ஊர்ச்சபைக் கணக்கெழுதுபவன், கரணத்தான் (மத்தியஸ்தன்) எனப்படுவான்.

ஊர்ச்சபை வேலைக்காரனுக்கு வெட்டி (வெட்டியாள், வெட்டியான்) என்று பெயர் *(ப.ப. 29, 30)*

சவைவாள் *šavai-vāḷ*, பெ. (n.) ஒருவகை வாள் *(கட்டிட. நாமா. 41)*; tenon-saw.

[சவை + வாள்]

சழக்கன் *šaḻakkaṉ*, பெ. (n.) தீயவன்; wickedman. *"சழக்கனே னுனைச் சார்ந்திலேன்" (திருவாச. 30, 2).*

[சழங்கன் → சழக்கன்]

சழக்கு *šaḻakku*, பெ. (n.) *1.* குற்றம்; fault, blemish. *உள்ளச் சழக்கு மறினே பிறவி யறும் (சைவச. பொது. 404). 2.* தீமை; wickedness. *"சழக்கு நாக்கொடு" (திவ். பெரியாழ். 5.1.2).* **3. பயனின்மை;** uselessness. *"சழக்கே பறிநிறைப் பாரொடு தவமாவது செயன்மின்" (தேவா. 1154. 4). 4.* **தளர்ச்சி;** fatigue, exhaustion. *"ஒரு சழக்கறச் சமருழக்கினான்" (பாரத. இராச. 61).*

[சழங்கு → சழக்கு]

சழக்குச்சழக்கெனல் *šaḻakku-c-calak-k-enal*, பெ. (n.) சழக்குப்புழக்கெனல் பார்க்க; see *šaḻakku-p-puḻakkeṉal (செ.அக.).*

[சழக்கு + சழக்கு + எனல்]

சழக்குப்புழக்கெனல் *šaḻakku-p-puḻa-k-eṉal*, பெ. (n.) சிதறடிப்பதை உணர்த்தும் ஒலிக்குறிப்பு; onom. expr. of splashing sound.

[சழக்கு + புழக்கு + எனல்]

சழக்கெனல் *šaḻakkeṉal*, பெ. (n.) சழக்குப் புழக்கெனல் பார்க்க; see *šaḻakku-p-puḻakkeṉal.*

[சழக்கு + எனல்]

சழங்கு[1]-தல் *šaḻaṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) *1.* சோர்தல்; to languish; to be enfeebled. *"உடல் சழங்க லுற்றது" (காஞ்சிப்பு. தழுவக். 93). 2.* நெகிழ்தல்; to be loose - fitting, to hang loose, as one's garment. *"சழங்க லுடையார்ந் தழகு கொள்ள" (பெரியபு. தடுத்தாட். 31).* **3. தொங்கி யசைதல்;** to dangle. *"வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க" (பெரியபு. தடுத்தாட். 29).*

[சுள் → சள் → சழ → சழங்கு-,]

சழங்கு[2] *šaḻaṅgu*, பெ. (n.) முதுமைத் தளர்ச்சி *(யாழ்ப்.)*; decrepitude due to old age.

[சழங்கு[1] → சழங்கு[2]]

சழி-தல் *šaḻi-*, 2 செ.கு.வி. (v.i.) *1.* சப்பளிதல்; to be pressed out of form, crushed down on one side; to be squeezed and distorted. *2.* தளர்தல்; to become crumpled, wrinkled. 'தேகஞ் சழிந்துவிட்டது' (உ.வ.). **3. நெருங்கிக் கிடத்தல்;** to lie thick and close. *"திங்கட்டொல்லரா நல்லிதழி சழிந்த சென்னி" (தேவா. 980. 6).* **4. ஊழற்சதை வைத்தல்;** to grow flabby.

ம. சழயுக; க. சடில் (நெகிழ்தல்)

[சுல் = வளைதற் கருத்துவேர். சுல் → சுள் → சுளகு = வளைத்துப்பின்னும் புடைப்புத்தட்டு. சுள் → சுளி. சுளிதல் = திரிதல். சுளித்தல் = வெறுப்பால் முகத்தைத் திரித்தல். சுள் → சுளி → சளி → சழி. சழி-தல் = உடற்சதை சரிந்து தளர்தல் (வே.க. 227)]

சழிவுநெளிவு *šaḻivu-neḷvu*, பெ. (n.) கோணல் மாணல்; unshapely, distorted condition.

[சழிவு + நெளிவு. சளி → சழி → சழிவு]

சழுக்கம் *šaḻukkam*, பெ. (n.) *1.* நெகிழ்ச்சி; looseness, as of garment. *2.* மனமழிகை; rankling, as with envy. *"மனச்சழுக்கம்" (திவா.8,109).*

[சள் → சழு → சழுங்கு → சழுக்கம் (மு.தா.310)]

பொருள் குழைவும் மனக்குழைவும் எனக் குழைவு இருவகை. சளுத்தல் = சேறாதல். சள்ளல் = சேறு போன்றன பொருள் குழைவு.

சழுக்கம் = நெகிழ்ச்சி. மனமழிதல் போன்ற மனக்குழைவு. இவை இரண்டிற்கும் 'சள்' துளைப்பொருள்கருத்து வேரே அடிப்படை துளை விழுந்த பொருள் போல் கட்டுவிடுதல் குழைதல்.

சழுங்கல் *šaluṅgal*, பெ. (n.) சழுக்கம் (வின்.) பார்க்க; see *šalukkam*[1].

[சள் → சழு → சழுங்கு → சழுங்கல்]

சழுங்கு-தல் *šaluṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. சழங்கு-2 (யாழ்ப்.) பார்க்க; see *šaluṅgu-2*. 2. மழுங்குதல் (வின்.); to become blunt.

[சள் → சழு → சழுங்கு (மு.தா.310)]

சள் *šaḷ*, பெ. (n.) சுவையின்மையைக் காட்டும் குறிப்பு; onom. expr. of signifying insipidity.

சள்ளட்டியெனல் *šaḷḷaṭṭi-y-eṉal*, பெ. (n.) ஓர் ஒலிக்குறிப்பு (யாழ்ப்.); onom. expr. of snarling.

[சள்ளட்டி + எனல்]

சள்ளல் *šaḷḷal*, பெ. (n.) சேறு (யாழ்ப்.); mud, slush.

ம. சளிப்புறம் (சேற்றுநிலம்)

[சுள் → சள் → சள்ளல் (மு.தா. 310)]

அள்ளல் → சள்ளல் என்றுமாம்.

சள்ளு[1]-தல் *šaḷḷu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. இளகுதல் (வின்.); to slacken, abate. 2. எருவாய்க் காற்றுப் பிரிதல் (R.); to break wind. 3. சிக்குதல் (R.); to be entangled, involved.

ம. சள்ளுக; க. சல்லு (உரம் முதலியவற்றைப் பரப்பு); தெ. சொள்ள, சள்ளு

[சுள் → சள் → சள்ளுதல் (மு. தா. 312)]

சள்ளு[2]-தல் *šaḷḷu-*, 5 செ.கு.வி. (v.i.) துளை விழுதல்; to form hole.

[உள் → அள் → சள்-,]

சள்ளு[3] *šaḷḷu*, பெ. (n.) 1. சள்ளை[1] பார்க்க (இ.வ.); see *šaḷḷai*[1]. 2. சள்ளுக்காய் பார்க்க; see *šaḷḷu-k-kāy*.

க. சள்ளு.

[சுள் → சள் → சள்ளு]

சள்ளுக்காய் *šaḷḷu-k-kāy*, பெ. (n.) முற்றாத இளங்காய் (இ.வ.); tender and undeveloped green fruit.

[சள் → சள்ளு + காய்]

சள்ளுச்சள்ளெனல் *šaḷḷu-c-caḷḷeṉal*, பெ. (n.) 1. நாய் குரைக்கும் ஒலிக்குறிப்பு (சங்.அக.); dogs bark. 2. சினத்துடன் பேசுங் குறிப்பு; growling with anger.

[சள்ளு + சள்(ளு) + எனல்]

சள்ளுப்படு-தல் *šaḷḷu-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) தொல்லைக்குள்ளாதல் (இ.வ.); to undergo troubles, difficulties.

[சள்ளு + படு-,]

சள்ளுப்புள்ளு *šaḷḷu-p-puḷḷu*, பெ. (n.) 1. சண்டை (கொ.வ.); quarrel. 2. தொல்லை (யாழ்ப்.); trouble, worry.

[சள்ளு + புள்ளு. எதுகை நோக்கி வந்த மரபிணைமொழி]

சள்ளுப்புள்ளெனல் *šaḷḷu-p-puḷḷeṉal*, பெ. (n.) சள்ளுச்சள்ளெனல் (இ.வ.) பார்க்க; see *šaḷḷu-c-caḷḷeṉal*.

[சள் → சள்ளு + புள்ளு + எனல்]

சள்ளுவாயன் *šaḷḷu-vāyaṉ*, பெ. (n.) ஓயாது பேசுபவன் (இ.வ.); talkative fellow.

[சள்ளு + வாயன்]

சள்ளெனல் *šaḷ-ḷ-eṉal*, பெ. (n.) சள்ளுச்சள்ளெனல் பார்க்க; see *šaḷḷu-c-caḷḷeṉal*. 'சள்ளென விழுகிறான்' (உ.வ.).

[சள் + எனல்]

சள்ளை[1] *šaḷḷai*, பெ. (n.). 1. தொல்லை ; trouble, annoyance. 2. ஆற்றுமீன்வகை; grey river-mullet, Mugil. "சள்ளை வெள்ளை யங்குருகு தானதுவா மெனக்கருதி வள்ளை வெண்மலரஞ்சி" (தேவா. 628, 4).

பட. சள்ளெ

[சள் → சள்ளை]

சள்ளை[2] *šaḷḷai*, பெ. (n.) இடுப்பு (யாழ்ப்.); hip.

க., பட. அள்ளெ

[அள் → அள்ளை = விலாப்புறம். அள்ளை → சள்ளை]

சள்ளைக்கடுப்பு *šaḷḷai-k-kaḍuppu*, பெ. (n.) குளிர்மிகையால் நேரிடும் உடல் வலி; pain in the body caused by cold.

[சள்ளை + கடுப்பு]

சளக்குப்புளக்கெனல் *šaḷakku-p-puḷak-k-enal,* பெ. (n.) சழக்குப்புழக்கெனல் பார்க்க; see *šaḷakku-p-puḷak-k-enel.*

[சளக்கு + புளக்கு + எனல்]

சளக்கெனல் *šaḷakkenal,* பெ. (n.) ஓர் ஒலிக் குறிப்புச்சொல் ; onom. expr. of crashing sound. "சளக்கென் றடித்தாள் சதிகாரி" *(விறலிவிடு. 894).*

[சள் → சளக்கு + எனல்]

சளகந்தம் *šaḷagandam,* பெ. (n.) வசம்பு (மலை.); sweet-flag.

சளகன் *šaḷagaṉ,* பெ. (n.) நிலையற்ற மனமுடையவன்; weak, fickle-minded man. "சளகரல்லாத சதுரர்" *(திருநூற். 61).*

[அல் → (அலை) → அலம்பு = அசைதல். அல் → சல் → சள் → சளம் = அசைதல், துன்பந்தருதல். சளம் → சளகன் = அலைபாயும் மனமுள்ளவன்]

சளசண்டி *šaḷa-šaṇḍi,* பெ. (n.) விடாபிடிக்காரன், அடம்பிடிக்கிறவன்; obstinate and impudent fellow.

[சளம் + சண்டி]

சளசள-த்தல் *šaḷa-šaḷa-,* 4 செ.கு.வி. (v.i.) 1. சேறாயிருத்தல்; to be wet, muddy, sloppy. 2. அருவி மழை முதலியவற்றின் வீழ்ச்சியால் ஒலியுண்டாதல்; to patter as rain. 3. கறி முதலியன குழைந்து நீராய் விடுதல் (வின்.); to become watery as vegetable, curries. 4. எதிர்ப் பேச்சு (வாதம்) முதலியவற்றால் தளர்ச்சி யடைதல் (யாழ்ப்.); to be discomfited, dispirited in controversy or in public speaking.

ம. சளியுக.

[சுள் → சள் → சள்ளல் = சேறு. சளசள = சேறாயிருக்குந் தன்மையையுணர்த்தும் ஒலிக்குறிப்புச்சொல். சளசளத்தல் = குழைதல், நெகிழ்தல், ஒழுகுதல், சதை தளர்தல், சோர்வான தன்மையில் பேச்சு வெளிப்படுதல்.]

சளசளவெனல் *šaḷa-šaḷa-v-eṉal,* பெ. (n.) சளசளெனல் பார்க்க; see *šaḷašaḷeṉal.* "சளசள வென மழைத் தாரை கான்றன" *(கம்பரா. திருவவ.46).*

[சளசள + எனல்]

சளசளெனல் *šaḷa-šaḷ-eṉal,* பெ. (n.). 1. அலப்புதற் குறிப்பு ; onom. expr. of babbling. 2. நீர்வீழ்ச்சி மழை முதலியவற்றால் உண்டாம் ஒலிக்குறிப்பு (பிங்.) splashing, pattering as of rain.

க. சளமள;

Mar. saḷasaḷa ṇēm

[சளசள + எனல்]

சளப்பு[1]-தல் *šaḷappu-,* 5 செ.கு.வி. (v.i.) அலப்புதல் (கொ.வ.); to babble, prate.

[அல் → அலை → அலம்பு. அலம்புதல் = அசைதல், அசைத்தல், அசைந்து ஒலித்தல். அலம் (த.வி.) → அலப்பு (பி.வி.) அலப்புதல் = நாவசைத்தல், பேசுதல். அலப்பு → சலப்பு → சளப்பு-]

சளப்பு[2]-தல் *šaḷappu-,* 5 செ.குன்றாவி. (v.t.) குழப்புதல் (சங்.அக.); to confuse; confound.

[அலப்பு → சலப்பு → சலிப்பு → சளப்பு = வீண்பேச்சுப் பேசுதல், பிதற்றுதல், குழப்புதல்]

சளபுள-த்தல் *šaḷa-puḷa-,* 11 செ.கு.வி. (v.i.) 1. ஒலித்தல் (யாழ்ப்.); to splash. 2. மனங் கலங்குதல்; to be disconcerted, abashed. 3. ஆற்றல் முதலியன குறைதல் ; to be reduced in power, wealth. 4. குழப்பமாயிருத்தல் (இ.வ.); to be in utter confusion.

[சள + புள-,]

சளம்[1] *šaḷam,* பெ. (n.) துன்பம்; pain, distress. "மறலி கொடுபோகுஞ் சளமது தவிர" *(திருப்பு. 584).*

[சள் → சளம்]

த. சளம் → Skt. cala.

சளம்[2] *šaḷam,* பெ. (n.) 1. ஏய்ப்பு, வஞ்சனை (யாழ்.அக.); deceit, fraud. 2. சீற்றம், கொடுவெறி (வின்.); fury.

[சள் → சளம் = கடுஞ்சினம்]

சளம்பம் *šaḷambam,* பெ. (n.) சட்டை வகை; a kind of coat. "தோன்முழுச் சளம்ப மீதலம்பவே" *(தக்கயாகப். 369).*

[சள் → சள → சளம்பம் = நெகிழ்ச்சியான அமைப்புள்ள ஆடை]

சளவட்டை *šaḷavaṭṭai,* பெ. (n.) *சரவட்டை (யாழ்ப்.) பார்க்க;* see *šaravaṭṭai.*

[சாவட்டை → சரவட்டை → சளவட்டை]

சளன் *šaḷaṉ,* பெ. (n.) *ஏய்ப்பன், வஞ்சகன்;* deceitful person. "காமச் சளன் செய்த கன்மத்தை" *(பிரபோத. 6:38).*

[சளம் → சளன்]

த. சளம் → Skt. chala

சளாரெனல் *šaḷār-eṉal,* பெ. (n.) *ஓர் ஒலிக்குறிப்பு;* onom. expr. of splashing.

[சளார் + எனல்]

சளி[1] *šaḷi,* பெ. (n.) 1. *குளிர்ச்சி ;* cold, chillness. "சளி கொள் சந்தின்" *(சீவக. 1693).* 2. *நீர்க்கோவை;* catarrh. 3. *மூக்குச்சளி;* mucus blown out of the nose. "மூக்குக்குட் சளியிளையோடும்" *(திருப்பு. 90).* 'சளிபிடித்ததோ சனிபிடித்ததோ' *(பழ.).* 4. *கோழை (வின்.);* phlegm. 5. *பிசின் (தைலவ.);* resin.

ம. சளி; க., து. சளி, சலி; தெ. சலி, சலும்பு

[தண் → சண் → சள் → சளி]

சளி[2]**-த்தல்** *šaḷi-,* 4 செ.கு.வி. (v.i.) *சளிநோய் கொள்ளுதல் (வின்.);* to catch cold.

ம. சளியுக (சேறாதல்)

[சளி[1] → சளி[2]-]

சளி[3]**-த்தல்** *šaḷi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. *புளித்தல்;* to become stale and sour. 2. *பதனழிதல் (வின்.);* to grow mouldy as food, as liquors in incipient fermentation; to be soaked too much; to rot. 3. *சழி -, 2. பார்க்க;* see *šaḷi-.* 'அவனுக்கு உடம்பு சளித்துப் போயிற்று' *(உ.வ.).*

ம. சளிக்கு; க. சளிய (பதனழிந்த தன்மை)

[சழி → சளி]

சளிசிந்து-தல் *šaḷi-šindu-,* 5 செ.கு.வி. (v.i.) *சளியை மூக்கிலிருந்து வெளியேற்றுதல்;* to blow out the nose.

[சளி + சிந்து-,]

சளிசுரம் *šaḷi-šuram,* பெ. (n.) *குளிர்காய்ச்சல்;* ague.

க. சளிச்வர

[சளி + சுரம். சுள் → சுர் → சுரம் = காய்ச்சல்]

த. சுரம் → Skt. jvara

சளிப்பு[1] *šaḷippu,* பெ. (n.) 1. *பதனழிகை;* sourness. 2. *ஊளைச்சதைப் பிடிக்கை;* flabbiness.

[சளி[3] → சளிப்பு]

சளிப்பு[2] *šaḷippu,* பெ. (n.) *நீர்க்கோவை (வின்.);* catarrh.

தெ. த்ஜலுபு

[சளி → சளிப்பு]

சளு-த்தல் *šaḷu-,* 4 செ.கு.வி. (v.i.) *சேறாதல்;* to become muddy.

ம. சளியுக.

[சள் → சள் → சளு-,]

சளுக்கன்[1] *šaḷukkaṉ,* பெ. (n.) *சளுக்குவேந்தன் பார்க்க;* see *šaḷukku-vēndaṉ.*

[சளுக்கு → சளுக்கன்]

சளுக்கன்[2] *šaḷukkaṉ,* பெ. (n.) *பகட்டாரவாரமிக்கவன் (இடம்பக்காரன்) (வின்.);* vain, foppish man. 'சளுக்கன் தனக்குச் சத்துரு சவளிக்காரனுக்கு மித்துரு' *(பழ.).*

[தளுக்கன் → சளுக்கன்]

சளுக்கி[1] *šaḷukki,* பெ. (n.) *சளுக்குவேந்தன் பார்க்க;* see *šaḷukku-vendaṉ.* "திங்களின் வழிவரு சளுக்கி" (தெ.க.தொ.3, 66).

[சளுக்கியன் → சளுக்கி]

சளுக்கி[2] *šaḷukki,* பெ. (n.) *நெல்வகை;* kind of paddy.

சளுக்கியன் *šaḷukkiyaṉ,* பெ. (n.) *சளுக்கு வேந்தன் பார்க்க;* see *šaḷukku-vēndaṉ.*

[சாளுக்கியன் → சளுக்கியன்]

சளுக்கு *šaḷukku,* பெ. (n.) 1. *பகட்டாரவாரம்;* foppery. 2. *செருக்கு (வின்.);* conceit, presumption.

[தளுக்கு → சளுக்கு]

த. சளுக்கு → U. cālak.

சளுக்குவேந்தன் *šaḷukku-vēndaṉ,* பெ. (n.) *தக்காணநாட்டை ஆண்ட சாளுக்கியவரசன் (பிங்.);* Chāḷuka king of the Deccan.

[சளுக்கு + வேந்தன்]

சளுகம் *śaḷugam*, பெ. (n.) அட்டை (திவா.); leech.

[சலம் → சலகம் → சலுகம் → சளுகம். நீரில் வாழ்வது]

சளுகம் → Skt. jalūkā

சளுவுவாயன் *śaḷuvu-vāyaṉ*, பெ. (n.) சள்ளு வாயன் (யாழ்ப். அக.) பார்க்க; see *śaḷḷu-vāyaṉ*.

[சள்ளுவாயன் → சளுவுவாயன்]

சளை-த்தல் *śaḷai-*, 4 செ.கு.வி. (v.i.) தளர்தல், சோர்தல் (உ.வ); to grow tired, become weary.

[சள் → சளை → சளைத்தல்]

சற்று[1] *śaṟṟu*, பெ. (n.) 1. சிறுக்கம், சிறிதளவு; trifle. "சற்றெனு மருங்குல்" (சூடா.10,30). 2. எளிமை; ease, facility. "இவ்வுருவமாயினும் பெறல் சற்றல" (வைராக். சத. 16).

[சிறு → (சிற்று) → சற்று]

சற்று[2] *śaṟṟu*, கு.வி.எ. (adv.) 1. சிறிது; little. 2. சிறிதளவில்; a little, somewhat, a little while. "சற்றேயுந் தாமறிவில்" (தேவா. 190. 10).

[சிறு → (சிற்று) → சற்று]

சற்றும் *śaṟṟum*, கு.வி.எ. (adv.) கொஞ்சங் கூட, அறவே; even a little. எனக்குப் பாகற்காய் சற்றும் பிடிக்காது.

[சற்று → சற்றும்]

சற்றுமம் *śaṟṟumam*, பெ. (n.) புளியம் புறணி (புளியம்பழத்தின் தோல்); tamarind shell (சா.அக.).

சற்றைக்கொருதரம் *śaṟṟai-k-koru-daram*, வி.எ. (adv.) சிறிதுநேரத்துக்கு ஒருமுறை; quite frequently, often. அவர் சற்றைக்கொரு தரம் திரும்பித் திரும்பிப் பார்க்கிறார்.

சறடு *śaṟaḍu*, பெ. (n.) அழுக்கு (மூ.அ); dirt.

[கசடு → சகடு → சறடு]

சறணி *śaṟaṇi*, பெ. (n.) கீல்; winge (யாழ்ப்.).

சறாம்பு-தல் *śaṟāmbu-*, 5 செ.குன்றாவி. (v.t.) பேணாதிருத்தல்; to neglect. "சறாம்பி யிருக்கையாய் உடம்பைப் பேணாதிருக்கை யென்னுதல்" (ஈடு., 4:8:4).

சறுக்கல் *śaṟukkal*, பெ. (n.) 1. வழுக்கல்; slipperiness, slipping. 2. வழுக்கலிடம் (உ.வ.); slippery place. 3. கலிங்கு (இ.வ.) calingula.

[சறுக்கு → சறுக்கல்]

சறுக்கல்வேலை *śaṟukkal-vēlai*, பெ. (n.) சுவரிலிருந்து விழும் நீரைச் சாக்கடையிற் செல்லவிடுவதாகிய ஒருவகைக் கட்டுமான வேலை (C.E.M); apron, a construction which conducts the drip on a wall into a gutter.

[சறுக்கல் + வேலை]

சறுக்கு[1]**-தல்** *śaṟukku-*, 5 செ.கு.வி. (v.i.) 1. வழுக்குதல்; to slip or slide. 'ஆனைக்கும் அடிசறுக்கும்' (உ.வ.). 2. வழுவுதல் (வின்.); to go astray. 3. செயல் நழுவுதல்; to slip out of hand, as an affair. 4. உராய்ந்துசெல்லுதல் (வின்.); to skim, graze.

ம. சறுக்கு; க. சரகு; தெ., பட. சாரு

[சருக்கு → சறுக்கு-,]

சறுக்கு[2] *śaṟukku*, பெ. (n.) 1. வழுக்குகை (வின்.); slipping, sliding. 2. சறுக்குக்கட்டை பார்க்க; see *śaṟuku-k-kaṭṭai*. 3. நழுவுகை (வின்.); fall in circumstances; failure. 4. நெம்புதடி; block or roller put under a log or other heavy thing to facilitate its motion. 5. சாக்குப்போக்கு (இ.வ.); subterfuge, pretext, excuse. 6. தடை (இ.வ.); obstacle, hindrance.

க. சரகு; தெ. சாரு; பட. சாரிகெ

[சருக்கு → சறுக்கு]

சறுக்குக்கட்டை *śaṟukku-k-kaṭṭai*, பெ. (n.) 1. தேர்ச்செலவை வழிப்படுத்துங் கட்டை; inclined plane set before the front wheels of a car to regulate its course. 2. ஆப்பு (C.E.M); wedge.

[சறுக்கு + கட்டை. குட்டு → குட்டை; குட்டை → கட்டை= உயரக்குறைவு, அகலக் குறைவு, நீளக்குறைவு]

சறுக்குப்பாறைவிளையாட்டு *śaṟukku-p-pāṟai-viḷaiyāṭṭu*, பெ. (n.) சரிவான பாறையின்மேல் பக்கத்தில் அமர்ந்து கீழ்நோக்கி வழுக்கி விளையாடும் சிறுவர் விளையாட்டு; sliding.

மறுவ. வழுக்குப் பாறை விளையாட்டு

[சறுக்கு + பாறை + விளையாட்டு]

சறுக்குமரம் *śaṟukku-maram,* பெ. (n.) 1. பந்தய வழுக்குமரம்; greased pole, slippery post for climbing, as in games. 2. சறுக்கிவிழும் விளையாட்டுப்பலகை; sliding bar, in gymnastics. 3. சறுக்குக்கட்டை[1] பார்க்க; see *śaṟukku-k-kaṭṭai*[1].

[சறுக்கு + மரம்]

சறுக்கை *śaṟukkai,* பெ. (n.) மதகு (W.G); surplus-weir, sluice, flood-gate.

[சறுக்கு → சறுக்கை]

சறுகு-தல் *śaṟugu-,* 5 செ.கு.வி. (v.i.) நழுவுதல்; to slip, slide, to fail. "காரியஞ் சறுகிப் போயிற்று" (இ.வ.).

[சறு → சறுகு-,]

சறுதாகம் *śaṟudāgam,* பெ. (n.) வேங்கை மரம்; Indian kino tree - Pterocarpus marsupium (சா.அக.).

சறுதாசம் *śaṟudāsam,* பெ. (n.) சறுதாகம் பார்க்க; see *śaṟudāgam.*

சறுதாவிகம் *śaṟu-dāvigam,* பெ. (n.) பூவரசு; portia tree - Thespesia populnae (சா.அக.).

சறுவாவி *śaṟu-vāvi,* பெ. (n.) செங்கடுக்காய்; a red variety of galnut - Terminalia chebula (சா.அக.).

சறுவானுகம் *śaṟuvāṉugam,* பெ. (n.) சிவதை; jalap - Ipomaea turpethum (சா.அக.).

சறை[1] *śaṟai,* பெ. (n.) தாழ்வு (ஈடு. 4.8.4.); lowness, inferiority.

[சறுக்குதல் = வழுக்குதல். உயரத்தினின்று தாழ நழுவுதல், தாழ்வு, சறு → சறை]

சறை[2] *śaṟai,* பெ. (n.) சறைமணி (ஈடு. 4.8.4); பார்க்க; see *śaṟai-maṇi.*

[அறைதல் = ஒலித்தல் அறை → சறை]

சறைணி *śaṟaiṇi,* பெ. (n.) தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டத்தில் வழக்கிலிருந்த ஓர் அளவை (முகத்தல் அளவை); kind of measure of capacity at Tañjāvūr district, Kumbakōṇam taluk. "திருவாளிக்கு குரவின்னு குலட்டினைக்கு கால் சறைணியும் விதனா னக்கு வடத்துக்கு கால் சறைணியும்" (த. மரா. செப்பேடுகள் - 50: 2-68).

[சறு → சறை → சறைணி]

சறைமணி *śaṟai-maṇi,* பெ. (n.) ஆநிரைகள் ஓசையைக்கேட்டு உடன்வருகைக்காக இடையர் அரையிற்கட்டி ஒலிப்பிக்கும் மணி (ஈடு, 4. 8. 4): herdsman's tinkling girdle, at the sound of which cows follow him to their stall.

[அறைதல் = ஒலித்தல். அறை → சறை + மணி. முள் → முட்டு = சிறியது. முட்டுகள் = சிறு பொருட்கள். முள் → (மள்) → மண் → மணி = சிறியது]

சறையினான் *śaṟaiyiṉāṉ,* பெ. (n.) உடம்பைப் பேணாதவன்; one who neglects his person; slovenly fellow. 'சறையினார் கவராத தளிர்நிறத்தால்' (திவ். திருவாய். 4. 8: 4).

[சறை → சறையினான்]

சன்மலி[1] *śaṉmali,* பெ. (n.) இலவு; red cotton. "சன்மலி முட் டைத்துச் சோர்வான்' (சேதுபு. தனுக்கோ. 14).

[சல் - சிவத்தற் கருத்துவேர். சல் → சல் → சன் + மலி]

சன்மலி[2] *śaṉmali,* பெ. (n.) உயிர்கட்குத் துன்பஞ் செய்வோரை முள்தைக்குமாறு செய்து துன்புறுத்தும் நிரையம் (நரகம்) (சேதுபு. தனுக்கோ. 3); a hell where ruthless people who never scruple to torment animals are tortured.

[சல் - குத்தற்கருத்துவேர். சல் → சல் → சன்மலி]

சன்னக்கம்பி *śaṉṉa-k-kambi,* பெ. (n.) 1. மெல்லியக்கம்பி; thin-wire. 2. ஆடையின் சிறுகரைக்கோடு; fine border, as of a cloth.

[சன்னம் + கம்பி]

சன்னக்காரணை *śaṉṉa-k-kāraṇai,* பெ. (n.) வெட்டிவேர்; cuscus root - Andropogon aromaticus alias Amuricatus (சா.அக.).

சன்னக்காரை *śaṉṉa-k-kārai,* பெ. (n.) கைக்கு மெதுவாகும்படி நன்றாயரைக்கப்பட்ட சுண்ணாம்பு; fine plaster.

க. சண்ணகாரெ

[சன்னம் + காரை]

சன்னக்கீற்றுரூபாய் *šanna-k-kīrru-rūbāy,* பெ. (n.) *பழைய காசு வகை (சரவண. பணவிடு 63);* an ancient coin.

[சன்னம் + கீறு + ரூபாய். உருவம் → ரூபம் → ரூபா → ரூபாய்]

சன்னக்கூனி *šanna-k-kūni,* பெ. (n.) கூனியிறால் *(பதார்த்த, 930);* a common shrimp.

[சன்னம் + கூனி]

சன்னக்கெண்டை[1] *šanna-k-kendai,* பெ. (n.) *மீன்வகை (பதார்த்த. 918);* a species of small barbus.

[சன்னம் + கெண்டை]



சன்னக்கெண்டை மீன்

சன்னக்கெண்டை[2] *šanna-k-kendai,* பெ. (n.). *பொடிச்சரிகைக் கம்பி;* fine braid of lace.

[சன்னம் + கெண்டை]

சன்னகம் *šannagam,* பெ. (n.) பூங்கருவி என்னும் படைக்கலம் *(பிங்.);* a weapon.

சன்னகா *šannagā,* பெ. (n.) நேர்வாளம்; croton seed - Croton tigilium *(சா.அக.).*

சன்னச்சம்பா *šanna-c-cambā,* பெ. (n.) ஆடவை கடக மாதங்களில் விதைத்து ஆறு மாதத்தில் விளையும் நெல்வகை; a kind of small šampā paddy sown in July-August and maturing in six months *(செ.அக.).*

க. சண்ணநெல்லு

[சன்னம் + சம்பா]

சன்னச்சம்பான் *šanna-c-campān,* பெ. (n.) *குதிரைவகை (அசுவசா. 152.);* a species of horse.

சன்னசாலம் *šanna-šālam,* பெ. (n.) சன்னசாலைக் கடுகு (மலை.) பார்க்க; see *šanna-šālai-k-kadugu.*

சன்னசாலை *šanna-šālai,* பெ. (n.) சன்னசாலைக் கடுகு (வின்.) பார்க்க; see *šanna-šālai-k-kadugu.*

சன்னசாலைக்கடுகு *šanna-calai-k-kadugu,* பெ. (n.) வெண்கடுகு *(வின்.);* white-mustard.

[சன்னசாலை + கடுகு]

சன்னசிலம்புரி *šanna-šilam-buri,* பெ. (n.) புடைவை வகை *(யாழ். அக.);* a kind of saree.

[சன்னம் + சிலம்புரி]

சன்னஞ்சன்னமாக *šannañ-jannam-āga,* கு.வி.எ. (adv.) *சிறிதுசிறிதாக;* little by little, piece-meal. கடனைச் சன்னஞ்சன்னமாகக் கொடுத்தான் *(இவ.)*

[சன்னம் + சன்னம் + ஆக]

சன்னத்திப்பிலி *šanna-t-tippili,* பெ. (n.) அரிசித் திப்பிலி; long-pepper of a thin species as opposed to ஆனைத்திப்பிலி *(சா.அக.).*

[சன்னம் + திப்பிலி]

சன்னத்தும்பை *šanna-t-tumbai,* பெ. (n.) தும்பை வகை (L.); fascicled minute - leaved white dead nettle shrub.

[சன்னம் + தும்பை]

சன்னத்துருக்குவேம்பு *šanna-t-turukku-vēmbu,* பெ. (n.) வேம்புவகை (L.); globular-flowered neem.

[சன்னத்துருக்கு + வேம்பு]

சன்னத்துவரை *šanna-t-tuvarai,* பெ. (n.) ஆற்றுப்பூவரசு (L.); river portia.

[சன்னம் + துவரை]

சன்னநூல் *šanna-nūl,* பெ. (n.) மெல்லிதான நூல்; fine yārn, opp. to mutuku-nūl.

[சன்னம் + நூல்]

சன்னப்புட்டாணி *šanna-p-puttāni,* பெ. (n.) மகளிர் புடைவை வகை *(இ.வ.);* a kind of saree.

[சன்னம் + புட்டாணி]

சன்னப்பொடி *šanna-p-podi,* பெ. (n.) 1. சிறு பொடி; small particles. 2. பொன்துகள்; gold dust *(சேரநா.).*

ம. சன்னப் பொடி

[சன்னம் + பொடி. புள் → பொள் → பொட்டு = சிறியது, சிற்றளவு. பொள் → பொடி]

சன்னபின்னம் *šan̲n̲apin̲n̲am,* பெ. (n.) சின்னபின்னம்; pieces, shreds. "சன்ன பின்னமாய் நொறுக்கி" (தொண்டல் விடு. 187).

[சின்னபின்னம் → சன்னப்பின்னம்]

சன்னம்[1] *šan̲n̲am,* பெ. (n.) வெள்ளைநிறம்; white colour.

[சுள் → சுண் → சுண்ணம் = நீறு, சுண்ணாம்பு, வெள்ளை. சுண்ணம் → சுன்னம் → சன்னம் = வெள்ளை]

சன்னம்[2] *šan̲n̲am,* பெ. (n.) 1. நுண்மை; minuteness, smallness. 2. நேர்மை (வின்.); fineness. 3. பொடி மணிக்கல் (உ.வ.); precious stone of small size. 4. நுண்ணியபொடி (பிங்.); small particles, as filings of gold and silver. "சன்னமாகி வெண்சாம்பரி னாயின" (உபதேசகா. சிவவிரத. 174). 5. சிறிய வெடிகுண்டு (வின்.); small shot. 6. மெல்லியதாய் அரைக்கப்பட்ட காரை (இ.வ.); fine plaster. 7. மறை பொருள்; covery hits, hidden meaning. 'அவன் வைத்த சன்னம் எனக்குத் தெரியும்' (இ.வ.); 8. குரலிழைவு; thin timbre. 'குரல் சன்னமாயிருக்கிறது' (உ.வ.).

ம. சன்னம், க., தெ. சன்ன.

[சுல் → சல் → சன்னம்]

சன்னம்வை[1]**-த்தல்** *šan̲n̲a-vai-,* 4 செ.குன்றாவி. (v.i.). வெள்ளை வைத்தல் (இ.வ.); to plaster nicely, as a wall.

[சன்னம் + வை-,]

சன்னம்வை[2]**-த்தல்** *šan̲n̲a-vai-,* 4 செ.குன்றாவி. (v.i.). 1. சிறிய மணிகளைப் பதித்தல்; to inset fine gems as in ornaments. 2. அழகாய்ப் பேசுதல்; to talk nicely and neatly. 3. பேச்சில் சூழ்ச்சிகளைக் காட்டுதல்; to be cunning in speech. அவன் சன்னம் வைத்துப் பேசுகிறான் (இ.வ.).

[சன்னம்[2] + வை-,]

சன்னமணிவலை *šan̲n̲a-maṇi-valai,* பெ. (n.) அடிவலையிற் கட்டப்பெற்ற மிகச்சிறிய மணிகளையுடைய வலை (மீனவ.); a kind fishing net with small bells.

[சன்னம் + மணி + வலை]

சன்னமல்லி *šan̲n̲a-malli,* பெ. (n.) ஊசிமல்லிகை; needle jasmine - Jasminum rigidum (சா.அக.).

[சன்ன(ம்) + மல்லி]

சன்னல்பின்னல் *šan̲n̲al-pin̲n̲al,* பெ. (n.) சிக்கல்; entanglement, intricacy, confusion.

[சன்னல் + பின்னல். எதுகை நோக்கி வந்த மரபிணை மொழி]

சன்னவடம் *šan̲n̲a-vaḍam,* பெ. (n.) மெல்லிய சரடுகளால் திரிக்கப்பட்ட நீண்ட பொன் மாலை; a kind of gold garland.

[சன்னம் + வடம்]

சன்னவாழைப்பூ *šan̲n̲a-vāḻai-p-pū,* பெ. (n.) மகளிர் புடைவை வகை; a kind of saree.

[சன்னம் + வாழைப் பூ]

சன்னவிசிறி *šan̲n̲a-visiṟi,* பெ. (n.) மகளிர் புடைவை வகை; a kind of saree (செ.அக.).

[சன்னம் + விசிறி]

சன்னவீரம் *šan̲n̲a-vīram,* பெ. (n.) ஒரு வகை வெற்றி மாலை; a garland indicative of victory. "சன்ன வீரம் திருமார்பில் வில்லிலக" (பதினொ. திருக்கைலாயஞா-19).

[சன்னம் + வீரம்]

சன்னவோரா *šan̲n̲a-vōrā,* பெ. (n.) இரு கண்களும் ஒரே பக்கத்திலுள்ள சிறு கடல்மீன் வகை; a flat-fish, Tuthis, as having both eyes on one side.

[சன்னம் + ஓரா]

சன்னாக்கூனி *šan̲n̲a-k-kūn̲i,* பெ. (n.) சன்னக்கூனி பார்க்க; see *šan̲n̲a-kūn̲i.*

சன்னிகணாயன் *šan̲n̲igaṇāyan̲,* பெ. (n.) சன்னிநாயகம் (வின்.) பார்க்க; see *šan̲n̲ināyagam.*

சன்னிகுன்மம் *šan̲n̲i-kun̲mam,* பெ. (n.) சூலை நோய்வகை (R); convulsive fits.

[சன்னி + குன்மம்]

சன்னிநாயகம் *šan̲n̲i-nāyagam,* பெ. (n.). 1. தும்பை (மலை.); white dead nettle. 2. கருஞ்சீரகம் (வின்.); black cumin.

[சன்னி + நாயகம்]

சன்னிநாயன் *šan̲n̲i-nāyan̲,* பெ. (n.) சன்னி நாயகம் (வின்.) பார்க்க; see *šan̲n̲i-nāyagam.*

[சன்னிநாயகம் → சன்னிநாயன்]

சன்னிமீட்டான் *šan̲n̲i-mīṭṭān̲,* பெ. (n.) மூஞ்சுறு; grey musk shrew - Indian musk rat.

சன்னியம் *šanniyam,* பெ. (n.) மரமஞ்சள் (யாழ்அக.); tree turmeric.

சன்னை[1] *šannai,* பெ. (n.) தென்னைமரம்; coconut tree (சாஅக.).

ம. சன்னமிரி; க. சன்ன

சன்னை[2] *šannai,* பெ. (n.) 1. தேரின் உலுக்கு மரம் (யாழ்ப்.); timber used as a lever to help the movement of temple car. 2. ஒருவகைப் பெருமுரசு (இ.வ.); a large temple drum.

க. சன்னெ

சன்னைகொன்னை *šannai-konnai,* பெ. (n.). திருத்தமற்றபேச்சு (இ.வ.); unrefined speech.

[சன்னை + கொன்னை. எதுகை நோக்கி வந்த மரபிணைமொழி]

சன்னைசயிக்கினை *šannai-cayikkinai,* பெ. (n.) சாடைமாடை (மதுரகவி.47); hint.

[சன்னை + சயிக்கினை. மோனை நோக்கி வந்த மரபிணைமொழி]

சன்னைசாடை *šannai-šādai,* பெ. (n.) மறை பொருள், கமுக்கம்; secrecy.

[சன்னை + சாடை. சாய் → சாள் → சாடு → சாடை]

சனக்கிரம்புள் *šannakkiram-pul,* பெ. (n.) ஆவாரை; tanner's cassia - Cassia auriculata (சாஅக.).

சனகந்தம் *šanagandam,* பெ. (n.) வசம்பு (மலை.); sweet-flag.

சனகபோகிதம் *šanaga-pōgidam,* பெ. (n.) சிற்றரத்தை; smaller galangal -Alpinia galanga (சாஅக.).

சனகம் *šanagam,* பெ. (n.) புளியாரை (மலை.); yellow wood-sorrel.

சனகிப்பூடு *šanagi-p-pūdu,* பெ. (n.) நெய்ச்சிட்டிப் பூடு; round-leaved tadda - Grewia orbiculata.

மறுவ. சீதாசெங்கழுநீர்.

சனகிப்பூண்டு *šanagi-p-pūndu,* பெ. (n.) எருமை நாக்கிப் பூண்டு, செடி வகை (பாலவா. 346); buffalo-tongue milk - hedge herb, Onosma bracteatum.

[சாணாக்கி + பூண்டு → சணகிப்பூண்டு → சனகிப்பூண்டு]

சனசித்திரம் *šana-šittiram,* பெ. (n.) புளியாரை (யாழ்அக.); yellow wood-sorrel.

சனம்பா *šanambā,* பெ. (n.) சந்தனமரம்; sandal wood - Santanum album (சாஅக.).

[சந்தனம் → சனம → சனம்பா]

சனமாலி *šana-māli,* பெ. (n.) இலவு; silk cotton tree.

[சன்மலி → சனமாலி]

சனமாவியம் *šana-māviyam,* பெ. (n.) ஆலமரம்; banyan tree - Ficus bengalensis (சா. அக.).

சனன்மாலி *šananmāli,* பெ. (n.) சதகுப்பி (மலை.) பார்க்க; see *šada-kuppi.*

சனனசாலம் *šanana-šālam,* பெ. (n.)வெண்கடுகு; white mustard - Brassica alba (சாஅக.).

மறுவ. ஐயவி

[சன்னம் = வெள்ளை. சன்னம் → சனனம் + சாலம்]

சனனமாலி *šanan-māli,* பெ. (n.) சதகுப்பி பார்க்க; see *šada-kuppi* (சாஅக.).

[சனன்மாலி → சனனமாலி]

சனனி *šanani,* பெ. (n.) ஒருவகை மல்லிகை; a species of jasmine (சாஅக.).

சனாசனம் *šanāšanam,* பெ. (n.) கோனாய் (யாழ். அக.); wolf.

சனாவு *šanāvu,* பெ. (n.) கையாந்தகரை; eclipse plant - Eclypta prostrata (சாஅக.).

சனிகை *šanigai,* பெ. (n.) பெண்; a girl or woman (சாஅக.).

[கன்னிகை → சன்னிகை → சனிகை]

சனியன் *šaniyan,* பெ. (n.) குத்தும் படைக்கல வகை; bayonet.

[சுல் → சல் → சன் → சனியன்]

சனிவளையம் *šani-valayam,* பெ. (n.) மகளிரணியும் காதணிவகை (பரவ.); a kind of ear-ornament worn by women.

[சனி + வளையம்]

சனுகம் *šanugam,* பெ. (n.) மிளகு (மலை.); pepper.

சனை *šanai,* பெ. (n.) ஓமம்; Indian dill - Carum copticum (சாஅக.).

சா

சா[1] *cā / šā*, 'ச'கர மெய்யும் 'ஆ'கார உயிரும் இணைந்த உயிர்மெய்யெழுத்து; the syllable formed by adding the long vowel ā to the consonant 'c' / 'š'.

[ச் + ஆ]

சா[2]**-தல்** *šā-*, 19 செ.கு.வி. (v.i.) ஒன்றிற்காக வருத்திக்கொள்ளுதல்; ஒருவருக்காகத் துன்பப்படுதல்; to torture oneself something; suffer for someone. பணம், பணம் என்று ஏன் சாகிறாய்!

[சாய் → சா-,]

சா[3]**-தல்** *šā-*, 19 செ.கு.வி. (v.i.) 1. இறத்தல்; to die, to decease, to depart from life, to cease to live, to expire. "சாதலி னின்னாத தில்லை" (குறள், 230). 2. பயிர் முதலியன கெட்டுப்போதல்; to be spoiled or blighted, as crops. 'பயிர் தண்ணீரில்லாமற் சாகிறது' (உ.வ.). 3. சோர்தல்; to be exhausted. கைகால் செத்துப் போயின. 4. ஒன்றிற்காகப் பெருவிருப்பம் கொண்டிருத்தல்; to do, have great desire. பணத்திற்காகச் சாகின்ற அவன் ஒழுங்காக உண்ணவும் மாட்டான். 5. உடலுறுப்பு செயலிழத்தல்; to lose, or decay as of limbs. இரண்டு நாள் காய்ச்சலில் நாக்குச் செத்துவிட்டது.

மறுவ. உயிர் நீத்தல், மடிதல்

ம. சாகுக. சாவுக; க. சாய், சாயு; தெ. சச்சு, சா, சாவ்; து. சைபுனி; பட. சாயி; குட. சாள், சாவ்; பர். சய்; கட. சய், சய்; கோண்., மால. சைஆன; பிரா. ககி, சைஆன, சாய், சவெ; குவி. கைய்; Ice. deyja; Dan. do; Scot. dee; E. die, starve; O.E. steorfan.

[சாய் = சாய்தல், சாய்ந்து விழுதல். சாய் → சா]

சா[4] *šā*, பெ. (n.) முதன்மைவினையின் தன்மை மிகுதிப்படுவதை உணர்த்தும் துணைவினை; an auxiliary to indicate that the action of the main verb is greatly intensified. அப்பா திட்டுவாரோ என்று அஞ்சிச் சாகிறாள்.

சா[5] *šā*, பெ. (n.) சாவு பார்க்க; see *šāvu*.

[சாய் → சா]

சா[6] *šā*, பெ. (n.) வட்டக்கோட்டின் ஒரு பகுதியின் இருமுனைகளையும் சேர்க்கும் கோடு; chord of an arc; sine of an arc.

[சாய் → சா]

சாக்கட்டை *šākkaṭṭai*, பெ. (n.) கும்பாதிரி மரம் (L.); lac tree.

[சாய் + கட்டை]

சாக்கடை[1] *šākkaḍai*, பெ. (n.) சாய்கடை பார்க்க; see *šāy-kaḍai*. "சாக்கடைக்குள் நரிக்குட்டி" (இராமநா. உயுத். 43).

ம. சாக்கட; U. sāqit

[சாய்கடை → சாக்கடை (வே.க. 232) = வட்டமாகவுள்ள அங்கணம் (சலதாரை). ஒ.நோ. சூல் → சால் → சலாகம் = அங்கணம். சாலுதல் = சாய்தல். கடை = இடம்]

சாக்கடை[2] *šākkaḍai*, பெ. (n.) சேறு (யாழ். அக.); mire.

மறுவ. சள்ளல்

[சாய்கடை → சாக்கடை]

சாக்கண்ணன் *šā-k-kaṇṇaṉ*, பெ. (n.) ஒற்றைக் கண்ணன்; one eyed person (சேரநா.).

ம. சாக்கண்ணன்

[சாய் + கண்ணன்]

சாக்கணவாய் *šā-k-kaṇavāy*, பெ. (n.) ஆழ்கடலில் காணப்படும் முள்ளில்லாத மீன் (மீனவ.); a kind of sea fish.

[ஆழ்க்கணவாய் → ஆக்கணவாய் → சாக்கணவாய்]



சாக்கா-த்தல் *šā-k-kā-, 4* செ.கு.வி. (v.i.) இறப்போர்க்கு அருகிருந்து உதவுதல் (யாழ்ப்.); to wait on a dying person, affording necessary help.

[சா + கா-,]

சாக்காட்டு-தல் *šā-k-kāṭṭu-, 5* செ.கு.வி. (v.i.) சாக்கா- (யாழ்ப்.) பார்க்க.; see *šā-k-kā.*

[சா + காட்டு-,]

சாக்காட்டுப்பறை *šākkāṭṭu-p-paṟai,* பெ. (n.) சாப்பறை (புறநா. 194, உரை); funeral drum.

[சாக்காடு + பறை]

சாக்காட்டுமரம் *šākkāṭṭu-maram,* பெ. (n.) இடி, மின்னல் இவற்றால் தாக்குண்டு காய்ந்த மரம் (இ.வ.); a kind of tree.

[சாக்காடு + மரம். சாக்காடு = இறப்பு, அழிவு]

சாக்காடு *šākkāḍu,* பெ. (n.) 1. சாவு; death. "உறங்குவது போலுஞ் சாக்காடு" (குறள்.339). 2. கெடுதி; ruin, injury. 'மரம் சாக்காடா யிருக்கிறது' (இ.வ.).

[சா → சாக்காடு. (வே.க. 234). கடு → காடு = மிகுதி. ஒ.நோ. வெள்ளக்காடு]

சாக்காலம் *šākkālam,* பெ. (n.) இறக்கும் நேரம்; time of death.

ம. சாக்காலம்

[சா(கும்) + காலம். கோல் → கால் = கம்பு, தூண். தூண்போல் உடம்பைத்தாங்கும் உறுப்பு. கால்போல் நீண்டுசெல்லும் நீர்ப்போக்கு. நீண்டியங்கும் காற்று. நீண்டு தொடரும் காலம். கால் → காலம்]

சாக்காளி *šākkāḷi,* பெ. (n.) தன்னுருவை மறைத்துக் கிடக்கும் புழுவகை; a kind of worm which conceals its form by a membranous cover made by itself. "சாக்காளி என்னும் புழுப்போல... வேறேபூண்டு கிடக்கையாலே" (திருவந்தி. 24, உரை).

[சாக்கு + ஆள் - சாக்காள் → சாக்காளி]

சாக்கி *šākki,* பெ. (n.) சக்கிமுக்கிக்கல்; flint. "சதி கொண்ட சாக்கி யெரியின் வடிவாம்" (திருமந். 1653).

ம. சாக்கி

[சக்கி → சாக்கி]

சாக்கிடு-தல் *šākkiḍu-, 17* செ.குன்றாவி. (v.t.) தலைக்கீடாகக் கொள்ளுதல், பொய்க்காரணம் கூறுதல்; to make a false excuse, allege as a pretext. கோயிலைச் சாக்கிட்டு வயிறு வளர்க்கிறான்.

[சாக்கு + இடு-,]

சாக்கிபாக்கி *šākki-pākki,* பெ. (n.) கொசுறு (உ.வ.); extra quantity obtained into the bargain.

[சாக்கி + பாக்கி. எதுகைநோக்கி வந்த மரபிணைமொழி]

சாக்கு[1]-தல் *šākku-, 5* செ.குன்றாவி. (v.t.) வளர்த்தல், வளர்த்து உருவாக்குதல்; to bring up, to foster, to rear, to nurse, to keep, to protect, to preserve (கருநா.).

க., தெ., பட. சாகு

[சால் → சால்கு → சாக்கு-,]

சாக்கு[2] *šākku,* பெ. (n.) இறப்பு; death (சேரநா.).

ம. சாக்கு

[சா → சாக்கு]

சாக்கு[3] பார்க்க

சாக்கு[3] *šākku,* பெ. (n.) போலிக் காரணம்; pretence excuse, pretext. 'வேலையைச் செய்யாமல் சாக்குச் சொல்லுகிறான்' (உ.வ.).

தெ., க. சாக; பட. சாகி

[சா = சாவு. சா → சாக்கு. ம. சாக்கு (இறப்பு) ம. சாக்கும் போக்கும் (இறப்பும் புகலிடமும்). இவ்விணைமொழி மலையாளத்தில் சாக்கும் போக்கும் இல்லாத அல்லது கெட்ட என்று ஆளப்படுவது இதன் பொருளைத் தெளிவுபடுத்துதல் காண்க. இறப்பு அல்லது பிற புகலிடம் இல்லாத இக்கட்டான நிலையை உணர்த்தும் இவ் விணைமொழி இறப்பு அல்லது ஏதாவது புகலிடத்தைப் பற்றிப் பொய்யாகக் கூறும் வீண் காரணத்தையும் குறித்தது. பின் இவ்விணை மொழியின் முதற் சொல்லே இப் பொருளைக் குறித்தது.]

சாக்கு[4] *šākku,* பெ. (n.) பொன் (வின்.); gold.

[சரக்கு = வணிகப் பண்டம். சரக்கு → சாக்கு]

சாக்கு[5] *šākku*, பெ. (n.) *1.* கோணிப்பை; gunny bag. *2.* சட்டைப்பை (வின்.); pocket in a garment.

OE. sace; L., GK. sakkos; Heb. saq. Port. sac; Du. zak. E. sack, sake.

[சணப்பு → சாப்பு → சாக்கு]

சாக்குக்கணவாய் *šākku-k-kaṇavāy*, பெ. (n.) நத்தைவகை (வின்.); species of squid, octopus vulgaris.

[சாக்கு + கணவாய்]

சாக்குச்சுருளி *šākku-c-curuḷi*, பெ. (n.) சாக்கில் சுருட்டி வைத்திருப்பது (இவ.); that which is rolled up in a sack.

[சாக்கு[5] + சுருளி]

சாக்குடி *šākkuḍi*, பெ. (n.) கால்வழியில்லாமல் அழியும் குடும்பம்; extinction of a family, extinct family.

ம. சாக்குடி

[சா + குடி. குடி = இல், குடியிருப்பு. குடிகள் = நாட்டிற் குடியிருக்கும் மக்கள்]

சாக்குப்போக்கு *šākku-p-pōkku*, பெ. (n.) சாக்கு[3] பார்க்க; see *šākku*[3].

ம. சாக்கும் போக்கும் (இறப்போ புகலிடமோ இல்லாத)

[சாக்கு + போக்கு. மரபிணைமொழி]

சாக்குமாண்டி *šākku-māṇḍi*. பெ. (n.) மண்ணையன் (யாழ்ப்.); dullard, fool.

[சாக்கு + மாண்டி]

எளிய பொருட்களை உவமைப்படுத்தித் திட்டும் அடிப்படையில் எளியதும், முரட்டுமைப்பைக் கொண்டதுமான சாக்கு, திட்டுவதற்கு ஆளப்பட்டுள்ளது. ஒ.நோ. சாணிப்பிணம்.

மொண்ணை → மண்ணை = அறிவுக் கூர்மை இல்லாதவன். மண்ணை → மாண்டி. சாக்குமாண்டி மரபினை மொழி.

சாக்குரல் *šā-k-kural*, பெ. (n.) பிறர் இறப்பைக் குறிப்பிக்கும் ஆந்தையோசை; screech of owl, believed to portend death.

[சா + குரல்]

சாக்குரற்பறவை *šākkuraṟ-paṟavai*, பெ. (n.) சாக்குருவி பார்க்க; see *šākkuruvi*.

[சாக்குரல் + பறவை]

சாக்குருவி *šā-k-kuruvi*, பெ. (n.) தீச்செயல் நிகழுதற்கு அறிகுறியான ஓசையுடையதென்று கருதப்படும் ஆந்தை வகை; screech - owl, a species of Athene, whose cry is believed to portend death.

ம. சாகுருவி

[சா + குருவி]

சாக்குருவி

சாக்குழந்தை *šā-k-kuḻandai*, பெ. (n.) சாப்பிள்ளை பார்க்க; see *šā-p-piḷḷai*.

ம. சாகுருளி

[சா + குழந்தை]

சாக்குறி *šā-k-kuṟi*, பெ. (n.) இறக்கும் அறிகுறி; omen or sign of death.

[சா + குறி]

சாக்கை[1] *šākkai*, பெ. (n.) *1.* கணியன் (நிமித்திகன்) (சூடா.); astrologer. *2.* அரசரது கருமத்தலைவன் (பிங்.); king's ministerial officer. *3.* போற்றாளி, தலைமைப்பூசகர் (சங்.அக.); head priest.

[சால் → சால்கை → சாக்கை]

சாக்கை[2] *šākkai*, பெ. (n.) சாக்கைக் கூத்தாடுபவன்; a dancer. "மறைக்காட்டுக் கணவதியான திருவெள்ளறை சாக்கைக்குப் பங்கு ஒன்றரையும்' (தெ.க.தொ. 2:66).

[சால் = நிறைவு. சால் → சால்கை → சாக்கை = பெருமைகளைச் சொல்லி (புகழ்ந்து) மகிழச் செய்தல், புகழ்மொழிச் சொல்லி ஆடும் கூத்து]

சாக்கை → Skt. šlāgh

சாக்கைக்கூத்து *šākkai-k-kūttu,* பெ. (n.) **ஆடவர் ஆடும்கூத்து வகையுளொன்று;** a dance performed by šākkiyan. "...திருவிழாவிற்கு வந்து சாக்கைக்கூத்து ஆடக்கடவ அடலையூர் சாக்கைக்கு மூன்றங்கம் ஆட நிவந்தம்" *(தெ.க. தொ. 19:171)*

ம. சாக்கயான், சாய்பார் கூத்து

[சாக்கையன் + கூத்து]

சாக்கைக்கூத்து ஆடுபவர், சாக்கையர் எனப் பட்டனர். இவர்கள் ஆரியக்கூத்தும் ஆடும் திறமை பெற்றிருந்தனர். இக்கூத்து, தமிழகத்துச் சிவன்கோயில்களில் ஆடப்பெற்றது. சாக்கைக்கூத்து மூன்று பகுதியாகவும், ஏழு பிரிவாகவும் ஆடப்பெறும். *(கல்.அக.)*

சாக்கையர் பெயர், வெற்றிக்காலத்தும் அமைதிக்காலத்தும் அரசர்க்குக் கூத்தாடி மகிழ்ச்சியை யுண்டுபண்ணும் வேத்தியற் கூத்தரைக் குறிக்கும்.

சாக்கையன் *šākkaiyan,* பெ. (n.) 1. **சாக்கைக் கூத்து நிகழ்த்தும் ஓர் இனத்தான்;** member of a caste, whose profession in ancient times was to sing and dance in temples and palaces. "கூத்தச்சாக்கை யனாடலின்" *(சிலப். 28: 77).* 2. **கணியன்** (சூடா.); astrologer.

[சாக்கை → சாக்கையன்]

சாக்கொட்டு *šā-k-koṭṭu,* பெ. (n.) சாவுக்கொட்டு பார்க்க; see *šāvu-k-koṭṭu.*

[சா + கொட்டு]

சாக்கோட்டி *šā-k-kōṭṭi,* பெ. (n.) **கருவுற்ற மகளிர்க்கு வரும் மசக்கை** (இ.வ.); sickness of a pregnant woman.

சாகக்கீரை *šāga-k-kīrai,* பெ. (n.) **சிறுகீரை;** garden spinach - Amaranthus campestris.

சாகச்சூம்பி *šāga-c-cūmbi,* பெ. (n.) **மிக மெலிந்தவன்** *(யாழ்.அக.);* emaciated person.

[சா + சூம்பு – சாச்சூம்பு → சாகச்சூம்பி. சும்பு → சூம்பு → சூம்பி. 'இ' வி.முத.ஈறு]

சாகச்சோம்பி *šāga-c-cōmbi,* பெ. (n.) சாகச்சூம்பி பார்க்க *(யாழ்.அக.);* see *šāga-c-cūmbi.*

[சாகச்சூம்பி → சாகச்சோம்பி]

சாகசம்[1] *šāgašam,* பெ. (n.) **சிறுகீரை;** gardem greens - amaranthus campestris.

சாகசம்[2] *šāgašam,* பெ. (n.) **ஊர்க்குருவி;** sparrow.

[சகடம் – வளையவளைய சுற்றும் பறவை. சகடம் → சகசம் → சாகசம்]

சாகசன் *šāgašan,* பெ. (n.) **துணிவுள்ளவன்** (இ.வ.); a clever, brave man.

[சாகசம் → சாகசன்]

சாகசி *šāgaši,* பெ. (n.) **மருதோன்றி;** nail-dye - Lawsonia alba *(சா.அக.).*

சாகசிரேட்டம் *šāga-širēṭṭam,* பெ. (n.) **பாலை மரம்;** milk-tree - Dichopsis ellipticus *(சா.அக.).*

சாகஞ்சம் *šāgañjam,* பெ. (n.) **சிறுதேக்கு;** fire-creeper-Cleodendron serratum alias C. Javanicum *(சா.அக.).*

சாகடி-த்தல் *šāgaḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) **கொல்லுதல், உயிரைப் போக்குதல்);** to kill, render lifeless. 'பணத்துக்காக அவனைச் சாகடித்தான்' *(உ.வ.).*

ம. சாடிப்பு (தூக்குத்தண்டனை)

[சா + சாக + அடி = சாகடி-,]

சாகத்தீவு *šāga-t-tīvu,* பெ. (n.) **தேக்கந்தீவு;** an annular continent, named after a tree called šāgam or teak. "சாகத்தீவினுளுறைபவர்" *(கம்பரா. படைக்கா-9).*

[சாகம் + தீவு]

சாகதுண்டம் *šāga-tuṇḍam,* பெ. (n.) **அகில்** *(அக.நி.);* eagle-wood.

சாகநாற்றனம் *šāga-nāṟṟanam,* பெ. (n.) **ஒரு வகைப் பொன்;** a kind of gold *(சா.அக.).*

சாகபில்லகம் *šāga-pillagam,* பெ. (n.) சாகபிலவங்கம் பார்க்க; see *šāga-pilavaṅgam.*

[சாகபிலவங்கம் → சாகபில்லகம்]

சாகபிலவங்கம் *šāga-pilavaṅgam,* பெ. (n.) **கத்தரிச்செடி;** brinjal plant - Solanum melongena.

சாகம்[1] *šāgam,* பெ. (n.) 1. **அசோகு;** asoka tree - Saraca indica. 2. **அரசமரம்;** peepul tree. Ficus religiosa. 3. **மராமரம்;** saul tree - Aporo sa lindleyane *(சா.அக.).*

சாகம்[2] *šāgam,* பெ. (n.) வெள்ளாடு (பிங்.); he goat.

மறுவ. வெள்ளை, வற்காலி, கொச்சை

சாகம்[3] *šāgam,* பெ. (n.) தேனீ (சூடா.); bee.

[சரகம் → சாகம்]

சாகம்[4] *šāgam,* பெ. (n.) 1. இலைக்கறி (பிங்.); potherbs, greens. 2. இலை; leaf. "அருந் தவத்தின் சாகந்தழைத்து" (கம்பரா. நகரப். 75). 3. சிறுகீரை (பிங்.); a species of amaranth. 4. தேக்கு (பிங்.); teak. 5. தாழை (மலை.); fragrant screwpine. 6. சாகத்தீவு பார்க்க; see *šāga-t-tīvu.* 7. இலைச்சாறு (யாழ்ப்.); juice of leaves.

ம. சாகம்

[சாகை → சாகம்]

சாகம்[5] *šāgam,* பெ. (n.) வில்; bow. "சாகம் பொன்வரையாக" (தேவா. 1033, 6).

[ஆவம் → சாவம் → சாபம் = வில். சாபம் → சாவம் → சாகம்]

சாகமூலி *šāga-mūli,* பெ. (n.) 1. கொல்லன் கோவை; snake caper - Bryonia epigaea. 2. ஊமத்தை; dhatura - Ohatura stramonium.

[சா → சாக (வைக்கும்) + மூலி]

சாகயம் *šāgayam,* பெ. (n.) தேக்கு; teak-wood Tectona grandis (சா.அக.).

[சாகம் → சாகயம்]

சாகரக்கொடி šāgara-k-kodi, பெ. (n.) சுழற்சி; bonduct nut (lit); ocean round pebble - Caesalpinia bonduc.

[சாகரம் + கொடி]

சாகரக்கோடி *šāgara-k-kōḍi,* பெ. (n.) கடற் சங்கு; sea-chank.

[சாகரம் + கோடி. கோடு → கோடி]

சாகரகுலம் *šāgara-kulam,* பெ. (n.) உப்புரவர் குலம்; a caste of Uppuravar.

[சாகரம் + குலம்]

சாகரத்தினம் *šāgarattiṉam,* பெ. (n.) ஒரு வகை முல்லை; a species of jasmine (சா.அக.).

சாகரப்பன்றி *šāgara-p-paṉṟi,* பெ. (n.) பிலாச்சை மீன்; frog-fish - Ostrachian genus.

சாகரம்[1] *šāgaram,* பெ. (n.) யானையின் காது வழி ஒழுகும் மதநீர்; sporting, wantoning (கழ.அக.).

சாகரம்[2] *šāgaram,* பெ. (n.) 1. வாரி; ocean. 2. பதினாயிரங் கோடி (வின்.); ten quadrillions.

[சக்கரம் = வளைவு, வட்டம். சக்கரம் → சகரம் → சாகரம் = நிலவுலகத்தை வளையச் சூழ்ந்திருப்பது]

சகர என்னும் பெயருடைய ஞாயிற்றுக் குலத்து அரசன் நஞ்சுடன் பிறந்தவன் (ச-கர) என்றும் அவருக்குக் கெலினி என்னும் மனைவியிடம் அசமஞ்ச என்னும் மகனும் சுமதி என்னும் மனைவியிடம் அறுபதினாயிரம் மக்களும் பிறந்தனர் என்றும், கபிலர் என்னும் முனிவர் சாவத்தினால் அவ்வறுபதினாயிர மக்களும் சாம்பலாயினர் என்றும், அவர்களைத் தூய்மைபடுத்த பகீரதன் தன் பத்தியினால் கங்கையை மேலுலகத்திலிருந்து இறங்கச் செய்தான் என்றும், அந்நீர் சென்று சேரும் கடலுக்குத் தன்முன்னோர் பெயரை (சகர) இட்டார் என்றும் தொன்மக் (புராண) கதை அடிப்படையில் சாகரம் என்னும் சொற்கு மூலம் கூறுவது எத்துணையும் பொருந்தா.

மற்றொரு தொன்மக்கதை சகரனின் மக்கள் நிலத்தைத் தோண்டிக் கடலை உருவாக்கினர் எனக் கூறுகிறது. நிலவுலகத்தின் முக்காற் பங்கிற்கும் மேலாகப் பரந்திருப்பது ஒரு சிலரால் தோண்டி உருவாக்கப்பட்டது என்பதும் பொருந்தாது.

இச் சொற்கு இனச்சொற்கள் மேலையாரிய மொழிகளில் இல்லாமை இது இந் நாட்டு இயன்மொழிச்சொல் என்பதை உறுதிப் படுத்துதல் காண்க.

அகன்று விரிந்த கடல் பின்னர் பேரெண்ணிக்கையைக் குறித்தது.

சாகரி *šāgari,* பெ. (n.) ஒரு வகைப்பண் (யாழ்.அக.); a melody type.

சாகலா *šāgalā,* பெ. (n.) ஆடுதின்னாப் பாலை; worm-killer - Aristolochia bracteata.

சாகலாசனார் *šāgalāšaṉār,* பெ. (n.) அகநானூறு 16,270ஆவது பாடல்களின் ஆசிரியர்; šangam poet, author of Aganāṉūṟu 16, 270.

சாகவில்வம் *šāgavilvam,* பெ. (n.) சேம்பு (மலை.); cocco, a coarse herb.

சாகளம் *šāgaḷam,* பெ. (n.) வெள்ளாடு (உரி.நி.); goat.

சாகாகுவஞ்சம் *šāgā-kuvañjam,* பெ. (n.) தேக்கு; teak-wood - Tectona grandis *(சா.அக.).*

சாகாங்கம் *šāgāṅgam,* பெ. (n.) மிளகு (மலை.); pepper.

சாகாச்சாவு *šāgā-c-cāvu,* பெ. (n.) சாவாச்சாவு பார்க்க; see *šāvā-c-cāvu.*

ம. சாகாச்சாவு

[சாவாச்சாவு → சாகாச்சாவு]

சாகாசிவை *šāgācivai,* பெ. (n.) விழுது (யாழ்.அக.); aerial root.

சாகாடச்சிற்றன் *šāgāḍa-c-ciṟṟaṉ,* பெ. (n.) ஆநிரை மீட்கும் கரந்தைப்போரில் இறந்த வீரன்; a hero, who lost his life in a battle of restore buffalo herd. "கொங்கத்து எழுமாத்தூர் இருந்து வாழுஞ் சாகாடச் சிற்றன் மீகொன்றை" *(தெ.க.தொ. 1971/57).*

பல்லவன் கம்பவருமனின் ஆறாம் ஆண்டு; கி.பி. 9ஆம் நூற்றாண்டு. ஈரோடு வட்டத்தில் உள்ளது எழுமாத்தூர். கொங்குவேளாளரில் காடை குலத்தவரில், சாகாடை, பனங்காடை என்ற இரு வகையினர் உண்டு. கொங்கு நாட்டிலிருந்து மீகொன்றை நாட்டிற்கு விருந்திற்கு வந்த வேளையில், எருமை மந்தையை விரட்டிச் சென்றாரைத் தொடர்ந்து சென்று சண்டையிட்டு, எருமைகளை மீட்டு மாண்டான்.

சாகாடு *šāgāḍu,* பெ. (n.) 1. பெரும்பாலும் வேளாளர் பணிகளுக்கும் பெருஞ்சுமைகளை ஏற்றிச் செல்வதற்கும் எருது இழுத்துச் செல்லும் வலுவான இரண்டு சக்கரங்களை யுடைய வண்டி; strong two-wheeled, ox drawn vehicle used in farming and for heavy goods. "பீலிபெய் சாகாடு மச்சிறும்" *(குறள், 476).* 2. வண்டியுருளை; cart wheel. "அச்சுடைச் சாகாட்டாரம்" *(புறநா. 256).* 3. உருள் நாண்மீன் *(திவா.);* the fourth nakṣatra.

[சகடம் → சகடு → சகடி = வண்டி. சகடு → சாகாடு (வே.க. 241)]

சாகாதமூலி *šāgāda-mūli,* பெ. (n.) 1. வேம்பு; margosa tree. 2. சீந்திற்கொடி; moon creeper - Tinospora cordifolia.

[சாவாத → சாகாத + மூலி]

சாகாதுண்டம்[1] *šāgā-tuṇḍam,* பெ. (n.) சாகதுண்டம் பார்க்க; see *šāgatuṇḍam.*

[சாகதுண்டம் → சாகாதுண்டம்]

சாகாதுண்டம்[2] *šāgā-tuṇḍam,* பெ. (n.) சீந்தில் (வின்.); gulancha.

சாகாதுயில் *šāgā-duyil,* பெ. (n.) அகில்; eagle wood.

சாகாமருந்து *šāgā-marundu,* பெ. (n.) 1. தேவ அமிழ்தம் (இறவாமல் காப்பது); ambrosia, as preventing death. 2. ஒரு வகை மூலிகை (யாழ்.அக.); a medicinal shrub.

[சா + ஆ + மருந்து → சாவா மருந்து → சாகா மருந்து]

சாகாமிருகம் *šāgā-mirugam,* பெ. (n.) (மரக்கிளையில் வாழும்) குரங்கு (உரி.நி.); monkey, as living in branches.

[சாகைமிருகம் → சாகாமிருகம்]

Skt. mrṅga → த. மிருகம்

சாகாமூலி *šāgā-mūli,* பெ. (n.) சீந்தில் (மலை.); gulancha.

ம. சாகாமூலி

[சா + ஆ + மூலி - சாவாமூலி → சாகாமூலி]

சாகாமூவாப்பேருரு *šāgā-mūvā-p-pēruru,* பெ. (n.) திருநுந்தாவிளக்கெரிப்பதற்கு வேண்டும் நெய்யின்பொருட்டு, என்றும் இளமையுடன் ஒரு தொகையுள்ளனவாகக் கோயிற்குவிடப் படும் ஆடுமாடுகள்; cattle of a fixed number endowed to provide a continuous supply of ghee for temple lamps. "சாகாமூவாப் பேருருவாக அட்டின பசு இருபத்தஞ்சு" (T.A.S. I, 14).

[சா + ஆ + மூ + ஆ + பேருரு → சாவா மூவாப் பேருரு → சாகாமூவாப் பேருரு. 'ஆ' எதிர்மறை இடைநிலை]

சாகாரம் *šāgāram,* பெ. (n.) 'சா' என்னும் தமிழ் வண்ணமாலை எழுத்து; the letter 'sā'.

மறுவ. சகர ஆகாரம்

[சா+காரம். உயிர்மெய்யெழுத்துகளுள், நெடிலுக்குத் தனிச்சாரியை இல்லை. இருப்பினும், 'காரம்' அவ்வப்போது ஆளப்பெறுகிறது. சகர ஆகாரம் என்பதே, இலக்கணப்படி சரி]

சகரஆகாரம் பார்க்க

சாகாவுப்புச்செய்நீர் *sāgā-v-uppu-c-ceynīr,* பெ. (n.) நஞ்சக்கொடியினுப்போடு, ஏனைய மருந்துச் சரக்குகளைச் சேர்த்துப் பின்பு வடிக்கப்பெறும் மூலிகை நீர்; the salt extracted from the navel-string after mixing it with other ingredients.

[சாகாவுப்பு + செய்நீர்]

சாகி *sāgi,* பெ. (n.) *1.* மரம் (சூடா.); tree. *2.* சிற்றீஞ்சு; shiny-leaved dwarf date. *3.* திராய் (மலை.); Indian chickweed.

[அகைதல் = தளிர்தல். அகை → சகை → சாகை → சாகி]

சாகிலியன் *sāgiliyaṉ,* பெ. (n.) சிறுகீரை; garden spinach - Amaranthus campestris.

[சாகி → சாகிலியன்]

சாகினி[1] *sāgiṉi,* பெ. (n.) வெள்ளாடு; goat (கழ.அக.).

[சாகம் → சாகினி]

சாகினி[2] *sāgiṉi,* பெ. (n.) *1.* சிறுகீரை (திவா.); a species of amaranth. *2.* பூங்கீரை; cocks comb greens. *3.* சேம்பு (பிங்.); cocco.

சாகினி[3] *sāgiṉi,* பெ. (n.) தீத்தேவதை (சங்.அக.); an evil spirit.

[சாவு → சாவினி → சாகினி]

சாகினியம் *sāgiṉiyam,* பெ. (n.) சேம்பு; a vegetable plant with esculent leaves known as Indian kales - Caladium nymphaefolium alias colocasia antiquorum (சா.அக.).

[சாகனி → சாகினியம்]

சாகு-தல் *sāgu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* செல்லுதல்; to go, to move forward, to proceed. *2.* தொடர்தல், முன்னேறுதல்; to proceed or advance (கருநா).

க., தெ. சாகு

[சல் → சலகு → சாகு-,]

சாகுடி *sāguḍi,* பெ. (n.) வழித்தோன்றல் முடிந்த குடும்பம் (நாஞ்.); extinct family.

ம. சாகுடி

[சா + குடி]

சாகுபடி *sāgu-paḍi,* பெ. (n.) விளைச்சல், பயிர் வளர்ப்பு; cultivation. கடும்புயலால் நெல் சாகுபடி குறைந்துவிட்டது.

தெ. சாகுபடி (sāgubaḍi); க. து., சாகுவளி

சாகுபடிக்கணக்கு *sāgupaḍi-k-kaṇakku,* பெ. (n.) பயிர் செய்யப்பட்ட நிலங்களின் கணக்கு (R.T.); cultivation account.

[சாகுபடி + கணக்கு]

சாகுபடிக்காலம் *sāgupaḍi-k-kālam,* பெ. (n.) வேளாண் பணி தொடங்கும் காலம்; the time to commence farming.

க. சாகுவளி கால

[சாகுபடி + காலம்]

சாகுபடிசெய்-தல் *sāgubaḍi-sey-,* 1 செ.குன்றாவி. (v.t.) பயிர் செய்தல்; to cultivate, to till.

க. சாகுவளி மாடு

[சாகுபடி + செய்-,]

சாகுபடித்திட்டம் *sāgupaḍi-t-tiṭṭam,* பெ. (n.) *1.* காலநிலை கைகொடுக்கும்போது பயிர் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட நிலங்களின் பட்டியல் (R.T.); account, taken by revenue servants at the commencement of the cultivating season, of the holdings intended for cultivation. *2.* பயிரிடுதற்கு ஏற்படும் தோராயச் செலவு; approximate cultivation expenses.

[சாகுபடி + திட்டம்]

சாகுபடிப்பத்திரம் *sāgupaḍi-p-pattiram,* பெ. (n.) பயிர் செய்யப்படும் நிலங்களின் குத்தகை ஆவணம் (R.T.); lease deed of cultivate land.

[சாகுபடி + பத்திரம்]

Skt. பத்திரம் → த. பத்திரம்

சாகுபடிமுச்சலிக்கை *sāgupaḍi-muccalikkai,* பெ. (n.) *1.* ஒவ்வொருவரது கையொப்பத்துடனும் அவ்வவர்க்குச் சொந்தமான நிலத்தின் பரப்பளவைக் குறித்துவைக்கும் ஆண்டுக்

கணக்கு (R.T.); an annual rent-roll in which the extent of land held by each individual ryot is recorded and his signature taken. 2. சாகுபடி செய்வதாக ஒப்புக்கொண்டு நிலத்தின் சொந்தக்காரருக்கு எழுதிக் கொடுக்கும் ஆவணம்; agreement containing the terms of cultivation executed by a tenant in favour of his land-lord.

[சாகுபடி + முச்சலிக்கை]

சாகுருவி *šā-kuruvi*, பெ. (n.) சாக்குருவி பார்க்க; see *šā-k-kuruvi.*

[சா + குருவி]

சாகுலி *šāguli*, பெ. (n.) ஆவாரை; tanner's cassia -Cassia curiculata.

சாகுலிகர் *šāguligar*, பெ. (n.) கரையார் (யாழ்.அக.); fisherman.

சாகுவளி *šāguvaḷi*, பெ. (n.) சாகுபடி; cultivation, agriculture. "தரிசு பூமிசாகு வளி செய்திருக்க" (தாசீல்தார் நா. பக். 89).

க. சாகுவளி

[சாகுபடி → சாகுவளி]

சாகுளி *šāguḷi*, பெ. (n.) பண் வகை (பரத. ராக. 103); a specific melody type.

சாகை[1] *šāgai*, பெ. (n.) வாழுமிடம், வீடு; house, hut, residence, halting-place. "அந்த சாக(சாகை) தான் அவன் இருக்குமிடம்".

தெ. சாக; க. சாக (இடம், அறை)

[சால் → சாய்கை = படுக்குமிடம், இளைப்பாறுமிடம். சாய்கை → சாகை]

சாய்கை பார்க்க

சாகை[2] *šāgai*, பெ. (n.) 1. மரக்கிளை; branch of a tree. "சாகைச் சம்பு தன்கீழ்" (மணிமே. பதி.5). 2. கிளைக்குடும்பம்; branch of a family. (நாஞ்.), 3. கை; hand. "தளிரோங்கு சாகைகளும் (கோயிற். பாயி. 6). 4. மறையின் உட்பிரிவு; vedic section. "சாகையாயிர முடையார்" (தேவா. 199, 1). 5. மறை (பிங்.); vēdas. 6. எசுர் மறைப்பகுதி; a portion of yajur vēda.

[உகு → உகை → அகை. அகைதல் = தளிர்தல், கிளைத்தல். அகை → சகை → சாகை]

சாகை[3] *šāgai*, பெ. (n.) இலை (பிங்.); leaf.

[அகை → சகை → சாகை]

சாகை[4] *šāgai*, பெ. (n.) வட்டில் (பிங்.); cup.

[சூள் → சாள் → சாளை = வட்டமான குடிசை. சாள் → சாணை = வட்டமான சாணைக்கல். சாளை → சாளையம் = வளையம். சாளை → சாகை]

சாகை[5] *šāgai*, பெ. (n.) இறப்பு; death. 'சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றி" (கந்தரலங். 54).

[சா → சாகை. 'கை' தொ.பெ.ஈறு]

சாங்கசம் *šāṅgašam*, பெ. (n.) சீந்தில்; gulancha (சா.அக.).

[சாங்கம் → சாங்கசம்]

சாங்கடை *šāṅgaḍai*, பெ. (n.) சாங்காலம், இறக்குந்தறுவாய் (வின்.); moment of death.

[சா + கடை. 'கடை' இடம், பொழுது]

சாங்கம்[1] *šāṅgam*, பெ. (n.) 1. ஒழுங்கு; order. 2. சங்கொலி; the sound of a blown chank.

[சங்கு → சங்கம் = பெருஞ்சங்கு. 'அம்' பெருமைப் பொருள் பின்னொட்டு. சங்கம் → சாங்கம்]

சாங்கம்[2] *šāṅgam*, பெ. (n.) சங்கச் செய்நஞ்சு பாடாணம் (மூ.அ.); a mineral poison.

[சங்கம் → சாங்கம்]

சாங்கம்[3] *šāṅgam*, பெ. (n.) சீந்தில் (மலை.); gulancha.

சாங்கலிகன் *šāṅgaligaṉ*, பெ. (n.) நஞ்சுமுறி மருத்துவன் (சங்.அக.); a doctor who has specialised in curing poison.

சாங்காலம் *šāṅgālam*, பெ. (n.) இறக்குந் தருவாய், சாகுங்காலம்; the time of death.

[சா (சாகும்) + காலம்]

சாங்கிமம் *šāṅgimam*, பெ. (n.) மருத யாழ்த்திற வகை (பிங்.); an ancient secondary melody type of marudam class - musical.

சாங்கிருதம் *šāṅgirudam*, பெ. (n.) சலங்கை (யாழ்.அக.); tinkler in an anklet.

சாங்கு *šāṅgu*, பெ. (n.) ஒரு வகை அம்பு (யாழ்.அக.); a kind of dart, arrow.

[சங்கு = முளை. சங்கு → சாங்கு]

சாங்குகௌரி *šāṅgu-gauri,* பெ. (n.) *புளி நரளை (மலை.);* bristly trifoliate vine.

சாங்குலம் *šāṅgulam,* பெ. (n.) *நஞ்சு;* poison *(கழ. அக.).*

சாச்சடங்கு *šā-c-caḍaṅgu,* பெ. (n.) *இறப்பில் நிகழ்த்தும் செய்கைகள்;* funeral ceremonies, obsequies.

மறுவ. ஈமச்சடங்கு

[சா + சடங்கு]

சாச்சா *šāccā,* பெ. (n.) *குறட்டைப்பருப்பு (வின்.);* pulp of the bitter snake-gourd.

சாச்செலவு *šā-c-celavu,* பெ. (n.) *இறப்புச் சடங்கினை நடத்துவதற்கு ஆகும் செலவு (வின்.);* funeral expenses.

[சா + செலவு]

சாசக்கினி *šāšakkini,* பெ. (n.) *சிறுதேக்கு;* small teak - Cleodandron Javaulcum *(சா.அக.).*

சாசங்கமூலி *šāsaṅga-mūli,* பெ. (n.) *செங்குன்றி;* crab's eye; red seed of the plant - abrus precatorius *(சா.அக.).*

சாசபுடம் *šāšapuḍam,* பெ. (n.) *ஐவகைத் தாளத் தொன்று (பரத. தாள. 2);* a variety of time-measure, one of pañja-tāḷam.

சாசம் *šāšam,* பெ. (n.) *அசோகு;* asoka tree - polyathia longifolia *(சா.அக.).*

சாசயாபகம் *šāsayābagam,* பெ. (n.) *சிறுநீலி;* small-leaved indigo plant - Indigofera tinctoria *(சா.அக.).*

சாசற்புடம் *šāšar-puḍam,* பெ. (n.) *சாசபுடம் (பரத. தாள. 12) பார்க்க;* see *šāšapuḍam.*

சாசனம்[1] *šāšanam,* பெ. (n.) *வெண்கடுகு (மலை.);* white mustard, as keeping of evil spirits.

சாசனம்[2] *šāšanam,* பெ. (n.) *1. இறையில்லாதவூர் (யாழ். அக.);* tax-free village. *2. வலையர்சேரி;* fishermen's quarters.

சாசி[1] *šāši,* பெ. (n.) *கீரைவகை (மலை.);* Indian chickweed.

சாசி[2] *šāši,* பெ. (n.) *முலைப்பால்;* mother's milk *(செ.அக.).*

ம. சாச்சி; தெ. த்சாகி; க. சாசி

சாசியா *šāšiyā,* பெ. (n.) *அரசு;* peepul tree - ficus religiosa *(சா.அக.).*

சாசினம் *šāšinam,* பெ. (n.) *வெண்கடுகு;* white mustard - brassica alba *(சா.அக.).*

சாசு *šāšu,* பெ. (n.) *பேய்ப்பீர்க்கு;* wild luffa - cucumis acutangulus *(சா.அக.).*

சாசுக்கிலகம் *šāšu-k-kilagam,* பெ. (n.) *புளி;* tamarind - Tamarindus Indicus *(சா.அக.).*

சாசுகம் *šā-šugam,* பெ. (n.) *சிவப்புச் சோளம்;* red maize *(சா.அக.).*

சாசுலம் *šā-šulam,* பெ. (n.) *கருந்தக்காளி;* black tomato *(சா.அக.).*

சாசுறு *šāšuṟu,* பெ. (n.) *முந்திரி;* cashew-nut plant - Cassuvium pomiferum *(சா.அக.).*

சாசைவம் *šāšaivam,* பெ. (n.) *வெள்ளைக் கழற்கொடி;* a white species of kaḻar-k-koḍi, bonduct nut - Caesalpinia bonducella *(சா.அக.).*

சாஞ்சயம் *šāñjayam,* பெ. (n.) *மிளகு (மலை.);* pepper.

சாகாசிவை *šāgāšivai,* பெ. (n.) *கடலாமணக்கு;* sea-side castor plant - Jatropha curcas *(சா.அக.).*

சாஞ்சி[1] *šāñji,* பெ. (n.) *நடுவண் இந்தியாவில் போபால் அருகிலுள்ள இடம்;* a place in middle India near Bhopal.

இங்குப் புத்தமதத்தின் கலைச்சின்னங்கள் அமைந்துள்ளன. இங்கிருந்து அசோகன் மகன் மகேந்திரன் புத்தமதத்தைப் பரப்ப இலங்கைக்குச் சென்றான்.

சாஞ்சி[2] *šāñji,* பெ. (n.) *சாஞ்சியம் பார்க்க;* see *šāñjiyam.*

சாஞ்சிதம் *šāñjidam,* பெ. (n.) *பச்சைக்கல்லில் (மரகதம்) ஏற்படும் குற்றங்களுள் ஒன்று;* a kind of fault in an emerald.

சாஞ்சியம் *šāñjiyam,* பெ. (n.) *வெண்பாதிரி;* white fragrant trumpet flower - Bignonia chelonoides *(சா.அக.).*

சாட்குலி *šāṭkuli,* பெ. (n.) *தசை தின்போன் (பிங்.);* flesh-eater.

சாட்கோல் *šāṭ-kōl,* பெ. (n.) *சாணளவுள்ள கோல் (தொல்.எழுத்து. 147, உரை);* span measure.

[சாண் + கோல்]

சாட்டம்[1] *šāṭṭam,* பெ. (n.) *1.* அடிக்கை (இ.வ.); beating. *2.* செருக்கு (நாஞ்.); arrogant or autocratic behaviour.

[சாடு → சாட்டம்]

சாட்டம்[2] *šāṭṭam,* பெ. (n.) சாய்வு; slope. 'அங்கணம் வாட்டஞ் சாட்டமாய் இருக்க வேண்டும்' (உ.வ.).

[சள் → சடு → சாடு. சாடுதல் =சாய்தல். சாடு → சாட்டம் = சாய்வு. ஒ.நோ. வாள் → வாடு → வாட்டம் = சாய்வு. வாட்டம் சாட்டம் என்பது வழக்கு. அங்கணம் வாட்டசாட்டமாய் இருக்க வேண்டும் என்பர் (மு.தா.226)]

சாட்டரணை *šāṭṭaraṇai,* பெ. (n.) மூக்கொற்றி (மலை.); printed-leaved hogweed.

சாட்டி[1] *šāṭṭi,* பெ. (n.) சாட்டை பார்க்க (இ.வ.); see *šāṭṭai.*

[சவட்டு → சவட்டி → சாட்டி]

சாட்டி[2] *šāṭṭi,* பெ. (n.) *1.* அறுவடையானபின் உழாது கிடக்கும் நிலம்; land lying fallow after a crop. *2.* பயிரிடுதற்கு உரமிடப்பட்டிருக்கும் நிலம்; land manured for raising crop.

ம. சாட்டிப் பூட்டு

சாட்டிக்கழி-த்தல் *šāṭṭi-k-kaḻi-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1.* போக்குச் சொல்லிக் கழித்தல்; to shift off responsibility. *2.* சிறிது கொடுத்தல் (வின்.); to give sparingly, distribute scantily.

[சாட்டி + கழி-,]

சாட்டியம்[1] *šāṭṭiyam,* பெ. (n.) *1.* ஏய்ப்பு (திவா); deceit, guile. *2.* பொய்; falsewood. 'சாட்டியஞ் சொன்ன சத்தியகோடனும்' (நரிவிருத். 24).

[சாட்டு + இயம்]

சாட்டியம்[2] *šāṭṭiyam,* பெ. (n.) *1.* சடத்தன்மை; inanimateness. *2.* மந்தம்; dullness, inactivity. *3.* சுரக்குறி (கொ.வ.); symptoms of fever. *4.* உடல்வலி (சது.); pain, suffering. *5.* விடாப்பிடி (நாஞ்.); obstinacy.

சாட்டு[1]**-தல்** *šāṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) *1.* பொறுப்பை அல்லது கடமையைப் பிறனிடம் சார்த்துதல்; to transfer as a debt: to assign. *2.* ஒருவர் மீது குற்றஞ் சுமத்துதல் (வின்.); to accuse, charge with. *3.* தலைக்கீடாகக் கொள்ளுதல்; to allege as a pretext. கோயிலைச் சாட்டி வயிறு வளர்க்கிறான் (வின்.).

தெ. சாடு

[சார்த்து → சாட்டு. ஒ.நோ. துவர்த்து → துவட்டு (வே.க.235)]

சாட்டு[2]**-தல்** *šāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) அடித்தல் (வின்.); to beat or strike.

[சவட்டுதல் = காலால் மிதித்தல், அடித்தல். சவட்டு[1] → சாட்டு[3]]

சாட்டு[3] *šāṭṭu,* பெ. (n.) *1.* பிறனிடம் சார்த்துகை (வின்.); assigning, transferring. *2.* குற்றப் படுத்துகை; accusing, charging.

[சாட்டு[1] → சாட்டு[2]]

சாட்டு[4] *šāṭṭu,* பெ. (n.) புற்றரை (யாழ்.அக.); meadow, pasture land.

சாட்டுக்கூடை *šāṭṭu-k-kūḍai,* பெ. (n.) பெரிய கூடை (யாழ்ப்.); large basket.

[தாட்டு → சாட்டு + கூடை. தாட்டு = பெரிது]

சாட்டுகம் *šāṭṭugam,* பெ. (n.) சாட்டுவம்[2] பார்க்க; see *šāṭṭuvam*[2] (சா.அக.).

[சாட்டுவம் → சாட்டுகம்]

சாட்டுவம்[1] *šāṭṭuvam,* பெ. (n.) அறுகு; harialli grass.

சாட்டுவம்[2] *šāṭṭuvam,* பெ. (n.) வச்சநாபி (வின்.); Nepal aconite.

சாட்டுவரி *šāṭṭu-vari,* பெ. (n.) வரிவகை (S.I.I.V. 139); a tax.

[சாட்டு + வரி]

சாட்டுவலம்[1] *šāṭṭu-valam,* பெ. (n.) *1.* பைம்புற்றரை (பிங்.); meadow. *2.* அறுகு (மலை.); harialli grass.

[சாட்டுவம் → சாட்டுவலம்]

சாட்டுவலம்[2] *šāṭṭu-valam,* பெ. (n.) நாவல் (மலை.); common black plum.

சாட்டுவாய் *šāṭṭuvāy,* பெ. (n.) தூற்றின பொலியிற் பதருடன் கலந்துள்ள தவசக் குவியல் (இ.வ.); grain found mixed with chaff even after winnowing.

[சகட்டு → சாட்டு → சாட்டுவாய்]

சாட்டுளி *šāṭṭuḷi,* பெ. (n.) சுறாமீன்களை வேட்டையாடப் பயன்படும் கயிற்றுடன் கூடிய எறியீட்டி (மீனவ.); a kind of javelin.

[சாட்டு → சாட்டுளி]

சாட்டை[1] *šāṭṭai,* பெ. (n.) 1. கயிற்றை அல்லது தோல்வாரைக் கட்டியதும் அடிக்கப் பயன்படுத்துவதுமான ஒருவகைக் கருவி, 'கசை'; whip, made of cord or leather. 2. கோயில் திருமேனிகள் (மூர்த்திகள்), கண்டி நாட்டதிகாரிகள், இன்னோர் திருமுன் மக்கள் அமைதி உண்டாக்க வேண்டி அடித்து ஒலிக்கச் செய்யும் கிறிச்சுச் சாட்டை (யாழ்ப்.); a large whip cracked before idols and chief officers of the Kandyan country to disperse or silence crowd. 3. பம்பரம் மாட்டுங் கயிறு; string to spin a top. "சாட்டையிற் பம்பர சாலம் போலெலா மாட்டுவான்" (தாயு. ஆசை. 3). 4. மரத்தாற் செய்யப்பட்ட ஒருவகைக் குயக்கருவி (வின்.); a small pallet.

ம. சாட்ட; க. சாடி, சாவடி, சாவுடி; தெ. சாடி; கோத. சாட்

[சவட்டு → சவட்டை → சாட்டை]

சாட்டைக்கயிறு *šāṭṭai-k-kayiṟu,* பெ. (n.) சாட்டைக்கான கயிறு; whip or whip-cord.

ம. சாட்டக்கயிறு

[சாட்டை + கயிறு]

சாட்டைக்கூடை *šāṭṭai-k-kūḍai,* பெ. (n.) சாட்டுக்கூடை (இ.வ.) பார்க்க; see *šāṭṭu-k-kūḍai.*

[சாட்டு + கூடை → சாட்டைக்கூடை]

சாட்டைக்கோல்[1] *šāṭṭai-k-kōl,* பெ. (n.) வார்க்கோல்; whip made from twisted leather-strap.

க. சாடிகோலு

[சாட்டை + கோல்]

சாட்டைக்கோல்[2] *šāṭṭai-k-kōl,* பெ. (n.) சாட்டையின் கைப்பிடிக்கோல்; the wooden handle of a whip.

ம. சாட்டக்கோல்

[சாட்டை + கோல்]



சாட்டைக்கோல்

சாட்டைவார் *šāṭṭai-vār,* பெ. (n.) சவுக்கு (கொ.வ.); whip cord, whip.

ம. சாட்டவாரி

[சாட்டை + வார்]

சாடி[1]**-த்தல்** *šāḍi-,* 4 செ.கு.வி. (v.i.) கோள் சொல்லுதல் (வின்.); to slander.

க. சாடிசு; தெ. சாடிஞ்சு; து. சாடி

[சாடு → சாடி. (வே.க.231)]

சாடி[2]**-த்தல்** *šāḍi-,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. கண்டித்தல் (இ.வ.); to chide, rebuke. 2. நொறுக்குதல் (வின்.); to crush.

[சாடு → சாடி]

சாடி[2]**-த்தல்** *šāḍi-,* 4 செ.கு.வி. (v.i.) இரு பக்கமும் அசைதல் (யாழ்ப்.); to totter, rock from side to side.

[சாடு → சாடி-,]

சாடி[3] *šāḍi,* பெ. (n.) 1. கோள்மொழி (பிங்.), பிறரைக் குறித்துக் குற்றம் சொல்லும் பேச்சு; malicious report, slander. 2. பொடி (யாழ். அக.); powder.

தெ. துசாடி; க. சகட, சகடி, சகடெ, சாட, சாடி, சாகடி, சாட, சாடி; Mar. cahād, cahāḍi, cāḍi

[சாள் → சாடு. சாடுதல் = சாய்தல். சாடு → சாடி = ஒருவனைத் தாக்கிச் சொல்லும் கோட்சொல்]

சாடி[4] *šāḍi,* பெ. (n.) சீலை (பிங்.); cloth, clothing.

ம. சாடி; க. சாடி; Skt. šāḍi; H. šāri

[சவளி → சாளி → சாடி]

சாடி[5] *šādi,* பெ. (n.) ஆண்மக்கள் தலைமயிர் (யாழ்.அக.); man's hair.

[சாடு → சாடி]

சாடி[6] *šādi,* பெ. (n.) திப்பிலி (மலை.); long pepper.

சாடி[7] *šādi,* பெ. (n.) 1. தெருக் குப்பையைக் கூட்ட உதவும் மாறுவகை (mod.); road-sweep. 2. மணிகளைப் பதிக்கும் உம்மிசம்; socket for setting gems. "ரத்தினங்களை யெல்லாம் சாடியிலே பதித்துக் காட்டுமா போல" (திவ். அமலனாதி7. வியா. பக். 86).

[சாள் → சாடு. சாடுதல் = சாய்தல். சாடு → சாட்டம் = சாய்வு. சாடு → சாடி = குப்பைகளை ஒருபுறம் ஒதுக்க உதவும் மாறு]

சாடி[8] *šādi,* பெ. (n.) 1. பாண்டவகை; jar. "சாடிமட்டயின்று" (சீவக. 1614). 2. கும்ப ஓரை (திவா.); aquarius of the zodiac.

[சாள் → சாளி → சாடி]

சாளி[1] பார்க்க

சாடி[9] *šādi,* பெ. (n.) 1. ஓர் அளவை (தொல். எழுத்து. 170, உரை); a measure of capacity. 2. உழுசால்; a furrow. "மூரி தவிர முடுக்கு முதுசாடி" (பரிபா. 20, 54).

[சால் → சாலி → சாளி → சாடி]

சாடிக்காரன்[1] *šādi-k-kāran,* பெ. (n.) மீனின் ஒரு வகை (மீனவ.); a kind of fish.

சாடிக்காரன்[2] *šādi-k-kāran,* பெ. (n.) பழி தூற்றுபவன்; slanderer.

க. சாடிகார, சாடிகாற

[சாடி + காரன்]

சாடிகம் *šādigam,* பெ. (n.) திப்பிலி; long-pepper- Piper longume.

சாடிகோர் *šādikōr,* பெ. (n.) புறங்கூறுவோன் (C.G.); talebearer, backbiter (செ.அக.).

Mhr. šādakhōra - Persn. cughalkhōr

[சாடு → சாடி + காரன் - சாடிக்காரன் → சாடிகோர்]

சாடிதவம் *šādi-davam,* பெ. (n.) கற்கோவை; air -living bryony - Bryonia epigaea (சா.அக.).

சாடிப்பானை *šādi-p-pānai,* பெ. (n.) கோலா மீன் பிடிக்கச் செல்வோர் கொண்டு செல்லும் உணவு; a kind of fisherman's food.

[சாடி + பானை - சாடிப்பானை = சாடிப் பானையில் சமைக்கும் உணவு வகை]

இது பலநாள் கெடாமலிருக்குமாறுப் பக்குவமாகச் சமைக்கப்பட்டிருக்கும் (மீனவ.)

சாடிப்பேச்சு *šādi-p-pēccu,* பெ. (n.) பழி தூற்றுரை; slanderous talk.

க. சாடிமாது, சாடிவாது

[சாடி + பேச்சு]

சாடு[1]**-தல்** *šādu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. அடித்தல்; to beat. 'சாடிக்கொன்றனன் சிலவரை' (கம்பரா. கிங்கிர. 36). 2. மோதுதல்; to fall upon. 'கமுகின் குலைசாடி' (திருக்கோ. 100). 3. துகைத்தல்; to trample. "விடரியங் கண்ணிப் பொதுவனைச் சாடி" (கலித். 101). 4. குத்திக் கிழித்தல்; to tear open, gore. 'அதனிறஞ் சாடி முரண்டீர்ந்த' (கலித். 52). 5. வடுச்செய்தல்; to scratch. 'கூருகிர் சாடிய மார்பும்' (கலித். 91). 6. ஒடித்தல்; to lop off, break, as branches. "குங்குமத் தடஞ்சினை சாடி" (நைடத. நாட். 4). 5. கொல்லுதல்; to kill, destroy. "சாடியது சிற்சிலவர் தம்மை" (கந்தபு. தகரேறு. 14). 8. கடிதல் (வின்.); to abuse, reprove.

ம. சாடு (குதித்தல்); க. சாடிசு (எறிதல்); து. சாண்டுனி (ஈட்டியை அசைத்தல்); குரு. சாட்காரை (குதித்தல்).

[சாள் → சாடு (வே.க.231)]

சாடு[2]**-தல்** *šādu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. அசைதல்; to shake. 2. ஒரு கட்சிக்குச் சார்பாயிருத்தல்; to favour a party, as in a civil suit. 3. சாய்ந்து நிற்றல்; to lean, overhang, as a tree. 4. சாடி[3] பார்க்க; see *šādi*[3]. 'பட்டம் வாலுக்குச் சாடுகிறது'.

ம. சாடுக; க. சாடிசு; து. சாண்டுனி

[சாள் → சாடு[2]]

சாடு[3]**-தல்** *šādu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கை கால் எறிதல்; to stretch out, as the arms or legs from lassitude.

சாடு[4]-தல் *šādu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* குறைகூறிக் கடுமையாகத் தாக்குதல்; to critisize vehemently, attack verbally. *தமிழுக்கு எதிராகப் பேசுவோரைப் பாவாணர் சாடினார். 2.* தாவுதல், எகிறுதல்; to leap, jump over. *'திருடன் மேல் சாடி விழுந்தார்'.*

[சள் → சாள் → சாடு → சாடை = தன்மை, சாயல். சள் → சாள் → சாடு. சாடுதல் = சாய்தல்]

சாடு[5]-தல் *šādu-,* 5 செ.குன்றாவி. (v.t.) (கண்ணில் பீளை அதிக அளவில்) திரளுதல்; to collect dirt in the eyes. *'கண்வலியால் பீளை சாடிக் கண்ணைத் திறக்க முடியவில்லை'.*

[சாள் → சாடு]

சாடு[6] *šādu,* பெ. (n.) மணிமுற்றாத சோளம்; unripe grain of great millet.

ம. சாட; தெ. சவிலெ, சாவி; கூய். சடு

சாடு[7] *šādu,* பெ. (n.) கைக்கு இடும் உறை; glove, gaunlet. *'விரற்சாடு' (சீவக. 2202, உரை).*

க. சாடு; தெ. த்சாடு

[சாள் → சாடு]

சாடு[8] *šādu,* பெ. (n.) சாட்டுக்கூடை (யாழ்ப்.) பார்க்க; see *šāttu-k-kūdai.*

[சாட்டுக்கூடை → சாடு]

சாடு[9] *šādu,* பெ. (n.) வண்டி; cart. "குறுஞ்சாட்டுருளையொடு" *(பெரும்பாண். 188).*

ம. சாடு; க. சகம்; தெ. செகடா; Skt. šagadam

[சகடம் → சகடு → சகடி = வண்டி. சகடு → சாகாடு = வண்டி. சகடு → சாடு (வே.க.115)]

சாடுகம் *šādugam,* பெ. (n.) சாடு[7] (அகநி) பார்க்க; see *šādu[7].*

[சாடு → சாடுகம்]

சாடுசக்கட்டை *šādu-šakkattai,* பெ. (n.) திறமையற்றவ-ன்-ள் (நாஞ்.); a worthless person.

[சாடு + சக்கட்டை]

சாடுமாலி *šādu-māli,* பெ. (n.) சாடுமாறி பார்க்க; see *šādu-māri.*

[சாள் → சாடு → சாடுமாலி]

சாடுமாறி *šādu-māri,* பெ. (n.) *1.* வீட்டைப் பெருக்கித் தூய்மை செய்பவள்; woman sweeper. *2.* கீழ்த்தரமானவ-ன்-ள் (இ.வ.); a mean, despicable person.

க. சாடுமாலி

[சாடு + மாறி]

சாடை[1] *šādai,* பெ. (n.) *1.* சாயல்; appearance, feature. *தமையனுந் தம்பியும் ஒரு சாடை. 2.* ஒப்பு; similarity. *முகம் நிலவு சாடையாயிருக்கிறது. 3.* போக்கு (வின்.); inclination, tendency, temperament. *4.* சைகை; hint, significant, gesture. "சாடை பேசிய வகையாலே" *(திருப்பு. 572). 5.* மிகச்சிறு அளவு, சிறுக்கம்; trifle, slightness. *'சாடையால் உப்புக்கூட்டு' (கொ.வ.).*

தெ. சாட; ம. சாட; க. சாடு, சாடெ; கோத. சாட்; பட. சாடெ

[சாள் → சாடு. சாடுதல் = சாய்தல். சாடு → சாட்டம் = சாய்வு. சாடு → சாடை (வே.க.)]

சாடை[2] *šādai,* பெ. (n.) சாடி[2]-1 (வின்.) பார்க்க; see *šādi[2]-1.*

சாடைக்காரன் *šādai-k-kāran,* பெ. (n.) கோட்சொல்வான் (வின்.); tale bearer.

[சாடை + காரன். காரம் → காரன் = உரியவன், உடையவன்]

சாடைபண்ணு-தல் šādai-pannu-, 5 செ.கு.வி. (v.i.) *1.* சைகை காட்டுதல்; to make gestures. *2.* இரக்கம் (தயை) காட்டுதல் (வின்.); to be lenient.

[சாடை + பண்ணு-,]

சாடைமாடையாய் *šādai-mādai-y-āy,* கு.வி.எ. (adv.) *1.* குறிப்பாக; by hint. *'சாடைமாடையாய்ப் பேசுகிறார்' (கொ. வ.). 2.* சிறுக (இ.வ.); in a small degree, slightly. *3.* பார்த்தும் பாராமல்; without taking serious notice, somewhat indifferently. *அவன் செய்த குற்றத்தைச் சாடைமாடையாய் விட்டுவிட்டார்.*

[சாடை + மாடை + ஆய். சாடு - சாடை = நேரன்மை, சாயல், ஒப்பு. முள் → மாள் → மாடு → மாடை = சாய்]

சாடைமாடையாத்திட்டு-தல் *sādai-mādaiyāy-t-tiṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) நேரல் முறையில் பழித்தல்; to slander indirectly.

[சாடைமாடையாய் + திட்டு-,]

சாடைமூட்டு-தல் *sādai-mūṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) சண்டையெழுப்புதல் (யாழ்ப்.); to sow discord, incite quarrel by tale-bearing.

[சாடை + மூட்டு-,]

சாண்[1] *sāṇ,* பெ. (n.) விரல்களை அகல விரித்த நிலையில் சுண்டுவிரல் நுனியிலிருந்து கட்டை விரல் நுனிவரை உள்ள தொலைவு; a span, the distance between the end of the thumb to the end of the little finger or forefinger - nine inches. "எண் சாணளவா லெடுத்த வுடம்புக்குள்" (திருமந். 2127).

ம. சாண்; க. கேண், கேண, கேணு; தெ. சேன; து. கேணு, கேண; குட. சாணி; பட. சாணு; கோத. காண்; துட. கீண்; கொலா. சேன

[அள் → அண் = பொருந்துதல். அண் → சண் → சாண் = இரு இடங்களுக்கு இடைப்பட்ட அதாவது விரித்த கையின் இருவிரல்நுனி (கட்டைவிரல், சிறுவிரல்) களுக்கிடைப்பட்ட இடைவெளி.]

சாண் ஒன்பது விரலம் (அங்குலம்) அளவுடையது. 8 நெல் = 1 பெருவிரல், 12 பெருவிரல் = 1 சாண், 2 சாண் = 1 முழம் என்றும் ஒரு நீட்டளவு உண்டு.



சாண்

சாண்[2] *sāṇ,* பெ. (n.) சிறியது; that which is small. 'சாண்பிள்ளையானாலும் ஆண் பிள்ளை' (பழ.)

[சாண்¹ → சாண்]

சாண்கெண்டை *sāṇ-keṇḍai,* பெ. (n.) ஒரு சாண் அளவுள்ள கெண்டை மீன்; a carp-fish about a span in length - barbus chola (சா.அக.).

[சாண்¹ + கெண்டை]

சாண்சீலை *sāṇ-sīlai,* பெ. (n.) சிறுசீலை (வின்.); loin cloth.

[சாண்² + சீலை. சீரை → சீலை = துணி]

சாண்டு[1]**-தல்** *sāṇḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) குற்றுதல்; to pound (சேரநா.).

ம. சாண்டுக; க. சாடிசு; தெ. சாடின்சு; து. சாண்டுனி

[சாடு + சாண்டு-,]

சாண்டு[2] *sāṇḍu,* பெ. (n.) 1. பூப்புநீர்; menstrual discharge. 2. விந்து; semen.

ம. சாண்டு; க., தெ. சாடு

[சாறு → சாண்டு]

சாண்மூலி *sāṇ-mūli,* பெ. (n.) 1. சாண் உயரம் வளரும் மூலிகை; any herbaceous plant growing to the height of a span. 2. கற்பூரவள்ளி; camphor creeper - Anisochilus carnosus (சா.அக.).

[சாண்¹ + மூலி]

சாணக்கல் *sāṇa-k-kal,* பெ. (n.) சாணைக்கல் பார்க்க; see *sāṇai-k-kal.*

[சாணைக்கல் → சாணக்கல் (கொ.வ.)]

சாணகச்சாறு *sāṇaga-c-cāṟu,* பெ. (n.) பால், தயிர், நெய், ஆநீர், சாணம் என்னும் ஆனைந்து பொருள்களின் சேர்க்கை; the mixer of the five products of cow viz., milk, curd, ghee, urine and dung. "சாணகச் சாற்றோபாதி சுத்தி மாத்திரத்தையே உபசீவித்து" (ஈடு.4. 1:10).

ம. சாணகச்சாறு

[சாணகம் + சாறு]

சாணகம் *sāṇagam,* பெ. (n.) சாணம்¹ பார்க்க; see *sāṇam*[1]. "சாணகத்தைக் கொண்டு மெழுகுமளவிலே" (புறநா. 249, உரை).

ம. சாணகம். Pkt. chaṇaga

[சாணம் → சாணகம்]

சாணகி *sāṇagi,* பெ. (n.) கொத்தான்; air creeper. leafless creeper - Cassytha filiformis (சா.அக.).

சாணங்கி *sāṇaṅgi,* பெ. (n.) துளசி (மலை.); sacred basil.

சாணத்தனம்[1] *sāṇa-t-taṉam,* பெ. (n.) வசம்பு; sweet flag - Acorus calamus (சா.அக.).

[சணம் → சாணம் + தனம்]

சாணத்தனம்[2] *sāṇa-t-taṉam,* பெ. (n.) பகடி (இராட்.); ribaldry.

தெ. சாணதநமு

[சாணம் + தனம்]

சாணந்தெளி-த்தல் *sāṇan-teḷi-,* 4 செ.கு.வி. (v.i.) வீடு முதலியவற்றைத் தூய்மை செய்யச் சாணிநீர் தெளித்தல் (கொ.வ.); to sprinkle cow-dung mixed in water, for cleansing.

ம. சாணம் தளிக்க

[சாணம் + தெளி-த்தல்]

சாணம்[1] *sāṇam,* பெ. (n.) சாணி; cow-dung.

ம. சாணம், சாணகம்; க. சகணி; பட. செகணி; Pkt. chāṇaka; Skt. chagaṇa

[சண்ணுதல் = நீக்குதல். சண் → சாண் → சாணம் = மாட்டுப் பவ்வீ. வடவர் பல்வேறு மலத்தையும் சாணியையும் குறிக்கும் சக்ருத் என்னும் சொல்லினின்று சக்ன் என்றொரு மூலத்தை. வலிந்து திரிப்பர் (வ.வ. 145)]

சாணம் வீட்டைத் துப்புரவு செய்யவும் அடுப்பெரிக்கவும் பயிருக்குரமிடவும் உதவுவது.

சாணம்[2] *sāṇam,* பெ. (n.) 1. சாணைக்கல் (சது.) பார்க்க; see *sāṇai-k-kal.* 2. சந்தனக்கல் (பிங்.); stone for grinding sandalwood.

ம. சாணம்

[சூள் → சாள் → சாளை = வட்டமான குடிசை. சாளை → சாளையம் = வளைவு. சாளை → சாணை = வட்டமான சாணைக்கல். சாணை → சாணம்]

சாணம்[3] *sāṇam,* பெ. (n.) தழும்பு; scar. "சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை" (மதுரைக். 593).

[சதைத்தல் = அடித்தல். சதை → சதைவு = அடி, நெகிழ்ச்சி. சதை → சதைவுகாயம் = உதிரம் ஏற்படும் காயம். சதை → (சணை) → சாணை → சாணம்]

சாணம்[4] *sāṇam,* பெ. (n.) நாரலாகிய பொருள் (நன்266, மயிலை); article made of fibres.

[சள்ளுதல் = சிக்குதல். சள் → சடை = நார். சடை → சடம் → சடம்பு = நாருள்ளச் செடி. சள் → சணம் = சணல், சணல்நார். சணம் → சாணம் = நாரினால் செய்யப்பட்ட பொருள்]

சாணம்[5] *sāṇam,* பெ. (n.) சாதிலிங்கம்; vermilion.

சாணம்[6] *sāṇam,* பெ. (n.) சணற்கயிறு; flaxen cord. "இறுக்கின சாணமும் கட்டின கச்சும்" (திவ். திருநெடுந். 21, வியா. பக். 170).

சாணமுத்திரை *sāṇamuttirai,* பெ. (n.) முத்திரை வகை (சைவாநுட். வி. 17); a hand-pose.

[சாள் → சாளை → சாணை = வட்டமானது, வளைந்தது. சாணை → சாணம் + முத்திரை]

சாணமூலி *sāṇamūli,* பெ. (n.) கற்பூரவல்லி; thick-leaved - lavander - Anischilus carnosus.

[சாணம் + மூலி]

சாணளந்தான்பூச்சி *sāṉ-aḷantāṉ-pūcci,* பெ. (n.) புழுவகை (வின்.); a kind of worm.

[சாண் + அளந்தான் + பூச்சி]

சாணளப்பான்புழு *sāṉ-aḷappāṉ-puḻu,* பெ. (n.) சாணளந்தான்பூச்சி பார்க்க; see *sāṉ-aḷandāṉ-pūcci.* "சாணளப்பான் புழுப்போவ அந்த ஆன்மா.... வேறொருடலைக் கன்மத்துக்கீடாகப் பற்றினாலும் பற்றும்" (சிசி.2.37, மறைஞா.).

[சாண் + அளப்பான் + புழு]

சாணாக்கி *sāṇākki,* பெ. (n.) சாணாக்கிக்கீரை பார்க்க; see *sāṇākki-k-kīrai.*

சாணாக்கிக்கீரை *sāṇākki-k-kīrai* பெ. (n.) 1. மயிர் மாணிக்கம்; sickle leaf. 2. முயற்செவி (பதார்த்த. 600); hare's ear. 3. சனகிப்பூண்டு (வின்.); milk-hedge.

[சாணாக்கி + கீரை]

சாணாக்கிப்பூச்சி *sāṇākki-p-pūcci,* பெ. (n.) புழு வகை (இ.வ.); a kind of worm.

[சாணாக்கி + பூச்சி]

சாணாக்கியம் *šāṇākkiyam,* பெ. (n.) *1.* சின்ன முள்ளங்கி அல்லது சுவற்று முள்ளங்கி; wall radish - Blumea aurita. *2.* மக்கி; gamboge tree (சா.அக.).

சாணாகக்கடகம் *šāṇāga-k-kaḍagam,* பெ. (n.) சாணிக்கூடை (வின்.); basket for cow-dung.

[சாணாகம் + கடகம். குணகு → குடங்கு → குடகம் → கடகம் = வட்டம், வட்டமான கூடை]

சாணாகம் *šāṇāgam,* பெ. (n.) சாணம்[1] பார்க்க; see *šāṇam[1]*. "சாணாகத்தைக் கொண்டு மெழுகுமளவிலே" (புறநா. 249, உரை).

[சாணம் → சாணாகம்]

சாணாகமுதலை *šāṇāga-mudalai,* பெ. (n.) தீங்கு செய்யாத ஒருவகைத் தாழ்தரமான முதலை (வின்.); an inferior, harmless kind of alligator.

[சாணாகம் + முதலை]

சாணாகமூக்கன் *šāṇāga-mūkkaṉ,* பெ. (n.) வண்டு வகை (யாழ்அக.); a kind of bee.

[சாணாக + மூக்கன். சேண் → சாண் → சாணகம்]

சாணாங்கி *šāṇāṅgi,* பெ. (n.) சாணம்[1] பார்க்க; see *šāṇam[1]*.

[சாணம் → சாணாங்கி]

சாணாயிரம்முழமாயிரம்கோயில் *šāṇāyiram-muḻam-āyiram-kōyil,* பெ. (n.) தகடூரிலுள்ள சிவன் கோயில்; Šiva's temple in Tagaḍūr. "நகலிரு சோழமண்டலத்து கங்க நாட்டுத் தகடூர் சாட்டுத் தகடூரில் சாணாயிர முழமாயிரம் உட்பட்ட கோயில்." (தெகல்.தொ. 7. கல். 533, 534).

[சாணாயிரம் + முழமாயிரம் + கோயில்]

சாணார் *šāṇār,* பெ. (n.) பனை ஏறுவோர், சாணார்குடி; member of the šāṇār caste, whose occupation is toddy drawing. "பனையேரி சாணான் குடி" (சேதுபதி மன்னர் செப்பேடுகள்).

சாணாரக்கத்தி *šāṇāra-k-katti,* பெ. (n.) கள்ளுக்காகப் பாளைசீவும் கத்தி; toddy-drawer's knife.

[சாணான் + கத்தி → சாணாரக்கத்தி]

சாணாரமூக்கன் *šāṇāra-mūkkaṉ,* பெ. (n.) கொம்பேறிமூக்கன் என்னும் பாம்பு (சீவரட்.); tree-snake.

[சாணார + மூக்கன்]

சாணாரமூர்க்கன் *šāṇāra-mūrkkaṉ,* பெ. (n.) சாணாரமூக்கன் பார்க்க; see *šāṇāra-mūrkkaṉ.*

[சாணார + மூர்க்கன். மூக்கன் → மூர்க்கன்]

சாணி *šāṇi,* பெ. (n.) சாணம்[1] பார்க்க; see *šāṇam[1]*. "சாணியின் குவியலில்" (மணிமே. 30: 253, உரை.).

ம. சாணி, சகணம்; உ. சகணி; பட. செகணி; பர். சர்பி; கட. சர்பி, சட்பி;ப் கோண். சராபி, சடாபி; கொண். ராபி; குவி. ராபி

[சண் → சாண் → சாணம் → சாணி]

சாணிக்கெண்டை *šāṇi-k-keṇḍai,* பெ. (n.) ஒருவகைக் கெண்டை மீன் (மீனவ.); a kind of keṇḍai fish, bitter carp.

மறுவ. கருங்கெண்டை.

ம. சாணிக்கெண்ட

[சாணி + கெண்டை]



சாணிக்கெண்டைமீன்

சாணிச்சுருணை *šāṇi-c-curuṇai,* பெ. (n.) சாணமிட்டு மெழுகுதற்குரிய துணிக்கற்றை; rags used for cleansing the floor with cow-dung.

[சாணி + சுருணை. சுருள் → சுருணை = சுருட்டி வைத்தல், சுந்தல்]

சாணிதட்டு-தல் *šāṇi-taṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) சாணியை வறட்டிக்காக தட்டுதல்; to beat cow-dung into cakes for fuel.

[சாணி + தட்டு-,]

சாணிநீர் *šāṇi-nīr,* பெ. (n.) சாணிப்பால் பார்க்க; see *šāṇi-p-pāl.*

ம. சாணகநீர்; பட. செகணி நீரு

[சாணி + நீர்]

சாணிப்பச்சை *šāṇi-p-paccai,* பெ. (n.) கரும்பச்சை நிறம்; dark green colour.

ம. சாணகப்பச்ச

[சாணி + பச்சை]

சாணிப்பால் *šāṇi-p-pāl,* பெ. (n.) களத்தில் நெற்குவியலின்மேல் குறியிடுதற்குரிய சாணி நீர்; cow-dung mixed in water and used for marking paddy heaped on the threshing-floor.

[சாணி + பால்]

சாணிப்பாறை *šāṇi-p-pāṟai,* பெ. (n.) கடல் மீன் வகை (F.L.); marine fish, greyish, Gazza-Asgentaria.

[சாணி + பாறை]

சாணிப்பிண்டம் *šāṇi-p-piṇḍam,* பெ. (n.) சாணிப்பிணம் (இ.வ.) பார்க்க; see *šāṇi-p-piṇam.*

[சாணி + பிண்டம்]

சாணிப்பிணம் *šāṇi-p-piṇam,* பெ. (n.) 1. சதைமிக்கு வலியற்றவ-ன்-ள்; flabby, weak person. 2. பயனற்றவ-ன்-ள் (வின்.); useless fellow.

[சாணி + பிணம்]

சாணிப்புல் *šāṇi-p-pul,* பெ. (n.) ஒரு வகைப் புல்; a kind of grass.

[சாணி + புல்]

சாணிபோடு-தல் *šāṇi-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) ஆ மலங்கழித்தல்; to evacuate dung, as cow or buffalo.

[சாணி + போடு-,]

சாணிபோடு[2]-தல் *šāṇi-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) வெற்றிலையை யெண்ணுகையில் கள்ளத்தனமாகச் சிலவற்றை அடிக் கையால் நழுவவிடுதல் (இ.வ.); to drop stealthily some betel-leaves into the basket while counting them.

[சாணி + போடு-,]

சாணிமுத்திரை *šāṇi-muttirai,* பெ. (n.) நெற் குவியலில் சாணிப்பாலால் இடும் குறி; mark on a heap of paddy made with cow-dung mixture.

[சாணி + முத்திரை. முக + திரம் = மோதிரம், முத்திரையிட்ட விரலணி. முகத்திரம் → (முத்திரம்) → முத்திரை]

சாணிமுதலை *šāṇi-mudalai,* பெ. (n.) சாணாக முதலை (இ.வ.) பார்க்க; see *šāṇāga-mudalai.*

[சாணி + முதலை]

சாணியுடம்பு *šāṇi-y-uḍambu,* பெ. (n.) சதைமிக்கு வலியற்றிருக்கும் உடம்பு; flabby, weak body.

[சாணி + உடம்பு]

சாணிவண்டு *šāṇi-vaṇḍu,* பெ. (n.) சாணியிலிருந்து தோன்றும் வண்டு; the beetle generated in cow-dung (சா. அக.).

[சாணி + வண்டு]

சாணிவறட்டி *šāṇi-vaṟaṭṭi,* பெ. (n.) வறட்டி; dried cow-dung cake.

ம. சாணகவரடி, சாணகவறடி, சாணக வறட்டி, சாணகவரளி; க. சகணபிண்ட, பறடி; பட. செகணிபறட்டி

[சாணி + வறட்டி. வறள் + தி = வறட்டி]

சாணை[1] *šāṇai,* பெ. (n.) 1. சாணைக்கல் பார்க்க; see *šāṇai-k-kal.* "வாடீட்டிய கிடந்த சாணை" (நைடத. அன்னத்தைத். 14). 2. சருக்கரை முதலியவற்றால் வட்டமாய்ச் சுட்ட பணியார வகை (வின்.); round flat cake made of jaggery, etc.

ம. சாண; க. சாணெ; தெ. சான; Skt. šāṇa

[சவள் → சாள். சாளுதல் = வளைதல். சாள் → சாய். சாய்தல் = வளைதல். சாள் → சாளை → சாணை (வேக. 231) சாணை = 1. வட்டமான கதிர்ச்சூட்டு (நெல்லை). 2. வட்டமாய் தட்டிய புளி மொத்தை. வடவர், சோ (தீட்டு) என்னுஞ் சொல்லை மூலமாகக் காட்டுவர் அது சாணைக்கல் ஒன்றற்குத்தான் சிறிது பொருந்தும் (வ.வ. 145).]

சாணை[2] *šāṇai,* பெ. (n.) *சாணைச்சீலை* (வின்.) *பார்க்க;* see *šāṇai-c-cīlai.*

[சள் → சூழ். சூழ்தல் = நாற்புறமும் வளைதல். சள் → சாள் → சாணை = ஒன்றைச் சூழ்வது, போர்த்துவது]

சாணைக்கல் *šāṇai-k-kal,* பெ. (n.) *ஆய்தந் திட்டுங்கல்* (C.E.M.); grindstone, whetstone, hone.

ம. சாணக்கல்லு; க., து. சாணெக்கல்லு
[சாணை + கல்]

சாணைக்காரன் *šāṇai-k-kāraṉ,* பெ. (n.) *சாணை பிடிப்பவன்;* one who whets and sharpens knives, etc.

ம. சாணக்காரன்; க. சாணெகார, சாணிக

[சாணை + காரன்]

சாணைக்கூறை *šāṇai-k-kūṟai,* பெ. (n.) குழந்தைகளுக்கு மணம்பேசிச் செய்யும் விழாவில் பெண்ணுக்குக் கொடுக்கும் புதிய சிற்றாடை (யாழ்ப்.); new cloth given by bridegroom's parents to the infant bride at the time of betrothal in child-marriage.

[சாணை + கூறை]

சாணைகட்டு-தல் *šāṇai-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சோளம் கேழ்வரகு முதலிய கதிர்களை அறுத்துக் குவித்துச் சுற்றிலும் தட்டை, தாள் இவைகளைக் கொண்டு மழைநீர் உட்புகாத படி மூடுதல்; to cover the sheaf from rain.

[சாணை+ கட்டு-,]

சாணைச்சீலை *šāṇai-c-cīlai,* பெ. (n.) கைக் குழந்தைகளை மூடிப்பொதியுஞ் சீலை (யாழ்.அக.); swaddling clothes.

[சாணை + சீலை]

சாணை[2] பார்க்க

சாணைசேர்-த்தல் *šāṇai-cēr-,* 4 செ.கு.வி. (v.i.) புளியடை தட்டுதல் (வின்.); to preserve tamarind pulp in round cakes.

[சாணை+ சேர்-,]

சாணைதீர்-தல் *šāṇai-tīr-,* 4 செ.கு.வி. (v.i.) *1. சாணை பிடிக்கப்படுதல்;* to be sharpened, as a weapon. *2.* மணிபட்டை தீர்தல் (வின்.); to be cut and polished, as gems.

தெ. சானபட்டு

[சாணை+ தீர்-,]

சாணைப்பதம் *šāṇai-p-padam,* பெ. (n.) *மருக்களங்காய்;* common emetic nut - Randia dumetorum (சா.அக.).

[சாணை + பதம்]

சாணைப்பரல் *šāṇai-p-paral,* பெ. (n.) சாணை உருவாக்கப் பயன்படுத்தும் ஒரு வகை மணல்; a kind of sand used for making the whetting roller (சேரநா.).

ம. சாணப்பரல்

[சாணை + பரல். (புர்) → பர → பரல் = பருக்கைக்கல்]

சாணைப்பிள்ளை *šāṇai-piḷḷai,* பெ. (n.) துணியில் கிடக்கும் கைக்குழந்தை (யாழ்ப்.); infant in swaddling - clothes.

[சாணை + பிள்ளை]

சாணைபிடி-த்தல் *šāṇai-piḍi-,* 4 செ.கு.வி. & செ.குன்றாவி. (v.i. & v.t.) ஆய்தத்தைக் கூர்மைப்படுத்துதல் (திவ்.திருப்பா. 1, அரும். 32); to grind, whet, sharpen, as a weapon.

க. சாணெபிடி

[சாணை+ பிடி-,]

சாணைமேய்-தல் *šāṇai-mēy-,* 3 செ.கு.வி. (v.i.) சாணைகட்டு-தல் பார்க்க; see šāṇai-kaṭṭu-.

[சாணை+ மேய்-, வேய் → மேய்]

சாணைவை[1]**-த்தல்** *šāṇai-vai-,* 4 செ.கு.வி. & செ.குன்றாவி. (v.i. & v.t.) சாணைபிடி-த்தல் பார்க்க; see *šāṇai-piḍi-.*

[சாணை+ வை-,]

சாணைவை[2]**-த்தல்** *šāṇai-vai-,* 4 செ.கு.வி. (v.i.) கதிர்க்கட்டுகளைக் களத்தில் ஒரே இடத்தில் கூட்டிவைத்தல்; to gather sheaf.

[சாணை+ வை-,]

சாத்தக்கணத்தார் *šātta-k-kaṇattār,* பெ. (n.) அய்யனார் கோயிலை ஆளுமை (நிருவாகம்) செய்பவர்கள்; admininstrators of Aiyaṉār temple. "இத்தன்மம் சாத்த கணத்தார் ரச்சிப்பாராகவும்" *(தெ.க.தொ. III).*

[சாத்தன் + கணத்தார். கள்ளுதல் = கூடுதல், பொருந்துதல், ஒத்தல். கள் → கள → கண. கணத்தல் = கூடுதல், ஒத்தல். கள் → களம் = கூட்டம், அவை. களம் → கணம் = கூட்டம். கணம் + அத்து + ஆர் = கணத்தார்]

சாத்தண்டம் *šāttaṇḍam,* பெ. (n.) கொலை செய்ததற்கு விதிக்கும் தண்டனை; punishment for killing. சாத்தண்டம் செய்கில் இருபத்து நாலு காணம் கொடுப்பது *(T.A.S. iii. 195).*

[சா + தண்டம்]

சாத்தண்டை *šāttaṇḍai,* பெ. (n.) நிலத்தில் அண்டை வெட்டுதலில் ஒருவகை (செங். 2); a kind of cultivation. அண்டை வெட்டும்போது வயல்வரப்பில் இருக்கும் ஒட்டைகளை அடைப்பதற்காகச் சேற்றினை அள்ளி வரப்பின்மீது சாத்தி வெட்டும் அண்டை.

[சாத்து + அண்டை]

சாத்தந்தை *šāttandai,* பெ. (n.) சாத்தனுக்குத் தந்தை (தொல். எழுத்து. 347); father of šāttaṉ.

[சாத்தன் + தந்தை]

சாத்தந்தையார் *šāttandaiyār,* கடைக்கழகப் புலவர்; šangam poet.

[சாத்தன் + தந்தையார்]

திணைமொழி யைம்பதின் ஆசிரியர் கண்ணஞ்சேந்தனாருடைய தந்தை. இவர் பாடியதாகப் புறநானூற்றில் நான்கு பாடல்கள் காணப்படுகின்றன. மற்போர் இயல்பு இவர் பாடலில் காணப்படுகிறது. சோழன் போர்வைக் கோப்பெருநற் கிள்ளியைப் பாடியுள்ளார்.

சாத்தமகரணி *šātta-magaraṇi,* பெ. (n.) உத்தாமணி; hedge cotton - Damea extensa (சா.அக.).

சாத்தம்மி *šāt-t-ammi,* பெ. (n.) 1. கலவைச் சந்தனங் குழைத்தற்குரிய அம்மி; grindstone for compounding perfumed sandal. 'கருங்கொள்ளியின் நிறத்தையொத்த நறிய சாத்தம்மியிலே கத்தூரி முதலிய பசுங்கூட்டரைக்க' *(நெடுநல். 50 உரை).* 2. மெருகு சுண்ணாம்பு அரைக்கும் பெரிய அம்மி வகை; big grind stone for pounding limepolish, etc.

[சாந்து + அம்மி – சாந்தம்மி → சாத்தம்மி]

சாத்தமிழ்து *šāttamiḻdu,* பெ. (n.) புளிச் சாறு சோறு; a kind of water soup added to the rice.

[சாறு → சாற்று → சாத்து + அமிழ்து. அமிழ்து = உணவு]

சாத்தமுது *šāttamudu,* பெ. (n.) சாத்தமிழ்து பார்க்க; see *šāttamiḻdu.*

[சாத்தமிழ்து → சாத்தமுது]

சாத்தர் *šāttar,* பெ. (n.) சாத்தவர்[2] பார்க்க; see *šāttavar*[2]. "அதர்கெடுத் தலறிய சாத்தரொ டாங்கு" *(அகநா. 39).*

[சாத்து → சாத்தர்]

சாத்தல் *šāttal,* பெ. (n.) மறைநூல்; the vēdas. "சாத்த லோதும்..... பிரமசாரிப் புதல்வரை" *(திருவாலவா. 27, 52).*

[சாற்று → சாத்து → சாத்தல்]

சாத்தலகு *šāttalagu,* பெ. (n.) கூரைக் கைமரங்களை இணைக்கும் பட்டியல் சட்டம் (கட்டட); a kind of wooden bar used house making.

[சார் → சார்த்து → சாத்து + அலகு]

சாத்தவர்[1] *šāttavar,* பெ. (n.) குதிரை வீரர்; cavalry, troopers.

சாத்தவர்[2] *šāttavar,* பெ. (n.) வெளிநாடுகளிற் சென்று வணிகஞ் செய்யும் வணிகக் கூட்டத்தார்; trading caravan. "பழுதில் சாத்தவர்கள் சூழ" *(திருவாலவா. 27.1).*

[சாத்து → சாத்தவர்]

சாத்தன்[1] *šāttaṉ,* பெ. (n.) 1. சாத்தன் எனும் தெய்வம் (திவா.); a village deity. 2. அருகன் (சூடா.); Arhat. 3. புத்தன்; Buddha. 4. சீத்தலைச் சாத்தனார் பார்க்க; see šīttalai-c-šāttaṉār. "அவனுழை யிருந்த தண்டமிழ்ச் சாத்தன்" *(சிலப். பதி10).* 5. யாரேனும் ஒருவனைக் குறிப்பதற்காகச் சொல்லும் சொல்; imaginary person of male sex. "அக்கடவுளாற் பயன்பெற நின்றானோர் சாத்தனை" *(தொல். பொருள். 422, உரை).*

ம. சாத்தன்; க. சாத (பேய்)

[சாத்து → சாத்தன் = வணிகச் சாத்தினர் வணங்குந்தெய்வம். பண்டைக் காலத்தில் பெரும்பாலும் வணிகரே சாத்தன் என்னும் பெயர் தாங்கியிருந்தனர்.]

வடவர் ஐயனாரைக் குறிக்கும்போது சாஸ்தா என்றும் சாஸ்த்கு என்றும் திரிப்பர். இதனின்று அவர் ஏமாற்றை அறிந்து கொள்க (தமி.வ.66).

சாத்தன்[2] *śāttaṉ*, பெ. (n.) *வாணிகக்கூட்டத் தலைவன் (நன். 130, மயிலை);* head of a trading caravan (செ.அக.).

[சாத்து → சாத்தன்]

வணிகச் சாத்தின் தலைவன் சாத்தன் எனப்படுவான். இப்பெயர் ஸார்த்த என்று வடமொழியில் திரியும். வடமொழியில் சாத்தைக் குறிக்கும் சொற்கும் சாத்தின் தலைவனைக் குறிக்கும் சொற்கும் வேறு பாடின்மையும், சாத்தன் என்னும் தெய்வத்தைக் குறிக்கும் சொல் வேறு பட்டிருப்பதும் கண்டு உண்மை தெளிக.

சாத்தன் என்னும் சொல் பிற்காலத்திற் சாத்துவன் என்றும் சாத்துவான் என்றுந் திரிந்தது. கண்ணகியின் தந்தை மாசாத்துவான் (பெருஞ்சாத்தன்) என்று இயற்பெயர் பெற்றிருந்தமை காண்க (தமி.வ. 66).

சாத்தன்காசு *śāttaṉ-kāśu*, பெ. (n.) *ஒரு பழைய காசு வகை;* name of an old coin (சேரநா.).

ம. சாத்தன் காசு

[சாத்தன் + காசு]

சாத்தனார் *śāttaṉār*, பெ. (n.) *கழகக்காலப் புலவர்;* sangam poet.

[சாத்தன் → சாத்தனார்]

சாத்தாதவன் *śāttātavaṉ*, பெ. (n.) *சாத்தானி பார்க்க (பூணூல் அணியாதவன்);* see *śāttāṉi*, lit. one who does not wear the sacred thread.

[சாத்து + ஆ + த + அவன்]

பூணூல் அணியாமலும், உச்சிக்குடுமி வைக்காமலும் இருக்கும் ஒரு பிரிவினர். மாலியத்தை (வைணவத்தை)ச் சார்ந்த இவர்கள் பல்வேறு பிரிவுகளிலிருந்து, ஒன்று சேர்ந்தவர்கள்.

சாத்தாவாரி *śātta-vāri*, பெ. (n.) *தண்ணீர் விட்டான் கிழங்கு;* a common climber with many thick fleshy roots.

சாத்தானி *śāttāṉi*, பெ. (n.) *கோயிலில் பூமாலை கட்டிக் கொடுக்கும் பார்ப்பனன் அல்லாத மாலியன்;* non-brahmin caste of vaiṣṇavas who render service in temples.

க., தெ., சாதாநி

[சாத்து + ஆ + ஆன் → சாத்தான் → சாத்தானி]

சாத்திக்கொள்(ளு)-தல் *śātti-k-koḷ(ḷu)-*, 13 செ.குன்றாவி. (v.t.) *பகட்டாக (ஆடம்பரமாக) மாலை முதலியன அணிதல் (யாழ்ப்.);* to dress oneself with gaudy, costly attire, decorate oneself.

[சாத்து → சாத்தி + கொள்(ளு)-,]

சாத்தியசாந்தகம் *śāttiya-śāndagam*, பெ. (n.) *நான்முகப் புல்;* reed grass - Saccharum spontaneum (சா.அக.).

சாத்தியநாமம் *śāttiya-nāmam*, பெ. (n.) *ஒருவன் மீது மந்திரம் செயல்படுவதற்காக அம்மந்திரத்திற் சேர்க்கும் அவன் பெயர் (யாழ்ப்.);* name of a person introduced in a mantra for achieving the desired end.

[சாத்திய + நாமம்]

Skt. nāma → த. நாமம்

சாத்து[1]**-தல்** *śāttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *ஒருவர் பெயர் நிலைத்துநிற்கும் நோக்கோடு அவர் நினைவாக ஒன்றினைச் செய்தல்;* to do a good thing in memory of an other person. "குன்றனூரனைச் சாத்தி இவர் மகன் ஸ்ரீராசிங்கப் பேரையனான அரைசயன் இகழாநிலை கண்ணனூர்க் குளத்துக்குக் கட்டின குமிழி" (ஆவணம் 1991: 15-1)

[சார் → சார்த்து → சாத்து-,]

சாத்து[2]**-தல்** *śāttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. *அணிதல்;* to put on, adorn used in reference to idols, great persons, etc. 'முளைவெண்டிங்க ளென்னச் சாத்தி' (சிலப். 12:26). 2. *பூணுதல்;* to wear, as the caste-mark. 'தன்றிரு நாமத்தைத் தானுஞ் சாத்தியே' (கம்பரா. கடிமண. 49). 3. *பூசுதல் (பிங்.);* to daub, smear, anoint. 'சாத்தியருளச் சந்தன முக்கசும்' (S.I.I.iii, 187). 4. *நூலைப் படித்து முடித்தல்;* to finish reading a sacred book. 5. *அடித்தல்;* beat, thrash. 'அவனை இரண்டு சாத்துச் சாத்தினான்' (கொ.வ.).

6. பெயர்த்து நடுதல் (வின்.); to transplant. தென்னம்பிள்ளை சாத்துதல்.

[சுள் → சூர் → சார் → சார்த்து → சாத்து. சாத்துதல் = மூடுதல் (மு.தா.33)]

சாத்து[3]**-தல்** *šāttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) ஒன்றின் மேல் சாய்ந்த நிலையில் இருக்கச் செய்தல்; rest something at a slant. 'குடையை மூலையில் சாத்தி வை'.

[சார்த்து → சாத்து-,]

சாத்து[4]**-தல்** *šāttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) அடைத்தல்; to close, as a door, to shut. "போர்க் கதவஞ் சாத்தி" (திவ்.இயற். 1,4).

[சார்த்து → சாத்து-,]

sātt-u. to close a door, to shut: Saxon scyit-an, to shut in; Dutch schutt-en, to stop; English to shut (C.G. D.F.L. 593).

சாத்து[5] *šāttu*, பெ. (n.) 1. சாத்துகை; wearing, as a garland. 'சாத்து கோதையும்' (பெருங். மகத. 5, 78). 2. சாத்துமுறை[-3] பார்க்க; see *šāttumuṟai-3*. 3. அடி; beat, thrash. 4. பெயர்த்து நடப்பட்ட நாற்று; young plant transplanted. நாற்று முப்பது சாத்து முப்பது *Rd.M.*

[சார்த்து → சாத்து]

சாத்து[6] *šāttu*, பெ. (n.) 1. வணிகக் கூட்டம்; trading caravan. 'சாத்தொடு போந்து தனித்துய ருழந்தேன்' (சிலப். 11:190)). 2. கூட்டம்; company. "சுரிவளைச் சாத்து நிறைமதி தவழும்" (கல்லா. 63, 32).

[சேர் → சார் → சார்த்து → சாத்து. சாத்தல் = சேர்தல், கலத்தல், கூடுதல்]

த. சாத்து → Skt. sārtha

நிலவாணிகர் வணிகப்பண்டங்களைக் குதிரைகள் மேலும், கோவேறு கழுதைகள் மேலும் ஏற்றிக்கொண்டு, கூட்டங்கூட்டமாய் காட்டுவழியே தமிழகத்தையடுத்த வடுக நாட்டிற்கும், நெடுந்தொலைவான வட நாட்டிற்கும், காவற்படையுடன் சென்று ஏராளமாய்ப் பொருளீட்டி வந்தனர். அவ் வணிகக் கூட்டங்கட்குச் 'சாத்து' என்று பெயர். சாத்து கூட்டம். சார்த்து → சாத்து. சார்தல் = சேர்தல். வணிகச்சாத்துகளின் காவல்தெய்வமாகிய ஐயனார்க்குச் சாத்தன் என்று பெயர். அதனால் வணிகர்க்குச் சாத்தன், சாத்துவன் என்னும் பெயர்கள் இயற்பெயராய் வழங்கின. ஐயனார் கோயிலில், வணிகச்சாத்தைக் குறித்தற்கு, மண் குதிரை யுருவங்கள் செய்து வைத்திருத்தலைக் காண்க. சாத்தன் என்னும் தெய்வப்பெயர் வடமொழியில் சாஸ்தா எனத் திரியும் (பப. 93).

சாத்து[7] *šāttu*, பெ. (n.) சாத்துப்பட்டை பார்க்க; see *šāttu-p-paṭṭai*.

[சார் → சார்த்து → சாத்து]

சாத்து[8] *šāttu*, பெ. (n.) சாத்தம்மி; big grinding stone. "ஓர் சாமஞ் சாத்தி லரைக்க தனித்து" (தஞ்.சர. iii, 69).

[சாத்தம்மி → சாத்து]

சாத்துக்கடி *šāttu-k-kaḍi*, பெ. (n.) சாத்துக்குடி (இ.வ.) பார்க்க; see *šāttu-k-kuḍi* (செ.அக.).

[சாத்துக்குடி → சாத்துக்கடி]

சாத்துக்கம்பு *šāttu-k-kambu*, பெ. (n.) தாழ்வாரத்தைத் தாங்கச் சாய்வாக அமைக்கப் பட்ட கழி; support pole.

[சாத்து + கம்பு. கும் → கொம் → கொம்மை = திரட்சி. கொம் → கொம்பு → கம்பு]

சாத்துக்கவி *šāttu-k-kavi*, பெ. (n.) சிறப்புப் பாயிரக்கவி; laudatory stanza in praise of an author and his work.

[சார்த்து + கவி]

சாத்துக்கழி *šāttu-k-kaḻi*, பெ. (n.) கூரையைத் தாங்க முகட்டு வளையையும் சுவரின் மேற் பகுதியிலமைந்த சட்டத்தையும் இணைக்கும் மரச்சட்டம் (கட்டட.); a kind of wooden bar used in sloping roof.

[சாத்து + கழி]

சாத்துக்காப்பு *šāttu-k-kāppu*, பெ. (n.) சாத்துப்படி (வின்.) பார்க்க; see *šāttu-p-paḍi*.

[சாத்து + காப்பு]

சாத்துக்கால்[1] *šāttu-k-kāl*, பெ. (n.) 1. இறைவன் திருமேனியை அழகு செய்யப் பயன்படுத்தும் திருப்பாதம் (இ.வ.); metal leg used in decorating an idol.

[சாத்து + கால்]

சாத்துக்கால்[2] *šāttu-k-kāl,* பெ. (n.) மாட்டுக் குற்றவகை (பெரியமாட் 18); a blemish in cattle.

[சாத்து + கால்]

சாத்துக்குடி *šāttu-k-kuḍi,* பெ. (n.) 1. சாத்துக்குடி என்னும் ஊரில விளைந்த கிச்சிலிப் பழவகை (M.M.); batavian orange produced in sāttukkuḍi, a village in North Arcot district. 2. தித்திப் பெலுமிச்சை; sweet lime - m.tr. Citrus medica-limetta.

[சாத்து + குடி]

சாத்துக்கூறை *šāttu-k-kūṟai,* பெ. (n.) திருப் பரிவட்டம் (S.I.I.iv, 280.); vestment of a deity.

[சாத்து + கூறை]

சாத்துக்கை *šāttu-k-kai,* பெ. (n.) திருவிழாத் திருவுருவை அழகுபடுத்தப் பயன்படுத்துந் திருக்கை (இ.வ.); metal arm used in decorating an idol.

[சாத்து + கை]

சாத்துடிப்பு *šā-t-tuḍippu,* பெ. (n.) இறக்கும் தருவாயில் ஏற்படும் துடிப்பு (மரணவேதனை); death-throb (செ.அக.).

[சா + துடிப்பு]

சாத்துச்சட்டி *šāttu-c-caṭṭi,* பெ. (n.) குழம்பு வைக்கப் பயன்படுத்தும் மட்பாண்டம்; earthern vessel used for keeping sauce.

[சாறு → சாற்று → சாத்து + சட்டி]

சாத்துநாற்று *šāttu-nāṟṟu,* பெ. (n.) பட்டுப்போன வற்றிற்கு மாற்றாக நடும் நாற்று (இராட்.); young plants planted in place of those which are dead.

[சார் → சார்த்து → சாத்து + நாற்று. நாறு → நாற்று]

சாத்துநாறு *šāttu-nāṟu,* பெ. (n.) சாத்துநாற்று (இராட்.) பார்க்க; see *šāttu-nāṟṟu.*

[சாத்து + நாறு]

சாத்துப்பட்டை *šāttu-p-paṭṭai,* பெ. (n.) கைமரம் (இ.வ); common rafter.

ம. சாத்து (படகின் இருபுறமும் சேர்த்துக் கட்டும் பலகை)

[சார் → சார்த்து → சாத்து = சாத்துகை. சாத்து + பட்டை]

சாத்துப்படி *šāttu-p-paḍi,* பெ. (n.) 1. கோயிலில் திருமேனிகட்குச் செய்யும் ஒப்பனை; adornment, bedecking of idols. 'சாத்துப்படிக்குச் சந்தனம் பலகாலும்' (T.A.S. iv. 95). 2. பூசுதற்குரிய சந்தனம் (vaiṣṇ.); sandal paste.

ம. சாத்துப்படி

[சாத்து + படி]

சாத்துப்பயிர் *šāttu-p-payir,* பெ. (n.) பிடுங்கி நடப்பெற்று வளர்ந்த பயிர் (தஞ்சை); grown-up plant transplanted a second time.

[சாத்து + பயிர்]

சாத்துப்பனை *šāttu-p-paṉai,* பெ. (n.) 1. சாற்றுப் பனை; palmyra, yielding fruit or toddy. 2. பெண் பனை; female palmyra tree (சா.அக.).

[சாத்து + பனை]

சாத்துப்பிள்ளை *šāttu-p-piḷḷai,* பெ. (n.) ஒரு நெசவுக் கருவி; a kind of weaving parts.

[சாத்து + பிள்ளை]

சாத்துப்பிள்ளைக்கால் *šāttu-p-piḷḷai-k-kāl,* பெ. (n.) சாத்துப்பிள்ளைத் தாங்கி நிற்கும் மரக்கால்கள்; supporting poles or legs of šāttu-p-pillai.

[சாத்துப்பிள்ளை + கால்]

சாத்துமாலை *šāttu-mālai,* பெ. (n.) அணிதற்குரிய பூமாலை; garland intended to be put on idols, etc. opp. to tūkku-mālai.

[சாத்து + மாலை]

சாத்துமுறை *šāttu-muṟai,* பெ. (n.) 1. கோயில் முதலிய இடங்களில் போற்றிப் பாடல்களை ஓதியபின் இறுதியில் சில பாடல்களைச் சிறப்புத் தோன்ற தனியே ஓதுகை; recital of some special stanzas at the close of pirabandam recitation in times of worship at temples, etc. 2. ஆழ்வார் முதலானோர் விழா முடிவு; close of the festival in honour of vaiṣṇava saints. 3. ஓதுகை முடிவு; completion of the study of sacred works.

[சாற்று → சாத்து + முறை]

சாத்துயர் *šā-t-tuyar,* பெ. (n.) கடுந்துயர் (மரணவேதனை); death agony.

[சா + துயர்]

சாத்துவதி[1] *šāttu-vadi,* பெ. (n.) அறம் பொருளாகவும் தெய்வமானிடர் தலைவராகவும் வரும் நாடக வகை (விருத்தி); a variety of dramatic, composition which has a semi-divine being for hero and treats of virtue, one of four nāḍaga-virutti, 'அவன் சாத்துவதி.... பாரதி யென வினவ' (சிலப். 3, 13, உரை.).

சாத்துவரப்பு *šāttu-varappu,* பெ. (n.) திரட்டுவரப்பு (செங்கை); patch ridge of a field.

[சாத்து + வரப்பு]

சாத்துவரி *šāttu-vari,* பெ. (n.) கள்ளிறக்கும் மரங்களுக்கிடும் வரி (இ.வ.); tax on toddy-yielding trees.

[சாறு + வரி – சாற்றுவரி → சாத்துவரி]

சாத்துவன் *šāttuvaṉ,* பெ. (n.) சாத்தன்[2] பார்க்க; see *šāttaṉ*[2].

[சார் → சார்த்து → சாத்து → சாத்துவன்]

சாத்துவாதி *šāttu-vādi,* பெ. (n.) சித்திர மூலம்; Ceylon leadwort - Plumbago zeylanica (சா.அக.).

சாத்துவான் *šāttuvāṉ,* பெ. (n.) சாத்தன்[2] பார்க்க; see *šāttaṉ,*.

[சாத்து → சாத்துவன் → சாத்துவான்]

சாத்துறி *šātturi,* பெ. (n.) உறிவகை; suspended network of rope. "சாத்துறி பவளக் கன்னல்" (சீவக. 1906).

[சார்த்து + உறி]

சாத்தூலம் *šāttūlam,* பெ. (n.) புலிதொடக்கிச் சாறு; the juice of tiger stopper - Caesalpinia sepiaria(சா.அக.).

சாத்தெறி-தல் *šātteri-,* 3 செ.கு.வி. (v.i.) வாணிகக் கூட்டத்தைக் கொள்ளையிடுதல்; to plunder a trading caravan (செ.அக.).

[சாத்து + எறி-,]

சாதகக்கட்சி *šādaga-k-kaṭci,* பெ. (n.) காந்தம் (மூ.அ.); loadstone.

சாதகக்கிள்ளையோன் *šādaga-k-kiḷḷaiyōṉ,* பெ. (n.) காய்ச்சற்செய்நஞ்சு (யாழ்.அக.); a mineral poison.

சாதகக்கோடு *šādaga-k-kōḍu,* பெ. (n.) சங்க செய்நஞ்சு (யாழ்.அக.); a mineral poison.

சாதகச்சக்கிலி *šādaga-c-cakkili,* பெ. (n.) சத்திசாரம் (யாழ்.அக.); an acrid salt.

சாதகச்சீர்த்தி *šādaga-c-cīrtti,* பெ. (n.) அரத்தச் செய்நஞ்சு (யாழ்.அக.); a prepared arsenic.

சாதகசித்தி *šādaga-šitti,* பெ. (n.) 1. வல்லாரை Indian penny wort - Hydrocotyle asiatica. 2. வாலுளுவை அரிசி; seeds of spindle tree - Oleum nigrum alias Celastrus Paniculata (சா.அக.).

சாதகப்புள் *šādagappuḷ,* பெ. (n.) வானத்தினின்று விழும் மழைத்துளியைப் பருகி வாழ்வதாகக் கருதப்படும் பறவை; வானம்பாடி; shepherd koel, believed to subsist on rain drops.

சாதகம் *šādagam,* பெ. (n.) எருக்கு (மலை) பார்க்க; see *erukku.*

சாதகாகத்தி *šādagāgatti,* பெ. (n.) கோழித் தலைக் கந்தகம் (வின்.); a prepared arsenic.

சாதகும்பம் *šāda-kumbam,* பெ. (n.) பொன்; gold. "விற்சாதகும்பன்" (காளத். உலா, 87).

சாதகை *šādagai,* பெ. (n.) மலைமகள்; Durgā.

சாதல் *šādal,* பெ. (n.) இறப்பு; death. "சாதலும் பிறத்த றானுந் தம்வினைப் பயத்தினாகும்" (சீவக. 269).

[சா + தல். 'தல்' தொ.பெ. ஈறு]

சாதலப்பேரி *šādala-p-pēri,* பெ. (n.) ஒருவகைக் கீரை; cake mellow - Abutilon indicum (சா.அக.).

சாதலம் *šādalam,* பெ. (n.) ஒருவகைக் கீரை (மலை.); Indian chickweed.

சாதலி *šādali,* பெ. (n.) நெய்ச்சிட்டி; jauna - Grewia orbiculata (சா.அக.).

சாதவாகனன்[1] *šādavāgaṉaṉ,* பெ. (n.) சாதவாகன இனத்தைச் சார்ந்த ஒரு மன்னன் (நன். 48, மயிலை.); a king of the sātavāgana dynasty

சாதவாகனன்[2] *šādavāganan,* பெ. (n.) ஐயனார் (திவா.); Aiyanār, as having a vehicle.

[சாத்து + வாகனன் → சாத்துவாகனன் → சாதவாகனம். வணிகக் கூட்டத்தை (சாக்கை) ஊர்தியாகக் கொண்டவன் என்னும் பொருளில் சாதவாகனன் ஐயனாரைக் குறித்தது]

சாதவு *šādavu,* பெ. (n.) கருங்கொள்; black horse-gram (சா.அக.).

சாதவேதம் *šādavēdam,* பெ. (n.) 1. கொடுவேலி; lead wort - Acacia tomentosa. 2. நெருப்பு; fire (சா.அக.).

சாதாரி *šādāri,* பெ. (n.) செவ்வழியாழ்த் திற வகை; a secondary melody-type of the ševvaḻi class corresponding to tēva-kāntāri. "சாதாரி யென்னுங் கானம் பாடினான்" (திருவாலவா. 54, 32).

சாதாவேரி *šādā-vēri,* பெ. (n.) தண்ணீர் விட்டான்; a common climber with many thick fleshy roots.

சாதாவேலி *šādā-vēli,* பெ. (n.) சாதாவேரி பார்க்க; see *šādā-vēri.*

சாதாழை *šādāḻai,* பெ. (n.) 1. கடற்பூண்டு வகை (யாழ்ப்.); dead sea-weed. 2. வலுவற்றவன்; weak, inert person.

சாதாழைநிம்பம் *šādāḻai-nimbam,* பெ. (n.) சாதாளம் பார்க்க; see *šādāḷam.*

சாதாளநிம்பம் *šādāḷa-nimbam,* பெ. (n.) சாதாளம் பார்க்க; see *šādāḷam.*

[சாதாளம் + நிம்பம்]

சாதாளம் *šādāḷam,* பெ. (n.) எருக்கு; madar plant - Caltropis gigantea (சா.அக.).

[சாதகம் → சாதாளம்]

சாதாளி *šādāḷi,* பெ. (n.) சாதாரி பார்க்க; see *šādāri.*

சாதாளிகம் *šādāḷigam,* பெ. (n.) விடத்தலை மரம்; viḍattalai tree - Dichrostachyo cinerea (சா.அக.).

சாதி *šādi,* பெ. (n.) 1. தேக்கு (பிங்.); teak. 2. திப்பிலி (வின்.); long-pepper. 3. பிரம்பு (பிங்.); common rattan of S. India. 4. பிரப்பம்பாய் (பிங்.); rattan matting. 5. ஆடாதோடை (மலை.); malabar-nut tree. 6. கள் (பிங்.); toddy. 7. புழுகுச் சட்டம்; perfume sac of a civet cat. "அமிர்தை முக்கடு சாதி" (தைலவ. தைல. 34).

[சடாய்த்தல் = செழித்தல். சடாய் → சதாய் → சாதி]

சாதிக்காய்[1] *šādi-k-kāy,* பெ. (n.) பந்தைப்போல் உருண்டையாயும், பழுப்பு நிறமாயும், மணம் கொண்டுள்ளதாயுமுள்ள ஒருவகை நெற்றுக் காய்; common nutmeg - Myristica fragrans. It is like a ball. The outer portion which forms the kernel of the fruit is yellowish, fragrant.

இது வளிநோயைப் போக்கும். சுறுசுறுப்பை உண்டாக்கும். வயிற்றுவலி, கழிச்சல் முதலிய நோய்களுக்கு மருந்தாகப் பயன்படும். இலங்கை, மலையாளம், நீலகிரி முதலிய இடங்களில் பயிராகிறது.

இதன் காய்மேல் படர்ந்திருப்பதே சாதி பத்திரி. இதில் பலவகைகள் உண்டு.

1. பெரிய காட்டுச் சாதிக்காய்: forest nutmeg - Myristica Malabarica
2. மலையாளச்சாதிக்காய்: Travancore nutmeg - Myristica magnia
3. நீலகிரி சாதிக்காய் - a variety grown in the Nilgiris
4. நாட்டுச் சாதிக்காய்:
5. காட்டுச் சாதிக்காய்; wild nutmeg - Myristica laurigolia.

(சா.அக.).

சாதிக்காய்[2] *šādi-k-kāy,* பெ. (n.) சீமைக்கள்ளி மரம்; firabies.

சாதிக்காய்[3] *šādi-k-kāy,* பெ. (n.) ஐந்து நறுமணத்துள் ஒன்று; nutmeg, fragrant and medicinal.

து. சாய்காய்

சாதிக்காய்ப்பெட்டி *šādi-k-kāy-p-peṭṭi,* பெ. (n.) சீமைக்கள்ளிப் பெட்டி; dealwood box, especially used as packing case.

[சாதிக்காய் + பெட்டி]

சாதிகம் *šādigam,* பெ. (n.) ஆடாதோடை; Malabar winter cherry - Adhatoda vesica *(சா.அக.).*

சாதிகி *šādigi,* பெ. (n.) முருங்கை; moringa - drumstick tree *(சா.அக.).*

சாதிகேசம் *šādi-kēsam,* பெ. (n.) குங்குமப்பூ; English saffron flower - Crocus sativus *(சா. அக.).*

சாதிகோசம் *šādi-kōsam,* பெ. (n.) வேலம் பிசின்; gum of acacia tree - Gummi acasiae *(சா.அக.).*

சாதிங்குலிகம் *šādinguligam,* பெ. (n.) சாதிலிங்கம்; vermilion. "சாதிங்குலிக மொடு சமர மொழுகிய" *(பெருங். இலாவாண. 5, 22).*

[சாதி + குங்குலிகம்]

சாதிசம் *šādišam,* பெ. (n.) *1.* சாதிக்காய்[1] *(தைலவ.தைல. 98). 2.* நறும்பிசின் *(யாழ்.அக.);* socotrine aloe.

[சாதி → சாதிசம்]

சாதித்துப்பூசு-தல் *šādittu-p-pūšu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தேய்த்துப் பூசுதல் *(வின்.);* to rub, as oil. ointment.

[சாதித்து + பூசு-,]

சாதிப்பன்னம் *šādi-p-pannam,* பெ. (n.) சாதிபத்திரி *(தைலவ.தைல. 109.);* mace.

சாதினி *šādini,* பெ. (n.) *1.* முசுக்கட்டை *(மலை.);* Indian Mulberry. *2.* பீர்க்கு; sponge-gourd.

சாவுத்தீட்டு *šāvu-t-tīttu,* பெ. (n.) உறவினரின் இறப்பால் நேரும் தீட்டு *(கொ.வ.);* pollution on the death of a relative.

மறுவ. சாதீட்டு, சாத்தீட்டு

[சாவு + தீட்டு]

சாதீவம் *šādīvam,* பெ. (n.) குழி நாவல்; common myrtle - Myrtus communis *(சா.அக.).*

சாது[2] *šādu,* பெ. (n.) தயிர் *(யாழ்.அக.);* curd.

[அள் → அளி. அளிதல் = குழைதல். அளி → அளை = தயிர். அளை → சளை → (சதை) → சாது]

சாது → Skt. svādu

சாதுகம் *šādugam,* பெ. (n.) பெருங்காயம் *(மூ.அ.);* Asafoetida.

சாதுசாக்கிரன் *šādu-šākkiran,* பெ. (n.) வான்வழிச் செல்லும் கலையறிந்த முனிவர்; sage, he knew travelling on sky *(அபி.சிந்.).*

[சாது + சாக்கிரன்]

சாதுசீதளம் *šādu-sīdalam,* பெ. (n.) மகிழம்பூ; ape-face flower - Mimusops elengi *(சா.அக.).*

சாதுவன் *šāduvan,* பெ. (n.) காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த வணிகன்; a merchant lived in Kaviri-p-pūmpattinam.

[சாத்து → சாத்துவன் → சாதுவன்]

சாதேவி *šādēvi,* பெ. (n.) திப்பிலி; long pepper *(சா.அக.).*

சாந்தகப்பை *šāndagappai,* பெ. (n.) கொத்தன் கரண்டி *(யாழ்ப்.);* mason's trowel.

[சாந்து + அகப்பை. அகழ் → அகழ்ப்பு → அகழ்ப்பை → அகப்பை]

சாந்தகம் *šāndagam,* பெ. (n.) நான்முகப் புல்; four-faced grass; buffalo reed - Saccharum spontaneum *(சா.அக.).*

சாந்தகலம் *šāndagalam,* பெ. (n.) தணக்கு முட்டைக் கோங்கு என்னும் மரம்; whirling nut - Gyrocarpus jacuini.

சாந்தகவன்னி *šāndaga-vanni,* பெ. (n.) தீமுறிப் பூடு; a kind of plant which is said to suspen the action of fire *(சா.அக.).*

சாந்தகவிராயர் *šānda-kavirāyar,* பெ. (n.) இரங்கேச வெண்பா இயற்றிய புலவர்; author of Irankēsa-venpā.

[சந்தம் → சாந்தம் + கவிராயர்]

சாந்தசந்திரோதயம் *šānda-šandirōdayam,* பெ. (n.) ஒருவகைக் குளிகை *(வின்.);* a medicinal pill.

சாந்தபனம் *šāndabanam,* பெ. (n.) ஒருவகை நோன்பு; penance, religious vow.

இது மூன்றுநாள் பகலுணவு மட்டும் உண்டு, பின் மூன்றுநாள் இரவு உணவு மட்டும் உண்டு, மூன்றுநாள் கேட்காமல் கிடைத்த பொருளை உண்டு, மூன்று நாள் உணவின்றிப் பட்டினி இருக்கும் நோன்பு. *(அபி.சிந்.).*

சாந்தம்[1] *šāndam,* பெ. (n.) *1. அமைதி;* peace, composure, resignation, quietism. *"சாந்தந் தருபவர் வெங்கை புரேசர்" (வெங்கைக்கோ 329).* *2.* **பொறுமை** (சூடா.); endurance, patience. *3.* **ஒன்பான் சுவைகளுள் ஒன்று** (திவா.); sentiment of resignation, quietistic sentiment, one of nava-rašam.

[சந்து → சந்தம் → சாந்தம். சந்து செய்தல் = சமன்செய்தல், சமன்செய்து அமைதி உண்டாக்கல்.]

சாந்த (šānta) என்னும் சொற்கு உழைத்தல், அதனால் ஏற்படும் களைப்பு, அதிலும் குறிப்பாகப் பூசை தொடர்பான சடங்கினை மேற்கொள்வதால் ஏற்படும் களைப்பு, களைப்பின் காரணமாகப் பணி செய்யாது வெறுமனே இருத்தல், ஓய்வெடுத்தல், அமைதியாதல் என்பன போன்ற பொருள்களைக் கொண்ட சம் (šam) என்பதை வேராகக் காட்டுகிறது மா.வி. அகரமுதலி. இதில் உழைத்தலும் அதனால் ஏற்படும் களைப்பும் அடிப்பொருள்களாகக் கொண்ட வேர் அமைதிப் பொருள் தராமை கண்டு கொள்க. உழைத்துக் களைப்படையும் நிலை சோர்வினைக் குறிக்குமேயல்லாமல் அமைதிப் பொருள் தராது. அதேபோல் சோர்வின் காரணமாகப் பணிசெய்யாது வெறுமனே இருத்தல் ஓய்வெடுத்தலாகுமே யல்லாமல் எவ்வகையிலும் அமைதியின் பாற்படாது.

அமைதி மனவுணர்வுகளை அமையச்செய்யும் (அமை + தி), அடக்கச் செய்யும் தன்மையது.

வடமொழிக்கு இனமொழிகளான மேலையாரிய மொழிகளில் இச் சொற்கான இனச்சொல் இல்லை.

கொண்முடிபு (சித்தாந்த) நூலாரும் மெய்ப் பொருள் (தத்துவ) நூலாரும், இருவகைப் பற்றுமறுத்து முற்றத்துறந்த முழுமுனிவரான ஓகியரும் இருவினையுஞ் செய்யாது இறைவன் மேல் எண்ணத்தை நிலையாக நிறுத்தி இருக்கும் நிலையில் அமைதி பிறக்கும் என்றும் அது இணையற்ற இன்பநிலை என்றும் குறிப்பிட்டுள்ளனரே யல்லாமல் பணி செய்யாது சும்மாயிருக்கும் நிலையில் அமைதி பிறக்கும் எனக் குறியாமை காண்க.

சாந்தம்[2] *šāndam,* பெ. (n.) *1. சந்தனம்;* sandal. *"சாந்த நறும்புகை" (ஐங்குறு. 253). 2.* **குளிர்ச்சி** (சூடா.); coolness. *3.* **சாணம்** (வின்.); cow-dung.

[சாந்து → சாந்தம் (வ.வ. 148)]

சாந்தம்மி *šāndammi,* பெ. (n.) *1. சந்தனக்கல்;* sandal-mortar. *"நறுஞ்சாந்தம்மியும்" (பெருங். உஞ்சைக். 38. 171). 2.* **சுண்ணாம்புச் சாந்து அரைக்கும் அம்மி;** stone for grinding lime.

ம. சாந்தம்மி

[சாந்து + அம்மி. அம்முதல் = அமுக்குதல், அமுக்கியரைத்தல். அம் + இ - அம்மி = அமுக்கியரைக்கவுதவுங்கல்]

சாந்தலிங்கக்கவிராயர் *šāndalinga-k-kavirāyar,* பெ. (n.) **தண்டலையார் சதகம் பாடியவர்;** author of Taṇḍalaiyār šadagam.

இவர் சோழநாட்டில் தண்டலைச்சேரியில் பிறந்தவர். தண்டலையார் சதகம், பழமொழி விளக்கம் எனவும் பெயர் பெறும் (அபி.சிந்.).

சாந்தலிங்கசுவாமிகள் *šānda-linga-šuvāmigaḷ,* பெ. (n.) **கொலைமறுத்தல் முதலிய நூல்கள் இயற்றியவரும் 17ஆம் நூற்றாண்டினருமாகிய ஒரு வீரச் சிவனிய முனிவர்;** a vīra-šaiva ascetic of the 17th century author of kolai-maṟuttal and some other works.

சாந்தரை-த்தல் *šāndarai-,* 4 செ.கு.வி. (v.i.) *சாந்தினை அரைத்துக் கூழாக்குதல்;* to grind sandal to make paste.

[சாந்து + அரை-,]

சாந்தவாரி *šānda-vāri,* பெ. (n.) **தண்ணீர் விட்டான்** (மலை.); a common climber with many thick fleshy roots.

சாந்தன் *šāndaṉ,* பெ. (n.) *1.* **அமைதியுடையோன்;** quiet, peaceful person, patient man. *"புராரியும் புகழ்தற்கொத்த சாந்தனால்" (கம்பரா. திருவவ. 34). 2.* **அருகன்** (திவா.); Arhat. *3.* **புத்தன்** (திவா.); Buddha.

[சாந்தம் → சாந்தன்]

சாந்தாற்றி *šāndāṟṟi,* பெ. (n.) *1.* **சிற்றால வட்டம்;** fan. *'மணிக்கட் பீலி மின்னு சாந்தாற்றி' (சீவக. 839). 2.* **பீலி விசிறி** (அக.நி.); bunch of peacock's feathers used as fan.

[சாந்து + ஆற்றி]

சாந்தி[1] *šāndi,* பெ. (n.) *1. அமைதி;* composure, tranquillity, peace. *"சாந்தி மேவி யுயர் தருமம் மல்கி" (சேதுபு. பாவநா. 7). 2.* தணிவு; alleviation, pacification. *3.* கோள் கோளாறுகளை அமைதிப்படுத்தச் செய்யும் விழா; propitiatory rites for averitng the evil influences of planets. *4. கழுவாய்;* remedy, antidote. *5. திருவிழா;* festival. *"கபாலீச் சரமமர்ந்தான் பெருஞ்சாந்தி காணாதே" (தேவா. 1119. 10). 6.* பூசை; worship, *'ஆய்ந்த மரபிற் சாந்திவேட்டு' (பதிற்றுப். 90, பதி.).* *7.* தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர் (திருக்கலம். காப்பு. உரை); a Jaina Arhat, one of 24 tirttangarars.

[சாந்தம் → சாந்தி]

சாந்தம்[1] பார்க்க

சாந்திக்கூத்தன் *šāndi-k-kūttan,* பெ. (n.) *சாந்திக்கூத்து ஆடுபவன்;* person performing the šāndi-k-kūttu. *'சாந்திக்கூத்தன் திருவாலன் திருமுது குன்றனான விஜயராஜேந்திர ஆசார்யனுக்கும்' (S.I.I.ii. 306).*

[சாந்தி + கூத்தன்]

சாந்திக்கூத்து *šāndi-k-kūttu,* பெ. (n.) ஒன்பது வகைகளையுடையதும் கோயில்களில் திருவிழாக் காலங்களில், உலக மக்களின் அமைதி வேண்டி ஆடப்படுவதுமான கூத்து வகையுள் ஒன்று; a kind of dance calculated to give peace of mind to the people and other actors. "சித்திரைத் திருநாளுக்குக் கூத்தாடுகைக்குச் சாந்திக் கூத்தாடுகிற ஏழுநாட்டு நங்கைக்கு கூத்தாடுகைக்கு விட்டநிலம்-இந்நிலம் கொண்டு இத்திருநாளுக்கு ஆடக்கடவ கூத்து ஒன்பது ஆடுவாளாகவும்" *(விக்கிரம சோழன், கிபி. 1134, புதுக். கல். 128)* (கல்கலை.அக.).

[சாந்தி + கூத்து]

சாந்திமத்தீவு *šāndima-t-tīvu,* பெ. (n.) மேல்கடற்கண் உள்ள ஒரு தீவு; an island in the Arabian sea.

[சாந்திமம் + தீவு. தீர்வு → தீவு]

முதல் இராசேந்திரன் காலத்தில் இத்தீவு சோழர்களால் வெற்றி பெறப்பட்டது.

யாரும் கிட்டுதற்கரிய அரண்களையுடையது சாந்திமத்தீவு என கூறப்படுகிறது *(பிற். சோழ. வர. சதாசிவபண், பக். 155.).*

சாந்திரகம் *šāndiragam,* பெ. (n.) *1.* இஞ்சி; green ginger. *2. சுக்கு;* dried ginger *(சா.அக.).*

சாந்திறாசு *šāndirāšu,* பெ. (n.) ஒரு வகை மரம் *(L.);* Tasmanian pine.

சாந்து *šāndu,* பெ. (n.) *1. சந்தன மரம்;* sandal tree. *"சாந்துசாய் தடங்கள்" (கம்பரா. வரைக்காட்சி. 44). 2. கலவைச் சந்தனம்;* sandal paste. "புலர்சாந்தின்....வியன்மார்ப" *(புறநா. 3).* *3.* அரிசி அல்லது கேழ்வரகைக் கருக்கிக் கூட்டப்பட்டதாய் நெற்றிக்கிடும் கருஞ்சாந்து; black pigment made of burnt rice or ragi, used as tilaka. *4.* திருநீறு; sacred ashes. *"ஈசன சாந்தும்" (புறநா. 246). 5.* விழுது; paste. "வெள்ளெட் சாந்து" *(புறநா. 246). 6.* சுண்ணாம்பு; mortar, plaster. *7.* மலம் (வின்.); faeces.

ம. சாந்து; க. சாது, சாந்து; தெ. சாது; து. சாந்து; குட. சாந்தி

[சார் → சார்த்து → சாத்து. சாத்துதல் = பூசுதல், திருமண் காப்பிடுதல், சந்தனம் பூசுதல். சாத்து → சாந்து = சுண்ணாம்புச் சேறு, அரைத்த சந்தனம் (வ.வ. 147, 148)]

Skt. šandana

சாந்துக்காரை *šāndu-k-kārai,* பெ. (n.) சுவர் முதலியன பூசுதற்குரிய சுண்ணாம்பு (இ.வ.); lime for plastering walls, etc.

[சாந்து + காரை]

சாந்துக்காறை *šāndu-k-kārai,* பெ. (n.) மகளிர் கழுத்தணிவகை (இ.வ.); collar-like ornament worn by women.

[சாந்து + காறை]

சாந்துக்கோய் *šāndu-k-kōy,* பெ. (n.) சாந்துப்பரணி; perfume box or casket. "ஓடிச் சாந்துக்கோய் புதிய செல்வ" *(சீவக. 764).*

[சாந்து + கோய்]

சாந்துகா *šānduga,* பெ. (n.) வெளிச்சிப் பிசின்; the gem of wood apple tree *(சா.அக.).*

[சாந்து → சாந்துகா]

சாந்துகுத்து-தல் *šāndu-kuttu-,* 5செ.குன்றாவி. (v.t.) சுண்ணாம்பை உலக்கையாற் குத்திச் சாந்தாக்குதல்; to pound mortar for use.

[சாந்து + குத்து-,]

சாந்துகுழை-த்தல் *šāndu-kulai-*, 4 செ.கு.வி. (v.i.) *1. பொட்டிடுதற்குச் சாந்து குழைத்தல்;* to soften black pigment with water for use as tilaka. *2. சுண்ணாம்பு முதலியன குழைத்தல்;* to pound and temper mortar, etc.

ம. சாந்துகுழய்க்குக

[சாந்து + குழை-,]

சாந்துகூட்டு-தல் *šāndu-kūttu-*, 5 செ.கு.வி. (v.i.) நெற்றிக்கிடுஞ் சாந்து உண்டாக்குதல்; to prepare šāndu or black pigment.

[சாந்து + கூட்டு-,]

சாந்துசாத்தி *šāndu-šātti*, பெ. (n.) கோயிலில் மூலவர்க்கு நெய்க் காப்பிடுகை (R.); anointing of an idol.

[சாந்து + சாத்தி. சார் → சார்த்து → சாத்தி]

சாந்துசேவை *šāndu-šēvai*, பெ. (n.) சாந்துசாத்தி (R.) பார்க்க; see *šāndu-šātti*.

[சாந்து + சேவை]

Skt. sēv → த. சேவை

சாந்துதேய்-த்தல் *šāndu-tēy-*, 5 செ.கு.வி. (v.i.) சாந்தரை-த்தல் பார்க்க; see *šāndarai-*.

ம. சாந்துதேய்க்குக

[சாந்து + தேய்-,]

சாந்துப்படி *šāndu-p-padi*, பெ. (n.) சந்தனக் குழம்பு தருவதற்கான படி; allowance for supplying sandal paste (சேரநா.).

ம. சாந்துப்படி

[சாந்து + படி]

சாந்துப்புறம் *šāndu-p-puram*, பெ. (n.) சந்தனம் கொடுத்துவருவதற்காக விடப்பட்ட இறையிலி நிலம் (சீவக. 2577); land granted rent-free for supplying sandal paste to the king.

[சாந்து + புறம்]

சாந்துப்பொட்டு *šāndu-p-pottu*, பெ. (n.) கருஞ்சாந்தால் நெற்றியிலிடும் பொட்டு; tilaka made with black pigment.

க. சாது; தெ. சாது

[சாந்து + பொட்டு]

சாந்துப்பொடி *šāndu-p-podi*, பெ. (n.) மணப் பொடி (வின்.); perfumed powder.

[சாந்து + பொடி]

சாந்துபூசு-தல் šāndu-pūšu-, 5 செ.குன்றாவி. (v.t.) *1. சந்தனம் முதலியவை பூசுதல் (வின்.);* to smear the body with sandal or other unguents. *2. சுண்ணாம்பு பூசுதல்;* to plaster a wall.

ம. சாந்துபூசுக

[சாந்து + பூசு-,]

சாந்துருவம் *šānduruvam*, பெ. (n.) சுண்ணச் சிலை; plaster statue (கழ.அக.).

[சாந்து + உருவம்]

சாந்துலக்கை *šāndulakkai*, பெ. (n.) சுண்ணாம்புச் சாந்து குத்தும் உலக்கை; pestle for pounding mortar.

[சாந்து + உலக்கை. உல் → உலம் = திரட்சி. உலம் → உலக்கை = திரண்ட தடி]

சாந்துவாரி *šānduvāri*, பெ. (n.) குப்பைக்காரன் (வின்.); scavenger.

[சாந்து + வாரி]

சாந்தை *šāndai*, பெ. (n.) மலைமகள் (கூர்மபு. திருக்கலியாண. 23); Pārvati.

சாப்படுக்கை *šā-p-padukkai-*, பெ. (n.) இறுதிப் படுக்கை, சாவுக்குரிய இறுதிநோய்; death bed.

[சா + படுக்கை. பள் → படு → படுக்கை]

சாப்பறை[1] *šāpparai* பெ. (n.) நெய்தல் நிலப் பறை; maritime district drum (கழ.அக.).

[சா + பறை]

சாப்பறை[2] *šāpparai* பெ. (n.) சாவில் அடிக்கப்படும் பறை (தி.வா.); funeral drum.

[சா + பறை]

சாப்பாக்கொடு-த்தல் *šāppā-k-kodu-*, 4 செ.கு.வி. (v.i.) சுருதியோடு இசைய வேண்டி முழவைத் தட்டிப் பார்த்தல்; to test the tone of a mattalam by striking it.

[சாப்பா + கொடு-,]

சாப்பாட்டுக்கடை *sāppāṭṭu-k-kaḍai,* பெ. (n.) 1. **பணங்கொடுத்துச் சாப்பிடுங் கடை;** hotel, restaurant. 2. **உணவிடுகை;** serving of food. *சாப்பாட்டுக்கடை முடிந்துவிட்டதா?*

[சாப்பாடு + கடை]

சாப்பாட்டுராமன் *sāppāṭṭu-rāmaṉ,* பெ. (n.) 1. **பெருந்தீனிக்காரன்;** glutton. 2. **பயனற்றவன்;** good-for-nothing fellow.

[சாப்பாடு + ராமன்]

இராம காதைத் தலைவன் இராமன் மாந்தப் பண்புகளின் உயர்விடமாகக் காட்டப் பட்டுள்ளதையொற்றிப் பிறசெயல்களிலும் மேலானவன் (உண்பதில் முன்னிற்பவன்) எனக் காட்டும் முகத்தான் ஆளப்பட்ட சொல். ஒநோ: தண்டச்சோத்துத் தடிராமன், திண்ணைத் தூங்கி இராமன்.

சாப்பாட்டுவிடுதி *sāppāṭṭu-viḍudi,* பெ. (n.) **பணங்கொடுத்து உண்ணும் உண்டிச்சாலை** (இ.வ.); hotel.

[சாப்பாடு + விடுதி]

சாப்பாடு[1] *sāppāḍu,* பெ. (n.) 1. **கவளங் கவளமாகக் கறிவகைகளுடன் (அல்லது அவையின்றிக்) குழம்பும் சாறும் மோரும் (அல்லது அவற்றுள் ஒன்று) கலந்து உண்பதற்கான சோறு;** boiled rice with or without side dishes, sauce, buttermilk, etc. 2. **உணவு;** food, meal especially of human beings. "நல்வண்ணமென்னி லொரு சாப்பாடு" *(திருவேங். சத. 29).*

ம. சாப்பாடு; தெ. சாபாடு

[சப்பு → சப்பிடு → சாப்பிடு → சாப்பாடு]

சாப்பாடு[2] *sāppāḍu,* பெ. (n.) **நல்ல அடி;** drubbing. 'நீ சேட்டை பண்ணினால் சாப்பாடு கிடைக்கும்' *(உ.வ.).*

ம. சாப்பாடு; தெ. சாபாடு

[சப்பு → சப்பிடு → சாப்பிடு → சாப்பாடு]

சாப்பாணம் *sāppāṇam,* பெ. (n.) யாழ்ப்பாணம்; a northern province of Ceylon, Jaffna *(சேரநா.).*

ம. சாப்பாணம்

[யாழ்ப்பாணம் → சாப்பாணம்]

சாப்பிடு[1]**-தல்** *sāppiḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. **குழம்பும் சாறும் மோரும் (அல்லது அவற்றுள் ஒன்று) கலந்த சோற்றைக் கவளங் கவளமாகக் கறிவகைகளுடன் (அல்லது அவையின்றி) உட்கொள்ளுதல்;** to take into mouth chew and swallow boiled rice with or without side dishes, sauce, butter milk, etc. இருவரும் ஒன்றாகத்தான் சாப்பிடச் செல்வோம். 2. **திட உணவுகளை உண்ணுதல்;** to eat solid foods, eatables. பழம் சாப்பிடப் பெரும் பாலோர்க்கு ஆசை. 3. **பருகையை (நீர்மத்தை) க் குடித்தல்;** to drink. தேநீர் சாப்பிடச் சென்றனர். 4. **புகைத்தல் (புகை பிடித்தல்);** to smoke. வெண் சுருட்டு (சிகரட்) சாப்பிடும் பழக்கம் கேடானது.

ம. சாப்பிடுக; தெ. சாபடு

[சப்பு → சப்பிடு → சாப்பிடு-,]

சாப்பிடு[2]**-தல்** *sāppīḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) **கவர்தல்;** to consume, misappropriate ஊர்ப்பணத்தைச் சாப்பிடக் கூடாது.

ம. சாப்பிடுக

[சப்பிடு → சாப்பிடு]

சாப்பிரா *sāppirā,* பெ. (n.) **சிறுமரவகை** (I.P.); arnotto.

தெ. சாபரா

சாப்பிராவிதை *sāppirā-viḍai,* பெ. (n.) **குரங்குமஞ்சி விதை;** arnotto, monkey turmeric-Bixa orellana *(சாஅக.).*

[சாப்பிரா + விதை]

சாப்பிள்ளை *sā-p-piḷḷai,* பெ. (n.) **கருவிலே இறந்துவிழும் பிள்ளை;** still-born child. 'சாப்பிள்ளைபெற்றுத் தாலாட்டலாமா?' *(இ.வ.).*

ம. சாப்பிள்ள, சாகிடாவு

[சா + பிள்ளை]

சாப்பீடு *sāppīḍu,* பெ. (n.) **'சப்பு' எனும் உயர்திணை ஒலிக்குறிப்பினின்று தோன்றிய ஒலிக்குறிப்புச் சொல்;** onom. expr. word signifying smacking sound.

[சப்பு → சப்பிடு → சாப்பிடு → சாப்பீடு]

சாப்பு[1]-தல் *sāppu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *அடித்தல்;* to strike. "கேவரகைத் தண்டெடுத்துக் கேப்பை யென்று சாப்பினேன்" *(நெல்விடு. 416).*

[சாய் → சாய்ப்பு → சாப்பு-,]

சாப்பு[2] *sāppu*, பெ. (n.) படி (C.G.); copy, transcript.

[சாய் → சாயை = நிழல். சாய் → சாயல்= ஒப்பு. சாய் → சாய்பு → சாய்ப்பு → சாப்பு]

சாப்பு[3] *sāppu*, பெ. (n.) ஒருவகைத் தாளம்; a kind of cymbal *(கழ.அக.).*

சாப்புத்தாளம் *sāppu-t-tāḷam*, பெ. (n.) *தாளவகை;* variety of time-measure (Mus.).

[சாப்பு + தாளம்]

சாப்புள் *sā-p-puḷ*, பெ. (n.) சாக்குருவி பார்க்க; see *sā-k-kuruvi.*

[சா + புள்]

சாப்பை[1] *sāppai*, பெ. (n.) புற்பாய் *(திவா.);* mat made of grass or rushes.

ம. சாப்ப; க. சாப, சாபெ, சாபெ; தெ. சாப; து. சாபெ, சாபெ; துட. சோப்ய; பட. சாபெ.

[சாய் + பாய் = சாய்ப்பாய் → சாப்பை (கொ.வ.). சாய் = பாய்முடையப் பயன்படும் நீர்க்கால் புல்வகை]

சாப்பை[2] *sāppai*, பெ. (n.) ஆற்றலில்லாதவன் *(வின்.);* weak-minded person.

[சப்பை → சாப்பை]

சாப்பைக்கொண்டான் *sāppai-k-koṇḍāṉ*, பெ. (n.) சாப்பைச்சொண்டான் பார்க்க; *sāppai-c-coṇḍāṉ (சா.அக.).*

[சாப்பைச்சொண்டான் → சாப்பைக் கொண்டான்]

சாப்பைச்சொண்டான் *sāppai-c-coṇḍāṉ*, பெ. (n.) *நாரைவகை (யாழ்ப்);* spoonbill, species of platalea.

சாப்பொறி *sā-p-poṟi*, பெ. (n.) *காப்பாகத் தோன்றினாலும் உயிருக்குப் பேரிடர் தரக்கூடிய இடம்;* death-trap.

[சா + பொறி]

சாபஞ்சியம் *sābañjiyam*, பெ. (n.) *சீரகம்;* cummin seed *(சா.அக.).*

சாபத்திரி *sāpattiri*, பெ. (n.) *சாதிபத்திரி (கொ.வ.);* mace.

சாபம்[1] *sābam*, பெ. (n.) தவத்தோர் கடிந்து கூறும் மொழி; curse, imprecation. "தடுப்பருஞ் சாபம்" *(கம்பரா. அகலிகை. 7.).*

ம. சாபம்

[சா → சாவி (பி.வி.). சாவித்தல் = அங்கதம் பாடி அல்லது சினந்துரைத்துச் சாகப் பண்ணுதல், சாவு குறித்த சொற்களைச் சொல்லித் திட்டுதல்.

வாழ்த்து (வாழவை) என்னும் பிற வினைக்கு எதிராகச்சாவியென்னுஞ் சொல்லே பொருத்தமாயிருத்தல் காண்க. இனி, ஒருவன் கடுமையாகத் திட்டும்போது, 'சாவிக்கிறன்' என்று கூறும் உலக வழக்கையும் நோக்குக (வ.வ. 147).

சாவி → சாவம் → சாபம்]

சாபம்[2] *sābam*, பெ. (n.) 1. மூங்கிலால் செய்த வில்; bow made of bamboo. 2. வில்; bow. "சாபஞ்சாத்திய கணை துஞ்சு வியனகர்" *(பெரும்பாண். 121).* 3. வானவில்; rainbow. 4. சிலை ஓரை (தனுசு) *(திவா.);* sagittarius of the zodiac.

மறுவ. கொடு, மரம், சிலை.

ம. சாபம்; க. சாப

[ஆவம் = மூங்கில். ஆவம் → சாவம் = வில். சாவம் → சாபம்]

த. சாபம் → Skt. cāpa

சாபம்[3] *sābam*, பெ. (n.) விலங்கின் குருளை; the younger of an animal. "சாபவெங் கோளரியெனா" *(பாரத. சம்பவ. 40).*

சாபம்[4] *sābam*, பெ. (n.) விலக்கப்பட்டது; that which is prohibited or banned. "உலகத்தார் சாபமென்று ஆசௌசங் கொள்கின்றது மாம்சத்தையன்றே" *(நீலகேசி, 341, உரை).*

சாபம்கொடு-த்தல் *sābam-koḍu-*, 4 செகுன்றாவி. (v.t.) சாபமிடு-தல் பார்க்க; see *sābam-iḍu-.*

க. சாபகொடு

[சாபம் + கொடு-,]

சாபமிடு-தல் *sābamiḍu-*, 17 செ.குன்றாவி. (v.t.) *திட்டுதல்;* to curse, revile.

க. சாபகொடு

[சாபம் + இடு-,]

சாபவான்புழு *šāpa-vān-pulu,* பெ. (n.) வில்லூன்றிப்புழு (ஞானா.20).; an insect.

சாபறை *šā-parai,* பெ. (n.) சாப்பறை[2] (யாழ்.அக) பார்க்க; see *šā-p-parai.*

[சா + பறை]

சாபாவனி *šāpāvani,* பெ. (n.) அரசிறையைத் தவிர்ப்பதற்காக ஒளித்துச் செய்யும் பயிர்த் தொழில் (M.Sm. D. I. 278); concealment of cultivation for the purpose of evading payment of government revenue.

சாபி-த்தல் *šābi-,* 4 செ.குன்றாவி. (v.t.) சாவி[1]-த்தல் பார்க்க; see *šāvi-.* "கேள்வித் தலைவரைச் சாபியா" (உபதேசகா. அயமுகி. 75).

[சவி → சபி → சாபி]

சாபிணம் *šā-pinam,* பெ. (n.) வலியற்றுச் சாகுநிலையிலுள்ளவன் (வின்.); weak old person, as one about die-used in contempt.

[சா[1] + பிணம்)]

சாபிள்ளை *šāpillai,* பெ. (n.) சாப்பிள்ளை (வின்.) பார்க்க; see *šā-p-pillai.*

[சா + பிள்ளை]

சாபுதாளம் *šāpu-tālam,* பெ. (n.) சாப்புதாளம் பார்க்க; see *šāppu-tālam.*

[சாப்புதாளம் → சாபுதாளம்]

சாம்பகி *šāmbagi,* பெ. (n.) நெருஞ்சில்; calotrope - Tirbulus terrestris (சா.அக.).

சாம்பச்சி *šāmbacci,* பெ. (n.) சாம்பன் குடியைச் சார்ந்த பெண் (சங்.அக.); a woman belonging to samban clan.

[சாம்பன் → சாம்பத்தி → சாம்பச்சி. அச்சி = பெண்பாலீறு]

சாம்பசதாசிவன் *šāmba-sadā-sivan,* பெ. (n.) சிவனார் வேம்பு; Shiva's neem - Indigofera asphalathoides (சா.அக.).

சாம்பசிவம் *šāmbasivam,* பெ. (n.) அறுகம்புல்; sacred grass (சா.அக.).

சாம்பசிவன் *šāmba-šivan,* பெ. (n.) அம்பிகையுடன் கூடிய சிவன்; Šiva in company with Pārvati.

[சாம்பன் + சிவன். சாம்பல் → சாம்பன் = சுடலையாண்டி]

சாம்பம் *šāmbam,* பெ. (n.) ஆனைநெருஞ்சி (மலை.); a small plant.

சாம்பர் *šāmbar,* பெ. (n.) சாம்பல்[1] பார்க்க; see *šāmbal*[1]. "சாம்பரகலத் தணிந்தாய் போற்றி" (தேவா. 967. 4).

[சாம்பல் → சாம்பர். ல - ர போலி]

சாம்பராக்கு *šāmbarākku,* பெ. (n.) பாட்டினிறுதி தோறும் 'சாம்பராக்கு' என்று முடியுமாறு பாடப்படும் ஒரு வகைப் பாட்டு (வின்.); a poem in praise of a deity, each stanza of which ends with the refrain šāmbarākku.

[சாம்பல் → சாம்பர் + ஆக்கு]

சாம்பல்[1] *šāmbal,* பெ. (n.) 1. ஏதாவது பொருளை எரித்த பின் மிஞ்சும் பொடித்துகள்; powdery residue left after combustion of any substance, ashes. "சுடுகாடான சாம்பல ரங்கத்திலே நிருத்தமாடி" (பு.வெ. 9, 43, உரை.). 2. வாடற்பூ; withered flower. "ஆம்பற் பூவின் சாம்பலன்ன" (குறுந். 46). 3. முதுமை (பிங்.); old age. 4. புகையிலை, பருத்திப்பயிர்களைக் கெடுக்கும் பூச்சி (இ.வ.); insect causing damage to tobacco, cotton, etc.

ம. சாம்பல்

[சுள் → சுட்பு → சுப்பு. சுப்பெனல் = விரைந்து நீர்வற்றுதல். சுப்பு → சுப்பல் = சுள்ளி. சுப்பு → சும்பு → சம்பு → சாம்பு. சாம்புதல் = எரிதல், வாடுதல். சாம்பு → சாம்பல் (வே.க. 89). எரிபட்ட நீறு, சாம்பல் நிறமாகத் தெரியும் வாடிய பூ, பயிர்களை அழிக்கும் சாம்பம்நிறப் பூச்சி]

சாம்பல்[2] *šāmbal,* பெ. (n.) நாவல் மரம் (மலை.); jamun plum.

[சம்பு → சாம்பு → சாம்பல்]

சம்பு[4] பார்க்க

சாம்பல்கரை-த்தல் *šāmbal-karai-,* 4 செ.குன்றாவி. (v.t.) சாம்பற்கரை-த்தல் பார்க்க; see *šāmbar-karai-.*

[சாம்பல் + கரை-,]

சாம்பல்கிளுவை *šāmbal-kiluvai,* பெ. (n.) சாம்பல்நிறமான கிளுவை; grey balsum - Balsmodendron Beryyi (சா.அக.).

[சாம்பல் + கிளுவை]

சாம்பல்சத்து *śāmbal-śattu,* பெ. (n.) *பயிரின் திரட்சிக்கும், நோய் எதிர்ப்புத் தன்மைக்கும் உதவியாக இருந்து நல்ல சாகுபடியைத் தரும் சத்து;* potash.

[சாம்பல் + சத்து]

சாம்பல்நத்தம் *śāmbal-nattam,* பெ. (n.) *மதுரை மாவட்டத்தில் உள்ள ஊர்;* a village in Madurai district.

[சாம்பல் + நத்தம்]

சம்பந்தர் சமணர்களைச் சொல்லாடலில் (வாதில்) வென்று அவர்கள் பாடிய ஏடுகளைத் தீயில் எரித்துச் சாம்பலாக்கிய காரணமாக பெற்ற பெயர் சாம்பல் நத்தம் *(த.ஊ.பெ.).*

சாம்பல்நாரை *śāmbal-nārai,* பெ. (n.) *சாம்பல் நிற நாரை வகை;* eastern grey heron - Ardea cinerea rectirostris.

மறுவ. நாராயன், நரையான், நாராயணப்பட்சி

[சாம்பல் + நாரை]

நரை என்ற சொல், சாம்பல் கலந்த வெள்ளை நிறத்தைக் குறிக்கும். நரை நிறமுடைய பறவையை நரையான் (அ) நாரை என்று அழைத்தனர் *(சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்).*

சாம்பல்நோய் *śāmbal-nōy,* பெ. (n.) *எள் பயிரைத் தாக்கும் நோய்;* a disease attack gingelly.

[சாம்பல் + நோய். நுள் → நொள் → நோள் → நோய்]

சாம்பல்புறா *śāmbal-puṟā,* பெ. (n.) *ஒரு வகைப் புறா;* a kind of dove - Streptopelia decaocto.

[சாம்பல் + புறா]

வெள்ளைப் புறா, தூதுணம் புறா என்ற வேறு பெயர்களும் உண்டு. வேலமரத்தில் காணப்படும் தவசங்களோடு சிறுசிறு கற்களையும் விழுங்கும் தன்மையால் தூதுணம் புறா என்றும் அழைப்பர் *(சங்.புள்.விள.).*

சாம்பல்பூ-த்தல் *śāmbal-pū-,* 4 செகுன்றாவி. (v.t.) *1. கதிரில் உள்ள கங்கின்மேல் சாம்பல் படிதல், மரம், காய் முதலியவற்றில் சாம்பல்நிறப் பொருள் படிதல்;* to be covered with ashes or ash like thing. *2. உடல் வெளுத்தல்;* to turn ashen to body. அவன் உடம்பு மெலிந்து சாம்பல் பூத்துவிட்டது. *3. அதிக வேலையினால் உடலில் (வெயர்வையால்) சாம்பல்படிதல்;* to turn ashen (of body). 'உடல் சாம்பல் பூத்து விட்டது, குளிக்கவேண்டும்' *(உ.வ.).*

[சாம்பல் + பூ-,]

சாம்பல்பூசனம் *śāmbal-pūśaṉam,* பெ. (n.) *பருத்திச்செடியைத் தாக்கும் ஒரு நோய், பூசனக்கொல்லிகள்;* a kind of disease attack cotton.

[சாம்பல் + பூசனம். பூஞ்சாளம் → பூசாளம் → பூசனம்]

சாம்பல்மரலி *śāmbal-marali,* பெ. (n.) *சிறுநாவல்;* ruddy black plum - Eugenia rubicunda *(சா.அக.).*

[சாம்பல் + மரலி]

சாம்பல்மொந்தன் *śāmbal-mondaṉ,* பெ. (n.) *வாழைவகை;* a variety of plantain bearing ash - coloured fruits.

ம. சாம்பமொந்தன்

[சாம்பல்' + மொந்தன். பொந்து → பொந்தன் → மொந்தன். பொதுபொது (இரட்டைக் கிளவி). பொதுக்கு, பொந்து என்னும் சொற்களை நோக்குக. இவை பெருமைப்பொருளைக் குறிப்பன]

சாம்பல்வருணி *śāmbal-varuṇi,* பெ. (n.) *செருப்படை;* a low spreading plant found in rice fields after harvest - Coldenia procumbens *(சா.அக.).*

[சாம்பல் + வருணி]

சாம்பல்வாழை *śāmbal-vāḻai,* பெ. (n.) *சாம்பல் மொந்தன் (G.Sm.D.I.i, 215) பார்க்க;* see *śāmbal-mondaṉ.*

[சாம்பல்' + வாழை. சாம்பல் நிற வாழை]

சாம்பலச்சி *śāmbalacci,* பெ. (n.) *வெடியுப்பு (யாழ்ப்.);* saltpetre, potassium nitrate.

[சாம்பல் → சாம்பலச்சி]

சாம்பலடிப்பெருநாள் *śāmbalaḍi-p-perunāḷ,* பெ. (n.) *கிறித்துவத் திருநாள்களுள் ஒன்று;* Ash wednesday. Shrove Tuesday *(R.C.).*

ம. சாம்பல் பெருநாள்

[சாம்பல் + அடி + பெருநாள்]

சாம்பலாண்டி *šāmbal-āṇḍi,* பெ. (n.) 1. உடல் முழுதும் நீறுபூசிய துறவி; religious mendicant whose whole body is smeared with ashes. 2. கோமாளி (வின்.); clown.

[சாம்பல் + ஆண்டி]

சாம்பலுப்பு *šāmbal-uppu,* பெ. (n.) மரவுப்பு (இங்.வை.166); potash, salt of tartar, Potassa.

[சாம்பல் + உப்பு]

சாம்பலெரு *šāmbal-eru,* பெ. (n.) வறட்டி, விறகு, உமி முதலியவை முற்றிலும் எரிந்தபின், கிடைக்கும் எரு (செங்கை); a kind of manure.

[சாம்பல்+ எரு]

சாம்பலொட்டி *šāmbal-oṭṭi,* பெ. (n.) எருக்கு (சாம்பனிறம் படிந்திருப்பது) (சங்.அக.); madar, as being of ash-like dull-grey colour.

[சாம்பல்[1] + ஒட்டி. சாம்பலை அப்பியது போன்ற நிறமுடையது]

சாம்பவம்[1] *šāmbavam,* பெ. (n.) 1. சிவன் தொடர்பானது; that which pertains to Šivaṉ. 2. சிவமதவேறுபாடு; a šaiva sect. "சிலர் சாத்தமும் சிலர் சாம்பவமுமாய்ச் சேர்வர்" (திருக்காளத். பு. 30: 26).

[சம்பு → சாம்பு → சாம்பல் → சாம்பன் → சாம்பவன் → சாம்பவம்]

சாம்பவம்[2] *šāmbavam,* பெ. (n.) சம்புநாவல் (யாழ்.அக.); rose-apple.

[சம்பு → சாம்பு → சாம்பல் → சாம்பவம்]

சாம்பவன் *šāmbavaṉ,* பெ. (n.) சிவனை வழிபடுவோன்; worshipper of Šivaṉ, šaiva devotee.

[சாம்பன் → சாம்பவன்]

சாம்பவனோடை அம்பலவாண முனிவர் *šāmbavaṉōḍai-ambalavāṇa-muṉivar,* பெ. (n.) 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து திருவுசாத்தானப் புராணம் பாடிய தில்லை வளாகத்தைச் சேர்ந்த புலவர்; a poet, author of Tiruvušāttāṉa-p-purāṉam, lived in 17th century at Tillaivaḷāgam. "சாம்பவனோடை என்பது இவரின் ஊர்" (பிற்.புல.).

[சாம்பனோடை + அம்பலவாண முனிவர்]

சாம்பவி *šāmbavi,* பெ. (n.) 1. நாவல்வகை; clove leaved black plum. 2. பெருநாவல் (மலை.); east Indian rose-apple.

[சாம்பவம் → சாம்பவி]

சாம்பவிவிந்து *šāmbavi-vindu,* பெ. (n.) கௌரி செய்நஞ்சு (யாழ்.அக.); a prepared arsenic.

சாம்பற்கத்தலை *šāmbaṟ-kattalai,* பெ. (n.) மூன்றடி நீளமும், சாம்பல்நிறமும் கொண்டதும், சாப்பிட உதவாததுமான கத்தலை என்னும் கடல்மீன்; a grey-coloured sea-fish - Sciaena albida alias corvina albida. It is about 3ft long not esteemed for table (சா. அக.).

[சாம்பல் + கத்தலை]

சாம்பற்கரைத்தல் *šāmbaṟ-karaittal,* பெ. (n.) பிணத்தை எரித்த பின்பு, சாம்பலைக் கரைத்து எலும்பைப் பொறுக்கும் ஈமச்சடங்கு (இ.வ.); performing the ceremony of pouring water on the ashes and collecting the bones after cremation.

[சாம்பல் + கரைத்தல். இதனை அங்கங் கரைத்தல் என்று கூறுவது, தென்பாண்டி வழக்கம்]

சாம்பற்கரை-த்தல் *šāmbaṟ-karai-,* 4 செ.குன்றாவி. (v.t.) இறந்தவரின் உடலை எரித்தபின் சாம்பலையும் எரியாத எலும்பையும் எடுத்து நீரில் விடுதல்; to immerse ashes of a cremated person in river etc., a post-funeral rite.

[சாம்பல் + கரை-,]

சாம்பற்கற்றாழை *šāmbaṟ-kaṟṟāḻai,* பெ. (n.) வீக்கத்தைக் குணப்படுத்தும் சாம்பல் நிறமான கற்றாழை; an ash-coloured aloe found grown near the railway fencing; Rail - Aloe americana.

[சாம்பல் + கற்றாழை]

சாம்பற்காட்டுக்கோழி *šāmbaṟ-k-kāṭṭu-k-kōḻi,* பெ. (n.) சாம்பற்கோழி பார்க்க; see *šāmbaṟ-kōḻi.*

[சாம்பல் + காட்டுக்கோழி]

சாம்பற்கீரை *šāmbaṟ-kīrai,* பெ. (n.) சிறுபசலைக் கீரை; creeping purslane.

[சாம்பல் + கீரை]

சாம்பற்குண்டி *šāmbar̠-kuṇḍi,* பெ. (n.) அருவருக்கத்தக்கவன் (வின்.); slovenly, dirty, person.

[சாம்பல் + குண்டி; குள் → குண் → குண்டி = புட்டம். உடல் முழுவதும் சாம்பல் பூசியவன் அல்லது நெடுங்காலம் நீராடாமல் புழுதி படிந்த அம்மணத் தோற்றத்து முனிவன்]

சாம்பற்குளி-த்தல் *šāmbar̠-kuḻi-,* 4 செ.குவி. (v.i.) சாம்பலிற் புரளுதல் (யாழ்ப்.); to bathe in ashes to be covered with ashes, as a brooding hen.

[சாம்பல் + குளி-,]

சாம்பற்கோழி *šāmbar̠-kōḻi,* பெ. (n.) சாம்பல் நிறத்தில் இருக்கும் கோழி; ash coloured fowl.

ம. சாம்பக்கோழி

[சாம்பல் + கோழி. குள் → கொழு → கோழி = நிலத்தையும் குப்பையையும் கிளைக்கும் பறவை]

சாம்பற்சுறா *šāmbar̠-šur̠ā,* பெ. (n.) சாம்பல் வண்ணமான சுறாமீன்; grey shark - Carcharias macloti (சா.அக.).

[சாம்பல் + சுறா]

சாம்பற்பாரை *šāmbar̠-pārai,* பெ. (n.) சாம்பல் வண்ணமான ஒருவகைக் கடல்மீன்; a sea-fish, grey pauray - Caranx nigrescens (சா.அக.).

[சாம்பல் + பாரை]

சாம்பற்புறா *šāmbar̠-pur̠ā,* பெ. (n.) சாம்பல் நிறத்தில் இருக்கும் புறா; ash coloured dove.

ம. சாம்பப்ராவு

[சாம்பல் + புறா]

சாம்பற்பூ-த்தல் *šāmbar̠-pū-,* 4 செ.குவி. (v.i.) 1. நெருப்பில் நீறுபூத்தல்; to be covered with ashes, as live embers. 2. காய், இலை முதலியவற்றில் சாம்பல்நிறம் படிதல்; to have ash-like appearance, as fruits, leaves, etc. 3. சாம்பல் போல் உடல் வெளுத்தல்; to grow ashy, as one's body.

[சாம்பல் + பூ-,]

சாம்பற்பூசணி *šāmbar̠-pušaṇi,* பெ. (n.) பூசணி வகை (மலை.); ash-gourd.

[சாம்பல் + பூசணி]

சாம்பன் *šāmban̠,* பெ. (n.) சிவன்; Śivan̠. "சாம்ப கடம்பவ னேசனே" (குமர. பிர. மதுரைக்கலம். 68).

[சம்பு → சாம்பு. சாம்புதல் = எரிதல். சாம்பு → சாம்பல் = எரிந்த சாணம். சாம்பல் → சாம்பன் = சுடலையாண்டி]

சாம்பனாரை *šāmban̠ārai,* பெ. (n.) நாரை வகை (யாழ். அக.); a kind of grey crane.

[சாம்பல் + நாரை]

சாம்பாகினி *šāmbāgin̠i,* பெ. (n.) பசலைக் கீரை; garden spinach, Malabar night shade - Basella Cordifolia (சா.அக).

சாம்பாட்டு *šāmpāṭṭu,* பெ. (n.) புடல் (மலை.); snake gourd.

[சாம்பல் + ஆட்டு → சாம்பலாட்டு → சாம்பாட்டு]

சாம்பாத்தி *šāmbātti,* பெ. (n.) சாம்பச்சி (யாழ்ப்.) பார்க்க; see *šāmbācci.*

சாம்பான்[1] *šāmbān̠,* பெ. (n.) எருக்கிலை; madar leaf - Caltropis gigantea (சா.அக.).

[சாம்பல் → சாம்பன் → சாம்பான் = சாம்பல்நிற இலைகளைக் கொண்டது]

சாம்பான்[2] *šāmbān̠,* பெ. (n.) பறையர் பட்டப்பெயர்; caste of Pariahs. "பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து" (தனிப்பா.).

ம. சாம்பான்

[சும் → சும்பு → (சம்பு) → சாம்பு → சாம்பல் → சாம்பர். சாம்பு → சாம்பான் = பிணத்தைச் சுடுபவன் (மு.தா.149)]

சாம்பி *šāmbi,* பெ. (n.) கயிறு முதலியவற்றை மாட்டி, ஒன்றை உயரத் தூக்குதற்குரிய உருளை (இ.வ.); pulley.

[சாம்பு → சாம்பி]

சாம்பியம் *šāmbiyam,* பெ. (n.) சிறுநாகப்பூ; iron-wood of Ceylon - Musua ferrea (சா.அக.).

சாம்பிரி *šāmbiri* பெ. (n.) சேங்கொட்டை; dhoby's nut - Semicarpus anacardium (சா. அக.).

சாம்பு[1]-தல் *sāmbu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. வாடுதல்; to wither, droop. 'நெய்தற் பூச்சாம்பும் புலத்தாங்கண்' (பட்டின. 12). 2. கெடுதல்; to perish, pine away. 3. குவிதல் (திவா.); to close up, as flowers. 4. ஒடுங்குதல் (பிங்.); to decline. 5. உணர்வழிதல்; to lose consciousness. "சாதல் காப்பவரு மென்றவத்திற் சாம்பினார்" (கம்பரா. உருக்காட். 21). 6. ஒளி மழுங்குதல்; to grow dim, as the eyes. "மன்னரெல்லாந் தளர்ந்து கண் சாம்பினாரே" (சீவக. 811). 7. எரிதல்; to burn.

ம. சாம்புக

[சுள் → சுட்டு → சுப்பு. சுப்பெனல் = விரைந்து நீர்வற்றுதல். சுப்பு → சுப்பல் = சுள்ளி. சுப்பு → சுப்பி = சுள்ளி. சுப்பு → சும்பு → சம்பு → சாம்பு (வே.க. 212)]

சாம்பு[2]-தல் *sāmbu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. இழுத்தல் (வின்.); to pull in by jerks; to haul' to draw in, to pump. 2. அறைதல் (யாழ்ப்.); to give a blow.

[சப்பு → சம்பு → சாம்பு]

சாம்பு[3] *sāmbu*, பெ. (n.) பறை (சூடா.); drum.

[சாம்பு[2](-தல்) → சாம்பு = அடித்து இசையெழுப்பும் இசைக்கருவி]

சாம்பு[4] *sāmbu*, பெ. (n.) படுக்கை; bed. "கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்" (பெரும்பாண். 150).

[சாள் → சாடு. சாடுதல் = சாய்தல். சாள் → சாய். சாய்தல் = வளைதல், கவிழ்தல், படுத்தல். சாய் → (சாயம்) Skt. śayana = படுக்கை. சாய் → சாய்கை = படுக்குமிடம். சாள் → சாய்ப்பு → சாம்பு]

சாம்பு[5] *sāmbu*, பெ. (n.) 1. 18 முழங்கொண்ட புடைவை; woman's cloth of 18 cubits. 2. பல துண்டுகள் கொண்ட முழுச்சீலை (வின்.); a full piece containing several clothes.

சாம்பு[6] *sāmbu*, பெ. (n.) பொன் (சூடா.); gold.

[சுள் → சுட்டு → சுப்பு. சுப்பெனல் = விரைந்து நீர் வற்றுதல். சுப்பு → சுப்பல் = சுள்ளி. சுப்பு → சும்பு → சம்பு → சாம்பு = எரிதல், ஒளிவிடுதல், ஒளிவிடும் பொன்]

சாம்பு[7] *sāmbu*, பெ. (n.) நாவல் (தைலவ. தைல.); jamum plum.

[சம்பு → சாம்பு]

சாம்புசண்பகம் *sāmbu-saṉpagam*, பெ. (n.) நாவற்பூ (வின்.); flower of the jamum plum.

[சாம்பு + சண்பகம்]

சாம்புநதம் *sāmbu-nadam*, பெ. (n.) 1. மேரு மலைக்கு வடக்கில், நாவற்சாறு பெருகி ஓடும் ஆறு; a river believed to flow north of the Mt. Mēru carrying the juice of the jamun tree. "இத்தருவின் நீங்கனிநீ ராறாய் மேருத் தடவரையைப் புடை சூழ்ந்து வடபாற் சென்று சாம்புநதப் பெயர்பெறும்" (கந்தபு. அண்டகோ. 33). 2. நால்வகைப் பொன்களுள் ஒன்று; a kind of fine gold, one of four kinds of poṉ. "பொன்னுக்குச் சாம்புநதம்" (வள்ளுவமா. 36).

[சாம்பு + நதம்]

சாம்புவன் *sāmbuvaṉ*, பெ. (n.) சுடலை காப்பவன்; watchman of burning ground.

[சும்பு → சம்பு → சாம்பு. சாம்புதல் = எரிதல். சாம்பு → சாம்பல் = எரிவதால் மிஞ்சும் பொடித்துகள், சுடலைப்பொடி. ஒ.நோ: சாம்பற்கரைத்தல். சாம்பலவன் → சாம்புவன்]

சாம்பூநதம் *sāmbū-nadam*, பெ. (n.) சாம்புநதம் பார்க்க; see *sāmbu-nadam*.

[சாம்புநதம் → சாம்பூநதம்]

சாமக்காரன் *sāma-k-kāraṉ*, பெ. (n.) இரவுக் காவலாளன் (யாழ்ப்.); night-watch.

[சாமம் + காரன்; சாமம் = இரவு, நடுஇரவு]

சாமக்காவல் *sāma-k-kāval*, பெ. (n.) இரவுக் காவல் (யாழ்.அக.); night-watch.

[சாமம் + காவல்]

சாமக்கிழங்கு *sāma-k-kiḻaṅgu*, பெ. (n.) ஒரு வகைக் கிழங்கு; the root of a plant - Colocasia antiquorum (சா. அக.).

[சாமம் + கிழங்கு. கிழக்கு → கிழங்கு = நிலத்தின்கீழ் விளைவது]

சாமக்கீரை *sāma-k-kīrai*, பெ. (n.) கீரை வகை (விவசா. 4); a kind of greens.



சாம்பல்நிறத் தாரா

சாம்பல்நிறக் கவுதாரி



சாம்பற் காட்டுக்கோழி



சாம்பற் சுறா

சாம்பல் நாரை

சாமக்கோழி *sāma-k-kōḻi,* பெ. (n.) நள்ளிரவில் கூவுங்கோழி; cock crowing at midnight. "உறங்குமது தான் சாமக்கோழி" (திவ். திருப்பா. 18, வ்யா, பக். 170).

து. சாமகோரி

[சாமம் + கோழி]



சாமசம் *sāmašam,* பெ. (n.) யானை; elephant.

[யாமயம் → சாமயம் → சாமசம் = கரு நிறமுடையது. ஓ.நோ: யாமம் → சாமம்]

சாமண்டகம் *sāmaṇḍagam,* பெ. (n.) சரக்கொன்றை; cassia (சா.அக.).

சாமணம் *sāmaṇam,* பெ. (n.) தட்டார் கருவி வகை (C.E.M.); nippers, pincers.

ம. சாமணம்

[சாவணம் → சாமணம்]

சாமத்திரம் *sāmattiram,* பெ. (n.) கருங்காலி; black wood (சா.அக.).

[சாமம் + திரம். சாமம் - கருநிறமுடையது]

சாமந்தநாராயணத்தொண்டைமான் *sāmanda-nārāyaṇa-t-toṇḍaimāṉ,* பெ. (n.) தஞ்சையில் சாமந்த நாராயண விண்ணகர் கட்டியவன்; the builder of Sāmanda-nārāyaṇa-viṇṇagar at Tanjore (அபி.சிந்.).

[சாமந்தன் + நாராயணன் + தொண்டைமான்]

சாமந்தம்[1] *sāmandam,* பெ. (n.) ஒரு பண் (சது.); a kind of tune.

சாமந்தம்[2] *sāmandam,* பெ. (n.) பக்கம் (யாழ்.அக.); neighbourhood.

[அம்முதல் = நெருங்குதல், அடைதல், பொருந்துதல். அம் → அமை. அமைதல் = நெருங்குதல் (மலைபடு. 181). அமை = நெருக்கம், அண்மை. அமை → Skt. amā. அமை → அமைந்தம் → சமைந்தம் → சாமந்தம்]

சாமந்தன்[1] *sāmandaṉ,* பெ. (n.) 1. அமைச்சன் (சது.); king's minister. 2. படைத்தலைவன்; "சேனை யோட்டு சாமந்தராகி" (திருவாலவா. 59, 16). 3. சிற்றரசன்; feudatory prince, petty ruler. "சண்டவார் சிலை சாமந்தர் வாங்கினார்" (பாரத. முதற்போ. 24).

ம. சாமந்தன், சாமந்தன்

[அம்முதல் = பொருந்துதல், கூடுதல், நெருங்குதல். அம் → அமை. அமைதல் = பொருந்துதல், சேர்தல், நெருங்குதல். அம் → அமை → அமைத்தோன் → அமைச்சன் = அரசனுடன் நெருங்கி இருந்து அரசச் செயல்களை நிறை வேற்றுபவன், செயலாற்றும் பணியாளர். அமைந்தோன் → அமைந்தன் → சமைந்தன் → சமந்தன் → சாமந்தன்]

சாமந்தன்[2] *sāmandaṉ,* பெ. (n.) குலப்பூடண பாண்டியனின் படைத்தலைவன்; army chief of Kulapūḍaṇa Paṇḍiyan.

[சாமந்தன்[1] → சாமந்தன்]

அரசன் படை திரட்டக் கொடுத்த பணத்தை அறவழியில் செலவிட்டவன். இவன் பொருட்டு மதுரைக் கடவுள் மெய்க் காட்டிட்ட திருவிளையாடலைச் செய்தார் என்று திருவிளையாடல் தொன்மம் கூறுகிறது (சிற.பெ.அக.).

சாமந்தன்காசு *sāmandaṉ-kāšu,* பெ. (n.) பழைய மாழையால் ஆன பண (நாணய) வகை (சரவண. பணவிடு. 56); an ancient coin.

[சாமந்தன் + காசு. காழ் → காசு]

சாமந்தி *sāmandi,* பெ. (n.) 1. ஒருவகைப் பூச்செடி; Indian chamomile or chinese flower - Chrysanthemum indicum.

தெ. சேமந்தி, க. சேவந்தி

[சாமம் + அந்தி - சாமம் அந்தி → சாம அந்தி - மாலையந்தி. சாம அந்தி → சாமந்தி = அந்தி வண்ணம், அந்தி வண்ணம் போன்ற நிறமுடைய பூ வகை]

செவ்வந்தி → Skt. šēvati

சாமந்தியை, நாட்டுச் சாமந்தி, சீமைச் சாமந்தி என இருவகைப்படுத்தியும் அதன் பூவின்

நிறத்தை வைத்து மஞ்சள், வெள்ளை, நீலம் என வகைப்படுத்தியும் குறிப்பதுண்டு.

பூவின் வகைகள்

1. நாட்டுச் சாமந்தி - தோட்டச் சாமந்தி; garden chamomile - Chrysan themum indicum.
2. மஞ்சள் சாமந்தி; yellow chamomile - Chrysanthemum caronarium.
3. வெள்ளைச் சாமந்தி; white chamomile - Chrysanthemum crinatum
4. சிவப்புச் சாமந்தி; red chamomile - Chrysanthemum roxburghi.
5. நீலச் சாமந்தி; blue chamomile - Chrysanthemum genus.
6. சீமைச் சாமந்தி; Europe chamomile - Anthemis nobilis.
7. துலுக்கச் சாமந்தி; Turkish chamomile - Tagetus erec.
8. ஆடு சாமந்தி; Helicteres isora.
9. காட்டுச் சாமந்தி; wild chamomile - Matricuria chamomile *(சா.அக.).*

சாமந்திப்பூ *sāmandi-p-pū,* பெ. (n.) செவ்வந்திப் பூ வடிவினதான திருகுவில்லை என்ற மகளிர் அணி; gold jewel resembling chrysanthemum, worn by women in the hair.

[சாமந்தி + பூ]

சாமபுட்பம் *sāma-putpam,* பெ. (n.) பாக்கு மரம்; arecanut - areca catechu *(சா.அக.).*

சாமம்[1] *sāmam,* பெ. (n.) தூண், கதவு, உத்திரம் முதலியன செய்யப் பயன்படும் மரம்; a kind of tree.

சாமம்[2] *sāmam,* பெ. (n.) 1. $7^1/_2$ நாழிகை கொண்ட காலவளவை (பிங்.); a watch of $7^1/_2$ nāḻigai = 3 hours. 2. நடுச்சாமம் (வின்); midnight. 3. இரவு (பிங்.); night.

[யாமம் → சாமம்]

சாமம்[3] *sāmam,* பெ. (n.) 1. பசுமை (பிங்.); green or dark green colour. 2. கருமை; dark or black colour. "சாயற் சாமத் திருமேனி" (திவ். திருவாய். 8.5.1). 3. அறுகு (மலை.); cynodon grass.

[யா = கருமை. யா → யாமம் = இருள், இரவு, கருமை. யாமம் → சாமம் = கருப்பு, பச்சைகளை அழிக்கும் அறுகம் (அறு → அறுகு) புல்]

சாமம்[4] *sāmam,* பெ. (n.) வறட்சி, பஞ்சம்; drought, famine.

[சப்பு → சம்பு → சம்பு → சாம்பு. சாம்புதல் = எரிதல், வாடுதல். சாம்பு → சாம்பல் = எரிந்த சாணம். அம் → சம் → சாம் → சாமம் = வறட்சி]

சாமரசம் *sāmarasam,* பெ. (n.) பசுமுன்னை; fire-brand teak *(சா.அக).*

சாமரம்[1] *sāmaram,* பெ. (n.) கழு, இறப்புத் தண்டனை (மரணத்தண்டனை) வழங்கப் பயன்படுத்தும் கூர்முனையுள்ள கம்பம்; impaling stake. "குறித்த சாமரம் பெற்றது குற்றமோ" *(திருவாலவா. 38, 51).*

[சா + மரம்]

சாமரம்[2] *sāmaram,* பெ. (n.) 1. கவரிமானின் மயிரால் அமைந்த அரசச் சின்னம் (சூடா.); chowry, bush tail of the yak, used as a fly-flapper for idols or as a royal insignia. 2. கவரிமானின் மயிரால் அமைந்த விசிறி; fan.

ம. சாமரம்; க. சமர, சாமர; து. சாமர, சாமரோ

[கவரி → சவரி → சமரி → சாமரி → சாமரம்]

த. செவ்வந்தி → Skt. sāmara



சாமரம்

சாமரம்[3] *sāmaram,* பெ. (n.) சிவதைக்கொடி (மலை.); jalap.

சாமரம்வீசு-தல் *sāmaram-visu-,* 5 செ.கு.வி. (v.i.) காற்று வருமாறு சாமரம் (விசிறி) கொண்டு அசைத்தல்; to fly-flap with bushy tail of the yak, chowry.

க. சாமரவனிடு

[சாமரம் + வீசு-,]

சாமந்தி வகைகள்

சிவப்புச் சாமந்தி

நீலச் சாமந்தி

கன்னிமாரா (மாநில (ம) மைய) நூலகம்
அலுவலகம்
30 ஆக 20
சென்னை-600 008

மஞ்சள் சாமந்தி

சாமந்தி

நாட்டுச் சாமந்தி

காட்டுச் சாமந்தி

சாமரி *šāmari,* பெ. (n.) குதிரை (யாழ்அக.); horse.

ம. சாமரி

சாமரிகம் *šāmarigam,* பெ. (n.) குதிரைக் குளம்படி; horse-hoof plant (சாஅக).

[சாமரி → சாமரிகம்]

சாமரை *šāmarai,* பெ. (n.) சாமரம்[2] பார்க்க; see šāmaram. "சாமரை யுக்க மாதியாம்" (கம்பரா. நிந்தனை. 12).

சாமளம் *šāmaḷam,* பெ. (n.) 1. கருமை (உரிநி.); blackness. 2. பசுமை (திவா.); dark-green colour.

[சாமம் → சாமளம்]

சாமளை *šāmaḷai,* பெ. (n.) மலைமகள் (சாமள நிறமுடையவள்); Pārvati, as being of dark-green complexion. "சாம்பவி சங்கரி சாமளை" (அபிராமி. 50).

[சாமம் → சாமளை]

சாமன்[1] *šāmaṉ,* பெ. (n.) 1. அறிவன் (புதன்) (பிங்.); the planet mercury. 2. சிவன்; Šivaṉ.

[சாம்பன் → சாமன்]

சாமன்[2] *šāmaṉ,* பெ. (n.) காமன்தம்பி; younger brother of Kāma. "சாமனார் தம்முன் செலவு" (கலித். 94).

சாமிநாதக்கவிராயர் *šāmināda-k-kavirāyar,* பெ. (n.) பொதிகை நிகண்டின் ஆசிரியர்; a poet, author of Podigai Nigaṇḍu.

[சாமிநாதன் + கவி + அரையர் → ராயர்]

இவர் பாண்டி நாட்டில் கல்விடைக் குறிச்சியில் வாழ்ந்தவர். இவரின் தந்தையார் நாமதீப நிகண்டு இயற்றிய சிவசுப்பிரமணியக் கவிராயர் (தமி. புல. அக.).

சாமிலம் *šāmilam,* பெ. (n.) புளிவஞ்சி; a sour plant, perhaps a species of rattan (சாஅக.).

சாமுகூர்த்தம் *šāmukūrttam,* பெ. (n.) சாமுழுத்தம் பார்க்க; see *šāmuḻuttam.*

[சா + முகூர்த்தம்]

சாமுண்டி[1] *šāmuṇḍi,* பெ. (n.) ஏழு கன்னியரில் ஒருத்தியாகிய கொற்றவை; Durgā, one of šatta-mādar.

ம. சாமுண்ட, சாமுண்டி, சாமுண்ணி; க. சாமுண்டி; து. சாமுண்டி, சவுண்டி

[சாவு + உண்டி - சாவுண்டி → சாமுண்டி. வெற்றித் தெய்வமாகக் கருதப்படும் கொற்றவை சாவு உண்டாக்கும் திறம் பற்றிச் சாமுண்டி எனப்பட்டாள்]

cāmuṇḍā, a form of Durgā or Māri, in D. also cavuṇḍi, cavuḍi. The word is composed of D. sāvu, death; a corpse, and uṇḍā (uṇḍi, uḍi). Uṇḍi, etc. may be uṇi, uṇṇi or oḍati (of uḷ, to possess), or uruṇḍi (she who rolls about) (K.K.E.D. XXIX).

சாமுண்டி[2] *šāmuṇḍi,* பெ. (n.) 1. நாணல் (மலை.); kaus. 2. அவுரி; Indigo plant.

சாமுண்டி[3] *šāmuṇḍi,* பெ. (n.) பொன்னாவிரை (மலை.); negro coffee.

சாமுண்டிதேவநாயகர் *šāmuṇḍi-dēvanāyagar,* பெ. (n.) செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மாகறல் ஊரினராகிய புறப்பொருள் வெண்பாமாலையின் உரையாசிரியர்; the commentator of Puṟa-p-poruḷ-veṇbā-mālai, native of Mākaṟal, in Cheṅgaṟpaṭṭuu district (செஅக.).

[சாமுண்டி + தேவநாயகர்]

சாமுதம்[1] *šāmudam,* பெ. (n.) கடுக்காய் (வின்.); chebulic myrobalan.

சாமுதம்[2] *šāmudam,* பெ. (n.) கோரைப்புல் (மலை.); sedge.

சாமுழுத்தம் *šāmuḻuttam,* பெ. (n.) கெட்ட காலம் (வின்.); fatal hour, inauspicious time.

[சா + முழுத்தம்]

சாமூஞ்சி *šāmūñji,* பெ. (n.) பிணமூஞ்சி; dismal, ghastly countenance.

[சா + மூஞ்சி. முசு → மூசு. மூசுதல் = மூச்சுயிர்த்தல், மோப்பம் பிடித்தல். மூசு → மூச்சு. முசு → மூஞ்சு → மூஞ்சி = மூக்கு, மூக்குள்ள முகப்பகுதி]

சாமூர்த்தம் *šā-mūrttam,* பெ. (n.) சாமுழுத்தம் பார்க்க; see *šāmuḻūttam.* "சாமூர்த்தமென்றே மந்திரிநூன் மறை வல்லவ ரோதினர்" (விதான. குணாகுண. 91).

[சாமுகூர்த்தல் → சாமூர்த்தம்]

சாமூலி *šāmūli,* பெ. (n.) **ஊமத்தை;** dhatura (சா.அக.).

[சா + மூலி]

சாமேளம் *šā-mēḷam,* பெ. (n.) **சாப்பறை;** funeral drum.

[சா + மேளம்]

சாமை[1] *šāmai,* பெ. (n.) *1.* **மடங்கல் (ஆவணி) மாதத்தில் விதைத்து 6 கிழமை முதல் 4 மாதங்களுள் விளையும் ஒரு வகைப் புன்செய்ப்பயிர்;** poor-man's millet, sown in Āvaṇi and maturing in six weeks to four months 'சக்கிலியப் பெண்ணும் சாமைக்கதிரும் சமைந்தால் தெரியும்' (பழ.) *2.* **தவச வகை;** little millet, panicum miliare. "சாமை தினை வண்ண வோதனம்" (விதான. யாத்திரை. 8). *3.* **வரகு;** common millet.

ம. சாம; க. சாமெ, சாவெ, சந்தெ; தெ. ச்யாமாலு; பட. சாமெ; பர். சாம; H. sāma; Skt. šyāma

[சமை → சாமை. வடவர் கரியது என்று பொருட்காரணம் கூறுவது தவறு. சாமை கரியதாகாது.]

சாமை படைப்புக் காலந் தொட்டுத் தென்னாட்டில் விளைந்துவரும் தொண் (ஒன்பான்) கூலங்களுள் ஒன்றாகும். இன்றும் அது நாட்டுப்புற உழவர்க்கு உரிய ஒழுங்கான உணவு வகைகளுள் ஒன்றாக இருந்து வருகின்றது (மொ.க.66).

சாமை[2] *šāmai,* பெ. (n.) *1.* **பெருநெருஞ்சி** (சங்.அக.); a stout stemmed herb. *2.* **கற்சேம்பு** (சங்.அக.); a plant.

சாமைக்குருணை *šāmai-k-kuruṇai,* பெ. (n.) **ஒரு வகைப் புல்;** a kind of grass.

[சாமை + குருணை]

சாமைப்புல் *šāmai-p-pul,* பெ. (n.) **ஒரு வகைப் புல்;** a kind of grass.

[சாமை + புல். சாமைப் பயிர் போன்ற புல்]

சாய்[1]**-தல்** *šāy-,* 2 செ.கு.வி. (v.i.) *1.* **கவிழ்தல்;** to incline, hand down. "நாணடச் சாய்ந்த நலங்கிள ரெருத்தின்" (பொருந. 31). *2.* **வானில் கோள் முதலியவை சாய்தல்;** to decline, as a heavenly body. *3.* **வளைதல்;** to bend, turn down, as the ear. "சாய் செவிக்குருளை" (சிறுபாண். 130). *4.* **படுத்தல்;** to recline, lie down. 'திருக்கையிலே சாயுமித்தனை' (ஈடு, 27: 5). *5.* **திரண்டுசெல்லுதல்;** to march, in crowds. 'திருவிழாவுக்கு மக்கள் திரள் சாய்கிறார்கள்' (உ.வ.). *6.* **முறிதல்;** to give way, break. "சாய்ந்த வல்லுருமு போய்" (கம்பரா. நாகபாச. 99). *7.* **தோற்றோடுதல்;** to be routed; to flee. "வந்தவர் சாய்ந்த வாறும்" (பாரத. நீரைமீட்சி. 137). *8.* **நடுநிலை திறம்புதல்;** to be partial, biassed. *9.* **ஒதுங்குதல்** (வின்.); to decline from a direct course; to deviate. *10.* **சார்தல்;** to lean. தூணின் மேல் சாய்ந்தான். *11.* **நடந்தேறுதல்;** to happen, succeed. அந்தக் காரியஞ் சாய்ந்தது.

ம. சாயுக; து. சாவுனி; வ. சய்; சீ, கூடிய்.

[சூள் → சாள் → சாய்]

சாய்[2]**-தல்** *šāy-,* 2 செ.கு.வி. (v.i.) *1.* **தளர்தல்;** to be fatigued, to grow weary. "கள்ளொற்றிக் கண் சாய்பவர்" (குறள், 927). *2.* **வருந்துதல்;** to be troubled. "சாய்குவ ளல்லளோ" (கலித். 79: 10). *3.* **மெலிதல்;** to grow thin, emaciated. "சாயினள் வருந்தியாளிடும்பை" (கலித். 121). *4.* **வற்றுதல்;** to get dried up, as a channel. "கான்யாற்றுக் கடும்புனல் சாஅய்" (அகநா. 25). *5.* **அழிதல்;** to be ruined, to perish. "மறஞ்சாய்" (பு.வெ. 2,1, கொளு.).

[சாள் → சாய்]

சாய்[3]**-த்தல்** *šāy-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1.* **சாயச் செய்தல்;** to cause to incline, bend or stoop. "உண்டுறையுடைந்த பூப்புனல் சாய்ப்ப" (கலித். 78). *2.* **ஒருபக்கமாக ஓட்டுதல்** (வின்.); to turn in a new direction, to drive. *3.* **கரைக்குச் செலுத்துதல்** (வின்.); to steer shoreward, as a vessel. *4.* **மனஞ்சாயப் பண்ணுதல்** (வின்.); to prejudice. *5.* **கெடுத்தல்;** to destroy, mar or spoil. "மல்லரை மறஞ்சாய்த்த" (கலித். 134). *6.* **தோல்வியுறச் செய்தல்;** to discomfit, defeat. "சூதும் பங்கய முகையுஞ் சாய்த்துப் பணைத் தெழுந்து" (பெரியபு. தடுத்தாட். 21). *7.* **முறித்தல்;** to break off. "குருந்தஞ் சாய்த்ததூஉம்" (திரிகடு. காப்பு, 1). *8.* **மெய்ப்படுத்துதல்;** to establish. "தன்பாற் றவறுண்டெனக் கௌசிகன் சாய்க்கின்" (அரிச். பு. இந்திர. 42). *9.* **முற்றுவித்தல்;** to finish, bring to a successful issue. *10.* **மிகுதியாகக் கொடுத்தல்;** to give in abundance. 'தாய் பெண்ணுக்கு எல்லாவற்றையுஞ் சாய்த்தாள்' (உ.வ.)

ம. சாய்க்குக; து. சாசுனி

[சாள்→சாய். சாய்தல் (த.வி.), சாய்த்தல் (பி.வி.)]

சாய்[4] *šāy,* பெ. (n.) 1. ஒளி; brilliance, light. "சாய்கொண்ட விம்மையும்" (திவ். திருவாய். 3. 9: 9); 2. சாயல், அழகு; beauty. "சங்கஞ் சரிந்தன சாயிழந்தேன்" (திவ். திருவாய். 8. 2: 1). 3. சாயம், நிறம்; colour. "சாயாற்கரியானை" (திவ்.இயற். பெரியதிருவந். 14). 4. புகழ்; fame, reputation. 'இந்திரன் தன் சாயாப் பெருஞ்சாய் கெட" (கம்பரா. நாகபா. 21). 5. சாயை, நிழல்; shadow.

ம. சாய்; குட. சய் (அழகு); கோத. சய்வ் (நிறம்)

[சால் → சாய் (வே.க. 232.)]

சாய்[5] *šāy,* பெ. (n.) 1. தண்டான்கோரை; sedge. "சாய்க்கொழுதிப்பாவை தந்தணைத் தற்கோ" (கலித். 76,7). 2. செறும்பு; splinter. "இரும்பனை வெளிற்றின் புன்சாயன்ன" (திருமுரு. 312).

[சான் → சாய்]

சாய்க்காடு *šāy-k-kāḍu,* பெ. (n.) பூம்புகாரைச் சார்ந்த ஊர்; a village near Pōmbukar.

[சாய் + காடு]

இவ்வூர், தேவாரத்தில் பூம்புகார்ச் சாய்க்காடு என்றும் காவிரிப் பூம்பட்டினத்துச் சாய்க்காடு என்றும் குறிக்கப்படுகிறது. "விண்புகார் எனவேண்டா வெண்மாட நெடுவீதித் தன் புகார்ச்சாய்க்காட்டுள் தலைவன் தாள் சார்ந்தாரே" எனவும் "மொட்டலர்ந்த தடந்தாழை முருகுயிர்க்கும் காவிரிப்பூம் பட்டினத்துச் சாய்க்காட்டெம் பரமேட்டி பாதமே" (திருச்சாய்க்காட்டுப் பதிகம். 1: 4).

சாய்கடை *šāy-kaḍai,* பெ. (n.) நீர்த்தாரை; drain, gutter for carrying off sewage.

மறுவ. சுருங்கு, சலதாரை, சாலகம், அங்கணம்

[சான் → சாய். சாய்தல் = வளைதல். சாய் + கடை]

அங்கணம் என்னும் பெயரும் இக்கரணியம் பற்றியதே. ஒ.நோ. வணங்கு → வாங்கு → வங்கு → அங்கு. அங்குதல் = வளைதல், சாய்தல். அங்கு + அணம் - அங்கணம் - வாட்டஞ் சாட்டமாயிருக்கும் சாலகம்.

சாய்கண்குருடு *šāy-kaṇ-kuruḍu,* பெ. (n.) வாய், கண், மூக்கு, நாக்கு இவை ஒரு பக்கத்தில் இழுத்துக் கொண்டு, அத்துடன் கண்கள் சிவந்து குருடாகி, எரிச்சல், நீர் வடிதல் ஆகிய பண்புகளைக் காட்டுமோர் நோய்; blindness of the eyes characterised by controtion of the face on one side, thereby affecting the mouth, eyes, nose, tongue, etc., attended with inflammation, burning and watery discharge from the eyes (சா.அக.).

[சாய் + கண் + குருடு]

சாய்கரகம் *šāy-karagam,* பெ. (n.) தண்ணீர்ப் பந்தரில் நீர் வார்க்கும் ஏன (பாத்திர) வகை (ஈடு, 6. 10: 7); a kind of spouted vessel used in pouring water.

[சாய் + கரகம்]

சாய்கால் *šāy-kāl,* பெ. (n.) செயற்றிறம் வாய்ந்த மதிப்பு (இ.வ.); influence.

[சான் → சாய் → சாய்கால் (வே.க.233.)]

சாய்கால்விக்கிரயம் *šāykāl-vikkirayam,* பெ. (n.) உள்ளூர் வணிகம்; inland trade.

[சாய்கால் + விக்கிரயம்]

சாய்காலம் *šāy-kālam,* பெ. (n.) சொல் செயற்படும்படியான நிலை (இ.வ.); time of prosperity and influence.

[சாய்[1] + காலம்]

சாய்கை *šāygai,* பெ. (n.) தங்குமிடம் (யாழ்ப்.); house, rest-house.

[சாய்[1] → சாய்கை. சாய்கை = படுக்குமிடம், இளைப்பாறுமிடம். 'கை' சொ. ஆ. ஈறு.]

ஒ.நோ: இ. சகா; சாய் → (சாயனம்) → வ. சயனம் = படுக்கை. உ. சாகர்

சாய்ங்காலம் *šāy-ṅ-gālam,* பெ. (n.) சாயுங் காலம் பார்க்க; see *šāyu-ṅ-gālam.* 'சாய்ங்காலம் இன்றைக்கு ஊருக்குப் போறேன்' (உ.வ.).

[சாயுங்காலம் → சாயங்காலம் → சாய்ங்காலம்]

சாய்த்துக்கொடு-த்தல் *šāyttu-k-kōḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ஒருசேரக் கொடுத்தல்; to give in abundance. "பரிசிலரைக் காணில்...... யானையை அணியணியாகச் சாய்த்துக் கொடுக்கும்" (புறநா. 135, உரை.).

[சாய் → சாய்த்து + கொடு-,]

சாய்த்துப்பார்-த்தல் *šāyttu-p-pār-,* 4 செ.குன்றாவி. (v.t.) கண்ணைக் கோணலாக வைத்துக் கொண்டு (வக்கிரித்துப்) பார்த்தல்; to look askant.

[சாய் → சாய்த்து + பார்-,]

சாய்த்துவிடு-தல் *šāyttu-vịdu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. சாய்த்துக்கொடு பார்க்க; see *šāyttu-k-koḍu-.* 2. கொல்லுதல் (இ.வ.); to kill.

[சாய் → சாய்த்து + விடு-,]

சாய்ந்தரக்களை *šāyndara-k-kaḷai,* பெ. (n.) மாலை நான்கு மணியில் இருந்து இருட்டும் வரை செய்யும் களையெடுத்தல் தொழில் (தெ.ஆ.); evening weeding. சாய்ந்தரக் களைக்கு ஆள் கூப்பிடு.

[சாய்ந்தரம் + களை. சாய் → சாய்ந்தரம்]

சாய்ந்தரப்பூட்டு *šāyndara-p-pūṭṭu,* பெ. (n.) மாலையில் (4 மணிக்குமேல்) செய்யும் உழவு (தொழில்); evening ploughing.

[சாய்ந்தரம் + பூட்டு. பூண் → பூட்டு = உழவு]

சாயந்தரம் *šāyandaram,* பெ. (n.) மாலைப் பொழுது; evening.

[சாய் → சாய்ந்தரம் → சாயந்தரம்]

சாய்ந்தாட்டம் *šāyndāṭṭam,* பெ. (n.) சாய்ந்தாடுதல்; swinging or swerveing sideways without shifting position.

ம. சாஞ்சாட்டம்

[சாய்ந்தாடு → சாந்தாட்டம்]

சாய்ந்தாடு-தல் *šāyndāḍu-,* 5 செ.கு.வி. (v.i.) நிலத்தில் நின்றுகொண்டு அல்லது இருக்கையில் இருந்து கொண்டு பக்கவாட்டில் அல்லது முன்னும்பின்னும் அசைதல்; to swing or swerve sideways without shifting position. "சாந்தாடம்மா சாய்ந்தாடு" (குழந்தைப் பாட்டு).

ம. சாஞ்ஞாடுக, சாஞ்சாடுக

[சாய்ந்து + ஆடு-,]

சாய்ப்பாங்கரை *šāy-p-pāṅgarai,* பெ. (n.) அடுப்பங்கரை, அடுப்படி; kitchen; the front of the hearth.

[சாய்ப்பாங்கடை → சாய்ப்பாங்கரை]

சாய்ப்பாய்விடு-தல் *šāy-p-pāy-vịdu-,* 18 செ.குன்றாவி. (v.t.) பாராதுபோல இருந்து விடுதல்; to connive at.

[சாய்ப்பாய் + விடு-,]

சாய்ப்பாவை *šāy-p-pāvai,* பெ. (n.); கோரைப் பாவை (கலித். 133, 33, உரை); doll made of sedge.

[சாய்[5] + பாவை. சாய் = கோரை]

சாய்ப்பிடம் *šāyppiḍam,* பெ. (n.) 1. படை பின் வாங்குமிடம்; place of retreat, as of an army. "சாய்ப்பிடமாகப் போர்ப்படை பரப்பி" (பெருங். மகத. 17: 63). 2. சிறு கொட்டகை (இவ.); a shed with sloping roof.

[சாய்[3] + சாய்ப்பிடம்]

சாய்ப்பிறக்கு-தல் *šāyppiṟakku-,* 5 செ.கு.வி. (v.i.) சாய்வாக மேற்கூரை அமைத்தல் (வின்.); to construct a sloping roof.

[சாய்ப்பு + இறக்கு-,]

சாய்ப்பு *šāyppu,* பெ. (n.) 1. தாழ்வு (பிங்.); slope, slant. 2. மலைச்சரிவு (வின்.); slide or declivity of a mountain. 3. சாய்வான கூரை (வின்.); sloping or slanting roof. 4. சாய்வு-2 பார்க்க (வின்.); see *šāyvu-2.* 5. முகங்கொடாமை (வின்.); aversion, indifference. 6. மட்ட வெற்றிலை (யாழ்ப்.); inferior betel leaves.

ம. சாயிப்பு

[சாய் + சாய்ப்பு. 'பு' சொ.ஆ.ஈறு]

சாய்பலகை *šāy-palagai,* பெ. (n.) சாய்மானப் பலகை (இ.வ.); sloping wooden back for reclining.

[சாய் + பலகை]

சாய்மணை *šāy-maṇai,* பெ. (n.) 1. சாய்மானம்[1], 1 பார்க்க; see *šāy-māṉam*[1], *l.* 2. திண்டு; a kind of pillow.

[சாய் + மணை]

சாய்மரம் *šāy-maram,* பெ. (n.) சிவதை (மலை); jalap.

சாய்மானக்கதிரை *šāy-māṉa-k-kadirai,* பெ. (n.) சாய்வுநாற்காலி (இலங்கை); easy chair.

[சாய்மானம் + கதிரை]

சாய்மானப்பலகை *šāymāṉa-p-palagai,* பெ. (n.) 1. *சாய்ந்துகொள்ளுதற்குரிய பலகை;* a plank used for reclining. 2. *துணிவெளுக்கும் பலகை (இ.வ.);* washboards.

[சாய்மானம் + பலகை]

சாய்மானம்[1] *šāymāṉam,* பெ. (n.) 1. *சார்மனை (உ.வ.);* back, as of a chair; a masonry construction to recline. 2. *சாய்கை (உ.வ.);* leaning, reclining. 3. *சாய்வு*[1], *2 (வின்.) பார்க்க;* see šāyvu[1],2.

ம. சாய்மானம்

[சாய் + மானம்]

சாய்மானம்[2] šāy-māṉam, பெ. (n.) ஒப்பொழுக்கம் (ஒப்பாசாரம்) (யாழ். அக.); conformity, decorum.

[சாய் + மானம்]

சாய்மேதிதம் *šāy-mēdidam,* பெ. (n.) குங்குமப்பூ; English saffron flower - Crocus sativus (சா.அக.).

சாய்வு[1] *šāyvu,* பெ. (n.) 1. சரிவு (யாழ்.அக.); slope, declivity, side of a hill. 2. ஒருபாற்கோடல் (சங்.அக.); bias, partiality. 3. குறைவு; defect, deficiency. "சாய்வறத் திருத்திய சாலை" (கம்பரா. திருவவ. 84). 4. நிலைமைத்தாழ்வு; straitened circumstances. 5. வளைவு (யாழ்ப்.); going obliquely; turning aside; obliquity, divergency. 6. நோக்கம்; inclination, bent of mind. 7. அழிவு; death; destruction. "உயிர்ப்பொறைச் சாய்வு நீக்குதல் சாரதி தன்மைத்தால்" (கம்பரா. இராவணன்வதை, 182). 8. கட்டடம் முதலியவற்றின் வாட்டம் (இ.வ.); gradient.

ம. சாய்வு

[சாள் → சாய் → சாய்வு. 'வு' சொ.ஆ.ஈறு]

சாய்வு[2] *šāyvu,* பெ. (n.) நீர் இல்லாமல் உலர்ந்து போன பயிர் (செங்கை); dry crop (without water).

[சாய் → சாய்வு]

சாய்வுசரிவு *šāyvu-šarivu,* பெ. (n.) 1. இரக்கம் (தாட்சணியம்); kindness, leniency. 2. *சாய்வு*[1]*–2 பார்க்க;* see *šāyvu*[1]*-2.*

[சாய்வு + சரிவு]

சாய்வுநாற்காலி *šāyvu-nāṟkāli,* பெ. (n.) கெட்டியான துணியைத் தொட்டில் போல் தொங்கவிட்ட, சாய்ந்து கொள்வதற்கான நாற்காலி; deck-chair; easy chair. தாத்தாவுக்கு ஒரு சாய்வு நாற்காலி வாங்க வேண்டும்.

[சாய்வு + நாற்காலி]



சாய்வு நாற்காலி

சாய்வுப்பாதை *šāyvu-p-pādai,* பெ. (n.) மாடிக்கு அல்லது மேடைக்குச் செல்லப் படியில்லாமல் சாய்வாக அமைக்கப்பட்ட தளப்பாதை (கட்டட.); terrace way without step, ramp.

[சாய்வு + பாதை]

சாய்வுமேசை *šāyvu-mēšai,* பெ (n.) எழுதுவதற்கு ஏந்தாகக் கீழ்நோக்கிச் சாய்ந்த பரப்பையுடைய மிசை; a desk with a sloping top.

[சாய்வு + மேசை]

சாயக்காரன் *šāya-k-kāraṉ,* பெ. (n.) 1. சாயமிடுபவன்; dyer. 2. சாயம் காய்ச்சுபவன்; one who prepares dye.

[சாயம் + காரன்]

சாயக்கிழங்கு *šāya-k-kiḻaṅgu,* பெ. (n.) கிழங்கு மஞ்சள்; green turmeric, turmeric root (சா.அக.).

[சாயம் + கிழங்கு]

சாயக்குண்டா *šāya-k-kuṇḍā,* பெ. (n.) சாயம் போடப் பயன்படும் செப்பு ஏனம் (செங்கை); copper vessel for dyeing.

[சாயம் + குண்டா. குள் → குண் → குண்டு → குண்டா = உருண்டு திரண்ட கலம்]

சாயக்கொண்டை *šāya-k-koṇḍai,* பெ. (n.) 1. மகளிரது கொண்டை வகைகளுளொன்று; women's tresses done in a particular way.

2. கோயில்களில் திருவிழாக் காலங்களில் உலா வரும் திருமேனிக்குச் சிவப்பு அல்லது நீலநிறப் பட்டாடையால் தலையில் முடி போல் அமைக்கப்படுங் கொண்டை; a turban of red or blue silk resembling crown, put on the head of urcavamūrtti. *3.* முடியணி வகை; a kind of coronet.

[சாய்வுக்கொண்டை → சாயக்கொண்டை]

சாயக்கோரை *šāya-k-kōrai,* பெ. (n.) சாயம் நனைத்துப் பாய் முதலியன பின்னப் பயன்படும் கோரைவகை (வின்.); a sedge used for making mat etc.

[சாயம் + கோரை]

சாயக்கோல் *šāya-k-kōl,* பெ (n.) சாயம் போடுதலில் பயன்படும் மரக்கோல் (செங்கை); wooden pole for dyeing.

[சாயம் + கோல். குல் → கோல் = திரட்சி, திரண்டகம்பு]

சாயகம் *šāyagam,* பெ (n.) அம்பு; arrow. "இரட்டிச் சாயகங்கள்" (கம்பரா. மகரக்கண்ணன். 18).

[சாய் → சாயகம் - சாயச்செய்வது; விழ்த்துவது]

சாயங்காய்ச்சு-தல் *šāyań-kāyccu-,* 5 செ.குவி. (v.i.) சாயம் போடுதல் (வின்.); to dye, colour.

[சாயம் + காய்ச்சு. காய் → காய்ச்சு. காய்தல் = சுடுதல். காய்ச்சுதல் = சுடவைத்தல்]

சாயங்காலம் *šāyań-gālam,* பெ (n.) சாயுங் காலம் பார்க்க; see *šāyuń-gālam.*

தெ. சாயமு

[சாயுங்காலம் → சாயங்காலம்]

சாயங்கொட்டை *šāyań-koṭṭai,* பெ (n.) சேங்கொட்டை; dhoby's nut (சா.அக.).

[சாயம் + கொட்டை]

சாயச்சந்தி *šāya-c-candi,* பெ (n.) *1.* மாலை மங்கல் (வின்.); evening twilight. *2.* மாலை வழிபாடு (இ.வ.); evening devotions.

[சாய் → சாயும் + சந்தி → சாயும் சந்தி → சாயச்சந்தி = மாலைப்பொழுது, அப்பொழுதில் செய்யும் வழிபாடு]

சாயச்சம்பங்கி *šāya-c-cambańgi,* பெ (n.) கொடிச் சம்பங்கி; champank creeper - Pergularia monor (சா.அக.).

[சாயம் + சம்பங்கி]

சாயச்சாந்தி *šāya-c-cāndi,* பெ. (n.) சாவுச்சடங்கு (அந்தியேட்டி) (யாழ் அக.); crematory rite.

[சாவுசாந்தி → சாயசாந்தி]

சாயச்சால் *šāya-c-cāl,* பெ. (n.) சாயந் தோய்க்கும் பானை (வின்.); vat for dyeing.

[சாயம் + சால்]

சாயச்சீலை *šāya-c-cīlai,* பெ (n.) சாயமேற்றப் பட்ட வண்ணத்துணி; coloured cloth.

ம. சாயச்சீல (ஓணத்தில் உடுத்தும் புதிய வண்ணத்துணி)

[சாயம் + சீலை]

சாயச்செடி *šāya-c-ceḍi,* பெ (n.) இம்பூறல்; Indian madder (சா.அக.).

[சாயம் + செடி]

சாயடி *šāyaḍi,* பெ. (n.) சாயம் போடுமிடம்; place for dyeing.

[சாயம் + அடி. அடி = இடம்]

சாயத்துணி *šāya-t-tuṇi,* பெ. (n.) நிறமேற்றப் பட்ட துணி; dyed cloth.

ம. சாயத்துணி

[சாயம் + துணி]

சாயந்தரம் *šāyandaram,* பெ. (n.) சாயுங்காலம் பார்க்க; see *šāyuńgālam.*

Skt. antara → த. அந்தரம்

சாயந்தீர்-தல் *šāyań-tīr-,* 4 செ.குன்றாவி., செ.குவி. (v.t & v.i.) சாயந்தோய்த்தல் (வின்.) பார்க்க; see *šāyańdōy-.*

[சாயம் + தீர்-,]

சாயந்தோய்-த்தல் *šāyan-tōy-,* 4 செ.குவி. (v.i.) சாயம் போடுதல் (கொ.வ.); to dye, colour.

[சாயம் + தோய்-,]

சாயப்பட்டை *šāya-p-paṭṭai,* பெ. (n.) வேம்பாடம் பட்டை; the bark of buck thorn climber (சா.அக.).

[சாயம் + பட்டை]

சாயப்பணி *šāya-p-paṉi,* பெ. (n.) 1. செஞ் சாயமிடுந் தொழில் (வின்.); work of dyeing with red, dist. fr. nīla-p-paṉi. 2. சாயமூட்டும் பணி the art of painting, dyeing.

ம. சாயப்பணி

[சாயம் + பணி]

சாயப்பாக்கு *šāya-p-pākku,* பெ. (n.) சாயமேற்றிய பாக்கு (உ.வ.); areca-nut sliced and dyed by boiling.

[சாயம் + பாக்கு]

சாயப்பிடி-த்தல் *šāya-p-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) காற்றுவாக்கிற் கப்பலைச் செலுத்துதல் (யாழ்ப்.); to steer a vessel windward (செ.அக.).

[சாய் + பிடி-,]

சாயப்பூலிகம் *šāya-p-pūligam,* பெ. (n.) சிவப்புப் பசலை; red spinach (சா.அக.).

[சாயம் + பூலிகம்]

சாயப்பெட்டி *šāya-p-peṭṭi,* பெ. (n.) சாயமிட்ட ஓலை முதலியவற்றால் அறைகள் உள்ளனவாகச் செய்யப்பட்ட பெட்டி (இ.வ.); small lacquer boxes with compartments; dyed ola-covered baskets with compartments.

[சாயம் + பெட்டி]

சாயப்போல் *šāya-p-pol,* பெ. (n.) சாயமிட்ட கழி (யாழ்ப்.); painted cane or staff.

[சாயம் + போல்]

சாயப்பொன் *šāya-p-poṉ,* பெ. (n.) நிறமூட்டப் பட்ட பொன்; coloured gold.

ம. சாயப்பொன்னு

[சாயம் + பொன்]

சாயம்[1] *šāyam,* பெ. (n.) சாயங்காலம் (பிங்.) பார்க்க; see *šāyaṅgālam.*

[சாய்[3] → சாயம்]

சாயம்[2] *šāyam,* பெ. (n.) 1. நிறம்; colour, tinge, tint. 2. நூல் முதலியவற்றிற்கு ஊட்டும் வண்ணம்; dye. 3. உண்மைத்தன்மை; true colour; real nature. "சாயந்துலங்கி விட்டது". 4. பொய்த்தன்மை; false nature. சாயம் வெளுத்து விட்டது. 5. சாயவேர் (வின்.) பார்க்க; see *šāya-vēr.*

ம. சாயம்; க., தெ., பட. சாய; குட. சாய்; கோத. சய்வ்; துட. சாய

[சாய் → சாயை = நிழல், படிவடிவம், ஒப்பு, புகழ். சாய்[4] → சாயம்]

த. சாயம் → Skt. chāyā

சாயம்பற்றவை-த்தல் *šāyam-paṟṟa-vai-,* 4 செ.கு.வி. (v.i.) பொய்ச்செய்தியைப் பரப்புதல் (நாஞ்.); to spread false information.

[சாயம் + பற்ற + வை-,]

சாயம்பிடி[1]**-த்தல்** *šāyam-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) சாயம்பற்றுதல்; to take on colour.

[சாயம் + பிடி-,]

சாயம்பிடி[2]**-த்தல்** *šāyam-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) சாயந்தோய்-த்தல் பார்க்க; see *šāyandōy-.*

[சாயம்[2] + பிடி-,]

சாயம்பிடி[3] *šāyam-piḍi,* பெ. (n.) பொன்னாங் காய்; Indian soap-nut (சா.அக.).

[சாயம் + பிடி]

சாயம்போ-தல் *šāyam-pō-,* 8 செ.கு.வி. (v.i.) ஏற்றிய நிறம் நீங்குதல்; to become change of real colour.

[சாயம் + போ-,]

சாயம்போடு-தல் *šāyam-pōḍu-,* 19 செ.கு.வி. (v.i.) சாயந்தோய்-த்தல் பார்க்க; see *šāyan-tōy-.*

[சாயம் + போடு-,]

சாயம்வெளு-த்தல் *šāyam-veḷu-,* 4 செ.கு.வி. (v.i.) பொய் மறைந்து உண்மை வெளிப்படுதல்; to come to light; get-exposed. அவன் சாயம் வெளுத்துப் போச்சு, இனி யாரையும் ஏமாற்ற முடியாது.

[சாயம் + வெளு-,]

சாயமடி-த்தல் *šāyam-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) சாயந்தோய்-த்தல் பார்க்க; see *šāyan-dōy-.*

[சாயம் + அடி-,]

சாயமரம் *šāya-maram,* பெ. (n.) 1. ஒரு வகை மரம் (M.M.464); Malay sandal. 2. மரவகை (இங்.வை.); American logwood.

[சாயம் + மரம்]

சாயமேற்று-தல் *šāyam-ēṟṟu-*, 5 செ.குன்றாவி. (v.i.) *சாயந்தோய்-த்தல் பார்க்க;* see *šāyan-dōy-* (செ.அக.).

[சாயம் + ஏற்று-,]

சாயர் *šāyar*, பெ. (n.) *1.* நிலவரி நீங்கிய வழக்கமான பிற தீர்வை (C.G); customs, duties, current or customary sources of revenue other than land tax. *2.* தீர்வை தண்டுபவர்; custom-house officer (செ.அக.).

[ஆயம் = வரி. ஆயர் = வரி வாங்குபவர். ஆயர் → சாயர்]

சாயர்சௌகி *šāyar-caugi*, பெ. (n.) தீர்வை வாங்குமிடம் (C.G.); custom-house or station.

[சாயர் + சௌகி. சவுக்கம் → சவுக்கி → சௌகி]

சாயரச்சை *šāya-raṭcai*, பெ. (n.) *1.* சாயங் காலம்; evening. *2.* கோவிலில் நடக்கும் மாலைப் பூசை; evening service in temples.

[சாயம் + ரச்சை. சாயம் = மாலை, த. ரச்சை → Skt. rakṣā. செய்கிறபொழுது, போகிறபொழுது என்பனபோல் வரும் தொடர்நிகழ்வைக் குறிக்கும், சொல்லாட்சிகள் செய்கிறச்சை, போரச்சை எனக் கொச்சை திரிபுற்று வழக்கெய்தியன. அச்சொல்லாட்சிகளில் பின்னொட்டாக வரும் ரச்சை என்பதனைத் தனிச்சொல்லாகக் கொண்டு ரக்ஷா என்னும் வட சொற்றிரிபு எனத் தலைக்கீழாகக் கொண்டனர்]

சாயரி *šāyari*, பெ. (n.) பாலைப் பண்வகை (பிங்.); a primary melody type of the pālai class.

சாயல்[1] *šāyal*, பெ. (n.) *1.* சாய்வு; inclining, slanting. *2.* இளைப்பு; weariness, exhaustion. "உழையோர் தன்னினும் பெருஞ்சாயலரே" (புறநா. 262). *3.* நுணுக்கம் (திவா.); contraction, shrinking. *4.* துயிலிடம் (பிங்.); bed, sleeping place.

ம. சாயல்

[சாய்தல் = படுத்தல். தலைசாய்தல் = படுத்தல், சிறிது நேரம் உறங்குதல். சாய் → சாய்கை = படுக்குமிடம் சாய் → (சாயனம்) → வ. சயனம் = படுக்கை. சாய்[2] → சாயல்]

சாயல்[2] *šāyal*, பெ. (n.) *1.* அழகு; beauty, gracefulness. "கண்ணாருஞ் சாயல்" (பரிபா. 11:54). *2.* நிறம் (பிங்.); colour. *3.* மேனி, உடல்; body form. "தளர்ந்த சாயற் றகைமென் கூந்தல்" (சிலப். 8: 100). *4.* ஒப்பு; likeness, resembleance in feature. "பாலனை நின் சாயல் கண்டு... மெல்லியலா ளெடுத்தாள்" (தனிப்பா. 2: 142:361). *5.* நிழல்; reflectd image, shadow. *6.* சார்பு; protection. "அன்பர்கள் சாயலுளடையலுற் றிருந்தேன்" (தேவா. 154, 7). *7.* மஞ்சள் (மலை.); turmeric. *8.* மேம்பாடு (சூடா.); excellence, superiority. *9.* அருள்; grace, as of God. "சாயனினது வானிறை" (பரிபா. 2:56). *10.* மேம்பாடாகிய சொல்; lofty words. "சாயலே மெய்யே யுணர்ந்ததார் மிகவுரைப்பர்" (ஏலாதி, 28).

ம. சாயல்; Skt. chāyā

[சாய்[4] + சாயல்]

சாயல்[3] *šāyal*, பெ. (n.) மென்மை; tenderness. "அது நாயும் பன்றியும் போலாது மயிலும் குயிலும் போல்வதோர் தன்மை" (தொல்.பொருள். 243, இராம. உரை).

[சாய்[4] + சாயல்]

சாயல்காட்டு-தல் *šāyal-kāṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *1.* நடித்தல்; to imitate, represent, personate. *2.* முன்குறியாகக் காட்டுதல் (உவ.); to foreshadow.

[சாயல் + காட்டு-,]

சாயல்சரிவு *šāyal-šarivu*, பெ. (n.) *1.* ஒப்பு; likeness. *2.* இசைவு; symmetry. *3.* இணக்கங் காட்டுங் குணம்; spirit of compromise

[சாயல் + சரிவு – சாயல்சரிவு – மரபிணை மொழி]

சாயல்பிடி[1]**-த்தல்** *šāyal-piḍi-*, 4 செ.குவி. (v.i.) சரியான படி (அராகம்) பண்பிடித்தல்; to get the right tune.

[சாயல் + பிடி]

சாயல்பிடி[2]**-த்தல்** *šāyal-piḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) ஒத்திசைத்தல் (அனுகரித்ததல்); to imitate correctly, as in dress.

[சாயல் + பிடி-,]

சாயல்மாயலாய் *šāyal-māyalāy,* கு.வி.எ. (adv.) சாடைமாடையாய் (இ.வ.); without taking serious notice.

[சாயல் + மாயல் + ஆய்]

சாயல்வரி *šāyal-vari,* பெ. (n.) வரிப் பாட்டு வகை (சிலப். 7:43, உரை); a love-song.

[சாயல் + வரி]

சாயல்வாகை *šāyal-vāgai,* பெ. (n.) உசிலமர வகை (L); black sirissa.

சாயலம் *šāyalam,* பெ. (n.) ஓரணி கலன்; a kind of ornament. "வயிரசாயலம், பாதசாயலம்" (S.I.I.iil6).

[சாய்[4] → சாயல் = அழகு. சாயல் → சாயலம்]

சாயலன் *šāyalan,* பெ. (n.) காவிரிப்பூம் பட்டினத்துள்ள ஒரு வணிகன்; a trader in Kāviri-p-pūm-paṭṭinam. எட்டிப் பட்டம் பெற்ற வணிகன் (சா.அக.).

[சாயல் → சாயலன்]

சாயலாள் *šāyalāḷ,* பெ. (n.) நல்ல தலைமுடி உள்ளவள், அழகி; a woman having beautiful hair, a beautiful woman (சேரநா.).

ம. சாயலாள்

[சாயல் + ஆள்]

சாயவடுப்பு *šāya-v-aduppu,* பெ. (n.) சாயம் காயச்சுதற்குரிய அடுப்பு; oven for preparing dye.

[சாயம் + அடுப்பு. அடுதல் = சுடுதல், சமைத்தல். அடு → அடுப்பு]

சாயவிடு-தல் *šāya-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) சாய்த்தல்; to cause to incline. 'மூட்டையைச் சாயவிட்டான்' (உ.வ.).

[சாய் → சாய + விடு-,]

சாயவிராதகம் *šāya-virādagam,* பெ. (n.) கடுக்காய்; gallnut (சா.அக.).

சாயவிரை *šāya-virai,* பெ. (n.) குரங்குமூஞ்சி விதை; monkey turmeric (சா.அக.).

சாயவிலை *šāya-vilai,* பெ. (n.) சீமைக் கற்பூரம் (L); Bengal sage.

சாயவெளிச்சை *šāya-veḷiccai,* பெ. (n.) ஆறு விரலம் (அங்குலம்) நீளமுள்ள ஆற்றுமீன் வகை (F.L.); a river-fish, silvery, attaining 6 in. in length.

சாயவேட்டி *šāya-vēṭṭi,* பெ. (n.) சாயமேற்றிய ஆடை; dyed clothworn by men.

[சாயம் + வேட்டி]

சாயவேர் *šāya-vēr,* பெ. (n.) சாயமிடுதற்குதவும் பூடுவகை (M.M. 160); chayroot, Indian madder.

ம. சாயவேர்; க. சாயி, சாயிபேரு

[சாயம் + வேர்]

சாயவேர்குத்திகள் *šāyavēr-kuttigaḷ,* பெ. (n.) சாயவேரைத் தோண்டியெடுப்போர் (யாழ்ப்.); chayroot diggers.

[சாயவேர் + குத்திகள்]

சாயவேர்ச்சக்களத்தி *šāya-vēr-c-cakkaḷatti,* பெ. (n.) போலிச்சாயவேர் (சங்.அக.); counterfeit chayroot.

[சாயவேர் + சக்களத்தி]

சாயவேளாகொல்லி *šāyavēḷākolli,* பெ. (n.) பண்வகை (சிலப். 14:166, உரை); primary melody-type.

சாயவோலை *šāya-v-ōlai,* பெ. (n.) காதுக்கு இடவும் பெட்டி முடையவும் உதவுஞ் சாயமிட்ட ஓலை (வின்.); dyed olas or rushes for ear-ornament and for matting.

[சாயம் + ஓலை]

சாயனதம் *šāyanadam,* பெ. (n.) சாயானகம் பார்க்க (யாழ்.அக.); see *šāyānagam.*

சாயனம் *šāyanam,* பெ. (n.) கோள்நிலை (வின்.); celestial longitude computed form the vernal equinox.

சாயாகிரகம் *šāyā-kiragam,* பெ. (n.) சாயைக்கிரகம் பார்க்க; see *šāyai-k-kiragam.*

[சாயை → சாயா + கிரகம்]

Skt. graha → த. கிரகம்

சாயாகௌளம் *šāyākauḷam,* பெ. (n.) பண் (அராகம்) வகை (பரத. இராக. 55); a specific melody - type.

சாயாசூரன் *šāyā-šūraṉ*, பெ. (n.) ஓர் அசூரன்; a monster.

[சாய் → சாயா + சூரன். சுள் → சுர் → சுரம் → சுரன் → சூரன்]

சாயாபடம் *šāyā-paḍam*, பெ. (n.) சாயைப்படம் பார்க்க; see *šāyai-p-paḍam*.

[சாய் → சாயா + படம்]

சாயானகம் *šāyāṉagam*, பெ. (n.) ஓந்தி (திவா.); chameleon.

சாயி[1] *šāyi*, பெ. (n.) மை (C.G.); ink.

க. சாய்

[சாய் = நிறம். சாய் → சாயி]

சாயி[2] *šāyi*, பெ. (n.) படுத்துக்கிடப்பவன்; reclining person used only in compounds.

[சாள் → சாடு. சாடுதல் = சாய்தல். சாள் → சாய். சாய்தல் = படுத்தல். சாய் + இ - சாயி]

சாயிதான் *šāyitāṉ*, பெ. (n.) மைக்கூடு (C.G.); ink stand, ink-bottle.

[சாயம் → சாயி + தான். தானம் → தான்]

U. dān → த. தான்

சாயினம் *šāyiṉam*, பெ. (n.) மென்மையுள்ள மகளிர்கூட்டம்; bevy of beautiful ladies. "துவ்வா நறவின் சாயினத்தானே" (பதிற்றுப். 60).

[சாய் [4] → சாயல் → சாயினம்]

சாயு *šāyu*, பெ. (n.) ஒருவகைப்புல்; a kind of grass.

[சாய் [5] → சாயு]

சாயுங்காலம் *šāyuṅgālam*, பெ. (n.) கதிரவன் சாயும் வேளை (எற்பாடு) மாலைப் பொழுது; evening.

[சாயும் + காலம்]

கதிரவன் சாயுங்காலத்தைப் பொழுது சாய்கிற வேளை என்பது இன்றும் பெருவழக்கான உலக வழக்கு. ஆங்கிலரும் decline என்று கூறுதல் காண்க.

வடவர் ஸோ என்பதை மூலமாகக் காட்டுவர். ஸோ = அழி, கொல், முடி. சாயம் = நாள், முடிவு. இங்ஙனம் வடசொல்லாகக் காட்டுவதற்கே சாயுங்காலம் என்னும் வடிவைச் சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலியிற் காட்டாது விட்டிருக்கின்றனர் (வ.வ.146).

த. சாயுங்காலம் → Skt. sāyam

சாயை[1] *šāyai*, பெ. (n.) 1. நிழல்; shadow. "தன்னது சாயை தனக்குத வாது" (திருமந். 170). 2. படிவடிவம் (வின்); reflected image, reflection. 3. ஒப்பு; resemblance, likeness. இக் குழந்தைக்குத் தகப்பன் சாயை உள்ளது. 4. சாயைக்கிரகம் பார்க்க (வின்.)); see *šāyai-k-kiragam*. 5. புகழ்; fame. "நின் சாயை யழிவு கண்டாய்" (திவ். பெரியாழ். 5,3,3.). 6. நிழல்போல் தொடரும் கரிசு (பாவம்); sin, as following a person like his shadow. "பிரமக் கொலைச் சாயை" (திருவானைக். தீர்த்தலி. 9).

வ. சாயா; கிரே. ஸ்கிய

[சாய் + ஐ - சாயை = நிழல்]

நிழல் சாய்கிறது என்பது வழக்கு. ஒ.நோ: மாய் + ஐ = மாயை. சாயை சாயா என்று ஆகார வீறாக்கின வளவானே வடசொல்லாகக் கூறுவது நகைப்பிற்கிடமானதே (ஒப். மொ.64).

சாயை[2] *šāyai*, பெ. (n.) சாயமரம் பார்க்க (L.); see *šāya-maram*.

[சாயம் → சாயை]

சாயை[3] *šāyai*, பெ. (n.) மனைவி (யாழ்அக.); wife.

[சாயல் → சாயை. சாயல் = நிழல்; சாயை = நிழல்போல் உடனிருப்பவள்]

சாயை[4] *šāyai*, பெ. (n.) சுவடு; trace. "தன்னய விருப்பின் சாயைகூடத் தன்னிடம் இல்லாமலும்" (நித்தியானுசந். பக்.366).

[சாயல் → சாயை]

சாயைக்கிரகம் *šāyai-k-kiragam*, பெ. (n.) காணாக்கோள்களாகக் கருதப்படும் இராகு, கேது என்னும் கோள்கள்; nodes, considered as invisible planets.

Skt. graha → த. கிரகம்

[சாய் → சாயை + கிரகம்]

கருங்கோள் (இராகு), செங்கோள் (கேது) எனக் கருதப்படும் இரு கோள்களும் தனியான கோள்கள் அல்ல. பெருங்கோள்களின் சாயை (நிழல்).

சாயைகாட்டு-தல் *šāyai-kāṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) கோயிலில் இறைவனுக்கு முன் மதிப்புரவாகக் (உபசாரமாகக்) கண்ணாடி காட்டுதல் (இ.வ.); to hold a mirror before an idol, in worship.

[சாயை = நிழல். சாயை + காட்டு-,]

சாயைப்படம் *šāyai-p-paḍam*, பெ. (n.) புகைப்படம்; photograph.

[சாயை = படம்]

சார்[1]-தல் *šār-*, 2 செ.குன்றாவி. (v.t.) *1.* சென்றடைதல்; to reach, approach. "சாரா வேதங்கள்" *(திவ். திருவாய். 10. 5:8). 2.* புகலடைதல்; to depend upon, take shelter in. *3.* அடுத்தல்; to be near to. கடல்சார்ந்து மின்னீர் பிறக்கும்" *(நாலடி, 245). 4.* கலத்தல்; to unite. "நல்லெழில் மார்பனைச் சார்ந்து" *(கலித். 142). 5.* உறவு கொள்ளுதல் (கொ.வ.); to be related to. *6.* ஒத்தல்; to resemble, equal. *7.* சாய்தல் (வின்.); to lean upon, recline against. *8.* பொருந்தி யிருத்தல்; to be associated or connected with. "நலமாட்சி நல்லாரைச் சார்ந்து" *(நாலடி. 175).*

ம. சாருக; க. சார்; தெ. சாரு; து. சார்தி; கோத. சார்ய்; துட. சோர்ய்; பட. சேரு

[சுள் → சள் → சழி. சழிதல் = கலமும் பெட்டியும் பக்கமாக அமுங்கிச் சரிதல். சள் → சரு → சருவு. சருவுதல் = சாய்தல். சரு → சரி → சரிவு. சரிதல் = சாய்தல். சடி = அடி வாரம். சரு → சார். சார்தல் = சாய்தல் (மு.தா.66,67)]

சார்[2] *šār*, பெ. (n.) *1.* கூடுகை (சூடா.); joining, uniting. *2.* இடம் (பிங்.); place, situation. *3.* இடப்பொருளுணர்த்தும் ஏழனுருபு; a locative ending. "காட்டுச்சார்க் கொய்த சிறுமுல்லை" *(கலித். 117:11). 4.* பக்கம்; side. "பழுமரத்தின் புறத்தொரு சார்" *(திருவிளை. பழியஞ்சு. 12). 5.* அணைக்கரை (வின்.); bund across a river or channel with an opening for placing a fishing net. *6.* தாழ்வாரம்; inner verandah under sloping roof surrounding the inner courtyard of a house. *7.* வகை; kind, class, species. ஒருசாராசிரியர். *8.* அழகு (பிங்.); beauty, comeliness. *9.* ஒரு மரம்; a tree. "ஆரும் வெதிருஞ் சாரும் பீரும்" *(தொல். எழுத்து. 363).*

[சாள் → சார்]

சார்[3] *šār*, பெ. (n.) ஒற்றன்; spy. "சிறுவனுய்த்த சாரென நினைந்து" *(கந்தபு. அவைபுகு. 151).*

சார்[4] *šār*, பெ. (n.) *1.* சுவர்; wall. "தச்சனஞ்சிச் சாரகழ்கள்வனென்கின்ற தன்மையினாய்" *(நீலகேசி, 510). 2.* மலரணை (நாஞ்.); benami.

[சான் → சார்]

சார்க்கரம் *šārkkaram*, பெ. (n.) *1.* கற்கண்டு; sugar candy. *2.* பாலின் ஆடை; skim of milk.

[சருக்கரை → சர்க்கரை → சக்கரை = வட்டமாக வார்க்கப்பட்ட வெல்லக்கட்டி. சருக்கரம் → சார்க்கரம் (வே.க.114)]

சார்க்களம் *šār-k-kaḷam*, பெ. (n.) ஆதொண்டை; Ceylon caper - Capparis horrida *(சா.அக.).*

சார்க்காரி *šār-k-kāri*, பெ. (n.) தழுதாழை; wind-killer-Cleodendron phlomoides *(சா.அக.).*

சார்க்கேசபுஞ்சம் *šār-k-kēšapuñjam*, பெ. (n.) இலவம்பிசின் (யாழ். அக.); gum of the red cotton tree.

சார்க்கருவூலம் *šār-k-karuvūlam*, பெ. (n.) மாவட்டக் கிளைக் கருவூலம்; district sub-treasury.

[சார் + கருவூலம்]

சார்கொடு-த்தல் *šār-koḍu-*, 4 செ.குன்றாவி. (v.t.) அணுகவிடுதல்; to give room as to a disease. "நோயுஞ் சார்கொடான்" *(திவ். திருவாய். 1. 10: 6).*

[சார்[2] + கொடு-,]

சார்ச்சார் *šār-c-cār*, கு.வி.எ. (adv.) இடந்தொறு மிடந்தொறும்; everywhere. "மலையினிழி யருவி சார்ச்சார்க் கரைமரஞ் சேர்ந்து" *(பரிபா. 16, 32).*

[சார் + சார்]

சார்ச்சி[1] *šārcci*, பெ. (n.) *1.* சாய்வு; leaning. *2.* சேருகை; uniting. *3.* தொடர்பு; connection. "கருமச் சார்ச்சியல்லாத" *(தொல். சொல். 84, உரை). 4.* வருகை; approach. "சகுனி கௌசிகன் சார்ச்சியை" *(பெருங். மகத. 26: 47). 5.* சார்விடம் (பிங்.); support, place of support.

[சார் → சார்ச்சி]

சார்ச்சி[2] *šārcci*, பெ. (n.) ஒன்றை மற்றொன்றாகச் சார்த்திக் கூறுதல் (உபசரித்தல்); to quote one's own as others (in metonymy).

[சார் → சார்ச்சி]

சார்த்தவகன் *sārttavagaṉ*, பெ. (n.) வாணிகன் (யாழ்அக.); merchant, trader.

[சார் → (சாத்து) → சார்த்து → சார்த்தவகன்]

சார்த்திக்கொடு-த்தல் *sārtti-k-koḍu-*, 4. செ.குவி (v.i.) ஆடு, மாடு, கன்று போன்றவற்றை ஒன்றாக மதிப்பீடு செய்து கொடுத்தல்; to pay tax in kind, calculating goat, cow calf etc., in total. "பசுவின் கன்றும் எருதும் பசுச் சார்த்திக் குடுத்தன பசுவாகவும் ஆட்டுக் குட்டியும் கிடாயும் ஆடு சாத்திக் குடுத்தன ஆடாகவும்" (தெ. க. தொ. 2, கல். 63).

[சார்த்தி + கொடு-,]

சார்த்தியளத்தல் *sārtti-y-aḷattal*, பெ. (n.) ஒன்றனோடு மற்றொன்றை ஒப்பிட்டு அளக்கை (தொல். எழுத்து. 7, உரை); measurement by comparison.

[சார்த்தி + அள-,]

சார்த்து[1]-தல் *sārttu*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. சாரச் செய்தல்; to cause to lean, to support. 2. இணைத்தல்; to join, unite, connect (செ. அக.).

ம. சார்த்து; க. சார்; தெ. சாது; து. சார்ணி; பட. சேத்து

[சார் → சார்த்து (வே.க. 234)]

சார்த்து[2] *sārttu*, பெ. (n.) 1. ஆவணம்; document. 'கைச்சார்த்து' (நாஞ்.). 2. குறிப்பு; note, memorandum. 'முகூர்த்தச் சார்த்து' (இ.வ.).

[சார் → சார்த்து]

சார்த்து[3] *sārttu*, பெ. (n.) 1. வணிகக் கூட்டம்; a caravan. 2. வணிகப் பொருட்கள்; merchandise, commodity (சேரநா.).

ம. சார்த்து

[சார் → (சாத்து) → சார்த்து]

சார்த்துக்கை *sārttu-k-kai*, பெ. (n.) கைமரம் (யாழ்ப்.); common rafter.

[சார் → சார்த்து + கை]

சார்த்துகவி *sārttu-kavi*, பெ. (n.) ஒருவன் கவியிசையில் வேறொரு செய்யுட் புணர்ப்போன் (வெண்பாப். செய். 48, உரை); one who composes a verse after a model set by another.

[சார் → சார்த்து + கவி]

சார்த்துப்பெட்டி *sārttu-p-peṭṭi*, பெ. (n.) அரிப்பெட்டியின்கீழ்ச் சலித்த பொருளைக் கொள்ளவைக்கும் பெட்டி (யாழ். அக.); box under a sieve to receive anything sifted, as corn flour.

[சார் → சார்த்து + பெட்டி]

சார்த்துவகை *sārttu-vagai*, பெ. (n.) தலைமை வகையானன்றி உவமை முதலிய சார்பு வகையாற் கூறும் முறை; mode of stating a thing casually or incidentally, dist. fr. talaimai-vagai. "அகத்திணைக்கண் சார்த்துவகையான் வந்தனவன்றித் தலைமை வகையாக வந்தில என்பது" (தொல். பொருள். 54. உரை).

[சார் → சார்த்து + வகை]

சார்த்துவரி *sārttu-vari*, பெ. (n.) பாட்டுடைத் தலைவன் பதியொடும் பேரொடுஞ் சார்த்திப் பாடும் வரிப்பாட்டு வகை (சிலப். 7: 7. அரும்.); a kind of love songs having the name or the place of the hero, as its theme.

[சார் → சார்த்து + வரி. வரி = வரிப்பாட்டு]

சார்த்தூலம் *sārttūlam*, பெ. (n.) புலி (திவா.); tiger.

மறுவ. வல்லியம், வயமா, வெல்லுமா, உழுவை, பாய்மா, தரக்கு, வேங்கை, குயவரி, புல், புண்டரீகம், கொடுவரி

சார்ந்தோர் *sārndōr*, பெ. (n.) 1. சுற்றத்தார் (சூடா.); relatives. 2. நண்பர்; friends, associates.

[சார் → சார்ந்தோர்]

சார்நிலை *sār-nilai*, பெ. (n.) மாவட்ட அளவில் உள்ள அலுவலர்க்கோ அலுவலகத்துக்கோ அடுத்த நிலை; subordinate to district level officer or offices sub as in sub-registrar, sub-treasury, etc.

[சார் + நிலை]

சார்ப்பிறக்கு-தல் *sārppiṟakku-*, 5 செ.குவி. (v.i.) சாய்ப்பிறக்குதல் (இ.வ.); to construct a sloping roof.

[சார் → சார்ப்பு + இறக்கு-,]

சார்ப்பு *sārppu*, பெ. (n.) 1. சாய்ப்புக்கூரை; sloping roof. 2. அடிப்படை; support. "சார்ப்புக் கொண்ட தஞ்சிறகரால்" (கந்தபு. திருநாட்டுப். 45). 3. மலைச்சரிவு; slope of hill.

[சார் → சார்ப்பு]

சார்படமானம் *šārpadamānam,* பெ. (n.) பின்னொற்றி (இ.வ.); subsequent mortgage.

[சார்பு + அடமானம்]

சார்பதிவாளர் *šār-padivāḷar,* பெ. (n.) பதிவுத் துறை உதவிப்பதிவாளர்; sub-registrar in registrar's office.

[சார் + பதிவாளர்]

சார்பறு-த்தல் *šārpaṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. துறத்தல் (சூடா.); to renounce the world. 2. பிறப்பறுத்தல்; to be freed from births. "இறைவற் பேணிச் சார்பறுத் துய்தி யென்று" (சீவக. 1221).

[சார் → சார்பு + அறு-,]

சார்பாக *šārbāga,* வி.எ. (adv.) 1. ஒருவருக்கோ ஒன்றனுக்கோ நிகராளியாக; on behalf of; for someone. 2. உதவுவித்து; on behalf of; in one's favour.

[சார்பு + ஆக]

சார்பியல்கோட்பாடு *šārbiyal-kōtpādu,* பெ. (n.) இயக்கத்திலிருக்கும் பொருளின் அளவு, நிறை, காலம் ஆகியவை வேகத்தைச் சார்ந்து மாறுபடும் என்பதை விளக்கும் கோட்பாடு; theory of relativity.

[சார்பியல் + கோட்பாடு]

சார்பில் *šārbil,* வி.எ. (adv.) ஆள்வினை பொருணிலை ஆகியவற்றால் செய்யும் உதவியில்; under the auspicious of a university, etc., with the help of. அறக்கட்டளையின் சார்பல் நடைபெறும் சொற்பொழிவுத் தொடர் இது (கிரியா.).

[சார்பு + இல்]

சார்பிலார்[1] *šārbilār,* பெ. (n.) முனிவர்; ascetics.

[சார் → சார்பு + இலார்]

சார்பிலார்[2] *šārbilār,* பெ. (n.) பகைவர்; enemies.

[சார் → சார்பு + இலார். இல்லார் → இலார்]

சார்பிலோர் *šārbilōr,* பெ. (n.) சார்பிலார் (சூடா.) பார்க்க; see *šārbilār.*

[சார்பிலார் → சார்பிலோர்]

சார்பிற்றோற்றம் *šārbiṟṟōṟṟam,* பெ. (n.) 1. இயற்கைத் தோற்றமுறை (சி.சி.); natural cause of existence, as offspring from the parent, saplings from the root. 2. சார்பெழுத்து பார்க்க. see *šārbeluttu.* "சார்பிற்றோற்றம் பிறக்குமாறு கூறுகின்றது" (தொல். எழுத்து. 101, உரை). 3. சார்பு-8 பார்க்க. see *šārpu-8.* "தவமுந் தருமமுஞ் சார்பிற் றோற்றமும்" (மணிமே. 21: 163).

[சார்பு + இல் + தோற்றம்]

சார்பின்சார்பு *šārbin-šārpu,* பெ. (n.) குறுகின சார்பெழுத்து; shortened secondary letter. "சார்பின் சார்பாகிய ஆய்தக் குறுக்கமும்" (நன். 87, விருத்.).

[சார் → சார்பின் + சார்பு]

சார்பு *šārbu,* பெ. (n.) 1. இடம்; place. "படைஞர் சார்புதொறேறி" (கந்தபு. முதனாட். 30). 2. பக்கம்; side. வாதிசார்பில் நியாயாதிபதி தீர்மானித்தார். 3. சார்ப்பு, 1 பார்க்க; see *šārppu, 1.* 4. துணை; help, support. "மதலையாஞ் சார்பிலார்க்கு" (குறள், 449). 5. புகலிடம்; refuge, shelter. "ஓர் சார்பிலாமையால்— காப்பு நீங்கினார்" (திருவிளை. வளையல். 28). 6. பற்று; attachment. "சார்புகெட வொழுகின்" (குறள், 359). 7. பிறப்பு; birth. "சார்பறுத் துய்தி யென்று கூறினன்" (சீவக. 1221). 8. புத்த மதத்தினர் கூறும் பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பிறப்பு, தோற்றம் வினைப்பயன் என்ற பன்னிரண்டு நெறிகள் (மணிமே. 21: 163-4); causes of misery, 12 in number.. 9. ஒருதலைப்பக்கம்; bias, partiality. அவனுக்குச் சார்பாகப் பேசுகிறான். 10. கூட்டுறவு; friendship. அவனோடு இவன் சார்புள்ளவன். 11. கிட்டுகை (வின்.); approximation. 12. அருகு, அண்மை (வின்.); adjacency, nearness.

[சார் → சார்பு]

சார்புச்செயலர் *šārbu-c-ceyalar,* பெ. (n.) தலைமைச் செயலக உதவிச் செயலர் (இக்.வ.); under secretary in secretariat.

[சார் → சார்பு + செயலர்]

சார்புநூல் *šārbu-nūl,* பெ. (n.) நூல்வகை மூன்றனுள் முதனூல் வழிநூல்களோடு பொருண்முடிபு ஒருபுடையொத்து ஒழிந்தன ஒவ்வாமையுடைய புடைநூல் (நன். 8, உரை);

a work, which has for its source a mutanūl and a valinūl, but differs from them in many particulars, one of three kinds of nūl.

[சார்பு + நூல்]

1. முதனூல் வழிநூல் ஆகிய நூலுள்ளும் ஒரு வழி முடிந்த பொருளை ஒரு பயன் நோக்கி ஒரு கோவைபட வைப்பது *(இறை. 1).*

2. முதனூல், வழிநூல் ஆகிய நூலுள்ளும் ஒருவழி முடிந்த பொருளை ஓராசிரியன் யாதானும் ஒரு பயன்நோக்கி ஒரு கோவைபட வைப்பது. *(யாப். பாயிரம்).*

3. சார்பு நூல் என்று ஒன்றுண்டா லெனின் அஃது இருவர் ஆசிரியர் கூறியதற்கு உடம்பட்டு வருதலின் அதுவும் வழிநூலென அடங்கும் *(தொல்.பொருள். 639 இளம். உரை).*

சார்பெழுத்து *šārbeluttu,* பெ. (n.) **தமக்கென்று தனியான வரிவடிவங்கள் இல்லாமல் முதலெழுத்துகளைச் சார்ந்து ஒலிக்கும் எழுத்துகள்;** secondary letters.

[சார்பு + எழுத்து]

1. தம்மொடு தாம் சார்ந்தும் இடஞ் சார்ந்தும் இடமும் பற்றுக்கோடும் சார்ந்தும் வேறுபாட்டால் வருதலின் சார்பெழுத் தென்றாயின *(நன். 60 மயிலை).*

2. சார்ந்து வருவதானும் தத்தம் முதலெழுத்தின் திரிபு விகாரத்தால் பிறத்தலானும் சார்பெழுத்தாயின.

உயிர்மெய் யொழிந்தன, அகரம் முதலியன போல் தனித்தானும், ககரம் முதலியனபோல் அகரமொடு சிவணியானும் இலங்கும் இயல்பின்றி ஒரு மொழியைச் சார்ந்து வருதலே தமக்கு இலக்கணமாக உடைமையின் சார்பெழுத்தாயின *(நன். 60. சிவ.)* (உ.சொ.க.).

தொல்காப்பியம் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்றினைச் சார்பெழுத்துகளாகக் குறிப்பிடுகிறது.

நன்னூல் இவற்றொடு உயிர்மெய், உயிரளபெடை, ஒற்றளபெடை, ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகியவற்றையும் சேர்த்துச் சார்பெழுத்துகள் பத்து என்று குறிப்பிடுகிறது.

உயிரும் மெய்யும் ஆகிய முதலெழுத்துகளுட் சிலவற்றின் சார்பினால் தோன்றுவன சார்பெழுத்துகள். சார்தல் ஒன்றையொன்று அடுத்தல். உயிரினத்தைச் சேர்ந்தவை இரண்டும் மெய்யினத்தைச் சேர்ந்தது ஒன்றும் ஆக, சார்பெழுத்துகள் மொத்தம் மூன்றாம். அவை குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்பனவாகும்.

தொல்காப்பியர் கூறியவாறு இம் மூன்றே சார்பெழுத்துகள். நன்னூலார் உயிர் மெய்யையும் வேறு சில எழுத்துக் குறுக்கங்களையும் அளபெடையும் சேர்த்துத் தவறாகப் பத்தென விரித்து விட்டார். உயிர்மெய், உயிரும் மெய்யும் சேர்ந்த கூட்டெழுத்தே யன்றி வேறெழுத்தாகாது. எழுத்துக் குறுக்கங்களையெல்லாம் சார்பெழுத்தென்று கொள்ளின் ஆய்தக் குறுக்கத்தைச் சார்பிற் சார்பென்று கொள்ளவேண்டும். அளபெடை என்பது எழுத்தொலி நீட்டமேயன்றித் தனியெழுத்தாகாது. இவ்வுண்மைகளை யெல்லாம் நோக்காது. சார்பெழுத்துத் தொகையைப் பெருக்கியதற்கு மாணவரை மயக்குதலன்றி வேறொரு பயனுமின்றாம் *(த.வ. 137).*

சார்போடு-தல் *šār-bōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) **மீன் பிடிக்கச் சிறுகரை போடுதல்** *(வின்.);* to put up a small bund for fishing.

[சார் + போடு-தல். சார் = கரை]

சார்போதன் *šār-pōtan,* பெ. (n.) **படிகம்போல் சார்ந்ததன் வண்ணமாகிய ஆதன்** *(ஆன்மா);* soul, as assuming, like crystal, the characteristics of objects in contact *(செ.அக.).*

[சார்பு + ஆதன் - சார்பாதன் → சார்போதன்]

சார்மணை *šār-maṇai,* பெ. (n.) **சுவரோடு ஒட்டித் திண்ணையில் கட்டிய சாய்மானத் திண்டு** *(வின்.);* cushion-like masonry work against the wall on a pial, intended to lean on.

[சார் + மணை]

சார்மானம் *šār-mānam,* பெ. (n.) **சாய்மானம்** *(வின்.);* anything to lean on.

ம. சார்ம்மானம்.

[சார் + மானம்]

சார்வணை *šārvaṇai,* பெ. (n.) **சாய்ந்திருத்தற் குரிய அணை;** seat provided with back. "சந்தனப் பீடிகைச் சார்வணை யேறி" *(பெருங். உஞ்சைக். 37: 15).*

[சார் + அணை]

சார்வரி *šār-vari,* பெ. (n.) *நரிப்பயறு;* fox gram - Rothia trifoliate *(சா.அக.).*

சார்வலை *šārvalai,* பெ. (n.) *மீன் வலை வகை* *(இ.வ.);* a fishing net.

[சார் + வலை]

சார்வா-தல் *šārvā-,* 6 செ.கு.வி. (v.i.) *அறமன்றக் கட்டளை முதலியன உரியவனிடத்துக் கொடுக்கப்படுதல்;* to be served as summons. *சம்மன் அவனுக்குச் சார்வாகவில்லை.*

[சார் → சார்வா-,]

சார்வாய் *šārvāy,* பெ. (n.) *அறுத்தவித்த பனங்காய் (யாழ்.அக.);* palmyra fruit sliced and cooked.

சார்வாய்க்கதிர்வேற்கவிராயர் *šārvāy-k-kadir-vēṟ-kavirāyar,* பெ. (n.) *முருகர் பதிற்றுப் பத்தாந்தியின் ஆசிரியர்;* a poet, author of Murugar-padiṟṟu-p-pattantādi.

[சார்வாய் + கதிர்வேற் கவிராயர்]

இவர் சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் சார்வாய் என்னும் ஊரைச் சார்ந்தவர். குமரேசசதகம் பாடிய குருபாத தாசர் இவரின் தந்தை. இவர் உயிர் வருக்கத் திருப்புகழ், உயிர் வருக்கக் கீர்த்தனை, பஞ்சரத்தினத் திருப்புகழ் முதலிய நூல்களை இயற்றியவர் *(பிற்.புல.).*

சார்வாரம் šārvāram, பெ. (n.) *மகளிர் கச்சின் றலைப்பு (பிங்.);* tying ends of a bodice.

[சார் + வாரம். வார் → வாரி = நீண்ட வார் → வாரம்]

சார்வு šārvu, பெ. (n.) *1. இடம் (பிங்.);* place, residence. *2. ஒட்டுத்திண்ணை;* verandha. "சார்வுந் திண்ணையுங் குயிற்றி" *(சீவக. 108).* *3. புகலிடம்;* refuge. "உறுவர் செல்சார்வாகி" *(புறநா. 205). 4. அடிப்படை;* basis. *5. துணை;* help, support. "கெட்டார்க்குச் சார்வாய்" *(குறள், 15). 6. வழிவகை;* means. "உயருஞ் சார்விலா வுயிர்" *(கம்பரா. நாட்டு. 55).* *7. பற்று (சூடா.);* attachment. *8. அயலிடம் (வின்);* vicinity, neighbourhood. *9. ஒருதலைப் பக்கம்;* partiality. *10. சார்வோலை (யாழ்ப்.) பார்க்க;* see šār-v-ōlai.

[சார் → சார்வு]

சார்வோலை *šār-v-ōlai,* பெ. (n.) *முதிர்ந்த குருத்தோலை (யாழ்ப்.);* matured palm leaf adjoining kuruttu.

[சார்வு + ஓலை]

சாரக்கட்டை *šāra-k-kaṭṭai,* பெ. (n.) *1. வளைவைத் தாங்குதற் கென்று கட்டிப் பின்பு எடுத்துவிடக் கூடிய சுவர்;* temporary wall erected for supporting an arch under construction. *2. அணை வளைவைத் தாங்க இடைக்கால ஏற்பாடாகக் கட்டப்படும் நடுக்கட்டைச் சுவர்* (C.E.M.); centering pier.

[சாரம் + கட்டை]

சாரக்கிழங்கு *šāra-k-kiḻaṅgu,* பெ. (n.) *சிறுகிழங்கு;* Chinese yam; small yam - Dioscorea aculeata *(சா.அக.).*

[சாரம் + கிழங்கு. கிழக்கு → கிழங்கு = நிலத்தின்கீழ் விளைவது]

சாரக்கினி *šāra-k-kiṉi,* பெ. (n.) *சிறுகீரை;* field spinach - Amaranthus eampestris *(சா.அக.).*

சாரக்குறி *šāra-k-kuṟi,* பெ. (n.) *(சாம்பலால்) நெற்றியில் பூசும் குறி;* a mark on the forehead etc. made by ashes *(சேரநா.).*

ம. சாரக்குறி

[சாரம் + குறி]

சாரகத்தி *šāra-katti,* பெ. (n.) *நீர்முள்ளி;* water thistle - Hygrophila spinosa *(சா.அக.).*

சாரகந்தகம் *šāra-kandagam,* பெ. (n.) *சந்தனம் (மலை.);* sandalwood.

சாரகந்தம் *šāra-kandam,* பெ. (n.) *சாரகந்தகம் பார்க்க (மூ.அ.);* see *šāra-kandagam.*

[சாரகந்தகம் → சாரகந்தம்]

சாரகம்[1] *šāragam,* பெ. (n.) *தேன் (சங்.அக.);* honey.

ம. சாரகம்; Skt. kṣāraka

சாரகம்[2] *šāragam,* பெ. (n.) *இந்துப்பு (மூ.அ.);* rock salt.

சாரங்கட்டு-தல் *šāraṅgaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) *கட்டடத்தின் மேற்பகுதிக்கு ஏறுவதற்கு வாய்ப்பாகக் கம்புகளைக் கொண்டு படி போன்ற நிலையினை உருவாக்குதல்;* to scaffold.

க. சாரகட்டு

[சாரம் + கட்டு-,]

சாரங்கநாட்டை *šāranga-nāttai,* பெ. (n.) பண் வகை (பரத. ராக. 102); a specific melody-type.

சாரங்கபாடாணம் *šāranga-pādāṇam,* பெ. (n.) செய்நஞ்சு (பாடாண) வகையுளொன்று (சங்அக.); a kind of arsenic.

சாரங்கம்[1] *šārangam,* பெ. (n.) 1. குறிஞ்சா; Indian ipecacuanha. 2. சிறுகுறிஞ்சா; small Indian pecacuanha (செ.அக.).

சாரங்கம்[2] *šārangam,* பெ. (n.) சாரங்கவீணை பார்க்க (பரத. ஒழிபி. 15); see *šāranga-viṇai.*

சாரங்கவீணை *šāranga-viṇai,* பெ. (n.) வீணை வகை (சங்அக.); a kind of lute.

[சாரங்கம் + வீணை. விண் = வில்நரம்பு தெரித்தற்குறிப்பு. விண்விண் = யாழ்நரம்பு தெரித்தற்குறிப்பு. விண் → வீணை]

சாரங்கன்[1] *šārangaṉ,* பெ. (n.) திருமால் (வின்.); Tirumāl (Viṣṇu), as a bowman.

[சரம் = அம்பு. சரம் → சாரம் + அங்கன்]

Skt. anga → த. அங்கன்

சாரங்கன்[2] *šārangaṉ,* பெ. (n.) குதிரை வகை (அசுவசா. 151); a species of horse (செ.அக.).

சாரங்கி *šārangi,* பெ. (n.) நரம்பிசைக் கருவி வகை (வின்.); Indian violin, a stringed instrument played with a bow.

சாரசணம் *šārašaṇam,* பெ. (n.) மாதரின் இடையணி வகை (யாழ்அக.); a waist band for women (செ.அக.).

சாரசம் *šārašam,* பெ. (n.) சீமை நன்னாரி (M.M.171); sarsaparilla china root, smilax officinalis.

சாரசவேர் *šāraša-vēr,* பெ. (n.) சீமை நன்னாரி வேர்; root of jamaica sarsaparilla - sarsac radix (சா.அக.).

[சாரசம் + வேர்]

சாரசிங்கி *šāra-šingi,* பெ. (n.). 1. கல்லுப்பு; crystallized sea-salt. 2. சவ்வீரம்; corrosive sublimate (சா.அக.).

சாரசேர் *šārašēr,* பெ. (n.) முதியார் கூந்தல்; virginian silk - Periploca sclapidae (சா.அக.).

சாரஞ்சுடு-தல் *šārañ-judu-,* 20 செ.கு.வி. (v.i.) காரநீர் மருந்துக்கானச் சாம்பலுக்காகக் கள்ளி முதலியவற்றை எரித்தல் (வின்.); to burn the milk - hedge, prickly pear, etc., to get their ashes for making lye .

[சாரம் + சுடு-,]

சாரடை *šāradai,* பெ. (n.) வரிவகையுளொன்று (தெ.க.தொ. 4. 106); a tax.

சாரணத்தி *šāraṇatti,* பெ. (n.) சாரணை (மலை.) பார்க்க; see *šāraṇai.*

[சாரணை → சாரணத்தி]

சாரணம் *šāraṇam,* பெ. (n.) அம்மையார் கூந்தல் (மலை.); seeta's thread.

சாரணர்[1] *šāraṇar,* பெ. (n.) 1. ஒற்றர்; spies, secret agents, emissaries. "தவாத் தொழிற் றூதுவர் சாரணர்" (திவா.). 2 தூதுவர்; messengers, ambassadors. "சாரணர்....... அளித்த வோலை" (விநாயகபு. 3: 35). 3. சமணரிலும் புத்தரிலும் சித்தி பெற்றோர்; Jain or Buddhist sages who have obtained supernatural powers. "சாரண ரறிந்தோர் காரணங்கூற" (மணிமே. 29. 29). 4. பதினெண்கணத்துள் ஒரு சாரார் (சூடா.); a class of celestial hosts, one of patiṉeṉ-kaṇam. 5. நாட்டு நலப்பணியாளர்கள்; scouts.

[சரணம் = கால். சரணம் → சாரணர்]

சாரணர்[2] *šāraṇar,* பெ. (n.) தேவருள்பாடும் வகுப்பார்; recite caste (அபி.கோ).

சாரணரியக்கம் *šāraṇar-iyakkam,* பெ. (n.) நாட்டுநலப்பணித் தொண்டர் படை இயக்கம் (Mod.); scout movement.

[சாரணர் + இயக்கம்]

சாரணை *šāraṇai,* பெ. (n.) மழைக்காலத்தில் முளைக்கும் செடி; one - styled trianthema - Trianthema monogyna (சா.அக.).

வகைகள்

1. சத்திச் சாரணை; hogweed - Boerhaavia rependa.
2. வெள்ளைச் சாரணை; white Shauranay - Trianthema decandra.
3. சிகப்புச் சாரணை; red Shauranay - Orygia decumbens alias O. trianthemoides.

4. *மிளகுச் சாரணை;* pungent trianthema.
5. *செஞ் சாரணை;*
6. *மூக்கரைச் சாரணை;* a white creeper - Trianthema monogyna.
7. *வட்டச் சாரணை;* purslane - leaved trianthema - Trianthema pentardra.
8. *அதி சாரணை;*
9. *சிறு சாரணை;*

சாரத்தண்ணீர் *sāra-t-taṇṇīr,* பெ. (n.) *காரத் தண்ணீர்* (வின்.); lye.

[காரம் → சாரம் + தண்ணீர்]

சாரத்துளை *sāra-t-tuḷai,* பெ. (n.) *சாரக்கழி வைக்கும் சுவர்த்துளை;* scaffold - hole or pút log hole in a building under construction.

[சாரம் + துளை. துள் → துளை]

சாரப்பருப்பு *sāra-p-paruppu,* பெ. (n.) *காட்டுமாவிரை* (பதார்த்த. 786); pulp of Cuddapah almond.

[சாரம் + பருப்பு]

சாரப்பாரிகம் *sārap-pārigam,* பெ. (n.) *விளாம்பழம்;* the riped fruit of wood - apple tree (சா.அக.).

சாரப்பந்தினி *sārabandiṉi,* பெ. (n.) பேரா *முட்டி;* fragrant pavinia - Pavonia odorate (சா.அக.).

சாரம்[1] *sāram,* பெ. (n.) 1. மேலேறக்கட்டும் *மரம்;* scaffolding, sheers, sticks tied to the smaller branches of a flower - tree, as a scaffold for pricking flowers. "உதர ரோமச் சங்கிலி சாரமாக்கி" (குற்றால. தல. தருமசா. 70). 2. மேடு (வின்.); elevation, eminence, high ground.

ம. சாரம்; க. சார; தெ. சாரவ, சாருவ; கோத. சாம்

[சார் → சாரம் = சுவரைச் சாரக்கட்டும் மரம்]

சாரம்[2] *sāram,* பெ. (n.) 1. பயிர்களின் உயிர்ச் *சாறு;* sap, as of plants. "வழியு மாசாரமுஞ் சிறந்தீர்" (அழகர்கல. 67). 2. *இனிமை* (பிங்.); relish sweetness. 3. *மருந்து* (பிங்.); medicine, elixir. 4. *சிறந்தது;* that which is of superior quality. "மாமணிச்சாரம் வைத்த வலயமொன்று" (பார. சூது போர். 175). 5. *வடித்தெடுத்த பகுதி;* essence, gist. "பதார்த்த மெல்லாஞ் சாரமாச் சேகரித்து" (சிவரக. சிவதன்மா. 34). 6. *பயன்;* advantage use. 7. *ஆற்றல்;* strength, vigour. 8. *மரவயிரம்* (பிங்.); hard inner part or heart of a tree. 9. *மரவகை;* Cuddapah almond, Buchanania latifolia. 10. *இருப்பை* (மலை.); South Indian mahua. 11. *கொட்டை முந்திரி* (மலை.); cashew tree. 11. *சித்திரப் பாலடை* (மலை.); tailed tick-trefoil.

[சாறு → சாறம் → சாரம்]

சாரம்[3] *sāram,* பெ. (n.) 1. *எரிவுப்பு* (நவச்சாரம்); ammonium chloride. 2. *வண்ணான் காரம்;* washerman's lye. 3. *காரச் சாம்பல்;* ashes for lye.

[காரம் → சாரம்]

சாரம்[4] *sāram,* பெ. (n.) *அணிவகை* (பாப்பா. 72); a figure of speech.

சாரம்[5] *sāram,* பெ. (n.) *சாம்பல்;* a kind of ash.

ம. சாரம்;

Pkt. charra; Skt. kṣāra.

[சார் → சாரம்]

சாரம்[6] *sāram,* பெ. (n.) *அருகு, அண்மை;* nearness, vicinity (சேரநா.).

ம. சாரம்; க., பட. சாரெ; து. சார்தி (சந்திப்பு); கோத. சாரி; துட. சோரி; குட. சாசெ (உறவினர்)

[சார் → சாரம்]

சாரம்போடு-தல் *sārampōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) *சாரங்கட்டு-தல் பார்க்க;* see *sāraṅ-gaṭṭu-.*

[சரம் + போடு-,]

சாரமண் *sāra-maṇ,* பெ. (n.) 1. *உழமண்;* fuller's earth. 2. *தூய்மையான மண்;* pure alkaline earth (சா.அக.).

[காரம் → சாரம் + மண்]

சாரமத்தியம் *sāra-mattiyam,* பெ. (n.) நாயுருவி; Indian burr - Achy - ranthes aspera (சா.அக.).

சாரமாக்கு-தல் *sāram-ākku-,* 5 செ. குன்றாவி. (v.t.) *பொருட்படுத்துதல்;* to give importance, mind. அவன் செய்ததைச் சாரமாக்காதே (நாஞ்.).

[சாரம் + ஆக்கு-,]

சாரமாணி *šāramāṇi,* பெ. (n.) பகடிக்காரன் (சிலப். 5: 53, உரை); professional buffoon.

[சாரம் + மாணி]

சாரமிறக்கு[1]-தல் *šāram-iṟakku-,* 5 செ.கு.வி. (v.i.) கட்டடச் சாரத்தைப் பிரித்தல் (வின்.); to take down a scaffoldings.

[சார் → சாரம் + இறக்கு-,]

சாரமிறக்கு[2]-தல் *šāram-iṟakku-,* 5 செ.கு.வி. (v.i.) 1. சாறுபிழிதல் (வின்.); to express juice, distil. 2. சாற்றை உட்செலுத்துதல்; to swallow the juice of anything chewed or dissolved in the mouth.

[சாறு → சாறம் → சாரம் + இறக்கு-,]

சாரமேசன் *šāra-mešaṉ,* பெ. (n.) கருஞ்சீந்தில்; a black variety of moon-creeper - menispermum cardifolium (சா.அக.).

சாரமேயன் *šāra-mēyaṉ,* பெ. (n.) நாய் (பிங்.); dog.

சாரர் *šārar,* பெ. (n.) 1. ஒற்றர்; spy. 2. நண்பர்; friend.

[சார் → சாரர்]

சாரல்[1] *šāral,* பெ. (n.) சாய்வாகவும் துளித் துளியாகவும் விழும் மழை அல்லது காற்றால் அடித்துவரப்படும் மழை; light drizzle, driving rain. குற்றாலத்தில் சாரல் எப்போது தொடங்கும்.

ம. சாரல் (மழை); பட. செரெ

[சார் → சாரல் = சாய்ந்து பெய்யும் தூறல்]

šāral, rain driven by th wind ; in the usage of the southern Tamilians, the rain brought by the south-west monsoon. Comp. Samoiede sarre, Perimian ser, Votiak sor, rain. (C.G.D.F.L. 619).

சாரல்[2] *šāral,* பெ. (n.) 1. கிட்டுகை; drawing near. "தாஞ்சாரற்கரிய தனுவளைத்தான்" (பாரத. திரௌபதி. 57). 2. பக்கம்; side. "மாளிகையின் சாரல்" (கம்பரா. ஊர்தே. 100). 3. பக்கமலை; side or slope of a mountain. "வழையமை நறுஞ்சாரல்" (கலித். 53). 4. மலை (பிங்.); mountain. 5. தூவானம்; rain driven in. 6. மலையில் மேகங் கட்டிப் பெய்யுந் தூற்றல்; drizzling rain from clouds gathering on hill-tops. 7. மருதயாழ்த் திறமாகிய காந்தாரப்பண் (பிங்.); gāndhāra, a secondary melody-type of the marutham class.

ம. சாரல்

[சார் → சாரல் = மலைச்சரிவு]

மலையடிவாரம் சாரல் எனப்படும். 'சாரல்நாட செவ்வியை யாகுமதி' (குறுந். 18-2) "சாரல் நாட நடுநாள்" (குறுந். 9). "சாரல் நாட வாரலோ எனவே" (குறுந். 141:8) என்பன மலைப்பக்க நாட்டைச் சாரல் நாடு எனக் கூறுதல் காண்க. மேற்புறமாயினும் கீழ்ப்புறமாயினும் சேரநாடு முழுவதும் பெரும்பாலும் மேற்குத் தொடர்ச்சி கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் அடிவாரச் சரிவே. இதனாலேயே இந்நாட்டரசன் சேரன் (சாரல் - சேரல் - சேரலன் - சேரன்) எனப்பட்டான்.

சாரல்[3] *šāral,* பெ. (n.) நிறம் சற்றுக் குறைகை; become dull colour.

[சார் → சாரல்]

சாரல்கட்டு-தல் *šāral-kaṭṭu-,* 5. செ.கு.வி. (v.i.) மழைபெய்தற்கு ஏற்றபடி நிறைந்திருத்தல்; to be dense with water-vapour as clouds on hill-side (Tinn.).

[சாரல் + கட்டு-,]

சாரல்காற்று *šāral-kāṟṟu,* பெ. (n.) மேற்குக் காற்று; west wind.

ம. சாரவாயு

[சாரல் + காற்று]

சாரல்நாடன் *šāral-nāḍaṉ,* பெ. (n.) மலைச் சரிவிலுள்ள நாட்டரசன்; king of slope of hill. "சாரல் நாட வாரலோ வெனவே" (குறுந். 141).

[சாரல் + நாடன்]

சாரலம் *šāralam,* பெ. (n.) எள் (மூ.அ.); sesamum.

சாரலன் *šāralaṉ,* பெ. (n.) சாரல்நாடன் பார்க்க; see *šāral-nāḍaṉ.*

[சார் → சாரல் = மலைச்சரிவு, சாய்ந்து பெய்யும் மழை. சாரல் → சாரலன்]

சாரலி *šārali,* பெ. (n.) நெல்வகை (வின்.); a kind of paddy.

[சாலி → சாரலி]

சாரளை



சாரப்பருப்பு

சாமந்தி

சாலாமிசிறி

சாறுவேளை

சாரவறுதி *sāravaṟuti,* பெ. (n.) நொய்மை (இலேசு); lightness, slightness, as of a blow, a fall. 'அடி சாரவறுதியாய்ப்பட்டது' (யாழ்ப்.).

[சாரம் + அறுதி]

சாரவாக்கியம் *sāra-vakkiyam,* பெ. (n.) கோள்நிலையைக் கணிக்கும் விளக்க நூற்பா (வின்.); mnemonic or formula for calculating the position of planets, the letters of the alphabet being substituted for numbers.

[சாரம் + வாக்கியம்]

சாரவிறுதி *sāraviṟuit,* பெ. (n.) சாரவறுதி (யாழ்ப்.) பார்க்க; see *sāravaṟudi.*

[சாரம் + இறுதி]

சாரற்கட்டு *sāraṟ-kaṭṭu,* பெ. (n.) கோடைக் காலத்தில் மலையுச்சியில் முகில் கூடியிருக்கை; gathering of clouds over the hills during the monsoon. "விண்மலர்ந்த சாரற்கட்டு" (கொண்டல் விடு. 651).

[சாரல் + கட்டு]

சாரன் *sāraṉ,* பெ. (n.) 1. ஒற்றன்; spy, emissary. "ஓடினார் சாரர்வல்லை" (கம்பரா. பிரமாத்திர. 162). 2. குதிரைவகை (அசுவசா. 152.); a breed of horse.

[சார் → சாரன்]

சாராக *sārāga,* கு.வி.எ. (adv.) அணைவாக (நாஞ்.); benami.

[சார் → சாராக]

சாராம்சம் *sāramšam,* பெ. (n.) வடித்தெடுத்த பகுதி (கொ.வ.); essence, as of a fruit, purport, gist, as of speech.

[சாறு → சாரு → சாரம் + அம்சம்]

Skt. amsa → த. அம்சம்

சாராயக்கடை *sārāya-k-kaḍai,* பெ. (n.) சாராயம் விற்கும் கடை; an arrack shop.

ம. சாராயக்கட; பட. சாராயக்கடெ

[சாராயம் + கடை]

சாராயக்காரன் *sārāya-k-kāraṉ,* பெ. (n.) 1. சாராயம் காய்ச்சுபவன்; one who distills arrack. 2. சாராயம் விற்போன்; one who sells arrack.

ம. சாராயக்காரன்; பட. சாராயகாரா

[சாராயம் + காரன்]

சாராயக்கிடங்கு *sārāya-k-kiḍaṅgu,* பெ. (n.) சாராயக்கடை; arrack shop tavern.

[சாராயம் + கிடங்கு. கிழக்கு → கிழங்கு = நிலத்தின் கீழ் விளைவது. கிழங்கு → கிடங்கு]

சாராயங்கட்டு-தல் *sārāyaṅ-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) சாராயங் காய்ச்சு-தல் (வின்.) பார்க்க; see *sārāyaṅ-kāyccu-.*

[சாராயம் + கட்டு-,]

சாராயங்காய்ச்சு-தல் *sārāyaṅ-kāyccu-,* பெ. (n.) சாராயம் வடித்தல்; to distil arrack.

[சாராயம் + காய்ச்சு. காய் → காய்ச்சு]

சாராயச்சட்டி *sārāya-c-caṭṭi,* பெ. (n.) சாராயம் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தும் பானை; an earthern vessel used for distilling arrack .

ம. சாராயச்சட்டி

[சாராயம் + சட்டி]

சாராயப்பாவாலை *sārāya-p-pāvālai,* பெ. (n.) சாராயம் வடியும் பானை (இ.வ.) (வின்.); vessel for receiving distilled spirits.

[சாராயம் + பாவாலை]

சாராயம் *sārāyam,* பெ. (n.) மரப் பட்டையையோ, கரும்பின் கழிவையோ, சில வகைக் கிழங்கையோ நொதிக்க வைத்துக் காய்ச்சி வடித்தெடுக்கும் மயக்கமூட்டும் நீர்மம்; local alcoholic brew; spirits; arrack.

ம. சாராயம்; க. சாராய; தெ. சாராய், சாராயி; து. சாராயி; பட. சாராய; Ar. sharab; Skt. saraka.

[சாறு → சாரு → சாராயம்]

சாராய வகைகள்

1. இலுப்பைச் சாராயம்
2. வேலம்பட்டைச் சாராயம்
3. வத்தாவிச் சாராயம்
4. தென்னஞ் சாராயம்
5. கொழும்புச் சாராயம்
6. ஈச்சஞ் சாராயம்
7. வெல்லச் சாராயம்
8. பனஞ் சாராயம்
9. பட்டைச் சாராயம்
10. அரிசிச் சாராயம்
11. கூந்தல்பனைச் சாராயம்

(சா. அக.).

சாரார் *śārār,* பெ. (n.) *குழுவினர்; பிரிவினர்;* group or party; section. இரு *சாராருமே ஒத்துப் போக வேண்டும்.*

[சார் + ஆர். 'ஆர்' பலர்பாலீறு]

சாரி[1] *śāri,* பெ. (n.) *1. வட்டமாயோடுகை;* circular, movement, wheeling, as of soldiers, horses or chariots in fighting. *"திரிந்தார் நெடுஞ்சாரி" (கம்பரா. வாலிவ. 37). 2.* நடை (வின்.); movement, course. *3.* ஊர்தி மீது செல்லுகை; ride, drive. *4.* உலாவுகை *(வின்.);* stroll, walk. *5.* கூட்டம்; company, swarm, as of ants. *எறும்பு சாரிசாரியாய்ப் போகிறது.*

[சார் → சாரி]

சாரி[2] *śāri,* பெ. (n.) இசைக்கருவி வகை; a musical instrument. *"கரடிகை பீலிசாரி" (கந்தபு. திருக்கல். 6.).*

[சார் → சாரி]

சாரி[3] *śāri,* பெ. (n.) சூதாடுகாய் *(பிங்.);* dice.

[சார் → சாரி]

சாரி[4] *śāri,* பெ. (n.) *1.* பக்கம்; side, wing. *'அவன் வீடு வடசாரியில் இருக்கிறது'. 2.* வரிசை; row or series. *சாரிசாரியாக மக்கள் சென்றனர். 3.* நடந்து செல்பவனைக் குறிக்கவரும் கூட்டுச் சொல்லின் இறுதிப் பகுதி; at the end of compounds one who is moving, walking or wandering about. *பாதசாரி.*

ம. சாரி

[சார் → சாரி]

சாரம்[8] பார்க்க

சாரி[5] *śāri,* பெ. (n.) தடவை; time, turn. *அவனுக்குப் பலசாரி சொன்னார் (தஞ்சை.) (செ.அக.).*

தெ., க., து. சாரி

[சார் → சாரி]

சாரி[7] *śāri,* பெ. (n.) மகளிர் சீலை வகை; long piece of cotton or silk cloth worn by women.

[சீரை → சாரி]

சாரி[8] *śāri,* பெ. (n.) அஞ்சனச் செய்நஞ்சு *(பாடாணம்) (யாழ்.அக.);* a mineral poison.

சாரி[9]**-த்தல்** *śāri-,* 4 செ. குன்றாவி. (v.t.) கீழ் வீழ்த்தல்; to prostrate, fell down. "நெடுமரத்தாற் *சாரித்தலைத் துருட்டும்" (கம்பரா. அதிகாயன். 161).*

[சார் → சாரி-,]

சாரிகை[1] *śārigai,* பெ. (n.) *1. சாரி*[1] *பார்க்க;* see *śāri*[1]. "நெடுஞ்சாரிகை திரிந்தான்" *(கம்பரா. திரும்பலை. 104). 2.* வையாளி; horse-riding. "சாரிகைப் புள்ளர்" *(திருவிருத். 19). 3.* கதி; onward movement. *"சாரிகை மறுத்து" (பரிபா. 6, 36). 4.* சுழல்காற்று *(பிங்.);* whirlwind.

[சார் → சாரி → சாரிகை]

சாரிகை[2] *śārigai,* பெ. (n.) நாகணவாய்ப்புள்; myna. *"கருந்தலைச் சாரிகை" (கல்லா.7.).*

சாரிகை[3] *śārigai,* பெ. (n.) *சாரி*[4] (வின்.) *பார்க்க;* see *śāri*[4] (செ.அக.).

[சார் → சாரி → சாரிகை]

சாரிகை[4] *śārigai,* பெ. (n.) கவசம் *(சது.);* armour coat of mail.

[சல் → (சோல்) → சால் → சால்பை = போர்வை. சால் → சார் → சாரிகை = மெய்புகு கருவி, மெய்யை மூடும் கருவி]

சாரிகைவரி *śārigai-vari,* பெ. (n.) தலைச் சுமையாக வழிச்சாரிகள் சுமந்து வந்து விற்பனை செய்யும் பொருள்களுக்கான வரி; duty, toll. "முன்னாள் வழிச்சாரிகையில் வைத்துக் குடுத்த மகண்மையும்" *(தெ. க. தொ. 17, க. 142)*

மறுவ. மகண்மை

[சாரிகை + வரி]

சாரிகொள்(ளு)-தல் *śāri-koḷ(ḷu)-,* 13 செ.கு.வி. (v.i.) நடனத்தில் இடம் வலமாக ஆடுதல்; to move about or dance in a circle, as in nautch. "பதசாரி சாரி கொள்ள" *(விறலிவிடு. 419).*

[சாரி + கொள்]

சாரிசாரியாக *śāriśāriyāga,* வி.எ. (adv.) வரிசை வரிசையாக; in a row or series. *மக்கள் திருவிழாவிற்குச் சாரிசாரியாகச் சென்றனர்.*

[சாரி + சாரியாக]

சாரிதங்கன் *šāri-daṅgaṉ*, பெ.(n.) சிறுகீரை; pig's greens - Amaranthus campestris (சா.அக.).

சாரிபம் *šāripam*, பெ. (n.) சாரிபை (மலை.) பார்க்க; see *šāribai*.

சாரிபாதிதம் *šāri-pādidam*, பெ. (n.) வெருகன் கிழங்கு; a kind of bulbous root - Arum Macrorhizon (சா.அக.).

சாரிபூமி *šāri-būmi*, பெ. (n.) முற்றவெளி; esplanade.

[சார் → சாரி + பூமி]

Skt. būmi → த. பூமி

சாரிபை *šāripai*, பெ. (n.) நன்னாரி (தைலவ. தைல. 34); Indian saraparilla.

சாரியக்கோட்டை *šāriya-k-kōṭṭai*, பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடி வட்டாரத்தில் உள்ள ஊர்; a village in Tanjavur district, Maṉṉārkuḍi taluk. "சமையதன்மை இனிது நடாத்தி நிகழாநின்ற சாரியக் கோட்டையில் புவனெகவிரன்மடிகையில் நான்கு திசை பதினெண் விஷயத்தோம்" (தெ. க. தொ. 6, க. 47-10).

[சாரியம் + கோட்டை]

சாரியம்[1] *šāriyam*, பெ. (n.) எட்டி (மலை.); strychnine tree.

சாரியம்[2] *šāriyam*, பெ. (n.) சாரிபை (மலை.) பார்க்க; see *šāribai*.

சாரியல் *šāriyal*, பெ. (n.) இந்துப்பு (யாழ்.அக.); rock-salt.

[சாரி + இயல்]

சாரியன் *šāriyaṉ*, பெ. (n.) ஒழுக்கமுடையவன்; person of unimpeachable conduct. "மாசாரியனா மறுதலைச் சொன் மாற்றுவதே ஆசாரியன தமைவு" (ஏலாதி, 75).

சாரியா *šāriyā*, பெ. (n.) அகத்திக்கீரை; leaves of sesbane - Sesbania grandiflora.

சாரியெலும்பு *šāri-y-elumbu*, பெ. (n.) கரட்டெலும்பு (இங்.வை.15); ankle bone, Astragalus.

[சாரி + எலும்பு. எல் = ஒளி, வெள்ளை. எல் → எலும்பு]

சாரியை[1] *šāriyai*, பெ. (n.) 1. குதிரையின் சுற்று வரவு; pace of horse in a circle. "பதினெட்டுச் சாரியையும்" (பு.வெ.12, வென்றிப். 13). 2. வீரனுடைய நடை வகை; course, onward movement, as of a warrior. "சாரியை யந்தரத் தியக்கமும்" (பெருங். உஞ்சைக். 37, 30). 3. ஆடல் வகை ; a mode of dancing. "பெருநடை சாரியை பிரமரி இவை முதலாயினவும்" (சிலப். 3, 16, உரை).

[சார் → சாரியை]

சாரியை[2] *šāriyai*, பெ. (n.) சொல்லுக்கும் உருபுக்கும் இடையில் தோன்றும் அசை; empty morph.

ம. சாரிய

[சார் → சாரியை]

தாமாகச் சேராத சொல்லுறுப்புகளையும் சொற்களையும் சார்ந்து இயைக்கும் அசைகளும் சொற்களும் சாரியை எனப்படும். இயைத்தல் → இசைத்தல். தாமாக ஒலிக்காத எழுத்துகளை ஒலித்தற்கும், ஒலிக்கும் எழுத்துகளை எளிதாய் ஒலித்தற்கும், அவற்றைச் சார்ந்து வரும் ஒலிகளும் சாரியை எனப்படும். ஆகவே எழுத்துச்சாரியை, சொற் சாரியை எனச் சாரியை இரு வகையாம்.

எழுத்துச்சாரியை

உயிரெழுத்துகளுள் குறிலுக்குக் கரமும் நெடிலுக்குக் காரமும் சாரியையாம். நெடில்களுள் ஐ, ஔ என்னும் இரண்டிற்கும் கான் என்பது சிறப்புச் சாரியை.

ஆய்தத்திற்குச் சாரியை ஏனம் என்பதாம். அது சேரும்போது ஆய்தத்திற்கு முன் அகரமும் பின் ககர மெய்யும் சேர்ந்து அஃகேனம் என்றாகும்.

மெய்யெழுத்திற்கு 'அ' சாரியை. அது மெய்க்குப் பின் வரும். க என்பது சாரியை யேற்ற மெய்யெழுத்திற்கும் க என்னும் குறிலுக்கும் பொதுவாயிருப்பதால் மெய் யெழுத்தை விதந்து குறிக்கும்போது ககரமெய் என்பது மரபு.

உயிர்மெய்யெழுத்துகளுள், குறிலுக்குக் கரம் சாரியை; நெடிலுக்குத் தனிச் சாரியை இல்லை. அதனால் மெய்யையும் நெடிலையும் பிரித்துக் ககர ஆகாரம் (கா), ககர ஈகாரம் (கீ) என்ற முறையிற் சொல்லப்பெறும்.

சொற்சாரியை

அ, அத்து, அம், அற்று, அன், ஆம், இற்று, இன், உ, ஐ முதலியன சொற்சாரியை.

எ-டு: தட்டாரப்பாட்டம், எனக்கு, பட்டினத்தான், குளத்துப் பாய்ச்சல், புளியம்பழம், அவற்றை, அதனை. கல்லாங்கொள்ளி, பதிற்றுப்பத்து, பதினொன்று, வேரினை, அவனுக்கு, பண்டைக்காலம்.

இவற்றுள் அற்றுச் சாரியைப் புணர்ச்சியும் இற்றுச் சாரியைப் புணர்ச்சியும் இன்று உலக வழக்கற்றன. அவைகள் என்பது மிகைபடக் கூறும் வழூஉச் சொல்லும், அதுகள் என்பது இழிவழக்கும் ஆகும். ஆதலால், அவற்றை இவற்றை எவற்றை என்றே குமரி நாட்டுப் பொதுமக்கள் வழங்கியிருத்தல் வேண்டும்.

சாரியைகளும் சுட்டடியினவே. (த.வ.252, 253)

பகுபதவுறுப்புகளுள் ஒன்றான சாரியை முழுச் சொல்லோடு இடைச் சொற்கள் சேரும்போதும் பிற இடங்களிலும் அச் சொற்கள் நன்கு இசையும் வண்ணம் சார்ந்து இயைந்து நிற்கும். சாரியைக்கென்று தனிப்பட்ட பொருள் எதுவும் இல்லை. அதனாற்றான் இதனைப் பொருளற்ற உருபன் (empty morph) என்றழைப்பர்.

மொழியியல் நோக்கில் அகப்புணர்ச்சியில் வரும் சாரியைகளுக்குப் பொருள் இல்லை என்பதனைப் பல சொற்கள் சாரியை இல்லாமல் வருவது, (வேந்தன், வேந்தனை, கை, கையால், கால் (காற்று) காலொடு) சில சொற்கள் சாரியை பெற்றும் பெறாமலும் வருவது, (நாட்டை நாட்டினை, வடக்கண் வடக்கின்கண்) ஆகியவற்றைக் காரணமாகக் காட்டுவர். சாரியை பொருளுள்ளனவாக இருந்தால் சாரியை பெற்று வரும் சொற்களை நோக்கச் சாரியை பெறாது வரும் சொற்கள் பொருள் குறைவு உடையனவாக இருக்கவேண்டும். அவ்வாறின்மையால் சாரியைக்குப் பொருள் இல்லை என்பதே ஏரண அடிப்படையான முடிவாகும்.

சாரிரத்தை *šārirattai*, பெ. (n.) எட்டி (யாழ்.அக.); strychine.

சாரிவசந்தம் *šāri-vašandam*, பெ. (n.) கழற்கொடி; grey bonduc - Casalpinia bonducella.

சாரு *šāru*, பெ. (n.) 1. அழகு (பிங்.); beauty. 2. கிளி; parrot.

[சார் → சாரு]

சாருகம் *šārugam*, பெ. (n.) 1. கொலை; murder. 2. ஊறு; disaster. 3. அணங்கு; an inferior deity. 4. வேட்டம்; hunting.

சாருகன் *šārugan*, பெ. (n.) கொலையாளன் (பிங்.); murderer.

சாருகேசி *šārug-kēci*, பெ. (n.) முதன்மைப் பண் வகையுளொன்று (சங்.சந்.47); a primary rāga.

சாருசகம் *šāru-šagam*, பெ. (n.) கறியுப்பு; common salt (சா.அக.).

சாருசம் *šārušam*, பெ. (n.) கல்லுப்பு (யாழ்.அக.); rock salt.

சாருசி *šāruši*, பெ. (n.) சிற்றாமணக்கு; small castor seed - Ricinus communis (சா.அக.).

சாருணி *šāruṇi*, பெ. (n.) மஞ்சிட்டி; butter seed tree - Bira Orellana (சா.அக.).

சாருதாரி *šāru-dāri*, பெ. (n.) வெள்ளைக் கரிசிலாங்கண்ணி; white flowered eclipse plant - Eclipta alba (சா.அக.).

சாருபலம் *šāru-palam*, பெ. (n.) கொடி முந்திரிகை; grape vine - Vitis vinifera (சா.அக.).

சாருமாட்சிகம் *šāru-māṭcigam*, பெ. (n.) முந்திரிகை; cashew nut - Anacardium Occidentale (சா.அக.).

சாருல் *šārul*, பெ. (n.) உத்திரம், தூண், பாலம் முதலியன கட்டப் பயன்படும் காட்டு மர வகை; a kind of forest tree.

சாரை[1] *šārai*, பெ. (n.) நீளமான கோடு (வின்.); long, straight, direct course or line, stripe.

[சார் → சாரை]

சாரை[2] *šārai*, பெ. (n.) ஒரு வகைப் பாம்பு, சாரைப்பாம்பு; a kind of a rat-snake.

[சர் → சர → சர சர → சாரை. 'சர்' எனும் ஒலிக் குறிப்பினின்று தோன்றிய சொல்]

நல்ல பாம்போடு இணையும் ஆண் பாம்பு புகர் நிறம் அல்லது மஞ்சள் நிறம் கொண்டது. இப்பாம்பு சீறும் தன்மையது. எனினும் நச்சுத் தன்மை இல்லாதது. நீண்ட உடலும் வேக ஓட்டமும் கொண்டது. எதிரியை வாலால் அடிக்கும் தன்மையது.

இதன் வகைகள்:

1. *கருஞ்சாரை;* black rat snake.
2. *மலஞ்சாரை;* hill rat snake.
3. *பெருஞ்சாரை அல்லது சாரைக்கடா;* large rat snake.
4. *நெடுஞ்சாரை;* long rat snake.
5. *வெண்சாரை;* white rat snake.
6. *மஞ்சட்சாரை;* yellow rat snake.
7. *செஞ்சாரை;* red rat snake.


சாரைப் பாம்பு

சாரை[3] *šārai,* பெ. (n.) வெள்ளை நிற வெள்ளாடு *(செங்கை);* a kind of goat.

சாரைக்கடா *šārai-k-kaḍā,* பெ. (n.) *சாரை*[2] *(யாழ்ப்.)* பார்க்க; see *šārai*[2].

[சாரை + கடா]

சாரைக்கிட்டகுட்டி *šārai-k-kiṭṭa-kuṭṭi,* பெ. (n.) 1. *முயற்குட்டி;* feeble leveret, unable to escape from pursuit, usually with a white spot on the forehead. 2. *நோஞ்சான்;* feeble, harmless chap.

[சாரை + கிட்டகுட்டி]

சாரைசாரையாக *šārai-sārai-y-āga,* வி.எ. (adv.) *சாரிசாரியாக* பார்க்க; see *šāri-šāri-y-āga.*

[சாரை + சாரையாக]

சாரையுப்பு *šārai-y-uppu,* பெ. (n.) *கல்லுப்பு;* crystallised sea salt *(சா.அக.).*

சாரையோட்டம் *šārai-y-ōṭṭam,* பெ. (n.) *சாரைப்பாம்பின் விரைவு (வின்.);* darting, rapid and direct motion of the rat-snake, applied to persons, bulls, etc.

[சாரை[2] *+ ஓட்டம்]*

சாரைவால் *šārai-vāl,* பெ. (n.) மாட்டு வால் வகையுள் ஒன்று; a kind of cow's tail.

[சாரை + வால்]

சாரைவாலன் *šārai-vālaṉ,* பெ. (n.) 1. நீண்ட வாலுள்ள எருது *(யாழ்ப்.);* bullock with a long tapering tail. 2. புகையிலை வகை; a kind of tobacco.

[சாரை + வாலன். வால் → வாலன். 'ன்' உடைமை குறித்த ஈறு]

சாரோசி *šārōsi,* பெ. (n.) எரியுப்பு (நவச்சாரம்) *(யாழ்.அக.);* sal-ammoniac, a solder.

சாரோலை *šārōlai,* பெ. (n.) பாய், தடுக்கு, பெட்டிகள் செய்யப் பயன்படும் பனையின் முதிர்ந்த குருத்தோலை; palmyra leaf 'சாரோலை விழுந்ததென்று குருத்தோலை சிரிக்கலாமா' *(பழ.)(செ.அக.).*

[சார் + ஓலை - சாரோலை].

சார்வோலை பார்க்க

சால்[1]**(லு)-தல்** *šāl(lu)-,* 13 செ.கு.வி. (v.i.) 1. *நிறைதல்;* to be abundant, full, extensive. "ஈடுசால் பேர்" *(சீவக. 59).* 2. *மாட்சிபெறுதல்;* to excel in moral worth; to great, noble. 3. *பொருந்துதல்;* to be suitable, fiting. "இந்திரனே சாலுங் கரி" *(குறள், 25).* 4. *முற்றுதல்;* to be finished, exhausted. "தாமத்தாரின ரெண்ணினுஞ் சால்வரோ" *(கம்பரா. பிணிவீட்டு. 97).* 5. *போதியதாதல்;* to be all that is required, to be sufficient.

ம. சாலு; க., து. சாலு; தெ. சாலு; கோத. சலு; துட. சௌலு.

[சல் → சோல் → சால். சாலுதல் = நிறைதல், நற்குணம் நிறைந்திருத்தல், முற்றுதல், நிறைதலால் போதியதாதல்]

சால்[2] *šāl,* பெ. (n.) உத்தரம், தளம், தூண், பாலம் முதலிய வேலைகளுக்குப் பயன்படும் மரம்; a kind of strong trees.

சால்[3] *šāl,* பெ. (n.) 1. *நிறைவு;* fullness, abundance. 2. *தண்ணீர் நிரப்பும் பானை (பிங்.);* large water -pot; 3. *நீர் இறைக்கும் கலம்;* baling bucket. 4. *உழவுசால்;* furrow in ploughing. "உழுத செஞ்சால்" *(சீவக. 817).* 5. விதைக்கும் பொழுது விதைப்பவன் வயலில் ஒரு முறை சென்று திரும்புகை *(வின்.);* track of a sower in passing and repassing while sowing grain. 6. கும்பவோரை (கும்பராசி) *(குமாரசு. தினாதி, 3, உரை);*

the eleventh sign of the zodiac, Aquarius. 7. நீண்டவரி; continuous line, row (செ.அக.).

ம. சால; க. சால், சாலு (போதும்); தெ. சால, சாலு (முடியும், போதும்); கொலா. சால் (முடியும்); குவி. கால் (போதும்)

E. jar

[சல் → (சோல்) → சால்]

sāl, a bucket, a furrow, Comp. oni-ia (sēl-ia), any flat board or tray with a raised rim (C.G.D.F.L. 593).

சால்[4] *šāl*, பெ. (n.) ஆண்டு (இ.வ.); year (செ.அக.).

[சல் → (சோல்) → சால் = நிறைதல், ஒரு குறிப்பிட்ட கால எல்லை நிறைவடைதல்]



சால்

சால்[5]**(லு)-தல்** *šāl(lu)-*, 5 செ.கு.வி. (v.i.) சாய்தல்; to decline.

[சல் → சால்-,]

சால்கட்டு-தல் *šāl-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. தலைச்சாலுழுதல் (வின்.); to plough the first furrow in a field. 2. வாய்க்கால் போல் நீண்ட கோடு உருவாக்குதல்; to form a line 3. சாலில் விதைத்துச் செல்லுதல்; to pass and repass, sowing grain in a field.

ம. சாலாகுக (உழுதல், சிறுகால்வாய் வெட்டுதல்); க. சாலுகட்டு

[சால் + கட்டு-,]

சால்கரகம் *šāl-karagam*, பெ. (n.) ஒருவகைக் குடம்; a kind of water pot. "அமு பானை சட்டி திருமஞ்சனக் குடம் சால் கரகம் எரி கரும்பு இவையும்" (தெ.க, தொ. 7, க. 470/4)

[சால் + கரகம்]

சால்கோல் *šāl-kōl*, பெ. (n.) ஏற்றக்கோல் (செங்கை); bamboo pole of picottah.

[சால் + கோல்]

சால்பிடி-த்தல் *šālpiḍi*, 4 செ.குன்றாவி. (v.t.) ஏர்ச்சால் பிடித்தல்; to form a line, to be in rows.

க. சால் கொள், சால்தெகெ; படு. சால் கிடி

[சால் + பிடி]

சால்பு[1] *šālbu*, பெ. (n.) 1. மேன்மை (திவா.); excellence. 2. நற்குணம்; good quality or character. "சாலும் பிறநூலின் சால்பு" (ஏலாதி, 5) 3. சான்றாண்மை; nobility. "என்ன பயத்ததோ சால்பு" (குறள், 987). 4. தன்மை; nature, "தடுப்பன போலுஞ் சால்பின" (கம்பரா. கடிமண. 67). 5. கல்வி (திவா.); learning, erudition.

மறுவ. தகவு, பெற்றி, தகுதி, பான்மை, தகைமை

[சால் → சால்பு]

சால்பு[2] *šālbu*, பெ. (n.) மனவமைவு; frame of mind. "இரவொல்லாச் சால்பு" (குறள், 1064).

[சால் → சால்பு. 'பு' சொல்லாக்க ஈறு]

சால்புமுல்லை *šālbu-mullai*, பெ. (n.) சான்றோரின் அமைதி கூறும் புறத்துறை (பு.வெ. 8:31); theme describing the serenity of noble - minded persons.

[சால்பு + முல்லை]

சால்புளி *šāl-puḷi*, பெ. (n.) முறைப்படி; in the prescribed manner. "சமிதைக் கிரிகை சால்புளிக் கழிப்பி" (பெருங். இலாவாண. 3, 81).

[சால்பு → சால்புளி]

சால்வடம் *šāl-vaḍam*, பெ. (n.) துலான் வடம்; a kind of picottah part.

[சால் + வடம்]

சால்வயிறு *šāl-vayiṟu*, பெ. (n.) பெருவயிறு (கொ.வ.); pot belly.

[சால் + வயிறு]

சால்வளை-த்தல் *šāl-vaḷai-*, 4 செ.கு.வி. (v.i.) சால்விடு-, பார்க்க; see *šāl-viḍu-*.

[சால் + வளை-,]

சால்வளையம் *šāl-vaḷaiyam,* பெ. (n.) சாலின் நான்கு இரும்புப் பட்டைகள் சேர்ந்த, மேற் பகுதியில் உள்ள வளையம் (செங்கை); a ring of baling bucket.

[சால் + வளையம். வள் → வளை → வளையம்]

சால்விடு-தல் *šāl-viḍu-, 20* செ.கு.வி. (v.i.) ஏர்ச்சாலுழுதல் (யாழ்ப்.); to plough a furrow.

[சால் + விடு-,]

சால்விதைப்பு *šāl-vidaippu,* பெ. (n.) மழை பெய்து மேல்மண் காய்ந்தபின் ஏர்ச்சாலில் விதைகளைப் போடுதல்; furrow sowing.

[சால் + விதைப்பு. விதை → விதைப்பு]

சால்வு *šālvu,* பெ. (n.) பொந்திகை (திருப்தி); satisfaction.

[சால் → சால்வு]

சால்பு[1] பார்க்க

சால்வை *šālvai,* பெ. (n.) மயிர்க்கம்பளம்; shawl. சொற்பொழிவாளர் சால்வை பரிசில் பெற்றார்.

க. சாலுவெ, சாலு; பட. சால்வெ

[சல் → (சோல்) → சால் → சால்வை = போர்வை (மு.தா. 191). போர்த்திக் கொள்வதற்குப் பயன்படுவது]

சால்வையெடு-த்தல் *šālvai-y-eḍu-, 4* செ.குன்றாவி. (v.i.) மதிப்புரவாக (மரியாதையாக) மேல்துண்டை யெடுத்தல் (யாழ்ப்.); to lower or take the upper cloth as a mark of respect.

[சால்வை + எடு-,]

சால *šāla,* கு.வி.எ. (adv.) மிகவும்; very well, very much. "சால வமுதுண்டு" *(திருவாச. 16, 8).*

ம. சால; க. சலெ; தெ. சாலு

[சால் → சால]

சாலக்காரன் *šāla-k-kāraṉ,* பெ. (n.) ஏய்ப்பவன் (வஞ்சகன்); deceiver, hypocrite.

க. சாலகார (கடன்காரன்)

[சாலம் + காரன்]

சாலக்கிராமம் *šāla-k-kirāmam,* பெ. (n.) சாளக்கிராமம் பார்க்க; see *šāḷa-k-kirāmam.*

[சாளக்கிராமம் → சாலக்கிராமம்]

சாலகம்[1] *šālagam,* பெ. (n.) *1.* வலை (அக.நி); net, rope-net. *2.* சிலந்தி வலை; cobweb. *3.* வேள்வி செய்யுங்கால் வேள்வி செய்பவரின் மனைவியணியும் நுதலணி (புறநா. 166, உரை.); ornament worn on the forehead by sacrificer's wife. *4.* பறவைக் கூடு; bird's nest. *5.* அரும்பு (பிங்); flower bud. *6.* மந்திரவித்தை (வின்); trick, magic.

க. சாளேசு; து. சாலீசு

[சூல் → சால் → சாலகம்]

சாலகம்[2] *šālagam,* பெ. (n.) கழிவு நீர் செல்லும் மூடிய வழி, அங்கணம்; drain.

ம. சாலகம்.

[சூல் → சால் → சாலகம். சாலுதல் = சாய்தல்]

சாலகம்[3] *šālagam,* பெ. (n.) சிறுகுறிஞ்சா (மலை); species of gymnema.

சாலகம்[4] *šālagam,* பெ. (n.) கோயிற் கருவறை முகமண்டபத்திலும் பெருமண்டபத்திலும் ஒளியும், வளியும் உட்செல்லத் துளைகள் பல அமையுமாறு சிற்ப வேலைப்பாட்டுடன் அழகூட்டமாகச் செய்யப்பெறும் சிற்பப் பலகணி; a kind of ornament window. "மங்கைமார் சாலக வாசல்பற்றி" *(திவ். பெரியாழ். 3,4:1)* "இத்திருச்சலாகம் கஞ்சமலைப் பெரிய பிள்ளை தன்மம்" *(தெ. க. தொ.4,க.146)* "சாலேகம் சார நட" *(முத்தொள்.)*

[சாளரம் → சாலகம்]

சாலகராகம் *šālagragam,* பெ. (n.) தூய (சுத்த) பண்ணை (அராகத்தை)யொட்டி அதற்கடுத்த படியிலுள்ள பண் (அராகம்); a class of melody type differing but slightly form cutta-rāgam.

[சாலகம் + அராகம்]

சாலகாரகன் *šālakāragaṉ,* பெ. (n.) *1.* சிலந்தி; spider. *2.* வலை பின்னுவோன்; net weaver.

[சாலிகன் → சாலகாரன்]

சாலடி-த்தல் *šālaḍi-, 4* செ.குன்றாவி. (v.t.) சால்பட உழுதல்; to make furrows in ploughing.

[சால் + அடி-,]

சாலப்பகம் *šālappagam,* பெ. (n.) நாவல்; jambo tree (சா.அக.).

சாலப்பு *šālappu,* பெ. (n.) சிவதை; Indian jalap

u. jālab

[சாலம் → சாலப்பு]

சாலப்பூச்செடி *šāla-p-pūccedi,* பெ. (n.) மலமிளக்கிக் கிழங்கு; purgative root, true jalap (சா.அக.).

சாலபஞ்சிகை[1] *šāla-panjigai,* பெ. (n.) மரப் பாவை (இலக்.அக.); wooden image.

சாலபஞ்சிகை[2] *šāla-panjigai,* பெ. (n.) விலை மகள் (வேசி) (யாழ்.அக.); prostitude.

சாலம்[1] *šālam,* பெ. (n.) 1. சாலவித்தை பார்க்க; see *šāla-vittai* 2. நடிப்பு; artfulness. pretence. "சாலமென்ன சொல்லுவேன்" (பணவிடு. 316). 3. கூட்டம்; multitude, company, flock, herd, shoal. "திரிந்தன சாலமீன் சாலம்" (கம்பரா. வருணனை, 25). 4. சவை (பிங்); assembly, court. 5. வலை; net. "அளப்பில் சாலம் வீசிநின் றீர்த்திடும்" (கந்தபு. திருநகரப். 18). 6. பலகணி (பிங்.); latticed window. 7. அரும்பு (வின்.); flower-bud. 8. குறளை (பிங்); slander. 9. கல்வி (திவா.); learning. 10. மருத்துவநூல் (வின்.); medical science.

தெ. சால

[சலுக்கு பிலுக்கு = நகைகளைக் காட்டி மிடுக்காக நடக்கும் ஒலிக்குறிப்பு. சலுக்கு → சாலக்கு → சாலம்]

சாலம்[2] *šālam,* பெ. (n.) சாலப்பு பார்க்க; see *šālappu.*

சாலம்[3] *šālam,* பெ. (n.) 1. மதில் (பிங்); surrounding wall, fortress. 2. ஆச்சா (பிங்); sal. 3. மராமரம்; Ceylon ebony. 4. மரம் (வின்); tree.

[சூல் → சால் → சாலம்]

சாலம்[4] *šālam,* பெ. (n.) அகலம் (அக.நி.); width.

[சால் → சாலம். அகலம் → ஆலம் → சாலம் என்றுமாம்]

சாலம்பப்பாடாணம் *šālamba-p-pādāṇam,* பெ. (n.) ஒருவகைச் செய்நஞ்சு (பாடாணம்) (யாழ்.அக.); a kind of arsenic.

சாலமலி *šāla-mali,* பெ. (n.) 1. இலவு; silk-cotton tree-Bombaz malabartcum. 2. இலவம்பிசின்; the gum of silk - cotton tree.

சாலமலிபத்திரம் *šāla-mali-pattiram,* பெ. (n.) ஏழிலைப் புன்னை; seven leaved poon.

[சாலமலி + பத்திரம்]

சாலமலினிருச்சி *šāla-mali-nirucci,* பெ. (n.) இலவம் பிசின்; gum of silk cotton tree.

சாலமாலம்[1] *šālamālam,* பெ. (n.) ஏய்ப்பு (வஞ்சகம்) (யாழ்ப்.); trickery deceplion.

[சாலம் + மாலம். 'சாலமாலம்' மரபிணை மொழி]

சாலமாலம்[2] *šālamālam,* பெ. (n.) கண்டு சாய்ப்பு (யாழ்.அக.); furtiveness. கண்டுங் காணாதது போலிருக்கை.

[சாலம் + மாலம். எதுகை நோக்கி வந்த இணைமொழி]

சாலர்[1] *šālar,* பெ. (n.) நெய்தனிலமாக்கள் (வலையுடையோர்) (சூடா.); inhabitants of coastal region, fishermen as using nets.

மறுவ. பரதவர், நுளையர், பஃறியர், திமிலர், கடலர், கழியர்

[சலம் → சலர் → சாலர்]

சாலர்[3] *šālar,* பெ. (n.) கைத்தாளம்; cymbals.

[சல் → சல்லர் → சாலர். சல் அல்லது சல்லரை என்னும் ஓசையுண்டாக்குவது. இத்தாளக் கருவியில் பெரியது சல்லரி சிறியது சாலர்]

த. சாலர் → Skt. jhallai

சாலரா *šālarā,* பெ. (n.) சாலர்[3] பார்க்க; see *šālar*[3].

[சாலர் → சாலரா]

சாலரி *šālari,* பெ. (n.) ஓர் இசைக் கருவி; a musical instrument.

[சாலர் → சாலரி]

சாலவம் *šālavam,* பெ. (n.) சலதாரை (இ.வ.); drain, gutter.

[சல் → சூல் → சால் → சாலகம் → சாலவம்]

சாலவித்தை *šāla-vittai,* பெ. (n.) கண்கட்டி கலை (வித்தை); magic, juggelry.

[சாலம் + வித்தை]

Skt. vidyā → த. வித்தை

சாலா *šālā,* பெ. (n.) 1. சிறிய கடல்மீன் (நெல்லை); small sea fish. 2. ஆற்றில் மேயுங் கெண்டை மீன்; river fish.



சாலா கெண்டைமீன்

சாலாங்கபாடாணம் *šālānga-pāḍāṇam,* பெ. (n.) பிறவிச் செய்நஞ்சு வகை; a mineral poison.

சாலாதார் *šālātār,* பெ. (n.) பெருமையில்லாதோர்; சான்றாண்மை இல்லாதோர்; ignorable persons. opp to šanṟōr. "சாலாதார் தீயவினைகளைச் செய்து" (குறள், 657, உரை.)

[சால் + ஆ + தார். ஆ' எ.ம.இ.]

சாலாபோகம் *šālāpōgam,* பெ. (n.) அறச் சாலைகட்காக விடப்படும் இறையிலி நிலம் (T.A.S. I. *16, 5);* endowment of land for the maintenance of rest houses and choultries.

[சாலை → சாலா + போகம்]

சாலாமாலாவாக *šālāmālā-v-āga,* கு.வி.எ. (adv.) குழப்பமாக (இ.வ.); confusedly.

[சாலா + மாலா. எதுகை நோக்கி வந்த மரபிணைமொழி]

சாலாமியம் *šālāmiyam,* பெ. (n.) கருடக்கொடி; Indian birth-wort - Aristolochia Indica (சா.அக.).

சாலாரம் *šālāram,* பெ. (n.) 1. ஏணி; ladder. 2. படிக்கட்டு; steps. 3. பறவைக்கூடு; nest, cage (கழ.அக.).

[சால் + ஆரம். சால் போன்று அடுக்கடுக்காக அமையும் படி, ஏணி.]

சாலாவலை *šālā-valai,* பெ. (n.) சாலாமீன் பிடிக்கப் பயன்படும் வலை (மீனவ.); a fishing net.

[சாலா + வலை]

சாலி[1] *šāli,* பெ. (n.) 1. செந்நெல்; a superior, species of paddy. "சாலி வெண்சோறு குவைஇய குன்றில்" (ஞானா. 36,15). 2. நெற்பயிர்ப்பொது; growing paddy crop. "தாரைகொள்ளத் தழைப்பன சாலியே" (கம்பரா. நாட். 25). 3. புழுகுச் சட்டம் (தைலவ.); perfume - sac of the civet cat.

மறுவ. வரி, கொல், விரீஇ, யவம்; க. சாலி, சாலெ ம. சாலி

[சேய் → சே. சேத்தல் = சிவத்தல். சேது → சேது = சிவப்பு. சல் → (சோல்) சால் → சாலி (மு.தா. 153)]

சாலி[2] *šāli,* பெ. (n.) உடையவன்-உடையவள் என்னும் பொருளுடன் தொடர்மொழியிறுதியில் வருஞ்சொல்; word meaning possessor, used at the end of compounds, as in திறமைசாலி, குணசாலி.

[சால் = நிறைவு, உடைமை. சால் → சாலி]

சாலி[3] *šāli,* பெ. (n.) அருந்ததி; wife of Vasiṣtaṉ. "சாலியொருமீன் றகையாளை" (சிலப். 1: 51).

சாலி[4] *šāli,* பெ. (n.) சாலிகை[2] (அக. நி.) பார்க்க; see *šāligai[2].*

[சால் → சாலி]

சாலி[5] *šāli,* பெ. (n.) 1. மராமரம் (க); Ceylon ebony. "மிக்க சாலிக ளோழையும்" (சேதுபு. சேதுவந். 9). 2. சீமைவேல்; Jerusalam thorn. 3. குடைவேல்; umbrella - thorn babul. 4. கூந்தல் வேல்; elephant thorn. 5. முள்வேல்; buffalo - thorncutch.

சாலிக்கண்ணி *šāli-k-kaṇṇi,* பெ. (n.) அவுரி; indigo - Indigo fera tinctoria (சா.அக.).

சாலிக்கிராமம் *šāli-k-kirāmam,* பெ. (n.) சாளக்கிரமம்; see *šāḷa-k-kirāmam.*

சாலிகம் *šāligam,* பெ. (n.) சம்பா நெல்; champa paddy-Oryza sative (சா.அக.)

[சாலி → சாலிகம்]

சாலிகர் *šāligar,* பெ. (n.) நெய்வோன்; weaver. "சாலிகற்க்கு குடியிருப்புக் காணியாக விட்டமனம் பெரியான் திருவீதி" (தெ.க.தொ. 24, க. 145-4)

[சாலி → சாலியர் → சாலிகர்]

சாலிகன் *šāligaṉ,* பெ. (n.) 1. சாலியன், 1 பார்க்க; see *šāliyaṉ, 1.* 2. சாலியன் நெய்த ஆடை (நன் 289, மயிலை); cloth manufactured by weavers.

க. சாலிக

[சாலியன் → சாலிகன்]

சாலிகை[1] *šāligai,* பெ. (n.) ஒருவகை மரம்; french honey-suckle-Desmodium genus (சா.அக.).

[சாலி → சாலிகை]

சாலிகை[2] *šāligai,* பெ. (n.) கவசம்; armour, coat of mail. "சாலிகை யுடம்பினர் தறுகணாளரே" (சீவக. 2227).

மறுவ. அரணம், சடாரி, ஆசு, கண்டம், பருமம், மெய்யுறை, கச்சை, பரம்.

[சுல் → (சோல்) → சால் = நிறைதல். சால் → சாலிகை = குறிப்பிட்ட உறுப்பை முழுவதுமாக (நிறைவாக) மூடுவது]

சாலிகை[3] *šāligai,* பெ. (n.) வரி, இறை; toll, customs, duty.

சாலிகைத்தறி *šāligai-t-taṟi,* பெ. (n.) பழைய வரிவகை (S.I.I. i. 91); ancient tax.

[சாலிகை + தறி]

சாலிநெல் *šāli-nel,* பெ. (n.) செந்நெல்; paddy (கழ.அக.).

க. சாலி (நெல்)

[சாலி + நெல். சால் → சாலி = செந்நெல்]

சாலி[1] பார்க்க

சாலிப்பகுதி *šāli-p-pagudi,* பெ. (n.) கடைகளுக்கு வாங்கும் வரிவகை (R.T.); a tax on shops.

சாலிப்பரணி *šāli-p-paraṇi,* பெ. (n.) 1. பெரு மல்லிகை; large jasmine. 2. படிக்கட்டு; steps. 3. பறவைக் கூடு; nest, cage (சா.அக.).

[சால் → சாலி + பரணை. பரணை → பரணி. சால் போன்று அடுக்கடுக்காக (பரணையாக) அமையும் படிக்கட்டு]

சாலிமரம் *šāli-maram,* பெ. (n.) குடைவேல் மரம்; arrowthorn (சா.அக.).

[சாலி + மரம்]

சாலியக்கோட்டம் *šāliya-k-kōṭṭam,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்தை உள்ளடக்கிய பழைய நாடு; an ancient province, country. "சோழ மண்டபத்தில் சாலியக் கோட்டத்தில் வாழை குலைச்சேரி கிராமம் ஒன்றும்" (திருப். க. தொ. 2. க. 106–4)

[சாலியம் + கோட்டம். கோண் → கோடு. கோடுதல் = வளைதல். கோடு → கோட்டம் = வளைவு]

சாலியம்பாக்கு *šāliyam-pākku,* பெ. (n.) சாயப்பாக்கு (இ.வ.); areca nut sliced and boiled in water which gives it a reddish hue.

ம. சாயில்யம்

[சுல் → செல் → சேல் = செந்நிறக் கெண்டை. சுல் → சேல் → சால் → சாலி = சிவப்பு. சாலி + அம் + பாக்கு]

சாலியர்காணம் *šāliyar-kāṇam,* பெ. (n.) துணி நெய்யும் நூலிற்குச் சாயமிடும் சாலியக்குடியினர் அத்தொழிலுக்குரிய வரியைக் காசாகச் செலுத்தும் முறை; a tax rended by šāliyar of their weaving occupation (கல். கலை. அக).

மறுவ. சாலியத்தறி

[சாலியர் + காணம்]

சாலிகைத்தறி பார்க்க

சாலியன் *šāliyaṉ,* பெ. (n.) 1. நெசவுத் தொழில் செய்யும் இனத்தான்; a caste of weavers "பட்டுச்சாலிய ரிருக்கு மிடங்களும்" (சிலப். 5: 17, உரை). 2. காராம்பூப்பட்டையை உரிக்கும் யாழ்ப்பாணத்து வகுப்பான் (சாதியான்) (யாழ்ப்.); member of a caste of cinnmon peelers.

ம. சாலியன்; க. சாலிக; தெ. சாலெவாடு; து. சாலியன், சாடெ, சாட்ய

[சாலி → சாலியன்]

சாலியன்கூறை[1] *šāliyan-kūrai,* பெ. (n.) திருமணத்தில் மணமகளுடுத்துங் கூறைப் புடைவை (இ.வ.); bride's wedding cloth.

[சாலியன் + கூறை]

சாலிவாகனசகாப்தம் *šālivāgana-šagāptam,* பெ. (n.) கி.பி. 78ஆம் ஆண்டு மேழம் (சைத்திர) மாதத்தில் தொடங்கிச் சாலிவாகனன் பெயரால் வழங்கும் ஆண்டு; era of Salivahana commencing with chaitra. 78 A.D.

[சாலிவாகனன் + சகாப்தம்]

சாலிவாகனன் *šālivāganan,* பெ. (n.) விக்கிரமாதித்தனுக்குப் பகைவனும் ஆண்டு தொடக்கத்திற்குரியவனுமாகச் சொல்லப்படும் ஒரு பேரரசன்; a celebrated king believed to have been the enemy of Vikramāditya and the institutor of the era now called Sākā (செ.அக.).

[சாலி + வாகனன். சுல் → (சோல்) → சால் = நிறைதல், ஒரு கால எல்லை நிறைவு, ஆண்டு. ஆண்டுமானக் கணக்குக்குரிய அரசன்]

சாலினி[1] *šālini,* பெ. (n.) 1. தெய்வமேறியாடும் பெண்; women employed in pronouncing oracles under the influence of a spirit. "பழங்கடனுற்ற முழங்குவாய்ச் சாலினி" (சிலப். 12:7). 2. அருந்ததி; wife of Vasiṣṭan. "கடவு ளொருமீன் சாலினி யொழிய" (பரிபா. 5: 44).

மறுவ. தேவராட்டி.

சாலினி தெய்வமேறியாடும் பெண். காளி பெண் தெய்வமாதலின் அணங்காடுபவள் பெரும்பாலும் சாலினியே யென்பது 'வேட்டுவவரி'யால் அறியக் கிடக்கின்றது.

சாலினி[2] *šālini,* பெ. (n.) 1. பேய்ப்பீர்க்கு (தைலவ.தைல. 52); bitter luffa. 2. பீர்க்கு (மலை.); sponge gourd.

க. சாலினீ

சாலினி[3] *šālini,* பெ. (n.) கள் வாணிச்சி (அக.நி.); woman who deals in toddy.

[சாலி → சாலினி]

சாலு[2] *šālu,* பெ. (n.) சால்வை பார்க்க; see *šālvai.*

க. சாலு

[சுல் → (சோல்) → சால் → சாலு (மு.தா.209)]

சாலுகம் *šālugam,* பெ. (n.) சாதிக்காய் (சங்.அக.); nutmeg.

சாலுங்கரகம் *šālun-karagam,* பெ. (n.) பட்டினவர் திருமணத்துள் நாட்டாண்மைக் காரர் வீட்டிலிருந்து மணவீட்டுக்கு மேள தாளத்துடன் எடுத்துச்செல்லும் நீர்க் கரகம் (இ.வ.); water -pot, taken ceremoniously from the Nāṭṭāṇmaikkār's house to the house where a marriage is being performed, among Paṭṭinavar.

[சால் + உம் + கரகம்]

சாலுவை *šāluvai,* பெ. (n.) சால்வை பார்க்க; see *šālvai.* "தண்டிகையும் போர்த்திட்ட சாலுவையும்" (பணவிடு. 245).

க. சாலுவெ; பட. சாலவெ

[சால்வை → சாலுவை]

சாலூரம்[1] *šālūram,* பெ. (n.) மேன்மை (சூடா.); greatness, eminence.

[சால் + ஊர் - சாலூர் → சாலூரம்]

சாலூரம்[2] *šālūram,* பெ. (n.) தவளை; frog.

[சால் + ஊரம். ஊர் → ஊரம்]

சாலெடு-த்தல் *šāledu-,* 4 செ.குன்றாவி. (v.i.) கீறுதல் போன்ற நீண்ட பள்ளம் உருவாக்குதல்; to furrow, to form a line.

க. சாலிடு; பட. சாலிடி

[சால் + எடு-,]

சாலேகம்[1] *šālēgam,* பெ. (n.) 1. சாளரம்; latticed window. "சாலேகநாற்றிக் குத்துறுத்து" (நெடுநல். 125). 2. பூவரும்பு (பிங்.); flower - bud.

க. சாளக

[காலேகம் → சாலேகம். கால் = காற்று]

சாலேகம்[2] *šālēgam,* பெ. (n.) 1. சந்தனம் (மலை.); sandalwood. 2. சிந்தூரம் (வின்.); vermilion.

[சேய் → சே. சேத்தல் = சிவத்தல். சுல் → (சோல்) → சால் → சாலி = செந்நெல். சேல் → சேலேகம் = சிந்தூரம். சேலேகம் → சாலேகம் (மு.தா. 140)]

சாலேகால் *šālēgāl,* பெ. (n.) நடப்பு ஆண்டு (C.G.); current year.

[சால் + ஏ + கால்]

சாலேயம்[1] *šālēyam,* பெ. (n.) *சிறுதேக்கு;* bushy fire brand teak *(சா.அக).*

[சால் = மரவகை. சால் → சாலேயம்]

சாலேயம்[2] *šālēyam,* பெ. (n.) செந்நெல் விளையும் நிலம் (பிங்.); field where šāli rice is cultivated.

[சாலி → சாலேயம். சாலி = நெல். நெல் விளையும் நிலம்]

சாலேயம்[3] *šālēyam,* பெ. (n.) கம்பளித்துணி (யாழ்.அக.); woollen cloth

சாலை[1] *šālai,* பெ. (n.) நீர்க்குழாய்கள் செய்யப் பயன்படும் மரம்; a tree used to made water tubes.

[சால் → சாலை]

சாலை[2] *šālai,* பெ. (n.) 1. உணவு அளிக்கும் அறச்சாலை; alms-house, feeding-house. "தண்ட மிட்டன்றிச் சாலை உண்ணப் பெறார்" *(T.A. S. 1, 9).* 2. வேள்விச் சாலை; sacrificial hall. "திருத்திய சாலை புக்கனன்" *(கம்பரா. திருவவ. 84).* 3. பள்ளிக்கூடம்; school. "கறையறு கல்வி கற்குங் காமர்சாலையும்" *(குசேலோ. குசே. வைகுந். 23).* 4. குதிரை யானை முதலியவற்றின் கூடம் (பிங்.); stable, elephant-stable. 5. ஆவின் (பசுக்)கொட்டில்; cow-shed. "ஆத்துறு சாலைதோறும்" *(கம்பரா. ஊர்தேடு. 101).* 6. பெரிய பொது மண்டபம் (இ.வ.); large public hall. 7. அரண்மனை (பிங்); royal palace. 8. வீடு; house, mansion. "விதுரன் சாலைக் கரும்புது விருந்தா மருந்தே" *(அழகர்கல. 5).* 9. இருபக்கமும் மரஞ்செறிந்த பாதை; avenue, public road shaded by trees. 10. அகன்ற பாதை; road. 'அண்ணா சாலை சென்னையில் மிக நீளமானது' *(உ.வ.).*

ம. சால; E. saloon, hall

[சால் → சாலை = பெருங்கூடம், பட்டறை, தொழிலகம், அலுவலகம், அகன்றபாதை (மு.தா. 173)]

மாணவர் கல்வி பயிலும் பள்ளியைக் கல்விச் சாலை, பாடசாலை என்றும் தொழிலாளர் பலர் கூடித்தொழில் செய்யுமிடத்தைத் தொழிற்சாலை என்றும், கம்மியர் வீட்டில் பணிசெய்யும் அறையை, பட்டசாலை என்றும் வழங்குதல் காண்க.

சாலை[2] *šālai,* பெ. (n.) *கையாந்தகரை (L);* a plant.

[கரிசாலை → சாலை]

சாலைக்கரை *šālai-k-karai,* பெ. (n.) சாலைப் பக்கம் (கொ.வ.); road-side.

[சாலை + கரை]

சாலைநடவு *šālai-naḍavu,* பெ. (n.) பயிர் நடவு வகை (செங்.); transplantation of seedlings.

[சாலை + நடவு. நடவு 'வு' தொ.பெ. ஈறு]

சாலைப்பணி *šālai-p-paṇi,* பெ. (n.) சாலை அமைக்கும் பணி; work of laying road.

[சாலை + பணி]

சாலைப்புறம் *šālai-p-puṟam,* பெ. (n.) அந்தணர்கள் உண்பதற்குக் களப்பாளர் அரசன் ஏற்படுத்திய மடம், மடப்புறம்; brahmin's abbey. "திரிபுவனசண்டேஸ்வர தேவற்கு இத்தேவர் ஸ்ரீ பண்டாரத்தை வஸ்துக் கொண்டு இச்சாலைப்புறமாக நாங்கள் இறையிலியாக விற்றுக்குடுக்க நிலைமாவுது" *(ந.க. 2. க 321-6).*

[சாலை + புறம்]

சாலைமடையன் *šālai-maḍaiyaṉ,* பெ. (n.) கோயில் உணவு சமைப்பவன்; temple cook. "சனி ஒன்றுக்கு எண்ணை உரி ஆழாக்குக்கு நெல்லு ஐங்குறுணியும் சாலைமடையன் ஒருவனுக்கு நெல்லு அறுநாழியும்" *(தெ. க. தொ. 4. க. 223/1986).*

[சாலை + மடையன். மடைத்தொழில் = உணவு சமைக்கும் தொழில்]

சாலையட்டுவான் *šālai-y-aṭṭuvāṉ,* பெ. (n.) உணவுச் சாலையில் உணவிடுபவன்; server. "சாலையட்டுவானுக்கு நெல்லுப்பது பதக்கும்" *(தெ. க.தொ.13. க.157-3).*

[சாலை + அட்டுவான்]

சாலையூஞ்சல் *šālai-y-ūñjal,* பெ. (n.) ஒருவகை ஊஞ்சல் மரம்; a kind of sirissa tree *(சா.அக.).*

சாலைவாசல் *šālai-vāšal,* பெ. (n.) அறச்சாலை அல்லது உணவுச்சாலை; alms-house, mess. "திருக்கொடி திருநாள்-2க்கு ஏழந் திருநாளில் சாலை வாசலில் அமுது செய்தருளும் சீடைப்படி" *(திருப். க. தொ-3 க. 127-4).*

[சாலை + வாசல்]

சாவக்காய் *sāva-k-kāy,* பெ. (n.) மாமரம்; mango tree - Mungifera India (சா.அக.).

சாவக்கை *sāvakkai,* பெ. (n.) கூரை வேயப் பயன்படும் குருத்துள்ள மூங்கில் தப்பை; bark of bamboo.

[சவம் = மூங்கில். சவம் → சாவம் → சாவக்கை]

சாவகக்குறிஞ்சி *sāvaga-k-kuriñji,* பெ. (n.) குறிஞ்சியாழ்த் திறத்துள் ஒன்று (பிங்.); a secondary melody-type of kuriñji class.

மறுவ. சாவகன் குறிஞ்சி.

[சாவகம் + குறிஞ்சி]

சாவகநோன்பி *sāvaga-nōnbi,* பெ. (n.) இல்லறத்திலிருந்து நோன்பு இருப்போன்; householder who takes to ascetic practice "சாவகநோன்பிக ளடிக ளாதலின்" (சிலப். 16:18).

[சாவகம் + நோன்பி]

சாவகம்[1] *sāvagam,* பெ. (n.) 1. யவத்திவு; the Archipelago, Sumatra-Java or Java. "சாவக நன்னாட்டுத் தண்பெயன் மறுத்தலின்" (மணிமே. 14, 74). 2. யவத்தீவில் வழங்குதும் பதினெண் மொழிகளுள் ஒன்றானதுமான மொழி; language of the country of Sāvagam, one of 18 languages referred to in Tamil work.

சாவகம்[2] *sāvagam,* பெ. (n.) 1. நாயுருவி; Indian burr-Achyanthus aspera. 2. கருப்புக் கடுகு; black mustard (சா.அக.).

சாவகன் *sāvagan,* பெ. (n.) காரி (சனி) (திவா.); Saturn.

[சாவு + அகம் - சாவகம் → சாவகன்]

சாவகாரியம் *sāvakāriyam,* பெ. (n.) உலகியல் அறிவு; discernment, discrimination.

சாவச்சம் *sāvaccam,* பெ. (n.) இறப்பு நேரக்கூடும் என்னும் நேரத்தில் மனத்தில் தோன்றும் அச்சம்; death fear. 'பாட்டிக்குச் சாவச்சம் வந்துவிட்டது' (உ.வ.).

[சாவு + அச்சம். அஞ்சு → அச்சம்]

சாவட்டம் *sāvaṭṭam,* பெ. (n.) ஒற்றை உருபாவைக் குறிக்கும் குழூஉக்குறி (இ.வ.); slang term for a rupee.

ம. சாவட்டம்

[சாவு + வட்டம் → சாவுவட்டம் → சாவட்டம். வட்டம் = காசு]

இறந்தவர் நெற்றியில் ஒட்டும் பணம் பெரும்பாலும் ஓர் உருபாவாக் இருந்ததன் அடிப்படையில் தோன்றிய குழூஉக்குறி.

சாவட்டை[1] *sāvaṭṭai,* பெ. (n.) 1. ஈர் (வின்.); nits found in the hair. 2. பயிர்ச்சாவி (இ.வ.); withered grain, chaff. 3. மெலிந்தவ-ன்-ள் (இ.வ.); emaciated person. 4. உலர்ந்தவெற்றிலை (யாழ்ப்.); dried betel leaves. 5. தட்டாரப்பூச்சி; butterfly.

ம. சாவட்ட

[சா → சாம்பு. சாம்புதல் = வாடுதல், குவிதல், ஒடுங்குதல். சா + அட்டை]

சாவட்டை[2] *sāvaṭṭai,* பெ. (n.) சிறுவட்டத் தலையணை (நாஞ்); a small round pillow.

[சாய் → சா + வட்டை. வட்டு → வட்டை. 'ஐ' ப.பெ. ஈறு]

சாவட்டைப்பயிர் *savaṭṭai-p-payir,* பெ. (n.) சாவியான பயிர் (வின்.); blighted or withered plants.

[சாவட்டை + பயிர்]

சாவடி[1] *sāvaḍi,* பெ. (n.) இறப்பை விளைக்கத் தக்க அடி; deadly blow.

[சாவு + அடி]

சாவடி[2] *sāvaḍi,* பெ. (n.) 1. வழிப்போக்கர் தங்குமிடம்; inn, choultry. "மலர்ச்சோலையுஞ் சாவடிகளும்" (இராமநா.சுந்தர.3). 2. ஊர்ப் பொதுக்கட்டடம்; a public building in a village. 3. காவல் அலுவலகம் (கச்சேரி) (வின்.); police station, office of village magistrate. customs station. 4. வீட்டுச்சவுக்கை; open dais in front of a house for general use. "சாவடியும் வீடுந் தலைவாசலும்" (பணவிடு. 163).

ம., க., குரு. சாவடி; தெ. சாவடி, சாவிடி; Mar. chavḍi

[உசாவடி → சாவடி]

சாவடிச்சீட்டு *sāvaḍi-c-cīṭṭu,* பெ. (n.) 1. சாவடியில் சோறுண்ணுதற்குப் பெறும் நுழைவுச்சீட்டு; a chit or ticket permitting one

to obtain food at a choultry. *2. அரசனளிக்குங் கொடை;* royal or government grant.

[சாவடி + சீட்டு]

சாவடிமரம் *šāvadi-maram,* பெ. (n.) வெடங்குறுணி அல்லது அலம்பல்மரம்; walking stick bignonia - Stereospermum xylocarpum (சா.அக.).

[சாவடி + மரம்]

சாவணம்[1] *šāvaṇam,* பெ. (n.) *1. கம்மியர் கருவி வகை;* goldsmith's pincers. *2. மூக்குமயிர் களையும் கருவி (யாழ்ப்.);* barber's pincers for extracting hair of the nose.

ம. சாவணம்; தெ. ச்ராவணமு



சாவணம்

சாவணம்[2] *šāvaṇam,* பெ. (n.) *1. நாணல் (மலை);* kaus. *2. நாளம்;* hollow stalk as of a lotus.

[சரவணம் → சாவணம்]

சாவதயிலம் *šāva-tayilam,* பெ. (n.) மாமரம் (மலை.); mango tree.

சாவம்[1] *šāvam,* பெ. (n.) வில்; bow. "சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்" *(சிறுபாண். 98).*

[ஆவம் = மூங்கில். ஆவம் → சாவம்]

த. சாவம் → Skt. cāpa

சாவம்[2] *šāvam,* பெ. (n.) தீமொழி (சாபம்); curse. "சாவ முண்டெடன தாருயிர் தந்ததால்" *(கம்பரா. சூளா.21).*

Pkt. šava

[சாவி → சாவம் (வ.வ.147); சாவித்தல் = கடுமையாகத் திட்டுதல்]

சாவம்[3] *šāvam,* பெ. (n.) *1. சாத்திட்டு;* pollution due to death of a relative. "அதனால் வருஞ் சாவம் சூதகத்தோடு அழியும்" *(சங்.அக.).* *2. பிணம்;* corpse, carcass.

ம. சாவம்

[சா → சாவு → சாவம். 'அம்' ப.பெ.ஈறு]

சவம்[1] பார்க்க.

சாவம்[4] *šāvam,* பெ. (n.) அறுகு; panic grass (சா.அக.).

சாவல் *šāval,* பெ. (n.) ஆண்கோழி; cock, male of domestic fowls.

ம. சாவல்

[சேவல் → சாவல்]

சாவறுதி *šā-v-aṟudi,* பெ. (n.) *1.* இறக்குந் தறுவாய்; the moment of death *2. வலுவின்மை;* feebleness, debility.

[சாவு + அறுதி]

சாவாக்கியம் *šāvākkiyam,* பெ. (n.) கணித வாய்பாட்டு வகை (சங்.அக.); table of equations.

சாவாக்கிழங்கு *šāvā-k-kiḻaṅgu,* பெ. (n.) கருடன் கிழங்கு (மலை); Indian birth wort.

[சா + ஆ+ கிழங்கு]

சாவாச்சாவு *šāvā-c-cāvu,* பெ. (n.) இறந்தவன் போல் இருக்கும் நிலை; பயனற்று வாழும் நிலை; a state similar to death, to be useless or inactive like a dead body.

ம. சாகாச் சாவு

[சாவு + ஆ + சாவு]

சாவாஞ்செத்தவன் *šāvāñ-cettavaṉ,* பெ. (n.) வலுவற்றவன் (வின்); very weak person, not much better than a live corpse.

[சாவு + ஆ + செத்தவன்]

சாவாடுசெத்தவன் *šāvāḍu-cettavaṉ,* பெ. (n.) சாவாஞ்செத்தவன் பார்க்க; see *šāvāñ-cettavaṉ.*

தெ. சாவடமு

[சாவு → சாவாடு + செத்தவன்]

சாவாடைசெத்த *šāvāḍai-cetta,* கு.பெ.எ. (adj.) *பயனற்ற (இ.வ.);* worthless, withered, good for nothing.

[சாவு → சாவாடை. சா → சத்த → செத்த. சாவாடை + செத்த]

சாவாண்டை *šāvāṇḍai,* பெ. (n.) பொன்னின் நிறைபற்றி வழங்கும் ஒரு குழூஉக் குறி; a trade term for a weight of gold.

சாவாமருந்து *šāvā-marundu,* பெ. (n.) 1. இறவாமல் காப்பது, அமிழ்தம்; ambrosia, as preventing death. "சாவாமருந் தெனினும் வேண்டற்பாற் றன்று" *(குறள், 82)* 2. ஒருவகை மூலிகை *(யாழ்.அக.);* a medicinal shrub.

[சா + ஆ + மருந்து. 'ஆ' (எ.ம.இ.)]

சாவாமூலி *šāvā-mūli,* பெ. (n.) 1. மயிற்றோகை *(சங்.அக.);* peacock fan. 2. வேம்பு; margosa.

[சா + ஆ + மூலி. மூல் → மூலி]

சாவாமூவா *šāvā-mūvā,* பெ. (n.) இறப்போ முதுமையோ இல்லாமல் கோயில் விளக்கு தொடர்ந்து எரிவதற்குரிய நெய்யினைத் தரும் கால்நடைகளின் நலத்தினைக் குறிக்கும் பழைய வழக்கு; an old usage to quality milch cattle (neither dying nor growing old, healthy) endowed to provide a continuous supply of ghee for temple lamps.

ம. சாவாமூவா

[சா + ஆ + மூ + ஆ. 'ஆ' எ.ம.இ.]

சாவாமூவாச்செவ்வரிஆடு *šāvā-mūvā-c-cevvari-āḍu,* பெ. (n.) முதலீடாக வைத்த எண்ணிக்கையளவு குறையாமல் இருக்கும் பெரிய செம்மறி ஆடுகள்; big rams. "நெய் தொண்ணூற்று நாழிக்கு விட்ட சாவா மூவா செவ்வரி ஆடு" *(தெ. க. தொ. 5, க. 646).*

[சாவா + மூவா + செவ்வரி + ஆடு. செவ்வரி = செம்மறி]

சாவாமூவாப்பசு *šāvā-mūvā-p-pašu,* பெ. (n.) வைத்த எண்ணிக்கையில் குறையாது ஈடு செய்து காக்கும் ஆநிரை; cow endowed. 'திருவிறையான் கோயில் மஹா தேவர்க்கு விட்ட சாவாமூவாப் பசு பதிநாறு' *(முதற்குலோத்துங்கன், கி.பி.1092, தெ.க.தொ. 7, க.849)*

[சாவா + மூவா + பசு]

Skt. pasu → த. பசு

சாவாமூவாப்பாலாடு *šāvā-mūvā-p-pāl-āḍu,* பெ. (n.) என்றும் எண்ணிக்கை குறையாது பால் கறக்கும் ஆடு; a constant counting goat. "சாவாமூவா பாலாடு தொண்ணூற்று ஆறு இவ்வாடு கொண்டு..." *(தெ.க.தொ. 24, க. 45-58).*

[சாவா + மூவா + பால் + ஆடு]

சாவாமூவாப்பேராடு *šāvā-mūvā-p-pēr-āḍu,* பெ. (n.) நந்தாவிளக்கு எரிப்பதற்கு வேண்டும் நெய்யின் பொருட்டு என்றும் இளமையுடன் ஒரு தொகையுள்ளனவாகக் கோயிற்கு விடப்படும் ஆடுகள்; a fixed number of milch sheep endowed permanently to provide a continuous supply of ghee for temple lamps. "நந்தா விளக்கொன்றினுக்கு வைத்த சாவா மூவாப் பேராடு தொண்ணூறு" *(S.I.I. III, 107).*

[சாவா + மூவா + பேராடு]

சாவாமூவாவாழ்மாடு *šāvā-mūvā-vāḻ-māḍū,* பெ. (n.) கோயில்களில் திருவிளக்கு இடுவதற்குக் கொடையாகக் கொடுக்கப்பட்ட ஆநிரைகளை எண்ணிக்கையில் குறையாமல் வைத்திருக்க வேண்டும் என்னும் ஒப்பந்தக் குறிப்பு; cow endowed agreement.

[சாவா + மூவா + வாழ் + மாடு]

கோயில்களில் விளக்கு வைப்பதற்கு மானிய மாகப்பெறும் மாடுகள் முதுமையுற்றாலும் இறந்து விட்டாலும் ஒப்பந்தக்காரர் அதற்கு ஈடாக அவருக்கு உரிமையான கன்றினங்களில் பருவமடைந்த கன்றுகளைத் தந்து எண்ணிக்கைக் குறையாமல் வைப்பர் *(தெ.க.தொ.ம.க. 51).*

சாவாவரம் *šāvā-varam,* பெ. (n.) இறவாதபடி பெறும் இறையருள்; divine gift of immortality.

[சாவா + வரம்]

சாவாவுடம்பு *šāvā-v-uḍambu,* பெ. (n.) புகழ் அழியாத உடல்; fame as vehicle of deathless life. "இம்மூவர் சாவாவுடம் பெய்தினார்" *(திரிகடு. 16).*

[சாவா + உடம்பு]

சாவாளன் *šāvāḷaṉ,* பெ. (n.) இறப்பைக் கொண்டவன், மனிதன்; one who is mortal, man *(சேரநா.).*

ம. சாவாளன்

[சா + ஆளன்]

சாவாளை *šāvāḷai,* பெ. (n.) மூன்றடி நீளமுள்ள கடல்மீன் வகை (சங்அக.); sabre-fish-attaining at least 3 ft. in length.

ம. சாவாள; தெ. சாவட

சாவாளை மீன்

சாவி[1] *šāvi,* பெ. (n.) மணிபிடியாமற் பதராய்ப் போன பயிர்; withered crop, blighted empty grain. "சாவியே போன புன்செயே யனையேன்" (அருட்பா. 4, அபயத்திறன். 13).

ம. சாவி; தெ. சாவி

[சாவு → சாவி. 'வி' ப.பெ.ஈறு]

சாவி[2]**-த்தல்** *šāvi-,* 4 செ.குன்றாவி. (v.t.) திட்டுதல்; to curse, revile. "வீணாகச் சாவிக்கிறான்" (இவ.).

[சா → சாவி. சாவித்தல் = அங்கதம் பாடி அல்லது சினந்து, வைது சாகப் பண்ணுதல். சாவுகுறித்த சொற்களைச் சொல்லித்திட்டுதல் (வ.வ.)]

சாவி[3]**-த்தல்** *šāvi-,* 4 செ.குன்றாவி. (v.t.) அங்கதம் பாடி அல்லது சினந்துரைத்துச் சாகச் செய்தல் (தொல். எழுத்து. 76 இளம்.); to cause to die.

[சா. → சாவி. சாவி-, (வ.வ.)]

சாவிப்பு *šāvippu,* பெ. (n.) வசையாணை; curse.

[சாவித்தல் = திட்டுதல். சாவி → சாவிப்பு. 'பு' பெ.ஆ.ஈறு.]

சாவிப்போ-தல் *šāvi-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) பயிர் பட்டுப்போதல்; to perish, to be blighted, as crop. "கொல்லைதான் சாவிபோய் விட்டாலு மங்குவரு குருவிக்கு மேய்ச்சலுண்டு" (குமரே. சத. 79).

[சாவு → சாவி + போ-,]

சாவியபயிர் *šāviya-payir,* பெ. (n.) சவலைப் பயிர் பார்க்க; see *šavalai-p-payir.*

[சாவிய + பயிர்]

சாவியோதம் *šāvi-y-ōdam,* பெ. (n.) ஒருவகை முல்லை; a species of jasmine (சாஅக.).

சாவிவைக்கோல் *šāvi-vaikkōl,* பெ. (n.) சாவியாய்ப் போன பயிரின் வைக்கோல்; straw of blighted crop.

[சாவி + வைக்கோல்]

சாவிளைவு *šā-viḷaivu,* பெ. (n.) சாக்குறியாக விளையும் பெருவிளைவு; super-abundant crop, believed to be a prognostic of death of the land owner or his near relatives. 'அவனுக்குச் சாவிளைவாயிருக்கிறது. நலமாய் இருக்க வேண்டும்' (உ.வ.).

[சாவு + விளைவு]

சாவீடு *šāvīḍu,* பெ. (n.) இழவு நேர்ந்த வீடு; house in mourning.

பட. சாவுமனெ

[சாவு + வீடு]

சாவீரன் *šāvīraṉ,* பெ. (n.) தற்கொலைப் படை மறவன்; a soldier belonging to a suicide squad (சேரநா.).

ம. சாவீரன், சாவரக்கன்

[சா(வு) + வீரன்]

சாவு *šāvu,* பெ. (n.) 1. இறப்பு (பிங்.); death. 2. பிணம்; corpse. 3. பிறந்த ஒன்றுக்கு (இலக்கினத்துக்கு) எட்டா மிடமாகிய இறப்பைக் குறிக்கும் இடம் (விதான. மரபி. 4); the eighth house, as the house of death. 4. பேய்; ghost. "சாவாயகன்று தாவினன்" (ஞானா. 33, 10).

ம. சாவு; க., து., பட. குட. சாவு; தெ. சாவு. கோத. சாவ்; துட. சொவ்; கோண். காவ; குவி. கானெ; பர். சாந்த்

[சாய் = சாய்தல், சாய்ந்து விழுதல். சாய் → சா → சாவு = நேராக நிற்கும் தன்மையற்ற (உயிரற்ற) உடல். இறந்தவர் பேயாக மாறுவர் என்னும் நம்பிக்கையின் அடிப்படையில் சாவு, பேயைக் குறித்தது. 'வு' தொ.பெ.ஈறு.]

சாவுக்காணிக்கை *šāvu-k-kāṇikkai,* பெ. (n.) இறப்பின் பேரில் போடப்பட்ட வரிவகை (நாஞ்.); a kind of death-duty, opp. to vāḻvu-kāṇikkai.

[சாவு + காணிக்கை]

சாவுக்காயம் *šāvu-k-kāyam,* பெ. (n.) இறப்பு தரத்தக்க புண் (இறப்புக் காயம்) (வின்.); mortal wound.

[சாவு + காயம்]

சாவுக்கொட்டு *šāvu-k-koṭṭu,* பெ. (n.) சாவு குறிக்கும் பறைமுழக்கு (உ.வ.); a mode of beating the drum to indicate the death of a person.

[சாவு + கொட்டு]

சாவுகம் *šā-v-ugam,* பெ. (n.) வன்னிக்காய்; Indian tanarix-tamarix gallica (சா.அக.).

சாவுச்சான்றிதழ் *šāvu-c-cāṉṟidaḻ,* பெ. (n.) ஒருவரது இறப்பைத் தெரிவிக்கும் சான்றிதழ்; death certificate.

ம. இறப்புச் சான்றிதழ்.

[சாவு + சான்றிதழ்]

சாவுசெத்தவன் *šāvu-šettavaṉ,* பெ. (n.) சாவாஞ் செத்தவன் பார்க்க; see *šāvāñ-cettavaṉ.*

[சாவு + செத்தவன்]

சாவுநோவு *šāvu-nōvu,* பெ. (n.) இறப்பும் நோவும், துன்பப்பட்டறிவு; death and experiencing agony.

க. சாவு நோவு

[சாவு + நோவு]

சாவுமணி *šāvu-maṇi,* பெ. (n.) 1. ஒருவர் இறப்பைத் தெரிவிக்கும் வகையில், கிறித்தவர் கோயிலில் அடிக்கப்படும் மணி; death bell in a church. 2. ஒன்றின் முடிவு; end. 'அவன் ஆட்சிக்குச் 'சாவுமணி' அடித்தாயிற்று'.

ம. சாவுமணி

[சாவு + மணி]

சாவெடி *šā-veḍi,* பெ. (n.) பிணநாற்றம் (இ.வ.); fetid smell of a corpse.

[சா + வெடி. வெறி → வெடி]

சாவெடில் *šā-veḍil,* பெ. (n.) 1. சாவெடி (சங்.அக.) பார்க்க; see *šāveḍi. 2.* கெட்ட நாற்றம் (யாழ்ப்.); stinking smell, as of putrid matter.

[சா + வெடில். வெடி → வெடில்]

சாவெடு-த்தல் *šāveḍu-, 4* செ.குன்றாவி. (v.t.) இறந்த உடலை நன்காட்டிற்குக் கொண்டு செல்லுதல்; to take the dead body to funeral ground.

ம. சாவெடுக்குக; பட. சாவெத்து

[சாவு + எடு-,]

சாவெழுத்து *šā-v-eḻuttu,* பெ. (n.) நச்செழுத்து (வின்.); fatal letter.

மறுவ. நச்செழுத்து

[சாவு + எழுத்து. மங்கலமொழி அல்லாதவிடத்து மொழி முதலில் வரக்கூடாத எழுத்துகள். ய், ர், ன், யா, ரா, லா, ளா, யோ, ரோ, லோ, ளோ, ஃ, மகரக்குறுக்கம், அளபெடை]

சாவேரி *šāvēri,* பெ. (n.) ஒரு பண் (அராகம்), (பரத.இராக.56); a specific melody-type.

சாவேறு *šāvēṟu,* பெ. (n.) பகையரசனைச் சூழ்ந்து காக்கும் படைமீது ஒருமுகமாய்ப் பாய்ந்து ஊடறுத்துச் செல்லமுயன்று அந்நிலையில் உயிர் துறத்தலையே சூளாகக் (விரதமாகக்) கொண்ட வீரர் தொகுதி; a select band of armed warriors who, under a solemn vow, rush in a body, endeavor to cut their way through the guards of the enemy-king and lose their lives in the fray 'சாவேறெல்லாந் தனி விசும்பேற' (தெ.க.தொ. 3. க.145).

ம. சாவேறு

[சாவு + ஏறு]

சாவோலை *šā-v-ōlai,* பெ. (n.) இறப்பைத் தெரிவிக்கும் ஓலைச்சீட்டு; ōlai letter informing the death of a person. "சாவோலை கொண்டொருவ னெதிரே செல்ல" (தனிப்பா.).

ம. சாவோல

[சாவு + ஓலை]

சாழல் *šāḻal,* பெ (n.) *1.* மகளிர் விளையாட்டு வகை; an ancient game played by girls. *"மற்று மங்கையர் சாழலாம் விளையாடலாக" (திருவாத. புபுத்துறை. 86). 2.* முன்னிரண்டடிகள் வினாவும் பின்னிரண்டடிகள் விடையுமாக அவ்விடை யிறுதியில் 'சாழலோ' என்ற சொல்லுடையவாக வரும் பாடல்களையுடைய சிற்றிலக்கியம் *(திவ்.பெரியதி. 11,5);* a poem whose stanzas are each in the form of a question and answer with the refrain šāḻalō at the end. *3.* வரிக்கூத்து வகை *(சிலப். 3, 13, உரை);* a masquerade dance. *4.* கரடி *(அக.நி.);* bear.

சாழல்படி-த்தல் *šāḻal-p-padi-, 4* செ.குவி. (v.i.) ஒருவன் சாகுந்தறுவாயில் திருவாசகத்தின் பகுதியாகிய திருச்சாழலை ஓதுதல் (நாஞ்.); to recite or read Tiru-c-cāḻal from Māṇikka-vāšagar's Tiruvāšagam during the last moments of a person.

[சாழல் + படி-,]

சாழல்பாடு-தல் *šāḻal-pāḍu-, 5* செ.கு.வி. (v.i.) சாழல் ஆடுதல் (வின்.); to play the šāḻal game.

[சாழல் + பாடு-,]

சாழை[1] *šāḻai,* பெ. (n.) கைகொட்டி ஆடும் விளையாட்டு (யாழ்.அக.); a girls game accompained with clapping of hands.

[சாழல் → சாழை]

சாழை[2] *šāḻai,* பெ. (n.) சாளை[2] (வின்.) பார்க்க; see *šāḷai*[2].

[சாளை → சாழை]

சாழைகொட்டு-தல் *šāḻai-koṭṭu, 5* செ.கு.வி. (v.i.) கைகொட்டுதல் (வின்.); to clap hands.

[சாழை + கொட்டு-,]

சாழையகத்தி *šāḻai-y-agatti,* பெ. (n.) ஒருவகை அகத்திமரம்; a species of sesbane tree (யாழ்.அக.).

சாளக்கிராமம் *šāḷa-k-kirāmam,* பெ. (n.) திருமாலுருவமாகக் கொண்டு பூசித்தற்குரிய கண்டகிச் சிலை; black fossil ammonite worshipped as a form of Tirumāl chiefly found in the river Gandak. "பாற் கடற் பிறந்தாலு நத்தை தான் சாளக்கிராம மாமோ *(சேதுபு. சக்கர. 19).*

சாளகபைரவி *šāḷaga-bairavi,* பெ. (n.) பண் வகை (பரத.ராக.102); a specific melody-type.

[சாளகம் + பைரவி]

சாளகம் *šāḷagam,* பெ. (n.) இசைப்பாவுக்குரிய சாதியோசை மூன்றனுள் ஒன்று *(சிலப். 6, 35, உரை);* one of the three types of harmonic tone.

சாளம்[1] *šāḷam,* பெ. (n.) குங்கிலியம் (மூ.அ.); dammar resin.

சாளம்[2] *šāḷam,* பெ. (n.) மணல் (சங்.அக.); sand.

[அளம் = உவர்மண், நெய்தல் நிலம், அளம் → (சளம்) → சாளம்]

சாளம்[3] *šāḷam,* பெ. (n.) சாளரம் பார்க்க; see *šāḷaram.* "மலயத் தனிக்கால் வரசாளந் தைவந் துலவ" *(சொக்கநா. உலா. 42).*

[சாளரம் → சாளம்]

சாளமீன் *šāḷa-mīṉ,* பெ. (n.) ஒருவகை மீன் (மீனவ.); a kind of fish.

[சாளை + மீன் = சாளை மீன் → சாளமீன்]

சாளர் *šāḷar,* பெ. (n.) செவ்வழி யாழ்த்திற வகை (பிங்); a secondary melody-type of the ševvaḻi class.

சாளரம்[1] *šāḷaram,* பெ. (n.) பலகணி; latticed window; window. "சாளரந் தோறுந் தோன்றுஞ் சந்திரவுதயங் கண்டார்" (கம்பரா. மிதிலைக். 14).

ம. சாளரம்; க. சாலந்தரா

[சாரல் → சாரலம் → சாரளம் → சாளரம்]

சாளரம்[2] *šāḷaram,* பெ. (n.) சாலகராகம் பார்க்க; see *šālaga-rāgam.* "சுத்த சாளர சங்கீதம்" *(திருவால வா. 54. 13).*

சாளரவாயில் *šāḷara-vāyil,* பெ. (n.) பலகணி (வின்.); window.

க. சாலகா

[சாளரம் + வாயில்]

சாளவலை *šāḷa-valai,* பெ. (n.) சாலமீன் பிடிக்கப் பயன்படும் வலை; sāla fish net.

[சாளை → சாள + வலை]

சாளா *šāḷā,* பெ. (n.) *சாளை¹ (சங்அக.) பார்க்க;* see *šāḷai¹.*

[சாளை → சாளா]

சாளி¹ *šāḷi,* பெ. (n.) *சாளிகை² (தனிப்பா 1, 72, 142. உரை) பார்க்க;* see *šāḷigai.*

[சாள் → சாளி]

சாளி² *šāḷi,* பெ. (n.) குடைவேல் *மரம்;* umbrella thorn babul.

சாளிகம் *šāḷigam,* பெ. (n.) *சாளிகை¹ (வின்.) பார்க்க;* see *šāḷigai.*

[சாளிகை → சாளிகம்]

சாளிகை¹ *šāḷigai,* பெ. (n.) வண்டு *(வின்);* beetle.

ம. சாழி

[அள் = கூர்மை, முள், கொடுக்கு. அள் → அளி = கொட்டும் உறுப்புள்ள ஈ அல்லது வண்டு. அளி → சளி → சாளி → சாளிகை]

சாளிகை² *šāḷigai,* பெ. (n.) பணப்பை; money bag. "மாளிகையும் பணச்சாளிகையும்" *(கந்தரலங். 78).*

ம. சாளிக; க. சாளிகெ; தெ. சாலியா, சாலெ. சாலேய; Skt. jālaka

[சால் → சாலிகை → சாளிகை]

சாளிகை³ *šāḷigai,* பெ. (n.) *சாடி;* jar.

[சாடி → சாடிகை → சாளிகை]

சாளிகைப்பணக்காரன் *šāḷigai-p-paṇa-k-kāraṉ,* பெ (n.) பெருஞ்செல்வன் *(வின்.);* person with long purse, wealthy man.

[சாளிகை + பணக்காரன்]

சாளிகைமாடு *šāḷigai-māḍu,* பெ (n.) சல்லிக் கட்டுக்குரிய எருது (இ.வ.); bull let out in bull-baiting.

[சாளிகை + மாடு]

சாளியல் *šāḷiyal,* பெ (n.); *சாளிகை² (இ.வ.) பார்க்க;* see *šāḷigai².*

[சாளி(கை) → சாளியல்]

சாளியா *šāḷiyā,* பெ. (n.) ஒருவகை மருந்துவிதை *(வின்.);* a kind of medicinal seed.

சாளு-தல் *šāḷu-,* 5 செ.கு.வி. (v.i.) *வளைதல்;* to bend *(பே.மொ.வ. 145).*

[சூள் → சாள் + சாளை = வட்டமான குடிசை. சாளை → சாளையம் = வளைவு. சவள் → சாள் → சாளு-.]

சாளுக்கிநாராயணன்கால் *šāḷukki-nārāyaṇaṉ-kāl,* பெ. (n.) முகத்தல் அளவை (அளவு); measure of capacity. "சிரிபண்டாரத்திலே சாளுக்கி நாராயன் காலால் அமுதுபடி இரண்டு மரக்காலும்" *(திருப்-க- தொ. 2, க 3-4)*

[சாளுக்கி நாராயணன் + கால்]

சாளுக்கியர் *šāḷukkiyar,* பெ. (n.) இந்தியாவின் தென்பகுதியை ஆறு முதல் பதின்மூன்றாவது நூற்றாண்டு வரை ஆண்டு வந்த ஓர் அரச *மரபினர்;* a dynasty of kings who ruled in the Dekhan from 6th to 13th C. A.D.

சாளுவன் *šāḷuvaṉ,* பெ. (n.) விசயநகர அரசரது பட்டப்பெயர்களுள் (விருதுகளுள்) ஒன்று; a dynastic surname of the kings of Vijayanagar. "சாளுவ தேவமகாராயர்" *(தெ.க.தொ.85).*

சாளை¹ *šāḷai,* பெ. (n.) எட்டு விரலளவு நீளமுள்ள கடல்மீன் வகை *(வின்.);* oil sardine, bluish, attaining 8 in. in length species of clupea.

ம. சாலி

சாளை² *šāḷai,* பெ. (n.) இரண்டடிச்சுவரும் அதன் மீது கூரைச்சாய்ப்பும் கொண்ட வீடு, வட்டமான குடிசை; hut, hovel. "சாளை போட்டான்" *(சங்அக.).*

[சவள் → சாள். சாளுதல் = வளைதல். சாள் → சாய். சாய்தல் = வளைதல். சாள் → சாளை = வட்டமான குடிசை (வ.வ.145)]

ம. சாள → Skt. šālā

சாளை³ *šāḷai,* பெ. (n.) வழிந்து விழும் வாய்நீர் *(கொ.வ.);* dribble, saliva flowing from the mouth.

ம. சாளுக

[சுள் → சொள் = வடியும் வாய்நீர். சுள் → சள் → சழ → சழங்கு. சழங்குதல் = சோர்தல். சள் → சாள் → சாளை (மு.தா. 312.)]

சாளைக்காரன் *šāḷai-k-kāraṉ,* பெ. (n.) குடிசையில் வாழ்பவன்; one who lives in a hut.

ம. சாளக்காரன்

[சாளை + காரன்]

சாளைக்கெண்டை *šāḷai-k-keṇḍai,* பெ. (n.) பழுப்பு நிறமுள்ள ஆற்றுமீன் வகை (வின்.); a kind of river-mullet, greenish-brown, barbas carnaticus.

[சாளை + கெண்டை]

சாளைத்தடி *šāḷai-t-taḍi,* பெ. (n) கட்டுமரம்; a fishing catamaran, used on the west coast.

ம. சாளத்தடி

[சாளை + தடி. சாளை = வளைவு. துள் → தள் → தண்டு → தண்டம். தண்டு → தண்டி → தடி = திரண்ட கம்பு. சாளைத்தடி = வளைந்து திரண்ட கம்பு]

சாளையக்கை *šāḷaiya-k-kai,* பெ. (n) பெருவிரல், சுட்டுவிரல், நடுவிரல் இம் மூன்றையும் நீட்டி, மோதிரவிரல் சுண்டு விரல்களின் நுனி உள்ளங்கையிற்படும்படி வளைத்து, விரல்களின் இடைவெளி தோன்றும்படி செய்து, மணிக்கட்டை வளைத்துக்காட்டும் நளிநயக்கை (முத்திரைக் கை) (பரதபாவ.24); gesture with one hand in which the thumb, fore-finger and the middle finger are held erect and the reminaing fingers are so bent that their trips touch the palm, the wrist being turned down.

[சூள் → சாள் → சாளை = வட்டமான குடிசை. சாளை → சாணை = வட்டமான கதிர்ச்சூடு. சாள் → சாளை + அம் + கை = விரல்கள் வளைந்து நிற்கும் தன்மை]

சாளையப்பட்டு *šāḷaiya-p-paṭṭu,* பெ. (n) படைவீரர்கள் தங்குங் குடிசைகளுள்ள இடம்; soldiers lines. "சாளையப்பட்டு சளப்பட்டு" (மான்விடு. 112).

[சுள் → சுழி. சுழிதல் = வளைதல். சுள் → சுட்டி = வட்டமான நெற்றியணி. சூள் → சூடு. சூடுதல் = வளைதல். சூள் → சாள் → சாளை = வட்டமான குடிசை. சாளை + அம் + பட்டு]

சாளையம் *šāḷaiyam,* பெ. (n) வளைவு; bent.

[சூள் → சாள் → சாளை = வட்டமான குடிசை. சாளை → சாளையம் = வளைவு (வே.க. 231.)]

சாளையிறக்கு-தல் *šāḷai-y-iṟakku-,* 5 செ.குவி. (v.i.) குடிசை கட்டுதல் (யாழ்ப்.); to put up a hut.

[சாளை + இறக்கு-,]

சாளைவாய் *šāḷai-vāy,* பெ. (n.) நீர்வடியும் வாய் (கொ.வ.); dribbling mouth.

ம. சாளுவா

[சாளை + வாய்]

சாற்காந்தள் *šāṟ-kāndaḷ,* பெ. (n.) மலையத்தி; malabar mountain ebony.

சாற்றங்காலி *šāṟṟaṅgāli,* பெ. (n) கருங்காலி; glabrous foliaged cutech - Acacia catechu.

[சாறு → சாரம், வலிமை. சாறு + அம் + காலி]

சாற்றமுது *šāṟṟamudu,* பெ. (n.) மிளகுச்சாறு; pepper-water (vaiṣṇ).

[சாறு + அமுது]

சாற்று[1]-தல் *šāṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. விளம்பரப்படுத்துதல்; to publish, announce. "அடிசேர்ந்து சாற்றுமின்" (பரிபா. 8, 79). 2. விரித்துச்சொல்லுதல்; to explain in detail. கலந்தார்க் குயலுண்மை சாற்றுவேன் மன் (குறள், 1212) 3. சொல்லுதல் (தி.வா.); to speak, mention. 4. புகழ்தல்; to praise. "சாற்றரிய வாயிரக்கால் மண்டபம்" (ஏகாம். உலா. காப்பு). 5. அடித்தல்; to beat, as a drum. "பேரி....... திரிந்து சாற்றினான்" (கம்பரா. மந்தரை. 25). 6. நிறைத்தல்; to fill with water, as tank. "குளங்கொளச் சாற்றி" (மதுரைக். 246). 7. அமைத்தல்; to form. "விற்படைசாற்றி" (சீவக. 1951).

ம. சாற்றுக; க. சாறு; தெ. சாடு; து. சாரியுனி; கோத. சார்; பட. சாறு

[சார் → சார்த்து → சாத்து. சாத்துதல் = பூசுதல், திருமண் காப்பிடுதல். சாத்து → சாற்று → சாற்றுதல் = பலரறியச் சொல்லுதல்]

சாற்று[2] *šāṟṟu*, பெ. (n). 1. விளம்பரப்படுத்துகை; proclaiming, declaring. 2. ஓசை; sound. "சுரிவளைச் சாற்றும்" (கல்லா. 46, 11).

ம. சாற்று

சாற்றுப்பட்டை *šāṟṟu-p-paṭṭai*, பெ. (n) சாத்துப்பட்டை (C.E.M.) பார்க்க; see *šāttu-p-paṭṭai*.

[சாத்துப்பட்டை → சாற்றுப்பட்டை]

சாற்றுப்படி *šāṟṟu-p-paḍi*, பெ. (n) சாத்துப்படி[1] பார்க்க; see *šāttup-paḍi*. "அடைக்காயமுது சாற்றுப்படி" (T.A.S.I. 268).

[சாத்துப்படி → சாற்றுப்படி]

சாற்றுப்பனை *šāṟṟu-p-paṉai*, பெ. (n) பனை; char-palm.

[சாறு + பனை]

பனை பார்க்க

சாற்றுப்பாட்டு *šāṟṟu-p-pāṭṭu*, பெ. (n) திருநாலாயிரப் பனுவல் ஓதி முடிக்கும்போது பாடும் (விசேடந் தோன்ற அனுவந்திக்கும் அதன்) இறுதிப் பாடல்கள் (பாசுரங்கள்); stanzas sung to mark the close of Tivya-p-prapantam recitation in a temple.

ம. சாற்றுப்பாட்டு

[சாற்று + பாட்டு]

சாற்றுவரி *šāṟṟu-vari*, பெ. (n) கள்ளிறக்கும் மரவரி; tax on toddy-yielding trees.

[சாறு → சாற்று + வரி]

சாற்றுவாய் *šāṟṟu-vāy*, பெ. (n) சாளைவாய் (யாழ்.அக.); dribbling mouth.

[சாறு + வாய்]

சாற்றுவாயூற்று-தல் *šāṟṟu-vāy-ūṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) சாளைவடிதல் (வின்.); to dirbble in the mouth, as a babe.

[சாறு → சாற்று + வாய் + ஊற்று-,]

சாற்றுவாரி *šāṟṟu-vāri*, பெ. (n.). சாளைவாய் (வின்.) பார்க்க; see *šāḷai-vāy*.

[சாறு + வாரி → சாற்றுவாரி]

சாற்றோலை *šāṟṟōlai*, பெ. (n.) ஆட்டுக் கிடையில் இடையர்கள் ஒதுங்கியிருக்கும் மறைவோலை (நாஞ்); ōlai shelter for shepherds keeping watch over their flock.

[சாற்று + ஓலை]

சாறடை *šāṟaḍai*, பெ. (n.) சாறணை (பிங்.) பார்க்க; see *šāṟaṇai*.

[சாறணை → சாறடை]

சாறணத்தி *šāṟaṇatti*, பெ. (n). சாறணை (வின்) பார்க்க; see *šāṟaṇai*.

[சாறணை → சாறணத்தி]

சாறணை *šāṟaṇai*, பெ. (n) பூடு வகை (பிங்.); purslane leaved trianthema.

சாறதி *šāṟaḍi*, பெ. (n.) சிறு செருப்படை; a low spreading leaf - coldenia procumbens (சா.அக.).

சாறயர்-தல் *šāṟayar-*, 3 செ.கு.வி. (v.i.) விழாக் கொண்டாடுதல்; to celebrate a festival. "சாறயர்ந் திறைவற் பேணி" (சீவக.1221).

[சாறு[3] + அயர்-,]

சாறல் *šāṟal*, பெ. (n) சாரல் பார்க்க; see *šāral*.

[சாரல் → சாறல்]

சாறிப்போ-தல் *šāṟi-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) வீண் போதல்; to prove futile, to fail, as business. காரியஞ் சாறிப் போயிற்று (வின்.)

[சாறு → சாறி + போ-,]

சாறு[1]-தல் *šāṟu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. நழுவுதல்; to slip off. "கலையுஞ் சாறின" (கம்பரா. உண்டாட்டு. 63). 2. வழுக்குதல்; to slip down, as from a tree. "சாறிவிழுந்தான்" (வின்.) 3. சரிதல் (வின்.); to slant, incline as a post; to deviate. 4. வடிதல்; to flow, issue. "இரு விழிகள் பீளை சாறிட" (திருப்பு. 790).

ம. சாருக; க. சாறு; தெ. சாறு; பட. சாரு

[சார் → சாறு]

சாறு[2]-தல் *šāṟu-*, 5 செகுன்றாவி. (v.t.) 1. களத்தில் தவசம் (தானியம்) பெருக்குதல் (யாழ்ப்.) to sweep the threshing floor and gather scattered grain. 2. நிலத்தைக்கொத்துதல்; to hoe superficially, harrow.

[சார் → சாறு-,]

சாறு[3] *šāṟu-*, பெ. (n.) 1. இலை பழம் முதலியவற்றின் சாறு; juice, sap. "கரும்பூர்ந்த சாறு" (நாலடி. 34). 2. கள் (பிங்.); toddy. 3. மணப் பொருள்கள் ஊறின நீர்; water in which aromatic substances are infused. "சாறுஞ் சேறு நெய்யு மலரும்" (பரிபா. 6, 41). 4. மிளகுச் சாறு; pepper water. "காரசாரஞ் சேர் சாற்றிலே கலந்து சோறு" (அருட்பா, 4. அவாவறு,2). 5 இழவு வீட்டில் இறந்தவருடைய உறவினர் இடும் உணவு (இ.வ.); food given by relatives in the house of the chief mourner, generally on the tenth day.

ம. சாறு; க. சாறு, சாறு; து. சாரு, சாரு; தெ. சேரு

[தெள் → தெறு → தெற்று = தெளிவு. தெற்றென = தெளிவாக. தெறு → தேறு. தேறுதல் = தெளிதல், துணிதல். தேறு → தேறல் = தெளிவு, தெளிந்த கள், தேன், தெளிந்த சாறு (சாரம்.). தேறு → சேறு = கள், தேன், பாகு, இனிமை. ஒ.நோ: தாறு → சாறு = காய்கனிக் குலை (பிங்). சேறு → சாறு = கள், நறுமணப் பண்டங்கள் ஊறின நீர், மிளகுநீர், இலை, கனி முதலியவற்றின் நீர். (வ.வ.147)]

த. சாறு → Skt. sāra

சாறு[3] *šāṟu*, பெ. (n.) 1. விழா; festival. "வேறு வேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்" (சிலப். 5, 178). 2. பூசை; worship. "அடியார் சாறுகொள வெழுந்து" (பரிபா. 8: 96). 3. திருமணம்; marriage. "நூன்மறை விதியிற் சாறு செய்தே" (திருவாலவா. 31, 5).

சாறு[4] *šāṟu*, பெ. (n.) மீன்பிடிக்க இடும் சிற்றணை (இ.வ.); small dam of mud across a channel with a row of bamboo splits planted on it, put up in fishing.

தெ. சாருவ

[சார் → சாறு]

சாறு[5] *šāṟu*, பெ. (n.) மரத்தின் குலை (பிங்); bunch or cluster of fruits.

ம. சாறு.

[தாறு → சாறு]

சாறுசிவப்பி *šāṟu-šivappi*, பெ. (n) தேள் கொடுக்கிச்செடி; scorpion's sting plant - Heliotropium indicum (சா.அக.).

சாறுதாரி *šāṟu-dāri*, பெ. (n) கரிசலாங்கண்ணி (மலை.); species of eclipta.

[சாறு + தாரி]

Skt. dhārin → த. தாரி

சாறுபிழி-தல் *šāṟu-piḻi-*, 2 செ.கு.வி. (v.i.) 1. சாறெடுத்தல்; to express juice. 2. வேலை மிகுதி முதலியவற்றால் வருத்துதல்; to squeeze oppress as by over working a person. 3. நன்றாய் அடித்தல் (வின்.); to give one a good drubbing.

[சாறு + பிழி-,]

சாறுவேளை[1] *šāṟu-vēḷai*, பெ. (n.) 1. தைவேளை; fire leaved cleome - Cleome pentaphylla. 2. வெள்ளைச்சாறணை; white trianthema - Trianthema decandra (சா.அக.).

[சாறு + வேளை]

சாறுவேளை[2] *šāṟu-vēḷai*, பெ. (n.) சாறணை பார்க்க; see *sāraṇai*.

[சாறு + வேளை]

சான்மலம் *šāṉmalam*, பெ. (n.) சான்மலி (மூ.அ.) பார்க்க; see *šāṉmali*.

[சான்மலி → சான்மலம்]

சான்மலி *šāṉmali*, பெ. (n.) 1. இலவு (பிங்.); red flowerd silk-cotton tree. 2. சான்மலித்துவீபம் பார்க்க; see *šāṉmali-t-tuvībam*. "கன்னல் வளைந்துடைய தீபஞ் சான்மலியாம்" (கந்தபு. அண்டகோ. 53) 3. ஒரு நிரயம் (நரகம்) (சி.போ.பா. 2, 3, பக்.204); a hell.

[சால் + மலி]

சான்மலிசாரம் *šāṉmali-sāram*, பெ.. (n.) இலவம் பிசின் (யாழ்.அக.); resin of the silk-cotton tree.

[சான்மலி + சாரம்]

சான்மலித்தீவு *šāṉmali-t-tīvu*, பெ. (n) இலவந்தீவு; an annular continent named after silk-cotton tree. "சான்மலித் தீவின் வேந்தன்" (நைடத. சுயம்வர. 135).

[சான்மலி + தீவு. தீர்வு → தீவு]

சான்மலித்துவீபம் *sānmali-t-tuvībam,* பெ. (n) சால்மலித்தீவம்; *sālmali-t-tīvam.*

[சான்மலி + துவீபம். தீர்தல் = நீங்குதல். தீர் → தீர்வு → தீவு]

Skt. dvīpa → துவீபம்

சான்மூலிகை *sān-mūligai,* பெ. (n) சிறுதேக்கு; small teak - cleadendron serratum *(சா.அக.).*

[சான் + மூலிகை]

சான்ற *sānṟa,* பெ.எ. (adj.) இயல்பு, தன்மை, பண்பு முதலியவற்றைக் குறிக்கும் பெயர்களோடு இணைக்கப்படும்போது, 'உள்ள', 'நிறைந்திருக்கிற' என்னும் பொருளில் பயன்படுத்தும் சொல்; when added to nouns of quality, nature, etc. it is used in the sense of 'having', being full of. 'புகழ் சான்ற தலைவர்' *(உ.வ.).*

[சால் → சான்ற]

சான்றவர் *sānṟavar,* பெ. (n.) 1. சான்றோர்[1] பார்க்க; see *sānṟōr-1.* "சான்றவர் சான்றாண்மை குன்றின்" (குறள், 990). 2. சான்றோர்[2] பார்க்க; see *sānṟōr-2.* "ஞாலமேழ் புகழுஞ் சான்றவ ருடனே" *(திருவாலவ. 17,6).*

[சால் → சான் → சான்றவர்]

சான்றவன் *sānṟavan,* பெ. (n) சான்று கூறுவோன்; a witness. "பொய்த்த சான்றவன் குலமென" *(கம்பரா. வருணனை. 25).*

[சான்று → சான்றவன்.]

சான்றளி-த்தல் *sānṟaḷi-,* 4 செ.குன்றாவி. (v.t.). விளத்தம் உண்மையானது என்று அல்லது அவற்றின் படி உண்மையானது என்று கையொப்பமும் முத்திரையும் இட்டு உறுதியளித்தல்; to certify (a fact) attest (a copy). 'விண்ணப்பத்துடன் சான்றளிக்கப்பட்ட மதிப்பெண் பட்டியலையும் இணைத்து அனுப்புக' *(உ.வ).*

[சான்று + அளித்தல்]

சான்றாண்மை[1] *sānṟāṇmai,* பெ. (n.) 1. பெருந்தன்மை; நற்குணங்கள் பல்லாற் றானும் அமைதல் (குறள். அதி, 99, மணக் குடவர்); nobility, greatness. "சான்றாண்மை தீயினஞ்சேரக் கெடும்" *(நாலடி.179).* 2. பொறுமை, பலகுணங்களானும் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை (குறள், அதி. 99, பரிமே.); self-control, patience. "கதனன்று சான்றாண்மை தீது" *(சிறுபஞ். 17).*

ம. சான்னாய்

[சல் → சோல் → சால். சாலுதல் = நிறைதல். சால = மிக. சால் → சான்றோர். சால் - சான்றாண்மை = எல்லா நற்குணங்களும் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை (மு.தா.158)]

சான்றாண்மை[2] *sānṟāṇmai,* பெ. (n.) கள்ளிறக்கும் தொழில்; toddy-drawing. "சான்றாண்மை பயின்றார்" *(குமரபிர. மதுரைக்.24).*

[சாறு = கள். சாறு + ஆண்மை - சாற்றாண்மை → சான்றாண்மை]

சான்றார்[1] *sānṟār,* பெ. (n.). சான்றோர் பார்க்க; see *sānṟōr.* "சான்றாருட் சான்றானெனப்படுதல்" *(திரிகடு.82).*

ம. சான்றான்

[சால் → சான் → சான்றோர்]

சான்றார்[2] *sānṟār,* பெ. (n.) சாணார்; sāṇārs. "சான்றான்மாட்டு மேனிப்பொன்னும்" *(T.A.S. II. 67).*

[சான்றோர் = போர் மறவர் "தேர்தர வந்த சான்றோரெல்லாம்" (புறம்.63) சான்றோர் → சான்றார். "ஈழக்குலச் சான்றார் ஏனாதி நாயனார்" (பெரியபு.15:2)]

இப்பிரிவினருடைய தொழில் கள்ளிறக்குதல், கருப்பட்டி காய்ச்சுதல், வாணிகஞ்செய்தல், குடிக்காவல், படைக்கலம் பயிற்றல் ஆகியன.

இதில் கருக்கு மட்டையன், மேனாட்டான், கொடிக்கால் நாட்டாத்தி, பிழுக்கை என்னும் பிரிவுகளுண்டு.

நாடார், சேர்வைகாரன் என்பன, இவர்களின் குலப்பட்டப் பெயர்கள். முக்குந்தன் என்பது வழக்கு வீழ்ந்தது *(தமி.வ.111).*

சான்றிதழ் *sānṟidaḻ,* பெ. (n.) பிறப்பு, கல்வி முதலிய குறித்துக் குறிப்பிட்ட விளக்கமளித்து அதற்குரிய அதிகாரி அல்லது அமைப்பு வழங்கும் எழுத்து வடிவான சான்று;

testimonial; certificate. ஓட்டுநர் பயிற்சிச் சான்றிதழ் வாங்க வேண்டும்.

[சான்று + இதழ்]

சான்று *šāṉṟu*, பெ. (n.) *கரி;* witness, evidence. "வன்னிமரமு மடைப்பளியுஞ் சான்றாக" *(சிலப். 21:5).*

[சால் → சான்று]

சான்றுரை *šāṉṟurai*, பெ. (n.) *சான்றுக்காகச் சொல்லும் உரை;* evidence, demonstration.

[சான்று + உரை]

சான்றுறுதி *šāṉṟuṟudi*, பெ. (n.) *எழுத்துமூலம் அளிக்கும் உறுதி;* testimony.

[சான்று + உறுதி]

சான்றோர் *šāṉṟōr*, பெ. (n.) *1. அறிவொழுக்கங் களால் நிறைந்த பெரியோர்;* the great, the learned, the noble. "சான்றோர் செய்த நன்றுண்டாயின்" *(புறநா. 34:20).* 2. *கழகக் காலத்துப் புலவர்;* poets of the Saṅgam period. "சான்றோர் செய்யுளில் இன்சாரியை உருபுபற்றாது நிற்றல் நோக்கி" *(தொல்.சொல். 1, உரை).* 3. *வீரர்;* warriors. "தேர்தர வந்த சான்றோ ரெல்லாம்" *(புறநா. 63, 5).*

மறுவ. மிக்கோர், நல்லோர், தகுதியோர், மேலோர், ஆய்ந்தோர், ஆன்றவர், உலகம், மேதாவியர்

[சாலுதல் = நிறைதல். சால் → சான் → சான்றோர் = அறிவு நிறைந்தோர் (மு.தா.158)]

சான்றோர்தன்மை *šāṉṟōr-taṉmai*, பெ.. (n.) *சான்றோர்க்குரிய எட்டுத் தன்மைகள்;* the eight qualities of learned men.

[சான்றோர் + தன்மை]

சான்றோராட்சி *šāṉṟōr-āṭci*, பெ. (n) *கற்றோர் வழக்கு;* the learned usages.

[சான்றோர் + ஆட்சி]

சான்றோன்[1] *šāṉṟōṉ*, பெ. (n.) *அறிவொழுக்கங் களாற் சிறந்தவன்;* a wise, learned and respectable man. "சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே" *(புறநா. 312).*

[சால் → சான் → சான்றோன்]

தாமாக உயர்ந்த ஒழுக்கம் பூணும் ஒரு சிலரே சான்றோர். ஏனையோரெல்லாம், அரசனின் தண்டனைக்கஞ்சியே ஒழுக்கத்தைக் கடைப் பிடிப்பவராவர்.

சான்றோன்[2] *šāṉṟōṉ*, பெ. (n) *மாழ்கு விண்மீன் (மிருகசீரிடம்) (பிங்.);* the fifth nakṣatra.

சான்றோன்[3] *šāṉṟōṉ*, பெ. (n) *கதிரவன் (பிங்.);* sun.

[சான்று → சான்றோன்]

சான்றோன்மூலி *šāṉṟōṉ-mūli*, பெ. (n.) *கொடி எலுமிச்சை;* lemon creeper - Citrus medica limonum *(சா.அக.).*

[சான்றோன் + மூலி]

சானக்கிமேனி *šāṉakki-mēṉi*, பெ. (n) *குப்பை மேனிச் செடி;* rubbish plant - Acalypha indica *(சா.அக.).*

சானகி[1] *šāṉagi*, பெ. (n.) *1. பொன்னாங்காணி (மலை);* plant growing in damp places. 2. *கொற்றான்செடி;* a plant.

சானகி[2] *šāṉagi*, பெ. (n.) *மூங்கில் (யாழ்.அக.);* bamboo.

[சானகம் → சானகி]

சானகை *šāṉagai*, பெ. (n.). *சானிகை (இவ.) பார்க்க;* see *šāṉigai.*

சானம்[1] *šāṉam*, பெ. (n.) *பெருங்காயம் (மூ.அ.);* asafoetida.

சானம்[2] *šāṉam*, பெ. (n.) *சாதிலிங்கம்;* vermilion.

சானம்[3] *šāṉam*, பெ. (n.) *1. அம்மி (யாழ்.அக.);* millstone. 2. *உரைகல்;* touchstone.

சானிகை *šāṉigai*, பெ. (n.) *மண்ணாற் செய்த தட்டு;* earthen dish (madr).

தெ. சானிக

சானினி *šāṉiṉi*, பெ. (n.) *1. சிறுகீரை (மலை.);* amaranth. 2. *சேம்பு;* cocco, coarse herb.

[சாகினி → சானினி]

சானீளம் *šāṉīḷam*, பெ. (n.) *ஒரு படைச்சால் நீளம்;* a furlong.

[சால் + நீளம்]

CPL600908

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

மூன்றாம் மடலம் - இரண்டாம் பாகம்

சி - சூ

Vol. III - Part - II

பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை

தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு

2004

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

மூன்றாம் மடலம் - இரண்டாம் பாகம்

சீ - தூ

Vol. III - Part - II

பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை

தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மேற்பார்வையாளர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு

2004

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்கக வெளியீடு - 8

முதற் பதிப்பு : 2004

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. III, Part - II

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு

விலை : உருபா 300/-

குறியீட்டெண் : Colon No. P.J1-J, 314" K.M4

வெளியிட்டோர் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி-48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை - 600 040

அச்சீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி
சென்னை - 600 113

நூல் கிடைக்குமிடம் : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி
சென்னை - 600 113

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி-48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை - 600 040

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

Vol. III - Part - II

மூன்றாம் மடலம் - இரண்டாம் பாகம்

(சி முதல் சூ வரை)

பதிப்புக் குழு

திரு. பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை

திரு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,
அரசு சிறப்புச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை
மற்றும்
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மேற்பார்வையாளர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

கூர்ந்தாய்வாளர்

புலவர் த. சரவணத் தமிழன்

தொகுப்பாளர்கள்

திரு. முத்து. பிச்சை
முனைவர் மு. கண்ணன்
முனைவர் பா. வெற்றிச்செல்வன்
முனைவர் ச. செந்திலாண்டவன் (பகுதிப்பொறுப்பாளர்)
முனைவர் இரா.கு. ஆல்துரை
திரு. கா. இளமுருகு
திரு. ச.கி. கணேசன் (ஓவியர்)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

ஜெ ஜெயலலிதா

வாய்மையே வெல்லும்

22.12.2004

அணிந்துரை

'ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம் ஒவ்வொன்றும் உன் முன்னேற்றம்' என்னும் வைர வரியில் தமிழின் முன்னேற்றமே தமிழர் முன்னேற்றம் என்பதை எடுத்துக் காட்டினார் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்.

பாவேந்தர் பணித்தபடி, ஒல்லும் வகையில் எல்லாம் அந்த ஒண்டமிழை வளர்க்க உற்ற பணி புரியும் நற்றமிழ் அரசே தமிழ் நாடு அரசு.

காலத்தை வென்று நிற்கும் நம் கன்னித் தமிழை இந்திய அரசின் ஆட்சி மொழியாக ஆக்குவதற்கும், உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழியின் ஒப்பற்ற இலக்கியமாகவும், உலக சிந்தனையின் உச்சமாகவும் விளங்கும் திருக்குறளைத் தேசிய இலக்கியமாக ஆக்குவதற்கும், இடையறா முயற்சிகளை எடுத்து வருகிறது எனது அரசு. அனைத்து மாணவரும் தமிழைப் பயில வேண்டும் என்பதற்காக மழலையர் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை அறிவியல் தமிழைக் கற்பிக்க ஏற்பாடு செய்ததும் எனது அரசே.

வளர்ந்து வரும் அறிவியலுக்கு ஈடு கொடுக்கும் வகையிலும், இலக்கண இலக்கிய மரபுகளைப் பேணிக் காக்கும் முறையிலும் மொழியின் சொல்வளத்தை அறிந்து கொள்வதும், பெருக்குவதும் இன்றியமையாததாகும். இப் பயன்பாட்டு நோக்கில் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி' (A comprehensive Etymological Dictionary of Tamil Language) நூல்களை உருவாக்கும் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது. இப் பணியின் தனித் தன்மை கருதி, பன்மொழிப் புலமையும், ஆய்வு நுட்பமும், தமிழ்ப் புலமையும், ஒருங்கே அமையப் பெற்றிருந்த மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களை இயக்குநராகக் கொண்டு இத் திட்டம் தொடங்கப்பட்டது. பைந்தமிழ் அறிஞர் பாவாணர் அவர்கள் 'தனித் தமிழ் இயக்கம்' கண்ட மறைத்திரு மறைமலை அடிகளார் வழியில் தமிழ் ஆய்ந்து தமிழே உலக முதன்மொழி என்பதை உலகுக்கு உணர்த்தியவர் ஆவார்.

அவர் தொடங்கி வைத்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம், அருந்தமிழின் வளர்ச்சிக்கு அடிப்படையான தலையாய பணிகளில் ஒன்றாகும் என்பதைக் கருத்திற் கொண்டு எனது அரசு இத் திட்டத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. இத் திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 6 பகுதிகள் மட்டுமே முடிக்கப்பட்டிருந்தன. இவற்றில் 'அ' முதல் 'ஙௌ' வரையிலான எழுத்துக்களில் அமையும் சொற்கள் பற்றிய விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. தற்பொழுது 'ச' வரிசையில் மூன்று பகுதிகளும் 'த' வரிசையில் மூன்று பகுதிகளும் ஆக மேலும் 6 பகுதிகள் முடிக்கப்பட்டு வெளியிடப் பெறுவதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழோடு இந்த யுகத்தின் நான்காவது தமிழாகிய 'அறிவியல் தமிழ்' வளர, அறிவியலைத் தமிழில் கூறுவதற்கான சொற்களைக் கண்டறிய வேண்டியது இன்றியமையாததாகும். அதற்காக ஏற்கெனவே தமிழில் உள்ள சொல்வளத்தை அறியவும், புழக்கத்தில் இல்லாத சொற்களைப் புதுப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும், புதிய சொற்களை உருவாக்கவும், சொற்களின் வேர்களை ஆராய்ந்து புதியன படைக்கவும் இன்றைய தமிழ் வளர்ச்சியின் உடனடித் தேவையை நிறைவு செய்வதாக செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி நூல் மடலங்கள் அமைகின்றன.

இம் மடலங்கள் தமிழின் அழிவிலாச் சொத்தாக விளங்கும் என்பது உறுதி.

இப் பகுதிகள் வெளிவர அயராது உழைத்த அறிஞர் பெருமக்களையும், அலுவலர்களையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

வாழ்க தமிழ்!
வளர்க தமிழ்ப் பணி!

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
டாக்டர் செல்வி ஜெ ஜெயலலிதா

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

சி.வி. சண்முகம்
கல்வி மற்றும்
வணிக வரித்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

அணிந்துரை

"ஒரு மொழிக்குட்பட்ட சொற்களை ஆராயும் சொல்லாராய்ச்சியும் பல மொழிகளை ஒப்பு நோக்கும் மொழியாராய்ச்சியும் மேனாட்டாரிடமிருந்து நாம் அறிந்தவை.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே **(தொல்.சொல்.எச்.1)**

என்று தொல்காப்பியர் காலத்திலேயே சொல்லாராய்ச்சியும் மொழியாராய்ச்சியும் ஓரளவு தமிழ்நாட்டிலிருந்ததேனும் விரிவான முறையிலும், நெறிப்பட்ட வகையிலும் சொன்னூலும் (Etymology), மொழிநூலும் (Philology) நாம் பெற்றது மேலையரிடமிருந்தே". இது, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் தம் சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் என்ற நூலைச் சேலத்திலிருந்து 1948-இல் வெளியிட்டபோது, அந்நூலில் அவரே எழுதிய முகவுரை. ஆகப் பல்லாண்டுகளாகச் சொல்லாராய்ச்சியிலேயே தம்மை ஆட்படுத்திக் கொண்டு, நுணுகி நுணுகித் துருவித் துருவிப் பார்த்ததன் தெள்ளிய வெளிப்பாடுதான் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி. அதன் வாயிலாகத் தமிழின் சொல்வளத்தை நாம் அறிகின்றோம். அத்துடன் நில்லாது தொன்றுதொட்டு இன்று வரையுமுள்ள பண்பாடு, நாகரிகம், வரலாறு ஆகியவற்றையும் அறிய முடிகிறது.

தமிழ் பிறமொழியின் கலப்பில்லாமல் தனித்தியங்கும் ஆற்றலுடைய தன்னிகரில்லா மொழி என்று உலக மொழியறிஞர்களெல்லாம் ஒப்புக் கொள்கின்றனர். செந்தமிழின் நீண்ட நெடிய சொல்வள வரலாற்றில் சொல்லும் பொருளும் பெருகியுமுள்ளன; அருகியுமுள்ளன! வழக்கிழந்த சொற்களை மீட்பதற்கும், அனைத்துச் சொற்களையும் காப்பதற்கும் அகரமுதலிகள் இன்று வழிவகுக்கின்றன.

இலக்கியச் சொல்லாட்சிகள் முதலாக இன்றைய பேச்சு வழக்குச் சொல்லாட்சிகள் ஈறாக அனைத்தையும் உள்ளடக்கிச் சொற்களின் வடிவம், பொருள், பிறப்பு போன்றவை பற்றிய தேவையான செய்திகளுடன் விளக்கமுற உரைப்பவையாக இருப்பவையே செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் மடலங்கள்.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூற்றாண்டு விழா கண்ட நம் **புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்களின் சீரிய தலைமையில் அமைந்த அரசு, அவரின் தனித்தமிழ்ப் பற்றினைப் பேணிக் காத்திடவும், அவர் காட்டிய நெறிமுறைகளின்படி அகரமுதலி மடலங்கள் வெளிவரவும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்று இந்தியாவிலேயே தலைசிறந்த முதன்மை மாநிலமாக மாற்றிடச் சூளுரைத்துச் செயற்பட்டு வரும் **புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்களின் சீரிய வழிகாட்டுதல்படி தமிழக அரசு முனைந்து பீடுநடை போடுகின்றது.

'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் எஞ்சிய பகுதிகள் யாவும் நான்காண்டுக்கால வரம்பெல்லைக்குள் வெளிக்கொணரப்படும்' எனச் சட்டப்பேரவையில் அறிவித்தபடி 'ச'கர மடலத்தின் 3 பகுதிகளும், 'த'கர மடலத்தின் 3 பகுதிகளும் இப்போது ஒருசேர வெளிவருவது, மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். முன் எப்போதும் இல்லாதவாறு 6 பகுதிகள் ஒருசேர முடிக்கப்பெற்று வெளியிடப்பெறுவது அருஞ்சாதனையே! அதற்கு முதற்காரணம் நம் **புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்களே என்பது மறுக்க முடியாத உண்மை. 6 பகுதிகள் சீரிய முறையில் வெளிவர அரும்பங்காற்றிய தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திரு. பு.ஏ. இராமையா இ.ஆ.ப., அவர்களுக்கும், அகரமுதலித் திட்டப் பொறுப்பு இயக்குநர் திரு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப., அவர்களுக்கும், அகரமுதலி மேற்பார்வையாளர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், கூர்ந்தாய்வுப் புலமையாளர்களுக்கும் மற்றும் அகரமுதலித் தொகுப்பாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுகள். இதேபோல மற்றப் பகுதிகளையும் விரைந்து முடித்து வெளியிடத் தொடர்ந்து பாடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

31.8.04

சென்னை

சி.வி. சண்முகம்
கல்வி மற்றும்
வணிக வரித்துறை அமைச்சர்

பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்

தமிழ் வளர்ச்சி-பண்பாடு
(ம) அறநிலையத்துறை
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

அணிந்துரை

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முன்தோன்றி மூத்த குடி" (பு.வெ.மாலை)

என்று தமிழ்க்குடி பாராட்டப்பெறும். அவ்வகையில் எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந்தமிழணங்கின் சீரிளமைத்திறம் வியந்து தம்முடைய வாழ்நாள் பணியாகச் சொல்லாராய்ச்சியை மேற்கொண்டவர் மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள்.

முதல் மாந்தன் தோன்றிய இடம் குமரி; உலக முதன் மொழி தமிழ். என்ற கோட்பாட்டில் திளைத்து, அக்கோட்பாட்டின் அடிப்படையில் தம் ஆராய்ச்சியை அமைத்து முதன்மொழியாகிய தமிழின் சொற்பிறப்பாய்வைத் துருவித்துருவியாய்ந்து மிகத் துல்லியமாக வேர் விளக்கம் கண்டவர் பாவாணரே.

இப்பெருமகனாரைப் போலத் தனித்தமிழ் ஆய்வுக் கருத்துகளை இதுவரை எந்தவோர் அறிஞரும் வழங்கிடவில்லை; பெருஞ்சித்திரனார் கூறுவதைப்போலத் "தமிழ்த் துறைக்கு அவர் தொண்டு புதியது; தமிழர்க்கு அவர் கருத்துகள் மயக்கறுப்பன; மேனாட்டார்க்கு அவர் நூல்கள் வியப்பளிப்பன; அவர் எடுத்துக் கொண்ட முயற்சி அரியது. தொல்காப்பியர் காலத்திற்குப் பின் தமிழ் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும் ஒட்டுமொத்த முயற்சிக்குப் பாவாணர் என்றே பெயரிடலாம்". இவ்வுரைக்கு ஏதும் மறுப்புரையுண்டோ?

"கதிர்தரு ஒளியென மொழிதரு மலையே!
முதிர்முகி லெனவே வேர்பொழி விளைவே
தமிழ்ச்சுட ரணிதலைப் பாவா ணர்தான்
தமிழ்மகள் பெறுதவப் பேரறிவாளன்!

வேர்ச்சொல் லாய்வின் வித்தகன்! மொழியின்
போர்ப்படைத் தலைவன்! புலமைப் புதையல்!
தலைவ! நீதரும் ஒளியே பாதை
விலைமதிப் பில்லா வெற்றியைத் தருமே!"

என்றொரு பாவலர் பாடியதற்கேற்பப் பாவாணர் பெரும்புகழ் பெற்ற அமுதப்படையல்!

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி 12 மடலங்களில் 31 தொகுதிகளாக வெளியிடத் திட்டமிடப்பட்டதாகும். கடந்த 28 ஆண்டுகளில் 6 தொகுதிகள் மட்டுமே வெளிவந்துள்ள நிலையில், சுணக்கமுற்றிருந்த அகரமுதலித் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதுத்தெம்பு ஊட்டியதன்விளைவாய், எஞ்சிய 25 தொகுதிகளை நான்காண்டுக் கால வரம்பெல்லைக்குள் வெளிக்கொணரப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. அதன் வெளிப்பாடே இப்போது 'ச' மற்றும் 'த' மடலங்களின் 6 தொகுதிகள் ஒருசேர வெளிவருகின்றன. இது ஓர் அரும்பெருஞ் செயல் என்றால் மிகையாகாது.

இத்தொகுதிகளில் காட்டப்பெறும் தமிழ்ச் சொற்களின் விரிவும் விளக்கமும் நம்மை வியப்பிலாழ்த்துகின்றன. எடுத்துக்காட்டிற்கு ஒன்றிரண்டினைக் குறிப்பிட விரும்புகிறேன்.

'ச'கர மடலத்தின் முதற்பகுதியில் (ச, சா) வரும் **'சக்கரம்'** என்ற சொல்லிற்கு 27 வகையான பொருள் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாது இலக்கிய மேற்கோள்களும் வேர் விளக்கமும் அருமையாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

சருக்கு - சருக்கரம் - சக்கரம் (வே.க. 239)

அதேபோல் **'சத்தம்'** என்ற சொல்லுக்கான விளக்கமும் அருமை.

சாத்து = பண்டங்களைக் கொண்டு விற்கும் வணிகர் கூட்டம். சாத்துவண்டிக்குக் கொடுக்கும் கூலி சாத்தம் எனப்பட்டது. வண்டிச்சாத்தம் = வண்டிக்கூலி. சாத்தம் - சத்தம் ஆயிற்று.

அடுத்து, இரண்டாவது தொகுதியில் (சி-சூ), 'சிலை' என்ற சொல்லிற்குக் காட்டப்பட்டுள்ள விளக்கம் அழகுற அமைந்துள்ளது. 'சீரகம்' என்ற சொல்லிற்குப் பொருள் - வேர் விளக்கம் - விரிவுப் பொருள் காட்டியிருப்பது திகைக்க வைக்கிறது.

சீர் - சீரம் - சீரகம்

உலகில் முதன்முதலாகச் சிறந்த முறையில் சமையல் தொழில் தொடங்கியதும் அதற்குச் சீரகத்தைப் பயன்படுத்தியதும் தமிழகமே! என்பதற்குச் சான்றுகள் பல உள.

"சிறுபிள்ளை இல்லா வீடும், சீரகம் இல்லாத கறியும் செவ்வையாயிரா" என்பது தொன்று தொட்டுவரும் பழமொழி.

சீரகக்கோரை, சீரகச்சம்பா, சீரகவள்ளி என்பன ஒப்புமை பற்றிப் பெயர்பெற்ற நிலைத் திணை வகைகள். பொன்னளவையிற் சீரகம் என்பது ஓர் அளவு.

5 கடுகு = 1 சீரகம்; 5 சீரகம் = 1 நெல்

"அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுதலாகி
உளவெனப் பட்ட வொன்பதிற்றெழுத்தே
அவைதாம்
கசதப வென்றா நமவ வென்றா
அகர உகரமோ டவையென மொழிப" (தொல்.எழுத். 170)

என்னும் தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பா உரையில் கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை என்று இளம்பூரணரும், 'கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை, இவை நிறை' என்று நச்சினார்க்கினியரும் கூறியிருத்தலையும் நோக்குக.

செரி - செரியகம் - சீரகம்

என்றுமாம். வடவர் மூலம் காட்டும் வகை. ஜீரக - ஜீரண; ஜ்ரு - ஜீரண, ஜ்ரு - கிழமாக்கு, கட்டுக்குலை, கரை, செரிக்கச் செய். ஜ்ரு என்பது கிழ என்னும் தென்சொற்றிரிபே (வ. மொ. வ.153).

அடுத்து, மூன்றாம் தொகுதியில் (செ - சௌ) 'செம்பியன்' என்ற சொல்லின் பொருள் விளக்கம் சிறப்புடையதாயிருக்கின்றது. அதைப்போலச் 'செஞ்சம்' என்ற சொல்லுக்கு அளிக்கப்பட்டுள்ள பொருள் விளக்கமும் சிறப்பாயுள்ளது. செஞ்சு - செம்மை, செவ்வை, நிறைவு, செஞ்சு - செஞ்சம்.

அடுத்து, 'த்'கர மடலத்தின் முதற் தொகுதியில் (த, தா) 'தமிழ்' என்ற சொல்லுக்குக் காட்டப்பெற்றிருக்கும் விளக்கம் விரிவானதாகவும் பொருத்தமானதாகவும் நுட்பமானதாகவும் அமைந்துள்ளது. அதைப்போலத் 'தா' என்னும் சொல்லுக்கும் அருமையான விரிவான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது, 'தா' என்ற சொல் தந்தை என்பதனையும் குறிக்கும் என்று நிறுவியிருப்பது ஆராய்ச்சியாளரின் சான்றாண்மையைக் காட்டுகிறது.

அதே மடலத்தின் இரண்டாவது தொகுதியில் (தி-தூ) 'திறம்' என்ற சொல்லுக்கும், 'துடி' என்ற சொல்லுக்கும் தரப்பட்டுள்ள விளக்கங்கள் பயனுடையவையாகும்.

மூன்றாவது தொகுதியில் (தெ-தௌ), 'தெரு' என்னும் சொல்லின்கீழ், முடுக்கு சிறுசந்து; சந்து தெருவின் கிளை; தெரு சிறுவீதி; மறுகு போக்குவரத்து மிகுந்த பெருந்தெரு அல்லது வீதி; ஆவணம் கடைத்தெரு; அகலுள் அகன்ற மறுகு; சாலை பெருவழி; சந்தி மூன்று தெருக்கள் கூடுமிடம்; சதுக்கம் நான்கு தெருக்கள் கூடுமிடும் என்ற வகையில் பதிவு செய்துள்ளமை பாராட்டுக் குரியதாகும்.

அடுத்து, 'தொல்காப்பியர் காலம்' என்னும் தலைப்பின்கீழ்க் காட்டப்பட்டுள்ள சான்றுகள் ஆய்வாளர்களுக்கு மிக்கப்பயனுடையனவாகும். இந்த ஆறு தொகுதிகளிலும் தேவையான சொற்களுக்குப் பொருத்தமான பட விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருப்பதும் அழகுக்கு அழகு சேர்ப்பதாயுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டப்பணிகள் விரைந்து நடைபெற பலவகையிலும் பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களுக்கும், **மாண்புமிகு கல்வி அமைச்சர்** அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு அறிவித்தவண்ணம் 6 தொகுதிகளை ஒருசேர அணியமாக்கி வெளியிடும் பணியைச் சிரமேற்கொண்டு செவ்விய முறையில் வெளிவர அரும்பணியாற்றிய தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அரசு சிறப்புச் செயலாளரும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் **திட்டப்பொறுப்பு இயக்குநருமான திரு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும், அகரமுதலி மேற்பார்வையாளராகச் செயற்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், அகரமுதலித் திட்டப் பணியாளர்கள் மற்றும் கூர்ந்தாய்வுப் புலமையாளர்களுக்கும் எனது மனமுவந்த பாராட்டுகள். பாராட்டுகளைப் படிக்கற்களாகக் கொண்டு தொடர்ந்து நன்கு உழைத்து எஞ்சிய தொகுதிகள் அனைத்தையும் அரசு விரும்பிய வண்ணம் வெளிக்கொணர வேண்டுமென விழைகிறேன்.

சென்னை **பு.ஏ. இராமையா**

23-10-2003 **அரசு செயலாளர்**

தா. சந்திரசேகரன், இ.ஆ.ப.
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
சென்னை - 600 008

பதிப்புரை

வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
மாண்புகள் நீயே என் தமிழ்த் தாயே
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே
வீரனின் வீரமும் வெற்றியும் நீயே

- பாவேந்தர் (இசையமுது - 19)

உலக முதன்மொழி தமிழே! இந்திய மொழிகளுக்கு மூலமும் வேரும் தமிழ்; திரவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் என்று வாழ்நாள் முழுவதும் ஆய்வு செய்து நிறுவிய செந்தமிழறிஞர், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் ஆவார். உலகின் முதல் மாந்தன் தமிழன் என்பதும்; தமிழன் தோன்றிய இடம் குமரிக் கண்டமே; மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் பழந்தமிழ் நாகரிகமே என்பதும் பாவாணரது ஆய்வுப் புலத்தின் இரு கண்களாகும்.

உலகின் முதன்மொழி தோன்றியதற்கான அடிப்படைகளை மேனாட்டு அறிஞர்கள் பல்வகையில் ஆராய்ந்திருப்பினும் அ, இ, உ என்னும் முச்சுட்டுகளே ஞால முதன்மொழி தோன்ற வழி வகுத்தன என்னும் சுட்டடிக் கொள்கையை (Deictic Theory) முதன்முதல் பாவாணர் கண்டறிந்தார். சுட்டு விளக்கம், முதல் தாய்மொழி, ஒப்பியன் மொழி நூல், வேர்ச்சொற்கட்டுரைகள் ஆகிய தமது நூல்களில் பாவாணர் இதனைத் தெளிவாக விளக்கியுள்ளார். உகரச் சுட்டிலிருந்தே பெரும்பான்மையான சொற்கள் பிறந்திருப்பதை அவருடைய ஆய்வு காட்டுகின்றது. மேலும் ஊகாரச் சுட்டடிப் பிறந்த சொற்களே மிகுதி. குறில் நெடிலாயிற்று என்பது பலர் கருத்து. நெடிலே குறிலாயிற்று என்பது பாவாணர் கருத்து. இதற்குப் பிற திரவிட மொழிகள் வலுவூட்டுகின்றன.

"சொற்பிறப்பியல் பணிக்கென்றே தம்மை இறைவன் படைத்தனன்" என உளங்கூர்ந்துரைத்து அப்பணிக்கே தம்மை முழுதுற ஒப்படைத்து உழைத்த உரவோர்" என்று பாராட்டப்படுபவர் பாவாணர்.

ஞால முதன்மொழி தமிழ் என்பதைப் பாவாணர் "குமரிக் கண்டத் தமிழ் வடக்கே சென்று திரவிடமாய்த் திரிந்தது. வடகோடித் திரவிடம் நாளடைவில் பிராகிருதமாய் மாறியது. வேத காலத்தில் விந்திய மலைக்கு வடக்கில் பைசாசம், சூரசேனம், மாகதம் என்று மூன்று பிராகிருதங்களும் அதற்குத் தெற்கில் தமிழ், ஆந்திரம் (தெலுங்கு) கன்னடம், மகாராட்டிரம், கூர்ச்சரம் என்னும் ஐந்து திரவிடங்களும் (பஞ்ச திரவிடம்) வழங்கிவந்தன. பிற்காலத்தில் ஐந்து திரவிடங்களுள், மகாராட்டிரம் ஒரு பிராகிருதமாகக் கொள்ளப்பட்டது. மாகதத்தின் பிற்காலத் திரிபு பாலி. பிராகிருதம் என்னும் சொல் தமிழில் பாகதம் எனத் திரியும். வேத ஆரியம் வழக்கற்றுப் போனபின், அதனோடு ஐம்பிராகிருதங்களையும் கலந்து சமற்கிருதம் என்னும் இலக்கிய மொழியை அமைத்தனர். பிராகிருதம் முந்திச் செய்யப்பட்டது; சமற்கிருதம் நன்றாய்ச் செய்யப்பட்டது. ஆகவே சமற்கிருதத்திற்கு முந்தியது பிராகிருதம், பிராகிருதத்திற்கு முந்தியது திரவிடம்; திராவிடத்திற்கு முந்தியது தமிழ்" (செ.அக.சீர். பக். 32) என உரைத்துள்ள தன்மை சிந்திக்கத் தக்கது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் மூன்றாம் மடலத்தின் இரண்டாம் பகுதி (சி முதல் சூ வரை) அரிய விளக்கங்களுடன் பாவாணர் காட்டிய வேர் வரலாறுகள், இனச்சொற்கள், மறுவழக்குச் சொற்கள், பழமொழிகள், இலக்கிய மேற்கோள்கள் ஆகியவற்றுடன் அனைவரும் பயன்கொள்ளும் வகையில் அகரமுதலித் திட்ட ஆய்வாளர்களின் கடின உழைப்பின் சீரிய விளைவாகச் சிறந்த முறையில் வெளிவருகின்றது. அரிய சொல்விளக்கமாகச் 'சிதம்பரம்' என்னும் தலைப்புச் சொல்லின் கீழ், விளக்கமாக, தில்லையிற் சிற்றம்பலம் பேரம்பலம் என ஈரம்பலங்களுண்டு. அவற்றுள் சிற்றம்பலமே இறைவன் திருக்கோயில். "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும்" (திருக்கோ.) வடவர் திரிவு வடிவை இயல்பு வடிவாகக் கொண்டு அறிவு வெளி (ஞானாகாசம்) என்று பொருள் புணர்க்க முயல்வர். அம்பலம் (மன்றம்) வேறு; அம்பரம் (வானம்) வேறு. மேலும் 'சித்', 'அம்ர' என்னும் இருசொற்களும் தென் சொற்றிரிபே. சித்து - சித். அம்பரம் - அம்ர (வடமொழி வரலாறு, 149, 150).

த. சிதம்பரம் —> Skt. Cidambara

என்று பாவாணர் கூறியவாறே சேர்த்திருப்பது நினைக்கத்தக்கது. இன்னும் சுட்டடிக் கொள்கை, சீரகம், சும்மா முதலிய சொற்களின் விளக்கங்களும் மடலத்திற்குப் பெருமை சேர்க்கின்றன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் துறையின் பணிகள் வளர்ந்து பெருகிட வள்ளண்மை சுரந்து வண்டமிழுக்கு வாழ்வளிக்கும் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களுக்கு என்றென்றும் எங்கள் நன்றி உரியதாகும்.

எங்களைத் தக்காங்கு வழி நடத்துவதோடு, தக்கதொரு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்திருக்கும் **கல்வி (ம) வணிகவரித்துறை அமைச்சர் மாண்புமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், பல்வேறு பணிகளுக்கிடையிலும் அவ்வப்போது ஊக்கமும் ஆக்கமும் தந்து அகரமுதலித் தொகுதிகள் வெளிவரப் பெருந்துணை புரிந்த **தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயல**ர் **திரு. பு.ஏ. இராமையா** இ.ஆ.ப. அவர்களுக்கும், அகரமுதலி மேற்பார்வையாளராகப் பணியாற்றிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டிணமூர்த்தி அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பகுதி வெளிவர அயரா துழைத்த தொகுப்பாளர்களுக்கும் கூர்ந்தாய்வுப் புலமையாளர்களுக்கும் எனது நன்றி கலந்த பாராட்டுகள்.

தா. சந்திரசேகரன்

சென்னை

15-10-2003

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

மூன்றாம் மடலம் - இரண்டாம் பாகம்

சி - சூ

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

OF THE TAMIL LANGUAGE

சி

சி[1] *ci/śi*, *'ச'கர* மெய்யும் 'இ'கர உயிரும் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து; syllable formed by adding the short vowel 'i' to the consonant 'c/ś'.

[ச் + இ]

சி[2] *śi*, இடை. (part.) *1.* தொழிற்பெயரீறு; suff. of vbl. nouns. *எழுச்சி, வளர்ச்சி, அழற்சி. 2.* பெண்பாலீறு; a feminine suffix, as in *ஆய்ச்சி*.

சிக்க *śikka*, கு.வி.எ. (adv.) *1. சுருக்கமாக;* in brief, in a nut-shell. "சிக்க வுரைத்தேம்" *(கம்பரா. நிந்த. 79). 2.* நன்றாய்; soundly. "சிக்கவொறுத்தா லல்லதை யுண்மை செப்பான்" *(திருவிளை. பழியஞ். 26).*

ம. சிக்க (சிறிய, முதிராத), செக்க, செறுக்க; க. சிக்க (சிறிய); தெ. சிக்கசிக (சிறிய, சிறிதளவு); து. சிக்க (சிறிய); குட. சிக்க (இளைய); Pkt. cikka

[சிறு → சிறுக்கு → சிக்கு → சிக்க]

சிக்கங்கோல் *śikkaṅgōl*, பெ. (n.) சிடுக்கு வாரி; forked comb for dressing the hair. "சீப்பு சிக்கங்கோலுந் தேன்மொழிக்கு வாங்கலுற்றாள்" *(கோவ. க.88)*

மறுவ. சிக்குவாரி; மயிர்கோதி; சிறுக்கணி, ஈர்கொல்லி.

[சிக்கு + அம் + கோல்]

சிக்கட்டி *śikkaṭṭi*, பெ. (n.) *அவரை;* country bean *(சா.அக.).*

[சிக்கடி[1] → சிக்கட்டி]

சிக்கடம் *śikkaḍam*, பெ. (n.) பறவையைப் பிடிக்கும் வலை; snare. "பறவை சிக்கடத்திற் பட்டவெனத் தேய்ந்தனவே" *(பஞ்ச. திருமுக. 167).*

[சிக்குதல் = ஒன்றனுள் அகப்படுதல். சிக்கு → சிக்கடம்]

சிக்கடி[1] *śikkaḍi*, பெ. (n.) அவரை *(பிங்.);* field-bean.

தெ. சிக்குடு

சிக்கடி[2] *śikkaḍi*, பெ. (n.) சிக்கல்[1] பார்க்க (வின்.); see *śikkal*[1].

[சிக்கு[3] → சிக்கல் → சிக்கலி → சிக்கடி]

சிக்கடி[3]**-த்தல்** *śikkaḍi-*, 4 செ.கு.வி. (v.i.) சிக்கு நாற்றமடித்தல் (வின்.); to give out bad smell, as of oily stink.

[சிக்கு = நாற்றம். சிக்கு[5] + அடி-,]

சிக்கடி[4]**-த்தல்** *śikkaḍi-*, 4 செ.கு.வி. (v.i.) குழறுபடி செய்தல்; to complicate, confuse.

[சிக்கு[1] + அடி-,]

சிக்கடிமுக்கடி *śikkaḍi-mukkaḍi*, பெ. (n.) சிக்கல்[1] பார்க்க; see *śikkal*[1].

[சிக்கடி[2] + முக்கடி]

சிக்கணப்பதம் *śikkaṇa-p-padam*, பெ. (n.) சிக்குப்பாகம் பார்க்க; see *śikku-p-pāgam*.

ம. சிக்கணபதம்

[சிக்கணம் + பதம்]

சிக்கணப்பாகம் *śikkaṇa-p-pāgam*, பெ. (n.) சிக்குப்பாகம் பார்க்க; see *śikku-p-pāgam*.

ம. சிக்கணபாகம்

[சிக்கணம் + பாகம்]

சிக்கணம் *śikkaṇam,* பெ. (n.) மழமழ வென்றுள்ளது (நன். 273, மயிலை.); that which is glossy or slippery.

ம. சிக்கணம்; Skt. cikkaṇam

[சிக்கு → சிக்கணம். 'அணம்' சொ.ஆ. ஈறு]

சிக்கத்துப்புழுதி *śikkattu-p-puḻudi,* பெ. (n.) உழுதும் விதைக்கப்படாதுள்ள நன்செய் (C.G.); wet land ploughed but not sown.

[சிக்கறுத்தபுழுதி → சிக்கறுத்துப்புழுதி → சிக்கத்துப்புழுதி (மரூஉ.). பூழ்தி = மண் துகள். பூழ்தி → புழுதி]

சிக்கம்[1] *śikkam,* பெ. (n.) சீப்பு; comb. "சிகைத் தொழிற் சிக்கமும்" (பெருங். உஞ்சைக். 57:36).

க. சிக்கடி; தெ. சிக்கண்டெ

[சிக்கு[3] → சிக்கம்]

[ஒ.நோ. அக்கு - அக்கம்]

சிக்கம்[2] *śikkam,* பெ. (n.) மெலிவு (திவா.) emaciation, waste.

[சிக்கு[2] → சிக்கம்]

சிக்கம்[3] *śikkam,* பெ. (n.) சிறைச்சாலை (வின்.); prison.

[சிக்கு[1] → சிக்கம்]

சிக்கம்[4] *śikkam,* பெ. (n.) 1. ஈயம்; lead. 2. வெள்ளி; silver. 3. செம்பு; copper.

சிக்கம்[5] *śikkam,* பெ. (n.) 1. உறி; a net-work of rope or a string-loop for suspending pots. "தூதையிற் சிக்கங் கரஞ்சேர்த்து" (பதினொ. ஆளு. திருவந். 66). 2. வலை; net. 3. வலைப்பை முதலியன (வின்.); net-work, bag of net-work. 4. பின்னல்; net of hair. 5. வால்மிளகு; tail-pepper, cubeb. 6. மூக்கணாங் கயிற்றுக்கு மாறாகக் கன்றுக்குட்டியின் வாயைச் சுற்றிக் கட்டும் கயிறு; rope tyed around the face of calf.

மறுவ. முகரைக் கயிறு

க. சிக்க.

[சிக்கு[1] → சிக்கம்]

சிக்கம்[6] *śikkam,* பெ. (n.) 1. குடுமி. (பிங்.); tuft of hair on the crown of the head. 2. உச்சி (அக.நி.); crown of the head.

[சிக்கு[3] → சிக்கம்]

சிக்கம்பலகை *śikkam-palagai,* பெ. (n.) சிக்குப் பலகை (இ.வ.) பார்க்க; see *śikku-p-palagai.*

[சிக்குப்பலகை → சிக்கம்பலகை]

சிக்கம்போடு[1]**-தல்** *śikkam-pōḍu-,* 18 செ. குன்றாவி. (v.t.) ஓகப்பயிற்சியில், காலினையும் கழுத்தையும் அசையா வண்ணம் இணைத்து முடிச்சுப்போடல்; a string-hoop fastening to the legs and the neck with a view to restrict the movements of the body so as to support the posture in yoga practice.

[சிக்கம்[5] + போடு-,]



சிக்கம்போடு[2]**-தல்** *śikkam-pōḍu-,* 14 செ.குன்றாவி. (v.t.) மூக்கணாங் கயிற்றுக்கு மாறாகக் கன்றுகுட்டியின் வாயைச் சுற்றிக் கயிறு கட்டுதல்; to tie a rope around the face of calf.

[சிக்கம்[5] + போடு-,]

சிக்கர்[1] *śikkar,* பெ. (n.) சிக்கரத்தெளியல் (திவா.) பார்க்க; see *śikkara-t-teḷiyal.*

ம. சிக்கிர்

[சீக்கிரி → சிக்கர். சீக்கிரி = ஒருவகை மரம்]

சிக்கர்[2] *śikkar,* பெ. (n.) தலைநோவுடையார்; persons suffering from headache. "சிக்கர் சிதடர்" (சிறுபஞ். 76)

[சிக்கல்[3] → சிக்கர். 'அர்' - பலர்பாலீறு]

சிக்கரத்தெளியல் *śikkara-t-teḷiyal,* பெ. (n.) உசிலம்பட்டையிலிருந்து இறக்குங் கள்; toddy extracted from sirissa bark. "உக்கிர வூறலுஞ் சிக்கரத் தெளியலும்" (பெருங்.இலாவாண. 2:180)

[சிக்கர் + தெளியல். தெளி → தெளிவு, தெளியல் = பதநீர்]

சிக்கரத்தெளிவு *śikkara-t-teḷivu,* பெ. (n.) சிக்கரத்தெளியல் பார்க்க; see *śikkara-t-teḷiyal.*

[சிக்கரத்தெளியல் → சிக்கரத்தெளிவு]

சிக்கல்[1] *śikkal,* பெ. (n.) 1. தாறுமாறு; tangle. 2. பின்னல்; plaiting. 3. கோளாறு; complication. 4. அருமைப்பாடு; முட்டுப்பாடு; difficulty. 5. குழப்பம், தடுமாற்றம்; embarrassment.

ம. சிக்கல்

[சிக்கு[1] → சிக்கல்]

சிக்கல்[2] *śikkal,* பெ. (n.) இளைக்கை (சூடா.); leanness, emaciation.

[சிக்கு[2] → சிக்கல்]

சிக்கல்[3] *śikkal,* பெ. (n.) காந்தக் கல்வகையைச் சேர்ந்த காக்கைக்கல் (யாழ்.அக.); a kind of black load-stone.

சிக்கல்[4] *śikkal,* பெ. (n.) தலைநோய்; head ache.

[சிக்கு[6] → சிக்கல்]

சிக்கல்[5] *śikkal,* பெ. (n.) மாட்டிக்கொள்ளல் (கழ.அக.); entangling, ensnaring.

[சிக்கு[1] → சிக்கல்]

சிக்கல்நெய் *śikkal-ney,* பெ. (n.) நாட்பட வைத்திருப்பதால் சிக்குநாற்றம் ஏற்பட்ட நெய்; stale-ghee from age or long keeping.

[சிக்கு[1] → சிக்கல். சிக்கு + நெய்]

சிக்கல்பிக்கல் *śikkal-pikkal,* பெ. (n.) சிக்கல்[1] (இ.வ.) பார்க்க; see *śikkal*[1].

[சிக்கல் + பிக்கல்]

சிக்கலாட்டம் *śikkalāṭṭam,* பெ. (n.) சிக்கல்[1] (இ.வ.) பார்க்க; see *śikkal*[1].

[சிக்கல் + ஆட்டம்]

சிக்கவுரை-த்தல் *śikka-v-urai-,* 4 செ.குன்றாவி. (v.t.) சுருக்கமாகக் கூறுதல்; to speak shortly.

[சிக்கம் + உரை-,]

சிக்கவை-த்தல் *śikkavai-,* 4 செ.குன்றாவி. (v.t.) மாட்டச் செய்தல்; to cause oneself to be caught, to be caught. வகையாகச் சிக்கவைத்து வேடிக்கை பார்க்கிறார்.

க. சிக்கிசு

[சிக்கு → சிக்க + வை-,]

சிக்கறு-த்தல் *śikkaṟu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. நூல் முதலியவற்றிற் சிக்குவிடுத்தல்; to unite a knot, disentagle. 2. சிக்கலானதைத் தீர்த்தல்; to settle an intricate business; to cut the gordian knot. 3. துறவறம்புகுதல் (வின்.); to give up wordly attachment; to become an ascetic.

[சிக்கு[1] + அறு-,]

சிக்கறுக்கி *śikkaṟukki,* பெ. (n.) சிடுக்குவாரி (வின்.); a kind of comb.

ம. சிக்கறுக்கி; க. சிக்கடிகெ, சிக்கணிகெ, சிக்கடி; தெ. சிக்கண்டு, சிக்கண்டெ

[சிக்கு[1] + அறுக்கி]

சிக்கறுப்பான் *śikkaṟu-p-pāṉ,* பெ. (n.) சிடுக்குவாரி பார்க்க; see *śiḍukku-vāri.*

[சிக்கு[1] + அறுப்பான்]

சிக்கறுப்பு *śikkaṟuppu,* பெ. (n.) முடிவு; decision.

[சிக்கு + அறுப்பு. அறு → அறுப்பு = அறுத்தல், தீர்வு, முடிவு]

சிக்கனப்பாகம் *śikkaṉa-p-pāgam,* பெ. (n.) சிக்குப்பாகம் (பைஷஜ. 6) பார்க்க; see *śikku-p-pāgam.*

ம. சிக்கணபாகம்

[சிக்குப்பாகம் → சிக்கனப்பாகம்]

சிக்கனப்பாகம் *śikkaṉa-p-pāgam,* பெ. (n.) கல்கத்தைத் திரட்டும்போது கையில் ஒட்டாமல் மாத்திரை உருட்டுவதற்குப் பதமாகவிருக்கும் நிலை; that stage to which a thick consistence of medicine is so rendered as to be free from being sticky with a view to make them into pills.

[சிக்கனம் + பாகம்]

சிக்கனம்[1] *šikkaṉam,* பெ. (n.) செட்டு (உ.வ.); thrift.

[சிக்கு[1] + அனம்]

சிக்கனம்[2] *šikkaṉam,* பெ. (n.) கஞ்சத்தனம்; niggardness.

[சிக்கு + அனம்]

சிக்கனம்[3] *šikkaṉam,* பெ. (n.) பாக்கு; areca-nut *(சா.அக.).*

ம. சிக்க, சிக்கணி, சிக்கனம்

[சிக்கு + அணம் = சிக்கணம் → சிக்கனம்]

சிக்கனவு *šikkaṉavu,* பெ. (n.) *1.* திண்மை *(ஈடு, 5.8:3);* வலிமை; hardness, strength. *2.* மனவன்மை; hardness of heart. "அஞ்சத்தக் கதுன் சிக்கனவே" *(திருக்கோ. 343). 3.* மனவுறுதி; firmness of mind. "சிக்கனவுடனே நின்று" *(திருவாலவா. 56:8). 4.* சிக்கனம்[1] பார்க்க; see *šikkaṉam[1].*

[சிக்கனம் → சிக்கனவு]

சிக்காரம் *šikkāram,* பெ. (n.) அழுகை *(சா.அக.);* lamentation, weeping.

[சிக்கு → சிக்கம் + ஆரம் = சிக்காரம்]

சிக்கிமுக்கி *šikkimukki,* பெ. (n.) நெருப்புண்டாக்குங் கல்; flint used in producing fire.

மறுவ. தீத்தட்டி

[சக்கிமுக்கி → சிக்கிமுக்கி]

சிக்கு[1]-தல் *šikku-,* 5 செ.குவி. (v.i.) *1.* சிக்குப்படுதல்; to become entangled, complicated. *2.* இறுகுதல்; to be tightened, as a knot. "புயஞ் சிக்கயாத்தபின்" *(பாரத. வாரணா.5). 3.* ஒன்றனுள் அகப்படுதல்; to be caught, ensnared. "பொதிந்து சிக்க... மறையக்காப்பின்" *(சீவக. 1890). 4.* கிடைத்தல்; to be obtained. "தரிப்பிடந்தான் — தெருவாச் சிக்கினதும்" *(தனிப்பா. 1, 323, 18)*

ம., சிக்குக; க. சிக்கு, சிகு, சிர்கு, சிலிகு, சிலுகு; தெ., கோத. சிக்கு; து. சிக்குனி, திக்குனி; பட., குவி. சிக்கு; துட. திக்க்; கூ. செக்ப; கொண். சிர்கானா; கொலா. சிக்க் (தொங்குதல்): பர். சிர்ங்க்

[சிலுக்கு → சிக்கு-,]

சிக்கு[2]-தல் *šikku-,* 5 செ.குவி. (v.i.) இளைத்தல் *(குடா.);* to become lean or emaciated.

தெ. சிக்கு

சிக்கு[3] *šikku-,* பெ. (n.) *1.* நூல் முதலியவற்றின் சிக்கு, முறுக்கு; tangle, twist. "சிக்கறத் தெரிந்த நூல்" *(கம்பரா. சித்திர. 32). 2.* சிக்கலாயிருப்பது; intricry, complication. *3.* கண்ணி *(இ.வ.);* snare, entanglement. *4.* மாட்டிக்கொள்ளுகை; being caught or entangled. *5.* தடை; obstacle, impediment.

ம. தெ. சிக்கு; க., து., பட. சிக்கு

[சிலுக்கு → சிக்கு]

சிக்கு[4] *šikku-,* பெ. (n.) *1.* ஐயம்; doubt. "சிக்கறத் தெளிந்தேன்" *(கம்பரா. அனுமப். 21). 2.* உறுதி; firmness. "சிக்குறச் சேமஞ் செய்தாள்" *(கம்பரா. சடாயு. 69).*

சிக்கு[5] *šikku-,* பெ. (n.) *1.* எண்ணெய்ச்சிக்கு; stickiness of hair, due to oil. *2.* சிக்குநாற்றம்; rancid smell of oil or ghee on clothes, etc., "கூந்தறானுஞ் சிக்குமே னாறுமே" *(திருவாலவா. 16:23). 3.* மாசு *(யாழ்ப்);* stain.

[சிலு → சிலுத்தல் = சோறு பதனழிதல், பதனழிதல். சிலு → சிலுக்கு → சிக்கு = பதனழிதலினின்று தோன்றும் முடை நாற்றம்]

சிக்கு[6] *šikku-,* பெ. (n.) வெட்கம் *(இ.வ.);* modesty, shame.

க., பட. சிக்கு; தெ. சிக்கு

[வெட்கு → வெக்கு → எக்கு. க. எக்கு = நாணம். எக்கு → (செக்கு) → சிக்கு]

சிக்குக்கழித்தல் *šikku-k-kaḻittal,* பெ. (n.) திருமணக்காலத்தில் மணமகனுக்குச் செய்யும் மயிர்கழி சடங்கு; ceremony of shaving the hair of the bridegroom, preliminary to marriage.

[சிக்கு + கழித்தல்]

சிக்குச்சிலுகு *šikku-c-cilugu,* பெ. (n.) *1.* தொல்லை (தொந்தரவு); hindrance, trouble. *2.* தடை (வில்லங்கம்); encumbrance. *3.* சிக்கலானது; intricacy.

தெ. சிலுகு

[சிக்கு[3] + சிலுகு. மீமிசைப் பொருள் மரபிணை மொழி]

சிக்குச்சிலுவு *šikku-c-ciluvu,* பெ. (n.) சிறு தொடர்பு (இ.வ.); slight connection.

[சிக்கு³ + சிலுவு]

சிக்குச்சிறகு *šikku-c-ciragu,* பெ (n.) சிக்கல்; tangle. "மேலேயிருக்கிற சிக்குச் சிறகெல்லாம் அறுத்துவிட்டு" (தமிழறி. 38).

[சிக்கு + சிறகு. மோனை நோக்கி வந்த இணைமொழி]

சிக்குண்டாக்கு-தல் *šikkundākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) சிக்கு ஏற்படுத்துதல்; to cause to become entangled or ensured, to entangle, ensnare.

க. சிக்குசு

[சிக்கு + உண்டாக்கு-,]

சிக்குண்(ணு)-தல் *šikkunnu-,* 12 செ.கு.வி. (v.i.) *1.* படுமுடிச்சுப்படுதல்; to be entangled; to form into an inextricable knot. *2.* அகப்படுதல்; to be caught.

[சிக்கு + உண்-,]

சிக்குத்தலை¹ *šikku-t-talai,* பெ (n.) முடை நாற்றமுள்ள தலை; rancid smell of hair.

[சிக்கு + தலை]

ஈரத்தோடு எண்ணெய்யைத் தடவுதலாலும் பதனழிந்த எண்ணெயைத் தடவுதலாலும் அளவுக்கதிகமாக தலையில் வேர்வை சுரந்து அதனை உரிய முறையில் தூய்மைப்படுத்திக் கொள்ளாமையாலும் ஏற்படும் முடைநாற்றம், சிக்கு நாற்றமாகும்.

சிக்குத்தலை² *šikku-t-talai,* பெ (n.) *1.* சிக்குப் பிடித்த தலை; an entangled head of lair. *2.* சடைமுடி; matted locks of hair.

க. சிக்குதலெ

[சிக்கு + தலை]

சிக்குப்படு-தல் *šikku-p-padu-,* 20 செ.கு.வி. (v.i.) வெட்கப்படுதல்; to be ashamed, to beshy or baseful.

தெ., பட. சிக்கு படு

[சிக்கு + படு-,]

சிக்குப்பலகை *šikku-p-palagai,* பெ. (n.) பொத்தகத்தைப் பிரித்து வைத்துப் படிப்பதற்கு ஏந்தாகவிருக்கும் பலகைச் சட்டம்; wooden folding frame for keeping book while reading.

[சிக்கு + பலகை]

இரு பலகைகளை ஒன்றுடனொன்று நடுவில் சிக்கவைத்து அமைக்கப்பட்ட பலகை. மேலானதெனக் கருதும் நூலைத் தரையில் வைத்துப் படிப்பது குற்றமெனக் கருதி, இப் பலகையின் மீது வைத்துப் படிப்பர். இங்ஙனம் செய்வது, நூலின் கட்டுகோப்புக் குலையாமலிருக்கவும் உதவும்.



சிக்குப்பாகம் *šikku-p-pāgam,* பெ. (n.) மருந்தெண்ணெய்ப் பக்குவத்துள் கையில் ஒட்டிக் கொள்ளக்கூடியதான பக்குவம் (தைலவ. பாயி. ஷ43); viscous condition, as of a medicinal preparation.

ம. சிக்கணபாகம்

[சிக்கு³ + பாகம்]

சிக்குப்பாடு *šikku-p-pādu,* பெ. (n.) சிக்குப்பிக்கு (இ.வ.) பார்க்க; see *šikku-p-pikku.*

[சிக்கு³ + பாடு]

சிக்குப்பிக்கு *šikku-p-pikku,* பெ. (n.) *1.* சிக்கலாயிருப்பது (இ.வ.); complication. *2.* விளங்காப்புதிர்; intricacy.

[சிக்கு³ + பிக்கு. எதுகை நோக்கி வந்த இணைமொழி]

சிக்குமுக்கி *šikku-mukki,* பெ. (n.) சிக்கிமுக்கி பார்க்க; see *šikki-mukki.*

ம. சக்குமுக்கி, சக்கிமுக்கி, சக்குமுக்கு; க. சக்கமுக்கி; தெ. சக்கிமுக்கி; Turk. cakmuk.

[சக்கிமுக்கி → சிக்குமுக்கி]

சிக்குமுக்கி = தேய்த்துத் தீமூட்டிப் பயன் படுத்தப்படுஞ் சிக்கிமுக்கிக்கல், தொல் பழங்காலத்திலேயே புழக்கத்திலிருந்தது.

சிக்குயத்தி *šikkuyatti*, பெ. (n.) *சதகுப்பி;* bishop's weed *(சா.அக.).*

சிக்குரு *šikkuru*, பெ. (n.) முருங்கை (பிங்.); drum-stick tree *(சா.அக.).*

சிக்குருப்பூ *šikkuru-p-pū*, பெ. (n.) முருங்கை *மலர்;* flowers of drum-stick tree *(சா.அக.).*

சிக்குவலை *šikku-valai*, பெ. (n.) வலை வகையுளொன்று (மீனவ.); a kind of trap net.

[சிக்கு + வலை]

சிக்கு = அகப்படு, பிடி, கிட்டு.

சிக்குவாங்கி *šikku-vāṅgi*, பெ. (n.) சிக்குவாரி (வின்.) பார்க்க; see *šikku-vāri.*

[சிக்கு³ + வாங்கி. வாங்கு → வாங்கி. 'இ' வினை முதலீறு]

சிக்குவாங்கு-தல் *šikku-vāṅgu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மயிர் முதலியவற்றிற் சிக்கலெடுத்தல் (வின்.); to disentagle. 2. முடிச்சவிழ்த்தல், *தளர்த்துதல்;* unravel, untie.

க. சிக்குபிடிசு; பட. சிக்குபுடிசு

[சிக்கு³ + வாங்கு-,]

சிக்குவாரி *šikku-vāri*, பெ. (n.) ஒரு வகைச் *சீப்பு;* a kind of comb.

[சிக்கு³ + வாரி. வாரி = வார்கருவி]



சிக்குவை¹ *šikkuvai*, பெ. (n.) 1. நாக்கு; tongue. 2. தண்ணீர் விட்டான் கிழங்கு (தைலவ. தைல. 73); climbing as paragus.

[சிகுவை → சிக்குவை]

சிக்கெடு-த்தல் *šikkedu-*, 4 செ.குன்றாவி. (v.t.) சிக்குவாங்கு- பார்க்க; see *šikkuvāṅgu-.*

க. சிக்குபிடிசு; பட. சிக்கெந்து, சிக்குபுருசு

[சிக்கு + எடு-,]

சிக்கென்(னு)-தல் *šikkeṉṉu-*, 2 செ.கு.வி. (v.i.) *இறுகுதல்;* to become hardened, as the ground. "நிலனாய்ச் சிக்கென்பதுவும்" *(மணிமே. 27:143)*

[சிக்கு³ + என்-,]

சிக்கென *šikkeṉa*, கு.வி.எ. (adv.) 1. *உறுதியாக;* firmly tenaciously. "எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்" *(திருவா. 37:5).* 2. *இறுக;* tightly, closely. "கண்ணெனும் புலங்கொள் வாயுஞ் சிக்கென வடைத்தேன்" *(கம்பரா. உலா. 14).* 3. கையிறுக்கமாக (கருமியாக); niggardly. "பெரும் பொருளை......... பிறர்க்கு வழங்காதே சிக்கெனக் கட்டிவையா தொழிமின்" *(பு.வெ. 10: காஞ்சிப். 2, உரை).* 4. *விரைவாக;* quickly, promptly. "அக்கமுங் காசுஞ் சிக்கெனத் தேடு" *(கொன்றைவே.)*

ம. சிக்கனெ, சிக்கனே; க. சக்கன, செக்கனெ, சக்கனை; தெ. செச்ச. து. சக்க; துட. திக்ச்ன் (எதிர்பாராமல்) Pkt. šigkh

[சிக்கு³ + என]

சிக்கெனப்பிடி-த்தல் *šikkeṉa-p-pidi-*, 4 செ.குன்றாவி. (v.i.) 1. *உறுதியாகப் பிடித்தல்;* to catch firmly, tenaciously. 2. *இறுக்கமாகப் பிடித்தல்;* to catch tightly. 'சிலவேளைகளில் பழமையை நாம் சிக்கெனப் பிடித்துக் கொள்ளுகிறோம்' *(உ.வ.).*

[சிக்கு³ + என + பிடி-,]

சிக்கெனவு *šikkeṉavu*, பெ. (n) 1. *உறுதி;* firmness, tenacity. 2. *கையிறுக்கம்;* niggardliness, closefistedness.

க. சிகணி; தெ. சிக்கனி

[சிக்கு³ + எனவு]

சிக்கோளிக்குழல் *šikkōḷi-k-kuḻal*, பெ. (n.) *ஆதொண்டை;* Ceylon caper *(சா.அக.).*

[சிக்கோளி + குழல்]

சிகண்டி[1] *šigandi*, பெ. (n) 1. துருபதனுக்குப் பெண்ணாகப் பிறந்து பின் தேவன் ஒருவனால் ஆணுருவடைந்து பாரதப்போரில் வீடுமன் உயிர் நீங்குதற்குக் காரணமாயிருந்த கதை மாந்தர்; a character as son of Drupada who, originally a female exchanged sex with a Yakṣa and brought about the death of Bhīṣma in the Bhārata war. 2. அலி; hermaphrodite.

சிகண்டி[2] *šigandi*, பெ. (n) 1. பாலைப்பண்ணுள் ஒன்று (பிங்.); a secondary melody-type of the pālai class. 2. இசை நுணுக்கம் என்ற நூலின் ஆசிரியர் (சிலப். உரைப்பாட்டு மடை); a sage, author of Išai-nuṇukkam. 3. தொல்லை கொடுப்பவன்; troublesome, obstinate person. 4. கஞ்சன்; miser.

சிகண்டி[3] *šigandi*, பெ. (n.) சிற்றாமணக்கு (மலை.); castor plant.

சிகண்டி[4] *šigandi*, பெ. (n.) மயில்; peacock. "நீலச் சிகண்டியிலேறும் பிரான்" (கந்தரலங். 26). 2. கொண்டையுடன் கூடிய திருமால் (இலக்.அக.); Tirumal, as having a knotted tuft of hair on his head.

சிகண்டிகை *šigandigai*, பெ. (n.) கருங்குன்றி (மூ.அ.); a black species of bead vine.

சிகத்துப்புழுதி *šigattu-p-puḷudi*, பெ. (n) சிக்கத்துப்புழுதி (R.T.) பார்க்க; see *šikkattu-p-puḷudi*.

[சிக்கத்துப்புழுதி → சிகத்துப்புழுதி]

சிகதம் *šigadam*, பெ. (n.) சிகதை பார்க்க; see *šigadai*. "சிகதத்தினா லிலிங்கமு மாற்றி" (வேதாரணி. மணவாள. 19).

[சிகதை → சிகதம்]

சிகதாமூத்திரம் *šigadā-mūttiram*, பெ. (n.) சிறுநீரில் கல்விழும் நோய் (இங்.வை.); gravel, a disease of the kidneys.

சிகதை *šigadai*, பெ. (n.) 1. வெண்மணல்; white sand. "சிலையி னீரிற் சிகதையில்" (சிவதரு. பாவவி. 60). 2. மணற்குன்று; sand-hill.

சிகப்பகில் *šigappagil*, பெ. (n.) மலைக் கொன்றை (L.); shingle tree.

[சிவப்பு → சிகப்பு + அகில்]

சிகப்பு *šigappu*, பெ. (n.) சிவப்பு பார்க்க; see *šivappu*.

ம. சிகப்பு, செமப்பு; க. கெம்பு; பட. கெப்பு

[செவ் → செவ → சிவ → சிவப்பு → சிகப்பு]

சிகப்புக்கலவாய் *šigappu-k-kalavāy*, பெ. (n.) மூன்றடிக்குமேல் வளரக்கூடியதும் உடலில் வெள்ளைப்புள்ளிகளைப் பெற்றதுமான கடல்மீன் வகை; a species of white - spotted sea - fish attaining more than 3 ft. in length.

[சிகப்பு + கலவாய்]



சிகப்புக்கலவாய்

சிகரியந்தம் *šigari-y-andam*, பெ. (n.) புல்லுருவி (மலை.); species of loranthus.

சிகல்[1](லு)-தல் *šigal-*, 13 செ.கு.வி. (v.i.) 1. குறைதல்; to diminish, decrease. 2. கெடுதல்; to perish.

[சிதை → கெடு. சிதை → சிகை → சிகல்-,]

சிகல்[2] *šigal*, பெ. (n.) 1. குறைவு; want. 2. கேடு; ruin.

[சிறுகுதல் → சிகல்]

சிகல்[3] *šigal*, பெ. (n.) தொழில்; action, deed. "அச்சிகலாலே..... நாதனானவன்" (திருவிருத். 68, பக்.358).

[செயல் → சியல் → சிகல்]

சிகை[1] *šigai*, பெ. (n.) *1. எஞ்சியது;* that which is left; remainder. *"சிகை கிடந்த வூடலில்" (பரிபா. 7:70). 2. வட்டி;* interest on money lent. *"இவனிட்ட காசு......சிகைக்கு அடிப்பிக்கும்" (ஈடு, 4.9.6).*

[இகை → சிகை]

சிகை[2] *šigai*, பெ. (n.) *1. தொடர்பு;* wordly ties. *"பிறவிச் சிகையறவே" (கந்தரந். 50). 2. உண்டிக் கவளம்;* mouthful of cooked rice. *"மறுசிகை நீக்கி யுண்டாரும்" (நாலடி, 1).*

[சிக்கு → சிகை]

சிகை[3] *šigai*, பெ. (n.) *நிலுவை;* arrears. *"கீழாண்டைச்சிகை வாசியா நின்றார்" (ஈடு, 1.4:7).*

சிகைக்காய் *šigai-k-kāy*, பெ. (n.) *1. சீயக்காய் மரம் (பதார்த்த.721);* soap pod wattle. *2. சீயக்காய் பார்க்க;* see *šīya-k-kāy*.

ம. சீக்கக்காய், சீவக்காய், சீவய்க்க, சீனிக்கா, சீயக்கா, சீக்கக்காயி; க. சீகெகாயி; தெ. சீகாய; து. சீகெகாயி, சீகெ; துட. சிங்க்.

[சீய்க்காய் → சிகைக்காய்]

சிகையறு-தல் *šigai-y-aṟu-*, 4 செ.குன்றாவி. (v.i.) *முற்றும் அழிதல்;* to be ruined or destroyed completely. *"ப்ராரப்த பாபவிசேஷஞ் சிகையறுகிறதென்கிற ஸந்தோஷமும் நடையாடிற் றாகில்" (ரஹஸ்ய. 478).*

சிகையானகாசு *šigai-y-āṉa-kāšu*, பெ. (n.) *1. மொத்தமாகச் சேர்ந்த காசு;* accumulated money. *2. ஒரு தொகையாகத் தங்கி நின்ற காசு;* the accumulation of money to the required amount. *"கணக்கு கெட்டு, இப்பெயரால் சிகையான காசு தண்ட" (தெ.க.தொ. 12, க.199)*

சிங்கசல்லியம் *šiṅga-šalliyam*, பெ. (n.) *கருங்காலி மரவகை;* black sundara tree *(சா.அக.).*

சிங்கட்டான் *šiṅgaṭṭāṉ*, பெ. (n.) *முள் வேங்கை (L);* thorny blue-druped featherfoil.

சிங்கடாபருப்பு *šiṅgaḍa-paruppu*, பெ. (n.) *ஒரு கொட்டையின் பருப்பு;* the pulp in the seed of the plant trapa bispinosa *(சா.அக.).*

சிங்கடியப்பன் *šiṅgaḍi-y-appaṉ*, பெ. (n.) *சிங்கடியென்ற பெண்ணுக்குத் தந்தையாகக் கொள்ளப்பட்ட சுந்தரமூர்த்தி நாயனார்;* Šundaramūrtti-nāyaṉār, as the foster-father of Siṅgaḍi. *"சித்தம் வைத்த புகழ்ச் சிங்கடி யப்பன்" (தேவா. 735, 11).*

[சிங்கடி + அப்பன்]

சிங்கணம் *šiṅgaṇam*, பெ. (n.) *வீரராசேந்திரன் வென்ற நாடுகளுள் ஒன்று; இந்நாடு கங்க நாட்டிற்குக் கீழ்த்திசையிலிருந்தது;* a country conquered by the Chola king Vīrarājendra, which is located by the east of 'Gaṅga nāḍu'. *"சேரனைச் சிறைகொண்டு சிங்கண தேசம் அடிப்படுத்து" (தெ.க.தொ. 17, க. 301).*

சிங்கமெழுது-தல் *šiṅgam-eḻudu-*, 5 செ.கு.வி. (v.i.) *உடம்பில் தோன்றும் வெப்பு நோயான அக்கியைப் போக்க குயவரால் செம்மண் பூசப் பெறுதல்;* to paint with red ochre on the herpes as a cure, generally done by a potter.

[செக்கர் → செங்கர் → செங்கம் → சிங்கம் + எழுது-,]

சிங்கரந்தகம் *šiṅgarandagam*, பெ. (n.) *இரு மலையும் நாட்பட்ட சளியையும் போக்கும் தூதுவளை என்னும் மூலிகை;* three-lobed night shade.

சிங்கல்[1] *šiṅgal*, பெ. (n.) *1. குறைகை;* diminishing, drooping. *"சிங்கலி வருமறை" (கம்பரா. கடிமண. 48). 2. இளைப்பு (பிங்.);* weakness, exhaustion

[சிக்கு → சிக்கல் → சிங்கல்]

செங்காரித்தல் பார்க்க.

சிங்கல்[2] *šiṅgal*, பெ. (n.) *1. இளைத்தல்;* fainting, drooping. *2. இளைப்பு நோய்;* exhaustion *(சா.அக.).*

[சிங்கு → சிங்கல். 'அல்' தொ.பெ. ஈறு]

சிங்கலாட்டம் *šiṅgal-āṭṭam*, பெ. (n.) *சிக்கல்*[1] *பார்க்க;* see *šikkal*[1].

[சிக்கல் + ஆட்டம் → சிக்கலாட்டம் → சிங்கலாட்டம்]

சிங்கலை *śiṅgalai,* பெ. (n.) தொல்லை, தடை, சொத்துரிமையிலுள்ள தடை முதலியன (இ.வ.); incumbrance; tangle of difficulties.

[சிக்கல் → சிக்கலை → சிங்கலை]

சிங்கவல்லி *śiṅgavalli,* பெ. (n.) தூதுவளை (தைலவ. பாயி. 57); three-lobed night shade.

[சிக்கு → சிங்கு + வல்லி]

சிங்கவாழை *śiṅga-vāḻai,* பெ (n.) சிங்கன் வாழை (யாழ்ப்.) பார்க்க; see *śiṅgaṉ-vāḻai.*

[சிங்கன் வாழை → சிங்கவாழை]

சிங்களத்தி *śiṅgaḷatti,* பெ. (n.) சிங்கள நாட்டவள்; Sinhalese woman.

[சிங்களம் → சிக்களத்தி]

சிங்களன் (ஆ.பா.) - சிங்களத்தி (பெ.பா.)

சிங்களம் *śiṅgaḷam,* பெ (n.) 1. இலங்கை (நன். 272, மயிலை); Ceylon. 2. பதினெண் மொழிகளுள் ஒன்றாகிய சிங்களமொழி (திவா.); Siṅhalese language. 3. சிங்களவர்க்குரியதாய்த் தமிழில் வழங்குங் கூத்துவகை (சீவக. 672, உரை.); a mode of dancing with gesticulation peculiar to the Siṅhalese.

சிங்களமருந்து *śiṅgaḷa-marundu,* பெ. (n.) சிங்கள மருத்துவர் செய்து தரும் மருந்து வகை (யாழ்ப்.); a medicine prepared by Siṅhalese physicians, said to be very effective, dist. for Tamiḻ-marundu.

[சிங்களம் + மருந்து]

சிங்களர் *śiṅgaḷar,* பெ (n.) சிங்களத் தீவில் வாழ்வோர்; the Siṅhalese. "சிங்களர் வங்களர்" (கலிங். 318).

[சிங்களம் → சிங்களர். 'அர்' பலர்பாலீறு]

சிங்களவன் *śiṅgaḷavaṉ,* பெ. (n.) சிங்கள நாட்டான்; man of Siṅhaḷa country.

[சிங்களம் → சிங்களவன். 'அன்' - ஆண் பாலீறு]

சிங்களன் *śiṅgaḷaṉ,* பெ. (n.) சிங்களவன் (வின்.) பார்க்க; see *śiṅgaḷavaṉ.*

[சிங்களவன் → சிங்களன்]

சிங்களாந்தகன் *śiṅgaḷāndagaṉ,* பெ. (n.) ஈழத்தை வென்ற சோழமன்னன்; name of the Cōḻa king.

சிங்கன் *śiṅgaṉ,* பெ. (n.) குறவன் (குற்றா.குற.); man of the fowler tribe.

தெ. சிங்கடு

சிங்கன்வாழை *śiṅgaṉ-vāḻai,* பெ. (n.) சிங்கள நாட்டிலிருந்து வந்த வாழை வகை; a variety of plantain introduced from Ceylon.

[சிங்களம் + வாழை]

சிங்கா *śiṅgā,* பெ. (n.) அகவையைக் குறிப்பதாய்க் குதிரைப் பற்களிலுண்டாம் நிற வேறுபாடு (அசுவசா. 6); change in the coloration of horse's teeth indicating its age.

சிங்காடி *śiṅgāḍi,* பெ. (n.) சிங்காணி (வின்.) பார்க்க; see *śiṅgāṇi.*

ம. சிங்காடி; க. சிங்காடி

[சிங்காணி → சிங்காடி]

சிங்காடிக்காய் *śiṅgāḍi-k-kāy,* பெ. (n.) வேங்கைக்காய்; the fruit of kino tree.

[சிங்காடி + காய்]

சிங்காணகம் *śiṅgāṇagam,* பெ. (n.) 1. மூக்குச் சளி; mucous from the nose. 2. மாழைகளின் மாசு; the scoria of molten metals (சா.அக.).

[சிங்காணம் → சிங்காணகம்]

சிங்காணசில்லி *śiṅgāṇa-silli,* பெ. (n.) 1. குடல், வயிறு முதலியவற்றில் உள்ளுறையாய்க் காணப்படும் ஊரற்சவ்வு; the serous membrance which lines the intestines and other internal viscera of the abdominal cavity. 2. மூக்கினுள்ளிருக்கும் சவ்வு; the mucous membrane of the nose (சா.அக.).

[சிங்காணம் + சில்லி]

சிங்காணம் *śiṅgāṇam,* பெ. (n.) மூக்குச்சளி (யாழ்.அக.); mucous.

[சிக்கு → சிக்கணம் = மழமழ வென்றிருப்பது. சிக்கணம் → சிங்கணம் → சிங்காணம்]

சிங்காணி *śiṅgāṇi,* பெ. (n.) உண்டை வைத்து அடிக்கும் ஒருவகை வில் (வின்.); bow for shooting small balls, pellet-bow.

மறுவ. சுண்டுவில்

ம. சிங்காடி; க. சிங்காடி; தெ. சிங்காணி, சிங்கிணி; து. சிங்காணி பிரு, சிங்கணி பிரு; Skt. śiñjini

[சிலும்பு = மரச்சிறாய். சிலும்பு → சிலுங்கு → சிங்கு → சிங்காணி]

சிங்காரக்கிழங்கு *śiṅgāra-k-kiḻaṅgu,* பெ. (n.) சருக்கரை வள்ளிக்கிழங்கு; sweet potato.

[சிங்காரம் + கிழங்கு]

சிங்காரக்கொட்டை *śiṅgāra-k-koṭṭai,* பெ. (n.) 1. வேங்கைமரத்தின் கொட்டை; the nut of a kino tree. 2. முந்திரிக்கொட்டை; cashew nut.

[சிங்காரம் + கொட்டை]

சிங்காரக்கோட்டை *śiṅgāra-k-kōṭṭai,* பெ. (n.) இளமஞ்சள் மலர்ச்செடிவகை; (M.M. 995); primrose willow.

[சிங்காரம் + கோட்டை]

சிங்காரக்கோளி *śiṅgāra-k-kōḷi,* பெ. (n.) வெளுத்த அரளி; common caper.

[சிங்காரம் + கோளி]

சிங்காரம் *śiṅgāram,* பெ. (n.) செந்நிறம்; red colour.

[சும் → செம்பு → செப்பு. செம் → செவ் → செவப்பு → சிவப்பு. செம் + காரம் → செங்காரம் → சிங்காரம். 'காரம்' ஒரு ஈறு. ஒ.நோ. வெண்காரம், அதிகாரம்]

சிங்காரவல்லிக்கொடி *śiṅgāra-valli-k-koḍi,* பெ. (n.) கரும்பசுமை நிறமுள்ள கம்மாறு வெற்றிலை வகை; a kind of betel leaf, dark green and pungent.

சிங்கி[1] *śiṅgi,* பெ. (n.) பின்னல்; that which is woven or plaited. "சிங்கிசெய் கூட்டின்" (ஞானவா.தாம. 4).

[சிங்கு → சிங்கி]

சிங்கி[2] *śiṅgi,* பெ. (n.) 1. கடுக்காய் (மூ.அ.); gall nut. 2. நன்னீரில் வாழ்வதும் ஓரடி நீளம் உடையதுமான மீன்வகை; a fresh-water fish, leaden, attaining more than one ft. in length. 2. நஞ்சு; poison "கோளரா வெயிற்றுச் சிங்கி" (உபதேசகா. சிவ புண்ணிய. 348).

சிங்கி[3] *śiṅgi,* பெ. (n.) 1. குறத்தி (குற்றா.குற.); woman of the fowler tribe. 2. துணங்கைக் கூத்து (சிலப். 5:70, உரை.); a mode of dancing. 3. இராகுவின் தாய் (இலக்.அக.); mother of Rāhu, the ascending node. 4. நாணமற்றவள்; forward, immodest woman.

சிங்கி[4] *śiṅgi,* பெ. (n.) 1. வல்லாரை (மலை.); Indian pennywort. 2. மான்கொம்பு (மூ.அ.); stag's horn.

சிங்கி[5] *śiṅgi,* பெ. (n.) 1. கட்டியினின்று ஊனீர் கசியும் தசை நோய்; an ulcer or sore with a serious discharge. 2. நாவில் வரும் புண் வகை; ulceration of the tongue. 3. மகிழம்பூ; ape-face flower. 4. முப்பத்திரண்டு வைப்பு நஞ்சு வகையுளொன்று; a chemically prepared compound with lead and salpetre as ingredients (சா.அக.). "கலக்குகின்ற வங்கத்தில் இணங்கன் சேர்த்துக் கலந்ததினால் சிங்கி யென்ற பேருமாச்சு" (உரோமரிஷி.சூத். 100).

ம. சிங்கி (நஞ்சு); து. சிங்கி (நஞ்சு)

சிங்கிக்கணமாந்தம் *śiṅgi-k-kaṇa-māndam,* பெ. (n.) குழந்தைகளுக்குச் சரிவரச் செரியாமையினால் ஏற்படும் மாந்தநோய்; aphthae in children tongue due to indigestion.

[சிங்கி + கணம் + மாந்தம்]

சிங்கிகம் *śiṅgigam,* பெ. (n.) 1. கறிமுள்ளிக்கீரை; prickly greens (சா.அக.). 2. சிறுவழுதலை (மலை.); Indian nightshade.

சிங்கிக்குரு *śiṅgi-k-kuru,* பெ. (n.) செம்பின் களிம்பை அகற்றித் தங்கமாக்க, பொன்னாக்க முறைப்படி உருவாக்கப்பட்ட மருந்து; litharage quintessence prepared by an alchemical process. It removes verdigria from copper and as such, can very easily transmute copper into gold (சா.அக.).

சிங்கிகொள்(ளு)-தல் *śiṅgi-koḷḷu-,* 7 செ.குன்றாவி. (v.t.) வயப்படுத்தி, மகிழ்ச்சிக் கூத்தாடச் செய்தல்; to make one dance with joy, to fascinate, charm. "தேராத சிந்தையரைச் சிங்கி கொளுமல்லாமல்" (பிரபோத. 27, 14).

சிங்கிச்செம்பு *śiṅgi-c-cembu,* பெ. (n.) பொன்னாக்க முறைப்படி மிருதார சிங்கியினின்று எடுக்குஞ் செம்பு; copper extracted form litharage by alchemical process *(சா.அக.).*

[சிங்கி + செம்பு]

சிங்கிச்செயநீர் *śiṅgi-c-ceyanīr,* பெ. (n.) தாரம், வீரம் முதலானவற்றையரைத்து ஈயத்திற்குப் பூசி மலர்ந்த பின், இவ்வெடைக்கு ககாரஞ் சேர்த்து இறக்குஞ் செயநீர்; a strong pungent liquid prepared by exposing lead coated with orpiment and corrosive sublimate to night's dew after adding to it a sufficient quantity of borax.

[சிங்கி + செயநீர்]

சிங்கிட்டம் *śiṅgiṭṭam,* பெ. (n.) குடசப்பாலை *(மூ.அ.);* green wase-flower.

சிங்கித்தைலம் *śiṅgi-t-tailam,* பெ. (n.) மிருதார சிங்கியுடன் கெந்தகம், நீலம், இதளியம், படிகாரம், பால்துத்தம், நாலி, பரங்கிப் பட்டை, கடுக்காய், வசம்பு, வெங்காரம், துத்தம் முதலியவற்றைச் சமனெடை சேர்த்து இவற்றுடன் புங்கம்பால், ஒதியம்பால், தேங்காய் எண்ணெய் முதலானவற்றைக் கூட்டிக் காய்ச்சி வடிக்கும் எண்ணெய்; a healing balm prepared with litharge, sulphur, indigo, mercury, alum, white vitriol, aconite, china-bark, gall-nut, sweet flag, borax etc., by grinding the mixture with the juices of poongam, and Indian ash trees together with a sufficient quantity of coconut oil *(சா.அக.).*

[சிங்கி + தைலம்]

சிங்கிப்பிளவை *śiṅgi-p-piḷavai,* பெ. (n.) தசைப் பிளவை நோய் வகையுளொன்று; a kind of anthurax in men; carbuncle *(சா.அக.).*

[சிங்கி + பிளவை]

சிங்கிபற்பம் *śiṅgi-paṟbam,* பெ. (n.) நெஞ்செரிவு, உட்காய்ச்சல், நீர் எரிப்பு முதலான நோய்களைப் போக்கும் சிங்கி பற்பம்; the calcined śiṅgi powder is prescribed for burning of chest, internal fever, high coloured urine, etc.

[சிங்கி + பற்பம்]

சிங்கிமாதழுவாள் *śiṅgi-mādaḻuvāḷ,* பெ. (n.) கவிழ்தும்பை; stooping leucas *(சா.அக.).*

சிங்கிமாந்தக்கணை *śiṅgimānda-k-kaṇai,* பெ. (n.) குழந்தைகளது உடம்பை இளைக்கச் செய்யும் கணைநோய் வகையுளொன்று; a kind of congenital heat affecting children. It is a wasting disease *(சா.அக.).*

[சிங்கி + மாந்தம் + கணை]

சிங்கிமாந்தசுரம் *śiṅgimānda-śuram,* பெ. (n.) குழந்தைகளுக்கு ஏற்படும் காய்ச்சல் நோய் வகை; a kind of convulsive fever of children *(சா.அக.).*

[சிங்கி + மாந்தம் + சுரம்]

சிங்கிமார்க்கம் *śiṅgimārkkam,* பெ. (n.) பொன்னாக்கத்திற்கு மந்தண முறையில் சிங்கிவைப்பு நஞ்சைக் கொண்டு செய்யும் மருந்து; a secret process of alchemical preparation with the aid of litharge *(சா.அக.).*

[சிங்கி + மார்க்கம்]

சிங்கிமுப்பு *śiṅgi-muppu,* பெ. (n.) சிங்கிவைப்பு நஞ்சைக் கொண்டு மந்தண முறையிற் செய்யப்படும் உப்பு வகை; a quintessence salt prepared out of litharge by a secret process *(சா.அக.).*

[சிங்கி + உப்பு. உப்பு → முப்பு]

சிங்கியடி-த்தல் *śiṅgi-y-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. முடக்கிய இருகைகளாலும் விலாப் புறங்களை அடித்துக் கொண்டு கூத்தாடுதல்; to beat the sides with the elbows and dance. 2. வறுமையால் முட்டுப்படுதல்; to be in straightened circumstances; to suffer from poverty. சோற்றுக்குச் சிங்கியடிக்கிறான். 3. பெண்மைக் குணமின்றியொழுகுதல் (வின்.); to behave shamelessly, as a virago. 4. கோலி விளையாட்டிற் கோலியைக் கைமுட்டியால் குழியில் தள்ளுதல் (இவ.); to push marbles with knuckles, in the children's game of marbles.

ம. சிங்கியடிக்குக

[சிங்கி³ + அடி]

சிங்கியடித்தல் = இரப்போன் தாளம் தட்டி இரப்பது போல் திண்டாடுதல் (செல்வி 1943, சுறவம் பக். 108). சிங்கி = தாளம்.

சிங்கிரம் *śiṅgiram,* பெ. (n.) குடசப்பாலை (மலை.); green wax flower.

சிங்கிலி *śiṅgili,* பெ. (n.) 1. குன்றி (மலை.); crab's-eye. 2. புலிதொடக்கி (மலை.); Mysore thorn. 3. இண்டு; a species of sensitive tree. 4. விளையாட்டில் மிகையாக ஒருமுறை ஆடும் ஆட்டம் (இவ.); extra turn which a person is entitled to in games.

சிங்கிவிளையாட்டு *śiṅgi-viḷaiyāṭṭu,* பெ. (n.) மாய விளைவுகளை உருவாக்கும் விளையாட்டு வகையுளொன்று; a kind of magic (சா.அக.).

[சிங்கி + விளையாட்டு]

சிங்கிவைப்பு *śiṅgi-vaippu,* பெ. (n.) சிங்கிவைப்புநஞ்சு,[1] பார்க்க; see *śiṅgi-vaippu-nañju,*[1] (சா.அக.).

[சிங்கி + வைப்பு]

சிங்கிவைப்புநஞ்சு[1] *śiṅgi-vaippu-nañju,* பெ. (n). மச்சமுனி 800இல் சொல்லியபடி அரிதாரம், பச்சை, சிவலிங்கம், வெள்ளை, வீரம், நாகம், சிலை, காரம், சாரம், சூதம் ஆகியவற்றை ஒன்றாய்ப் பொடித்துச் செய்யும் வைப்பு நஞ்சு; a poisonous compound prepared as per process of machamuni as dealt with in his work '800' (சா.அக.).

[சிங்கி + வைப்புநஞ்சு]

சிங்கிவைப்புநஞ்சு[2] *śiṅgi-vaippu-nañju,* பெ. (n.) மிருதார சிங்கி வைப்பு நஞ்சு; impure oxide of lead or litharge (சா.அக.).

[சிங்கி + வைப்புநஞ்சு]

சிங்கிறால் *śiṅgiṟāl,* பெ. (n.) ஈர்க்கிறால் (M.M.); lobster.

[சிங்கி[2] + இறால்]



சிங்கிறால்

சிங்கினி[1] *śiṅgiṉi,* பெ. (n.) 1. வில் (வின்.); bow. 2. வில்லின் நாண் (யாழ்ப்.); bow string.

[சிங்காணி → சிங்கனி → சிங்கினி]

சிங்கினி[2] *śiṅgiṉi,* பெ. (n.) 1. கண்டங்கத்திரி; yellow berried night shade. 2. ஒதியமரம்; odinawodier. 3. கொள்ளுப் பயறு (காணப் பயறு); jungle horse-gram (சா.அக.).

சிங்கு[1]**-தல்** *śiṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. குன்றுதல்; to diminish, wane, decrease. "சிங்கா வண்புகழ்ச் சிங்கபுரத்து" (சிலப். பதி. 47). 2. இளைத்தல் (பிங்.); to faint, fail, droop. 3. அழிதல்; to decay, perish. "சிங்காமைத் தங்கள் கவசமாய்" (கம்பரா. சரபங்க. 26). 4. கழிந்து போதல்; to elapse, pass away, as time. "சிங்குமாற் காலம்" (கம்பரா. மருத்து. 63).

ம. சிங்கு (பதர்); து. சிங்கு

[இங்குதல் = அழுந்துதல், துன்புறுதல். இங்கு → சிங்கு]

சிங்கு[2]**-தல்** *śiṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) சிக்கிக் கொள்ளுதல்; to be caught. "சிங்கினா ரிரு முதுகுரவ ரென்பவே" (சீவக. 2832).

[சிக்கு → சிங்கு-.]

சிங்கு[3] *śiṅgu,* பெ. (n.) நாக்கு; tongue (சா.அக.).

சிங்குவை *śiṅguvai,* பெ. (n.) 1. உள்நாக்கு; root of the tongue. 2. ஐம்பொறியிலொன்று; one of the five sensory organs, the mouth including the tongue.

[சிங்கு[3] → சிங்குவை]

சிங்குவைநோய் *śiṅguvai-nōy,* பெ. (n.) நாக்கில் ஏற்படும் புண் முதலான நோய்கள்; a term applied to all diseases, wounds or ulcers etc., of the tongue.

[சிங்குவை + நோய்]

சிங்கை *śiṅgai,* பெ. (n.) 1. இண்டு; prickly brasilletta climber. 2. சிங்கை முள்; rusty mimosa.

சிங்கையாரியர் *śiṅgai-y-āriyar,* பெ. (n.) யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழரசர்கள்; ancient rulers of Jaffna.

[சிங்கை + ஆரியர்]

இரகுவமிசம் இயற்றிய அரசகேசரி, தட்சிண கைலாச புராணம் பாடிய செகராசசேகரன், அந்தகக் கவி வீரராகவ முதலியாரால் புகழப்பெற்ற பரராசசேகரன் ஆகியோர் இம்மரபினரே.

சிச்சி *śicci*, இடை. (int.) சிச்சீ பார்க்க; see *śiccī*. "சிச்சியெனத் தன்மெய்ச் செவி பொத்தி" (கம்பரா. மாரீச. 76).

து. சிச்சி (மலம்)

சிச்சிரம் *śicciram*, பெ. (n.) மீன்கொத்தி (சங்.அக.); king-fisher.

சிச்சிலி[1] *śiccili*, பெ. (n.) 1. மீன்கொத்தி (சீவக. 2499, உரை); king-fisher. 2. பறவை வகை; a species of partridge. "அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடும்" (திருமுறைகண். 17).

ம. சிச்சிலி; த. சிச்சிலி → Skt. tittri

சிச்சிலி[2] *śiccili*, பெ. (n.) கோப்பிரண்டைக் கொடி; a species of adamantine creeper (சா.அக.).

சிச்சிலிப்பான் *śiccilippāṉ*, பெ. (n.) சிச்சிலிர்ப்பான் பார்க்க; see *śiccilirppāṉ* (சா.அக.).

[சிச்சிலிர்ப்பான் → சிச்சிலிப்பான்]

சிச்சிலிப்பொறி *śiccili-p-poṟi*, பெ. (n.) சிச்சிலி வடிவாகச் செய்து கோட்டை மதிலில் அமைக்கப்படுவதும் பகைவரை அழித்தற் குரியதுமான எந்திர வகை (சிலப். 15: 214, உரை); a destructive machine in the form of a king-fisher, mounted on the walls of a fortress for defence.

[சிச்சிலி + பொறி]

சிச்சிலியாதனம் *śiccili-y-ādaṉam*, பெ. (n.) ஒகநிலை (தத்துவம். 109, உரை.); a yogic posture.

சிச்சிலிர்ப்பான் *śiccilirppāṉ*, பெ. (n.) 1. தட்டம்மை; measles. 2. நீர்க்கொள்ளுவான்; chicken pox (சா.அக.).

சிச்சிலுப்பான்[1] *śicciluppāṉ*, பெ. (n.) மீன் கொத்திப்பறவை; king-fisher (a sparrow) (சா.அக.).

மறுவ. சிரற்புள்; பொன்வாய்ப்புள், சிச்சிரம்; சிச்சிலி.

ம. சிச்சிலி

[சிச்சிலி → சிச்சிலுப்பான்]



சிச்சிலுப்பான்

சிச்சிலுப்பான்[2] *śicciluppāṉ*, பெ. (n.) சிச்சிலுப்பை (வின்.) பார்க்க, see *śicciluppai*.

சிச்சிலுப்பை *śicciluppai*, பெ. (n.) அம்மை வகை; chicken-pox or measles.

சிச்சீ *śiccī*, இடை. (int.) இகழ்ச்சிக் குறிப்பு; expr. meaning fie! used in contempt "சிச்சீ வயிறு வளர்க்கைக்கு மானமழியாது" (நல்வழி, 14).

ம. சிச்சீ; க., தெ., சிசீ

சிசுகம் *śiśugam*, பெ. (n.) 1. மரவகை; a kind of tree. 2. முதலை; crocodile. 3. திமிங்கலம்; whale (சா.அக.).

சிசுபாலன் *śiśubālaṉ*, பெ. (n.) 1. இடை வள்ளல்களெழுவருள் ஒருவன்; a liberal chief, one of seven iḍai-vaḷḷalkaḷ. 2. கண்ணனால் கொல்லப்பட்ட ஒரு மன்னன். "தெழித்துரப்புஞ் சிசுபாலன்" (கலிங்.580).

இடைவள்ளல்கள் எழுவர்: அக்குரன், சந்திமான், அந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன், கன்னன், சந்தன்.

சிசுமரம் *śiśu-maram*, பெ. (n.) நூக்க மரம்; sissum tree (சா.அக.).

சிசுமாரம் *śiśu-māram*, பெ. (n.) 1. முதலை; crocodile, the gangetic dolphin. 2. முதலையைப் போன்று வடிவுள்ள பெரிய மீன் வகையுளொன்று; a large fish of the species of whale (சா.அக.).

சிசுமூலிகம் *śiśu-mūligam,* பெ. (n.) 1. நூலாஞ் செடி; cotton tree. 2. நூலிலைச் செடி; doodooga (சா.அக.).

[சிசு + மூலிகம்]

சிசுமூலிகா *śiśu-mūligā,* பெ. (n.) சிசுமூலிகம் பார்க்க; see *śiśu-mūligam* (சா.அக.).

[சிசுமூலிகம் → சிசுமூலிகா]

சிஞ்சபாகம் *śiñja-bāgam,* பெ. (n.) சிஞ்சுபாகம் பார்க்க; see *śiñju-bāgam* (சா.அக.).

[சிஞ்சுபாகம் → சிஞ்சபாகம்]

சிஞ்சம் *śiñjam,* பெ. (n.) 1. புளி (வின்.); tamarind. 2. புளிமா (மலை.); Indian hog-plum.

ம. சிஞ்ச; Skt. ciñcā

புளியம்பழம் வற்றிச்சுருங்கும் இயல்புடைமையால் இஞ்சு என்னும் சொல் சு-சிஞ்சம் என்று திரிந்தது. இஞ்சுதல் - வற்றுதல். ஒ.நோ. இறப்பு → சிறப்பு.

சிஞ்சாதிஇளகியம் *śiñjādi-iḷagiyam,* பெ. (n.) இரும்புத்தூள் முதலியவற்றையும் பல மூலிகைகளையும் சேர்த்துக் காய்ச்சிப் பாண்டுநோயினுக்குக் கொடுக்கும் ஆயுள் வேத மருந்து; an ayurvēdic medicine prepared with iron dust as a chief ingredient mixed with other herbs and prescribed for dropsy (சா.அக.).

[சிஞ்சாதி + கூழ்]

இதனைச் சிஞ்சாதி லேகியம் என சா.அக. குறித்துள்ளது.

சிஞ்சாரி *śiñjāri,* பெ. (n.). சிஞ்சாரிகம் பார்க்க; see *śiñjārigam* (சா.அக.).

[சிஞ்சாரிகம் → சிஞ்சாரி]

சிஞ்சாரிகம் *śiñjārigam,* பெ. (n.) புளியமரம்; tamarind tree (சா.அக.).

சிஞ்சிகம் *śiñjigam,* பெ. (n.) இசைபாடும் கேகயப் புள்; a bird charmed by music (சா.அக.).

சிஞ்சிகாநீர் *śiñjiga-nīr,* பெ. (n.) காடி; vinegar; any fermented liquid (சா.அக.).

[சிஞ்சிகம் + நீர்]

சிஞ்சிமாரம் *śiñji-māram,* பெ. (n.) முதலை; crocodile (சா.அக.).

சிஞ்சிரணி *śiñjiraṇi,* பெ. (n.) மிளிறை என்னும் அரிவாள் மூக்குப் பூண்டு; sickle plant (சா.அக.).

சிஞ்சிரம் *śiñjiram,* பெ. (n.) சிஞ்சிகம் பார்க்க; see *śiñjigam* (சா.அக.).

சிஞ்சிலி *śiñjili,* பெ. (n.) மரவகை; a kind of tree. "சிஞ்சிலிவேலியோடும்" (தெ.க.தொ vii. 62).

சிஞ்சினி *śiñjiṉi,* பெ. (n.) புளிகரணை; a plant probably of the vitex genus (சா.அக.).

சிஞ்சுகம் *śiñjugam,* பெ. (n.) 1. சிஞ்சிகம் பார்க்க; see *śiñjigam.* 2. கலியாண முருக்க மரம்; Indian coral tree.

சிஞ்சுபாகம் *śiñju-bāgam,* பெ. (n.) மஞ்சள் காமாலை நோயகற்றும் செடி; an unidentified plant supposed to cure jaundice (சா.அக.).

சிஞ்சுமாரம் *śiñju-māram,* பெ. (n.) 1. ஒரு பெண் தெய்வம்; a Goddess. 2. முதலை (பிங்.); crocodile.

சிஞ்சைவித்துரி *śiñjai-vitturi,* பெ. (n.) புளியங்கொட்டைத் தோல்; the outer skin of the tamarind seed (சா.அக.).

[சிஞ்சைவித்து + உரி]

சிட்டக்கல் *śiṭṭakkal,* பெ. (n.) செங்கற்கிட்டம்; over-burnt brick (சா.அக.).

[சிட்டம் + கல்]

சிட்டங்கட்டு-தல் *śiṭṭaṅ-gaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. செங்கல் உருகி உருக்குக் கல்லாதல்; to be overburnt as a brick. 2. திரி எரிந்து கருகிப் போதல்; to be burnt up, as wick.

[கிட்டம் → சிட்டம் + கட்டு-,]

சிட்டப்பட்டார் *śiṭṭa-p-paṭṭār,* பெ. (n.) அடியார்; devotees. "சிட்டப்பட்டார்க் கெளியான்" (தேவா. 33, 6).

[சிட்டு → சிட்டம் + பட்டார்]

சிட்டம்[1] *śiṭṭam,* பெ. (n.) 1. 2520 அடி நீளமுள்ள நூலை 4 1/2 அடி நீளமுள்ள சுற்றளவில் சுற்றிய வட்டநூற் சுருள்; hank. 2. நூல் சுற்றப்

பயன்படும் மரத்தாலான சட்டகம்; a wooden instrument for hank.



சிட்டம்

சிட்டம்[2] *śiṭṭam,* பெ. (n.) 1. இரும்பூறல்; iron rust. 2. உருக்கு அல்லது கற்சிட்டம்; over-burnt brick, charred brick. 3. இருப்புக்கிட்டம்; இரும்பை நெருப்பிற் காய்ச்சுவதால் உதிரும் பொடி; the extraneous matter thrown off in the process of heating or melting iron (சா.அக.).

[கிட்டம் → சிட்டம்]

சிட்டம்[3] *śiṭṭam,* பெ. (n.) 1. பெருமை; eminence, greatness. "சிட்ட மார்ந்த மும்மதிலும்" (தேவா. 540, 8). 2. மதிப்பானது, மரியாதைக்குரியது; that which is estimable, sacret. "சிட்டமாஞ் சிவசின்னங்கள்" (சிவரக. சிவரகசியவாலா. 9).

ம. சிட்டம்

[சிட்டு → சிட்டம்]

த. சிட்டம் → Skt. śiṣṭa

சிட்டாய்ப்பற-த்தல் *śiṭṭāy-p-paṟa-,* 3 செ.கு.வி. (v.i.) சிட்டுக்குருவி போல விரைந்தோடிப் போதல் (இ.வ.); to run or fly like a house sparrow.

[சிட்டு ' + ஆய் + பற-,]

சிட்டி[1] *śiṭṭi,* பெ. (n.) 1. சிறுமட்கலம்; a small earthern vessel. 2. ஓர் அளவுக் கருவி (வின்.); a small measure. 3. சூது கருவியை உருட்டுஞ் செப்பு (வின்.); small dice-case.

க. சிட்டி; தெ. சிட்டி

[சுள் = சிறுமை. சுள் → சுள்ளாணி = சிறிய ஆணி. சுள் → (சுட்டு) → சிட்டு = சிறியது, சிறுகுருவி. சிட்டு → சிட்டி (மு.தா.129)]

சிட்டி[2] *śiṭṭi,* பெ. (n.) சீழ்க்கை (இ.வ.); whistle.

[சீழ்க்கை → சீக்கை → சீக்கி → சீட்டி → சிட்டி]

சிட்டி[3] *śiṭṭi,* பெ. (n.) சிற்றிலைச் செடியெனப் படும் நெய்ச்சிட்டி; fleabane (சா.அக.).

சிட்டி[4] *śiṭṭi,* பெ. (n.) 1. நொடி; snap of fingers. 2. இரண்டு விரலின் நடுக்கொண்ட அளவு; as much as is taken with the finger and the thumb-pinch, said of medical powder and snuff (சா.அக.).

து. சிடுகு

[சின் → சிட்டி]

சிட்டிகை *śiṭṭikai,* பெ. (n.) 1. கைந்நொடி; snap of the fingers. 2. கைந்நொடிப் பொழுது; moment, as measured by snap of the finger. 3. விரற்பிடியளவு; a pinch, as of snuff. 'ஒரு சிட்டிகைப் பொடி கொடு' (உ.வ.).

க. சிடிகெ; தெ. சிடிக; து. சிடிகி; பட. சிடுகு; குட. செடி

[சிட்டி → சிட்டிகை]

சிட்டிதட்டு-தல் *śiṭṭitaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) கைப்பெரு விரலையும் நடுவிரலையும் அழுத்தி உராயச் செய்து ஒலியுண்டாக்குதல்; to snap of the fingers.

து. சிடுகு பாடுனி; பட. சிடகு ஆகு;

[சிட்டி + தட்டு-,]

சிட்டிதும்மியிலை *śiṭṭitummi-y-ilai,* பெ. (n.) தும்பியிலை; leaves of river ebony (சா.அக.).

[சிட்டி + தும்மியிலை]

சிட்டிப்பாம்பு *śiṭṭi-p-pāmbu,* பெ. (n.) பாம்பு வகையுளொன்று; a species of snake (சா.அக.).

[சிட்டி + பாம்பு]

சிட்டிப்பால் *śiṭṭi-p-pāl,* பெ. (n.) ஆடை கட்டிய பால்; cream milk (சா.அக.).

[சிட்டி + பால்]

சிட்டிமந்தாரம் *śiṭṭi-mandāram,* பெ. (n.) மயிற்கொன்றை (இங்.வை.); peacock's crest (சா.அக.).

[சிட்டி + மந்தாரம்]

சிட்டிமந்தாரை *śiṭṭi-mandārai,* பெ. (n.) சிட்டி மந்தாரம் பார்க்க; see *śiṭṭi-mandāram* (சா.அக.).

[சிட்டி + மந்தாரை]

சிட்டிலிங்கு *śiṭṭiliṅgu,* பெ. (n.) காட்டு மரவகை (வின்.); a forest tree.

[சிட்டு + இலிங்கு]

சிட்டு[1] *śiṭṭu,* பெ. (n.) பெருமை; eminence. "சிட்டாய சிட்டற்கே" (திருவாச. 10:7).

ம. சிட்டு (பெரிய, மேலான)

[சுள் → (சூர்) → சீர் → சிற → சிறப்பு (மு.தா.217) சுள் → சிள் → சிட்டு]

சிட்டு[2] *śiṭṭu,* பெ. (n.) 1. சிறியது (வின்.); anything little, that which is small. 2. சிட்டுக்குருவி பார்க்க; see *śiṭṭu-k-kuruvi.* 3. சிலுப்பாக்குடுமி (வின்.); hair grown about the ears.

ம., க. சிட்டு; து. சிட்டெ; தெ. சிட்டா

[சுள் = சிறுமை. சுள்ளாணி = சிறிய ஆணி. சுள் → சுண்டு = சிறியது, சிறிய முகவைக் கருவி (வீசம்படி). சுள் → (சுட்டு) → சிட்டு (மு.தா.140)]



சிட்டு

சிட்டுக்குடுமி *śiṭṭu-k-kuḍumi,* பெ. (n.) உச்சியிலுள்ள சிறுகுடுமி (வின்.); small hair-tuft on the crown of the head.

ம., தெ. சுட்டு; து. சிட்டு; கொலா. சுட்டி.

[சிட்டு + குடுமி]

சிட்டுக்குருவி *śiṭṭu-k-kuruvi,* பெ. (n.) சிறுகுருவி வகை (பதார்த்த. 882); a kind of sparrow. 'சிட்டுக் குருவியின் தலையில் பனங்காய் வைத்தது போல' (பழ.).

ம. சிட்டுகுருவி; து. சிட்டெபக்கி

[சுள் → (சுட்டு) → சிற்று → சிட்டு + குருவி]

சிட்டு வகைகள்

1. சிட்டு
2. மஞ்சள் சிட்டு
3. மஞ்சள் தொண்டைச் சிட்டு
4. பச்சைச் சிட்டு
5. நீலச் சிட்டு
6. கருஞ் சிட்டு
7. கருப்பு வெள்ளைப் புதர்ச்சிட்டு
8. சின்ன மின்சிட்டு
9. மின்சிட்டு
10. தேன் சிட்டு
11. ஊதா தேன் சிட்டு
12. தையச் சிட்டு

சிட்டுக்குருவியிளகியம் *śiṭṭu-k-kuruvi-iḷakiyam,* பெ. (n.) உடல் வலிமைக்கும் சிற்றின்ப நுகர்ச்சிக்கும் சிட்டுக்குருவியைப் பதப்படுத்திக் கடைச்சரக்குகளுடன் சேர்த்துச் செய்யும் இளகியம்; an electuary prepared with the flesh of house sparrow as chief ingredient amongst other bazaar drugs it also improves bodily beauty and invigorates the system (சா.அக.).

[சிட்டுக்குருவி + இளகியம். உள் → (இள்) → இள → இளகு → இளகியம்]

சிட்டுக்குருவிலேகியம் *śiṭṭu-k-kuruvi-ilēgiyam,* பெ. (n.) சிட்டுக்குருவியிளகியம் பார்க்க; see *śiṭṭu-k-kuruvi-iḷagiyam* (சா.அக.).

த. இளகியம் → Skt. lēhya

[சிட்டுக்குருவி + லேகியம்]

சிட்டுணம் *śiṭṭuṇam,* பெ. (n.) ஆதொண்டை; climbing caper (சா.அக.).

சிட்டுலா *śiṭṭulā,* பெ. (n.) காடை; quail (சா.அக.).

[சிட்டு → சிட்டுலா. சிட்டு = சிறுகுருவி]

சிட்டு[2] பார்க்க

சிட்டை[1] *śiṭṭai,* பெ. (n.) ஆடைக் கரைவகை (இ.வ.); short striped border of a cloth.

து. சிட்டெபட்டி (கூத்தாடுவோர் தலையில் கட்டும் துணி)

[சிட்டு → சிட்டை. சிட்டு = சிறிய, குறுகிய]

சிட்டு வகைகள்

கன்னிமாரா (மாநில (ம) மைய) நூலகம்
அலுவலகம்
30 ஆக 2015
பெறப்பட்டது
சென்னை-600 008

புதர்ச்சிட்டு

நீலச்சிட்டு

கருஞ்சிட்டு

ஊதாபிட்டத் தேன்சிட்டு

ஊதாத் தேன்சிட்டு

மின்சிட்டு

லோடென் தேன்சிட்டு

மஞ்சள் தொண்டைச்சிட்டு

சிட்டை[2] *šiṭṭai,* பெ. (n.) *1.* நாள்வழி வரவு செலவுக் கணக்கிற்கான சிற்றேடு; day book. *2.* வரவு செலவு விளத்தம் காட்டும் தனிக் கணக்குப் பொத்தகம்; memorandum of account containing details of major items of expenses.

மறுவ. கைசிட்டை

ம. சிட்ட; து. சிட்டெ

சிட்டை[3] *šiṭṭai,* பெ. (n.) கேட்போர்க் கினிமையாகச் செய்திகளைத் தொகுத்துப் பாடம் பண்ணிக் கோவையாகக் கூறும் முறை (உ.வ.); set mathodical style in singing, speaking, etc.

சிட்டை[4] *šiṭṭai,* பெ. (n.) சிட்டம்,[1] பார்க்க; see *šiṭṭam,*[1].

சிட்டைக்கரி *šiṭṭai-k-kari,* பெ. (n.) சிறிய கரித்துண்டு; small piece of charcoal. "ஊதழலிற் சிட்டைக் கரியை யிட்டு" (பஞ்ச. திருமுக. 1280)

[சிட்டை + கரி. சிட்டி = சிறுகலம், சிறிய அளவு, சிற்றளவை; சிட்டி → சிட்டை]

சிட்டைமரம் *šiṭṭai-maram,* பெ. (n.) இருவரால் தூக்கியெடுத்துச் செல்லப்பெறும் காவடிமரம் (யாழ்ப்.); yoke for load carried on the shoulders between two persons, dist. fr. kā-maram carried by a single person.

சிட்டையிசை *šiṭṭai-išai,* பெ. (n.) நிறவாளத்தி; an elaboration of musical modes.

சிடம் *šiḍam,* பெ. (n.) சாதிக்காய் (மூ.அ.); nutmeg.

[சிதம் → சிடம்]

சிடிகை *šiḍigai,* பெ. (n.) ஒருசார் நோயின் மருத்துவமாகச் சூடு இடுகை (C.G.); cauterigation.

க. சிடிகெ.

[சுடுகை → சிடுகை → சிடிகை]

சிடிகைவேதை *šiḍigai-vēdai,* பெ. (n.) வெடியுப்பைக் கட்டிப் பொன்னாக்கும் செய்யும் வழி; the alchemical method usually adoped by consolidating nitre (சா.அக.).

[சிடிகை + வேதை]

சிடிமுகிவேர் *šiḍi-mugi-vēr,* பெ. (n.) இன்னதென அறியப்படாத ஒருவகை மருந்துச் செடியின் வேர்; the root of an unknown plant (சா.அக.).

[சிடி + முகிவேர்]

சிடுக்கு[1] *šiḍukku,* பெ. (n.) *1.* சிக்கு; tangle. *2.* மகளிர் அணிவகை; a kind of ornament for women. "முத்தின் சிடுக்கு ஒரணையிற் கோத்த முத்து" (தெ. க. தொ. 2, 211).

[சிக்கு[1] → சிடுக்கு]

சிடுக்கு[2] *šiḍukku,* பெ. (n.) சிடுசிடுப்பு,[1] பார்க்க; see *šiḍu-šiḍuppu,*[1].

சிடுக்குப்பிடுக்கு *šiḍukku-p-piḍukku,* பெ. (n.) சிடுசிடுப்பு பார்க்க; see *šiḍu-šiḍuppu.*

சிடுக்குவாரி *šiḍukku-vāri,* பெ. (n.) மயிர்ச் சிக்கலெடுக்குங் கருவி; forked comb for disentangling the hair.

[சிடுக்கு[1] + வாரி]

சிடுசிடு-த்தல் *šiḍu-šiḍu-,* 4 செ.கு.வி. (v.i.) சினக் குறிப்புக் காட்டுதல்; to knit the brow in anger, scowl, frown. "சிடுசிடுத்த ராட்சதர் தம்மை" (இராமநா. உயுத். 16)

சிடுசிடுப்பு *šiḍu-šiḍuppu,* பெ. (n.) *1.* சினக்குறி; knitting the brow in anger, frowning. *2.* காய்ச்சும் எண்ணெய்யில் நீரிருப்பதை உணர்த்தும் ஒலிக்குறிப்பு (தைலவ.பாயி. 56, உரை.); onom. expr. of hissing noise, as of a burning wick when it contains particles of water.

[சிடுசிடு → சிடுசிடுப்பு]

சிடுமூஞ்சி *šiḍu-mūñji,* பெ. (n.) *1.* கடுகடுத்த முகம்; frowning face. *2.* கடுகடுத்த முக முடையவன்; one having a frowning face.

[சிடு + மூஞ்சி

முகம் → மூஞ்சி (உ.வ.)]

சிண்[1] *šiṇ,* பெ. (n.) கையாள் (யாழ்.அக.); personal attendant.

[சில் → சின் → சிண்]

சிண்[2] *śiṇ,* பெ. (n.) 1. சூதாட்டத்திற் கூட்டாளி; mate, partner in playing dice. 2. கூட்டாளி; substitute in a game. 3. விளையாட்டிற் பின்னும் ஒருமுறை ஆடுகை; extra turn which a person is entitled to in a game.

சிண்டா *śiṇḍā,* பெ. (n.) சிண்டு[1] பார்க்க; see *śiṇḍu*.

[சிண்டு → சிண்டா]

சிண்டி *śiṇḍi,* பெ. (n.) செம்முள்ளி; created purple nail-dye (சாஅக.).

சிண்டு[1] *śiṇḍu,* பெ. (n.) குடுமி (உவ.); hair-tuft.

ம. சிண்டி

[சுண்டு → சுண்டான் = சிறுமொந்தை. சுண்டெலி, சுண்டுவிரல் முதலிய புணர்ப் பெயர்களில், சுண்டு என்பது சிறுமையைக் குறிக்கும். சுண்டு → சுண்டை = சிறிய காய்வகை. சுண்டு → சிண்டு = சிறிய குடுமி]

சிண்டு[2] *śiṇḍu,* பெ. (n.) 1. ஒரு சிற்றளவு (வின்.); a small measure of capacity. 2. சிறு ஏனவகை; a small narrow - necked vessel. எண்ணெய்ச் சிண்டு.

ம. சிண்டு

[சுள் → சுண்டு = சிறியது, சிறுமுகவைக் கருவி (வீசம்படி) சுண்டு → சிண்டு (மு.தா. 128)]

சிண்டு[3]**-தல்** *śiṇḍu-,* 5 செ.கு.வி. (v.i.) சருவுதல்; to touch with mischievous intention.

[சீண்டு → சிண்டு-,]

சிண்டுமுடி[1]**-தல்** *śiṇḍu-muḍi-,* செ.குன்றாவி. (v.t.) அவிழ்ந்த கூந்தலை முடிச்சுப்போடுதல்; to tie, fasten, to make into a knot, as of hair. 'தலையைச் சிண்டு முடிந்து கொண்டு வேலையைச் செய்' (உவ.)

சிண்டுமுடி[2]**-தல்** *śiṇḍu-muḍi-,* 4 செ.கு.வி. (v.i.) சண்டை மூட்டுதல் (உவ.); to incite persons to a quarrel. 'இவன் சிண்டுமுடிதலில் கைதேர்ந்தவன் (உவ.).

[சிண்டு + முடி-,]

சிண்டூரி *śiṇḍūri,* பெ. (n.) சிறுகீரை; pig greens (சாஅக.).

சிணாட்டிப்பார்-த்தல் *śiṇāṭṭi-p-pār-,* 4 செ.கு.வி. (v.i.) சண்டைக்கிழுத்தல் (வின்.); to create mischief; to attempt a quarrel.

[சிணாட்டி + பார்]

சிணாட்டு[1]**-தல்** *śiṇāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நோய் திரும்பவும் வருதல்; to relapse, as a disease. நீங்கின நோய் இவனைச் சிணாட்டிக் கொண்டிருக்கிறது (இவ.).

[சில் → சிள் + ஆட்டு = சிளாட்டு → சிணாட்டு]

சிணாட்டு[2] *śiṇāṭṭu,* பெ. (n.) சிணாறு (இ.வ.) பார்க்க; see *śiṇāṟu*.

சிணாற்றைக்கழி-த்தல் *śiṇāṟṟai-k-kaḻi,* 4 செ.கு.வி. (v.i.) 1. மரத்தினின்று சிறு கிளைகளை வெட்டுதல்; to prune, lop off branches. 2. வழக்குத் தீர்த்தல்; to settle a dispute.

[சிணாறு + கழி-,]

சிணாறு *śiṇāṟu,* பெ. (n.) அடர்ந்த சிறு கிளை (இ.வ); small close-set branch of trees and bushes.

[சிள் → சிண் + அறு = சிணறு → சிணாறு]

சிணி *śiṇi,* பெ. (n.) கெட்ட நாற்றம் (வின்.); unpleasant or offensive smell.

சிணுக்கம் *śiṇukkam,* பெ. (n.) 1. மூக்கால் அழுகை (வின்.); whining, whimpering. 2. சுருக்கம் விழுகை (இ.வ.); shrinking, as of cloth; becoming wrinkled. 3. உடன்பாடன்றென்பதையுணர்த்தும் முகக்குறி (உவ.); facial expression of disapproval or protest.

ம. சிணுக்கம்

[சிணுங்கு → சிணுக்கம்]

சிணுக்கறுக்கி *śiṇukkaṟukki,* பெ. (n.) சிடுக்குவாரி (இ.வ.) பார்க்க; see *śiḍukku-vāri*.

[சிணுக்கு[2] + அறுக்கி]

சிணுக்கன் *śiṇukkaṉ,* பெ. (n.) பயனற்றவன்; worthless person, as always whining. "அம்பலத் தாடிக் கல்லாச் சிணுக்கரை" (திருவிசை. திருமா. 4; 4,).

[சிணுங்கு → சிணுக்கன்]

சிணுக்காட்டம் *šiṇukkāṭṭam,* பெ. (n.) மூக்காலழுகை; whining, whimpering. "சிந்தை யுமக்கேன் சிணுக்காட்டம்" (பஞ்ச.திருமுக. 493).

ம. சிணுங்ஙாட்டம் (இன்பக் கேளிக்கை யாட்டம்)

[சிணுக்கு + ஆட்டம்]

சிணுக்கிருமல் *šiṇukkirumal,* பெ. (n.) 1. அடிக்கடி வரும் இருமல்; a short, frequent and feeble cough. 2. சிற்றிருமல்; slight cough (சா.அக.).

[சிணுக்கு + இருமல்]

சிணுக்கு[1]-தல் *šiṇukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. சிக்குப்படுத்துதல்; to complicate, entangle. 2. உடன்பாடன்மையையுணர்த்த முகத்தைக் கோட்டுதல்; to show facial signs of dis approval or protest. 3. பிள்ளையைத் திருடுதல்; to kidnap.

ம. சிணுக்குக

[சிக்கு → சிணுக்கு-,]

சிணுக்கு[2]-தல் *šiṇukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. சீண்டுதல்; to be mischieveous. 2. சிறிது சிறிதாகத் தருதல்; to yield in small quantities.

தெ. சிநுகு

சிணுக்கு[3]-தல் *šiṇukku-,* 5 செ.கு.வி. (v.i.) 1. விட்டுவிட்டு வருதல்; to linger, relapse, as intermittent fever. 2. துளித்தல் (வின்.); to ooze, issue in drops; to drizzle.

சிணுக்கு[4] *šiṇukku-,* பெ. (n.) சீண்டுகை; playful or wanton mischief. 'சிணுக்கெல்லாம் பிணக்குக் கிடம்' (வின்).

சிணுக்கு[5] *šiṇukku-,* பெ. (n.) சிக்கு (சங்.அக.); tangle, intricacy.

[சிக்கு → சிணுக்கு]

சிணுக்கு[6] *šiṇukku-,* பெ. (n.) 1. உழலைமரம் (யாழ்.அக.); block of wood to the neck of straying cattle. 2. விரல் முதலியவற்றின் நொடிப்பு (புதுவை.); fillip.

சிணுக்கு[7] *šiṇukku-,* பெ. (n.) அழுகிப் போகை; decaying.

சிணுக்குச்சிணுக்கெனல்[1] *šiṇukku-c-ciṇukkeṉal,* பெ. (n.) சிறிதுசிறிதாக வெளிவருதற் குறிப்பு; onom. expr. of issuing in drops.

[சிணுக்கு + சிணுக்கு + எனல்]

சிணுக்குச்சிணுக்கெனல்[2] *šiṇukku-c-ciṇukkeṉal,* பெ. (n.) 1. சிடுசிடுப்புக் குறிப்பு; onom. expr. of scowling. 2. அடிக்கடி அழுது தொந்தரவு செய்தற் குறிப்பு; worrying with frequent crying.

[சிணுக்கு + சிணுக்கு + எனல்]

சிணுக்குவலி[1] *šiṇukku-vali,* பெ. (n.) 1. சிடுக்கு வாரி (நெல்லை.); forked comb or dressing the hair.

[சிணுக்குவாரி → சிணுக்குவாலி → சிணுக்குவலி (கொச்சை)]

சிணுக்குவலி[2] *šiṇukku-vali,* பெ. (n.) குழந்தை பெறுவதற்கு முன்பு ஏற்படும் சிறு வலி (இ.வ.); slight pains at the commencement of child-birth.

[சிணுக்கு + வலி]

சிணுக்குவாங்கி *šiṇukku-vāṅgi,* பெ. (n.) சிடுக்குவாரி (இ.வ.) பார்க்க; see *šiḍukkuvāri.*

[சிணுக்கு + வாங்கி]

சிணுக்குவாதம் *šiṇukku-vādam,* பெ. (n.) குளிர்ச்சியால் மூட்டுகளுக்கு அடிக்கடி ஏற்படும் ஊதை (வாத) நோய்; a kind of recurrent rheumatism due to exposure (சா.அக.).

Skt. vādam - த. ஊதை.

[சிணுக்கு + வாதம்]

சிணுக்குவாரி *šiṇukku-vāri,* பெ. (n.) சிடுக்குவாரி (இ.வ.) பார்க்க; see *šiḍukkuvāri.*

[சிணுக்கு + வாரி]

சிணுங்கி *šiṇuṅgi,* பெ. (n.) 1. அழும் குழந்தை; crying child. 2. சிணுங்கும் பெண்; she who whines or whimpers. 3. தொட்டாற்சுருங்கி; a sensitive plant as toṭṭāṟ-siṇuṅgi, niṉṟāṟ siṇuṅgi, etc., plants that are sensitive to mere touch or by standing near it (சா.அக.).

ம. சிணுங்கி

[சிணுங்கு → சிணுங்கி]

சிணுங்கு-தல் *šiṇuṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மூக்காலழுதல்; to whine, whimper. "ஏங்கியிருந்து சிணுங்கி விளையாடும்" (திவ். பெரியதி. 10.5:1). 2. விட்டுவிட்டு மழை தூறுதல் (இவ.); to drizzle, intermittingly. 3. கொஞ்சுதல் (சங்அக.); to caress, fondle.

ம. சிணுக்குக, சிணுங்ஙுக; க. சினுகு (முணுமுணுத்தல்); தெ. சனுகு

சிணுசிணு-த்தல் *šiṇu-šiṇu-,* 4 செ.கு.வி. (v.i.); சிணுங்கு- பார்க்க; see *šiṇuṅgu-*.

[சிணுங்கு → சிணுசிணு-,]

சித்தக்கல் *šitta-k-kal,* பெ. (n.) 1. குறுஞ்சிலைக் கல் (வின்.); a red stone. 2. நாகக் கல்வகையுள் ஒன்று; a kind of zinc stone. 3. ஈரற்கல்; gall stone (சாஅக.).

[செந்தூள் → செந்தூளம் → செந்தூரம்→ சிந்தூரம் = செந்நீறு. செம்பொடி, சிவப்பு. சிந்தூரம் → சிந்துரம் = சிவப்பு. சிந்து → சித்து → சித்த = சிவப்பு. சித்த + கல்]

சித்தகத்தி *šittagatti,* பெ. (n.) 1. சிற்றகத்தி பார்க்க; see *širragatti*. 2. வெண்செம்பை; white sesbane (சாஅக.).

[சிற்றகத்தி → சித்தகத்தி]

சித்தகம் *šittagam,* பெ. (n.) மஞ்சள் மெழுகு; yellow wax.

சித்தகல்பம் *šitta-kalbam,* பெ. (n.) சித்தகற்பம் பார்க்க; see *šitta-karbam.*

[சித்தகற்பம் → சித்தகல்பம்]

சித்தகற்பம் *šitta-karbam,* பெ. (n.) சித்தர்கள் உண்ணும் உடலுக்கு வலிமை தரும் மருந்து (காயகற்பம்); rejuvenating drug or medicine taken by Sittar (சாஅக.).

[சித்தர் + கற்பம்]

சித்தகாயகற்பம் *šitta-kāyakarbam,* பெ. (n.) சித்தகற்பம் பார்க்க; see *šitta-karbam* (சாஅக.).

[சித்தர் + காயகற்பம்]

சித்தநாதி *šitta-nādi,* பெ. (n.) முருங்கை; drum-stick tree (சாஅக.).

சித்தநூற்றெளிவு *šitta-nūrrelivu,* பெ. (n.) சித்த மருத்துவ நூலில் சொல்லியவாறு, ஊடுருவத் தெளிந்து குறிக்கப்பட்ட வழலை அல்லது முப்பு; the mystic three salts expounded with great care and caution as mentioned in Sittar's science (சாஅக.).

[சித்தநூல் + தெளிவு]

சித்தநெறி *šitta-neri,* பெ. (n.) சிவவழி பாடியற்றும் சித்தர்கள் மேற்கொண்டதும், தென்பாண்டி நாட்டிலுண்டாகியதுமான சிவநெறி; the Šittar's school of thought in respect of the affairs relating to worship of God Šivan. It started from southern part of Pāṇḍiya-nāḍu. 2. அறிவுக் கொள்கை வழி; way of Šittar's concept.

[சித்தர் + நெறி]

சித்தப்பா *šittappā,* பெ. (n.) சிற்றப்பன் பார்க்க; see *širrappan.*

[சிற்றப்பன் → சித்தப்பன் → சித்தப்பா]

சித்தபத்திரி *šitta-pattiri,* பெ. (n.) கஞ்சா; ganjah leaves used by Sittars (சாஅக.).

சித்தம்[1] *šittam,* பெ. (n.) 1. மனம்; mind, will. "பத்தர் சித்தம்" (திவ்.திருச்சந்.110). 2. முடிவான மனக்கொள்கை; determination, firm conviction. "தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி" (திருவாச. 4,42). 3. அகக்கருவி (அந்தக்கரணம்) நான்கனுள் உறுதிப்படுத்தும் தொழில் உடையது; determinative faculty, one of four anta-k-karaṇam. "சிந்தித்தாய்ச் சித்தம்" (சி.போ.சிற். 4,1,2). 4. திடம் (சூடா.); courage firmness.

[செத்தல் = கருதுதல். செ → செத்து = கருத்து, அறிவு. செத்து → சித்து = கருத்து, அறிவு. சித்து → சித்தம் = கருத்து, மனம், அறிவு]

த. சித்தம் → Skt. šitta

சித்தம்[2] *šittam,* பெ. (n.) 1. உப்பு வகை; any kind of salt. 2. முருங்கை; drum stick tree. 3. 28 தோன்றிய(ஆகம)ங்களில் ஒன்று; one of 28 saiva-āgamas (சாஅக.).

சித்தமணி *šitta-maṇi,* பெ. (n.) *1. பொன்னாங் கண்ணி;* sessile. *2. இதளிய மணி;* consolidated mercurial pill. *3. பத்து வகை இதளிய ஆற்றல்களுள் ஒன்றான கிளர்ச்சியூட்டும் தன்மை தீர்ந்த குளிகை;* one of the ten animated mercurial pills *(சா.அக.).*

சித்தமருத்துவம் *šitta-maruttuvam,* பெ. (n.) *சித்தர்கள் கையாண்ட மருத்துவ முறை;* a kind of healing art ascribed to Šittar.

மறுவ. தமிழ் மருத்துவம், மூலிகை மருத்துவம், வீட்டு மருத்துவம், நாட்டு மருத்துவம், பாட்டி மருத்துவம், கை மருத்துவம்

[சித்தர் + மருத்துவம்]

சித்தமருத்துவமுறை *šitta-maruttuva-muṟai,* பெ. (n.) *சித்தர்தம் நூலின் துணையுடன், வைப்புச் சரக்குகளைக் கொண்டு செய்யும் மருந்துகள்;* the following are the medicine and medical preparations, according to Sitta system *(சா.அக.).*

[சித்தமருத்துவம் + முறை]

சித்தமருந்து *šitta-marundu,* பெ. (n.) *சித்த முறைப்படி 212 மூலப் பொருள்களினின்று செய்யும் மருந்துகள்;* medicines in Sitta system are prepared from out of the mineral substances which are 212 in number *(சா.அக.).*

[சித்தர் + மருந்து]

சித்தமார்க்கம் *šitta-mārkkam,* பெ. (n.) *சித்தநெறி பார்க்க;* see *sitta-neṟi.*

[சித்தர் + மார்க்கம். மார்க்கம் = நெறி]

Skt. mārga → த. மார்க்கம்

சித்தர் *šittar,* பெ. (n.) *1. ஒகத்தின்மூலம் உலகை உணரும் நுண்ணறிவு பெற்றவர்;* mystic. *2. பதினெண்கணத்துள் ஒருசாரார் (கம்பரா. நிந்தனை.10);* supernals unhabiting the inter mediate region between the earth and the sun, one of padiṉeṉ-kaṇam. *3. முழு அருளை யடைந்தோர்;* perfected ones. *4. எண் பெரும் பேரறிவுடையோர் (அஷ்டமா சித்தியுடையோர்);* mystics who have acquired the aṣṭa-ma-šitti. *"ஏறுயர்த்தோர் சித்தராய் விளையாடிய செயல்" (திருவிளை. எல்லாம் வல்ல.1).*

மறுவ. அறிவர், பெற்றியர்

[சித்து → சித்தர். உண்மை கண்டவிடத்து மரபையும் மீறும் இயல்பினர்]

சித்தர்கல்வி *šittar-kalvi,* பெ (n.) *பண்டைக் காலத்தில், இந்தியாவிலிருந்த குரு மாணவத் தொடர்பிலமைந்த மரபுவழிக் கல்வி முறை;* the Šitta system of education in ancient India followed hereditary *(சா.அக.).*

[சித்தர் + கல்வி]

சித்தர்களஞ்சியம் *šittar-kaḷañjiyam,* பெ (n.) *சித்தர் தம் மந்தணச் செயல்முறையையும், அறிவுத்திறனையும் விளக்கமுறவுரைக்குந் தமிழ்நூல் திரட்டு;* a full and exhaustive treatise in Tamiḻ revealing all about Šittar's secrets and their activities *(சா.அக.).*

[சித்தர் + களஞ்சியம்]

சித்தர்கற்பம் *šittar-kaṟpam,* பெ (n.) *சித்தர்கள், நலமுடனும், வலிவுடனும் நீடூழிக் காலம் வாழ்வதற்காக உட்கொண்ட சாகா மருந்து;* a very rare medicinal preparation taken generally by Šittars for rejuvenation and for prolonging life it is also known ambrosial medicine *(சா.அக.).*

மறுவ. காயகல்பம்

[சித்தர் + கற்பம்]

சித்தர்காலம் *šittar-kālam,* பெ (n.) *சித்த மருந்துகளைப் பயன்படுத்திய காலமான கி.மு. 10,000 முதல் கி.மு. 4,400க்கும் இடைப்பட்ட காலம்;* the period 10,000 B.C. to 4,400 B.C. in which siddha medicines were used by ancient people *(சா.அக.).*

[சித்தர் + காலம்]

சித்தர்குடியிருப்பு *šittar-kuḍiyiruppu,* பெ. (n.) *இரவெரி மரம் (இருளில் ஒளிவிடும் மரம்);* a luminous tree in the dark like burning bush *(சா.அக.).*

மறுவ. சோதி மரம்

[சித்தர் + குடியிருப்பு]

சித்தர்குளிகை *šittar-kuḷigai,* பெ. (n.) சித்தர் வானவெளியில் பறப்பதற்குப் பயன்படுத்தும் இதளியக் (பாதரச) குளிகை; the animated mercurial pill used for travelling in the serial regions. These pills were prepared and used by the Šittars in various ways (சா.அக.).

[சித்தர் + குளிகை]

சித்தர்கூட்டம் *šittar-kūṭṭam,* பெ. (n.) ஒரு பொருள் குறித்துச் சித்தர்கள் பலர் ஒரே இடத்தில் கூடும் கூட்டம்; the meeting of several Šittars to form an assembly for some object in view.

[சித்தர் + கூட்டம்]

சித்தர்கூனி *šittar-kūṉi,* பெ. (n.) கட்டுக் காடை; a bird of large size of the coracidae family (சா.அக.).

[சித்தர் + கூனி]

சித்தர்கொள்கை *šittar-koḷgai,* பெ. (n.) பொன்னாக்கம், மருத்துவம், ஓகம், மெய்ப் பொருளியல் (தத்துவம்) முதலானவை பற்றித் தெளிவாக அமைந்த சித்தர் கோட்பாடுகள்; every one of Šittars has written clearly in their works on four subject viz, alchemy, medicine, yoga, and philosophy (சா.அக.).

[சித்தர் + கொள்கை]

சித்தர்சமாதி *šittar-šamādi,* பெ (n.) சித்தர்கள் தங்கள் உயிரை நீத்து, இலிங்க வடிவமாகி நிலைபெற்ற இடம்; Šittars who attained success metamosphosed their bodies into liṅga (phallus) form (சா.அக.).

[சித்தர் + சமாதி]

சித்தர்சிகிச்சை *šittar-šigiccai,* பெ (n.) சித்த மருத்துவம் பார்க்க; see *šitta-maruttuvam.*

[சித்தர் + சிகிச்சை]

சித்தர்சூரணம் *šittar-šūraṇam,* பெ (n.) சித்தர் பொடி பார்க்க; see *šittar-poḍi.*

வ. சூரணம்; த. பொடி, தூள்

[சித்தர் + சூரணம்]

சித்தர்ஞானம் *šittar-ñāṉam,* பெ (n.) தன்னைத் தானறியும் சித்தர்தம் பேரறிவு; Šittars wisdom insisted on self-knowledge (சா.அக.).

[சித்தர் + ஞானம்]

சித்தர்தங்கம் *šittar-taṅgam,* பெ. (n.) பொன்னாக்கத்தினாலுண்டான தங்கம்; the synthetic gold obtained through alchemical process (சா.அக.).

[சித்தர் + தங்கம்]

சித்தர்தமிழ் *šittar-tamiḻ,* பெ. (n.) பொன்னாக்கம், மருத்துவம், ஓகம், மெய்யறிவு, கணியம் பற்றித் தெளிவான நடையில் இலக்கணப் பொருத்தத்துடன் எழுதப்பெற்ற பாடல்கள்; Sittar Tamiḻ usually deals with medicines, yōga, philosophy and astrology in highly grammatic form with clearly understandable verses (சா.அக.).

[சித்தர் + தமிழ்]

சித்தர்நாடி *šittar-nāḍi,* பெ. (n.) மருத்துவமும் கணியமும் (சோதிடம்) இணைந்து வருமாறு சித்தர்களால் பாடப் பெற்ற நூல்கள்; poetics composed by Sittars dealing with medicines and astrology (சா.அக.).

[சித்தர் + நாடி]

சித்தர்நுட்பம் *šittar-nuṭpam,* பெ. (n.) சித்தர்தம் நுண்மாண் நுழைபுலத்தினால், பல் திறப்பட்ட பொருள் பற்றி எழுதப்பட்ட நூற் சுருக்கம்; synopsis or summary exhibiting only the principle and intricate points of several subjects on a general view such a kind of keen compilation is possible only by siddhars endowed with spiritual knowledge (சா.அக.).

[சித்தர் + நுட்பம்]

சித்தர்நூல் *šittar-nūl,* பெ. (n.) பதினெண் சித்தர்கள் இயற்றிய ஊதை (வாத) மருத்துவம், ஓகம், கணியம் குறித்த நூல்கள்; the several treatises compiled by Šittars on alchemy, medicine, yoga, philosophy, astrology etc. (சா.அக.).

[சித்தர் + நூல்]

சித்தர்நூற்சிறப்பு *šittar-nūṟ-šiṟappu,* பெ. (n.) சித்தர்கள் தங்கள் முறைப்படி இயற்றிய நூல்களும், அவற்றின் மேம்பட்ட கொண் முடிபுகளும்; the superiority of the sience under the Siddha system in all its branches, as composed with the other science leading one to the following higher conclusions (சாஅக.).

[சித்தர் + நூற்சிறப்பு]

சித்தர்நெறி *šittar-neṟi,* பெ. (n.) சித்தநெறி பார்க்க; see *šittaneṟi.*

சித்தர்நோக்கம் *šittar-nōkkam,* பெ. (n.) மக்களுக்காக இவ்வுலகின் கண் வரையறுத்த பொருள் பற்றியும், அவர்கள் யாதோர் இடையூறுமின்றி உயிர் வாழ்வதற் குண்டான பொருள்கள் பற்றியும், சித்தர்கள் கொண்ட கருத்துகள்; the following are the end and aims of Siddhars regarding the positive assertions towards the welfares of mankind to enable them to live in this world without any hindrance (சாஅக.).

[சித்தர் + நோக்கம்]

சித்தர்பட்டை *šittar-paṭṭai,* பெ. (n.) சித்திர மூலம்; black flowered lead wort (சாஅக.).

[சித்தர் + பட்டை]

சித்தர்பதினெண்மர் *šittar-padiṉeṇmar,* பெ. (n.) திருமூலர், நந்திதேவர், இடைக்காடர், புலத்தியர், அகத்தியர், புண்ணாக்கீசர், போகர், புலிக்கீசர், கொங்கணவர், அழுகண்ணி, பாம்பாட்டி, குதம்பை, கருவூரார், அகப்பேய், தேரையர், சட்டைமுனி, பூனைக்கண்ணர், காலாங்கி ஆகிய பதினெட்டுச் சித்தர்கள்; the eighteen Šittars viz., Thirumūlar, Nandidēvar, Idaikkāḍar, Pulatutiyar, Agattiyar, Puṉṉākkīcar, Bōgar, Pulikkīcar, Koṅgaṇavar, Aḻugaṇṇi, Pāmbāṭṭi, Kudambai, Karuvūrār, Aagappēy, Tēraiyar, Saṭṭaimuṉi, Pūṉaikkaṇṇār, Kālāṅgi (சாஅக.).

[சித்தர் + பதினெண்மர்]

சித்தர்பொடி *šittar-poḍi,* பெ. (n.) சித்த மருந்துத் தூள்; medicinal powder of Šittars.

[சித்தர் + பொடி]

சித்தர்போக்கு *šittar-pōkku,* பெ. (n.) சித்தர்கள் தங்கள் நூல்களில், ஒவ்வொரு பொருள் பற்றியும் விளக்குங்கால், மேற்கொள்ளும் முறை; the method or ways adopted by the Šittars on every subjects in their works (சாஅக.).

[சித்தர் + போக்கு]

சித்தர்மந்தணம் *šittar-mandaṉam,* பெ. (n.) குருவருளின் துணையுடன் சித்தர் இயற்றிய நூலில் அமைந்துள்ள மந்தணச் செய்திகள்; the secret methods which ought to be learnt through the inspiration of a guru on several matters contained in the works (சாஅக.).

[சித்தர் + மந்தணம்]

சித்தர்மறைப்பு *šittar-maṟaippu,* பெ. (n.) தவறாகப் பயன்படுத்தப்பட்டுவிடக் கூடாதென்று கருதித் தகுதியுடையார்க்கன்றி ஏனையோர் எளிதில் கைக்கொள்ளவும் கடைப்பிடிக்கவும் முடியாதவாறு சித்தர்களால் மறைக்கப்பட்ட நூல்களும் மருத்துவச் செய்முறைகளும்; the several sciences and scientific methods of preparing medicine of high repute (சாஅக.).

[சித்தர் + மறைப்பு]

சித்தர்முறை *šittar-muṟai,* பெ. (n.) மக்கள் வாழ்விற்கு இன்றியமையாத, சித்தர்களால் இயற்றப்பட்ட மருத்துவமுறைகள்; the Šittar's medical system can be learnt from the works compiled by them they have mentioned all that is required for a man's career in life (சாஅக.).

[சித்தர் + முறை]

சித்தர்மூலம் *šittar-mūlam,* பெ. (n.) சித்திர மூலம்,1 பார்க்க; see *šittira-mūlam,1.*

[சித்தர் + மூலம்]

சித்தர்மூலி *šittar-mūli,* பெ. (n.) சித்திரமூலம்,1 பார்க்க; see *šittara-mūlam,1.*

[சித்தர் + மூலி]

சித்தர்வர்க்கம் *šittar-varkkam,* பெ. (n.) சித்தர் வகுப்பைச் சார்ந்த நவநாத சித்தர், மூல வர்க்க சித்தர் என்ற இரு பிரிவினர்; the two schools of Šittars viz 1. Navanāda [nine siddhar]. 2. the eighteen Mūlavarkka-Šittars (சாஅக.).

[சித்தர் + வர்க்கம்]

சித்தர்வாக்கியம் *sittar-vākkiyam,* பெ. (n.) *சித்தர்தம் அறிவுரைகள்;* the sacred sayings of Šittars *(சா.அக.).*

[சித்தர் + வாக்கியம்]

சித்தர்விளையாட்டு *sittar-viḷaiyāṭṭu,* பெ. (n). *சித்தர்கள் புரியும் எண்வகை விளையாட்டுகள் (சித்துகள்);* the eight miracle or supernatural powers played by Šittars *(சா.அக.).*

[சித்தர் + விளையாட்டு]

சித்தர்வேதியல்நூல் *sittar-vēdiyal-nūl,* பெ. (n) *சரக்கு வைப்பின் வேதிம இயல்பை விளக்கும் நூல்;* science of Šittars describing the chemical nature of substances *(சா.அக.).*

[சித்தர் + வேதியல்நூல்]

சித்தரகசியம் *sitta-ragašiyam,* பெ. (n.) *சித்தர்மந்தணம் பார்க்க;* see *sittar-mandaṇam.*

[சித்தர் + ரகசியம்]

Skt. rahasya → த. இரகசியம்

சித்தரத்தை *šittarattai,* பெ. (n). *சிற்றரத்தை பார்க்க;* see *sirrarattai.*

[சிற்றரத்தை → சித்தரத்தை]

சித்தராரூடம் *sittar-ārūḍam,* பெ. (n) *நஞ்சு பற்றிய மருத்துவ நூல் (சீவக. 1287, உரை.);* a treatise describing poisonous snakes, effect of their bite and remedies there of.

[சித்தர் + ஆருடம்]

சித்தரி *šittari,* பெ. (n). *சிறுகுளம் (W.G.);* a small tank.

[சிற்றேரி → சித்தேரி → சித்தரி]

சித்தரி-த்தல் *šittari-,* 4 செ.கு.வி. (v.i.) *சித்திரி-த்தல் பார்க்க;* see *šittiri-.*

சித்தருண்ணுங்கற்பத்தி *šittar-uṇṇuṅ-garpatti,* பெ. (n.) *திருகுக் கள்ளியின் வேர்;* twist spurge *(சா.அக.).*

[சித்தருண்ணும் + கற்பத்தி]

சித்தருண்ணுங்கற்பம் *šittar-uṇṇuṅ-karpam,* பெ. (n.) *சித்தர்கற்பம் பார்க்க;* see *šittar-karbam.*

[சித்தர் + உண்ணும் + கற்பம்]

சித்தருண்ணும்புகைமூலி *sittar-uṇṇum-pugai-mūli,* பெ. (n.) *கஞ்சா;* Indian hemp *(சா.அக.).*

[சித்தருண்ணும் + புகைமூலி]

சித்தருண்ணுமூலி *šittar-uṇṇum-mūli,* பெ. (n.) *தம் வாணாளை நீட்டிப்பதற்காகச் சித்தர் உட்கொள்ளும் மூலிகைகள்;* the drugs taken in by Šittars for purposes of rejuvenation *(சா.அக.).*

[சித்தருண்ணும் + மூலி]

சித்தல் *šittal,* பெ. (n.) *சீலை (வின்.);* cloth.

சித்தலை *šittalai,* பெ. (n.) *சிற்றலை;* wavelet.

[சிற்றலை → சித்தலை]

சித்தவைத்தியம் *šitta-vaittiyam,* பெ. (n.) *சித்த மருத்துவம் பார்க்க;* see *šitta-maruttuvam.*

[சித்தர் + வைத்தியம்]

சித்தன்[1] *šittaṉ,* பெ. (n.) *1. நுண்ணறிவு பெற்றவன்;* mystics. *2. அருள் பெற்றோன்;* one endowed with supernatural powers and capable of performing miracle. *3. முருகன் (திருமுரு. 176, உரை);* Murugan. *4. வைரவன் (பிங்.);* Bhairava. *5. அருகன் (பிங்.);* Arhat. *6. சிவன் (சங்.அக.);* Šivan. *7. பிள்ளையார்;* Lord Ganesh.

[சித்து → சித்தன்]

வடவர் சித்தன் என்னும் சொல்லை, ஸாத் (dh) என்பதன் திரிபான ஸித் (dh) என்பதனொடு தொடர்புபடுத்தி ஸித்த (siddha) என்றும், சித்தியை ஸித்தி (siddhi) என்றும் காட்டுவர்.

ஸித் = முடி., கைகூடு. ஸித்தி = முடிவு, முடிபு, கைகூடல். ஸித்த = அரும்பேறு பெற்றவன்.

சித்தன் ஆற்றலைத் தமிழிற் சித்து என்பதே மரபு. சித்து விளையாடல் என்பது உலக வழக்கு. கலம்பகவுறுப்பும் சித்து என்றே பெயர் பெற்றிருத்தல் காண்க. (வ.வ. 148).

சித்தன்[2] *šittaṉ,* பெ. (n.) *வியாழன் (பிங்.);* Jupiter.

[சித்து → சித்தன்]

சித்தன்[3] *šittaṉ,* பெ. (n.) *நேர்மையுள்ளவன் (வின்.);* upright man.

[சித்து → சித்தன்]

சித்தன்[4] *šittaṉ*, பெ. (n.) *1.* இலவு (மலை.); red-flowered silk-cotton tree. *2.* காந்தக்கல் (சங்.அக.); loadstone.

சித்தன்[5] *šittaṉ*, பெ. (n.) கரடி; bear.

சித்தன்சாபக்கல் *šittaṉ-šāba-k-kal*, பெ. (n.) தவளைக்கல் (யாழ்.அக.); laterite slab of iron stone.

[சித்தன் + சாபக்கல்]

சித்தன்வாழ்வு *šittaṉ-vāḻvu*, பெ. (n.) முருகக் கடவுள் வாழ்விடமான திருவாவினன்குடி (திருமுருகு. 176, உரை.); *Thiru-v-āviṉaṉ-kuḍi*, as the abode of Murugaṉ.

[சித்தன் + வாழ்வு]

சித்தாச்சிரமம் *šittācciramam*, பெ. (n.) வாமனனாகப் பிறப்பெடுத்த திருமால் தவஞ்செய்த இடம்; a hermitage where Thirumal- performed penance during His Dwarf-incarnation.

[சித்தன் + ஆசிரமம்]

சித்தாசனம் *šittāšaṉam*, பெ. (n.) இடக்குதி காலை உள்ளடக்கி வலக்குதி காலை எதிரில் வைத்து உட்கார்ந்து புருவத்தின் நடுவில் நாட்டம் வைத்திருக்கையாகிய ஓகவகை (சங்.அக.); yōgic posture which consists in placing the left heel under the body and the right heel in front of it and fixing the sight between the eyebrows in meditation.

[சித்து + ஆசனம்]

சித்தாடு-தல் *šiṭṭāḍu-*, 5 செ.கு.வி. (v.i.) சித்து விளையாடு-தல் பார்க்க; see *šittu-viḷai-y-āḍu.*

சித்தாந்தத்தொகை *šittānda-t-togai*, பெ. (n.) தமிழ்மொழியிற் செய்த ஒரு புத்த நூல் (சி.சி. பர.சௌத். 2, உரை.); a treatise in Tamiḻ on Buddhism.

[சித்தாந்தம் + தொகை]

சித்தாந்தப்பஃறொடை *šittānda-p-paḵroḍai*, பெ. (n.) அம்பலவாண தேசிகரியற்றிய நூல்; a Šaiva Šiddhānda treatise by Ambala-vāṇa-Dēšigar.

[சித்தாந்தம் + பஃறொடை]

சித்தாந்தம் *šittāndam*, பெ. (n.) *1.* முடிந்த முடிபு; well-established conclusion, settled opinion or doctrine, received or admitted truth. "மறையின் வைத்த சித்தாந்த வருத்தமதாலே" (திருக்காளத். பு. 29:37). *2.* வானநூல் (வின்.); astronomical treatise. *3.* சிவக்கொண்முடிபு (சைவ சித்தாந்தம்); Šaiva Šiddhānda. *4.* சிவனறிவு நூல் (சிவாகமம்); Šaiva Āgamās. "சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" (சி.சி.8:15). *5.* விடாப்பிடி (பிடிவாதம்); obstinacy. இந்தச் சித்தாந்தம் ஆகாது.

[சித்து → சித்தாந்தம்]

சித்தாந்தன் *šiṭṭāntaṉ*, பெ. (n) சிவன் (யாழ்.அக.); Šivaṉ.

சித்தாந்தி *šittāndi*, பெ. (n.) *1.* தன் கொள்கையை நாட்டுபவன் (சங்.அக.); one who establishes or proves his theory logically. *2.* வானநூலார்; astronomer. *3.* கணக்கியலார்; mathematician. *4.* சிவக்கொண்முடிபைச் சார்ந்தவன் (உ.வ.); a follower of the Šaiva Šiddhānda system, dist. fr. Vēdāndi. *5.* விடாப்பிடியன்; an obstinate person.

[சித்தாந்தம் → சித்தாந்தி]

சித்தாமணக்கு *šittāmaṇakku*, பெ. (n.) சிற்றாமணக்கு பார்க்க; see *šiṟṟāmaṇakku* (சா.அக.).

[சிற்றாமணக்கு → சித்தாமணக்கு]

சித்தாமல்லி *šittāmalli*, பெ. (n.) சிற்றாமல்லி பார்க்க; see *šiṟṟāmalli* (சா.அக.).

[சிற்றாமல்லி → சித்தாமல்லி]

சித்தாமுட்டி *šittāmuṭṭi*, பெ. (n.) சிற்றாமுட்டி பார்க்க; see *šiṟṟāmuṭṭi* (சா.அக.).

[சிற்றாமுட்டி → சித்தாமுட்டி]

சித்தாள் *šittāḷ*, பெ. (n.) சிற்றாள் பார்க்க; see *šiṟṟāḷ*.

[சிற்றாள் → சித்தாள்]

சித்தி[1]**-த்தல்** *šitti-*, 4 செ.கு.வி. (v.i.) *1.* கைகூடுதல்; to be gained, accomplished, to be realised. "சித்தாந்தத்தே நிற்பர் முத்தி சித்தித்தவர்" (திருமந். 2394). *2.* மருந்தினை முழுமையாகச் செய்து

முடித்தல்; to succeed in the preparation of medicine of high repute.

[சித்து → சித்தி; சித்து = அறிவு, முழுமை. சித்தி → சித்தித்தல்]

சித்தி[2] *šitti*, பெ. (n.) சிறிய தாய்; சித்தப்பாவின் மனைவி, தாயின் தங்கை; mother's younger sister; father's younger brother's wife.

[சிற்றாய் → சிற்றாய்த்தி → சித்தி]

சித்தி[3] *šitti*, பெ. (n.) சித்தியா (தஞ்சைமாலியஅந்) பார்க்க; see *šittiya*.

[சித்தியா → சித்தி]

சித்தி[4] *šitti*, பெ. (n.) சித்தை[1] பார்க்க; see *šittai*.

[சித்தை → சித்தி]

சித்தி[5] *šitti*, பெ. (n.) செடில்; hook - swinging festival.

சித்தி[6] *šitti*, பெ. (n.) நிலக்குமிழ்; small Cashmere tree.

சித்திக்கண் *šitti-k-kaṉ*, பெ. (n.) அறிவுக்கண்; the eye of wisdom (சா.அக.).

[சித்து → சித்தி + கண்]

சித்திக்கண்ணன் *šitti-k-kaṇṇaṉ*, பெ. (n.) துறவி; sage (சா.அக.).

[சித்து → சித்தி + கண்ணன்]

சித்திக்கல் *šitti-k-kal*, பெ. (n.) 1. செடிலாட்டத்திற்காக நாட்டப்பட்ட தூண். (G. Sm. D.. I. i, 122); stone or wooden pillar set up for hook - swinging. 2. குறுஞ்சிலைக்கல் (வின்.); kind of red stone.

[சித்தி[4] + கல்]

சித்திக்கலை *šitti-k-kalai*, பெ. (n.) சித்திக்கல் பார்க்க; see *šitti-k-kal* (சா.அக.).

சித்திக்குளிகை *šitti-k-kuḷigai*, பெ. (n.) எண் வகை இறும்பூதுகளை (அற்புதங்களை) நிகழ்த்தும் குளிகை; a magic pill peculiar to Tamiḻ Sitta medicine prepared to enable one to attain success in the performance of eight miracles (சா.அக.).

[சித்தி + குளிகை. குள் → குளிகை = உருண்டை மாத்திரை]

சித்திக்குறி *šitti-k-kuṟi*, பெ. (n.) எட்டிக் கொட்டை; nux vamica nut (சா.அக.).

சித்திடு *šittiḍu*, பெ. (n.) சித்துடு[2] (மலை.) பார்க்க; see *šittuḍu*[2].

[சித்துடு[2] → சித்திடு]

சித்திநெறி *šittineṟi*, பெ. (n.) சித்தநெறி பார்க்க; see *šittaneṟi*,*l*.

[சித்தநெறி → சித்திநெறி]

சித்திமல்லி *šitti-malli*, பெ. (n.) வெதுப்படக்கி; stinking plant (சா.அக.).

சித்திமூலம் *šittimūlam*, பெ. (n.) 1. கொடுவேலி; Ceylon lead-wort. 2. நிலப் பனையின் கிழங்கு; moosly root.

ம. சித்திரமூலம்

[சித்திரமூலம் → சித்திமூலம்]

சித்தியம் *šittiyam*, பெ. (n.) கோரி (யாழ்.அக.); turret.

சித்தியர்[1] *šittiyar*, பெ. (n.) தெய்வமங்கையர் வகையினர்; a class of celestial women. "சித்திய ரிசைப்பத் தீஞ்சொல்" (கம்பரா. ஊர்தேடு. 186).

[சித்தன் (ஆ.பா.) - சித்தி (பெ.பா.). 'இ' பெ.பா. ஈறு. சித்தி + அர் → சித்தியர். 'அர்' ப.பா. ஈறு]

சித்தியர்[2] *šittiyar*, பெ. (n.) சித்திபெற்றவர்கள்; one who attained spiritual power.

சித்தியா *šittiyā*, பெ. (n.) சிற்றப்பன்; தந்தையின் தம்பி, அம்மாவின் தங்கை கணவர் (மாலிய அந்தணர்); father's younger brother; mother's younger sister's husband.

[சிற்றையா → சித்தையா → சித்தியா]

சித்தியாகு-தல் *šittiyāgu-*, 5 செ.கு.வி. (v.i.) பயன்படல்; to become useful (சா.அக.).

[சித்தி + ஆகு]

சித்தியார் *šittiyār*, பெ. (n.) சிவஞான சித்தியார்; a treatise on Šaiva Šiddhāntā. "உந்திகளி றுயர் போதஞ் சித்தியார்" (திராவிடப். 384).

[சித்தி → சித்தியார்]

சித்திரக்கடம் *šittira-k-kaḍam,* பெ. (n.) பெருங்காடு (வின்.); wild jungle, wilderness.

[சித்திரம் + கடம்]

சித்திரக்கண்டகம் *šittira-k-kaṇḍagam,* பெ. (n.) சித்திரகண்டம் பார்க்க; see *šittira-kaṇḍam* (சா.அக.).

[சித்திரகண்டம் → சித்திரகண்டகம்]

சித்திரக்கண்டம் *šittira-k-kaṇḍam,* பெ. (n.) 1. அழகிய கழுத்து; beautiful neck. 2. பல வண்ணக் கழுத்துடைய மாடப் புறா; house pigeon.

[சித்திரம் = ஓவியம், அழகு. கண்டம் = கழுத்து; சித்திரம் + கண்டம்]

சித்திரக்கம்மம் *šittira-k-kammam,* பெ. (n.) அழகிய நுண்கலை வேலைப்பாடு; artistic workmanship. "செந்நூ னிணைந்த சித்திரக் கம்மத்து" (பெருங். உஞ்சைக் 35:98)

[சித்திரம் + கம்மம்]

சித்திரக்கம்மி *šittira-k-kammi,* பெ. (n.) ஓவியத் தொழிலமைந்த ஆடைவகை. (சிலப். 14:108, உரை.); a kind of cloth.

[சித்திரம் + கம்மி]

சித்திரக்கருங்கல் *šittira-k-karuṅgal,* பெ. (n.) கோடுகளுள்ள கருங்கல் வகை; graphic granite.

[சித்திரம் + கருங்கல்]

சித்திரக்கவி *šittira-k-kavi,* பெ. (n.) 1. நால்வகைப் பாக்களுள் சித்திரத்தில் அமைத்துப் பாடும் மிறைப்பா (பிங்.); a variety of metrical composition filled into fanciful figures, one of nāṟ-pā. 2. சித்திரப்பா பாடுவோன் (சங்.அக.); one claver in composing šittira-p-pā.

[சித்திரம் + கவி]

சித்திரக்கா *šittirakkā,* பெ. (n.) சித்திரக்கவி வகை; a kind of šittira-k-kavi. "சித்திரக்காவே விசித்திரக்காவே" (யாப்.வி.96).

[சித்திரம் + கா]

சித்திரக்காரன் *šittira-k-kāraṉ,* பெ. (n.) 1. ஓவியம் எழுதுவோன்; painter, portrait-painter. "சித்திரகாரருஞ் செய்கெனச் சொல்லி" (பெருங். வத்தவ. 3:28). 2. சிற்பி (சூடா.); sculptor, engraver.

ம. சித்ரக்காரன், சித்ரகான்

[சித்திரம் + காரன்]


சித்திரக்காரன்

சித்திரக்காரை *šittirakkārai,* பெ. (n.) புள்ளிகளையுடைய மீன் வகை; a kind of fish (சேரநா.).

[சித்திரம் + காரை]

சித்திரக்காலி *šittira-k-kāli,* பெ. (n.) 1. காரத் தன்மையுள்ள கொடிவகை; an unknown pungent creeper. 2. நெல்வகை (சங்.அக.); a kind of paddy.

சித்திரக்கிழங்கு *šittira-k-kiḻaṅgu,* பெ. (n.) கொடுவேலிக் கிழங்கு; the root of plumbago zeylarica (சேரநா.).

ம. சித்திரக்கிழங்ங

சித்திரக்குண்டலி *šittira-k-kuṇḍali,* பெ. (n.) கூத்து வகை (கல்லா. 27, உரை, பக்.222); a kind of dance.

[சித்திரம் + குண்டலி]

சித்திரக்குத்தன் *šittira-k-kuttaṉ,* பெ. (n.) கூற்றுவனிடம் உயிர்களின் நல்வினை தீவினைகளைக் கணக்கெழுதிப் படிப்போனாகக் கருதப்படுவான்; one who believes Yama's officer who records the good end evil deeds of human beings. "சித்திரகுத்த னெழுத்தால்" (திவ். பெரியாழ். 5. 2:2).

சித்திரக்குள்ளன் *šittira-k-kuḻḻaṉ*, பெ. (n.) உடற் குறையோடுகூடிய குள்ளன்; chandroplatic dwarf with bodily defects (சா.அக.).

[சித்திரம் + குள்ளன். சித்திரம் = குறைவு]

சித்திரக்கூடக்கல் *šittirakūḍa-k-kal*, பெ. (n.) நாக வடிவாகச் செய்யப்பட்ட கல்; a stone idol of serpent god (சேரநா.).

ம. சித்ரகூடக்கல்லு

[சித்திரம் + கூடம் + கல்]

சித்திரக்கூடம்[1] *šittira-k-kūḍam*, பெ. (n.) 1. ஓவியச் சாலை; decorated or painted hall, hall hung with pictures. "செல்வப் பொறிகிடுகு சூழ்ந்த சித்திரக்கூடம்" (சீவக. 2139). 2. தெற்றியம் பலம் (திவா.); raised platform. 3. தில்லைத் திருமால் கோயில்; a Tirumāl shrine in Chidambaram. "தில்லைத் திருச்சித்திரக்கூடஞ் சென்று சேர்மின்களே" (திவ். பெரியதி. 3:2).

[சித்திரம் + கூடம்]

சித்திரக்கூடம்[2] *šittira-k-kūḍam*, பெ. (n.) இராமன் காட்டில் வாழ்ந்த போது தங்கியிருந்த ஒரு மலை; a mountain in Bundlekh and where Ramaṉ stayed during his exile. "சித்திர கூடத் திருப்பச் சிறுகாக்கை முலை தீண்ட" (திவ். பெரியாழ். 3.10:6).

[சைத்ரம் → சித்திரம் + கூடம்]

சித்திரக்கொடி *šittira-k-koḍi*, பெ. (n.) கொடுவேலி (பிங்.); ceylon leadwort.

[சித்திரம் + கொடி]

சித்திரக்கோலம் *šittira-k-kōlam*, பெ. (n.) 1. நச்சுப் பல்லி (யாழ். அக.); a kind of poisonous lizard. 2. பாம்பு; cobra (சா.அக.).

[சித்திரம் + கோலம்]

சித்திரகம் *šittiragam*, பெ. (n.) 1. கொடுவேலி (மலை.); Ceylon leadwort. 2. ஆமணக்கு (சூடா.); castor plant.

சித்திரச்சபை *šittira-c-cabai*, பெ. (n.) திருக் குற்றாலத்துச் சிவன் நடனமாடும் கோயில் (குற்றா. தல. கடவுள் வண.3); dancing - hall of Naṭrāja at Tiru-k-kuṟṟālam in Tirunelveli district.

[சித்திரம் + சபை. அவை → சவை → சபை]

சித்திரச்சாலை *šittira-c-cālai*, பெ. (n.) சித்திர மண்டபம் பார்க்க; see *šittira-maṇḍabam*. "பத்தியிற் குயிற்றிய சித்திரச் சாலையும்" (பெருங். மகத. 4:15).

[சித்திரம் + சாலை]

சித்திரச்சிலந்தி *šittira-c-cilandi*, பெ. (n.) ஒரு வகைச் சிலந்தி; a kind of spider (சா.அக.).

[சித்திரம் + சிலந்தி]

சித்திரச்சூடகம் *šittira-c-cūḍagam*, பெ. (n.) அழகிய வேலைப்பாடமைந்த விரற்செறி. (குற்றா.குற. 51); a ring of fine workman ship.

[சித்திரம் + சூடகம். சூடு → சூடகம் = கைவளை]

சித்திரச்சோறு[1] *šittira-c-cōṟu*, பெ. (n.) புளிச்சோறு, சருக்கரைச் சோறு, எட்சோறு முதலியன கலந்து செய்த பலவண்ணச் சோறு (சங்.அக.); boiled rice mixed with spicy condiments, as tamarind, sesamum, suger, etc. "சித்திரச் சோற்றிற் செருக்கினேன்" (அருட்பா, vi, அவாவறுப்பு. 7)

மறுவ. சித்திரான்னம்

[சித்திரம் + சோறு]

சித்திரத்தண்டகம் *šittira-t-taṇḍagam*, பெ. (n.) பருத்தி (யாழ்.அக.); cotton.

[சித்திரம் + தண்டகம்]

சித்திரத்தாரணை *šittira-t-tāraṇai*, பெ. (n.) ஒன்பதுவகை ஆற்றல்களுளொன்று (யாப்.வி96, பக். 516); one of nava-tāraṇai (சா.அக.).

சித்திரத்தாளம் *šittira-t-tāḷam*, பெ. (n.) ஒன்பது வகை தாளத்தொன்று (பரத.தாள. 6); a variety of time-measure one of nava-tāḷam.

[சித்திரம் + தாளம்]

சித்திரத்தையல் *šittira-t-taiyal*, பெ. (n.) ஆடைகளில் பூ வேலைப்பாடுகள் அமைந்த தையல்; embroidary (சேரநா.).

மறுவ. சித்திரத் துன்னல்

ம. சித்ரத்தய்யல்

[சித்திரம் + தையல்]

சித்திரநாடி *šittira-nāḍi,* பெ. (n.) நடு முதுகிலோடும் சுழிமுனை நாடி; one of the passages of nerve-centre at the top of the vertebral column running down the spinal cord *(சா.அக.).*

சித்திரநோய் *šittira-nōy,* பெ. (n.) குடல் நோய்; a disease of the intestines *(சா.அக.).*

சித்திரப்படம் *šittira-p-paḍam,* பெ. (n.) *1.* எழுதிய ஓவியம்; picture. 'சித்திரத்துக் கொக்கே, ரத்தினத்தைக் கக்கு' *(பழ.)* *2.* பூந்துகில்; variegated, painted or printed cloth. *3.* யாழ் முதலியவற்றில் பல நிறமுள்ள அல்லது பூத்தொழிலமைந்த உறை; decorated cloth-cover. "சித்திரப்படத்துட் புக்கு" *(சிலப். 7:1).*

ம. சித்ரபடம்

[சித்திரம் + படம்]

சித்திரப்படாம் *šittira-p-paḍām,* பெ. (n.) சித்திரப்படம், 2 பார்க்க *(யாழ். அக.);* see *šittira-p-paḍam, 2.*

[சித்திரம் + படாம். படம் → படாம்]

சித்திரப்பணி *šittira-p-paṇi,* பெ. (n.) *1.* வியப்பிலாழ்த்தும் வேலைப்பாடு; decorative or ornamental work. *2.* ஓவியம் *(சிலப். 6:169, அரும்.);* painting.

ம. சித்ரப்பணி

[சித்திரம் + பணி]

சித்திரப்பலகை *šittira-p-palagai,* பெ. (n.) ஓவியம் வரையப் பயன்படும் பலகை; a board used for painting a picture, painted board or plank *(சேரநா.).*

ம. சித்ரப்பலக

[சித்திரம் + பலகை]

சித்திரப்பா *šittira-p-pā,* பெ. (n.) சித்திரக்கவி *(திவா.)* பார்க்க; see *šittira-k-kavi.*

[சித்திரம் + பா]

சித்திரப்பாலடை *šittira-p-pālaḍai,* பெ. (n.) *1.* பூடுவகை; painted-leaved tailed tick-trefoil. *2.* அம்மான்பச்சரிசி *(சங்.அக.);* species of euphorbia.

[சித்திரம் + பால் + அடை. அடை = இலை]

சித்திரப்பாலாடை *šittira-p-pālāḍai,* பெ. (n.) சித்திரப்பாலடை பார்க்க; see *šittira-p-pālaḍai.*

[சித்திரம் + பாலாடை]

சித்திரப்பாலாவி *šittira-p-pālāvi,* பெ. (n.) அம்மான்பச்சரிசி; species of euphorbia.

மறுவ. சித்திரவல்லாதி, சீதேவியார்

[சிற்றிலைப் பாலாவி → சித்திரப்பாலாவி]

சித்திரப்பாலை *šittira-p-pālai,* பெ. (n.) சிற்றம்மான் பச்சரிசி *(பாலவா. 364);* species of euphorbia.

[சித்திரம் + பாலை]

சித்திரப்பாவை *šittira-p-pāvai,* பெ. (n.) சித்திரத்தில் தீட்டப்பட்ட பெண் வடிவம்; picture, portrait, carved image, especially of a woman. "சித்திரப் பாவையி னத்தக வடங்கி" *(நன். 41).*

[சித்திரம் + பாவை. பார்ப்பு = பறவைக் குஞ்சு, மக்கட்குழவி. பார்ப்பு → பாப்பு. ஒ.நோ. கோர்வை → கோவை. பார்வை → பாவை = கண்ணில் தோன்றும் உருவம். பாவை = படிமை, பொம்மை, அழகிய உருவம், பெண் வடிவம்]

சித்திரப்பாளை *šittira-p-pāḷai,* பெ. (n.) கேரளத்துத் தெய்யம், கோலம், துள்ளல் முதலிய ஆட்டங்களில் பாக்குமரப் பட்டைகளில் வண்ணந்தீட்டி அணியப்படும் முகமூடி; a painted mask made of spathe of the areca nut palm (worn by actors in teyyam and kolam tuḷḷal) *(சேரநா.).*

ம. சித்ரப்பாள

[சித்திரம் + பாளை]

சித்திரப்பிரதிமை *šittira-p-piradimai,* பெ. (n.) சித்திரப்பாவை *(யாழ்ப்.)* பார்க்க; see *šittira-p-pāvai.*

[சித்திரம் + பிரதிமை]

Skt. pratimā → த. பிரதிமை

சித்திரப்புடைவை *šittira-p-puḍaivai,* பெ. (n.) *1.* அச்சடிசேலை *(இ.வ.);* printed cloth, chintz. *2.* பல வண்ண ஓவிய வேலைப்பாடுடைய புடைவை; damask.

[சித்திரம் + புடைவை]

சித்திரப்புணர்ப்பு *šittira-p-puṇarppu*, பெ. (n.) இசை கொள்ளும் எழுத்துகளின் மேல் வல்லெழுத்து வந்தபோது மெல்லொற்று போலப் பண்ணீர்மை நிறுத்துகை (சிலப். 3: 56, உரை.); nasalising the hard consonants in singing a musical piece.

[சித்திரம் + புணர்ப்பு. புணர் → புணர்ப்பு]

சித்திரப்புல் *šittira-p-pul*, பெ. (n.) ஓவியத் தூரிகையிற் பயன்படுத்தும் ஒருவகைப் புல்; a kind of grass or reed used as a painter's brush.

ம. சித்ரப்புல்லு

[சித்திரம் + புல்]

சித்திரப்புறா *šittira-p-puṟā*, பெ. (n.) புள்ளிப் புறா (சீவக. 564, உரை); spotted dove.

[சித்திரம் + புறா]

சித்திரப்பூச்சு *šittira-p-pūccu*, பெ. (n.) ஓவிய வேலைப்பாடமைந்த வெள்ளி அல்லது தங்கப் பூச்சு; decorative plating (சேரநா.).

ம. சித்ரப்பூச்சு

[சித்திரம் + பூச்சு]

சித்திரப்பூமி *šittira-p-pūmi*, பெ. (n.) அழகும் வியப்பும் நிறைந்த சோலை, செய்குன்று முதலிய இடங்கள்; beautiful landscape. "சித்திரப்பூமி வித்தக நோக்கி" (பெருங். உஞ்சைக். 33:7.).

[சித்திரம் + பூமி]

Skt. bhūmi → த. பூமி

சித்திரப்பெண் *šittira-p-peṇ*, பெ. (n.) 1. வெற்றிலை; betel leaf. 2. வெற்றிலைக் கொடி; betel vine (சா.அக.).

[சித்திரம் + பெண். சித்திரம் = அழகு]

சித்திரப்பேச்சு[1] *šittira-p-pēccu*, பெ. (n.) அழகான பேச்சு; rhetorical utterance.

[சித்திரம் + பேச்சு]

சித்திரப்பேச்சு[2] *šittira-p-pēccu*, பெ. (n.) தந்திரப் பேச்சு; artful speech.

[சித்திரம் + பேச்சு]

சித்திரம்[1] *šittiram*, பெ. (n.) 1. ஓவியம்; picture, painting. "சித்திரம் பயின்ற செம்பொன் விதானத்து" (பெருங். உஞ்சைக். 37:14). 'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்' (பழ.). 2. சிறப்பு (பிங்.); excellence. 3. அழகு; beauty. "சித்திரமாக...... செய்த....... பூங்காவின்" (பெருங். வத்தவ. 7:149). 4. அணியழகு; decoration, embelishment. 5. வியப்பானது; object of wonder, surprise. "சித்திர மிங்கிது வொப்பது" (கம்பரா. கார்முக. 19). 6. சித்திரப்பேச்சு[1] பார்க்க; see *šittira-p-pēccu*[1]. 7. சித்திரக்கவி (பிங்.) பார்க்க; see *šittira-k-kavi*. 8. ஒரு சிற்பநூல்; a treatise on architecture. 9. காடு (பிங்.); forest.

ம. சித்திரம்

[செத்தல் = ஒத்தல். செத்து = ஒத்து, போல. (தொல்.பொருள். 286, உரை.) செ + திரம் - செத்திரம் → சித்திரம் = ஒப்பு, ஓவியம், பலவண்ணம், திறமை, புதுமை. ஒ.நோ. செந்தூரம் → சிந்தூரம். செத்தல் = ஒத்தல்

'திரம்' தொழிற் பெயரீறு. எ.டு. மாத்திரம், மோட்டிரம் → மோத்திரம் = மூத்திரம்

வடவர் சித்ர என்பதைச் சித் என்பதன் திரிபாகக் கொண்டு, தெளிவாய்த் தெரிதல், விளக்கமான நிறம், வண்ண வேறுபாடு, வண்ணப்படம் என்று வலிந்து பொருத்திக் காட்டுவர் (வ.வ.149)]

த. சித்திரம் → Skt. citra

சித்திரம்[2] *šittiram*, பெ. (n.) புலி; tiger, panther. "கதியில் வந்த சித்திரமென" (பாரத. பதின்மூ. 125).

சித்திரம்[3] *šittiram*, பெ. (n.) 1. ஓட்டை; hole, slit, opening. 2. குறைவு; ignominy, blot. "மெலிவு தோன்றிய சித்திரம் பெறுதலில்" (கம்பரா. கும்பகரு. 293). 3. வெளி (மாறனலங். 261. உதா. 626); void. 4. பொய்; unreality. "சித்திரமிக் கனவில் வாழ்வென" (கந்தரந். 50). 5. மந்தணம்; secret. "பகைவெல் சித்திரம் பலதிறம் பயிற்றி" (பெருங். உஞ்சைக். 37:43). 6. சித்திரப்பேச்சு[2] பார்க்க; see *šittira-p-pēccu*[2]. 7. உட்கலகம்; discord, as in a family.

[இல் → இல்லி = துளை, சிறுதுளை. இல் → சில் → சில்லி = ஓட்டை. சில் → சின் → சிந்திரம் → சித்திரம்]

சித்திரம்[4] *šittiram*, பெ. (n.) *1.* கொடுவேலி; Ceylon leadwort. *2.* சிறுகுறிஞ்சா; species of gymnema. *3.* ஆமணக்கு; castor plant.

சித்திரம்[5] *šittiram*, பெ. (n.) *1.* புதுமைப் பொருள்; novelty. *2.* பல நிறம்; varied colours.

சித்திரம்பேசு-தல் *šittiram-pēšu-*, *5* செ.கு.வி. (v.i.) போலியாகப் பேசுதல், பொய்யாகச் சொல்லுதல்; to utter false with rhetorical style to speak falsehood (சா.அக.).

[சித்திரம் + பேசு-,]

சித்திரம்வெட்டு-தல் *šittiram-veṭṭu-*, *5* செ.கு.வி. (v.i) கல்லில் ஓவியவேலை செய்தல் (C.E.M.); to engrave on stones.

[சித்திரம்[1] + வெட்டு]

சித்திரமண்டபம் *šittira-maṇḍabam*, பெ. (n.) *1.* ஓவியச்சாலை; painted chamber, hall decorated with pictures, picture-gallery. *2.* ஓலக்க மண்டபம் (சீவக. 2370); royal audience - hall.

[சித்திரம் + மண்டபம். முள் → முண்டு → மண்டு. மண்டுதல் = கூடுதல். மண்டு → மண்டகம் → மண்டபம்]

சித்திரமண்டலம் *šittira-maṇḍalam*, பெ. (n.) நச்சுப் பாம்பு வகைகளுள் ஒன்று; a venamous kind of snake (சேரநா.).

[சித்திரம் + மண்டலம். மண்டுதல் = வளைதல். மண்டு → மண்டலம் = வட்டம், வட்ட வடிவம், வட்டமாய்ச் சுற்றி வருகை]

சித்திரமண்டலச்சிலந்தி *šittira-maṇḍala-c-cilandi*, பெ. (n.) நச்சுத் தன்மையுள்ள சிலந்தி; a kind of poisonous spider (சா.அக.).

[சித்திரம் + மண்டலம் + சிலந்தி]

சித்திரமாடம் *šittira-māḍam*, பெ. (n.) ஓவிய வேலைப்பாடமைந்த, அணியழகு செய்யப் பட்ட மாளிகை; beautiful hall or palace artistically decorated with pictures and paintings. "சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன்" (புறநா. 59).

[சித்திரம் + மாடம்]

சித்திரமூலப்பற்று *šittira-mūla-p-paṟṟu*, பெ. (n.) கடைச் சரக்குகளாற் செய்யப்படுவதும் வீக்கத்தைப் போக்குவதுமாகிய களிம்பு; an ointment prepared from the bazar ingredients. It is used for reducing swelling for purposes of cure.

[சித்திர மூலம் + பற்று]

சித்திரமூலம் *šittira-mūlam*, பெ. (n.) *1.* கொடுவேலி; Ceylon leadwort. *2.* செங்கொடு வேலி; rosy-flowered leadwort. *3.* நீலக்கொடு வேலி; blue lead - wort. *4.* நிலப்பனை; ground-palm. *5.* காட்டாமணக்கு; English physic nut (சா.அக.).

ம. சித்திரமூலம்

[சித்திரம்[4] + மூலம்]

சித்திரமூலி *šittira-mūli*, பெ. (n.) சித்திரமூலம்,[2] (மலை.) பார்க்க; see *šittira-mūlam*,[2].

[சித்திரம் + மூலி]

சித்திரமெழுதுமண் *šittira-meḻudu-maṇ*, பெ. (n.) *1.* செம்மண்; red ochre. *2.* செம்மணல்; red sand.

[சித்திரம் + எழுதும் + மண்]

சித்திரமேகத்தடாகம் *šittira-mēga-t-taḍāgam*, பெ. (n) மகேந்திரவர்மன் மாமண்டூரில் உண்டாக்கிய ஓர் ஏரி; a lake made by the Pallava king Mahēndravarmaṉ.

[சித்திரம் + மேகம் + தடாகம்]

சித்திரமேகலை *šittira- mēgalai*, பெ. (n.) மயில்; pea-cock (சா.அக.).

[சித்திரம் + மேகலை]

சித்திரமேழி *šittiramēḻi*, பெ. (n.) *1.* கலப்பைக் குறி; a plough-emblem cut in stone. "திருவாழியும் சித்திர மேழியும் இட்ட கல்நட்டு" (தெ.க.தொ. 5, 199). *2.* ஊரவை (I.M.P.N.A.149); village assembly.

[சித்திரம் + மேழி]

மேழி பார்க்க

சித்திரர் *šittirar*, பெ. (n.) கலகம் விளைப்போர், குழப்பம் விளைப்போர்; quarrelsome, factious people. "சித்திரர்க்கெளி யேனலேன்" (தேவா. 859, 3)

சித்திரரதன் *śittira-radaṉ,* பெ. (n.) அழகிய தேரையுடைய கதிரவன் (சங்.அக.); Sun, as riding in a beautiful chariot.

[சித்திரம் + இரதன்]

சித்திரவண்ணச்சேலை *śittira-vaṇṇa-c-cēlai,* பெ. (n.) வண்ணந்தீட்டிய புடைவை வகை (பஞ்ச. திருமுக. 1160); a kind of saree.

[சித்திரம் + வண்ணம் + சேலை]

சித்திரவண்ணம் *śittira-vaṇṇam,* பெ. (n.) நெடிலும் குறிலும் ஒப்பவிரவிய சந்தம் (தொல். பொருள். 534); a rhythmic verse characterised by euphonic alternation of long and short syllables.

[சித்திரம் + வண்ணம்]

சித்திரவரி *śittira-vari,* பெ. (n.) கண்விழி; pupil of the eye.

[சித்திரம் + வரி]

சித்திரவரைவு *śittira-varaivu,* பெ. (n.) கையிலுள்ள வரைவு (ரேகை); streaks or lines on the palms.

[சித்திரம் + வரைவு]

சித்திரவல்லாரி *śittira-vallāri,* பெ. (n.) சேங்கொட்டை; common marking- nut.

[சித்திரம் + வல்லாரி]

சித்திரவல்லி *śittira-valli,* பெ. (n.) கசப்பு வெள்ளரி வகை; a species of bitter cucumber.

[சித்திரம் + வல்லி]

சித்திரவிதழ் *śittira-v-idaḻ,* பெ. (n.) துத்தி (மலை.); country mallow.

[சித்திரம் + இதழ்]

சித்திரவிதை *śittira-vidai,* பெ. (n.) ஆமணக்கு, முத்துக்கொட்டை; castor seed (சா.அக.).

[சித்திரம் + விதை]

சித்திரவெழுத்து *śittira-v-eḻuttu,* பெ. (n.) ஓவியக் கலை; the art of painting (சேரநா.).

[சித்திரம் + எழுத்து]

சித்திரவேளாகொல்லி *śittira-vēḷā-kolli,* பெ. (n.) யாழ்த்திறவகை (திவா.); a secondary melody-type.

[சித்திரம் + வேளாகொல்லி]

சித்திரவேளாவளி *śittira-vēḷā-vaḷi,* பெ. (n.) பண்வகை (பரத. ராக.104.); a specific melody - type.

சித்திரவோடாவி *śittira-v-ōḍāvi,* பெ. (n.) ஓவியம் எழுதுவோன் (யாழ்.அக.); painter.

[சித்திரம் + ஓடாவி]

சித்திரவோரை *śittira-vōrai,* பெ. (n.) உள்ளங்கை வரிகை (ரேகை)களுள் ஒன்று (வின்.); a line in palm of hand significant in palmistry.

[சித்திரம் + ஓரை]

சித்திரன் *śittiraṉ,* பெ. (n.) *1.* ஓவியன்; painter, artist. *2.* தச்சன்; carpenter.

[சித்திரம் → சித்திரன்]

சித்திராங்கதை *śittirāṅgadai,* பெ. (n.) அருச்சுனன் மனைவியான பாண்டியன் மகள்; the Pandiayan princess who married Aruccuṉaṉ. "சித்திராங்கதை யென்னுஞ் செஞ்சொல் வஞ்சி" (பாரத. அருச்சுனன்றீர். 26)

சித்திராசனம் *śittirāśaṉam,* பெ. (n.) *1.* ஏந்தாக இருத்தலாகிய ஒக வகை (காசிக. யோக. 15); a yōgic posture which consists in sitting as best suits one's comfort. *2.* உட்காரப் பயன்படும் சிறிய அரத்தினக் கம்பளம் (சிசி. 8, 33, நிரம்ப); small coloured corpet for sitting.

[சித்திரம் + ஆசனம்]

சித்திரான்னம் *śittirāṉṉam,* பெ. (n.) சித்திரச் சோறு பார்க்க; see *śittira-c-cōṟu.*

[சித்திரை + அன்னம்]

சித்திரி[1]-த்தல் *śittiri-,* 4 செ.குவி. (v.i.) *1.* சித்திர மெழுதுதல்; to paint, make fancy work. *2.* வண்ணித்துப் (அழகாகப்) பேசுதல் (வின்.); to paint in words, use rhetorical tricks in speech. *3.* கற்பனை செய்தல்; to fashion, invent, as arguments; to fabricate. "வஞ்சனை தெரிந்து

சித்திரிப்பார்" (பெரியபு. திருநாவுக். 82). 4. ஒப்பனை செய்தல்; to beautify. *"திகழொளி தோன்றச் சித்திரித் தியற்றிய" (பெருங். வத்தவ. 17:76).*

[சித்திரம் → சித்திரி → சித்திரித்தல்]

வடவர் 'சித்ர' என்பதைச் 'சித்' என்பதன் திரிபாகக்கொண்டு தெளிவாய்த் தெரிதல், விளக்கமான நிறம், வண்ணவேறுபாடு, வண்ணப்படம் என்று வலிந்து பொருத்திக் காட்டுவர். சித்திரித்தல் என்னும் வினை வடமொழியில் இல்லை (வ.வ.149).

சித்திரி[2] *šittiri,* பெ. (n.) கெந்தலவணம் *(யாழ்.அக.);* mineral salt.

சித்திரிகத்திரி *šittiri-kattiri,* பெ. (n.) மகப்பேற்றிற்குப் பயன்படும் கருவி வகையு *ளொன்று;* an instrument or scissors used for removing the child *(சா.அக.).*

[சித்திரி + கத்திரி]

சித்திரிகன் *šittirigan,* பெ. (n.) ஓவியன்; artist. "வரைவுறு சித்திரிகன் சித்திர சக்தியைப் போல்" *(வேதா. சூ. 26).*

[சித்திரம் → சித்திரி → சித்திரிகன்]

சித்திரிகை *šittirigai,* பெ. (n.) 1. வீணை வகை *(பரத. ஒழிபி. 15);* a kind of lute. 2. நல்லாடை வகை *(திவா.);* good, valuable clothes.

[சித்திரி' → சித்திரிகை]

சித்திரை[1] *šittirai,* பெ. (n.) 1. பதினான்காம் விண்மீனாகிய நெய்ம்மீன் *(பிங்.);* the 14th naksatra, part of Virgo. 2. தமிழாண்டின் முதல் மாதமாகக் கருதப்படும் மேழம்; known as the first month of the Tami̲l year, April-May. "சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென" *(சிலப். 5:64).*

சுறவமே தமிழாண்டின் தொடக்கம்;
மேழத்தைக் கொள்வது பொருத்தமன்று

சித்திரை[2] *šittirai,* பெ. (n.) அம்மான்பச்சரிசி *(வின்.);* species of euphorbia.

சித்திரை[3] *šittirai,* பெ. (n.) நாகணவாய்ப் புள்; common myna.

சித்திரைக்கஞ்சி *šittirai-k-kañji,* பெ. (n.) மேழ வெள்ளுவா (சித்திரா பௌர்ணிமை) நாளில் சித்திரகுத்தன் மனநிறைவடையும் பொருட்டு வழங்கும் கஞ்சி *(யாழ்ப்.);* rice gruel distributed on the fullmoon - day of Šittirai to propitiate Šitragupta.

[சித்திரை' + கஞ்சி]

சித்திரைக்கடப்பு *šittirai-k-kaḍappu,* பெ. (n.) சீகாழிவட்டத்தில் பெரும்பாலும் கோடையில் விளைவிக்கப்படும் பெருநெல் வகை *(இ.வ.);* a kind of paddy generally cultivated in summer in Sirkāḻi taluk.

[சித்திரை + கடப்பு]

சித்திரைக்கதை *šittirai-k-kadai,* பெ. (n.) மேழவெள்ளுவா நாளில் கோயில்களிலும் வீடுகளிலும் படிக்கப்படுவதும் நன்மை தீமைகளைக் கூறுவதுமான சித்திரகுப்தன் கதை *(யாழ்ப்.);* story of Šitragutta describing rewards and punishments for various good and bad actions, read in temples and houses on Šittirāpūraṇai.

[சித்திரை + கதை]

சித்திரைக்கரந்தை *šittirai-k-karandai,* பெ. (n.) சித்திரைக்கருந்தலை (நெல்லை) பார்க்க; see *šittirai-k-karundalai.*

[சித்திரை + கரந்தை]

சித்திரைக்கருந்தலை *šittirai-k-karundalai,* பெ. (n.) விளைச்சல் (சாகுபடி) முற்றுப் பெற்றதும் பின்னேற்பாடுகளை நடத்தற்குரிய மேழ (சித்திரை) மாத முடிவு; the closing part of šittirai when the agricultural season ends and plans are made for cultivation in the ensuing season.

[சித்திரை + கருந்தலை. கருந்தலை = முடிவு]

சித்திரைக்கார் *šittirai-k-kār,* பெ. (n.) மேழ (சித்திரை) மாதத்தில் அறுவடையாகும் நெல்வகை. *(G.T.D. I. 94);* a kind of coarse paddy harvested in šittirai.

[சித்திரை + கார்]

சித்திரைக்காலி *šittirai-k-kāli,* பெ. (n.) நெல் வகை *(யாழ்ப்.);* a kind of paddy.

[சித்திரை + காலி]

சித்திரைக்குழப்பம் *šittirai-k-kuḻappam,* பெ. (n.) மேழ (சித்திரை) மாதத்துப் பெருங்

காற்று (வின்.); stormy weather of šittirai, the fore-runner of the S.W. monsoon.

[சித்திரை + குழப்பம்]

சித்திரைச்சிலம்பன் *šittirai-c-cilampaṉ,* பெ. (n.) காவிரியில் உண்டாம் மேழ (சித்திரை)ப் பெருக்கு (இ.வ.); April freshes in the Kāviri.

[சித்திரை + சிலம்பன். சிலம்பன் - புதுவெள்ளம்]

சித்திரைச்சுழி *šittirai-c-cuḻi,* பெ. (n.) மேழ மாதத்துச் சுழல் காற்று (இ.வ.); wind-storm occurring in April.

[சித்திரை + சுழி]

சித்திரைச்சுழியன் *šittirai-c-cuḻiyaṉ,* பெ. (n.) 1. சித்திரைச்சுழி பார்க்க; see *šittirai-c-cuḻi.* 2. குறும்பன் (இ.வ.); mischievous urchin.

[சித்திரை + சுழியன்]

சித்திரைப்பால் *šittirai-p-pāl,* பெ. (n.) 1. ஆவிரை; tanners cassia. 2. அம்மான் பச்சரிசி; species of euphorbia (சா.அக.).

[சித்திரை + பால்]

சித்திரைப்பூ *šittirai-p-pu,* பெ. (n.) மே (சித்திரை)த் திங்களில் முழுநிலாவன்று நிலத்தில் பூக்கும் நீறு; the salt found on the soil of fuller's earth on the full moon night in the month of Šittirai (சா.அக.).

[சித்திரை + பூ]

சித்திரைமுழுநிலவு *šittirai-muḻu-nilavu,* பெ. (n.) மேழ மாதத்து முழு நிலவில் நிகழுந் திருவிழா; festival celebrated on the fullmoon-day in the month of Šittirai.

[சித்திரை + முழுநிலவு]

சித்திரையன்நெல் *šittiraiyaṉ-nel,* பெ. (n.) நெல்வகை (A); a kind of paddy.

சித்திரைவெயில் *šittirai-veyil,* பெ. (n.) சுட்டெரிக்கும் மேழ (சித்திரை) மாதத்துக் கடும் வெயில்; burning April Sun (சா.அக.).

[சித்திரை + வெயில்]

சித்திரோடாவி *šittirōḍāvi,* பெ. (n.) கல்லில் சிலை முதலியன செய்யும் சிற்பி (யாழ்ப்.); sculpture, artisan who carves images, statues, etc.

[சித்திரம் + ஓடாவி]

சித்தில் *šittil,* பெ. (n.) அறிவு (R); knowledge.

[சித்து → சித்தல் → சித்தில்]

சித்திலி *šittili,* பெ. (n.) சிற்றெறும்பு (யாழ்.அக.); a species of ant.

[சில் = சிறுமை. சில் → சித்து → சித்தில் → சித்திலி]

சித்திலிகை *šittiligai,* பெ. (n.) அச்சடிசீலை. (வின்.); printed or painted cloth.

சித்திலைச்செடி *šittilai-c-ceḍi,* பெ. (n.) குன்றி மணி; crab's eye (சா.அக.).

[சிற்றிலை → சித்திலை. சித்திலை+ செடி]

சித்திவலை *šitti-valai,* பெ. (n.) சித்திவலையம் பார்க்க; see *šitti-valaiyam* (சா.அக.).

சித்திவலையம் *šittivalaiyam,* பெ. (n.) அம்மான் பச்சரிசி; an annual with erect or procumbent branches (சா.அக.).

[சித்தி + வலையம்]

சித்தின்பம் *šittiṉbam,* பெ. (n.) அறிவால் விளையும் பேரின்பம்; perfect bliss, as the result of true knowledge. "நித்தியானந்த மாகிய சித்தின்பம்" (சி.போ. பா. 6: 2, பக்.330).

[சித்து + இன்பம்]

சித்தினி *šittiṉi,* பெ. (n.) நால்வகைப் பெண்களுள் பதுமினிவகைக்கு அடுத்த தரத்தவள் (கொக்கோ. 1710); woman of the class inferior only to padumiṉi, one of four peṇ.

சித்து[1] *šittu,* பெ. (n.) 1. அறிவு; intellect, intelligence. "சித்தென வருமறைச் சிரத்திற் றேறிய" (கம்பரா. இரணியன். 60). 2. அறிவுடைப் பொருள் (சூடா.); intelligent being. 3. ஆதன்; soul. "சித்த சித்தொ டீசனென்று" (பாரத. பதினைந்தாம். 1)

[செ → செத்து → சித்து (முதா. 202). ஒ.நோ: செந்துரம் → சிந்துரம்.

செத்தல் = 1. கருதுதல். "அரவுநீருணல் செத்து" (கலித். 45). 2. அறிதல் "துதிக்கா லன்னந் துணைசெத்து" (ஐங். 106).

சித்து = கருத்து, அறிவு, கருதியதை அடையும் திறம்]

சித்து[2] *šittu,* பெ. (n.) 1. மாயவித்தை; magic. 2. கலம்பகத்தின் உறுப்புகளுள் ஒன்று. (பன்னிருபா. 211); a constituent theme of kalambagam appearing to be a magician's brag but really signifying ordinary things. 3. வேள்வி (பிங்.); sacrifice. 4. வெற்றி (சூடா.); success. 5. ஒருவகை வரிக்கூத்து (சிலப். 3:13, உரை.); a masquerade dance.

சித்து[3] *šittu,* பெ. (n.) கொத்தனுக்கு உதவி செய்யும் சிற்றாள்; assisting hand of a brick layer.

[சிற்றாள் → சித்தாள் → சித்து]

சித்துக்காரன் *šittu-k-kāraṉ,* பெ. (n.) மாயவித்தை கற்றவன்; magician.

[சித்து² → சித்துக்காரன்]

சித்துடு[1] *šittudu,* பெ. (n.) நேர்வாளம்; croton.

சித்துடு[2] *šittudu,* பெ. (n.) கிலுகிலுப்பை (மலை.); laburnum- leaved rattlewort.

சித்துநீர் *šittu-nīr,* பெ. (n.) இதளியம் (பாதரசம்); mercury. *"சீருணஞ் சித்துநீர் செறிந்த தொத்தும்" (ஞானா. 45:13).*

[சித்து + நீர்]

சித்துப்பொருள் *šittu-p-poruḷ,* பெ. (n.) அறிவுடைப் பொருள்; intelligent, sentient being, opp. to caḍa-p-poruḷ.

[சித்து ¹ + பொருள்]

சித்துரு *šitturu,* பெ. (n.) அறிவு வடிவான கடவுள்; god, as the embodiment of intelligence. *"மெய்ச் சித்துரு வென்றறி" (காஞ்சிப்பு. வயிர. 9).*

[சித்து ¹ + உரு]

சித்துரூபம் *šittu-rūbam,* பெ. (n.) சிறுமரவகை, நேர்வாளம் (மலை.); croton.

சித்துவித்தை *šittu-vittai,* பெ. (n.) செப்படி வித்தை, புரட்டு, ஏமாற்றுவித்தை, மாய வித்தை; magic, jugglery, miracle.

[சித்து ² + வித்தை]

சித்துவிளையாடு-தல் *šittu-viḷai-y-āḍu-,* 5 செ.குவி. (v.i.) 1. சித்திகள் செய்தல்; to exhibit supernatural powers. 2. இயற்கையிறந்தன செய்தல், மாயவித்தை செய்தல்; to perform magic.

[சித்து² + விளையாடு-,]

சித்துவிளையாட்டு *šittu-viḷaiyāṭṭu,* பெ. (n.) மாயவித்தை; magic.

சித்தேரி *šittēri,* பெ. (n.) சிற்றேரி பார்க்க; see *širrēri.*

[சிற்றேரி → சித்தேரி]

சித்தை[1] *šittai,* பெ. (n.) 1. எண்ணெய்த்துருத்தி (வின்.); leather case for ghee or oil. 2. எண்ணெய் முதலியன வைக்கும் தகர ஏனம் (சென்னை); tin can for oil.

தெ. சித்தே.

சித்தை[2] *šittai,* பெ. (n.) மலைமகள் (சிவரக. தாருக. 30); Pārvati.

[சித்து¹ → சித்தன் (ஆ.பா.) → சித்தை (பெ.பா.)]

சிதகலை *šidagalai,* பெ. (n.) 1. வெட்டை; venereal heat. 2. பெண்களுக்குண்டாகும் வெட்டை நோய்; whites peculiar to woman.

சிதகம் *šidagam,* பெ. (n.) தூக்கணாங்குருவி (பிங்.); weaver-bird.

சிதகு[1]**-தல்** *šidagu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. உருவுதல். (பிங்.); to strip off, rub or draw gently. 2. எழுதியதையழித்தல் (வின்.); to erase, strike off.

[சிதை → சிதகு]

சிதகு[2] *šidagu,* பெ. (n.) குற்றம்; fault. *"தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலுஞ் சிதகுரைக்குமேல்" (திவ். பெரியாழ். 4.9:2)*

[சிதை → சிதகு]

சிதடன் *šidaḍaṉ,* பெ. (n.) 1. குருடன்; blind man. *"துஞ்சுபுலி யிடறிய சிதடன் போல" (புறநா. 73:7)* 2. அறிவிலி; ignorant person. *"செம்மை நலமறியாத சிதடரொடும்" (திருவாச. 5:19).* 3. பித்தன்; insane person. *"சிக்கர் சிதடர்" (சிறுபஞ். 76).*

[சிதடு → சிதடன்]

சிதடி[1] *šidaḍi,* பெ. (n.) சிதடு,2 பார்க்க; see *šidaḍu,*[2] "சிதடியிற் றுவ்வாது" (முதுமொழி. 35).

[சிதடு → சிதடி]

சிதடி[2] *šidaḍi,* பெ. (n.) சிள்வண்டு பார்க்க; see *šiḻvaṇḍu.* "சிதடி கரையப் பெருவறங் கூர்ந்து" (பதிற்றுப். 23:2)

சிதடு *šidaḍu,* பெ. (n.) *1.* குருடு; blindness. "சிறப்பில் சிதடும்" (புறநா. 28). *2.* பேதைமை (அக.நி.); ignorance, folly. *3.* உள்ளீடின்மை; emptiness, hollowness. "சிதட்டுக்கா யெண்ணின்" (குறுந். 261).

[சிதர் ² → சிதடு]

சிதப்பூரம் *šida-p-pūram,* பெ. (n.) பொன்னாங் காணி (மலை.); species of alternanthera.

சிதம்[1] *šidam,* பெ. (n.) *1.* வெண்மை; whiteness. "சிதம்படு நற்றுகில்" (ஞானவா. வைரா. 53). *2.* வெள்ளி (சங். அக.); silver. *3.* வெண்சிவதை (மலை.); white bind weed. *4.* விண்மீன் (பிங்.); star.

[சுதை = வெண்மை. சுதம் → சிதம்]

சிதம்[2] *šidam,* பெ. (n.) வெல்லப்பட்டது (பிங்.); that which is subdued or conquered.

[சித்தி → சித்தம் → சிதம்]

சிதம்[3] *šidam,* பெ. (n.) மனைவாயில் (பிங்.); door, entrance to a house.

சிதம்[4] *šidam,* பெ. (n.) அறிவு (பிங்.); wisdom, intelligence, knowledge.

[சித்தம் = கருத்து, மணம், அறிவு. சித்தம் → சிதம் = மணம், அறிவு]

சிதம்[5] *šidam,* பெ. (n.) *1.* புளியாரை (மலை.); yellow wood sorrel. *2.* மால்கரந்தை (மலை.); Indian globe-thistle. *3.* சாதிக்காய் (L); true nutmeg.

சிதம்பர் *šidambar,* பெ. (n.) இழிந்தோர்; base persons. "செத்தற் கொத்தைச் சிதம்பரை" (திருவிசை. திருமாளிகைத். 4: 4).

[சிதம்பு → சிதம்பர்]

சிதம்பரச்செய்யுட்கோவை *šidambara-c-ceyyuṭ-kōvai,* பெ. (n.) குமரகுருபர முனிவரால் இயற்றப்பட்டதும் யாப்பிலக்கணத்திற் கூறப்படும் பாவும் பாவினமுமாகிய பல்வகை யாப்புகளுக்கும் எடுத்துக்காட்டுச் செய்யுள்களை யுடையதுமான நூல்; a work by Kumara-kurupara-munivar illustrating the various metres of Tamiḻ prosody.

[சிதம்பரம் + செய்யுள் + கோவை]

சிதம்பரப்பதம் *šidambara-p-padam,* பெ. (n.) 34 விரலம் அளவுள்ள கோல் (சர்வா. சிற்21); a measuring rod of 34 inches in length.

[சிதம்பரம் + பாதம் → பதம்]

சிதம்பரப்பாட்டியல் *šidambara-p-pāṭṭiyal,* பெ. (n.) செய்யுளமைதிகளைக் கூறுவதும் 16ஆம் நூற்றாண்டினரான பரஞ்சோதியார் இயற்றியதுமான ஓர் இலக்கண நூல்; a treatise on prosody by Parañjōdiyār 16th C.

[சிதம்பரம் + பாட்டியல்]

சிதம்பரம்[1] *šidambaram,* பெ. (n.) கடலூர் மாவட்டத்தில் உள்ளதும் பாடல் பெற்ற சிவன் கோயில் உள்ளதுமான ஊர்; a celebrated saiva shrine in Cuddalore district.

ம. சிதம்பரம்

[சிற்றம்பலம் → சித்தம்பலம் → சிதம்பலம் → சிதம்பரம்]

தில்லையிற் சிற்றம்பலம் பேரம்பலம் என ஈரம்பலங்களுண்டு. அவற்றுள் சிற்றம்பலமே இறைவன் திருக்கோயில். "இறைவன் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும்" (திருக்கோ.). வடவர் திரிவு வடிவை இயல்பு வடிவாகக் கொண்டு அறிவுவெளி (ஞானாகாசம்) என்று பொருள் புணர்க்க முயல்வர். அம்பலம் (மன்றம்) வேறு; அம்பரம் (வானம்) வேறு. மேலும் 'சித்', 'அம்ர' என்னும் இரு வடசொற்களும் தென்சொற்றிரிபே. சித்து → சித்; அம்பரம் → அம்ர (வ.வ. 149, 150).

த. சிதம்பரம் → Skt. cidambara

சிதம்பரம்



சிதம்பரம்[2] *šidambaram,* பெ. (n.) *1.* இடகலை நாடிக்கும் பிங்கலை நாடிக்கும் நடுவில் அமைந்துள்ள சுழிமுனை நாடி; human microcosum is the region of šuḻimuṉai, between iḍagalai, piṅgalai nāḍis playing a central part. "சேர்த்தே பிடித்துச் சிதம்பரம் பூமடி" *(சட்டமுனி. 800).*

சிதம்பரம்[3] *šidambaram,* பெ. (n.) தில்லைமரம்; tiger's milk spurge.

[சிற்றம்பலம் → சிதம்பரம்]

தில்லை மரம் மிகுதியாக இருந்த ஊரான தில்லை சிவன் சிற்றம்பலம் என்னும் அடிப்படையில் சிதம்பரம் எனப்பட்டது. பின்னர்ச், சிதம்பரம் தில்லை மரத்தைக் குறித்தது தில்லையில் தில்லை மரங்கள் நெடுங்காலம் இருந்தமையை வலியுறுத்தி நிற்றல் காண்க.

சிதம்பரவெலுமிச்சை *šidambara-v-elu-miccai,* பெ. (n.) பேரெலுமிச்சை *(யாழ்ப்.);* lemon.

[சிதம்பரம் + எலுமிச்சை]

சிதம்பரன் *šidambaraṉ,* பெ. (n.) சிவன்; lord Šivaṉ.

ம. சிதம்பரன்

[சிதம்பரம் → சிதம்பரன்]

சிதம்பல் *šidampal,* பெ. (n.) பதனழிகை; being softened by soaking or spoiled by too much moisture.

[சிதம்பு → சிதம்பல்]

சிதம்பு[1]**-தல்** *šidambu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* பதனழிதல்; to be spoilt by too much moisture; to become rotten. *2.* நீரில் நெடுநேரம் கிடத்தலால் கைகால்கள் வெளுத்தல்; to be whitened, as the hands or feet by being dipped in water for a long time. 'கை சிதம்பிப் போயிற்று' *(உ.வ.).* *3.* நீர்ச்சாவியாதல்; to be damaged or injured by excess of water, as crops, vegetation.

[சிதை → சிதைவு → சிதம்பு]

சிதம்பு[2] *šidambu,* பெ. (n.) *1.* தன்மையினழிவு *(பிங்.);* debasement in quality, spoilt condition. *2.* இழிவு; baseness, meaness. "சிதம்ப நாயேன்" *(தேவா. 996, 1).* *3.* பதனழிவு *(யாழ்ப்.);* excessive maceration.

[சிதை → சிதைவு → சிதம்பு]

சிதமருசம் *šida-marušam,* பெ. (n.) வெண்மிளகு *(மலை.);* white pepper.

[சிதம் + மருசம். மரிசம் → மருசம் - மிளகு]

சிதமை *šidamai,* பெ. (n.) வெள்ளாடு *(தைலவ. தைல.4);* goat.

[சிதம் → சிதமை]

சிதர்[1]**-தல்** *šidar-,* 2 செ.குன்றாவி. (v.t.) *1.* சிதறுதல்; to scatter, strew. *2.* பரக்கச் சொல்லுதல்; to dilate upon, narrate, expound in detail. "சிந்தாமணியின் சரிதஞ் சிதர்ந்தேன்" *(சீவக. 3144).* *3.* காலாற்கிளைத்தல்; to scratch, as a fowl. "சிதர்கால் வாரணம்" *(நற். 389).*

[சிதை → சிதர்]

சிதர்[2]**-தல்** *šidar-,* 2 செ.கு.வி. (v.i.) *1.* பரத்தல்; to spread over, to be diffused. "ஓடரி சிதரிய வொள்ளரி மழைக்கண்" *(பெருங்.இலாவாண. 16:16).* *2.* சிதறி வீழ்தல்; to be scattered, strewn "ஆரஞ் சிதர்ந்து போகச் சிந்துவார்" *(சீவக. 1106).* *3.* நைதல்; to be worn out, as cloth. "சிதரின சீரை" *(பெரும்பாண். 468, உரை).*

ம. சிதறுக; க. கெதர், சதறு, செகறு; தெ. செதறு; து. சதருனி; கோத. சித்

[சிதை → சிதர்]

சிதர்[3]**-த்தல்** *šidar-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1.* பிரித்தல்; to separate, split. "சொற்சிதர் மருங்கின்" *(தொல்.எழுத்து. 132).* *2.* வெட்டுதல்; to cut, hack. "வாளினாற் சிதர்த்தல் வேண்டும்" *(விநாயகபு. 1:18)* *3.* சிந்துதல் *(சூடா.);* to shed, scatter.

[சிதை → சிதர்]

சிதர்[4] *šidar,* பெ. (n.) *1.* மழைத்துளி; rain drop. "தண்சிதர் கலாவப் பெய்யினும்" *(புறநா. 105:3).* *2.* பூந்தாது *(பிங்.);* pollen of flowers. *3.* பொடி *(பிங்.);* powder. *4.* துணி *(பிங்.);* cloth. *5.* கந்தை; rag. "அழுக்கு மூழ்கிய சிதரசைத்து" *(திருவிளை. விறகு. 12).* *6.* உறி *(சூடா.);* rope-loop for suspending pots. *7.* வண்டு; bee, beetle. "கொம்பின்மேற் சிதரின மிறைகொள" *(கலித். 34).*

8. மெத்தனவு; gentleness, softness. "சிதர்வர லசைவளி" (முல்லைப். 52). 9. சிந்துகை; spilling, shedding. "சிதர்நனை முருக்கின்" (சிறுபாண். 254). 10. சிச்சிலிப்பறவை வகை (சிறுபாண். 254, உரை.); a kind of kingfisher.

சிதர்வு *šidarvu*, பெ. (n.) வீணாகச் செலவழிக்கை (Pond.); squandering.

[சிதர் → சிதர்வு]

சிதர்வை *šidarvai*, பெ. (n.) நைந்து அற்றுப்போன சீரை; cloth worn out or reduced to rag. "பாசி யன்ன சிதர்வை நீக்கி" (பெரும்பாண். 468).

[சிதர் → சிதர்வை]

சிதரம் *šidaram*, பெ. (n.) 1. மழைத்துளி (பிங்.); rain drop. 2. உறி (யாழ்.அக.); rope - loop for suspending pots.

[சிதர் → சிதரம்]

சிதரல் *šidaral*, பெ. (n.) சிதறுகை; splashing, bespattering. "சிதரற் பெரும்பெயல்" (மதுரைக். 244).

[சிதர் → சிதரல்]

சிதல் *šidal*, பெ. (n.) 1. வெண்ணிறமானதும் அரித்துணும் இயல்பினதும் வெப்ப நாட்டில் வாழ்வதும் எறும்பினத்தைச் சார்ந்ததுமான சிற்றுயிர்; termite. "சிதல் மண்டிற் றாயினும்" (நாலடி., 147). 2. சிறகு முளைத்த கறையான் (பிங்.); flying white ant.

மறுவ. கறையான், ஈசல்

ம. சிதல்; க. கெதல், கெத்தலு, கெத்தலி; தெ. செதலு, செத; து. உதலு, உதால்; குட. கெதெ; துட. செகல்; கொலா. செத, செதல்; நா. கெதல்; கோத. கெசல்

[சிதர் → சிதல்]

சிதல்தின்னி *šidal-tinni*, பெ. (n.) கறையானை உண்ணும் பறவை; a kind of bird that eats white ant.

ம. சிதல்தின்னி

[சிதல் + தின்னி]

சிதல்தின்னு-தல் *šidaltinnu-*, 14 செ.குன்றாவி. (v.t.) சிதலரி-த்தல் பார்க்க; see *šidalari-*.

ம. சிதல் தின்னுக

[சிதல் + தின்னு-,]

சிதல்புற்று *šidalpurru*, பெ. (n.) கறையான் ஈர மண்ணைக் கொண்டு உண்டாக்கும் கூடு; termitarium, termitary, ant-hill.

மறுவ. கறையான் புற்று

ம. சிதல் புற்று

[சிதல் + புற்று]

சிதல்மண் *šidalman*, பெ. (n.) கறையான் கூட்டும் மண், புற்று மண்; termite soil.

ம. சிதல் மண்ணு

[சிதல் + மண்]

சிதலம் *šidalam*, பெ. (n.) 1. தளர்வு; loosening. 2. கீல் (மூட்டு) தளரல்; loosening of joints. 3. சிதைவு; spoil. "சிதரற் பெரும் பெயல்" (மதுரைக். 244).

[சிதிலம் → சிதலம்]

சிதலரி-த்தல் *šidalari-*, 4 செ.குன்றாவி. (v.t.) கறையான் சிறிது சிறிதாகக் கடித்து அல்லது குடைந்து குறைத்தல்; to be gnawed by white ants. அரிய நூல்களைச் சிதலரித்துவிட்டது.

ம. சிதலிக்குக, சிதலரிக்குக

[சிதல் + அரி-,]

சிதலை *šidalai*, பெ. (n.) 1. கறையான்; termite. "நுண்பல சிதலை" (புறநா. 51:9). 2. துணி (பிங்.); small piece of cloth, rag. 3. நோய்; disease. "சிதலைச்செய் காயம் பெறேன்" (திருவாச. 6: 41).

[சிதர் → சிதல் → சிதலை]

சிதவல்[1] *šidaval*, பெ. (n.) 1. சீலைத் துணி; strip of cloth. "தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்" (குறுந். 146). 2. கந்தைத்துணி; rag, torn piece of cloth. "சிதவல் சுற்றி" (பதினொ. பொன்வண். 12). 3. கிழிந்த துண்டு; torn piece. "சிதவற் றுணியொடு சேணோங்கு நெடுஞ்சினை" (மணிமே. 3:106). 4. வெட்டுகை; cutting off, cropping. "சிதவல் கொண்டிடு செம்மயிர்க் கொய்யுளை" (கந்தபு. நகரழி. 64). 5. தேரின்கொடி (வின்.); flag of a car or chariot. 6. புரையோடிய புண். (யாழ்ப்.); running sore.

[சிதை → சிதைவல் → சிதவல். 'அல்'. தொ. பெ. ஈறு]

சிதவல்[2] *śidaval*, பெ. (n.) மண்சட்டி முதலியவற்றின் உடைந்த துண்டு; broken piece, as of a pot. "சிதவலோடொன் றுதவுழி" (பதினொராந். திருவிடை. மும். 7).

[சிதை → சிதைவல் → சிதவல். 'அல்' தொ.பெ. ஈறு]

சிதவலிப்பு *śida-valippu*, பெ. (n.) மனவுறுதி; firmness of mind. "சிதவலிப் பீவார்" (சிறுபஞ். 64).

[சித்தம் = கருத்து, மனம், அறிவு. சித்தம் → சிதம் = மனம். சிதம் + வலிப்பு. வலி → வலிப்பு = உறுதி]

சிதள் *śidal*, பெ. (n.) 1. மீன்செதிள் (யாழ்.அக.); fish-scales. 2. புண்ணின் அசடு (யாழ்ப்.); scab of a sore. 3. எலும்பு முதலியவற்றின் துண்டு (வின்.); small bit of bone, chip, splinter.

[செதிள் → சிதள்]

சிதறடி-த்தல் *śidaradi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கலங்கச் செய்தல்; to scatter, disperse. 2. முறியடித்தல்; to put to rout.

[சிதறு + அடி-,]

சிதறவடி-த்தல் *śidara-vadi-*, 4 செ.குன்றாவி. (v.t.) சிதறடி- பார்க்க; see *śidaradi-*.

[சிதறடி → சிதறவடி-,]

சிதறி *śidari*, பெ. (n.) 1. மழை (திவா.); rain. 2. மூங்கில் (பிங்.); bamboo. 3. பாதிரி (மலை.); trumpet flower.

ம. சிதரி

[சிதறு → சிதறி]

சிதறிப்போ-தல் *śidari-p-pō-*, 8 செ.குன்றாவி. (v.t.) 1. கூட்டம் கலைந்தோ தவசம் போன்றவை தனித்தனியாகப் பிரிந்தோ பொருள் உடைந்தோ போதல்; to disperse as of a crowd, scatter as of grams etc., break or disintegrate as of solid matters etc., வெடியொலியைக் கேட்ட காக்கைக் கூட்டம் சிதறிப்போனது. சாக்கு பிய்ந்ததால் நெல் மணிகள் சிதறிப் போயின. சிதறிப் போன கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்கியெடு. 2. நோய் உடம்பைவிட்டகலல்; to leave or quit from the body, as disease.

[சிதறி + போ. 'போ' து.வி.]

சிதறியோடு[1]**-தல்** *śidari-y-ōdu-*, 5 செ.குன்றாவி. (v.t.) சிதறிப்போ-தல் பார்க்க; see *śidari-p-pō*.

சிதறியோடு[2]**-தல்** *śidari-y-ōdu-*, 5 செ.குன்றாவி. (v.t.) மூன்று நாளுள் இறப்பு நிகழுமென்பதன் அறிகுறியாகப் பித்தநாடி நிலைகுலைதல்; disturb to the equilibrium in the pulsation indicating bile, a symptom of death within three days.

[சிதறி + ஓடு-,]

சிதறு[1]**-தல்** *śidaru-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. இறைத்தல்; to fall in different places, disperse, scatter, as grain. "செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி" (திருமுருகு. 231). 2. சிறிய பொருள்களாய்த் தெரித்தல்; to be strewn in small particles, to spill, pour, shed. தரையில் சிந்திய இதளியம் (பாதரசம்) சிதறியோடியது. 3. சிறுதுண்டுகளாக உடைந்து போதல்; to be broken into pieces, to explode. 4. மிகுதியாகக் கொடுத்தல்; to give liberally, bountifully. "மாசித றிருக்கை" (பதிற்றுப். 76).

ம. சிதறுக; க. கெதர், சதறு, செதறு; தெ. செதறு; து. சதறுணி; கோத. கித் (தெளித்தல்); துட. கித்

[சிதை → சிதறு]

சிதறு[2]**-தல்** *śidaru-*, 5 செ.கு.வி. (v.i.) 1. கலைதல்; to be shed, strewn, scattered, as a flock; to disperse, as a company. 2. அழிதல்; to be squandered, wasted. 3. பயன்படாது போதல்; to prove fruitless, become unprofitable. "பதறாத காரியஞ் சிதறாது" (பழ.). 4. களைதல்; removing.

க. கெதறு

[சிதை → சிதறு-,]

சிதறுதேங்காய் *śidaru-tēngāy*, பெ. (n.) சூறைத் தேங்காய் (வேண்டுதலுக்காகத் துண்டாகத் தெறிக்கும்படி உடைக்கும் தேங்காய்; coconut dashed on the ground and broken, on special occasions in fulfilment of a vow.

மறுவ. விடலைத்தேங்காய்

[சிதறு + தேங்காய். தெங்கங்காய் → தேங்காய்]

சிதறுமணி *šidaṟu-maṇi,* பெ. (n.) நெற்களத்திற் கதிரடிக்கும்போது தெறித்து விழுந்த தவசம் (இ.வ.); grains that fall scattered on the threshing - floor, while threshing, dist. fr. சிந்துமணி.

[சிதறு + மணி. முள் → (மள்) → மணி = சிறியது, சிறியதான தவசம்]

சிதறை *šidaṟai,* பெ. (n.) கறையான் நோய்; a skin disease due to the bite of white - ants (சா.அக.).

[சிதலை → சிதறை]

சிதன்[1] *šidaṉ,* பெ. (n.) வெண்மையான நிறமுடைய வெள்ளி (சுக்கிரன்) (பிங்.); the planet Šukkiran, as white.

[சிதம் → சிதன்]

சிதன்[2] *šidaṉ,* பெ. (n.) அச்சமுள்ளோன் (பிங்.); timid man.

சிதனம் *šidaṉam* பெ. (n.) கோடகசாலை (மலை.); a very small plant.

சிதார் *šidār,* பெ. (n.) 1. சீலை; cloth, rag. "பாறிய சிதாரேன்" (புறநா. 150). 2. மரவுரி (வின்.); thin bark of certain trees, used as clothing.

[சிதர் → சிதார்]

சிதாரம் *šidāram,* பெ. (n.) தேர்க்கொடி. (யாழ்.அக.); flag of a car or chariot.

[சிதார் → சிதாரம்]

சிதாரி *šidāri,* பெ. (n.) புகை போடும் பண்டம் (I.M.P. Tj. 55); incense.

சிதிலம் *šidilam,* பெ. (n.) சிதைவு (வின்.); crumbling, decaying.

[சிதைவு → (சிதவு) → சிதலம் → சிதிலம்]

சிதுமலர் *šidumalar,* பெ. (n.) தண்ணீர் விட்டான் என்றழைக்கப்பெறும் கொடி வகை (மலை.); climbing asparagus.

சிதுரம் *šiduram,* பெ. (n) நேர்வாளம் (மலை.); croton.

சிதேக்கதிரம் *šitē-k-kadiram,* பெ. (n) வெள்ளைக்கருங்காலி (மலை.); egg-fruited ebony.

சிதேகி *šidegi,* பெ. (n) கடுக்காய் (யாழ்.அக.); chebulic myrobalan.

சிதை[1]**-தல்** *šidai-,* 2 செ.கு.வி. (v.i.) 1. தன்மை கெடுதல்; to be injured, spoiled; to deteriorate, decay. "கூம்புவிடு பன்மலர் சிதைய" (அகநா. 36). 2. சிதறுதல்; to be scattered, dispersed. "ஆன்பொருநை வெண்மணல் சிதைய" (புறநா. 36:5). 3. அறுபடுதல்; to be sundered, broken, cut to pieces. "கவசம் பூம்பொறி சிதைய" (புறநா. 13:2). 4. சினத்தல்; to be angry. "நீ யுண்டகாற் சிதையாரோ வுன்னோடு" (திவ்.நாய்ச். 7:9). 5. சொற்சிதைந்து வழங்குதல்; to become corrupt, degenerate by lapse of time, as words. "சிதைந்தன வரினும்" (தொல். சொல். 402). 6. பொய்யாதல்; to prove untrue. "அவனுரையுஞ் சிதைந்ததால்" (கம்பரா. ஊர்தேடு. 232). 7. வரம்பழிதல்; to exceed limit or propriety. "பேதை யுரைப்பிற் சிதைந்துரைக்கும்" (நாலடி. 71). 8. குலைதல் (வின்.); to disperse, scatter, as an army. 9. இசை முதலியன கெடுதல் (வின்.); to become out of tune, as music; to go wrong, as rhythm.

ம. சிதயுக, சிதெயுக; க. சிதகு, சிதுகு; தெ. சிதுகு

சிதை[2]**-த்தல்** *šidai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கெடுதல்; to injure, waste. "பூங்கண் மகளிர் புனைநலஞ் சிதைக்கும்" (கலித். 75:31). 2. குலைத்தல்; to disperse. scatter. "சிறந்த நண்பரைக் கொன்றுதன் சேனையைச் சிதைக்க" (கம்பரா. பிரமாத்திர. 187). 3. அழித்தல்; to destroy, ruin, demolish, kill."தீவளி சென்று சிதைத்தாங்கு" (நாலடி, 179). 4. சிரைத்தல் (யாழ்ப்.); to shave, shear. 5. களைதல் (பிங்.); to pluck out, uproot. 6. தேய்த்தல் (பிங்.); to rub. 7. ஒலித்தல் (திவா.); to sound. 8. நசுங்குதல்; crushing as plants.

ம. சிதய்க்குக.

சிதை[3] *šidai-,* பெ. (n.) 1. சிதைவு,[1] பார்க்க; see *šidaivu,1.* "கொழுமணிச் சிகர கோடி சிதைபட" (திருவிளை, மாயப். 20). 2. கப்பற்பாய்; sail. "தெய்வநீறு மைந்தெழுத்துமே சிதைக்கல னாக" (திருவிளை. திருநகர. 88). 3. இழிசொற்கள்; vulgar words. "சிதையுரையான்" (ஏலா.34).

சிதை[4] *šidai-,* பெ. (n.) ஈமவிறகு (யாழ்.அக.); funeral pile, pyre .

சிதை[5] *šidai-,* பெ. (n.) கீழ்மக்கள் (அக.நி.); low persons.

[சீத்தை → சிதை]

சிதைக்கரு *šidai-k-karu,* பெ. (n.) அழிகரு; foetus brought forth in an immature state.

[சிதை + கரு]

சிதைசுற்று *šidai-cuṟṟu,* பெ. (n.) 1. செக்கு; oil press. 2. ஆலை; sugar-cane press. 3. சக்கரம்; wheel.

[சிதை + சுற்று]

சிதைந்தவேடு *šidainda-vēḍu,* பெ. (n.) செல்லரித்த ஓலையேடு (யாழ்ப்.); ant-eatan ola book.

[சிதை → சிதைந்த + ஏடு]

சிதையர் *šidaiyar,* பெ. (n.) கீழ்மக்கள் (அக.நி.); low, mean people.

[சிதை[5] → சிதையர்]

சிதைவு *šidaivu,* பெ. (n.) 1. கேடு; injury, degeneracy, ruin, defeat. "செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி" (குறள், 112). 2. குற்றம்; fault, defect. "சிதைவெனப் படுபவை வசையற நாடின்" (தொல். பொருள். 664)

[சிதை → சிதைவு]

சிந்தகம்[1] *šindagam,* பெ. (n.) புளியமரம்; tamarind tree. "சிந்தகத்துக் கீழமர்ந்து" (பாகவ. சிறப்புப்பாயி. 2).

புளியின் செந்நிறம் பற்றிப் புளியமரத்தைக் குறித்தது.

சிந்தகம்[2] *šindagam,* பெ. (n.) சிதகம் (சது.) பார்க்க; see *šidagam.*

சிந்தகம்[3] *šindagam,* பெ. (n.) 1. வெள்ளை வெப்பு நஞ்சு; white arsenic. 2. சிறுநாகப்பூ; iron wood of Ceylon.

சிந்தகி *šindagi,* பெ. (n.) சொத்து (வின்.); property.

Persn. zindagi

சிந்தடி[1] *šindadi,* பெ. (n.) இருசீரடி (குறள்)க்கும் நாற்சீரடி (அளவு)க்கும் இடைப்பட்ட முச்சீரடி (தொல்.பொருள். 349); metrical line of three feet.

[சிந்து + அடி. ஏழும் எட்டும் ஒன்பதும் ஆகிய எழுத்தினால் மூன்று சீராய் வருவது சிந்தடி]

சிந்தடியம் *šindadiyam,* பெ. (n.) கருங்கொள்; black horse-gram.

சிந்தம்[1] *šindam,* பெ. (n.) புளியமரம்.(பிங்.); tamarind tree.

தெ. சிந்த

சிந்தம்[2] *šindam,* பெ. (n.) சிதகம். (சது) பார்க்க; see *šidagam.*

சிந்தம்[3] *šindam,* பெ. (n.) பாவகை; a kind of metre. "அறிவுடைநம்பியார் செய்த சிந்தம்" (யாப். வி. 93, பக். 352).

சிந்தன்[1] *šindaṉ,* பெ. (n.) குறளனிலும் சிறிது நெடியவன் (தொல். பொருள். 349, உரை); dwarfish person. "சேயனாய் வந்தொரு சிந்தன் போன்றுலாய்" (கந்தபு. அவைபுகு. 75).

[சிந்து[2] → சிந்தன். மக்களுள் மிகக் குள்ளமானவனு(குறளன்)க்கும் அளவாக வளர்ந்தவனு(அளவன்)க்கும் இடைப் பட்ட உயரமானவன் சிந்தன்]

சிந்தன்[2] *šindaṉ,* பெ. (n.) சிதகம் (பிங்.) பார்க்க; see *šidagam.*

சிந்தனை *šindaṉai,* பெ. (n.) 1. எண்ணம்; thought, idea. "சிந்தனை யுரைசெய்வான்" (கம்பரா. கங்கை. 53). 2. படித்த பாடத்தை மீண்டும் நினைக்கை; revision of lessons. 'படித்தவற்றைச் சிந்தனை செய்யவேணும்' (உ.வ.). 3. ஊழ்கம் (தியானம்); meditation. 'அதே சிந்தனையா யிருக்கிறான்' (உ.வ.). 4. கவலை; care, concern, grief. "சிந்தனை முகத்திற் றேக்கி" (கம்பரா. குகப். 35). 5. கவனம். (வின்.); attention, consideration. 6. குறி கேட்கும் செய்தி; subject about which a person consults a soothsayer. "நட்டமுட்டி சிந்தனை" (சூடா. உள்).

[சித்து → சிந்து → சிந்தை → சிந்தனை. சித்து = அறிவு, கருத்து, கருதியதை அடையும் திறம் (மு. தா. 184)]

த. சிந்தனை → Skt. cintanā

சிந்தாக்கட்டிகை *šindā-k-kaṭṭigai,* பெ. (n.) அட்டிகை வகை; a kind of necklace.

[சிந்தாக்கு + அட்டிகை]

சிந்தாக்கு[1] *šindākku,* பெ. (n.) சிந்தாக்கட்டிகை பார்க்க; see *šindākkaṭṭigai.* "சிந்தாக்கை யிருமுலையாட் கேள்கழுத்தி லிட்டேன்" *(விறலி விடு. 695).*

க. சிந்தாக; தெ. சிந்தாகு; து. சிந்தாகு

சிந்தாக்கு[2] *šindākku,* பெ. (n.) சிறுவர் விளையாட்டு வகை. (வின்.); a child's game.

மறுவ. தொளாக்கு

சிந்தாதேவி *šindā-dēvi,* பெ. (n.) மதுரையில் பழங்காலத்தில் வணங்கப்பட்டு வந்த கலைமகள்; goddes Šarašvadi worshipped in ancient Madurai. "சிந்தாதேவி செழுங்கலை நியமம்" *(மணிமே. 14: 17).*

[சித்து = அறிவு. சித்து → சிந்து + தேவி]

சிந்தாமணி[1] *šindā-maṇi,* பெ. (n.) 1. விரும்பிய வனைத்துங் கொடுக்கவல்ல தெய்வமணி; a mythical gem believed to yield to its possessor everything that is desired. "சிந்தாமணி தெண்கடலமிர்தம்" *(திருக்கோ. 12).* 2. சீவகசிந்தாமணி பார்க்க; see šivaga šindāmaṇi. "சிந்தாமணி யோதி யுணர்ந்தார்" *(சீவக. 3143).* 3. ஒருவகை மருந்து (வின்.); a compound medicament. 4. குளம்புக்கு மேலுள்ள குதிரைச் சுழி (அசுவசா. 12); auspicious curl-mark just above horse's hoofs.

ம. சிந்தாமணி

[சித்து + மணி. மண்ணுதல் = கழுவுதல். மண் → மண்ணி → மணி = கழுவப்பெற்ற ஒளிக்கல்]

சிந்தாமணி[2] *šindāmaṇi,* பெ. (n.) பண்வகை (பரத ராக. 103); a specific melody- type.

சிந்தாமணி[3] *šindāmaṇi,* பெ. (n.) 1. சமணர் காலத்தில் தென்னகத்தில் தமிழர் கையாண்டு வந்த சிறந்த மருத்துவ நூல்களின்று திரட்டி எழுதிய உயர்ந்த மருத்துவ நூல்; an excellant treatise on medicine consisting purely of selections from the medical works of Siddars compiled by the Jains of Southern India. 2. தமிழ்ச் சித்த மருத்துவ நூல்களினின்று வடமொழியில் மொழிபெயர்த்த நூல்; a work translated from the Tamil Sittars medical works into Sanskrit. 3. அகத்தியர் செய்த தமிழ் மருத்துவ நூல்களிலிருந்து திரட்டி மலையாளத்தில் இப்போது கையாளப்பட்டு வரும் மருத்துவ நூல்; an abridged edition of the supposed Agattiyar's work on Tamil medicines, used at the present day by the Malayalam. 4. இழிந்த மாழையைப் பொன்னாக்குங் கல்; philosopher's stone capable of transmuting inferior metals into gold.

சிந்தாமணிக்குளிகை *šindāmaṇi-k-kuḷigai,* பெ. (n.) நாட்பட்ட மலச்சிக்கல், மிகுவெப்பம், களைப்பு, உடல்வலி முதலானவற்றை அகற்றும் ஆயுள்வேதமாத்திரை (சா.அக.); a pill prepared according to the process of Āyurvēda and prescribed for removing constipation rheumatism through excess of heat all weariness and pain in the system.

[சிந்தாமணி + குளிகை. குள் → குளிகை]

சிந்தாமணிச்சாறு *šindāmaṇi-c-cāṟu,* பெ. (n.) ஈளை, எலும்புருக்கி, நீர்க்கோவை, மேகம் முதலான பெரிய நோய்களுக்காக, வெள்ளி, தாம்பிரம் அயம், பொன், முத்து முதலான வற்றின் பொடிகளுடன், இஞ்சி, கரிசாலைச் சாறு விட்டு அரைத்துச் செய்யப்படும் ஆயுள் மருத்துவ மருந்து; a medicine prepared as per process of Āyurvēdā by grinding the calcined oxides of silver copper iron, pearl and prescribed for great diseases as asthma, consumption, dropsy, venerel complaints etc.

[சிந்தாமணி + சாறு]

சிந்தாமணிமருத்துவம் *šindāmaṇi-maruttuvam,* பெ. (n.) தமிழ்நாட்டில் வழங்கி வந்த மருத்துவ முறை. பின்பு மலையாளத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, அங்குள்ள சரகசுசுருத மருத்துவமுறைக்கு மாறாகக் கையாளப்படும் மருத்துவ முறை; a translation of Tamil Sitta medical works in Malayalam and practised by some of the physicians in Malabar in opposition to Šanskrit Āyurvēdā Šaraka and Šušuruda.

[சிந்தாமணி + மருத்துவம்]

சிந்தாமணிமருத்துவன் *śindāmaṇi-maruttuvaṉ*, பெ. (n.) அகத்தியர் மருத்துவ நூலில் கூறியவாறு மலையாள மருத்துவத்திற்கு மாறாக நெஞ்சாங்குலை (இருதய) மருத்துவஞ் செய்யுந் தமிழ் மருத்துவன்; the Tamil physicians who follow Agattiyar's work on medicine in opposition to Malayalam physicians.

[சிந்தாமணி + மருத்துவன்]

சிந்தாமணிமாத்திரை *śindāmaṇi-māttirai*, பெ. (n.) சிந்தாமணிக் குளிகை பார்க்க; see *śindāmaṇi-kuḷigai*. "பிறங்கு சிந்தாமணி மாத்திரையல்லவோ" (தனிப்பா. ii, 149: 375).

[சிந்தாமணி + மாத்திரை]

சிந்தாமணிவிளக்கு *śindāmaṇi-viḷakku*, பெ. (n.) சிந்தாவிளக்கு-2 பார்க்க; see *śindāviḷakku-2*.

சிந்தாவிளக்கு *śindā-viḷakku*, பெ. (n) 1. சிந்தையை விளக்கமாக்கும் கலைமகள்; Šarašvadi, as mind - illuminator. "சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்து" (மணிமே. 13: 106). 2. அணையாவிளக்கு; ever burning lamp.

[சிந்தை + விளக்கு]

சிந்தார்மணி *śindārmaṇi*, பெ. (n.) தென்னிந்தியாவில் குறிப்பாக மலையாளத்தில் வழங்கி வரும் மருத்துவ முறை; a system of medical treatment prevalent in South India (சேரநா.).

ம. சிந்தாமணி

[சிந்தாமணி → சிந்தார்மணி]

சிந்தார்மணியன் *śintārmaṇiyaṉ*, பெ. (n.) ஒரு வகை நெல்; a variety of paddy (சேரநா.).

ம. சிந்தாமணியன்

[சிந்தார்மணி → சிந்தார்மணியன்]

சிந்தி[1]-த்தல் *śindi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. நினைத்தல்; to think of, consider. "மறுமையைச் சிந்தியார் சிற்றறிவினார்" (நாலடி., 329). 2. மனனம் பண்ணுதல்; to reflect, ponder. "பொது வியல்பு....கேட்டல் சிந்தித்த லென்னும் இருதிறத்தா னுணரப்படும்" (சிபோ. சிற். பாயி. பக். 4). 3. ஓகம் செய்தல்; to meditate. "எம்பெருமானென் சொல்லிச் சிந்திக்கேனே" (திருவாச. 5:25). 4. கேட்ட பாடத்தை மீண்டும் நினைத்தல்; to revise lessons. 5. விரும்புதல்; to desire. "நம்மிறுதி சிந்தியாதவர் யார்" (கம்பரா. யுத்த. மந்திரப். 106).

ம. சிந்திக்குக

[சித்து → சிந்து → சிந்தி-,]

சிந்தி[2]-த்தல் *śindi-*, 4 செ.கு.வி. (v.i.) கவலைப் படுதல்; to be concerned, sorrowful. 'கழிந்ததைக் குறித்துச் சிந்திக்கலாகாது' (உ.வ.).

[சிந்தி[1] → சிந்தி[2]]

சிந்தி[3] *śindi*, பெ. (n.) தலையணி வகையைச் சார்ந்த சுட்டி என்னும் அணி; an ornament forming part of *talai-aṇi*.

சிந்தி[4] *śindi*, பெ. (n.) 1. உப்பு; salt in general. 2. வாதமடக்கி; wind killer. 3. எலுமிச்சம்பழச் சாறு; lime-juice.

சிந்திதம் *śindidam*, பெ. (n.) நினைக்கப்பட்டது (சங்.அக.); that which is thought of or considered.

[சிந்தி → சிந்திதம்]

சிந்திபிந்தி *śindi-pindi*, பெ. (n) சின்னா பின்னம்; shred, shattered bit. "கட்டுக்குலைந்து சிந்தி பிந்தியாய்ப் போயிற்றிறே" (திவ். பெரியாழ். 2. 1: 5 வியா - பக். 224).

மறுவ. சின்னாபின்னம்

[சிந்துதல் = சிதறுதல். சிந்து → சிந்தி. சிந்திபிந்தி = எதுகை நோக்கி வந்த இணைமொழி]

சிந்திப்பு *śindippu*, பெ. (n.) நினைப்பு; thought.

[சிந்தி → சிந்திப்பு]

சிந்தியம் *śindiyam*, பெ. (n.) 1. நினைக்கத்தக்கது (சங்.அக.); that which is worthy of consideration. 2. சிவத் தோன்றியங்கள் (சிவாகமம்) இருபத் தெட்டனுளொன்று (சைவச.பொது331, உரை); an ancient saiva scripture in Šanskrit, one of 28 *śivāgamam*.

[சிந்தி → சிந்தியம்]

சிந்தியல்வெண்பா *śindiyal-veṇbā*, பெ. (n.) மூன்றடியாலமைந்த வெண்பா வகை (காரிகை, செய். 5, உரை); veṇbā verse of three lines.

[சிந்து[3] + இயல் + வெண்பா]

சிந்திராபதி *śindirāpadi,* பெ. (n.) ஆகாசக் கருடன் கிழங்கு; sky root.

சிந்தினர் *śindiṉar,* பெ. (n.) குள்ளர்; dwarfs. "நெடியர் சிந்தினர் குறியினர்" *(கந்தபு. படையெழு. 7).*

[சிந்து → சிந்தினர்]

சிந்து[1]-தல் *śindu-,* 5 செ.குன்றாவி. (v.i.) 1. சிதறு படுதல்; to be strewn, spilled. 2. சொட்டி யொழுகுதல்; to trickle, stream. கண்ணீர் சிந்தியது. 3. அழிதல்; to be destroyed. "இடர்தொடரா வினையான சிந்தும்" *(தேவா.37: 1).*

தெ. சிந்து; ம. சிந்துக.

சிந்து[2]-தல் *śindu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. சிதறுதல்; to scatter or strew. "தூயபொன் சிந்தி" *(திருவாச. 9:3).* 2. நீக்குதல்; to remove. "மறுக்கஞ் சிந்தினார்" *(கம்பரா. மருத்து. 105).* 3. தெளித்தல்; to spill, sprinkle, shed. 4. செலவழித்தல்; to spend, waste. "சிந்து நெறிக ளகலாமல்" *(விநாயகபு. 2:66).* 5. பரப்புதல்; to cast on all sides, expand. "கண் சென்றுலாய்ப் பிறழச்சிந்தி...... ஆடும்" *(சீவக. 2287).* 6. மூக்கைச் சிந்துதல்; to blow the nose. 7. அழித்தல்; to destroy. "புர மூன்றும் . . . மூரல் கொடு சிந்தி" *(காஞ்சிப்பு. இருபத். 131)* (க. சிந்து). 8. களைதல் (பிங்.); to pluck up, root out. 9. பயனிலவாகச் செய்தல்; to render futile. "பண்டு தானுடை வரங்கள் சிந்துவன்" *(கம்பரா. ஒற்றுக். 64).* 10. வெட்டுதல்; to cut off. "வாளாற் செறுநர் தங்களுடல் சிந்துவர்" *(கந்தபு. இரண்டா. நாட். சூர. உயுத். 341).*

தெ. சீது, க. சிந்து

[உல் → இல் → இல்லி = துளை, சிறுதுளை. இல்லிக்குடம் = துளையுள்ள குடம். உல் → உள் → உரை → உகு. உகுதல் = உள்ளிருந்து ஒழுகுதல், தத்தல், சிந்துதல். இல் → சில் ஒழுகுதல். ஒ.நோ. இல்லி மூக்கு → சில்லிமூக்கு = குருதி ஒழுகும் மூக்கு. சில் → சின் → சிந்து]

சிந்து[3] *śindu,* பெ. (n.) 1. குறளினுஞ் சிறிது நெடியனாய் மூன்றடியுயரமுள்ளவன்; dwarf, about 3ft. high, dist. fr. *kuṟaḷ.* "குறள் சிந்தினொ டோரு நடந்தன" *(சீவக. 631).* 2. சிந்தடி (காரிகை, உறுப். 12) பார்க்க; see *śindaḍi.* 3. இசைப்பா வகை. *(சிலப். 6:35, உரை);* a kind of musical composition. 4. ஒருவகை வரிக்கூத்து *(சிலப். 3: 13, உரை.);* a masquerade dance.

[சில் → சின் → சிந்து. சிந்துதல் = நீங்குதல், களைதல், குறைதல். சிந்து(தல்) → சிந்து → அளவிலிருந்து சற்றுக் குறைவான நிலை]

இசைத் தமிழ்ப் பாட்டு வகைகளுள் ஒன்று அடிக்குறுமை பற்றிச் சிந்து எனப்பெயர் பெறும்.

சிந்து[4] *śindu,* பெ. (n.) 1. கடல்; sea, ocean. "தேர்மிசைச் சென்றதோர் சிந்து" *(கம்பரா. ஆற்றுப். 32).* 2. நீர் (பிங்.); water. 3. ஆறு (பிங்.); river. 4. சிந்து ஆறு; the river Indus. "கிளர்சே ணிமயமுங் கெங்கையுஞ் சிந்துவும்" *(பெருங். நரவாண. 4: 122).* 5. ஐம்பத்தாறு நாடுகளுள் ஒன்று; Sindh, as the country of the Indus, one of 56 dēšam. 6. பதினெண்மொழிகளுள் சிந்து நாட்டில் வழங்கும் மொழி (திவா.); the language of Sindh, one of the 18 languages referred to in Tamil works.

[சிந்துதல் = துளி சிதறுதல், நீர் தெளித்தல், நீர் ஒழுகுதல். சிந்து(தல்) → சிந்து]

ஆரியர் வருமுன்பே தமிழரும் திரவிடரும் பனிமலை வரை பரவியிருந்ததால், சிந்தாற்றைத் தமிழர் முன்னரே அறிந்திருத்தல் வேண்டும்.

வடவர் ஸித் (dh) என்னுஞ் சொல்லை மூலமாக ஐயுற்றுக் கூறுவர். ஸித் = செல் (வ.வ.150).

த. சிந்து → Skt. sindhu

சிந்து[5] *śindu,* பெ. (n.) பண்; musical note. "சிந்தொக்குஞ் சொல்லினார்" *(கம்பரா. இராவணன் சோகப். 38).*

ம. சிந்து

[செந்து → சிந்து. செந்து = பெரும் பண்களுள் ஒன்று]

சிந்து[6] *śindu,* பெ. (n.) கொடி, பதாகை; flag, banner. "தீமதலை சிந்தா" *(கந்தரந். 21).*

Mhr. jheṇḍā

சிந்து[7] *śindu,* பெ. (n.) 1. சிந்துப்பு; Sindh salt. 2. வைடூரியம்; a precious gem - cat's eye.

சிந்து[8] *šindu,* பெ. (n.) இருவாட்சி (வின்.); Tuscan jasmine.

சிந்து[9] *šindu,* பெ. (n.) கால்நடைகளின் மேற்றோலில் காணப்படும் ஒரு வகை வெள்ளைப் புள்ளி; a kind of spot on the skin of cattle (சேரநா.).

ம. சிந்து

வெள்ளைப் புள்ளிகளையுடைய ஆடு, மாடுகளையும் 'சிந்து' என்ற சொல் காலப்போக்கில் குறிக்கலாயிற்று.

சிந்துக்காணி *šindu-k-kāṇi,* பெ. (n.) அசையும் சொத்து (வின்.); goods, chattels, movables.

u. zindagāni

[சிந்து + காணி]

சிந்துக்கொடி *šindu-k-koḍi,* பெ. (n.) சிந்தில் பார்க்க; see *šindil.*

[சிந்து + கொடி]

சிந்துகம்[1] *šindugam,* பெ. (n.) நொச்சி (மலை.); stalked leaflet chaste-tree.

[சிந்து → சிந்துகம்]

சிந்துகம்[2] *šindugam,* பெ. (n.) மூக்கு; nose.

[சிந்து → சிந்துகம் = சளி சிந்தும் உறுப்பு]

சிந்துகி *šindugi,* பெ. (n) சீமையகத்தி; ringworm shrub.

சிந்துசம் *šindušam,* பெ. (n.) உப்பு; salt.

[சிந்து → சிந்துசம்]

சிந்துசாரம் *šindu-šāram,* பெ. (n.) கடலுப்பு (வின்.); sea-salt.

[சிந்து[3] + சாரம்]

சிந்துநீர் *šindu-nīr,* பெ. (n.) மூக்குச்சளி; mucous from the nose.

[சிந்து[1] + நீர்]

சிந்துப்பிழுக்கை *šindu-p-piḻukkai* பெ. (n.) வரிக்கூத்து வகை (சிலப்.3: 13, உரை.); a masquerade dance.

[சிந்து + பிழுக்கை]

சிந்துப்பு *šinduppu,* பெ. (n.) சிந்து நாட்டிலுள்ள மலை, பாறை முதலானவற்றில் பனியினால் இயற்கையாய் விளையும் உப்பு; இருபத்தொரு உப்பு வகைகளுள் இதுவும் ஒன்று; வெங்காரமுடையதும், சித்த மருத்துவத்தில் மிகுதியாகப் பயன்படுவதுமான இவ்வுப்பு, பெருங்கட்டிகளாயிருக்கும்; Sindh salt. It is one of the 21 kinds of salt. It is formed naturally on mountains and rocks being soldified from the felling dew. It is an impure chloride of sodium. It occurs in large masses and is used in šiddha medicine for binding borax.

[சிந்து + உப்பு]

சிந்துப்பூ *šindu-p-pū,* பெ. (n) கடலில் தோன்றும் பூவாகிய சங்கு (மூ.அ).; conch, as flower of the ocean.

[சிந்து + பூ]

சிந்துபலம் *šindu-palam,* பெ. (n.) இந்துப்பு; sindu salt.

சிந்துபாலவம் *šindu-pālavam,* பெ. (n.) கடல் நுரை; cuttle-fish bone.

சிந்துபுட்பகம் *šindu-putpagam,* பெ. (n.) சுரபுன்னை; soora poon.

சிந்துமணி *šindu-maṇi,* பெ. (n.) களத்தில் உதிர்ந்து கிடக்குந் தவசம் (இ.வ.); stray grains that lie strewn on the threshing-floor, dist. fr. šidaṟumaṇi.

[சிந்து[1] + மணி. முள் → (மள்) → மண் → மணி = தவசமணி]

சிந்துரக்கட்டி *šindura-k-kaṭṭi,* பெ. (n.) செங்காவி; lump of lead ochre. "சந்தனக் குறையுஞ் சிந்துரக் கட்டியும்" (சிலப் 25: 39)

[சிந்துரம் + கட்டி]

சிந்துரத்தம் *šindu-rattam,* பெ. (n.) சிந்து நாட்டில் விளையுஞ் சிவப்பு நிறமுள்ள உப்பு; a red salt obtained from Sindh.

[சிந்து + அரத்தம். அர் → அரக்கு = சிவந்த மெழுகு. அர் → அரத்தம் = சிவப்பு, சிவப்பு நிறவுப்பு]

சிந்துரத்தாதிகம் *šinduratṭādigam,* பெ. (n.) எலுமிச்சை மரம்; lime tree.

சிந்துரதம் *šindu-radam,* பெ. (n.) இந்துப்பு (மூ.அ.); rock-salt.

[சிந்து [3] + ரதம். அரத்தம் → ரத்தம் → ரதம்]

சிந்துரத்தம் பார்க்க

சிந்துரம்[1] *šinduram,* பெ. (n.) *1.* சிந்தூரம், 1 பார்க்க; see *šindūram[1]*. "சிந்துரச் சேவடியானை" (திருவாச. 18: 5). 2. சிந்தூரம்[1], 3 பார்க்க; see *šindūram[1]*, 3. 'சிந்துர மிலங்கத் தன்றிருநெற்றி மேல்" (திவ். பெரியாழ். 3. 4: 6). 3. நெற்றியில் வைக்கும் பொட்டு; round coloured mark put on the forehead, usually of saffron. "சிந்துர வாதித்த வித்தார முடையார்" (கந்தரந். 5).

தெ. சிந்துரமு

[சிந்தூரம் → சிந்துரம்]

சிந்துரம்[2] *šinduram,* பெ. (n.) யானை (சூடா.); elephant. "கார்கொள் சிந்துரங் காயத்திடை யிடைச் சோரி சோர்தார" (கந்தபு. நகரழி. 61).

ம. சிந்துர்

[செந்தூரம் → சிந்தூரம் → சிந்துரம்]

த. சிந்துரம் → Skt. sindhura

புகர் முகம் (செம்புள்ளியுள்ள முகம்) என்பது சினையாகு பெயராய் யானையைக் குறிப்பது போன்றே சிந்துரம் என்பதும் யானையைக் குறிக்கும்.

சிந்துரம்[3] *šinduram,* பெ. (n.) *1.* புளியமரம். (சூடா.); tamarind tree. *2.* வெட்சிச் செடிவகை; scarlet ixora.

சிந்துரம் என்பது புளியின் செந்நிறம் பற்றிப் புளியமரத்தைக் குறிக்கும்.

சிந்துரம்[4] *šinduram,* பெ. (n.) செவ்வியம்; root of black pepper plant.

சிந்துரி-த்தல் *šinduri-,* 4 செ. குன்றாவி. (v.t.) சிந்தூரி –, (சங்.அக.) பார்க்க; see *šindūri-.*

[சிந்தூரி → சிந்துரி]

சிந்துருணி šinduruṇi, பெ. (n.) புளியம் பட்டை; tamarind bark.

சிந்துரை *šindurai,* பெ. (n.) இந்திரன் யானையால் வளர்க்கப்பட்டவளாகிய தெய்வ யானை; *Teyvayāṉai,* consort of Murugan, as brought up by Indra's white elephant. "சிந்துரைபாக" (கந்தரந். 39).

[சிந்துரம்[2] → சிந்துரை]

சிந்துவாரம்[1] *šinduvāram,* பெ. (n.) *1.* நொச்சி (சூடா.); stalked leaflet chaste - tree. *2.* கருநொச்சி; three-leaved chaste - tree. "வஞ்சி பித்திகஞ் சிந்துவாரம்" (குறிஞ்சிப். 89)

சிந்துவாரம்[2] *šinduvāram,* பெ. (n.) கடல் (அக.நி.); sea.

[சிந்து + வாரம். வாரி → வாரம். வாரி – கடல், நீர்நிலை]

சிந்துவாரம்[3] *šinduvāram,* பெ. (n.) வில் (பிங்.); bow.

சிந்துவாரி *šinduvāri,* பெ. (n.) பெருங்கடல்; ocean.

[சிந்து + வாரி]

சிந்துவெளி *šinduveḷi,* பெ. (n.) சிந்து ஆறு பாயும் பகுதி, சிந்து பள்ளத்தாக்கு; river belt, Indus valley.

[சிந்து + வெளி]

சிந்துவெளி நாகரிகம் *šinduveḷi-nāgarigam,* பெ. (n.) சிந்து ஆறு பாய்ந்த பகுதியில் 5,000 ஆண்டுகளுக்கு முன்பு நிலவிய பழந்தமிழர் நாகரிகம்; an ancient Tamilian civilization which prevailed about 5000 years ago in Sindu river belt, Indus valley civilization.

[சிந்துவெளி + நாகரிகம்]

சிந்தூகம் *šindūgam,* பெ. (n.) சேங்கொட்டை; dhoby's nut.

சிந்தூரச்சிலை *šindūra-c-cilai,* பெ. (n.) *1.* மாக்கல்; pot stone. *2.* சிகப்புக்கல்; any red stone. *3.* சிகப்புத்தாதுமண்; any red ore such as, red zinc ore. *4.* செம்மண்; ochre.

[சிந்தூரம் + சிலை. செந்தூளம் → செந்தூரம் → சிந்தூரம் = சிவப்பு]

சிந்தூரத்திலகம்[2] *šindūra-t-tilagam,* பெ. (n.) சிந்தூரப்பொட்டு பார்க்க; see *šindūra-p-poṭṭu.* "தெறிக்குந் திவலை யழிக்குஞ் சிந்தூரத் திலகத்தையே" (தனிப்பா. ii, 129: 327).

[சிந்தூரம் + திலகம்]

சிந்துவெளி நாகரிகம்



சென்னை-600 008

சிந்தூரத்திலதம் *śindūra-t-tiladam,* பெ. (n.) *நாதவுப்பு;* a kind of negative salt.

சிந்தூரப்புடம் *śindūra-p-pudam,* பெ. (n.) சிந்தூர மருந்து செய்வதற்காகப் போடும் *புடம்;* calcination of metals with a view to obtain red extraneous oxides.

[சிந்தூரம் + புடம்]

சிந்தூரப்பூடணம் *śindūra-p-pūdanam,* பெ. (n.) இசிவு, சுரம், மகப்பேறடைந்தோர்தம் நோய்கள் முதலானவற்றைப் போக்கும் *ஆயுள்வேத மாத்திரை;* an Āyurvēdic red pill prescribed for diseases of pregnant women and for curing ailments and other evils as apolexy, fever etc.

[சிந்தூரம் + பூடணம்]

சிந்தூரப்பொட்டு *śindūra-p-pottu,* பெ. (n.) *குங்குமப்பொட்டு (வின்.);* vermilion mark on the forehead.

மறுவ. செந்தூரம்

[சிந்தூரம் + பொட்டு. சிந்தூரம் = சிவப்பு]

சிந்தூரம்[1] *śindūram,* பெ. (n.) *1. சிவப்பு (பிங்.);* redness. *2. செங்குடை. (பிங்.);* red umbrella. *3. நெற்றியில் அணிதற்குரிய ஒருவகைச் செம்பொடி (பிங்.);* vermilion, red paint, red powder for tilaka. *"மதகரியைச் சிந்தூரமப்பிய போல்" (கம்பரா. மிதிலைக். 151).* 4. *செந்நிறமுள்ள பொடி வகை;* red metallic oxide, precipitate of mercury, any chemical or metallic compound used medicinally. *"சிந்தூரத்தாது கொடுத்திலரேல்" (உபதேசகா. உருத்திரா. 67).* 5. *யானைப் புகர்முகம் (பிங்.);* elephant's face, as spotted red. *6. வெட்சி. (திவா.);* scarlet ixora. *7. சேங்கொட்டை. (மலை.);* marking - nut tree. *8. மாவகை;* a kind of mango. செந்தூர மாம்பழம்.

[கம் → செம் → செம்பு → செப்பு. செம்பு → கெம்பு = சிவந்த கல். செந்தூள் = செம்பொடி, செந்நீறு. செந்தூள் → செந்தூளம் → செந்தூரம் → சிந்தூரம் (மு.தா. 153)]

த. சிந்தூரம் → Skt. sindūra

சிந்தூரம்[2] *śindūram,* பெ. (n.) *சிந்துரம்*[2]. *(பிங்.) பார்க்க;* see *śinduram*[2].

சிந்தூரம்[3] *śindūram,* பெ. (n.) *சிந்துரம்*[3] *பார்க்க;* see *śindūram*[3].

சிந்தூரம்[4] *śindūram,* பெ. (n.) *செவ்வீயம் (வின்.);* red lead, minium.

சிந்தூரம்[5] *śindūram,* பெ. (n.) *பறைவகை (பிங்.);* a kind of drum.

சிந்தூரம்[6] *śindūram,* பெ. (n.) *1. பவளம்;* coral. *2. சாதிலிங்கம்;* vermilion. *3. பாறையுப்பு;* rock-salt.

[செந்தூள் → செந்தூளம் → செந்தூரம் → சிந்தூரம்]

சிந்தூரமணி *śindūra-mani,* பெ. (n.) *ஆண்குறியின் மேற்புறமும் நுனியும் வீங்கியுந் தோல் சிவந்தும் காணப்படும் பால்வினை நோய்;* inflammation and swelling of the glans penis and perpuce due to venereal affections or other causes.

[சிந்தூரம் + மணி. சிந்தூரம் = சிவப்பு. மணி = ஆண்குறியின் நுனி]

சிந்தூரமரம் *śindūra-maram,* பெ. (n.) *1. செங்கடம்பு;* red Indian oax tree. *2. புளிய மரம்;* tarmarind tree.

[சிந்தூரம் + மரம்]

சிந்தூரமருத்துவம் *śindūra-maruttuvam,* பெ. (n.) *தேவ மருத்துவம்;* devas treatment.

[சிந்தூரம் + மருத்துவம்]

சிந்தூரமாக்கு-தல் *śindūramākku-,* 5 செ.கு.வி. (v.i.) *சிவப்பு வண்ணமாக்குதல்;* to make into a red colour.

[சிந்தூரம் + ஆக்கு-,]

சிந்தூரவிதி *śindūra-vidi,* பெ. (n.) *சிந்தூரம் செய்யும் முறை;* rules relating to calcination of metals into red oxides.

[சிந்தூரம் + விதி]

சிந்தூரி[1]**-த்தல்** *śindūri-,* 4 செ.குன்றாவி. (v.t.) *மாழைகளைச் (உலோகங்களை) செந்தூள மாக்குதல்;* to calcine, prepare powders of

metals or minerals by the agency of fire. "சுருக்குக் கொடுத்ததைச் சிந்தூரித்து" (பணவிடு. 230).

ம. சிந்தூரிக்குக

[செந்தூளம் → சிந்தூளம் → சிந்தூரம் → சிந்தூரி]

சிந்தூரி²-த்தல் *šindūri-*, 4 செ.கு.வி. (v.i.) சிவப்பாக்குதல்; to convert into a red colour.

[சிந்தூரம் → சிந்தூரி-. 'இ' வினையாக்க ஈறு]

சிந்தூரி³ *šindūri*, பெ. (n.) சிறுபுள்ளடி; bird's feet plant.

சிந்தூரிகை *šindūrigai*, பெ. (n.) செவ்வியம்; black pepper root.

[சிந்தூரி → சிந்தூரிகை]

சிந்தை *šindai*, பெ. (n.) 1. மனம்; mind, intellect. "கெடுக சிந்தை கடிதிவள் துணிவே" (புறநா.). 2. அறிவு; knowledge. "இரவு பகலுணர்வோர் சிந்தை" (சி.சி.பாயி. விநாயகர்துதி, சிவஞா.). 3. எண்ணம்; thought, idea, intention. "நாகேச்சரம் வலங்கொள் சிந்தையுடையார்" (தேவா.439, 8). 4. ஊழ்கம் (தியானம்); meditation, contemplation. "சிந்தை செய்து" (திவ். திருவாய். 2. 6: 5). 5. கவலை; solicitude, care. "செதுமகப் பலவும் பெற்றுச் சிந்தைகூர் மனத்தையாகி" (சீவக. 1124).

[சித்து → சிந்து → சிந்தை]

சிந்தைகல-த்தல் *šindai-kala-*, 3 செ.கு.வி. (v.i.) மனமொத்தல்; to be of one mind. "சிந்தைகலந்த சகியாகச் சேர்ந்து" (உத்தரரா. அனுமப். 45).

[சிந்தை + கல-,]

சிந்தைகூரியன் *šindai-kūriyan̠*, பெ. (n.) 1. அறிவுக் கூர்மையுள்ளவன்; sharp, keen-witted person. 2. அறிவன் (புதன்) (சூடா.); the planet Mercury.

[சிந்தை + கூரியன்]

கூரியன் பார்க்க

சிந்தைசெய்-தல் *šindai-šey-*, 2 செ.குன்றாவி. (v.t.) 1. நினைவில் வைத்தல்; to remember, bear in mind. 2. ஊழ்கம் (தியானம்) செய்தல்; to meditate upon, reflect. "உன்னைச் சிந்தைசெய்து" (திவ். திருவாய். 2. 6: 6). 3. கவலை கொள்ளுதல்; to care for, to be anxious about. "எம்மையு மாள்வரோ வென்று சிந்தைசெயும்" (தேவா. 743, 11).

[சிந்தை + செய்-,]

சிந்தையடக்கு-தல் *šindai-y-aḍakku-*, மனத்தை ஒருவழிப்படுத்துதல்; concentration of mind.

[சிந்தை + அடக்கு-,]

சிந்தையின்மை *šindai-y-in̠mai*, பெ. (n.) 1. மனம் ஒன்றாமை; absence of mind. 2. புறப் பொருட்களில் பற்றற்ற நிலை; in attention to external impressions.

[சிந்தை + இன்மை]

சிப்பம்¹ *šippam*, பெ. (n.) 1. பொட்டலம்; parcel. 2. சிறுமூட்டை; bundle. 3. ஒருவன் சுமக்கும் அளவுள்ள கட்டப்பட்ட சுமை (வின்.); a man's load of tobacco leaves.

ம. சிப்பம்; தெ. சிப்பமு

[சுள் → (சுட்டு) → சிட்டு (மு.தா. 140). சிட்டு → சிறியது. சிட்டு → சிட்டம் → சிப்பம்]

சிப்பம்² *šippam*, பெ. (n.) சிறுமை (யாழ்ப்.); a little, trifle.

ம. சிம்பி

[சில் → சிறு → சிற்பம் → சிப்பம்]

சிப்பம்³ *šippam*, பெ. (n.) சிற்பம்; architecture, statuary art, artistic fancy work. "கடிமலர்ச் சிப்பமும்" (பெருங். உஞ்சைக். 34: 167).

[சில் → சில்பு → சிற்பு → சிற்பம் (வ.வ. 154). சிற்பம் → சிப்பம்]

த. சிற்பம் → Skt. silpa.

சிப்பமுத்து *šippa-muttu*, பெ. (n.) செயற்கை முத்து; artificial pearl.

தெ. சிப்பமுத்தமு

[சிப்பம் ³ + முத்து]

சிப்பல் *šippal*, பெ. (n.) 1. மூங்கில் சிம்பினாலான மூடி; bamboo lid. 2. கஞ்சி

வடித்தல் முதலியவற்றிற்குதவும் தட்டு; colander, perforated rice-strainer.

தெ. சிம்பி; க. சிப்பலு, சிப்பல, சிப்பில், சிப்புல்

[சிம்பு = மூங்கிற்சிம்பு. சிம்பு → சிப்பு → சிப்பல் = மூங்கிற் சிம்புகளால் முடையப் பெற்ற சிறுதட்டு, அதைப்போல் மாழையாலான துளைகளுள்ள தட்டு]


சிப்பல்

சிப்பலித்தட்டு *šippali-t-taṭṭu,* பெ. (n.) சிப்பல் பார்க்க; see *šippal.*

[சிப்பல் → சிப்பலி + தட்டு]

சிப்பற்றட்டு *šippaṟṟaṭṭu,* பெ. (n.) சிப்பல் பார்க்க; see *šippal.*

[சிப்பல் + தட்டு]

சிப்பாதிமூலி *šippādi-mūli,* பெ. (n.) தைவேளை (மலை.); species of cleome.

சிப்பி[1] *šippi,* பெ. (n.) 1. சிற்பி பார்க்க; see *širpi.* 2. தையற்காரன், துன்னக்காரன் (சிலப். 5:32, அடிக்குறிப்பு); tailor.

[சிற்பி → சிப்பி]

சிப்பி[2] *šippi,* பெ. (n.) 1. முத்து முதலியவை பொதிந்திருக்கும் ஓடு; pearl-oyster, oyster-shell. 2. சிப்பியோடு கூடிய நீர்வாழ் உயிரி; shell-fish. "நண்டு சிப்பி வேய்கதலி" (நல்வழி, 36). 3. தயிர் அளந்துவிடும் கொட்டாங்கச்சி; coconut- shell for measuring out curds.

ம. சிப்பி; க. சிப்பு, சிப்பு, சிம்பு, சிம்பி, சிம்பெ; தெ. சிப்ப; Pkt., Pali. sippī; Skt. šukti; Port. chipo

[சிம்பு → சிப்பு → சிப்பி]


சிப்பி

சிப்பி[3] *šippi,* பெ. (n.) 1. உவர்மண்; a secret term used for fullers earth. 2. நச்சுப்பல்; poisonus fang of a serphent.

சிப்பிச்சி *šippicci,* பெ. (n.) துத்தம்; white vitriol.

சிப்பிச்சுண்ணாம்பு *šippi-c-cuṇṇāmbu,* பெ. (n.) கிளிஞ்சிலை நீற்றியெடுத்த சுண்ணாம்பு. (வின்.); shell-lime.

[சிப்பி[2] + சுண்ணாம்பு. சுள் → சுண் → சுண்ணம் → சுண்ணாம்பு]

சிப்பித்தட்டு *šippi-t-taṭṭu,* பெ. (n.) சிப்பல் (இந்துபாக. 62) பார்க்க; see *šippal.*

[சிப்பல் + தட்டு - சிப்பத்தட்டு → சிப்பித் தட்டு]

சிப்பித்தான்பழம் *šippittāṉ-paḻam,* பெ. (n.) சீமை நறுவிலி; foreign sebesten.

[சிப்பித்தான் + பழம்]

சிப்பித்தைலம் *šippi-t-tailam,* பெ. (n.) புழுக்கடி வெட்டு, ஊறல் போன்றவற்றின் தொல்லை யகல உடம்பின் மேற்பூசும் மருந்தெண்ணெய்; a medicated oil extracted probably from molluse and used externally for scold head and itching (சா.அக.).

[சிப்பி + தைலம்]

Skt. tailā → த. தைலம்

சிப்பிநீற்று-தல் *šippi-nīṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.i.) கிளிஞ்சிலைச் சுண்ணாம்பாகத் தாளித்தல்; to roasting or reducing shell into a lime powder (சா.அக.).

[சிப்பி + நீற்று-,]

சிப்பிநீறு *śippi-nīṟu*, பெ. (n.) சிப்பிச்சுண்ணாம்பு (வின்.) பார்க்க; see *śippi-c-cuṇṇāmbu*.

[சிப்பி² + நீறு]

சிப்பிப்பாறை *śippi-p-pāṟai*, பெ. (n.) சிப்பிப் படுகை; an oyster-bed.

ம. சிப்பிப்பாற

[சிப்பி + பாறை]

சிப்பிமீன் *śippimīṉ*, பெ. (n.) 1. கிளிஞ்சலின் ஓட்டிற்குள் இருக்கும் மீன் இனம்; a species of shell fish. 2. நூற்றுக்கண் மீன் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுவதும், அழகான புள்ளிகளமைந்ததுமான கடல் மீன் இனம்; a kind of sea-fish commonly known as hundred-eyed fish in English because of its innumerable spots on the body.

[சிப்பி + மீன்]



சிப்பிமுத்து *śippi-muttu*, பெ. (n.) சிப்பியில் விளையுந் தரங்குறைந்த முத்து; an inferior kind of pearl obtained from oysters - mother of pearls.

[சிப்பி + முத்து. முள் → (மள்) → மண் → மணி = உருண்ட கூலம் அல்லது விதை உருண்ட பாசி]

சிப்பிமெட்டி *śippi-meṭṭi*, பெ. (n.) கிளிஞ்சல் வகையுளொன்று; a kind of shell.

[சிப்பி + மெட்டி]

சிப்பியச்சு *śippi-y-accu*, பெ. (n.) தொடரியில் (சங்கிலியில்) கோத்தற்குரிய மணிகள் செய்ய உதவும் கம்மியர் அச்சு; goldsmith's mould for making shell - shaped pendants.

[சிப்பி + அச்சு]

சிப்பியம் *śippiyam*, பெ. (n.) கத்தியாலறுத்து அரத்தத்தை வெளியேற்றும், அரத்தக்கட்டி வகை; an abcess bleeding on incision (சா.அக.).

சிப்பியவேலை *śippiya-vēlai*, பெ. (n.) அழகிய வேலை (வின்.); any curious workmanship; fancy needle-work.

சிற்பம் = நுண்டொழில், நுட்பத்தொழில்.

[சிற்பி → சிப்பி → சிப்பியம் + வேலை]

சிப்பியன் *śippiyaṉ*, பெ. (n.) 1. கம்மியன் (வின்.); fancy-worker, engraver. 2. துன்னக்காரன், தையற்காரன் (யாழ்.அக.); tailor.

தெ. சிப்பெவாடு; க. சிப்பிக, து. சிப்பிக.

[சிற்பி → சிப்பி → சிப்பியன்]

சிப்பிரகருப்பம் *śippira-karuppam*, பெ. (n.) பூடுவகையுளொன்று; a kind of plant (சா.அக.).

சிப்பிலி¹ *śippili*, பெ. (n.) கழிமுகங்களில் வந்துசேரும் கடல்மீன் வகை; sea-fish in backwaters.

ம. சிப்பிலி

[சிப்பி → சிப்பிலி]

சிப்பிலி² *śippili*, பெ. (n.) சிப்பல் பார்க்க; see *śippal*.

ம. சிப்பிலி; க. சிம்பலு; தெ. சிம்பி

[சிப்பல் → சிப்பலி → சிப்பிலி]

சிப்பிலித்தட்டு *śippili-t-taṭṭu*, பெ. (n.) சிப்பல் பார்க்க; see *śippal*.

[சிப்பிலி + தட்டு]

சிப்புரதிமூலி *śippuradi-mūli*, பெ. (n.) வேம்பு; margosa tree.

[சிப்பிரதி + மூலி]

சிபி *śibi*, பெ. (n.) வள்ளன்மையிற் பேர் பெற்ற கதிரவகுல மன்னன்; a king of the solar race, renowned for his liberality.

சிம்பட்டை *śimbaṭṭai*, பெ. (n.) சிம்பத்தை பார்க்க; see *śimbattai* (சா.அக.).

[சிம்பத்தை → சிம்பத்தை → சிம்பட்டை]

சிம்பத்தை *śimbattai*, பெ. (n.) சிறுபுள்ளடி (மலை.); species of desmodium.

[சிம்பதை → சிம்பத்தை]

சிம்பதை *šimbadai,* பெ. (n.) *சிம்பத்தை (மலை.) பார்க்க;* see *šimbattai.*

[சிம்பத்தை → சிம்பதை]

சிம்பர் *šimbar,* பெ. (n.) *துமுக்கி (துப்பாக்கி) யிலிடும் தக்கை (யாழ்.அக.);* ramrod.

[சிம்பு → சிம்பர்]

சிம்பல்[1] *šimbal,* பெ. (n.) *ஒலிக்கை (யாழ். அக.);* sounding.

[சிம்பு[3] *→ சிம்பல்]*

சிம்பல்[2] *šimbal,* பெ. (n.) *துள்ளுகை (உ.வ.);* frisking labout.

[சிம்பு[1] *→ சிம்பல்]*

600909

சிம்பல்[3] *šimbal,* பெ. (n.) *சிம்பு (யாழ்.அக.);* splinter, grain of boards, rough nap on the surface of coarse cloth or of paper.

[சிம்பு[6] *→ சிம்பல்]*

சிம்பல்சிலும்பல் *šimbal-šilumbal,* பெ. (n.) *கந்தை (வின்.);* tatters, shreds.

[சிம்பல்[3] *+ சிலும்பல். மீமிசைப் பொருள் மரபிணைமொழி]*

494.811321 GEN.3-2

சிம்பி[1] *šimbi,* பெ. (n.) *வாழையிலைத் துண்டு. (இ.வ.);* piece of a plantain leaf.

[சிம்பல்[3] *→ சிம்பி]*

சிம்பி[2] *šimbi,* பெ. (n.) *சிறுவிடுகொள்;* horse, gram; it is opposed to peruvidukoḷ *(சா.அக.).*

[சிம்பு → சிம்பி]

சிம்பிகம் *šimbigam,* பெ. (n.) *1. கருங்கொள்;* black horse-gram. *2. அவரை;* Indian bean. *3. மொச்சை;* country bean. *4. உளுந்து;* black-gram.

சிம்பித்தானியம் *šimbittāniyam,* பெ. (n.) *இரண்டு பிரிவுகளாகப் பகுக்கப்படும், பருப்பு வகைகளைச் சார்ந்த தவசவகைகள்;* pulse of dolichos genus *(சா.அக.).*

[சிம்பு → சிம்பி + தானியம்]

Skt. dhānya → *த. தானியம்*

சிம்பிலி *šimbili,* பெ. (n.) *சருக்கரையும் தேங்காயும் கேழ்வரகு மாவுஞ் சேர்த்துச் செய்த பிட்டு;* comestibles made of ragi flour mixed with jaggery and coconut.

[சிம்பு[2] *→ சிம்பிலி*[2]*]*

சிம்பிளி-த்தல் *šimbiḷi-,* 4 செ.கு.வி. (v.i.) *சிம்புளி- (வின்.) பார்க்க;* see *šimbuḷi-.*

சிம்பிளிபொன் *šimbiḷi-pon,* பெ. (n.) *கண்ணிமையும் கருவிழியும் ஒட்டிக் கொள்வதால் ஏற்படும் கண்ணோய். (இங்.வை.);* a disease of the eye-lids characterised by the adhesion of the eye-lids to the eye-balls.

E. symblepharon

சிம்பு[1]**-தல்** *šimbu-,* 5 செ.கு.வி. (v.i.) *1. துள்ளுதல்;* to frisk about. *மாடு சிம்புகிறது. 2. சினக்குறி காட்டுதல்;* to be restive, to show signs of anger. *"தாராரைச் சிம்பித் துரத்துவார்" (விறலிவிடு. 315).*

[சிலம்பு → சிம்பு]

சிம்பு[2]**-தல்** *šimbu-,* 5 செகுன்றாவி. (v.t.) *1. சுண்டி யிழுத்தல் (உ.வ.);* to pull hard. *'உன்னாலான மட்டுஞ் சிம்பிப்பார்' (கொ.வ.). 2. ஒன்று கூட்டுதல்;* to gather together. *'விளக்கு மாற்றை நன்றாய்ச் சிம்பிக்கொள்' (இ.வ.). 3. நன்றாய்த் தேய்த்தல்;* to rub well. *'இவ்விடத்தை நன்றாய்ச் சிம்பு' (இ.வ.).*

சிம்பு[3]**-தல்** *šimbu-,* 5 செ.கு.வி. (v.i.) *ஒலித்தல் (வின்.);* to sound, make noise.

ம. சிம்பல்

[சிலம்பு → சிம்பு]

சிம்பு[4] *šimbu,* பெ. (n.) *எலும்பையொட்டிய சவ்வு;* a membrane sticking to the bone *(சா.அக.).*

சிம்பு[5] *šimbu,* பெ. (n.) *சுண்டியிழுக்கை;* pull. *'ஒரு சிம்புச் சிம்பினான்' (உ.வ.).*

சிம்பு[6] *šimbu,* பெ. (n.) *1. சிராய்;* small splinter or fibre rising on a smooth surface of wood or metal. *2. இரும்பு முதலியவற்றின் தெறிப்பு (வின்.);* chip, strip, flake from beaten iron; any small mass breaking off in flakes, in scales or in chips. *3. செதும்பு;* fibre, frayed ends of a worn cord. *"சிம்பறத் திரண்ட நரம்பு" (சீவக. 559, உரை). 4. மூங்கிற்சிம்பு [illegible];* bamboo splints.

5. இளம்விளாறு (வின்.); twig, young stalk. 6. குற்றம் (சீவக. 666, உரை.); fault, defect.

ம. சிம்பு; தெ. சிம்பி

[சிதம்பு → சிம்பு]

சிம்புக்கட்டு *šimbu-k-kaṭṭu*, பெ. (n.) ஒடிந்த எலும்பையொட்டுவதற்காக மூங்கிற் பத்தை வைத்துக் கட்டும் கட்டு; splint bandage for fractured bones.

[சிம்பு + கட்டு]



சிம்புகட்டு-தல் *šimbu-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) ஒடிந்த உறுப்புக்குப் பத்தைவைத்துக் கட்டுதல் (இ.வ.); to bandage fractured limbswith splints.

[சிம்பு[5] + கட்டு]

சிம்புதெறி-த்தல் *šimbu -teṟi-*, 4 செ.கு.வி. (v.i.) சிராய்த்தல் (வின்.); to splinter, break into small flakes.

[சிம்பு[6] + தெறி-]

சிம்புபற-த்தல் *šimbu-paṟa-*, 4 செ.கு.வி. (v.i.) சிராய் கிளம்புதல் (இ.வ.); to rise into splinter or fibre.

[சிம்பு[5] + பற-,]

சிம்புரி *šimburi*, பெ. (n.) கலம் அசையாதபடி அதன்கீழிடும் புரிமணை, சும்மாடு முதலியன (வின்.); coil of straw used for keeping steady a vessel, load etc., as on the ground or head.

க. சிம்பி

[வைக்கோற் புரியாலான சும்மாடு. சும்மாடு + புரி = சும்மாட்டுப்புரி → சிம்மாட்டுப்புரி → சிம்புரி]

சிம்புவிடு-தல் *šimbu-viḍu-*, 20 செ.கு.வி. (v.i.) மரக்கன்று தளிர்த்தல் (வின்.); to shoot forth tender leaves.

[சிம்பு[5] + விடு-,]

சிம்புவெடி-த்தல் *šimbu-veḍi-*, 4 செ.கு.வி. (v.i.) சிம்புவிடு-, (வின்.) பார்க்க; see *šimpu-viḍu-*.

[சிம்புவிடு → சிம்புவெடி-,]

சிம்புள்[1] *šimbuḷ*, பெ. (n.) எட்டுக்காற் பூச்சி; spider (சா.அக.).

சிம்புள்[2] *šimbuḷ*, பெ. (n.) அரிமாவைக் கொல்லும் ஆற்றலுடையது எனப்படும் எண்காற்புள் (சரபம்); a fabulous eight-legged bird. "பறந்து செல் சிம்புள் பைபென வைத்தலும்" (பெருங். இலாவாண. 11:65). சிம்புட் பறவையே சிறகை விரி! எழு! - பாவேந்தர்.

சிம்புளானோன் *šimbuḷ-āṉōṉ*, பெ. (n.) எண்காற்புள் (சரபம்) வடிவமெடுத்த வீரபத்திரன் (பிங்.); Virabattiraṉ, as one who assumed the form of šimpuḷ.

[சிம்புள்[2] + ஆனோன்]

சிம்புளி[1]-த்தல் *šimbuḷi-*, 4 செ.கு.வி. (v.i) 1. கண்ணை மூடிக்கொள்ளுதல்; to close or shut the eyes, as in joy, terror, etc. "சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில் வைத்துகந்து" (தேவா. 195,1). 2. கண்ணிமை கொட்டுதல்; to flutter the eyelids.

ம. சிம்முக, சிம்புக, சீம்முக; க. சிமுடு; தெ. சிமுடு

சிம்புளி[2] *šimbuḷi*, பெ. (n.) செவ்வாடை (பிங்.); red cloth.

[செம்பு + உள் (மை) → சிம்புளி]

சிம்புளி[3] *šimbuḷi*, பெ. (n.) கம்பளி (வின்.); woollen cloth, blanket.

[சிம்பு → சிம்புளி]

சிம்புறுகண்[1] *šimbuṟu-kaṇ*, பெ. (n.) கண்ணிற் படலம் உரிவதாகிய நோய் வகை.(வின்.); a disease of the conjunctivea which causes it to become sealy.

[சிம்பு + உறு + கண்]

சிம்புறுகண்[2] *šimburu-kaṇ,* பெ. (n.) கண்ணிற் சிராய் பாய்வதினாலுண்டாகும் நோய்; irritation of the eyes due to flakes from a beaten iron striking against cornea of the eye *(சா.அக.).*

[சிம்புறு + கண்]

சிம்பை *šimpai,* பெ. (n.) அவரை (சூடா.); field-bean.

சிம்மதம் *šimmadam,* பெ. (n.) பாம்பு; snake *(சா.அக.).*

சிம்மது *šimmadu,* பெ. (n.) சிம்பத்தை பார்க்க; see *simbattai (சா.அக.).*

சிம்மாங்கவாதம் *šimmāṅga-vādam,* பெ. (n.) ஊதைநோய் வகையுளொன்று; a kind of rheumatism *(சா.அக.).*

Skt. vāta → த. ஊதை

சிம்மமுகி *šimma-mugi,* பெ. (n.) ஆடா தோடை (தைலவ. தைல. 16); malabar nut.

[சிம்மம் + முகி]

சிம்மவிட்டுணு *šimma-viṭṭuṇu,* பெ. (n.) காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பல்லவ நாட்டையாண்ட மகேந்திரவர்மனின் தந்தை; father of Mahēndra varmaṉ, a Pallava king, who ruled over from Kañcipuram.

நாட்டுக்கு அரசனாய்த் திகழ்ந்ததோடு கலைகளுக்கும் அரசனாய்த் திகழ்ந்தான். கற்கோயில்களைக் கட்டினான்; குகைக் கோயில்களையும் உருவாக்கினான்.

சிம்மா-த்தல் *šimmā-,* 6 செ.கு.வி. (v.i.) இறுமாத்தல்; to be elated with pride.

[செம்மா → சிம்மா]

சிம்மாங்கவாதாங்குசாறு *šimmāṅga- vādāṅgu-sāṟu,* சிம்மாங்க ஊதை நோயைப் போக்கும் ஆயுள்வேத மருந்து; an Āyurvēdic medicine for rheumatism *(சா.அக.).*

சிம்மாடு *šimmādu,* பெ. (n.) சும்மாடு (மதி.கள. ii, 73); load-pad for the head.

ம. சிம்மாடு

[சும்மாடு → சிம்மாடு]

சிம்மாளம் *šimmāḷam,* பெ. (n.) மகிழ்ச்சி (சங்.அக.); exhilaration, mirth.

க. சுமான; தெ. சுமாளமு

[கும்மாளம் → கிம்மாளம் → சிம்மாளம்]

சிம்மு[1]**-தல்** *šimmu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கொப்புளங் குத்தி விடுதல் (இ.வ.); to open a blister.

தெ. சிம்மு

[செம்மு → சிம்மு-,]

சிம்மு[2]**-தல்** *šimmu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சிம்பு[1]-2 பார்க்க; see *šimpu*[1]*-2.*

சிம்மு[3] *šimmu,* பெ. (n.) எல்லை (யாழ்.அக.); limit, border.

சிம்மை *šimmai,* பெ. (n.) அவுரி; indigo plant *(சா.அக.).*

சிமட்டி *šimaṭṭi,* பெ. (n.) பேய்க் கொம்மட்டி (மலை.); colocynth, climber.

சிமந்தாதி *šimandādi,* பெ. (n.) பச்சைப் பாக்கு; raw of green areca-nut *(சா.அக.).*

சிமந்தாரிகம் *šimandārigam,* பெ. (n.) சிறுபுள்ளடி; species of desmodium *(சா.அக.).*

சிமந்தூரி *šimandūri,* பெ. (n.) சிறுபுள்ளடி (மலை.); species of desmodium.

சிம்பத்தை பார்க்க

சிமம் *šimam,* பெ. (n.) எல்லாம் (யாழ்.அக.); all.

சிமயம் *šimayam,* பெ. (n.) 1. பனிமலை (பிங்.); the Himlayas. 2. பொதியமலை (சூடா.); the mount Podigai in Tirunelveli District.

[சிமையம் → சிமயம்]

சிமையம் பார்க்க

சிமரகம் *šimaragam,* பெ. (n.) சுவர் முள்ளங்கி; wild country radish *(சா.அக.).*

சிமலி *šimali,* பெ. (n.) பூளை; malabar semul *(சா.அக.).*

சிமாளம் *šimāḷam,* பெ. (n.) சிம்மாளம் (வின்.) பார்க்க; see *šimmāḷam.*

சிமாளி[1]-த்தல் *šimāḷai-*, 4 செ.கு.வி. (v.i) மிக மகிழ்தல் (யாழ்.அக.); to rejoice greatly.

[சிமாளம் → சிமாளி-,]

சிமாளி[2]-த்தல் *šimāḷai-*, 4 செ.குன்றாவி. (v.t.) சமாளி பார்க்க; see *šamāḷi.*

[சமாளி → சிமாளி-,]

சிமான் *šimāṉ*, பெ. (n.) 1. அவுரிவித்து; seeds of indigo plant. 2. கந்தகம்; sulphur (சா.அக.).

சிமி *šimi*, பெ. (n.) ஆண்மக்களின் குடுமி (பிங்.); hair-tuft of men.

[உம் → சும் → சும. சுமத்தல் = தலைமேற் பொறை கொள்ளுதல். சும → சுமை → சிமை → சிமி]

சிமிக்கி *šimikki*, பெ. (n.) பூச்செடி வகையுள் ஒன்று; a kind of Bounapart is passion flower.

சிமிக்கிப்பூ *šimikki-p-pū*, பெ. (n.) 1. சீமை மல்லிகைக் கொடி; foreign jasmine creeper. 2. மலைச்சிமிக்கி; mountain foreign jasmine (சா.அக.).

[சிமிக்கி + பூ]

சிமிகம் *šimigam*, பெ. (n.) கிளி; parrot (சா.அக.).

சிமிங்கி *šimiṅki*, பெ. (n.) கடுக்காய்; gallnut (சா.அக.).

சிமிட்டி[1] *šimiṭṭi*, பெ. (n.) சிமிட்டுக்கள்ளி பார்க்க; see *šimiṭṭu-k-kaḷḷi.*

[சிமிட்டு → சிமிட்டி]

சிமிட்டி[3] *šimiṭṭi*, பெ. (n.) பேய்க்கொம்மட்டி; colocynthis (யாழ்.அக.).

[சிமட்டி → சிமிட்டி]

சிமிட்டி[4] *šimiṭṭi*, பெ. (n.) பேய்த் திமிட்டி; bitter apple (சா.அக.).

மறுவ. சிமிட்டிக் கள்ளி

சிமிட்டு[1]-தல் *šimiṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கண்ணிமைத்தல்; to blink, wink. "இருகண்ணுஞ் சிமிட்டாமுன்" (இராமநா. உயுத். 107). 2. சாடை தோன்றக் கண்சிமிட்டுதல்; to make a signal with the eyes; to wink. "சிமிட்டிக் கண்களினால்" (திருப்பு. 553). 3. தந்திரஞ்செய்து ஏமாற்றுதல் (வின்.); to deceive artfully, impose upon by stratagem.

ம. சிமிட்டுக; க. சிமிடு, சிவடு, சிவிடு; து. சிமுடு

[சிமிழ் → சிமிட்டு-,]

த. சிமிழ் → Skt. šiml

சிமிட்டு[3] *šimiṭṭu*, பெ. (n.) 1. இமைப்பு; blinking of the eyes. 2. கண்சைகை; significant wink. "விழிக்கொரு சிமிட்டும்" (குற்றா. குற.). 3. சிமிட்டு வித்தை பார்க்க; see *šimiṭṭu-vittai.* 4. கள்ள வேலை; scamped or dishonest work. 5. கைந் நொடி; snap of the finger.

ம. சிமிட்டு

[சிமிழ் → சிமிட்டு]

சிமிட்டு[4] *šimiṭṭu*, பெ. (n.) கவர்ச்சி; bewitchery (சா.அக.).

சிமிட்டுக்கண் *šimiṭṭu-k-kaṇ*, பெ. (n.) கொட்டுங்கண் (இ.வ.); blinking - eyes.

[சிமிட்டு + கண்]

சிமிட்டுக்கண்ணன் *šimiṭṭu-k-kaṇṇaṉ*, பெ. (n.) அடிக்கடி கண்சிமிட்டும் இயல்பினன்; a person who constantly blinks or has bad eyes (சா.அக.).

[சிமிட்டு + கண்ணன்]

சிமிட்டுக்கண்ணி *šimiṭṭu-k-kaṇṇi*, பெ. (n.) கண்சிமிட்டிப் பூடு; a sensitive plant.

மறுவ. கண்சிமிட்டி; தொட்டாற்சுருங்கி

[சிமிட்டு + கண்ணி]

சிமிட்டுக்கள்ளி *šimiṭṭu-k-kaḷḷi*, பெ. (n.) 1. தந்திரக்காரி (வின்.); artful woman. 2. கற்புக் குன்றியவள்; a woman of loose character, fallen woman.

சிமிட்டுப்பார்வை *šimiṭṭu-p-pārvai*, பெ. (n.) மருட்டு அல்லது மயக்குப்பார்வை; bewitching look (சா.அக.).

[சிமிட்டு + பார்வை]

சிமிட்டுப்பால் *šimiṭṭu-p-pāl*, பெ. (n.) சிமிட்டுக் கள்ளிப்பால்; spurge milk (சா. அக.).

[சிமிட்டு + பால்]

சிமிட்டுப்போக்கு *šimittu-p-pōkku*, பெ. (n.) கண்சைகை; sign by movements of the eye (சா.அக.).

[சிமிட்டு + போக்கு]

சிமிட்டுவித்தை *šimittu-vittai*, பெ. (n.) 1. மயக்கு வித்தை; witchcraft. 2. தந்திர வித்தை; magic.

மறுவ. கண்கட்டு வித்தை

த. விச்சை; ச = த, வித்தை; வ. வித்தை

[சிமிட்டு + வித்தை. வித் → வித்தை]

த. வித்தை → Skt. vidyā

சிமிட்டுவேலை *šimittu-vēlai*, பெ. (n.) 1. கள்ள வேலை; scamped, dishonest work. 2. வியக்க வைக்கும் வேலைப்பாடு (வின்.); curious piece of workmanship, dexterous workman ship.

[சிமிட்டு + வேலை]

சிமிண்டல் *šimindal*, பெ. (n.) கிள்ளல்; pinching (சா.அக.).

[சிமிண்டு → சிமிண்டல். 'அல்' தொ.பெ. ஈறு]

சிமிண்டு¹-தல் *šimindu-*, 5 செ.குன்றாவி. (v.t.) நிமிண்டுதல்; to tickle, pluck, pinch, prod. "கக்கத்திற் சிமிண்டுகிற கை நமனல்லவோ" (யாழ்.அக.).

[நிமிடு → நிமிட்டு → நிமிண்டு → சிமிண்டு-,]

சிமிண்டு²-தல் *šimindu-*, 5 செ.குன்றாவி. (v.t.) சிமிட்டு பார்க்க; see *šimittu-*.

சிமிண்டு³ *šimindu*, பெ. (n.) தடி (வின்.); stick, post.

சிமியம் *šimiyam*, பெ. (n.) ஒரு வகைக் கெட்டி மூங்கில்; a kind of hard bamboo (சேரநா.).

ம. சிமியம்

சிமிரி *šimiri*, பெ. (n.) அறுகம்புல் வகை; a kind of synodon grass (சா.அக.).

சிமிலம் *šimilam*, பெ. (n.) மலை (பிங்); hill, mountain.

Skt. saila

[சிமயம் → சிமிலம்]

சிமிலி¹ *šimili*, பெ. (n.) 1. உறி; rope - loop for suspending pots. "பல்புமரிச் சிமிலி நாற்றி" (மதுரைக். 483). 2. ஆண்மக்களின் குடுமி (திவா.); hair-tuft of men. 3. சிள்வீடு (பிங்.); cricket. 4. தோணி (யாழ்.அக.); boat. 5. கருந்தேனீ; a black bee (சேரநா.).

ம. சிமிலி; க. சிமண்டி, சிம்மண்டெ; தெ. சிமட, சிமிட, சிம்மட, சிம்மெட

[சிமி → சிமிலி]

சிமிலி² *šimili*, பெ. (n.) வெல்லங்கலந்த எள்ளின் பொடி (இ.வ.); sesamum powder mixed with jaggery.

[சிம்மிலி → சிமிலி]

சிமிலியுண்டை *šimili-y-undai*, பெ. (n.) சருக்கரை, தேங்காய் முதலியவை சேர்த்துச் செய்யும் எள்ளுருண்டைப் பண்ணியம் (இ.வ.); a sweetmeat made of fried sesamum seeds with scrapings of coconut kernal and sugar.

[சிமிலி³ + உண்டை]

உருண்டை → உண்டை

சிமிழ்¹-த்தல் *šimil-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கட்டுதல் (பிங்.); to tie, bind. "பாசப் பிணிப்பினாற் சிமிழ்ப் புண்டு" (பிரபோத. 5:5). 2. அகப்படுத்தல்; to entrap, catch. "வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று" (குறள். 274).

[இமிழ்² → சிமிழ்-,]

சிமிழ்²-த்தல் *šimil-*, 4 செ.குன்றாவி. (v.t.) கண்கொட்டுதல் (பிங்.); to wink, blink.

மறுவ. சிமிட்டுதல்

[இமை → சிமை → சிமிழ்-,]

சிமிழ்³ *šimil*, பெ. (n.) 1. செப்பு; small round jewel box, small caskat. "தட்டா னடித்த சிமிழ்போல்" (தனிப்பா. ii, 160, 399). 2. திமில் (இ.வ.); hump.

ம. சிமுழ்

[திமில் → திமிழ் → சிமிழ்]

சிமிழ் வகைகள்

1. மருப்பு(தந்த)ச்சிமிழ்
2. கொம்புச்சிமிழ்
3. மரச்சிமிழ்
4. செம்புச்சிமிழ்
5. வெள்ளிச்சிமிழ்
6. மாவிலிங்கச்சிமிழ்

சிமிழ்ப்பு *šimilppu,* பெ. (n.) *பிணைப்பு;* bondage, tie. *"காதலில் வரு சிமிழ்ப் பனைத்தும்" (கூர்மபு. இந்திர. 30).*

[இமிழ் → சிமிழ் → சிமிழ்ப்பு]

சிமிழிவட்டம் *šimili-vattam,* பெ. (n.) பனை ஓலையால் செய்யப்பெற்ற கவிப்புக்குடை; a hat umbrella made of palm leaves *(சேரநா.).*



சிமிள்வித்தை *šimil-vittai,* பெ. (n.) மைதடவிச் செய்யும் கண்கட்டுவித்தை; the art of fascinating the eyes of the spectators in the performance of jugglery with the aid of magic paint *(சா.அக.).*

மறுவ. மயக்குவித்தை

[சிமிள் + வித்தை]

சிமிளல் *šimilal,* பெ. (n.) கண்சிமிட்டல்; twinkling of the eye *(சா.அக.).*

சிமிளி[1] *šimili,* பெ. (n.) *சிமிலி[3] பார்க்க;* see *šimili[3].*

[சிமிளி → சிமிலி]

சிமிளி[2]-த்தல் *šimili-,* 4 செ.கு.வி. (v.i.) *சிமிழ்[2]-* (வின்.) பார்க்க; see *šimil.*

[சிமிழ் → சிமிள் → சிமிளி]

சிமிளிகம் *šimiligam,* பெ. (n.) பூளைச்செடி; malabar semul *(சா.அக.).*

சிமிளிப்பு *šimilippu,* பெ. (n.) கண்கொட்டுகை *(சங்.அக.);* winking of the eyes.

[சிமிழ் → சிமிள் → சிமிளி → சிமிளிப்பு]

சிமிறு *šimiru,* பெ. (n.) அறுகு; synodon grass *(சா.அக.).*

சிமுக்கம் *šimukkam,* பெ. (n.) *1.* கைமுட்டியால் குத்துதல், அடித்தல்; a beat (with the fist). *2.* அச்சம்; fear. *3.* வலிமை; strength. *4.* பேச்சு; speech. *5.* அசைவு; movement *(சேரநா.).*

சிமுக்கிடு-தல் *šimukkidu-,* 20 செ.கு.வி. (v.i.) *1.* எச்சரிக்கைசெய்தல் (வின்.); to give alarm, utter a warning, used only in the negative. *2.* அசைதல் *(சங்.அக.);* to move.

ம. சிமுக்கு.

[சிமுக்கு + இடு-,]

சிமுட்டி *šimutti,* பெ. (n.) கீழாநெல்லி (மலை); a small plant.

ம. சிமுட்டி

சிமுடிகம் *šimudigam,* பெ. (n.) பயற்றங்கொடி என்னும் தட்டைப்பயற்றுக்கொடி; creeper of chinese dolichos *(சா.அக.).*

சிமுதை *šimudai,* பெ. (n.) கொடிமுந்திரி; sweet berry *(சா.அக.).*

சிமை *šimai,* பெ. (n.) *1.* மலையுச்சி; summit of a mountain. "தோய்வருஞ் சிமைதொறும்" *(பரிபா. 7, 13)* *2.* குடுமி. (வின்.); hair-tuft.

[உம் → சும் → சும. சுமத்தல் = தலைமேற் பொறை கொள்ளுதல். சும → சுமை → சிமை (வே.க. 36)]

ME.,AF.,OF. summe, somme; L. summa, summur (highest); E. sum.

ME., OF. sohmet, sommettc, som (top); L. summum; E. summit.

சிமையம் *šimaiyam,* பெ. (n.) *1.* உச்சி; top "ஒளிர்கொள் சிமைய வுரவுமலர் வியன்கா" *(நெடுநல்.27).* *2.* மலையுச்சி; summit of a mountain. *3.* கொடுமுடி; peak. "சிமையத் திமையமும்" *(சிலப். 6, 28).* *4.* மலை; mountain, hill. "பனிவார் சிமையக் கானம் போகி" *(மதுரைக். 148)*

[சிமை → சிமையம்]

E: summit; Fr: sommet; L: summum; Sp: šima mountain; E: sum; Fr: sume; some; Fr: somme; L: summa.

சிய்யான் *šiyyāṉ*, பெ. (n.) தாய்வழிப் பாட்டன் (இ.வ.); maternal grandfather (சா.அக.).

[சேயோன் → சீயோன் → சீயன் → சிய்யான்]

சியகு *šiyagu*, பெ. (n.) ஏறுகொடி வகையுள் ஒன்று; a kind of climber (சா.அக.).

சியச்சினி *šiya-c-ciṉi*, பெ. (n.) வேலிப்பருத்தி (மலை) பார்க்க; see *vēli-p-parutti.*

Skt. srihastini

சியச்சினிகம் *šiya-c-ciṉigam*, பெ. (n.) உத்தாமணி; hedge cotton plant (சா.அக.).

சியண்டி *šiyaṇḍi*, பெ. (n.) சருக்கரை; sugar (சா.அக.).

சியத்தாவி *šiyattāvi*, பெ. (n.) பவள மல்லிகை; coral jasmine (சா.அக.).

சியத்துத்தம் *šiyattuttam*, பெ. (n.) கடுக்காய்; Indian gallnut (சா.அக.).

சியநாகம் *šiyanāgam*, பெ. (n.) துத்தச்செய்ந் நஞ்சு; a kind of prepared arsenic (சா.அக.).

சியநாயகம் *šiyanāyagam*, பெ. (n.) சியநாகம் பார்க்க; see *siyanāgam* (சா.அக.).

[சியநாகம் → சியநாயகம்]

சியபங்கம் *šiyabaṅgam*, பெ. (n.) வத்தேக்கு; sappan wood (சா.அக.).

சியம் *šiyam*, பெ. (n.) சிப்பியாகம் என்னும் மரம்; lodh tree (சா.அக.).

சியாமகுலமீன் *šiyāma-kula-mīṉ*, பெ. (n.) தெளிவற்ற நிறமுள்ள ஆற்றுமீன்; dusky-coloured river fish (சா.அக.).

சியாமரம் *šiyāmaram*, பெ. (n.) செழுமலர்க் கொன்றை; a species of cassia yielding luxuriant flowers (சா.அக.).

சியாமலதை *šiyāmaladai*, பெ. (n.) 1. வேலியிற் படரும் வள்ளிச்செடி; dark-blue creeper. 2. பால்வல்லி; milk creeper (சா.அக.).

சியேனம் *šiyēṉam*, பெ. (n.) 1. பருந்து; kite, fakon. 2. படைத்தகை (வியூக) வகை; a kind of kite-shapped military array (குறள், 767, அடிக் குறிப்பு).

சிர-த்தல் *šira-*, செ.குன்றாவி. (v.t.) 1. தேய்த்தல்; to crush, grind. 2. அழித்தல் (வின்.); to destroy.

சிரக்குழி *šira-k-kuḻi*, பெ. (n.) நத்தைச் சூரி; bristly button-weed (சா.அக.).

சிரக்கொழி *šira-k-koḻi*, பெ. (n.) வசம்பு; sweet flag (சா.அக.).

சிரக்கோரை *šira-k-kōrai*, பெ. (n.) கடலாத்தி; fragrant trumpet tree (சா.அக.).

சிரக்கோழி *šira-k-kōḻi*, பெ. (n.) 1. வசம்பு (மலை.); sweet flag. 2. குழலாதொண்டை (மலை.); common caper.

சிரகசிதம் *širakašidam*, பெ. (n.) பல்லிப் பூண்டு; lizard plant (சா.அக.).

சிரகம்[1] *širagam*, பெ. (n.) 1. மழைத்துளி; rain drops. 2. தூய்மைப்படுத்திய சருக்கரை; refined sugar (சா.அக.).

மறுவ. தூறல், சாரல்

சிரகம்[2] *širagam*, பெ. (n.) 1. திவலை (திவா.); water drop. 2. கரகம்; water-pot, ever. "அடர்பொற் சிரகத்தால் வாக்கு" (கலித். 51).

[கரகம் → சிரகம்]

சிரகரிதம் *širagaridam*, பெ. (n.) பல்லிப் பூண்டு; lizard plant (சா.அக.).

சிரங்காடு *širaṅ-kāḍu*, பெ. (n.) அடர்ந்த காடு (வின்.); thick forest, imperetrable jungle.

[சுரம் → சிரம் + காடு]

சிரகாதி *širagādi*, பெ. (n.) பறங்கிப்பட்டை; china root (சா.அக.).

சிரகாமணக்கு *širagāmaṇakku*, பெ. (n.) வெள்ளை ஆமணக்கு; croton oil plant (சா.அக.).

சிரகெந்தா *širakanda*, பெ. (n.) நீர்த்திப்பிலி; water long pepper (சா.அக.).

சிரங்கரடி *širaṅgaraḍi*, பெ. (n.) திருநாமப் பாலை; seven-leaved plant (சா.அக.).

சிரங்காய்[1] *śiraṅgāy,* பெ. (n.) தேங்காய்; coconut (சா.அக.).

சிரங்காய்[2] *śiraṅkāy,* பெ. (n.) சிறங்கை (வின்.) பார்க்க; see *śiraṅgai.*

சிரங்காற்றிச்சூரணம் *śiraṅgāṟṟi-c-cūraṇam,* பெ. (n.) அரிப்பு, சிரங்கு முதலானவற்றைப் போக்கும் கழிச்சல் சூரணம்; a medicinal powder curing itch and other. cutaneous affections through purgation (சா.அக.).

[சிரங்கு + ஆற்று + சூரணம்]

சிரங்கி *śiraṅgi,* பெ. (n.) வங்கமும், இலிங்கமும் சேர்ந்த கலப்புமருந்து; a compound of lead and vermilion as in. "கலிக்கின்ற வங்கத்தில் இலிங்கஞ்சேர்த்துக் கலக்கினால் சிரங்கி என்ற பேருமாச்சு" (உரோமரிஷி-முப்பு. சூத்.)(சா. அக.).

சிரங்கிரா *śiraṅgirā,* பெ. (n.) பேய்க்குமட்டி; bitter apple (சா.அக.).

சிரங்கிவித்தை *śiraṅgi-vittai,* பெ. (n.) சிரங்கியைக் கொண்டு அணியமாக்கும் பதங்கத்தைப் பொன்னாக்கத்திற்குப் பயன்படுத்தும் கலை; in alchemy, the art of employing the sublimated compound of lead and vermilion in the transmutation of metals (சா.அக.).

த. வித்தை → வ. வித்யா

[சிரங்கி + வித்தை]

சிரங்கு *śiraṅgu,* பெ. (n.) *1.* பரு; eruption, pimple. *2.* தோலில் அரிப்புக்காணும் ஒருவகை நோய்; itch, scat.

ம. சிரங்ஙு; க. கெரகு; து. கேரெ, இரணி; பட. செரங்கு

1. ஆனைச்சிரங்கு; scabby itch.
2. சொறிசிரங்கு; itch with scaly red patches
3. கழுட்டுச்சிரங்கு; itch with pustules.
4. தொடர்சிரங்கு; confluent itch.
5. பெருஞ்சிரங்கு; itch with a wide vesiculation.
6. பரங்கிச்சிரங்கு; syphilitic itch.

சிரங்குகிள்ளு-தல் *śiraṅgu-kiḷḷu-,* 5 செ. குன்றாவி. (v.t.) சினைப்புக்கிள்ளுதல்; pinching off the end of a pimple (சா.அக.).

[சிரங்கு + கிள்ளு-,]

சிரங்குகுத்து-தல் *śiraṅgu-kuttu-,* 5 செ.குன்றாவி. *1.* புண்ணைக் குத்திவிடுதல்; to scratch open pimples with nails for relief from itching. *2.* வீண் காலங்கழித்தல்; to waste one's time.

[சிரங்கு + குத்து-,]

சிரங்குச்சொறி *śiraṅgu-c-coṟi,* பெ. (n.) சொறி சிரங்கு; itch attended with scaly affections (சா.அக.).

[சிரங்கு + சொறி]

சிரங்குப்புண் *śiraṅgu-p-puṇ,* பெ. (n.) புண்ணான சிரங்கு; itch developed into a sore (சா.அக.).

[சிரங்கு + புண்]

சிரங்கை[1] *śiraṅgai,* பெ. (n.) *1.* உள்ளங்கையளவு; palmful. *2.* பால்வல்லி; milk creeper (சா.அக.).

சிரங்கை[2] *śiraṅgai,* பெ. (n.) சிறங்கை (வின்.) பார்க்க; see *śiṟaṅgai.*

[சிறு + அங்கை → சிறங்கை → சிரங்கை]

சிரசன் *śirasaṉ,* பெ. (n.) ஒருவகைச் செய்நஞ்சு; a mineral poison.

சிரசாலம் *śirasālam,* பெ. (n.) வெள்விழியில் சிவப்புத் தழும்புகள், அகலமாய்ப் பரவி வலையைப் போன்று காணப்படும் கண்ணோய்; red and extensive patches of hardened veins spreading over the white coat of the eye and looking like a net work (சா.அக.).

சிரசின்னு *śirasiṉṉu,* பெ. (n.) மலை வேம்பு; hill neem (சா.அக.).

சிரசுவாது *śirasu-vādu,* பெ. (n.) இலவங்க மரம்; clove tree (சா.அக.)

[சிரசு + வாது]

சிரசோன் *śirasōṉ,* பெ. (n.) சேர்பந்த வைப்பு நஞ்சு; kind of native arsenic (சா.அக.).

சிரஞ்சனம் *širañjaṉam,* பெ. (n.) அன்னச் சாற்றை இயல்பிற்கு மாறாக விரைவாகச் செரிமானஞ் செய்யும் பொருள்; that which hurries the chyle or other material for digestion before the usual time *(சா.அக.).*

சிரட்குச்சி *širaṭ-kucci,* பெ. (n.) நிலவேம்பு; ground neem *(சா.அக.).*

சிரட்சி *širaṭši,* பெ. (n.) இலந்தை; indian plum *(சா.அக.).*

சிரட்டகப்பை *širaṭṭa-kappai,* பெ. (n.) தேங்காய் ஓட்டாலான அகப்பை; coconut shell spoon.

ம. சிரட்டக்கயில

[சிரட்டை + அகப்பை]

சிரட்டை *širaṭṭai,* பெ. (n.) *1.* தேங்காய்ப் பருப்பினை மூடியிருக்கும் ஓட்டின் மேற்பாதி, கண்ணுள்ள பகுதி; the upper half of the coconut shell. *2.* தேங்காய்ப் பருப்பினை மூடியிருக்கும் கெட்டியான ஓடு (யாழ்.அக.); coconut shell. *3.* இரக்குங்கலம், திருவோடு; begging bowl, the hard shell of the coconut.

மறுவ. கொட்டங்கச்சி

ம. சிரட்ட; க. கர; பட. கரட்டலு; குட. செரடெ

[சுர் → சுர → சுரசுர → சுரசுரப்பு. சுர் → சர் → சரு → சருசரு → சருச்சரை. சர் → சரள் = சுரட்டுமண். சுர் → (சுரடு) → கரட்டை → சிரட்டை = சுரடான கொட்டாங்கச்சி (மு.தா.122)]

சிரட்டைக்கருப்பட்டி *širaṭṭai-k-karuppaṭṭi,* பெ. (n.) கருப்பட்டி வகை (நாஞ்.); a kind of jaggery *(செ.அக.).*

[சிரட்டை + கருப்பட்டி]

சிரட்டைக்கைச்சி *širattai-k-kaicci,* பெ. (n.) கொட்டாங்கச்சி (வின்.); half of a coconut shell.

மறுவ. சிரட்டைக் கையில்

ம. சிரட்டக்கயில், சிரட்டக்கய்யில் (சிரட்டகப்பை)

[சிரட்டை + கைச்சி]

சிரட்டைக்கையில் *širaṭṭai-k-kaiyil,* பெ. (n.) சிரட்டைக்கைச்சி (வின்.) பார்க்க; see *širaṭṭai-k-kaicci.*

ம. சிரட்டக்கய்யில்

[சிரட்டைக் கைச்சி → சிரட்டைக் கையில்]

சிரட்டைச்சங்கு *širaṭṭai-c-caṅku,* பெ. (n.) இரவலர் பயன்படுத்தும் பெரிய அளவிலான சங்கு; a big size of conch which is used by beggars.

மறுவ. திருவோட்டுச் சங்கு

[சிரட்டை + சங்கு]

சிரட்டை பார்க்க

சிரடகம் *širaḍagam,* பெ. (n.) பூவா மாமரம்; mango tree not bearing flowers *(சா.அக.).*

சிரணி *širaṇi,* பெ. (n.) ஓமம் (மூ.அ.); bishop's weed.

சிரத்தக்காளகம் *široatta-k-kāḷagam,* பெ. (n.) மருக்காரை (மலை); emetic -nut.

சிரத்தகாழகம் *širatta-kāḻagam,* பெ. (n.) சிரத்தக்காளகம் (வின்.) பார்க்க; see *siratta-k-kāḷagam.*

சிரத்தியார் *širattiyār,* பெ. (n.) சிறியதாயார்; father's younger brother's wife; mother's younger sister.

[சின்னதாயார் → சிறுதாயார் → சிறத்தயார் → சிரத்தியார் (கொ.வ.)]

சிரத்து-தல் *širattu-,* 5 செ.கு.வி. (v.i & v.t.) சிரற்று- (வின்.) பார்க்க; see *široaṟṟu-.*

சிரத்தை *širattai,* பெ. (n.) காழகம்; மருக்காரை; a thorny shrub *(சா.அக.).*

சிரந்துகம் *širandugam,* பெ. (n.) நொச்சி மரம்; five leaved chaste tree *(சா.அக.).*

சிரந்தை *širandai,* பெ. (n.) உடுக்கை; small x-shaped drum. "நுண்ணூற் சிரந்தை யிரட்டும் விரலன்" *(தொல். பொருள். 81, உரை).*

[சிரற்று → சிரற்றை → சிரத்தை → சிரந்தை]

சிரநோய் *śira-nōy,* பெ. (n.) *தலைநோய்;* head ache *(சா.அக.).*

[சிரம் + நோய்]

சிரப்பலம் *śirappalam,* பெ. (n.) தேங்காய்; coconut *(சா.அக.).*

[சிரம் + பலம்]

சிரப்புள் *śirappuḷ,* பெ. (n.) *சிச்சிலிக் குருவி;* a kind of king fisher *(சா.அக.).*

[சிரல் + புல் – சிரற்புள் → சிரப்புள்]

சிரபுரம் *śira-puram,* பெ. (n.) *சீர்காழி;* sīkāḻi. "சித்தர் வந்து பணியுஞ் செல்வச் சிரபுர மேயவனே" *(தேவா. 99, 10).*

[சிரம் + புரம்]

சிரம்[1] *śiram,* பெ. (n.) நெடுங்காலம் (சூடா.); a long time.

சிரம்[2] *śiram,* பெ. (n.) *1. ஆமணக்கு (சங்.அக.);* castor plant. *2. கமுகு (சங்.அக.);* areca-palm. *3. ஊதையடக்கி (வாதமடக்கி);* wind killer. *4. கூகை நீறு (மூ.அ.);* arrow root flour. *5. சீரகம்;* cumin seed.

சிரமச்சாலை *śirama-c-cālai,* பெ. (n.) *சிலம்பம் முதலிய படைக்கலப் பயிற்சி செய்யுமிடம்;* place for military exercise and for practice of arms. "காமவேள் சிரமச்சாலையை யொக்கும் *(பரிபா. 18, 29, உரை).*

[சிலம்பம் → சிரம்பம் → சிரமம் + சாலை]

சிரமஞ்செய்-தல் *śiramañ-cey-,* 1 செ.குன்றாவி. (v.i.) *சிலம்பம் முதலிய பழகுதல் (சூடா.);* to practise arms, fencing, etc.

[சிலம்பம் → சிரம்பம் → சிரமம் + செய்-,]

சிரமடக்கி *śiramaḍakki,* பெ. (n.) *1. ஊதை யடக்கி (வாதமடக்கி) என்னும் மூலிகை;* wind-killer. *2. வளிநோயைக் கண்டிக்கும் மருந்துகள்;* drugs expelling wind *(சா.அக.).*

[சிரம் + அடக்கி]

சிரமப்பணிக்கன் *śirama-p-paṇikkaṉ,* பெ. (n.) *சிலம்பக்காரன்;* fencing-master *(செ.அக.).*

[சிரமம் + பணிக்கன்]

சிரயசி *śirayasi,* பெ. (n.) *ஆனைத் திப்பிலி;* elephant long pepper *(சா.அக.).*

சிரல்[1] *śiral,* பெ. (n.) *சிச்சிலி;* king fisher. "புலவுக் கயலெடுத்த பொன்வாய் மணிச்சிரல்" *(சிறுபாண். 181).*

சிரல்[2] *śiral,* பெ. (n.) *முடிவிடம் (யாழ்.அக.);* top, end.

சிரவஞ்சம் *śiravañjam,* பெ. (n.) *எலிப்பயறு;* rat pulse *(சா.அக.).*

சிரவணி *śiravaṇi,* பெ. (n.) *1. நீர்த்தாரை வழியாய்ச் சிறுநீர்ப்பைக்குப் போக விடும் குழாய்க் கருவி வகையுளொன்று;* a kind of tubular instrument to be introduced through the urethra into the bladder. *2. கொட்டைக் கரந்தை;* Indian globe thistle *(சா.அக.).*

சிரவணியிடு-தல் *śiravaṇi-y-iḍu-,* 8 செ.கு.வி. (v.i.) *சிறுநீர்த் துளை வழியாகக் குழாயூசியைச் செலுத்துதல்;* to pass catheter as in cases of obstruction of urine *(சா.அக.).*

சிரவம் *śiravam,* பெ. (n.) *கவுதாரி (பிங்.);* partridge.

சிரவல் *śiraval,* பெ. (n.) *1. கவுதாரி;* partridge. *2. அதிமதுரம்;* honey creeper *(சா.அக.).*

சிரற்புள் *śiraṟpuḷ,* பெ. (n.) *பொன்வாய்ப்புள்;* a kind of king fisher *(சா.அக.).*

சிரற்று-தல்[1] *śiraṟṟu-,* 5 செ.கு.வி. (v.i) *உரக்க வொலித்தல்;* to shout, call loudly. "சிரற்றின பார்ப்பினின்.... வெய்துயிர்த் தரற்றின" *(கம்பரா. கும்பக. 268).*

சிரற்று-தல்[2] *śiraṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *சினத்தல்;* to be angry with. "சிறுபாகராகச் சிரற்றாது" *(கலித். 97.29).*

தெ. சிரசிர

சிரறு-தல் *śiraṟu-,* 5 செ.கு.வி. (v.i.) *1. மாறு படுதல்;* to sulk, disagree. "சிரறுபு சீறச் சிவந்த நின் மார்பு" *(கலித். 88, 13).* *2. சிதறுதல்;* to scatter. "சிரறு சிலவூறிய நீர்வாய்ப் பத்தல்" *(பதிற்றுப். 22, உரை).*

சிராகம் *širākam,* பெ. (n.) பல தெருக்கள் கூடுமிடம் (பிங்.); crossings, junction of many roads.

[சிறகம் → சிரகம் → சிராகம்]

சிராநெய் *širāney,* பெ. (n.) சுறாமீனின் கொழுப்பு; shark's fat (சா.அக.).

சிராப்பள்ளி *širā-p-paḷḷi,* பெ. (n.) திருச்சிராப் பள்ளி; Tiruchirappalli. "சிராப்பள்ளிக் குன்றுடை யானை" (தேவா. 367,1).

சிராபத்திரம் *širāpattiram,* பெ. (n.) விளாமரம்; wood-apple tree (சா.அக.).

சிராய்[1]-தல் *širāy-,* 4 செ.கு.வி. (v.i) உராய்ந்து ஊறுபடுதல்; to get scratched, as in the skin.

சிராய்[2] *širāy,* பெ. (n.) 1. மரச்சக்கை; splint, splinter, shivered chip of palmyra or other timber. 2. பனஞ்சிறாம்பு; fibres of palmyra timber. 3. பருவின் முளை; hard and indurated part in a bubo or cancer.

சிராய்ப்பாக்கு[1] *širāy-p-pākku,* பெ. (n.) முற்றாத பாக்கு (வின்.); unripe areca -nut.

சிராய்ப்பாக்கு[2] *širāy-p-pākku,* பெ. (n.) சீவிய பாக்கு; parings of areca nut for use with betel (சா.அக.).

[சிராய் + பாக்கு]

சிராய்விழு-தல் *širāy-viḻu-,* 1 செ.கு.வி. (v.i.) நார்ப் பழமாதல் (வின்.); to be fibrous, as blighted mangoes and other fruits.

[சிராய்[2] + விழு-,]

சிராவகயானம் *širāvaka-yāṉam,* பெ. (n.) புத்தசமய வகை; a school of Buddhism (நீலகேசி, 342, உரை).

சிராவசம் *širāvašam,* பெ. (n.) நான்கு திங்களில் அழியும் கரு (சி.சி. 2, 93, மறைஞா. பக். 1347); foetus which is aborted in four months.

சிரி[1]-த்தல் *širi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஒலியெழுப்பியோ முகக்குறிப்பின் மூலமோ பல் தெரிய உதடுகளை விரிப்பதன் மூலமோ மகிழ்ச்சி, ஏளனம் முதலியவற்றை வெளிப் படுத்துதல்; to laugh. "சிரித்தது செங்கட் சீயம்" (கம்பரா. இரணியன். 127). 2. கனைத்தல்; to neigh, as a horse. "வாசி சிரித்திட" (கம்பரா. சம்புமா. 8). 3. மலர்தல்; to blossom. "சிரித்த பங்கய மொத்த செங்கண்" (கம்பரா. கைகேசி. 50).

ம. சிரிக்குக; க. சிரிசு; தெ. சிரு, செரு; துட. சிர்ய (மகிழ்ச்சி)

[சில் → சிர் → சிரி]

சிரி[2]-த்தல் *širi-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஏளனம் செய்தல் (பரிகசித்தல்); to ridicule. "சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப" (திருவாச. 4:68).

[சில் → சிர் → சிரி]

சிரி[3] *širi,* பெ. (n.) மகிழ்ச்சி, ஏளனம் முதலியவற்றை வெளிப்படுத்தும் மெய்ப்பாடு, நகைப்பு (சேரநா.); laughter, smile.

ம. சிரி

[சிர்' → சிரி]

சிரி[4] *širi,* பெ. (n.) 1. அம்பு; arrow. 2. வாள்; sword. 3. கொலை செய்வோன்; murderer. 4. வெட்டுக்கிளி; locust.

[சில் → சிறு → சிறாய் = மரச்சில்லு. சில் → சிர் → சிரி = சில்லு]

சிரி[5] *širi,* பெ. (n.) 1. புளியமரம்; tamarind tree. 2. கருக்குவாமரம்; deccany olive-wood (சா.அக.).

சிரிக்கி *širikki,* பெ. (n.) காக்கட்டான் கொடி; smaller morning glory (சா.அக.).

சிரிகாலக்கொல்லி *širikāla-k-kolli,* பெ. (n.) சூரையிலந்தை; oblique - leaved jujube (சா.அக.).

மறுவ. சூரைச்செடி

சிரிகாலகண்டம் *širikāla-kaṇḍam,* பெ. (n.) குடியோட்டிப் பூடு; yellow thistle (சா.அக.).

சிரிகிவிதை *širigi-vidai,* பெ. (n.) காக்கட்டான் விதை; kaladana seed (சா.அக.).

[சிரிக்கி → சிரிகி + விதை]

சிரிங்கசியம் *širiṅgašiyam,* பெ. (n.) இசங்கு மரம்; small - leaved glory tree (சா.அக.).

சிரிங்காடகம் *širiṅgaḍagam,* பெ. (n.) 1. முக்கோண வடிவம்; a triangular or pyramidal figure (சா.அக.). 2. ஒருவகைப்பூடு; a plant.

சிரிங்கிநஞ்சு *śiringi-nañju,* பெ. (n.) வசனாவி என்னும் நச்சுச் செடி; aconite (சா.அக.).

மறுவ. பிச்சநாவி

இதை ஆவின் கொம்பில் கட்டி வைக்கப் பால் செந்நிறமாகும்.

சிரிஞ்சிப்பூ *śirinji-p-pu,* பெ. (n.) வண்ண மேற்றப் பயன்படுத்தப்படும் செந்நிறப்பூ; a plant with red flowers used by dyers (சா.அக.).

சிரிட்டம் *śiriṭṭam,* பெ. (n.) விளாம்பட்டை (யாழ்.அக.); the bark of the wood-apple tree.

சிரிடம் *śiriḍam,* பெ. (n.) 1. வாகைமரம்; common sirissa. 2. குன்றி; Indian liquorice (சா.அக.).

சிரித்தபிழைப்பு *śiritta-piḷaippu,* பெ. (n.) ஏளனம் செய்யத்தக்க வாழ்க்கை (உ.வ.); contemptible, ridiculous life.

[சிரித்த + பிழைப்பு]

சிரிப்பாணி *śirippāṇi,* பெ. (n.) 1. அடங்காச் சிரிப்பு; excessive or irrepressible laughter. 2. பகடி; jest, fun. 3. ஏளனம்; ridicule.

[சிரி → சிரிப்பாணி]

சிரிப்பாணிப்படு-தல் *śirippāṇi-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. சிரிப்புக்கிடமாதல்; to become a laughing stock. 2. சிறுமைப்படுதல்; to suffer shame, degradation.

[சிரிப்பாணி + படு-,]

சிரிப்பாய்ச்சிரி-த்தல் *śirippāy-c-ciri-,* 4 செ.குன்றாவி. (v.t.) இகழ்தல்; to laugh at.

[சிரிப்பாய் + சிரி-,]

சிரிப்பாய்ச்சிரி-த்தல் *śirippāy-c-ciri-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மலிந்து கிடத்தல்; to be abundant and cheap, to be so common as to be despised. 2. நிலை கெட்டுத்திரிதல்; to lead a despicable life. 'அவன் சிரிப்பாய்ச் சிரிக்கிறான்' (தஞ்சை.).

[சிரிப்பு → சிரிப்பாய் + சிரி-,]

சிரிப்பு *śirippu,* பெ. (n.) 1. நகைப்பு; laughter. "கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்" (தேவா. 11, 4). 2. ஏளனம்; ridicule. "அன்பர்க்கு மல்லாதவர்க்குஞ் சிரிப்பல்லவோ" (தனிப்பா. i, 198: 12). 3. குதிரைக் கனைப்பு; neigh of horse. "தேரதிர்ப்பினும் புரவியஞ்சிரிப்பினும்" (உப. தேசகா. சிவபுண். 74). 4. பகடி (வின்.); jest, fun.

[சிரி → சிரிப்பு]

சிரிபரணி *śiriparaṇi,* பெ. (n.) 1. பேராமல்லி; long tubed Arabian jasmine. 2. குமிழ்; coom teak (சா.அக.).

சிரிபலம் *śiripalam,* பெ. (n.) 1. நெல்லிக்காய்; indian gooseberry. 2. வில்வம்; bael fruit tree (சா.அக.).

சிரிபாசம் *śiripāśam,* பெ. (n.) பிசின் வகையுளொன்று; resin of pine tree (சா.அக.).

சிரிபில்லகம் *śiripillagam,* பெ. (n.) ஆவில் புங்கு; an unknown plant (சா.அக.).

சிரியக்கிபழஞ்சலாகையச்சு *śiriyakki-palañcalakai-y-accu,* பெ. (n.) பழைய நாணய வகை; an ancient coin (M.E.R. 117 of 1915).

மறுவ. சிரியக்கியச்சு

சிரியக்கியச்சு *śiriyakki-y-accu,* பெ. (n.) சிரியக்கிபழஞ்சலாகையச்சு பார்க்க; see *siriyakki-palañcalākai-y-accu.*

மறுவ. சிரியக்கியச்சு

சிரியத்தி *śiriyatti,* பெ. (n.) உத்தாமணி; hedge cotton (சா.அக.).

சிரியத்தினி *śiriyattiṉi,* பெ. (n.) சிரியத்தி பார்க்க; see *śiriyatti* (சா.அக.).

[சிரியத்தி → சிரியத்தினி]

சிரியம் *śiriyam,* பெ. (n.) வெண்டாமரை; white lotus.

சிரீடம் *śirīḍam,* பெ. (n.) 1. வாகை (பிங்.); sirissa. 2. குன்றி (மலை); crab's eye.

சிரு *śiru,* பெ. (n.) தோட்பொருத்து (யாழ்.அக.); shoulder-joint (சா.அக.).

சிருக்கி *śirukki,* பெ. (n.) கற்றாழை; aloe (சா.அக.).

சிருக்கு *śirukku,* பெ. (n.) 1. வேள்வியிற் பயன்படுத்தும் நெய்த்துடுப்பு; wooden ladle

for pouring ghee on sacrifical fire. "கிஞ்சுகபத்திரமே கிட்டுஞ் சிருக்காக" (தேவை. 175). 2. எண்ணெய் காய்ச்சுவதற்குப் பயன் படுத்தும் துடுப்பு; wooden ladle used in the preparation of medicated oil (சா.அக.).

சிருக்குமுத்திரை *śirukku-muttirai,* பெ. (n.) பூசைக்காலத்துக் காட்டுங் கை முத்திரை வகை (சைவாநு. வி. 20); a hand-pose, in worship.

சிருகண்ணி *śiruganni,* பெ. (n.) அழுகண்ணி மரம்; Indian weeping tree (சா.அக.).

சிருகம் *śirugam,* பெ. (n.) 1. அம்பு (யாழ்.அக.); arrow. 2. காற்று; wind. 3. தாமரை; lotus.

சிருகாரிடம் *śirugāridam,* பெ. (n.) சாதிக்காய்; nutmeg (சா.அக.).

சிருகாலன் *śirugālan,* பெ. (n.) நரி; fox, jackal (சா.அக.).

சிருகாலி *śirukāli,* பெ. (n.) 1. சந்தனம்; sandal. 2. காவட்டம் புல்; citronella (சா.அக.).

சிருகுலி *śirukuli,* பெ. (n.) புளியாரை; sour-sorral (சா.அக.).

சிருங்கி[1] *śirungi,* பெ. (n.) நச்சுத்தன்மையைப் போக்கும் மருந்து; an antidote for poison. "தீற்றுதுஞ் சிருங்கி யென்பார்" (சீவக. 1277).

சிருங்கி[2] *śirungi,* பெ. (n.) பொன் (யாழ்.அக.); gold.

சிருங்கை *śirungai,* பெ. (n.) 1. கண்விழியின் முற்பகுதியிலுள்ள மெல்லிய கருந்திரை; the horny transparant membrane in the fore-part of the eye. 2. உள்ளங்கையளவு; handful (சா.அக.).

மறுவ. ஆணிச் சவ்வு; கருவிழி

சிருங்கைக்கத்தி *śirungai-k-katti,* பெ. (n.) கண்விழியின் மேற்றோலை அறுக்கப் பயன்படுத்தப்படும் சிறிய கத்தி; knife used for operating the cornea of the eye (சா.அக.).

[சிருங்கை + கத்தி]

சிருதி[3] *śirudi,* பெ. (n.) பிறப்பு; birth (சா.அக.).

சிருந்துரமம் *śirunduramam,* பெ. (n.) பொட்டிலுப்பு; nitre (சா.அக.).

சிருபாடிகை *śirupādigai,* பெ. (n.) பறவை மூக்கு; bird's beak (சா.அக.).

சிருபரணி[1] *śirupārani,* பெ. (n.) 1. பெருங்குமிழ்; coomteak. 2. முன்னை மரம்; Indian head ache-tree (சா.அக.).

சிருபாணி[2] *śirupāni,* பெ. (n.) மருள்; hyacinth aloe (சா.அக.).

சிரும்பவாதம் *śirumba-vādam,* பெ. (n.) முழங்காலிலுண்டாகும் வலி நோய்; rheumatism affecting the knee cap (சா.அக.).

சிரும்பிதம் *śirumbidam,* பெ. (n.) கொக்கோக முனியால், தமிழிற் கூறப்பட்ட கலவிமுறைகளுளொன்று; it is an attitude in tight of it union as described in the Tamil erotic science of Kokkoga Muni (சா.அக.).

சிரை[1]**-த்தல்** *śirai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. மயிர் கழித்தல்; to shave. "காம்பறத் தலை சிரைத்து" (திவ். திருமாலை. 38). 2. செதுக்குதல்; to cut with a sickle. "புற்சிரைத்தல் செய்ய மாட்டீர்களோ" (ஈடு 3,9, 6).

ம. சிரய்க்குக; க. கெரெ, கிரி; தெ. கொருகு; து. கெரெபுனி; பட. கெரெ; கொலா. க்வர்க்; மா. க்வெரெ

AS: sceren; OE: schere, shere; E: shear : L.G.: scheren; Du: scheeren; Ice: shera; Dan: shere; Yer: scheren.

[சில் → சிறு → சிறாய். சில் → சிலும்பு → சிலாம்பு → சினாம்பு → சிறாம்பு = மரத்திலும் மீனிலுமுள்ள நுண்பட்டை. சில் → சிர் → சிராய். சிராய்த்தல் = உராய்ந்து, ஊறுபடுதல். சில் → சிர் → சிரை. சிரைத்தல் மேலுள்ளதை நீக்குதல், செதுக்குதல், மழித்தல்]

சிரை[2] *śirai,* பெ. (n.) நரம்பு (திவா.); nerve, vein.

Skt. sira

சிரை[3] *śirai,* பெ. (n.) குரங்கு (அக.நி); monkey.

Skt. śira

சிரை[4] *śirai,* பெ. (n.) தாதுக்களினின்று கழிவுப் பொருட்களை வெளியேற்றும் அரத்தக் குழாய்கள்; any tube or vessal through which

waste matters or secretions are discharged-duct (சா.அக.).

சிரைத்தொழில் *širai-t-toḻil,* பெ. (n.) 1. சிரைக்கும் வேலை (யாழ்ப்.); shaving. 2. வீண்வேலை (கொ.வ.); unprofitable task.

[சிரை + தொழில்]

சிரைப்பாசி *širai-pāši,* பெ. (n.) கடுக்காய்; gall-nut (சா.அக.).

சிரைப்புண் *širai-p-puṇ,* பெ. (n.) முடிதிருத்துவோன் சிரைக்குங்காலேற்பட்ட புண்; barber's itch (சா.அக.).

[சிரை + புண்]

சிரையன் *širaiyaṉ,* பெ. (n.) மயிர் சிரைப்போன் (பிங்); barber.

ம. சிரயன்

[சிரை → சிரையன்]

சிரைவேலை *širai-vēlai,* பெ. (n.) 1. சிரைதொழில் (யாழ்ப்.); shaving. 2. அரை குறைப்பணி; infinished work.

[சிரை + வேலை]

சில்[1] *šil,* பெ.எ. (adj.) 1. சில; some, few. 2. சிறியதான; small, slight. "விராவு சில்லுணா மிசைந்தனர்" (கந்தபு. வள். 209). 3. நுண்மையான (திருக்கோ. 196, உரை); fine.

[சல் → சில் = சிற்றளவு]

சில்[2] *šil,* பெ. (n.) 1. சிறுதுண்டு; small piece, as of broken glass. கண்ணாடிச்சில், தேங்காய்ச்சில். 2. ஒட்டுச்சீலை; small patch of cloth. 3. வட்டமானது; anything flat and round, as eye-glass, wheel. 4. உருளை; wheel, as of a car. 5. தலையணி வகை (இ.வ.); a kind of hair-ornament. 6. கடற்சில் (யாழ்ப்.); flat round stone or seed of a sea-plant.

[சல் → சில் = சிறியது, துண்டு]

சில்[3] *šil,* பெ. (n.) 1. ஆரவாரம் (வின்.), ஒலி; sound. 2. இரைச்சல் (வின்.); noise.

சில்[4] *šil,* பெ. (n.) 1. மூடி (இ.வ.); cover. 2. மூக்குக் கண்ணாடி (யாழ்.அக.); spectacles.

சில்[5] *šil,* பெ. (n.) குளிர்ச்சி; chillness.

சில்காற்று *šil-kāṟṟu,* பெ. (n.) தென்றல்; gentle South wind. "சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்" (மதுரைக். 358).

[சில் + காற்று]

சில்சொல் *šil-šol,* பெ. (n.) மென்மொழி; soft or gentle speech. "சில்சொற் பெருந் தோண் மகளிரும்" (திரிகடு. 47).

[சில → சில். சில் + சொல்]

சில்பதவுணவு *šilpada-v-uṇavu,* பெ. (n.) பக்குவப்படுத்துவதற்குச் சிறிதளவாகக் கூட்டப்பெறும் உணவுப்பொருளாகிய உப்பு; salt, as an article used in small quantities for seasoning. "சில்பத வுணவின் கொள்ளை சாற்றி" (பெரும்பாண். 64).

[சில் + பதம் + உணவு]

சில்பி *šilpi,* பெ. (n.) கடல்மீன் வகை; a kind of sea-fish.

சில்மூக்கு *šil-mūkku,* பெ. (n.) 1. மூக்கிலிருந்து அரத்தமொழுகும்நோய்; epistaxis. 2. அரத்தம் வடியும் மூக்கு; bleeding nose.

[சில்லி → சில் + மூக்கு]

சில்லகி *šillagi,* பெ. (n.) சில்லம் (சூடா.) பார்க்க; see *šillam.*

[சில்லம் → சில்லகி]

சில்லங்கெடு-தல் *šillaṅ-keḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. சிதறுண்ணுதல் (யாழ்.அக.); to be scattered, 2. உடைதல்; to be broken.

[சில்லம் + கெடு-,]

சில்லட்டைக்கடி *šillaṭṭai-k-kaḍi,* பெ. (n.) நச்சுத் தன்மைமிக்க சிறிய அட்டைப்பூச்சியின் கடிவாய்; a poisonous leech-bite (சா.அக.).

[சில்லட்டை + கடி]

சில்லந்தட்டிப்போ-தல் *šillan-daṭṭi-p-pō,* செ.கு.வி. (v.i.) வறுமையுட்படுதல் (யாழ்.அக.); to become impoverished.

[சில்லம்[2] + தட்டிப்போ-,]

சில்லந்தராயம் *šillanda-rāyam,* பெ. (n.) சில்வரி (தெ.க.தொ.5,501) பார்க்க; see *šilvari.*

[சில் + அந்தராயம்]

சில்லபொல்லம் *šilla-pollam,* பெ. (n.) சிறுதுண்டு; சிறுபகுதி; நுண்மையான சில்; fragments, small pieces.

[சில்லம் + பொல்லம்]

சில்லம்[1] *šillam,* பெ. (n.) 1. தேற்றாமரம் (சூடா.); clearing nut tree. 2. எட்டி (மலை.); nux vomica tree. 3. தில்லைமரம்; tiger's milk spurge.

க. சில்ல

சில்லம்[2] *šillam,* பெ. (n.) 1. சிறுதுண்டு; shivers, fragments, small pieces. 2. பொருள் முட்டுப் பாடு (வின்.); extreme or pressing necessity, urgent straits.

க., தெ., சில்ல.

[சிதிலம் → சில்லம்]

சில்லம்[3] *šillam,* பெ. (n.) தொட்டாற் சுருங்கி; sensitivity plant, touch-me-not (சா.அக.).

சில்லம்பாய் *šillam-bāy,* பெ. (n.) கிழிந்தபாய் (யாழ்ப்.அக.); worn-out mat.

[சில்லம் + பாய்]

சில்லர்[1] *šillar,* பெ. (n.) கிறீச்சென்று ஒலிக்கின்ற பூச்சி வகை (இ.வ.); a kind of screeching insect.

[சில் = ஒலிக்குறிப்பு; சில் → சில்லர்]

சில்லர்[2] *šillar,* பெ. (n.). வேடர் (சது.); hunters.

மறுவ. வேட்டுவர்.

சில்லரங்கம் *šillarangam,* பெ. (n.) முந்திரிப் பழம்; cashew fruit (சா.அக.).

சில்லரி *šillari,* பெ. (n.) சிலம்பின் பருக்கைக் கற்கள் (யாழ்.அக.); pebble inserted in tinkling anklets.

[சில் + அரி]

சில்லறை[1] *šillarai,* பெ. (n.) 1. சிறுசிறு பகுதிகளாகக் கிடப்பவை; things scattered here and there in small quantities or amounts, sundries. 2. மீதி எஞ்சியுள்ளவற்றின் தொகுதி; remainder. 'நான் கொடுக்க வேண்டியதை எடுத்துக் கொண்டு சில்லறையைக் கொடு'. 3. தேவைக்கு மேற்பட்ட கையிருப்பு; surplus. 'சில்லறை ஆசை கல்லறை வரை விடாது' (உ.வ.). 4. சில்வானம்; fractional quantities over and above a round sum, odd. 'பத்தே சில்லறை உரூபாய்' (உ.வ.). 5. கீழ்வாய் எண்; an amount less than one, fraction. 6. சிறுபாகம்; a small fraction. 7. சிறு தொகையாக மாற்றும் பணம்; change, as of a rupee. நூறு உரூபாய்க்குச் சில்லறை கொடு. 8. காசு (நாணயம்); change as of coin. என்னிடம் பணமில்லை சில்லறைதான் இருக்கிறது.

ம. சில்லற; க. சில்லற, சில்றெ, சில்லறெ; தெ. சில்லற; து., பட. சில்லறெ; கோத. சில்ர்; துட. சிலொர்

[சில் + அறு - சில்லறு → சில்லறை]

சில்லறை[2] *šillarai,* பெ. (n.) 1. மிகவும் சிறுமையானது; trifling, insignificant matter. 2. மகளிர் காதணிவகை; காதுச் சில்லறை (இ.வ.); woman's small ear-ornament. 3. தொந்தரவான சிறு செயல்; petty, annoying business. 4. திருடர் தொந்தரவு; trouble from thieves. "கள்ளர் சில்லறை" (வின்.) 5. கொடு நோயால் ஏற்படும் இறப்பு (வின்.); death from malignant diseases.

[சில் + அறு - சில்லறு → சில்லறை]

சில்லறைக்கடை *šillarai-k-kadai,* பெ. (n.) 1. சிறிதளவாக வாணிகஞ் செய்யுங் கடை; shop dealing in miscellaneous things on a small scale, retail shop. 2. பணமாற்றுக் கடை (இ.வ.); exchange stall.

ம. சில்லறக்கட

[சில்லறை + கடை]

சில்லறைக்கணக்கு *šillarai-k-kaṇakku,* பெ. (n.) 1. விளக்கம் அறியப்படாத சிறு தொகைகள் (வின்.); small unaccounted sums. 2. கணக்குப்பொத்தகத்தில் அங்குமிங்குமாகப் பதிவு செய்யப்பட்ட, சில்லறைக்குறிப்புகள்; sundry items promiscuously arranged in account.

ம. சில்லறக்குற்றி

[சில்லறை + கணக்கு]

சில்லறைக்காசு *šillarai-k-kāšu,* பெ. (n.) 1. மாழையில் வார்க்கப்பட்ட காசு; metal coins. 2. சில்லறையாயுள்ள தொகை; small money change. 3. சிறு கையூட்டு (இ.வ.); petty bribe.

[சில்லறை + காசு]

க. சில்லற நாண்ய; து. சில்லரெகாசு

சில்லறைக்குடி *šillarai-k-kudi,* பெ. (n.) சிறிதாகப் பயிரிட்டு வாழுங்குடிகள் (R.T.); ryots who hold small holdings.

[சில்லறை + குடி]

சில்லறைகூடுதல் *šillarai-kūdudal,* பெ. (n.) 1. பலவகைச் சிறு வருமானங்கள்; sundry items. 2. தஞ்சாவூர் மாவட்டத்தில் முகம்மதிய அரசு சுமத்திய தீர்வை மிகுதி; an extra tax imposed by the Muhammadan Government in Tañjāvūr district.

[சில்லறை + கூடுதல்]

சில்லறைச்சாமான் *šillarai-c-cāmān,* பெ. (n.) உதிரிப்பொருள், மளிகைப் பொருள்; sundry articles of commerce, as grain etc., excluding cloth.

க. சில்லறெ சாமானு, து. சில்லரெ சாமான்

[சில்லறை + சாமான்]

சில்லறைச்செலவு *šillarai-c-celavu,* பெ. (n.) சிறிய தொகைக்கான செலவு; the non descriot petty expenses.

ம. சில்லறச் செலவு; க. சில்லறகர்சு; து. சில்லரெகர்சு

[சில்லறை + செலவு]

சில்லறைச்செலவினம் *šillarai-c-celavinam,* பெ. (n.) சில்லறைச்செலவு பார்க்க; see *šillarai-c-celavu.*

[சில்லறை + செலவினம். செலவு → செலவினம்]

சில்லறைத்தட்டுப்பாடு *šillarai-t-tattu-p-pādu,* பெ. (n.) சில்லறைக் குறைபாடு; lack of coins.

[சில்லறை + தட்டுப்பாடு]

சில்லறைதீர்-த்தல் *šillarai-tīr-,* 4 செ.குன்றாவி. (v.i.). நிலுவை, கடன் முதலியவற்றை முடித்தல் (இ.வ.); to settle outstandings or debts.

[சில்லறை + தீர்-,]

சில்லறைப்பணம் *šillarai-p-panam,* பெ. (n.). குறிப்பிட்ட முழு எண்ணுக்குக் குறைவான பணம்; small money, change.

க. சில்லறரொக்க; பட. சில்லரெகண.

[சில்லறை + பணம். படம் → பணம்]

சில்லறைப்பணி *šillarai-p-pani,* பெ. (n.) சிறுசிறு பணிகள்; small works.

க. சில்லறெகெலச; து. சில்லரெ கெலச; பட. சில்லரெ கெலச

[சில்லறை + பணி]

சில்லறைப்புத்தி *šillarai-p-putti,* பெ. (n.) 1. சிறுமைத்தனம்; silliness, mean-mindedness. 2. மழுங்கியவறிவு (வின்.); shallow wit. 3. கூடாவொழுக்கம் (வின்.); adultery.

து. சில்லரெபுத்தி

[சில்லறை + புத்தி]

சிற்றறிவு பார்க்க

சில்லறையங்காடி *šillarai-y-angādi,* பெ. (n.) அரிசி, பருப்பு, எண்ணெய் போன்ற பொருள்களை விற்கும் மளிகைக்கடை; a shop of sundry articles, as rice, pulse, oil, etc., with the exclusion of cloth, petty shop.

க. சில்லறெயங்காடி; து. சில்லரெ அங்கடி

[சில்லறை + அங்காடி]

சில்லறைவேலை *šillarai-vēlai,* பெ. (n.) சில்லறைப்பணி பார்க்க; see *šillarai-p-pani.*

க. சில்லெறகெலச; து. சில்லரெ கெலச; பட. சில்லரெ கெலச

[சில்லறை + வேலை]

சில்லறையாட்கள் *šillarai-y-ātkal,* பெ. (n.) 1. சிறப்பற்றவர்; unimportant persons. 2. தொந்தரவு செய்யும் புல்லியர்; troublesome people. 3. எடுபிடி ஆட்கள்; ordinary coolies.

ம. சில்லறக்காரன்; தெ. சில்லறவாண்டுலு; து. சில்ரெசன

[சில்லறை + ஆட்கள்]

சில்லறைவணிகம் *šillarai-vanigam,* பெ. (n.) மொத்த விற்பனையாளரிடமிருந்து பெற்று நுகர்வோருக்கு விற்கும் வணிகம்; retail trade.

ம. சில்லறகச்சவடம்

[சில்லறை + வணிகம்]

சில்லறைவணிகர் *šillaṟai-vaṇigar,* பெ. (n.) மொத்த விற்பனையாளரிடமிருந்து பெற்று நுகர்வோருக்கு விற்கும் வணிகர்; a retail merchant.

ம. சில்லறகச் சவடக்காரன்

[சில்லறை + வணிகர்]

சில்லறைவிற்பனை *šillaṟai-viṟpaṉai,* பெ. (n.) பொருட்களைச் சில்லறையாக விற்கும் வணிகம்; retail trade.

ம. சில்லறவில்பன

[சில்லறை + விற்பனை]

சில்லாக்கோல்பாய்ச்சு-தல் *šillā-k-kōl-pāyccu-,* 5 செ.கு.வி. (v.i.) முழங்கால்களுக்குள் இரு கைகளையும் விட்டு அவற்றை நிலத்திற் பதிய வைத்து அம்முழங்கால்கைகளிடையே கோலைவிட்டு இறுக்கி அசையாதிருக்கும் படி குற்றவாளியை ஒறுத்தல் (இ.வ.); to punish a person by making him sit with his hands across the knees and with a stick thrust between, making it impossible for him to move.

தெ. ஜில்ல.

[சில்லாக்கோல் + பாய்ச்சு-,]



சில்லாங்குச்சி *šillāṅkucci,* பெ. (n.) கிட்டிப்புள் (இ.வ.); game of tipcat.

[சில் + ஆம் + குச்சி]

சில்லாட்டு *šillāṭṭu,* பெ. (n.) சில்லறை[1] (யாழ்ப்.) பார்க்க; see *šillaṟai[1]*

[சில் + ஆட்டு = சில்லாட்டு]

சில்லாட்டை *šillāṭṭai,* பெ. (n.) பன்னாடை (இ.வ.); fibrous covering around the top of palms.

[இல் → சில் + ஆடை - சில்லாடை → சில்லாட்டை]

சில்லாடை *šillāḍai,* பெ. (n.) சில்லாட்டை (இ.வ.) பார்க்க; see *šillāṭṭai.*

[சில்லாட்டை → சில்லாடை]

சில்லாவலி *šillāvali,* பெ. (n.) வீண்கலகம் (இ.வ.); petty infructuous disturbance.

தெ. சில்ல

[சில் = சில்லறை, சிறியது. வலி = வருத்தம், துன்பம். சில் + வலி = சில்வலி → சில்லாவலி]

சில்லான் *šillāṉ,* பெ. (n.) 1. ஒருவகைச் சிறிய ஓந்தி (யாழ்ப்.); small blood sucker. 2. குருவி வகை; a small bird. 3. சிறுவர் விளையாட்டு, சில்லான் குடுகுடு (யாழ்ப்.); a boy's game. 4. கறையான் (இ.வ.); white ant.

[சுல் → சில் = சிறியது, துண்டு. சில் → சில்லான் (மு.தா. 129)]

சில்லான்குடுகுடு *šillāṉ-kuḍukuḍu,* பெ. (n.) சடுகுடு விளையாட்டு (யாழ்ப்.); a boy's game.

[சில்லான் + குடுகுடு]

சில்லி[1] *šilli,* பெ. (n.) சிள்வண்டு; cricket. "சில்லி சில்லென் றொல்லறாத" (திவ். பெரியதி. 1, 7:9).

Skt. jhila.

[சில் → சில்லி. 'சில்' ஒலிக்குறிப்பு]

சில்லி[2] *šilli,* பெ. (n.) ஒட்டை, விரிசல், துளை; leak, crack, hole.

ம., க., தெ. சில்லி

[இல்லி → சில்லி]

சில்லி[3] *šilli,* பெ. (n.) 1. வட்டம் (பிங்.); circle. 2. தேருருளை; car wheel. "வெள்ளிச் சில்லிபுக் குற்றது" (கம்பரா. கடிமண. 71). 3. சிறுகீரை; field spinach. "சில்லி தங்குமென் யாத்தி" (திருவிளை. அருச். 29). 4. துண்டு; small broken piece of stone etc., "திரிந்தன சிகரச் சில்லி" (கம்பரா. சேதுபந். 22)

க. சல்லி.

[சில் → சில்லி]

சில்லி[4] *šilli,* பெ. (n.). 1. புண்துளை; sinus of a wound. 2. மெல்லியதோல்; membrane (சா.அக.).

சில்லிக்கரண்டி *šilli-k-karaṇḍi,* பெ. (n.) 1. மரம் அல்லது இரும்பினாலாகியதும், துளைகள் அமைந்ததும் மருந்து வடிகட்டப் பயன் படுவதுமான சிறிய அகப்பை; a wooden or iron spoon with small holes for filtering. 2. சில்லியகப்பை; a colander used in cookery (சா.அக.).

[சல்லி = சிறு சிறுதுளை. சல்லிக் கரண்டி → சில்லிக்கரண்டி]



சில்லிக்கரண்டி

சில்லிக்காது *šilli-k-kādu,* பெ. (n.) சிறு தொளைக் காது (இ.வ.); bored ear dist. fr. toḷai-k-kādu.

[சில்லி² + காது]

சில்லிக்கோல் *šilli-k-kōl,* பெ. (n.) ஒருவகைச் சிறுகம்பு; a kind of small stick. "சில்லிக்கோ லெடுத்துக் கண்ணிசேர்த்து" (குற்றா. குற. 79.).

தெ. சில்லகோல

[சில்லி + கோல்]

சில்லிகாதபம் *šilligādapam,* பெ. (n.) தொண்டையில் மெல்லியதாய்ச் சதை வளர்ந்ததால், ஏற்படும் அழற்சி; an inflammatery disease of the throat with the formation of a false membrane-diphtheris (சா.அக.).

சில்லிகுத்தியவோடு *šillikuttiya-v-ōḍu,* பெ. (n.) துளைகளிட்ட ஓட்டுப் பாளம்; a piece of file perforated holes (சா.அக.).

[சல்லி = சிறு துளை. சல்லி → சில்லி. சில்லி + குத்திய + ஓடு]

சில்லிகை¹ *šilligai,* பெ. (n.) சுவர்க்கோழி (சூடா.); cricket. 2. நல்லாடை வகை (சிலப்.14, 108, உரை.); a kind of superfine cloth.

[சில்லி + கை]

சில்லிகை² *šilligai,* பெ. (n.) கதிரொளி; sun's rays (சா.அக.).

[சில்லி + கை]

சில்லிசாகம் *šilli-sāgam,* பெ. (n.) சிறுகீரை; pigs greens (சா.அக.).

சில்லிட்டுச்சீலைசெய்-தல் *šilliṭṭu-c-cīlai-šey-,* 1 செ.கு.வி. (v.i.) சில்லுப்போடு-தல் பார்க்க; see *šillu-p-pōḍu-.*

சில்லிட்டுப்போ-தல் *šilliṭṭu-p-pō-,* செ.கு.வி. (v.i.) இறப்பின் அறிகுறியாக உடம்பு முழுதுங் குளிர்ந்து போதல்; losing the ordinary warmth of the body which becomes chill, as a sign of death (சா.அக.).

[சில் → சில்லிட்டு. சில்லிட்டு + போ-,]

சில்லிடல் *šilliḍal,* 20 செ.கு.வி. (v.i.) சில்லிடுதல் பார்க்க; see *šilliḍu-.*

சில்லிடு-தல் *šil-l-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. குளிர்ந்து போதல்; to become chill. 2. ஒலித்தல் (சங்.அக.); to buzz, as bees. 3. அச்சங் கொண்டு நடுங்குதல் (வின்.); to thrill with a sudden sensation of fear. 4. சினம் நீர்க்கோப்பு முதலியவற்றால் முகஞ்சிவத்தல் (யாழ்ப்.); to blush, to be flushed with rage, to be red in the face from cold, from weeping.

ம. சில்லிடுக

[சில் + இடு-,]

சில்லிதம் *šillidam,* பெ. (n.) தேற்றா மரம்; water clearing tree (சா.அக.).

சில்லிப்பலம் *šilli-p-palam,* பெ. (n.) இலைமேற் காய்; bridal couch plant (சா.அக.).

[சில்லி + பலம்]

சில்லிபூ-த்தல் *šilli-pū-,* 4 செ.கு.வி. (v.i.) கண் கூசும்படியிருத்தல் (யாழ்ப்.); to be dazzled, as eyes.

[சில்லி³ + பூ-,]

சில்லிமூக்கு *šilli-mūkku,* பெ. (n.) 1. குருதி வடியும் மூக்கு; bleeding nose. 2. மூக்குநுனி (இ. வ.); tip of the nose.

[சில்லி + மூக்கு]

சில்லிமூக்குடை-தல் *šilli-mūkkuḍai-,* 2 செ.கு.வி. (v.i.) மூக்கினின்று குருதி வடிதல்; to bleed in the nose.

[சில்லி² + மூக்கு + உடை-,]

சில்லியகப்பை *šilli-y-agappai,* பெ. (n.) சல்லடைக் கண் போன்ற சில்லிகளையுடைய அகப்பை (தைலவபாயி37, உரை) flat perforated ladle.

[சில்லி + அகப்பை]



சில்லியடை-த்தல் *šilli-yaḍai-,* செ.கு.வி. (v.i.) சில்லிடு-தல் பார்க்க; see *šilliḍu-,* (சா.அக.).

சில்லியடை *šilli-y-aḍai,* பெ. (n.) சல்லடை வகை (தைலவ. பாயி. 22); a kind of covered sieve.

[சில்லி² + அடை. அடு → அடை]

சில்லியரத்தம் *šilli-y-arattam,* பெ. (n.) 1. பொசியும் குருதி (யாழ்அக.); oozing blood. 2. உரைந்த அரத்தம்; coagulated blood (சா.அக.).

[சில்லி² + அரத்தம்]

சில்லியெடு-த்தல் *šilli-y-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) முடமாக்கல்; to break the leg by taking off the knee-cap, said by person in fury (சா.அக.).

[சில்லி + எடு-,]

சில்லிவாயன் *šillivāyaṉ,* பெ. (n.) வாயில் வந்ததைப் பிதற்றுபவன்; a babbler, as leaky-mouthed "சில்லிவாயர் சொல்லுவார்" (பெரியபு. திருஞான. 776).

மறுவ. சல்லிவாயன்

[சில்லி² + வாயன்]

சில்லிறை *šilliṟai,* பெ. (n.) சில்லறை வரி (தெ.க.தொ. 3,142); petty taxes.

[சில்லி³ + இறை]

சில்லு¹ *šillu,* பெ. (n.) 1. துண்டு, உடைந்த கற்சில்; broken piece, as of stone. "கல்லுச் சில்லுப் பொருநாசிக் கேழல்" (திருப்போ. சந். அலங். 18). 2. வட்டமாயுள்ள விளையாட்டுக் கருவி; a round piece used by children in play. 3. கண்ணாடிச் சில்லு; glass pane. 4. சக்கரம் (இ. வ.); wheel. 5. முழங்காற் சில்லு; knee cap, as being round. 6. நொண்டி விளையாட்டு; a game of hopscotch played with potsherd. உடைந்த புதியவோடு; broken piece of a new pot (சா.அக.).

ம., து. சில்ல

[சில்¹ → சில்லு]

சில்லு² *šillu,* பெ. (n.) பெருங்கொடி வகை (L.); a kind of scimitar-pod.

மறுவ. இரிக்கி

சில்லுக்கருப்பட்டி *šillu-k-karuppaṭṭi,* பெ. (n.) தூய்மைப்படுத்திய பனைவெல்லச் சிறுகட்டி; a superior kind of spiced jaggery.

[சில்லு¹ + கருப்பட்டி. சல் → சில் = சிறியது. துண்டு, சிற்றளவு. சில்லுக் கருப்பட்டி = சிறு கருப்புக்கட்டி. கருப்பு + கட்டி → கருப்புக்கட்டி → கருப்பட்டி (மு.தா. 140)]

சில்லுக்குந்து-தல் *šillu-k-kundu-,* செ.கு.வி. (v.i.) பாண்டிவிளையாடுதல் (வின்.); to play hopscotch.

[சில்லு + குந்து-,]

சில்லுசெய்-தல் *šillucey-,* 1 செ.கு.வி. (v.i.) சில்லுப்போடு-தல் பார்க்க; see *šillu-p-pōḍu-.* (சா. அக.).

[சில்லு¹ + செய்-,]

சில்லுண்டி *šillundi,* பெ. (n.) 1. சிறுமையானது; trifling thing. 2. புல்லன் (இ.வ.); mean person. 3. சிறுகுழந்தைகள் (வின்.); little children.

[சில் + உண்டி]

சில்லுணா *šil-l-unā,* பெ. (n.) சிற்றுண்டி (இலக்.அக.); light refreshments.

[சில்' + உண்டி; உணவு = உணா]

சில்லுப்போடு-தல் *šillu-p-pōdu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. மருந்திட்ட பாண்டத்தை ஓடு வைத்து மூடிய பின் சீலை மண் செய்தல்; to lute a vessel containing medicine by covering the lid with a piece of tile (சா.அக.).

[சில்லு + போடு-,]

சில்லுப்பு *šilluppu,* பெ. (n.) கல்லுப்பு; crystallised salt (சா.அக.).

[சில் = சிறுதுண்டு, சில் + உப்பு]

சில்லுமாங்கொட்டை *šillu-māṅ-kottai,* பெ. (n.) மாங்கொட்டை வகை (இ.வ.); a kind of mango seed which resembles the stone of a mango.

[சில்லு + மாங்கொட்டை]

சில்லுமூடு-தல் *šillu-mūdu-,* செ.கு.வி. (v.i.) சில்லுப்போடுதல் பார்க்க; see *šillu-p-pōdu-* (சா.அக.).

[சில் → சில்லு; சில்லு + மூடு-,]

சில்லுமூடிசீலைசெய்-தல் *šillu-mūdi-šīlaišey-* செ.கு.வி. (v.i.) சில்லுப்போடு-தல் பார்க்க; see *šillu-p-pōdu-* (சா. அக.).

[சில்லு + மூடி + சீலை + செய்-,]

சில்லூறு *šillūṟu,* பெ. (n.) சிள்வண்டு; cricket.

[சில் + ஊறு. உறு → ஊறு]

சில்லெடு-த்தல் *šilledu-,* 4 செ.கு.வி. (v.i.) சட்டப்படி ஒருவரைப் பிடித்து, முறைமன்றம், காவல் நிலையம் முதலியவற்றில் ஒப்படைக்க ஆணை பெறுதல் (இ. வ.); to take out a warrant.

[சில்+ எடு-,]

சில்லெலும்பு *šillelumbu,* பெ. (n.) முழங்காற் சில்லெலும்பு; knee-cap bone (சா.அக.).

[சில் = சிறுதுண்டு. சில் + எலும்பு]

சில்லெனல் *šillenal,* பெ. (n.) 1. குளிர்ந்திருக்கைக் குறிப்பு; onom. expr. of being very chill. "சில்லென் றென்னு டம்பும் .... குளிர் வித்த தாண் மலர்கள்" (அருட்பா. 4, அருட்பிர. 74). 2. புலன்களுக்கு இன்பமூட்டுங் குறிப்பு; being pleasant to the senses. "மழலைச் சில்லென் கிளவி" (கூர்மபு. திருக்கல்யாண. 47). 3. முக மலர்ச்சிக் குறிப்பு; being cheerful in countenance 4. ஒலியின்மைக் குறிப்பு; absence of bustle. 'இரவில் ஊர் சில்லென்றிருக்கிறது' (உ.வ.) 5. ஒலிக் குறிப்பு வகை; shrill sound. "சில்லி சில்லென் றொல்லறாத" (திவ். பெரியதி. 1.7:9).

[சில்² + எனல்]

சில்லை[1] *šillai,* பெ. (n.) 1. சிள் வண்டு (பிங்.); cicada. 2. கிலுகிலுப்பை; rattle wort.

த. சில்லி → Skt. jhillī

[சில்லிடுதல் = ஒலித்தல். சில் → சில்லி → சில்லை]

சில்லை[2] *šillai,* பெ. (n.) 1. இழிவு; humbleness. 2. கஞ்சத்தனம், கயமை; meanness. "சில்லைச் சிறுகுடி லகத்திருந் தோனென" (சிலப். 16:147). 3. பழிச்சொல்; slander. "சில்லை வாய்ப் பெண்டுகள்" (திவ். திருவாய். 6.7:4). 4. முரட்டுத் தனம்; unruly mischievous disposition, as of a bull "சில்லைச் செவிமறைக் கொண்டவன்" (கலித். 107). 5. சிற்றின்பம் மிகுதியாகவுடைய கொடு மனத்தள்; wicked and libidinous woman. "சில்லைக்க ணன்பினை யேமாந் தெமதென் றிருந்தார்" (நாலடி, 377).

[சில் → சில்லை]

சில்லை[3] *šillai,* பெ. (n.) 1. தமிழ்நாட்டில் கிழக்குக்கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் பறவை வகை; munia. 2. நீர்ப்பறவை வகை (மணிமே. 8, 29); a kind of water-bird. 3 சிவல் வகை (பிங்.); a species of partidge.

1. சிவப்புச் சில்லை
2. வெண்தொண்டைச் சில்லை
3. வெண்முதுகுச் சில்லை
4. கருந்தொண்டைச் சில்லை
5. புள்ளிச் சில்லை
6. கருந்தலைச் சில்லை

சில்லை வகைகள்

சிவப்புச் சில்லை

புள்ளிச் சில்லை

கருந்தொண்டைச் சில்லை

கருந்தலைச் சில்லை

வெண்தொண்டைச் சில்லை

வெண்முதுகுச் சில்லை

சிரால் மீன்கொத்தி

சின்னக் கொக்கு

சிலந்தி பிடிப்பான்

சிட்டான்

சிரிப்பான்

வெண்மார்புச் சிரிப்பான்

சில்லை[4] *šillai,* பெ. (n.) பிரண்டை; square-stalked wild grape.

சில்லொலி *šil-l-oli,* பெ. (n.) கீச்சுக்குரல் (புதுவை.); shrill; squeak.

சில் = ஒலிக்குறிப்புச் சொல்

[சில் + ஒலி]

சில்வண்டு *šil-vandu,* பெ. (n.) 'கிறிச்' என்று ஒலியெழுப்பும் வண்டு; cicada.

[சில்' + வண்டு]

சில்வரி *šil-vari,* பெ. (n.) சிறிய வரிகள் (தெ.க. தொ. i, 87); small taxes or cesses.

[சில் = சில; சில் + வரி]

சில்வநோய் *šilvanōy,* பெ. (n.) உகிர் (நக)க் கண்ணைச் சுற்றியேற்படும் உகிர்ச் சுற்றுநோய்; it is a swelling of the nail-bed. It is known by several names-felon, panaris etc. (சா.அக.).

மறுவ. நகச்சுற்று, உகிர்ச்சுற்று, விரற்சுற்று

சில்வாய் *šil-vāy,* பெ. (n.) கடைவாய் (நெல்லை.); corners of mouth.

[சில் + வாய்]

சில்வாய்ப்பிடி *šilvāy-p-pidi,* பெ. (n.) இரு கன்னங்களையும், கை விரல்களால் உள்ளழுத்தி, வாய் திறந்த வண்ணமாயிருக்கும்படி செய்யுந் தண்டனை (வின்.); the punishment of keeping one's mouth open by pressing in the cheeks with fingers.

[சில்வாய் + பிடி]

சில்வாரி *šilvāri,* பெ. (n.) செவ்வலரி; red oleander (சா.அக.).

சில்வான் *šilvān,* பெ. (n.) சில்வானம் பார்க்க; see *šilvānam.*

க. சிலவடு

[சில்வானம் → சில்வான்]

சில்வானஞ்சேர்-த்தல் *šilvānañ-jēr-,* செ.கு.வி. (v.i.) வீட்டுப் பொருள்களைப் பிறர் காணா வண்ணம் விற்றுச் சிறுவாடு சேர்த்தல் (இ.வ.); to scrape up small illegitimate earnings by secretly selling house hold things.

[சில்வானம் + சேர்-,]

சில்வானம்[1] *šilvānam,* பெ. (n.) 1. சில்லறை[3] பார்க்க; see *šillarai*[3]. 2. வீட்டுச் செலவுக்குக் கொடுத்த தொகையில் சிறு தனிச் சொத்தாக மிகுத்து வைக்கும் பணம் (இ.வ.); savings effected from the sum allotted for household expenses.

ம. சில்வானம்; சில்லுவானம், சில்லானம்; க. சிலவான்; து. சில்வான, சிலுவான.

[சில் + மானம் - சில்மானம் → சில்வானம்; மா + அனம் - மானம் = அளவீடு, அளவு, அளவை, மதிப்பு]

சில்வானம்[2] *šil-vānam,* பெ. (n.) சிறிது; that which is small or little, thing of minor importance. "சில்வான பிரயோஜனங்களைப் பற்ற" (ரஹஸ்ய. 49).

[சில் + மானம் - சில்மானம் → சில்வானம்]

சில்வானம்[3] *šilvānam,* பெ. (n.) சிறுதூறல் (இ.வ.); drizzle.

[சில்' + வானம்]

சில்வானம்வில்-தல் (சில்வானம்விற்றல்) *šilvānam-vil-,* 4 செ.கு.வி. (v.i.) சிறுவாடு சேர்த்தற்காக வீட்டுப் பொருள்களைக் கமுக்கமாக விற்றல் (இ.வ.); to sell household things secretly and effect small illegitimate savings.

[சில்வானம் + வில்-,]

சில்விடம் *šil-vidam,* பெ. (n.) சிறு பூச்சிகளின் கடிநஞ்சு; poison due to bite of small insects. "சில்விடம தொப்பான்" (பிரபோத. 26:47).

[சில் + விடம்]

Skt. visa → த. விடம்

சில *šila,* பெ. (n.) சின்மையானவை; some, a few. "சிலசொல்ல றேற்றா தவர்" (குறள், 649).

ம. சில; க. கெலவி, கெல; தெ. சிலுபி, சிலுவ; து. கெல, கெலவு, கிக்; கோத. கில்கட்

[சல் → சில் = சிறியது, துண்டு, சிற்றளவு. சில் → சில்வான் = குட்டி ஓணான். சில் → சின் → சின்னான் = சிறியவன். சில் → சின்மை. சில் → சில. அளவுச் சிறுமை குறித்த சொல் தொகைச் சிறுமையும் குறித்தது (மு.தா. 129)]

சிலக்கு *silakku,* பெ. (n.) இன்னும் கொஞ்சம் (இ.வ.); something more.

U. silak.

சிலக்குணம் *sila-k-kuṇam,* பெ. (n.) திமிங்கிலம் (யாழ்அக.); whale.

சிலகம்[1] *silagam,* பெ. (n.) 1. சட்டுவம் (பிங்.); a kind of ladle. 2. நாவழுத்திப் பிடிக்கும் மாழையிற் செய்த குறடு (பிங்.); metal spatula.

[சல் → சூல் → சூலம். சூல் = சூலம். சல் → சில் சிலகம் = குத்துவது போன்று இறுக்கிப் பிடிக்குங் கருவி]

சிலகம்[2] *silagam,* பெ. (n.) சாதிக்காய்; nutmeg (சாஅக.).

சிலகயம் *silagayam,* பெ. (n.) அரத்தத்தை முறிக்குந்தன்மை வாய்ந்த சிவப்புச் சதுரக்கள்ளி; a red variety of square; it destroys the richness of blood (சாஅக.).

சிலசியம் *silaśiyam,* பெ. (n.) கருநெல்லி மரம்; black-barried feather foil (சாஅக.).

மறுவ. உச்சிலிந்தி

சிலங்கம்[1] *silaṅgam,* பெ. (n.) விளாம்பட்டை (வின்.); bark of the wood-apple tree.

சிலங்கம்[2] *silaṅgam,* பெ. (n.) வெள்ளி மரப்பட்டை; lodhra bark (சாஅக.).

சிலங்கை *silaṅgai,* பெ. (n.) சலங்கை; tinny bells used as ornaments.

[சலங்கை → சிலங்கை (மு.தா.3)]

சிலத்திற்கடுகு *silattiṟ-kaḍugu,* பெ. (n.) திமிங்கிலம் (யாழ்அக.); whale.

மறுவ. சிலக்குணம்.

சிலதன்[1] *siladaṉ,* பெ. (n.) 1. மருதநிலவாணன் (பிங்.); inhabitant of the agricultural tract. 2. ஏவலாளன்; servant, labourer. "சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பின்" (பெரும்பாண். 324). 3. தூதன்; messenger. "சேறி யாலெனச் சிலத ரோதினார்" (கந்தபு. தெய்வயா. 53).

சிலதன்[2] *siladan,* பெ. (n.) தோழன் (பிங்.) கூட்டாளி; male companion, associate.

சிலதி *siladi,* பெ. (n.) நம்பகத்தன்மை மிக்க தோழி, பெண் பணியாள்; a confident female servant or companion "அங்கொரு சிலதியை" (பெருங். வத்தவ. 14:172).

[சிலதன் - ஆண்பால்; சிலதி - பெண்பால்]

சிலதை *siladai,* பெ. (n.) நீண்டு மெலிந்து கரு நிறத்தளாய காமமிக்க பெண்; a tall and lean woman, black in complexion and highly lustful. "பேசலஞ் சிலதை யென்றே" (சொக்கோ. 4:6).

சிலந்தி[1] *silandi,* பெ. (n.) 1. பரு; pimple. 2. சிறு கட்டி; small boil. 3. கட்டி, நச்சுக்கட்டி; abscess, ulcer, venereal boil. 4. நடன முத்திரைக்குரிய ஆண் கையுள் ஒன்று (சிலப். பக். 92,); a hand-pose expressive of the emotions of men.

ம. சிலன்னி; Skt. granthi.

[சில→சிலந்தி (வேக.) உடம்பில் தலைக்குக் கீழ் எங்கேனும் புறப்படும் கொப்புளம் சிலந்திப்பூச்சியின் உடல் போல் திரண்டிருத்தல் தன்மை பற்றிச் சிலந்தியெனப் பெயர்பெற்றது]

சிலந்தி[2] *silandi,* பெ. (n.) 1. மரவகை; panicled golden-blossomed pear tree. 2. கருஞ்சிலந்தி; small-leaved golden-blossomed pear tree. 3. சிலந்தியரிசி; edible sedge. 4. கோரை வகை; sedge.

சிலந்தி[3] *silandi,* பெ. (n.) தன் வாயிலுள்ள சுரப்பைக் கொண்டு பூச்சிகளைச் சிக்க வைக்கும் வகையில் வலை பின்னக்கூடியதும் எட்டுக் கால்களை உடையதுமான சிறுபூச்சி; spider. "சிலந்தி யுண்பதோர் குரங்கின்மேல்" (கம்பரா. பஞ்சசேனா1).

ம. சிலந்தி, சிலன்னி; க. செலதி, செலந்தி; தெ. செலதி

[சில் → சிலந்தி = வட்டமான நூல்வலை யமைக்கும் பூச்சி]



சிலந்தி

சிலந்தி[4] *śilandi,* பெ. (n.) தொண்மணிகளுள் ஒன்றான கோமேதக வகை (தெ.இ.க.தொ. 8. 53); sardonyx.

சிலந்திக்கடி *śilandi-k-kaḍi,* பெ. (n.) நச்சுத் தன்மையுள்ள சிலந்திப் பூச்சியாலேற்பட்ட கடி; spider-bite; it is very poisonous and troublesome in nature (சா.அக.).

[சிலந்தி + கடி]

சிலந்திக்கரப்பான் *śilandi-k-karappāṉ,* பெ. (n.) தோலிலேற்படுங் கரப்பான் புண் வகை (தஞ்.சர.iii,92); ulcerating eruption of the skin.

[சிலந்தி + கரப்பான்]

சிலந்திக்கழலை *śilandi-k-kaḻalai,* பெ. (n.) உடம்பிலுண்டாகும் மிகு வெப்பத்தினால் முதலிற் பருத்து வீங்கி, வரவரப் பெரிதாகிச் சீழ்ப் பிடித்துக் கட்டியாக மாறுங் கழலை; a sebaceous tumor arising from excess of heat in the body.

[சிலந்தி + கழலை]

சிலந்திக்கூடு *śilandi-k-kūḍu,* பெ. (n.) பஞ்சினைப்போல் வெண்மையாகவும், மென்மையாகவும் அமைந்ததும், அரத்தப் போக்கினை நிறுத்துந்தன்மை மிக்கதுமான சிலந்தியின் கூடு; the spider-web of a house spider. It is white and soft like cotton and is a useful application for checking the flow of blood (சா.அக.).

மறுவ. கோலான்

[சிலந்தி + கூடு]

சிலந்திக்கொடி *śilandi-k-koḍi,* பெ. (n.) ஈசுரமூலி; Indian birthwort.

[சிலந்தி + கொடி]

சிலந்திநாயகம் *śilandi-nāyagam,* பெ. (n.) சொறி, புண்களை நீக்கும் மருந்துவகை (பதார்த்த. 290); a plant as curing cutaneous eruptions.

[சிலந்தி + நாயகம்]

சிலந்திப்பூச்சி *śilandi-p-pūcci,* பெ. (n.) வாயின் கீழ் வளைந்த, நச்சுத்தன்மை மிக்க கொடுக்கினையுடையதும், கூடுகட்டுந் தன்மையுடையதுமான எட்டுக்காற் பூச்சி; an eight-legged insect known as spider. It has four parts of legs attached fore-parts of the body. mandibles furnished with a curved claw perforated at the extremity like poison fang.

[சிலந்தி + பூச்சி]



சிலந்திகம் *śilandigam,* பெ. (n.) வாலுளுவை மரம்; spindle tree (சா.அக.).

சிலந்திமரம் *śilandimaram,* பெ. (n.) 1. அத்தி மரவகையுளொன்று; a kind of fig tree. 2. செருந்திமரம்; fire fly (சா.அக.).

[சிலந்தி + மரம்]

சிலந்தியரிசி *śilandi-y-ariśi,* பெ. (n.) 1. பூங்கோரை (வின்.); edible sedge. 2. கோரை வகை (மூ.அ); a kind of weed.

[சிலந்தி + அரிசி]

சிலப்பதிகாரம் *śilappadigāram,* பெ. (n.) ஐம் பெருங்காப்பியத்துள் பழைமை வாய்ந்ததும் இளங்கோவடிகளால் இயற்றப் பெற்றதும் கோவலன் கண்ணகியின் வரலாற்றைக் கூறுவதுமாகிய ஓர் இலக்கியம்; an ancient historic poem by Iḷaṅgōvaḍigaḷ dealing with the story of Kōvalaṉ and Kaṇṇagi, one of Aimberuṅgāppiyam.

[சிலம்பு + அதிகாரம்]

சிலம் *śilam,* பெ. (n.) 1. பொதுவகையுப்பு; salt in common. 2. இந்துப்பு; rock-salt (சா.அக.).

சிலம்பக்காரன் *śilamba-k-kāraṉ,* பெ. (n.) சிலம்பக்கலை வல்லவன்; person clever in the use of quarterstaff.

ம. சிலம்பி

[சிலம்பம் + காரன்]

சிலம்பக்கூடம் *šilamba-k-kūḍam*, பெ. (n.) சிலம்பம் பயிலுமிடம் (வின்.); palaestra, fencing school.

[சிலம்பம் + கூடம்]

சிலம்பங்கட்டு-தல் *šilambaṅ-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) சிலம்பக் கலையில் கழி முதலியவற்றை வீசுதல் (வின்.); to brandish quarter-staff in the art of fencing.

[சிலம்பம் + கட்டு-,]

சிலம்பங்காட்டு-தல் *šilambaṅ-kāṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. சிலம்பக்கலை (வித்தை) காட்டுதல்; to brandish staff in fencing. 2. அச்சுறுத்துதல் (இ.வ.); to menace, threaten. 3. செயற்கரிய செயலைச் செய்வது போல் நடித்தல் (இ.வ.); to pretend to be active in the accomplishment of a difficult task.

[சிலம்பம் + காட்டு-,]

சிலம்பப்பயிற்சி *šilamba-p-payirci*, பெ. (n.) சிலம்பாட்டம் பார்க்க; see *šilambāṭṭam* (சா.அக.).

[சிலம்பம் + பயிற்சி]

சிலம்பம் *šilambam*, பெ. (n.) 1. கழியை இருகையாலும் பிடித்து முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் சுழற்றித் தாக்கவும் தாக்குதலைத் தடுக்கவும் மேற்கொள்ளும் பயிற்சி (பதார்த்த. 1294); a kind of martial art where fencing is done with a staff. 2. சூழ்ச்சி; trick, stratagem. "சிலம்பத்திற் றிரிந்துற் றிட்டு" (திருப்பு. 1076).

ம. சிலம்பம்

[சிலம்பு → சிலம்பம் (த. வ. 79)]

சிலம்பம்பண்ணு-தல் *šilambam-paṇṇu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. சிலம்பமாடு- பார்க்க; see *šilambam-āḍu-*. 2. சிலம்பங்காட்டு- (இ.வ.) பார்க்க; see *šilambaṅ-kāṭṭu-*

[சிலம்பம் + பண்ணு-,]

சிலம்பமாடு-தல் *šilambam-āḍu-*, 5 செ.கு.வி. (v.i.) சிலம்பம் விளையாடுதல்; to fence, brandish, parry with quarterstaff.

[சிலம்பம் + ஆடு-,]

சிலம்பல் *šilambal*, பெ. (n.) 1. யாழினோசை (பிங்.); sound of a lute. 2. ஓயாது, வீண் பேச்சுப் பேசுபவ-ன்-ள் (இ.வ.); a vulger chatter box, chatterer.

ம. சிலம்பல்

[சிலம்பு → சிலம்பல்]

சிலம்பவித்தை *šilamba-vittai*, பெ. (n.) சிலம்பாட்டம் பார்க்க; see *šilambāṭṭam* (சா.அக.).

த. விச்சை; வ. வித்தை

சிலம்பன்[1] *šilambaṉ*, பெ. (n.) 1. குறிஞ்சித் தலைவன்; chief of a hilly tract. "அயந்திகழ் சிலம்ப" (ஐங்குறு. 264). 2. முருகன் (பு. வெ. 12, இருபாற்.10, கொளு.); Muruga, as lord of the hilly tract. 3. காவேரியின் புதுவெள்ளம்; the freshet in the river Kāvēri, as in the month the Chittirai. 'சித்திரைச் சிலம்பன்' (இ. வ.).

மறுவ. மலையன், வெற்பன், பொருப்பன்.

ம. சிலம்பன்; Eng. sherha, sherrif['

[சிலம்பு = மலை. சிலம்பு → சிலம்பன். 'அன்' ஆண்பாலீறு]

சிலம்பன்[2] *šilambaṉ*, பெ. (n.) பழைய காசு (நாணய) வகை (சரவண. பணவிடு, 56); an ancient coin.

[சிலம்பு → சிலம்பன்]

சிலம்பன்[3] *šilambaṉ*, பெ. (n.) குருவி வகை; babbler.

[சிலம்பு → சிலம்பன் = ஒலித்துக் கொண்டேயிருக்கும் பறவை]

தமிழ்நாட்டின் மலைப்பகுதிகளும், புல்வெளிகளிலும், புதர்க்காடுகளிலும் காணப் படும் குருவி வகை, இது உடலமைப்பாலும், வண்ணத்தாலும் பலவகைகளாகக் காணப் படுகின்றன.

சிலம்பன் வகைகள்

1. வளைந்த அலகுச் சிலம்பன்
2. வெண் தொண்டைச் சிலம்பன்
3. கருந்தலைச் சிலம்பன்
4. மஞ்சள்கண் சிலம்பன்
5. தவிட்டுச் சிலம்பன்
6. பெரிய சாம்பற் சிலம்பன்

சிலம்பன் வகைகள்

கன்னிமாரா (மாநில (ம) மைய)
நூலகம்
30 ஆக
பெறப்பட்டது
சென்னை-600

பெரிய சாம்பல் சிலம்பன்

வளைந்த அலகுச் சிலம்பன்

கருஞ்சிவப்புச் சிலம்பன்

கலகலப்பான் சிலம்பன்

காட்டுச் சிலம்பன்

புள்ளிச் சிலம்பன்

கருந்தலைச் சிலம்பன்

வெண் தொண்டைச் சிலம்பன்

7. கருஞ்சிவப்புச் சிலம்பன்
8. காட்டுச் சிலம்பன்
9. வெண்தலைச் சிலம்பன்
10. கலகலப்பான் சிலம்பன்
11. புள்ளிச் சிலம்பன்

சிலம்பாட்டம் *śilambāṭṭam*, பெ. (n.) கம்பை முறைப்படிச் சுழற்றி எதிரிகளிடமிருந்து தற்காத்துக் கொள்வதற்காகவும் தளர்ந்த உடல் இறுகுவதற்காகவும், பசியேற்படுவதற் காகவும் பயிலுங்கலை; an orderly method of rotating the long role either to defend or to offend, it is a tiring exercise by which the body is hardened, appetite is increased (சா.அக.).

[சிலம்பம் + ஆட்டம்]

சிலம்பாட்டம்

சிலம்பாறு *śilambāṟu*, பெ. (n.) மதுரை மாவட்டத்தில் அழகர்மலையில் உருவாகுஞ் சிற்றாறு; the sacred stream of the Aḻagar hills, in Madurai district. "நிலம்பக வீழ்ந்த சிலம்பாற் றகன்றலை" (சிலப். 11:108).

[சிலம்பு + ஆறு]

சிலம்பி *śilambi*, பெ. (n.) சிலந்தி; spider. "சிலம்பி வானூல் வலந்த மருங்கில்" (பெரும்பாண். 236).

[சிலந்தி → சிலம்பி (வே.க.)]

சிலம்பிநூல் *śilambi-nūl*, பெ. (n.) சிலந்திப்பூச்சி நூல்; spider web (சா.அக.).

[சிலம்பி + நூல்]

சிலம்பியாதனம் *śilambi-y-ādaṉam*, பெ. (n.) ஓக வகையுளொன்று (தத்துவப்.109); yogic posture.

[சிலம்பு + ஆதனம். ஆசனம் → ஆதனம்]

சிலம்பு¹-தல் *śilambu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. ஒலித்தல்; to sound, make a tinkling noise. "சீரார் ஞெகிழஞ் சிலம்ப" (கலித். 90). 2. எதிரொலித்தல்; to echo, resound. "வளநகர் சிலம்பப் பாடி" (அகநா. 22).

ம. சிலம்புக

[சில் - ஒலிக்குறிப்பு. சில் → சிலம்பு]

சிலம்பு² *śilambu-*, பெ. (n.) 1. ஒலி (சூடா.); sound. 2. இரைச்சல்; noise. 3. ஒலியலை எதிர்வு; resonance. 4. வண்டின் மென் முரலொலி; buzz.

ம. சிலம்பு; க. செலெ; கோண். கிலி; குயி. க்லா, க்லாத்

[சில் → சிலம்பு]

சிலம்பு³ *śilambu-*, பெ. (n.) பூசாரிகள் கைச் சிலம்பு; blong hollow ring of brass filled with pebbles and shaken before an idol in worship.

[சில் → சிலம்பு]


சிலம்பு

சிலம்பு⁴ *śilambu-*, பெ. (n.) உள்ளீடு அற்ற பொன்னாலோ வெள்ளியாலோ ஆனதுமான் வளைகூட்டில் பரலிடப்பட்டு ஒலியெழுப்பு வதுமான மகளிர் காலணி; a kind of tinkling hollow anklet made of gold, silver, copper, etc. and filled with granules for tinkling worn by women in former times. "ஒன்றின வோவவ ளஞ்சிலம் படியே" (ஐங்குறு. 389)

ம. சிலம்பு

[சில் → சிலம்பு]

சிலம்பு[5] *šilambu,* பெ. (n.) *1. மலை;* mountain. "நளியிருஞ் சிலம்பிற் சீறூர்" *(புறநா. 143:10.). 2. பக்கமலை;* mountain slope. "மால்வரைச் சிலம்பின்" *(பெரும்பாண். 330). 3. மலை, முழைஞ்சு;* mountain cave, cavern. "சிலம்பிற் சிலம்பிசை யோவாது" *(பரிபா. 15 : 44).*

மறுவ. வெற்பு, பொருப்பு

[சில் → சிலை. சிலை - கல், மலை, கரடு. சிலை → சிலைம்பு → சிலம்பு]

சிலம்புகழிநோன்பு *šilambu-kaḻi-nōṉbu,* பெ. (n.) மணவினைக்குமுன் பெண்ணிற்கு நடத்தும் சிலம்புகழற்றலாகிய சடங்கு வகை *(ஐங்குறு.399,உரை.);* ancient ceremony preliminary to marriage, probably consisting in removing the anklets of a bride.

[சிலம்பு + கழி + நோன்பு]

சிலம்புகூறல் *šilambu-kūṟal,* பெ. (n.) கோவலன் சிலம்புவிற்ற கதை *(யாழ்.அக.);* story of Kōvalaṉ selling the anklet.

[சிலம்பு + கூறல்]

சிலம்புப்பாட்டு *šilambu-p-pāṭṭu,* பெ. (n.) *சிலப்பதிகாரக் கதையடிப்படையில் காளியைப் புகழ்ந்து பாடும் பாட்டு;* a song in praise of Kāḷi based on the story of Silappadigāram *(சேரநா.).*

ம. சிலம்பு பாட்டு

[சிலம்பு + பாட்டு]

சிலம்புரி *šilamburi,* பெ. (n.) அயல்நாட்டுத் துணி வகை *(இ.வ.);* a kind of foreign long-cloth.

[சிலம்பி + புரி. புரி = நூல்]

சிலந்திநூல் போல் மெல்லிய இழையால் நெய்யப்பட்ட துகில்.

சிலம்பொலி *šilamboli,* பெ. (n.) சிலம்பின் ஓசை; tinkling sound of an anklet.

ம. சிலம்பொலி

[சிலம்பு + ஒலி]

சிலமம் *šilamam,* பெ. (n.) சிலம்பம்-2 *பார்க்க;* see *šilambam-*[2]. 'சிலமத்திலே காரியம் பார்க்க' *(யாழ்ப்.).*

[சிலம்பம் → சிலமம்]

சிலமன் *šilamaṉ,* பெ. (n.) *சாடை;* indication by noise, stir, etc. *'அவர் வந்த சிலமனில்லை' (யாழ்ப்.).*

[சிலம்பு → சிலமன்]

சிலமான்கல் *šilamāṉ-kal,* பெ. (n.) விலையுயர்ந்த கல்வகையுளொன்று (M.M.); agate, a variegated form of silica.

U. sulaimāṉ.

சிலமி[1] *šilami,* பெ. (n.) *1. சிலம்பக்காரன் (சங்.அக.);* person clever in the use of quarter-staff. *2. அடாவடிக்காரன் (யாழ்ப்.);* bully, blusterer.

[சிலமம் → சிலமி]

சிலமி[2]**-த்தல்** *šilami-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1. சிலம்பம் பண்ணுதல் (யாழ்.அக.);* to fence with the quarter-staff. *2. அச்சுறுத்துதல்;* threaten.

[சிலம்பம் = கழி கொண்டு சண்டையிடுதல். சிலம்பம் → சிலமம் → சிலமி-.]

சண்டையிடுதற் பொருள் அச்சுறுத்தலுக்கும் புடை பெயர்ந்தது.

சிலமூலகாரம் *šilamūlakāram,* பெ. (n.) சிலைமூலகாரம் பார்க்க; see *šilai-mūlagāram (சா.அக.).*

[சிலைமூலகாரம் → சிலமூலகாரம்]

சிலர் *šilar,* பெ. (n.) *1. சிலபேர்;* some, a few persons. opp. to palar. "நோற்பார் சிலர் பலர் நோலாதவர்" *(குறள், 270).*

ம. சிலர்; க. கெலபர்

[சில் → சில + அர்]

சிலவங்கம் *šilavaṅgam,* பெ. (n.) மீனெலும்பு *(யாழ்.அக.);* fish bone.

Skt. gila + vaṅga

சிலவர்[1] *šilavar,* பெ. (n.) சிலர் *பார்க்க;* see *šilar.* "அழுதனர் சிலவர்" *(கம்பரா. திருவடி. 4).*

க. கெலபர்

[சில + அர்]

சிலவர்[2] *šilavar,* பெ. (n.) *1. பாலைநில மக்கள் (திவா.);* people of the desert tract. *2. பாலை நிலத் தலைவர் (திவா.);* chiefs of the desert tract. *3. வேடர் (அக.நி.);* hunters.

[சிலர் → சிலவர்]

சிலவிரிஞ்சம் *šilaviriñjam,* பெ. (n.) *தாமரை மலர்;* lotus flower *(சா.அக.).*

சிலவெதுப்பு *šila-veduppu,* பெ. (n.) *மாட்டு நோய்வகை (மாட்டுவா. 156);* a disease of cattle.

சிலனி *šilaṉi,* பெ. (n.) *ஊமத்தை வகையுளொன்று;* a kind of datura burdock *(சா.அக.).*

சிலாகு *šilāgu,* பெ. (n.) *1. இரும்பூசி;* needle. *2. அறுவை மருத்துவர் பயன்படுத்தும் கருவி;* surgeon's probe *(சா.அக.).*

சிலாகை[1] *šilāgai,* பெ. (n.) *சலாகை (வின்.) பார்க்க;* see *šalāgai.*

சிலாகை[2] *šilāgai,* பெ. (n.) *1. செம்பாறைக்கல், தேக்கல்;* gravel stone. *2. தொட்டிச்செய்நஞ்சு (சங்.அக.);* a mineral poison. *3. நீலக்கல் (யாழ்.அக.);* a blue stone.

சிலாங்கன் *šilāṅgaṉ,* பெ. (n.) *விளாம்பட்டை;* the bark of wood apple tree *(சா.அக.).*

சிலாசத்து *šilāšattu,* பெ. (n.) *1. எழுவகைத் துணைத் தாதுக்களில் மாழை வகை (பதார்த்த. 1130);* an inferior mineral, one of seven upa-datu. *2. கோடைக் காலத்து மிகு வெப்பத்தின் விளைவாக மலைப் பகுதிகளிலிருந்து உருகி வழியும் இரும்பு கலந்த கல்மதம்;* a bituminous substance containing from exuded by rocks during summer *(சா.அக.). 3. கனிக்கல் வகை;* foliated crystallized gypsum.

[சிலை → கல், கற் குன்று, மலை. சிலை → சிலா. சிலா + சத்து]

சிலாசம் *šilāšam,* பெ. (n.) *1. இரும்பு செம்பு முதலிய மாழை;* metal such as iron, copper etc., *2. மலைபடு பொருள்;* that which is procured from a mountain *(சா.அக.).*

சிலாசாசனம் *šilā-šāšanam,* பெ. (n.) *கொடை (தானம்) முதலியவற்றைக் குறித்து வரையப் படும் கல்வெட்டு;* stone inscription.

சிலாசாதனம் *šilā-šātaṉam,* பெ. (n.) *சிலாசாசனம் பார்க்க;* see *šilā-šāsaṉam.*

சிலாசாரம் *šilā-šāram,* பெ. (n.) *கல்லைப் போன்ற வன்மையுடைய இரும்பு (மூ.அ.);* iron, a hard as rock.

மறுவ. சிலாத்துமசம்

சிலாசிலாவாக *šilā-šilā-v-āga,* வி.எ. (adv.) *சிறிது சிறிதாக;* little by little. *'தான் வாங்கிய கடனைச் சிலாசிலாவாகக் கொடுக்கிறான்' (சென்னை).*

மறுவ. கொஞ்சங் கொஞ்சமாக

[சில் → சில → சிலா. சிலா + ஆக]

சிலாஞ்சனம் *šilāñjaṉam,* பெ. (n.) *நீலமணி வகை (வின்.);* a blue stone, lapis - lazuli.

சிலாடா *šilāḍa,* பெ. (n.) *நெல்லிக்காய்;* Indian gooseberry *(சா.அக.).*

சிலாத்தஞ்சனம் *šilāttañjaṉam,* பெ. (n.) *கட்களிம்பு;* eye-ointment *(சா.அக.).*

சிலாத்திக்குமரி *šiladi-k-kumari,* பெ. (n.) *கௌரி வைப்பு நஞ்சு;* a prepared arsenic *(சா.அக.).*

சிலாத்துமசம் *šilattumašam,* பெ. (n.) *(கல்லிற் பிறந்த தாது) இரும்பு (யாழ்.அக.);* iron, as born of stone.

சிலாசாரம் பார்க்க

சிலாதரன் *šilātaraṉ,* பெ. (n.) *சிலாதன் பார்க்க;* see *šilādaṉ. "சிலாதரன் புதல்வன் சொல்வான்" (சிவரக. வில்வவன. 30).*

சிலாதலம் *šilādalam,* பெ. (n.) *1. பாறை;* rock. *"சிலாதலத்தின் மேலிருந்த மந்தி" (திவ். இயற். 3, 58). 2. கற்பாவிய இருக்கைமேடை;* a raised stone paved seat. *"இலகொளிச் சிலாதல மேலிருந் தருளி" (சிலப். 15:154).*

சிலாதன் *šilātaṉ,* பெ. (n.) *நந்திதேவரின் தந்தை;* the father of Nandi-dēvar. *"தேக்கு மன்பிற் சிலாதனற் செம்மலை" (கந்தபு. அயனைச் சிறை நீக்கு. 8).*

சிலாதைலம் *šilā-tailam,* பெ. (n.) *பாறையில் வடியும் மண் நெய்மம்;* bitumen, as exuding from rocks.

[சிலை + தைலம். சிலை → சிலா]

சிலாந்தி *šilāndi,* பெ. (n.) சீந்தில் (மலை.); gulancha.

Skt. jivanti

சிலாந்திகம் *šilāndigam,* பெ. (n.) கருஞ்சிலந்தி மரம்; a kind of pear tree (சா.அக.).

சிலாநஞ்சு *šilānañju,* பெ. (n.) கன்மதம் (யாழ்.அக.); rock-alum.

[சிலை → சிலா. சிலா + நஞ்சு]

சிலாநாகக்கல் *šilā-nāga-k-kal,* பெ. (n.) சூடாலைக் கல் (வின்.); a kind of stone.

[சிலை → சிலா. சிலா + நாகக்கல்]

சிலாநாகம் *šilā-nāgam,* பெ. (n.) சிலாநாகக்கல் (வின்.) பார்க்க; see *šilā-nāga-k-kal.*

[சிலை → சிலா. சிலா + நாகம்]

சிலாப்பி *šilāppi,* பெ. (n.) கழப்புவோன் (யாழ்ப்.); idler, one who whiles away his time in idleness.

[சிலாப்பு → சிலாப்பி]

சிலாப்பு-தல் *šilāppu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. கழப்புதல் (யாழ்ப்.); to idle away one's time. 2. நடித்தல்; to profess, pretend.

[சிலம்பு → சிலப்பு → சிலாப்பு-,]

சிலாப்புட்டி *šilā-p-putti,* பெ. (n.) நீரிறைக்கப் பயன்படும் தோற்பை அல்லது இறைகூடை (இராட்.); leather bag or bucket for baling water.

[சலம் + புட்டி → சலப்புட்டி → சிலாப்புட்டி]

சிலாபம் *šilābam,* பெ. (n.) முத்துக் குளிக்கை (வின்.); pearl fishery.

ம. சிலாபம்

[சலாபம் → சிலாபம்]

சிலாபேசி *šilā-pēši,* பெ. (n.) சிவப்பு நெருஞ்சி; red cow-thorn.

சிலாபேதி *šilābēdi,* பெ. (n.) 1. செப்பு; trailing indigo. 2. கலப்பு வெள்ளி; inferior silver (சா.அக.).

சிலாம்பு *šilāmbu,* பெ. (n.) 1. சிறாம்பு (இ.வ.); splinter. 2. கூடை முடைவதற்குரிய மூங்கிற் சிம்பு; splint.

மறுவ. சிலும்பு; சிராய்

[சிலும்பு → சிலம்பு → சிலாம்பு]

சிலாம்பேதம் *šilāmbēdam,* பெ. (n.) 1. சிறு பூனைக்காலி; common cowich, cowhage. 2. கல்லுருவி; gravel plant (சா.அக.).

சிலாமணி[1] *šilāmaṇi,* பெ. (n.) செல்லக்கூடியது; that which is in currency.

U. calāoni.

[செலாவணி → சிலாவணி → சிலாமணி]

சிலாமணி[2] *šilāmaṇi,* பெ. (n.) கனிக்கல் வகை (வின்.); a variety of gypsum.

[சிலை → சிலா. சிலா + மணி]

சிலாமதம் *šilā-madam,* பெ. (n.) 1. பிறவி வைப்பு நஞ்சு வகையுளொன்று; a kind of mineral poison. 2. கன்மதம் (சங்.அக.); rock alum.

[சிலை → சிலா. சிலா + மதம்]

சிலாமுகம் *šilā-mugam,* பெ. (n.) வண்டு (பிங்.); bee.

[சில் → சிலா + முகம். துளையுடைய கையை முகத்திற் கொண்ட வண்டு. சுல் - துளைத்தல் கருத்து வேர்]

சிலாமேனி *šilā-mēṉi,* பெ. (n.) திருமால் உருவமாகக் கொண்டு பூசித்தற்குரிய கண்டகிச் சிலை; black fossil ammonite worshipped as a form of Tirumāl chiefly found in the silver Gandak.

சிலார்[1] *šilār,* பெ. (n.) 1. சச்சரவு, பூசல், சண்டை; quarrel. 2. குழப்பம் (வின்.); confusion. 3. தொல்லை; trouble.

சிலார்[2] *šilār,* பெ. (n.) நன்கொடை; reward, recompense.

U. sila.

சிலாரு *šilāru,* பெ. (n.) குழப்பம் (யாழ்.அக.); confusion.

சிலாலம் *šilālam,* பெ. (n.) சிறுநீரகத்தில் உண்டாகும் கல்லை நீக்கச் செய்யும் அறுவை மருத்துவம்; the operation of cutting into the bladder in order to extract a calculus of stone (சா.அக.).

சிலாவி[1] *šilāvi,* பெ. (n.) உத்தரத்துக்கு மேல் கூரையைத் தாங்குவதற்கான வளைவு (C.E.M); collar-piece.

சிலாவி[2] *šilāvi,* பெ. (n.) *சிலாவிந்து பார்க்க;* see *šilā-vindu.*

சிலாவி[3] *šilāvi,* பெ. (n.) *சிற்பி;* artisan.

Skt. šilpin

சிலாவி[4] *šilāvi,* பெ. (n.). கட்டடவுறுப்பு வகை *(இ.வ.);* a part of a building.

சிலாவிந்து *šilāvindu,* பெ. (n.) *கல்நார் (யாழ்.அக.);* asbestos.

Skt. šilābindu

சிலாவு[1]**-தல்** *šilāvu-,* 5 செ.கு.வி. (v.i.) *சுழலுதல் (வின்.);* to whirl, revolve.

[சலவு → சலாவு → சிலாவு-,]

சிலாவு[2]**-தல்** *šilāvu-,* 5 செ.கு.வி. (v.i.) *வட்டமாய் வார்த்தல் (இ.வ.);* to pour circularly.

[சலவு → சலாவு → சிலாவு-,]

சிலிசிமம் *šili-šimam,* பெ. (n.) *சிறிய மீன்;* a small fish *(சா.அக.).*

சிலிட்டம் *šilittam,* பெ. (n.) *1.* செறிவு *(தண்டி. 15; உரை.);* compactness. *2.* *மணிச்சுருக்கம்;* terseness. *3.* *இரட்டுற மொழிதலுளொன்று;* that which admits of two or more meanings. சிலிட்ட வுருவகம்.

Skt. šlista

[சில் = நெருக்கம். சில் → சிலிட்டம்]

சிலிந்தியரிசி *šilindi-y-ariši,* பெ. (n.) சிலந்தியரிசி *(சங்.அக.)* பார்க்க; see *šilandi-y-ariši.*

[சிலந்தியரிசி → சிலிந்தியரிசி]

சிலிபதம் *šilipadam,* பெ. (n.) *ஆனைக்கால் நோய்;* elephantiasis *(சா.அக.).*

சிலிம்பி *šilimbi,* பெ. (n.) *கருஞ்சிலந்தி மர வகையுளொன்று;* a kind of pear tree *(சா.அக.).*

[சிலம்பி → சிலிம்பி]

சிலியாக்கை *šili-y-ākkai,* பெ. (n.) *சிலியானை பார்க்க;* see *šili-y-āṉai (சா.அக.).*

சிலியானை *šili-y-āṉai,* பெ. (n.) *முடக்கொற்றான் (மலை.);* balloon vine.

சிலிர்[1]**-த்தல்** *šilir-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* *தளிர்த்தல் (திவா.);* to sprout, shoot. *2.* *உடல் புல்லரித்தல்;* to get the goose-skin, from intense emotion.

E: shiver

[உல்லரி = தளிர். உல்லரி → (உலிர்) → இலிர். இலிர்த்தல் = தளர்த்தல். இலிர் → சிலிர்]

சிலிர்[2]**-த்தல்** *šilir-,* 4 செ.குன்றாவி. (v.t.) *மயிர் கூச்செறிதல்;* to bristle, as the hair on the body. "மெய்ம்மயிர் சிலிர்த்த தன்றே" *(கம்பரா. மிதிலை. 98).*

[இலிர் → சிலிர்]

சிலிர்[3]**-த்தல்** *šilir-,* 4 செ.கு.வி. (v.i.) *சில்லிடுதல் (வின்.);* to be chilled, to run cold,as blood.

E. chill

[சில் → சிலிர்-,]

சிலிர்[4] *šilir-,* பெ. (n.) *மரவகையுளொன்று (தொல். எழுத்து. 363, உரை.);* a kind of tree.

சிலிர்சிலிர்-த்தல் *šilir-šilir-,* 4 செ.கு.வி. (v.i.) *மெய்சிலிர்த்தல்;* to get the goose-skin, from intense emotion. "திருமேனி திகழநோக்கிச் சிலிர்சிலிர்த்து" *(திருவாச. 27, 8.).*

[சிலிர் → சிலிர்சிலிர்-,]

சிலிர்ப்பு *šilirppu,* பெ. (n.) *குளிராலோ அச்சத்தாலோ மயிர் குத்திட்டு நிற்றல்;* bristiling of the hair occasioned by cold or fear *(சா.அக.).*

[சில் → சிலிர் → சிலிர்ப்பு]

சிலிரிடல் *šiliridal,* பெ. (n.) *அச்சத்தினால் உடம்பு குளிர்கை;* becoming chill through fear *(சா.அக.).*

[சில் → சிலிர் + இடல்]

சிலீபதம் *šilīpadam,* பெ. (n.) *யானைக்கால் நோய் (யாழ்.அக.);* elephantiasis.

சிலீமுகக்கை *šilīmuga-k-kai,* பெ. (n.) *பெரு விரலின் உகிர் நுனியினைச் சுட்டு விரலின் முன்வரை ஊன்றி, ஏனைய விரல்களின் உகிர் நுனிகளை உள்ளங்கையிலூன்றும் முத்திரை வகை (பரத. பாவ. 27);* hand-pose in which the tip of the thumb touches the first line of the

forefinger and the tips of the other fingers touch the palm.

சிலீமுகம் *šilīmugam,* பெ. (n.) 1. அம்பு; arrow. "சிலையிது சிலீமுகங்க ளிவை" (பாரத. திரௌ. 31). 2. வண்டு (பிங்.); bee. 3. முலைக்கண் (பிங்.); nipple of woman's breast. 4. போர் (யாழ். அக.); battle, fight.

சிலீர்சிலீரெனல் *šilīr-šilīr-eṉal,* பெ. (n.) சிலீரெனல் பார்க்க; see *šilīr-eṉal.* "ரோம குச்சு நிறைந்து சிலீர் சிலீரென" (திருப்பு. 296).

[சிலீர் + சிலீர் + எனல்]

சிலீரிடு-தல் *šilīriḍu-,* 20 செகுவி. (v.i.) குளிர்ந்து போதல்; to become chill.

[சில்லெனல் = குளிர்தல். சில் → சிலிர் → சிலீர் + இடு-,]

சிலீரெனல் *šilīr-eṉal,* பெ. (n.) 1. குளிரா லுண்டாம் உணர்ச்சிக் குறிப்பு; onom. expr. of being benumbed with cold, being chill. 2. மகிழ்ச்சிக் குறிப்பு ; onom. expr. of getting the goose-skin. "மெய்யுஞ் சிலீரென்ன" (பணவிடு. 324).

[சில் → சிலிர் → சிலீர் + எனல்]

சிலு[1]-த்தல் *silu-,* 4 செகுவி. (v.i.) 1. பதமாதல்; to be properly boiled, as rice. "செவ்வித் தினையரிசியால் ஆக்கின சிலுத்த சோற்றை" (பெரும்பாண். 168, உரை). 2. சோறு பதனழிதல் (தஞ்சை.); to be spoiled, as cooked rice. 3. சோறளிதல் (யாழ்ப்.); to overboil, as rice. 4. கனிதல் (யாழ்ப்); to ripen as fruits. 5. சினத்தல் (இ.வ.); to get angry. 6. விள்ளுதல் (இ.வ.); to open split. 7. குலுங்கக் காய்த்தல் (வின்.); to bear fruit in abundance, as a tree.

[சில் → சிலு-,]

சிலு[2]-த்தல் *šilu-,* 4 செ.குன்றாவி. (v.t.) சிறிது சிறிதாய்ச் சொரிதல் (வின்.); to pour in small quantities, as grain; to pour in drops, as fluid.

[சில் → சிலு-,]

சிலுக்கன் *šilukkaṉ,* பெ. (n.) தொந்தரை செய்பவன் (இ.வ.); troublesome or quarrelsome man.

ம. சிலுகன்

[சிலுகு → சிலுக்கு → சிலுக்கன்]

சிலுக்கி *šilukki,* பெ. (n.) வல்லாரை; Indian penny wort (சா.அக.).

சிலுக்கு[1]-தல் *šilukku-,* செ.கு.வி. (v.i.) சிக்கு[1]-தல் பார்க்க; see *šikku-.*

க. சிலுகு, சிலிகு, சிக்கு

[இல் → இல்லி = பொள்ளல், துணை. இல் → சில் → சில்கு → சிலுக்கு = துளையுள் புகுதல், மாட்டுதல், சிக்குப்படுதல்]

சிலுக்கு[2]-தல் *šilukku-,* 5 செ.கு.வி. (v.i.) பகட்டுதல்; to make a display. "செய்யுள் பலகற்றுச் சிலுக்கி யிறுமாந்து" (பஞ்ச. திருமுக 884).

[சில் → சிலு → சிலுகு → சிலுக்கு-,]

சிலுக்கு[3] *šilukku,* பெ. (n.) 1. இரும்பு வளையம் இரும்பு மோதிரம் (வின்.); iron staple, iron-ring. 2. வாள் முதலியவற்றின் பல் (வின்.); tooth of a saw, barb of an arrow. 3. சிலும்பு (வின்.); splint or fibre rising on a smooth surface of wood. 4. வெட்டிய சிறுதுண்டு (வின்); chipping, cutting. 5. சிலுக்கு வெட்டு (இ. வ.) பார்க்க; see *šilukku-veṭṭu.*

[கல் → சில் = துண்டு. வட்டம், வட்டப் பொருள். சில் → சிலுக்கு = வெட்டின துண்டு]

சிலுக்கு[4] *šilukku,* பெ. (n.) 1. தொந்தரவு (வின்.); trouble. 2. சண்டை; quarrel.

க. சிலுகு

[சிலுகு → சிலுக்கு]

சிலுக்குவெட்டு *šilukku-veṭṭu,* பெ. (n.) சிறு காயம் (வின்.); slight notch, gash or wound (சா.அக.).

[சிலுக்கு + வெட்டு]

சிலுகன் *šilugaṉ,* பெ. (n.) சிலுக்கன் (யாழ்.அக.) பார்க்க; see *šilukkaṉ.*

[சிலுகு → சிலுக்கன் → சிலுகன்]

சிலுகி *šilugi,* பெ. (n.) கலகக்காரி (வின்.); quarrelsome woman.

[சிலுகன் → சிலுகி]

சிலுகிடு-தல் *šilugiḍu-*, 20 செகுவி. (v.i.) 1. நிலை குலைதல்; to become disorderly, confused. "ஸம்ஸாரம் . . . சிலுகிடாதபடி . . . வேலியிட்டு வர" (குருபரம். 151, ஆறா.). 2. சண்டையிடுதல்; to quarrel. "சிலுகிடுகையே . . . ஸ்வபாவமான. . ஸ்திரீகள்" (ஈடு, 6.7:4, ஜீ). 3. கூச்சலிடுதல் (ஈடு. 1,8,5); to raise a hue and cry.

[சிலுகு + இடு-,]

சிலுகு[1] *šilugu*, 5 செ.குவி. (v.i.) 1. துன்பம் (பிங்.); trouble, affliction. 2. குழப்பம்; perplexity. "அறச்சிலு குடைத்து நின்றிற முரைக்கின்" (உத்தரரா. தோத்திர. 22). 3. சண்டை (ஈடு, 6:7:4, ஜீ); quarrel. 4. கூச்சல்; hue and cry. "கள்ளனென்று சிலுகிட்ட வாறே" (ஈடு, 1:8:5). 5. குறும்பு (இ.வ.); mischief. 6. தடை; obstacle. "கன்மலோகச் சிலுகும்" (சுந்தரந். 47). 7. தோல்வி (வின்.); failure.

ம., க., தெ. சிலுகு

சிலுகு[2] *šilugu*, பெ. (n.) சிலுகுபாக்கி பார்க்க; see *šilugu-pākki*.

தெ. சிலுகு

சிலுகுசிலுகெனல் *šilugu-silugenal*, பெ. (n.) 1. விரைவுக்குறிப்பு (யாழ்ப்.); onom. expr. of rapidity. 2. இடைவிடாது பேசுதற்குறிப்பு; garrulousness. "சிலுகுசிலுகென்னும் ஸ்திரீகள்" (ஈடு, 6:7:4).

[சிலுகு + சிலுகு + எனல்]

சிலுகுபாக்கி *šilugu-pākki*, பெ. (n.) கையிருப்பு (C.G.); balance on hand.

[சிலுகு + பாக்கி]

சிலுகை *šilugai*, பெ. (n.) கஞ்சாக்குடுக்கை; bowl for smooking gañja.

சிலுசிலு-த்தல் *šilu-šilu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. ஒலித்தல் (யாழ்ப்.); to sound, as in frying. 2. படபடவென்று பேசுதல்; to rattle away, talk without restraint. "சிற்றுணர்வோ ரென்றுஞ் சிலுசிலுப்பர்" (நீதிவெண். 35). 3. சினத்தல் (இ.வ.); to get angry. 4. சுறீரென்று ஒலித்தல் (வின்.); to make a hissing noise, as water in contact with a burning wick. 5. தூறுதல் (வின்.); to rain gently, drizzle. 6. சுரக்குளிர் வருதல்; to feel chill. 7. குளிர்ந்திருத்தல்; to be cool. 8. மயிர்க் கூச்செறிதல்; bristling (சா.அக.).

சிலுசிலுப்பான் *šilu-šiluppāṉ*, பெ. (n.) அம்மை நோய் வகை (யாழ்.அக.); a kind of small pox.

[சிலுசிலு → சிலுசிலுப்பான்]

சிலுசிலுப்பு *šilu-šiluppu*, பெ. (n.) 1. குளிர்ச்சி; cold, chill. 2. சிறுசினம் (இ.வ.); querulousness. 3. குறும்பு (இ.வ.); mischief.

[சிலுசிலு → சிலுசிலுப்பு]

சிலுசிலெனல் *šilu-šilenal*, பெ. (n.) 1. ஒலிக் குறிப்பு வகை (யாழ்ப்.); onom. expr. of chattering, crackling. 2. குளிரால் நடுங்குதற் குறிப்பு; shivering, shaking with cold.

[சிலுசிலு + எனல்]

சிலுநீர் *šilu-nīr* பெ. (n.) இலையில் தங்கி விழும் மழைத்துளி (யாழ்.அக.); rain drop dripping from leaves.

[சில் → சிலு + நீர்]

சிலுப்பட்டை *šiluppaṭṭai*, பெ. (n.) 1. அலப்புகிறவன் (இ.வ.); chatterbox, applied especially to children. 2. குறும்பு செய்யுஞ் சிறுவன்; mischievous brat.

தெ. சிலிபி.

[சிலு + பட்டை]

சிலுப்பல் *šiluppal*, பெ. (n.) சிலும்பல் (வின்.); roughness, as of a surface.

[சிலும்பு → சிலும்பல்; சிலும்பல் → சிலுப்பல்]

சிலுப்பா *šiluppā*, பெ. (n.) 1. தொங்கும் பக்கக் குடுமி; side locks on the temples, especially of boys and young men. 2. கத்தரித்துக்கொண்ட தலைமயிர் (யாழ்ப்.); cropped hair.

U. zulf.

சிலுப்பிக்குடல் *šiluppikkuḍal*, பெ. (n.) மணிக்குடலின் ஒரு பகுதி; a part of the small intestines.

[சிலுப்பு → சிலுப்பி + குடல்]

சிலுப்பு[1]**-தல்** *šiluppu*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மயிர் நெறிக்கச் செய்தல் (வின்.); to bristle,

erect the hair, raise the quills, as a porcupine, to dishevel. 2. *சுழற்றுதல்;* to whirl round. "*ஒரு செண்டு சிலுப்பி*" (*திவ்.பெரியதி. 10:8:2*) 3. *அசைத்தல்;* to shake, as one's head in disdain or displeasure. *ஏன் தலையைச் சிலுப்புகிறாய்?* 4. *தயிர்கடைதல் (உவ.);* to churn. 5. *கலக்குதல் (வின்.);* to stir, agitate.

[சில் → சிலு → சிலுப்பு]

சிலுப்பு[2] *śiluppu,* பெ. (n.) 1. *சினங் காட்டுகை;* show of anger. '*இவன் உம்முடைய சிலுப்புக் கெல்லாம் அஞ்சுபவனல்லன்*'. 2. *அடங்கா நடை (இ.வ.);* unruly behaviour.

[சில் → சிலு → சிலுப்பு]

சிலும்பல் *śilumbal,* பெ. (n.) 1. *சிலிர்த்திருக்கை;* roughness, shagginess, as the body, of bear dog. 2. *சீலை முதலியவற்றின் கரடு;* uneveness, as of cloth, uneveness in thatching, matting or hedging. 3. *துணி முதலியவற்றின் பீறல்;* tear, as in garment.

[சிலு → சிலுப்பு → சிலுப்பல் → சிலும்பல்]

சிலும்பலி *śilumbali,* பெ. (n.) *அழகற்ற, அருவருக்கத்தக்க உருவினள் (இ.வ.);* ugly woman.

[சிலுப்பல் → சிலும்பல் → சிலும்பலி]

சிலும்பி *śilumbi,* பெ. (n.) *கஞ்சாக் குடிக்கும் குழாய்;* pipe for smoking bhang.

U. cilm.



சிலும்பு[1]**-தல்** *śilumbu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. *மயிர் முதலியன சிலிர்த்தல்;* to stand on end, as man's hair, porcupine's quill, etc., "*உன்னரு மயிர் சிலும்ப*" (*திருவாலவா. 27:39*). 2. *கட்டை முதலியவற்றில் தும்பு முதலியன வெளிப் பட்டு நிற்றல்;* to have an uneven surface by the rise of splinters, fibres etc. '*கட்டை சிலும்பி யிருக்கிறது*' (*உ. வ.*). 3. *பெருகி வருதல்;* to flow out, gush out. "*மார்பங் குருதி சிலும்பிட*" (*உபதேசகா. அயமுகி. 71*). 4. *ஒலித்தல் (சூடா.);* to sound. 5. *கலங்குதல் (வின்.);* to be agitated, excited; to be shaken. 6. *அசைதல்;* to move restively. '*மாடு சிலும்புகிறது*' (*உ. வ.*).

[சில் → சிலு → சிலுப்பு → சிலும்பு-,]

சிலும்பு[2] *śilumbu,* பெ. (n.) *மரச்சிறாம்பு;* small splinter or splint rising on the smooth surface of wood.

சிலும்பு[3] *śilumbu,* பெ. (n.) *களிம்பு (வின்.);* verdigris.

க. கிலுபு; தெ. சிலுமு; பட. கிலும்பு

சிலும்பு[4] *śilumbu,* பெ. (n.) *சுருட்டு வகை;* hookha. "*பீடி சிலும்பு குடாக்கும் பிடிப்பார்கள்*" (*மதி.க. ii, 116*).

சிலும்பு[5] *śilumbu,* பெ. (n.) *மீன் முதுகிலுள்ள துடுப்பு போன்ற முள்ளெலும்பு;* the spinal portion of the dorsal in the fish (*சா.அக.*).

சிலுவட்டை *śiluvaṭṭai,* பெ. (n.) *சிறுமையான-வன்-வள்-து;* anything small, a little creature, an insignificant person or thing. '*சிலு வட்டைகளோடு சேராதே*' (*இ. வ.*).

[சில் → சிலு + அட்டை]

சிலுவணி *śilu-vaṇi,* பெ. (n.) *காதணி வகையு ளொன்று (மீனவ.);* a kind of ear-ornament.

[சில் → சிலு + அணி]

சிலுவல் *śiluval,* பெ. (n.) 1. *கந்தை (யாழ்ப்.);* rags, tatters. 2. *எளிமை (யாழ்ப்.);* poorness, thinness. 3. *அழகின்மை (யாழ்ப்.);* ugliness. 4. *ஒழுங்கின்மை (யாழ்.அக.);* disorderliness. 5. *மதிப்புரவின்மை (யாழ்.அக.);* want of decorum, 6. *தகுதியின்மை;* impropriety. 7. *ஒழுங்கற்றவள் (யாழ்ப்.);* slut.

[சில் → சிலு → சிலுவல்]

சிலுவலி *śiluvali,* பெ. (n.) இழிமகள் (யாழ்ப்.); slut.

[சிலுவல் → சிலுவலி]

சிலுவாணம் *śiluvāṇam,* பெ. (n.). சில்வானம்[1]-2 (C.G.) பார்க்க; see *silvāṉam*[1], -2.

[சில்வானம் → சிலுவாணம்]

சிலுவைக்கடப்பு *śiluvai-k-kaḍappu,* பெ. (n.) கடப்ப நெல் வகை; a kind of paddy.

[சிலுவை + கடப்பு]

சிலேயம்[1] *śilēyam,* பெ. (n.) கல்போலக் கடினமாயிருப்பது (சங்அக.); anything hard like a stone.

[சிலை → சிலையம் → சிலேயம்]

சிலேயம்[2] *śilēyam,* பெ. (n.) மலையில் விளையும் மூலிகை, கனிமம் முதலானவை; herbs, mineral etc, obtained from a mountain (சாஅக.).

சிலேற்பம் *śilēṟpam,* பெ. (n.) நறுவிலி மரம்; sebesten tree (சாஅக.).

சிலேற்பனநாடி *śilēṟpaṉa-naḍi,* பெ. (n.) மணிக்கட்டிலுள்ள மூவகை நாடியுளொன்று; one of the three beats, felt at the wrist (சாஅக.).

சிலேற்பின்பால் *śilēṟpiṉ-pāl,* பெ. (n.) தேங்காய்ப்பால்; milky juice of coconut milk (சாஅக.).

சிலை[1]-த்தல் *śilai-,* செகுவி. (v.i.) 1. ஒலித்தல்; to sound, resound. "காவலர் கொடுங்கோடு சிலைப்ப" (பெருங். உஞ்சைக். 58:25). 2. முழங்குதல்; to roar, bellow. "ஆமா நல்லேறு சிலைப்ப" (திருமுரு. 315). 3. யாழொலித்தல் (திவா.); to twang, as musical instrument. 4. கொட்டுதல்; to beat, as a drum. "வலி துரந்து சிலைக்கும்.....துடி" (புறநா.170). 5. சினங் கொள்ளுதல்; to be angry. "செற்றங் கொண்டாடிச் சிலைத் தெழுந்தார்" (பு.வெ.3:7).

[சில் → சிலை-,]

சிலை[2]-த்தல் *śilai-,* 4 செகுவி. (v.i.) பின்னிடல்; to retreat. "செருச்சிலையா மன்னர்" (பு.வெ. 1:16).

சிலை[3] *śilai,* பெ. (n.) 1. முழக்கம்; sound, roar, bellow, twang. "கடுஞ்சிலை கழறி" (பதிற்றுப். 81:4). 2. பாடும்போது கலகலவென்றிலங்கும் ஒலி; rattling sound (of singing). 3. வில்; bow. "கொடுஞ்சிலைக் கைக்கூற்றினை" (பு. வெ. 1:10). 4. சிலையோரை (தனுராசி) (விதான. யாத். 13.); sagittarins of the zodiac. 5. சிலை (மார்கழி) மாதம்; the month Mārgaḻi. "சிலையில் வெங்கதிரைத் திங்க ளொன்றிய" (பாரத. முகூர்த்தங்கேள். 4.). 6. பத்தொன்பதாவது விண்மீனான குருகு (சூடா.); the 19th Mūla nakṣatra. 7. வானவில்; rainbow "சிலைத் தராகலம்" (புறநா.61:14). 8. ஒளி; lustre, light. "சிலையிலங்கு மணிமாடத்து" (திவ். பெரியதி. 3.9:4). 9. வால்; tail. "பைஞ்சிலைச் சேலை" (கல்லா. 26:24).

[சில் → சிலை]

சிலை[4] *śilai,* பெ. (n.) 1. கல் (பிங்.); rock, stone. 2. மலை; hill, mountain. "வணங்காச் சிலையளித்த தோளான்" (பு.வெ. 2:12). 3. அம்மி; horizontal stone for macerating spices. "தரைத் தடஞ் சிலையதாக" (கந்தபு. தாரகன் வதை. 48). 4. கலுவம்; apothecary's stone-mortar. "இரதமாங் கொருசிலையிலிட்டு" (கந்தபு. மார்க்கண். 132). 5. சிலை வாகை; stone sirissa. "வணங்குசிலைச் சாபம்" (பெருங். மகத. 20. 8). 6. மனோசிலை என்னும் செய் நஞ்சு; a mineral poison. 7. சூதமென்னும் செய்நஞ்சு; a mineral poison. 8. கருநிறம்; black colour. 9. உஞ்சை மர வகையுளொன்று; a kind of sirissa tree.

[சில் → சிலம்பு, எதிரொலிக்கும் மலை. ஒலிக்கும் சிலம்பக் கழி. சில் → சிலை = மலை, கல்]

சிலை என்பதற்கு வடமொழியில் கல் என்னும் பொருட்படும் வேர் அல்லது முதனிலை இல்லை. மானியர் வில்லியம்சு தம் அகர முதலியில், ஒருகா. 'சி' மூலமாயிருக்கலாம் என்பர். 'சி' என்பதற்கு நல்கு, பொந்திகை (திருப்தி)ப்படுத்து, கூராக்கு என்னும் பொருள்கள்தாம் உண்டு. அவை பொருந்தா. தமிழிலும் திட்டமாகவோ, தேற்றமாகவோ மூலங்காட்டுதற்கில்லை. சிலை என்னுஞ் சொற்குச் சில் என்பதுதான் மூலமாயிருத்தல் வேண்டும்.

இனி, சிலை என்பது சிலம்பு என்பது போல் மலை என்றும் தமிழில் பொருள் கொண்டிருப்பதால், மலை என்னும் பொருளினின்றே கல் (மலைப் பிஞ்சு) என்னும் முதலாகுபெயர்ப் பொருளும் தென்மொழியிலும் வடமொழியிலும் தோன்றிற்று என்று கொள்ளவும் இடமுண்டு. (நாகைத் தமிழ்ச் சங்க மறைமலையடிகள் நினைவு மலர் 1969).

சிலை[5] *šilai,* பெ. (n.) **நினைவுகூர்தற்கு ஒருவரைப் போல் செய்துவைத்த உருவம்;** statue, idol.

[சுலவுதல் = வளைதல், துண்டு. சுல் → சில் → சிலை = வெட்டின அல்லது செதுக்கின உருவம்]

சிலை என்னும் சொல் வடமொழியில் கல் அல்லது பாறை என்றே பொருள்படும். silex என்னும் இலத்தீன் சொல்லும் அதனின்று திரிந்த silica என்னும் ஆங்கிலச் சொல்லும் வன்கல்லை (second stone) யன்றி உருவச் சிலையைக் குறியா. நாம்தான் அதைக் கருவி யாகுபெயராய் உருவம் என்னும் பொருளில் வழங்குகின்றோம்.

சிலா சாசனம் = கல்லில் எழுதப்பட்ட கட்டளை, கற்பட்டயம், விக்கிரகம், மூர்த்தம் என்பனவே உருவத்தைக் குறிக்கும் வட சொற்கள். மூர்த்தம் உடையவன் மூர்த்தி. ப்ரதிமா என்பது தென் சொற்றிரிபு.

நாம் கற்சிலை என்பதுபோல் வடவர் சிலாசிலா என்ன முடியாது. இருப்புச் சிலை, வெள்ளிச்சிலை, செப்புச்சிலை, பொற்சிலை, வெண்கலச் சிலை என்று உருவப் பொருளில் தான் வழங்குகின்றோம். கற்பொருளில் என்றும் வழங்குவதில்லை. தெய்வ உருவம் தெய்வச் சிலை எனப்படும். (நாகை தமிழ்ச் சங்க மறைமலையடிகள் நினைவு மலர், 1969).

சிலை என்னும் உருவப்பொருட் சொற்குத் தமிழ் மூலம் சற்று வலிந்து கொள்வதாகவே இருப்பினும் பின்வரும் ஏதுக்களால் அதைத் தென்சொல் என்று கொள்ளவும் இடமுண்டு. 1. வடமொழியில் சிலை என்னும் சொற்கு மூலமில்லை. ஆரியர் இந்தியாவிற்கு வரும் முன்பே தமிழகத்தில் உருவக் கலை இருந்தது. 2. உருவம், படிமை என்னும் தென்சொற்களும் வடசொல்லாகக் காட்டப்படுகின்றன. அவை போன்றே சிலை என்பதும். 3. வேத ஆரியர்க்கு வேள்வி வழிபாடேயன்றி உருவ வணக்கமில்லை. 4. தென்னாடு வந்த பின்னரே தமிழரிடமிருந்து மேற்கொண்டனர். 5. சிலா என்னும் வடசொல்லில் இருமொழிப் பொதுவெழுத்தேயன்றி வடமொழிச் சிறப்பெழுத்தில்லை. 6. தமிழ் ஐகாரவீறு வடமொழியில் ஆகார ஈறாய்த் திரிவது இயல்பே. எ.டு: மாலை → மாலா; வடை → வடா. 7. சிலா என்னுஞ் சொல் இருக்கு வேதத்திற்குப் பிற்பட்ட வடநூல்களிலேயே ஆளப் பட்டுள்ளது. 8. சிலம்பு, சிலை என்னும் இரு (மலைப் பொருட்) சொற்களும், தமிழில் சில் என்னும் ஒரே மூலத்தையும், ஒலித்தல் என்னும் ஒரே வேர்ப்பொருட்கரணியத்தையும் கொண்டுள்ளன. 9. தமிழ் மேலை ஆரியத் திற்கும் அடிப்படைச் சொற்களை உதவிய பெருவளமொழி.

சிலை[6] *šilai,* பெ. (n.) *சினம்;* anger. "பொய்ச்சிலைக் குரலேற் றெருத்தமிறுத்த" *(திவ். பெருமாள். 2:5, வியா. பக். 33).*

[சில் → சிலை]

சிலை[7] *šilai,* பெ. (n.) *1.* **புண்புரை;** sore or wound or ulcer. *2.* **புண்ணின் உட்டுளை;** sinus of an ulcer or abscess *(சா.அக.).*

சிலைக்கல் *šilai-k-kal,* பெ. (n.) *1.* **செங்கற் கிட்டம்;** over burnt brick. *2.* **உருகிய கல்;** molten rock of the volcanic region. *3.* **காகச் சிலை;** black load stone. *4.* **ஈரக்கல்** *(யாழ்.அக.);* corundum.

[சிலை + கல்]

சிலைக்கல்லிச்சி *šilai-k-kallicci,* பெ. (n.) **கற்பாங்குள்ள இடத்தில் முளைக்கும் இச்சி மரம்;** yellow barked fig found grown in stoney soil *(சா.அக.).*

[சிலை + கல் + இச்சி]

சிலைக்காரம்[1] *šilai-k-kāram,* பெ. (n.) செந்நாயுருவி; a red variety of nāyuruvi *(சா.அக.).*

[சிலை + காரம்]

சிலைக்காரம்[2] *šilai-k-kāram,* பெ. (n.) வெடிகாரம் *(மூ.அ.);* a kind of salt - Caustic potash.

[சிலை + காரம்]

சிலைக்காரி *šilai-k-kāri,* பெ. (n.) அஞ்சன செய்நஞ்சு வகையுளொன்று (யாழ்.அக.); a mineral poison.

[சிலை + காரி]

சிலைக்கால் *šilai-k-kāl,* பெ. (n.) சித்தர் பயன்படுத்திய நூற்று இருபது இயற்கை மருந்துச் சரக்கு வகைகளுளொன்று; an unknown stone, which is classified as one of the 120 kinds of natural substances in Tamil Šitta medicine (சாஅக.).

மறுவ. முடவாட்டுக்கால்

[சிலை + கால்]

சிலைக்கால்தூய்மை *šilai-k-kāl-tūymai,* பெ. (n.) வைப்பு நஞ்சு வகையுளொன்று; a kind of native arsenic (சாஅக.).

[சிலைக்கால் + தூய்மை]

சிலைக்குள்தீட்டு *šilai-k-kuḷ-tīṭṭu,* பெ. (n.) சிலையொழுக்கு பார்க்க; see *šilai-y-oḻukku* (சாஅக.).

[சிலைக்குள் + தீட்டு]

சிலைக்கெந்தி *šilai-k-kendi,* பெ. (n.) கந்தகம் சேர்ந்த கல் (யாழ்அக.); sulphur ore.

[சிலை + கெந்தி]

சிலைச்சத்து *šilai-c-cattu,* பெ. (n.) கல்மதம்; bitumen, fossil exudation.

மறுவ. சிலைநஞ்சு, சிலைத்தாது

[சிலை + சத்து]

சிலைச்சாசனம் *šilai-c-cāšaṉam,* பெ. (n.). கொடை முதலியவற்றைக் குறித்துப் பொறிக்கப்படும் கற்பட்டயம்; stone inscription.

[சிலை + சாசனம். சிலை = கல். சாசனம் = ஆவணம்]

த. சிலைச்சாசனம் → Skt. சிலாசாசனம்

சிலைச்சூதம் *šilai-c-cūdam,* பெ. (n.) எளிதில் உடையுந்தன்மையுள்ள நீலக்கல்; sulphate of antimony (சாஅக.).

[சிலை + சூதம்]

சிலைச்செம்மண் *šilai-c-cemmaṉ,* பெ. (n.) செம்மையும் மஞ்சளுங் கலந்த கற்காவி; red-ochre.

[சிலை + செம்மண்]

சிலைத்தண்ணீர் *šilai-t-taṇṇīr,* பெ. (n.) சிலைநீர் பார்க்க; see *šilai-nīr.*

[சிலை + தண்ணீர்]

சிலைத்தாசி *šilai-t-tāsi,* பெ. (n.) திருமால் உருவமாகக்கொண்டு பூசித்தற்குரிய கண்டகிச் சிலை; black fossil ammonite worshipped of a form a Tirumāl chiefly found in the river Gandak.

மறுவ. சாளக்கிராமம்

சிலைத்தைலம்[1] *šilai-t-tailam,* பெ. (n.) 1. மருந்தெண்ணெய் வகையுளொன்று; a kind of essential medicinal oil. 2. பாறை யெண்ணெய்; rock oil. 3. நிலத்தடி எண்ணெய், மண்ணெண்ணெய்; earth oil or crude oil. 4. மண் நெய்மம்; bitumen. 5. புண் புரைகளுக் கிடும் மருந்தெண்ணெய்; a medicated oil or ointment used chiefly for putrified sores (சாஅக.).

[சிலை + தைலம்]

Skt. taila → த. தைலம்

சிலைநாகம் *šilai-nāgam,* பெ. (n.) சூடாலைக் கல் (வின்.); a mineral.

[சிலை + நாகம்]

சிலைநார் *šilai-nār,* பெ. (n.) கல்நார் (சங்அக.); asbestos.

[சிலை + நார்]

சிலைநிறக்கல் *šilai-niṟa-k-kal,* பெ. (n.) கருநிறக்கல் (மாமிசசிலை) வகை (யாழ்அக.); a kind of black stone.

[சிலை + நிறம் + கல்]

சிலைநீர் *šilai-nīr,* பெ. (n.) காயம் பட்ட புண்ணினின்று வடியும் நீர்; a thin and coloured discharge issuing out from wounds, etc. (சாஅக.).

[சிலை + நீர்]

சிலைநீர்சொரி-தல் *šilai-nīr-sori-,* தொ. பெ. (n.) *புண்புரையினின்று நீர் வடிதல்;* a thin watery acrid humour or discharge from sinus of sores, wounds, ulcers etc.,

[சிலை + நீர் சொரி-,]

சிலைப்பலா *šilai-p-palā,* பெ. (n.) *கற்பலா;* stone jack *(சா.அக.).*

[சிலை + பலா]

சிலைப்பாசி *šilai-p-pāši,* பெ. (n.) பாறைகளின் மேல் படருந்தன்மையுள்ள புல்லுருவி வகையைச் சார்ந்த பூடு; rock-moss or lichen or order of cryptogenic plant *(சா.அக.).*

[சிலை + பாசி]

சிலைபாரி-த்தல் *šilai-pāri,* 4 செகுவி. (v.i.) வில் வளைத்தல் *(சீவக. 2286, உரை.);* to bend the bow.

[சிலை + பாரி-,]

சிலைப்புல் *šilai-p-pul,* பெ. (n.) *மலைப்புல்;* mountain grass *(சா.அக.).*

[சிலை + புல்]

சிலைமா *šilai-mā,* பெ. (n.) மாக்கல் *(யாழ்.அக.);* soap-stone.

[சிலை + மா]

சிலைமான்கல் *šilai-mān-kal,* பெ. (n.) அரத்தின மணிவகையுளொன்று; agate or solomon stone.

[சிலைமான் + கல்]

சிலைமூலக்காரம் *šilai-mūlak-kāram,* பெ. (n.) *படிகாரம் (சீனக்காரம்);* alum stone.

[சிலை + மூலக்காரம்]

சிலைமெழுகு *šilai-meḻugu,* பெ. (n.) *தலைச்சூட்டு வள்ளி;* Indian birth-wort.

[சிலை + மெழுகு]

சிலையடி-த்தல் *šilai-y-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) *கல்லில் உருவம் அமைத்தல் (உ.வ.);* to carve in a stone.

[சிலை + அடி-,]

சிலையரசன் *šilai-y-arasaṉ,* பெ. (n.) *மணிகளுள் அரசனாகிய வைரம் (யாழ்.அக);* diamond, as the king of stones.

[சிலை + அரசன்]

சிலையாதனம் *šilai-y-ādaṉam-,* பெ. (n.) *சிவனிய வோக நிலையு ளொன்று (தத்துவப். 109, உரை.);* a yogic posture.

[சிலை + ஆதனம்]

சிலையாவி *šilai-y-āvi,* பெ. (n.) *சிலைநார் (வின்.) பார்க்க;* see *šilai-nār.*

[சிலை + ஆவி]

சிலையிராசன் *šilai-y-irāsaṉ,* பெ. (n.) *சிலையரசன் பார்க்க;* see *šilai-y-arasaṉ.*

மறுவ. சிலையரசன்

[சிலை + இராசன்]

சிலையுஞ்சை *šilai-y-uñjai,* பெ. (n.) *நறுமண மிக்க மரவகை;* fragrant sirissa.

[சிலை + உஞ்சை]

சிலையுடம்பு *šilai-y-uḍambu,* பெ. (n.) *புண் கட்டிகள் அடிக்கடி புறப்படுதற்குரிய உடல் அமைப்பு;* bodily constitution which has a tendency to skin eruptions.

[சிலை + உடம்பு]

சிலையுருக்குக்கல் *šilai-y-urukku-k-kal,* பெ. (n.) *1. உருக்காங்கல் (யாழ்.அக.);* overburnt brick. *2. செங்கல்;* brick.

[சிலை + உருக்கு + கல்]

சிலையூஞ்சில் *šilai-y-ūñjil,* பெ. (n.) *காட்டுத் துரிஞ்சல்;* fragrant acacia.

[சிலை + ஊஞ்சில்]

சிலையெண்ணெய் *šilai-y-eṇṇey,* பெ. (n.) *புண்ணிற்கிடும் மருந்தெண்ணெய்;* medicated oil used externally for wounds *(சா.அக.).*

[சிலை + எண்ணெய்]

சிலையெழும்பு-தல் *šilai-y-eḻumbu-,* 10 செகுவி. (v.i.) *எதிரொலியுண்டாதல்;* to echo. "பறையர்கொட்டு முழக்காலும் ... பாட்டாலும் எங்கும் சிலையெழும்பிற்று" *(எங்களூர், 104).*

[சிலை³ + எழும்பு-,]

சிலையொழுக்கு *šilai-y-oḻukku,* பெ. (n.) *கல் மதம்;* bitumen exuding from rocks during summer.

சிலையோடு[1]-தல் *šilai-y-ōḍu,* 5 செ.கு.வி. (v.i.) *புரையோடுதல் (வின்.);* to burrow into the flesh, as a fistula.

[சில்லி[2] + ஓடு-,]

சிலையோடு[2]-தல் *šilai-y-ōḍu,* செ.கு.வி. (v.i.) *எதிரொலித்தல் (வின்.);* to echo, as rocks.

[சில்லி[3] + ஓடு-,]

சிலையோட்டம் *šilai-y-ōṭṭam,* பெ. (n.) *புரையோடுகை;* formation of sinuses in a wound or abscess.

[சிலை + ஓட்டம்]

சிலையோடுபுண் *šilai-y-ōḍu-puṇ,* பெ. (n.) 1. *புரையோடும் புண்;* a deep-seated sore. 2. *உள் மூல நோய்;* internal fistula *(சா.அக.).*

[சிலை + ஓடு + புண்]

சிலைவங்கம் *šilai-vaṅgam,* பெ. (n.) 1. *செய் நஞ்சு வகையுளொன்று (யாழ்.அக.);* a mineral poison. 2. *ஈயக் கல்;* lead sulphide.

[சிலை + வங்கம்]

சிலைவாகை *šilai-vāgai,* பெ. (n.) *பீலி வாகை;* stipulate srissa.

[சிலை + வாகை]

சிலைவாழை *šilai-vāḻai,* பெ. (n.) *கல் வாழை;* stone plantain.

[சிலை + வாழை]

சிலைவிந்து *šilai-vindu,* பெ. (n.) *சிலைநார் (வின்.) பார்க்க;* see *šilai-nār.*

மறுவ. கல்நார்

[சிலை + விந்து]

சிலைவைரம் *šilai-vairam,* பெ. (n.) *வயிரக்கல் (வின்.);* diamond.

[சிலை + வைரம்]

சிவ்வல் *šivval,* பெ. (n.) *கடற்பாசி (மூ.அ);* sea-weed.

சிவ்வெனல்[1] *šiv-v-eṉal,* பெ. (n.) *சிவத்தற் குறிப்பு;* expr. of being red. *'கண் சிவ்வென் றிருந்தது' (நெல்லை.).*

[சிவ் + எனல்]

சிவ்வெனல்[2] *šiv-v-eṉal,* பெ. (n.) 1. *விரைவுக் குறிப்பு;* onom. expr. of being quick. 2. *இறுகற் குறிப்பு (இ.வ.);* being tough, firm or viscid.

சிவ-த்தல் *šiva-,* 3 செ.கு.வி. (v.i.) 1. *செந்நிற மாதல்;* to redden, blush, to be red. *"காமர் நெடுங்கண் கைம்மீச் சிவப்ப" (பெருங். இலாவாண. 14, 63).* 2. *சினத்தல்;* to become angry. *"தேற்றாய் சிவந்தனை காண்பாய்நீ தீ தின்மை" (கலித். 91).*

[சிவ் → சிவ → சிவ-. (வே.க.)]

சிவக்குறி *šiva-k-kuṟi,* பெ. (n.) *சிவனியர் வழிபடும் இலிங்க வடிவமான சிவனுருவம்;* cylindrical stone rounded off at the top worshipped by saivites as an emblem of Šiva. *"தகுசிவக்குறி யர்ச்சிப்பர்" (சூத. முத்தி. 1:18: சங். அக.).*

ம. சிவக்குக

[சிவ் → சிவ → சிவம் + குறி (வே.க.)]

சிவகணம் *šiva-gaṇam,* பெ. (n.) *சிவபெருமானுடைய திருவருட் கூட்டம்;* Šivan's celestial hosts. *"சிவகணத்துளோர். . . சீறி" (உபதேசகா. உருத்திரா. 109).*

[சிவன் + கணம்]

சிவகணமுதல் *šiva-gaṇa-mudal,* பெ. (n.) *சிவகணத் தலைவரான நந்திதேவர் (பிங்.);* Nandi as the leader of Šivan's hosts.

[சிவகணம் + முதல். கள் → கண். கண்ணுதல் = பொருந்துதல். கண் → கண. கணத்தல் = கூடுதல். கண → கணம் = கூட்டம், படைப்பகுதி]

சிவகதி *šivagadi,* பெ. (n.) *வீடுபேறு (முத்தி);* salvation, final deliverance of the soul. *"சிவகதி நாயகன்" (சிலப். 10: 180).*

[சிவம் + கதி]

சிவகதிக்கிறை *šivagadi-k-kiṟai,* பெ. (n.) *சிவகதிக்குத் தலைவனான அருகன் (சூடா.);* Arugan, as lord of Šiva-gadi.

[சிவகதிக்கு + இறை]

சிவகம் *šivagam,* பெ. (n.) 1. *சாதிக்காய் (மலை.);* true-nutmeg. 2. *நாய்ச்சீரகம்;* purple fleabane.

சிவகரணம் *śiva-garaṇam,* பெ. (n.) ஆதனின் செயலற்ற நிலையில் தன்முனைப்பறுக்கும் (ஆணவம்) இறையின் செயல்; action of god manifested in a person who has attained the stage of complete self effacement.

[சிவம் + கரணம்]

சிவகரந்தை *śiva-karandai,* பெ. (n.) கரந்தை வகை (பதார்த்த. 314); fever basil.

[சிவம் + கரந்தை]

சிவகாமி *śiva-gami,* பெ. (n.) சிதம்பரத்தில் வழிபடப் பெறும் அம்மன்; Pārvadi as worshipped at Chidambaram. "சிவகாமி நல்கிய சேயே" (திருப்பு. 553).

[சிவம் + காமி]

சிவகீதை *śiva-kīdai,* பெ. (n.) அகத்தியர் செய்ததாகக் கூறப்படும் தமிழ் நூல் (சி.சி. 8:16, சிவஞா.); a devotional work in Tamil attributed to Agattiyar.

[சிவன் + கீதை]

Skt. gīta → த. கீதை

சிவகூர்ச்சம் *śiva-kūrccam,* பெ. (n.) ஆவினின்று பெறப்படும் ஐவகைப் பொருள்கள்; mixture of the five products of the cow.

மறுவ. ஆனைந்து (பஞ்சகவ்யம்)

ஐம்பொருள்களாவன: பால், தயிர், நெய், மூத்திரம், சாணம்.

சிவகோணம் *śiva-kōṇam,* பெ. (n.) சிவபெருமானைக் குறிப்பதாகத் தாமிரம் முதலியவற்றில் வரையும் கோணம் (சௌந்தர்ய. 11); a mystic diagram believed to represent Śivan.

[சிவன் + கோணம். கோள் → கோண் → கோணம் = வளைவு, மூலை]

சிவங்கரன் *śivaṅgaraṉ,* பெ. (n.) ஆதனுக்குப் (ஆன்மா) பேரின்பப் பெருவாழ்வை வழங்கும் சிவன் (சங்.அக.); Śivan as the dispenser of bliss.

சிவங்கரி *śivaṅgari,* பெ. (n.) மங்கலத்தைச் செய்பவளான மலைமகள் (திருவானைக். கோச்செங்.81); Pārvadi, as the dispenser of bliss.

சிவச்சி *śivacci,* பெ. (n.) சாதிக்காய் (மூ.அ.); nutmeg.

சிவசத்தி *śiva-śatti,* பெ. (n.) 1. ஐவகைச் சிவ ஆற்றல்கள் (சி.சி. 1:61, சிவஞா); the five energies of Śivan. 2. துரிசு (யாழ்.அக.); verdigris.

[சிவன் + சத்தி]

ஐவகைச் சிவ ஆற்றல்கள்

1. விழைவாற்றல் (இச்சா சத்தி)
2. செயலாற்றல் (கிரியா சத்தி)
3. அறிவாற்றல் (ஞான சக்தி)
4. மறைப்பாற்றல் (திரோதான சத்தி)
5. அருளாற்றல் (பராசத்தி)

சிவசமவாதசைவம் *śiva-śama-vāda-śaivam,* பெ. (n.) அகச்சமயம் ஆறனுள் மலங்கள் நீங்கிய வழி, அறிவு மாத்திரையாய் நிற்கும் ஆதனை, இறைவன், தன் வடிவாக்கித் தன் ஐந்தொழில்களை இயற்றும்படிச் செய்வன் என்று கூறும் சிவனிய வகை (சி. போ. பா. பக். 22, சுவாமிநா.); a Śaiva sect which holds that the soul when it is freed from *malam* becomes Pure Intelligence, and that in such a condition Śivan transmutes it into a Being like Himself enabling it to perform His five-fold functions, one of six aga-c-camayam.

[சிவம் + சமவாதம் + சைவம்]

சிவசன் *śivaśaṉ,* பெ. (n.) சிவனிடம் பிறந்தவனாகிய சுக்கிரன்; Śukraṉ, as born of Śivan.

[சிவன் + (சேயன் → சேன் →) சன்]

சிவசாதனம் *śiva-śādaṉam,* பெ. (n.) அக்கமணி திருநீறு முதலிய சிவனியத்திற்குரிய சின்னங்கள்; emblems of Śaiva religion, as rudrākṣa beads and sacred ashes. "சிவசாதனந் தனி லன்பு மிக்கவன்" (திருவிளை. நாக. 3).

[சிவன் + சாதனம்]

சிவசித்தர் *śivaśittar,* பெ. (n.) சிவனிய (சைவ) சமயத்திற் கூறியவாறு கட்டுகளினின்று நீங்கிப் பரமுத்தியை அடைந்தவர்; those who have obtained the highest form of salvation.

[சிவம் + சித்தர்]

சிவசிவ *śiva-śiva,* இடை. (int.) 1. வழிபடற் குறிப்பு; a sign of worship. "சிவசிவ என்றிடத் தீவினைமாளும்" (திருமந்.). 2. ஓர் இரக்கக் குறிப்பு; an exclamation of pity. "சிவசிவ மற்றென் செய்வாய்" (அருட்பா. i, நெஞ்சறி, 401).

[சிவ + சிவ]

சிவசின்னம் *śiva-śiṉṉam,* பெ. (n.) சிவசாதனம்[1] பார்க்க; see *śivasādaṉam[1]*. "சிட்டமாஞ் சிவ சின்னங்கள் சேர்ந்துளீர்" (சிவரக. சிவரகவரலா. 9).

[சிவம் + சின்னம்]

சிவஞானகோசம் *śiva-ñāṉa-kōśam,* பெ. (n.) சிவாகமம் பார்க்க; see *śivāgamam.* "பொருவில் - பரம சிவஞானகோசம்" (சிவதரு. சிவஞானதா. 50).

[சிவம் + ஞானம் + கோசம்]

சிவஞானசித்தியார் *śiva-ñāṉa-śittiyār,* பெ. (n.) அருணந்தி சிவாசாரியரால், சிவஞான போதத்தை முதனூலாகக் கொண்டு, விரிவாகச் செய்யப் பெற்றதும், மெய்கண்ட நூல்களுள் பதினான்கனுளொன்றுமாகிய சிவனியக் கொண்முடிபு நூல்; a text-book of the Śaiva Śittānda philosophy by Aruāṇandi - Śivācāriyar, based on Śiva-ñāṉa-bōdam, one of 14 meygaṇḍa-šāttiram.

[சிவஞானம் + சித்தியார்]

சிவஞானபோதம் *śivañāṉa-bōdam,* பெ. (n.) மெய்கண்ட தேவரால் இயற்றப்பட்டதும், மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள் ஒன்றும் அவற்றுள் பன்னிரண்டு நூல்களுள் முதன்மையாயுள்ளதுமாகிய சிவனியக்கொண் முடிபு நூல்; a text book of the Śaiva Siddhānda philosophy composed by Mey-kaṇḍa-dēvar, the basis of twelve of the fourteen textbooks one of 14 mey-kanda-nūl.

[சிவஞானம் + போதம்]

சிவஞானம் *śiva-ñāṉam,* பெ. (n.) பதியுணர்வு; knowledge of god. "சிவஞானந் தனக்கு மேலாம்" (சி. சி. 2:2).

[சிவம் + ஞானம்]

சிவஞானமுனிவர் *śiva-ñāṉa-muṉivar,* பெ. (n.) சிவஞான போதத்திற்குத் திராவிட மாபாடியம் என்னும் பேருரை செய்தவரும், சிவஞான சித்தியார், தொல்காப்பியப் பாயிரம் முதல் நூற்பா முதலியவற்றிற்கு உரை வகுத்தவரும், காஞ்சிப்புராணம் முதற்காண்டத்தின் ஆசிரியரும், சிவசமவாத மறுப்பு முதலிய கண்டன நூல்கள் எழுதியவரும், 18ஆம் நூற்றாண்டில் திருவாவடுதுறை மடத்தில் வாழ்ந்தவருமாகிய சிவனியத் துறவி; a celebrated ascetic of the Tiruvāvaḍurai mutt, 18th century A.D. author of many minor poems, the first part of Kāñjippūrāṇam, some polemic treatises and commentaries on the pāyiram and the 1st nūrpā of Tolgāppiyam, Śiva-ñāṉa-bōdam and Śiva-ñāṉa-śittiyār.

[சிவஞானம் + முனிவர்]

சிவஞானி *śiva-ñāṉi,* பெ. (n.) சிவனறிவு பெற்றோன்; Śaiva saint as one who has obtained knowledge of God.

[சிவம் + ஞானி]

சிவணு[1]-தல் *śivaṇu-,* 11 செ.கு.வி. (v.i.) 1. நட்புக் கொள்ளுதல்; to make friends. "தன்னோடு சிவணிய வேனோர்" (தொல். பொருள். 27). 2. பொருந்துதல்; to go with. "பல்லோ ரறியுஞ் சொல்லோடு சிவணி" (தொல். சொல். 2.) 3. அளவளாவுதல் (பிங்.); to hold intimate intercourse, to show intimacy.

ம. சிவணன் (சேர்தல், இணைதல், இயைபு)

[சுவள் → சுவண் → சிவண் → சிவணுதல் (இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும் பக். 26)]

சிவணு[2]-தல் *śivaṇu-,* 10 செ.குன்றாவி. (v.t.) 1. அணுகுதல் (திவா.); to approach. 2. ஒத்தல்; to resemble. "நெடுவரையெவையு மொரு வழித்திரண்டன சிவண" (கம்பரா. நிந்தனை. 1.) 3. பெறுதல்; to receive. "தனங்கிடைக்குமேற் சிவணுறாதவர் யாரே" (தணிகைப்பு. திருநா. 16).

[சுவள் → சுவண் → சிவண் → சிவணுதல் (வ.வ. 211)]

சிவத்ததாசி *śivatta-tāśi,* பெ. (n.) 1. சிவந்த வேசை பார்க்க; see *śivanda-vēšai.* 2. செம்பருத்தி; tree cotton.

சிவத்தம் *śivattam,* பெ. (n.) செம்முருங்கை (மலை.); red Indian laburnum.

[சிவந்தம் → சிவத்தம்]

சிவத்தமண் *śivatta-maṇ,* பெ. (n.) *1.* செம்மண்; red soil. *2.* காவி மண்; red ochre (சா.அக.).

[சிவந்த → சிவத்த + மண்]

சிவத்தமுள்ளங்கி[1] *śivatta-muḷḷaṅgi,* பெ. (n.) காசினி விரை; chicory.

[சிவப்பு முள்ளங்கி → சிவத்த முள்ளங்கி]

சிவத்தமுள்ளங்கி[2] *śivatta-muḷḷaṅgi,* பெ. (n.) சிவப்புமுள்ளங்கி பார்க்க; see *śivappu-muḷḷaṅgi* (சா.அக.).

[சிவப்பு முள்ளங்கி → சிவத்த முள்ளங்கி]

சிவத்தாசிகம் *śivattāśigam,* பெ. (n.) செம்பரத்தை; chinese rose mallow (சா.அக.).

சிவத்தாட்சி *śivattāṭci,* பெ. (n.) சிவத்தாசிகம் பார்க்க; see *śivattāśigam* (சா.அக.).

சிவத்தானம் *śivattāṉam,* பெ. (n.) வெற்றிலை; betel leaf (சா.அக.).

சிவத்தி *śivatti,* பெ. (n.) சாதிலிங்கம்; vermilion (சா.அக.).

சிவத்திருமி *śivattirumi,* பெ. (n.) தான்றி மரம்; devil's abode (சா.அக.).

சிவத்திருவம் *śivattiruvam,* பெ. (n.) சிவத்துருமம் பார்க்க; see *śiva-t-turumam* (சா.அக.).

சிவத்திறை *śivattiṟai,* பெ. (n.) சிவகதிக்குத் தலைவனான அருகன் (சூடா.); Arugan, as lord of Śiva-gadi. "சிவத்திறை யுறையுஞ் சித்தாயதனம்" (மேருமந். 620).

[சிவம் (சிவத்து) + இறை]

சிவத்துருமம் *śiva-t-turumam,* பெ. (n.) வில்வம்; bael tree.

[சிவம் + துருமம்]

சிவத்துவிசர் *śiva-t-tuviśar,* பெ. (n.) சிவன் கோயில்களிற் பூசைக்கு அதிகாரிகளாகிய சிவப்பார்ப்பனர்; Brāhmans who conduct service in Śivan temples.

சிவத்தை *śivattai,* பெ. (n.) *1.* சிவப்பு; redness in colour. *2.* பொன்னிறப்பெண்; fair complexed girl. *3.* செந்நிறக் காளை; red colour bull.

[சிவ் → சிவ → சிவத்தை (வே.க.222)]

சிவத்தோன்றியம் *śiva-t-tōṉṟiyam,* பெ. (n.) சிவனிடமிருந்து தோன்றியவை எனப்படும் காமிகம், ஒகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீபதம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிசுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் ஆகிய இருபத்தெட்டு தோன்றியங்கள் (ஆகமங்கள்) (சைவச, பொது, 78); ancient Āgamas or śaiva scriptures in Sanskrit believed to have originated from Śiva Himself 28 in number, viz, Kāmigam, Ōgasam, Śindiyam, Kāraṇam, Acidam, Tīptam, Cūkkumam, Sagacciram, Añjumāṉ, Cuppirabēdam, Visayam, Nisubāsam, Suvāyambuvam, Ākkiṉēyam, Vīram, Irauravam, Magudam, Vimalam, Candirañāṉam, Mugavimbam, Purōṟkīdam, Ilaḷidam, Cittam, Sandāṉam, Sarvōttam, Pāramēsuvaram, Kiraṇam, Vāduḷam.

[சிவம் + தோன்றியம்]

சிவதகி *śivadagi,* பெ. (n.) வெள்ளரி; cucumber (சா.அக.).

சிவதகை *śivadagai,* பெ. (n.) எழுத்தாணிப் பச்சிலை; style plant (சா.அக.).

சிவதங்கை *śivadaṅgai,* பெ. (n.) சிவதகை பார்க்க; see *śivadagai* (சா.அக.).

சிவதடி[1] *śivadaḍi,* பெ. (n.) வெள்ளரி (மலை.); cucumber.

சிவதடி[2] *śivadaḍi,* பெ. (n.) வெள்ளி; silver (சா.அக.).

சிவதத்துவம் *śiva-tattuvam,* பெ. (n.) அறிவாற்றலின் இருப்பிடமும் தூய மாயை மெய்ம்மங்களுள் ஒன்றுமாகிய மெய்ப்

பொருள் (சி.போ.பா.2:2. பக்.139); sphere or region of knowledge presided over by Šivan's ñāṉa-satti.

[சிவம் + தத்துவம்]

சிவதத்துவம்[2] *šiva-tattuvam,* பெ. (n.) 1. ஒளி (விந்து); semen. 2. தோன்றியத்தில் கூறப் பட்டுள்ள ஐவகைச் சிவமெய்ப்பொருள்கள்; in Āgama philosophy the five degrees of development or attainment in the spiritual power derived from Šivan as šuttavittai, īsuram, sadākkiyam, šatti, šivam (சா.அக.).

[சிவம் + தத்துவம்]

சிவதம் *šivadam,* பெ. (n.) இருக்கு வேதம் (வின்.); the Rig-Vēda.

Skt. šiva-da

சிவதரம் *šiva-daram,* பெ. (n.) அதிக மங்கலமானது; that which is highly auspicious. "தலைவா நின்னிற் சிவதரமாம் பொருள் வேறின்மையால்" (திருக்காளத். 4. 5:51).

சிவதரிசனம் *šiva-darisaṉam,* பெ. (n.) சிவப்பார்வை பார்க்க; see *šiva-p-pārvai.*

[சிவம் + தரிசனம்]

Skt. daršana → த. தரிசனம்

சிவதரு *šivadaru,* பெ. (n.) சிவதாரம் பார்க்க; see *šiva-dāram.*

சிவதருமம் *šiva-darumam,* பெ. (n.) பதினெண் வகைத் துணைத் தொன்மப் பிரிவுகளுள் ஒன்று; a secondary purāṇa one of 18 uba-purāṇam.

[சிவம் + தருமம்]

சிவதருமிணி *šiva-darumiṇi,* பெ. (n.) அறிவொழுக்கத்திலுயர்ந்து திகழும் முத்தி பெற்றவர்கட்கு மறைப்பு நிலையில் தலை மழித்துச் செய்யும் குருவின் அருள் வழங்கல் முறை (சைவச. ஆசாரி. 62, உரை.); a way or religious initiation accompanied with the removal of hair-tuft, which is believed to represent the obscuring principle, a kind of šapīša-dīṭcai.

[சிவம் + தருமிணி]

சிவதலம் *šiva-dalam,* பெ. (n.) சிவன் கோயில் கொண்ட இடம்; place or shrine sacred to Šivan.

சிவதன்மம் *šiva-daṉmam,* பெ. (n.) சிவதருமம் (திவா.) பார்க்க; see *šiva-darumam.*

[சிவம் + தன்மம்]

சிவதா *šivadā,* பெ. (n.) அடைக்கலக்கூற்று (பெரியபு. எறி. 16); an expression crying forhelp.

சிவதாகம் *šivadāgam,* பெ. (n.) முருங்கை மரம்; drumstick tree.

சிவதாகிதம் *šivadāgidam,* பெ. (n.) மாசிக்காய்; nut gall oak (சா.அக.).

சிவதாசு *šivadāsu,* பெ. (n.) திருநாமப்பாலை; poon tree (சா.அக.).

மறுவ. சீரானயிருசுவம்

சிவதாது *šivadādu,* பெ. (n.) 1. இதளியம்; mercury. 2. ஒருவகைக் கல்; a stone (சா.அக.).

[சிவம் + தாது]

சிவதாரம் *šiva-dāram,* பெ. (n.) தேவதாரு (மலை.); red-cedar.

மறுவ. செம்மரம், சிவதாரி

சிவதாரிகம் *šivadārigam,* பெ. (n.) பாலை; milk-tree (சா.அக.).

சிவதீட்சை *šiva-tīṭcai,* பெ. (n.) சிவ பூசையையும் சமயவொழுகலாறுகளையும், மேற் கொள்ளுதற்குமுன், சிவனியனுக்குக் குருவினாற் செய்யத்தகுஞ் சமய நிகழ்வு (அருட்பாலிப்பு); initiation of a disciple into the mysteries of the Šaiva religion.

[சிவன் + தீட்சை]

சிவதும்பை *šiva-dumbai,* பெ. (n.) சிறு தும்பை; small leucas (சா.அக.).

[சிவன் + தும்பை]

சிவதுரியம் *šiva-duriyam,* பெ. (n.) தோன்றியத்துள் கூறப்படும் மேலான பேருறக்க (துரிய)நிலை; in āgama philosophy the highest degree in which the yogi attains entire quiescence (சா.அக.).

[சிவன் + துரியம்]

சிவதுளசி[1] *śiva-tulaśi*, பெ. (n.) 1. திருநீற்றுப் பச்சை; sweet basil. 2. வெண் துளசி; white basil (சா.அக.).

[சிவன் + துளசி]

சிவதூசி *śiva-dūśi*, பெ. (n.) பாற்குறண்டி; milk coranday (சா.அக.).

[சிவம் + தூசி]

சிவதை *śivadai*, பெ. (n.) வயிற்றுப்பூச்சி, மலச்சிக்கல், கால் வீக்கம், தோல்நோய் முதலானவற்றைப் போக்கும் மருந்துக் கொடி; Indian jalap turpath root; it is a good remeady against worms, swellings of the limbs and diseases of the skin (சா.அக.).

மறுவ. பகன்றை

சிவதையிளகியம் *śivadai-y-ilagiyam*, பெ. (n.) பெருநோய், மலச்சிக்கல் போன்றவற்றைப் போக்குவதற்காகக் கடைச்சரக்குகளுடன் சிவதை மூலிகையைச் சேர்த்துச் செய்யப்படும் இளகியம்; an electuary prepared with jalap as a chief ingredient along with other bazār drugs. It is removes costipation by helping a free motion of bowels and cures dyspepsia (சா.அக.).

[சிவதை + இளகியம்]

சிவதைச்சர்க்கரை *śivadai-c-carkkarai*, பெ. (n.) சீந்திற் கொடியினின்று எடுக்கப்படும் மருந்துப்பு; a medicinal salt prepared from gulancha stalk (சா.அக.).

[சிவதை + சர்க்கரை]

சிவதைப்பொடி *śivadai-p-podi*, பெ. (n.) சிவதையை ஆவின் பாலில் அவித்தெடுத்து உலர்த்திய பொடி; purification of jalap by boiling it in milk and then drying (சா.அக.).

[சிவதை + பொடி]

சிவதைவேர் *śivadai-vēr*, பெ. (n.) மலம் போக்கிவேர்; turpith root (சா.அக.).

[சிவதை + வேர்]

சிவதைவேர்ச்சூரணம் *śivadai-vēr-c-cūranam*, பெ. (n.) பகன்றை மருந்துப் பொடி; Indian jalap powder (சா.அக.).

[சிவதை + வேர் + சூரணம்]

சிவதோதிகம் *śivadōdigam*, பெ. (n.) திருநீற்றுப் பச்சை; holy ashes leaf (சா.அக.).

சிவந்தகஞ்சா *śivanda-kañja*, பெ. (n.) சிவப்பு நிறக் கஞ்சா வகை; a red variety of kañja (சா.அக.).

[சிவந்த + கஞ்சா]

சிவந்தகதிர்நிறத்தி *śivanda-kadir-niratti*, பெ. (n.) இக்காலத்தில் அறியப்படாத சேந்தாடுபாவை என்னும் கற்பமூலிகை வகையு ளொன்று; a rejuvenating drug unidentified at present (சா.அக.).

[சிவந்த + கதிர் + நிறத்தி]

சிவந்தகரிசாலை *śivanda-kariśālai*, பெ. (n.) பொற்றலைக் கையாந்தகரை; Ceylon verbesina (சா.அக.).

[சிவந்த + கரிசாலை]

சிவந்தகன்னிப்பால் *śivanda-kanni-p-pāl*, பெ. (n.) மருந்திற்குப் பயன்படும் சிவப்புப் பெண்ணின் முலைப்பால்; the breast milk of a woman of red complexion and it is considered an important medium in the use of medicine.

[சிவந்த + கன்னி + பால்]

சிவந்தகுளிகை *śivanda-kuligai*, பெ. (n.) சிந்தூரக் குளிகை; pills prepared out of red - oxides of metals (சா.அக.).

[சிவந்த + குளிகை]

சிவந்தகையான் *śivanda-kaiyān*, பெ. (n.) சிவந்தகரிசாலை பார்க்க; see **śivanda-kariśālai**.

[சிவந்த + கையான்]

சிவந்தகோழிக்காரம் *śivanda-kōḷi-k-kāram*, பெ. (n.) செந்நிறக் கோழியின் மலம்; the drug of a red fowl.

[சிவந்த + கோழி + காரம்]

சிவந்தசதுர்முகி *śivanda-śadurmugi*, பெ. (n.) சிவப்புச் சதுரக்கள்ளி; a red variety of square spurge (சா.அக.).

[சிவந்த + சதுர்முகி]

நான்கு பட்டை உள்ளதைச் சதுர முகம் என்பது உலக வழக்கம். சதுர முகத்தை உடைய கள்ளி சதுர்முகி ஆயிற்று.

சிவந்தசந்தம் *śivanda-šandam,* பெ. (n.) செஞ்சந்தனம்; red sandal *(சா.அக.).*

[சிவந்த + சந்தம். சந்தனம் → சந்தம்]

E: sandal.

சிவந்தசோறு *śivanda-šōṟu,* பெ. (n.) *தீய்ந்து போன சோறு (யாழ்ப்.);* rice burnt reddish in cooking.

[சிவந்த + சோறு]

சிவந்தநாயுருவி *śivanda-nāyuruvi,* பெ. (n.) *செந்நாயுருவி;* a red variety of Indian burr *(சா.அக.).*

[சிவந்த + நாயுருவி]

சிவந்தநிறவல்லி *śivanda-niṟavalli,* பெ. (n.) *சிவந்தவல்லி பார்க்க;* see *śivanda-valli.*

[சிவந்தவல்லி → சிவந்தநிறவல்லி]

சிவந்தநீர் *śivanda-nīr,* பெ. (n.) *முத்தின் சிவந்த நீரோட்டம்;* red water of a pearl. *"சிவந்த நீரும் பாணிச்சாயு முடைய முத்து" (தெ.இ.க. தொ.2, 171).*

[சிவந்த + நீர்]

சிவந்தபசு *śivanda-pašu,* பெ. (n.) *சேதா;* red cow.

ம. சேதா; துட. கெபாப்.

[சிவந்த + பசு]

சிவந்தபத்திரி *śivanda-pattiri,* பெ. (n.) *சாதிப்பத்திரி;* nut meg *(சா.அக.).*

[சிவந்த + பத்திரி]

சிவந்தபாலி *śivanda-pāli,* பெ. (n.) *சிவந்த சதுர்முகி பார்க்க;* see *śivanda-šaturmugi.*

[சிவந்த + பாலி]

கள்ளிச் செடி பாலுள்ளதாகையால் பாலி எனப்பட்டது.

சிவந்தபோத்தக்காய்விதை *śivanda-pōtta-k-kāy-vidai,* பெ. (n.) *சிவப்புக் கசகசாச் செடியின் விதை;* red seed.

[சிவந்த + போத்தக்காய் + விதை]

சிவந்தமண் *śivanda-maṇ,* பெ. (n.) *செப்பு மணல்;* copper ore *(சா.அக.).*

[சிவந்த + மண்]

செந்நிறமாயுள்ள மண்ணைச் செம்மண் என வழங்குவது உலக வழக்கு. செந்நிறமாயுள்ள செம்பு கலந்த மணலையோ மண்ணையோ சிவந்தமண் என்பது மருத்துவ வழக்கு.

சிவந்தமல்லி *śivanda-malli,* பெ. (n.) *பொன்னிறமல்லி அல்லது செப்பு மல்லிகை;* golden jasmine *(சா.அக.).*

[சிவந்த + மல்லி]

இஃது இருபத்தெட்டு பெரு மூலிகைகளுள் ஒன்றாகும்

சிவந்தமலர் *śivanda-malar,* பெ. (n.) *செம்பு;* copper.

[சிவந்த + மலர்]

செம்பு செந்நிறத்தது. மருத்துவக்குழூஉக் குறியாக இம்மாழையை மலரெனச் சொல்லியிருப்பர் போலும்.

சிவந்தமலர்ப்பருத்தி *śivanda-malar-p-parutti,* பெ. (n.) *செம்பருத்தி, கம்பளிப்பருத்தி;* Bengal cotton, spence cotton.

[சிவந்த + மலர் + பருத்தி]

சிவந்தவரிதாரம்[1] *śivanda-v-aridāram,* பெ. (n.) *பிறவி வைப்பு நஞ்சு (மூ.அ.);* red arsenic.

[சிவந்த + அரிதாரம்]

சிவந்தவரிதாரம்[2] *śivanda-v-aridāram,* பெ. (n.) *சிவப்பரிதாரம் பார்க்க;* see *śivapparidāram (சா.அக.).*

[சிவப்பரிதாரம் → சிவந்தவரிதாரம்]

சிவந்தவல்லி *śivanda-valli,* பெ. (n.) *செவ்வரளி;* red oleander.

[சிவந்தவரளி → சிவந்தவள்ளி → சிவந்தவல்லி]

சிவந்தவாலனரிசி *śivanda-vālaṉ-arišī,* பெ. (n.) 1. *பெருநோயைப் போக்குந் தன்மைமிக்க சிவப்பு வால் நெல்லரிசி;* a species of red paddy considered to be a good diet for leprosy. 2. *செவ்வாலுளுவை;* a red variety of spindle tree *(சா.அக.).*

[சிவந்த + வாலன் + அரிசி]

சிவந்தவேசை *śivanda-vēšai,* பெ. (n.) *செம்பரத்தை;* Chinese rose mallow *(சா.அக.).*

[சிவந்த + வேசை]

பொது மகளிரை வேசையெனவும், பரத்தை யெனவும் வழங்குவதுண்டு. மருத்துவக் குழூஉக் குறியாகப் 'பரத்தை' என்பதற்குப் பகரமாய வேசை கையாளப்படுகிறது.

சிவந்தவைப்புநஞ்சு *šivanda-vaippu-nañju*, பெ. (n.) செந்நிற வைப்பு நஞ்சு *(யாழ்.அக.)*; red arsenic.

[சிவந்த + வைப்பு நஞ்சு]

சிவந்தாடு *šivandāḍu*, பெ. (n.) செம்மறியாடு; a brown wooly sheep *(சா.அக.)*.

[சிவந்த + ஆடு]

சிவந்தி[1] *šivandi*, பெ. (n.) *1.* கொடிப்பாலை *(மலை.)*; green wax flower. *2.* தான்றிமரம்; devil's abods *(சா.அக.)*.

சிவந்தி[2] *šivandi*, பெ. (n.) செவ்வந்தி; garden chrysanthemum.

[செவந்தி → சிவந்தி]

சிவந்திக்கடுக்காய் *šivandi-k-kaḍukkāy*, பெ. (n.) ஊதை, மூலம் போன்ற நோய்க்கு மருந்தாவதும், பொன் வண்ணமுடையதும், காட்டில் விளைவதுமான செங்கடுக்காய்; a wild red golden-coloured gallnut and it is a cire against rheumatism and hemorrhoids *(சா.அக.)*.

[சிவந்தி + கடுக்காய்]

சிவந்திக்கருப்பூரம் *šivandi-k-karuppūram*, பெ. (n.) இதளியக் (இரச) கருப்பூரம்; bichloride of mercury *(சா.அக.)*.

[சிவந்தி + கருப்பூரம்]

சிவந்திகம் *šivandigam*, பெ. (n.) நரிநாவல் அல்லது சிறுநாவல்; ruddy black plum *(சா.அக.)*.

சிவந்திடுமாழைமண் *šivandiḍu-māḻai-maṇ*, பெ. (n.) *1.* செப்புமணல்; copper ore. *2.* பூங்காவி; red ochre *(சா.அக.)*.

[சிவந்திடு + மாழை + மண்]

சிவநாபம் *šivanābam*, பெ. (n.) ஒருவகைச் சிவலிங்கம்; a variety of linga. "நாசமில் செழுஞ் சிவநாபந் தன்னையும்" *(சேதுபு. சேதுபல. 126)*.

சிவநிசி *šivaniši*, பெ. (n.) சிவராத்திரி பார்க்க; see *šivarāttiri*. "நன்று சிவநிசியி னன்மை" *(பிரமோத். 4, 60)*.

சிவநெறிப்பிரகாசம் *šiva-neṟi-p-piragāšam*, பெ. (n.) ஒரு சிவனியக் கொண்முடிபு நூல் *(பெரியபு. உபோற். பக். 2)*; a treatise on the Šaiva Šittānda philosophy.

சிவப்பகத்தி *šiva-p-pagatti*, பெ. (n.) செவ்வகத்தி; West Indian sesban *(சா.அக.)*.

சிவப்பகாதிதம் *šiva-p-pagādidam*, பெ. (n.) குன்றிமணி; crab's eye *(சா.அக.)*.

சிவப்பகில் *šivappagil*, பெ. (n.) செந்நிறம் உள்ள அகிற்கட்டை; agallocha *(சா.அக.)*.

[சிவப்பு + அகில்]

சிவப்படுக்கலரி *šivappaḍu-k-kalari*, பெ. (n.) செம்மைநிறமுள்ள குங்குமவலரி; double red oleander.

[சிவப்பு + அடுக்கு + அலரி]

சிவப்பணு *šivappaṇu*, பெ. (n.) குருதியிலுள்ள சிவப்பணுத் திரள்; red cells in blood *(சா.அக.)*.

[சிவப்பு + அணு]

சிவப்பந்திமல்லிகை *šivappandi-malligai*, பெ. (n.) செவ்வந்தி மந்தாரை; evening twilight flower *(சா.அக.)*.

[சிவப்பு + அந்தி + மல்லிகை]

சிவப்பப்பிரகாரம் *šivappa-p-piragāram*, பெ. (n.) சிவப்புநிறமுள்ள காக்காய்ப்பொன்; a red variety of mica *(சா.அக.)*.

[சிவப்பு + அப்பிரகாரம்]

சிவப்பம்மான்பச்சரிசி *šivapp-ammāṉ-paccarisi*, பெ. (n.) வெள்ளிமாழையைத் துகளாக்கவும், ஆண் விந்துவினை பெருக்கி, முடக்கு நோயைப் போக்கவும் பயன்படும் செம்மை நிறமுள்ள ஒருவகை யரிசி; a red variety of rice which is used for calcining silver, secretion of semen against rhumatism and urinary disease.

மறுவ. சிறுசித்திரப் பாலடை

[சிவப்பு + அம்மான் + பச்சரிசி]

சிவப்பம்மை *śivappammai,* பெ. (n.) உடம்பில் சிவந்த கொப்புளங்களையுருவாக்கி அவற்றின் விளைவாக மிகுதியான காய்ச்சலை யேற்படுத்தும் அம்மைநோய் வகை; a kind of variola attended with red eruptions or rash and fever (சா.அக.).

[சிவப்பு + அம்மை]

சிவப்பரக்கு *śivapparakku,* பெ. (n.) 1. செவ்வரக்கு; wax red or red sealing wax. 2. செம்பரக்கு; lac dye or cake lac (சா.அக.).

ம. க. கெம்பரகு

[சிவப்பு + அரக்கு]

சிவப்பரசிகா *śivapparaśigā,* பெ. (n.) செவ்வாம்பல்; red Indian water lily (சா.அக.).

சிவப்பரிசி *śivappariśi,* பெ. (n.) 1. மட்டையரிசி; red rice of an inferior kind of paddy. 2. பத்தியத்திற்கு (மருந்துணவுக்குப்) பயன்படும் கருங்குருவையரிசி; black paddy, the red rice of which is used in diet (சா.அக.).

[சிவப்பு + அரிசி]

சிவப்பரிதகிக்காய் *śivapparidagikkāy,* பெ. (n.) சிவந்திக்கடுக்காய் பார்க்க; see *śivandi-k-kaḍukkāy* (சா.அக.).

[சிவப்பு + அரிதகிக்காய்]

சிவப்பரைக்கீரை *śivapparai-k-kīrai,* பெ. (n.) செந்நிறமுள்ள அரைக்கீரை; red garden greens (சா.அக.).

[சிவப்பு + அரைக்கீரை]

சிவப்பல்லி *śivappalli,* பெ. (n.) செவ்வாம்பல்; red Indian water lily.

[சிவப்பு + அல்லி]

சிவப்பல்லிக்கிழங்கு *śivappalli-k-kiḻangu,* பெ. (n.) செம்பின் களிம்பைப் போக்கிச் செந்தூரவண்ணமாக்குந் தன்மையுள்ள செங்கழுநீர்க் கிழங்கு; root of red Indian water lilly. It is useful for purifying and calcining copper.

[சிவப்பு + அல்லி + கிழங்கு]

சிவப்பலரி *śivappalari,* பெ. (n.) செவ்வரளி; red oleander (சா.அக.).

[சிவப்பு + அலரி]

சிவப்பலி *śivappali,* பெ. (n.) செம்மரம்; red wood (சா.அக.).

சிவப்பவரை *śivappavarai,* பெ. (n.) குங்கும நிறமுடைய சிவந்த அவரைக்கொடி, இதன் இலைச்சாறு பொன்னைச் சிந்தூரமாக்குந் தன்மையது; red bean creeper the juice of the leaves is used for calcining gold (சா.அக.).

[சிவப்பு + அவரை]

சிவப்பன் *śivappaṉ,* பெ. (n.) செந்நிறமுள்ளவன்; a man of ruddy or fair complexion. "பேர் கறுப்பனிறஞ் சிவப்பன்" (தனிப்பா. i, 216:1).

கோத்த: கெம்பன்

[சிவ் → சிவ → சிவப்பு → சிவப்பன் (வே.க. 222)]

சிவப்பாக்கல் *śivappākkal,* தொ. பெ. (vbl.n.) செந்தூரமாகச் செய்தல்; calcining into a red powder (சா.அக.).

சிவப்பாதளை *śivappādaḷai,* பெ. (n.) 1. சீமையாதளை; foreign physic nut. 2. செவ் வாமணக்கு; red castor plant (சா.அக.).

சிவப்பாம்பல் *śivappāmbal,* பெ. (n.) செந்நிற மலர்தரும் ஆம்பல்; water-lily having red flower.

ம. சுவன்னஆம்பல்

[சிவப்பு + ஆம்பல்]

சிவப்பாமணக்கு *śivappāmaṇakku,* பெ. (n.) ஆமணக்குவகை; a variety of castor-plant.

[சிவப்பு + ஆமணக்கு]

சிவப்பார்வை *śiva-p-pārvai,* பெ. (n.) இறைவனது பத்து வகையருளிச் செயல்களுள், ஆதனது (ஆன்மா) சிறுமையையும், தன் முயற்சியாலன்றித் தனக்கருள் புரிந்த இறைவனது பெருமையையும் தெளிய வுணர்ந்து கொள்ளுதலாகிய ஆதனின் அருளுணர்வு நிலை (சிவப்.கட்.); spiritual experience of the soul in which it understands its own limitations and perceives the Divine wisdom which, of its own accord, bestows grace one of dasa-kāriyam.

[சிவம் + பார்வை]

சிவப்பாற்றுச்சவுக்கு *śivappāṟṟu-c-cavukku*, பெ. (n.) சிவப்பான காயினையுங் கசப்புத் தன்மை வாய்ந்த பட்டையையுமுடைய சிவந்த ஆற்றுச் சவுக்கு மரம்; red Indian tamarisk galls are employed as an astringent and tonic and bark is bitter (சா.அக.).

[சிவப்பு + ஆற்று + சவுக்கு]

சிவப்பானபசளை *śivappāṉa-paśaḷai*, பெ. (n.) செம்பசளைக்கீரை; red Indian spinach (சா.அக.).

[சிவப்பு + பசளை]

சிவப்பானந்தவல்லி *śivappāṉanda-valli*, பெ. (n.) கோழித்தலைக் கந்தகம்; red sulphur (சா.அக.).

[சிவப்பு + ஆனந்தவல்லி]

சிவப்பானவெள்ளைச்சி *śivappāṉa-veḷḷaicci*, பெ. (n.) புற்றாம்பழம் (யாழ்.அக.); a kind of ore.

சிவப்பி[1] *śivappi*, பெ. (n.) 1. சிவப்பு நிறமுள்ளவள்; woman of ruddy or fair complexion. 2. செந்தெங்கு (யாழ். அக.); reddish coconut.

கோத்த: கெம்பய்

[சிவ → சிவப்பி (வே. க. 222)]

சிவப்பி[2] *śivappi*, பெ. (n.) 1. செவ்வாமணக்கு; red castor plant. 2. செந்திராய்; red Indian chickweed. 3. தொட்டி வைப்புநஞ்சு; a prepared arsenic. 4. அரத்த வைப்புநஞ்சு; red arsenic. 5. செவ்வகத்தி; west Indian sesban (சா.அக.).

[சிவப்பு → சிவப்பி. 'இ' உடைமைப் பொருளீறு]

சிவப்பிப்பால் *śivappi-p-pāl*, பெ. (n.) சிவந்த பெண் முலைப்பால்; breast milk of a fair woman (சா.அக.).

[சிவப்பி + பால்]

சிவப்பிரகாசம்[1] *śiva-p-piragāsam*, பெ. (n.) மெய்கண்ட பதினான்கனுள் உமாபதி சிவாச்சாரியாரால் இயற்றப்பெற்ற சிவனியக் கொண்முடிபு நூல் (சிவப்பிர. பாயி. 11); a text book of the Śaiva Śittānda philosophy by Umāpadi-Śivāccāriyār, one of 14 mey-kaṇḍa-śāttiram.

சிவப்பிரகாசர் *śivappiragāśar*, பெ. (n.) பதினேழாம் நூற்றாண்டிலிருந்தவரும், பிரபுலிங்கலீலை, நன்னெறி முதலிய நூல்களின் ஆசிரியரும், வீரச் சிவனிய மதத்தைச் சார்ந்தவருமாகிய ஒரு துறவி; a Vira-Śaiva ascetic, author of Prabuliṅga- līlai, Naṉṉeṟi and some other works, 17th century.

சிவப்பிராமணர் *śiva-p-prāmaṇar*, பெ. (n.) சிவன்கோயிற் பூசை, முதலான ஒழுகலாறுகளை மேற்கொண்ட அதிகாரிகள்; Brāhmans, who conduct service in Śiva temples. "வீரசோழன் திருமடை விளாகத்தில் குடியிருந்த தவசியர்க்கும் சிவப்பிராமணர்க்கும்" (தெ.க.தொ. 3, 47).

[சிவன் + பிராமணர்]

சிவப்பிரியம் *śiva-p-piriyam*, பெ. (n.) அக்கமணி (சங்.அக.); rudrākṣa bead.

[சிவன் + பிரியம். புரியம் → பிரியம்]

குமரி நாட்டுக் காலந்தொட்டுச் சிவநெறித் தமிழரால் அணியப்பட்டு வரும் அக்கமணி (முள்மணி) சிவனுக்கு விருப்பமானது என்னும் அடிப்படையில் சிவப்பிரியம் என வழங்கப்பெற்றது.

சிவப்பிரியா *śiva-p-piriyā*, பெ. (n.) கருப்பு வண்ண ஊமத்தை; black datura (சா.அக.).

சிவப்பிரியை *śiva-p-piriyai*, பெ. (n.) சிவபிரானது அன்புடைய உமையம்மை; Umai, as the beloved of Śivaṉ.

[சிவன் + பிரியை]

சிவப்பிவேர் *śivappi-vēr*, பெ. (n.) நச்சுப்புல்; a species of poisonous grass (சா.அக.).

[சிவப்பி + வேர்]

சிவப்பீயம் *śivappīyam*, பெ. (n.) செம்மண் நிறமுள்ள ஈயத்தூள்; a heavy bright red powder of lead (சா.அக.).

ம. சுவப்பீயம்

[சிவப்பு + ஈயம்]

சிவப்பு[1] *śivappu*, பெ. (n.) 1. செந்நிறம் (பிங்.); ruddiness, red colour. 2. சிவப்புக்கல்; ruby. 3. கறுப்பு (அக.நி.); blackness.

ம. சிவப்பு, செமப்பு; க. கெம்பு; தெ. செம்; து. கெம், கெஞ்ச, கெஞ்சி, கெம்பு; பட. கெப்பு; குரு. கேசொ; மா. கெசோ.

[செம் → செவ் → சிவ் → சிவ → சிவப்பு (வே.க.222)]

சிவப்பு[2] *śivappu*, பெ. (n.) சினம்; anger, "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள" (தொல். சொல். 372).

[செம் → செவ் → சிவ் → சிவ → சிவப்பு. (வே. க. 222)]

சிவப்பு[3] *śivappu*, பெ. (n.) 1. சாதிலிங்கம்; vermilion. 2. மகளிர் (சூதகம்) தீட்டு; menstrual blood. 3. செந்தூரம்; red-oxide. 4. சிவப்புக் கல்நார்; red variety of asbestos. 5. அரக்கு; sealing wax.

[செம் → செவ் → சிவ் → சிவ → சிவப்பு]

சிவப்பு[4] *śivappu*, பெ. (n.) சீட்டு முதலிய விளையாட்டுகளில் வென்ற குழுவினருக்கு இடுங்குறியீடு; score of a winning party in a game of cards, etc.,

[சிவ → சிவப்பு]

சிவப்புக்கசகசா *śivappu-k-kaśakaśā*, பெ. (n.) செந்நிறக் கசகசா; red poppy seed (சா.அக.).

[சிவப்பு + கசகசா]

சிவப்புக்கடுக்காய் *śivappu-k-kaḍukkāy*, பெ. (n.) செங்கடுக்காய்; red gallnut (சா.அக.).

மறுவ. சிவந்திக்கடுக்காய், சிவப்புச்சிந்தாதி

[சிவப்பு + கடுக்காய்]

சிவப்புக்கத்தரிக்காய் *śivappu-k-kattarikkāy*, பெ. (n.) 1. சிவந்த கத்தரிக்காய்; red brinjal plant. 2. செங்கத்தரி; caper shrub (சா.அக.).

[சிவப்பு + கத்தரிக்காய்]

சிவப்புக்கத்திரகம் *śivappu-k-kattiragam*, பெ. (n.) மதிமயக்கிப் பூடு; a plant supposed to cause bewilderment if trodden upon or interfered with (சா.அக.).

மறுவ. திகைப்பூடு

சிவப்புக்கத்திரி *śivappu-k-kattiri*, பெ. (n.) சிவப்புக்கத்தரிக்காய் பார்க்க; see *śivappu-k-kattarikkāy*.

[சிவப்புக் கத்தரிக்காய் → சிவப்புக் கத்திரி]

சிவப்புக்கந்தகம் *śivappu-k-kandagam*, பெ. (n.) செயற்கைப் பொன் மற்றும் வெள்ளி செய்யப் பயன்படும் கந்தகம்; red sulphur used to preparing artificial gold and silver (சா.அக.).

[சிவப்பு + கந்தகம்]

சிவப்புக்கந்தி *śivappu-k-kandi*, பெ. (n.) கோழித்தலைக் கந்தகம் (வின்.); a mineral poison.

[சிவப்பு + கந்தி]

சிவப்புக்கந்திகா *śivappu-k-kandigā*, பெ. (n.) பூனைவணங்கி; rubbish plant (சா.அக.).

மறுவ. குப்பைமேனி

[சிவப்பு + கந்திகா]

சிவப்புக்கரிசாலை *śivappu-k-kariśālai*, பெ. (n.) பொற்றலைக் கையாந்தகரை; Ceylon verbesina.

மறுவ. சிவந்த கரிசலாங்கண்ணி, சிவப்புக் கரிசலாங்கண்ணி, சிவப்புக் கையான்.

[சிவப்பு + கரிசாலை]

சிவப்புக்கரு *śivappu-k-karu*, பெ. (n.) முட்டையிலுள்ள மஞ்சட்கரு (வின்.); yolk of an egg.

[சிவப்பு + கரு]

சிவப்புக்கல் *śivappu-k-kal*, பெ. (n.) 1. ஈரற்கல் (வின்.); a red stone. 2. கெம்புக்கல் (உ.வ.); ruby.

க. கெம்புகல்லு

[சிவப்பு + கல்]

சிவப்புக்கலவாய் *śivappu-k-kalavāy*, பெ. (n.) சிவப்புக்களவாய் பார்க்க; see *śivappu-k-kaḷavāy*.

[சிவப்புக்களவாய் → சிவப்புக்கலவாய்]

சிவப்புக்கழற்சி *śivappu-k-kaḻaṟci*, பெ. (n.) செந்நிறமுள்ள கழற்சிக்காய்; a red variety of bonduc nut (சா.அக.).

[சிவப்பு + கழற்சி]

சிவப்புக்கழி-தல் *śivappu-k-kaḻi-,* 2 செ.கு.வி. (v.i) *1. மாதவிடாயாதல்;* to menstruate. *2. மட்டுமீறிய மாதவிடாயாதல்;* to menorrhagia *(சா.அக.).*

[சிவப்பு + கழி-,]

சிவப்புக்களவாய் *śivappu-k-kaḷavāy,* பெ. (n.) *மிக்க செந்நிறமுள்ளதும், மூன்றடி நீளம் வளர்வதுமாகிய கடல்மீன் வகை;* sea fish, lake, attaining 3 ft. in length.

[சிவப்பு + களவாய்]

களவாய் பார்க்க.

சிவப்புக்கற்பூரம் *śivappu-k-kaṟpūram,* பெ. (n.) *இதளியக் கற்பூரம்;* a red arsenic camphor *(சா.அக.).*

[சிவப்பு + கற்பூரம்]

சிவப்புக்கற்றாழை *śivappu-k-kaṟṟāḻai,* பெ. (n.) *செங்கற்றாழை;* red aloe *(சா.அக.).*

[சிவப்பு + கற்றாழை]

சிவப்புக்காசரைக்கீரை *śivappu-k-kāśarai-k-kīrai,* பெ. (n.) *புளிச்சைக்கீரை;* red Indian brown hemp.

மறுவ. சீமைக் காசரைக் கீரை

[சிவப்பு + காசரை + கீரை]

சிவப்புக்காசற்கீரை *śivappu-k-kāśaṟkīrai,* பெ. (n.) *சிவப்புக்காசரைக்கீரை பார்க்க;* see *śivappu-k-kāśarai-k-kīrai.*

சிவப்புக்காசித்தும்பை *śivappu-k-kāśi-t-tumbai,* பெ. (n.) *செந்நிறமான காசித்தும்பை;* a red tumbay flower *(சா.அக.).*

[சிவப்பு + காசித்தும்பை]

சிவப்புக்காசினிக்கீரை *śivappu-k-kāśiṉi-k-kīrai,* பெ. (n.) *செந்நிறமான காசினிக்கீரை வகை;* endive plant *(சா.அக.).*

[சிவப்பு + காசினிக்கீரை]

சிவப்புக்காஞ்சொறி *śivappu-k-kāñjoṟi,* பெ. (n.) *செந்தொட்டிப் படர்கொடி;* climbing nettle *(சா.அக.).*

[சிவப்பு + காஞ்சொறி]

சிவப்புக்காட்டுக்கோழி *śivappu-k-kāṭṭu-k-kōḻi,* பெ. (n.) *1. செந்நிறமுள்ள காட்டுச் சம்பங் கோழி;* red jungle fowl. *2. சிறகுக்கோழி;* red spur fowl.

[சிவப்பு + காட்டுக்கோழி]



சிவப்புக்காதி *śivappu-k-kādi,* பெ. (n.) *செம்பசளை;* red Malabar night shade.

[சிவப்பு + காதி]

சிவப்புக்காந்தள் *śivappu-k-kāndaḷ,* பெ. (n.) *செங்காந்தள்;* flame flower *(சா.அக.).*

[சிவப்பு + காந்தள்]

சிவப்புக்காய்ச்சுரை *śivappu-k-kāy-c-curai,* பெ. (n.) *சீமைக்காய்ச்சுரை;* red sorrel *(சா.அக.).*

மறுவ. செம்புளிச்சை

[சிவப்பு + காய்ச்சுரை]

சிவப்புக்காய்வேளை *śivappu-k-kayvēḷai,* பெ. (n.) *செங்கீரை வகை;* red cleome *(சா.அக.).*

[சிவப்பு + காய்வேளை]

சிவப்புக்கார்கண்டல் *śivappu-k-kārgaṇḍal,* பெ. (n.) *சேற்றுநிலத்தில் விளையும் மரவகை;* tree mangrove *(சா.அக.).*

[சிவப்பு + கார்கண்டல்]

சிவப்புக்காவி *śivappu-k-kāvi,* பெ. (n.) *பூங்காவிக்கல்;* red ochre containing much oxide of iron, used by dyers as red paint *(சா.அக.).*

[சிவப்பு + காவி]

சிவப்புக்கி *śivappukki,* பெ. (n.). *சிவகரந்தை பார்க்க;* see *śivagarandai (சா.அக.).*

சிவப்புக் குன்றிமணி

சிவப்புக் கொடிவேலி

சிவப்பு மந்தாரை



சிவனார்வேம்பு

சிவப்புக்கிலுகிலுப்பை *śivappu-k-kilu-kiluppai,* பெ. (n.) செங்கிலுகிலுப்பை; red crotolaria (சா.அக.).

[சிவப்பு + கிலுகிலுப்பை]

சிவப்புக்கீழ்க்காய்நெல்லி *śivappu-k-kīḻ-k-kay-nelli,* பெ. (n.) அடித்தண்டு செந்நிறமாயிருக்கும் ஒருவகைக் கீழ்க்காய் நெல்லி; red neeroory (சா.அக.).

[சிவப்பு + கீழ்க்காய் + நெல்லி]

சிவப்புக்கீழாநெல்லி *śivappu-k-kīḻānelli,* பெ. (n.) சிவப்புக்கீழ்க்காய்நெல்லி பார்க்க; see *śivappu-k-kīḻ-k-kay-nelli* (சா.அக.).

[சிவப்பு + கீழாநெல்லி (உ.வ.) இதனைக் கீழ்க்காய் நெல்லி என வழங்குவதே திருந்திய வடிவம்]

சிவப்புக்குங்கிலியம் *śivappu-k-kuṅgiliyam,* பெ. (n.) குங்கிலிய மரவகையுளொன்று (மூ.அ); red dammer.

[சிவப்பு + குங்கிலியம்]

சிவப்புக்குத்தாளை *śivappu-k-kuttāḷai,* பெ. (n.) நெல்வகை; a kind of paddy (சா.அக.).

[சிவப்பு + குத்தாளை]

குத்தாளை = நெல்வகை, வானவாரியாக விளையக்கூடியது

சிவப்புக்கும்மிட்டி *śivappu-k-kummiṭṭi,* பெ. (n.) சிவப்புக்கொம்மட்டி பார்க்க; see *śivappu-k-kommaṭṭi* (சா.அக.).

[சிவப்புக்கொம்மட்டி → சிவப்புக் கும்மட்டி → சிவப்புக்கும்மிட்டி]

சிவப்புக்குன்றி *śivappu-k-kuṉṟi,* பெ. (n.) சிவப்புநிறமுள்ள குன்றிமணி; crab's eye (சா.அக.).

மறுவ. குன்றிமுத்து, குண்டுமணி

[சிவப்பு + குன்றி]

சிவப்புக்கூத்தன் *śivappu-k-kūttaṉ,* பெ. (n.) சிவப்புநிறமுள்ள காதணிவகையு ளொன்று; a red variety of ear-ring (சா.அக.).

[சிவப்பு + கூத்தன்]

சிவப்புக்கெண்டை *śivappu-k-keṇḍai,* பெ. (n.) 1. சேற்கெண்டை; red carp. 2. பூமீன்கெண்டை; red masheer or salmon of India (சா.அக.).

[சிவப்பு + கெண்டை]

சிவப்புக்கெந்தி *śivappu-k-keṇḍi,* பெ. (n.) சிவப்புக்கந்தகம் பார்க்க; see *śivappu-k-kandagam* (சா.அக.).

[சிவப்பு + கெந்தி. கந்தகம் → கெந்தி]

சிவப்புக்கையான் *śivappu-k-kaiyāṉ,* பெ. (n.) சிவப்புக்கரிசாலை பார்க்க; see *śivappu-k-kariśālai* (சா.அக.).

மறுவ. பொற்றலைக் கையாந்தகரை, சிவந்த கரிசாலை

[சிவப்பு + கையான்]

சிவப்புக்கொட்டைக்கரந்தை *śivappu-k-koṭṭai-k-karandai,* பெ. (n.) சிறு நீரடைப்பைப் போக்குங் கரந்தைச் செடி; Indian globe thistle (சா.அக.).

[சிவப்பு + கொட்டை + கரந்தை]

சிவப்புக்கொடிப்பசலை *śivappu-k-koḍi-p-paśalai,* பெ. (n.) இரவில் பூக்கும் கொடி வகை (மூ.அ.); red malabar nightshade (சா.அக.).

[சிவப்பு + கொடிப்பசலை]

சிவப்புக்கொடிவேலி *śivappu-k-koḍivēli,* பெ. (n.) செங்கொடி வேலி; rosy coloured leadwort (சா.அக.).

[சிவப்பு + கொடிவேலி]

சிவப்புக்கொம்மட்டி *śivappu-k-kommaṭṭi,* பெ. (n.) செங்கொம்மட்டி; red bitter water melon (சா.அக.).

[சிவப்பு + கொம்மட்டி]

சிவப்புக்கொய்யா *śivappu-k-koyyā,* பெ. (n.) செங்கொய்யா; red guava (சா.அக.).

[சிவப்பு + கொய்யா]

சிவப்புக்கொன்றை[1] *śivappu-k-koṉṟai,* பெ. (n.) வரிக்கொன்றை; red Indian laburnum (சா.அக.).

[சிவப்பு + கொன்றை]

சிவப்புக்கொன்றை[2] *śivappu-k-konṟai*, பெ. (n.) அழகிற்காகத் தோட்டங்களிற் பயிராக்கப் படும் செங்கொன்றை; red Indian laburnum planted in garden for ornamental purposes (சா.அக.).

[சிவப்பு + கொன்றை]

சிவப்புக்கோடைச்சவுக்கு *śivappu-k-kōḍai-c-cavukku*, பெ. (n.) இறகுபோன்ற கிளைகளை உடைய ஆற்றுச்சவுக்கு; tamarisk (சா.அக.).

[சிவப்பு + கோடை + சவுக்கு]

சிவப்புச்சங்கு *śivappu-c-caṅgu*, பெ. (n.) வெண் சிவப்புநிறமுள்ள சங்குவகை; pink coloured conch (சா.அக.).

[சிவப்பு + சங்கு]

சிவப்புச்சத்திசாரணை *śivappu-c-cattiśāraṇai*, பெ. (n.) செந்நிறமும் சிறியதும் சதைப்பற்றும் வாய்ந்த இலையினையுடையதும், உணவிற்குக் கீரையாகப் பயன்படுவதுமான சத்திசாரணை மூலிகை; red shauranay. It is a procumbent herb with fleshy red leaves and it is used in food like vegetable greens (சா.அக.).

[சிவப்பு + சத்திசாரணை]

சிவப்புச்சதுரக்கள்ளி *śivappu-c-cadura-k-kaḷḷi*, பெ. (n.) செங்கள்ளி; a red variety of square spurge (சா.அக.).

[சிவப்பு + சதுரக்கள்ளி]

சிவப்புச்சந்தனம் *śivappu-c-candaṉam*, பெ. (n.) செஞ்சந்தன மரவகை; a kind of red sandals (சா.அக.).

[சிவப்பு + சந்தனம்]

சிவப்புச்சந்தானிகம் *śivappu-c-candāṉigam*, பெ. (n.) செம்மாதுளை; red pomegranate.

[சிவப்பு + சந்தானிகம்]

சிவப்புச்சவ்வீரம் *śivappu-c-cavvīram*, பெ. (n.) இதளியஞ் சேர்த்துருவாக்கப்பட்ட வீரவைப்பு நஞ்சு வகையுளொன்று; a prepared sublimate of mercury (சா.அக.).

[சிவப்பு + சவ்வீரம்]

சிவப்புச்சாமந்தி *śivappu-c-cāmandi*, பெ. (n.) கொத்தாக மலரும் சாமந்தி வகை; red chrysanthemum (சா.அக.).

[சிவப்பு + சாமந்தி. சாமம் + அந்தி → சாமந்தி = அந்தி வண்ணம் போன்ற நிறமுடைய பூவகை]

சிவப்புச்சாமை *śivappu-c-cāmai*, பெ. (n.) செஞ்சாமை; red species of little millet (சா.அக.).

மறுவ. மத்தங்காய்ப்புல்

[சிவப்பு + சாமை. சமை → சாமை]

சிவப்புச்சாரணை *śivappu-c-cāraṇai*, பெ. (n.) சிவப்புச்சத்திசாரணை பார்க்க; see *śivappu-c-cattiśāraṇai* (சா.அக.).

[சிவப்புச்சத்திசாரணை → சிவப்பு சாரணை]

சிவப்புச்சாரம் *śivappu-c-cāram*, பெ. (n.) மருந்துச்சரக்குகளைக் கொல்லுந் தன்மை மிக்க சாரம்; an unknown alkaline potash supposed to kill some of the drugs (சா.அக.).

[சிவப்பு + சாரம். காரம் → சாரம்]

சிவப்புச்சாறு *śivappu-c-cāṟu*, பெ. (n.) தேட் கொடுக்குப்பூடு; scorpion sting plant (சா.அக.).

[சிவப்பு + சாறு]

சிவப்புச்சிக்கு *śivappu-c-cikku*, பெ. (n.) புளி யிண்டு; rosy-flushed assitello climber (சா.அக.).

[சிவப்பு + சிக்கு]

சிவப்புச்சிங்கிரா *śivappu-c-ciṅgirā*, பெ. (n.). செவ்வரளி; red oleander.

[சிவப்பு + சிங்கிரா]

சிவப்புச்சிங்கொனா *śivappu-c-ciṅgoṉā*, பெ. (n.) சிவப்புச்சுரப்பட்டை பார்க்க; see *śivappu-c-curappaṭṭai* (சா.அக.).

[சிவப்பு + சிங்கொனா]

சிவப்புச்சித்திரமூலம் *śivappu-c-cittira-mūlam*, பெ. (n.) செங்கொடிவேலி; rosy-flowered leadwort (சா.அக.).

[சிவப்பு + சித்திரமூலம்]

சிவப்புச்சிந்தாதி *śivappu-c-cindādi,* பெ. (n.) சிவந்திக்கடுக்காய் பார்க்க; see *śivandi-k-kaḍukkāy* (சா.அக.).

[சிவப்பு + சிந்தாதி]

சிவப்புச்சிவதை *śivappu-c-civadai,* பெ. (n.). குடலிளக்க மருந்தாகப் பயன்படும் செஞ்சிவதை வேர்; a red variety of turbith root.

[சிவப்பு + சிவதை]

சிவப்புச்சிற்றகத்தி *śivappu-c-ciṟṟāgatti,* பெ. (n.) சிவப்பு வகை அகத்தி; red sesbana (சா.அக.).

[சிவப்பு + சிற்றகத்தி]

சிவப்புச்சிற்றாமரை *śivappu-c-ciṟṟāmarai,* பெ. (n.) முளரிமலர் (உரோசா); rose-flower (சா.அக.).

[சிவப்பு + சிற்றாமரை]

சிவப்புச்சிறுசவுக்கு *śivappu-c-ciṟu-śavukku,* பெ. (n.). கோடைச்சவுக்கு; common tamarisk (சா.அக.).

[சிவப்பு + சிறுசவுக்கு]

சிவப்புச்சிறுமணியன் *śivappu-c-ciṟumaṇiyaṉ,* பெ. (n.) சம்பாநெல் வகை (தஞ்சை.); a variety of cambā paddy (சா.அக.).

[சிவப்பு + சிறுமணியன். சிறுமணி → சிறுமணியன்]

சிவப்புச்சிறுமுறியன் *śivappu-c-ciṟu-muṟiyaṉ,* பெ. (n.) நெல்வகை; a kind of paddy (சா.அக.).

[சிவப்பு + சிறுமுறியன்]

சிவப்புச்சீதாசெங்கழுநீர் *śivappu-c-cīdā-śeṅgaḻunīr,* பெ. (n.) சிவப்பு நெய்ச்சிட்டிக் கீரை; a red variety of ash coloured fleabane (சா.அக.).

[சிவப்பு + சீதா + செங்கழுநீர்]

சிவப்புச்சீபிகம் *śivappu-c-cībigam,* பெ. (n.). சிவப்புக்கழற்சி பார்க்க; see *śivappu-k-kaḻaṟci* (சா.அக.).

சிவப்புச்சீமைப்பிச்சி *śivappu-c-cīmai-p-picci,* பெ. (n.) 1. சீனப்பவளப்பிச்சி; China coral jasmine. 2. பாரசீகப்பழம்; Persian fruit (சா.அக.).

[சிவப்பு + சீமைப்பிச்சி]

சிவப்புச்சுரப்பட்டை *śivappu-c-curappaṭṭai,* பெ. (n.) சிவப்புச் சின்கொனாப்பட்டை; California cinchona bark (சா.அக.).

[சிவப்பு + சுரப்பட்டை]

சிவப்புச்சோளம் *śivappu-c-cōḷam,* பெ. (n.) செஞ்சோளம்; red maize.

[சிவப்பு + சோளம்]

சிவப்புச்சோற்றுக்கற்றாழை *śivappu-c-cōṟṟu-k-kaṟṟāḻai,* பெ. (n.) செங்கற்றாழை; curacoa aloes (சா.அக.).

[சிவப்பு + சோற்றுக்கற்றாழை]

சிவப்புத்தண்டுக்கீரை *śivappu-t-taṇḍu-k-kīrai,* பெ. (n.) தண்டுக்கீரை; a pot-herb (சா.அக.).

மறுவ. தண்டங்கீரை

[சிவப்பு + தண்டுக்கீரை]

சிவப்புத்தம்பட்டை *śivappu-t-tampaṭṭai,* பெ. (n.) வாளவரை வகை; ovate-leaved red-flowered sword-bean (சா.அக.).

[சிவப்பு + தம்பட்டை]

சிவப்புத்தலைக்கிளி *śivappu-t-talaikkiḷi,* பெ. (n.) செந்நிறக்கொண்டையுள்ள கிளி; rose-headed parrot (சா.அக.).

[சிவப்புத்தலை + கிளி]

சிவப்புத்தில்லை *śivappu-t-tillai,* பெ. (n.) மலைமூலிகை இருபத்துமூன்றுள் ஒன்றாகிய சிவப்புத் தில்லை மரம்; a red variety of tigermilk tree which is one of the twenty three mountain herbs (சா.அக.).

சிவப்புத்துத்தி *śivappu-t-tutti,* பெ. (n.) செந்துத்தி; devil's cotton (சா.அக.).

மறுவ. துத்தி, வட்டத்துத்தி, வட்டக்கண்ணி

[சிவப்பு + துத்தி]

சிவப்புத்துவரை *śivappu-t-tuvarai,* பெ. (n.) துவரை வகை; red gram (சா.அக.).

[சிவப்பு + துவரை]

சிவப்புநண்டு *śivappu-naṇḍu,* பெ. (n.). கடற்கரையோரமாகக் காணப்படும் சிவப்பு நிறமுள்ள நண்டு; red - crab found in sea-shore.

[சிவப்பு + நண்டு]

சிவப்புப்பசலை *śivappu-p-paśalai,* பெ. (n.) கீரை வகை (சங்.அக.); a variety of Indian spinach.

மறுவ. பசளைக்கீரை, செம்பசளைக் கீரை

க. கெபுபசளெ

[சிவப்பு + பசலை]

சிவப்புப்பனையேறி *śivappu-p-panaiyēṟi,* பெ. (n.) கிச்சிலிநிறமும் மஞ்சள் புள்ளிகளும் உடைய ஒரு வகை மீன்; a variety of orange colour and yellow spots (சா.அக.).

[சிவப்பு + பனையேறி]

சிவப்புப்பூலா *śivappu-p-pūlā,* பெ. (n.) 1. பூலா; feather foil, a large shrub. 2. பவளப்பூலா; coral berry tree.

[சிவப்பு + பூலா]

சிவப்புமந்தாரை *śivappu-mandārai,* பெ. (n.) மந்தாரை வகையுளொன்று (மூ. அ.); a variety of purple variegated mountain ebony.

க. கெம்புமந்தார

[சிவப்பு + மந்தாரை]

சிவப்புமரம் *śivappu-maram,* பெ. (n.) 1. செம்மரம்; Coromandel redwood. 2. விளாரி; bastard cedar.

[சிவப்பு + மரம்]

சிவப்புமருதோன்றி *śivappu-marudōṉṟi,* பெ. (n.) செம்மருது; a red variety of nail dye (சா.அக.).

[சிவப்பு + மருதோன்றி]

சிவப்புமிளகு *śivappu-miḷagu,* பெ. (n.) சம்பா நெல் வகையுளொன்று; a kind of cambā paddy (சா.அக.).

மறுவ. மிளகுச் சம்பா

[சிவப்பு + மிளகு. மிளகு = மிளகுச் சம்பா]

நீண்டு மெலிந்த மணியுடைய நெல்லைச் சீரகச்சம்பா என்றும், உருண்டை வடிவ மணியுடைய நெல்லை மிளகுச்சம்பா என்றும், தடித்த மணியுடைய நெல்லைக் கட்டைச்சம்பா என்றும் வழங்குவர்.

சம்பா பொதுவாய்க் கூலத்தையும், சிறப்பாய் நெல்லையும் குறிக்கும்.

சிவப்புமுள்ளங்கி *śivappu-muḷḷaṅgi,* பெ. (n.) செந்நிறமுள்ள முள்ளங்கிக்கிழங்கு வகை (இ.வ.); red country radish.

[சிவப்பு + முள்ளங்கி]

சிவப்புமூக்குள்ளான் *śivappu-mūkkuḷḷāṉ,* பெ. (n.) உள்ளான் வகை; painted snipe.

[சிவப்பு மூக்கு + உள்ளான்]



சிவப்புமொச்சை *śivappu-moccai,* பெ. (n.) மொச்சை வகை; red bean.

[சிவப்பு + மொச்சை]

சிவப்புவாடாமல்லிகை *śivappu-vāḍā-malligai,* பெ. (n.) செம்மல்லிகை வகையுளொன்று; a red variety of globe everlasting jasmine.

[சிவப்பு + வாடாமல்லிகை]

சிவப்புவெட்சி *śivappu-veṭci,* பெ. (n.) வெட்சி வகை; pink ixora.

[சிவப்பு + வெட்சி]

சிவப்புவேர் *śivappu-vēr,* பெ. (n.) நச்சுப் புல் வகையுளொன்று; a red variety of poisonous grass (சா.அக.).

[சிவப்பு + வேர்]

சிவப்பூ *śivappū,* பெ. (n.) மரவகை; bastard cedar (சா.அக.).

சிவப்பூர்-தல் *śivappūr-,* 2 செ.கு.வி. (v.i.) சிவந்த நிறமடைதல்; to redden. "செவ்விரல் சிவப்பூர" (கலித். 76).

[சிவப்பு + ஊர். உறு-தல் → ஊர்-,]

சிவப்பெலிச்செவி *śivap-peli-c-cevi*, பெ. (n.). *சிவப்பு நிறமுள்ள எலிச்செவிக்கீரை வகை;* a red variety of rat's ear green plant *(சா.அக.).*

[சிவப்பு + எலி + செவி]

சிவப்பேறு-தல் *śiva-p-pēṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *செந்நிறமடைதல்;* to redden.

[சிவப்பு + ஏறு-,]

சிவப்பேறு *śivappēṟu*, பெ. (n.). *சிவமாந் தன்மையை அடைகை;* realization of God-head. "*ஆன்மசுத்திப்பின் சிவப்பேறாமாறு உணர்த்துகின்றது" (சி.போ.பா.அவை. பக்.4).*

[சிவம் + பேறு]

சிவப்பொட்டடை *śivappoṭṭaḍai*, பெ. (n.) *செந்நிறமுள்ள ஒட்டடை நெல்வகை;* a red variety of oṭṭaḍai paddy.

[சிவப்பு + ஒட்டடை]

சிவப்போணான் *śivappōṇāṉ*, பெ. (n.) *சித்தியோணான் (வின்.);* a species of small blood-sucker.

[சிவப்பு + ஓணான்]

சிவப்போளகம் *śiva-p-pōḷagam*, பெ. (n.) *அரத்தபோளம்;* red dammer *(சா.அக.).*

[சிவப்பு + போளகம்]

சிவபண்டாரி *śiva-paṇḍāri*, பெ. (n.) 1. *சிவாலயக் கருவூலக்காரன்;* treasurer of Śaiva temple. "சிவபண்டாரிகள் வசமும்" (தெ.க.தொ. 1,140). 2. *சிவாலயத்தின் சரக்கறைக்காரன் (இ.வ.);* store keeper of a Śivaṉ temple.

[சிவன் + பண்டாரி]

பண்டம் = சரக்கு, பணம், கருவூலம், பொன். பண்டத்தையுடையவனும், காப்பவனும் பண்டாரி எனப்பட்டனர்.

ஒ.நோ. அதிகாரமுடையவன், அதிகாரி.

பண்டாரி என்னும் சொல் மக்கட் பெயராக இந்தியாவிலும் இந்தியாவிற்கு வெளியிலும் சென்றுள்ளது.

எ. கா. ரமேஷ் பண்டாரி: வ. இந்தியா
பண்டார நாயகா: இலங்கை

கடற்கரைத்துறைமுகங்கள் அருகில் சரக்குகள் உள்ள பண்டாரக் குடில்கள் ஏராளமாக இருந்தமையால், துறைமுகங்களே பண்டார் எனப்பட்டன.

எ. கா. அப்பாஸ் பண்டார்.

இது பந்தர் எனச் சுருங்கி வட இந்தியாவில் உள்ளது.

எ. கா. போர் பந்தர், மஜித் பந்தர்.

சிவபதம் *śiva-padam*, பெ. (n.) *சிவ பத்தர்கள் தத்தம் பக்குவத்திற்கு (பரிபாகத்திற்கு) ஏற்ப அடையும் தானாளுலகிருத்தல், தன் பாலிருத்தல், தானாம்பதம் பெறல், தானாகுதல் என்ற நால்வகைச் சிவபதவி (பிங்.);* Śiva's plane, comprising four states of bliss, viz, tāṉ-āḷ-ulagiruttal, taṉpāl-iruttal, tāṉ-ām-padam-peṟal, tāṉ-āgudal. "செம்மையேயாய சிவபத மளித்த செல்வமே" *(திருவாச. 37:3).*

[சிவன் + பதம்]

சிவபாத்தியன் *śiva-pāttiyaṉ*, பெ. (n.) *சிவனடியான்;* Śivaṉ's devotee as attached to the feet of Śivaṉ. "*திருவாதவூர்ச் சிவபாத்தியன்" (பதினொ. கோயிற்றிருப்பண். 58).*

[சிவன் + பாத்தியன்]

சிவபிரான் *śiva-pirāṉ*, பெ. (n.) *சிவபெருமான்;* Śivaṉ. "*முனிவர் நாகருஞ் சென்று காணரிய சிவபிரானை" (சேதுபு. நைமிசா. 20).*

[சிவன் + பிரான். பெருமகன் → பெருமான் → பிரான்.]

சிவபீசம் *śiva-pīśam*, பெ. (n.) *இதளியம் (சங்.அக.);* quick silver.

சிவபுண்ணியத்தெளிவு *śiva-puṇṇiya-t-teḷivu*, பெ. (n.) *உமாபதிசிவாசாரியர் இயற்றியதாகக் கருதப்படும் சிவனிய அறநூல்;* a treatise on Śaiva dharma considered to be authorised by Umāpadi-śivācāriyār, 13th C.

சிவபுண்ணியம் *śiva-puṇṇiyam*, பெ. (n.) *சிவனே முழுமுதற்கடவுளெனக் கொண்டு அக்கடவுளுவப்பச் செய்யும் நற்கருமங்கள் (சி.போ.பா. 8:1, பக். 356);* meritorious acts done in reference to Śivaṉ, as the Supreme Being.

[சிவன் + புண்ணியம்]

சிவபுரம் *śiva-puram*, பெ. (n.). *சிவவுலகம்;* Śivaṉ's abode. "*பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும்" (திருவாச. 19:3).*

[சிவன் + புரம்]

சிவபுராணம் *śiva-purāṇam*, பெ. (n.) 1. பதினெண் தொன்மங்களுள் (புராணத்துள்) சிவனைப் பற்றிக்கூறும் பத்துத் தொன்மங்கள் (கந்தபு. பாயி. 54); ten of the eighteen chief purāṇās. 2. மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்துள் ஒரு பகுதி; a poem in Tiruvāšagam by Māṇikkavāšagar.

[சிவன் + புராணம்]

Skt. purāṇa → த. புராணம்

சிவபூசை *śiva-pūšai*, பெ. (n.) நெறிமுறைப்படி செய்யும் சிவவழிபாடு; worship of Šivan usually ceremonial. "சிவபூசையின் பேற்றினால்" (சிவரக. தேவிநாட்டிய. 24).

[சிவன் + பூசை. பூசு → பூசை]

Skt. pūjā

சிவபெருமான் *śiva-perumān*, பெ. (n.) சிவபிரான் பார்க்க; see *šivapirān*. "செல்வமே சிவபெருமானே" (திருவாச. 37:1).

[சிவன் + பெருமான். பெருமகன் → பெருமான்]

சிவபோகம் *śiva-pōgam*, பெ. (n.) ஆதனின், பத்துவகைச் செயல்களுள் ஒன்றானதும், ஆதன் தன்னையிழந்து இறையுளொன்றி நிற்பதுமான பெருமகிழ்வுப் பெருவாழ்வு (உண்மை நெறி. 6.); spiritual experience of the soul in which it merges its individuality in Šivan, the Supreme Being, one of taša-kāriyam.

[சிவன் + போகம்]

சிவபோளம் *śiva-pōḷam*, பெ. (n.) வெள்ளைப் போளம்; myrrh.

[சிவன் + போளம்]

சிவம்[1] *śivam*, பெ. (n.) 1. வீடுபேறு (முத்தி) (பிங்.); final deliverance. 2. சித்துருவாகித் தற்பேரொளியாய் நிற்கும் சிவவடிவம்; highest state of God in which He exists as pure intelligence. "சித்தமல மறுவித்துச் சிவமாக்கி" (திருவாச. 51:1). 3. சிவதத்துவம் பார்க்க; see *šiva-tattuvam*. 4. ஓகம் இருபத்தேழனுள் ஒன்று; a division of time, one of 27 ōgam. 5. குறுணி; a measure of capacity = 8 paḍi. "ஒல்லைக்கொடுத்த மதுச்சிவ மென் றுரைத்தான் (உபதேசகா. சிவநாம. 8).

[செம் → செவ் → சிவ் → சிவ → சிவம் (த.ம.39)]

"சிவம் என்ற சொல்லிற்கு நன்மை என்று செ.அக. பொருள் கூறியிருப்பது, வடநூல் வழக்கைத் தழுவியதாகும். சிவன், தென்னவர் தெய்வமாதலால், அப்பொருள் பொருந்தாது. நல்ல அல்லது மங்கல என்னும் பொருளில் உருத்திரனுக்கும் இந்திரனுக்கும் அக்கினிக்கும் பொதுவாக வழங்கிய, 'சிவ' என்னும் அடைமொழியாகிய வடசொல் வேறு; நெருப்பின் கூறாகக் கொள்ளப்பட்டு அழல்வண்ணன் எனப்பட்ட இறைவன் பெயராகிய சிவன் என்னும் தென்சொல் வேறு." (வே. க. 225)

'தென்னாடுடைய சிவனே போற்றி!' என்பது மேற்கூறிய கருத்தை அரண்செய்யும். தட்சிணாமூர்த்தி என்ற சொல்லாட்சியும் இதனையே வலியுறுத்தும்.

சிவம்[2] *śivam*, பெ. (n.) 1. கொடிவேலி; Ceylon redwort. 2. வழலையுப்பு; mystric salt. 3. கறியுப்பு; common salt. 4. வெண்காரம்; borax. 5. வேம்பு; margosa tree. 6. திருகு கள்ளி; twisted spurge. 7. மழையோடு சேர்ந்துவிழும் ஆலங்கட்டி; frozen drops of rain. 8. கடுக்காய்; gall-nut. 9. இதளியம்; mercury. 10. நெல்லிக் காய்; Indian gooseberry. 11. தண்ணீர்; water. 12. செயற்கை உப்பு வகையுளொன்று; a kind of synthetic salt (சா.அக.).

சிவம்[3] *śivam*, பெ. (n.) சிவக்கொண்முடிபு (சைவ சித்தாந்தம்); Šaiva Šittānda philosophy. "சிவமென்னு மந்தந்தரம் (சி. போ. 12:4, வெண்பா.)

[சிவனியம் → சிவம்]

சிவமகாபுராணம் *śiva-magā-purāṇam*, பெ. (n.) பதினெண் தொன்மத்தொன்று; a chief Tonma one of padineṇ-tonmam.

[சிவன் + மகாபுராணம்]

சிவமயம் *śiva-mayam*, பெ. (n.) 1. சிவமாந் தன்மை; Šiva in essence. "அவர் சிவமயமே யாகலின்" (சி. போ. பா. அவை. பக். 4). 2. கடிதம், நூல் முதலியவற்றின் தொடக்கத்தில் சிவ சமயிகளால் வழங்கப்பெறும் மங்கலமொழி; an invocation meaning "All to the glory of Šiva", used by Šaivites at the head of a letter or document or over the title of a book.

[சிவன் + மயம்]

சிவமரம் *śiva-maram,* பெ. (n.) 1. வெள்ளைக் கடம்பு; bridal-couch plant. 2. சவுக்கு; whip tree.

[சிவன் + மரம்]

சிவமல்லி *śiva-malli,* பெ. (n.) கொக்கு மந்தாரை (மலை.); taper-pointed mountain ebony.

[சிவன் + மல்லி, மல்லி = மல்லிகை]

சிவமல்லிகா *śiva-malligā,* பெ. (n.) வெள்ளை வெங்காயம்; white onion (சா.அக.).

[சிவன் + மல்லிகா. மல்லிகை → மல்லிகா]

சிவமாக்கு-தல் *śivam-ākku-,* 5 செ.குன்றாவி. (v.i.) பற்பமாக்குதல், துகள்துகளாக்குதல்; calcining into an oxide, it is so called from its being turned into ashes (சா.அக.).

[சிவம் + ஆக்கு-,]

சிவமாதிகம்[1] *śiva-mādigam,* பெ. (n.) சிவகரந்தை பார்க்க; see *śiva-karandai* (சா.அக.).

சிவமாதிகம்[2] *śiva-mādigam,* பெ. (n.) மாமரம்; mango tree (சா.அக.).

சிவமாதுகம் *śiva-mādugam,* பெ. (n.) வேம்பு; margosa tree (சா.அக.).

சிவமாலை *śiva-mālai,* பெ. (n.) தலைமாலை; Indian shot (சா.அக.).

சிவமுப்பு *śiva-muppu,* பெ. (n.) 1. மண்டையோட்டிலிருந்து செய்யப்படும் உப்புவகை; a salt prepared by a secret process from the skull. 2. விந்து; semen (சா.அக.).

சிவமுறை *śiva-muṟai,* பெ. (n.) ஐவேலி; species of bryonia (சா.அக.).

சிவமூலக்காரம் *śiva-mūla-k-kāram,* பெ. (n.) ஊதைநோய், பல்லரணை, உட்சூடு போன்றவற்றைப் போக்கும் சீனக்காரம்; alum imported from China as distinguished from indegenous one (சா.அக.).

[சிவமூலம் + காரம்]

சிவமூலி *śiva-mūli,* பெ. (n.) கஞ்சா; gunjah plant (சா.அக.).

[சிவம் + மூலி]

சிவயோகத்தங்கம் *śiva-y-ōgat-t-taṅgam,* பெ. (n.) சிவவோகத்தங்கம் பார்க்க; see *śiva-v-ōga-t-taṅgam* (சா.அக.).

சிவயோகம் *śiva-y-ōgam,* பெ. (n.) சிவவோகம் பார்க்க; see *śiva-v-ōgam* (சா.அக.).

சிவயோகி *śiva-y-ōgi,* பெ. (n.) சிவவோகி பார்க்க; see *śiva-v-ōgi.*

சிவரகசியம் *śiva-ragaśiyam,* பெ. (n.) 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒப்பிலாமணி தேசிகரால் இயற்றப்பட்டதும் சிவபூசை முதலியவற்றின் பெருமைகளை வனப்பு இலக்கிய முறையில் கூறுவதுமான செய்யுணூல்; a treatise in Tamil verse dealing with the importance of Śivan worship and illustrating it by means of stories, by Oppilā maṇi dēsigar, 1718 A.D.

[சிவன் + ரகசியம்]

Skt. rahasya.

சிவரசம் *śiva-raśam,* பெ. (n.) 1. மூன்று நாள் ஊறிய கஞ்சி; rice gruel for three days. 2. மூலநோயகல செம்பு முதலிய மாழைகளைப் பற்பமாக்கி, மாதுளம் பழச்சாறு, இதளியம் போன்றவற்றைச் சமநிலையிற் சேர்த்துக் கொடுக்கும் ஆயுள்வேதமருந்து; a kind of Āyurvēdic medicine prepared by mixing the calcined powders of mercury, copper and mica taken in equal weights and then grinding them with the pomegranate juice. It is prescribed for piles (சா.அக.).

வ. ரசம்

[சிவன் + ரசம்]

சிவராசவோகி *śiva-rāśa-v-ōgi,* பெ. (n.) மாபெருஞ்சித்தரும், அகத்தியர் மாணவருமான புலத்தியர்; the name of a Śitta known as Pulathiar, the disciple of the great Śittar Agattiya (சா.அக.).

சிவராசத்தங்கம் *śiva-rāśa-t-taṅgam,* பெ. (n.) உப்பைச் சேர்த்துச் செயற்கைப் பொன்னாக்க முறையிற் செய்த தங்கம்; a synthetic gold prepared out of consolidated common salt by alchemical process (சா.அக.).

சிவராசவெள்ளி *śiva-rāsa-veḷḷi,* பெ. (n.) இதளிய (பாதரச) வெள்ளி; a synthetic silver prepared from consolidated mercury.

[சிவராசம் + வெள்ளி. சிவரசம் → சிவராசம்]

சிவராத்திரி *śiva-rāttiri,* பெ. (n.) சிவனிரவு பார்க்க; see *śivaniravu.* "சிவராத்திரிப் போது துயிலோமென்ற விரதியரும்" (தாயு. பரிபூ. 3).

[சிவன் + இராத்திரி. இரவு → இரா]

சிவராயன் *śiva-rāyaṉ,* பெ. (n.) 1. பழைய காசு (நாணய) வகை (பணவிடு. 117); an ancient coin. 2. துணிவகை (இ.வ.); a kind of cloth.

சிவராளம் *śivarāḷam,* பெ. (n.) இலவங்கப்பூ; clove flower (சா.அக.).

சிவரி *śivari,* பெ. (n.) கழுதை; ass (சா.அக.).

சிவரோகம் *śiva-rōgam,* பெ. (n.) கற்கடகச் சிங்கி; crab's horn (சா.அக.).

சிவல் *śival,* பெ. (n.) 1. கவுதாரி என்னும் பறவை (திவா.); Indian partridge. 2. காடை வகை (வின்.); quail. 3. கிலுகிலுப்பைச் செடி (மலை.); laburnum-leaved rattlewort. 4. செவ்வணிலம்; redsoil.

மறுவ. செவல், செவல்மண், செவலை.

[சிவ் → சிவ → சிவல் (வே.க. 223)]

சிவல்கறி *śival-kaṟi,* பெ. (n.) பித்தம், கோழை போன்றவற்றைப் போக்கும் கவுதாரி இறைச்சி; partridge flesh is greatly useful in cases of bilious and phlegmatic (சா.அக.).

[சிவல்+ கறி]

சிவலிங்கக்காய் *śivaliṅga-k-kāy,* பெ. (n.) ஐவேலி மரத்தின் காய்; the fruit of Ivēli tree (சா.அக.).

[சிவலிங்கம் + காய்]

சிவலிங்கப்பூசை *śivaliṅga-p-pūśai,* பெ. (n.) சிவ சமயத்தவரால் பூசிக்கப்படும் சிவலிங்க வழிபாடு; cylindrical stone rounded off at the top, worshipped by Śaivites as an emblem of Śivaṉ (சா.அக.).

[சிவலிங்கம் + பூசை]

சிவலிங்கம் *śivaliṅgam,* பெ. (n.) சிவனியர் வழிபடும் இலிங்க வடிவமான சிவனுருவம்; cylindrical stone rounded off at the top, worshipped by Śaivites as an emblem of Śivaṉ.

[சிவன் + இலிங்கம். இலங்கம் → இலிங்கம்]

சிவலிங்கமரம் *śiva-liṅga-maram,* பெ. (n.) மாவகம்; nitta tree (சா.அக.).

[சிவலிங்கம் + மரம்]

சிவலை *śivalai,* பெ. (n.) 1. செந்நிறமான எருது போன்ற விலங்கு (உ.வ.); reddish animal, as a bull. 2. சிவப்பான ஆள் (யாழ்ப்.); person of light complexion. 3. சிவப்புநிறமுள்ளது; that which is red. "நெற்றிச் சிவலை" (கலித். 104:65).

சிவலோகச்சிவன் *śiva-lōga-c-civaṉ,* பெ. (n.) காந்தம் (இராட்.); load stone.

சிவலோகத்தி *śiva-lōgatti,* பெ. (n.) திப்பிலி; long pepper (சா.அக.).

சிவலோகம்[1] *śiva-lōgam,* பெ. (n.) சிவன் வாழும் இடமென்று கருதப்படும் கைலாயம்; Kailāyam, as Śivaṉ's abode. "அப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த வப்பார் சடையப்பன்" (திருவாச. 8:11).

[சிவன் + உலகம் - சிவனுலகம் → சிவலோகம்]

சிவலோகம்[2] *śiva-lōgam,* பெ. (n.) இதளியம்; mercury (சா.அக.).

சிவவடிவம் *śiva-vaḍivam,* பெ. (n.) ஆதனின் பத்து வகைச் செயற்பாடுகளுள் ஒன்றாய், 'அருள்மயமான ஐந்தொழிலால், தன்னைக் கட்டுண்ட மலங்களை நீக்கி, இறைவன் முத்தியளிப்போன்' என்றுணர்ந்து கொள்ளும் ஆதனின் துய்ப்பு நிலை (உண்மை நெறி. 3); spiritual experience of the soul in which it clearly understands that Śivaṉ, by His five gracious functions cleanses it of malam and bestows salvation, one of tasa-kāriyam.

[சிவன் + வடிவம்]

சிவவல்லபம் *śiva-vallabam,* பெ. (n.) 1. எருக்கு; madar. 2. நாவல் வகை; a species of jambolona.

3. செவ்வந்தி; chrysanthemum. 3. மாமரம்; mango tree (சா.அக.).

[சிவன் + வல்லபம்]

வல்லபம் பார்க்க.

சிவவல்லி *śiva-valli,* பெ. (n.) கோவைக் கொடி வகை (சங்.அக.); a kind of climber.

[சிவம் + வல்லி. வல்லி = கொடி. வள்ளி → வல்லி]

சிவவாக்கியம்[1] *śiva-vākkiyam,* பெ. (n.) சிவவாக்கியர் இயற்றிய செய்யுள் நூல்; a collection of mystic verses ascribed to Śiva-vākkiyar.

[சிவவாக்கியர் → சிவவாக்கியம்]

ஒ.நோ. தொல்காப்பியர் → தொல்காப்பியம்

சிவவாக்கியம்[2] *śiva-vākkiyam,* பெ. (n.) திருவைந்தெழுத்து; the five mystic letters (சா.அக.).

[சிவம் + வாக்கியம். வாக்கு → வாக்கியம்]

சிவவாக்கியர் *śiva-vākkiyar,* பெ. (n.) சிவத் துறவி; a Śaiva devotee.

இவர் மெய்ப்பொருட் கருத்தடங்கிய சிவ வாக்கியம் என்ற நூலை இயற்றியவர்.

சிவவீசம் *śiva-vīsam,* பெ. (n.) சிவலோகம் பார்க்க; see *śiva-lōgam.*

சிவவுலகச்சேவகன் *śiva-v-ulaga-c-cēvagaṉ,* பெ. (n.) காந்தம்; load-stone.

[சிவவுலகம் + சேவகன்]

சிவவேகை *śiva-vēgai,* பெ. (n.) செம்பருத்தி; red cotton (சா.அக.).

சிவவேடம் *śiva-vēdam,* பெ. (n.) அக்கமணி முதலான சிவச்சின்னம் பூண்ட கோலம்; distinctive external marks of a Śaiva consisting of akkamaṇi beads and sacred ashes. "சிவ வேடந் தரித்தவர்" (காசிக. பாயி. 12).

[சிவன் + வேடம்]

சிவவோகத்தங்கம் *śiva-vōga-t-taṅgam,* பெ. (n.) சிவவோகி தம்முடைய குண்டலத்திற்குப் பயன்படுத்தும் உயர்ந்த வகைத் தங்கம்; a superior refined synthetic gold used as an ear ornament by a vōgi addicted to worship of Śiva (சா.அக.).

[சிவவோகம் + தங்கம்]

சிவவோகம் *śiva-vōgam,* பெ. (n.) ஆதனது (ஆன்மாவின்) பத்து வகைச் செயற்பாட்டி னொன்று. இந்நிலையில் ஆதன் தன்னை யிழக்காது இறைவனின் எல்லாமாந் தன்மையை உணர்ந்து அவனோடு இயைந்து நிற்கும் துய்ப்பு நிலை (உண்மை நெறி. 5); spiritual experience of the soul in which it realises the omnitude of Śiva and sets itself in tune with Him with out losing its individuality, one of taśa-kāriyam.

[சிவன் + ஓகம்]

சிவவோகி[1] *śiva-v-ōgi,* பெ. (n.) சிவவோகத்தால் முத்தி நிலையடைந்தோர்; yogins who by meditation on Śivaṉ have attained salvation.

[சிவன் + ஓகி]

சிவவோகி[2] *śiva-v-ōgi,* பெ. (n.) வசம்பு (பாலவா. 317); sweet flag.

சிவளிகை *śivaḷigai,* பெ. (n.) பெருஞ்சூட்டு (அக.நி.); a kind of head-ornament.

[சிகழிகை → சிவளிகை]

சிவளிகைக்கச்சு *śivaḷigai-k-kaccu,* பெ. (n.). உடைமேற் கட்டுங்கச்சு; sash tied round the waist over the dress. "செவ்வரத்த வுடையாடை யதன்மேலோர் சிவளிகைக்கச்செசன்கின்றாளால்" (திவ். பெரியதி. 8.1.7).

[சிவளிகை + கச்சு]

சிவறாங்கம் *śivaṟāṅgam,* பெ. (n.) உருத்திரனைக் குறிக்கும் திருவைந்தெழுத்துள் ஒன்றான சிகாரம்; the middle of the Śivan mystic letters representing the power Rudran (சா.அக.).

சிவறாமவிந்து *śivaṟāma-vindu,* பெ. (n.) முலைப்பால்; woman's breast milk (சா.அக.).

சிவன்[1] *śivaṉ,* பெ. (n.) சிவனியர்க்கு வழங்கிய சிறப்புப் பெயர்; title of śaiva devotees. "கயிலாயன் ஆரூரான் தர்மம் சிவனக்கு நிசதம் நெல்லு முக்குறுணி" (தெக.தொ. 2, 254).

ம. சிவன்; க. சிவ, சிவு; தெ. சிவுடு

[சிவ → சிவம் → சிவன். (த.ம.)]

த. சிவன் → Skt. śiva

சிவன் என்னும் பெயர் சிவந்தவன் என்று பொருள்பட்டுச் சேயோன் என்னும் முருகனை முன்னும் முத்தொழிலிறைவனைப் பின்னும் குறிக்கும் தூய தமிழ்ச்சொல். வேதத்தில் அக்கினிக்கும் இந்திரனுக்கும் உருத்திரனுக்கும் பொது அடைமொழியாக வரும் சிவ என்னும் சொல், மங்கல அல்லது நல்ல என்று பொருள்படும் பெயரெச்சம், இவ்விரண்டிற்கும் தொடர்பில்லை (வ.வ.இன்.34)

சிவன்[2] *śivaṉ*, பெ. (n.) பூனைக் கண்மணி (வயிடூரியம்) (மூ.அ.); cat's eye, a variety of quartz.

[(சிவப்பு) → சிவ → சிவன்]

சிவன்[3] *śivaṉ*, பெ. (n.) 1. இதளியம்; mercury. 2. சிவகரந்தை; sweet basil (சா.அக.).

சிவன்[4] *śivaṉ*, பெ. (n.) 1. தந்தை; father. 2. குரு; master.

சிவன்சொத்து[1] *śivaṉ-śottu*, பெ. (n.) சிவன் கோயில், திருமேனி, அணிகலன்கள், முதலியன; property of sivan viz. temple, statue, ornament, etc. 'சிவன் சொத்து குலநாசம்' (பழ.).

சிவன்சொத்து[2] *śivaṉ-śottu*, பெ. (n.) செயற்கைப் பொன்; synthetic gold (சா.அக.).

[சிவன் + சொத்து]

சிவன்மாலை *śivaṉ-mālai*, பெ. (n.) சிவதுளசி பார்க்க; see *śiva-tuḷasi* (சா.அக.).

[சிவன் + மாலை]

சிவன்முடிக்கன்னி *śivaṉ-muḍi-k-kaṉṉi*, பெ. (n.) சிவகரந்தை பார்க்க; see *śiva-karandai* (சா.அக.).

[சிவன் + முடிக்கன்னி]

சிவன்முடிச்செல்வி *śivaṉ-muḍi-c-celvi*, பெ. (n.) நாறுகரந்தை; Indian globe thistle (சா.அக.).

[சிவன் + முடிச்செல்வி]

சிவன்மூலி *śivaṉ-mūli*, பெ. (n.) அழற்சி மிகு குளிர்ச்சி, பெருநோய், பிளவை, பல்வலி, வாய்ப்புண் போன்றவற்றைப் போக்கும் படர் கொடி மூலிகை; Śivaṉ's neem, wiry indigo. It is a spreading shrub, decoction is prescribed for sever cold, leprous, and cancerous affections the chewed root when given has the virtue of easing tooth ache and etc (சா.அக.).

[சிவன் + மூலி]

மறுவ. சிவனார்வேம்பு, சிவவீரியம், சிவனார் சேவிகம்.

சிவன்விந்து *śivaṉ-vindu*, பெ. (n.) 1. வழலை; a mystic name for quintessence salt used in Alchemy. 2. மூளை; brain. 3. தலைப்பிண்ட மூளை; the brain of the first foetus of a woman's womb. 4. வன்னிமரம்; suma trees (சா.அக.).

[சிவன் + விந்து]

சிவன்வீரியம் *śivaṉ-vīriyam*, பெ. (n.) இதளியம்; mercury.

[சிவன் + வீரியம்]

சிவன்வேசை *śivaṉ-vēsai*, பெ. (n.) செம்பருத்தி; red-cotton (சா.அக.).

[சிவன் + வேசை]

செம்பரத்தை பார்க்க

சிவன்வேம்பு *śivaṉ-vēmbu*, பெ. (n.) சிவனார் வேம்பு (வின்.) பார்க்க; see *śivanār-vēmbu*.

[சிவன் + வேம்பு]

சிவனடியார் *śivaṉaḍiyār*, பெ. (n.) 1. சிவனை வழிபடுவோர்; devotees of Śiva. 2. நாயன்மார்கள் (வின்.); the Nāyaṉmārs.

[சிவன் + அடியார்]

சிவனந்தி *śivanandi*, பெ. (n.) அடுக்கு நந்தியாவட்டம்; double wax flower (சா.அக.).

சிவனம் *śivaṉam*, பெ. (n.) 1. குன்றிமணி; jewellers bead. 2. பொருத்து; suture (சா.அக.).

சிவனமிர்தம் *śivaṉamirdam*, பெ. (n.) கடுக்காய்; gall nut (சா.அக.).

சிவனாகம் *śivaṉāgam*, பெ. (n.) உப்புமணி; salt beads (சா.அக.).

சிவனாகினி *śivaṉāgiṉi*, பெ. (n.) வெற்றிலைக் கொடி; betel creeper (சா.அக.).

சிவனாடல் *śivaṉ-āḍal*, பெ. (n.) *பாண்டரங்கம், கொடுகொட்டி, காபாலம் என்று கூறப்படும் சிவபெருமானது ஆடல்;* dance of Śivaṉ, three in number, viz. pāṇḍaraṅgam, koḍu-kōṭṭi, kābālam.

[சிவன் + ஆடல்]

சிவனாதியுப்பு *śivaṉādi-y-uppu*, பெ. (n.) *பூரணாதி உப்பு;* a quintesence salt *(சா.அக.).*

சிவனாம்பு *śivaṉāmbu*, பெ. (n.) *மருந்துப் பூடுவகை;* a kind of medicinal shrub.

[சிவன் → சிவனாம்பு]

சிவனார்கிழங்கு *śivaṉār-kiḻaṅgu*, பெ. (n.) *கார்த்திகைக் கிழங்கு (மலை.);* Malabar glory-lily.

[சிவனார் + கிழங்கு]

சிவனார்கொடி *śivaṉār-koḍi*, பெ. (n.) *செங்காந்தள் (திவ்.பெரியாழ். 3.3:1, ஜீ);* Malabar glory-lily.

சிவனார்சேவிகம் *śivaṉār-śēvigam*, பெ. (n.) *சிவன்மூலி பார்க்க;* see *śivaṉ-mūli (சா.அக.).*

[சிவனார் + சேவிகம்]

சிவனார்தலை *śivaṉār-dalai*, பெ. (n.) *இலிங்கம்;* phallus.

[சிவனார் + தலை]

சிவனார்பாகல் *śivaṉār-pāgal*, பெ. (n.) 1. *ஐவிரலி;* a creeper bearing a red fruit. 2. *கோவை (மலை.);* a common creeper of the hedges.

[சிவனார் + பாகல்]

சிவனார்பாவை *śivaṉār-pāvai*, பெ. (n.) *கொவ்வைக் கொடி;* Indian creeper *(சா.அக.).*

[சிவனார் + பாவை]

சிவனார்விந்து *śivaṉār-vindu*, பெ. (n.) *இதளியம்;* mercury *(சா.அக.).*

[சிவனார் + விந்து]

சிவனார்வேம்பு *śivaṉār-vēmbu*, பெ. (n.) *செடிவகை (பதார்த்த. 267);* wiry indigo.

மறுவ. இறைவன் வேம்பு

[சிவனார் + வேம்பு]



சிவனி[1] *śivaṉi*, பெ. (n.) *கழுதை (யாழ்.அக.);* ass.

சிவனி[2] *śivaṉi*, பெ. (n.) 1. *மருளூமத்தை;* Indian xanthium. 2. *பாலை;* edible paulay.

சிவனிப்பால் *śivaṉi-p-pāl*, பெ. (n.) *கழுதைப் பால்;* ass's milk.

[சிவனி + பால்]

சிவனிரவு *śiva-rāttiri*, பெ. (n.) *கும்ப (மாசி) மாதத்துக் காருவா பதினான்காம் நாளில் (கிருஷ்ண சதுர்த்தசி) சிவனடியார்கள் நாள் முழுதும் உண்ணாநோன்பிருந்து இரவெல்லாம் கண்விழித்துச் சிவனைப் பூசித்துக் கொண்டாடும் நோன்பு;* a popular religious observance in honour of Śivaṉ on the 14th titi of the dark fortnight of the month of Māsi, when Śaiva devotees perform pūjās several times at night without having any sleep.

[சிவன் + இரவு]

சிவனுப்பு *śivaṉ-uppu*, பெ. (n.) *செயற்கையுப்பு;* an artificial salt *(சா.அக.).*

[சிவன் + உப்பு]

சிவனுள்மலை *śivaṉuḷ-malai*, பெ. (n.) *அயமலை;* mountain containing iron ore *(சா.அக.).*

சிவனெண்குணம் *śivaṉ-eṇ-kuṇam*, பெ. (n.) *சிவபெருமானுடைய எண் வகைக் குணங்களான தன் வயத்தனாதல், தூய வுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல் இயல்பாக, பாசங் களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலா ஆற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை*

முதலியன (குறள், 9, உரை); the eight attributes of Šivan, viz, tan-vayattanādal, tūya-v-udambinanādal, iyarkai-y-unarvinanādal, murrumunardal, iyalpāgavē pāšangali nīngudal, pērarulụdaimai, mudivilā-ārraludaimai, varambilinpamudaimai.

[சிவன் + எண் + குணம்]

சிவனேயென்றிரு-த்தல் *šivanē-y-enriru-, 3* செ.குன்றாவி. (v.i.) முயற்சியின்றி அடங்கியிருத்தல் (உ.வ.); to keep quiet or peaceful.

[சிவன் + ஏ+ என்றிரு-,]

சிவனைம்முகம் *šivanai-m-mugam,* பெ. (n.) கிழக்கு, மேற்கு, வடக்கு, வடகிழக்கு, தெற்கு நோக்கி யருள்பாலிக்கும் சிவபெருமானுடைய ஐந்து முகங்கள் (ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம்); the five faces of Šivan in His Sadā Šivan from, viz, īšānam, tarpurudam, akōram, vāmam, šattiyōsātam.

[சிவன் + ஐம்முகம்]

சிவனோங்கிவள்ளி *šivanōngi-valli,* பெ. (n.) காந்தம்; magnet (சாஅக.).

சிவாக்கிரயோகி *šivākkira-y-ōgi,* பெ. (n.) சிவஞானசித்தியார் உரைகாரருளொருவர்; a commentator on Šiva-ñāna-šittiyār.

சிவாகம் *šivāgam,* பெ. (n.) கடுக்காய்; galnut (சாஅக.).

சிவாகமம் *šivāgamam,* பெ. (n.) சிவத்தோன்றியம் பார்க்க; see *šiva-t-tōnriyam.*

[சிவன் + ஆகமம்]

Skt. āgama → த. ஆகமம்

சிவாகிதம் *šivāgidam,* பெ. (n.) பாதிரி; trumpet flower tree (சாஅக.).

சிவாங்கம் *šivāngam,* பெ. (n.) 1. வில்வம்; bael. 2. இலவங்கப் பத்திரி; cinnamon (சாஅக.).

சிவாச்சகம் *šivāccagam,* பெ. (n.) கீழ்க்காய் நெல்லி; niruri (சாஅக.).

சிவாச்சிரமத்தெளிவு *šivāccirama-t-telivu,* பெ. (n.) பண்டாரசாத்திரத் தொன்றும், அம்பலவாண தேசிகரியற்றியதுமான சிவனியக்கொண்முடிபு நூல்; a Šaiva Šittānda treatise by Ambalavāṇa tēšigar, one of paṇḍāra-cāttiram.

[சிவாசிரமம் + தெளிவு]

சிவாசாரியர் *šivā-šāriyar,* பெ. (n.) சிவன் கோயில் குருக்கள்மார்தம் பட்டப்பெயர்; title of saiva Āccāryās especially Ādi-saiva priests.

[சிவன் + ஆசாரியர்; சிவனாசாரியார் → சிவாசாரியர்]

சிவாட்சம் *šivātcam,* பெ. (n.) அக்கமணி (மலை.); rudrākka bead.

[சிவன் + அட்சம் (அக்கமணி). அள் = கூர்மை. அள் → அங்கு → அக்கு. அக்கு = கூர்மை, முனை, முண்முனை, முண்முனை யாடிள்ளமணி. அக்கு → அக்கம் → அக்சம் → அக்சம் → அட்சம்]

சிவாத்துவிதசைவம் *šivāttuvida-šaivam,* பெ. (n.) அகச்சமயம் ஆறனுள், துணை காரணனாகிய இறைவனே உலகிற்கு முதற் காரணனும் ஆவன் என்று கூறும் சிவனியப் பிரிவு (சி.போ.பா. 7:1, பக். 337); šaiva doctrine which holds that Šiva, the efficient cause, is also the material cause of the universe one of six aka-c-camayam.

[சிவன் + அத்துவைதம் + சைவம்; சிவனத்துவைத சைவம் → சிவாத்துவைத சைவம்]

சிவாத்துவிதம் *šivāttuvidam,* பெ. (n.) சிவாத்துவிதசைவம் பார்க்க (சி. போ. பா. 2:1. பக். 106); see *šivāttuvida-šaivam.*

[சிவன் + அத்துவைதம்]

அத்துவைதம் → அத்துவிதம்

சிவாத்துவைதம் *šivāttuvaidam,* பெ. (n.) சிவாத்துவிதசைவம் பார்க்க (சி. போ. பா. 2:1. பக். 106); see *šivāttuvida-šaivam.*

[சிவன் + அத்துவைதம்]

சிவாதகி *šivādagi,* பெ. (n.) வன்னிமரம்; suma tree (சாஅக.).

சிவாதமுள்ளி *śivāda-muḷḷi,* பெ. (n.) செம்முள்ளி; thorny nail dye (சா.அக.).

[சிவந்தமுள்ளி → சிவாதமுள்ளி (கொ. வ.)]

சிவாதாயம் *śivādāyam,* பெ. (n.) பல சில்லறை வகைகளிலும் வரும் வருமானம் (R.T.); miscellaneous revenue.

[சிவன் + ஆதாயம். சிவனாதாயம் → சிவாதாயம்]

சிவாதிகம் *śivādigam,* பெ. (n.) பேயத்தி; devil fig (சா.அக.).

சிவாநந்திமூலம் *śivā-nandi-mūlam,* பெ. (n.) வெடியுப்புச் சுண்ணம்; calcium compound prepared from nitre (சா.அக.).

சிவாம்பரத்தம் *śivām-parattam,* பெ. (n.) செம்பரத்தம்; Chinese rose mallow (சா.அக.).

[சிவப்பு + செம்பரத்தம். சிவப்புச் செம்பரத்தம் → சிவாம்பரத்தம்]

சிவாமதானு *śivāmadāṉu,* பெ. (n.) வெந்தயம்; dill seed (சா.அக.).

சிவாயநம *śivāyanama,* பெ. (n.) சிவனியர்களால் போற்றப்படும் திருவைந்தெழுத்து மந்திரம்; the tiruvaindeluttu mantra of the śaivaites, held to be most sacred. *"நானேயோ தவஞ்செய்தேன் சிவாய நமவெனப் பெற்றேன்"* (திருவாசகம்).

சிவார்ப்பணம் *śivār-p-paṇam,* பெ. (n.) செயல் முடிவில், அதன் பயனைச் சிவனுக்குரிய தாக்குவதைக் குறிக்குந் தொடர்; expression used by śaivites generally at the close of rituals, ablutions, etc., dedicating them to Śivaṉ. "சிவார்ப்பணம் எனக்கருதாத வழிக் குற்றமென்று ஆகமங்கள் கூறியதூஉம்" *(சி.போபா.11:1, பக். 224).*

[சிவம் + அர்ப்பணம்]

சிவாரகம் *śivāragam,* பெ. (n.) ஆட்டாங் கொடி; a kind of medicinal plant (சா.அக.).

சிவாராதி *śivārādi,* பெ. (n.) நாய்; dog (சா.அக.).

சிவாருகம் *śivārugam,* பெ. (n.) ஆல் (மலை.); banyan tree.

[சிவ + ஆருகம்]

சிவாலயம்[1] *śivālayam,* பெ. (n.) சிவன் கோயில்; Śivaṉ temple.

[சிவன் + ஆலயம்]

Skt. ālaya.

சிவாலயம்[2] *śivālayam,* பெ. (n.) செந்துளசி; red basil (சா.அக.).

[சிவன் + ஆலயம்]

சிவாலு *śivālu,* பெ. (n.) நரி; fox (சா.அக.).

சிவானந்தி *śivānandi,* பெ. (n.) சிறுதுத்தி; small leaved rose mallow (சா.அக.).

சிவி-தல் *śivi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. பிஞ்சாய் உதிர்தல் (நெல்லை.); to wither as fruits. 2. சுருங்குதல், சிறுத்தல் *(திருக். தமிழ் மரபுரை. 742).*

சிவிகரம் *śivigaram,* பெ. (n.) சாதிக்காய் (மலை.); nutmeg.

சிவிகாதிதம் *śivigādidam,* பெ. (n.) வேங்கை மரம்; kino tree (சா.அக.).

சிவிகை *śivigai,* பெ. (n.) 1. பல்லக்கு; palanquin, covered litter. "சிவிகை பொறுத்தானோ டூர்ந்தானிடை" (குறள், 37). 2. எருது பூட்டிய ஊர்தி (திவா.); bullock-cart.

[சில் → சிவ் → சிவி → சிவிகை]

சிவிகையார் *śivigaiyār,* பெ. (n.) பல்லக்குத் தூக்கும் பிரிவினர்; a caste of palanquin - bearers.

[சிவிகை + ஆர்]

சிவிகையார்வழக்கு *śivigaiyār-vaḻakku,* பெ. (n.) பெருஞ்சண்டை (இராட்.); violent quarrel.

[சிவிகையார் + வழக்கு]

சிவிங்கி[1] *śiviṅgi,* பெ. (n.) 1. ஒருவகை விலங்கு; Indian lynx. 2. சிறுத்தை (வின்.); hunting leopard.

[சிவி → சிவிங்கி]

தெ. க. சிவிங்கி; ம. சிவின்னி

சிவிங்கி[2] *śiviṅgi,* பெ. (n.) சிவிங்கி மீன்; a felix species of fish (சா.அக.).

சிவிங்கி[3] *śiviṅgi*, பெ. (n.) பறவை வகை; a kind of bird (சா.அக.).

சிவிங்கிநாய் *śiviṅgi-nāy*, பெ. (n.) வேகமாய் ஓடக்கூடிய சோணங்கி நாய் (வின்.); a swift-footed hunting dog.

[சிவிங்கி + நாய்]

சிவிங்கிப்பூனை *śiviṅgi-p-pūṉai*, பெ. (n.) பூனை வகை; leopard cat.

[சிவிங்கி + பூனை]

சிவிட்கு *śiviṭku*, பெ. (n.) சினம்; anger. *"புலியினுடைய சிவிட்கும்"* (திவ். திருப்பா. 23, வியா. 205).

தெ. சிவிக்கு

சிவிட்கெனல் *śiviṭkeṉal*, பெ. (n.) 1. பொறுமை யின்மைக் குறிப்பு; onom. expr. of being impatient. "பின்னையும் உணரக் காணாமை யாலே சிவிட்கென்று உன் மகள் தான் ஊமையோ வென்கிறார்கள்" *(திவ். திருப்பா. 9, வியா. 114).* 2. விரைவுக்குறிப்பு; being quick, hasty. 'பூனைபோ லொடுங்கிச் சிவிட்கென் றெழுந்து" *(குருபரம். 197).*

தெ. சிவ்ன்க்குனா

[சிவிட்கு + எனல்]

சிவிடு *śiviḍu*, பெ. (n.) 1. 360 நெல் பிடிக்கும் அளவு; a measure of 360 paddy grains. 2. சிறிது; that which is small.

[செவிடு (யாழ்.அக.) → சிவிடு]

சிவித்திரம் *śivittiram*, பெ. (n.) வெண்குட்டம்; white leprosy (சா.அக.).

சிவிப்பறவை *śivi-p-paṟavai*, பெ. (n.) சிறவிப் புலி; a small variety of panther (சா.அக.).

சிவிபோகணம் *śivibōgaṇam*, பெ. (n.) வெள்ளை நாகணம்; white croton plant (சா.அக.).

சிவியார் *śiviyār*, பெ. (n.) 1. சிவிகையார் பார்க்க; see *śivigaiyār*. "பரியெங்கே சிவியா ரெங்கே" *(தண்டலை.சத.34).* 2. மீன்பிடி தொழிலால் வாழுமினம்; a caste whose profession is fishing.

[சிவிகையார் → சிவியார்]

சிவிரம் *śiviram*, பெ. (n.) படையெடுத்த அரசன் தங்கும் பாசறை; camp of an invading king.

Skt. šibira.

சிவிறி *śiviṟi*, பெ. (n.) 1. விசிறி (பிங்.); fan. "தேயுமிடைப் பாங்கியர்கள் சிவிறி யால் வீசி" *(குசேலோ. குசே. வைகுந். 58).* 2. நீர்வீசுங்கருவி; syringe. "நெய்ம்மாண் சிவிறியர் நீர்மணக் கோட்டினர்" *(பரிபா. 6:34).*

தெ. சிவிறி; குய். ஜிப்பெரி, ஜின்ஜெரி

[விசிறி → சிவிறி]

சிவிறி[2] *śiviṟi*, பெ. (n.) பெருந்துருத்தி; bellows (சா.அக.).

சிவிறு-தல் *śiviṟu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. பரத்தல்; to spread as water. "ஊடுறு கமலக் கண்ணீர் திசைதொறுஞ் சிவிறியோட" *(கம்பரா. மீட்சி. 348).* 2. விசிறு-தல் பார்க்க; see *viśiṟu-*.

[விசிறு → சிவிறு-,]

சிவீரெனல்[1] *śivīr-eṉal*, பெ. (n.) தொட்டாற் சில்லென்றிருத்தற் குறிப்பு (இவ.); expr. of being cold to the touch.

[சிலீர் → சிவீர்]

சிவீரெனல்[2] *śivīreṉal*, பெ. (n.) சிவந்திருக்கை; become red; blush.

[செவேர் → சிவீர் + எனல் (வே.க.)]

சிவீலெனல் *śivēl-eṉal*, பெ. (n.) பொறாமைக் குறிப்பு; onom. expr. of being jealous, envious. "நம்முடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளைச் சொன்ன விடத்தில் சிவீ லென்றிருந்திலை" *(ஈடு, 3.5:6).*

[சிவ் → சிவீல்; சிவீல் + எனல்]

சிவுகம் *śivugam*, பெ. (n.) மோவாய் (சூடா.); chin.

சிவுடம் *śivuḍam*, பெ. (n.) சிவுகம் பார்க்க; see *śivūgam*.

சிவேதை[1] *śivēdai*, பெ. (n.). 1. செடிவகை (பிங்.); square-stalked bindweed. 2. நாணல்; kaus.

Skt. svetā

சிவேதை[2] *śivēdai*, பெ. (n.) 1. சீந்தில் (மூ.அ.); gulancha. 2. கொடிவகை; Indian jalap.

Skt. śiva-dā

சிவேதை[3] *śivēdai*, பெ. (n.) தெற்கு (பிங்.); south.

Skt. śivētavā

சிவேரெனல் *śivēr-eṉal*, பெ. (n.) சிவந்திருத்தற் குறிப்பு; exprn. signifying redness.

[சிவீர் → சிவேர் + எனல் (வே.க.)]

சிவை[1] *śivai*, பெ. (n.). 1. மலைமகள் (பிங்.); Pārvadi. "பொருவரிய சிவையாகி யனந்தையாய்" (கூர்மபு. திருக்கலி. 3). 2. காளி (சூடா.); Durgā.

[சிவன் (ஆ.பா.) → சிவை (பெ.பா.) சிவன் தேவியாக உருவகிக்கப்பட்ட திருவருள் (வே.க.).]

சிவை[2] *śivai*, பெ. (n.) 1. நரி; jackal. "வெந்திறற் சிவையை யெல்லாம் வெம்பரி யாக்கி" (திருவாலவா. 29:16). 2. நெல்லி (தைலவ. தைல. 28.); emblic myrobalan. 3. வேர்; root 'கல்லறச் சிவைக ளூன்றி" (இரகு. இரகுகதி. 7).

[சிவன் → சிவ → சிவை]

சிவை[3] *śivai*, பெ. (n.) உலைமூக்கு (திவா.); nozzle or bellows. "சிவையின்வா யென்னச் செந்தீ யுயிர்ப்புறச் சிவந்த மூக்கன்" (கம்பரா. கும்பகரு. 14).

Skt. jihvā

சிவைக்கியம் *śivaikkiyam*, பெ. (n.) சிவனும், ஆதனும் (ஆன்மா) இணைந்து ஒன்றியிருத்தல்; the union of the soul with God Śivaṉ (சா.அக.).

[சிவன் + ஐக்கியம்]

சிவோகம்பாவனை *śivōgam-bāvaṉai*, பெ. (n.) சிவன் நான் என்று கருதுகை; meditation suggesting a mystic union with Śivaṉ. "சிவோகம்பாவனையைத் தலைப்பட்டோனாதல் அறிக" (சி. போ. சிற். 2, 1, 4, பக். 39).

Skt. śivōham + bhāvanā

த. பாவித்தல் - Skt. bhāvanā

[சிவோகம் + பாவனை]

சிழகு-தல் *śiḻagu-*, 7 செ.கு.வி. (v.i.) விம்முதல்; to choke with sobbing. "சிழகிச் சிழகி யழுதால்" (ஈடு, 3.2:7).

[சிழ்கு → சிழகு. சிழ்குதல் = விம்முதல்]

சிள்வண்டு *śiḷ-vaṇḍu*, பெ. (n.) சுவர்க்கோழி; (M. M. 670) cricket.

[சின் → சிள். சிள் + வண்டு]

சிள்வீடு *śiḷ-vīḍu*, பெ. (n.) சிள்வண்டு பார்க்க; see *śiḷ-vaṇḍu*. "சிள்வீடு கறங்குஞ் சேய் நாட்டத்தும்" (நற். 252).

[சின் → சிள். சிள் + வீடு. விடு → வீடு]

சிள் ஒலிக்குறிப்பு. சிள்ளென ஒலி விடுதலால் இவ்வாறழைக்கப்பட்டது.

சிள்ளீடு *śiḷḷīḍu*, பெ. (n.) சிள்வண்டு (யாழ்.அக.) பார்க்க; see *śiḷ-vaṇḍu*.

[சின் → சிள். சிள் + வீடு]

சிள்ளுப்புள்ளெனல் *śiḷḷu-p-puḷḷ-eṉal*, பெ. (n.) சிளுசிளெனல் (உ.வ.) பார்க்க; see *śiḷuśiḷeṉal*.

[சிள்ளு + புள்ளு + எனல்]

சிள்ளெனல் *śiḷḷ-eṉal*, பெ. (n.) 1. விரைவுக் குறிப்பு; onom. expr. of a rapidity, swiftness. 'சிள்ளெனப் பருந்து வீழ்ந்தெடுத்த பைந்தலை யரவம்" (ஐங்குறு. 501). 2. ஆரவாரக் குறிப்பு (திவா.); boisterous.

[சின் + எனல்]

சிளுசிளு[1]**-த்தல்** *śiḷu-śiḷu-*, 4 செ.கு.வி. (v.i.) இரைச்சலிடுதல் (யாழ்.அக.); to be chattering.

[சிளு + சிளு-,]

சிளுசிளு[2]**-த்தல்** *śiḷu-śiḷu-*, 4 செ.கு.வி. (v.i.) பதனழிதல்; to decay, rot or become decomposed, as vegetables.

[சிளு + சிளு-,]

சிளுசிளெனல் *śiḷuśiḷeṉal*, பெ. (n.) ஒலிக் குறிப்பு வகை (சங்.அக.); onom. expr. of bubbling, as boiling water.

[சிளு + சிளு + எனல்]

சிளுபுளு-த்தல் *śiḷu-puḷu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. சிளுசிளு-த்தல் பார்க்க (யாழ்.அக.); see *śiḷu-śiḷu-*. 2. நொதுநொதுத்தல்; to be mashy, as overboiled rice.

[சிளு + புளு-,]

சிளுபுளெனல் *śiḷu-puḷeṉal*, பெ. (n.). சிளு சிளெனல் (வின்.) பார்க்க; see *śiḷu-śiḷeṉal*.

[சிளு + புளு + எனல்]

சிளை-த்தல் *šiḷai-, 4* செ.கு.வி. *(v.i.)* சோர்தல்; to be weary, become tired. *'அவனைப் போலே பிரிவுக்குச் சிளையாதபடி' (ஈடு, 9.5:3).*

[இளை → சிளை-,]

சிற்குணம் *šiṟ-kuṇam,* பெ. (n.) இறைவன் அல்லது ஆதனுக்கு (ஆன்மா) அறிவாகிய இயல்பாகவுள்ள பண்பு; attribute of intelligence either of God or individual souls. *"காரண சிற்குணரூப" (பாரத. மூன்றாம் போர். 17).*

[சித்து + குணம் → சிற்குணம்]

சிற்குணன் *šiṟkuṇaṉ,* பெ. (n.) கடவுள்; God as pure intelligence. *"சிற்குணனுட னிருப்பன்" (சேதுபு. இராமநா. 43).*

[சித்து + குணன் → சிற்குணன்]

சிற்குரு *šiṟ-guru,* பெ. (n.) பளு, பாரம் (நாமதீப. 794); weight.

[சில் + குரு]

சிற்சத்தி *šiṟ-šatti,* பெ. (n.) ஐவகையாற்றல்களி லொன்றாய், ஆதன் இருவினைப் பயன்களைத் துய்த்துத் தொலைத்து, முத்தியெய்துமாறு செய்யும் சிவபிரானது ஆற்றல்; Šivaṉ's energy of wisdom which has the virtue of liberating the souls from the bondage of karma and establishing them in bliss one of ai-vagi-c-catti. *"சிற்சத்தியா லுணர்ந்து" (தாயு. பரசிவ. 2).*

[சித்து + சத்தி → சித்சத்தி → சிற்சத்தி]

சிற்சபை *šiṟ-šabai,* பெ. (n.) சிற்றம்பலம்; hall of wisdom, the sacred dancing - hall at Chidambaram. *"கருதரிய சிற்சபையில்" (தாயு. கருணாகர. 1)*

த. சபை - Skt. sabhā

[சிறு + சபை. அவை → சவை → சபை]

சிற்சில *šiṟšila,* பெ.அ. (adj.) அளவில் குறைவான; slight or minor. *'அமைச்சரவையில் சிற்சில மாற்றங்கள் வரவிருக்கின்றன' (உ.வ.).*

[சில + சில]

சிற்சிலிர்ப்பான் *šiṟ-šilirppāṉ,* பெ. (n.) சிச்சிலுப்பை (யாழ்ப்.); chicken pox.

[சில் + சிலிர் = சில்சிலிர் → சிற்சிலிர் → சிற்சிலிர்ப்பான்]

சிற்சுகம் *šiṟ-šugam,* பெ. (n.) இறையின்பம்; spiritual enjoyment. *"செல்லுவே னந்தச் சிற்சுகத்தே" (தாயு. பாயப். 44).*

[சித்து + சுகம் → சிற்சுகம்]

சிற்சுடர்த்தைலம் *šiṟ-šuḍar-t-tailam,* பெ. (n.) வெளிப்புறப் பயன்பாட்டிற்குரிய கூட்டு எண்ணெய் (தைலவ.தைல.100); a compound medicinal oil for external application.

[சில் + சுடர் + தைலம்]

சிற்சொரூபம் *šiṟ-šorūbam,* பெ. (n.) அறிவின் திருவுருவம்; embodiment of pure intelligence.

[சித்து + சொரூபம் = சிற்சொரூபம்]

சிற்சோமன் *šiṟ-šōmaṉ,* பெ. (n.) சீர்பந்தச் செய்நஞ்சு (மூ.அ.); a mineral poison.

சிற்பக்கயிறு *šiṟba-k-kayiṟu,* பெ. (n.) சிற்ப சாத்திரம் பார்க்க; see *šiṟba-šāttiram. "யாத்த சிற்பக் கயிற்றின் வாழ்நரும்" (பெருங். வத்தவ. 2:51).*

[சிற்பம்' + கயிறு]

சிற்பசாத்திரம் *šiṟba-šāttiram,* பெ. (n.) கட்டடக்கலை, சிற்பக்கலை தொடர்பான கல்வி; science of architecture sculpture and other branches of art.

[சிற்பம் + சாத்திரம்]

சிற்பசாத்திரி *šiṟba-šāttiri,* பெ. (n.) சிற்பாசாரி, பெருந்தச்சன், கலைஞன்; architect, headmason.

[சிற்பம் + சாத்திரி. சாத்திரம் → சாத்திரி. ஓ. நோ. பரிகாரம் → பரிகாரி]

சிற்பசாலை *šiṟpa-sālai* பெ. (n.) சிலை செய்யுமிடம்; mechanic's shop, manufactory.

[சிற்பம் + சாலை. சாலுதல் = நிறைதல், கூடுதல். சால் → சாலை = கூடம், பட்டறை, தொழிலகம்]

சிற்பத்தொழிற்குறுப்பு *šiṟpa-t-toḻiṟ-kuṟuppu,* பெ. (n.) கல், மாழை, செங்கல், மரம், மண், சுதை, மருப்பு, வண்ணம், கண்டசருக்கரை, மெழுகு என்னும் சிற்பவேலைக்குரிய உறுப்புகள் (பிங்.); materials required for art production ten in number, viz., stone, metal, brick, wood, soil, lime, ivory, colour, sugar-candy, wax.

[சிற்பம் + தொழில் + உறுப்பு]

சிற்பநூல் *śiṟpa-nūl*, பெ. (n.) *சிற்பக்கலை பற்றிய நூல்கள்;* ancient treatises on architecture and allied arts.

[சிற்பம் + நூல்]

சிற்பம்[1] *śiṟpam*, பெ. (n.) *1. தொழிலின்திறமை;* artistic skill. *"செருக்கயல் சிற்பமாக" (சீவக. 2716). 2. நுட்பமானதொழில்;* fine or artistic workmanship. *"சிற்பந் திகழ்தரு திண்மதில்" (திருக்கோ. 305). 3. சிற்பநூல் பார்க்க;* see *śiṟpa-nūl*. *"தெளிதரு சிற்ப நன்னூல்" (திருவாலவா. 1:24).*

ம. சில்பம்

[சில் → சிற் → சிற்பு → சிற்பம்]

சிற்பம்[2] *śiṟpam*, பெ. (n.) *சிந்திக்கை;* thinking. *"அவர்தஞ் சிற்பங்க டரும் புகழும்" (கோயிற்பு. பாயி. 21).*

[சிற் → சிற்பி → சிற்பம்]

சிற்பம்[3] *śiṟpam*, பெ. (n.) *குறைவு;* fewness, shortness, as of duration. *"சிற்பங்கொள் பகலென" (கம்பரா. சடாயுகாண். 8).*

[சிற் → சிற்பு → சிற்பம் → Skt. svalpa (வ.வ.152)]

சிற்பர் *śiṟpar*, பெ. (n.) *கம்மியர், கலைஞர் முதலான சிற்பிகள் (வின்.);* mechanics, artisans, stone-cutters.

[சிற்பம் → சிற்பர்]

சிற்பரக்கூர்மை *śiṟpara-k-kūrmai*, பெ. (n.) *கந்தகவுப்பு (வின்.);* salt produced from sulphur.

[சிற்பரம் + கூர்மை]

சிற்பரம் *śiṟparam*, பெ. (n.) *1. கந்தம்;* fragrance. *2. கடல்;* ocean, sea. *3. அறிவு;* wisdom.

சிற்பரவுப்பு *śiṟpara-v-uppu*, பெ. (n.) *இந்துப்பு (மூ.அ.);* sea-salt.

[சிற்பரம் + உப்பு]

சிற்பரன் *śiṟparaṉ*, பெ. (n.) *அறிவிற்கு எட்டாத கடவுள்;* God as transcending human understanding. *'எப்பொருளினுமாஞ் சிற்பரன்" (திருவாத. பு. திருப்பெருந். 21).*

[சிற்பரம் → சிற்பரன்]

சிற்பரி *śiṟpari*, பெ. (n.) *1. பொன்னிமிளை;* bismuth. *2. வெண்காரம்;* borax.

[சிற்பரம் → சிற்பரி]

சிற்பரை[1] *śiṟparai*, பெ. (n.) *மலைமகள்;* Pārvadi. *"சிற்பரை யிங்கெமையாளு முமையாள்" (கந்த. சு. பாயி. 3).*

[சித் + பரை → சிற் + பரை]

சிற்பரை[2] *śiṟparai*, பெ. (n.) *1. வழலைக் கட்டி (வின்.);* soap. *2. சிற்பரி (வின்.) பார்க்க;* see *śiṟpari*.

சிற்பவியல் *śiṟpaviyal*, பெ. (n.) *சிற்பஞ்சார் தொழில்;* architecture, as an art.

[சிற்பம் + இயல்]

சிற்பன் *śiṟpaṉ*, பெ. (n.) *படைத்தல் தொழிலில் வல்லவனான நான்முகன்;* Nāṉmugaṉ as one skilled in the art of creation. *"சிற்பனை யெலாஞ் சிருட்டித்த" (திருமந். 628).*

[சிற்பம் → சிற்பன்]

சிற்பாசாரி *śiṟpāśāri*, பெ. (n.) *சிற்பி (யாழ்.அக.) பார்க்க;* see *śiṟpi*.

[சிற்பம் + ஆசாரி]

சிற்பி *śiṟpi*, பெ. (n.) *கம்மியன் (சூடா.) கல் தச்சன், கைவினைஞர்;* mechanic, artisan, stone-cutter.

ம. சில்பி

[சிற்பம் → சிற்பி]

சிற்பிடம் *śiṟpiḍam*, பெ. (n.) *பிறர் காணாமல் இருக்கை;* being invisible. *"சிற்பிடத்தாற் புக்கு" (நீலகேசி, 236).*

சிற்பியல் *śiṟpiyal*, பெ. (n.) *சிற்பநூல்;* architecture, as an art. *"மாசில் கம்மத்துச் சிற்பியற் புலவர்" (பெருங். இலாவண. 4:50).*

[சிற்பம் + இயல் → சிற்பவியல் → சிற்பிவியல் → சிற்பியல்]

சிற்பிரதானம் *śiṟpiradāṉam*, பெ. (n.) *அறிவின் விளக்கம்;* effulgence of wisdom. *"பொலிந்த சிற்பிரதானமதனால்" (வேதா. சூ. 49).*

சிற்றகத்தி *śiṟṟagatti*, பெ. (n.) *செடிவகை (L);* common sesban.

[சிறு(மை) → சில் + அகத்தி]

சிற்றகவை *šiṟṟagavai,* பெ. (n.) இளம்பருவம்; nonage, youth.

[சிறு(மை) + அகவை]

சிற்றச்சிறுகாலே *šiṟṟa-c-ciṟukālē,* வி.எ. (adv.) சிற்றஞ்சிறுகாலே பார்க்க; see *šiṟṟañ-šiṟu-kālē.* "சிற்றச் சிறுகாலே முனிசென்றான்" *(பிரமோத். 10: 10).*

[சிற்றம் சிறு + காலை → சிற்றச்சிறு + காலே]

சிற்றஞ்சிறுகாலே *šiṟṟañ-šiṟu-kālē,* வி.எ. (adv.) புலர்காலையில்; early in the morning, in the small hours of the morning. "சிற்றஞ்சிறு காலே வந்துன்னைச் சேவித்து" *(திவ். திருப்பா. 29).*

[சின்னஞ்சிறிய → சிற்றஞ்சிறிய → சிற்றஞ் சிறு + காலே → சிற்றஞ்சிறு காலை → சிற்றஞ்சிறுகாலே]

சிற்றடி *šiṟṟaḍi,* பெ. (n.) சீறடி; small foot, considered beautiful. "பெருமான் மருகன்றன் சிற்றடியே" *(கந்தரலங். 15).*

[சிறு + அடி]

சிற்றடிசில் *šiṟṟaḍišil,* பெ. (n.) சிறுசோறு பார்க்க; see *šiṟu-šōṟu.* "செய்தபூஞ் சிற்றடிசி லிட்டுண்ண வேற்பார்" *(பரிபா. 10:105.)*

[சிறுமை + அடிசில்]

சிற்றடிப்பாடு *šiṟṟaḍi-p-pāḍu,* பெ. (n.) ஆள் நடமாட்டம் அதிகமில்லாத ஒற்றையடிப் பாதை; unfrequented foot path. "காட்டில் சிற்றடிப்பாடான வழிகளிலே" *(திவ். பெரியாழ். 3, 2:4, வியா. பக். 542).*

[சிற்றடி + பாடு]

சிற்றண்டம் *šiṟṟaṇḍam,* பெ. (n.) முட்டை (மூ.அ.); egg.

[சிறு(மை) + அண்டம்]

சிற்றணுக்கன் *šiṟṟaṇukkaṉ,* பெ. (n.) விசிறி அல்லது ஈச்சோப்பியாகிய அரசச் சின்னம் (சீவக. 437, உரை); fan or fly-whisk waved before a king.

[சிறு(மை) + அணுக்கன்]

சிற்றப்பன் *šiṟṟappaṉ,* பெ. (n.) 1. தகப்பனின் தம்பி; father's younger brother. 2. தாயின் தங்கை கணவன்; mother's younger sister's husband. சிற்றப்பன் வீட்டுக்குச் சிற்றாடை வாங்கி வரலாம் என்று போனாளாம்; சிற்றப்பன் பெண்சாதி ஈச்சம்பாயைக் கட்டிக் கொண்டு எதிரே வந்தாளாம் *(பழ.).*

ம. சிற்றப்பன்; க. சிக்கப்ப

[சிறு(மை) + அப்பன்]

சிற்றப்பா *šiṟṟappā,* பெ. (n.) சிற்றப்பன் பார்க்க; see *šiṟṟappaṉ.*

சிற்றம்பலம் *šiṟṟambalam,* பெ. (n.) சிற்சபை; hall of wisdom, the sacred dancing hall at Chidambaram. "செற்றார்வாழ் தில்லைச் சிற்றம்பல மேய" *(தேவா. 1, 1).*

ம. சிற்றம்பலம்

[சித்து + அம்பலம் → சித்தம்பலம் → சிற்றம்பலம்]

சிற்றம்பலவன் *šiṟṟambalavaṉ,* பெ. (n.) தில்லையில் திருநடமாடுஞ் சிவபெருமான்; Šiva, as dancing in the sacred Hall at Chidambaram. 'தென்பா லுகந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன்" *(திருவாச. 12:9).*

[சித்து + அம்பலவன் - சித்தம்பலவன் → சிற்றம்பலவன்]

சிற்றம்மான்பச்சரிசி *šiṟṟammāṉ-paccarìši,* பெ. (n.) 1. செடிவகை; thyme leaved spurge. 2. செவ்வம்மான் பச்சரிசி; red spurge.

[சிறு(மை) + அம்மான்பச்சரிசி]

சிற்றமட்டி *šiṟṟamaṭṭi,* பெ. (n.). சிற்றாமுட்டி (யாழ்ப்.); rose-coloured sticky mallow.

[சிறு(மை) + ஆமுட்டி - சிற்றாமுட்டி → சிற்றாமுட்டி → சிற்றாமட்டி → சிற்றமட்டி]

சிற்றமட்டியெண்ணெய் *šiṟṟamaṭṭi-y-eṇṇey,* பெ. (n.) சிற்றாமட்டிவேரைக் கூடுதலாகச் சேர்த்து வடிக்கப்படும் மருந்தெண்ணெய் (யாழ்ப்.); a medicinal oil in which the root of šiṟṟa-maṭṭi forms the chief ingredient.

[சிற்றமட்டி + எண்ணெய்]

சிற்றரசன் *šiṟṟarašaṉ,* பெ. (n.) ஒரு பேரரசின் மேலாண்மையை ஏற்று அதற்குக் கீழ்ப்பட்டுக் தண்டம் (கப்பம்) செலுத்தி ஒரு நிலப்

சிற்றரத்தை



சிற்றாமுட்டி

சிறுதேக்கு

சிறுபூனைக்காலி

பகுதியை ஆளும் அரசன்; chieftain (who accepts the overlordship of a king); feudatory.

ம. சிற்றரசன்

[சிறு + அரசன்]

சிற்றரத்தை *śiṟṟarattai,* பெ. (n.) அரத்தை வகை (பதார்த்த. 985); lesser galangal.

ம. சிற்றரத்த

[சிறு + அரத்த]

அரத்தை பார்க்க.

சிற்றரிவாள் *śiṟṟarivāḷ,* பெ. (n.) கையரிவாள்; small sickle.

[சிறு(மை) + அரிவாள்]

அரிவாள் பார்க்க.



சிற்றரிவாள்

சிற்றரும்பு *śiṟṟarumbu,* பெ. (n.) காயரும்பு (பிங்.); bud.

[சிறு(மை) + அரும்பு]

அரும்பு பார்க்க

சிற்றல்லி *śiṟṟalli,* பெ. (n.) நீலநிற அல்லி; (M.M. 368) blue Indian water-lily.

[சிறு(மை) + அல்லி]

சிற்றலை *śiṟṟalai,* பெ. (n.) வானொலியில் நூறிலிருந்து பத்துமீட்டர் நீளத்துக்குட்பட்ட ஒரு மின்காந்த அலை; shortwave.

[சிறு + அலை]

சிற்றவரை *śiṟṟavarai,* பெ. (n.) அவரை வகை (வின்.); a kind of small bean.

[சிறு(மை) + அவரை]

சிற்றவை *śiṟṟavai,* பெ. (n.) சிற்றாத்தாள்; mother's younger sister. "சிற்றவை பணியால் முடிதுறந்தானை" (திவ். பெரியதி. 2.3:1).

[சிறு(மை) + அவ்வை = சிற்றவ்வை; சிற்றவ்வை → சிற்றவை]

சிற்றழிஞ்சில் *śiṟṟaḻiñjil,* பெ. (n.) அழிஞ்சில் வகை; privet.

[சிறு(மை) + அழிஞ்சில்]

சிற்றறிவன் *śiṟṟaṟivaṉ,* பெ. (n.) ஆதன்; jiva or individual soul, as having limited knowledge.

[சிறு(மை) + அறிவன்]

சிற்றறிவு *śiṟṟaṟivu,* பெ. (n.) 1. புல்லறிவு; unsound, imperfect knowledge or understanding. 2. சுருங்கிய அறிவு; limited knowledge.

[சிறு(மை) + அறிவு]

சிற்றறுகு *śiṟṟaṟugu,* பெ. (n.) அறுகம்புல் வகை (வின்.); a kind of grass.

[சிறு(மை) + அறுகு]

அறுகு பார்க்க

சிற்றன்னை *śiṟṟaṉṉai,* பெ. (n.) சித்தி; father's second wife.

ம. சிற்றச்சி, சிற்றம்ம

[சிறு + அன்னை]

சிற்றாச்சா *śiṟṟāccā,* பெ. (n.) அத்திமரம்; common mountain ebony.

[சிறுமை → சிறு + ஆச்சா]

சிற்றாசா *śiṟṟāśā,* பெ. (n.) சிற்றாச்சா பார்க்க; see *śiṟṟāccā.*

[சிற்றாச்சா → சிற்றாசா (கொ. வ.)]

சிற்றாட்புள்ளி *śiṟṟāṭ-puḷḷi,* பெ. (n.) சிற்றாளன் (நாஞ்.) பார்க்க; see *śiṟṟāḷaṉ.*

[சிற்றான் + புள்ளி]

சிற்றாடை *śiṟṟāḍai,* பெ. (n.) 1. சிறிய ஆடை; small garment. "சிற்றாடையுஞ் சிறுப்பத்திரமும் (திவ். பெரியாழ். 3.3:5). 2. சிறுபெண்ணின் ஆடை; cloth made for girls. "நற்சிற்றாடைக் காரி" (தனிப்பா. ii 132, 334).

ம. சிற்றாட

[சிறு(மை) + ஆடை]

சிறுமை - அளவிற்சிறிய, வயதிற் சிறிய.

சிற்றாத்தாள் *śiṟṟāttāl,* பெ. (n.) *சிறியதாய் பார்க்க;* see *śiṟiya-tāy.*

ம. சிற்றம்ம, சிற்றச்சி

[சிறு(மை) + ஆத்தாள்]

சிற்றாதாயம் *śiṟṟādāyam,* பெ. (n.) *1. சில்லரை வரும்படி;* small income from miscellaneous sources. *2. கள்ளச்சிறுதேட்டு (வின்.);* money gained by embezzlement or fraud.

[சிறு(மை) + ஆதாயம்]

ஆதாயம் பார்க்க

சிற்றாம்பல் *śiṟṟāmbal,* பெ. (n.) *நீலநிறமுள்ள அல்லி;* blue Indian water lily.

[சிறு(மை) + ஆம்பல்]

ஆம்பல் பார்க்க

சிற்றாமணக்கு *śiṟṟāmaṇakku,* பெ. (n.) *ஆமணக்கு (பதார்த்த. 154.);* castor-plant.

[சிறு(மை) + ஆமணக்கு]

சிற்றாமரைப்பூ *śiṟṟāmarai-p-pū,* பெ. (n.) *முளரி மலர் (ரோசா மலர்) (பதார்த்த. 644.);* rose, as a small lotus.

[சிறு(மை) + தாமரைப்பூ]

முளரிமலர் தாமரையை ஒருபோகு ஒத்திருத்தலால் இவ்வாறழைக்கப்பட்டது.

சிற்றாமல்லி *śiṟṟāmalli,* பெ. (n.) *காட்டு மல்லிகை;* wild jasmine.

[சிறு(மை) + ஆ + மல்லி]

சிற்றாமுட்டி *śiṟṟāmuṭṭi,* பெ. (n.) *1. மெல்லிலைத் தண்டுகளுடன் கூடிய மஞ்சள்வண்ணச் செடி;* yellow sticky mallow. *2. செவ்வண்ணப் பூச்செடி (பதார்த்த. 470);* rose coloured sticky mallow.

[சிறு(மை) + ஆ + முட்டி]

சிற்றாய் *śiṟṟāy,* பெ. (n.) *சிறியதாய் பார்க்க;* see *śiṟiya-tāy.*

[சிறு(மை) + தாய்]

சிற்றாயம் *śiṟṟāyam,* பெ. (n.) *சிற்றூர் வரிவகை (தெ. க. தொ. iii 35);* a village cess.

[சிறு(மை) + ஆயம்]

சிற்றாரால் *śiṟṟārāl,* பெ. (n.) *சிறியவகை ஆரல் மீன் (பதார்த்த. 920);* a species of small lamprey.

[சிறு(மை) + ஆரல்]

சிற்றால் *śiṟṟāl,* பெ. (n.) *முட்டைவடிவ இலையினையுடைய அத்திமரம்;* jointed ovate-leaved fig.

ம. சிற்றால்

[சிறு(மை) + ஆல்]

சிற்றாலவட்டம் *śiṟṟāla-vaṭṭam,* பெ. (n.) *பீலிவட்ட விசிறி (சீவக. 839, உரை);* small circular fan or fly whisk, made of peacock's feathers.

[சிறு(மை) + ஆலவட்டம்]

சிற்றாழாக்கு *śiṟṟāḻākku,* பெ. (n.) *1. ஒரு நிறுத்தலளவு;* bazaar weight = $^1/_5$ tōlā. *2. ஒரு முகத்தலளவு;* measure of capacity = $^1/_{16}$ pucka seer.

[சிறு(மை) + ஆழாக்கு]

சிற்றாள் *śiṟṟāḷ,* பெ. (n.). *1. சிறுவன் (பிங்.);* boy. *'சிற்றாள் எட்டாளுக்குச்சரி' (பழ.). 2. ஏவலாள்;* servant. "சிற்றாளில்லாதான் கைம்மோதிரமும்" *(திரிகடு. 66). 3. கொத்தனுக்கு உதவி புரியுங் கூலியாள்;* mason's assistant, boy or girl cooly. "சேர்ந்து சுமக்கின்ற சிற்றாளை" *(திருவாலவா. 30:3). 4. சிற்றாளன் (இ.வ.) பார்க்க;* see *śiṟṟāḷaṉ.*

ம. சிற்றாள்

[சிறு(மை) + ஆள். ஆன் → ஆளன்]

சிற்றாளன் *śiṟṟāḷaṉ,* பெ. (n.) *சீட்டுப்புள்ளி (நாஞ்.);* subscriber in a chit transaction.

ம. சிற்றாளன்

[சிறுமை + ஆளன்]

சிற்றாறு *śiṟṟāṟu,* பெ. (n.) *1. சிறு ஓடை;* rivulet. *2. துணை ஆறு (இ.வ.);* tributary stream.

ம. சிற்றாறு

[சிறுமை + ஆறு]

சிற்றி¹ *śiṟṟi,* பெ. (n.) *பசலை (மலை.);* Indian spinach.

[சிறு(மை) + இலை → சிற்றிலை; சிற்றிலை → சிற்றி]

சிற்றி² *šiṟṟi*, பெ. (n.) சிற்றாத்தாள் பார்க்க; see *šiṟṟāttāḷ*.

[சிறுமை + ஆய் → சிற்றாய் → சிற்றி]

சிற்றிசை¹ *šiṟṟišai*, பெ. (n.) இசையைப் பற்றிக் கூறும் கடைக்கழக நூல் (இறை. 1, பக். 5.); a treatise of the last Šaṅgam, bearing on music.

[சிறு(மை) + இசை]

சிறுமையாவது நுணுக்கம். இசையின் நுணுக்கம், நுட்பம் கூறும் நூல்.

சிற்றிசை² *šiṟṟišai*, பெ. (n.) வெண்டுறைச் செந்துறையுளொருவகை (யாப். வி. 538); a sub-division of veṇḍuṟai-c-cenduṟai.

[சிறு(மை) + இசை]

சிற்றிசைச்சிற்றிசை *šiṟṟišai-c-ciṟṟišai*, பெ. (n.) வெண்டுறைச் செந்துறையுளொருவகை (யாப். வி. 538); a sub-division of veṇḍuṟai-c-cenduṟai.

[சிற்றிசை + சிற்றிசை]

சிற்றிதழ்¹ *šiṟṟidaḻ*, பெ. (n.) 1. தாமரை மலரின் உள்ளிதழ் (வின்.); corolla, inner petal, as of the lotus. 2. நேர்த்தியான பின்னல் (யாழ்ப்.); fine plaiting, as in mats, baskets, etc.,

[சிறு(மை) + இதழ்]

சிற்றிதழ்² *šiṟṟidaḻ*, பெ. (n.) குறிப்பிட்ட துறைகளில், குறைந்தஅளவு படிப்பாளிகளுக் காக நடத்தப்படும் இதழ்; journal with limited circulation for limited readers.

[சிறு(மை) + இதழ்]

சிற்றியாறு *šiṟṟi-y-āṟu*, பெ. (n.) சிறுநதி; small river. "சிற்றியாற் றடைகரை" (மணிமே. 15, 82).

[சிறு(மை) + யாறு]

சிற்றிராசிப்பணம் *šiṟṟirāši-p-paṇam*, பெ. (n.) பழைய காசு (நாணய) வகை (புதுக் கல். 71.); an ancient coin.

[சிறு + இராசி + பணம்]

சிற்றிரு *šiṟṟiru*, பெ. (n.) கிலுகிலுப்பைச் செடி (மலை.); laburnum - leaved rattlewort.

சிற்றிரை *šiṟṟirai*, பெ. (n.) 1. சிறுவிலங்கினுணவு; prey or food of small animals. 2. மிகச் சிறு அளவு உணவு; small quantity of food, morsel.

[சிறு(மை) + இரை]

சிற்றிரைப்பு *šiṟṟiraippu*, பெ. (n.) குறுமூச்சு; shortness of breath.

[சிறு(மை) + இரைப்பு]

சிற்றில் *šiṟṟil*, பெ. (n.) 1. சிறுகுடில், குடிசை; hut, hovel. "சிற்றி னற்றூண் பற்றி" (புறநா. 86). 2. சிறுமியர் கட்டியாடும் மணல்வீடு; toy house of sand built by little girls in play. "நீயாடுஞ் சிற்றில் புனைகோ சிறிதென்றான்" (கலித். 111). 3. சிற்றிற்பருவம் பார்க்க; see *šiṟṟiṟ-paruvam*. "சிறுபறை சிற்றில் சிறுதேரென்ன" (இலக். வி. 806).

[சிறு(மை) + இல்]

சிற்றில்² *šiṟṟil*, பெ. (n.) 1. கந்தை (பிங்.), பீற்றல், துணிக்கீறல்; rags. 2. கிழிசல், கீற்று; tatters.

[சில் → சிற் → சிற்றில்]

சிற்றில்சிதைத்தல் *šiṟṟil-šidaittal*, பெ. (n.) சிறுமியரிழைத்த மணல்வீட்டைக் குலைத் தாடும் ஆண்மகன் விளையாட்டு (இலக்.வி. 806, உரை.); boy's play of trampling down the toy house of sand built by little girls.

[சிற்றில் + சிதைத்தல்]

சிற்றிலக்கம் *šiṟṟilakkam*, பெ. (n.) கீழ்வாயிலக்கம்; fraction.

[சிறு(மை) + இலக்கம்]

சிற்றிலக்கியம் *šiṟṟilakkiyam*, பெ. (n.) உள்ளடக்கத்தின் அடிப்படையிலும் செய்யுள் வடிவ அடிப்படையிலும் பாகுபடுத்தப்பட்ட இலக்கிய வகை; minor literary genre.

[சிறு(மை) + இலக்கியம்]

சிற்றிலிழைத்தல் *šiṟṟil-iḻaittal*, பெ. (n.) சிறுமியர் மணல்வீடு கட்டி விளையாடுகை; a play in which girls built toy houses with sand.

[சிற்றில் + இழைத்தல்]

இழைத்தல் = தேய்த்தல், தேய்த்து மெருகூட்டுதல், மெருகூட்டி அழகுபடுத்துதல்.

நான் இழைத்து இழைத்துக் கட்டியவீடு என்னும்வழக்கு இன்றுமுளது. சிறுமியர் தம் ஆற்றல் முழுதையும் பயன்படுத்தி அழகாய்க் கட்டுவதாய் எண்ணிக் கொள்வர்.

சிற்றிலுப்பை *šiṟṟiluppai*, பெ. (n.). இலுப்பை வகை (மலை.); a species of mahwa.

[சிறு(மை) + இலுப்பை]

சிற்றிலை[1] *śiṟṟilai,* பெ. (n.) சிறியஇலை; tiny leaf.

[சிறு + இலை]

சிற்றிலை[2] *śiṟṟilai,* பெ. (n.) 1. நெய்ச்சிட்டி (மலை.); purple fleabane. 2. குன்றிமணி; crab's eye. 3. கடுக்காய்; chebulic myrobalan.

[சிறு(மை) + இலை]

சிற்றிலை[3] *śiṟṟilai,* பெ. (n.) 1. நிலவாகை; medicinal senna. 2. காட்டுச்சீரகம்; vernonia authelmintica. 3. கொழுந்து; tender leaves (சா.அக.).

[சிறு(மை) + இலை]

சிற்றிலைக்கள்ளி *śiṟṟilai-k-kaḷḷi,* பெ. (n.) சிறிய இலைக்கள்ளி; small leaf spurge (சா.அக.).

[சிற்றிலை + கள்ளி]

சிற்றிலைக்கிரியம் *śiṟṟilai-k-kiriyam,* பெ. (n.) நீர்ப்பாசம்; duck weed plant (சா.அக.).

[சிற்றிலை + கிரியம்]

சிற்றிலைக்கொடி *śiṟṟilai-k-koḍi,* பெ. (n.) மயிர் மாணிக்கம்; common balah (சா.அக.).

[சிற்றிலை + கொடி]

சிற்றிலைச்சீரகம் *śiṟṟilai-c-cīragam,* பெ. (n.) காட்டுச்சீரகம்; wild cumin, vernonia anthelmintica (சா.அக.).

[சிற்றிலை + சீரகம்]

சிற்றிலைத்தளை *śiṟṟilai-t-taḷai,* பெ. (n.) விடத்தளை; ashy babul (சா.அக.).

[சிற்றிலை + தளை]

சிற்றிலைநங்கை *śiṟṟilai-naṅgai,* பெ. (n.) சிறியாணங்கை என்னும் பூடு; a kind of small milkwort.

[சிற்றிலை + நங்கை]

சிற்றிலைநரம்பு *śiṟṟilai-narambu,* பெ. (n.) இலைக்காம்பு; pedicle.

[சிற்றிலை + காம்பு]

சிற்றிலைப்பருவம் *śiṟṟilai-p-paruvam,* பெ. (n.) இளம்பருவம்; juvenile period.

[சிற்றிலை + பருவம்]

சிற்றிலைப்பாதம் *śiṟṟilai-p-pādam,* பெ. (n.) படர்கொடியினத்தைச் சார்ந்த செருப்படை; a diffuse prostrate herb.

[சிற்றிலை + பாதம்]

சிற்றிலைப்பாலாடை *śiṟṟilai-p-pālāḍai,* பெ. (n.) மருந்துப் பூடுவகையுளொன்று (சங்.அக.); a kind of medicinal herb.

[சிற்றிலை + பாலாடை]

சிற்றிலைப்பாலாவி *śiṟṟilai-p-pālāvi,* பெ. (n.) மருந்துச் செடி வகை (சங்.அக.); a medicinal herb.

மறுவ. அம்மான் பச்சரிசி

[சிற்றிலை + பாலாவி]

பாலாவிச் செடி இருவகை. ஒன்று சிறிய இலையையுடையது. மற்றது பெரிய இலையையுடையது.

சிற்றிலைப்பிலவு *śiṟṟilai-p-pilavu,* பெ. (n.) 1. மரவகை; creamy - leaved lancewood. 2. நீண்ட மரவகை; rusty - leaved lance wood (சா.அக.).

[சிற்றிலை + பிலவு]

சிற்றிலைப்பிளவு → சிற்றிலைப்பிலவு (கொ.வ.)

சிற்றிலைப்புல் *śiṟṟilai-p-pul,* பெ. (n.) மலையாளத்தில் காணப்படும் கொச்சிலிச்சி யெனும் மூலிகை; medicinal grass - reputed drug of Malabar (சா.அக.).

[சிற்றிலை + புல்]

சிற்றிலைப்பூ *śiṟṟilai-p-pū,* பெ. (n.) முருங்கைப் பூ; drum stick flower (சா.அக.).

[சிற்றிலை + பூ]

சிற்றிலைப்பூடு *śiṟṟilai-p-pūḍu,* பெ. (n.) காட்டுக் களைச்செடி; iron weed.

[சிற்றிலை + பூடு]

சிற்றிலைப்பொலவு *śiṟṟilai-p-polavu,* பெ. (n.) 1. வண்டி அடிக்கட்டைக்குப் பயன்படுத்தப் படுங் கெட்டியான மரவகை; creamy - leaved lance - wood. 2. தூண்டிற்கோல் முதலியன செய்யப்பயன்படும் நீண்ட மரவகை; rusty - leaved lance wood.

[சிற்றிலை + பிளவு → பொளவு → பொலவு]

சிற்றிலைப்போளம் *śiṟṟilai-p-pōḷam,* பெ. (n.) 1. நீண்ட மரவகை; rusty - leaved lance wood. 2. சிற்றிலைப்பிலவு பார்க்க; see *śiṟṟilai-p-pilavu.*

[சிற்றிலை + போளம்]

சிற்றிலைமடக்கு *śiṟṟilai-maḍakku,* பெ. (n.) நெய்க்கொட்டை; butterfly soap nut *(சா.அக.).*

[சிற்றிலை + மடக்கு]

சிற்றிலைமடுக்கு *śiṟṟilai-maḍukku,* பெ. (n.) சிற்றிலைமடக்கு பார்க்க; see *śiṟṟilai-maḍakku.*

[சிற்றிலை மடக்கு → சிற்றிலை மடுக்கு]

சிற்றிலைவாகை *śiṟṟilai-vāgai,* பெ. (n.) கருவாகை; fragrant sirissa.

[சிற்றிலை + வாகை]

சிற்றிளைப்பு *śiṟṟiḷaippu,* பெ. (n.) மெலிதாக இளைத்த நிலை; slight emaciation *(சா.அக.).*

[சிறு(மை) + இளைப்பு]

சிற்றிற்பருவம் *śiṟṟiṟ-paruvam,* பெ. (n.) சிறுமியர் இழைத்த மணற் சிற்றிலைத் தலைவன் சிதைக்கும் பருவத்தைப் புனைந்து கூறும் ஆண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பகுதி; section of āṇpāṟ-piḷḷai-t-tamiḻ, which describes the stage of childhood in which the hero of the poem tramples down the toy houses built by little girls, one of ten.

[சிற்றில் + பருவம்]

சிற்றிறால் *śiṟṟiṟāl,* பெ. (n.) பூச்சியிறால்; common shrimp *(சா.அக.).*

[சிறு(மை) + இறால்]

சிற்றின்பநூல் *śiṟṟiṉba-nūl,* பெ. (n.) கொக்கோக நூல்; sexual science *(சா.அக.).*

[சிற்றின்பம் + நூல்]

சிற்றின்பப்போகி *śiṟṟiṉba-p-pōgi,* பெ. (n.) உடலின்பத்தில் மிகையான நாட்டமுடையோன்; one who indulges in sexual enjoyments and pleasures *(சா.அக.).*

[சிற்றின்பம் + போகி]

சிற்றின்பம் பார்க்க

சிற்றின்பம்[1] *śiṟṟiṉbam,* பெ. (n.) 1. இம்மை நலம்; earthly pleasures. "சிற்றின்பம் வெஃகி" *(குறள். 173).* 2. மெய்யுறுவின்பம், காமவின்பம்; sexual pleasure, carnal pleasure. "இவடர வந்தவின்பஞ் சிற்றின்ப மென்பது" *(சிவப். பிர. வெங்கைக்கோ. 137).* 'அறுக்க ஊறும் பூம்பாளை, அணுக ஊறும் சிற்றின்பம்' *(பழ.).*

ம. சிற்றின்பம்

[சிறு(மை) + இன்பம்]

சிற்றின்பம்[2] *śiṟṟiṉbam,* பெ. (n.) உப்புக் கட்டிக் கொடி; a kind of milky medicinal creeper *(சா.அக.).*

சிற்றினம் *śiṟṟiṉam,* பெ. (n.) நல்லறிவில்லாத தாழ்ந்தோர்; company of low people. "செய்ந்நன்றியறிதலுஞ் சிற்றின மின்மையும்" *(சிறுபாண். 207).*

[சிறு(மை) + இனம்]

சிறுமை = தாழ்ந்தது, இழிந்தது, வளர்ச்சி யற்றது, தன்னினும் தாழ்ந்த அறிவுடையாரைச் சிற்றினம் என்பர். இங்குத் தாழ்வு என்பது இனத்தாலோ, குலத்தாலோ அன்று. பண்பால், ஒழுக்கத்தால், செயற்பாட்டால், அறிவால் தன்னினும் சிறியர் என்க.

சிற்றீச்சங்குருத்து *śiṟṟīccaṅ-kuruttu,* பெ. (n.) பெண்களது வயிற்றில் தேங்கியுள்ள அரத்தக் கட்டினைப் போக்கும் சிற்றீச்ச மரத்தினது வெள்ளைக்குருத்து; tender black dates - Phoenix farinifera which is opposed to large date phoenix a caulis *(சா.அக.).*

[சிற்றீச்சம் + குருத்து]

சிற்றீச்சை *śiṟṟīccai,* பெ. (n.). சிற்றீச்ச மரம்; tender block dates - Phoenix farnifera.

[சிறு(மை) + ஈச்சை]

சிற்றீஞ்சு *śiṟṟīñju,* பெ. (n.) சிற்றீச்சை பார்க்க; see *śiṟṟīccai.*

[சிறு(மை) + ஈஞ்சு]

சிற்றீந்து *śiṟṟīndu,* பெ. (n.) ஈந்து வகை *(பதார்த்த. 753);* dwarf wild date - palm.

ம. சிற்றீந்து

[சிறு(மை) + ஈந்து]

சிற்று-தல் *śiṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) மனத் துயரடைதல்; to be troubled in mind perplexed. "மாநிலத் தெவ்வுயிர்க்குஞ் சிற்ற வேண்டா" *(திவ். திருவாய். 9.1:7).*

[சுற்று → சிற்று-,]

சிற்றுடுப்பை *śiṟṟuḍuppai*, பெ. (n.) மூலிகை வகையுளொன்று; a kind of medicinal herb *(சா.அக.).*

[சிறு + உடுப்பை]

சிற்றுடை *śiṟṟuḍai*, பெ. (n.) வேலம் முள்; thorn of babul tree *(சா.அக.).*

சிற்றுண்டி *śiṟṟuṇḍi*, பெ. (n.) 1. அப்ப வகை, பண்ணிகாரம் (பிங்.); pastry, cake. 2. தித்திப்புள்ளதாய், உருண்டை வடிவில் அரிசி அல்லது கோதுமை மாவிற் செய்த பண்ணிகார வகை; sweet pastry-ball made of rice or wheat flour. "அப்பங்கலந்த சிற்றுண்டி" *(திவ். பெரியாழ். 2.4:5).* 3. அயர்வாற்றுஞ் சிற்றுணா; light refreshment. 4. அளவிற் சிறியவுணவு; abstemious meal.

ம. சிற்றுண்டி

[சிறு(மை) + உண்டி. சிறுமை = சிறிய, அளவிற் குறைந்த]

சிற்றுண்டிச்சாலை *śiṟṟuṇḍi-c-cālai*, பெ. (n.) சிற்றுண்டியும் கானீர், தேநீர் முதலிய பருகங்களும் சாப்பிடக் கிடைக்குமிடம்; snack restaurant, canteen.

[சிற்றுண்டி + சாலை]

சிற்றுணவு *śiṟṟuṇavu*, பெ. (n.) 1. பொரிக்கறிக் குழம்பு, கூட்டுவகை முதலியன; curry preparations added to give relish to the main food. "பொரிக்குஞ் சிற்றுணவு" *(திவா. 6:86).* 2. சிற்றுண்டி,-1 பார்க்க; see *śiṟṟuṇḍi*,[-1] "இனிய சிற்றுண வேதேனு மின்றிநீ வருவாய் கொல்லோ" *(குசேலோ. குசே. தந்நகர். 275).*

[சிறுமை = அளவிற் குறைந்த; சிறுமை + உணவு]

சிற்றுதடு *śiṟṟudaḍu*, பெ. (n.) அல்குலின் இரு மருங்கிலுமுள்ள வுதடு; the internal lips of the female genital organ *(சா.அக.).*

[சிறு(மை) + உதடு]

சிற்றுந்து *śiṟṟundu*, பெ. (n.) பயணிகளுக்குப் போக்குவரத்துக்குதவும் சிறிய இயங்கி; mini bus.

[சிறு(மை) + உந்து; சிறுமை = அளவிற் சிறிய]

சிற்றுப்புளி *śiṟṟu-p-puḷi*, பெ. (n.) சிறிதளவான புளி; a small quantity of tamarind. "கறிக்குச் சிற்றுப்புளி சேர்க்க வேண்டும்" *(நாஞ்.)*

[சிறு(மை) + புளி]

சிற்றுமரி *śiṟṟumari*, பெ. (n.) 1. உவர்நிலப் புதர்ச்செடி (வின்.); marsh samphire. 2. பவளப் பூண்டு; coral plant.

[சிறு(மை) + உமரி]

சிற்றுயிர் *śiṟṟuyir*, பெ. (n.) 1. சிறிது காலம் வாழும் விலங்கு; short - lived being. 2. மிகச் சிறிய உயிரி (வின்.); minute insect, animalcule.

[சிறு(மை) + உயிர். சிறுமை = சிறியது, குறைந்த அளவுடையது]

சிற்றுயிரிலக்கணம் *śiṟṟuyir-ilakkaṇam*, பெ. (n.) பூச்சி புழுக்களின் அமைப்பு, தன்மை, பழக்க வழக்கங்களைப் பற்றிக் கூறும் நூல்; the part of zoology, which treats of the structure habits of insects - entomology.

[சிற்றுயிர் + இலக்கணம்]

சிற்றுரகம் *śiṟṟuragam*, பெ. (n.) சிறுகடுகு; Indian mustard *(சா.அக.).*

சிற்றுரு *śiṟṟuru*, பெ. (n.) 1. சிறிய உருவ முடையது; small person or object, miniature. "அண்டங்கள் சிற்றுருவமைந்து" *(கந்தபு. திருநகரப். 9).* 2. தாலியுடன் கோக்கும் உரு; ornamental pieces appended to the tāli.

ம. சிற்றுரு

[சிறு(மை) + உரு]

உரு = உருவுடையது, உருண்டையானது.

சிற்றுருவிளக்கி *śiṟṟuru-viḷakki*, பெ. (n.) உருப்பெருக்கியாடி (பூதக்கண்ணாடி); microscope *(சா.அக.).*

மறுவ. உருப்பெருக்கி

[சிற்றுரு + விளக்கி. விளக்கு → விளக்கி. 'இ' வினை முதலீறு]

சிற்றுள் *śiṟṟuḷ*, பெ. (n.) வீட்டிலுள்ள சரக்கறை (உ.வ.); store-room in a house.

[சிறு(மை) + உள். உள் = அகம், வீடு]

சிற்றுள்ளங்கி *śiṟṟuḷ-aṅgi*, பெ. (n.) உட்சட்டையின் மேல் இடுஞ் சிறுசட்டை; vest.

[சிறு + உள் + அங்கி]

சிற்றுள்ளாடை *śiṟṟuḷ-ḷ-āḍai*, பெ. (n.) உள்ளாடை வகையுளொன்று; a kind of under vest.

[சிறு + உள்ளாடை]

சிற்றுள்ளான் *śiṟṟuḷḷāṉ*, பெ. (n.) உள்ளான் குருவி; small snipe.

[சிறு + உள்ளான்]

சிற்றுளி *śiṟṟuḷi*, பெ. (n.) கல், மரம் போன்றவற்றைத் தகர்க்கும் தச்சுக்கருவி; small chisel used for cutting stones and wood. "சிற்றுளியாற் கல்லுந் தகரும்" (நீதிநெறி. 14).

ம. சிற்றுளி; க. கிட்டுளி

[சிறு(மை) + உளி]

உளியின் வகையைப் பிரித்துக் காட்டவே 'சிறுமை' சேர்க்கப்பட்டது.



சிற்றுழா *śiṟṟuḻā*, பெ. (n.) அரத்த மூலம், சீழ் மூலம், வெட்டை முதலியவற்றைப் போக்கும் குட்டி விளா எனும் மூலிகை; it is a small plant of the feronia genus; it cures piles, gleet etc., (சா.அக.).

சிற்றூண் *śiṟṟūṇ*, பெ. (n.) சிற்றுண்டி பார்க்க; see *śiṟṟuṇḍi*. "நெய்ச்சூட் டமைந்த சிற்றூண்" (பெருங். இலாவாண. 2:81). 'சிற்றூண் இனிது' (பழ.).

[சிறு(மை) + ஊண்]

சிற்றூர் *śiṟṟūr*, பெ. (n.) 1. சிறிய ஊர் (சூடா.); small village, hamlet. 'சிற்றூரிலே பாரிக்கூத்தா' (பழ.). 2. குறிஞ்சி நிலத்தூர்; village in the hilly tracts.

[சிறு(மை) + ஊர்]

குறிஞ்சி நிலம், மலையும் மலை சார்ந்த பகுதியுமாதலால், பரந்துபட்ட ஊர் தோன்றும் வாய்ப்பு குறைவு; எனவே குறிஞ்சி நிலத்தமைந்த ஊரும் சிற்றூரெனப்பட்டது.

சிற்றூழியன் *śiṟṟūḻiyaṉ*, பெ. (n.) 1. வீட்டு வேலையாள்; lacquey. 2. கலப்பற்றுக்காரன்; one whose occupation is the caulking of ships, boats etc., (செ.அக.).

[சிறு(மை) + ஊழியன்]

சிற்றெட்டகம் *śiṟṟeṭṭagam*, பெ. (n.) அகப் பொருளைக் கூறும் ஒரு நூல் (களவியற். 16); an ancient poem on Agam.

[சிறு + எட்டகம்]

சிற்றெண் *śiṟṟeṇ*, பெ. (n.) 1. கீழெண்; fraction. 2. இருசீர் ஓரடியாய் வரும் அம்போதரங்க வகை (காரிகை, செய். 10, உரை.); a variety of ambōdaraṅgam consisting of short lines of two feet each. 3. பரிபாடலுறுப்புகளுள் ஒன்று (பரிபா. 1: 60); a constituent section of Paripāḍal.

[சிறு(மை) + எண்]

சிற்றெல்லை *śiṟṟellai*, பெ. (n.) அவ்வச் செய்யுட்குரிய அடிகளின் சிறுமை வரையறை; minimum number of lines, as in a stanza, opp. to pēr-ellai.

[சிறு(மை) + எல்லை]

சிற்றெலி *śiṟṟeli*, பெ. (n.). சுண்டெலி (இ.வ.); mouse, species of small rat.

[சிறு(மை) + எலி]

வகை வேறுபாடறிதற்கும், தோற்றம் கருதியும் இப்பெயரமைந்தது.

சிற்றெலும்பு *śiṟṟelumbu*, பெ. (n.) மெல்லிய தான சிறிய எலும்பு; small bone (சா.அக.).

[சிறு(மை) + எலும்பு]

சிற்றெள் *śiṟṟeḷ*, பெ. (n.) எள் வகை (வின்.); gingelly oil plant, small kind of sesamum.

[சிறு(மை) + எள்]

தோற்றத்தினாலும், வகைமையை விதந்தோதுதற்கும் சிறுமை முன்னொட்டானது.

சிற்றெழுத்தாணிப்பூடு *śiṟṟeḻuttāṇi-p-pūḍu*, பெ. (n.) சிறிய வடிவுள்ள எழுத்தாணிப் பூண்டுச் செடி; small variety of style plant (சா.அக.).

[சிறு + எழுத்தாணிப்பூடு]

சிற்றெறும்பு *śiṟṟeṟumbu*, பெ. (n.) சிவப் பெறும்பு வகை; small red ant. "பாற்கடலைச் சிற்றெறும்பு பருகநினைப் பதுபோலும்" (சேக்கிழார். பு. பாயி. 9). 'சிற்றெறும்பைச் சிற்றெறும்பும் கட்டெறும்பைக் கட்டெறும்பும் தேடும்' (பழ.).

[சிறு(மை) + எறும்பு]

வகையை விதந்து கூற சிறுமை முன்னொட்டானது.

சிற்றேரண்டம் *śiṟṟēraṇḍam*, பெ. (n.) சிற்றாமணக்கு (மலை.); castor plant.

[சிறு(மை) + ஏரண்டம்]

சிற்றேரி *śiṟṟēri*, பெ. (n.) சிறிய நீர்நிலை; a small tank.

சிற்றேரிகம் *śiṟṟerigam*, பெ. (n.) பாசி வகையுளொன்றான இலைப்பாசி (மூ.அ.); species of duckweed.

[சிறு + ஏரிகம்]

சிற்றேலம் *śiṟṟēlam*, பெ. (n.) தலைவலி, காய்ச்சல், உமிழ்நீரூறல், வயிற்றுக்கொதிப்பு முதலானவற்றைப் போக்கும், சிறிய ஏலக்காய்; small cardamum, which cures headache, fever, excess salvation etc., (சா.அக.).

ம. சிற்றேலம்

[சிறு(மை) + ஏலம்]

சிற்றொடுவை *śiṟṟoḍuvai*, பெ. (n.) ஒடுவை மரம்; a kind of rafle tree (சா.அக.).

[சிறு + ஒடுவை]

சிற்றொத்தி *śiṟṟotti*, பெ. (n.) சிற்றொற்றி பார்க்க; see *śiṟṟoṟṟi*.

[சிறு(மை) + ஒத்தி]

ஒற்றி → ஒத்தி. ஒ.நோ: பற்று → பத்து. கற்றுக்குட்டி → கத்துக்குட்டி

சிற்றொழுக்கம் *śiṟ-ṟ-oḻukkam*, பெ. (n.) இழிநடத்தை (நாமதீப. 650); base conduct.

[சிறு + ஒழுக்கம்]

சிற்றொற்றி *śiṟṟoṟṟi*, பெ. (n.) மறுவொற்றி; sub-mortgage.

ம. சிற்றொற்றி

[சிறு(மை) + ஒற்றி]

ஒற்றிக்கு வைத்தல் என்பது ஒரு பொருளை அடைமானமாய் வைத்து வேறொரு பொருளையோ பணத்தையோ மறுதலையாகப் பெறல். இங்குச் சிறுமை, மறுமைப் பொருளில் முன்னொட்டானது.

சிற்றோலை *śiṟ-ṟ-ōlai*, பெ. (n.) தென்னை மட்டையின் நுனிப்பாகத்துள்ள சிறிய ஓலை; the short blades at the end of the leaf of a coconut tree.

[சிறு(மை) + ஓலை]

சிற-த்தல் *śiṟa-*, 3 செ.கு.வி. (v.i.) 1. மேன்மையுடையதாதல்; to be eminent, illustrious. "சிறந்த நான்மறை முனிவர்" (புறநா. 6:19). 2. மேற்படுதல்; to surpass, excel. "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" (திருவாச. 1, 61). 3. அளவிற்கதிமாகக் கனத்தல்; to be unbearable heavy. "சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே" (புறநா. 75:5). 4. மிகுதல்; to be abundant. "பெரும் பெயல் சிறத்தலின்" (மதுரைக். 244). 5. இன்றியமையாதிருத்தல்; to be indispensable. "கற்பார்க்குச் சிறந்தது செவி" (தொல். சொல். 76, சேனா.). 6. மங்கலமாதல்; to be auspicious, lucky. 7. அன்பாதல்; to be dear. "சிறந்தானென் றேவற்பாற் றன்று" (குறள், 515). 8. மகிழ்தல்; to rejoice. "உளஞ்சிறந்து புகலுவான்" (கந்தபு. யுத்தகாண். ஏமகூ. 31). 9. அழகாதல் (வின்.); to be graceful. 10. நனிநாகரிகமாதல்; to be elegant. 11. பிறங்கொளி வாய்ந்ததாதல்; to be splendid.

ம. சிறக்குக

[சுள் → (சூர்) → சீர் → சிற]

த. சிற → Skt. śras

சிறக்கணி-த்தல் *śiṟakkaṇi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. சிறங்கணி பார்க்க; see *śiṟaṅgaṇi-*, "சிறக்கணித்தாள் போல நகும்" (குறள், 1095). 2. கடைக்

கண்ணாற் பார்த்தல் (சூடா.); to cast a side-look.

[சிறங்கணி → சிறக்கணி-,]

சிறக்கணித்தல் *śiṟa-k-kaṇittal*, தொ.பெ. (vbl.n.) குறைத்தல்; to diminish (சா.அக.).

சிறக்கணிப்பு *śiṟakkaṇippu*, பெ. (n.) பக்கப் பார்வை; side look (சா.அக.).

சிறக்கிமுத்து *śiṟakki-muttu*, பெ. (n.) முத்துவகையுளொன்று; solid pearl.

[சிறக்கி + முத்து]

சிறகடி-த்தல் *śiṟagaḍi-*, 4 செ.கு.வி. (v.i.) சிறகடிக்கொள்(ளு)-தல் பார்க்க; see *śiṟakaḍi-k-koḷ-*.

[சிறகு + அடி-,]

சிறகடிக்கொள்(ளு)-தல் *śiṟagaḍi-k-koḷ[ḷu]-*, 13 செகுவி. (v.i.) பறத்தற் பொருட்டுச் சிறகடித்தல் (பு.வெ. 9:19, உரை); to flap the wings as birds commencing flight.

[சிறகு + அடித்துக் கொள்ளு-; சிறகடித்துக் கொள்ளு- → சிறகடிக் கொள்ளு-]

சிறகம் *śiṟagam*, செ.கு.வி. (v.i.) வளாகத்தின் பகுதி; wings of a complex. i.e., south wing, east wing.

[சிறகு → சிறகம்]

சிறகர் *śiṟagar*, பெ. (n.) சிறகு பார்க்க; see *śiṟagu*. "சேவலாய்ச் சிறகர்ப் புலர்த்தியோ" (பரிபா. 3:26).

[சிறகு → சிறகர்]

சிறகறு-தல் *śiṟagaṟu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. வலியழிதல் (இ.வ.); to lose strength. 2. முடமாக்குதல், தளர்வுறச் செய்தல்; to be disabled. 'அவன் சிறகறுந்தான்' (உ.வ.)

[சிறகு + அறு. சிறகு = உறுப்பு, வலிமை, பிரிவு]

சிறகாற்று-தல் *śiṟagāṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) சிறகினை விரித்தடித்து இளைப்பாற்றிக் கொள்ளுதல் (வின்.); to flap the wings gently and rest, as birds.

[சிறகு + ஆற்று-,]

சிறகி[1] *śiṟagi*, பெ. (n.) கிளுவை (வின்.); common teal.

[சிறகு → சிறகி. இ = உடைமைப் பொருள் பின்னொட்டு]

சிறகி[2] *śiṟagi*, பெ. (n.) நீர்ப்பறவை; a water bird (சா.அக.).

[சிறகு → சிறகி]

சிறகிமீன் *śiṟagi-mīṉ*, பெ. (n.) பறவை மீன் (வின்.); a flying fish.

[சிறகி + மீன். சிறகு → சிறகி]



சிறகிமீன்

சிறகு[1] *śiṟagu*, பெ. (n.) 1. பறவை, வெளவால், பூச்சி முதலியன பறப்பதற்கு ஏதுவாக அமையும் உறுப்பு; one of the limbs or organs by which the flight of a bird, bat, insect etc., is efferted, wing. 'சிறகு பறி கொடுத்த பறவை போல' (பழ.). 2. பறவை யிறகுகளின் தொகுதி; plumage. "ஈச்சிற கன்னதோர் தோலறினும்" (நாலடி. 41). 3. மீன் சிறகு; fin.

ம. சிறகு; க. எறகெ, எக்கி, எறங்கெ, றக்கெ, றெக்கெ; தெ. எறக, ரெக்க; து. எதிங்கெ, றெங்கெ; பட. றக்கெ; குட. றெக்கெ, தெறகெ; கோத. ரெக்; துட. தெர்க்ய்; கோண். ரெக; நா. றெப்ப, ரெக்க; கொலா. றெப்பா; பர். ரெக்க.

[சில் → சிற → சிறகு]

சிறகு[2] *śiṟagu*, பெ. (n.) 1. படை, கட்டடம் முதலியவற்றின் உறுப்பு (இ.வ.); wing of an army or building. 2. தெருப்பக்கம்; row of houses, side of a street. "தெற்குத் தளிச்சேரி தென்சிறகு" (தெ.க.தொ. 2,216). 3. தெரு; street. 4. கிளைவாய்க்கால் (வின்.); branch channel for

irrigation. 5. *பனையோலையிற் பாதி (யாழ்ப்.);* half of a palmyra leaf. 6. *கதவு முதலியவற்றின் இலை (யாழ்ப்.);* leaf of a door, shutter.

[சில் → சிற → சிறகு. சிறகு = உறுப்பு, பிரிவு, கிளை]

சிறகுகட்டிப்பற-த்தல் *śiṟagu-kaṭṭi-p-paṟa-,* செ.கு.வி. (v.i.) *விரைந்து செல்லுதல்;* to move with great swiftness, be in great haste.

[சிறகுகட்டி → பற-,]

பறவையினம் பறந்து செல்வதை விரைவாய்ச் செல்வதாயுணர்ந்தவர்கள், மாந்தனது விரைந்த செலவினையும் பறப்பதாய்க் கூறினர். இது, மிகைப்படுத்துதல் பொருளிலும் வருதலை, ஆலாய்ப் பறக்கிறான், பறவாய்ப் பறக்கிறான் எனும் உலக வழக்கு நோக்கி யறிக.

சிறகுகதவு *śiṟagu-kadavu,* பெ. (n.) *இரட்டைக் கதவு (யாழ்ப்.);* folding - door, two - leaved door.

[சிறகு + கதவு. சிறகு = உறுப்பு, பிரிவு]

சிறகுகுடில் *śiṟaku-kuḍil,* பெ. (n.) *தூக்குங் குடிசை (யாழ்ப்.);* small movable hut.

[சிறகு + குடில். சிறகு = மென்மை]

மென்மையானது இயங்கற்கும் எடுத்துச் செல்லற்கும் இயைபாயது.

சிறகுகோழி *śiṟagu-kōḻi,* பெ. (n.) *காட்டுக் கோழி வகை;* red spur fowl.

[சிறகு + கோழி]

சிறகு = பறக்கும் உறுப்பு. வீட்டுக் கோழிகளை நோக்க, காட்டுக் கோழிகட்குப் பறக்குமாற்றல் மிகுதியாயிருத்தல் கருதி இவ்வாறமைந் திருக்கலாம்.

சிறகுதெரி-த்தல் *śiṟagu-deri-,* 4 செ.கு.வி. (v.i.) *சிறகுலர்த்துதல் (யாழ்.அக.);* to dry or air the wings, as a bird.

[சிறகு + தெரி-, தெரி = தெளி, பரப்பு]

சிறகுநீண்டோன் *śiṟagu-nīṇḍōṉ,* பெ. (n.) *நீண்ட சிறகையுடைய வெளவால்;* long - winged bat *(சா. அக.).* .

[சிறகு + நீண்டோன். ஓன் = உடைமை குறித்த ஈறு]

சிறகுமுளைத்தல் *śiṟagu-muḷai-,* பெ. (n.) 1. *தற்காத்துக் கொள்ளும் வலி பெறுகை;* being capable of maintaining oneself. 2. *வெளியேறி விடுகை (உ.வ.);* disappearance; tendency towards waste, as wealth *(சா.அக.).*

[சிறகு + முளைத்தல். சிறகு = பறக்கும் உறுப்பு, ஆற்றல்]

பறவையினம் பிறக்கும்போதே சிறகுடன்தான் பிறக்கும். எனினும் அவ்வுறுப்பு போதுமான வளர்ச்சியடைந்து, பயிற்சி பெற்றுப் பறக்கும் ஆற்றலையுணர்ந்து கொள்ளும் நிலையைச் 'சிறகு முளைத்தல்' என்பர். மாந்தவினத்திலும் பெரியோரைப் பிரியும் இளையோரைச் 'சிறகு முளைத்ததும் பறந்துவிட்டது' எனும் வழக்கால் குறிப்பதைக் காணலாம்.

சிறகுமுறி-தல் *śiṟagu-muṟi-,* செ.கு.வி. (v.i.) *சிறுகறு-தல் பார்க்க;* see *śiṟagaṟu-.*

[சிறகு + முறி - முறி = அறு, பிரி, ஒடி]

சிறகை *śiṟagai-,* பெ. (n.) *உண்பவர்க்குச் சொறியினையுருவாக்குந் தன்மையுள்ள பறவை வகை;* a bird, the flesh of which causes itching when eaten *(சா.அக.).*

சிறகொடிந்தபறவை *śiṟakoḍinda-paṟavai,* பெ. (n.) 1. *துணையிழந்தவள்;* widow. 2. *துணையிழந்தவன்;* widower. 3. *நட்பினை இழந்தவர்;* one who loose friendship.

[சிறகொடிந்த + பறவை]

சிறகினை இழந்த பறவை பறக்க இயலாதது போன்றது துணை இழந்தாரின் ஆற்றல் என்பதைக் குறிக்கும் கூட்டுச் சொல்.

சிறங்கணி-த்தல் *śiṟaṅgaṇi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. *கண்ணைச் சுருக்கிப் பார்த்தல்;* to squint one's eyes and glance. "குவளைமாலைப் போது சிறங்கணிப்பப் போவார்" *(சிலப். கானல்வரி, 1 பாடல், 7.).* 2. *இழிவாய்க் கருதுதல்;* to despise. 3. *மதியாதிருத்தல், சிறுமையாய்க் கருதுதல்;* to disregard.

[சிறுமை → சிறு → சிற. சிற + கண் → கணி]

வியப்பானதைக் காணும் போது விரித்துப் பார்த்தலும், இழிவானதைக் காணும் போது சுருக்கிப் பார்த்தலும் அனிச்சைச் செயலாய் அமைந்துள்ளதை அறிக.

சிறங்காடு *śiṟaṅgāḍu,* பெ. (n.) *சிறுகாடு;* low jungle.

[சிறுமை → சிறு + காடு = சிறுகாடு → சிறங்காடு]

சிறங்கி[1]**-த்தல்** *šiṟaṅgi-,* 4 செ.குன்றாவி. (v.t.) மதியாதிருத்தல், இகழ்ச்சி செய்தல்; to despise.

[சிறங்கணி → சிறங்கி]

சிறங்கி[2]**-த்தல்** *šiṟaṅgi-,* 4 செ.குன்றாவி. (v.t.) சிறங்கையாலளத்தல் (யாழ்ப்.); to measure in the hollow of the hand.

[சிறங்கை → சிறங்கி]

சிறங்கை பார்க்க

சிறங்கை *šiṟaṅgai,* பெ. (n.) கைந்நிறையளவு; quantity that can be held in the hollow of the hand; palmful, as a measure. "முன்னாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா" (குமர. பிர. மீனா. குற. 26).

[சிறு + அங்கை. அகம் + கை – அகங்கை]

சிறட்டை *šiṟaṭṭai,* பெ. (n.) சிரட்டை பார்க்க; see *širaṭṭai.*

ம. சிரட்ட

[சிரட்டை → சிறட்டை]

சிறந்தகற்பகம் *šiṟanda-kaṟpagam,* பெ. (n.) நாகச் செய்ந்நஞ்சு (மூ.அ.); a prepared arsenic.

சிறந்தோர் *šiṟandōr,* பெ. (n.) 1. உயர்ந்தோர்; the great, the renowned, the illustrious. 2. கடவுளர், தேவர்; Gods, Dēvas. "சிறந்தோ ருலகம் படருநர் போல" (பரிபா. 19:11). 3. உறவினர் (திவா.); relatives. 4. துறந்தோர் (வின்.); ascetics.

ம. சிறந்தோர்

[சிற + ந் + த் + ஓர். சுள் → (சூர்) → சிற. சிற → சிறப்பு (பெருமை)]

சிறப்பசை *šiṟappašai,* பெ. (n.) நேரசைகட்டும் நிரையசைகட்டும் ஓதிய எழுத்துகள் மொழியாய் நின்றால் சிறப்பசையாகும் (யாப்.8); a metrical special syllable.

[சிறப்பு + அசை]

சிறப்பணி *šiṟappaṇi,* பெ. (n.) 1. இனம், குணம், செயல் என்பவற்றால் ஒரு பொருளைச் சிறப்பித்துக் கூறும் அணி; figure of speech which consists in magnifying the excellence of an object. 2. ஒப்புமையாற் பொதுமையுற் றிருந்த இரண்டு பொருள்களுக்கு ஒரு காரணியத்தால், வேறுபாடு தோன்றுவதைக் கூறும் அணி (அணியி. 82); figure of speech in which a reason is given for differentiating two similar objects taken up for comparison.

[சிறப்பு + அணி]

சிறப்பில்சீர் *šiṟappil-šīr,* பெ. (n.) பாட்டில் வகையுளி சேர்ந்து நிற்பரும் சீர்கள் (யாப்.வி.10).

[சிறப்பு + இல் + சீர்]

சிறப்பிலசை *širappil-ašai,* பெ. (n.) நேரசை கட்டும் நிரையசைகட்டும் ஓதிய எழுத்துகள் மொழிக்கு உறுப்பாய் நிற்பின் சிறப்பிலசை எனப்படும் (யாப்.8); an unwanted metrical syllable.

[சிறப்பு + இல் + அசை]

சிறப்பாங்கல் *šiṟa-p-pāṅgal,* பெ. (n.) குருந்தக்கல் (வின்.); corundum emery.

[சிறப்பு + ஆம் + கல்]

சிறப்பாடு *šiṟappāḍu,* பெ. (n.). மேம்பாடு, சால்பு; excellence, splendour. "சிறப்பாடுடையர்" (தேவா. 500, 4).

[சிறப்பு + பாடு – சிறப்புப்பாடு → சிறப்பாடு]

சிறப்பியற்பெயர் *šiṟappiyaṟ-peyar,* பெ. (n.) இனத்தி (சாதியில்)லுள்ளோர் சிறப்பினால் தமக்குத்தாமே வழங்கும் பெயர் (பன்னிருபா. 151); titles assumed by members of a community as a mark of special distinction.

[சிறப்பு + இயற்பெயர்]

சிறப்பிலாதாள் *šiṟappilādāḷ,* பெ. (n.) மேம்பாடில்லாதவள், மூதேவி (சூடா.); goddess of ill-luck, as being graceless.

[சிறப்பு + இலாதாள்]

சிறப்பு[1] *šiṟappu,* பெ. (n.) 1. தலைமை, தன்னேரில்லாத் தன்மை; pre-emience. "மேவிய சிறப்பின்" (தொல். பொருள்.அகத். 28). 2. மேம்பாடு, உயர்வு; superiority. 3. பகட்டு (ஆடம்பரம்), ஆரவாரம்; pomp. "விழா சிறப்பாக நடை பெற்றது" 4. பேராற்றல், உயர்நிலை; grandeur. 5. நயப்பண்பு; courtesy. 6. விருந்தோம்பும் பண்பு; hospitality. "விழுமியோர் காண் டொறுஞ் செய்வர் சிறப்பு" (நாலடி, 159).

[சிற → சிறப்பு]

சிறப்பு[2] *śiṟappu,* பெ. (n.) *சிறப்பணி,1 (வீரசோ. அலங். 12) பார்க்க;* see *śiṟappaṇi,1.*

[சிற → சிறப்பு]

சிறப்பு[3] *śiṟappu,* பெ. (n.) *1. மிகுதி (பிங்.);* abundance, plenty. *2. செல்வம்;* wealth. *3. வளமை;* prosperity. *"தகைப்பெருஞ் சிறப்பிற் குடுமிக்கோமான்" (புறநா. 64, 5). 4. இன்பம்;* happiness. *"காதலர் செய்யுஞ் சிறப்பு" (குறள், 1208). 5. வரிசை, நன்மதிப்பு;* honours, privileges. *"தென்னவன் பெயரொடு சிறப்புப் பெற்ற" (சிலப். 16: 109). 6. மதிப்பு;* regard, esteem. *"சீர்மை சிறப்பொடும்" (குறள், 195). 7. மேன்மை;* superiority, greatness. *8. நன்கொடை;* present, gift. *"சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க" (குறள், 590). 9. துறக்கம், பேரின்பம், உம்பருலகம்;* heaven, heavenly bliss. *"சிறப்பீனுஞ் செல்வமு மீனும்" (குறள், 31).*

ம. சிறப்பு; க. செறபு

[சிற → சிறப்பு]

சிறப்பு[4] *śiṟappu,* பெ. (n.) *1. வாலாயமான திருவிழா;* periodical festival in a temple. *"சிறப்பொடு பூசனை செல்லாது" (குறள், 18). 2. நகரத்தார் கொண்டாடும் ஒரு சடங்கு;* a ceremony observed by Nāṭṭukkōṭṭai Nagarattār.

[சிற → சிறப்பு]

சிறப்புக்கட்டளை *śiṟappu-k-kaṭṭaḷai,* பெ. (n.) *கோயிலில் ஏற்படுத்தப்பட்ட படையலுக்கான படித்தரம் (தெ.க.தொ.4,103);* institution of naivettiyam in a temple.

[சிறப்பு + கட்டளை]

சிறப்புச்செய்[1]**-தல்** *śiṟappu-c-cey-,* 1 செ.கு.வி. (v.i.) *1. ஒப்பனைசெய்தல், அழகுபடுத்துதல் (வின்.);* to embellish. *2. வரவேற்று முகமன் கூறுதல், விருந்தோம்பல்;* to welcome, show hospitality.

[சிறப்பு + செய். 'செய்' து.வி.]

சிறப்புச்செய்[2]**-தல்** *śiṟappu-c-cey-,* 1 செ.கு.வி. (v.i.) *கோயில் திருவிழாவைக் கொண்டாடுதல் (யாழ்ப்.);* to celebrate, as a temple festival.

[சிறப்பு + செய்-,]

சிறப்புடைக்கிளவி *śiṟappuḍai-k-kiḷavi,* பெ. (n.) *முகமன் மொழிந்து விருந்தோம்புகை;* words of hospitality. *"சிறப்புடைக்கிளவி செவ்விதிற் பயிற்றி" (பெருங். உஞ்சைக். 34:44).*

[சிறப்புடை + கிளவி]

சிறப்புடையரசியல் *śiṟappuḍai-y-araśiyal,* பெ. (n.) *மடிந்த உள்ளத்தோனையும், மகப்பெறாதோனையும் அடிப்பிறக் கிட்டோனையும், பெண் பெயரோனையும், படையிழந்தோனையும், ஒத்த படையோடா தோனையும், பிறவும் இத்தன்மை உடையோரையும், கொல்லாது விடுதலும் கூறிப்பொருதலும் முதலியன. (தொல். பொருள். 238, நச்);* grandeur of politics.

சிறப்புப்பாயிரம் *śiṟappu-p-pāyiram,* பெ. (n.) *ஆக்கியோன்பெயர், வழி, எல்லை, நூற்பெயர், யாப்பு, நுதலியபொருள், கேட்போர், பயன், காலம், களம், காரணம் முதலான பொருள்களைப் பற்றிப் புகலு முகத்தான் ஒரு நூலுக்குச் சிறப்பாக அமைக்கப்பட்ட முன்னுரை (தொல். பாயி. உரை.);* introduction to a book, giving particulars of the author, title of the work, subject-matter, etc., opp. to poḍu-p-pāyiram.

[சிறப்பு + பாயிரம்]

சிறப்புப்பெயர் *śiṟappu-p-peyar,* பெ. (n.) *1. பொதுப்பெயருக்கு எதிரிடையாக வொன்றற்கே, சிறப்பாக வரும் பெயர் (நன். 62, உரை.);* specific, name, opp. to poḍu-p-peyar. *2. திணை, நிலம், சாதி, குடி, உடைமை, குணம், தொழில், கல்வி என்ற எண் வகையானும், பொருள்களுக்குச் சிறப்பாகக் கூறும்பெயர் (நன்.393);* descriptive names of eight kinds, viz., tiṇai, nilam, śādi, kuḍi, uḍaimai, kuṇam, toḻil, kalvi. *3. வேந்தன் கொடுக்கும் பட்டப்பெயர் (பன்னிருபா. 150);* title given by a king.

[சிறப்பு + பெயர்]

சிறப்பும்மை *śiṟappummai,* பெ. (n.) *குறவரு மருளுங் குன்றம் அல்லது புலையனும் விரும்பாத யாக்கை என்று சிறப்பாக வரும் உம்மை (புறநா. 212, உரை);* connective particle implying superiority or inferiority.

[சிறப்பு + உம்மை]

சிறப்புமொழி *śiṟappu-moḻi*, பெ. (n.) *சிறப்பணி (திவா.) பார்க்க;* see *śiṟappaṇi.*

[சிறப்பு + மொழி]

சிறப்புலிநாயனார் *śiṟappuli-nāyaṉār*, பெ. (n.) *நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவர் (பெரியபு.);* a canonized Śaiva saint one of 63.

[சிறப்பு + புலி + நாயனார்]

சிறப்புவிதி *śiṟappu-vidi*, பெ. (n.) ஒன்றற்கே தனித்துக் கூறும் நெறி (நன்.165, உரை.); special rule, dist. fr. podu-vidi.

[சிறப்பு + விதி]

சிறப்புழகரம் *śiṟappu-ḻagaram*, பெ. (n.) *தமிழுக்குச் சிறப்பாயுள்ள ழகரம்;* the letter ḻ, as peculiar to Tamiḻ language.

[சிறப்பு + ழகரம். 'கரம்' சாரியை]

ழகரம் தமிழில் சிறப்பாகவுள்ளது எனக் குறிப்பிட்டாலும் தமிழின் இனமொழியான மலையாளத்தில் இன்றும் வழக்கில் இருக்கிறது. பழங்கன்னடம், பழந்தெலுங்கு போன்ற மொழிகளில் ழகரம் இருந்துள்ளது. ழகரம் இடம்பெற்றிருந்த சொற்களை ஒப்பு நோக்கினால் அது சில இடங்களில் முழுவதுமாக மறைந்துள்ளது. பிறவிடங்களில் க, ட, ண, த, வ போன்றனவாகத் திரிந்துள்ளது.

சிறப்பெடு-த்தல் *śiṟappeḍu-*, 4 செ.கு.வி. (v.i.) திருவிழாக் கொண்டாடுதல்; to celebrate a festival. "பேய்க்கே சிறப்பெடுப்பார்" *(அருட்பா, 1. நெஞ்சறி. 388).*

[சிறப்பு + எடு]

சிறப்பெழுத்து *śiṟappeḻuttu*, பெ. (n.) ஒரு மொழிக்கே சிறப்பாக உரித்தான எழுத்து (நன். 274); alphabetic letter peculiar to a language.

[சிறப்பு + எழுத்து]

சிறப்பை *śiṟappai*, பெ. (n.) மரத்தினாற் செய்யப்பட்டதும், பறவைகளைத் துரத்த வேனும், மாடுகளை அடையாளம் கண்டு பிடிக்குமாறு அவற்றின் கழுத்திற் கட்டுதற் கேனும், பயன்படுத்தப்படுவதுமான ஒரு வகை மணி (வின்.); a kind of bell or clapper, sometimes made of wood, used to scare away birds or tied to a bullock's neck for identification.

[சிறப்பு → சிறப்பை]

சிறவி *śiṟavi*, பெ. (n.) *சிறகி (பதார்த்த. 899) பார்க்க;* see *śiṟagi.*

[சிறகி → சிறவி]

சிறவு *śiṟavu*, பெ. (n.) *சிறந்தசெயல்;* meritorious deed. "சிறவேசெய்து வழிவந்து" *(திருவாச. 5:86).*

[சிற → சிறப்பு → சிறவு]

சிறாங்கணி-த்தல் *śiṟāṅ gaṇi-*, 4 செ.குன்றாவி. (v.t.) *சிறக்கணி-த்தல் பார்க்க;* see *śiṟakkaṇi-* "தோற்றமை தோற்றச் சிறாங்கணித்துப் பார்த்து" *(திவ். பெருமாள். 6:3, வியா.).*

[சிறக்கணி → சிறங்கணி → சிறாங்கணி]

சிறாங்கி-த்தல் *śiṟāṅgi-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* உள்ளங்கையளவாக்குதல்; to reduce to the size of the hollow of one's palm. "கண்களைச் சிறாங்கித்துப் பருகலா யிருந்தபடி" *(திருவிருத். 11, வியா, 81).* 2. தன்வயமாக்குதல்; to get into one's power or control. "அவனைச் சிறாங்கிக்கும் ஸம்சிலேஷ தசையில்" *(ஸ்ரீவசன, 25).* 3. இரத்தல்; to beg. "தன்னைச் சிறாங்கித்து இருக்கிற நம்மை அறிகிறதில்லை" *(ஈடு. 6:10,அவ.).* 4. கெஞ்சுதல்; to beg, entreat.

[சிறங்கை → சிறாங்கை → சிறாங்கி-,]

சிறாங்கு *śiṟāṅgu*, பெ. (n.) *சிராங்கு பார்க்க;* see *śirāṅgu.*

[சிராங்கு → சிறாங்கு]

சிறாங்கை *śiṟāṅgai*, பெ. (n.) *சிறங்கை பார்க்க;* see *śiṟaṅgai* "எனக்கும் ஒரு சிறாங்கை யிடவல்லி கோளே" *(திவ். திருமாலை. 19, வியா. 72).*

[சிறங்கை → சிறாங்கை]

சிறாம்பி¹-த்தல் *śiṟāmbi-*, 4 செ.குன்றாவி. (v.t.) ஒரு சேரத் திரட்டுதல்; to gather up in a mass. "சிறாம்பித் தனுபவிக்கலாயிருக்கை" *(ஈடு, 69:2, ஜீ).*

[சேர்த்தல் → சிறத்தல் → சிறாம்பி]

சிறாம்பி² *śiṟāmbi*, பெ. (n.) காவற்பரண் *(யாழ்ப்.);* a loft or platform for keeping watch.

ம. சிறாம்பி

சிறாம்பு¹-தல் *śiṟāmbu-*, 5 செ.கு.வி. (v.i.) *1.* குறுகுதல்; to shrink, look small. "சிறாம்பி இரப்பாளனாய் நின்ற நிலை" *(ஈடு, 2.6:1).* 2. இளைத்தல்; to grow lean, become emaciated.

"இத்தலையைப் பிரிந்து வந்த சிறாம்புத லெல்லாம்" (ஈடு, 6.1:11).

[சிறுமை → சிறு → சிறா → சிறாம்பு-,]

சிறாம்பு²-தல் *śirāmbu-,* 5 செ.கு.வி. (v.i.) உராய்தல் (வின்.); to graze, as a ball when passing.

[சிறாய் → சிறாம்பு-,]

சிறாம்பு³-தல் *śirāmbu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பிறாண்டுதல் (வின்.); to scratch with a splinter or thorn.

[சிறாய் → சிறாம்பு-,]

சிறாம்பு⁴ *śirāmbu,* பெ. (n.) மரச்சிலும்பு (வின்.); fibre risings in wood shiver.

[சில் → சிலும்பு → சிலாம்பு → சினாம்பு → சிறாம்பு = மரத்திலும் மீனிலுமுள்ள நுண்பட்டை (மு.தா. 130)]

சிறாய்¹-த்தல் *śirāy-,* 4 செ.குன்றாவி. (v.t.) சிராய் (உ.வ.) பார்க்க; see *śirāy-.*

[சிராய் → சிறாய்]

சிறாய்² *śirāy,* பெ. (n.) மரத்துண்டு; chip, splinter. "ஒரு சிறாயை விசுவசித்து" (ஈடு, 3.6:8).

[சிறு → செறா → சிறா]

சிறாயத்துக்குச்சி *śirāyattu-k-kucci,* பெ. (n.) நிலவேம்பு (யாழ்.அக.); Himalayan chiretta.

U. chirāita

சிறார் *śirār,* பெ. (n.) சிறுவர்; children. "திதியின் சிறாரும் விதியின் மக்களும்" (பரிபா. 3:6).

[சிறுமை → சிறு → சிறார். 'அர்' ப.பா. ஈறு]

சிறார்பணி *śirār-paṇi,* பெ. (n.) சிறுவர்களைப் பணிக்கமர்த்தல்; child labour.

[சிறார் + பணி. பண் → பணி]

சிறான் *śirāṉ,* பெ. (n.) சிறுவன்; boy.

[சிறுவன் → சிறான்]

சிறிக்கி¹ *śirikki,* பெ. (n.) சிறுக்கி பார்க்க; see *śirukki.*

[சிறுக்கி - சிறிக்கி (கொ.வ.)]

சிறிக்கி² *śirikki,* பெ. (n.) கொடிக்காக்கட்டான்; sky-blue bindweed.

சிறிசு *śiriśu,* பெ. (n.) 1. சிறிது (உ.வ.) பார்க்க; see *śiridu.* 2. சிறுவன் அல்லது சிறுமி; young boy or girl.

[சிறிது → சிறிசு. ஒ.நோ. கடிது - கடிசு. 'து' ஒ.பா.ஈறு]

சிறிஞன் *śiriñaṉ,* பெ. (n.) சிறுவன்; small insignificant boy. "அறிஞருஞ் சிறிஞரு மாதியந்தமா" (கம்பரா. ஆறுசெல்ப. 45).

[சிறியன் → சிறிஞன். 'ன்' ஆ.பா.ஈறு]

சிறிட்டம் *śiriṭṭam,* பெ. (n.) விளாம்பட்டை (இராட்.); bark of the wood-apple.

Skt. ślișța.

சிறிதாக்கு-தல் *śiridākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) அளவு, வடிவு போன்றவற்றில் குறைத்தல்; to make small, reduce.

ம. சிறியிக்குக

[சிறிது + ஆக்கு - ஆகு (த.வி.) - ஆக்கு (பி.வி.)]

சிறிது *śiridu,* பெ. (n.) பொருட்படுத்தத்தக்க தல்லாதது, சிறப்பிலாதது; that which is small, trifling or insignificant. "இறப்பச் சிறிதென்னாது" (நாலடி., 99).

ம. சிறிது, செறிது; க. கிரி, கிரிது; தெ. சிறுத; து. கிர்து; குட. செர்யெ; கோத., துட. கிர்

[சிறுமை → சிறு → சிறி → சிறிது]

சிறிதுரை-த்தல் *śiridurai-,* 4 செ.குன்றாவி. (v.t.) இகழ்ந்து பேசுதல், பழித்துரைத்தல்; to belittle, despise, speak contemptuously or disparagingly of. "சேர்ந்தாரை யெல்லாஞ் சிறிதுரைத்து" (பழ. 123).

[சிறுமை → சிறிது. சிறிது + உரை. சிறுமை = கீழ்மை, இகழ்ச்சி. உரை = பேச்சு]

சிறிபலம் *śiripalam,* பெ. (n.) வில்வம் (மலை.); bael.

Skt. śri-phala

சிறிய *śiriya,* பெ.எ. (adj.) 1. குறைந்த; small, little. 2. இளைய; younger in age. 3. தாழ்ந்த, இழிந்த; base, inferior.

ம. செறிய, சிரிய; க. கிறுது; தெ. சிறுத; குட. செய்யெ

[சிறு → சிறிய]

சிறியசிந்தையர் *śiṟiya-śindaiyar,* பெ. (n.) கீழோர் (சூடா.); base petty - minded persons.

[சிறுமை – சிறிய. சிறிய + சிந்தையர்]

சிறியத்தினி *śiṟiyattiṉi,* பெ. (n.) வேலிப்பருத்தி (மலை.); hedge cotton.

Skt. śri hastinī

சிறியதகப்பன் *śiṟiya-tagappaṉ,* பெ. (n.) தந்தைக்கு இளையவன் சிறிய தாயின் கணவன்; father's younger brother; mother's younger sister's husband.

[சிறிய + தகப்பன். தம் + அப்பன் → தமப்பன் → தவப்பன் → தகப்பன்]

சிறியதாய் *śiṟiya-tāy,* பெ. (n.) தாய்க் கிளையவள், சிற்றப்பன் மனைவி, இளைய மாற்றாந்தாய்; mother's younger sister, father's younger brother's wife, junior step-mother. "சிறியதாய் சொன்ன திருமொழி" (கம்பரா. பாசப். 41).

க. சிக்கதாயி

[சிறிய + தாய்]

சிறியதாயார் *śiṟiya-tāyār,* பெ. (n.) சிறியதாய் பார்க்க; see *śiṟiya-tāy.*

[சிறியதாய் → சிறியதாயார். ஆர் = உயர்வுப் பன்மையீறு]

சிறியதிருமடல் *śiṟiya-tiru-maḍal,* பெ. (n.) நாலாயிரத் தெய்வப் பனுவலைச் சார்ந்ததும், திருமங்கையாழ்வாரால் செய்யப்பட்டது மான ஒரு சிற்றிலக்கியம்; a poem by Tirumaṅgai-y-āḻvār forming part of Nālāyira-tivviya-p-pirabandam.

[சிறிய + திருமடல்]

சிறியதிருவடி *śiṟiya-tiruvaḍi,* பெ. (n.) அனுமன்; hanuman.

[சிறிய + திருவடி]

மாலியர் கருடனை பெரியதிருவடி என்றும், அனுமனைச் சிறியதிருவடி என்றும் அழைப்பர். திருவடி பார்க்க.

சிறியது *śiṟiyadu,* பெ. (n.) 1. வடிவத்திலோ தரத்திலோ தாழ்வானது; that which is small in size or imperior in quality. 2. இளையது; that which is young.

ம. செறியது

[சிறு → சிறியது]

சிறியதைலம் *śiṟiya-tailam,* பெ. (n.) தேவைக் கேற்பக் காய்ச்சிப் பயன்படுத்தும் மருந் தெண்ணெய் (பைஷஜ. 7); medicinal oil prepared as occasion requires.

[சிறுமை = குறைவு, சிறிது. சிறிய + தைலம்]

Skt. taila → த. தைலம்

சிறியநோக்கு-தல் *śiṟiya-nōkku-,* 5 செ. குன்றாவி. (v.t.) கடைக்கணித்துப் பார்த்தல்; to cast a benignant glance to ogle. "சிறிய நோக்கா .... நகை முகங் கோட்டி நின்றாள்" (சீவக. 1568).

[சிறிய + நோக்கு]

சிறியபேயத்தி *śiṟiya-pēyatti,* பெ. (n.) அத்தி வகை (இங்.வை); wild-fig.

[சிறிய + பேயத்தி]

சிறியமரத்தி *śiṟiya-maratti,* பெ. (n.) சிற்றகத்தி (மலை.); common sesban.

சிறியமனம் *śiṟiya-maṉam,* பெ. (n.) 1. சிறுமைப் பண்பு (யாழ்ப்.); pettiness. 2. கஞ்சத்தனம்; meanness.

[சிறிய + மனம். முன் = மனக்குறிப்பு. முன் → முன்னம் → முனம் → மனம்]

சிறியர் *śiṟiyar,* பெ. (n.) இழிதகவுடையவன்; low, mean person. "தேயம்வைத் திழந்தான். சீச்சீ! சிறியர் செய்கை செய்தான்" (பாஞ். ப. 378).

[சிறியன் → சிறியர். 'அர்' ப.பா.ஈறு.]

சிறியவன் *śiṟiyavaṉ,* பெ. (n.) சிறியன் பார்க்க; see *śiṟiyaṉ.* "செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை" (குறள், 815).

க. சிக்கவ

[சிறுமை → சிறு → சிறிய → சிறியன் → சிறியவன்]

சிறியன் *śiṟiyaṉ,* பெ. (n.) 1. சிறுவன்; small, insignificant person, boy. "சிறியனென் றென்னிளஞ் சிங்கத்தை யிகழேல்" (திவ். பெரியாழ். 1.4:8). 2. இழிந்தவன்; mean person 'சிறியர் செயற்கரிய செய்கலாதார்" (குறள், 26).

ம. செறியவன்

[சிறியவன் → சிறியன். 'ன்' ஆ.பா.ஈறு]

சிறியாணங்கை *śiṟiyāṇaṅgai,* பெ. (n.) சிறியாநங்கை (வின்.) பார்க்க; see *śiṟiyānaṅgai.*

[சிறியாநங்கை → சிறியாணங்கை]

சிறியாநங்கை *śiṟiyā naṅgai,* பெ. (n.) பூடுவகை; a species of small milkwort.

சிறியார் *śiṟiyār,* பெ. (n.) சிறியர் பார்க்க; see *śiṟiyar.* 'சிறியாரோடு இணங்காதே; சேம்புக்குப் புளிவிட்டுக் கடையாதே' (பழ.)

[சிறியர் → சிறியார்]

சிறியிலை *śiṟiyilai,* பெ. (n.) சிற்றிலை பார்க்க; see *śiṟṟilai.* "சிறியிலை நெல்லி" (புறநா. 91).

[சிறுயிலை → சிறியிலை]

சிறிவில் *śiṟivil,* பெ. (n.) அகில் (மலை.); eagle-wood.

சிறு[1]-த்தல் *śiṟu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. சிறுகு[1]-தல் பார்க்க; see *śiṟugu-.* "சிறுத்த செலுவதனு ளிருந்து" (திருப்பு. 227).

[சில் → சிறு-,]

சிறு[2]-த்தல் *śiṟu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. முட்டுக் கட்டையிடுதல்; to hinder. 2. தடுத்தல் (நாஞ்.); to resist.

[சில் → சிறு-,]

சிறு[3] *śiṟu,* பெ.எ. (adj.) 1. குறைந்த, சிறிய; small, little. 2. இளைய, அகவையில் குறைந்த; young.

ம. செறு, செரிய; க. கிறி, கிற, கிறு, கிறிது; தெ. சிறு, சிறுத; து. கிளி, கிறு; குட. கிர்கெ, கெர்யெ; கோத. துட. கிர்.

[சில் → சிறு-,]

சிறுக்கம் *śiṟukkam,* பெ. (n.) 1. சிறுபிள்ளைத் தனம்; trifle. 2. புன்மை (அற்பம்); triff. 3. இழிவு; baseness.

[சிறு → சிறுக்கு → சிறுக்கம்]

சிறுக்கன் *śiṟukkaṉ,* பெ. (n.) சிறுவன்; boy, youngster, a term of endearment. "ஆலினிலை வளர்ந்த சிறுக்கன்" (திவ். பெரியாழ். 1.4:7).

ம. சிறுக்கன், செறுக்கன்.

[சிறு → சிறுவன் → சிறுக்கன். 'ன்' ஆ.பா. ஈறு]

சிறுக்காம்பன்சேலை *śiṟu-k-kāmbaṉ-šēlai,* பெ. (n.) ஒரு வகை எழுத்துச்சிற்றாடை; a kind of printed saree (திவ். பெரியாழ். 1.3:8, வியா. பக். 64).

[சிறு + காம்பு + அன் + சேலை]

சிறுக்கி[1] *śiṟukki,* பெ. (n.) 1. இளம்பெண்; girl, wench. "சிறுக்கிகளுற வாமோ" (திருப்பு. 145). 3. வேலைக்காரி; maidservant. "கோசலை வீட்டுச் சிறுக்கிக்குஞ் சிறுக்கி" (இராமநா. அயோத். 7.).

ம. செறுக்கி

[சிறுக்கன் → சிறுக்கி. 'இ' பெ.பா.ஈறு]

சிறுக்கி[2] *śiṟukki,* பெ. (n.) இழிநடத்தை யுடையவள்; woman of meniel behaviour. 'செல்லிக்குச் சிறங்கு, சிறுக்கிக்கு அரையாப்பு, பார்க்க வந்த பரிகாரிக்கும் பக்கப் பிளவு' (பழ.).

[சிறு → சிறுக்கி]

சிறுக்கி[3] *śiṟukki,* பெ. (n.) பகட்டாரவார மிக்கவள்; ostentatious woman.

[செறுக்கி → சிறுக்கி]

சிறுக்கீரை *śiṟu-k-kīrai,* பெ. (n.) சிறுகீரை பார்க்க; see *śiṟu-kīrai.* "சிறுக்கீரை வெவ்வடகும்" (தமிழ்நா. 57).

[சிறுகீரை → சிறுக்கீரை]

சிறுக்கு-தல் *śiṟukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. சிறுகச்செய்தல் (தைலவ. தைல. 1.); to reduce in size or quantity, lessen. 2. சினத்தல் (யாழ்அக.); to be angry with.

[சில் → சிறு → சிறுக்கு]

சிறுக *śiṟuga,* கு.வி.எ. (adv.) 1. சிறிதாக; a little. 2. செட்டாக, சுருக்கமாக; sparingly. "சிறுகக் கட்டிப் பெருக வாழ்" (பழ.).

[சிறு → சிறுக]

சிறுகஞ்சாங்கோரை *śiṟugañjāṅ-kōrai,* பெ. (n.) கஞ்சாங்கோரை (வின்.) பார்க்க; see *kañjāṅ-gōrai.*

[சிறு + கஞ்சாங்கோரை]

கஞ்சாங்கோரை வகைகளுள் வேறுபாடறிதற்காகச், 'சிறு' முன்னொட்டானது.

சிறுகட்டுக்கொடி *śiṟu-kaṭṭu-k-koḍi,* பெ. (n.) *உப்புக்கட்டியென்னுங் கொடி (மலை.);* a kind of milky medicinal creeper.

[சிறு + கட்டுக்கொடி]

சிறுகடலாடி *śiṟu-kaḍalāḍi,* பெ. (n.) *நாயுருவி (மலை.);* dog - prick.

ம. செறுகடுகு

[சிறு + கடலாடி]

நாயுருவி வகைகளுளொன்றை இனம் பிரித்துக் காட்டச் 'சிறு' முன்னொட்டானது.

சிறுகடுக்காய் *śiṟu-kaḍukkāy,* பெ. (n.) கடுக்காய் வகை (வின்.); a variety of chebulic myrobalan.

[சிறு + கடுக்காய்]

சிறுகடுகு[1] *śiṟu-kaḍugu,* பெ. (n.) கடுகு; Indian mustard. "மஞ்சளும் இஞ்சியும் செஞ்சிறு கடுகும்" *(பெருங். மகத. 17:142).*

ம. செறுகடுகு

[சிறு + கடுகு]

சிறுகடுகு[2] *śiṟu-kaḍugu,* பெ. (n.) *எட்டு நுண் மணல் கொண்ட சிற்றளவு;* a small unit of weight, 8 fine grains of sand.

[சிறு + கடுகு]

சிறுகண்ணாகம் *śiṟu-kaṇṇāgam,* பெ. (n.) *நச்சுப்பாம்புவகை (யாழ்.அக.);* a kind of venomous serpent.

[சிறுகண் + நாகம்]

சிறுகத்திரி *śiṟu-kattiri,* பெ. (n.) *சூரை;* hedge caper shurb.

[சிறு + கத்திரி]

சிறு = சிறிது, கீழ், தாழ்வு, பயனற்றது.

சிறுகம்பில் *śiṟu-kambil,* பெ. (n.) *திக்காமல்லி;* dikmali gum-plant.

சிறுகம்மான்பச்சரிசி *śiṟu-kammāṉ-paccariśi,* பெ. (n.) சிற்றம்மான்பச்சரிசி (நாஞ்.) பார்க்க; see *śiṟṟammāṉ-paccariśi.*

[சிற்றம்மான்பச்சரிசி → சிறுகம்மான் பச்சரிசி]

அம்மான்பச்சரிசி பார்க்க

சிறுகரையான் *śiṟu-karaiyāṉ,* பெ. (n.) *கறையான் வகை;* a species of small white ants.

[சிறு + கரையான்]

கறையான் பார்க்க

சிறுகல்லூரி *śiṟu-kallūri,* பெ. (n.) *கல்லுருவி (சங்.அக.);* blistering plant.

[சிறு + கல்லூரி. கல்லுருவி → கல்லுரி → கல்லூரி]

சிறுகளர்வா *śiṟu-kaḷarvā,* பெ. (n.) *களர்வா மரம்;* tooth-brush tree.

[சிறு + களர்வா]

சிறுகளா *śiṟu-kaḷā,* பெ. (n.) *முட்கள் செறிந்த களாக்கீரை வகை (சங்.அக.);* a low spreading spiny evergreen shrub.

ம. செறுகளாவு

[சிறு + களா]

சிறுகளி *śiṟu-kaḷi,* பெ. (n.) சிறுகளா (வின்.) பார்க்க; see *śiṟu-kaḷā.*

[சிறுகளா → சிறுகளி]

சிறுகற்றாழை *śiṟu-kaṟṟāḻai,* பெ. (n.) *கடற் கரையில் வளருங் கற்றாழை;* sea side aloe.

ம. செறுகற்றாழ

[சிறு + கற்றாழை. கல் + தாழை = கற்றாழை]

சிறுகறி *śiṟu-kaṟi,* பெ. (n.) பச்சடி முதலிய கறி வகை (விஞ்.); minor curry preparation.

[சிறு + கறி]

சிறுகாக்கைபாடினியார் *śiṟu-kākkai-pāḍiṉiyār,* பெ. (n.) சிறுகாக்கைபாடினியமென்னும் யாப்பிலக்கணஞ் செய்த பழம்புலவர் (தொல். பொருள். 650, உரை.); author of the śiṟu-kākkai-pāḍiṉiyam, an ancient work on prosody.

சிறுகாசா *śiṟu-kāśā,* பெ. (n.) காசா மரம் (திவா.); iron wood tree.

[சிறு + காசா]

சிறுகாஞ்சொறி *śiṟu-kāñjoṟi,* பெ. (n.) உடலிற் பட்டால் தினவேற்படுத்தும் இலையைக் கொண்ட செந்தொட்டிச் செடி; small climbing nettle.

ம. சிறுகாஞ்சொறி

[சிறு + காஞ்சொறி]

சிறுகாடு *śiṟu-kāḍu,* பெ. (n.) *தூறடர்ந்த காடு (வின்.);* low jungle, thicket.

[சிறு + காடு. சிறு = அடர்த்தி, நெருக்கம்]

சிறுகாப்பியம் *śiṟu-kāppiyam,* பெ. (n.) பெருங்காப்பியவுறுப்புக்களிற் சிலகுறைந்து வரும் நூல்வகை; short narrative poem, wanting in some of the requistes of peruṅ-kāppiyam.

[சிறு + காப்பியம். சிறு = சிறுமை, குறைபாடு]

சிறுகாய் *śiṟu-kāy,* பெ. (n.) *சாதிக்காய் (மலை.);* nutmeg.

[சிறு + காய்]

சிறுகாரிடம் *śiṟu-kāriḍam,* பெ. (n.) *சிறுகாய் (மலை.) பார்க்க;* see *śiṟukāy.*

சிறுகால்[1] *śiṟu-kāl,* பெ. (n.) தென்றல் *(சூடா.);* south wind.

[சிறு(மை) + கால். கால் = காற்று. சிறு = சிறுமை, மென்மை, குறைவு]

குறைந்த வேகத்தில் வீசும் காற்று இயல்பான வேகத்தினின்றும் சற்று மாறுபட்டாலே தென்றல் எனும் பெயர் மாறி, காற்று என்றழைக்கப்படுவதையும், சுழன்றடிக்கும் காற்றைச் சூறைக்காற்று என்றழைக்கப் படுவதையும் நினைத்தல் நலம்.

சிறுகால்[2] *śiṟu-kāl,* பெ. (n.) *காவட்டம்புல் (மலை.);* citronella grass.

[சிறு + கால்]

சிறுகாலே *śiṟu-kālē,* வி.எ. (adv.) புலர் பொழுதில், நாட்காலையில், விடியலில்; early in the morning, in the small hours of the morning. "சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து" *(திவ்.திருப்பா. 29).*

[சிறு + காலே. சிறு = சிறிது, குறைவு. கல் → கால் = ஒளி, வெளிச்சம். காலே = காலை - காலையிலே]

சிறுகாலை *śiṟu-kālai,* பெ. (n.) *1.* புலர்பொழுது, விடியல்; early morning, dawn. "சிறுகாலை யட்டில் புகாதா ளரும்பிணி" *(நாலடி, 363).* *2.* இளம்பருவம்; early lifetime. "சிறுகாலையே .... தோட் கோப்புக் கொள்ளார்" *(நாலடி, 328).*

ம. சிறுகாலம்

[சிறு + காலை]

சிறுகாலைச்சந்தி *śiṟukālai-c-candi,* பெ. (n.) சிறுகாலை,-1 பார்க்க; see *śiṟukālai*[1]. "சிறுகாலைச்சந்திக்கு வைத்த திருவிளக்கு" *(தெ.க. தொ. 3: 88).*

[சிறு காலை + சந்தி. அந்தித்தல் = நெருங்குதல், கூடுதல். அந்தி → சந்தி]

காலையும் பகலும் சந்திக்கும் வேளையைக் காலைச்சந்தி எனவும், மாலையும் இரவும் சந்திக்கும் வேளையை மாலைச்சந்தி எனவும் வழங்குகிறோம். அந்த வகையில் சிறுகாலை யாகிய புலர் பொழுதும், காலைவேளையும் சந்திக்கும் பொழுது சிறுகாலைச்சந்தியாகும்.

சிறுகிராமம் *śiṟu-kirāmam,* பெ. (n.) நூறு குடியுள்ள ஊர் (சூடா.); hamlet of 100 families, opp. to pēruṅ-kirāmam.

[சிறு + கிராமம்]

சிறுகிழங்கு *śiṟu-kilaṅgu,* பெ. (n.) செடிவகை *(பதார்த்த. 438);* Goa potata.

ம. செறுகிழங்ஙு

[சிறு + கிழங்கு]

சிறுகீரை *śiṟu-kīrai,* பெ. (n.) *1.* கீரைத்தண்டு வகை; a species of amarnath. *2.* கீரைவகை *(யாழ்.அக.);* a pot-herb.

ம. செறுகீர

[சிறு + கீரை]

சிறுகு[1]**-தல்** *śiṟugu-,7* செ.கு.வி. (v.i.). *1.* சிறிதாதல்; to be small, short. *2.* வளர்ச்சிகுறைதல்; stunted in growth. *3.* சுருங்குதல்; to shrink, diminish. "சீறிற் சிறுகுந் திரு" *(குறள், 568).* *4.* நிலைதாழ்தல்; to be impoverished, to sink low.

ம. செறுகுக

[சிறுமை → சிறு → சிறுகு-,]

சிறுகு[2] *śiṟugu,* பெ. (n.) சிலுகு-1,2,6 *(யாழ்.அக.)* பார்க்க; see *śilugu 1,2,6.*

[சிலுகு → சிறுகு]

சிறுகுடல் *śiṟu-kuḍal,* பெ. (n.) இரைப்பைமுதல் பெருங்குடல் வரையுள்ள உணவுக்குழாயின் பகுதி; small intestines.

ம. செறுகுடல், செறியகுடல்

[சிறு + குடல். குழல் = துளையுள்ளது. குழல் → குடல் = குழல் போன்ற உறுப்பு]

சிறுகுடி *śiṟu-kuḍi,* பெ. (n.) 1. குறிஞ்சிநிலத்து ஊர்; village in a hilly tract. "மறைவரைச் சாரற் சிறுகுடி" (பெருங். உஞ்சைக். 41:30). 2. சிற்றூர்; small village. 3. ஏழைக்குடும்பம் (வின்.); poor family.

[சிறு + குடி. குள் → குட → குடி]

சிறுமை = குறைவு, வறுமை.

முதற்காலத்தில் வீடுகளெல்லாம் வட்டமாய்க் கட்டப்பட்டிருந்ததால் வீடு குடியெனப் பட்டது. ஒரு கால் வழியினர் பல இல்லங்களில் குடியிருந்தாலும் ஒரே இல்லத்தைச் சார்ந்தவராகக் கருதும் மரபும் முதற்காலத்தில், பெரும்பாலும் ஒரு சிற்றூரில் ஒரு கால்வழியினர் இருந்ததனாலும் வீட்டைக் குறிக்கும் குடி சிற்றூரைக் குறித்தது.

மலையும் மலைசார்ந்ததும் குறிஞ்சி. குறிஞ்சியில் சமதளப்பகுதி குறைவு. அதனால் குடியிருப்பு அமைத்துக் கொளலரிது. ஒரு சில குடியிருப்புகளையே, ஊராகக் கருதிக் கொள்வர்.

சிறுகுடில் *śiṟu-kuḍil,* பெ. (n.) சிறுகுடிசை, சிற்றில்; small-hut, hovel. "சிறுகுடி லங்க ணிருமி னீரென" (சிலப். 16: 124).

[சிறு + குடில். குள் → குட → குடி → குடில்]

சிறுகுரீஇயுரை *śiṟu-kurīi-y-urai,* பெ. (n.) நகைவிளைப்பதும், வழக்கு வீழ்ந்ததுமான ஒரு பழையநூல் (தொல். பொருள். 485, உரை.); a humourous story-book of ancient times, not now extant.

[சிறு + குருவி + உரை]

சிறுகுரு *śiṟu-kuru,* பெ. (n.) உவர்மண் (வின்.); alkaline earth.

சிறுகுரும்பை *śiṟu-kurumbai,* பெ. (n.) உயர்தர நெல்வகையுளொன்று (வின்.); a kind of fine paddy.

[சிறு(மை) + குரும்பை]

சிறுகுழி *śiṟu-kuḻi,* பெ. (n.) 1. கீழ்வாயிலக்கப் பெருக்கம்; multiplication of fractions, opp. to peruṅ-guḻi. 2. 36 சதுரஅடி கொண்ட அளவை (இ.வ.); a superficial measure = 36 sq. ft.

[சிறு + குழி. குள் → குழி. குழித்தல் = குழித்தெழுதுதல்]

சிறுகுளம் *śiṟu-kuḷam,* பெ. (n.) குட்டை; small pond.

[சிறு + குளம்]

சிறுகுறட்டை *śiṟu-kuṟaṭṭai,* பெ. (n.) குறட்டை வகை (யாழ்.அக.); a species of snake - gourd.

[சிறு + குறட்டை]

சிறுகுறிஞ்சா *śiṟu-kuṟiñjā,* பெ. (n.) நீரிழிவு நோயை நீக்கும் பண்புடைய மருந்துக்கொடி வகை (பதார்த்த. 126); a medicinal climber.

[சிறு + குறிஞ்சா]

சிறுகுறிஞ்சா

சிறுகுறிஞ்சி *śiṟu-kuṟiñji,* பெ. (n.) 1. நேர்வாளம்; croton. 2. புளியாரை; yellow wood-sorrel.

[சிறு + குறிஞ்சி]

சிறுகுறுங்கை *śiṟu-kuṟuṅgai,* பெ. (n.) கூம்பு வடிவிலமைந்த செடிவகை; a species of conehead.

[சிறு + குறுங்கை]

சிறுகுறுவை *śiṟu-kuṟuvai,* பெ. (n.) குறுவை நெல்வகையுளொன்று; a kind of kuṟuvai paddy.

[சிறு + குறுவை]

சிறுகுன்று *śiṟu-kuṉṟu,* பெ. (n.) சிறுதிட்டை பார்க்க; see *śiṟu-tiṭṭai.*

[சிறு + குன்று]

சிறுகூவரகு *śiṟu-kūvaragu,* பெ. (n.) தவசப் புல்வகை; kora millet.

[சிறு + (கூழ்வரகு) → கூவரகு]

சிறுகேசரம் *śiṟu-kēšaram,* பெ. (n.) சிறுநாகப்பூ (சங்.அக.); iron-wood of Ceylon.

[சிறு + கேசரம்]

சிறுகொட்டைக்கரந்தை *śiṟu-koṭṭai-k-karandai,* பெ. (n.) *பறவைகள் விரும்பியுண்ணும் கொட்டைக் கரந்தைவகை;* a kind of chickweed.

[சிறு + கொட்டைக்கரந்தை]

சிறுகொம்மட்டி *śiṟu-kommaṭṭi,* பெ. (n.) *வடிவிற் சிறிய, புளிப்புச்சுவைமிக்க காய்காய்க்கும் கொம்மட்டி வகை (யாழ்.அக.);* a variety of small-sized cucumber.

[சிறு + கொம்மட்டி]

சிறுகொய்யா *śiṟu-koyyā,* பெ. (n.) *வடிவிற் சிறிய கொய்யா வகையுளொன்று;* dwarf guava.

[சிறு + கொய்யா]

சிறுகொன்றை *śiṟu-koṉṟai,* பெ. (n.) *தரங் குறைந்த கொன்றை மரவகை (பதார்த்த. 205);* a variety of small-sized cassia tree.

ம. செறு கொன்ன

[சிறு + கொன்றை]

சிறுகோரை *śiṟu-kōrai,* பெ. (n.) *கோரைவகை (வின்.);* a kind of sedge.

[சிறு + கோரை]

சிறுகோல் *śiṟu-kōl,* பெ. (n.) *4 முழங்கொண்ட அளவுகோல் (யாழ்.அக.);* a measuring rod = 4 cubits.

[சிறு + கோல்]

சிறுங்குறுந்தொட்டி *śiṟuṅguṟun-toṭṭi,* பெ. (n.) *சிற்றாமுட்டி (இங்.வை.52);* yellow sticky mallow.

[சிறும் + குறும் + தொட்டி]

சிறுச்சிறிது *śiṟu-c-ciṟidu,* பெ. (n.) *கொஞ்சங் கொஞ்சமாக;* little by little, gradually. "செங்கண் சிறுச்சிறிதே யெம்மேல் விழியாவோ" *(திவ். திருப்பா. 22).*

[சிறு + சிறிது]

சிறுச்செய் *śiṟu-c-cey,* பெ. (n.) *சிறுசெய் (யாழ்.அக.) பார்க்க;* see *śiṟu-śey.*

[சிறு + செய்]

சிறுசண்பகம் *śiṟu-śaṇbagam,* பெ. (n.) *சிறுசெண்பகம் (திவா.) பார்க்க;* see *śiṟu-śeṇbagam.*

[சிறு + சண்பகம்]

சிறுசணல் *śiṟu-śaṇal,* பெ. (n.) *சணல்வகை;* linseed and flax plant.

ம. செறுசணம்

[சிறு + சணல்]

சணல் பார்க்க

சிறுசவளம் *śiṟu-śavaḷam,* பெ. (n.) *குந்தப்படை (பிங்.);* dart, javelin.

[சிறு + சவளம்]

[சுவள் → சவள் → சவளம் (மு.தா.250)]

சிறுசவுக்கு *śiṟu-śavukku,* பெ. (n.) *கோடைச் சவுக்கு (L.);* tamarisk.

[சிறு + சவுக்கு]

சிறுசாமம் *śiṟu-śāmam,* பெ. (n.) *மூன்றே முக்கால் நாழிகைகொண்ட பொழுது (வின்.);* minor watch of an hour and a half.

[சிறு + சாமம். யாமம் – சாமம்]

சிறுசாமை *śiṟu-śāmai,* பெ. (n.) *சாமைவகை (சங்.அக.);* a kind of little millet.

[சிறு + சாமை. சமை → சாமை]

சிறுசானல்விரை *śiṟu-śāṉal-virai,* பெ. (n.) *ஆளிவிரை (இங்.வை. 52);* linseed.

[சிறு + சானல்விரை]

சிறுசிட்டாஞ்சி *śiṟu-śiṭṭāñji,* பெ. (n.) *நெல் வகை;* a kind of paddy.

[சிறு + சிட்டாஞ்சி]

சிறுசிவிங்கி *śiṟu-śiviṅgi,* பெ. (n.) *சிறுத்தை வகையுளொன்று;* a kind of small-sized panther.

[சிறு + சிவிங்கி]

சிறுசின்னம் *śiṟu-śiṉṉam,* பெ. (n.) *ஊதுகுழற் கருவிவகையி லொன்று (பிங்.);* a kind of clarionet.

[சிறு + சின்னம்]

சிறுசின்னி *śiṟu-śiṉṉi,* பெ. (n.) செடிவகை (*பதார்த்த. 536*); a species of copper leaf.

ம. செறுசின்ன

[சிறு + சின்னி]

சிறுசுங்கம் *śiṟu-śuṅgam,* பெ. (n.) வரிவகை; a kind of tax (*செ.அக.*).

[சிறு + சுங்கம்]

சிறுசுரப்பி *śiṟu-śurappi,* பெ. (n.) நுண்கழலை; glandule.

[சிறு + சுரப்பி]

சிறுசுளகு *śiṟu-śuḷagu,* பெ. (n.) சிறுமுறம்; a kind of small-sized winnowing fan. "சிறு சுளகும் மணலுங் கொண்டு" (*திவ். நாய்ச். 2:8*).

[சிறு + சுளகு]

சிறுசூடு *śiṟu-śūḍu,* பெ. (n.) இளஞ்சூடு (இ.வ.); gentle heat, luke-warm.

[சிறு + சூடு. சுள் → சுடு → சூடு]

சிறுசூலி *śiṟu-śūli,* பெ. (n.) அகச்சூலி; a kind of tree.

[சிறு + சூலி]

சிறுசெங்குரலி *śiṟu-śeṅ-gurali,* பெ. (n.) கருந்தாமக்கொடி; a mountain creeper. "சேடல் செம்மல் சிறுசெங்குரலி" (*குறிஞ்சிப். 82*).

[சிறு + செங்குரலி]

சிறுசெண்பகம் *śiṟu-śeṇbagam,* பெ. (n.) சண்பக மரம்; cananga flower tree. "சிறு செங்குரலியுஞ் சிறு செண்பகமும்" (*பெருங். இலாவாண: 12.29*).

[சிறு + செண்பகம். செம் → செண் → செண்பகம்]

சிறுசெய் *śiṟu-śey,* பெ. (n.) 1. பாத்தி (சூடா.); garden bed. 2. பயிர் செய்வதற்காகப் பண்படுத்திய நிலக்கூறு; small cultivated plot.

[சிறு + செய்]

சிறுசெருப்படி *śiṟu-śeruppaḍi,* பெ. (n.) செருப்படி வகை (வின்.); a species of śeruppaḍi with small leaves.

[சிறு + செருப்படி]

சிறுசெருப்படை *śiṟu-śeruppaḍai,* பெ. (n.) கொடிவகை; a prostrate shrub.

[சிறு + செருப்படை]

சிறுசொல்[1] *śiṟu-śol,* பெ. (n.) 1. இழிசொல்; slighting language, word of contempt. "சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை" (*புறநா. 72*). 2. பழிச்சொல், திட்டு; censure, reproach. 'இந்தச் சிறுசொல் நமக்கு வேண்டுமா' (*நெல்லை*) 'சிறுசொல் சொல்லிச் சின்னபுத்தியைக் காட்டாதே' (*உ.வ.*). 3. குறிப்பிடத்தக்கதல்லாத பேச்சு; an insignificant word.

ம. சிக்கமாது

[சிறு + சொல். சிறு = சிறுமை, இழிவு, பழி]

சிறுசொல்[2] *śiṟu-śol,* பெ. (n.) குறுமொழி (சிலப். 16:64, உரை); gentle speech, as of women .

சிறுமை → சிறு

[சிறு + சொல். சிறு = சிறிய, அழகிய, மென்மையான]

சிறுசொறிக்குட்டம் *śiṟu-śoṟi-k-kuṭṭam,* பெ. (n.) தொழுநோய்வகையு ளொன்று (இராசவைத். 101, உரை.); a kind of leprosy.

[சிறு + சொறி + குட்டம்]

சிறுசோற்றுவிழவு *śiṟu-śōṟṟu-viḻavu,* பெ. (n.) சோற்றைத் தயிர் முதலியவற்றோடு கலந்து உருண்டைகளாக்கி அவற்றை வருவோர்க்குக் கொடுத்து மகிழுங் கொண்டாட்டம் (புறநா. 33, உரை.); a festive celebration in which balls of cooked rice mixed in curd and some other ingredients are distributed.

[சிறு + சோறு + விழவு]

சிறுசோறடுதல் *śiṟu-śōṟaḍudal,* பெ. (n.) பெண்பாற் பிள்ளைத்தமிழில் வரும் பத்துப்பருவங்களுள் தலைவி மணற்சோறு சமைக்கும் பருவத்தைப் புனைந்து கூறும் பகுதி (பிங்.); section of peṇ-pāṟ-piḷḷai-t-tamiḻ, which describes the stage of childhood in which the heroine of the poem cooks toy food of sand, one of ten.

[சிறுசோறு + அடு. உடு → அடு. அடுதல் = சுடுதல், எரித்தல், சமைத்தல்]

சிறுசோறு *śiṟu-śōṟu,* பெ. (n.) 1. பிள்ளைகள் விளையாட்டாகச் சமைக்கும் மணற்சோறு; toy food of sand, in children. "சிறுசோறமைத்தருந்த" (திருவானைக்கா உலா, 222). 2. கலவைச்சோறு; a kind of rice-preparation flavoured with spices. "சிறுசோற்றுப் பெருஞ்சிறப்பும்" (பெரியபு. சேரமான். 155).

[சிறு + சோறு. சிறு = சிறிய, குறைந்த]

சிறுட்டாட்டி *śiṟuṭṭāṭṭi,* பெ. (n.) சிறுசட்டி வகை (இ.வ.); a small earthen vessel.

சிறுத்தாயார் *śiṟu-t-tāyār,* பெ. (n.) 1. சிறியதாய்; father's younger brother's wife. 2. சித்தி; mother's younger sister (செ.அக.).

[சிறு + தாயார்]

சிறுத்தை *śiṟuttai,* பெ. (n.) சிறுபுலி வகை; panther.

க. சிறதெ, சிர்ச; தெ. சிறுதெ, சிறுதபுலி, சிறுபுலி

[சிறு → சிறுத்தை]

சிறுத்தொண்டநாயனார் *śiṟu-t-toṇḍa-nāyaṉār,* பெ. (n.) நாயன்மார் அறுபத்துமூவரில், பல்லவ அரசனது தானைத்தலைவரும், திருஞான சம்பந்தர் காலத்தவருமான சிவனடியார் (பெரியபு.); a canonized Śaiva śaint, commander-in-chief of a Pallava king and contemporary of Tiru-ñāṉa-śambandar one of 63.

[சிறுத்தொண்டர் + நாயனார்]

சிறுதக்காளி *śiṟu-takkāḷi,* பெ. (n.) 1. மணித்தக்காளி (மலை.); black nightshade. 2. பிள்ளைத்தக்காளி (M.M.); small Indian winter-cherry.

[சிறு + தக்காளி]

சிறுதகரை *śiṟu-dagarai,* பெ. (n.) தகரை (L.); fetid cassia.

[சிறு + தகரை]

சிறுதகை *śiṟu-dagai,* பெ. (n.) தலைவணக்கம்; humility. "பெரும்பூட் சிறுதகை....... வெண்குடையான்" (பு. வெ. 8:24).

[சிறு + தகை. சிறு = சிறப்பு]

சிறுதகைமை *śiṟu-dagaimai,* பெ. (n.) சிறுதகை பார்க்க; see *śiṟu-dagai.* "பெரியார் பெருமை சிறுதகைமை" (நாலடி, 170).

[சிறு + தகைமை]

சிறுதடி *śiṟu-taḍi,* பெ. (n.) பாத்தி; small plot of land, small salt - pan. "காயற் சிறுதடி" (அகநா. 366).

[சிறு + தடி. சிறு = சிறுமை. தடி = வயல், பாத்தி, வெட்டு]

சிறுதரம் *śiṟu-daram,* பெ. (n.) 1. சிறிய அளவு; small size. 2. இளம்பருவம்; boyhood, youth. 'சிறுதரத்துப் பிள்ளைகள்' (இ. வ.).

[சிறு + தரம்]

சிறுதருப்பம் *śiṟu-daruppam,* பெ. (n.) நாணல் (இ.வ.); lalong grass.

[சிறு + தருப்பம்]

சிறுதவசம் *śiṟu-davaśam,* பெ. (n.) புன்செய் கூலம்; dry crop.

[சிறு + தவசம்]

சிறுதனம்[1] *śiṟu-daṉam,* பெ. (n.) சிறுபிள்ளைத் தன்மை (இ.வ.); childishness.

[சிறு + தனம்]

சிறுதனம்[2] *śiṟu-daṉam,* பெ. (n.) 1. சொந்தப் பொருள் (நிதி); private treasure. "உடையார் ஸ்ரீ இராஜராஜ தேவர் சிறுதனத்துக் கொடுத்த பொன்னின் தட்டம்" (தெ.க.தொ. 2 : 3.). 2. சில்வானம்; small savings. "சிறுதனந் தேடுவள்" (தண்டலை. 95).

[சிறு + தனம். தனம் = செல்வம்]

சிறுதனம்[3] *śiṟu-daṉam,* பெ. (n.) 1. பண்டைக் காலத்திருந்த ஒருவகைப் பணியாளர் (M.E.R.p.97,1913); an inferior grade of officials, in olden days. 2. ஆடல்வல்ல மகளிருள் ஒரு பிரிவினர் (சிலப். 14:167, உரை.); a class of dancing girls.

[சிறுமை → சிறு. சிறு + தனம்]

சிறுதாயார் *śiṟu-tāyār,* பெ. (n.) சிறியதாயார் பார்க்க; see *śiṟiya-tāyār.*

க. சிக்கதாயி

[சிறு + தாயார். 'ஆர்' உயர்வுப் பன்மையீறு]

சிறுதாரை *śiṟu-dārai*, பெ. (n.) நீர்வீசுந் துருத்தி (திவா.); syringe or instrument to discharge water in jets.

[சிறு + தாரை]

சிறுதாலி *śiṟu-tāli*, பெ. (n.) 1. சிறியதாலி வகை; a kind of small tāli or 'marriage badge'. "நல்லோன் புனைந்த நெற்சிறு தாலி" (பெருங். வத்தவ. 16:29). 2. கணவனது வாழ்நாள்வரை மகளிர் கழுத்தில் சரட்டுடன், எப்பொழுது முள்ள தாலி; a small tāli worn by married women and removed only on widowhood. 3. காமக்கிழத்திக்குக் கொடுக்கும் தாலி (இ.வ.); tāli given by a paramour to his concubine.

ம. செறுதாலி

[சிறு + தாலி]

சிறுதாலிக்கட்டு *śiṟu-tāli-k-kaṭṭu*, பெ. (n.) கைக்கோளரில் மணத்திற்கிசையாத மாமன்மகள் அல்லது அத்தைமகளை விரும்பிய ஒருவன், அவள் தன்னை மணமுடித்தற் பொருட்டு, தாலியையேனும், துணியையேனும், தூங்கும் பொழுது அவள் கழுத்திற்கட்டும் மரபு (E.T.iii,40); a custom among the Kaikkōḷars by which an unwilling maiden, usually one's maternal uncle's daughter or paternal aunt's daughter is forced into marrying by a tāli or a piece of cloth being tied around her neck while asleep, a form of surreptitious marriage.

[சிறுதாலி + கட்டு]

சிறுதாளி *śiṟu-tāḷi*, பெ. (n.) தழுவுகொடியைச் சார்ந்த தாளிவகை (மூ.அ.); hairy-leaved creamy-white bindweed.

ம. சிறுதாளி

[சிறு + தாளி]

சிறுதானியம் *śiṟu-dāṉiyam*, பெ. (n.) சிறுதவசம் பார்க்க; see *śiṟu-tavaśam*.

[சிறு + தானியம்]

Skt. dhānya → த. தானியம்

சிறுதிகை *śiṟu-digai*, பெ. (n.) சிறுதிசை பார்க்க; see *śiṟu-diśai*. 'ஆழியு மாறும்போற் கீறிச் சிறுதிகைக் கண்' (சிலப். 17, பக். 443, அரும்.).

[சிறு + திகை. துகு → (திகு) → திகை = முடிவு, எல்லை, பக்கம்]

சிறுதிசை *śiṟu-tiśai*, பெ. (n.) வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு எனப்படும், கோணத் திசைகள் (உ.வ.); the four intermediate directions, N.E., N.W., S.E., S.W.

[சிறு + திசை. திகை → திசை = முடிவு, எல்லை, பக்கம்]

குணக்கு, குடக்கு, தெற்கு, வடக்கு என்பன நான்குதிசைகள். இவையே முதன்மையானவை. எஞ்சிய நான்கும் நான்கு கோணங்களைக் குறிக்குந் திசைகள். எனவே முதன்மையான வற்றைத் திசைகள் என்றும், பிறவற்றைச் சிறுதிசைகள் என்றும் குறித்தனர். ஒ.நோ. சிறுபொழுது, சிறுதொழில், சிறுபயிர், சிற்றுண்டி.

சிறுதிட்டை *śiṟu-diṭṭai*, பெ. (n.) சிறுமேடு (திவா.); hillock, mound.

மறுவ. சிறுதிடர், பொற்றை, திடல்.

[சிறு + திட்டை. தில் → திள் → திண் திண்ணை = திரண்ட மேடு. திண் → திண்டு = பருமன், சிறு திண்ணை. திண்டு → திட்டு = சிறுமேட்டு நிலம். திட்டு → திட்டை. மேடு, மண்மேடு, சிறுகுன்று]

சிறுதிடர் *śiṟu-diḍar*, பெ. (n.) சிறுதிட்டை பார்க்க; see *śiṟu-tiṭṭai*.

[சிறு + திடர். திடம் → திடன் → திடல் = மேட்டு நிலம், பொட்டல். திடல் → திடர் = புடைப்பு, மேட்டுநிலம்]

சிறுதிண்டி *śiṟu-diṇḍi*, பெ. (n.) சிற்றுண்டி பார்க்க; see *śiṟṟuṇḍi*.

தெ. சிருதிண்டி

[சிறு + திண்டி. தின் → தின்றி → திண்டி = உணவு]

க. திண்டி (உணவு)

தீனி = உணவு, சிற்றுண்டி, உண்டி. தின்பது தீனி. அதிகமாய் உண்டு பயனற்றிருப்பாரைத் 'திண்டி', என்றும் 'திண்டிப்பயல்' என்றும் வழங்கும் வழக்குண்மையைக் காண்க.

உடல் வளர்ந்து, உயிர் வாழ்ந்திட உணவு தேவை. அதை உணவுவேளையி லுண்டனர். உணவுவேளைக்கிடையிலுண்பதைச் சிற்றுண்டி என்றனர். அளவிற்குறைந்த உணவும் அவ்வாறே சொல்லப்பட்டது.

சிறுதிண்ணை *śiṟu-tiṇṇai,* பெ. (n.) வாயிலின் முன் அமைந்திருக்கும் திண்ணை; a narrow projection at the base of a verandah.

ம. செறுதிண்ண

[சிறு + திண்ணை. தில் → திள் → திண் → திண்ணை = திரண்டமேடு]

சிறுதிப்பலி *śiṟu-tippali,* பெ. (n.) திப்பலி வகை (வின்.); a species of long pepper.

ம. செறுதிப்பலி

[சிறு + திப்பிலி]

சிறுதுகில் *śiṟu-dugil,* பெ. (n.) கந்தை (பிங்.); tatters.

[சிறு + துகில்]

துகில் = நல்லாடை. நல்லாடை நைந்தும் கிழிந்தும், துண்டாயும், தன்னியல்பில் திரிந்தும் இருப்பதைக் குறிக்கும் வகையில் இவண் 'சிறு' முன்னொட்டானது.

சிறுதுடி *śiṟu-duḍi,* பெ. (n.) 1. கிலுகிலுப்பை; rattle. 2. சிறிய உடுக்கை வகை (வின்.); a kind of clapper.

[சிறு + துடி]

துடி = உடுக்கைவகை

ஒ.நோ. சிறுபறை, சிறுமுழவு.

சிறுதுண்டு *śiṟu-duṇḍu,* பெ. (n.) 1. சிறிது; little, small quantity. 2. சிறியபகுதி; small parts.

[சிறு + துண்டு. துல் → துள் → துண்டு = சிறியது, சிறுபகுதி]

சிறுமைப் பொருள் அடை 'சிறு', சிறியது என்னும் பொருள்படும் துண்டுக்கு வந்தது. துண்டிலும் சிறியது அதாவது மிகச்சிறியது எனப் பொருள் உணர்த்துதற்காம். எனினும் சிறு; துண்டுக்கு மீமிசைப் பொருள் உணர்த்தும் அடைமொழியாகியுள்ளது.

சிறுதுத்தி *śiṟu-tutti,* பெ. (n.). 1. மெல்லிழைச் செடிவகை; membraneous carpelled evening mallow. 2. துத்திச்செடிவகையு ளொன்று; five-winged capsule rose-mallow.

[சிறு + துத்தி]

சிறுதுத்திரி *śiṟu-tuttiri,* பெ. (n.) இரட்டைச் சின்னம் என்ற ஊது கருவி (தக்கயாகப். 344, உரை.); clarionet.

[சிறு + துத்திரி]

சிறுதும்பை *śiṟu-dumbai,* பெ. (n.) மருந்துச்செடி வகை; a kind of medicinal plant.

ம. செறுதும்ப

[சிறு + தும்பை]

சிறுதுருமம் *śiṟu-durumam,* பெ. (n.) பொட்டிலுப்பு (மூ.அ.); saltpetre.

[சிறு + துருமம்]

சிறுதுளசி *śiṟu-tuḷaśi,* பெ. (n.) மருந்துச் செடிவகை (மூ.அ.); a kind of medicinal plant.

ம. செறுதுளசி

[சிறு + துளசி. துளவு = துளசி. துளவு → (துளசு) → துளசி]

த. துளசி → Skt. tulasi

சிறுதூறல் *śiṟu-dūṟal,* பெ. (n.) சிறுமழை பார்க்க; see *śiṟumaḻai.*

[சிறு + தூறல். தூறு + அல். 'அல்' தொ.பெ.ஈறு]

சிறுதூறு *śiṟu-dūṟu,* பெ. (n.) 1. மரஞ்செடிகளின் சிறுசெறிவு (திவா.); thicket. 2. புதர்; bushes. 3. சிறுசெடி (வின்.); small shrub. 4. இளம்வேர்; tender root.

[சிறு + தூறு]

சிறுதெய்வம் *śiṟu-deyvam,* பெ. (n.) சிற்றூர் தெய்வம்; village deity.

[சிறு + தெய்வம். தேய் → தே = தெய்வம். தேய் → (தெய்) தெய்வு → தெய்வம்]

சிறுதேக்கு *śiṟu-dēkku,* பெ. (n.) 1. பூடுவகை; bushy fire brand teak. 2. மரவகை; beetle-killer.

ம. செறுதேக்கு

[சிறு + தேக்கு]

சிறுதேங்காய் *śiṟu-dēṅgāy,* பெ. (n.) சிறிய தேங்காய் அளவினதான மருத்துவப் பண்புடைய பழம் (சமுத்திராப் பழம்) (மூ.அ.); a medicinal fruit resembling a coconut.

[சிறு + தேங்காய். தெங்கங்காய் → தேங்காய்]

சிறுதேட்கொடுக்கு *śiṟu-dēṭ-koḍukku,* பெ. (n.) ஒளிநோக்கிச் சாயும் தேட்கொடுக்குச் செடி வகை (பதார்த்த. 265); a species of heliotropium.

[சிறு + தேள் + கொடுக்கு]

சிறுதேட்டு *śiṟu-dēṭṭu,* பெ. (n.) நிலவுடைமை யாளர், பெருந்தனத்தார் முதலியோருக்குரிய பண்ணைநிலங்கள்; private property in land, as of Zamindars. "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்" (பழ.)

[சிறு + தேட்டு. தேடு → தேட்டு]

சிறுதேட்டு[2] *śiṟu-dēṭṭu,* பெ. (n.) வீட்டுச் செலவுக்குக் கொடுக்கும் பணத்தில் சொந்தச் (சிறுதனமாக) சிறுசேமிப்பாக மீத்து வைக்கும் பணம்; savings effected from the sum allotted for household expenses.

[சிறு + தேட்டு. தேடு → தேட்டு]

சிறுதேர் *śiṟu-dēr,* பெ. (n.) 1. விளையாட்டு வண்டி; child's toy cart. "விளையாடு சிறு தேரீர்த்து" (மணிமே. 7:55). 2. சிறுதேர்ப்பருவம் (இலக். வி. 806) பார்க்க; see *śiṟu-tēr-p-paruvam.*

[சிறு + தேர். சிறு = சிறிய. தில் → திர் → தேர் = தேர் வடிவினதான வண்டி]

இங்குச் சிறு என்பது, அளவிற் சிறிய என்னும் பொருளிலமைந்தாலும் 'போல' என்னும் உவம உருபுப் பொருளையே உணர்த்துகின்றது.

சிறுதேர்ப்பருவம் *śiṟu-dēr-p-paruvam,* பெ. (n.) தலைவன், சிறியதேரைச் செலுத்தும் பருவத்தைச் சிறப்பிக்கும், ஆண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பகுதி; section of āṇpāṟ-piḷḷai-t-tamiḻ, which describes the stage of childhood in which the hero plays with a toy cart, one of ten.

[சிறுதேர் + பருவம்]

சிறுதேவபாணி *śiṟu-dēva-pāṇi,* பெ. (n.) இசைப்பாவகை (சிலப். 6: 35, உரை.); a kind of song in praise of a deity, set to music, opp. to peru-n-dēvapāṇi.

[சிறு + தேவபாணி]

சிறுதேன் *śiṟu-tēṉ,* பெ. (n.) 1. கொசுகுத்தேன் (யாழ்அக.); honey gathered by species of small bees. 2. சிறுதேனீ பார்க்க; see *śiṟu-tēṉī.*

ம. செறுதேன்

[சிறு + தேன்]

சிறு = சிறிது, கொஞ்சம், கொசுறு

சிறுதேனீ *śiṟu-tēṉī,* பெ. (n.) தேனீ வகையு ளொன்று; small flower bee.

ம. செறுதே நீச்ச

[சிறு + தேனீ]

சிறுதையல் *śiṟu-taiyal,* பெ. (n.) நுண்ணிய தையற்றொழில் (வின்.); fine stitching.

[சிறு + தையல். சிறு = சிறுமை, நுண்மை, நுண்ணிது.]

சிறுதொழில்[1] *śiṟu-toḻil,* பெ. (n.) இகழத்தக்க செயல்; base deed. "சிறுதொழிற் சீறோய்" (கம்பரா. முதற்போர். 253).

[சிறு + தொழில். சிறு = சிறிது, குறைவு, இழிவு, இகழத்தக்கது.]

சிறுதொழில்[2] *śiṟu-doḻil,* பெ. (n.) வரையறுக்கப் பட்ட குறைந்த முதலீட்டில், குறைந்த ஆட்களின் உழைப்பைப் பயன் கொண்டு செய்யும் தொழில்; small scale industries comparatively little size or strength or power or number, consisting of minute units.

[சிறு + தொழில். சில் → சிறு. சிறு = சிறிய, குறைந்த.]

சிறுநகை[1] *śiṟu-nagai,* பெ. (n.) புன்சிரிப்பு; smile. "திருமுகத் தழகுறு சிறுநகை" (திருவாச. 2:143).

[சிறு + நகை. சில் → சிறு. சிறு = சிறிய, குறுகிய.]

சிறுநகை[2] *śiṟu-nagai,* பெ. (n.) ஏளனச்சிரிப்பு; mockery laugh. 'சித்திராபதிதான் சிறுநகை எய்தி' (மணிமே. 18 : 86).

[சிறு + நகை. சிறு = சிறிய, குறைந்தது, இழிந்த, ஏளனமானது.]

சிறுநங்கூரம் *śiṟu-naṅgūram,* பெ. (n.) சிறு படகுகள் நங்கூரமாய் பயன்படுத்தும் கல்; killick.

[சிறு + நங்கூரம்]

சிறுநணி *śiṟu-naṇi,* வி.எ. (adv.) சிறிதுநேரம்; a little while. "சிறுநணி வரைந்தனை கொண்மோ" (ஐங்குறு. 180, இரண்டாம் பதிப்பு).

[சிறுநனி → சிறுநணி]

சிறுநறளை *śiṟu-naṟaḷai,* பெ. (n.) கொடி வகை (மூ.அ.); large woolly-lobed vine.

[சிறு + நறளை]

சிறுநறுவிலி *śiṟu-naṟuvili,* பெ. (n.) நறுவிலி வகை (மூ.வ.); a kind of common sebesten.

[சிறு + நறுவிலி]

சிறுநன்னாரி *śiṟu-nannāri,* பெ. (n.) நன்னாரி வகை (L.); a species of sarsaparilla swallow - wort.

[சிறு + நன்னாரி]

சிறுநனி *śiṟu-naṉi,* வி.எ. (adv.) 1. சிறிதுநேரம்; for a short time, a little while. "சிறுநனி நீதுஞ்சி" (கலித். 12). 2. விரைவாக; quickly, expeditiously. "சிறுநனி வரைந்தனை கொண்மோ" (ஐங்குறு. 180).

[சிறு + நனி]

சிறுநாக்கு *śiṟu-nākku,* பெ. (n.) உண்ணாக்கு (பிங்.); uvula.

ம. செறுநாக்கு; க. கிரிநாலி, தெ. சிறுநாலுக, சிறுநாக; பட. கிரு நாலங்கே

[சிறு + நாக்கு]

சிறுநாகப்பூ *śiṟu-nāga-p-pū,* பெ. (n.) 1. மரவகை (பதார்த்த. 1011); iron wood of Ceylon. 2. பெரிய இலவங்கப்பட்டை (L.); cassia cinnamon.

[சிறு + நாகப்பூ]


சிறுநாகப்பூ

சிறுநாகம் *śiṟu-nāgam,* பெ. (n.) 1. இருள்மரம்; iron wood of Ceylon. 2. மலர்களிற் காணப் படுவதும், மிகச்சிறிய வடிவினதும், நச்சுத் தன்மை மிக்கதுமான பூநாகம்; a species of very small snake found among flowers, considered to be very poisonous.

ம. செறுநாகம்

[சிறு + நாகம். நகர் → நாகம் = பாம்பு. நகர்தல் = ஊர்ந்து செல்லுதல்]

சிறுநார் *śiṟu-nār,* பெ. (n.) கல்நார் (யாழ்.அக.); asbestos.

[சிறு + நார்]

சிறுநாவல் *śiṟu-nāval,* பெ. (n.) செங்கறுப்பான சிறியமரவகை (மூ.அ.); ruddy black plum.

[சிறு + நாவல்]

சிறுநாளிகம் *śiṟu-nāḷigam,* பெ. (n.) காலாட் படை குதிரைப்படைகள் தாங்கிச் செல்வதற் குரிய, துமுக்கி போன்ற கருவி; a kind of machine - gun used by infantry and cavalry.

[சிறு + நாளிகம்]

சிறுநான்கெல்லை *śiṟu-nāṉkellai,* பெ. (n.) பெருநான்கெல்லைக்கு எதிராக ஊர்த் தனிநிலங்களிலமைந்த நாற்புறத்தெல்லை (இ.வ.); boundaries of small plots or sites. opp. to perunāṉgellai.

[சிறு + நான்கெல்லை]

நான்கெல்லையாவது, குறித்த இடத்தைச் சுற்றி நாற்புறமும் அமைந்துள்ள குறியீட்டைக் குறிப்பது. அஃதொரு தனி நிலமாயின் நாற்புறத்தமைந்த தனியார் நிலங்களையோ, பாதை போன்றவற்றையோ குறிப்பர். அது சிறுநான்கெல்லையெனப்படும். ஓர் ஊரைக் குறிப்பதாயின், நாற்புறத்து மமைந்துள்ள ஊர்களைக் குறிப்பர். அது பெருநான்கெல்லையெனப்படும்.

சிறுநிம்பம் *śiṟu-nimbam,* பெ. (n.) மலைவேம்பு (மலை.); Persian lilac.

[சிறு + நிம்பம்]

Skt. nimba → த. நிம்பம்

சிறுநிலம்[1] *śiṟu-nilam,* பெ. (n.) நாகரிகமற்றோர் நாடு; the Mleccha country. "தீவின் சிறுநிலத்தார்" (நீலகேசி, 83).

[சிறு + நிலம். இங்குச் 'சிறு' என்பது இழிவை, நாகரிக மற்ற தன்மையைக் குறிக்குஞ் சொல்லாய் வந்துள்ளது]

சிறுநிலம்[2] *śiṟu-nilam,* பெ. (n.) துண்டுநிலம், தீவு; island.

[சிறு + நிலம். நில் → நிலம்]

சிறுநீர் *śiṟu-nīr,* பெ. (n.) 1. மூத்திரம்; urine. "ஒண் சிறுவர் தஞ்சிறுநீர்" (அருட்பா, 1, நெஞ்சறி 1371). 2. குறைந்த நீர்; littll water. சிறுநீர் பாசனம்.

ம. செறுநீரு

[சிறு + நீர். சிறு = சிறிது, இழிவு, தாழ்வானது.]

சிறுநீர்ப்பெருக்கி *śiṟu-nīr-p-perukki,* பெ. (n.) சிறுநீர்ப் பெருகச்செய்யும் மருந்து வகை; medicine with diuretic properties.

[சிறுநீர் + பெருக்கி. பல் → பரு - பெரு → பெருகு → பெருக்கு → பெருக்கி. 'இ' வினை முதலீறு]

சிறுநீருப்பு *śiṟu-nīruppu,* பெ. (n.) சிறுநீரிலுள்ள உப்புவகை; uric acid .

[சிறுநீர் + உப்பு]

சிறுநுண்மை *śiṟu-nuṇmai,* பெ. (n.) அம்பெய்தற்குரிய, நால்வகை இலக்குகளுள் மிகவும் சிறியதான இலக்கு; very small target for an arrow, one of four ilakku. "பெருவண்மை சிறுநுண்மை சலம் நிச்சலம்" (பாரத. வாரணா. 56).

[சிறு + நுண்மை. சிறு = சிறிது. நுல் → (நுற்பு) → நொற்பு → நொற்பம் = நுட்பம். நுல் → நுள் → நுண் → நுண்மை]

சிறுநெருஞ்சி *śiṟu-neruñji,* பெ. (n.) நெருஞ்சி வகை (யாழ்.அக.); a prostrate herb found in waste places.

[சிறு + நெருஞ்சி]

சிறுநெல்லி *śiṟu-nelli,* பெ. (n.) நெல்லிவகை; otaheite gooseberry.

ம. செறுநெல்லி

[சிறு + நெல்லி]

சிறுநெறி *śiṟu-neṟi,* பெ. (n.) 1. அருநெறி; narrow path. "நிரம்பாச் செலவி னீத்தருஞ் சிறுநெறி" (பெருங்.உஞ்சைக். 49:31). 2. இழிவான வழி; despicable ways. "செல்லாரு மல்லர் சிறுநெறி" (நாலடி, 303). 3. தீயவழி; path of evil. "சிறுநெறிகள் சேராமே" (திருவாச. 51:2).

[சிறு + நெறி. சிறு = சிறிது, குறுகியது, இழிந்தது.]

சிறுநொச்சி *śiṟu-nocci,* பெ. (n.) கருநொச்சி (L.); three leaved chaste tree.

[சிறு + நொச்சி]

சிறுநோக்கு *śiṟu-nōkku,* பெ. (n.) ஏளனப் பார்வை; look of contempt, scornful look. "செல்வர் சிறுநோக்கு நோக்குங்கால்" (நாலடி, 298).

[சிறு + நோக்கு. சிறு = சிறிது, குறைவு, தாழ்வு, இகழ்ச்சி, ஏளனம்.]

சிறுப்பம் *śiṟuppam,* பெ. (n.) இளமை (நாஞ்.); youth, early life.

ம. செறுப்பம்.

[சிறுமை (சிறு) → சிறுப்பம். ஒ.நோ: வளமை → வளப்பம். 'சி' இளமைப் பொருள் அடை முன்னொட்டு]

சிறுப்பனை *śiṟu-p-paṉai,* பெ. (n.) 1. இழிவு (வின்.); baseness. 2. கஞ்சத்தனம்; meanness. 3. வறுமை (வின்.); indigence. 4. மதிப்புக்கேடு; disrespect. என்னிடத்தில் சிறுப்பனை பட வேண்டுமோ? (வின்.); 5. கவலை; worry. 6. குழப்பம், தொல்லை; trouble. 'இந்தக் குழந்தை படுத்துஞ் சிறுப்பனை பொறுக்க முடியவில்லை' (நெல்லை.).

[சிறு → சிறுப்பனை. 'சிறு' தாழ்வுப் பொருளடை]

சிறுப்பி-த்தல் *śiṟuppi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. சிறுகப்பண்ணுதல், குறைத்தல்; to reduce, diminish. 2. மதிப்புக்குறைவு காட்டுதல் (யாழ்.அக.); to show scant courtesy to, to treat disrespectfully.

[சிறு → சிறுப்பி-,]

சிறுப்பிள்ளை *śiṟu-p-piḷḷai,* பெ. (n.) வேலையாள்; servant. "வீரசோமீசுவர தேவர் சிறுப்பிள்ளை" (M.E.R.242 of 1929-30).

[சிறு + பிள்ளை]

சிறுப்பெரியார் *śiṟu-p-periyār,* பெ. (n.) சிறுமைக்குணங்கொண்டு பெரியார்போலத்

தோன்றுபவர்; small persons affecting greatness. "சினந்திருத்துஞ் சிறுப்பெரியார் குண்டர்" (தேவா. 321, 6).

[சிறு(மை) + பெரியார்]

சிறுபகன்றை *śiṟu-pagaṉṟai*, பெ. (n.) பூடுவகை (மூ.அ.); a species of water - thorn.

[சிறு + பகன்றை]

சிறுபசளை *śiṟu-paśaḷai*, பெ. (n.) பசலை வகை (A); large-flowered purslane.

[சிறு + பசளை]

சிறுபஞ்சமூலம் *śiṟu-pañja-mūlam*, பெ. (n.) 1. சிறுவழுதுணை, சிறுநெருஞ்சி, சிறுமல்லிகை, பெருமல்லிகை, கண்டங்கத்தரி என்ற ஐந்தன் வேர்களும் சேர்ந்த கூட்டு மருந்து; compound medicine prepared from the roots of five herbs, viz., śiṟuvaḻuduṇai, śiṟuneruñji, śiṟu-malligai, perumalligai, kaṇḍaṅgattari. 2. ஐந்து சிறந்த மூலிகைகளைப் போன்ற, ஐந்தைந்து அரிய அறக்கருத்து (நீதி)களைத் தன்னகத்தே கொண்ட 100 செய்யுள்களால், காரியாசான் இயற்றியதும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுளொன்றுமாகிய அறநூல்; an ancient didactic work of 100 stanzas by Kāri-y-āśāṉ, each stanza inculcating five virtues, one of padiṉ-eṇ-kīḻ-k-kaṇakku.

[சிறு + பஞ்சமூலம்]

Skt. pañca → த. பஞ்ச (ஐந்து) மூலம் = வேர்.

சிறுபட்டி *śiṟu-paṭṭi*, பெ. (n.) கட்டுக்கடங்காத இளைஞன்; unruly youngster. "நோதக்க செய்யுஞ் சிறுபட்டி" (கலித். 51).

[சிறு + பட்டி]

பட்டி = கொட்டில், கொண்டித்தொழு. இங்கு 'பட்டி' என்பது பட்டிக்குள் அடைக்கப் பட வேண்டியது என்னும் பொருளில் கட்டுக்கடங்காத, கட்டுப்பாடற்ற, காவலற்ற இளையோனைக் குறித்தது. கட்டுக்கடங்கா மாட்டைப் பட்டிமாடு என்றும், தளையறுத்துச் செல்லுதலைப் பட்டி முறித்தல் எனவும், பொலி யெருதைப் பட்டிக்கடா என்றும் வழங்கும் வழக்க முண்மையைக் காண்க.

சிறுபடப்பு *śiṟu-paḍappu*, பெ. (n.) குட்டான்; சிறுவைக்கோற்போர்; small heap.

[சிறு + படப்பு]

சிறுபடுகண் *śiṟupaḍukaṇ*, பெ. (n.) அணியுறுப்பு வகை (தெ.க.தொ. 2, 396); a pendant in an ornament.

[சிறு + படுகண்]

சிறுபண்ணை *śiṟu-paṇṇai*, பெ. (n.) கோழிக் கீரை வகை (புதுவை.); a kind of greens.

[சிறு + பண்ணை]

சிறுபதம்[1] *śiṟu-padam*, பெ. (n.) வழி (திவா.); path, foot-path.

[சிறு + பதம். பதி → பதம் = நிலத்திற் பதியும் காலடி. பதம் → பாதம் → பாதை = பாதம் பட்டு உண்டாகும் வழி. பாதம் → பதம்]

சிறுபதம்[2] *śiṟu-padam*, பெ. (n.) தண்ணீராகிய உணவு; water, as food. "வேளாண் சிறுபதம்" (புறநா. 74).

[சிறு + பதம்]

சிறுபயறு *śiṟu-payaṟu*, பெ. (n.) 1. பாசிப்பயறு; green gram. "சிறுபயறு நெரித்துண்டாக்கிய பருப்பு" (திவ். பெரியாழ். 2. 9 : 7. வியா.) 2. பனிப் பயறு (பதார்த்த. 839); field-gram.

ம. செறுபயறு

[சிறு + பயறு]

சிறுபயல் *śiṟu-payal*, பெ. (n.) 1. பிசுக்கி, இவறன்; miser. 2. குழந்தை; child.

[சிறு + பயல்; அறிவிற் குறைபாடுடையவன், சிறியவன், குழந்தை]

சிறுபயிர் *śiṟu-payir*, பெ. (n.) குறைவான காலத்தில் விளையும் பயிர் (நாஞ்.); minor crop that can be raised in a short period.

[சிறு + பயிர். சிறு = சிறிய, குறுகிய, குறைந்த.]

சிறுபருப்பு *śiṟu-paruppu*, பெ. (n.) பச்சைப் பயற்றம்பருப்பு; green gram, pulse. "செந்நெலரிசி சிறுபருப்புச் செய்த வக்காரம்" (திவ். பெரியாழ். 2. 9 : 7).

ம. செறுபரிப்பு

[சிறு + பருப்பு]

சிறுபருவம் *šiṟu-paruvam,* பெ. (n.) *இளமைக் காலம்;* childhood, youth.

க. சிக்கப்ராய

[சிறு+பருவம். 'சிறு' இளமைப் பொருளடை]

சிறுபறை *šiṟu-paṟai,* பெ. (n.) *1.* தோற்கருவி வகை; small drum. "யாழுங் குழலு மரிச்சிறு பறையும்" (பெருங். உஞ்சைக். 37:90). 2. சிறுபறைப்பருவம் (இலக். வி. 806) பார்க்க; see *šiṟu-paṟai-p-paruvam.*

ம. சிறுபற

[சிறு + பறை]

பறை = தோற்கருவி. பறையைப் போன்ற வடிவினதாகிய சிறிய தோற்கருவியும் தோற் கருவி போன்றே ஒலியெழுப்பும் பிறவும் சிறுபறை எனப்பட்டன.

சிறுபறைப்பருவம் *šiṟupaṟai-p-paruvam,* பெ. (n.) *தலைவன் சிறுபறை வைத்துக் கொண்டு அடித்து விளையாடும் பருவத்தைச் சிறப்பிக்கும் ஆண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பகுதி;* section of āṇpāṟ-piḷḷai-t-tamiḻ, which describes the stage of childhood, in which the hero plays on a small drum, one of ten.

[சிறுபறை + பருவம்]

பறையைப் போன்ற வடிவினதாகிய தோற்கருவியையும், தோற்கருவி போன்றே ஒலியெழுப்பும் பிறவற்றையுங் கொண்டு, ஒலியெழுப்பியாடும் பருவம்.

சிறுபாடிகாவல் *šiṟu-pāḍi-kāval,* பெ. (n.) *வரிவகை (தெ.க.தொ. 7, 30);* a kind of tax.

[சிறு + பாடி + காவல்]

சிறுபாடு[1] *šiṟu-pāḍu,* பெ. (n.) கோயிலுக்குக் கொடுத்த சிறியகொடை (தெ. க. தொ. 3, 477); small gift, as to a temple.

[சிறு + பாடு. பாடு = உழைப்பு, உழைப்பிற்கேற்ற ஊதியம், செல்வம்.]

சிறுபாடு[2] *šiṟu-pāḍu,* பெ. (n.) சிறுதேட்டு; small savings. "உம்முடைய சிறுபாட்டு வகையிலிருந்து ஒன்றுந் தரவேண்டாம்" (நாஞ்.).

[சிறு + பாடு. படு → பாடு = உழைப்பு, கடமை. 'பாடுபடுதல்' என்னும் வழக்குண்மையை நோக்குக. உழைப்பில் கிடைக்கும் ஊதியத்திற் சிறுபகுதியையும் பாடு என்னும் சொல் குறித்தது. சிறுபாடு= சிறுசேமிப்பு → சிறுபாடு. சிறுவாடு எனவும் வரும்]

சிறுபாண்டரங்கன் *šiṟu-pāṇḍaraṅgaṉ,* பெ. (n.) இடைக்கழகக் காலப் புலவருள் ஒருவர் (இறை. 1:5); a poet of the middle Tamiḻ Šaṅgam.

[சிறு + பாண்டரங்கன்]

சிறுபாணாற்றுப்படை *šiṟu-pāṇāṟṟu-p-paḍai,* பெ. (n.) ஓய்மா நாட்டு நல்லியக்கோடனென்ற தலைவன் மேல் நல்லூர் நத்தத்தனார் பாடியதும், பத்துப்பாட்டினுள் ஒன்றாய்த் திகழ்வதுமான கழக நூல்; an idyll by Nallūr Nattattaṉār on the chief Nalliyakkōḍaṉ of Ōymā-nāḍu one of pattuppāṭṭu.

[சிறு + பாணர் + ஆற்றுப்படை]

யாழ் இசைத்துப் பாடும் மரபினர் பாணர். அவருள் சிறியயாழ் இசைப்பவர் சிறுபாணர். ஆறு → ஆற்று + படை. படு → படை. ஆற்றுப்படை = பரிசில் பெற்றவன், அது பெறக்கருதியவனுக்கு வழிப்படுத்துவதாகப் பாடப்பெறும் இலக்கிய வகை.

சிறுபாம்பு *šiṟu-pāmbu,* பெ. (n.) *அரிப்புத் தழும்பை உண்டாக்கக் கூடிய நச்சுயிரி வகை;* a kind of small venomous reptile producing ringworm.

[சிறு + பாம்பு. பாம்பு = ஊர்ந்து செல்லும் உயிரி. தோற்றத்தில் அஃதொத்த புழுவடிவினதான நச்சுயிரியும், பாம்பெனப்பட்டது]

சிறுபாலடை *šiṟupālaḍai,* பெ. (n.) பூடுவகை (யாழ்.அக.); a plant.

[சிறு + பாலடை. பாலடை = பூடுவகை]

சிறுபாலம் *šiṟu-pālam,* பெ. (n.) சிறிய மதகு (C.E.M.); culvert.

[சிறு + பாலம்]

சிறுபாலா *šiṟu-pālā,* பெ. (n.) பேய்ப்புடல் (மலை.); wild snake-gourd.

[சிறு + பாலா]

சிறுபாலி *šiṟupāli,* பெ. (n.) கள்ளி; milk-hedge.

[சிறு + பாலி. பால் + இ = பாலி. பாலி = பாலுடைய கள்ளிச் செடி. 'இ' உடைமைப் பொருளீறு]

சிறுபாளைச்சம்பா *śiṟupāḷai-c-cambā*, பெ. (n.) சம்பா நெல்வகை; a kind of šambā paddy.

[சிறு + பாளை + சம்பா]

சிறுபான்மை[1] *śiṟu-pāṉmai*, வி.எ. (adv.) சில நேரங்களில்; sometimes, occasionally, opp. to perumpāṉmai. "சில சிறுபான்மை வருமே" (பன்னிருபா. 264).

[சிறு + பான்மை. பால் = பகுப்பு, பகுதி, பண்பு, தன்மை. பால் → பான்மை]

சிறுபான்மை[2] *śiṟu-pāṉmai*, பெ. (n.) சில; a few 'இவற்றுட் சிறுபான்மை யிங்ஙனம் வரும்' (உ.வ.).

[சிறு + பான்மை]

சிறுபிள்ளை *śiṟu-piḷḷai*, பெ. (n.) 1. குழவி; குழந்தை; child, infant. 'சிறுபிள்ளை இட்ட வெள்ளாமை வீடு வந்து சேராது' (பழ.). 2. இளைஞர், சிறுவர்; youngster. "என்கண் சிறுபிள்ளாய் வருகென்றே" (திருப்போ. சந். வண்ணத்தாழிசை, 1).

[சிறு + பிள்ளை]

சிறுபிள்ளைத்தனம் *śiṟu-piḷḷai-t-taṉam*, பெ. (n.) முதிர்ச்சியின்றியும், பொறுப்பின்றியும் குழவியைப் போன்று செயற்படுந்தன்மை; childness.

[சிறு + பிள்ளை + தனம். 'தனம்' பண்புணர்த்தும் இடைச்சொல்]

சிறுபீங்கா *śiṟu-pīṅga*, பெ. (n.) நாட்டு வாதுமை; wild almond myrobalan.

[சிறு + பீங்கா]

சிறுபுடையன் *śiṟu-puḍaiyaṉ*, பெ. (n.) சிறிய பாம்பு வகை (M.M.700); small wart-snake.

[சிறு + புடையன்]

சிறுபுள்ளடி *śiṟu-puḷḷaḍi*, பெ. (n.) ஒற்றை யிலைச் செடிவகை (பதார்த்த. 366); scabrous ovate unifoliate tick - trefoil.

ம. சிறுப்புள்ளடி

[சிறு + புள்ளடி. புள் + அடி = புள்ளடி. பறவைகளின் காலடி போன்ற இலைகளையுடைய செடி]



சிறுபுள்ளடி

சிறுபுள்ளுநோய் *śiṟu-puḷḷu-nōy*, பெ. (n.) மாட்டுநோய் வகை (மாட்டுவா. 121); a kind of cattle disease.

[சிறு + புள்(ளு) + நோய். புள் = வண்டு. வண்டுகடி போன்ற நோயாயிருக்கலாம்]

சிறுபுறம் *śiṟu-puṟam*, பெ. (n.) 1. பிடர்; nape, back of the neck, as the small side. "செயத்தகு கோவையிற் சிறுபுற மறைத்து" (சிலப். 6: 102). 2. முதுகு; back. "நின் னணிமாண் சிறுபுறங் காண்கம்" (அகநா. 261). 3. சிறுகொடை; small gift. "சிறுபுறமென நூறாயிரங் காணம் கொடுத்து" (பதிற்றுப். 70, பதி.).

[சிறு + புறம். புறம் = முதுகு]

சிறுபுறம்பேசு-தல் *śiṟu-puṟam-pēśu-*, 4 செ.கு.வி. (v.i.) காணாவிடத்துத் தூற்றுதல்; to backbite. "செப்பிள மென்முலையார்கள் சிறுபுறம் பேசித்திரிவர்" (திவ். பெரியாழ். 2. 4 : 5) (செ.அக.).

[சிறுபுறம் + பேசு. முகத்துக்கெதிரே பேசாமல், முதுகுப்பக்கம் பேசுதல், புறம்பேசுதல்]

சிறுபுன்னை *śiṟu-puṉṉai*, பெ. (n.) புன்னை வகை; small poon.

ம. செறுப்புன்ன, செறுபுன்ன

[சிறு + புன்னை]

சிறுபூச்சி *śiṟu-pūcci*, பெ. (n.) புழுவகை (இ.வ.); worm.

[சிறு + பூச்சி]

பெரும்பாலும், முட்டையிலிருந்து தொடங்கும் பூச்சிப்பருவங்களில், பூச்சிக்கு முந்தைய பருவம் புழு. கூட்டுப்புழு எனும் வடிவு

பெற்றுப் பின் பூச்சிப்பருவம் எய்துவது முறைமை. எனவே பூச்சிக்கு முந்தைய புழுப் பருவத்தை, சிறுபூச்சி என வழங்கும் மரபுள்ளது.

சிறுபூலா *śiṟu-pūlā*, பெ. (n.) புதர்ச்செடி வகை; a shrub.

[சிறு + பூலா]

சிறுபூளை *śiṟu-pūḷai*, பெ. (n.) நடைவழியில் முளைக்கும் ஒருவகைப் பூடு; a common wayside weed. "அறுகு சிறுபூளை நெல்லொடு தூஉய்ச் சென்று" *(சிலப். 9: 43).*

ம. செறுபூள

[சிறு + பூளை]



சிறுபூனைக்காலி *śiṟu-pūṉai-k-kāli*, பெ. (n.) காதணிபோல் பூக்கும் கொடிவகை, சிமிக்கிப் பூ (பதார்த்த. 577); mountain leschenault's passion - flowered.

[சிறு + பூனை + காலி]

சிறுபொழுது *śiṟu-poḻudu*, பெ. (n.) மாலை, இடையாமம், விடியல், காலை, நண்பகல், எற்பாடு (தொல். பொருள். 6, உரை.) என அறுவகையாகவும், மாலை, யாமம், வைகறை எற்பாடு, காலை, நண்பகல் (நம்பியகப். 12) என ஐவகையாகவும் கூறப்படும் நாட்பிரிவு; divisions of the day, six in number, viz., mālai, iḍai-yāmam, viḍiyal, kālai, naṇpagal, eṟpāḍu. or five in number, viz., mālai, yāmam, vaigaṟai, eṟpaḍu kālai, naṇpagal, dist. fr. perum-poḻudu.

மறுவ. அறுபொழுது

[சிறு + பொழுது]

பெரும்பொழுதின் மறுதலை. யாண்டின் (பருவ காலப்) பிரிவுகளைப் பெரும்பொழுது என்றும், நாளின் (காலப்) பிரிவுகளைச் சிறுபொழுது என்றும், பிரித்தமைத்து வழங்கினர் பண்டைத்தமிழர் பொழுது சிறுபொழுது பெரும்பொழுது என இருபாற்பட்டு ஒவ்வொரு பாலும் அறுவகை கொண்டிருக்கும் நம்பியகப் பொருள் ஏற்பாட்டினையும் காலையையும் ஏற்படுகாலெ என ஒன்றாகக் கொண்டமையால் சிறுபொழுது ஐந்து எனக் குறித்துள்ளது. கதிரவன் தோற்றம் முதல் பப்பத்து நாழிகை கொண்ட நாட் பிரிவுகளாகக் கொள்ளும் மரபும் பெரும்பொழுது அறுவகையாய் இருப்பதும் சிறுபொழுது அறுவகையாவதை இயல்பாயக் காட்டுகிறது.

சிறுபோகம் *śiṟu-pōgam*, பெ. (n.) கம்பு, கேழ்வரகு போன்ற சிறுதவச விளைவு (வின்.); harvest of the inferior kinds of grain.

[சிறு + போகம்]

சிறுமகன் *śiṟu-magaṉ*, பெ. (n.) *1.* அறிவில்லாதவன், பேதை, முட்டாள்; fool, ignoramus. "தீத்திற மொழிகெனச் சிறுமக னுரைப்போன்" *(மணிமே 16: 117). 2.* சிறியன் பார்க்க; see *śiṟiyaṉ*.

ம. செறுமகன் (பேரன்)

[சிறு + மகன். சிறு = சிறிய, குறுகிய, தாழ்ந்த, இழிவான]

சிறுமட்டம்[1] *śiṟu-maṭṭam*, பெ. (n.) *1.* சிறு குதிரை; pony, nag. *2.* யானைக்கன்று; young elephant.

[சிறு + மட்டம். முள் → மள் → மடு = பள்ளம். மடு → மட்டு → மட்டம் = தாழ்ந்தது, சிறியது. மட்டம் = குதிரைக் குட்டி, யானைக் குட்டி]

சிறுமட்டம்[2] *śiṟu-maṭṭam*, பெ. (n.) *1.* சிற்றளவு; small measure. *2.* சிறுவாழை; young plantain. *3.* குள்ளமானவ-ன்-ள்; short young man or woman.

[சிறு + மட்டம். மட்டம் = கரும்பு, வாழை போன்றவற்றின் கன்று, அளவு, குள்ளம்.]

சிறுமணி[1] *śiṟu-maṇi*, பெ. (n.) சலங்கை (சூடா.); tiny bell tied in a string around a child's waist or foot.

ம. செறுமணி

[சிறு + மணி. மண்ணுதல் = கழுவுதல். மண் → மண்ணி → மணி = கழுவப்பெற்ற ஒளிக்கல்]

சிறுமணி[1] *śiṟu-maṇi,* பெ. (n.) ஆறு மாதத்திற் பயிராகும் சம்பாநெல் வகை; a kind of śambā paddy maturing in six months.

ம. செறுமணி

[சிறு + மணி. முள் → முட்டு = சிறியது. முன் → மன் → மண் → மணி = சிறியது, தவசமணி]

சிறுமணிக்கொட்டுவான் *śiṟu-maṇi-k-koṭṭuvāṉ,* பெ. (n.) நீர்ப்புள் வகை (யாழ்அக.); a water-bird.

[சிறு + மணி + கொட்டுவான்]

சிறுமணிச்சம்பா *śiṟu-maṇi-c-cambā,* பெ. (n.) சம்பா நெல்வகை; a kind of paddy.

ம. செறுமணிச்சம்ப

[சிறு + மணி + சம்பா]

சிறுமணிப்பயறு *śiṟu-maṇi-p-payaṟu,* பெ. (n.) காராமணி வகை; asparagus bean.

[சிறு + மணி + பயறு]

சிறுமணியன் *śiṟu-maṇiyaṉ,* பெ. (n.) சம்பா நெல்வகையுள் ஒன்று (தஞ்சை.); a variety of śambā paddy.

ம. செறுமணியன்

[சிறு + மணியன். சிறுமணி = நெல்வகை. சிறுமணி → சிறுமணியன்]

சிறுமயிற்கொன்றை *śiṟu-mayiṟ-koṉṟai,* பெ. (n.) மயிற்கொன்றை மரம்; peacock-flower tree.

[சிறு + மயில் + கொன்றை]

சிறுமரம் *śiṟu-maram,* பெ. (n.) சிறிய பாய்மரம்; jigger.

[சிறு + மரம்]

மீனவ வழக்கில் மரம் என்பது பொதுவில் கட்டுமரத்தையும் சிறப்பில் பாய் மரத்தையும் குறிக்கும்.

சிறுமல் *śiṟu-mal,* பெ. (n.) தண்ணீர் விட்டான் கிழங்குக்கொடி (மலை.); a common climber with many thickened fleshy roots.

சிறுமல்லி *śiṟu-malli,* பெ. (n.) சிறுமல்லிகை (சங்அக.) பார்க்க; see *śiṟu-malligai.*

[சிறு + மல்லி]

சிறுமல்லிகை *śiṟu-malligai,* பெ. (n.) மல்லிகை வகை (சங்அக.); wild jasmine.

ம. செறுமுல்ல

[சிறு + மல்லிகை]

சிறுமலை[1] *śiṟu-malai,* பெ. (n.) 1. பொற்றை (சூடா.); hill. 2. சிறுகுன்று; hillock.

[சிறு + மலை]

சிறுமலை[2] *śiṟu-malai,* பெ. (n.) திண்டுக்கல் மாவட்டத்தில், சுவைமிக்க இனிய வாழைப் பழத்திற்குப் பெயர்பெற்ற மலை; a mountain range in Dindugal district noted for its plantain fruits. "தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்" (சிலப். 11: 85).

மறுவ. செறுமலை.

[சிறு + மலை]

சிறுமலையரியன் *śiṟu-malai-y-ariayṉ,* பெ. (n.) நெல்வகை; a kind of paddy.

[சிறு + மலை + அரியன்]

சிறுமழை *śiṟu-maḻai,* பெ. (n.) நுண் திவலைகளாகப் பெய்யுந் தூறல்; drizzle.

மறுவ. சிறுதூறல்

ம. செறுமழ

[சிறு + மழை]

சிறுமாரோடம் *śiṟu-mārōḍam,* பெ. (n.) செங்கருங்காலி (குறிஞ்சிப். 78); red catechu.

[சிறு + மாரோடம்]

சிறுமி *śiṟumi,* பெ. (n.) 1. இளம்பெண்; maiden, girl. "சிறுமி தந்தையும்" (சீவக. 1458). 2. மகள் (பிங்.); daughter.

ம. செறுமி

[சிறு → சிறுமி]

சிறுமியம் *śiṟumiyam,* பெ. (n.) சேறு (சது.); mud, mire.

சிறுமீன் *śiṟu-mīṉ,* பெ. (n.) 1. அருந்ததி விண்மீன்; the star Arundadi. "சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல்" (பெரும்பாண். 303). 2. நொய்ம் மீன் (பிங்.); loach.

ம. செறுமீன்; க. சிக்க

[சிறு + மீன்]

சிறுமுட்டி *śiṟu-muṭṭi*, பெ. (n.) சிறுசுத்தியல் (C.E.M.); small hammer.

[சிறு + முட்டி]

சிறுமுத்தன் *śiṟu-muttaṉ*, பெ. (n.) ஆண் பொம்மை; male toy - baby. "சிறுமுத்தனைப் பேணி" (கலித். 59).

Skt. mugdha

[சிறு + முத்தன்]

சிறுமுதுக்குறைமை *śiṟu-mudu-k-kuṟaimai*, பெ. (n.) இளமையிற் பேரறிவுடைமை; precociousness. "இனிய சொல்லாள் சிறுமுதுக்குறைமை கேட்டே" (சீவக. 1051).

[சிறு + முதுக்குறைமை. முதுக்குறைமை = இளம் + பருவத்திலேயே பேரறிவுடைமை]

சிறுமுதுக்குறைவி *śiṟu-mudu-k-kuṟaivi*, பெ. (n.) இளம்பருவத்தே பேரறிவுடையவள்; precocious girl, a term of endearment. "சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன்" (சிலப். 16, 68).

[சிறு + முதுக்குறைவி. 'இ' பெண் பாலீறு.]

சிறுமுழவு *śiṟu-muḻavu*, பெ. (n.) தோற்கருவி வகை; a kind of drum.

[சிறு + முழவு]

சிறுமுள்ளி *śiṟu-muḷḷi*, பெ. (n.) முள்ளிவகை (யாழ்.அக.); a kind of nail dye.

ம. செறுமுள்ளி

[சிறு + முள்ளி]

சிறுமுறி *śiṟu-muṟi*, பெ. (n.) கைச்சீட்டு; small note or chit. "பரமபதம் தங்கள் சிறுமுறிப்படி செல்லும்படி" (ஈடு, 4. 3: 11).

[சிறு + முறி]

சிறுமூங்கில் *śiṟu-mūṅgil*, பெ. (n.) மூங்கில் வகை; swollen node - ringed semi-solid medium bamboo.

ம. செறுமுள

[சிறு + மூங்கில். சிறு = மெல்லிய]

சிறுமூசை *śiṟu-mūśai*, பெ. (n.) மாழைகளை யுருக்கப் பயன்படுத்தும் சிறிய மண்குகை (C.E.M.); small crucible.

[சிறு + மூசை]

சிறுமூலகம் *śiṟu-mūlagam*, பெ. (n.) 1. அரிசித் திப்பிலி; common long pepper. 2. பூடுவகை (அக.நி.); a small plant.

[சிறுமூலம் → சிறுமூலகம்]

சிறுமூலம் *śiṟu-mūlam*, பெ. (n.) 1. திப்பிலி (பிங்.); long pepper. 2. சிறுகிழங்கு (மலை.) பார்க்க; see *śiṟu-kiḻaṅgu*.

[சிறு + மூலம். மூலம் = வேர், கிழங்கு]

சிறுமூளை *śiṟu-mūḷai*, பெ. (n.) மூளையின் பகுதி; cerebellum.

[சிறு + மூளை]

சிறுமை[1] *śiṟumai*, பெ. (n.) 1. இழிவு, புன்மை; lowness, meanness, insignificance. "ஆண்டு கொண்டானென் சிறுமை கண்டும்" (திருவாச. 5: 9). 2. நுண்மை (வின்.); minuteness. 3. குறைபாடு; diminution. "சிறுமையுஞ் செல்லாத் துனியும்" (குறள், 769). 4. வறுமை; poverty, indigence. "சிந்தைநோய் கூருமென் சிறுமை நோக்கி" (சிலப். 8 : 85). 5. வறட்சி; scarcity. 6. துன்பம்; sorrow, misery. "சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்" (குறள், 934). 7. பிறர்மனத்தை வருத்துகை; offence. "சிறுமையுணீங்கிய வின்சொல்" (குறள், 98). 8. இளப்பம்; disgrace. "தீர்ந்ததெஞ் சிறுமை" (கம்பரா. திருவவ. 25). 9. குற்றம்; fault. "உள்ளந் திகைத்திந்தச் சிறுமை செய்தேன்" (கம்பரா. ஊர்தே. 93). 10. நோய்; disease. "பையுளுஞ் சிறுமையும் நோயின் பொருள" (தொல். சொல். 341).

ம. செறும

[சில் → சிறு → சிறுமை]

சிறுமை[2] *śiṟumai*, பெ. (n.) 1. இளமை (இ.வ.); youth, minority. 2. கழிகாமம்; lust. "சினமுஞ் சிறுமையு மில்லார்" (குறள், 431). 3. கயமை; baseness. "சிறுமை தீரா வெவ்வழி மாயை" (கம்பரா. மாயாசனக. 1.)

[சில் → சிறு → சிறுமை]

சிறுமைத்தனம் *śiṟumai-t-taṉam,* பெ. (n.) சிறுமை [2,3,4] (இ.வ.) பார்க்க; see *śiṟumai*,[2,3,4]. 2. இளமை; youth.

[சிறுமை + தனம். ஒ.நோ. இவறன்மை → இவறற்றனம். அடிமை → அடிமைத்தனம். வள்ளன்மை → வள்ளற்றனம். தனம் = பண்புணர்த்தற்குப் பெயரின் பின்வரும் ஈறு.]

சிறுமையர் *śiṟumaiyar,* பெ. (n.) கீழ்மக்கள் (திவா.); mean, vulgar persons.

[சிறு → சிறுமை → சிறுமையர். சிறு = தாழ்ந்த, இழிவான]

சிறுமொழி *śiṟu-moḻi,* பெ. (n.) சிறுசொல்[2] பார்க்க; see *śiṟu-sol*[2].

க. சிக்கமாது

[சிறு + மொழி]

சிறுலவங்கம் *śiṟu-lavaṅgam,* பெ. (n.) சன்னக் கறாம்பூ (லவங்கப்பட்டை); Ceylon cinnamon.

[சிறு + இலவங்கம். சிறு = சிறிய, மெல்லிய]

சிறுவட்டம்[1] *śiṟu-vaṭṭam,* பெ. (n.) இளமை, இளம் பருவம்; youth, boyhood.

மறுவ. இளவட்டம்

[சிறு + வட்டம். சுற்று, மண்டிலம், பருவம்]

சிறுவட்டம்[2] *śiṟu-vaṭṭam,* பெ. (n.) பூடுவகை (வின்.); a shrub with scarlet flowers in clusters, the juice of which is pressed and given in gingelly oil to children for cutaneous eruptions.

[சிறு + வட்டம்]

குழந்தைகளின் தோல்நோய்க்கு, இதன் சாற்றினை நல்லெண்ணெய்யில் இழைத்துக் கொடுப்பர்.

சிறுவட்டமணி *śiṟu-vaṭṭa-maṇi,* பெ. (n.) குழந்தைகள் அரையிற் கட்டுஞ் சிறுமணி; tiny bells worn round the waist, by children.

[சிறு + வட்டம் + மணி]

சிறுவடம் *śiṟu-vaḍam,* பெ. (n.) சிறுவட்டம்[1] (இ.வ.) பார்க்க; see *śiṟu-vaṭṭam*[1].

[சிறு + வடம். வட்டம் → வடம்]

சிறுவதும் *śiṟuvadum,* வி.எ. (adv.) சிறிதும்; even a little, even a bit, used only with neg. verbs. "சிறுவது மஞ்சிலன்" *(கந்தபு. தானப். 2).*

[சிறிதும் → சிறுவதும்]

இஃது எதிர்மறைவினையில் வரும்.

சிறுவம் *śiṟuvam,* பெ. (n.) சிறுப்பம் (வின்.) பார்க்க; see *śiṟuppam.*

[சிறுப்பம் → சிறுவம்]

சிறுவயது *śiṟu-vayadu,* பெ. (n.) இளம்பருவம் (உ.வ.); non-age, youth.

[சிறு + வயது. சிறு = குறைவு]

Skt. vayas → த. வயது

சிறுவரை[1] *śiṟu-varai,* பெ. (n.) 1. சிறிதுநேரம்; short time, a little while. "சிறுவரைத் தங்கின் வெகுள்வர்" *(கலித். 93).* 2. சிறுதொலைவு; short distance. "சிறுவரை சென்று நின்றோர்க்குந் தோன்றும்" *(புறநா.).*

[சிறு + வரை. வரை = காலம், தொலைவு]

சிறுவரை[2] *śiṟu-varai,* பெ. (n.) சிறுமூங்கில்; small bamboo.

[சிறு + வரை. சிறு – சிறிய, இளைய. வரை– மூங்கில்]

சிறுவரை[3] *śiṟu-varai,* பெ. (n.) இழிவு, சிறுக்கம், சிறியபொருள்; trifle, small thing.

[சிறு + வரை]

சிறுவல்[1] *śiṟuval,* பெ. (n.) 1. குழந்தை (யாழ்ப்.); little child. 2. இளம்பருவம் (இ.வ.); childhood.

[சிறு → சிறுவல். 'அல்' சொல்லாக்க ஈறு]

சிறுவல்[2] *śiṟuval,* பெ. (n.) 1. தடை (நாஞ்.); obstacle. 2. இடையூறு; hindrance.

[சிறு → சிறுவல்]

சிறுவலி *śiṟu-vali,* பெ. (n.) குழவி முதிரா நிலையில், பருவந்தவறிப் பிறப்பதாலுண்டாகும் நோவு (வின்.); premature labour pains.

[சிறு + வலி. சிறு = முதிர்வின்மை, முதிராநிலை]

சிறுவழுதலை *śiṟu-vaḻudalai,* பெ. (n.) சிறுவழுதுணை (L.) பார்க்க; see *śiṟu-vaḻuduṇai.*

[சிறுவழுதுணை → சிறுவழுதலை]

சிறுவழுதுணை *śiṟu-vaḻuduṇai,* பெ. (n.) 1. இரவில் மலருஞ் செடிவகை (வின்.); Indian nightshade. 2. கண்டங்கத்தரி; species of solanum.

ம. செறுவழுதின

[சிறு + வழுதுணை. வழுதுணை = கத்திரிக் காய். சிறுவழுதுணை = கத்திரிக்காயைப் போன்ற வடிவிலிருக்கும் கண்டங்கத்திரி] இங்கும் சிறு, 'போல' எனும் உவமஉருபுப் பொருளில் வந்தது. சிறுதேர் பார்க்க.


சிறுவழுதுணை

சிறுவள்ளி *śiṟu-vaḷḷi,* பெ. (n.) சிறுகிழங்கு (பதார்த்த. 438); Goa potato.

ம. செறுவள்ளிக் கிழங்நு

[சிறு + வள்ளி. வள்ளி = கொடி, கிழங்கு]

சிறுவள்ளிக்கிழங்கு *śiṟuvaḷḷi-k-kiḻaṅgu,* பெ. (n.) சிறுவள்ளி பார்க்க; see *śiṟu-vaḷḷi.*

ம. செறுவள்ளிக் கிழங்நு

[சிறு + வள்ளிக்கிழங்கு]

சிறுவன் *śiṟuvaṉ,* பெ. (n.) 1. இளைஞன்; boy. "மால்பெருஞ் சிறப்பையச் சிறுவனும் பெற்று" (பாரத. நிரைமீட். 46). 2. சிறியன்; lad. "உறுவருஞ் சிறுவரும்" (புறநா. 381). 3. மகன்; son. "உலகாளுஞ் சிறுவர்ப் பயந்து" (சீவக. 2606). 4. சிறுபுள்ளடி வகை (மலை.); species of desmodium.

ம. சிறுவன்

[சிறு → சிறுவன். 'அன்' ஆண்பாலீறு]

சிறுவாடு *śiṟu-vāḍu,* பெ. (n.) 1. சிறுசேமிப்பு (வின்.); small savings in money. 2. சிறுதேட்டு (நாஞ்.) பார்க்க; see *śiṟu-ṭēṭṭu.* 3. பற்றடைப்பு நிலம் (C.G.); reclaimed land enjoyed by a tenant for a certain period in requital of his labour for so reclaiming it.

[சிறுபாடு → சிறுவாடு]

சிறுவாத்தி *śiṟu-vātti,* பெ. (n.) திருவாத்தி (L.); holy mountain ebony.

[சிறு + ஆத்தி]

சிறுவாய்க்கயிறு *śiṟu-vāy-k-kayiṟu,* பெ. (n.) குதிரையின் கடிவாள வார்; reins. "பிடித்த சிறுவாய்க் கயிறும்" (ஈடு, 7. 4: 5).

[சிறு + வாய் + கயிறு]

சிறுவாலுழுவை *śiṟu-vāl-uḻuvai,* பெ. (n.) வாலுழுவைக்கொடிவகை (L.); climbing staff - plant.

[சிறு + வாலுழுவை]

சிறுவாழை *śiṟu-vāḻai,* பெ. (n.) இளம்வாழை; young plantain.

[சிறு + வாழை. வழு → வாழை = வழு வழுப்பான மரம்]

சிறுவாள் *śiṟu-vāḷ,* பெ. (n.) கைவாள் (பிங்.); hand-saw.

[சிறு + வாள். வார் → வால் → வாள் = நீண்ட கத்தி]

சிறுவி *śiṟuvi,* பெ. (n.) மகள் (சூடா.); daughter.

[சிறு → (சிறுமி) → சிறுவி. 'இ' பெ.பா.ஈறு]

சிறுவிடு *śiṟuviḍu,* பெ. (n.) கொள்ளு (மலை.); horse-gram.

சிறுவித்தம் *śiṟu-vittam,* பெ. (n.) சூதாட்டத்தில் ஒட்டமாக வைக்கப்பட்ட சிறுதொகை; stake - money, as in gambling. "சிறுவித்த மிட்டான் போல்" (கலித். 136).

[சிறு + வித்தம்]

சிறுவியர் *śiṟu-viyar,* பெ. (n.) குறுவியர்; light or mild perspiration. "திங்கள் வாண்முகஞ் சிறுவியர் பிரிய" (சிலப். 4: 52).

க. கிறுபெமர்

[சிறு + வியர்]

சிறுவிரல் *śiṟu-viral*, பெ. (n.) சுண்டுவிரல்; little finger. *"சிறுவிரன் மோதிரங் கொடுத்தனன்" (பெருங். வத்தவ. 13: 180).*

ம. செறுவிரல்; க. கிறும், பிரலு

[சிறு + விரல். விரி → விரல்]

சிறுவிரியன் *śiṟu-viriyaṉ*, பெ. (n.) நச்சுத் தன்மை கொண்ட விரியன்பாம்பு (M.M.); small viper.

[சிறு + விரியன்]

சிறுவிலை *śiṟu-vilai*, பெ. (n.) 1. அருவிலை; high price. 2. சிறுவிலைநாள் பார்க்க; see *śiṟu-vilai-nāḷ*. *"சிறு விலை யெளியவ ருணவு சிந்தினோன்" (கம்பரா. பள்ளி. 111).* 3. இளைத்துள்ளது; that which is lean or slender. *"சிறுவிலை மருங்குல்" (கம்பரா. தைலமாட்டு. 53).*

[சிறு + விலை. சிறு = சிறியது, அருமைப்பாடுடையது]

சிறுவிலைநாள் *śiṟu-vilai-nāḷ*, பெ. (n.) வற்கடக்காலம்; times of scarcity, famine. *"சிறுவிலை நாண் முந்தீந்தகொ ருணவின்பயன்" (கம்பரா. இராவணன் வதை. 52).*

[சிறுவிலை + நாள்]

சிறுவீட்டுப்பொங்கல் *śiṟu-vīṭṭu-p-poṅgal*, பெ. (n.) சுறவ (தை)த்திங்களில் சிறுமியர் சிறு வீடு கட்டிப்பொங்கலிடும் பண்டிகை (இ.வ.); a festival in the month of śuṟavam in which rice is boiled and offered to God by girls, in front of the toy-houses, prepared for the occasion.

[சிறு + வீடு + பொங்கல்]

சிறுவீடு[1] *śiṟu-vīḍu*, பெ. (n.) கறப்பதற்கு முன் மாடுகளைப் புலர்பொழுதில் மேயவிடுகை; letting out cattle in the early morning to graze before they are milked. *"எருமை சிறுவீடு மேய்வான் பரந்தனகாண்" (திவ். திருப்பா. 8.)*

[சிறு + வீடு. சிறு = சிறிது காலம். வீடு = மேய்ச்சலுக்கு விடுதல். விடு → வீடு]

சிறுவீடு[2] *śiṟu-vīḍu*, பெ. (n.) சிற்றில்[1] 1,2 பார்க்க; see *śiṟṟil*[1] 1,2.

[சிறு + வீடு]

சிறுவுடை *śiṟu-v-uḍai*, பெ. (n.) நீருடைமரம்; buffalo thorn cutch.

[சிறு + உடை. உடை = உடைமரம்]

சிறுவுமரி *śiṟu-v-umari*, பெ. (n.) பவளப்பூண்டு (யாழ்அக.); coral plant.

[சிறு + உமரி]

சிறுவெண்காக்கை *śiṟu-veṇ-kākkai*, பெ. (n.) கழுத்திற் சிறுவெண்மையுடைய காகம்; crow having a greyish neck. *"பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை" (ஐங்குறு. 170).*

[சிறு + வெண் + காக்கை. கரியநிறமுள்ள காக்கையின் கழுத்தில், சிறிது வெண்ணிற முடைமையைக் குறிக்கச் 'சிறுவெண்' என வந்தது]

சிறுவெள்ளரி *śiṟu-veḷḷari*, பெ. (n.) வெள்ளரி வகை (வின்.); a species of cucumber.

ம. செறுவெள்ளரி

[சிறு + வெள்ளரி]

சிறுவேங்கை *śiṟu-vēṅgai*, பெ. (n.) மலை வேங்கை மரம்; thorny blue - draped feather foil.

[சிறு + வேங்கை]

சிறுவேட்டி *śiṟu-vēṭṭi*, பெ. (n.) துண்டு; towel.

[சிறு + வேட்டி. வெட்டி → வேட்டி]

சிறுவேட்டை *śiṟu-vēṭṭai*, பெ. (n.) வரிவகை (M.E.R. 134 of 1924); a kind of tax.

[சிறு + வேட்டை]

சிறுவேர் *śiṟu-vēr*, பெ. (n.) மருந்துவேர் வகையு ளொன்று (இங்.வை. 234); a kind of medicinal root.

[சிறு + வேர்]

சிறுவோர் *śiṟuvōr*, பெ. (n.) 1. சிறுபிள்ளைகள்; children, little boys. *"ஆனாவறு சிறுவோர்தமை யளித்தோன்" (கந்தபு. சரவண. 32).* 2. இளைஞர்; youngsters.

[சிறு → சிறுவோர்]

சிறை[1]**-த்தல்** *śiṟai-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. சிறை செய்தல்; to restrain, imprison. *"தன் வயிற் சிறைப்பினும்" (தொல். பொருள். 147).* 2. நீரைத்

தடுத்தல்; to dam up. "கீழ்மடைகள் சிக்கெனச் சிறைத்து" (தணிகைப்பு. திருநா. 91).

[இறு → சிறு → சிறை-,]

சிறை[2]-த்தல் *śirai-,* 4 செ.குன்றாவி. (v.t.) சுழல விழித்தல்; to see rolling one's eyes. "சிதரரி மழைக்கணுஞ் சிறைக்கும்" (நீலகேசி, 72).

சிறை[3]-தல் *śirai-,* 2 செ.குவி. (v.i.) நிறங்கெடுதல்; to turn pale, lose colour. "பொருமுரண் சீறச் சிறைந்து" (கலித். 91).

ம. சிறயுக

[சிதை → சிறை-,]

சிறை[4] *śirai,* பெ. (n.) 1. காவல்; guard, watch. "வீங்குசிறை வியலருப்பம்" (புறநா. 17: 28). 2. அரண், காப்பு; defence. 3. காவலில் அடைக்கை; confinement, restraint. 4. சிறைப் படுத்துகை; incarceration. "உன் சிறை விடுக்கற் பாலார் யாருளர்" (கம்பரா. மாயாசன. 38). 5. சிறைச்சாலை; prison, jail. "சிறையிற் போகென்று" (திருவாலவா.33: 8). 6. அடிமைத் தனம் (வின்.); captivity, slavery. 7. அடிமையாள்; captive, slave. 'அவன் சிறை கொள்ள வந்தான்' (உ.வ.). 8. பெண்டாகச் சிறைப் பிடிக்கப்பட்ட இளம் பெண் (உ.வ.); young woman taken captive to marry or to keep. 9. சிறைகொள்ளத்தக்கவள் (இ.வ.); beautiful young woman worth taking captive.

க., பட. செறெ; தெ. செர; ம. சிற

[இறு → சிறு → சிறை]

சிறை[5] *śirai,* பெ. (n.) 1. அணை; dam, bank. "சிறையு முண்டோ செழும்புனன் மிக்குழி" (மணிமே. 5: 19). 2. நீர்நிலை (பிங்.); tank. "வான் சிறை மதகுகள்" (கம்பரா. அகலிகை. 64). 3. இடம் (பிங்.); place, location. 4. பக்கம்; side of a street. "மறுகுசிறை" (பதிற்றுப். 29: 9). 5. கரை; bank, shore. "உறைசிறை வேதியர்" (பரிபா. 11:84). 6. கோட்டைமதில்; fort-wall. "சிறையை வளைத்திடு தெண்ணீரே" (இரகு. நகர. 12). 7. மதிற்சுற்று; surrounding wall of a city. 8. வரம்பு; boundary. "சாலி நெல்லின் சிறை கொள்வேலி" (பொருந. 246).

ம. சிற, செறு; க., பட. கெரெ; தெ. செறுவு; து. கெறெ, கிறெ; குட. கெரெ; கோத. கெரீ; துட. கெர்வ்; கொலா., பர். சொறு

[இறு → சிறு → சிறை]

சிறை[6] *śirai,* பெ. (n.) 1. இறகு; wing, feather. "திருந்துசிறை வளைவாய்ப் பருந்து" (புறநா. 3: 22). 2. ஒலியெழாமல் தடைப்படுத்தி வைக்கும் யாழ்நரம்புக் குற்றம் (பதிற்றுப். 43: 21, உரை.); flaw of tonelessness in a lute string.

ம. இறகு, கொ, ரெக; க. எறகெ; து. றெங்கெ. தெ. எறகு, ரெக்கு; கொலா. ரெடப, ரெப்பா; கோண்ட். றெக்க

[இற(கு) → சிதை → சிறை]

சிறை[7] *śirai-,* பெ. (n.) பாத்தி; parterre in a field. "ஓங்கு மணற் சிறுசிறை" (குறுந். 149).

[இறு → சிறு → சிறை]

சிறைக்கணி-த்தல் *śirai-k-kaṇi-,* 4 செ.குன்றாவி. (v.t.) புறக்கணித்தல்; to ignore, neglect. "அருள் செய்திட லன்றியே சிறைக்கணித்தனை" (கந்தபு. வள்ளி. 86).

[சிற → சிறை + கணி-,]

சிறைக்களம் *śirai-k-kaḷam,* பெ. (n.) சிறைக் கூடம்; prison-house. "வெய்ய சிறைக்களத்துச் சென்றனனே" (கந்தபு. மீட்சி. 4).

[சிறை + களம். கள் → களம் = இடம், அறை, கூடம்]

சிறைக்காடு *śirai-k-kāḍu,* பெ. (n.) அரசிற்குரிய காவலுள்ள காடு (எங்களூர்.174); reserved forest.

[சிறை + காடு. கடு → காடு]

சிறைக்காவல் *śirai-k-kāval,* பெ. (n.) நிறை காவலுக்கெதிராயமைந்த சிறையிலிட்டுக் காக்குங் காப்பு (இறை. 29, பக். 134); physical restraint, confinement, opp. to niṟai-kāval.

[சிறை + காவல்]

சிறைக்கூடம் *śirai-k-kūḍam,* பெ. (n.) காவற்கூடம் (இ.வ.); place of captivity, prison-house.

ம. சிறகூடம், சிறைகூடம்; க. செறெமனெ

[சிறை + கூடம்]

சிறைக்கோட்டம் *šiṟai-k-kōṭṭam,* பெ. (n.) *சிறைக்கூடம் பார்க்க;* see *šiṟai-k-kūḍam* . *"சிறைக் கோட்டம் விருப்பொடும் புகுந்து" (மணிமே. 19: 49).*

ம. சிறைக்கோட்டம்

[சிறை + கோட்டம். கோட்டம் = வளைவு, வளைந்த மதில்; வளைந்த மதிலையுடைய சிறைக்கூடம்.]

சிறைகொள்(ளு)-தல் *šiṟai-koḷḷu-,* 13 செ.குன்றாவி. (v.t.) *காவற்கூடத்து அடைத்தற்பொருட்டுப் பிடித்துப்போதல்;* to take captive. "பெருந்திறல் வேந்தனெம் பெருமாற் சிறைகொள" *(பெருங். இலாவாண. 1: 51).*

க. சொறெகொள்

[சிறை + கொள்-,]

சிறைச்சாலை *šiṟai-c-cālai,* பெ. (n.) *சிறைக் கூடம் (உ.வ.) பார்க்க;* see *šiṟai-k-kūḍam.*

க. செறெசாலெ, செறெமனெ, பட. செரெமனெ

[சிறை + சாலை]

சிறைச்சோறு *šiṟai-c-cōṟu,* பெ. (n.) 1. *முப்பத்திரண்டு வாழ்வியல் அறங்களுள் சிறைப்பட்டார்க்கு உணவளிக்கும் செயல் (திவா.);* distributing food to prisoners, a form of charity, one of muppattiraṇḍaṟam. 2. *சிறையிலிருப்பவருக்குக் கிடைக்கும் சோறு;* prisoner's food.

[சிறை + சோறு]

சிறைசெய்-தல் *šiṟai-šey-,* 1 செ.குன்றாவி. (v.t.) 1. *சிறையில்வைத்தல்;* to imprison, restrain. "ஆயிழை தன்னைச் சிறைசெய் கென்றலும்" *(மணிமே. பதி. 79 - 80).* 2. *நீரைக்கட்டுதல்;* to dam up, as water. "செம்புனலோ டூடார் மறுத்துஞ் சிறை செய்வர்" *(நாலடி., 222).*

க. செறெகாகு

[சிறை + செய்-,]

சிறைசெல்(லு)-தல் *šiṟai-šel,* செ.குன்றாவி. (v.i.) *சிறையில் அடையடுதல்;* to be enclosed, to grow captive, to be made prisoner, to get into prison.

க. செறெயாகு

[சிறை + செல்-,]

சிறைத்திமிங்கிலம் *šiṟai-t-timiṅgilam,* பெ. (n.) *திமிங்கிலவகை;* whale.

[சிறை + திமிங்கிலம்]

சிறைத்தீர்வை *šiṟai-t-tīrvai,* பெ. (n.) *அடிமை வரி (இராட்.);* tax on slaves.

[சிறை + தீர்வை]

சிறைநோய் *šiṟai-nōy,* பெ. (n.) *சிறைத்துன்பம்;* miseries of imprisonment. "செறிந்த சிறைநோய் தீர்க்கென் றிறைசொல" *(மணிமே. 23 : 34).*

[சிறை + நோய்]

சிறைப்படு-தல் *šiṟai-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. *சிறையில் அடைபடுதல்;* to be imprisoned; to be impounded, as stray cattle. 2. *அகப்படுதல்;* to be enslaved; taken captive, to be ensnared, encaged, as birds or animals. 3. *மறக்கப்படுதல் (யாழ்ப்.);* to be mislaid, to be forgotten.

க. செறெயாகு

[சிறை + படு. 'படு' து. வி.]

சிறைப்பள்ளி *šiṟai-p-paḷḷi,* பெ. (n.) *சிறைக் கூடம் பார்க்க;* see *šiṟai-k-kūḍam.* "வெஞ்சிறைப் பள்ளியாக" *(சீவக. 1538).*

[சிறை + பள்ளி]

சிறைப்பாடு *šiṟai-p-pāḍu,* பெ. (n.) 1. *பக்கம்;* side. "ஒரு சிறைப்பாடு சென்றணைதலும்" *(மணிமே. 23: 50).* 2. *சிறை (யாழ்ப்.);* captivity. 3. *தடை (யாழ்ப்.);* restraint hindrance. 4. *தவறி விழுந்த இடத்திற் பண்டங்கிடக்கை (யாழ்ப்.);* being dropped on the ground and lying untouched, as a thing lost.

[சிறை + பாடு]

சிறைப்புறம் *šiṟai-p-puṟam,* பெ. (n.) 1. *ஒதுக்கிடம்;* secret place . "ஒற்றிற் றெரியா சிறைப்புறத்து" *(நீதிநெறி. 32).* 2. *தோழி தலைவியர்க்குள் நிகழும் செய்திகளைத் தலைவன் மறைந்தறிதற்கு ஏதுவாகக் காவல் மனைப் புறத்தமைந்த இடம் (தொல். பொருள். 114, உரை.);* (akap) a hedge- side near a mansion from which a lover can watch unseen what passes between his sweet heart and her maid. 3. *சிறைச்சாலை;* prison-cell. "சிறைப்புறங் காத்துச் செல்லு மதனனை" *(சீவக. 1142).*

[சிறை + புறம்]

சிறைபிடி-த்தல் *šiṟai-piḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. அடிமையாக்குதல் (வின்.); to take captive, enslave. 2. மனைவியாகவேனும், காமக்கிழத்தியாகவேனும், கொள்ளுமாறு பெண்ணைச் சிறைப்படுத்திக்கொண்டு போதல் (உ.வ.); to take a woman captive, for the purpose of marrying or keeping her.

க. செறெபிடி, செறெவிடி

[சிறை + பிடி-,]

சிறைமீள்[1](ளு)-தல் *šiṟai-mīḷ(ḷu)-*, 16 செ.கு.வி. (v.i.) சிறைநீங்குதல்; to be freed from slavery; to be released from prison.

[சிறை + மீள்-,]

சிறைமீள்[2]-தல் *(சிறைமீட்டல்) šiṟai-mīḷ-*, 13 செ.குன்றாவி. (v.t.) சிறையிலிருந்து விடுவித்தல்; to rescue from slavery or captivity.

க. செறெபிடிசு

[சிறை + மீள்-,]

சிறைமீட்டான் *šiṟai-mīṭṭāṉ*, பெ. (n.) நெல் வகை; a kind of paddy. "கறுத்த நிறவாலன் சிறை மீட்டான் வளர்பூசைப் பாடிவெள்ளை" (நெல்விடு. 186).

[சிறை + மீட்டான்]

சிறையா *šiṟaiyā*, பெ. (n.) மூன்றடி வரை வளரக்கூடிய சாம்பல்நிறமுள்ள கடல்மீன் வகை; grey mullet, attaining 3 ft. in length.



சிறையா

சிறையெடு-த்தல் *šiṟai-y-eḍu-*, 4 செ.குன்றாவி. (v.t.). சிறைபிடி-2 பார்க்க; see *šiṟai-piḍi-2*.

[சிறை + எடு-,]

சிறைவன் *šiṟaivaṉ*, பெ. (n.) காவற்பட்டவன்; a captive, slave, prisoner. "தன்னைச் சிறைவனாச் செய்வானுந் தான்" (அறநெறி. 67).

[சிறை → சிறைவன்]

சிறைவீடு *šiṟai-vīḍu*, பெ. (n.) சிறையினின்று வெளிவிடுகை; release from prison. "சிறை வீடு செய்தலும்" (மணிமே. பதி. 80).

[சிறை + வீடு. விடு → வீடு]

சின்[1] *šiṉ*, பெ. (n.) சினம்; anger. "மறையவர் பால் சின்பற்றி யென்பயன்" (இரகசிய. 1379).

[சினம் → சின்]

சின்[2] *šiṉ*, இடை. (part.) ஓர் அசைச்சொல்; an expletive generally used in poetry. "காப்பும் பூண்டிசின்" (தொல். சொல். 277).

சின்சாசங்குமாத்திரை *šiṉšā-šaṅgu-māttirai*, பெ. (n.) வயிற்றிலேற்படும் அனைத்து வகையான வலியினையும் போக்கும் ஆயுள் வேத மருந்து மாத்திரை; an Ayulvedic medicine in the form of pill given for all sorts of pain in the body and stomach disorders (சா.அக.).

சின்மதி *šiṉ-madi*, பெ. (n.) சிற்றறிவு; poor understanding. "பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால்" (கம்பரா. சூளா. 12).

[சில் → சின். சின் + மதி]

சின்மயம் *šiṉmayam*, பெ. (n.) அறிவுக்கடல்; embodiment of pure intelligence. "சின்மய வுள்ளொளியே" (பிரபோத. 1, 2).

[சித்து → சின் + மயம்]

சின்மயன் *šiṉmayaṉ*, பெ. (n.) தூயவறிவுப் பிழம்பான ஆதன் அல்லது இறைவன்; individual soul or god, as pure intelligence. "மலின மறு சின்மயன்" (கைவல். சந். 120).

[சின்மயம் → சின்மயன்]

சின்முத்திரை *šiṉ-muttirai*, பெ. (n.) அறவுரைக் குறியாகச் சுட்டுவிரல் நுனியைப் பெருவிரல் நுனியுடன் சேர்த்துக் காட்டும் அறிவு முத்திரை; hand-pose assumed by a guru while giving spiritual instruction. "மோன ஞானமமைத்த சின்முத்திரைக்கடலே" (தாயு. பன்மாலை. 1)

[சித்து → சின் + முத்திரை]



சின்மை *śiṉmai,* பெ. (n.) 1. எண்ணிக்கையின் சிறுமை; smallness, fewness. "எழுத்தின் சின்மை மூன்றே" (தொல். பொருள். 358). 2. இழிவு (சிலப். 10: 130, உரை.); coarseness, vulgarity, as of language. 3. குரலின் மென்மை; softness, lowness, as of voice. "சின்மொழி நோயோ" (திவ். இயற். திருவிருத். 20).

[சில் → சின் → சின்மை]

சின்ன[1] *śiṉṉa* பெ. எ. (adj.) 1. சிறிய; small, little. "சின்னத் துணி" (சீவக. 2929). 2. இழிந்த; mean, low. சின்ன மனிதன். 3. தாழ்ந்த; inferior. சின்ன பயல், சின்னக்குலம் 4. இளைய; young. 'என் சின்னத்தம்பி'.

[சின் → சின்ன]

சின்ன[2] *śiṉṉa,* பெ. (n.) பூண்டின் முதற்பெயர்; plant first term often indicating the size of the plant, or of its leaves, flowers or fruits.

ம. சின்ன

சின்னக்கரடி *śiṉṉa-k-karaḍi,* பெ. (n.) விண்மீன் தொகுதி (புதுவை.); the constellation Little Bear.

[சின்ன + கரடி]

சின்னக்காசு *śiṉṉa-k-kāśu,* பெ. (n.) $^{1}/_{5}$ காசு மதிப்புள்ள பழைய சிறிய காசு (நாணய) வகை (M.M.); an ancient small coin = 1/5 pie.

[சில் → சின் → சின்ன + காசு]

சின்னக்குடல் *śiṉṉa-k-kuḍal* பெ. (n.) சிறுகுடல் பார்க்க; see *śiru-kuḍal.*

[சின்ன + குடல். குழல் → குடல் = குழல் போன்ற உறுப்பு]

சின்னக்குத்துழுவன் *śiṉṉa-k-kuttuḻuvaṉ,* பெ. (n.) சிற்றுருவமுடையதும் அலகடியில் முள்போன்ற மயிர்க் கொத்துடையதும் பச்சை நிறமுடையதுமான பறவைவகை; the small green barbet (சேரநா.).

சின்னக்குள்ளக்கெண்டை *śiṉṉa-k-kuḷḷa-k-keṇḍai,* பெ. (n.) கெண்டை மீன்வகையு ளொன்று; barbus vittatus.

[சின்ன + குள்ளக்கெண்டை]

சின்னக்குறிஞ்சி *śiṉṉa-k-kuṟiñji,* பெ. (n.) குறிஞ்சி (L.); a species of conehead.

[சின்ன + குறிஞ்சி]

சின்னக்கூனி *śiṉṉa-k-kūṉi,* பெ. (n.) சிறிய இறால் வகை; a kind of fish, *śeṉṉa-k-kuṉṉi.*

சின்னக்கொக்கு *śiṉṉa-k-kokku,* பெ. (n.) காளையின் கதறலைப் போன்ற ஒலியெழுப்பும் நாரையினப் பறவை வகை; the Indian little green bittern (சேரநா.).

ம. சின்னக்கொக்கு

[சின்ன + கொக்கு. கொள் → (கொட்கு) → கொக்கு = வளைந்த கழுத்துள்ள பறவையினம்]

சின்னக்கொடுக்கன் *śiṉṉa-k-koḍukkaṉ,* பெ. (n.) நச்சுப் பூச்சி வகையுளொன்று; a kind of poisonous insect.

[சின்ன + கொடுக்கன்]

சின்னக்கொழுஞ்சி *śiṉṉa-k-koḻuñji,* பெ. (n.) சீனக் கொழுஞ்சி; Triphasier trifoliata.

சின்னகை *śiṉṉagai* பெ. (n.) புன்னகை; smile, "முளையேர் முறுவன் முகிழ்த்த சின்னகை" (பெருங். மகத. 6:49).

[சில் + நகை]

சின்னச்சக்கரம் *śiṉṉa-c-cakkaram,* பெ. (n.) பழைய திருவிதாங்கூர் அரசாட்சியில் புழக்கத்திலிருந்த காசு வகை; a coin prevalent in old Tiruvidāṅgūr (T.S.M. (vel) iv. 264) (சேரநா.).

[சின்ன + சக்கரம்]

சின்னச்சம்பா *śiṉṉa-c-cambā,* பெ. (n.) நாலுமாதத்திற் பயிராகும் சம்பா நெல்வகை; a variety of śambā maturing in four months.

[சின்ன + சம்பா]

சின்னச்சலவாதை *šinna-c-cala-vādai,* பெ. (n.) சிறுநீர்விடுகை (இழி.வ.); urination.

[சின்ன + சலம் + உபாதை → வாதை]

சின்னச்சாதி *šinna-c-cādi,* பெ. (n.) கீழ்க்குலம்; low caste. 'சொன்னபடி கேட்பானா சின்னச்சாதி பயல்?' (உ. வ.).

[சின்ன + சாதி]

Skt. jāti → த. சாதி

சின்னச்சிலப்பன் *šinna-c-cilappan,* பெ. (n.) நீண்ட கால்களையுடைய இன்னிசைப் பறவை வகை; a kind of bird babbler (சேரநா.).

சின்னச்சலபாதை *šinna-c-cala-pādai,* பெ. (n.) சின்னச்சலவாதை பார்க்க; see *šinna-c-cala-vādai* (சா.அக.).

[சின்னசலம் + உபாதை → பாதை]

சின்னசிற்கருகு *šinna-šiṟkarugu,* பெ. (n.) வெள்ளாடு; goat (சா.அக.).

சின்னஞ்சிறிய *šinnañ-šiṟiya,* பெ.எ. (adj.) பென்னம்பெரிய என்னுஞ்சொல்லின் எதிர் மறைச் சொல், மிகச்சிறிய; very small, opp. to pennam periya. "சின்னஞ்சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்" (அபிரா. 53).

மறுவ. சின்னஞ்சிறு.

[சின்னம் + சிறிய]

சின்னஞ்சிறு *šinnañšiṟu,* பெ.எ. (adj.) சின்னஞ் சிறிய பார்க்க; see *šinnañjiṟiya.*

[சின்ன + சிறு]

சின்னட்டி[1] *šinnaṭṭi,* பெ. (n.) 1. சின்னது (யாழ்ப்.); little thing. 2. பூடுவகை; a kind of small herb.

[சின்ன → சின்னட்டி]

சின்னட்டி[2] *šinnaṭṭi,* பெ. (n.) நெல்வகை; a kind of paddy. "சின்னட்டி பொன்னாயன்" (பறாளை. பள்ளு. 23).

[சின் → சின்னட்டி]

சின்னத்தட்டு *šinna-t-taṭṭu,* பெ. (n.) பொற் கொல்லர் துலை (தராசு)த்தட்டு (திவா. 7: 223); scale-pan used by goldsmiths.

[சின்ன + தட்டு]

சின்னத்தனம் *šinna-t-tanam,* பெ. (n.) 1. சின்மை; meanness, petty-mindedness. 2. சிறுபிள்ளைத் தனம் (இ.வ.); childishness.

தெ. சின்னத்தன

[சில் → சின் → சின்னம் + தனம்]

சின்னத்தானம் *šinna-t-tānam,* பெ. (n.) ஒரு வகை மீன்; a kind of fish. "சின்னத்தானங் கறுத்த கெளிற்று மீன்" (பறாளை. பள்ளு. 16).

[சின்ன + தானம்]

சின்னத்தும்பி *šinna-t-tumbi,* பெ. (n.) பழுப்பு நிறமுள்ள கடல்மீன் வகை; a marine fish, brown.

[சின்ன + தும்பி]

சின்னத்தும்பி



சின்னது *šinnadu,* பெ. (n.) சிறியது; little child, animal or thing.

பட. குன்னது

[சில் → சின் → சின்னது]

சின்னநண்டு *šinna-nanḍu,* பெ. (n.) 1. சிறிய நண்டு; small crab. 2. தேள்; scorpion.

[சின்ன + நண்டு]

சின்னப்பட்டம் *šinna-p-paṭṭam,* பெ. (n.) பெரிய மடத்துத் தலைவர்க்கு அடுத்தபடியான மடத்துத் தலைவர்; person who is second in authority and is the successor - designate of the head of a mutt.

மறுவ. இளைய பட்டம்

[சின்ன + பட்டம்]

பட்டுதல் = தட்டுதல், அடித்தல். பட்டு → பட்டம் = பட்டையான பொருள், துணி, பெயரும் பதவியும் பொறித்து அரசன் நெற்றியிலணியும் தகடு, பதவிப் பெயர். மடத்

தலைவருக்குப்பின், பதவிமாற்றம் சிக்கல் இல்லாமல் நடைபெறுவதற்கும் தலைவருக்கு உதவுவதற்கும், தலைவருக்கு அடுத்து அப் பதவி வரவிருப்பவரை அணியமாக்குவதற்கும், கட்டப்படுவது சின்னப்பட்டம். 'சின்ன' என்னும் அடை இளமைப்பொருளைக் குறிக்கும்.

சின்னப்படி *śinna-p-paḍi*, பெ. (n.) *அரைப்படி;* half of a standard measure.

[சின்ன + படி]

சின்னப்படு¹-தல் *śinna-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) *1. உடைபடுதல்;* to be broken, discomfited. *2. ஊனப்படுதல்;* to be wounded, maimed, mutilated. *3. சிதைவடைதல் (வின்.);* to be injured, as fruit; to be deflowered, as a woman.

[சின்னம் + படு. 'படு' து.வி.]

சின்னப்படு²-தல் *śinna-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) *இகழ்ச்சிப்படுதல்;* to be derided, disgraced. *'அந்தச் செயலைச் செய்ததால் சின்னப்பட்டுச் சீரழிந்து போனான்' (உ. வ.).*

[சின்னம் + படு-,]

சின்னப்பணம்¹ *śinna-p-paṇam*, பெ. (n.) *1. அரைப்பணம் அல்லது ஒன்றே காலணா மதிப்புள்ள பழையகாலத்துக் காசு;* an ancient coin equivalent to fifteen paise. *2. பழைய திருவிதாங்கூர் அரசாட்சியில் புழக்கத்திலிருந்த காசுவகை;* a coin prevalent in old Tiruvitāṅgūr *(சேரநா.).*

ம. சின்னப் ப்ணம்; க. சிக்ககண

[சின்ன = சிறிய, குறைந்த, மிகக் குறைவான. சின்ன + பணம்]

சின்னப்பயல் *śinna-p-payal*, பெ. (n.) *1. சிறு பையன்;* little fellow. *"காந்திமதி நாதனைப்பார் அதிசின்னப்பயல்" (பாரதியார்).* *2. கீழ்மகன்; இழி குணத்தன்;* mean, petty-minded fellow.

[சின்ன + பயல்]

சின்னப்பாகல் *śinna-p-pāgal*, பெ. (n.) *மிதிபாகல்;* balsam apple, climber.

[சின்ன + பாகல்]

சின்னப்பிசானம் *śinna-p-piśāṉam*, பெ. (n.) *நெல்வகை (விவசா.1.);* a kind of paddy.

[சின்ன + பிசானம்]

சின்னப்புடையன் *śinna-p-puḍaiyaṉ*, பெ. (n.) *புடையன்பாம்பு வகையுளொன்று;* a kind small wart snake.

[சின்ன = சிறிய. சின்ன + புடையன்]

சின்னப்புத்தி *śinna-p-putti*, பெ. (n.) *1. சிற்றறிவு;* meanness, low-mindedness. *2. பிள்ளைப்புத்தி;* shallow wit.

[சின்ன + புத்தி]

Skt. buddhi → த. புத்தி

சின்னப்பூ¹ *śinna-p-pū*, பெ. (n.) *நூறு, தொண்ணூறு, எழுபது, ஐம்பது, முப்பது இவற்றுள் ஒரெண்கொண்ட நேரிசை வெண்பாக்களால், அரசனின் பத்து உறுப்புகளையும் சிறப்பித்துப் புகழ்ந்து கூறும், சிற்றிலக்கிய வகை (இலக். வி. 846);* poem celebrating the taśāṅgam of a king in 100, 90, 70, 50 or 30 nēriśai-veṇbā verses.

[சின்ன + பூ]

மன்னர்தம் சின்னங்களின் சிறப்பெல்லாம் தோன்றக்கூறுவதனால் 'சின்னப்பூ' என்ற பெயராயிற்று என்பர் அறிஞர் மு.அருணாசலம். தமிழிலக்கிய பரப்பினுள் தத்துவராயர் செய்த 'சின்னப்பூ வெண்பா' என்ற நூல் தவிர இப்பெயர் கொண்ட வேறு சிற்றிலக்கியம் ஏதும் காண்பதற்கில்லை.

சின்னப்பூ² *śinna-p-pū*, பெ. (n.) *1. விடுபூ;* loose, untied flowers. *"சின்னப்பூ வணிந்த குஞ்சி" (சீவக. 2251).* *2. சின்னம்³,-5 பார்க்க;* see *śinnam³,-5.*

[சின்னம் + பூ]

சின்னப்பூக்கொட்டைக்கரந்தை *śinna-p-pū-k-koṭṭai-k-karandai*, பெ. (n.) *பெண்களின் மாதவிடாய்த் தொல்லையைப் போக்கி, நோயெதிர்ப்பு ஆற்றலை அளிக்கும் மாசிப்பத்திரி;* Madras absinth, Madras wormwood. It cures obstructed menses and hysteria. It is used as antiseptic *(சா.அக.).*

[சின்னபூக் + கொட்டை + கரந்தை]

சின்னபின்னம் *śinna-piṉṉam*, பெ. (n.) *1. கண்டதுண்டம் (திவா.);* mangled, hacked pieces. *"தோளுந் தாளுஞ் சின்னபின்னங்கள் செய்தவதனை" (கம்பரா. நிந்தனை. 57).* *2. கணக்கதிகாரத்திற் கூறப்படும் மிகமிகச்*

சிறிய கடைக்கோடிக் கீழ்வாய் அளவு = 1/3, 22,56,000; the smallest fraction as mathematics prevalent in Tamilnāḍu as per the book Kaṇakkadikāram.

தமிழகத்தில் வழங்கிய கீழ்வாய் இலக்க வாய்பாடு.
முந்திரி = 1/320
கீழ் முந்திரி = 1/320 x 1/320
10 சின்னம் = ஒரு நுண்மை முந்திரி
10½ இம்மி முந்திரி = ஒரு கீழ் முந்திரி
ஒரு சின்னம் = 1/3,25,56,000
ஒரு நுண்மை முந்திரி = 1/32,25,600
ஒரு இம்மி முந்திரி = 1/10,75,200
இது 1/10,00,000 அளவுக்குச் சமம்.
இங்கிருந்து ஒரு இம்மியளவு கூட எடுத்துச் செல்ல இயலாது, என்பது உலகவழக்கு.

[சின்னம் + பின்னம்]

சின்னம்[1] *šiṉṉam*, பெ. (n.) *1.* புன்மை (அற்பம்); smallness. *2.* நுண்மை; minuteness. "சின்னமானுஞ் சின்னவுற்பவம்" *(ஞானா. 59: 16).* *3.* சிறியது *(யாழ்ப்.)*; anything small. *4.* முறம் *(பிங்.)*; winnowing fan. *5.* மழைத்தூறல் *(அகநி.)*; drizzling. *6.* இகழ்ச்சி *(இ.வ.)*; derision, slight.

[சில் → சின் → சின்னம்]

சின்னம்[2] *šiṉṉam*, பெ. (n.) *1.* அடையாளம் *(பிங்.)*; sign, insignia. *2.* குறி; mark, token. *3.* பெண்குறி *(பிங்.)*; pudendum mulibre. *4.* காளம்; a kind of trumpet. "சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்" *(திருவாச. 7: 7).*

L. signum; E. assign

[சில் → சின் → சின்னம் = சிறியது]

சின்னம்[3] *šiṉṉam*, பெ. (n.) *1.* துண்டு; piece. "வாளி . . . சின்னமாக வீர்ந்திட" *(திருவாலவா. 36:8).* *2.* முறிவுற்றது; anything broken. "கார்முகஞ் சின்னமென்றும்" *(கம்பரா. கரன். 177).* 3. பொடி *(பிங்.)*; powder, pollen. "சின்னப்படுங் குவளை" *(திருக்கோ. 334).* *4.* சின்னப்பூ[2], *1* பார்க்க; see *šiṉṉappū*[2], *1*. "நனை சின்னமு நீத்த நல்லார்" *(கம்பரா. பூக்கொய். 12).* *5.* கிள்ளுப்பூ; petal - pieces of flowers. "நன்னுதலப்புஞ் சின்னம்" *(கம்பரா. வனம். 14).* *6.* காசு; coin, as a piece of metal. "நாலு சின்னங் கைப்பட்ட வாறே" *(ஈடு, 4. 9: 2).* *7.* போர்க்களம் புகுங்கால் வீரர்கள், தம் வாயிலிட்டுக் கொள்ளும் பொற்றகடு *(சீவக. 2303, உரை.)*; gold piece put by a warrior into his mouth when starting for battle.

ம. சின்னம்; க. சின்னெ

[சில் → சின் → சின்னம்]

Skt. chinnam

சின்னம்[4] *šiṉṉam*, பெ. (n.) சிந்தில்; gulancha. "சின்னமானுஞ் சின்னவுற்பவம்" *(ஞானா. 59: 16).*

சின்னம்[5] *šiṉṉam*, பெ. (n.) சில்வானம்; odd. "முந்நூற்றுச் சின்னம் நாள்" *(தெ. கல். தொ. 4, எண். 140).*

[சில் → சின் → சின்னம்]

சின்னம்[6] *šiṉṉam*, பெ. (n.) பயன்பாடற்றது, பழுதுற்றது; being worn out or decayed. "சின்னச்சீரை துன்னற் கோவணம்" *(பதினொ. திருவிடை. மும். 7).*

Pali. jinno; Skt. Jirṇa.

சின்னம்படு-தல் *šiṉṉam-paḍu-*, 20 செ.குவி. (v.i.) சின்னப்படு[2] பார்க்க; see *šiṉṉa-p-paḍu*[2]-. "சின்னம்பட வருத்தஞ் செய்தாலும்" *(நீதிவெண். 64).*

[சின்னம்[1] + படு-,]

சின்னம்மா *šiṉṉammā*, பெ. (n.) சின்னம்மாள் பார்க்க; see *šiṉṉammāḷ*.

[சின்னம்மாள் - சின்னம்மா]

சின்னம்மாள் *šiṉṉammāḷ*, பெ. (n.) சிறியதாய்; mother's younger sister; wife of father's younger brother. *2.* திருமகள் *(இ.வ.)*; Goddess of Wealth.

ம. சின்னம்ம

[சின்ன + அம்மாள்]

சின்னம்மை[1] *šiṉṉammai*, பெ. (n.) சின்னம்மாள்[1] பார்க்க; see *šiṉṉammāḷ*[1].

[சின்ன = சிறிய. அம்மை = அம்மா. சின்ன + அம்மை]

சின்னம்மை[2] *šiṉṉammai*, பெ. (n.) அம்மை நோய் வகை; chicken - pox.

[சின்ன + அம்மை]

சின்னமரம் *šiṉṉa-maram,* பெ. (n.) பெரிய கட்டுமரத்திற்குத் துணையாகப் போகுஞ் சிறிய கட்டுமரம்; small cattamaram.

[சின்ன + மரம்]

சின்னமலர் *šiṉṉa-malar,* பெ. (n.) 1. சின்னப்பூ[2], 1 பார்க்க; see *šiṉṉappu*[2], *l.* "சின்னமலர்க் கோதை" (சீவக. 2369).

[சின்ன + மலர்]

சின்னமனிதன் *šiṉṉa-maṉidaṉ,* பெ. (n.) இழிகுணமுள்ளவன்; man of low character, small man.

[சின்ன + மனிதன்]

சின்னமாவிலங்கம் *šiṉṉa-māvilaṅgam,* பெ. (n.) காட்டுமாவிலங்கம்; round berried lingam tree.

[சின்ன = சிறிய. சின்ன + மாவிலங்கம்]

சின்னமாவிலிங்கை *šiṉṉa-māvilaṅgai,* பெ. (n.) மரவகை (L.); a species of garlic-pear.

[சின்ன + மாவிலங்கை]

சின்னமுண்டி *šiṉṉa-muṇḍi,* பெ. (n.) நாரையினப் பறவை; a kind of stork, little egret (சேரநா.)

சின்னமுத்து *šiṉṉa-muttu,* பெ. (n.) சின்னம்மை[2] (வின்.) பார்க்க; see *šiṉṉammai*[2].

[சின்ன + முத்து]

அம்மைநோய் கண்டவரின் உடம்பில், சிறு சிறு கொப்புளங்கள் உண்டாகும். அவை பார்ப்பதற்கு முத்துப் போன்றிருக்கும். அம்மை நோயுற்றவரை, அவருக்கு 'முத்துப் போட்டுள்ளது' யாரும் அணுகவேண்டாம் எனும்வழக்கு இன்றுமுளது.

சின்னமுள்ளங்கி *šiṉṉa-muḷḷaṅgi,* பெ. (n.) சுவற்று முள்ளங்கி; blumea amplectens.

[சின்ன + முள்ளங்கி]

சின்னமூங்கில் *šiṉṉa-mūṅgil,* பெ. (n.) கெட்டி அல்லது கல் மூங்கில்; solid bamboo.

[சின்ன + மூங்கில். சின்ன = குறைந்த, நெருங்கிய, அடர்த்தியான, கெட்டியான]

சின்னமூச்சு *šiṉṉa-mūccu,* பெ. (n.) வயிற்றுப் பிசம், சிறுநீர்ப்பை எரிச்சல் முதலியவற்றில் வலியுண்டாகிச் சிறிதளவாகப் பொறுத்துப் பொறுத்து மூச்சுவிடல்; short breath, due to some diseases of the abdomen like ascites, enlarged liver and spleen (சா.அக.).

[சின்ன = சிறிய, குறைந்த, சின்ன + மூச்சு]

சின்னமூதி[1] *šiṉṉa-mūdi,* பெ. (n.) சின்னமூதிக் கொண்டு அரசாணையைப் படைக்குச் சாற்றுவோன் (சிலப். 8: 13, உரை); royal herald who proclaims by trumpet the king's commands to his army.

[சின்னம்[2] + ஊதி]

சின்னமூதி[2] *šiṉṉa-mūdi,* பெ. (n.) பீடையுடையவள் என வையுஞ்சொல் (நெல்லை.); abusive language.

[சின்ன + மூதி. மூதேவி → மூதி]

சின்னமூளை *šiṉṉa-mūḷai,* பெ. (n.) சிறுமூளை பார்க்க; see *šiṟu-mūḷai.*

[சின்ன + மூளை]

சின்னமேளம் *šiṉṉa-mēḷam,* பெ. (n.) தண்ணுமை (மத்தளம்), துருத்தி முதலிய இன்னியங்களுடன் ஆடல் மகளிர் பாடிக் கொண்டு ஆடுதற்குரிய சதிர் மேளம் (உ.வ.); nautch music, with the accompaniment of tabor, pipe and cymbals, dist. fr. periya-mēḷam.

[சின்ன + மேளம்]

சின்னமேளமோகரா *šiṉṉa-mēḷa-mōgarā,* பெ. (n.) திருநெல்வேலியில் வழங்கிய பொற்காசுவகை (M.M.); Thirunelvēli gold coin = 3 pagodas 34 fanams 7 cash.

[சின்ன + மேளம் + மோகரா]

U. mohur.

சின்னய்யா *šiṉṉayyā,* பெ. (n.) சின்னையா பார்க்க; see *šiṉṉaiyā* (சேரநா.).

[சிற்றப்பா → சின்னய்யா]

சின்னராவுத்தன்வெட்டு *šiṉṉa-rāvuttaṉ-veṭṭu,* பெ. (n.) பழைய காசுவகை (பணவிடு. 144); an ancient coin.

[சின்னராவுத்தன் + வெட்டு]

சின்னல் *šiṉṉal*, பெ. (n.) *பகட்டு (வின்.);* foppery, extravagance.

தெ. சின்னெலு

சின்னவல்லூறு *šiṉṉa-vallūṟu,* பெ. (n.) *அரசாளிப் பருந்து;* falcon.

[சின்ன + வல்லூறு]



சின்னவிறால் *šiṉṉa-viṟāl,* பெ. (n.) *பொடிமீன் வகையுளொன்று;* a kind of Viṟāl fish.

[சின்ன + விறால். சின்ன = சிறிய]

சின்னவைசூரி *šiṉṉa-vaišūri,* பெ. (n.) *சின்னம்மை[2] பார்க்க;* see *šiṉṉammai[2] (சா.அக.).*

சின்னறிதாரு *šiṉṉaṟi-dāru,* பெ. (n.) *1. கணைத் தேவதாரு;* prickly deodar, a variety of deodar. *2. காட்டுத்தேவதாரு;* deccany deodar *(சா.அக.).*

சின்னறு *šiṉṉaṟu,* பெ. (n.) *கொடிச் சிணுங்கி;* a sensitive creeper *(சா.அக.).*

சின்னன்[1] *šiṉṉaṉ,* பெ. (n.) *1. இளமையானவ-ன் -ள்-து;* one who is young. *2. குள்ளமான வடிவுடையவன்;* a dwarf, one who is of short stature *(சேரநா.).*

ம. சின்னன்; க. சிண்ண; தெ. சின்னவாடு; பிரா. சுனா (குழந்தை)

[சில் → சின் → சின்ன → சின்னன்]

சின்னன்[2] *šiṉṉaṉ,* பெ. (n.) *சிறு குழந்தை, விலங்கு அல்லது பொருள் (யாழ்ப்.);* little child, animal or thing.

க. சிந்ந

[சில் → சின் → சின்ன → சின்னன்]

சின்னன்பின்னன் *šiṉṉaṉ-piṉṉaṉ,* பெ. (n.) *சிறியதும் பெரியதும் (யாழ்.அக.);* small as well as large.

[சின்னன் + பின்னன்]

சின்னன்பேரி *šiṉṉaṉ-bēri,* பெ. (n.) *இன்னிசை பாடும் பறவை;* a kind of bird *(சேரநா.).*

சின்னாஞ்சான் *šiṉṉāñjāṉ,* பெ. (n.) *கப்பற் கயிறு வகை;* backstay rope.

[சின்ன + ஆஞ்சான்]

சின்னாஞா *šiṉṉāñjā,* பெ. (n.) *சிற்றப்பன் (இ.வ.);* father's younger brother.

[சின்ன + ஆஞா. ஆஞா = தந்தை]

சின்னாணி *šiṉṉāṇi,* பெ. (n.) *சிறியது (இ.வ.);* little thing, a term of endearment applied to little children.

[சின் → சின்ன → சின்னான் → சின்னாணி]

சின்னாத்தாள் *šiṉṉāttāḷ,* பெ. (n.) *சின்னம்மா பார்க்க;* see *šiṉṉamma.*

[சின்ன + ஆத்தாள். ஆத்தாள் - அம்மா]

சின்னாந்திரம் *šiṉṉāndiram,* பெ. (n.) *அறுபட்ட குடல்;* bowels parted or separated by violence or force *(சா.அக.).*

சின்னாபின்னம் *šiṉṉā-piṉṉam,* பெ. (n.) *சின்னபின்னம், 1 பார்க்க;* see *šiṉṉapiṉṉam, 1.*

[சின்னம் + பின்னம்]

சின்னாயி *šiṉṉāyi,* பெ. (n.) *சின்னம்மாள் பார்க்க;* see *šiṉṉammāḷ.*

ம. சின்னாய

[சின்ன + (ஆய் →) ஆயி. ஆயி = அம்மா]

சின்னாரியம் *šiṉṉāriyam,* பெ. (n.) *கேழ்வரகு வகை (M.M. 735);* small rāgi.

[சின்ன + ஆரியம். ஆரியம் = கேழ்வரகு]

ஆரியம் பார்க்க

சின்னாருகம் *šiṉṉārugam,* பெ. (n.) *சீந்தில் (மலை.);* gulancha.

சின்னாருகை *šiṉṉārugai,* பெ. (n.) *சின்னாருகம் பார்க்க;* see *šinnārugam. 2. மூலிகை வகை;*

a kind of drug capable of turning sub-kingdom of minerals into a liquid oil (சா.அக.).

[சின்னாருகம் → சின்னாருகை]

சின்னாருகைக்கியாழம் *šinnārugai-k-kiyālam,* பெ. (n.) குட்டம், மூலம், உள்மூலம், இருமல் போன்ற கொடிய நோய்களுக்குக் கொடுக்கப்படும் கியாழம், கருக்குநீர்; šinnārugai-k-kiyālam is prescribed for leprosy, piles, fistula, consumption, urinary and venerul diseases (சா.அக.).

[சின்னாருகை + கியாழம்]

சின்னாருதம் *šinnārudam,* பெ. (n.) சின்னாருகை பார்க்க; see *šinnārugai* (சா.அக.).

சின்னான்[1] *šinnān,* பெ. (n.) சிறியவன்; younger (சா.அக.).

[சில் → சின் → சின்னான் (மு.தா. 140)]

சின்னான்[2] *šinnān,* பெ. (n.) சிறு கொண்டையோடு கூடிய கருந்தலையும் மணற்பழுப்பான செதிள் தோற்றமுமுடைய உடலும் கொண்டதும் மாந்தர் வாழ் விடங்களைச் சார்ந்து வாழ்வதுமான குருவி வகை; red vented bulbul.

[சின் → சின்னான்]

சின்னான் குருவிவகை

1. சாம்பல் தலைச் சின்னான்
2. கருங்கொண்டைச் சின்னான்
3. சிவப்பு மீசைச் சின்னான்
4. மஞ்சள் தொண்டைச் சின்னான்
5. வெண்புருவச் சின்னான்
6. மஞ்சள் புருவச் சின்னான்
7. கருஞ்சின்னான்

சின்னி *šinni,* பெ. (n.) 1. சிறியது; small child, little thing. 2. முகத்தலளவைக் கருவி; a small measure. 'இரண்டு சின்னிப் பூ' (நெல்லை.). 3. சின்னிபொம்மை பார்க்க; see *šinni-pommai.* 4. புரட்டுக்காரி (இ.வ.); tricky woman. 5. மருந்துச்செடி வகை (மூ.அ.); Indian shrubby copper leaf. 6. கிராம்பு (மலை.); cinnamon. 7. குன்றிமணி; crab's eye. 8. தண்டங்கிழங்குச் செடி வகை (வின்.); a bulbous plant.

ம. சின்னி; க. சிட்டி

[சல் → சில் = சிறியது, துண்டு. சில் → சின் → சின்னான் = சிறியவன். சில் → சின் → சின்னி = சிறியது, சிறிய முகத்தலளவை, குன்றிமணி, சிறுமதியுடைய புரட்டுக்காரி]

சின்னிக்காய் *šinni-k-kāy,* பெ. (n.) சீயக்காய்; soap-pod wattle (சேரநா.).

ம. சின்னிக்காய்

சின்னிக்கிழங்கு *šinni-k-kilaṅgu,* பெ. (n.) சிறு சின்னி மூலம்; the root of brich leaved acalypha (சா.அக.).

[சின்னி + கிழங்கு]

சின்னிச்சாறு *šinni-c-cāṟu,* பெ. (n.) 1. சிறு சின்னிச்சாறு; juice of the leaves of brich leaved acalypha. 2. சிறுநீர்; urine (சா.அக.).

[சின்னி + சாறு]

சின்னிசன்னி *šinni-šanni,* பெ. (n.) குன்றிச் செடி; crab's eye (சா.அக.).

[சின்னி + சன்னி]

சின்னிபொம்மை *šinni-pommai,* பெ. (n.) பின்னல் மயிருள்ள தலையும், மரத்தால் செய்யப்பட்ட கரங்களும், நீண்டு தொங்குஞ் சட்டையுங் கொண்டதாய், ஒரு சார் இரவலர் தம் மனம் போன போக்கில் தாளமிடும்படிச் செய்து, கையில் வைத்தாட்டும் ஒருவகைப் பொம்மை; small wooden doll carried by itinerant beggar-women, who make the doll dance and clap its hands to the accompaniment of music.

[சின்னி + பொம்மை]

சின்னிமாமுனி *šinni-māmuni,* பெ. (n.) சிருகுறுங்கை மூலிகைச்செடி; a variety of conehead plant (சா.அக.).

[சின்னி + மாமுனி]

சின்னிமார் *šinni-mār,* பெ. (n.) சிறுசின்னிச் செடி; a species of copper leaf (சா.அக.).

சின்னியிலை *šinni-y-ilai,* பெ. (n.) சிறுசின்னிக் கீரை (பதார்த்த. 536); a species of copper leaf.

[சின்னி + இலை]

சின்னான் வகைகள்

சென்னை-600 008

கருஞ்சின்னான்

மஞ்சள் புருவச் சின்னான்

வெள்புருவச் சின்னான்

மஞ்சள் தொண்டைச் சின்னான்

சின்னான்

கருங்கொண்டைச் சின்னான்

சிவப்புமீசைச் சின்னான்

சாம்பல்தலைச் சின்னான்

சின்னியுரு *šiṉṉi-y-uru,* பெ. (n.) வெள்ளைக் குன்றி; white bead vine (சா.அக.).

[சின்னி + உரு]

சின்னிவிரல் *šiṉṉi-viral,* பெ. (n.) சுண்டுவிரல் (யாழ். அக.); little finger.

[சின்னி + விரல்]

சின்னிவைப்புநஞ்சு *šiṉṉi-vaippu-nañju,* பெ. (n.) வைப்புநஞ்சு வகையுளொன்று; a prepared arsenic (சா.அக.).

[சின்னி + வைப்புநஞ்சு]

சின்னீர் *šiṉṉīr,* பெ. (n.) 1. கலங்கலான நீர் (சீவக. 2381, உரை.); muddy water. "துடியடிக் கயந்தலை வழக்கிய சின்னீரை" (கலித்.). 2. சிறுநீர் (வின்.); urine.

[சில் + நீர். சில் = சிறிதளவு, சின்னது, குறைந்தது, கலங்கியது, இழிந்தது]

சின்னீரவின்பம் *šiṉṉīra-v-iṉbam,* பெ. (n.) 1. சிற்றின்பம்; carnal pleasure. 2. கலவியின்பம்; sexual pleasure (சா.அக.).

[சின்னீரம் + இன்பம். சில் → சின்; நேரம் → நீரம்]

சின்னூல் *šiṉṉūl,* பெ. (n.) 1. சிறுநூல்; small treatise "சின்மையைச் சின்னூல் என்றது போல்" (பதிற்றுப். 76, உரை.). 2. நேமிநாதம்; a tamil grammar, Nēminadam. "சின்னூ லுரைத்த குணவீர பண்டிதன்" (தொண்டை. சத. 32).

[சில் + நூல்]

சின்னெறி *šiṉ-ṉeṟi,* பெ. (n.) கள்ளச்சிறுவழி; secret-passage. "திமிரம் போன சின்னெறி போலு மென்பார்" (பாரத. இந்திர. 31).

[சில் + நெறி]

சின்னை *šiṉṉai,* பெ. (n.) பெரிய கடல்மீன் வகை; large sea-fish. "கடல் வழிச் சுறவு சின்னை" (கந்தபு. ஏம. 25).

சின்னையா *šiṉṉaiyā,* பெ. (n.) 1. சிற்றப்பன்; father's younger brother; mother's younger sister's husband. 2. தலைவனின் மகன்; leader's son.

ம. சின்னய்ய

[சின்ன + ஐயா]

சின்னோக்கு *šiṉṉōkku,* பெ. (n.) 1. சிறுபார்வை; glance. 2. அமைந்த பார்வை அல்லது கிட்டப் பார்வை; short sight.

[சில் + நோக்கு]

சின்னோய் *šiṉṉōy,* பெ. (n.) 1. சிறு நோய்; minor complaints. 2. எளியநோய்; simple diseases without complication. 3. சிலநோய்; some diseases (சா.அக.).

[சின் + நோய்]

சின[1]-த்தல் *šiṉa-,* 3 செ.குன்றாவி. (v.t.) வெகுண்டு கடிதல், சீற்றமுறுதல்; to be enraged, to be very angry.

ம. சினக்குக; க. கினிம்பு; தெ. கினுக; து. கெணகு

[சில் → சின் → சின-,]

சின[2]-த்தல் *šiṉa-,* 3 செ.கு.வி. (v.i.) புண் முதலியன வீங்கிச் சிவத்தல் (இ.வ.); to become red with inflammation, as tumour.

சினம் = பொங்கு. புண் பொங்கிற்று எனும் வழக்குண்மை கொண்டு, இச்சொல் சில் → சின் → சின → சினம் எனவாகியிருத்தல் கூடும். சினத்தொடு எழுந்தவனைப் 'பொங்கி எழுந்தான்' என்றும், சீறிவரும் புனலைப் 'பொங்கிவரும் புதுப்புனல் என்றும், அலை ஆர்ப்பரிக்கும் கடலைப் 'பொங்குமாங்கடல்' என்றும் இருவகை வழக்கிலும் உரைத்தல் கொண்டு இதன் பொருளை உணரலாம்.

சினக்கடம் *šiṉa-k-kaḍam,* பெ. (n.) வெண்கடுகு; white mustard (சா.அக.).

சினக்குவாதம் *šiṉakku-vādam,* பெ. (n.) தன் பற்களால், தன் உடலையே அடிக்கடி கடித்துக் கொள்ளச் செய்யும் குதிரை முடக்குநோய் வகை (அசுவசா. 69); a rheumatic disease of horse in which it often bites itself.

[சிணுக்கு + வாதம்]

சிணுக்கு = சிக்குப்படுத்துதல், உடன்படாத தன்மையையுணர்த்த, முகத்தைக் கோட்டுதல்.

நோயுற்ற குதிரை, தன்னுடலின் உடன் படாமையை, அதாவது இயல்பான நிலைக்கு மாறான நிலையை வெளிப்படுத்தும் போது நிகழும் நிகழ்வுகள் எனக்கொள்வது தகும்.

சினக்கூவை *šiṉa-k-kūvai,* பெ. (n.) கூகை மஞ்சள்; violen arrow root (சா.அக.).

சினக்கெளிறு *šina-k-keḷiṟu*, பெ. (n.) எண்விரல நீளமுள்ள கெளிற்றுமீன் வகையுளொன்று; fidler macrones, attaining 8 in. in length (சா.அக.).

[சின்ன + கெளிறு = சின்னக் கெளிறு → சினக்கெளிறு]

சினச்சம் *šiṉaccam*, பெ. (n.) முளை, கிளை; a sprout, branch (சேரநா.).

மறுவ. சினப்பம்

ம. சினச்சம்

சினந்தவிர்ந்தோன் *šiṉandavirndōṉ*, பெ. (n.) சீற்றங்கடந்தவன், புத்தன் (சூடா.); Buddha, as one devoid of anger.

[சினம் + தவிர்ந்தோன்]

சினந்திட்டவிந்து *šinandiṭṭa-vindu*, பெ. (n.) இதளியம்; mercury (சா.அக.).

சினப்பம் *šiṉappam*, பெ. (n.) சினச்சம் பார்க்க; see *šinaccam*.

ம. சினப்பம்

சினப்பு[1] *šiṉappu*, பெ. (n.) 1. சினம்,1 (வின்.) பார்க்க; see *šiṉam, l.* 2. புண் முதலியவற்றின் வீக்கம்; inflammed condition, as of tumour.

ம. சினப்பு

[சின → சினப்பு]

சினப்பு[2] *šiṉappu*, பெ. (n.) 1. சினைப்பு; prickly heat. 2. வேனற்கட்டி; rash.

[சின → சினப்பு]

சினப்பு[3] *šiṉappu*, பெ. (n.) முளை, இளமொட்டு, கிளை; a sprout, tender bud, branch (சேரநா.).

ம. சினப்பு

[சினைப்பு → சினப்பு]

சினப்புக்கிள்ளு-தல் *šiṉappu-k-kiḷḷu-*, 5 செ.குன்றாவி. (v.t.) வேர்க்குரு, பரு முதலியவற்றை நகத்தாற்கிள்ளுதல்; to press out matter from pimples etc., with the finger nails (சா.அக.).

[சினப்பு + கிள்ளு-,]

சினப்புக்குத்து-தல் *šiṉappu-k-kuttu-*, 5 செ.கு.வி (v.i.) 1. சிறுசிரங்கு குத்துதல்; to prick small cutaneous eruptions. 2. வீண்காலம் போக்குதல் (உ.வ.); to waste time, as in pricking pimples.

[சினப்பு + குத்து-,]

சினப்புக்கொள்(ளு)-தல் *šiṉappu-k-koḷḷu*, 16 செ.கு.வி. (v.i.) 1. கொப்பளித்தல்; to rise as boil. 2. விம்முதல்; to distend with matter such as pus etc. 3. சீழ்கொள்ளுதல்; to suppuruate (சா.அக.).

[சினப்பு + கொள்(ளு)-,]

சினப்புண் *šiṉa-p-puṇ*, பெ. (n.) அழற்புண்; சீழ்ப்புண்; inflamed ulcer.

[சினம் + புண்]

சினம்[1] *šiṉam*, பெ. (n.). 1. சீற்றம்; வெகுளி; anger, fury. 'சினத்தால் அறுத்த மூக்குச் சிரித்தால் வருமா' (பழ). "செறிதீ நெஞ்சத்துச் சினநீடினோரும்" (பரிபா. 5:73). 2. நெருப்பு; fire. "எரிசினந் தவழ்ந்த விருங்கடற்று" (அகநா.75). 3. போர் (திவா.); battle, war.

ம. சிநம்., சினப்பு; க. கிநிசு; தெ. கிநுக.

[சுள் = சுடுதற்கருத்து வேர். சுள் → சின் → சில் → சின் → சினம். (ஓ.மொ. 307)]

சினம் நெருப்பையொத்த குணமாதலின், நெருப்பைக் குறிக்குஞ்சொல் சினத்தையுங் குறித்தது. எரிதல் என்னுஞ்சொல் சினத்தலைக் குறித்தலையும், 'சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி என்று திருவள்ளுவர் கூறியிருத்தலையும் நோக்குக (வே.க.214).

சினம்[2] *šiṉam*, பெ. (n.) 1. பரு; wart (சா.அக.).

சினம்[3] *šiṉam*, பெ. (n.) வெம்மை; heat. "சென்று சென்றிறைஞ்சிய சினந்தீர் மண்டிலம்" (பெருங். உஞ்சைக் 33:40).

[சில் → சின் → சினம்]

சினம்கொள்(ளு)-தல் *šiṉamkoḷ(ḷu)*, 16 செ.குன்றாவி. (v.i.) சின[1]-த்தல் பார்க்க; see *šina-*

ம. சினகொள்ளுக

[சினம் + கொள்-,]

சினம்பு *šiṉambu*, பெ. (n.) மிகச்சிறிது; a little (சேரநா.).

[சில் → சின் → சின்னம் → சினம்பு]

சினவர் *šiṉavar,* பெ. (n.) சினவுநர் (வின்.); foe.

ம. சினவா

[சினம் → சினவர்]

சினவரன் *šiṉavaraṉ,* பெ. (n.) சினத்தை யடக்கியவன் (சிலப். 10: 180, உரை.); one who has subdued his anger.

[சினம் → சினவரன்]

சினவல் *šiṉaval,* பெ. (n.) போர் (சூடா.); battle.

[சினவு → சினவல்]

சினவு-தல் *šiṉavu-,* 5 செ.குவி. (v.i.) 1. சினத்தல், வெகுளுதல்; கடிதல்; to be angry, indignant. "நீங்கிச் சினவு வாய்மற்று' (கலித். 116). 2. வெஞ்சினத்தால் வீறுகொண்டெழுதல்; to rise in anger or fury. "இருளுமுண்டோ ஞாயிறு சினவின்" (புறநா. 90). 3. பொருதல் (ஆ.நி.); to fight, wage war.

ம. சினியுக; க. கினிசு; தெ. கினியு. துட. சினிம்

[சின → சினவு]

சினவுநர் *šiṉavunar,* பெ. (n.) 1. பகைவர்; enemies. 2. எதிரி; adversaries. "சினவுநர்ச் சாய்த்தவன்" (பெருங். மகத. 14:174).

ம. சினவர்

[சினவு → சினவுநர்]

சினன் *šiṉaṉ,* பெ. (n.) 1. அருகன்; Aruhaṉ. 2. புத்தன்; Buddhaṉ.

Skt. jina

சினா[1] *šiṉā,* பெ. (n.) 1. வட்டத்திருப்பி (வின்.); Indian pareira. 2. பங்கம்பாளை; worm -killer.

சினா[2] *šiṉā,* பெ. (n.). சாலாம்பிசின்; gum of common saul shorea robusta (சா.அக.).

சினாசிகா *šiṉāšigā,* பெ. (n.) மராமரம்; tree of trees (சா.அக.).

சினாடி *šiṉāḍi,* பெ. (n.) சினாடிகா பார்க்க; see *šiṉāḍigā.*

சினாடிகா *šiṉāḍigā,* பெ. (n.) மூக்கிரட்டை (யாழ்அக.); pointed - leaved hogweed.

Skt. dvināsikā

சினாதாக்கு *šiṉā-tākku,* பெ. (n.) சாதிக்காய்; nutmeg (சா.அக.).

சினாது *šiṉādu,* பெ. (n.) 1. மெலிந்தது; that which is emaciated. 2. மெலிவு; emaciation; leanness, as of body.

[சின்னது → சினது → சினாது. ஒ.நோ. தன்னது → தனது → தனாது]

சினாயு *šiṉāyu,* பெ. (n.) இழைநார்; fibrous tissue ligaments, tendons (சா.அக.).

சினாவட்டம் *šiṉā-vaṭṭam,* பெ. (n.) வட்டத் திருப்பி; cissampelos parcira (சா.அக.).

[சினா + வட்டம்]

சினாவில் *šiṉāvil,* பெ. (n.) தும்பை (மலை.); white dead nettle.

சினாவு *šiṉāvu,* பெ. (n.) தகரை; ringworm plant (சா.அக.).

சினிக்கிருமல் *šiṉi-k-kirumal,* பெ. (n.) விட்டு விட்டு அடிக்கடி வரும் இருமல்; a short, frequent and feeble cough (சா.அக.).

சினித்தகாரி *šiṉitta-kāri,* பெ. (n.) மென்மையை யுண்டாக்கும் மருந்து வகை (இங்.வை.); demulcent emollient.

Skt. snigdha - kārin

சினித்தம் *šiṉittam,* பெ. (n.) மான்செவிக்கள்ளி; spiral leafy milk hedge (சா.அக.).

சினிபம் *šiṉibam,* பெ. (n.) வாகை (மலை.); sirissa.

சினேகம் *šiṉēgam,* பெ. (n.) சாதிக்காய்; nutmeg (சா.அக.).

சினேகயம் *šiṉēgayam,* பெ. (n.) சீமையிலந்தை; pyrus genius (சா.அக.).

சினேகதாரு *šiṉēgadāru,* பெ. (n.) சாதிக்காய் மரம்; nutmeg tree (சா.அக.).

[சினேகம் → சினேகதாரு]

சினேந்திரநாசன் *šiṉēndira-nāšaṉ,* பெ. (n.) நச்சுப்பாலை; minusops genus. (சா. அக.)

சினேந்திரமாலை *šiṉēndra-mālai,* பெ. (n.). உபேந்திராசிரியர் செய்த தமிழ்க் கணிய (ஆரூட) நூல்; a treatise on horary astrology by Upēndirāširiyar.

சினேந்திரன் *śiṉēndiraṉ,* பெ. (n.) 1. அருகன் (திவா.); Aruhaṉ. 2. புத்தன்; Buddhaṉ "ஆதிசினேந்திர னளவை யிரண்டே" (மணிமே. 29:47).

[சைனேந்திரன் → சினேந்திரன்]

சினை[1]-த்தல் *śiṉai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. தோன்றுதல்; to form. 2. எழுதல்; உருவாகி வளர்தல்; to arise; come into being. "தும்மல் சினைப்பது போன்று" (குறள், 1203). 3. பூ அரும்புதல் (திவ். இயற். திருவிருத். 68, வியா); to bud. 4. தழைத்தல்; to branch out on all sides. "எங்குமொக்கச் சினைத்துக் கொண்டு" (ஈடு, 8 : 1:3). 5. சிரங்கு புடைத்தல் (வின்.); to rise in pimples, as prickly heat. 6. பருத்தல் (யாழ்ப்.); to grow stout or fat, as a person used in contempt. 7. கருக்கொள்ளுதல் (வின்.); to be impregnated as animals.

ம. சினய்க்குக சனய்க்குக

[சுல் → சுன் (சுனை) → சினை (வே.க.265)]

சினை[2] *śiṉai,* பெ. (n.) 1. கொழுப்பு; fat 2. சோலை; flowers-garden, grove (சா.அக.).

சினை[3] *śiṉai,* பெ. (n.) 1. விலங்கு முதலியவற்றின் சூல்; embryo or foetus of animals; pregnancy. "சினைவளர் வாளையின்" (பரிபா. 7 : 38). 2. முட்டை (பிங்.); eggs. 3. பூமொட்டு (திவா.); flower-bud. 4. மரக்கிளை; branch of a tree. "குலவுச்சினைப் பூக்கொய்து" (புறநா. 11 : 4). 5. உறுப்பு (திவா.); member, component part, limb. 6. மூங்கில் (மலை.); bamboo.

ம. சின, சனெக்கு; க. ஜனெ, தான; து. தனெ, சனெ; தெ. ஜென

[சுன் → சின் → சினை (வே.க. 226)]

சினை[4] *śiṉaigaḷ,* பெ. (n.) பெண்களின் கருப்பையில் அமைந்துள்ள சவ்வால் இணைக்கப்பட்ட அரத்த நாளம்; vesicular graffinac - ovary consisting of a close and compact Taxture united by cellular structure (சா.அக.).

சினைக்காலம் *śiṉai-k-kālam,* பெ. (n.) சினைப்பருவம் பார்க்க; see *śiṉai-p-paruvam.*

[சினை + காலம். கோல் → கால் → காலம்]

சினைக்குழல் *śiṉai-k-kuḻal,* பெ. (n.) சினை செல்லும் பாதை; fallopian tube (சா.அக.).

[சினை + குழல்]

சினைக்கொழு-த்தல் *śiṉai-k-koḻu-,* 4 செ.குன்றாவி. (v.t.) சினைவள மாடுதல்; fertilization of ovum (சா.அக.).

[சினை + கொழு-,]

சினைக்கோளம் *śiṉai-k-kōḷam,* பெ. (n.) கருவறை; ovary-gland (சா.அக.).

[சினை + கோளம்]

சினைகரை-த்தல் *śiṉai-karai-,* 4 செ.குன்றாவி. (v.t.) கருவழித்தல்; to miscarry, to abort (சா.அக.).

[சினை + கரை-,]

சினைகொள்(ளு)-தல் *śiṉai-koḷḷ(u)-,* 13 செ.குன்றாவி. (v.t.) 1. கருக்கொள்ளுதல்; கருவுண்டாதல்; to conceive. 2. கொழுத்தல்; to be fattered. 3. சினைவளர்தல்; becoming heavy with pregnancy (சா.அக.).

[சினை + கொள்-,]

சினைத்தண்ணீர் *śiṉai-t-taṇṇīr,* பெ. (n.) சினைநீர் பார்க்க; see *śiṉai-nīr.*

சினைத்தாரை *śiṉai-t-tārai,* பெ. (n.) சினைக்குழல் பார்க்க; see *śiṉai-k-kuḻal.*

[சினை + தாரை]

சினைநண்டு *śiṉai-naṇḍu,* பெ. (n.) முட்டை கொண்ட நண்டு; crab pregnated with eggs (சா.அக.).

[சினை + நண்டு]

சினைநீர் *śiṉai-nīr,* பெ. (n.) 1. புண்ணினின்று வடியுந்தண்ணீர்; a thin colourless discharge from wounds ulcers etc. 2. சினைப்பையினின்று வடியும் நீர்; secretion from ovary (சா.அக.).

[சினை + நீர்]

சினைப்படு-தல் *śiṉai-p-paḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) மாவினம் கருக்கொள்ளுதல்; to be cow in calf (சா.அக.).

[சினை + படு-,]

சினைப்படுத்து-தல் *šiṉai-p-paḍuttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) சினையாக்கு-தல் (இ.வ.) பார்க்க; see *šiṉai-y-ākku-*,

[சினை + படுத்து-. படுத்து- துணைவினை]

சினைப்பருவம்[1] *šiṉai-p-paruvam*, பெ. (n.) நெற்கதிரில் மணிபிடிக்கும் பருவம் (வின்.); earing stage in the growth of paddy.

[சினை + பருவம்]

சினைப்பருவம்[2] *šiṉai-p-paruvam*, பெ. (n.) கருக்கொள்ளுங்காலம்; period of gestation. (சா.அக.).

[சினை + பருவம்]

சினைப்பாதை *šiṉai-p-pādai*, பெ. (n.) சினைக்குழல் பார்க்க; see *šinai-k-kuḻal* (சா.அக.).

மறுவ. சினைத்தாரை

[சினை + பாதை. பதி → பதம் = நிலத்திற் பதியும் காலடி. பதம் → பாதம் → பாதை = பாதம் பட்டு உண்டாகும் வழி]

சினைப்பி-த்தல் *šiṉaippi-*, 4 செ.குன்றாவி. (v.t.) கருக்கொள்ளச் செய்தல்; to in pregnate (சா.அக.).

[சினை → சினைப்பி-,]

சினைப்பு *šiṉaippu*, பெ. (n.) 1. வெப்பத்தால் உடலில் உண்டாகும் வியர்க்குரு; prickly heat. 2. கருக்கொள்கை; becoming pregnant. 3. கொழுப்பு; fatness.

[சினை → சினைப்பு]

சினைப்புக்கிள்ளு-தல் *šiṉaippu-k-kiḷḷu-*, 5 செகுன்றாவி. (v.t.) சினப்புக்கிள்ளு-தல் பார்க்க; see *šiṉaippu-k-kiḷḷu-*.

[சினைப்பு + கிள்ளு-,]

சினைப்பூ *šiṉai-p-pū*, பெ. (n.) கோட்டுப்பூ; flowers on branches. "சினைப்பூப் போற்றளை விட்ட" (கலித். 118).

[சினை + பூ]

சினைப்பெயர் *šiṉai-p-peyar*, பெ. (n.) 1. உறுப்பைக் குறிக்கும் பெயர் (நன். 132); noun denoting part of the whole, as kaṇ. 2. உறுப்படியாகப் பிறந்த பெயர் (நன். 281); name formed from noun, denoting part of the whole, as Kaṇṇaṉ

[சினை + பெயர். கண் உறுப்புப்பெயர். கண்ணன் உறுப்படியாகப் பிறந்த பெயர்]

சினைப்பை *šiṉai-p-pai*, பெ. (n.) சினை முட்டைகள் உருவாகும் கருக்கூடு; ovary the organ in which the eggs or their elemantary or essential parts are found developed (சா.அக.).

[சினை + பை]

சினைப்பையொழுக்கு *šiṉaippai-y-oḻukku*, பெ. (n.) சினைத்தாரையடைபட்டுக் கருக் கூட்டினின்று ஒழுகும், கருப்பை நீர்ம வொழுக்கு; a condition in which the fallopian tube is closed and consequently the tube is filled with serum until pressure causes it to escape through unterine opening (சா.அக.).

[சினைப்பை + ஒழுக்கு]

சினைமுற்றிவெளிப்படு-தல் *šiṉai-muṟṟi veḷi-p-paḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) பெண்ணின் சினை முட்டை முதிர்ந்து பருவமடைந்து கருக் கூட்டினின்று வெளிப்படுதல்; formation and discharge of ova from the ovary ovulation.

[சினைமுற்றி + வெளிப்படு-,]

சினையம்புலிநோய் *šiṉai-y-ambuli-nōy*, பெ. (n.) மகளிர்தம் பிறப்புறுப்பினின்று பால்போன்று வெண்மையாக வடியும் வெட்டை நீரொழுக்கு; discharge of a milk white fluid from the uterus or vagina (சா.அக.).

[சினை + அம்புலி + நோய்]

சினையழிவு *šiṉai-y-aḻivu*, பெ. (n.) 1. கருத்திரளாமை; அஃதாவது கருப்பைக்குள் விந்து விழுவதற்கு முன்பே, உண்டாயிருக்கும் அழிவு; tubal abortion occuring from the ampulla of the oviduct-Tubal abortion. 2. கருக் கூட்டினுள், சினைமுட்டை முதிராது இளங் கருவாயிருக்கும் போது ஏற்படும் அழிவு; foetus expelled in its embryonic state (சா.அக.).

[சினை + அழிவு]

சினையறை *šiṉai-y-aṟai*, பெ. (n.) கருப்பை; ovarium (சா.அக.).

[சினை + அறை]

சினையாக்கு¹-தல் *šinai-y-ākku-*, 5 செ.குன்றாவி. (v.t.) கருவுண்டாக்குதல்; to impregnate.

[சினை + ஆக்கு-. ஆக்கு - து.வி.]

சினையாக்கு²-தல் *šinai-y-ākku-*, 5 செ.குன்றாவி. (v.t.) மிகுதியாகத் துன்பம் தருதல்; குழப்பஞ்செய்தல்; to cause excessive trobule, annoy. 'அவன் ஆட்களைச் சினையாக்கி விடுகிறான்' (இ.வ.).

[சினை + ஆக்கு-,]

சினையாகு-தல் *šinai-y-āgu-*, 6 செ.கு.வி. (v.i.). சூலுறுதல்; impregnate. (சா. அக.)

[சினை + ஆகு-,]

சினையாகுபெயர் *šinai-y-āgu-peyar*, பெ. (n.) சினைப்பெயர் அதன் முதலுக்கு ஆகும் பெயர் (நன். 290, உரை.); synecdoche in which part is put for the whole as வெற்றிலை நட்டான்.

[சினை + ஆகுபெயர்]

சினையாறுபடுகை *šinai-y-āṟupaḍugai*, பெ. (n.) வெள்ளம் வருதற்குறியாக ஆற்றுநீர் பொசிகை; oozing of water in a river - bed indicative of the coming freshet. "சினையாறு படுகையாவது ஆறுநீர்வரஅணித்தானால் பொசிந்து உள்ளே ஜலமுண்டாயிருக்கை" (ஈடு, 1. 6 : 2, ஜீ)

[சினை + ஆறு + படுகை]

சினையிட்டலி *šinai-y-iṭṭali*, பெ. (n.) சூலுற்ற பெண்களுக்குக் கொடுக்கும் இனிப்புச் சுவைமிக்க இட்டலிவகை (நெல்லை.); a kind of sweetened iṭṭali offered to pregnant women.

[சினை + இட்டலி]

சினையெடு-த்தல் *šinai-y-eḍu-*, 4 செ.குன்றாவி. (v.t.). கருப்பையிலிருந்து சினைப்பையை அறுவை மருத்துவ முறையில் அகற்றல்; hystertomy (சா.அக.).

[சினை + எடு]

சினைவினை *šiṉai-viṉai*, பெ. (n.) உறுப்பு உணர்த்தும் பெயரின் தொழிலைக் காட்டும், வினைச்சொல் (புறநா. 9, உரை); verb relating to part of the whole, dist, fr. mudal - viṉai, as kāl muṟindadu.

[சினை + வினை]

சீ

சீ *cī/šī*, தமிழ் நெடுங்கணக்கில் 'ச்' என்ற மெய்யும் 'ஈ'கார வுயிரும் சேர்ந்துருவான உயிர்மெய் எழுத்து; the compound of c/š and ī.

[ச் + ஈ = சீ]

சீ² *šī*, பெ. (n.) 1. சீழ்; pus. "சீயார்ந் தீமொய்த்து" (திருவாச. 25: 3). 2. சளி; mucous matter, as of the nose. "குமிழ்மூக் குவைகாணுமிழ்சீ யொழுக்குவ" (மணிமே. 20: 48). 3. விந்து; semen. 4. மகளிர்தம் அரத்தப் போக்கு; menstrual blood. 5. புண்ணில் வடியும் நீர்; fluid oozing out from wound or ulcer. 6. அரத்தமுறிவு; purulance. 7. நஞ்சு; poison.

ம. சி; க. கீவு, கீவ, கீமு, கீ; தெ. சீமு; து. கீவு; குட. சீய்; கோத. சிவ்; துட. கிதில்; கூ. சீவெஞ்சி; குவி. சீவச்சி; நா. சீம; கொலா. சீம்; குரு. கீத்னா, மா. கிதொ, கித்ரொ, ஜ; பிரா. கீழ்; பட. கீவு

[சீழ் → சீ]

சீ³ *šī*, இடை. (int.) இகழ்ச்சி வெறுப்புகளின் குறிப்பு; an exclamation of contempt, disgust, repudiation. 'சீ என்கிற வீட்டில் ஈயும் நுழையாது' (பழ.).

ம., க., து. சீ

சீ⁴ *šī*, பெ. (n.) பாராமுகம் (அலட்சியம்); disdain, spurn. "சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளும்" (திருவாச. 10: 12).

ம., க., தெ., து. சீ

Mar. cī

சீ⁵-த்தல் *šī-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கீறிக் கிளறுதல்; to scratch, as fowls; to tear up earth, as pigs; to scrape. 2. துடைத்தல்; to sweep off, brush away, wipe off. "மென்பூஞ் செம்மலொடு நன்கலஞ் சீப்ப" (மதுரைக். 685). 3. போக்குதல்; to expel, remove, root out. "இருள் சீக்குஞ் சுடரேபோல்" (கலித். 100:24). 4. தூயதாக்குதல் (சூடா.); to cleanse, purify. 5. கூர்மையாகச் சீவுதல்; to sharpen. "கணிச்சிபோற் கோடு சீஇ" (கலித். 101:8).

ம. சீ.; க. சீ

கிளறுதற் பொருள் துடைத்தலுக்கும், துடைத்தற் பொருள் துடைத்துப் போக்குதலுக்கும், புடைபெயர்ந்தது. துடைத்துப் போக்கிய பின் தூயதாதலும், கூர்மையாதலுமென விரிந்தது.

சீக்கட்டு-தல் *sī-k-kaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.i.) *சீழ்பிடித்தல்;* to suppurate.

[சீழ்கட்டு → சீக்கட்டு-,]

சீக்கல்[1] *sīkkal,* பெ. (n.) சீழ்க்கை *(யாழ்.அக.)* பார்க்க; see *sīḻkkai.*

க. சிள்ளு

[சீழ்க்கை → சீக்கை → சீக்கல்; ஒ.நோ. வாழ்க்கை → வாக்கை → வாக்கல். அவனது வகைதொகையில்லா வாக்கலைப் பற்றிப் பேசிப் பயனென்ன எனும் உலக வழக்கு இன்றுமுள்ளது]

சீக்கல்[2] *sīkkal,* பெ. (n.) *கல்வகை (நாஞ்.);* laterite.

ம. சீக்கல்லு

சீக்கல்[3] *sīkkal* பெ. (n.) *காது;* ear *(சா.அக.).*

சீக்காச்சா *sī-k-kāccā* பெ. (n.) நாய்ப்புடல் எனும் கொடிவகை; wild snake gourd.

சீக்காது *sīkkādu,* பெ. (n.) *சீழ்க்காது* பார்க்க; see *sīl-k-kādu.*

ம. சீக்காது

[சீழ்க்காது → சீக்காது]

சீக்காய்[1] *sīkkāy* பெ. (n.) சீழ்க்கை *(யாழ்ப்.)* பார்க்க; see *sīḻkkai.*

[சீழ்க்கை → சீக்கை → சீக்காய்]

சீக்காய்[2] *sīkkāy* பெ. (n.) பழுக்காத பனங்காய் *(யாழ்ப்.);* unripe palmyra fruit.

சீக்காய்[3] *sīkkāy* பெ. (n.) சீயக்காய் (இ.வ.) பார்க்க; see *sīya-k-kāi.*

ம. சீவய்க்க, சீகக்காய்; க. சீகெகாயி; தெ. சீகாய்; து. சீகெகாயி; துட. சிங்கு.

[சீயக்காய் → சீக்காய்]

சீக்காய்ச்சடங்கு *sīk-kāy-c-caḍaṅgu,* பெ. (n.) சில இனத்தாருள் ஒரளவு அரிசியில் சீயக்காயும் எழுத்தாணியும் வைத்து மணமகன் முகத்துக்கு நேராகக் காட்டிக் கண்ணேறு கழிக்கும் மணச்சடங்கு (இ.வ.); ceremony in marriage among certain castes for warding off the evil eye, which consists in holding up to the face of the bride-groom a measure full of rice with a piece of soap-pod and a writing style in it.

[சீக்காய் + சடங்கு]

சீக்காய்ச்சி *sīkkāycci,* பெ. (n.) வெளிறின முகமுள்ளவள்; woman with a sallow countenance.

[சீக்காய்[2] → சீக்காய்ச்சி = பழுக்காத பனங்காய் போன்ற வெளிறின முகமுடையவள்]

சீக்காய்நிறம் *sīkkāy-niṟam,* பெ. (n.) வெளிறின நிறம் *(யாழ்.அக.);* dull green colour.

[சீக்காய்[2] + நிறம்]

சீக்காயன் *sīkkāyaṉ,* பெ. (n.) வெளிறின முகமுள்ளவன் *(யாழ்ப்.);* man with a sallow countenance, like the unripe palmyra fruit.

[சீக்காய்[2] → சீக்காயன்]

சீக்கிதாவிகம் *sīkkidāvigam,* பெ. (n.) *பாசிப்பயறு;* green-gram *(சா.அக.).*

சீக்கிரகாயம் *sīkkira-gāyam,* பெ. (n.) நரிப் புடலை; ordinary snake-gourd *(சா.அக.).*

சீக்கிரவீரணம் *sīkkira-vīraṇam,* பெ. (n.) பெரிய முள்ளங்கி; a variety of radish-large *(சா.அக.).*

சீக்கிராந்தி *sīkkirāndi,* பெ. (n.) *பசலை;* Indian spinach *(சா.அக.).*

சீக்கிராந்தூள் *sīkkirāndūḷ,* பெ. (n.) உசிலம் பொடி; powder of the washing tree *(சா.அக.).*

[சீக்கிராம் + தூள்]

சீக்கிராம்[1] *sīkkirām,* பெ. (n.) ஒருவகை *மரம்;* black sirissa.

மறுவ. சீக்கிரி

சீக்கிராம்[2] *sīkkirām,* பெ. (n.) சவர்க்காரத்திற்குப் பதிலாகப் பயன்படுத்தும் சீக்காய்ப்பொடி; soap-nut powder *(சா.அக.).*

[சீக்காய்[3] → சீக்கிராம்]

சீக்கிராம்பட்டை *sīkkirām-paṭṭai,* பெ. (n.) உசிலம்பட்டை; albizzia amara barks *(சா.அக.).*

[சீக்கிராம் + பட்டை]

சீக்கிரி *sīkkiri,* பெ. (n.) 1. உசிலமரம்; albizzia amara. 2. வெட்டுப்பாக்கு; sliced arecanut (சா.அக.).

சீக்கிரியன் *sīkkiriyaṉ,* பெ. (n.) சீக்கிரி.-1 (யாழ். அக.) பார்க்க; see *sīkkiri,-1.*

[சீக்கிரி + சீக்கிரியன்]

சீக்கிரியான் *sīkkiriyāṉ,* பெ. (n.) சீக்கிரி,-1 (மலை.) பார்க்க; see *sīkkiri,-1.*

[சீக்கிரி → சீக்கிரியான்]

சீக்கிரிவேர் *sīkkiri-vēr,* பெ. (n.) காசினிவேர்; chicori root (சா.அக.).

[சீக்கிரி + வேர்]

சீக்கு *sīkku,* பெ. (n.) செத்தை, குப்பை (யாழ்.அக.); rubbish.

[சீ⁵ → சீக்கு]

சீக்குரி *sīkkuri,* பெ. (n.) கோழியவரை; fowl's bean.

மறுவ. தம்பட்டையவரை.

சீக்குரு *sīkkuru,* பெ. (n.) முருங்கை (மலை.); horse-radish tree.

[சிக்குரு → சீக்குரு]

சீக்கூட்டு-தல் *sī-k-kūṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) சீக்கட்டு- (வின்) பார்க்க; see *sīkkāṭṭu-.*

[சீக்கட்டு → சீக்கூட்டு. கூட்டு = சேர்]

சீக்கூட்டுவிரியன் *sī-k-kūṭṭu-viriyaṉ,* பெ. (n.) தன் கடியால் சீழை உண்டாக்கும் விரியன் பாம்புவகை (இ.வ.); pus-viper, as causing pus to form by its bite.

[சீக்கூட்டு + விரியன். விரி → விரியன் = பாம்பு வகை]

சீக்கை *sīkkai,* பெ. (n.) கோழை; phlegm. "சீக்கை விளைந்தது" (திருமந். 147).

[சீ² → சீக்கை]

சீக்கொள்(ளு)-தல் *sīkkoḷḷu-,* 16 செ.கு.வி. (v.i.) சீழ்கட்டுதல் பார்க்க; see *sīḻkaṭṭu-.*

[சீழ் + கொள்-,]

சீகஞ்சாறு *sīgañjāṟu,* பெ. (n.) சிறுகீரையிலைச் சாறு; juice of pigs green (சா.அக.).

சீகட்டு *sīgaṭṭu,* பெ. (n.) சீழ்ப்பிடிப்பு; suppuration, purulence (சா.அக.).

[சீழ் + கட்டு]

சீகண்டர் *sīgaṇḍar,* பெ. (n.) சிவத்திருமேனி வகையுளொன்று (நஞ்சுண் மிடற்றர்.); a manifestation of Šiva, as having poison - stained neck. "அனந்தர் சீகண்டர் செய்யுந் தொழிலும்" (சி.சி. 1 : 19, சிவஞான.).

[சீ² + கண்டர். கண்டம் = கழுத்து; கண்டம் → கண்டர்]

சீகண்டருத்திரர் *sīgaṇḍa-ruttirar,* பெ. (n.) சீகண்டர் (சி.போ.பா. 30) பார்க்க; see *sīgaṇḍar.*

[சீகண்டர் + உருத்திரர்]

சீகநாங்கூழ் *sīga-nāṅgūḻ,* பெ. (n.) சிறு குடலடியின் கீழ் ஒட்டிச் சுருண்டு கொண்டிருக்கும் நாங்கூழ்; vermi form appendix so called from its hanging below the intestines in the shape of a worm (சா.அக.).

[சீகம் + நாங்கூழ்]

சீகம்¹ *sīgam,* பெ. (n.) தமரத்தை (மலை.); carambola apple tree.

சீகம்² *sīgam,* பெ. (n.) 1. சிறுகுடலடியுடன் தொடர்ந்திருக்கும் விரிந்த பைபோன்ற குழல்; caecum, a blind dilatation formed by the large intestine beyond the ileo-caecal valve. 2. புளியாரை; sour sorrel. 3. நாகவைப்புநஞ்சு; prepared Zinc poison.

சீகம்புல் *sīgam-bul,* பெ. (n.) ஊகம்புல் (வின்.); broom-grass.

[சீகு + அம் + புல்]

சீகர் *sīgar,* பெ. (n.) ஐம்பொன் (பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, பித்தளை); an alloy of five metals - gold, silver, copper, iron and magnet (சா.அக.).

[சீர் + கரம் → சீகரம்]

சீகரம் *sīgaram,* பெ. (n.) 1. சுக்கு; dried ginger. 2. ஐம்பொன் (பொன், வெள்ளி, செம்பு, பித்தளை, இரும்பு); an alloy of five metals - gold, silver, copper, magnet and iron.

[சீகர் → சீகரம்]

சீகா[1] *sīgā*, பெ. (n.) ஐம்பொன் (இராட்.); the five metals.

Skt. sīsādi

சீகா[2] *sīgā*, பெ. (n.) சீயக்காய்; soap-nut powder (சா.அக.).

க. சீகெ

[சீகை → சீகா]

சீகாமரம்[1] *sīgā-maram*, பெ. (n.) மருத யாழ்த் திறங்களுள் ஒன்று (பிங்.); an ancient secondary melody type of the marudam class.

சீகாமரம்[2] *sīgā-maram*, பெ. (n.) சீயக்காய் மரம்; soap-pod tree (சா.அக.).

[சீகை → சீகா + மரம்]

சீகாரம் *sīgāram*, பெ. (n.) பண்வகை (சங்.அக); a melody type.

சீகு *sīgu*, பெ. (n.) 1. சீகம்புல்; broom-grass. 2. கருப்பு வாகை; black sirissa.

மறுவ. சீகுப்புல்

தெ. சீபுரு; க. சீபரி

[சீழ்கு → சீகு]

சீகை *sīgai*, பெ. (n.) 1. வழலையைப் போல் குளியலுக்கு உதவும் காயைத் தரும் மரம்; a tree the pods of which are used the soap for washing the hair, etc.

க. சீபரி

[சீத்தல் = துடைத்தல், கழுவுதல். சீ → சிகு]

சீகைக்காய் *sīgai-k-kāy*, பெ. (n.) சீக்காய்; soap-pod (சா.அக).

ம. சீக்காயி, சீயக்காயி; க. சீகெகாயி; தெ. தீகாயி, சீகாயி.

[சிகைக்காய் → சீகைக்காய்]

சீங்கட்டான் *sīṅgaṭṭāṉ*, பெ. (n.) முள் வேங்கை; spinous kino tree (சா.அக.).

சீங்கண்ணி *sīṅgaṇṇi*, பெ. (n.) முதலைவகை (நாஞ்.); a species of crocodile.

ம. சீங்கண்ணி

[சீ = புண்ணினின்று வடியும் நீர், கண்ணீர். சீ + கண்ணி]

சீங்காய் *sīṅgāy*, பெ. (n.) இண்டு (L.); eight pinnate, soap-pod.

[சீத்தல் = துடைத்தல், தூயதாக்குதல், கழுவுதல். சீ + காய் - சீங்காய் = உடம்பைத் தூயதாக்குவதற்குப் பயன்படும் காய்]

சீங்குழல் *sīṅguḻal*, பெ. (n.) குழல் வகை; a kind of flute. "தித்தி சிறுமுகவீணை சீங்குழல்" (குற்றா. தல. தருமசாமி. 54).

ம. சீங்குழல்

[தீங்குழல் → சீங்குழல்]

சீங்கை *sīṅgai*, பெ. (n.) வேலமர வகையுள் ஒன்று; acacia pennata (சா.அக.).

சீச்சீ *sī-c-cī*, இடை. (int.) இகழ்ச்சிக்குறிப்பு (பிங்.); an exclamation of contempt, abhorrence. 'சீச்சீ என்கிறதும் இந்த வாய்தான் சிவசிவ என்கிறதும் இந்த வாய்தான்' (பழ.).

து. சீசீ

[சீ = இகழ்ச்சிக் குறிப்பு. சீ + சீ - சீச்சீ - அடுக்குத் தொடர்]

சீசி *sīsi*, இடை. (int.) சீச்சீ பார்க்க; see *sī-c-cī*. "சீசியிவையுஞ் சிலவோ" (திருவாச. 7:2).

[சீச்சீ → சீசி (செய்யுள் வழக்கு)]

சீசீ *sīsī*, பெ. (n.) சீச்சீ பார்க்க; see *sī-c-ci*.

து. சீசீ

[சீச்சீ → சீசீ]

சீசு *sīsu*, பெ. (n.) கருங்காலி மரவகையுள் ஒன்று; a kind of rose-wood (சா.அக.).

சீட்டனுப்பு-தல் *sīṭṭaṉuppu-*, 5 செ.குவி. (v.i.) சீட்டுக்கொடு-த்தல் பார்க்க; see *sīṭṭu-k-koḍu-*

[சீட்டு + அனுப்பு-,]

சீட்டாட்டம் *sīṭṭāṭṭam*, பெ. (n.) 54 அட்டைகளைக் கொண்டு விளையாடும் விளையாட்டு; cards play.

ம. சீட்டுகளி, சீட்டுக்கச்சேரி

[சீட்டு + ஆட்டம்]

சீட்டாடு-தல் *sīṭṭāḍu-*, 5 செ.குவி. (v.i.) சீட்டு விளையாடுதல்; to play at cards (செ.அக.).

க. சீடாடு; பட. சீட்டாடு

[சீட்டு + ஆடு-,]

சீட்டாள் *sīṭṭāḷ,* பெ. (n.) மடல் கொண்டு செல்லும் வேலைக்காரன்; servant, as carrying letters. சீட்டாளுக்கொரு மூட்டாளா? 'ஆட்டாளுக்கொரு சீட்டாள்; அடைப்பக் காரனுக்கொரு துடைப்பக்கட்டை' (பழ.)

[சீட்டு + ஆள். சீட்டு = நறுக்கோலை, ஓலைச்சீட்டு, மடல்]

சீட்டி *sīṭṭi,* பெ. (n.) 1. சீழ்க்கை; whistling. 2. ஊதுகுழல் (வின்.); toy whistle.

Mhr. šiti

[சீழ்க்கை → சீட்டி]

சீட்டியடி-த்தல் *sīṭṭi-y-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.i.) சீழ்க்கைஅடித்தல் (இ.வ.); to whistle.

[சீழ்க்கை → சீக்கை → சீட்டி + அடி-,]

சீட்டு *sīṭṭu,* பெ. (n.) 1. எழுத்துக்குறிப்பு; note, letter, scrap of paper or ōla containing a memorandum. 2. ஆவணம்; bond, document, promissory note. 3. கூட்டுச்சீட்டு வைப்பு (நிதி); association chit fund where the sum total of the premiums in each instalment is assigned either to the lowest bidder or to one whose name is decided by drawing lots. 4. விளையாடும் சீட்டு; playing cards. 5. பட்டியல்; list. "நூற்றொரு பேதமாய் விரியுமென்று பாடியகாரர் சீட்டுக் கொடுப்பர்" (பி.வி. 17, உரை). 6. ஓலை நறுக்கு; palm-leaf. 7. சிற்றோலை; letter, small piese of paper. 8. உசீட்டு; ticket. 9. நுழைவுச் சீட்டு; pass. 10. பற்றுச்சீட்டு; voucher.

ம., பட. சீட்டு; க. சீடு, சீடி; து. சீட், சீடி; H. ciṭṭhī - small; E. chit - a baby, a piece of paper; AS. cith - a young, lander shoot.

[கள் = சிறுமை. கள்ளாணி = சிறிய ஆணி. கள் → சுண்டு = சிறியது. கள் → (சுட்டு) → சிட்டு → சீட்டு = ஓலைநறுக்கு (மு.தா. 140) (சு.வி.19)]

சீட்டுக்கச்சேரி *sīṭṭu-k-kaccēri,* பெ. (n.) சீட்டாட்டம்; game with cards.

ம. சீட்டுகச்சேரி

[சீட்டு + கச்சேரி]

சீட்டுக்கட்டு[1] *sīṭṭu-k-kaṭṭu,* பெ. (n.) விளையாடுஞ் சீட்டுத்தொகுதி; pack of playing cards (செ.அக.).

[சீட்டு + கட்டு. சீட்டு = விளையாட்டு அட்டை. குல் → குள் → கள் → கட்டு = தொகுதி, சேர்க்கை]

சீட்டுக்கட்டு[2]**-தல்** *sīṭṭu-k-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) கூட்டுச்சீட்டிற் சேர்ந்து பணங்கட்டி வருதல்; to subscribe to a chit fund (செ.அக.).

[சீட்டு + கட்டு-. சீட்டு = கூட்டுச் சீட்டு வைப்பு (நிதி). கட்டுதல் = சேர்த்தல், செலுத்துதல்]

சீட்டுக்கரைசுவான் *sīṭṭu-k-karaisuvāṉ,* பெ. (n.) ஏலச் சீட்டு நடத்துபவன் (இ.வ.); foreman of a chit transaction.

க. கரெ (அழைத்தல்)

[சீட்டு + கரைசுவான். கரைதல் சரைசுதல். ஏலத் தொகையை உரக்கக் கூவுதல்]

சீட்டுக்கவி *sīṭṭu-k-kavi,* பெ. (n.) ஓலைப்பா; epistle or letter written in verse. "சேரற்குச் சீட்டுக்கவி பாடிக்கொடுத்த சொக்கே" (திருவிளை. பயகர. 55).

[சீட்டு + கவி. சீட்டு = ஓலை நறுக்கு, சிற்றோலை]

சீட்டுக்கிழி-த்தல் *sīṭṭu-k-kiḻi-,* 5 செ.கு.வி. (v.i.) ஒருவரைப் பணியிலிருந்து நீக்குதல்; to sake one from service. 'ஒழுங்காய்ப் பணி செய்யாவிடில் சீட்டைக் கிழித்து விடுவேன்' (உ.வ.).

சீட்டுக்கிழிதல் *sīṭṭu-k-kiḻidal,* பெ. (n.) இறக்கை (ஒருவனது வாணாள் வரையப்பட்ட சீட்டுக் கிழிகை); lit., tearing of one's life record, death.

க. சீழபரு

*[சீட்டு + கிழிதல். சீட்டு = ஓலைநறுக்கு, ஏடு, சிற்றோலை. மண்ணில் பிறந்த மாந்தருயிர் ஒவ்வொன்றிற்கும் தனித் தனியேட்டில் கணக்கெழுதி வைக்கப் பட்டிருக்கிறது என்பதும் குறித்த நாள் முடிந்ததும், தன் கணக்கு முடிவுறும் என்பதும், மக்களின் நம்பிக்கை. அந்த வகையில், ஒருவனது சாவைக் குறிக்கும்

போது, அவன் கணக்கு முடிந்து விட்டது என்றும், அவன் சீட்டு கிழித்தாயிற்று என்றும் கூறுதலை இன்றும் காணலாம். கடும் நோயிலிருந்தும், ஏதத்திலிருந்தும் தப்பிப் பிழைத்தோரை 'அவன் கணக்கு முடியவில்லை போலும்' என்பர். சாவுக்கு ஏங்கும் முதியவரும், நோயரும், என் ஏட்டை எப்போது பார்ப்பானோ எனப் புலம்புவர்]

சீட்டுக்கீறு-தல் *sīṭṭu-k-kīṟu-*, 5 செ.கு.வி. (v.i.) ஒருவனைக் கெடுக்கச் சூழ்தல் (இ.வ.); to contrive or resolve upon one's ruin.

ம. சீட்டுகீறுக

[சீட்டு + கீறு. சீட்டு = இறைவனால் பேணப்படும் வாழ்வுக்கணக்கு, வாழ்வு, வாழ்க்கை. கீறு = கிறுக்கு, கிழி, சீரழிவு, கேடு]

சீட்டுக்குலுக்கு-தல் *sīṭṭu-k-kulukku-*, 5 செ.கு.வி. (v.i.) திருவுளச்சீட்டுக் குலுக்கிப் போடுதல்; to cast lots (செ.அக.).

[சீட்டு + குலுக்கு. இருவேறு வினைகளில் எதைச் செய்வதென மனந்தடுமாறும் வேளையிலும், சம வாய்ப்புள்ளோரில் யாரைத் தெரிவுசெய்வது எனும் நிலையிலும், ஒரு கூட்டத்தாருள் ஒருவரைத் தெரிவுசெய்ய வேண்டிய நிலையிலும், சீட்டுக்குலுக்கித் தெரிவு செய்யும் பழக்கம் இன்றுமுளது. சீட்டாவது துண்டுச்சீட்டு. அதில் தெரிவு செய்யவேண்டிய வினைகளையோ, பெயர்களையோ தனித்தனியே எழுதிச் சுருட்டி இரு உள்ளங்கைக்குள்ளுமிட்டுக் குலுக்கிப்போட்டு, இளமகவொன்றினைக் கொண்டு ஒரு சீட்டை எடுக்கச்சொல்லி, அச்சீட்டிலுள்ளதே தெரிவுபெற்றதாக அறிவிப்பர். தேர்தல் போன்ற போட்டிகளில் சமவளவு நேரிபெற்ற வேட்பாளரிருவரு ளொருவரைத் தெரிவு செய்ய இம்முறை கையாளப்படுவதை இன்றும் காணலாம்]

சீட்டுக்கொடு-த்தல் *sīṭṭu-k-koḍu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. மூலாவணம் முதலியன கொடுத்தல் (வின்.); to tender a bond, voucher, draft, etc. 2. வேலையினின்று விலகக் கட்டளையிடுதல் (உ.வ.); to dismiss, as giving written order to stop work. அவன் நடத்தை சரியில்லை சீட்டுக் கொடுத்து வீட்டுக்கன்பு. 3. குறிப்பை யுணர்த்துதல்; to send a piece of paper with a message. பேச்சை முடித்துக் கொள்ளுமாறு சீட்டுக் கொடுத்தார்.

[சீட்டு + கொடு. சீட்டு = மடல், ஆணை, துண்டுத்தாள்]

சீட்டுத்தட்டு-தல் *sīṭṭu-t-taṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) சீட்டுக்குலுக்கு-தல் (நெல்லை.) பார்க்க; see *sīṭṭu-k-kulukku-*.

[சீட்டு + தட்டு-,]

சீட்டுதறு-தல் *sīṭṭu-daṟu-*, 2 செ.கு.வி. (v.i.) சீட்டுக்குலுக்கு-தல் (இ.வ.) பார்க்க; see *sīṭṭu-k-kulukku*.

[சீட்டு + உதறு-,]

சீட்டுநாட்டு *sīṭṭu-nāṭṭu*, பெ. (n.) 1. ஆதரவுமுறி (உ.வ.); note, bond. 2. கூட்டுச்சீட்டு முதலியன; chit or similar profit-earning transaction. 'சீட்டுநாட்டிற் சேர்ந்தால் பணம் பெருகும்' (நெல்லை).

[சீட்டு + நாட்டு. மரபிணை மொழி]

சீட்டுநெல் *sīṭṭu-nel*, பெ. (n.) கூட்டுச்சீட்டுப் பொருளு(நிதி)க்குப் பிறன்மூலமாக வேனும் பிறனுக்கு, அப்பொருள் (அந்நிதி) மூலமாக வேனும், சேரவேண்டிய நெல் (இ.வ.); paddy due from, or to, a chit transaction.

[சீட்டு + நெல்]

சீட்டுப்பணம் *sīṭṭu-p-paṇam*, பெ. (n.) கூட்டுச் சீட்டுப்பொருளு (நிதி)க்குப் பிறன் மூலமாக வேனும், பிறனுக்கு அப்பொருள் (அந்நிதி) மூலமாகவேனும், சேரவேண்டிய பணம்; money due from, or to, a chit fund (செ.அக.).

[சீட்டு + பணம்]

சீட்டுப்பிடி[1]-த்தல் *sīṭṭu-p-piḍi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. கூட்டுச்சீட்டு ஏற்படுத்துதல் (இ.வ.); to organise a chit transaction. 2. சீட்டில் ஏலமெடுத்தல் (இ.வ.); to bid, as a subscriber in a chit transaction.

[சீட்டு + பிடி. பிடி = பற்றுதல், வெல்லுதல்]

சீட்டுப்பிடி²-த்தல் *śīṭṭu-p-piḍi-*, 4 செ.கு.வி. (v.i.) *சீட்டு விளையாட்டில் பிறர் சீட்டை வென்றெடுத்தல்;* to win a trick in card-play.

[சீட்டு + பிடி-,]

சீட்டுப்புள்ளி *śīṭṭu-p-puḷḷi*, பெ. (n.) *சீட்டுச் சேர்ப்பில் பணங்கட்டுவோன் (இ.வ.);* subscriber to a chit-fund.

[சீட்டு + புள்ளி. புள்ளி = ஆள் (காரணவாகுபெயர்). ஒ.நோ. பெரும்புள்ளி, நல்லபுள்ளி]

சீட்டுப்போடு-தல் *śīṭṭu-p-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. *சீட்டுக்குலுக்கு-தல் பார்க்க;* see *śīṭṭu-k-kulukku-*. 2. கூட்டுச்சீட்டு வைப்பில் (நிதியில்) பங்கெடுத்தல்; to take up shares in a chit fund. 3. *சீட்டுவிளையாடுதல்;* to play at cards. 4. *சீட்டாடுபவருள், ஒருவர் மற்றவர்க்குச் சீட்டுகளைக் கலைத்துப் பிரித்துப்போடுதல்;* to shuffle and distribute the cards.

ம. சீட்டிடுக

[சீட்டு + போடு. சீட்டு = நறுக்குச்சீட்டு, சிற்றோலை, விளையாட்டுச்சீட்டு (நிதியம்). போடு = நழுவவிடு, அடி, செலுத்து, சேர். 'போடு'. து.வி. போகவிடு → போடு]

சீட்டுவட்டமறுதி *śīṭṭu-vaṭṭam-aṟudi*, பெ. (n.) *சீட்டு முடிவு (நாஞ்.);* close or end of a chit transaction.

[சீட்டு + வட்டம் + அறுதி]

சீட்டுவாங்கு-தல் *śīṭṭu-vāṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *தள்ளப்படுதல்;* to receive dismissal order. 2. இறத்தல் (எமனுடைய சீட்டுப்பெறுதல்); to die as receiving Yama's mandate (செ.அக.).

[சீட்டு + வாங்கு-,]

சீட்டுக்கிழி-தல் பார்க்க

சீட்டுவாசகம் *śīṭṭu-vāśagam*, பெ. (n.) *கடிதத்தில் அடங்கியுள்ள பொருள் (யாழ்ப்.);* tenor or contents of a letter.

[சீட்டு + வாசகம்]

சீட்டுவிழு-தல் *śīṭṭu-viḻu-*, 2 செ.கு.வி. (v.i.) திருவுளச்சீட்டு முதலியன ஒருவன் சார்பாக உரிமையாதல்; to fall to one's lot, as a lottery, chit (செ.அக.).

[சீட்டு + விழு-,]

சீட்டுகுலுக்கு-தல் பார்க்க

சீட்டை¹ *śīṭṭai*, பெ. (n.) *சீட்டி² (இ.வ.) பார்க்க;* see *śīṭṭi²*.

[சீட்டி → சீட்டை]

சீட்டை² *śīṭṭai*, பெ. (n.) *சீட்டைக்கதிர் (யாழ்ப்.) பார்க்க;* see *śīṭṭai-k-kadir*.

[சிட்டு → சீட்டு → சீட்டை]

சீட்டைக்கதிர் *śīṭṭai-k-kadir*, பெ. (n.) 1. மறுகாம்பில் (இரண்டாம் அறுவடையில்) விளையுங்கதிர் (யாழ்ப்.); ear of corn in the second growth. 2. ஏழைகள் பயன்பாட்டிற்கு விடப்பட்ட கதிர்; gleanings left for the poor.

மறுவ. மறுதாம்புப்பயிர்

[சிட்டு → சீட்டு → சீட்டை + கதிர்]

சீட்டைவாங்கு-தல் *śīṭṭai-vāṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) மறுகாம்பில் (இரண்டாம் அறுவடையில்) கதிர்பரிதல்; to shoot for the ear of corn in the second growth (செ.அக.).

[சீட்டை + வாங்கு-,]

சீடகாபி *śīḍakāpi*, பெ. (n.) இலவமரம்; silk cotton tree (சா.அக.).

சீடிமண் *śīḍimaṇ*, பெ. (n.) அப்பிரமண்; talc earth (சா.அக.).

சீடு¹-தல் *śīḍu-*, 5 செ.குன்றாவி. (v.t.) மூடுதல்; to cover. "பொடிசீடின தணல்போலே யிருக்கை" (திவ். திருச்சந்த. 9, வியா, ப. 29).

சீடு² *śīḍu*, பெ. (n.) நெசவில் பயன்படுத்தும் எட்டுக்குஞ்சவளவு நீளமுள்ள நூற்கண்டு; skein of thread = 8. kuñjam.

தெ. சீடு, க. சிடுகு

[சீர் = துலை, அளவு. சீர் → (சீட்) → சீடு]

சீடை *śīḍai*, பெ. (n.) 1. உருண்டை வடிவான சிறுநொறுவை வகை; small ball cakes of rice flour. "சீடைகாரெள்ளினுண்டை" (திவ். பெரியாழ். 2 : 9.9). 2. நருங்கல் (யாழ்ப்); stunted

growth, as of tree, child, etc. *3. நான்கு விரல நீளமும் மஞ்சள்கலந்த நீலநிறமுமுள்ள மீன்வகை;* sardine, golden shot with purple, attaining 4 in. in length.

ம. சீட; க. சீடெ, சிடெ; தெ. சீடெலு, சீட, சிடெ.

[சில் → சிறு → சிடு → சீடு → சீடை]

சீடைப்புழு *sīḍai-p-puḻu*, பெ. (n.) *செடிகளிலுள்ள புழுவகையுளொன்று;* a worm found in plants *(சா.அக.).*

க. சீடெகுளு

[சீடை + புழு]

சீடையாய்ப்போ-தல் *sīḍai-yāy-p-pō-*, *8 செ.கு.வி.* (v.i.) *அதிர்ச்சியால் வளர்ச்சி குன்றல்;* to be stunted in growth *(சா.அக.).*

[சீடையாய் + போ. சிட்டு → சீட்டு → சீடை. சிட்டு = சிறியது, குட்டையானது, வளர்ச்சியற்றது]

சீண்டரம் *sīṇḍaram*, பெ. (n.) *தொந்தரை (உ.வ.);* teasing, vexing.

தெ. சீண்டரமு

[சீண்டு → சீண்டரம்]

சீண்டல் *sīṇḍal*, பெ. (n.) *விழல்நாற்றம்;* bad or rancid smell *(சா.அக.).*

[சீ → சீண்டு → சீண்டல். சீ = இகழ்ச்சிக் குறிப்பு, இழிவானது]

சீண்டிரம்[1] *sīṇḍiram*, பெ. (n.) *சீண்டரம் பார்க்க;* see *sīṇḍaram.*

ம. சீண்ரம்

[சீண்டரம் → சீண்டிரம்]

சீண்டிரம்[2] *sīṇḍiram*, பெ. (n.) *1. அழுக்கு (சுசுமாலம்) (வின்.);* filthiness, nastiness, stench. *2. இகழ்வுரை (யாழ்.அக.);* word of contempt.

[சீண்டு² → சீண்டிரம்]

சீண்டு[1]**-தல்** *sīṇḍu-*, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தீண்டியுணர்த்துதல்;* to tap, touch gently, as in drawing one's attention. *2. தொந்தரவு செய்தல்;* to tease, vex.

ம. சீண்டுக

[தீண்டு → சீண்டு]

சீண்டு[2] *sīṇḍu*, பெ. (n.) *தயிர் முதலியவற்றின் கெட்டவாடை;* stench, as of rancid curd. *"சீண்டு நாறுவது முதலிய குற்றங்கள் இல்லாத தயிர்" (சிவதரு. பரமதரு. 35, உரை).*

Tu. sīntelu

[சீ → சீண்டு. சீ - இகழ்ச்சிக்குறிப்பு, இழிவானது, தாழ்ந்தது]

சீத்தடி-த்தல் *sīttaḍi-*, *4 செ.குன்றாவி.* (v.t.) *காற்று வாரிவீசுதல்;* to sweep away, as wind. *"பொடியைச் சூறை சீத்தடிப்ப" (கலிங். 78).*

[சீய் → சீய்த்து + அடி → சீத்தடி-,]

சீத்தபுழுதி *sītta-puḻudi*, பெ. (n.) *உழுதும் விதைக்காத நிலம்* (M.Sm.D.i. 279); land ploughed but not sown.

[சீ⁵ → சீ-த்தல் + புழுதி]

சீத்தலைச்சாத்தனார் *sīttalai-c-cāttaṉār*, பெ. (n.) *1. கடைக்கழகப் புலவர்;* a poet of the last Šaṅgam grain merchant of Madura. *2. மணிமேகலையாசிரியர்;* the author of Maṇi-mēgalai.

[சீத்தலை + சாத்தனார்]

சீத்தி *sītti*, பெ. (n.) *இளப்பம்;* inferiority. *'அவனிலும் நான் சீத்தியா' (வின்.).*

[சீத்தை → சீத்தி]

சீத்தியம் *sīttiyam*, பெ. (n.) *சிறுதவசம் (யாழ்.அக.);* grain.

சீத்தியோணான் *sītti-y-ōṇāṉ*, பெ. (n.) *ஒரு வகை சிற்றோந்தி (வின்.);* a kind of bloodsucker.

[சீத்தி + ஓணான்]

சீத்திரை *sīttirai*, பெ. (n.) *அம்மான்பச்சரிசி;* raw rice plant *(சா.அக.).*

சீத்து *sīttu*, பெ. (n.) *மூங்கில்வகையுள் ஒன்று;* a kind of bright green bamboo *(சா.அக.).*

சீத்துப்பூத்தெனல் *sīttu-p-pūtteṉal*, பெ. (n.) *1. மூச்சுத்திணறுதற் குறிப்பு;* onom. expr. of short, quick breathing. *2. பாம்பு சீறுதற்குறிப்பு;* hissing, as of an irritated serpent. *3. முறுமுறுத்தற் குறிப்பு;* scolding, querulousness.

சீத்துவம்[1] *šittuvam*, பெ. (n.) *1.* வளம்; prosperity. "*சீத்துவமாய் வாழ்வதுவும்*" *(பணவிடு. 158). 2.* தூய்மை *(வின்.);* cleanliness, decency.

ம. *சீத்தந;* Skt. *šrī-tva*

[சீர் → சீர்த்தி → சீத்தி → சீத்துவம்]

சீத்துவம்[2] *šittuvam*, பெ. (n.) *1.* ஊட்டச்சத்து; nutritiousness. "*சீத்துவமில்லாத சாப்பாடு*" *(யாழ்ப்.). 2.* திறன்; strength, energy. "*சீத்துவங் கெட்டவன்*" *(நெல்லை.). 3.* உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது; anything that is necessary for life. "*சீத்துவமிதார்க்குந் தெரியாதோ*" *(பஞ்ச. திருமுக. 1406).*

Skt. *jīva-tva*

[சீத்துவம்[1] → சீத்துவம்[3]]

சீத்தை *šittai*, பெ. (n.) *1.* குணமின்மை *(பிங்.);* want of character, lowness, badness. *2.* கைவிடப்பட்டவன்; lost person. "*சீத்தையாங்... கடியவும்... பாய்ந்தான்*" *(கலித். 86). 3.* கீழ்மகன் *(திவா.);* low, base person. *4.* அசடன் *(அக.நி.);* fool, dolt. *5.* பதனழிவு *(வின்);* decay, rottenness, unhealthiness. *6.* சீத்தைப்பூரான் *(யாழ்ப்)* பார்க்க; see *šittai-p-pūrāṉ*.

ம. *சீத்த*

[சீ[3] → சீத்தை. சீ = இகழ்ச்சி]

சீத்தைக்கண் *šittai-k-kaṇ*, பெ. (n.) புளிச்சைக் கண் *(வின்.);* blear eyes.

ம. *சீக்கண்ணு*

[சீத்தை + கண்]

சீத்தைக்காடு *šittai-k-kāḍu*, பெ. (n.) அடர்ந்த காடு *(வின்.);* jungle, thicket.

[சீத்தை + காடு]

சீத்தைத்தகன் *šittai-t-tagaṉ*, பெ. (n.) சீத்தைப் பூரான் *(வின்.)* பார்க்க; see *šittai-p-pūrāṉ*.

சீத்தைப்பூரான் *šittai-p-pūrāṉ*, பெ. (n.) கெட்டுப்போன பனந்தகன் *(யாழ்ப்.);* rotten kernel of a palmyra stone.

சீதக்கட்டு *šida-k-kaṭṭu*, பெ. (n.) சீதவழும்பு *(நெல்லை.);* slimy, mucous matter voided in dysentery.

[சீதம் + கட்டு]

சீதக்கடுப்பு *šida-k-kaḍuppu* பெ. (n.) சீதக்கட்டால் மலவாயிலில் தோன்றும் வலி; sharp, straining pain in dysentery *(செ.அக.).*

[சீதம் + கடுப்பு]

சீதக்கழிச்சல் *šida-k-kaḻiccal*, பெ. (n.) வயிற்றுப் போக்கு *(வின்.);* dysentery.

மறுவ. *சீதக்கழிவு*

[சீதம் + கழிச்சல்]

சீதக்காதி *šida-k-kādi*, பெ. (n.) 17-ம் நூற்றாண்டில் கீழக்கரையில் வாழ்ந்தவரும் புலவர்களைப் பெரிதும் போற்றி வந்தவருமாகிய ஒரு முகமதியச் செல்வர் (Rd. M. 228); Syed Kadir, a Muhammadan nobleman of Kīlakkarai near Rāmnāḍ and a great patron of learning, 17th century.

'சையத்காதிர்' எனும் முகமதியப்பெயர் தமிழ் மரபிற்கேற்பச் சீதக்காதி என்றானது.

சீதநாடு *šida-nāḍu*, பெ. (n.) கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டனுள் கோயமுத்தூர், (நீலமலை) மாவட்டப் பகுதிகளைக் கொண்ட நாடு (நன். *273, உரை);* the region where a dialect of Tamil was spoken, corresponding to portions of Coimbatore and Udaga-maṇḍalam, one of 12 koḍuntamiḻ-nāḍu.

ம. *சீதநாடு*

[சீதம் + நாடு]

சீந்தல்[1] *šindal*, பெ. (n.) *1.* மழைத்தூறல் *(வின்.);* drizzle. *2.* மூக்குச்சளி; mucous matter of the nose. "உய்க்குமிழுஞ் சீந்த லுளதேயோ" *(அருட்பா. 1, நெஞ்சறி. 320).*

[சிந்து → சீந்து → சீந்தில்]

சீந்தல்[2] *šindal*, பெ. (n.) குளிர்ச்சி; coldness, chillness.

[சீ → சீந்தில்]

சீந்தி *šindi*, பெ. (n.) சீந்தில்[1] *(இ.வ.)* பார்க்க; see *šindil*[1].

Skt. *jīvantī*.

சீந்தில் *šindil*, பெ. (n.) படர்கொடி வகை; gulancha, "வீழ் என்பது ஆல் . . . சீந்தில்கட் குரித்து" *(நன். 387, மயிலை).*

[தெல் → தென் → தென்பு = தெளிவு, தென் → தேன் = இனிமை, இனிய மணம். தென் → தேம் → தீம் = இனிமை. தீம் → சீம் → சீந்தில் = இனிப்புச் சுவையுடையது. ஒ.நோ. க. சீ, சீயி (இனிமை)]

சீந்தில்

சீந்திலுப்பு *sīndil-uppu*, பெ. (n.) சீந்திற்சருக்கரை (மூ.அ.) பார்க்க; see *sīndir-šarukkarai.*

[சீந்தில் + உப்பு]

அவையல் கிளவியாக உப்பைச் சருக்கரை என வழங்கும் மரபு, இன்றுமுளது. அதனடிப் படையில் சருக்கரையை உப்பு என வழங்குவது மருத்துவக் குழூஉக்குறி போலும்.

சீந்திற்சருக்கரை *sīndir-šarukkarai*, பெ. (n.) சீந்திற்கொடியிலிருந்து எடுக்கப்படும் மருந்துப்பு (மூ.அ.); a medicinal salt prepared from gulancha stalk.

[சீந்தில் + சருக்கரை. சருவுதல் = சாய்தல். சரிதல் → சருவு → சருகு. சருகுதல் = சரிதல். சருகு → சருக்கு → சருக்கரம் → சருக்கரை]

சீந்து¹-தல் *sīndu-*, 5 செ.குன்றாவி. (v.t.) சினத்தல்; to be angry with. "சீந்தாநின்ற தீமுக வேலான்" (சீவக. 1055).

[சீறு → சீந்து-,]

சீந்து²-தல் *sīndu-*, 5 செ.கு.வி. (v.i.) சீறுதல்; to hiss as a serpent. "பைத்துச் சீந்திய வரவம்" (வாயுசங். கிரியாபூ. 40).

[சீறு → சீந்து-,]

சீந்து³-தல் *sīndu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. சிந்துதல்; to cast, scatter. 2. மூக்குச் சிந்துதல் (வின்.); to blow, as the nose.

ம. சீந்துக, சீற்றுக; க. சீன், சீந்து, சீந்த்; தெ. சீந்து, சீது; து. சீந்த்ருனி, இம்புனி; கோண். ஈசானா; கூ. ச்ரீந்து; குவி. சிந்தலி, பர். சீந்த், தீத்; கட. சீந்த்; குரு. சீர்னா; மா. இன்செ; பட. சீன்சு

[சிந்து → சீந்து-,]

சீந்து⁴-தல் *sīndu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மதித்தல்; to have, regard for, respect. யார் உன்னைச் சீந்துவார்கள் (சென்னை). 2. விரும்புதல் (யாழ்.அக.); to desire.

[சிண்டு → சீந்து-,]

சீந்து⁵-தல் *sīndu-*, 5 செ.குன்றாவி. (v.t.) தீண்டுதல்; to touch. "அக்குமணியைக் கொடுத்தா லார்சீந்துவார்கள்" (பஞ்ச. திருமுக. 1998).

[தீண்டு → சீந்து-,]

சீப்பங்கோரை *sīppan-gōrai*, பெ. (n.) கோரைவகை (யாழ்.அக.); clubrush, bulrush.

[சீப்பு + அம் + கோரை]

சீப்பால் *sīppāl*, பெ. (n.) சீம்பால் (வின்.) பார்க்க; see *sīmbāl.*

[சீம்பால் → சீப்பால்]

சீப்பி *sīppi* பெ. (n.) குழந்தைகளுண்ணும் சிற்றுண்டிவகை; a sweet meat in the form of a stick chewed by children.

[சூப்பு → சூப்பி → சீப்பி (கொ.வ.)]

சீப்பிடு-தல் *sīppidu-*, 18 செ.குன்றாவி. (v.t.) மயிர் சீவுதல் (யாழ்.அக.); to comb the hair.

[சீப்பு + இடு-,]

சீப்பு *sīppu*, பெ. (n.) 1. மயிர்வாருங் கருவி; comb. "பெருவெண் சீப்பிற் றிருவுற வாரி" (பெருங். உஞ்சைக். 34: 190). 2. வாழைக்குலைச் சீப்பு (உ.வ.); small cluster or bunch of plantain fruits. 3. கதவின்தாழ் (பிங்.); bolt. 4. கதவுக்கு வலியாக உள்வாயிற்படியில் நிலத்தே வீழ விடும் மரம்; wooden brace to a door, driven into the ground in bolting. "எழுவுஞ் சீப்பும்" (சிலப். 15: 215). 5. மதகிலுள்ள அடைபலகை (நாஞ்.); shutter of a sluice. 6. விலாவெலும்பு (யாழ்ப்.); rib.

7. தோட்சீப்பு (வின்.); bones of the shoulder joint. 8. நெசவுக்கருவியின் ஓர் உறுப்பு; weaver's reed frame having parallel flat strips of metal or reed between which the warp threads pass. 9. சீப்பங்கோரை (மூ.அ.) பார்க்க; see *sippaṅgōrai*. 10. பாளம் (நெல்லை.); lamina, flat piece. 11. காற்று முதலியவற்றால் அடித்துக் கொண்டு வரப்படுவது; that which is wafted, as fragrance by wind. "நாற்றம் . . . மலிர்கால் சீப்பு" (பரிபா. 8 : 54).

ம. சீப்பு, சீர்ப்பு; தெ. சிபு, து. சீப்பு, கீபு; கோத. சீபி; துட. கிச், பர். கீடாத்; பட. சீப்பு.

[சீர் → சீர்ப்பு → சீப்பு]



சீப்பு

சீப்பு²-தல் *sippu-*, 5 செ.குன்றாவி. (v.t.) சப்புதல் (உ.வ.); to suck.

தெ., க. சீபு

[சப்பு → சிப்பு → சீப்பு-,]

சீப்புக்கோரை *sippu-k-kōrai*, பெ. (n.) 1. பயிரோடு முளைக்குங் களைவகை (வின்.); a parasitic plant. 2. சீப்பங்கோரை பார்க்க; see *sippaṅgōrai*.

[சீப்பு → கோரை]

சீப்புச்சரட்டை *sippu-c-caraṭṭai*, பெ. (n.) முதுகுப்புறத்தில் சீப்புப்போன்ற செதிலுடைய மீன்வகை (வின்.); a kind of fish with comb-like fins on the back.

[சீப்பு → சரட்டை]



சீப்புச்சரட்டை

சீப்புச்சிப்பி *sippu-c-cippi*, பெ. (n.) சீப்பின் வடிவுடைய சிப்பி (வின்.); a comb - like shell.

[சீப்பு + சிப்பி]

சீப்புச்சுறாண்டி *sippu-c-curāṇḍi*, பெ. (n.) சீப்புச்சரட்டை பார்க்க; see *sippu-c-caraṭṭai*.

[சீப்பு + சுறாண்டி. சுறா → சுறாண்டி]

சீப்புசவாய் *sippušavāy*, பெ. (n.) கப்பலின் முகப்புக்கட்டையிற் கட்டுங்கயிறு; jib-stay.

சீப்புநூல் *sippu-nūl*, பெ. (n.) பட்டைநூல் (இ.வ.); thread wound on a card.

ம. சீப்புநூல்

[சீப்பு → நூல்]

சீப்புப்பணிகாரம் *sippu-p-paṇigāram*, பெ. (n.) பணிகாரவகை (யாழ்ப்.); a kind of pastry.

[சீப்பு + பணிகாரம்]

சீப்புப்போடு-தல் *sippu-p-pōḍu-*, 5. செ.கு.வி. (v.i.) அடைபலகையால் மதகையடைத்தல் (நாஞ்.); to close down the shutter of a sluice.

[சீப்பு¹ + போடு-,]

சீபம் *sibam*, பெ. (n.) சரகாண்டச்செய்ந்நஞ்சு (யாழ்.அக.) பார்க்க; see *šarakāṇḍa-c-ceynnañju*.

சீபலம் *sibalam*, பெ. (n.) வில்வம்; bael. "வில்வந்தானுஞ் சீபலமென்றே சாற்று நாமமும் புணரும்" (சிவதரு. பரமதரு. 32).

Skt. šri-phala

[சீ¹ + பலம்]

சீபன்னம் *sībannam,* பெ. (n.) குமிழ்மர வகை (சிவதரு. சிவஞானதா. 58); a kind of kumiḻ tree.

சீம்பால் *sīmbāl,* பெ. (n.) ஆவின் ஈன்றணிமைப்பால் (உ.வ.); beestings, especially of cow as impure.

ம. சீம்பால்; க. கிண்ணி

[தீம் + பால் – தீம்பால் → சீம்பால்]

சீமணல் *sīmaṇal,* பெ. (n.) நாகமணல் (யாழ்அக.); sand containing lead ore.

Skt. sīsa

சீமூத்திரம் *sīmūttiram,* பெ. (n.) சீயாக வடியும் சிறுநீர்நோய் வகை (M.L.); chyluria.

[சீழ் → சீ + மூத்திரம். மோள்திரம் → மோட்டிரம் → மூத்திரம்]

மூத்திரம் பார்க்க

சீமூதை *sīmūdai,* பெ. (n.) திராட்சை (மூ.அ.); common grape vine.

சீமூலம் *sī-mūlam,* பெ. (n.) சீழ்மூலம் பார்க்க; see *sī-ḻmūlam.*

[சீழ்மூலம் → சீமூலம்]

சீமை *sīmai,* பெ. (n.) 1. எல்லை; boundary, limit. 2. நாட்டின் பகுதி; country, territory, province, district. "சீமைக்கணக்கு" (பணவிடு. 20). 3. மேலை நாடு (உ.வ.); western country, especially England. 'ஊசி மலிவு என்று சீமைக்குப் போகலாமா?' (பழ.).

ம. சீம; க. சீமெ, சீமா, சீம; பட. சீமெ

[ஏய் → உயர்ச்சி, பெருமை. ஏ பெற்றாகும் (தொல். உரி. 7). ஏ → ஏண் = உயர்ச்சி. ஏண் → சேண் = உயர்ச்சி. ஏ → (ஏய்) → சேய் → சேய்மை = தொலைவு, நீளம். சேய்மை → சேமை → சீமை]

த. சீமை → Skt. sīman

சீமைக்கத்தரி *sīmai-k-kattari,* பெ. (n.) செடி வகை; egg plant (செ.அக.).

[சேய்மை → சீமை. சீமை + கத்தரி]

சீமைக்கமலம் *sīmai-k-kamalam,* பெ. (n.) மேல்நாட்டில் பட்டை தீர்ந்த வயிரமணி (உ.வ.); rose diamond, as cut in foreign countries.

[சீமை + கமலம்]

சீமைக்கருப்பூரம் *sīmai-k-karuppūram,* பெ. (n.) காட்டுக்கஞ்சாங்கோரை (M.M.); sage tea plant.

[சீமை + கருப்பூரம்]

சீமைக்கரி *sīmai-k-kari,* பெ. (n.) நிலக்கரி (இ.வ.); coal.

[சீமை + கரி]

சீமைக்கள்ளி *sīmai-k-kaḷḷi,* பெ. (n.) சாதிக்காய் மரம் (இ.வ.); nutmeg-tree.

[சீமை + கள்ளி]

சீமைக்கற்றாழை *sīmai-k-kaṟṟāḻai,* பெ. (n.) தாழை வகை (L.); giant Mexican lily.

[சீமை + கற்றாழை]

சீமைக்காசான் *sīmai-k-kāšāṉ,* பெ. (n.) மரவகை (L.); ellisduranta.

சீமைக்காடி *sīmai-k-kāḍi,* பெ. (n.) சீமையிலிருந்து இறக்குமதி செய்யப்படுங் காடி; vinegar imported from the western countries.

[சீமை + காடி]

காடி பார்க்க.

சீமைக்காவிக்கல் *sīmai-k-kāvi-k-kal,* பெ. (n.) செந்நிறக்கல் (காவிக்கல்) (வின்); armenian bole, a soft clayey earth of bright red colour.

[சீமை + காவிக்கல்]

சீமைக்கிச்சிலிக்கிழங்கு *sīmai-k-kiccili-k-kiḻaṅgu,* பெ. (n.) கிச்சிலிக்கிழங்கு (L.); camphor zedoary.

[சீமை + கிச்சிலி + கிழங்கு]

சீமைக்கிழங்கு *sīmai-k-kiḻaṅgu,* பெ. (n.) சருக்கரை வள்ளிக்கிழங்கு; sweet-potato.

ம. சீமக்கிழங்ஙு

[சீமை + கிழங்கு]

சீமைக்கொஞ்சி *sīmai-k-koñji,* பெ. (n.) கறிவேப்பிலை (L.); China box.

[சீமை + கொஞ்சி]

சீமைக்கொட்டைக்களா *sīmai-k-koṭṭai-k-kaḷā,* பெ. (n.) மரவகை; thornless, long-leaved, sweet thorn.

[சீமை + கொட்டைக்களா]

கொட்டைக்களா பார்க்க

சீமைக்கொய்யா *šīmai-k-koyyā*, பெ. (n.) கொய்யா வகை (L.); Chinese guava.

[சீமை + கொய்யா]

சீமைக்கொன்றை *šīmai-k-konrai*, பெ. (n.) கொன்றைவகை (L.); red Indian laburnum.

[சீமை + கொன்றை]

சீமைச்சணல் *šīmai-c-caṇal*, பெ. (n.) சணல் வகை (புதுவை); a kind of sunn-hemp.

[சீமை + சணல்]

சீமைச்சரக்கு *šīmai-c-carakku*, பெ. (n.) 1. வெளிநாட்டுச்சரக்கு; foreign goods. 2. கிடைத்தற்கரியசரக்கு; rare valuable commodity, often used ironically. 'இதென்ன சீமைச்சரக்கா?' (உ.வ.).

[சீமை + சரக்கு]

சீமைச்சாமந்தி *šīmai-c-cāmandi*, பெ. (n.) சாமந்திவகை (M.M. 63); chamomile, flowering shrub.

[சீமை + சாமந்தி]

சீமைச்சிவதை *šīmai-c-civadai*, பெ. (n.) ஒரு கொடிவகை (மூ.அ); a kind of ipomaea, climber.

[சீமை + சிவதை]

சீமைச்சீரகம் *šīmai-c-cīragam*, பெ. (n.) ஒருவகைப் பிளப்புச் சீரகம்; a species of cumin seed (சா.அக.).

[சீமை + சீரகம்]

சீமைச்சுண்ணாம்பு *šīmai-c-cuṇṇāmbu*, பெ. (n.) கரும்பலகை முதலியவற்றில் எழுதப் பயன்படும் சுண்ணாம்புக்கட்டி; chalk - European lime (செ.அக.).

[சீமை + சுண்ணாம்பு. சுள் → சுண் → சுண்ணம் = பொடி, நீறு. சுண்ணம் → சுண்ணம்பு → சுண்ணாம்பு = காரக்கல் நீறு]

சீமைச்செம்பை *šīmai-c-cembai*, பெ. (n.) சீமைவேல் (L.); see *šīmai-vēl*.

[சீமை + செம்பை]

சீமைச்சோம்பு *šīmai-c-cōmbu*, பெ. (n.) செடி வகை (M.M.128); caraway.

[சீமை + சோம்பு]

சீமைத்தக்காளி *šīmai-t-takkāḷi*, பெ. (n.) தக்காளிவகை (M.M. 107); tomato variety.

[சீமை + தக்காளி]

சீமைத்துணி *šīmai-t-tuṇi*, பெ. (n.) வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் துணி; foreign cloth.

[சீமை + துணி]

சீமைத்துத்தி *šīmai-t-tutti*, பெ. (n.) துத்திச்செடி வகை (M.M. 914); Marsh mallow.

[சீமை + துத்தி]

சீமைத்தேவதாரு *šīmai-t-tēvadāru*, பெ. (n.) நீண்டமர வகை (L.); long-leaved pine.

[சீமை + தேவதாரு]

சீமைநன்னாரி *šīmai-nannāri*, பெ. (n.) நன்னாரி வகை (M.M. 364); sarsaparilla China root.

[சீமை + நன்னாரி]

சீமைநாபி *šīmai-nābi*, பெ. (n.) ஒரு வகை மருந்துச்செடி (இங்.வை); aconite.

[சீமை + நாபி]

சீமைநாய்விருஞ்சி *šīmai-nāy-viruñji*, பெ. (n.) நீண்டசெடி வகை (L.); aaron's-rod.

[சீமை + நாய்விருஞ்சி]

சீமைநிலவாகை *šīmai-nila-vāgai*, பெ. (n.) செடிவகை (வின்.); African senna.

[சீமை + நிலவாகை]

சீமைநிலவேம்பு *šīmai-nila-vēmbu*, பெ. (n.) நிலவேம்பு வகை; a bitter species of French chiretta.

[சீமை + நிலவேம்பு]

சீமைநிலாவிரை *šīmai-nilāvirai*, பெ. (n.) சூரத்தாவிரை செடிவகை (L.); African senna.

[சீமை + நிலாவிரை]

சீமைநீலி *šīmai-nīli*, பெ. (n.) அவுரிவகை (M.M.); West Indian Indigo.

[சீமை + நீலி]

சீமைநூக்கு *šīmai-nūkku*, பெ. (n.) அயல் நாட்டுமரவகை (L.); true mahogany.

[சீமை + நூக்கு]

சீமையகத்தி

சீயக்காய்

சுண்டை

சுருளை மருள்

சீமைநெல்லி *sīmai-nelli,* பெ. (n.) 1. சிறு மரவகை; barbadoes cherry. 2. நெல்லி மரவகை; box-leaved barbadoes cherry.

[சீமை + நெல்லி]

சீமைப்பச்சைமிளகாய் *sīmai-p-paccai-milagāy,* பெ. (n.) மிளகாய்வகை (L.); cayenne pepper.

மறுவ. சீனி மிளகாய்

[சீமை + பச்சை மிளகாய்]

சீமைப்பருத்தி *sīmai-p-parutti,* பெ. (n.) அயல்நாட்டுப் பருத்திவகை (L.); barbadoes cotton.

[சீமை + பருத்தி]

சீமைப்பலா *sīmai-p-palā,* பெ. (n.) ஈரப்பலா; bread-fruit.

[சீமை + பலா]

சீமைப்பற்று *sīmai-p-parru,* பெ. (n.) அதிகாரத்திற்குட்பட்ட நாட்டின் எல்லை (R.T.); territorial jurisdiction of government.

[சீமை + பற்று]

சீமைப்பனை *sīmai-p-panai,* பெ. (n.) பனை வகை (L.); chocolate - margined and stalked Mauritius palm.

[சீமை + பனை]

சீமைப்பிரதானி *sīmai-p-piradāni,* பெ. (n.) சீமையதிகாரி பார்க்க; see *sīmai-y-adigāri.*

[சீமை + பிரதானி]

சீமைப்பிரப்பமரம் *sīmai-p-pirappamaram,* பெ. (n.) இலங்கை மரவகை (வின்.); Ceylon oak.

[சீமை + பிரப்பமரம்]

சீமைப்புளியன் *sīmai-p-puliyan,* பெ. (n.) ஆனைப்புளி (இ.வ.); baobab (செ.அக.).

[சீமை + புளியன். புளி → புளியன்]

சீமைப்பூசனி *sīmai-p-pūsani,* பெ. (n.) 1. சருக்கரைப்பூசனி (M.M. 129); squash gourd. 2. பூசனிவகை (M.M. 130); vegetable marrows.

[சீமை + பூசனி]

சீமைமகிழ் *sīmai-magil,* பெ. (n.) மகிழமர வகை (L.); iron wood of the cape.

[சீமை + மகிழ்]

சீமைமணத்தக்காளி *sīmai-mana-t-takkāli,* பெ. (n.) சீமைத்தக்காளி (M.M. 107) பார்க்க; see *sīmai-t-takkāli.*

[சீமை + (மணித்தக்காளி) மணத்தக்காளி (கொ.வ.)]

சீமைமாதுளை *sīmai-mādulai,* பெ. (n.) மர வகை (L.); common quince.

[சீமை + மாதுளை]

சீமைமிளகாய் *sīmai-milagāy,* பெ. (n.) நேபாளத்து மிளகாய் (L.); Nepal chilly.

[சீமை + மிளகாய்]

சீமைமிளகாய்

சீமையகத்தி *sīmai-y-agatti,* பெ. (n.) செடி வகை (L.); large-leafletted eglandular senna.

[சீமை + அகத்தி]

சீமையகத்தி

சீமையத்தி *sīmai-y-atti,* பெ. (n.) அத்தி வகை (L.); common cultivated fig.

[சீமை + அத்தி]



சீமையத்தி

சீமையதிகாரி *sīmai-y-adigāri,* பெ. (n.) நாட்டையாளும் அதிகாரி (வின்.); administrator or ruler of a country.

[சீமை + அதிகாரி]

சீமையதிமதுரம் *sīmai-y-adimaduram,* பெ. (n.) சீமைக்குன்றிமணி (இங்.வை.); liquorice.

[சீமை + அதிமதுரம்]

சீமையலரி *sīmai-y-alari,* பெ. (n.) மஞ்சளலரி வகை (L.); yellow oleander.

[சீமை + அலரி]

சீமையவரை *sīmai-y-avarai,* பெ. (n.) அவரை வகை (A.); field gram.

[சீமை + அவரை]

சீமையழவனம் *sīmai-y-aḻavaṉam,* பெ. (n.) மருதோன்றி வகை (M.M. 340); harmal.

[சீமை + அழவனம்]

சீமையாமணக்கு *sīmai-y-āmaṇakku,* பெ. (n.) 1. ஆமணக்குவகை; bronze-leaved physic nut. 2. காட்டாமணக்கு; red physic nut.

[சீமை + ஆமணக்கு]

சீமையால் *sīmai-y-āl,* பெ. (n.) ஆல்வகை (L.); Assam rubber (செஅக.).

[சீமை + ஆல்]

சீமையாவிரை *sīmai-y-āvirai,* பெ. (n.) பிரம்புக் கொன்றை (L.); siamese tree (செஅக.).

[சீமை + ஆவிரை]

சீமையிந்துப்பு *sīmai-y-induppu,* பெ. (n.) கழிச்சலையுண்டாக்கும் உப்பு (இங்.வை.); epsom salt.

[சீமை + இந்துப்பு]

சீமையிலந்தம்பழம் *sīmai-y-ilandam-paḻam,* பெ. (n.) இலந்தைவகை (M.M.); apple.

மறுவ. இரத்தி

[சீமை + இலந்தம்பழம்]

சீமையிலுப்பை *sīmai-y-iluppai,* பெ. (n.) ஒரு வகை மரம் (L.); sapodilla.

மறுவ. இருப்பை

[சீமை + இலுப்பை. இருப்பை → இலுப்பை]

சீமையீஞ்சு *sīmai-y-īñju,* பெ. (n.) ஈஞ்சுவகை (L.); common Indian fern palm.

[சீமை + ஈஞ்சு]

சீமையூமத்தை *sīmai-y-ūmattai,* பெ. (n.) வெள்ளூமத்தை (L); white-flowered thorn apple.

[சீமை + ஊமத்தை]

சீமையெண்ணெய் *sīmai-y-eṇṇey,* பெ. (n.) மண்ணெண்ணெய் (இ.வ.); kerosene.

க. சீமெயெண்ணி

[சீமை + எண்ணெய்]

சீமைவாகை *sīmai-vāgai,* பெ. (n.) தூங்குமூஞ்சி மரம் (L.); rain tree.

[சீமை + வாகை]

சீமைவாத்து *sīmai-vāttu,* பெ. (n.) வாத்துவகை (M.M.942); domestic duck.

[சீமை + வாத்து]

சீமைவெள்வேல் *sīmai-veḷ-vēl,* பெ. (n.) பேய்க் கருங்காலி; tamarind-like cutch.

[சீமை + வெள்வேல்]

சீமைவெள்ளரி *sīmai-veḷḷari,* பெ. (n.) வெள்ளரிவகை (வின்.); a kind of melon.

[சீமை + வெள்ளரி]

சீமைவேல் *sīmai-vēl,* பெ. (n.) மரவகை (L.); Jerusalem - thorn.

[சீமை + வேல்]

சீமைவேலம்பட்டை *sīmai-vēlam-paṭṭai,* பெ. (n.) 1. பெரியவேல மரவகை; black wattle. 2. சிறியவேல மரவகை; common wattle. 3. செடிவகை; mimosa wattle.

[சீமை + வேலம்பட்டை]

சீய்[1]-த்தல் *sīy-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. பெருக்குதல்; to sweep. "கடைத்தலை சீய்க்கப் பெற்றால்" (திவ். திருவாய். 10. 2 : 7). 2. வெட்டுதல்; to cut down, cut with adze. "பாவக்காட்டைச் சீய்த்து" (திவ். பெரியாழ். 5, 4, 7, வியா). 3. போக்குதல்; to destroy, remove.

[சீ → சீய்-,]

சீய்[2]-த்தல் *sīy-,* 4 செ.கு.வி. (v.i.) உரைசுதல் (யாழ்அக.); to rub.

சீய்க்காய் *sīy-k-kāy,* பெ. (n.) சிக்காய் பார்க்க; see *sīk-kāy.*

சீயக்காய் *sīya-k-kāy,* பெ. (n.) சிக்காய் பார்க்க; see *sīk-kāy.*

[சிக்காய் → சீயக்காய் (கொ.வ.)]

சீயக்காய்ச்சடங்கு *sīya-k-kāy-c-caḍaṅgu,* பெ. (n.) சிக்காய்ச்சடங்கு பார்க்க; see *sīkkāy-c-caḍaṅgu.*

சீய்க்காய்ச்சடங்கு *sīy-k-kāy-c-caḍaṅgu,* பெ. (n.) சிக்காய்ச்சடங்கு பார்க்க; see *sīkkāy-c-caḍaṅgu.*

சீயகங்கன் *sīya-gaṅgaṉ,* பெ. (n.) 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நன்னூல் செய்வித்த ஒரு கங்கவரசன்; a Gaṅga prince under whose patronage Nannūl was written early in the 13th C. "திருந்திய செங்கோற் சீயகங்கன்" (நன். பாயி.).

சீயகு *sīyagu,* பெ. (n.) புளியீண்டு (L.); rosy-flushed white brasiletto.

சீயங்கணக்கு *sīyaṅ-kaṇakku,* பெ. (n.) மூன்றா முறை அணியஞ்செய்யப்பட்ட கணக்கு (வின்.); accounts prepared for the third time.

சீயங்காய் *sīyaṅ-kāy,* பெ. (n.) சிக்காய் (யாழ்அக) பார்க்க; see *sīk-kāy.*

சீயம் *sīyam,* பெ. (n.) எருக்கம்பால் (மூ.அ.); madar juice.

சீயம்பாக்கு *sīyam-bākku,* பெ. (n.) தாழ் தரமான பாக்கு (இ.வ.); boiled areca-nut of inferior quality.

[சீயம் + பாக்கு]

சீயன் *sīyaṉ,* பெ. (n.) சீயான் பார்க்க; see *sīyāṉ.* "சிறுமுனிவன் சீயனம் போதிகடைந்தான்" (கந்தரந். 19).

[சீயான் → சீயன்]

சீயா *sīyā* பெ. (n.) சிக்காய் (யாழ்அக.) பார்க்க; see *sīk-kāy.*

[சிக்காய் → சீகைக்காய் → சீயக்காய் → சீக்காய் → சீகாய் → சீயா (கொ.வ.)]

சீயாக்காய் *sīyā-k-kāy,* பெ. (n.) சிக்காய் (யாழ்ப்.) பார்க்க.; see *sīk-kāy* (செஅக.).

[சிக்காய் → சீயக்காய் → சீயாக்காய் (இ.வ.)]

சீயாள் *sīyāḷ,* பெ. (n.) மூன்றாம்பாட்டி (வின்.); great grandmother.

[சேயாள் → சிய்யாள் → சீயாள்]

சீயான்[1] *sīyāṉ,* பெ. (n.) மூன்றாம்பாட்டன் (வின்.); great grandfather.

[சேய்யான் → சிய்யான் → சீயான்]

சீயான்[2] *sīyāṉ,* பெ. (n.) செம்பூரான்; reddish venomous centipede (செஅக.).

[செய்யான் → சீயான்]

சீயெனல் *sī-y-eṉal,* பெ. (n.) வெறுப்புக்குறிப்பு; onom. expr. signifying disgust.

[சீ[3] → எனல்]

சீர்[1]-த்தல் *sīr-,* 4 செ.கு.வி. (v.i.) சினத்தல்; to be angry. "சுந்தரி பொறாளாய்ச் சீர்த்திடலும்" (கந்தபு. தெய்வயா. 34).

[சீறு → சீர்-,]

சீர்²-த்தல் *śīr-*, 4 செ.கு.வி. (v.i.) 1. சிறத்தல்; to be excellent, to be superior. "பொருள் மற்றெனக்குமோர் பொருடன்னிற் சீர்க்கத் தருமேல்" (திவ். திருவாய். 8. 7 : 6). 2. காலம் வாய்த்தல்; to be suitable, fitting, as an opportunity. "குத்தொக்க சீர்த்த விடத்து" (குறள், 490). 3. ஓசை நயம்படநிற்றல்; to fall into rhythmic movement. "சொற்சீர்த் திறுதல்" (தொல். பொருள். 324, உரை).

ம. சீர்க்குக

[சீ → சீர்]

சீர்³-த்தல் *śīr-*, 4 செ.கு.வி. (v.i.) நிகழ்தல், நேரிடுதல்; to happen, occur. "புலந்தலைப் பெய்தலறிவுடன் சீர்க்குமன்றே" (நீலகேசி, 509).

[சீ → சீர்-,]

சீர்⁴ *śīr*, பெ. (n.) 1. செல்வம் (பிங்.); prosperity, wealth. 'சீர் அற்றார் கையில் செம்பொன் விளை பெறா' (பழ.). 2. அழகு; beauty, gracefulness. "சீர்கெழு சிறப்பின்" (மலைபடு. 570.). 3. நன்மை (திவா.); goodness. 4. பெருமை; greatness, excellence, superiority. "சீர்கெழு கொடியும்" (புறநா. 1). 5. தலைமை; paramount importance. "ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும் . . ." (திருமுரு. 220). 6. மதிப்பு; esteem, regard. "வணக்கருஞ்சீர் . . . மன்னன்" (பு.வெ.9, 22). 7. புகழ்; reputation, fame. "ஆனாச்சீர்க் கூடலுள்" (கலித். 30). 8. இயல்பு; nature, characteristic. "கழற்பெய் குடத்தின் சீரே" (நன். பொது. 32). 9. நேர்மை; good, normal condition. 'அவன் சீராக இருக்கிறானா?' (உ.வ.). 10. செம் பொருள் (அக.நி.); literal meaning. 11. சமம்; equilibrium, evenness. "உலகுசீர்பெற விருந்தான்" (கம்பரா. அகத். 40).

Skt. śri

[சீ⁶ → சீர்]

சீர்⁵ *śīr*, பெ. (n.) 1. சீர்தூக்குங்கோல் (தராசு) (பிங்.); balance. 2. அளவு; measure, quantity. "விரிசீர்த் தெரிகோல்" (புறநா. 6 : 8). 3. எடை; heaviness. "விழுச்சீ ரையவி" (பதிற்றுப். 22). 4. துலையோரை (சூடா.); libra of the Zodiac. 5. காவடித்தண்டு (திவா.); shoulder-staff for carrying burden. "யானைக்கோடு சீராக" (மலைபடு. 154). 6. தண்டப் படைக்கலம் (பிங்.); club, bludgeon.

[சீ → சீர்]

சீர்⁶ *śīr*, பெ. (n.) 1. தாளம்; time-measure. "தண்குரவைச் சீர்" (புறநா. 24, 6). 2. பாட்டு; song. "சேயுய ருசற்சீர்" (கலித். 131 : 24.). 3. செய்யுளின் ஓருறுப்பு; metrical foot. "யாத்த சீரே யடியாப்பெனா" (தொல். பொருள். 313). 4. இசைக் கருவியாலெழும் ஒலி (திவா.); sound of musical instruments. 5. ஓசை (அக.நி); sound. 6. சீர் சிறப்பு² (உ.வ.) பார்க்க; see *śīr-śiṟappu*. 7. காலிலணிவதற்குரிய தண்டை (வின்.); tinkling ornaments for the feet.

ம. சீலு

[சீ → சீர்-,]

சீர்⁷ *śīr* பெ. (n.) தளர்வு (அக.நி.); weak condition.

[சீ → சீர்-,]

சீர்க்கம் *śīrkkam* பெ. (n.) மண்டபத்தில் அமைக்கப்படும் சிற்ப வகை; an ornamental structure in a hall. "கொடுக்குஞ் சீர்க்கமு மடுத்து" (பெருங். மகத. 9 : 36).

[சீர் → சீர்க்கம்]

சீர்க்காரம் *śīrkkāram* பெ. (n.) எதிரொலி (யாழ்.அக.); echo.

Skt. śilkāra

[சீழ்க்கை → சீர்க்கை → சீர்க்கார் → சீர்க்காரம்]

சீர்க்கோழி *śīr-k-kōḻi* பெ. (n.) நரைக்கொள்ளு (மலை.); a kind of gram.

சீர்குலை-தல் *śīr-kulai-*, 4 செ.கு.வி. (v.i.) 1. ஒழுங்கு முறைகெடு; to be in disorder, to be deranged. 2. ஒழுக்கங்கெடுதல்; to lose one's character, chastity, as a woman. 3. நிலை கெடுதல்; to be ruined in circumstances.

சீர்கெடு-தல் *śīr-keḍu-*, 20 செ.கு.வி. (v.i.) சீர்குலை- பார்க்க; see *śīr-kulai-*.

[சீர் + கெடு-,]

சீர்கேடி *sīr-kēḍi* பெ. (n.) மூதேவி (பிங்.); goddess of Misfortune.

[சீர்கெடு → சீர்கேடு → சீர்கேடி]

சீர்கேடு *sīr-kēḍu* பெ. (n.) 1. ஒழுங்கின்மை (உ.வ.); disorder, irregularity. 2. அழகிலி, அருவருப் புள்ளது (வின்.); ugliness, clumsiness. 3. நிலை குலைவு (வின்.); misfortune.

[சீர் + கேடு. கெடு → கேடு]

சீர்கோடிகம் *sīr-kōḍigam,* பெ. (n.) பாலைப் பண்ணின் திறங்களில் ஒன்று (சிலப். 14: 160, உரை.); ancient secondary melody-type of the pālai class.

சீர்சிறப்பு *sīr-śiṟappu,* பெ. (n.) 1. மிகுசெழிப்பு (வின்.); prosperity. 2. பொருட் கொடை (இ.வ.); gifts to a girl given by her parents on the occassion of her marriage.

[சீர் + சிறப்பு]

சீர்செய்-தல் *sīr-śey-,1* செ.கு.வி. (v.i.) திருமணம் முதலியவற்றில் உறவின் முறையார் செய்யும் சீர்வரிசை; to give presents, as to a daughter, on the occasion of her marriage and other ceremanies.

[சீர் + செய்-,]

சீர்த்தவர் *sīrttavar,* பெ. (n.) சீரியர் பார்க்க; see *sīriyar.* "சீர்த்தவர் செய்யத்தக்க கருமமே" (கம்பரா. களியாட்டு. 9).

[சீர்³ → சீர்த்தவர்]

சீர்த்தி *sīrtti,* பெ. (n.) மிகுபுகழ் (தொல். சொல். 313); great reputation, renown. 'சீவன் போனாலும் சீர்த்தி போகாது' (பழ.).

[சீ³ → சீர் → சீர்த்தி]

சீர்த்துழாய் *sīr-t-tuḻāy,* பெ. (n.) துளசி (மலை.) பார்க்க; see *duḷaśi.*

[சீ → சீர் + துழாய்]

சீர்தட்டுதல் *sīr-taṭṭudal,* பெ. (n.) தூய்மை யற்றோர் நெருங்குதலாலேனும், தொடுதலா லேனும், குழந்தைக்கு நோய்மிகுகை (இ.வ.); sickness of a child caused or aggravated by the touch or approach of impure persons.

[சீர் + தட்டுதல். தட்டுதல் = மோதுதல், கெடுதல், தீண்டுதல்]

சீர்திருத்தத்திருமணம் *sīr-dirutta-t-tirumaṇam,* பெ. (n.) மரபான சடங்குகளை முற்றுந் தவிர்த்துச் செய்யும் மணமுறை; marriage conducted according to one's self-respect rejecting all the traditional rites.

[சீர்திருத்தம் + திருமணம்]

சடங்கு திருமணங்களே சட்டப்படிச் செல்லும் என்ற நிலையை மாற்றிச் சீர்திருத்தத் திருமணமும் செல்லும் என்று 1969-ஆம் ஆண்டு தமிழக அரசு சட்டம் நிறைவேற்றியது.

சீர்திருத்தம் *sīr-diruttam,* பெ. (n.) செவ்வைப் படுத்துகை, சீர்படுத்துகை; reform, reformation, correction.

[சீர் + திருத்தம்]

சீர்திருத்து-தல் *sīr-diruttu-,5* செ.குன்றாவி. (v.t.) செவ்வைப்படுத்துதல்; to correct, rectify, reform.

[சீர் + திருத்து-,]

சீர்திருந்து-தல் *sīr-dirundu-,5* செ.குன்றாவி. (v.t.) செவ்வைப்படுதல்; to be corrected, rectified, reformed.

[சீர் + திருந்து-,]

சீர்தூக்கு-தல் *sīr-dūkku-, 5* செ.குன்றாவி. (v.t.) 1. நிறையளவை வரையறுத்தல்; to determine the weight of. "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல்" (குறள், 118). 2. ஆராய்தல்; to weigh in the mind, consider. "சீர்தூக்காக் கொடையும்" (பு. வெ. 9 : 1, கொளு, உரை). 3. ஒப்புநோக்குதல்; to compare. "மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்" (வாக்குண். 26).

[சீர்³ + தூக்கு-,]

சீர்தைத்தல் *sīr-daittal,* பெ. (n.) சீர்தட்டுதல் (இ.வ.) பார்க்க; see *sīrdaṭṭudal.*

[சீர் + தைத்தல்]

சீர்நிருவாகம் *sīr-niruvāgam,* பெ. (n.) நிலைமை; condition, circumstances. 'இந்தச் சீர் நிருவாகத்தில் என்ன செய்வது' (வின்.).

[சீர் + நிருவாகம்]

சீர்ப்படு-தல் *sīr-p-paḍu-, 20* செ.கு.வி. (v.i.) 1. செம்மைப்படுதல்; to reform, improve.

2. அளவிற்படுதல்; to be moderate. "சீர்ப்பட வுண்ட சிறுகளி யேருண்கண்" (கலித். 97).

[சீர் + படு-,]

சீர்ப்படுத்து-தல் *sīr-p-paḍuttu-*, 5 செ. குன்றாவி. (v.t.) குணப்படுத்துதல் (இ.வ.); to bring round, cure.

[சீர் + படுத்து-,]

சீர்ப்பாடு *sīr-p-pāḍu*, பெ. (n.) மேம்பாடு; greatness. "திருமுனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு" (பெரியபு. திருநாவுக். 11).

[சீர் + பாடு]

சீர்ப்பிழை *sīr-p-piḻai*, பெ. (n.) 1. குற்றம் (வின்.); mistake, defect. 2. தடை; impediment, obstacle, untoward circumstance.

[சீர் + பிழை]

சீர்ப்பு *sīrppu*, பெ. (n.) சிறப்பு; excellence. "சீர்ப்பமை சிகழிகை" (பெருங். உஞ்சைக். 42, 148).

ம. சீர்ப்பு (தடிப்பு)

[சீர் → சீர்ப்பு]

சீர்பாடல் *sīrbāḍal*, பெ. (n.) திருமணத்தில், பெரும்பாலும் நான்காம் நாள் நடக்குந் திருமண நிகழ்ச்சியில், மணமக்களின் பெற்றோர்களைப் புகழ்ந்துபாடுகை (மாலியம்); extolling or recounting the excellences of wedding parties, usually on the fourth day of marriage.

[சீர் + பாடல்]

சீர்போடு-தல் *sīr-bōḍu-*, 19 செ.கு.வி. (v.i.) காற்றாடிப் பட்டத்துக்குக்கயிறு கட்டுதல் (யாழ்ப்.); to tie the balance-string to a paper kite.

[சீர் + போடு-,]

சீர்மடக்கு *sīr-maḍakku*, பெ. (n.) செய்யுளுள் சீர் இடைமடக்கி வருகை (வின்.); repetition of a foot in a metrical line.

[சீர் + மடக்கு]

சீர்மரம் *sīr-maram*, பெ. (n.) படமரம் என்னும் நெசவுக்கருவி (வின்.); weaver's beam.

[சீர்[4] + மரம்]



சீர்மரம்

சீர்மை[1] *sīrmai*, பெ. (n.) 1. சிறப்பு; greatness, excellence, eminence. "செறிவறிந்து சீர்மை பயக்கும்" (குறள். 123). 2. புகழ்; reputation, renown. "குடிமைக்குஞ் சீர்மைக்கும்" (தஞ்சைவா. 241). 3. நிறை; weight. "மென்மை, சீர்மை, நொய்ம்மை" (மணிமே. 27:254). 4. அளவிற் படுகை; moderateness. "நின்னை மிகாமற் சீர்மைப்பட நுகர்ந்த சிறிய களிப்பு" (கலித். 97, உரை). 5. நன்னடை; decorum, good behaviour. "சீர்மை சிறிதுமிலி" (திருப்பு. 109). 6. வழவழப்பு (வின்); smoothness, evenness, polish.

ம. சீர்ம்ம

[சீர் → சீர்மை]

சீர்மை[2] *sīrmai*, பெ. (n.) சீமை (வின்) பார்க்க; see *sīmai*.

[சீமை → சீர்மை (இ.வ.)]

சீர்வண்டு *sīrvaṇḍu*, பெ. (n.) நெய்வார்கருவியி லொன்று (வின்.); a weaver's instrument.

[சீர் + வண்டு]

சீர்வரிசை *sīrvarišai*, பெ. (n.) சீர்செய்தல் பார்க்க; see *sīršey-*.

[சீர் + வண்டு]

சீரகக்கோரை *sīraga-k-kōrai*, பெ. (n.) கோரை வகை (சங்.அக.); a kind of sedge.

Skt. jīraka

[சீரகம் + கோரை]

சீரகச்சம்பா *sīraga-c-cambā*, பெ. (n.) 1. மடங்கல் (ஆவணி), கன்னி (புரட்டாசி) மாதங்களில் விதைக்கப்பெற்று ஐந்து மாதங்களிற்

பயிராகுஞ் சம்பாநெல் வகை (பதார்த்த. 814); a superior kind of paddy sown in September and maturing in five months. 2. ஒருவகைச் செந்நெல்: a variety of red paddy.

[சீரகம் + சம்பா]

சீரகத்தாமன் *šīraga-t-tāmaṉ*, பெ. (n.) 1. சீரகத்தாரோன் (வின்) பார்க்க; see *šīraga-t-tārōṉ*. 2. வணிகன் (R.); member of the Vaišya caste.

[சீரகம் → சீரகத்தாமன்]

சீரகத்தாரோன் *šīraga-t-tārōṉ*, பெ. (n.) சீரகமாலையணிந்த குபேரன் (பிங்.); Kubēraṉ, as wearing a garland of šīragam.

[சீரகம் + தாரோன். தார் = மாலை, தார் → தாரோன்]

சீரகபாடி *šīraga-pāḍi*, பெ. (n.) கோட்டம் (மலை.); Arabian costum.

[சீரகம் + பாடி]

சீரகம்[1] *šīragam*, பெ. (n.) 1. செடிவகை (பதார்த்த: 1032); cumin. 2. ஒரு நிறையளவு (தொல். எழுத்து. 170, உரை); a small measure of weight.

Skt. jīraka

[சீர் → சீரம் → சீரகம்]

சீரம் → சீரகம்.

உலகில் முதன்முதற் சிறந்தமுறையில் சமையல் தொழில் தொடங்கியதும், அதற்குச் சீரகத்தைப் பயன்படுத்தியதும், தமிழகமே.

"சிறுபிள்ளை யில்லாத வீடும் சீரகமில்லாத கறியும் செவ்வையாயிரா" என்பது தொன்று தொட்டு வழங்கும் பழமொழி.

சீரகக்கோரை, சீரகச்சம்பா, சீரகவள்ளி என்பன ஒப்புமைபற்றிப் பெயர்பெற்ற நிலைத்திணை வகைகள்.

பொன்னளவையிற் சீரகம் என்பது ஓர் அளவு.

5 கடுகு = 1 சீரகம், 5 சீரகம் = 1 நெல்

"அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுதலாகி
யுளவெனப்பட்ட வொன்பதிற் றெழுத்தே
அவைதாம்.
கசதப வென்றா நமவ வென்றா
அகர உகரமோ டவையென மொழிப" (தொல். எழுத்து. 170)

என்னும் தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பா வுரையில், "கழஞ்சு சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை" என்று இளம்பூரணரும்; "கழஞ்சு சீரகம் தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை இவை நிறை" என்று நச்சினார்க்கினியரும், கூறியிருத்தலையும், நோக்குக. செரி → செரியகம் → சீரகம்.

வடவர் மூலம் காட்டும் வகை: - ஜீரக = ஜீரண. ஜ்ரு = ஜீரண. ஜ்ரு - கிழமாக்கு, கட்டுக்குலை, கரை, செரிக்கச் செய். ஜ்ரு என்பது கிழ என்னும் தென்சொற்றிரிபே. (வ.மொ.வ. 153).



சீரகம்[2] *šīragam*, பெ. (n.) பன்றி (யாழ்.அக.); hog.

சீரகர் *šīragar*, பெ. (n.) புத்த மதத்தவர் (மரப் பட்டை தரித்தோர்); Buddhist, as clad in bark.

Skt. šīraka

[சீரை = மரவுரி, மரப்பட்டை. சீரை → சீரையர் → சீரகர்]

சீரகரை *šīragarai*, பெ. (n.) அரைச்சீரக அளவு (தொல். எழுத்து. 171, உரை); a measure of weight = half a šīragam.

[சீரகம் + அரை]

சீரகவள்ளி *šīraga-vaḷḷi*, பெ. (n.) 1. காட்டுக்காய் வள்ளி (L.); cultivated yam. 2. காட்டுச் சீரகவள்ளி (M.M. 463); Malacca yam.

[சீரகம் + வள்ளி]

சீரங்கச்சம்பா *šīraṅga-c-cambā*, பெ. (n.) நெல்வகை (மதி.க., 6); a kind of paddy.

[சீரகச்சம்பா → சீரங்கச்சம்பா]

சீரங்கராயன் *šīraṅga-rāyaṉ*, பெ. (n.) பழைய காசு வகை (பணவிடு. 117).; an ancient coin.

[சீரங்கம் + அரையன் → ராயன்]

சீரங்கி *sīraṅgi,* பெ. (n.) ஒருவகை நெல்; a kind of paddy.

சீரணன் *sīraṇaṉ,* பெ. (n.) கிழவன் (யாழ்.அக); old man.

சீரணி[1] *sīraṇi,* பெ. (n.) ஓமம் (மலை.); bishop's weed.

சீரணி[2] *sīraṇi,* பெ. (n.) 1. காடு (திவா.); jungle, forest. 2. கூத்தின் வேறுபாடு; quick step in dancing. 3. பந்தத்தில் எரிதற்குச் சுற்றுந் துணி; fuse-cloth in a torch.

[சீர்² + அணி]

சீரணி[3] *sīraṇi,* பெ. (n.) ஒரு பணியாரம் (வின்.); a kind of pastry.

U. sīrā

சீரணி[4] *sīraṇi,* பெ. (n.) ஒழுங்கான அணி; systamatic parade. *'சீரணி கெட்டால் கோரணி' (பழ.).*

[சீர் + அணி]

சீரணிபோடு-தல் *sīraṇi-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) கூத்தில் விரைந்து அடியெடுத்துவைத்தல் (வின்.); to move with quick steps in dancing.

[சீரணி + போடு-,]

சீரணை *sīr-aṇai,* பெ. (n.) பழக்கம் (யாழ்.அக); habit, custom, constant use.

[சீர்² + அணை]

சீரத்துவசன் *sīra-t-tuvasaṉ,* பெ. (n.) மேழிக் கொடியையுடைய சனகன் (அபி.சிந்.); King Janaga, as having a plough as his flag.

[சீர் = மேழி. சீர் → சீரத்துவசன்]

சீரந்தாதி *sīr-andādi,* பெ. (n.) பாட்டில் ஓரடியின் இறுதிச்சீர் அடுத்த அடியின் முதற்சீரோடு தொடுத்து வருவது (தொல். பொருள். 411, உரை); repetition of the final foot of a line as the initial foot of the following line.

[சீர் + அந்தாதி. அந்தாதியை ஈறு தொடங்கி என்பது செந்தமிழ் வழக்கு]

சீரம்[1] *sīram,* பெ. (n.) மரவுரி; bark of a tree, used as clothing. *"தீரா மனத்தாள் தரவந்தன சீரம்" (கம்பரா. நகர்நீ. 147).*

Skt. śira

[சீரை¹ → சீரம்]

சீரம்[2] *sīram,* பெ. (n.) கலப்பை; plough. *"சீரங்கராக மறமோது திகிரி செங்கை" (கந்தரந். 98).*

Skt. sīra

[சீர் → சீரம்]

சீரம்[3] *sīram,* பெ. (n.) பால் (வின்); milk.

Skt. ksīra

சீரம்[4] *sīram,* பெ. (n.) இலாமிச்சை (மலை.); cuscuss grass.

Skt. uśīra

சீரம்[5] *sīram,* பெ. (n.) சீரகம்,1 (மூ.அ) பார்க்க; see *sīragam,1* (செ.அக.).

[சீரகம் → சீரம்]

சீரமோடா[1] *sīram-ōḍā,* பெ. (n.) 1. வீழி (மலை.); a straggling shrub with simple oblong leaves and greenish flower. 2. நார்ச்சீலை (வின்.); cloth made of fibres.

[சீரம்¹ → சீரமோடா]

சீரமோடா[2] *sīram-ōḍā,* பெ. (n.) காட்டெருமைப் பால் (வின்.); milk of the wild buffalo.

[சீரம்³ → சீரமோடா]

சீரலைவாய் *sīr-alai-vāy,* பெ. (n.) அலைவாய் என்னும் பெயருடைய திருச்செந்தூர்; Tiruccendūr, in Tinnevelly district, as situate in the sea-shore. *"விழுச் சீரலைவாய்ச் சேறலும்" (திருமுரு. 125).*

[சீர் + அலைவாய்]

அலைவாய் பார்க்க

சீரவட்டம் *sīra-vaṭṭam* பெ. (n.) ஈயம் (மலை.); lead.

சீரழி[1]**-த்தல்** *sīr-aḻi-* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஒழுங்குலைத்தல்; to cause, disorder; to disarrange. 2. கற்பழித்தல்; to ravish, as a woman. 3. நிலைகெடுத்தல் (வின்.); to ruin.

[சீர்² + அழி-,]

சீரழி²-தல் *sīrali*,² 2 செ.கு.வி. (v.i.) சீர்குலை- பார்க்க; see *sīr-kulai-*.

[சீர் + அழி-,]

சீரளவு *sīraḷavu*, பெ. (n.) நேர்மையாக அளக்கை (இ.வ.); measuring properly.

[சீர் + அளவு]

சீரா¹ *sīrā*, பெ. (n.) தலைச்சீரா; helmet. "கிடந்த பேராசு சீரா" *(திருவாலவா. 45 : 9)*.

Skt. šīrṣa

[சீர் → சீரா]

சீரா² *sīrā*, பெ. (n.) புரசமரம் (மலை.); palas tree.

மறுவ. பலாசம்

சீரா³ *sīrā*, பெ. (n.) கவசம் (வின்.); armour, coat of mail.

U. zirāh

சீரா⁴ *sīrā*, பெ. (n.) சிற்றுண்டிவகை; a confection.

U. sirā

சீராகம் *sīrāgam*, பெ. (n.) ஒருவகைப் பண் (பிங்.); a specific melody-type.

Skt. šri-rāga

[சீர் + ராகம். அராகம் → ராகம்]

சீராங்கம் *sīrāṅgam*, பெ. (n.) 1. கலப்பை (யாழ்அக.); plough. 2. கொழு; ploughshare.

[சீரம் → அங்கம்]

சீராட்டு¹-தல் *sīrāṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. செல்லம்பாராட்டுதல்; to caress, pet. "பேராட்டி சீராட்டும் பிள்ளையார்" *(கோயிற்பு. பாயி. 7)*. 2. கொண்டாடுதல்; to extol, applaud; "கரத்தாற் றைவந்து சீராட்டி யுரைத்தாள்" *(சிவரக. தேவியுடன். 24)*.

[சீர் + ஆட்டு-,]

சீராட்டு² *sīrāṭṭu*, பெ. (n.) செல்லம் பாராட்டுகை; caressing, fondling. "பாலர்க்குரிய சீராட்டுப் பண்ணி" *(சேது. அநுமகுண். 12)*.

சீராட்டு³ *sīrāṭṭu*, பெ. (n.) சிறுசண்டை, ஊடல் (இ.வ.); petty quarrel.

[சீராடு → சீராட்டு]

சீராடிக்கொண்டுபோகை *sīrāḍi-k-koṇḍu-pōgai*, பெ. (n.) கணவன்வீட்டில் சிறுசண்டையிட்டுக் கொண்டு அதுகாரணமாக மனைவி தன் பிறந்தகஞ் செல்லுகை (இ.வ.); going of a married girl from her husband's house to her father's on the pretext of a petty quarrel.

[சீராடிக்கொண்டு + போகை]

சீராடு-தல் *sīrāḍu-*, 5. செ.கு.வி. (v.i.) சிறு சண்டையிடுதல்; to pick petty quarrels. "ஏன் ஓயாமல் சீராடுகிறாய்?" *(நெல்லை)*.

[சீர் + ஆடு-,]

சீராமமாடை *sīrāma-māḍai*, பெ. (n.) பழைய பொற்காசு வகை; an ancient gold coin. "ஒரு சீராம மாடையுங் கொடுத்து" *(கோயிலொ. 143)*.

சீராளதேவன் *sīrāḷa-dēvaṉ*, பெ. (n.) பெற்றோராற் கொன்று, கறியாகச் சமைத்து அடியார்உருவில் வந்த சிவனுக்குப் பரிமாறப் பட்டுப் பின், அவனருளால் உயிர் பெற்றெழுந்த சிறுத்தொண்ட நாயனாரின் மைந்தன்; the son of Šiṟuttoṇḍar who was cut up cooked and served to Šivaṉ by his parents, but miraculously brought back to life by Him. "சீராள தேவரெனுந் திருமைந்த ரவதரித்தார்" *(பெரியபு. சிறுத்தொண். 17)*.

[சீராளன் + தேவன்]

சீராளன் *sīrāḷaṉ*, பெ. (n.) 1. சிறப்புற்றவன்; distinguished person. "மனக்கினிய சீராளன்" *(பதினொ. அற்புத. 44)*. 'சீராளனைப் பெற்றபிறகு திருச்சீலைத்துணிக்கு வருத்தமாச்சுது' *(பழ.)* 2. சீராளதேவன் பார்க்க; see *sīrāḷa-dēvaṉ*. "சீராளா வாராய்" *(பெரியபு. சிறுத்தொண். 81)*.

[சீர்² + ஆளன்]

சீரி¹-த்தல் *sīri-*, 4 செ.கு.வி. (v.i.) சிறப்புறுதல்; to be magnificent. "சீரித்த வேலவன் யாரையென்று" *(தணிகைப்பு. களவு. 494)*.

[சீர்³ → சீரி-,]

சீரி² *sīri*, பெ. (n.) முக்காடு (யாழ்அக.); veil.

[சீரை¹ → சீரி]

சீரிகை *sīrigai*, பெ. (n.) சிள்வண்டு (யாழ்அக.) பார்க்க; see *siḷvaṇḍu*.

ம. சீரி

[சீர் → சீரிகை]

சீரிடம்[1] *sīridam*, பெ. (n.) *வாய்த்தஇடம்;* suitable place or opportunity. *"சீரிடங்காணி னெறிதற்குப் பட்டடை" (குறள். 821).*

[சீர்[3] + இடம்]

சீரிடம்[2] *sīridam*, பெ. (n.) *தலை (யாழ்.அக.);* head.

Skt. śirṣa

சீரிடம்[3] *sīridam*, பெ. (n.) *வாகைமரம் (மலை.);* siris tree.

Skt. śirisa

சீரிப்பு *sīrippu*, பெ. (n.) *சீரணை (வின்.) பார்க்க;* see *sīranai.*

[சீர்[2] → சீரிப்பு]

சீரிமரம் *sīri-maram*, பெ. (n.) *புளியமரம் (மலை.);* tamarind tree.

[சீரி + மரம்]

சீரிய *sīriya*, கு.பெ.எ. (adj.) *சிறப்பான;* of surpassing excellence. *"சீரிய சிங்காதனத் திருந்து" (திவ். திருப்பா. 23).*

[சீர்[2] → சீரிய]

சீரியர் *sīriyar*, பெ. (n.) *பண்பார்ந்த செயல்களாற் சிறந்தவர்;* the noble, the great. *"சீரியர் கெட்டாலுஞ் சீரியர் சீரியரே" (மூதுரை, 18).*

[சீர்[2] → சீரியர். 'அர்' உடைமைப் பெயரீறு]

சீரியார் *sīriyār*, பெ. (n.) *சீரியர் பார்க்க;* see *sīriyar. "சீரியார் கேண்மை" (நாலடி.. 232).*

[சீரியர் → சீரியார்]

சீருகை *sīrugai*, பெ. (n.) *சீரிகை (யாழ்.அக.) பார்க்க;* see *sīrigai.*

[சீரிகை → சீருகை]

சீருணம் *sīrunam*, பெ. (n.) *செம்பு (திவா.);* copper. *"சீருணத் தசும்ப ரொன்றில்" (கந்தபு. வில்வலன் வாதாவி வதை. 13).*

[சீர்[2] + உண்(மை) = சீருண். சீருண் → சீருணம். 'அம்' சொல்லாக்க ஈறு]

சீருணி *sīruni*, பெ. (n.) *சீருணம் (வின்.) பார்க்க;* see *sīrunam.*

[சீருணம் → சீருணி]

சீருள் *sīrul*, பெ. (n.) *1. ஆக்கம் (பிங்.);* prosperity, wealth. *2. செம்பு;* copper. *3. ஈயம்;* lead. *4. வெள்ளீயம்;* pewter.

[சீர்[2] → சீருள்]

சீருளியம் *sīruliyam*, பெ. (n.) *சீருணம் (அக.நி.) பார்க்க;* see *sīrunam.*

[சீருள் → சீருளி + அம். 'அம்' = சொல்லாக்க ஈறு]

சீரெடு-த்தல் *sīredu-*, 4 செ.கு.வி. (v.i.) *சீர்செய்- பார்க்க;* see *sīr-šey-.*

[சீர் + எடு-,]

சீரை[1] *sīrai*, பெ. (n.) *1. செதுக்கப்பட்ட மரவுரி;* bark of a tree, used as clothing. *"சீரை தைஇய வுடுக்கையர்" (திருமுரு. 126). 2. சீலை (பிங்.);* cloth. *3. கந்தை;* rags, tatters. *"செடிபடுந் துணியுடைச் சீரை சுற்றினான்" (திருவாலவா. 54:19).*

ம. சிரெ; க. செரெ

[சிரை → சீரை (வ.மொ.வ. 153)]

சீரை[2] *sīrai*, பெ. (n.) *துலைத்தட்டு;* scale-pan. *"சீரைபுக்க வரையா வீகை யுரவோன்" (புறநா. 43:7).*

[சீர் → சீரை]

சீல்[1] *sīl*, பெ. (n.) *பருந்து (M.M.170);* kite.

U. cilla

சீல்[2] *sīl*, பெ. (n.) *நல்லொழுக்கம்;* good conduct. *"சீலுறு தெக்கணை கேளா" (உபதேசகா. சிவநாம. 123).*

[சீர் → சீல்]

சீலக்கேடு *sīla-k-kēdu*, பெ. (n.) *தீயநடத்தை (இ.வ);* bad manners; ill-behaviour.

[சீலம் + கேடு]

சீலங்கா-த்தல் *sīlan-gā-*, 4 செ.கு.வி. (v.i.) *நோன்பு முதலியவற்றை மேற்கொள்ளுதல் (சிலப். 14:11, உரை);* to observe austerities.

[சீலம் + கா-,]

சீலப்பேர் *sīla-p-pēr*, பெ. (n.) *ஒழுக்கத்தால் ஒருவர்க்கு வழங்கும் பெயர்;* name given to a person on account of his noble conduct. *"சீலப்பேர் வீரப்பேர் அநேகமா யிருக்குமிறே" (ஈடு, 2. 5 : 6).*

[சீலம் + பேர். பெயர் → பேர்]

சீலம்பாய் *šīlam-bāy*, பெ. (n.) *கிழிந்தபாய் (யாழ்ப்.);* worn-out mat.

[சிதிலம் → சீலம் + பாய்]

சீலம்பாயறுகு *šīlam-bāy-aṟugu*, பெ. (n.) *அறுகு வகை (யாழ்ப்.);* a species of cynodon grass, as spreading like a mat.

சீலா *šīlā*, பெ. (n.) *1. ஐந்து அடிநீளமுள்ள கடல் மீன் வகை;* a fish attaining 5 ft. in length. *2. படகின் இறைகூடை (வின்.);* a basket or bag for baling out bilge-water from a boat. *3. நீர்வாழ் பறவைவகை (வின்.);* a water-bird.

ம. சீலாவு

[சீல் → சீலா]



சீலா

சீலாந்தி *šīlāndi*, பெ. (n.) *பூவரசு பார்க்க;* see *pūvarašu.*

ம. சீலாந்தி

[சீறா² → சீலாந்தி]

சீலாப்புட்டி *šīlā-p-puṭṭi*, பெ. (n.) சீலா,-2 (வின்.) *பார்க்க;* see *šīla,-2.*

[சீலா + புட்டி. புட்டி = மூங்கில்கூடை, கூடைகலன்]

சீலாப்பூட்டை *šīlā-p-pūṭṭai*, பெ. (n.) சீலா² *(யாழ்அக.) பார்க்க;* see *šīlā*².

[சீலா + பூட்டை]

சீலி¹-த்தல் *šīli-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1. நல்லொழுக்கத்தில் நிறுத்துதல்;* to lead one in the path of virtue. "சீலிக்கு முறுதியாலே தேடரு நட்புமாகும்" *(ஞானவா. தாமவி. 15).* *2. பழகுதல் (யாழ்ப்.);* to practise, accustom oneself to. "உலக்கல் சீலிக்கப்பட்ட தோளினை யுடையான்" *(பு.வெ.11, ஆண்பாற். 2, உரை).*

[சீலம் → சீலி-,]

சீலி²-த்தல் *šīli-*, 4 செ.கு.வி. (v.i.) *சிலிர்த்தல்;* to become cool. "மேனியெல்லாஞ் சீலித்து ரோமஞ் சிலீரென்ன" *(நெல்விடு.தூது. 293).*

[சில் → சிலிர் → சீலி-,]

சீலி³ *šīli*, பெ. (n.) *வழக்கமுள்ளவன்;* person who has fallen into a habit. "பிறர் பின்செலுஞ் சீலிகட்கு" *(தேவா. 859, 8).*

[சீர் ² → சீல் → சீலி]

சீலை¹ *šīlai*, பெ. (n.) *1. துணி;* cloth, garment. "சீலைக் குதம்பை யொருகாது" *(திவ். பெரியாழ். 3. 3:1).* 'ஈரச்சீலையைப் போட்டுக் கழுத்தறுப்பான்' *(பழ.).* *2. புடைவை;* woman's cloth. 'சீலை இல்லையென்று சின்னாயிவீட்டுக்குப் போனாளாம்; அவள் ஈச்சம்பாயைக் கட்டிக்கொண்டு எதிரே வந்தாளாம்' *(பழ.).* *3. இரண்டேகால் முழத் துணி;* cloth of 2¼ cubits. *4. நீர்ச்சீலை (கோவணம்) (இ.வ.);* man's forelap.

ம. சீல; க. சேல, சீலெ; சீரெ; தெ. சீர; து. சீரெ; துட. சீல்ய; பட. சேலெ

[சீரை → சீலை]

த. சீலை → Skt. cīram

சீலை² *šīlai*, பெ. (n.) *1. செந்நிறக்கல் (மனோசிலை);* red ochre. *2. வெண்காரம்;* borax.

[சிலை → சீலை]

சீலை³ *šīlai*, பெ. (n.) *சீலைவாகை பார்க்க;* see *šīlai-vāgai.*

சீலைகொடு-த்தல் *šīlai-koḍu-*, 4 செ.கு.வி. (v.i.) *கைம்பெண்ணிற்குப் புடைவை கொடுத்து அவளை மணம் புரிதல்;* to present a cloth to a widow in taken of marrying her. 'அவளைச் சீலை கொடுத்துக் கொண்டுபோனான்' *(நாஞ்.).*

[சீலை + கொடு-,]

சீலைத்துணி *šīlai-t-tuṇi*, பெ. (n.) *1. சிறுதுண்டு (வின்.);* piece of cloth. *2. ஆடை;* clothes. *3. அழகுபடுத்தப் பயன்படுந்துணி (இ.வ.);* cloth for decoration.

[சீலை + துணி]

சீலைநாட்டு-தல் *šīlai-nāṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) குட்டி, பால் குடியாதிருக்கும் பொருட்டு

ஆட்டுமடியில் துணிகட்டுதல் (இ.வ.); to cover the udder of a goat with cloth, preventing its kid from sucking.

[சீலை + நாட்டு-,]

சீலைப்பாம்பு *sīlai-p-pāmbu,* பெ. (n.) நஞ்சில்லாததும், வெண்புள்ளியுள்ளதுமான ஒருவகைப் பாம்பு; carpet snake non-poisonous Russell's viper with white spots.

[சீலை + பாம்பு]

சீலைப்பாய் *sīlai-p-pāy,* பெ. (n.) சீலம்பாய் (யாழ்ப்.) பார்க்க; see *sīlam-bāy* 'சீலைப்பாய் ஈழம் போய்ச் சீனி சக்கரை கட்டுமா' (பழ.).

[சீலம்பாய் → சீலைப்பாய்]

சீலைப்பிள்ளை *sīlai-p-piḷḷai,* பெ. (n.) சீலையினாற் செய்த பொம்மை (நாஞ்.); a doll made of cloth, dist. fr. ōlai-p-piḷḷai.

[சீலை + பிள்ளை. சீரை → சீலை = துணி, புடவை]

பண்டைக்காலத்தில் சிறுபிள்ளைகளின் விளையாட்டிற்குதவும் வகையில் சீலையாலும், ஓலையாலும் பொம்மைகள் செய்தளித்தனர். அடுத்த நிலையில் மரத்தாலான பொம்மைகளைக் கொடுத்தனர். சீலையாற் செய்த பொம்மை, சிறுபிள்ளைகட்குத் தீங்கு விளைவிக்காது. இன்றும் soft toys என்னும் பெயரில் துணிப் பொம்மைகளைப் பிள்ளைகட்குக் கொடுப்பதைக் காணலாம்.

சீலைப்புடம் *sīlai-p-puḍam,* பெ. (n.) மருந்துப் புட வகை (தைலவ. தைல. 12, உரை); a mode of calcination of medicines.

[சீலை + புடம்]

சீலைப்புல் *sīlai-p-pul,* பெ. (n.) புல்வகை (வின்.); a kind of grass.

[சீலை + புல்]

சீலைப்பேன் *sīlai-p-pēṉ,* பெ. (n.) சீலையிற் பற்றும் பேன்; lice in cloths. "பாழுந்துணி சீலைப்பே னொருநாண் மாறா" (அரிச்.பு. சூழ்வினை. 91) 'சிரிப்பாணிக் கூத்து சிரிப்பாய்ச் சிரித்துச் சீலைப்பேன் குத்துகிறது' (பழ.).

ம. சீலப்பேன்; தெ. சீரபேநு

[சீலை + பேன்]

சீலைமண் *sīlai-maṇ,* பெ. (n.) மருந்துச்சட்டி வாயினிற் சுற்றுந் துணிமேலிடும் மண்பூச்சு; coat of clay on cloth spread over the mouth of a calcinatory pot.

தெ. சீலமந்நு

[சீலை + மண்]

சீலையுஞ்சை *sīlaiyuñjai,* பெ. (n.) கருவாகை எனும் மரவகை; fragrant sirissa.

[சீலை + உஞ்சை]

சீலைவாகை *sīlai-vāgai,* பெ. (n.) பீலிவாகை (L.); stipulate sirissa.

சீலைவாங்கியுடு-த்தல் *sīlai-vāṅgi-y-uḍu-,* 4 செ.கு.வி. (v.i.) கைம்பெண்ணொருத்தி, ஒருவனிடமிருந்து புடைவைபெற்று, அவனை மணம் புரிதல் (நாஞ்.); to accept a cloth from a man in token of marrying him, as a widow.

[சீலை + வாங்கி + உடு-,]

சீலைவாளை *sīlai-vāḷai,* பெ. (n.) ஒன்றரையடி நீளமுள்ள சொட்டைவாளை மீன்; butter-fish, fresh-water, silvery shot with purple, attaining $1\frac{1}{2}$ ft. in length (செ.அக.).

[சீலை + வாளை. வாளைமீன் வகையுள் நீண்டதாயிருப்பது]



சீலைவாளை

சீவகசிந்தாமணி *sīvaga-sindāmaṇi,* பெ. (n.) சீவகனைத் தலைவனாகக் கொண்டதும் திருத்தக்கதேவரால் இயற்றப்பெற்றதும், சமணஞ்சார்ந்ததும் ஐம்பேரிலக்கியங்களுள் ஒன்றுமான ஒரு தொடர்நிலைச் செய்யுள்; a Jaiṉa epic poem of which Jīvaga is the hero, composed by Tiruttakka dēvar, one of Iim-peruṅ-kāppiyam.

[சீவகன் + சிந்தாமணி]

சீவகன்[1] *sīvagaṉ*, பெ. (n.) சீவகசிந்தாமணியின் பாட்டுடைத்தலைவன்; the hero of the epic - Šīvaga-šindāmaṇi.

Skt. jīvaka.

சீவகன்[2] *sīvagaṉ*, பெ. (n.) ஆசீவகன்; member of the Ājīvaga sect among the jains. "சீவகனுக் கிரைந்தோ டிருமூன்றாம்" *(சி.சி. முகவுரை, தனிப்பா.)*

Skt. ajīvaka.

சீவடம் *sīvaḍam*, பெ. (n.) இழைப்பு (வின்.); planning, polishing.

தெ. சீவுடா

[சீவு → சீவுடம் → சீவடம்]

சீவரத்தார் *sīvarattār*, பெ. (n.) சீவரர் பார்க்க; see *sīvarar*. "உடையிலார் சீவரத்தார்" *(தேவா. 64. 10).*

[சீவரர் → சீவரத்தார்]

சீவரம் *sīvaram*, பெ. (n.) புத்தத்துறவிகள் அணியும் துவருட்டின ஆடை; salmon. coloured dress of Buddhist monks. "சீவரம் போர்த்தல்" *(சீவக. 1427, உரை).*

[செவ் → செவ → சிவ = சிவப்பு. சிவ → சீவம் → சீவரம் = செவ்வாடை (காவியுடை)]

சீவரர் *sīvarar*, பெ. (n.) புத்தத்துறவியர் (சீவரம் அணிந்தோர்); Buddhist monks as wearing sīvaram (செ.அக.).

Skt. sīvara

[சீவரம் → சீவரர்]

சீவல் *sīval*, பெ. (n.) 1. செதுக்கப்பட்டது (வின்); parings, shavings. 2. பாக்குச்சீவல்; parings of areca-nut for use with betel. 3. மெலிவு; thinness, leanness of body. 4. நெகிழ்ச்சியானது; that which is loosely woven. 5. மெலிந்தவ-ன் -ள்; thin person. 6. தலைமுடி ஒப்பனை; hair-style.

ம. சீவல்; க. சிகுர், சிகுரு, சிவரு; தெ. சிச்ச; கொலா. சிவ்வ; நா. சிவ்வ (மரம்)

[சீவு → சீவல்]

சீவல்வெற்றிலை *sīval-veṟṟilai*, பெ. (n.) வெற்றிலைபாக்கு (தஞ்சை); betel with parings of areca-nut for chewing.

[சீவல் + வெற்றிலை]

சீவலம் *sīvalam*, பெ. (n.) நீர்ப்பூடுவகை (யாழ்.அக); an aquatic plant.

சீவாளம் *sīvāḷam*, பெ. (n.) தம்பூருவின் நுண்ணிதாக அளவுபடுத்தற்கு அதன் நரம்பில் தொடுக்கும் சிறுநூல் (வின்.); piece of cord or wire attached to the strings of tampūru to regulate its sound.

தெ. ஜவாளமு; க. ஜீவாலி

[சீவு → சீவி + கட்டு-,]

சீவிக்கட்டு-தல் *sīvi-k-kaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. தலைவாரி முடித்தல்; to comb and tie-up the hair. 2. பாளையைச் சீவிக் கள்ளுக் கட்டுதல் (யாழ்ப்.); to pare off the spathes of a palm and attach a pot for drawing toddy.

[சீவு → சீவி + கட்டு-,]

சீவிடம் *sīviḍam*, பெ. (n.) சீவடம் (வின்.) பார்க்க; see *sīvaḍam*.

[சீவடம் → சீவிடம்]

சீவீர்க்கு *sīvīrkku*, பெ. (n.) சீவியஈர்க்கு (இ.வ.); ribs of palm leaves.

[சீவு + ஈர்க்கு]

சீவு-தல் *sīvu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. செதுக்கிக் கழித்தல்; to pare off, shave or scrape off. "புலவு சீவாப் புதுப்போர்வை" *(காசிக. பிரமன்வே. 8).* 2. மரமிழைத்தல்; to smooth or polish by planing. 3. தலைவாருதல்; to comb or brush the hair. "சீவிய கூந்தல்" *(இராமநா. பாலகா. 19).* 4. பெருக்குதல்; to sweep clean, as floor. 'களஞ்சீவித் தயாராயிருக்கிறது' *(இ.வ.).* 5. பல் முதலியவை துலக்குதல்; to clean, as teeth. "பற்சீவுங் கோல்" *(சூடா. 7:62).*

ம. சீவுக; க. சிவ்வு; தெ. சிவ்வு; பட. சீவு.

சீவுபுழுக்கொடியல் *sīvu-puḻukkoḍiyal*, பெ. (n.) புழுக்கி உலர்த்தின பனங்கிழங்கு (யாழ்ப்.); palmyra roots, boiled, pared and dried.

[சீவு + புழுக்கு + ஒடியல். புழுக்கு = வேகவை]

சீவுளி¹ *sīvuḷi*, பெ. (n.) 1. இழைப்புளி வகை; block-plane. 2. மெருகிடுங் கருவி வகை (வின்.); burnishing stick.

[சீவு + உளி]

சீவுளி² *sīvuḷi*, பெ. (n.) பலகை சுரண்டி என்ற கருவி (இ.வ.); scraper.

சீவுளிக்கூடு *sīvuḷi-k-kūḍu*, பெ. (n.) இழைப்புளிக் கட்டை (வின்.); wooden stock of a plane.

[சீவுளி + கூடு]



சீவுளிக்கூடு

சீவை *sīvai*, பெ. (n.) கூத்து (அக.நி.); dance.

சீவையர் *sīvaiyar*, பெ. (n.) கூத்தியர் (அக.நி.); dancing girls.

[சீவை → சீவையர்]

சீழ்¹ *sīḻ*, பெ. (n.) புண்ணின் சீ; pus.

தெ. சீமு; க. கீவு

[சீ → சீழ்]

சீழ்² *sīḻ*, பெ. (n.) சீழ்க்கை (வின்.) பார்க்க; see *sīḻkkai*.

['சீ' ஒலிக்குறிப்புச் சொல். சீ → சீழ்]

சீழ்க்கட்டி *sīḻ-k-kaṭṭi*, பெ. (n.) சீழ்ப்பிடித்த புண்கட்டி; abscess, boil, as having pus.

[சீழ் + கட்டி]

சீழ்க்காது *sīḻ-k-kādu*, பெ. (n.) காதிலிருந்து சீழ் வடியும் நோய்வகை; purulent discharge from the ear (செ.அக.).

[சீழ்¹ + காது]

சீழ்க்கை *sīḻkkai*, பெ. (n.) நாவின்நுனியை மடித்து எழுப்பும் ஒலி; whistling. "கொக்கரிப்பையும் சீழ்க்கையையு மெழுப்பினார்" (சீவக. 447, உரை).

க. சிள்ளு

[சீ → சீழ்² → சீழ்க்கை]

சீழ்க்கைக்கூத்து *sīḻkkai-k-kūttu*, பெ. (n.) சீழ்க்கையெழுப்பி ஆடுங்கூத்து; a mode of dancing accompanied with whistling. "இளையவர் சீழ்க்கைக் கூத்தோடு நெருங்குதலால்" (சீவக. 120, உரை).

[சீழ்க்கை + கூத்து]

சீழ்க்கைவிடு-தல் *sīḻkkai-viḍu-*, 20 செகுவி. (v.i.) நாவை மடித்து ஒலியெழுப்புதல் (வின்.); to whistle, give a signal by whistling.

[சீழ் → சீழ்க்கை + விடு-,]

சீழ்கட்டு-தல் *sīḻ-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) சீழ்ப்பிடித்தல்; to suppurate. 'உதைத்த கால் புழுக்கிறதுக்கு முன்னே அடிவயிறு சீழ் கட்டுகிறது' (பழ.).

[சீழ்¹ + கட்டு-,]

சீழ்கு-தல் *sīḻgu-*, 7 செ.கு.வி. (v.i.) விம்முதல்; to fetch, heave a sob. "சீழ்கிச் சீழ்கி யழுதால்" (ஈடு, 3.2 : 7).

[சிழகு → சீழ்கு-,]

சீழ்கு² *sīḻgu*, பெ. (n.) துடைப்பப்புல் (தொல். எழுத்து. 415, உரை); broom-grass.

[சீகு → சீழ்கு]

சீழ்கோ-த்தல் *sīḻkō-*, 17 செகுவி. (v.i.) சீழ்கட்டு-, பார்க்க; see *sīḻkaṭṭu*.

[சீழ்¹ + கோ-,]

சீழ்நோய் *sīḻ-nōy*, பெ. (n.) படைநோய் வகை (பைஷஜ. 282); gonorrhaea.

[சீழ் + நோய்]

சீழ்மரம் *sīḻ-maram*, பெ. (n.) மாமரவகை (இ.வ.); a species of mango.

சீழ்மலடு *sīḻ-malaḍu*, பெ. (n.) சீதமலடு (மூ.அ.) பார்க்க; see *sīda-malaḍu*.

[சீழ்¹ + மலடு]

சீழ்மூலம் *sīḻ-mūlam*, பெ. (n.) சீழ்வடியும் மூலநோய் (வின்); piles attended with discharge of pus.

[சீ (→ சீழ்) + மூலம்]

சீளைப்பறவு *sīḷai-p-paṟavu*, பெ. (n.) ஆறுவிரல நீளமும், நீலநிறமுமுள்ள கடல்மீன் வகை; sea-fish, steel-blue, attaining 6 in. in length.

சீற்காரம் *sīṟ-kāram* பெ. (n.) 1. மூச்சை உள்வாங்குதலால் எழுமொலி (கந்தபு. இந்திர. 45); sound made by drawing in the breath. 2. சீழ்க்கை (இ.வ.); whistling.

Skt. sīl-kāra

[சீழ்² + காரம்]

சீற்றம் *sīṟṟam*, பெ. (n.) மிகுசினம்; anger, fury. "சீற்றமொ டாருயிர் கொண்ட ஞான்று" (கலித். 103).

ம. சீற்றம்

[சீறு → சீற்றம்]

சீறடி *sīṟaḍi*, பெ. (n.) அழகிய சிறியகால்; small foot, considered beautiful. "சிலம்புங் கழலும் புலம்புஞ்சீறடி" (சிலப். 12: 64). "அஞ்செஞ் சீறடி யணிசிலம் பொழிய" (சிலப். 4 : 47).

[சிறு(மை) + அடி = சிற்றடி → சீறடி]

சீறல்¹ *sīṟal*, பெ. (n.) பெருஞ்சினம் (திவா.); fury, rage.

ம. சீறல்

[சீறு → சீறல்]

சீறல்² *sīṟal*, பெ. (n.) பெருங்காயம் (மூ.அ.); asafoetida.

சீறல்போக்கல் *sīṟal-pōkkal*, பெ. (n.) மருந்தின் வேகம்தணித்தல்; to root out or eradicate the virulence of medicine (சா.அக.).

[சீறல் + போக்கல்]

சீறளவு *sīṟaḷavu*, பெ. (n.) தலைகட்டாமல் அளக்கும் அளவு (இ.வ.); measuring grain without heaping it above the top of the measure.

[சிறு(மை) + அளவு. சிற்றளவு சீறளவு]

சீறாப்புராணம் *sīṟā-p-purāṇam*, பெ. (n.) முகமது நபியின் வரலாறு பற்றி 17ஆம் நூற்றாண்டில் உமறுப்புலவர் இயற்றிய தொன்ம (புராண) இலக்கிய நூல்; a poem on the life of Muhammad, by Umaṟu-p-pulavar, 17th C.

Arab. sīrat.

சீறியகற்பு *sīṟiya-kaṟpu*, பெ. (n.) மறக்கற்பு; chastity militant which actively guards and upholds its dignity, dist. fr. āṟiya-kaṟpu. "ஆறிய கற்புஞ் சீறியகற்பு மெனக் கற்பு இருவகை" (சிலப். பதி. 42, அரும்.).

[சீறு + கற்பு]

சீறியழு-தல் *sīṟi-y-aḻu-*, 1 செ.கு.வி. (v.i.) குழந்தை அலறியழுதல் (இ.வ.); to scream out loudly, as a child.

[சீறி + அழு-,]

சீறியாழ் *sīṟi-yāḻ*, பெ. (n.) சிறிய யாழ்; a small lute. "கருங்கோட்டுச் சீறியாழ்" (புறநா. 127).

[சிறு(மை) + யாழ். சிறுயாழ் → சீறியாழ்]



சீறில் *sīṟil*, பெ. (n.) சிறுவீடு; small house. "சீறின் முன்றி லிருந்த முதுவாய்ச்சாடி" (புறநா. 319).

[சிறு(மை) + இல். சிற்றில் → சீறில்]

சீறிவிழு-தல் *sīṟi-viḻu-*, 2 செ.கு.வி. (v.i.) 1. மிகு சினத்தால் ஓசையிட்டுக் கொண்டு ஒருவன் மேற் பாய்தல்; to fall into a rage and attack. 2. சினங்கொள்ளுதல்; to get enraged.

[சீறி + விழு-,]

சீறு¹-தல் *sīṟu-*, 5. செ.கு.வி. (v.i.) 1. பாம்பு முதலியன சீற்றத்துடன் வெகுளுதல்; to hiss, as a serpent. 2. குதிரை முதலியன மூச்செறிதல் (வின்); to snort, as a horse; to sniff. 3. மிகுசினங் கொள்ளுதல்; to be infuriated, to swell with rage. 4. தீ முதலியன முழங்கியெரிதல்; to roar and blaze forth, as a flame.

சீறு²-தல் *sīṟu-*, 5. செ.குன்றாவி. (v.t.) 1. சினத்தல்; to get angry with. "சிறுபேரழைத்தனவுஞ் சீறியருளாதே" (திவ். திருப்பா. 28). 2. அழித்தல்; to destroy. "எயில்கண் மூன்றுஞ் சீறு மெந்தைபிரான்" (தேவா. 45, 2).

சீறு³-தல் *sīṟu-*, 5 செ.கு.வி. (v.i.) ஆந்தைபோல் கத்துதல்; to hoot like an owl. "ஆந்தை சீறல் அறியும் பலன்" (கவுளிசா. 16).

சீறு[4] *sīṟu*, பெ. (n.) *சீற்றம்;* anger. "*சீறில்லான்*" *(ஏலாதி, 34).*

சீறுசீறெனல் *sīṟu-sīṟeṉal*, பெ. (n.) 1. *அலறியழுதற்குறிப்பு;* onom. expr. signifying vehemence in crying. "*பிள்ளை சீறுசீறென் றழுகிறது*". 2. *சினமிகுதிக் குறிப்பு;* violent anger.

[சீறு + சீறு + எனல்]

சீறுபாறெனல் *sīṟu-pāṟeṉal*, பெ. (n.) *முரண்படுதற் குறிப்பு;* onom. expr. signifying quarelling. "*பூவோடே சீறுபா றென்னுங் கண்*" *(திவ். திருப்பா. 13, வியா. 140).*

[சீறு + பாறு + எனல்]

சீறுபூறெனல் *sīṟu-pūṟeṉal*, பெ. (n.) 1. *மிகுசினத்தோடு தாக்குதற்குறிப்பு;* onom. expr. signifying quarelling with another, attacking with fury. 2. *பெருங்குறட்டைவிடுதற் குறிப்பு;* hard snoring. 3. *இரைச்சற்குறிப்பு;* roaring, as an approaching storm.

[சீறு + பூறு + எனல்]

சீறுமாறு *sīṟu-māṟu*, பெ. (n.) 1. *தாறுமாறு;* confusion. 2. *சரியாய் நடத்தாமை (வின்.)*, ill-treatment.

[சீறு + மாறு]

சீறுவாணம் *sīṟu-vāṇam*, பெ. (n.) *வெடிக்காமற் சீறிச்செல்லும் வாணம்;* rocket.

[சீறு + வாணம்]

சீறுள் *sīṟuḷ*, பெ. (n.) 1. *ஈயம்;* lead or tin. 2. *செம்பு;* copper.

சீறூர் *sīṟūr*, பெ. (n.) 1. *சிறிய ஊர்;* small village, hamlet. "*சீறூர்க் கோளிவண் வேண்டேம் புரவே*" *(புறநா. 297).* 2. *குறிஞ்சி நிலத்தூர் (பிங்.);* village in hilly tracts. "*தழங்கு மருவியெஞ் சீறூர் பெருமவிது*" *(திருக்கோ. 127).*

[சிறு(மை) + ஊர் = சீறூர்]

சீறெலி *sīṟeli*, பெ. (n.) *சுண்டெலி (பிங்.);* mouse, as a small species of rat.

[சிறு + எலி = சீறெலி]

சீனி *sīṉi*, பெ. (n.) 1. *சேணம்;* saddle. 2. *மர நங்கூரம் (வின்.);* wooden anchor made heavy with stones.

U. zin

[சேணம் → சேணி → சீனி]

சீனிக்கட்டை *sīṉi-k-kaṭṭai*, பெ. (n.) *சேணஞ் செய்தற்குரிய மரவச்சு (புதுவை.);* saddle-tree.

[சேணம் → சேணி. சீனி + கட்டை]

சீனிக்கயிறு *sīṉi-k-kayiṟu*, பெ. (n.) *மரநங்கூரக் கயிறு (வின்.);* cable of wooden anchor.

[சேணம் → சேணி. சீனி + கயிறு]

சீனிகட்டு-தல் *sīṉi-kaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.i.) *குதிரைக்குச் சேணமிடுதல்;* to saddle a horse *(செ.அக.).*

[சேணம் → சீனம் → சீனி + கட்டு-,]

சீனிச்சட்டி *sīṉi-c-caṭṭi*, பெ. (n.) *வறுத்தற்குரிய இருப்புச்சட்டி (இ.வ.);* frying pan.

[சில் → சின் → சினி → சீனி]

சீனிப்பாய் *sīṉi-p-pāy*, பெ. (n.) *பாய்வகை;* a kind of mat. "*மெத்தைத் தலையணையும் சீனிப்பாயும் போட்டுக் கொடுத்து*" *(தமிழறி. 57).*

[சீனி + பாய்]

சீனிமிளகாய் *sīṉi-miḷagāy*, பெ. (n.) *மிளகாய் வகை (வின்.);* a kind of chilli.

[சீனி' + மிளகாய்]

சீனியவரை *sīṉi-y-avarai*, பெ. (n.) *கொத்தவரை;* *cluster-bean.*

[சீனி + அவரை]



சீனியவரை

சீனிவெடி *sīṉi-veḍi*, பெ. (n.) *சிறிய பட்டாசு;* a kind of small crackers.

[சீனி + வெடி]

சீனை *sīṉai*, பெ. (n.) *வன்னி (மு.அ.);* Indian mesquit.

சு

சு[1] *cu/šu,* சகரமெய்யும் உகரவுயிருங் கூடிய உயிர் மெய்யெழுத்து; syllable formed by adding the short vowel 'u' to the consonant 'c'/ 's'.

சு[2] *šu,* பெ. (n.) 1. அதட்டும் ஓசை; warning sound. 2. நாய் முதலியவற்றைத் துரத்தும் ஒலி; driving sound of dog etc.

சுஃறெனல் *šukrenal,* பெ. (n.) சுஃஃறெனல் பார்க்க; see *sukkrenal.* "சுஃறெனுந் தோட்டுப் பெண்ணை" *(திருவிளை. வலைவீ. 48).*

சுஃஃறெனல் *šukkrenal,* பெ. (n.) பனையோலை போன்றன எரியும்பொழுது ஏற்படுவது போன்ற ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. of rustling, as of palmyra leaves, spreading fire, etc., "சுஃஃறென்னுந் தண்டோட்டுப் பெண்ணை" *(தொல். எழுத்து. 40, உரை).*

சுஃறு *šukru,* பெ. (n.) சுஃஃறெனல் பார்க்க; see *šukkrenal* "சுஃறொலி வேத்திரப் படைக்கை" *(திருவிளை. எல்லாம்5).*

சுக்கங்கீரை *šukkan-kirai,* பெ. (n.) தோட்டங்களில் பயிர் செய்யப்படுவதும், உடம்பிற்குக் குளிர்ச்சியைத் தருவதும், மலத்தை இளக்குவதும், சிறுநீரைப் பெருக்குவதுமாகிய புளிக்கீரை வகை; country sorrel, it is commonly cultivated in gardens and it is cooling and aperient and diuretic to some extent *(சா.அக.).*

மறுவ. புளிச்சக்கீரை

தெ. சுக்க கூர

[சுக்கன் + கீரை]

சுக்கச்சீலை *šukka-c-cilai,* பெ. (n.) வங்குக்கல்; lead ore *(சா.அக.).*

[சுக்கான் → சுக்கன் + சீலை]

சுக்கஞ்செட்டி *šukkañ-jetti,* பெ. (n.) கடுஞ்செட்டுள்ளவன்; miser; hard-fistal person.

ம. சுக்குச்செட்டி

[சுக்கு + அம் + செட்டி. செட்டு → செட்டி]

சுக்கடித்தம் *šukkadittam,* பெ. (n.) அழுத்தமாக நெய்யப்பட்ட புடைவை (வின்.); linen closely woven.

தெ. சுக்கடிதமு; Skt. su-ghatita

[சுள் → சுக்குதல் = காய்தல், வறளுதல். சுட்டு → சுக்கு. சுக்குதல் = உலர்தள். சுக்கு → சுக்கடி = நெருங்கியிருத்தல்]

சுக்கடித்தல் *šukkadittal,* பெ. (n.) 1. ஆடவர் விளையாட்டு; a boys game. 2. பலீன்சடுகுடு பார்க்க; see *palinšadukudu.*

[சுக்கு + அடித்தல்]

சுக்கடைப்பஞ்சு *šukkadai-p-pañju,* பெ. (n.) 1. காதுவலிக்குப் பயன்படும் மருந்து; ear drops for pain in the ear. 2. சுக்கையிடித்துப் பஞ்சுக்குள் பொதிந்து காதில் அடைத்துக் கொள்ளும் பஞ்சு; cotton in which is concealed powdered dried ginger inserted into ear as a remedy in certain diseases of the ear.

[(சுக்கு + அடை) சுக்கடை + பஞ்சு]

சுக்கம்[1] *šukkam,* பெ. (n.) 1. நாட்டு வெள்ளரிக் காய், தும்மட்டி; country cucumber. 2. வெள்ளரி; mottled.

சுக்கம்[2] *šukkam,* பெ. (n.) களவு (யாழ்ப்.); steeling, pilfering.

[சுக்கு → சுக்கம்]

சுக்கம்பார் *šukkam-pār,* பெ. (n.) சுக்கான் பாறை (இவ.) பார்க்க; see *šukkān-pārai.*

[சுக்கான் → சுக்கம். பாறை → பார்; சுக்கம் + பார்]

சுக்கம்வைத்-தல் *šukkam-vai-,* 4 செ.குன்றாவி. (v.i.) காளவாயைக் கைப்பற்றுதல்; capturing of kiln.

[சுக்கம் + வை-,]

சுக்கல்[1] *šukkal,* பெ. (n.) சிறுதுண்டு; bit; small piece. கண்ணாடியை அவன் சுக்கலாய் நொறுக்கி விட்டான்.

ம. சுக்கிரி

[சுள் → சுண்டு = சிறியது, சிறிய முகவைக் கருவி. சுண்டு → சுண்டை = சிறிய காய் வகை. சுள் → சுட்கு → சுக்கு = சிறியது, சிறு துண்டு. சுக்கு → சுக்கல்]

சுக்கல்[2] *šukkal,* பெ. (n.) *கண்ணில் பூவிழும் நோய்வகை;* opacity of cornea.

க. சுக்கி; தெ. சுக்கலமு.

சுக்காங்குழல் *šukkāṅ-kuḷal,* பெ. (n.) குருவி முதலிய சிறுபறவைகளை உண்டைவைத்து அடிக்கும் ஊதுகுழாய் (இ.வ.); a long tube through which pellets of clay are shot.

[சுக்கான் + குழல்]

சுக்காஞ்செட்டி *šukkāñ-jeṭṭi,* பெ. (n.) சுக்கஞ் செட்டி (இ.வ.) பார்க்க; see *šukkañjeṭṭi.*

[சுக்கான் + செட்டி]

சுக்காம்பார் *šukkām-pār,* பெ. (n.) சுக்கான் பாறை (இவ.) பார்க்க; see *šukkāṉ-pāṟai.*

[சுக்கான் + (பாறை) பார்]

சுக்காரம் *šukkāram,* பெ. (n.) அரிமாமுழக்கம் (யாழ்.அக.); roar, as of a lion.

ம. சுக்காரம்

Skt. šukkāra

சுக்கான் *šukkāṉ,* பெ. (n.) 1. சுக்கான்கல், 1 (தைலவ.பாயி.26) பார்க்க; see *šukkāṉ-kal,1.* 2. சுக்கம்[1], 1 (பதார்த்த. 718) பார்க்க; see *šukkam*[1].

[சுள் → சுள்கு → சுட்கு → சுக்கு = காய்ந்த இஞ்சி. சுக்குதல் = காய்தல். சுக்கு → சுக்கான் = சுண்ணாம்புக்கல்]

சுக்கான்கல் *šukkāṉ-kal,* பெ. (n.) 1. சுண்ணாம்புக்கல்; kunkur limestone, impure concretionary carbonate of lime. "சுக்கான் கல்லாகிய பகையாலே" (பொருந. 44, உரை). 2. ஒரு வகைக்கட்டி மண் (M.M. 748); pipe clay. 3. உருக்குச் செங்கல் (இ.வ.); overburnt brick.

ம. சுக்கான் கல்லு

[சுக்கான் + கல்]

சுக்கான்கல்குரு *šukkāṉ-kal-guru,* பெ. (n.) செம்பின் ஊறலைப் போக்கும் ஒரு குரு மருந்து; lime stone quintessence prepared through alchemical process and used for purifying copper (சா.அக.).

[சுக்கான் + கல் + குரு]

சுக்கான்கல்சுண்ணம் *šukkāṉ-kal-šuṇṇam,* பெ. (n.) 1. செம்புக்களிம்பு நீக்கி; copper rust remover. 2. நீற்றிய கற்சுண்ணாம்பு; slaked lime (சா.அக.).

[சுக்கான்கல் + சுண்ணம்]

சுக்கான்காய் *šukkāṉ-kāy,* பெ. (n.) தும்மட்டிக் காய் (பதார்த்த718); unripe cucumber.

[சுக்கான் + காய்]

சுக்கான்கீரை *šukkāṉ-kīrai,* பெ. (n.) சுக்கங்கீரை (மலை.) பார்க்க; see *šukkaṅ-gīrai.*

[சுக்கான் + கீரை]



சுக்கான்கீரை

சுக்கான்சுண்ணாம்பு *šukkāṉ-šuṇṇāmbu,* பெ. (n.) சுக்கான்கல்லை நீற்றியெடுத்த சுண்ணாம்பு; kunkur lime.

மறுவ. சுட்ட சுண்ணாம்புக்கல்

[சுக்கான் + சுண்ணாம்பு]

சுக்கான்தண்ணீர் *šukkāṉ-taṇṇīr,* பெ. (n.) 1. சுண்ணாம்பு ஊறிய நீர்; water on lime-stone beds. 2. சுண்ணாம்பு கரைந்துள்ள தண்ணீர்; lime water. 3. சுண்ணாம்பு உப்புள்ள தண்ணீர்; water containing calcium salts; calcic water.

[சுக்கான் + தண்ணீர்]

சுக்கான்தரை *šukkāṉ-darai,* பெ. (n.) சுண்ணாம்பு நிலம்; soil of lime stone.

[சுக்கான் + தரை]

சுக்கான்பருவதம் *šukkāṉ-paruvadam,* பெ. (n.) சிலாவங்கம் அல்லது வங்கக்கல்; lead ore (சா.அக.).

[சுக்கான் + பருவதம்]

சுக்கான்பழம் *šukkān-palam,* பெ. (n.) கொம்மட்டிப்பழம்; fruit of Bryonia (சா.அக.).

[சுக்கான் + பழம்]

சுக்கான்பார் *šukkān-pār,* பெ (n.) 1. சுக்கான் கரை; lime stone bed or bank. 2. சுக்கான் பாறை; lime stone quarry.

[சுக்கான் + பார்]

சுக்கான்பாறை *šukkān-pārai* பெ. (n.) சுக்கான் மயமான பாறை (பதார்த்த. 37); kunkur ledge. 'சுக்கான் பாறைத் தண்ணீர் கடுக்கும்' (உ.வ.).

[சுக்கான்[2] + பாறை]

சுக்கான்பாறைநீர் *šukkān-pārai-nīr* பெ. (n.) சுக்கான் தரையிலூறும் தண்ணீர்; water comes from calcium quarry.

[சுக்கான் + பாறை + நீர்]

சுக்கான்மண் *šukkān-maṇ,* பெ. (n.) 1. சுக்கான் நிலம்; lime stone soil. 2. சீமைச்சுண்ணாம்புத் தரை; soil largely impregnated with carbonate of lime (சா.அக.).

[சுக்கான் + மண்]

சுக்கானீறு *šukkānīṟu,* பெ. (n.) தாளித்த சுண்ணாம்பு, கற்சுண்ணாம்பு; slaked lime.

மறுவ. கற்சுண்ணாம்பு

[சுக்கான் + (நீற்று) நீறு]

சுக்கிகை *šukkigai,* பெ. (n.) புளியாரை (சங்.அக.); yellow wood-sorrel.

மறுவ. சுக்கான் வருத்தியம்

[சுக்கு → சுக்கி → சுக்கிகை]

சுக்கிலான் *šukkilān,* பெ. (n.) வெட்பாலை; tellicherry bark (சா.அக.).

சுக்கிலை *šukkilai,* பெ. (n.) புளியமரம்; tamarind tree (சா.அக.).

[சுக்கு + இலை. மரப்பட்டை உலர்ந்திருத்தலால் இப்பெயர் வந்தது போலும்]

சுக்கு[1]-தல் *šukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. புணர்தல்; கூடுதல்; to copulate. 2. செய்தல்; to perform, execute (சா.அக.).

தெ. சொக்கு

[சுள் → சுள்கு → சுட்கு → சுக்கு (வேக.211)]

சுக்கு[2] *šukku,* பெ. (n.) 1. உலர்ந்த இஞ்சி (திவா.); dried ginger. சுக்கு அறியாத கியாழம் உண்டா? (பழ.). 2. சிறுதுண்டு; துணுக்கு (கொ.வ.); small piece; bit; fragment; small particle. 'கண்ணாடி சுக்குச் சுக்காய் உடைந்து போயிற்று' (உ.வ.). 3. பயனற்றது; worthless thing. "அங்கு சுக்குத் தான் இருக்கிறது" (நாஞ்.).

ம. சுக்கு. க. சுண்டி; பட. சுட்டி; pkt. sukkha; Skt. šuṣka

[சுள் → சுட்கு → சுக்கு. ஒ.நோ. வெள் → வெள்கு → வெட்கு (வே.க. 211)]

சுக்கு[3]-தல் *šukku-,* 5 செ.கு.வி. (v.i.) 1. உலர்தல் (நாஞ்.); to get dry. 2. உணக்குதல்; to cause to dry, to dry in the sun.

ம. சுக்குக; க. சுக்கு; தெ. சுருக்கு; து. சிர்க்குனி; கோத. சுக்; துட. சுர்; கொலா. சுக்; பர். சுர்க்; கோண். சூர்

[சுள் → சுங்கு → சுக்கு]

சுக்குக்களி *šukku-k-kaḷi,* பெ. (n.) சுக்குச் சேர்த்து மருந்தாகச்செய்யப்படும் களிவகை; a pasty preparation of which dried ginger forms the main ingredient chiefly given to women in confinement.

[சுக்கு + களி]

சுக்குச்சுக்காய் *šukku-c-cukkāy,* வி.அ. (adv.) துண்டுதுண்டாய்; in pieces; shattered to pieces.

மறுவ. சுக்குச்சுக்காக, சுக்கு நூறாக, சுக்கல் சுக்கலாக

[சுக்கு + சுக்கு + ஆய்]

சுக்குச்சூரணம் *šukku-c-cūraṇam,* பெ. (n) 1. சுக்கையிடித்துச் சலித்தபொடி; powdered and sieved dried ginger. 2. சுக்கை முதன்மையாகக் கொண்டு பல மருந்துச் சரக்குகளைச் சேர்த்துச் செய்த சுக்குப்பொடி; powder prepared with dry ginger as cheif ingredient (சா.அக.).

[சுக்கு + சூரணம்]

சுக்குச்செட்டி *šukku-c-ceṭṭi,* பெ. (n.) சுக்கஞ் செட்டி (இவ.) பார்க்க; see *šukkañ-šeṭṭi.*

[சுக்கு + செட்டி]

சுக்குச்செட்டு *šukku-c-cettu*, பெ. (n.) இவறற்றன்மை; misarliness; stinginess.

[சுக்கு + செட்டு]

சுக்குச்செட்டுப்பண்ணு-தல் *šukku-c-cettu-p-pannu-*, 5 செ.குன்றாவி. (v.i.) 1. அதிகப்படியான சிக்கனம் கொள்ளுதல் (இவ.); to be stingy. 2. சிறுவணிகம் செய்து ஆதாயம் பிடித்தல் (வின்.); to make profit by trading, in small articles.

[சுக்கு + செட்டுப்பண்ணு-,]

சுக்குத்தண்ணீர் *šukku-t-tannīr*, பெ. (n.) 1. சுக்கிட்டுக் காய்ச்சிக் கொதிக்க வைத்த நீர்; boiled ginger water. 2. சுக்கும் வெல்லமுமிட்டுக் காய்ச்சியிறக்கி வடிகட்டிய பருகம்; a favourite and in vigorating beverage made by boiling dried ginger and jaggery and then filtered milk can be added and taken as coffee (சா.அக.).

[சுக்கு + தண்ணீர்]

சுக்குத்தான் *šukku-t-tān*, பெ. (n.) சுங்குத்தான் குழல் பார்க்க; see *šungu-t-tān-kulal*.

சுக்குநாறி *šukku-nāri*, பெ. (n.) சுக்கு மணமுடைய சாலிமரம்; a tree having the odour of dried ginger (சா.அக.).

[சுக்கு + நாறி. நாற்றம் = மணம். நாற்றம் → நாறி]

சுக்குநாறிப்புல் *šukku-nāri-p-pul*, பெ. (n.) 1. ஒருவகைப்புல்; spice or dry ginger grass. 2. சுன்னாறிப்புல்; orange grass. 3. மாந்தப்புல்; roussa grass. 4. எலுமிச்சம்புல்; rusa oil plant. 5. கருப்பூரப்புல்; andropogon citratis (சா.அக.).

ம. சுக்கு நாறிப்புல்லு

[சுக்குநாறி + புல்]

சுக்குநாறிப்புல்தைலம் *šukku-nāri-p-pul-dailam*, பெ. (n.) சுக்குநாறிப் புல்லிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்; oil extracted from the ginger grass (சா.அக.).

[சுக்குநாறிப்புல் + தைலம்]

சுக்குநாறிப்பூடு *šukku-nāri-p-pūdu*, பெ. (n.) எல்லாவகைப் புண்களையும் ஆற்றும் குணமுடைய மூலிகை; a plant supposed to cure all kind of ulcers.

மறுவ. வெட்டுப்புண் ஆற்றி, காயமாற்றி

[சுக்குநாறி + பூடு]

சுக்குப்பாணிதம் *šukku-pānidam*, பெ. (n.) சுக்கு நீரில் சருக்கரையிட்டு மீண்டும் காய்ச்சி எடுத்த பாகு; a strong medicated solution of sugar from the extract of dried ginger (சா.அக.).

Skt. pāṇi

[சுக்கு + பாணிதம்]

சுக்குப்பால் *šukku-p-pāl*, பெ. (n.) கண்ணோய்க்காகச் சுக்கைப் பாலில் இழைத்து கண்ணிற் பிழியும் ஒருவகைக் கலிக்கமருந்து (இ.வ.); a medicinal preparation for some kind of eye diseases from the dried ginger rubbed with milk (சா.அக.).

[சுக்கு' + பால்]

சுக்குப்பொடி[1] *šukku-p-podi*, பெ. (n.) சுக்குத் தூள்; dried ginger powder.

[சுக்கு + பொடி]

சுக்குப்பொடி[2] *šukku-p-podi*, பெ. (n.) சொக்குப்பொடி (பேச்சு வழக்கு); a kind of magic powder (சா.அக.).

தெ. சொக்குப்பொடி

[சுக்கு + பொடி]

சுக்கும்பல் *šukkumbal*, பெ. (n.) சிலந்தி; spider (சா.அக.).

சுக்குமத்தண்டுலம் *šukkumattandulam*, பெ. (n.) திப்பிலி; long-pepper (சா.அக.).

[சுக்குமம் + தண்டுலம்]

சுக்குமம் *šukkumam*, பெ. (n.) சிற்றேலம் (மூ.அ.); small cardamom.

Skt. sūkṣmā

சுக்குமாத்தடி[1] *šukku-mā-t-tadi*, பெ. (n.) 1. துறவிகள் கையில் கொண்டு செல்லும் கழி (வின்.); staff carried by mendicants as imbued with the power or energy of a deity. 2. சிறு தெய்வங்கள் கையில் அமைக்கப்படுஞ் சிறு

தண்டம் (இவ.); a club with which some inferior deities are armed. 3. மந்திரக்கோல் (இவ.); magic wand.

மறுவ. சுக்குமாந்தடி

[சொக்கு → சுக்கு + மா + தடி]

சுக்குமாந்தடி *śukku-māndaḍi*, பெ. (n.) சுக்கு மாத்தடி பார்க்க; see *śukku-mā-t-taḍi*. "சுக்குமாந்தடி கொண்டு நொக்கி விடுவான்" (நந்த. சீர்த்.).

[சுக்குமாத்தடி → சுக்குமாந்தடி]

சுக்குமி *śukkumi*, பெ. (n.) கொத்தவரை; cluster bean (சா.அக.).

மறுவ. சீனியவரை

சுக்குயிளகியம் *śukku-y-iḷagiyam*, பெ. (n.) சுக்கு 25 பலத்திற்கு 2 1/2 படி கியாழமிறக்கி, அதனோடு வெல்லம் 2 1/2 பலம் ஓமம் 1 1/2 பலம் நெய் 1/2 படி என இவற்றையும் சேர்த்து இளகியமாக (லேகியம்) ஆக்குதல்; an electuray prepared with the decoction of dry ginger, jaggery, ajown, curry leaves and cow's ghee. It cures diarrhoea, chronic diarrhoea indigestion, wind swelling, etc.,

[சுக்கு + இளகியம்]

இவ்விளகியம் சாப்பிட்டால், மிகு கழிச்சல், செரியாமை, மூலம், வீக்கம், முதலானவை போகுமெனச் சாம்பசிவம் பிள்ளை மருத்துவ அகரமுதலி குறிக்கின்றது.

சுக்குலகந்தம் *śukkula-gandam*, பெ. (n.) 1. வசம்பு; sweet flag. 2. அதிவிடயம்; Indian atees.

சுக்குவெல்லம் *śukku-vellam*, பெ. (n.) சுக்குப் பொடி கலந்த வெல்லம் (உவ.); jaggery mixed with pulverised dried ginger, used as a digestive.

ம. சுக்குவெல்லம்

[சுக்கு + வெல்லம்]

சுக்குவெள்ளம் *śukku-veḷḷam*, பெ. (n.) சுக்குக் கலந்த வெந்நீர் (நாஞ்.); ginger-water a stimulant.

ம. சுக்குவெள்ளம்

[சுக்கு + வெள்ளம்]

சுக்கெலும்பு *śukkelumbu*, பெ. (n.) மார்பு எலும்பு; bones of the chest (சா.அக.).

மறுவ. விலாவெலும்பு, நெஞ்செலும்பு

[சுக்கை (வரி) + எலும்பு]

சுக்கை[1] *śukkai*, பெ. (n.) முசுமுசுக்கை (மலை.); bryony or bristly.

[முசுமுசுக்கை → சுக்கை]

சுக்கை[2] *śukkai*, பெ. (n.) விண்மீன்; star.

தெ. சுக்க cf. ulkā; க. சுக்கெ; நாய்க். சுக்க பாலி. சுக்க; கோண்ட். சுக்கம்; கோண்டா. சுக; குவி. ஹுசு

சுக்கை[3] *śukkai*, பெ. (n.) பூமாலை; garland. "சுக்கைப் பிற்சுற்றியும்" (திருப்பு. 161).

சுக்கை[4] *śukkai*, பெ. (n.) கப்பற்சுங்கம் (யாழ்ப்.); passage money; freight.

[சுங்கம் → சுக்கம் → சுக்கை]

சுகட்டான் *śugaṭṭāṉ*, பெ. (n.) 1. நாணற்புல்; kaus. 2. முடக்கொற்றான்; balloon vine, smooth leaved heart pea (சா.அக.).

சுகட்டிகம் *śugaṭṭigam*, பெ. (n.) பெருங்குமிழ மரம்; Cashmere tree (சா.அக.).

சுகட்டிகா *śugaṭṭigā*, பெ. (n.) நாணற்புல்; kaus (சா.அக.).

[சுகட்டான் → சுகட்டிகா]

சுகட்டிரா *śugaṭṭirā*, பெ. (n.) பேய்ப்புல்; a kind of poisonous grass full of little clots (சா.அக.).

சுகண்டி *śugaṇḍi*, பெ. (n.) ஒருவகை உயர் மணி (அரத்தினம்); a gem (சா.அக.).

சுகந்திக்கல் *śugandi-k-kal*, பெ. (n.) ஒருவகைச் செவ்வந்திக்கல்; a semi precious stone (சா.அக.).

[சுகந்தி + கல்]

சுகந்திப்பாலை *śugandi-p-pālai*, பெ. (n.) 1. நற்பாலைவேர்; the root of fragrant palay milky plant. 2. நன்னாரிவேர்; Indian sarasaparilla (சா.அக.).

சுகம்பல் *śugambal,* பெ. (n.) புளிநறளை (மலை); bristly trifoliate vine.

சுகம்பலம் *śugambalam,* பெ. (n.) பூனைக் காலி; cowhage plant (சா.அக.).

சுகியன் *śugiyaṉ,* பெ. (n.) ஒரு வகை இனிப்புப் பண்ணியம்; a kind of sweet pastry ball. "அவல்பொரி சுகியன் . . ." (திருப்பு. 426).

ம. சுகியன்; தெ. சுகிய; க. சுக்ய

[சுழியன் → சுகியன் (வே.க. 229)]

சுகிர்[2] *śugir,* பெ. (n.) உட்டுளை (சூடா.); tubularity.

Skt. suṣira.

சுகிர்புரி-தல் *śugir-puri-,* 2 செ.குன்றாவி. (v.t.) யாழ் நரம்பினை வடித்து முறுக்குதல்; to rub clean and tighten the strings of a lute. "சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி" (புறநா. 109).

[சுகிர்' + புரி-,]

சுங்கடி *śuṅgaḍi,* பெ. (n.) முடிச்சுக்கட்டிச் சாயமிடப்பெற்ற ஒருவகைச் சீலை; a kind of dyed saree with undyed spots.

தெ. சுங்கடி

சுங்கம்[1] *śuṅgam,* பெ. (n.) கஞ்சத்தனம்; misserlyness.

[சுள் → சுட்கு → சுக்கு → சுக்கம் → சுங்கம்]

சுங்கம்[2] *śuṅgam,* பெ. (n.) 1. ஆடுதின்னாப் பாலை (மலை.); worm killer. 2. கடுகு; mustard.

Skt. juṅga

சுங்கம்[3] *śuṅgam,* பெ (n.) 1. கீழறுக்கை; undermining. 2. திருட்டு; stealing, pilfering.

சுங்கம்பிடி-த்தல் *śuṅgam-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) கடுஞ்சிக்கனம் செய்து பொருள் சேர்த்தல். (இ.வ.); to save money, as a miser.

[சுங்கம் + பிடி-,]

சுங்கல்[1] *śuṅgal,* பெ. (n.) விளையாட்டில் மேலும் ஓர் ஆட்டம்; an extra turn in game.

சுங்கல்[2] *śuṅgal,* பெ. (n.) சுங்கு,1 பார்க்க; see śuṅgu.

மறுவ. சுங்கு

தெ. சுங்கு; க: சுங்கு

[சுங்கு → சுங்கல்]

சுங்கான் *śuṅgāṉ,* பெ (n.) புகை பிடிக்கும் குழாய் (யாழ்.அக.); tobacco pipe.

க., து. சுங்காணி; ம. சுங்கா; U. cuṅgā

[சுருங்கை → சுங்கை → சுங்கான்]

சுருங்கை என்பது சிறுவழி; புகையிலையைப் போட்டுத் தீமூட்டிச் சிறுகுழாய் வழியே புகையை உறிஞ்சுதலால் சுங்கான் என்று பெயர் பெற்றது.

சுங்கான்

சுங்கான்களி *śuṅgāṉ-kaḷi,* பெ. (n.) புகை பிடிக்கும் சுங்கான் செய்வதற்கேற்ற தூய, பொடியான களிமண்; pure and nice powdered clay to be used to manufacture the tobacco pipes.

[சுங்கான் + களி]

சுங்கான்புகையிலை *śuṅgāṉ-pugai-y-ilai,* பெ. (n.) சுங்கானில் போட்டுப் புகை பிடிப்பதற்கு அணியமாக்கப்பட்ட புகையிலை; tobacco prepared for the pipe.

[சுங்கான் + புகை + இலை]

சுங்கு *śuṅgu,* பெ. (n.) 1. ஆடையில் தொங்க விட்டுக் கட்டும் முலை; end of a cloth left hanging out in dressing. 2. ஆடையின் கொய்சகம் (வின்.); pleat or fold of a garment. "சுங்குவிட்டுக் கட்டுகிறாள்" (வின்.). 3. சடைக் குச்சு; silken tassel used in plaiting girl's hair.

தெ. சுங்குலு; க. சுங்கு; கொலா. இதன

சுங்குடு *šuṅguḍu,* பெ. (n.) சிறுபாக்கி; trivial balance, trifling amount in arrears.

தெ. சுங்குடு; க. சுங்கடி; து. சுங்குடி

சுங்குத்தான்குழல் *šuṅguttāṉ-kūḻal,* பெ. (n.) பறவை முதலியவற்றை வீழ்த்த உண்டை எறியுங்குழல் (வின்.); long tube through which pellets of clay are shot at birds.

U. cōṅgā

மறுவ. சுக்குத்தான்

[சுங்குத்தான் + குழல்]

சுச்சு[1] *šuccu,* பெ. (n.) 1. சுக்கு (மூ.அ.); dried ginger. 2. இஞ்சி; ginger-plant. 3. வறட்சுண்டி (பிங்.); floating sensitive plant.

Skt. šuṣka

[சுக்கு → சுச்சு]

சுச்சு[2] *šuccu,* பெ. (n.) பறவைமூக்கு (பிங்); அலகு; beak of a bird.

Skt. cañju

சுசியம் *šušiyam,* பெ. (n.) சுழியம் பார்க்க; see *šuḻiyam.*

[சுழியம் → சுசியம் (வே.க. 228)]

சுட்கம் *šuṭkam,* பெ. (n.) 1. வறட்சி; dryness. 2. வறண்டது; that which is dried up. 3. ஒரு நோய்; a disease. 4. பணம் முதலியவற்றின் குறைவு (இ.வ.); shortage, as of funds, provisions. 5. கஞ்சத்தனம்; stinginess. 'சுட்கஞ் செய்யாதே' (உ.வ.)

Skt. šuṣka

[சுள் → சுட்டு → சுட்கம். ஒ.நோ: வெட்கு → வெட்கம் (வே.க.)]

சுட்கமூலம் *šuṭka-mūlam,* பெ. (n.) 1. முளை சுருங்கிய ஒருவகை மூலநோய்; a kind of pile disease. 2. வறட்சி மூலம்; a kind of hemorrhoid due to the dry condition of the lower end of the rectum. 3. உலர்ந்துசுருங்கி இருப்பது; that which is dried and shrinked. 4. உலர்ந்தவேர்; dried root. 5. உலர்ந்தகிழங்கு; dried bulb or rhyzome (சா.அக.).

[சுட்கம் + மூலம்]

சுட்கு-தல் *šuṭ-ku-,* 5 செ.குவி. (v.i.) 1. வறளுதல்; to grow dry. 2. மெலிதல்; to get reduced as emaciated.

[சுள் → சுட்கு-,]

சுட்சுள் *šuṭ-šuḷ,* பெ. (n.) சுள்ளுச்சுள்ளெனல் பார்க்க; see *šuḷu-c-culeṉal.*

சுட்டகரி *šuṭṭa-kari,* பெ. (n.) 1. எரித்தகரி; burnt charcoal, carbon. 2. சுடுவதனாலுண்டாகும் கரி; charcoal derived by burning wood fuel. 3. காந்திப்போன நிலக்கரி; the refuse of the burned coals; a hot coal that ceased to flame.

[சுட்ட + கரி]

சுட்டகல் *šuṭṭa-kal,* பெ. (n.) சுட்டசெங்கல் பார்க்க (இ.வ.); see *šuṭṭa-šeṅgal.*

ம. சுடுகல்லு

[(சுடு) சுட்ட + கல்]

சுட்டசாம்பச்சி *šuṭṭa-šāmbacci,* பெ. (n.) எவட்சாரம்; saltpetre.

சுட்டசுண்ணாம்பு *šuṭṭa-šuṇṇāmbu,* பெ. (n.) 1. சுட்ட சுண்ணாம்புக்கல்; burnt lime stone; quick lime. 2. நீற்றிய சுண்ணாம்பு; slacked lime.

[சுட்ட + சுண்ணாம்பு]

சுட்டசெங்கல் *šuṭṭa-šeṅgal,* பெ. (n.) சூளையிற் சுடப்பட்ட செங்கல்; burnt brick in kiln.

[சுட்ட + செங்கல்]

சுட்டடிக்கொள்கை *šuṭṭaḍi-k-kolgai,* பெ. (n.) ஒருமொழிச் சொற்களெல்லாம் சுட்டுகளினின்று கிளைத்து வளர்ந்தன என்னும் கோட்பாடு; deietic theory.

[சுட்டடி + கொள்கை]

மொழியின்கண் பல்கிப்பெருகிக் காணப் படுகின்ற சொற்களெல்லாம் மிகச்சிறிய அளவிலான வேர்களினின்று வளர்ந்து வந்துள்ளன. அவ்வேர்களுக்கும் மூலமாகச் சுட்டடிகள் இருந்துள்ளன என்பது பாவாணரின் ஆய்வு முடிவு.

செய்மை, அண்மை, முன்மை ஆகிய மூவிடங்களையும் முறையே சுட்டக்கூடிய ஒலிகள் ஆ, ஈ, ஊ என்னும் மூன்றாய்த்தான் இருக்கமுடியும். வாயை ஆவென்று விரிவாகத் திறந்து சேய்மையைச் சுட்டும் போது ஆகார

வொலியும் ஈயென்று பின்னோக்கியிழுத்துச் சேய்மைக்குப் பின்மையாகிய அண்மையைச் சுட்டும்போது ஈகாரவொலியும், ஊவென்று முன்னோக்கிக் குவித்து முன்மையைச் சுட்டும்போது ஊகாரவொலியும் பிறத்தல் காண்க. நெடிலின் குறுக்கம் குறிலும் குறிலின் நீட்டம் நெடிலுமாதலின் ஆ, ஈ, ஊ எனினும் அ, இ, உ எனினும் ஒன்றே. குறிலினும் நெடில் ஒலித்தற் கெளிதாகலானும் குழந்தைகள் குறில்களைப் பெரும்பாலும் நெடிலாகவே யொலித்தலானும் குழந்தை நிலையிலிருந்த முந்தியல் மாந்தன் வாயில் நெடில்களே முந்திப் பிறந்திருத்தல் வேண்டும் (மு.தா. 18).

சுட்டணி *śuṭṭaṇi*, பெ. (n.) வீரசோழியத்தில் கூறப்பட்ட நிதரிசனம் என்னும் ஒருவகை அணி (வீரசோ. அலங். 12); a kind of figure of speech as in Vira cōḻiyam.

[சுட்டு + அணி]

சுட்டபுண் *śuṭṭa-puṇ*, பெ. (n.) 1. நெருப்பினால் சுடப்பட்ட புண்; injury caused by fire-burns. "தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்" (குறள், 129). 2. வெந்தபுண்; wound caused by hot substances - scalds (சா.அக.).

[சுட்ட + புண்]

சுட்டபுண்ணாற்றி *śuṭṭa-puṇṇāṟṟi*, பெ. (n.) தீச்சுட்ட புண்களை ஆற்றும் மருந்து; an agent that cures burns antipyrotic (சா.அக.).

[சுட்ட + புண் + ஆற்றி]

சுட்டபுளி *śuṭṭa-puḷi*, பெ. (n.) நெருப்பிலிட்டெடுத்த புளி; burnt tamarind used in diet (சா.அக.).

[சுட்ட + புளி]

சுட்டபூக்கல் *śuṭṭa-pūkkal*, பெ. (n.) ஒருவகை உப்பு, வழலை; a kind of salt (சா.அக.).

[சுட்ட + உப்புக்கல்]

சுட்டல் *śuṭṭal*, பெ. (n.) சுட்டுணர்வு, 1 பார்க்க; see *suṭṭuṇarvu, 1*. "சுட்ட றிரிதல்" (மணிமே. 27:22).

[சுட்டு → சுட்டல்]

சுட்டவெண்காரம் *śuṭṭa-veṇ-kāram*, பெ. (n.) வெப்பத்தால் நீர்க்கூறகற்றிய வெண்காரம்; roasted borax, dehydrated borax (சா.அக.).

[சுட்ட + வெண்காரம்]

சுட்டறிவு *śuṭṭaṟivu*, பெ. (n.) சுட்டுணர்வு, 2 பார்க்க; see *śuṭṭuṇarvu, 2*. "சுட்ட றிவாவது . . . அசத்தேயாகலின் . . ." (சி.சி. 6:2, சிவஞா.)

[சுட்டு + அறிவு]

சுட்டாமுட்டி *śuṭṭā-muṭṭi*, பெ. (n.) சுட்டுவிரல் (சிலப். 3:58, அரும்.); index finger, forefinger.

[சுட்டு + ஆ + முட்டி]

சுட்டாவிரல் *śuṭṭā-viral*, பெ. (n.) சுட்டுவிரல் பார்க்க; see *śuṭṭu-viral* (சா.அக.).

[சுட்டு + ஆ + விரல்]

சுட்டி[1] *suṭṭi*, பெ. (n.) 1. குழந்தைகளும் மகளிரும் அணிந்து கொள்ளும் நெற்றியணி; a small designed ornament worn by children and women on the forehead. "சுட்டி சிதையக் குட்டத்துக் குளித்து" (பெருங். உஞ்சைக். 40:102). 2. மாட்டின் நெற்றியிலுள்ள வெண்சுழி; white curl on the forehead of bull or cow. "சுட்டியை நெற்றியிலேயுடைய கரிய எருது" (கலித். 101 : 2, உரை.). 3. பாம்பு முதலிய உயிரிகளின் உச்சி வெள்ளை (வின்.); white spot on the head of a beast or serpent. 4. சிறுபட்டி (நாஞ்.); short striped border of a cloth. 5. மயிர்முடி (அக.நி); குடுமி; tuft of hair. 6. நெற்றிப்பட்டம் (அக.நி.); a plate of gold worn on the forehead, as a mark of distinction.

ம. சுட்டி; க. சுட்டி; து. சிட்டி.

Skt. cūḍiya

[சுள் → சுட்டி (வே.க. 230)]

சுட்டி[2] *śuṭṭi*, பெ. (n.) 1. துடிப்பானவன்; an active fellow. 2. குறும்புத்தனம் உள்ளவன்; a mischievous fellow. 3. ஆகூழற்றவன் (இ.வ.); luckless fellow; ill-fated person. 4. அறிவுக் கூர்மையுள்ளவன் (இ.வ.); intelligent person.

ம. சுட்டி; க., தெ. சூடி; து. சுடி

Skt. dusṭa

[சுடு → (சுட்டு) → சுட்டி (மு.தா. 62)]

சுட்டி[3] *śuṭṭi*, பெ. (n.) பொருட்டு; for the sake of. "எனக்குச் சுட்டி ஒன்றுஞ் செய்ய வேண்டாம்" (நாஞ்.).

[சுட்டு → சுட்டி]

சுட்டி[4] *šutti*, பெ. (n.) நாக்கு (அக.நி.); tongue.

[சுட்டு → சுட்டி]

சுட்டிக்காட்டு-தல் *šutti-k-kāttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *1.* சுட்டு[1]-தல் பார்க்க; see *šuttu-*, 1. *2.* அடையாளங்காட்டுதல்; identity. "உன்னையே சுட்டிக் காட்டுங்காண்" *(திவ். பெரியாழ். 1.4 : 4).*

[சுட்டி + காட்டு-,]

சுட்டிகை *šutti-gai*, பெ. (n.) மகளிர் நுதலணி; an ornament worn by women on the forehead. "சூளிகையுஞ் சுட்டிகையும்......" *(பதினொ. ஆதியுலா, 68).*

[சுட்டி + கை]

சுட்டிச்சுண்ணம் *šutti-c-cunnam*, பெ. (n.) உடம்பைத் தூய்மை செய்தற்குரிய நறுமணப் பொடி; scented or aromatic powder used in bathing. "சுந்தரப் பொடியுஞ் சுட்டிச் சுண்ணமும்" *(பெருங். உஞ்சைக். 42 : 73).*

[சுட்டி + சுண்ணம்]

சுட்டிசுட்டியாக *šutti-šutti-y-āga*, வி.அ. (adv.) வட்டம் வட்டமாக; in round patches. 'அவன் உடலில் சுட்டிசுட்டியாக வெள்ளை விழுகிறது' *(உ.வ.).*

[சுட்டி + சுட்டி + ஆக]

சுட்டிட்டிகை *šuttittigai*, பெ. (n.) சுட்டோடு பார்க்க; see *šuttōdu*. "சுட்டிட்டிகையால் மாடமாளிகை எடுக்கப் பெறுவதாகவும்..." *(தெக. தொ. 521, 35).*

[சுட்ட + இட்டிகை]

சுட்டித்தலை *šutti-t-talai*, பெ. (n.) *1.* சுட்டித் தனம் (யாழ்.அக.) பார்க்க; see *šutti-t-tanam*. *2.* சுட்டித்தலையன்[1] (இ.வ.) பார்க்க; see *šutti-t-talaiyan*[1]. *3.* சுட்டியுள்ள தலை; head which have a curl.

[சுட்டி + தலை]

சுட்டித்தலையன்[1] *šutti-t-talaiyan*, பெ. (n.) குறும்பு செய்பவன், கெட்டவன்; mischievous fellow.

[சுட்டி + தலையன்]

சுட்டித்தலையன்[2] *šutti-t-talaiyan*, பெ. (n.) உச்சி வெள்ளையுடைய விலங்கு (யாழ்ப்.); animal with a white spot on its forehead.

[சுட்டி[1] + தலையன்]

சுட்டித்தனம் *šutti-t-tanam*, பெ. (n.) துடுக்குத் தனம்; mischievousness, turbulence.

[சுட்டி + தனம்]

சுட்டிப்பயல் *šutti-p-payal*, பெ. (n.) சுட்டிப் பையன் பார்க்க; see *šutti-p-paiyan*.

[சுட்டிப் பையன் → சுட்டிப்பயல். பையன் → பையல் → பயல்]

சுட்டிப்பேசு-தல் *šutti-p-pēšu-*, 5 செ.குன்றாவி. (v.t.) குறிப்பாகச் சொல்லுதல் (இ.வ.); to hint, allude to in discourse.

[சுட்டி + பேசு-,]

சுட்டிப்பையன் *šutti-p-paiyan*, பெ. (n.) *1.* குறும்புசெய்யும் பையன்; mischevous boy; *2.* கூர்த்த அறிவுடையோன்; brilliant boy.

[சுட்டி[2] + பையன்]

சுட்டிமுகடு *šutti-mugadu*, பெ. (n.) மகளிர் அணியும் தலையணி (இ.வ.); set of ornaments worn by women on the head.

[சுட்டி + முகடு]

சுட்டியன் *šuttiyan*, பெ. (n.) சுட்டி[2] பார்க்க; see *šutti*[2].

[சுட்டி + சுட்டியன்]

சுட்டு[1]-தல் *šuttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *1.* குறிப்பிடுதல்; to point out; indicate. "துன்னுநர் சுட்டவும்" *(பரிபா. 19, 54).* *2.* நோக்கமாகக் கொள்ளுதல், குறிக் கோளாய்க் கொள்ளுதல்; to have in view, aim at, desire. *3.* நினைத்தல், உன்னுதல்; to think, consider. "சுட்டினும் பனிக்கும்" *(மலைபடு. 398).* *4.* நன்குமதித்தல்; to honour. "இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி" *(திருமுருகு. 178).*

ம. சுட்டு; க., தெ., சுட்டு

[சுள் → சுட்டு-,]

சுட்டு[2] *šuṭṭu,* பெ. (n.) 1. குறிப்பிடுகை; to indication, reference. "சுட்டுத்தலை போகாத் தொல்குடி" *(சிலப். 12:21).* 2. கருதப்படும் பொருள்; that which is intended, designated. "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே" *(தொல். சொல். 1).* 3. நன்மதிப்பு; honour. "பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான்" *(நீதிநெறி. 20).* 4. சுட்டெழுத்து பார்க்க; see *šuṭṭeḻuttu.* "அ இ உ அம்மூன்றுஞ் சுட்டு" *(தொல். எழுத்து. 31).* 5. சுட்டணி பார்க்க; see *šuṭṭaṇi.*

ம. சுட்டு; க. சுட்டு; தெ. சூட்டி; து. சூடி; குய். சூட்டா; குவி. ஹுட்டாலி.

[சுள் → சுட்டு]

சுட்டுக்குருவி *šuṭṭu-k-kuruvi,* பெ. (n.) சிட்டுக்குருவி (இ.வ.) பார்க்க; see *šiṭṭu-k-kuruvi.*

[சிட்டுக்குருவி → சுட்டுக்குருவி. சுள் → (சுட்டு) → சிட்டு = சிறியது. குள் → குரு → குருவி = சிறு பறவை]

சுட்டுக்குவி *šuṭṭu-k-kuvi,* பெ. (n.) பிணங்களைச் சுட்டுக்குவி எனப் பொருள்படும்படி அமைந்ததாகக் கருதப்படும் ஆந்தையின் ஒலிக்குறிப்பு; screeching of an owl fancied to resemble the word šuṭṭu-k-kuvi and indicate that the corpses should be burnt and heaped. "சுட்டுக் குவியெனச் செத்தோர்ப் பயிருங் கள்ளியம் பறந்தலை" *(புறநா. 240).*

[சுட்டு + குவி]

சுட்டுக்கொட்டைபரப்பு-தல் *šuṭṭu-k-koṭṭai-parappu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ஊரைச்சுட்டு விதைத்தல், முற்றும் அழித்தல்; lit., to burn down a city and sow it with castor seeds. To destroy completely, devastate.

[சுட்டு + கொட்டை + பரப்பு-,]

சுட்டுக்கோல் *šuṭṭu-k-kōl,* பெ. (n.) 1. உலையாணிக்கோல்; smith's poker. "சுட்டுக்கோல் போல வெரியும் புகுவரே நீட்டாரெனப் படுவார்" *(நாலடி. 208).* 2. தீயோன் (யாழ்ப்.); mischievous person.

[சுட்டு + கோல்]

சுட்டுணர்வு *šuṭṭuṇarvu,* பெ. (n.) 1. போலி யளவைகளெட்டனுள் பொருளுண்மை மாத்திரை காணும் அறிவு (மணிமே. 27 : 6); knowledge of the mere existence of a thing without knowing its nature, one of eight piramāṇāpāšam. 2. புலன்களால் உய்த்துணரும் அறிவு; cognition by the senses. "சுட்டுணர் வின்றி நின்றறியப்படுஞ் சிவசத்தின் முன்னர்" *(சி.போ. பா. பக்.154).*

[சுட்டு + உணர்வு]

சுட்டுநட்டவேப்பங்கன்று *šuṭṭu-naṭṭa-vēppaṅ-kaṉṟu,* பெ. (n.) பெருங்கொடுமையன் (நெல்லை); extremely mischievous person.

[சுட்டு + நட்ட + வேப்பங்கன்று]

சுட்டுப்பெயர் *šuṭṭu-p-peyar,* பெ. (n.) 1. சுட்டெழுத்தை முன்பெற்ற பெயர்; demonstrative pronoun, as அவன், இவன். 'சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்" *(தொல். சொல். 38).* 2. சுட்டுமாத்திரையாய் நிற்கும் பெயர்; noun used in the place of pronoun. "கூற்றம் நமன் என்பன சுட்டுப்பெயர்" *(சீவக. 1487, உரை).*

[சுட்டு + பெயர்]

அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளுடன் பால்ஈறுகள் சேர்ந்து உருவாகும் சுட்டுப் பெயர்கள், படர்க்கைப்பெயர்களாக ஆளப்படுகின்றன. பழந்தமிழில் சுட்டெழுத்துகள் நெடிலாக இருந்தன (இன்றளவும் தமிழின மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் சுட்டு நெடில்களாக இருக்கின்றன) பின்னர், அவை குறில்களாகக் குறுக்கம் பெற்றன.

I need not call attention to the beautiful and philosophical regularity of this quadruple set of remote, proximate and intermediate demonstrative and interrogatives. In no other language or family of languages in the world shall we find its equal, or even its second. In addition to which, the circumstance that the demonstrative vowels are not only used in these languages with an invariable and exact discrimination of menaing which is not found in the Indo-European tongues (with the solitary and partial exception of the new persian) but are also associated with a corresponding interrogative vowel of which the Indo-European tongues are totally

ignorant, tends to confirm the supposition which I have already expressed, that the Dravidian family has retained some pre-Sanskrit elements of immense antiquity; and, in particular, that its demonstratives, instead of being borrowed from Sanskrit, represent those old Japhetic bases from which the demonstrative of Sanskrit itself, as well as of various other members of the Indo-European family, were derived. (C.G.D.F.L. 422).

சுட்டுப்பொருள் *ṡuṭṭu-p-poruḷ,* பெ. (n.) 1. கருதிய பொருள்; intended meaning, object aimed at. 2. ஊழ்கத்துக்காக (தியானத்துக்காக) மனத்தில் அமைக்கப்படும் முழுத்தம் (வின்.); image of the object of worship formed in the mind for meditation. 3. ஊழ்கத்தில் நினைத்த படி கடவுள் குருவாக எழுந்தருளல்; god appearing in the form of a Guru in meditation.

[சுட்டு + பொருள்]

சுட்டுவிடை *ṡuṭṭu-viḍai,* பெ. (n.) எண்வகை விடைகளுள், இது இவன் முதலிய சுட்டுப் பெயர்களாற் கூறும் விடை (நன். 386, உரை); answer in the form of demonstrative pronouns, one of eṇ-vagai-viḍai.

[சுட்டு + விடை]

சுட்டுவிரல் *ṡuṭṭu-viral,* பெ. (n.) ஆட்காட்டி விரல்; forefinger. "சுட்டு விரறனை மாசற நீட்டி . . ." (பரத. பாவ. 30).

ம. சுண்டந் விரல்; தெ. சட்டு வேலு.

[சுட்டும் + விரல்]



சுட்டுவிரல்

சுட்டுவை-த்தல் *ṡuṭṭu-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஒருவரை நினைத்த வண்ணமாய் இருத்தல் (யாழ்.); to think intently about a person. 2. ஊழ்கத்தில் தான்நினைத்த தெய்வத் திருமேனியிலேயே மனத்தை நிறுத்துதல்; to fix one's mind on the image of the object of worship, in meditation.

[சுட்டு + வை-,]

சுட்டுறுகோல் *ṡuṭṭuṟu-kōl,* பெ. (n.) சுட்டுக் கோல்,1 பார்க்க; see *ṡuṭṭu-k-kōl,1.* 'சுட்டமுற் புகூஉஞ் சுட்டுறுகோல் போல்" (பெருங். இலாவாண. 8:155).

[சுட்டுறு + கோல்]

சுட்டெரி-த்தல் *ṡuṭṭeri-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. நெருப்பு அல்லது வெப்பம் கடுமையாகக் காய்தல்; fire or sun shine heating hardly. 'சுட்டெரிக்கும் இந்த வெயிலில் அலைந்து திரிந்தால் சூட்டுக்கடுப்பு வரும்' (உ.வ.). 2. கடுந் தீயால் எரித்தல்; burning by fire. "சிறுவர்கள் விளையாட்டாய் மூட்டிய தீ வீட்டையே சுட்டெரித்து விட்டது" 3. உடலையும் மனத்தையும் புண்படுத்துதல்; hurting one's body and mind. "அவருடைய சினம் அவளைச் சுட்டெரித்தது."

ம. சுட்டெரிக்குக

[சுட்டு + எரி-,]

சுட்டெழுத்து *ṡuṭṭ-eḻuttu,* பெ. (n.) சுட்டி உணர்த்தும் அ, இ, உ என்ற எழுத்துகள்; the demonstrative sounds a, i, u. "சுட்டெழுத்தினை முதலாகவுடைய வகர வீற்றுப் பெயர் மூன்றும்" (தொல். எழுத்து. 378, உரை).

ம. சுட்டெழுத்து

[சுட்டு + எழுத்து]

சுட்டொலி *ṡuṭṭoli,* பெ. (n.) சுட்டிக்காட்டும் ஒலிகள்; deictic sounds.

[சுட்டு + ஒலி]

சேய்மையைச் சுட்டுதற்கேற்ப வாயை விரிவாய்த் திறந்தொலிக்கும் ஆகாரமும், சேய்மைக்குப் பிற்பட்ட அண்மையைச் சுட்டுதற்கேற்ப வாயைப் பின்னுக்கிழுத் தொலிக்கும் ஈகாரமும், சேய்மைக்கும் அண்மைக்கும் இடைப்பட்ட முன்மையைச்

சுட்டுதற்கேற்ப இதழ்களை முற்படக் குவித்தொலிக்கும் ஊகாரமும், முறையே சேய்மை யண்மை முன்மைச் சுட்டொலிக ளாயின. இச்சுட்டொலிகளின் தோற்றமே தமிழ்க் கருநிலையாம். இவையே முதன் முதல் தமிழில் தோன்றிய உயிர்கள்.

முதற்கண் மூவிடச்சுட்டு கைச்சைகையினால் மட்டும் நிகழ்ந்தது. பின்பு கைச்சைகையோடு கூடிய வாய்ச்சைகையினால் நிகழ்ந்தது. அதன்பின், வாய்ச்சைகையினால் மட்டும் நிகழ்ந்து வருகின்றது. ஆயின், அவ்வாய்ச் சைகைத் தன்மை இன்று மறைந்துள்ளது. முச்சுட்டொலிகளும் வாய்ச்சைகை யொலிகளாயிருப்பதனாலேயே, அவை தமிழில் எக்கரணியத்தையிட்டும் பிற மொழிகளிற் போல் இடமாறிச் சுட்டுவ தில்லை. இதனால், தமிழொடு சிறிதும் பெரிதும் தொடர்புள்ள பிறமொழிச் சுட்டுச் சொற்கட்கெல்லாம். தமிழ்ச்சொற்களே மூலமென்பதைத் தெற்றென தெரிந்து கொள்ளலாம்.

எ-டு : இடம்மாறாதன

சமற்கிருதம்	தமிழ்	ஆங்கிலம்	தமிழ்
தத்ர	அங்கு	that	அது
இக	இங்கு	this	இது
இடம் மாறியன			
அத்ர	இங்கு	it	அது
அதுனா	இப்பொழுது	thus	இப்படி

(த.வ. 66, 67)

சுட்டோடு *šuttōḍu,* பெ. (n.) சுட்டசெங்கல்; burnt brick. "சுட்டோட்டால் மாட மாளிகை எடுக்கப் பெறுவதாகவும்" *(தெ. க. தொ. 2, 509 : 58).*

[சுட்டு + ஓடு]

சுடக்கு[1]-தல் *šuḍakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) சொடக்கு-, (உ.வ.) பார்க்க; see *šoḍakku-.*

[சொடக்கு → சுடக்கு-,]

சுடக்கு[2] *šuḍakku,* பெ. (n.) சொடக்கு பார்க்க; see *šoḍakku.*

[சொடக்கு → சுடக்கு]

சுடக்குடித்தவன் *šuḍa-k-kuḍittavaṉ,* பெ. (n.) பதட்டக்காரன் (உ.வ.); hasty man. 'அவன் எப்போதும் சுடக்குடித்தவன் தானே' *(உ.வ.).*

[சுடு → சுட + குடித்தவன்]

சுடகத்தி *šuḍagatti,* பெ. (n.) பேய்க்கடலை; wild bitter gram.

சுடகமாமிசம் *šuḍaga-māmišam,* பெ. (n.) கருவாடு; dried fish *(சா.அக.).*

[சூடு → சுடு → சுடகம். சுடகம் + மாமிசம்]

சுடங்கமூலி *šuḍaṅga-mūli,* பெ. (n.) நிலத் துளசி; holy basil *(சா.அக.).*

[சுடங்கம் + மூலி]

சுடச்சுட *šuḍa-c-cuḍa,* வி.அ. (adv.) 1. சூடு குன்றாமல்; right hot. *"சுடச்சுட இட்டலி சாப்பிட்டால் அதன் சுவையே தனி!"* 2. உடனடி யாகவும், மனத்தில் பதியும்படியாகவும்; immediately and impressively. *"'குறும்பு மாணவர்கள் கேட்ட வினாக்களுக்கு ஆசிரியர் சுடச்சுட மறுமொழி கொடுத்தார்".*

[சுள் → சுடு → சுட + சுட]

சுடர்[1] *šuḍar,* பெ. (n.) 1. ஒளி, வெளிச்சம், சுவாலை; light, brilliance, lustre. "தெறுசுட ரொண் கதிர் ஞாயிறு" *(புறநா. 6:27).* 2. ஞாயிறு; sun. "சுடர் சுட்ட சுரத்தேறி" *(புறநா. 136:18).* 3. வெயில்; sunshine. "வல்லிருள் புதைப்பச் செல்சுடர் சுருக்கி" *(பெருங். உஞ்சைக். 33:155).* 4. நிலா; moon. "சுடரொடு சூழ்வரு தாரகை" *(பரிபா. 19 : 19).* 5. கோள்; planet. "சுடர்நிலை உள்படுவோரும்" *(பரிபா. 19:7).* 6. நெருப்பு; fire. "சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்" *(திருமுரு. 43)* 7. விளக்கு; burning lamp. "இரவின் மாட்டிய விலங்கு சுடர்" *(பெரும்பாண். 349).* 8. தீக் கொழுந்து; flame. "விளக்கினுளொண் சுடரே போன்று" *(நாலடி, 189).* 9. தீப்பொறி (அக.நி.); spark. 10. சுடரெண்ணெய், 1 பார்க்க; see *šuḍer-eṇṇey, 1.*

ம. சுடர்; க. சுடு, சொடர், சொட்ரு, சொடலு; தெ. சுடு; து. சுடரு, தடறு, துடரு (விளக்கு) Pkt. cuḍuli (torch); Mar. cuḍi (torch of wisps or twigs)

[சுடு → சுடர் (வே.க.210)]

சுடர்[2]-தல் *šuḍar-,* 2 செ.கு.வி. (v.i.) 1. ஒளி விடுதல்; to give light; to burn brightly; to shine, as a heavenly body; to sparkle, as a gem; to gleam. "சுடச்சுடரும் பொன்போல்" (குறள், 267)

[சுள் → சுடு → சுடர் (மு.தா. 147)]

சுடர்க்கடை *śuḍar-k-kaḍai,* பெ. (n.) 1. *மின்மினி;* fire fly. 2. *மயில்;* peacock.

[சுடர் + கடை]

சுடர்க்காசம் *śuḍar-k-kāsam,* பெ. (n.) ஈளை (*காச*) நோய் வகை; a kind of asthma (*சாஅக.*).

[சுடர் + காசம்]

சுடர்க்காரி *śuḍar-k-kāri,* பெ. (n.) *சுடர்க்கடை பார்க்க;* see *śuḍar-k-kaḍai* (*சாஅக.*).

[சுடர் + காரி]

சுடர்க்காளை *śuḍar-k-kāḷai,* பெ. (n.) *சுடர்க் கொடி பார்க்க;* see *śuḍar-k-koḍi* (*சாஅக.*).

[சுடர் + காளை]

சுடர்க்கொடி *śuḍar-k-koḍi,* பெ. (n.) *ஆலத்திக் கருப்பூரம்* (*வின்.*); incense of camphor.

[சுடர் + கொடி]

சுடர்ச்சக்கரம் *śuḍar-c-cakkaram,* பெ. (n.) *ஞாலமுனைச் சக்கரம்;* the great bear, polar circle. "சுடர்ச்சக்கரத்தைப் பொருந்திவரும் ஆதித்தன் முதலாக வருங் கோள்களது நிலைமையை" (*பரிபா. 19, 46, உரை*).

[சுடர் + சக்கரம்]

சுடர்ச்செலவு *śuḍar-c-celavu,* பெ. (n.) ஓரையை இரண்டாகப் பகிர்கை (*வின்.*); division of the rising sign into two equal parts for casting horoscopes.

[சுடர் + செலவு]

சுடர்நிலை *śuḍar-nilai,* பெ. (n.) 1. விளக்குத் தண்டு (*பிங்.*); lampstand. 2. *விளக்கணி;* a figure of speech.

ம. சுடர்நிலை

[சுடர் + நிலை]

சுடர்நிலைத்தண்டு *śuḍar-nilai-t-taṇḍu,* பெ. (n.) *சுடர்நிலை,1 பார்க்க* (*சூடா. 11:120*); see *śuḍar-nilai,*[1].

[சுடர்நிலை + தண்டு]

சுடர்நேமி *śuḍar-nēmi,* பெ. (n.) *சுடர்ச்சக்கரம் பார்க்க;* see *śuḍar-c-cakkaram.* "சுடர்நேமி யொன்றிய சுடர்நிலை" (*பரிபா. 19 : 46*).

[சுடர் + நேமி]

சுடர்ப்பொடி *śuḍar-p-poḍi,* பெ. (n.) *கருப்பூரம்;* camphor (*செஅக.*).

[சுடர் + பொடி]

சுடர்பலதோன்றுதல் *śuḍar-pala-dōṉṟudal,* பெ. (n.) ஒளியால் ஏற்படும் ஒருவகைக் *கண்ணோய்;* an eye disease casused by seeing bright lamp's light (*சாஅக.*).

[சுடர் + பல + தோன்றுதல்]

சுடர்மணிக்கோவை *śuḍar-maṇi-k-kōvai,* பெ. (n.) *யானையின் அணிவகை;* an ornament put on elephants. "சூழிபு மோடையுஞ் சுடர் மணிக் கோவையும்" (*பெருங்.இலாவாண. 2 : 2*).

[சுடர் + மணி + கோவை]

சுடர்மௌலியர் *śuḍar-mauliyar,* பெ. (n.) *ஒளிவிடுஞ் சென்னியராகிய தேவர்கள்* (*யாழ்அக.*); celestials or Dēvās, as having a bright halo about their heads.

[சுடர் + மௌலியர்]

சுடர்விட்டெரி-தல் *śuḍar-viṭṭeri-,* 2 செ.கு.வி. (v.i.) கொழுந்துவிட்டு எரிதல்; to burn brightly; blaze forth.

[சுடர் + விட்டெரி-,]

சுடர்விடு-தல் *śuḍar-viḍu-,* 20 செகுவி. (v.i.) *சுடர் விட்டெரி-தல் பார்க்க;* see *śuḍar-viṭṭeri-.*

[சுடர் + விடு-,]

சுடர்விளக்கு *śuḍar-viḷakku,* பெ. (n.) *சுடர் நிலை,2* (*திவா.*) *பார்க்க;* see *śuḍar-nilai,* 2.

[சுடர் + விளக்கு]

சுடரவன் *śuḍaravaṉ,* பெ. (n.) ஒளியுடைப் பகலவன் (*திவா.*); sun, as emitting light.

ம. சுடரவன்

[சுடர் → சுடரவன் (வேக. 210)]

சுடரார் *śuḍarār,* பெ. (n.) ஒளியுடையவரான கடவுள்; God as lustrous. "என்னகத் திருந்த சுடரார்" (*திருநூற். 26*).

ம. சுடராள்

[சுடு → சுடர் → சுடரார் (வேக.210)]

'ஆர்' உடைமைப் பொருளீறு.

சுடராவிரை *šudar-āvirai,* பெ. (n.) சுழலாவிரை (இவ.) பார்க்க; see *šulalāvirai.*

[சுடர் + ஆவிரை]

சுடரெண்ணெய் *šudar-enney,* பெ. (n.) 1. சுடரிலிருந்து விழும் எண்ணெய்த்துளி; drops of burning oil dripping from lamp, torch etc. 2. ஒரு வகை மருந்தெண்ணெய்; a kind of medicinal oil. 3. மருந்துச்சரக்குகள் கூட்டி வடிக்கப்பட்ட வேப்பெண்ணெய்; margosa oil prepared with medicinal drugs.

[சுடர் + எண்ணெய்]

சுடரொளி *šudaroli,* பெ. (n.) கதிரவன், நெருப்பு, திங்கள் போன்றவற்றின் கதிர்; lusture of the sun, fire, moon etc.

ம. சுடரொளி

[சுடர் + ஒளி]

சுடரோன் *šudaron,* பெ. (n.) சுடரவன் (பிங்.) பார்க்க; see *šudaravan.* "கதிராயிரம் விரிக்குஞ் சுடரோன்" (திருக்கருவை. கலித். 11).

ம. சுடரோன்

[சுடு → சுடர். சுடர் → சுடரவன் → சுடரோன் (மு.தா. 132)]

சுடல் *šudal,* பெ. (n.) 1. சுடரெண்ணெய்,1 பார்க்க; see *šudar-enney,1.* 2. திரியின் எரிந்த முனை முடிச்சு; charred end of a burning wick. 'விளக்கெரியும்படி சுடலைத் தட்டி விடு'. (உ.வ.)

ம. சுடல்; க. சொடல்

[சுடு → சுடல் (வே.க. 210)]

சுடலன் *šudalan,* பெ. (n.) ஒருவகைப் பூடு; phoelin paniculata (சா.அக.).

[சுடல் → சுடலன்]

சுடலாவிரை *šudalā-virai,* பெ. (n.) சுழலாவிரை (இவ.) பார்க்க; see *šulalā-virai.*

[சுழலாவிரை → சுடலாவிரை (இவ.)]

சுடலை[1] *šudalai,* பெ. (n.) 1. சுடுகை; baking. 2. சமைக்கை; cooking. 3. கொல்லுகை; killing. 4. அழிக்கை; destroying. 5. போர்செய்கை; quarrelling.

[சுடு → சுடலை]

சுடலை[2] *šudalai,* பெ. (n.) 1. சுடுகாடு பார்க்க; see *šudu-kādu.* "இவ்வழல்வாய்ச் சுடலைத் தின்னக் கண்டும்" (மணிமே. 6:101). 2. சுடலையாடி,2 (மு.அ.) பார்க்க; see *šudalai-y-ādi,2.*

ம. சுடல; து. சுடெலெ.

[சுடு → சுடர் → சுடல் → சுடலை (மு.தா. 132)]

சுடலைக்கரை *šudalai-k-karai,* பெ. (n.) சுடுகாடு (இ.வ.) பார்க்க; see *šudu-kādu.*

[சுடலை + கரை]

சுடலைக்காடு *šudalai-k-kādu,* பெ. (n.) சுடுகாடு பார்க்க; see *šudu-kādu.*

ம. சுடலக்களம், சுடலக்காடு

[சுடலை + காடு]

சுடலைக்கான் *šudalai-k-kān,* பெ. (n.) சுடுகாடு பார்க்க; see *šudu-kādu.* "சுடலைக் கானிற் றொடுகுழிப் படுத்து" (மணிமே. 16:25).

[சுடலை + கான்]

சுடலைக்குருவி *šudalai-k-kuruvi,* பெ. (n.) சுடுகாட்டுக் குருவி; சாக்குருவி; a species of owl.

[சுடலை + குருவி]



சுடலைக்குருவி

சுடலைகுத்தியாடு-தல் *šudalai-kutti-y-ādu-,* 5 செ.குன்றாவி. (v.t.) செடில்குத்தியாடு-தல் பார்க்க; see *šedil-kutti-y-ādu-* (சா.அக.).

[சுடலை + குத்தியாடு-,]

சுடலைதனில்நிருத்தன் *šudalai-danil-niruttan,* பெ. (n.) சிவனார்வேம்பு; Sivan's neem (சா.அக.).

சுடலைநீறு *šudalai-nīru,* பெ. (n.) பிணம் சுட்ட சாம்பல்; ashes left after burning the dead (சா.அக.).

[சுடலை + நீறு]

சுடலைநோன்பிகள் *šudalai-nōṉbigaḷ*, பெ. (n.) காபாலிகச் சமயத் துறவிகள்; a sect of Šaiva ascetics holding kābāligam doctrines. "சுடலை நோன்பிகள் ... மடைதீயுறுக்கும் வன்னி மன்றமும்" (மணிமே. 6 : 86).

[சுடலை + நோன்பிகள்]

சுடலைப்பூச்செடி *šudalai-p-pūccedi*, பெ. (n.) ஆற்றலரி; a kind of flower plant with tubular stipules (சா.அக.).

[சுடலை + பூ + செடி]

சுடலைப்பூண்டு *šudalai-pūṇḍu*, பெ. (n.) சுடுகாட்டில் முளைக்கும் பலவகைச் செடிகள்; various plants grown generally in the cremation ground (சா.அக.).

[சுடலை + பூண்டு]

சுடலைமாடன் *šudalai-māḍaṉ*, பெ. (n.) சுடலையிலுள்ள ஒருவகைப் பேய் (G.Tn.D.I, 118); evil spirit haunting burning-grounds.

ம. சுடலப்பேய், சுடலமாடன்

[சுடலை + மாடன்]

சுடலைமுத்து *šudalai-muttu*, பெ. (n.) ஊர்ச் சிறு தெய்வம்; a village deity. "மனச் சோபத்தை தீர்க்குஞ் சுடலை முத்து" (பஞ்ச. திருமுக. 651).

[சுடலை + முத்து]

சுடலையாடி *šudalai-y-āḍi*, பெ. (n.) 1. சுடுகாட்டில் ஆடுவோனாகிய சிவன் (திவா.); Sivaṉ as dancing in burning ground. 2. சவர்காரம் (வின்.); soap. 3. சிவனார்வேம்பு; Siva's neem

ம. சுடலயாடி

[சுடலை + ஆடி]

சுடலையாவாரை *šudalai-y-āvārai*, பெ. (n.) சுடுகாட்டில் விளையும் ஆவாரஞ் செடி; tanners cassia found grown in the grave-yard (சா.அக.).

[சுடலை + ஆவாரை]

சுடலையூர்தி *šudalai-ūrdi*, பெ. (n.) கருமருது; brown-hard-felted-backed-leaved winged Myrobalam.

[சுடலை + ஊர்தி]

சுடலையோன் *šudalai-y-ōṉ*, பெ. (n.) 1. மயில் துத்தம்; blue vitrol. 2. கள்; toddy (சா.அக.).

[சுடலை → சுடலையோன்]

சுடவாலமல்லி *šudavāla-malli*, பெ. (n.) பவள மல்லிகை; coral jasmine (சா.அக.).

[சுடவாலம் + மல்லி]

சுடவை-த்தல் *šudavai-*, 4 செ.குன்றாவி. (v.t.) சூடுண்டாக்குதல்; to heat any thing in fire (சா.அக.).

[சூடு → சுடு → சுட. சுட + வை-,]

சுடற்காளை *šudaṟ-kāḷai*, பெ. (n.) கருப்பூரம்; camphor (சா.அக.).

[சுடர் + காளை]

சுடற்கொடி *šudaṟ-kodi*, பெ. (n.) சுடர்க்கொடி பார்க்க; see *šudar-k-kodi* (சா.அக.).

[சுடர் + கொடி]

சுடாரி *šudāri*, பெ. (n.) கவசம்; coat of mail.

[சடாரி → சுடாரி]

சுடிகை[1] *šudigai*, பெ. (n.) பனங்கள் (வின்.); palm-wine; palm toddy.

[சுடு → சுடிகை]

சுடிகை[2] *šudikai*, பெ. (n.) 1. தலையுச்சி (திவா.); crown of the head. 2. மகுடம் (திவா.); crown, crest, diadem. 3. நெற்றிச் சுட்டி (திவா.); ornament worn by women and girls on the forehead. 4. நெற்றியில் இட்டுக் கொள்ளும் பொட்டு (திவா.); a mark worn on the forehead. 5. மயிர்முடி (திவா.), குடுமி; hair-knot on the top of the head, hair tuft on the head. 6. சூட்டு, கொண்டை (திவா.); crest as of a peacock. 7. பாம்புப்படம்; hood of a cobra. "பஃறலைச் சுடிகை மாசுணம்" (கந்தபு. திருநாட்டுப். 29).

த. சுடிகை → Skt. jutikā

[சுட்டி → சுட்டிகை]

சுடிநார் *šudinār*, பெ. (n.) மஞ்சள் பூக்களையுடைய காட்டிலவமரம்; yellow flowered silk cotton (சா.அக.).

சுடிகை *śuḍigai*, பெ. (n.) 1. உச்சி; crown of the head. 2. கள்; fermented liquor. 3. பனங்கள்; palm toddy. 4. பிள்ளைப்பேறு; parturition, child birth (சா.அக.).

[சூடு → சுடு → சுடி → சுடிகை → சுடிகை]

சுடிரம்[1] *śuḍiram*, பெ. (n.) பொந்து; துளை (சீவரட்.); hole, cavity.

[(சொள்ளை → சொள்) → சுள் → சுடிரம்]

சுடிரம்[2] *śuḍiram*, பெ. (n.) பீநாறி என்னும் மூலிகை; fetid tree (சா.அக.).

சுடு[1]**-தல்** *śuḍu-*, 20 செ.குவி. (v.i.) காய்தல்; to be hot; to burn. "வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்" (நாலடி, 89).

க., து. சுடு; ம. சுடு

[சுள் → சுடு-,]

சுடு[2]**-தல்** *śuḍu-*, 8 செ.குன்றாவி. (v.t.) காயச் செய்தல்; to warm, heat. "சுடச்சுடரும் பொன்போல்" (குறள், 267). 2. எரித்தல்; to burn up. 3. பணியாரம் முதலியன சுட்டுச் செய்தல்; to roast, toast, bake, fry, cook in steam. "பிட்டுச் சுட்டுக் கொடுத்தனள்" (திருவாலவா. 30, 20). 4. காளவாயில் வேகவைத்தல்; to burn, as bricks in kiln. 'மழை வருமுன் செங்கல்லைச் சுட்டுவிட வேண்டும்' (உ.வ.). 5. மருந்து நீற்றுதல்; to calcine, as medicine. 6. சூடிடுதல்; to cauterise, brand. 7. வெடிசுடுதல்; to fire, as gun, fire works. 8. வருத்துதல், துன்புறுத்துதல்; to mortify, as the flesh; to injure as one's feelings. "துன்பஞ் சுடச்சுட நோற்கிற்பவர்க்கு" (குறள், 267). 9. காயப் படுத்துதல்; to inflict pain. 10. கெடுத்தல், அழித்தல்; to destroy, ruin. "குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பின்" (குறள், 1019). 11. நெருப்பில் வாட்டுதல்; to roast. "சங்கு சுட்டாலும் வெண்மை தரும்" (மூதுரை, 4).

ம. சுடுக; க., பட. சுடு; தெ. சுடியு, சுட; து. சுடுபுனி, சுட்பினி, துடுபுனி; கோண். சுர்ரானா; குவி. குதலி; கொலா. சுட், சுடு; குரு. குக்னா; மா. குடெ

[சுள் → சுடு-, (வே.க. 209)]

சுடு[3] *śuḍu*, பெ. (n.) சுடுகை; burning, heating, scalding. "சுடுவிற் றேனுடைந்த வண்ணமே" (சீவக. 416).

[சுள் → சுடு]

சுடு[4] *śuḍu*, பெ. (n.) சும்மாடு (பிங்.); a kind of load-pad for the head.

[சூடு → சுடு]

சுடுக்கு[1]**-தல்** *śuḍukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. நெட்டிவாங்குதல்; to crack the joints and knuckles. 2. பேன் முதலியவற்றை நெரித்தல்; to crack lice, bugs etc.,

மறுவ. சொடுக்குதல், நெரித்தல், சொடக்குப் போடுதல்

[சொடக்கு → சுடக்கு → சுடுக்கு-,]

சுடுக்கு[2] *śuḍukku-*, பெ. (n.) நெட்டிவாங்குகை; cracking the joints and knuckles.

[சொடக்கு → சுடுக்கு]

சுடுகஞ்சி *śuḍu-kañji*, பெ. (n.) சூடுள்ளகஞ்சி (பதார்த்த. 1381); hot gruel.

[சுடு + கஞ்சி]

சுடுகண் *śuḍu-kaṇ*, பெ. (n.) கொள்ளிக்கண்; evil eye.

[சுடு + கண்]

சுடுகலம் *śuḍu-kalam*, பெ. (n.) சுடப்பட்ட மட்பாண்டம்; earthen vessel.

[சுடு + கலம்]

சுடுகாட்டுக்கோட்டம் *śuḍu-kāṭṭu-k-kōṭṭam*, பெ. (n.) சக்கரவாளக்கோட்டம்; a place in the ancient city of Kāviri-p-pūm-paṭṭiṇam. "சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கிருளிற் சென்று" (சிலப். 9:20).

[சுடுகாடு + கோட்டம்]

சுடுகாட்டுச்சித்தர் *śuḍu-kāṭṭu-c-cittar*, பெ. (n.) சுடுகாட்டிலிருந்து மந்தரம் செய்தும், இறந்தோர் எலும்பு கொண்டு மாயக்கலை செய்தும், குறி சொல்லியும் வாழும் ஒருவகைச் சித்தர் கூட்டத்தார்; a kind of Śittars who are jugglers and fortune-tellers by practising their austerities in the burning-ground and carry about

human bones for working charms and in cantations.

[சுடுகாடு + சித்தர்]

சுடுகாட்டுப்பாட்டம் *śuḍukāṭṭu-p-pāṭṭam*, பெ. (n.) சுடலை வரி, சுடுகாட்டு வரிவகை (I.M.P.Cm. 147); fee collected in the burning-ground.

[சுடுகாடு + பாட்டம்]

சுடுகாட்டுப்புகை *śuḍu-kāṭṭu-p-pugai*, பெ. (n.) பிணம் சுடும்புகை; smoke from the burning dead body (சா.அக.).

[சுடுகாடு + புகை]

சுடுகாட்டுப்பூ *śuḍu-kāṭṭu-p-pū*, பெ. (n.) ஒருவகைக் காட்டுச் செடியில் மலரும் பூ; periwinkle, as graveyard flower, vinca.

[சுடுகாடு + பூ]

சுடுகாட்டுப்பேய் *śuḍu-kāṭṭu-p-pēy*, பெ. (n.) சுடுகாட்டில் திரியும் பேய்; spirit of dead persons hovering about the grave yard-Goblin.

[சுடுகாடு + பேய்]

சுடுகாட்டுமணிபொறுக்கி *śuḍu-kāṭṭu-maṇi-poṟukki*, பெ. (n.) 1. கொண்டையுள்ள ஒரு வகைப் பறவை; a kind of bird with crest on its head hovering around the burial ground. 2. காட்டுப்புறா; wild dove (சா.அக.).

[சுடுகாடு + மணி + பொறுக்கி]

சுடுகாடு *śuḍu-kāḍu*, பெ. (n.) சுடலை; burning-ground; crematorium. "மக்கட் பிணத்த சுடுகாடு" (நாலடி., 121).

ம. சுடுகாடு; க., து. சுடுகாடு; குட. சுடிகள; கோத. சுட்கட்

[சுடு + காடு]

சுடுகாடுநக்கி *śuḍu-kāḍu-nakki*, பெ. (n.) 1. ஏதிலி (இவ.); lit. one who licks the burning ground forsaken wretch, forlorn person. 2. மூக்கில் வெள்ளைப்பொறியுள்ள (ஆ) (இ.வ.); cow having a white spot on its nose. 3. மேல்வாய், கீழ்வாய் இதழ்களில் ஒன்று கருமையாகவும் மற்றது வெண்மையாகவும் உள்ள மாடு (இவ.); bullock having one of its lips black and the other white.

[சுடுகாடு + நக்கி]

சுடுகாடுமீட்டான் *śuḍukāḍu-mīṭṭaṉ*, பெ. (n.) முடக்கொற்றான் (மலை.); balloon vine.

[சுடுகாடு + மீட்டான்]

சுடுகாடுமீட்டான்குழம்பு *śuḍukāḍu-mīṭṭaṉ kuḻambu*, பெ. (n.) பாம்புகடித்தவரின் உடலில் ஏறிய நஞ்சை முறிக்கும் மருந்து; a medicine for snake-bite (சா.அக.).

[சுடுகாடு + மீட்டான் + குழம்பு]

சுடுகாடுறையன் *śuḍu-kāḍuṟaiyaṉ*, பெ. (n.) முடக்கொற்றான்; paly carer (சா.அக.).

[சுடுகாடு + உறையன்]

சுடுகூத்தன் *śuḍu-kūttaṉ*, பெ. (n.) கருப்பட்டி வாகை; a kind of śirissa tree.

[சுடு + கூத்தன்]

சுடுகை *śuḍugai*, பெ. (n.) சூடுகாட்டல்; process of heating calcification (சா.அக.).

[சுடு → சுடுகை]

சுடுகைக்கஞ்சி *śuḍugai-k-kañji*, பெ. (n.) சூடான கஞ்சி; hot-gruel (சா.அக.).

[சுடுகை + கஞ்சி]

சுடுகோல் *śuḍu-kōl*, பெ. (n.) 1. குறியிடப் பயன்படும் சூட்டுக்கோல்; a red hot burning iron rod used for marking purpose. 2. பற்றுக் கோல்; soldering iron. 3. சுடுகாட்டு நெருப்பைக் கிளறுங்கோல் (வின்.); rod for stirring funeral fire.

[சுடு + கோல்]

சுடுங்கரிநாள் *śuḍuṅ-karināḷ*, கரிசுக் கோள் நின்று நீங்கிய விண்மீன்; the particular nakṣatran from which an inauspicious planet has just left. "கொடுங்கோள் விடுநாள் . . . சுடுங் கரிநாள்" (விதான. குணாகுண. 94).

[சுடும் + கரிநாள்]

சுடுசாப்பாடு *śuḍu-śāppāḍu*, பெ. (n.) சுடுசோறு பார்க்க; see *śuḍu-śōṟu*.

[சுடு + சாப்பாடு]

சுடுசாம்பல் *śuḍu-śāmbal,* பெ. (n.) ஒத்தடம் கொடுக்கவுதவுஞ் சூடான அடுப்புச் சாம்பல்; hot ashes direct from oven used in fomantation.

[சுடு + சாம்பல்]

சுடுசுடு-த்தல் *śuḍu-śuḍu-,* 4 செ.குவி. (v.i.) சிடுசிடு; to frown.

[சிடுசிடு → சுடுசுடு-,]

சுடுசுடெனல் *śuḍu-śuḍeṉal,* பெ. (n.) 1. விரைவுக் குறிப்பு; onom, expr. singifying hurry. 2. சினக்குறிப்பு; onom expr. signifying irritability.

[சுடுசுடு + எனல்]

சுடுசுண்ணம் *śuḍu-śuṉṉam,* பெ. (n.) 1. தாளித்த சுண்ணாம்பு; slaked lime 2. புடமிட்ட மருந்துச் சுண்ணம்; a calcined calcium compound (சா.அக.).

[சுடு + சுண்ணம்]

சுடுசுண்ணச்சாந்து *śuḍu-śuṉṉa-c-cāndu,* பெ. (n.) நீற்றின சுண்ணாம்பு (திவா); white wash.

[சுடு + சுண்ணம் + சாந்து]

சுடுசுளாத்தி *śuḍu-śuḷātti,* பெ. (n.) சுடுதுரத்தி பார்க்க; see *śuḍu-duratti* (சா.அக.).

சுடுசெங்கற்குகை *śuḍu-śeṅgaṟ-kugai,* பெ. (n.) சுட்ட செங்கல்லை அரைத்துப் பண்ணிய குகை; crucible made of powedered burnt brick (சா.அக.).

[சுடு + செங்கல் + குகை]

சுடுசொல் *śuḍu-śol,* பெ. (n.) வசை, துன்புறுத்தும் மொழி; caustic remarks. "சீறிச் சுடுசொலால் இகழ்வோர்" (கூர்மபு. 32 : 34).

க. சுடுநுடி

[சுடு + சொல்]

சுடுசோறு *śuḍu-śōṟu,* பெ. (n.) புதிதாகச் சமைத்த சோறு; fresh, cooked rice, opposite to palañ-jōṟu (செ.அக.).

[சுடு + சோறு]

சுடுதண்ணீர் *śuḍu-taṉṉīr,* பெ. (n.) சுடுநீர் பார்க்க; see *śuḍunīr.*

[சுடு + தண்ணீர்]

சுடுதண்ணீர்க்கொப்புளம் *śuḍu-taṉṉīr-k-koppuḷam,* பெ. (n.) சுடுநீர்க்கொப்புளம் பார்க்க; *śuḍu-nīr-k-koppuḷam.*

[சுடு + தண்ணீர் + கொப்புளம்]

சுடுதழும்பு *śuḍu-taḻumbu,* பெ. (n.) 1. சுட்ட வடு; scar formed by healing of wounds caused by burning or cauterization. 2. காரத்தினால் சுட்ட தழும்பு; scar caused by the application of caustics (சா.அக.).

[சுடு + தழும்பு]

சுடுதி *śuḍudi,* பெ. (n.) விதைகளின் மேற்றோலினின்று வடிக்கும் மருந்தெண்ணெய் (இ.வ.); medicinal oil extracted from the husk of seeds.

சுடுதிமடுதி *śuḍudimaḍudi,* பெ. (n.) விரைவு; haste.

[சுள் → சுடு → சுடுதி; சுடுதி + மடுதி]

சுடுதிமடுதி - எதுகை குறித்து வந்த இணைமொழி.

சுடுதுரத்தம் *śuḍu-turattam,* பெ. (n.) அம்மான் பச்சரிசி (மலை.); an annual with erect branches.

சுடுதுரத்தி *śuḍu-turatti,* பெ. (n.) சித்திரப் பாலாடை; euphorbia thymifolia or hyperici folia (சா.அக.).

சுடுதொரட்டி *śuḍu-toraṭṭi,* பெ. (n.) சூரை முள்ளி பார்க்க; see *śūrai-muḷḷi* (சா.அக.).

சுடுநாற்றம் *śuḍu-nāṟṟam,* பெ. (n.) மயிர், பிணம் முதலியன சுடுதலால் உண்டாகும் நாற்றம் (உ.வ.); bad odour produced by burning hair or corpse.

ம. சுடுநாற்றம்

[சுடு + நாற்றம்]

சுடுநிலம் *śuḍu-nilam,* பெ. (n.) சுடுகாடு (திவா.) பார்க்க; see *suḍu-kāḍu.*

மறுவ. சுடலை

[சுடு + நிலம்]

சுடுநீர் *śuḍu-nīr,* பெ. (n.) வெந்நீர்; hot water.

[சுடு + நீர்]

சுடுநீர்க்கொப்புளம் *śuḍu-nīr-k-koppuḷam*, பெ. (n.) கொதிநீர் உடலில் படுவதால் உண்டாகும் கொப்புளம் (M.L.); scald caused by pouring boiling water on the body.

[சுடு + தண்ணீர் + கொப்புளம்]

சுடுநோக்கு *śuḍu-nōkku*, பெ. (n.) *1.* சுடுகண் பார்க்க; see *śuḍu-kaṇ*. *2.* கடும் பார்வையுடைய கண்; fierce-looking eyes. "சூர்த்துக் கடைசி வந்த சுடுநோக்கு" *(சிலப். 5:84).*

[சுடு + நோக்கு]

சுடுபடை *śuḍu-paḍai*, பெ. (n.) சுடுகோல், 1 பார்க்க; see *śuḍukōl,1.* "கழுவொடு சுடுபடை சுருக்கிய தோல்" *(கலித். 106).*

[சுடு + படை]

சுடுபுண் *śuḍu-puṇ*, பெ. (n.) சுட்டதனால் உண்டான புண் (உ.வ.); scald, burn.

[சுடு + புண்]

சுடுபொன் *śuḍupoṉ*, பெ. (n.) புடமிட்ட பொன்; refined gold, as burnt by fire. "சுடுபொன் வளைஇய . . . சுற்றொடு" *(கலித். 85)*

[சுடு + பொன்]

சுடுமட்பலகை *śuḍumaṭ-palagai*, பெ. (n.) செங்கல்; burnt brick. "சுடுமட் பலகை" *(பெரியபு. ஏயர்கோன். 49).*

[சுடுமண் + பலகை]

சுடுமடியைப்பிடியெனல் *śuḍu-maḍiyai-p-piḍi-eṉal*, பெ. (n.) விரைவுக்குறிப்பு; expression of haste, quickness. 'வேலை சுடுமடியைப் பிடியென்று நடந்துவிட்டது' *(நாஞ்.)*

சுடுமண் *śuḍu-maṇ*, பெ. (n.) *1.* சுடுமட்பலகை பார்க்க; see *śuḍu-maṭ-palagai.* "சுடும ணோங்கிய நெடுநகர் வரைப்பில்" *(பெரும்பாண். 405).* *2.* சுட்ட ஓடு; burnt tile. "சுடுணோறா வடுநீங்கு சிறப்பின்" *(சிலப். 14 : 146).* *3.* மட்பாண்டம் (சிலப் 14:146, அரும்.); earthen vessel.

[சுடு + மண்]

சுடுமருந்து *śuḍu-marundu*, பெ. (n.) *1.* நீறுசெய்த மருந்து (வின்.); medicine prepared by calcination. *2.* புண்ணைச் சுடும் மருந்து; caustic.

[சுடு + மருந்து]

சுடுமூஞ்சி *śuḍu-mūñji*, பெ. (n.) சினமேறிச் சிவந்த முகம்; frowning face. 'அவன் ஒரு சுடுமூஞ்சி' *(உ.வ)*

மறுவ. சிடுமூஞ்சி

ம., து. சுடுமோரெ.

[சுடு + மூஞ்சி. முகம் → மூஞ்சி]

சுடுமூஞ்சித்தனம் *śuḍu-mūñji-t-taṉam*, பெ. (n.) சிடுசிடுத்த முகக்குறி; angry face; irritated face or temperament *(சா.அக.).*

[சுடுமூஞ்சி + தனம்]

சுடுரத்தம் *śuḍurattam*, பெ. (n.) சித்திரப்பாலை; species of euphorbia *(சா.அக.).*

[சுடு + அரத்தம்]

சுடுவல் *śuḍuval*, பெ. (n.) குருதி, அரத்தம் (திவா.); blood, as warm.

[சுடு → சுடுவல் (வே.க. 210)]

சுடுவள்ளி *śuḍu-vaḷḷi*, பெ. (n.) தலைச்சூடுவள்ளி பார்க்க; see *talai-c-cūḍu-vaḷḷi (சா.அக.).*

[சுடு + வள்ளி]

சுடுவளர்த்தி *śuḍu-vaḷartti*, பெ. (n.) சூடு வளர்த்தி பார்க்க; see *śūḍu-vaḷartti (சா.அக.).*

[சூடுவளர்த்தி → சுடுவளர்த்தி]

சுடுவன் *śuḍuvaṉ*, பெ. (n.) சுடுவல் (பிங்.) பார்க்க; see *śuḍuval.*

[சுடுவல் → சுடுவன் (வே.க. 210)]

சுடுவனம் *śuḍu-vaṉam*, பெ. (n.) *1.* சுடு அரத்தம்; warm blood. *2.* சுடுநீர்மம்; hot fluid. *3.* அனல் வீசும்காற்று; a forest throwing hot wind. *4.* பாலை நிலம்; desert *(சா.அக.).*

[சுடு + வனம்]

சுடுவான் *śuḍuvāṉ*, பெ. (n.) மரக்கலத்துள்ள சமையலறை; galley, caboose (naut.).

[சுடு → சுடுவான்]

சுடுவு *śuḍuvu*, பெ. (n.) சுடு[4] பார்க்க (சூடா.); see *śuḍu,[4].*

[சுடு → சுடுவு]

சுண்ட *śuṇḍa*, வி.அ. (adv.) முற்றும்; completely to the last drop. 'சுண்டக் கறந்ததினால் கன்றுக்குப் பால் இல்லை' *(இவ.)*

[சுள் → சுடு → சுண்டு. சுண்டு → சுண்ட]

சுண்டக்கட்டுதல் *šunda-k-kattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. இழுத்துக்கட்டுதல் (யாழ்ப்.); to stretch tight and fasten as a rope tied to posts. 2. இறுகக்கட்டுதல்; to be hardended after boiling.

[சுண்ட + கட்டு-,]

சுண்டக்காய்-தல் *šunda-k-kāy-,* 2 செ.கு.வி. (v.i.) இறுகும்படிக் காய்தல்; to dry in the sun till it completely dries (சா.அக.).

[சுண்ட + காய்-,]

சுண்டக்காய்ச்சு-தல் *šunda-k-kāyccu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நீர்வற்றும்படி காய்ச்சுதல்; to heat till it completing dries (சா.அக.).

[சுண்ட + காய்ச்சு-,]

சுண்டக்கீரை *šunda-k-kīrai,* பெ. (n.) நீர்ச் சுண்டி; floating sensitive plant(சா.அக.).

[சுண்டை + கீரை]

சுண்டகம் *šundagam,* பெ. (n.) 1. கள்; toddy. 2. மூஞ்சூறு; musk rat (சா.அக.).

சுண்டகன் *šundagan,* பெ. (n.) கள்ளிறக்கு வோன் (யாழ்.அக.); toddy-drawer.

சுண்டங்காய் *šundangāy,* பெ. (n.) 1. சிறுகாய்; small fruit. 2. சுண்டைக்காய் பார்க்க; see *šundai-k-kāy* (சா.அக.).

[சுண்டைக்காய் → சுண்டங்காய்]

சுண்டப்பிடி-த்தல் *šunda-p-pidi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஆடையை அளக்க இழுத்துப் பிடித்தல்; to hold tight, as in measuring cloth. 2. வயிற்றில் பிடித்துக்கொள்ளுதல்; to be affected with colic pains. 3. கஞ்சத்தனம் செய்தல்; to be niggardly in expenditure.

[சுண்ட + பிடி-,]

சுண்டம் *šundam,* பெ. (n.) 1. கள் (மூ.அ.); toddy. 2. நொதிப்படைந்த நீர்மம்; fermented liquor. 3. யானைத்துதிக்கை; elephant's trunk. "புரு சுண்டந் தாங்குந் தன்மையால் . . ." (விநாயகபு. 46:44).

Skt. šundā

[சுண்டு → சுண்டம்]

சுண்டல்[1] *šundal,* பெ. (n.) சுண்டுகை; getting evaporated or dried.

[சுண்டு' → சுண்டல்]

சுண்டல்[2] *šundal,* பெ. (n.) 1. சுண்டற்கறி பார்க்க; see *šundar-kari.* 2. பயறுகளின் சுண்டல்; boiled and spiced pulse. "பேதமாகிய பல்சுண்டல்" (விநாயகபு. 39: 38).

ம. சுண்டல்

[சுண்டு → சுண்டல்]

சுண்டலி *šundali,* பெ. (n.) மரவகை (L.); axillary cymed false holly.

[சுண்டு → சுண்டல் → சுண்டலி]

சுண்டவை-த்தல் *šunda-vai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. குழம்பு, கறி மறுநாளும் கெடாதிருக்குமாறு நெருப்பெரித்து நீர்வற்றவைத்தல்; to heat till it completely dries the remnants of the day's curry. 2. நீர் வற்றும் வரை நெருப்பெரித்தல்; to evaporate, to dry up. 'பாலைச் சுண்டவை' (உ.வ.)

[கள் → சுண்டு → சுண்ட + வை-,]

சுண்டற்கறி *šundar-kari,* பெ. (n.) எரித்த பழங்கறி (இ.வ.); a warmed up dish of the remnants of the day's curry. 'சுண்டற்கறியின் சுவையே தனிச்சுவை' (உ.வ.).

[சுண்டல் + கறி]

சுண்டன்[1] *šundan,* பெ. (n.) அறிவிலி (சது.); முட்டாள்; ignorant, stupid person.

Skt. šuntha

[சுண்டு → சுண்டன்]

சுண்டன்[2] *šundan,* பெ. (n.) மூஞ்சூறு; musk rat. 2. சுண்டெலி; mouse.

ம., தெ., க. சுண்ட; Skt. šundia-mūṣika

சுண்டன்[3] *šundan,* பெ. (n.) 1. 24ஆம் விண்மீனாகிய குன்று (சதயம்) (பிங்.); the 24th star. 2. கருக்குவை; holy-leaved berried spindle tree (செ.அக.).

சுண்டாங்கி *šundāngi,* பெ. (n.) 1. கறியோடு சேர்ப்பதற்காக அரைத்த சம்பாரம்; seasoning

stuffs pounded and used with curry. 2. குறைவு; small matter, trifle. 3. அளவிற்குறைவு; scantiness in measure or quantity.

[சுண்டு' → சுண்டாங்கி]

சுண்டாங்கியார் *śuṇḍāṅgiyār*, பெ. (n.) சிக்கனக்காரி; கடுஞ்செட்டுக்காரி; stingy woman (செஅக.).

[சுண்டாங்கி → சுண்டாங்கியார்]

சுண்டாங்கொள்ளி *śuṇḍāṅ-goḷḷi*, பெ. (n.) குழந்தைகள் தீக்கொளுத்தி விளையாடுங் குச்சி (இ.வ.); stick ignited at one end, used by children, as a firework.

[சுண்டான்[2] → கொள்ளி]

சுண்டாயம் *śuṇḍāyam*, பெ. (n.) விளையாட்டு; sport. "இவையென்ன சுண்டாயங்களே" (திவ். திருவாய். 7. 8 : 7).

[சுண்டு + ஆயம்]

சுண்டாலம் *śuṇḍālam*, பெ. (n.) யானை (யாழ்அக.); elephant.

சுண்டாலி *śuṇḍāli*, பெ. (n.) சுண்டாலம் (பிங்) பார்க்க; see *śuṇḍālam*.

[சுண்டாலம் → சுண்டாலி]

சுண்டான்[1] *śuṇḍāṉ*, பெ. (n.) கள்; toddy (சாஅக.).

[சுண்டு → சுண்டான்]

சுண்டான்[2] *śuṇḍāṉ*, பெ. (n.) கள்விற்போர் வழங்கும் ஒரு மட்பாண்டச் சிற்றளவு (யாழ்ப்.); small earthen measure used by toddy-sellers.

Skt. śuṇḍā

[சுண்டு → சுண்டான்]

சுண்டான்[3] *śuṇḍāṉ*, பெ. (n.) சுண்டாங்கொள்ளி பார்க்க; see *śuṇḍāṅ-koḷḷi*.

[சுள் → சுண்டு → சுண்டான்]

சுண்டான்கொளுத்து-தல் *śuṇḍāṉ-koḷuttu-*, 5 செ.குன்றாவி. (v.i.) குழந்தைகள் விளையாட்டாகக் குச்சியைத் தீயிற் கொளுத்துதல் (இவ.); to ignite small sticks at one end as a firework by children.

[சுண்டான் + கொளுத்து-,]

சுண்டி[1] *śuṇḍi*, பெ. (n.) 1. கள்; toddy. 2. புளித்த மது; any fermented, liquor. 3. சுக்கு (அக.நி.); dried ginger. 4. ஒருவகைக் கண்நோய்; a kind of eye disease. 5. தொட்டால் வாடி (மலை.); sensitive plants, mimosa pudica. 6. சுண்டிக் கீரை (மூ.வ.) பார்க்க; see *śuṇḍi-k-kīrai*. 7. வறட்சுண்டி (வின்.); floating sensitive plant. 8. இஞ்சி; ginger. 9. சுண்டை பார்க்க (யாழ்அக.); see *śuṇḍai*. 10. கருஞ்சுண்டி; mimosa rubicaulis (சாஅக.).

[சுள் → சுண்டு → சுண்டி]

சுண்டி[2] *śuṇḍi*, பெ. (n.) குறும்புக்காரன்; smart, mischieveous fellow. 'சுண்டிப்பயல்' (செஅக.).

[சுட்டி → சுண்டி]

சுண்டிக்கிருதம் *śuṇḍi-k-kiṟudam*, பெ. (n.) பாண்டுவீக்கம், குளிர்க்கழிச்சல் போன்ற வற்றைச் குணமாக்கும் ஒருவகை மருந்து; a medicine prepared to cure dysentry (சாஅக.).

[சுண்டி + கிருதம்]

சுண்டிக்கீரை *śuṇḍi-k-kīrai*, பெ. (n.) நீர்ச் சுண்டி; water mimosa (செஅக.).

[சுண்டி' + கீரை]

சுண்டிகை *śuṇḍigai*, பெ. (n.) 1. உண்ணாக்கு; uvula. 2. சுண்டைக்காய் பார்க்க; see *śuṇḍai-k-kāy*. 3. வண்டின் நாக்கு; tongue of beetle (சாஅக.).

சுண்டிப்போ-தல் *śuṇḍi-p-pō-*, 8 செ.குவி (v.i.) சுருங்கல்; to be reduced by boiling or evaporation (சாஅக.).

[சுண்டி' + போ-,]

சுண்டியம் *śuṇḍiyam*, பெ. (n.) 1. சுக்கு; dried ginger. 2. சுண்டி[1] பார்க்க; see *śuṇḍi*[1] (சாஅக.).

[சுண்டி → சுண்டியம்]

சுண்டியாதிக்கருக்கு *śuṇḍi-y-āti-k-karukku*, பெ. (n.) சுக்கு முதலியவற்றால் அணியமாக்கப் படும் ஒருவகைக் கருக்கு; a kind of decoction prepared out of dry ginger and other materials (சாஅக.).

மறுவ. கசாயம், கியாழம்

[சுண்டி + ஆதி + கருக்கு]

சுண்டியாதிச்சூரணம் *šuṇḍiyāti-c-cūraṇam,* பெ. (n.) ஒருவகை ஆயுள்வேத மாத்திரை செய்யப் பயன்படும் மருந்துப்பொடி; a kind of Ayurvedic powder to make tablet (சா.அக.).

[சுண்டியாதி + சூரணம்]

சுண்டியிலை *šuṇḍi-ilai,* பெ. (n.) தொட்டால் வாடி இலை; leaves of mimosa pudica (சா.அக.).

[சுண்டி + இலை]

சுண்டியுண்டை *šuṇḍi-y-uṇḍai,* பெ. (n.) சதுரக்கள்ளி, சித்திரகம், கொஞ்சி இவற்றின் வேர்ப்பட்டையாலும், சீரகத்தாலும் செய்யப் பட்டுச் சோறு முதலியவற்றைப் புளிக்க வைப்பதற்குப் பயன்படுத்தும் குளிகை (வின்.); a pill prepared from the bark of the roots of šadura-k-kaḷḷi, šittiragam, koñji and cumin seed used to produce fermentation in rice and other food.

[சுண்டு → சுண்டி. சுண்டி + உண்டை. உருண்டை = உண்டை]

சுண்டில் *šuṇḍil,* பெ. (n.) தொட்டால் வாடி (மலை); sensitive plant.

[சுண்டு → சுண்டில்]

சுண்டிலி *šuṇḍili,* பெ. (n.) 1. மயில்; peacock. 2. மூஞ்சூறு; musk rat (சா.அக.).

[சுண்டில் → சுண்டிலி]

சுண்டு[1]-தல் *šuṇḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நீர் முதலியவை வற்றுதல்; to dry up, to be evaporated by heat. 2. குன்றிப்போதல்; to look small. 'அச்செய்தியைக் கேட்டதும் அவள் முகம் சுண்டிப் போயிற்று' (உ.வ.).

[சுள் → சுண்டு-,]

சுண்டு[2]-தல் *šuṇḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வேகவைத்தல்; to boil, stew, simmer (செ.அக.). 'அவள் கீரையைச் சுண்டினாள்' (உ.வ.).

[சுள் → சுண்டு-,]

சுண்டு[3]-தல் *šuṇḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நோவுண்டாகும்படி நரம்பு முதலியன இழுத்தல்; to be tight, as a string, to contract, as a muscle in cramp. 2. வயிறுஇசித்தல் (வின்.); to pinch internally, gripe.

சுண்டு[4]-தல் *šuṇḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. விரலால் காசு முதலியவற்றைத் தெறித்தல்; to shoot with the thumb or a finger, as marble; to flip up a coin for testing its ring; to tap with; the thumb or finger; coconut. 2. நாண் முதலியவற்றை இழுத்துத் தெறித்தல்; to jerk, as reins; to snap, as a ball with a bow or a carpenters like on a plant. 3. இழுமம் (ரப்பர்) முதலியவற்றை இழுத்து விடுதல்; to draw out an elastic body and let it recoil with a jerk.

[சுள் → சுண்டு → சுண்டு-,]

சுண்டு[5] *šuṇḍu,* பெ. (n.) தெறிக்கை; jerking.

[சுள் → சுண்டு]

சுண்டு[6] *šuṇḍu-,* பெ. (n.) 1. மிகக்குறைவு (யாழ்.அக.); smallness, trifle. 2. சிறு ஏனவகை; a small vessel. 3. ஒரு சிற்றளவு; a small measure. "ஒரு சுண்டு பால்' (உ.வ.). 4. தலைப் பொடுகு; dandruff. 5. காய்ச்சுகையில் ஏனத்தடியிற் பற்றியது (யாழ்ப்.); sediment that which adheres to a pot when boiling.

க. சொண்டு; தெ. சுண்டு

[சுள் → சுண்டு]

சுண்டு[7] *šuṇḍu,* பெ. (n.) 1. மூக்கு; பறவை அலகு (இவ.); bill; beak. 2. கீழ்உதடு; lower lip.

ம. சுண்டு; க். சுண்டு; பர். சொண்டு; கூய். சுட; பிரா. சுண்டு Skt. tuṇḍa

[சுள் → சுண்டு]

சுண்டுகட்டை *šuṇḍu-kaṭṭai,* பெ. (n.) ஒரு நெசவுக்கருவி (இவ.); weaver's instrument for driving the shuttle.

[சுண்டு[3] + கட்டை]



சுண்டுசாதம் *śuṇḍu-śādam,* பெ. (n.) சுண்டு சோறு பார்க்க; see *śuṇḍu-śōṟu,*

[சுண்டு + சாதம்]

சுண்டுசொல் *śuṇḍu-śol,* பெ. (n.) சுடுசொல் பார்க்க; see *śuḍu-śol.*

[சுண்டு + சொல்]

சுண்டுசோறு *śuṇḍu-śōṟu,* பெ. (n.) *மயக்கத்தைத் தரும் புளிப்பேற்றிய சோறு;* fermented rice, intoxicating food.

[சுண்டான் + சோறு]

சுண்டுதலை *śuṇḍudalai,* பெ. (n.) சொறித் தலை; head with scurf.

[சுண்டு + தலை. சுண்டு = பொடுகு, சொறி]

சுண்டுமணி *śuṇḍu-maṇi,* பெ. (n.) *சிறந்தமணி (கட்டபொம். பக்.56);* ruby of the finest quality.

[சுண்டு + மணி. மன் → மண் → மணி = விளங்கும் கல்]

சுண்டுவாதம் *śuṇḍu-vādam,* பெ. (n.) நரம்பு முதலியன வெட்டி வெட்டி உள்ளிழுக்கப் படும் ஒரு முடக்கி நோய் (இ.வ.); a disease marked by contraction of muscles, cramp.

[சுண்டு + வாதம். சுண்டு = நெறி, இழு.]

Skt. vāta → த. வாதம்

சுண்டுவிரல் *śuṇḍu-viral,* பெ. (n.) *சிறுவிரல், குறுவிரல்;* little finger.

[சுண்டு⁶ + விரல். விர் → விரி → விரல்]



சுண்டுவில் *śuṇḍu-vil,* பெ. (n.) *விளையாட்டுக்கு உதவும் ஒருவகை வில்;* a toy bow for shooting stones or pellets. "தெறி வில்லாவது சுண்டுவில்" *(திவ். பெரியாழ். 3. 4 : 3, வியா.)*

ம. சுண்டுவில்லு

[சுண்டு³ + வில்]



சுண்டுவிரற்கண்ணி *śuṇḍu-viraṟ-kaṇṇi,* பெ. (n.) *மகளிர் கால் விரலணி;* a kind of ring, worn by women on the toe.

[சுண்டுவிரல் + கண்ணி]

சுண்டெலி *śuṇḍeli,* பெ. (n.) *சிற்றெலிவகை; சிறியஎலி;* mouse.

ம. சுண்டெலி; க. சுண்டிலி, சூஞ்சிலி, கொண்டிலி; தெ. சுண்டெலுக, சுஞ்செலுக; து. சுண்ட் எலி; குட. சிண்ட எலி; பட. சுண்டெலி

[சுண்டு + எலி]

சுண்டை¹ *śuṇḍai,* பெ. (n.) *1. கள் (பிங்.);* toddy; an intoxicating drink. *2. யானைத் தும்பிக்கை;* elephant's trunk.

[சுள் → சுண்டு → சுண்டை]

சுண்டை² *śuṇḍai,* பெ. (n.) *நீர்நிலை (யாழ்.அக.);* reservoir, tank.

Skt. kuṇḍa

சுண்டை³ *śuṇḍai,* பெ. (n.) *1. செடிவகை;* turkey berry. *2. சுண்டைவகை (L.);* indian currant tomato. *3. காட்டுச்சுண்டை;* Indian tree-potato.

Skt. śuṇḍā; ம. சுண்ட

[சுண்டு⁶ → சுண்டை]

சுண்டை⁴ *śuṇḍai,* பெ. (n.) *நீர்யானை (புதுவை.);* hippopotamus.

சுண்டைக்காய் *śuṇḍai-k-kāy,* பெ. (n.) மருந்தாகப் பயன்படும் ஒருவகைக்காய்; a medicinal product from śuṇḍai plant which controls many body diseases.

[சுண்டை + காய்]

சுண்டைக்காய்

சுண்டைக்காயன் *śuṇḍai-k-kāyaṉ,* பெ. (n.) மதிப்பற்றவன் (உ.வ.); an insignificant person. 'அவன் கிடக்கிறான், சுண்டைக் காய்ப் பயல்' (உ.வ.)

[சுண்டை + காய் + அன்]

சுண்டை அளவிற் சிறியது என்னும் பொருள் பற்றி, இவ்வழக்கு வந்ததாகலாம்.

சுண்டைக்கீரை *śuṇḍai-k-kīrai,* பெ. (n.) கீரை வகை; a kind of greens (செ.அக.).

[சுண்டை + கீரை]

சுண்டைச்செடி *śuṇḍai-c-ceḍi,* பெ. (n.) சுண்டைக்காய்ச் செடி அல்லது மரம்; śuṇḍai-k-kāy is a plant as a tree (சா.அக.).

[சுண்டை + செடி]

சுண்டை வகைகள்

1. ஆனைச்சுண்டை
2. மலைச்சுண்டை
3. இராமேசுவரச் சுண்டை
4. முட்சுண்டை
5. கருஞ்சுண்டை
6. காட்டுச்சுண்டை
7. பேய்ச்சுண்டை
8. நஞ்சுண்டை
9. இலைச்சுண்டை
10. குத்துச்சுண்டை
11. முள்ளிலாச்சுண்டை

சுண்டைப்பிரமாணம் *śuṇḍai-p-piramāṇam,* பெ. (n.) சுண்டைக்காய் அளவு இளகியம், மெழுகு போன்றன; குறிப்பிட்ட வடிவ அளவு; the size of sundai for prescribing the intake (சா.அக.).

[சுண்டை + பிரமாணம்]

சுண்டைவற்றல் *śuṇḍai-vaṟṟal,* பெ. (n.) சுண்டைக்காய் வற்றல்; dried unriped fruits of solanum pubescens (சா.அக.).

[சுண்டை + வற்றல்]

சுண்டைவேர் *śuṇḍai-vēr,* பெ (n.) தும்மலை யுண்டாக்கும் சுண்டைச்செடியின் வேர்; the root of solanum pubescens, causes sneezing (சா.அக.).

[சுண்டை + வேர்]

சுண்ணக்கரி *śuṇṇa-k-kari,* பெ. (n.) சுண்ணாம்பு சேர்த்த கரி; heep of calcium stones and carbon pieces (சா.அக.).

[சுண்ணம் + கரி]

சுண்ணக்கல் *śuṇṇa-k-kal,* பெ. (n.) சுக்கான்கல் பார்க்க (யாழ்அக.); see *śukkāṉ-kal.*

[சுண்ணம் + கல்]

சுண்ணக்குகை *śuṇṇa-k-kugai,* பெ. (n.) சுண்ணாம்புக்கல்லினால் செய்த குகை; crucibles made of slaked lime (சா.அக.).

[சுண்ணம் + குகை]

Skt. guhā → த. குகை

சுண்ணக்குகையிலூது-தல் *śuṇṇa-k-kugaiyl-ūdu-,* 5 செ.குன்றாவி. (v.t.) மருந்தைச் சுண்ணாம்புக் குகையில் வைத்து ஊதுதல்; to blow with belows the lime crucible containing the medicine which is to be calcified (சா.அக.).

[சுண்ணம் + குகையில் + ஊது-,]

சுண்ணக்குரு *śuṇṇa-k-kuru,* பெ. (n.) சுண்ணாம்பு நீர் மற்றும் சில பொருட்கள் மூலம் உருவாக்கப்படும் மருந்துப்பு; a salt prepared from quick lime and other ingredients (சா.அக.).

[சுண்ணம் + குரு]

சுண்ணக்கூர்மை *šunna-k-kūrmai,* பெ. (n.) நாகரவண்டு; beetle supposed to carry snake holes (சா.அக.).

[சுண்ணம் + கூர்மை]

சுண்ணகக்குற்றி *šunnaga-k-kurri,* பெ. (n.) நறுமணப்பொடி வைக்கும் சிமிழ்; a small casket for keeping aromatic bathing powder. "சுட்டிக்கலனுஞ் சுண்ணகக் குற்றியும்" (பெருங். உஞ்சைக். 38:168).

[சுண்ணகம் + குற்றி]

சுண்ணகம் *šunnagam,* பெ. (n.) சுண்ணப் பொடி பார்க்க; see *šunna-p-podi.*

[சுண்ணம் → சுண்ணகம்]

த. சுண்ணகம் → Skt. šūrnaka

சுண்ணச்சத்து *šunna-c-cattu,* பெ. (n.) 1. சுண்ணாம்புச்சத்து; essence of lime. 2. எலும்பிலுள்ள சுண்ணச்சத்து; calcium phosphate found in bones. 3. சுண்ணாம்பில் உள்ள மாழைச்சத்து; the metalic basis of lime-Calcium. 4. சுண்ணக்குரு பார்க்க; see *šunna-k-kuru* (சா.அக.).

[சுண்ணம் + சத்து]

சுண்ணச்சாந்து *šunna-c-cāndu,* பெ. (n.) சுண்ணாம்புக்காரை; plaster, mortar (செ.அக.).

[சுண்ணம் + சாந்து]

சுண்ணச்சிறுநீர் *šunna-c-ciru-nīr,* பெ. (n.) அதிக சுண்ணாம்புச்சத்துள்ள சிறுநீர்; excess of calcium salt in the urine.

[சுண்ணம் + சிறுநீர்]

சுண்ணச்சீலை *šunna-c-cīlai,* பெ. (n.) சுண்ணாம்பு தடவிய சீலைத்துணி; a piece of cloth luted with lime and used for packing the container of medicine which is to be exposed to fire (சா.அக.).

[சுண்ணம் + சீலை. சீரை → சீலை]

சுண்ணச்சீலைசுற்று-தல் *šunna-c-cīlai-šurru-,* 7 செகுன்றாவி. (v.t.) சீலைச்சுண்ணம் சுற்றுதல்; to pack by winding the piece of cloth luted with lime over the container of medicine (சா.அக.).

[சுண்ணச் சீலை + சுற்று-,]

சுண்ணச்சீனிநீர் *šunna-c-cīni-nīr,* பெ. (n.) சருக்கரை கலந்த சுண்ணாம்புத்தெளிவு; saccharated solution of lime (சா.அக.).

[சுண்ணம் + சீனி + நீர்]

சுண்ணத்துக்குயிர் *šunnattu-k-kuyir,* பெ. (n.) முட்டை; egg, supposed to posses life giving virtue to lime (சா.அக.).

[சுண்ணத்துக்கு + உயிர்]

சுண்ணத்துக்கூர்மையோன் *šunnattu-k-kūrmaiyōn,* பெ. (n.) நாகரவண்டு; a beetle supposed to carry water to snake holes (சா.அக.).

[சுண்ணத்து + கூர்மையோன்]

சுண்ணத்தோன் *šunnattōn,* பெ. (n.) கருப்பூரக் கல்மதம்; foliated crystallized gypsum (சா.அக.).

[சுண்ணம் → சுண்ணத்தோன்]

சுண்ணநீர் *šunna-nīr,* பெ. (n.) சுண்ணாம்பு தெளிந்த நீர்; lime water (சா.அக.).

[சுண்ணம் + நீர்]

சுண்ணநீறு *šunna-nīru,* பெ. (n.) 1. நீற்றிய சுண்ணாம்பு; slaked lime. 2. நீற்றிய சுண்ண மருந்து; a calcium compound (சா.அக.).

[சுண்ணம் + நீறு]

சுண்ணப்பூச்சவுடு *šunna-p-pū-c-cavudu,* பெ. (n.) 1. உவர்மண்; dhoby's earth. 2. உவர் மண்காரம்; impure carbonate of soda (சா.அக.).

[சுண்ணம் + பூச் + சவுடு]

சுண்ணப்பூமி *šunna-būmi,* பெ. (n.) நில (பூ) நீறு எடுக்கும் நிலம்; šoil of fuller's earth (சா.அக.).

[சுண்ணம் + பூமி]

Skt. bhumi → த. பூமி

சுண்ணப்பொடி *šunna-p-podi,* பெ. (n.) 1. நறுமணப்பொடி; an aromatic powder. 2. சுண்ணாம்புத்தூள்; lime powder or dust. 3. சுண்ணநீறு பார்க்க; see *šunna-nīru.* 4. சுண்ண மருந்து; calcined medicine. 5. விழா முதலிய காலங்களில் மக்களின்மேல் தூவும் நறுமணப் பொடி (வின்.); aromatic powder mixed with saffron and gold or silver dust, used for spirnkling over guests or friends on festive occasions (சா.அக.).

[சுண்ணம் + பொடி]

சுண்ணம் *šunnam*, பெ. (n.) 1. பொடி; powder, dust. "செம்பொற் சுண்ணம்" *(பெருங். உஞ்சைக். 33: 120)*. 2. சுண்ணப்பொடி பார்க்க; see *šunna-p-podi*. "பலதொகு பிடித்த தாதுகு சுண்ணத்தர்" *(மதுரைக். 399)*. 3. பூந்தாதுத்தூள், மகரந்தத் தூள்; pollen dust. "தாழைக் கொழுமட லவிழ்ந்த ... சுண்ணம்" *(மணிமே. 4 : 18)*. 4. மலர் (பிங்.); flower. 5. 24ஆம் விண்மீன் குன்று (சதயம்); the 24th star in the celestial area 'satayam'. 6. சுண்ணாம்பு; lime, oxide of calcium. 7. ஈரடி எண்சீரைப் பொருள் முறையின்றித் துணித்துச் செய்யுளியற்றும் முறை (தொல். சொல். 406); a mode of constructing a stanza in which the word in a pair of four-footed lines are transposed their natural order. 8. சொல்வகை நான்கனுள் நான்கு அடியாக வரும் இசைப் பாட்டு. (சிலப். 3 : 12, பக்.88); a stanza of four lines set to music, one of four col-vagai. 9. பட்டு வகை (சிலப். 14: 108, உரை); a variety of silk.

Pkl. šunna; ம. சுண்ணம்

[சுள் → சுண். சுண்ணித்தல் = நீற்றுதல். சுண் → சுண்ணம் (வே.க. 211)]

த. சுண்ணம் → cūrṇa

சுண்ணம்[2] *šunnam*, பெ. (n.) ஒன்பான் மணிகளும் பொன்னும் சந்தனமும் கருப்பூரம் முதலியனவும் புனுகிலும் பனிநீரிலும் நனைய வைத்திடித்தல்; bounding of nine jewells, gold, sandal wood and camphor wetted in the punugu and snow water.

சுண்ணமண் *šunna-man*, பெ. (n.) 1. சுண்ணாம்பு மண்; sand mixed with lime. 2. உவர்மண்; fuller's earth (சா.அக.).

ம. சுண்ணாம்பு மண்ணு

[சுண்ணம் + மண்]

சுண்ணமாடு-தல் *šunna-mādu-*, 5 செ.குவி. (v.i.) விழா முதலிய காலங்களில் மணப்பொடி தூவுதல் (வின்.); to spirinkle scented powder on festive occasion, etc.,

[சுண்ணம் + ஆடு-,]

சுண்ணமானோன் *šunnam-āṉōṉ*, பெ. (n.) கொடுக்காய்ப்புளி; sweet babool (சா.அக.).

[சுண்ணம் + ஆனோன். சுன்னம் = சுழி, வட்டம், வளைவு. சுன்னம் – சுண்ணம்]

சுண்ணமொழிமாற்று *šunna-moli-māṟṟu*, பெ. (n.) சுண்ணமாக அமைந்த செய்யுளை ஏற்றபடி மொழிமாற்றிப் பொருள் கொள்ளுகை (நன். 412, மயிலை); construing a šunnam verse by suitable transposition of words.

[சுண்ணம் + மொழிமாற்று]

சுண்ணவட்டு *šunna-vattu*, பெ. (n.) சுண்ணங் கலந்த நீரை வீசுங்கருவி; a kind of syringe for spirnkling water mixed with aromatic powder. "சுண்ண வட்டுஞ் சுழிநீர்க் கோடும்" *(பெருங். உஞ்சைக். 38 : 107)*

[சுண்ணம் + வட்டு]

சுண்ணவரத்தம் *šunnavarattam*, பெ. (n.) சுண்ணாம்பு அதிகமுள்ள குருதி; blood having more calcium percentage.

[சுண்ணம் + அரத்தம்]

சுண்ணவாசி *šunna-vāši*, பெ. (n.) முல்லை (மலை.); wild jasmine.

த. வாசம்; Skt. vāsa

[சுண்ணம் + வாசி. வாசம் → வாசி. 'இ' உடைமைப் பொருளீறு]

சுண்ணவுப்பு *šunna-v-uppu*, பெ. (n.) சுண்ணாம்பிலிருந்து எடுக்கப்படும் உப்பு வகைகள்; lime salt (சா.அக.).

[சுண்ணம் + உப்பு]

சுண்ணவைப்பு *šunna-vaippu*, பெ. (n.) 1. சுட்டசுண்ணாம்பு; burnt lime stone. 2. புடமிட்டெடுத்த மருந்துச் சுண்ணம்; a kind of calcium salt obtained through calcination etc., 3. சுண்ணாம்பு வண்டல்; calcium deposits. 4. தமிழ்மருந்து முறைப்படியான மாழைச் சுண்ணம்; compound of calcium, carbonate prepared as prescribed in Tamil medicine.

[சுண்ணம் + வைப்பு]

சுண்ணாம்படி-த்தல் *šunnāmbadi-*, 4 செ.குன்றாவி. (v.t.) வெள்ளையடித்தல்; to white wash (செ.அக.).

[சுண்ணாம்பு + அடி-,]

சுண்ணாம்படைதல் *šunnāmbadaidal*, பெ. (n.) பதநீரில் சுண்ணாம்பு வண்டல் படிகை (வின்.); setling of lime in sweet toddy.

[சுண்ணாம்பு + அடைதல்]

சுண்ணாம்பு *šuṇṇāmbu,* பெ. (n.) 1. சுட்ட சுண்ணாம்புக்கல்; lime burnt in the kiln, quicklime. 2. நீற்றின சுண்ணாம்பு; slaked lime. "விரைப்பாகு வெள்ளிலை சுண்ணாம் பினொடு" (வாயுசங்கிரியா. 23). 3. சன்னச்சாந்தாக அரைத்த சுண்ணாம்பு; macerated lime specially prepared as fine plaster.

ம. சுண்ணாம்பு; Skt. šuṇṇa; Pkt. cuṇṇa

[சுண்ணம் → சுண்ணம்பு → சுண்ணாம்பு = காரக்கல் நீறு]

சுண்ணாம்புக்கம்பி *šuṇṇāmbu-k-kampi,* பெ. (n.) சுண்ணாம்புக்கரடு பார்க்க; see *šuṇṇāmbu-k-karaḍu* (சா.அக.).

சுண்ணாம்புக்கரடு[1] *šuṇṇāmbu-k-karaḍu,* பெ. (n.) சுண்ணாம்பு மண் நிறைந்த குன்று; hill of lime-stone.

[சுண்ணாம்பு + கரடு]

சுண்ணாம்புக்கரடு[2] *šuṇṇāmbu-k-karaḍu,* பெ. (n.) சுண்ணாம்புக்கல்லில் சேர்ந்த, தண்ணீரில் கரையாத, கரடான பொருள்; impurity of limestone containing magnesite (சா.அக.).

[சுண்ணாம்பு + கரடு]

சுண்ணாம்புக்கரண்டகம் *šuṇṇāmbu-k-karaṇḍagam,* பெ. (n.) அடைகாய்க்காக (வெற்றிலை போடுவதற்காக)ச் சுண்ணாம்பு வைக்கும் மூடுசெப்பு; small casket for lime.

[சுண்ணாம்பு + கரண்டகம்]



சுண்ணாம்புக்கரண்டகம்

சுண்ணாம்புக்கல் *šuṇṇambu-k-kal,* பெ. (n.) சுண்ணாம்புச்சத்துள்ள சுக்கான்கல்; lime stone (சா.அக.).

ம. சுண்ணாம்புக்கல்லு

[சுண்ணாம்பு + கல்]

சுண்ணாம்புக்காய் *šuṇṇāmbu-k-kāy,* பெ. (n.) சுண்ணாம்புக்கரண்டகம் பார்க்க; see *šuṇṇāmbu-k-karaṇḍagam.* 'சுண்ணாம்புக் காய் முள்ளிடுக்கி முதலிய இன்றியமையாத பொருள்களிலே' (எங்களுர், 30).

[சுண்ணாம்பு + காய்]

சுண்ணாம்புக்காரன் *šuṇṇāmbu-k-kāraṉ,* பெ. (n.) 1. சுண்ணாம்பு நீறு விற்கும் ஆள்; person who sells lime stone etc., 2. சுண்ணாம்பு நீறுவிற்கும் வகுப்பான்; person belonging to lime-selling caste.

[சுண்ணாம்பு + காரன்]

இவர்கள் தனி இனத்தவராகக் கருதப் பட்டதும் உண்டு. திருச்சிராப்பள்ளி போன்ற நகரங்களில் சுண்ணாம்புக்காரத் தெரு எனத் தெருப்பெயர் அமைந்துள்ளமை காண்க.

சுண்ணாம்புக்காரை *šuṇṇāmbu-k-kārai,* பெ. (n.) 1. கட்டடத்திற்கு உரிய சுண்ணாம்புச் சாந்து; mortar. 2. காய்ந்த சாந்து; dried plaster of chuṇṇam (செ.அக.).

[சுண்ணாம்பு + காரை]

சுண்ணாம்புக்காளவாய் *šuṇṇambu-k-kāḷavāy,* பெ. (n.) சுண்ணாம்பு நீற்றுஞ் சூளை; lime-kiln.

ம. சுண்ணாம்பு சூள

[சுண்ணாம்பு + காளவாய்]

காளவாய் பார்க்க

சுண்ணாம்புக்கிளிஞ்சில் *šuṇṇambu-k-kiliñjil,* பெ. (n.) சுண்ணாம்புச்சிப்பி பார்க்க; see *šuṇṇāmbu-c-cippi.*

[சுண்ணாம்பு + கிளிஞ்சல்]

சுண்ணாம்புக்கீரை *šuṇṇāmbu-k-kīrai,* பெ. (n.) 1. ஒருவகைக்கீரை (வின்.); a kind of greens. 2. சிறுபூளை; a common wayside weed.

[சுண்ணாம்பு + கீரை]

சுண்ணாம்புக்குட்டான் *šuṇṇāmbu-k-kuṭṭāṉ,* பெ. (n.) பதனீர் இறக்குவோர் சுண்ணாம்பு வைக்குஞ் சிறுகூடை (யாழ்ப்.); toddy drawer's small basket for lime.

[சுண்ணாம்பு + குட்டான். கொட்டான் → குட்டான்]

கொட்டான் பார்க்க

சுண்ணாம்புகுத்து-தல் *šunnāmbu-kuttu-*, 5 செ.கு.வி. (v.i.) சுண்ணாம்பை மணல் கலந்து இடித்தல்; to pound lime with sand and water and make it into mortar-paste.

[சுண்ணாம்பு + குத்து-. குற்று → குத்து-,]

சுண்ணாம்புச்சத்து *šunnambu-c-cattu*, பெ. (n.) சுண்ணம்; calcium (சா.அக.).

[சுண்ணாம்பு + சத்து]

சுண்ணாம்புச்சிப்பி *šunnāmbu-c-cippi*, பெ. (n.) சுண்ணாம்பு நீற்ற உதவும் முத்துச் சிப்பிக் கூடு (இ.வ.); lime-shells.

[சுண்ணாம்பு + சிப்பி]

சுண்ணாம்புச்சூளை *šunnāmbu-c-cūḷai*, பெ. (n.) சுண்ணாம்புக்காளவாய் பார்க்க; see *šunnāmbu-k-kāḷavāy*.

ம. சுண்ணாம்புசூள

[சுண்ணாம்பு + சூளை. சுள் → சுள்ளை → சூளை]

சுண்ணாம்புத்தண்ணீர் *šunnāmbu-t-tannīr*, பெ. (n.) 1. ஆடை, காகிதக்கூழ் முதலியனவற்றை வெளுக்கவும், மருந்து, வண்ணம் முதலியன உண்டாக்கவும் பயன்படும் சுண்ணாம்பு கலந்த தெளிநீர்; lime-water used in bleaching and washing lines, in paper making, in dyeing and in dressing leather. 2. வீட்டுச்சுவர்க்கு அடிக்க உதவும் சுண்ணாம்பு நீர்; white-wash solution.

[சுண்ணாம்பு + தண்ணீர்]

சுண்ணாம்புத்தித்திப்பு *šunnāmbu-t-tittippu*, பெ. (n.) சுண்ணாம்பு, சருக்கரை, தண்ணீர் கொண்டு உருவாக்கப்படும் குழந்தை நோய்க்கான ஒருவகை மருந்து; a medicine for children prepared from lime liquor and sugar (சா.அக.).

[சுண்ணாம்பு + தித்திப்பு]

சுண்ணாம்புத்துடுப்பு *šunnāmbu-t-tuḍuppu*, பெ. (n.) வெற்றிலை போடுவதற்காகக் கரண்டகத்திலிருந்து சுண்ணாம்பு எடுக்கும் சிறுகருவி (யாழ்ப்.); a small metal rod for taking slaked lime from its casket.

[சுண்ணாம்பு + துடுப்பு]



சுண்ணாம்புத்தெளிவு *šunnāmbu-t-teḷivu*, பெ. (n.) தெளிந்த சுண்ணாம்புத்தண்ணீர்; aqua calcis or liquor calcis used for some medical preparations (சா.அக.).

[சுண்ணாம்பு + தெளிவு]

சுண்ணாம்புதடவு-தல் *šunnāmbu-taḍavu*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. வெற்றிலை முதலிய வற்றிற்குச் சுண்ணம் தடவுதல்; to dabu with lime, as betal leaves. 2. ஏமாற்றுதல்; to play the hypocrite. 'அவன் சிரித்துக்கொண்டே சுண்ணாம்பு தடவுகிறான்' (உ.வ.).

[சுண்ணாம்பு + தடவு-,]

சுண்ணாம்புதாளி-த்தல் *šunnāmbu-dāḷi-*, 4 செ.கு.வி. (v.i.) சுண்ணாம்பு நீற்றுதல் (சென்னை.); to slake lime.

[சுண்ணாம்பு + தாளி-,]

சுண்ணாம்புநீற்று-தல் *šunnāmbu-nīṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) சுண்ணாம்புதாளி-த்தல் பார்க்க; see *šunnāmbu-dāḷi-*.

[சுண்ணாம்பு + நீற்று-,]

சுண்ணாம்புப்பட்டை *šunnāmbu-p-paṭṭai*, பெ. (n.) 1. விழாக்காலங்களிலும், நற்காலங்களிலும் சுவர், திண்ணை முதலியவற்றில், செம்மண் பட்டையை இடையிட்டு அடிக்கும் சுண்ணாம்புக்கோலம்; stripes of white wash alternating with red on the side-walls, as of temples, raised platform at the entrance of houses, etc., made on festive occasions. 2. ஓடு விலகாதிருக்கப் போடும் சாந்துப் பட்டை; chunnam border over the tile roofing.

[சுண்ணாம்பு + பட்டை]

சுண்ணாம்புபதநீர் *šunnāmbu-badanīr*, பெ. (n.) பனையின் பாளையிலிருந்து வடித்துச் சுண்ணாம்பு கலந்தெடுக்கப்பட்ட, இனிய சாறு; sweet toddy prepared with lime.

மறுவ. அக்காரநீர் (நெல்லை.); சுண்ணாம்புப் பதனி

[சுண்ணாம்பு + பதநீர்]

சுண்ணாம்புப்பரவர் *šunnāmbu-p-paravar*, பெ. (n.) ஒருவகைப் பரவர்; a sub-sect among Parava caste.

[சுண்ணாம்பு + பரவர்]

சுண்ணாம்புப்பற்று *šunnāmbu-p-parru*, பெ. (n.) இஞ்சிச் சாற்றிற் படியும் சுண்ணாம்பு வண்டல் (வின்.); sediment of lime in ginger-juice.

[சுண்ணாம்பு + பற்று]

சுண்ணாம்புப்பறையர் *šunnāmbu-p-paraiyar*, பெ. (n.) சுண்ணாம்பு நீற்றி விற்போர்; cunnam-sellers.

ம. சுண்ணாம்புபரவன்

[சுண்ணாம்பு + பறையர்]

சுண்ணாம்புலக்கை *šunnāmbulakkai*, பெ. (n.) சுண்ணாம்புச்சாந்து இடிக்கும் உலக்கை; chunnam beater.

[சுண்ணாம்பு + உலக்கை. உல் → உலம் → உலக்கை]

சுண்ணாம்போர் *šunnāmbōr*, பெ. (n.) சுண்ணாம்பு நீற்றி விற்போர்; chunnam sellers. "பான்மதிக்குச் சுண்ணாம்போர்" (சினேந். 141).

[சுண்ணாம்பு + விற்போர். சுண்ணாம்பு விற்போர் → சுண்ணாம்போர்]

சுண்ணாம்புவல்லி *šunnāmbu-valli*, பெ. (n.) காட்டுக்கொடிமுந்திரிகை; jungle angoor (சா.அக.).

[சுண்ணாம்பு + வல்லி]

சுண்ணி[1]-த்தல் *šunni-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. நீற்றுதல் (சங்.அக.); to slake, as lime. 2. புடமிட்டுச் சுண்ணமாகச் செய்தல்; to calcinate a metal in air as contemplated in Tamil medicine (சா.அக.).

[உள் → சுள் → சுண் → சுண்ணி-,]

சுண்ணி[2]-த்தல் *šunni-*, செ.கு.வி. (v.i.) பூசுதல்; to daub.

சுண்ணி[3] *šunni*, பெ. (n.) ஆண்குறி (கொ.வ.); male genital.

ம. சுண்ணி; க. துண்ணி, துண்ணெ; தெ. சுல்லு, சுல்லி; பட. துண்ணெ; Pkt. cunna.

சுண்ணு *šunnu*, பெ. (n.) 1. புனுகு (இ.வ.); civet. 2. ஆமணக்கு; castor seed.

u. jund

சுணக்கம்[1] *šunakkam*, பெ. (n.) 1. காலத்தாழ்வு; delay. 'இப்படி நடந்தால் பள்ளிக்குச் சுணக்கமாகும்' (உ.வ.). 2. வாட்டம்; depression of spirits; fatigue emaciation. 'இந்தச் சுணக்கம் தீர்ந்தால் மடமடவென்று நடக்கலாம்' (உ.வ.). 3. இன்பவிளையாட்டு; dalliance. 'அவளோடு சுணக்கம் தகுமா?' (உ.வ.).

[சுள் → சுணங்கு → சுணக்கம்]

சுணக்கம்[2] *šunakkam*, பெ. (n.) முடை; tightness, as of market. "பண்டு போலில்லை பணச் சுணக்கம்" (பஞ்ச. திருமுக. 445).

[சுணக்கம்[2] → சுணக்கம்[3]]

சுணக்கன் *šunakkan*, பெ. (n.) 1. சுணங்கன் (சங்.அக.) பார்க்க; see *šunangan*. 2. நாய் போலத் திரிபவன் (வின்.); one who wanders about as street dog, loafer. 3. இழிந்தோன் (வின்.); mean person, one who performs mean offices.

க. சொணக்; த. சுணக்கன்

[சுணங்கன் → சுணக்கன்]

Skt. šunaka

சுணக்கு[1]-தல் *šunakku-*, 5 செ.குன்றாவி. (v.t.) காலந்தாழ்த்துதல்; to delay. 'வேலையைச் சுணக்காதே' (நெல்லை).

[சுணங்கு → சுணக்கு-,]

சுணக்கு[2] *šunakku*, பெ. (n.) வேலை தொடங்குவதை அல்லது செய்யும் வேலையைக் காலந்தாழ்த்துகை; delay in starting or doing delay in the work.

[சுணக்கம்[1] → சுணக்கு]

சுணக்குமுத்திரை *šuṇakku-muttirai,* பெ. (n.) *அரக்குமுத்திரை (வின்.);* seal put upon one's property with sealing wax.

[சுணக்கு + முத்திரை]

சுணங்கத்திசை *šuṇaṅga-t-tišai,* பெ. (n.) தென்மேற்குத் திசை *(வின்.);* the South West quarter.

Skt. šunaka

சுணங்கம் *šuṇaṅgam,* பெ. (n.) *சுணங்கன் பார்க்க;* see *šuṇaṅgaṉ.* "*அந்தமில்லச் சுணங்கம தாயினாள்" (யசோ. 3 : 4).*

[சுணங்கன் → சுணங்கம்]

சுணங்கல்[1] *šuṇaṅgal,* பெ. (n.) *1. சுணக்கம் பார்க்க;* see *šuṇakkam. 2. சோம்பேறி; மடியாளன்;* lazy person. *'போடா சுணங்கலே' (இ.வ.). 3.* மெலிவு; emaciation.

ம. சுணங்ஙவு

[சுணக்கம் → சுணங்கல்]

சுணங்கழி-தல் *šuṇaṅgaḻi-,* 2 செ.கு.வி. (v.i.) செருக்குக்குறைதல் (ஈடு); to have one's pride reduced.

[சுணங்கு[3] *+ அழி-,]*

சுணங்கறை *šuṇaṅgaṟai,* பெ. (n.) புணர்ச்சி; sexual union. "*சுணங்கறைப் பயனு மூடலுள் ளதுவே" (பரிபா. 9 : 22).*

[சுணங்கு + அறு - சுணங்கறு. சுணங்கறு → சுணங்கறை]

சுணங்கன்[1] *šuṇaṅgaṉ,* பெ. (n.) 1. சோர்வுற்றவன்; tired person. 2. மெலிந்தவன்; slender person.

ம. சுணங்ஙன்

[சுணங்கு → சுணங்கன்]

சுணங்கன்[2] *šuṇaṅgaṉ,* பெ. (n.) *நாய் (திவா.);* dog.

Skt. šunaka

சுணங்கன்புல் *šuṇaṅgaṉ-pul,* பெ. (n.) மஞ்சள் நிறக் கிழங்குள்ள ஒருவகைப்புல்; a kind of a grass having yellow coloured bublous root *(சா.அக.).*

[சுணங்கன் + புல்]

சுணங்கன்மரம் *šuṇaṅgaṉ-maram,* பெ. (n.) நோய்களைத் தீர்க்கும் மருத்துவப் பண்புடைய நாய்க்குட்டி மரம்; a rare kind of tree called as nāy-k-kuṭṭi *(சா.அக.).*

[சுணங்கன் + மரம்]

சுணங்கன்மூலி *šuṇaṅgaṉ-mūli,* பெ. (n.) கற்பமூல பெருமூலி 23 வகைகளில் ஒன்றான நாய்க்குட்டிச் செடி; a kind of medicinal plant which is one of the 23 varieties of kaṟbamūla magā-mūli *(சா.அக.).*

[சுணங்கன் + மூலி]

சுணங்கி *šuṇaṅgi,* பெ. (n.) சோம்பேறி; sluggard, idler.

[சுணங்கு → சுணங்கி]

சுணங்கிப்போ-தல் *šuṇaṅgi-p-pō-,* 8 செ.கு.வி (v.i.) மெலிந்துபோதல்; to grow weak and thin *(சா.அக.).*

[சுணங்கி + போ-,]

சுணங்கிவிழு-தல் *šuṇaṅgi-viḻu-,* 2 செ.கு.வி. (v.i.) களைத்துவிழுதல்; to fall by exhaustion or over exertion *(சா.அக.).*

[சுணங்கி + விழு-,]

சுணங்கு[1]**-தல்** *šuṇaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* வினையிற் சோர்தல்; to be fatigued; jaded; to be emaciated. *2.* காலந்தாழ்த்தல்; to delay; loiter, linger. 'இந்த இளவயதில் இப்படிச் சுணங்குதல் சரியா?' *(உ.வ.). 3.* தடைப்படுதல்; to hindered, interrupted. *4.* பொந்திகையடையா திருத்தல்; to be dissatisfied. '*அவன் தன் திருமண முயற்சியில் சுணங்கிக் கொண்டிருக்கி றான்' (உ.வ.). 5.* கெஞ்சுதல் (வின்.) to cringe, persist in requesting. *6.* இன்ப விளையாட்டுப் புரிதல் (இ.வ.); to dally, make amorous advances. *7.* சினங்கொள்ளுதல்; to get angry. *8.* ஊடுதல்; to feign displeasure, as a wife for her husband.

ம. சுணங்ஙுக; க. சுணுகு; தெ. சுடுகு, சுணுகு

E. slack; AS. sleak; Su. slak; Ice. Slakr-

[சுள் → சுண் → சுணங்கு (வே.க. 215)]

சுணங்கு[2] *šuṇaṅgu,* பெ. (n.) மெலிவு *(வின்.);* reduction, emaciation.

[சுள் → சுண் → சுணங்கு]

சுணங்கு[3] *šuṇaṅgu-,* பெ. (n.) *1.* அழகுத்தேமல்; yellow spreading spots on the body of women, regarded as beautiful. *"மின்னுறழ் சாயற் பொன்னுறழ் சுணங்கின்" (பெருங்.மகத. 16:5).* *2.* பசலை; sallow complexion of a love-lorn woman. *3.* படர்புண் வகை *(இவ.);* a spreading skin-disease, especially of animals. *4.* பூந்தாது; pollen-dust. *"பசுமலர்ச் சுணங்கின்" (ஐங்குறு. 76).* (செ.அக.).

ம. சுணங்ஙு

[சுணம் → சுணங்கு]

சுணங்கு[4] *šuṇaṅgu,* பெ. (n.) சுணங்கன் பார்க்க; see *šuṇaṅgaṉ. "சுணங்குபல பிணங்கு பெருங் குரைப்பினாலும்" (அரிச். பு. மயான. 35).*

ம. சுணங்ஙி

[சுணங்கன் → சுணங்கு]

சுணங்குபடர்-தல் *šuṇaṅgu-baḍar-,* 2 செ.கு.வி. (v.i.) உடம்பில் தேமல் படர்தல் *(சிறுபாண்.);* to spread as yellow patches or spots on the skin especially of the woman *(சா.அக.).*

[சுணங்கு + படர்-,]

சுணங்குபூ-த்தல் *šuṇaṅgu-bū-,* 4 செ.கு.வி. (v.i.) சுணங்குபடர்-தல் பார்க்க; see *šuṇaṅgu-baḍar-* *(சா.அக.).*

[சுணங்கு + பூ-,]

சுணங்கை *šuṇaṅgai,* பெ. (n.) துணங்கை; a kind of devil-dancing. *"ஆடுங்கள்ளும் பராய்ச் சுணங்கை யெறிந்து" (திவ்.திருவாய். 4. 6 : 7).*

[துணங்கை → சுணங்கை]

சுணச்சி *šuṇacci,* பெ. (n.) *1.* பவளப்புற்று நஞ்சு; a kind of prepared arsenic. *2.* பேய்க்கடலை; a kind of bitter wild gram. *3.* பேய்த்தும்பை; devil tumbay. *4.* நாகசிங்கி; a medicinal plant available in tanks *(சா.அக.).*

சுணம்[1] *šuṇam,* பெ. (n.) அழகுத்தேமல்; yellow spreading spots on the body of women. *"சுண நன் றணிமுலை யுண்ண" (திவ். பெரியாழ். 2. 3:4).*

[சுள் → சுண் → சுணம்]

த. சுணம் → Skt. svarṇa

சுணம்[2] *šuṇam,* பெ. (n.) சுண்ணப்பொடி பார்க்க; see *šuṇṇa-p-poḍi. "புரிந்த பூவொடு பொற்சுணங் கமழும" (பெருங். உஞ்சைக். 39:46).*

[சுள் → சுண் → சுண்ணம் → சுணம்]

சுணவு *šuṇavu,* பெ. (n.) சுணைவு பார்க்க; see *šuṇaivu (சா.அக.).*

[சுணைவு → சுணவு]

சுணை[1]**-த்தல்** *šuṇai-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* தினவெடுத்தல்; to itch severely. *2.* நமைச்சல்; to tingle, as tongue after eating something pungent. *3.* அரிப்பெடுத்தல்; to be inflamed, as from the touch of a micro thorn plant, nettle. *4.* அரித்தல்; to be inflammed, as from the hairs of a caterpillar.

ம. சுணய்க்குக

Mhr. šuṇašuṇa

[சுனை → சுணை-,]

சுணை[2] *šuṇai,* பெ. (n.) சுரணை, நெஞ்சகத்திற் குத்தும் மானவுணர்ச்சி; sense of shame; sensibility. *"துகிலு மிழந்து சுணையு மழிந்து" (பட்டினத். உடற் கூற்று வண்ணம். 249).* *2.* கூரிய அறிவு; sense. *3.* கூர்மை; keenness, sharpness. 'சுணையில்லாக் கத்தி' *(உ.வ.).* *4.* தினவு; itching, tingling, smarting. *5.* அம்மைநோய் கண்ட காலத்தில் உடம்பில் உள்ளிடமாகத் தங்கி முட்குத்துப் போன்ற உணர்ச்சியுள்ள அம்மைக்கொப்புளம் *(உ.வ.);* pustules, as in the alimentary canal, formed when a person is attacked with small-pox. *6.* இலை, காய் முதலியவற்றின் மேலுள்ள சிறுமுள்; prickle, as in leaves stalks etc., down on fruits.

ம. சுண, சுணை (முள்.); தெ. சொந

[சல் → சர் + சுரணை = குத்தும் மான வுணர்ச்சி. சுரணை → சுணை]

த. சுணை (கூர்மை) → Skt. smaraṇa

"செ.ப. அகரமுதலி . . . நினைவு அல்லது தன்னுணர்ச்சி என்று மட்டும் பொருள்படும் ஸ்மரண என்னும் வடசொல்லை, சுரண என்னும் சொற்கு மட்டுமின்றிச், சுணை யென்னும் சொற்கும் மூலமாகக் காட்டியுள்ளது. சுணை, சுரணை என்னும் தென்சொற்கள், குத்தற்கருத்தை அடிப் படையாகக் கொண்ட, 'சுள்' என்னும்

வேரினின்றும், ஸ்மரண என்னும் வடசொல் நினை என்று பொருள்படும் ஸ்ம்ரு என்னும் வினை முதனிலையினின்றும், பிறந்துள்ளன என வேறுபாடறிக. (வே.க.206-7).

சுணைக்கரந்தை *šuṇai-k-karandai,* பெ. (n.) *சுணையுள்ள கரந்தை;* sharp sweet basil *(சா.அக.).*

[சுணை + கரந்தை]

சுணைக்காணம் *šuṇai-k-kāṇam,* பெ. (n.) பேய்க் கொள்; wild horse-gram *(சா.அக.).*

[சுணை + காணம்]

சுணைக்காது *šuṇai-k-kādu,* பெ. (n.) *காது மடலின்கீழ்த் தொங்கிக் கொண்டிருக்கும் மெதுவான சதைப்பாகம்;* the lower termination of the ear *(சா.அக.).*

[சுணை + காது]

சுணைக்குறிஞ்சா *šuṇai-k-kuṟiñjā,* பெ. (n.) *சொரசொரப்புள்ள குறிஞ்சா;* rough swallow wort *(சா.அக.).*

[சுணை + குறிஞ்சா]

சுணைக்கொடி *šuṇai-k-koḍi,* பெ. (n.) *முசுமுசுக்கை;* bryonia scabra *(சா.அக.).*

[சுணை + கொடி]

சுணைக்கேடன் *šuṇai-k-kēḍaṉ,* பெ. (n.) *வெட்கம் கெட்டவன்;* person of blunted sensibilities. "தானும் ஒக்க மடலெடுப்பான் ஒருசுணைக் கேடன்" *(திவ். திருப்பா. 1:20, வியா.).*

[சுணை + கேடன்]

சுணைக்கோரை *šuṇai-k-kōrai,* பெ. (n.) *ஒரு வகைக் கோரை (மலை);* a kind of rough grass.

[சுணை + கோரை]

சுணைகழியாப்பிஞ்சு *šuṇai-k-kaḻiyā-p-piñju,* பெ. (n.) *அப்பொழுது பறித்த பிஞ்சு;* a fresh downy fruit *(சா.அக.).*

[சுணை + கழியா + பிஞ்சு]

சுணைகெட்டவன் *šuṇai-keṭṭavaṉ,* பெ. (n.) *மானவுணர்ச்சியில்லாதவன்;* person of blunted sensibilities.

ம. சுண கெட்டவன்

[சுணை + கெட்டவன்]

சுணைச்சி *šuṇaicci,* பெ. (n.) *சிறுகாஞ்சொறி;* small climbing nettle *(சா.அக.).*

[சுணை + ச்சி. 'இ' உடைமைப் பொருளீறு]

சுணைத்தழும்பு *šuṇai-t-taḻumbu,* பெ. (n.) *சுணை உடம்பிற்படுவதனால் நமைச்சல் எடுத்துத் தடித்துத் தழும்புண்டாதல்;* nettle rash *(சா.அக.).*

[சுணை + தழும்பு]

சுணைநெரிஞ்சி *šuṇai-neriñji,* பெ. (n.) *ஒருவகை முள்நெரிஞ்சி;* a kind of nettle *(சா.அக.).*

[சுணை + நெரிஞ்சி]

சுணைப்பு *šuṇaippu,* பெ. (n.) *1. குத்தும் மானவுணர்ச்சி;* sense of shame, sensibility. "ஒருதரஞ் சொன்னால் தெரியாதா? உனக்குச் சுணைப்பு இல்லையா?" என்பது நாஞ்சில் நாட்டு வழக்கு. *2. கூரியஅறிவு;* sense.

[சுணை + பு. 'பு' பண்புப் பெயர் ஈறு]

சுணைப்புல் *šuṇai-p-pul,* பெ. (n.) *1. சுணையுள்ள புல்;* any grass with rough surface. *2. கோரைப் புல்;* reed sedge grass *(சா.அக.).*

[சுணை + புல்]

சுணையுறுகாணம் *šuṇai-y-uṟu-kāṇam,* பெ. (n.) *பேய்க்கொள் என்னும் தவசம்;* wild horse-gram *(சா.அக.).*

[சுணையுறு + காணம்]

சுணையுறுகொத்து *šuṇai-y-uṟu-kottu,* பெ. (n.) *சுணையுறுகாணம் பார்க்க;* see *šuṇai-y-uṟu-kāṇam.*

[சுணையுறு + கொத்து]

சுணைவண்டு *šuṇai-vaṇḍu,* பெ. (n.) *ஒருவகை வண்டு;* a kind of beetle.

[சுணை + வண்டு]

சுணைவு *šuṇaivu,* பெ. (n.) *பேய்க்கடலை (மலை.);* wild bitter bengal gram.

சுணைவெள்ளரி *šuṇai-veḷḷari,* பெ. (n.) *நரி வெள்ளரி;* downy cucumber *(சா.அக.).*

[சுணை + வெள்ளரி]

சுத்தல்சம்பா *šuttal-šambā,* பெ (n.) *சம்பா நெல்வகை (வேளாண்.);* a kind of paddy.

சுத்தி[1] *šutti,* பெ. (n.) 1. சிப்பி (பிங்.); oyster-shell. "சுத்தியின் கருப்போல்" (பிரபோத. 2:26). 2. சங்கு (பிங்.); conch. 3. கும்பிடு கிளிஞ்சில் (தைலவ.); a species of cackle, a bivalve. 4. இப்பி வடிவாகத் தலை ஓட்டால் அமைக்குந் திருநீற்றுக் கலம்; skull used as receptacle for sacred ashes. "சுத்திய பொக்கணத்து . . ." (திருக்கோ. 242). 5. அகல் (சூடா.); shallow earthen vessel. 6. நெய் முதலியன ஊற்றுஞ் சிறு ஏனம் (வின்.); small vessel for pouring ghee, oil etc.

Skt. šukti

[சுறு → (சுற்று) → சுத்து → சுத்தி (வே.க.208.)]

சுத்தி[2] *šutti,* பெ. (n.) குத்துவதுபோல் தட்டும் சிறு சம்மட்டி; small hammer.

ம. சுத்தி; து. சுத்தி

[சுறு → (சுற்று) → சுத்து → சுத்தி (வே.க.208.)]

சுத்தியல் பார்க்க

சுத்தி[3] *šutti,* பெ. (n.) அரைப்பலம் (தைலவ.); half a palam.

சுத்தி[4] *šutti,* பெ. (n.) வயிரத்தின் பண்புகளுள் ஒன்று (சிலப்.14:181, உரை); a quality of diamond.

சுத்திகெந்தி *šutti-kendi,* பெ (n.) சிவப்புக் கெந்தகம்; red sulphur (சா.அக.).

சுத்திகை *šuttikai,* பெ (n.) 1. கிளிஞ்சல்; சிப்பி; shell, oyster shell. 2. அகல் (பிங்.); pan as of a lamp. 3. உட்குடான தட்டு; கிண்ணம் shallow dish.

[சுத்தி → சுத்திகை]

சுத்தியம் *šuttiyam,* பெ. (n.) நல்லாடை வகை (திவா.); a kind of cloth of superior quality.

Pkt. katta; U. kātnā.

சுத்தியல் *šuttiyal,* பெ. (n.) ஓங்கியடிக்க உதவும் கம்மாளர் கருவி வகை; small hammer.

மறுவ. தட்டுங்கருவி, சிறு சம்மட்டி

[சுத்து[2] *→ சுத்தி → சுத்தியல் (மு.தா. 117: வே.க.208)]*



சுத்திரப்பலகறை *šuttira-p-palakaṟai,* பெ. (n.) கடலில் உண்டான ஒரு வகைச் சோழி; a kind of gowri grown in the ocean (சா.அக.).

சுத்திலப்பரணி *šuttila-p-paraṇi,* பெ. (n.) ஏழிலைப் புன்னை என்னும் மூலிகை; seven leaved milky plant (சா.அக.).

சுத்திலாட்டம் *šuttilāṭṭam,* பெ. (n.) நாணல்; reed (சா.அக.).

சுத்திவில்முடுக்கி *šutti-vil-muḍukki,* பெ. (n.) ஒரு பக்கம் அடிப்பதற்கும் மறுபக்கம் ஆணியின் கொண்டையைப் பற்றி திருகிப் பிடுங்குவதற்கும் உதவுங் கருவி; wrench and hammer.

மறுவ. ஆணிபிடுங்கிச் சுத்தியல்

[சுத்தி[2] *+ வில் + முடுக்கி]*

சுத்து-தல் *šuttu-,* 5 செ.கு.வி. (v.i.) சுற்று-தல் பார்க்க; see *šuṟṟu-*.

[சுறு → (சுற்று) → சுத்து → சுத்து-தல் (மு.தா.117)]

சுத்துரு *šutturu,* பெ. (n.) கண்டங்கத்திரி (மலை.); a thorny plant.

சுதமதி *šudamadi,* பெ (n.) மணிமேகலையில் மாதவியின் தோழியாக வருபவள்; a female character, Madavi's friend in Manimegalai epic.

சுதர்ச்சி *šudarcci,* பெ (n.) சதுரக்கள்ளி; square spurge (சா.அக.).

சுதாகு *šudāgu,* பெ. (n.) கடம்பு மரம்; cadambo tree.

சுதாச்சி *śudācci*, பெ. (n.) *சதுரக்கள்ளி (மலை.);* triangular spurge.

சுதாதாளி *śudādāḷi*, பெ. (n.) *கிச்சிலிக் கிழங்கு;* orange root *(சா.அக.).*

சுதுப்புநாங்காறல் *śuduppu-nāṅgāṟal*, பெ. (n.) *1. பத்துவிரல நீளமும் வெண்ணிறமுமுள்ள மண்டைக்காறல் மீன்;* horse-mackerel, silvery, attaining 10 in. in length, ascending rivers for above tidal reach. *2. நீலவெள்ளை நிறமுடைய காறல் மீன் வகை;* horse mackerel, bluish-silver *(செ.அக.).*

சுதும்பு *śudumbu*, பெ. (n.) *பத்துவிரல நீளமும் சாம்பல் நிறமும் உள்ள பால் மீன்வகை;* milk-fish, leaden, attaining 10 in. in length *(செ.அக.).*



சுதும்பு

சுதை[1] *śudai*, பெ. (n.) *1. அமிழ்தம்;* ambrosia. *"சுதையனைய வெண்சோறு" (கம்பரா. குலமுறை. 18). 2. பால்;* milk. *"சுதைக் கணுரையைப் பொருவு தூசு" (கம்பரா. வரைக். 16). 3. சுவை (வின்.);* taste, savour, sweetness. *4. சுண்ணாம்பு;* lime, plaster. "வெள்ளி வெண்சுதை யிழுகிய மாடத்து" *(மணிமே. 6:43). 5. வெண்மை (சூடா.)* whiteness. *6. விண்மீன் (அகநி.);* star. *7. மின்னல் (சங்.அக.);* lightning.

[சொது → சுது → சுதை]

"ஒளியார் முன் ஒள்ளியராதல் வெளியார் முன் வான்சுதை வண்ணங் கொளல்" (குறள், 714) என்று திருவள்ளுவரும், "வெள்ளி வெண்சுதை யிழுகிய மாடத்து" (மணிமே. 6:43) என்று சீத்தலைச்சாத்தனாரும் கூறுவதால், 'சுதை' என்பது தென்சொல்லே (வே.க.243).

சுதை[2] *śudai*, பெ. (n.) *உதைகால் ஆன் (பிங்.);* kicking cow. "வருகன் றூட்டாப் புன்சுதை" *(குற்றா.தல. தக்கன் வேள்விச். 117).*

சுதை[3] *śudai*, பெ. (n.) கேடு; destruction. *"சுதையொன்றி யக்களத்தே விழ" (கந்தபு. அக்கினிமு. 85).*

சுதைக்குன்று *śudai-k-kuṉṟu*, பெ. (n.) *சுண்ணாம்பு பூசிய செய்குன்று;* an artificial hillock plastered with śuṉṉam. *"கூத்தாடிடமுங் கொழுஞ் சுதைக் குன்றமும்" (பெருங். வத்தவ. 15: 109).*

[சுதை + குன்று]

சுதையம் *śudaiyam*, பெ. (n.) *சுண்ணாம்புச் சத்து;* calcium *(சா.அக.).*

[சுதை → சுதையம்]

சுந்தரத்தாது *śundara-t-tādu*, பெ (n.) *ஒரு வகைச் செய்ந்நஞ்சு (சங்.அக.);* a mineral poison.

சுந்தரப்பொடி *śundara-p-poḍi*, பெ. (n.) *சிந்துரப்பொடி;* aromatic powder. *"சுந்தரப் பொடி தெளித்த" (சீவக. 1956).*

[சிந்துரம் → சுந்தரம் + பொடி]

சுந்தரம் *śundaram*, பெ. (n.) *சிந்துரம்;* red paint. *"சுந்தரம் பெய்த யானைத் தூமருப்பு" (சீவக. 3048).*

[சிந்துரம் → சுந்தரம்]

சுப்பல் *śuppal*, பெ. (n.) *சுள்ளி;* dry things, especially for fuel. *'சுள்ளி சுப்பல்' என்பது உலக வழக்கிணை மொழி (வே.க.212) 'சுப்பலெடுத்துப் பல் குத்துகிறான்'*

[சும்பு → சுப்பு → சுப்பல் (மு.தா. 150)]

சுப்பி *śuppi*, பெ. (n.) *1. சுப்பல் பார்க்க;* see śuppal. *2. சுப்பிவிறகு(வின்.), உருட்டைக்குச்சி;* thin fire wood.

[சுப்பு → சுப்பி]

சுப்பிவிறகு *śuppiviṟagu*, பெ. (n.) *சுள்ளிவிறகு (வின்); காய்ந்தசுள்ளி; கட்டைவிறகு;* small sticks of firewood.

[சுள் → சுட்பு → சுப்பு. சுப்பெனல் = விரைந்து நீர்வற்றுதல். சுப்பு → சுப்பல் = சுள்ளி. சுப்பு → சுப்பி = சுள்ளி. சுள்ளி சுப்பல் (சுப்பி) என்பது உலகவழக்கிணை மொழி. சுப்பி + விறகு (வே.க. 212)]

சுப்பு *śuppu*, பெ. (n.) *நீர்வற்றற்குறிப்பு;* onom. expr. quick absorbtion of liquid.

[சுள் → சுட்பு → சுப்பு (வே.க. 212)]

சுப்பெனல் *šup-p-enal,* பெ. (n.) நீர் முதலியவற்றை, விரைவில் உள்ளிழுத்தற் குறிப்பு (வின்.); onom. expr. signifying quick absorption of liquid.

[சுள் → சுட்பு → சுப்பு + எனல் - சுப்பெனல் (வேக.212)

சூப்பு = Ger. suppe, Fr. soupe, E. sup.

சுப்பு = AS. supan, Ice. supa; Ger. saufen - to drink*]*

சுபத்தி *šubatti,* பெ. (n.) பவளப்புற்று செய்ந் நஞ்சு; a kind of arsenic *(சா.அக.).*

சுபத்திரம் *šubattiram,* பெ. (n.) *1.* வெள்வேல்; white acacia. *2. காட்டாத்தி;* bauhnia purpurea *(சா.அக.).*

சுபரணி *šubarani,* பெ. (n.) ஏழிலைப் புன்னை; a medicinal herb named seven leaved milky plant.

மறுவ. ஏழிலைப்பாலை

சும்பு-தல் *šumbu-,* 5 செ.கு.வி. (v.i.) வாடிச் சுருங்குதல்; to wither *(சா.அக.).*

[கும்பு → சும்பு-]

சும்புளி-த்தல் *šumbuli-,* 4 செ.கு.வி. (v.i.) பேரொளி முதலியவற்றால் கண்கூசுதல்; to be dazed, dazzled, as the eyes. *"சுமந்தநாகமுங் கண் சும்புளித்தவே" (கம்பரா. மிதிலை. 132).*

ம. சிம்பு

[கூம்பு → சூம்பு → சும்பு → சும்புளி]

சும்மா *šumma,* கு.வி.எ. (adv.) *1.* தொழிலின்றி, வெறுமனே; leisurely; without any occupation or work. *"வாகனமேறிச் சேணிற் சும்மா திரிமூர்த்தியல்லாமல்" (தனிப்பா. 2, 246, 581).* *2.* இயல்பாய்; in normal condition, in health. *உடம்பு சும்மா இருக்கிறான் (உ.வ.).* *3.* அமைதியாய்; silently, quietly, in perfect peace and rest. *"சும்மா விருக்கு மெல்லையுட் செல்ல வெனைவிட்டவா" (கந்தரலங். 10).* *4.* வறிதாக; bare. *"அவள் கழுத்துச் சும்மா இருக்கிறது" (உ.வ.).* *5.* காரணமின்றி; without any reason. *'சும்மா போவானேன்'.* *6.* பயனின்றி; uselessly. *'போய்ச் சும்மா வந்தான்'.* *7.* கருத்தின்றி; vaguely; unintentionally, at random. *'சும்மா சொன்னேனோ?'.* *8.* விளையாட்டாய்; as a joke; playfully. *'சும்மா சொன்னேன்'.* *9.* இலவயமாய்; freely; gratuitously gratis. *'சும்மா கொடுப்பானா?'* *10.* தடையின்றி; freely, unhesitatingly unceremoniously. *இம்மாநாட்டிற்குச் சும்மா வரலாம்.* *11.* அடிக்கடி; continously, repeatedly. *சும்மா வந்து கொண்டிருக்கிறான்.*

ம. சும்ம; க. சும்மனெ

[சும் → சும்மா. சம் = மடிமை]

இக்கருத்துகளையெல்லாம் "சும்மா யிருத்தல்" என்னும் மரபுச்சொல், உணர்த்துதல் காண்க.

கொண்முடிபு (சித்தாந்த) நூலாரும், மெய்ப் பொருள் (தத்துவ) நூலாரும், இச்சொல்லை இருவகைப் பற்றுமறுத்து, முற்றத்துறந்த முழு முனிவரான ஓகியர், இருவினையும் செய்யாது இறைவன்மேல் எண்ணத்தை நிலையாக நிறுத்தி, அமைதியாயிருக்கும் இணையற்ற இன்ப நிலைமையைக் குறிக்கப் பயன்படுத்தி யுள்ளனர்.

மௌன குருவடிகள் தாயுமானஅடிகளுக்குச் 'சும்மாயிரு' என்று செவியறிவுறுத்தியதையும், அதை நினைந்து தாயுமான அடிகள்,

"சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு
சரீரத்தினும் புகுதலாம்
சலமே னடக்கலாம் கனன்மேலிருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா யிருக்கின்ற
திறமரிது; சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே"

என்று பாடியிருத்தலையும், நோக்குக.

வெப்பத்தினால் மந்தமும் மடிமையும் உண்டாகுமாதலால், வெப்பக்கருத்தில் சோம்பற்கருத்துத் தோன்றிற்று. வெப்பக் காலத்திலும், வெப்பநாட்டிலும், வினை முயற்சி குன்றுவதையும், குளிர்காலத்திலும் குளிர்நாட்டிலும் அது மிகுவதையும் உலகியலை நோக்கிக் காண்க *(வே.க.215).*

'சும்மா கிடக்கிற சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி' (பழ.).

'சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப் பணத்துத் தாலி போதாதா?' (பழ.)

சும்மாடு *šummādu,* பெ. (n.) *1.* சுமையைத் தாங்க உதவும்படி தலையில்கொள்ளும் சுமையடை (துணிப்புரியணை); load-pad for the head. *'சும்மா டம்மா மதியாக்கி' (திருவாலவா. 30 : 9)* *2.* தவசமாகக் கொடுக்கும் உரிமை (R.T.); perquisites in grain. *'சும்மாட்டுக்கும் சும்மா இருப்பவனுக்கும் என்ன தெரியும்?' (பழ.)*

ம. சும்மாட்டு.

[சுமடை → சுமடு → சும்மாடு (சு.வி. 101)]



சும்மாடு

சும்மாடுகோலு-தல் *šummādu-kōlu-*, 15 செ.கு.வி. (v.i.) துணியைத் தலைக்குச் சும்மாடாகச் சுற்றிக்கட்டுதல்; to coil a cloth as load-pad for the head.

[சும்மாடு + கோலு-,]

சும்மாது *šummādu*, வி.அ. (adv.) சும்மா பார்க்க; see *summā*. 'சும்மாது சிரந்தூக்கி யெதிராடா திருந்தார்' (திருவிளை. பரிநரி. 41) (செ.அக.).

[சும்மா → சும்மாது]

சும்மி *šummi*, பெ. (n.) பெருங்குமிழி; gmeilina arborea (சா.அக.).

சும்மெனல் *šum-m-eṉal*, பெ. (n.) ஒலிக் குறிப்பு; மூச்சுவிடுதற் குறிப்பு; onom. expr. signifying breathing. "சும்மெனாதே கைவிட் டோடி" (திவ். பெரியாழ். 5. 4 : 3).

[சும் + எனல்]

சும்மை¹ *šummai*, பெ. (n.) 1. சுமை (பிங்.); burden; charge. "சும்மையா லுயிர்கொள" (கம்பரா. விபீடண. 62). 2. தொகுதி; group, gathering, as of rays, bundle. "சுடரின் சும்மை விசும்புற" (கம்பரா. இலங்கைகாண். 33) 3. நெற்போர் (பிங்.); stack or rick of reaped paddy. 4. ஊர் (பிங்.); village, town. 5. நாடு (பிங்.); country, district. 6. ஆவிரை (மலை.); tanner's senna. 7. நெற்பொரி; fried paddy. 8. ஆளிவிதை; linseed (சா.அக.).

ம. சும்மல்

[சும் → சும்மை (மு.தா. 175)]

சும்மை² *šummai*, பெ. (n.) 1. ஓசை; sound, noise, clamour. 'இழுமென் சும்மை யிடனுடை வரைப்பின்' (பொருந. 65). 2. யாழ்நரம்பின் ஓசை (பிங்.); musical note.

[சும் → சும்மை]

சும்மை³ *šummai*, பெ. (n.) சும்மாடு; load-pad for the head. "சும்மையாகவே கடைகளை நெருக்கியே" (திருவிரிஞ்சைப். கௌரீ. 6).

[சும் → சும்மை]

சும்மோதகம் *šummōdagam*, பெ. (n.) கொழுக்கட்டைத் தேக்கு; bastard teak (சா. அக.).

சும¹-த்தல் *šuma-*, 3 செ.கு.வி. (v.i.) 1. சுமையாதல்; to become heavy, as accumulated debt, interest; to be burdened. 'இன்றைய உணவால் வயிறு சுமந்து விட்டது' (உ.வ.). 2. சார்தல்; to devolve on, press upon. 'அவனது ஈட்டமும் இழப்பும் என்பேரிற் சுமந்தன' (உ.வ.). 3. மிகுதல்; to increase, swell. 'பழிபாவங்கள் சுமந்தன' (உ.வ.). 'சுமந்த தலையும் சும்மாடாய்த் திரிகிறது' (பழ.).

[சுமை → சும-,]

சும²-த்தல் *šuma-*, 3 செ.குன்றாவி. (v.t.) 1. தாங்குதல்; to bear; to support; to carry a burdern, as a beast, to bear in the womb "பவழம் புனைந்த பருதி சுமப்ப" (கலித். 80). 2. மேற்கொள்ளுதல்; to take upon oneself. "முயற்றி சுமந்தெழுந்து" (திவ். இயற். பெரியதிருவந். 1). 3. பணிதல்; to submit to humble. "செறுநரைக் காணிற் சுமக்க' (குறள், 488), 'சுமந்தவன் தலையிலே சும்மாடு பத்து' (பழ.). 4. சூல் கொள்ளுதல்; to pregnant.

ம. சும; தெ. போசு

[சுமை → சும-,]

சுமக்க *šumakka*, கு.வி.எ. (adv.) 1. சுமந்திட; to carry. 2. மிகவும்; in abundance, plenty. 'பண் சுமக்கப் பாடி' (ஈடு, 3. 5 : 2).

[சும → சுமக்க]

சுமங்கை *šumaṅgai*, பெ. (n.) 1. ஆடு தின்னாப்பாலை; a medicinal plant, worm killer. 2. வறட்சுண்டி; sensitive plant (சா.அக.).

சுமஞ்சரி *šumañjari,* பெ. (n.) *துளசி;* holy basil *(சா.அக.).*

சுமடம் *šumaḍam,* பெ. (n.) *அறிவின்மை, முட்டாள்தனம்;* ignorance, folly. *"சுமடதாய் வம்பு மால் கொளுந்திய" (திருப்பு. 460).*

[சுமடு → சுமடம்]

சுமடன் *šumaḍaṉ,* பெ. (n.) 1. *கீழ்மகன் (திவா.);* mean, vulgar, person. 2. *அறிவில்லாதவன்;* ignorant, illiterate person. *"உள்ளமிலாத சுமடர்கள்" (தேவா. 604. 5).*

[சுமடு → சுமடன்]

சுமடு *šumaḍu,* பெ. (n.) 1. *சும்மாடு பார்க்க;* see *šummāḍu.* *"புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ" (பெரும்பாண். 159).* 2. *சுமை;* load, burden. *"இவடான் திருந்தாச் சுமட்டினள்" (கலித். 109).*

ம. சுமடு

[சுமை + அடு → சுமடு]

சுமடை *šumaḍai,* பெ. (n.) *சும்மாடு (அக.நி.) பார்க்க;* see *šummāḍu.*

[சுமடு → சுமடை]

சுமணா *šumaṇā,* பெ. (n.) *சிறுசண்பகம்;* small sampak flower *(சா.அக.).*

சுமத்தி *šumatti,* பெ. (n.) 1. *சுமதலை, 2 பார்க்க;* see *šumadalai,* 2. *'சுமத்தியான விலை' (உ.வ.).* 2. *மிகுதி;* abundance. *'அங்கே பண்டங்கள் சுமத்தியாயிருக்கின்றன' (உ.வ.).* 3. *கெட்டி;* solidity; firmness. *'இது சுமத்தியான வேலை' (உ.வ.) (செ.அக.).*

[சுமத்து → சுமத்தி]

சுமத்து-தல் *šumattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. *சுமையேற்றுதல்;* to burden, to load. *"சோற்றைச் சுமத்தி நீ பந்தித்து வைக்க" (தாயு. பெரியநாயகி. 1).* ம. சுமத்து. 2. *கடன் முதலியன பொறுக்க வைத்தல்;* to impose, as a debt, obligation; to make one liable. 3. *குற்ற முதலியன ஏற்றுதல்;* to impute, as fault.

[சம் → சுமை → சுமத்து]

சுமதலை *šuma-dalai,* பெ. (n.) 1. *சுமைதலை பார்க்க;* see *šumai-dalai.* 2. *விலை முதலியவற்றின் ஏற்றம்;* excessiveness, as of price. *'சுமதலையான விலை' (உ.வ.) (செ.அக.).*

[சம் → சுமை → சும + தலை]

சுமதாகம் *šuma-dāgam,* பெ. (n.) *சிற்றகத்தி;* common sasban *(சா.அக.).*

[சும + தாகம்]

சுமதாசா *šumadāšā,* பெ. (n.) *செம்பை;* foreign sesban.

சுமதி[1] *šumadi,* பெ. (n.) 1. *பொறுப்பு;* responsibility, duty. *'அது உன்மேற் சுமதி' (உ.வ.).* 2. *சுமை (பாரம்) (சங்.அக.);* load, burden. *'குடும்பச் சுமதி அவனுக்கு அதிகம்' (உ.வ.).* 4. *மிகுதி;* large quantity, abundance. *'சரக்குச் சுமதியாய் வந்ததா?' (உ.வ.).*

[சம் → சும → சுமதி (மு.தா. 175)]

சுமதி[2] *šumadi,* பெ. (n.) *பேராமல்லி;* long tubed arabian jasmine *(சா.அக.).*

சுமந்த *šumanda,* பெ.அ (adj.) 1. *அதிகமான;* abundant, numerous. *'சுமந்த சனம் வந்தார்கள்' (நெல்லை).*

[சும → சுமந்த]

சுமர்-தல் *šumar-,* 3 செ.கு.வி. (v.i.) *கனமாகுதல்;* to become heavy. *'சாமான் சுமருகிறது' (உ.வ.).*

[சம் → சும → சுமர்-,]

சுமி *šumi,* பெ. (n.) *செம்மரம்;* coromandel red-wood, soymida febrifuga *(சா.அக.).*

சுமுகம் *šumūgam,* பெ. (n.) 1. *கஞ்சாங்கோரை;* white-basil. 2. *துளசி;* holy basil *(சா.அக.).*

சுமை *šumai,* பெ. (n.) 1. *சுமக்கை;* bearing, carrying. *"சுமைக்கடாத மெய் விடுத்தலே நன்று" (பிரபுலிங். அக்கமா. துறவு. 21).* 2. *கனம்;* weight, load, burden. 3. *தொகுதி;* collection. *"வார்சுமைப் பூக்கொண்டு" (திருமந். 1834.).* 4. *கடமை, பொறுப்பு;* duty, responsibility. 5. *ஒரு விரல மழை;* one inch of rain. 6. *60 படி கொண்ட ஓர் அளவை;* a measure equal to 60 measures. 7. *180 தேங்காய்கொண்ட அளவு* (G.Tj.D.i. 134); a bundle of 180 coconuts. 8. *270 கவளி கொண்ட வெற்றிலைக் கட்டு;* a bundle of 270 kavaḷi of betel-leaves. *'சுமை எடுப்பவனுக்கு சுமைப் பளுவுத் தெரியும்' (பழ.).*

[சம → சுமை]

சுமைக்காரன் *šumai-k-kāran*, பெ. (n.) 1. மூட்டைத் தூக்குவோன் (யாழ். அக.); porter, carrier. 2. குடும்பச் சுமைமிக்கவன் (உவி.); man of large family.

[சுமை + காரன்]

சுமைக்கூலி *šumai-k-kūli*, பெ. (n.) 1. மூட்டைத் தூக்குவதற்கு கொடுக்கும் கூலி (யாழ்.அக.); porterage, wage for carrying a load. 'சுமை காற்பணம்; சுமைக்கூலி முக்காற்பணம்' (பழ.).

[சுமை + கூலி]

சுமைத்தயிர் *šumai-t-tayir*, பெ. (n.) 1. ஆடைத் தயிர் (சீவக. 468, நச். உரை.); curd with cream; a layer on the top of curd. 2. கட்டித் தயிர்; solid curd. "சுமைத்தயிர் வேய்ந்த சோற்றின்" (சீவக. 2617).

[சுமை + தயிர்]

சுமைதலை *šumai-talai*, பெ. (n.) பொறுப்பு கடமை (இ.வ.); responsibility, burden.

[சுமதலை → சுமைதலை]

சுமைதாங்கி *šumai-tāṅgi*, பெ. (n.) சுமையை இறக்கித் தலைச்சுமை ஆற்றுதற்கு உதவியாக உயர்த்தி நிறுத்தப்பட்ட கற்கட்டு; elevated stone platform erected on the roadside to rest burdens. "சுமை தாங்கி மேற் சாத்துவர்" (திருவிளை. விறகு. 16). 'அவன் குடும்பத்திற்கு அவன் சுமைதாங்கியானான்' (உவ.). 'சுமைதாங்கி ஆயந்தீர்க்காது' (பழ.) (செ.அக.).

[சுமை + தாங்கி]



சுமைதாங்கிபோடு-தல் *šumai-tāṅgipōḍu-* செகுவி. (v.i.) பெற்றெடுக்காமல், வயிற்றுக் குழந்தையுடன் இறந்தவள் பொருட்டு, அவள் வயிற்றுச் சுமையாலுண்டான வருத்தம் நீங்குமாறும், அவள் ஆதன் அமைதியுறும் பொருட்டும், சுமைதாங்கிக்கல் நாட்டுதல்; to erect a šumai-tāṅgi often times in memory of a woman who has died in pregnancy, the belief being that by such erection she will be relieved of her burden in the womb.

[சுமைதாங்கி + போடு-,]

சுமைதி *šumaidi*, பெ. (n.) சுமதி[1] பார்க்க (சங்.அக.); see *šumati*[1].

[சும் → சும → சுமதி → சுமைதி]

சுமையடை *šumai-y-aḍai*, பெ. (n.) சும்மாடு பார்க்க; see *šummāḍu*. "சுமையடை மேற் கூடை கவிழ்த்து" (திருவிளை. மண்சுமந். 16).

[சுமை + அடை (சு.வி. 101)]

சுமையன் *šumaiyaṉ*, பெ. (n.) சுமையாள்; porter, carrier. "சுமையராயிருப்பார் சும்மாட்டுக் குள்ளே தாழைமடலைச் சொருகுமாபோலே" (திவ். அமலனாதி, 6, வியா. பக். 73).

[சுமை → சுமையன்]

சுமையாள் *šumai-y-āḷ*, பெ. (n.) சுமைக்காரன் பார்க்க; see *šumai-k-kāraṉ*. "எமைச் சுமையாளு மாக்கி" (தாயு. சச்சிதா. 4).

[சுமை + ஆள்]

சுமையிறக்கி *šumai-y-iṟakki*, பெ. (n.) சுமைதாங்கி (யாழ்ப்.) பார்க்க; see *šumai-tāṅgi*.

[சுமை + இறக்கி]

சுர[1]-த்தல் *šura-*, 3 செகுவி. (v.i.) 1. ஊறுதல்; to spring forth to stream out. "ஆழியா னவனை நோக்கி யருள் சுரந்து" (கம்பரா. விபீடண. 142). 2. உடலில் நீர் முதலியன பெருகி வீங்குதல் (இ.வ.); to swell morbidly with secretion. 3. நிறைதல், பெருகுதல்; to increase by steady accumulation, as wealth. "விருப்பஞ் சுரந்த சிலந்தி முடிசூட்டும் பெருமான்" (திருவானை. உலா, 60).

ம. சுரத்து; க. ஒசர்

[சுல் → (சர்) → சுர → சுர-. (வேக. 245)]

சுர[2]-த்தல் *šura-*, 3 செகுன்றாவி. (v.t.) 1. பால் முதலியன சுரத்தல்; to secrete as milk. 'கன்றைக் கண்டதும் பசுவிற்குப் பால் சுருந்தது' (உவ.).

2. இடைவிடாது சொரிதல்; to pour forth continuously. "மேனின்று தான் சுரத்தலான்" (சிலப். 1, 9, உரை). 3. மிக அதிகமாகக் கொடுத்தல்; to give abundantly. "நெடுந்தேர் களிறொடு சுரக்கும் . . . முசுண்டை" (அகநா. 249).

[சுல் → (சுர்) → சுர → சுர-. (வே.க. 245)]

சுரக்கட்டி *śura-k-kaṭṭi,* பெ (n.) வயிற்றுக் கட்டி; enlargement of the spleen.

[சுரம் + கட்டி]

இவ் வயிற்றுக்கட்டி காய்ச்சலினால் ஏற்படும் மண்ணீரல் வீக்கம் என்று சா.அக. கூறும்.

சுரக்கணை *śura-k-kaṇai,* பெ. (n.) காய்ச்சலுடன் வாய் நீரூற்றங் காணும் ஒருவகைக் கணைச் சூடு; congenital heat in children accompanion by fever and salivation (சா.அக.).

[சுரம் + கணை]

சுரக்கரந்தை *śura-k-karandai,* பெ. (n.) 1. சிவ கரந்தை; fever basil. 2. கொழும்புச் சிவகரந்தை; Ceylon toolsy.

[சுரம் + கரந்தை]

சுரக்காலிக்கம் *śura-k-kālikkam,* பெ. (n.) காய்ச்சல், இசிவு முதலிய நோய்களுக்காகக் கண்ணிலிடும் மருந்து; an eye salve used on the eye lids in cases of fever (சா.அக.).

[சுரம் + காலிக்கம்]

சுரக்கழிச்சல் *śura-k-kaḻiccal,* பெ. (n.) எளிதில் பண்டுவத்திற்கு வயப்படாத காய்ச்சலோடு கூடிய கழிச்சல்நோய்; diarrhoea with fever (சா.அக.).

[சுரம் + கழிச்சல்]

சுரக்கள்ளி *śura-k-kaḷḷi,* பெ. (n.) செம்மரம்; red cedar (சா.அக.).

[சுரம் + கள்ளி]

சுரக்காமலிகம் *śura-k-kāmaligam,* பெ (n.) செருந்தி; golden champak (சா.அக.).

சுரக்காய்ச்சல் *śura-k-kāyccal,* பெ (n.) 1. கடுமையானகாய்ச்சல்; a high degree of fever. 2. உடம்பில் எரிச்சலை உண்டாக்கும் காய்ச்சல்; fever causing burning sensation over the body (சா.அக.).

[சுரம் + காய்ச்சல்]

சுரக்கியானம் *śura-k-kiyāṉam,* பெ (n.) பாடுகையில் பண்புகளை (சுரங்களை)த் தனித் தனியாய் எடுத்துக் கூறவல்ல இசையுணர்ச்சி (சங்.அக.); intimate knowledge of the musical notes involving the ability to identify each of them as it occurs.

சுரக்கினி *śurakkiṉi,* பெ. (n.) காய்ச்சலைத் தணிக்கும் மருந்து; remedy for dispelling as reducing fever (சா.அக.).

சுரக்கினிநோய் *śurakkiṉi-nōy,* பெ (n.) ஊதையினால் உண்டாகிச் சளிக்கோளாறு அடைவதனால் காணும் தொண்டைக் கம்மல், மூச்சுத் திணறல், வறட்சி போன்ற பண்புகளைக் காட்டும் நோய்; a throat disease caused by gas and kabam making hard of speech, breathing trouble etc. (சா.அக.).

[சுரம் + அக்கினி + நோய்]

சுரக்குடாரம் *śura-k-kuḍāram,* பெ. (n.) காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் மாத்திரை; a medicine for fever (சா.அக.).

[சுரம் + குடாரம்]

சுரக்குடிநீர் *śura-k-kuḍinīr,* பெ. (n.) காய்ச்சலுக்கான கியாழம்; a decoction given for fever (சா.அக.).

[சுர(ம்) + குடிநீர்]

சுரக்குளிர் *śura-k-kuḷir,* பெ. (n.) குளிர்க் காய்ச்சல்; shivering accompanied fever an intermitent fever (சா.அக.).

[சுரம் + குளிர்]

சுரக்கோடாரி *śura-k-kōḍāri,* பெ. (n.) சுரக்கோடாலி பார்க்க; see *śura-k-kōḍāli* (சா.அக.).

[சுர(ம்) + கோடாரி]

சுரக்கோடாலி *śura-k-kōḍāli,* பெ. (n.) காய்ச்சலைப் போக்கும் இணையில்லா மருந்து; an infalliable medicine for any kind of fever (சா.அக.).

[சுரம் + கோடாரி → கோடாலி]

சுரக்கோது *śura-k-kōdu,* பெ. (n.) காய்ச்சற் குற்றம்; vitiation caused by fever (சா.அக.).

சுரகணரோகம் *śuragaṇa-rōgam,* பெ. (n.) *பிறவிக் குற்றத்தினால் குழந்தைகளுக்கு வரும் காய்ச்சல்;* chronic fever by children due to congenital causes *(சா.அக.).*

[சுரகண(ம்) + ரோகம்]

சுரகரகாரி *śuragaragāri,* பெ. (n.) *காய்ச்சலை நிறுத்தும் ஒரு மருந்து;* a remedy that dispels fever *(சா.அக.).*

[சுரம் + க ரம் + காரி]

சுரகரி *śuragari,* பெ. (n.) *பேய்த்தும்பை;* devil toombay *(சா.அக.).*

சுரகாமலிகம் *śura-gāmaligam,* பெ. (n.) *செருந்தி;* golden champak *(சா.அக.).*

[சுரம் + காமலிகம்]

சுரகுயிலம் *śuragyilam,* பெ. (n.) *பிசின்;* gum *(சா.அக.).*

சுரகுரு *śura-guru,* பெ. (n.) *1. வியாழன் (திவா.), தேவர் குரு;* jupiter, as the preceptor of gods. *2. இந்திரன் (சூடா.), தேவர்க்குத் தலைவன்;* indira as the chief of gods. *3. பண்டைச் சோழர்குலத் தலைவருள் ஒருவன்;* an ancient Cōḻa king. "பொன்னி நன்னாடன் சுரகுருவின் வழியோன்" *(நன். 296, மயிலை.).*

[சுரர் + குரு]

குரவன் → குரு

Skt. guru

சுரக்கேசரிக்குளிகை *śura-kēśari-k-kuḷigai,* பெ. (n.) *குழந்தைகளுக்கு பலவகைக் குற்றங்களினால் வரும் காய்ச்சலுக்குரிய மருந்து;* pill used for fevers of children *(சா.அக.).*

[சுரம் + கேசரி + குளிகை]

சுரகை *śuragai,* பெ. (n.) *1. சுண்ணாம்பு;* slaked lime. *2. வசம்பு;* sweet flag *(சா.அக.).*

சுரங்கக்காரன் *śuraṅga-k-kāraṉ,* பெ. (n.) *1. வெடி மருந்தால் பாறைகளைப் பிளப் போன் (இ.வ.);* one whose occupation is rock-blasting. *2. சுரங்கம் தோண்டுவோன்;* one who dugs mine. *3. சுரங்கத்தில் பணியாற்றுவோன்;* one who works in a mine *(செ.அக.).*

[சுரங்கம் + காரன்]

சுரங்கப்பாதை *śuraṅga-p-pādai,* பெ. (n.) *1. சாலைகளைக் கடக்க நிலத்திற்கடியில் அமைக்கப்படும் பாதை;* sub-way. "சென்னையில் சுரங்கப்பாதைகள் பலவுள்ளன. *2. மலையைக் குடைந்து அமைக்கப்படும் பாதை;* tunnel. "புனலூர் அருகே சுரங்கப்பாதை ஓர் அயிரமாத்திரி (கிலோ மீட்டர்) நீளமுடையது".

[சுரங்கம் + பாதை]



சுரங்கப்பாதை

சுரங்கம்[1] *śuraṅgam,* பெ. (n.) *1. நிலவறை (வின்.);* under ground cellar. *2. நிலவறைப் பாதை;* subterraneous passage. *3. கீழறுக்கும் அறை;* mine, trench. *4. கனிமங்கள் தோண்டி யெடுக்கும் போது ஏற்படும் பெரும் பள்ளம்;* a large under-ground excavation dug minerals and oares. *5. திருடுவதற்காக வீட்டுச்சுவரில் கள்வரிடுங்கன்னம்;* hole cut through or under a wall to break into a house.

[சுள் → சுர → சுரங்கு → சுரங்கம் (வேக245)]

சுரங்கம்[2] *śuraṅgam,* பெ. (n.) *1. இங்கிலிகம்;* cinnabar. *2. சிந்தூரம்;* red powder. *3. தேன்;* honey. *4. தோடம்பழம்;* citrus fruit *(சா.அக.).*

சுரங்கவெடி *śuraṅga-veḍi,* பெ. (n.) *1. நிலத்தில் உள்ள பெரும்பாறைகளை உடைத்துக் கிணறோ, பெரிய அகழ்வோ ஏற்படுத்தப் பயன்படும் வெடி;* to blast rock or to excavate to make a mine, a kind of detornators are used, such detonators are called 'suraṅga veḍi'.

[சுரங்கம் + வெடி]

சுரங்கவூற்று *śuraṅga-v-ūṟṟu,* பெ. (n.) *சுரங்கங்களிலிருந்து வரும் மாழைகளின்*

முதற்பொருள் கலப்பான நீர்; spring issuing out from mines containing minerals (சா.அக.).

[சுரங்க(ம்) + ஊற்று]

சுரங்கம்வை-த்தல் *śurangam-vai-*, 4 செ.கு.வி. (v.i.) 1. பாறைகளை மருந்து வைத்து உடைத்தல் (வின்.); to blast rocks. 2. கீழறுத்தல்; to lay mines under, open a subterraneous passage. 3. கன்னமிடுதல்; to break into a house through a hole cut in its wall. 4. வஞ்சகத்தால் கெடுதி செய்தல்; to undermine, ruin by insidious means, sap.

[சுரங்கம் + வை-,]

சுரங்கமறு-த்தல் *śurangam-aṟu-*, 4 செ.கு.வி. (v.i.) சுரங்கம்வை-, (வின்.) பார்க்க; see *śurangam-vai-* (செ.அக.).

[சுரங்கம் + அறு-,]

சுரங்குன்று-தல் *śuraṅ-guṉṟu-*, செ.கு.வி. (v.i.) 1. பேச்சுதாழ்தல் (உ.வ.); lowering of the voice in speaking. 2. பாட்டின் உச்சத்திலிருந்து கீழிறக்குதல்; to lower the high pitch into a low pitch.

[சுரம் + குன்றுதல். சுரம் = பண், ஓசை]

சுரச்சதி *śura-c-cadi*, பெ. (n.) இசைவகை (வின்.); a variety in tunes.

[சுரம் + சதி]

சுரசகசாயம் *śurasagaśāyam*, பெ. (n.) மிகுதியான சிறுநீர் பிரிதலைக் கட்டுப்படுத்துவதற்காக நீரிழிவு நோயாளர்க்குக் கொடுக்கும் கருக்குநீர்; a decoction prescribed for diabetes (சா.அக.).

[சுரசம் + கசாயம்]

சுரசபிருதம் *śuraśabirudam*, பெ. (n.) வேளைத் தாவரம்; veḷaiplant (சா.அக.).

[சுரசம் + பிருதம்]

சுரசம் *śuraśam*, பெ. (n.) 1. அரத்தை; galangal. 2. நறும்பிசின்; a fragrant resin (சா.அக.).

சுரசம்மாரி *śuraśammāri*, பெ. (n.) காய்ச்சலைப் போக்கும் மருந்து; medicine eradicating fever (சா.அக.).

[சுரம் + சம்மாரி]

சுரசமணி *śuraśamaṇi*, பெ. (n.) ஆடாதோடை; Malabar nut (சா.அக.).

[சுரசம் + மணி]

சுரசமான *śurasamāṉa*, பெ.அ. (adj.) 1. சுவையுள்ள; delicious. 2. தித்திப்புள்ள; sweetish (சா.அக.).

சுரசவாகுதிரசம் *śuraśavāgutiraśam*, பெ. (n.) ஒரு வகைத் துளசி; a varity of holy basil (சா.அக.).

[சுரசம் + வாகுதி + ரசம்]

சுரசா *śuraśā*, பெ. (n.) துளசி (மலை.); sacred basil.

சுரசி *śuraśi*, பெ. (n.) வெண்ணொச்சி (தைலவ. தைல. 135, 14); five leaved chaste tree.

சுரசு *śuraśu*, பெ (n.) வேளைப்பூடு; five leaved cleome (சா.அக.).

சுரசுர-த்தல் *śuraśura-*, 4 செ.கு.வி. (v.i.) சருச்சரையாதல் (இ.வ.); to be rough to have a rough surface.

[சுள் → சுர் → சுர. சுரசுர = சுரடுமுரடாய் இருத்தல்]

சுரசுரப்பு *śura-śurappu*, பெ (n.) சருச்சரையாக இருக்கை (இ.வ.); roughness as of woollen cloth.

[சுரசுர → சுரசுரப்பு (வே.க. 206)]

சுரசுரா *śura-śurā*, பெ (n.) சிறுபிள்ளைகள் கொளுத்தி விளையாடும் வாணவகை; a kind of small crackers handled by the children. (வே.க. 212).

[சுர் → சுரசுரா]

சுரசூடாமணிமாத்திரை *śuraśūḍāmaṇi-māttirai*, பெ (n.) (ஊதை, நீங்காதகாய்ச்சல் போன்றவற்றைப் போக்கும் குணமுடைய) இதளியம், கந்தகம், இங்குலிகம் இம்மூன்றையும் கருமத்தை விதையினால் தூய்மைசெய்து பின்பு திரிகடுகு சேர்த்துப் பழச்சாற்றால் அரைத்து உருட்டிய மாத்திரை; a pill given for fevers (சா.அக.).

[சுரம் + சூடாமணி + மாத்திரை]

சுரசூலை *śura-śūlai*, பெ. (n.) வெப்புநோய் வகை (சீவரட். 123); a fever, ague.

[சுரம் + சூலை]

சுரசை *śuraśai*, பெ. (n.) சிற்றரத்தை (தைலவ. தைல. 98); lesser galangal.

சுரஞ்சனம் *śurañjaṉam,* பெ. (n.) கமுகு (மலை); areca-palm.

மறுவ. பாக்கு மரம்

சுரஞ்சா *śurañjā,* பெ. (n.) துளசி; holy basil (சா.அக.).

சுரஞ்சி *śurañji,* பெ. (n.) உசிலைமரம்; sirissaticle from its clearing rancidity (சா.அக.).

சுரடி *śuraḍi,* பெ. (n.) பண்வகை (யாழ்.அக.); a musical mode.

[சுருட்டி → சுரடி]

சுரண்டி[1] *śuraṇḍi,* பெ. (n.) 1. புண்சுரண்டும் கருவி; a sharp instrument used for scraping wounds. 2. சட்டுவம் (சுரண்டி); an iron instrument to scrap anything (சா.அக.).

[சுரண்டி → சுரண்டி]

சுரண்டி[2] *śuraṇḍi,* பெ. (n.) 1. தவறான வழியில் பொருள்களைக் கவருபவன்; one who misappropriates. 2. சிறிது சிறிதாகப் பொருள் சோர்ப்பவன் (உ.வ.); one who scraps up money. 3. சுரண்டினபொருள் (இ.வ.); scrapings.

[சுரண்டு → சுரண்டி]

சுரண்டு[3]**-தல்** *śuraṇḍu-,* செ.குன்றாவி. (v.t.) 1. உகிர் முதலியவற்றால் பிறாண்டுதல் (வின்.); to scratch, scrape with finger's-nail. 2. உகிர் அல்லது விரல் நுனியால் உடம்பைத்தீண்டிக் குறிப்பித்தல் (வின்.) ; to scratch a person with the tip of the finger to draw his attention. 3. தூண்டிவிடுதல் (வின்.); to instigate. 4. சண்டைக்கிழுத்தல் (வின்.); to pick up a quarrel. 5. செலவாற் கரைத்தல்; to drain away one's property. "அவன் தன் சொத்தை யெல்லாம் சுரண்டி விட்டான்". 6. கவர்தல்; to mis-appropriate by slow degree. "என் பொருளை யெல்லாம் சுரண்டி விட்டான்".

ம. சுரண்டுக; க. கெரண்டுக, கெரெ; தெ. கீறு; து. கெரெபுனி; கோத. கெக்ர்வ்; துட. கெர்வ்; பர். கிர், கிர்வ், கிர்ப்; குரு. கெர்ச்; மா. க்வெர்செ; பிரா. கர்கிங்.

[சுள் → சுர் → சுரடு → சுரண்டு]

சுரண்டு[4]**-தல்** *śuraṇḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. பணத்திற்காகப் பலரோடு உடலுறவு கொள்ளல் (வின்.); to commit adultery, prostitution. 2. இரத்தல்; to crave, solicit meanly. 'என்னிடம் வந்து சுரண்டுகிறான்' (உ.வ.)

[சுர் → சுரடு → சுரண்டு]

சுரணை *śuraṇai,* பெ. (n.) 1. உணர்ச்சி; sensitiveness, consciouness. "சுரணை கெட்டவன்" (உ.வ.), "அதிக நித்திரை கொடுக்கச் சுரணைகெட்டு" (இராமநா. உயுத். 33). 2. அறிவு; sense, intelligence. "அவன் மிக்க சுரணை யுள்ளவன்" (செ.அக.).

ம. சுரண; க. சுரளெ

[சுள் → சுர் → சுரி → சுரணை (மு.தா. 130)]

சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலி நினைவு அல்லது தன்னுணர்ச்சி என்று மட்டும் பொருள்படும் 'ஸ்மரண' என்னும் வடசொல்லை, சுரணை என்னும் சொற்கு மட்டுமின்றிச் சுணை யென்னும் சொற்கும் மூலமாகக் காட்டியுள்ளது. அணை, சுரணை என்னும் தென்சொற்கள் குத்தற்கருத்தை அடிப்படையாகக் கொண்ட 'சுள்' என்னும் வேரினின்றும், 'ஸ்மரண' என்னும் வடசொல் 'நினை' என்று பொருள்படும், 'ஸ்ம்ரு' என்னும் வினை முதனிலையினின்றும் பிறந்துள்ளன என வேறுபாடறிக.

சுரணைமரணை *śuraṇai-maraṇai,* பெ. (n.) மானவுணர்ச்சி; self-respect. 'சுரணை மரணை கெட்டு அலையாதே'.

[சுரணை + மரணை]

சுரணைமரணை என்னும் இணை மொழியிலுள்ள இரண்டாம் சொல்லே வடசொல்லாகும். அஃது ஒலியொப்புமையும் இற்றைத் தமிழரின் மொழியுணர்ச்சி யின்மையும் பற்றி இணைந்ததென அறிக. (வே.க. 207).

சுரணைமரம் *śuraṇai-maram,* பெ. (n.) மாவகை; a speces of mango.

மறுவ. சுரணை

[சுரணை + மரம்]

சுரத்திருமம் *śura-t-tirumam,* பெ. (n.) நேயமரம்; a kind of medicinal tree (சா.அக.).

சுரத்து *śurattu,* பெ. (n.) 1. மிக அதிகமாகப் பால்தரும் கறவையினத்தின் இயல்பு; quality of a cow which gives milk in abundant. 'இந்தப் பசுமாடு நல்ல சுரத்துடையது' (உ.வ.). 2. தெம்பு;

valour, strength. நோய்வாய்ப்பட்ட பின் பையன் சுரத்தில்லாமல் இருக்கிறான். 3. ஆர்வம், ஈடுபாடு; eagerness, interest, involvement. தேர்வில் தோற்றதால், அவன் எதிலும் சுரத்தின்றி காணப்படுகிறான்.

சுரத்துக்காதி *śurattu-k-kādi,* பெ. (n.) திப்பிலி மூலம்; root of long pepper *(சா.அக.).*

[சுரத்துக்கு + ஆதி]

சுரத்துய்த்தல் *śura-t-tuyttal,* பெ. (n.) வீரர் தாம் கவர்ந்த ஆனிரையை அரியவழியில் நோவு படாதபடி நடத்திக்கொண்டு செல்லுதலைக் கூறும்புறத்துறை (பு.வெ. 1:11); theme of a warrior leading the captured cattle safe through a baren tract fraught with dangers.

[சுரம் → சுரத்து + உய்த்தல்]

சுரத்தை *śurattai,* பெ. (n.) முந்திரிப்பழம்; cashew nut fruit *(சா.அக.).*

சுரதரு *śuradaru,* பெ. (n.) தேவதாரு; deoder tree *(சா.அக.).*

சுரதாக்கு *śuradākku,* பெ. (n.) அரத்தை; galangal *(சா.அக.).*

சுரதாக்குதம் *śuradākkudam,* பெ. (n.) பேரரத்தை; greater galangal *(சா.அக.).*

சுரதாகநாசினி *śuradāga-nāśiṉi,* பெ. (n.) இருவேலி என்னும் வெட்டிவேர்; cuscuss root *(சா.அக.).*

மறுவ. இருவேரி

சுரதாபதைலம் *śuradāba-dailam,* பெ. (n.) காய்ச்சலுக்குக் கொடுக்கும் ஒருவகை மருந்தெண்ணெய்; a medicinal oil for burning fever *(சா.அக.).*

சுரதாரம் *śuradāram,* பெ. (n.) புண்களுக்குச் செய்யும் ஒருவகைப் பண்டுவம்; a treatment for ulcers *(சா.அக.).*

சுரதாரு *śuradāru,* பெ. (n.) 1. செம்பரத்தை; red shoe flower. 2. தேவதாரு; deodar *(சா.அக.).*

சுரதுருமம் *śuradurumam,* பெ. (n.) தேவதாரு; deodar *(சா.அக.).*

[சுரம் + துருமம்]

சுரந்தா *śurandā,* பெ. (n.) தேவதாருமரம்; deodar tree *(சா.அக.).*

சுரநடை *śura-naḍai,* பெ. (n.) அருஞ்சுரத்தில் தலைவியையிழந்து நின்ற தலைவனிலையைக் கூறும் புறத்துறை (பு.வெ.10:2); theme describing the desolate condition of a hero who lost his wife in a desert.

[சுரம் + நடை]

சுரநதி *śura-nadi,* பெ. (n.) தெய்வ ஆறெனவழங்கப்படும் கங்கை; the Ganges, as the river of Gods. "சுரநதிக்கணுரையென மிதக்கவே" (கலிங். 342).

[சுரம் + நதி]

சுரப்பட்டை *śura-p-paṭṭai,* பெ. (n.) காய்ச்சலை நீக்கும் மர (கொய்னா)ப்பட்டை; Cinchona tree bark, used to avoid fever mainly Malaria *(சா.அக.).*

[சுரம் + பட்டை]

சுரப்பட்டைச்சத்து *śura-p-paṭṭai-c-cattu* பெ. (n.) மர (சின்கொய்னா)ப் பட்டையில் இருந்து செய்யப்படும் காய்ச்சலைப் போக்கும் ஒரு சாறு; Quinine is prepared from Cinchona bark, used for all kinds of fever.

[சுரம் + பட்டை + சத்து]

சுரப்படுத்து-தல் *śura-p-paḍuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சுரம்போடு-தல் பார்க்க; see *śuram-pōḍu-*

[சுரம் + படுத்து-,]

சுரப்பாலை *śura-p-pālai* பெ. (n.) ஒரு வகைப் பாலை; a land of Paulay much resembling downy Oleander.

[சுரம் + பாலை]

சுரப்பி *śurappi,* பெ. (n.) 1. கந்தகத்தூள்; sulphur powder. 2. கள்ளி; milk spurge. 3. சாதிக்காய்; nutmeg. 4. பனங்கள்; toddy of palmyra. 5. துளசி; holy basil. 6. மது; arrack. 7. மல்லிகை; jasmine. 8. பல்லி; lizard. 9. ஆ; cow. 10. நறுமணம்; fragrance. 11. பிரமி (மலை.); a prostrate herb. 12. இலவம் பிசின்; gum of silkcotton tree. 13. இருவாட்சி; Tuscan jasmine. 14. பசி; hunger. 15. தேள் கொடுக்கி; Indian turnsole. 16. மருத மரம்; Terminatia arjuna. 17. ஒருவகை இதளியக் குளிகை; a kind of mercurial pill. 18. மாட்டுக்

கொம்பு; cow's horn. *19.* பால்மிகுதியாய்ச் சுரக்கும் ஆ (திவா.); white cow. *20.* சண்பகம்; champak flower. *21.* வெண்கடம்பு; white cadamba. *22.* குந்துருக்கம்; Indian frank in cense. *23.* தேவருலக ஆ; celestial cow. *24.* உடம்பிலிருந்து வெளியேறுவதும் அரத்தத்தில் கலப்பதுமான நீர்மங்களைச் சுரக்கும் உள்ளுறுப்பு; gland. உமிழ்நீர்ச் சுரப்பி, நாளமில்லாச் சுரப்பி. *25.* அதிமதுரம்; liquorice.

[சுர → சுரப்பு → சுரப்பி]

"வடவர் ஸு + ரப் (bh.) எனப் பகுத்து, 'இனிதாய்த் தாக்குதல்' (affecting pleasantly) என்று வேர்ப்பொருளுரைப்பர். இருக்கு வேதத்தில் நறுமணங்கமழ்தல், வசியம் செய்தல், இன்புறுத்தல், அழகாயிருத்தல் என்னும் பொருள்களிலேயே சுரபி என்னுஞ் சொல் ஆளப்பெற்று இருப்பதாகவும், பிற்கால வட நூல்களிலேயே அது காமதேனு என்னும் ஒரு கற்பனை ஆவைக்குறித்ததாகவும், மா.வி. அகர முதலியினின்று அறியக் கிடக்கின்றது" (வ.மொ.வ.).

Skt. surabhi

சுரப்பு *śurappu*, பெ. (n.) *1.* சுரக்கை; welling out, flowing, gushing out. "சுரப்புறு சிறைப்புனல்" (அரிச். பு. விவாக. 107). *2.* ஊற்று; fountain, spring. *3.* வீக்கம்; swelling. 'காலிற் சுரப்பு உண்டாகி இருக்கிறது' (உ.வ.).

சுரப்புத்தண்ணீர் *śurappu-t-tannīr*, பெ. (n.) ஊற்றுத்தண்ணீர்; spring water; fountain water.

[சுரப்பு + தண்ணீர்]

சுரப்புவடிவு *śurappu-vaḍivu*, பெ. (n.) முலைமேற்றிரள்; nipple (சா.அக.).

[சுரப்பு + வடிவு]

சுரப்புவிடு¹-தல் *śurappu-viḍu-*, 20 செ.கு.வி. (v.i.) கறத்தற்கு ஏற்ப, மாட்டின் மடியினின்று, பால் சுரக்கத் தொடங்குதல் (உ.வ.); to start secretion of milk in the udder. 'மாடு சுரப்பு விட்டதா?

[சுரப்பு + விடு-,]

சுரப்புவிடு²-தல் *śurappu-viḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) கன்றை ஊட்டவிட்டுப் பால்சுரக்கச் செய்தல்; to start the flow of milk by letting the calf suck cow's udder. மாட்டைச் சுரப்பு விட்டாயிற்றா?

[சுரப்பு + விடு-,]

சுரபத்து *śurabattu*, பெ. (n.) நரம்பு வாச்சிய வகை (உ.வ.); a kind of stringed instrument played with a plectrum of ivory.

சுரபரணி *śurabaraṇi*, பெ. (n.) முறைக் காய்ச்சல்; intermittent fever (சா.அக.).

[சுரம் + பரணி]

சுரபாசாணம் *śurabāsāṇam*, பெ. (n.) காய்ச்சற் செய்ந்நஞ்சு; a kind of prepared native arsenic (சா.அக.).

[சுரம் + பாசாணம்]

சுரபாண்டம் *śurapāṇḍam*, பெ. (n.) கருக்குழியில் இருக்கும் பனிக்குடம் என்னும் பை; foetal membrane forming the bag of water in the womb (சா.அக.).

[சுரம் + பாண்டம்]

சுரபாத்திரி *śurapāttiri*, பெ. (n.) சுரப்பி பார்க்க; see *śura-pattiri* (சா.அக.).

சுரபானம் *śurabāṉam*, பெ. (n.) *1.* சாராயம்; arrack. *2.* கள்; toddy (சா. அக.).

[சுரம்³ + பானம்; சுரம் = கள்]

சுரபி *śurabi*, பெ. (n.) சுரப்பி பார்க்க; see *śurappi* (சா.அக.).

[சுரப்பி → சுரபி]

சுரபிகா *śurabigā*, பெ. (n.) தேள்கொடுக்குச் செடி; scorpion plant (சா.அக.).

சுரபிகாசி *śurabi-kāśi*, பெ. (n.) வரிக்கற்றாழை; a kind of striped aloe (சா.அக.).

சுரபிகோசம் *śurabikōśam*, பெ. (n.) சுரபிபத்திரை; see *śurabipattirai* (சா.அக.).

[சுரபி + கோசம்]

சுரபிசேகம் *śurabiśēgam*, பெ. (n.) வரி கொம்மட்டி; striped colocynth (சா.அக.).

சுரபிதானி *śurabi-dāṉi*, பெ. (n.) சண்பகம்; champak (சா.அக.).

சுரபிபத்திரை *śurabi-pattirai,* பெ. (n.) *சம்பு நாவல்;* jambu tree, Malay apple tree.

சுரபிமணி *śurabi-maṇi,* பெ. (n.) இதளியமணி; mercurial pill *(சா.அக.).*

[சுரபி + மணி. மண் → மண்ணு → மணி]

த. மணி → Skt. maṇi

சுரபிமன்றாடி *śurabi-maṉṟāḍi,* பெ. (n.) *ஆக்களைப் பாதுகாப்பவர், மாட்டிடையர்;* protect of cow-herds. "இந்நாயனார் சுரபி மன்றாடிகளில் கலையன் சூற்றி திருவகம்படிக் கோன்கைக் கொண்டு நாளொன்றுக்கும் அளக்கும் பால்" *(தெ.க. தொ.8, கல், 73).*

[சுரபி + மன்றாடி]

சுரபிமுத்திரை *śurabi-muttirai,* பெ. (n.) *பூசையில் ஆவின்மடிபோற் காட்டும் முத்திரை (சங். அக.);* a pose of the fingers in the form of cow's udder, assumed in worship.

[சுரபி + முத்திரை]

சுரபிமேற்புல்லுருவி *śurabi-mēṟ-pulluruvi,* பெ. (n.) மருதமரத்தின் புல்லுருவி; a parasite found grown on marudha tree *(சா.அக.).*

[சுரபி + மேல் + புல்லுருவி]

சுரபியாங்கம் *śurabi-y-āṅgam,* பெ. (n.) வெண்கடம்பு; white cadamba tree *(சா.அக.).*

சுரபியிடையர் *śurabi-y-iḍaiyar,* பெ. (n.) *ஆக்களை வளர்த்துப் பயன்கொள்பவர்;* cowherds. 'இக்கோயில் சுரபி இடையற் குனாயகம் கைக்கொண்ட பால்பசு பத்தும்' *(தெ.க.தொ, கல். 822).*

மறுவ. கோவலர், கோபாலர், மாட்டிடையர்

[சுரபி + இடையர்]

சுரபியில் *śurabi-yil,* பெ. (n.) *கோயிற்குப் பாலுதவும்படி அரசர்களால் அமைத்துக் காக்கப்பட்ட ஆ மடம்;* cow stall maintained for the supply of milk to a temple. ஸ்ரீ ராஜ ராஜீஸ்வரமுடையார் சுரபியில் அடுத்த பசு பன்னீரண்டினால்..." (அடுத்த = சேர்த்த, கூடிய)

[சுரபி → சுரபியல்]

சுரபில்லை *śurabillai,* பெ. (n.) *சுரக்கட்டி;* enlargement of spleen *(சா.அக.).*

[சுரம் + பில்லை]

சுரபின்னை *śurapiṉṉai,* பெ. (n.) *சுரபுன்னை பார்க்க;* see *śura-puṉṉai (சா.அக.).*

சுரபு *śurabu,* பெ. (n.) *1. இலவம்பிசின்;* gum of silk cotton tree. *2. துளசி;* holy basil. *3. மல்லிகை;* jasmine. *4. இலவு;* silk cotton *(சா.அக.).*

சுரபுகி *śurabugi,* பெ. (n.) *துளசி;* holy-basil *(சா.அக.).*

[சுரபு → சுரபுகி]

சுரபுங்கு *śurapuṅgu,* பெ. (n.) *சுனைப்புங்கு;* rusty soapnut *(சா.அக.).*

சுரபுன்னை *śura-puṉṉai,* பெ. (n.) நாக சம்பங்கி என்ற மூலிகையின் பண்பையும், கரும்பச்சை நிற இலையையும், வெண் பூவையுமுடைய சிறிய மரம்; a small tree having dark green leaves and flowers are white and its fruit pulp is medicinal properties equal to naga champak "கரையன சுரபுன்னையும்" *(பரிபா. 11:17) (சா.அக.).*

ம. சுரப்புன்ன; க. சுரகொன்னெ; தெ. சுரபொன்ன

Skt. surapunnāgam

சுரபேதம் *śura-bēdam,* பெ. (n.) *1. காய்ச்சல் வகைகள்;* different kinds of fever. *2. கரகரத்த தொண்டை;* hoarse throat *(சா.அக.).*

[சுரம் + பேதம்]

சுரம்[1] *śuram,* பெ. (n.) *1. காய்ச்சல் (உ.வ.);* fever. *2. பாலைநிலம்;* desert tract. "சுரமென மொழியினும்" *(தொல். பொருள். 216). 3. காடு;* jungle. "வெங்க லழற்சுரந் தாம் படர்ந்தார்" *(பு.வெ. 2 : 3). 4.* அருநெறி *(திவா.);* narrow and difficult path. *5.* வழி *(பிங்.);* way.

ம. சுரம்

[சுள் → சுர் → சுரம் (வ.வ.)]

சுரம் என்னும் சொல் முதுவேனிற் காலத்தில் கடுமையாய்ச் சுடும் பாலைநிலத்தைக் குறிக்கப் பயன்பட்டமையால் சுரநோயைக் காய்ச்சல் என்றே சொல்ல வேண்டும் (வ.வ.).

சுரம்[2] *śuram,* பெ. (n.) *கள்;* toddy.

[சுரா → சுரம்]

சுரம்[3] *śuram,* பெ. (n.) *உப்பு (மூ.அ.);* salt

சுரம்[4] *šuram,* பெ. (n.) 1. நகத்தின் அடி; quick tender, flesh below nail. 2. உட்டுளை; hollow, as of horn, quill.

[சுரை → சுரம்]

சுரம்போக்கு *šuram-pōkku,* பெ. (n.) தலைவனுடன் தலைவி பாலைவழியில் செல்லும் உடன் போக்குத் துறை; theme describing the elopement of a maiden with her lover. "தோயமும் நாடுமில்லாச் சுரம் போக்குத் துணிவித்தவே" (திருக்கோ. 207).

[சுரம் + போக்கு]

சுரமகம் *šura-magam,* பெ. (n.) செருந்தி; golden champak (சாஅக.).

மறுவ. சுரகாமலிகம்

சுரமகளிர் *šura-magaḷir,* பெ. (n.) தெய்வப் பெண்டிர் (பிங்.); celestial damsels.

மறுவ. தேவமகளிர், அரம்பையர்

[சுரர் + மகளிர்]

சுரமண்டலம் *šura-maṇḍalam,* பெ. (n.) ஒரு வகை வாச்சியம்; harp.

[சுரம் + மண்டிலம் → மண்டலம்]

சுரமணிமாத்திரை *šura-maṇi-māttirai,* பெ. (n.) நேர்வாளத்துடன் கடைச்சரக்குகள் சேர்த்து அணியம் செய்த, கழிச்சல் மாத்திரை; a purgative pill prepared with croton seed as a chief ingredient along with other bazaar drugs and prescribed for fever gravel or urinary calculus dyspepsia testicular complaints, etc. (சாஅக.).

[சுரம் + மணி + மாத்திரை]

இம்மாத்திரையினால் சுரம், கல்லடைப்பு, குன்மம், அண்டவூதை ஆகியன நீங்குமெனக் குறிக்கிறது.

சுரமதில் *šuramadil,* பெ. (n.) சிந்தில் கொடி; moon creeper (சாஅக.).

[சுரம் + மதில்]

சுரமயக்கம் *šura-mayakkam,* பெ. (n.) காய்ச்சலினால் வரும் மயக்கம்; giddiness from fever (சாஅக.).

[சுரம் + மயக்கம்]

சுரமருந்து *šura-marundu* பெ. (n.) காய்ச்சலைப் போக்கும் மருந்து; a medicine for the cure of fever (சாஅக.).

[சுரம் + மருந்து]

சுரமலி *šuramali,* பெ. (n.) சுரமலிகம் பார்க்க; see *šuramaligam* (சாஅக.).

சுரமலிகம் *šuramaligam,* பெ. (n.) 1. உடம்பில் பலவிடங்களில் வரும் அக்கி; eruptions of a fiery acrid humour in different parts of the body. 2. செருப்படை; a low spreading plant. 3. செருந்தி; golden champak (சாஅக.).

மறுவ. செந்திக் கரப்பான், கரகாமலிகம்

[சுரம் + மலிகம். சுரம் = வெப்பம். இங்கு வெப்பக் = கொப்புளம், மிகுதல் = நிறைய இருத்தல்.]

சுரமாத்திரை *šura-māttirai,* பெ. (n.) சுரத்திற்கு கொடுக்கும் மருந்துக்குளிகை; fever pill.

[சுரம் + மாத்திரை]

சுரமாந்தம் *šura-māndam,* பெ. (n.) செரியாமை, மந்தம் போன்றவற்றால் குழந்தைக்கு வரும் காய்ச்சலுடன் கூடிய கழிச்சல்நோய்; diarrhoea in children attended with fever due to indigestion and other disorders of bowel (சாஅக.).

[சுரம் + மாந்தம். மந்தம் → மாந்தம்]

சுரமாந்தை *šura-māndai,* பெ. (n.) அதிக உடற்சூட்டுடன் இருமல், களைப்பு, சோற்று வெறுப்பு போன்ற பண்புகள் உள்ள ஒரு வகை மாந்தநோய்; a kind of tuberculosis marked by excess of fever, cough, fatigue, loss of appetite, etc. (சாஅக.).

[சுரம் + மாந்தை]

சுரமாய்கிடத்தல் *šuramāy-kiḍattal,* பெ. (n.) காய்ச்சலினால் படுத்தபடுக்கையாகக் கிடக்கை; to be laid up with fever (சாஅக.).

[சுரம் + ஆய் + கிடத்தல்]

சுரமாலிகை *šura-māligai,* பெ. (n.) காய்ச்சல், இசிவுநோய் இவற்றைப் போக்குவதற்காக அகத்தியர் மருத்துவ காவியம் 1500ல் சொல்லியுள்ள ஒரு மருந்து; a medicinal

preparation contemplated in the Agastiyar work 1500 on medicine for curing fever, apoplexy etc. (சா.அக.).

[சுரம் + மாலிகை]

சுரமாறாட்டம் *šuramārāṭṭam* பெ. (n.) காய்ச்சற் கடுமையினால் அறிவு மயங்கிப் பிதற்றல் போன்ற மாறுபாடுகள்; several bad symptoms such as loss of senses, incoherent talk etc., due to excess of fever (சா.அக.).

[சுரம் + மாறாட்டம்]

சுரமுண்டாக்கல் *šuramuṇḍākkal,* பெ. (n.) காய்ச்சல் வரும்படிச் செய்தல்; causing or giving room for fever - may be by irregularity or excess in diet (சா.அக.).

[சுரம் + உண்டாக்கல்]

சுரமுண்டாக்கி *šuram-uṇḍākki,* பெ. (n.) காய்ச்சல் உண்டாக்கும் மருந்து; anything causing or producing fever (சா.அக.).

[சுரம் + உண்டாக்கி]

சுரமுதல் *šuramudal,* பெ. (n.) உடம்பில் காய்ச்சல் உண்டாதல்; getting feverish (சா.அக.).

[சுரம் + முதல்]

சுரமும்முரம் *šura-mummuram,* பெ. (n.) காய்ச்சலின் கடுமை; severity or intensity of fever (சா.அக.).

[சுரம் + மும்முரம்]

சுரமுறுசூலை *šuram-uṟu-šūlai,* பெ. (n.) காய்ச்சல், தலைவலி, உடம்பு வீக்கம் போன்ற பல வகைத் துன்பங்களைத் தரும் ஒருவகைச் சூலை நோய்; a kind of acute arthritis or gout marked by febrile symptoms head-ache, swelling and weakness (சா.அக.).

[சுரம் + உறு + சூலை]

சுரமெழுப்பி *šuram-eḻuppi,* பெ. (n.) 1. காய்ச்சல் உண்டாக்கும் பொருள்; any substance which excites fever. 2. சுரமுண்டாக்கி பார்க்க; see *šuram-uṇḍākki* (சா.அக.).

[சுரம் + எழுப்பி]

சுரமேற்று[1]-தல் *šuramēṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) காட்டிற்குத் துரத்தி அடியோடு ஒழித்தல்; to drive into the forest and dispel, remove, as darkness. "திக்குக்களில் உண்டான இருளைச் சுரமேற்றா நிற்பதும்" (திருவிருத். 31, வியா, 194).

[சுரம் + ஏற்று-. சுரம் = காடு]

சுரமேற்று[2]-தல் *šuram-ēṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தூண்டுதல்; to instigate, egg on (செ.அக.).

[சுரம் + ஏற்று-,]

சுரர் *šurar,* பெ. (n.) தேவர், வானோர்; celestials. "சுரரறிவரு நிலை" (திவ். திருவாய். 1. 1:8).

மறுவ. அமரர், விழியார்

சுரர்குருநாள் *šurar-guru-nāḷ,* பெ. (n.) கொடிறு என்னும் எட்டாவது விண்மீன் (பூசம்) (திவா.); the 8th nakṣatra.

[சுரர் + குருநாள்]

சுரர்துருமம் *šurar-turumam,* பெ. (n.) தேவதாரு; deodar tree (சா.அக.).

சுரரிடம் *šurar-iḍam,* பெ. (n.) வீட்டுலகம், சுரர் வாழும் உலகம் (பிங்.); heaven, as the world of gods.

[சுரர் + இடம்]

சுரவல்லி *šuravalli,* பெ. (n.) அப்பிரகம் எனும் செய்ந்நஞ்சு; a kind of mineral poison (சா.அக.).

சுரவன்பாக்கு *šuravaṉ-pākku,* பெ. (n.) ஓர் உயர்ந்த வகைப் பாக்கு; a kind of superior areca-nut 'திருவாலி நாடுதாஸர் நல்லன சில சுரவன் பாக்குக்களைப் பட்டருக்குக் கொடுவந்து கொடுத்தாராய்' (ஈடு. 10. 2: 2).

[சுரர் → சுரவன் + பாக்கு]

சுரவி *šuravi,* பெ. (n.) 1. சண்பகம்; champaka flower. 2. ஆ; cow.

[சுரபி → சுரவி]

சுரவிகாரநாசினி *šuravikāra-nāšiṉi,* பெ. (n.) பாதிரி; sterospermum suaveolens (சா.அக.).

சுரவின்பால் *šuraviṉpāl,* பெ. (n.) ஆவின் பால்; cow's milk (செ.அக.).

[சுரபி → சுரவி → சுரவின் + பால்]

சுரவினாசி *śura-vināśi*, பெ. (n.) *மாம்பிசின், பனம்பிசின், கிராம்பு முதலியவற்றால் செய்யப்படும் காய்ச்சலைப் போக்குகின்ற ஒரு மருந்து;* a medicine for fever prepared from the gum of mango tree, the gum of palmyra tree and clove *(சா.அக.).*

மறுவ. இடவகம்

[சுரம் + வினாசி]

சுரவீக்கம் *śura-vīkkam*, பெ. (n.) *காய்ச்சலிற் காணும் உடம்பு, கை கால் வீக்கம்;* swelling due to fever *(சா.அக.).*

[சுரம் + வீக்கம்]

சுரவெப்பம் *śura-veppam*, பெ. (n.) *காய்ச்சலினாற் ஏற்படும் உடல்வெப்பம்;* temperature of the body during fever *(சா.அக.).*

[சுரம் + வெப்பம்]

சுரவேகம் *śura-vēgam*, பெ. (n.) *காய்ச்சலின் கடுமை;* a high degree of fever *(சா.அக.).*

[சுரம் + வேகம்]

சுரவை *śuravai*, பெ. (n.) *வீக்கம்;* swelling *(சா.அக.).*

[சுரப்பு → சுரவை]

சுரழ் *śuraḻ*, பெ. (n.) இலவம்பிசின் *(மலை.);* gum arabic, gum of silk cotton tree *(சா.அக.).*

சுரளம் *śuraḷam*, பெ. (n.) புன்னைமரம் *(மலை.);* common poon tree *(சா.அக.).*

சுரளிகை *śuraḷigai*, பெ. (n.) *பாலைமரம்;* iron wood tree *(சா.அக.).*

சுரன் *śuraṉ*, பெ. (n.) *1. ஞாயிறு;* Sun. *2. காய்ச்சல்;* fever. *3. ஒருவகைச் சிறுமீன்;* a small fish *(சா.அக.).*

[சன் → சர் → சுரன் (ஞாயிறு)]

சுரனாசி *śuraṉāśi*, பெ. (n.) *மால் கரந்தை;* Viṣṇu karanthai *(சா.அக.).*

சுரனாசினி *śuraṉāśiṉi*, பெ. (n.) *திருநாமப் பாலை;* a pālai tree *(சா.அக.).*

[சுரன் + நாசினி]

சுரனுவா *śuraṉuvā*, பெ. (n.) *பேராமல்லி;* big jasmine *(சா.அக.).*

சுராகாரம் *śurākāram*, பெ. (n.) *ஒரு வகையுப்பு;* a kind of salt *(சா.அக.).*

சுராங்கிசக்குளிகை *śurāṅgiśa-k-kuḷigai*, பெ. (n.) *அகத்தியர் வல்லாதி 600இல் சொல்லியபடி பலவகைக் காய்ச்சல்களுக்கும் உரிய மாத்திரை;* a medicinal pill described in Agasthiyar vallāthi 600 and prescribed for different kinds of fever *(சா.அக.).*

[சுரம் → சுராங்கிசம் + குளிகை]

சுராசமுத்திரம் *śurā-samuttiram*, பெ. (n.) *ஏழு கடல்களுள் ஒன்றாகிய கட்கடல்;* ocean of toddy *(செ.அக.).*

[சுரா + சமுத்திரம்]

சுராட்டு *śurāṭṭu*, பெ. (n.) நான்கு அடியுள்ள செய்யுளில் இரண்டெழுத்து ஓரடியுள் மிக்குச் சீரொத்து வருவது *(யாப். வி. 95, பக். 482);* a four lined stanza of equal metrical quantity, with two extra letters in one of the lines *(செ.அக.).*

சுராதி *śurādi*, பெ. (n.) *1. துளசி;* holy basil. *2. வட்டத்திருப்பி;* Indian pareira cissampeloe pareira *(சா.அக.).*

சுராதிராசன் *śurādi-rāśaṉ*, பெ. (n.) *சுரர்குரு;* Jupiter, as the preceptor of Gods. "*சுராதிராசன் முதலாகவரு சோழன்*" *(கலிங். 178).*

[சுரர் + அதி + (அரசன் →)ராசன்]

சுராபகம் *śurābagam*, பெ. (n.) *சுண்டைக் காய்;* Turkey berry *(சா.அக.).*

சுராலயம் *śurālayam*, பெ. (n.) தேவர்கள் வாழிடமான மேருமலை *(சூடா.);* Mount Mēru, as the abode of Gods.

[சுரர் + ஆலயம் = சுராலயம்]

சுராலை *śurālai*, பெ. (n.) சாம்பிராணி (நறுமணப் புகைப்பொருள்) *(தைலவ.தைல. 3);* frank-incense.

சுரி[1]-தல் *śuri-*, 2 செ.கு.வி. (v.i.) *1. சுழிதல்;* to be spiral, as conch. "*வெள்ளைச் சுரி சங்கொடாழியேந்தி*" *(திவ். திருவாய். 7. 3 : 1). 2.* மடிப்பு விழுதல்; to wrinkle. *3.* கடைகுழலுதல்; curl. "*சுரியிரும் பித்தை*" *(பொருந. 160).*

[சுழி → சுரி]

சுரி[2]-த்தல் *šuri-*, 4 செ.கு.வி. (v.i.) 1. *சுழிதல் (சங்.அக.);* to wind spirally. 2. *திரைதல் (யாழ்.அக.);* to wrinkle. 3. *சுருளுதல்;* to curl. 4. *வளைவாய்க் கிடத்தல்;* to lie in a circle. "சுரிக்கு மண்டலந் தூங்குநீர்" *(கம்பரா. தேரேறு. 30).* 5. *மனஞ்சுழலுதல்;* to be perturbed. 'சுரிச்சிராது நெஞ்சே யொன்று சொல்லக் கேள்" *(தேவா. 369:3).*

[சுழி → சுரி]

சுரி[3]-த்தல் *šuri-*, 4 செ.கு.வி. (v.i.) 1. வற்றுதல்; to get dried. "நெருப்பிடைச் சுரிக்க நீட்டும்" *(கம்பரா. இரணிய. 137).* 2. சுருங்குதல்; to shrink. 3. சேறாதல் (யாழ்ப்.); to muddy, miry. 4. சேற்றிற் புதைதல் *(யாழ்ப்.);* to sink, as foot in mire.

சுரி[4]-த்தல் *šuri-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. *உள்ளொடுக்குதல்;* to draw in. "ஆமை தலைபுடை சுரிப்ப" *(கம்பரா. நாட்டுப். 18.)* 2. முகஞ்சுளித்தல்; to frown. 'சுரித்த மூஞ்சி' *(வின்.).* 3. ஓலை முதலியவற்றில் துளையிடுதல் *(யாழ்ப்.);* to bore as in an da leaf.

[சுழி → சுரி]

சுரி[5] *šuri*, பெ. (n.) 1. சுழற்சி *(சங். அக.);* whirling. 2. *சுழி;* spiral, curl, screw. "சுரியேறு சங்கினாய்" *(திவ்.இயற்.3:49).* 3. எருத்தின் நெற்றி வெள்ளைச் *சுழி;* white curl on the forehead of bulls. "சுரிநெற்றிக் காரி" *(கலித். 101).* 4. அணியுறுப்பு *வகை;* part of an ornament. "உருத்திராக்ஷத் தாழ்வடம் ஒன்றிற் பொன்னின் சுரி" *(தெ.க.தொ. 2, 156).* 6. நரி. *(அக.நி);* jackal.

[சுழி → சுரி]

சுரி[6] *šuri*, பெ. (n.) சேறு *(யாழ்ப்.);* thin mud, mire.

சுரி[7] *šuri*, பெ. (n.) 1. துளை *(திவா.);* hole, aperture. 2. ஏட்டுத்துளை *(வின்.);* perforation through the leaves of an ōla book. *(ம. சுரி).* 3. ஏட்டில் *துளையிடுங்கருவி;* instrument for boring ōla leaf or book.

[சுரை → சுரி]

சுரிகுழல் *šuri-kuḻal*, பெ. (n.) 1. சுருண்ட கூந்தல்; curling hair. 2. சுருண்ட கூந்தலுடைய பெண் *(பிங்.);* woman as having curly hair.

[சுரி + குழல்]

சுரிகை[1] *šurigai*, பெ. (n.) கவசம் *(திவா.);* coat of mail.

[சுரி → சுரிகை]

சுரிகை[2] *šurigai*, பெ. (n.) 1. உடைவாள்; dirk, short sword. "சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடை" *(பெரும்பாண். 73)* 2. கத்தி; knife. "சுற்கம் வழித்தற்கு— கைச்சுரிகை" *(தைலவ. தைல.)*

[சுரி → சுரிகை; சுர் → சுரி. சுரித்தல் = துளைத்தல். வடமொழியில் 'சுரிகா' என்பதன் அடி 'சுர்'. ஆயின் மா.வி.அ. 'க்ஷுர்' என்பதை மூலமாகக் காட்டும். இவையிரண்டும் 'சுரி' என்பதன் திரிபே.

'சூரி' என்பது உலகவழக்கு. 'சுரிகை' என்பது செய்யுள் வழக்கு.

ஏட்டில் துளையிடுங்கருவியைச் 'சுரியூசி' என்பது யாழ்ப்பாண வழக்கு (வ.வ. 157).]

Skt. Swikā, skhūr; E. Sword

சுரிஞ்சான் *šuriñjāṉ*, பெ. (n.) பழுப்புநிறமான கிழங்கைப் போன்ற உனானி (uṉāṉi) மருந்துச் சரக்கு; a yellowish brown bulbous root known as mercury's finger - an uṉāni drug *(சா.அக.).*

சுரிஞ்சான்மிசிரி *šuriñjāṉ-miširi*, பெ. (n.) சுரிஞ்சான் பார்க்க; see *šuriñjāṉ* *(சா.அக.).*

[சுரிஞ்சான் → சுரிஞ்சான் மிசிரி]

சுரிஞ்சி *šuriñji*, பெ. (n.) தணக்கு (M.M.367); small ach root *(செ.அக.).*

சுரித்தமுகம் *šuritta-mugam*, பெ. (n.) 1. மூப்பினால் திரைந்த முகம்; wrinkled face. 2. வெறுப்பை அல்லது சினத்தைக் காட்டும் முகம்; face contorted in frowning.

[சுரித்த + முகம்]

சுரித்தமூஞ்சி *šuritta-mūñji*, பெ. (n.) சுரித்த முகம் பார்க்க; see *šuritta-mugam.*

[சுரித்த + (முகம்) மூஞ்சி]

சுரிதகம்[1] *šuridagam*, பெ. (n.) கலிப்பா வகையின் இறுதியுறுப்பு (காரிகை, செய். 12, உரை.); short final lines of certain kinds of kali verse.

சுரிதகம் எனினும், அடக்கியல் எனினும் வாரம் எனினும், வைப்பு எனினும், போக்கியல் எனினும் ஒக்கும் *(யாப். 82).*

ஆசிரிய இயலானாதல் வெண்பா இயலானாதல் பாட்டிற் கருதிய பொருளை முடித்து நிற்பது. (தொல். செய். 117).

உள்ளுறுப்பின் பொருளினைத் தன் கண் வைக்கப்படுவது சுரிதகம் (தொல். பொருள். 4, பேரா.).

சுரிதகம்[2] *šuridagam,* பெ. (n.) 1. கூத்தில் சொல் நிகழும் வகையில் வரும் எட்டடிப்பாட்டு (சிலப். 3: 13, உரை.); eight line stanza in dialogues of drama. 2. ஒருவகைத் தலையணி; an ornament fastened to the hair with a screw. "சுரிதக வுருவினதாகி" (நற். 86).

[சுரி + அகம்]

சுரிந்து *šurintu,* பெ. (n.) 1. நீர்ச்சுழல், நீர்ச்சுழி; eddy, whirl-pool. 'நீர் . . . சுரிந்தோடு மதனைச் சுரிந்தென்றும் சுழியென்றும் வழங்குவது போல" (யாப். வி. 81. பக். 282).

[சுரி → சுரிந்து]

சுரிப்புறம்[1] *šuri-p-puram,* பெ. (n.) 1. சங்கு; conch. 2. நத்தை; snail.

ம. சுரிப்புறம்

[சுரி + புறம்]

சுரிப்புறம்[2] *šuri-p-puram,* பெ. (n.) பனை ஏடுகளின் ஓட்டையுள்ள இடது புறம் (வின்.); left side of an ōla leaf or book, as perforated.

[சுரி + புறம்]

சுரிபோடு-தல் *šuri-pōdu-,* 8 செ.கு.வி. (v.i.) தமரிடுதல் (யாழ். அக.); to bore a hole, as in a plank.

[சுரி + போடு-,]

சுரிமண் *šuri-man,* பெ. (n.) புதைமணல் (யாழ்ப்.); a kind of quick sand.

[சுரி + மண்]

சுரிமுகம்[1] *šuri-mugam,* பெ. (n.) 1. சுழிந்த முகமுடைய சங்கு (திவா.); conch, as having a spiral head. "முரசுடன் சுரிமுகந் தழங்க" (பாரத. அருச்சுனன்றீ. 77). 2. நத்தை (திவா.); snail.

சுரிமுகம்[2] *šuri-mugam,* பெ. (n.) துளையுள்ள பக்கம்; that portion having the hole (சா.அக.).

ம. சுரிமுகம்

[சுரி + முகம்]

சுரியல் *šuriyal,* பெ. (n.) 1. வளைவு; curling. "சுரியற் றாடி" (மணிமே. 3: 116). 2. குழன்ற மயிர்; curly hair. "தென்றல் . . . சுரியற் றூற்றும்" (அகநா. 21). 3. மயிர் (திவா.); lack of hair. 4. நீர்ச்சுழி; whirlpool, eddy. 5. இளையோர் மயிர்; hair of the young. 5. பெண்மயிர்; hair of the female (சா.அக.).

[சுரி → சுரியல்]

சுரியகுழல் *šuriya-kulal,* பெ. (n.) 1. சுருண்ட கூந்தலை உடைய பெண்; woman having curly hair. 2. பெண்கூந்தல்; female's hair.

[சுரி + குழல்]

சுரியாணி *šuri-y-āni,* பெ. (n.) முறுக்காணி (இ.வ.); screw.

ம. சுரியாணி, சிரியாணி

[சுரி + ஆணி. ஆழ் → ஆழி → ஆணி = ஆழ்ந்திறங்குவது]

சுரியூசி *šuri-y-ūši,* பெ. (n.) பனையேட்டில் துளையிடுங்கருவி; instrument for boring ōlā leaf or book.

[சுரி + ஊசி. சுள் → சுர் → சுரி. உள் → உளி → உசி → ஊசி]

சுரீரெனல் *šurīrenal,* பெ. (n.) 1. கடுமையாகச் சுடுதற் குறிப்பு; onom. expr. signifying the sensation of piercing hot. சுரீரெனச் சுட்டது. 2. கடும்வலியுடன் ஏற்படும் உணர்வு; எறும்பு, பூச்சி, தேனீ, தேள் முதலியன கடிப்பதால் ஏற்படும் கூர்மை மிகுந்த கடுமையான வலியுணர்வு; a sharp pain. 'தேள் கொட்டியது போலச் சுரீரென்றது' 3. கடுமையான சொல், செய்தி போன்றவை மனத்தில் குத்துவது போன்ற ஊறுபாட்டையேற்படுத்துகை; harsh remark, news etc., give a pang feel touched to the quick. பாவாணர் மறைந்த செய்தி தமிழர்களின் மனத்தில் சுரீரெனத் தைத்தது (உவ.) 4. காய்ந்த இரும்பில் நீர் சுண்டும்போது உண்டாகும் ஒலிக்குறிப்பு; onom. expr. of hissing, as of heated iron in contact with water.

['சுல்' சுடுதற் கருத்துவேர். சுல் → சுள் → சுர் → சுரீர் + எனல்]

சுருக்க *śurukka*, கு.வி.எ. (adv.) 1. விரைவாய்; quickly, hastily. 'சுருக்க வா'. 2. சுருக்கமாக; briefly, shortly.

[சுருங்க → சுருக்க]

சுருக்கங்கோரை *śurukkaṅ-kōrai*, பெ. (n.) கோரைவகையுள் ஒன்று; a kind of sedge.

[சுருக்கம் + கோரை]

சுருக்கம் *śurukkam*, பெ. (n.) 1. குறுக்கம்; brevity, conciseness. 2. குறுக்கமானது; abbreviation, epitome, abstract, gist. 3. சிறுமை (வின்.); smallness, shortness. 4. குறைவு; diminution, decrease, contraction. "சுருக்கமுற்றனரரக்கர்" (கம்பரா. முதற்போ. 189). 5. வறுமை; poverty, want. "சிறிய சுருக்கத்து வேண்டு முயர்வு" (குறள். 963). 6. கஞ்சத்தனம்; miserliness. 7. ஆடை முதலியவற்றின்சுருக்கு (இ.வ.); fold or pucker in a garment, crease.

ம. சுருக்கம்

[சுருங்கு → சுருக்கு → சுருக்கம்]

சுருக்கம்[2] *śurukkam*, பெ. (n.) 1. ஒடுக்கம்; ஒடுக்கல்; contracting 2. எருவாய்ச்சுருக்கம்; anal stricture. 3. தட்டுப்பாடு, பற்றாக்குறை; shortage. 'பணச்சுருக்கம் ஏற்பட்டு விட்டதால், வணிகம் மந்தமாக உள்ளது' (உ.வ.).

[சுருங்கு → சுருக்கு → சுருக்கம்]

சுருக்கல்[3] *śurukkal*, பெ. (n.) 1. ஒடுக்கல்; contracting. 2. குறைத்தல்; diminution as food (சா.அக.).

[சுருங்கு → சுருக்கு → சுருக்கல்]

சுருக்களஞ்சி *śuru-k-kaḷañji*, பெ. (n.) 1. குழைச்சு; sliding knot. 2. கண்ணி; noose, trap, snare. 3. கட்டு; tying.

[சுருக்கு → சுருக்களஞ்சி]

சுருக்காங்கி *śuru-k-kāṅgi*, பெ. (n.) சுருக்களஞ்சி பார்க்க; see *śuru-k-kaḷañji*.

சுருக்கி[1] *śurukki*, பெ. (n.) 1. ஆமை; tortoise. 2. சிறுகீரை; pig greens. 3. தொட்டாற்சுருங்கி; sensitive plant; touch me not plant. 4. இங்குலிகம்; variety of cinnabar. 5. கசப்புப் பசளை; bitter purslane (சா.அக.)

[சுருக்கு → சுருக்கி]

சுருக்கிக்காய்ச்சல் *śurukki-k-kāyccal*, பெ. (n.) சுண்டக்காய்ச்சுவை; boiling down to reducible quantity (சா.அக.).

[சுருக்கி + காய்ச்சல்]

சுருக்கிக்கூறு-தல் *śurukki-k-kūṟu*, பெ. (n.) சுருக்கிச்சொல்லு-தல் பார்க்க; see *śurukki-c-col-*.

[சுருக்கி + கூறு-,]

சுருக்கிச்சொல்(லு)-தல் *śurukki-c-col-*, 13 செ.கு.வி. (v.i.) சொல்லுவதை, பேசுவதைச் சுருக்கமாகக் கூறுதல்; speak abruptly. 'அவையில் சுருக்கிச் சொல்லக் கற்றுக் கொள்ளவேண்டும்' (உ.வ.).

[சுருக்கி + சொல்-,]

சுருக்கிட்டுக்கொள்(ளு)-தல் *śurukkiṭṭu-k-koḷ*, 16 செ.கு.வி. (v.i.) சுருக்குப்போட்டுக்கொள் பார்க்க; see *śurukku-p-pōṭṭu-k-koḷ*.

[சுருக்கு + இட்டுக்கொள்-,]

சுருக்கிடல் *śurukkiḍal*, பெ. (n.) 1. சுருக்குப் போடுகை; to strangulate. 2. உருக்குமுகத்தில் மாழைகளுக்கு மூலிகைக்குடிநீர் அல்லது சாறுவார்த்து அதன் சாரத்தை இழுக்கும்படி செய்கை; in medicine pouring the juice or decoction of drugs in small quantities from time to time to metals in melting state in the process of calcination so as to absorb the essence of drugs. (சா.அக.)

[சுருக்கு → சுருக்கிடல்]

சுருக்கிடு[1]-தல் *śurukkiḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. சுருக்குப் போடுதல்; to make a noose on cord 2. சுருக்கில் மாட்டுதல்; to noose. "கழுத்திற் சுருக்கிட் டிழுக்கு மன்றோ" (சுந்தரலங். 2).

சுருக்கிடு[2]-தல் *śurukkiḍu-*, 20 செ.கு.வி. (v.i.) சுருக்குக்கொடு[2] பார்க்க; see *śurukku-k-koḍu*[2].

[சுருக்கு + இடு-,]

சுருக்கிப்பிடி-த்தல் *śurukki-p-piḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. செலவு முதலியன குறைத்தல்; to curtail, as expenses; to effect retrenchement. 2. வேலை முதலியவற்றைக் குறைத்து முடித்தல்; to minimise, as labour.

[சுருக்கு → சுருக்கிப்பிடி-,]

சுருக்கினதகடு *šurukkiṉa-tagaḍu*, பெ. (n.) செம்பு, பித்தளை ஆகிய மாழைகளினாலான பொருள்களின் மேல் வடிவோடு இரண்டறப் பொருந்துமாறு அமைக்கப்பெறும் பொற்ற கடு (கலை); the golden plate which is fitted upon the statue plate made by copper brass alloy. "செப்புக்குடம் ஒன்று நிறைமுவாயிரத்து எண்பத்து முப்பலத்தில் சுருக்கின தகடு பல பொன் . . ." (தெ. க. தொ. 2, கல். 1).

[சுருக்கின + தகடு]

சுருக்கு[1]-தல் *šurukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. குறைத்தல்; to curtail, reduce. "முன்னிக் கடலைச் சுருக்கி" (திருவாச. 7:16). 2. உள்ளிழுத்தல்; to compress, to contract, to draw in, as the tortoise its head. 3. ஆடை முதலியன சுருக்குதல்; to pucker, tuck in. 4. வலை, பை முதலியன சுருக்குதல்; to draw tight, as noose, net, string of a purse. "கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்" (கலித். 106). 5. குடை முதலியவற்றை யொடுக்குதல்; to close, as umbrella to fold. 6. கட்டுதல்; to tie, as an old book, to make up into a bundle. "நல்யா ழாகுளி பதலையொடு சுருக்கி" (புறநா. 64). 7. திரண்ட கருத்து வரைதல்; to epitomise, summarise. 8. ஓலை முதலியன அணிதல்; to wear, as ear-ring. "செம்பொ னோலை சேடுபடச் சுருக்கி" (பெருங். மகத. 22: 225). 9. முலாம் பூசுதல்; to gild. "இத்தேவர் பிரபையிற் சுடர்களிற் சுருக்கின பொன்" (தெ.க.தொ. 2, 419).

க. சுர்க்கு, ம. சுருக்கு

[சுருங்கு → சுருக்கு-,]

சுருக்கு[2]-தல் *šurukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. சுருங்கச்செய்தல்; causing anything to shrdink. 2. வற்றச்செய்தல்; causing to be reduced as decocdtion. 3. உருகிய மாழைக்கு மூலிகைச்சாற்றைவிடுதல்; administering juice of drugs to metals infusion.

ம. சுருக்குக; க. சுர்கு, சுக்கு; தெ. சுருக்கு; து. சிர்க்காவுனி; கோத. சுர்க்; துட. துரட்; பர். சுர்க்கிப்

[சுருங்கு (த.வி.) → சுருக்கு (பி.வி.)-,]

சுருக்கு[3] *šurukku*, பெ. (n.) 1. சுருங்குகை; contraction, reduction "பெரும்படை . . . பரப்புஞ் சுருக்கும்" (பெருங். மகத. 20, 135). 2. ஆடை முதலியவற்றின் மடிப்பு; wrinkle fold, crease. 3. குழைச்சு; slipknot, sliding knot. அந்தத் தாம்பிற் சுருக்கு நெகிழ்ந்திருக்கிறது. 4. கண்ணி; noose, snare, trap- 'வேடன் கண்ணிவைத்துப் பறவைகளைப் பிடிப்பதில் வல்லவன்' (உ.வ.). 5. கட்டு; tying. "குழற்சுருக் குடைந்து" (இரகு.இரகுவுற். 17). 6. குறைவு; deficiency. 7. சுருக்கம்; shortness. 'விடை சுருக்கமாக இருக்கட்டும்' (உ.வ.). 8. கஞ்சத்தன்மை; miserliness. "அவர் சுருக்கிலாது தூவினார்" (இரகு. இரகுவுற். 19). 9. ஒன்றன் பிழிவு; gist, summary. "மாதவன் பேர் சொல்லுவதே யோத்தின் சுருக்கு" (திவ். இயற். 2 : 39). 10. விரைவு; haste, speed. 'அவன் வந்த சுருக்கு வியப்பானது'. (உ.வ.). 11. அக்கறை; care, attention, eagerness. 'பையன் சுருக்காய்ப் படிக்கிறான்' (உ.வ.). 12. சுரணை; sensitiveness, sense of shame. 'நான் அவனை வைதால் உனக்கென்ன சுருக்கு' (உ.வ.). 13. ஒட்டணி (வீரசோ. அலங். 24); a figure of speech.

ம. சுருக்கு; க. சுலுக்கு

[சுருங்கு → சுருக்கு-,]

சுருக்கு[4] *šurukku*, பெ. (n.) அடி; சவுக்கடி; whipping. 'அவனுக்குச் சுருக்கு விழுந்தது' (உ.வ.).

[சுருக்கெனல் → சுருக்கு]

சுருக்கு[5] *šurukku*, பெ. (n.) 1. பூமாலை வகை; a kind of garland. "தண்சுருக்குப் பைந்தொடை" (திருக்காளத். பு. 7, 54). 2. வில்வம் (மலை); bael.

சுருக்கு[6] *šurukku*, பெ. (n.) வேள்வியில் உதவும் நெய்த்துடுப்பு (திவா.); a ladle made of mango leaves wood or metal used for pouring clarified butter on the sacred fire. "சோதிசேர்தருஞ் சுருக்குச் சுருவமும்" (சிவ ரக. நைமி.44).

சுருக்கு[7] *šurukku*, பெ. (n.) கயிற்றின் ஒரு முனையை மடக்கிக் கயிற்றிலேயே நகரும் வகையில் போடப்படும் முடிச்சு; ஒன்றைப் பிணைப்பதற்காகக் கயிற்றில் போடப்படும் முடிச்சு; noose; knot. அவன் கழுத்தில் சுருக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

[சுருங்கு → சுருக்கு]

சுருக்குக்கஞ்சிகை *śurukku-k-kañjigai*, பெ. (n.) வேண்டியபொழுது சுருக்கிக் கொள்ளு தற்குரிய திரை; roller curtain. "சுருக்குக் கஞ்சிகை விரித்தனர்" (பெருங். மகத. 13:54).

[சுருக்கு + கஞ்சிகை]

சுருக்குக்கொடு[1]-த்தல் *śurukku-k-kodu*, 4 செ.கு.வி. (v.i.) மாழைகளைப் புடமிடும் பொழுது மருந்துநீர் சேர்த்தல்; to add a liquid preparation in the process of calcinating a metallic substance. "ஏறச் சுருக்குக்கொடுத் ததைச் சிந்தூரித்து" (பணவிடு. 230).

[சுருக்கு + கொடு-,]

சுருக்குக்கொடு[2]-த்தல் *śurukku-k-kodu*, செ.கு.வி. (v.i.) 1. அடிகொடுத்தல்; to administer cuts, as punishment. 'ஆசிரியர் அவனுக்குச் சுருக்குக் கொடுத்தார்' (உ.வ.). 2. கண்டிப்புக் காட்டுதல்; to rebuke.

[சுருக்கு + கொடு-,]

சுருக்குக்கொடு[3]-த்தல் *śurukku-k-kodu-*, 4 செ.குன்றாவி. (v.t.) ஓடும் சரக்குகளைக் கட்டுவதற்காக அச்சரக்கை ஓட்டிலிட்டு அடுப்பில் வைத்து, மூலிகைச் சாற்றைச் சிறுகச்சிறுக அதில் விட்டுக் கட்டியைப் புரட்டிக் கொடுத்துக் கொண்டு வருதல்; the process used to purify or consolidate such substances as cinnabar, sulphur, arsenic etc.

[சுருக்கு + கொடு -,]

சுருக்குச்சதை *śurukku-c-cadai*, பெ. (n.) வட்ட வடிவச் சதை, ஒரு துளையுடன் இயற்கையாக முடிவடைவது; ring like muscle which closes a natural orifice sphincter muscle.

[சுருக்கு + சதை]

சுருக்குத்தாக்கல் *śurukku-t-tākkal*, பெ. (n.) சுருக்கிடல் பார்க்க; see *śurukkidal* (சா.அக.)

[சுருக்கு + தாக்கல்]

சுருக்குத்தைலம் *śurukku-t-tailam*, பெ. (n.) தலைவலிக்குப் பயன்படுத்தும் ஒருவகை மருந்தெண்ணெய் அல்லது களிம்பு; a medicated oil or ointment applied to headache.

[சுருக்கு + தைலம்]

Skt. taila → த. தைலம்

சுருக்குப்பை *śurukku-p-pai*, பெ. (n.) வாயைச் சுருக்கக்கூடிய தையற்பை (உ.வ.); a small bag or purse drawn together at the mouth with a thong or string. 'கிழவியின் சுருக்குப்பையில் வெற்றிலைச் சருகும் சில்லறைக் காசும் இருக்கும்' (உ.வ.).

[சுருக்கு + பை]

சுருக்குப்பைக்காரன் *śurukku-p-paikkāraṉ*, பெ. (n.) குறைந்த வளவு உண்பதாகப் பாசாங்கு செய்பவன் (இவ.); one who pretends to take only a small quantity of food.

[சுருக்கு + பைக்காரன்]

சுருக்குப்போட்டுக்கொள்(ளு)-தல் *śurukku-p-pōṭṭu-k-koḷ-*, 6 செ.கு.வி. (v.i.) கழுத்தில் உருவு கயிறிட்டுத் தற்கொலை புரிந்து கொள்ளுதல்; to commit suicide by hanging. 'வறுமையால் அவன் சுருக்குப் போட்டுக் கொண்டான்' (உ.வ.).

மறுவ. நாண்டுகொள்ளுதல்.

[சுருக்கு + போட்டுக்கொள்-,]

சுருக்குவலை *śurukku-valai*, பெ. (n.) ஒரு வகை வலை; a kind of net. "சுருக்குவலைப் படுத்து" (மணிமே. 18:106).

ம. சுருக்குவல

[சுருக்கு + வலை]

சுருக்குவழி *śurukku-vaḻi*, பெ. (n.) 1. குறுக்குப் பாட்டை (பாதை); cross cut, short cut. 2. கணக்கிற்கு விடை காணும் எளிய முறை; short or easy method in solving a problem. 'சுருக்குவழி தெரிந்ததால் அவன் கணக்கில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்கினான்' (உ.வ.).

[சுருக்கு + வழி]

சுருக்குவார் *śurukku-vār*, பெ. (n.) விலங்குகளைப் பிடிப்பதற்குரிய கருவி வகை (நற். 82, உரை); a long rope or leather strap provided with a noose used in capturing animals.

சுருக்குவிழு-தல் *śurukku-viḻu-*, பெ. (n.) 1. கயிறு முதலியவற்றில் முடிச்சு விழுகை; becoming knotted as string. 2. முதியவர், மடிப்பு விழுதல்; becoming wrinkled as old man's body; becoming creased. 3. ஏமாறுகை, மோசத்துக்

குள்ளாகை (வின்.); becoming ensnared or deceived.

மறுவ. திரை

[சுருக்கு + விழு + தல். 'தல்' தொ.பெ.ஈறு.]

சுருக்குவை-த்தல் *šurukku-vai-*, 4 செ.கு.வி. (v.i.) 1. கண்ணி வைத்தல்; to set a snare. 'நரிக்குறவன் சுருக்குவைத்தான்' (உ.வ.). 2. செருக்கை ஒடுக்க வழிதேடுதல் (வின்.); to take measures for humbling a person.

[சுருக்கு + வை-,]

சுருக்கெழுத்தர் *šuru-k-keluttar*, பெ. (n.) சுருக்கெழுத்தில் குறித்துக்கொண்டு பின் முழுமையாகத் தட்டச்சு செய்து தரும் பணியாளர்; stenographer.

ம. சுருக்கெழுத்துகாரன்

[சுருக்கு + எழுத்தர்]

சுருக்கெழுத்து *šuruk-k-eluttu*, பெ. (n.) குறியீடுகளைப் பயன்படுத்தி வேகமாகப் பேச்சை எழுத்தில் பதிவு செய்யும் முறை; short-hand. தாளிகைச் செய்தியாளர்களுக்குச் சுருக்கெழுத்து தெரிந்திருந்தால் பெரிதும் உதவியாயிருக்கும்.

ம. சுருக்கெழுத்து

[சுருக்கு + எழுத்து]

சுருக்கெனல் *šuruk-k-enal*, பெ. (n.) 1. எறும்பு, பூச்சி, தேள், தேனீ போன்றவை கடித்தவுடன்/ கொட்டியவுடன் கடுமையான வலி ஏற்படுகை; cause a sharp pain. கட்டெறும்பு கடித்த வலி அவனுக்குச் சுருக்கென்றது. 2. கடுமையான சொல், செய்தி முதலியன மனத்தில் குத்துவது போன்ற நிலையை உணர்கை; feeling when one is insulted. 'நீ கூட உன்பெற்றோரைப் பேணாமலிருக்கிறாயே என்று அவர் கேட்டதும் அவனுக்குச் சுருக்கென்றது' (உ.வ.).

[சுருக்கு + எனல்]

சுருக்கேற்று[1]-தல் *šuru-k-kēṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. மேலும் மேலும் சுருக்குக் கொடுத்துக் கொண்டே போதல்; increasing the imparting of juice of drugs to substances to increase their potency (சா.அக.). 2. சுருக்குக்கொடு[1]-த்தல் பார்க்க; see *šurukku-k-koḍu[1]*- "பூரத்துக்குச் சுருக்கேற்றுவது போலவே" (பைஷஜ. 127).

[சுருக்கு + ஏற்று-,]

சுருக்கேற்று[2]-தல் *šuru-k-kēṟṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) தூண்டிவிடுதல்; to incite egg on.

[சுருக்கு + ஏற்று-,]

சுருக்கை *šurukkai*, பெ. (n.) சுருக்கு[5] பார்க்க; see *šurukku[5]*.

[சுருக்கு → சுருக்கை]

சுருங்ககம் *šurungagam*, பெ. (n.) ஒருவகை நச்சுக்கிழங்கு; an unknown drug said to resemble aconite (சா.அக.)

சுருங்கச்சொல்லணி *šuruṅga-c-col-l-aṇi*, பெ. (n.) அணியிலக்கண வகை; சுருக்கமாகச் சொல்வதனால் ஏற்படும் நயந்தரும் அணி; a figure of speech (அணியி. 23).

[சுருங்கு → சுருங்க + சொல் + அணி]

சுருங்கச்சொல்லல் *šuruṅga-c-collal*, பெ. (n.) நூலழகு பத்தனுள் விரிவின்றிச் சுருக்கமாகக் கூறுகை (நன்.13); brevity, terseness of expression one of ten literary - beauty (nul-alagu).

[சுருங்கு → சுருங்க + சொல்லல்]

சுருங்கண் *šuruṅgaṇ*, பெ. (n.) புண்ணாகி நாளுக்கு நாள் கண்சுருங்கும் ஒருவகைக் கண்ணோய்; an eye disease (சா.அக.).

[சுருங்கு + கண் - சுருங்குகண் → சுருங்கண்]

சுருங்கம் *šuruṅgam*, பெ. (n.) பீச்சுங்குழல்; an instrument expelling the fluid contained in it with some force, syringe (சா. அக.).

[சுன் → சுர் → சுரு → சுருங்கு = உட்டுளையுடையது. சுருங்கு + அம்]

சுருங்கல்[1] *šuruṅgal*, பெ. (n.) 1. குறைகை; to reducing. 2. பட்டினியாயிருக்கை; starving. 3. திரைவு அதாவது தோல் சுருங்குகை; formation of wrinkles on the body due to old age. 4. ஒடுங்குகை; shrinking. 5. சுருங்கினது; anything shurnk, wrinkled. 6. மடிப்பு; wrinkle, crease. சரீரத்தில் சுருங்கல் விழுந்தது.

[சுருங்கு + அல். 'அல்' தொ.பெ.ஈறு]

சுருங்கல்[2] *šuruṅgal,* பெ. (n.) *சுருங்கை, 2 பார்க்க;* see *šuruṅgai, 2* (வின்.).

[சுருங்கு → சுருங்கல்]

சுருங்கல்[3] *šuruṅgal,* பெ. (n.) *சுருக்கு; பூமாலை வகை;* a kind of garland.

[சுருங்கு → சுருங்கல்]

சுருங்கில் *šuruṅgil,* பெ. (n.) *சிறுவீடு;* small house. "ஐந்து பூதங்கூடுஞ் சுருங்கிலை" *(தாயு. சச்சிதா. 2).*

மறுவ. குடிசை, குடி, சிற்றில்

[சுருங்கு + இல்]

சுருங்கு-தல் *šuruṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) *1. ஒடுங்குதல்;* to shrink; to wrinkle. "வாளரப் பார்த்திறை பைத்துச் சுருங்க" *(திருவாச. 6 : 42)* *2. சிறுகுதல்;* to lessen, dwindle. "சுருங்கு மருங்குல்" *(திருக்கோ. 115).* *3. சுருக்கமாதல்;* to be epitomised, summarised. *4. ஆடை முதலியன சுருக்கங்கொள்ளுதல்;* to be puckered, creased. *5. உள்ளடங்குதல்;* to close, as flower, umbrella; to be furled, drawn in, as the limbs of tortoise. *6. ஒழுக்கம் முதலியவற்றினின்று தவறுதல்;* to fail, as in duty. "சொல்லின பரிசிற் சுருங்கலன்" *(பதினொ. திருக்கண்ணப்ப. திருமறம். வரி, 52).*

ம. சுருங்குக; க. சுர்கு; தெ. சுருண்கு; து. சுருண்டினி, சுருட்டனி; கோத. சுர்க்; துட. தூட்; கொலா. சுக்; பர். சுர்க்; பட. சுருங்கு

[சுள் → சுர் → சுரு → சுருங்கு-,]

சுருங்குகண் *šuruṅgu-kaṇ,* பெ. (n.) *1. சுருங்கண் பார்க்க;* see *šuruṅgaṇ.* *2. முதுமையில் ஏற்படும் கண் சுருக்கம்;* shrunken eye due to old age.

[சுருங்கு + கண்]

சுருங்குசதை *šuruṅgu-šadai,* பெ. (n.) *உடம்புத் துளையை அடைப்பதற்கு ஏதுவான சுற்றிலுமுள்ள சதைகள்;* the circular muscles which contract and close the natural apertures orifices- sphincter muscle- constrictor muscle (சா. அக.).

[சுருங்கு + சதை]

சுருங்குதசை *šuruṅgu-dašai,* பெ. (n.) *சுருங்கு சதை பார்க்க;* see *šuruṅgu-šadai.*

[சுருங்கு + தசை]

சுருங்கை *šuruṅgai,* பெ. (n.) *1. நீர் முதலியன செல்லுதற்கு நிலத்துள் கற்களால் கரந்து படுத்தவழி;* subterranean passage, underground channel, covered gutter, sewer. "பெருங்குள மருங்கிற் சுருங்கைச் சிறுவழி" *(மணிமே. 12, 79).* *2. கோட்டையிற் கள்ளவழி* (சூடா.); secret passage in a fortress. *3. நுழைவாயில்* (பிங்.); creep-hole, low entrance to creep through. *4. மாளிகையின் சாளரம்;* window-like opening in walls of big buildings. "மாடமேற் சுருங்கையிலிருந்து . . . மாநகரணி பார்த்திடும்" *(சீகாளத். பு. நக்கீர. 30).*

[சுருங்கு → சுருங்கை]

சுருசி *šuruši,* பெ. (n.) *நாவல் மரம்;* jambu tree.

சுருசுரு-த்தல் *šurusuru-,* 4 செ.கு.வி. (v.i.) *1. ஒலித்தல்* (தொல். சொல். 48, சேனா); to hiss, as dry combustibles when ignited. *2. ஊக்கமாதல்;* to be active.

து. சுருசுரு.

சுருசுருப்பு *šurušuruppu,* பெ. (n.) *1. ஊக்கம்* (கொ.வ.); diligence; activity. *2. தளராத விறுவிறுப்பு;* brisk activity.

[சுருசுரு → சுருசுருப்பு]

சுருசுரெனல் *šurušureṉal,* பெ. (n.) *1. வேகத்தோடு தீப்பற்றுதற் குறிப்பு;* expr. signifying rapid burning as of dry combustibles. *2. வலித்தற் குறிப்பு;* twitching with pain. *3. உடல் சுடுதற் குறிப்பு;* feeling hot in the body. 'உடம்பு சுருசுரென்றிருக்கிறது' *(உ.வ.).*

[சுருசுரு + எனல்]

சுருட்காய் *šuruṭ-kāy,* பெ. (n.) *சுண்டைக்காய் பார்க்க;* see *šuṇḍai-k-kāy.*

[சுருள் + காய்]

சுருட்கொண்டை *šuruṭ-koṇḍai,* பெ. (n.) *மயிர் முடிவகை;* hair dressed in a particular way.

[சுருள் + கொண்டை]

சுருட்கொள்(ளு)-தல் *šurut-kol-,16* செ.கு.வி. (v.i.) சுருண்டு விழுதல்; to faint from weakness; to wilt, as vegetation. "சோலையும் வெஞ்சுருட் கொண்டது வெப்பால்" (திருவாலவா. 37:41).

[சுருள் + கொள்-,]

சுருட்டல் *šuruttal,* பெ. (n.) சுருட்டிக்கொள்ளல் பார்க்க; see *šurutti-k-kollal.*

ம, சுருட்டல்

[சுருட்டு + அல். 'அல்' தொ.பெ.ஈறு]

சுருட்டி *šurutti,* பெ. (n.) 1. மயிர்ச்சிகைப்பூடு (மலை.); peacock's crest plant; sickle leaf. 2. எடுபிடி வகை; an item of royal paraphernahia borne in procession. "சந்திரோதயம் போற் றயங்குஞ் சுருட்டி வர" (கூளப்ப. 69). 3. மரியாதையாகப் பெரியோர் திருமுன் சுருட்டி வீசப்படும் பாவாடை (இ.வ.); cloth waved before great persons to serve as fan. 4. பட்டுச் சீலைச்சுருட்டு (சங்.அக.); roll of silk. 5. ஒருவகைப் பண்; a kind of tune.

ம. சுருட்டி

[சுருட்டு → சுருட்டி]

சுருட்டிக்காரன் *šurutti-k-käran,* பெ. (n.) அரசர், முதலியோரது உலாவில் சுருட்டி விருது எடுப்பவன் (T.A.S. 1. 150); one who carries šurutti in processions.

[சுருட்டி + காரன்]

சுருட்டிக்கொள்(ளு)-தல் *šurutti-k-kol(lu)-,* 6 செ.குன்றாவி. (v.t.) தந்திரமாய்க் கைப்பற்றுதல் (வின்.); to carry off, remove by stratagem.

[சுருட்டி + கொள்(ளு)-,]

சுருட்டிக்கொள்ளல் *šurutti-k-kollal,* பெ. (n.) 1. சுருண்டு கொள்ளுகை; winding into round folds coiling reptiles do. 2. களைப்படைகை; to be fatigued; lying tired (சா.அக.).

[சுருட்டி + கொள்ளல்]

சுருட்டிப்பிடி¹-த்தல் *šurutti-p-pidi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. வயிற்றில் சுருட்டி வலித்தல்; twisting and gripping pain as in the bowls. 'வயிறு சுருட்டிப் பிடிக்கிறது' (உ.வ.). 2. நோய் முதலியன உடலை மெலிவித்தல்; to prostrate, reduce to extreme physical weakness, as disease. 'நோய் இவனைச் சுருட்டிப் பிடித்து விட்டது' (உ.வ.).

[சுருட்டி + பிடி-,]

சுருட்டிப்பிடி²-த்தல் *šurutti-p-pidi-,* 4 செ.கு.வி. (v.i.) வலியுண்டாகும்படி பசியால் குடல் சுருட்டப்படுதல்; to experience wringing sensation, as stomach with excessive hunger.

[சுருட்டி + பிடி-,]

சுருட்டிமடக்கு-தல் *šurutti-madakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. சுருட்டிக்கொள்-தல் பார்க்க; see *šurutti-k-kol-.* 2. சொற்போர் மற்போர் முதலியவற்றில் பிறரைக் கீழ்ப்படுத்துதல்; to overthrow as in debate, wrestling, etc.

[சுருட்டி + மடக்கு-,]

சுருட்டிமூலி *šurutti-mūli,* பெ. (n.) பொன் முசுட்டை; Indian pareira gravel plant.

[சுருட்டி + மூலி]

சுருட்டியடி-த்தல் *šurutti-y-adi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. சுழற்றித்தள்ளுதல்; to rush on violently, as whirlwind; to rage, as epidemic. 2. சுருட்டி மடக்கு, 2 பார்க்க; see *šurutti-madakku,2.*

[சுருள் → சுருட்டு → சுருட்டி + அடி-,]

சுருட்டியிழுத்தல் *šurutti-y-iluttal,* பெ. (n.) நரம்பிழுப்பு நோய்; twitching of the nerve.

[சுருட்டு → சுருட்டி + இழு-,]

சுருட்டிவாங்கு¹-தல் *šurutti-vāngu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மூச்சு இழுப்போடு வெளிவருதல்; to be convulsive; spasmodic, as breathing. 'அவனுக்கு மூச்சு சுருட்டி வாங்குகிறது' (உ.வ.).

[சுருட்டி + வாங்கு-,]

சுருட்டிவாங்கு²-தல் *šurutti-vāngu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. வருத்துதல் (வின்.); to oppress, to tyrannise over. 2. சுருட்டிப்பிடி (இ.வ.) பார்க்க; see *šurutti-p-pidi-.*

[சுருட்டி + வாங்கு-,]

சுருட்டு[1]-தல் *šuruṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. சுருளச்செய்தல்; to roll up, coil, curl. "பைந்நாகப் பாய்சுருட்டிக்கொள்" (குருபரம். 19, ஆறா.). 2. கவர்தல், திருடுதல்; to take away, steal. 'என் பொருட்களைச் சுருட்டப் பார்க்கிறான்'.

ம. சுருட்டு; க. சுருடு, சுருண்டு; தெ. தொரல்சு

[சுருள் → சுருட்டு]

சுருட்டு[2] *šuruṭṭu,* பெ. (n.) 1. சுருட்டுகை; curling, coiling. 2. சுருள்; anything rolled up. 3. புகையிலைச் சுருட்டு; cheroot, cigarette. 4. சுருட்டுப் பட்டு (இ.வ.) பார்க்க; see *šuruṭṭu-p-paṭṭu.* 5 தந்திரம் (யாழ்.) சூழ்ச்சி; shrewdness, cunning.

ம. சுருட்டு; தெ. சுட்டலு

[சுருள் → சுருட்டு]

சுருட்டுக்கிடங்கு *šuruṭṭu-k-kiḍaṅgu,* பெ. (n.) புகைச்சுருட்டு செய்யும் தொழிற்சாலை. (உ.வ.); cigar factory.

[சுருட்டு + கிடங்கு]

சுருட்டுக்குடி-த்தல் *šuruṭṭu-k-kuḍi-,* 4 செ.கு.வி. (v.i.) சுருட்டுப்புகையை உட்கொண்டு வெளியிடல் (உ.வ.); to smoke cigar, cigarette, etc.

[சுருட்டு + குடி-,]

சுருட்டுக்கொழுக்கட்டை *šuruṭṭu-k-koḻu-k-kaṭṭai,* பெ. (n.) ஒருவகைக் கொழுக்கட்டைப் பணியாரம் (யாழ்.); a kind of pastry.

[சுருட்டு + கொழுக்கட்டை]

சுருட்டுப்பட்டு *šuruṭṭu-p-paṭṭu,* பெ. (n.) உயர்ந்த வகைப்பட்டு (உ.வ.); a kind of superior silk.

[சுருட்டு + பட்டு]

சுருட்டுப்பாசி *šuruṭṭu-p-pāši,* பெ. (n.) கடற்பாசி; sea moss.

[சுருட்டு + பாசி]

சுருட்டுவாதம் *šuruṭṭu-vādam,* பெ. (n.) கை கால்களை முடக்கும் ஒருவகை முடக்குநோய்; a chronic inflammation of the joints of arms and legs with deformity.

[சுருட்டு + வாதம்]

Skt. vāta → த. வாதம்

சுருட்டுவாள் *šuruṭṭu-vāḷ,* பெ. (n.) சுருளும் வாள் வகை (சங்.அக.); a kind of sword with rollable blade.

[சுருட்டு + வாள்]

சுருட்டை *šuruṭṭai,* பெ. (n.) 1. சுருண்டமுடி; curly hair. 2. சுருட்டை மயிருள்ள பிள்ளை; curly haired boy or girl. 3. மிளகாய்ச்செடிக்கு வரும் இலை சுருண்டு கொள்ளும் நோய்; a disease attacking the chilly plant, mainly in leaves.

ம. சுருட்ட

[சுள் → (சுரு) → சுருள் = சுருண்ட பொருள். சுருள் → சுருட்டு → சுருட்டை]

சுருட்டைக்கழலை *šuruṭṭai-k-kaḻalai,* பெ. (n.) சுருட்டிக் கொண்டிருப்பதைப் போலக் காணப்படும் ஒருவகைக் கழலை; skin tumour having the look of coil of intestine.

[சுருட்டை + கழலை]

சுருட்டைத்தலை *šuruṭṭai-t-talai,* பெ. (n.) சுருள்சுருளாகத் தலைமுடியுள்ள தலை; head having curly hair.

[சுருட்டை + தலை]

சுருட்டைநரம்பு *šuruṭṭai-narambu,* பெ. (n.) முடிச்சுகள் போலக் காணப்படும் கருநிற அரத்த நாளங்கள் தளர்ந்து சுருண்டு கிடக்கும் நோய் வகை; enlarged veins appearing like knots; varicore veins (சா.அக.).

[சுருட்டை + நரம்பு]

சுருட்டைப்பாம்பு *šuruṭṭai-p-pāmbu,* பெ. (n.) ஒருவகை நச்சுப்பாம்பு (வின்.); a kind of venomous snake.

ம. சுருட்டப்பாம்பு

[சுருட்டை + பாம்பு]

சுருட்டைமயிர் *šuruṭṭai-mayir,* பெ. (n.) சுருள்முடி; curly hair.

மறுவ. அலைமுடி, சுருட்டை முடி, சுருட்டை

[சுருட்டை + மயிர்]

சுருட்டையட்டை *šuruṭṭai-y-aṭṭai,* பெ. (n.) தொட்டால் சுருட்டிக்கொள்ளுவதும்

அரத்தம் உறிஞ்சுவதுமாகிய ஒருவகை அட்டை; a leech which curls when touched.

[சுருட்டை + அட்டை]

சுருட்டைவிரியன் *šuruttai-viriyan,* பெ. (n.) விரியன் பாம்புவகை (M.M.); carpet snake.

[சுருட்டை + விரியன்]

இது சிறியதாயும் புகர் (கபில) நிறமாயும், ஓரத்தில் கருப்பாயுள்ள வெண்புள்ளிகளை உடையதாயுமிருக்கும். சீறிப்பாயும் குண முடையது. விரியன் பாம்புகளில் மிகவும் கொடிய நஞ்சுண்டு.

சுருட்டைப் பாம்பு வகைகள்

1. இரத்தச்சுருட்டை
2. அரணைவாற்சுருட்டை
3. நெடுஞ்சுருட்டை
4. செஞ்சுருட்டை
5. குறுஞ்சுருட்டை
6. ஊதுசுருட்டை
7. விரல (அங்குல)ச்சுருட்டை

சுருட்பட்டை *šurut-pattai,* பெ. (n.) பப்பிளி (L.); red creeper.

தெ. சுருகுதுப்பட்ட

[சுருள் + பட்டை]

சுருட்பள்ளம் *šurut-pallam,* பெ. (n.) காதின் மேல் வளைவின் பள்ளம்; the margin of the pinna of the ear; helix.

[சுருள் + பள்ளம்]

சுருண்டுபோ-தல் *šurundu-pō-,* 8 செகுவி. (v.i.) 1. சோர்வடைதல்; to get exhausted. 2. வலிமை குன்றல்; to become weak. 3. ஒடுங்குதல்; a state of extreme prostration and depression. தோல்வி, இந்திய அணியின் பந்து வீச்சுத் தாளாமல் இலங்கை அணி சுருண்டு போனது. 4. வாடியொடுங்குதல்; to droop, as under scorching sun; to be weakened, as by disease. 5. இறத்தல்; to die.

[சுருள் → சுருண் → சுருண்டு + போ-,]

சுருண்டுவிழல் *šurundu-vilal,* தொ.பெ. (vbl.) மெலிவினால் மயங்கி விழுகை; drooping down from fatigue.

[சுருண்டு + விழல். 'அல்' தொ.பெ.ஈறு]

சுருண்டைக்காய் *šurundai-k-kāy,* பெ. (n.) சுண்டைக்காய் பார்க்க; see *šundai-k-kāy.*

[சுருண்டை + காய்]

சுருணி *šuruni,* பெ. (n.) 1. தொழுகண்ணி; unidentified plant. 2. யானைத்தோட்டி (சங்.அக.); elephant goad (செ.அக.).

சுருணை *šurunai,* பெ. (n.) 1. சுருட்டி வைத்த பொருள்; anything rolled up. 'இலைச் சுருணை' (நெல்லை.). 2. கணக்கு எழுதப்பட்ட ஓலைச் சுருள் (திவ். பெரியாழ். 5, 2, 2, வியா.); roll of ōla accounts. 3. சாணிச் சுருணை; rags for mopping the floor, especially with cow-dung mixture. 4. தீப்பற்றுதற்குரிய பந்தம்; ball of cloth twisted in torch for lighting. "நெருப்பானது சுருணையை வேவப்பண்ணி" (ஈடு. 5, 4, 6). 5. பூண்; ferrule, metallic cap. "கனையிருஞ் சுருணைக் கனிகாழ் நெடுவேல்" (அகநா. 113). 6. கட்டட வளைவு வகை (வின்.); a kind of curve in architecture.

[சுருள் → சுருன் → சுருணை]

சுருணைகட்டு-தல் *šurunai-kattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நெல்விதையைக் கோட்டையாகக் கட்டி வைத்தல் (இ.வ.); to store in straw bundles, as paddy seeds.

[சுருணை + கட்டு-,]

சுருணைவெள்ளை *šurunai-vellai,* பெ. (n.) புன்செய்யில் பயிராகும் நெல்வகை; a kind of paddy raised on dry land.

[சுருணை + வெள்ளை]

சுருபவேர் *šurubavēr,* பெ. (n.) அந்திமல்லிகை; a flower which blossoms in the evening twilight (சா.அக.).

மறுவ. அந்தி மந்தாரை, அந்திப்பூ

சுரும்பர் *šurumbar,* பெ. (n.) 1. வண்டு, சுரும்பு (சூடா.); bee. 2. ஆண் வண்டு; male bee, drone.

[சுரும்பு → சுரும்பர்]

சுரும்பாநோய் *šurumbānōy,* பெ. (n.) மூளைக்கோளாறினால் அடிக்கடி முறுக்குக் கொட்டாவி விடும் நோய்; the act of stretching and yawning frequently by the disorder in the cerebral system (சா.அக.).

[சுரும்பா + நோய்]

சுரும்பாயன் *śurumbāyaṉ*, பெ. (n.) சுரும்பாவன் (சங்.அக.) பார்க்க; see *śurumbāvaṉ*.

சுரும்பாவன் *śurumbāvaṉ*, பெ. (n.) வண்டாகிய வின்னாணை உடைய காமன் (யாழ்.அக.); Kāma, the Hindu Cupid, as having bees for his bow-sting.

மறுவ. மதன், மாறன்

[சுரும்பு → சுரும்பாவன்]

சுரும்பி-த்தல் *śurumbi-*, 4 செ.கு.வி. (v.i.) ஒலித்தல்; to hum, as bees. "சுரும்பித்த வண்டினங்கள்" (தேவா. 969, 4).

[சுரு → சுரும்பி-,]

சுரும்பு[1] *śurumbu*, பெ. (n.) 1. வண்டு; bee. "சுரும்பு மூசாச் சுடர்ப்பூங்காந்தள்" (திருமுரு. 43). 2. ஆண் வண்டு (திவா.); male bee, drone. 3. மலை (சூடா.); mountain. "சுரும்பறை மணித்தோள்" (மணிமே. 20:107).

[சுரு → சுரும்பி → சுரும்பு]

சுரும்பு[2] *śurumbu*, பெ. (n.) 1. சுதும்பு பார்க்க; see *śudumbu*. 2. மலைவண்டு; mountain beetle (சா.அக.).

[சுதும்பு → சுரும்பு]

சுருமா *śurumā*, பெ. (n.) ஈயத்தைப்போல் சாம்பல்நிறமாய் இருக்கும் கருநிமிளை; native sulphide of antimony (சா.அக.).

மறுவ. சுக்கான்கல், சுருமாக்கல்

Persn. surmā

சுருமாரம் *śurumāram*, பெ. (n.) சாரணை; purslane-leaved trianthema (சா.அக.).

சுருமாலாடு *śurumā-lāḍu*, பெ. (n.) ஒருவகைப் பணியாரம் (இந்து பாக. 379); a confection ball.

மறுவ. சுருமாலட்டு

சுருவம்[1] *śuruvam*, பெ. (n.) 1. வேள்விகளில் பயன்படுத்தும் நெய்த் துடுப்பு; a ladle used to pour clarified butter in sacrificial fire. "சீரைச் சுருக்குச் சுருவமெலாம்" (உத்தரரா. அனுமப். 41). 2. ஒருவகை அகப்பை (அக.நி.); a kind of ladle.

சுருவம்[2] *śuruvam*, பெ. (n.) வடிவம்; image. "நரசிங்கமெனுஞ் சுருவத்தொடு" (பிரபோத. 19:16).

[உருவம் → சுருவம்]

சுருவவாசனி *śuruvavāsaṉi*, பெ. (n.) கற்றாழை; aloes (சா.அக.).

சுருவை *śuruvai*, பெ. (n.) சுருவம்,1 பார்க்க; see *śuruvam*,1. "அந்தணாளர்க்குச் சுருவையும் சமிதை குறைக்குங் கருவியு முதலாயின" (தொல். பொருள். 629, உரை).

[சுருவம் → சுருவை]

சுருள்[1](ளு)-தல் *śuruḷ-*, 16 செ.கு.வி. (v.i.) 1. சுருளாதல்; to become coiled; to roll; to curl, as hair. "நீண்டு குழன்று . . . கடைசுருண்டு" (கம்பரா. உருக்காட்டு. 57). 2. சுருங்குதல்; to shrivel, shrink, as leaf. 3. சோர்தல்; to droop, as from heat, hunger. 4. துன்பத்திற்குள்ளாதல்; to be reduced to severe straits.

[சுள் → (சுரு) → சுருள் (மு.தா. 247)]

சுருள்[2] *śuruḷ*, பெ. (n.) 1. சுருட்டை; curl; coil. 2. தாமரை உட்சுருள்; the inner fold of the young lotus flower. "தாமரை மென் சுருள்" (சூளா. நாட்டுப் 18). 3. சுருள்பட்டை பார்க்க; see *śuruḷ-paṭṭai*. 4. பெண்மயிர்; ஐம்பான் முடிகளுள் ஒன்று; கூந்தல், அளகம்; female hair curled and tied up.

[சுள் → (சுரு) → சுருள்]

சுருள்[2] *śuruḷ*, பெ. (n.) 1. சுருளுகை; rolling. 2. சுருண்ட பொருள்; roll, scroll, curl. 3. கட்டு; bundle, as of leaves. 'இலைச் சுருள்' (உ.வ.) 4. ஓலைச்சுருளின் மடிப்பு; fold of an ōlā roll. "சுருள்பெறு மடியை நீக்கி" (பெரியபு. தடுத்தாட். 58). 5. மகளிர் காதணி வகை; women's ear ornament. "செம்பொன் செய் சுருளுந் தெய்வக் குழைகளும்" (கம்பரா. பூக்கொய். 5). 6. வெற்றிலைச் சுருள்; roll of betel leaves. "சுருளைச் சேடியர் செப்பொடு மேந்த" (சீவக. 197, உரை). 7. திருமணத்தில் மணமக்களுக்கு வெற்றிலைத் தட்டுடன் கொடுக்கும் பரிசு (இ.வ.); presents with betel given to bride and bride-groom.

க. சுருளி; ம. சுருள்; து. சுருள்

[சுரு → சுருள்]

சுருள்கல் *śuruḷ-kal,* பெ. (n.) ஒருவகைக் கல்; ring stone.

[சுருள் + கல்]

சுருள்தங்கம் *śuruḷ-taṅgam,* பெ. (n.) இழைப்பிற் குதவும் மெல்லிய தங்கத் தகடு (உ.வ.); gold leaves.

[சுருள் + தங்கம்]

சுருள்தேவதாரு *śuruḷ-dēvadāru,* பெ. (n.) சீமைச் செம்மரம்; long-leaved pine.

[சுருள் + தேவதாரு]

சுருள்நாரி *śuruḷ-nāri,* பெ. (n.) மலையில் வளர்வதும், காயகற்பத்திற்கேற்றதுமான மயிர்மரம் என்னும் பெருமூலிகைகள் இருபத்து மூன்றில் ஒன்று; an unknown tree said to be rarely found on mountain tops, as one of the twenty three all healing drugs of high potency, capable of rejuvenating the system (சா.அக.).

[சுருள் + நாரி]

சுருள்பட்டை *śuruḷ-paṭṭai,* பெ. (n.) சாயப் பட்டை; dye root of red creeper bark or felse, peacock's foot tree (சா.அக.).

மறுவ. வேட்பாடம் பட்டை, செங்கத்தாரிப் பட்டைக்கொடி

[சுருள் + பட்டை]

சுருட்டுப்பட்டை பார்க்க

சுருள்பட்டைக்கொடி *śuruḷ-paṭṭai-k-koḍi,* பெ. (n.) சுருள்பட்டை பார்க்க; see *śuruḷ-paṭṭai* (சா.அக.).

[சுருள் + பட்டை + கொடி]

சுருள்பலகாரம் *śuruḷ-palakāram,* பெ. (n.) சீப்புப்பணியாரம்; a kind of pastry.

[சுருள் + பலகாரம்]

சுருள்பாக்கு *śuruḷ-pākku,* பெ. (n.) கொட்டைப் பாக்கிலிருந்து எந்திரத்தால் சீவப்பட்ட சுருள் வடிவச் சீவல்; curled shavings of areca-nut.

[சுருள் + பாக்கு]

சுருள்பீலி *śuruḷ-pīli,* பெ. (n.) மகளிர் தம் காலின் மூன்றாம் விரலில் அணியும் ஆழி; ring worn by women on the third toe.

மறுவ. மிஞ்சி

[சுருள் + பீலி]

சுருள்பூச்சி *śuruḷ-pūcci,* பெ. (n.) நிலக்கடலைச் செடியை அரித்துக் கெடுக்கும் இலைப் பூச்சி வகை; insect which blights groundnut plant.

[சுருள் + பூச்சி]

சுருள்வை-த்தல் *śuruḷ-vai-,* 4 செ.கு.வி. (v.i.) மணமக்களுக்கு வெற்றிலைப் பாக்குடன் பரிசுப் பொருள் அளித்தல் (இ.வ.); to offer presents with betel to bride and bridegroom.

[சுருள் + வை-,]

சுருளட்டை *śuruḷ-aṭṭai,* பெ. (n.) சுருண்டு கொள்ளும் ஒருவகை அட்டைப்பூச்சி; a leech capable of coiling round.

[சுருள் + அட்டை]

சுருளமுது *śuruḷ-amudu,* பெ. (n.) வெற்றிலைப் பாக்கு; betel and areca-nut, a term of respectful offering. "சுருளமுது முதலானதும்" (கோயிலொ. 62).

[சுருள் + அமுது]

சுருளல் *śuruḷal,* பெ. (n.) மயிர் முதலியவற்றின் சுருள் (வின்.); ringlet, coil.

[சுருள் → சுருளல்]

சுருளவதக்கல் *śuruḷa-vada-k-kal,* பெ. (n.) பச்சிலையைச் சுருங்கும்படி வாட்டல்; roasting leaves for medicinal purposes till they are completely shrunk (சா.அக.).

[சுருள் → சுருள + வதக்கல்]

சுருளவாட்டு-தல் *śuruḷa-vāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. வருந்தவேலை வாங்குதல்; to exact hard work from. 2. சுருட்டிப்பிடி- பார்க்க; see *śuruṭṭi-p-piḍi-.*

[சுருள் → சுருள + வாட்டு-,]

சுருளி *śuruḷi,* பெ. (n.) 1. தலைச்சுருளி; Indian birth wort. 2. தொழுகண்ணி (சங்.அக.); telegraph plant. 3. சந்தனவேம்பு; sandal neem.

4. சாவக நாட்டுப் பூமரம்; Java flower tree (சா.அக.).

[சுருள் → சுருளி]

சுருளிமாமுனி *šuruḷi-māmuṉi,* பெ. (n.) செடிவகை, குறிஞ்சிப்பூடு; wing stemmed cone head (சா.அக.).

[சுருளி + மாமுனி]

சுருளுப்பட்டை *šuruḷu-p-paṭṭai,* பெ. (n.) செங்கத்தாரிப்பட்டை; bark of the false peacock's foot tree.

மறுவ. வெம்பாடம்பட்டை, வேட்பாடம் பட்டை, சாயப்பட்டை

[சுருள் → சுருளு + பட்டை]

சுருளுப்பூலா *šuruḷu-p-pūlā,* பெ. (n.) நச்சுப் பூலா என்னும் மூலிகை; poisonous poolah (சா.அக.).

[சுருள் → சுருளு + பூலா]

சுருளெடு-த்தல் *šuruḷ-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) மணமக்கள் பரிசுப்பொருளை ஏற்றுக் கொள்ளுதல்; to accept presents given on one's marriage occasion.

[சுருள் + எடு-,]

சுருளை *šuruḷai,* பெ. (n.) 1. சுருள்; coil, roll. 2. குருத்து; tender shoot. "வாழையுள்ளெழு சுருளை வாங்கி" (சூளா. சுயம். 87). 3. காதணி வகை; an ear ornament. "செம்பொன் செய் சுருளை மின்ன" (சூளா. சுயம். 79).

க. சுருளை

[சுருள் → சுருளை]

சுரே *šurē,* பெ. (n.) கொத்தான்; green thread creeper.

மறுவ. முடக்கொற்றான்; முடக்கறுத்தான்

சுரை[1] *šurai,* பெ. (n.) 1. சுரக்கை; streaming, flowing, as of milk. "கடுஞ்சுரை நல்லான்" (குறுந்.132). 2. பெற்றம் முதலியவற்றின் மடி; udder, teat of cow and other animals. "வருடை மான்மறி சுரைபொழி தீம்பால்" (குறுந். 187). 3. கறவை ஆன் (திவா.); milch cow. "சுரைமலி யமிர் தீம்பால்" (சூளா. தூது. 90). 4. ஒருவகைக் கொடி; calabash, climber. "சுரைவித்துப் போலுந்தம் பல்" (நாலடி. 315).

ம. சுர; க. சொரெ

[சுர → சுரை]

சுரை[2] *šurai,* பெ. (n.) 1. கள் (திவா.); toddy. "புரையுற்றிடு சுரையூன் றுய்யுற்றவள்" (கந்தபு. அசமுகிப். 7). 2. தேன்; honey. "வாவிக் கமலச் சுரைதேக்கி" (கம்பரந். 72).

[சுர → சுரை]

சுரை[3] *šurai,* பெ. (n.) 1. குழிந்த இடம்; hollowness, hollow interior of a vessel. "பாத்திரத் தகன்சுரைப் பெய்த வாருயிர் மருந்து" (மணிமே. 11:117). 2. உட்டுளை (பிங்.); tubularity, cavity. 3. மூங்கிற்குழாய்; bamboo tube. "அகன்சூலஞ்சுரைப் பெய்த வல்சியர்" (அகநா. 113). 4. திரிக்குழாய்; a kind of oil-can. "சொரிசுரைக வருநெய்" (பதிற்றுப். 47). 5. திருகாணியைச் செலுத்தும் சிறுகுழாய்; female screw. 6. மூட்டுவாய்; joint. "சுரையம்பு மூழ்க" (கலித். 6). 7. அம்புத்தலை. (அக.நி.); head of an arrow. 8. பூண்; ferrule. "செறிசுரை வெள்வேல்" (அகநா. 216). 9. கூரான கடப்பாரை வகை; a kind of sharp crow - bar. "உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி" (பெரும் பாண். 92).

[சுர → சுரை]

சுரை[4] *šurai,* பெ. (n.) சுரைக்கொடி பார்க்க; see *šurai-k-koḍi* (சா.அக.).

சுரைவகைகள்:

1. கற்சுரை
2. பேய்ச்சுரை
3. காய்ச்சுரை
4. கறிச்சுரை
5. காட்டுக்காய்ச்சுரை
6. காட்டுச்சுரை
7. கும்பச்சுரை
8. கருஞ்சுரை
9. கின்னரச்சுரை
10. பாத்திரச்சுரை.



சுரைக்கந்தகம் *śurai-k-kandagam,* பெ. (n.) ஒரு வைப்புச்சரக்கு, நாற்றமில்லாத கந்தகம், நெருப்பிற்கு இளகி ஓடாத தன்மையுடையது; brim stone in round pieces or sticks, prepared sulphur, which is odourless and not melting or affected by fire *(சா.அக.).*

[சுரை + கந்தகம்]

சுரைக்கந்தி *śurai-k-kandi,* பெ. (n.) 1. சுரைக் கந்தகம் பார்க்க; see *śurai-k-kandagam.* 2. வாணகந்தி; sulphur used in fire works. 3. மச்சமுனி 800இல் கூறியபடியான துருசு, நாகம், இரசம், வீரம், இலிங்கம், மனோசிலை, அரிதாரம், சத்திசாரம் ஆகியவற்றினாலாகிய மருந்துப் பொடி; it is a kind of prepared sulphur copper sulphate, zinc, mercury, corosire sublimate, cinnabar, red orpiment, yellow orpiment and sathi sarnam powdered and burnt,as told by Matcha muni 800. The resultant is surai-k-kendi *(சா.அக.).*

[சுரை + கந்தி]

சுரைக்கரந்தை *śurai-k-karandai,* பெ. (n.) கரந்தைவகை (வின்.); fever basil.

மறுவ. சுரக்கரந்தை

[சுரை + கரந்தை]

சுரைக்கருவி *śurai-k-karuvi,* பெ. (n.) நெஞ்சாங்குலை; the heart.

[சுரை + கருவி]

சுரைக்காய் *śurai-k-kāy,* பெ. (n.) வயிற்று வலியை ஆற்றுவதும், நுண்ணுயிரிகளை அழிப்பதும், உருண்டையான தடித்த அடிப் பகுதியையும் சிறுத்த மேற்பகுதியையும் உடைய வெளிர்பச்சை நிறக்காய்; fruit of bottle gourd which reduces the stomach pain, kills germs.

[சுரை + காய்]

சுரைக்காய்க்கந்தகம் *śuraikkāy-k-kandagam,* பெ. (n.) சுரைக்கந்தகம் பார்க்க; see *śurai-k-kandagam.*

சுரைக்காய்முலை *śuruaikkāy-mulai,* பெ. (n.) தளர்ந்தமுலை; a loose breast *(சா.அக.).*

[சுரை + காய் + முலை]

சுரைக்குடம் *śurai-k-kuḍam,* பெ. (n.) சுரைக் காயால் அமைந்த குடம்; a pitcher - like vessel made of the shell of bottle-gourd. "சுரைக்குட மெடுத்து . . . தெளிபுன லுண்டும்" *(கல்லா.12).*

[சுரை + குடம்]

சுரைக்குடுக்கை *śurai-k-kuḍukkai,* பெ. (n.) சுரைக்காய் ஒட்டுக்குப்பி; bowl made of the shell of bottle-gourd.

[சுரை + குடுக்கை]

சுரைக்குடுக்கைக்கின்னரம் *śurai-k-kuḍukkai-k-kinnaram,* பெ. (n.) சுரைக்குடுக்கையால் அமைந்த, வாச்சிய வகை (வின்.); lute with calabash of bottle-gourd shell.

[சுரை + குடுக்கை + கின்னரம்]

சுரைக்குழல் *śurai-k-kuḻal,* பெ. (n.) சிறுநீர்க் குழல்; the coiled corticle portion of the urinary tube - spiral tubule *(சா.அக.).*

[சுரை + குழல்]

சுரைக்கெந்தி *śurai-k-kendi,* பெ. (n.) வாண கெந்தி; sulphur used in fire works *(சா.அக.).*

[சுரை + கெந்தி]

சுரைக்கொடி *śurai-k-koḍi,* பெ. (n.) குடுவை வடிவத்தில் காய் தரும் ஒருவகைப் படரும் கொடி; bottle-gourd climber.

[சுரை + கொடி]

சுரைச்செப்பு *śurai-c-ceppu,* பெ. (n.) சுரைக் குடுக்கை பார்க்க; see *śurai-k-kuḍukkai.*

[சுரை + செப்பு]

சுரைபவனி *śurai-bavaṉi,* பெ. (n.) கள்; toddy.

[சுரை + பவனி]

சுரைப்பரணி *śurai-p-paraṇi,* பெ. (n.) சுரையிலை; leaf of bottle gourd creeper *(சா.அக.).*

[சுரை + பரணி]

சுரைப்பழம் *śurai-p-paḻam,* பெ. (n.) 1. பழுத்த சுரைக்காய்; riped fruit of bottle gourd. 2. பயனற்றவன்; worthless person. 'தம்பி சுரைப்பழம்' (வின்.).

[சுரை + பழம்]

சுரையிலந்தை *śurai-y-ilandai,* பெ. (n.) ஒருவகை யிலந்தைப் பழம்; gourd jujube (சா.அக.).

[சுரை + இலந்தை]

சுரையிலை *śurai-y-ilai,* பெ. (n.) கீரையாக உண்ணப்படுவதும், உடம்புவீக்கம், முக்குற்றம் போக்குவதும், மலத்தை இளக்குவதும் சிறுநீர்ப்பெருக்கியுமான சுரையின் இலை; bottle gourd leaf useful in cases of anemia, swelling due to dropsy derangement of the three humours in the system which is used as laxative and digestive (சா.அக.).

[சுரை + இலை]

சுரையிலைச்சுவரம் *śurai-y-ilai-c-cuvaram,* பெ. (n.) 1. சூரல் இனச் சிறுமர வகை; spleen tree. 2. செம்மரம்; red tree (சா.அக.).

[சுரையிலை + சுவரம்]

சுரைவிளக்கு *śurai-viḷakku,* பெ. (n.) மருந் தெரிக்கப் பயன்படும் விளக்கு; lamp used for heating medicine (சா.அக.).

[சுரை + விளக்கு]

சுல்லம் *śullam,* பெ. (n.) செம்பு (மலை.); copper. "சுல்வதீதா லமைத்த நெடுங்களத்தின்" (சேதுபு.தனுக்கோ. 9).

[சுல் → சுல்லு → சுல்லம்]

சுல்லி *śulli,* பெ. (n.) 1. அடுப்பு (திவா.); oven. "சுல்லி யுரலுலக்கை" (சைவச.பொது.266). 2.மடைப்பள்ளி (இலக்.அக.); kitchen.

[சுல் → சுல்லி]

சுல்லு *śullu,* பெ. (n.) வெள்ளி (சூடா.); silver.

[சுல் → சுல்லு]

சுல்வம் *śulvam,* பெ. (n.) சுல்லம் பார்க்க; see *śullam.* "சுல்வதீதா லமைத்த நெடுங்களத்தின்" (சேதுபு.தனுக்கோ. 9)

[சுல் → சுல்லு → சுல்வம்]

சுலவடை *śulavaḍai,* பெ. (n.) சொலவடை; பழமொழி; proverb.

[சுலவம் + அடை]

சுலவம் *śulavam,* பெ. (n.) சொலவம் பார்க்க; see *śolavam.*

[சொலவம் → சுலவம்]

சுலவு[1]-தல் *śulavu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. சுழலுதல்; move round to revolve, hover about. "சுலவுற் றெதிர் போகிய தூவியனம்" (நைடத.அன்னத்.45).

சுலவு[2]-தல் *śulavu-,* 5 செகுன்றாவி. (v.t.) 1. சுழலச் செய்தல் (யாழ்ப்.); to coil round as a cord, to surround. "அரவூறு சுலாய்மலை தேய்க்கும்" (திவ்.திருவாய். 7. 4:2).

[சுல் → சுலவு-,]

சுலாவு[3]-தல் *śulāvu-,* 5 செ.குன்றாவி. (n.) சுலவு பார்க்க; see *śulavu-.* "விரைகமழ் சோலை சுலாவி யெங்கும்" (தேவா. 418:1).

[சுலவு → சுலாவு-,]

சுலாவு[4] *śulāvu,* பெ. (n.) காற்று; wind. "சுலாவாகி" (தேவா. 1227, 3).

[சுலவு → சுலாவு]

சுவட்டவர் *śuvaṭṭavar,* பெ. (n.) காடையைப் பழக்கிப் போர் மூட்டுபவர்; those who train quails to fight. "சொல்லுஞ் சுவட்டவர் சொல்லுக" (பு.வெ. 12, வென்றிப் 9) (செ.அக.).

[சுவடு → சுவட்டு → சுவட்டவர்]

சுவட்டிலக்கம் *śuvaṭṭilakkam,* பெ. (n.) நெல்லிலக்கம்; table of grain measure.

[சுவடு[1,7] + இலக்கம்]

சுவடன் *śuvaḍaṉ,* பெ. (n.) சுவைஞன்; person of refined taste. "சுவடர் பூச்சூடும்போது புழுகிலே தோய்த்துச் சூடுமா போலே" (திவ்.திருப்பல். 9 வியா.) (செ.அக.).

[சுவடு[2] → சுவடன், சுவடு = சுவை]

சுவடி[1] *śuvaḍi,* பெ. (n.) 1. ஏட்டுப் புத்தகம்; ōlai book. "பாட்டுப்புற மெழுதிய கட்டமை சுவடி" (பெருங். மகத. 1:121). மறுவ. ஓலைச்சுவடி. 2. பொத்தகம்; book in general. 3. கோவையாக அமைத்த ஆவணத் தொகுதி; fill bundle, as of records. "எங்கள் ஆவணங்களைச் சேர்த்துச் சுவடியாக வைத்திருக்கிறேன்' (நாஞ்.).

[சுவடு[1] → சுவடி]

சுவடி²-த்தல் *śuvaḍi-*, செ.குன்றாவி. (v.t.) தின்னுதல்; to eat, devour. *"கர்க்கடகத்தைச் சுவடிச் சியங்கும் சூனரி" (பதினோ. ஆளு. திருமும். 25).*

[சவடு → சுவடு → சுவடி-. சவட்டுதல் = மெல்லுதல், விழுங்குதல்]

சுவடி³-த்தல் *śuvaḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) ஒப்பனை செய்தல்; to decorate. "கோயிலில் இப்பொழுது வாகனஞ் சுவடிக்கிறார்கள்" *(நாஞ்.).*

[சோடி → சுவடி-,]

சுவடிசேர்-த்தல் *śuvaḍi-śēr-*, 4 செ.கு.வி. (v.i.) பிள்ளைகள் படிக்க ஏடுசேர்த்தல் *(வின்.);* to make up an ōla book for a child.

[சுவடி + சேர்-. சுவடி → எழுது-,]

சுவடியெழுது-தல் *śuvaḍi-y-eḻudu-*, 5 செ.கு.வி. (v.i.) எழுத்து எழுதப் பழகுதல்; to practise writing of the alphabet.

[சுவடி + எழுது-,]

சுவடியைக்கட்டு-தல் *śuvaḍiyai-k-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) Lit., to tie-up ōlai books. *(ஏட்டைக் கட்டுதல்).* 1. படிப்பைநிறுத்துதல்; to discontinue one's study. 2. பேச்சு முதலியவற்றை நிறுத்திவிடுதல்; to stop. close, as one's argument, action. 'மேல் பேச வேண்டாம், சுவடியைக் கட்டு' *(உ. வ.).*

[சுவடி + கட்டு-,]

சுவடு¹ *śuvaḍu*, பெ. (n.) 1. அடித்தடம்; track; foot stop. "பூவா ரடிச்சுவடென் றலை மேற் பொறித்தலுமே" *(திருவாச. 11:7).* 2. அடிச் சுவட்டின் ஒலி; காலடியோசை; noise caused by foot-fall. "செல்வர் வருகின்ற சுவட்டை யோர்ந்தான் செவிகளால்" *(கம்பரா. மருத்து மலைப். 17).* 3. ஒன்று பதிதலால் உண்டாகுங் குறி; impression "கண்கடோய் சுவடு ... தங்குமார் பினனே" *(திருவாச. 29:5).* 4. அடையாளம்; sign, indication. 'அன்னமிவை யுள்ள சுவடில்லை' *(கம்பரா. பிலநீங்கு. 40).* 5. தழும்பு *(பிங்.);* scar, cicatrice. 6. ஆற்றல் (தொல். பொருள். 558); strength, power. 7. பழக்கம் (பெருங். உஞ்சைக், 34:79, உரை.); practice, experience. 8. வழிவகை; means, method. "வினவுஞ் சுவடுதனக் கின்மையின்" *(பெருங். உஞ்சைக். 34:79).* 9. வயிரக்கவசம் *(சூடா.);* impenetrable armour. 10. சுவட்டிலக்கம் *(சூடா.):* table of grain measures. 11. 360 நெற்கொண்ட அளவு *(நாஞ்.);* a unit of grain measure, containing 360 paddy grains. 12. கட்டுதற்குக்கருவியான கயிறு முதலியவை *(வின்.);* tie; strap, as of harness; band, as of the ridge of a house. 13. அடிதாங்கி *(வின்.);* stir up.

சுவடு² *śuvaḍu*, பெ. (n.) சுவை; taste, sweetness. *"அடிமையிற் சுவடறிந்த" (ஈடு, 2. 6:5).*

[சுவை → சுவடு]

சுவண்டிலை *śuvaṇḍilai*, பெ. (n.) திருகோண மலைச் செம்மரம்; Tirukkoṇamalai red wood.

மறுவ. சவண்டிலை, சவண்டலை

[சுவண்டு + இலை]

சுவண்டு *śuvaṇḍu*, பெ. (n.) பொருத்தம்; propriety; fitness "பேய்கள்சூழ நடமாடிச் சுந்தரராய்த் தூமதியஞ் சூடுவது சுவண்டே" *(தேவா. 677. 4).*

[சுவடு² → சுவண்டு]

சுவண்டை *śuvaṇḍai*, பெ. (n.) இன்சுவை; taste. 'சுவண்டையாய்த் தின்னத் திரிகிறான்' *(உ.வ.).*

[சுவண் → சுவண்டு → சுவண்டை (வ.வ.)]

சுவணம்² *śuvaṇam*, பெ. (n.) 1. ஒருபறவை; a bird. 2. கருடன் *(சங்.அக.).* 3. கழுகு *(யாழ்.);* eagle.

"கலுழனும், கழுகும் உயரப் பறக்கும் பருந்தினத்தைச் சேர்ந்தனவாகலின் அப்பெயர் பெற்றன". "உயரவுயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?' என்னும் பழமொழியை நோக்குக.

உவணன் = கலுழன் (திவா.)

[உவணம் → சுவணம்]

ஒ.நோ. உதை → சுதை. உருள் → சுருள். உழல் → சுழல்

வடவர் சுவணம் என்பதை, ஸுபர்ண என்று திரித்தும், ஸு+பர்ண என்று பிரித்தும் அழகிய இலை, அழகிய இலையுடையது, இலைபோன்ற அழகிய சிறகுகளை உடையது, பெரும்பறவை, கலுழன் என்று பொருள் விரித்தும், தம் ஏமாற்றுத்திறத்தின் பேரெல்லையைக் காட்டியுள்ளனர்.

ஸு = நல்ல, பர்ண = இலை (வ.வ)]

சுவத்துமுள்ளங்கி *śuvattu-muḷḷaṅgi,* பெ. (n.) *சுவர்முள்ளங்கி பார்க்க;* see *śuvar-muḷḷaṅgi.*

[சுவர் + முள்ளங்கி]

சுவர் *śuvar,* பெ. (n.) 1. மேற்கூரையைத் தாங்கி நிற்பதற்கோ, காப்பு ஏற்படுத்துவதற்கோ, அறைகள் ஆக்குவதற்கோ கருங்கல், செங்கல், மண் போன்றவற்றால் எழுப்பப்படும் தடுப்பு; wall. "மரத்தினுஞ் சுவரினுங் கண்ணிய தெய்வம்" *(மணிமே. 21:125).* 2. தேரின் ஒருறுப்பு; fence round the seat of war-chariot. "நெரிந்தன தடஞ்சுவர்" *(கம்பரா. சம்புமாலி. 27).*

ம. சுமர், சுவர், சுமரு; பழங். க. கேர்; துட. கோவ்; குட. கெவன்; H., U. divar; Heb: shur; Pers: dīvār.

[உல் → உலவு → உலாவு. உலாவுதல் = சூழ்தல். உல் → சுல் → சுற்று → சுற்றம். சுற்றுதல் = சூழ்தல். சுல் → சுள் → சூழ். சூழ்தல் = நாற்புறமும் வளைதல். சுல் → சுவல் → சுவர் = சூழநிற்றல், மறைப்பை ஏற்படுத்தும் தடுப்பு]

சுவர்க்கடிகாரம் *śuvar-k-kaḍigāram,* பெ. (n.) சுவரில் மாட்டக்கூடிய பெரிய கடிகாரம்; wall clock.

[சுவர் + (கடிகை + ஆரம்) கடியாரம்]



சுவர்க்கடிகாரம்

சுவர்க்கருவிலி *śuvar-k-karuvili,* பெ. (n.) சுவர்நாகம் (யாழ்ப்.) பார்க்க; see *śuvar-nāgam.*

[சுவர் '+ கருவிலி]

சுவர்க்காயம் *śuvar-k-kāyam,* பெ. (n.) உறுப்பு அல்லது உட்கிளையின் சுவர்; walls of an organ or cavity- parietes *(சாஅக.).*

[சுவர் + காயம்]

சுவர்க்கால் *śuvar-k-kāl,* பெ. (n.) 1. சுவரடி, அடிச்சுவர்; bottom of the wall. 2. சுவர்மேல் கட்டும் நீர்க்கால் (இ.வ.); water way on the wall.

[சுவர் + கால்]

சுவர்க்கோழி *śuvar-k-kōḻi,* பெ. (n.) 1. சுவர் இடுக்கில் வாழ்வதும் இறக்கைகளை வேகமாக ஒன்றோடொன்று உரசுவதால் ஒருவகை ஒலி எழுப்பக்கூடியதுமான சிறிய பழுப்பு நிறப்பூச்சி; cricket.

மறுவ. உறைவி, (வெண்பழுப்பு நிறமாய் உள்ளது) வெள்ளைப்பாய்ச்சான்; (கரு நிறமாக உடல் வலுப்பெற்றிருப்பது) கரும்பாய்ச்சான், பாய்ச்சல் (தஞ்.)

[சுவர் + கோழி]

சுவர்ச்சாதி *śuvar-c-cādi,* பெ. (n.) ஒருவகைக் கார உப்பு (சத்தி சாரம்); a kind of acid salt.

[சுவர் + சாதி]

சுவர்தாங்கி *śuvar-dāṅgi,* பெ. (n.) அணைசுவர்; buttress.

மறுவ: அணைப்புச் சுவர், தடுப்புச் சுவர்

[சுவர் + (தாங்கு→) தாங்கி]

சுவர்நாகம் *śuvar-nāgam,* பெ. (n.) நச்சுப்பாம்பு வகை (வின்.); a kind of poisonous snake.

[சுவர் + நாகம்]

சுவர்ப்பலகை *śuvar-p-palagai,* பெ. (n.) 1. பெட்டியின் சுற்றுப்பலகை (வின்.); upright boards of a box, especially of a wardrobe. 2. எழுதுபலகையாகப் பயன்படுத்தப்படும் சுவர் (இ.வ.); wall black-board.

[சுவர் + பலகை]

சுவர்மாடம் *śuvar-māḍam,* பெ. (n.) 1. சுவர்ப் புரை (வின்.); niche, vaulted recess in house walls. 2. மாடக்குழி; ஒளி வழிபாட்டிற்காகவும் முன்னோர் வழிபாட்டிற்காகவும் வீட்டுச் சுவரில் அகல்விளக்கு வைப்பதற்கான இடம்; a planed niche on the wall intended to light a small lamp for the sake of light-worship and forefather's-worship.

மறுவ. புரை

[சுவர் + மாடம்]



சுவர்மாடம்

சுவர்முள்ளங்கி *šuvar-muḷḷangi*, பெ. (n.) சுவரில் பற்றிப் படரும் ஒருவகைப் பூடு (வின்.); parasitic plant growing on the walls.

[சுவர் + முள்ளங்கி]

சுவர்மேற்பிதுக்கம் *šuvar-mēṟ-pitukkam*, பெ. (n.) சுவரின் எழுதகவகை; string course (C.E.M.).

[சுவர் + மேல் + பிதுக்கம்]

சுவர்மேற்பூனை *šuvar-mēṟ-pūṉai*, பெ. (n.) 1. நடுமனத்தனாக இருப்பவன்; person sitting on the fence, person of dubious attitude. 2. அதுவோ இதுவோ என்ற ஐயநிலை; uncertain state.

[சுவர் + மேல் + பூனை]

சுவர்வளையன் *šuvar-vaḷaiyaṉ*, பெ. (n.) சுவர் நாகம் பார்க்க; see *šuvar-nāgam*.

[சுவர் + வளையன்]

சுவர்விரியன் *šuvar-viriyaṉ*, பெ. (n.) சுவர் நாகம் (வின்.) பார்க்க; see *šuvar-nāgam*.

[சுவர் + விரியன்]

சுவரகழ்கருவி *šuvar-agaḻ-karuvi*, பெ. (n.) கன்னக்கோல் (பிங்.); iron crow-bar used in house breaking.

[சுவர் + அகழ் + கருவி]

சுவரம் *šuvaram*, பெ. (n.) காய்ச்சல் (சங்.அக.); fever (செ.அக.).

ம. சுரம்; தெ. கன்; து., வ.இ.மொ. H., U. jvara

[சுரம் → சுவரம்]

சுவரறை *šuvar-aṟai*, பெ. (n.) சுவர்ப்பேழை; cupboard; shelved recess in wall.

[சுவர் + அறை]

சுவருத்தரம் *šuvaruttaram*, பெ. (n.) சுவரின் மேல் வைக்கும் உத்தரம் (இ.வ.); wall plate.

[சுவர் + உத்தரம்]

சுவரொட்டி[1] *šuvaroṭṭi*, பெ. (n.) 1. சுவர்முள்ளங்கி (வின்.) பார்க்க; see *šuvar-muḷḷangi*. 2. சுவரில் மாட்டும் சிறு கைவிளக்கு (இ.வ.); small wall lamp. 3. காப்பாகச் சுவரில் மாட்டும் ஆட்டீரல் (யாழ்ப்.); the liver of a sheep stuck to a wall,as a charm. 4. பிறரை ஒட்டியிருக்கும் பண்புடையவன்-ள் (இ.வ.); one who sticks like a burr. 5. ஒற்றுக்கேட்போன் (இ.வ.); eaves dropper. 6. சுவர்தாங்கி பார்க்க; see *šuvar-dāngi*.

[சுவர்[1] + ஒட்டி]

சுவரொட்டி[2] *šuvar-oṭṭi*, பெ. (n.) பலரும் புரிந்து கொள்ளும் வகையில் பொது இடத்தில் ஒட்டி வைக்கப்படும் அச்சடிக்கப்பட்ட அல்லது எழுதப்பட்ட பெரிய அளவுத்தாள்; wall poster. 'திரைப்படங்களின் வெற்றிக்கு வண்ண வண்ணச் சுவரொட்டிகளும் ஒரு கரணியம்'. (உ.வ.).

[சுவர் + ஒட்டி]

சுவல் *šuval*, பெ. (n.) 1. பிடர் (பிங்.); nape of the neck. 2. தோட்கட்டு; upper part of the shoulder. "கூழை சுவன்மிசைத் தாதொடு தாழ" (கலித். 56) 3. முதுகு; back. "சுவலோடு வாரலையப் போவார்" (பெரியபு. திருநாளைப். 18). 4. குதிரைப் பிடரி; கழுத்துமயிர்; horse's mane. "பன்மயிர்க் கொய்சுவல்" (கலித். 96). 5. மேடு (பிங்.); hillock "வேங்கைச் செஞ்சுவல்" (புறநா. 120). 6. தொல்லை (அகநி.); trouble, hardship.

ம. சுவல்

சுவலை *šuvalai*, பெ. (n.) அரசமரம் (மலை.).

சுவலொட்டி *šuvaloṭṭi*, பெ. (n.) சுவரொட்டி[1], 3 பார்க்க; see *šuvar-oṭṭi*[1],3.

[சுவரொட்டி → சுவலொட்டி]

சுவவு *šuvavu*, பெ. (n.) 1. பறவைமூக்கு; bird's beak. 2. மூஞ்சூறு; grey musk - shrew.

சுவற்று-தல் *šuvaṟṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *1.* வற்றச்செய்தல்; to dry up, absorb, cause to subside. "துயர்க்கடல் சுவற்றினை" *(கந்தபு. அக்கினி. 229)* 2. முற்றும்அழித்தல்; to extirpate destroy utterly. "வீரஞ் சுவற்றிய பின்" *(காஞ்சிப்பு. வீரரா. 28).*

[சுவறு → சுவற்று-,]

சுவற்றுப்பல்லி *šuvaṟṟu-p-palli*, பெ. (n.) சுவரில் சத்தமிடும் ஒருவகைப் பல்லி; wall lizard *(சா.அக.)*

[சுவர் + பல்லி]

சுவற்றுப்பாசி *šuvaṟṟu-p-pāši*, பெ. (n.) சுவரில் படரும் பாசி; the yellow wall lichen; the stone crop; wall moss *(சா.அக.).*

[சுவர் + பாசி]

சுவற்றுப்பூ *šuvaṟṟu-p-pū*, பெ. (n.) சுவரில் முளைக்கும் மஞ்சள்நிற நறுமண மலர்; plant with yellow flowers in its wild state on old walls *(சா.அக.).*

[சுவர் + பூ]

சுவற்றுப்பேன் *šuvaṟṟu-p-pēṉ*, பெ. (n.) மூட்டைப் பூச்சி; bug *(சா.அக.).*

[சுவர் + பேன்]

சுவற்றுமுள்ளங்கி *šuvaṟṟu-muḷḷaṅgi*, பெ. (n.) சுவர்முள்ளங்கி பார்க்க; see *šuvar-muḷḷaṅgi.*

[சுவர் + முள்ளங்கி]

சுவறக்குழை-த்தல் *šuvaṟa-k-kuḻaittal*, 4 செ.கு.வி. (v.i.) ஊறும்படி கலத்தல்; mixing so as to soak well *(சா.அக.).*

[சுவறு → சுவற + குழை-,]

சுவறப்பூசு-தல் *šuvaṟa-p-pūšu-*, 5 செ.குன்றாவி. (v.t.) மருந்தெண்ணெய் முதலியவற்றைச் சூடுபெறத் தேய்த்தல்; rubbing with pressure on the surface of the body so as to create heat, as is done with ointment or medicated oil *(சா.அக.).*

[சுவறு → சுவற + பூசு-,]

சுவறிநில்(ற்)-(ற)தல் *šuvaṟinil*, செ.கு.வி. (v.i.) உடம்பில் நோய் ஊறியிருத்தல்; continuing a long time as a disease in the system.

மறுவ. சுவறியிருத்தல்

[சுவறு → சுவறி + நில்-,]

சுவறு-தல் *šuvaṟu-*, 5 செ.கு.வி. (v.i.) *1.* வற்றுதல்; to dry up, evaporate. "கடல் சுவறின தோற்றம்" *(கம்பரா. முதற்போர். 191).* 2. உறிஞ்சப்படுதல்; to be imbibed absorbed. 'வறண்ட நிலத்தில் நீர் சுவறிவிடும்' *(உ.வ.)*

சுவாக்கீரை *šuvā-k-kīrai*, பெ. (n.) ஒரு வகைப்பூண்டு; a plant.

[சுவை → சுவா + கீரை]

சுவை[1]-த்தல் *šuvai-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* சுவையறிதல்; to taste. 2. உண்ணுதல்; to eat, chew, suck. "சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி" *(புறநா. 164).* 3. முத்தமிடுதல்; to kiss. "புல்லுதல் சுவைத்திடல்" *(கந்தபு. இந்திரபுரி. 38).* 4. புணர்ச்சியின்பம் நுகர்தல் (சங்.அக.); to experience, enjoy.

ம. சுவய்க்குக; க. சவி; தெ. சவிகொனு; து. சம்பி, சவி; கோத. சய்வ்; நா. சவத்; கொலா. சவ்வி (இனிப்பு)

[அசைத்தல் = கூறுபடுத்துதல், அறுத்தல். அசை → சசை → சவை. சவைத்தல் = மெல்லுதல், மென்று உண்ணுதல். சவை → சுவை. சுவைத்தல் = மெல்லுதல், மென்று உண்ணுதல், உண்டு சுவையறிதல்]

சுவை[2]-த்தல் *šuvai-*, 4 செ.கு.வி. (v.i.) சுவையாதல்; to be palatable, agreeable, pleasing. "இக்கரும மென்றனுக்குச் சுவைப்பதிலை" *(திருக்காளத்பு.ஞானயோ.1).*

சுவை[3] *šuvai*, பெ. (n.) *1.* சுவையும் மணமும்; taste and flavour. "அறுசுவையுண்டி" *(நாலடி. 1).* 2. இனிமைத்தன்மை (பிங்.); sweetness, deliciousness. 3. இனிமையானது (சூடா.); that which is pleasing or gratifying to the senses. 4. புலன்களுள் நாவின் உணர்வு; the sense of taste, one of ai-m-pulaṉ. "சுவையொளி யூறோசை நாற்றம்" *(குறள், 27).* 5. அறுசுவையும்

தோன்றுவதற்குக் காரணமான உமிழ்நீர்ச் சுரப்பு; the subtle matter from which water is said to have evolved. *6. செய்யுளின் சாரத் தன்மை (இலக். வி. 665);* poetic sentiment. *7. பதினாலாவது விண்மீனான நெய்ம்மீன் (சித்திரை) (திவா.);* the 14th naksatra. *8. அறிவால் உணரப்படும் மெய்ப்பாடு;* taste which is understood by brain. "சுவை என்பது காணப்படும் பொருளால் காண்போரகத்தின் வருவதோர் விகாரம்" *(இளம். தொல். பொருள்.245).*

ம. சுவ; தெ., க. சவி.

சுவைக்காட்டு-தல் *šuvai-k-kāttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *1. சுவையாதல்;* to be tasteful. *2. சுவை தருதல்;* to give a taste. *3. ஆசை காட்டுதல்;* to entice, allure, decoy. *4. இனிப்புக் காட்டல்;* to make agreeable.

[சுவை + காட்டு-,]

சுவைக்கேடு *šuvai-k-kēdu*, பெ. (n.) *சுவை இழக்கை;* loss of sensation of taste *(சா.அக.).*

[சுவை + கேடு. கெடு → கேடு]

சுவைகமம் *šuvai-gamam*, பெ. (n.) *மலை ஆமணக்கு;* hill castor plant *(சா.அக.).*

சுவைகாணல் *šuvai-kāṇal*, பெ. (n.) *சுவையறிகை;* to taste by the tongue and palate *(சா.அக.)*

[சுவை + காணல்]

சுவைஞர் *šuvaiñar*, பெ. (n.) *இலக்கியம், கலை ஆகியவற்றை ஆழ்ந்து நுகரும் பண்புடையவர்;* connoisseur of literature.

சுவைதட்டு¹-தல் *šuvai-taṭṭu-*, 5 செ.கு.வி. (v.i) *சுவை தோன்றல்;* finding agreeable to taste. 'கூட்டில் கொஞ்சம் உப்புச்சேர்த்த பின்னரே சுவை தட்டுகிறது' *(உ.வ.) (சா.அக.).*

[சுவை + தட்டு-,]

சுவைநரம்பு *šuvai-narambu*, பெ. (n.) *சுவை அறியும் நரம்பு;* nerve pertaining to the sense of taste-Gustatory nerve *(சா.அக.).*

மறுவ. சுவையரும்பு

[சுவை + நரம்பு]

சுவைப்படுத்து-தல் *šuvai-p-paḍuttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *சுவைக்காட்டு-தல் பார்க்க;* see *šuvai-k-kāttu-.*

[சுவை + படுத்து-,]

சுவைப்பரீட்சை *šuvai-p-parītcai*, பெ. (n.) *சுவைத்து அறிதல்;* examination by the sense of taste *(சா.அக.).*

Skt. pariksa → த. பரீட்சை

[சுவை + பரீட்சை]

சுவைப்பொருள் *šuvai-p-poruḷ*, பெ. (n.) *சிற்றுண்டி; தின்பண்டம்;* eatables *(சா.அக.).*

[சுவை + பொருள்]

சுவைமிகுதி *šuvai-migudi*, பெ. (n.) *அறுசுவைப் பண்டங்களை முறையாகக்கொள்ளாமல் அதிகமாக ஏற்பது;* instead of eating substances of each taste in equal measure to eat substances of certain taste in excess *(சா.அக.).*

[சுவை + மிகுதி]

சுவைமூலம் *šuvai-mūlam*, பெ. (n.) *நாவில் சுவையறியும் பகுதி;* end organs of the gustatory nerve in the papillae of the tongue *(சா.அக.).*

[சுவை + மூலம்]

சுவைமை *šuvaimai*, பெ. (n.) *சுவைத்தன்மை;* taste, flavour. "சுவைமை யிசைமை" *(பரிபா. 13,14).*

[சுவை → சுவைமை]

சுவையணி *šuvai-y-aṇi*, பெ. (n.) *உண்ணிகழ்ந் தன்மை வெளிப்பட்ட எண்வகை மெய்ப் பாட்டினாலும் விளங்கும் அணியழகு (தண்டி 68);* a figure of speech which consists in describing the eight sentiments.

[சுவை + அணி]

சுவையாதீதம் *šuvai-y-ā-tīdam*, பெ. (n.) *சோற்றுப்பு;* common salt *(சா.அக.).*

[சுவை + அதீதம்]

சுவையிலசுவரம் *šuvaiyilasuvaram*, பெ. (n.) *செம்மரம்;* amoora rohituka *(சா.அக.).*

சுவையின்மை *śuvaiyiṉmai,* பெ. (n.) சுவை யில்லாமை; tastelessness; inspidity (சா.அக.).

[சுவை + இன்மை]

சுவையுள்ள *śuvai-yuḷḷa,* பெ.எ. (adj.) சுவையுடைய; palatable; sapid savoury (சா.அக.).

[சுவை + உள்ள]

சுழல்[1]**(லு)-தல்** *śuḻal(lu)-,* 13 செ.கு.வி. (v.i) 1. உருளுதல்; to whirl, spin, rotate, roll, turn on an axis, as wheel. "தேர்க்காலாழியிற் சுழன்றவை" (பெருங். வத்தவ. 12:205). 2. வட்டமாகச் சுற்றுதல்; to revolve in an orbit. "சுழன்றிலங்கு வெங்கதிரோன்" (திவ். பெரியதி. 9, 4:6). 3. சுற்றித் திரிதல்; to roam, wander. "குழலின்படி சுழலும்" (கம்பரா. கங்கைப். 3). 4. அலைவுபடுதல்; to be tossed about, driven to and fro. 'காற்றால் கப்பல் சுழல்கின்றது' (உ.வ.). 5. மனங்கலங்குதல்; to be agitated, troubled, distressed in mind. "சுழலுஞ் சுராசுர்க ளஞ்ச" (திவ். இயற். 1, 48). 6. சோர்தல்; to droop, faint, languish. 'அவன் பசியினாற் சுழன்று போனான்' (உ.வ.). 7. பொறிமயங்குதல்; to be dizzey to swim, as eyes. "கண்ணுஞ் சுழன்று பீளையோடு" (திவ். பெரியதி. 7. 4:1).

ம. சுழலுக; தெ. சுடியு

சுழல்[2] *śuḻal,* பெ. (n.) 1. சுழற்சி; whirling, revolving. "சுழற்கண் வேதாளமானான்" (சேதுபு. வேதாள. 72). 2. வளைவு; curl. "சுழலிடு சுந்தலும்" (கம்பரா. மிதிலை. 43). 3. சுழிநீர்; eddy, whirlpool. 4. சுழல்காற்று பார்க்க; see *śuḻal-kāṟṟu.* 5. காற்றாடி (சூடா.); machine on an axle turned by the wind; whirliging, kite. 6. பீலிக்குடை (பிங்.); umbrella made of peacock's feathers. 7. சுழல்படை (வின்.) பார்க்க; see *śuḻalpaḍai.* 8. கலக்கம்; agitation. "சுழலார் துயர்" (தேவா.294:19). 9. ஏமாற்று (வின்); deception, frau

ம. சுழல்

சுழல்காற்று *śuḻal-kaṟṟu,* பெ. (n.) சுழன்று வீசும் காற்று; whirl-wind.

ம. சுழலிகாற்று, சுழல்க்காற்று

[சுழல் + காற்று]

சுழல்நாற்காலி *śuḻal-nāṟkkāli,* பெ. (n.) சுற்றிடும் நாற்காலி; rotating chair.

[சுழல் + நாற்காலி]



சுழல்நாற்காலி

சுழல்நோய் *śuḻal-nōy,* பெ. (n.) ஆடுமாடுகள் திடீரெனச் சுழன்றுவிழும் ஒருவகை நோய்; a disease in cattle causing them to swing and fall down suddenly (சா.அக.).

[சுழல் + நோய்]

சுழல்வண்டு *śuḻal-vaṇḍu,* பெ. (n.) எப்போதும் நீரில் சுழன்றுகொண்டிருப்பதும், மந்திர வித்தைக்கு உதவுவதுமான ஒருவகை வண்டு; an insect found whirling in water; water beetle (சா.அக.).

[சுழல் + வண்டு]

சுழல்படை *śuḻal-paḍai,* பெ. (n.) வளைதடி (சூடா.); a kind of boomerang.

[சுழல் + படை]

சுழல்மரம் *śuḻal-maram,* பெ. (n.) கட்டைத் திருகாணி (வின்.); winding screw made of wood.

[சுழல் + மரம்]

சுழல்மாறித்தனம் *śuḻal-māri-t-taṉam,* பெ. (n.) ஏமாற்று (உ.வ.); deceit, fraud.

[சுழல்மாறு → சுழல்மாறி + தனம்]

சுழல்மாறு-தல் *śuḻal-māṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) திருடுதல்; to sted. "சாமானைச் சுழல் மாறிவிட்டான்" (நாஞ்.).

[சுழல் + மாறு-,]

சுழல்வண்டெரிவு *śuḻal-vaṇḍerivu-,* பெ. (n.) சுழல்வண்டெரி பார்க்க; see *śuḻal-vaṇḍeri* (சா.அக.).

[சுழல் + வண்டெரிவு]

சுழல்வண்டெரி *šul̤al-vaṇḍeri-,* பெ. (n.) விழித்திருக்கும் நிலையிலும் தூங்கும்போதும் பூச்சிபறப்பது போன்று கண்கூச்சம் கண் புகைச்சல் முதலிய பண்புகளோடு விளக்கைப் பார்க்கப் பலவகையாகக் காணப்படுவதுமான ஒரு வகைக் கண்ணோய்; a disease of the eye in which the vision is severely affected due to a derangement of the muscular coordination of the eye. It is marked by a condition of a subjective appearance in which mote appears to be floating, where ever seen both in a waking state and in sleep, extreme sensitiveness to light dullness of vision, etc.,

[சுழல் + வண்டு + எரிவு]

சுழல்விழியெரிவு *šul̤al-vil̤i-erivu-,* பெ. (n.) கண்களில் எரிச்சலெடுத்து நேராகப் பார்க்க வொட்டாமலும், இமைகனத்துக் கீழ் தொங்கி மிகுந்த அரிப்பும் வலியும் தருவதும், பீளை பிடித்து நீர்வடிந்து தூக்கந்தராத ஒருவகைக் கண்நோய்; an affection of the eye marked by varied sensation of burning in ability to look straight at an object, thickening and drooping of the eye-lids, itching and slight pain muco purulent and watery discharge, sleeplessness etc., (சா.அக.).

[சுழல் + விழி + எரிவு]

சுழல்வு *šul̤alvu,* 5 செ.கு.வி. (v.i.) சுழற்சி பார்க்க; see *šul̤arcci* (சா.அக.).

சுழலவெரி-த்தல் *šul̤ala-v-eri-,* 4 செ.குன்றாவி. (v.t.) நான்கு பக்கமும் தீப்படும் படியாக எரித்தல்; to burn rotating the material so that the fire or heat is extensively affected all the parts of the thing (சா.அக.).

[சுழல + எரி-,]

சுழலமாடு[1]-தல் *šul̤alamāḍu-,* 5 செ.கு.வி. (v.i.) தலைசுற்றல்; to reel of the head; swim of the head (சா.அக.).

[சுழல(ம்) + ஆடு-,]

சுழலமாடு[2]-தல் *šul̤alamāḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ஒன்றைப் பெறுவதற்கு இடைவிடாது முயலுதல்; to make persistent effort for a thing. 2. அடிக்கடி போய் வணங்குதல் (இவ.); to frequent; dance attendence on.

[சுழல் → சுழலம் + ஆடு-,]

சுழலமாடு[3]-தல் *šul̤alamāḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ஒன்றைப் பெறுவதற்கு இடைவிடாது முயலுதல்; to make persistent effort for a thing. 2. அடிக்கடி போய் வணங்குதல் (இவ.); to frequent; dance attendence on.

[சுழல் → சுழலம் + ஆடு-,]

சுழலல் *šul̤alal,* பெ. (n.) 1. பொறிமயங்கல்; being dizzy. 2. கிறுகிறுத்தல் அல்லது சுற்றல்; reeling of head. 3. அலைவுபடுதல்; being restless (சா.அக.).

[சுழல் → சுழலல்]

சுழலாரை *šul̤al-ārai,* பெ. (n.) சுழலாவிரை பார்க்க; see *šul̤al-āvirai* (சா.அக.).

[சுழல் + (ஆவிரை→) ஆரை]

சுழலாவிரை *šul̤alāvirai,* பெ. (n.) பொன்னாவிரை; rounded poded cassia (சா.அக.).

ம. சுழலாவர

[சுழல் + ஆவிரை]

சுழலி *šul̤ali,* பெ. (n.) மாந்தத்தினால் வரும் வலிப்பு; convulsions or fits from fever due to digestive disorders (சா.அக.).

[சுழல் → சுழலி]

சுழலை[1] *šul̤alai,* பெ. (n.) ஆடுமாடுகள் தலைசுற்றிச் சோர்வுற்றுத் திடீரெனவிழும் ஒருவகை நோய்; a disease a sort of giddiness causing cattle to fall down fatigued suddenly without apparent cause (சா.அக.).

மறுவ. சுழல் நோய்

[சுழல் → சுழலை]

சுழலை[2] *šul̤alai,* பெ. (n.) 1. கொள்கலம்; receptacle. "துக்கச்சுழலையை" (திவ். பெரியாழ். 5. 3:1). 2. ஏய்ப்பு; deception, fraud. "சுழலை பெரிதுடைத்துச் சோதனை" (திவ்.பெரியாழ். 1,8,5).

சுழலையாடு[1]-தல் *šul̤alai-y-āḍu-,* 5 செ.கு.வி. (v.i.) களைப்பினால் சோர்ந்துவிழுதல்; களைத்துப் போதல்; to be fatigued, to faint (சா.அக.).

[சுழலை + ஆடு-,]

சுழலையாடு[2]-தல் *šuḻalai-y-āḍu-*, 5 செ.குன்றாவி. (v.i.) 1. அலைக்கழித்தல்; to harass as a person. 2. வீணாகச் செலவழித்தல்; to waste, as property.

[சுழலை + ஆடு-,]

சுழற்கண் *šuḻaṟ-kaṇ*, பெ. (n.) சுற்றுக்கண் பார்க்க; see *šuṟṟu-k-kaṇ*.

[சுழல் + கண்]

சுழற்கத்தி *šuḻar-katti*, பெ. (n.) கண்ணின் படலத்தை அறுப்பதற்காகப் பயன்படுத்தும் ஒருவகைக் கத்தி; a kind of knife used in a circular extraction of cataract (சா.அக.).

[சுழல் + கத்தி]

சுழற்காய் *šuḻaṟ-kāy*, பெ. (n.) சுண்டைக்காய் பார்க்க; see *šuṇḍai-k-kāy*.

[சுழல் + காய்]

சுழற்கேடயம் *šuḻaṟ-kēḍayam*, பெ. (n.) (தனிப் பரிசாக அல்லாமல்) வெற்றிபெறுவோர்க்கு அடுத்த ஆண்டுவரை வைத்திருக்கக்கூடிய பரிசுச் சின்னம்; a shield or trophy only for one year to the winner.

[சுழல் + கேடயம்]

சுழற்கோப்பை *šuḻaṟ-kōppai*, பெ. (n.) (தனிப் பரிசாக அல்லாமல்) வெற்றி பெறுவோர்க்கு அடுத்த ஆண்டுவரை வைத்திருக்க கூடிய தற்காலிக வெள்ளி அல்லது தங்கக்கோப்பை; a gold or silver cup only for one year to the winner.

[சுழல் + கோப்பை]

சுழற்சி *šuḻaṟci*, பெ. (n.) 1. சுழல்கை; whirling, spinning, rotating, brandishing. 2. அலைகை; wondering, moving to and fro. 3. மனக்கலக்கம்; trouble, agitation.

ம. சுழல்

[சுழல் → சுழற்சி]

சுழற்பந்துவீச்சு *šuḻaṟ-pandu-vīccu*, பெ. (n.) மட்டைப் பந்து விளையாட்டில் தரையில் பட்டு எழும்போது திசைமாறிப் பாயத்தக்கதாக மெதுவாகப் பந்துவீசுகை; spin bowling in cricket.

[சுழல் + பந்து + வீச்சு]

சுழற்றல் *šuḻaṟṟal*, பெ. (n.) கிறுகிறுப்பு; giddiness. தலை சுழற்றலாயிருக்கிறது (உ.வ.).

[சுழல் + தல் = சுழற்றல்]

சுழற்றி[1] *šuḻaṟṟi*, பெ. (n.) 1. கருவண்டு; a black beetle. 2. சுழற்கத்தி பார்க்க; see *šuḻaṟ-katti*.

[சுழல் → சுழற்றி]

சுழற்றி[2] *šuḻaṟṟi*, பெ. (n.) 1. சுழற்றுகருவியின் கைப்பிடி (வின்); handle, as of a spinning wheel. 2. துளையிடுங்கருவி (உ.வ.); brace and bit.

ம. சுழற்றி

[சுழல் → சுழற்றி]

சுழற்றித்துரப்பணம் *šuḻaṟṟi-t-turapaṇam*, பெ. (n.) துளையிடுங்கருவி; gimlet (C.E.M.).

[சுழற்றி + துரப்பணம்]

சுழற்றியடி-த்தல் *šuḻaṟṟi-y-aḍi-*, 4 செ.கு.வி. (v.t.) 1. பெருவாரி நோய்களில் உயிரைக் கொள்ளை கொண்டுபோதல்; to sweep away of innumerable lives in epidemics. 2. புயற் காற்றடித்தல்; to fierce blowing to wind in stormy weather. 3. சுழன்றுவீசுதல்; to blow violently, to devastate, as whirlwind. 'காற்றுச் சுழற்றியடிக்கிறது' (உ.வ.).

[சுழற்றி + அடி-,]

சுழற்றிடுபில்லம் *šuḻaṟṟiḍu-pillam*, பெ. (n.) விழியழற்சியால் சதைவளர்ந்து கருவிழி குவிந்து சிறுக்கும் ஒருவகைக் கண்ணோய்; an eye disease causing inflammation of the eye growth flesh and shrinking of the black portion of the eye (சா.அக.).

[சுழற்றிடு + பில்லம்]

சுழற்று[1]-தல் *šuḻaṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. சுழலச் செய்தல்; to whir, spin, swing round, turn; to roll. "நமுசியை வானிற் சுழற்றிய மின்னுமுடியன்" (திவ்.பெரியாழ். 1,8,8). 2. சுற்றியாட்டுதல்; to brandish, flowish, wave. 'சிலம்பக் கழியைச் சுழற்றுகின்றான்' (உ.வ.). 3. கிறுகிறுக்கச் செய்தல்; to cause dizziness, make giddy. 'பித்தம் தலையைச் சுழற்றுகின்றது' (உ.வ.).

ம. சுழற்று

[சுழல் → சுழற்று-,]

சுழற்று[2] *šuḻaṟṟu,* பெ. (n.) *சுழற்றுகை;* whirling, wheeling, spinning. *'அவனை ஒரு சுழற்றுச் சுழற்றினான்' (உ.வ.).*

ம. சுழற்று

[சுழல் → சுழற்று]

சுழற்றுதடி *šuḻaṟṟu-daḍi,* பெ. (n.) *சிலம்பத்தடி;* a kind of fencing staff, quarter-staff.

[சுழற்று + தடி]

சுழன்மரம் *šuḻaṉ-maram,* பெ. (n.) *தவசங்களைத் திரிக்கும் மரவெந்திரம்;* wooden machine for grinding corn. *"சுழன்மரஞ் சொலித்த . . . வெண் காழ்" (அகநா. 393).*

[சுழல் + மரம்]

சுழன்மாறி *šuḻaṉ-māṟi,* பெ. (n.) *தந்திரமாய் ஏமாற்றுபவ-ன்-ள்;* a skilful cheat. *"எனை யிக்கோலங் கண்ட சுழன்மாறி" (விறலிவிடு. 901).*

[சுழல் + மாறி]

சுழனி *šuḻaṉi,* பெ. (n.) *குழந்தைநோய்களைத் தீர்க்கவுதவும் வலம்புரிக்கொடி;* a kind of creeper whirling on to the right side. It is used in children's diseases *(சா.அக.).*

[சுழல் → சுழனி]

சுழனோய் *šuḻaṉōy,* பெ.(n.) *சுழல்நோய் பார்க்க;* see *šuḻal-nōy (சா.அக.).*

[சுழல் + நோய்]

சுழாரை *šuḻārai,* பெ. (n.) *சுழலாவிரை பார்க்க;* see *šuḻalāvirai (சா.அக.).*

சுழாவிரை *šuḻāvirai,* பெ. (n.) *சுழலாவிரை பார்க்க;* see *šuḻalā-virai (சா.அக.).*

[சுழல் + ஆவிரை]

சுழி[1]**-தல்** *šuḻi-,* 4 செ.கு.வி. (v.i.) *1. சுழிபோல் வளைவாதல்;* to become curved, curled, involved, to form eddies, as on the surface of water. *"சுழியுங் குஞ்சிமிசை" (கம்பரா. எழுச்சி.34). 2. வெறுப்பு முதலியவற்றின் குறியாக முகஞ் சுருங்குதல்;* to be contracted, screwed up as one's face in disgust. *"தழலுமிழ்ந்தும் மதம் பொழிந்தும் முகஞ்சுழிய" (தேவா. 1148, 7). 3. கவடமாதல்;* to be cunning, guileful. *சுழியப் பேசினான் (யாழ்ப்.). 4. மனங்கலங்குதல்;* to be distracted, agitated. *"வரிவிழிகொண்டு சுழிய வெறிந்து" (பட்டினத். திருப்பா. உடற். 3). 5. இறத்தல்;* to die. *'அவன் சுழிந்து விட்டான்' (இ.வ.).*

ம. சுழி; தெ. சுடியு; க. சுளி

[சுளி → சுழி-,]

சுழி[2]**-த்தல்** *šuḻi-,* 4 செ.கு.வி. (v.i.) *1. சுழற்காற்றுப் போல் சுழலுதல்;* to whirl, as whirlwind. *"சண்டமாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து" (திருவாச. 4:55). 2. நீர்ச் சுழியுண்டாதல்;* to form whirlpools eddies. *"சுழித்துநீர் வருதுறை யாற்றை" (கம்பரா. குகப். 63). 3. உடற்சுழியுண்டாதல்;* to form curls; to have curl-marks, as on the head or body. *4. கண்குழிதல் (வின்.);* to be sunk, as eyes by age. *5. வேறிடத்தின்றி யொருங்கே திரண்டுநிற்றல்;* to be gathered in one place, concentrated. *"சுழித்து நின்றறாத கற்பிற் சுநந்தை" (சீவக. 2551). 6. அடிபடாமல் ஒதுங்குதல்;* to shrink, recoil, as from blows. *'அவனடிக்குச் சுழித்துக் கொண்டான்' (உ.வ.). 7. தவறிப்போதல்;* to fail, as rain in drought, as candidate in examination. *'இவ்வாண்டு மழை சுழித்து விட்டது' (உ.வ.).*

ம. சுழிக்குக; க. சுழிடு, சுளி; தெ. சுடியு

[சுல் → சில் = சக்கரம். சுல் → சுள் → சுழி = வட்டம். சுழித்தல் = வட்டம் வரைதல்]

சுழி[3]**-த்தல்** *šuḻi-,* 4 செ.குன்றாவி. (v.tr.) *1. சுழி உண்டாக்குதல்;* to curl, incurve, curve, *"சுழித்த செம்பொனின் றொளை புரை யுந்தி" (கம்பரா. சித்திர. 21). 2. அலையச்செய்தல்;* to cause to roam. *"வெங்கா னென்கான்முளையைச் சுழிக்கும் வினையால்" (கம்பரா. நகர். நீங்கு. 49). 3. தேர்வில் தேறாதபடிச் செய்தல்;* to plough cause to fail in examination. *"ஆசிரியர் மாணவனை இந்த ஆண்டுத்தேர்வில் சுழித்துவிட்டார்". 4. செலவினங்களைக் குறைத்தல்;* to curtail, as expenses. *"உள்ளதற்கேற்பச் செலவைச் சுழிக்க வேண்டும்". 5. மறைத்தல்;* to conceal, deposit, to hide. *'பணத்தை எங்கேயோ சுழித்துவிட்டான்' (உ.வ.). 6. சினத்தல்;* to be angry *"எமை யெமர்கள் சுழியாரோ" (தேவா. 1148, 7).*

[சுள் → சுழி-,]

சுழி[4] *śuḻi-*, பெ. (n.) 1. சுழலுகை; whirling. 'சுழிக்காற்று' (உ.வ.). 2. நீர்ச்சுழி; whirl, vortex, eddy. "கங்கையின் சுழியிற் பட்ட" (சீவக. 1096). 3. எழுத்துச்சுழி; incurvature, curl in the formation of letters, circlet, as in ண (ṇ), ன (ṉ) etc. 4. சுழியம்; cipher, zero. 5. மயிர்ச்சுழி; curl of the hair. 6. ஆகூழ் அல்லது போகூழைக் குறிப்பதாகக் கருதப்படும் உடற்சுழி; circular or curved marks on the head or body indicating one's luck. "சுழிகொள் வாம்பரி" (கம்பரா. எழுச். 32). 7. ஊழ்வினை; fate. 'அவன் சுழியால் அலைகிறான்' (உ.வ.). 8. உச்சி (திவா.); crown of the head. 9. உச்சிப்பூ (இ.வ.); a kind of ornament for child's head. 10. சூழ்ச்சியறிவு; wickedness. "சுழியுடைத் தாயுடைக் கொடிய சூழ்ச்சியால்" (கம்பராபள்ளி. 74). 11. 2 1/2 அணா (15 புதுச்சல்லி) கொண்ட சிறு காசுவகை; a small coin = 2 1/2 annas. 12. மழையின் ஒரு விரல அளவு; an inch, a unit of rainfall. 13. கடல்; sea. "கொண்ட சுழியுங் குலவரை யுச்சியும்" (திருமந். 2966). 14. சுழிமுனை[1] பார்க்க; see *śuḻi-muṉai*[1].

ம. சுழி; க. சுழி, சுளி; தெ. சுடி; து. சுளி; கோத. சுளி; துட. தூள்ய; பட. சுயி

[சுள் → சுளி → சுழி]

சுழிக்காற்று *śuḻi-k-kāṟṟu*, பெ.(n.) சூறைக்காற்று; whirl-wind.

க. சுழிகாளி

[சுழி + காற்று]

சுழிக்கு-தல் *śuḻikku-*, 5 செ.குன்றாவி. (v.t.) சுழித்துவாங்கு-தல் பார்க்க; see *śuḻittu-vāṅgu-*. (சா.அக.).

[சுழி → சுழிக்கு-,]

சுழிகணநோய் *śuḻi-kaṇa-nōy*, பெ. (n.) ஒருவகைக் கண்ணோய்; a kind of eye disease. (சா.அக.).

மறுவ. சுழிக்கணம்

[சுழி + கணம் + நோய்]

காய்ச்சல், மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகளுடன் இந் நோய் காணப்படும்.

சுழிகணம் *śuḻigaṇam*, பெ. (n.) குழந்தைகளின் விலாவைச் சுழிக்கச்செய்யும் கணைநோய் (பாலவா. 40); a variety of taber mesenterica causing twitching of the sides, in children.

[சுழி + கணம்]

சுழிகுளம் *śuḻi-kuḷam*, பெ. (n.) ஒரு செய்யுளை எவ்வெட்டெழுத்தாய், நான்குவரியாக எழுதி மேனின்று கீழிழிந்தும் கீழ்நின்று மேலேறியும், புறநின்று வந்து உள்முடிய பலுக்கினாலும், அவ் வரி நான்குமே ஆகி, அச்செய்யுளாலேயே முற்றுப்பெறும் மிறைக்கவி (தண்டி. 98); a four lined stanza of eight letters each, so composed that the letters are arranged in a series of incurving loops, one with in another.

[சுழி + குளம்]

எ-டு. : "கவிமுதி யார் பாவே
விலையரு மா நற்பா
முயல்வ துறுநர்
திருவ திந்து மாயா" (தண்டி. 98, விளக்.)

சுழிகுற்றி *śuḻi-kuṟṟi*, பெ. (n.) சுழியாணிக்கட்டை பார்க்க (நாஞ்.); see *śuḻi-y-āṇi-k-kaṭṭai*.

ம. சுழிக்குற்றி, சுழுக்குற்றி

[சுழி + குற்றி]

சுழிகை *śuḻigai*, பெ. (n.) கள்; toddy (சா.அக.).

[சுடு → சுடிகை = கள். சுடிகை → சுழிகை]

சுழிகோதை *śuḻi-kōdai*, பெ. (n.) மூக்கடைப்பு நோய் நீக்கும் புல்வகை; a kind of grass (சா.அக.).

[சுழி + கோதை]

சுழிச்சக்கரம் *śuḻi-c-cakkaram*, பெ. (n.) மதுரையில் வழங்கிய பழைய பொற்காசு வகை; an ancient gold coin of Madurai.

[சுழி + சக்கரம்]

சுழித்துவலி-த்தல் *śuḻittu-vali-*, 4 செ.கு.வி. (v.i) மூச்சுவிடுங்காலை இசிவுடன் வலித்தல்; to have stitches or spasms in breathing.

[சுழித்து + வலி-,]

சுழித்துவாங்கு-தல் *śuḻittu-vāṅgu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கண்சுழலல்; to whirl as of the eyes. 2. மூச்சைச்சுழற்றி, உள்ளேயிழுத்தல்; to draw in as whirlpool, eddy, to engulf. 3. மடக்கிவிடுதல் (இ.வ.); to over throw, prostrate.

[சுழித்து + வாங்கு-,]

சுழித்தோடல் *šuḷi-t-tōḍal,* பெ. (n.) *சாக்குறியைக் காட்டும் நாடியோட்டம்;* whirling and drawing in of the pulse- this is a death sign.

[சுழித்து + (ஓடு) → ஓடல்]

சுழிப்பணம் *šuḷi-p-paṇam,* பெ. (n.) *இரண்டணாவையொத்த பழைய காசு வகை;* an ancient coin = 2 annas *(செ.அக.).*

[சுழி + பணம்]

சுழிப்பிழையன் *šuḷi-p-piḻaiyaṉ,* பெ. (n.) *1. தீய சுழியுள்ள விலங்கு;* any domestic animal having unlucky curl-marks. *2. ஆகூழ் கெட்டவன்;* ill-fated person.

[சுழி + பிழையன்]

சுழிபுத்தி *šuḷi-putti,* பெ. (n.) தீக்குணம் *(யாழ்ப்);* wickedness, knavery.

[சுழி + புத்தி]

Skt. buddhi → த. புத்தி

சுழிபேதம் *šuḷi-bēdam,* பெ. (n.) *ஏய்ப்பு, (மோசம்);* cheating fraud. *'அவன் என்னைச் சுழிபேதம் பண்ணிவிட்டான்' (வின்).*

[சுழி + பேதம்]

Skt. bhēda → த. பேதம்

சுழிமாந்தக்கழிச்சல் *šuḷi-mānda-k-kaḻiccal,* பெ. (n.) குழந்தைகளுக்குச் செரியாமையால் வரும் கழிச்சல்நோய்; purging or distortion of bowels in children due to indigestion marked by whirling of the eyes *(சா.அக.).*

[சுழி + மாந்தம் + கழிச்சல்]

சுழிமாந்தம் *šuḷi-māndam,* பெ. (n.) *கண்களின் சுழற்சியோடு கூடிய மாந்த நோய்வகை;* colic attended with rolling of the eyes, one of eight māndam.

[சுழி + மாந்தம்]

சுழிமின்னல் *šuḷi-miṉṉal,* பெ. (n.) *கவருள்ள மின்னல் (யாழ்.அக.);* forked-lightning.

க. சுழிமின்சு

[சுழி + மின்னல்]

சுழிமுனை *šuḷi-muṉai,* பெ. (n.) *1. சுழுமுனை பார்க்க;* see *šuḷumuṉai. 2.* பெண்குறி; a misnomer for clitoris *(சா.அக.).*

[சுழி + முனை]

சுழிமுனைக்கோளம் *šuḷi-muṉai-k-kōḷam,* பெ. (n.) *1. அமுதநிலை;* eternal bless. *2.* நாளமில் *சுரப்பிகளுள் ஒன்று;* pituitary gland *(சா.அக.).*

[சுழி + முனை + கோளம்]

சுழிமுனைமூளையன் *šuḷi-muṉai-mūḷaiyaṉ,* பெ. (n.) *மூளையின் அடிப்பாகம் பருத்தவன்;* a large headed idiot having swollen lower brain *(சா.அக.).*

[சுழி + முனை + மூளையன்]

சுழிமை *šuḷimai,* பெ. (n.) *காற்று உள்ளே பூரித்தல்;* inhalation of the vital air *(சா.அக.).*

[சுழி → சுழிமை]

சுழியச்சு *šuḷi-y-accu,* பெ. (n.) பொன்னை உருக்கி *வார்க்கும் அச்சு (யாழ்.அக.);* gold-smith's matrix.

[சுழி + அச்சு. அட்டுதல் = வார்த்தல், உருக்கி வார்த்தல். அட்டு → அச்சு]

சுழியப்பேசு-தல் *šuḷiya-p-pēšu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வருந்தச்சொல்லுதல் *(யாழ்ப்.);* to speak wounding words *(செ.அக.).*

[சுழிய + பேசு-,]

சுழியம்[1] *šuḷiyam,* பெ. (n.) *மகளிர்தலையணி வகையுளொன்று;* a kind of ornament worn by women on the head. *"சுழியம் சூடி" (கம்பரா. கடிமணப். 52).*

ம. சுழியம்

[சுழி → சுழியம்]

சுழியம்[2] *šuḷiyam,* பெ. (n.) ஒருவகை இனிப்புத் தின்பண்டம்; a kind of sweet pastry cake.

[சுழி → சுழியம்]

சுழியல்[1] *šuḷiyal,* பெ. (n.) *1. தலைமுடி;* hair *(சா.அக.). 2. சுழிந்திருக்கை;* curling, as of hair. *3. சுருளாக மயிரை முடிகை;* a mode of dressing the hair.

[சுழி → சுழியல்]

சுழியல்[2] *šuḷiyal,* பெ. (n.) *கள்;* toddy *(சா.அக.).*

[சுழி → சுழியல்]

சுழியன் *šuḷiyaṉ,* பெ. (n.) 1. ஏமாற்றுக்காரன், (வஞ்சகன்) *(யாழ்.அக.);* cunning schemer, deceitful person. *2. அறிவாளி;* intelligent

person. 3. எதற்கும் சினம்கொள்பவன்; irritable man. 4. கொடிய குறும்பன் (இவ.); wicked, mischievous man. 5. சுழற்காற்று; whirlwind "சித்திரைச் சுழியன்" (சங்அக.).

[சுழி → சுழியன்]

சுழியாணி *šuḷi-y-āṇi*, பெ. (n.) கதவுக்குடுமியின் முள்ளாணி; projecting-pin of a door serving as pivot to move on.

ம. சுழியாணி

[சுழி + ஆணி]

சுழியாணிக்கட்டை *šuḷi-y-āṇi-k-kaṭṭai*, பெ. (n.) குடுமிக்கதவின் முள்ளாணியைத் தாங்கும் கட்டை; block or stone to receive the projecting pin of a door.

[சுழி + ஆணி + கட்டை]

சுழியாணிக்கதவு *šuḷi-y-āṇi-k-kadavu*, பெ. (n.) குடுமிக்கதவு (யாழ்.அக.); door moving on projecting pins instead of wings.

[சுழி + ஆணி + கதவு]

சுழியிலெழுத்து *šuḷi-yil-eḻuttu*, பெ. (n.) ஊழ்வினை; fate, destiny. 'சுழியிலெழுத்தைத் தான் நோவ வேண்டும்' (வ.வ.)

[சுழி → சுழியில் + எழுத்து]

சுழியோடு-தல் *šuḷi-y-ōḍu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. முக்குளித்தல் (யாழ்.அக.); to dive into water. 2. மனத்தை ஆராய்தல் (சங்அக.); to study one's mind.

[சுழி + ஓடு-,]

சுழிவு *šuḷivu*, பெ. (n.) 1. மறைவு; concoalment, seclusion; circumvention. 'சுழிவு பார்த்து வந்துவிட்டான்' (வின்.) 2. மனக்கவலை; anxiety solicitude, care. "சுழிவுறேன் மன்ன வென்றான்" (பெரியபு. திருஞான. 693).

[சுழி → சுழிவு]

சுழிவோகம் *šuḷi-v-ōgam*, பெ. (n.) சிவவோகம், 64 ஓகங்களில் ஒன்று, மற்ற ஓகங்களைக் காட்டிலும் மிகச்சிறந்ததும், மேன்மையானதும் ஆகும்; this is one of the 64 yogas and is by far superior to other kinds of yōga (சாஅக.).

[சுழி + ஓகம்]

சுழுகு *šuḻugu*, பெ. (n.) சுளுவு (யாழ்.) பார்க்க; see *šuḷuvu*.

சுழுத்தி *šuḻutti*, பெ. (n.) 1. நினைவுகெட்டுத் தன்னை மறந்து உறங்கும் காலத்தில் உயிர், வளி, ஓசை ஆக இரண்டு கருவிகளைக் கொண்டு ஆதன் நெஞ்சாங்குலையின்று உடம்பைப் பாதுகாக்கும் நிலை; in the yōgā philosophy it is a state of insensibility to one's surroundings, when the soul is said to take its a stand in the region of the heart with the aids of vital power and sound and guard the human body trance. 2. ஏழு நிலைமைகளில் (அவத்தைகளில்) ஒன்று; in the Āgama philosophy an intellectual faculty that argues future events from the present circumstances. 3. ஆழ்ந்தவுறக்கம்; deep sleep; a state of deep thought or abstraction - Reverie. 4. மூன்றாவது நிலைமை (அவத்தை); the third stage dreamless slumber. 5. புலன்கள் செயலற்றுத் தன்னை யறியாமல் ஆழ்ந்தவுறக்கத்தில் இருக்கும் ஒரு நிலைமை; cosmic dreamless state (சாஅக.).

சுழுந்து *šuḻundu*, பெ. (n.) சுளுந்து பார்க்க; see *šuḷundu*.

[(சுள்ளி → சுளு-) சுளுந்து → சுழுந்து]

சுழுமுணா *šuḻumuṇā*, பெ.(n.) சுழிமுனை பார்க்க; see *šuḻi-muṇai* (சா. அக.).

[சுழு + முணா]

சுழுமுனை *šuḻumuṇai*, பெ. (n.) சுழிமுனை பார்க்க; see *šuḻi-muṇai* (சாஅக.).

[சுழு + முனை]

சுழுனா *šuḻuṇā*, பெ. (n.) சுழிமுனை பார்க்க; see *šuḻi-muṇai* (சாஅக.).

சுழுனை *šuḻuṇai*, பெ. (n.) சுழிமுனை பார்க்க; see *šuḻi-muṇai* (சாஅக.).

சுள்[1] *šuḷ*, பெ. (n.) 1. உறைப்பு; pungency; acrimony. 2. சுள்சுள்ளெனல் பார்க்க; see *šuḷšuḷḷeṉal*. 3. கருவாடு; dried fish. "சுள்ளிணைக் கறித்தனர்" (கந்தபு. அசமுகிநகர். 18) (சாஅக.).

க. சுள்

[சல் → சுள்]

சுள்² *śuḷ*, பெ. (n.) *சிறுமை (இலக்அக.);* littleness, smallness.

ம. சுள்ளு

சுள்ளக்கம் *śuḷḷakkam*, பெ. (n.) *1.* வேர்க்குரு *(சங்அக.);* prickly heat. *2.* சினம் *(யாழ்.அக.);* anger, fury. *3.* மேட்டிமை *(சங்.அக.);* haughtiness, affectation.

ம. சுள்ளம்

[சுள் → சுள்ளக்கம்]

சுள்ளக்காய் *śuḷḷa-k-kāy*, பெ. (n.) மிளகாய் *(யாழ்ப்.);* red-chilly.

[சுள்¹ → சுள்ளம் + காய். சுள் = உறைப்பு]

சுள்ளம் *śuḷḷam*, பெ. (n.) சுள்ளக்கம்² பார்க்க; see *śuḷḷakkam*.

ம. சுள்ளம்

[சுள் → சுள்ளம்]

சுள்ளல் *śuḷḷal*, பெ. (n.) மென்மை *(யாழ்ப்.);* tenderness, flexibility.

[சுள் = சிறுமை, மென்மை. சுள் → சுள்ளல்]

சுள்ளலன் *śuḷḷalaṉ*, பெ. (n.) மெலிந்தவன் *(யாழ்ப்.);* an emaciated person.

[சுள்ளல் → சுள்ளலன். சுள் = மென்மை]

சுள்ளலி *śuḷḷali*, பெ. (n.) *1.* மெலிந்தவள்; உயரத்திற்கேற்ற பருமனில்லாத பெண்; a thin girl, slender woman. *2.* மெல்லிதான மரம்; thin, slender tree *(சாஅக.).*

[சுள்ளல் → சுள்ளலி. சுள் = மென்மை]

சுள்ளற்கோல் *śuḷḷaṟ-kōl*, பெ. (n.) *1.* வளையும் தடி *(வின்.);* flexible stick or rod. *2.* சாட்டை *(சவுக்கு);* whip. "குதிரை மேலிருந்து 'கோல்தா' என்றால் . . . சுள்ளற் கோலாம் ஆகலானும்" *(தொல். சொல். 53, இளம்.).*

[சுள்ளல் + கோல்]

சுள்ளாக்காய் *śuḷḷā-k-kāy*, பெ. (n.) சுள்ளக்காய் பார்க்க; see *śuḷḷa-k-kāy*.

[சுள்¹ → சுள்ளக்காய் → சுள்ளாக்காய். சுள் = உறைப்பு]

சுள்ளாணி *śuḷḷāṇi*, பெ. (n.) சிறியஆணி *(மலைபடு. 27, உரை);* small nail.

ம. சுள்ளாணி

[சுள் (சிறுமை) + ஆணி]

சுள்ளாப்பி-த்தல் *śuḷḷā-p-pi-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* சூடுகாட்டல்; to render hot. *2.* அடித்தல்; to beat, lash, strike.

[சுள்ளாப்பு + சுள்ளாப்பி-,]

சுள்ளாப்பு *śuḷḷāppu*, பெ. (n.) *1.* உறைப்பு; pungency. *2.* முனைப்பு; hastiness, quickness. *3.* மழையின்பின் அடிக்கும் கடுவெயில்; piercing heat of the sun after rain. *4.* அடி; stroke, cut. *5.* பழிச்சொல்; cutting, sarcasm 'சுள்ளாப்பெல்லாம் பொல்லாப்பு' *(உ.வ.).* *6.* வெப்பம்; heat.

[சுள் + சுள்ளாப்பு]

சுள்ளான் *śuḷḷāṉ*, பெ. (n.) *1.* சுள்ளெறும்பு பார்க்க; see *śuḷḷeṟumbu*. *2.* ஒரு வகைக் கொசு *(இ.வ.);* a kind of mosquito.

[சுள் → சுள்ளான்]

சுள்ளி *śuḷḷi*, பெ. (n.) *1.* அனிச்சப்பூடு; pimpernel *2.* ஆச்சாமரம்; Ceylon ebony tree. "எரிபுரை யுறழுஞ் சுள்ளி" *(குறிஞ்சிப். 66).* *3.* ஞாழல் *(திணைமாலை. 2);* a species of fragrant tree. *4.* கதம்பம்; different shrubs used in perfumes and unguents. *5.* மாமரம்; mango tree. *6.* மல்லிகை; Jasmine. *7.* மயிற் கொன்றை *(மலை.);* peacock's crest. *8.* மாந்துளிர்; tender leaves of mango tree. *9.* நாகதாளி; snake charmingroot. *10.* குங்குமம் *(அக.நி.);* saffron. *11.* எலும்பு; bone. "சுள்ளி யியற்றிய குரம்பை" *(பதினொ. ஆளு. திருக்க. 37)* *12.* நாகமல்லி *(மலை.);* ring-worm root. *13.* கருப்பூரவகை; cinnomum genus. *14.* மரக்கிளை; branch,bough "சுள்ளியி னிருந்துறை குரங்கு" *(கம்பரா. யுத். மந்திரப். 25).* *15.* உலர்ந்த சிறுகொம்பு; dry twigs, especially for fuel. "சுள்ளிக்கேன் கோடாலி" *(தனிப்பா. 1, 227:20).* *16.* சிறுமை; smallness. "சுள்ளி வெள்ளிப் பற்கொண்டும்" *(கம்பரா.யுத். முதற்போ. 139)* . *17.* மாமரம் *(மலை.);* mango tree.

ம. சுள்ளி; க. சுள்க்கு; தெ. சிடுகு

[சுள் → சுள்ளி]

சுள்ளிக்கோல் *śuḷḷi-k-kōl,* பெ. (n.) குதிரைச் சாட்டை; whip. "மாமேலிருந்தொரு கோறா வெனிற் சுள்ளிக்கோல் தரலும்" (சிசி. அளவை.).

[சுள்ளி + கோல்]

சுள்ளிடு-தல் *śuḷḷiḍu-,* 20 செ.கு.வி. (v.i) 1. உறைத்தல்; being pungent to taste. 2. வலித்தல்; paining. 3. மனம்வருந்துதல்; being troubled in mind, to be stung to the quick.

[சுள் + இடு-,]

சுள்ளிடுவான் *śuḷḷiḍuvāṉ,* பெ. (n.) 1. சுள்ளெனக் கடிக்கும் ஒருவகைப் பூச்சி; தெள்ளுப்பூச்சி; a kind of insect flea. 2. மிளகு; pepper. 3. மிளகாய்; chilly (சா.அக.).

[சுள் + இடுவான்]

சுள்ளிவிறகு *śuḷḷi-viṟagu,* பெ. (n.) காய்ந்த மிலாறு; dry twigs for fuel.

ம. சள்ளிவிறகு

[சுள்ளி + விறகு]

சுள்ளு *śuḷḷu,* பெ. (n.) 1. கள்; toddy. 2. வெப்பம்; heat. 3. உறைப்பு; pungency.

[சுள் → சுள்ளு]

சுள்ளுக்கருவாடு *śuḷḷu-k-karuvāḍu,* பெ. (n.) ஒருவகைச் சிறிய கருவாடு; a kind of small dried fish (சா.அக.).

[சுள் → சுள்ளு + கருவாடு]

சுள்ளுச்சுள்ளெனல் *śuḷḷu-c-cuḷḷeṉal,* பெ. (n.) 1. வளி (வாயு) முதலிய தொல்லைகளால் உண்டாகும் குத்தல் நோய்; a minute pain experienced at times due to deranged Vāyu in the body system (சா.அக.). 2. கடுப்புக் குறிப்பு; expr. signifying sharp pricking sensation.

சுள்ளுப்பூச்சி *śuḷḷu-p-pūcci,* பெ. (n.) சுள்ளிடுவான்,1 பார்க்க; see *śuḷḷiḍuvāṉ,1* (சா.அக.).

[சுள் → சுள்ளு + பூச்சி]

சுள்ளெறும்பு *śuḷḷeṟumbu,* பெ. (n.) சிவப்புக் கொள்ளியெறும்பு; a species of red ant.

மறுவ. செவ்வெறும்பு

[சுள் + எறும்பு]

சுள்ளை *śuḷḷai,* பெ. (n.) 1. மட்கலஞ்சுடுஞ் சூளை (தொல்.சொல். 449, உரை); potter's kiln. 2. காளவாய்; kiln, furnace.

ம. சூள

[சுள் → சுள்ளை]

சுள்ளைபிரி-த்தல் *śuḷḷai-piri-,* 4 செ.கு.வி. (v.i.) கருப்பத்துடன் இறந்தவள் பொருட்டுச் சூளையைப் பிரித்து மட்பாண்டம் ஏழைகட்கு வழங்குதல்; to purchase and distribute to the poor a kilnful of baked pots for propitiating the spirit of a woman deceased in pregnancy.

[சுள் → சுள்ளை + பிரி-,]

சுளகம் *śuḷagam,* பெ. (n.) உள்ளங்கை (பிங்.); hollow of the palm.

[சுளகு + அம்]

சுளகு *śuḷagu,* பெ. (n.) 1. முறவகை; a kind of winnowing fan for separating chaff from grain. "சுளகிற் சீறிட நீக்கி" (புறநா. 249). 2. சுளகைப் போன்ற பதினாறாவது (விசாக) விண்மீன் (பிங்.); the 16th nakṣatra, as resembling fan.



சுளகு

சுளகுக்கொழுக்கட்டை *śuḷagu-k-koḻukkaṭṭai,* பெ. (n.) கொழுக்கட்டைப் பணியார வகை (யாழ்ப்.); a kind of pastry.

[சுளகு + கொழுக்கட்டை]

சுளகுகட்டு-தல் *śuḷagukaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) சுளகுமுடைதல்; to braid a winnowing fan.

[சுளகு + கட்டு-,]

சுளகுப்பின்னல் *śuḷagu-p-piṉṉal,* பெ. (n.) 1. ஓலை முதலியவற்றிற் பின்னும் ஒருவகை முடையல்; a kind of braiding with coconut

leaves, rattan, etc. 2. ஒருவகைத் தலைப் பின்னல்; loose and wide plaiting of hair.

[சுளகு + பின்னல்]

சுளி¹-தல் *śuḷi-*, 2 செ.கு.வி. (v.i.) சினத்தல்; to be angry. "கழை காண்டலுஞ் சுளியுங் களியானை" (திருக்கோ. 111).

[சுள் → சுளி-,]

சுளி²-த்தல் *śuḷi-*, 4 செ.குன்றா.வி. (v.t.) 1. சினத்தல்; to be angry with. "சுளிமுகக் களிறனான்" (சீவக. 298). 2. காலால் துகைத்தல்; to tread or trample upon in fury. "கொலை வேழம். . . . நிழலையுந் தான் சுளிக்கும்" (பு.வெ.12, வென்றிப். 8). 3. வெறுத்தல் (சைவச. மாணாக். 33); to dislike, detest.

[சுள் → சுளி-,]

சுளி³-த்தல் *śuḷi-*, 4 செ.கு.வி. (v.i.) வருந்துதல்; to feel pain. சுளிக்கச் சொல்லேல்.

[சுள் → சுளி-,]

சுளி⁴ *śuḷi*, பெ. (n.) புளியாரைக்கீரை; sour sorrel (சா.அக.).

சுளிக்கு *śuḷikku*, பெ. (n.) முனை கூர்மையான ஒருவகைக் கைக்கோல் (வின்.); pike staff, sharp pointed stick carried by travellers.

க. சுளிக்கெ

சுளிகா *śuḷigā*, பெ. (n.) வாகை; sirissa tree (சா.அக.).

சுளிகாமேற்புல்லுருவி *śuḷiga-mēr-pulluruvi*, வாகை மரத்துப் புல்லுருவி; a parasite on sirissa tree (சா.அக.).

[சுளிகா + மேல் + புல் + உருவி]

சுளிகை¹ *śuḷigai*, பெ. (n.) 1. முருங்கை; drum stick tree. 2. பாலை; iron wood tree (சா.அக.).

சுளிகை² *śuḷigai*, பெ. (n.) அணிவகை; a kind of ornament. "சுளிகையும் சுட்டிகையும்" (ஆதியுலா, 68).

சுளிசனம் *śuḷisaṉam*, பெ. (n.) சுளிகை¹ பார்க்க; see *śuḷigai¹* (சா.அக.).

சுளிவு¹ *śuḷivu*, பெ. (n.) சினம்; anger. "மகிபதி சுளிவின்றி" (பாரத. பதினாறாம் போ. 77).

ம. சுளிவு

[சுளி → சுளிவு]

சுளிவு² *śuḷivu*, பெ. (n.) சுளுவு பார்க்க; see *śuḷuvu*.

[சுளி → சுளிவு]

சுளீரென்று *śuḷīr-eṉṟu*, வி.அ. (adv.) (வலி, வெயில் முதலியவை உடலைத் தாக்கும் போது) கடுமையாக; சுரீரென்று; a term denoting the severity or acuteness of pain or hot sun-shine etc. 'வெயில் சுளீரென்று முகத்தில் அடித்தது'.

[சுளீர் + என்று]

சுளுக்கு¹-தல் *śuḷukku-*, 5 செ.கு.வி. (v.i.) நரம்பு பிசகிக் கொள்ளுதல்; to be sprained; to be deranged, dislocated.

ம. சுளுக்குக

[சுளி → சுளுக்கு-,]

சுளுக்கு²-தல் *śuḷukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) வெறுப்புக்குறியாக முகத்தைச் சுருக்குதல்; to screw one's face in dissatisfaction, frown.

[சுளி² → சுளுக்கு-,]

சுளுக்கு³ *śuḷukku*, பெ. (n.) நரம்புப்பிறழ்ச்சி (பதார்த்த. 289.); sprain.

ம., க., சுளுக்கு; தெ. இளுக்கு; து. உளுக்கு; பட. சிக்கு

சுளுக்குக்காய்ச்சல் *śuḷukku-k-kāyccal*, பெ. (n.) எலும்புமுறிவு அல்லது சுளுக்கினால் ஏற்படும் ஒருவகைக் காய்ச்சல்; fever following the sprain or fracture (சா.அக.).

[சுளுக்கு + காய்ச்சல்]

சுளுக்குச்சுரம் *śuḷukku-c-curam*, பெ. (n.) சுளுக்குக்காய்ச்சல் பார்க்க; see *śuḷukku-k-kāyccal* (சா.அக.).

[சுளுக்கு + சுரம்]

சுளுக்குத்தசை *śuḷukku-t-taśai*, பெ. (n.) 1. நரம்பு பிசகுதல்; sprain. 2. முட்டுப்பிசகி மென் தோலில் காணும் வீக்கம்; the wrenching of a

joint with inflamation of the mucous membrane (சா.அக.).

[சுளுக்கு + தசை]

சுளுக்குநாயகம் *śuḷukku-nāyagam,* பெ. (n.) நரம்புச்சுளுக்கைப் போக்கும் மருந்துச்செடி வகை (பதார்த்த. 289); a medicinal plant capable of removing or curing all kinds of sprain.

[சுளுக்கு + நாயகம்]

சுளுக்குப்பார்-த்தல் *śuḷukku-p-pār-,* 4 செ.கு.வி. (v.i.) சுளுக்கு நீங்க மந்திரித்தல் (யாழ்ப்.); to utter magic spell for curing sprain.

[சுளுக்கு + பார்-,]

சுளுக்குப்பிடி-த்தல் *śuḷukku-p-piḍi-,* 4 செ.கு.வி. (v.i) சுளுக்கேறு-தல் பார்க்க; see *śuḷukkēṟu-*.

[சுளுக்கு + பிடி-,]

சுளுக்குருவு-தல் *śuḷukuruvu-,* 5 செ.கு.வி. (v.i.) சுளுக்குவழி பார்க்க; see *śuḷukku-vaḻi*.

மறுவ. சுளுக்கு வழித்தல்

[சுளுக்கு + உருவு -,]

சுளுக்குவழி-த்தல் *śuḷukku-vaḻi-,* 4 செ.குன்றாவி. (v.i.) எண்ணெய் முதலியவற்றால் சுளுக்கு நீங்கும்படி மந்திரித்து உருவுதல் (உ.வ.); to masage a sprained limb with oil, ashes, leaves, etc., by way of cure.

[சுளுக்கு + வழி]

சுளுக்கெடுப்போன் *śuḷukkeḍuppōṉ,* பெ. (n.) எலும்புமுறிவு, சுளுக்கு முதலியவற்றைத் தீர்ப்பவன்; an authorised person who professes skill in treating fractures and dislocations (சா.அக.).

[சுளுக்கு + எடுப்போன்]

சுளுக்கேற்றிவிடல் *śuḷukkeṟṟi-v-iḍal,* பெ. (n.) சுளுக்கினை அதிகப்படுத்துதல்; causing sprain to grow worse by improper handling or massage (சா.அக.).

[சுளுக்கு + ஏற்றிவிடல்]

சுளுக்கேறு-தல் *śuḷukkēṟu-,* 5 செ.கு.வி. (v.i.) சுளுக்கிக்கொள்ளுதல் (வின்.); to be sprained.

[சுளுக்கு + ஏறு-,]

சுளுகன் *śuḷugaṉ,* பெ. (n.) 1. சதுரப்பாட்டுப் பேச்சாளன் (யாழ்.அக.); clever ready - witted person.

ம. சுளுகன்

[சுளுகு → சுளுகன்]

சுளுகு[1] *śuḷugu,* பெ. (n.) 1. நுட்பவறிவு; keen intellect. 2. சதுரப்பாட்டுப் பேச்சு; clever talk 3. வலக்காரப்பேச்சு; enticing speech, cunning speech. "சுளுகுகள் விவரமொ டுரையிடுவார்" (திருச்செந் பு. செயந்திபுர. 55).

சுளுகு[2] *śuḷugu,* பெ. (n.) சுளுவு பார்க்க; see *śuḷuvu*.

சுளுந்து *śuḷundu,* பெ. (n.) 1. தீப்பந்தமாகப் பயன்படும் சுளுந்துக்கோரான் அல்லது வெள்ளை வெட்சி எனப்படும் ஒரு சிறிய மரம்; a kind of small tree its branches can be used as torch. 2. சுள்ளி முதலியவற்றாலான தீப்பந்தம்; torch made of dired twigs and leaves.

[சுள்ளி → சுளு → சுளுந்து]

சுளுந்துக்கட்டை *śuḷuntu-k-kaṭṭai,* பெ. (n.) சுளுந்து மரக்கழியில் எரிக்கும் தீப்பந்தம் (வின்); torch of ixora sticks.

[சுளுந்து + கட்டை]

சுளுந்துக்காரன் *śuḷundu-k-kāraṉ,* பெ. (n.) 1. தீப்பந்தக்காரன்; torch-bearer. 2. தீப்பந்தம் பிடிக்கும் வலையன்; person of Valaiyan sub caste whose occupation is torch-bearing.

[சுளுந்து + காரன். காரன் உடைமைப் பெயரீறு]

சுளுந்துக்கோல் *śuḷundu-k-kōl,* பெ. (n.) சுளுந்து பார்க்க; see *śuḷundu* (சா.அக.).

[சுளுந்து + கோல்]

சுளுவு *śuḷuvu,* பெ. (n.) 1. எளிமை; ease, facility. 2. இலேசு; lightness. சுமை சுளுவானது. 3. தணிவு; cheapness, as of price. விலை சுளுவாயுள்ளது.

தெ., க. சுளுவு

[சுள் → சுளுவு]

சுளை *śuḷai,* பெ. (n.) பலாப்பழ முதலியவற்றின் சதைப்பற்று; the pulp as of jack fruit. "சாரற் பலவின் சுளையொடு" (அகநா. 2).

சுளைப்பிடாம் *śuḷai-p-piḍām,* பெ. (n.) கம்பளி; (திவ். பெரிய. தி. 8,1,1. வியா.); woollen stuff.

[சுளை + படாம் → பிடாம்]

சுளையம் *śuḷaiyam,* பெ. (n.) திருட்டு (இ.வ); thieft, fraud.

சுளையமாடு-தல் *śuḷaiyam-āḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) திருடுதல் (இ.வ.); to steal, defraud.

[சுளையம் + ஆடு]

சுளையாக *śuḷai-y-āga,* வி. அ. (adv.) மொத்தமாக, கணிசமாக; a good lumpsum or round sum. 'இந்தச் சேலைக்குச் சுளையாக ஐந்நூறு ரூபாய் பெற்றுக் கொண்டார்' (உ.வ.).

[சுளை → சுளையாக]

சுற்கம் *śuṟkam,* பெ. (n.) பெண்கொள்வோன் பெண்ணின் தந்தைக்குக் கொடுக்கும் பரிசம், (விவகார சங். சிறப். 89); marriage fee paid to the father of a maid by her suitor 2. பெண்ணுக்குக் கொடுக்குஞ் சீர்வரிசை; dowry. 3. வரி; tax, duty. "சுற்கத்தில் வரு செம்பொன்னும்" (திருக்காளத். பு. 11, 23).

சுற்பம் *śuṟpam,* பெ. (n.) செம்பு; copper "சுற்பம் பூரிசந்திரம் பொருவ" (ஞானா. 68; 15).

[சுல் → சுல்லம் = செம்பு. சுல்லம் → சுற்பம்]

சுற்றத்தார் *śuṟṟattār,* பெ. (n.) 1. உறவினர்; kinsmen, relations. "சுணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலர" (நாலடி. 25). 2. அரசனோடு எப்போதும் உடனிருக்கும் அரசு அலுவலர்கள்; officials, attendants. "அரசர்க் குறுதிச் சுற்றத்தார்" (சூடா.).

ம. சுற்றத்தார்

[சுற்றம் → சுற்றத்தார்]

சுற்றந்தழால் *śuṟṟandaḻāl,* பெ. (n.) கிளைஞரை அணைத்துக் கொள்ளுகை (குறள், அதி.53); cherishing one's kindred.

[சுற்றம் + (தழுவு →) தழால்]

சுற்றம் *śuṟṟam,* பெ. (n.) 1. சுற்றத்தார் பார்க்க; see *śuṟṟattār.* "நகைப்புறனாக நின் சுற்றம்" (புறநா. 29:25). 2. அரசர்க்குறுதிச் சுற்றம்; confidential servants of kings. 3. ஆயத்தார்; friends, attendants. "தொடிமாண் சுற்றமு மெம்மு முள்ளாள்" (அகநா. 17). 4. கூட்டம்; crowd, gathering. "ஓவியச் சுற்றத் துரையவிந் திருப்ப" (சிலப். 22 : 11).

ம. சுற்றம்; தெ. த்ச்சுட்டமு

[சுற்று → சுற்றம்]

சுற்றளவு *śuṟṟaḷavu,* பெ. (n.) வட்டவளவு; circumference, perimeter, girth.

ம. சுற்றளவு

[சுற்று + அளவு]

சுற்றறிக்கை *śuṟṟaṟikkai,* பெ. (n.) ஓர் அலுவலகத்தில் அல்லது அமைப்பில் செய்திகளைத் தொடர்புடைய அனைவருக்கும் தெரிவிக்க அனுப்பும் அறிக்கை; circular in an office or department etc. சுற்றறிக்கை வந்த பின்பே அயல்நாட்டுச் செல்கை பற்றித் தெரிய வந்தது'.

[சுற்று + அறிக்கை]

சுற்றாடை *śuṟṟāḍai,* பெ. (n.) 1. கட்டுத்துணி; a strip of cloth used in dressing bandage. 2. மாதவிடாயின்போது பெண்கள் உள்ளாகச் சுற்றிக் கொள்ளும் பழஞ்சீலை; a strip of old cloth, used by females as an underwear during menustrual period. 3. பிள்ளைப்பேறான பெண்டிர்க்கு 'வயிறு விழாமலிருக்க' வயிற்றைச் சுற்றி இறுகக்கட்டும் சீலை; a tight bandage used round the abdomen of a women immediately after delivery (சா.அக.).

[சுற்று + ஆடை]

சுற்றாலை *śuṟṟālai,* பெ. (n.) திருச்சுற்றாலை; temple enclosure.

க. சுட்டாலெ

[சுற்று → ஆலை]

சுற்றிக்கட்டு[1]-தல் *śuṟṟi-k-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. எழுத்துச்சுழி வரைதல்; to write the curls of alphabetic letters. 2. தீச்செயலுக்கான

கலந்தாய்வு செய்தல், சூழ்ச்சிசெய்தல்; to form a conspiracy.

[சுற்றி + கட்டு-,]

சுற்றிக்கட்டு²-தல் *šuṟṟi-k-kaṭṭu-*, 5 செ.குன்றா.வி. (v.t.) 1. நீரை வேறுவழியில் திருப்புதல்; to divert water into a new channel. 2. பொய்யாகக் கற்பித்தல்; to fabricate. 3. கையூட்டுக் கொடுத்தல்; to bribe.

[சுற்றி + கட்டு-,]

சுற்றிச்சுழல்(லு)-தல் *šuṟṟi-c-cuḻal-*, 7 செ.குன்றா.வி. (v.t.) சுற்றுக்காலிடு- பார்க்க; see *šuṟṟu-k-kālidu-*. "என்னைச் சுற்றிச் சுழன்று போகானால்" (திவ். நாய்ச். 13:5).

[சுற்றி + சுழல்-,]

சுற்றிச்சுழற்றி *šuṟṟi-c-cuḻaṟṟi*, வி.எ. (adv.) 1. ஒரு மிக்க; altogether. 2. நேரின்றி; indirectly, in a circumlocutory fashion (செ.அக.).

[சுற்றி + சுழற்றி]

சுற்றிச்சுழற்று-தல் *šuṟṟi-c-cuḻaṟṟu-*, 5 செ.குன்றாவி. (v.i.) விளக்கமின்றி வளர்த்துப் பேசுதல்; to be vague, indirect or circumlocutory, as in speech.

[சுற்றி + சுழற்று-,]

சுற்றித்திரி-தல் *šuṟṟi-t-tiri-*, 2 செ.கு.வி. (v.i.) 1. அங்குமிங்கும் சென்று வருதல்; roam, wander 'மேய்ப்பாரின்றி ஆடுமாடுகள் அங்கு மிங்கும் சுற்றித் திரிந்தன'. 2. ஒரு பற்றுக்கோட்டிற்காக அலைதல்; wandering for a purpose. வேலைக்காக அவன் பலவிடங்களில் சுற்றித் திரிந்து இன்று ஒரு நல்ல வேலையில் அமர்ந்து விட்டான்.

[சுற்று → சுற்றி + திரி-,]

சுற்றிப்பார்-த்தல் *šuṟṟi-p-pār-*, 4 செ.கு.வி. (v.i.) 1. நேரில்சென்று பார்வையிடுதல்; to inspect. 'தீப்பிடித்த குடிசைகளை அமைச்சர் சுற்றிப் பார்த்தார்'. 2. பொழுதுபோக்காகச் சென்று பார்த்தல்; to visit, to go on a tour, sight see. 'குற்றாலத்தைச் சுற்றிப்பார்க்க இன்றளவும் எனக்கு வாய்ப்புக் கிட்டவில்லை'.

[சுற்று → சுற்றி + பார்-,]

சுற்றிப்பிடி¹-த்தல் *šuṟṟi-p-piḍi-*, 4 செ.கு.வி. (v.i.) வயிறு மிகவும் நோதல்; to suffer from colic, to have acute, griping pain in the stomach.

[சுற்றி + பிடி-,]

சுற்றிப்பிடி²-த்தல் *šuṟṟi-p-piḍi-*, 9 செ.குன்றாவி. (v.t.) பற்றிக் கொள்ளுதல்; to hold in one's grip. (பாவம்) கரிசு அவனைச் சுற்றிப்பிடிக்கும்.

[சுற்றி + பிடி-,]

சுற்றிப்போடு-தல் *šuṟṟi-p-pōḍu-*, 9 செ.குன்றா.வி. (v.t.) 1. மிளகாய், உப்பு, சந்திமண், கிழிந்த துணி இவற்றை நோயாளி தலைமேற் சுற்றிப் பின் நெருப்பிலிட்டுக் கண்ணேறுகழித்தல்; to avert the effects of evil eye by waving round the affected person by chillies, salt, earth from cross roads and rags and throwing. 2. சுற்றியெடு-, பார்க்க; see *šuṟṟi-y-eḍu*.

[சுற்றி + போடு-,]

சுற்றியெடு-த்தல் *šuṟṟi-y-eḍu-*, செ.குன்றா.வி. (v.t.) மணமக்கள் முதலியோரின் தலை முடியைச் சுற்றிப் பணியாரம் முதலியவற்றை எறிந்து கண்ணேறு கழித்தல்; to wave cakes and other things round a newly married couple for averting evil eye.

[சுற்றி + எடு-,]

சுற்றியெறி-தல் *šuṟṟi-y-eṟi-*, 2 செ.குன்றாவி. (v.t.) சுற்றிப்போடு,1 பார்க்க; see *šuṟṟi-p-pōḍu, 1-*.

[சுற்றி + எறி-,]

சுற்றிலும் *šuṟṟilum*, வி.அ. (adv.) சுற்றுமுற்றும், எங்கும்; on all sides; around. 'வீட்டைச் சுற்றிலும் தீப்பிடித்தபோது தெருக்காரர்கள் தீயை அணைத்தனர்'.

[சுற்று → சுற்றிலும்]

சுற்றிலை *šuṟṟilai*, பெ. (n.) சுருட்டுப் புகையிலையைச் சுற்றும் இலை (வின்.); wrapper or cover-leaf of cigar.

[சுற்று + இலை]

சுற்றிவலி-த்தல் *šuṟṟi-vali-*, 4 செ.குன்றாவி. (v.t.) வஞ்சனை முதலியவற்றால் வலிந்து கொள்ளுதல்; to extort by fraud or stratagem.

[சுற்று + வலி-,]

சுற்றிவரு-தல் *śuṟṟi-varu-, 18* செ.கு.வி. (v.i.) *1.* **உலா வருதல்;** go round as a pleasure tour or as an excursion 'உலகைச் சுற்றிவர எல்லாருக்கும் ஆசைதான்'. *2.* **பணிவுடன் அல்லது பத்தியுடன் சுற்றுதல்;** to go around due to obedience or prayers. கோயிலையோ கடவுள் திருவுருவையோ மூன்று முறை சுற்றிவருவது உலக நடைமுறை. *3.* **சுற்றிலும், சுற்றுமுற்றும்;** on all side, around.

[சுற்று → சுற்றிவரு-,]

சுற்றிவளை-த்தல் *śuṟṟi-vaḷai-, 4* செ.கு.வி. (v.i.) *1.* **நாலாப்பக்கமும் சூழ்ந்து கொள்ளுதல்;** to encircle on all sides. 'படைகள் எதிரியின் கோட்டையைச் சுற்றி வளைத்தன'. *2.* **செய்தியை நேரிடையாகக் கூறாது தேவையற்ற பிறவற்றையும் சேர்த்து விரிவாக்கிக்கூறுதல்;** to beat about the bush. 'தன் தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் சுற்றி வளைத்துப் பேசினான்.'

[சுற்று → சுற்றி + வளை-,]

சுற்றிவாங்கு *śuṟṟi-vāṅgu,* பெ. (n.) **தேசிக் கூத்திற்குரிய கால்வகை** *(சிலப்.பக். 90, உரை)* (nāṭyā.); a kind of leg pose.

[சுற்றி + வாங்கு]

சுற்று[1]-தல் *śuṟṟu-, 5* செ.கு.வி. (v.i.) *1.* **சுழன்று செல்லுதல்;** to revolve, circulate, turn around, spin, whirl. 'சக்கரம் சுற்றுகிறது'. *2.* **சுற்றிப் போதல்;** to take a circuitous or indirect course, meander, wind about. "அவன் நேர்வழியிற் போகாமற் சுற்றிப்போகின்றான்." *3.* **அலைதல்;** to move here and there, roam, wander about. "அவன் சும்மா சுற்றுகிறான்" *4.* **வளைந்தமைதல்;** to be coiled, to lie encircling. "காலிற் சுற்றிய நாகமென்ன" *(கம்பரா.நீர்விளை. 11). 5.* **கிறு கிறுத்தல்;** to be giddy, dizzy. "பித்தத்தினால் தலை சுற்றுகிறது". *6.* **மனங் கலங்குதல்;** to be perplexed with difficulties.

ம. சுற்றுக; க. சுற்று; தெ. சுட்டு; து. சுத்துளி; கோத. சுச்; துட. தூத்; குட. சுதித்; கொலா. சுட்; நா. சுட்டி; பர். சுத்த; கட. சுடட்; குவி. சுத்தலி; பட. சுத்து

[சல் → சர் → சற் → சற்று]

சுற்று[2]-தல் *śuṟṟu-, 5* செ.குன்றாவி. (v.t.) *1.* **சுற்றி வருதல்;** to go round, to circle. "போகா தெறும்பு புறஞ்சுற்றும்" *(நாலடி, 337). 2.* **தழுவுதல்;** to entwine, embrace. "கொடிகள் ஒன்றையொன்று சுற்றிக்கிடக்கின்றன" *3.* **விடாதுபற்றுதல்;** to follow unceasingly. "அவன் அவனைச் சுற்றிக் கொண்டே இருக்கிறான்" *4.* **சூழ்ந்திருத்தல்;** to encompass, surround. "தோகை மாதர்கள் மைந்தரிற் றோன்றினர் சுற்ற" *(கம்பரா. பிணிவீ. 45). 5.* **வளையச் சூடுதல்;** to wear around. "குடர் நெடுமாலை சுற்றி" *(திருவாச. 6:30). 6.* **உடுத்துதல்** (திவா.); to tie around the waist, invest, gird. "கூறையரைச் சுற்றி வாழினும்" *(நாலடி, 281). 7.* **வளையக்கட்டுதல்;** to coil up, as rope. "சுற்றுஞ் சடைக் கற்றைச் சிற்றம்பலவர்" *(திருக்கோ. 134). 8.* **சுருட்டுதல்;** to roll up, as mat. "பாயைச் சுற்றுக". *9.* **சுழற்றுதல்;** to wave, whirl, brandish. "சிலம்பஞ் சுற்றுகிறான்". *10.* **கம்பி கட்டுதல்;** to string, fasten with fine wire, as coral beads, pearls. "பவழ மாலையைச் சுற்றிக் கொண்டு வா". *11.* **கவர்தல்;** to grasp, appropriate, steal. "அவனுடைய பொருளை யெல்லாம் சுற்றிக் கொண்டான்" *(தெ.க.தொ. 2, 194). 12.* **வஞ்சித்தல்;** to circumvent, accomplish by trickery.

[சல் → சர் → சற் → சற்று]

சுற்று[3] *śuṟṟu,* பெ. (n.) *1.* **வட்டமாய்ச் செல்லுகை** (சூடா.); passing round in an orbit, moving around. *2.* **அச்சின் மேற்சுழற்சி;** whirling on an axis, revolving, spinning. *3.* **சுருளுகை;** rolling, coiling. *4.* **சுற்றுவட்டம்;** circumference, periphery, bounding space. "ஏழுமுழச் சுற்றுடைய பிரவை". *5.* **சுற்றளவு;** circuit, compass, range, girth. "இதன் சுற்று மூன்றரைக் கல்". *6.* **சுற்றுவழி;** circuitous run, round about way zigzag route. "இந்தவழி சுற்று". *7.* **சுற்றிடம்;** regions on the border; neighbourhood. "சுற்றுறு முனிவர்யாரும்" *(கம்பரா. மிதிலை. 113). 8.* **சுற்றப் பட்ட பொருள்;** coil, roll. *9.* **கால் விரலணி;** toe ring. "சுடுபொன் வளைஇய வீரமை சுற்றொடு" *(கலித். 85). 10.* **மதில்** (பிங்.); fortification, compound wall. *11.* **கோயிலின் திருச்சுற்று;** surrounding arcade of a temple. "அந்த வாலயச் சுற்றெலாந் தெற்றிகள்" *(சிவரக. மேரு. 10).*

12. சொற்பொருள்களின் சிக்கல்; complication in thought and expression. "இந்தப் பாட்டின் கருத்துச் சுற்றாயிருக்கிறது".

க. சுட்டு., ம. சுற்று

[சுல் → சுர் → சுற் → சுற்று]

சுற்றுக்கட்டு *šuṟṟu-k-kaṭṭu*, பெ. (n.) 1. வீட்டைச் சுற்றியுள்ள புறக்கட்டு (இ.வ.); verandahs adjoining main house. 2. சுற்றுப்புறம் பார்க்க; see *šuṟṟu-p-puṟam*. 3. உறவினர்களின் கூட்டம்; large circle of relations. 4. கட்டுக்கதை; fabrication, fiction. 5. கையூட்டு; bribery.

[சுற்று + கட்டு]



சுற்றுக்கட்டை *šuṟṟu-k-kaṭṭai*, பெ. (n.) பணியாசிக் கட்டை (தஞ்சை.); mason's plastering plane.

[சுற்று + கட்டை]

சுற்றுக்கடிதம் *šuṟṟu-k-kaḍitam*, பெ. (n.) சுற்றுத் தரவு (இ.வ.) பார்க்க; see *šuṟṟu-t-taravu*.

[சுற்று + கடிதம்]

சுற்றுக்கடுக்கன் *šuṟṟu-k-kaḍukkaṉ*, பெ. (n.) கடுக்கன் வகை; a kind of ear-ring.

[சுற்று + கடுக்கண்]

சுற்றுக்கண் *šuṟṟu-k-kaṇ*, பெ. (n.) சுழற்கண்; whirling eye (சா.அக.).

[சுற்று + கண்]

சுற்றுக்கல் *šuṟṟu-k-kal*, பெ. (n.) கொப்பு முதலிய அணிகலன்களைச் சுற்றி வட்டமாக அமைக்கும் மணிகள்; precious stones set circularly on the fringe of koppu and similar ornaments. சுற்றுக்கற் கொப்பு.

[சுற்று + கல்]

சுற்றுக்காரியம் *šuṟṟu-k-kāriyam*, பெ. (n.) சுற்றுவேலை பார்க்க; see *šuṟṟu-vēlai* (செ.அக.).

[சுற்று + காரியம்]

சுற்றுக்கால் *šuṟṟu-k-kāl*, பெ. (n.) 1. சுற்றுப்புறம் பார்க்க; see *šuṟṟu-p-puṟam*. "சுற்றுக்காலில் கேட்டால் தெரியும்" (இவ.) 2. பக்கங்களிலிருந்து கசியும் நன்னீரையொதுக்கி விடுவதற்காக உப்பளத்தைச் சுற்றியெடுக்கப்படும் கால்வாய்; ring-channel round a salt pan for keeping off fresh water.

[சுற்று + கால்]

சுற்றுக்காலிடு-தல் *šuṟṟu-k-kāliḍu-*, செகுன்றாவி (v.t.) 1. விடாதுபற்றித் தொடர்தல்; to cling to one's legs. 2. விடாதுகெஞ்சுதல்; to importune.

[சுற்றுக்கால் + இடு-,]

சுற்றுக்குடல் *šuṟṟu-k-kuḍal*, பெ. (n.) வயிற்றுக்குள் சுற்றிக் கொண்டிருக்கும் குடல்; the position of the intestine attached to the abdominal wall by the fold of peritonium (சா.அக.).

[சுற்று + குடல்]

சுற்றுக்குடுமி *šuṟṟu-k-kuḍumi*, பெ. (n.) குடுமியைச் சுற்றி வளர்க்கும் மயிர்; short hair-growth round the tuft.

[சுற்று + குடுமி]

சுற்றுக்குலைவு *šuṟṟu-k-kulaivu*, பெ. (n.) இமை மயிர் உதிர்ந்து, கண்ணில் நீர்வடிதல், வீக்கம், வலி இவற்றையுண்டாக்கும் ஒருவகைக் கண்ணோய்; a disease of the eyelids an ulcerous form of margiral blepharitis marked by chornic inflammable of hair fedlicles and sebaceous glands of the margin of the eyes.

[சுற்று + குலைவு]

சுற்றுக்கொடி *šuṟṟu-k-koḍi*, பெ. (n.) நஞ்சுக் கொடி; naval card, umbilical cord (சா.அக.).

[சுற்று + கொடி]

சுற்றுக்கொழுப்பு *šuṟṟu-k-koḻuppu*, பெ. (n.) கொழுப்புக்குடல்; the lower part of the intestine or colon the outer part of which is covered with fat.

[சுற்று + கொழுப்பு]

சுற்றுக்கோயில் *šuṟṟu-k-kōyil,* பெ. (n.) பெருங்கோயிலின் சுற்றாலையில் உள்ள சிறு தெய்வக் கோயில்கள்; subordinate shrines connected with a main temples.

[சுற்று + கோயில்]

சுற்றுக்கோள் *šuṟṟu-k-kōḷ,* பெ. (n.) சுற்றிக் கொள்ளுகை; surrounding, enclosing. "நடுவூருள் வேதிகைச் சுற்றுக் கோட் புக்க" (நாலடி, 96).

[சுற்று + கோள்]

சுற்றுச்சுவர் *šuṟṟu-c-cuvar,* பெ. (n.) சுற்றுப்புற மதில்; compound wall.

[சுற்று + சுவர்]

சுற்றுச்சுழல் *šuṟṟu-c-cuḻal,* பெ. (n.) சுற்றுச் சுழற்சி பார்க்க; see *šuṟṟu-c-cuḻarcci.*

சுற்றுச்சுழற்சி *šuṟṟu-c-cuḻarrci,* பெ. (n.) 1. சுற்று வழி; meandering, zigzag route. 2. செயலில் வரும் முட்டுப்பாடு; intricacy, as of an affair. 3. குறித்த செய்தியை நேராகக் கூறாது வளர்த்துக் கூறுகை; circumlocutory expression; confused complicated treatment of a subject.

[சுற்று + சுழற்சி]

சுற்றுஞ்சுழற்றுமாய் *šuṟṟuñ-šuḻaṟṟumāy,* எ.வி. (adv.) நேரின்றி வளைந்து; in a zigzag or indirect manner. 'வழி சுற்றுஞ்சுழற்றுமா யிருக்கிறது' (கொ.வ.).

[சுற்றும் + சுழற்றும் + ஆய்]

சுற்றுச்சூழல் *šuṟṟu-c-cūḻal,* பெ. (n.) உயிரினங்கள் வாழும் பகுதியில் உள்ள காற்று, நீர் போன்றவை அடங்கிய இயற்கைச் சூழ்நிலை; environment. 'தொழிற்சாலைகள் பெருக்கத்தால் சுற்றுச்சூழல் கெட்டுவிட்டது'.

[சுற்று + சூழல்]

சுற்றுடைமை *šuṟṟuḍaimai,* பெ. (n.) வட்டவடிவு; roundness, plumpness "சுற்றுடைமைக்குஞ் செவ்வைக்கும் மூங்கில் போலே இருந்துள்ள தோள்" (ஈடு, 2, 5).

[சுற்று + உடைமை]

சுற்றுத்தரவு *šuṟṟu-t-taravu,* பெ. (n.) பலரும் ஒரே நேரத்திலறியும்படி அதிகாரிகள் பிறப்பிக்கும் ஆணை; circular order (C.G.).

[சுற்று + தரவு]

சுற்றுத்தேவதை *šuṟṟu-t-tēvadai,* பெ. (n.) 1. திருக்கோயில்களின் திருச்சுற்றுகளிலுள்ள உடன்சுற்றத் தெய்வம்; group of subordinate deities surrounding the chief deities of a temple. 2. பெரியோரை அடுத்திருப்பவர் (கொ.வ.); satellites of greatmen.

[சுற்று + தேவதை]

சுற்றுப்பக்கம் *šuṟṟu-p-pakkam,* பெ. (n.) சுற்றுப்புறம் பார்க்க; see *šuṟṟu-p-puṟam.*

சுற்றுப்பட்டு *šuṟṟu-p-paṭṭu,* பெ. (n.) சுற்றுப்புறம் பார்க்க; see *šuṟṟu-p-puṟam.*

தெ. த்சுட்டுப் பட்டு

[சுற்று + பட்டு]

சுற்றுப்படாகை *šuṟṟu-p-paḍāgai,* பெ. (n.) சுற்று வட்டகை பார்க்க (நாஞ்.); see *šuṟṟuvaṭṭagai.*

[சுற்று + படாகை]

சுற்றுப்பயணம்[1] *šuṟṟu-p-payaṇam,* பெ. (n.) 1. அதிகார முறையில் அதிகாரிகள் பல ஊர்களுக்கும் சென்று வருகை; circuit, tour, as of an officer. "சுற்றுப்பயணம் வந்து ஜகந்நிர்வாகம் பண்ணுகை" (ஈடு, 4,5,1). 2. சுற்று வழி பார்க்க; see *šuṟṟuvaḻi.*

[சுற்று + பயணம்]

சுற்றுப்பயணம்[2] *šuṟṟu-p-payaṇam,* பெ. (n.) சுற்றுலா பார்க்க; see *šuṟṟulā.*

சுற்றுப்பலி *šuṟṟu-p-pali,* பெ. (n.) 1. கோயிலைச் சுற்றித் திக்குத்தேவதைகளுக்கு இடும் படையல்; offerings to the regents of the eight cardinal points, made round a temple in the respective directions. 2. கீழதிகாரிகளுக்குக் கொடுக்கும் கையூட்டு; bribe offered to persons in subordinate position.

[சுற்று + பலி]

சுற்றுப்பாதை *šuṟṟu-p-pādai,* பெ. (n.) 1. சுற்றுவழி; நேர்பாதையல்லாத வழி; way which is not short-cut. 2. மாற்றுவழி; by-pass.

3. விண்வெளியில் கோள் அல்லது செயற்கைக் கோள் சுற்றி வரும் நீள்வட்டப் பாதை; orbit. 'இந்தியா பறக்கவிட்ட செயற்கைக்கோள் சுற்றுப் பாதையை விட்டு விலகிவிட்டது'.

[சுற்று + பாதை]

சுற்றுப்பிரகாரம் *šuṟṟu-p-piragāram,* பெ. (n.) கோயிற்றிருச்சுற்று; surrounding arcade of temple.

[சுற்று + பிரகாரம்]

சுற்றுப்புடை *šuṟṟu-p-puḍai,* பெ. (n.) 1. பக்க வீக்கம்; swelling at the sides or in the surroundings. 2. பக்கம் புடைத்தல்; protruding at the sides (சாஅக.).

[சுற்று + புடை]

சுற்றுப்புடைகொள்(ளு)-தல் *šuṟṟu-p-puḍai-koḷ-* செ.குன்றாவி. (v.i.) பக்கம் புடைத்திருத்தல் (சிலப். 13, 162, அரும்.); to be pretruding at the sides.

[சுற்று + புடைகொள்ளு-,]

சுற்றுப்புறம் *šuṟṟu-p-puṟam,* பெ. (n.) 1. அயலிடம்; adjacent place, neighbourhood, vicinity. 2. குறிப்பிட்ட இடத்தை ஒட்டியுள்ள அல்லது சார்ந்த பகுதி; surroundings. 'நம்முடைய சுற்றுப்புறத்தை நாம்தான் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்'.

[சுற்று + புறம்]

சுற்றுப்பூசை *šuṟṟu-p-pūšai,* பெ. (n.) 1. சுற்றுக் கோயில்களில் செய்யும் பூசை; worship in *šuṟṟu-k-kōil.* 2. சுற்றுப்பலி பார்க்க; see *šuṟṟu-p-pali.*

[சுற்று + பூசை]

சுற்றுப்பேழை *šuṟṟu-p-pēḻai,* பெ. (n.) பேழைபோற் சுருண்டுகிடக்கும் பாம்பின் உடம்புமண்டலம்; coils of the lower part of snake's body, as basket-shaped. "நாபிக்குக் கீழ் மூன்று சுற்றுப் பேழை செய்துகொடு . . . ஸ்ரீ பதஞ்சலி தேவர்" (தெக.தொ. 2, 119).

[சுற்று + பேழை]

சுற்றும் *šuṟṟum,* கு.வி.எ. (adv.) சூழ; all around. "காலவான் கடுங்கணை சுற்றுங் கவ்வலால்" (கம்பரா. வருணனை. 55).

ம. சுற்றும்

[சுற்று → சுற்றும்]

சுற்றும்பிற்றும் *šuṟṟum-piṟṟam,* கு.வி.எ. (adv.) சுற்றுமுற்றும் பார்க்க; see *šuṟṟumuṟṟum.*

[சுற்றும் + பிற்றும்]

சுற்றுமண் *šuṟṟu-maṇ,* பெ. (n.) 1. ஓலை முடங்கலில் இடும் முத்திரை மண்; clay cover of an ōlai-letter for impressing stamp. "சுற்றுமண் மூடுதோட்டின் முடங்கல்" (கம்பரா. பள்ளி. 6). 2. வார்ப்புக்கருவின் புறம்பூசிய மண்; outer coating of the clay-mould for receving molten metal, as in casting brass.

[சுற்று + மண்]

சுற்றுமணி *šuṟṟu-maṇi,* பெ. (n.) மகளிர் கழுத்திலணியும் அணிவகை; an ornament worn by women round the neck.

[சுற்று + மணி]

சுற்றுமதில் *šuṟṟu-madil,* பெ. (n.) கோயில் முதலியவற்றைச் சூழ்ந்துள்ள மதில் (சிலப். 10, 31, அரும்.); surrounding wall, as of temple.

[சுற்று + மதில்]

சுற்றுமுற்றும் *šuṟṟu-muṟṟum,* கு.வி.எ. (adv.) நான்கு பக்கமும்; all around, on all sides. "சுற்றுமுற்றும் புதை நின்னை" (திருக்கோ. 43).

தெ. சுட்டுமுட்டு; க., து. சுட்டுமட்ட

[சுற்றும் + முற்றும்]

சுற்றுலா *šuṟṟulā,* பெ. (n.) பொழுது போக்காகவோ, ஓய்வாகவோ பிறவற்றிற்காகவோ மேற்கொள்ளும் சுற்றுச் செலவு; tour, excursion. 'வழக்கம் போல இந்த ஆண்டும் பள்ளிமாணவர்கள் குற்றாலத்திற்குச் சுற்றுலா சென்றுள்ளனர்'.

[சுற்று (ம்) + உலா]

சுற்றுலாத்தலம் *šuṟṟulā-t-talam,* பெ. (n.) சுற்றுலா மேற்கொள்ளுமிடம்; place of tourist importance.

[சுற்றுலா + தலம்]

சுற்றுலாத்துறை *šuṟṟulā-t-tuṟai,* பெ. (n.) சுற்றுலா மேற்கொள்ளும் அயல் நாட்டவரையும், உள்நாட்டவரையும் ஆற்றுப்படுத்தும் ஓர் (அரசுத்) துறை; a department intended to increase the tourism from the people as well as foreigners. 'இந்த

ஆண்டு சுற்றுலாத்துறை மூலம் அரசிற்கு ஐநூறுகோடி உருபா வருமானம் கிட்டியுள்ளது'.

[சுற்றுலா + துறை]

சுற்றுலாப்பயணிகள் *surrulā-p-payanigaḷ*, பெ. (n.) சுற்றுலாச் செல்வோர்; tourists. 'இந்தியாவிற்கு இந்த ஆண்டு ஐம்பது இலக்கம் சுற்றுலாப்பயணிகள் வந்துள்ளனர்'.

[சுற்றுலா + பயணிகள்]

சுற்றுலாமாளிகை *surrulā-māḷigai*, பெ. (n.) சுற்றுலாச் செல்வோர் தங்கும் விடுதி, விருந்தினர் விடுதி; tourist lodge or hotel, government's guest house.

[சுற்றுலா + மாளிகை]

சுற்றுவட்டகை *surru-vaṭṭagai*, பெ. (n.) சுற்றுப்புறச் சிற்றூர்கள்; surrounding country or villages.

[சுற்று + வட்டகை]

சுற்றுவட்டம் *surru-vaṭṭam*, பெ. (n.) சுற்றுவட்டகை பார்க்க; see *surru-vaṭṭagai*.

[சுற்று + வட்டம்]

சுற்றுவட்டாரம் *surru-vaṭṭāram*, பெ. (n.) சுற்றுவட்டகை பார்க்க; see *surru-vaṭṭagai*.

[சுற்று + வட்டாரம்]

சுற்றுவரவு *surru-varavu*, பெ. (n.) 1. சூழ்ந்து வருகை; moving in a circle, passing around. 2. வட்டமிட்டோடும் குதிரைச்சாரியை வகை; running of a horse in a circular course. "பதினெட்டு வகைப்பட்ட சுற்றுவரவினையும்" (பு.வெ. 12, வென்றிப். 13, உரை). 3. விழாக் காலங்களில் வரும் மேல்வரும்படி; extra income, as at festival.

[சுற்று + வரவு]

சுற்றுவழி *surru-vaḻi*, பெ. (n.) 1. நேரற்ற பாதை; roundabout or circuitous way, indirect course. 2. தந்திரச்செயல், கீழறுப்பு; secret, underhand method.

[சுற்று + வழி]

சுற்றுவளையம்[1] *surru-vaḷaiyam*, பெ. (n.) 1. உருட்டி விளையாடும் சக்கரம்; hoop trundled along by children. 2. வட்டம்; round, circuit. "இந்தச் சாமான்கள் ஒரு சுற்று வளையத்திற்குக் கூடக் காணாது". 3. தெருவிற் சுற்றிக் கொண்டிருக்கை; wandering in the street. "ஊரைச் சுற்றுவளையம் போடுகிறான்". 4. கை கட்டிப் பணிபுரிதல்; dancing attendance, as at court.

[சுற்று + வளையம்]

சுற்றுவளையம்[2] *surru-vaḷaiyam*, பெ. (n.) கருப்பை நழுவாமல் இருக்கும்படி அல்குலிற் புகட்டும் வளையம்; a ring pessary placed in the vagina to support the uterus (சா.அக.).

[சுற்று + வளையம்]

சுற்றுவாடை *surru-vāḍai*, பெ. (n.) சுற்றுப்புறம்; அண்டையயல் பகுதிகள்; nearby places. 'சாத்தூர் சுற்றுவாடையில் தீப்பெட்டித் தொழிற்சாலைகளே உள்ளன'.

[சுற்று + வாடை]

சுற்றுவாரி *surru-vāri*, பெ. (n.) சுவருக்கப்பால் நீண்டுள்ள கூரை; projecting roof of a house, eaves.

[சுற்று + வாரி]

சுற்றுலாவிடுதி *surrulā-viḍudi*, பெ. (n.) சுற்றுலாமாளிகை பார்க்க; see *surrulā-māḷigai*.

[சுற்றுலா + விடுதி]

சுற்றுவீதி *surru-vīdi*, பெ. (n.) 1. கோயிலைச் சுற்றியுள்ள தெரு; streets surrounding a temple. 2. வளைந்து செல்லும் தெரு; winding street.

[சுற்று + வீதி]

சுற்றுவேலை *surru-vēlai*, பெ. (n.) உதவித் தொழில்; minor work, as of household.

[சுற்று + வேலை]

சுற்றோட்டம் *surrōṭṭam*, பெ. (n.) 1. வட்டமாகச் சுற்றிவரல்; movement in a regular or circuitous course. 2. அரத்தம் நாடிநாள வழியாக உடம்பினுள் சுற்றி வரல்; the blood circulation in the body (சா.அக.).

[சுற்று + ஓட்டம்]

சுற்றொத்தி *surrotti*, பெ. (n.) சிற்றொத்தி பார்க்க; see *sirrotti*.

சுற *šura*, பெ. (n.) சுறா; shark. "சுறவழங்கு மிரும்பௌவத்து" *(பொருந. 203).*

[சுற → சுறா]

சுறட்டன் *šurattan*, பெ. (n.) தொந்தரைக்காரன் *(யாழ்ப்.)*; abstinate person, one who creates trouble.

[சுறட்டு → சுறட்டன்]

சுறட்டு *šurattu*, பெ. (n.) 1. இணக்கமின்மை; stubbornness, pertinacity, obstinacy. 2. தொந்தரை; troublesomeness, quarrelsome ness. 3. சிக்கு; difficulty, intricacy. 4. தலையிடுகை; meddling, interference.

[ஒருகா. துறட்டு → சுறட்டு]

சுறட்டுக்கோல் *šurattu-k-kōl*, பெ. (n.) துறட்டுக் கோல்; an iron crook.

[சுறட்டு + கோல்]



சுறட்டுக்கோல்

சுறட்டுப்பிடி *šurattu-p-pidi*, பெ. (n.) 1. முரட்டுப் பிடி; holding tightly and roughly. 2. முரட்டுத் தனம்; stubborness, obstinacy *(சா.அக.).*

[சுறடு + பிடி]

சுறட்டுவலி *šurattu-vali*, பெ. (n.) 1. தொந்தரவான வலி; persistent pain giving much trouble. 2. குறட்டைவலி; cram. 3. குறண்டல்வலி; spasmodic pain. 4. விடாப்பிடி; stubbornness *(சா.அக.).*

[சுறடு + வலி]

சுறட்டை *šurattai*, பெ. (n.) பசையற வறண்டது; that which is dried up. "சுறட்டைத்தலை" *(சங்.அக.)*

[சுறண்டு → சுறட்டு → சுறட்டை]

சுறட்டைத்தலை *šurattai-t-talai*, பெ. (n.) தலைப்பொடுகு; dandruff *(சா.அக.).*

[சுறட்டை + தலை]

சுறண்டி *šurandi*, பெ. (n.) ஒருவகைக்கரண்டி; a kind of spoon for scraping; a scraper *(சா.அக.).*

[சுறண்டு → சுறண்டி]

சுறண்டு-தல் *šurandu-*, 5 செ.குன்றாவி. (v.t.) சுரண்டியெடுத்தல்; removing by scraping as in wound *(சா.அக.).*

ம. சுரண்டு; க. கெரண்டு

[சுரண்டு → சுறண்டி]

சுறணகி *šuranagi*, பெ. (n.) காட்டுக்கரணை; wild suran *(சா.அக.).*

சுறணம் *šuranam*, பெ. (n.) காறாக்கரணை; white yam *(சா.அக.).*

சுறவம் *šuravam*, பெ. (n.) 1. சுறவு பார்க்க; see *šuravu*. "எயிற்றிறப் பாய்ந்தது சுறவம்" *(திருவிளை. வலைவீசி, 37).* 2. தமிழாண்டின் முதல் மாதம் (தை); the first month of the Tamil year.

[சுறவு → சுறவம்]

சுறவு *šuravu*, பெ. (n.) 1. சுறாமீன்; shark-fish. 2. சுறாவினம்; fish of shark family. "சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப" *(புறநா. 13:7).*

[சுற → சுறவு]

சுறவுக்குழை *šuravu-k-kulai*, பெ. (n.) சுறவுமீன் வடிவாகச் செய்த காதணி (இலக்.அக.); an ear ornament shaped like fish.

[சுறவு + குழை]

சுறவுக்கோடு *šuravu-k-kōdu*, பெ. (n.) நெய்தல் நில மக்கள், தெய்வமாகவைத்து வணங்கும் சுறாமீன்கொம்பு (பட்டினப், 86, 87, உரை); jaw-bone of the swordfish, worshipped by the people of the coastal regions.

[சுறவு + கோடு]

சுறவுவாய் *šuravu-vāy*, பெ. (n.) சுறவுவாய் என்னுந் தலைக்கோலம்; an ornament shaped like a shark's mouth, worn by women on the head. "சுறவுவா யமைத்த" *(பெரும்பாண். 385).*

[சுறவு → வாய்]

சுறவை *šuravai,* பெ. (n.) 1. சுரப்பு அல்லது வீக்கம்; swelling. 2. உணர்ச்சி; sensitiveness. 3. சுறுசுறுப்பு; diligence. 4. வேர்க்குரு; prickly heat (சா.அக.).

மறுவ. சுள்ளக்கம்

[சுர → சுற → சுறவை]

சுறா[1] *šurā,* பெ. (n.) 1. கடல்மீன்களில் பெருங்கேடு தரும் பேரின மீன்வகையான சுறாமீன்; shark fish. 2. சுறவவோரை; capricorn of the zodiac. 3. கோலாமீன்; flyingfish, sword fish. 4. நாய்மீன்; dog fish. 5. கொட்டை வாளை; two spotted shark-butter fish (சா.அக.).

ம. சுறா; க. கொற; தெ. சொற

சுறா வகைகள்

1. குரங்கன்சுறா; 2. வழுவன்சுறா; 3. செஞ்சுறா; 4. புள்ளிச்சுறா; 5. கொம்பன்சுறா; 6. வெள்ளைச் சுறா; 7. பால்சுறா; 8. மணிச் சுறா; 9. ஓங்கிற்சுறா; 10. மட்டிச்சுறா; 11. வெண்ணெய்ச்சுறா; 12. கோலாச்சுறா; 13. வெள்ளைக்கோலாச்சுறா; 14. காலன்சுறா; 15. நெளிஞ்சுறா; 16. ஆரணிச்சுறா; 17. பேய்ச் சுறா; 18. மேயுஞ்சுறா; 19. ஒரு கொம்பன்சுறா; 20. புடுக்கன்சுறா; 21. புலிச்சுறா; 22. பறங்கிச் சுறா; 23. பருவாய்ச்சுறா.



சுறா

சுறா[2] *šurā,* பெ. (n.) 1. உடம்பின் அழுக்கு; filth or dirt of the body. "சுறாப் பிடித்திருக்கிறது" 2. உடம்பிற் பூக்கும் உப்பு; a kind of eczema giving white saltish appearance to the skin.

[சிராய் → சிரா → சுறா]

சுறாக்கவடி *šurā-k-kavadi,* பெ. (n.) சிறுவர் விளையாட்டு வகை (யாழ்.அக.); a kind of boy's game.

[சுறா + கவடி]

சுறாக்களிறு *šurā-k-kaliru,* பெ. (n.) ஆண் சுறா; male-shark.

[சுறா + களிறு]

சுறாக்கொம்பு *šura-k-kombu,* பெ. (n.) சுறவுக் கோடு பார்க்க; see *šurāvu-k-kōdu.*

[சுறா + கொம்பு]

சுறாச்சிறை *šura-c-cirai,* பெ. (n.) சுறாமீன் இறகு; shark fins.

[சுறா + சிறை]

சுறாத்தலைக்கல் *šura-t-talai-k-kal,* பெ. (n.) மந்திரக் கலைக்குப் பயன்படும் சுறாமீன் தலையிலிருந்து எடுக்கப்படும் கல்; a stone from the shark's head, used in magic (சா.அக.).

[சுறா + தலை + கல்]

சுறாத்துருமம் *šurā-t-turumam,* பெ. (n.) தேவதாரு; deodar tree (சா.அக.).

[சுறா + துருமம்]

சுறாநெய் *šurā-ney,* பெ. (n.) வழவழப்பும் வெகுட்டலும் உடையதாகவும், ஊதைநோய், இருமல் போன்றவற்றை நீக்கி, உடம்பிற்கு வலுவைக் கொடுப்பதுமான ஒருவகை நெய்; shark oil used as a substitute for codliver oil (சா.அக.).

மறுவ. திருவிதாங்கோட்டுநெய், மங்காரநெய்

[சுறா + நெய்]

சுறாப்பாரை *šurā-p-pārai,* பெ. (n.) 1. ஒருவகைக் கடல்மீன் (யாழ்ப்.); a sea fish, shark pauray. 2. குமரப்பரை என்னும் கடல் மீன்; a kind of sea fish (சா.அக.).

[சுறா + பாரை]

சுறாமீன்செப்பட்டை *šurāmīn-šeppattai,* பெ. (n.) சுறாமீன்சிறகு; shark's fin (சா.அக.).

[சுறா + மீன் + செப்பட்டை]

சுறாமீனெய் *šurā-mīney,* பெ. (n.) சுறாநெய் பார்க்க; see *šurā-ney* (சா.அக.).

[சுறா + மீன் + நெய்]

சுறாமுள் *šurā-mul,* பெ. (n.) சுறாமீன் எலும்பு; shark bones (சா.அக.).

[சுறா + முள்]

சுறாமீன் வகைகள்

சுறாவேறு *śuṟā-vēṟu,* பெ. (n.) சுறாக்களிறு பார்க்க; see *śuṟā-k-kaḷiṟu* (சா.அக.).

[சுறா + ஏறு]

சுறாளம் *śuṟāḷam,* பெ. (n.) *1.* சினம்; anger. *2.* வேகம்; swiftness, as of horse.

[சுறு + ஆலாம்]

சுறிமுகத்தந்தம் *śuṟi-muga-t-tandam,* பெ. (n.) யானைக்கொம்பு; elephant's tusk (சா.அக.).

[சுறி + முகம் + தந்தம்]

சுறீரெனக்கடி-த்தல் *śuṟīr-eṉa-k-kaḍi-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* கொட்டுதல்; to sting as a scorpion, or ant or honey bee etc. *2.* கடுமையான வலியுண்டாகும்படிக் கடித்தல்; to bitting vehamently so as to cause acute pain. *3.* கடுத்தல்; to sting pain.

[சுறீர் + என + கடி-,]

சுறீரெனல் *śuṟīr-eṉal,* பெ. (n.) *1.* கடுத்தற்குறிப்பு; stinging, smarting excessively. 'எறும்பு சுறீரென்று கடித்தது' (உ.வ.). *2.* ஓர் ஒலிக்குறிப்பு; hissing, as water when in contact with fire. *3.* அச்சக்குறிப்பு; being struck with fear or horror.

க. சறீரெ

[சுறீர் + எனல்]

சுறீரெனவலி-த்தல் *śuṟīr-eṉavali-,* 4 செ.கு.வி. (v.i.) கடுத்துவலித்தல்; to shoot as quick darting pain (சா.அக.).

[சுறீர் + என + வலி-,]

சுறு *śuṟu,* பெ. (n.) மயிர் முதலியன, தீயிற் பொசுங்குதலால் உண்டாகும் நாற்றம்; stench, as of burning hair "கூந்தலின் சுறு நாறுகின்றது" (கம்பரா. இராவணன். மந்திர. 13).

[சுள் + சுறு]

சுறுக்கன் *śuṟukkaṉ,* பெ. (n.) *1.* சுறுசுறுப் புள்ளவன்; active, diligent person. *2.* சினமுடையவன்; hasty, irritable person.

[சுருக்கு → சுறுக்கன்]

சுறுக்கு *śuṟukku,* பெ. (n.) *1.* விரைவு; quickness, rapidity. *2.* சுறுசுறுப்பு; diligence, briskness. *3.* பரபரப்பு; haste, hastiness. *4.* கடுமை; irritableness, severity. *5.* கூர்மை; sharpness, keenness. *6.* காரம்; pungency, poignancy. *7.* விலையேற்றம்; high-price. 'புதுநெல் இப்போது சுறுக்காயிருக்கிறது' (உ.வ.). *8.* சந்தை விலை; demand, as in market. 'சம்பாவுக்கு இப்போது சுறுக்குண்டு' (உ.வ.).

ம. சுறுக்கு; க. சுறுகு; தெ. சுருக்கு; து. சுருக்கு; கோத. சுர்கு; குட. சுரிகி

[சுள் → சுறு → சுறுக்கு]

சுறுக்குக்காட்டு-தல் *śuṟukku-k-kāṭṭu-,* செ.கு.வி. (v.i.) அடிகொடுத்து அச்சங்காட்டுதல்; to give warning cut, as to a school boy.

[சுறுக்கு + காட்டு-,]

சுறுக்குத்தாக்கு-தல் *śuṟukku-t-tākku-,* 5 செ.கு.வி. (v.i.) சுறுக்குக்காட்டு-, பார்க்க; see *śuṟukku-k-kāṭṭu-.*

[சுறுக்கு + தாக்கு]

சுறுக்கெனல் *śuṟukkeṉal,* பெ. (n.) *1.* விரைவுக் குறிப்பு; onom. expr. signifying, quickness. *2.* கடுத்தற்குறிப்பு; onom. expr. signifying stinging, smarting. "பாந்தள்சீறிச் சுறுக்கெனவே கடிக்க" (சிவரக. அபுத்திபு. 13). *3.* திடீரென்று குத்துதற்குறிப்பு; onom. expr. signifying sudden prick.

க. சுருக்கெனெ

[சுறுக்கு + எனல்]

சுறுக்கொள்(ளு)-தல் *śuṟu-k-koḷ(ḷu)-,* 16 செ.கு.வி. (v.i.) *1.* மயிர்க்கூச்செறிதல், மயிர்ச்சிலிர்த்தல்; stand on end as hair to get the goose-skin. "மீசை சுறுக்கொள" (பிரபோத. 25 : 34). *2.* தீய்ந்து போதல்; to become chared or scorched. "மாலைவண்டொடுஞ் சுறுக்கொண்டேற" (கம்பரா. அட்ச. 1).

[சுறு + கொள்(ளு)-,]

சுறுசுறு-த்தல் *śuṟu-śuṟu-,* 4 செ.கு.வி. (v.i.) விரைவுபடுதல்; to be in a hurry; to be very active (செ.அக.).

[சுறு + சுறு-,]

சுறுசுறுப்பு *šuṟu-šuṟuppu,* பெ. (n.) 1. ஊக்கம்; diligence industry. 2. மிகுவிரைவு (வின்.); bustling, hurrying.

ம. சுறுசுறுப்பு, சுறுகுறுக்கு; க. சுருகுருக; தெ. சுரட்சுர

[சுறுசுறு → சுறுசுறுப்பு]

சுறுசுறெனல் *šuṟu-šuṟeṉal,* பெ. (n.) 1. தீயில் தண்ணீர் பட்டாற் போன்ற ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying hissing, as water when in contact with fire. 2. விரைவுக் குறிப்பு; quick rising, as of anger; rapid spreading as of fire, poison in the system. 3. உட்செல்லுதற்குறிப்பு; penetrating, going down with ease, as in quicksand. 4. கடுத்தற்குறிப்பு; stinging, as thorn.

க. சுறுசுரெனெ

[சுறுசுறு + எனல்]

சுறுதி *šuṟudi,* பெ. (n.) மிகுவிரைவு; swiftness, quickness, alacrity. 'சுறுதியா யோடு' (வின்.).

ம. சுறுதி

[சுறு + தி → சுறுதி]

சுறுமாக்கல் *šuṟumā-k-kal,* பெ. (n.) அஞ்சனக் கல்; black antimony (சாஅக.).

மறுவ. சுருமாக்கல்

U. surmā

[சுறுமா + கல்]

சுறை *šuṟai,* பெ. (n.) கொற்றான் (மலை.); parasitc leafless plant.

[சுறு → சுறை]

சுறோணிதம் *šuṟōṇidam,* பெ. (n.) நாகமல்லி (பச்மூ.); ringworm root.

சுறோணிதவழலை *šuṟoṇida-vaḻalai,* பெ. (n.) இந்துப்பு; rock salt (சாஅக.).

[சுறோணிதம் + வழலை]

சுன் *šuṉ,* பெ. (n.) 1. வெண்மை; whiteness. 2. பாழ்; சுன்னம்; சுழி; zero, cipher (சாஅக.).

சுன்னக்குகை *šuṉṉa-k-kugai,* பெ. (n.) 1. சுண்ணாம்பினாற் செய்த மூசை; crucible made of lime stone. 2. சுண்ணமருந்தால் செய்து பொன்னாக்கத்திற்குப் பயன்படுத்தப் படும் மூசை; a crucible made of alkaline salts and used in alchemy (சாஅக.).

[சுன்னம் + குகை]

சுன்னச்சி *šuṉṉacci,* பெ. (n.) சத்திசாரம்; an acrid salt (சாஅக.).

[சுன்னம் + சி]

சுன்னப்புச்சவுடு *šuṉṉappu-c-cavuḍu,* பெ. (n.) உழமண்; fuller's earth (சாஅக.).

[சுன்னப்பு + சவடு]

சுன்னமேகம் *šuṉṉa-mēgam,* பெ. (n.) சிறுநீரில் சுன்னச்சத்து அதிகமாகவரும் ஒருவகை நோய்; a kind of mega disease in which the urine comes with plenty of calcium salts (சாஅக.).

[சுன்னம் + மேகம்]

சுன்னம்[1] *šuṉṉam,* பெ. (n.) 1. சுண்ணாம்பு; lime 2. மாழைகளைப் புடமிட்ட தமிழ் மருந்து; a calcium compund prepared from metals (சாஅக.).

[சுன் → சுன்னம்]

சுன்னம்[2] *šuṉṉam,* பெ. (n.) சுழி, பாழ்; zero, cipher, circular mark.

[சுல் → சுன் → சுன்னம் (வே.க.)]

த. சுன்னம் → Skt. šunnya

Pkt. sunna

சுன்னம்[3] *šuṉṉam,* பெ. (n.) வெண்மையான மருந்துச் சரக்கு; a kind of white medicine (சாஅக.).

[சுன் → சுன்னம்]

சுன்னாகம் *šuṉṉāgam,* பெ. (n.) வெண்ணாவல்; white jamoon.

சுன்னாரிப்புல் *šuṉṉāri-p-pul,* பெ. (n.) சுக்குநாறிப்புல்; ginger grass spice grass, citronella grass or roussa oil grass (சாஅக.).

மறுவ. காவட்டம்புல்; மாந்தப்புல்

[சுன்னாரி + புல்]

சுன்னிதம் *šuṉṉidam,* பெ. (n.) நுண்மை; very minute (சாஅக.).

[சுன்னம்[2] → சுன்னிதம்]

சுன்னுக்கட்டி *šuṉṉu-k-kaṭṭi,* பெ. (n.) 1. பாற் கட்டி (வின்.); cheese (சா.அக.). 2. திரட்டுப்பாற் கட்டி; condensed milk.

[சுல் → சுன் → சுன்னு + கட்டி. சுல் → சுன் = வெண்மை]

சுனக்குடம் *šuṉa-k-kuḍam,* பெ. (n.) சதுரக் கள்ளி (மலை.); square spurge.

[சுன் → சுனம் + குடம்]

சுனை[1]-தல் *šuṉai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. குழைதல் (பிங்.); to be soft and pulpy to be mashed. 2. வாடுதல்; to fade, droop.

[சுள் → சுன் → சுனை]

சுனை[2]-த்தல் *šuṉai-,* 4 செ.கு.வி. (v.i.) தினவெடுத்தல்; to tingle, itch. "சுனைத்தெழுதல் காமுறுவர்" (நாலடி., 313).

ம. சுனெக்க

[சுல் → சுன் → சுனை-,]

சுனை[3] *šuṉai,* பெ. (n.) 1. தினவு; itching. "நாத்தின்னு நல்ல சுனைத்து" (நாலடி., 335). 2. சுரசுரப்பு; roughness, sharpness. 3. கரும்பு, சோளம் போன்றவற்றின் தோகைகளிலும், கம்பு சோளம் போன்றவற்றின் கதிர்களிலும் காணப்படும் முட்போன்ற பகுதி; prickle. as in leaves, stalks, etc., down on fruits.

ம. சுன; க, டொனெ, தொனெ; தெ. தொன

சுனை[4] *šuṉai,* பெ. (n.) 1. நீருற்று; spring. 2. நீர்நிலையும் நிழல் மரமுமுள்ள பசும்புல் தரை; grassy. 3. மலைச்சுனை; mountain spring. "பூவமன் றன்று சுனையுமன்று" (கலித். 55).

சுனைக்கரந்தை *šuṉai-k-karandai,* பெ. (n.) மேனியில் பட்டால் அரிக்கும் ஒருவகைக் கரந்தைச்செடி; a kind of basil coming in contact with the body causes itching sensation (சா.அக.).

மறுவ. திருநீற்றுப்பச்சை

[சுணை → சுனை[3] + கரந்தை]

சுனைக்காஞ்சொறி *šuṉai-k-kāñjoṟi,* பெ. (n.) செந்தொட்டி; stinging nettle (சா.அக.).

[சுனை + காஞ்சொறி]



சுனைக்கொடி *šuṉai-k-koḍi,* பெ. (n.) முசு முசுக்கை; rough bryony (சா.அக.).

[சுனை + கொடி]

சுனைக்கோரை *šuṉai-k-kōrai,* பெ. (n.) நமைச்சலை உண்டாக்கும் ஒருவகைக் கோரை; a kind of bristly sedge grass causing itching when touched bristly kōray (சா.அக.).

[சுனை + கோரை]

சுனைத்தவம் *šuṉai-t-tavam,* பெ. (n.) பூலாங் கிழங்கு; poolah root (சா.அக.).

சுனைத்தவிடு *šuṉai-t-taviḍu,* பெ. (n.) உமித் தவிடு; bran (சா.அக.).

[சுனை + தவிடு]

சுனைத்துளசி *šuṉai-t-tuḷaši,* பெ. (n.) எலிக்கடி நஞ்சைப் போக்கும் முள்துளசி; thorny basil, it cures rat bite (சா.அக.).

[சுனை + துளசி]

சுனைத்தேவதாரி *šuṉai-t-tēvadāri,* பெ. (n.) முள்ளுத்தேவதாரு; a kind of bristly deodar. (சா.அக.).

[சுனை + தேவதாரி]

சுனைத்தோரிதம் *šuṉai-t-tōridam,* பெ. (n.) பூனைக்காஞ்சொறி; a small climbing nettle jragia involucrate (சா.அக.).

[சுனை + தோரிதம்]

சுனைப்பாசி *šuṉai-p-pāši,* பெ. (n.) கொடிப் பாசி; moss creeping upon water (சா.அக.).

[சுனை + பாசி]

சுனைப்புல் *śuṉai-p-pul*, பெ. (n.) ஒருவகைப் புல்; a coarse grass (சா.அக.).

[சுனை + புல்]

சுனைப்புன்கு *śuṉai-p-puṉgu*, பெ. (n.) மணிப்புன்கு; rusty soapnut (சா.அக.).

[சுனை + புன்கு]

சுனைமேலாதி *śuṉai-mēlādi*, பெ. (n.) சுனைக் கொடி பார்க்க; see *śuṉai-k-koḍi* (சா.அக.).

[சுனை + மேலாதி]

சுனைவள்ளி *śuṉai-vaḷḷi*, பெ. (n.) முள்வள்ளி; the root of a winding plant of the Dioscorea genus (சா.அக.).

[சுனை + வள்ளி]

சுனைவாகினி *śuṉai-vāgiṉi*, பெ. (n.) முசுட்டை; clove scented creeper (சா.அக.).

சுனைவீரம் *śuṉai-vīram*, பெ. (n.) கொச்சிவீரம்; corrosive sublimate prepared formerly in Cochin.

[சுனை + வீரம்]

சுனைவு[1] *śuṉaivu*, பெ. (n.) பேய்க்கடலை (மலை.); bitter bengal-gram.

சுனைவு[2] *śuṉaivu*, பெ. (n.) சுனைநீர் (வின்.); rock water.

[சுனை → சுனைவு]

சுனைவெண்டை *śuṉai-veṇḍai*, பெ. (n.) முள்வெண்டை; rough lady's finger (சா.அக.).

[சுனை + வெண்டை]

சுனைவெப்பிலி *śuṉai-veppili*, பெ. (n.) கரும்புத் தோகை; the tail portion of sugar cane (சா.அக.).

[சுனை + வெப்பிலி]

சுனைவெள்ளரி *śuṉai-veḷḷari*, பெ. (n.) முள்வெள்ளரி; common cucumber (சா.அக.).

[சுனை + வெள்ளரி]

சுனைவேப்பிலை *śuṉai-vēppilai*, பெ. (n.) மலைவேப்பிலை; mountain neem (சா.அக.).

[சுனை + வேப்பிலை]

சூ

சூ[1] *cu/śū*, பெ. (n.) சகரமெய்யும் ஊகார நெடிலும் சேர்ந்து பிறந்த உயிர்மெய் யெழுத்து; the compound of ச் and ஊ.

[ச் + ஊ = சூ]

சூ[2] *śū*, பெ. (n.) 1. நாயை ஏவும் ஒலிக்குறிப்பு; sound uttered in setting dogs on. 2. வெறுப்பு முதலியவற்றை உணர்த்தும் ஒலிக்குறிப்பு; sound uttered to express disgust or aversion. 3. பன்றி முதலிய விலங்குகளையும், காகம், கோழி முதலிய பறவைகளையும் விரட்டப் பயன்படுத்தும் ஒலிக்குறிப்புச் சொல்; sound uttered in setting pigs and some birds like crow, cock, etc.

சூ[3] *śū*, பெ. (n.) 1. பனங்கதிர் முதலியவற்றைக் கருக்கிப் பொடித்துத் துணியிற்கட்டி யமைக்கும் வாணவகை; a kind of home - made firework encased in cloth. 'கார்த்திகையில் சூவிடுதல் வழக்கம்' (இ.வ.). 2. சுளுந்து (நாஞ்.); a kind of torch.

சூக்காட்டு-தல் *śū-k-kāṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. நாயை ஏவுதல்; to set dogs on. 2. எவற்றையும் 'சூ'வென்று ஓசையிட்டு வெருட்டுதல்; to drive away with the sound šū, as dogs. (செ. அக.)

[சூ (ஒலிக்குறிப்பு) + காட்டு-,]

சூக்காய் *śūkkāy*, பெ.(n.) கடுக்காய் நண்டு (யாழ்ப்.); a kind of small crab. 2. கடுக்காய்; gall-nut, one of the tiri palai (சா.அக.)

சூக்கீடம் *śūkkīḍam*, பெ.(n.) கம்பளிப்பூச்சி (யாழ்ப்.); hairy caterpillar.

சூக்கொட்டு-தல் *śū-k-koṭṭu-*, 5 செ.குவி. (v.i.) 1. 'சூ' வொலியிட்டு இசைவு காட்டுதல்; to express assent with the sound-'šū'. 2. வெறுப்புக் குறி காட்டுதல்; to hiss in aversion or dissent.

[சூ + கொட்டு-,]

சூகரை *śūgarai*, பெ. (n.) குளத்தில் உடைப்பு நீர் வெளிப்போகாதபடி இடும் அணை (Rd.);

ring- bound, a temporary bund preventing escape of water through breaches.

[சூழ் + கரை → சூகரை]

சூகை[1] *šūgai,* பெ. (n.) 1. சுழற்சி; whirling 2. தலைச்சுழற்சி; reeling of the head.

[சூழ்கை → சூகை]

சூகை[2] *šūgai,* பெ. (n.) 1. கரிய சிற்றெறும்பு வகை; small black ant. 2. யானை; elephant. 3. நீர்அட்டை; a kind of irritating water leech (சா.அக.).

சூகை[3] *šūgai,* பெ.(n.) வீட்டின் பின்புறம்; back part of the house. "சூகையொண்டிக் கேட்டான்" (யாழ்ப்.).

சூகை[4] *šūgai,* பெ. (n.) வற்றியுலர்ந்தது; that which is withered or shrunken. 'சூகை முலை'.

சூகைக்கண் *šūgai-k-kaṇ,* பெ. (n.) 1. கிட்டப் பார்வை (யாழ்ப்.); shorted sight-ness, as causing one to keep the eyes nearly shut. 2. சுழற்கண்; whirling eye.

மறுவ. கூச்சக்கண்

[சூகை + கண்]

சூகைக்கை *šūgai-k-kai,* பெ. (n.) சூம்பியகை; withered arm (சா.அக.).

[சூகை + கை]

சூகைமுலை *šūgai-mulai,* பெ. (n.) வற்றிப் போன முலை; shrunken breast of a female (சா.அக.).

[சூகை[4] + முலை]

சூகையாடு-தல் *šūgai-y-āḍu-,* 5 செ.குவி. (v.i.) கிறுகிறுத்தல், தலை சுற்றுதல் (யாழ்ப்.); to be dizzy.

[சூகை[1] + ஆடு-,]

சூங்குமம் *šūṅgumam,* பெ. (n.) வேலிப்பருத்தி (மலை.); a hedge-twiner.

மறுவ. உத்தாமணி, சூக்குலம்

சூச்சான் *šūccāṉ,* பெ. (n.) கிட்டிப் புள் (யாழ்ப்.); game of tipcat.

சூச்சூவெனல் *šūcšūveṉal,* பெ. (n.) 1. ஒலியை (சத்தத்தை) அடக்கும் குறிப்பு; onom. expr. of silencing. 2. நாய், பன்றி, பறவை போன்றவைகளை விரட்டும் ஒலிக்குறிப்பு; onom. to drive dog, pig, birds.

சூசம் *šūšam,* பெ. (n.) செம்மறியாட்டுக் கடா (வின்.); a species of ram.

சூசாக்கிரம் *šūšakkiram,* பெ. (n.) ஊசி மல்லிகை; needle jasmine (சா.அக.).

சூட்சம் *šūṭšam,* பெ. (n.) 1. பெருவழுதலை; big brinjal. 2. வெள்ளைக்காக்கணம்; white mossel shell creeper. 3. குக்கில்; குங்கிலியம்; Indian bedellium (சா.அக.).

சூட்சி[1]**-த்தல்** *šūṭšci-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஆராய்ந்து அறிதல்; to understand thoroughly. "சூட்சித்துப் புத்ரசங்கை சொல்லுவது தானே" (சாதகசிந். 1704).

[சூழ் + சி - சூழ்ச்சி → சூட்சி]

சூட்சி[2] *šūṭši,* பெ. (n.) 1. கலந்தாய்வு; counsel, deliberation. "சூட்சியின் கிழவரை நோக்கிச் சொல்லினான்" (கம்பரா. உயுத்த. மந்திர. 11). 2. வழி; means, device. 'இச்சிக்கலுக்கு மீளும் சூட்சி யாது?' (உ.வ.). 3. ஏய்ப்பு; deceit. "சூட்சி சிறிது மிலாதாய் போற்றி" (தேவா. 1164, 4).

[சூழ்ச்சி → சூட்சி]

சூட்சியன் *šūṭšiyaṉ,* பெ. (n.) 1. அமைச்சன், (மந்திரி); minister as skilled in deliberation. "நல்லோர் யாரென நலங்கிளர் சூட்சியன்" (ஞானா. 26: 17).

[சூட்சி → சூட்சியன்]

சூட்டடி *šūṭṭaḍi,* பெ. (n.) 1. அடித்த கதிரைக் கடாவிட்டு உழக்குகை (நெல்லை.); beating or treading of sheaves for the second time. 2. முதன் முறையாக நெற்களத்தில் கதிர்ச்சூட்டை அடிக்கை (வின்.); beating sheaves for the first time.

[சூடு + அடி]

சூட்டடுப்பு *šūṭṭaḍuppu,* பெ. (n.) அடுப்புவகை; a kind of domestic oven. "சூட்டடுப்பிற் செழுந்தாட் பவளத் துவரடுக்கி" (குமர. பிர. மீனாட். பிள்ளைத். 23).

ம. சூட்டடுப்பு

[சூட்டு + அடுப்பு]



சூட்டளவை *šūttaḷavai,* பெ. (n.) வெப்பமானி; an instrument to measure the temperature; thermometre (சா.அக.).

[சூடு + அளவை. உடல் சூட்டை, வெப்பத்தை அளக்கும் கருவி]

சூட்டாணி *šūttāṇi,* பெ. (n.) சூட்டுக்கோல் பார்க்க; see *šūttu-k-kōl.* "செவிச் சூட்டாணியிற் புகையழல் பொத்தி" (சிலப். 23: 48).

[சுடு → சூடு + ஆணி]

சூட்டிக்கை *šūttikkai,* பெ. (n.) 1. அறிவுக்கூர்மை; ingenuity. 'சிறுவயதிலேயே அவன் சூட்டிக்கையாக இருந்தான்' (உ.வ.). 2. சுறுசுறுப்பு; smartness. 'வேலைசெய்வதிலே அவன் படு சூட்டிக்கை' (உ.வ.).

க. சூடி

சூட்டிஞ்சி *šūttiñji,* பெ. (n.) ஏவறைகளை கொண்ட மதில்; crenelated wall. "இடு சூட்டிஞ்சியி னேணி சாத்தின்று" (பு.வெ. 6 : 18, கொளு).

[(சூடு →) சூட்டு + இஞ்சி]

சூட்டிவிடு-தல் *šūttiviḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. பெண்ணை மணம்செய்து கொடுத்தல்; to give a girl in marriage. 2. அமர்த்துதல்; to appoint, destine. 3. ஒப்படைத்தல்; to assign make over, transfer, as property. 4. பட்டங் கட்டி விடுதல், மகுடம் சூட்டுதல்; to offer royal title or to crown a person as king.

[சூட்டு → சூட்டி +விடு-,]

சூட்டிறைச்சி *šūttiṟaicci,* பெ. (n.) சுட்ட இறைச்சி (பிங்.); roasted-meat.

[சுடு → சூடு + இறைச்சி]

சூட்டு[1]**-தல்** *šūttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. அணிவித்தல்; to adorn, as with garlands, chain-ornaments, etc. "பாதமலர் சூடுகின்றிலை, சூட்டுகின்றதுமிலை" (திருவாச. 5:31). 2. ஒருவரை பாமாலையாற்புனைதல்; to honour, as with a poem. 3. மணிமுடி புனைவித்தல்; to crown, as with diadem. "தொன்னெடு முடி சூட்டுகின்றான்" (கம்பரா. அயோத். மந்திரப். 90). மன்னன் தன் மகனுக்கு மணிமுடி சூட்டினான்' (உ.வ.). 4. பட்டம் முதலியன கொடுத்தல்; to confer, as title. பாவாணருக்குப் பாவலரேறு 'மொழி ஞாயிறு' என்று பட்டஞ் சூட்டினார். 5. பரப்புதல்; to spread over, as an army. "நிலவரை சூட்டிய நீணெடுந் தானை" (புறநா. 228: 6). 6. ஆணை முதலியன செலுத்துதல்; to extend, as one's sway. 'நீரக விருக்கை யாழிசூட்டிய . . . முன்னோர்போல' (புறநா. 99: 3). 7. சுமத்துதல் (யாழ்ப்.); to attribute. 8. சூட்டிவிடு-தல் பார்க்க; see *šūtti-viḍu-*[2]. 9. இயலாத ஒன்றை மேற்கொள்ளும்படி தூண்டிவிடுதல் (இக்.வ.); to encourage one in undertaking a task beyond his means, yoke a person to a difficult task.

[சூடு → சூட்டு-,]

சூட்டு[2] *šūttu,* பெ. (n.) 1. சூட்டுகை; investing adorning, as with crown, head-dress. முடிசூட்டு. 2. பூமாலை; wreath, garland. "மல்லிகை நறுஞ்சூட்டு வெள்ளிதின் விளங்க" (பெருங். உஞ்சைக். 46: 233). 3. பெண்களுக்குரிய நுதலணி (பிங்.); நெற்றிச்சூட்டு; ornament for women's forehead. 4. நெற்றிப்பட்டம்; a golden plate worn on the forehead, as ornament or badge of distinction. 5. மயில், கோழி முதலியவற்றின் உச்சிக்கொண்டை; peacock's crest, cock's comb. "காட்டுக்கோழிச் சூட்டுத் தலைச்சேவல்" (பெருங். உஞ்சைக், 52:62). 6. பாம்பின் படம்; snake's hood. "செங்கணாயிரஞ் சூட் டராவி னறிதுயி லமர்ந்து" (கூர்மபு. வருணாச். 3). 7. வண்டிச்சக்கரத்தின் விளிம்பைச் சூழ அமைக்கப்பட்ட வளைவுச் சட்டம்; felloe of a wheel. "கொழுஞ் சூட்டருந்திய திருந்துநிலை யாரத்து" (பெரும்பாண். 46). 8. ஏவறை; a kind of casemate in a fortress for shooting arrows from "இடுசூட் டிஞ்சியின்" (பு.வெ. 6: 18. கொளு.).

[சூடு → சூட்டு]

சூட்டு[3] *šūṭṭu*, பெ. (n.) *1. சுடப்பட்டது;* that which is burnt or cooked. *சூட்டிறைச்சி, சூட்டாங்கறி. 2. ஓலை, நாணல் முதலியவற்றால் ஆன திவட்டிவகை (நாஞ்.);* a kind of ōla torch.

ம. சூட்டு; க. சூடெ; தெ. சூடு; து. சூடெ, தூடெ; குட. துடி

Pkt. cuḍuli; Mar. cūḍ

[சுடு → சூட்டு]

சூட்டு[4] *šūṭṭu*, பெ. (n.) *தூணின்தலைக்கல் (இ.வ.);* capital of a pillar.

சூட்டு[5] *šūṭṭu*, பெ. (n.) *சூட்டிக்கை பார்க்க;* see *šūṭṭikkai.*

சூட்டுக்கணம் *šūṭṭu-k-kaṇam*, பெ.(n.) *சுழிக்கணம்; ஒருவகைக் கணநோய்;* atroply due to excess of heat in the system resulting in diarrhoea *(சா.அக.).*

[சூடு + கணம் = சூட்டுக்கணம்]

சூட்டுக்கத்திகை *šūṭṭu-k-kattigai*, பெ. (n.) *பூமாலை வகை (இறை. 2, பக். 42, உரை);* a kind of garland.

[சூட்டு + கத்திகை]

சூட்டுக்கறி *šūṭṭu-k-kaṟi*, பெ. (n.) *முகமதியரின் பக்கிரீத்துப் பண்டிகையில் வழங்கப்படும் இறைச்சி;* Bakri-id, the Muhammadan festival, as time for meat.

[சூட்டு + கறி]

சூட்டுக்காரன் *šūṭṭu-k-kāraṉ*, பெ. (n.) *திறமையாகவும், சுவையாகவும், சிரிப்பாகவும் பேசுபவன் (வின்.);* wittly person.

க. சூடுக்காற

[(சூடு→) சூட்டு + காரன்]

சூட்டுக்குத்தல் *šūṭṭu-k-kuttal*, பெ. (n.) *சூட்டினால் கண்சதை வளர்ந்து கண்ணில் ஏற்படும் குத்தல்நோய்;* irritation due to abnormal growth of flesh in the eye arising from constitutional heat-ophthalmia *(சா.அக.).*

[சூடு + குத்தல்]

சூட்டுக்குச்சூடுகொடுத்தல் *šūṭṭukku-c-cūḍu koḍuttal*, பெ. (n.) *தமிழ்மருத்துவ முறையில் சிலபோது, சூட்டுக்குச் சூடுகொடுத்தால் உடம்பு குளிர்ச்சி ஆகும் எனுங் கொள்கை;* in Tamil medicine the principle of treating with a remedy apparently hot for internal heat on the theory that such treatment would result in rendering the system cool *(சா.அக.).*

[சூட்டுக்குச்சூடு + கொடுத்தல்]

சூட்டுக்கோல் *šūṭṭu-k-kōl*, பெ. (n.) *1. மாடு முதலியவற்றின்மேல் அடையாளச் சூடு இடுதற்குரிய கம்பி (உ.வ.);* branding iron. instrument for cauterising. *2. குழந்தைகளின் சில நோய்களுக்காகச் சூடுபோடும் ஊசி அல்லது இரும்புக்காம்பு;* heated branding iron used as a treatment in children suffering from convulsions for fits accompanying diseases *(சா.அக.).*

ம. சூடுகோல், சூட்டுக்கோல்

[சுடு → சூடு → சூட்டு +கோல்]

சூட்டுக்கோலிடு-தல் *šūṭṭu-k-kōliḍal*, 5 செகுன்றாவி. (v.t.) *வலிப்புவந்த குழந்தைகளுக்கு ஊசி அல்லது இரும்புக்கம்பியினால் சூடு போடுதல்;* cauterising with a red hot needle or rod children suffering from convulsion *(சா.அக.).*

[சூட்டுக்கோல் + இடு-,]

சூட்டுடம்பு *šūṭṭuḍambu*, பெ. (n.) *வெப்பம் கொண்ட உடல்;* body, which is over heated. *'அவனுக்குச் சூட்டுடம்பு' (உ.வ.).*

[சூடு + உடம்பு]

சூட்டுத்தலைவலி *šūṭṭu-t-talai-vali*, பெ. (n.) *உடம்பின் வெப்பத்தால் ஏற்படும் தலைவலி;* head-ache due to excess of heat in the body *(சா.அக.).*

[சூடு → சூட்டு + தலைவலி]

சூட்டுப்பாய் *šūṭṭu-p-pāy*, பெ.(n.) *சூடடித்த நெற்குவியலைப் போர்த்துவைத்தற்குரிய பாய் (யாழ்.அக);* mat used to cover the threshed corn.

[(சூடு) → சூட்டு + பாய்]

சூட்டுப்புண் *šūṭṭu-p-puṇ*, பெ. (n.) *1. சுட்டபுண்;* burns. *2. வெப்பத்தினால் ஏற்பட்ட புண்;* boil arising from the internal heat in the system *(சா.அக.).*

[சூடு → சூட்டு + புண்]

சூட்டுமணல் *šūttu-maṇal,* பெ. (n.) கருமணல்; black sand (சா.அக.).

[சூடு → சூட்டு + மணல்]

சூட்டுமாலை *šūttu-mālai,* பெ. (n.) தோளணி மாலை (யாழ்.அக.); a kind of garland.

[சூட்டு + மாலை]

சூட்டுமிதி *šūttu-midi,* பெ. (n.) நெற்சூட்டைக் கடாவிட்டு மிதித்து உழக்குகை (யாழ்.அக.); threshing sheaves of corn by treating with cattle.

[சூட்டு + மிதி]

சூட்டுவடு *šūttu-vaḍu,* பெ. (n.) சூட்டுக் கோலிட்ட வடு; a scar or cicatrix left after cautery (சா.அக.).

[சூட்டு + வடு]

சூட்டுவலி *šūttu-vali,* பெ. (n.) 1. வெப்பத்தால் உடம்பில் ஏற்படும் நோவு; ache in the body due to heat in the system. 2. பிள்ளைப்பேற்று நோவு (இ.வ.); labour, pains of child-birth.

[சூடு + வலி]

சூட்டெண்ணெய் *šūtteṇṇey,* பெ. (n.) 1. எரித்து வடிக்கும் வேப்பெண்ணெய்; margosa oil extracted from the seeds of margosa by boiling them. 2. உடற்சூட்டைத் தணித்துக் குளிர்ச்சி தரும் எண்ணெய்; a medicated oil prescribed for reducing the heat in the body (சா.அக.).

[சூடு + எண்ணெய்]

சூட்டோடுசூடாக *šūttōḍu-šūḍāga,* கு.வி.அ. (adv.) 1. முந்தைய செயல் செய்த வேகத்திலேயே அல்லது நடந்த விரைவிலேயே; the speedy velocity with which prior work or speech has happened. 2. தொடர்ச்சியாக அல்லது உடனடியாக; continuously or immediately. 'வீட்டுமனை வாங்கிய கையோடு, சூட்டோடு சூடாக அவன் வீட்டையும் கட்டிமுடித்தான்' (உ.வ.).

மறுவ. சூட்டோடு சூடாய்.

[சூடு + ஓடு + சூடு + ஆக]

சூடகம் *šūḍagam,* பெ. (n.) கைவளை; bracelet. 'பாடகத் தரவமுஞ் சூடகத் தோசையும்' (பெருங். வத்தவ. 12: 210).

தெ. சூடிகமு; க. சூடக; து. சூடக

[சூடு → சூடகம்]



சூடகம்

சூடங்கேட்டுப்போ-தல் *šūḍaṅ-geṭṭu-p-pō-,* செ.கு.வி. (v.i.) நிலைகெட்டு முடிவடைதல்; to come to an end. "அவன்பாடு சூடங்கேட்டுப் போயிற்று" (நாஞ்.).

[சூடங்கெட்டு + போ-,]

சூடசத்திரி *šūḍašattiri,* பெ. (n.) சுவையுணர்வு இல்லாமற் செய்யும் ஒரு வகை மூலிகை; a plant that destroys the sense of taste (சா.அக.).

சூடடி-த்தல் *šūḍaḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) கதிரைக் கடாவிட்டுழக்குதல் (வின்.); to thresh sheaves of corn by treading with cattle.

மறுவ. சூட்டடி

[சூடு + அடி-,]

சூடம்[1] *šūḍam,* பெ. (n.) சூடன்,1 பார்க்க; see *šūḍaṉ,1.*

[சூடு → சூடம்]

சூடம்[2] *šūḍam,* பெ. (n.) தலையின் உச்சி; crown of the head. "புரவிசயன் சூடந்தரு பாகீரதி" (பாரத. அருச்சுனன்றீர், 7).

[சூடு → சூட்டு → சூடம்]

சூடம்[3] *šūḍam,* பெ. (n.) சூளம் (நெல்லை.) பார்க்க; see *šūḷam.*

[சூளம் → சூடம்]

சூடமூலி *šūḍa-mūli,* பெ. (n.) கற்பூரவல்லி; thick leaved lavender (சா.அக.).

[சூடம் + மூலி]

சூடவல்லி *šūḍa-valli,* பெ. (n.) சூடமூலி பார்க்க; see *sūḍa-mūli* (சா.அக.).

[சூடம் + வல்லி]

சூடறுத்தல் *šūḍaṟuttal,* பெ. (n.) கண்ணில் சூட்டினால் வளர்ந்த தசையை, அறுவை மருத்துவம் செய்தோ, சுணையுள்ள இலையினால் தேய்த்தோ நீக்குகை; the scraping of an affected part of the eye due to growth of flesh with a scraping knife or rough leaf (சா.அக.).

[சூடு + அறுத்தல்]

சூடன் *šūḍaṉ,* பெ. (n.) 1. கருப்பூரவகை; prepared camphor (சிலப். 14: 109, உரை.). 2. மீன்வகை (யாழ்.அக.); a kind of fish.

[சூடு → சூடன்]

சூடன்கருப்பூரம் *šūḍaṉ-karuppūram,* பெ. (n.) கருப்பூர வகை (வின்.); prepared camphor.

ம. சூடன் கர்ப்பூரம்

[சூடன் + கருப்பூரம்]

சூடன்வைப்பு *šūḍaṉ-vaippu,* பெ. (n.) வாழைக் கிழங்கு, நீர் வெடியுப்பு, கருவாப்பட்டை நெய் (தைலம்) போன்ற சரக்குகளைச் சேர்த்துச் செய்யப்படும் சூடம்; a medicine it is prepared from plantain bullouspart, nitre, karuvāppaṭṭai etc. (சா.அக.).

[சூடன் + வைப்பு]

சூடனி *šūḍaṉi,* பெ. (n.) சிற்றரத்தை; lessar galangal (சா.அக.).

சூடனிந்து *šūḍaṉintu,* பெ. (n.) சூடன்செயநீர்; a pungent water prepared with camphor as chief ingredient (சா.அக.).

[சூடன் + இந்து]

சூடனுப்பு *šūḍaṉuppu,* பெ.(n.) கருப்பூரவுப்பு; camphor salt; preparing from a mixture salts (சா.அக.).

[சூடன் + உப்பு]

சூடா[1] *šūḍā,* பெ.(n.) 1. கைவளை; bracelet. 2. கழுத்திலணியும் பொற்கொடியிற் கோத்த அக்கமணி (உருத்திராக்கம்); sacred eleocarpus bead enclosed in gold and hung round the neck in a gold band. 3. குடுமி; tuft of hair in the head.

த. சூடு → H., U. chudi

சூடா[2] *šūḍā,* பெ. (n.) ஒருவகைத் தின்பண்டம்; an eatable cake (சா.அக.).

[சூடு → சூடா]

சூடாக்கல் *šūḍā-k-kal,* பெ. (n.) சூடாலைக்கல் பார்க்க; see *šūḍālai-k-kal.*

சூடாகரணம் *šūḍā-karaṇam,* பெ. (n.) ஒன்று, மூன்று, ஐந்தாம் அகவையில் குழந்தைகட்குக் குடுமிவைக்கும் விழா (சடங்கு) (சங்.அக.); tonsure - ceremony of a child performed in its first, third or fifth year.

[சூடு → சூடா + கரணம்]

சூடாகருமம் *šūḍā-karumam,* பெ. (n.) சூடாகரணம் பார்க்க; see *šūḍā-karaṇam.*

[சூடா + கருமம்]

சூடாதிக்கம் *šūḍādikkam,* பெ. (n.) உடம்பின் சூடு அல்லது வெப்பம்; increase of heat in the system (சா.அக.).

[சூடு + ஆதிக்கம்]

Skt. ādhikyā → த. ஆதிக்கம்

சூடாமணி[1] *šūḍā-maṇi,* பெ. (n.) வடமொழியில் எழுதிய அமரகோசத்தைப் போல், தமிழில் சமணத்துறவிகளால் விலங்குத்தொகுதி, மரத்தொகுதி முதலியவற்றை வரிசை முறையாய்ச் செய்த மூன்றுவகை நிகண்டுகளில் ஒன்று; a poetical lexicon on the plan of Sanskrit Amarakōšam written by a Jainya ascetic. It is one of the three classical diction aries, consisting the names of beasts, plants etc. together with explanations of the 64 sciences (சா.அக.).

[சூடா + மணி]

சூடாமணிநிகண்டு பார்க்க

சூடாமணி[2] *šūḍā-maṇi,* பெ. (n.) 1. குன்றிமணி; jeweller's bead. 2. வெட்பூலா; white poolah (சா.அக.).

சூடாமணி[3] *śūḍā-maṇi,* பெ. (n.) 1. முடிமணி; jewel in a crest or diadem. "சூடாமணிப் படலம்" (கம்பரா.). 2. தெய்வ மணிவகை (பிங்.); a celestial gem.

ம. சூடாமணி

[சூடா + மணி]

சூடாமணிக்கயிறு *śūḍā-maṇi-k-kayiṟu,* பெ.(n.) மணிக்கட்டை அளந்து, பிறகு அதைக் கொண்டு விரற்கடை அளவுக்கு ஒத்துப் பார்த்து, அதன் வேறுபாட்டால் நோய்களை விளக்கும், ஒரு தமிழ மருத்துவநூல்; a treatise in Tamiḻ describing the several diseases indicated by the various differences caused in the calculation of lengths of strings with which wrist and fingers are measured according to rules mentioned there in (சா.அக.).

[சூடாமணி + கயிறு]

சூடாமணிக்குளிகை *śūḍāmaṇi-k-kuḷigai,* பெ. (n.) வேதமுனி முறைப்படி செய்து குளிர்க் காய்ச்சல், இசிவு, பிதற்றிசிவு முதலிய நோய்களுக்குக் கொடுக்கப்படும் மாத்திரை; a pill prepared as per process of Vēdamuṉi and used for ague apoplexy delirium etc. (சா. அக.).

[சூடாமணி + குளிகை]

சூடாமணிநிகண்டு *śūḍāmaṇi-nigaṇḍu,* பெ. (n.) 16ஆம் நூற்றாண்டில் மண்டல புருடன் என்ற சமண ஆசிரியரால் மண்டிலச் செய்யுளால் இயற்றப்பட்ட நிகண்டு; a Tamiḻ lexicon in verse, by Maṇḍalapuruḍaṉ, a Jaiṉa of 16th c.

[சூடாமணி + நிகண்டு]

சூடாமணியுள்ளமுடையான் *śūḍāmaṇi-y-uḷḷam-uḍaiyāṉ,* பெ.(n.) 12ஆம் நூற்றாண்டில் திருக்கோட்டி நம்பியால் இயற்றப்பெற்ற ஒரு கணியநூல்; an astronomical work by Tiru-k-kōṭṭi-nambi, 12th c.

[சூடாமணி + உள்ளம் + உடையான்]

சூடாலம் *śūḍālam,* பெ.(n.) சணல்விதை (தைலவ. தைல. 74); seed of sunn-hemp.

சூடாலைக்கல் *śūḍālai-k-kal,* பெ. (n.) ஒருவகைக் காந்தக்கல் (வின்.); a kind of magnetic stone.

[சூடாலை + கல்]

சூடி[1] *śūḍi,* பெ. (n.) எரியுப்பு; sal ammoniac (சா.அக.).

சூடி[2] *śūḍi,* பெ. (n.) சீலை (பிங்.); cloth.

[சூடு' → சூடி]

சூடிக்கயிறு *śūḍi-k-kayiṟu,* பெ. (n.) சூடுகயிறு (யாழ்ப்.) பார்க்க; see *śūḍu-kayiṟu.*

[சூடு → சூடி + கயிறு]

சூடிக்கை *śūḍikkai,* பெ. (n.) சூட்டிக்கை பார்க்க; see *śūṭṭikkai.*

சூடிக்கொடுத்தநாச்சியார் *śūḍi-k-koḍutta-nācciyār,* பெ. (n.) தான் சூடிய பூமாலையைத் திருமால் சூடக்கொடுத்த ஆண்டாள்; Āṇḍāḷ, a female devotee of Thirumāl, as one who offered to God wreaths worn by her.

[சூடி + கொடுத்த + நாச்சியார்]

சூடிக்கொடுத்தாள் *śūḍi-k-koḍuttāḷ,* பெ. (n.) சூடிக்கொடுத்தநாச்சியார் பார்க்க; see *śūḍi-k-koḍutta-nācciyār.*

[சூடி + கொடுத்தாள்]

சூடிகம் *śūḍigam,* பெ. (n.) கள்; toddy (சா.அக.).

மறுவ. சொல்விளம்பி

சூடிகை[1] *śūḍigai,* பெ. (n.) 1. மணிமுடி (பிங்.); crown bejewelled diadem. 2. கோயில் முதலியவற்றிலுள்ள கோபுரக்கும்பம்; ornamental rounded crest, as of temple tower. "சூட வீத்தன சூடிகை சூளிகை" (கம்பரா. பள்ளி24).

[சுடிகை → சூடிகை]

சூடிகை[2] *śūḍigai,* பெ. (n.) பாம்பின் படத்திலுள்ளதாகச் சொல்லப்படும் மணி; fabulous gem on a cobra's hood. "படத்தெடுத்த சூடிகை பறித்துமே" (தக்கயாகப். 362).

[சூடு → (சூட்டி →) சூடிகை]

சூடிகை[3] *śūḍikai,* பெ. (n.) சூலிக்கு உண்டாகும் நோய்; a disease to the pregnant ladies. கருப்பக் காலத்தில் செரிமானக் கோளாறும் காய்ச்சலும் பிறகு நாளுக்கு நாள் அரத்தக் கேட்டினால் சோர்வும் உண்டாக்கும் எனச் சா.அக. கூறும்.

சூடிச்சி *śūḍicci*, பெ. (n.) வெடியுப்பு *(வின்.)*; salt petre.

மறுவ. யவட்சாரம்

[சூடு → சூடிச்சி]

சூடிணர் *śūḍiṇar*, பெ. (n.) கோங்கிலவு *(மலை.)*; false tragacanth.

[சூடு' + இணர்]

சூடு[1] -தல் *śūḍu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *1.* அணிதல்; to wear, especially on the head. "கோட்டுப் பூச் சூடினுங் காயும்" *(குறள், 1313)*. *2.* பெயர் முதலியன சூட்டிக்கொள்ளுதல்; to be invested, as with a title. தமிழர்கள் தம் பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பெயர் சூடுதலே தகவாகும்.

[சூட்டு → சூடு-,]

சூடு[2] -தல் *śūḍu-*, 5 செ.குவி. (v.i.) *1.* பரவுதல்; to spread. *2.* வளைந்துபோதல்; to become bent. warped. "வண்டிப் பாதை சூடியிருக்கிறது" *(நாஞ்.)*. *3.* கவிதல்; to surround, envelope. "வானஞ் சூடிய மலர்தலை யுலகத்துள்ளும்" *(பெரும்பாண். 409)* *4.* உண்ணுதல்; to eat. "பிரசாதத்தைச் சூடி" *(ஈடு. 2. 7. 5.)*.

சூடு[3] *śūḍu*, பெ. (n.) *1.* சுடப்பட்டது; that which is heated, burnt, roasted. "கடலிறவின் சூடுதின்றும்" *(பட்டினப். 63)*. *2.* சுடுபுண்; burn, scald. *3.* வெப்பம்; heat. 'உடம்பு சூடாயிருக்கிறது' *(உ.வ.)*. *4.* ஒத்தடம்; fomentation. *5.* சினமுண்டாக்குவது; that which provokes. அவன் பேசுவது சூடாக இருக்கிறது. *6.* சினம்; anger. 'அவன் சூடாக இருக்கிறான்' *(உ.வ.)*. *7.* உணர்ச்சி; feeling, sensibility. 'எவ்வளவு சொன்னாலும் அவனுக்குச் சூடில்லை' *(உ.வ.)*. *8.* விலையேற்றம்; increase or enhancement, as of prices. விலை சூடாயிருக்கிறது *9.* கண்ணோய்வகை; opthalmia. கண்ணில் சூடு வளர்ந்திருக்கிறது. *10.* சூட்டுக்குறி; brand. "கருநரைமேற் சூடேபோல்" *(நாலடி, 186)*. *11.* வடு; scar, callosity "பாடகஞ் சுமந்த சூடுறு சேவடி" *(பெருங். மகத. 8: 14)*.

ம. சூடு; க. தூடு; தெ. சூடு; து. சூடு.

[சுடு → சூடு]

சூடு[4] *śūḍu*, பெ. (n.) அரிக்கட்டு; bundle of sheaves. "அகவய விளநெல் கரிகாற் சூடு" *(பரிபா. 7: 27)*.

ம. சூட்டு; க. சூடு; து. சூடி

சூடு[5]-தல் *śūḍu-*, பெ. (n.) சூடுபோடுதல்; to brand, as cattle; to cauterise. 'மாட்டைச்சூடினான்' *(சென்னை.)*.

க. சூடு; தெ. கூடு

[சுடு → சூடு-,]

சூடு[6] *śūḍu*, பெ. (n.) *1.* குடுமி; hair-tuft. "கானிறை குஞ்சிச் சூட்டில்" *(திருவிளை. யானையெய். 25)* *2.* உச்சிக்கொண்டை; crest, comb.

[சூட்டு → சூடு]

சூடு[7] *śūḍu*, பெ. (n.) கண்டனம்; condemnation; strong protest. 'ஆங்கில நாளேட்டிற்குத் தமிழறிஞர்கள் சூடு' *(உ.வ.)*.

[சூட்டு → சூடு]

சூடுகயிறு *śūḍu-kayiṟu*, பெ. (n.) வரிச்சல் கட்டும் தென்னைநார்க் கயிறு *(யாழ்ப்.)*; coir used for tying bamboo laths in tiling a roof.

[சூடு' + கயிறு]

சூடுகாட்டு-தல் *śūḍu-kāṭṭu-*, 5 செ.குவி. (v.i.) *1.* ஒத்தடங்கொடுத்தல்; to apply fomentation. *2.*. சூடாக்குதல்; to warm, heat. உடம்பு சூடு காட்டுகிறது. *3.* சுரக்குறி தோற்றுதல்; to feel hot, as in fever. *4.* கடுமைக்குறி காட்டுதல்; to warn, show severity, give deterrent punishment.

[சூடு + காட்டு-,]

சூடுகுத்தல் *śūḍu-kuttal*, பெ. (n.) சூடறுத்தல் பார்க்க; see *śūḍaṟuttal* *(சா.அக.)*.

[சூடு + குத்தல்]

சூடுகுத்து-தல் *śūḍu-kuttu-*, பெ. (n.) நோய் வகை (M.L.); conjunctivitis.

[சூடு + குத்து -,]

சூடுகொள்ளல் *śūḍu-koḷḷal*, பெ. (n.) *1.* உடம்பு வெப்பங்கொள்ளுகை; becoming heated in ansitution. *2.* உடம்பு அனலுகை; becoming feverish *(சா.அக.)*.

[சூடு + கொள்ளல்]

சூடுசுடு-தல் *šūḍu-šuḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) சூடு போடுகை; branding. காமாலைக்குச் சூடுசுட வேண்டும்.

[சூடு + சுடுதல்]

சூடுசுரணை *šūḍu-šūraṇai*, பெ. (n.) உணர்ச்சி; feeling or sensibility (சாஅக.).

[சூடு + சுரணை]

சூடுசுள்ளாப்பி-த்தல் *šūḍu-šūḷḷappi-*, 4 செ.குவி. (v.i.) களத்தில் கடாவிட்டு உழக்குதற்கு முன், கதிர்க்கற்றைகளை விரித்துப்பரப்புதல் (யாழ்ப்.); to loosen and spread sheaves on the threshing-floor preparatory to treading out the grain.

[சூடு + சுள்ளாப்பி-,]

சூடுசெய்-தல் *šūḍu-cey-*, பெ. (n.) வெப்பம் கொள்ளும்படிச் செய்தல்; causing warmth. உணவை சூடு செய்

[சூடு + செய்-,]

சூடுண்டா-தல் *šūḍuṇḍā-*, 5 செ.குன்றாவி. (v.t.) உடம்பு சூடு கொள்ளுதல்; to get increased in warmth of body (சாஅக.).

[சூடு + உண்டாகு-,]

சூடுதாவு-தல் *šūḍu-tāvu-*, பெ. (n.) சூடு உறை (வின்.); radiation of heat. 'காலைக் கதிர் மலை மீது பட்டு அடிவாரம் எங்கும் சூடு தாவிற்று' (உ.வ.).

[சூடு + தாவு-,]

சூடுதுரத்தி *šūḍu-duratti*, பெ. (n.) சூடுபோக்கி பார்க்க; see *šūḍu-pōkki* (சாஅக.).

[சூடு + துரத்தி]

சூடுபறக்கத்தேய்-த்தல் *šūḍu-paṟakka-t-tēy-*, செ.கு.வி. (v.i.) உடம்பில் மருந்தெண்ணெய் பூசிச் சூடு உண்டாகும்படித் தேய்த்தல்; rubbing with hand forcibly after applying ointment to the affected part so as to create heat, the act of anointing or of applying oil with friction Inunction (சாஅக.). சுளுக்கு விழுந்த இடத்தில் எண்ணெய் தடவி சூடுபறக்கத் தேய்.

[சூடு + பறக்க + தேய்-,]

சூடுபிடி-த்தல் *šūḍu-piḍi-*, 4 செ.கு.வி. (v.i.) நீர்க்கடுப்பு உண்டாகுதல்; to be attacked with strangury. 'வெயிலில் அலைந்ததால் அவனுக்குச் சூடுபிடித்தது' (உ.வ.).

[சூடு + பிடி-,]

சூடுபொறுக்காமை *šūḍu-poṟukkāmai*, பெ. (n.) சூடு தாங்காமை; extreme sensitiveness to heat (சாஅக.).

[சூடு + பொறுக்காமை]

சூடுபோக்கி *šūḍu-pōkki*, பெ. (n.) உடம்பின் வெப்பத்தைத் தணிக்கும் மருந்து; antipyretic (சாஅக.).

[சூடு + போக்கி]

சூடுமிதி-த்தல் *šūḍu-midi-*, 4 செ.கு.வி. (v.i.) கதிர்ச்சூடடித்தல்; to tread sheaves of corn.

[சூடு + மிதி-,]

சூடுவளர்த்தி *šūḍu-vaḷartti*, பெ. (n.) சூட்டினால் கண்ணில் சதை வளருதல்; granular ophthalmia (சாஅக.)

மறுவ. சூடுவளர்க்கை, சூடுவளர்தல

[சூடு + வளர்த்தி]

சூடுறல் *šūḍuṟal*, பெ. (n.) உடம்பு காய்தலின் உணர்ச்சி; feeling feverish (சாஅக.).

[சூடு + உறல்]

சூடை[1] *šūḍai*, பெ. (n.) 1. தலை; head. "சூடையின் மணி" (கம்பரா. சூளா. 88). 2. குடுமி; hair-tuft. "சூடை விளங்கு மாமணி" (சேதுபு. சேதுவந்த. 15).

[சூடு → சூடை]

சூடை[2] *šūḍai*, பெ. (n.) 1. பசிய நிறமுள்ள மீன் வகை; sardine, bluish-green, clupea fimbriata.



சூடை

2. நான்குவிரல நீளமும், பொன் நிறமும் உள்ள மீன்வகை; sardine, with purple colour growing upto four inches. 3. இருபது விரல நீளம் வளரக்கூடிய வெண்ணிறமுள்ள கடல்மீன் வகை; silvery sea fish growing upto twenty inches.

சூடைக்காசு *śūḍai-k-kāsu*, பெ. (n.) சூடாமணி (இலக். அக.) பார்க்க; see *śūḍā-maṇi*.

[சூடை + காசு]

சூடைப்பொடி *śūḍai-p-poḍi*, பெ.(n.) சூடை^{2},1 (யாழ்ப்.) பார்க்க; see *śūḍai*,^{2},1.

[சூடை + பொடி]

சூணம் *śūṇam*, பெ. (n.) கண்ணின் கருவிழிச் சவ்வு; the dark brown vascular of the eye between the sclera and the retina (சா.அக.).

[சூண் + அம்]

சூணித்துச்சொல்(லு)-தல் *śūṇittu-c-col-*, 8 குன்றாவி. (v.t.) / 3 செ.கு.வி. (v.i.) குறைகூறுதல் (இ.வ.); to criticise, expose defects.

[சூணித்து + சொல்]

சூத்தாங்கரடு *śūttāṅ-garaḍu*, பெ. (n.) எருவாயின் தடிப்பு (யாழ்ப்.); roughness of the anus or perineum.

[சூத்து + ஆம் + கரடு. ஆம் = சாரியை]

சூத்தழகி *śūttaḻagi*, பெ. (n.) ஒரு வகை மாம்பழம் (இ.வ); a kind of mango.

மறுவ. குரங்குச் சூத்து மாம்பழம்

[சூத்து + அழகி]

சூத்தாட்டி *śūttāṭṭi*, பெ. (n.) 1. வேலை கழப்புகிறவன் (இ.வ); an indolent, shirking workman; eye-servant. 2. தகுதிகடந்து உடன்பட்டு அருள் ஈட்டுபவன்; one who curries favour by unworthy complaisance.

[சூத்து + ஆட்டு → சூத்தாட்டி]

சூத்தாட்டிக்குருவி *śūttāṭṭi-k-kuruvi*, பெ. (n.) சூத்தாட்டியுள்ளான் பார்க்க; see *śūttāṭṭi-y-uḷḷāṉ*.

[சூத்தாட்டி + குருவி]

சூத்தாட்டியுள்ளான் *śūttāṭṭi-y-uḷḷāṉ*, பெ. (n.) வாலை எப்பொழுதும் ஆட்டிக்கொண்டிருக்கும் சிறுபறவை; வலியன்குருவி; pied wagtail.

மறுவ. வலியன்

[சூத்தாட்டி + உள்ளான்]



சூத்தாட்டு-தல் *śūttāṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. வேலைகழப்புதல்; to make a show of working. 2. தகுதிகடந்து உடன்பட்டுக் கருணை ஈட்டுதல்; to acquire favour by unworthy means.

[சூத்து + ஆட்டு-,]

சூத்தாம்பட்டை *śūttām-paṭṭai*, பெ. (n.) பிட்டம் (உ.வ.); buttocks.

மறுவ. புட்டம், புட்டாணி

[சூத்து + (ஆம்) + பட்டை]

சூத்திரகண்டகாரி *śūttira-kaṇḍakāri*, பெ. (n.) சிறுகண்டங்கத்திரி; dwarf prickly night shade (சா.அக.).

சூத்திரகுட்டம் *śūttira-kuṭṭam*, பெ. (n.) 1. சாந்தகுட்டம்; a mild form of leprosy. 2. ஒருவகைத் தோல்நோய்; itch thyosis eruptions in the form of fish scales (சா.அக.).

சூத்து *śūttu*, பெ. (n.) 1. எருவாய் (மலவாயில்); anus. 2. புட்டம்; buttocks, rump. 'சூத்திலடித் தானாம், பல்லுப் போச்சாம்' (பழ.).

ம. சூத்து; க. சுதி

H. cūt (பெண்குறி); Mar. cūtaṭ (பெண்குறி); Skt. cūta

[சூறு → சூற்று → சூத்து. சூறல் (சூலுதல்) = தோண்டுதல். சூறு = துளை, எருவாயில். (வே.க. 247)]

சூத்தை *śūttai*, பெ. (n.) கேடுற்றது (சங்.அக.); that which is decayed.

[சொத்தை → சூத்தை]

சூத்தைப்பல் *śūttai-p-pal*, பெ. (n.) சொத்தைப் பல்; decayed tooth (சா.அக.).

[சூத்தை + பல்]

சூத்தைப்பாக்கு *śūttai-p-pākku*, பெ. (n.) சொத்தைப்பாக்கு; worm eaten arecanut (சா.அக.).

[சூத்தை + பாக்கு]

சூத்தொட்டல் *śūttoṭṭal*, பெ. (n.) புட்டம் வற்றிப் போதல்; a slang for atrophy of buttocks (சா.அக.).

[சூத்து + ஒட்டல்]

சூத்தொட்டி *śūttoṭṭi*, பெ. (n.) இளைத்துப் போனவன்; a slang or contemptuous term for an emaciated person ove one with skin and bones (சா.அக.).

[சூத்து + ஒட்டி]

சூத்தொட்டிப்போதல் *śūttoṭṭi-p-pōdal*, பெ. (n.) புட்டம் ஒட்டிப்போகை; shrinking or diminution in bulk of the buttocks found in an emaciated person (சா.அக.).

[சூத்து + ஒட்டிப்போதல்]

சூதடி[1]-த்தல் *śūdaḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) ஏமாற்றுதல்; to cheat, decieve. "வீட்டிற் சூதடித்து நாமிருக்கிற்போமோ" (குருகூர்ப்.).

சூதடி[2] *śūdaḍi*, பெ. (n.) வஞ்சகம் (உ.வ.); ஏய்ப்பு; deception, trick.

[சூது + அடி]

சூதர் *śūdar*, பெ. (n.) 1. அரசன் முன்பு நின்றேத்துவார்; bards whose duty was to praise kings standing in their presence, encomiasts. "சூதரேத்திய துயிலெடை நிலையும்" (தொல். பொருள். 91). 2. பாணர் (அக.நி.); a caste of singers, lute-players.

சூதன் *śūdaṉ*, பெ. (n.) 1. சூதாடுபவன் (சூடா.); gambler. 2. தந்திரக்காரன்; cunning person, deep.

[சூது → சூதன்]

சூதாட்டம் *śūdāṭṭam*, பெ. (n.) 1. சூதாடுகை; gambling. 2. தந்திரம், கரவு; trick.

[சூது + ஆட்டம்]

சூதாடி *śūdāḍi*, பெ. (n.) சூதாடுவோன் (உ.வ.); gambler.

[சூது + ஆடி]

சூதாடு-தல் *śūdāḍu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. பணம், பொருள் ஈடாகவைத்து ஆடுதல்; gamble by betting money or materials. 'தருமன் நாடுநகரம் மனைவியை வைத்துச் சூதாடித் தன்பெருமைக்கு இழுக்குச் சேர்த்தான்' (உ.வ.).

[சூது + ஆடு-,]

சூதாடுகருவி *śūdāḍu-karuvi*, பெ. (n.) 1. தாயம் உருட்டும் பாய்ச்சிகைக் கவறு (யாழ்.அக.); dice. 2. சூதாட்டக்கட்டத்தில் வைக்குங்காய் (புறநா. 52, உரை); conical pieces moved on the chess-board according to the throw of dice.

[சூது + ஆடு + கருவி]

சூதாளி *śūdāḷi*, பெ. (n.) சூதன், 2 பார்க்க; see *śūdaṉ*, 2.

க. ஜூடாலி, ம. சூதாளி

[சூது → சூதாளி]

சூது[1] *śūdu*, பெ. (n.) ஏமாற்றுகை; cheat.

சூது[2] *śūdu*, பெ. (n.) 1. சூதாட்டம்; gambling. "வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை" (குறள், 931). 2. சூதுக்கட்டத்தில் வைக்குங்கருவி; conical pieces in dice-play. "சூதும் பங்கய முகையுஞ் சாய்த்து" (பெரியபு. தடுத்தாட். 21). 3. வழி; means, .device. "களவு கடனாகக் கடிந்திடுதல் சூதே" (சீவக. 2870). 4. வெற்றி; victory, success. "வெல்வது சூதென வேண்டி" (சீவக. 879). 5. மந்தணம்; secret. 6. தந்திரம்; trick. இந்தச் சூது எங்கிருந்து கற்றான்?

க., ம. சூது

சூதுக்காரன் *śūdu-k-kāraṉ*, பெ. (n.) சூதுகாரன் (இ.வ.) பார்க்க; see *śūdu-kāraṉ*.

[சூது + காரன்]

சூதுகருவி *śūdu-karuvi*, பெ. (n.) சூதாடுகருவி பார்க்க (புறநா. 52, உரை); see *śūdāḍu-karuvi*.

[சூது + கருவி]

சூதுகளி *šūdu-kaḷi*, பெ. (n.) சூதாட்டம் (நாஞ்.) பார்க்க; see *šūdāṭṭam*.

[சூது + களி]

சூதுகாரன் *šūdu-kāraṉ*, பெ. (n.) தந்திர முள்ளவன்; cunning person. 'சூதுகாரன் கை சும்மா இராது'.

ம. சூதுகாரந், க. சூதுகார

[சூது + காரன்]

சூதுபாய்ச்சிக்கை *šūdu-pāyccikkai*, பெ. (n.) தாயம் உருட்டுஞ் சொக்கட்டான்காய் (வின்.); dice.

[சூது + பாய்ச்சிகை → பாய்ச்சிக்கை]



சூதுபாய்ச்சிக்கை

சூதுபொரு-தல் *šūdu-poru-*, 4 செ.கு.வி. (v.i.) சூதாடுதல்; to gamble. "சூதுபொரு கழகத் தருகலும்" (பெருங். இலாவாண 8: 62).

ம. சூதுபொருக

[சூது + பொரு-,]

சூதுமாதவம் *šūdu-mādavam*, பெ. (n.) ஒரிதழ்த் தாமரை; viola suffruticosa (சா.அக.).

சூதுமுத்து *šūdu-muttu*, பெ. (n.) போலிமுத்து (தஞ்சை.); artificial pearl.

[சூது + முத்து]

சூதுவாது *šūdu-vādu*, பெ. (n.) கள்ளங்கபடு; cunning. 'அவள் சூதுவாது தெரியாதவள்' (உ.வ.).

[சூது + வாது]

சூதுவென்றி *šūdu-veṉṟi*, பெ. (n.) சூதாட்டத்தில் பெற்ற வெற்றியைக் கூறும் புறத்துறை (பு.வெ. 12: 16); theme describing success in gambling.

[சூது + வென்றி]

சூநாறி *šūnāṟi*, பெ. (n.) ஒரு வகைப் பிசின்மரம் (L.); umbelled yellow flowered resin seed.

சூப்பல் *šūppal*, பெ. (n.) சூப்பு-தல் பார்க்க; see *šūppu-* (சா.அக.).

[சூப்பு → சூப்பல்]

சூப்பான் *šūppāṉ*, பெ. (n.) சூப்பி பார்க்க; see *šūppi*.

[சூப்பு + சூப்பான்]

சூப்பி *šūppi*, பெ. (n.) 1. குழந்தைகள் வாயில் வைத்துச் சுவைத்தற்கு முலைக்காம்பு போல் அமைந்த குமிழ்க்கருவி; artifical nipple for a child to suck. 2. குழந்தைகள் உண்ணும் சிற்றுண்டி வகை; a sweetmeat in the form of a stick chewed by children. 3. இரந்துண்ணி (யாழ்ப்.); one who sponges on others. 4. கைவிரலைச் சப்பும் சிறுகுழந்தை; a child sucking its finger (சா.அக.).

[சூப்பு → சூப்பி]



சூப்பி

சூப்பிடி *šūppiḍi*, பெ. (n.) நாட்டுக்கோட்டைச் செட்டிமார்தம் திருமணத்திற்கு முன் நிகழும் ஒருவகை நிகழ்வு; a preliminary ceremony in marriage among Nāṭṭu-k-koṭṭai Chetti people.

சூப்பியம் *šūppiyam*, பெ. (n.) பாம்பு கொல்லி (மலை.); snake killer, common rue (சா.அக.).

சூப்பியகால் *šūppiya-kāl*, பெ. (n.) துவண்ட கால்; atrophied leg (சா.அக.).

[சூம்பு → சூப்பு → சூப்பிய + கால்]

சூப்பு-தல் *šūppu-*, 5 செ.கு.வி. (n.) சப்புதல்; to suck, sip.

க. சீபு

சூம்படை[1]-தல் *śūmbaḍai-*, 4 செ.கு.வி. (v.i.) நிலைகெடுதல் *(வின்.)*; to be reduced in circumstances to be ruined. "அவனுடைய வணிகம் சூம்படைந்தது" *(உ.வ.)*.

[சூம்பு + அடை-,]

சூம்படை[2]-த்தல் *śūmbaḍai-*, 4 செ.கு.வி. (v.i.) சோம்பல்கொள்ளுதல் (நெல்லை.); to be indolent.

[சோம்பு → சூம்பு + அடை-,]

சூம்படைந்தவன் *śūmbaḍaindavaṉ*, பெ. (n.) *1.* சுறுசுறுப்பற்றவன் (நெல்லை.); one who is gloomy and indolent. *2.* நிலைகெட்டவன் *(வின்.)*; ruined person, one whose hopes have been blasted.

[சோம்பு → சூம்பு + அடைந்தவன்]

சூம்பு[1]-தல் *śūmbu-*, 5 செ.கு.வி. (v.i.) மெலிந்து வாடுதல்; to wither, as hand to be blighted, as fruit; to be shrunk as countenance by sorrow. "மல்லாரும் புயுமென்றேன் சூம்பற் றோளை" *(தனிப்பா. 1, 274, 16)*.

[சோம்பு → சூம்பு-,]

சூம்பு[2]-தல் *śūmbu-*, 5 செ.குன்றாவி. (v.t.) சவைத்தல் *(இ.வ.)*; to suck, fondle with lips.

[சோம்பு → சூம்பு-,]

சூம்பு[3]-தல் *śūmbu*, 5 செ.குன்றாவி. (v.t.) *1.* கை கால் முதலிய உறுப்புகள் குச்சியாகமெலிதல்; limb becoming thin as a stick. 'அவளது வலது கால் சூம்பியிருக்கிறது' *(உ.வ.)*. *2.* (முகத்தைக் குறிக்கும்போது) சிறிதாதல், குறுகுதல்; shrunken face. 'செய்தித்தாளில் தேர்வில் அவன் தோல்வியுற்றான் என்று கண்டதும் அவன் முகம் சூம்பிவிட்டது' *(உ.வ.)*.

[சோம்பு → சூம்பு-,]

சூம்பு[4]-தல் *śūmbu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *1.* நீர் அல்லது அரத்தம் சுண்டிச்சிறுத்து வாட்டமடைதல்; wasting or diminution in the size of a part or sliphy of the eye due to leed of blood circulation. *2.* உறுப்புஉலர்தல்; drying up or withering as wasting of a part of the organism ss whole as limbs *(சாஅக.)*.

மறுவ. சூம்பல், வாடுதல், கூம்புதல்

[சோம்பு → சூம்பு-,]

சூமந்திரம்போடு-தல் *śū-mandiram-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) *1.* நோய், அச்சம் முதலின தீங்குவதற்கு மந்தரித்தல்; to exorcise. *2.* கமுக்கமாகக் கெடுமதிகூறல்; to exercise evil influence in secret.

[சூ = ஒலிக்குறிப்பு. சூ + மந்திரம் + போடு-,]

சூர்[1] *śūr*, பெ. (n.) *1.* அச்சம்; fear. "சூருறு மஞ்ஞையிற் சோர்ந்த கூந்தலர்" *(பெருங். உஞ்சைக். 44 : 22)*. *2.* துன்பம்; suffering. "சூர்தான்வந் தழிவேன்றனை" *(இரகு. சீதைவ. 133)*. *3.* நோய் *(பிங்.)*; disease. *4.* கடுப்பு; pungency. 'சூர்நறா வேந்தினாள்" *(பரிபா. 7: 62)*. *5.* ஏய்ப்பு *(அக.நி.)*; deceit, guile. *6.* கொடுமை; cruelty. சூரரமகளிர் ஆடுஞ்சோலை" *(திருமுரு.41)*. *7.* கொடுந்தெய்வம்; malignant deity. "உருமுஞ் சூரும்" *(குறிஞ்சிப். 255)*. *8.* தெய்வ மகளிர்; celestial maidens. "சுனைவாய் நிறைக்குஞ் சூருடைச் சிலம்பில்" *(பெருங். உஞ்சைக். 50 : 40)*. *9.* மிளகு (மலை.); black- pepper. *10.* வால்மிளகு (மலை.); cubeb.

ம. சூர்.

[சுள் → சுர் → சூர் (வே.க.)]

சூர்[2]-த்தல் *śūr-*, 4 செ.குன்றாவி. (v.t.) அச்சுறுத்தல்; to frighten. "சூர்த்துக் கடை சிவந்த சுடுநோக்கு" *(சிலப். 5: 84)*.

[சூர் → சூர்[2]]

சூர்[3]-த்தல் *śūr-*, 4 செ.கு.வி. (v.i.) *1.* கொடுமை செய்தல் (திருமுரு. 48, உரை); to be cruel. *2.* சுழலுதல்; to revolve, whirl round. "சூர்த்த நோக்கு" *(அக.நி.)*.

[சூர்[1] → சூர்[3]]

சூர்[4]-தல் *śūr-*, 4 செ.குன்றாவி. (v.t.) கவர்தல் *(யாழ்ப்.)*; to get by unfair means, as property.

[சூர்[1] → சூர்[4]]

சூர்[5]-தல் *śūr-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* தனிமைப் படுத்துதல், பொறுக்குதல்; to pick, separate. *2.* வகிர்தல், பிளத்தல்; to bore, to pierce, scoope out. 'பழம் நல்லதா என்று சூர்ந்து பார்' *(இ.வ.)*

ம. சூருக

[சுள் → சுளி→ சுகி (சுகிர்) → சூர்-,]

சூர்[6] *šūr,* பெ. (n.) சூரபதுமன் பார்க்க; see *sūrapadumaṉ.* "சூர்நவை முருகன்" (புறநா. 23: 4).

[சுள் → சுர் → சூர்]

சூர்[7] šūr, பெ. (n.) 1. ஆண்மை; valour. "வான் பகையின் சூரழிந்திட" (கம்பரா. பிரமாத். 76). 2. அஞ்சாமை (சூடா.); fearlessness, courage.

[சூர்[6] → சூர்[7]]

சூர்[8] *šūr,* பெ. (n.) சூரன்[2], 1 பார்க்க; see *šūraṉ*[2], 1. "சூர்புகலரியது ... தொன்மதில்" (கம்பரா. கவந்த. 21).

[சுள் → சுர் → சூர்]

சூர்க்கத்தி *šūr-k-katti,* பெ. (n.) சூரிக்கத்தி பார்க்க; see *šūri-k-katti.*

[சூர் + கத்தி]

சூர்க்கோடரி *šūr-k-kōḍari,* பெ. (n.) ஈட்டி எனப்படும் படைக்கருவி; pole-axe.

[சூர் + கோடரி]

சூர்த்தநோக்கு *šūrtta-nōkku,* பெ. (n.) கொடுமை (அக.நி.); cruelty.

[சூர்[2] + நோக்கு → சூர்த்தநோக்கு]

சூர்த்தம் *šūrttam,* பெ. (n.) நடுக்கம் (திருமுரு. 48, வேறுரை); trembling.

[சூர் → சூர்த்தம்]

சூர்ப்பகை *šūrppagai,* பெ. (n.); சூரபதுமனின் பகைவனான முருகக்கடவுள்; Lord Murugan, as the foe of Šūraṉ. 'சூர்ப்பகை தொட்ட தோராார்" (கந்தபு. வள்ளியம். 154).

[சூர் + பகை]

சூர்ப்பு *šūrppu,* பெ. (n.) 1. கொடுந்தொழில்; cruel, ferocious deed. "விறல் விளங்கிய விழுச் சூர்ப்பின்" (மதுரைக். 33). 2. சுழற்சி (சங்.அக.); whirling, revolving. 3. கைக்கடகம்; bracelet "சுடர்விடு பசும்பூட் சூர்ப்பமை முன்கை" (புறநா. 153: 3).

[சூர் → சூர்ப்பு]

சூர்ப்புகா *šūrppugā,* பெ. (n.) கழற்கொடி; bonduc nut creeper (சா.அக.).

சூர்மகள்[1] *šūrmagaḷ,* பெ. (n.) வீராங்கனை; amazon.

[சூர் + மகள்]

சூர்மகள்[2] *šūr-magaḷ,* பெ. (n.) 1. கொற்றவைக்கு ஏவற்றொழில் புரியும் இடாகினி அல்லது ஓகினி என்ற பெண்பேய் (பிங்.); Iḍākiṉi or Yōgiṉi, the female attendant of Koṟṟavai. 2. ஏமாற்றுப்பெண் (அக.நி.); deceitful, wily woman.

[சூர் + மகள்]

சூர்மிளகு *šūrmiḷagu,* பெ. (n.) வால்மிளகு; pepper (சா.அக.).

[சூர் + மிளகு]

சூர்வு *šūrvu,* பெ. (n.) வகிர்தல் (சங்.அக.); piercing, boring.

[சூர்[3] → சூர்வு]

சூரகாசிதம் *šūragāšidam,* பெ. (n.) சிறுகடலை; small bengal gram (சா.அக.).

சூரசூதன் *šūra-šūdaṉ,* பெ. (n.) கதிரவனின் தேரோட்டியாகிய அருணன் (சங்.அக.); sun's charioteer.

[சூரன் (கதிரவன்) → சூரசூதன்]

சூரசேனம் *šūra-šēṉam,* பெ. (n.) ஐம்பத்தாறு நாடுகளில் வடமதுரையைச் சூழ்ந்துள்ள நாடு (சங்.அக.); the country around vada Mathurai one of the 56 countries.

சூரடி-த்தல் *šūraḍi-,* 4 செ.கு.வி (v.i.) மயிர் முதலியன தீப்படுதலால் கருகல் நாற்றம் வீசுதல் (யாழ்ப்.); to emit offensive smell, as burning hair or wool.

[சூர் + அடி-,]

சூரணக்கிழங்கு *šūraṇa-k-kiḻaṅgu,* பெ. (n.) கரணைக்கிழங்கு; elephant yam (சா.அக.).

[சூரணம் + கிழங்கு]

சூரணஞ்சம் *šūraṇañjam,* பெ. (n.) காட்டுக் கரணை; wild foot yam (சா.அக.).

[சூரணம் → சூரணஞ்சம்]

சூரணஞ்சனி *šūraṇañjaṉi,* பெ (n.); 32 பரங்கி வைப்புநஞ்சுகளில் ஒன்றான செய்ந்நஞ்சு; one of the thirty two kinds of prepared poisons (சா.அக.).

சூரணத்தண்டு *sūraṇa-t-taṇḍu,* பெ. (n.); *கரணைக்கிழங்கின் தண்டு;* stem of elephant yam *(சா.அக.).*

[சூரணம் + தண்டு]

சூரத்ததிவிடயம் *sūrattadiviḍayam,* பெ. (n.) *மருந்துப்பண்டம்;* a medicinal drug.

[சூரத்து² + அதிவிடயம்]

சூரத்தனம் *sūra-t-taṉam,* பெ. (n.) *சூரம்¹ பார்க்க;* see *sūram¹.*

[சூரம் + தனம்]

சூரத்தாவிரை *sūrattāvirai,* பெ. (n.) *சூரத்து நிலாவிரை பார்க்க;* see *sūrattu-nilāvirai,* srican senna, as from Sūrat.

[சூரத்து ² + ஆவிரை]

சூரத்து¹ *sūrattu,* பெ. (n.) *சூரம்¹ பார்க்க;* see šūram¹. *மிகவும் சூரத்துக் காட்டுகிறான் (இ.வ.).*

[சூரம் → சூரத்து]

சூரதாரு *sūradāru,* பெ. (n.) *தேவதாரு;* deodar cedar *(சா.அக.).*

சூரப்பட்டைச்சத்து *sūrap-p-paṭṭai-c-cattu,* பெ. (n.) *சுரப்பட்டைச்சத்து பார்க்க;* see *sura-p-paṭṭai-c-cattu (சா.அக.).*

[சூரம் + பட்டை + சத்து]

சூரப்பத்திரி *sūra-p-pattiri,* பெ. (n.) *ஒருவகைச் சாதிப்பத்திரி;* myristica attenanata available *(சா.அக.).*

சூரப்பழம் *sūra-p-paḻam,* பெ. (n.) *சூரைப்பழம் பார்க்க;* see *sūrai-p-paḻam (சா.அக.).*

சூரப்பானு *sūra-p-pāṉu,* பெ. (n.) *ஒருவகைச் சாதிக்காய்;* Travance or nutmeg *(சா.அக.).*

[சூரை + பானு]

சூரப்புத்தி *sūra-p-putti,* பெ. (n.) *அறிவாற்றல் (யாழ்ப்.);* ingenuity, intellectual ability.

[சூரன் + புத்தி]

சூரப்புலி *sūra-p-puli,* பெ. (n.) *அஞ்சா மறவன் (வீரன்) (உ.வ.);* dauntless hero, generally used in contempt.

[சூரன் + புலி]

சூரபதுமன் *sūra-padumaṉ,* பெ. (n.) *முருகக் கடவுளாற் போரில் இருகூறாக்கப்பட்ட அசுர வேந்தன் (கந்தபு.);* an Asura king slained in battle by Lord Murugaṉ.

[சூரன் + பதுமன்]

சூரபற்பன் *sūra-paṟpaṉ,* பெ. (n.) *சூரபதுமன் (சங்.அக.) பார்க்க;* see *sūra-padumaṉ.*

சூரபன்மன் *sūra-paṉmaṉ,* பெ. (n.) *சூரபதுமன் பார்க்க;* see *sūra-padumaṉ.* "துண்ணென மீள்வனாற் சூரபன்மனே" *(கந்தபு. இந்திரன்க.4).*

சூரம்¹ *sūram,* பெ. (n.) *மறம் (சூடா.);* valour, bravery, heroism.

[சுள் → சுர் → சூர் → சூரம்]

சூரம்² *sūram,* பெ. (n.) *1. கொண்டைக்கடலை;* Bengal gram. *2. வால்மிளகு;* tail pepper *(சா.அக.).*

[சூர் → சூரம்]

சூரம்³ *sūram,* பெ. (n.) *ஒருவகை மரம் (M.M. 787);* evergreen cyprus tree.

சூரம்⁴ *sūram,* பெ. (n.) *அச்சம் (அக.நி.);* fear, terror.

[சூர் → சூரம்]

சூரமானம் *sūra-māṉam,* பெ. (n.) *சூரத்தனம் (யாழ்.அக.) பார்க்க;* see *sūra-t-taṉam.*

[சூரம் + மானம்]

சூரரமகளிர் *sūrara-magaḷir,* பெ. (n.) *தெய்வப் பெண்கள் (பிங்.);* celestial maidens.

[சூர்¹ + அர + மகளிர்]

சூரல்¹ *sūral,* பெ. (n.) *சுழித்தடிக்கை;* whirling, as of wind. "சூரலங் கடுவளி யெடுப்ப" *(அகநா. 1).*

[சூர் → சூரல்]

சூரல்² *sūral,* பெ. (n.) *1. பிரம்பு;* common rattan. "வள்ளியும் வகுந்துஞ் சுள்ளியுஞ் சூரலும்" *(பெருங். உஞ்சைக். 46: 276). 2. செடி வகை;* oblique-leaved jujube. "விரிமல ராவிரை வேரல் சூரல்" *(குறிஞ்சிப். 71). 3. நரியிலந்தை;* small round-errate-obtuse-leaved jujube.

ம. சூரன்

[சூர் → சூரல்]

சூரவிதளம் *śūravidaḷam*, பெ. (n.) செழுமலர்க் கொன்றை; a kind of cassia.

சூரளம் *śūraḷam*, பெ. (n.) கரணைக்கிழங்கு; elephant foot yam (சா.அக.).

சூரன்[1] *śūraṉ*, பெ (n.) 1. மறவன் (பிங்.); warrior, man of valour, hero. "துறப்பில ரறமெனல் சூர ராவதே" (கம்பரா. தைலமாட்டு. 30). 2. சூரபதுமன் (பிங்.) பார்க்க; see *śūra-padumaṉ*. "சூரனென் றுரைபெற்றுள்ள தொல்லையோன்" (கந்தபு. இரண். சூரபன்மன். 248) 3. நாய் (பிங்.); dog.

மறுவ. வீரன்

[சுள் → சுர் → சூர் → சூரன்]

சூரன்[2] *śūraṉ*, பெ. (n.) 1. ஞாயிறு; Sun. "காதற் சூரனை யனைய சூரா" (பாரத. பதினேழாம். 49). 2. நெருப்பு (பிங்.); fire.

[சுள் → சுர் → சுரம் → சுரன் → சூரன்]

சூரன்[3] *śūraṉ*, பெ (n.) 1. ஒருவகைச் செய்நஞ்சு; a prepared arsenic. 2. மீன்; fish. 3. அரிமா; lion. 4. மூஞ்சூறு; musk rat. 5. எரியுப்பு; sal ammoniac. 6. சேவல்; cock. 7. மாமரம்; mango tree. 8. கரடி; bear (சா.அக.).

சூரன்கனி *śūraṉ-kaṉi*, பெ (n.) 1. மாம்பழம்; mango fruit. 2. மாங்காய்; raw mango fruit.

[சூரன் + கனி]

சூரன்பாசாணம் *śūraṉ-pāśāṇam*, பெ (n.) கொச்சிவீரம்; a corrosive sublimate formerly prepared at Cochin.

[சூரன் + பாசாணம்]

சூராட்டி *śūrāṭṭi*, பெ. (n.) தேவராட்டி; a female devil-dancer. "மற்றவன்றன் மொழிகேட்ட வரைச் சூராட்டி" (பெரியபு. கண்ணப்ப. 51)

[சூன் → சூர் + ஆட்டி]

சூராதிபூடு *śūrādi-pūḍu*, பெ. (n.) அழுகண்ணி; Indian weeping tree (சா.அக.).

[சூராதி + பூடு]

சூரி[1] *śūri*, பெ. (n.) 1. நத்தைச்சூரி; bristly button weed. 2. புளிச்சை; Indian brown hemp.

[சுரி → சூரி]

சூரி[2] *śūri*, பெ. (n.) 1. மறக்குடி மகள்; heroic woman. 2. மாகாளி (பிங்.); goddess Durgā. "நான்முகன் வணங்கு மலர்த்தாட் சூரி" (அரிச். பு.பாயி.9). 3. காடுகாள் (பிங்.); goddess of the forest.

[சூரன் → சூரி]

சூரி[3] *śūri*, பெ (n.) 1. ஞாயிறு (அக.நி.); Sun. 2. எருக்கு (மலை.); madar plant.

[சூர் → சூரி]

சூரி[4] *śūri*, பெ (n.) 1. சூரிக்கத்தி பார்க்க; see *śūri-k-katti*. 2. எழுதும் ஓலையில் துளையிட உதவுங்கருவி; a small double-pointed iron style for boring ōlai leaves.

ம., க., து. சூரி; தெ. ச்சூரி

[சுள் → சுர் → சூர் → சூரி]

சூரி[5] *śūri*, பெ (n.) வெப்பு நோய்; small - pox.

[சூர் → சூரி]

சூரிக்கத்தி *śūri-k-katti*, பெ (n.) கூர்மையான ஒருவகைக் கத்தி (உ.வ.); a kind of sharp knife.

க. சூரிக்கத்தி; தெ. சூரிக்கத்தி

[சூரி + கத்தி]



சூரிக்கத்தி

சூரிக்காய் *śūri-k-kāy*, பெ (n.) புளிச்சைக்காய்; acid cucumber tree (சா.அக.).

[சூரி + காய்]

சூரிக்காயளவு *śūri-k-kāyaḷavu*, பெ (n.) இளகிய மருந்தின் அளவைச் சுட்டிக்காட்டக் கூறப்படும் ஒப்பளவு; a measure of medicine about the size of Śūri-k-kāy (சா.அக.).

ஒ.நோ. கழற்சிக்காயளவு

[சூரிக்காய் + அளவு]

சூரிக்கிளிஞ்சல் *šūri-k-kiḷiñjal,* பெ (n.) *பிளவுக் கிளிஞ்சில்;* bivalve shell.

[சூரி + கிளிஞ்சல்]

சூரிக்கொழுந்து *šūri-k-koḻundu,* பெ. (n.) *புளிச்சைக்கீரைத் துளிர்;* young shoot or tender leaves of hemp leaved hibiscus *(சா.அக.).*

[சூரி + கொழுந்து]

சூரிப்பட்டை *šūrippaṭṭai,* பெ. (n.) *கூரையின் முகவாய்ப்பட்டை;* cave board.

ம. சூருப்பட்டெ

[சூரி + பட்டை]

சூரிப்பலகை *šūri-p-palagai,* பெ. (n.) *கதவு நிலையின் தலையிற் பொருத்தும் பார்வைப் பலகை;* plank placed on the transom of a door.

[சூரி + பலகை]

சூரிப்புகை *šūri-p-pugai,* பெ (n.) *ஒட்டடை;* smoky deposit on the spider web *(சா.அக.).*

[சூரி + புகை]

சூரிபத்திரம் *šūri-pattiram,* பெ (n.) *புளிச்சைக் கீரையிலை;* leaves of hibiscus *(சா.அக.).*

[சூரி + பத்திரம்]

சூரிமீன் *šūri-mīṉ,* பெ (n.) *கடல்மீன் வகையு ளொன்று;* a kind of sea fish.

[சூரி + மீன்]

சூரிமுள்ளு *šūri-muḷḷu,* பெ (n.) *சூரையிலந்தை;* jujube *(சா.அக.).*

[சூரி + முள்ளு]

சூரியானி *šūriyāṉi,* பெ (n.) *1. கத்தியைக் கொண்டு செய்யப்படும் அறுவைமருத்துவம்;* surgical operation. *2. முரட்டு மருத்துவம்;* barbarous way of treating diseases *(சா.அக.).*

[சூரி → சூரியானி]

சூரியிண்டு *šūriyiṇḍu,* பெ (n.) *கழற்சிக்காய்;* seed of caesalpinia bonducella *(சா.அக.).*

[சூரி + இண்டு]

சூரியிலந்தை *šūri-y-ilandai,* பெ (n.) *ஒருவகை இலந்தை;* a kind of jujube *(சா.அக.).*

[சுள் (முள்) → சுர் → சூர் → சூரி]

சூரிவித்து *šūri-vittu,* பெ (n.) *நத்தைச்சூரி விதை;* seed of the button weed plant *(சா.அக.).*

[சூரி (முள்) + வித்து]

சூரினர் *šūriṉar,* பெ (n.) *தெய்வப் பெண்கள் (கந்தபு. மலை. 47);* celestial maidens.

[சூர் → சூரி → சூரினர்]

சூருக்கத்தி *šūru-k-katti,* பெ (n.) *சூரிக்கத்தி (இ.வ.) பார்க்க;* see *šūri-k-katti.*

[சூரி → சூரு + கத்தி]

சூருசரக்கல் *šūrušarakkal,* பெ. (n.) *சுக்கான்கல்;* lime stone *(சா.அக.).*

[சூரி → சூரு + சரக்கல்]

சூருமகந்தம் *šūrumagandam,* பெ. (n.) *தருப்பைப்புல்;* sacrificial grass *(சா.அக.).*

மறுவ. நாணல்

[சூரு + மகந்தம்]

சூருமம் *šūrumam,* பெ. (n.) *1. கருப்பூரப்புல்;* lemon grass. *2. சூருமகந்தம் பார்க்க;* see *šūru-magandam (சா.அக.).*

[சூர் → சூருமம்]

சூருறை *šūr-uṟai,* பெ. (n.) *கத்தியால் அறுக்கும் மருத்துவம்;* surgical operation *(சா.அக.).*

[சூர் + உறை]

சூரேகம் *šūrēgam,* பெ (n.) *பேய்ப்புடல்;* wild snake gourd, devils gourd *(சா.அக.).*

சூரை *šūrai,* பெ. (n.) *1. இலந்தை;* oblique leaved jubube. *"கான்றையுஞ் சூரையுங் கள்ளியும் அடர்ந்து" (மணிமே. 6:81). 2. தூது வளை (மலை.);* three lobed nightshade. *3. கருஞ் சூரை (K.R.);* hedge coper shrub. *4. மணி பிடியாப்பயிர் (வின்.);* growing grain not eared. *5. பயிரில் விழும் நோய்வகை (இ.வ.);* a blight affecting growing corn. *6. மீன்வகை;* tunny species of fish. *7. இரண்டடி நீளமும் நீலநிறமுமுள்ள மீன்வகை;* tunny-fish, bluish, attaining 2 ft. in length.

[சூர் → சூரை]

சூரைக்காற்று *šūrai-k-kāṟṟu,* பெ. (n.) *சூறைக்காற்று (வின்.) பார்க்க;* see *šūṟai-k-kāṟṟu.*

[சூரை + காற்று]

சூரைக்காரை *śūrai-k-kārai,* பெ. (n.) 1. முடி மயிர்; tuft of hair on the crown of the head. 2. சூரைப்பழம்; a fruit (சா.அக.).

[சூரை + காரை]

சூரைமான் *śūrai-māṉ,* பெ. (n.) பொன்னாங் கண்ணி; water olive (சா.அக.).

[சூரை + மான்]

சூரைமுள்ளி *śūrai-muḷḷi,* பெ. (n.) சூரையிலந்தை; oblique leaved jujubi (சா.அக.).

மறுவ. சூரைமுள்ளு

[சூரை + முள்ளி]

சூல்[1](லு)-தல் *śūl-,* 3 செ.கு.வி. (v.i.) கருக் கொள்ளுதல்; to become pregnant. "சூலாமை சூலிற் படுந்துன்பம்" (சிறுபஞ். 75).

[சல் → சூல்]

சூல்[2](லு)-தல் *śūl-,* 8 செ.குன்றாவி. (v.t.) 1. தோண்டுதல்; to scoop, dig out, pierce. "நுங்கு சூன்றிட்டன்ன கண்ணீர்மை" (நாலடி. 44). 2. அறுத்தல்; to cut off.

[சல் → சூல்]

சூல்[3] *śūl,* பெ. (n.) 1. கருப்பம்; conception, pregnancy. "இளம்பிடி ஒரு சூல் பத்தீ னும்மோ" (புறநா. 130: 2). 2. முட்டை; egg. "ஞமலி தந்த மனவுச் சூலுடும்பின்" (பெரும்பாண். 132). 3. முகில் நீர் நிரம்பியிருக்கை; wateriness of clouds. "சூன்முதிர் முகில்" (பரிபா., 20: 3).

ம. சூல்; க. சூல்; தெ. சூலு

[சல் → சூல்]

சூல்[4] *śūl,* பெ. (n.) சூலம்; trident of Śivan. "குலிசங் கதைசூல்" (சேதுபு. தேவிபுர. 27).

[சல் → சூல்]

சூல்[5] *śūl,* பெ. (n.) யானை, குதிரை முதலியவற்றிற்கு இடும் அழகணிப் போர்வை; ornamental cloth cover for elephants, horses etc.

U. Jhūl

[சூழ் → சூல்]

சூல்கலியாணம் *śūl-kaliyāṇam,* பெ. (n.) சீமந்தம் (இ.வ.) பார்க்க; see *sīmandam.*

[சூல்[2] + கலியாணம்]

சூல்காண்(ணு)-தல் *śūl-kāṇ(ṇu)-,* 16 செ.குன்றாவி. (v.t.) முதல் கருப்பம் கொண்டிருக்கும் பெண்ணைப் பணியாரங்களோடு சென்று பார்த்தல் (இ.வ); to visit a woman in her first pregnancy with presents of savoury eatables.

[சூல்[2] + காண்-,]

சூல்காப்பு *śūl-kāppu,* பெ. (n.) சூற்காப்பு (இ.வ.) பார்க்க; see *śūṟ-kāppu.*

[சூல் + காப்பு]

சூல்சாதம் *śūl-śādam,* பெ. (n.) சூல்விருந்து பார்க்க; see *śūlvirundu.*

[சூல் + சாதம்]

சூல்வயிறு *śūl-vayiṟu,* பெ. (n.) கருப்பிணியாய் இருக்கும் போது வயிறு அதிகமாகப் பருத்துக் காணல்; abnormal enlargement of the abdomen during pregnancy (சா.அக.).

[சூல் + வயிறு]

சூல்விருந்து *śūl-virundu,* பெ. (n.) கருக் கொண்டவள் பொருட்டுச் சமைக்கும் பல்சுவை விருந்து; feast given in honour of pregnant woman.

[சூல் + விருந்து]

சூலக்கல் *śūla-k-kal,* பெ.(n.) 1. சிவன் கோயில்களுக்கு விடப்பட்ட நிலங்களின் எல்லையில் நடப்படும் சூலக்குறியுள்ள கல் (கல்.); boundary-stone bearing trident mark for lands granted to Śivan temples. 2. அளவைக்கல் (இ.வ.); survey stones.

[சூலம் + கல்]

சூலக்கால் *śūla-k-kāl,* பெ. (n.) சூலக்குறி பொறிக்கப் பெற்ற சிவன் கோயில் அளவை மரக்கால் (தெ.க.தொ. 5,8); measure of capacity marked with trident, used in Śivan temples.

[சூலம் + கால்]

சூலக்கால்வண்டி *šūla-k-kāl-vaṇḍi,* பெ. (n.) *சிவன்கோயிலில் பயன்படும் கட்டைவண்டி வகை (இ.வ.)* a kind of strong rough-made cart, used generally in Šivaṉ temples.

[சூலம் + கால் + வண்டி]

சூலக்காளை *šūla-k-kāḷai,* பெ. (n.) *1. சிவன் கோயிலுக்காகச் சூலம்பொறித்து விடப்பட்ட காளை;* bull branded with trident mark and dedicated to Šivaṉ shrine. *2. மனம் போன போக்கில் திரிபவன்;* loafer.

[சூலம் + காளை]

சூலக்கினி *šūla-k-kiṉi,* பெ. (n.) *1. பேய்ப்புல்;* devil grass. *2. கருஞ்சீரகம்;* black cumin *(சா.அக.).*

சூலக்குழி *šūla-k-kuḻi,* பெ. (n.) *ஈமக்கடன் செய்தற்குரிய பிணக்கற்குழி (பிராமண.);* pit for stones set up in funeral ceremonies.

[சூலம் + குழி]

சூலக்குறடு *šūla-k-kuṟaḍu,* பெ. (n.) *சூட்டுக் கோல் (யாழ்ப்.);* branding instrument.

[சூலம் + குறடு]

சூலகக்கேசரி *šūlaga-k-kēšari,* பெ. (n.) *எல்லா வகைச் சூலைநோய்களும் தீரக்கொடுக்கும் ஆயுள்வேத மருந்து;* an Āyurvedic preparation for all stabing pain, colic pain etc. *(சா.அக.).*

[சூலகம் + கேசரி]

சூலகிருது *šūla-kirutu,* பெ. (n.) *பெருங்காயம் (மூ.அ.);* as afoetida.

[சூலம் + கிருது]

சூலசத்துரு *šūla-šatturu,* பெ. (n.) *ஆமணக்கு வித்து;* castor seed.

[சூலம் + சத்துரு]

சூலத்திசை *šūl-t-tišai,* பெ. (n.) *சிவனது சூலம் நிற்பதால் இன்ன இன்ன திக்கு இன்ன கிழமையில் செல்கைக்கு ஆகாதென்று விலக்கப்பட்ட திக்கு;* the direction believed to be affected by vārašūlai as inauspicious.

[சூலம் + திசை]

சூலத்தீபம் *šūla-t-tībam,* பெ. (n.) *கோயில் விளக்கு வகை (பரத. ஒழிவி. 41-43);* a kind of temple lamp.

[சூலம் + தீபம்]

சூலத்தீவர்த்தி *šūla-t-tīvartti,* பெ. (n.) *சூலம் போன்று, மூன்றுகவருள்ள தீப்பந்தம் (வின்.);* torch with three prongs in the form of trident, used in temples.

[சூலம் + தீவர்த்தி]

சூலதாபனம் *šūla-dābaṇam,* பெ. (n.) *சூல வடிவினைப் பொறித்த கற்களை நிலையாக நடுகை;* erecting permanently border stones embossed trident.

[சூலம் + தாபனம்]

சூலநட்டம் *šūla-naṭṭam,* பெ. (n.) *வரிக்கூத்து வகை (அபி. சிந்.);* a masquerade dance.

[சூலம் + நட்டம்]

சூலநாசனம் *šūla-nāšaṉam,* பெ. (n.) *கருவையழிக்கும் ஒருவகையுப்பு;* a kind of salt causing abortion *(சா.அக.).*

[சூலம் + நாசனம்]

சூலநாமா *šūla-nāmā,* பெ. (n.) *செழுமலர்க் கொன்றை;* a kind of cassia an unknown plant *(சா.அக.)*

சூலப்பிராந்தம் *šūla-p-pirāndam,* பெ. (n.) *நிரயவகையுளொன்று (சேதுபு. தனுக்கோ. 4) ;* a hell.

[சூலம் + பிராந்தம்]

சூலபாணி *šūla-pāṇi,* பெ. (n.) *சூலப்படையைக் கையிலுடைய சிவன் (சூடா.);* Šivaṉ as holding the trident.

[சூலம் + பாணி (கை)]

சூலபீங்கா *šūla-pīṅgā,* பெ. (n.) *நாய்வேளை;* wild or dog mustard *(சா.அக.).*

சூலம்[1] *šūlam,* பெ. (n.) *1. முக்கவரான முனையுடைய வேல்;* trident, the three-pronged dart of Šivaṉ. *"ஊனக மாமழுச் சூலம் பாடி" (திருவாச. 9: 17). 2. இடிதாங்கி;* lightning rod, as three-pronged. *"ஒள்ளிலைச் சூல . . . மாடம்" (சீவக. 2527). 3. கூரியமுனையுள்ள கழு (வின்.);*

impaling stake. 4. சூலவேல் வடிவில் மாட்டுக்கு இடுஞ் சூட்டுக்குறி; brand-mark on cattle, usually trident-shaped. 5. தோணி (இரேவதி) விண்மீன் (பிங்.); the 27th nakṣatra. 6. சூலை; supposed position of Śivaṉ's trident during week-day, considered inauspicious.

வ. சூல.

சூலம் வேல்வகைகளுள் ஒன்றென்பது "உருகெழு சூலவேல் திரித்து" (சங்.அக.) என்னும் தொடரால் அறியப்படும். "சூல வேலைப் போல மூன்று வழி" (சிலப். 11: 73, உரை.)

வேல், முருகனது சிறப்புப்படைக்கலமாகக் கொள்ளப்பட்டதுபோல், சூலவேல் சிவனது சிறப்புப் படைக்கலமாகக் கொள்ளப்பட்டதனால், சிவன்கோயிலுக்கு விடப்பட்ட நிலங்களின் எல்லைகளில் நடப்படும் சூலக்குறியுள்ள கல், 'சூலக்கல்' என்றும், சூலக்குறி பொறிக்கப்பெற்ற சிவன்கோயில் அளவைமரக்கால், 'சூலக்கால்' என்றும், சூலக்குறியிடப்பெற்ற சக்கரமுள்ள சிவன் கோயில் வண்டி, சூலக்கால்வண்டி என்றும், சிவன்கோயிலுக்காகச் சூலவடிவிற் சூடிட்டு விடப்பெற்ற காளை 'சூலக்காளை' என்றும், பெயர்பெறும் (வே.க.204).

"சிவபிரானது சூலம் குறுக்கே நிற்பதால் இன்னின்ன திசை, இன்னின்ன கிழமைகளில் வழிப்போக்கிற்கு ஆகாதென்றும் விலக்கப் பட்ட கிழமைக்குற்றம், கிழமைச்சூலம் எனப்படும். அஃது இன்று 'வாரசூலை' என இலக்கியத்தில் வழங்குகிறது. 'சூலம்' என்பதே உலக வழக்கு. "திங்கள் கிழமை தெற்கே சூலம்" என்றே மக்கள் கூறுதல் காண்க (வே.க. 204).

[சூல் → சூலம்]

சூலம்[2] *śūlam,* பெ. (n.) சதுரக்கள்ளி; square spurge (சா.அக.).

சூலம்[3] *śūlam,* பெ. (n.) 1. குத்தலுங் குடைச்சலுமுள்ள பல்வகைச் சூலைநோய்; a severe colic pain in the region of abdomen. 2. குத்தல்; pricking pain.

[சூல் → சூலம்]

சூலம்பிரி-தல் *śūlam-piri-,* 4 செ.குன்றாவி. (v.i.) நீர்கட்டப் பெறுதலால் பயிர் கிளைவிட்டுத் தோன்றுதல் (இ.வ.); to branch out and grow luxuriantly, as plant when well-watered.

[சூலம் + பிரி-,]

சூலமருது *śūlamarudu,* பெ. (n.) பேய்க் கடுக்காய்; Travancore myrobalan (சா.அக.).

[சூலம் + மருது]

சூலவரி *śūlavari,* பெ. (n.) பழைய வரிவகை (I.M.P.N.A. 255); an ancient tax.

[சூலம் + வரி]

சூலவாசனம் *śūla-v-āśaṉam,* பெ. (n.) ஒரு வகை உப்பு; a kind of salt (சா.அக.).

சூலவிளக்கு *śūla-viḷakku,* பெ. (n.) சூல வடிவிலான விளக்குவகை (யாழ்ப்.); temple lamp in the form of trident.

[சூலம் + விளக்கு]

சூலவேல் *śūla-vēl,* பெ. (n.) சூலப்படைக்கலம்; the trident weapon. 'உருகெழு சூலவேல் திரித்து' (சங்.அக.).

[சூலம் + வேல்]

சூலனாதி *śūlaṉādi,* பெ. (n.) சிறுதும்பை; small tombay (சா.அக.).

சூலாக்கினி *śūlā-k-kiṉi,* பெ. (n.) நச்சுப்பாலைக் கொடி; a poisonous creeper of the mimusops genus (சா.அக.).

[சூலம் → சூலா + அக்கினி]

சூலாதவிருத்தி *śūlātavirutti,* பெ. (n.) சிவப்பாமணக்கு; red castor seed (சா.அக.).

சூலாய்தம் *śūlāydam,* பெ. (n.) நீண்டதண்டின் நுனியில் மூன்றுகூரிய முனைகளையுடைய ஒருவகை வேல்; trident. 'கையில் சூலாய்தத்துடன் நிற்கும் காளியின் உருவம், அச்சமூட்டுவதாக உள்ளது' (உ.வ.).

[சூல் + ஆய்தம்]


சூலாய்தம்

சூலானோன் *šūlāṉōṉ,* பெ. (n.) வழலைக்கட்டி; soap.

சூலி[1] *šūli,* பெ. (n.) கருவுற்றவள் (சூடா.); pregnant woman. "சூலி முதுகிற் சுடச்சுட" (திருக்கை வழக்கம், கண்ணி, 12).

[சூல் → சூலி]

சூலி[2] *šūli,* பெ. (n.) 1. சூலமேந்திய சிவன்; lord Šivaṉ, as holding the trident. "சூலி தன்னருட் டுறையின் முற்றினான்" (கம்பரா. நட்புக். 37). 2. சூலப்படை கொண்ட காளி; Kāḷi, as holding the trident. "சூலி நீலி மாலவற் கிளங்கிளை" (சிலப். 12: 68).

[சூல் → சூலம் → சூலி (வேக. 205)]

சூலிகணம் *šūliganam,* பெ. (n.) சூலைக்கணம் பார்க்க; see *šūlai-k-kaṇam.*

[சூலி + கணம்]

சூலிகம் *šūligam,* பெ. (n.) கோழி; fowl (சா.அக.).

[சூல் → சூலிகம்]

சூலிகை *šūligai,* பெ. (n.) இடிதாங்கி; lightening rod, as three-pronged. "மாட நெடுமுகட்டின் சூலிகை" (திவ். பெரியதி. 8. 3 : 3).

[சூல் → சூலம் → சூலிகை]

சூலியா *šūliyā,* பெ. (n.) பிள்ளைத்தாய்ச்சி மரம்; an unknown tree (சா.அக.).

[சூல் → சூலியா]

சூலிலை *šūlilai,* பெ. (n.) வெற்றிலை; betel leaf (சா.அக.).

[சூல் + இலை]

சூலினி[1] *šūliṉi,* பெ. (n.) சூலத்தையேந்திய மலைமகள் (அபிரா. 50); goddess Pārvati as holding the trident.

[சூல் → சூலம் → சூலினி]

சூலினி[2] *šūliṉi,* பெ. (n.) வெற்றிலை (தைலவ. தைல. 70); betel leaf.

[சூலம் → சூலி → சூலினி]

சூலினி[3] *šūliṉi,* பெ. (n.) முதல் பண்களுள் (மேளகர்த்தாக்களுள்) ஒன்று (சங்.சந்.47); a primary rāga.

[சூல் → சூலினி]

சூலினி[4] *šūliṉi,* பெ. (n.) வழலை (வின்.); soap.

சூலுண்டா-தல் *šūl-uṇḍā-,* 6 செ.கு.வி. (v.i.) கருப்பிணியாய் இருத்தல்; to conceive (சா.அக.).

[சூல் + உண்டா-,]

சூலுளை-தல் *šūluḷai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மகப்பேற்றுத் துன்பப்படுதல்; to travail in labour. "சங்கு சூலுளைந் தலறிய தடம்பணை" (நைடத. நாட்டுப். 5). 2. சூலைக்குடைச்சல்; a boring pain experienced in arteritis (சா.அக.).

[சூல் + உளை-,]

சூலெலியன் *šūleliyaṉ,* பெ. (n.) ஒருவகை எலிக்கடி நச்சு நோய்; a disease due to the poison of rat bite (சா.அக.).

[சூல் + எலியன்]

சூலேதம் *šūlēdam,* பெ. (n.) புன்னை; a flowering tree - Alexandrian laural (சா.அக.).

சூலை *šūlai,* பெ. (n.) காலந்தவறி நிகழும் மாதவிடாயால் ஏற்படும் மூட்டுவலி நோய், முடக்குவலி நோய், வயிற்றுளைவு நோய் முதலிய நோய்கள்; a clan of diseases including arthritic complaints, stiffness or contraction of the muscls or nerves, scrofula, rheumatism, gout, colic, spasmodic pain, complaints from irregular menses. "அன்னவனை யினிச்சூலை மடுத்தாள்வன்" (பெரியபு.4, திருநாவுக். 48).

[சூல் → சூலை]

சூலைக்கட்டி *šūlai-k-kaṭṭi,* பெ. (n.) 1. தாங்க முடியாத குத்தலை உண்டாக்கும் ஒரு வகைக் கட்டி; a small kind of abscess attended with an unbearable excruiating pain. 2. அளவுக்கு அதிகமான புணர்ச்சியினால் உண்டாகும் கட்டி; venereal bubo (சா.அக.).

[சூலை + கட்டி]

சூலைக்கட்டு *šūlai-k-kaṭṭu,* பெ. (n.) ஊதையினால் கெட்ட காற்று, அரத்தம் மூலம் மூட்டுகளிற் பரவி நடக்க முடியாத அளவிற்குக் குத்தலைத் தரும் ஒரு நோய்; a disease of metabolism dependent on the morbid vāyu which by the spread of blood, makes pain in the bone-joints so much as to make painful movement (சா.அக.).

[சூலை + கட்டு]

சூலைக்கடுப்பு *śūlai-k-kaḍuppu*, பெ. (n.) சூலைவலி; piercing pain (சா.அக.).

[சூலை + கடுப்பு]

சூலைக்கணம் *śūlai-k-kaṇam*, பெ. (n.) குழந்தைகளுக்கு வாய்முதல், நெஞ்சுவரை புண்ணாகி, மூச்சுடன் இருமல்காணும் ஒரு வகைக் கணநோய்; an affection of congenital heat in children marked by inflamation of the oesophagus hard breath and cough (சா.அக.)

[சூலை + கணம்]

சூலைக்கிராணி *śūlai-k-kirāṇi*, பெ. (n.) மிகு கழிச்சலில் காணும் (தாங்க முடியாத) வயிற்றுவலி; an acute and unbearable darting pain in the stomach in an attack of chronic diarrhoea (சா.அக.).

[சூலை + கிராணி]

சூலைக்கிருது *śūlai-k-kirudu*, பெ. (n.) சூலைகிருது பார்க்க; see *śūlai-kirudu* (சா.அக.).

[சூலை + கிருது]

சூலைக்குச்சம் *śūlai-k-kuccam*, பெ. (n.) நோய்வகை (கடம்ப. இலீலா. 110); a kind of disease.

[சூலை + குச்சம்]

சூலைக்குடைச்சல் *śūlai-k-kuḍaiccal*, பெ. (n.) சூலைநோயில் உண்டாகும் திருகுவலி (வின்.); writhing pain in certain arthritical diseases.

[சூலை + குடைச்சல்]

சூலைக்குத்து *śūlai-k-kuttu*, பெ. (n.) மாதவிடாய் தடைபடுவதால் பெண்களுக்குப் பிறப்புறுப்பினுள் உண்டாகும் ஒரு வகைக் குத்தல் நோய்; acute pain in the vagina in a female due ot the obstruction of menstrual discharge (சா.அக.).

[சூலை + குத்து]

சூலைக்குன்மம் *śūlai-k-kuṉmam*, பெ. (n.) பித்தத்தில் வெப்புதோன்றி அதனால் வறட்சி கண்டு வீங்கி, அந்திநேரத்தில் குடலூதை யோடி அனற்றுமொருவகைக் குன்மநோய்; chronic dyspepsia of acute type.

[சூலை + குன்மம்]

சூலைகரப்பான் *śūlai-karappāṉ*, பெ. (n.) குழந்தைகளுக்கு உடல் முழுவதும் வெடித்துப் புண்ணாகி முகம் வாடி, கைகால் முடக்கிச் சூலத்தாற் குத்துவதைப் போல் குத்தலை உண்டாக்கும் ஒரு வகைக் கரப்பான் நோய்; a kind of eruption in children marked by cracked sores all over the body - with unbearable pain (சா.அக.).

[சூலை + கரப்பான்]

சூலைகிருது *śūlai-kirudu*, பெ. (n.) பெருங்காயம்; assafoetida.

மறுவ. சூலகிருது

[சூலை + கிருது]

சூலைகிருமி *śūlai-kirumi*, பெ. (n.) ஊதைப் பிடிப்பில் காணப்படும் நீளப்பூச்சி; a long shaped bacillus found in the effusion of articular rheumatism (சா.அக.).

[சூலை + கிருமி]

சூலைச்சத்துரு *śūlai-c-catturu*, பெ. (n.) ஆமணக்கு; castor plant (சா.அக.).

[சூலை + சத்துரு]

சூலைத்திரட்சி *śūlai-t-tiraṭci*, பெ. (n.) சூலை நீரின் திரட்சி; an accumulation of morbid fluid-sebum (சா.அக.).

[சூலை + திரட்சி]

சூலைநாசனி *śūlaināśaṉi*, பெ. (n.) 1. பெருங்காயம்; asaafoetida. 2. குக்கில்; bedellium. 3. மூக்கிரட்டை; spreading hog weed. 4. சூலைநோயைத் தீர்க்கும் மருந்து; any medicine for the relief of acute pain in gout rheumatism. 5. செம்பை; bastard sensitive plant. 6. நறுங்குறிஞ்சா; naruṅ-kuriñjā.

மறுவ. சுற்றத்தி

[சூலை + நாசினி]

சூலைநிவாரணசூரணம் *śūlai-nivāraṇa-śūraṇam*, பெ. (n.) சூலை, குன்மம் இவற்றிற்குக் கொடுக்கும் ஒருவகை ஆயுள்வேத மருந்து; an ayurvedic medicine for relief of śūlai (சா.அக.).

[சூலை + நிவாரணம் + சூரணம்]

சூலைநீர் *šūlai-nīr,* பெ. (n.) 1. பால்வினை நோயால் பிறப்புறுப்பிலிருந்து வெளிவரும் சீழ்; whites, diseased discharge from the urethra. 2. மேகநீர் (யாழ்ப்.); ill-humours of the body causing šūlai diseases.

[சூலை + நீர்]

சூலைநோய் *šūlai-nōy,* பெ. (n.) சூலத்தாற் குத்துவது போன்று உடம்பின், பக்கம், வயிறு, பொருத்து முதலிய பல உறுப்புகளில் காணும் வலி; on affection of a very acute shooting pain experienced, as if inflicted or caused with a trident in any part of the body such as sides, stomach, joints, etc. (சா.அக.).

[சூலை + நோய்]

சூலைப்பிடிப்பு *šūlai-p-pidippu,* பெ. (n.) சூலையினால் கைகால் பொருத்துகளில் உண்டாகும் பிடிப்பு; arthrites due to gout (சா.அக.).

[சூலை + பிடிப்பு]

சூலைப்பித்தரோகம் *šūlai-p-pitta-rōgam,* பெ. (n.) கொப்பூழில் குத்தல், மிகுநீர் வேட்கை, வியர்வை, தினவு, நடுக்கம், குத்தல் போன்ற அறிகுறிகளுடன் உள்ளங்கை, உள்ளங்கால் எரிச்சலையும், தலை சுற்றலையும் உண்டாக்கும் பித்தநோய்; a bilious disease marked by burning sensation of the palm and the sole and whirling of the head.

[சூலை + பித்தநோய்]

சூலைப்புகைச்சல் *šūlai-p-pugaiccal,* பெ. (n.) சூலைநோய்களுக்குக் கொடுக்கும் மருந்துப் புகை; fumigation applied in cases of šūlai diseases (சா.அக.).

[சூலை + புகைச்சல்]

சூலைபூபதி *šūlai-būpadi,* பெ. (n.) சூலை, இசிவு, கீல்பிடிப்பு ஆகியவற்றைச் சீர்படுத்தும் ஓர் ஆயுள்வேத இதளியக்குளிகை; an ayurvedic mercurial pill prescribed for contraction of the joints such as arthritis rheumatism, gout etc attended with acute pain and apoplexy.

[சூலை + பூபதி]

சூலைவாயு *šūlai-vāyu,* பெ. (n.) 1. சூலையை உண்டாக்கும் காற்று; flatulence giving rise to šūlai diseases such as colic, iliac passium gout. 2. முடக்குநோய்; rheumatism (சா.அக.).

[சூலை + வாயு]

சூவாரை *šūvārai,* பெ. (n.) ஒரு வகை மீன் (யாழ்ப்.); a kind of fish.

சூவானம் *šūvāṉam,* பெ. (n.) அட்டில் (யாழ்.அக.); kitchen.

மறுவ. அடுமனை, அடுக்களை.

தெ. சுவாரமு

[சூடு → சூ + வானம்]

சூவி *šūvi,* பெ. (n.) நெல்குத்தும்போது 'சூவி' என்று முடித்துப்பாடும் உலக்கைப்பாட்டு (இவ); song used when pounding grain, in which every line ends with the sound of šūvi.

தெ., க. சுவ்வி

[சூ + இ. மூச்சுவிடற் குறிப்பு]

சூவிடு-தல் *šūvidu-,* 18 செ.குன்றாவி. (v.t.) நாயைப் பாய ஏவுதல்; to set on, as dogs to attack.

[சூ + விடு-. 'சூ' ஒலிக்குறிப்புச் சொல்]

சூவெனல் *šū-v-eṉal,* பெ. (n.) நாயைப் பாய ஏவுதற்குறிப்பு; onom. expr. of urging dogs to attack.

[சூ + எனல். 'சூ' ஒலிக் குறிப்புச் சொல்]

சூழ்[1]-த்தல் *šūḻ-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. சுற்றுதல்; to wind, wrap round. "பூப்பால் வெண்டுகில் சூழ்ப்ப" (பரிபா. 10 : 80). 2. சுற்றிமொய்த்தல்; to surround, hover about. "சூழ்த்து மதுகர முரலும்" (திருவாச. 5:16).

[சுள் → சுழ் → சூழ்-,]

சூழ்[2]-தல் *šūḻ-,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. சுற்றியிருத்தல்; to encompass, surround, envelope "அறைகடல் சூழ்வையம்" (நாலடி., 230). 2. சுற்றி வருதல்; to go round, as in temple from left to right, hover about, flow around. "சூழ்கதிர் வான் விளக்கும்" (பு. வெ. 9:16). 3. ஆராய்தல்; to consult, to deliberate. "நின்னொடு சூழ்வ றோழி" (கலித். 54). 4. கருதுதல்; to intend, to think over. "புலைசூழ்வேள்வியில்" (மணிமே. 13 : 28).

5. தீயசூழ்ச்சிக்குத் திட்டமிடல்; to conspire. "கொடியவன் கடிய சூழ்ந்தான்" (சீவக. 261). 6. தேர்ந்தெடுத்தல்; to select. "சூழ் புரவித்தேர்" (பு.வெ. 9 16). 7. அறிதல் (சங்.அக.); to know. 8. பண்ணுதல்; to construct, to create. "பாவை சூழ்ந்தும்" (பட்டினப். 102). 9. எழுதுதல்; to draw. "தொய்யில்சூ ழிளமுலை" (கலித். 125). 10. தாக்குதல் (யாழ்ப்.); to encounter.

ம. சூழுக; க. சொழல்; தெ. சுடியு; து. சுயிபுனி, சுலிபினி; துட. துட்ய; கூ. டொட்க; குவி. துர்லிகியாலி

[சூள் → சுழ் → சூழ்²-,]

சூழ்³ *šūḻ*, பெ. (n.) 1. கலந்தாய்வு; deliberation, counsel. 2. ஆராய்ச்சி; investigation. "கற்றார் சூழ் சொல்லுமாங்கண்டு" (சி.போ. 8. 1:1). 3. சுற்று; surrounding. "சூழா மெட்டே யாயிரவேதி" (கந்தபு. அசுரர்யா. 61). 4. தலைக்கணி மாலை; wreath of flowers for head. "மென்பூச் சூழு மெழுதி" (திருக்கோ. 79). 5. கடலை (மலை.); Bengal gram.

சூழ்ச்சம் *šūḻccam*, பெ. (n.) சூழ்ச்சி, 2,4 பார்க்க (யாழ்.அக.); see *šūḻcci*, 2,4

[சூழ் → சூழ்ச்சம்]

சூழ்ச்சி *šūḻcci*, பெ. (n.) 1. பரப்புகை; spreading. "சூழ்ச்சி ஞானச் சுடரொளியாகி" (திவ். திருவாய். 3. 2 : 4). 2. கலந்தாய்வு; counsel, consultation. "போற்றார் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்" (புறநா. 2:7). 3. நுண்ணறிவு; wisdom. "கருமக் கிடக்கையுங் கலங்காச் சூழ்ச்சியும்" (பெருங். உஞ்சைக். 46:117). 4. செய்வழி; plan means. "சொல்லா யானுன்னைச் சார்வதோர் சூழ்ச்சியே" (திவ். திருவாய். 3. 2:3). 5. மனத் தடுமாற்றம்; mental disturbance. "மைம்மிக னலிதல் சூழ்ச்சி" (தொல். பொருள். 260).

ம. சூழ்ச்ச

[சூழ் → சூழ்ச்சி]

சூழ்ச்சித்துணைவர் *šūḻcci-t-tuṇaivar*, பெ. (n.) அமைச்சர்கள்; counsellers, ministers. "சூழ்ச்சித் துணைவராகிய அமைச்சரோடு கூட விருந்து" (சி. போ. சிற். 4, பக். 90).

[சூழ்ச்சி + துணைவர்]

சூழ்த்து-தல் *šūḻttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) சூழச் செய்தல்; to cause to surround, to involve. 'உனைப்பாடாதவர்களைப் பல்வினைக்கே சூழ்த்துதி" (திருநூற். 20).

[சூழ்² → சூழ்த்து-,]

சூழ்தாழை *šūḻtāḻai*, பெ. (n.) தாமரை (மலை); lotus flower.

[சூழ் + தாழை. தாழ் → தாழை]

சூழ்ந்து *šūḻntu*, பெ. (n.) சுளுந்து பார்க்க; see *šuḷundu* (சா.அக.).

சூழ்நிலை *šūḻ-nilai*, பெ. (n.) 1. செய்தி அல்லது நிகழ்ச்சிக்குப் பின்னணி, நிலைமை; circumstances, conditions. 'மாணவன் தேர்வு எழுதமுடியாத சூழ்நிலைக்காக ஆசிரியர் வருந்தினார்'. 2. மாந்தர் வாழும் இடத்தைச் சுற்றியிருக்கும் இயற்கைப்பொருள்களின் தொகுதி; surroundings.

[சூழ் + நிலை]

சூழ்போ-தல் *šūḻ-pō-*, 9 செ.குன்றாவி. (v.t.) 1. சுற்றிப்போதல்; to go round. 'சுடுமண்ணேற்றி யரங்கு சூழ்போகி" (மணிமே. 18 : 33). 2. வலம் வருதல்; to go round from left to right as in temple. "தோகையோர் பங்கன்றாளி லுவகையின் வணங்கிச் சூழ்போந்து" (கூர்மபு. தக்கன்வேள். 18). 3. வளைத்தல் (திவா.); to surround, hover about. 4. சுற்றிக்கிடத்தல்; to lie around. "சுணங்குந் திதலையுஞ் சூழ்போந்து" (ஆதியுலா. 177). 5. ஆராய்தல்; to deliberate. "மன்னு நரகன் றன்னைச் சூழ்போகி வளைத்தெறிந்து" (திவ். பெரியாழ். 4. 3:3).

[சூழ் + போ-,]

சூழ்வல்லோர் *šūḻ-vallōr*, பெ. (n.) அமைச்சர்; ministers. "எதிராடா திருந்தாரச் சூழ்வல்லோர்கள்" (திருவிளை. பரிநரி. 41).

[சூழ் + வல்லோர்]

சூழ்வளி *šūḻvaḷi*, பெ. (n.) சுழல்காற்று, சூறாவளி; whirlwind, cyclone. "சூழ்வளி சுழற்ற வாழ்கயத் தழுந்தினன்" (பெருங். நரவாண 1, 24).

ம. சூழ்வல்லோர்

[சூழ் + வளி]

சூழ்வார் *šūḻvār*, பெ. (n.) சூழ்வோர் பார்க்க; see *šūḻvōr*. "சூழ்வார் கண்ணாக ஒழுகலான்" (குறள். 445).

[சூழ் + ஆர். 'ஆர்' பலர்பாலீறு]

சூழ்வினை *šūḻvinai*, பெ. (n.) சூழ்ச்சி,4 பார்க்க; see *šūḻcci, 4*. "தோழர்க் குணர்த்துஞ் சூழ்வினை தொடங்கி" (பெருங். இலாவாண, 10, 84) (செ.அக.).

[சூழ் + வினை]

சூழ்வு *šūḻvu*, பெ. (n.) 1. சூழல்[1] பார்க்க; see *šūḻal*. "சூழ்வுற வமரர் துதைந்தனர்" (கோயிற்பு. பதஞ்சலி, 45). 2. சூழ்ச்சி,2 பார்க்க; see *šūḻcci*, 2. 3. சூழ்ச்சி,4 பார்க்க; see *šūḻcci*,4. "ஏகாதொழிவது சூழ்வன்று" (கந்தபு. ஏமகூட. 2).

[சூழ் → சூழ்வு]

சூழ்வோர் *šūḻvōr*, பெ. (n.) 1. அமைச்சர் (பிங்.); counsellors, ministers. 2. உறவினர் (வின்.); relations; friends. 3. சூழ்ந்து நிற்பவர்; spectators, neighbours.

[சூழ் + ஏர் → சூழ்வோர்]

சூழ *šūḻa*, கு.வி.எ. (adv.) 1. கூட்டமாகப் பின் தொடர; to accompany. 'இக்கால அரசியலார் பலர் புடைசூழ வருவதில்தான் மகிழ்ச்சி கொள்கின்றனர்'. 2. வெள்ளம் போன்று சூழ வருதல்; encircling like flood water 'வெள்ளம் சிற்றூரைச் சூழ்ந்தது'.

[சூழ் → சூழ]

சூழகழிருக்கை *šūḻagaḻ-irukkai*, பெ. (n.) தோணாமுகம் (பிங்.); a fortified capital.

[சூழ் + அகழ் + இருக்கை]

சூழகம் *šūḻagam*, பெ. (n.) வெள்ளைக்கடலை; Bengal gram (சா.அக.).

H., Ur. Chenna.

[சூழ் + அகம்]

சூழவரினி *šūḻavarini*, பெ. (n.) பொற்சீந்தில்; moon creeper (சா.அக.).

[சூழ + வரினி]

சூழல் *šūḻal*, பெ. (n.) 1. சூழ்கை; surrounding. 2. இடம் (பிங்.); place, locality. 3. மணற்குன்று; sand-hill. "விளையாடு சூழல்" (திவ். திருவாய். 6, 2, 4. பன்னீ.). 4. கூட்டம்; company, crowd. "வானவர் சூழலோடு" (கந்தபு. மேருப். 48). 5. கலந்தாய்வு; counsel. 6. சூழ்ச்சி[4] பார்க்க; see *šūḻcci*. "சூழல்கள் சிந்திக்கில்" (திவ். திருவாய். 5, 5). 7. தோற்றரவு; incarnation. "சூழலென்று அவதாரத்தைச் சொல்லக் கடவதிறே" (ஈடு. 2, 7, 6). 8. தந்திரம்; trick, stratagem.

ம. சூழல்

[சூழ் + அல். 'அல்' தொ.பெ.ஈறு.]

சூழி[1] *šūḻi*, பெ. (n.) 1. சேணம் (பிங்.); saddle. 2. யானையின் முகபடாம்; ornamental covering for the elephant's face. "யானைச் சூழியிற் பொலிந்த" (மலைபடு. 228). 3. நீர்நிலை; pool in hilly tracts, tank, pond. "அலங்கு கதிர் சுமந்த கலங்கற் சூழி" (புறநா. 375). 4. கடல் (அக.நி.); sea, ocean. 5. சூழியல் பார்க்க (யாழ்ப்.); see *šūḻiyal*.

[சூழ் → சூழி. 'இ' பெயராக்க ஈறு]

சூழி[2] *šūḻi*, பெ. (n.) 1. உச்சி (பிங்.); crown of the head. 2. சூழியம் பார்க்க (இ.வ.); see *šūḻiyam*. 3. மேலிடம்; top portion. 'நெடுமதிற் சூழி" (பு. வெ. 6: 15).

சூழிகணம் *šūḻiganam*, பெ. (n.) சூலிகணம் (பை. ஷஜ. 209) பார்க்க; see *šūliganam*.

[சூழ் → சூழி + கணம்]

சூழிகை *šūḻigai*, பெ. (n.) கள் (அக.நி.); toddy.

மறுவ. மது, சொல்விளம்பி.

சூழியப்படை *šūḻiya-p-paḍai*, பெ. (n.) சூழியற் படை பார்க்க; see *šūḻiyar-paḍai*.

[சூழியம் + படை]

சூழியம் *šūḻiyam*, பெ.(n.) 1. உச்சிக்கொண்டை; hair-knot on the crown of the head (திருவிருத். 60. வியா. பக். 330). 2. உச்சிக்கொண்டையில் அணியும் அணிகலன்; ornament worn on the crown of the head. "விட்டிலகு சூழியம் விழுங்கு சிறுகொண்டை" (திருவிளை. தடாதகை. 16).

[சூழி[2] → சூழியம்]

சூழியல் *šūḻiyal*, பெ. (n.) வீட்டிறப்புத் தாங்கும் கழி (யாழ்ப்.); supporting stakes in wall or the eaves of a house.

ம. சூழிக

[சூழ்[2] → சூழியல்]

சூழியற்கம்பு *šūḻiyaṟ-kambu*, பெ. (n.) சூழியல் (வின்.) பார்க்க; see *šūḻiyal.*

[சூழியல் + கம்பு]

சூழியற்படை *šūḻiyaṟpaḍai*, பெ. (n.) வீட்டுச் சுவரின் எடுத்துக்கட்டி; sloping cornice of a house-wall.

[சூழியல் + படை]

சூழியற்படைதட்டு-தல் *šūḻiyaṟpaḍai-taṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) பிறரது பாட்டைச் சிறிது மாற்றித் தன்னதாக்குதல்; lit. to knock off cornice and slightly raise the wall, to adopt another's composition as one's own, making slight alterations, to plagiarise. சூழியற்படையை இடித்துச் சுவரையெழுப்புதல்.

[சூழியல் + படை + தட்டு-,]

சூள்[1]-தல் *šūḷ-*, 5 செ.கு.வி. (v.i.) 1. ஆணையிடுதல்; to take an oath. "ஐய சூளி னடிதொடு குன்றொடு" (பரிபா. 8:70). 2. வஞ்சினங்கூறுதல்; to vow. "சூட்கின்ற வீரம்" (கம்பரா. நிகும்ப. 82).

[உள் → சுள் → சூள்]

சூள்[2] *šūḷ*, பெ. (n.) 1. பூட்கை (சபதம்); vow. "சூள் பேணான் பொய்த்தான் மலை" (கலித். 41). 2. ஆணை; oath. "இன்னாத் தொல்சூ ளெடுத்தற் கண்ணும்" (தொல். பொருள். 147). 3. சாவிப்பு (சாபம்); malediction, curse. "கருப்பமோ டிருத்திர் பல்காலம் . . . என்று சூளிசைத்தாள்" (கந்தபு. துணைவ. 10).

ம. சூழ்; க. சுருள்; தெ. சூசு; து. சூலு; கூ. சூள; பர். சூள்; E. jury

[உள் → சுள் → சூள்]

சூள்[3] *šūḷ*, பெ. (n.) தீப்பந்தம் (யாழ்ப்); torch, flambeau.

சூளம் *šūḷam*, பெ. (n.) சீழ்க்கை (நாஞ்.); whistle.

ம. சூள

[சூள் + அம்]

சூளரவு *šūḷaravu*, பெ. (n.) சூளுறவு பார்க்க; see *šūḷuṟavu*. "இன்னோர் சான்ற சூளரவு சாற்றி" (கந்தபு. அசமுகிபு. 29).

[சூள் + அரவு]

சூளாமணி *šūḷāmaṇi*, பெ. (n.) 1. முடிமணி; chief gem in a crest or diadem. "சூளாமணி சிந்தித்திரியுமன்றே" (சீவக. 786). 2. தேவர்கோன் (இந்திரன்) அணியும் மணி (பிங்.); gem worn by Indra. 3. திவிட்டனைக் காப்பியத் தலைவனாகக் கொண்டு தோலாமொழித் தேவர் இயற்றிய தொடர்நிலைச் செய்யுள்; a Jaina poem with Tiviṭṭaṉ- as hero by Tōlā moḻi-t-tēvar.

ம. சூளாமணி

[சூடாமணி → சூளாமணி]

சூளி *šūḷi*, பெ. (n.) சூழியம், 1 (யாழ்.அக.) பார்க்க; see *šūḻiyam,1.*

சூளிகம் *šūḷigam*, பெ. (n.) அப்பவகை (சங். அக.); flour cakes cooked in ghee.

[சூள் → சூளிகம்]

சூளிகை[1] *šūḷigai*, பெ. (n.) 1. நீர்க்கரை; shore. "நன்னீர்ச் சூளிகைதோறும்" (அரிச். பு. விவாக. 46). 2. செய்குன்று; an artificial mound. "கோபுர மன்றஞ் சூளிகை" (கந்தபு. வரைபுனை. 7). (இலக்.அக.).

[சூழ்[2] → சூழிகை → சூளிகை]

சூளிகை[2] *šūḷigai*, பெ. (n.) 1. யானைச் செவியடி (பிங்.); the root of elephant's ear. 2. நிலாமுற்றம் (பிங்.), மொட்டைமாடி; open terrace. "மாடமலி சூளிகையிலேறி மடவார்கள் பாடலொலி செய்ய" (தேவா. 324. 2). 3. தலை அணிகலன்களில் ஒன்று; an ornament for the head. "சூளிகையுஞ் சூட்டும் . . . மின் விலக" (ஆதியுலா. 68).

[சூடிகை → சூளிகை]

சூளுதல் *šūḷudal*, தொ.பெ. (vl.n.) குடைகை; boring pain (சா.அக.).

[சூள் → சூளுதல்]

சூளுரை *šūḷurai*, பெ. (n.) பூட்கை; vow. 'தன் சூளுரை நிறைவேறுமா நிறைவேறாதா என்று அவனுக்குத் தெரியாது' (உ.வ.).

[சூள் + உரை]

சூளுரை-த்தல் *šūḷurai-*, 4 செ.குன்றாவி. (v.t.) சூளுறு-தல் பார்க்க; see *šūḷuṟu-*.

சூளுறவு *šūḷ-uṟavu,* பெ. (n.) ஆணையிடுகை; oath. "தோழி சூளுறவாகக் கருதினாள்" *(இறை. 18. பக். 107, உரை).*

[சூள் + உறு → உறவு]

சூளுறு-தல் *šūḷuṟu-, 20* செ.கு.வி. (v.i.) *1.* ஆணையிடுதல்; to swear, to take oath. *2.* வஞ்சினம் கூறுதல்; to take a vow. "உண்ணா நோன்பி தன்னொடுஞ் சூளுற்று" *(மணிமே. 3:102).*

க. சூருளிசு

[சூள் + உறு-,]

சூளை[1] *šūḷai,* பெ. (n.) *1.* செங்கல் முதலியன சுடுங்காளவாய்; kiln, furnace. "அகலிரு விசும்பி னூன்றுஞ் சூளை" *(புறநா. 228:3). 2.* ஈமவிறகு; funeral pile.

ம. சூள. Pkt. culli; H. cūlliyā; Mar. cūn; Skt. cūlli *(உலை)*



சூளை

சூளை[2] *šūḷai,* பெ. (n.) கணிகை; prostitute. "பலர்ப் புணர்ந்து முயங்கு சூளையாய் முடிந்தனள்" *(உபதேச. உருத்திரா. 113).*

ம. சூள., க., து. குட., பட. சூளெ. கோத. சூள். Skt. šūlā

[சூள் → சூளை]

சூளைக்கல் *šūḷai-k-kal,* பெ. (n.) *1.* செங்கல்; brick. *2.* சுண்ணாம்புக்கல்; lime stone. *3.* ஒரு வகைக்கல்; a kind of stone *(சா.அக.).*

[சூளை + கல்]

சூளைச்சக்கரம் *šūḷai-c-cakkaram,* பெ. (n.) *1.* பானையோடு; piece of broken pot. *2.* அகல் விளக்கு; an earthern lamp *(சா.அக.).*

[சூளை + சக்கரம். சருக்கரம் → சக்கரம்]

சூளைபிரி-த்தல் *šūḷaipiri-, 4* செ.கு.வி. (v.i.) கருப்பத்துடன் இறந்தவள் பொருட்டுச் சூளையினின்று மட்கலம் வாங்கிப் பிறர்க்கு அளித்தல் (இ.வ.); to purchase pots from a kiln and distribute them to the poor in memory of a woman who died in pregnancy.

[சூளை + பிரி-,]

சூற்கருப்பை *šūṟ-karuppai* பெ. (n.) கருப்பந் தாங்கிய பை; the pregnant uterus - gravid uterus *(சா.அக.).*

[சூல் + கருப்பை]

சூற்காப்பு *šūṟ-kāppu,* பெ. (n.) முதன்முறையாக கருக்கொண்ட கருப்பிணிகட்கு ஐந்தாவது அல்லது ஏழாவது மாதங்களில் அணிவிக்கப் படும் வளைகாப்பு; bracelets put ceremonially on the arms of pregnant lady in the 5th or 7th month after conception *(செ.அக.).*

[சூல் + காப்பு]

சூற்கொள்ளல் *šūṟ-koḷḷal,* பெ. (n.) கருப்பங் கொள்ளுகை; to conceive, to be pregnant *(சா.அக.).*

[சூல் + கொள்ளல்]

சூற்கொள்ளாமை *šūṟkoḷḷāmai,* பெ. (n.) கருத்தரிக்காமை; absence of pregnancy *(சா.அக.).*

[சூல் + கொள்ளாமை]

சூற்சங்கு *šūṟšangu,* பெ. (n.) முத்திருக்கும் சிப்பி (யாழ்ப்); shell, oyster containing pearls.

[சூல் + சங்கு]

சூற்சராயு *šūṟšarāyu,* பெ. (n.) சூற்கருப்பை பார்க்க; see *šūṟ-karuppai (சா.அக.).*

[சூல் + சராயு]

சூற்சாதம் *šūṟsādam,* பெ. (n.) முதன்முறையாக கருக்கொண்ட பெண்ணுக்குச் சுற்றத்தார் இடும் விருந்து (தஞ்சை.); feast given by relatives to a woman in her first pregnancy.

[சூல் + சாதம்]

சூற்பிபாசம் *šūṟpipāšam,* பெ. (n.) நிரய (நரக) வகை (சி.போ.பா. 2, 3, பக். 204); a hell.

[சூல் + பிபாசம்]

சூற்பெண்டு *šūṟ-peṇḍu*, பெ. (n.) சூலி; pregnant woman. 'சூற்பெண்டுகள் சுரமேறுமாபோலே' *(ஈடு, 2. 10 : 2).*

[சூல் + பெண்டு]

சூறல் *šūṟal*, பெ. (n.) தோண்டுகை; scooping digging out.

ம. சூறல்

[சூல் → சூறல்]

சூறன் *šūṟaṉ*, பெ. (n.) மூஞ்சுறு (பிங்.); grey musk - shrew.

[சூறு + அன்]

சூறாவளி *šūṟāvaḷi*, பெ. (n.) சுழற்காற்று, கடுங்காற்று; whirlpool, tempest "சூறாவளிபோற் சுழற்றுஞ் சிறுபுன்றுரும்பு" *(நன்னெறி. 11).*

ம. சூறாவளி; தெ. சூரகருவலி; பட. சுற்றிகாயி

[சூறா + வளி]

சூறாவளிக்கிணறு *šūṟāvaḷi-k-kiṇaṟu*, பெ. (n.) உள்ளுறைக் கிணறு (இ.வ.); under-well inside a well.

[சூறாவளி + கிணறு]

சூறாவளிச்சட்டம் *šūṟāvaḷi-c-caṭṭam*, பெ. (n.) கிணற்றினடியில் வைக்கும் நெல்லிமரச் சட்டம் (வின்.); frame of nelli wood placed at the bottom in constructing a well.

[சூறா + வளி + சட்டம்]

சூறாவாரி *šūṟāvāri*, பெ. (n.) சூறாவளி பார்க்க; see *šūṟāvaḷi*.

[சூறா + வாரி]

சூறு-தல் *šūṟu-*, 5 செ. குன்றாவி. (v.t.) சூழ்தல்; to surround, encompass. "சூறிய விமையோர்" *(பாரத. காண்டவ. 31).*

சூறு *šūṟu*, பெ. (n.) எருவாய்; anus.

[சூத்து → சூற்று → சூறு]

சூறை[1] *šūṟai*, பெ. (n.) 1. நெற்றி; forehead. 2. தூதுவளை; three lobed night shade (சா.அக.).

சூறை[2] *šūṟai*, பெ. (n.) கழுத்தின் பின்குழி (பிங்.); hallow in the nape of the neck.

சூறை[3] *šūṟai*, பெ. (n.) 1. சுழல்காற்று; whirl wind. "சூறைமாருதத்து" (திருவாச. 3:10). 2. கொள்ளை (திவா.); decoity. 3. பயிரில் விழும் நோய்வகை; a blighting disease of crops. 4. பனிச்சை என்ற மயிர்முடிவகை; a kind of dressing the hair in a knot. "வட்டச் சூறையர்" (சீவக. 632). 5. சல்லடம் (சீவக. 632. விசேடக் குறிப்பு); loin cloth. 6. இரண்டடி நீளமும் கருநீல நிறமுமுள்ள கடல் மீன்; tunny fish bluish attaining 2 ft. in length. 7. சூறைக்குருவி (பதார்த்த. 894) பார்க்க; see *šūṟai-k-kuruvi*.

ம. சூற

[சூறு + ஐ]

சூறைக்காரன் *šūṟaikkāraṉ*, பெ. (n.) கொள்ளையடிப்பவன்; robber, plunderer. "நிருதர்புரச் சூறைக்காரப் பெருமாளே" *(திருப்பு., 170).*

[சூறை + காரன்]

சூறைக்காற்று *šūṟai-k-kāṟṟu*, பெ. (n.) சுழல் காற்று (இ.வ.); whirlwind.

[சூறை + காற்று]

சூறைக்குருவி *šūṟai-k-kuruvi*, பெ. (n.) சோள வயலிற் கூட்டங்கூட்டமாய்க் காணப்படும் குருவி வகை; rose coloured starling, found in flocks on the chōḷam fields, pastor roscus (M.M. 181).

[சூறை + குருவி]

சூறைக்குருவிக்கறி *šūṟai-k-kuruvi-k-kaṟi*, பெ. (n.) குட்டம், சோகை, குன்மம், வீக்கம், ஆறாப்புண் இவற்றைப் போக்கும் சூறைக் குருவியின் கறி; the flesh of the šūṟai kuruvi controls leprosy, worms, severe rheumatic affections (சா.அக.).

[சூறைக்குருவி + கறி]

சூறைகொள்(ளு)-தல் *šūṟaikoḷ-*, 7 செ.குன்றாவி. (v.t.) சூறையாடுதல்; to plunder. "சோதியான் சூழ் பனிநீர் சூறைகொளு மாறே போல்" *(பட்டினத். திருப்பா., நெஞ்சொடு. 32).*

[சூறை + கொள்-,]

சூறைகோட்பறை *šūṟaikōṭpaṟai*, பெ. (n.) வழிப்பறி செய்வோர்க்குரிய பாலைப்பறை (தொல். பொருள். 18. உரை); robber's drum.

[சூறை + கொள் + பறை - சூறை கோட்பறை]

சூறைச்சின்னம் *šūṟai-c-cinnam*, பெ. (n.) கொள்ளையிடுவோர்க்குரிய ஊதுகொம்பு; robber's horn. "ஆறெறி பறையுஞ் சூறைச் சின்னமும்" (சிலப். 12. 10).

[சூறை + சின்னம்]

சூறைத்தேங்காய் *šūṟai-t-tēṅgāy*, பெ. (n.) நேர்த்திக் கடனாகத் தெய்வத்தின் முன்னிலையில் உடைக்கும் சிதறுதேங்காய்; coconuts dashed on the ground before a shrine in fulfilment of vow.

[சூறை + தேங்காய்]

சூறையர் *šūṟaiyar*, பெ. (n.) பரத்தையர்; prostitute "தயங்கு குழற் சூறையர்" (தஞ்சை.வா. 377).

[சூளை² → சூறை → சூறையர்]

சூறையாடு¹-தல் *šūṟai-y-aḍu-*, 5 செ.குன்றாவி. (v.t.) கொள்ளையடித்தல்; to plunder, pillage. "அறிவினைச் சூறையாட" (கம்பரா. நகர்நீ. 200.).

[சூறை + ஆடு-,]

சூறையாடு²-தல் *šūṟai-y-aḍu-*, செ.கு.வி. (v.i.) தலைசுற்றல்; to be dizzy from disease, from hunger (செ.அக.).

[சூறை + ஆடு-,]

சூறைவிடு-தல் *šūṟaiviḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) 1. கொள்ளையிடச் செய்தல்; to permit plunder. 2. சொத்தைப் பிறர்க்கு வாரிவிடுதல்; to give one's things to be appropriated promiscuousiy.

தெ. சூரவிடுச்சு; க. சூறெவிடு.

[சூறை + விடு-,]

சூறைவேடன் *šūṟai-vēḍan*, பெ. (n.) சுறாமீன் வகையுளொன்று; a kind of shark sea-fish (சா.அக.).

[சூறை + வேடன்]

சூன் *šūṉ*, பெ. (n.) 1. பிதுக்கம்; swelling. 2. வளைவு; crookedness, bend, irregular-shape. சூன்நிலம். 3. கை முதலியன சூம்பியிருத்தல்; whithering, as of a limb. 4. குற்றம்; defect. 5. கவடம்; guile. "அவன் மனத்திலிருக்கும் சூனுக்கு அளவில்லை". 6. கமுக்கம் (இரகசியம்); secret, inner meaning. "காரியத்தின் சூனெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்." 7. இரண்டு வீட்டுச்சுவர்களின் இடைச்சந்து (இ.வ.); narrow lane between the walls of adjacent houses. 8. புறம்போக்குநிலம்; a piece of unoccupied land.

[சுல் → சுன் → சூன் (வே.க. 244)]

சூன்பிடித்தவன் *šūṉ-piḍittavaṉ*, பெ. (n.) வயிறு பெருத்தவன்; one with swallow belly (சா.அக.).

[சூன் + பிடித்தவன்]

சூன்மி *šūṉmi*, பெ. (n.) கற்பழித்தவரை, காய்ந்து கொதிக்கும் இருப்புப்பாவையைத் தழுவும் படிச் செய்து, வருத்தும் நிரயவகை (சேதுபு. தனுக்கோ. 3); a hell where immortal people are punished by being forced embrace red-hot iron statues.

[சூன் → சூன்மி]

சூன்றல் *šūṉṟal*, பெ. (n.) தோண்டுகை (திவா.); scooping out.

[சூல் → சூன்றல்]

சூனம்¹ *šūṉam*, பெ. (n.) மான் (பிங்.); deer.

சூனம்² *šūṉam*, பெ. (n.) முழுவதும் மலந்த மலர் (யாழ்.அக.); full blown flower.

சூனம்³ *šūṉam*, பெ. (n.) வயிற்றுவீக்கம் (தஞ்சை.); swelling of the abdomen.

[சூன் → சூனம்]

சூனம்வயிறு *šūṉam-vayiṟu*, பெ. (n.) 1. பெரு வயிறு; a distanded abdomen. 2. குழந்தைக்கு உண்டாகும் (கல்லீரல் வீக்கம்) பெருவயிறு; pot belly in children.

[சூனம் + வயிறு]

சூனர் *šūṉar*, பெ. (n.) ஊன்விற்போர்; dealers in meat.

[சூன் + அர்]

சூனன் *šūṉaṉ*, பெ. (n.) 1. பெருவயிற்றோன்; man with a big belly. 2. நோயால் வயிறு பெருத்தோன்; a patient with distended abdomen (சா.அக.).

[சூன் → சூனன். சூன் = பிதுக்கம்]

சூனாம்வயிறு *šūṉām-vayiṟu*, பெ. (n.) சூனம்வயிறு பார்க்க; see *šūṉam-vayiṟu*.

[சூனாம் + வயிறு]

சூனாவயிறு *šūṉā-vayiṟu*, பெ. (n.) பெருவயிறு (இ.வ.); swollen abdomen, as of diseased children.

[சூனம் + வயிறு → சூனவயிறு → சூனாவயிறு]

சூனி *šūṉi*, பெ. (n.) கவடன் (இ.வ.); cunning person (செ.அக.).

மறுவ. வஞ்சகன், ஏமாற்றுக்காரன், ஏய்ப்பவன்.

[சூன் → சூனி]

சூனை[1] *šūṉai*, பெ. (n.) 1. சிறுமூளைக்குள் உண்ணாக்கைப் போற் புதைந்துகிடக்கும் சதை; மொத்தை; a lobe or small fleshy mass found demarcated in the little brain, intertonsillar lobe or uvula of the cerebellum (சா.அக.). 2. வயிற்று வீக்கம்; swelling of abdomen. 3. குற்றம்; fault. 4. சொத்தை; that which is decayed.

சூனை[2] *šūṉai*, பெ. (n.) ஆடு வெட்டப்படும் இடம்; slaughter - house. "சொன்ன சூனைத் துறந்த வற்றட்டன்ன" (நீலகேசி. 314).

சூனை[3] *šūṉai*, பெ. (n.) மகள்; daughter.

சூனைப்பற்று-தல் *šūṉai-p-paṟṟu-*, செ.கு.வி. (v.i.) வயிறு வீக்கமடைதல்; to swell as of the abdomen (சா.அக.).

[சூனை + பற்று-,]

சூனைவயிறு *šūṉai-vayiṟu*, பெ. (n.) சூனம் வயிறு பார்க்க; see *šūṉam-vayiṟu* (சா.அக.).

மறுவ. பானைவயிறு

[சூனை + வயிறு]

சூனைவிழு-தல் *šūṉai-viḻu-*, 2 செ.கு.வி. (v.i.) சொத்தை விழுதல்; to be rotten at the core as teeth.

[சூனை + விழு-,]

CPL600909

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

மூன்றாம் மடலம் - மூன்றாம் பாகம்

செ - ஞௌ

Vol. III - Part - III

பு.ஏ. இராமையா இ.ஆ.ப.
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை

தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு
2004

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

மூன்றாம் மடலம் - மூன்றாம் பாகம்

செ - ஔ

Vol. III - Part - III

பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,

அரசு செயலாளர்,

தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை

தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,

இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மேற்பார்வையாளர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி

இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட

இயக்கக வெளியீடு

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்கக வெளியீடு - 9

முதற் பதிப்பு : 2004

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. III, Part - III

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு

விலை : உருபா 300/-

குறியீட்டெண் : Colon No. P.J1-J, 314" K.M4

வெளியிட்டோர் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி-48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை - 600 040

அச்சீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி
சென்னை - 600 113

நூல் கிடைக்குமிடம் : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி
சென்னை - 600 113

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி-48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை - 600 040

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

Vol. III - Part - III

மூன்றாம் மடலம் - மூன்றாம் பாகம்

(செ முதல் சௌ வரை)

பதிப்புக் குழு

திரு. பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை

திரு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,
அரசு சிறப்புச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை
மற்றும்
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மேற்பார்வையாளர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

கூர்ந்தாய்வாளர்

புலவர் த. சரவணத் தமிழன்

தொகுப்பாளர்கள்

திரு. முத்து. பிச்சை
முனைவர் மு. கண்ணன்
முனைவர் பா. வெற்றிச்செல்வன் (பகுதிப்பொறுப்பாளர்)
முனைவர் ச. செந்திலாண்டவன்
முனைவர் இரா.கு. ஆல்துரை
திரு. கா. இளமுருகு
திரு. ச.கி. கணேசன் (ஓவியர்)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

ஜெ ஜெயலலிதா
முதலமைச்சர்

வாய்மையே வெல்லும்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009

22.12.2004

அணிந்துரை

'ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம் ஒவ்வொன்றும் உன் முன்னேற்றம்' என்னும் வைர வரியில் தமிழின் முன்னேற்றமே தமிழர் முன்னேற்றம் என்பதை எடுத்துக் காட்டினார் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்.

பாவேந்தர் பணித்தபடி, ஒல்லும் வகையில் எல்லாம் அந்த ஒண்டமிழை வளர்க்க உற்ற பணி புரியும் நற்றமிழ் அரசே தமிழ் நாடு அரசு.

காலத்தை வென்று நிற்கும் நம் கன்னித் தமிழை இந்திய அரசின் ஆட்சி மொழியாக ஆக்குவதற்கும், உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழியின் ஒப்பற்ற இலக்கியமாகவும், உலக சிந்தனையின் உச்சமாகவும் விளங்கும் திருக்குறளைத் தேசிய இலக்கியமாக ஆக்குவதற்கும், இடையறா முயற்சிகளை எடுத்து வருகிறது எனது அரசு. அனைத்து மாணவரும் தமிழைப் பயில வேண்டும் என்பதற்காக மழலையர் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை அறிவியல் தமிழைக் கற்பிக்க ஏற்பாடு செய்ததும் எனது அரசே.

வளர்ந்து வரும் அறிவியலுக்கு ஈடு கொடுக்கும் வகையிலும், இலக்கண இலக்கிய மரபுகளைப் பேணிக் காக்கும் முறையிலும் மொழியின் சொல்வளத்தை அறிந்து கொள்வதும், பெருக்குவதும் இன்றியமையாததாகும். இப் பயன்பாட்டு நோக்கில் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி' (A comprehensive Etymological Dictionary of Tamil Language) நூல்களை உருவாக்கும் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது. இப் பணியின் தனித் தன்மை கருதி, பன்மொழிப் புலமையும், ஆய்வு நுட்பமும், தமிழ்ப் புலமையும், ஒருங்கே அமையப் பெற்றிருந்த மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களை இயக்குநராகக் கொண்டு இத் திட்டம் தொடங்கப்பட்டது. பைந்தமிழ் அறிஞர் பாவாணர் அவர்கள் 'தனித் தமிழ் இயக்கம்' கண்ட மறைத்திரு மறைமலை அடிகளார் வழியில் தமிழ் ஆய்ந்து தமிழே உலக முதன்மொழி என்பதை உலகுக்கு உணர்த்தியவர் ஆவார்.

அவர் தொடங்கி வைத்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம், அருந்தமிழின் வளர்ச்சிக்கு அடிப்படையான தலையாய பணிகளில் ஒன்றாகும் என்பதைக் கருத்திற் கொண்டு எனது அரசு இத் திட்டத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. இத் திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 6 பகுதிகள் மட்டுமே முடிக்கப்பட்டிருந்தன. இவற்றில் 'அ' முதல் 'ஙௌ' வரையிலான எழுத்துக்களில் அமையும் சொற்கள் பற்றிய விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. தற்பொழுது 'ச' வரிசையில் மூன்று பகுதிகளும் 'த' வரிசையில் மூன்று பகுதிகளும் ஆக மேலும் 6 பகுதிகள் முடிக்கப்பட்டு வெளியிடப் பெறுவதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழோடு இந்த யுகத்தின் நான்காவது தமிழாகிய 'அறிவியல் தமிழ்' வளர, அறிவியலைத் தமிழில் கூறுவதற்கான சொற்களைக் கண்டறிய வேண்டியது இன்றியமையாததாகும். அதற்காக ஏற்கெனவே தமிழில் உள்ள சொல்வளத்தை அறியவும், புழக்கத்தில் இல்லாத சொற்களைப் புதுப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும், புதிய சொற்களை உருவாக்கவும், சொற்களின் வேர்களை ஆராய்ந்து புதியன படைக்கவும் இன்றைய தமிழ் வளர்ச்சியின் உடனடித் தேவையை நிறைவு செய்வதாக செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி நூல் மடலங்கள் அமைகின்றன.

இம் மடலங்கள் தமிழின் அழிவிலாச் சொத்தாக விளங்கும் என்பது உறுதி.

இப் பகுதிகள் வெளிவர அயராது உழைத்த அறிஞர் பெருமக்களையும், அலுவலர்களையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

வாழ்க தமிழ்!
வளர்க தமிழ்ப் பணி!

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
டாக்டர் செல்வி ஜெ ஜெயலலிதா

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

சி.வி. சண்முகம்
கல்வி மற்றும்
வணிக வரித்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

அணிந்துரை

"ஒரு மொழிக்குட்பட்ட சொற்களை ஆராயும் சொல்லாராய்ச்சியும் பல மொழிகளை ஒப்பு நோக்கும் மொழியாராய்ச்சியும் மேனாட்டாரிடமிருந்து நாம் அறிந்தவை.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே (தொல்.சொல்.எச்.1)

என்று தொல்காப்பியர் காலத்திலேயே சொல்லாராய்ச்சியும் மொழியாராய்ச்சியும் ஓரளவு தமிழ்நாட்டிலிருந்ததேனும் விரிவான முறையிலும், நெறிப்பட்ட வகையிலும் சொன்னூலும் (Etymology), மொழிநூலும் (Philology) நாம் பெற்றது மேலையரிடமிருந்தே". இது, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் தம் சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் என்ற நூலைச் சேலத்திலிருந்து 1948-இல் வெளியிட்டபோது, அந்நூலில் அவரே எழுதிய முகவுரை. ஆகப் பல்லாண்டுகளாகச் சொல்லாராய்ச்சியிலேயே தம்மை ஆட்படுத்திக். கொண்டு, நுணுகி நுணுகித் துருவித் துருவிப் பார்த்ததன் தெள்ளிய வெளிப்பாடுதான் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி. அதன் வாயிலாகத் தமிழின் சொல்வளத்தை நாம் அறிகின்றோம். அத்துடன் நில்லாது தொன்றுதொட்டு இன்று வரையுமுள்ள பண்பாடு, நாகரிகம், வரலாறு ஆகியவற்றையும் அறிய முடிகிறது.

தமிழ் பிறமொழியின் கலப்பில்லாமல் தனித்தியங்கும் ஆற்றலுடைய தன்னிகரில்லா மொழி என்று உலக மொழியறிஞர்களெல்லாம் ஒப்புக் கொள்கின்றனர். செந்தமிழின் நீண்ட நெடிய சொல்வள வரலாற்றில் சொல்லும் பொருளும் பெருகியுமுள்ளன; அருகியுமுள்ளன! வழக்கிழந்த சொற்களை மீட்பதற்கும், அனைத்துச் சொற்களையும் காப்பதற்கும் அகரமுதலிகள் இன்று வழிவகுக்கின்றன.

இலக்கியச் சொல்லாட்சிகள் முதலாக இன்றைய பேச்சு வழக்குச் சொல்லாட்சிகள் ஈறாக அனைத்தையும் உள்ளடக்கிச் சொற்களின் வடிவம், பொருள், பிறப்பு போன்றவை பற்றிய தேவையான செய்திகளுடன் விளக்கமுற உரைப்பவையாக இருப்பவையே செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் மடலங்கள்.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூற்றாண்டு விழா கண்ட நம் **புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்களின் சீரிய தலைமையில் அமைந்த அரசு, அவரின் தனித்தமிழ்ப் பற்றினைப் பேணிக் காத்திடவும், அவர் காட்டிய நெறிமுறைகளின்படி அகரமுதலி மடலங்கள் வெளிவரவும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்று இந்தியாவிலேயே தலைசிறந்த முதன்மை மாநிலமாக மாற்றிடச் சூளுரைத்துச் செயற்பட்டு வரும் **புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்களின் சீரிய வழிகாட்டுதல்படி தமிழக அரசு முனைந்து பீடுநடை போடுகின்றது.

'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் எஞ்சிய பகுதிகள் யாவும் நான்காண்டுக்கால வரம்பெல்லைக்குள் வெளிக்கொணரப்படும்' எனச் சட்டப்பேரவையில் அறிவித்தபடி 'ச'கர மடலத்தின் 3 பகுதிகளும், 'த'கர மடலத்தின் 3 பகுதிகளும் இப்போது ஒருசேர வெளிவருவது, மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். முன் எப்போதும் இல்லாதவாறு 6 பகுதிகள் ஒருசேர முடிக்கப்பெற்று வெளியிடப்பெறுவது அருஞ்சாதனையே! அதற்கு முதற்காரணம் நம் **புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்களே என்பது மறுக்க முடியாத உண்மை. 6 பகுதிகள் சீரிய முறையில் வெளிவர அரும்பங்காற்றிய தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திரு. பு.ஏ. இராமையா இ.ஆ.ப., அவர்களுக்கும், அகரமுதலித் திட்டப் பொறுப்பு இயக்குநர் திரு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப., அவர்களுக்கும், அகரமுதலி மேற்பார்வையாளர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், சூர்ந்தாய்வுப் புலமையாளர்களுக்கும் மற்றும் அகரமுதலித் தொகுப்பாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுகள். இதேபோல மற்றப் பகுதிகளையும் விரைந்து முடித்து வெளியிடத் தொடர்ந்து பாடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை

சி.வி. சண்முகம்
கல்வி மற்றும்
வணிக வரித்துறை அமைச்சர்

பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்

தமிழ் வளர்ச்சி-பண்பாடு
(ம) அறநிலையத்துறை
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

அணிந்துரை

> "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
> முன்தோன்றி மூத்த குடி" (பு.வெ.மாலை)

என்று தமிழ்க்குடி பாராட்டப்பெறும். அவ்வகையில் எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந்தமிழணங்கின் சீரிளமைத்திறம் வியந்து தம்முடைய வாழ்நாள் பணியாகச் சொல்லாராய்ச்சியை மேற்கொண்டவர் மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள்.

முதல் மாந்தன் தோன்றிய இடம் குமரி; உலக முதன் மொழி தமிழ். என்ற கோட்பாட்டில் திளைத்து, அக்கோட்பாட்டின் அடிப்படையில் தம் ஆராய்ச்சியை அமைத்து முதன்மொழியாகிய தமிழின் சொற்பிறப்பாய்வைத் துருவித்துருவியாய்ந்து மிகத் துல்லியமாக வேர் விளக்கம் கண்டவர் பாவாணரே.

இப்பெருமகனாரைப் போலத் தனித்தமிழ் ஆய்வுக் கருத்துகளை இதுவரை எந்தவோர் அறிஞரும் வழங்கிடவில்லை; பெருஞ்சித்திரனார் கூறுவதைப்போலத் "தமிழ்த் துறைக்கு அவர் தொண்டு புதியது; தமிழர்க்கு அவர் கருத்துகள் மயக்கறுப்பன; மேனாட்டார்க்கு அவர் நூல்கள் வியப்பளிப்பன; அவர் எடுத்துக் கொண்ட முயற்சி அரியது. தொல்காப்பியர் காலத்திற்குப் பின் தமிழ் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும் ஒட்டுமொத்த முயற்சிக்குப் பாவாணர் என்றே பெயரிடலாம்". இவ்வுரைக்கு ஏதும் மறுப்புரையுண்டோ?

> "கதிர்தரு ஒளியென மொழிதரு மலையே!
> முதிர்முகி லெனவே வேர்பொழி விளைவே
> தமிழ்க்கூட ரணிதலைப் பாவா ணர்தான்
> தமிழ்மகள் பெறுதவப் பேரறிவாளன்!
> வேர்ச்சொல் லாய்வின் வித்தகன்! மொழியின்
> போர்ப்படைத் தலைவன்! புலமைப் புதையல்!
> தலைவ! நீதரும் ஒளியே பாதை
> விலைமதிப் பில்லா வெற்றியைத் தருமே!"

என்றொரு பாவலர் பாடியதற்கேற்பப் பாவாணர் பெரும்புகழ் பெற்ற அமுதப்படையல்!

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி 12 மடலங்களில் 31 தொகுதிகளாக வெளியிடத் திட்டமிடப்பட்டதாகும். கடந்த 28 ஆண்டுகளில் 6 தொகுதிகள் மட்டுமே வெளிவந்துள்ள நிலையில், கணக்கமுற்றிருந்த அகரமுதலித் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதுத்தெம்பு ஊட்டியதன்விளைவாய், எஞ்சிய 25 தொகுதிகளை நான்காண்டுக் கால வரம்பெல்லைக்குள் வெளிக்கொணரப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. அதன் வெளிப்பாடே இப்போது 'ச' மற்றும் 'த' மடலங்களின் 6 தொகுதிகள் ஒருசேர வெளிவருகின்றன. இது ஓர் அரும்பெருஞ் செயல் என்றால் மிகையாகாது.

இத்தொகுதிகளில் காட்டப்பெறும் தமிழ்ச் சொற்களின் விரிவும் விளக்கமும் நம்மை வியப்பிலாழ்த்துகின்றன. எடுத்துக்காட்டிற்கு ஒன்றிரண்டினைக் குறிப்பிட விரும்புகிறேன்.

'ச'கர மடலத்தின் முதற்பகுதியில் (ச, சா) வரும் '**சக்கரம்**' என்ற சொல்லிற்கு 27 வகையான பொருள் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாது இலக்கிய மேற்கோள்களும் வேர் விளக்கமும் அருமையாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

சருக்கு - சருக்கரம் - சக்கரம் (வே.க. 239)

அதேபோல் '**சத்தம்**' என்ற சொல்லுக்கான விளக்கமும் அருமை.

சாத்து = பண்டங்களைக் கொண்டு விற்கும் வணிகர் கூட்டம். சாத்துவண்டிக்குக் கொடுக்கும் கூலி சாத்தம் எனப்பட்டது. வண்டிச்சாத்தம் = வண்டிக்கூலி. சாத்தம் - சத்தம் ஆயிற்று.

அடுத்து, இரண்டாவது தொகுதியில் (சி-சூ), 'சிலை' என்ற சொல்லிற்குக் காட்டப்பட்டுள்ள விளக்கம் அழகுற அமைந்துள்ளது. 'சீரகம்' என்ற சொல்லிற்குப் பொருள் - வேர் விளக்கம் - விரிவுப் பொருள் காட்டியிருப்பது திகைக்க வைக்கிறது.

சீர் - சீரம் - சீரகம்

உலகில் முதன்முதலாகச் சிறந்த முறையில் சமையல் தொழில் தொடங்கியதும் அதற்குச் சீரகத்தைப் பயன்படுத்தியதும் தமிழகமே! என்பதற்குச் சான்றுகள் பல உள.

"சிறுபிள்ளை இல்லா வீடும், சீரகம் இல்லாத கறியும் செவ்வையாயிரா" என்பது தொன்று தொட்டுவரும் பழமொழி.

சீரகக்கோரை, சீரகச்சம்பா, சீரகவள்ளி என்பன ஒப்புமை பற்றிப் பெயர்பெற்ற நிலைத் திணை வகைகள். பொன்னளவையிற் சீரகம் என்பது ஓர் அளவு.

5 கடுகு = 1 சீரகம்; 5 சீரகம் = 1 நெல்

"அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுதலாகி
உளவெனப் பட்ட வொன்பதிற்றெழுத்தே
அவைதாம்
கசதப வென்றா நமவ வென்றா
அகர உகரமோ டவையென மொழிப" (தொல்.எழுத். 170)

என்னும் தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பா உரையில் கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை என்று இளம்பூரணரும், 'கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை, இவை நிறை' என்று நச்சினார்க்கினியரும் கூறியிருத்தலையும் நோக்குக.

செரி - செரியகம் - சீரகம்

என்றுமாம். வடவர் மூலம் காட்டும் வகை. ஜீரக - ஜீரண; ஜரு - ஜீரண, ஜரு - கிழமாக்கு, கட்டுக்குலை, கரை, செரிக்கச் செய். ஜரு என்பது கிழ என்னும் தென்சொற்றிரிபே (வ. மொ. வ.153).

அடுத்து, மூன்றாம் தொகுதியில் (செ - சௌ) 'செம்பியன்' என்ற சொல்லின் பொருள் விளக்கம் சிறப்புடையதாயிருக்கின்றது. அதைப்போலச் 'செஞ்சம்' என்ற சொல்லுக்கு

அளிக்கப்பட்டுள்ள பொருள் விளக்கமும் சிறப்பாயுள்ளது. செஞ்சு - செம்மை, செவ்வை, நிறைவு, செஞ்சு - செஞ்சம்.

அடுத்து, 'த்'கர மடலத்தின் முதற் தொகுதியில் (த, தா) 'தமிழ்' என்ற சொல்லுக்குக் காட்டப்பெற்றிருக்கும் விளக்கம் விரிவானதாகவும் பொருத்தமானதாகவும் நுட்பமானதாகவும் அமைந்துள்ளது. அதைப்போலத் 'தா' என்னும் சொல்லுக்கும் அருமையான விரிவான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது, 'தா' என்ற சொல் தந்தை என்பதனையும் குறிக்கும் என்று நிறுவியிருப்பது ஆராய்ச்சியாளரின் சான்றாண்மையைக் காட்டுகிறது.

அதே மடலத்தின் இரண்டாவது தொகுதியில் (தி-தூ) 'திறம்' என்ற சொல்லுக்கும், 'துடி' என்ற சொல்லுக்கும் தரப்பட்டுள்ள விளக்கங்கள் பயனுடையவையாகும்.

மூன்றாவது தொகுதியில் (தெ-தௌ), 'தெரு' என்னும் சொல்லின்கீழ், முடுக்கு சிறுசந்து; சந்து தெருவின் கிளை; தெரு சிறுவீதி; மறுகு போக்குவரத்து மிகுந்த பெருந்தெரு அல்லது வீதி; ஆவணம் கடைத்தெரு; அகலுள் அகன்ற மறுகு; சாலை பெருவழி; சந்தி மூன்று தெருக்கள் கூடுமிடம்; சதுக்கம் நான்கு தெருக்கள் கூடுமிடும் என்ற வகையில் பதிவு செய்துள்ளமை பாராட்டுக் குரியதாகும்.

அடுத்து, 'தொல்காப்பியர் காலம்' என்னும் தலைப்பின்கீழ்க் காட்டப்பட்டுள்ள சான்றுகள் ஆய்வாளர்களுக்கு மிக்கப்பயனுடையனவாகும். இந்த ஆறு தொகுதிகளிலும் தேவையான சொற்களுக்குப் பொருத்தமான பட விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருப்பதும் அழகுக்கு அழகு சேர்ப்பதாயுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டப்பணிகள் விரைந்து நடைபெற பலவகையிலும் பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களுக்கும், **மாண்புமிகு கல்வி அமைச்சர்** அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு அறிவித்தவண்ணம் 6 தொகுதிகளை ஒருசேர அணியமாக்கி வெளியிடும் பணியைச் சிரமேற்கொண்டு செவ்விய முறையில் வெளிவர அரும்பணியாற்றிய தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அரசு சிறப்புச் செயலாளரும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டப்பொறுப்பு இயக்குநருமான **திரு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும், அகரமுதலி மேற்பார்வையாளராகச் செயற்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், அகரமுதலித் திட்டப் பணியாளர்கள் மற்றும் கூர்ந்தாய்வுப் புலமையாளர்களுக்கும் எனது மனமுவந்த பாராட்டுகள். பாராட்டுகளைப் படிக்கற்களாகக் கொண்டு தொடர்ந்து நன்கு உழைத்து எஞ்சிய தொகுதிகள் அனைத்தையும் அரசு விரும்பிய வண்ணம் வெளிக்கொணர வேண்டுமென விழைகிறேன்.

சென்னை
23-10-2003

பு.ஏ. இராமையா
அரசு செயலாளர்

தா. சந்திரசேகரன், இ.ஆ.ப.
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
சென்னை - 600 008

பதிப்புரை

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்" (தண்டி 50 நூ. மேற்கோள்)

மக்களினம் முதன் முதல் தோன்றிய இடம் ஞால உருண்டையின் நடுப்பகுதியே. அப்பகுதியே பண்டு குமரிக் கண்டம் (இலெமுரியா) என அழைக்கப்பட்டது. எங்கு முதன் மாந்தன் தோன்றினானோ அங்குதான் ஞால முதன்மொழியும் தோன்றியிருக்க வேண்டும். குமரி நில மாந்தனே முதன் மாந்தன். அவன் பேசிய மொழியே முதன்மொழி; அதுவே நந்தம் தாய்மொழியாம் தமிழ்மொழி.

தமிழ்மொழி தென்னாட்டுப் பழங்குடிமொழி; அதுவே திரவிடத்திற்குத் தாய்மொழி; ஆரியத்திற்கு மூலமொழி; உலகத்திற்கு முதன்மொழி என்பது பாவாணர் கொள்கை.

தமிழ் இயல்பாகத் தோன்றிய மொழி. அதனால் இயன்மொழிக்குரிய பதினாறு பண்புகளும் ஒருசேர வாய்க்கப் பெற்ற சிறப்புமிக்க தமிழ்மொழிக்குச் சொற்பிறப்பியல் அகரமுதலி இல்லாத குறையை நீக்கத் தமிழக அரசு மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணரை இயக்குநராகக் கொண்டு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தைத் தோற்றுவித்தது.

போர் வீரனுக்குச் செவ்விய படைக்கலங்கள் வெற்றிக்குத் துணைபுரிவது போலப் பல்வேறு துறைகளில் அறிவை வளர்த்துக் கொள்ள விழையும் எம்மொழியினர்க்கும் அம்மொழியில் அவ்வத்துறைத் தொடர்பான கலைச்சொற்கள் பெரிதும் துணை நிற்கும். நல்ல அகரமுதலி மக்களைச் செவ்விய மொழிப் பாங்குடையவராக மாற்றும். தாய்மொழியின் வெற்றிக்கும், பற்றுக்கும், தாய்மொழியில் ஊற்றாய்ப் பெருகும் சொல்வளம் மிகவும் இன்றியமையாதது.

ஒவ்வொரு சொல்லும் எப்படி பிறந்தது: எவ்வேரிலிருந்து எச்சொல் பிறந்தது. பிறமொழியில் இருந்து கடன்பெற்ற சொல்லாயின் அது எவ்வாறு திரிகிறது; அம்மொழியின் கிளை மொழிகளில் எவ்வாறு வழங்குகிறது; அச்சொல்லின் மாற்று வடிவங்கள் எவை; சொல் வடிவிலும், பொருளமைப்பிலும் எவ்வாறு அமைகிறது என்பதை விளக்கமாக ஆராய்வது சொற்பிறப்பு அகரமுதலியின் பணியாகும்.

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், அயற்சொல் என்னும் சொல்பாகுபாட்டை உலகமொழிகளில் காணலாம். இவற்றுள் தமிழிலுள்ள கொச்சை வழக்குகளுக்கும், மருவித் திரிந்தவற்றுக்கும், வடதமிழ் எனப்படும் பாலி பிராகிருத மொழிச் சொற்களுக்கும், ஏனைத்

திராவிட திசைச் சொல்லாக மாறியவற்றுக்கும் மூலவடிவங்களை மீட்டெடுத்துச் செந்தமிழ்ச் சொல் வடிவம் காட்டுதலாலும், மறைந்துபோன செந்தமிழ்ச் சொற்களையும், வேர் மூலங்களையும் ஏரண அடிப்படையில் பொருத்திக் காட்டுதலாலும், தமிழில் காலந்தோறும் வந்து கலந்த பிறமொழிச் சொற்களுக்கேற்ற செந்தமிழ்ப் படைப்புச் சொற்களைச் சேர்த்திருத்தலாலும், தமிழா சமற்கிருதமா என்னும் ஐயம் தெளிவித்துத் தமிழ்ச் சொற்களை வேறுபடுத்தி வேர் மூலம் விரித்துக்காட்டி இது செந்தமிழ்ச் சொல் அல்லது வடதமிழ்ச் சொல் என ஐயம் நீக்கதலாலும் பொதுவாகத் தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி எனப் பெயரிடாமல் "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி எனப் பெயரிடப்பட்டுள்ளது.

சொல்லின் பிறப்பை மட்டும் உணர்த்துவதே எல்லை என்று மேலை நாட்டவா கருதினர். ஆனால் பாவாணரைத் தலைவராகக் கொண்டு துவக்கப்பட்ட இச்சொற்பிறப்பியல் அகரமுதலி சொல்லின் பிறப்போடு நில்லாமல் சொல்லின் வரலாற்றையும் கூறுகிறது. இம்முறையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பில் அகரமுதலித் திட்ட இயக்ககம் ஆய்வு செய்ததின் பயனாக மூன்றாம் மடலத்தின் மூன்றாம் பகுதி செ-சௌ வெளிவருகிறது. இந்நூலுக்கு அடிப்படையாகச் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள பேரகரமுதலி எடுத்துக் கொள்ளப்பட்டது. மேலும் 40-க்கும் மேற்பட்ட அகரமுதலிகளிலிருந்தும் சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. நாட்டுப்புற வழக்கில் உள்ள சொற்களும், மன்னர் பெயர்களும், புலவர் பெயர்களும் இதில் இடம்பெற்றுள்ளன. வரலாற்று புகழ்மிக்க ஊர்ப்பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

பாவாணரின் நூல்களில் இருந்தும், தனிக்கட்டுரைகளில் இருந்தும் வேரும், வரலாறும், விளக்கமும் தொகுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. சொற்களுக்கு அரண்சேர்ப்பதாக அரிய படங்கள் விளங்குகின்றன. அழிந்துவரும் **செக்கு, செங்கோட்டுயாழ், சொக்கப்பனை, செடிலாட்டம், சொக்கட்டான் மனை, சேகண்டி** போன்ற படங்கள் பழைமையை நிலைநாட்டுவதாக அமைகின்றன. இவ்வகரமுதலியில் பழந்தமிழ்ச் சொற்கள் முதல் இக்கால அறிவியல் தமிழ்ச் சொற்கள் வரை தொகுக்கப்பட்டுள்ளன. இவ்வகரமுதலியின் சிறப்புக்குச் சில எடுத்துக்காட்டுகள் **(1) செட்டி, (2) செல்(லு)-தல், (3) சோகா-த்தல்.**

நாளும் தமிழ் நலம் நாடிவரும் தமிழக அரசுக்கும் தமிழ் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டு அதன் வளர்நிலைகளைக் கவனமுடன் மனத்தில் நிறுத்திச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் சிறப்புடன் இயங்கத் தேவையான அனைத்து ஏந்துகளையும் அளித்து எங்களை ஊக்குவித்து வரும் **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களுக்கும், **மாண்புமிகு கல்வியமைச்சர்** அவர்களுக்கும், எங்கள் துறையின் **செயலாளர் திரு. பு.ஏ. இராமையா,** இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றிக் கடப்பாடுடையேன்.

தமிழகத்தின் மூலை முடுக்குகளில் ஒளிந்திருக்கும் சொற்களை எல்லாம் தொகுத்து உரிய விளக்கம் எழுதவும், நன்கு பதிப்பிக்கவும் துணையாயிருந்து அகரமுதலி மேற்பார்வையாளராகச் செயற்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர். சா. கிருட்டினமூர்த்தி அவர்களையும், நன்முறையில் கூர்ந்தாய்வு செய்து தந்த அமரர் எம். சி. சீனிவாசன், சிறப்பான முறையில் நூலைத் தொகுப்பித்த தொகுப்பாளர்கள், பணியாளர்கள் ஆகிய அனைவரையும் பாராட்டுவதோடு மேலும் திறம்பட உழைத்து அடுத்தடுத்த மடலங்கள் விரைந்து வெளிவரப் பாடுபட வேண்டும் என்று விழைகின்றேன்.

சென்னை
15-10-2003

தா. சந்திரசேகரன்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

மூன்றாம் மடலம் - மூன்றாம் பாகம்

செ - ணௌ

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

செ

செ[1] *še/ce,* பெ. (n.) *சகர மெய்யும் எகர உயிரும் சேர்ந்த உயிர் மெய்யெழுத்து;* the combination of c and e.

[ச் + எ - செ]

செ[2]**-த்தல்** *še-,* 4 செ.குன்றாவி. (v.t.) *பொருந்துதல், ஒத்தல், கருதுதல்;* to intend; to purpose; to design. "வெப்புடை யாடூஉச் செத்தனென்" *(பதிற்றுப். 86).*

[(சள்) → செள் → செ-.]

செக்கச்சிவ-த்தல் *šekka-c-civa-,* 3 செ.கு.வி. (v.i.) *மிகச்சிவத்தல்;* to be deep-red. "விழியிணை செக்கச் சிவந்து" *(திருப்பு. 126).* சினத்தால் அவனது முகம் செக்கச் சிவப்பாயிற்று *(உ.வ.).*

[செக்கம்[2] *+ சிவ-.]*

செக்கச்சிவந்த *šekka-c-civanda,* பெ.எ. (adj.) *மிகவும் சிவப்பான;* deep red. செக்கச் சிவந்த உதடு.

[செக்கம்[2] *+ சிவந்த]*

செக்கச்சிவேரெனல் *šekka-c-civēr-enal,* பெ. (n.) *மிகவும் சிவந்திருத்தற் குறிப்பு;* expr. of being deep-red. காலை ஞாயிறு செக்கச் சிவேரென்று ஒளிர்ந்தது *(உ.வ.).*

[செக்கம்[2] *+ சிவேரெனல்]*

செக்கச்செவேரென்று *šekka-c-cevēr-enru,* வி.எ. (adv.) *செக்கச்சிவேரெனல் பார்க்க;* see *šekka-c-civēr-enal.* நாணத்தால் அவள் முகம் செக்கச் செவேரென்றானது *(உ.வ.).*

[செக்கம் + செவேரென்று]

செக்கஞ்செகு-த்தல் *šekkañ-jegu-,* 4 செ.கு.வி. (v.i.) *செக்கச்சிவ-த்தல் பார்க்க;* see *šekka-c-civa-.* 'செக்கஞ்செக என்றது செக்கச்சிவ என்றாய்' *(ஈடு, 1. 9:5).*

[செக்கம்[2] *+ செகு-.]*

செக்கடி[1]**-த்தல்** *šekkadi-,* 4 செ.குன்றாவி. (v.t.) *செக்கில் எள் முதலியவற்றை ஆட்டுதல் (உ.வ.);* to work the oil-press.

மறுவ. செக்காட்டல்

[செக்கு + அடி-.]

செக்கடி[2] *šekkadi,* பெ. (n.) *எண்ணெய்யாட்டும் இடம்;* place where oil-press is working. செக்கடிக்குப் போய்வந்தான் *(உ.வ.).*

[செக்கு + அடி]

செக்கடிக்கருப்பன் *šekkadi-k-karuppan,* பெ. (n.) *செக்கடியில் இருக்கும் சிறுதெய்வம் (வின்.);* a demon or ferocious deity having its abode in oil-press.

[செக்கு + அடி + கறுப்பன்]

செக்கடிமுண்டன் *šekkadi-mundan,* பெ. (n.) *செக்கடிப்பதற்கு ஏற்ற உடல்வலிவுள்ள வெறுந்தடியன்;* stout, strong but senseless man, as fit only to work an oil-press.

மறுவ. செக்குலக்கை

ம. சக்கடியன்

[செக்கடி[2] *+ முண்டன்]*

செக்கணி *šekkani,* பெ. (n.) *கூத்துவகை;* a kind of dance. "தெள்ளிய செக்கணி யாடி" *(குற்றா. தல. தருமசாமி. 55).*

தெ. சக்கணி

[சொக்கம் → செக்கம் → செக்கணி]

செக்கம்[1] *śekkam*, பெ. (n.) இறப்பு; death. 'செக்கமென்று மரணமாய்' (சூடு. 1. 9:5)

[*செகு → செக்கம்*]

செக்கம்[2] *śekkam*, பெ. (n.) 1. சிவப்பு; redness. 2. சினம்; anger. "செக்கஞ் செகவென் றவள்பா லுயிர்செக வுண்ட பெருமான்" (திவ். திருவாய். 1. 9:5).

[*செம் → செவ் → செவு → செகு → செக்கு → செக்கம்*]

செக்கமலம் *śekkamalam*, பெ. (n.) செந்தாமரை; red lotus flower.

[*செங்கமலம் → செக்கமலம்*]

செக்கர் *śekkar*, பெ. (n.) 1. சிவப்பு; redness, crimson. "சுடுதீவிளக்கஞ் செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் றோன்ற" (புறநா. 16:8). 2. செவ்வானம்; red sky of the evening. "செக்கர் கொள் பொழுதினான்" (கலித். 126). 3. மாலைநேரம்; evening.

ம. செக்கர்

[*செக்கல் → செக்கர்*]

செக்கர்வானம் *śekkar-vāṉam*, பெ. (n.) செவ்வானம்; red sky. "செஞ்சோரி யெனப் பொலிவுற்றது செக்கர்வானம்" (கம்பரா. வரைக். 66).

[*செக்கர் + வானம்*]

செக்கர்வானிறத்தன் *śekkar-vāṉiṟattaṉ*, பெ. (n.) 1. செவ்வானம்போற் செந்நிற முள்ளவன் (வீரபத்திரன்.); lit., one red as the red sky (Vīrabadraṉ). 2. சிவன்; Lord Śivaṉ. 3. முருகன், செவ்வேள்; Lord Murugaṉ.

[*செக்கர் + வான் + நிறத்தன்*]

செக்கல் *śekkal*, பெ. (n.) 1. செக்கர்,2 பார்க்க; see *śekkar*,2. 2. அந்திமாலை (யாழ்.அக.); evening. 3. செவ்வந்தி; a flower.

ம. செக்கல்

[*செக்கம்*[2] *→ செக்கல்*]

செக்கவுரி *śekkavuri*, பெ. (n.) கற்சூரை (மலை.); spinous wild indigo.

[*செக்கர் + அவுரி - செக்கரவுரி → செக்கவுரி*]

செக்காட்டி *śekkāṭṭi*, பெ. (n.) வாணியன், எண்ணெயின் பொருட்டுச் செக்கை யாட்டுபவன்; person of the Vāṇiyaṉ caste, as worker of oil-press.

[*செக்கு + ஆட்டி. ஆட்டு → ஆட்டி*]

செக்காடி *śekkāḍi*, பெ. (n.) செக்காட்டி பார்க்க; see *śekkāṭṭi*.

[*செக்கு + ஆடி. ஆட்டு → ஆடு → ஆடி*]

செக்காடு-தல் *śekkāḍu-*, 5 செ.கு.வி. (v.i.) செக்கில் அரைபடுதல்; to be pressed in oil-press. எள் செக்காடுகிறது (உ.வ.).

[*செக்கு + ஆடு. ஆட்டு → ஆடு*]

செக்காத்தி *śekkātti*, பெ. (n.) செக்கார இனப் பெண்பாற் பெயர்; woman of the Vāṇiya caste.

[*செக்கான் → செக்காத்தி*]

செக்காயம் *śekkāyam*, பெ. (n.) எண்ணெய் ஆட்டும் செக்குக்குரிய முற்கால வரி (I.M.P.Cg. 1113); tax levied on oil crusher.

மறுவ. செக்குக் கடமை

[*செக்கு + ஆயம்*]

செக்கார் *śekkār*, பெ. (n.) எண்ணெய் வணிகர்; oil merchant.

[*செக்கு → செக்கார்*]

செக்காரக்குடி *śekkārakkuḍi*, பெ. (n.) செக்காலியர் பார்க்க; see *śekkāliyar*.

[*செக்கார் + குடி*]

செக்காலியர் *śekkāliyar*, பெ. (n.) செக்காட்டுந் தொழிலுள்ள ஒரு இனத்தாரான வாணியர் (நாஞ்.); a caste of oil-press workers.

[*செக்கு + (ஆலையர் →) ஆலியர்*]

செக்கான் *śekkāṉ*, பெ. (n.) செக்காட்டி பார்க்க; see *śekkāṭṭi*. "செக்கானெண்ணெய் விற்பான் (தனிப்பா.1, 58:114).

ம. செக்கன்

மறுவ. வாணியன், வாணியச் செட்டியார்

[*செக்கு → செக்கான்*]

செக்கான்கைதுவட்டுமெண்ணெய்ச்சி *šekkāṉ-kaiduvaṭṭum-eṇṇeycci*, பெ. (n.) வாணியன் எண்ணெய் பிழிந்து கையைத் துடைக்கப் பயன்படுத்தும் துணி. இது நாய்முள்ளைப் போக்கும்; a rag used by oil monger to wipe his hands in an oil press. This piece of cloth is said to cure thorny eruptions.

[செக்கான் + கை + துவட்டும் + எண்ணெய்ச்சி]

செக்கில்வைத்தாட்டு-தல் *šekkil-vaittāṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. செக்கில் எள் போன்றவற்றை ஆட்டுதல்; grinding in the oil press. 2. மிகத் துன்புறுத்துதல்; to oppress, torment as by grinding in oil-press.

[செக்கு + இல் + வைத்து + ஆட்டு-.]

செக்கில்வைத்துத்திரி-த்தல் *šekkil-vaittu-t-tiri-*, 4 செ.குன்றாவி. (v.t.) செக்கில்வைத்தாட்டு-பார்க்க; see *šekkil-vaittāṭṭu-*.

[செக்கில் + வைத்து + திரி-.]

செக்கிலிட்டுத்திரி-த்தல் *šekkil-iṭṭu-t-tiri-*, 4 செ.குன்றாவி. (v.t.) செக்கில்வைத்தாட்டு-பார்க்க; see *šekkil-vaittāṭṭu-*. "செக்கிலிட்டுத் திரிக்கு மைவரை" *(திவ்.திருவாய். 7. 1:5).*

[செக்கில் + இட்டு + திரி-.]

செக்கிழு-த்தல் *šekkiḻu-*, 4 செ.கு.வி. (v.i.) சிறைத் தண்டனையின் ஒரு பகுதியாக மாட்டிற்குப் பதிலாக எண்ணெய்ச் செக்கை இழுத்தல்; to work on the oil-press by pulling the yoke instead of bull. இந்திய விடுதலைப் போரின் போது கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் கோவைச் சிறையில் செக்கிழுத்தார் *(உ.வ.).*

[செக்கு + இழு-.]

செக்கிறை *šekkiṟai*, பெ. (n.) ஊர்ப்பொது விடத்தைச் செக்கு நிறுத்தப் பயன்படுத்திக் கொண்டதற்காகச் செலுத்தும் வரி (தெக.தொ. 7; கல். 98, 107); tax for utlizing the public land for installing oil crusher.

மறுவ. செக்குவரி, செக்குக்கடமை, செக்காயம்.

ம. செக்கிற, சக்கிற, சேக்கிற

[செக்கு[1] + இறை]

செக்கு[1] *šekku*, பெ. (n.) 1. மரத்தாலோ கல்லாலோ ஆன பெரிய உரல் போன்ற அமைப்பின் நடுவில் பொருத்தப்பட்டுள்ள உலக்கை போன்ற தடியை மாடுகளைக் கொண்டு வட்டமாகச் சுழலச் செய்வதன் மூலம் வித்துகளிலிருந்து எண்ணெய் எடுக்கப் பயன்படும் பொறி; a country oil-press. "செக்கூர்ந்து கொண்டாருஞ் செய்த பொருளுடையார்" *(நாலடி, 374).* 2. காணம், ஒரு செக்கில் ஒரு முறை ஆட்டிக் கிடைக்கும் எண்ணெயின் அளவு; a measure of oil extracted one's from an oil press called *kāṇam*. 3. இருபத்து நான்காம் விண்மீன் (பிங்.); the 24th star. "மகயிரஞ் செக்குருடேர்" *(விதான. குணாகுண. 11).*

ம. செக்கு, சக்கு; க. செக்கு

எண்ணெய் ஆட்டும் செக்கு கருங்கல், மரம் ஆகியவற்றால் செய்யப்பட்டது. கல்செக்கில் பிழிவு அதிகமிருக்கும். எனினும், மரச்செக்கே நன்றெனக் கருதப்படுகிறது. கல்செக்கை விழுப்புரம் மாவட்டத்தில் ஏராளமாகப் பார்க்கலாம். கருங்கல் செக்கு மிகுந்திருந்த காலத்தில், அரிதாக மரச்செக்கு இருந்த ஊர் மரக்காணம் ஆயிற்று.

[சக்கரம் → (சக்கு) → செக்கு = எண்ணெயாட்டும் வட்டமான பேருரல். ஒ.நோ. ச → செ. சத்தான் → செத்தான் சற்றே பொறு → செத்த (கொச்சை) பொறு. சருமன் (வ) → செம்மான்]



செக்கு[2] *šekku*, பெ. (n.) கும்பவோரை; Kumbha rāsi.

[செக்கு[1] → செக்கு[2]]

செக்கு[3] *šekku*, பெ. (n.) இட்டலி, தோசை முதலானவற்றிற்கு ஈர மாவரைக்கும் கருங்கல் கருவி; stone grinder for wet flour.

மறுவ. ஆட்டுக்கல், ஆட்டுரல்.

[செக்கு¹ → செக்கு³]

செக்குக்கடமை *šekku-k-kaḍamai*, பெ. (n.) செக்காயம் பார்க்க; see *šekkāyam*. 'செக்குக் கடமை, வணிகர் பேராற் கடமை உள்ளிட்ட கடமைகளும்' *(தெ.க.தொ. 1, கல்.108).*

ம. சக்குகடமப்பாட்டம்

[செக்கு¹ + கடமை]

செக்குக்கீரை *šekku-k-kīrai*, பெ. (n.) கீரை வகை (வின்.); a kind of green, herb.

[செக்கு + கீரை]

செக்குத்துணி *šekku-t-tuṇi*, பெ. (n.) எண்ணெய் ஆட்டும்போது எண்ணெய்யைப் பிழிந்து எடுக்கும் துணி; cloth used to take away the oil occumuleted in the press. செக்குத் துணி போல அழுக்காகி விட்டதே *(உ.வ.).*

[செக்கு¹ + துணி]

செக்குமன்றாடி *šekku-manrāḍi*, பெ. (n.) வரி வகை (M.E.R. 134 of 1924); a tax.

[செக்கு + மன்றாடி]

செக்குமுட்டை *šekku-muṭṭai*, பெ. (n.) செக்காடுவோரிடத்திலிருந்து ஊர்த்தலைவர் எண்ணெய் நிரம்பிய முட்டை உருவமாகப் பெறும் ஒரு வகை வருமானம் (R.T.); spoonful of oil, being a contribution from oil-presses in the village to the village proprietors.

[செக்கு + முட்டை]

செக்குமூட்டை *šekku-mūṭṭai*, பெ. (n.) செக்கு போன்று கனமான சுமை (பாரம்.); a bag full of heavy material is considered as told as oil press bag. இது என்ன கனம் கனக்கிறது; செக்கு மூட்டை போல அல்லவா இருக்கிறது! *(உ.வ.).*

[செக்கு¹ + மூட்டை]

செக்குமேடு *šekku-mēḍu*, பெ. (n.) எண்ணெயாடும் செக்குள்ள மேட்டிடம் (உ.வ.); raised place where oil-press works. செக்கு மேட்டிற்குப் போய் வருகின்றேன் (உ.வ.).

[செக்கு¹ + மேடு]

செக்குரல் *šekkural*, பெ. (n.) செக்கின் அடிப் பகுதி (உ.வ.); mortar of oil-press. உடம்பு செக்குரல் போலப் பருத்துவிட்டதே *(உ.வ.).*

ம. செக்குரல், சக்குரல்

[செக்கு¹ + உரல்]

செக்குலக்கை *šekkulakkai*, பெ. (n.) 1. செக்கில் அழுத்தும் மரத்தடி; pestle or shaft of the oil press, large and heavy wooden pole used to press the oil seeds etc., in the oil press. "வாய்ந்தவிடை செக்குலக்கை மாத்திரமே" *(தனிப்பா. 1, 51:99).* 2. செக்கு உலக்கை போல நின்று மெதுவாகச் சுறுசுறுப்பின்றி வேலை செய்பவன்; a person working very slowly like the wooden shaft used in the oil-press. வேலையைச் சுறுசுறுப்பின்றிச் செய்வதால் அவனுக்குச் செக்கு உலக்கை என்பது பட்டப் பெயர் *(உ.வ.).* 3. வலிமை உள்ளவன்; a strong person.

[செக்கு + உலக்கை]

செக்குவாணிகர் *šekku-vāṇigar*, பெ. (n.) எண்ணெய் விற்கும் இனத்தினர்; caste of oil mongers.

மறுவ. வாணியர், வாணியச் செட்டி

[செக்கு¹ + வாணிகர்]

செக்கைப்பிடியாய்தம் *šekkai-p-piḍi-y-āydam*, பெ. (n.) சிற்ப வேலைக்குரிய கருவி வகை (C.E.M.); flagner's iron.

செக்கையன் *šekkaiyan*, பெ. (n.) விளக்கு எரிக்கப் பொன் கொடுத்தவன்; a person who denoted for lighting. 'இத்தளித்தேவனார் மகன் குமரடி நங்கை மகன் செக்கையன் கையால்' *(தெ.க.தொ. 5-8, 1366-8).*

[செக்கு → செக்கையன்]

செகண்டி *šegaṇḍi*, பெ. (n.) தட்டும்போது ஒலியெழுப்பும் வட்ட மாழைத்தட்டு (வெண்கலம்); circular bronze plate, raising sound on beating; a musical instrument used in religious rituals. 'செகண்டிகை . . . இவ்வூர் அரணியச் சிங்க உவைச்சன் கொட்டுவதாக வைத்தோம்' *(தெ.க.தொ. 12, பக. 1. கல். 114).*

[சேகண்டி² → செகண்டி]

செகண்டை *śegaṇḍai*, பெ. (n.) சேகண்டி; gong. "தண்ணுமை செகண்டை" *(மேருமந். 1030).*

[சேகண்டி → செகண்டி → செகண்டை]

செகதம் *śegadam*, பெ. (n.) உண்ணுகை *(யாழ்.அக.)*; eating.

செகதி *śegadi*, பெ. (n.) இங்கிதம் *(யாழ்.அக.)*; indication, hint.

[செய்தி → செகதி]

செகிடு *śegiḍu*, பெ. (n.) அலகடி, கன்னம்; cheek. *செகிட்டைக் கட்டியறைந்தான் (உ.வ.)*

[செகிள் → செகிடு (வே.க. 223)]

செகில்[1] *śegil*, பெ. (n.) தோளின் மேலிடம்; upper part of the shoulders. *"நாடு செகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப" (பொருந. 138)*

E. shoulder

[செகிடு → செகில்]

செகில்[2] *śegil*, பெ. (n.) சிவப்பு; redness. *"செகிலேற்றின் சுடருக் குளைந்து" (திருவிருத். 69).*

[செம் → செவ் → செவு → செகு → செகில்]

செகிள் *śegiḷ*, பெ. (n.) *1. கனியின் தோல் (பிங்.)*; skin or rind of fruit. *2. மீன் செதில்*; fish scales. *3. மீனின் சிவந்த மூச்சுறுப்பு (செதிள்)*; fins. *4. கேழ்வரகின் கப்பி*; bran of ragi.

[செகில் → செகிள்]

செகு-த்தல் *śegu-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1. கொல்லுதல்*; to destory, kill. *2. வெல்லுதல்*; conquer. *"பொருப்பெலாம் வானகஞ் செகுக்குமே" (சீவக. 1903).*

[செம் → செவ் → செவு → செகு-.]

செகுடன் *śeguḍan*, பெ. (n.) செவிடன்; deaf.

[செவிடன் → செகுடன்]

செகுடு *śeguḍu*, பெ. (n.) செவிடு; deaf.

[செவிடு → செகுடு (கொ.வ.)]

செங்கட்டி *śeṅgaṭṭi*, பெ. (n.) *1. காவிக்கல் (யாழ்.அக.)*; red ochre. *2. சாதிலிங்கம் (யாழ்.அக.)*; vermilion. *3. செங்கல்லின் துண்டு (வின்.)*; brick bat.

[செம் + கட்டி. கட்டடம் → கட்டி]

செங்கடப்பாரை *śeṅgaḍa-p-pārai*, பெ. (n.) கடலில் வாழும் வெள்ளிய பெருமீன் வகை; large silvery sea-fish.

[செம் + கடல்பாரை → செங்கடப் பாரை]

செங்கடம்பு *śeṅ-gaḍambu*, பெ. (n.) கடம்ப மரவகை *(திருமுருகு. 10, உரை)*; small Indian oak.

ம. செங்கடம்பு

கடம்பு வகைகள் : வெண்கடம்பு, மஞ்சட் கடம்பு, செங்கடம்பு

[செம் + கடம்பு → செங்கடம்பு]

செங்கடல் *śeṅ-gaḍal*, பெ. (n.) அரேபியாவிற்கு மேல்பக்கம் உள்ள கடல்; the Red sea.

ம. செங்கடல்

[செம் + கடல்]

செங்கடிவாயுப்பு *śeṅgaḍi-vāyuppu*, பெ. (n.) வெடியுப்பு; potasium nitrate *(சா.அக.)*.

செங்கடுக்காய் *śeṅ-gaḍukkāy*, பெ. (n.) செந்நிறமுள்ள கடுக்காய் வகை *(பதார்த்த. 972)*; red species of chebulic myrobalan.

ம. செங்கடுக்க

[செம் + கடுக்காய் - செங்கடுக்காய்]

செங்கடுகு *śeṅ-gaḍugu*, பெ. (n.) செடி வகை; Indian mustard.

ம. செங்கடுகு

[செம் + கடுகு - செங்கடுகு]

செங்கடுமொழி *śeṅgaḍumoḻi*, பெ. (n.) போலியாகக் கூறும் கொடிய மொழி; strong words from sweet consort.

[செம் + கடுமொழி]

செங்கண் *śeṅ-gaṇ*, பெ. (n.) *1. சிவந்து விளங்கும் விழி*; bright glowing eyes. *"செயிர்தீர் செங்கட் செல்வநிற் புகழ" (பரிபா. 4:10). 2. நான்கு விரல் நீளமும் வெளிர்சிவப்பு நிறமுமுள்ள கடல்மீன் வகை (F.L.)*; sea-fish rosy, attaining 4 in. in length.

ம. செங்கண்ணு; க. கெங்கண்

[செம் + கண் - செங்கண்]

செங்கண்டங்கத்திரி *śeṅ-gaṇḍaṅ-gattiri,* பெ. (n.) சிவப்புக் கண்டங்கத்திரி; a red variety of prickly night shade.

[செம் + கண்டங்கத்திரி]

செங்கண்ணன்[1] *śeṅ-gaṇṇaṉ,* பெ. (n.) மீன்வகை; a kind of fish. "குமிளா மாசினி செங்கண்ணன்" (பறாளை பள்ளு. 74).

[செம் + கண் - செங்கண் → செங்கண்ணன்]

செங்கண்ணன்[2] *śeṅ-gaṇṇaṉ,* பெ. (n.) சிவந்த கண்களுடைய எலிவகை (வின்.); a kind of rat as red-eyed.

[செம் + கண்ணன் - செங்கண்ணன்]

செங்கண்ணனார் *śeṅ-gaṇṇaṉār,* பெ. (n.) அகம் 39, நற்றிணை 122 ஆகிய பாடல்களின் ஆசிரியர்; author of the verse Agam 39 and Naṟṟiṇai 122.

[செம் + கண்ணனார்]

செங்கண்ணி *śeṅ-gaṇṇi,* பெ. (n.) 1. சிவந்த கண்களுடைய கடல் மீன்வகை; young cockup, grey, as having eyes remarkably reddish and transparent. 2. செந்நெல் வகை; a kind of śampā paddy.

ம. செங்கண்ணி

[செம் + கண்ணி - செங்கண்ணி]

செங்கண்ணிக்கார் *śeṅ-gaṇṇi-k-kār,* பெ. (n.) கார் நெல் வகை; a kind of paddy.

[செம் + கண்ணி + கார்]

செங்கண்ணிப்பாரை *śeṅ-gaṇṇi-p-pārai,* பெ. (n.) செங்கண்ணி,1 பார்க்க; see *śeṅ-gaṇṇi,1.*

[செம் + கண்ணி + பாரை]

செங்கண்மா[1] *śeṅ-gaṇ-mā,* பெ. (n.) திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள தற்காலச் செங்கம் என்ற ஊரின் பழைய பெயர்; the old name of present Śeṅgam town near Thiruvaṇṇāmalai. 'செங்கண் மாத்து நன்னன் சேய் நன்னனை' (மலைபடு, ப. 503, உரை).

பத்துப்பாட்டின் இறுதியில் உள்ள மலைபடுகடாம் பாட்டின் தலைவனான நன்னன் வேண்மான் தலைநகரம்.

செங்கண்மா[2] *śeṅ-gaṇ-mā,* பெ. (n.) சிவப்பான கண்ணுடைய விலங்கு, கரடி (உரிநி.); bear, as red-eyed beast.

மறுவ. உளியம்

[செங்கண் + மா. மா = விலங்கு]

செங்கண்மாரி *śeṅ-gaṇ-māri,* பெ. (n.) மஞ்சள் காமாலை (யாழ்ப்.); jaundice.

[செங்கண் + (மாறு →) மாரி]

செங்கண்மால் *śeṅgaṇ-māl,* பெ. (n.) சிவந்த கண்களுடைய திருமால்; Thirumāl, as having red eyes. "திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டு போனாள்" (திவ்.பெரியாழ். 3. 8:4).

மறுவ. விண்ணவன், மாலவன்.

[செங்கண் + மால்]

செங்கணார்கிழங்கு *śeṅgaṇār- kiḻaṅgu,* பெ. (n.) ஒரு வகைக் கிழங்கு; a variety of tuber.

செங்கணான் *śeṅ-gaṇāṉ,* பெ. (n.) 1. செங்கண்மால் பார்க்க; see *śeṅgaṇ-māl.* "சிறியதோர் முறுவலுந் தெரியச் செங்கணான்" (கம்பரா. கும்பகர்ணன். 310). 2. கோச்செங்கணான்; a Chōḻā king. "செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயில்" (திவ். பெரியதி. 6. 6:4).

[செங்கண் + ஆன் - செங்கணான். ஆன் - ஆண் பாலீறு]

செங்கணிக்குறுவை *śeṅgaṇi-k-kuṟuvai,* பெ. (n.) மூன்று அல்லது நான்கு திங்களில் பயிராகும் குறுவை நெல்வகை; a kind of coarse paddy cultivated throughout the year, maturing in three or four months.

[செங்கண்ணி + குறுவை - செங்கணிக் குறுவை. ஆண்டு முழுமையும் பயிரிடக் கூடிய செந்நெல் வகை]

செங்கத்தரி *śeṅ-gattari,* பெ. (n.) செடிவகை (L.); orbicular-leaved caper.

[செம் + கத்தரி]

செங்கத்தாரி *śeṅ-gattāri,* பெ. (n.) மயிலடிக் குருந்து (வின்.); false peacock's foot tree.

செங்கத்திமீன் *šeṅ-gatti-mīṉ*, பெ. (n.) ஒருவகை *மீன்;* a kind of fish.

[செங்கத்தி + மீன்]



செங்கத்திமீன்

செங்கதாரி *šeṅ-gadāri*, பெ. (n.) செங்கத்தாரி *பார்க்க;* see *šeṅ-gattāri.*

செங்கதிர் *šeṅ-gadir*, பெ. (n.) பகலவன் *(திவா.);* the sun, as bright-rayed.

ம. செங்கதிர்; க. செங்கதிர

[செம் + கதிர். சிவந்த கதிர் உடைய கதிரவன்]

செங்கதிர்நாள் *šeṅ-gadir-nāḷ*, பெ. (n.) மானேறு *(உத்திர)* நாள் *(சூடா.);* the 12th star as having Sun for its presiding deity.

[செங்கதிர் + நாள்]

செங்கதிர்பிறந்தநாள் *šeṅ-gadir-piṟanda-nāḷ*, பெ. (n.) செங்கதிர்நாள் *பார்க்க;* see *šeṅ-gadir-nāḷ.*

[செங்கதிர் + பிறந்த + நாள்]

செங்கதிரோன் *šeṅ-gadirōṉ*, பெ. (n.) செங்கதிர் *பார்க்க;* see *šeṅ-gadir.* "செங்கதிரோன் மகன் செருக்கி" *(கம்பரா. வாலிவதை. 55).*

ம. செங்கதிரோன்

மறுவ. ஞாயிறு

[செம் + கதிரோன்]

செங்கதிர்வாழி *šeṅgadir-vāḻi*, பெ. (n.) கத்தூரி; musk.

செங்கம் *šeṅgam*, பெ. (n.) குழலாதொண்டை *(L.);* common caper.

செங்கமட்டை *šeṅga-maṭṭai*, பெ. (n.) செங்கமுட்டி *பார்க்க;* see *šeṅga-muṭṭi.*

செங்கமலக்காமாலை *šeṅ-gamala-k-kāmālai*, பெ. (n.) காமாலை வகை *(சீவரட். 134);* a kind of jaundice.

[செங்கமலம் + காமாலை]

செங்கமலநெல் *šeṅ-gamala-nel*, பெ. (n.) நெல் வகை *(A.);* a kind of paddy.

[செங்கமலம் + நெல்]

செங்கமலம் *šeṅ-gamalam*, பெ. (n.) செந்தாமரை; red lotus. "செங்கனிவாய் செங்கமலம்" *(திவ். திருவாய். 2. 5:1).*

ம. செங்கமலம்

[செம் + கமலம்]

கமலம் பார்க்க

செங்கமலவல்லி *šeṅ-gamala-valli*, பெ. (n.) செந்தாமரை மலரில் வாழுங் கொடி போன்ற திருமகள் *(அக.நி.);* Thirumagaḷ, as the creeper dwelling on red lotus.

ம. செங்கமலவல்லி

[செங்கமலம் + வல்லி]

செங்கமலை[1] *šeṅ-gamalai*, பெ. (n.) செங்கமல வல்லி, திருமகள்; Thirumagaḷ.

[செங்கமலம் → செங்கமலை]

செங்கமலை[2] *šeṅ-gamalai*, பெ. (n.) துளசி; holy basil.

செங்கமுட்டி *šeṅ-gamuṭṭi*, பெ. (n.) உடைந்த செங்கல் துண்டு; brick piece.

மறுவ. செங்கமட்டை, செங்கமட்டி, செங்கற் சல்லி.

[செங்கல் + முட்டி. மத்தி → மட்டி → முட்டி]

செங்கயல் *šeṅ-gayal*, பெ. (n.) மீன்வகை; a kind of fish. "செங்கயல் பாய்ந்து பிறழ்வன கண்டாங்கு" *(மணிமே. 4:22).*

[செம் + கயல் – செங்கயல்]

செங்கரடு *šeṅ-garaḍu*, பெ. (n.) செம்மண் குன்று *(வின்.);* red-hill.

மறுவ. செங்குன்று, செம்மலை

[செம் + கரடு – செங்கரடு]

செங்கரந்தை *šen-garandai*, பெ. (n.) பூடுவகை (சங்.அக.); red-basil.

[செம் + கரந்தை]

செங்கரப்பன் *šen-garappan*, பெ. (n.) எயிற்றுப் புண் (சங்.அக.); red-gum.

ம. செங்கரப்பன்

[செம் + கரப்பன்]

செங்கரப்பான் *šen-garappān*, பெ. (n.) செங்கரப்பன் பார்க்க; see *šen-garappan*.

[செம் + கரப்பான்]

செங்கரா *šen-garā*, பெ. (n.) 1. மஞ்சள் கலந்த செந்நிறமுள்ள கடல்மீன் வகை (சங்.அக.); sea-fish, yellowish red. 2. கருஞ்சிவப்பும், பழுப்பு நிறமும் கலந்த கடல்மீன் வகை; red rock-cod, dark reddish-brown.

செங்கரிப்பான் *šen-garippān*, பெ. (n.) கையாந்தகரை (பாலவா. 692) என்னும் மூலிகை; a kind of herb.

[செம் + கரிப்பான்]

செங்கருங்காலி *šen-garungāli*, பெ. (n.) மரவகை (குறிஞ்சிப். 78, உரை); red catechu.

ம. செங்கரிங்ஙாலி

[செம் + கருங்காலி]

செங்கரும்பு *šen-garumbu*, பெ. (n.) செந்நிற முள்ள கரும்பு வகை (பதார்த்த. 178).; red sugar cane.

ம. செங்கரிம்பு

[செம் + கரும்பு]

செங்கல் *šen-gal*, பெ. (n.) 1. கட்டடம் முதலியவை கட்டப் பயன்படும் செம்மை நிறக் கனச் செவ்வகச் சுடுமண் கல், கட்டுமானப் பொருள் (பு.வெ. 6, 19, உரை); burnt brick, as red. 2. காவிக்கல்; red ochre in lumps; laterite. "செங்கற் பொடிக்கூறை" (திவ். திருப்பா. 14). 3. மாணிக்கம்; ruby. "கட்செவி யுமிழ் செங்கல் வீசுவர்" (வெங்கைக்கோ. 396).

ம., பட. செங்கல்லு

[செம் + கல்]

செங்கல்மங்கல் *šengal-mangal*, பெ. (n.) 1. மங்கின செந்நிறம்; dim red colour. 2. அந்தி வேளையில் உண்டாகும் மங்கல் ஒளி; dimness, of the evening twilight.

[செம் → செங்கல் + மங்கல்]

செங்கல்மா *šengal-mā*, பெ. (n.) செங்கல்லின் தூள் (வின்.); brick-dust.

[செங்கல் + மா. மாவு → மா]

செங்கல்மாச்சுண்ணாம்பு *šengal-mā-c-cunnāmbu*, பெ. (n.) சுண்ணாம்புடன் கலந்த செங்கல்தூள் காரை; mortar of brick dust and lime.

[செங்கல் + மா(வு) + சுண்ணாம்பு]

சுண்ணாம்பும் செங்கற்பொடியும் கலந்த காரை மிகவும் உறுதியானது. இன்றும் பழைய கட்டுமானங்களில் இவ்வலிமையைக் காணலாம். சுதைமா வந்த புதிதில், சுதைமா கற்காரையை விடச் செங்கல்மாவும் சுண்ணாம்பும் கலந்த கலவையே சிறந்ததென்ற கருத்து நிலவியது.

செங்கல்மால் *šengal-māl*, பெ. (n.) செங்கற் சூளை (நெல்லை); brick-kiln.

[செங்கல் + மால். மால் = காளவாய்]

செங்கல்மாவெள்ளம் *šengalmā-vellam*, பெ. (n.) செங்கலங்கல் பார்க்க; see *šen-galangal*.

செங்கல்வராயன் *šengalva-rāyan*, பெ. (n.) செங்கல்வமலையென்னும் திருத்தணி மலைத்தலைவன், முருகக் கடவுள்; Murugan, as lord of Šengalvakiri, i.e., Tiruttani hill. "செங்கல் வராயரே வாரும்" (அருட்பா, 5. சண்முகர். காலைப். 5).

தெ. செங்கலுவ

[செங்கல்வன் + அரையன்]

செங்கலங்கல் *šen-galangal*, பெ. (n.) செந்நிறக் கலங்கலாக வரும் புது வெள்ள நீர்; freshets, flood from rains, as turbid and reddish. "செங்கலங்கல் வெண்மணன் மேற் றவழு நாங்கூர்" (திவ். பெரியதி. 4. 4:7).

[செம் + கலங்கல்]

செங்கலச்சு *śeṅgal-accu*, பெ. (n.) செங்கற் கட்டளை (இ.வ.) பார்க்க; see *śeṅgaṟ-kaṭṭaḷai.*

மறுவ. செங்கற் கட்டளை

[செங்கல் + அச்சு]

செங்கலதை *śeṅgaladai*, பெ. (n.) நெல்வகை (A.); a kind of paddy.

செங்கலம் *śeṅ-galam*, பெ. (n.) செந்தாமரை (மூ.அ.); red lotus.

[செம் + கமலம் - செங்கமலம் → செங்கலம். கமலம் → கலம்]

செங்கலறு-த்தல் *śeṅgal-aṟu-*, 5 செ.கு.வி. (v.i.) ஈரமண்ணிலிருந்து செங்கல் வார்த்தல்; to make brick with wet clay.

[செங்கல் + அறு-.]

செங்கவளநாரை *śeṅ-gavaḷa-nārai*, பெ. (n.) செங்கானாரை பார்க்க; see *śeṅ-gaṉārai.*

[செம் + கால் + வளம் + நாரை – செங்கால் வளநாரை → செங்கவள நாரை]

செங்கழனாரை *śeṅ-gaḻaṉārai*, பெ. (n.) செங்கானாரை (யாழ்.அக.); pelican ibis.

[செம் + கழல் + நாரை.]

செங்கழுத்துள்ளான் *śeṅ-gaḻuttuḷḷāṉ*, பெ. (n.) உள்ளானைப் போன்ற பறவை; red necked phalarope.

[செம் + கழுத்து + உள்ளான்]

இது உப்பங்கழிகளில் காணப்படும்; கூட்டம் கூட்டமாகப் பறக்கும் இயல்புடையது; உடல் நீல நிறமாகவும், மார்பு வெண்மையாகவும் இருக்கும்.

செங்கழுநாடு *śeṅgaḻu-nāḍu*, பெ. (n.) ஆய் நாட்டில் இருந்த ஊர்; a place in Āy country. "செங்கழு நாட்டு ஐம்மாக் கொல்லை" *(பாண்டிய செப்பேடு).*

[செங்கழுநாடு = செங்கழுநீர்ப்பூ அதிகமாக இருந்த நாடு]

செங்கழுநீர் *śeṅ-gaḻu-nīr*, பெ. (n.) 1. அல்லிக் கொடி வகை; purple Indian-lily. "கண்மலர் செங்கழுநீர்" *(திருக்கோ. 108).* 2. செவ்வாம்பல்; red Indian water-lily.

ம. செங்ஙழுநீர்

[செம் + கழுநீர். கழுநீர் = குவளை மலர்]

செங்கழுநீர்க்கல் *śeṅ-gaḻunīr-k-kal*, பெ. (n.) காவிக்கல் வகை (வின்.); red ochre, reddle.

[செங்கழுநீர் + கல்]

செங்கழுநீர்க்காய் *śeṅ-gaḻu-nīr-k-kāy*, பெ. (n.) ஊதா நிறமுள்ள வழுதுணங்காய் வகை (இவ.); purple brinjal.

[செங்கழுநீர் + காய்]

செங்கழுநீர்ப்பற்று *śeṅgaḻu-nīr-p-paṟṟu*, பெ. (n.) செங்கல்பட்டு நகரம்; cheṅgal-paṭṭu town.

[செங்கழுநீர்ப்பற்று → செங்கல்பட்டு = செங்கழுநீர் அதிகம் காணப்பட்டதால் பெற்ற பெயராகலாம்]

செங்கழுநீர்ப்புறம் *śeṅgaḻu-nīr-p-puṟam*, பெ. (n.) குளத்தில் வளரும் செங்கழுநீர் எனும் குவளை மலரை நாடோறும் அலரெடுத்து மாலையாக்கி கோயிலுக்குத் தர அமர்த்தப் பட்டவனுக்காக வைக்கப்பட்ட முதல் தொகை; capital alocated for payment from interest to the person nominated for preparation of garland out of lilly flower grown in the tank.

"திருவண்ணாமலை உடைய நாயனார்க்கு ... ஒடுக்கின காசு 2000 திருச்செங் கழுநீர்ப் புறமாகக் கொடுத்தோம் (தெ.க.தொ. 8, கல். 93).

[செங்கழுநீர் + புறம்]

செங்கழுநீரோடை *śeṅkaḻu-nīr-ōḍai*, பெ. (n.) இலால்குடி வட்டம் துறையூர் கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலத்தின் ஒரெல்லை; a rivulet forming one boundary of a land denoted to Thuṟaiyūr temple in Lālguḍi Taluk. "செங்க ழுநீரோடைக்கும் மேற்கே" *(தெ.க.தொ. 26, கல். 752).*

[செங்கழுநீர் + ஓடை]

செங்களம் *śeṅ-gaḷam*, பெ. (n.) அரத்தத்தால் சிவந்த இடமான போர்க்களம்; battlefield, as red with blood. "செங்களம் படக்கொன்று" *(குறுந். 1).*

ம. செங்களம்

[செம் + களம்]

செங்களி *šeṅ-gaḷi*, பெ. (n.) *1.* செம்பஞ்சுக் குழம்பு; red lac-dye. "செங்களி தோய்ந்துள் சிவந்த சீறடி" (சூளா. சுயம். 101). 2. பாக்கினை ஊறவைக்குஞ் சாயக்குழம்பு; a kind of infusion used in preparing areca-nuts "கருங்காலிச் செங்களியளைஇ" (பெருங். மகத். 14:81).

ம. செங்களி

[செம் + களி]

செங்களை[1] *šeṅ-gaḷai*, பெ. (n.) செங்கரும்பு (யாழ்.அக.); red sugarcane.

[செம் + கழை]

செங்களை[2] *šeṅ-gaḷai*, பெ. (n.) குதிரை நஞ்சு (வின்.); a mineral poison.

ம. செங்கள

செங்கற்கட்டடம் *šeṅgaṟ-kaṭṭaḍam*, பெ. (n.) செங்கல் கொண்டு கட்டப்பட்ட கட்டடம்; building made up of bricks.

[செங்கல் + கட்டடம்]

செங்கற்கட்டளை *šeṅ-gaṟ-kaṭṭaḷai*, பெ. (n.) செங்கல் செய்தற்குரிய அச்சு; mould for making bricks.

மறுவ. செங்கலச்சு, செங்கற் சட்டம்

[செங்கல் + கட்டளை]



செங்கற்கட்டளை

செங்கற்காளவாய் *šeṅgaṟ-kāḷavāy*, பெ. (n.) செங்கற்சூளை பார்க்க; see *šeṅgaṟ-šūḷai*.

[செங்கல் + காளவாய்]

செங்கற்சல்லி *šeṅgaṟ-šalli*, பெ. (n.) தளம் போடுவதற்காகவும், தட்டைக்கூரை மீது போடுவதற்காகவும், உடைக்கப்பட்ட செங்கல் துண்டுகள்; broken brick jelly for flooring and weathering course over that roof.

[செங்கல் + சல்லி. சன்னமாக உடைக்கப் பட்டது சல்லி]

செங்கற்சீரை *šeṅgaṟ-šīrai*, பெ. (n.) காவித் துணி; ochre-colored cloth. "கையில் அர்த்த முண்டான காலம் பார்வையைச் செங்கற்சீரை கட்டிக் கூப்பிட்டுத் திரியவிடுமவன்" (திவ்.பெரிய திரு. 1, 1:4, வியா. ப.34).

[செங்கல் + சீரை. செங்கல் = காவிக்கல்]

செங்கற்சுவர் *šeṅgaṟ-šuvar*, பெ. (n.) செங்கல் வைத்துக்கட்டிய சுவர்; wall made up of bricks.

[செங்கல் + சுவர்]

செங்கற்சூளை *šeṅgaṟ-šūḷai*, பெ. (n.) உலர்ந்த களிமண் பாளங்களை (செங்கற்கள்) இடை வெளியிட்டு அடுக்கி, அதில் மரத்துண்டுகள் இட்டு, எரித்துச்சுடும் அமைப்பு; stack of dried bricks with wooden blocks as fuels to burn kiln.

மறுவ. செங்கற் காளவாய்

[செங்கல் + சூளை]



செங்கற்சூளை

செங்கற்பால் *šeṅgaṟ-pāl*, பெ. (n.) நீரில் கலக்கிய செங்கற் பொடி (வின்.); brick-dust mixed with water.

[செங்கல் + பால்]

செங்கற்பொடி *šeṅgaṟ-poḍi*, பெ. (n.) *1.* செங்கல்லின் தூள்; brick-dust. *2.* செங்கற் றுண்டு (இ.வ.); brick-bat, piece of brick.

மறுவ. செங்கற்சல்லி

[செங்கல் + பொடி]

செங்கற்றலை *šeṅ-gaṟṟalai*, பெ. (n.) *மீன்வகை (யாழ்.அக.);* a kind of fish.

[செம் + கற்றலை]

செங்கற்றாழை *šeṅ-gaṟṟāḻai*, பெ. (n.) கற்றாழை வகை *(சித்.அக.);* a species of aloes.

[செம் + கற்றாழை]

செங்கறுப்பிறுங்கு *šeṅ-gaṟuppiṟuṅgu*, பெ. (n.) சோள வகை *(விவசா. 3);* a kind of maize.

[செம் + கறுப்பு + இறுங்கு. இறுங்கு = சோளம்]

செங்கனல் *šeṅ-gaṉal*, பெ. (n.) 1. கொழுந்து விட்டெரியுந்தீ; blazing fire. "செங்கனல் வெண்மயிர் செல்ல" *(கம்பரா. வாலிவதை 50)* 2. செந்தணல் பார்க்க (இ.வ.); see *šen-daṇal.*

மறுவ. செந்தணல், செஞ்சுடர்

[செம் + கனல்]

செங்கனிறமணி *šeṅ-gaṉiṟa-maṇi*, பெ. (n.) படிதமென்னும் ஒருவகை மணி (கோவாங்கப் பதுமராகம்) *(யாழ்.அக.);* a kind of precious stone.

[செங்கல் + நிறம் + மணி]

செங்காகம் *šeṅ-gāgam*, பெ. (n.) செம்போத்து *(யாழ்.அக.)* பார்க்க; see *šem-pōttu.*

மறுவ. செம்புகம்

[செம் + காகம்]

செங்காட்டுக்கோட்டம் *šeṅ-gāṭṭu-k-kōṭṭam*, பெ. (n.) முதல் இராசராசன் ஆட்சிக்கு உட்பட்ட செயங்கொண்டசோழ மண்டலத்தில் இருந்த 24 கோட்டங்களுள் ஒன்று; one of the 24 areas (kottam) in Jayamkoṇḍa Chōḻa maṇḍalam in first Rajaraja empire. "செயங்கொண்ட சோழ மண்டலத்து செங்காட்டுக் கோட்டத்து மாகனூர் நாட்டு மணிமங்கலம்" *(தெக.தொ. 2, 28).*

[செங்காடு + கோட்டம்]

செங்காடக்கோடன் *šeṅ-gāḍa-k-kōḍaṉ*, பெ. (n.) மதுராந்தகம் வட்டாரத்திலுள்ள திருப்புலி வனம் கோயிலுக்கு நந்தா விளக்கு எரிப்பதற்கு ஆக்களைக் கொடையாக வழங்கியவன்; a person who denoted cows for the lighting of Thiruppulivaṉam temple in Madurandagam taluk. "இராசக்கோன் விளக்கு காலும் பிடாரன் மகன் செங்காடக்கோடன் விளக்கு காலும்" *(தெக. தொ-6, கல்326-5).*

[செங்காடு + கோடன்]

செங்காடு *šeṅgāḍu*, பெ. (n.) 1. சிவந்த காட்டு நிலம் (வின்.); red soil. 2. திருச்செங்காட்டங்குடி; a Šivaṉ shrine. "ஊரோ செங்காடு" (தனிப்பா.).

[செம் + காடு]

செங்காடை *šeṅ-gāḍai*, பெ. (n.) காடைப்புள் வகை (M.M. 885); rock bush quail.

[செம் + காடை]

செங்காந்தள் *šeṅ-gāndaḷ*, பெ. (n.) செந்நிற முள்ள கொடி வகை (திவா.); red species of Malabar glory-lily.

[செம் + காந்தள்]

செங்காமாரி *šeṅ-gāmāri*, பெ. (n.) நெற்பயிரில் விழும் நோய் வகை (நாஞ்.); a blighting disease of paddy.

ம. செங்காமாரி

[செம் + காய் + மாரி – செங்காமாரி]

செங்காய் *šeṅ-gāy*, பெ. (n.) பழுக்கும் பருவத்துள்ள காய்; fruit almost ripe.

மறுவ. உதைக்காய்; உதைப்பழம்

க. கெங்காய்

[செம் + காய்]

செங்காய்ப்புண் *šeṅ-gāy-p-puṇ*, பெ. (n.) பழுக்காத புண் (இ.வ.); unripe boil.

[செங்காய் + புண்]

செங்காய்வேளை *šeṅ-gāy-vēḷai*, பெ. (n.) பூடுவகை (யாழ்.அக.); a herb.

[செங்காய் + வேளை]

செங்கார் *šeṅ-gār*, பெ. (n.) மழைக்காலத்து விளையும் மங்கிய செந்நிறமுள்ள நெல்வகை (சங்.அக.); a kind of dark-red paddy growing in rainy season.

[செம் + கார்]

செங்காரனி *šeṅ-gāraṉi*, பெ. (n.) கருஞ் சிவலையான பெற்றம் முதலிய விலங்குகள் (யாழ்ப்.); dark-red animal as cow.

மறுவ. செங்காரி

[செம் + கார் – செங்கார் → செங்காரனி. கார் = கருமை]

செங்காரி[1] *šeṅgāri*, பெ. (n.) *செங்காரனி பார்க்க;* see *šeṅ-gārani.*

[செம் + காரி. கார் → காரி]

செங்காரி[2]**-த்தல்** *šeṅ-gāri-*, 4 *செ.கு.வி.* (v.i.) *1.* **சினம், வெயில் கடுமை இவற்றால் முகஞ்சிவந்து காட்டுதல்;** to flush or redden, as face due to anger or exposure to scorching heat. *2.* **பருவமழையின்றி பயிர்கள் கதிர் வாங்காது செந்நிறமாதல்;** to redden without forming ears, as paddy, crop for want of seasonal rains.

[செம் + காரி-.]

செங்காரை[1] *šeṅ-gārai*, பெ. (n.) **கன்மீன்** (M.M.105); bride-fish.

[செம் + காரை]

செங்காரை[2] *šeṅ-gārai*, பெ. (n.) **காரைச்செடி** (L.); spurious honey-thorn.

[செம் + காரை. காரை = முட்செடி]

செங்காலி *šeṅ-gāli*, பெ. (n.) **செங்கருங்காலி** *பார்க்க;* see *šeṅ-garuṅ-gāli.* *'பாங்குறு செங்காலி கருங்காலி' (சிலப். 3:26, உரை).*

ம. *செங்ஙாலிக்காலி*

[செம் + காலி.]

செங்காவி *šeṅ-gāvi*, பெ. (n.) *1.* **செங்கழுநீர்** (அக.நி.); purple Indian water lily. *2.* **குங்குமக் காவி** (இ.வ.); saffron ochre.

தெ. செங்காவி

[செம் + காவி]

செங்காவிதி *šeṅ-gāvidi*, பெ. (n.) **கணக்கன்;** accountant. *'புகருடையர் செங்காவிதி நல்லாண்டார்' (ஆவணம் : 10-12. பக். 20).*

[செம் + காவிதி. காவிதி பார்க்க]

செங்கானாரை *šeṅ-gāṉārai*, பெ. (n.) **சிவந்த காலையுடைய நாரைவகை;** pelican ibis, as having red legs. *"செங்கானாரை செல்வன காண்மின்" (பெருங். உஞ்சைக். 40:23).*

[செம் + கால் + நாரை]



செங்கிடை *šeṅ-giḍai*, பெ. (n.) **ஒருவகை முட்செடி;** prickly sesban. *"நீலச் சுருளுஞ் செங்கிடையுங் கொண்டு" (கம்பரா. மிதிலை.14).*

[செம் + கிடை]

செங்கிடைச்சி *šeṅ-giḍaicci*, பெ. (n.) **செங்கிடை** *பார்க்க;* see *šeṅ-giḍai.*

[செங்கிடை → செங்கிடைச்சி]

செங்கிரந்தி *šeṅ-girandi*, பெ. (n.) *1.* **ஒருவகை (மேக)க்கட்டி** (மூ.அ.); venereal herpes. *2.* **செந்நிறப் புண்கட்டி** (M.L); erysipelas.

[செம்(மை) + கிரந்தி]

செங்கிளுவை *šeṅ-giḷuvai*, பெ. (n.) *1.* **சீச்சுத் தாரா** (M.M.338); whistling teal. *2.* **ஒருவகை மரம்** (சங்.அக.); a kind of jujube.

[செம் + கிளுவை]

செங்கீரை[1] *šeṅ-gīrai*, பெ. (n.) **ஒருவகைக் கீரை** (தைலவ. தைல. 135); cocks comb greens.

ம. *செஞ்சீர*

[செம் + கீரை]

செங்கீரை[2] *šeṅ-gīrai*, பெ. (n.) **செங்கீரைப் பருவம்** *பார்க்க (இலக்.வி.806);* see *šeṅ-gīrai-p-paruvam.*

[செம் + கீரை]

செங்கீரைப்பருவம் *šeṅgīrai-p-paruvam*, பெ. (n.) **பிள்ளைத் தமிழ்ப்பருவங்கள் பத்தினுள், குழந்தை பிறந்த ஐந்தாம் திங்களில் தன் தலையை நிமிர்த்தி இங்குமங்கும் அசைத்தாட்டுவதைச் சிறப்பித்துக் கூறும் பகுதி;** one of the ten section of piḷḷai-ṭ-tamil describing the stage of childhood in which the

செங்குருவி

செங்கால் நாரை

சென்னை-600 008

செங்கழுத்து உள்ளான்

செங்குயில்

செங்காடை

செங்காகம்

child lifts up its head and nods it in about the fifth month from its birth.

[செங்கீரை + பருவம்]

செங்குங்கிலியம் *šeṅ-guṅgiliyam*, பெ. (n.) செந்நிறமான குங்கிலிய வகை (வின்.); red resin.

[செம் + குங்கிலியம்]

செங்குங்குமம் *šeṅ-guṅgumam*, பெ. (n.) செஞ்சந்தனம் (பிங்.); red sanders.

[செம் + குங்குமம்]

செங்குட்டம் *šeṅ-guṭṭam*, பெ. (n.) நோய் வகை; a disease. "தணிந்திடச் செய்யா திடர் செய்யுஞ் செங்குட்ட ரோகர்" (கடம்பு. பு. இலீலா. 124).

[செம் + குட்டம்]

செங்குட்டுவன் *šeṅ-guṭṭuvaṉ*, பெ. (n.) இளங்கோவடிகட்குத் தமையனும் பெரும்புழ் பெற்றவனுமான சேரவரசன் (பதிற்றுப். 5. பதி); a famous Šēra king, brother of Iḷaṅgōvaḍigal.

சேரன்செங்குட்டுவன் பார்க்க

செங்குடை *šeṅ-guḍai*, பெ (n.) செந்நிறமுள்ள குடை; red umbrella.

க. கெங்கொடெ

[செம் + குடை]

செங்குணக்கு *šeṅ-guṇakku*, பெ. (n.) நேர்கிழக்கு; due east. "காவிரிப்பாவை செங்குணக் கொழுகி" (மணிமே. பதி. 13)

[செம் + குணக்கு]

செங்குத்தாய்விழு-தல் *šeṅguttāy-viḻu*, 2 செ.கு.வி. (v.i.) தலைகுப்புற விழுதல் (உ.வ.); to fall headlong. மலை மீதிருந்து செங்குத்தாய் அவன் விழுந்ததால் மண்டை உடைந்து மடிந்தான் (உ.வ.).

[செங்குத்து + ஆய் + விழு-]

செங்குத்தான் *šeṅ-guttāṉ*, பெ. (n.) பறக்கும் புறாமீது உருண்டையடிக்குங் குழல்; blow-pipe, used for shooting pigeons.

Malay. sumpitan.

செங்குத்து *šeṅ-guttu*, பெ. (n.) 1. மேலிருந்து கீழ்விழும் பொருளின் பாதை; perpendicular. 2. பக்கச் சாய்வு இல்லாத நிலை; hot stanting on either side. 3. கிடை மட்டத்திலிருந்து சமமாக எழும்பும் கோடு; line perpendicular to the base. 4. 90 பாகைக் கோணத்தின் இரு பக்கங்கள்; sides of a rectangle. செங்கோண முக்கோணத்தில் இரு பக்கங்களில் ஒன்று கிடைக்கோடாயின் மற்றது செங்குத்துக் கோடு.

ம. செங்குத்து

[செம்+ குத்து]

செங்குத்துமேடு *šeṅ-guttu-mēḍu*, பெ. (n.) மிக உயரமான மேட்டுநிலம்; mesa.

[செங்குத்து + மேடு]

செங்குத்துவழிகால் *šeṅguttu-vaḻikāl*, பெ. (n.) நீர்போக்கிற்கு ஏற்றமான வழி; shaft spill way.

[செங்குத்து + வழிகால்]

செங்குந்தம்[1] *šeṅ-gundam*, பெ. (n.) கண்ணில் விழுங் குந்த நோய் (வின்.); tubercle on the cornea of the eye.

[செம் + குந்தம். செங்குமுதரோகம் பார்க்க]

செங்குந்தம்[2] *šeṅ-gundam*, பெ. (n.) அரத்தத் தாற் சிவந்த ஈட்டி (ஈட்டியெழுபது); spear red with blood.

[செம் + குந்தம்]

செங்குந்தர் *šeṅ-gundar*, பெ. (n.) செந்நிற ஈட்டியையுடைய கைக்கோளர் (திவா.); persons of Kaikōḷa caste, as the spearmen of ancient times.

[செங்குந்தம் → செங்குந்தர்]

செங்குமரி *šeṅ-gumari*, பெ. (n.) சிவப்புக் கற்றாழை; red aloe.

[செம் + குமரி]

செங்குமரு *šeṅ-gumaru*, பெ. (n.) வேம்பு; neem tree.

செங்குமிழ் *šeṅ-gumiḻ*, பெ. (n.) குமிழ மரவகை (சூடா.); small Cashmre tree.

[செம் + குமிழ்]

செங்குமுகி *šeṅ-gumugi*, பெ. (n.) சிவப்புத் தொட்டி நஞ்சு; red poison.

செங்குமுதம் *šeṅ-gumudam*, பெ. (n.) செவ்வாம்பல்; red Indian water lily. "செய்யிற் கொய்யுஞ் செங்குமுதம்" *(கம்பரா. பூக்கொய். 33).*

[செம் + குமுதம்]

செங்குமுதரோகம் *šeṅgumuda-rōgam*, பெ. (n.) கண்ணின் கருவிழியில் செங்கழுநீர்ப் பூப் போல் சிவப்பான சதை வளர்ந்து, குத்தல், எரிச்சல் முதலிய வலிகளை உண்டாக்கும் நோய்; red growth of flesh over the pupil of the eye marked by acute pain, burning sensation etc. *(சா.அக.).*

[செங்குமுதம் + ரோகம். செங்குமுதம் பார்க்க]

செங்குயில் *šeṅ-guyil*, பெ. (n.) ஒருவகைக் குயில்; banded bay cuckoo.

[செம் + குயில்]

தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டங்களின் அடர்ந்த காடுகள், தோப்புகளில் காணப் படும் பறவை. இது செம்பழுப்பான உடலில் பழுப்பு நிறக் குறுக்குக்கோடுகளைக் கொண்டது.



செங்குரங்கு *šeṅ-guraṅgu*, பெ. (n.) முகம் செந்நிறமாகவுள்ள குரங்குவகை; red monkey, opp. to karu-ṅ-guraṅgu.

[செம் + குரங்கு]

செங்குருகடம் *šeṅ-gurugaḍam*, பெ. (n.) உடம்பின் அரத்தத்தில் வாழும் சிறிய அணுப் பூச்சிகள்; a minute organism forming the constitutent material of blood corpusles.

[செங்குருதி + கடம்]

செங்குருகு *šeṅ-gurugu*, பெ. (n.) ஒருவகைப் பறவை; a kind of bird, chestnut bittern.

[செம் + குருகு]

தமிழகத்தில் ஆற்றங்கரையோரம் நெல் வயல்களையும் புதர்களையும் சார்ந்து காணப் படும் பறவை. செம்பழுப்பான உடலையும், வெண்மையான தொண்டையையும் உடையது; மிகவும் அச்சங் கொள்ளும் இயல்பினது.

செங்குலிகம் *šeṅ-guligam*, பெ. (n.) இங்குலிகம், சாதிலிங்கம்; vermilion. "அரக்குறு நறுநீ ரஞ்செங் குலிகம்" *(பெருங். உஞ்சைக். 41:16).*

[செம்(மை) + குலிகம்]

செங்குவளை *šeṅ-guvaḷai*, பெ. (n.) செங்கழுநீர் பார்க்க; see *šeṅ-gaḻu-nīr.*

[செம் + குவளை]

செங்குளம் *šeṅ-guḷam*, பெ. (n.) இராமநாதபுரம், சாத்தூர் என்னுமிடத்தில் இருந்த பழைய குளம்; an old pond at Šāttur in Ramanatha puram. "நீர்ப்புகழ் மலியேரியோடு செங்குளமு நாடினோர் தமக்கில்லா" *(தெ.க. தொ.14, கல். 44, 19).*

[செம் + குளம்]

செங்குளம்படி *šeṅ-guḷampaḍi*, பெ. (n.) மான் குளம்படிக் கொடி; deer's hoof creeper.

[செம் + குளம்படி]

மான் குளம்பைப் போன்றதும் செம்மை யானதுமான கொடி

செங்குளவி *šeṅ-guḷavi*, பெ. (n.) செம்மஞ்சள் நிறமுள்ள குளவி வகை (வின்.); bright yellow hornet. opp. to karu-ṅ-guḷavi.

[செம் + குளவி]

செங்குறிஞ்சி *šeṅ-guṟiñji*, பெ. (n.) மரவகை; Travancore red-wood. "செங்குறிஞ்சித் தாரார் நறுமாலை" *(திவ்.இயற். சிறியதிரு. 16).*

ம. செங்குறுஞ்ஞு

[செம் + குறிஞ்சி]

செங்குறுவை *šeṅ-guṟuvai*, பெ. (n.) ஒரு வகை நெல்; a kind of paddy. "கோடைக் குறுவை குளவாளை செங்குறுவை" (நெல்விடு. 179).

[செம் + குறுவை]

செங்குன்றி *śeṅ-guṉṟi,* பெ. (n.) குன்றி (மூ.அ.); crab's eye.

ம. செங்குன்னி

மறுவ. குன்றிமணி, குன்றி முத்து

[செம் + குன்றி]

பொன் நிறுப்பதற்குப் பயன்படும் ஒரு கொட்டை; சிவப்பு, கறுப்பு வண்ணத்துடன் இருக்கும்.

செங்குன்று *śeṅ-guṉṟu,* பெ. (n.) கண்ணகியின் இறுதிக் காலத்தோடு தொடர்புடைய மலை; the hill connected with the last days of Kaṇṇagi of Śilappadikāram.

சிலப்பதிகாரத்தின் அரும்பதவுரைகாரர் செங்குன்று என்பது இக்காலத் திருச்செங்கோடு என்று அடையாளம் காட்டுகிறார். இதனை அடியார்க்கு நல்லார் ஒப்பவில்லை. சுருளிமலை மேலுள்ள மங்கலாதேவி கோயிலோடு தொடர்புபடுத்தி இப்போதைய கருத்து நிலவுகிறது.

[செம் + குன்று]

செங்கெறால் *śeṅgeṟāl,* பெ (n.) இறால் மீன் வகை (மீனவ.); a kind of prawns.

[சிங்கிறால் → செங்கெறால்]

செங்கை *śeṅgai,* பெ. (n.) 1. கொடுக்குந் தன்னமையுள்ள கை; fair, liberal hand. "செங்கையோன் றங்கை" (கம்பரா. சூர்ப்ப. 39). 2. யாழ்விண்மீன் (திருவாதிரை) (சூடா.); the 6th star.

[செம் + கை]

செங்கையான் *śeṅ-gaiyāṉ,* பெ. (n.) சிவப்புக் கரிசலாங்கண்ணி; a red variety of Eclipta prostrata.

[செம் + கையான். கையான் = கரிசலாங் கண்ணி.]

செங்கையொளிதம் *śeṅgai-y-oḷidam,* பெ. (n.) கருங்குளவி; black wasp beetle (சா.அக.).

செங்கொடிக்காணம் *śeṅ-goḍi-k-kāṇam,* பெ. (n.) பழைய வரிவகை (தெ.க.தொ. 2, 352); an ancient tax.

[செம் + கொடி காணம்]

செங்கொடிவேலி *śeṅ-goḍi-vēli,* பெ. (n.) இளஞ்சிவப்பு நிறப்பூவுள்ள கொடி வகை (யாழ்.அக.); rosy-flowered lead wort.

ம. செங்கொடிவேலி

[செம் + கொடிவேலி]

செங்கொடுவேரி *śeṅ-goḍu-vēri,* பெ. (n.) செங்கொடிவேலி பார்க்க; see *śeṅ-goḍi-vēli.*

[செங்கொடி வேலி → செங்கொடுவேரி]

செங்கொய்யா *śeṅ-goyyā,* பெ. (n.) கொய்யாப் பழ வகை (M.M. 333); red guava.

[செம் + கொய்யா]

செங்கொல் *śeṅ-gol,* பெ. (n.) செம்பொன் (பிங்.); pure gold.

[செம் + கொல்]

கொல்லுத் தொழிலில் அதிகம் பயன்படுவது பொன். எனவே கொல் என்பது பொன்னைக் குறித்தது.

செங்கொல்லர் *śeṅ-gollar,* பெ. (n.) தட்டார்; gold smiths.

[செம் + கொல்லர்]

செங்கொள் *śeṅkoḷ,* பெ. (n.) கொள்ளு வகை; Madras horse-gram. "கருஞ்கொள்ளுஞ் செங்கொள்ளுந் தூணிப் பதக்கென்று" (நாலடி, 387).

[செம் + கொள்]

செங்கொன்றை *śeṅ-goṉṟai,* பெ. (n.) ஒரு வகை மரம்; red Indian laburnum.

[செம் + கொன்றை]

செங்கொன்னை *śeṅ-goṉṉai,* பெ. (n.) செங்கொன்றை பார்க்க; see *śeṅ-goṉṟai.*

[செம் + கொன்னை]

செங்கோட்டம் *śeṅ-gōṭṭam,* பெ. (n.) செந்நிற முள்ள ஒரு கிழங்கு; red Arabian costum.

[செம் + கோட்டம்]

செங்கோட்டியாழ் *śeṅ-gōṭṭiyāḻ,* பெ. (n.) நால்வகை யாழ்களுள் ஒன்று; a kind of stringed musicl instrument, one of four kinds of yāḻ. "அங்கோற் றீந்தொடைச் செங்கோட்டி யாழின்" (பெருங். உஞ்சைக். 40: 269)

[செம் + கோட்டியாழ். செம்மை நிற மரத்தால் செய்த யாழாகலாம்]

நால்வகை யாழ்களாவன :

பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ். செங்கோட்டியாழிற்கு ஏழு நரம்புகள்.



செங்கோட்டியாழ்

செங்கோட்டைச்சிவப்பி *šeṅgōṭṭai-c-civappi*, பெ (n.) *புளிச்சிறு கீரை;* a kind of sour green.

செங்கோடு *šeṅ-gōḍu*, பெ. (n.) *1.* செங்குத்தான *மலை;* steep precipice, precipitous cliff. "செங்கோடு பாய்துமே யென்றாள் மன்" *(நாலடி. 372). 2.* நாமக்கல் மாவட்டத்திலுள்ள *திருச்செங்கோடு;* Thiruchengodu in Namakkal. "செந்திலுஞ் செங்கோடும்" *(சிலப். குன்றக்.). 3.* செருந்தி*(சூடா.);* panicled golden blossomed pear tree. *4.* செங்குத்துக்கோடு; perpendicular.

ம. செங்கோடி

[செம் + கோடு. கோடு = மலை]

செங்கோணம் *šeṅ-gōṇam*, பெ (n.) *90° பாகை கொண்ட கோணம்;* right angle.

[செம் + கோணம்]

செங்கோல் *šeṅ-gōl*, பெ. (n.) *1.* அரச இலச்சினை பொறிக்கப்பட்ட அரசாட்சிச் சின்னமாகிய நேர் கோல்; sceptre, a symbol of sovereignty. "சேயுயர் விற்கொடிச் செங்கோல் வேந்தே" *(சிலப். 26:139). 2.* அறுவகை நாட்டமைதிகளில் ஒன்றாகிய நல்லரசாட்சி; kingly justice, impartial administration of justice, one of six principles of a state. opp. to koḍu-ṅ-gōl. "செங்கோல் காட்டிச் செய்தவம் புரிந்த *(மணிமே. 18:82). 3.* பழுக்கக் காய்ந்த *சலாகை;* red-hot rod. "தீத்துறு செங்கோல் *(மணிமே. 18:2).*

ம. செங்கோல்

[செம் + கோல்]

அறுவகை நாட்டமைதியாவன:

செல்வம், விளைநிலம், செங்கோல், நோயின்மை, வளம், குறும்பின்மை.

செங்கோல்

செங்கோல்கோடு-தல் *šeṅ-gōl-kōḍu-*, 5 செ.கு.வி. (v.i.) அரச முறை (நீதி) தவறுதல்; to fail in justice, rule unrighteously, as the sceptre slanting. "செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ" *(மணிமே. 28:188).*

[செங்கோல் + கோடு-.]

செங்கோலம் *šeṅ-gōlam*, பெ. (n.) செம்பு மணல் *(வின்.);* sand containing copper-ore.

[செம் + கோலம்]

செங்கோலறுகு *šeṅ-gōl-aṟugu*, பெ. (n.) அறுகு வகை *(பு.வெ.10, முல்லைப். 3, உரை.);* a kind of hurrialli grass.

[செம் + கோலறுகு]

செங்கோலோச்சு-தல் *šeṅ-gōl-ōccu-*, 5 செ.கு.வி. (v.i.) அறம் (நீதி) தவறாது அரசு புரிதல்; to rule righteously, as wielding the sceptre properly. "செல்வவேந்தன் செங்கோ லோச்சி" *(பெருங். வத்தவ. 14:185).*

[செங்கோல் + ஓச்சு]

செங்கோற்கடவுள் *šeṅ-gōṟ-kaḍavuḷ*, பெ. (n.) *அறக்கடவுள், யமன்;* Yama, as the god dispensing impartial justice.

[செங்கோல் + கடவுள்]

செங்கோற்பொறையன் *šeṅgōṟ-poṟaiyaṉ*, பெ. (n.) சேரமான் பெருமாளுக்கு முன் சேரநாட்டையாண்ட அரசர்; the predecessor of Šēramāṉ perumāḷ.

[செங்கோல் + பொறையன்]

பொறையன் சேர மன்னர்களின் அடைமொழி

செங்கோன்தரைச்செலவு *šeṅgōṉ-darai-c-celavu*, பெ. (n.) மறைந்து போன தமிழ் நூல்; a Tamil book lost in time.

செங்கோன்மை *šeṅ-gōṉmai*, பெ. (n.) அரச முறைமை (நீதி) (குறள்,அதி. 55); righteous rule.

ம. செங்கோம

[செம் + கோன்மை]

செச்சை[1] *šeccai*, பெ. (n.) 1. சிவப்பு; redness. "செச்சை வாய்திறந்து" (திருவிளை. வலை. 24). 2. வெட்சி; scarlet ixora. "செச்சைக் கண்ணியன்" (திருமுருகு. 208). 3. செந்துளசி (மலை.); red basil.

ம. செச்ச, செக்கி

[சுல் (சிவப்பு) → செல் → செள் → செட்டு → செச்ச → செச்சை]

செச்சை[2] *šeccai*, பெ. (n.) 1. வெள்ளாட்டுக் கடா; he-goat. "வெள்ளாட்டுச் செச்சை போல" (புறநா. 286). 2. ஆடு; sheep. "செச்சைக் கண்டத் தொத்துரன் போல" (ஞானா. பாயி. 5:12). 3. மேழ ஓரை (விதான. நல்வினை. 9); aries of the zodiac.

ம. செச்ச; தெ. த்சுத்சு

[சே → செச்சை]

செச்சை[3] *šeccai*, பெ. (n.) 1. சந்தனக் குழம்பு (திவா.); sandal unguent. 2. நீறு (அக.நி.); ashes. 3. சட்டை; coat. "உதிரச் செச்சை யொண்ணிண மீக்கொ டானை" (சீவக. 1080).

[செம் → செச்சை]

செச்சை[4] *šeccai*, பெ. (n.) 1. தழைகள் வேய்ந்த விடுதி; resting-place with roof of foliage. "மன்றமுஞ் செச்சையும் பலகண்டான்." (குற்றா. தல.கவுற்சன.90). 2. காடு (அக.நி.); forest. 3. இலிங்கங்கட்டிகள் அணிந்து கொள்ளும் இலிங்கப் பெட்டகம்; a little casket for liṅgam, worn by Liṅgāyats. லிங்கச் செச்சை (இவ.)

ம. செச்ச; க., தெ. செச்செ

[செத்தை → செச்சை]

செச்சை[5] *šeccai*, பெ. (n.) இரட்டை (அக.நி.); pair or set.

[செண்டை → செச்சை. செண்டை = இரட்டை]

செச்சை[6] *šeccai*, பெ. (n.) தோன்றும் நிலா; rising moon.

[செம் → செச்சை]

தோன்றும் நிலவு செந்நிறம் கொண்டது

செஞ்ச *šeñja*, வி.எ. (adv.) 1. நேராக; properly, directly. "செஞ்ச நிற்போரைத் தெரிசிக்க" (திருமந். 2118). 2. முழுதும் (யாழ்.அக.); abundantly; completely, wholly.

[செஞ்செவே → செஞ்ச]

செஞ்செவே பார்க்க

செஞ்சடைச்சி *šeñ-jaḍaicci*, பெ. (n.) மஞ்சட் பூவுள்ள செடி வகை (L.); yellow-flowered climbing Indian linden.

[செம் + சடைச்சி]

செஞ்சடையோன் *šeñ-jaḍaiyōṉ*, பெ. (n.) காசுமீரத்துப் படிகக்கல் (யாழ்.அக.); a kind of red crystal.

[செம் + சடையோன். செந்நிறமான படிகக்கல்]

செஞ்சந்ததி *šeñ-jandadi*, பெ. (n.) சிவப்பு ஆவிரை; red variety of cassia curiculata.

செஞ்சந்தனம் *šeñ-jandaṉam*, பெ. (n.) 1. சந்தன மரவகை; red sanders. 2. மரவகை; Travancore red-wood.

[செம் + சந்தனம்]

செஞ்சம் *šeñjam*, பெ. (n.) 1. நேர்மை; correctness, directness. 2. நிறைவு, முழுமை; completeness, fullness. "செஞ்சமுற வேறல் செயமென்று" (குற்றா.தல.திருமால். 114).

[செஞ்ச → செஞ்சம்]

இயல்பாக எல்லாரையுஞ் சுடவேண்டிய நெருப்பானது வாய்மை, குற்றமின்மை, கற்பு, தெய்வநம்பிக்கை முதலிய பண்புகளை மெய்ப்பிக்கும் தெய்வச் சான்றாக நின்று சுடாதிருப்பதால், தீயின் நிறப்பண்பாகிய செம்மைக் கருத்தினின்று, தூய்மை அல்லது நேர்மைக் கருத்தும், நேர்மைக் கருத்தினின்று நிறைவுக் கருத்தும், கிளைத்தன.

செஞ்சம்பா *šeñ-jambā*, பெ. (n.) நான்கு அல்லது ஐந்து திங்களில் பயிராகும் சம்பா நெல் வகை (*பதார்த்த. 804*); a red Šamba paddy, maturing in four or five months.

[செம் + சம்பா]

செஞ்சாந்து *šeñ-jāndu*, பெ. (n.) 1. குங்குமம் (*திவா.*); saffron powder. 2. சந்தனக்கூட்டு; fragrant sandal-paste. "செஞ்சாந்து புலர்த்துந் தேக்க ணகிற்புகை" (*பெருங். உஞ்சைக். 33:64*).

[செம் + சாந்து]

செஞ்சாமாருதம் *señjā-mārudam*, பெ. (n.) 1. மழையோடு கூடிய காற்று; violent storm, boisteros wind and rain. "செஞ்சாமாருதம் போலே நொடிக்கிறேன்" (*இராமநா. ஆரணி5*). 2. திறனை வெளிப்படுக்கை (*உ.வ.*); show or display of skill.

[செம் + (சமம் →) சா + மாருதம். மாருதம் = காற்று]

செஞ்சாமிருதம் *šeñjā-mirudam*, பெ. (n.) செஞ்சாமாருதம், 2 பார்க்க; see *šeñjā-mārudam,2.*

[செஞ்சாமாருதம் → செஞ்சாமிருதம்]

செஞ்சாமை *šeñ-jāmai*, பெ. (n.) ஒரு வகைச் சாமை; red species of little millet.

[செம் + சாமை]

செஞ்சால் *šeñjāl*, பெ. (n.) துமுக்கி (துப்பாக்கி) (*யாழ்அக.*); gun, rifle.

[செம் + சால்]

செஞ்சாலி *šeñ-jāli*, பெ. (n.) உயர்தரச் செந் நெல்வகை; a kind of superior yellowish paddy. "செஞ்சாலி நெல்லின் வளர்சோ றளிக்கொள்" (*தேவா. 37:7*).

ம. செஞ்சாலி

[செம் + சாலி]

செஞ்சி *šeñji*, பெ. (n.) விழுப்புரம் மாவட்டத்தில் திண்டிவனம் திருவண்ணாமலை இடையே யுள்ள வரலாற்றுப் புகழ் பெற்றதும் அரணுடையதுமான ஒரு குறிஞ்சி நிலத்தூர் (G.S.A.D); Ginji, a hill fortress of historical interest in Villupuram district.

செஞ்சிக்கோட்டை *šeñji-k-kōṭṭai*, பெ. (n.) செஞ்சியிலுள்ள கோட்டை; fort at Ginji.

[செஞ்சி + கோட்டை]

திண்டிவனம், திருவண்ணாமலை இடையில் உள்ள செஞ்சி, வீர இளைஞன் இராசா தேசிங்கு பற்றிய நாட்டுப்பாடலால் பெரும் புகழ் பெற்றது. இராசகிரி, கிருட்ண கிரி, சந்திரகிரி ஆகிய மூன்று அரண் மனைகளையும், கொத்தளங்களையும் இணைத்து அமைக்கப்பட்ட கோட்டை சுமார் 5 கல் (8 கிலோமீட்டர்) நீளம் கொண்டது. இன்றைய விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த சுற்றுலாப் பேரூர்.

செஞ்சியர்கோன்காடவன் *šeñjiyar-kōṉ kāḍavaṉ*, பெ. (n.) செஞ்சியில் வாழ்ந்த குறுநில மன்னன்; a king lived in Ginji. பல்லவ குலமரபைச் சார்ந்தவன்.

[செஞ்சியர்கோன் + காடவன்]

செஞ்சிலுவைச்சங்கம் *šeñjiluvai-c-caṅgam*, பெ. (n.) போர், புயல், பஞ்சம் போன்ற சீரழிவுகளால் அல்லலுறும் மக்களுக்கு மருத்தவ உதவியும் பிற உதவிகளும் வழங்கக் கூடிய ஒரு பன்னாட்டுத் தொண்டு நிறுவனம்; Red cross society an international organisation to help the people affected by war, cyclone, famine etc.

[செம் + சிலுவை + சங்கம். Syr. slibo → த. சிலுவை; Skt. saṅgha → த. சங்கம்]

செஞ்சிலை[1] *šeñ-jilai*, பெ. (n.) 1. சிவந்தகல் (*யாழ்அக.*); a red stone. 2. செங்காவி; red ochre.

[செம் + சிலை]

பெருங்கல்லில் இருந்து செதுக்கும்போது சிதறி விழும் சிறுகல்லிற்குப் பெயர் 'சில்' ஆகும். இதனால் தான் செதுக்கப்பட்ட கல்லிற்கு ஆகுபெயராய் சிலை என்ற பெயர் உண்டாயிற்று.

செஞ்சிலை[2] *šeñ-jilai*, பெ. (n.) அழகிய வில்; beautiful bow. "செஞ்சிலைக் கரத்தர்" (*கம்பரா. மிதிலை. 20*).

[செம் + சிலை]

செஞ்சிற்றகத்தி *šeñ-jiṟ-ṟ-agatti*, பெ. (n.) மரவகை (*சித்அக.*); variety of comon sesban.

[செம் + சிற்றகத்தி]

செஞ்சீரகம் *šeñ-jīragam*, பெ. (n.) செந் நிறமுள்ள சீரக வகை (யாழ்.அக.); red cumin.

ம. செஞ்சீரகம்

[செம் + சீரகம்]

செஞ்சு *šeñju*, பெ. (n.) செஞ்சம் பார்க்க; see *šeñjam*. "செஞ்சுறு செஞ்சுடர்" (திருமந். 1743).

ம. செஞ்சு (அழகு)

[சல் → செல் → சென் → செட்டு → செச்சு → செஞ்சு = செம்மை, செவ்வை, நிறைவு]

செஞ்சுடர் *šeñ-judar*, பெ. (n.) 1. பகலவன் (பிங்.); Sun. 2. எரியும் நெருப்பு (யாழ்.அக.); fire.

ம. செஞ்சுடர்; க. கெஞ்சொடர்

[செம் + சுடர்]

செஞ்சுடர்ப்பகவன் *šeñ-judar-p-pagavaṉ*, பெ. (n.) 1. நெருப்பு (திவா.); the Fire-god. 2. பகலவன் (வின்.); the Sun-god.

[செம் + சுடர் + பகவன்]

செஞ்சுருட்டி *šeñ-jurutti*, பெ. (n.) ஒரு பண்; one musical mode.

ம. செஞ்சுருட்டி

[செம் + சுருட்டி. சுருட்டி = பண்]

செஞ்சுருட்டை[1] *šeñ-juruttai*, பெ. (n.) சுருட்டைப் பாம்பு வகை; the yellow variety of Echis carinata, red carpet-snake.

[செம் + சுருட்டை]

சுருட்டை = ஒருவகைப் பாம்பு

செஞ்சுருட்டை[2] *šeñ-juruttai*, பெ. (n.) கேழ்வரகு வகை (விவசா.3); a species of ragi.

[செம் + சுருட்டை. சுருட்டை = சுருண்ட கதிரையுடைய கேழ்வரகு]

செஞ்சுறா *šeñ-juṟā*, பெ. (n.) சுறாமீன் வகை (M.M. 850); shark, grey or bronze, attaining considerable size.

[செம் + சுறா. சுறவு → சுறா]



செஞ்சுறா

செஞ்சூரன் *šeñ-jūraṉ*, பெ. (n.) செந்நாய்; a particular variety of dog used in the chase while hunting.

[செம் + சூரன். சூரன் = நாய்]

செஞ்செயல் *šeñ-jeyal*, பெ. (n.) நேர்மையான தொழில் (இ.வ.); upright action.

[செம் + செயல்]

செஞ்செவியர் *šeñ-jeviyar*, பெ. (n.) செல்வர் (யாழ்.அக.); wealthy person.

[செம் + (செவ்வியர் →) செவியர்]

செஞ்செவே *šeñ-jevē*, வி.எ. (adv.) 1. நேராக; properly, directly. "செஞ்செவே கமலக் கையாற் றீண்டலும்" (கம்பரா. பூக்கொய். 7). 2. எளிதாக; with ease. "செஞ்செவே படர்வரென் படைஞர்" (கம்பரா. வருணனை. 13). 3. முழுதும்; abundantly, completely, wholly. "செஞ்செவே யாண்டா சிவபுரத்தரசே" (திருவாச. 28: 6).

ம. செஞ்செம்மே.

[செம் + செவ் – செஞ்செவ் → செஞ்செவே]

செஞ்செழிப்பு *šeñ-jelippu*, பெ. (n.) 1. முக மலர்ச்சி; cheerfulness of countenance. 2. பயிர்ச் செழிப்பு (யாழ்ப்.); fertility, luxuriance of crops or produce. 3. ஏராளம் (யாழ்.அக.); plentifulness, copiousness.

[செம் + செழிப்பு]

செஞ்சேரா[1] *šeñ-jērā*, பெ. (n.) ஒரு வகை நச்சுப் பூச்சி (சீவரட். 364); a kind of poisonous insect.

செஞ்சேரா[2] *šeñjērā*, பெ (n.) இறால் வகை; spiny lobster.

செஞ்சைப்பாலை *šeñjai-p-pālai*, பெ. (n.) முல்லை; a kind of jasmine.

[செம்(மை) + செய் + பாலை]

செஞ்சொட்டி *šeñ-joṭṭi*, பெ. (n.) பூடுவகை; a plant. "செஞ்சொட்டி யடியொட்டி" (குருகூர்ப். 45).

[செம் + சொட்டி]

செஞ்சொல் *šeñ-jol*, பெ. (n.) 1. திருந்திய சொல்; correct language; felicitous words. "செஞ்சொலா னயந்த பாடல்" (தேவா. 734. 10). 2. வெளிப்படையான சொல் (குறள், 711, உரை.); word or language in its direct primary significance. 3. பல சொற்களிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட சரியான சொல்; standard term.

[செம் + சொல்]

செஞ்சொற்கழகம் *šeñ-joṟ-kaḻagam*, பெ. (n.) பிற மொழிகளில் உள்ள தொழில் நுட்பச் சொற்களுக்கு இணையான செம்மைப் படுத்திய நல்ல தமிழ்ச் சொற்களை வழங்கு வதற்கான நிறுவனம்; an institution to furnish standarised Tamil equivalents for technical terms from other languages.

[செம் + சொல் + கழகம்]

செஞ்சொன்மாலை *šeñ-joṉ-mālai*, பெ. (n.) புகழ் மாலை; eulogy. "செஞ்சொன்மாலை சூடினான்" (சீவக. 691).

[செம் + சொல் + மாலை]

செஞ்சோளம் *šeñ-jōḷam*, பெ. (n.) செந்நிறமுள்ள சோளவகை (பதார்த்த. 832); a red species of great millet.

ம. செஞ்சோளம்; க. கெஞ்சோளம்

[செம் + சோளம்]

செஞ்சோற்றுக்கடன் *šeñ-jōṟṟu-k-kaḍaṉ*, பெ. (n.) 1. அரசனிடம் பெற்றுண்ட உணவுக்காக அவன் பொருட்டு வீரன் தன் உயிரைப் போரிடைக் கொடுத்தலாகிய கடமை; duty or obligation of a soldier to lay down his life in the cause of the king who fed him. "செஞ்சோற்றுக்கட னீங்கி" (சீவக. 2240). 2. பெற்ற உதவிக்காகச் செய்யும் உதவி; a help done for the help received. பாரதப் போரில் கன்னன் துரியோதனனுக்குத் தன் உயிரைக் கொடுத்துச் செஞ்சோற்றுக் கடன் தீர்த்தான்.

[செஞ்சோறு + கடன்]

செஞ்சோற்றுதவி *šeñjōṟṟudavi*, பெ. (n.) செஞ்சோற்றுக்கடன் பார்க்க (திவா.); see *šeñjōṟṟu-k-kaḍaṉ.*

[செஞ்சோறு + உதவி]

செஞ்சோறு *šeñ-jōṟu*, பெ. (n.) 1. தீட்டாத சிவப்பு அரிசி கொண்டு வடித்த சோறு; cooked rice of red colour. "கருஞ்சோறு மற்றைச் செஞ்சோறுங் களனிழைத்தென் பயன்" (திவ். திருவாய். 4. 6:4). 2. செஞ்சோற்றுக்கடன் பார்க்க (பு.வெ.8: 30, கொளு.); see *šeñ-jōṟṟu-k-kaḍaṉ.* 3. தன்பொருட்டுப் போரில் உயிர் கொடுத்தலைக் கருதிய வீரனுக்கு அரசனளிக்குஞ் சோறு; provisions given by a king to a soldier as the price of his blood.

[செம் + சோறு]

செஞ்ஞானி *šeññāṉi*, பெ. (n.) சிறந்த அறிவாளி; a person of ripe wisdom. "செஞ்ஞானிக் குரித்தாகு நற்சீவன் முத்தி" (வேதா. சூ. 162).

[செம் + ஞானி]

வ. ஜ்ஞாநிந் (jñanin) → த. ஞானி

செட்டி[1] *šeṭṭi*, பெ. (n.) 1. வணிகன்; Vaišya or mercantile community. "முட்டில் வாழ்க்கைச் செட்டியர் பெருமகன்" (பெருங்.இலாவாண. 20:126). 2. வணிகர்களின் பட்டப்பெயர்; title of traders.

ம. செட்டி; Pkt., Pali. šeṭṭhi

செட்டி → ச்ரேஷ்டின் (Skt.)

எழுதல் = உயர்தல். எண்ணுதல் = மேன்மேல் அளவிடுதல். எட்டுதல் = உயர்தல்; உயர்ந்து தொடுதல், தொடுமளவு நெருங்குதல். எட்டி நோக்குதல் = அண்ணாந்து பார்த்தல் (பெருங். நரவாண. 8:82). எட்டம் = உயரம், தொலைவு. எடுத்தல் = உயர்த்துதல், தூக்குதல். எட்டி = 1. உயர்ந்தவன், மேலோன். 2. பண்டையரசர் வணிக மேலோனுக்குக் அளித்த பட்டம். "எட்டிக் குமர விருந்தோன் தன்னை" (மணிமே. 4:58) 3. வணிகன் (திவா.).

எட்டு → எட்டி

எட்டிப்பூ = எட்டிப்பட்டம் பெற்றவனுக்கு அரசர் கொடுக்கும் பொற்பூ. "எட்டிப் பூ பெற்று" *(மணிமே. 22:115).*

எட்டிப்புரவு = எட்டிப்பட்டம் பெற்றவனுக்கு அரசர் கொடுத்த நிலம் *(நன். 158, மயிலை, உரை).*

எட்டி → செட்டி ஒ.நோ: இளை → சிளை; ஏண் → சேண்.

செட்டி எனுஞ் சொல்லிற்கு வடமொழியாளர் காட்டும் மூவேறு மூலம் வருமாறு.

1. ச்ரீமத் (திருமான்) என்பதன் உச்சத்தரம்.

2. பிரகஸ்ம (புகழப்படத் தக்கவன்) என்பதன் உச்சத்தரம்.

3. ச்ரீ (திரு) என்பதன் உச்சத்தரம்

தென் சொற்களை வட சொல்லாக்கும் வழிகளுள் ஒன்று முதலெழுத்தின் பின் ரகரம் இடைச் செருகல்.

எ-டு :- தமிழம் - த்ரமிள; கமுகம் - க்ரமுச; திடம் - த்ருட; நட்டம் - ந்ருத்த; படி - ப்ரதி; மெது - ம்ருது; விடை - வ்ருஷ்

இம்முறையில் செட்டி என்பதை வடமொழியில், எகரம் இன்மையால் ச்ரேட்டி எனத் திரித்து அதற்கேற்பப் பொருந்தப் பொய்த்தல் எனும் உத்தி பற்றி வெவ்வேறு மூலங்காட்டுவாராயினர். செட்டி என்பது தமிழில் வணிகனை மட்டுமே குறிக்கும் என்றும் ச்ரேஷ்டின் என்பது வடமொழியிற் சிறந்தோன் என்பதனையும் குறிக்கும் என்றும், வேறுபாடறிக (வ.மொ.வ.).

செட்டி[2] *šeṭṭi*, பெ. (n.) *1.* **சிவந்த அடியையுடைய வெட்சிச் செடி;** scarlet ixora. *2.* **சேயோன் (செந்நிற முருகன்);** Murugan. "கடற்சூர் தடிந்திட்ட செட்டி" *(தேவா. 742, 10).*

[கல் → செல் → சென் → (செட்டு) → செட்டி = செம்மலர் மரவகை (வெட்சி)]

செட்டி[3] *šeṭṭi*, பெ. (n.) மல்லகசெட்டி; wrestler, prize fighter.

க., தெ. செட்டி

செட்டிகுடிகெடுத்தான் *šeṭṭi-kuḍi-keḍuttāṉ*, பெ. (n.) **அறிவனது (புதனது) தோற்றத்தை வெள்ளியின் (சுக்கிரன்) தோற்றமாகக் கருதி மயங்கிப் புறப்பட்ட செட்டி இடை வழியிற் கள்வராற் கொலையுண்ணும்படி அச்செட்டி குடும்பத்தைக் கெடுத்தவனான அறிவன் (புதன்)** *(செஞ். 10,243);* Mercury, as one who, by his appearance like Venus, misled a Chetti to start on his journey in the dead of night and runied his family by the robbers murdering him.

[செட்டி+ குடிகெடுத்தான்]

செட்டிச்சி *šeṭṭicci*, பெ. (n.) **வணிக குடிப் பெண்** *(உவ.);* woman of Vaisya (merchant) community.

ம. செட்டிச்சி; க. செட்டிதி; பட. செட்டித்தி

[செட்டி ஆ.பா. → செட்டி(ய)த்தி → செட்டிச்சி (பெ.பா.)]

செட்டிநாகம் *šeṭṭi-nāgam*, பெ. (n.) **நல்ல பாம்பு வகை** *(யாழ்அக.);* cobra.

[செட்டி + நாகம்]

செட்டிப்பிள்ளை *šeṭṭi-p-piḷḷai*, பெ. (n.) **நாட்டுக் கோட்டைச் செட்டி;** person of Nāṭṭukkōṭṭai Chetti caste.

[செட்டி + பிள்ளை]

செட்டிபிள்ளையப்பன் *šeṭṭi-piḷḷaiyappaṉ*, பெ. (n.) **கொங்கு மண்டல சதகத்தில் பாடப் பெற்ற ஒரு வள்ளல்;** a donor praised in a verse of Kongu-maṇḍala-šadagam.

[செட்டி + பிள்ளை + அப்பன்]

"இட்டமான கவிசொல்லும் பாவலர்க்கில்லை யென்று சொலற்கஞ்சிக் காட்டில் வாழ்துட்ட வன்புலித் தூற்றில் புகுந்தவன் தூயவன் கணவாள குலத்தினன், செட்டிப் பிள்ளையப் பன்றனந் தொண்டு செய்தேவி மாமலை யாதொரு பங்குள கட்டு செஞ்சடை அமரவிடங்கனார் கதித்து வாழ் பாரிபூ ரெங்கரரோ" கொங்கு மண்டல சதகம்.

செட்டிமை *šeṭṭimai*, பெ. (n.) *1.* **வணிகத் தன்மை** *(யாழ்அக.);* qualities, characteristics of the Chetti caste. *2.* **வணிகம்** *(வின்.);* trade, traffic mercantile profession.

[செட்டி → செட்டிமை]

செட்டியப்பன் *šeṭṭi-y-appaṉ*, பெ. (n.) **முருகக் கடவுளின் தந்தையான சிவன்;** Šivaṉ, as the Father of Murugaṉ. "கடற்சூர் தடிந்திட்ட செட்டியப்பனை" *(தேவா. 742, 10).*

[செட்டி + அப்பன்]

செட்டியார்குதிரை *śeṭṭiyār-kudirai*, பெ. (n.) பிள்ளை விளையாட்டு வகை (இ.வ.); a boy's game of leap-frog.

[செட்டியார் + குதிரை]

செட்டியார்மகமை[1] *śeṭṭiyār-magamai*, பெ. (n.) வணிகர்கள் நாள்தோறும் தம் வருமானத்தில் ஒரு பகுதியைத் தம் குமுகாயத்திற்கோ பொதுநன்மைக்கோ ஒதுக்கி வைத்தல்; allocation of a small portion of the income daily by the merchants for the benefit of their communties or public.

[செட்டியார் + மகமை]

மகன்மை = மகனுக்குச் செய்யும் பண உதவி போல குமுகாய மக்களுக்கு உதவும் வகையில் ஏற்படுத்தப்பட்ட ஒருவகைப் பொது நலச் சேமிப்பு. மகன்மை → மகமை ஆயிற்று. சில இடங்களில் பேச்சு வழக்காய் மகிமை என உள்ளது.

செட்டியார்மகமை[2] *śeṭṭiyār-magamai*, பெ. (n.) செட்டியிறை (I.M.P.Sm.91) பார்க்க; see *śetti-y-iṟai*.

செட்டியிறை *śeṭṭi-y-iṟai*, பெ. (n.) வணிகர்களிடம் வாங்கப்பட்ட பழைய வரி; an ancient tax on traders.

[செட்டி + இறை. இறை = வரி]

செட்டிறை *śeṭṭiṟai*, பெ. (n.) செட்டியிறை பார்க்க; see *śeṭṭi-y-iṟai*.

[செட்டியிறை → செட்டிறை]

செட்டு[1] *śeṭṭu*, பெ. (n.) கொங்கு நாட்டுக் குயவர் சமுதாயத்தின் சிறுகுழுத் தலைவர்; a leader of a small group of Kulalar of Kongu country.

[செட்டி → செட்டு]

கொங்கு நாட்டுக் குயவர்குடி 24 நாடாகப் பிரிந்துள்ளது. ஒவ்வொரு நாட்டுக்காரரும் தம்முள் பங்காளிகள். பிறநாட்டில் தான் மணஉறவு கொள்வர். ஒவ்வொரு நாட்டுக்காரரும் 20 அல்லது 30 குழுவாக இயங்குகின்றனர். இதில் 2 அல்லது 3 குழுக்களுக்கு ஒரு செட்டுக்காரர் இருப்பார். திருமணம், பிற சிறப்பு நிகழ்ச்சிகள் உறுதி செய்ய இவரிடம் உரிய கட்டணம் செலுத்தி ஒப்புதல் பெற வேண்டும். குடி வழக்குகளில் இவர் முறைமை வழங்குவார். சிறப்பு நிகழ்ச்சிகளில் கட்டில் மேல் அமரவைத்துப் பல சிறப்புகள் செய்யப்படுவார், குயவர் குடியில் மதிப்புறு மாந்தர்.

செட்டு[2] *śeṭṭu*, பெ. (n.) 1. வாணிகம் (யாழ்.அக.); trade, traffic. 2. சிக்கனம்; economy, thrift. "பலங்கொண்ட செட்டுமக்குப் பலித்தது" (குமர.பிர.மதுரைக்.7). வரவுக்குத் தக்க செலவு செய்து செட்டாகக் குடும்பம் நடத்தத் தெரியாதவர். 3. கஞ்சத்தனம்; miserliness, stinginess.

ம. செட்டு

[செட்டி → செட்டு]

செட்டுக்கட்டு *śeṭṭu-k-kaṭṭu*, பெ. (n.) சிக்கனம் (உ.வ.); carefulness, thrift.

[செட்டு + கட்டு]

செட்டுக்காரர்[1] *śeṭṭu-k-kārar*, பெ. (n.) கோயம்புத்தூரில் வாழும் தேவாங்க இனத்தார் (E.T. ii, 155); Dēvāṅgas of Coimbatore.

[செட்டு + காரர்]

செட்டுக்காரர்[2] *śeṭṭu-k-kārar*, பெ. (n.) 1. செட்டுப் பொறுப்பை வகிப்பவர்; one who has the responsibility of śettu. 2. செட்டுப் பொறுப்பை வகிப்பவருக்கு உரிய பட்டம்; the title of the person who bears the responsibility of śettu.

[செட்டு + காரர்]

செட்டுக்காரன் *śeṭṭu-k-kāraṉ*, பெ. (n.) 1. அளவாய்ச் செலவிடுவோன் (உ.வ.); thrifty person, one careful in spending. 2. கஞ்சன் (வின்.); niggard, hard dealer.

[செட்டு + காரன்]

செட்டுப்பொட்டா-தல் *śeṭṭu-p-poṭṭā-*, 6 செ.குவி. (v.i.) வணிகம் சிதைதல்; to fail, as business. அவன் வணிகம் செட்டுப் பொட்டாய் விட்டது (வின்.).

[செட்டு + பொட்டு + ஆ-]

செட்டுமை *śeṭṭumai*, பெ. (n.) செட்டு[2] பார்க்க; see *śeṭṭu*[2].

[செட்டு → செட்டுமை]

செட்டை[1] *śettai,* பெ. (n.) 1. சிறகு (யாழ்.அக.); wing, feather, plumage. கோழி செட்டை அடித்துப் பறந்தது. 2. மீன்சிறை (வின்.); fin. 3. தோட்பட்டை (யாழ்.அக.); shoulder blade.

தெ. செட்டுப

[தோள் → தேள் → சேள் → செட்டை]

செட்டை[2] *śettai,* பெ. (n.) ஆடைக் கரைவகை; short lace-border in cloth.

[சிட்டை → செட்டை]

செடல் *śedal,* பெ. (n.) செடில் (வின்.) பார்க்க; see *śedil.*

செடி[1] *śedi,* பெ. (n.) 1. மரத்தை விடக் குறைவாக வளரக் கூடிய, மெல்லிய தண்டைக் கொண்ட சிறுபூடு; shrub. கத்தரிச் செடி. 2. புதர் (பிங்.); shrubbery, bush. 3. நெருக்கம், அடர்த்தி (சூடா.); denseness. "செடிகொள் வான்பொழில் சூழ்" (திருவாச. 29:5).

ம. செடி; க. கிட, கிடு, செட்டு; தெ. செட்டு; து., குட. கிட; பட. கிடு; கோத. கிட்வ்; துட. கிட்வ்; கொலா. செட்ட், செட்ட்; நா. செட்ட (மரம்)

இ. ஜாட் (d) = மரம்

[சென் → செழி → செடி = இலை கிளையடர்ந்த சிறு நிலைத்திணை வகை]

செடி[2]**-த்தல்** *śedi-,* 4 செ.கு.வி. (v.i.) கொடி தழைகள் அடர்தல் (யாழ்ப்.); to grow bushy, shoot out, as sprays, foliage.

ம. செடிக்குக

[சென் → செழி → செடி - செடி-த்தல் = அடர்தல் (வ.மொ.வ.)]

செடி[3] *śedi,* பெ. (n.) 1. அறங்கடை (பாவம்.); sin. "செடியேறு தீமைகள்" (திருவாச. 40:2). 2. தீமை (சூடா.); vice, evil. 3. துன்பம்; trouble, distress. "செடிபடுநோ யடியாரைத் தீர்ப்பார் போலும்" (தேவா. 44, 7). 4. தீய நாற்றம்; bad odour, stench. "செடிபடுந் துணியுடைச் சீரை சுற்றினான்" (திருவாலவா. 54:19). 5. காய் விழுந்த மகளிர் தீண்டுதலால் குழந்தைகளுக்கு நேர்வதாகக் கருதப்படும் நோய்வகை; a disease of children, believed to be caused by the approach of aborted women. குழந்தைக்குச் செடி தட்டியிருக்கிறது (நெல்லை.). 6. இழிவு; meanness. "செடி நாய் குரைக்க" (தேவா. 991,7). 7. பதனழிந்தது (யாழ்.அக.); that which is decayed, faded, spoiled, as food, flower, etc.,

ம. செடி; தெ. செடு, செட்ட; து. செடி.

[சிதை → செதை → செடி. சிதை = சிதைத்தல்]

செடி[4] *śedi,* பெ. (n.) ஒளி(பிங்.); light, splendour. "செடிச்சிறு செம்பொற் கிண்ணம்" (இரகு. தேனுவ. 112).

[சுல் → செல் → செள் → செழி → செடி]

செடிக்கள்ளி *śedi-k-kalli,* பெ (n.) சதுரக்கள்ளி (இ.வ.); square spurge.

[செடி + கள்ளி]

செடிக்காடு *śedi-k-kādu,* பெ. (n.) புதர்; low thicket, jungle.

[செடி' + காடு]

செடிக்குடிபுக்கி *śedi-k-kudi-pukki,* பெ (n.) நாகரவண்டு (மூ.அ.); bee.

[செடி + குடி + புக்கி. புகு → புக்கு → புக்கி = புகுவது அல்லது புகுந்தது.]

செடிக்கொல்லி *śedi-k-kolli,* பெ. (n.) களைச் செடிகளை அழிக்கும் மருந்து; herbicide.

[செடி' + கொல்லி.]

செடிங்காடு *śedi-n-gādu,* பெ. (n.) செடிக்காடு (வின்.) பார்க்க; see *śedi-k-kādu.*

[செடி + காடு. செடிக்காடு → செடிங்காடு]

செடிச்சி *śedicci,* பெ. (n.) இழிந்தவள் (யாழ்ப்.); bad woman, strumpet. "செடிச்சிகள் மன்றி விடைபலி தேரப் போவது வாழ்க்கையே" (தேவா. 991, 7).

தெ. செடிய

[செடி[3] → செடிச்சி]

செடிசீ-த்தல் *śedi-cī-,* 4 செ.கு.வி. (v.i.) காடுவெட்டுதல்; to clear jungle. 'செடிசீத்துக் குடியேற்றினபடை வீடுகளை' (ஈடு, 1. 7:4).

[செடி' + சீ-.]

செடியன் *šeḍiyaṉ*, பெ. (n.) இழிந்தோன் (யாழ்.அக.); bad, vicious fellow.

[செடி³ → செடியன்]

செடில் *šeḍil*, பெ. (n.) வேண்டுதலுக்காக முதுகின் தோலிடைக் கொக்கியைச் செலுத்தி அந்தக் கொக்கியை அதற்கென நாட்டப் பெற்ற நீண்ட கழையில் மாட்டி ஒருவனைத் தூக்கியாட்டுங் கருவி; a mechanism consisting of a standing post with a long sweep at its top, on one end of which a person, under a vow, is suspended by a hook fastened into the integuments of his back and raised high in the air, is swung around.

க., தெ. சிடி.

[செடி³ → செடில்]

செடிலாட்டம் *šeḍil-āṭṭam*, பெ. (n.) மாரியம்மன் வேண்டுதலுக்காகச் செடிலில் தொங்கியாடும் ஆட்டம்; hook-swinging in honour of Māriyammaṉ.

[செடில் + ஆட்டம்]



செடிலாட்டம்

செடிலூசல் *šeṭil-ūšal*, பெ. (n.) செடிலாட்டம் பார்க்க; see *šeḍil-āṭṭam*.

[செடில் + ஊசல்]

செண் *šeṇ*, பெ. (n.) மகளிர் கொண்டை; tuft, tresses done into a knot. "செண்ணியற் சிறுபுறம்" (அகநா. 59).

[செல் → செள் → செண் (மு.தா.171)]

செண்டலரி *šeṇḍalari*, பெ. (n.) அடுக்கலரி; double-flowred oleander.

[செண்டு¹ + அலரி]

செண்டாடு¹-தல் *šeṇḍāḍu-*, 5 செ.கு.வி. (v.i.) பந்தாடுதல்; to play ball.

க. செண்டாடிசு; தெ. செண்டாடு; து. செண்டாடுனி; பட. செண்டாடு

[செண்டு¹ + ஆடு-.]

செண்டாடு²-தல் *šeṇḍāḍu-*, 5 செ.குன்றாவி. (v.t.) நிலை குலைத்தல்; to demolish, ruin. "தக்கன் பெருவேள்வி செண்டாடுதல் புரிந்தான்" (தேவா. 908, 9).

க. செண்டாடிசு; தெ. செண்டாடு; து. செண்டாடுனி.

[செண்டு¹ + ஆடு-.]

செண்டாய்தன் *šeṇḍāydaṉ*, பெ. (n.) செண்டாய்தம் உடைய ஐயனார் (பிங்.); Aiyaṉār, as bearing the weapon šeṇḍu.

[செண்டு¹ + ஆய்தன்]

செண்டு¹ *šeṇḍu*, பெ. (n.) 1. கட்டப்பட்ட மலர்த்தொகுப்பு பூக்கற்றை; a kind of bouquet. "செண்டாடல் பாடி" (திருவாச. 9:18). 2. விளையாட்டில் பயன்படுத்தும் பந்து; ball used in games. "செண்டோ முலை" (தனிப்பா ii, 22:48). 3. குதிரைஓட்டும் சவுக்கு; horse-whip. "செண்டு கொண்டு கரிகாலன்" (கலிங்.165). 4. குதிரை முதலிய வற்றைப் பழக்கிச் செலுத்தும் வையாளி வீதி; குதிரையைப் பயிற்றும் சாலை; horse training area; race-course. "செண்டுசேர் விடையினான்" (தேவா. 35, 2). 5. பந்தடி மேடை (யாழ்.அக.); terrace for ball-game. 6. நூற்செண்டு (வின்.); ball of thread. 7. தீவட்டிச்செண்டு (இ.வ.); ball of rags used in torch. 8. கொடி; flag.

க., தெ., து., செண்டு

[செள் → செண் → செண்டு (மு.தா. 171)]

மணவேளையின்போது மணமக்கள் கையில் கொள்ளும் கட்டிய பூங்கொத்து, பூச்செண்டு. தீவட்டி, குதிரைச் சவுக்கு அனைத்தும் கையில் கொள்வன. குதிரையைப் பழக்கும் இடம், பந்தடி மேடை ஆகியவை இடஞ் சார்ந்தன. முதலில் பூச்சுற்று செண்டாகியது; பின்னர் துணிச்சுற்று (பந்து) செண்டாகியது. கொடியையும் செண்டு என்றனர்.

செண்டு[2] *śeṇḍu*, பெ. (n.) *1.* கூர்மை (அக.நி.); sharpness. *2.* மழு; a kind of axe.

[சுள் → செள் → செண்டு (மு.தா.228)]

மரத்தைச் செதுக்குவதற்கு உரிய கோடரி மனிதர்களையும் வெட்டிச் (செதுக்குவதில்) சிதைப்பதற்கு உரிய மாற்றம் பெற்றது; கூர்முனையையுடையது.

செண்டுகோல் *śeṇḍu-kōl*, பெ. (n.) பந்தடிக்குங் கோல்; a kind of bat used in ball-game. "சுரிகையுந் தெறிவில்லுஞ் செண்டுகோலும்" *(திவ்.பெரியாழ். 3. 4:3).*

[செண்டு + கோல்]

செண்டுமல்லிகை *śeṇḍu-malligai*, பெ. (n.) குடமல்லிகை; Arabian jasmine.

மறுவ. குண்டு மல்லிகை

ம. செண்டு மல்லிக; து. செண்டுமல்லிகெ.

[செண்டு' + மல்லிகை]

செண்டுவாத்து *śeṇḍu-vāttu*, பெ. (n.) நீலமும் பசுமையும் தோய்ந்த கருப்புநிற உடலையும் வெண்மையான மார்பையும் வயிற்றையும் கொண்ட பறவை; comb duck.

தமிழ்நாட்டின் வடக்குப் பகுதியில் காணப்படுகிறது. ஆண் பறவையின் அலகின் நெற்றியை ஒட்டிய பகுதியில் குமிழ் அமைந்திருக்கும். பெண் பறவை ஆணை விட சிறியது.

செண்டுவெளி *śeṇḍu-veḷi*, பெ. (n.) அரண்மனையைச் சார்ந்துள்ள குதிரையைப் பழக்கும் இடம்; open place adjacent to a palace, used for training and riding horses. "வெம்பரியூர் செண்டுவெளி பார்த்து" *(தெய்வீகவுலா. 23).*

[செண்டு + வெளி]

செண்டேறு-தல் *śeṇḍēṟu-*, 5 செ.கு.வி. (v.i.) உலாவரப் புறப்படுதல்; to promenade. "அழகு செண்டேறக் கடவதாயிறே யிருப்பது" *(திவ். திரு. நெடுந். 6, பக்.50).*

[செண்டு' + ஏறு-.]

செண்டை[1] *śeṇḍai*, பெ. (n.) கேரள மாநிலத்தில் அதிகம் பயன்படும் ஒருவகைக் கொட்டிசைக் கருவி; a kind of large drum. "திமிலை செண்டை குறடு" *(கம்பரா. பிரமாத். 5).*

ம. செண்ட; து. செண்டெ



செண்டை

செண்டை[2] *śeṇḍai*, பெ. (n.) இரட்டை (இ.வ.); pair, set.

க. சண்டி; தெ. சண்ட

[சுள் → செள் → செண்டு → செண்டை (வ.மொ.வ.)]

செண்டைவரிசை *śeṇḍai-variśai*, பெ. (n.) இசைப்பண் வரிசை; serial combination of the notes of the scale doubled, sung as exercise.

[செண்டை² + வரிசை]

சச, ரிரி, கக என ஏழிசைகளும் இரட்டை, இரட்டைகளாய் வருதல் (மு.தா. 192)

செண்ணம் *śeṇṇam*, பெ. (n.) *1.* நுண்டொழில்; fine, delicate work. "செண்ண வஞ்சிலம் பேறுதுக ளவித்து" *(சீவக. 1333). 2.* அழகிய வடிவு; beautiful form. "செண்ணக் காஞ்சனை" *(பெருங். உஞ்சைக். 3:75).*

மறுவ. நுண்வேலை

[சன்னம் → சண்ணம் → செண்ணம்]

செண்ணிகைக்கோதை *śeṇṇigai-k-kōdai*, பெ. (n.) பூமாலை வகை; a kind of garland. "செண்ணிகைக் கோதை கதுப்போ டியல" *(பரிபா. 21: 56).*

[கண்ணி (=பூமாலை) → செண்ணி → செண்ணிகை + கோதை]

செண்ணு-தல் *śeṇṇu-*, 5 செ.குன்றாவி. (v.t.) அழகுபடுத்துதல் (அகநா. 59, உரை); decorate, dress up.

[செள் → செண் → செண்ணு-.]

செண்பகக்குளிகை *šeṇbaga-k-kuḷigai*, பெ. (n.) *பழைய காசு வகை (புது.கல். 261);* an ancient coin.

செண்பகம்[1] *šeṇbagam*, பெ. (n.) *மணமிக்க மஞ்சள் நிறப் பூப்பூக்கும் ஒருவகை மரம்;* champak. *"பெருஞ் செண்பகமும் பிண்டியும் பிரம்பும்" (பெருங். உஞ்சைக். 50: 25).*

ம. செண்பகம், செம்பகம்

[சண்பகம் → செண்பகம்]

சண்பக மரம் வெப்பமண்டலத்தைச் சார்ந்தது. வடமொழியில் 'சம்பகா' என்று ஆளப்படுகிறது.



செண்பகம்

செண்பகம்[2] *šeṇbagam*, பெ. (n.) செம்போத்து *பார்க்க;* see *šem-bōttu.*

H., U. pue.

செண்பகவருக்கை *šeṇbaga-varukkai*, பெ. (n.) *பலாவகை (யாழ்.அக.);* a species of jack fruit tree.

செத்தல் *šettal*, பெ. (n.) *1. சாகை (யாழ்ப்.);* dying. *2.* தேங்காய் நெற்று *(யாழ்ப்.);* dry, over-ripe coconut on the tree. *3.* உலர்ந்து சுருங்கிய பனம்பழம், மிளகாய், வாழை முதலியன; shrivelled palmyra or other fruit; dried chillies, plantain trees, vegatbles or grass. *4.* ஒல்லி *(வின்.);* emaciated person; leán, skinny animal. *5.* மெலிவு; leanness. செத்தற் பிள்ளை *(யாழ்.அக.). 6.* பதர் (தெ.க.தொ. 5, 84); chaff, withered.

[சா → (சத்தல்) → செத்தல்]

செத்தல்மிளகாய் *šettal-miḷagāi*, பெ. (n.) *மிளகாய் வற்றல் (யாழ்ப்.);* dried chilly.

[செத்தல் + மிளகாய்]

செத்தலி *šettali*, பெ. (n.) *1.* எலும்புந் தோலுமான பெண் *(யாழ்ப்.);* lanky or skinny woman. *2.* மெலிகை அல்லது இற்றுப் போகை; leaning or becoming to powerless.

[செத்தல் → செத்தலி]

செத்தலை *šettalai*, பெ. (n.) *உழவுக் கணக்கு;* cultivation accounts. செத்தலை யிலே புளித்தரவு எழுதவும்.

[செய் + தலை - செத்தலை]

செத்தவீடு *šetta-vīḍu*, பெ. (n.) இழவு வீடு *(உவ.);* mourning house.

மறுவ. துட்டி வீடு, இறப்பு வீடு.

[செத்தல் + வீடு - செத்தவீடு]

செத்து[1]**-தல்** *šettu-*, 5 செ.குன்றாவி. (v.t.) செதுக்குதல்; to cut with adze, chisel, pare off. "மனத்தையுங் குழையச் செத்து மாண்பினன்" *(சீவக. 1578).*

ம. செத்துக; க., பட. கெத்து; தெ. செக்கு

[செதுக்கு → செத்து-.]

செத்து[2] *šettu*, வி.எ. (adv.) *1.* கருதி; having thought. "அரவுநீ ருணல் செத்து" *(கலித். 45). 2.* ஒத்து (தொல். பொருள். 286, உரை); having resembled. *3.* ஐயம் *(யாழ்.அக.);* doubt.

[செய் → செ → செத்து (மு.தா. 216)]

செத்து[3] *šettu*, பெ. (n.) செதுக்குகை; cutting, chiseling. 'வாய்ச்சியினது வாயைச் சேர்த்தி ஒரு மயிர்க்கு ஒரு செத்தாகக் செத்தினாலும்' *(சீவக. 2825, உரை).*

[செதுக்கு → செத்து]

செத்துபனை *šettu-paṉai*, பெ. (n.) கள்ளிறக்கும் பனை *(நாஞ்.);* toddy-yielding palmyra.

[செத்து + பனை]

செத்துபாட்டம் *šettu-pāṭṭam*, பெ. (n.) பனையிற் கள்ளிறக்கக் கொடுக்கும் வரி *(நாஞ்.);* tax paid for tapping palmyra.

[செத்து' + பாட்டம்]

செத்துப்பிழை-த்தல் *šettu-p-piḻai-*, 4 செ.கு.வி. (v.i.) நெருக்கடிக்கு உள்ளாகி மீள்தல்; have a narrow escape; survive a crisis. காமாலை நோயால் அவதிப்பட்டுச் செத்துப் பிழைத்தான் என்று தான் நினைக்க வேண்டும்.

[செத்து + பிழை-.]

செத்துவம் *šettuvam*, பெ. (n.) பேய்; spirit. "செத்துவங்க டாக்கி" (நீலகேசி, 112).

[சா → (சத்துவம்) செத்துவம்]

செத்துவிருப்பாநெல் *šettu-viruppā-nel*, பெ. (n.) நெல்வகை; a kind of paddy.

செத்தெழுத்து *šetteḻttu*, பெ. (n.) ஒற்றெழுத்து (வின்.); consonant.

மறுவ. மெய்யெழுத்து

[செத்தல் + எழுத்து]

உயிரற்ற மெய்யெழுத்து

செத்தை *šettai*, பெ. (n.) 1. கூரை வேய்வதற்கான தட்டை, புல், சருகு முதலியன; roofing materials like leaves, straw etc. 2. குப்பை; dry rubbish, dried vegetable matter, as grass, leaves, etc., "செத்தையேன் சிதம்பநாயேன்" (தேவா. 996, 1). 3. வைக்கோல் (இ.வ.); hay, straw. 4. ஓலைவேலி (யாழ்ப்.); hedge or fence of palm leaves. 5. அழுகின தசை; putrefied flesh. மாட்டின் காலிற் செத்தை வைத்திருக்கிறது (நாஞ்.). 6. கன்று ஈனிய பிறகு மாடு வெளியிடும் நஞ்சு; pleasanta. 7. வெண் சாம்பல் நிறமுள்ள கடல் மீன் வகை; sea-fish, silvery grey.

ம. செற்ற; க. செத்தெ; தெ. செத்த

[சா → செத்து → செத்தை]

செத்தைகட்டு-தல் *šettai-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) பழத்துக்கு ஓலை மறைவு கட்டுதல் (யாழ்ப்.); to cover fruit with olas, screening it from coveting or evil eyes.

[செத்தை + கட்டு-.]

செத்தைகுத்து-தல் *šettai-kuttu-*, 5 செ.கு.வி. (v.i.) மதிலில் முளைக்குஞ் செடிகளைக் களைதல்; to root out parasitic plants on walls. "நித்தியப்படி திருமதில் கோபுரங்களிலே செத்தை குத்தி வைக்கிறதும்" (கோயிலொ. 63).

[செத்தை + குத்து-.]

செத்தைமேய்-தல் *šettai-mēy-*, 1 செ.குன்றாவி. (v.t.) கூரையைக் காய்ந்த தழை வைக்கோல் முதலியவற்றால் மூடுதல் (வின்.); to cover roof with dried leaves, hay etc.

[செத்தை + மேய். வேய் → மேய்]

செத்தைவேர் *šettai-vēr*, பெ. (n.) நெல் வயலில் முளைக்குங் களை வகை (நாஞ்.); a kind of weed growing in paddy-fields.

[செத்தை + வேர்]

செத்தோர்ப்புணர்-த்தல் *šettōr-p-puṇar-*, 2 செ.கு.வி. (v.i.) இறந்தோரை உயிர் பெற்றெழச் செய்தல்; to restore to life, resuscitate. "செத்தோர்ப் புணர்க்கும் விச்சையொடு" (பெருங். மகத. 4:91).

[செத்தோர் + புணர்-.]

புணர்த்தல் = உயிர் பெற்றெழச் செய்தல்

செதில் *šedil*, பெ. (n.) 1. மீனின் உடல் மேலுள்ள காப்பு உறுப்பு; fish-scale. "பல கடலுஞ் செதிலடங்க ... மீன்வடி வெடுத்தாய்" (அழகர்கலம். 1). 2. மரப்பட்டை (வின்.); outer bark of trees.

ம. செதும்பல்

[செது → செதில். சில் → சிலு → செலு = சிறு செதிள். செலு → செது]

செதிலடுக்கு *šedil-aḍukku*, பெ. (n.) மீனின் மேல் செதில் செதிலாக உள்ள அமைப்பு; lamella.

[செதில் + அடுக்கு]

செதிள் *šediḷ*, பெ. (n.) 1. செதில்,1 பார்க்க; see *šedil*,1. 2. தூசி; dust. "நிலஞ்செதி ளெடுக்கு மான்றேர்" (சீவக. 2915). 3. மரப்பட்டை (தொல்.பொருள்.643); bark of a tree. 4. ஓணான் போன்றவற்றின் உடல்மேல் செறிவாக மூடியிருக்கும் விறைப்பான தோல் அடுக்கு; skin.

ம. செதல்

[சில் → சிலு → செலு → செது → செதிள்]

செதிள்வயிற்றுமரங்கொத்தி *šediḷ-vayiṟṟu-maraṅ-gotti*, பெ. (n.) புல் பச்சை நிற உடலும் மஞ்சள் நிறப்புட்டமும் கொண்ட பறவை; little scaly-bellied green wood pecker.

[செதிள்வயிற்று + மரங்கொத்தி]

ஆணின் உச்சந் தலையும், தலைக் கொண்டையும் குங்குமச் சிவப்பாக இருக்கும். பெண்ணின் உச்சியும் கொண்டையும் கருப்பு நிறமானவை. மேற்கு, கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் காணப்படுகிறது.

செதிளெடு-த்தல் *śedil-edu-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. *தோலையுரித்தல்;* to skin off. அங்கே போனால் உன் காலைச் செதிளெடுத்து விடுவேன். 2. *முற்றும் போக்குதல்;* to remove utterly. "கரு நிறஞ் செதிளெடுப்பான் கருணை செய்கென" *(காஞ்சிப்பு. வீராட்ட 43.)*

[செதிள் + எடு]

செது-த்தல் *śedu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. *ஒளி முதலியன மழுங்குதல்;* to get blunt; to lose lustre. செதுக்கணார *(புறநா. 261:9).* 2. *வற்றி யொடுங்குதல்* (புறநா. 261:9, உரை); to shrink. 3. *சோர்தல்;* to be weak. "செதுகாற் குரம்பை" *(அகநா. 63).*

[செத்தல் → செது-த்தல். செத்தல் = ஒல்லி, மெலிதல்]

செதுக்கடவேலை *śedukkaḍa-vēlai*, பெ. (n.) *அணிகலன்களில் மணிபதிக்குந் தொழில்;* work of inlaying gem in gold jewels by setting gold leaf on it and chiselling.

[செதுக்கு → செதுக்கடவேலை]

செதுக்கணார்-தல் *śedu-k-kaṇār-*, 3 செ.கு.வி. (v.i.) விஞ்சியிருத்தல் (புறநா. 261: 9, உரை); to be excessive.

மறுவ. மீதி, மிஞ்சுதல், எஞ்சுதல்

[செது + கண் + ஆர்-.]

செதுக்கி *śedukki*, பெ. (n.) செதுக்குப்பாறை பார்க்க; see *śedukku-p-pārai.*

[செதுக்குப்பாரை → செதுக்கி]

செதுக்கு[1]-தல் *śedukku-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *புல் முதலியன செதுக்குதல்;* to cut off a surface, as in cutting grass; to pare, shave off. 2. *மர முதலியன செதுக்குதல்;* to plane, how with an adze, chisel. கட்டையைச் செதுக்கிக் கத்திக்குப் பிடி போட்டான்.

ம. செதுக்கு; க., பட. கெத்து; தெ. செக்கு

[செது → செதுக்கு-.]

செதுக்கு[2] *śedukku-*, 5 செ.கு.வி. (v.i.) செது,2 பார்க்க; see *śedu-2.*

[செது → செதுக்கு-.]

செதுக்கு[3] *śedukku*, பெ. (n.) 1. *செதுக்குகை;* paring, cutting, chiselling. 2. *பூ முதலியவற்றின் வாடல்;* that which is faded, dried, as flowers. "செம்பூத் தூய செதுக்குடை முன்றில்" *(பெரும் பாண். 338).* 3. *சேறு (அக.நி.);* mud, mire.

[செது → செதுக்கு]

செதுக்குப்பாரை *śedukku-p-pārai*, பெ. (n.) *புல் மண் முதலியன செதுக்குங் கருவி;* tool for cutting grass, soil, etc.

[செதுக்கு + பாரை]

செதுக்குவேலை *śedukku-vēlai*, பெ. (n.) 1. *மிகையாயுள்ளவற்றைக் கழித்துச் சீர்படுத்தும் கலைத்தொழில்;* the art of trimming the excess portion for beautification. 2. செதுக்கடவேலை பார்க்க; see *śedukkaḍa-vēlai.*

[செதுக்கு + வேலை]

செதுக்குளி *śedukkuḷi*, பெ. (n.) 1. *தச்சனின் உளி;* carpenter's chisel. 2. *மணி பதித்தற்குரிய தட்டான் கருவி;* gold-smith's chisel, used in enchasing.

[செதுக்கு + உளி]

செதுக்கை *śedukkai*, பெ. (n.) *தழும்பு (பிங்.);* scar, cicatrice.

[செது → செதுக்கை]

செதுகு[1]-தல் *śedugu-*, 5 செ.கு.வி. (v.i.) *தவறுதல்;* to err, as in aim; to go wrong. "செதுகாப்படை தொடுப்பேன்" *(கம்பரா. நிகும்ப. 130).*

[செது → செதுகு-.]

செதுகு[2] *śedugu*, பெ. (n.) 1. *கூளம்;* rubbish, chaff. "குலால னானவன் மண்ணும் நீரும் செதுகுங் கூட்டி *(ஈடு, 6. 9:1).* 2. *சருகு;* dried leaves. "செதுகையிட்டுப் புகைக்க அமையும்" *(ஈடு, 1. 6:1).* 3. *தீங்கு;* evil. "செதுகறா மனத்தார்" *(தேவா. 381, 9).*

ம. செதுக்கு; க. சத்தெ, சதெ, செதாக; தெ. செத்த; து. சதெ

[செத்தை → செது → செதுகு]

செதுகை *śedugai*, பெ. (n.) *தீமை;* evil. "செதுகைப் பெருந்தானவர்" *(கம்பரா. நாகபா. 22)*

[செதுகு → செதுகை]

செதும்பல் *šedumbal*, பெ. (n.) செதும்பு,1 பார்க்க; see *šedumbu,1*. "செதும்பற் றாமரைச்செவ்விதழ் போல" *(பெருங். உஞ்சைக். 40: 323)*.

[செதும்பு → செதும்பல்]

செதும்பு¹-தல் *šedumbu-*, 5 செ.கு.வி. (v.i.) ஈரம் உறைத்தல்; to become damp and moist, as from excessive sprinkling of water; to be soaked. செதும்ப நீர்தெளி (இ.வ.).

செதும்பு² *šedumbu*, பெ. (n.) 1. சேறு; mud, mire. "செகுத்தற் றீம்பால் செதும்பு படப் பிலிற்றி" *(பெருங். உஞ்சைக். 49: 112)*. 2. குறைவாக ஓடும் நீர்; thin current of water, as of rivers in summer. "இன்னுரைச் செதும்பரற்றுஞ் செவ்வியுள்" *(கலித். 48)*.

[செதுக்கு² → செதும்பு]

செதுமகவு *šedu-magavu*, பெ. (n.) இறந்து பிறக்கும் பிள்ளை, சாபிள்ளை; still-born child. "செதுமகப் பலவும் பெற்று" *(சீவக. 1124)*.

[(செத்த) செது + மகவு]

செதுமொழி *šedu-moli*, பெ. (n.) தீ மொழி, பொல்லாச் சொல்; evil words. "செதுமொழி சீத்த செவி" *(கலித். 68)*.

[செது + மொழி]

செதுவல் *šeduval*, பெ. (n.) பட்டுப் போகை; withering, drying. "செதுவன் மரத்திற் சேக்கை யாதலின்" *(பெருங். மகத. 15:20)*

[செது¹ → செதுவல்]

செந்தட்டி *šen-datti*, பெ. (n.) செந்தொட்டி¹ பார்க்க; see *šen-dotti,¹*.

செந்தட்டு *šen-dattu*, பெ. (n.) 1. தன்மேல் விழும் அடியைத் தடுக்கை; parrying. 2. செயல் வெற்றி கிட்டுமாறு செய்யும், மறைந்து கொள்ளல் முதலிய செயற்பாடு; scheme; knavish contrivance to secure an object, as evading a creditor or the tax gatherer.

[செம்(மை) + தட்டு - செந்தட்டு]

செந்தண்டீன்(னு)-தல் *šendandīn [nu]-*, 5 செ.கு.வி. (v.i.) நோயுற்ற கதிரை ஈனுதல் (யாழ்ப்.); to put forth blighted ears.

[செந்தண்டு + ஈன்(னு)]

செந்தண்டு *šendandu*, பெ. (n.) 1. செந்தண்டுக் கீரை பார்க்க; see *šendandu-k-kīrai*. 2. நோயாற் சிவந்த கதிர் (யாழ்ப்.); red spikes of blighted paddy. 3. பவளம் (யாழ்.அக.); coral.

ம. செந்தண்டு

[செம்(மை) + தண்டு]

செந்தண்டுக்கீரை *šendandu-k-kīrai*, பெ. (n.) செந்நிறமுள்ள கீரைவகை (வின்.); red spinach.

ம. செந்தண்டுசீர

[செந்தண்டு + கீரை]

செந்தணக்கு *šendanakku*, பெ. (n.) 1. முட்டைக் கோங்கு எனும் மரம்; whirling nut. 2. கோங்கிலவு மரவகை; false tragacanth tree. 3. வெண்டாளி; white catamaran tree.

ம. செந்தணக்கு

[செம்(மை) + தணக்கு]

செந்தணல் *šen-danal*, பெ. (n.) கனிந்து கொண்டிருக்கும் அழல் (உ.வ.); glowing red-hot cinder.

ம. செந்தணல்; க. கெந்தணலு

[செம்(மை) + தணல். தழல் → தணல்]

செந்தணற்கொடி *šen-danar-kodi*, பெ. (n.) செந்தழற்கொடி பார்க்க; see *šen-dalar-kodi*

[செந்தணல் + கொடி]

செந்தம் *šendam*, பெ. (n.) எழுத்தாணி யென்னும் பூடு (மலை.); style plant.

ம. செந்தம்

செந்தமிழ் *šendamil*, பெ. (n.) கலப்பற்ற தூய தமிழ்; refined, standard Tamil, free from all corruptive elements, opp. to kodu-n-tamil "செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி" *(தொல். சொல். 398)*.

ம. செந்தமிழ்

[செம்(மை) + தமிழ்]

செந்தமிழ்நாடு *šen-damil-nādu*, பெ. (n.) 1. செந்தமிழ் வழங்கும் பகுதி; portion where standared Tamil is in vogue. 2. வைகையாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும் மருவூரின் மேற்கும் கருவூரின் கிழக்கும் ஆகிய செந்தமிழ் வழங்கும் நிலம் (தொல்.சொல். 400, உரை);

the country of the standard Tamil, said to be bounded on the south by the river Vaigai on the north by the river Mrudai on the east by Maruvūr, and on the west by Karuvūr.

[செந்தமிழ் + நாடு]

செந்தமிழ்நிலம் *šen-damil-nilam*, பெ. (n.) செந்தமிழ்நாடு பார்க்க; see *šen-damil-nādu*. "செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி" *(தொல். சொல். 398)*

[செந்தமிழ் + நிலம்]

செந்தமிழிலக்கணம் *šentamil-ilakkaṇam*, பெ. (n.) வீரமாமுனிவரால் இயற்றப்பட்ட செந்தமிழ் மொழியின் இலக்கணம்; a grammar of classical Tamil by Beschi.

[செந்தமிழ் + இலக்கணம்]

செந்தயிர் *šen-dayir*, பெ. (n.) செந்நிறமுள்ள கட்டித்தயிர்; reddish curds. "வெண்டயிருஞ் செந்தயிரும் விராய்" *(கலிங். 506)*.

[செம்(மை) + தயிர்]

செந்தரா *šen-darā*, பெ. (n.) கசப்புள்ள மருந்துக்கொடி வகை *(பதார்த்த. 581)*; a kind of bitter climber.

[செம் → தரா]

செந்தருப்பை *šen-daruppai*, பெ. (n.) நச்சுப் புல்வகை *(மலை.)*; a kind of poisonous grass.

[செம்(மை) + தருப்பை]

செந்தரை *šendarai*, பெ. (n.) கரை விளங்கு மரவகை *(L.)*; a species of white cadar.

செந்தலி-த்தல் *šen-dali-*, 4 செ.கு.வி. (v.i.) 1. செழிப்பாதல் (திவ். திருவாய். 6. 8: 4 பன்னீ.); to be rich, fertile, as soil. 2. செவ்வியுறுதல்; to be fresh and attractive. "நம்முகம் பண்டுபோலே செந்தலித்திருக்க நாம் காண்பதெப்போதோ? (திவ்.திருநெடுந். 12, வியா. பக்.107).

[செம் + தளிர் - செந்தளிர் → செந்தலி]

செந்தலிப்பு *šendalippu*, பெ. (n.) செழிப்பு; fertility, prosperity. "அவனுடைய செந்தலிப் பேயிறே அத்தேசத்திற்குஞ் செந்தலிப்பு" *(திவ். திருநெடுந். 12: 105, வியா.)*.

[செந்தளிர் → செந்தலி → செந்தலிப்பு]

செந்தலை *šen-dalai*, பெ. (n.) அரைக்கால்; the fraction 1/8, a mercantile slang. "கருந்தலை செந்தலை தங்கான் றிரிக்கால்" *(தனிப்பா. 87: 171)*

செந்தலைக்கதிர்க்குருவி *šendalai-k-kadir-k-kuruvi*, பெ. (n.) உச்சந்தலை செம்பழுப்பாகவும் உடலின் மேற்பகுதி கருங் கோடுகளோடும் கீழ்ப்பகுதி துருநிறமாகவும் இருக்கும் பறவை; golden-headed fantail warbler.

[செந்தலை + கதிர்க்குருவி]

இது கொடைக்கானல், நீலகிரி மலைப் பகுதிகளில் காணப்படும் பறவை வகை.

செந்தலைக்கழுகு *šendalai-k-kalugu*, பெ. (n.) கருப்பு நிற வுடலையும், தலை, கழுத்து, தொடை, கால் ஆகிய பகுதிகள் சிவப்பு நிறமாகவும் உள்ள பறவை; red-headed vulture.

[செந்தலை + கழுகு]

தமிழ்நாடு முழுமையும் வறள் காடுகளிலும், மக்கள் வாழ்விடத்தை அடுத்தும் காணப்படும் பறவை. பிணம் தின்னும் பறவை. மற்ற வகைக் கழுகுகளினும் வலிமை வாய்ந்ததால் கழுகு அரசன் (King vulture) என்று அழைக்கப்படுகிறது. கழக இலக்கியங்களில் 'செஞ்செவி எருவை' எனக் குறிக்கப்படுகிறது.

செந்தலைக்கிளி *šendali-k-kili*, பெ. (n.) நீலந்தோய்ந்த சிவப்பு நிறத்தலையும் மஞ்சள் நிற அலகும் கொண்ட கிளி; plum-headed parakeet.

[செந்தலை + கிளி]

செந்தலைப்பஞ்சுருட்டான் *šendali-p-pañjuruṭṭāṉ*, பெ. (n.) செம்பழுப்பு நிறத் தலையும் புல்பச்சை நிற உடலும் கொண்ட பறவை; chestnut-headed bee.

[செந்தலை + பஞ்சுருட்டான்]

மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்த இலையுதிர் காடுகளில் காணப்படும் பறவை.

செந்தலைப்புலி *šendalai-p-puli*, பெ. (n.) சிவப்புத் தலைப்பாகை அணிந்த காவல்

செந்தாமரை

துறைப் பணியாளர்; police constable, as a tiger with red turban, used in contempt mod.

[செம் + தலை + புலி]

ஆங்கிலேயர் ஆட்சி முதல் 1972ஆம் ஆண்டு வரை காவலரின் தலைத் தொப்பி சிவப்பு வண்ணத்தில் இருந்தது. பின்னர் சீருடை மாறிவிட்டது.

செந்தலைப்பூங்குருவி *šendali-p-pūṅguruvi,* பெ. (n.) தலை பிடரி, மார்பு, வயிறு ஆகிய பகுதிகள் ஆரஞ்சு நிறம் தோய்ந்த செம்பழுப்பாக இருக்கும் குருவியினப் பறவை வகை; orange headed thrush.

[செந்தலை + பூங்குருவி]

நிழல் அடர்ந்த மலையருவிகள், நிழலான ஏலக்காய்த் தோட்டங்கள், மூங்கில் காடுகள் ஆகிய பகுதிகளில் காணப்படும் பறவை.

செந்தலைமுத்தி *šendalai-mutti,* பெ. (n.) எலிவகை (வின்.); a kind of rat.

[செம் + தலை + முத்தி]

செந்தலைவல்லூறு *šendalai-vallūṟu,* பெ. (n.) செந்நிறத் தலையை உடைய ஒரு வகை வல்லூறு; marlin redhead falco.

[செந்தலை + வல்லூறு]

செந்தலைவிரியன் *šen-dalai-viriyaṉ,* பெ. (n.) நச்சுப் பாம்பு வகை (யாழ்அக.); russell's viper.

[செந்தலை + விரியன்]

செந்தழல் *šen-dalal,* பெ. (n.) 1. பொங்கி யெரியுந் தீ; blazing fire. "செந்தழலே வந்தழலைச் செய்திடினும்" *(திவ்.பெருமாள். 5:6).* 2. செந்தணல், கனிந்து கொண்டிருக்கும் தீ; glowing red hot cinder. 3. 18வது விண்மீன் (கேட்டை) (யாழ்அக.); the 18th star.

[செம் + தழல்]

செந்தழற்கொடி *šendalaṟ-kodi,* பெ. (n.) பவளக் கொடி (யாழ்அக.); creeper-like coral.

[செம் + தழல் + கொடி]

செம்மையான கொடி போன்ற பவளம்

செந்தளி-த்தல் *šendaḷi-,* 4 செ.கு.வி. (v.i.) செந்தலி– பார்க்க; see *šen-dali-.*

[செம் + (தளிர் →) தளி]

செந்தளிப்பு *šen-daḷippu,* பெ. (n.) செந்தளிர்ப்பு பார்க்க; see *šen-daliṟppu.*

[செந்தளி → செந்தளிப்பு]

செந்தளிர் *šen-daḷir,* பெ. (n.) செந்நிறமுள்ள இளந்தளிர்; fresh, tender sprout, as reddish. "செந்தளிர் மராஅத்துப் பைங்காய்" *(பெருங். மகத. 1:114)*

ம. செந்தளிர்; க. கெந்தளிர்

[செம் + தளிர்]

செந்தளிர்ப்பு *šen-daḷirppu,* பெ. (n.) 1. செழிப்பு (வின்.); fertility, luxuriance, prosperity. 2. மகிழ்ச்சி (யாழ்ப்.); joy, happiness.

[செந்தளிர் → செந்தளிர்ப்பு]

செந்தாது *šen-dādu,* பெ. (n.) பொன் (திவா.); gold.

[செம் + தாது]

செந்தாமரை *šendāmarai,* பெ. (n.) செந்நிறமுள்ள தாமரை; red lotus. "அஞ்செந் தாமரை யகவித ழன்ன" *(பெருங். உஞ்சைக். 53: 149).*

ம. செந்தாமர, செந்தார்; க. கெந்தாவரெ

[செம்(மை) + தாமரை. வெண் தாமரை போல செந்தாமரை நிறத்தால் பெயர் பெற்றிருக்கிறது]

செந்தார் *šen-dār,* பெ. (n.) கிளிக்கழுத்தின் செவ்வரை; bright red streaks round parrot's neck. "செந்தார்ப் பைங்கிளி முன்கை யேந்தி" *(அகநா. 34).*

[செம் + தார்]

செந்தார்ப்பைங்கிளி *šen-dār-p-paiṅgiḷi,* பெ. (n.) பச்சைக்கிளி; rose-ringed paraker.

[செந்தார் + பைங்கிளி]

இதன் கழுத்தில் உள்ள ரோசா நிற வளையக் கோடு கொண்டு இலக்கியங்களில் செந்தார்ப் பைங்கிளி என அழைக்கப்படுகிறது.

செந்தாரை *šen-dārai,* பெ. (n.) வெண்மை கலந்த சிவப்பு (இ.வ.); pale redness.

[செம் + தாரை. தாரை = கோடு]

செந்தாழம்பழம் *šen-dālam-palam,* பெ. (n.) அன்னாசிப்பழம் (மூ.அ.); pine-apple fruit.

[செம் + தாழம்பழம்]



செந்தாழை[1] *šen-dāḻai*, பெ. (n.) 1. செந்நிறமுள்ள தாழை வகை (பதார்த்த. 622); red species of screw pine. 2. கோங்கிலவு மரவகை; false tragacanth. 3. பார்வை மறைவுண்டாக்கும் கண்ணோய் (வின்.); redness of the eye causing obscurity of sight. 4. பயிரைச் செந்நிறமாக்கும் நோய்; red blight of paddy. 5. உதட்டிற் புண்ணுண்டாக்கி வாயில் கெட்ட நாற்றம் அடைவிக்கும் நோய் (வின்.); a disease which causes the mouth to smell badly, making the lips sore.

[செம் + தாழை]

செந்தாழை[2] *šen-dāḻai*, பெ. (n.) நெல்வகை (குருகூர்ப். 58); a kind of paddy.

[செம் + தாழை]

செந்தாள் *šen-dāḷ*, பெ. (n.) நோய்ப்பட்ட பயிரின் செந்நிறமான கதிர் (யாழ்ப்.); red spikes of blighted paddy.

[செம் + தாள்]

செந்தாளி *šen-dāḷi*, பெ. (n.) கொடிவகை (L.); red convolvulus.

[செம் + தாளி]

செந்தி *šendi*, பெ. (n.) செந்தில் பார்க்க (கந்தபு. முதனா. 6); see *šendil*.

[செந்தில் → செந்தி]

செந்திரிக்கம் *šendirikkam*, பெ. (n.) செந்திருக்கம் பார்க்க; see *šendirukkam*.

[செந்திருக்கம் → செந்திரிக்கம்]

செந்திரு *šen-diru*, பெ. (n.) 1. திருமகள்; goddess of wealth. "செந்திரு நீரல்லீரே லவளும்வந் தேவல் செய்யும்" (கம்பரா. மாயாசனக. 53). 2. தாளகம் (மூ.அ.); yellow sulphide of arsenic.

[செம் + திரு - செந்திரு]

செந்திருக்கம் *šendirukkam*, பெ. (n.) 1. ஓலைக் கடிதத்தின் மூடு சுருள் (வின்.); ola envelope of an ola letter. 2. காற்றாடிக் கயிற்றில் ஏறிச் செல்லுமாறு தொடுக்கும் ஓலைச் சுருள் (நாஞ்.); an ola scroll passed through the string of a flying kite.

ம. செந்திரிக்க

Skt. candraka

[செந்துருக்கம் → செந்திருக்கம்]

செந்திருக்கு *šendirukku*, பெ. (n.) 1. செடி வகை (மூ.அ.); a plant. 2. செந்திருக்கம்,2 பார்க்க; see *šendirukkam,2*.

[செந்திருக்கம் → செந்திருக்கு]

செந்திருக்கை[1] *šen-dirukkai*, பெ (n.) திருக்கை மீன் வகை; a kind of dirukkai fish.

[செம் + திருக்கை]

செந்திருக்கை[2] *šen-dirukkai*, பெ (n.) மஞ்சள் வகை (யாழ்.அக.); a kind of turmeric.

செந்தில் *šendil*, பெ. (n.) முருகனின் அறுபடை வீடுகளுள் ஒன்றாகிய தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள திருச்செந்தூர்; Tiru-c-cendūr, one of six abodes of Lord Murugaṉ in Thoothukudi distirict. "வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில்" (புறநா. 55: 18)

திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை, சுவாமி மலை ஆகியன முருகனின் ஆறு படை வீடுகள் ஆகும். இவற்றிற்கு வேறு பெயர்களும் உள. அவை திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவின்குடி, திருவேரகம், குன்றுதோராடல், பழமுதிர் சோலை ஆகியனவாகும்.

திருச்சீரலைவாய் என்பது திருச்செந்தூரின் மறுபெயர்.

[சேந்து + இல் - சேந்தில் → செந்தில்]

செந்திலகம் *šen-dilagam*, பெ. (n.) செடி வகை (புட்ப. 29); a kind of plant.

செந்திறம் *šendiṟam*, பெ. (n.) 1. சிவப்பு (சங்.அக.); redness. 2. குறிஞ்சி யாழ்த்திறத் தொன்று (திவா.); a secondary melody-type of the *kuṟiñji class*. 3. தெளிவு; clearness. "செந்திறத்த தமிழோசை" (திவ். திருநெடுந். 4).

ம. செந்திறம்

[செம் + திறம். நிறம் → திறம்]

செந்தினை *šen-diṉai*, பெ. (n.) 1. தினை வகை; Italian millet. "செந்தினையிடியுந் தேனும்" (கந்தபு. வள்ளி 208). 2. கம்புப்பயிர் (சூடா.); bulrush millet.

ம. செந்தினை

[செம்(மை) + தினை]

செந்தீ *šen-dī*, பெ. (n.) கொழுந்து விட்டெரியுந் தீ; blazing fire. "ஊருளொழுந்த வுருகெழு செந்தீக்கு" (நாலடி, 90).

ம. செந்தீ

[செம் + தீ]

செந்தீக்கரப்பன் *šendī-k-karappaṉ*, பெ. (n.) கரப்பன் கட்டி வகை; erysipelas, a kind of cutaneous eruption.

ம. செந்தீக்கரப்பன்

[செந்தீ + கரப்பன்]

செந்தீவண்ணன் *šendī-vaṇṇaṉ*, பெ. (n.) 1. சிவன்; Šivaṉ. 2. செவ்வாய் (திவா.); Mars.

நெருப்பின் நிறமுடையவன் என்ற பொருள் அடிப்படையில் இச்சொல் சிவனையும், செவ்வாயையும் குறித்தது.

[செந்தீ + வண்ணன்]

செந்தீவளர்ப்போர் *šen-dī-vaḷarppōr*, பெ. (n.) (ஓமத்தீயை வளர்ப்பவர்) அந்தணர் (யாழ்.அக.); Brahmins, as tending the sacred fire.

[செந்தீ + வளர்ப்போர்]

செந்தீவேள்-தல் (செந்தீவேட்டல்) *šen-dī-vēḷ*, 16 செ.குவி. (v.i.) வேள்வி (யாகம்) செய்தல்; to perform Vēdic sacrifice "செந்தீவேட்ட சிறப்புரைத் தன்று" (பு.வெ. 9: 15, கொளு).

[செந்தீ + வேள்-.]

செந்து[1] *šendu*, பெ. (n.) 1. உயிரி (பிங்.); anything possessed of life, living being, creature. 2. ஊர்வன; animal of the inferior species, as the lower brutes, insects, reptiles, worms etc. 3. நரி (பிங்.); jackal. 4. அணு; atom. 5. ஏழுநிரய (நரக)த்தொன்று (பிங்.); a hell, one of ēḻu-naragam.

வ. ஜந்து.

செந்து[2] *šendu*, பெ. (n.) 1. பெரும் பண்களுள் ஒன்று; a primary melody-type. 2. ஓசை; sound.

செந்து[3] *šendu*, பெ. (n.) 1. சடாமாஞ்சி (மலை.); spikenard herb. 2. பெருங்காயம் (மூ.அ.); assafoetida.

செந்துத்தி *šen-dutti*, பெ. (n.) சிறுதுத்தி (மூ.அ.); fine-winged capsule rose mallow.

[செம் + துத்தி]

செந்துத்தீ *šendutti*, பெ. (n.) செந்து[3] பார்க்க; see *šendu*.

[செந்து → செந்துத்தீ]

செந்தும்பி *šen-dumbi*, பெ. (n.) ஏறக்குறைய 14 விரலம் (அங்குலம்) நீளமும் செந்நிறமும் உடைய கடல்மீன் வகை; sea-fish, reddish, attaining nearly 14 in. in length.

[செம் + தும்பி. தும்பி = மீன்வகை]

செந்தும்பை *šen-dumbai*, பெ. (n.) தும்பை வகை (மூ.அ.); a species of spider flower, shrub.

ம. செந்தும்ப

[செம்(மை) + தும்பை]

செந்துமி *šen-dumi*, பெ. (n.) செம்மரம்; Indian red wood tree or bastard cedar.

செந்துரசம் *šen-durašam*, பெ. (n.) ஒருவகைப் பிசின்; a resinous substance.

செந்துரிப்போ-தல் *šenduri-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) மட்பாண்டத்தின் அடியில் சிறு ஓட்டை விழுதல்; to form a hole at the bottom of a earthen pot.

[சிந்தூரி → செந்தூரி + போ-.]

செந்துருக்கம்[1] *šen-durukkam*, பெ. (n.) எழுதிய ஓலையின் மேற் சுற்றும் ஓலைச் சுருள் (யாழ்.அக.); ola leaf wound round an ola.

[சந்திரகம் → (செந்திரகம்) → செந்துருக்கம். சந்திரகம் = ஓலைச்சுருள்]

செந்துருக்கம்[2] *šen-durukkam*, பெ. (n.) செடி வகை (M.M. 776); safflower.

ம. செந்துரகம்

[செம் + துருக்கம்]

செந்துருக்கு *šen-durukku,* பெ. (n.) செந்துருக்கம் பார்க்க; see *šen-durukkam.*

[செம் + துருக்கு]

செந்துருக்கை *šen-durukkai,* பெ. (n.) செந்துருக்கம் பார்க்க; see *šen-durukkam.*

[செம் + துருக்கை]

செந்துருத்தி *šen-durutti,* பெ. (n.) செம்பாலைப் பண்களுள் ஒன்று (சிலப். 8:35, உரை); an ancient melody-type.

[செம் + துருத்தி]

செந்துருதி *šen-durudi,* பெ. (n.) குறிஞ்சி யாழ்த்திறத்துள் ஒன்று (பிங்.); a secondary melody type of the kuriñji class.

[செம் + துருதி]

செந்துளசி *šen-dulaši,* பெ. (n.) செந்நிறமுள்ள துளசி வகை (பதார்த்த. 303); red basil.

ம. செந்துளசி

[செம் + துளசி]

செந்துளிர் *šen-dulir,* பெ. (n.) செந்தளிர் பார்க்க; see *šen-dalir.*

[செந்தளிர் → செந்துளிர்]

செந்துறை *šen-durai,* பெ. (n.) பாடற்கேற்ற செய்யுள் வகை (யாப்.வி.537); a kind of composition adapted to singing, dist. fr. vendurai.

[செம் + துறை]

விகார வகையான் அமரராக்கிச் செய்யும் அறுமுறை வாழ்த்தினைப்போலாது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுவது, செந்துறைப் பாடாண் பாட்டு எனப்படும். (தொல். பொருள். நச். 82).

பாடாண் பாட்டின்கண் செந்துறைப் பாட்டு இவையெனக் கூறப்படவில்லை. எனவே எல்லாப் பாட்டும் செந்துறைப் பாட்டே ஆம். (தொல். பொருள். இளம். 80).

செந்துறைச்செந்துறை *šen-durai-c-cendurai,* பெ. (n.) இசைப்பாட்டு வகை (யாப்.வி. 537); a kind of musical composition.

[செந்துறை + செந்துறை]

செந்துறைப்பாட்டு *šen-durai-p-pāttu,* பெ. (n.) செந்துறை பார்க்க; see *šen-durai.*

செந்துறைமார்க்கம் *šen-durai-mārkkam,* பெ. (n.) நாற்பெரும் பண்ணிலும் இருபத்தொரு திறனிலும் பாடக்கூடிய இசைப்பாடல் (யாப்.வி. 537); musical composition which could be sung in any of the four major pan and of the 21 diran.

[செந்துறை + மார்க்கம்]

செந்துறைவெண்பா *šen-durai-venbā,* பெ. (n.) செந்துறைவெள்ளை பார்க்க; see *šen-durai-vellai.*

[செந்துறை + வெண்பா]

செந்துறைவெள்ளை *šen-durai-vellai,* பெ. (n.) குறள் வெண்பாவின் இனத்துள் ஒன்றாகி, ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளும் பெற்று இரண்டடியாய்த் தம்முள் அளவொத்து வருவது (காரிகை, செய்.6); a species of rhythemic couplet of equal metrical quantitiy, dealing with noble topics, a variety of kural-venbā.

மறுவ. வெண்செந்துறை

எ-டு. "ஆர்கலி யுலகத்து மக்கட்கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"
(முதுமொழிக். 1)

[செந்துறை + வெள்ளை]

செந்தூக்கு[1] *šen-dūkku,* பெ. (n.) 1. நேராகத் தூக்குகை; lifting straight up, direct lift. செந்தூக்காய்த் தூக்கிக் கொண்டு போனான். 2. செங்குத்து; steepness, as of rock. செந்தூக்கான மலையினின்றும்' (பு.வெ. 1:11, உரை). 3. தாளவகை (சிலப். 14:150, உரை); a mode of beating time.

ம. செந்தூக்கு

[செம் + தூக்கு]

செந்தூக்கு[2] *šen-dūkku,* பெ. (n.) கையால் இலேசாய்த் தூக்கும் கனம், கனமுள்ளது (யாழ்.அக.); weight which can be easily lifted by a person.

[செம் + தூக்கு. தூக்கு = தூக்கக்கூடியது.]

செந்தூட்படுத்து-தல் *šendūṭ-paḍuttu*, 5 செ.கு.வி. (v.i.) கெடுத்தல் (நாசஞ்செய்தல்); to reduce to dust. "வழக்கையெல்லாம் செந்தூட்படுத்தி" (பேரின்பக்கீர்த். பக். 103).

[செந்தூள் + படுத்து-.]

செந்தூரத்தாசி *šendūra-t-tāši* பெ. (n.) கந்தகம் (சங்.அக.); sulphur.

செந்தூரத்தாதி *šendūra-t-tādi*, பெ. (n.) செந்தூரத்தாசி பார்க்க (மூ.அ.); see *šendūra-t-tāši.*

[செந்துரத்தாசி → செந்தூரத்தாதி]

செந்தூரம் *šendūram*, பெ (n.) சிந்தூரம் (உ.வ.); red metallic oxide.

செந்தூரம் > Skt. sindūra

[செந்தூள் → செந்தூரம்]

செந்தூரி-த்தல் *šendūri-*, 4 செ.கு.வி. (v.i.) சிந்தூரமாக்குதல் (யாழ்.அக.); to calcine.

[செந்தூரம் → செந்தூரி-.]

செந்தூள் *šen-dūḷ*, பெ. (n.) போர்க்களத்தி லுள்ள அரத்தமயமான தூளி; red dust, dust red from the blood of the slain in battle. செந்தூள் கருந்தூள் பறக்கிறது (யாழ்.அக.).

[செம் + தூள்]

செந்தூள்கருந்தூள்பறத்தல் *šendūḷ-karundūḷ-paṟattal*, பெ. (n.) பொருதல் முதலிய செய்கையின் கடுமையை உணர்த்துங் குறிப்பு; expr. denoting fierceness of combat in battlefield or vehemence of action in general.

[செந்தூள் + கருந்தூள் + பறத்தல்]

செந்தூள்பறத்தல் *šendūḷ-paṟattal*, பெ. (n.) செந்தூள்கருந்தூள்பறத்தல் (இவ.) பார்க்க; see *šendūḷ-karundūḷ-paṟattal.*

[செந்தூள் + பறத்தல்]

செந்தெங்கு *šen-deṅgu*, பெ. (n.) செந்நிறத் தேங்காய் காய்க்கும் தென்னை வகை (இவ.); a variety of coconut bearing red fruit.

ம. செந்தெங்கு; க. செந்தெங்கு; குட. கென்தெங்கெ

[செம் + தெங்கு]

செந்தேன் *šendēṉ*, பெ. (n.) 1. அறுவகைப் புகைப்பொருள்களுள் ஒன்று (சீவக. 534, உரை); a kind of frankincense one of six dūbavarukkam. 2. உயர்ந்த வகைத் தேன்; honey of superior quality. "செந்தேன் பருகி" (கம்பரா. மாயாசனக. 86).

ம. செந்தேன்

[செம் + தேன்]

செந்தொட்டி[1] *šen-doṭṭi*, பெ. (n.) 1. காஞ்சொறி (பதார்த்த. 471); climbing nettle. 2. சிறு காஞ்சொறி (மலை.); small climbing nettle. 3. உடலின் மீது பட்டால் அரிப்பையுண்டாக்கும் ஒருவகைச் சிறு கொடி; a creeper which when touched, causes irritation to the skin.

[சேர் + தொட்டி. தொட்டி = செடி. இச்செடியைச் சேர்ந்தால், செடியைத் தொட்டால் அரிப்பையுண்டாக்கி, அவ்விடத்தைச் செந்நிறமாக்கும் தன்மை யுடையது]

செந்தொட்டி[2] *šen-doṭṭi*, பெ. (n.) செப்புத் தொட்டி நஞ்சு (யாழ்.அக.); a prepared arsenic.

[செம் + தொட்டி]

செம்மையான தொட்டி நஞ்சு

செந்தொடை *šen-doḍai*, பெ. (n.) 1. சிவப்பு மாலை; garland of red flowers. 2. மோனை முதலிய அமையாது வேறுபடத் தொடுக்குந் தொடை (காரிகை, உறுப். 17); versification in which mōṉai etc., are neglected. 3. அம்பு முதலியவற்றை எய்யுங்குறி; aim in shooting. "செந்தொடை பிழையா வன்க ணாடவர்" (புறநா. 3:20).

[செம் + தொடை]

செந்தொடை : எ-டு

"பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத்தோனே"

செந்தொடைமருள் *šen-doḍai-maruḷ*, பெ. (n.) இனவெழுத்துப் பெற்றுத் தொடையும், தொடை விகற்பமும் போலாது தொடுப்பது (யாப்.வி.53); a typical poetical grammar reference.

[செம் + தொடை + மருள்]

செந்தொடையன் *šen-dodaiyan*, பெ. (n.) செந்நிறப் பூமாலையை அணிந்த, வைரவன் (வின்.); Bairavan, as wearing a garland of red flowers.

[செம் + தொடையன்]

செந்தோன்றி *šen-donri*, பெ. (n.) 1. காந்தள் மலர் (மலை.); Malabar glory lily. 2. செங்கழுநீர் (வின்.); red Indian water lily.

[செம் + தோன்றி]

செந்நகரை *šen-nagarai*, பெ. (n.) 1. எட்டு விரல நீளமும் செந்நிறமுமுள்ள கடல் மீன் வகை; sea fish, reddish, attaining 8 in. in length. 2. ஒரு வகை மரம் (தைலவ. தைல. 135); a species of live linden.

[செம் + நகரை. நகரை = மீன்]



செந்நகரை

செந்நடை *šen-nadai*, பெ. (n.) நாளும் தவறாது நிகழும் தூய வழிபாட்டு முறைமை; daily or the adore rituals in a temple. "இவ்வூர்த் திருமேற்றாகி ஆழ்வார்க்கு வைத்த திருச்செந்நடை நிசதி நெல்லுக் குறுணி நானாழி யால் சந்திராதித்தவல் வைத்தோம். (தெ. க. தொ. 19, கல் 351)

[செம் + நடை]

செந்நடையந்தாதி *šen-nadai-y-andādi*, பெ. (n.) செய்யுளின் இறுதியடியின் இறுதிச் சீரும் முதலடியின் முதற்சீரும் ஒன்றாகாமல் அடிதோறும் எழுத்து, அசை, சீர் முதலியன, அந்தாதியாக வருந்தொடை (யாப்.வி. 52, 184); a kind of metrical composition in which the last syllable of every line occurs at the beginning of the next line, the last syllable of the last line and the first syllable of the first line being dissimilar.

[செம் + நடை + அந்தாதி]

அந்தாதியை ஈறுதொடங்கி என்பர்

செந்நாகம் *šen-nāgam*, பெ. (n.) 1. செந்நிறமுள்ள நாகப் பாம்பு வகை; red cobra. 2. செம்பாம்பு (கேது); descending node. "செந்நாகமோடு கருநாகத்தின் செய்கை பெற்று" (கந்தபு. மகாசாத்தா. 25).

[செம் + நாகம்.]

செந்நாடிக்கா *šen-nādikkā*, பெ. (n.) மூக்கிரட்டை (மலை.); spreading hogweed.

செந்நாப்போதார் *šennāp-pōdār*, பெ. (n.) செஞ்சொல் கமழும் செந்நாவாகிய தாமரையையுடைய திருவள்ளுவர்; the poet Tiruvalluvar. "மறுவில் புலச்செந்நாப் போதார்" (வள்ளுவமா. 21).

[செம் + நா(ப்)போதார்]

நாப்போதார் = செந்நாவாகிய தாமரையை யுடையவர்

செந்நாய் *šen-nāy*, பெ. (n.) செந்நிறமுள்ள நாய் வகை; brown - coloured dog. "வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்" (குறுந். 56).

ம. செந்நாயி; க. கெம்பு நே; பட. கென்னெ

[செம் + நாய் - செந்நாய் = செந்நிற உடலும் கறுப்பு நிறவாலும் உடைய காட்டு நாய்]

செந்நாய்

செந்நாயுருவி *šen-nāyuruvi*, பெ. (n.) நாயுருவி வகை (பதார்த்த. 396); a kind of dog-prick.

[செம்(மை) + நாயுருவி]

செந்நிலம் *šen-nilam*, பெ. (n.) *1.* போர்க்களம்; battle-field. *2.* செந்தரை; red soil.

க. கெந்நெல

[செம்(மை) + நிலம்]

அரத்தத்தால் சிவந்த நிலம்

செந்நிலை *šen-nilai*, பெ. (n.) கூத்துநிலை வகை; a posture in dancing. "செந்நிலை மண்டிலத்தாற் கற்கடகக் கைகோஒத்து" *(சிலப். 17, கூத்துள். 1).*

[செம் + நிலை]

கூத்துக்கு வேண்டிய செம்மையான நடை (பாவணை) வகை.

செந்நிறக்கல் *šen-niṟa-k-kal*, பெ. (n.) ஒருவகை சிவப்புக் கல் (மாமிசச்சிலை) (யாழ்அக.); a kind of red stone.

[செம் + நிறம் + கல்]

செந்நிறமி *šen-niṟami*, பெ (n.) அரத்தத்திற்குச் சிவப்பு நிறம் தரும் நுண்பொருள்; huemoglobin.

[செம் + நிறமி. நிறமி = நிறம் தரும் பொருள்]

செந்நிறுவு-தல் *šen-niṟuvu-*, 5 செ.குன்றாவி. (v.t.) நேர்வழியில் நிறுத்துதல்; to keep one out of harm's way; to establish one in the path of virtue. "சேரி திரியாமற் செந்நிறீஇ" *(திவ். இயற். 1:47).*

[செம் + நிறுவு-.]

செந்நீர்[1] *šen-nīr*, பெ. (n.) *1.* புது வெள்ளம்; fresh, flood, as turbid. "முதூர்ச் செந்நீர்க் கடியின் விழவாட்டினுள்" *(சீவக. 12). 2.* அரத்தம்; blood, as red. "செந்நீர்த் திரைகடல் பருகலாக" *(கலிங். 293). 3.* விந்துவோடு கலந்து கரு உண்டாகு தற்குக் காரணமாகும் மகளிர் அரத்தம்; blood believed to be in the womb causing pregnancy when fused with semen. "மாதர் செந்நீரொடு கூடி" *(சூத. ஞான.10: 9).*

ம. செந்நீர்; க. கெந்நீர்

[செம் + நீர்]

செந்நீர்[2] *šen-nīr*, பெ. (n.) பருவ காலத்தில் ஆற்றில் பெருகி வரும் செவ்வண்ணப் புதுநீர்; fresh water in the rivers, rivulats in red colour. "செந்நீர் வெட்டி செய்யக் கடவதில்லை யாகவும், புந்நீர் விட்டுப் பாய்ச்சிக் கொள்வதாகவும்" *(தெ. க. தொ. 2:1, கல். 24).*

[செம் + நீர்]

செந்நீர்நுங்கல் *šen-nīr-nuṅgal*, பெ. (n.) ஒரு நிரையம் (நரகம்) (சேதுபு. தனுக்கோ. 4); a hell.

[செந்நீர் + நுங்கல்]

செந்நீர்ப்பவளம் *šen-nīr-p-pavaḷam*, பெ. (n.) சிவந்த பவளம் (யாழ்அக.); coral with bright red lustre.

[செம் + நீர் + பவளம்]

செந்நீர்முத்து *šen-nīr-muttu*, பெ. (n.) செந்நீரோட்டமுள்ள முத்து (சிலப். 14: 195, உரை); pearl with pink lusture.

[செம் + நீர் + முத்து]

செந்நெய்தல் *šen-neydal*, பெ. (n.) அல்லிக் கொடிவகை (புட்ப. 4); a kind of water-lily.

[செம் + நெய்தல். நெய்தல் = ஆம்பல் மலர்]

செந்நெல் *šen-nel*, பெ. (n.) *1.* செஞ்சாலி நெல்; a kind of superior paddy of yellowish hue. "பருஉப்பக டுதிர்த்த மென்செந் நெல்லின்" *(பதிற்றுப். 71:4). 2.* நன்னீர் மீன்வகை (யாழ்அக.); a kind of fresh water fish.

ம. செந்நெல்; க. கெம்புநெல்லு

[செம் + நெல்]

செந்நெல்தீட்டல் *šen-nel-diṭṭal*, பெ. (n.) புது நெல்லை உரலிலிட்டுக் குற்றித் தீட்டிய அரிசி; hand pounded rice from fresh paddy. "செந்நெற்றீட்டல் அறுபத்து நாற்கலம்" *(தெ.க.தொ. 14, கல்.13).*

[செம் + நெல் + தீட்டல்]

செந்நெற்றீட்டல் *šenneṟṟiṭṭal*, பெ. (n.) செந்நெல்தீட்டல் பார்க்க; see *šen-nel-diṭṭal*. "நாழி அரிசிக்கு முற்றாழி நெல்லாகத் திருபலிக்கு நியதி அரிசி செந்நெற்றீட்டல் ஒரு போரைக்கு நாழியாக" *(தெ.க.தொ. 14 கல். 16:4 - 133).*

செந்நெறி *šen-neṟi*, பெ. (n.) *1.* செவ்விய வழி; good or fine path. "இடையது செந்நெறியாகும்" *(சிலப். 11:142). 2.* நல்வழி (சன்மார்க்கம்); path of virtue, the right way, especially in religious sense. "சேராரே செந்நெறிச் சேர்து மென்பார்"

(நாலடி, 378). 3. மரபு சார்ந்து ஒழுகும் தூய பண்பு; righteous path.

[செம் + நெறி]

செந்நென்முத்து *šennen-muttu*, பெ. (n.) செந்நெலில் உண்டாவதாகக் கருதப்படும் முத்து (யாழ்.அக.); pearl believed to be formed in šennel paddy.

[செந்நெல் + முத்து.]

செந்நொச்சி *šen-nocci*, பெ. (n.) நொச்சி வகை (யாழ்.அக.); a variety of chaste-tree.

[செம் + நொச்சி]

செப்பஞ்செய்-தல் *šeppañ-jey-*, 1 செ.குன்றாவி. (v.t.) 1. ஒழுங்குபடுத்துதல்; to clean, repair, put in order. 2. புதைத்தல் (வின்.); to inter. 3. கட்டடங்களைப் பழுதுபார்த்தல்; to repair buildings, maintenance of buildings. 4. பழுது, குறைபாடு, பிழை முதலியவற்றை நிக்கிச் சரிசெய்தல்; புதுப்பித்தல்; restore; renovate; set right.

[செப்பம் + செய்-.]

செப்பட்டை[1] *šeppattai*, பெ. (n.) 1. கட்டடச் சுவரின் அடிப்படை; plinth. 2. தூணின் அடியில் வைக்கும் சதுரக்கல்; square plate stone placed at the bottom the piller.

[செம்பொன் → செம்பு → செப்பு. செப்பு + பட்டை → செப்பட்டை]

செப்பட்டை[2] *šeppattai*, பெ. (n.) 1. பறவைச் சிறகு (யாழ்.அக.); wing. 2. தோட்பட்டை; shoulder blade. 3. கன்னம்; cheek.

[சப்பட்டை → செப்பட்டை]

செப்பட்டைமட்டம் *šeppattai-mattam*, பெ. (n.) அடிப்படை மட்டச் சுவர் அளவு; plinth level.

[செப்பட்டை + மட்டம்]

செப்பட *šeppada*, கு.வி.எ. (adv.) செவ்விதாக; correctly, neatly. "மாலை வாங்கிச் செப்பட முன்கை யாப்ப" (சீவக. 2665).

[செம் + படு = செம்படு. செம்படு → செப்படு → செப்பட. படு → பட]

செப்படக்குவித்தை *šeppadakku-vittai*, பெ. (n.) செப்படிவித்தை பார்க்க; see *šeppadi-vittai.*

"பச்சிலைக்குளோது செப்படக்கு வித்தையோ." (தனிப்பா. II, 57:140).

[செப்பு + அடக்கு + வித்தை]

செப்படி[1]**-த்தல்** *šeppadi-*, 4 செ.கு.வி. (v.i.) செப்படி வித்தை செய்தல்; to practise sleight of hand. "செப்படிப்பவரி னின்று சிரித்தனன்" (பாரத. புட்ப. 106).

[செப்பு + அடி]

செப்படி[2] *šeppadi*, பெ (n.) செப்படிவித்தை பார்க்க; see *šeppadi-vittai.*

ம. செப்படி, செப்பிடி

செப்படிவித்தை *šeppadi-vittai*, பெ (n.) 1. பிறரறியா வகையில் செப்புகளுள் உருண்டைகள் வந்து போகுமாறு அவற்றைத் தரையில் அடித்துக்காட்டுவது முதலிய தந்திரக் கலைகள்; legerdemain; sleight of hand, as causing a ball to appear or disappear by a mere touch on the cup containing it. 2. தந்திரம்; tricks, deceptive arts. "செப்படி வித்தைத் திறமறியேன் பூரணமே" (பட்டினத். திருப்பா. பூரண. 73). 3. சிறுகச் செலவாக்கிச் செய்யுஞ் சிக்கனம் (யாழ்ப்.); contrivance to economise by dealing out in small quantities.

ம. செப்படிவித்ய

[செப்படி + வித்தை]

செப்படிவித்தைக்காரன் *šeppadi-vittai-k-kāran*, பெ. (n.) 1. செப்படிக்கலை செய்வோன்; one who practises legerdemain, juggler. 2. தந்திரக்காரன்; deceitful person.

[செப்படி + வித்தை + காரன்]

செப்பப்புல் *šeppa-p-pul*, பெ (n.) நாணல் (மலை.); kaus.

செப்பம் *šeppam*, பெ (n.) 1. செம்மை; ruddiness. "செப்பமு நாணு மொருங்கு" (குறள், 951). 2. நடுநிலை (பிங்.); impartiality, evenness, equity. செப்பமுடைய வனாக்கம் (குறள், 112). 3. சீர்திருத்துகை; repair, renewal. இந்த வீதியைச் செப்பஞ்செய். 4. ஆயத்தம் (யாழ்ப்.); preparedness, fitness. 5. பாதுகாப்பு; protection. "செப்ப முடையாய்" (திவ். திருப்பா. 20). 6. செவ்விய வழி; straight path, road. "சேந்த

செயலைச் செப்பம் போகி" (மலைபடு. 160). 7. தெரு (பிங்.); street. 8. நெஞ்சு (பிங்); heart. 9. மனநிறைவு (திருப்தி) (வின்.); satisfaction, agreeableness. 10. ஒழுங்கு, செவ்வை; perfection. ஆய்வுக்கட்டுரை செப்பமாக உள்ளது.

[செய்ம்மை → செய்மை → செப்பம்]

செப்பம்செய்-தல் *šeppam-šey-*,1 செ.கு.வி. (v.i.) செப்பஞ்செய்-தல் பார்க்க; see *šeppañ-jey-*.

செப்பல்[1] *šeppal*, பெ (n.) 1. சொல்லுகை; saying, replying, declaring. "செறிவளை மகளிர் செப்பலு முண்டோ" (மணிமே. 4:110). 2. செப்பலோசை பார்க்க; see *šeppal-ōšai*. "திண்பா மலிசெப்பல்" (காரிகை, செய். 1).

[செப்பு → செப்பல்]

செப்பல்[2] *šeppal*, பெ (n.) செந்நிறம்; red, rosy colour, as of dawn. பொழுது செப்பலோடி வரும் பொழுது (யாழ்ப்.).

[செப்பு[3] → செப்பல்]

செப்பல்பிரி-தல் *šeppal-piri-*, 4 செ.கு.வி. (v.i.) பொழுது விடிதல்; to dawn. செப்பல் பிரியப் புறப்பட்டோம் (இ.வ).

[செப்பல்[2] + பிரி]

செப்பலி *šeppali*, பெ. (n.) 1. இரண்டடி நீளமும் ஒருவகைச் செந்நிறமும் உடைய கடல் மீன்வகை; sea-fish, cherry red, attaining 2 ft. in length. 2. கருமை கலந்த செந்நிறமுடைய கடல் மீன்வகை; red rock cod, dark reddish brown.

[செப்பல்[3] → செப்பலி]

செப்பலோசை *šeppal-ōšai*, பெ. (n.) வெண்பாவுக்குரிய ஓசை (தொல்.பொருள். 379, உரை); rhythmic tone appropriate to veṉbā verse.

[செப்பல் + ஓசை]

செப்பலோசை மூன்று வகைப்படும். ஏந்திசைச் செப்பலும், தூங்கிசைச் செப்பலும், ஒழுகிசைச் செப்பலும் என்பன (யாப். கா. 22). அகவிக் கூறாது ஒருவற்கு ஒருவன் இயல்பு வகையானே ஒரு பொருண்மையைக் கட்டுரைக்குங்கால் எழும் ஓசை செப்பலோசை எனப்படும் (தொல். பொருள். 394, பேரா.). அழைத்துக் கூறாது ஒருவற்கு ஒருவன் இயல்பு வகையான் ஒரு பொருண்மையைக் கட்டுரைக்குங்கால் எழுந்த ஓசை செப்பலோசை (தொல். பொருள். செய். 82, நச்)

செப்பலோடு-தல் *šeppal-ōdu-*, 5 செ.கு.வி. (v.i.) செந்நிறங் கொள்ளுதல் (யாழ்ப்.); to become red, as the sky at dusk. பொழுது செப்பலோடி வரும் பொழுது (யாழ்ப்.).

[செப்பல் + ஓடு-.]

செப்பவாய் *šeppavāy*, பெ. (n.) இடை (யாழ்.அக.); waist.

[செப்பு → செப்பவாய்]

செப்பனிடு-தல் *šeppaṉiḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) 1. பழுதுபார்த்தல், சீர்திருத்துதல்; to repair, correct. சாலைகளைச் செப்பனிடக் கேட்டுள்ளோம். 2. சமப்படுத்துதல்; to level, make even. 3. மெருகிடுதல்; to polish.

[செப்பம் → செப்பன் + இடு-.]

செப்பாடல் *šeppāḍal*, பெ. (n.) பழைய காசு வகை (பணவிடு. 139); an ancient coin.

செப்பாடு *šeppāḍu*, பெ. (n.) நேர்மை; straightness, justness. "செப்பாடுடைய திருமாலவன்" (திவ்.பெரியாழ். 35:6).

[செப்பம் + பாடு.]

செப்பிக்கூறு-தல் *šeppi-k-kūṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) விடை சொல்லுதல்; to reply, give answer. ஒருவன் கேட்ப அவற்கு ஒன்று செப்பிக் கூறாது (தொல். பொருள். 393, உரை).

[செப்பு → செப்பி + கூறு-.]

செப்பிடில் *šeppiḍil*, பெ. (n.) சடாமாஞ்சி (மலை.); spikenard herb.

செப்பிடுவித்தை *šeppiḍuvittai*, பெ. (n.) செப்படிவித்தை பார்க்க; see *šeppaḍi-vittai*. "செப்பிடு வித்தை செலத்தம்பன வித்தை" (பணவிடு. 20).

[செப்பு + இடு + வித்தை]

செப்பியம் *šeppiyam*, பெ. (n.) திரும்பத்திரும்பச் சொல்லுகை (யாழ்.அக.); repeating.

[செப்பு → செப்பியம்]

செப்பிலி *šeppili*, பெ. (n.) செப்பலி,1 பார்க்க; see *šeppali,1*.

[செப்பலி → செப்பிலி]

செப்பிலை *šeppilai*, பெ. (n.) தும்பை (மலை.); white dead nettle.

[செம்பு + இலை]

செப்பு[1]-தல் *šeppu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. சொல்லுதல்; to say, speak, declare, tell. "செய்ததும் வாயாளோ செப்பு" (பரிபா. 6: 67). 2. செப்பிக்கூறு- பார்க்க (தொல்.பொருள். 393, உரை); see *šeppi-k-kūṟu-*.

ம. செப்புக; தெ. செப்பு; குரு. கெப்னா

செப்பு[2] *šeppu*, பெ. (n.) 1. சொல்; speech, word. "ஏதுபோ விருந்த தைய னிசைத்த செப்பென்றார்" (திருவிளை. வளையல். 9) (கூடா.) 2. விடை; answer, reply. "செப்பும் வினாவும் வழாஅ லோம்பல்" (தொல். சொல். 13).

தெ. செப்பு

OE. secgan; OS. soggian; E. say; M.E. seggen; A.S. secgaṅ; Dan. sige; Swed. saga; G. sagen; OHG. sagēn; Lith. sakyti; OI. in-sece; Wels. heb

செப்பு[3] *šeppu*, பெ. (n.) 1. செம்பு-1 பார்க்க; see *šembu-1*. 2. குங்குமம் முதலியவைப் போட்டு வைக்கப் பயன்படும் மரத்தால் அல்லது மாழையாலான சிறிய பெட்டி, சிமிழ்; casket, little box of metal, ivory or wood. "செப்பின் புணர்ச்சிபோற் கூடினும்" (குறள், 887). 3. நீர்க்கரகம்; a kind of water-vessel. "சேமச் செப்பிற் பெறீஇயரோ" (குறுந். 277). 4. மரத்தால் செய்யப்பட்ட விளையாட்டு ஏனம் (உவ.); toy utensils.

ம. செப்பு; குட. செப்பி

E. copper; M.E. coper; O.E. coper; L.L. cuper; L. cuprum; Gk. cyprium; G. kupper; Du. koper; F. cuivre.

[செம்பு → செப்பு]

செப்பு[4] *šeppu*, பெ. (n.) இடுப்பு; hip. அவன் விழுந்ததில் செப்பு நகர்ந்து விட்டது (நாஞ்.).

[சப்பை → செப்பு]

செப்புக்கட்டை *šeppu-k-kaṭṭai*, பெ. (n.) பொன் வளையல் முதலியவற்றிற்கு உள்ளே இடும் தாமிரக்கட்டை (உவ.); copper bar inserted in hollow gold ornaments, as in bracelets.

[செம்பு + கட்டை]

செப்புக்கால்திருச்சிற்றம்பலமுடையான் *šeppu-k-kāl-tiru-c-ciṟṟambalam-uḍaiyāṉ*, பெ. (n.) முற்காலத்து வழங்கிய நெல்லளக்குங் கருவி வகை; a kind of measure for paddy used in ancient times. 'செப்புக்கால் திருச்சிற்றம்பல முடையானாலே அளக்கக் கடவார்களாகவும்' (தெ.க.தொ. 5, 178).

[செம்புக்கால் + திருச்சிற்றம்பலம் + உடையான் = செம்பால் செய்யப்பட்ட அளவு கருவி]

செப்புக்குடம் *šeppu-k-kuḍam*, பெ (n.) 1. கோயில் கோபுரத்தின் மீது பொருத்தப்படும் செம்பலான கலசம்; ornamental copper kuḍam placed at the top of vimāṉam and gopuram. "ஸ்தூபித் தறியில் வைக்கக் குடுத்த செப்புக் குடம்" (தெ.க.தொ.2; கல்.1). 2. கோயில் பூசைக்கு நீர் எடுத்துவரும் செம்பாலான குடம்; copper vessel used to bring water to temple rituals. 3. குடிநீர் எடுத்து வரும் செம்பாலான குடம்; water carrier for drinking purposes made of copper. செப்புக் குடத்து நீர் குடிக்க நல்லது.

ம. செப்புகுடம், செப்பிக்குடம்

[செப்பு + குடம்]

கோயில் கோபுரத்தின் மீது பொருத்தப்படும் செப்புக் குடத்துள் ஒன்பது வகைத் தவசங்களைப் போடுவர். செப்புக் கலயமும் தவசங்களும் கூடி இடிதாங்கியாகப் பயன் படுகின்றன. இதுகாறும் எந்தக் கோவில் மீதும் இடிவிழுந்ததில்லை. இஃது பழந் தமிழரின் அறிவியல் திறமைக்குச் சான்றாகும்.



செப்புக்குடம்

செப்புக்கோட்டை *šeppu-k-kōṭṭai*, பெ. (n.) செம்பினாலியன்ற கோட்டை; fort, as made of copper.

செம்பினால் கட்டியது இராவணன் கோட்டை

[செம்பு → செப்பு + கோட்டை]

செப்புச்சல்லி *šeppu-c-calli*, பெ. (n.) ஒரு தம்படியான சிறு தாம்பரக்காசு; small copper coin = 1 pie. ஒரு செப்புச் சல்லிக் காசு கூட உனக்குத் தரமாட்டேன்.

[செப்பு + சல்லி]

செப்புச்சிலை *šeppu-c-cilai*, பெ. (n.) 1. செம்பாலான படிமை (பிரதிமை); copper idol or statue. செப்புச்சிலை போன்ற உடம்பு. 2. மாந்தளிர்க்கல் (யாழ்.அக.); a copper-coloured stone.

[செம்பு + சிலை]

செப்புத்தளிகை *šeppu-t-taḷigai*, பெ. (n.) செப்புத் தட்டு; copper plate. 'செப்புத் தளிகை ஒன்று' (தெ.க. தொ. 2. கல். 85-22).

[செப்பு + தளிகை. தளிகை = தட்டு, ஏனம், உண்கலம்]

செப்புத்திருமேனி *šeppu-t-tirumēṉi*, பெ. (n.) செம்பினாலாகிய கடவுள் உருவச்சிலை; copper idol. 'ஸ்ரீ ராஜராஜேச்வரமுடையார் கோவிலில் . . . எழுந்தருளுவித்த செப்புத் திருமேனி' (தெ.க.தொ. 2, 400).

[செப்பு + திருமேனி]

செப்புத்துறை *šeppu-t-tuṟai*, பெ. (n.) இடுகாடு (வின்.); burial ground, grave-yard.

[செப்பு + துறை]

செப்புத்தொட்டி *šeppu-t-toṭṭi*, பெ. (n.) வைப்பு நஞ்சு வகை (மூ.அ.); a prepared arsenic.

[செப்பு + தொட்டி]

செப்புநிறம் *šeppu-niṟam*, பெ. (n.) கருஞ்சிவப்பு நிறம் (யாழ்.அக.); dark-red colour.

[செம்பு + நிறம்]

செப்புநெருஞ்சி *šeppu-neruñji*, பெ. (n.) சிறு நெருஞ்சி (பதார்த்த. 357); red cow thron.

[செம் → செப்பு + நெருஞ்சி]



செப்புப்பட்டயம் *šeppu-p-paṭṭayam*, பெ. (n.) செப்பேடு பார்க்க; see *šeppēḍu*.

மறுவ. செப்பேடு

[செம்பு + பட்டயம்]

செப்புப்பத்திரம் *šeppu-p-paṭṭiram*, பெ. (n.) செப்பேடு பார்க்க; see *šeppēḍu*. 'விடுபேறாகச் செப்புப் பத்திரஞ்செய் தட்டிக் கொடுத்தேன்' (T.A.S. 2, 68)

மறுவ. செப்பேடு

[செம்பு + பத்திரம்]

செப்புமல்லிகை *šeppu-malligai*, பெ. (n.) பொன்னிறமுள்ள மல்லிகை வகை; golden jasmine.

[செம்(மை) → செப்பு + மல்லிகை]

செப்புமலை *šeppu-malai*, பெ. (n.) காவியுடை (யாழ்.அக.); ochre-coloured cloth.

செப்புவழு *šeppu-vaḻu*, பெ. (n.) விடைக் குற்றம் (தொல். சொல். 13, உரை); incorrect answer.

[செப்பு + வழு]

செப்பேடு *šeppēḍu*, பெ. (n.) பழங்கால அரசர்களின் ஆணைகள், அவர்கள் வழங்கிய கொடை பற்றிய செய்திகள் முதலானவை



பொறிக்கப்பட்ட செப்புத்தகடு(ஈடு, 4. 4:10); copper-plate grant. சோழர் காலச் செப்பேடுகள் அந்தக்கால நிர்வாக முறையை அறிய உதவுகின்றன.

ம. செப்பேடு, செம்பேடு

L. cuprium; E. copper.

மறுவ. செப்புப்பட்டயம்

[செப்பு + ஏடு]

செப்போடு *šeppōḍu*, பெ. (n.) செம்பாலான ஓடு (வின்.); copper tiles, as on temple roof.

[செப்பு + ஓடு]

செம் *šem*, கு.பெ.எ. (adj.) 1. சிவந்த; reddish. செந்நீர். 2. நேர்மையான; honest. செங்கோலாட்சி. 3. நடு நிலையான; impartial. "செம்மனத்தான்" (நள.46). 4. இலக்கணம் பிறழாத; grammatical. செந்தமிழ். 5. முதிர்ந்த; mature. செங்காய். 6. சொல்லழகில்லாத; without flourish of words. செந்தொடை. 7. இயல்பான; natural. "செம்மகள்" (கல்லா. 5:31). 8. தகுந்த, ஏற்ற; in accordance with, appropriate. செந்துறை. 9. சமமான; equal. செம்பாகம். 10. ஒரே ஒழுங்கான; stright. செந்தூக்கு. 11. கோட்டமில்லாத; without bend. செங்குத்து. 12. எண்ணிடைச் சொல் பெறாத; without conjunctive particles. செவ்வெண்.

[செய்ம்மை → செம்மை → செம். ஒ.நோ.: வெள் → வெய் → வெய்ம்மை → வெம்மை → வெம்]

செம்பக்கால் *šemba-k-kāl*, பெ. (n.) வெற்றிலைக் கொடி நடாத இளமையான அகத்திச் செடிகளையுடைய வெற்றிலைத் தோட்டம் (R.T.); unplanted betel-garden with young 'akatti' plants.

[செம்பை + கால்]

செம்பகம் *šembagam*, பெ. (n.) செண்பகம்' பார்க்க; see *šeṇbagam*.

ம. செம்பகம், சம்பகம்

[செண்பகம் → செம்பகம் (உ.வ.)]

செம்பகை *šem-bagai*, பெ. (n.) மரக் குற்றத்தால் நரம்பு இன்பமின்றி இசைக்கையாகிய யாழ்க் குற்றம்; harsh note of a lute-string, due to bad wood of the lute. "செம்பகை யார்ப்பே யதிர்வே கூடம்" (சிலப். 8:29).

[செம் + பகை]

பகை = குற்றம். சரியான, செம்மையான மரத்தால் செய்யாத யாழில் இருந்து எழும் ஓசை குற்றமுடையது.

செம்பசலை *šem-bašalai*, பெ. (n.) பசலை வகை (மலை.); red Malabar nightshade.

[செம் + பசலை]

செம்பசளை *šem-bašaḷai*, பெ. (n.) செம்பசலை பார்க்க (யாழ்.அக.); see *šem-bašalai*.

[செம்பசலை → செம்பசளை]

செம்பஞ்சி *šem-bañji*, பெ. (n.) செம்பஞ்சு பார்க்க (சிலப். 6:82, அரும்.); see *šem-bañju*.

[செம்பஞ்சு → செம்பஞ்சி]

செம்பஞ்சு *šem-bañju*, பெ. (n.) 1. பருத்தி வகை; Brazil cotton. 2. செவ்வரக்குச் சாயமிட்ட பஞ்சு; cotton coloured with lac-dye. 'கோகிலக்கண் செம்பஞ்சு' (சிலப். 14:187, உரை).

[செம் + பஞ்சு]

செம்பஞ்சுக்குழம்பு *šem-bañju-k-kuḻambu*, பெ. (n.) 1. செம்பஞ்சாற் செய்யப்பட்டு மகளிர் காலிற் பூசியணியப்பட்டுவந்த வண்ணக் குழம்பு வகை (மணிமே. 6:110, உரை); paste prepared from red cotton, used to dye women's feet. 2. எழுதுவதற்குப் பயன்பட்ட செந்நிற மை; ink prepared for writing letters.

[செம்பஞ்சு + குழம்பு]

செம்பஞ்சுக் குழம்பு = எழுதுவதற்குப் பயன் பட்ட வண்ணக் குழம்பு. தாழை மடலில், பித்திகை முனையால் தொட்டு மடல்கள் எழுதப்பட்டன. பனை ஓலையின் பழக்கம் இதன் பின்னரே தோன்றியது. பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு கீற வேண்டும். தாழை மடலில் மை தோய்த்து எழுத வேண்டும்.

செம்பஞ்சுநிறமணி *šem-pañju-niṟamaṇi*, பெ. (n.) ஒருவகை மணி (சௌகந்திகப் பதுமராகம்) (யாழ்.அக.); a kind of precious stone.

[செம் + பஞ்சு + நிறமணி]

செம்பஞ்சூட்டு-தல் *šem-bañjūṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) மகளிர் பாதத்திற்குச் செம்பஞ்சுக் குழம்பு பூசுதல்; to paint women's feet with red-cotton dye.

[செம்பஞ்சு + சூட்டு-]

செம்பஞ்செழுது-தல் *šem-bañjeḻudu,* 5 செ.குன்றாவி. (v.i.) செம்பஞ்சூட்டு- பார்க்க; see *šem-bañjūṭṭu-*.

[செம்பஞ்சு + எழுது-.]

செம்பட்டத்தி *šem-baṭṭatti,* பெ. (n.) செம்படத்தி பார்க்க (யாழ்.அக.); see *šem-badatti.*

[செம்படத்தி → செம்பட்டத்தி]

செம்பட்டலரி *šem-baṭṭalari,* பெ. (n.) அலரி வகை (புட்ப. 29); a kind of oleander.

[செம்பட்டை (= வெளிர்ச்சிவப்பு) + அலரி]

செம்பட்டை[1] *šem-baṭṭai,* பெ. (n.) ஒருவகைக் கொட்டிசைக் கருவி; a kind of musical instrument. 'பாணி யிடக்கை செம்பட்டை' (வள்ளிகதை. Ms.)

[செம் + பட்டை]

செம்பட்டை[2] *šem-baṭṭai,* பெ. (n.) தலை முடியின் ஒரு வகை வெளிர்ச் சிவப்பு நிறம் (உ.வ.); reddish brown colour of hair.

பட. கெஞ்சலு

[செம் + பட்டை]

செம்பட்டைபாய்-தல் *šem-baṭṭaipāy-,* 1 செ.கு.வி. (v.i.) செந்நிறமாதல்; to become reddish brown, as hair. அவன் தலை செம்பட்டை பாய்ந்தது.

[செம்பட்டை + பாய்-.]

செம்பட்டைமயிர் *šem-baṭṭai-mayir,* பெ. (n.) செம்மயிர்; reddish brown hair.

[செம்பட்டை + மயிர்]

செம்படக்கரை *šem-bada-k-karai,* பெ. (n.) செம்படவர் வாழும் கடற்கரை; sea shore where fishermen live.

[செம் + படகு + கரை]

செம்படக்கா *šem-badakkā,* பெ. (n.) ஒரு வகை மீன்; a kind of fish.

செம்படத்தி *šem-badatti,* பெ. (n.) பரதவரினப் பெண் (சங்.அக.); woman of the fisherman caste.

[செம்படவன் (ஆ.பா.) → செம்படத்தி (பெபா.)]

செம்படம்[1] *šembaḍam,* பெ. (n.) திருநீறு வைக்குஞ் சிறுசெப்பு (இ.வ.); small, round or oval matal box for keeping holy ashes.

[சம்புடம் → செம்படம்]

செம்படம்[2] *šem-baḍam,* பெ. (n.) செப்புமலை (நிலகேசி, 244, உரை.) பார்க்க; see *šeppu-malai.*

[செம் + படம்.]

செம்படர் *šembaḍar,* பெ. (n.) சிவப்பாடை அணியும் புத்தர்கள்; Buddhists, as wearing red-coloured cloth. "இது செம்படர்க ளிறைவ னுறையு மிடம்" (நீலகேசி, 464).

[செம்படம்[2] → செம்படர்]

செம்படவச்சி *šem-badavacci,* பெ. (n.) செம்படத்தி பார்க்க; see *šem-badatti.*

[செம்படத்தி → செம்படவச்சி]

செம்படவன் *šembaḍavaṉ,* பெ. (n.) மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்; fisherman.

[செம் + (படகு → படவு + அன்]

செம்படாம் *šem-baḍām,* பெ. (n.) 1. சிவந்த ஆடை (திவா.); red cloth. 2. சிவப்புச் சீலை; red saree.

[செம் + படாம்]

செம்படை[1] *šem-baḍai,* பெ. (n.) செம்பட்டை-2 பார்க்க; see *šem-baṭṭai.*

செம்படை[2] *šem-baḍai,* பெ. (n.) பொது வுடைமைக் கட்சியினர்; followers of the communist parties.

[செம் + படை]

பொதுவுடைமைக் கட்சியின் கொடி சிவப்பு வண்ணமுடையதாதலின், அதன் தொண்டர் செம்படைத் தொண்டர் எனப்பட்டனர்.

செம்படைச்சி *šem-baḍaicci,* பெ. (n.) செம்படத்தி (யாழ்.அக.) பார்க்க; see *šem-badatti.*

[செம்படத்தி → செம்படைச்சி]

செம்பண்ணை *šembaṇṇai,* பெ. (n.) சேவலின் தலைக் கொண்டை (மலை.); cock's comb.

[செம் + பண்ணை]

செம்பத்தி *šembatti*, பெ. (n.) உண்மையான அன்பு; true piety. "தாமரைத்தாள் செம்பத்தியால் வணங்காச் சிறியார்" (திருநூற். 23)

[செம் + (பற்று → பற்றி →) பத்தி]

செம்பயிரவப்பூண்டு *šem-bayirava-p-pūṇḍu*, பெ. (n.) மருதோன்றி வகை; unarmed orange nail dye.

[செம் + பயிரவப் பூண்டு]

செம்பரக்கு *šembarakku*, பெ. (n.) கொம்பரக்கில் வெந்நீரை விட்டு உண்டுபண்ணும் அரக்கு வகை (M.M. 427); square cake of crimson colouring-matter, obtained by pouring warm water on stick-lac.

[செம்பு + அரக்கு]

செம்பரத்தை *šem-barattai*, பெ. (n.) செடிவகை; shoe-flower.

ம. செம்பரத்தி

[செம் + (பருத்தி →) பரத்தை]

செம்பரத்தை

செம்பரவன் *šem-baravaṉ*, பெ. (n.) மீனவருள் ஒரு வகையினர்; a group among fishermen.

[செம்படவன் → செம்பரவன்]

செம்பருத்தி *šem-barutti*, பெ. (n.) 1. நல்ல பருத்தி வகை (G.Sm.D. i. 227); a kind of superior cotton. 'திலக முலோத்திரஞ் செம் பருத்திப்பூ' (சிலப். 14:187, உரை). 2. செம்பஞ்சு; Brazil cotton. 3. பருத்தி வகை (L.); a kind of cotton plant. 4. புதர்போல் வளர்வதும் சிவப்பு நிறப்பூப்பூப்பதுமான ஒருவகைச் செடி; a shrub with red flowers. செம்பருத்திப் பூப்போன்றச் சிவப்புச் சேலை வாங்கி வா.

க. கெம்பத்தி; ம. செம்பருத்தி

[செம் + பருத்தி]

செம்பருத்தி

செம்பருந்து *šem-barundu*, பெ. (n.) கருடன்; sacred kite.

[செம் + பருந்து]

செம்பருந்து

செம்பலக்கிளுவை *šem-bala-k-kiḷuvai*, பெ. (n.) பேய்க்கண்டை (L.); woolly, oblong bluish-flowered prickly night-shade.

செம்பலகை *šem-balagai*, பெ. (n.) செங்கல் (வின்.); brick.

[செம் + பலகை]

களி மண்ணைப் பலகை போல் தட்டையாகப் பரப்பி மரச் சட்டத்தால் அறுத்துச் சுட்டுச் செய்வதால் செங்கல்லுக்குச் செம்பலகை என்ற பெயர் உண்டாயிற்று.

பண்டை நாளில் செங்கல்லைப் பலகை போன்று அகலமும் நீளமும் மிகுந்ததாகச் செய்தனர். அவ்வகைச் செங்கற்கள் பூம்புகாரில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

செம்பலா *šembalā*, பெ. (n.) கிராம்பு வகை (L.); country cinnamon.

[செம் + பலா]

செம்பரத்தை

செம்முள்ளி

செந்தும்பை

சேராங்கொட்டை

செம்பருந்து

செம்பருந்து

செந்தலைக்கதிர்க்குருவி

செந்தலைக் கிளி

செந்தலைப் பஞ்சுருட்டான்

செந்தலைப் பூங்குருவி

செம்பவளச்சம்பா *šem-bavaḷa-c-cambā*, பெ. (n.) செந்நிறமுள்ள சம்பா நெல்வகை; a kind of reddish šambā paddy.

[செம்பவளம் + சம்பா]

செம்பவளம் *šem-bavaḷam*, பெ. (n.) 1. வெளுப்புக் கலவாது செந்நிறத்திலுள்ள பவளவகை; coral of deep red colour. "வாய் செம்பவளம்" (திவ். திருவாய். 2. 5:5). 2. உருண்டை வடிவுள்ள பவளவகை (இ.வ.); round-shaped red coral.

[செம் + பவளம்]

செம்பவழம் *šem-bavaḻam*, பெ. (n.) செங்காய் (யாழ்.அக.); fruit almost ripe.

[செம் + பழம்]

செம்பளி-த்தல் *šembaḷi-*, 4 செ.குன்றாவி. (v.t.) அச்சம் முதலிய காரணம் பற்றிக் கண்ணை இடுக்கிக் கொள்ளுதல்; to close the eyes, as in terror. 'அஞ்சிக் கண்ணைச் செம்பளித்தவாறே' (ஈடு, 5. 5:3)

செம்பறாம்பண்ணி *šembaṟāmpaṇṇi*, பெ. (n.) செம்பழுப்பு நிறமுள்ள ஒருவகைக் கடல்மீன்; sea-fish, reddish brown.

செம்பன் *šembaṉ*, பெ. (n.) சிவலை (யாழ்.அக.); brown-coloured cow or bull.

[செம்பு → செம்பன்.]

செம்பனசை *šem-baṉašai*, பெ. (n.) பனசைப் பாம்பு வகை (யாழ்.அக.); a venomous snake.

[செம் + பனசை. பனசை = பாம்பு வகை]

செம்பாகம்[1] *šem-bāgam*, பெ. (n.) செம்பாதி பார்க்க; see *šem-bādi*. "காமத்திற் செம்பாக மன்று பெரிது" (குறள். 1092)

[செம் + பாகம். பகு → பாகம்]

செம்பாகம்[2] *šem-bāgam*, பெ. (n.) தெளிவு; lucidity; clear, natural flow of style. அவர்கவி செம்பாகமாயுள்ளது.

[செம் + பாகம்.]

செம்பாட்டுத்தரை *šem-bāṭṭu-t-tarai*, பெ. (n.) செம்மண் நிலம்; red earth, red soil. "செம்பாட்டுத் தரையிலே மலையருவிகள் விழுந்தாற்போல" (திவ். பெருமாள். 10:2, வியா.).

[செம்பாடு + தரை]

செம்பாட்டுநிலம் *šem-bāṭṭu-nilam*, பெ. (n.) செம்பாட்டுத்தரை பார்க்க (அகநா. 26, 24, உரை); see *šem-bāṭṭu-t-tarai*.

[செம்பாடு + நிலம்]

செம்பாட்டுமண் *šem-bāṭṭu-maṇ*, பெ. (n.) செம்பாட்டுத்தரை (வின்.) பார்க்க; see *šem-bāṭṭu-t-tarai*.

[செம்பாடு → செம்பாட்டு + மண்]

செம்பாடு *šem-bāḍu*, பெ. (n.) 1. செம்மண் நிலம்; red soil. 2. செம்மண் படிந்தது; anything soiled or tinged with red earth.

[செம் + பாடு]

செம்பாதி *šem-bādi*, பெ. (n.) சரிபாதி; exact half, moiety. 'இவ்வூர்த் தச்சக்காணி செம்பாதியுடைய தச்சன்' (தெ.க.தொ. 3, 80).

ம. செம்பாதி

[செம் + பாதி. பகுதி → பாதி]

செம்பாந்தள் *šem-bāndaḷ*, பெ. (n.) கேது (சாதகசிந். 7); moon's descending node.

[செம்பு → செம்பாந்தள்]

செம்பாம்பு *šem-bāmbu*, பெ. (n.) ஒன்பான் கோள்களுள் ஒன்று (கேது) (திவா.); moon's descending node.

[செம் + பாம்பு]

செம்பாரை *šem-bārai*, பெ. (n.) வரிப்பாரை என்னும் மீன் (வின்.); horse mackerel, silvery.

[செம் + பாரை. பாரை = மீன்வகை]

செம்பால்[1] *šem-bāl*, பெ. (n.) 1. அரத்தம்; blood. "செம்பாலிறைச்சி திருந்த மனைசெய்து" (திருமந். 461). 2. கருப்பை அரத்தம் (பிங்.); blood in the womb causing, pregnancy.

[செம் + பால். பால் = அரத்தம்]

செம்பால்[2] *šem-bāl*, பெ. (n.) செம்பாதி பார்க்க; see *šem-bādi*. "செம்பால் வாரம் சிறுமைக் கெல்லை" (தொல்.பொருள். 463).

[செம் + பால். பால் = பாதி]

செம்பால்பாய்-தல் *šembāl-pāy-*, 1 செ.கு.வி. (v.i.) கட்டிளமையால் உடம்பில் அரத்த வோட்டம் தெரியும் படியாயிருத்தல்; to glow with health and beauty, as one's youth, making

the blood-vessels appear through the transparent skin. "இவனுடைய பால்யம் செம்பால் பாயாநிற்கும்" (திவ்அமலனாதி-9, வியா. 101).

[செம்பால் + பாய்-.]

செம்பால்முடாங்கி *šembāl-mudāṅgi*, பெ. (n.) பூடுவகை (யாழ்அக.); a shrub.

செம்பாலை *šem-bālai*, பெ. (n.) பாலைப் பண்வகை (பிங்.); a melody type of the pālai class.

[செம் + பாலை. பாலை = பண்வகை]

செம்பாளை *šem-bāḷai*, பெ. (n.) 1. தில்லைக் கட்டி நெல்; a reddish kind of paddy. 2. சம்பா நெல் வகை (G.Tj.D.I., 92); a species of šampā paddy.

[செம் + பாளை. பாளை = நெல்வகை]

செம்பாற்சிட்டி *šem-bāṟ-šiṭṭi*, பெ. (n.) கீரை வகை (யாழ்.அக.); a kind of greens.

[(செம் + பாற்சிட்டி. பாற்சிட்டி = கீரை வகை]

செம்பாறாங்கல் *šem-bāṟāṅ-gal*, பெ. (n.) செந்நிறப் பாறை; laterite, cabook.

[செம் + பாறை (ஆம்) + கல்]

செம்பாறைநண்டு *šem-bāṟai-naṇḍu*, பெ. (n.) சிவப்பு நண்டு; large red crab.

[செம் + பாறை + நண்டு. பாறை இடுக்குகளில் காணப்படும் நண்டு]

செம்பி[1] *šembi*, பெ. (n.) சோழர்குல முன்னோன்; ancestor of Chola dynasty.

செம்பி[2] *šembi*, பெ. (n.) கருவண்டு (யாழ்.அக.); black bee.

செம்பிச்சி *šembicci*, பெ. (n.) செம்பிச்சு (மூஅ.) பார்க்க; see *šembiccu*.

செம்பிச்சு *šembiccu*, பெ. (n.) செப்புத் தொட்டி நஞ்சு (மலை.); a prepared arsenic.

[செம்பு + (நச்சு →) பிச்சு]

செம்பித்தநோய் *šem-bitta-nōy*, பெ. (n.) பித்த நோய் வகை (சீவரட். 185); a bilious disease.

[செம் + பித்தநோய்]

பித்தநோய் பார்க்க

செம்பிநாட்டுமறவன் *šembi-nāṭṭu-maṟavan*, பெ. (n.) மறவர் வகையான் (E.T.V, 32); a sub-sect of Maṟava caste.

செம்பிநாடு *šembi-nāḍu*, பெ. (n.) கி.பி. 14ஆம் நூற்றாண்டில் திருக்குருகூர் உள்ளிட்ட பகுதியின் பெயர்; the name of a region including Thirukkurugur in Thiruchendur Taluk during 14th century. "வட தலை செம்பிநாட்டு கீழைக்கொடுமளான மது ரோதைய நல்லூர்" (தெ.க.தொ. 26; கல். 495)

செம்பியதரையன் *šembiya-daraiyan*, பெ. (n.) திருவள்ளூர் வட்டத்திலுள்ள கூவியம் கோயிலில் பதியப்பட்ட ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டவர்; a signatury of an agreement recorded in temple of Kūviyam at Thiruvallur tk. 'இவை செம்பியதரையன் எழுத்து' (தெ.க.தொ. 26; கல். 363)

[செம்பியன் + அரையன்]

செம்பியன்[1] *šembiyan*, பெ. (n.) 1. சிபியின் வழி வந்த சோழன்; king of the Šōḷa dynasty, as descendant of Šibi. "செம்பியர் மருகன்" (புறநா. 228 : 9). 2. முதல் வள்ளல்கள் எழுவரில் ஒருவன் (சூடா.); an ancient chief, noted for his liberality, one of seven mudal-vaḷḷalgal.

[செம்பி[1] → செம்பியன்]

வ. சைப்ய

முதல் வள்ளல்கள் எழுவராவர்: குமணன், சரகன், சாரண், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி, இவர்கள் தொன்மங்களில் கூறப்பட்டவர்கள்.

ஆரியர் வருமுன் ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் பாண்டியர் ஆட்சியிலிருந்தது.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி"
(சிலப். 11:19-22)

என்று இளங்கோவடிகள் கூறுதல் காண்க.

அக்காலத்தில் பாண்டியர் குடியினர் சிலர் வடநாடு சென்று வாழ்ந்திருந்தனர். அவரே, பாண்டவரின் முன்னோரான வடநாட்டுத் திங்கள் மரபினர். அதன்பின், சோழக் குடியினர் சிலரும் வடநாடு சென்று ஆண்டனர். அவரே இராமனின்

முன்னோரான வடநாட்டுக் கதிரவன் மரபினர். இதனாலேயே, மனு, மாந்தாதா, முசுகுந்தன், செம்பி முதலியோர், சோழருக்கும் வடநாட்டுக் கதிரவக் குலத்தினருக்கும் பொது முன்னோராகச் சொல்லப்படுவாராயினர். செம்பி வழிவந்தவன் செம்பியன். செம்பி என்னும் பெயர் வடமொழியிற் சிபி எனத் திரிந்துள்ளது.

செம்பியன் சோழன், "செம்பியர் மருகன்" (புறநா. 228:9).

சோழன் செம்பியன் எனப் பெற்றமையாலும், செம்பியன் தமிழப் பேரரையன், செம்பியன் தமிழவேள் என்பன சோழராற் கொடுக்கப் பெற்று வந்த பட்டங்களா யிருந்தமையாலும், செம்பி என்னும் பெயர் தூய தமிழ்ச் சொல்லாகவேயிருத்தல் வேண்டும். மனு, மாந்தாதா முதலியோரின் தமிழப் பெயர் மறையுண்டு போயின.

தலையெழு வள்ளல்களுள் ஒருவன் செம்பியன் எனப் பெற்றிருந்தமையால், சோழர்குடித் தொன்முது பழைமையும் செம்பியன் முதுபழமையும் உணரப் பெறும்.

ஆரியர் வருமுன் வடநாட்டில் தமிழர் குடியேறி யிருந்தது போன்றே தமிழ் அரசரும் குடியேறியிருந்தனர் என அறிக.

அகத்தியர் "துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண் குடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து காடு கெடுத்து நாடாக்கிப் பொதியின் கண்'' இருந்தார் என்று நச்சினார்க்கினியர் கூறுவதையும் நோக்குக (வ.மொ.வ.).

செம்பியன்தமிழப்பேரரையன் *šembiyan-tamiḻa-p-pēraraiyan*, பெ. (n.) **பிற்காலத்துச் சோழர்களாற் கொடுக்கப்பட்டு வந்த பட்டங் களிலொன்று** *(தெ.க.தொ. 5,238)*; a tittle conferred by the later Cholas.

[செம்பியன் + தமிழப் பேரரையன்]

செம்பியன்தமிழவேள் *šembiyan-tamiḻa-vēḷ*, பெ. (n.) **பிற்காலத்துச் சோழர்களால் கொடுக்கப்பட்டு வந்த பட்டங்களுள் ஒன்று** *(தெ.க.தொ. 3, 22)*; a title conferred by the later Cholas.

[செம்பியன் + தமிழவேள்]

செம்பியன்மாதேவி *šembiyan-mādēvi*, பெ. (n.) **கண்டராதித்த சோழனின் இரண்டாம் மனைவி**; wifc of Kaṇḍarāditta-šōḻar.

[செம்பியன் + மாதேவி]

கண்டராதித்த சோழரின் இரண்டாம் மனைவியின் பெயர் செம்பியன்மாதேவி. கொல்லிமலை மழவர் குடியைச் சேர்ந்தவர். இராசராசசோழனின் வளர்ப்பு அன்னை. கணவர் இறந்த பின்னரும் 40 ஆண்டு காலம் வாழ்ந்து பல குமுகாயப் பணி செய்துள்ளார். குறிப்பாகப் பல கோயில்கள் கருங்கல்லில் எடுத்துள்ளார்.

செம்பியன்மாதேவிநாழி *šembiyan-mādēvi-naḻi*, பெ. (n.) **திருமழபாடி கோயிலில் உப்பு அளப்பதற்காகப் பயன்படும்படியளவு** *(தெ.க.தொ. 5, கல். 627, 638)*; a volume measure, in use, the temple of Tirumaḻabādi.

[செம்பியன்மாதேவி + நாழி]

அளவுக் கலங்களுக்கு, அரச மரபினர், இறைவன் பேரிட்டு அழைப்பது பண்டைய மரபாகையால், அளவு நாழிக்கு செம்பியன்மா தேவி பெயரிடப்பட்டுள்ளது. இதே பெயரில் ஒரு மரக்காலும் இருந்ததாகத் தெரிகிறது.

செம்பியன்மாதேவிப்பெருமண்டபம் *šembiyan-mādēvi-p-perumaṇḍabam*, பெ. (n.) **முதல் இராசராசன் (கி.பி. 985-1016) தன்னுடைய பெரிய பாட்டியாகிய செம்பியன் மாதேவியின் பெயரால் திருமுக்கூடல் என்னும் ஊரில் எழுப்பித்த மண்டபம்** (பிற்.சோ.வர. சதாசிவ பண். பக். 134.); a memorial building built by Rajaraja Chola-I.

[செம்பியன்மாதேவி + பெருமண்டபம்]

செம்பியனார் *šem-bianār*, பெ. (n.) **நற்றிணை 102ஆம் பாடலின் ஆசிரியர்**; author of the verse Naṟṟiṇai 102.

செம்பிரண்டை *šem-biranḍai*, பெ. (n.) **முடைநாறி**; a small downy-lobed vine.

[செம் + பிரண்டை]

செம்பில் *šembil*, பெ. (n.) **மரவகை**; cup-calyxed white cedar.

செம்பில்வேதை *šembil-vēdai*, பெ. (n.) **சோரநஞ்சு** (மூ.அ.); a prepared arsenic.

செம்பிளி-த்தல் *šembiḷi-*, 4 செ.குன்றாவி. (v.t.) செம்பளி- பார்க்க; see *šembaḷi-*.

[செம்பளி → செம்பிளி]

செம்பிற்பொருப்பு *šembiṟ-poruppu*, பெ. (n.) செம்புகனிமம் உள்ள பொதியமலை; Mt. Podiyam, as containing copper. தென்கால் விடுக்குஞ் செம்பிற் பொருப்பு (கல்லா. 51:11).

[செம்பு + இல் + பொருப்பு (செம்புத் தாது உள்ள மலை)]

செம்பிறப்பு *šem-biṟappu*, பெ. (n.) அறுவகைப் பிறப்புகளுள் நான்காவதாகிய செம்புயிர்க் குரிய பிறப்பு; the fourth of the six kinds of birhts, which is that of šempuyir. "பசும் பிறப்புஞ் செம்பிறப்பும்" (மணிமே.27:151).

[செம் + பிறப்பு]

சமணர் கொள்கையின் படி பிறப்பு அறுவகைப்படும். தமிழகராதிகள் கூற்றுப்படி பிறப்பு ஏழு வகைப்படும். அவையாவன : தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம். சமண வகைப்பாடு வருமாறு : கரும் பிறப்பு, கருநீலப் பிறப்பு, பசும்பிறப்பு, செம்பிறப்பு, பொன் பிறப்பு, வெண் பிறப்பு.

செம்பிறால் *šembiṟāl*, பெ. (n.) சிவப்பிறால் மீன் வகை (யாழ்.அக.); a species of reddish prawn.

[செம்பு + இறால். செம்பு = சிவப்பு]

செம்பிறை *šembiṟai-*, பெ. (n.) 1. கானறகல் (யாழ்.அக.); a kind of metallic ore. 2. நீலக்கல் (யாழ்.அக.); blue stone.

[செம் + பிறை]

செம்பின்பச்சை *šembiṉ-paccai*, பெ. (n.) நாகப்பச்சை (வின்.); a kind of green stone.

செம்பினிறம் *šembiṉiṟam-*, பெ. (n.) மாந்தளிர்க் கல் (யாழ்.அக.); a kind of precious stone.

[செம்பு + நிறம்]

செம்பு¹-தல் *šembu-*, 5 செ.குன்றாவி. (v.t.) செம்மு¹,2 பார்க்க; see *šemmu¹,2*. "அவுணன் பட்டுக் குரைகடல் செம்ப" (திருப்பு. 841).

[செம்மு → செம்பு (அடைத்தல்)]

செம்பு² *šembu*, பெ. (n.) 1. வெப்பம், மின்சாரம் ஆகியவற்றை எளிதில் கடத்தக் கூடியதும் கடினத் தன்மை குறைந்ததுமான வெளிர்ச் சிவப்பு நிற மாழை, தாம்பரம்; copper Cuprum, as reddish. "செம்பிற் செய்நவுங் கஞ்சத் தொழிலவும்" (சிலப். 14: 174). 2. பொன் (அக.நி.); gold. 3. நீர், பால் முதலியவற்றை எடுத்துச் செல்ல ஏந்தாகக் குறுகிய கழுத்தும் உருண்டை வடிவக் கீழ்ப்பகுதியும் உடைய ஓர் மாழை ஏனம்; a small metal vessel with a narrow neck for carrying water, milk, etc. 4. மூன்றே காற் சேர்கொண்ட முகத்தலளவு; liquid measure = 3¼ šēr = 216 cu. in. 5. காசுக்குற்ற வகை (சரவண. பணவிடு. 16); a blemish in coin.

ம. செம்பு; க. செம்பு, கெம்பு; து. செம்பு

E. copper; LL. cuper; L. cuprum; Gk. cyprium; G. kuppes; Du. koper; F. cuinre.

[செம் → செம்பு (வே.க. 220)]

செம்புக்குட்டி¹ *šembu-k-kuṭṭi*, பெ. (n.) செம்புச் சிலை; idol made of copper.

[செம்பு + குட்டி. குட்டி = சிலை]

செம்புக்குட்டி² *šembu-k-kuṭṭi*, பெ. (n.) 1. செண்பகக்குட்டி (இயற்பெயர்); a personal name. 2. செண்பகக் குட்டி குலப்பிரிவு; a sub-sect as Šeṇbagakkuṭṭi.

செம்புக்குள்வேதை *šembukkuḷ-vēdai*, பெ. (n.) கற்பரி நஞ்சு (வின்.); a mineral poison.

செம்புகம்¹ *šembugam*, பெ. (n.) நரி; fox.

செம்புகம்² *šembugam*, பெ. (n.) செம்போத்து (சங்.அக.); crow pheasant.

தெ. செமுடு காகி

[செம்போத்து → செம்புகம்]

செம்புகொட்டி *šembu-koṭṭi*, பெ. (n.) செம்பு வேலை செய்யும் தொழிலாளி (சிலப். 5: 28, உரை); copper smith.

ம. செம்பு கொட்டி; க. செம்புகுட்டிக; து. செம்பு குட்டி

[செம்பு + கொட்டி]

செம்புடையன் *šem-budaiyan*, பெ. (n.) பாம்பு வகை; red wart snake.

[*செம் + உடையன். உடையன் = பாம்பு*]

செம்புண் *šem-buṇ*, பெ. (n.) 1. ஆறும் நிலைமையில் உள்ள புண் (இ.வ.); healing wound, as looking reddish. 2. அரத்தத்தாற் செந்நிறமாயிருக்கும் புண்; fresh wound, red with blood. "தாம்பிறிதின் செம்புண் வறுத்த வறைதின்பர்" (அறநெறி. 94).

[*செம் + புண்*]

செம்புண்ணீர் *šem-buṇṇīr*, பெ. (n.) அரத்தம்; blood. "செம்புணீர் பொசியு மெய்யினன்" (பாரத. வேத்திரகீய. 15).

[*செம் + புண்ணீர்*]

செம்புத்தீக்கல் *šembu-t-tīkkal*, பெ. (n.) இரும்புஞ் செம்புங் கலந்த மாழைக்கட்டி (இவ); copper pyrites, sulphide of copper and iron.

[*செம்பு + தீக்கல்*]

செம்புதட்டி *šembu-taṭṭi*, பெ. (n.) செம்பு கொட்டி பார்க்க; see *šembu-koṭṭi*.

ம. செம்புதட்டி

[*செம்பு + தட்டி*]

செம்புப்பற்று *šembu-p-paṟṟu*, பெ. (n.) பொன்னிற் கலந்த செம்பு (வின்.); alloy of copper in gold.

[*செம்பு + பற்று*]

செம்புமணல் *šembu-maṇal*, பெ. (n.) செம்பு கலந்த மணல் (வின்.); sand containing copper.

[*செம்பு + மணல்*]

செம்புமலை *šembu-malai*, பெ. (n.) செப்புக் கனிமங்களைத் தன்னிடத்தே கொண்ட மலை; mountain containing copper ore.

[*செம்பு + மலை*]

செம்புயிர் *šembuyir*, பெ. (n.) 1. மக்களிற் கீழாயினாரும் விலங்கும் கொண்டுள்ள உயிர்; the grade of life which includes animals and human beings of low type. "செம்புயி ரிரும்புபோல வாம் பிணியுயிர்" (சீவக. 3111)

[*செம்பு + உயிர்*]

மணி உயிர் - வீடு பெற்ற உயிர்; பொன் உயிர்- வானவர் உயிர்; வெள்ளி உயிர் - அழகிய மக்கள் உயிர்; செம்புயிர் - மக்களின் கீழாயினோர் உயிர், விலங்குயிர்; இரும்பு உயிர் - நிரையயுயிர் (நரகருயிர்) (சைனம்).

செம்புலப்பெயல்நீரார் *šembula-p-peyal-nīrār*, பெ. (n.) குறுந்தொகை 40ஆம் பாடலில் வரும் சொற்றொடர் கொண்டு அழைக்கப்படும் புலவர், அப்பாடலின் ஆசிரியர்; the name of the poet, named after the terms found in his verse Kuṟundogai 40, when his original name was not known. "செம்புலப் பெயந்நீர் போல" (குறுந். 40).

[*செம்புலம் + பெயல் + நீரார்*]

செம்புலம் *šembulam*, பெ. (n.) 1. செம்மண் நிலம்; red earth country. "செம்புலப் பெயந்நீர் போல" (குறுந். 40). 2. போர்க்களம் (திவா.); battle field. 3. பாலைநிலம் (பிங்.); desert tract. 4. சுடுகாடு; place of cremation. 5. செம்புமலை பார்க்க; see *šembu-malai*. 6. செழிப்பானநிலம் (வின்.); fertile land.

[*செம் + புலம். புலம் = நிலம்*]

செம்புலவு *šembulavu*, பெ. (n.) வெண்ணாங்கு மரவகை (L.); creamy-leaved lance wood.

செம்புலி *šem-buli*, பெ. (n.) 1. பழுப்பு நிறமுள்ள புலிவகை; tawny-coloured tiger. 2. கள்ளர் இனத்தில் ஓர் உட்பிரிவு (E.T.); a sub-sect of Kaḷḷar caste.

ம. செம்புலி

[*செம் + புலி*]

செம்புலியாடு *šembuli-y-āḍu*, பெ. (n.) செம்மறி பார்க்க (பதார்த்த. 847); see *šem-maṟi*.

செம்புவரை *šembu-varai*, பெ. (n.) செம்பிற் பொருப்பு பார்க்க; see *šembiṟ-poruppu*. "செம்பு வரை தனிலேகி" (குற்றா. தல. திருமால். 9).

[*செம்பு + வரை. வரை = மலை*]

செம்புவிலை *šembu-vilai*, பெ. (n.) சேரர் ஆட்சிக் காலத்தில் வாங்கப்பட்ட வரி; a kind of tax.

செம்புள் *šem-buḷ*, பெ. (n.) கருடன்; sacred kite. "செம்புளாய்க் கொடிய நாரசிங்க மாய்" (திருவிளை. யானையெ. 41).

ம. செம்புள்

[*செம் + புள்*]

செம்புளிச்சான் *šem-buḻiccāṉ,* பெ. (n.) செம்புளிச்சை (L.) பார்க்க; see *šem-buḻiccai.*

செம்புளிச்சை *šem-buḻiccai,* பெ. (n.) 1. தேவதாரு மரம் (பிங்.); red cedar. 2. மரவகை (M.M. 83); a kind of tree Roselle.

[செம் + புளிச்சை. புளிச்சை = மரவகை]

செம்புறா *šembuṟā,* பெ. (n.) மீன் வகை (யாழ்ப்.); a kind of fish.

[செம்பிறால் → செம்புறா]

செம்புறைக்கல் *šem-buṟai-k-kal,* பெ. (n.) செம்பாறாங்கல் (சங்.அக.) பார்க்க; see *šem-pāṟāṅgal.*

செம்புனல் *šem-buṉal,* பெ. (n.) 1. புது வெள்ளம்; freshes in river. "தலைப் பெயற் செம்புன லாடி" (ஐங்குறு. 80). 2. சிவந்த நீர்; red -water. 3. அரத்தம்; blood. "கடார மழித்த நாட் பாய்ந்து செம்புன லாடியு நீந்தியும்" (கலிங். 138).

[செம் + புனல்]

செம்பூ *šem-bū,* பெ. (n.) செந்நிறப் பூவுள்ள செடி வகை; a plant with red-flower. "செம்பூங் கண்ணியர்" (பரிபா. 22:21).

[செம் + பூ]

செம்பூசணி *šem-būšaṇi,* பெ. (n.) பூசணி வகை (மூ.அ.); a variety of reddish pumpkin.

[செம்(மை) + பூசணி]

செம்பூட்சேய் *šembūṭ-šēy,* பெ. (n.) அகத்தியனார் மாணாக்கருள் ஒருவரான கூற்றியல் என்னும் நூலின் ஆசிரியர் (இறை. 56, உரை); a disciple of Agastya, author of Kūṟṟiyal.

செம்பூர்நாடு *šembūr-nāḍu,* பெ. (n.) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பழைய நாட்டுப் பிரிவு; an old divison in Kāñjipuram dt. "செம்பூர்க் கோட்டத்து செம்பூர் நாட்டு கலிகுளத்து வாயுடையமாங் கோயில் . . ." (தெ.க.தொ : 7, கல். 541-1).

[செம்பூர் + நாடு]

செம்பூரம் *šem-būram,* பெ. (n.) செம்பூரான் பார்க்க; see *šem-būrāṉ.*

[செம் + பூரம். பூரம் = பூரான்]

செம்பூராங்கல் *šem-būrāṅgal,* பெ. (n.) செம்பாறாங்கல் பார்க்க; see *šem-bāṟāṅ-gal.*

[செம்பாறாங்கல் → செம்பூராங்கல்]

செம்பூரான் *šem-būrāṉ,* பெ. (n.) பூரான் வகை (சங்.அக.); red centipede.

[செம்(மை) + பூரான்]

செம்பூரான்கல் *šem-būrāṉ-kal,* பெ. (n.) செம்பாறாங்கல் (கட்டடநா. 41) பார்க்க; see *šem-bāṟāṅ-gal.*

[செம் + பூரான்]

செம்பூவம் *šem-būvam,* பெ. (n.) மரவகை; a kind of tree.

[செம் + பூவம். பூவம் = மரவகை.]

செம்பூறல் *šembūṟal,* பெ. (n.) செம்பிலுண்டாகுங் களிம்பு (யாழ்ப்.); verdigris.

[செம்பு + ஊறல். ஊறு → ஊறல்]

செம்பூறு-தல் *šembūṟu-,* 5 செ.கு.வி. (v.i.) களிம்பு உண்டாதல்; to form verdigris, as on copper.

[செம்பு + ஊறு-.]

செம்பை[1] *šembai,* பெ. (n.) 1. சிற்றகத்தி (L.); common sesban. 2. சீமைச்செம்பை (L.); Jerusalem thorn. 3. ஒருவகைப் பூச்செடி; a kind of flower plant.

[செம்பு → செம்பை (வே.க.220)]

செம்பை

செம்பை[2] *šembai,* பெ. (n.) நெற்பயிரின் நோய் வகை (நீலகேசி, 366, உரை.); a disease affecting paddy crop.

செம்பொடி[1] *šem-bodi*, பெ. (n.) 1. செம்மணல் (சங்.அக.); red sand. 2. மகரந்தப்பொடி; pollen. "சேவலொடு பெடையன்னம் . . . பூவணைமேல் துதைந்தெழு செம்பொடியாடி" (திவ். பெரியாழ். 4.9:9).

[செம் + பொடி]

செம்பொடி[2] *šem-bodi*, பெ. (n.) 1. நீலக்கல் (யாழ்.அக.); blue stone. 2. சிந்தூரம்; red oxide of mercury. "செம்பொடிப் புரத்திக் கயங்களை" (தக்கயாகப். 496).

[செம் + பொடி]

செம்பொத்தி *šem-botti*, பெ (n.) ஆடைவகை (சிலப். 14:108, உரை); a kind of cloth.

[செம் + பொத்தி. பொத்தி = ஆடை வகை]

செம்பொருள் *šem-boruḷ*, பெ (n.) 1. நேர் பொருள்; natural, correct meaning. 2. உண்மைப்பொருள் (சி.போ.பா. 6:2, பக். 319); true significance. 3. சிறந்த பொருள்; object of supreme worth or excellence. "மெய்ந்நிறைந்த செம்பொருளாம் வேதத்தின்" (பெரியபு. திருஞான. 102). 4. முதற்பொருளான கடவுள்; God. "செம் பொருள் காண்ப தறிவு" (குறள், 358). 5. அறம்; virtue. "செம்பொருள் கண்டார்" (குறள், 91).

[செம் + பொருள்]

செம்பொருளங்கதம் *šem-boruḷ-aṅgadam*, பெ. (n.) வாய்கரவாது சொல்லிய வசைப் பாட்டு (தொல்.பொருள்.437,உரை); open, undisguised lampoon.

[செம்பொருள் + அங்கதம். அங்கதம் = வசைப்பாட்டு]

செம்பொறி *šem-boṟi*, பெ. (n.) அரசமுத்திரை (அக.நி.); royal seal.

[செம் + பொறி]

செம்பொன் *šem-boṉ*, பெ. (n.) சிறந்த பொன்; superior gold. "செம்பொன் விளக்கொடு சேடியர் முந்துற" (பெருங். உஞ்சைக். 33:189).

ம. செம்பொன்னு; க. செம்பொன்

[செம் + பொன்]

செம்பொன்வரை *šem-boṉ-varai*, பெ. (n.) மேருமலை; Mt. Mēru, as golden. "கல்விச் செம்பொன் வரையினா ரளவில்லா வளவு சென்றார்" (திருக்கோ. 308).

[செம் + பொன் + வரை. வரை = மலை.]

செம்போக்கு *šem-bōkku*, பெ. (n.) உயிர், உயர் பிறவிகளிற் சென்று கொண்டிருக்கை; upward progress of souls in higher births. "இது செம்போக்கி னியல்பு" (மணிமே.27: 157).

[செம் + போக்கு. செம்மை = உயர்ந்தது]

செம்போத்து[1] *šem-bōttu*, பெ. (n.) உடல் கறுப்பாகவும் இறக்கை பாக்கு நிறமாகவும் இருக்கும் காக்கை அளவிலான பறவை (பிங்.); crow pheasant.

மறுவ. செண்பகம்

ம. செம்போத்து; க. செம்போது, கெம்போது

[செம் + போத்து. போத்து = பறவை]



செம்போத்து

செம்போத்து[2] *šem-bōttu*, பெ. (n.) செண்பகம் (யாழ்.அக.); champak tree.

செம்போத்துக்காரி *šembōttu-k-kāri*, பெ. (n.) சில இடங்களில் வெளுத்தும் சில இடங்களிலும் கறுத்துமுள்ள எருது (இ.வ.); bull partly grey and partly black in colour.

[செம்போத்து + காரி]

செம்போதகர் *šem-pōdagar*, பெ. (n.) அருகரில் ஒரு பகுதியார் (சி.சி. ஆசீவகன் மறுதலை, 2, பர.); a class of Arhats.

Skt. bōdhaka

[செம் + போதகர்]

செம்மகள்[1] *šem-magaḷ*, பெ. (n.) 1. திருமகள்; Lakshmi, as beautiful. "முளரி நிறை செம்மகள் முன்னி யாடுக" (கல்லா. 39: 4).

[செம் + மகள். செம்மையான, அழகான திருமகள்]

செம்மகள்[2] *šem-magaḷ*, பெ. (n.) பட்டறிவற்ற (அனுபவமற்ற) பெண்; artless, inexperienced girl. "செம்மகண் மாலை யிம்முறை யென்றால் (கல்லா. 5:31).

[செம் + மகள்]

செம்மட்டி *šem-maṭṭi*, பெ. (n.) 1. ஒரு வகைச் சிப்பி; a kind of mussel or oyster. 2. மரமஞ்சள் (மலை.); tree turmeric.

[செம் + மட்டி. மட்டி = சிப்பிமீன்]

செம்மண்[1] *šem-maṇ*, பெ. (n.) மட்பாண்டங்கள் மீது பூசவும், சாலைகள் அமைக்கவும் பயன்படும் ஒருவகைச் சிவப்பு நிற மண் (சிலப். 16:5, உரை); a kind of red earth, red soil.

ம. செம்மண்ணு; க., பட. கெம்மண்ணு; துட. கெம்மொண்

[செம் + மண்]

செம்மண்[2] *šem-maṇ*, பெ. (n.) மாணிக்கக் குற்றங்களுள் ஒன்று (திருவாலவா. 25:14); a flow in rubies, one of māṇikka-k-kuṟṟam.

[செம் + மண்]

செம்மண்சிலை *šem-maṇ-šilai*, பெ. (n.) காவிக்கல் (யாழ்.அக.); red ochre.

[செம்மண் + சிலை.]

செம்மண்நிலம் *šem-maṇ-nilam*, பெ. (n.) சிவந்த மண்ணையுடைய நிலப்பகுதி; red soil area; laterite soil.

[செம்மண் + நிலம்]

செம்மண்பட்டை *šem-maṇ-paṭṭai*, பெ. (n.) நற்காலங்களில் கோயில், மதில், திண்ணை முதலியவற்றில், சுண்ணாம்புப்பட்டையை இடையிட்டு அடிக்கும் சிவப்புப்பட்டை; stripes of red wash alternating with white, made on festive occasions on the side walls, as of temples, of raised platform at the entrance of house, etc.,

[செம்மண் + பட்டை]

செம்மண்பூச்சு *šem-maṇ-pūccu*, பெ. (n.) மண் சுவரின் மீது குழைத்த செம்மண் கொண்டு பூசி மெழுகியது; finishing the mud wall with red earth. என் வீட்டிற்கு நேற்று செம்மண் பூச்சு பூசினார்கள் (உ.வ.).

[செம்மண் + பூச்சு]

செம்மண்பூமி *šem-maṇ-pūmi*, பெ (n.) செம்மண்நிலம் பார்க்க; see *šem-maṇ-nilam*.

[செம்மண் + பூமி]

செம்மணத்தக்காளி *šem-maṇa-t-takkāḷi*, பெ (n.) செம்மணித்தக்காளி (M.M.) பார்க்க; see *šem-maṇi-t-takkāḷi*.

[செம்மணித்தக்காளி → செம்மணத் தக்காளி]

செம்மணத்தி *šem-maṇatti*, பெ. (n.) செம்புளிச்சை,1 (மலை) பார்க்க; see *šem-puḷiccai,1*.

செம்மணற்பாறை *šem-maṇaṟ-pāṟai*, பெ (n.) மணற்பாறை வகைகளுள் ஒன்று; a kind of sand-stone in red colour.

[செம்மணல் + பாறை]

செம்மணி *šem-maṇi*, பெ (n.) 1. மாணிக்கம் (பிங்.); ruby. 2. பதுமராகம், குருவிந்தம், குருந்தக்கல், மாம்சகந்தி, பவளம் என்ற ஐம்மணிகளில் ஒன்று (யாழ்.அக.); any of the red gems, viz., padumarāgam, kuruvindam, kurundakkal, māmšagandi, pavaḷam. 3. சிவப்புமணி; red bead. 4. கண்ணின் கருமணியைச் சூழ்ந்துள்ள செந்நிற வட்டம் (யாழ்ப்); a redddish circle round the pupil of the eye.

[செம் + மணி]

செம்மணிச்சை *šem-maṇiccai*, பெ. (n.) மரவகை (தெ.க.தொ. 3, 408); a tree.

[செம் + (மணிச்சிகை→) மணிச்சை]

செம்மணித்தக்காளி *šem-maṇi-t-takkāḷi*, பெ. (n.) செடிவகை; a variety of Indian hounds-berry.

[செம்மணி + தக்காளி]

செம்மந்தாரை *šem-mandārai*, பெ. (n.) மந்தார மரவகை (L.); purple variegated mountain ebony.

[செம் + மந்தாரை]

செம்மயிற்கொண்டை *šemmayiṟ-koṇḍai*, பெ. (n.) செம்மயிற்கொன்றை (வின்.) பார்க்க; see *šem-mayiṟ-koṉṟai*.

[செம்மயிற்கொன்றை → செம்மயிற் கொண்டை]

செம்மயிற்கொன்றை *šem-mayiṟ-koṉṟai*, பெ. (n.) கொன்றை வகை (L.); scarlet peacock flower tree.

[செம் + மயிற்கொன்றை]

செம்மரம் *šem-maram*, பெ. (n.) 1. மரவகை; Coromandal red-wood-Soymida febrifuga. 2. மரவகை (L.); a kind of tree. 3. செஞ்சந்தனம் (L.); red-sanders. 4. அழிஞ்சில் (மலை.); sage-leaved alangium. 5. மஞ்சாடி (L.); barbadoes pride. 6. தேவதாரு (L.); red cedar.

ம. செம்மரம்

[செம் + மரம்]

செம்மரிசி *šem-m-arišì*, பெ. (n.) செந்நெல்லில் இருந்து எடுக்கப்பட்ட அரிசி (நன்னி. க.தொ.2. கல்.2. தொ.எண். 254-32); a kind of rice taken from red paddy.

[செம் + அரிசி]

செம்மருதம் *šem-marudam*, பெ. (n.) கட்டடப் பணிக்குப் பயன்படும் கெட்டியான மருதமரம், பூமருது; hard country wood for building works.

ம. செம்மருத

[செம் + மருதம்]

செம்மருதர் *šem-marudar*, பெ. (n.) நல்ல வேளாளர்; good farmers or cultivators. செம்மருதர் குடியாக (T.A.S.)

[செம் + மருதர்]

செம்மருது *šem-marudu*, பெ. (n.) செம்மருதம் பார்க்க; see *šem-marudam*.

ம. செம்மருது

[செம் + மருது]

செம்மல்[1] *šemmal*, பெ. (n.) 1. தலைமை; greatness, excellence, superiority. "அருந் தொழில் முடித்த செம்மற் காலை" (தொல். பொருள். 146). 2. வலிமை (பிங்.); power. 3. தருக்கு; haughtiness. "செயிர்ப் பவர் செம்மல் சிதைக்கலாதார்" (குறள், 880). 4. பெருமையிற் சிறந்தோன், தலைவன் (திவா.); great person, as king. சீர்திருத்தச் செம்மல். 5. இறைவன் (திவா.); god. "சித்தன் பெரியவன் செம்மல்" (சிலப். 10:183). 6. சிவன் (சூடா.); Šiva. 7. அருகன் (சூடா.); Arhat. 8. மறவன் (வீரன்) (திவா.); warrior, hero. 9. பெருமையுள்ள மகன்; son. "பருதிச் செல்வன் செம்மலுக்கு" (கம்பரா. அனும. 18).

ம. செம்மு

[செம் → செம்மல்]

தலைவன் அல்லது அரசன் செம்மல் எனப்பட்டது, நேர்மையான ஆட்சியால்; சிவன் செம்மல் எனப்பட்டது, செந்நிறத்தால்

செம்மல்[2] *šemmal*, பெ. (n.) 1. சாதிப்பூ (குறிஞ்சிப். 82); large flowered jasmine. 2. வாடிச்சிவந்த பழம்பூ (திவா.); faded flower "உதிர்ந்த . . . செம்மன் மணங்கமழ" (சிலப். 7, பாடல், 39). 3. வாடாப்பூ (அக.நி.); ever-fresh flowers.

[செம் → செம்மல்]

செம்மல்[3] *šemmal*, பெ (n.) நீர் (அக.நி.); water.

[செம் → செம்மல்]

செம்மல்லிகை *šem-malligai*, பெ. (n.) செம் முல்லை (இ.வ.); golden jasmine.

[செம் + மல்லிகை]

செம்மலை[1] *šemmalai*, பெ. (n.) செங்கரடு பார்க்க; see *šeṅ-garaḍu*.

செம்மலை[2] *šemmalai*, பெ. (n.) ஆவிரை; tanner's senna.

செம்மலைப்பாலை *šem-malai-p-pālai*, பெ. (n.) பாலைப் பண் வகை (சங்.அக.); a secondary melody-type of the pālai class.

செம்மறி *šem-maṟi*, பெ. (n.) கம்பளிப் போர்வைக்குத் தேவையான முடியைப் பொறுவதற்காகவும், இறைச்சிக்காகவும் வளர்க்கப்படும் ஒருவகைப் செம்பழுப்பு நிற ஆடு (திவா.); common brown sheep.

ம. செம்மரி

[செம் + மறி]



செம்மறிப்புருவை *šem-maṟi-p-puruvai*, பெ. (n.) 1. பெண்ணாடு (நாஞ்.); she sheep, ewe. 2. செம்மறியாட்டுக்குட்டி (வின்.); lamb.

[செம்மறி + புருவை]

செம்மறியாடு *šem-maṟi-y-āḍu*, பெ. (n.) செம்மறி பார்க்க; see *šem-maṟi*.

செம்மன்திருக்கை *šemmaṉ-tirukkai*, பெ. (n.) பழுப்பு நிறமும், 25 விரலம் நீளம் வளரும் உடலும், 72 விரலம் நீளம் வளரும் வாலுமுள்ள, மீன்வகை; sting ray, brown, attaining 25 in. in length besides a tail 72 in. long, trigon bleekeri.

[செம் → செம்மன் + திருக்கை]



செம்மா¹-தல் *šemmā-*, 6 செ.கு.வி. (v.i.) செம்மை யாதல்; to be right, to become proper. "என் கண்ணன் கள்வ மெனக்குச் செம்மாய் நிற்கும்" (திவ். திருவாய். 9. 6:6).

ம. செம்மாக்குக (அழகாக்குதல், நேராக்குதல்)

[செம் + ஆ - செம்மா-.]

செம்மா²-த்தல் *šemmā-*, 6 செ.கு.வி. (v.i.) 1. இறுமாத்தல்; to be elated with pride, to be haughtly, to assume superiority "மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்' (குறள், 1074). 2. மிகக் களித்தல்; to be over-joyed, intoxicated with joy. "மதுவுண்டு செம்மருந் தண்கரும்பு" (பெரியபு. ஆனாய. 20). 3. வீறுபெறுதல்; to be majestic in manner or bearing. "அண்ணல் செம்மாந் திருந்தானே" (சீவக. 2358).

[செம் → செம்மா-.]

செம்மாத்தி *šemmātti*, பெ. (n.) காலணித் தொழிலாளர் குலப்பெண்; woman of the shoe-maker caste.

[செம்மான் (ஆ.பா.) → செம்மாத்தி (பெபா.)]

செம்மாப்பு *šemmāppu*, பெ. (n.) 1. அகமலர்ச்சி (திவா.); exultation. 2. இறுமாப்பு (சூடா.); pride, haughtiness. 3. வீற்றிருக்கை (சூடா.); majestic bearing or manner.

[செம்மா-² → செம்மாப்பு]

செம்மார்புக்குக்குறுவான் *šemmārbu-kuk-kuṟuvāṉ*, பெ. (n.) பச்சை நிறவுடலும், மஞ்சள் நிறத் தொண்டையும் சிவப்பு நிறமார்பும் கொண்ட பறவை; coppersmith barbet.

[செம்மார்பு + குக்குறுவான்]

சாலை ஓரமரங்கள், தோட்டங்கள், பூங்காக்கள் ஆகியவற்றில் காணப்படும் பறவை.

செம்மாரா *šem-m-ārā*, பெ. (n.) மஞ்சள் அல்லது இளஞ்சிவப்பு நிறமுள்ள கடல்மீன் வகை; sea-fish, yellow or rosy.

[செம் + (ஆரால் →) ஆரா]

செம்மாளி *šemmāḷi*, பெ. (n.) செம்படவர் அணியும் செருப்பு வகை (இ.வ.); a kind of sandals used by fishermen.

தெ. சம்மாளிகலு.

[செம்மான் → செம்மாளி]

செம்மான் *šemmāṉ*, பெ. (n.) காலணி செய்வோன் (சூடா.); shoe-maker, one who works in leather.

ம. செம்மான்

[செம் → செம்மான்]

Skt. carman

செம்மானம் *šem-māṉam*, பெ. (n.) 1. செக்கர் வானம்; roseate sky. "செம்மானத் தொளியன்ன மேனியான் காண்" (தேவா. 711. 1). 2. மழைப் பெய்தலைக் குறிக்கும் வானம் (தஞ்சை); copper sky.

ம. செம்மானம்; க. கெம்பார

[செம் + (வானம் →) மானம்]

செம்மிளகி *šem-miḷagi*, பெ. (n.) சம்பாநெல் வகை (A.); a species of šambā paddy.

[செம் + மிளகி. மிளகி = நெல் வகை]

செம்மீன்[1] *šem-mīṉ*, பெ. (n.) 1. அருந்ததி; the star Arundadi "செம்மீ னனைய ணின்றொன்னகர்ச் செல்வி" (பதிற்றுப். 31:28). 2. செவ்வாய்; Mars. செம்மீ னிமைக்கு மாக விசும்பின் (புறநா. 60:2). 3. யாழ்விண்மீன் (திருவாதிரை) (புறநா. 60, உரை); the 6th star.

ம. செம்மீன்

[செம்(மை) + மீன். மீன் = விண்மீன்]

செம்மீன்[2] *šem-mīṉ*, பெ. (n.) 1. பெருந்தலைத் திமிங்கலம் (M.M.345); sperm whale. 2. இறால் மீன்; prawns.

ம. செம்மீன்

[செம் + மீன்]

செம்மீன்வயிரம் *šem-mīṉ-vayiram*, பெ. (n.) மீனம்பர் என்னும் மருந்துப்பண்டம் (வின்.); ambergris as found in the intestines of the sperm whale.

[செம்மீன் + வயிரம்]

செம்மீன் வயிற்றில் காணப்படுவது

செம்மு[1]**-தல்** *šemmu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மூடுதல்; to shut, close, as door. "திண்கதவஞ் செம்மி" (திவ்.இயற். 3:12). 2. தூர்த்தல்; to close up, fill up "தூளி . . . யானை மதத்தொளை செம்மிற் றன்றே" (கம்பரா. எழுச். 52). 3. மருந்துப் பண்டங்களைப் புடமிடும் பொழுது சீலை மண்கட்டுதல் (வின்.); to apply lute to a cloth covering a medicinal substance, before heating. 4. பையை நிறைத்து வாயைத் தைத்தல் (வின்.); to stuff and fill, as pillow or bag, and sew up the end. 5. புண்ணைக் கீறிவிடுதல்; to open, as a sore. 6. புடைத்தல் (இ.வ.); to beat soundly, thrash. 7. கிட்டித்தல்; to consolidate. தோண்டிய குழிக்குள் தூணை நிறுத்திச் சுற்றிலும் சல்லி மண் முதலியன இட்டுச் செம்மினார்கள்.

[செம் → செம்மு]

செம்மு[2]**-தல்** *šemmu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. கலங்குதல்; to be disturbed, agitated. 2. கண் கலங்கி வீங்குதல் (வின்.); to be swollen and bleared, as the eyes. 3. வயிறு பொருமுதல் (வின்.); to be hard, as belly through indigestion. 4. நிறமுதலியன பரவுதல் (வின்.); to spread, as colour.

[செம் → செம்மு]

செம்முதுகுக்கீச்சான் *šem-mudugu-k-kīccāṉ*, பெ. (n.) பெரிய தலையோடு பருத்த வளைந்த அலகும், செம்மையான முதுகும் கொண்ட பறவை; rufous-backed shrike.

[செம்முதுகு + கீச்சான்]

இது ஓணான், தவளை போன்றவற்றைப் பிடித்து முள்மரங்களில் குத்தி வைத்து பின் ஓய்வாகத் தின்னும் இயல்புடையது.

செம்முருங்கை *šem-muruṅgai*, பெ. (n.) மரவகை; a kind of tree.

ம. செம்முரிங்ங

[செம் + முருங்கை]

செம்முல்லை *šem-mullai*, பெ. (n.) முல்லை வகை (L.); golden jasmine.

[செம் + முல்லை]

செம்முள்ளி *šem-muḷḷi*, பெ. (n.) 1. சமுத்திராப் பழவகை (L.); Andaman Indian oak. 2. முட் செடிவகை; a thorny plant. 3. வெள்ளை நீலாம்பரம் (L.); crested purple nail dye.

ம. செம்முள்ளி

[செம் + முள்ளி]

செம்மூக்கன் *šem-mūkkan*, பெ (n.) 1. *முதலை வகை (யாழ்ப்.);* a species of alligator. 2. *எலி வகை (சங்.அக.);* a species of rat.

[செம் + மூக்கன்]

செம்மேவல் *šem-mēval*, பெ. (n.) இணங்குகை *(யாழ்ப்.);* agreement, reconciliation.

[செம் + மேவு + அல்]

செம்மை *šemmai*, பெ. (n.) 1. *சிவப்பு (திவா.);* redness, ruddiness. கதிரவன் மறையும் நேரத்தில் வானம் செம்மை பூசியிருந்தது. 2. செவ்வை *(திவா.);* goodness, soundness, good condition. 3. *நேர்மை;* spotlessness, directness, rectitude "செம்மையி னிகந் தொரீஇ" *(கலித்.14).* வறுமையிலும் செம்மை வேண்டும். 4. *மனக் கோட்டமின்மை;* fairness, impartiality. "செம்மையுஞ் செப்பும்" *(தொல்.பொருள். 209).* 5. *ஒற்றுமை (யாழ்ப்.);* unity, concord, agreement. 6. பெருமை *(திவா.);* excellence, eminence, greatness. "செம்மை சான்ற காவிதி மாக்களும்" *(மதுரைக். 499).* 7. தூய்மை (வின்.); fineness, neatness, cleanliness. 8. *அழகு;* beauty, grace, elegance. 9. செங்கோள் (கேது) *(சூடா.);* moon's descending node. 10. *கந்தகம்;* sulphur. "செம்மை முன்னிற்பச் சுவேதம் திரிவபோல்" *(திருமந். 2455).* 11. *கருத்தும் சொல்லும் செயலும் தம்முள் மாறாமை* (குறள், *அதி 11, பரிமே.);* no change in thought, word and deed.

ம. செம்ம

[செய்ம்மை → செம்மை]

செம்மைக்கல் *šemmai-k-kal*, பெ. (n.) செந்நிறமான *கானகக்கல்;* a variety of red stone containing ore.

[செம்மை + கல்]

செம்மைகட்டு-தல் *šemmai-kaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. *ஒழுங்குபடுத்துதல்;* to adjust, settle. 2. *அமைதி (சமாதான)ப் படுத்துதல்;* to reconcile, as parties. 3. *ஏற்றுக் கொள்ளச் (சம்மதிக்கச்) செய்தல்;* to induce consent.

[செம்மை + கட்டு-]

செம்மைப்படுத்து-தல் *šemmai-p-paḍuttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. *ஒழுங்குபடுத்துதல்;* to put in order, adjust, arrange, make ready, rectify. 2. *தூய்மையாக்குதல் (உ.வ.);* to cleanse. 3. *நிறைவு செய்தல்;* to finish, complete. 4. *அழகு படுத்துதல்;* to dress, decorate. 5. *மேம்படுத்துதல்;* to improve. 6. *சீர்படுத்துதல்;* to reform. நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தச் சில திட்டங்கள் போட வேண்டும்.

[செம்மை + படுத்து-.]

செம்மைபண்டாரக்கல் *šemmai-paṇḍārakkal*, பெ. (n.) *பொன்னை அளவிட உதவும் பண்டைய கல்;* an old weighing stone to weigh gold. 'தென்னாட்டுத் (தி) ருவ (ரை)ச் சங்கரனிரனை சிங்கன் நந்தாவிளக் கொன்றி னுக்குத் தந்த பொன் செம்மை பண்டாரக் கல்லால் 79 இவனெய்' *(தெ.க.தொ.4, கல். 519/1986).*

[செம்மை + பண்டாரக்கல்]

செம்மையாக *šemmai-y-āga*, வி.எ. (adv.) *கடுமையாக;* severely. அதிகாரியிடம் செம்மையாக வாங்கிக் கட்டிக் கொண்டான்.

[செம்மை → செம்மையாக]

செம்மொழி[1] *šem-moḻi*, பெ. (n.) 1. நல்ல *சொல்;* good, spotless words. "செம்மொழி மாதவர்" *(சிலப். 30:32).* 2. தொகை மொழியல்லாத ஒரு மொழி; simple, inseparable word; word that cannot be split up. opp.to piri-moḻi. 'தாமரை யென்பது செம்மொழியும் பிரிமொழியுமானாற் போலவும்' *(பி.வி. 5, உரை).*

[செம் + மொழி]

செம்மொழி[2] *šem-moḻi*, பெ. (n.) தொன்மையும் *சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட செவ்வியமொழி;* classical language. இந்திய அரசின் செம்மொழிப் பட்டியலில் இன்னும் தமிழ் இடம் பெறவில்லை.

[செம் + மொழி]

செம்மொழிச்சிலேடை *šem-moḻi-c-cilēḍai*, பெ. (n.) *பிரிக்கப்படுதலின்றியே பலபொருள் பயக்குஞ் சொற்களாலாகிய தொடர் (தண்டி. 75 உரை);* paronomasia in šem-moḻi, caused without splitting up words, one of two šilēḍai.

"செங்கரங்க ளானிரவு நீக்கத் திறம் புரிந்து
பங்கய மாதர் நலம்பயிலப் -பொங்குத்

தேராழி வெய்யோ னுயர்ந்த நெறியொழுகும்
நீராழி நீணிலத்து மேல்"
இப்பாடலில் ஆதித்தச் சோழனுக்குப் பகலவன் சிலேடையாக குறிப்பிடப்பட்டுள்ளது காண்க.

[செம்மொழி + சிலேடை]

செமக்கையிறால் *šemakkai-y-iṟāl*, பெ. (n.) இறால் வகை; a kind of prawn.

[செம் + கை + இறால்]

செமதி *šemadi*, பெ. (n.) மிகுதி; abundance.

[செம் → செமதி]

செமி[1]-த்தல் *šemi-*, 4 செ.குன்றாவி. (v.t.) செரித்தல்; to digest. "நஞ்சையுண்டு செமிப்பீரையா" (திருக்குற் ஊடற். 19. செந். 25, 392).

[சரி → செரி- → செமி-.]

செமி[2]-த்தல் *šemi-*, 4 செ.குவி. (v.i.) செரிமான மாதல்; to be digested. 'உண்டது செமியாமே' (ஈடு).

[செமி[1] → செமி[2]-.]

செமி[3]-த்தல் *šemi-*, 4 செ.குவி. (v.i.) பிறத்தல்; to be born. "செமித்த தெத்தனை" (திருப்பு. 242).

செமியாக்குணம் *šemi-yā-k-kuṇam*, பெ (n.) செரியாமை; indigestion.

[செமி- → செமியா + குணம்]

செய்[1]-தல் *šey-*, 1 செ.குன்றாவி. (v.t.) 1. இயற்றுதல்; to do; perform, make, create, accomplish. "செயப்படு பொருளைச் செய்தது போல" (தொல். சொல். 248). செய்வதைத் திருந்தச் செய். 2. உண்டாக்குதல்; to cause, effect. "செறிந்தேர் முறுவலாள் செய்தவிக் காமம்" (கலித். 140). 3. பொருளீட்டுதல் (சம்பாதித்தல்); to acquire. "ஈதற்குச் செய்க பொருளை" (திரிகடு. 90). 4. ஒத்தல்; to resemble "வேனிரை செய்த கண்ணி" (சீவக. 2490).

ம. செய்யுக; க. கெய், தெய்; தெ. சேயு; து. கைபினி; கோத. கெய்; துட. கிய்; பிரா. கன்னிங்க்; குட. கெய்; கோண். கீபானா; கூ. கிவ, கிய; குவி. கீனை; நா. அக்; கொலா. கக்; கட. கெய்; பட. கீய்

[கல் → செல் → செள் → செய்-.]

செய்[2]- *šey-*, பெ. (n.) 1. செய்கை; deed, act, action. "களிறு களம்படுத்த பெருஞ்செய் யாடவர்" (நெடுநல். 171). 2. வயல்; field, especially wet field. "செய்யிற் பொலம்பாப்புஞ் செய்வினை" (பரிபா. 10:128).

ம. செயி; க. கெய்

[செய்[1] → செய்[2]]

செய்[3] *šey*, பெ. (n.) 1. 1¾ ஏக்கர் கொண்ட நன்செய் அல்லது புஞ்சை நிலவளவு; a unit of field measure = 276 ft x 276 ft = 76, 176 sq. ft = 1¾ acres of wet land (R.P.) 2. பெருங்குழி, 100 சிறு குழி கொண்ட நிலவளவை (G.Sm.D. I, i. 288); peru-ṅ-kuḻi, a land measure consisting of 100 ciṟu-kuḻi.

[செள் → செய். (ஒ.மொ. 169)]

செய்[4] *šey-*, பெ. (n.) சிவப்பு (தைலவ.); redness.

[சுல்(சிவப்பு) → செல் → செள் → செய்]

செய்க்கடன் *šey-k-kaḍaṉ*, பெ. (n.) நிலவரி; land tax. "பழஞ் செய்க்கடன் வீடுகொண்டது" (புறநா. 35).

[செய் + கடன்]

செய்கடன் *šey-kaḍaṉ*, பெ. (n.) 1. கடமைச் செயல்; duty, religious, social or moral. "தீர்த்தமாடிச் செய்கட னினிது முற்றி" (தணிகைப்பு, அகத். 131). 2. முன்னோர்க்குச் செய்யும் கடன் (வின்.); funeral obsequies, rites for the manes. 3. நேர்த்திக்கடன்; votive offering as to a deity. "தெய்வம் நொந்தேஞ் செய்கட னேர்ந்தேம்" (மனோன். 1, 3:168). 4. ஏற்கனவே ஒருவர் செய்த கொடை, அன்பளிப்பு போன்றவற்றைத் திருப்பிச் செய்தல்; returning the donation or gift to other when the occasion occurs.

[செய் + கடன்]

செய்கரை *šey-karai*, பெ. (n.) 1. வரப்பு; artificial bank, ridge in fields. "மண் . . . சுமந்து சென்றச் செய்கரை சிந்தி" (திருவாத.பு.மண்சுமந்த 37). 2. பாலம் (சூடா.); causeway, bridge. "அதுவே காட்சிச் செய்கரை யாகப் போகி" (இரகு. திக்குவி. 70). 3. செயற்கையாய் உண்டாக்கப்பட்ட தடுப்புக் கரை; dykes.

[செய் + கரை]

செய்காடு *šey-kāḍu*, பெ. (n.) குறுங்காடு (திருக்கோ. 148, உரை.); thickest.

[செய்² + காடு]

செய்காரியஅட்டவணை *šey-kāriya-aṭṭavaṇai*, பெ. (n.) கோயிலில் நடக்க வேண்டிய காரியங்களைக் காட்டும் பட்டி (இ.வ.); index of items of work to be done in temple service.

[செய் + காரியம் + அட்டவணை]

செய்காரியம் *šey-kāriyam*, பெ. (n.) 1. செய்யப் பட்ட வேலை; thing done, deed, act. 2. வல்லமை (சமாளிப்பு); economical management.

[செய் + காரியம்]

செய்கால்[1] *šey-kāl*, பெ. (n.) 1. பயிர் செய்யும் நிலம்; cultivated or arable land. 'தரிசு கிடந்த தரையைச் செய்காலாம்படி திருத்துவாரைப் போலே' (ஈடு, 2. 7:4). 2. சோலை (பிங்.); grove.

[செய்² + கால்.]

செய்கால்[2] *šey-kāl*, பெ. (n.) 1. நற்காலம்; happy occasion, opp. to pari-kāl. செய்கால் பரிகால் மட்டுந் தென்புறத்துத் திண்ணை விடுகிறது (இ.வ.).

[செய் + கால் = காலம்]

செய்கால்[3] *šey-kāl*, பெ. (n.) நிலத்தில் பயிர் செய்வதற்கு வேண்டிய வுழைப்பு (தஞ்சை.); labour necessary for the cultivation of lands.

[செய் + கால்]

செய்கால்சாகுபடி *šey-kāl-šāgupaḍi*, பெ. (n.) நன்செய் நிலத்தில் புன்செய்ப்பயிர் செய்கை (இ.வ.); cultivation of dry crops in wet lands.

[செய்கால் + சாகுபடி]

செய்கால்பரிகால் *šeykāl-parikāl*, பெ. (n.) நற்காலமும் தீக்காலமும்; occasions of joy and sorrow. செய்கால் பரிகால் மட்டுந் தென்புறத்துத் திண்ணை விடுகிறது (இ.வ.).

[செய்கால் + பரிகால்]

செய்காற்கரம்பு *šeykāṟ-karambu*, பெ (n.) தரிசாகவிடப்பட்ட சாகுபடி நிலம்; arable land, allowed to lie fallow or waste, one of two karambu.

[செய்கால் + கரம்பு]

செய்காற்றரிசு *šeykāṟṟarišu*, பெ (n.) செய்காற் கரம்பு பார்க்க; see *šeykāṟ-karambu*.

[செய்கால் + தரிசு]

செய்குற்றம் *šey-kuṟṟam*, பெ (n.) பிழை (யாழ்ப்.); fault, error commission (of a crime sin etc,.).

[செய் + குற்றம்]

செய்குறை *šey-kuṟai*, பெ. (n.) 1. பிழை; non-performance of duty, fault, error, mistake. 2. அரைகுறை வேலையாயிருப்பது; incomplete thing, that which is in an unfinished state.

[செய் + குறை]

செய்குன்றம் *šey-kuṉṟam*, பெ. (n.) செய்குன்று பார்க்க; see *šey-kuṉṟu*. "சேணோங் கருவி தாழ்ந்த செய்குன்றமும்" (மணிமே. 28: 62)

[செய் + குன்றம்]

செய்குன்று *šey-kuṉṟu*, பெ. (n.) செல்வமக்கள் விளையாடற் பொருட்டு அமைக்கப்படும் கட்டுமலை; artificial mound, elevated place for high-born persons to play on. "செய்குன் றுவையிவை சீர்மலர் வாவி" (திருக்கோ. 223)

[செய் + குன்று]

செய்கூலி *šey-kūli*, பெ. (n.) 1. செய்த வேலைக்குப் பெறுங்கூலி (உ.வ.); wages for labour. 2. பொற்கொல்லர் தச்சர் முதலியோர் பொருளின்விலை அல்லாமல் செய்த வேலைக்குப் பெறும்கூலி; labour charges. நகை வாங்கினால் செய் கூலி தள்ளுபடி செய்யப்படும்.

[செய் + கூலி]

செய்கை *šeygai*, பெ. (n.) 1. செயல்; act, deed, action. "மக்கள் மனம்வேறு செய்கையும் வேறு" (நாலடி., 127). அவர் செய்கை பலருக்கும் சினமூட்டியது. 2. மனம், பேச்சு, உடல் இவைகளிலுண்டாகும் இருவகை வினை-களாகிய நிலை; actions, physical and mental. "நின்றவுரு வேதனையே குறிப்புச் செய்கை நேர்நின்ற ஞான மென நிகழ்ந்த வைந்து மொன்றிய கந்தத்து" (பெரியபு. திருஞான. 916). 3. கருமம் (உ.வ.); karma. 4. வேலைப்பாடு; workmanship, work. "செய்கை யழிந்து சிதன்மண்டிற் றாயினும்" (நாலடி.147). 5. ஒழுக்கம்; conduct. "பேரருளாளர் தத்தஞ் செய்கையிற்

பிழைப்பதுண்டோ" (கம்பரா. விபீடண. 128). 6. உடன்படிக்கை; agreement, contract, as a solemn act. "ஆதிசைவ னாரூரன் செய்கை" (பெரியபு. தடுத்தாட். 59). 7. செயற்கைப் பொருள்; artificial product, artifact, that which is manufactured. இந்தச் சரக்கு செய்கை. 8. செய்கைச் சூத்திரம் பார்க்க (நன்.20, உரை); see šeygai-c-cūttiram. 9. செய்வினை (பில்லி சூனியம்); witchcraft, sorcery. இந்த நோய் செய்கையாலானது. 10. வேளாண்மை (யாழ்ப்.); cultivation of land, agricultural labour. 11. அரசின் அனுமதியாற் பெற்றுப் புதிதாகப் பண்படுத்திப் பயிரிடப் பெற்ற காட்டு நிலம் (யாழ்ப்.); forest land newly broken up, enclosed and cultivated, held by grant or permission from Government.

[செய் → செய்கை (முதா. 177)]

செய்கைக்காணி *šeygai-k-kāṇi*, பெ. (n.) 1. பற்றடைப்பு நிலம்; land held by a cultivator who renders a certain share of the produce to the owner. 2. ஆவணக்காணி (சாசன காணி); hereditary property held under a royal grant.

[செய்கை + காணி]

செய்கைக்காரன் *šeygai-k-kāraṉ*, பெ. (n.) 1. குத்தகைக்காரன் (யாழ்ப்.); cultivator who is a sharer in the produce. 2. நல்ல வேளாளன்; good cultivator. 3. மந்திரஞ் செய்வோன்; sorcerer. 4. வேலைக்காரன் (யாழ்அக.); servant.

[செய்கை + காரன்]

செய்கைக்குறைச்சல் *šeygai-k-kuṟaiccal*, பெ. (n.) 1. வேளாண் தாழ்வு; shortage of labour in cultivation. 2. நடத்தைத் தவறு; misdeed, bad conduct.

[செய்கை + குறைச்சல்]

செய்கைகாண்(ணு)-தல் *šeygai-kāṇ-*, 12 செ.குவி. (v.i.) நிலம் வயலாகத் திருத்தப்படுதல் (யாழ்ப்.); land to be newly brought under cultivation.

[செய்கை + காண்-.]

செய்கைச்சரக்கு *šeygai-c-carakku*, பெ. (n.) செயற்கைப் பொருள்; that which in manufactured.

[செய்கை + சரக்கு]

செய்கைச்சீட்டு *šeygai-c-cīṭṭu*, பெ. (n.) மேல் வாரச் சாகுபடி ஒப்பந்தம் (யாழ்ப்.); cultivation deed, written contract between owner and cultivator.

செய் = நிலம்

[செய் → செய்கை + சீட்டு]

செய்கைச்சூத்திரம் *šeygai-c-cūttiram*, பெ. (n.) புணர்ச்சி நெறி (விதி) முடிபு நெறி (விதி) முதலியவற்றை முடித்துக்காட்டும் நெறி (விதி); šūtra containing directive rules on sandhi, syntax etc., corresponding to vidi šūtras in Šanskrit

[செய்கை + சூத்திரம்]

செய்கைச்சூழ்ச்சி *šeygai-c-cūḻcci*, பெ. (n.) தந்திரச்செயல்; stratagem, trick, secret, device. "கையிகந்து பெருகிய செய்கைச் சூழ்ச்சியுள்" (பெருங். இலாவாண. 17:67).

[செய்கை + சூழ்ச்சி]

செய்கைத்தரை *šeygai-t-tarai*, பெ. (n.) பண்படுத்தின நிலம் (யாழ்அக.); field prepared for sowing.

[செய்கை + தரை]

செய்கைத்தளை *šeygai-t-taḷai*, பெ. (n.) 1. நன்றாகப் பண்படுத்தப்பட்ட நிலம்; field well ploughed and richly manured. 2. பட்டயக் காணி; land held from Government for cultivation.

[செய்கை + தளை]

செய்கைத்தாழ்ச்சி *šeygai-t-tāḻcci*, பெ. (n.) 1. மேற்பார்வைக் குறைவு; mismanagement. 2. தொழிற்குறைவு; deficiency in the amount of labour required. 3. வயலின் செம்மைக் குறை (தஞ்சை.); defect in the nature of the field.

[செய்கை + தாழ்ச்சி]

செய்கைத்தேர் *šeygai-t-tēr*, பெ. (n.) ஊர்வலத்தில் பயன்படுத்தும் தேர்வகை (யாழ்ப்.); a kind of car used in procession.

[செய்கை + தேர்]

செய்கைப்பங்கு *šeygai-p-paṅgu*, பெ. (n.) 1. பயிரிடுவோனுக்குரிய வாரம் (யாழ்ப்.); share of the cultivator or planter. 2. செய்நேர்த்தி யான நிலம்; land made suitable for cultivation.

[செய்கை + பங்கு]

செய்கைபண்ணு-தல் *šeygai-paṇṇu-*, 5 *செ. குன்றாவி. (v.t.)* உழவு முதலிய பயிர்த் தொழில் செய்தல் *(யாழ்ப்.);* to cultivate, till, manure.

[செய்கை + பண்ணு-.]

செய்கையாட்சி *šeygai-y-āṭci*, *பெ. (n.)* பட்டயத்தாற் பெற்ற நில உரிமை *(யாழ்ப்.);* possession of land for cultivation held under a written grant from Government.

[செய்கை + ஆட்சி]

செய்கையுப்பு *šeygai-y-uppu*, *பெ. (n.)* காய்ச்சியெடுக்கப்படும் உப்பு *(யாழ்ப்.);* manufactured salt.

மறுவ. செயற்கை உப்பு

[செய்கை + உப்பு]

செய்கையொப்பம் *šeygai-y-oppam*, *பெ. (n.)* நில உரிமைச் சீட்டு *(பட்டா);* written grant by Government for cultivation.

[செய்கை + ஒப்பம்]

செய்சுனை *šey-šuṉai*, *பெ. (n.)* அகழ்ந்து உண்டாக்கப்பட்ட நீர்நிலை; tank or pond, as formed by human labour. "கையமைத் தியற்றிய செய்சுனை தோறும்" *(பெருங். இலாவாண. 15:18).*

[செய் + சுனை]

செய்தி *šeydi*, *பெ. (n.)* 1. செய்கை[1] பார்க்க; see *šeygai[1]*. "குடிப்பொருளன்று நுஞ்செய்தி" (புறநா. 45: 7). 2. தொழில் (இறை. 1:18); occupation. 3. ஒழுக்கம் (சூடா.); behaviour, conduct. 4. செய்ந்நன்றி (புறநா. 34:6) பார்க்க; see *šey-n-naṉṟi*. 5. குறிப்பிட்டுச் சொல்லும்படியான நிகழ்ச்சி பற்றிய விளக்கம்; தெரிவிக்கப்படத் தகுதியுள்ள விளக்கம் (செய்தி); news, tidings, information. "பாத்திர தானமும் பைந்தொடி செய்தியும்" *(மணிமே. 19:49).* அவனுக்குப் பணம் கிடைத்த செய்தி எனக்குத் தெரியாது. 6. நிலைமை; state, condition.

ம. செய்தி; க., பட. சுத்தி; தெ. செயிதமு

[செய் → செய்தி]

செய்திக்காக *šeydi-k-kāga*, *வி.அ. (adv.)* கவனத்திற்காக (தகவலுக்காக); for guidance; for information.

[செய்தி + ஆக]

செய்திக்குறிப்பு *šeydi-k-kuṟippu*, *பெ. (n.)* 1. ஓர் அமைப்பு தனது நடவடிக்கைகளைப் பொதுமக்களுக்கு அறிவிக்கும் முகமாகச் செய்தித்தாள், வானொலி போன்றவற்றுக்கு அனுப்பிவைக்கும் எழுத்து வடிவச் செய்தி; press release. பொங்கலுக்குச் சேலை வழங்கப்படும் என்று அரசின் செய்திக் குறிப்புக் கூறுகிறது. 2. சிறுவிளத்தத் தொகுப்பு; a note. இதைக் கட்டுரை என்பதை விடச் செய்திக்குறிப்பு எனலாம்.

[செய்தி + குறிப்பு.]

செய்திகள் *šeydigaḷ*, *பெ. (n.)* வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் படிக்கப்படும் செய்தித் தொகுப்பு; news over the radio or television. செய்திகள் வாசிப்பது செல்லையா.

[செய்தி → செய்திகள்.]

செய்திகொல்(லு)-தல் *šeydi-kol-*, 13 *செ.கு.வி. (v.i.)* செய்ந்நன்றிகொல்(லு)-தல் பார்க்க; see *šey-n-naṉṟi-kol-*. "செய்தி கொன்றோர்க் குய்தி யில்லெனா" *(புறநா. 34:6).*

[செய்தி + கொல்-.]

செய்தித்தாள் *šeydi-t-tāḷ*, *பெ. (n.)* 1. செய்தியிதழ் பார்க்க; see *šeydi-y-idaḻ*. 2. நாள்தோறும் செய்திகள் அச்சடிக்கப்பட்டு, விற்பனைக்கு வரும், நாட்டு நடப்பைக் காட்டும் இதழ் (பத்திரிக்கை); news paper.

[செய்தி + தாள்.]

செய்தித்துணுக்கு *šeydi-t-tuṇukku*, *பெ. (n.)* கவனத்தை ஈர்க்கும் வகையில் செய்தியிதழ்களில் வெளியாகும் சுவையான சிறு செய்திகள்; titbits in periodicals. அந்தச் செய்தியிதழில் செய்தித் துணுக்குகள் அதிகம் வெளிவருகின்றன.

[செய்தி + துணுக்கு]

செய்திப்படம் *šeydi-p-paḍam*, *பெ. (n.)* செய்திகளை வெளியிடும் முறையில் எடுக்கப்படும் செய்தித் திரைப்படம்; documentary film.

[செய்தி + படம்]

செய்திப்பிழை *šeydi-p-piḻai*, *பெ. (n.)* அறியாமல் செய்த தவறு; unconscious mistake; slip. "எப்பொழுதுந் தன்மணத்துக் கேற்க நடப்பார்க்கொரு செய்திப்பிழை வாராதோ தினகரா" (தினகரவெண்பா, 85).

[செய்தி + பிழை.]

செய்திமடல் *šeydi-madal*, பெ. (n.) ஒரு துறை அல்லது கழகத்தின் செய்திகள் அடங்கிய இதழ்; news letter of a department or association journal.

[செய்தி + மடல்]

செய்திமெய்ப்பு *šeydi-meyppu*, பெ. (n.) செய்தித்தாள் அச்சாகுமுன் தயாரிக்கப்படும் மெய்ப்பு; news proof; gally proof.

[செய்தி + மெய்ப்பு]

செய்தியறிக்கை *šeydi-y-arikkai*, பெ. (n.) வானொலி, தொலைக்காட்சிகளில் குறிப்பிட்ட நிகழ்ச்சி பற்றிய சிறப்பு அறிக்கை; news bulletin. தேர்தல் பற்றிய செய்தியறிக்கை மணிக்கொருமுறை நாள் முழுதும் வழங்கப்படுகிறது.

[செய்தி + அறிக்கை]

செய்தியாளர் *šeydi-y-ālar*, பெ. (n.) செய்தித் தாள், வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றின் நிருபர்; reporter, newsperson. செய்தியாளர் கூட்டத்தில் முதல்வர் பேசினார்.

[செய்தி → செய்தியாளர்.]

செய்தியிதழ் *šeydi-y-idal*, பெ. (n.) நாளிதழ், வார இதழ், மாத இதழ் மற்றும் பருவ இதழ் ஆகியனவற்றின் பொதுப் பெயர்; a common name for the daily, weekly, monthly and periodical newspaper.

[செய்தி + இதழ்]

செய்திவள்ளுவன்பெருஞ்சாத்தன் *šeydi-valluvan-peruñjāttan*, பெ. (n.) குறுந்தொகை 228ஆம் பாடலின் ஆசிரியர்; author of Kurundogai-228.

[செய்தி + வள்ளுவன் + பெருஞ்சாத்தன்]

செய்திறம்[1] *šeydiram*, பெ. (n.) மருத யாழ்த் திறத்துள் ஒன்று (பிங்.); a secondary melody-type of the Marudam class.

[செய் + திறம்]

செய்திறம்[2] *šendiram*, பெ. (n.) வினைத்திறம்; செயல்படக்கூடிய திறமை; the technique of doing things in a perfect manner.

[செய் + திறம்]

செய்துகோள் *šeydu-kōl*, பெ. (n.) தானே உண்டாகாது செய்து கொள்ளப்பட்டது (நம்பியகப். 1, பக்.36); artificiality.

[செய் → செய்து + கோள்.]

செய்தே *šeydē*, இடை. (part.) வினை நிகழ்ந்து கொண்டிருத்தலைக் குறித்தற்குச் செயவென் எச்சத்துடன் வரும் ஒரு துணைவினை; an auxiliary verbal participle added to verbal participles for denotng continuity of action. "குணவிசிஷ்ட வஸ்து தோற்றா நிற்கச் செய்தேயும்" (ஈடு, 1. 1:6).

[செய் → செய்தே]

செய்தொழில் *šey-dolil*, பெ. (n.) 1. செய்கை; action, deed "கீழ்களைச் செய்தொழிலாற் காணப்படும்" (நாலடி, 350). 2. செய்கின்ற வேலை; the work having done. 3. வேளாண் பயிர்த்தொழில்; agriculture.

[செய் + தொழில்]

செய்ந்நன்றி *šey-n-nanri*, பெ. (n.) 1. உதவி; act of benevolence "செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (குறள், 110). 2. நன்றியறிவு; gratitude.

[செய் + நன்றி]

செய்ந்நன்றிக்கேடு *šey-n-nanri-k-kēdu*, பெ. (n.) பிறன்செய்த உதவியை மறக்கை (கலித். 149, உரை.); ingratitude.

[செய்ந்நன்றி + கேடு]

செய்ந்நன்றிகொல்(லு)-தல் *šey-n-nanri-kol-*, 13 செ.கு.வி. (v.i.) நன்றி மறத்தல்; to be ungrateful. "செய்ந்நன்றி கொல்லன் மின்" (சிலப். 30:191).

[செய்ந்நன்றி + கொல்]

செய்ந்நன்றியறிதல் *šey-n-nanri-y-aridal*, பெ. (n.) தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை; to remember the help done to one, the act of gratitude.

[செய்ந்நன்றி + அறிதல்]

செய்நீர் *šey-nīr*, பெ. (n.) மருந்துச் சரக்கினின்று இறக்கப்படுஞ் சத்துநீர் (இ.வ.); tincture.

[செய் + நீர்]

செய்நேர்த்தி[1] *šey-nērtti*, பெ. (n.) 1. குற்றங் குறைபாடில்லாத நில விளைவு (C.G.16); proper cultivation of land, as by manuring, weeding in season, etc., 2. பயிர்வைப்பதற்கு முன் நிலத்திற் செய்யுஞ் சீர்திருத்தம்; improvement effected on land before actual cultivation; reclamation of waste land. 3. சரியான ஊட்டம்; proper nourishment. செய்நேர்த்தி யில்லாத பிள்ளை (தஞ்சை).

[செய் + நேர்த்தி. நேர்த்தி = திறமை, அழகு]

செய்நேர்த்தி[2] *šey-nērtti*, பெ. (n.) 1. சிறப்பான செயல்; great action. 2. நுட்பமான செயல்; very fine work. இந்த அணைக்கட்டு செய் நேர்த்தி மிக்கது (உ.வ.). 3. அழகான (நகாசு) வேலை; fine decorative work. இந்த அணிகலன் செய்நேர்த்தி மிக்கது (உ.வ.).

[செய் + நேர்த்தி. நேர்த்தி = திறமை, அழகு]

செய்பவன் *šeybavaṉ*, பெ. (n.) செயற்படுபவன் (கருத்தா); subject of an active verb. "செய்பவன் கருவி நிலஞ் செயல்" (நன். 320).

[செய் → செய்பவன்]

செய்பாகம் *šey-bāgam*, பெ. (n.) 1. மருந்து செய்யும் முறை; medical process, skill in preparing medicines. செய்பாகங் கைபாகம் அறியவேண்டும். 2. கருத்து முற்றுதற்கு ஏற்ற வழி (வின்.); proper means to effect an object. 3. ஒழுங்கு முறை; methodical arrangement.

[செய் + பாகம். பாகம் = வழி]

செய்பாவை *šey-pāvai*, பெ. (n.) 1. திருமகள்; Lakshmi. "செய்பாவை யன்னார்" (சீவக. 2338). 2. பொம்மை; doll, image.

[செய் + பாவை]

செய்பொருள் *šey-poruḷ*, பெ. (n.) 1. செயப்படு பொருள் (நன். 320); object. 2. மனித வாழ்வின் குறிக்கோள்; objects of human pursuit. "அவரவர் செய்பொருட் கரணமு நீயே" (பரிபா. 4:73). 3. ஆக்கும் பொருள்; manufactured products; produce.

[செய் + பொருள்.]

செய்ம்மெழுகு *šey-m-meḻugu*, பெ. (n.) அரக்கு (இவ.); lac.

[செய் + மெழுகு]

செய்ம்மை *šeymmai*, பெ. (n.) செம்மை (சிவப்பு); redness.

[கல் → செல் → சென் → செய் → செய்ம்மை]

செய்முறை *šey-muṟai*, பெ. (n.) 1. பணிநிரல்; procedure, process, method. கணக்குத் தேர்வில் செய்முறைக்கும் மதிப்பெண் வழங்கப்படுகிறது. ஆய்வகச் சோதனைகளில் முதலில் செய்முறையை எழுதிக்கொள்ள வேண்டும். 2. இறந்தவருக்கு உறவினர் சடங்காகச் செய்ய வேண்டிய கடமை; ritual obligations imposed on close relations on occasions like funeral, etc., சம்பந்திக்கு செய்முறை செய்ய வேண்டும்.

[செய் + முறை]

செய்முறைப்பயிற்சி *šey-muṟai-p-payiṟci*, பெ. (n.) 1. எடுத்துக்காட்டாக நிகழ்த்தப்படும் விளக்கம்; demonstration. வேளாளர்களுக்கு வேளாண்மைத் துறைவழி செய்முறைப் பயிற்சி அளிக்கப்படுகிறது (உ.வ.). 2. மாணவர்களை ஆய்வு செய்யப் பாடத்தின் பின்பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் வினாப்பட்டியல்; exercise in a text book. பாடத்தின் பின்பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் செய்முறைப் பயிற்சிகளைச் செய்து வரவேண்டும். 3. கருவிகள் கொண்டு நிகழ்த்திக் காட்டும் பயிற்சி; experiments in a school etc., in science subjects; demonstration. பள்ளியில் செய்முறைப் பயிற்சி வகுப்புகள் நடக்கின்றன.

[செய்முறை + பயிற்சி]

செய்ய *šeyya*, பெ.எ. (adj.) 1. சிவந்த; red. "செய்ய தாமரைக ளெல்லாம்" (கம்பரா. நீர்விளை.3). 2. செப்பமான, நேர்மையான; correct, perfect, sound "செய்ய சிந்தைப் பேரருளாளர்." (கம்பரா. விபீடண. 128).

ம. செய்ய

[செய்[4] → செய்ய]

செய்யல் *šeyyal*, பெ. (n.) 1. ஒழுக்கம் (பிங்.); behaviour, conduct. 2. செய்தொழில் (சூடா.); work, occupation. 3. காவல்; protection, watch. 4. சேறு (திவா.); mire, slush. "பலத்தின் செய்யலி னடந்து" (இரகு. தேனுவ. 22).

[செய் → செய்யல்]

செய்யவள் *šeyyavaḷ*, பெ. (n.) சிவந்த திருமகள்; Lakshmi "செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்" (குறள், 167).

[செய்ய → செய்யவள்]

செய்யவன் *šeyyavaṉ*, பெ. (n.) 1. சிவந்தவன்; person of red or brown complexion. 2. சிவன்; Šivaṉ. "செய்யவனே சிவனே" (திருவாச. 6:7). 2. செவ்வாய்க் கோள் (விதான. குணாகுண. 12); Mars. 3. பகலவன்; Sun.

ம. செய்யவன்

[செய்ய → செய்யவன்]

செய்யன்[1] *šeyyaṉ*, பெ. (n.) செந்நிறமான முருகன்; Murugaṉ. "செய்யன் சிவந்த வாடையன்" (திருமுரு. 206). 2. நேர்மையானவன்; just, impartial person. "செய்யரைச் சேர்ந்துளாரும்" (கம்பரா. கோலங்.9).

[செம் → செய் → செய்யன்]

செய்யன்[2] *šeyyaṉ*, பெ. (n.) பாம்புவகை (சித்தர். சிந்து); a species of snake.

[செய் → செய்யன்]

செய்யாக்கோலம் *šeyyā-k-kōlam*, பெ. (n.) இயற்கையழகு; natural beauty "செய்யாக் கோலமொடு வந்தீர்க்கு" (சிலப். 16: 11).

[செய் + ஆ + கோலம்]

செய்யாமொழி *šeyyā-moḻi*, பெ. (n.) (செய்யப்படாத மொழி) மறை (வேதம்); the Vēda, as uncreated. "செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த பொய்யா மொழிக்கும்" (வள்ளுவமா. 23).

[செய் + ஆ + மொழி]

செய்யார் *šeyyār*, பெ. (n.) பகைவர்; enemies. "செய்யார் தேஎம்" (பொருந. 134).

[செய் → செய்யார்]

செய்யாள் *šeyyāḷ*, பெ. (n.) 1. திருமகள் (செந்நிற முடையவள்); Laksmi, as being red. "செய்யாட் கிழைத்த திலகம் போல்" (பரிபா 22:4, பக்.175). 2. தாயின்தங்கை; சின்னம்மா அல்லது சித்தி (தஞ்சை.); mother's younger sister.

ம. செய்யாள்

[செய்யவள் → செய்யாள்]

செய்யான்[1] *šeyyāṉ*, பெ. (n.) செய்யன் பார்க்க; see *šeyyaṉ*.

செய்யான்[2] *šeyyāṉ*, பெ. (n.) 1. சிவந்தவன்; person of red or brown complexion. 2. சிவன்; Šivaṉ. "செய்யானை வெண்ணீ றணிந்தானை" (திருவாச. 8:13). 3. செம்பூரான்; red, venomous centipede.

[செய் → செய்யான்]

செய்யில் *šeyyil*, பெ. (n.) சமம் செய்யப்பட்ட விளைநிலம் (தெ.க.தொ. 3, கல்.210); modified and cultivated land.

[செய் + இல்]

செய்யுட்கணம் *šeyyuṭ-kaṇam*, பெ. (n.) சிற்றிலக்கியம் இயற்றத் தொடங்கும் போது செய்யுண்முதற்கண் வருதற்குரிய நிலக்கணம், நீர்க்கணம், மதிக்கணம் அல்லது சந்திரகணம், இயமானக்கணம் அல்லது இந்திரகணம் என்ற நற்கணம் நான்கும், சூரியகணம், தீக்கணம், வாயுகணம் அல்லது மாருதகணம், அந்தர கணம் அல்லது ஆகாயகணம் என்ற தீக் கணம் நான்குமாகிய எண்கணங்கள் (திவா.) (பிங்.); the eight varities of trisyllabic feet viz., nila-k-kaṇam, nīr-k-kaṇam, madi-k-kaṇam or šandira-kaṇam, iyamāṇa-k-kaṇam, or indira-kaṇam, šūriya-kaṉam, tī-k-kaṇam, vāyu-kaṇam or māruda-kaṇam, andara-kaṇam or āgāya-kaṇam of which the first four are considered auspicious at the beginning of a poem and the rest inauspicious.

[செய்யுள் + கணம்]

செய்யுட்கலம்பகம் *šeyyuṭ-kalambagam*, பெ. (n.) பலவகைப் பாடற்றிரட்டு; anthology of different kinds of verses.

மறுவ. செய்யுட் கோவை

[செய்யுள் + கலம்பகம்]

செய்யுட்கிழமை *šeyyuṭ-kiḻamai*, பெ. (n.) ஆறாம்வேற்றுமைப் பொருள்களுள், இன்னாரது பாட்டு என, ஆக்கியோனுக்கும் அவன் பாட்டுக்கும் உள்ள உரிமையாகிய பொருள் (குறள், 6, உரை.); the relation of an author to his work, denoted by the possessive case.

[செய்யுள் + கிழமை]

செய்யுட்கோவை *šeyyuṭ-kōvai*, பெ. (n.) செய்யுட்கலம்பகம் பார்க்க; see *šeyyuṭ-kalambagam*. சிதம்பரச் செய்யுட் கோவை.

[செய்யுள் + கோவை]

செய்யுட்சொல் *šeyyuṭ-šol*, பெ. (n.) செய்யுளில் மாத்திரம் வழங்கும் சொல்; word used only in poetry. 'இது செய்யுட்சொல் லாதலால் வந்தது' (திருக்கோ. 1, உரை).

[செய்யுள் + சொல்]

செய்யுட்டாரணை *šeyyuṭ-ṭāraṇai*, பெ. (n.) ஒன்பது தாரணையுள் ஒன்று (வின்.); one of navadāraṇai.

[செய்யுள் + தாரணை]

செய்யுட்பாடு *šeyyuṭ-pāḍu*, பெ. (n.) அசை நிலை (ஈடு.); expletive particle.

[செய்யுள் + பாடு]

செய்யுட்பொருத்தம் *šeyyuṭ-poruttam*, பெ. (n.) செய்யுண் முதன்மொழிப் பொருத்தம் பார்க்க; see *šeyyuṇ-mudaṉmoḻi-p-poruttam*.

[செய்யுள் + பொருத்தம்]

செய்யுட்போலி *šeyyuṭ-pōli*, பெ. (n.) கத்திய வகை இரண்டனுள் ஒன்று (வீரசோ. யாப். 6, உரை.); one of the two divisions of kattiyam dist. fr. katturai-p-pōli.

[செய்யுள் + போலி]

செய்யுண்முடிபு *šeyyuṇ-muḍibu*, பெ. (n.) செய்யுளில் மட்டும் வழங்குஞ் சொல் வழக்கு; peculiar forms which words assume in poetry. "என்மனாரென்பது செய்யுண் முடிபெய்தி நின்றதோர் . . . சொல்" (தொல்.சொல். 1, சேனா.)

[செய்யுள் + முடிபு. முடிவு → முடிபு]

செய்யுண்முதன்மொழிப்பொருத்தம் *šeyyuṇ-mudaṉ-moḻi-p-poruttam*, பெ. (n.) மங்கலப் பொருத்தம், சொற் பொருத்தம், எழுத்துப் பொருத்தம், தானப் பொருத்தம், பாற் பொருத்தம், உண்டிப் பொருத்தம், வருணப் பொருத்தம், நாட்பொருத்தம், கதிப்பொருத்தம், கணப் பொருத்தம் என்று பத்து வகையாய்க் காவியத்தின் முதற்செய்யுள் முதன்மொழியிற் பார்த்தற்குரிய பொருத்தம் (வெண்பாப். முதன்.1); rules of propriety regarding the initial word or letter of a poem ten in number, viz. maṅgala-p-poruttam, šoṟ-poruttam, eḻuttu-p-poruttam, tāṉa-p-poruttam, pāṟ-poruttam, uṇḍi-p-poruttam, varuṇa-p-poruttam, nāṭ-poruttam, kadi-p-poruttam and kaṇa-p-poruttam.

[செய்யுள் + முதன்மொழி + பொருத்தம்]

செய்யுணடை *šeyyuṇaḍai*, பெ. (n.) செய்யுளில் வழங்கும் நடை; poetic style.

[செய்யுள் + நடை]

செய்யும்படி *šeyyum-paḍi*, பெ. (n.) ஆணை; order, instruction. 'பிரசாதஞ் செய்தருளி வந்த செய்யும்படிப் படி' (தெ.க.தொ. 3, 211)

[செய் → செய்யும் + படி]

செய்யுள் *šeyyuḷ*, பெ. (n.) 1. செய்கை; action. 'பாய்த்துள் விக்குள் என்றாற் போலச் செய்யுள் என்பதூஉம் தொழிற்பெயர்' (தொல்.பொருள். 439, உரை). 2. யாப்பு தவறாது அடிவரையறயுடன் எழுதப்படுவது, பாட்டு; stanza, verse. "செய்யுளுறுப் பென . . . வகுத்துரைத்தனரே" (தொல்.பொருள். 313) 3. காப்பியம்; poetic composition, poem. "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்" (சிலப். பதி. 87). 4. உரை; commentary. "யாதொரு செய்யுள் கேட்டாற் றோன்றிய புளக மெய்யுந் துளிபடு கண்ணு முண்டோ வான்றவச் செய்யுள்" (திருவாலவா. 19:6). 5. விளைநிலம் (சங்.அக.); cultivated field.

[செய் → செய்யுள்]

இலக்கணம் பிழைபாமற் கூற வேண்டுதலானும், ஒரு பொருளைக் குறித்து. செய்யப்படுதலானும் செய்யுளாம் (தொல். பொருள். செய். 166, இளம்.). செய்யுளாவது அடிவரையறை யுள்ளனவும், அடிவரையறையில்லனவும் என இருவகைப்படும். அடிவரையுள்ளன ஆசிரியம். வஞ்சி, வெண்பா, கலி, தாழிசை துறை விருத்தம் என்பன அடிவரையில்லன.

செய்யுள்வழக்கு *šeyyuḷ-vaḻakku*, பெ. (n.) செய்யுளில் வழங்குஞ் சொல்; poetic or literary usage opp. to ulaga-vaḻakku. *'திரிசொல் திசைச்சொல் வடசொல்லாகிய செய்யுள் வழக்கையும்' (நன். 267, உரை).*

மறுவ. இலக்கிய வழக்கு

[செய்யுள் + வழக்கு]

செய்யுள்வழு *šeyyuḷ-vaḻu*, பெ. (n.) யாப்பிலக் கணத்தோடு பொருந்தாத இயல்பினையுடைய குற்றம் (தண்டி. 112); defect in versification.

[செய்யுள் + வழு]

செய்யுள்விகாரம் *šeyyuḷ-vigāram*, பெ. (n.) வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல், முதற்குறை, இடைக் குறை, கடைக்குறை எனச் செய்யுளிற் சொற்கள் பெறும் ஒன்பதுவகை மாறுபாடு (நன். 155, உரை); changes in words allowed as poetic licence, nine in number viz. valittal, melittal, nīṭṭal, kuṟukkal, virittal, toguttal, mudaṟ-kuṟai, iḍai-k-kuṟai, kaḍai-k-kuṟai.

[செய்யுள் + விகாரம்]

Skt. vi-kāra → த. விகாரம்

செய்யுளியல் *šeyyuḷ-iyal*, பெ. (n.) இலக்கண நூல்களில் யாப்பிலக்கணங் கூறும் பகுதி; a section in grammatical works, dealing with prosody.

[செய்யுள் + இயல்]

செய்யுளுறுப்பு *šeyyuḷ-uṟuppu*, பெ. (n.) எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்ற செய்யுள் பகுதிகள்; constituent elements of a stanza, viz. eḻuttu, ašai, šīr, taḷai, aḍi, toḍai.

[செய்யுள் + உறுப்பு]

செய்யோள் *šeyyōḷ*, பெ. (n.) 1. செந்நிற முள்ளவள்; ruddy or fair-complexioned woman. *"எய்யா விளஞ்சூற் செய்யோள்" (பொருந. 6).* 2. செய்யாள்,1 பார்க்க; see *šeyyāḷ,1.* *"செய்யோள் சேர்ந்த நின்மாசி லகலம்" (பரிபா. 2:31).*

[செய் → செய்யோள்]

செய்யோன் *šeyyōṉ*, பெ. (n.) 1. செந்நிற முள்ளவன்; ruddy or fair-complexioned person. *"செய்யோ னகளங்கன்" (பெருந்தொ. 817).* 2. செவ்வாய்; Mars *"மீனத்து மந்தன் செய்யோன் மதியெழ" (விதான. கர்ப்பா. 10).* 3. அருகன் (சூடா.); Arhat. 4. கதிரவன் (சீவக. 2322, உரை); Sun.

[செய் → செய்யோன்]

செய்வகை *šey-vagai*, பெ. (n.) 1. செய்யுமுறை; method. 2. செய்முறை நுட்பம்; technological procedure, process of manufacture.

[செய் + வகை]

செய்வது *šeyvadu*, பெ. (n.) 1. செய்யத்தக்கது; that which ought to be done. *"செய்வது தெரிந்திசிற் றோழி" (அகநா. 281).* 2. கருத்தா; agent, doer of an action. *"வினையே செய்வது செயப்படு பொருளே" (தொல்.சொல். 112).*

[செய் → செய்வது]

செய்வினை[1] *šey-viṉai*, பெ. (n.) 1. செய்யுந் தொழில்; work, undertaking. *"செய்வினை தூய்மை" (குறள், 455).* 2. முற்பிறப்பிற் செய்த செயல்; karma. *"சீலமில்லாச் சிறியனேனுஞ் செய்வினையோ பெரிதால்" (திவ்.திருவாய். 4. 7:1).* 3. கருத்தா செய்யும் செயலை உணர்த்தும் வினைச் சொல், வினைமுதல் வினை (இலக். கொத். 67); verb in active voice.

[செய் + வினை]

செய்வினை[2] *šey-viṉai*, பெ. (n.) மந்திர தந்திரத்தால் பிடிக்காதவர் மீது ஏவல் போன்ற வினைகளைச் செய்கை; mystic acts done against the enemy people by black magic. செய்வினை செய்து அவனைக் கொன்று விட்டனர்.

[செய் + வினை]

செய்வினைமடி-தல் *šey-viṉai-maḍi-*, 2 செ.கு.வி. (v.i.) உரியதொழிலிற் சோம்புதல்; to shirk or delay one's appointed work, to fail in one's duty. *"செய்வினை மடிந்தோற் சேர்ந்துறை விலளே . . . மலர்மகள்" (பெருங். இலாவாண. 17:39).*

[செய்வினை + மடி-.]

செயங்கொண்டான் *šeyan-gondāṉ*, பெ. (n.) ஒருவகை நெல்; a kind of paddy. "சித்திரக் காலிவாலன் செயங்கொண்டான் மணல்வாரி" (முக்கூடற். 97).

செயநீர் *šeya-nīr*, பெ. (n.) சுண்ணாம்பும் எரியுப்பும் (நவச்சாரமும்) கலந்த நீர் (பதார்த்த. 1488); medicinal preparation of lime and sal-ammoniac.

[செய் + நீர்]

செயநீர்க்கருத்தன் *šeya-nīr-k-karuttaṉ*, பெ. (n.) எரியுப்பு (நவச்சாரம்) (மூ.அ.); sal-ammoniac.

[செயநீர் + கருத்தன்]

செயப்படுபொருள் *šeya-p-paḍu-poruḷ*, பெ. (n.) 1. வினை, முதலது தொழிலின்பயனை அடைவது; object of a verb. "வினையே செய்வது செயப்படு பொருளே" (தொல். சொல். 112). 'நான் வண்டியை ஓட்டினேன்' என்பதில் 'வண்டி' என்பது செயப்படுபொருள். 2. நூலாசிரியன் கூறப்புகும் நூற்பொருள்; subject of a treatise required to be mentioned by its author at the commencement. 'தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளும்' (யாப். வி. கடவுள்வா. உரை).

[செய் + படு + பொருள்]

செயப்படுபொருள்:

வினைமுதற் றொழில் பயனுறுவது. (சேனா. தொல்.சொல். 71) இயற்றப்படுவதும், வேறு படுக்கப்படுவதும், எய்தப்படுவதுமென செயப்படுபொருள் மூன்றாம். இயற்றுதலாவது முன்னில்லதனை உண்டாக்குதல், வேறு படுத்துதலாவது முன்னுள்ளதைத் திரித்தல்; எய்தப்படுதலாவது, இயற்றுதலும், வேறு படுத்தலுமின்றி, தொழிற் பயனுறுந் துணையாய் நிற்றல். (தொல். சொல். 71, சேனா).

செயப்படுபொருள்தான் இல்லதொன்றாய் உண்டாக்கப்படுதலும், உள்ளதொன்றாய் உடல் வேறுபடுக்கப்படுவதும், உள்ள தொன்றாய் ஒரு தொழில் உறுவிக்கப்படுவதும், உள்ளதொன்றாய் ஒன்றனாலுறப் படுவதும் எனப் பல வகையாம். (தொல்.சொல். 73, கல்.) வினை முதற்றொழில் பயனுறுவது, செயப்படு பொருள். செய் பொருள், கருமம், காரியம் என்பன ஒரு பொருட்சொற்கள். அச் செயப்படு பொருள், கருத்தினின்றிச் செயப்படுவதும், கருத்துடன் செய்யப்படுவதும், இருமையிற் செய்யப் படுவதும் என மூவகைப்படும். அச் செயப்படு பொருள் அகநிலையாகவும் தானே கருத்தாவாகவும் வரும். (நன். 296, ஆறு).

செயப்படுபொருள்குன்றாதவினை *šeya-p-paḍu-poruḷ-kuṉṟāda-viṉai*, பெ. (n.) செயப்படு பொருளை ஏற்கும் வினைச்சொல் (நன். 320, சடகோப.); transitive verb.

எகா: சுரண்டு (சுரண்டினான்) உரை(உரைத்தான்)

[செயப்படுபொருள் + குன்றாத + வினை]

செயப்படுபொருள்குன்றியவினை *šeya-p-paḍu-poruḷ-kuṉṟiya-viṉai*, பெ. (n.) செயப்படு பொருளை ஏற்காத வினைச்சொல் (நன். 320, சடகோப.); intranstive verb.

எ.கா.: ஓடு (ஓடினான்), நில் (நின்றான்)

[செயப்படுபொருள் + குன்றிய + வினை]

செயப்பாட்டுவினை *šeyappāṭṭu-viṉai*, பெ. (n.) 1. படு ஈறு புணர்ந்த முதனிலையுடையதாய்ச் செயப்படுபொருளை எழுவாயாகக் கொண்ட வினை (இலக். கொத். 67); verb in the passive voice. 2. பழவினை; karma. "செயப்பாட்டு வினையாற் றெரிந்துணர் வரியது" (மணிமே. 23: 77).

எ.கா. பாடல் பாடப்பட்டது சோறு உண்ணப்பட்டது.

[செயப்பாட்டு + வினை]

செயர் *šeyar*, பெ. (n.) வீட்டுவரி, சந்தைவரி உரிமக் கட்டணம், ஆயத்தீர்வை முதலிய பலவகை வருவாய் (R.T); current or customary sources of revenue other than the land-tax as customs, transit duties, licence-fees, house-tax, market-tax, etc.

க. சயர்

செயல் *šeyal*, பெ. (n.) 1. உறுப்புகளை இயக்குவதன் மூலம் ஒன்றைச் செய்வது, தொழில்; act, action, performance, work, operation. "கழலிணை கடந்தருளுஞ் செயலை" (திருவாச. 11:17). கள்ளக் கடத்தல் ஒரு குற்றமான செயலாகும். 2. பொருள் தேடுகை; acquisition, as of wealth. "மலையிறந்து செயல் சூழ்ந்த பொருள்" (கலித்.2). 3. இழைப்பட வேலை; engraving, carving; setting work in jewellery. 'வயிரச் செயல்தாலி மணிவடம்' (தெக.தொ. 2,16). 4. வேலைப்பாடு; fine workmanship. 'இந்தச் சங்கிலி செயலாக உள்ளது' (இ.வ.). 5. காவல் (பிங்.); safeguard, protection, watch. "செயலைச் செற்ற பகைதெறுவான்" (கம்பரா. வாலிவதை. 86). 6. ஒழுக்கம் (சூடா.); behaviour, conducts.

7. வலிமை; power, energy. இப்போது அவனுக்கு நடக்கச் செயலில்லை. 8. செல்வாக்கு (உ.வ.); influence. 9. நிலைமை; state, circumstance. அவன் நல்ல செயலில் இருக்கிறான். 10. செய்யல்,4 பார்க்க (அக.நி.); see *šeyyal,4*.

ம. செயல்

[செய் → செயல்]

செயல்தலைவர் *šeyal-talaivar*, பெ. (n.) செயலை நிறைவேற்றுவதில் தலைமை வகிப்பவர்; chief executive.

[செயல் + தலைவர்]

செயல்திட்டம் *šeyal-tiṭṭam*, பெ. (n.) ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் செய்து முடிக்க வேண்டிய பெரிய திட்டத்தின் நடைமுறைச் செயற்பாடு; action programme. இரண்டாயிரம் வீடுகள் கட்டித் தருவதாக அரசு செயல்திட்டம் வகுத்துள்ளது.

[செயல் + திட்டம்]

செயல்திறன் *šeyal-tiṟaṉ*, பெ. (n.) கால, பண இழப்பு இல்லாமல் செலவழிக்கப்படும் ஆற்றலின் முழுமையான பயன்பாடு; efficiency. செயல்திறன் அதிகரித்தால் நாட்டின் வளம் பெருகும்.

[செயல் + திறன்]

செயல்மாள்(ளு)-தல் *šeyal-māḷ-*, 16 செ.கு.வி. (v.i.) செயலறு-தல் பார்க்க; see *šeyal-aṟu-*. "கலகமிடு மஞ்சும் வேரறச் செயல்மாள" (திருப்பு. 194).

[செயல் + மாள்-.]

செயல்முறை *šeyal-muṟai*, பெ. (n.) இயங்கும் அல்லது செயற்படும் முறை; mode of functioning. தொழிற்சாலைகள் உற்பத்தியைப் பெருக்குவதற்கான செயல்முறையைப் பற்றிக் கலந்து பேசினார்கள்.

[செயல் + முறை]

செயல்வடிவம் *šeyal-vaḍivam*, பெ. (n.) செயற்படுத்துவதற்குரிய வழிமுறை; implementation. முதலமைச்சரின் கருத்து உடனடியாகச் செயல் வடிவம் பெற்றது.

[செயல் + வடிவம்]

செயல்விளக்கம் *šeyal-viḷakkam*, பெ. (n.) எவ்வாறு செய்வது அல்லது மேற்கொள்வது என்பதை நிகழ்த்திக்காட்டும் முறை; demonstration. சிறுதொழில் வளர்ச்சியைப் பெருக்கச் செயல் விளக்கக் கூட்டங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன.

[செயல் + விளக்கம்]

செயல்வீரர் *šeyal-vīrar*, பெ. (n.) குறிக்கோளை அடைவதில் ஏற்படும் தடைகளையெல்லாம் கடந்து நடைமுறையில் நிறைவேற்றி முடிப்பவர்; man of action. இயக்கத்தின் செயல் வீரர்களுக்குப் பாராட்டுக் கூட்டம் நடந்தது.

[செயல் + வீரர்]

செயலகம் *šeyalagam*, பெ. (n.) உயர்நிலை நிருவாக அலுவல்கள் நடைபெறும் இடம்; secretariat. அரசுச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

[செயல் + அகம்]

செயலர் *šeyalar*, பெ. (n.) ஒரு துறையின் நிருவாகப் பொறுப்புள்ள தலைமை அதிகாரி; secretary to departments, ministry.

[செயல் → செயலர்]

செயலலுவலர் *šeyal-aluvalar*, பெ. (n.) செயல் நிறைவேற்றுவோர்; executive.

[செயல் + அலுவலர்]

செயலலுவலர்துறை *šeyal-aluvalar-duṟai*, பெ. (n.) செயல் நிறைவேற்றுத்துறை; executive department.

[செயல் + அலுவலர் + துறை]

செயலழி-தல் *šeyal-aḻi-*, 2 செ.கு.வி. (v.i.) செயலறு,1 பார்க்க; see *šeyal-aṟu,1*. "செயலழிந்து ழன்று" (திருப்பு. 89). வணிகத்தில் கைமுதல் இழந்ததும் அவன் செயலழிந்தான் (உ.வ.).

[செயல் + அழி-.]

செயலற்ற *šeyal-aṟṟa*, பெ.எ. (adj.) சடமான; இயக்கமற்ற; inactive functionless.

[செயல் + அற்ற]

செயலற்ற நிலையைச் சிவம் என்பர்; இயங்கு நிலையைச் சத்தி என்பர். உடற்கூற்று நூல்களில் மூளை இயங்கினும் உடல் இயங்கா நிலையைச் செயலற்ற (கோமா) நிலை என்பர்.

செயலறவு *šeyal-aṟavu*, பெ. (n.) வலியின்மை; prostrate condition, helplessness.

[செயல் + அறவு]

செயலறு-தல் *šeyal-aṟu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. வலியழிதல் (சூடா.); to be powerless, to be laid prostrate; to be helpless. 2. ஒழுக்கங் கெடுதல் (உ.வ.); to swerve or go astrey from the path of virtue. 3. அழகழிதல் (இ.வ.); to lose beauty, to be in disorder.

[செயல் + அறு-.]

செயலாளர் *šeyal-āḷar*, பெ. (n.) செயலர் பார்க்க; see *šeyalar.* கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர்.

[செயல் + ஆளர்]

செயலாற்று-தல் *šeyal-āṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) செயல்படுதல்; function; act; work. தனக்கென்று இல்லாமல் நாட்டுக்கென்று செயலாற்றவே விருப்பம்.

[செயல் + ஆற்று-.]

செயலிழ-த்தல் *šeyal-iḻa-*, 3 செ.கு.வி. (v.i.) செயற்படும் திறனை இழத்தல்; become impaired. பக்கவாதையால் ஒரு கையும் காலும் செயலிழந்து விட்டது.

[செயல் + இழ-.]

செயலூரிளம்பொன்சாத்தன்கொற்றனார் *šeyalūr-iḷambon-šāttan-koṟṟanār*, பெ. (n.) அகநானூறு 177ஆம் பாடலைப் பாடிய புலவர்; author of Agam 177.

[செயலூர் + இளம்பொன் + சாத்தன் + கொற்றனார்]

செயலை *šeyalai*, பெ. (n.) சிவந்த அடியையுடைய அசோகமரம்; Indian mast-tree. "செயலைத் தண்டளிர்" (திருமுருகு. 207)

[செய் → செயல் → செயலை]

செயவெனெச்சம் *šeyaven-eccam*, பெ. (n.) எச்சவகைகளுள் ஒன்று; an infinite verb

[செயவென் + எச்சம்]

செயவெனெச்சம் = காரணகாரியப் பொருண்மை உணர்த்தும் வழியில்லது. செயவெனெச்சம் இறந்தகால முணர்த்தாது. (தொல்.சொல். 457, சேனா.) நிகழ்காலத்தின் கண் இது நிகழாநிற்க இது நிகழ்ந்த தென்னும் பொருட்டாயும், இறந்த காலத்திற் காரணப் பொருட்டாயும் எதிர்காலத்தில், காரியப் பொருட்டாயும் வரும்.

மழை பெய்யக், குளம் நிறைந்தது - காரண காரியத்தால் இறந்த காலம் உணர்த்திற்று.

பக்தி பெருக, வானுலகம் அடையலாம் - எதிர்காலம் உணர்த்திற்று.

செயற்கட்டளைகள் *šeyaṟ-kaṭṭaḷaigaḷ*, பெ. (n.) செயல்வரைவு ஆணைகள்; instructions.

[செயல் + கட்டளைகள்]

செயற்கரிய *šeyaṟkariya*, பெ.எ. (adj.) எளிதில் செய்ய முடியாத; not easily achieved; extra ordinary. அவர் யாராலும் செய்ய முடியாத ஒரு செயற்கரிய காரியத்தைச் செய்து முடித்தார்.

[செயல் + அரிய → செயற்கரிய]

செயற்குழு *šeyaṟkuḻu*, பெ. (n.) நிருவாகத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் குழு; executive committee. பொதுக்குழுவின் செயற்பாடுகளைச் செயற்குழு நடைமுறைப்படுத்தும்.

[செயல் + குழு]

செயற்கை *šeyaṟkai*, பெ. (n.) 1. தொழில்; action. "இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்" (புறநா. 35:28). 2. இயற்கையாகக் காணப்படும் அல்லது பெறப்படும் ஒன்றிற்கு மாற்றாக மனிதனால் உண்டாக்கப்படுவது; artificiality. 3. செயற்கைப்பொருள் பார்க்க; see *šeyaṟkai-p-poruḷ.* 4. தன்மை; characteristic, property. "இயற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப" (தொல். எழுத்து. 197). 5. செய்பொருள்; manufactured products.

[செயல் + செயற்கை]

செயற்கைக்கோள் *šeyaṟkai-k-kōḷ*, பெ. (n.) நிலவுலகை அல்லது ஒரு கோளைச் சுற்றி வரும்படி செலுத்தப்பட்ட அறிவியல் கருவி (சாதனம்); satellite. இந்தியா பல செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவி வருகிறது.

[செயற்கை + கோள்]

செயற்கைச்சாக்காடு *šeyaṟkai-c-cākkāḍu*, பெ. (n.) *பொய்ச்சாவு;* feigned or pretended death. *"செயற்கைச் சாக்காடு தெளியக் காட்ட" (பெருங். இலாவாண. 9: 254)*

[செயற்கை + சாக்காடு]

செயற்கைப்பொருள் *šeyaṟkai-p-poruḷ*, பெ. (n.) *1. கரணியத்தால், தன்மைதிரிந்த பொருள்;* object whose nature or character is changed by artificial means. "செயற்கைப் பொருளை யாக்கமொடு கூறல்" *(தொல். சொல்.20). 2. உண்டாக்கப்பட்ட பொருள்;* manufactured article; artifact. நம்நாட்டு இயற்கைப் பொருள்கள் அயல்நாடு சென்று செயற்கைப் பொருள்களாகத் திரும்புகின்றன *(உ.வ.).*

[செயற்கை + பொருள்]

செயற்கைமூச்சு *šeyaṟkai-mūccu*, பெ. (n.) *மூச்சு தடைபட்டுத் திணறும் நிலையில் உள்ள ஒருவர் மீண்டும் சீரான முறையில் மூச்சு விடுவதற்கான உயிர் வலியைச் செலுத்தி அளிக்கும் சிகிச்சை;* artificial respiration.

[செயற்கை + மூச்சு]

செயற்கைமுத்து *šeyaṟkai-muttu*, பெ. (n.) *கடலில் உண்டாகும் இயற்கை முத்துக்கு மாறாக மனித முயற்சியால் ஆய்வகத்தில் உண்டாக்கும் முத்து;* artificial pearl cultured in a laboratory.

[செயற்கை + முத்து]

செயற்கையழகு *šeyaṟkai-y-aḻagu*, பெ. (n.) *பட்டாலும் பகட்டாலும் மெருகேற்றிப் புணைந்துண்டாக்கிய எழில்;* the beauty caused by silk and various cosmetics artificial beauty.

[செயற்கை + அழகு]

செயற்கையிரை *šeyaṟkai-y-irai*, பெ. (n.) *1. செயற்கையாகத் தரப்படும் உணவு;* artificial food. *2. மீன் பிடிக்க உதவும் உணவு;* the food material used to catch fish.

[செயற்கை + இரை]

செயற்கையளபெடை *šeyaṟkai-y-aḷabeḍai*, பெ. (n.) *செய்யுளின் ஓசை நிரம்பப் புலவர் செய்து கொள்ளும் அளபெடை (தொல். பொருள். 329, உரை);* long vowel or consonant lengthened for the sake of metre.

[செயற்கை + அளபெடை]

செய்யுட்குப் புலவர் செய்து கொண்டது *(தொல். பொருள். 330, பேரா. தொல். எழுத்து. 6, நச்.)* செய்யுட்குப் புலவர் ஓசை கருதிச் செய்து கொண்டது செயற்கை அளபெடை *(தொல். சொல். 17, செய்).*

செயற்கையறிவு *šeyaṟkai-y-aṟivu*, பெ. (n.) *இயல்பாகவன்றிக் கல்வி முதலியவற்றால் உண்டாகிய அறிவு;* acquited knowledge.

[செயற்கை + அறிவு]

செயற்கைவாசனை[1] *šeyaṟkai-vāšaṉai*, பெ. (n.) *உண்டாக்கப்பட்ட நறுமணம்;* artificial fragrance.

[செயற்கை + வாசனை]

செயற்கைவாசனை[2] *šeyaṟkai-vāšaṉai*, பெ. (n.) *சேர்க்கைக் குணம் (இ.வ.);* habits acquired from company.

[செயற்கை + வாசனை]

செயற்படு-தல் *šeyaṟ-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) *செயல் நிகழ்த்தி இயங்குதல்;* function; operate; work. நாளை அலுவலகம் வழக்கம் போல் செயற்படும்.

[செயல் + படு-.]

செயற்படுத்து-தல் *šeyaṟ-pāḍuttu-*, 5 செ.கு.வி. (v.i.) *ஒரு திட்டம் செயல் முதலியவற்றை நடை முறைப்படுத்துதல்;* to implement a scheme. இந்தியா, மொழிவழி மாநிலங்களாகத் திருத்தியமைக்கப்பட்டவுடனேயே, தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சிமொழியாகச் செயற்படுத்தப்பட்டது.

[செயல் + படுத்து-.]

செயற்பாடு *šeyaṟ-pāḍu-*, பெ. (n.) *செயற்படுகின்ற முறை;* style of functioning. ஆட்சியின் அடக்குமுறைச் செயற்பாட்டைக் கண்டித்துப் பேசினார்.

[செயல் + பாடு.]

செயிர்[1]**-த்தல்** *šeyir-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1. வெகுளுதல்;* to be angry with, to show signs

of anger. "செற்றன் றாயினுஞ் செயிர்த்தன் றாயினும்" *(புறநா. 226)*. 2. வருத்துதல்; to afflict, cause pain. "சிரறியவன்போற் செயிர்த்த நோக்கமொடு" *(பொருந. 124)*.

[செய் → செயிர்-. செயிர்-த்தல் பார்க்க]

செயிர்²-த்தல் *šeyir-*, 4 செ.கு.வி. (v.i.) 1. சிவத்தல்; to show sign of red. 2. குற்றஞ்செய்தல்; to commit an offence. "செயிர்தீதெழு தெவ்வர்" *(பொருந. 120)*.

[செய் → செயிர் → செயிர்-த்தல் (முதா. 153)]

கறுத்தற்பொருளும், சிவத்தற்பொருளும், சினத்தற்பொருளையும் குறிக்கும். "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள" *(தொல்.உரி. 74)*. செயிர்த்தலாகிய சிவத்தல் சினத்தலையும் குறித்தது. சினத்தால் குற்றஞ்செய்தலும் உண்டு.

செயிர்³ *šeyir*, பெ (n.) 1. சினம்; anger, rage. "செயிர்தீர் செங்கட் செல்வ" *(பரிபா. 4:10)*. 2. குற்றம்; fault, defect, blemish "செயிர் தீரண்ணல்" *(பரிபா. 1:27)*. 3. போர்; battle, fight. "செயிர்மேற் கனல் விழிப்பச் சீறி" *(பு.வெ. 7:4)*. 4. வருத்துகை; affliciting, oppressing. "செயிர்த்தொழின் முதியோன்" *(சிலப். 27:7)*. 5. நோய்; disease "செயிருடம்பிற் செல்லாத்தீ வாழ்க்கையவர்" *(குறள், 330)*.

[செயிர்¹ → செயிர்²]

செயிர்ப்பு *šeyirppu*, பெ. (n.) 1. சினம்; anger. "சிவப்பு ளுறுத்துச் செயிர்ப்பு முந்துறீஇ" *(பெருங் இலாவாண. 16:18)*. 2. குற்றம்; fault. "செயிர்ப்பொடு சிவந்து நோக்கி" *(சீவக. 1624)*.

[செயிர் → செயிர்ப்பு]

செயிரியர் *šeyiriyar*, பெ. (n.) பாணர் (பிங்.); minstrels. "செயிரியர் மகரயாழின் றேம்பிழி தெய்வகீதம்" *(கம்பரா. கார்முக. 40)*.

[செயிர் → செயிரியர்]

செயிற்றியம் *šeyiṟṟiyam*, பெ. (n.) செயிற்றி யனார் என்ற புலவர் இயற்றிய நாடக விலக்கண நூல் (சிலப். பக்.9); a treatise on dramaturgy by Šeyiṟṟiyaṉār.

[செயிற்றியன் → செயிற்றியம்]

செயிற்றியன் *šeyiṟṟiyaṉ*, பெ. (n.) செயிற்றியம் என்னும் நாடக நூலின் ஆசிரியர்; author of *šeyiṟṟiyam*.

[செயிற்றியம் → செயிற்றியன்]

செரி-த்தல் *šeri-*, 4 செ.கு.வி. (v.i.) குடலினால் உறிஞ்சப்படுவதற்கு ஏந்தாக உணவில் உள்ள சத்துகள் வயிற்றுத் தசைகளினால் அரைக்கப்பட்டுக் கூழாதல் (சீரணமாதல்); to be digested. "புவனஞ் செரிக்கு மென்றே" *(அஷ்டப். திருவரங். மா. 98)*. தின்ற சோறு செரிக்கவாவது வேலை செய்ய வேண்டும். 2. நிலையாகப் பெறுதல்; to be permanently acquired. கோயில் சொத்து உனக்குச் செரிக்காது.

[சிதை → செரி-. சிதைத்தல் = நிலை குலைதல், தன்மை கெடுதல்]

செரிப்பி-த்தல் *šerippi-*, 4 செ.குன்றாவி. (v.t.) செரிக்கச் செய்தல்; to help or promote digestion by medicine. 2. இடையூற்றை நீக்குதல்; to remove a difficulty. 3. நிலைநிறுத்தல்; to maintain successfully. உன் வாதத்தைச் செரிப்பிக்க முடியுமா?

[செரி → செரிப்பி-]

செரிமானநெதி *šerimāṉa-nedi*, பெ. (n.) செரிக்க உதவும் நீர்மப்பொருள்; protein catalyst of a specific bio-chemical reaction, namely enzyme.

[செரிமானம் + நெதி]

செரிமானம் *šerimāṉam*, பெ. (n.) செரிக்கை (இ.வ.); digestion. செரிமானத்திற்கு மாவுப் பொருள் பெரிதும் உதவுகிறது.

[செரி + மானம். மானம் சொல்லாக்க ஈறு]

செரியாப்படுவன் *šeriyā-p-paḍuvaṉ*, பெ. (n.) நோய்வகை (யாழ்.அக.); a disease.

[செரி + ஆ + படுவன்]

செரியாமாந்தம் *šeriyā-māndam*, பெ. (n.) செரிமானம் ஆகாத் தன்மைகளை உண்டாக்கும் நோய்; dyspepsia.

[செரி + ஆ + மாந்தம்]

செரு¹-த்தல் *šeru-*, 4 செ.குன்றாவி. (v.t.) அழித்தல்; to destroy, ruin. "செருத்தது தக்கனை வேள்வி" *(தேவா. 139, 4)*

தெ. செருகு

[செறு → செரு]

செரு[2] *śeru*, பெ. (n.) 1. போர்; battle, fight. "மதந்தபக் கடந்து செருமேம் பட்ட" (பரிபா. 1:27) 2. ஊடல்; love-quarrel between husband and wife. "தீர்விலதாகச் செருவுற்றாள்" (பரிபா. 7:75).

மறுவ. அமர், சமர், சண்டை

ம. செரு; க. கெரன் (சினப்படுதல்); தெ. சிராகு (சினம்)

[சுள் → செள் → செறு → செரு]

செருக்கடு-த்தல் *śerukkaḍu-*, 4 செ.கு.வி. (v.i.) இறுமாப்புக் (அகந்தைக்) கொள்ளுதல்; to become proud, haughty. "செருக்கடுத்தன்று திகைத்தவரக்கரை" (திவ்.திருவாய். 1.4:7).

[செருக்கு + அடு-.]

செருக்கம்[1] *śerukkam*, பெ. (n.) மாதுளை (மலை.); pomegranate.

Skt. karaka

செருக்கம்[2] *śerukkam*, பெ. (n.) கள் முதலியன குடிப்பதால் வரும் மயக்கம்; intoxication "கட்கழி செருக்கத்தன்ன" (நற்.35).

ம. செருக்கம், சொருக்கம்

[செருக்கு → செருக்கம்]

செருக்கல் *śerukkal*, பெ. (n.) குடிமயக்கம்; intoxication.

ம. சொருக்கல்

[செருக்கம் → செருக்கல்]

செருக்கல்வரகு *śerukkal-varagu*, பெ. (n.) மயக்கத்தை உண்டாக்கும் வரகுவகை; a kind of millet that causes dizziness.

[செருக்கல் + வரகு]

செருக்களம் *śeru-k-kaḷam*, பெ. (n.) போர்க்களம் (பிங்.); field of battle. "செருக்களத் துருத்தெய் யாதே" (கம்பரா. வாலிவ. 116).

மறுவ. அடுகளம், சமர்க்களம், படுகளம்

ம. செருக்களம்

[செரு + களம்]

செருக்களவஞ்சி *śerukkaḷa-vañji*, பெ. (n.) போர்க்களத்தைச் சிறப்பித்து அகவற்பாவாற் பாடப்படும் சிற்றிலக்கியம்; battle-piece, a poem in agaval verse describing the field of battle. "செருக்களங் கூறிற் செருக்கள வஞ்சி" (இலக்.வி. 869).

[செருக்களம் + வஞ்சி]

செருக்கற்பாக்கு *śerukkal-pākku*, பெ. (n.) மயக்கத்தை உண்டாக்கும் பாக்கு வகை; a kind of areca-nut having narcotic properties.

[செருக்கல் + பாக்கு]

செருக்கறு-தல் *śerukkaṟu-*, 4 செ.கு.வி. (v.i.) வாடுதல்; to fade, wilt, as flower. "செருக்கற்ற பஞ்சி மலர்ச் சீறடி" (சீவக. 2339).

[செருக்கு + அறு-.]

செருக்கன் *śerukkaṉ*, பெ. (n.) இறுமாப் புள்ளவன்; vain, self-conceited person. 'செருக்கனாயிருக்கும் ராஜபுத்ரனுக்கு' (ஈடு, 10. 3:1).

[செருக்கு →செருக்கன்]

செருக்கு[1]**-தல்** *śerukku-*, 5 செ.கு.வி. (v.i.) 1. இறுமாப்புக் (அகந்தை) கொள்ளுதல்; to be proud, vain, self-conceited. "மீளி மொய்ம்பின், மிகுவலி செருக்கி" (பொருந. 140). 2. பெருமித முறுதல்; to be elated with self pride. "செருக்கியே தவங்கள் செய்வீர்" (இராமநா. ஆரணிய. 4). 3. மதர்த்தல்; to be gay, lively "செருக்கிய நெடுங்கண் சேப்ப" (சீவக. 2657). 4. களித்தல்; to exult. "கடாஅஞ் செருக்கிக் கால்கிளர்ந்து" (மணிமே. 19:22). 5. மயங்குதல்; to be infatuated. "மொய்வளஞ் செருக்கி" (பதிற்றுப். 49:8).

ம. செருக்குக; க. செர்கு, செக்கு; தெ. செருவு; து. சுக்கனி; கோண். சோமூநானா; கூ. சோம்பு; நா. சோன்; கொலா. சொந்க்; பர். சோங்க; கட. சிக்த்; மா. க்வெரெ; குரு. கெர்னா

[செரு → செருக்கு-.]

செருக்கு[2]**-தல்** *śerukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) மிகுத்தல்; to increase, nurse, cherish, as anger. "செங்குட்டுவன் சினஞ் செருக்கி" (சிலப்.29, உரைப்பாட்டு). 2. நன்கு நுகர்தல் (அனுபவித்தல்); to enjoy to the full. "நன்னிலப் பகுதியிற் பெருவளஞ் செருக்கி" (உபதேசகா. சிவபுராண. 50).

[செரு → செருக்கு-.]

செருக்கு³ *śerukku*, பெ. (n.) 1. பிறரை மதிக்காத போக்கு, இறுமாப்பு (அகந்தை); haughtiness, pride, arrogance, self-conceit. "செருநர் செருக்கறுக்கு மெஃகு" (குறள், 759). 2. மகிழ்ச்சி; cheer exultation, elation. "செருக்கொடு நின்ற காலை" (பொருந. 89). 3. ஆண்மை; daring, intrepidity, courage, as of an army. படைச் செருக்கு (குறள், 78, அதி.). 4. மயக்கம்; infatuation; intoxication. "யானென தென்னுஞ் செருக்கறுப்பான்" (குறள், 346). 5. செல்வம்; wealth. "விறலீனும் ... வேண்டாமை யென்னுஞ் செருக்கு" (குறள், 180). 6. செல்லம் (இ.வ.); luxury, indulgence, as in bringing up a child. செருக்காய் வளர்த்த பிள்ளை.

ம. சொருக்கு; க. ஸொர்கு, ஸொக்கு; தெ. சொக்கு; து. சொர்கு

[செரு → செருக்கு]

செருக்கு⁴**-தல்** *śerukku-*, 5 செ.கு.வி. (v.i.) பாக்கு முதலியன தொண்டையில் அடைத்துக் கொள்ளுதல்; to be choked, as by a bone or a piece of areca-nut.

[செருகு → செருக்கு]

செருக்கு⁵ *śerukku*, பெ. (n.) செருகு கொண்டை பார்க்க (இ.வா.); see *śerugu-koṇḍai.*

செருக்கொடு-த்தல் *śeru-k-koḍu-*, 4 செ.கு.வி. (v.i.) எதிர்த்து போர் செய்தல்; to give battle. "தூதனு மெதிரே செருக்கொடுத்தான்" (கம்பரா. அதிகாய. 177).

[செரு + கொடு-.]

செருகு¹**-தல்** *śerugu-*, 5 செ.குன்றாவி. (v.t.) ஒரு பிடிப்பில் நிற்கும்படி ஒன்றை நுழைத்தல் அல்லது திணித்தல்; to insert, to slide into. "திருகிச் செருகுங் குழன்மடவீர்" (கலிங். 30). பேனாவைப் பையில் செருகினான்.

[சொருகு → செருகு]

செருகு²**-தல்** *śerugu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. பசி, மயக்கம், வலி முதலியவற்றால் கண் சொருகுதல்; to roll sideways, as eyeballs. "கண்கள் செருகின வன்றே" (கம்பரா. நாகபாச. 287). பசியால் கண் செருகி வீழ்ந்தான். 2. செரிமானமாகாத தின்பண்டம் வயிற்றிற் சிக்கிக்கொள்ளுதல்; to get held up in stomach, as indigestible matter. 3. வயிற்றில் திருகுவலியுண்டாதல்; to have colic pains.

[சொருகு → செருகு]

செருகுகொண்டை *śerugu-koṇḍai*, பெ. (n.) முடிக்குங் கொண்டைவகை (யாழ்.அக.); a mode of dressing the hair.

[செருகு + கொண்டை]

செருகுபூ *śerugu-pū*, பெ. (n.) இடையிடையே வைத்துத் தொடுக்கப்பட்ட பூ (யாழ்.அக.); flowers inserted singly in making wreaths.

[செருகு + பூ]

செருத்தணி *śeruttaṇi*, பெ. (n.) திருத்தணிகை (கந்தபு. வள்ளி. 216); Tiruttaṇigai.

மறுவ. திருத்தணி

[செரு + தணி. செரு = போர், சினம்]

செருத்தல் *śeruttal*, பெ (n.) மாட்டுமடி; udder as of a cow. "குடம்புரை செருத்தல் ... எருமை" (சீவக.2102). செருத்தல் பருத்திருந்தும் பால் குறைவாகத் தருகிறதே (உவ.).

க. கெச்சல்

[செறு¹ → செரு → செருத்தல்]

செருத்தி *śerutti*, பெ. (n.) வெற்றிக்கொடி (வின்.); banner of victory; badge of distinction.

[செரு → செருத்தி. செரு = போர்]

செருத்துணைநாயனார் *śeruttuṇai-nāyaṉār*, பெ. (n.) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் (பெரியபு.); a canonized Śaiva saint one of 63.

செருத்தொழிலோர் *śeru-t-toḻilōr*, பெ. (n.) செருநர்,1 பார்க்க; see *śerunar,1.*

[செரு + தொழிலோர்]

செருதண்ணை *śerudaṉṉai*, பெ. (n.) மரக் கலத்தைக் கட்டுதற்குரிய சிறுமரப் பலகை; small plank to tie the boats.

செருந்தி *šerundi*, பெ. (n.) 1. வாட்கோரை; a kind of sedge. "களிறுமாய் செருந்தியொடு" (மதுரைக். 172). 2. சிலந்தி என்னும் மரம்; panicled golden-blossomed pear tree. "செருந்தி காலையே கனகம் மலர்கின்ற சாய்க்காடே" (தேவா. 40, 9). 3. மணித்தக்காளி (மலை.); Indian hounds-berry. 4. குறிஞ்சி யாழ்த்திறத்தொன்று (பிங்.); a secondary melody-type of the kuriñji class.

[சிலந்தி → செருந்தி]

செருந்து *šerundu*, பெ. (n.) 1. பூ முதலியவற்றின் இதழ்; petal. "செருந்தவிழ் துளபமாலை" (பாரத. எட்டாம். 15). 2. செருந்தி,2 பார்க்க; see *šerundi*,2. "பரிமளப்பூஞ் செருந்தொன்று சோலை" (தஞ்சைவா. 9).

[செருந்தி → செருந்து]

செருநர் *šerunar*, பெ. (n.) 1. படைவீரர் (பிங்.); soldiers, warriors. 2. பகைவர்; enemies. "கதம்பெற் றார்க்குஞ் செருநர்" (கலிங். 548).

ம. செருநர்

[செரு → செருநர்]

செருப்படி[1] *šeru-p-padi*, பெ. (n.) 1. செருப்பு என்னும் காலணியால் கொடுக்கும் அடி; blow given through sandals. அண்ணன் தம்பியர் சண்டையில் ஒருவருக்கொருவர் செருப்படி கொடுத்துக் கொண்டனர் (உ.வ.).

ம. செருப்படி

[செருப்பு + அடி]

செருப்படி[2] *šeru-p-padi*, பெ. (n.) செருப்படை[2] பார்க்க; see *šeru-p-padai*[2].

[செருப்படை → செருப்படி]

செருப்படிநாயன் *šeru-p-padi-nāyan*, பெ. (n.) செருப்படை[2] பார்க்க; see *šeruppadai*[2].

செருப்படை[1] *šeru-p-padai*, பெ. (n.) சிறந்த போர் வீரர்களைக் கொண்ட போர்ப்படை; army of tried soldiers. "செருப்படையான் பல் புகழ் பாடி" (பு.வெ. 9:31).

[செரு + படை]

செருப்படை[2] *šeruppadai*, பெ. (n.) படர்கொடி வகை; a diffuse prostrate herb.

ம. செருப்படி

செருப்பளிச்சம்பா *šeruppali-c-cambā*, பெ (n.) சரப்பளிச்சம்பா என்னும் நெல் வகை; a kind of šambā-paddy.

[சரப்பளிச்சம்பா → செருப்பளிச்சம்பா]

செருப்பு *šeruppu*, பெ. (n.) 1. காலில் பொருத்தி நிற்கும்படி சிறுபட்டை வைத்துத் தைத்த அடிப்பகுதியுடைய காலணி; leather sandals, slippers, shoe. "மணியமுத்திச் செய்த தெனினுஞ் செருப்புத்தன் காற்கேயாம்" (நாலடி. 347).

மறுவ. மிதியடி, அடிபுதையரணம்.

ம. செரிப்பு, செருப்பு; க. கெர, கெரவு, கெரகு; கெர்பு; தெ. செப்பு; து. செப்பளு; பட. கெருவு; கோத. கெர்ப்; துட. கெர்வு; கோண். சர்பு; குவி. செப்பு; கெலா., நா. கெர்ரி; பர். செருப்

[சரு → செரு → செருப்பு]

செருப்பு, தொடுதோல் என்ற பெயரில் வழங்கப்படுகிறது. செருப்பைத் தொட்டுக் கொண்டு போனார் என்பது கொங்குநாட்டு வழக்கு.

செருப்பு[2] *šeruppu*, பெ. (n.) பூழிநாட்டிலுள்ள தோர் மலை; a mountain in Pūli-nādu. "மிதியற் செருப்பிற் பூழியர் கோவே" (பதிற்றுப். 21:23).

[பொருப்பு → செருப்பு]

செருப்புக்கட்டை *šeruppu-k-kattai*, பெ. (n.) தேய்ந்த செருப்பு (வின்.); worn-out sandals.

[செருப்பு + கட்டை]

செருப்புக்கடி *šeruppu-k-kadi*, பெ. (n.) செருப்பு அழுத்துவதால் உண்டாய புண்; shoe-bite. செருப்புக்கடியால் உண்டான புண் ஆற அவனுக்கு ஆறுமாதம் ஆகியது (உ.வ.).

[செருப்பு + கடி]

செருப்புத்தின்னி *šeruppu-t-tinni*, பெ (n.) தோற் செருப்பைத் தின்னும் நாய் (யாழ்ப்.); a dog as sandals eater.

[செருப்பு + தின்னி]

செருப்புநெருஞ்சி *šeruppu-neruñji*, பெ (n.) சிவப்பு நெருஞ்சி முள்; red cow-thorn.

[சிவப்பு + நெருஞ்சி]

செருப்பூசி *šeruppūši*, பெ (n.) செருப்புத் தைக்கும் ஊசி; shoemaker's awl.

[செருப்பு + ஊசி]



செருப்பூசி

செருமகள் *šeru-magaḷ*, பெ (n.) போர்க்குரிய பெண் தெய்வம் (துர்க்கை) (இலக். அக.); Durgā, as the war Goddess.

[செரு + மகள்]

செருமரம் *šeru-maram*, பெ (n.) கடலில் மீன் பிடிக்கச் செல்வதற்குரிய கட்டுமரம்; a kind of cata-maram.

[சறுக்குமரம் → செருமரம்]

செருமல் *šerumal*, பெ (n.) தொண்டையைத் தூய்மையாக்கக் கனைக்கை; hemming, clearing the throat.

க. கெம்மு

[செருமு → செருமல்]

செருமலையரியன் *šerumalai-y-ariyaṉ*, பெ (n.) ஒருவகை நெல்; a kind of paddy.

செருமு-தல் *šerumu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. நிரம்புதல்; to be full, replete. "கருனை வாசமும் . . . அகிற் புகை வாசமுஞ் செருமி" (சீவக. 130). 2. நெருக்கமாயிருத்தல்; to be close and crowded. பயிர் செருமிப் போனதினால் கதிர்க்குலை வாய்க்கவில்லை (நாஞ்). 3. பதிதல்; to sink; to pierce through. "மருமங்களினும் புயங்களினுஞ் . . . செருமும்படி வெங்கணை மாரி சிந்தி" (பாரத. மூன்றாம். 12). 4. இருமுதல், கனைத்தல்; to hem, cough. "செந்தேனே மெல்லச் செருமுவேன்" (விறலிவிடு. 293). கிழவர் செருமிவிட்டுச் சளியைத் துப்பினார். 5. விக்குதல்; to get choked. "தருப்பணஞ் செருமித் தன்னுயிர் வைத்தனன்" (பெருங். இலாவாண. 9:239).

ம. செருமல்

[இருமு → செருமு-.]

செருமு²-தல் *šerumu-*, 5 செ.குன்றாவி. (v.t.) அடைத்தல் (யாழ்ப்.); to crowd in, stuff or cram in, fill up.

[இருமு → செருமு-.]

செருமுனை *šeru-muṉai*, பெ (n.) 1. போர்க் களம்; field of battle. "செருமுனையுள் வைகி" (பு.வெ. 1:6). 2. போர்புரியும் படை; fighting army. "செருமுனைமேல் வாள்சென்றன்று" (பு.வெ. 4:7, கொளு).

[செரு + முனை]

செருவஞ்செய்-தல் *šeruvañ-jey-*, 1 செ.கு.வி. (v.i.) மாறுபடுதல்; to attack. "செருவஞ் செய்தற்கு" (பரிபா. 8:87).

மறுவ. போர்புரிதல், தாக்குதல்

[செரு → செருவம் + செய்-.]

செருவாடி *šeruvāḍi*, பெ. (n.) சிறுவாடு; petty savings in money. 'செருவாடி போகம் கொண்டு' (தெ.க.தொ. 5, 285).

[சிறுவாடு → செருவாடி]

செருவிச்சினவி *šeruvi-c-ciṉavi*, பெ (n.) மிகு சினம் (கோபம்); tremendous anger.

[செரு → செருவி + சினவி]

செருவிடைவீழ்தல் *šeru-v-iḍai-vīḻdal*, பெ. (n.) அகழினையும் காவற்காட்டையுங் காத்துப் பட்ட வீரரது வெற்றியைப் புகழும் புறத் துறை (பு.வெ. 5:4); theme celebrating the heroic death of the warriors who defended the moat round a city and the adjoining forest.

[செரு + இடை + வீழ்தல்]

செருவிளை *šeru-viḷai*, பெ. (n.) வெள்ளைக் காக்கணம் (குறிஞ்சிப். 68); white-flowered mussel-, shell creeper.

[செரு + விளை]

செருவுறு-தல் *šeru-v-uṟu-*, 5 செ.கு.வி. (v.i.) ஊடுதல்; to quarrel; to sulk. "தீர்விலதாகச் செருவுற்றாள்" (பரிபா. 7:75).

செல்[1](லு)-தல் *šel-*, 13 செ.கு.வி (v.i.) 1. போதல்; to go, flow, pass, to traverse, as the eye, mind. "சென்ற தேஎத்து" (தொல்.பொருள்.146). 2. நிகழ்தல்; to occur. "செல்லாஅநின்ற வித்தாவர சங்கமத்துள்" (திருவாச. 1:30). 3. வீழ்தல்; to fall, as on the ground. "படியிற் செல்லும்படி" (கம்பரா. நிகும்பலை. 23). 4. ஆதல்; to become, form. "புண்செல்வன வல்லால்" (கம்பரா.நிகும் பலை.107). 5. பரவுதல்; to spread, as fame. "உரைசெல முரசுவெளவி" (புறநா. 26:7). 6. பயனுறுதல்; to be effective; to have influence. "செல்வர்வாய்ச் சொற்செல்லும்" (நாலடி. 115). 7. நிலைத்திருத்தல்; to last, endure, exist. "செல்லாதவ் விலங்கை வேந்தர்க் கரசென" (கம்பரா. இந்திரசித். 56). 8. செலாவணியாதல்; to pass, as coin. "சந்தையினிற் செல்லாப் பணஞ் செல்லுமோ" (தனிப்பா.). 9. வேண்டியதாதல்; to be required; to cost. இந்தக் காரியத்தை முடிக்க ஆயிர உருபா செல்லும் (உ.வ.). 10. பொருந்துதல்; to be suitable; to be acceptable. உலகம் . . . தோற்றுவா னொருவனை உடைத்தாதல் செல்லாது (சி.போ.சிற். 1:2, பக். 17). 11. விரும்பி யேற்றுக் கொள்ளப்படுதல்; to be acceptable to the system. நோயாளிக்கு உணவு செல்லவில்லை. 12. அடைதற்குரியதாதல்; to be due, as money; to appertain to, as a right. இந்தப் பணம் எனக்குச் செல்ல வேண்டியது. 13. கழிதல்; to pass away, lapse, expire, as time. "சென்றன சென்றன வாழ்நாள்" (நாலடி. 4). 14. தணிதல்; to disappear, diminish, as anger. "செலியரத்தை நின் வெகுளி" (புறநா. 6:23). 15. கெடுதல்; to perish, to be ruined. "செல்லா நல்லிசை" (மலைபடு. 388). 16. இறத்தல்; to die. "செல்லுநாளைந்து புலனு மயர்ந்த பின்னர்" (உபதேசகா. சிவநாம. 3).

ம. செல்லுக; க. சல், செல்; தெ. செல், செல்லு; து. சல்லுனி; கோண். கன்தாரை, சொனானா; கூ. சல்பா; நா.ச; கொலா. செர்; பர். செல், செல்; கட. செல்

[சல் → செல்.]

'சல்' பார்க்க

šel, to go, to proceed. This is unquestionably a Dravidian root, and abounds in derivatives e.g. šel, the white ant; šel-avu, expenditure, šel-vam, prosperity. It forms its preterite also in a manner which is peculiar to pure Dravidian verbs. It is obviously allied to the Sanskrit šal, to go or move; šel, to move, to trumble; chal and char, to go, to shake, to totter; and also to the Hindustani derivative chal, to go, close as these analogies are, šel appears to bear an equally close resemblance to cel, the obsolete Latin root, signifying to go, from which are formed celer and also ex-cell-o and pre-cell-o the same root is in Greek kel- e.g. kel-ēs, a runner; and kellō, to urge on (CGDFL. 594).

செல்(லு)[2]-தல் *šel-*, 8 செ.குன்றாவி. (v.t.) 1. கிட்டுதல்; to approach. "செல்வரைச் சென்றிர வாதார்" (நாலடி. 296). 2. அடைதல்; to become, trun into, attain. "கலங்கலைச் சென்றவன்றும்" (திருக்கோ. 24).

[சல் → செல்-.]

செல்[3] *šel*, பெ. (n.) 1. விரைந்து போகை; career, swift course. "செல்லொன்று கணையால்" (கம்பரா. இராவணன்வதை. 15). 2. வாங்கிய கடனுக்குச் செலுத்திய தொகை; payment of loan. இந்தப் பத்திரத்துக்குச் செல் உருபா ஐம்பது (உ.வ.). 3. கடன்; loan, debt. கணக்குப் பார்த்ததில் அவனுக்கு ஆயிர உருபா செல் இருக்கிறது. 4. கடன் செலுத்தியதற்கு ஆவணத்திலெழுதுங் குறிப்பு; note of payment. கொடுத்த உருபாவைச் செல் வைத்திருக்கிறதா? (உ.வ.). 5. சென்ற கால வளவு; period that has elapsed. சூரிய புத்தியின் செல் நான்கு ஆண்டு. 6. மஞ்சு (பிங்.); cloud. 7. வானம் (அக.நி.); sky. 8. இடி; thunder bolt. "வான் முழக்குச் செல்" (பரிபா. 13: 44). 9. வேல் (அக.நி.); javelin.

[சல் → செல்]

செல்[4] *šel*, பெ. (n.) கறையான் (பிங்.); white ant. "செல்லரித்திடவு மாண்டெழாதாள்" (கம்பரா. காட்சி. 15). செல்லரித்த புத்தகம்.

[சிதல் → செல்]

செல்கதி *šel-kadi*, பெ. (n.) 1. புகல்; the ultimate or last refuge. "எங்கள் செல்கதி வந்தது" (கம்பரா. கங்கை. 10). 2. உய்வு; salvation. "செல்கதி யுண்டோ தீவினை யேற்கென்று" (மணிமே. 13:88).

வ. கதி

[செல் + கதி]

செல்காரியம் *šel-kāriyam*, பெ. (n.) நடத்தப் பெறுங் காரியம் (வின்.); the matter on hand.

[செல் + காரியம்]

செல்காலம் *šel-kālam*, 1. செல்வாக்குள்ள காலம்; time of one's influence. 2. சென்ற காலம்; past time. "வருகாலஞ் செல்கால மாயினானை" (தேவா. 716, 3).

மறுவ. இறந்த காலம், கடந்த காலம்.

[செல் + காலம்]

செல்கை *šelgai*, பெ. (n.) செல்வாக்கு பார்க்க (இ.வ.); see *šel-vākku*.

[செல் + காரியம்]

செல்சார் *šel-šār*, பெ. (n.) பற்றுக்கோடு; support. "இரப்பவர்க்குச் செல்சாரொன்றீ வோர்" (நான்மணி. 39).

[செல் + சார். சார் = சார்தல்]

செல்சார்வு *šel-šārvu*, பெ. (n.) செல்சார் பார்க்க; see *šelšār*. "சிறைகொளப் பட்டியான் செல்சார் வுறுத்த பின்" (பெருங். இலாவாண. 10:126).

[செல் + சார்வு]

செல்சுடர் *šel-šudar*, பெ. (n.) மறையும் பகலவன்; declining Sun. "செல்சுடர் நோக்கி" (நாலடி, 394).

மறுவ. அடை ஞாயிறு; மறையும் ஞாயிறு படி ஞாயிறு.

[செல் + சுடர்]

செல்பாக்கி *šel-bākki*, பெ. (n.) சிற்றூர்களின் வரவு செலவுப் பாக்கிக் கணக்கு; statement of demand, collection and balance of revenue in a village.

[செல் + பாக்கி]

செல்ல *šella*, வி.எ. (adv.) 1. அகல; at a distance, out of the way. "செல்லப்போய் நிற்பாள்திரு" (அபி.சிந். 277:தனிப்பா.). 2. சிறிது காலங் கழித்து; after some time. 'செல்ல வா' (வின்.). 3. முடிய; to the very end. 'சடைக்கு மேல் கேசாந்தத் தளவுஞ் செல்ல' (தெ.க.தொ. 2, 175).

[செல் → செல்ல]

செல்லக்கட்டு-தல் *šella-k-kaṭṭu-*, 5 செகுன்றாவி. (v.t.) 1. திட்டமாய் முடித்தல்; to accomplish. 2. வயப்படுத்துதல்; to bring round, as a person. அவனைச் செல்லக் கட்டி விட்டேன். 3. கடன் தீர்த்தல் (வின்.); to liquidate loan, pay up arrears.

[செல் → செல்ல + கட்டு-.]

செல்லக்கலியாணம் *šella-k-kaliyāṇam*, பெ. (n.) சிறு குழந்தைகளாக இருக்கும்போதே செய்யும் திருமணம்; child-marriage.

மறுவ. சிறுவர் திருமணம், குழந்தை மணம்

[செல்லம் + கலியாணம்]

செல்லக்குடை *šella-k-kuḍai*, பெ. (n.) மிகு செல்வம் (இ.வ.); immense wealth.

[செல்வம் → செல்லம் + குடை]

செல்லக்குந்தாணி *šella-k-kundāṇi*, பெ. (n.) செல்லமாக வளர்க்கப்பட்ட பிள்ளை (இ.வ.); boy or girl very indulgently brought up, used in contempt.

[செல்வம் → செல்லம் + குந்தாணி]

செல்லங்கொஞ்சு-தல் *šellaṅ-goñju-*, 5 செ.கு.வி. (v.i.) குழந்தை பெண்டிர் முதலியவருடன் கொஞ்சிப் பேசுதல்; to prattle; to use gestures, as a humoured child or woman; to fondle, dally with a woman.

[செல்வம் → செல்லம் + கொஞ்சு-.]

செல்லங்கொடு-த்தல் *šellaṅ-goḍu-*, 4 செ.கு.வி. (v.i.) அன்பு மேலீட்டால் குழந்தைகட்கு அதிக இடங்கொடுத்தல்; to be indulgent, as to a child.

[செல்வம் → செல்லம் + கொடு-.]

செல்லச்சிரிப்பு *šella-c-cirippu*, பெ. (n.) புன்சிரிப்பு (வின்.); delicate, gentle smile.

மறுவ. சிறுநகை, முறுவல், புன்னகை, குறுஞ் சிரிப்பு.

[செல்லம் + சிரிப்பு]

செல்லச்சோறு *šella-c-cōṟu*, பெ. (n.) செல்லத்தால் சிறிது சிறிதாக அடிக்கடி கொடுக்கும் உணவு (வின்.); food repeatedly

given in small quantities, as to children brought up indulgently, dainties

[செல்லம் + சோறு]

செல்லடி[1]-த்தல் *šel-l-adi-*, 4 செ.குன்றாவி. (v.t.) செல்லரி (இ.வ.) பார்க்க; see *šel-l-ari.*

செல்லடி[2]-த்தல் *šell-adi-*, 4 செ.குன்றாவி. (v.t.) செல்வை பார்க்க; see *šel-vai.*

செல்லத்தனம் *šella-t-tanam*, பெ. (n.) செல்லம் (யாழ்ப்.) பார்க்க; see *šellam.*

[செல்வம் → செல்லம் + (தன்மை) தனம்]

செல்லத்தீனி *šella-t-tīni*, பெ. (n.) செல்லச் சோறு (யாழ்.அக.) பார்க்க; see *šella-c-cōṟu.*

[செல்லம் + தீனி]

செல்லத்தொந்தி *šella-t-tondi*, பெ. (n.) செல்வச் செழிப்பில் இளமையிற் பெருத்த வயிறு; paunch belly due to luxurious living.

[செல்லம் + தொந்தி]

செல்லத்தொப்பை *šella-t-toppai*, பெ. (n.) செல்லத்தொந்தி பார்க்க; see *šella-t-tondi.*

[செல்லம் + தொப்பை]

செல்லநடை *šella-nadai*, பெ. (n.) 1. குழந்தை முதலியோரின் தளர்நடை; gentle, graceful gait, as of children. 2. மந்தநடை; slow, loitering walk.

[செல்லம் + நடை]

செல்லநரை *šella-narai*, பெ. (n.) செல்வமாக வளர்வதால் இளமையில் உண்டாம் நரை (யாழ்ப்.); premature grey hairs, supposed to result from luxurious living.

[செல்வம் + நரை]

செல்லப்பசி *šella-p-paši*, பெ. (n.) குழந்தைகட்கு அடிக்கடி உண்டாகும் பசி (வின்.); frequent hunger as of children.

[செல்லம் + பசி]

செல்லப்பிள்ளை *šella-p-piḷḷai*, பெ. (n.) 1. செல்லம் கொடுத்து வளர்க்கப்பட்ட அருமைக் குழந்தை; child brought up delicately, petted child. கடைக்குட்டிதான் அவனுக்குச் செல்லப் பிள்ளை. 2. செல்வமாக வாழ்பவர் (சுகவாசி); person living in luxury and ease. 3. நாடக மாந்தர்களில் முருகன் வேடம்பூண்டு வரும் இரண்டாம் மாந்தன் (வின்.); the second character in comedy, supposed to have been originally a representation of Murugan.

ம. செல்லப்பிள்ளை

[செல்லம் + பிள்ளை]

செல்லப்பிள்ளைக்காய்ச்சல் *šella-p-piḷḷai-k-kāyccal*, பெ. (n.) 1. ஒருவகைக் காய்ச்சல்; a kind of fever. 2. பள்ளிக்குப் போவதற்கு அஞ்சி, செல்வச் சிறுவர் நடிக்கும் போலி காய்ச்சல் பாவனை; action of children of rich people as if they are in fever - only to avoid to go to school.

மறுவ. பாசாங்குக் காய்ச்சல்

[செல்லம் + பிள்ளை + காய்ச்சல்]

செல்லப்பிள்ளைவிளையாட்டு *šella-p-piḷḷai-viḷaiyāṭṭu*, பெ. (n.) இன்ப வாழ்விலிருப் பவனது கருதலற்ற நடத்தை (உ.வ.); thoughtless, extravagant conduct of a person given to luxurious and easy life. முதாதையர் சேர்த்து வைத்திருந்த செல்வத்தை, இவன் செல்லப்பிள்ளை விளையாட்டில் தொலைத்து விட்டான் (உ.வ.).

[செல்லப்பிள்ளை + விளையாட்டு]

செல்லப்பிள்ளைவேட்டி *šella-p-piḷḷai-vēṭṭi*, பெ. (n.) சிறுவர் அணியும் சிற்றுடை (தஞ்சை.); a small cloth usually worn by children.

மறுவ. சித்தாடை, குறுவேட்டி

[செல்லம் + பிள்ளை + வேட்டி]

செல்லப்பெட்டி *šella-peṭṭi*, பெ. (n.) வெற்றிலைப் பாக்கு வைக்கும் பெட்டி; metallic box for keeping betel leaves and areca-nut.

மறுவ. வெற்றிலைச் செல்லம்

ம. செல்லப்பெட்டி

[செல்லம் + பெட்டி]

செல்லப்பெட்டி

செல்லப்பெண் *šella-p-peṇ*, பெ. (n.) அருமைப் பெண்; female child or girl brought up delicately; petted girl.

[செல்வம் + பெண்]

செல்லப்பேச்சு *šella-p-pēccu*, பெ. (n.) 1. மழலைச்சொல்; child's prattle or lisp. 2. மகளிரின் கொஞ்சற் பேச்சு; soft, winning talk, as of a woman.

மறுவ. கிள்ளைப் பேச்சு, மழலை மொழி, காதற் பேச்சு.

[செல்வம் + பேச்சு]

செல்லம் *šellam*, பெ. (n.) 1. பொருள்; opulence, prosperity, fortune. 'செல்லஞ் செருக்குகிறது, வாசற்படி வழுக்குகிறது' (வின்.). 2. சொந்தக் கருவூலம்; private treasury, as of a king. 3. செல்லப்பேச்சு,2 பார்க்க; see *šella-p-pēccu,2* இந்தச் செல்லமெல்லாம் இங்கே நடக்காது. 4. புதுமை (வினோதம்); novelty, amusement, pastime. 5. வெற்றிலை பாக்கு எடுத்துச் செல்லும் செல்லப் பெட்டி (தஞ்சை.); metal box to carry betal leaves and areca-nuts. அந்த வெற்றிலைச் செல்லத்தைக் கொண்டுவா (உ.வ.). 6. இளக்காரம் (இ.வ.); indulgence. 7. இளமை; youth. செல்லக்குட்டி.

ம. செல்லம்

[செல்வம் → செல்லம்]

செல்லம்பொழி-தல் *šellam-poḻi-*, 2 செ.கு.வி. (v.i.) 1. செல்வமாய் இருத்தல் (இ.வ.); to be happy and prosperous. அந்த ஊர் செல்லம் பொழிகிறது (உ.வ.). 2. மகிழ்ந்து விளையாடுதல்; to play merrily; to be frolic-some, jovial.

[செல்லம் + பொழி-.]

செல்லமடி *šella-maḍi*, பெ. (n.) இளமையிற் பெருத்த கன்று மடி (யாழ்ப்.); premature udder of a heifer.

[செல்லம் + மடி]

செல்லமடிப்பு *šella-maḍippu*, பெ. (n.) செல்வச் செழிப்பில் விழும் வயிற்று மடிப்பு; folds of the abdomen, due to luxurious living.

மறுவ. தொந்தி, மடிப்பு

[செல்லம் + மடிப்பு]

செல்லரி-த்தல் *šel-l-ari-*, 4 செ.கு.வி. (v.i.) கறையானால் தின்னப்படுதல்; to be eaten by white ants. "செல்லரித்த வோலை செல்லுமோ" (அஷ்டப். திருவரங். கலம். 53).

[செல் + அரி-.]

செல்லரித்துப்போன *šel-l-arittu-p-pōṉa*, பெ.எ. (adj.) மதிப்பிழந்துவிட்ட அல்லது பயன் இல்லாமல் போன; old and worn-out; moth-eaten. செல்லரித்துப் போன சடங்குகளை இன்னும் சிலர் அப்படியே பின்பற்றி வருகின்றனர்.

[செல் + அரித்து + போன]

செல்லல்[1] *šellal*, பெ. (n.) 1. துன்பம் (தொல். சொல். 302); sorrow, suffering, afflicition. 2. வெறுப்பு (வின்.); disgust.

[செல் → செல்லல்]

செல்லல்[2] *šellal*, பெ. (n.) மூன்று விரல நீளமும் மஞ்சணிறமும் உள்ள நன்னீர் மீன்வகை; fresh water fish, yellowish, attaining 3 in. in length.

தெ. ஜெல்ல

[சேல் → செல் → செல்லல்]

செல்லவண்டி *šella-vaṇḍi*, பெ. (n.) செல்லத்தொந்தி பார்க்க; see *šella-t-tondi.*

[செல்லம் + வண்டி. பண்டி → வண்டி.]

செல்லவயிறு *šella-vayiṟu*, பெ. (n.) செல்லத் தொந்தி பார்க்க; see *šella-t-tondi.*

[செல்லம் + வயிறு]

செல்லவை-த்தல் *šella-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) செல்லாத காசைச் (நாணயத்தைச்) செலாவணி யாக்குதல்; to pass, as a base coin.

[செல் + வை-.]

செல்லன் *šellaṉ*, பெ. (n.) 1. செல்லப்பிள்ளை 1,2 பார்க்க; see *šella-p-piḷḷai,1,2*. 2. செல்வ முள்ளவன் (உ.வ.); wealthy person. செல்லன் சொல்லுக் கஞ்சான், அழகன் நடைக்கஞ்சான் (உ.வ.).

[செல்லம் → செல்லன்.]

செல்லா-தல் *šel-lā-*, 6 செ.கு.வி. (v.i.) 1. கடன் தொகை செலுத்தப்படுதல்; to be paid or discharge, as loan. 2. இறந்து போதல்; to be dead and gone. அவர் செல்லானார் (இ.வ.).

[செல்[2] + ஆ-.]

செல்லாக்காசு *šellā-k-kāšu*, பெ. (n.) 1. செலாவணியாகாத பணம்; coin that will not pass, base coin. 2. செல்வாக்கும் மதிப்பும் இழந்தவன் (வின்.); one who has lost credit or influences. அவன் அரசியலில் செல்லாக்காசு ஆகிபோனான் (உ.வ.). 3. செல்லல்,3 பார்க்க; see *šellal,3*. 4. மருந்துப் பச்சிலை வகை; a medicinal herb. செல்லாக்காசில் வைத்துச் சிறுசெருப்படியைக் கொடுக்க.

ம. செல்லாக்காசு; க. சல்லத காசு

[செல் + ஆ + காசு]

செல்லாக்காசோலை *šellā-k-kāšōlai*, பெ. (n.) பணம் மறுக்கப்பட்ட காசோலை; dishonoured cheque.

[செல்லா + காசோலை. செல்லா = செல்லாத]

செல்லாக்காலம் *šellā-k-kālam*, பெ. (n.) செல்வாக்கு நீங்கின காலம்; time when one's influence is gone, as by loss of office, reputation etc. அந்தக் கட்சிக்கு இப்போது செல்லாக்காலம் (உ.வ.). 2. தள்ளாத கிழப் பருவம்; decrepit, old age.

[செல் + ஆ + காலம்]

செல்லாநெறி *šellā-neṟi*, பெ. (n.) செல்லுதற்கரிய வானம்; aerial region, as impassable. "செல்லா நெறி யேறினர்" (அரிச். பு.விவாக. 59).

[செல் + ஆ + நெறி]

செல்லாமை[1] *šellāmai*, பெ. (n.) 1. பிரிந்து போகாமை; remaining, stopping. "செல்லாமை யுண்டே லெனக்குரை" (குறள், 1151). 2. வறுமை; poverty. "செல்லாமை செவ்வனேர் நிற்பினும்" (நாலடி, 148). 3. வலியின்மை (இ.வ.); inability. 4. செய்யாதிருக்கக் கூடாமை; unavoidable necessity, inevitability. 'என் செல்லாமையாலே ஏத்தினேன்' (ஈடு, 4. 3:10).

[செல் + ஆ + மை. ஆ = எதிர்மறை இடைநிலை]

செல்லாமை[2] *šellāmai*, பெ. (n.) ஆற்றாமை; powerlessness to control oneself. 'பெரிய திருவடியுடைய செல்லாமையாலும் தன் செல்லாமை யாலும் . . . அழகு செண்டேறக் கடவதாயிறே யிருப்பது' (திவ்.திருநெடுந். 6, வியா, பக். 50).

[செல் → செல்லாமை]

செல்லாயி *šellāyi*, பெ. (n.) ஊர்த் தெய்வம்; a village goddess.

[செல்லியாயி → செல்லாயி]

செல்லாவாழ்க்கை *šella-vāḻkkai*, பெ. (n.) வறுமை வாழ்வு; wretched life, life of poverty. "சில்விலைக் கிடுஉஞ் செல்லா வாழ்க்கையர்" (பெருங். உஞ்சைக். 55:49). செல்லா வாழ்க்கை வாழ்வதிலும் உயிர் துறப்பதே நன்று (உ.வ.).

[செல் + ஆ (எதிர்மறை) + வாழ்க்கை]

செல்லாவிடம் *šellā-v-iḍam*, பெ. (n.) 1. வறுமைக் காலம்; straitened circumstances. "செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன" (நாலடி, 149). 2. தகுதியில்லாத இடம்; improper place. "செல்லா விடத்துச் சினந்தீது" (குறள். 302).

[செல் + ஆ + இடம்]

செல்லாறு *šel-l-āṟu*, பெ. (n.) 1. கைக்கொள்ளும் முறை; the proper or advisable course, the correct or the right path. "இருளற விளங்குஞ் செல்லா றிதுவென" (பெருங். நரவாண, 7:90 -91). 2. செல்லும் வழி; the way one goes.

[செல் + ஆறு]

செல்லானகணக்கு *šel-l-āṉa-kaṇakku*, பெ. (n.) தீர்ந்துபோன கணக்கு; paid-off account.

[செல்[2] + ஆ(ன) + கணக்கு]

செல்லி *šelli*, பெ. (n.) 1. செல்லப்பெண் பார்க்க; see *šella-p-peṇ*. "தங்கையான செல்லி மங்கையர்க்குள் நல்லி" (இராமநா. ஆரணி. 12). 2. செல்லாயி பார்க்க; see *šellāyi*.

[செல்லம் → செல்லி]

செல்லிடம் *šel-l-iḍam*, பெ. (n.) 1. பொருளுள்ள காலம்; prosperous circumstances "செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்" (நாலடி, 149). 2. தகுதியான இடம்; proper place. "செல்லிடத்துக் காப்பான் சினம் காப்பான்" (குறள், 301). 3. செல்லுகின்ற இடம்; the place to which one goes.

[செல் + இடம்]

செல்லியம் *šelliyam*, பெ. (n.) கோழி; fowl.

[சேவல் → சேல் → செல் → செல்லியம்]

செல்லியாயி *šelli-y-ayi*, பெ. (n.) சிற்றூர்த் தெய்வம்; village goddess.

[செல்லி + ஆயி. ஆய் → ஆயி]

செல்லு[1] *šellu*, பெ. (n.) செல்[2] பார்க்க; see *šel*[2].

செல்லு[2] *šellu*, பெ. (n.) செல்[3] பார்க்க; see *šel*[3].

செல்லுங்காசோலை *šelluṅ-gāšōlai*, பெ. (n.) செல்லுபடியான காசோலை, தீர்வான காசோலை; valid cheque honoured.

[செல்லும் + காசோலை]

செல்லுச்சீட்டு *šellu-c-cīṭṭu*, பெ. (n.) பற்றுச்சீட்டு (ரசீது); receipt or acquittance in evidence of payment.

தெ. செல்ல சீட்டு

[செல்லு + சீட்டு]

செல்லுஞ்சீட்டு *šelluñ-jīṭṭu*, பெ. (n.) 1. உண்மையான கையெழுத்து; authentic signature. 2. செலாவணியான ஆணை (பத்திரம்) முதலியன; bill or bond that is valid and honoured. 3. செல்லுச்சீட்டு பார்க்க; see *šellu-c-cīṭṭu*.

[செல் → செல்லும் + சீட்டு]

செல்லுஞ்செலவுக்கு *šelluñ-jelavukku*, கு.வி.எ. (adv.) இன்றியமையாத செலவுக்குப் போதியதாக (இ.வ.); sufficiently for actual or necessary expenses.

[செல் → செல்லும் + செலவுக்கு]

செல்லுஞ்சொல் *šelluñ-jol*, பெ. (n.) 1. செல்வாக்கு பார்க்க; see *šel-vākku*. 2. பிறர்க் கேற்க உரைக்கும் சொல்; word acceptable to others; winsome or convincing words. "செல்லுஞ்சொல் வல்லா னெதிர் தம்பியும்" (கம்பரா. நகர்நீங். 139).

[செல் + உம் + சொல்]

செல்லுப்புலையர் *šellu-p-pulaiyar*, பெ. (n.) உப்பு விற்கும் பிரிவினர்; people who sell salt. "தறிக்குறையுழு கோடு செல்லுப் புலையரும்" (பாண்டிய செபத். பக். 29, பாலி. செ.).

செல்லுபடி *šellu-paḍi*, பெ. (n.) செல்லான தொகை (உ.வ.); the amount paid.

[செல் + படி.]

செல்லுபடியாகு-தல் *šellu-paḍi-y-āgu*, 5 செ.கு.வி. (v.i.) உரிய மதிப்பையும் பயனையும் பெற்று நடைமுறையில் ஏற்கப்படுதல்; be valid; be in force. உன் அதிகாரமெல்லாம் இனி செல்லுபடியாகாது.

[செல்லுபடி + ஆகு-.]

செல்லுபாக்கி *šellu-pākki*, பெ. (n.) செல்பாக்கி பார்க்க; see *šel-pākki*.

[செல் + பாக்கி]

செல்லும்புள்ளி *šellum-puḷḷi*, பெ. (n.) 1. கொடுக்கல் வாங்கல் செய்யத் தகுதியுள்ளவன்; a man capable of money transaction. 2. கொடுக்க வேண்டிய கடன் (நெல்லை.); liabilities, debt.

[செல் + உம் + புள்ளி]

செல்லும்பேச்சு *šellum-pēccu*, பெ. (n.) செல்லுஞ்சொல் பார்க்க; see *šelluñ-jol*.

[செல் + உம் + பேச்சு]

செல்லுமதி *šellu-madi*, பெ. (n.) செல்லாக வேண்டிய தொகை; balance due.

[செல் + மதி. மதி = அறிவு, செல்வம்]

செல்லுலகு *šel-l-ulagu*, பெ. (n.) மக்கள் செல்லுதற்குரிய உலகம், மறுமை; heaven, as the goal of humanity. "செல்லு லகறிந் தோர்" (மணிமே. 23: 134).

[செல் + உலகு]

செல்லூர்க்கிழார்மகனார்பெரும்பூதங் கொற்றனார் *šellūr-k-kilār-maganār-perumbūdaṅ-gorranār*, பெ. (n.) அகநானூறு 250, குறுந்தொகை 218, 358, 368, நற்றிணை 30 ஆகிய பாடல்களின் ஆசிரியர்; a Šangam poet, author of Agam 250, Kurundogai 218, 358, 368 and Narrinai-30.

[செல்லூர்க்கிழார் + மகனார் + பெரும்பூதம் + கொற்றனார்]

செல்லூர்க்கோசிகன்கண்ணனார் *šellūr-k-kōšigan-kaṇṇanār*, பெ. (n.) அகம் 66ஆம் பாடலின் ஆசிரியர்; author of Agam 66.

[செல்லூர் + கோசிகன் + கண்ணனார்]

செல்லெண்ணெய் *šel-l-eṇṇai*, பெ. (n.) மரத்தைக் கறையான் அரிக்காமல் பாதுகாக்கப் பூசும் எண்ணெய்; anti termite oil for wood.

[செல் + எண்ணெய்]

செல்லெழுத்து *šel-l-eluttu*, பெ. (n.) உண்டியல் ஆவணம் முதலியவற்றில் வரவு வைக்கும் கையொப்பம் (இவ.); endorsement of payment, as on bonds.

[செல் + எழுத்து]

செல்லெழுது-தல் *šel-l-eludu-*, 5 செ.குன்றாவி. (v.i.) ஆவணத்தில் (பத்திரத்தில்) கடன் தீர்ந்ததாக எழுதிக் கொடுத்தல்; to cancel, as a bond, by super-scription.

[செல் + எழுது-]

செல்லொப்பம் *šel-l-oppam*, பெ. (n.) ஆவணம் (பத்திரம்) முதலியவைகளில் இடம்பெறும் மேல் ஒப்பம் (யாழ்ப்.); counter-signature.

[செல் + ஒப்பம்]

செல்லொளி *šel-l-oḷi*, பெ. (n.) வைடூரியம் (யாழ்.அக.); cat's eye.

[செல் + ஒளி]

செல்வக்கடி *šelva-k-kaḍi*, பெ. (n.) பருங்கடி (யாழ்.அக.); biting, in playfulness.

[செல்வம் + கடி]

செல்வக்களிப்பு *šelva-k-kaḷippu*, பெ. (n.) செல்வச் செழிப்பால் உண்டாகும் திமிர் (வின்.); joy or elation due to prosperity.

[செல்வம் + களிப்பு]

செல்வக்கிடப்பு *šelva-k-kiḍappu*, பெ. (n.) செல்வமிகுதி; aboundance of wealth. '... தன்னை எழுதிக் கொடுத்தால் பின்னை செல்வக்கிடப்புக் காட்டி மீட்க வொண்ணாதாப் போலே' (ஈடு, 1. 3:1).

[செல்வம் + கிடப்பு]

செல்வங்காசி *šelvaṅgāši*, பெ. (n.) மதகிரி வேம்பு; Chittagong wood.

செல்வச்சிரஞ்சீவி *šelva-c-cirañjīvi*, பெ. (n.) (நீடுழி வாழ்க என சொல்லும்) ஒரு வாழ்த்துரை; a term of blessing.

[செல்வம் + சிரஞ்சீவி]

செல்வச்செருக்கு *šelva-c-cerukku*, பெ. (n.) செல்வ மிகுதியால் உண்டாகும் இறுமாப்பு; haughtiness due to wealth. செல்வச்செருக்கால் அழிந்தோர் பலர்.

மறுவ. பணத்திமிர்

[செல்வம் + செருக்கு]

செல்வந்தன் *šelvandaṉ*, பெ. (n.) மிகுந்த செல்வம் படைத்தவன்; rich person, plutocrat.

[செல்வன் → செல்வந்தன்]

செல்வநூல் *šelva-nūl*, பெ. (n.) செல்வப் பொருளைப் பற்றிய நூல் (இக்.வ); economics, political economy.

[செல்வம் + நூல்]

செல்வப்பிள்ளை *šelva-p-piḷḷai*, பெ. (n.) செல்லப்பிள்ளை பார்க்க; see *šella-p-piḷḷai*. "அடியேனை நின் செல்வப் பிள்ளை யாக்கினையே" (அருட்பா, 4, திருவருட்பேறு 1, பக்622).

[செல்வன் + பிள்ளை]

செல்வப்பெண் *šelva-p-pen*, பெ. (n.) செல்லப் பெண் பார்க்க; see *šella-p-pen*. "வியனகரிடத்திற் செல்வப் பெண் விளையாடும்" *(பிரபுலிங். ஆரோகண. 39).*

[செல்வம் + பெண்]

செல்வப்பொருள் *šelva-p-poruḷ*, பெ. (n.) கல்வியின் மாறான பொருட் செல்வம்; wealth, riches, dist. from education.

[செல்வம் + பொருள்]

செல்வம் *šelvam*, பெ. (n.) 1. மதிப்புள்ள உடைமைகளின் தொகுப்பு; சொத்து; பொருள் வளம்; wealth, riches. "துகடீர் பெருஞ் செல்வம்" *(நாலடி. 2).* எவ்வளவு செல்வம் இருந்து என்ன பயன். 2. செழிப்பு, வளமை; immensity, prosperity, flourishing state; "சேனையின் செல்வ நோக்கி" *(திருவிளை. மெய்க்கா. 29).* 3. அழகு; beauty. "தேவரிற் பெற்றநஞ் செல்வக்கடி" *(திருக்கோ. 14).* 4. நுகர்ச்சி (தொல்.பொருள். 259, உரை); enjoyment, pleasure, experience of happiness. 5. மேலுலகம் (துறக்கம்) (அக.நி.); Indra's heaven. 6. கல்வி (அக.நி.); learning. 7. குழந்தை; child. உங்கள் செல்வங்களின் வளமான வாழ்க்கைக்குச் சொத்துச் சேருங்கள்.

ம. செல்வம்; க. செல்வ, செல்வு (அருள்); தெ. செலுவமு, செலுவு (அழகு); து. செலுவிகெ (அழகு)

[செல் → செல்வம்]

செல்வமட்டி *šelvamaṭṭi*, பெ. (n.) கொடி வகை; a kind of creeper.

செல்வர் *šel-var*, பெ. (n.) திருமால் கோயிலிலுள்ள திருபலி மூர்த்தி (இவ.); Šri-pali in Viṣṇu temple.

[செல்வம் → செல்வர்]

செல்வராட்சி *šelvar-āṭci*, பெ. (n.) பணக்காரர் மட்டுமே பங்கு பெறும் ஆட்சி; timocracy.

[செல்வர் + ஆட்சி]

செல்வழி *šel-vaḻi*, பெ. (n.) போகும்பாதை (இவா); royal road.

ம. செல்வழி

[செல் + வழி]

செல்வன் *šelvaṉ*, பெ. (n.) 1. செல்வமுள்ளவன் பொருளுடையவன்; wealthy man. "செல்வர் சிறுநோக்கு நோக்குங்கால்" *(நாலடி, 298).* 2. இறைவன்; lord. "ஆலமர் செல்வற்கு" *(சிறுபாண். 97).* 3. புத்தன் (சூடா.); Buddhaṉ. 4. மகன்; son. "செங்கதிர்ச் செல்வன் செய்த வென்றியை" *(கம்பரா. மகுடபங்க. 45).* 5. மணமாகாத இளைஞனின் பெயருக்கு முன் சேர்த்து வழங்கும் சொல்; a form of address for an unmarried young man.

[செல்வம் → செல்வன்]

செல்வாக்கு *šel-vākku*, பெ. (n.) பணம், மதிப்பு, பதவி முதலியவற்றால் பிறரைத் தன் விருப்பத்திற்கு ஏற்ப நடக்கச் செய்ய அல்லது வழிநடத்த இருக்கும் திறன், நாடெங்குங் கிடைக்கும் பெருமதிப்பு (இவ.); influence. நாளுக்குநாள் அவன் செல்வாக்குப் பெருகிடவே, அவன் தனிக்கட்சியைத் தொடங்கினான் *(உ.வ.).*

[செல் + வாக்கு]

செல்வானம் *šel-vāṉam*, பெ. (n.) சில்லறை; small change.

[சில்வானம் → செல்வானம்]

செல்வி *šelvi*, பெ. (n.) 1. திருமகள் (திவா.); Lakshmi, as Goddess of Wealth. 2. பொருள் உள்ளவள்; wealthy woman. 3. தலைவி; lady of rank. "செல்வீ... உனக்குண்மை யியம்பினேமால்" *(காஞ்சிப்பு. தலவி. 29).* 4. மகள்; daughter. 5. மணமாகாத பெண்ணைச்சுட்டும் முன்னடை; miss.

[செல்வம் → செல்வி]

செல்விக்கை *šelvikkai*, பெ. (n.) 1. செல்வம்; luxury, affluence. 2. செட்டு; thriftiness.

[செல்வம் → செல்விக்கை]

செல்விராசகேசரி *šelvi-rāšakēšari*, பெ. (n.) 1. திருவல்லம் 'சிவன் கோயிலில் நெல் அளக்கப் பயன்பட்ட மரக்காலின் பெயர்; name of a measure for paddy, use in the Šivaṉ temple at Tiruvallam. "காசொன்றுக்குச் செல்விராஜ கேஸரியால் நெல்லு நாற்கலமாக" *(தெ.க.தொ. 3: கல். 57).*

[செல்வி + (அரச →) ராச + கேசரி]

அளவுக் கருவிகளுக்கு அரசர், இறைவர் பெயர் சூட்டும் பண்டைப் பழக்கத்தின் அடிப்படையில் எழுந்த பெயர்.

செல்வு *šelvu*, பெ. (n.) செல்வம் பார்க்க; see šelvam. "கோனாகி வீற்றிருந்து கொண்டாடுஞ் செல்வறியேன்" *(திவ். பெருமாள். 4:7).*

[செல்வம் → செல்வு]

செல்வுழி *šel-v-uḻi*, பெ. (n.) செல்லுதற்குரிய இலக்கு; destination, goal. *"தாஞ்செல்வுழி யெண்ணாத" (நாலடி, 8).*

[செல் + உழி]

செல்வை-த்தல் *šel-vai-*, 4 செ.கு.வி. (v.i.) கடன் முதலியவற்றிற்குத் தொகை செலுத்தி ஆவணத்தில் பதிதல்; to enter a credit in account; to endorse payment.

[செல் + வை-.]

செலக்குரு *šelakkuru*, பெ. (n.) செலக்கூர்மை பார்க்க; see *šela-k-kūrmai.*

செலக்கூர்மை *šela-k-kūrmai*, பெ. (n.) எரியுப்பு (நவச்சாரம்) (சங்.அக.); sal-ammoniac.

செலகம் *šelagam*, பெ. (n.) மல்லிகை; Arabian jasmine.

செலதம் *šeladam*, பெ. (n.) கோரைக் கிழங்கு; fragrant tuber of Cyprus rotundus.

செலந்தன் *šelandaṉ*, பெ. (n.) ஒரு வகை மீன் ; a kind of fish.

செலவடை *šelavaḍai*, பெ. (n.) செலவு; expenses. அவனுக்கு ஒருநாள் செலவடை பத்து உருபா *(உ.வ.).*

[செலவு + (அடு →) அடை]

செலவயர்-தல் *šelavayar-*, 2 செ.கு.வி. (v.i.) செல்ல விரும்புதல்; to desire to go. *"சீர்மிகு நல்லிசை பாடிச்செலவயர்தும்" (பு.வெ. 12, வென்றிப். 1).*

[செலவு + அயர்-.]

செலவழி¹-தல் *šelavaḻi-*, 2 செ.கு.வி. (v.i.) 1. பணம், பொருள், நேரம் முதலியன செலவாய்ப் போதல் (உ.வ.); to be spent, used up, consumed. 2. சாதல் (இ.வ.); to die. அவன் செலவழிந்து விட்டான்.

ம. செலவழியுக

[செலவு + அழி-.]

செலவழி²-த்தல் *šelavaḻi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. செலவிடுதல்; to spend, consume, use up, as stores. 2. கொடுத்துவிடுதல்; to give away, dispose of. 3. பொருளையழித்தல்; to squander, waste. மலையளவு சொத்தைச் செலவழித்ததால் அவன் இன்று இரங்கத்தக்க நிலையில் உள்ளான் *(உ.வ.).*

ம. செலவழிக்குக

[செலவு + அழி-.]

செலவழிவு *šelavaḻivu*, பெ. (n.) 1. செலவழிகை; disbursement and expenditure. 2. ஊதியமும் இழப்பும் (இலாப நட்டம்); gain and loss.

[செலவு + அழிவு]

செலவழுங்கு-தல் *šelavaḻuṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) தலைவன் தலைவியிடமிருந்து பிரிதலைத் தவிர்த்தல்; to desist from parting from one's love. *'தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது' (அகநா. 191).*

[செலவு (பயணம்) + அழுங்கு (நிறுத்தம்)-.]

செலவா-தல் *šelavā-*, 6 செ.கு.வி. (v.i.) செலவழி¹-தல் பார்க்க; see *šelavaḻi-.*

[செலவு + ஆ-.]

செலவாளி *šelavāḷi*, பெ. (n.) செலவுகாரன் பார்க்க; see *šelavu-kāraṉ.*

ம. செலவாளி; தெ. செலவுகாடு

[செலவு + ஆளி]

செலவிடு¹-தல் *šelaviḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) கூலி கொடுத்தல், பொருள் வாங்குதல் போன்ற வற்றிற்காகப் பணத்தை வழங்குதல்; to spend. 2. பணம் போன்றே நேரம் முதலியவற்றையும் செலவிடுதல்; to spend time like money etc. ஆய்விற்காக அவன் தன் வாழ்நாளின் பெரும்பகுதியைச் செலவிட்டான் *(உ.வ.).* 3. பொருளையழித்தல்; to squander, waste.

ம. செலவிடுக

[செலவு + இடு-.]

செலவிடு²-தல் *šelaviḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) அனுப்புதல்; to send, send forth. *"சிந்தை மகிழ்வுற வுரைத்து மணநேர்ந்து செலவிட்டார்" (பெரியபு. மானக்கஞ். 17).* கலைப் பொருட்களின் நேர்த்தியில் அவர் தம் சிந்தையைச் செலவிட்டார் *(உ.வ.).*

*[செல் + விடு-.]

செலவினம் *šelavinam*, பெ. (n.) வெவ்வேறு பணிகளுக்கான செலவு வகை; items of expenditure. மருத்துவச் செலவு உட்பட எல்லாச் செலவினங்களும் கணக்கில் காட்டப்படுகின்றன.

[செலவு → செலவினம்]

செலவு *šelavu*, பெ. (n.) 1. போக்கு; going, passing. "செலவினும் வரவினும்" (தொல். சொல். 28). 2. ஓட்டம்; running, flowing. "வெருவருஞ் செலவின் வெகுளி வேழம்" (பொருந. 172). 3. நடை; manner or mode of walk. "சாமனார் தம்முன் செலவு காண்க" (கலித். 94). 4. குதிரை (கதி) நடை அல்லது ஓட்டம்; pace of a horse. "ஐந்து செலவொடு மண்டிலஞ் சென்று" (பு.வெ.12, வென்றிப். 14). 5. பயணம்; journey. "நீளிடைச் செலவொழிந்தனனால்" (கலித். 10). 6. படையெடுப்பு; expedition of an army. 'நாடிய நட்புப் பகை செலவு' (பு.வெ. 9:37, உரை). 7. நீட்சியளவு; full height. "ஒளிநிற வண்ணனைச் செலவு காணலுற்றா ரங்கி ருவரே" (தேவா. 1209). 8. கலைத் தொழில் எட்டனுள் ஒன்றாகிய அலுக்கம் (ஆலாபனம்); elaboration of a tune on the yāḻ one of eight *kalai-t-toḻil*. 'ஆளத்தியிலே நிரம்பப்பாடுதல் செலவு' (சீவக. 657, உரை). 9. வழி (திவா.); way, passage, route, street. "செஞ்ஞாயிற்றுச் செலவும்" (புறநா. 30). 10. ஒழுக்கம்; conduct, behaviour. "தன் செலவிற் குன்றாமை" (திரிகடு. 29). 11. பணச்செலவு; expense, charges. "தாங்குகோடி தனஞ்செல வென்பவே" (சிவரக. சுகமுனி. 41). 12. வீட்டுக்கு வேண்டிய உணவுப் பண்டம்; provisions needed for consumption. கடைக்குப்போய்ச் செலவு வாங்கி வந்தேன் (உ.வ.). 13. தேவை (இவ.); demand, necessity, need. இந்தத் துணிக்கு வீட்டில் செலவில்லை. 14. மொய் (இ.வ.); marriage presents. 15. காலம், பண்டம் முதலியவற்றின் கழிவு; expenditure, as provisions, lapse, as of time of life, etc. 16. இறந்த காலம்; past tense. "பாந்தஞ் செலவொடு வரவும்" (நன். 145). 17. சாவு; death. ஊரில் செலவு அதிகம் (இ.வ.). 18. பிரிவு; separation, departure. "செலவழுங்கியது" (அகநா. 191). 19. ஆணை; permission, leave, order. செலவு பெற்றுக் கொள்கிறேன். 20. எலி முதலிவற்றின் வளை; hole, as of rat. எலிச் செலவாயினுந் தனிச்செலவு வேண்டும் (யாழ்ப்.).

ம. செலவு; க., தெ., பட. செலவு; கோத. சல்வ், செல்வ்; துட. சல்வ்

[செல் → செலவு]

செலவுகாரன் *šelavū-kāran*, பெ. (n.) 1. தாராளமாய்ச் செலவிடுபவன்; one who spends freely. 2. மட்டுக்கு மிஞ்சிச் செவழிப்போன்; spendthrift, extravagant person. 3. குடும்பச் செலவுமிக்கவன்; one who has large expenses.

ம. செலவுகாரன்; தெ. செலவுகாடு; பட. செலவுகார

[செலவு + காரன்]

செலவுகொடு-த்தல் *šelavu-koḍu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. அனுமதி கொடுத்தல்; to give leave. 2. இழப்பீடு கொடுத்தல்; to pay costs, as in a suit; to recompense. செலவு கொடுக்கும்படி முறை மன்றத்தில் தீர்ப்பாயிற்று (உ.வ.).

[செலவு + கொடு-.]

செலவுசிற்றாயம் *šelavu-širrāyam*, பெ. (n.) 1. நாள் செலவுக்கு வேண்டும் பணம்; money required for daily expenses. செலவு சிற்றாயத்திற்கு என்ன செய்வாய். 2. நாளுக்கும் வேண்டிய உணவுப் பண்டம்; provisions for daily consumption.

[செலவு + சிற்றாயம்]

செலவுசெய்-தல் *šelavu-šey-*, 1 செ.குன்றாவி. (v.t.) பணம், பொருள், நேரம் போன்றவற்றைத் தீர்த்தல்; to spend, consume, use up.

ம. செலவு செய்யுக

[செலவு + செய்-.]

செலவுசொல்(லு)-தல் *šelavu-šol-*, 13 செ.கு.வி. (v.i.) வாங்கிய தொகையிற் செலவிட்டதற்குக் கணக்கு ஒப்பித்தல்; to account for sum received. 2. செலவிடுதற்கு விளத்தம் சொல்லுதல்; to give directions for the expenditure of a sum.

[செலவு + சொல்]

செலவுபாக்கு *šelavu-pākku*, பெ. (n.) செலவிடுதற்குப் பயன்படும் தாழ்தரமான பாக்கு; areca-nuts for distribution, generally of an inferior quality.

[செலவு + பாக்கு]

செலவுபெயர்-தல் *šelavu-peyar-*, 2 செ.கு.வி. (v.i.) போதலைத் தவிர்தல் (கலித். 17); to give up one's journey.

[செலவு + பெயர்-.]

செலவுமுன்பணம் *šelavu-munpaṇam*, பெ. (n.) திட்டச் செலவிற்கு அளிக்கப்படும் முன் பணம்; advance for planning expenditure.

[செலவு + முன்பணம்]

செலவுவாங்கு[1]-தல் *šelavu-vāṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) விடைபெறுதல்; to take leave, get leave.

[செலவு + வாங்கு-.]

செலவுவாங்கு[2]-தல் *šelavu-vāṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) மசாலைப் பண்டம் வாங்குதல்; to buy provisions, as curry stuffs.

[செலவு + வாங்கு-.]

செலவுவை-த்தல் *šelavu-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) செலவழிக்கச் செய்தல்; make one spend. மகனின் படிப்பு அவருக்கு நிறையச் செலவு வைத்து விட்டது

[செலவு + வை-.]

செலவெடு-த்தல் *šelaveḍu-*, 4 செ.கு.வி. (v.i.) பண்ட சாலையிலிருந்து உணவுப் பண்டங் கொள்ளுதல் (யாழ்ப்.); to purchase provisions from a store.

[செலவு + எடு-.]

செலவோடு-தல் *šelavōḍu-*, 5 செ.கு.வி. (v.i.) புண் புரையோடுதல் (வின்.); to run deep, as a fistula, an ulcer.

[செலவு + ஓடு-.]

செலாமணி *šelāmaṇi*, பெ. (n.) 1. செல்லக் கூடியது; that which can be passed, as coin, that which is a legal tender. 2. செல்வாக்கு (இ.வ.); influence. இப்போது அவருக்கு அவ்வளவு செலாமணி யில்லை.

U. clāoṇi

[செலாவணி → செலாமணி]

செலாவணி[1] *šelāvaṇi*, பெ. (n.) பணப் புழக்கம்; currency. அணா காசுகள் இப்போது செலாவணியில் இல்லை.

[செலவாணி → செலாவணி]

செலாவணி[2] *šelāvaṇi*, பெ. (n.) செலாமணி பார்க்க; see *šelāmaṇi*.

செலாவணிச்சீட்டு *šelavaṇi-c-cīṭṭu*, பெ. (n.) செல்லக் கூடிய உண்டியல் முதலியன (செந். xii, 283); negotiable instrument like demand draft, cheque etc.

மறுவ. கேட்பு ஓலை, வரைவு ஓலை

[செலாவணி + சீட்டு]

செலியம் *šeliyam*, பெ. (n.) இலாமிச்சை (மலை.); cuscuss grass.

செலு[1] *šelu*, பெ. (n.) 1. மீன் செதிள்; small fins of a fish. "செலுவுட் கரந்தவாழி" (அஷ்டப். திருவரங். மா. 22). 2. சிலாம்பு; splinter. "பௌவமுற்றுமோர் செலுவுட் சென்று" (பாகவத. 8. 8:17).

[சல் → சில் = சிறியது. சில் → சிலு → செலு = சிறு செதிள்]

செலு[2] *šelu*, பெ.எ. (adj) மெலிந்த; thin, poor, puny. செலுநாய்.

க. சிலு

[சில் → சில்லு → செலு]

செலுத்து-தல் *šeluttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. செல்லச் செய்தல்; to cause to go or proceed, despatch, circulate, deliver. "மாதலியைச் செலுத்தி" (கம்பரா. இராவணன் வதை. 203). 2. எய்தல்; to discharge, as a missile. அம்பைச் செலுத்தினான். 3. ஓட்டுதல்; to drive, impel, push forward, propel. "ஓராழி கொண்டு செலுத்துதேர்" (பாரத பதினோறாம் 40) 4. ஆணை நடத்துதல்; to execute, as orders; to administer, as justice. "தனியரசு செலுத்து நாள்" (உபதேசகா.

விபூதி. 104). 5. நடத்துதல்; to perform, observe, as charity, to fulfil, as a promise, vow. 'இத்தன்மம் முட்டாமை செலுத்துவோ மானோம்' (தெ.க.தொ. 3, 95). 6. இறுத்தல்; to pay, as tribute, debt. வரி செலுத்தியாயிற்று. 7. போகவிடுதல், திருப்பிவிடுதல்; to direct; turn. பந்தை அவர் இடப்பக்கமாகச் செலுத்திய முறை சிறப்பாக இருந்தது. 8. ஏற்றுதல், உட்செலுத்துதல்; to transfuse; give, infect. நோயாளிக்கு உடனடியாக அரத்தம் செலுத்த வேண்டும். 9. காட்டுதல், மேற்கொள்ளுதல்; to show, exercise. அவர் மீது அன்பு செலுத்த ஆளில்லை.

ம. செலுத்துக

[செல் → செலுத்து-.]

செலுந்தி *šelundi*, பெ. (n.) மெலிந்தது; thin, slim person or animal; small, stunted tree.

[செலு² → செலுந்தி]

செலுந்தில் *šelundil*, பெ. (n.) செலுந்தி பார்க்க (யாழ்ப்.); see *šelundi*.

[செலு → செலுந்தில்]

செலுப்பட்டி *šelu-p-patti*, பெ. (n.) மீன்வகை; flat fish, olive-brown.

[செலு + பட்டி]

செலுப்பு¹ *šeluppu*, பெ. (n.) நீர்க்கோப்பு (இ.வ.); cold.

தெ. த்ஜலுபு

[சல் → செல் → செலு → செலுப்பு]

செலுப்பு² *šeluppu*, பெ. (n.) 1. சிறுதுண்டு; a little piece. 2. பாக்குச் சீவல் (யாழ்ப்.); slices or parings of areca-nut.

[செலு² → செலுப்பு]

செலுப்பை *šeluppai*, பெ. (n.) கருவாலி (L.); Ceylon tea.

செலும்பு *šelumbu*, பெ. (n.) 1. சிறுதுண்டு; a little piece. 2. பாக்குச்சீவல்; parings of areca-nut for use with betel.

[செலு² → செலும்பு]

செலுமுரல் *šelu-mural*, பெ. (n.) மீன்வகை (யாழ்.அக.); a kind of fish.

[செலு + முரல்]



செலுமுரல்

செலுவல் *šeluval*, பெ. (n.) செத்தல் பார்க்க (யாழ்.அக.); see *šettal*.

[செலு → செலுவல்]

செலுவன் *šeluvan̠*, பெ. (n.) மெலிந்தவன் (யாழ்.அக.); lean person.

க. செலுவ, சலுவ (அழகன்)

[செலு² → செலுவன்]

செலை *šelai*, பெ. (n.) சிலைவாகை (G.Tj.D.I,115); fragrant sirissa.

[சிலை → செலை. சிலை = வாகை மரம்]

செவ்வகத்தி *šev-v-agatti*, பெ. (n.) மரவகை (பதார்த்த. 521); red flowered West Indian pea-tree. 2. செடிவகை (L.); scarlet-flowered pea-tree of Texas.

க. செம்பகசெ

[செம் → செவ் + அகத்தி]

செவ்வகம் *šev-v-agam*, பெ. (n.) நீண்ட சதுரம்; rectangle.

[செம் → செவ் + அகம்]

செவ்வகில் *šev-v-agil*, பெ. (n.) தூணாமரம்; moulmein cedar.

க. செம்பகிலு

[செம் + அகில்]

செவ்வட்டை¹ *šev-v-attai*, பெ. (n.) உடலின் ஓரத்தில் சிவப்புப் பட்டைகள் கொண்டதும் சிறு கால்களால் ஊர்ந்து செல்வதுமான அட்டை வகை; a species of leech; "மரவட்டை, செவ்வட்டை" (விறலிவிடு. 620).

க. கெம்பட்டெ

[செம் → செவ் + அட்டை]

செவ்வட்டை[2] *ševvaṭṭai*, பெ. (n.) *1. சருக்கரை வள்ளிக் கொடிக்கு வரும் நோய்;* a blight affecting sweet potato. *2. நெற்பயிரின் தோகையில் எள் வடிவத்தில் பழுப்பு நிறப் புள்ளிகளாகத் தோன்றிப் பச்சையத்தைச் சிதைக்கும் பூசண நோய்;* helmin thosporium.

செவ்வண் *šev-vaṇ*, பெ. (n.) *செங்குத்து (யாழ்.அக.);* steepness.

[செம் → செவ் → செவ்வண்]

செவ்வண்டு[1] *šev-vaṇḍu*, பெ. (n.) *1. தென்னையின் குருத்தைக் கெடுக்கும் ஒரு வகை வண்டு;* red beetle which damages the tender shoots of coconut trees. *2. வீட்டின் சல தாரைப் பகுதியில் திரியும் செந்நிறப் பூச்சி;* cockroach.

[செம் + வண்டு]

செவ்வண்டு[2] *ševaṇḍu*, பெ. (n.) *சிவப்பு இண்டஞ் செடி;* a red variety of sensitive tree.

செவ்வணம் *šev-vaṇam*, கு.வி.எ. (adv.) *செவ்வனம் பார்க்க;* see *ševvaṇam*. 'இதனைச் செவ்வணங் கூறாமையின் அமைத்தார்' *(தொல்.பொருள். 242, உரை).*

[செம் → செவ் → செவ்வணம்]

செவ்வணி *šev-v-aṇi*, பெ. (n.) *தலைமகற்குத் தலைவியின் பூப்பு உணர்த்தற் குறியாகத் தோழியணிந்து கொள்ளுஞ் செங்கோலம்;* red garment and red flowers, worn by the confidante to indicate to the hero that the heroine is in her periods. "செவ்வணி யணிந்து சேடியை விடுப்புழி" *(நம்பியகப். 205).*

[செம் → செவ் + அணி]

செவ்வணில் *ševvaṇil*, பெ. (n.) *சீமைச்சிவப்பு அணில்;* red squirrel of Europe.

[செம் → செவ் + அணில்]

செவ்வத்தை *šev-v-attai*, பெ. (n.) *1. செடிவகை (K.R.);* globular-flowred neem. *2. கொடி வகை (L);* a species of silverweed.

செவ்வந்தி *šev-v-andi*, பெ. (n.) *1. செவ்வந்தி நேரத்தில் பூக்கும் பூச்செடிவகை;* garden chrysanthemum. *2. சாமாந்தி;* wild chammomile.

ம. செவ்வந்தி, சேமந்தி, சேமந்திக; க. சேவந்திகெ, த. செவ்வந்தி → Skt. ševanti

[செம் → செவ் + அந்தி - செவ்வந்தி = செவ்வான மாலை, அவ்வேளையில் மலரும் பூ]

செவ்வந்திக்கல் *ševvandi-k-kal*, பெ. (n.) *ஒருவகைச் செந்நிறமணி (வின்.);* amethyst.

[செவ்வந்தி + கல்]

செவ்வந்திப்புராணம் *ševvandi-p-purāṇam*, பெ. (n.) *எல்லப்ப நாவலர் இயற்றிய திருச்சிராப்பள்ளிப் புராணம்;* a Purāṇa on the Šiva shrine at Trichirāppaḷḷi by Ellappa Nāvalar.

[செவ்வந்தி + புராணம்]

Skt. *புராணா → த. புராணம்*

செவ்வநிறம் *ševvaniṟam*, பெ. (n.) *மாந்துளிர் கல்;* a red stone of the colour of tender mango leaf *(சா.அக.).*

[செம் → செவ் + நிறம்]

செவ்வம்மான்பச்சரிசி *šev-v-ammāṉ-paccariši*, பெ. (n.) *ஒருவகைப் பூடு (மூ.அ.);* red spurge.

[செம் → செவ் + அம்மான் பச்சரிசி]

செவ்வரக்கு *šev-v-arakku*, பெ. (n.) *1. சாதிலிங்கம்;* vermilion. "பருவிரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇ" *(நெடுநல். 80).* *2. செம்பரக்கு;* red lac.

[செம் + அரக்கு]

செவ்வரத்தம் *šev-v-arattam*, பெ. (n.) *1. செவ்வரத்தை பார்க்க;* see *šev-v-arattai*. "கூத்தன் குதம்பை செவ்வரத்த முயரசோகம்" *(சங்.அக: திருநாகைக்கா. புண்ட. இரண்5).* *2. மிகு சிவப்பு;* crimson colour. "செவ்வரத்த வுடையாடை" *(திவ். பெரியதி. 8. 1:7).*

மறுவ. கருஞ்சிவப்பு

[செவ்வரத்தை → செவ்வரத்தம்]

செவ்வரத்தமணி *šev-v-aratta-maṇi*, பெ. (n.) *தாழ்ந்த தரமான ஒருவகை மணி (சங்.அக.);* an inferior ruby.

[செம் → செவ் + அரத்தம் + மணி]

செவ்வரத்தை *šev-v-arattai*, பெ. (n.) செம்பரத்தை (உரி.நி.); shoe-flower.

[செம்பரத்தை → செவ்வரத்தை]

செவ்வரளி *šev-v-araḷi*, பெ. (n.) சிவப்பு நிறப் பூப்பூக்கும் அரளி; oleander rose bay.

[செம் → செவ் + அரளி]

செவ்வரி *šev-vari*, பெ. (n.) கண்ணின் சிவந்த கோடுகள்; red streaks in the eye. "செவ்வரி யொழுகிய செழுங்கடை மழைக்கண்" (சிலப். 11: 184). 2. நாரை வகை (பதிற்றுப். 23:21, அரும்.); a species of ibis.

ம. செவ்வரி; க. கெம்பரி

[செம் → செவ் + வரி]

செவ்வரியாடு *ševvari-y-āḍu*, பெ. (n.) ஆடுவகை (தெ.க.தொ. 5, 265); a kind of sheep.

[செம் → செவ் + வரி + ஆடு]

செவ்வல் *ševval*, பெ. (n.) 1. செந்நிறம்; redness. "செவ்வலங் குன்றம்" (களவழி. 10). 2. செம்மண் நிலம்; soil of light red colour.

[செம் → செவ் → செவ்வல்]

செவ்வல்நார் *ševval-nār*, பெ. (n.) செவ்வாம்பல் (மலை.) பார்க்க; see *šev-v-āmbal*.

[செவ்வல் + நார்]

செவ்வல்லி[1] *šev-valli*, பெ. (n.) 1. செவ்வள்ளி (தைலவ.தைல. 59) பார்க்க; see *šev-vaḷḷi*. 2. மஞ்சிட்டி; Indian madder.

[செவ்வள்ளி → செவ்வல்லி]

செவ்வல்லி[2] *šev-v-alli*, பெ. (n.) செவ்வாம்பல் (பிங்.) பார்க்க; see *šev-v-āmbal*.

[செம் → செவ் + அல்லி]

செவ்வலரி *šev-v-alari*, பெ. (n.) செவ்வரளி பார்க்க; see *šev-v-araḷi*.

[செம் → செவ் + அலரி]

செவ்வவரை *šev-v-avarai*, பெ. (n.) அவரை வகை (M.M. 206); hyacinth bean.

[செம் → செவ் + அவரை]

செவ்வழலை *šev-vaḻalai*, பெ. (n.) மனைப் பாம்பு; common brown snake.

[செம் → செவ் + அழலை]

செவ்வழி *šev-vaḻi*, பெ. (n.) 1. நல்ல வழி; good way, path of virtue. "கைதவந் திருப்பாச் செவ்வழி நிறீஇ" (பெருங். மகத. 15: 19). 2. பெரும் பண்களுள் ஒன்றாகிய முல்லைப் பண்; a primary melody-type of the *mullai class*. "சீறியாழ் செவ்வழி பண்ணி" (புறநா. 144).

[செம் → செவ் + வழி]

செவ்வழிப்பாலை *šev-vaḻi-p-pālai*, பெ. (n.) பாலையாழ்த் திறத்தொன்று; a secondary melody-type of the *pālai* class. "தீந்தொடைச் செவ்வழிப் பாலை" (சிலப். 7: 47, பக்.218).

[செவ்வழி + பாலை]

செவ்வழிபாடு *šev-vaḻi-pāḍu*, பெ. (n.) முற்றும் அடங்கியொழுகுகை; absolute obedience, as of a pupil towards his teacher. "செவ்வழிபாட ராகிச் சிலைத் தொழில் சிறுவர் கற்ப" (சீவக. 1758).

[செம் → செவ் + வழிபாடு]

செவ்வழியாழ் *ševvaḻi-yāḻ*, பெ. (n.) பெரும்பண்களுள் ஒன்றாகிய முல்லைப்பண்; a primary melody-type of the *mullai class*. 'வண்டுகள் செவ்வழியாழ்ப் பண்ணினைப் பாடும்' (சிலப். 11:88, உரை).

[செவ்வழி + யாழ்]

செவ்வள்ளி *šev-vaḷḷi*, பெ. (n.) வள்ளிக்கொடி வகை (தைலவ. தைல. 94:24); purple yam.

ம. செவ்வள்ளி; Skt. tāmravallī

[செம் → செவ் + வள்ளி]

செவ்வன் *ševvaṉ*, கு.வி.எ. (adv.) செவ்வனம் பார்க்க; see *ševvaṉam*. "செவ்வனிறை காக்கு மிவ்வுலகில்" (பு.வெ. 10, முல்லைப். 9).

[செவ்வனம் → செவ்வன்]

செவ்வனம் *ševvaṉam*, கு.வி.எ. (adv.) செவ்வையாக; rightly, properly, correctly, directly, completely. "செவ்வனஞ் செல்லுஞ் செம்மை தானிலள்" (மணிமே. 3:81).

[செம் → செவ் → செவ்வனம்]

செவ்வனார் *ševvaṉār*, பெ. (n.) செவ்வாம்பல் (மலை.) பார்க்க; see *šev-v-āmbal*.

[செம் → செவ் → செவ்வன் → செவ்வனார்]

செவ்வல்லி

செவ்வரளி

செவ்வாமணக்கு

செவ்வனிறை *ševvaṉ-iṟai*, பெ. (n.) நேர்விடை; direct answer. 'உயிர் எத்தன்மைத்து என்று வினாயவழி, உணர்தற்றன்மைத்து என்றல் செவ்வனிறையாம்' (தொல்.சொல். 13, சேனா.).

[செம் → செவ் → செவ்வன் + இறை]

செவ்வனே *ševvaṉē*, கு.வி.எ. (adv.) செம்மையாக; most properly. இந்த ஓவியம் காந்தாரக் கலைமரபில் செவ்வனே அமைந்துள்ளது.

[செம் → செவ் → செவ்வனே]

செவ்வாக்கு *šev-vākku*, பெ. (n.) நீண்ட வளைவு (யாழ்.அக.); long curve.

[செம் + வாக்கு. வங்கு (=வளைவு) → வாங்கு → வாக்கு]

செவ்வாப்பு *ševvāppu*, பெ. (n.) 1. செவ்வாப்புக் கட்டி பார்க்க; see *ševvāppu-k-kaṭṭi*. 2. காமாலை வகை (M.L.); cyanosis.

[செம் → செவ் + ஆப்பு]

செவ்வாப்புக்கட்டி *ševvāppu-k-kaṭṭi*, பெ. (n.) குழந்தைகளுக்குத் தலையிலுண்டாகும் சிவப்புக் கட்டி; a kind of erysipelas affecting the head, especially of children.

[செவ்வாப்பு + கட்டி]

செவ்வாப்புக்கட்டிக்களிம்பு *ševvāppu-k-kaṭṭi-k-kaḷimbu*, பெ. (n.) ஒரு ஏனத்தில் தேன் மெழுகை உருக்கி நெய்விட்டுப் பருத்திப் பஞ்சைச் சுட்ட சாம்பல் போட்டுக் கிளறி, இதனுடன் வசம்புசுட்ட சாம்பல், வறுத்த துருசும் சேர்த்துக் கிளறி ஆறவைத்துச் சீலை யிலூட்டிக் கட்டிக்குப் போடும் மருந்து; a medicinal preparation comprising melted bees wax, cow's ghee, ashes of cotton, sweet flag and fried copper sulphate. This is smeared over the affected part, as a sure cure for such boils.

[செவ்வாப்பு + கட்டி + களிம்பு]

செவ்வாப்பெண்ணெய் *ševvāppeṇṇey*, பெ. (n.) மருந்தெண்ணெய் வகை; a medicinal oil.

[செவ்வாப்பு + எண்ணெய்]

செவ்வாம்பல் *šev-v-āmbal*, பெ. (n.) செந்நிறமான அல்லிவகை (பிங்.); red Indian water lily.

மறுவ. சேதாம்பல், அரக்காம்பல், செங்குமுதம், செவ்வல்லி.

[செம் → செவ் + ஆம்பல்]

செவ்வாமகம் *ševvāmagam*, பெ. (n.) சிவப்புக் காசி தும்பை; a red variety of Benares toombay.

செவ்வாமணக்கு *šev-v-āmaṇakku*, பெ. (n.) சிவப்பாமணக்கு (பதார்த்த.531); variety of castor-plant.

[செம் → செவ் + ஆமணக்கு]

செவ்வாமிகம் *šev-v-āmigam*, பெ. (n.) சிவப்புக் கொன்றை; red cassia tree.

செவ்வாய்[1] *ševvāy*, பெ. (n.) 1. கதிரவனில் இருந்து நாலாவதாகவும் நிலவுலகையடுத்தும் உள்ள,ஒன்பது கோள்களுள் ஒன்று; the planet Mars, as red, one of *nava-k-kiragam*. 2. செவ்வாய்க்கிழமை பார்க்க; see *ševvāy-k-kiḻamai*. "ஞாயிறு திங்கள் செவ்வாய்" (தேவா. 1171,1).

[செம் → செவ் + வாய்]

செவ்வாய்[2] *ševvāy*, பெ. (n.) பிடாரி கோயில் திருவிழா; festival in a *Piḍāri-temple*.

செவ்வாய்[3] *ševvāy*, பெ. (n.) ஒரு வகைப் பாறை மீன்; a kind of pāṟai fish.

செவ்வாய்க்கிழமை *ševvāy-k-kiḻamai*, பெ. (n.) கிழமை ஏழனுள் மூன்றாவது; Tuesday, the third day of the week.

[செவ்வாய் + கிழமை]

செவ்வாய்நோன்பு *ševāy-nōṉbu*, பெ. (n.) ஆண்டிற்கு இருமுறை செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் ஆண்கள் யாரும் அறியா வண்ணம் வேளாள மகளிர் மேற்கொள்ளும் நோன்பு; ceremony performed in secret by Vēḷāla women twice a year on Tuesday mid-nights when no male, not even a babe in arms is allowed to be present.

[செவ்வாய் + நோன்பு]

செவ்வாய்ப்பிள்ளையார் *ševvāy-p-piḷḷaiyār*, பெ. (n.) செவ்வாய்நோன்பு (இவ.) பார்க்க; see *ševvāy-nōṉbu.*

[செவ்வாய் + பிள்ளையார்]

செவ்வாய்ப்பாகம் *ševvāy-p-pāgam*, பெ. (n.) சுவரை ஒன்பதாகப் பிரித்தால் அதில் மூன்றாம் பாகம்; the third part of the wall, where it was divided into 9 parts.

[செவ்வாய் + பாகம்]

செவ்வாயன் *ševvāyaṉ*, பெ. (n.) செம்போத்து பார்க்க; see *šem-bōttu.*

[செவ்வாய் + பாகம்]

செவ்வாயாட்சி *ševvāy-āṭci*, பெ. (n.) செவ்வாயின் சொந்த ஓரைகளான மேழம் நளி (விருச்சிகம்) ஆகியன (விதான.); Aries and Scorpio, the signs of the zodiac belonging to Mars.

[செவ்வாய் + ஆட்சி]

செவ்வாரம் *ševvāram*, பெ. (n.) நில உடைமையாளரும் பயிரிடுவோரும் பிரித்துக் கொள்ளும் சரிவாரம் (இவ.); equal division of the produce of a field between the owner and the cultivator.

ம. செவ்வாரம்

[செம் → செவ் + வாரம்]

செவ்வாரை *šev-v-ārai*, பெ. (n.) ஆரைப் பூடுவகை (வின்.); a red pseudo fern.

[செம் → செவ் + ஆரை]

செவ்வால் *šev-vāl*, பெ. (n.) அரணை; horse lizard.

[செம் → செவ் + வால்]

செவ்வாலம்பழம் *šev-v-ālam-paḻam*, பெ. (n.) ஆலமரத்தின் பழம்; fruit of banyan tree.

[செம் → செவ் + ஆலம்பழம்]

செவ்வாலிக்கெண்டை *ševvāli-k-keṇḍai*, பெ. (n.) ஆறு விரல (ஆறங்குல) நீளமும் வெண்ணிறமு முள்ள கடல் மீன் வகை; sea-fish, silvery, attaining 6 in. in length.

செவ்வாவிரை *šev-v-āvirai*, பெ. (n.) ஆவிரை வகை; red cassia.

[செம் → செவ் + ஆவிரை]

செவ்வாழை *šev-vāḻai*, பெ. (n.) மூன்று ஆண்டிற்கொரு முறை 60 முதல் 120 வரை, செந்நிறமும் நன்மணமுமுள்ள காய்கள் கொண்ட குலையினை ஈனும் வாழை வகை (G.Sm. D.I, i. 215); a kind of plantain tree yielding red fruits of delicate flavour once in three years in large bunches of 60 to 120.

ம. செவ்வாழ

[செம் → செவ் + வாழை]

செவ்வாளம் *šev-v-āḷam*, பெ. (n.) நேர்வாளம்; Indian croton seed.

[செம் → செவ் + வாளம்]

செவ்வானம் *šev-vāṉam*, பெ. (n.) *1.* செக்கர் வானம், செந்நிறமான அந்திவானம்; red evening sky. *2.* செந்நிறமுகில்; red clouds. "செவ்வானத்து வனப்புப் போன்றன" (புறநா. 4:2).

[செம் → செவ் + வானம்]

செவ்வி[1] *ševvi*, பெ. (n.) நேர்முகம் (யாழ்ப்.); interview. செய்தியாளர் அரசுத் தலைவரைச் செவ்வி கண்டார்.

[செம் → செவ் → செவ்வி]

செவ்வி[2] *ševvi*, பெ. (n.) *1.* காலம்; time. *2.* தகுந்த சமயம்; season, appropriate occasion. "கதங் காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி" (குறள், 130). *3.* காட்சி; audience. "செவ்வியுங் கொடா னிவ்வியல் புரிந்தனன்" (பெருங். இலாவாண. 9:198). *4.* மலரும் பருவத்துள்ள பேரரும்பு (பிங்.); bud about to blossom. *5.* விளைச்சற் பருவம்; mature condition. "முதிர்ந்த செவ்வித் தினையினை" (கந்தபு. வள்ளி. 158). *6.* புதுமை; newness; freshness. 'காயா மலருஞ் செவ்விப்பூப்போல' (பு.வெ. 9:4. உரை). *7.* அழகு; beauty, fairness. "வண்டுறை கமலச் செவ்வி வாண்முகம்" (கம்பரா. சூர்ப்ப. 2). *8.* சுவை; taste. "நாய்பாற்சோற்றின் செவ்விகொளா றேற்றா தாங்கு" (நாலடி., 322). *9.* மணம்; smell. "நாவிய செவ்விநாற" (கம்பரா. கார்கால. 35). *10.* தன்மை (வின்.); state. condition. *11.* செம்மை; propriety. "செவ்வியிற் றொடர்ந்த வல்ல செப்பலை" (கம்பரா. இராவணன்வதை. 210).

[செம் → செவ் → செவ்வி]

செவ்வாயன்

செவ்விறகுக் கொண்டைக் குயில்

கன்னிமாரா (மாநில (ம) மைய) நூலகம்
3 0 ஆக 2005
பெறப்பட்டது
சென்னை-600 008

செம்முதுகுக் கீச்சான்

செதில் வயிற்று மரங்கொத்தி

செம்மார்புக் குக்குறுவான்

செம்பகம்

செவ்விஞ்சி *šev-v-iñji*, பெ. (n.) *எலுமிச்சஞ் சாற்றில் ஊறின இஞ்சி (சீவக. 2682, உரை);* ginger pickled in lime-juice.

[செம் → செவ் + இஞ்சி]

செவ்விண்டு *šev-v-indu*, பெ. (n.) *இண்டுவகை;* a species of sensitive tree.

[செம் → செவ் + இண்டு]

செவ்விதின் *ševvidin*, வி.எ. (adv.) *செவ்வனம் பார்க்க;* see *ševvanam.*

[செம் → செவ் → செவ்விதின்]

செவ்விது[1] *ševvidu*, பெ. (n.) *நேரானது;* that which is right, good, proper.

[செம் → செவ் → செவ்விது]

செவ்விது[2] *ševvidu*, பெ. (n.) *நன்று;* expr. meaning 'very well'. "செவ்விதென் றவனுநேர" *(கம்பரா. வேள்வி. 3).*

[செம் → செவ் → செவ்விது]

செவ்விந்தியர் *ševvindiyar*, பெ. (n.) *அமெரிக்கக் கண்டத்தில் வாழும் பழங்குடி மக்கள்;* red Indian in America.

[செவ் → செம் + இந்தியர்]

இந்தியாவிற்குக் கடல் வழித் தேடிவந்த கொலம்பசு என்ற மாலுமி முதலில் அமெரிக்காவை அடைந்தபோது இந்தியா எனப் பிறழ உணர்ந்தததால், அமெரிக்கப் பழங்குடிகளும் இந்தியர் எனப்பட்டனர். அவர்களின் நல்ல சிவப்புப் பூச்சு, அவர்களைச் செவ்விந்தியர் என அழைக்க ஏதுவாயிற்று.

செவ்விநிறம் *ševvi-niram*, பெ. (n.) *செவ்வநிறம் பார்க்க;* see *ševvaniram.*

[செவ்வநிறம் → செவ்விநிறம்]

செவ்விபார்-த்தல் *ševvi-pār-*, 4 செ.குன்றா.வி. (v.i.) *ஒருவன் தக்க சமயத்தை எதிர்பார்த்து நிற்றல்;* to await one's convenience for audience. "செருவேன் மன்னர் செவ்விபார்த் துணங்க" *(மணிமே. 25:80).*

[செவ்வி + பார்-.]

செவ்விய[1] *ševviya*, பெ.எ. (adj.) *நேர்மையான;* guile-less, righteous, regular. "செவ்விய தீவிய சொல்லி" *(கலித். 19).* 2. *வாழ்க்கை, வழிமுறைகள் முதலியவற்றைக் குறிக்கையில் சிறந்த;* most proper, excellent. *செவ்விய வாழ்விற்குத் திருவள்ளுவரின் அறவுரைகளே போதுமானவை (உ.வ.).*

[செம் → செவ் → செவ்விய]

செவ்விய[2] *ševviya*, பெ.எ. (adj.) *சிவந்த;* red. *அவளின் செவ்விய இதழ்களும் நீண்ட விரல்களும் கவர்ச்சியாக இருந்தன.*

[செம் → செவ் → செவ்விய]

செவ்வியம் *ševviyam*, பெ. (n.) 1. *ஐம் மூலத்தொன்று;* one of the five meidicinal roots. 2. *மிளகுக் கொடி;* black pepper creeper. 3. *மலை வெற்றிலைக் கொடி;* mountain beteal creeper. 4. *கடைச்சரக்குகள் 64ல் ஒன்று;* one of the 64 bazaar drugs as contemplated in Tamil medicine.

ம. செவியம்

[செம் → செவ் → செவ்வியம்]

செவ்வியல் *ševviyal*, பெ. (n.) *மரபு வழிப்பட்ட சிறந்த கலை அல்லது இலக்கியம்;* classicalism.

[செம் → செவ் → செவ்வியல்]

செவ்வியன் *ševviyan*, பெ. (n.) *நேர்மையானவன்;* good, upright perrson, virtuous man a family man. "செவ்விய ரல்லார் செவிகொடுத்துங் கேட்கலார்" *(நாலடி., 322).*

[செம் → செவ் → செவ்வியன்]

செவ்வியான் *ševviyān*, பெ. (n.) *செவ்வியன் பார்க்க;* see *ševviyan*. "செவ்வியான் கேடும்" *(குறள், 169).*

[செம் → செவ் → செவ்வியன் → செவ்வியான்]

செவ்வியோன் *ševviyōn*, பெ. (n.) *செவ்வியன் பார்க்க;* see *ševviyan*. "செவ்வியோர்க் களித்தலும்" *(புறநா. 29:9).*

[செவ்வியன் → செவ்வியோன்]

செவ்வியைபு *šev-v-iyaibu*, பெ. (n.) *யாப்பிலக்கண நெறி (விதி)களுள் ஒன்று;* a grammatical point in composing poems.

[செம் → செவ் + இயைபு]

செவ்விரியன் *šev-viriyan*, பெ. (n.) சிவப்பு விரியன் பாம்பு; red viper snake.

[செம் → செவ் + விரியன்]

செவ்விருக்கைநாடு *šev-virukkai-nāḍu*, பெ. (n.) ஆழ்வார்திருநகரிக்கு அருகிலிருந்த பழைய நாட்டுப் பெயர்; name of small country near Alvār-dirunagari. "செவ்விருக்கை நாட்டு சக்கரபாணி நல்லூர்" *(தெ.க.தொ. 26, கல். 492-4).*

[செம் → செவ் + இருக்கை + நாடு]

செவ்விரும்பகக்களிமண் *šev-v-irumbaga-k kaliman*, பெ. (n.) செந்நிற இரும்புக் களிமண் கலந்த மண்; laterite.

[செம் → செவ் + இரும்பக + களிமண்]

செவ்விருள் *šev-v-irul*, பெ. (n.) சிவப்பு இருள மரம்; a red variety tree.

[செம் → செவ் + இருள்]

செவ்விலைக்கள்ளி *šev-v-ilai-kalli*, பெ. (n.) சிவப்பு இலைக்கள்ளி; a kind of milk hedge with red leaves used for rejuvenation.

[செம் → செவ் + இலை + கள்ளி]

செவ்விழிநோய் *šev-vili-nōi*, பெ. (n.) கண் சிவந்து காணும் கண்நோய்; redness of the eye disease.

[செம் → செவ் + விழிநோய்]

செவ்விளகி *šev-vilagi*, பெ. (n.) செவ்விறகி (வின்.) பார்க்க; see *šev-v-iragi.*

செவ்விளநீர் *šev-v-ilanīr*, பெ. (n.) செந்தெங்கின் இளங்காய்; tender coconut of red or yellow colour. "செவ்விள நீருந் தேர்வென்" *(கம்பரா. நாடவிட்ட. 43).*

க. கெம் பௌநீர்

[செம் → செவ் + இளநீர்]

செவ்விளிம்பன் *šev-vilimban*, பெ. (n.) சிவக்கத் தோய்ந்த விளிம்பினையுடைய ஆடை (வீரசோ.தொகை.8), சிவப்புக் கரையினை யுடைய ஆடை; red-bordered cloth.

[செவ் + விளிம்பன்]

செவ்விளை *šev-v-ilai*, பெ. (n.) செவ்விளநீர் பார்க்க; see *šev-v-ilanīr.*

செவ்விளைக்கெவுளி *ševvilai-k-kevuli*, பெ. (n.) உட்புறம் சிவந்தும் வெளிப்புறம் வெளுத்தும் உள்ள காய்களைக் கொண்டதென்னை வகை; a kind of coconut tree which yields nuts of white in outter portion and red in inner portion.

[செவ்விளை + கெவுளி]

செவ்விறகி *šev-v-iragi*, பெ. (n.) கழுதைவண்டு (வின்.); a kind of large beetle.

[செம் → செவ் + இறகி. இறகு → இறகி]

செவ்விறகுக்கொண்டைக்குயில் *šev-v-iragu-k-kondai-k-kuyil*, பெ. (n.) செம்பழுப்பு நிற இறக்கைகளையுடையதும், தலையில் கொண்டை போன்ற அமைப்பை யுடையதுமான பறவை; red-winged crested cuckoo.

[செவ்விறகு + கொண்டைக்குயில்]

இது சுடலைக் குயிலைப் போன்ற தோற்றம் உடையது. முதுகு பளபளப்பான கருப்பு நிறத்துடனும் மேவாய், தொண்டை, மேல் மார்பு ஆகியன துருச் சிவப்பு நிறத்துடனும் காணப்படும்.

செவ்வினையாளர் *šev-vinai-y-ālar*, பெ. (n.) நற்செய்கை யுடையோர்; men of virtuous deeds. "செவ்வினையாளர் சேரார் நம்பதிக்கு" *(பெருங். உஞ்சைக் 49:52).*

[செம் → செவ் + வினையாளர்]

செவ்வு[1] *ševvu*, பெ. (n.) *1.* செம்மை (யாழ்.அக.); redness. *2.* நேர்மை; straightness. "ஆருயிர் செவ்விராது" *(கம்பரா. காட்சி.29). 3.* திக்கு; direction. இந்தச் செவ்வுக்குப் போனால் கோயிலைக் காணலாம் *(நாஞ்.).*

ம. செவ்வு; க. சுய், செய், செய்; தெ. சசி; து. சச்சி

[செம் → செவ் → செவ்வு]

செவ்வு[2] *ševvu*, பெ. (n.) முத்துக்களின் அளவு வகை; a unit in counting pearls.

[செம் → செவ் → செவ்வு]

செவ்வெண் *šev-v-en*, பெ. (n.) பெயர் வினைகளுள் எண்ணிடைச் சொல் தொக்கு வருந்தொடர்; noun or verbs used co-ordinately in a sentence without conjunctive particles. "பெயர்க்குரி மரபிற் செவ்வெ ணிறுதியும்" (தொல்.சொல்.290).

[செம் → செவ் + எண்]

செவ்வெண்ணெய் *šev-v-enney*, பெ. (n.) பிறந்தவுடன் குழந்தையின் வாயில் தடவும் தேன் அல்லது சருக்கரை கலந்த ஆமணக் கெண்ணெய்; castor oil, sweetened with honey or cane-sugar and applied to the tongue and lips of an infant, at birth.

[செம் → செவ் + எண்ணெய்]

செவ்வெருக்கு *šev-v-erukku*, பெ. (n.) சிவப்புப் பூப்பூக்கும் மலையெருக்கு; mountain mader yielding red flower.

[செம் → செவ் + எருக்கு]

செவ்வெலி *šev-v-eli*, பெ. (n.) சிவப்பு நிறமுடைய எலி வகை; antelope rat.

[செம் → செவ் + எலி]

செவ்வெள்ளையிறுங்கு *šev-vellai-y-irungu*, பெ. (n.) சோள வகை (விவசாய. 3); a kind of mazie.

[செம் → செவ் + வெள்ளை + இறுங்கு. இறுங்கு = சோளம்]

செவ்வே *ševve*, கு.வி.எ. (adv.) 1. நன்றாக; rightly, correctly. "செவ்வே நெஞ்சா னினைப்பரிதால்" (திருவிருத். 98). 2. நேரே; directly, straightly. "செவ்வே பாரிற்செல்கின்ற வறுமையை நோக்கினன்" (கம்பரா. முதற்போர். 216). 3. நிலைக்குத்தாக; perpendicularly, straight up. "நீறு செவ்வே யிடக்காணில்" (திவ். திருவாய்.4.4:7).

ம. செவ்வே

[செம் → செவ் → செவ்வே]

செவ்வேள் *šev-vēl*, பெ. (n.) முருகக்கடவுள்; god Murugan. "வென்றிச் செவ்வேள் வேலன் பாணியும்" (சிலப். 25:25).

[செம் → செவ் → செவ்வேள்]

செவ்வை *ševvai*, பெ. (n.) 1. நேர்மை; correctness, straightness. "தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி" (சிலப்.வழக். 68). 2. மிகுதி; abundance. செவ்வையாய்க் கொடுத்தான். 3. வழி முதலியவற்றின் செப்பம்; evenness, smoothness, "அந்த வழி செவ்வையாக உள்ளது. 4. சரியான நிலை; sound condition, as of mind, body, etc., அவனுக்கு உடம்பு செவ்வையில்லை. 5. சீர்மை, சிறப்பு; proper manner or order. ஒவ்வொன்றையும் தனித்தனியாக விளக்கினார்.

ம. செவ்வ

[செம் → செவ் → செவ்வை]

ševv-ei, equal, level, correct; base šev or še. A nasalised, adjectival form of the same root is šen- e.g., šen-Damil, correct Tamil, the classical dialect of the Tamil language. From še, šev, or šen. is formed šemme-ei (šem-mei), an abstract of the same meaning as sevvei. Comp. Heb. šhāvāh; Chald. shevā (biliteral base shav) or shev to be equal, to be level. If the Sanskrit sama, even is at all connected with Tamil šev or šen, the connnection is remote; whereas the Tamil and the Hebrew words seem to be atmost identical (CGDFL. 608).

செவ்வைக்கேடு *ševvai-k-kēdu*, பெ. (n.) ஒழுங்கீனம்; unrighteous conduct. "அவன் செவ்வைக்கேட்டுக்கு ஈடாகத் தானுஞ் செவ்வைக் கேடனாய்க் கொண்டபடி" (ஈடு, 4. 8:6).

[செவ்வை + கேடு]

செவ்வைச்சூடுவார் *ševvai-c-cūduvār*, பெ. (n.) ஆரியப்பப்புலவரால் இயற்றப்பட்டதாகத் தவறி வழங்கும் தமிழ்த் தொன்மம் (பாகவத புராணம்) பாடியவரும், இராமநாதபுரம் மாவட்டம் வேம்பத்தூரில் வாழ்ந்தவருமான புலவர்; a native of Vēmbattūr in Ramnad District, author of the Tamil Bāgavadam, wrongly ascribed to a fictitous poet Āriyappa-p-pulavar.

செவ்வைப்பூசல் *ševvai-p-pūšal*, பெ. (n.) அறப்போர்; righteous warfare. "வழியல்லா வழியிலே இளைப்பிக்கை யன்றிக்கே செவ்வைப் பூசல் செய்து இளைப்பித்த படி" (ஈடு,7.4:1).

[செவ்வை + பூசல்]

செவ-த்தல் *ševa-*, 3 செ.குன்றாவி. (v.i.) *சிவத்தல்; செந்நிறமாதல்;* redden, to be red.

[சிவ → செவ-.]

செவகி *ševagi*, பெ. (n.) *நிலக்குமிழ்;* small Cashmere tree.

செவணை *ševaṇai*, பெ. (n.) செவிடு (இவ.); deafness.

[செவி + அணை]

செவத்தம் *ševattam*, பெ. (n.) ஒருவகை *முருங்கை மரம்;* a kind of moringa tree.

செவந்தரை *ševandarai*, பெ. (n.) *துலை (ஐப்பசி), நளி (கார்த்திகை) சிலை (மார்கழி)* **மாதங்கள் ஒன்றில் கோலாட்டத்துடன் இளம் பெண்கள் கொண்டாடும் ஒரு விழா;** a festival celebrated by girls with kōlāṭṭam.

செவந்தன் *ševandaṉ*, பெ. (n.) **பூவன்** *வாழை;* a kind of plantain tree.

[செம் → செவ் → செவ → செவந்தன்]

செவந்தி *ševandi*, பெ. (n.) செவ்வந்தி பார்க்க; see *ševvandi.*

ம. செவ்வந்தி; க. சேவந்தி; தெ. சேமந்தி.

[செம் → செவ் + அந்தி - செவ்வந்தி → செவந்தி]

த. செவந்தி → Skt. šēvati

செவரியாடு *ševari-y-āḍu*, பெ. (n.) செவ்வரியாடு பார்க்க; see *ševvari-y-āḍu.*

[செவ்வரியாடு → செவரியாடு]

செவல் *ševal*, பெ. (n.) 1. **சிவலை;** ruddy person or animal. 2. **செம்மண் நிலம்;** soil of light red colour. செவனிலம்.

[செம் → செவ் → செவல்]

செவல்காடு *ševal-kāḍu*, பெ. (n.) *செம்மண் நிலம்;* red soil. கடலை விளைச்சலுக்கு செவல்காடு சிறந்தது *(உ.வ.).*

மறுவ. செவ்வல், செவல்தரை, செம்மண் (பூமி) நிலம்.

[செவல் + காடு]

செவல்தரை *ševal-tarai*, பெ. (n.) *செம்மண் நிலம்;* red soil.

மறுவ. செவல்காடு, செவ்வல்

[செவல் + தரை]

செவலை *ševalai*, பெ. (n.) 1. செந்நிறமான விலங்கு; reddish animal, as a bull. செவலைக்காளை. 2. **சிவப்பான ஆள்;** person of light complexion. 3. *சிவப்பு நிறமுள்ளது;* that which is red.

[சிவலை → செவலை]

செவி[1] *ševi*, பெ. (n.) (ஒலி முதலியவற்றை) **கேட்பதற்குப் பயன்படும் உடல் உறுப்பு;** ear. "ஐந்தறி வதுவே யவற்றொடு செவியே" *(தொல். பொருள். 582)* செவிகிழிவது போல ஓசை வருகிறது. 2. **கேட்கை;** hearing. 3. **ஏனத்தின் காது வளையம்;** ear shaped handle of a vessel. "விழுத்தகு மணிச் செவி . . . படியகம்" *(சீவக. 2472).* 4. **வீணையின் முறுக்காணி;** the screw of a lute.

மறுவ. காது

ம. செவி; க. கிவி, கிமி; தெ. செவி; **து.** கெபி; கோத. கெவ்; துட. கிவ்ய்; குட. கெவின்; கோண். கவீ; கூ. க்ரிள; நா. கெவ்; பர். கொகொன்; குரு. கெம்தா; மா. க்வெத்வு; பிரா. கப்; பட. கிவி

ševi, Tam; chevi. Mal. - Tel., the ear; Can. kivi, Tulu keppi. Comp. šrava, the ear, Sans., from šru, to hear (CGDFL. 584).

[செவின் → செவி.]

செவி[2] *ševi*, பெ. (n.) ஒருவிரல மழை; a unit of rainfall one inch.

செவிக்கட்டி *ševi-k-katti*, பெ. (n.) **காதில் உண்டாகும் அழற்சி;** abscess or boil of the ear.

[செவி + கட்டி]

செவிக்கரப்பன் *ševi-k-karappaṉ*, பெ. (n.) **காதிலுண்டாகும் கரப்பான் நோய்;** eczema of the ear.

[செவி + கரப்பான்]

செவிக்காயம் *ševi-k-kāyam*, பெ. (n.) **காதுக் குறும்பி** (இ.வ.); ear wax.

மறுவ. காதுப்பீ, காதழுக்கு

[செவி + காயம். காயம் = செறிவான அழுக்கு]

செவிக்குத்து *ševi-k-kuttu*, பெ. (n.) **காது நோவு;** ear-ache.

ம. செவிக்குத்து.

[செவி + குத்து]

செவிக்குழல் *ševi-k-kuḻal*, பெ. (n.) *செவிக்குள் வழி;* ear cavity.

[செவி + குழல்]

செவிக்குழி *ševi-k-kuḻi*, பெ. (n.) *காதினுட் பக்கமுள்ள பள்ளம்;* labyrinth of the ear.

[செவி + குழி]

செவிக்குறடு *ševi-k-kuṟaḍu*, பெ. (n.) *காதிற்குள் செலுத்துங்கருவி;* ear forceps for extracting foreign bodies.

[செவி + குறடு]

செவிக்கெட்டு-தல் *ševikkeṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) *கேள்வியிற்படுதல்;* to reach one's ears.

[செவி(க்கு) + எட்டு-.]

செவிக்கேறு-தல் *ševikkēṟu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *கேள்வியிற்படுதல் (யாழ்அக.);* to reach one's ears. 2. *கேட்டற் கினிதாயிருத்தல் (இ.வ.);* to be pleasing to one's ears. புலவர் பேச்சை அவன் செவிக் கேற்றினான் *(உ.வ.).*

[செவி(க்கு) + ஏறு-.]

செவிகடி-த்தல் *ševi-kaḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) செவிதின்னு- பார்க்க; see *ševi-dinnu-*.

[செவி + கடி-.]

செவிகொடு-த்தல் *ševi-koḍu-*, 4 செ.கு.வி. (v.i.) *கேட்டற்குக் காது கொடுத்தல்;* to give ear, attend, listen. "செவி கொடுத்துங் கேட்கலார்" *(நாலடி, 322).* ஆசிரியரின் உரைக்குச் செவி கொடுக்க வேண்டும் *(உ.வ.).*

ம. செவிகொடுக்க

[செவி + கொடு-.]

செவிகொள்(ளு)-தல் *ševi-koḷ-*, 13 செ.குன்றாவி. (v.t.) 1. *கேட்டல்;* to hear, listen to. "கட்டுரை .. செவிகொளா" *(நீதிநெறி, 31).* பெரியோர் சொல்லைச் செவி கொள்ள வேண்டும் *(உ.வ.).*

[செவி + கொள்-.]

செவிச்சுவை *ševi-c-cuvai*, பெ. (n.) *செவியால் நுகரப்படும் இருவகைச் சுவை;* two kinds of pleasure heard by the ear.

[செவி + சுவை]

'செவியால் நுகரப்படும் சுவைகளாவன': சொற் சுவையும், பொருட்சுவையும். அவற்றுள் சொற்சுவை குணம், ஒப்பனை (அலங்காரம்) என இரு வகைத்து. பொருட்சுவை காமம், நகை, இரக்கம், வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, அமைதி என ஒன்பது வகைத்து' *(குறள், 420 உரை.).*

செவிச்செல்வம் *ševi-c-celvam*, பெ. (n.) *கேள்வியறிவாகிய பெருஞ்செல்வம்;* the wealth of knowledge acquired through the ear. "செல்வத்துட் செல்வஞ் செவிச் செல்வம்" *(குறள், 411).*

[செவி + செல்வம்]

செவிச்சொல் *ševi-c-col*, பெ. (n.) *காதில் கமுக்கமாக (இரகசியமாக) ஓதுகை;* whispering.

[செவி + சொல்]

செவிசாய்-த்தல் *ševi-šāy-*, 4 செ.கு.வி. (v.i.) 1. *சொல்வதைக் கேட்கச் செவி தாழ்த்தல்;* to incline one's ear. "இருத்த செவி சாய்த் தினியிளிப் பட்டன" *(கலித். 95).* தொழிலாளர்களின் கோரிக்கைக்கு நிருவாகம் செவி சாய்க்க மறுக்கிறது. 2. *விருப்பமுடன் கேட்டல்;* hearing with interest. பெரியோர் கூற்றுக்குச் செவி சாய்க்கவேண்டும் *(உ.வ.).*

[செவி + சாய்-.]

செவிட்டாம்பாம்பு *ševiṭṭām-bāmbu*, பெ. (n.) செவியான் பார்க்க; see *ševiyāṉ*.

[செவிடு → செவிட்டான் + பாம்பு]

செவிட்டு[1]-தல் *ševiṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *கொல்லுதல் (பிங்.);* to crush, destroy, kill.

மறுவ. கோறல், சாகடித்தல்

[சவட்டு → செவிட்டு-.]

செவிட்டு[2]-தல் *ševiṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *கூர்ந்து நோக்குதற்குக் கண் முதலியவற்றை ஒரு பக்கமாகச் சாய்த்தல்;* to incline to one side, as one's eyes in examining closely. "விசயனென்பான் வெங்கணை செவிட்டி நோக்கி" *(சீவக. 2191).*

மறுவ. தலை சாய்த்தல், சிறக்கணித்துக் கேட்டல்.

[சாய் → சார் → சார்த்து → சாட்டு → செவிட்டு-.]

செவிட்டு[3] *ševiṭṭu-*, பெ. (n.) *கன்னம்;* check.

[செவிடு → செவிட்டு]

செவிட்டுப்பயல் *ševiṭṭu-p-payal*, பெ. (n.) *செவிடன் பார்க்க;* see *ševiḍaṉ*.

[செவிடு + பயல்]

செவிட்டுவிரியன் *ševiṭṭu-viriyaṉ*, பெ. (n.) *விரியன் பாம்புவகை;* russell's viper.

[செவிடு + விரியன்]

செவிடன் *ševiḍaṉ*, பெ. (n.) *காது கேளாதவன் (திவா.);* deaf man.

ம. செவிடன், செகிடன்; தெ. செவிடி; க., பட. கிவட்; கோத. கெவ்டன்; கொலா. செவட்க்

[செவிடு + அன்]

செவிடி *ševiḍi*, பெ. (n.) *காது கேளாதவள்;* deaf woman.

க. கிவுடி; பட. கிவடி

[செவிடன் → செவிடி]

செவிடு[1] *ševiḍu*, பெ. (n.) *1. கேட்கும் திறன் இல்லாமை, காது கேளாமை;* deafness. "செவிடா யொழிகென் செவி" *(பு.வெ. சிறப்.3).* விபத்தில் அவனுக்குக் காது செவிடாகி விட்டது. *2. காது கேளாதவன்-வள்-து;* deaf person or animal. "கூனுங் குறளு மூமுஞ் செவிடும்" *(மணிமே. 12:97).* சத்தமாகச் சொல்ல வேண்டாம், நான் ஒன்றும் செவிடு இல்லை.

ம. செவிடு, செகிடு; க., பட. கிவடு

[செவி → செவிடு]

செவிடு[2] *ševiḍu*, பெ. (n.) *1. செவியை ஒட்டிய கன்னம்;* cheek. உன் செவிட்டிலே அடிப்பேன் *(இ.வ.). 2. காதணி வகை;* an ear-ornament.

[செகிள் → செவிள் → செவிடு]

செவிடு[3] *ševiḍu*, பெ. (n.) *ஆழாக்கில் ஐந்தில் ஒன்றாகிய அளவு (தொல். எழுத்து. 165, உரை);* a small measure consisting of 360 grains of paddy = 1/5 ollock. "மிளகமுது இரண்டரைச் செவிடும்" *(தெ.க.தொ. 154).*

ம. செவிடு

[சவடு → செவிடு. சவடு = அளவு]

செவிடுசெல்(லு)-தல் *ševiḍu-šel-*, 13 செ.கு.வி. (v.i.) *செவிடுபடு- பார்க்க;* see *ševiḍu-paḍu-*. "செவிடுசெல்லக் கிழிந்தன திசைகள்" *(கம்பரா. நாகபாச. 104).*

[செவிடு + செல்(லு)-.]

செவிடுபடு-தல் *ševiḍu-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) *1. ஓசை மிகுதியால் காது கேளாது போதல்;* to be deafened with noise. "செவி செவிடுபடுபு முடிக ளதிர" *(பரிபா.2:39). 2. செவிடெறி- பார்க்க;* see *ševiḍeṟi-*.

தெ. செவுடுபடு.

[செவிடு + படு-.]

செவிடெறி-தல் *ševiḍeṟi-*, 2 செ.கு.வி. (v.i.) *உரத்த வோசையால் அலைவுறுதல்;* to be stunned with deafening noise. "திசைகளோடு மலை செவி டெறிந்து" *(கம்பரா. நாகபாச. 61).*

[செவிடு + எறி-.]

செவித்துறண்டி *ševi-t-tuṟaṇḍi*, பெ. (n.) *குறும்பி வாங்கி (இ.வ.);* ear-pick.

ம. செவித்தோண்டி

[செவி + துறண்டி]

செவிதின்(னு)-தல் *ševi-diṉṉu-*, 14 செ.குன்றாவி. (v.t.) *கமுக்கமாக (இரகசியமாக) ஓதுதல் (வின்.);* to whisper.

[செவி + தின்-.]

செவிநிறக்கல் *ševi-niṟa-k-kal*, பெ. (n.) *மாந்தளிர்க்கல் (வின்.);* a stone.

[செவ்வி → செவி + நிறக்கல்]

செவிப்படு-தல் *ševi-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) *கேட்கப்படுதல்;* to be heard. "ஆபரண வொலி செவிப்படா நின்றது" *(ஈடு, 10. 6:6, வியா. பக். 200).*

[செவி + படு-.]

செவிப்படுத்து-தல் *ševi-p-paḍuttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *காதில் மெல்ல அறிவித்தல்;* to inform, as news.

[செவி + படுத்து-.]

செவிப்பண் *ševi-p-paṇ*, பெ. (n.) *நீர்க்கரகத்தை அடக்கி வைக்கப் பயன்படும் பிரம்புக் கூடை (வின்.);* a cane basket for keeping water-ewer.

[செவ்வி → செவி + பண்]

செவிப்பறை *ševi-p-parai*, பெ. (n.) உட்பகுதியில் ஒலியை உணர்வதற்காக இருக்கும் மெல்லிய தோலாலான உறுப்பு; eardrum.

[செவி + பறை.]

செவிப்பறைபறை-தல் *ševi-p-parai-parai-*, செ.குன்றாவி. (v.t.) மந்திர முதலியவற்றைப் பிறர் செவியிற்படாது கமுக்கமாக (இரகசியமாக) ஓதுதல்; to mutter inaudibly, as mantras. 'செவிப்பறை பறைந்து ஜபிக்கிறது என்ப' (ஈடு, 3. 5:5.).

[செவிப்பறை + பறை-.]

செவிப்பாடு[1] *ševi-p-pāḍu*, பெ. (n.) காதிற் புகுகை (ஈடு, 9. 9:1); entering the ear.

[செவி + பாடு]

செவிப்பாடு[2] *ševi-p-pāḍu*, பெ. (n.) கேள்வி யின்பம்; harmony, as of music. 'இசைக்கு எவ்வளவு செவிப்பாடுண்டு அவ்வளவும் பாதகமாம்' (ஈடு, 9. 9:1).

[செவ்வி + பாடு.]

செவிப்பாம்பு[1] *ševi-p-pāmbu*, பெ. (n.) செவியான் (இ.வ.) பார்க்க; see *ševiyāṉ*.

ம. செவிப்பாம்பு

[செவி + பாம்பு]

செவிப்பாம்பு[2] *ševi-p-pāmbu*, பெ. (n.) மாட்டுக் குற்றவகை (பெரிய மாட் 20); a blemish in cattle.

செவிப்புலன் *ševi-p-pulaṉ*, பெ. (n.) காதாலுணரும் ஓசையுணர்வு; sense of hearing.

[செவி + புலன்]

செவிப்புற்று *ševi-p-puṟṟu*, பெ. (n.) காதுநோய் வகை (வின்.); a kind of eruption about the ears.

[செவி + புற்று]

செவிப்பூ *ševi-p-pū*, பெ. (n.) மகளிர் காதணி வகை; an ear-ornament of women. "தோடே செவிப்பூவே" (திவ். திருப்பா. 27).

[செவி + பூ]

செவிப்பூரான் *ševi-p-pūrāṉ*, பெ. (n.) செவியான் (வின்.) பார்க்க; see *ševiyāṉ*.

ம. செவிப்பூரம்

[செவி + பூரான்]

செவிபடுவாதம் *ševi-paḍu-vādam*, பெ. (n.) காது கேளாமற் போகச் செய்யும் நோய் வகை (வின்.); disease of the ear causing deafness.

[செவி + படு + வாதம்]

செவிபிடி-த்தல் *ševi-p-piḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) விளையாட்டில் வெற்றிக் குறியாகத் தோற்றவன் காதைப்பிடித்தல் (வின்.); to seize one by the ear in token of winning, as in games.

[செவி + பிடி-.]

செவிமடல் *ševi-madal*, பெ. (n.) காதின் வெளி யுறுப்பு; external ear. திருடன் அவள் செவிமடலோடு நகையை அறுத்துக் கொண்டு போய் விட்டான். 2. செவிமலர் (இ.வ.) பார்க்க; see *ševi-malar*.

[செவி + மடல்]

செவிமடு-த்தல் *ševi-madu-*, 4 செ.குன்றாவி. (v.t.) கேட்டல்; to drink in by the ears, hear. "மாருதி வினய வார்த்தை செவிமடுத் தமிழ்தின் மாந்தி" (கம்பரா. விபீடண. 106). அந்த இனிய பாடலைக் கொஞ்சம் செவிமடுத்துக் கேள்.

[செவி + மடு-.]

செவிமத்திபம் *ševi-mattibam*, பெ. (n.) செவி மந்தம் (இவ.) பார்க்க; see *ševi-mandam*.

[செவி + மத்திபம்]

செவிமந்தம் *ševi-mandam*, பெ. (n.) காதுமந்தம் (யாழ்அக.); dullness of hearing, deafness.

[செவி + மந்தம்]

செவிமலர்[1] *ševi-malar*, பெ. (n.) 1. மகளிர் காதணி வகை (சூடா.); an ear-ornament of women. 2. தெய்வத்திருமேனிகளில் அணிவிக்கும் செவியணி; gold or silver ears put on idols on special occasions. 3. காதுநோய் நீங்கியது பற்றி வேண்டுதலாகச் செலுத்தும் செவியுருவம்; gold or silver ears presented as votive offerings by persons recovering from diseases of the ear.

[செவி + மலர்]

செவிமலர்[2] *ševi-malar*, பெ. (n.) உட்செவி (நெல்லை.); inner ear.

[செவி + மலர்]

செவிமலர்ப்பூ *ševi-malar-p-pū*, பெ. (n.) *மகளிர் காதணி வகை;* an ear-ornament of women.

[செவி + மலர்ப்பூ]

செவிமறை *ševi-marai*, பெ. (n.) *செவியில் மறுவையுடைய எருது;* bull having a spot in its ears. "செவிமறை ... நுண்பொறி வெள்ளை" *(கலித். 101).*

[செவி + மறை]

செவிமாட்டு-தல் *ševi-māṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *பிறர் காதில் வலிய நுழைத்தல்;* to force into one's ear. "*கற்றன கல்லார் செவி மாட்டி*" *(நீதிநெறி. 25).*

[செவி + மாட்டு-.]

செவியடி[1]-த்தல் *ševi-y-aḍi-*, 4 செ.கு.வி. (v.i.) *செவியினை ஆட்டுதல் (வின்.);* to flap the ears, as an elephant.

[செவி + அடி-.]

செவியடி[2] *ševi-y-aḍi*, பெ. (n.) 1. *காதின் அடிப்பகுதி;* temple, the part about the front of the ear. "கண்டிடுஞ் செவியடிப்பேர் சூளிகை" *(சூடா. 3:8).* 2. *களத்தில் கதிரடித்தவுடன் நெற்பட்டரை வைத்திருந்த இடம் (தஞ்சை.);* place where grain is temporarily stored on the threshing-floor immediately after it is threshed.

[செவி + அடி]

செவியம்[1] *ševiyam*, பெ. (n.) *செவ்வியம் (வின்.) பார்க்க;* see *ševviyam.*

ம. செவ்வியம்

[செவ்வியம் → செவியம்]

செவியம்[2] *ševiyam*, பெ. (n.) *செவி;* ear.

[செவி → செவியம்]

செவியறிவு *ševi-y-arivu*, பெ. (n.) *செவியறிவுறூஉ பார்க்க;* see *ševi-y-arivurūu.* "ஒண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை" *(காரிகை. செய். 15).*

[செவி + அறிவு]

செவியறிவுறுத்து-தல் *ševi-y-arivuruttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *நல்லறிவு புகட்டுதல்;* to give active, counsel. "மந்திரத்தை நல்கி . . . செவியறிவுறுத்தல் செய்தான்" *(கந்தபு. அசுரர்யாக.33).*

[செவியறிவு + உறுத்து-.]

செவியறிவுறூஉ *ševi-y-arivurūu*, பெ. (n.) 1. *அரசர் முதலியோர்க்குச் செவிக்கண் நிற்கக் கூறும் அறம்;* instruction in the path of virtue, given to kings, etc. "வாயுறை வாழ்த்தே செவியறிவுறூஉ" *(தொல். பொருள். 423).* 2. *அரசர்க்கு நல்லறிவு புகட்டுதலைக் கூறும் புறத்துறை (பு.வெ. 9:33);* theme of instructing the king in the path of virtue. 3. *செவியறிவுறூஉ மருட்பா (தொன். 283) பார்க்க;* see *ševi-y-ari-v-urūu-maruṭ-pā.*

[செவியறிவு + உறூஉ]

செவியறிவுறூஉமருட்பா *ševi-y-ariv-urūu-maruṭ-pā*, பெ. (n.) *அரசர்க்கு அறமுறைகளைக் கூறுவதும் மருட்பாவால் அமைந்ததுமாகிய ஒரு சிற்றிலக்கிய வகை (காரிகை, செய். 15, உரை);* a kind of poem in maruṭpā metre instructing the king in the path of virtue.

[செவியறிவு + உறூஉ + மருட்பா]

செவியறை *ševi-y-arai*, பெ. (n.) 1. *காது அறுபட்டவன் (நன். 139, மயிலை);* one whose ear has been cut off or mutilated. 2. *காது கேளாதவன் (வின்.);* a deaf person.

மறுவ. செவிடன்

[செவி + அறை. அறு → அறை]

ஒ.நோ. கண்ணறை, மூக்கறை

செவியன் *ševi-yan*, பெ. (n.) *நீண்ட செவியுடைய முயல் (நாஞ்.);* hare.

[செவி → செவியன்]

செவியான் *ševiyān*, பெ. (n.) *காதுக்குள் புகுந்து துன்புறுத்தும் சிறு பூரான் வகை;* a kind of small centipede believed to get into the ears and cause pain.

[செவி → செவியான்]

செவியிலி *ševi-y-ili*, பெ. (n.) *செவியறை (நன். 283, மயிலை.) பார்க்க;* see *ševi-y-arai.*

[செவி + இலி. ஒ.நோ. கண்ணிலி]

செவியுறு-தல் *ševi-y-uru-*, 4 செ.குன்றாவி. (v.t.) *கேட்டல், காதுகொடுத்துக் கேட்டல்;* to hear, listen to. "யாது மொன்று செவியுற்றிலார்" *(கம்பரா. நாகபாச. 68).*

வ. ச்ரு

[செவி + உறு-.]

செவியுறை *ševi-y-uṟai*, பெ. (n.) 1. *காதுக்கிடும் மருந்து;* medicine for the ear. 2. *அரசர் முதலியோர்க்குச் செவிக்கண் நிற்கக்கூறும் அறம் (நீதி);* instruction in the path of virtue, given to kings etc. "செவியுறை தானே, பொங்குதலின்றிப் புரையோர் நாப்ப, ணவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே" *(தொல்.பொருள். 426).*

[செவி + உறை]

செவியுறையங்கதம் *ševi-y-uṟai-y-aṅgadam*, பெ. (n.) *அரசர்க்கு உறுதி கூறும்* நோக்குடன் *அறிஞர் கூறும் வசைச் செய்யுள்* (தொல். பொருள். 440, *உரை);* a kind of derisive verse reproving a king for his faults with a view to reclaiming him to a sense of his duty.

[செவியுறை + அங்கதம்]

செவியேறு *ševi-y-ēṟu*, பெ. (n.) கேள்வி; hearsay. 'அவன் சொல்லக் கேட்ட செவியேற்றாலே சொல்லுகிறாளிறே' *(ஈடு, 10. 3:1).*

[செவி + ஏறு]

செவிரம் *ševiram*, பெ. (n.) ஒரு வகைப் பாசி *(திவா.);* a class of aquatic plant.

செவிலி[1] *ševili*, பெ. (n.) 1. செவிலித்தாய் பார்க்க; see *ševili-t-tāy.* "தாயெனப் படுவோள் செவிலி யாகும்" *(தொல். பொருள் 124).* 2. முன்பிறந்தாள் *(பிங்.);* elder sister.

செவிலி[2] *ševili*, பெ. (n.) நோயர்களைப் பேணுதல், மருத்துவர்க்குதவுதல் போன்ற பணிகளைச் செய்யும் ஊழியர்; nurse. *அறுவைச் சிகிச்சையின் போது பல செவிலியர் உதவி புரிந்தனர்.*

செவிலித்தாய் *ševili-t-tāy*, பெ. (n.) *ஐவகைத் தாயருள் வளர்ப்புத் தாய் (பிங்.);* foster-mother, one of *ai-vagai-t-tāyar.*

[செவிலி + தாய்]

செவிவழிசெய்தி *ševi-vaḻi-šeydi*, பெ. (n.) ஒருவர் கூற மற்றவர் கேட்பது என்ற முறையால் வழங்கிவரும் செய்தி; that which is orally transmitted. செவிவழிச் செய்தியில் உண்மை உருமாறியிருக்கும்.

[செவிவழி + செய்தி]

செவிலியர்[1] *ševiliyar*, பெ. (n.) குழந்தையின் *வளர்ப்புத் தாயர்;* those who bring up children of rich people.

மறுவ. செவிலித்தாய்

[செவிலி → செவிலியர்]

செவிலியர்[2] *ševiliyar*, பெ. (n.) செவிலி[2] பார்க்க; see *ševili.*

மறுவ. செவிலித்தாய்

[செவிலி → செவிலியர்]

செவிள் *ševiḷ*, பெ. (n.) *காதின் மேற்புறத் துறுப்பு;* tragus.

ம. செள்ள

[செகில் → செவிள்]

செவுரொட்டி *ševur-oṭṭi*, பெ. (n.) மண்ணீரல் *(இங்.வை. 42);* spleen.

[சுவரொட்டி → செவுரொட்டி]

செவுள் *ševuḷ*, பெ. (n.) *மீனின் மூச்சுறுப்பு (வின்.);* gills.

ம. செளுக்க

[செகிள் → செவுள்]

நீரிலுள்ள காற்றை இழுப்பதற்கு மீனுக்கு இயற்கையாகவே அமைந்த மூச்சுறுப்பு. இது அதன் கழுத்தின் இரண்டு பக்கமும் இருக்கும்.

செவுள்சிதைவு *ševuḷ-šidaivu*, பெ. (n.) செவுள் சிதைவதால் வரும் நோய்; branchial disease.

[செவுள் + சிதைவு]

இந்நோய் மீன்களுக்கு மட்டும் வரும்.

செவுள்மூடி *ševuḷ-mūḍi*, பெ. (n.) மீனின் செவுள் பகுதிகளை மூடும் உறுப்பு; operculum.

[செவுள் + மூடி]

செவுள்வலை *ševuḷ-valai*, பெ. (n.) மீன் பிடிக்கும் வலைகளில் ஒன்று; gill net.

[செவுள் + வலை]

செவேரெனல் *ševēr-eṉal*, பெ. (n.) சிவந்திருத்தற் குறிப்பு; expr. denoting redness.

[செம் → செவ் → செவ்வேர் + எனல்]

இரட்டுரையாகச் செக்கச் செவேரென்று என்ற வழக்கும் வழக்கில் உள்ளது. ஓநோ. கன்னங் கரேலென்று. பிறந்த குழந்தை, செக்கச் செவேரென்று இருந்தது. *(உ.வ.).*

செவை *śevai*, பெ. (n.) செவ்வை பார்க்க; see *śevvai*. 'நீ செவைக்கு வரமாட்டாய்' (வின்.).

[செவ்வை → செவை]

செழி¹-த்தல் *śeḻi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. தழைத்தல்; to thrive, flourish, grow well, as vegetation. மழைக்குப் பின் செடி நன்கு செழித்து வளர்ந்துள்ளது. 2. சிறப்புற்ற நிலையில் இருத்தல்; to prosper, as a kingdom family, country. "அடியேனுஞ் செழிக்க" (திருப்பு. 218). 3. வளமிகுதல்; to be fertile. செழித்த சீமை. 4. அளவுக்கு மிஞ்சியிருத்தல் (இ.வ.); to be super-abundant.

ம. செழிக்க

[செழு → செழி-.]

செழி²-த்தல் *śeḻi-*, 4 செ.கு.வி. (v.i.) முகமலர்ச்சி யுறுதல்; to be cheerful, as countenance. செழித்தமுகமுள்ளவன்.

[செழு → செழி-.]

செழி³-தல் *śeḻi-*, 2 செ.கு.வி. (v.i.) வளர்தல்; to grow; to increase. "செழிகின்ற தீப்புகு விட்டிலின்" (திருவாச. 6:5).

[செழு → செழி-.]

செழிச்சி *śeḻicci*, பெ. (n.) செழிப்பு (வின்.) பார்க்க; see *śeḻippu*.

[செழி → செழிச்சி]

செழிஞர் *śeḻiñar*, பெ. (n.) செழியன் பார்க்க; see *śeḻiyaṉ*.

[செழியன் → செழிஞர்]

செழித்தகல் *śeḻitta-kal*, பெ. (n.) சுக்கான்கல் (வின்.); lime-stone.

[செழி → செழித்தல் + கல்]

செழிப்பம் *śeḻippam*, பெ. (n.) செழிப்பு பார்க்க; see *śeḻippu*.

மறுவ. வளமை, செழுமை.

[செழிப்பு → செழிப்பம்]

செழிப்பு *śeḻippu*, பெ. (n.) 1. வளம்; fertility, flourishing, condition, prosperity. 2. பொருள் நிறைவு; plenteousness, abundance, fulness.

ம. செழிப்பு

[செழி → செழிப்பு]

செழிம்பு *śeḻimbu*, பெ. (n.) செழிப்பு பார்க்க; see *śeḻippu*.

[செழிப்பு + செழிம்பு]

செழியவாணியர் *śeḻiya-vāṇiyar*, பெ. (n.) தொண்டைமண்டலத்தில் வாழ்ந்திருந்த ஒருவகை எண்ணெய்ச் செக்கார்; a class of oil mongers who lived at Toṇḍai-maṇḍalam. "குன்றத்தூர் செழிய வாணியர்களோ மானோம்" (தெ.க.தொ. 12, ப-1, கல். 53).

[செழியன் + வாணியர்]

செழியன் *śeḻiyaṉ*, பெ. (n.) பாண்டியன்; king of the Pāṇḍya country. "வெவ்வேற் செழிய" (புறநா. 19:4).

[செழு → செழி → செழியன். செழு = செழுமை]

செழு-த்தல் *śeḻu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. மிகுதல்; to become abundant. 2. வளர்தல்; to grow. 3. செழித்தல்; to be fertile.

[செள் → செழு-.]

செழுகம் *śeḻugam*, பெ. (n.) அட்டை; leech. "செழுகம்போலச் சுருங்கியும் விரிந்தும்" (சி.போ.பா. 4: 2, பக்.264).

[செழு → செழுகம்]

செழுகாதனம் *śeḻugādaṉam*, பெ. (n.) ஓக வகை (தத்துவப். 109, உரை.); a yogic posture.

செழுகை *śeḻugai*, பெ. (n.) சாணளப்பான் புழு; a worm. "திரணுறுஞ் செழுகைபோல்" (சிவதரு. 8:88).

செழுசெழு-த்தல் *śeḻu-śeḻu*, 4 செ.கு.வி. (v.i.) மிகுவளப்பமாதல் (நன். 395, மயிலை.); to be extremely fertile.

[செழு + செழு-.]

செழுஞ்சோறு *śeḻu-ñ-jōṟu*, பெ. (n.) கொழுத்த உணவு; rich, sumptuous meal. "தீப்பசி மாக்கட்குச் செழுஞ்சோ றீத்து" (மணிமே. 18:117).

[செழு + சோறு]

செழுத்து *śeḻuttu*, பெ. (n.) வளமை; fertility. "செழுத்தாலதிர்த் தெழுந்து" (கோயிற்பு. பாயி. 9).

[செழு → செழுத்து]

செழுது *šeḻudu,* பெ. (n.) செழிப்பு பார்க்க; see *šeḻippu.* "செழுது மாதவி மலர்திசை மணக்க" (அருட்பா, 2, அவலத்தழு. 4).

[செழு → செழுது]

செழுந்து *šeḻundu,* பெ. (n.) செழிப்பு,2 பார்க்க; see *šeḻippu,2.* ஆயிரமரக்காற் செழுந்துபடச் செந்நெனி றைத்து" (சீவக. 2489).

[செழு → செழுந்து]

செழுப்பம் *šeḻuppam,* பெ. (n.) செழிப்பு; prosperity.

[செழு → செழுப்பு → செழுப்பம்]

செழும்பல் *šeḻumbal,* பெ. (n.) செழிப்பு, வளமை; fertility. 'செழும்பலான பயிர்' (வின்.).

[செழுப்பு → செழும்பு → செழும்பல்]

செழுமறை *šeḻumaṟai,* பெ. (n.) நெருப்பு (வின்.); fire.

செழுமை *šeḻumai,* பெ. (n.) 1. செழிப்பு (பிங்.); fertility. "செழுமிடற்றின் மைவந்த கோன்" (திருக்கோ. 212). 2. மாட்சிமை (பிங்.); greatness, excellence. 3. அழகு (பிங்.); beauty. 4. தழைவு (வின்.); verdancy verdure.

[செழி → செழு → செழுமை]

செழுவர் *šeḻuvar,* பெ. (n.) பள்ளர் வகையினர்; a sub-division of the Paḷḷar caste.

செழுவிதின் *šeḻuvidiṉ,* வி.எ. (adv.) செம்மையாக; correctly, fully. "செழுவிதி னுணர்த்தி" (திருக்காளத். பு. 33: 15).

[செழு → செழுவிதின்]

செள்ளு *šeḷḷu,* பெ. (n.) 1. தெள்ளுப் பூச்சி (வின்.); flea. 2. உண்ணிவகை; tick.

ம. செள்ளு; க. சிக்காடு; பட. சிக்கட்டு; கோத. செக்; துட. தொள்; குட. செள்ளி

[தெள்ளு → செள்ளு]

செளிம்பன் *šeḷimbaṉ,* பெ. (n.) சண்டித்தன முள்ளவன் (வின்.); obstinate, unruly fellow.

[செளிம்பு → செளிம்பன்]

செளிம்பு *šeḷimbu,* பெ. (n.) 1. களிம்பு; verdigris, rust. 2. விடாபிடி; obstinacy.

க. சிலுபு; தெ. சிலுமு

[களிம்பு → சளிம்பு → செளிம்பு]

செளிம்பூறல் *šeḷimbūṟal,* பெ. (n.) களிம்புப் பற்று (யாழ்ப்.); green rust on copper.

[செளிம்பு + ஊறல்]

செளுகம் *šeḷugam,* பெ. (n.) செழுகம் (உரி. நி.) பார்க்க; see *šeḻugam.*

[செழுகம் → செளுகம்]

செளுகை *šeḷugai,* பெ. (n.) செழுகம் பார்க்க; see *šeḻugam.* "செளுகையு முடலட வொருவழி யறிவிலர் செறிவார்" (சிவதரு. 7: 56).

[செழுகம் → செளுகம் → செளுகை]

செளைப்பு *šeḷaippu,* பெ. (n.) சோர்வு; weariness, fatigue. "செளைப்பில்லாமலே வருஞ் சேனைகளை" (இராமநா. உயுத். 78).

[சளை → செளை → செளைப்பு]

செற்பம் *šeṟbam,* பெ. (n.) வாய்ப்பும் (அநுகூலமும்) வாய்ப்பின்மையு (பிரதி கூலமும்)மான கருவிகள் இரண்டுமுள்ளதன் கண் வெல்லும் வேட்கையுடையோன் கதை (தருக். சங். நீலகண். 205); a form of polemical discussion, the aim of which is victory over opponents.

செற்றம் *šeṟṟam,* பெ. (n.) 1. மனக்காழ்ப்பு (திவா.); rancour, hatred. "செற்ற நீக்கிய மனத்தினர்" (திருமுருகு. 132). 2. வெறுப்பு; aversion. "ஆர்வமுஞ் செற்றமு நீக்கிய வச்சுதனே" (திருநூற். 20). 3. தணியாச்சினம் (பிங்.); irrepressible anger. 4. ஊடற்சினம்; love-quarrel. "செற்றமுன் புரிந்ததோர் செம்மல்" (கம்பரா. உண்டாட்டு. 30).

[செறு → செற்று → செற்றம்]

செற்றல் *šeṟṟal,* பெ. (n.) 1. கொல்லுகை (பிங். MSS); killing. 2. கேடு (அக.நி.); destruction. 3. செறிவு (திவா.); denseness, closeness. 4. ஈ முட்டை; eggs of fly. "புண்மேற் செற்றலேறி" (திவ். பெரியாழ். 4. 5:2).

ம. செற்றார்

[செறு → செற்று → செற்றல்]

செற்றலர் *śeṟṟalar*, பெ. (n.) செற்றார் பார்க்க; see *śeṟṟār*. "செற்றலரை வென்ற திருமலைராயன்" (தனிப்பா. 1, 27:49).

ம. செற்றலர்

[செற்றல் → செற்றலர்]

செற்றவர் *śeṟṟavar*, பெ. (n.) செற்றார் பார்க்க; see *śeṟṟār*. "செற்றவர் புரங்கண் மூன்றுந் தீயெழச் செறுவர் போலும்" (தேவா. 476:3).

[செறு → செற்றவர்]

செற்றார் *śeṟṟār*, பெ. (n.) பகைவர்; enemies. "செற்றார் செயக்கிடந்த தில்" (குறள், 446).

ம. செற்றார்

[செறு → செற்று → செற்றார்]

செற்று[1]**-தல்** *śeṟṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கொல்லுதல் (பிங். MSS); to kill. 2. அழித்தல்; to destroy. 3. செதுக்குதல் (ஈடு, 9. 9: 1); to cut, chisel. 4. பதித்தல்; to set, as a jewel. "மணி செற்றுபு குயிற்றி" (கம்பரா. கையடை. 5).

ம. செற்றுக; து. கெர்பினி; பர். கெத் (வேட்டையாடுதல்); மா. கெர்மெ.

[செறு → செற்று-.]

செற்று[2]**-தல்** *śeṟṟu-*, 5 செ.குவி. (v.i.) 1. செறிதல்; to gather in crowds. 'பெருங் களிறுகள் செற்றிவந்து சேர்ந்தன' (சீவக. 277, உரை). 2. அழுந்துதல்; to sink deep. "உரத்தினுயிர் செற்றும் வகை குத்தி" (கம்பரா. மகுட. 8).

[செறு → செற்று-.]

செற்று[3] *śeṟṟu-*, பெ. (n.) நெருக்கம் (பிங்.); thickness.

[செறு → செற்று]

செற்றை *śeṟṟai*, பெ. (n.) 1. சிறுதூறு; thicket, bush. "செற்றை வாயிற் சிறுகழிக் கதவின்" (பெரும்பாண். 149). 2. கூட்டம்; crowd. "சேய்விடுத்த செற்றை" (கந்தரந். 22). 3. நன்னீரில் வாழும் மீன்வகை; a fresh water fish. "செற்றைவரும் பழனம்" (கந்தரந். 22).

ம. செற்ற; க. ஜூதெ, ஜூத்தெ, செதகெ (குப்பை); தெ. செத்த (அழுக்கு)

[செற்று² → செற்றை]

செற்றோர் *śeṟṟōr*, பெ. (n.) செற்றார் பார்க்க; see *śeṟṟār*. "செற்றோர் கொலக்கொலக் குறையாத் தானை" (பதிற்றுப். 82:12).

[செறு → செற்றோர்]

செறல் *śeṟal*, பெ. (n.) 1. சினம், வெகுட்சி; anger, open hatred. "செறனோக்கின்... களிறு" (புறநா. 15: 8). 2. கொல்லுகை, அழிக்கை (தொல். சொல். 72, சேனா.); killing, destroying.

[செறு → செறல்]

செறி[1]**-தல்** *śeṟi-*, 2 செகுவி. (v.i.) 1. நெருங்குதல்; to be thick, as foliage, hair; to be dense, crowded. "செறிந்த மணிமுடி" (திவ். பெரியாழ். 3. 10:1). 2. திண்ணிதாதல்; to be hard and strong. "மாப்படை சிந்தின தெறித்துகச் செறிந்த தோளினான்" (கம்பரா. கான். 41). 3. இறுகலாய் இருத்தல்; to be tight, close fitting, as bangles. "செறிவளை நெகிழ்த்தோன்" (ஐங்குறு. 199). 4. அடங்குதல்; to be controlled. "செறியாப் பரத்தை யிவன்றந்தை" (கலித். 84). 5. எல்லை கடவாதிருத்தல்; to keep within bounds. "செறி கடலே" (திருக்கோ. 179). 6. மறைதல்; to hide, disappear. "அன்னம் . . . நளிமலர்ச் செறியவும்" (சிலப். 2:55-6). 7. மிகுதல்; to increase. "செயிர்சினஞ் செறிந்து" (கலித். 102). 8. கலத்தல் (வின்.); to mix. 9. திரளுதல்; to accumulate. 10. பொருந்துதல்; to be joined, accompanied. "மகளிரொடு செறியத் தாஅய்க் குழலகவ" (பட்டினப். 155).

[கள் → செள் → செறி → செறி-தல் = கூடுதல், நெருங்குதல்]

இருபொருள்கள் ஒன்றை ஒன்று அணுகுதல் நெருங்குதலும், பலபொருள் ஒன்றை யொன்றணுகுதல் செறிதலும் ஆகும். நெருங்கலினும் செறிவு, மிக அணுக்கமாகும்.

செறி[2]**-தல்** *śeṟi-*, 2 செகுன்றாவி. (v.t.) புணர்தல்; to cohabit with. "செறிதொறுஞ் சேயிழை மாட்டு" (குறள், 1110).

[செறி¹ → செறி²-.]

செறி[3]**-த்தல்** *śeṟi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. சேர்த்தல்; to unite. 2. அடைத்தல்; to shut, close, block up. "தாழ்செறி கடுங்காப்பில்" (கலித். 48). 3. அடக்குதல்; to hold in reserve, as one's opinion. "செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்" (குறிஞ்சிப். 12). 4. திணித்தல்; to stuff. "வாய்செறித் திட்ட மாக் கடிப்பிதுவே" (கல்லா.6). 5. அடைவித்தல்; to cause to obtain.

"சிவமந்திரமே சித்தி செறிக்கும்" (சிவரக. காயத்திரி.14). 6. இறுக்குதல்; to tighten. "நிறைத்தாழ் செறித்து" (நீதிநெறி. 99). 7. திரட்டுதல்; to hoard up, store up. 8. நெரித்தல் (வின்.); to press, crush. 9. கொல்லுதல் (பிங்.); to kill. 10. பதித்தல்; to set, enease.

[சுள் → செள் → செறி → செறி-த்தல். சுள் = அணுகல், நெருங்கல்]

செறி⁴-த்தல் *šeṟi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. மூழ்குதல் (திவா.); to immerse, dive, plunge into water. 2. மூடுதல்; to close, shut, as eyes. "கண்ணையும் செறித்து" (திவ்.திருப்பல். 3, வியா, பக்.40).

[செறி¹ → செறி⁴-]

செறி⁵ *šeṟi*, பெ. (n.) நெருக்கம் (சூடா.); closeness. denseness.

[செறி¹ → செறி⁵]

செறிஞர் *šeṟiñar*, பெ. (n.) உறவினர் (இலக். அக.); relations.

[செறி → செறிஞர்]

செறிப்பு *šeṟippu*, பெ. (n.) 1. நெருக்கம்; thickness. "செறிப்பில் பழங்கூரை" (நாலடி, 231). 2. இற் செறிவு; restraining the heroine from meeting her lover. "சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல்" (தஞ்சைவா. 151).

[செறி → செறிப்பு]

செறிமை *šeṟimai*, பெ. (n.) நெருக்கம்; thickness. "செறிமையுற" (கோயிற்பு. வியா. 6).

[செறி → செறிமை]

செறிவன் *šeṟivaṉ*, பெ. (n.) 1. எல்லாவுயிர் கட்கும் இதமான அருகன்; Arhat, as All-merciful Being. 2. சலியாதவன், கலங்காதவன் (சிலப். 10: 177, உரை); person of perfect equanimity.

[செறிவு → செறிவன்]

செறிவு *šeṟivu*, பெ. (n.) 1. நெருக்கம்; thickness, denseness, closeness. "செறிவுடை மும்மதில்" (திருவாச. 9: 5). 2. மிகுதி; abundance. "அரும் புலத்தின் செறிவு மீதே" (கம்பரா. உருக்காட்டு. 111). 3. கூட்டம்; union, combination. "இம்மூன்றன் செறிவுடையான் செல்க வினைக்கு" (குறள், 684). 4. உறவு; relationship. "செறிவெனப் படுவது கூறியது மாறாமை" (கலித். 133). 5. கலப்பு (வின்.); diffusion. 6. உள்ளீடு; kernel, as attached to the shell of a nut. 'நுங்கினது இனியசெறிவை அயில' (புறநா. 225, உரை). 7. தன்னடக்கம்; self-restraint, modesty. "முதுவருள் முந்துகிளவாச் செறிவு" (குறள், 715). 8. எல்லை கடவா நிலைமை (திருக்கோ. 179, உரை.); conformity to rules, as of properiety.

ம. செறிவு

[செறு → செறி → செறிவு]

செறிழிக்கதவு *šeṟiḻi-k-kadavu*, பெ. (n.) கழிகளை நெருக்கமாக வைத்துக், குறுக்குச் சட்டம் இட்டுச் செய்யப்பட்ட கதவு; a door with sticks arranged closely with a cross bar.

[செறி + கழி + கதவு → செறிழிக்கதவு]

செறு¹-தல் *šeṟu-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. அடக்குதல்; to control, as the senses. "ஆறுஞ் செற்றதில் வீற்றிருந்தானும்" (தேவா. 84:9). 2. தடுத்தல்; to hinder, prevent. 'வரையா வாயிற் செறாஅது" (மதுரைக். 748). 3. சினத்தல்; to be angry with. "அரசர் செறின் வவ்வார்" (நாலடி, 134). 4. வெறுத்தல்; to hate, dislike, detest. "செற்றாரெனக் கைவிட லுண்டோ" (குறள், 1245). 5. வருத்துதல்; to cause pain, torment. "செலினந்திச் செறிற்சாம்பும்" (கலித். 78). 6. வெல்லுதல்; to overcome. "இருநால் வினையுஞ் செற்றவற்கு" (திருநூற். 46). 7. அழித்தல்; to kill, destroy. "புரங்கள் மூன்றுந் தீயெழச் செறுவர் போலும்" (தேவா. 476:3).

[சுள் → (சுறு) → செறு-]

செறு²-தல் *šeṟu-*, 4 செ.கு.வி. (v.i.) வேறுபடுதல்; to change as one's mind. "அன்பிற் செறப்பட்டா ரில்லம் புகாமை" (ஆசாரக். 80).

[செறு¹ → செறு²-]

செறு³-த்தல் *šeṟu-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. அடக்குதல்; to suppress 2. தடுத்தல்; to prevent. "நாயேனைப் பொருட்படுத்துச் செறுத்தாய்" (தேவா. 31, 3). 3. செறிதல், உள்ளடங்கச் செய்தல்; to comprise, contain as ideas. "செறுத்த செய்யுள்" (புறநா. 53:11). 4. தூர்த்தல்; to fill up. "கடலைச்செறாஅ அய்வாழிய நெஞ்சு" (குறள், 1200). 5. வெறுத்தல் (திவா.); to detest. 6. வெல்லுதல்; to overcome.

"பாடல் பயின்றோரைப் பாணர் செறுப்பவும்" *(பரிபா. 9:73).* 7. கொல்லுதல் *(பிங்.);* to kill. "செறுத்தறுத் துழக்கி" *(கலித். 104).* 8. நெருக்குதல் *(வின்.);* to narrow. 9. சினத்தல்; to be angry.

ம. செறுக்குக; க. கிர்; தெ. செற (சிறை); து. செறெ (சிறை); கோண். கெக்தான; கொலா. செறு (ஏரி); பர். கெத்ப்; கோத. செர் (தடுத்தல்); துட. செர் (சிறை).

[(சுறு) → செறு-.]

செறு[4] *šeṟu,* பெ. (n.) 1. சினம்; anger. "யாண்டுஞ் செறுவொடு நிற்குஞ் சிறுமை" *(திரிகடு. 14).* 2. வயல்; field. "செதுமொழி சீத்த செவி செறுவாக" *(கலித். 68).* 3. குளம்; tank. 4. பாத்தி; garden plot, division in a field. "இருங்கழிச் செறுவின் வெள்ளுப்புப் பகர்நரொடு" *(மதுரைக். 117).*

ம. செறு (போர்); க. கொன் (சினப்படுதல்); தெ. சிறாகு

[செறு ' → செறு'.]

செறுதொழில் *šeṟu-doḻil,* பெ. (n.) வெறுக்கத் தக்கச் தீயசெயல்; evil deed, as reprehensible. "செறுதொழிலிற் சேணீங்கியான்" *(பு.வெ. 8:10, கொளு).*

[செறு + தொழில்]

செறுநர் *šeṟunar,* பெ. (n.) பகைவர்; foes, enemies. "செறுநர் செருக்கறுக்கு மெஃகு" *(குறள், 759).*

[செறு → செறுநர்]

செறுப்பனை *šeṟu-p-paṉai,* பெ. (n.) தொந்தரவு; trouble, worry.

[சிறுப்பனை → செறுப்பனை]

செறுப்பு *šeṟuppu,* பெ. (n.) 1. கட்டுப்பாடு; restriction. 'அச்செறுப்புத்தீர . . . போந்த இடமிறே இது' *(ஈடு, 5. 8:2).* 2. நெருக்கம் (வின்.); narrowness. 3. கொலை; killing.

[செறு → செறுப்பு]

செறுப்புநோய் *šeṟuppu-nōy,* பெ. (n.) நோய்வகை (கடம்பபு.இலீலா. 111); a disease.

[செறு → செறுப்பு + நோய். செறுத்தல் = வருத்துதல், அழித்தல்]

செறும்பு[1] *šeṟumbu,* பெ. (n.) மனக்காழ்ப்பு; rancour. 'மனத்திடைச் செறும்பு நீக்கி' *(சீவக. 947).*

க. கறும்பு

[செறு → செறும்பு]

செறும்பு[2] *šeṟumbu,* பெ. (n.) பனஞ்சிறாம்பு; fibres of palmyra palm. "செறும்பிற் பிறங்கிச் செறி . . . மயிர்" *(கம்பரா. கங்கை. 33).*

[சில் (= சிறியது) → சிலும்பு → செறும்பு]

செறும்புக்காரன் *šeṟumbu-k-kāraṉ,* பெ. (n.) மனத்திற்கறுக் கொண்டவன் *(வின்.);* malicious person.

[செறும்பு + காரன்]

செறுமர் *šeṟumar,* பெ. (n.) மலையாள (கேரள) நாட்டுப் பழங்குடிகளுள் ஒருவகையினர்; a kind of tribal people in Kēraḷa state.

மறுவ. செறுமக்கள்

செறுமு-தல் *šeṟumu-,* 5 செ.கு.வி. (v.i.) கனைத்தல், உறுமுதல்; to hem, grunt. "செறுமுமந்தச் சன்னை யறிந்து" *(விறலிவிடு. 759).* 2. தேம்பியழுதல்; to sob agitatedly.

[செறு → செறுமு-.]

செறுவர் *šeṟuvar,* பெ. (n.) பகைவர்; foes. "செறுவர் நோக்கிய கண்" *(புறநா. 100: 10).*

மறுவ. செறுநர்

[செறு → செறுவர்]

செறுவு *šeṟuvu,* பெ. (n.) திருத்திய நிலம்; developed lands. "பவழவாய்ச் செறுவு தன்னுள்" *(சீவக. 379).*

[செறு → செறுவு]

சென்ற *šeṉṟa,* பெஎ. (adj.) கடந்த; last. சென்ற ஆண்டு திருவிழா நடந்தது.

மறுவ. கழிந்த, முடிந்த, கடந்த.

[செல் → சென்ற]

சென்றஞான்றை *šeṉṟa-ñāṉṟai,* பெ. (n.) நேற்றைய நாள்; yesterday. "சென்ற ஞான்றைச் சென்றுபட ரிரவின்" *(புறநா. 390: 10).*

மறுவ. நேற்று

[செல் → சென்ற + ஞான்றை]

சென்றது *šeṉṟadu,* பெ. (n.) வினாவொடு சேர்த்து அடுக்கியும் அடுக்காதும் வரும்

அசைநிலை (தொல். சொல். 425); an expletive, used in its interrogative form, sometimes in pairs.

[செல் → சென்றது]

சென்றுதேய்ந்திறுதல் *šenru-tēyndirudal*, பெ. (n.) நூற்குற்றம் பத்தனுள் நூலின் அழகு வரவரக் குறைந்துகொண்டே வரும் குற்றம் (தொல். பொருள். 664, உரை); gradual loss of vigour and tone, one of ten *nūr-kurram*; defects of a literary work.

[செல் → சென்று + தேய்ந்து + இறுதல்]

சென்றுபோ-தல் *šenru-pō-*, 8 செ.கு.வி. (v.i.) இறத்தல்; to die. 'அவர் சென்றுபோனார்' (வின்.)

[சென்று + போ-.]

சென்றுமுட்டு-தல் *šenru-muttu-*, 5 செ.கு.வி. (v.i.) படையுடன் சென்று நேருக்கு நேர் மோதுதல்; to face the other directly in a fight. 'காரிப் பொருமாள் - எருமை தொரு எயினாட்டார் கொள்ளப் பாசாற்றூர் பூசலிடப்பூசல் சென்று கோவூர் நாட்டுச் சிற்றிடையாற்று முதுகொன்றை மூக்கின் மீடலை, அயங்கரையிற் சென்று முட்டி பட்டான்' (செங்கம் நடுகற்கள் - கம்பவர்மன் கிபி. 9 நூ.).

போரில் நேருக்கு நேர் மோதி இறப்பவனை சென்று முட்டி என்பர்.

[சென்று + முட்டு-.]

சென்றுழுபாழ் *šenrulu-pāl*, பெ. (n.) உழக்கூடிய சேரும் சகதியும் கொண்ட பாழ் நிலப்பகுதி; a kind of cultivable lying empty land.

சென்னக்கூனி *šenna-k-kūni*, பெ. (n.) சிறிய இறால் மீன் (வின்.); small shrimps.

[சில் → சின் → சின்ன → சென்ன + கூனி]

சென்னசிறை *šenna-širai*, பெ. (n.) பூடு வகை; a plant.

சென்னடை *šennadai*, பெ. (n.) நேர்த்தியான வழிபாட்டு முறைமை தொடர்பான செலவுகள்; expenditure towards regular worship in temples. 'சென்னடைக் கமைச்ச பூமியாவது' (T.A.S. 2; 1:23).

[செம் + நடை. செம்மையாக நடைபெறும் பூசைக்கு ஆகும் செலவைக் குறித்தது]

சென்னடைக்கால் *šennadai-k-kāl*, பெ. (n.) ஒரு முகத்தல் அளவை; a liquid measure. "பொலியூட்டு நெல்லுக் கலனெய் தூணியான பழநெல் சென்னடைக் காலால் நுற்றிருபதின் கலமுங் கொண்டு" (தெ.க.தொ. 4, கல். 517/1986).

[சென்னடை + கல்]

சென்னப்பட்டணத்தான் *šenna-p-pattanattān*, பெ. (n.) பழைய காசு வகை (பணவிடு. 117); an ancient coin.

[சென்னப்பட்டணம் → சென்னப் பட்டணத்தான்]

சென்னபட்டணத்தில் வழங்கிய காசு வகை

சென்னப்பட்டணம் *šenna-p-pattanam*, பெ. (n.) சந்திரகிரியரசன்கீழ்ச் சிற்றரசனாயிருந்த சென்னப்ப நாயக்கன் பெயரால் அமைந்த ஊர் (சிதக். நொண்டி. 7); Chennai, as the town of Sennappa-nāyakkan, a chief under the Raja of Chandragiri.

[சென்னப்பன் பட்டணம் → சென்னப் பட்டணம்]

Madras the chief city in the Tamil country, is also the chief city in the South Indian Presidency. The name by which it is known amongst natives everywhere is, not Madras, but Chennappa-pattanam abbreviated into Chenna-pattanam, a name which it derived from Chennappa Nāyakkar, father-in-law of the Nāyakkar of Chinglepat, a petty local chieftain, a feudatory of the Chandragiri Rājā, from whom the English obtained possession of a little fort on the coast which they converted into a fortified factory. The origin of the name by which it appears always to have been called by Europeans-Madras (officially Madraspatam) - has never been made out with certainty. Perhaps the most probable derivation is from the Telugu Madura (Tamil madil), the surrounding wall of a frot, a rampart. There is a neighbouring town, Sadras, originally a Dutch settlement, the name of which closely resembles Madras. Sadras is an European corruption from Sadurei, which is an abbreviation of Sadurangam (= Sans. Chaturanga) the four constituent arms of an army (-CGDFL. Int. p. 7-8).

சென்னபாத்திரம் *šenna-pāttiram*, பெ. (n.) தென்னை வகை (G.Sm.D.I, i, 214); a variety of coconut.

சென்னபுரி *šenna-puri*, பெ. (n.) சென்னப் பட்டணம் பார்க்க; see *šenna-p-pattanam*.

சென்னம்[1] *šennam*, பெ. (n.) நீர்ப்பறவை வகை; an aquatic bird. "சென்னங் காகங் குணாலஞ் சிலம்புமே" (கம்பரா. ஊர்தே. 151).

சென்னம்[2] *šennam*, பெ. (n.) வடிவு (யாழ்.அக.); shape.

[சின்னம் → சென்னம்]

சென்னமல்லையர் *šenna-mallaiyar*, பெ. (n.) கி.பி. 1768-ல் சிவசிவ வெண்பா இயற்றிய புலவர்; the author of Šivašiva-venbā, 1768 A.D.

சென்னல் *šennal*, பெ. (n.) எட்டரை விரல நீளமும் கரும்பச்சை நிறமுமுள்ள பனையேறிக் கெண்டை மீன்; climber perila, rifle green, attaining $8^1/_2$ in. in length.

சென்னவலை *šenna-valai*, பெ. (n.) பெரு மீன்கள் பிடிக்க உதவும் வலைவகை; net for catching big fish.

சென்னாக்கூனி *šennā-k-kūni* பெ. (n.) சென்னக்கூனி (வின்.) பார்க்க; see *šenna-k-kūni*.

[சென்னக்கூனி → சென்னாக்கூனி]

சென்னாக்கோனி *šennā-k-kōni* பெ. (n.) சென்னக்கூனி (வின்.) பார்க்க; see *šenna-k-kūni*.

[சென்னக்கூனி → சென்னாக்கோனி]

சென்னி[1] *šenni*, பெ. (n.) 1. தலை; head. "நலம்பெறு கமழ்சென்னி" (கலித். 81). 2. உச்சி; top, summit, peak. "மைபடு சென்னிப் பயமலை நாடன்" (கலித். 43). 3. சிறப்பு; eminence. "உனைச் சென்னித்தலை கொண்டது தேர்கிலையோ" (கந்தபு. காமத. 28). 4. சோழன்; Cōla king. "சென்னி செங்கோ லதுவோச்சி" (சிலப். 7:2, பக். 205). 5. உண்கலமாகத் தலையோடு கொண்ட பாணன்; bard, lyrisist, as having skull-bowl to eat from. "செவ்வரை நாடன் சென்னிய மெனினே" (பெரும்பாண். 103). 6. குதிரையின் தலை போன்ற முதல் விண்மீன், இரலை (அச்சுவினி) (சூடா.); the first nakṣatra, as resembling horse's head.

சென்னி[3] *šenni*, பெ. (n.) கன்னம்; cheek.

[சென்னை[3] → சென்னி]

சென்னிக்கோடு *šenni-k-kōdu*, பெ. (n.) சென்னிமலை பார்க்க; see *šenni-malai*. "ஓடுமழை கிழிக்குஞ் சென்னிக் கோடுயர் பிறங்கல் மலை கிழவோனே" (நற். 28)

[சென்னி + கோடு]

சென்னிக்கோன் *šenni-k-kōn*, பெ. (n.) ஏராளமான ஆநிரைகளையுடைய ஆயர் தலைவன்; a leader of shephards having numerous cows and goats. "இவ்வூர் மன்றாடிக் குடிமக்களில் சென்னிக்கோன்" (தெ.க.தொ. 12, 198).

[சென்னி + கோன்]

சென்னிமலை *šenni-malai*, பெ. (n.) ஈரோடு வட்டத்தில் மலை உள்ள ஓரூர்; a hill town in Erode dt. "சென்னிக் கோடுயர் பிறங்கள்..." (நற்.)

[சென்னி + மலை]

சென்னியர் *šenniyar*, பெ. (n.) கூத்தர் (அக.நி.); actors, dancers.

[சென்னி → சென்னியர்]

சென்னீர்வெட்டி *šennīr-vetti*, பெ. (n.) வரிவகை (தெ.க.தொ. 3,300); a tax.

சென்னீரமஞ்சி *šennīra-mañji*, பெ. (n.) வரிவகை (தெ.க.தொ. 4, 155); a tax.

சென்னை[1] *šennai*, பெ. (n.) சென்னப்பட்டணம் பார்க்க; see *šenna-p-pattanam*. "சென்னை நகர் வீற்றிருந்த விமலவாழ்வே" (விநாயகபு. 85:63).

சென்னை[2] *šennai*, பெ. (n.) மீன்வகை (பாலவா. 1085); a kind of fish.

[சென்னக்கூனி → சென்னை]

சென்னை[3] *šennai*, பெ. (n.) கன்னம்; cheek.

க. செந்நெ

[சென்னி → சென்னை]

சென்னைப்பட்டினம் *šennai-p-pattinam*, பெ. (n.) சென்னப்பட்டணம் பார்க்க; see *šenna-p-pattanam*.

சே

சே[1] *cē/šē*, சகரமெய்யும் ஏகார உயிரும் சேர்ந்த உயிர்மெய் எழுத்து; the compound of c and ē.

[ச் + ஏ - சே.]

சே[2]**-த்தல்** *šē-*, 4 செ.கு.வி. (v.i.) 1. தங்குதல்; to dwell, abide. "வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியில்" (பட்டினப். 249). 2. கிடத்தல்; to lie, remain. "கோழி சேக்குங் கூடுடைப் புதவின்" (பெரும்பாண். 52). 3. உறங்குதல்; to sleep. "பொய்கை நாரை போரிற் சேக்கும்" (புறநா. 209).

ம. சேருக; க. சே; கூ. கேக; கொலா. கெப்; மா. கிதெ

E. stay; OE. stag; OF. ester, stare; E. sommy-sleep; L. sommus.

[சேய் → சே → சே-த்தல்]

ஒருகா. த. சே → க்ஷி; வ. (இ.வே.). தங்கு, க்ஷி என்னுஞ் சொல்லினின்றே சேக்ஷித்ர என்னும் சொல் திரியும். வடமொழியில் "க்ஷேத்ர" என்னுஞ் சொல் 'தங்குமிடம்', 'மனை', 'நகர்', 'இடம்', 'திருவிடம்', என்னும் பொருளில் வழக்கூன்றியுள்ளது.

சே[3]**-த்தல்** *šē-*, 4 செ.குன்றாவி. (v.t.) எய்துதல்; to obtain. "கனவிற் றொட்டது . . . கனவிற் சேஎப்ப" (பரிபா. 8:103-4).

[சேய் → சே → சே-த்தல்]

சே[4]**-த்தல்** *šē-*, 4 செ.கு.வி. (v.i.) 1. சிவப்பாதல்; to redden. "அவன் வேலிற் சேந்து" (கலித். 57). 2. முகம் சிவந்து சினத்தல்; to get angry. "நித்திலமேந்திச் சேந்த போல்" (சீவக. 329).

[சேய் → சே-.]

சே[5] *šē*, பெ. (n.) 1. சிவப்பு; red, redness. "சேக்கொள் கண்ணை" (கல்லா. 85:9). 2. சேங்கொட்டை (மலை.) பார்க்க; see *šēṅgoṭṭai*. 3. அழிஞ்சில் (தொல். எழுத்து. 278); sage-leaved alangium.

[சேய் → சே]

சே[6] *šē*, பெ. (n.) 1. காளை; bull, bullock, ox. "சேவேறு சேவடிக்கே சென்றூதாய்" (திருவாச. 10:1). 2. விடை ஓரை (இராசி) (விதான. நல். 12); Taurus in the zodiac. 3. குதிரை; horse.

ம. சேக்காள

E. ox; OE. oxa; ON. uxi; G. ochs; S. ukshan.

[சே⁵ → சே]

சே[7] *šē*, இடை. (int.) 1. வெருட்டுங்குறி; exclamation used in driving animals, etc. 2. வெறுப்புக் குறி; expr. meaning 'fie! shocking!' used in disgust. சே! போகாதே (உ.வ.).

சேக்கரி-த்தல் *šēkkari-*, 4 செ.கு.வி. (v.i.) கொக்கரித்தல் (யாழ்.அக.); to cackle, as a hen after laying eggs.

[கெக்கரி → சேக்கரி-.]

சேக்காளி *šēkkāḷi*, பெ. (n.). தோழமையுள்ளவன்-ள் (நெல்லை.); comrade, friend.

[சேர்க்கை + ஆளி. ஆள் → ஆளி]

சேக்கிழார் *šēkkiḻār*, பெ. (n.) 1. தொண்டை நாட்டு வேளாளரின் குடிப்பெயருள் ஒன்று; a family name among Vēḷāḷās in Toṇḍai-maṇḍalam. 'சேக்கிழார் கரிகால சோழப்பல்லவரையர்' : 'சேக்கிழார் பாலறாவாயர்' (கல்வெட்.). 2. திருத்தொண்டர் மாக்கதை (பெரியபுராணம்) இயற்றிய ஆசிரியர்; the author of Thiru-t-tondar makkadai (Periyapurāṇam).

[செய்(நிலம்) + கிழார் → சேக்கிழார்]

சேக்கிழார்புராணம் *šēkkiḻār-purāṇam*, பெ. (n.). சேக்கிழாரின் வரலாற்றோடு, திருத்தொண்டர் புராண வரலாற்றையும் சேர்த்துக் கூறும் செய்யுள் நூல்; a Tamil purāṇā, author of Koṟṟavan-kuḍi Umāpadi devar.

[சேக்கிழார் + (Skt.) புராணம்]

சேக்கிழான் *šēkkiḻāṉ*, பெ. (n.) மாடு மனைகளையுடைய செல்வன்; well to do person. 2. ஆநிரைப் பண்ணையார்; cattle wealth holder. "மேலூர்க் கோட்டத்துத் தன்கூற்று காவனூர் சேக்கிழான் சத்தி மலையனாகிய சோழ முத்தரையன்" (தெ.க.தொ. 19. கல். 72).

[சேக்கிழார் → சேக்கிழான். சேக்கிழார் = வேளாளரின் குடிப்பெயர்]

சேக்கு[1] *šēkku*, பெ. (n.) முலைப்பால் (யாழ்.அக.); breast milk.

[சேக்கை² → சேக்கு]

சேக்கு[2] *šēkku*, பெ. (n.) 1. சீட்டாட்டத்தில் ஒருவர் கையில் ஒரு இனத்தில் தனித்து

நிற்குஞ் சீட்டு; solitary card of any denomination in the hands of a player at a game of cards. 2. துருப்புச் சீட்டு; trump-card. சேக்குராசா (இ.வ.) (செ.அக.).

சேக்கு[3] *šēkku*, பெ. (n.) கன்னக் குடுமி (இ.வ.); side lock.

சேக்குப்புள்ளி *šēkku-p-pulli*, பெ. (n.) உறவினரற்றுத் தனித்து இருப்பவன் (நாஞ்.); solitary person having no relations.

[சேக்கு[2] + புள்ளி]

சேக்கை[1] *šēkkai*, பெ. (n.) 1. கட்டில் முதலிய மக்கள் படுக்கை; cot, bed, thing to sleep on. "நுரைமுகந்தன்ன மென்பூஞ் சேக்கை" *(புறநா. 50.)* 2. விலங்கு முதலியவற்றின் படுக்கை (பிங்.); sleeping place of animals, roost of birds. 3. தங்குமிடம்; dwelling place. "புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை" *(மணிமே. 4:117).* 4. பறவைக் கூடு; bird's nest. "மாலுமயனு மூரும் படர்சிறைப் புண்மாகமிகந்து வந்திருக்குஞ் சேக்கை யெனவும்" *(பெரியபு. சண்டே. 4).* 5. வலை; net. "புளிஞர்... சேக்கைக் கோழிபோற் குறைந்து" *(சீவக. 449).*

ம. சேக்க; து. கேலு (பறையர் வாழிடம்)

[சே[2] → சேக்கை. சே = தங்கியுறங்குதல்]

சேக்கை[2] *šēkkai*, பெ. (n.) 1. முலை (பிங்.); woman's breast. 2. உடற்றழும்பு (பிங்.); scar.

[சே[2] → சேக்கை]

சேக்கை[3] *šēkkai*, பெ. (n.) 1. கடகவோரை (சூடா.); cancer in the zodiac. 2. நண்டு (யாழ்.அக.); crab, lobster.

[சே[2] → சேக்கை]

சேக்கை[4] *šēkkai*, பெ. (n.) 1. சேகை (பிங்.) பார்க்க; see *šēgai*. 2. செம்பசலை (மலை.); red Malabar night shade.

[சே[4] → சேக்கை]

சேக்கைப்பள்ளி *šēkkai-p-palli*, பெ. (n.) படுக்கை; bed, mattress. "பல்பூஞ் சேக்கைப் பள்ளியுட் பொலிந்து" *(சிலப். 4:28).*

[சேக்கை + பள்ளி]

சேக்கோள் *šēkkōl*, பெ. (n.) ஆகோள்; capture of enemies', cattle. "சேக்கோ ளறையுந் தண்ணுமை" *(அகநா. 63).* ஆகோள் என்பது ஆநிரை கவர்தலைக் குறிக்கும்.

[சே[6] + கோள். கொள் → கோள்; சே=ஆ, எருது, கால்நடைகள். ஆகோள் பார்க்க]

சேக்பறுவான் *šēkparuvān*, பெ. (n.) களமி மரத்தின் அடிக்கட்டைக்குக் குறுக்கே போடப்படும் கழி (M.Navi. 82); cross-jack yard.

சேகடி *šēkadi*, பெ. (n.) சாக்கடை நீர்த் தொட்டி (தெ. கோ. சா. 3. பகுதி 2); trough of waste water.

[சாய்கடை → சேய்கடை → சேகடி]

சேகண்டி[1] *šēgandi*, பெ. (n.) 1. காவலாளர் உறைவிடம் (யாழ்ப்.); patrol hut. 2. காவற் கூடம்; cell.

[சேக்கை + (அண்டு →) அண்டி]

சேகண்டி[2] *šēgandi*, பெ. (n.) கோல் கொண்டடிக்கும் வட்ட முறி (வெங்கல)த் தட்டு (சூடா.); gong.

சேகண்டி

சேகண்டியடி[1]**-த்தல்** *šēgandi-y-adi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. வீண்பேச்சுப் பேசிக் காலங் கழித்தல் (இ.வ.); to waste one's time in idle talk. 2. சேகண்டியை அடித்தல்; to strike a gong. 3. உணவுக்கு மிகவருந்தி முயலுதல் (இ.வ.); to work hard for livelihood.

[சேகண்டி + அடி.]

சேகண்டியடி[2]**-த்தல்** *šēgandi-y-adi-*, 4 செ.குன்றாவி. (v.t.) பலர் அறியக் கூறுதல் (இ.வ.); to proclaim widely.

[சேகண்டி + அடி-.]

சேகண்டியில்வை-த்தல் *šēgaṇḍiyil-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) குற்றவாளியாகக் கருதி காவற் கூடத்தில் வைத்தல் (யாழ்ப்.); to arrest and detain a criminal suspect in the cell.

[சேகண்டி[1] + இல் + வை-.]

சேகம் *šēgam,* பெ. (n.) மரவைரம் (திவா.); hard core of a tree, central part of exogenous plant hardened by age, heart-wood.

க. சேகு; தெ. சே

[சேகு → சேகம்]

சேகரம்[1] *šēgaram,* பெ. (n.) மாமரம் (சூடா.); mango tree. "வெய்யோன்... சேகரமாகி நின்றான்" (கந்தபு. சூரபதுமன்வதை. 473).

சேகரம்[2] *šēgaram,* பெ. (n.) முருங்கை (யாழ். அக.); horse-radish tree.

சேகரி[3] *šēgari,* பெ. (n.) நாயுருவி (மலை.); Indian burr.

சேகன் *šēgaṉ,* பெ. (n.) வீரன்; soldier. "சேகா... குதிரையோ வீறியது" (கலித். 96).

ம. சேகன்

[சேf → சேகன் = குதிரை வீரன். சேவல் = குதிரை.]

சேகில் *šēgil,* பெ. (n.) சிவந்த ஏறு; tawny-coloured bull. "குரூஉச் சேகில் காணிகா" (கலித். 105.).

[சேகு → சேகில்]

சேகிலி *šēgili,* பெ. (n.) வாழை; plantain as having no heart-wood.

[சேகு + இலி. சேகு = மரவயிரம்]

சேகு[1] *šēgu,* பெ. (n.) 1. சிவப்பு; redness. "பாதங்கள் சேகு சேர்தர" (கம்பரா. உலா. 37). 2. சேகம் (பிங்.) பார்க்க; see *šēgam.* 3. திண்மை; solidity, hardness. "சேகு நோன்சிலையாரோடும்" (சீகாளத். பு. கண்ண. 72). 4. குற்றம்; fault. 'சேகறு மலருஞ் சாந்தும்' (கம்பரா. மூலபல. 233). 5. ஐயம்; doubt. "சேகறத் தெருட்டி" (கம்பரா. கும்பக. 127). 6. மரவயிரம்; heart-wood.

ம. சேகு; க. சேகு; தெ. சேகி;

[சேவு → சேகு]

சேகு[2] *šēgu,* பெ. (n.) 1. தழும்பு (யாழ்அக.); scar. 2. செவ்வயிரம்; மரவயிரம்; heart-wood.

E. scar; OF. escare; L. eschara; Gk. escharā.

[சேவு → சேகு]

சேகுணம் *šēguṇam,* பெ. (n.) ஒரு நாடு; a country.

சேகுணர் *šēguṇar,* பெ. (n.) சேகுண நாட்டார் (கலிங்.318); people of šēguṇam.

சேகுவயிரம் *šēgu-vayiram,* பெ. (n.) செம்மையான உறுதி வாய்ந்த நன்கு முற்றிய மரம், மரவயிரம்; ripe, strong-wood.

[சேகு + வயிரம்]

சேகை *šēgai,* பெ. (n.) சிவப்பு; redness. "அண்டத் துயிர்களெலாம் வந்திறைஞ்சச் சேகையாய் மல்குந் திருத்தாள்" (கந்தபு. இரணியன்பு. 14.).

[சே → சேகு → சேகை]

செங்கலம் *šeṅgalam,* பெ. (n.) சேமக்கலம் (இ.வ.); gong used in temples.

ம. சேங்ஙில, சேங்கல, சேங்கில, சேங்ஙல, சேங்ஙலம்

மறுவ. சேகண்டி.

[சே + கலம் – சேக்கலம் → சேங்கலம்]

செங்கன்று *šeṅgaṉṟu,* பெ. (n.) ஆண்கன்று (உ.வ.); bull-calf.

[சே + கன்று]

செங்கார் *šeṅgār,* பெ. (n.) நெல்வகை (A.); a kind of paddy.

[சே + கார்]

செங்கொட்டை *šeṅ-goṭṭai,* பெ. (n.) 1. சேமரத்தின் கொட்டை (பதார்த்த. 1066); marking-nut. 2. மரவகை (மலை.); marking-nut tree.

[சே + கொட்டை]

செங்கொட்டைக்குறி *šeṅ-goṭṭai-k-kuṟi,* பெ. (n.) செங்கொட்டைப் பாலால் இடும் ஆடைக் குறி; marks on clothes made with the juice of the marking-nut.

[செங்கொட்டை + குறி]

சேச்சே *śē-c-cē,* பெ. (n.) *1. அருவருப்புக் குறிப்பு;* expr. meaning 'fie! shocking!', used in contempt. *2. அமர்த்துங் குறிப்பு (வின்.);* meaning 'hush', silence.

சேச்சே = ஒலிக்குறிப்புச் சொல்

சேச்சை *śēccai,* பெ. (n.) *1. பாலை மலர் (மலை.);* silvery-leaved ape flower. *2. முல்லை (மலை.);* trichotomous flowering smooth jasmine.

சேசூரணம் *śē-cūraṇam,* பெ. (n.) செயற்கை நஞ்சு (கௌரி நஞ்சு) (மூ.அ.); a prepared arsenic.

[சே + சூரணம். சே = சிவப்பு]

சேசேயெனல் *śē-śē-y-eṉal,* பெ. (n.) *1.* வெறுப்புக் குறிப்பு; expr. of contempt. *2.* மாடு முதலியன வெருட்டற் குறிப்பு; expr. used in driving as of animals. *3.* கூட்டத்தின் ஒலிக் குறிப்பு; onom. expr. denoting the tumultuous noise of a crowd. "சேசேயெனுஞ் சந்தடிக்குட் சிக்கினேன்" *(விறலிவிடு. 1033).*

சேட்சி *śēṭci,* பெ. (n.) தொலைவு; distance, remoteness. "சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க" *(திருவாச. 3:41).*

[சேண் → சேட்சி]

சேட்டங்கெட்டவேளை *śēṭṭaṅgeṭṭa-vēlai,* பெ. (n.) வறுமைக்காலம் *(வின்.);* hard times, straitened circumstances.

[சேட்டம்¹ + கெட்டவேளை]

சேட்டம்¹ *śēṭṭam,* பெ. (n.) *1.* மேன்மை; eminence, greatness, excellence. 'சேட்ட மல்கிய பாதுகை *(விநாயகபு. 80:278).* *2.* வலிமை; strength, power, capacity. "எழுந்திருக்கச் சேட்டமில்லை" *(யாழ்ப்.).* *3.* செழிப்பு; luxuriance, fertility. 'சேட்டமாய் உண்டாக' *(வின்.).* *4.* அழகு *(வின்.);* bloom, as of countenance.

ம. சேட்டம்

[சேண் → சேடு → சேட்டம். ஒ.நோ. கோண் → கோடு → கோட்டம்]

சேட்டம்² *śēṭṭam,* பெ. (n.) உடல்நலம்; body health. 'மேலுக்குச் சேட்டமில்லை' (உ.வ.).

[சேட்டம்¹ → சேட்டம்³]

சேட்டம்³ *śēṭṭam,* பெ. (n.) ஆடவை (வைகாசி, காருவா (அமாவாசை) கழிந்த முதல்நாள் தொடங்கி மடங்கல் (ஆனி) காருவா (அமாவாசை) முடியவுள்ள திங்கள் சார்ந்த மாதம் *(வின்.);* the third lunar month from the day following the New Moon in the month of Vaigāsi to the end of the New Moon day in the month of Āṉi.

[சேட்டம்¹ → சேட்டம்³]

சேட்டன்¹ *śēṭṭaṉ,* பெ. (n.) *1.* தமையன் (சூடா.); elder brother. *2.* வயதில் மூத்தவன்; senior in age.

ம. சேட்டன்

[சேண் → சேடு → சேட்டம் → சேட்டன்]

சேட்டன்² *śēṭṭaṉ,* பெ. (n.) *1.* பெரியோன்; person of eminence, or superior rank, great man. 'சேட்டராமுனிவோர்களும்" *(விநாயகபு. 75:79).* *2.* உருத்திரருள் ஒருவர் (சி.போ.பா. 2:3, பக். 212); a Rudra.

[சேட்டம் → சேட்டன்.]

சேட்டாதேவி *śēṭṭā-dēvi,* பெ. (n.) மூதேவி (இலக்குமிக்கு மூத்தவள்); goddess of lazyness, as the elder sister of Lakṣmi.

மறுவ. பெரியவள், அக்காள், மூத்தாள்

[சேட்டை → சேட்டா + தேவி.]

சேட்டி *śēṭṭi,* பெ. (n.) தமக்கை (யாழ். அக.); elder sister.

[சேட்டம் (ஆ.பா.) → சேட்டி (பெ.பா.)]

சேட்டுக்குழி *śēṭṭu-k-kuḻi,* பெ. (n.) சேற்றுக் குழி; pit filled with mire, swampy hollow. 'சேட்டுக்குழியிற் சேற்றினுட் புக்கு அழுந்திய. எருமை" *(சிலப். 10:120, உரை).*

[சேறு + குழி → சேட்டுக்குழி]

சேட்டை¹ *śēṭṭai,* பெ. (n.) *1.* மூத்தவள் (திவா.); elder sister, elder woman. *2.* மூதேவி (திவா.) (இலக்குமிக்கு மூத்தவள்); goddess of Misfortune, as the elder sister of Lakṣmī. *3.* பெருவிரல்; thumb. "செறித்துவடந் தர்ச்சனி

மீதே செபிக்க வொலியைச் சேட்டையினால்" (சிவதரு. 3:3).

[சேண் → சேடு = உயரம், பெருமை. சேடு → சேட்டம் = மேன்மை. சேட்டம் → சேட்டன் = பெரியோன், மூத்தவன், தமையன். சேட்டன் (ஆ.பா.) - சேட்டை (பெ.பா.)]

சேட்டை[2] *šeṭṭai*, பெ. (n.) முறம் (திவா.); winnowing fan or basket.

மறுவ. சுளகு

தெ. சேட

சேட்படு-தல் *šēṭ-paḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) எதிர்ப்படுதல்; to meet, approach. "சிறுமி தந்தையுஞ் செல்வனை. . . சேட்பட்டானரோ" (சீவக. 1458).

[சேண் + படு → சேட்படு-.]

சேட்படு-தல் *šēṭ-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. தொலைவாதல் (தூரத்தாதல்); to be at a distance; to be aloof. "செவ்வியில ளென்றல் சேட்பட நிறுத்தல்" (திருக்கோ. 90, அவ.). 2. நெடுங்காலத்ததாதல்; to take a long time. "சென்று சேட்பட்ட தென் னெஞ்சு" (கலித். 143).

[சேண் + படு → சேட்படு-.]

சேட்படுத்து-தல் *šēṭ-paḍuttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) விரைய வரைந்து கோடல் கருதிக் களவுக் கூட்டத்திலுளவாம் இடையூறுகளை எடுத்துமொழிந்து அக்கூட்டத்திற் கியையாது தோழி மறுத்துக்கூறித் தலைவனை அகற்றுதல்; to put off a lover telling him of the insurmountable difficulties in the way of his clandestine meetings and urging him to expedite the marriage. 'இவை யெல்லாங் கூறிச் சேட்படுத்தப் பெறும் என்பது' (திருக்கோ. 97, உரை).

[சேட்படு- → சேட்படுத்து-.]

சேட்படை *šēṭ-paḍai*, பெ. (n.) 1. தொலைவி (தூரத்தி)லிருக்கை; being at a distance. "அப்போர் செய்யச் சேட்படையன்றி யெம்முன் சேர்தியால் வீர" (கந்தபு. சிங்கமுகா. வதை. 194). 2. விரைய வரைந்து கோடல்கருதிக் களவுக் கூட்டத்திலுளவாம் இடையூறுகளை எடுத்து மொழிந்து அதற்கியையாது மறுத்துத் தோழி தலைவனை யகற்றுங் கிளவிக் கொத்து வகை (திருக்கோ. 90, அவ.); theme of the companion-maid putting off the lover of her mistress telling him of the insurmountable difficulties in the way of his clande stine meetings and urging him to expedite the marriage.

[சேட்படு → சேட்படை]

சேட்புலம் *šēṭ-pulam*, பெ. (n.) தொலைவான (தூரமான) இடம்; distant place. "சேட்புலம் படர்ந்தோர்" (அகநா. 61).

[சேண் + புலம்]

சேடக்கோல் *šēḍa-k-kōl*, பெ. (n.) தூக்குக்கோல், எடை அளக்குங்கோல் (G.Sm.D.I, i, 284.); balance on the principle of the steelyard.

[சேடம்[2] + கோல்]

சேடகப்பிண்டி *šēḍaga-p-piṇḍi*, பெ. (n.) கேடகம்பிடிக்கை; holding the shield. "செருவா ளாட்டுஞ் சேடகப் பிண்டியும்" (பெருங். உஞ்சைக். 37:32).

[சேடகம் + பிண்டி.]

சேடகம் *šēḍagam*, பெ. (n.) கேடகம்; shield. "மயிர்ப்புளக சேடகமு மேந்தி" (சூளா. அரசி. 159).

மறுவ. கேடயம், கிடுகு.

[கேடகம் → சேடகம்]

சேடகவட்டம் *šēḍaga-vaṭṭam*, பெ. (n.) வட்டவடிவக் கேடகம்; shield of round shape. "கோலுங் குந்தமுஞ் சேடக வட்டமும்" (பெருங். உஞ்சைக். 46:58).

[சேடகம் + வட்டம்]

சேடம்[1] *šēḍam*, பெ. (n.) 1. பெருமை; greatness. 2. மிகுதி; abundance. 3. மீதி; reminder.

[சேண் → சேடு → சேடம்]

சேடம்[2] *šēḍam*, பெ. (n.) எடை; weight.

சேடல் *šēḍal*, பெ. (n.) 1. பவளமல்லிகை (குறிஞ்சிப். 82.); night-flowering jasmine. 2. உச்சிச் செலுந்தில் என்னும் மரம் (சிலப். 13:153); a kind of tree.

[சேடு² → சேடல்]

சேடவட்டில் *šēḍa-vaṭṭil*, பெ. (n.) வட்ட வடிவ உண்கலம் (யாழ்அக.); plate for food in round shape.

[சேடம் + வட்டில்]

சேடன்¹ *šēḍaṉ*, பெ. (n.) 1. பெரியோன்; great man. "சேடனைக் காணிய சென்று" (சீவக. 2112). 2. கடவுள்; God. "செங்குன்றூர் நின்ற சேடனதாள்" (தேவா. 923, 7). 3. இளைஞன் (பிங்.) youth, lad. "குடந்தைக் கிடந்த சேடர் கொலென்று" (திவ். பெரியதி. 92:2).

[சேடு² → சேடன்]

சேடன்² *šēḍaṉ*, பெ. (n.) 1. தோழன் (பிங்.); companion, associate, friend. 2. பிரிந்திருந்த தலைவன் தலைவியரைச் சேர்த்து வைப்பதில் துணைபுரிபவன்; a companion who helps one in his love-affairs. "ஊடநீர்க்குஞ் சேடரின்" (சீவக. 852)

[சேட்டன் → சேடன்]

சேடா *šēḍā*, பெ. (n.) சடைப்பூரான் (நெல்லை.); centipede.

சேடி¹ *šēḍi*, பெ. (n.) 1. ஏவல் செய்பவள் (பிங்.); female servant. "சேடியர் செவ்வியி னேந்தினர்" (சிலப். 28:64). 2. தோழி (பிங்.); a lady's female companion; maid. 3. இளமையுடையாள் (யாழ்அக.); young woman.

[சேடன் → சேடி]

சேடி² *šēḍi*, பெ. (n.) 1. தெருச்சிறகு (சூடா.); side of a street. 2. விஞ்சையர் உலகு; the world of Vidyādaras. "மாசில் வாலொளி வடதிசைச் சேடி" (மணிமே. 17:21).

[சேடு² → சேடி.]

சேடி³-த்தல் *šēṭṭi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. எஞ்சுதல்; to be left over. "ஓரவிழுஞ் சேடியா தருந்தினன்" (பிரபுலிங். ஆரோகண. 29).

சேடி⁴-த்தல் *šēṭṭi-*, 4 செ.குன்றாவி. (v.t.) குறைத்தல் (வின்.); to deduct, diminish.

[சேடு → சேடி-.]

சேடிகை *šēḍigai*, பெ. (n.) 1. பணிப்பெண்; servant maid. 2. கன்னியோரை (வீமே. உள்.); Virgo in the zodiac.

[சேடி → சேடிகை]

சேடியம் *šēḍiyam*, பெ. (n.) ஊழியம்; service.

[சேடி → சேடியம்.]

சேடு¹ *šēḍu*, பெ. (n.) 1. தோழமை, நட்பு; friendship. 2. ஏவல்; command.

[சேண் → சேடு]

சேடு² *šēḍu*, பெ. (n.) 1. பெருமை (பிங்.); greatness. 2. திரட்சி (பிங்.); roundness, massiveness. 3. உயரம்; height, elevation. "சேடேறு பொழில்" (திவ். பெரியதி. 7. 8:9). 4. நன்மை (பிங்.); goodness, excellence. 5. அழகு (பிங்.); beauty, gracefulness, handsomeness. "சேடியல் வள்ளத்துப் பெய்த பால்" (கலித். 72). 6. இளமை (திவா.); youth, youthfulness. "சேட்டார் மைந்தர்கள்" (பிரமோத். பிரதோ. 13).

ம. சேடு

[ஏண் → சேண் → சேடு]

சேடை¹ *šēḍai*, பெ. (n.) மணமக்கள் மீது மஞ்சள் கலந்த அரிசி (அட்சதை) தூவும் திருமண நிகழ்ச்சி; part of the marriage ceremony which consists in throwing rice over the bride and bridegroom and blessing them. 2. சேடையரிசி பார்க்க; see *šēḍai-y-ariši*. "சேடை நல்கி . . . போற்றி நின்றாள்" (பெரியபு. கண்ணப். 48).

க. சேச; தெ. சேட

[சேடு → சேடை. சேடு = நன்மை]

சேடை² *šēḍai*, பெ. (n.) தொளி யுழவுக்காக நீர்கட்டப்பெற்ற வயல் (இவ.); field filled with water with a view to preparing it for sowing.

[செய் → சேய் → சேண் → சேடு → சேடை]

சேடைகட்டு-தல் *šēḍai-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) சேடைபாய்ச்சு- பார்க்க; see *šēḍai-pāyccu-*.

[சேடை + கட்டு]

சேடைபாய்ச்சு-தல் *šēḍai-pāyccu-*, 5 செ.கு.வி. (v.i.) வயலில் நீர் நிறைத்தல் (தஞ்சை.); to fill fields with water.

[சேடை² + பாய்ச்சு-.]

சேடைபாய்தல் *šēḍai-pāydal,* பெ. (n.) *வயலில் தானே நீர் பாய்கை (தஞ்சை.);* spontaneous flow of water into a field.

[சேடை + பாய்தல்]

சேடையரிசி *šēḍai-y-ariši,* பெ. (n.) *மணமக்கள் மீது இடும் மஞ்சள் கலந்த மங்கல வாழ்த்தரிசி;* rice sprinkled over bride and bridegroom, by the way of blessing them.

[சேடை¹ + அரிசி]

சேடைவை-த்தல் *šēḍai-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) தொளியடித்தல் (இ.வ.); to fill a field with water and preparing it for sowing paddy.

[சேடை² + வை-.]

சேண் *šēṇ,* பெ. (n.) 1. **சேய்மை;** distance, remoteness. "சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு" *(புறநா. 174:2).* 2. **உயரம்** (திவா.); height, loftiness. "சேண வந்தர நோக்கலும்" *(கம்பரா. இராவணன் வதை. 38).* 3. மலைமுகடு (பிங்.); mountain top, summit. 4. **வானம்;** sky. "சேணெல்லாம் புல்லொளி செலுத்தி" *(கம்பரா. சூர்ப்பணகை, 20).* 5. **துறக்கம்** (சுவர்க்கம்); heaven. "சேண் மகபதிக்கு நல்கி" *(கந்தபு. திருநகர. 105).* 6. **அகலம்** (பிங்.) (திருக்கோ.213,உரை); width, spaciousness.. 7. நீளம் (திவா.); length. "சேணுற நீண்டு மீண்டு" (கம்பரா. சூர்ப்பணகை. 46). 8. நெடுங்காலம்; long time. "சுற்றமொடு முழுதுசேண் விளங்கி" *(புறநா. 2:19).*

ம. சேணு

[ஏண் → சேண்]

சேண்டிரவர் *šēṇḍiravar,* பெ. (n.) சேணியன் *(யாழ்.அக.);* weaver.

க. ஜேடரு; தெ. ஜேண்ட்ர

சேண்மரம் *šēṇ-maram,* பெ. (n.) *அழிஞ்சில் மரம் (அக.நி.);* a tree.

[சே → சேண் + மரம்]

சேண *šēṇa,* கு.வி.எ. (adv.) *உயர;* up. "சேண வெரிநிற் சிறந்தானோ டேறினாள்" *(பரிபா. 12:48).*

[சேண் → சேண]

சேணம்¹ *šēṇam,* பெ. (n.) **துறக்கம்;** paradise. "சேணந் தருவது நீறு" *(தேவா. 857, 4).*

[ஏண் → சேண் → சேணம். உயர்ச்சிக் கருத்தினின்று முகிழ்த்த இச்சொல் தவமுதல்வர் சம்பந்தர் காலத்தில் துறக்க உலகினையும் குறித்து வழங்கிய தெனலாம்]

சேணம்² *šēṇam,* பெ. (n.) 1. மெத்தை (பிங்.); cushion, mattress. 2. குதிரை போன்ற விலங்குகளின் முதுகில் அமர்ந்து செல்வதற்குப் போடப்படுகிற தோல் அல்லது துணியினால் ஆன இருக்கை; saddle of cloth or leather pillion.

ம. சேணம்

[சேண் → சேணம்]

சேணாடு *šēṇāḍu,* பெ. (n.) **துறக்கவுலகம்** *(சுவர்க்கம்) (வின்.);* heaven, paradise.

ம. சேணாடு

[சேண் + நாடு]

சேணி *šēṇi,* பெ. (n.) 1. சேடி² பார்க்க; see *šēḍi,*². "விஞ்சையர் சேணி செலவிட்டு" *(சூளா. சயம். 192).* 2. ஏணி (திவா.); ladder. 3. முறை (யாழ்.அக.); order, arrangement. 4. குழு *(யாழ்ப்.);* party of workmen, set of players, company of travellers.

ம. சேணி; Pkt. sēṇi

[சேண் → சேணி]

த. சேணி → Skt. šrēṇi

சேணியர் *šēṇiyar,* பெ. (n.) **வானுலகத்தார்;** a class of celestials. "சேணியர் கோன் தோன்றல்" *(சேதுபு. வேதாள. 14).*

[சேணி → சேணியர்]

சேணியன்¹ *šēṇiyaṉ,* பெ. (n.) 1. **தேவர்கோன், இந்திரன்;** Indraṉ. "சேணியனு மன்றே தெரிந்து" *(தனிப்பா. 1, 60:120).* 2. **விஞ்சையன்;** Vidyādaraṉ.

[சேண் → சேணியன்]

சேணியன்² *šēṇiyaṉ,* பெ. (n.) **ஆடை நெய்வோர்** (E.T. vi. 361); a class of weavers.

ம. சேணியன்; க. சடேசேட; தெ. சேண்ட்று; து. சாடெ, சாட்யெ

சேணுவணன் *šēṇuvaṇaṉ,* பெ. (n.) **கொல்லங் கோவை;** a climbing shrub.

[சேண் + உவணன்]

சேணை[1] *šēṇai,* பெ. (n.) பிறந்த குழந்தையின் வாயினில், தாய்மாமன் தன் விரலால் கொடுக்கும் ஒருவகை மருந்துப் பொருள் மற்றும் இனிப்பு கலந்த நீர்மப்பொருள்; a kind of liquid medicine given to the new born baby by the maternal uncle.

சேணை[2] *šēṇai,* பெ. (n.) தூளி, ஏணை; cradle.

[ஏணை → சேணை]

சேணோன் *šēṇōṉ,* பெ. (n.) 1. மலைவாசி; mountaineer. "சேணோ னகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்" *(மதுரைக். 294).* 2. மரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கும் பரணிலிருந்து விலங்குகள், பயிர்களை அழிக்கா வண்ணம் காப்பவன்; one who keeps watch over a field from a platform on a tree. "மரமிசைச் சேணோன் இழைத்த . . . இதணம்" *(குறிஞ்சிப். 40).*

[ஏண் → சேண் → சேணோன். உயர்ச்சிக் கருத்தினின்று பிறந்த இச்சொல், காலப் போக்கில் மலையில் வாழும் மாந்தரையும் உயர்ந்த விடத்தினின்று காவல்புரிபவரையுங் குறித்து வழங்கலாயிற்று]

சேத்தாளி *šēttāḷi,* பெ. (n.) சேக்காளி (தஞ்சை.) பார்க்க; see *šēkkāḷi.*

மறுவ. கூட்டாளி, நண்பன்.

[சேர் + ஆளி → சேத்தாளி]

சேத்து[1] *šēttu,* பெ. (n.) சிவப்பு (திவா.); red, crimson. "சேத்தகில் புழுகு சந்தம்" *(பாரத. பதினான். 219).*

[சே[4] → சேது → சேத்து]

சேத்து[2] *šēttu,* பெ. (n.) 1. ஒப்பு (திவா.); resemblance, similarity. "நகையொடு சேத்திற் காசு நாறுவ நித்திலம்" (இரகு. நாட்டு. 10). 2. கருத்து (திவா.); thought, idea.

[சே[2] → சேத்து]

சேத்து[3] *šēttu,* பெ. (n.) 1. உறுப்பு (அகநி.); limb, member, section. 2. நெருக்கம் (வின்.); closeness, compactness, thickness.

[சேர் → சேத்து]

சேத்து[4] *šēttu,* பெ. (n.) நிலம் (வின்.); field, plot of ground.

H., U. kēth

[செய் → சேய் → சேத்து]

சேத்து[5] *šēttu,* பெ. (n.) அசைச்சொல்; an expletive (செ.அக.).

[சே → சேத்து]

சேதக்காலன் *šēda-k-kālaṉ,* பெ. (n.) கெடுதிக்காரன் (யாழ்ப்.); mischievious person.

[சேதம் + (காரன் →) காலன்]

சேதகம்[1] *šēdagam,* பெ. (n.) சிவப்பு (பிங்.); red.

[செம் → சே → சேது → சேதகம்]

சேதகம்[2] *šēdagam,* பெ. (n.) சேறு (திவா.); mud, slush. "குங்குமச் சேதகந் திமிர" (கம்பரா. வரைக்காட்சி. 56).

[சேறகம் (சேறு + அகம்) → சேதகம்]

சேதபாதம் *šēda-pādam,* பெ. (n.) கூத்து வகையுளொன்று (யாழ். அக.); a kind of dance.

[சேதம் + பாதம்]

சேதம் *šēdam,* பெ. (n.) 1. புயல், வெள்ளம் போன்றவற்றால் உயிர், பொருள் முதலியவற்றிற்கு ஏற்படும் அழிவு; loss of life, property, things. வெள்ளத்தால் பயிர்கள் சேதம். 2. கேடு (சூடா.); damage, ruin, waste, injury. 3. பிரிப்பு; splitting, dissecting. 4. வெட்டு; severance, cutting off. தலைச்சேதம். 5. துண்டு; part, piece, portion, section. 6. கீழ்வாயிலக்கம் (வின்); denominator of a fraction. 7. கூத்தின் ஓர் உறுப்பு (சிலப். 3:13. உரை, பக். 89); an element in dancing.

ம. சேதம்

[ஏதம் → சேதம். ஏதம் = கேடு குற்றம்]

சேதனகி *šēdaṉagi,* பெ. (n.) கடுக்காய் (சங்.அக.); chebulic myrobalan.

சேதனம் *šēdaṉam,* பெ. (n.) 1. பிளவு செய்கை; cutting, splitting. "சேதனப் படைஞரோடும்" *(பாரத. பதினே. 4.).* 2. ஆண்குறியின் முன்றோலை எடுக்கும் விழா; circumcision.

[சேதம் → சேதனம்]

சேதா *šēdā*, பெ. (n.) சிவப்பு ஆன்; tawny coloured cow. "சிலம்பின் மேய்ந்த சிறு கோட்டுச் சேதா" *(நற். 359).*

[சேது + ஆ - சேதா = செந்நிற ஆன்]

சேதாம்பல் *šēdāmbal*, பெ. (n.) செவ்வாம்பல் (திவா.); red Indian water-lily. "சேதாம்பற் போதனைய செங்கனிவாய்" *(கம்பரா. நகர்நீங். 101).*

[சேது + ஆம்பல்]

சேதாரம்[1] *šēdāram*, பெ. (n.) தேமா (சூடா.); sweet mango.

சேதாரம்[2] *šēdāram*, பெ. (n.) *1.* இழப்பு; waste, as of commodities in traffic; loss, damage, as of crops by cattle trespassing. *2.* பொன்னாலேனும் வெள்ளியினாலேனும் நகை முதலியன செய்யும்போது உண்டாகும் தேய்மான இழப்பு; wastage of gold or silver in making jewels, due to filing, etc. புத்தாண்டை முன்னிட்டுச் செய்கூலி, சேதாரம் இன்றி மலிவாகப் பொன் கிடைக்கும் (உ.வ.).

ம. சேதாரம், சேதவாரம்; க. சேதார; தெ. சேதாரமு

[சேதம் + ஆரம் - சேதாரம்]

சேதி[1]**-த்தல்** *šēdi-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* வெட்டுதல்; to cut off, divide, sever, dissect. "தாதைதனைத் தாளிரண்டுஞ் சேதிப்ப" *(திருவாச. 15:7). 2.* அழித்தல்; to destroy. "மேலுலகுஞ் சேதித்தீர்" *(உபதேசகா. சூராதி. 50).*

L. caedere

[சேதம் → சேதி-.]

சேதி[2] *šēdi*, பெ. (n.) *1.* செய்தி; news, occurence. "இந்தச் சேதி யுரைக்க" *(இராமநா. பாலகா. 13). 2.* தன்மை; nature. "வாவறுாங்குகின்ற சேதியென்ன" *(உத்தரரா. சம்புவன். 32).*

ம. சேதி

[செய்தி → சேதி]

சேதி[3] *šēdi*, பெ. (n.) *1.* 56 நாடுகளுள் ஒன்று; Chēdi, the region around Bilaspur and Jubbalpur, one of 56 countries. "சேதிப் பெருமான் சிசுபாலன்" *(பாரத. திரௌபதி. 42). 2.* திருக்கோவிலூர்ப் பகுதியான சேதிநாடு; part of Thirukkōvilūr country Šēthu nāḍu. "சேதி நன்னாட்டு நீடு திருக்கோவலூரில்" *(பெரியபு. மெய்ப்பொருள். 1). 3.* சேதியை ஆண்ட அரச குலம்; the dynasty that ruled Chēdi. "சேதிமா மரபோன்" *(பாரத. குருகுல. 104).*

சேதிகை *šēdigai*, பெ. (n.) மூங்கிலுழக்கு, நாழி முதலியவற்றின் அடிப்பகுதியால் குதிரை உடலிற் குத்தும் வண்ணத் தொழில்; coloured marking on a horse, made with the bottom of a bamboo measure. "வெதிருழக்கு நாழியாற் சேதிகைக் குத்தி" *(கலித். 96:27).*

சேதிநாடு *šēdi-nāḍu*, பெ. (n.) திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்ட நடுநாடு (பெரியபு. மெய்ப்பொருள்.1); Naḍu-nāḍu in Tamil country, having Tirukkōvalūr as its capital.

[சேதி + நாடு.]

சோழநாட்டுக்கும் தொண்டை நாட்டுக்கும் இடையில் இருந்த பகுதி நடுநாடு. இந்நடு நாட்டின் ஒரு பகுதி சேதி நாடு. சேதியர் மரபினரால் ஆளப்பட்டதால் சேதிநாடு எனப்பட்டது.

சேதிபன் *šēdiban*, பெ. (n.) *1.* சேதிநாட்டரசன்; the king of Chēdi. "சேதிபப் பெரும்பகை செகுத்தே" *(பாரத. இராசசூய. 152). 2.* நடு நாட்டரசன்; the king of Chēdi-nāḍu. "சேதியர் நற்கோவலூர் மலாட மன்னர்' *(புராணசாரம், 8, பெரியபு. பதிப்.).*

[சேதி → சேதிபன்.]

சேதிமம் *šēdimam*, பெ. (n.) சேதியம் (பிங்.) பார்க்க; see *šēdiyam.*

சேதிமரம் *šēdi-maram*, பெ. (n.) சமணக் கோயிலிலுள்ள புனிதமரம்; sacred tree in a Jaina temple. "சேதிமரங்களெட்டு" *(மேரு மந். 1063).*

சேதியம் *šēdiyam*, பெ. (n.) *1.* சமண புத்தரின் பள்ளி; Jain or Buddhist temple. "பகவற் கியற்றிய சேதியந் தொழுது" *(மணிமே. 28:175). 2.* தேவாலயம் (பிங்.); temple, shrine.

சேதிராயர் *šēdi-rāyar*, பெ. (n.) *1.* தமிழகத்தின் நடுநாட்டரசர்; the king of Naḍu- nāḍu in Tamiḷ country. *2.* திருவிசைப்பாவாசிரியருள் ஒருவரான சிவனடியார்; a Šaiva saint, one of the authors of Tiru-v-išaippā. *3.* கள்ளர் பட்டங்களிலொன்று; a title among Kaḷḷar caste.

[சேதி + (அரையர் →) ராயர் - சேதிராயர். இவர் திருக்கோவலூர் மலையமான் வழித்தோன்றலுள் ஒருவராவர்]

சேது *šēdu,* பெ. (n.) சிவப்பு (சூடா.); red.

[சே → சேது]

சேது² *šēdu,* பெ. (n.) 1. பாலம், செய்கரை (பிங்.); causeway, bridge, dam. "சேதுவை மேடுருத்தி வீதி சமைப்போம்" (பாரதி.). 2. இராமனது சேனைகள் இலங்கை செல்லுதற்கென இயற்றப் பெற்றதாகக் கருதப்படும் திருவணை; Adam's Bridge, a reef of sunken rocks connecting the north of Srilanka with the main land of India, 30 ft, wide with 3 or 4 ft. of water above it at high tide said to have been constructed to enable Rama's forces to cross over to Lanka. "சேடனென்னப் பொலிந்தது சேதுவே" (கம்பரா. சேதுப. 66). 3. இராமேசுவரம்; the island of Rāmēswaram. "சேதுவி னிராமநாதனை நிறுவிய காதையை" (சேதுபு. அவை. 1). 4. தனுக்கோடியில் உள்ள புனித நீராடுமிடம்; sacred bathing - ghat at Dhanuṣkōḍi.

[செய் → (சேய்) → சேது. செய் = செய்தது]

இராமேசுவரத் தீவின் கிழக்கு முனையான தனுக்கோடியிலிருந்து, இலங்கைத் தீவின் கிழக்கு முனையான மன்னார் துறையை இணைக்கும் நீர்ப்பகுதி ஆடம் பாலம் எனப்படும். சாற்றொப்ப 19மைல் நீளமும், 10 முதல் 12 அடி ஆழமும் உடையது. கடலடிப் பகுதி பவளப் பாறையாக அமைந்தது. வால்மீகி தென்னிந்தியப் பகுதியில் சுற்றுப் பயணம் செய்த காலத்தில், 4 அல்லது 5 அடி ஆழம் மட்டுமே இருந்திருக்கும். அக்காலத்தில் பாம்பன் பகுதி முழுதும் தரையாக இருந்தது. ஆழம் குறைவாக இருந்ததால், கற்பாறை கொண்டு மேடிட்டுப் பாலமாக்கும் எண்ணம் அவருக்குத் தோன்றியதெனலாம்

சேதுகாவலன் *šēdu-kāvalaṉ,* பெ. (n.) சேதுபதி பார்க்க; see šēdu-padi. 'சேதுகாவலன் திருவணைகாவலன்' (கல்.).

[சேது + காவலன்]

சேதுபதி *šēdu-padi,* பெ. (n.) இராமநாதபுர மன்னரின் பட்டப்பெயர்; hereditary title of the Rāja of Ramnad, as being guardians of Adam's Bridge. 'சேதுபதி ரகுநாதன்' (ஒருதுறைக்.)

[சேது + பதி]

சேதுபுராணம் *šēdu-purāṇam,* பெ. (n.) சற்றேறக்குறைய கி.பி. 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நிரம்பவழகிய தேசிகராற் பாடப் பெற்ற இராமேசுரப்புராணம்; a purāṇa on the shrine of Rāmēšvaram by Niramba-v-alagiya dēšigar. prob. 16th. c. "புகலு நூற்பெயர் சேதுபுராணமே" (சேதுபு. அவை. 10).

[சேது + புராணம்]

Skt. purāṇa → த. புராணம்

சேது அணைகட்டிய வரலாறு முதல் இராமேசுவரத்திலுள்ள நீராடும் துறையின் சிறப்பு வரை பல்வேறு செய்திகளைக் கூறும் சிறந்த நூல்.

சேதுரான் *šēduraṉ,* பெ. (n.) சேதிராயர்-3 (இவ.) பார்க்க; see *šēdirāyar-3.*

[சேது + (அரையன்) ராயன் → சேதுராயன் → சேதுரான்]

சேந்தங்கண்ணனார் *šēndaṅ-kaṇṇaṉār,* பெ. (n.) கழகக் காலப்புலவர்; a Šaṅgam poet.

[சேந்தன் + கண்ணனார்.]

இவரின் தந்தை பெயர் சேந்தன் என்பது. இவரின் இயற்பெயர் கண்ணனார். இவர் நற்றிணையில் 54ஆம் பாட்டையும், அகநானூறில் 350ஆம் பாட்டையும் பாடியுள்ளார்.

சேந்தம்பூதனார் *šēndam-būdaṉār,* பெ. (n.) அகநானூறு 84, 207; குறுந்தொகை 90, 226, 247; நற்றிணை 69, 261 ஆகிய பாடல்களை இயற்றியவர்; author of the following verses: Aganāṉūṟu 84, 207; Kuṟundogai 90, 226, 247 and Narriṇai 69, 261.

[சேந்தன் + பூதனார்]

சேந்தன் *šēndaṉ,* பெ. (n.) 1. முருகன்; Murugaṉ. "சூர்தடிந்திட்ட சேந்தர்" (தேவா. 942, 6). 2. திவாகரஞ் செய்வித்த அம்பர்த் தலைவன்; patron of the author of Tivāgaram, chief of Ambar. 3. சேந்தனார் (திருவிசைப்.) பார்க்க; see *šēndaṉār.* 4. கடைக்கழகக்கால அரசன்; a king in Šaṅgam age. இவன் பரணரால் குறுந்தொகை 258ல் பாடப்பெறுபவன்.

[சேத்து → சேந்து → சேந்தன்]

சேந்தன்கீரனார் *šēndaṉ-kīraṉār,* பெ. (n.) குறுந்தொகை 311ஆம் பாடலை

இயற்றியவர்; author of verse no. 311 of Kurundogai.

[சேந்தன் + கீரனார். சேந்தன் – தந்தையின் பெயர்.]

சேந்தன்றிவாகரம் *sēndaṉṟivāgaram,* பெ. (n.) சேந்தன் என்ற புரவலரால் புரக்கப் பெற்றுத் திவாகரரால் இயற்றப் பெற்ற நிகண்டு நூல்; Tivāgaram, a Tamil lexicon composed under the patronage of Šēndaṉ.

மறுவ. ஆதிதிவாகரம்

[சேந்தன் + திவாகரம்]

சேந்தனார் *šēndaṉār,* பெ. (n.) திருவிசைப்பா வாசிரியருள் ஒருவரும், திருப்பல்லாண்டு இயற்றியவருமாகிய சிவனடியார்; a Šaiva saint author of Tiru-p-pallāṇḍu and one of the author of Tiru-v-išaippā.

[சேந்தன் → சேந்தனார்]

இந்நூல் 12 தொகுதிகளையுடைது. 9500 சொற்கள் பொருள் விளக்கம் செய்யப் பட்டுள்ளன. இதில் 384 பலபொருள் ஒரு சொற்களாகும். இந்நூல் கி.பி. 1835ல் வெளியிடப்பட்டது.

சேந்தி[1] *šēndi,* பெ. (n.) 1. சுவரில் அமைந்த பரண்; loft. 2. துலாக்கட்டைகளின் மீது பலகைகளைச் சேர்க்கும்போது இடைவெளி தெரியாமலிடும் பலகை (நாஞ்.); thin reapers running across the joints on which planks are laid. 3. களஞ்சியம் (மதுரை); granary.

ம. சேந்தி

[சேர் → சேந்து → சேந்தி]

சேந்தி[2] *šēndi,* பெ. (n.) கள்; toddy. சேந்திக்கடை (W.G.).

து. சேந்தி; U. sēndi.

[சேந்தி' → சேந்தி]

சேந்து[1]**-தல்** *šēndu-,* 5 செகுன்றாவி. (v.t.) 1. கயிறு முதலியவற்றை இழுத்தல் (வின்.); to draw, as a rope running over a pulley. 2. கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்தல்; draw water from a well. அவள் கிணற்றிலிருந்து தண்ணீரைச் சேந்தினாள் (உவ.).

க. சேது; தெ. சேது

[சேர் (=திரட்டுதல்) → சேந்து-.]

சேந்து[2] *šēndu,* பெ. (n.) 1. சிவப்பு (பிங்.); redness. 2. தீ (யாழ். அக.); fire. "சேந்தினடைந்த வெலாஞ் சீரணிக்க (அருட்பா, 1, நெஞ்சறி, 689). 3. அசோகு (மலை.); mast-tree.

ம. சேந்து

[சேந்தன் → சேந்து. ஒ.நோ. வேந்தன் → வேந்து]

சேந்துகிணறு *šēndu-kiṇaṟu,* பெ. (n.) இறை கிணறு (இ.வ.); draw well.

[சேந்து ' + கிணறு]

சேந்துபந்தம் *šēndu-pandam,* பெ. (n.) அரக்கு (சங்.அக.); sealing-wax.

[சேந்து² + பந்தம்]

சேந்துவலை *šēndu-valai,* பெ. (n.) படகிலிருந்து சேந்தி இழுக்கப்படும் வலை; a kind of fishing net.

[சேந்து ' + வலை]

சேந்தை *šēndai,* பெ. (n.) கட்டிலின் மேற்கட்டி (யாழ்ப்.); canopy, tester.

[சேந்து ² → சேந்தை]

சேப்பங்கிழங்கு *šēppaṅ-gilaṅgu,* பெ. (n.) உணவுக்குப் பயன்படும் வழுவழுப்புத் தன்மை கொண்ட பழுப்பு நிறக் கிழங்கு (M.M. 402); Indian kales root.

[சேப்பை + கிழங்கு. சேம்பு பார்க்க]

சேப்பு[1]**-தல்** *šēppu-,* 5 செகுவி. (v.i.) தங்குதல்; to abide, remain "அணங்குடைத் தடக்கையர் தோட்டி சேப்பி" (பதிற்றுப். 62).

E. stay; OE. stadg; OF. estayer.

[சே² → சேப்பு-.]

சேப்பு[2] *šēppu,* பெ. (n.) 1. சிவப்பு; red, redness. "ஊடலிற் செங்கண் சேப்பூர" (பரிபா. 7:70). 2. சிவப்புக் கல்; red gem.

ம. சேப்பு; க. கெம்பு; பட. கெப்பு

[செம் → சே → சேப்பு]

சேப்பு[3] *šēppu,* பெ. (n.) தாமரைக் கிழங்கு; root of the lotus. "பாசடைச் சேப்பினுள்" (கலித். 74).

[செம் → சே → சேப்பு]

சேப்பை *šēppai,* பெ. (n.) சேம்பு பார்க்க; see *sēmbu.*

சேபாலம் *šēbalam*, பெ. (n.) சேங்கொட்டை (மலை.); marking-nut.

[சே + பாலம்]

சேபாலிகை[1] *šē-bāligai*, பெ. (n.) கருநொச்சி (மூ.அ.); willow-leaved jusiticia.

சேபாலிகை[2] *šē-baligai*, பெ. (n.) சேபாலம் பார்க்க; see *šēbalam*.

சேம்பி *šēmbi*, பெ. (n.) மருதாணி; fragrant nail dye. (சா.அக.).

சேம்பு *šēmbu*, பெ. (n.) *1.* நீர்ப்பாங்கான இடங்களில் வளரும் பெரிய இலைகளோடு கூடிய, கறிக்குதவும் கிழங்கைத்தரும் ஒரு வகைச் செடி; Indian kales. "சேம்புகால் பொர" (கம்பரா. நாட்டு. 35). *2.* வறட்சேம்பு; a garden plant.

வ. கேமுக



சேம்பு

சேம்புகா *šēmbugā*, பெ. (n.) பொன்னூமத்தை; yellow dalura (சா.அக.).

சேம்பை *šēmbai*, பெ. (n.) சேம்பு (மலை.) பார்க்க; see *šēmbu*.

[சேம்பு → சேம்பை]

சேமக்கலம் *šēma-k-kalam*, பெ. (n.) சேகண்டி; gong used in temples.

ம. சேமங்கலம்

[சேமம் + கலம்]

சேமக்காரன் *šēma-k-kāran*, பெ. (n.) *1.* காவற்காரன் (யாழ்ப்.); guard, watchman. *2.* நம்பிக்கையுள்ளவன்; trust-worthy, confidential person. *3.* சிக்கனமுள்ளவன்; thrifty, careful person. *4.* வருமுன் காப்போன் (யாழ். அக.); prudent, cautious man.

[சேமம் + காரன்]

சேமக்கிழங்கு *šēma-k-kilangu*, பெ. (n.) சேப்பங்கிழங்கு; Indian kales root.

[சேப்பங்கிழங்கு → சேமக்கிழங்கு]

சேமக்குழல் *šēma-k-kulal*, பெ. (n.) எப்பொழுதும் திறந்திருக்கும் கன்னக் குழாயின் ஓர் பகுதி; that portion of the eaustachien tube which is always open-safety tube.

சேமகாலம் *šēma-kālam*, பெ. (n.) செழிப்புக் காலம்; time of prosperity or plenty, opp. to šāma-kālam (செ.அக.).

[சேமம் + காலம்]

சேமங்கலம் *šēmangalam*, பெ. (n.) சேமக்கலம் (இ.வ.) பார்க்க; see *šēma-k-kalam*.

ம. சேமங்ஙலம்

சேமங்கொள்(ளு)-தல் *šēman-gol-*, 16 செ.கு.வி. (v.i.) பிணத்தை வைத்து அழகுபடுத்தச் சாணத்தால் இடத்தைத் தூய்மைப்படுத்துதல் (யாழ்ப்.); to smear a place with cowdung in order to lay out a corpse and dress it for the funeral.

[சேமம் + கொள்-.]

சேமஞ்செய்-தல் *šēmañ-jey-*, 1 செ.குன்றாவி. (v.t.) மூடி வைத்தல்; to keep covered, protected. "செவிகளைத் தளிர்க்கையாலே சிக்குறச் சேமஞ்செய்தாள்" (கம்பரா. சடாயுவுயிர். 69).

[சேமம் + செய்-.]

சேமண்டன் *šēmandan*, பெ. (n.) தந்தையிலி; one who has lost his father.

[சேமம் → சேமண்டன்]

சேமணி[1] *šē-mani*, பெ. (n.) மாட்டுக்கழுத்திற் கட்டும் மணி (யாழ்.அக.); bell tied to the neck of a cow.



சேமணி

[சே + மணி]

சே = எருது. எனினும் பொதுவாக பெற்றத்தையும் எருதையும் குறிக்கும்.

சேமணி[2] *šēmaṇi*, பெ. (n.) சேகண்டி; gong used in temples.

[சேமம் + மணி]

சேமத்தில்வை-த்தல் *šēmattil-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* பாதுகாப்புச் செய்தல் *(வின்.)*; to keep in safe custody. *2.* கோணிலை சரியற்ற குழந்தைகளைக் கணியன் (சோதிடன்) சொற்படி பெற்றோர் காணாதவாறு சிலகாலம் மறைத்து வைத்தல்; to keep away from parents children born under an unlucky star for a certain time fixed by astrologer.

[சேமத்தில் + வை-.]

சேமத்தேர் *šēma-t-tēr*, பெ. (n.) வைப்புத்தேர்; war-chariot kept in reserve. "சேயிரு மணிநெடுஞ் சேமத்தேர்" *(கம்பரா. யுத்த. முதற்போர். 105).*

[சேமம் + தேர்]

சேமதருமம் *šēma-darumam*, பெ. (n.) நிலை நிற்கும் வண்ணம் செய்யும் அறம் *(வின்.)*; deeds of lasting benefit, opp. to māyā-darumam.

[சேமம் + தருமம்]

சேமநலநிதி *šēma-nalanidi*, பெ. (n.) பொது நலனுக்காகச் சேமித்து வைக்கப்படும் பணம்; welfare fund. தொழிலாளர் சேம நலநிதி.

[சேமம் + நலநிதி]

சேமநிதி *šēma-nidi*, பெ. (n.) சேமப்பொருள் பார்க்க; see *šēma-p-poruḷ.*

[சேமம் + நிதி]

சேமப்படை[1] *šēma-p-paḍai*, பெ. (n.) வைப்புப் படை; army and weapons kept in reserve.

[சேமம் + படை]

சேமப்படை[2] *šēma-p-paḍai*, பெ. (n.) தேமல்; a yellow discolouration of the skin occuring in patches *(சா.அக.)*.

[சே → சேமம் + படை]

சேமப்பொருள் *šēma-p-poruḷ*, பெ. (n.) *1.* வைப்புப் பொருள்; riches kept in reserve, reserve funds. *2.* தன் நன்மைக்காகப் பிறரிடம் வைக்கப்பட்ட பொருள்; deposit to meet one's needs in the future. *3.* புதையல் *(யாழ்.அக.)*; treasure-trove.

[சேமம் + பொருள்]

சேமப்பிள்ளை *šēma-p-piḷḷai*, பெ. (n.) அரசருடைய மெய்க்காப்பாளன்; body-guard of the king. 'வீரபாண்டிய தேவற்கு 4ஆவது நாயனார் சேமப்பிள்ளையார் அகம்படி முதலிகளில்' *(புதுக்கோட்டைக் கல். 430)*

[சேமம் + பிள்ளை]

சேமம்[1] *šēmam*, பெ. (n.) *1.* நல்வாழ்வு; safety, well-being, welfare. "சேமமே யுன்றனக்கென் றருள்செய்தவன்" *(தேவா. 1136, 9). 2.* இன்பம் *(சூடா.)*; happiness, pleasure.

Skt. kṣēma

[ஏமம் → சேமம்]

தங்குதலை அல்லது குடியிருத்தலைக் குறிக்கும் 'க்ஷி' என்னும் முதனிலையை வடவர் மூலமாகக் காட்டுவது பொருந்தாது.

சேமம்[2] *šēmam*, பெ. (n.) *1.* காவல் *(சூடா.)*; protection, preservation, security, defence, safe guard. "சேம வன்மதில்" *(தேவா. 93, 4). 2.* அரணான இடம்; stronghold, secure place. "காப்புச் சிந்தைசெய்துவே றிடத்தொரு சேமத்தின் வைத்தார்" *(பெரியபு. அமர்நீதி. 16). 3.* சிறைச் சாலை; prison, dungeon. "சேமந் திறந்தனை. . . எய்துதி" *(உபதேசகா. சிவநாம. 90). 4.* படைத் தொழில் ஐந்தனுள் பகைவரது அம்பு தன்மேற்படாமற் காக்குஞ் செயல்; act of a warrior protecting himself against hostile arrows; one of pañja-kiruttiyam. 'எய்தாற் கருவியாலே மறைத்துச் சேமஞ் செய்யு மாறும்' *(சீவக. 1676, உரை.). 5.* சவக்காப்பு *(வின்.)*; binding and shrouding a corpse for burning or interment.

[ஏமம் → சேமம்]

சேமம்[3] *šēmam*, பெ. (n.) *1.* புதைபொருள்; hoard, treasure-trove. "சேமம்போ வெடுப்பவர்" *(பிரபுலிங். சித்தரா. 49). 2.* ஓலைச் சுவடியின் கட்டு; tying of ola book. "புத்தகந்தன்னைச் சேமநீக்கின னோதினான்" *(திருவாத. பு. திருவடி. 20)*

[ஏமம் → சேமம்]

சேமம்[4] *šēmam*, பெ. (n.) பலவகை அணுக்களின் சேர்க்கை; a unit of a group of atoms.

Skt. kshēma

[சேர்மம் → சேமம்]

சேமம்போகிப்போகு-தல் *sēmam-bōgi-pōgu-*, 5 செ.கு.வி. (v.i.) **பாதுகாப்பு இல்லாத போது களவு போகுதல்;** stolen when there was no proper security arragements. நாயனார் கோயில் எழுந்தருளுகிற நாயனார் இத்தேவர்க்கு ஏழாவது நாளில் சேமம் போகிப் போகையில் பின்பு இக்கோயிலுக்கு எழுந்தருளி விநாயகரையும் எழுந்தருளிவித்தான்" இராசராசன் 2, கி.பி. 1160, (தெ.க.தொ.8; கல். 201).

[சேமம் + போகிப் போகு-.]

சேமரம் *sē-maram*, பெ. (n.) 1. அழிஞ்சில் (பிங்.); sage leaved alangium. 2. சேங்கொட்டை (மலை.); marking nut tree.

[சே + மரம்]

சேமவில் *sēma-vil*, பெ. (n.) **உற்றகாலத்து உதவும்படி துணையாகக் கொள்ளும் வில்** (சிலப். 2:42, உரை.); bow kept in reserve.

[சேமம் + வில்]

சேமவைப்பு *sēma-vaippu*, பெ. (n.) சேமப்பொருள் பார்க்க; see *sēma-p-poruḷ*. "இராமானுச னென்றன் சேமவைப்பே" (திவ். இராமானுச. 22).

[சேமம் + வைப்பு]

சேமறி *sēmaṟi*, பெ. (n.) மாட்டின் புணர்ச்சி (வின்.); copulation of bull and cow.

[சே + மறி]

சேமன் *sēmaṉ*, பெ. (n.) போக்கிலி; cunning fellow; rogue. "இந்தச் சேமனை நீர். . . வெருட்டிடும்" (விறலிவிடு. 860).

[சோம்பன் → சோமன் → சேமன்]

சேமனம் *sēmaṉam*, பெ. (n.) உணவு; food.

[சேமம் + சேமனம்]

சேமனவம் *sēmaṉavam*, பெ. (n.) சிவந்த மணி (யாழ். அக.); red stone, ruby.

சேமா *sēmā*, பெ. (n.) எருது; bull. "சேமா போற் குப்புறாஉம்" (நாலடி., 377).

[சே + மா. சே = எருது. மா = விலங்கு; ஒ.நோ: ஆமா]

சேமாளைச் சம்பா *sēmāḷai-c-cambā*, பெ. (n.) சம்பா நெல்வகை (யாழ். அக.); a kind of šambā paddy.

[செம்பாளை → சேமாளை + சம்பா]

சேமாறி *sē-māṟi*, பெ. (n.) விதையடிப்போன் (நன். 138, மயிலை); gelder. 'எருதுகளுடைய பீசத்தை சேமாறிகளால் உடையும்படி செய்விக்கும் பொல்லாதவனும்" (சிவதரு. பாவ. 73, உரை.).

[சே + மாறி. மாறு → மாறி.]

சேமாறு-தல் *śe-māṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) எருதுக்கு விதையடித்தல் (இலக். வி. 45, உரை); to geld a bull.

[சே + மாறு - சேமாறு-.]

சேமி-த்தல் *śēmi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. போற்றி வைத்தல்; to keep secure, preserve in safety. "தனதானியங்கள் சேமித்தல்" (விதான. பஞ்சாங்க. 19). 2. புதைத்து வைத்தல் (சூடா.); to hide underground, bury. 3. நிறைத்தல்; save money, water, etc., store blood, etc., for emergency. ஏரிகளை ஆழப்படுத்தி அதிகத் தண்ணீரைச் சேமித்து வைக்கலாம். 4. எரிபொருள் முதலானவற்றைக் குறைந்த அளவில் பயன்படுத்திச் சிக்கனப் படுத்துதல்; conserve energy, fuel, etc., எரிபொருளைச் சேமிக்கும் நுட்பத்தைத் தொழிற்சாலைகள் மேற்கொள்ள வேண்டும்.

[சேமம் → சேமி-.]

சேமிப்பாவணம் *śēmippāvaṇam*, பெ. (n.) அரசு நேரடியாகவோ அஞ்சலகம் முதலிய அமைப்புகள் வழியாகவோ ஒருவர் சேமிப்பாகச் செலுத்தியத் தொகையைக் குறிப்பிட்ட கால முடிவில் வட்டியுடன் திருப்பித் தருவதாக எழுத்துமூலம் உறுதியளித்துத் தரும் ஆவணம்; savings certificate. தேசிய சேமிப்புப் பத்திரம்/ அஞ்சலகச் சேமிப்புப் பத்திரம்.

[சேமிப்பு + ஆவணம்]

சேமிப்பு *śēmippu*, பெ. (n.) 1. எதிர்காலத் தேவை கருதி வங்கி முதலியவற்றில்சிறிது சிறிதாகச் சேர்த்து வைத்திருக்கும் பணம்; savings in a bank, etc. திடீர் செலவுகளுக்குச் சேமிப்புதான் கைகொடுக்கிறது. 2. எதிர்காலத் தேவை கருதி உணவுப் பொருள் அரத்தம் முதலிய வற்றைப் பாதுகாப்பாக உரிய இடத்தில் சேர்த்தல்; store of paddy etc; stock. நெல் சேமிப்புக்கிடங்கு, அரத்தச் சேமிப்பு நிலையம்.

[சேமி → சேமிப்பு]

சேமிப்புப்பத்திரம் *śēmippu-p-pattiram*, பெ. (n.) சேமிப்பாவணம் பார்க்க; see *śemippāvaṇam*.

[சேமிப்பு + பத்திரம்]

Skt. Patra → க. பத்திரம்

சேமிப்புவங்கி *šēmippu-vaṅgi*, பெ. (n.) சேமிப்புப் பொருளகம்; savings bank.

[சேமிப்பு + வங்கி]

சேமை *šēmai*, பெ. (n.) சேம்பு,1 பார்க்க; see *šēmbu,1.*

[சேப்பை → சேமை]

சேய்[1] *šēy*, பெ. (n.) 1. சிவப்பு; red ness. "சேயுற்ற கார்நீர் வரவு" (பரிபா. 11:114). 2. செவ்வாய் (பிங்.); Mars. 3. செந்நிற முருகன்; God Murugan. "சேஎய் குன்றம்" (பரிபா. 6:69).

[செய்[4] → சேய்]

சேய்[2] *šēy*, பெ. (n.) 1. மகன்; son. "தயரதன் சேய்" (திவ். பெரியதி. 3.10:6). 2. இளமை (திவா.); juvenility, youth. 3. பெருமை; greatness. "சேயுடம் பெய்துவை" (சீவக. 943) 4. முருகனை யொத்த மறவன், தலைவன்; cheif, lord. "பாரதப் போர் செற்றானுங் கண்டாயிச் சேய்" (நள. சுயம்வ. 137). 5. குழந்தை; child. தாயும் சேயும் நலம்.

E. son; OE. sunu; OS. O.tris. sunu; ON. sonr; Dan. Swed. son; M.Du. sone; Du. zoon; OHG. sunn, son; MHG. sun; G. sohn; Goth. sunus; OG. sūnuh; Toch. A. se; Torcvh. B. soya; anestic: hunush; O. slov: synā; Lita: sunus; Gk. tos; Arm. ustre; Ogr. suta.

[செம் → சேய்]

சேய்[3] *šēy*, பெ. (n.) 1. தொலைவு (சூடா.); distance, remoteness. 2. நீளம் (பிங்.); length. 3. மனையிடம் (யாழ்.அக.); house, site. 4. மூங்கில் (மலை.); bamboo.

[சேண் → சேய்.]

சேய்குன்றம் *šēy-kunram*, பெ. (n.) முருகக் கடவுள் வாழ்விடமாகிய திருப்பரங்குன்றம்; Tirupparaṅgunram, as a residence of Murugan. "நீரிற்றுவண்ட சேஎய் குன்றம்" (பரிபா. 6:69).

[சேய்[2] + குன்றம்]

சேய்த்து[1] *šēyttu*, பெ. (n.) செம்மை நிறமுடையது; that which is red. "அறங்கரிது சேய்த் தென்ப தியாது மறியார்" (சீவக. 2622).

[சேய்[1] → சேய்த்து]

சேய்த்து[2] *šēyttu*, பெ. (n.) 1. தொலைவானது; that which is at a distance. "சேய்த்தானுஞ் சென்று கொளல் வேண்டும்" (நாலடி, 218). 2. நீளமானது (வின்.); that which is long.

[சேண் → சேய் → சேய்த்து]

சேய்து *šēydu*, பெ. (n.) சேய்த்து[1] பார்க்க; see *šēyttu*[1]. "ஒள்ளொளி சேய்தா" (பரிபா. 16:40).

[சேண் → சேய் → சேய்து]

சேய்நீர் *šēynīr*, பெ. (n.) சுண்ணாம்பும் எரியுப்பும் (நவச்சாரமும்) கலந்த நீர்; medicinal preparation of lime and sal ammoniac.

[செயநீர் → சேய்நீர்]

சேய்மரபு *šēy-marabu*, பெ. (n.) இளமைப் பருவம்; youth. "சேய்மரபிற் கல்விமாண் பில்லாத மாந்தரும்" (திரிகடு. 84). 2. குழந்தைத் தன்மை; childishness.

[சேய்[2] + மரபு]

சேய்மை *šēymai*, பெ. (n.) 1. தொலைவு (சூடா.); distance, remoteness. "சேய்மையி னோக்குறு" (கம்பரா. சடாயுகாண். 5). 2. நீளம் (யாழ்.அக.); length.

[சேய்[3] → சேய்மை]

சேய்மைவிளி *šēymai-viḷi*, பெ. (n.) தொலைவி லுள்ளோரை அழைக்கும் விளி (நன்.313, விருத்.); vocative used to call a person at a distance.

[சேய்மை + விளி]

சேயபரம் *šēyaparam*, பெ. (n.) மரமஞ்சள்; tree turmeric.

சேயம் *šēyam*, பெ. (n.) கரை (யாழ். அக.); shore, bank.

E. shore; OE. schore; Du. schoor, schor.

[சேய் → சேயம்]

சேயமம் *šēyamam*, பெ. (n.) செய் (கௌரி வைப்பு) நஞ்சு (யாழ்.அக.); a prepared arsenic.

சேயவன் *šēyavan*, பெ. (n.) 1. செவ்வாய்க் கோள் (திவா.); Mars. 2. முருகக் கடவுள்; Lord Murugan. "ஆறுமாமுகச் சேயவன்" (கந்தபு. தெய்வயா. 58).

[சேய்[2] → சேயவன்.]

சேயன்[1] *šēyan*, பெ. (n.) தொலைவிலுள்ளவன்; one who is at a distance. "சேய னணியன்" (திவ். பெரியதி. 2. 1:8).

[சேய்[3] → சேயன்]

சேயன்[2] *šēyan*, பெ. (n.) செந்நிறமுள்ளவன்; ruddy person. 'வண்ணமு மாயனவ னிவன் சேயன்' (தொல். பொருள். 307, உரை).

[சேய்[1] → சேயன்]

சேயா *šēyā*, பெ. (n.) கடுக்காய் *(மலை.)*; chebulic myrobalan.

சேயார் *šēyār*, பெ. (n.) *1.* தொலைவிலுள்ளவர் *(யாழ்.அக.)*; people at a distance. *2.* பகைவர்; enemies, foes.

[சேய்³ → சேயார்]

சேயாறு *šēyāṟu*, பெ. (n.) தொண்டை நாட்டில் ஓடும் செய்யாறு என்னும் ஆறு; a river flowing through Vellore and Kanchipuram districts. "சேயாற்றின் யாணரொரு கரை" *(மலைபடு. 476.)*.

[சேய் + ஆறு.]

சேயான் *šēyāṉ*, பெ. (n.) செந்நிற முடையவன்; person of ruddy complexion.

[சேய்¹ → சேயான்]

சேயிலம் *šēyilam*, பெ. (n.) இலுப்பை *(மலை.)*; South Indian mahua.

மறுவ. இருப்பை.

சேயிழை *šēy-iḻai*, பெ. (n.) அழகிய அணிகலன்களை அணிந்த பெண்; woman, as wearing beautiful ornaments. "சேயிழை கணவ" *(பதிற்றுப். 88:36)*.

மறுவ. ஆயிழை.

[செம் → சேய் + இழை]

சேயேபசம் *šēyēpašam*, பெ. (n.) மரமஞ்சள் *(மலை.)*; tree turmeric.

சேயோன்¹ *šēyōṉ*, பெ. (n.) *1.* முருகக்கடவுள்; Lord Murugaṉ. "சேயோன் மேய மைவரை யுலகமும்" *(தொல். பொருள். 5)*. *2.* சிவன் *(யாழ்.அக.)*; Šivaṉ. *3.* குழந்தை; baby.

[சேய்² → சேயோன் = முருகன், சிவன். முதற்காலத்தில் சேயோனும் சிவனும் ஒருவரே.]

சேயோன்² *šēyōṉ*, பெ. (n.) தொலைவில் இருப்பவன்; one who is remote. "புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க" *(திருவாச. 1:8)*.

[சேய்³ → சேயோன்]

சேர்¹-தல் *šēr-*, 2 செ.குவி. (v.i.) *1.* ஒன்று கூடுதல்; to become united, incorporated; to join together. "செம்பொன் செய்சுருளுந் தெய்வக் குழைகளுஞ் சேர்ந்து மின்ன" *(கம்பரா. பூக்கொய். 5)*. நீ என்னோடு சேர்ந்தால் உனக்கும் நன்மை, எனக்கும் நன்மை. *2.* கலத்தல்; to become mixed, blended. நீரும் பாலுஞ் சேரும். *3.* தொடர்புடையதாதல்; to have connection, as with a society or an institution. *4.* நட்பாதல்; to be in close friendship or union. அவனோடு சேர்ந்து கொண்டான். *5.* இயைதல்; to fit, suit; to be adapted to, as the tenon to the mortise. *6.* உரித்தாதல்; to be incidental, co-existent; to appertain, as a quality. இந்த நிலம் அவனைச் சேர்ந்தது (உ.வ.). *7.* சேர்த்தல்; to be collected to become aggregated. நெய்க்கு வேண்டிய வெண்ணெய் சேர்ந்து விட்டது (உ.வ.). *8.* திரளுதல்; to be well-rounded plump. 'மால்வரை யொழுகிய வாழை . . . என . . . சேர்ந்து' *(சிறுபாண். 20, உரை)*. *9.* செறிதல்; to be full, replete. "அருள் சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை" *(குறள், 243)*. *10.* கிடத்தல்; to lie down. "மீக்கோ ளுடற் கொடுத்துச் சேர்தல் வழி" *(ஆசாரக். 31)*. *11.* உளதாதல்; to exist; co-exist. "தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச் செல்வருஞ் சேர்வது நாடு" *(குறள், 731)*. *12.* செல்லுதல்; to go, advance. "எண் சேர்ந்த நெஞ்சத்து" *(குறள், 910)*.

ம. சேருக; க., குட. சேர்; தெ., பட. சேரு; து. சேருனி; கோத. சேர், சேட், சேத்; துட. சோர், சோத்; கோண். சேராணா; கூ. செர்னஆட; குவி. மகரினெ; நா. செத; கொலா. செர்(போ)

[சுள் → செள் → செரு → சேர்.]

சேர்²-தல் *šēr-*, 2 செ.குன்றாவி. (v.t.) *1.* கூடுதல்; to join, associate with. "தீயினஞ் சேரக்கெடும்" *(நாலடி. 179)*. *2.* பொருந்துதல்; to be in contact with. "மழகளிறு கந்துசேர்பு" *(புறநா. 22:9)*. *3.* புணர்தல்; to copulate. "அல்லில் வந்ததுண்டு சேர்ந்ததில்லை" *(தனிப்பா. 1, 151:58)* *4.* அடுத்தல்; to belong to; to be attached; dependent on, connected with. மன்னரைச் சேர்ந்தொழுகல். *5.* பெறுதல்; to obtain, acquire. "உறுதிசேர்ந் திவ்வுடம்பு நீட்டித்து நிற்குமெனின்" *(நாலடி., 40)*. *6.* சென்றடைதல்; to reach, gain, arrive at. "நும்மரண் சேர்மின்" *(புறநா. 9:5)*. *7.* இடை விடாது நினைத்தல் (தியானித்தல்); to unite in meditation. மாணடி

8. ஒப்பாதல்; to resemble, equal correspond with. "கனஞ்சேர் குழலி" (மருதூர். 25).

[சேர்[1] → சேர்[2]]

சேர்[3]-தல் *šēr-*, 2 செ.குன்றாவி. (v.t.) வெட்டுதல்; to cut. "வாழ்மரஞ் சேர்ந்தவை" (நீலகேசி. 389).

சேர்[4]-த்தல் *šēr-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* இயைத்தல்; to join. கம்பியின் இரு முனைகளையும் சேர். *2.* தொடுத்தல் (வின்.); to append, piece together. பூக்களை நார் கொண்டு சேர்த்தாள். *3.* கலத்தல்; to admix, incorporate, amalgamate. பாலொடு நீரைச் சேர்த்தான். *4.* புணரச்செய்தல்; to cause sexual union. பசுவைத் தொழுவிற்குச் சேர்க்கக் கொண்டு போனான் (நாஞ்.). *5.* கூட்டிக் கொள்ளுதல்; to admit to one's company or party, receive into friendship or service, bring under protection or shelter. வழிப் பயணத்துக்குத் துணையாக அவனையும் சேர்த்துக் கொள். *6.* கட்டுதல் (வின்.); to tie, fasten, as with a rope or chain; to secure by fastening. எல்லாவற்றையும் சேர்த்து முடிச்சுப் போடு (உ.வ.). *7.* கட்டடம் கட்டுதல் (நிருமித்தல்) (வின்.); to build, construct, make. *8.* இடைச் செருகுதல்; to add, interpolate, insert. இல்லாததைச் சேர்த்துப் பேசுகிறான். *9.* திரட்டுதல்; to collect, gather, muster, assemble, அறப்போருக்குத் தொண்டர்களைச் சேர். *10.* ஈட்டுதல்; to aggregate; to add sum to sum, to amass, as wealth; to increase as riches. பாடுபட்டுச் சேர்த்த காசு. *11.* தனதாக்குதல்; to appropriate, make one's own; annex. பகைவனாட்டைச் சேர்த்துக் கொண்டான். *12.* அடைவித்தல்; to restore. அதை உரியவனிடம் சேர்த்து விட்டான்.

[சேர் → சேர்-தல் = அணைத்தல். வாய்க்காலிற் பக்கமாக வழிந்தோடும் நீரை மண்ணிட்டுத் தடுத்தலை அணைத்தல் என்பர் உழவர்.]

சேர்[5] *šēr*, பெ. (n.) *1.* திரட்சி (தொல். சொல். 363); roundness, plumpness, globularity. *2.* வைக்கோற் புரியாலமைந்த நெற்குதிர்; (G.Tj.D.i, 103); straw-receptacle for paddy. *3.* களஞ்சியம் (இ.வ); granary. *4.* ஒரேர் மாடு (யாழ்ப்.); yoke of oxen, pair or oxen yoked together. *5.* இரண்டு மாடுகளின் முன்னங் கால்களைச் சேர்த்துக் கட்டுதல் (யாழ்ப்.); band joining the forelegs of a pair of cattle. *6.* சேங்கொட்டை (நேமிநா.எழுத்து. 15. உரை); marking-nut tree.

ம. சேர்; க. கெரு;

[சேர்[1] → சேர்[5]]

சேர்[6] *šēr*, பெ. (n.) *1.* எட்டுப்பலங் கொண்ட ஒரு நிறுத்தலளவை; a standard weight = 8 palams.ஒருசேர் கத்திரிக்காய் போடு (உ.வ.). *2.* ஒரு முகத்தலளவை; dry or liquid measure = 1/24 paṟ-ai in Ceylon = 70cu. in. and upward in S.India.

க., து., சேரு; H. sēr

[சேர்[1] → சேர்[6]]

சேர்க்காளி *šērkkāḷi*, பெ. (n.) சேத்தாளி (இ.வ.) பார்க்க; see *šēttāḷi.*

[சேர்க்கை + ஆளி.]

சேர்க்கை[1] *šērkkai*, பெ. (n.) *1.* நட்பு, தொடர்பு; friendship, intimacy. உன் சேர்க்கைதான் உனக்குக் கேடு (உவ). *2.* மற்றொரு பெண்ணை மனைவியாக ஏற்றுக் கொள்ளல்; taking a woman as a paramour. இவள் அவருடைய சேர்க்கை. *3.* சீட்டு விளையாட்டு போன்றவற்றில் ஒத்த சீட்டுகளைச் சேர்த்தல்; collecting the equivalents, as in the playing card game. *4.* புணர்ச்சி; sexual union.

[சேர் → சேர்க்கை]

சேர்க்கை[2] *šērkkai*, பெ. (n.) *1.* திரளுகை; collecting, gathering. *2.* ஒன்றோடொன்று சேர்ந்திருக்கும் நிலை, கூடுகை; combining, mixing. சுண்ணாம்பின் சேர்க்கையால் மஞ்சள் செந்நிறமடையும். *3.* கலப்புப்பொருள்; compound, mixture. *4.* கூட்டுறவு; fellowship; company; friendship; alliance. அவனுக்கு நல்ல சேர்க்கை வேண்டும். *5.* ஒன்றிப்பு (வின்.); union. *6.* வில்லையாகச் செய்த மணமூட்டும் கூட்டுச் சரக்கு (இ.வ.); scented substances mixed together and made into pills. *7.* பள்ளி முதலியவற்றில் மாணவர் ஆவதற்கான பதிவு; admission to a school, etc., enrolment. திறந்தவெளிப் பல்கலைக்கழக மாணவர் சேர்க்கை அறிவிப்பு.

தெ. சேரிக; து. சேரிகெ.

[சேர் → சேர்க்கை]

சேர்க்கைப்பல்லி šērkkai-p-palli, பெ. (n.) நிலைப்பல்லி; lizard that chirps for a long time in one place. 'இது சேர்க்கைப்பல்லி போலே பணியன்றோ' (ஈடு, 4. 9:3).

[சேர்க்கை + பல்லி]

சேர்க்கைமணம் *šērkkai-maṇam,* பெ. (n.) பல வகைக் கூட்டுப் பொருளால் உண்டான மணம்; a fragrance coming out from the mixture of materials. 2. பலரது நட்பால் உண்டாகும் குணம்; habits acquired from company.

[சேர்க்கை + மணம்]

சேர்க்கைமூலை *šērkkai-mūlai,* பெ. (n.) சந்து மூலை (C.E.M.); hip.

[சேர்க்கை + மூலை]

சேர்க்கைவாசனை *šērkkai-vāšaṉai,* பெ. (n.) சேர்க்கைமணம் பார்க்க; see *šērkkai-maṇam.*

[சேர்க்கை + வாசனை]

சேர்கட்டு-தல் *šēr-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தவசத்தை அளந்து சேரிலிடுதல்; to measure and store up paddy in straw receptacle or granary.

[சேர் + கட்டு-]

சேர்கந்தகம் *šēr-kandagam,* பெ. (n.) 80 பட்டணம் படியளவுள்ள முகத்தலளவை (G.Sm. D.I,i, 287); a measure of capacity equal to about 80 Madras measures.

[சேர் + கந்தகம்]

சேர்காய் *šēr-kāy,* பெ. (n.) செங்காய் (நாஞ்.); fruit almost ripe.

[சே → சேர் + காய்]

சேர்கால் *šēr-kāl,* பெ. (n.) தளைகால் (யாழ்ப்.); clogged feet, as of animals.

[சேர்¹ + கால்]



சேர்காலிடு-தல் *šēr-kāl-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) கால் தளைதல் (வின்.); to hamper the feet, clog.

[சேர்கால் + இடு-.]

சேர்கொடு-த்தல் *šēr-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) காட்டிக்கொடுத்தல்; to betray. "தென்புலர்க் கென்னைச் சேர் கொடான்" (திவ். பெரியதி. 7. 3: 3).

[சேர் + கொடு-.]

சேர்ச்சி *šērcci,* பெ. (n.) சேர்க்கை பார்க்க; see *šērkkai.* "சேர்ச்சியில் செய்கையொடு" (பெருங்.மகத. 24:84).

[சேர் → சேர்ச்சி.]

சேர்ச்சை *šērccai,* பெ. (n.) சேர்க்கை (நாஞ்.) பார்க்க; see *šērkkai.*

[சேர் → சேர்க்கை.]

சேர்த்தி *šērtti,* பெ. (n.) 1. சேர்க்கை பார்க்க; see *šērkkai.* 2. இசைவு; suitability, propriety. 3. ஒப்பு; resemblance, equality. "நித்திய சூரிகளுக்குந் தன்னோடு சேர்த்தி சொல்ல வொண்ணாத" (திவ்.திருவிருத். வியா.); 4. பொருத்தம்; consistency. "வந்தபடிக்கும் . . பேசுகிற பேச்சுக்கும் ஒரு சேர்த்தி கண்டிலோம்" (திருவிருத். 15:99). 5. சொல்லின் புணர்ப்பு (ஈடு); combination, as in words. 6. கடவுள் தேவியுடன் ஒருங்கு வீற்றிருக்கும் சமயம்; occasion when the god and goddess of a temple are seated together. "பெருமாள் சேர்த்தியை விட்டுப் புறப்பட்ட ருளினால்" (கோயிலொ. 96).

[சேர் → சேர்த்தி.]

சேர்த்திக்கை *šērttikkai,* பெ. (n.) சேர்த்தி, 1,2,3 (யாழ்.அக.) பார்க்க; see *šērtti, 1.2.3.*

[சேர் → சேர்த்திக்கை]

சேர்த்து¹-தல் *šērttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சேர்² பார்க்க; see *šēr².*

[சேர்² → சேர்த்து-.]

சேர்த்து² *šērttu,* பெ. (adv.) கூட; also, in addition to. சிறைக் காவலுடன் சேர்த்து தண்டமும் (அபராதமும்) விதிக்கப்பட்டது.

[சேர் → சேர்த்து.]

சேர்த்துக்கொள்(ளு)-தல் *sērttu-k-kol-*, 13 செ.குன்றாவி. (v.t.) 1. ஏற்றுக் கொள்ளுதல்; to admit into society, take into service. 2. கணக்கிற் பதிதல்; to allow in account, credit. 3. கவர்தல்; to encroach upon, misappropriate.

[சேர்த்து + கொள்(ளு)-தல்]

சேர்த்துப்பிடி-த்தல் *sērttu-p-pidi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. வயப்படுத்துதல் (வின்.); to conciliate, gain over. 2. சிக்கனம் பண்ணுதல்; to economise. 3. சேர்த்துக் கொள்-3. பார்க்க; see sērttu-k-kol-3. 4. வைப்பு வைத்தல், தொடுப்பு வைத்தல்; to keep a paramour.

[சேர்த்து + பிடி-.]

சேர்த்துவை-த்தல் *sērttu-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. சொத்துச் சேர்த்தல்; to lay up a hoard, amass, accumulate. 2. அமைதி உண்டாக்குதல்; to reconcile, reunite.

[சேர்த்து + வை-.]

சேர்ந்த *sērnda*, கு.பெ.எ. (adj.) 1. குறிப்பிட்ட ஊர், நாடு முதலியவற்றைப் பிறப்பிடமாகவோ வாழ்விடமாகவோ கொண்ட; ஒன்றை எல்லையாகக் கொண்டு அதற்கு உட்பட்ட; belonging to a country, nation, etc. 2. ஒரு பிரிவு, அமைப்பு முதலியவற்றில் உறுப்பினராக உள்ள; indicating membership belonging to; of. நீ எந்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்.

[சேர் → சேர்ந்த]

சேர்ந்தகை *sērnda-gai*, பெ. (n.) கூட்டாளி; partner, as in a game, a company.

[சேர் → சேர்ந்த + கை]

சேர்ந்தகைமை *sērndagaimai*, பெ. (n.) சேர்ந்தலை (யாழ்ப்.) பார்க்க; see sērndalai.

[சேர் + தகைமை. சேர்தகைமை → சேர்ந்தகைமை]

சேர்ந்தணையாக *sērndaṇai-y-āga*, கு.வி.எ. (adv.) சேர்ந்தரணையாக பார்க்க; see *sērndaraṇai-y-āga*.

சேர்ந்தரணையாக *sērndaraṇai-y-āga*, கு.வி.எ. (adv.) சேரிடையாக பார்க்க; see *sēridaiyāga*.

[சேர் + இணை + ஆக - சேரிணையாக → சேர்ந்தரணையாக]

சேர்ந்தலை *sērndalai*, பெ. (n.) 1. கூட்டுறவு; intimate, connection, intimacy of friends. 2. புணர்ச்சி; sexual union.

[சேர் → சேர்ந்தலை.]

சேர்ந்தார் *sērndār*, பெ. (n.) 1. தஞ்சம் அடைந்தவர்; persons under one's protection. "சேர்ந்தார் தீவினைகட் கருநஞ்சை" (திவ். திருவாய். 2. 3:6.). 2. நண்பர் (சூடா.); partisans, allies, friends. 3. உறவினர் (உ.வ.); relatives. 4. ஆட்கொள்ளப்பட்டவர்; one who is involved. 5. இறந்தவர்; dead person.

[சேர் → சேர்ந்தார்.]

சேர்ந்தார்க்கொல்லி *sērndār-k-kolli*, பெ. (n.) நெருப்பு (சூடா.); fire, as destroying anything that comes in contact with it.

[சேர்ந்தார் + கொல்லி. சேர்ந்தார்க் கொல்லி = தன்னைச் சேர்ந்தாரை அழிக்கும் நெருப்பு.]

சேர்ந்தாரைக்கொல்லி *sērndārai-k-kolli*, பெ. (n.) சேர்ந்தார்க்கொல்லி பார்க்க; see sērndār-k-kolli. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி (குறள், 306).

சேர்ந்தாற்போல் *sērndāṟpōl*, வி.எ. (adv.) தொடர்ச்சியாக; continuously; at a stretch. சேர்ந்தாற்போல் ஒரு மணி நேரம் பேசக்கூடியவர் சிலர் உண்டு (உ.வ.).

[சேர் → சேர்ந்தால் + போல்]

சேர்ந்திரணையாக *sērndiraṇai-y-āga*, கு.வி.எ. (adv.) 1. தொடர்ச்சியாக; சேரிடையாக (நெல்லை.); continuously. 2. மொத்தமாக; in a lot or lump. அவன் சேர்ந்திரணையாகப் பாடுபட்டு வெற்றி பெற்றான் (உ.வ.).

[சேர் → சேர்ந்த + இரணையாக. இணை → இரணை]

சேர்ந்து *sērndu*, கு.வி.எ. (adv.) 1. செயலைச் செய்யும்போது ஒன்றாக; ஒன்றுகூடி; to gether; jointly. 'இருவரும் சேர்ந்து நடித்த படம். 2. ஒன்றோடொன்று ஒட்டி; sticking together. புத்தகத்தின் பக்கங்கள் சேர்ந்து இருந்தன.

[சேர் → சேர்ந்து]

சேர்ப்பன் *šerppan*, பெ. (n.) 1. *நெய்தனிலத் தலைவன்;* chief of the maritime tract. 'பனிக்கடற் சேர்ப்ப னென்கோ' *(இறை. 1, உரை.)* 2. *மழைக் கடவுள் (வருணன்);* Varuna. "எற்று தெண்டிரைநீர்ச் சேர்ப்பன்" *(திருவிளை. நான்மா.4).*

[சேர்ப்பு → சேர்ப்பன்.]

சேர்ப்பாடு *šer-p-pāḍu*, பெ. (n.) சேரில் அளந்து வைத்த நெல்லில் ஏற்பட்ட குறைவு *(தஞ்சை.);* decrease in quantity of the grain stored up in granary.

[சேர் + பாடு. உலர்தலால் அல்லது காய்தலால் தவசங்களின் எடை அல்லது அளவு குறையும். இக்குறைப்பாட்டை சேர்ப்பாடு என்பர்.]

சேர்ப்பால் *šer-p-pāl*, பெ. (n.) *குழம்புப் பால்;* well-boiled milk. 'சேர்ப்பாலுங் கண்ட சர்க்கரையும் போல' *(ஈடு, 9. 3:7).*

[சேர் + பால்.]

சேர்ப்பி-த்தல் *šer-p-pi-*, 4 செ.குன்றாவி. (v.t.) *ஒப்படைத்தல்;* hand-over, entrust. பணத்தை யாரிடம் சேர்ப்பித்தாய்?

[சேர் → சேர்ப்பி]

சேர்ப்பு[1] *šerppu*, பெ. (n.) 1. *இடம்;* place. "மேருவின் சிகரச் சேர்ப்பின்" *(கம்பரா. மருத்து. 53).* 2. *சேர்பு-1 பார்க்க;* see *šerpu-1.* "ஏகம்பஞ் சேர்ப்பதாக நாஞ் சென்றடைந்து" *(தேவா. 1043, 7).* 3. *கடற்கரை;* seashore, coast. "பிறங்குநீர்ச் சேர்ப்பினும்" *(புறநா. 49:6).* 4. *கலப்பான பொருள்;* mixture. "சேர்ப்பாய பலவே யுண்மை யென்றிடின்" *(சிசி. 4:5).* 5. *பின்னி- ணைப்பு;* supplement, appendix. பிற்சேர்ப்பாக. 6. *மனைவியில்லாமல் மற்றொருத்தியை வைத்துக் கொள்ளல்;* another woman taken as wife; to keep a paramour. 7. *பட்டியலில் பதிவு செய்தல்;* enrolment. வாக்காளர் சேர்ப்புப் பணி தொடங்கியது. 8. *வேலைக்கு ஆட்களைத் தேர்ந்தெடுத்தல்;* recruitment. கப்பல் படைக்கு ஆள் சேர்ப்பு.

[சேர் → சேர்ப்பு.]

சேர்ப்பு[2] *šerppu*, பெ. (n.) 1. *கப்பலினின்று சரக்கிறக்கும் பாலம் (புதுவை.);* wharf. 2. *கட்டு மரத்தின் முன்புறம் பின்புறம் நீர் புகாதிருக்க தடுத்துக் கட்டப்பெறுமோர் மரப்பலகை;* a plank to prevent in flow of water in front and back side of catamaran.

[சேர் → சேர்ப்பு.]

சேர்ப்பூட்டு *šer-p-pūṭṭu*, பெ. (n.) 1. *சரியிணை;* well-matched pair. சேர்ப்பூட்டு மாடு *(யாழ்ப்.).* 2. *ஒத்த இணை;* well matched couple.

[சேர் + பூட்டு]

சேர்பு *šerbu*, பெ. (n.) 1. *வாழ்விடம்;* residence, abode. "செங்கமல பார்வையான் சேர்பு" *(அஷ்டப். திருவேங். மா. 7).* 2. வீடு *(பிங்.);* house. 3. *சேர்மானம்*[1] *(யாழ்.அக.) பார்க்க;* see *šer-mānam*[1].

[சேர் → சேர்பு.]

சேர்மம் *šermam*, பெ. (n.) *கூட்டுப் பொருள் (வேதி.);* compound.

[சேர் → சேர்மம்]

சேர்மானக்காரன் *šermāṉa-k-kāraṉ*, பெ. (n.) *வரி வாங்கும் அதிகாரி (நாஞ்.);* tax collector.

[சேர்மானம்[1] *+ காரன்]*

சேர்மானம்[1] *šermāṉam*, பெ. (n.) 1. *சேர்க்கை பார்க்க;* see *šerkkai.* 2. *கலக்கும் பொருள்;* addition, thing added, accompaniment. 3. *இணைப்பு;* joint in carpentry. 4. *ஒன்றில் இணைந்த மற்ற பொருளின் கூட்டு அளவு;* proportion of an additive. 5. *நகை செய்வதற்காகத் தங்கத்தில் செம்பின் கலப்பு விழுக்காடு;* ratio of copper added to pure gold.

ம. சேருமானம்.

[சேர் → சேர்மானம்]

சேர்மானம்[2] *šer-māṉam*, பெ.(n.) *ஓரவஞ்சனை (யாழ்.அக.);* partiality.

[சேர்மானம் = ஓர் ஓரம்சேர்தல். சேர் + மானம்]

சேர்மானம்சேர்த்துவிடல் *šērmāṉam šērttu-viḍal,* பெ. (n.) கூட்ட வேண்டியதைக் கூட்டுகை; adding what is required. தக்க சேர்மானம் சேர்த்துவிட்டால் சாம்பாரின் மணம் எட்டுத் தெரு வீசுமே! (உ.வ.).

[சேர்மானம் + சேர்த்துவிடல்]

சேர்வள்ளம் *šērvaḷḷam,* பெ. (n.) இரண்டு பட்டணம்படி அளவுள்ள முற்கால முகத்தலளவை (G.Sm. D.I, i, 287); a measure of capacity equal to about 2 old Madras measures.

[சேர் + வள்ளம்]

சேர்விடம் *šērviḍam,* பெ. (n.) 1. சேர்பு,1 பார்க்க; see *šērbu,1.* "சேர்விடந் தேடியுஞ் செல்குவரே" (திருக்கருவை, கலித். 38). 2. துயிலிடம் (பிங்.); bed, bed-room. 3. சேர்க்கை,1 (யாழ்.அக.) பார்க்க; see *šērkkai,1.* 4. தங்குமிடம்; place of staying. 5. வாழ்விடம்; place of living.

[சேர்வு + இடம்]

சேர்விலங்கு *šēr-vilaṅgu,* பெ. (n.) தளை (யாழ்ப்); fetters for the feet or hands.

[சேர் + விலங்கு]

சேர்வு *šērvu,* பெ. (n.) 1. அடைகை; arriving, joining. 2. சேர்பு,1 பார்க்க; see *šērbu,1.* "அகத்தியர் தமக்கு... திருப்பொதியிற் சேர்வு நல்கிய" (தேவா. 1715). 3. சேரி, ஊர் (பிங்.); town, village. 4. திரட்சி (பிங்.); roundness, sphericity. 5. ஒன்றுசேர்கை; union, association, junction, connection. 6. கூட்டம் (வின்.); collection, assocation.

[சேர் → சேர்வு.]

ஐரோப்பிய நாடுகளின் ஊர்ப்பெயர்களில் இச்சொல் பரவலாக உள்ளது.

Yark-shire; Lanka-shire - England.

சேர்வேன் *šērvēṉ,* பெ. (n.) சேரில் அளந்து வைத்தபின் அதிகப்படியாகக் கண்ட தவசம் (தஞ்சை.); excess in quantity of the grain measured and stored up in granary.

சேர் = தவசம் சேர்த்து வைக்கப்படும் களஞ்சியம்.

[சேர் → சேர்வேன்]

சேர்வை[1] *šērvai,* பெ. (n.) 1. கூட்டுறவு; fellowship, association, union. "தொண்டர்களின் சேர்வை" (தணிகைப்பு. நாரண. 1). 2. கலவை; mixture, compound. "அரிசனவாடைச் சேர்வை குளித்து" (திருப்பு. 139). 3. மருந்து முதலியவற்றிற் கூட்டுங் கலப்புச்சரக்கு; ingredients for medicinal or other composition. 4. சீலையிற் பூசிஇடும் மருந்து (யாழ்ப்.); plaster, salve spread on cloth. 5. மாழை (உலோக)க் கலப்பு (இ.வ.); alloy; admixture of base metal, as in coin. 6. சேனை (வின்.); army. 7. கூட்டம் (வின்.); collection, assemblage. 8. 20 வெற்றிலைக் கட்டு (வின்); twenty bundles of betel leaves. 9. மசாலாப் பொருட்களும் காய்கறி அல்லது இறைச்சியும் கலந்த ஆணம் (குழம்பு); a mixture of spices and vegetables or mutton.

[சேர் → சேர்வை]

சேர்வை[2] *šērvai,* பெ. (n.) 1. கள்ளிறங்கும்படி சீவிய பாளையைக் கள்ளுக் கலயத்துடன் இணைக்கை; connecting the scraped end of the spathe of a palm-tree with a vessel attached to it to receive toddy. 2. நுங்கு பொதிந்துள்ள பனங்காயின் இளந்தோல்; the tender skin of the unripe palm fruit around the jelly part.

[சேர் → சேர்வை]

சேர்வை[3] *šērvai,* பெ. (n.) 1. மகளிர் காதணி வகை (வின்.); women's ear-ornament. 2. கூத்து வகை (வின்.); a kind of dance.

[சேர் → சேர்வை.]

சேர்வை[4] *šērvai,* பெ. (n.) 1. பற்று (புதுவை.); poultice. 2. அணை; dam.

[சேர் → சேர்வை.]

சேர்வைக்களி *šērvai-k-kaḷi,* பெ. (n.) காசுக் குற்ற வகை; a defect in coins. "கள்ளனென்றுஞ் சேர்வைக்களி யென்றும்" (நெல்விடு. 345).

[சேர்வை + களி.]

சேர்வைக்காரன் *šērvai-k-kāraṉ,* பெ. (n.) 1. சேர்வைகாரன் பார்க்க; see *šērvai-kāraṉ.* 2. படைத்தலைவன் (வின்); captain, commander of a division of army.

[சேர்வை + காரன்]

சேர்வைக்கால் *šērvai-k-kāl,* பெ. (n.) 1. *ஏணியைத் தாங்குங்கால் (வின்.);* support for a ladder to lean against. 2. *தட்டைத் தாங்கி நிற்கும் பீடக்கால்;* stand, as of plates.

[சேர்வை + கால்]

சேர்வைகட்டு-தல் *šērvai-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. *மரக்கிளைகளைச் சேர்த்துத் தாழ்வாரம் இறக்குதல் (வின்.);* to unite the upper branches of trees in the form of a portico. 2. *வெற்றிலைக்கொடி படரும்படி அகத்திக் கால்களை இரட்டையாகச் சேர்த்துக் கட்டுதல்;* to tie the stalks of agatti trees in pairs, as a support for growing betel creepers. 3. *வெற்றிலைக் கொடிக்காலில் ஆள் ஏறி வெற்றிலை கிள்ளுவதற்கு வாய்ப்பாக வரிசல் வைத்துக் கட்டுதல் (இ.வ.);* to tie scaling pieces in a betel garden.

[சேர்வை + கட்டு-.]

சேர்வைகாரன் *šērvai-kāraṉ,* பெ. (n.) *அகம்படியார்க்கும் மறவர் கள்ளர் வன்னியரின் உள்வகுப்பினர்க்கும் வழங்கும் பட்டப்பெயர் வகை;* caste title of Agambaḍiyār and of certain other sub-castes, viz., Maṟavar, Kaḷḷar, Vaṉṉiyar.

து. சேரிகாரெ

[சேர்வை + காரன்]

சேர்வைச்சந்தனம் *šērvai-c-candaṉam,* பெ. (n.) *கலவைச் சந்தனம்;* compound sandal paste.

[சேர்வை + சந்தனம்]

சேர்வைச்சீலை *šērvai-c-cīlai,* பெ. (n.) *காரச்சீலை (யாழ்ப்.);* plaster, cere-cloth.

[சேர்வை + சீலை]

சேர்வையணி *šērvai-y-aṇi,* பெ. (n.) *கலவையணிக்கு எதிரிடையான வேறுபட்ட பல அணிகள் சேர்ந்து வரும் அணியிலக்கணம் (அணியி. 43);* combination of several distinct figures of speech, opp. to kalavai-y-aṇi.

[சேர்வை + அணி]

சேர *šēra,* கு.வி.எ. (adv.) 1. *முழுதும்;* altogether, wholly. "சேர வாருஞ் செகத்தீரே" *(தாயு. காடுங்கரையும். 2).* ஒரு சேர முயன்று அவன் வெற்றி பெற்றான் (உ.வ.). 2. *கூட (வின்);* along with, in company with. 3. *அணித்தாக;* near. சேரப் போ.

[சேர் → சேர]

சேரக்கட்டு-தல் *šēra-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *செலுத்துதல் (வின்.);* to deliver, remit, transmit.

[சேர + கட்டு-.]

சேரகோன் *šērakōṉ,* பெ. (n.) 1. *சேரவரசன்;* the king of Cēra country. 2. *நாஞ்சினாட்டு முதலியார்களுக்குரிய பட்டம் (நாஞ்.);* a title conferred upon Mudaliars in Nāñjiṉāḍu.

ம. சேரகோன்

[சேரன் + கோன்]

சேரங்கை *šēraṅgai,* பெ. (n.) *சிறாங்கை;* quantity that can be held in the hollow of the palm as a measure; palmful. *"சேரங்கை யள்ளிச் சீருடன் கொடுத்தல்" (பரத. பாவ. 23).*

[சேரை + அம் + கை]

சேரடி *šēr-aḍi,* பெ. (n.) *நெற்சேர் நிற்குமிடம்;* the place where granary or straw-receptacle for paddy stands. *"செந்நெற் சேரடிகளும்" (இராமநா. சுந். 3).*

சேர் = தவச வகைகளைச் சேர்த்து வைக்கும் களஞ்சியம்.

[சேர் + அடி]

சேரடையாக *šēraḍai-y-āga,* கு.வி.எ. (adv.) *தொடர்ச்சியாக;* continuously. சேரடையாக மாட்டுமந்தை வீடு திரும்பிக் கொண்டிருக்கிறது.

[சேர் + அடை + ஆக]

சேரநாடு *šēra-nāḍu,* பெ. (n.) *சேரமண்டலம் பார்க்க;* see *šēra-maṇḍalam.*

ம. சேரநாடு

[சேரன் + நாடு]

சேரம் *šēram,* பெ. (n.) *கேரளத்தின் பழம் பெயர்;* the ancient name of Kēraḷa *(சேரநா.).*

ம. சேரம்

[சாரல் → சேரல் → சேரம்]

சேரமண்டலம் *šēra-maṇḍalam,* பெ. (n.) *சேரநாடு;* the Cēra country.

[சேரன் + மண்டலம்]

சேரமான் *šera-mān*, பெ. (n.) சேரலன்[1] (புறநா.) பார்க்க; see *šeralan[1]*.

ம. சேரமான்

[சேரன் → சேரமான்.]

ஒ.நோ. தொண்டைமான், அதியமான்; மான்- சிறந்த மனிதர், பெருமகன் போன்ற பொருளில் வரும். உலகெங்கிலும் இச்சொல் மக்கட் பெயருடன் வருகிறது.

சேரமான்அந்துவஞ்சேரலிரும்பொறை *šeramān-anduvañjēral-irumporai*, பெ. (n.) புறநானூற்று 13ஆம் பாடலின் ஆசிரியரான உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரின் நண்பரான சேரன்; Cērā king, friend of the poet Uraiyūr Ēnicēry Mudamōšiyār, the author of poem no. 13 of Purananūru. சோழன் முடித்தலைக் கோப்பெருநற் கிள்ளி கருவூரிடஞ் செல்வானைக் கண்டு சேரமான் அந்துவஞ் சேரலிரும்பொறை யொடு வேண்மாடத்து மேலிருந்து உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது (புறம்நா. 13, உரை.).

[சேரமான் + அந்துவன் + சேரல் + இரும்பொறை]

சேரமான்இளங்குட்டுவன் *šeramān-ilanguṭṭuvan*, பெ. (n.) அகநானூறு 153ஆம் பாடலைப் பாடிய சேரர் குலத்து அரசன்; a Cērā prince who wrote the poem no. 153 of Agananūru.

[சேரமான் + இளம் + குட்டுவன்]

சேரமான்கடலோட்டியவேல்கெழுகுட்டுவன் *šeramān-kaḍal-ōṭṭiya-vēlkeḻu-kuṭṭuvan*, பெ. (n.) பரணர் பாடிய, புறநானூற்று 369ஆம் பாட்டின் பாட்டுடைத் தலைவன்; a Cērā king. சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவனைப் பாடியது. (புறநா. 369, உரை).

[சேரமான் + கடலோட்டிய + வேல்கெழு+ குட்டுவன்]

இம்மன்னனின் கடல் வெற்றிச் சிறப்பினை விளக்கும் வகையில் கடலோட்டிய என்னும் அடையும், வேலேந்திச் செய்யும் போர்த்திறச் சிறப்பால் 'வேல் கெழு' என்னும் அடையும் இவன் பெயர்க்கு முன் அமைந்துள்ளன. இவன் பெயர்க்கு 'வேள் கெழு குட்டுவன்' என்ற பாடபேதமும் உண்டு.

சேரமான்கடுங்கோவாழியாதன் *šeramān-kaḍungo-vāḻiyādan*, பெ. (n.) கபிலர் பாடிய பாட்டுடைத் தலைவன்; hero of a poem authored by Kapilar. 'சேரமான் கடுங்கோ வாழியாதனைப் பாடியது (புறநா. 8ஆம் பாடலின் குறிப்பு).

கடுங்கோ என்பது பெருவீரன், பெருமன்னன் என்ற பொருளில் வந்தது.

மறுவ. செல்வக்கடுங்கோவாழியாதன்

[சேரமான் + கடுங்கோ + வாழி + ஆதன்]

சேரமான்கணைக்காலிரும்பொறை *šeramān-kaṇaikkāl-irumporai*, பெ. (n.) சோழன் செங்கணானொடு பொருது சிறைப்பட்டு மாண்ட சேரன்; a Cērā who lost his life in jail, after fighting with Cōlan Šenganān. சேரமான் கணைக்கா லிரும்பொறை, சோழன் செங்கணா னொடு (புறநா. 74, உரை.).

மறுவ. கோச்சேரமான், சேரமான்.

[சேரமான் + கணைக்கால் + இரும்பொறை]

சேரமான்குடக்கோநெடுஞ்சேரலாதன் *šeramān-kuḍakkō-neḍuñjēralādan*, பெ. (n.) கழகக்கால சேரமன்னன்; a Cērā king in Šangam age.

[சேரமான் + குடக்கோ + நெடுஞ்சேரல் + ஆதன்]

சேரலாதன், செடுஞ்சேரலாதன் என்னும் பெயரோடு விளங்கிய ஏனையோர்களி னின்றும் பிரித்துணர ஏந்தாக இவன் பெயரில் குடக்கோ என்னும் அடை அமைந்ததாகலாம். சேரநாடு, குடநாடு, குட்டுவர் நாடு என்னும் பகுதிகளைக் கொண்டமையால் குடவர், குடவர்கோ, குட்டுவர், குட்டுவர்கோ என்று வழங்கப் பெற்றனர். ஆதன் சேரமன்னர்க்கு வழங்கிய இயற்பெயர்களுள் ஒன்று. இவனைப் பற்றி கழாத் தலையர், பரணர் ஆகியோர் புறநானூறு 62, 63, 368 ஆகிய பாடல்களில் பாடியுள்ளனர்.

சேரமான்கோக்கோதைமார்பன் *šeramān-kōkkōdai-mārban*, பெ. (n.) கழகக் கால மன்னர்களில் ஒருவன்; a king in šangam period.

மறுவ. கோதைமார்பன்

[சேரமான் + கோக்கோதை + மார்பன்]

இம்மன்னனைப்பற்றி நற்றிணை (8), அகநானூறு (346), புறநானூறு (48) ஆகியவற்றில் பாடல்கள் உள்ளன.

சேரமான்கோட்டம்பலத்துத்துஞ்சிய மாக்கோதை *šēramān-kōṭṭambalattu-t-tuñjiya mākkōdai*, பெ. (n.) புறநா. 245ஆம் பாடலை இயற்றிய சேரவரசர்; a Cērā king, who wrote the poem Puram. 245.

[சேரமான் + கோட்டம்பலத்து + துஞ்சிய மாக்கோதை]

சேரமான்தகடூர்எறிந்தபெருஞ்சேரல் இரும்பொறை *šēramān-tagaḍūr-eṟinda-peruñjēral-irumpoṟai*, பெ. (n.) கழகக்கால சேரமன்னன்; a Chera king in Šaṅgam period.

[சேரமான் + தகடூர் + எறிந்த + பெருஞ்சேரல் + இரும்பொறை]

இவன் தகடூர் மேல் படை எடுத்து வென்றதால் தகடூர் எறிந்த என்னும் அடையைப் பெற்றான். முரசு கட்டிலில் உறங்கிய மோசிகீரனார்க்குக் கவரி விசியவன் இவனே. புறநானூறு 50வது பாடல் இவனைப் பற்றிக் கூறுகிறது. அரிசில் கிழார் பதிற்றுப்பத்தில் இவனைப் பாடுகிறார்.

சேரமான்தோழர் *šēramān-dōḻar*, பெ. (n.) *(சுந்தரமூர்த்தி நாயனார்)* **வன்தொண்டர்;** Sundaramūrtti nāyaṉār, as the friend of Šēramāṉ-perumāḷ ṇāyaṉār."சேரமான்தோழரென்று பார்பரவு மேன்மை" *(பெரியபு. கழறிற். 66).*

[சேரமான் + தோழர்]

சேரமான்பெருஞ்சேரலாதன் *šēramān-peruñ-jēralādaṉ*. (n.) கழகக் கால சேரமன்னன்; a Cērā king in Šaṅgam age.

மறுவ. சேரமான் பெருந்தோளாதன்

[சேரமான் + பெருஞ்சேரலாதன்]

சோழன் கரிகாலன் விட்ட அம்பு மார்பில் பட்டு முதுகுவழியே வெளிவந்ததை இழுக்கு எனக் கருதி வடக்கிருந்து உயிர்விட்டவன். புறநானூற்று 65, 66ஆம் பாடல்கள் இவனைப் பற்றியது.

சேரமான்பெருஞ்சோற்றுதியஞ்சேரன் *šēramān-peruñ-jōṟṟudiyañjēran*, (n.) கழகக் கால சேர வேந்தன்; a Cērā king in Šaṅgam age.

மறுவ. உதியன், உதியஞ்சேரல், உதியஞ் சேரலன்

[சேரமான் + பெருஞ்சோற்று + உதியன்+ சேரன்]

பாரதப் போரில் நூற்றுவர் பொருது களத்தொழிய, மறவர்க்குப் பெருஞ்சோறு வழங்கியதால் பெருஞ்சோற்று உதியன் எனப்பட்டான். இவனை முரஞ்சியூர் முடிநாகனார், மாமூலனார், இளங்கீரனார் போன்றவர்கள் பாடியுள்ளனர். அகநானூறு (65, 233, 168), புறநானூறு (2), நற்றிணை (113) ஆகியவற்றில் இவன் பாடப்படுகிறான்.

சேரமான்பெருமாணாயனார் *šēramāṉ-perumāṇāyaṉār*, பெ. (n.) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவரும் சேரவரசரும் ஆதியுலா, பொன்வண்ணத்தந்தாதி முதலிய வற்றின் ஆசிரியருமான சிவனடியார் *(பெரியபு.)*; a canonized Šaiva saint, Cērā king and author of Ādi-ulā, Poṉ-vaṇṇattandādi. etc., one of 63 nāyaṉmārs.

[சேரமான் + பெருமாள் + நாயனார்]

சேரமான்மாந்தஞ்சேரவிரும்பொறை *šēramāṉ-māndājēra-v-irumboṟai*, (n.) கழகக் காலத்தில் வாழ்ந்த சேரமன்னர்களில் ஒருவன்; a Cērā king in Šaṅgam period.

[சேரமான் + மாந்தஞ்சேரவிரும்பொறை]

இவன் மாந்தரன் என்னும் சேரனின் மகனாக இருக்கலாம் இவன் புறநானூறு 125ல் பாடப் படுகிறான்.

சேரமான்மாரிவெண்கோ *šēramāṉ-māri-veṇkō*, (n.) கழகக் கால சேர மன்னன்; a Cērā king in Šaṅgam age.

[சேரமான் + மாரிவெண்கோ]

இவனைப் பற்றிய செய்தி புறநானூறு 367ஆம் பாடலில் காணப்படுகிறது.

சேரமான்யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரல் இரும்பொறை *šēramāṉ-yāṉaik-kaṭ-šēy-*

māndarañjēral-irumboṟai, (n.) கழகக் கால சேரமன்னன்; a Cērā king in Šangam period.

மறுவ. கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை

[சேரமான் + யானைக்கட்சேய் + மாந்தரஞ்சேரல் + இரும்பொறை]

சேரமான்வஞ்சன் *šēramān-vañjan,* (n.) புறநானூற்றால் அறியப்படும் சேரமன்னன்; a Cērā king in Puṟa-nāṉūṟu.

[சேரமான் + வஞ்சன்]

இவனைத் திருத்தாமனார் என்னும் புலவர் புறநானூறு 398இல் பாடியுள்ளார்.

சேரமானெந்தை *šēramāṉ-endai,* பெ. (n.) குறுந்தொகை 22ஆம் பாடலை இயற்றியவர்; author of 22nd verse of Kurundogai.

[சேரமான் + எந்தை]

சேரர் *šērar,* பெ. (n.) குடவர்; குட்ட நாட்டவர்; Kings of the western area. குட்டநாடு குறுகி குடநாடு ஆயிற்று.

[சாரல் (= மலைச்சாரல்) → சேரல் → சேரலர் → சேரர்]

தமிழக முடியுடை வேந்தர் மூவருள் முதன்மையினராக வைத்து எண்ணப் பட்டவர்கள் சேரர்கள். தமிழ்நாட்டின் மேற்கில் அமைந்துள்ள இன்றைய மலையாள நாடாகிய கேரளப் பகுதியில் அவர்கள் ஆண்டனர். மலை அடுக்குகள் தொடர்ச்சியாகப் பின்னிப் பிணைந்த பகுதி 'சேரல்' எனப்படும். அச்சேரலைச் சேர்ந்த நாடு சேரல் நாடாகும். அதனை ஆண்டவர்கள் 'சேரலர்' எனப்பட்டனர். 'சேரலர்' என்ற சொல் 'சேரர்' எனவும் 'கேரளம்' எனவும் திரிந்து வழங்கலாயிற்று.

இவர்கள் வில் பொறித்த கொடியினையும், பனம்பூ மாலையையும் அடையாளப் பொருள்களாகக் கொண்டனர். இவர்களின் தலைநகர் வஞ்சி,தொண்டி துறைமுகத் தலை நகராக இருந்தது.

சேரல் *šēral,* பெ. (n.) சேரலன்[1] பார்க்க; see *šēralaṉ*. "குடக்கோச் சேரல் இளங்கோ வடிகட்கு" *(சிலப். பதி2).*

[சேரலன் → சேரல். சேரலன் என்ற பெயர் ஈறுகெட்டுச் சேரல் என நின்றது. ஒ.நோ.: பாண் (பாட்டு) → பாணன் (பாடல் தொழிலான்) → பாண் = பாணர்குலம்]

சேரலன்[1] *šēralaṉ,* பெ. (n.) தமிழ் வேந்தர் மூவருள் சேரநாட்டரசன்; Cērā king one of the three Tamil dynasties. "சேரலர் சுள்ளியம் பேர்யாற்று" *(அகநா. 149).*

ம. கேரல, சேரலன்

[சாரல் = மலைச்சரிவு, மலை. சாரல் → சேரல் → சேரலன்]

தமிழ் வேந்தர் மூவர் - சேர, சோழ, பாண்டியர்.

சேரலன்[2] *šēralaṉ,* பெ. (n.) பகைவன் (திவா.); enemy.

ம. சேரார்

[சேர் + அலன் - சேரலன் = தன்னைச் சேர்ந்தவன் அல்லன். ஆகவே பகைவன்]

சேரலி *šērali,* பெ. (n.) ஒரு வகை நெல் (சங்.அக.); a kind of paddy.

சேரன் *šēraṉ,* பெ. (n.) சேரலன்[1] பார்க்க; see *šēralaṉ*. "சேரன்பொறையன் மலையன் திறம்பாடி" *(சிலப். 29, ஊசல்வரி. 2).*

ம. சேரன்

[சேரலன் → சேரன்]

குடமலைநாடு சேரனுக்கே சிறப்பாகவுரிய தாயிருந்தமையால் இதனால் மலையன், மலையமான், பொறையன், வானவன், வானவரம்பன் என்னும் பெயர்கள் அவனுக்கு வழங்கி வந்தன.

சேரன்செங்குட்டுவன் *šēraṉ-šeṅguṭṭuvaṉ,* பெ. (n.) கழகக் காலச் சேரமன்னன்; a Chera king in Šangam age.

[சேரன் + செங்குட்டுவன்.]

சேரமன்னர்களில் சிறந்தவன். கண்ணகிக்குக் கோயில் எடுத்துச் சிறப்புற்றவன். இவனைப் பற்றி பதிற்றுப் பத்தின் ஐந்தாம்பத்து, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு ஆகியவற்றால் அறியலாம். கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவன். சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள் இவன் தம்பி.

சேரன்தீவு *šēraṉ-tīvu,* பெ. (n.) இலங்கையின் பெயர்; the name of Srilanka.

வெளிநாட்டார் Cerandeep என்று இலங்கையை அழைத்தனர். இஃது ஒரு காலத்தில் சேரநாட்டின் பகுதியாக இருந்தது என்பதை உய்த்துணர்த்துகிறது.

[சேரன் + தீவு]

சேரன்மாதேவி *šēran-mādēvi,* பெ. (n.) நெல்லை மாவட்டத்திலுள்ள ஊர்; a place in Tirunelveli district. "கீழ்பாற்கெல்லை சேரமாதேவிக்கு மேற்கு" (தெ.க.தொ. 26, கல். 677-2).

சேர அரசியின் நினைவாக ஏற்படுத்தப் பட்ட ஊர்.

[சேரன் + மாதேவி]

சேரா *šērā,* பெ. (n.) கள் (அக.நி.); toddy.

[சுரா → சேரா.]

சேராங்கொட்டை *šērāṅ-goṭṭai,* பெ. (n.) சேங்கொட்டை; marking-nut.

[சேரான் + கொட்டை]



சேராச்சேர்த்தி *šērā-c-cērtti,* பெ. (n.) 1. இசைவற்ற சேர்க்கை (யாழ்ப்.); unequal match, as of a married couple, ploughing bullocks etc. 2. தகாத கூட்டுறவு (யாழ்ப்.); bad company, improper association with low persons. அந்தக் கட்சியும் இந்தக் கட்சியும் சேராச்சேர்த்தியாகத் தேர்தலில் கூட்டுச் சேர்ந்துள்ளன. (உ.வ.). 3. தாறுமாறு (யாழ்ப்.); confusion, disorder. 4. எதிர்பாராத சந்திப்பு (இ.வ.); unusual, unexpected meeting.

[சேர் + ஆ + சேர்த்தி.]

'ஆ' எதிர்மறை இடைநிலை

சேரார் *šērār,* பெ. (n.) பகைவர்; enemies, foes. "சேரார் இன்னுயிர் செகுக்கும்" (பரிபா. 2, 48).

ம. சேரார்

[சேர் + ஆ + அர்]

சேரான் *šērān,* பெ. (n.) சேங்கொட்டை (வின்.); marking-nut.

[சேர் → சேரான்]

சேரான்கொட்டை *šērān-koṭṭai,* பெ. (n.) சேங்கொட்டை பார்க்க; see *šēn-goṭṭai.*

சேரி *šēri,* பெ. (n.) 1. ஊர் (பிங்.); town, village, hamlet. 2. முல்லைநிலத்தூர் (தொல். பொருள். 18, உரை); village of the Mullai tract, herdsmen's village. 3. தெரு; street. "நஞ்சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பானை" (கலித். 65). 4. பழந் தமிழர் வாழும் பகுதி; quarters of the ancient Tamils. 5. சிற்றூர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வாழும் பகுதி; that part of the village where people of certain castes live. சேரிக்குப் பக்கத்திலிருக்கும் வயல். 6. நகர்ப் புறங்களில் ஏழை மக்கள் வாழும் நெருக்கமான குடிசைகளைக் கொண்ட பகுதி; slum. சேரிகளைத் தூய்மை செய்ய மாநகராட்சி நடிவடிக்கை எடுத்துள்ளது.

ம. சேரி; க., குட. கேரி; தெ. கேரி (தெரு, வழி); து. கேரி (தெரு); பட. கேரி (தெரு); கோத. கேர்ய்; துட. கேர்ய (தெரு); E. street; G. strāssa; OE. struot; Du. street; IT. strāta; L. strāta.

[சேர் → சேரி = மக்கள் சேர்ந்து வாழும் இடம்]

சேரிக்கூத்தன் *šēri-k-kūttan,* பெ. (n.) திருக்கச்சூர் கோயில் நிலத்திற்குத் தம் ஏரியிலிருந்து நீர் வழங்கியோருள் ஒருவர்; one of the group who donated water to the land of the Tirukkaccūr temple from their tank. "இவன் தம்பி சேரிக்கூத்தனும்" (தெ.க.தொ. 26, கல். 313-6).

[சேரி + கூத்தன்]

சேரிகை *šērigai,* பெ. (n.) நகரம், ஊர்; town, village. "சேரிகை யேறும் பழியாய் விளைந்தது" (திருவிருத். 19).

[சேரி → சேரிகை]

சேரிடு-தல் *šēriḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) பிணைத்தல் (சங்.அக.); to tie or fasten together, bind up.

[சேர் + இடு-.]

சேரிடையாக *šēr-idai-y-āga,* கு.வி.எ. (adv.) 1. இடையீடின்றித் தொடர்ச்சியாக; continuously, without break. அவனுக்கு நான்கு கோட்டை நிலம் சேரிடையாக இருக்கிறது (நாஞ்.). 2. ஒரே குழுவாக; in one group.

[சேர் + இடை + ஆக. ஆ → ஆக]

சேரிப்பரத்தை *šēri-p-parattai,* பெ. (n.) ஊர்ப்புறச் சேரியில் வாழும் பரத்தை (தொல். பொருள். 151, உரை); prostitute, courtesan, living in the quarters set apart for her class.

[சேரி + பரத்தை]

சேரிமடை *šēri-madai,* பெ. (n.) மதகின் மேலாக வழிந்தோடும் மிகுதி நீர் வாய்க்கால் (R.T.); sluice carrying surplus water.

மறுவ. வடிகால்

[சேரி + மடை]

சேரிமொழி *šēri-moli,* பெ. (n.) உலக வழக்குச் சொல்; colloquialism. "சேரிமொழியாற் செவ்விதிற் கிளந்து" (தொல். பொருள். 553).

[சேரி + மொழி]

சேருகம் *šērugam,* பெ. (n.) நாகண வாய்ப்புள் (சது.); common myna.

சேரும்பாடும் *šērum-pādum,* கு.வி.எ. (adv.) கூட்டாக் குழப்பமாய் (யாழ்ப்.); promiscuously, in confusion, topsy-turvy.

[சேர் + படு - சேர்படு → சேர்பாடு → சேரும்பாடும்]

சேரும்வழியுரிமை *šērum-vali-y-urimai,* பெ. (n.) கலப்பு மரபுவழி உரிமை; blending inheritance.

[சேரும் + வழியுரிமை]

சேருவைகாரன் *šēruvai-kāran,* பெ. (n.) சேர்வைகாரன் பார்க்க; see *šērvai-kāran.* "தேடுங்கன சேருவைகாரர்" (விறலிவிடு. 1001).

[சேர்வைகாரன் → சேருவைகாரன்]

சேரை[1] *šērai,* பெ. (n.) சாரைப் பாம்பு; rat snake. "சேரையென்று புலம்புவ தேரையே" (கம்பரா. ஆறுசெல்.43).

ம. சேர; க. கேரெ; து. கேரெ, கேரி; துட. கேர்; தெ. சார, கோத. கேர்பாம்ப்.

[சாரை → சேரை.]

சேரை[2] *šērai,* பெ. (n.) சேரங்கை பார்க்க; see *šēr-aṅgai.* 'உப்பு- ஒரு சேரை போடு' (பாலவா. 874).

க. சேரெ; தெ. சேர

[சேர் → சேரை]

சேல் *šēl,* பெ. (n.) செந்நிறக் கெண்டை மீன் (சூடா.); carnatic carp. "சேலனைய சில்லரிய" (சீவக. 167).

தெ. சேப்ப

[சல் → செல் → சேல். சல் = சிவத்தற் கருத்து]

சேல்கெண்டை *šēl-kendai,* பெ. (n.) சேற்கெண்டை பார்க்க; see *šēr-kendai.*

மறுவ. சேல்

[சேல் + கெண்டை]



சேல்விழி *šēl-vili,* பெ. (n.) சேல்மீன் போலும் செவ்வரி பரந்த பெண்ணின் கண்; women's eye.

[சேல் + விழி]

சேலகம் *šēlagam,* பெ. (n.) கோரைக்கிழங்கு (மலை.); tuber of sedge.

ம. சேலகம்

சேலஞ்சர்க்கரை *šēlañ-jarkkarai,* பெ. (n.) சேலஞ்சீனி (இ.வ.) பார்க்க; see *šēlañ-jīni.*

[சேலம் + சர்க்கரை. சருக்கரை → சர்க்கரை]

சேலஞ்சீனி *šēlañ-jīni,* பெ. (n.) பழுப்புச் சருக்கரை (இ.வ.); country sugar, after Salem where it was originally manufactured.

[சேலம் + சீனி]

சேலம்[1] *šēlam,* பெ. (n.) ஆடை; cloth. *"அவள் சேலந்திருந்தி" (பெருங். வத்தவ. 12:97).*

[சீரை → சீலை → சேலை → சேலம்]

சேலம்[2] *šēlam,* பெ. (n.) ஒரு நகரம்; Salem town. "சேலங்கைக் கொண்டு" *(ஒரு துறைக். 2).*

[சாரல் (=மலைச்சாரல்) → சேரல் → சேரம் → சேலம்]

சேலவன் *šēlavan,* பெ. (n.) திருமால் *(அக.நி.);* Viṣṇu, as fish Avatar.

ம. சேலவன்

[சேல் = மீன். சேல் + அவன் - சேலவன் = மீனாகத் தோற்றரவு செய்த திருமால்]

சேலியால் *šēliyāl,* பெ. (n.) இலாமிச்சை *(மலை.);* cuscuss.

சேலிரு *šēliru,* பெ. (n.) சிவப்பவரை; red bean.

சேலேகம் *šēlēgam,* பெ. (n.) 1. சிந்தூரம் *(சூடா.);* vermilion. 2. சந்தனம் *(மலை.);* sandal-wood tree.

ம. சேலேகம்

[சேல் → சேலேகம் = சிந்தூரம் (மு.தா. 140)]

சேலேசி *šēlēši,* பெ. (n.) அசோகு மரம்; asoka tree.

சேலை[1] *šēlai,* பெ. (n.) 1. ஆடை *(பிங்.);* cloth. 2. மகளிர் உடுத்தும் ஆடை; saree. "சேலை கட்டிய மாதரை" *(விவேகசிந்.).* 3. முழுத் துணியின் பாதி *(யாழ்ப்.);* half a piece of cloth, measuring 36 to 40 cubits.

ம. சேல; க., பட. சேலெ

A.S. segel; E. sail

[சீரை → சீலை → சேலை. சீலை = நீண்ட அல்லது அகன்ற துணி. சேலை → வ. சேல. வடவர் சில் (c) என்றொரு செயற்கை மூலத்தை அமைத்துக்கொண்டு ஆடையணிதல் என்று பொருள் கூறுவர். இஃது முற்றிலும் பொருந்தாமை வெள்ளிடைமலை. (வ.மொ.வ.166. ஒமொ.174.)]

சேலை[2] *šēlai,* பெ. (n.) அசோகு *(மலை.);* mast tree. 2. மரவகை; parchment bark cutch.

ம. சேல

[செய் → செயலை → சேலை]

சேலைக்கலிச்சி *šēlai-k-kalicci,* பெ. (n.) இச்சி மரம் *(L.);* jointed ovate-leaved fig.

சேலைபோடு-தல் *šēlai-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) கைம்பெண்ணானவட்குப் புதுத்துணி அளித்தல் *(நாஞ்.);* to offer a new cloth to a widow in mourning.

[சேலை+போடு-தல். கைம்பெண் ஆனவளின் திடீர் கையறு நிலை கண்டு அவளது எதிர்காலத் தேவையை முன்னிட்டு உறவினர்கள், அவளுக்குச் சேலை அளித்து உதவுதல்]

சேலையுஞ்சை *šēlai-yuñjai,* பெ. (n.) கருவாகை மரம் *(L.);* fragrant sirissa.

சேலையுடைத்தாள் *šēlai-y-uḍaittāḷ,* பெ. (n.) கவிழ்தும்பை; stooping leucas.

சேலைவாகை *šēlai-vāgai,* பெ. (n.) வாகை வகை; silken rose tree.

க. சேலபாகெ

[சேலை → சேலைவாகை]

சேலொளி *šēloḷi,* பெ. (n.) 1. வைடூரியம்; cat's eye. 2. சேற்கெண்டைமீனின் கண்ணை யொத்த ஒளி; light or lustre resembling the carp fish eye.

[சேல் + ஒளி.]

சேலோதம் *šēlōdam,* பெ. (n.) சந்தனம் *(மூ.அ.);* sandal-wood tree.

[சேலேகம் → சேலேதம் → சேலோதம்]

சேவகம்[1] *šēvagam,* பெ. (n.) 1. யானைக்கூடம்; elephant's stall. "சேவக மமைந்த சிறுகட்கரி" *(கம்பரா. தைலவ. 12).* 2. தூக்கம் *(சூடா.);* sleep. "யானை சேவகமமைந்த தென்னச் செறிமலர் அமளி சேர்ந்தான்" *(கம்பரா. கும்ப. 9).*

E. sleep; OE. sladpan; G. schlafen; L. sommus

[சே[2] + அகம்.]

சேவகம்[2] *šēvagam,* பெ. (n.) 1. பேயுள்ளி; wild onion. 2. கோரைக்கிழங்கு; koray root. 3. சோம்பு; anise seed.

[சே[2] + அகம்.]

சேவகன் *śēvagan,* பெ. (n.) சேவகன்பூடு (மலை.) பார்க்க; see *śēvagan-pūḍu.*

[செம் + அகம் – செமகம் → சேமகம் → சேவகம் → சேவகன்]

சேவகன்பூடு *śēvagan-pūḍu,* பெ. (n.) 1. சிற்றாமுட்டி (மலை.); rose-coloured sticky mallow. 2. காந்தள்; Malabar glory-lily. 3. சிறு புள்ளடி; scabrous ovate unifoliate ticktrefoil.

[சேவகன்[2] + பூடு]

சேவகனார் *śēvaganār* பெ. (n.) மஞ்சட் காளான்; yellow fungus.

சேவகனார்கிழங்கு *śēvaganār-kilaṅgu,* பெ. (n.) மருந்தாகப் பயன்படும் கிழங்குவகை (பதார்த்த. 408); a kind of root, used medicinally.

[சேவகன்[2] → சேவகனார் + கிழங்கு]

சேவடி *śēvaḍi,* பெ. (n.) சிவந்த பாதம்; lotus-red foot. "மன்னிய வீசன் சேவடி நாளும் பணிகின்ற" (தேவா. 104:15).

ம. சேவடி

[சே + அடி. சே = சிவப்பு, செம்மை]

சேவணம் *śēvaṇam,* பெ. (n.) ஒரு நாடு; a country.

சேவணர் *śēvaṇar,* பெ. (n.) சேவண நாட்டார் (கலிங். 318); people of the country of Śēvaṇam.

சேவதக்கு-தல் *śēvadakku-,* 5 செ.கு.வி. (v.i.) எருதுக்கு விதையடித்தல்; to geld a bull. "சேவதக்குவார் போலப் புகுந்து" (திவ்.பெரியாழ். 4. 5:7).

[சே + அதக்கு-,]

சேவமரம் *śēvamaram,* பெ. (n.) சாயமரம்; Malay sandal.

சேவல்[1] *śēval,* பெ. (n.) 1. மயிலொழிந்த பறவைகளின் ஆண் (தொல். பொருள். 603); male of birds and fowls, excepting peacock. 2. கோழியின் ஆண் (திவா.); cock. 3. ஆண் அன்னம் (திவா.); male swan. "அன்னச் சேவ லன்னச் சேவல்" (புறநா. 67) 4. கருடன்; kite. "உயிர்கொடிச் சேவலோய்" (பரிபா. 3:18). 5. முருகக் கடவுளூர்தியாகிய மயில் (தொல். பொருள். 603, உரை.); peacock, the vehicle of Murugan. 6. ஆண்குதிரை; stallion. "குதிரையு ளாணினைச் சேவலென்றலும்" (தொல். பொருள். 623).

F. chevell

ம. சேவல், சாவல் கோழி

[சே → சேவு → சேவல். சேவல் என்பது விலங்கு, பறவை முதலானவற்றின் ஆண்பாற் பொதுப்பெயராகும். (எ.கா) சேங்கன்று = ஆண்கன்று. "சேவும் சேவலும் இரலையும் கலையும் . . . போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும் யாத்த ஆண்பாற் பெயரென மொழிப" (தொல்.1501) (தமி.வ.108)]

சேவல்[2] *śēval,* பெ. (n.) காவல்; watching. "இறடியஞ் சேவற்கு" (கல்லா. 84: 9).

ம. சேவல்

[செய்வி → சேவி → சேவு → சேவல்]

சேவல்[3] *śēval,* பெ. (n.) சேறு (சூடா.); mud, mire.

மறுவ. களிமண், அளறு, சகதி.

[செவ்வல் → சேவல்]

சேவல்காத்தல் *śēval-kāttal,* பெ. (n.) பயிர்க்குப் புள், விலங்கு முதலியவற்றாற் கேடு விளையாமற் காக்கை (ஏரெழு.); keeping watch over corn-field, protecting it from birds, beasts, etc.

[சேவல் + காத்தல்]

சேவலஞ்சித்தி *śēvalañjitti,* பெ. (n.) கீரிப் பிள்ளை; mongoose (சா.அக.).

சேவலவரை *śēval-avarai,* பெ. (n.) கோழியவரை; fowl bean.

[சேவல் + அவரை]

சேவலாங்கொட்டை *śēvalāṅ-goṭṭai,* பெ. (n.) நேர்வாலங்கொட்டை; Indian croton seed.

[சேவாலம் + கொட்டை]

சேவலாள் *śēval-āḷ,* பெ. (n.) விளை புனங்களைக் காவல்புரிபவன் (W.G.); watchman in corn-field.

[சேவல்[2] + ஆள்]

சேவலான் *śēval-āṉ,* பெ. (n.) சேவற் கொடியோன் பார்க்க; see *śēvaṟ-koḍiyōṉ.* "சேவலானெனத் தயித்திய னனையவத் திகத்தர்" (பாரத. நிரைமீட். 20).

[சேவல்¹ → சேவலான்]

சேவற்கட்டு *śēvaṟ-kaṭṭu,* பெ. (n.) சேவற்போர் (எங்களுர். 10); cock-fight.

[சேவல் + கட்டு. கத்தி போன்றவற்றை சேவலின் காலில் கட்டி போர் புரியவிடல்]

சேவற்கத்தி *śēvāṟ-katti,* பெ. (n.) போர்ச் சேவல்களின் கால்களிற் கட்டுங் கத்தி; knife fastened to the feet of cocks in cock-fight, spur.

[சேவல் + கத்தி]



சேவற்கத்தி

சேவற்கொடி *śēvāṟ-koḍi,* பெ. (n.) ஒருவகைக் கொடி; cock-creeper (சா.அக.).

சேவற்கொடியோன் *śēvaṟ-koḍiyōṉ,* பெ. (n.) முருகக்கடவுள் (திவா.); Muruga, as having the cock on his banner.

[சேவல் + கொடியோன். சேவற்கொடி யோன் = சேவலைக் கொடியில் கொண்டவன்]

சேவற்கொண்டை *śēvaṟ-koṇḍai,* பெ. (n.) 1. சேவலின் தலையில் உள்ள கொண்டை போன்ற அமைப்பு; cock's crest. 2. கோழிக் கொண்டைச் செடி; cock-comb.

[சேவல் + கொண்டை]

சேவற்சூடு *śēvaṟ-śūḍu,* பெ. (n.) சேவற் கொண்டை; cock's crest.

[சேவல் + சூடு]

சேவற்பண்ணி *śēvaṟ-paṇṇi,* பெ. (n.) நாணற் புல்; kaus grass (சா.அக.).

சேவற்பண்ணை *śēvaṟ-paṇṇai,* பெ. (n.) கோழிக் கொண்டைச் செடி (சங்.அக.); cocks- comb.

[சேவல் + பண்ணை]

சேவற்பூ *śēvaṟ-pū,* பெ. (n.) கோழிக் கொண்டைச் செடி; cock's comb (சா.அக.).

சேவற்போர் *śēvāṟpōr,* பெ. (n.) சேவல்களின் காலில் கத்தியைக் கட்டி மோத விடும் ஒருவகை போர்; cock-fight.

[சேவல் + போர்]

சேவாலகம் *śēvālagam,* பெ. (n.) சத்திசாரணை; spreading hogweed.

சேவாலங்கொட்டை *śēvālaṅ-goṭṭai,* பெ. (n.) சேவாலம் பார்க்க; see *śēvālam.*

[சேவாலம் + கொட்டை]

சேவாலம் *śēvālam,* பெ. (n.) நேர்வாளம் (மலை.); croton.

சேவாலிகம் *śēvāligam,* பெ. (n.) கருநொச்சி (மலை.); willow-leaved justicia.

சேவியம் *śēviyam,* பெ. (n.) வெள்ளை வெட்டிவேர் (மூ.அ.); a variety of cuscuss grass.

சேவியால் *śēviyāl,* பெ. (n.) 1. இலாமிச்சை; cuscuss root. 2. வேலமரம்; acacia tree (சா.அக.).

சேவியால்புல்லுருவி *śēviyāl-pulluruvi,* பெ. (n.) வேலமரத்தின்மேற் புல்லுருவி; a parasite on acacia tree (சா.அக.).

[சேவியால் + புல்லுருவி]

சேவு¹ *śēvu,* பெ. (n.) 1. செவ்வயிரம்; heart-wood. 2. சிவப்பு வண்ணம்; red colour. 3. மரவயிரம்; headcore of a tree. 'செய் தகை சேவேறும், செய்யாத கை நோவேறும்' (பழ.).

[சே → சேவு]

சேவு² *śēvu,* பெ. (n.) கடலை மாவைப் பிசைந்து அச்சில் தேய்த்து எண்ணெய்யில் இட்டுச் செய்யப்படும் கார அல்லது இனிப்புச் சுவையுடைய தின்பண்டம்; a savoury or sweet in the shape of stort stick-strips made of chick- pea past fried in oil. இனிப்புச் சேவு.

[சேர் → சேர்வை → சேவை → சேவு]

சேவுகன் *šēvugaṉ*, பெ. (n.) பேயுள்ளி அல்லது நரி வெங்காயம்; wild onion.

சேவை[1] *šēvai*, பெ. (n.) எதிராக; towards, in front of. கடைக்குச் சேவை (இ.வ.).

[செவ்வை → சேவை]

சேவை[2] *šēvai*, பெ. (n.) அரிசி மாவை நூல் போலப் பிழிந்து நீராவியில் வேகவைத்துச் செய்யப்படும் உணவு; a noodle-like steamed rice preparation.

மறுவ. இடியாப்பம்

[சேர் → சேர்வை → சேவை]

சேவைக்கீல் *šēvai-k-kīl*, பெ. (n.) நீண்டகீல் (C.E.M.); long hinges.

[சேர் → சேர்வை → சேவை + கீல் - சேவைக்கீல்]

சேவைநாழி *šēvai-nāḻi*, பெ. (n.) சேவை பிழிவதற்கான அடித்துளைகளும் கைப் பிடிகளும் கொண்டு, ஒன்றுக்குள் ஒன்று செல்லுமாறு அமைந்த உழக்குப் போன்ற கருவி; a kind of colander-like vessel, used in preparing šēvai.

[சேவை + நாழி]



சேவைநாழி

சேவையர்காவலன் *šēvaiyar-kāvalaṉ*, பெ. (n.) சேக்கிழார்; Šēkkiḻār. "வளவர் கோமான் சேவையர் காவலரை முகநோக்கி" (சேக்கிழார். பு.25).

சேழ் *šēḻ*, பெ. (n.) மேலிடம்; the upper region. "சேழுயர்ந்த மணிமாடம்" (திவ். பெரியதி. 4. 4.9).

ம. சேழ்

[சேண் → சேழ்]

சேழம் *šēḻam*, பெ. (n.) சேளம் (நாஞ்.) பார்க்க; see *šēḷam*.

[சேளம் → சேழம்]

சேழி *šēḻi*, பெ. (n.) முற்றம் (தருமபுரி.); court-yard.

[சேழ் → சேழி]

சேளம் *šēḷam*, பெ. (n.) மீதி (நெல்லை); remainder, balance.

சேளாகம் *šēḷāgam*, பெ. (n.) ஒரு வகைக் கோணி (இ.வ.); a kind of gunny bag.

ம. சேளாகம்

சேற்கண்ணி *šēṟ-kaṇṇi*, பெ. (n.) மெய்யழகுப் பூச்சு, அரிதாரம் (சங்.அக.); sulphide of arsenic.

[சேல் + கண்ணி]

சேற்கெண்டை *šēṟ-keṇḍai*, பெ. (n.) கரும்பச்சை நிறமுடைய கெண்டை மீன் வகை; carnatic carp, greenish-brown, weighing as much as 25 lb.,

[சேல் + கெண்டை]

சேற்றாமை *šēṟṟāmai*, பெ. (n.) ஆமை வகை; common terrapin.

[சேறு + ஆமை]



சேற்றாமை

சேற்றாரால் *šēṟṟārāl*, பெ. (n.) 15 விரல நீளமும், பழுப்பும் பச்சையுங் கலந்த நிறமுமுள்ள ஆரால் மீன் வகை; sand-eel brownish or greenish, attaining 15in. in length.

[சேறு + ஆரால்]

சேற்றில்வளர்ந்தமடச்சி *šēṟṟil-vaḷarnda-maḍcci*, பெ. (n.) பிரமிப்பூடு; brahmiplant (சா.அக.).

[சேற்றில் + வளர்ந்த + மடச்சி]

சேற்றுக்கால் *šēṟṟu-k-kāl,* பெ. (n.) *1.* வயலில் தொளியடித்து நாற்றுநடவு செய்து பயிர் செய்யும் வேளாண்மை; wet-ploughing system of cultivation. *2.* தொளியடித்து விதைக்கும் வயல்; land trampled, ploughed and puddled for sowing paddy. *3.* களிமண் வயல், நஞ்சை (தஞ்சை); slushy clay-soil.

[சேறு + கால்]

சேற்றுக்கெண்டை *šēṟṟu-k-keṇḍai,* பெ. (n.) சேற்றில் வளரும் கெண்டை மீன்; a kind of fish

[சேறு → கெண்டை]



சேற்றுக்கெண்டை

சேற்றுத்தாவி *šēṟṟu-t-tāvi,* பெ. (n.) ஈரமும் மென்மையும் கொண்ட களிமண்; wet and soft earth mire, aspersions, mud slipper.

[சேறு + தாவி]

சேற்றுநாற்று *šēṟṟu-nāṟṟu,* பெ. (n.) சேறுசெய்த வயலில் முளைத்த நாற்று (G.Tj.D.I, 96); seedling, growing from slushed seed-bed, mud-shoots.

[சேறு + நாற்று]

சேற்றுப்பலகை *šēṟṟu-p-palagai,* பெ. (n.) *1.* மண்தாங்கிப் பலகை; wooden lintel. *2.* சேறடித்த வயலைப் பரம்படிக்கப் பயன்படும் பலகை; wooden plank to flatten the slushed wet land.

[சேறு + பலகை]

சேற்றுப்புண் *šēṟṟu-p-puṇ,* பெ. (n.) சேற்றால் கால்விரலிடையில் உண்டாகும் அரிபுண்; itching sore between the toes, due to frequent walking in the mud.

ம. சேற்றுப்புண்ணு; பட. கொரெகுண்ணு

[சேறு + புண்]

சேற்றுப்புழுதி *šēṟṟu-p-puḻudi,* பெ. (n.) உழப்பட்ட நிலம் (R.T.); ploughed land.

[சேறு + புழுதி]

சேற்றுமரக்கரப்பான் *šēṟṟumara-k-karappāṉ,* பெ. (n.) குழந்தைகளுக்கு வரும் கரப்பான் நோய்; eczema of children due to phlegm humour (சா.அக.).

சேறடி *šēṟaḍi,* பெ. (n.) சேறடை (யாழ்ப்.) பார்க்க; see *šēṟaḍai.*

சேறடை *šēṟaḍai,* பெ. (n.) வண்டிச்சக்கரத்தில் படும் சேற்றை அகற்றிக் கொண்டேயிருக்கும் கருவி; tool to remove the slush from the wheel of the cart; mudguards of a carriage.

[சேறு + அடை. சேறு அடையாவண்ணம் விலக்கிக் கொண்டேயிருக்கும் கருவி]

சேறல் *šēṟal,* பெ. (n.) செல்லுகை (சூடா.); passing, going, reaching. "தென்றிசை சேறலாற்றா" (கம்பரா. சம்புமாலி. 19).

[செல் → சேறல்]

சேறாடி[1] *šēṟāḍi,* பெ. (n.) சேறடை (யாழ்ப்.) பார்க்க; see šēṟaḍai.

[சேறு + ஆடி - சேறாடி. ஆடு → ஆடி]

சேறாடி[2] *šēṟāḍi,* பெ. (n.) ஒரு வகை விருது; a royal emblem carried in procession. "பொன் னெழுத் தெழுது சேறாடி பொற்புற" (திருக்காளத். பு. 7:66).

சேறாடு[1]**-தல்** *šēṟāḍu-,* 5 செ.கு.வி. (v.i.) வயலில் விதைத்தற்குத் தொளி கலக்குதல் (யாழ்ப்.); to make a field slushy for sowing paddy.

[சேறு + ஆடு-.]

சேறாடு[2]**-தல்** *šēṟāḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) துவைத்துக் குழைத்தல்; to mash, reduce to pulp, as mangled bodies on the field of battle.

[சேறு + ஆடு. சேறாடு = சேற்றைத் துவைத்துக் குழப்புதல்.]

சேறாம்பாம்பு *šēṟām-pāmbu,* பெ. (n.) 10 அடி நீளமும் பழுப்பு நிறமும் உள்ள மீன்வகை; eel, uniform brown, attaining 10 ft. in length.

[சேறு + ஆம் + பாம்பு; சேற்று மணலுள் அடிக்கடி புதைந்து செல்லும் செவிளுள்ள மீன், வடிவில் பாம்பு போலிருக்கும்]

சேறி *šēṟi,* பெ. (n.) 1. 2 அடி நீளமும் கரும்பலகை நிறமும் உடைய கடல்மீன் வகை; sea-fish, slaty grey attaining 2ft. in length, *Aiagramma cinctum.* 2. $4^{3}/_{4}$ விரல நீலமும் கருமை கலந்த சாம்பல் நிறமும் உடைய கடல்மீன் வகை; sea-fish dark-grey attaining $4^{3}/_{4}$ in. in length, mugil labiosus.

சேறு[1] *šēṟu,* பெ. (n.) 1. நீருடன் கலந்து குழைந்த மண், சகதி; mud, mire, slush, loam. "கதிர்மூக் காரல் கீழ்ச்சேற் றொளிப்ப" (புறநா. 249). 2. குழம்பு; liquid of thick consisting as sandal paste. "சாறுஞ் சேறும்" (பரிபா. 6:41). 3. பனம் பழம் தேங்காய் முதலியவற்றின் செறிந்த உள்ளீடு; kernel, as of a coconut. "நுங்கின் றீஞ்சேறு மிசைய" (புறநா. 225). 4. விளாம்பழம் (மலை.); wood-apple. 5. சீழ்; pus. புண்ணிலிருந்து சேறுஞ் சலமும் பாய்கின்றன (நாஞ்.).

ம. சேறு, சேற், சேர்; க. கெசர்; தெ. செறுகு; து. கெலர், கேது; பட. சேரு; குரு. கச்ச்; மா. க்வகு

[செறி → சேறு]

சேறு[2] *šēṟu,* பெ. (n.) கோயில் திருவிழா (சூடா.); temple festival.

சேறு[3] *šēṟu,* பெ. (n.) 1. சாரம்; sap, juice. "சேறு சேர்கனி" (சூளா. சுயம். 66). 2. இனிமை; sweetness, toothsomeness. "தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற" (நெடுநல். 26). 3. கள் (சூடா.); toddy. "சேறுபட்ட தசும்பும்" (புறநா. 379:18). 4. தேன்; honey. "சேறுபடு மலர்சிந்த" (சீவக. 426). 5. பாகு; treacle. "கரும்பின் றீஞ்சேறு" (பதிற்றுப். 75:6).

[சாறு → சேறு]

சேறு[4] *šēṟu,* பெ. (n.) அரத்தின நீரோட்டம் (இ.வ.); water, transparency and brilliance of a gem.

சேறுகம் *šēṟugam,* பெ. (n.) விதை; seed (சா.அக.).

[சாறு → சேறு → சேறுகம்]

சேறுகுத்தி *šēṟu-kutti,* பெ. (n.) சேற்றைத் தள்ளற்கு உதவுங் கருவி (புறநா. 61. உரை); an instrument for removing mud.

[சேறு + குத்தி]

சேறுஞ்சுரியும் *šēṟu-ñ-šuriyum,* பெ. (n.) சகதி; mud and mire.

மறுவ. சேறும் சகதியும் (முகவை)

[சேறு + சுரி]

சேறுஞ்சுரியுமாய் *šēṟu-ñ-juriyum-āy,* கு.வி.எ. (adv.) குழைவாய்; in over boiled mashy condition. சோறு சேறுஞ்சுரியுமா யிருக்கிறது (யாழ்ப்.).

[சேறு + சுரியும் + ஆய்]

சேறுதடித்தநீர் *šēṟu-taḍitta-nīr,* பெ. (n.) சேறு கலந்த கலங்கலான தண்ணீர்; muddy water.

மறுவ. மண்டி, மண்டிநீர் (முகவை)

[சேறு + தடித்த + நீர்]

சேறுதாங்கி *šēṟu-dāṅgi,* பெ. (n.) சேற்றினை வலைப்பையில் செல்லவிடாமல் செய்யும் ஒரு வலைக்கூறு; a part of the net to prevent slush going into the net.

[சேறு + தாங்கி]

சேறுதூக்கி *šēṟu-tūkki,* பெ. (n.) சேறு அகற்றி; mud jack.

[சேறு + தூக்கி]

சேறை *šēṟai,* பெ. (n.) சேரை[2] பார்க்க; see *šērai*[2].

சேன் *šēṉ,* பெ. (n.) சேனன் பார்க்க; see *šēṉaṉ.* "புரவிச்சே னென்றியாவரும் புகழப்பட்டார்" (சீவக. 1681).

[சேனன் → சேன்]

சேனம் *šēṉam,* பெ. (n.) சேம்பு[1] பார்க்க; see *šēmbu.*

[சேம்பு → (சேம்மு) → சேனம்]

சேனம்பாம்பு *šēṉam-pāmbu,* பெ. (n.) சேனா[1] பார்க்க; see *šēṉā.*

சேனன் *šēṉaṉ,* பெ. (n.) ஒரு பழைய பட்டப் பெயர்; an ancient title. "சந்து சேனனு மிந்து சேனனுந் தருமசேனனும்" (தேவா. 859, 4).

சேனா[1] *šēṉā,* பெ. (n.) 1. நான்கு அடிக்கு மேல் வளரும் பழுப்பு நிற மீன்வகை; true eel, brownish, attaining more than 4 ft. in length. 2. மலங்குமீன் (வின்.); a kind of eel with picked head.

சேனா² *šēṉā,* பெ. (n.) நிலவாவிரை; Thirunelveli senna.

சேனாங்கம் *šēṉāṅgam,* பெ. (n.) படையின் உறுப்பு (யாழ்.அக.); component division of an army.

[சேனை + அங்கம்]

சேனாசமுத்திரம் *šēṉā-šamuttiram,* பெ. (n.) 1. கடல்போன்ற பெரும் படை; army, vast as an ocean. 2. பெருங்கூட்டம் (உ.வ.); immense crowd.

[தானை → சேனை + சமுத்திரம். தானை = படை, பெரும்படை.]

Skt. சமுத்ர → த. சமுத்திரம்

சேனாதிபதி *šēṉādi-padi,* பெ. (n.) சேனாபதி பார்க்க; see *šēṉā-padi.*

சேனாதிபன் *šēṉādi-paṉ,* பெ. (n.) சேனாபதி பார்க்க; see *šēṉā-padi.* "சூரனே சேனாதிபன்" (அறப்பளி. 85).

[சேனை + அதிபன்]

Skt. அதிப → த. அதிபன்

சேனாதிராயன் *šēṉādi-rāyaṉ,* பெ. (n.) 1. சேனாபதி (யாழ்.அக.) பார்க்க; see *šēṉā-padi.* 2. முருகக்கடவுள்; god Murugaṉ.

[சேனை + ஆதிராயன்]

Skt. அதிராஜ → த. அதிராயன். அதி → ஆதி

சேனாபத்தியம் *šēṉāpattiyam,* பெ. (n.) படைத்தலைமை; office of a commander, commander-ship.

[சேனை + பத்தியம் - சேனைபத்தியம் → சேனாபத்தியம் Skt. பத்ய → த. பத்தியம்]

சேனாபதி¹ *šēṉā-padi,* பெ. (n.) படைத் தலைவன்; general, commander of an army. "சுவேதனைச் சேனாபதியாய்" (திவ். இயற். 4:24).

[சேனை + பதி. Skt. பதி]

சேனாபதி² *šēṉā-padi,* பெ. (n.) பண்வகை (இராகவகை) (பரத. ராக. 103.); a specific melody-type.

சேனாபதியாழ்வார் *šēṉāpadi-y-āḻvār,* பெ. (n.) திருமாலுக்கு விருந்து கொடுத்தவர் (M.E.R. 514 of 1917); Viṣṇu's host.

மறுவ. சேனை முதலியார்

[சேனாபதி + ஆழ்வார்]

சேனாமரம் *šēṉā-maram,* பெ. (n.) அழிஞ்சில் மரம்; alangium tree (சா.அக.).

[சே → சேனா + மரம்]

சேனாமுகம் *šēṉā-mugam,* பெ. (n.) 1. முற்படை; front army. "வாழ்க சேனாமுகம்" (சிலப். 25: 192). 2. மூன்று தேர், மூன்று யானை, ஒன்பது குதிரை, பதினைந்து காலாட்கள் அடங்கிய ஒரு படைத்தொகை (பிங்.); division of an army comprising 3 chariots, 3 elephants, 9 horses and 15 foot-soldiers.

[சேனை + முகம்]

சேனாவரைசி *šēṉā-v-araiši,* பெ. (n.) சேனாவரையன் மனைவி (நன். 276, மயிலை).; wife of commander-in-chief.

[சேனை + அரைசி]

சேனாவரையம் *šēṉāvaraiyam,* பெ. (n.) தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்குச் சேனாவரையர் செய்த உரை; a commentary on the Šol-l-adigāram of Tolkāppiyam by Šēṉāvaraiyar.

[சேனாவரையர் → சேனாவரையம்]

சேனாவரையர் *šēṉāvaraiyar,* பெ. (n.) தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்குச் சிறந்த உரை செய்த ஆசிரியர்; the renowned commentator on the Šol-l-adigāram of Tolkāppiyam.

[சேனை + அரையர்]

சேனாவரையன் *šēṉā-varaiyaṉ,* பெ. (n.) சேனாபதி (நன். 278, மயிலை) பார்க்க; see *šēṉā-pati.*

[சேனை + அரையன்]

சேனாவு *šēṉāvu,* பெ. (n.) தகரை (மலை.); foetid cassia.

சேனானியன் *šēṉāṉiyaṉ,* பெ. (n.) சேனாதிராயன் (யாழ்.அக.) பார்க்க; see *šēṉādi-rāyaṉ.*

சேனை[1] *šē*n̲*ai,* பெ. (n.) *1. யானை, தேர், பரி, காலாள் என்ற நாற்படை;* army comprising four-fold divisions, viz., yān̲ai, dēr, pari, kālāḷ. *2. படைக்கலம்;* weapon. *3. கூட்டம்;* multitude, crowd. "குரிசிலை விடாத சேனையே" *(கம்பரா. தைலமா. 8). 4. உற்றார் உறவினர்;* friends and relations. அவன் சேனையை யாரால் தாங்க முடியும்?

[தானை → (சானை→) சேனை. தானை = படை]

சேனை[2] *šē*n̲*ai,* பெ. (n.) *1.* தெரு *(பிங்.);* street. *2. கடைத்தெரு;* bazaar. *3. சந்தை (வின்.);* market, fair.

சேனை[3] *šē*n̲*ai,* வி.அ. (adj.) *பல;* many. அவன் வந்து சேனைநாள் ஆயின (இ.வ.).

தெ. சேந

சேனை[4] *šē*n̲*ai,* பெ. (n.) *சேணம்;* saddle.

[சேணம் → சேணை → சேனை]

சேனை[5] *šē*n̲*ai,* பெ. (n.) *1. கரணை வகை* (தைலவ. தைல. *135);* tahiti arrowroot, Tacoa pinnatifida. *2. கரணை வகை* (M.M.); tuberous- rooted herb. Amorphophallus campanulatue.

ம. சேன; க., து., கேனெ; கூ. கூனெ

[சேமம் → சேனை. சாற்றை (சத்துகளை) வேரில் சேமித்து வைக்கும் கிழங்கு]

சேனை[6] *šē*n̲*ai,* பெ. (n.) சேனைப்பால் பார்க்க; see *šē*n̲*ai-p-pāl.* "சங்கிற். . . சேனையுடன் வஞ்சத் திருட்டுமருட்டுங் கலந்து புகட்டினாள்" *(விறலிவிடு. 166).*

[சேணை → சேணை]

சேனைக்கணிமகன் *šē*n̲*ai-k-ka*n̲*i-maga*n̲*,* பெ. (n.) *சேனையிலுள்ள கணியன்;* astrologer attached to an army. "செவ்வகை யுணர்ந்தோன் சேனைக் கணிமகன்" *(பெருங். உஞ்சைக். 36:199).*

[சேனை + கணி + மகன்]

சேனைக்கால் *šē*n̲*ai-k-kāl,* பெ. (n.) கோயிலில், குடவடிவ விளக்கை வைக்கும் கம்பம் (இ.வ.); stand of a pot-shaped lamp used in temples.

[சேனை + கால்]

சேனைக்கிழங்கு *šē*n̲*ai-k-kiḻaṅgu,* பெ. (n.) சமையலுக்குப் பயன்படும், கறுப்பு நிறத்தோலும் வெளிர்ச் சிவப்பு நிறச் சதைப் பகுதியும் கொண்ட அரைக்கோள வடிவத்தில் இருக்கும் ஒருவகைக் கிழங்கு; a big variety of elephant foot yam *(சா.அக.).*

[சேனை + கிழங்கு]

சேனைக்கிழங்கு

சேனைக்குடையார் *šē*n̲*ai-k-kuḍiyār,* பெ. (n.) சேனைத்தலைவர்,3 பார்க்க; see *šē*n̲*ai-t-talaivar,3.*

மறுவ. படைத்தலைவர், சேனைமுதலி

[சேனை + கு + உடையார்]

சேனைக்கைகோளர் *šē*n̲*ai-k-kaikōḷar,* பெ. (n.) சேனைத்தலைவர் பார்க்க; see *šē*n̲*ai-t-talaivar.* "சேனைக் கைகோளரும், கண்ணாளரும் மற்றும் பல கல்வனையில் உள்ளாரும்" *(த.க.தொ.2 கல். 4, தொ. எ. 259-4).*

[சேனை + கைகோளர்]

சேனைத்தலைவர் *šē*n̲*ai-t-talaivar,* பெ. (n.) *1. சேனாபதி;* commander, leader of an army. "சேனைத் தலைவராய்ச் சென்றோரும்" (நாலடி.2). *2.* சேனைமுதலியார்,1 பார்க்க; see *šē*n̲*ai-mudaliyār,1.* 'சேனைத் தலைவர் திருத்தாள். . . சேவிப்பனே' *(அழகர்கலம். காப்பு). 3.* இலை வணிகரினத்தார் (இ.வ.); men of ilai-vāṇigar caste.

[சேனை + தலைவர்]

சேனைநாதன் *šē*n̲*ai-nāda*n̲*,* பெ. (n.) சேனாபதிஆழ்வார் பார்க்க; see *šē*n̲*āpadi-āḻvār.* "நாதமுனி சடகோபன் சேனை நாதன்" *(ரஹஸ்ய.51).*

[சேனை + நாதன்]

சேனைப்படைகள் *šē*n̲*ai-p-paḍaigaḷ,* பெ. (n.) பெருங்கூட்டம் *(யாழ்ப்.);* big crowd, concourse of people.

[சேனை + படைகள்]

சேனைப்படையரவம் *sēṉai-p-paḍaiyaravam,* பெ. (n.) சிறியாநங்கை; snake root (சா.அக.).

சேனைப்பால் *sēṉai-p-pāl,* பெ. (n.) குழந்தை பிறந்ததும் புகட்டும் இனிப்புக் கலந்த நீருணவு (இ.வ.); sweetened liquid, used for feeding an infant as soon as it is born.

[சேனை + பால் – சேனைப்பால்]

சேனைப்பெருங்கணி *sēṉai-p-peruṅ-gaṇi,* பெ. (n.) படையெடுப்பு முதலியவற்றுக்குரிய நாள் முழுத்தங்களைக் கணித்தற்குச் சேனையில் அமர்ந்துள்ள கணியர் தலைவன்; chief astrologer attached to an army. "சேனைப் பெருங்கணி செப்பிய நன்னாள்" (பெருங். மகத. 22: 185).

[சேனை + பெரும்கணி]

சேனைப்பெருவாணிகன் *sēṉai-p-peru-vāṇigaṉ,* பெ. (n.) படைக்கு வேண்டிய உணவு முதலிய பண்டங்களைக் கொடுத்து உதவுபவன்; chief purveyor for an army. "செருவார் சேனைப் பெருவாணிகன் மகன்" (பெருங். உஞ்சைக். 40: 344).

[சேனை + பெருவாணிகன்]

சேனைபோகம் *sēṉai-bōgam,* பெ. (n.) படைக்குரிய பணிகளில் ஒன்று; an office in military service.

[சேனை + போகம்]

சேனைமீகாமன் *sēṉai-mīgāmaṉ,* பெ. (n.) கடற்படையின் கலத்தலைவன்; captain of the warship. 'இராசராச சேதிராயஞ் சேனைமீகாமன் எழுந்தருவித்த சேதி நாயகற்கும் நாச்சியாற்கும்' (முதல் இராசராசன், கிபி. 1049, தெ.க.தொ. 7, கல். 890).

[சேனை + மீகாமன்]

சேனைமுதலி *sēṉai-mudali,* பெ. (n.) படைத் தலைவர்; chief of an army.

[சேனை + முதலி]

சேனைமுதலியார் *sēṉai-mudaliyār,* பெ. (n.) திருமாலுக்கு விருந்து கொடுத்தவர்; Viṣṇu's hosts. 2. கைக்கோள இனத்தார்; men of Kaikkōḷar caste.

[சேனை' + முதலியார்]

சேனையங்காடிகள் *sēṉai-y-aṅgāḍigaḷ,* பெ. (n.) அறுவை வணிகருளொரு வகையினர் (தெ.க.தொ. 430); a sect of cloth merchants.

[சேனை + அங்காடிகள்]

சேனையர்கோன் *sēṉaiyar-kōṉ,* பெ. (n.) சேனைமுதலியார் பார்க்க; see *sēṉai-mudaliyār.* "பேராழி செலுத்திய சேனையர் கோன்வாழ" (அஷ்டப். சீரங்கநாயகி. ஊசல், 1).

[சேனையர் + கோன்]

சேனையுள்படுநன் *sēṉaiyuḷ-paḍunaṉ,* பெ. (n.) அரசன் ஆணையைக் காளமூதிச் சேனைக்கு அறிவிப்போன்; royal herald who proclaims with a trumpet the king's commands to his army. 'சேனையுள்படுநரை யாணையி னேவி' (சிலப். 8: 13, உரை).

[சேனை + உள் + படுநன்]

சை

சை[1] *šai,* சகரமெய்யும் ஐகார உயிரும் சேர்ந்த உயிர்மெய் எழுத்து; the compound of 'c' and 'ai'.

[ச் + ஐ = சை]

சை[2] *šai,* இடை (int.) இகழ்ச்சிக் குறிப்பு; expr. of contempt, abhorrence.

சை[3] *šai,* பெ. (n.) தினை; millet.

சைக்கினை *šaikkinai,* பெ. (n.) சைகை பார்க்க; see *šaigai.*

E. signal; F., LL, L: signum

[சைகை → சைக்கினை]

சைகை *šaigai,* பெ. (n.) செய்தி தெரிவிக்கும் முறையில் கை, கண் முதலியவற்றால் காட்டும் குறிப்பு; signal gesture, hint, as winking of the eyes, hand. "செங்கட் சைகை" (சூளா. குமார. 27).

[செய் + கை - செய்கை (செய்வது) → சைகை]

சையகம் *šaiyagam,* பெ. (n.) படுக்கை (அக.நி.); bed.

[தலை சாய்த்தல் என்பது உறங்குதலைக் குறிக்கும். எனவே சாய் → அகம் - சாயகம் → சையகமாகிப் படுக்கையைக் குறிக்கிறது.]

சையரியம் *šaiyariyam,* பெ. (n.) பெருங் குறிஞ்சி; cone head - Strobil anthes consanguineus (சா.அக.).

சையல் *šaiyal,* பெ. (n.) சாயல்; exact likeness. "சாமி நடையைப் போல . . . சையலிலே நான் காணேன்" (கட்டபொம்மு, பக். 57).

[சாயல் → சையல்]

சையானம் *šaiyānam,* பெ. (n.) சையகம் பார்க்க; *šaiyagam.*

சையெனல் *šai-y-enal,* பெ. (n.) இகழ்ச்சிக் குறிப்பு; onom. expr. of contempt, abhorrence. "சையெனத் திரியேல்" (ஆத்திசூடி).

[சே → சை + எனல்]

சையை[1] *šaiyai,* பெ. (n.) சைகை பார்க்க; see *šaigai.*

E. signal; L.L, L., F. signum

[சைகை → சையை]

சையை[2] *šaiyai,* பெ. (n.) செய்யுள்போக்கு; flow as a poetry.

சையொத்திரு-த்தல் *šaiyottiru-,* 3 செ.கு.வி. (v.i.) இணக்கமாயிருத்தல் (வின்.); to be friendly.

[இசை + ஒத்திரு → சையொத்திரு]

சைரிகம் *šairigam,* பெ. (n.) கலப்பை (யாழ்.அக.); plough-share.

மறுவ. மேழி, ஏர்.

[ஏர் → சேர் → சேரி → சேரிகம் → சைரிகம்]

சைரிகன் *šairigan,* பெ. (n.) 1. உழவன் (யாழ்.அக.); ploughman. 2. ஏர்மாடு; plough-bullock.

[சைரிகம் → சைரிகன்]

சைரிபம் *šairibam,* பெ. (n.) எருமை (பிங்.); buffalo.

[சைரிகன் → சைரிபம்]

சைரியம் *šairiyam,* பெ. (n.) சையரியம் பார்க்க; see *šaiyariyam.*

சைலியம் *šailiyam,* பெ. (n.) 1. பூக்களை இரண்டிரண்டாகத் தொடுக்கும் மாலைவகை (உவ.); a kind of garland strung with pairs of flowers. 2. மொழிநடை; style.

[சையை → சைலியம்]

சைவகட்பலா *šaiva-katpalā,* பெ. (n.) வெள்வேல்; white babool.

சைவங்கம் *šaivangam,* பெ. (n.) தினை; millet.

சைவசுயா *šaivašuyā,* பெ. (n.) தழுதாழை; wild killer.

சைவரல் *šaivaral,* பெ. (n.) இகழ்கை (இலக்.அக.); contempt, act of despising.

[சே (ஒலிக்குறிப்பு) → சை + வரல்]

சைவலம் *šaivalam,* பெ. (n.) ஒரு வகைப்பாசி (சூடா.); duck-weed greee, moss-like plant growing in pools.

சைவவாதளா *šaiva-vādaḷā,* பெ. (n.) தணக்கு; catamaran tree (சா.அக.).

சொ

சொ *co/šo*, ஒகரம் ஏறிய 'ச'கர உயிர்மெய் எழுத்து; the compound of 'c' and 'o'.

[ச் + ஒ]

சொக்கக்கட்டிவெள்ளி *šokka-k-katti-velli*, பெ. (n.) தூய வெள்ளி; pure silver.

[சொக்கம் + கட்டி + வெள்ளி]

சொக்கக்கூத்து *šokka-k-kūttu*, பெ. (n.) ஒரு வகைக்கூத்து; a kind of dance.

[சொக்கன் + கூத்து. சொக்கம் = நல்லாடல் (சுத்த நிருத்தம்) சொக்கசீயன் என்பது கோப்பெருஞ்சிங்கன் என்னும் பல்லவ மன்னனுக்குரிய சிறப்புப் பெயர்.]

சொக்கச்சியன்கல் *šokkacciyan-kal*, பெ. (n.) தொண்டை மண்டலத்தில் பொன்னை நிறுப்பதற்குப் பயன்படுத்திய எடைக் கல்; a weight measure prevalent in the Tondai mandalam.

[சொக்கச்சீயன் → சொக்கச்சியம் + கல்]

சொக்கச்சியன்கோல் *šokkacciyan-kōl*, பெ. (n.) தில்லைக்கோயிலின் நிலங்களை அளக்கப் பயன்பட்ட கோல்; the name of linear measure, used to measure the lands belonging to the temple at Chidambaram.

"சொக்கச்சியன் கழுகு திருநந்தவனம் நிலம் அறுபத்து மூன்று மா முக்காணிக் கீழ் முக்காலும் சொக்கச்சியன் கோலால் அளந்த இடத்து" *(தெ.க.தொ. 12, கல் 215).*

[சொக்கச்சீயன் → சொக்கச்சியன் + கோல்]

சொக்கச்சியன்திருவாசல் *šokkacciyan-diruvāšal*, பெ. (n.) சிதம்பரம் திருக்கோயிலின் தெற்கு வாசலுக்கமைந்த பெயர் *(தெ.க.தொ. 8, கல். 50)*; the name given to the Southern entrance of the temple at Chidambaram.

[சொக்கச்சீயன் → சொக்கச்சியன் + திருவாசல்]

சொக்கச்சீயன் *šokka-c-cīyan*, பெ. (n.) பல்லவ அரசர்க்குரிய சிறப்புப் பெயர்; special title of Pallavā kings.

[சொக்கன் (=சிவன்) + சீயன்]

சொக்கட்டாய் *šokkattāy*, கு.வி.எ. (adv.) எளிதாக; easily, without much ado. *அதைச் சொக்கட்டாய்த் தள்ளி விட்டான் (இ.வ.).*

சொக்கட்டான் *šokkattān*, பெ. (n.). *1.* உருட்டிப் போடும் கட்டைகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி விளையாடும் தாய விளையாட்டு வகை; a game similar to backgammon. *2.* சொக்கட்டான்சீலை,2 பார்க்க; see *šokkattān-šīlai,2.*

ம. சொக்கட்டான்; கெ. சொடகமு

[சதுரம் என்பதைச் சவுக்கம், சதுக்கம் என்று கூறுவது உலகவழக்கு. சவுக்கம் + கட்டாம் → சவுக்கட்டாம் → சொக்கட்டாம் → சொக்கட்டான்]

சொக்கட்டான்கவறு *šokkattān-kavaru*, பெ. (n.) சொக்கட்டான் ஆட்டத்தில் தாயங் குறிக்க உருட்டும் கட்டை; dice used in the game of *šokkattān.*

மறுவ. ஆடுகல், தாயக்கட்டை

[சொக்கட்டான் + கவறு]

சொக்கட்டான்காய் *šokkattān-kāy*, பெ. (n.) சொக்கட்டான் ஆட்டத்தில் பயன்படுத்தும் காய் (சங். அக.); pieces used in the game of *šokkattān.*

மறுவ. சொக்கட்டான்கல்.

[சொக்கட்டான் + காய்]

சொக்கட்டான்சீலை *šokkattān-šīlai*, பெ. (n.) *1.* விளையாடுதற்கென்று சொக்கட்டான் கட்டங்கள் வரையப்பட்ட கிழிச்சீலை; chequered cloth in the form of a cross for playing šokkattān. *2.* ஒருவகைப் புடவை; a kind of saree, having square designs.

[சொக்கட்டான் + சீலை]

சொக்கட்டான்பந்தல் *šokkattān-pandal*, பெ. (n.) சொக்கட்டான் மனை போலமைத்த

பந்தர் (யாழ். அக.); shed or pavilion in the form of a šokkaṭṭāṉ board.

ம. சொக்கட்டா மண்டபம்

[சொக்கட்டான் + பந்தல் - சொக்கட்டான் பந்தல் = சொக்கட்டான் மனை வடிவில் உள்ள பந்தல்]

சொக்கட்டான்பாய்ச்சிகை *šokkaṭṭāṉ-pāyccigai,* பெ. (n.) சொக்கட்டான்கவறு பார்க்க; see *šokkaṭṭāṉ-kavaṟu.*

[சொக்கட்டான் + பாய்ச்சிகை]

சொக்கட்டான்மனை *šokkaṭṭāṉ-maṉai,* பெ. (n.) சொக்கட்டான் ஆடும் பலகை (வின்.); draught board for playing šokkaṭṭāṉ.

[சொக்கட்டான் + மனை]



சொக்கட்டான்வீடு *šokkaṭṭāṉ-vīḍu,* பெ. (n.) சொக்கட்டான் கட்டங்கள்; chequers of šokkaṭṭāṉ board.

[சொக்கட்டான் + வீடு]

சொக்கத்தங்கம் *šokka-t-taṅgam,* பெ. (n.) தூய்மையான தங்கம்; pure gold. 'பிள்ளையைச் சொக்கத்தங்கமே' என்று கொஞ்சினாள்.

[சொக்கம்' + தங்கம்]

சொக்கத்தாண்டவம் *šokka-t-tāṇḍavam,* பெ. (n.) நல்லாடல் (சுத்த நிருத்தம், ஆனந்தத் தாண்டவம்); a kind of dance. "சொக்கன் சொக்கத் தாண்டவம் புரிந்தா னன்றே" (திருவாலவா. 5:5).

[சொக்கன் + தாண்டவம்]

சொக்கதேவன் *šokka-dēvaṉ,* பெ. (n.) 1. கூகைபோல முகத்தை வீங்கச் செய்வதான பொன்னுக்கு வீங்கி என்னும் அம்மைக்கட்டு (யாழ்.அக.); mumps. 2. கூகை; rock horned owl.

சொக்கு, சோ என்பன துயிலைக் குறிக்கும் சொற்கள். சோம்பல், மடியையும் குறிக்கும். கூகை பகலில் துயின்று கொண்டிருப்பதால் சொக்கதேவன் என்றழைக்கப்பட்டது.

[சொக்கு + தேவன்]

சொக்கநாதன் *šokka-nāḍaṉ,* பெ. (n.) மதுரையிற் கோயிற் கொண்ட சிவன்; Šivaṉ at the shrine of Madurai. "மைதிகழுங் கண்டத்தன் சொக்கநாதன்" (திருவாலவா. 57: 21).

மறுவ. ஆலவாயன், நீலகண்டன்.

[சொக்கன் + நாதன்]

சொக்கு, சொக்கன் என்றால் அழகன் என்ற பொருள் உண்டு. எனவே ஆலவாயனை அழகன் என்ற பொருளில் சொக்கன் என்பர்.

சொக்கநாயகன் *šokka-nāyagaṉ,* பெ. (n.) சொக்கநாதன் பார்க்க; see *šokka-nāḍaṉ.* "அரவணிச் சொக்கநாயக னாடலும்" (திருவிளை. விடையி. 5).

[சொக்கன் + நாயகன்]

சொக்கப்பநாவலர் *šokkappa-nāvalar,* பெ. (n.) தஞ்சைவாணன் கோவையுரையாசிரியர்; the commentator on Tañjaivāṇaṉ-kōvai.

சொக்கப்பனை[1] *šokka-p-paṉai,* பெ. (n.) தாளிப்பனை; talipot (சா.அக.).

ம. சொக்கப்பன

சொக்கப்பனை[2] *šokka-p-paṉai,* பெ. (n.) கார்த்திகைத் திருவிழாவில் கோயில்களுக்கு முன்பு எரிக்கும் பனையோலைக் கூடு; bonfire with palmyra leaves lit in front of temples in Kārttigai festival. "வானளாவு மோங்கு சொக்கப்பனை" (திருநெல். பு. தீபம். 15).



சொக்கப்பான் *šokkappāṉ,* பெ. (n.) சொக்கப்பனை பார்க்க; see *šokka-p-panai.*

[சொக்கப்பனை → சொக்கப்பான்]

சொக்கப்பான்கார்த்திகை *šokkappāṉ-kārttigai,* பெ. (n.) சொக்கப்பனை நடக்கும் திருக் கார்த்திகை விளக்கீடு (வின்.); lamp lighting festival on the day of šokka-p-paṉai.

[சொக்கப்பான் + கார்த்திகை]

சொக்கப்பானை *šokka-p-pāṉai,* பெ. (n.) சொக்கப்பனை பார்க்க; see *šokka-p-paṉai.*

மறுவ. சொக்கப்பான், சொக்கப்பனை

[சொக்கப்பனை → சொக்கப்பானை]

சொக்கப்பையன் *šokka-p-paiyaṉ,* பெ. (n.) *1.* வேலைக்காரச் சிறுவன் (வின்.); errand boy, attendant. *2.* அழகிய சிறுவன்; beautiful boy.

மறுவ. சொக்கரா

H., U., Gu. chōkrā

[சொக்கு + பையன்]

சொக்கு என்ற சொல்லுக்கு மயங்க வைக்கும் அழகு என்ற பொருளும் உண்டு. அதனடிப்படையில் சொக்கன், சொக்கி என்னும் இயற்பெயர்கள் உண்டாகின.

சொக்கம்[1] *šokkam,* பெ. (n.) *1.* தூய்மை; genuineness, purity, excellence, as of gold, silver. சொக்கத்தங்கம் (உ.வ.). *2.* அழகு (பிங்.); beauty. *3.* சொக்கத்தாண்டவம் பார்க்க; see šokka-t-tāṇḍavam. 'சொக்க மவினய நாடகம்' (சிலப். பதி. 73, உரை.) *4.* கெம்பு (சங்.அக.); ruby. *5.* சிவப்பு; red.

[சொள் → (சொகு) → சொக்கம்]

சொக்கம்[2] *šokkam,* பெ. (n.) களவு (யாழ்ப்.); theft.

[சொக்கு' → சொக்கம்]

சொக்கயம் *šokkayam,* பெ. (n.) பட்டாணி; pea (சா.அக.).

சொக்கரை *šokkarai,* பெ. (n.) சொக்கறை (வின்.) பார்க்க; see *šokkaṟai.*

சொக்கலா *šokkalā,* பெ. (n.) மூக்கரட்டை; spreading hogweed (சா.அக.).

சொக்கலாதி *šokkalāti,* பெ. (n.) ஒளிப்புல்; a luminous grass (சா.அக.).

[சொக்கம் → சொக்கலாதி.]

சொக்கலி *šokkali,* பெ. (n.) *1.* சிறுபசளை; small Indian purslane. *2.* சடாமாஞ்சில்; valarian root. *3.* மூங்கில்; bamboo. *4.* மூக்கிலிப்பூடு; a plant-portulaca meridiana.

சொக்கலிங்கம் *šokkaliṅgam,* பெ. (n.) சொக்கநாதன் பார்க்க; see *šokka-nādaṉ.* "சொக்கலிங்க முண்டேதுணை" (பெருந்தொ. 1576).

[சொக்கு + இலிங்கம்]

அழகிய ஆடை அணிந்தவன் (புலித்தோல்) என்ற பொருளில் சிவபெருமானுக்குச் சொக்கலிங்கம் என்ற பெயர் ஏற்பட்டது.

சொக்கலை *šokkalai,* பெ. (n.) ஐந்திலைகளைக் கொண்ட ஒருவகை மரம்; roxburgh's five leaved tree of beauty.

சொக்கவெள்ளி *šokka-veḷḷi,* பெ. (n.) *1.* சொக்கக்கட்டி வெள்ளி (உ.வ.) பார்க்க; see šokka-k-kaṭṭi-veḷḷi. "சொக்கவெள்ளிப் பாற்குடமோ அமுதவூற்றோ" (பாவேந்தர்.) *2.* விடிவெள்ளி; morning star. சொக்கவெள்ளி தோன்றிவிட்டதாற் புறப்படுவோம் (நாஞ்.).

[சொக்கம் + வெள்ளி]

சொக்களி *šokkaḷi,* பெ. (n.) பயனற்ற மறுப்புரை கூறிப் பகடி பண்ணுகை; ridicule by raising frivolous objections. சொக்களி பேசுவதைத் தவிரக் காரியம் முடிக்க உன்னாலாகாது (நாஞ்.).

[சொல் + களி]

சொக்கறை *šokkaṟai,* பெ. (n.) *1.* கன்னம் முதலியவற்றில் விழுங்குழி; dimple in cheek; bend in walls, baskets, etc., flaw in the edge of nails. *2.* தோட்டம் முதலியவற்றின் சிறிய அடைப்பு; small enclosure or partition, as in a garden, a house. *3.* மதில் முதலிய வற்றிலுள்ள தொண்டு; breach or gap in a wall, hedge or mound.

[சொக்கு[5] + அறை]

சொக்கன்[1] *šokkan̲*, பெ. (n.) *1. அழகன்;* handsome person. *2. சிவன்;* Šivan̲, as beautiful. *"சொக்க னென்னு ளிருக்கவே" (தேவா. 859, 11).*

[சொக்கம் → சொக்கன்]

*சொக்கன் என்பது அழகன் என்று பொருள் படுமேனும், சிவனைக் குறிக்கும் போது அப்பொருள் படாது (மு.தா.142) மக்கட்பெயராக சொக்கன், சொக்கி, என உள்ளன. ஊர்ப்பெயராக சொக்கிக்குளம், சொக்கநாதபுரம் போன்று சில ஊர்ப் பெயர்கள் தமிழ்நாட்டில் உள்ளன. சொக்கலிங்கபுரம் என்ற பெயரில் பல ஊர்கள் உள்ளன. சொக்கு என்ற சொல் வட இந்திய மொழிகளில் சோபா, சோபனா என்று மக்கட்பெயராக மாறுகிறது. ஆங்கிலம் போன்ற மேலை ஆரிய மொழிகளில் சோபியா (*sophya, sophia*) என்ற வடிவம் பெறுகின்றது.*

சொக்கன்[2] *šokkan̲*, பெ. (n.) **வணிகனின் கையாள்** *(வின்.);* merchant's attendant, carrying a bag.

சொக்கன்[3] *šokkan̲*, பெ. (n.) *குரங்கு (நாஞ்.);* monkey.

ம. சொக்கன்

சொக்கன்[4] *šokkan̲*, பெ. (n.) *மிகுதியாக உண்போன்;* one who indulges to excess in eating. *சொக்கனுக்குச் சட்டியளவு (உ.வ.) (சா. அக.).*

சொக்கன்[5] *šokkan̲*, பெ. (n.) *மூடன்;* simpleton.

சொக்கன்சம்பா *šokkan̲-šambā*, பெ. (n.) *சம்பா நெல் வகை;* a kind of šambā paddy. *"நேர் பெருகு சொக்கன் சம்பா நெல்லென்றும்" (நெல்விடு. 189).*

[சொக்கன் + சம்பா]

சொக்கனார்புல் *šokkan̲ār-pul*, பெ. (n.) *புல்வகை;* citro-nella grass, Andropogon nardus.

[சொக்கனார் + புல்]

சொக்கா *šokkā*, பெ. (n.) *சொக்காய் பார்க்க;* see *šokkāy*. *"சோடில்லை மேல்வெள்ளைச் சொக்காவிலை" (அருட்பா. 6, வெறிவிலக்கு. 2).*

தெ. த்சொக்கா

அழகிய ஆடை என்ற பொருளுள்ள இச் சொல் உருது போன்ற பிறமொழிகளுக்கும் பரவியுள்ளது. பருத்தி, பஞ்சு, நூல், சாயமிடல், நெசவு ஆகியன தென்னிந்தியா விற்கே உரித்ததாக இருந்தமை மேலே கூறிய கருத்திற்கு அரண் செய்யும். இது தமிழ்ச் சொல்லே ஆகும்.

[சொக்கம்' → சொக்கா]

சொக்காக்கீரை *šokkā-k-kīrai*, பெ. (n.) *கீரைவகை (வின்.);* a species of greens.

[சொக்கு + கீரை]

சொக்காய் *šokkāy*, பெ. (n.) *சட்டை (ஈடு, 10. 6: 1, ஜீ);* coat, shirt, jacket.

மறுவ. கைச்சட்டை

[சொக்கம்' → சொக்காய்]

சொக்காரன்[1] *šokkāran̲*, பெ. (n.) **ஓரினத்துப் பிறந்த உரிமைப் பங்காளி** *(தாயாதி);* agnate.

மறுவ. தாயாதிக்காரன்

[சொந்தம் → சொம் + காரன்]

சொக்காரன்[2] *šokkāran̲*, பெ. (n.) *சகலன் (இ.வ.);* wife's sister's husband.

மறுவ. சட்டகர், சகலப்பாடி

[சொந்தக்காரன் → சொக்காரன்]

சொக்காரி *šokkāri*, பெ. (n.) **சொத்திற்கு உரிமையுண்டவள்** *(இ.வ.);* female agnate.

[சொக்காரன் → சொக்காரி]

சொக்காலி *šokkāli*, பெ. (n.) **சொக்காளி** *(வின்.) பார்க்க;* see šokkāḷi.

சொக்காளி *šokkāḷi*, பெ. (n.) **சிறுபூளை** *(யாழ்.அக.);* a common way- side weed.

சொக்கான் šokkān̲, பெ. (n.) **பழைய அரிசியிலுள்ள சிவப்பு வண்டு** *(இ.வ.);* rice-bug.

[சே → சேக்கு → சொக்கு → சொக்கான்]

சே = செந்நிறம். சிவப்பு நிறமுள்ள சிறுவண்டு சொக்கான் எனப்பட்டது.

சொக்கிடு-தல் *šokkiḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) **மயக்கப்பொடி தூவுதல்;** to sprinkle magic powder for inducing stupor. "சொக்கிடுந் தொழில் வல்ல துரிசனும்" *(சிவதரு. பாவ. 69).*

தெ. சொக்கிடு

[சொக்கு + இடு-.]

சொக்கு¹-தல் *šokku-*, 5 செ.கு.வி. (v.i.) 1. அழகு, திறமை முதலியவற்றால் தன்வயம் இழத்தல்; மயங்குதல்; to become languid, sleepy; to be stupefied. அவளின் அழகிலும் ஒப்பனையிலும் சொக்கிநின்றான். 2. மனம் பிறர்வயமாதல்; to be enchanted, fascinated, captivated, subjected to the will of another. 3. பிறரை மயங்குமாறு ஒழுகுதல் (இ.வ.); to behave in a captivating manner. 4. தூக்கத்தால் கண்கள் செருகுதல்; to be heavy with sleep. எனக்குத் தூக்கம் சொக்குகிறது.

க. சொக்கு (sokku); தெ. சொக்கு

[சோ → சொக்கு-.]

சொக்கு²-தல் *šokku-*, 5 செ.கு.வி. (v.i.) குழிவு அல்லது வளைவு விழுதல்; to be pressed in, bent in, as the surface of a wall, the edge of a mat, a basket.

சொக்கு³ *šokku*, பெ. (n.) 1. மயக்கம்; stupor, torpor, dullness, as produced by enchantment or drug. "சொக்குப் பொட்டெடுத்திக் கைப்பொருள்" (திருப்பு.). 2. வயப்படுகை; fascination, captivation.

ம. சொக்கு; க. சொக்கு; தெ. சொக்கு.

[சோ → சொக்கு]

சொக்கு⁴ *šokku*, பெ. (n.) தூய்மை; purity. 2. அழகு; beauty. 3. பொன் (சங்.அக.); gold. சொக்கத்தங்கம் (உ.வ.). 4. சொக்கநாதன் பார்க்க; see *šokka-nādaṉ*. "மன்றினு ளாடுஞ் சொக்கைப் பாடினான்" (திருவாலவா. 55:17).

ம. சொக்கு

[சொக்கம்¹ → சொக்கு]

சொக்கு⁵ *šokku*, பெ. (n.) கன்னக் கதுப்பு (யாழ்ப்.); cheek.

E. cheek

சொக்கு⁶ *šokku*, பெ. (n.) கள்ளுண்ணுதற் கேதுவாய சிறிய மட்பாண்டம்; small mud vessel used for drinking toddy.

சொக்குக்கிள்ளு-தல் *šokku-k-kiḷḷu-*, 5 செ.கு.வி. (v.i.) விளையாட்டாகவேனும், சினத்தினாலேனுங் கன்னத்தை நிமிண்டுதல் (யாழ்ப்.); to pinch, draw out or twist the cheeks, either for sport or in anger.

[சொக்கு + கிள்ளு-.]

சொக்குச்செட்டி *šokku-c-ceṭṭi*, பெ. (n.) கடுஞ்செட்டுள்ளவன், சிக்கனக்காரன் (கவிகுஞ். 13); miser.

[சுக்குச்செட்டி → சொக்குச்செட்டி]

சொக்குப்பாக்கு *šokku-p-pākku*, பெ. (n.) மயக்கத்தையுண்டாக்கும் புழுக்கள் பாய்ந்த பாக்கு; worm-eaten arecanut causing choke or loss of consciousness when chewed (சா.அக.).

[சொக்கு + பாக்கு.]

சொக்குப்பிடுங்கு-தல் *šokku-p-piḍuṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) சொக்குக்கிள்ளு- (யாழ்ப்.) பார்க்க; see *šokku-k-kiḷḷu-*.

[சொக்கு + பிடுங்கு-.]

சொக்குப்பொடி *šokku-p-poḍi*, பெ. (n.) பிறரை மயக்கித் தன்வயப்படுத்துதற்குப் பயன்படும் மாயப்பொடி; a magic powder causing stupor love-powder. "சொக்குப்பொடி யெடுத்துத் தூற்றி யுடைமையெல்லாம்... கழற்றியே" (பணவிடு. 337.).

ம. சொக்குபொடி; தெ. த்சொக்குபொடி

[சொக்கு + பொடி]

சொக்குமாந்தடி *šokku-mānḍaḍi*, பெ. (n.) சுக்குமாந்தடி (இ.வ.); magic wand.

[சுக்குமாந்தடி → சொக்குமாந்தடி]

சொக்குவித்தை *šokku-vittai*, பெ. (n.) மயக்குவித்தை (யாழ். அக.); art of causing sleep or stupefaction.

மறுவ. கண்கட்டி வித்தை

[சொக்கு + வித்தை]

சொக்குளிசம் *šokkuḷišam*, பெ. (n.) கிலுகிலுப்பை; nattle-wort (சா.அக.).

சொக்கெண்ணெய் *šokkeṇṇey*, பெ. (n.) நீராடுதற்கு முன் உடம்பில் அரைகுறையாய்த் தேய்த்துக் கொண்ட எண்ணெய் (உ.வ.); oil rubbed partially over the body before bathing.

[சொக்கு + எண்ணெய்]

சொகுசு *šogušu*, பெ. (n.) *1. அனைத்து ஏந்துகளும் நிறைந்தது, நேர்த்தி;* refinement, neatness. அவன் சொகுசான வாழ்க்கைக்குப் பழகி விட்டான். *2. இதம்;* luxury. சொகுசுப் பேருந்தில் நேற்றுதான் பயணித்தேன் *(உ.வ.).* *3. சிறப்பு;* fineness, as of work, superior quality.

ம. சொகிசு; க., தெ., து. சொகசு

[சொக்கு → சொகு → சொகுசு]

சொகுசுக்காரன் *šogušu-k-kāraṉ*, பெ. (n.) *பணச்செலவுமிக்க மிகுமகிழ் வாழ்க்கை வாழ்பவன்;* person of delicate or fastidious taste; person given to luxurious living. சொகுசுக்காரனாய்த் திரிந்ததால் இன்று தெருவில் நிற்கிறான் *(உ.வ.)*.

க. சொகசுகாற

[சொகுசு + காரன்]

சொங்காரன் *šoṅgāraṉ*, பெ. (n.) சொக்காரன்[1] *(வின்)* பார்க்க; see *šokkāraṉ*[1].

சொங்காரிகம் *šoṅgārigam*, பெ. (n.) *பப்பாளி;* common papaya tree.

சொங்கி *šoṅgi*, பெ. (n.) *உள்ளீடு இல்லாமை;* hollow. சொங்கிப்பயல், சொங்கித்தனம் *(உ.வ.)*.

[சொங்கு → சொங்கி.]

சோளத்தின் மணியை ஒட்டிக் கொண்டிருக்கும் மூடியைச் சொங்கு என்பது வழக்கு. சோளம் நீக்கிய சொங்கு உள்ளீடின்மையால் சோற்றுக்குப் பயன்படாது. சிலரை அவரது சோம்பல், செயலற்ற தன்மை, பயனின்மை ஆகியவை கருதிச் சொங்கு என்பது வழக்கு. பேச்சு வழக்கில் இது சொங்கி ஆயிற்று. (வழ. சொ. அ.)

சொங்கு[1] *šoṅgu*, பெ. (n.) *குற்றம்;* fault, blemish. "சொங்கில்லையாக" *(திருமந். 558)*.

[சொக்கு → சொங்கு]

சொங்கு[2] *šoṅgu*, பெ. (n.) *குஞ்சம்;* excess over the requirement. வேட்டியைச் சொங்கு வைத்துக் கட்டிக் கொண்டான்.

[சும் → சொம் → சொங்கு]

சொங்கு[3] *šoṅgu*, பெ. (n.) **சோளத்தின் உள்ளீடற்ற வெளிக்கூடு, உமி;** the outer cover of the cōlam.

[சும் → சொங்கு]

சொச்சம்[1] *šoccam*, பெ. (n.) *1. மிச்சம்;* deficiency, balance, arrears. செலவு போக சொச்சம் எங்கே. *2. சில்வானம்;* odd, a term appended to number, sum, weight, etc. "ஆயிரத்து சொச்ச நோய்களும்" *(தைலவ. தைல. 97.)* *3. வட்டி;* interest on prinicipal. சொச்சத்துக்குப் பணங் கொடுத்தான் (இ.வ.). *4. கழித்தல் வகுத்தல்களில் வரும் மீதி;* remainder, as in subtraction, division.

தெ. சொச்செமு

[மீதி → மிச்சம் → சொச்சம்]

சொச்சம்[2] *šoccam*, பெ. (n.) *தூய்மை;* purity. "சொச்சத் தாதையர் தாமெனவே" *(திருப்பு. 573.)*.

[சொக்கம்[1] → சொச்சம்]

சொச்சமுங்காசும் *šoccamuṅ-gāšum*, பெ. (n.) *வட்டியும் முதலும்;* principal and interest there on. சொச்சமுங்காசுங் கீழே வை *(வின்.)*.

[சொச்சம்[1] + உம் + காசு + உம்]

சொட்டச்சொட்ட *šoṭṭaccoṭṭa*, வி.எ. (adv.) *நீர் வழிய வழிய;* drenched, soaked. மழையில் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டே வந்தாள் *(உ.வ.)*.

[சொட்ட + சொட்ட]

சொட்டன் *šoṭṭaṉ*, பெ. (n.) *குற்றமுள்ளவன்;* guilty person. "சொட்டனுக்கு நெஞ்சு சுருக்கென்னும்" *(விறலிவிடு. 259.)*.

[சொட்டு[5] → சொட்டன்]

சொட்டு[1]-தல் *šoṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) **துளித்தல்;** to fall in drops, drizzle. "தேன் சொட்டச் சொட்டநின் றட்டுந் திருக்கொன்றை" *(தேவா. 586. 1)*. வியர்வை சொட்ட ஓடி வந்தான்.

ம. சொட்டுக; க. தொட்டு, தடக்கனெ, தொடக்கனெ; தெ. தொட்ட; து. தடகு; கோத. சொட்; துட. ச்விட்; பட. சொட்டு.

[சுல் (குத்தற் கருத்து வேர்) → சுள் → சுர் → சுரு → சுறு → (சுற்று) → சுத்து → சுத்தி = குத்துவது போல் தட்டும் சிறு சம்மட்டி. சுத்து → சொத்து → சொட்டு → சொட்டு-தல் = தட்டுதல், தட்டுதல் போல் துளி ஒன்றில் விழுதல்]

சொட்டு²-தல் *šoṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கொத்துதல்; to peck as a crow. 2. சூழ்ச்சியால் கவர்தல்; to snatch away, misappropriate secretly and slowly. 3. ஏமாற்றுதல் (வஞ்சித்தல்); to cheat, circumvent.

ம. சொட்டுக

[சொல் → சொள் → சொட்டு-.]

சொட்டு³-தல் *šoṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. குட்டுதல் (உ.வ.); to strike with knuckles. 2. பால் கறத்தற்கு ஆட்டு மடியைத் தட்டுதல் (வின்.); to tap gently the udder of a goat for inducing free flow of milk. 3. அடித்தல் (இ.வ.); to beat, hit.

ம. சொட்டுக; தெ. சொட்டு

[சொட்டு¹ → சொட்டு]

சொட்டு⁴ *šoṭṭu*, பெ. (n.) 1. சிறு உருண்டை வடிவ சொட்டுந்துளி; drop. ஒரு சொட்டு நெய். 2. துண்டு; small, piece, slice. தேங்காய்ச் சொட்டு (யாழ்ப்.).

க. சொட்டு

[சொட்டு¹ → சொட்டு]

சொட்டு⁵ *šoṭṭu*, பெ. (n.) 1. குட்டு; cuff, knock on the head. 2. குற்றங்குறை; defect, blemish, stigma. 3. குற்றத்தை வெளிப்படக் கூறாது குறிப்பாற் கூறும் பேச்சு; disparaging remark conveyed through a hint, insinuation. அவன் சொட்டு வைத்துப் பேசுகிறான். 4. பாழ் (சுன்னம்) (இ.வ.); cipher. 5. வழுக்கை; baldness.

ம. சொட்டு; க. சொட்ட; தெ. சொட்ட; து. சொண்ட், சோண்ட், சோண்டு.

[சல் (துளைத்தல் கருத்து) → சொல் → சொள் → சொண்டு → சொட்டு]

சொட்டுச்சொட்டாக *šoṭṭu-c-coṭṭāga*, வி.அ. (adv.) துளித்துளியாக; drop by drop. மழை சொட்டுச் சொட்டாகப் பெய்தது.

[சொட்டு¹ → சொட்டு + ஆக.]

சொட்டுச்சொட்டெனல் *šoṭṭu-c-coṭṭeṉal*, பெ. (n.) துளித்தற்குறிப்பு; expr. signifying dripping, drizzling. "சொட்டுச் சொட்டென்னத் துளிக்கத் துளிக்க" (திவ். பெரியாழ். 1. 9:1).

[சொட்டு¹ + சொட்டு + எனல்]

சொட்டுச்சொல் *šoṭṭu-c-col*, பெ. (n.) சொட்டைச் சொல் (உ.வ.) பார்க்க; see *šoṭṭai-c-col*.

[சொட்டு⁵ + சொல்]

சொட்டுத்தண்டம் *šoṭṭu-t-taṇḍam*, பெ. (n.) தனக்கு விருப்பமின்றிப் பிறர்க்காகக் கொடுத்த பொருள் (யாழ்ப்.); unwilling contribution made through another's influence.

[சொட்டு⁵ + தண்டம்]

சொட்டுநீர்ப்பாசனம் *šoṭṭu-nīr-p-pāšaṉam*, பெ. (n.) குழாய்களின் வழியே நீரைச் செலுத்தி, மரம் செடி கொடிகளின் வேர்ப் பகுதியில் நீர் சொட்டிக் கொண்டிருக்கும் வகையில் அமைந்த பாசனமுறை; drip irrigation.

[சொட்டு¹ + நீர் + பாசனம்]

சொட்டுப்பால் *šoṭṭu-p-pāl*, பெ. (n.) 1. கெட்டியான தேங்காய்ப் பால்; juice extracted from coconut kernel. 2. நீர் சேர்க்காத ஆவின் பால்; cow's milk without adding water.

[சொட்டு + பால்]

சொட்டுப்போடு-தல் *šoṭṭu-p-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. அடிகொடுத்தல் (வின்.); to give a slap. 2. குறைகூறுதல் (வின்.); to speak disparagingly of one's character. 3. தவறுதல்; to fail, as in examination. அவன் தேர்வில் சொட்டுப் போட்டுவிட்டான்.

[சொட்டு⁵ + போடு-.]

சொட்டுமருந்து *šoṭṭu-marundu*, பெ. (n.) இளம்பிள்ளைவாத நோய் தாக்காமல் இருப்பதற்காக, குழந்தை பிறந்த மூன்றாவது மாதத்திற்குப் பின் 6 திங்களுக்கொரு நாள் மேனி ஐந்து ஆண்டுகள், குழந்தையின் வாயில் சொட்டு சொட்டாக ஊற்றப்படும் மருந்து; polio drops. 2. கண், காது, மூக்கு, வாய் ஆகியவற்றில் சொட்டுச் சொட்டாக விடப்படும் மருந்து; medicinal drops.

[சொட்டு¹ + மருந்து]

சொட்டுமூத்திரம் *šoṭṭu-mūttiram*, பெ. (n.) ஒழுக்கு மூத்திர நோய்; strangury.

[சொட்டு¹ + மூத்திரம்]

நீர்க்கடுப்பு நோயால் இது நேரும். அதிகப் படியான தண்ணீர் அருந்துவதாலும், எலுமிச்சை, ஆரஞ்சு சாறுகளை உரிய முறையில் குடிப்பதாலும் இது நீங்கும்.

சொட்டுவை-த்தல் *šoṭṭu-vai-*, 4 செ.குவி. (v.i.) 1. குட்டுதல்; to give a hit with knuckles. 2. இகழ்ச்சிக்கு ஆளாகுதல்; to cast a slur. அவன்மேல் சொட்டுவைத்துப் பேசினான் (இவ.).

[சொட்டு⁵ + வை-.]

சொட்டை¹ *šoṭṭai*, பெ. (n.) பார்ப்பனரது பழங்குடிகளுள் ஒன்று; an ancient Brahmin family. "இராயூர் சொட்டை கோவிந்த பட்டரும்" (தெ.க.தொ. 3).

சொட்டை² *šoṭṭai*, பெ. (n.) 1. சொட்டைவாள் பார்க்க; see *šoṭṭai-vāḷ*. "சொட்டையாலே . . . நாவை விரைவொடு மரிந்து" (திருவாலவா. 35:22). 2. வளைதடி (வின்.); crooked club. 3. வளைவு (வின்.); crookedness, bend, as in the sheath of a sword. 4. சுருக்கு முதலியவற்றை மாட்டுதற் கிடமானது (நாஞ்.); a knob-like contrivance for hanging anything.

ம. சொட்ட

[சொட்டு⁵ → சொட்டை = சொத்தை, குற்றம்]

சொட்டை³ *šoṭṭai*, பெ. (n.) 1. சொட்டைச்சொல் பார்க்க; see *šoṭṭai-c-col*. 2. குழிவு; dent. அவன் கன்னத்தில் சொட்டை விழுந்திருக்கிறது (இவ.). 3. பள்ளம் (வின்.); excavation, furrow, cavity. 4. தலைவழுக்கை; baldness in spots due to disease or old age. 5. தலைப்பொடுகு (உவ.); dandruff. 6. சொற்சித்திரம் (யாழ்ப்.); pun quibble, play on words.

ம. சொட்ட, தெ. சொட்டா

[சொட்டு → சொட்டை = தட்டுவதால் உண்டாகும் தட்டை, மொட்டை, பள்ளம் வழுக்கை, வழுக்கைக் குற்றம். ஒ.நோ. தட்டு → தட்டை; பட்டு → பட்டை]

சொட்டைக்கத்தி *šoṭṭai-k-katti*, பெ. (n.) வளைந்த கத்தி; crooked or curved knife. சொட்டைக் கத்தியால் வெண்ணெய் கூட வெட்ட முடியாது (உவ.).

[சொட்டை + கத்தி]

சொட்டைக்காரன் *šoṭṭai-k-kāraṉ*, பெ. (n.) வேடிக்கையாக பேசுகிறவன் (யாழ்ப்.); punster, quibbler.

[சொட்டை + காரன்]

சொட்டைச்சொல் *šoṭṭai-c-col*, பெ. (n.) 1. பழிச்சொல் (உ.வ.); stigma. 2. எள்ளல் (பரிகாசம்) (யாழ்ப்.); ridicule.

[சொட்டை + சொல்]

சொட்டைசொள்ளை *šoṭṭai-šoḷḷai*, பெ. (n.) குற்றங்குறை (நெல்லை.); flaw, defect.

[சொட்டை + சொள்ளை]

சொட்டைத்தலை *šoṭṭai-t-talai*, பெ. (n.) வழுக்கை விழுந்த தலை; baldness in spots, due to disease.

ம. சொட்டித்தல

[சொட்டை + தலை]

சொட்டையன் *šoṭṭaiyaṉ*, பெ. (n.) சொட்டைக்காரன் (யாழ்ப்.) பார்க்க; see *šoṭṭai-k-kāraṉ*.

[சொட்டை → சொட்டையன்]

சொட்டையாளன் *šoṭṭaiyāḷaṉ*, பெ. (n.) படை வீரன்; soldier, warrior. 'சொட்டையாளர் படை தெரிய' (பதிற்றுப். 67:5, உரை.).

[சொட்டை + ஆளன். ஆள் → ஆளன்]

சொட்டைவாள் *šoṭṭai-vāḷ*, பெ. (n.) வளைந்த வாள் வகை; a kind of crooked sword. "சொட்டைவாள் பரிசை" (பாரத. திருட்டிண. 101).

[சொட்டை + வாள்]

சொட்டைவாளை¹ *šoṭṭai-vāḷai*, பெ. (n.) 1. இரண்டடிக்கு மேற்பட்ட நீளமுடையதும் நன்னீரில் வாழ்வதும் வெண்ணிறமுள்ளது மான வாளைமீன் வகை; fresh-water fish, silvery, attaining more than 2 ft. in length. 2. ஒன்றரையடி நீளமுள்ளதும் நன்னீரில் வாழ்வதும் வெண்ணிறமுள்ளதுமான வாளை வகை; butter-fish, fresh water-fish, silvery shot with purple attaining 1½ ft. in length. 3. பூரான் வகை (நாஞ்.); a species of centipede.

[சொட்டை + வாளை]



சொட்டைவாளை

சொட்டைவாளைக்குட்டி *śoṭṭai-vāḷai-k-kuṭṭi,* பெ. (n.) வாளை மீனைப் போல் தடித்த தேகமுள்ள இளைஞன்; said of a young lad with a robust and symmetrical body *(சா.அக.).*

[சொட்டை + வாளை + குட்டி]

சொட்டைவிழு-தல் *śoṭṭai-viḻu-,* 2 செ.குவி. (v.i.) *1.* தலையில் வழுக்கை உண்டாதல்; to become bald, as the head. தலையெல்லாம் சொட்டை விழுந்துவிட்டது. *2.* அதுங்கிப் போதல்; to be dented, marked with dents, as a vessel. ஏனம் சொட்டை விழுந்திருக்கிறது.

[சொட்டை + விழு-.]

சொடக்கு[1]-தல் *śoḍakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* நெட்டி வாங்குதல்; to crack as the joints, knuckles. *2.* கைநொடித்தல்; to snap, as the fingers. *3.* பேன் நசுக்குதல்; to crack, as lice.

[சடக்கு → சொடக்கு-.]

சொடக்கு[2] *śoḍakku,* பெ. (n.) *1.* கை, கால் முதலியவற்றை நீட்டி உதறி அல்லது விரல்களை நெறித்து எழுப்பும் சடசட ஒலி, நெட்டி; cracking the fingers, knuckles, etc. விரல்களைச் சொடக்கு எடுத்தான். *2.* சோம்பற்றன்மை (வின்.); laziness, idleness. *3.* கைநொடி (இ.வ.); snapping the fingers. *4.* சுட்டை விரலையும் நடுவிரலையும் சேர்த்துச் சுண்டியெழுப்பும் ஒலி; கை நொடிப் பொழுது; time taken to snap one's fingers, moment. ஒரு சொடக்கில் வருகிறேன்.

ம. சொடக்கு

[சடக்கு → சொடக்கு.]

சொடக்கு[3] *śoḍakku,* பெ. (n.) *1.* துளைக்கருவி (புதுவை.); wind instrument. *2.* கிலுகிலுப்பை (மலை.); rattlewort.

சொடக்குப்போடும்நேரம் *śoḍakku-p-pōḍum-nēram,* பெ. (n.) *1.* கைநொடிப் பொழுது; ஒரு மாத்திரை அளவு நேரம்; one second. *2.* விரைவு; quickness. சொடக்குப் போடும் நேரத்தில் அவ்வேலையை அவன் முடித்து விட்டான் (உ.வ.).

[சொடக்கு + போடும் + நேரம்]

சொடக்குவாங்கு-தல் *śoḍakku-vāṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சொடக்கெடு-த்தல் பார்க்க; see *śoḍakkeḍu-.*

[சொடக்கு + வாங்கு]

சொடக்கெடு-த்தல் *śoḍakkeḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) நெட்டி வாங்குதல்; to crack as the joints, knuckles; to stretch oneself.

[சொடக்கு + எடு-.]

சொடக்கெடுத்தாற்போலிரு-த்தல் *śoḍakkeḍuttāṟ-pōliru-,* 3 செ.கு.வி. (v.i.) தொந்தரவு நீங்கியிருத்தல் (இ.வ.); to feel easy; to be rid of uncomfortable elements.

[சொடக்கு + எடுத்தால் + போல் + இரு-.]

சொடக்கெனல் *śoḍa-k-keṉal,* பெ. (n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. of cracking noise. கம்பைச் சொடக்கென முறித்தான் (உ.வ.).

[சொடக்கு + எனல்]

சொடகு *śoḍagu,* பெ. (n.) சொடக்கு,1,2 பார்க்க; see *śoḍakku,1,2.*

[சொடக்கு → சொடகு]

சொடி[1]-தல் *śoḍi-,* 2 செ.கு.வி. (v.i.) *1.* வெயிலில் வாடுதல் (இ.வ.); to be burnt by the sun, as crops; to be blighted. மழையின்றி கடலைக்கொடி சொடிந்து போயிற்று. *2.* குழைதல்; to shrink, as the abdomen for want of food. வயிறு சொடிய (வின்.).

க. சடு

[சடு → சொடு → சொடி → சொடி-.]

சொடி²-த்தல் *šodi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. *குறைவாய் விற்றல் (யாழ்ப்.);* to sell dear. 2. *வற்றுதல்;* to grow dry.

[சுடு → சொடு → சொடி-.]

சொடி³ *šodi*, பெ. (n.) *சுறுசுறுப்பு (இ.வ.);* active, temperament and habit.

ம. சொடி

சொடிக்கு-தல் *šodukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. *சாட்டை முதலியவற்றைச் சுண்டியிழுத்தல்;* give a sharp, snapping, sound. *சாட்டையைச் சொடிக்கியதும் மாடு வேகமாக ஓடியது.* 2. *சொடக்குப்போடுதல்;* snap. *கை சொடிக்கும் நேரத்தில் எல்லாம் முடிந்துவிட்டது.*

[சுடக்கு → சொடுக்கு]

சொடுக்குச்சொடுக்கெனல் *šodukku-c-codukkenal*, பெ. (n.) 1. *ஓர் அடுக்கொலிக் குறிப்பு;* onom. expr. signifying repeated clacking noise, as of wooden sandals in walking. 2. *விரைவுக்குறிப்பு;* quick action. *தவறிழைத்த மாணவனை ஆசிரியர் சொடுக்குச்சொடுக்கென பிரம்பால் விளாசினார் (உ.வ.).*

[சொடுக்கு + சொடுக்கு + எனல்]

சொடுக்கெனல் *šodukkenal*, பெ. (n.) *பிரம்பாலடிக்கும் பொழுதும் சாட்டையால் வீசும்பொழுதும் எழும் ஒலிக்குறிப்பு (உ.வ.);* onom. expr. of sharp sound, as of a stroke with a cane or a smack with a whip.

[சொடுக்கு + எனல்]

சொடுகு *šodugu*, பெ. (n.) *குழிவு;* dent.

[சொட்டை → சொடுகு.]

சொடுதலை *šodutalai*, பெ. (n.) *வாயகன்ற ஏன வகை (சங்அக.);* a cylindrical vessel with open mouth.

[சோடு + தவலை - சோடுதவலை → சொடுதவலை → சொடுதலை]

சொண்டடி-த்தல் *šondadi-*, 4 செ.கு.வி. (v.i.) *பேசுதற்கு உதடு குவித்தசைத்தல் (வின்.);* to blubber in speaking, as an old man.

[சொண்டு = உதடு. சொண்டு + அடி-.]

சொண்டலு *šondalu*, பெ. (n.) *சரக்கொன்றை;* cassia fistula *(சாஅக.).*

சொண்டறை *šondarai*, பெ. (n.) *இழிந்தவன் (அற்பன்) (யாழ்ப்.);* mean person.

மறுவ. சொங்கி

[சொல் → சொள் → சொண்டு → சொண்டறை.]

சொண்டன் *šondan*, பெ. (n.) 1. *சொண்டுக்காரன் (வின்.) பார்க்க;* see *šondu-k-kāran*. 2. *செருக்கன்;* self-conceited person. "ஒரு சொண்டன் பரந்துலவும்" *(கோயிற்பு. இரணிய. 22).*

[சொண்டு² → சொண்டன்.]

சொண்டாங்கலயம் *šondāngalayam*, பெ. (n.) *சிறுமட்பாண்டம் (நெல்லை);* a small round earthern vessel.

ம. சொண்டாங்கி

[சொண்டு + ஆம் + கலயம்]

சொண்டி¹ *šondi*, பெ. (n.) *சுக்கு (மலை.);* dried ginger.

க., தெ. சொண்டி; பட. சுட்டி

[சுண்டி → சொண்டி]

சொண்டி² *šondi*, பெ. (n.) *சுண்டியுண்டை;* a kind of yeast-ball.

[சுண்டி → சொண்டி]

சொண்டிச்சோறு *šondi-c-cōru*, பெ. (n.) *சுண்டியுண்டையைப் பயன்படுத்திப் புளிக்க வைத்த சோறு;* a kind of rice.

[சொண்டி + சோறு]

சொண்டிதா *šonditā*, பெ. (n.) *கணைப் பூண்டு;* a plant *(சாஅக.).*

சொண்டிலி *šondili*, பெ. (n.) *சொண்டறை (சங்அக.) பார்க்க;* see *šondarai*.

சொண்டு¹ *šondu*, பெ. (n.) *குழிவு;* dent.

க. ஜொண்டு; தெ. த்சுண்டு

[சொல் → சொள் → சொண்டு.]

சொண்டு² *šondu*, பெ. (n.) 1. *பறவைமூக்கு (யாழ்ப்.);* beak, bill. 2. *உதடு;* lip. *சிவந்த சொண்டு.* 3. *தடித்த உதடு;* blubber lip. 4. *அடி*

பருத்த ஏன (பாத்திர) விளிம்பு; thick brim of a pot or vessel. 5. மீன் மூக்கு; nose of fish.

ம. சுண்டு

[சுல் → சுள் → சொள் → சொண்டு]

சொண்டு[3] *šoṇḍu*, பெ. (n.) 1. குற்றம்; guilt, fault. 2. சொண்டறை (இவ.) பார்க்க; see *šoṇḍaṟai*. 3. சொத்தை மிளகாய்; decayed chilly.

தெ. சொட்டு

[சுல் → சொல் → சொள் → சொண்டு]

சொண்டுக்கதை *šoṇḍu-k-kadai*, பெ. (n.) 1. உணவுக்காகச் சொல்லும் கதை (வின்.); stories told for food, etc. 2. பிறரை மகிழ்விக்கப் புறங்கூறுகை; tale-bearing, blabbing, exposing secrets in order to please others.

[சொண்டு + கதை]

சொண்டுக்காரன் *šoṇḍu-k-kāraṉ*, பெ. (n.) தடித்த உதடன் (வின்.); blubber-lipped person.

[சொண்டு[2] + காரன்]

சொண்டுகூட்டு-தல் *šoṇḍu-kūṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) பேசுதற்குக் குழந்தைகள் இதழ் கூட்டுதல் (வின்.); to protrude the lips, as a child when beginning to talk.

[சொண்டு[2] + கூட்டு-.]

சொண்டுச்சாடை *šoṇḍu-c-cāḍai*, பெ. (n.) ஒருவனைப் பிறன் இழித்துக் கூறியதாக அவனிடமே கூறும் புறங்கூற்று (வின்.); telling a person what another has said to his discredit, a kind of tale-bearing.

[சொண்டு [3] + சாடை]

சொண்டுசொல் *šoṇḍu-šol*, பெ. (n.) துன்புறுத்தும் மொழி (இவ); caustic remarks.

[சொண்டு[3] + சொல்]

சொண்டுத்தீன் *šoṇḍu-t-tīṉ*, பெ. (n.) அடிக்கடி கொள்ளுஞ் சுவையுணவு (வின்.); delicious food taken frequently.

[சொண்டு[2] + (தீனி →) தீன்]

சொண்டுப்பானை *šoṇḍu-p-pāṉai*, பெ. (n.) தடித்த விளிம்புடைய பானை (வின்.); thick brimmed pot.

[சொண்டு[2] + பானை]

சொண்டுபண்ணு-தல் *šoṇḍu-paṇṇu-*, 5 செ.குன்றாவி. (v.t.) இகழ்ச்சிசெய்தல் (யாழ்.அக.); to scorn, treat with contempt.

மறுவ. ஏளனம் செய்தல்

[சொண்டு + பண்ணு-.]

சொண்டுபேசு-தல் *šoṇḍu-pēšu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. இகழ்ச்சியைச் சொல்லில் மறைத்துப் பேசுதல் (உ.வ.); speak with hidden abuse. 2. பழித்தல் (யாழ்ப்.); to abuse. சொண்டு பேசுவதே அந்தக் கிழவிக்கு வழக்கம் (உ.வ.).

[சொண்டு + பேசு-.]

சொண்டுமிளகாய் *šoṇḍu-miḷagāy*, பெ. (n.) விதையில்லாத சொத்தை மிளகாய்த் தோல்; blighted pod of chilly.

[(சண்டு →) சொண்டு + மிளகாய்]

சொண்டுவில்-தல் *šoṇḍu-vil-*, 14 செ.கு.வி. (v.i.) புறங்கூறுதல் (வின்.); to backbite.

[சொண்டு[3] + வில்-.]

சொணை *šoṇai*, பெ. (n.) இலை, காய் முதலியவற்றின் மேல் உள்ள சிறுமுள்; prickle, as in leaves, stalks, etc.

[சுணை → சொணை]

சொணைப்பு *šoṇaippu*, பெ. (n.) சுரணை; *šensibility*. அவன் சொணைப்புக் கெட்டவன் (உ.வ.).

[சொணை → சொணைப்பு]

சொத்தட்டை *šottaṭṭai*, பெ. (n.) உளுத்த மரக்கட்டை (நாஞ்.); rotten piece of wood.

[சொத்தை + கட்டை - சொத்தட்டை]

சொத்தல் *šottal*, பெ. (n.) சொத்தை[1], 1, 4 பார்க்க; see *šottai*[1],1,4.

[சொத்தை[1] → சொத்தல்]

சொத்தலி *šottali*, பெ. (n.) கொட்டையில்லாப் பனங்காய் (யாழ்ப்.); stoneless palmyra fruit.

[சொத்தல் → சொத்தலி]

சொத்தாட்சியலுவலர் *šottatci-y-aluvalar*, பெ. (n.) சொத்து ஒப்படைப்பு அலுவலர்; official receiver.

[சொத்தாட்சி + அலுவலர்]

சொத்தி *šotti,* பெ. (n.) *1.* உறுப்புக்குறை; lameness, crippledom. *2.* நொண்டி; lame person. *3.* குற்றம்; fault. யாருடைய சொத்தியால் இந்த வேலை இப்படி யாயிற்று.

[சொத்தை → சொத்தி]

சொத்தியன் *šottiyaṉ,* பெ. (n.) நொண்டி (வின்.); lame person, cripple.

[சொத்தை → சொத்தியன்]

சொத்திருப்புவகை *šottiruppu-vagai,* பெ. (n.) சொத்து இருப்புகளின் வகைப்பாடு; classification of assets.

[சொத்து + இருப்புவகை]

சொத்திலை *šottilai,* பெ. (n.) பூமரம்; lac tree.

சொத்தினம் *šottiṉam,* பெ. (n.) அசையாச் சொத்துவகை; estate.

[சொத்து + இனம்]

சொத்து[1] *šottu,* பெ. (n.) *1.* அசையும் பொருள் அசையாப்பொருள் என்ற இருவகை உடைமை; property, possessions, being of two kinds viz., tāvaram and šaṅgamam. சொத்தை விற்றுக் கடனை அடைத்தார். *2.* பொன்; gold. "சொத்துற் றமைந்த சுதையில் செஞ்சுவர்" (பெருங். உஞ்சைக். 34:221).

க., தெ. சொத்து

[சொம் → சொத்து. ஒ.நோ. தொகை = தொகுதி, செல்வம். வ. ஸ்வாம் = சொத்து. தேவஸ்வாம் = தெய்வச் சொத்து, கோயிற் சொத்து. ஸ்வாம் → ஸ்வாமி → ஸ்வாமின் = சொத்துக்காரன், ஆண்டை, ஆண்டவன், தெய்வம். வடவர் ஸ்வாமின் என்னுஞ் சொல்லை ஸ்வ + மின் என்று பகுத்து, சொந்தக்காரன், உடையவன், உரிமையாளன், தலைவன், கணவன், அரசன், குரு, தெய்வப் படிமை என்று பொருள் தொடுப்பர்]

சொத்து[2] *šottu,* பெ. (n.) சொத்தை[1], 2 பார்க்க; see *šottai[1]*,2. "உலக்கை பட்டு வலக்கை சொத்தானவும்" (கலிங். 133).

[சொத்தை → சொத்து]

சொத்து[3] *šottu,* பெ. (n.) உடலிற்பூசும் அரத்தம் போன்ற செம்பசை; blood-like red paste. சொத்துப் பூசிக்கொண்டான் (வின்).

சொத்துக்காரன் *šottu-k-kāraṉ,* பெ. (n.) *1.* பொருளுக்குரியவன்; owner. *2.* பணக்காரன்; rich man.

[சொத்து + காரன்]

சொத்துசுகம் *šottu-šugam,* பெ. (n.) சொத்து பல, கை இருப்பில் உள்ளதால் வரும் இன்பம்; pleasure available by the ownership of property. அவனுக்குச் சொத்துச் சுகம் ஏதும் கிடையாது.

[சொத்து + சுகம்]

சொத்துப்பூசு-தல் *šottu-p-pūšu-,* 5 செ.கு.வி. (v.i.) பிறர் இரங்கிப் பிச்சைக் கொடுக்கும்படி உடலிற் செஞ்சாந்து பூசிக்கொள்ளுதல் (வின்.); to daub one's body with blood-like red paste with a view to excite compassion while begging.

[சொத்து + பூசு-]

சொத்துச்சொத்தெனல் *šottu-c-cotteṉal,* பெ. (n.) தேங்காய் முதலியன ஒன்றின்பின் ஒன்றாய் விழுதல் முதலியவற்றால் உண்டாகும் அடுக்கொலிக்குறிப்பு (வின்.); onom. expr. signifying the repeated sound as of coconuts falling on the ground one after another. தேங்காய் சொத்துக் சொத்தென விழுகின்றது. பழம் சொத்துச் சொத்தென விழுகின்றது.

[சுல் (குத்தல்) → சுள் → சுர் → சுரு → சுறு → (சுற்று) → சுத்து → சொத்து + சொத்து + எனல். சொத்து - சொத்துதல் வினை இன்று வழக்கற்றுப்போய் ஒலிக்குறிப்பாக மட்டுமே வழங்குகிறது]

சொத்துபற்றுஅறிக்கை *šottu-paṟṟu-aṟikkai,* பெ. (n.) சொத்திற்கான பொறுப்பு அறிக்கை; statement of assets and liabilities.

[சொத்துபற்று + அறிக்கை]

சொத்துவம்[1] *šottuvam,* பெ. (n.) *1.* பொருளுரிமை (சங்அக.); right, proprietorship, title, claim. *2.* தானே இருத்தல் (சுயம்பு) (யாழ்ப்.); self-existence, independent condition.

[சொத்து → சொத்துவம்]

சொத்துவரி *šottu-vari,* பெ. (n.) வீடு, பணம், வேளாண்மை நிலம் நீங்கலாக உள்ள இதர

நிலம் போன்ற சொத்துகளின் மதிப்பின்மீது வாங்கப்படும் வரி; wealth tax on the capital value of a person's assets exclusive of agricultural lands.

[சொத்து + வரி]

சொத்துவை-த்தல் *šottu-vai-*, 4 செ.குவி. (v.i.) 1. தொகுத்து வைத்தல்; to collect. "நெடுங்கயிறெல்லா மிசைசொத்து வைத்தும்" (அஷ்டப். திருவரங். மா.52). 2. வழித்தோன்றல் முதலியவர்க்கு சொத்து தொகுத்து வைத்தல் (உ.வ.); to leave properties to heirs.

[சொத்து + வை-.]

சொத்தெனல் *šotteṉal*, பெ. (n.) மண்போன்ற மென்மைப் பரப்பில் தேங்காய் போன்ற பொருள் விழும்போது ஏற்படும் ஒலிக்குறிப்பு; onom. expr. of a falling material like coconut over soil surface.

மறுவ. சொத்துச் சொத்தெனல்

[சொத்து + எனல்]

சொத்தை[1] *šottai*, பெ. (n.) 1. புழுவண்டு முதலியன அரித்தது; that which is decayed, worm-eaten, injured by insects. 2. ஊனம்; defect, as in limbs, teeth, fruits etc. "சொத்தைவில் லொடித்ததை" (இராமநா. பாலகா. 25.). 3. சீர்கேடு (வின்.); being ruined in circumstances or character. 4. மெலிந்த உயிரி (பிராணி); emaciated person or animal. 5. சொத்தைக்களா (வின்.) பார்க்க; see *šottai-k-kaḷa*.

ம., து. சொத்த; க. சொத்த, சொத்தி, சொத்து, ஜொத்து; தெ. சொத்த; கோத. சொதி; பட. சொத்தெ

[சொள் → சொட்டை → சொத்தை = உள்ளீடற்றுக் கறுத்த பழம், புழுத்த காய் பூச்சியரித்த பல்]

சொத்தை[2] *šottai*, பெ. (n.) கன்னம் (யாழ்ப்.); cheek.

E. cheek; OE. ce'ce.

சொத்தைக்களா *šottai-k-kaḷā*, பெ. (n.) 1. செடிவகை; bushy roundish-leaved sweet thorn. 2. இலங்கை மரவகை; Ceylon plum. 3. ஒருவகை இலங்கை மரம்; lovilovi of Ceylon.

[சொத்தை[1] + களா]

சொத்தைப்பல் *šottai-p-pal*, பெ. (n.) கெட்டுப் போன பல் (உ. வ.); carious tooth.

மறுவ. சூத்தைப் பல்

[சொத்தை + பல்]

சொத்தையிற்போடு-தல் *šottaiyai-r-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) கன்னத்திலடித்தல் (யாழ்ப்.); to give one a slap on the cheek.

[சொத்தை + இல் + போடு-.]

சொதசொதெனல் *šota-šoteṉal*, பெ. (n.) கசிதற் குறிப்பு; expr. signifying the state of being mashy, as over-boiled rice, or of being soaked, as with oil or other fluids.

[சொதுசொதுவெனல் → சொதசொத வெனல்]

சொதி *šodi*, பெ. (n.) தேங்காய்ப்பாலவியல் (யாழ்ப்.); vegetable soup prepared from coconut.

இவ்வகைக் குழம்பு நெல்லை மாவட்டத்தில் தான் சிறப்பாகச் செய்யப் படுகிறது.

சொதுசொதுவெனல் *šodu-šodu-v-eṉal*, பெ. (n.) சேறுபோற் குழைந்திருத்தல் குறிப்பு; expr. signifying the state of being mud.

[சொளுசொளு → சொதுசொது → சொதுசொதுவெனல்]

சொதை *šodai*, பெ. (n.) 1. குழாம், கூட்டம்; crowd. 2. சொத்து[1] (யாழ்.அக.) பார்க்க; see *šottu*[1].

[சொது → சொதை]

சொதைகாரன் *šodai-kāraṉ*, பெ. (n.) சொத்துக்காரன் பார்க்க; see *šottu-k-kāraṉ*.

[சொத்து → சொதை + காரன்]

சொந்த *šonda*, பெ.எ. (adj.) 1. தன்பிறப்பால் அல்லது தன்னுடைய முன்னோரில் பிறப்பால் உரிமையுடைய; native. சொந்த ஊருக்குப் போய் வந்தான். 2. உடன்பிறந்த; தன்நேர் உறவான; blood relation; own. சொந்தத் தம்பி. 3. தனக்கே உரிய; தனிப்பட்ட; personal; private. நடிகை தன் சொந்தக் குரலில் பாடினாள்.

[சொந்தம் → சொந்த]

சொந்தக்கம்பத்தம் *śonda-k-kambattam,* பெ. (n.) பண்ணை வைத்துச்செய்யும் வேளாண்மை; cultivation carried on by one's own plough and cattle.

[சொந்தம் + கம்பத்தம். கம்மம் → கம்பத்தம் = வேளாண்மை.]

சொந்தக்காரன் *śonda-k-kāraṉ,* பெ. (n.) 1. உரியவன்; owner. இந்த மாட்டின் சொந்தக் காரன் யாரோ? 2. உறவினன்; close relation. சொந்தக்காரன் திருமணத்திற்கு வந்தேன்.

[சொந்தம் + காரன்]

சொந்தக்காரி *śonda-k-kāri,* பெ. (n.) சொந்தக்காரன் என்பதன் பெண்பால்; feminine of śonda-k-kāraṉ.

[சொந்தக்காரன் (ஆ.பா.) → சொந்தக்காரி (பெ.பா.)]

சொந்தம் *śondam,* பெ. (n.) 1. நிலம், பொருள் முதலியவற்றின் மீது ஒருவருக்குள்ள உரிமை; one's own peculiar right, exclusive property, that which belongs to oneself. "சொந்தமா யாண்ட நீ" (தாயு. சுகவாரி. 11). அவருக்குச் சொந்த வண்டி உண்டு. 2. நெருங்கிய உறவு (உ.வ.); near relationship.

க. சொந்த; தெ. சொந்தமு

[சும் → சொம் → (சொத்து) → சொந்தம்]

சொப்பட *śoppaḍa,* குவி.எ. (adv.) நன்றாக; well, neatly, fully. 'சொப்பட நீராட வேண்டும்' (திவ். பெரியாழ். 2. 4:5).

தெ. சொப்படு

[செப்பம் + படு - செப்பப்படு → சொப்பட]

சொப்பம் *śoppam,* பெ. (n.) ஒளியின்மை; dullness, lack of brilliancy. 'ஹீனரோட்டை ஸம்ஸர்க்கத்திலே . . . சொப்பமும் பிறப்பது' (திவ். திருநெடுந். 21, வியா, பக். 175).

க. சொப்பு

சொம் *śom,* பெ. (n.) சொத்து; property, wealth, one's own goods. "சொம் மனைவைத் தெப்படி நடப்பீர்" (குமர. பிர. காசிக். 34).

வ. ஸ்வ → ஸ்வாம்

[சும் → சொம். சும் → சும்மை = தொகுதி, செல்வத் தொகுதி]

சொம்படக்கா *śombaḍakkā,* பெ. (n.) நீளமும் அகலமும் ஓரளவினதான கடல்மீன் வகை; sting-ray, dull brown, with disc as broad as long.



சொம்பாதி[1] *śom-bādi,* பெ. (n.) சரிபாதி; exact half. "சொம்பாதியானான் சுமக்கவெருதானான்" (தனிப்பா. 1, 62:123).

[செம்மை+பாதி–செம்பாதி → சொம்பாதி]

சொம்பாதி[2] *śombādi,* பெ. (n.) மேல்வாரம் (இ.வ.); owner's share of produce.

[சொம் + பாதி. சொம் = சொத்து]

சொம்பு[1] śombu, பெ. (n.) செம்பு பார்க்க; see *śembu.*

ம. செம்பு; க. செம்பு, சொம்பு; தெ. செம்பு; து. சொம்பு, செம்பு, சம்பு; கோத. கெபி; குட. செம்ப்; பட. செம்பு

[செம்பு → சொம்பு]

சொம்பு[2] *śombu,* பெ. (n.) அழகு; beauty, grace. "சொம்பிற் பலவள முதிர் சோலைகள்சூழ்" (திருப்பு. 136).

க., தெ. சொம்பு

சொம்மாளி *śom-m-āḷi,* பெ. (n.) உடைமையாளன் (யாழ். அக.); heir, owner.

மறுவ : உரிமையாளன், சொத்துக்காரன்

[சொம் + (ஆள் →) ஆளி]

சொம்மெடு-த்தல் *śom-meḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) வழியுரிமையாகச் (வாரிசாக) சொத்தை யடைதல் (நாஞ்.); to inherit of property.

[சொம் + எடு. சொம் = சொத்து]

சொர்க்கப்பாவனை *šorkka-p-pāvanai,* பெ. (n.) சொக்கப்பனை (வின்.) பார்க்க; see *šokka-p-panai.*

[சொக்கப்பனை → சொர்க்கப்பாவனை]

சொரங்கம் *šorangam,* பெ. (n.) ஏலக்காய்த் தோல் (வின்.); husk of cardamom.

சொரசத்தோரசி *šoraša-t-toraši,* பெ. (n.) இலவங்கம் (மலை.); clove.

சொரசொரப்பு *šora-šorappu,* பெ. (n.) உராய்வை ஏற்படுத்தும் தன்மை; roughness of a surface. மழிக்காமல் முகம் சொரசொரப்பாக உள்ளது.

[சுரசுரப்பு → சொரசொரப்பு]

சொரடு *šoradu,* பெ. (n.) துறட்டி (வின்.); crook of wood or iron.

[துறடு → சொரடு.]

துறடு = காய் முதலியனப் பறிக்குந் துறட்டுக் கோல்

சொரணை *šoranai,* பெ. (n.) சுரணை (யாழ்.அக.); sensitiveness.

[சுரணை → சொரணை]

சொரி¹-தல் *šori-,* 2 செ.கு.வி. (v.i.) 1. மழை முதலியன தொகுதியாக விழுதல்; to flow down, rain, spill. "அலர்மழை சொரிந்த" (கம்பரா. வேள்வி. 56) 2. மிகுதல்; to bear in plenty; to be abundant, profuse, copious. 3. உதிர்தல் (யாழ்ப்.); to drop off, as dry scales in small-pox; to be scattered, as rice from the husk. பூச்சொரிந்து வரவேற்றனர்.

ம. சொரியுக; க. சுரி; தெ. தொரகு, தொருகு, தொறகு; து. தொரியுனி; கோத. சோர்; குட. தோர்; கூ. சகார; பர். சோர்; கட. சோர்ப்; குரு. சுர்கானா; மா. சுர்கெ, சுர்க்ரெ; பட. சோரு

[சொல் → (சொர்) → சொரி → சொரி-தல் = உள்ளிருந்து விழுதல், சிந்துதல்]

சொரி² -தல் *šori-,* 2 செ.குன்றா.வி. (v.t.) 1. பொழிதல்; to scatter pour forth, effuse, emit, shoot, as arrows, shed, as leaves fruits. "வானவர்பூ மழை சொரிந்தார்" (பெரியபு. மநுநீதி. 45). 2. கொட்டுதல்; to empty, pour out, as corn from sack; to dump, as sand from cart. "காரியெட்ட சொரிந்தார்" (கம்பரா. பிரமாத். 165). 3. மிகக் கொடுத்தல்; to give a way in plenty. "துகில் வர்க்க மெல்லாம் . . . சொரிந்தா ரன்றே" (சிவரக. சுகமுனி. 5).

[சொரி¹ → சொரி²-.]

சொரி³ -தல் *šori-,* 2 செ.குன்றாவி. (v.t.) சொறி பார்க்க; see *šori.*

[சொறி → சொரி-.]

சொரி⁴ -தல் *šori-,* 2 செ.கு.வி. (v.i.) சுழலுதல் (சூடா.); to whirl, revolve.

[சுரி → சொரி-. சுரி-தல் = சுழிதல்]

சொரி⁵ *šori,* பெ. (n.) தினவு; itching, tingling. "சொரிபுற முரிஞ்ச" (சிலப். 10:122).

[சொறி → சொரி]

சொரிகுரும்பை *šori-kurumbai,* பெ. (n.) நெல்வகை (வின்.); a kind of paddy.

[சொரி¹ + குரும்பை - சொரி குரும்பை = மிகுதியாக விளையும் நெல் வகை]

சொரிகொன்றை *šori-konrai,* பெ. (n.) கொன்றை வகை (L.); Indian trumpet flower.

[சொரி + கொன்றை]

சொரிந்தள-த்தல் *šorindaḷa-,* 3 செ. குன்றாவி. (v.t.) பண்டங்களை மேலே தூவியளத்தல் (வின்.); to measure gently without pressing down, as flowers, flour, etc.

[சொரி¹ → சொரிந்து + அள-.]

சொரிநெல் *šorinel,* பெ. (n.) குவித்திருக்கும் நெல் (வின்.); paddy heaped up.

ம. சொரிநெல்லு

[சொரி + நெல்]

சொரிபுன்னை *šori-punnai,* பெ. (n.) பேய்க் கண்டல் என்னும் சிறுமரவகை; simple cymed mangrove.

[சொரி + புன்னை]

சொரிமணல் *šori-maṇal,* பெ. (n.) கால் வைத்தால் இறக்கியமிழ்த்தும் புதைமணல்; quick- sand.

ம. சொரி மணல்

மறுவ. சொருகுமணல், புதைமணல்

[சொரி + மணல்]

சொரிமி-த்தல் *šorimi-,* 4 செ.கு.வி. (v.i.) இணங்குதல் (நாஞ்.); to agree, to be cordial.

சொரிமிப்பு *šorimippu,* பெ. (n.) இணக்கம் (நாஞ்.); agreement, cordial relationship.

[சொரிமி → சொரிமிப்பு]

சொரிவாய் *šori-vāy,* பெ. (n.) குதிரிலிருந்து நெல் சொரிந்து விழுந்துளை (நாஞ்.); aperture or opening of a receptacle through which paddy can be taken out.

[சொரி + வாய்]

சொருக்கு *šorukku,* பெ. (n.) சொருகு கொண்டை பார்க்க; see *šorugu-koṇḍai.*

[சொருகு → சொருக்கு]

சொருகம்புல் *šorugam-pul,* பெ. (n.) புல்வகை (சங். அக.); a kind of grass.

[சொருகு + அம் + புல்]

சொருகல் *šorugal,* பெ. (n.) பெரும்பாலுங் குழந்தைகளிடங்காணும் குடற்சிக்கு; sticking in the bowels, as of indigestible food, especially of children.

[சொருகு → சொருகல்]

சொருகு[1]-தல் *šorugu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. சிக்கிக் கொள்ளுதல்; to be entangled, become connected inadvertently. 2. குடலிற் சிக்குதல்; to gripe in the bowels. 3. கருவிழி மறைதல்; to disappear, as the pupil of the eye in fainting. etc. தூக்கத்தால் அவனுடைய கண் சொருகுகின்றது 4. தங்குதல்; to repose. "துரியங்கண் மூன்றுஞ் சொருகிடனாகி" (திருமந். 1893).

[சொள் → (சொர்) → சொருகு → சொருகு-தல் = துளைக்குள் இடுதல், உள்ளிடுதல்]

சொருகு[2]-தல் *šorugu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. நுழைத்தல்; to put in, insert, tuck in. "சொருகு கொந்தளக மொருகை மேலலைய" (கலிங். 46). 2.தூக்கம் நோய் முதலியவை கண் விழிகளை ஒரு பக்கமாக ஒதுக்கி மறையச் செய்தல்; to turn the pupil of the eye till it disappears, as in sleep, giddiness. தூக்கம் கண்ணைச் சொருகுகிறது.

ம. சொருகுக; க. சொருகு

[சொருகு[1] → சொருகு[2]]

சொருகு[3] *šorugu,* பெ. (n.) 1. படகில் துடுப்பைப் பூட்டுதற்குரிய வளையம்; a ring to hold the ore in the boat. 2. உட்புறமிருந்து சிறு இரும்புச் சட்டத்தை அல்லது உருளையைத் தள்ளி, வீட்டுக்கதவைப் பூட்டுகை; small metal moving latch fitted on the door. 3. இரட்டைக் கதவில் ஒன்றை ஒரு சிறு இரும்பு உருளை அல்லது இரும்புச் சட்டத்தைத் தள்ளுவதன் மூலம் கதவு நிலையுடன் அல்லது கீழ்த் தரையில் உள்ள குழியுடன் பிணைப்பது; a movement of a latch which is used to fix the bolt to the door frame or whole on the floor.

[சொருகு[1] → சொருகு[3]]

சொருகுகதவு *šorugu-kadavu,* பெ. (n.) 1. சொருகி மூடுங்கதவு; door of insertion. 2. கடையை மூடவுதவும் சொருகு பலகைகள்; wooden planks to close the shops.

[சொருகு[1] + கதவு]

கடைக்கதவு பலகைகளால் ஆனது. மேல் நிலை, கீழ் நிலைகளில் தோண்டப்பட்ட பள்ளத்தில் நிற்கும். நடுப்பலகை இருக்கு மிடத்தில் மேல் நிலையில் பள்ளம் ஆழமாக எடுக்கப்பட்டிருக்கும். அப்பள்ளத்தில் பலகையைச் சொருகித் தூக்கிக் கீழ்நிலைப் பள்ளத்தில் நிறுத்தி இரு முனைகளுக்கும் தள்ளிவிடலாம். இறுதியில் நடுப்பலகையைச் சொருகிப் பூட்டி விடலாம்.



சொருகு கதவு

சொருகுகொண்டை *śorugu-koṇḍai,* பெ. (n.) பெண் மயிர்முடிவகை (வின்.); woman's hair twisted round and tucked in, as in dressing.

[சொருகு + கொண்டை]

சொருகுதலைப்பு *śorugu-talaippu,* பெ. (n.) சீலையின் உள்ளிடமான தலைப்பு (வின்.); the end of saree tucked in.

[சொருகு + தலைப்பு]

சொருகுபிடிகத்தி *śorugu-piḍi-katti,* பெ. (n.) உறையுள் இட்ட பிடியுள்ள கத்தி (இ.வ.); sword or knife with handle kept in sheath.

[சொருகு + பிடிகத்தி]

சொருகுமணல் *śorugu-maṇal,* பெ. (n.) சொரிமணல் பார்க்க; see *śori-maṇal.*

மறுவ. புதைமணல்

[சொருகு + மணல்]

சொருகுமாந்தம் *śorugu-māndam,* பெ. (n.) கண்களை ஒரு பக்கமாகச் சொருகுமாறு செய்யும் குழந்தை நோய்வகை (சங்.அக.); convulsions affecting children in, which the eyes are turned up under the lids.

[சொருகு + மாந்தம்]

சொருகுமுந்தானை *śorugu-mundāṉai,* பெ. (n.) புடைவையின் சொருகு தலைப்பு (வின்.); the end of a saree which is tucked in.

[சொருகு + முந்தானை]

சொருகோடு *śorukōḍu,* பெ. (n.) சொருகி யடுக்குந்தட்டையோடு (C.E.M.); thick flat insertible tile.

[சொருகு + ஓடு]

சொருணை *śoruṇai,* பெ. (n.) 1. சுரணை (யாழ்ப்.); sensitiveness. 2. சுருட்டி வைத்த பொருள்; anything rolled up.

[சுரணை → சுருணை → சொருணை]

சொருவா *śoruvā,* பெ. (n.) கஞ்சி (அக. நி.); gruel.

சொருவு *śoruvu,* பெ. (n.) உறை (இ.வ); sheath.

[சொருகு → சொருவு]

சொல்[1](லு)-தல் *śol(lu)-,* 8 செ.குன்றாவி. (v.t.) .1. பேசுதல்; to say, speak, tell, mention, utter, express. "சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ் சொல்லிய வண்ணஞ் செயல்" (குறள், 664). 2. திருப்பிக்கூறுதல்; to recite, repeat, relate, quote. சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளை. 3. கட்டளையிடுதல்; to dictate, command. மூத்தோர் சொல்லியதை மீறாதே. 4. அறிவுரைக் கூறுதல்; to advise. 5. அறிவித்தல்; to inform. "யாருக்கென் சொல்லுகே னன்னை மீர்காள்" (திவ். திருவாய். 9. 9:7). 6. புகழ்தல்; to praise. "தோளையே சொல்லுகேனோ" (கம்பரா. மாரீச. 73).

ம. சொல்லுக; க. சொல், சொல்லு; தெ. சொல்; இரு. சொல்லு; எர. சொன்னு

[சல் → சொல் = ஒலி, மொழி. சொல் → சொல்(லு)-தல் = உரைத்தல்]

சொல்[2](லு)-தல் *śol(lu)-,* 8 செ.குன்றாவி. (v.t.) களைதல்; to remove, alleviate, put away. "புறவி னல்லல் சொல்லிய . . . துலாஅம் புக்கோன்" (புறநா. 39).

[சல் → சொல் → சொல்(லு)-தல்]

சொல்[3] *śol,* பெ. (n.) 1. மொழி; word, term. 'சொல்லினாகு மென்மனார்' (தொல். சொல். 158). 2. பேச்சு; saying, speech. "சான்றோர் கொடுத்தா ரெனப் படுஞ்சொல்" (நாலடி, 100). 3. பழமொழி; proverb, maxim. "அல்லவை செய்தார்க் கறங் கூற்றமாமென்னும் . . . சொல்" (சிலப். 20, வெண்பா.). 4. உறுதிமொழி; declaration, promise, assurance. "தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ" (கம்பரா. குகப். 15.). 5. புகழ்; praise, encomium, panegyric. "தன்சொலாற் றான்கண்டனைத்து" (குறள். 387). 6. மந்திரம்; incantation. "சொல்லுங்காற் சொல்லும் பலவுள" (பு.வெ. 12, வென்றிப், 9). 7. தீமொழி (சாபம்); curse. "சொல்லொக்குங் கடியவேகச் சுடுசரம்" (கம்பரா. தாடகை. 72). 8. கட்டளை; command, direction. "என்சொற் கடந்தா லுனக்கியாதுள தீனமென்றான்" (கம்பரா. நகர்நீங்கு. 140). 9. அறிவுரை; advice. தந்தைசொல் மிக்க மந்திரமில்லை.

ம. சொல்லு, சொல்; க. சொல், சொல்லு; குட. சொல்லி (பெயர்); கோத. சொல் (ஆணை); பர். சல்

[சல் → சொல்]

சொல்[4] *šol*, பெ. (n.) *1.* பெயர்ச்சொல், வினைச் சொல், இடைச்சொல், உரிச்சொல் என்ற நால்வகை மொழிகள் *(நன். 270)*; part of speech, of which there are four, viz. peyar-c-col, viṉai-c-col, iḍai-c-col, uri-c-col. *2.* தமிழ் மொழியில் உள்ள இயற்சொல், திரிசொல், திசைச்சொல் வடசொல் என நால்வகைப் பட்ட மொழிகள் (தொல். சொல். 397); words in Tamil language, of four classes, viz., iyaṟ-col, tiri-šol, tišai-c-col, vaḍa-šol.

[சொல்[3] → சொல்[4]]

'சொல் எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை' *(இளம். தொல். சொல். 1; கல். தொல். சொல்1).*

'எழுத்தோடு ஒருபுடையான் ஒற்றுமையுடைத் தாய்ப் பொருள் குறித்து வருவது. சொல்தான் இரண்டு வகைப்படும் தனி மொழியும் தொடர் மொழியும் என' *(சேனா. தொல். சொல். 1).*

'எழுத்தினா னாக்கப்பட்டு இருதிணைப் பொருட்டன்மையும் ஒருவன் உணர்தற்கு காரணமாம் (நிமித்தமாம்) ஓசை' *(நச்.தொல். எழுத்து. பாயிரம்; நச். தொல். சொல். 1).*

'எழுத்தினான் ஆக்கப்பட்டுப் பொருளறி வுறுக்கும் ஓசை' *(நச்.தொல். பொருள்.195).*

'எழுத்தினானியன்று பொருள் அறிவிக்குஞ் சொற்களைப் பொருள் நிலைமை நோக்கித் தொடர்மொழி தனி மொழியென இருவகைப் படுத்தி, அத்தொடர்மொழியை அல்வழித் தொடர் வேற்றுமைத்தொடரென இருவகைப் படுத்தலாம்' *(தெய்வச். தொல். சொல்.1)*

'எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப் பொருட்டன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசை' *(சிவ. நன். சொல். முன்னுரை).*

'சொல் (கூறும் முறை) எல்லாச் சொற்களையும் கூறுங்கால் பொருள் சிறக்குமிடத்து எழுத்தினை எடுத்தும் அயலெழுத்தினை நலித்தும் ஏனை யெழுத்துகளைப்படுத்தும் கூறுக' *(நன்.132. சிவ.).*

'சொல் (முரண்) சொல்லாலன்றிப் பொருளான் மாறுபடாமை' *(தொல். செய். 91, இளம்.).*

சொல்[5] *šol*, பெ. (n.) *1.* நாடகவரங்கிற் பேசப்படும் உட்சொல், புறச்சொல், வான் (ஆகாசச்) சொல் என்பன *(சிலப். 3. 13 உரை. பக். 87)*; speech or utterance on the stage. of three kinds, viz., uṭ-col. puṟa-c-col. āgāša-c-col *2.* ஒலி; sound. பல்லி சொல்.

[சல் → சொல்]

சொல்[6] *šol*, பெ. (n.) *1.* நாமகள்; Šarasvadi, as Goddess of speech. சொல்லென்றது நாமகளாகிய தெய்வம் *(தொல். சொல். 57, சேனா.).* *2.* சொல் விளம்பி (அக. நி.) பார்க்க; see ***šol-viḷambi.***

[சல் → சொல்]

சொல்[7] *šol*, பெ. (n.) நெருப்புப் போல் அல்லது பொன்போல் விளங்கித் தோன்றும் நெல்; paddy. "சொல்_ இறைஞ்சிக் காய்த்தவே" *(சீவக. 53).*

[சல் → சொல்]

சொல்தவறு-தல் *šol-tavaṟu-*, 5 செ.குன்றா.வி. (v.i.) சொல் (வார்த்தை) பிறழ்தல்; to treak one's word.

[சொல் + தவறு-.]

சொல்லகத்தியம் *šol-l-agattiyam*, பெ. (n.) இறந்துபட்ட ஓர் இசைநூல் *(சிலப். 8:24, அரும்.)*; an ancient treatise on music, not extant.

[சொல் + அகத்தியம்]

சொல்லடைவு *šol-l-aḍaivu*, பெ. (n.) ஒரு நூலில் வழங்கும் சொற்களை அகர வரிசைப்படுத்தி நூலுடன் இணைக்கும் பட்டியல்; word index. (for texts, ext. literary works)

[சொல் + அடைவு]

சொல்லணி *šol-l-aṇi*, பெ. (n.) சொல்லினோசை முதலியன இன்பம்பட அமைக்கும் அணிவகை *(தண்டி.)*; figure of speech depending for its effect on sound alone, opp. to *poruḷ-aṇi.*

[சொல் + அணி]

சொல்லதிகாரம் *šol-l-adigāram*, பெ. (n.) சொல்லின் பாகுபாடு செய்கை முதலியவற்றைப் பற்றிக் கூறும் இலக்கணப் பகுதி (தொல்.); section dealing with etymology.

[சொல் + அதிகாரம்]

சொல்லபோனால் *šollapōṉāl*, வி.எ. (adv.). உண்மையில்; in fact. இவர்கள் ஏன் ஒப்பாரி வைக்கிறார்கள் என்று தெரியவில்லை; சொல்லப் போனால் நானல்லவா துயரப்பட வேண்டும்.

[சொல் → சொல்லப்போனால்]

சொல்லலங்காரம் *šol-l-alaṅgāram*, பெ. (n.) சொல்லணி பார்க்க; see *šol-l-aṇi*.

[சொல் + அலங்காரம்]

Skt. அலம்கார → த. அலங்காரம்

சொல்லழிம்பு *šol-l-aḻimbu*, பெ. (n.) இடக்கர்ச்சொல்; obscene word. அவன் சொல்லழிம்பு மிகமோசம் (உ.வ.).

[சொல் + அழிம்பு]

சொல்லழுத்தம் *šol-l-aḻuttam*, பெ. (n.) 1. ஊன்றிச்சொல்லுகை; emphasis. 2. சொல்லுறுதி (வாக்குறுதி); word of promise; decisive speech.

[சொல் + அழுத்தம்]

சொல்லற்பாடு *šollaṟ-pāḍu*, பெ. (n.) சொல்லப்படுகை; spoken mentioned. 'அவ்விரண்டும் உவமமென்று சொல்லற்பாட்டிற் கடியப்படா' (தொல். பொருள். 310, உரை).

[சொல் + அல் + (படு →) பாடு]

சொல்லறிகணை *šol-l-aṟi-kaṇai*, பெ. (n.) ஒலியைக் கேட்டே மறைந்துள்ள இலக்கை அறிந்து எய்யுங்கணை; arrow that is shot at a person or animal when out of sight, the direction being judged by sound. "சொல்லறி கணையை வாங்கித் தொடுத்தவன் விடுத்தலோடும்" (யசோதர. 4:31).

[சொல் + அறிகணை]

சொல்லறிபுள் *šol-l-aṟipuḷ*, பெ. (n.) 1. கிளி (யாழ்அக.); parrot. 2. பூவை (சங்அக.); myna.

[சொல் + அறி + புள்]

சொல்லறுதி *šol-l-aṟudi*, பெ. (n.) விலை முதலியவற்றை வரையறையாகக் கூறும் உறுதி (வின்.); final word, as in striking a bargain.

[சொல் + அறுதி]

சொல்லாக்கம் *šol-l-ākkam*, பெ. (n.) 1. புதிய கருத்துகளை உணர்த்த ஒரு மொழியில் சொற் செய்துகொள்ளுகை; formation of words, word-building. 2. பேட்டி; interview. 3. கலந்துரையாடல்; conversation.

[சொல் + ஆக்கம்]

சொல்லாகுபெயர் *šol-l-āgupeyar*, பெ. (n.) 'உரை செய்தான்' என்பதில் உரையென்பது அம்மொழியால் உணரப்படும் பொருளுக்கு ஆவது போன்ற ஆகுபெயர் (நன். 290, உரை); a species of metonymy in which a term signifying word is used to denote a composition, oral or written as in 'நூலுக்கு உரை செய்தான்'

[சொல் + ஆகுபெயர் – சொல்லாகுபெயர் = ஒரு சொல் அதனோடு ஏதேனும் ஒரு வகையில் தொடர்புடைய மற்றொன்றையும் குறிப்பிட்டு வழங்கி வருவது]

சொல்லாட்சி *šol-l-āṭci*, பெ. (n.) சொற்களை தொடரில் பயன்படுத்தும் பாங்கு; command over words. மொழிநடையில் உள்ள சொல்லாட்சி கண்டே, எழுத்தாளர்/கவிஞர் யாரென அறியமுடியும்.

[சொல் + ஆட்சி]

சொல்லாட்டி *šol-l-āṭṭi*, பெ. (n.) திறமையாய்ப் பேசுபவள்; woman of clever or skilful speech. "சொல்லாட்டி நின்னொடு சொல்லாற்ற கிற்பார் யார்" (கலித். 108).

[சொல் + ஆட்டி – சொல்லாட்டி = சொல்லை ஆள்பவள்.]

சொல்லாட்டு *šol-l-āṭṭu*, பெ. (n.) பேச்சு; conversation speech. "சொல்லாட் டிடையுஞ் செல்ல நீர்தலின்" (பெருங். வத்தவ. 6:25).

[சொல் + ஆட்டு. ஆடு → ஆட்டு]

சொல்லாடு-தல் *šol-l-āḍu-*, 5 செ.கு.வி. (v.i.) பேசுதல்; to speak, talk. "சொல்லாடச் சோர்வுபடும்" (குறள், 405).

[சொல் + ஆடு-. ஆடு → ஆடுதல் = பேசுதல், உரைத்தல்]

சொல்லாதசொல் *šollāda-šol*, பெ. (n.) 1. தகாத சொல் (யாழ்.அக.); improper word.

2. இடக்கர்ச் சொல்; obscene or indecent language. 3. வசை; abusive language.

[சொல் + ஆத + சொல்]

சொல்லாமற்சொல்(லு)-தல் *šollāmar-šoll(u)-*, 8 செ.குன்றாவி. (v.t.) தன் கருத்தைக் குறிப்பாற் கூறுதல்; to communicate one's thoughts indirectly or by sly remark or gestures. "சொல்லாமற் சொன்னவரை" (திருவிளை. பாயி. 13). மகன் செய்த தவற்றைச் சொல்லாமல் சொல்லித் திருத்தினார்.

[சொல்லாமல் + சொல்(லு)-.]

சொல்லாழம் *šol-l-ālam*, பெ. (n.) சொல்லின் பொருளாழம்; deep significance of a word.

[சொல் + ஆழம்]

சொல்லாளி *šol-l-āli*, பெ. (n.) 1. உறுதிச்சொல் (வாக்குறுதி) யுள்ளவன் (வின்.); one faithful to his word. 2. சொற்றிறமையுள்ளவன் (வின்.); eloquent person. 3. செல்வாக்குள்ளவன் (உ.வ.); a person of influence.

[சொல் + ஆளி. ஆள் → ஆளி]

சொல்லானந்தம் *šol-l-ānandam*, பெ. (n.) இலக்கியத் தலைவனின் இயற்பெயரை யடுத்துக் கேடுபயக்கும் அமங்கலச் சொல்லைப் புணர்த்துப்பாடுவது (யாப். வி. 96. பக். 519); inauspicious use of a word of evil import in conjunction with the name of the hero of a poem.

[சொல் + ஆனந்தம் – சொல்லானந்தம் = பாடலின் குற்றங்களுள் ஒருவகை. பாக்குற்றங்கள்: எழுத்துக் குற்றம், சொல் குற்றம், பொருள் குற்றம், யாப்புக் குற்றம், தூக்குக் குற்றம், தொடைக் குற்றம்]

சொல்லிக்காட்டு-தல் *šolli-k-kāttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. பாடம் ஒப்பித்தல்; to repeat a lesson. 2. விளக்கியறிவித்தல் (வின்.); to describe, explain, define. 3. குத்திக் காட்டுதல்; to remind one of one's faults; to call to mind one's misdeeds or defects. குற்றத்தைச் சொல்லிக் காட்டினான்.

[சொல் → சொல்லி + காட்டு-. காட்டு → காட்டு-தல் = அறிவித்தல், காண்பித்தல்]

சொல்லிக்கொடு¹-த்தல் *šolli-k-kodu-*, 4 செ. குன்றாவி. (v.t.) 1. படிப்பித்தல்; to teach, explain. 2. அறிவித்தல்; to inform, make known.

[சொல் → சொல்லி + கொடு-. 'கொடு' – துணைவினை]

சொல்லிக்கொடு²-த்தல் *šolli-k-kodu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. அறிவுரை கூறுதல்; to advise. 2. தூண்டி விடுதல்; to instigate.

[சொல் → சொல்லி + கொடு-. 'கொடு' – து. வினை]

சொல்லிக்கொள்(ளு)¹-தல் *šolli-k-kol(lu)-*, 16 செ.கு.வி. (v.i.) 1. விடைபெறுதல்; to take leave. 2. ஒருவனுக்காகப் பிறனிடந் தாங்கிப் பேசுதல்; to recommend; to speak on one's behalf. பணத்திற்காக நான் அவனுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

[சொல் → சொல்லி + கொள்(ளு)-. கொள் – துணைவினை]

சொல்லிக்கொள்(ளு)²-தல் *šolli-k-kol(lu)-*, 10 செ.குன்றாவி. (v.t.) 1. முறையிடுதல்; to complain, make known. நடுவரிடம் தன் குறையைச் சொல்லிக் கொண்டான். 2. தனக்குட் பேசுதல்; to speak to oneself. அவர் எதையோ சொல்லிக் கொண்டிருக்கிறார். 3. பாடங்கேட்டல்; to learn from a teacher. மாணாக்கன் பாடத்தைச் சொல்லிக் கொண்டு வரப் போயிருக்கிறான். 4. விடை பெறுதல்; take leave. மனைவியிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.

[சொல்லி + கொள்(ளு)-. 'கொள்' – துணை வினை.]

சொல்லிசையளபெடை *šollišai-y-alabedai*, பெ. (n.) பெயர்ச்சொல் வினையெச்சச் சொல்லின் இசையை நிறைத்தற்பொருட்டு அளபெடுப்பது (ஆறு.நன். 91); an extension of vowel or consonant sound to give rhythm or melody either in noun or in past participle.

"உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார் வரனசைஇ இன்னும் உளேன்" (குறள். 1263)

"உரனசைஇ யுள்ளம்", "வரனசைஇ யின்னும்" இவற்றுள் உரனசை, வரனசை என நிற்பினும் செய்யுளோசை குன்றாதாயினும் விருப்ப மெனப் பொருள்படும் நசையென்னும்

பெயர்ச்சொல், விரும்பியென வினையெச்சப் பொருள்படும் பொருட்டு வினையெச்சச் சொல்லாதற்கு 'நசைஇ' என அளபெடுத்தது.

[சொல் + இசை + அளபெடை]

சொல்லிசைவு *šolli̇šaivu,* பெ.(n.) சொல்லப் பட்டதற்கு ஏற்றது; according to the said word.

[சொல் + இசைவு]

சொல்லிப்போடு[1]-தல் *šolli-p-pōḍu-, 19* செ.குன்றாவி. (v.t.) 1. வெளியிடுதல்; to give out, publish, as a secret. 2. காட்டிக் கொடுத்தல்; to betray. 3. சொல்லியனுப்பு[1]-தல் பார்க்க; see *šolli-y-aṉuppu-.*

[சொல் → சொல்லி + போடு-. 'போடு' - துணை வினை.]

சொல்லிப்போடு[2]-தல் *šolli-p-pōḍu-, 20* செ.கு.வி. (v.i.) சொல்லியனுப்பு[2]-தல் பார்க்க; see *šolli-y-aṉuppu-.*

[சொல் → சொல்லி + போடு-. போடு' - துணை வினை.]

சொல்லியனுப்பு[1]-தல் *šolli-y-aṉuppu-, 5* செ.குன்றாவி. (v.t.) ஆள்மூலம் சொல்லி யனுப்புதல்; to send through a person, as a message.

[சொல் → சொல்லி + அனுப்பு-.]

சொல்லியனுப்பு[2]-தல் *šolli-y-aṉuppu-, 5* செ.கு.வி. (v.i.) அழைத்துவரச் செய்தி யனுப்புதல்; to send for. உறவினர்களுக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறோம்.

[சொல் → சொல்லி + அனுப்பு-,]

சொல்லிலக்கணம் *šol-l-ilakkaṇam,* பெ. (n.) சொல்லின் தன்மை பாகுபாடு முதலிய வற்றைக் கூறும் நூல்; etymology.

[சொல் + இலக்கணம்]

சொல்லிவிடு-தல் *šolli-viḍu-, 18* செகுன்றாவி & 20 செ.கு.வி. (v.t & v.i.) சொல்லிப்போடு-தல் பார்க்க; see *šolli-p-poḍu-.*

[சொல்லி + விடு-.]

சொல்லிவை-த்தல் *šolli-vai-, 4* செ.குன்றாவி. (v.t.) 1. முன்னறிவித்தல்; to inform before hand; to forewarn. "அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்" (திவ்.பெரியாழ். 4:1). 2. கற்பித்தல்; to teach.

[சொல் → சொல்லி + வை-.]

சொல்லிவைத்தாற்போல *šolli-vaittāṟ-pōla,* வி.எ. (adv.) முன்கூட்டியே திட்டமிட்டது என்று தோன்றும் படி; as if agreed upon or preplanned. சொல்லிவைத்தாற்போல இருவரும் ஒரே மதிப்பெண் வாங்கியிருக்கிறீர்களே!

[சொல்லி + வைத்தாற்போல]

சொல்லிழுக்கு *šol-l-iḻukku,* பெ. (n.) சொற்குற்றம்; incorrectness in speech. "சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" (குறள், 127).

[சொல் + இழுக்கு]

சொல்லிற-த்தல் *šol-l-iṟa-, 3* செ.கு.வி. (v.i.) வாக்கினைக் கடந்து நிற்றல்; to transcend description. "சொல்லிறந் தார்வ நெஞ்சந் தலைத்தலை சிறப்ப" (அகநா. 396).

[சொல் + இற-.]

சொல்லின்பம் *šol-l-iṉbam,* பெ. (n.) சொற்சுவை (வின்.); euphony.

[சொல் + இன்பம்]

சொல்லின்முடிவினப்பொருண்முடித்தல் *šolliṉ-muḍiviṉapporuṇ-muḍittal,* பெ. (n.) உத்தி முப்பத்திரண்டனுள், சொல் முடிந்த விடத்து மற்றப் பொருள்களையும் முடிய வைக்கும் உத்தி (நன். 14.); closing a topic with the finishing word or expression of the chapter dealing with it, one of 32 utti.

[சொல் → சொல்லின் + முடிவின் + அப்பொருண் + முடித்தல்]

சொல்லுதவி *šol-l-udavi,* பெ. (n.) உறுதி மொழி தருதல் (வின்.) பரிந்துரை; word of recommendation or encouragement, dist. fr. poruḷ-udavi.

[சொல் + உதவி]

சொல்லுரிமை *šol-l-urimai,* பெ. (n.) 1. பேசுவதற்குகான உரிமை (வின்.); freedom of speech. 2. அழுத்தமாய்த் திருந்திய பேச்சு (வின்.); fine, emphatic expression.

[சொல் + உரிமை]

சொல்லுருபு *šol-l-urupu,* பெ. (n.) வேற்றுமை யுருபுகட்கு மாற்றாக வழங்குஞ் சொல்; word functioning as case-suffix. "உருபுவே றுருபு சொல்லுரு பாகியும்" (இலக். கொத். 18).

[சொல் + உருபு]

'கத்தி கொண்டு வெட்டினான்' என்பதில் 'கொண்டு' என்பது 'ஆல்' என்னும் வேற்றுமை உருபு போலச் செயல்படுவதால் அதுஒரு சொல்லுருபு ஆகும்.

சொல்லுருமாறுபாடு *šolluru-mārupādu,* பெ. (n.) சொல்லின் ஒலிப்பு ஒருவருக்கு ஒருவர் மாறுபட்ட குரலில் ஒலிப்பது; sound difference from person to person on a particular word.

[சொல் + உரு + மாறுபாடு]

சொல்லுவான்குறிப்பு *šolluvān-kurippu,* பெ. (n.) கூறுவோன் கருத்து; speaker's aim or intention.

[சொல் → சொல்லுவான் + குறிப்பு]

சொல்லுறுதி *šol-l-urudi,* பெ. (n.) வாக்கு நிறைவேற்றுகை; keeping one's word or promise.

[சொல் + உறுதி]

சொல்லெச்சம் *šol-l-eccam,* பெ. (n.) சொல் எஞ்சி நிற்பது (சீவக. 4, உரை.); ellipsis in a sentence.

[சொல் + எச்சம்]

சொல்லெடுப்பு *šol-l-eduppu,* பெ. (n.) அழுத்தமாகச் சொல்லுகை (புதுவை.); emphasis.

[சொல் + எடுப்பு]

சொல்லேருழவர் *šol-l-ēr-ualavar,* பெ. (n.) 1. அமைச்சர்; king's ministers. "கொள்ளற்க சொல்லே ருழவர் பகை" (குறள். 872). 2. புலவர் (அக.நி.); poets. 3. சொல்லாகிய ஏரைக் கொண்ட உழவர்; those who plough with words.

[சொல் + ஏர் + உழவர்]

சொல்வகை *šol-vagai,* பெ. (n.) 1. சொல்லியற் பகுப்பு; classification of words into parts of speech. "பாடங் கருத்தே சொல்வகை" (நன். 21). 2. பேசுந்திறம் (வின்.); method of speaking, as of a teacher; method of cross-examining, as of a barrister. 3. சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் என நால்வகைப்பட்டுக் கூத்துக் குரியவாய் வரும்பாட்டு (சிலப். 3:13, உரை, பக். 88); song accompanying dance, of four kinds viz., *cunnam, curitagam, vannam, varitagam.*

[சொல் + வகை]

சொல்வருநிலை *šol-varu-nilai,* பெ. (n.) சொற்பின்வருநிலை பார்க்க; see *šoṟ-pinvaru-nilai.*

[சொல் + வருநிலை.]

சொல்வல்லபம் *šol-vallabam,* பெ. (n.) பேச்சு வன்மை (வின்.); power of speech, eloquence.

[சொல் + வல்லபம்]

சொல்வழு *šol-valu,* பெ. (n.) சொல்லிலக்கணத் தோடு பொருந்தாமை யாகிய குற்றம் (தண்டி. 108); சொல்லதிகாரத் தோடு மாறு கொள்வது (யாப். 95); etymological error.

[சொல் + வழு]

சொல்வளம் *šol-valam,* பெ. (n.) சொற் பொலிவு; copiousness of vocabulary. தமிழ்மொழியின் சொல் வளத்தைப் பாவாணர் தம் நூல்களில் பலபடக் காட்டியுள்ளார்.

[சொல் + வளம்]

சொல்வளர்-த்தல் *šol-valar-,* 4 செ.குன்றாவி. (v.i.) 1. செய்தியைப் பலருமறியச் செய்தல்; to spread news. "சொல்வளர்த்தாரவர் தோழியர்" (சீவக.1474). 2. வீணாகச் சொல்லைப் பெருக்குதல் (உ.வ.); to talk or write unnecessarily and without point.

[சொல் + வளர்-.]

சொல்வன்மை *šol-vanmai,* பெ. (n.) சொற்றிறம் (குறள்,65,அதி.); eloquence, command of language.

[சொல் + வன்மை]

சொல்வார்த்தை *šol-vārttai,* பெ. (n.) 1. எச்சரிப்புரை; admonition. 2. பொய்ச் சாற்று; false accusation.

[சொல் + வார்த்தை]

Skt. vārtta → த. வார்த்தை

சொல்விழுக்காடு *šol-viḻukkāḍu,* பெ. (n.) பொருளின்றிக் கூட்டுந் துணைச்சொல் (சீவக. 1886, உரை); expletive.

[சொல் + விழுக்காடு]

சொல்விளம்பி *šol-viḷambi,* பெ.(n.) கள், சாராயம் போன்ற மதுவகைகள்; hot drinks like arrack, toddy etc., as causing garrulity.

குடித்தவர் தம் மனதிலுள்ளதை யெல்லாம் தம் மதிமயக்கத்தில் கொட்டித் தீர்ப்பதால் இக்குழூஉக் குறி வந்ததாகலாம்.

[சொல் + விளம்பி]

சொல்வென்றி *šol-venṟi,* பெ. (n.) சொற்போரில் வெல்லுகை; victory in argument. "வாய்ப் பகையுட் சொல்வென்றி வேண்டு மிலிங்கியும்" (திரிகடு. 17).

[சொல் + வென்றி]

சொலவடை *šola-v-aḍai,* பெ. (n.) பழமொழி; proverb.

Poli., Russ. solava; Cz. solava; Skt. sloka

[சொலவு → சொலவடை]

சொலவம் *šolavam,* பெ. (n.) சொலவு (நெல்லை) பார்க்க; see *šolavu.*

[சொலவு → சொலவம்]

த. சொலவம் → Skt. šlōka

சொலவு *šolavu,* பெ. (n.) 1. சொல்லுகை; saying, telling. "சொற்செல்லாவழிச் சொலவு" (முது. காஞ்.87). 2. பழமொழி; proverb. 'ஆயிரங் காக்கைக்கு ஓரு கல் என்று ஒரு சொலவு உண்டு' (இ.வ.).

[சொல்[1] → சொலவு = மரபுக் கூற்று, பழமொழி, பழமொழி போன்ற செய்யுள் தொடர்]

சொலி[1]-த்தல் *šoli-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. உரித்தல்; to strip off, peel off. "பாம்பு சொலித்தன்ன வறுவை" (சிறுபாண். 236). 2. பெயர்த்தல், பேர்த்தல்; to tear. "திங்க ளுகிரிற் சொலிப்பது போல" (சீவக. 350). 3. தோண்டுதல்; to dig off. 4. பிளத்தல்; to split.

[சொல்[2] → சொலி-.]

சொலி[2]-த்தல் *šoli-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஒளிர்தல்; to shine, be radiant. "மானமென் றுரைப்ப தெழுந்துமேற் சொலித்து வருவது போன்றும்" (பிரபோத. 11:1). 2. எரிதல்; to burn, blaze up, as fire or anger. "நாப்ப ணழல் சொலிப்பதாக வுன்னி" (பிரபோத. 44:15).

[சுல் → சுல்லி = அடுப்பு. சுள்ளெனல் = வெயில் சுடுதல். சுள் → சுள்ளை = மட்கலஞ் சுடுமிடம் = காளவாய். சுல் → (சொல்) → சொலி → சொலி-த்தல்]

சொலி[3] *šoli,* பெ. (n.) மரமுதலியவற்றின் தோல், பட்டை; bark of a tree; the inner fibrous covering of a bamboo. "கழைபடு சொலியின்" (புறநா. 383).

[தொலி → சொலி]

சொலிதை *šolidai,* பெ. (n.) வெளிச்சம்; brilliance. "சொலிதை யுற்றிடும் விவேகர்" (பாடு. 28, அடியவர்).

[சொல்[2] → சொலிதை.]

சொலிப்பு *šolippu,* பெ. (n.) வெளிச்சம் பளபளத்தல் (வின்.); shining, glittering.

[சொலி[2] → சொலிப்பு.]

சொலியன் *šoliyaṉ,* பெ. (n.) முடக்கொற்றான் (மலை.); balloon vine.

சொலுசொலெனல் *šolu-šoleṉal,* பெ. (n.) 1. இடைவிடாத் தூறலின் ஒலிக்குறிப்பு (வின்); expr. signifying, continuous drizzling. 2. சேறாதற் குறிப்பு; clayey condition, as of wet floor 3. சோறு முதலியன குழைதற் குறிப்பு; the state of being mashy, as overboiled rice.

[சொளுசொளுத்தல் = எளிதாய்த் துளைக்குமாறு கூழ்போற் குழைதல், சேறாதல். சொளுசொளு → சொலுசொலு → சொலுசொலெனல் = சோறு குழைத்தல்]

சொள் *šoḷ,* பெ. (n.) வடியும் வாய்நீர்; dribbling at the mouth.

[சுள் → சொள்]

சொள்ளல் *šoḷḷal,* பெ. (n.) 1. சொத்தை; decayed. 2. பயனற்றவன்; useless person. 3. குற்றம், கறை, இழுக்கு; stigma.

[சொல் → சொள் → சொள்ளல்]

சொள்ளு *šoḷḷu,* பெ. (n.) வடியும் வாய்நீர், சாளைவாய் நீர்; dribbling at the mouth, as of a child.

க. ஜொல்லு; தெ. சொல்லு; து. சொல்லெ

[*சொள் → சொள்ளு*]

சொள்ளை *šoḷḷai,* பெ. (n.) 1. உள்ளீடற்ற சொத்தை; that which is decayed worm-eater, carious. 2. ஒல்லி; lean, skinny person. சொள்ளைப் பயல் (நாஞ்.) 3. ஒன்றுக்கும் பயனற்றவன்; useless, good-for-nothing person. 4. பள்ளமான அம்மை வடு; scars of small pox pock. சொள்ளை முகம். 5. இழுக்கு; stigma, flaw in character. 6. விளையாட்டில் தோற்றவர் தலையில் விழுங்குட்டு (இ.வ.); slap on the head of the loser in a game. 7. காரியக்கேடு; failure, as in a business. 8. துளை; hole. ஒற்றைக் கடுக்கன் சொள்ளை (உ.வ.).

[*சுல் (துளைத்தல்) → சொல் → சொள் + சொள்ளை*]

சொளு-த்தல் *šoḷu-,* 4 செ.கு.வி. (v.i.) சொளுசொளு-த்தல் பார்க்க; see *šoḷu-šoḷu-.*

[*சுள் → சொள் → சொளு → சொளு-த்தல்*]

சொளுசொளு-த்தல் *šoḷu-šoḷu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மழையால் தரை கூழ்போற் குழைதல், சேறாதல் (யாழ்ப்.); to become muddy, slippery as the ground by rain. 2. சோறு குழைதல்; to be sodden, as overboiled rice.

[*சொள் (=துளை) → சொளு → சொளுசொளு-த்தல். ஓ.நோ. நொள் → நொளு → நொளுநொளு-த்தல்*]

சொளையம் *šoḷaiyam,* பெ. (n.) 1. திருட்டு; fraud, stealing, pilfering. என்ன சொளையம் போடத் தொடங்கி விட்டாய்? (இ.வ.). 2. சுன்னம் (இ.வ.); zero.

[*சுள் → சுளை → சொளை → சொளையம்*]

சொளையமாடு-தல் *šoḷaiya-māḍu-,* 5 செ. குன்றாவி. (v.t.) 1. திருடுதல்; to steal. 2. திருடும் நோக்கத்துடன் வீட்டை வளைய வருதல் (உ.வ.); to pry about a house with the intention of stealing.

[*சொளையம் + ஆடு-.*]

சொளையமாறு-தல் *šoḷaiya-māṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) திருடுதல்; to steal.

[*சொளையம் + மாறு-.*]

சொற்கட்டான் *šoṟ-kaṭṭāṉ,* பெ. (n.) சொக்கட்டான் (வின்.); back-gammon.

சொற்கட்டு[1] *šoṟ-kaṭṭu,* பெ. (n.) 1. தாளக் கட்டுரை; imitative sounds uttered in drumming, etc. 2. செல்வாக்கு (இ.வ.); influence.

தெ. சொல்கட்டு

[*சொல் + கட்டு.*]

சொற்கட்டு[2] *šoṟ-kaṭṭu,* பெ. (n.) பொய் (இ.வ.); false-hood, fib.

[*சொல் + கட்டு. கால அளவைக் காட்டும் (பொருளற்ற) ஒலிக் குறிப்புகளின் தொகுதி*]

சொற்கலகம் *šoṟ-kalagam,* பெ. (n.) சொற்போர் (வின்.); controversy.

[*சொல் + கலகம்*]

சொற்கா-த்தல் *šoṟ-kā-,* 4 செ.கு.வி. (v.i.) 1. சொன்ன சொல்லை நிறைவேற்றுதல்; to keep one's word. 2. அடக்கிப் பேசுதல்; to speak with due caution. 3. புகழைப் போற்றுதல்; to guard one's reputation. "சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (குறள், 56).

[*சொல் + கா-.*]

சொற்காரி *šoṟ-kāri,* பெ. (n.) எழுவகை முகில்களுள் ஒன்று (சூடா.); one of seven kinds of clouds.

[*சொல் + காரி*]

சொற்குற்றம் *šoṟ-kuṟṟam,* பெ. (n.) 1. சொல்லிலக்கணத்திற்கு மாறான குற்றம்; etymological error. 2. சொல்லின் தீமை (இ.வ.); impropriety, offensiveness, in words.

[*சொல் + குற்றம்*]

சொற்குற்றம்வாய்க்குற்றம் *šoṟ-kuṟṟam-vāy-k-kuṟṟam,* பெ. (n.) சிறுசொற்பிழைகள் (வின்.); trivial mistakes in words.

[*சொல் + குற்றம் + வாய் + குற்றம்*]

சொற்குறி *šoṟ-kuṟi*, பெ. (n.) *செய்நஞ்சு (மூ.அ)*; a prepared arsenic.

[சொல் + குறி]

சொற்கேள்-தல் (சொற்கேட்டல்) *šoṟ-kēḷ-*, 6 *செ.கு.வி.* (v.i.) *1.* ஏவற்படி நடத்தல்; to be obedient; to listen, to pay regard. சொற்கேளாப் பிள்ளையினாற் குலத்துக் கீனம் (உ.வ.). *2.* வசையைப் பொறுத்தல்; to put up with abuse or abusive words. *3.* வசை பெறுதல்; to get abusive words. *4.* கேட்டல்; to hear. "மழலைச் சொல் கேளாதவர்" (குறள், 66).

[சொல் + கேட்டல்]

சொற்கோ *šoṟ-kō*, பெ. (n.) திருநாவுக்கரசு நாயனார்; Tiru-nāvukkarašu-nāyaṉār. "சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலு மென் சுந்தரனும்" (சிவானந்தமாலை).

[சொல் + கோ]

சொற்கோவை *šoṟkōvai*, பெ. (n.) *1.* சொற்களின் தொகுப்பு; thesaurus vocabulary; stock of words. *2.* உரை; speech.

[சொல் + கோவை - சொற்கோவை = ஒரு மொழியிலுள்ள அல்லது ஒருவர் அறிந்து வைத்துள்ள சொற்களின் தொகுப்பு]

சொற்சித்திரம் *šoṟ-cittiram*, பெ. (n.) பேச்சு வன்மை; picturesqueness of language; play on words.

[சொல் + சித்திரம்]

சொற்சிதைவு *šoṟ-cidaivu*, பெ. (n.) சொல்லின் மாறுபட்ட உருவம்; corrupt form of a word.

[சொல் + சிதைவு]

சொற்சிமிட்டு *šoṟ-cimiṭṭu*, பெ. (n.) *1.* பொடி வைத்துப் பேசுகை (யாழ்ப்.); subtle, speech. *2.* பொருளை மாற்றவல்ல சிறு சொல்; use of a little word or particle easily over looked yet materially affecting the meaning. *3.* சொற்றிறமை[2] பார்க்க; see *šoṟṟiṟamai[2]*.

[சொல் + சிமிட்டு]

சொற்சிலம்பம் *šoṟ-cilambam*, பெ. (n.) சொற்களின் அழகிய கூட்டு; rhetorical. கவிதையில் உணர்வு எதுவும் வெளிப்படவில்லை, எல்லாம் சொற்சிலம்பம் தான்.

[சொற் + சிலம்பம்]

சொற்சீரடி *šoṟ-cīradi*, பெ. (n.) அம்போதரங்கம் (காரிகை.செய். 10, உரை. பக்.96); one of the component elements of *kali verse*.

[சொல் + சீரடி]

சொற்சுவை *šoṟ-cuvai*, பெ. (n.) சொல்லினிமை; verbal sweetness. 'சொற்சுவையும் பொருட் சுவையும்' (குறள், 420. உரை).

[சொல் + சுவை]

சொற்செல்(லு)-தல் *šoṟ-cel(lu)-*, 13 செ.கு.வி. (v.i.) அதிகாரமுடையவனாதல்; to command obedience. "எனக்கு அடைத்த விடயத்தில் சொற் செல்லாதாகிலன்றோ எனக்குக் குறையாவது" (ஈடு, 10:2,1).

[சொல் + செல்(லு)-.]

சொற்செலவு *šoṟ-celavu*, பெ. (n.) *1.* செல்வாக்கு; influence, fame. 'நிலத்துக் குரிமை, சொற்செலவு, கல்வி . . . எனப்பட்ட' (ஆசாரக். 3, உரை). *2.* ஒருவர்க்காகப் பரிந்து பேசுகை (வின்.); recommendation.

[சொல் + செலவு]

சொற்செறிவு *šoṟ-ceṟivu*, பெ. (n.) சொல்வளம்; wealth of words. 'சொற்செறிவும் இசைச்செறிவு முடைத்தாதலானும்' (சிலப். 3:67, உரை.).

[சொல் + செறிவு]

சொற்சேர்க்கை *šoṟ-cērkkai*, பெ. (n.) அகரமுதலி (அகராதி) (புதுவை.); dictionary.

[சொல் + சேர்க்கை]

சொற்சோதனை *šoṟ-cōdaṉai*, பெ. (n.) சொல்லாராய்ச்சி; critical examination of words. "பேராசிரியர் சொற்சோதனை காட்டிய" (பி.வி.14).

மறுவ. சொல்லாய்வு

[சொல் + சோதனை]

சொற்சோர் *šoṟ-cōr*, பெ. (n.) சொற்சோர்வு (யாழ். அக.) பார்க்க; see *šoṟ- cōrvu*.

[சொல் + சோர்]

சொற்சோர்வு *šoṟ-cōrvu*, பெ. (n.) *1.* பேச்சில் தடுமாறுகை; faltering in speech. *2.* சொற்பிழை பார்க்க; see *šoṟ-pilai*. "சொற் சோர்வு படேல்" (ஆத்திசூடி.).

[சொல் + சோர்வு]

சொற்பகட்டு *šoṟ-pagaṭṭu,* பெ. (n.) *1. அணியழகுச் சொல்;* bombastic word. *2. வீண் பெருமை;* tall talk.

[சொல் + பகட்டு]

சொற்பசி *šoṟ-paši,* பெ. (n.) *1.* சொல்தேவை; hunger for words. *2.* சொல்தட்டுப்பாடு; short-age of words.

[சொல் + பசி]

சொற்படு-தல் *šoṟ-paḍu-,* 20 செ.குன்றாவி. (v.i.) பலன் மிகுதல்; to yield in plenty, increase; to succeed. 'தவசம் சொற்பட்டிருக்கிறது' (வின்.).

[சொல் + படு-.]

சொற்படுத்து-தல் *šoṟ-paḍuttu-,* 5 செ.கு.வி. (v.i.) இசைக்கு ஏற்பச் சொல்லமைத்தல்; to compose to a particular tune. 'உருவுக்குச் சொற்படுத்தியும் இசைப்படுத்தியும் அறிந்து' *(சிலப். 3, 150, உரை.).*

[சொல் + படுத்து-.]

சொற்பதம் *šoṟ-padam,* பெ. (n.) *1.* சொல்லளவு; implication, suggestion. "வெற்பன் வினாய சொற்பத நோக்கி" *(திருக்கோ.61).* *2.* சொல்லாற் குறிக்கப்படும் நிலை; the state of being expressed in words. "சொற்பதங் கடந்த சோதி" *(திருவிளை. வரகுண. 23).*

[சொல் + பதம்]

சொற்பயன்பாடு *šoṟ-payaṉpāḍu,* பெ. (n.) சொற்களைத் தெரிவுசெய்து ஆளுகை; use of words in proper place.

மறுவ. சொல்லாட்சி, சொல்லாண்மை, சொல்லாளுகை

[சொல் + பயன்பாடு]

சொற்பழி *šoṟ-paḻi,* பெ. (n.) பிறர்கூறும் பழிச்சொல்; scandal, reproach. "தலையெலாஞ் சொற்பழி யஞ்சிவிடும்" *(நாலடி, 297).*

[சொல் + பழி]

சொற்பழுத்தவர் *šoṟ-paḻuttavar,* பெ. (n.) நாவண்மையுடையவர்; persons with great power of speech or command of language, as poets. "சொற்பழுத்தவர்க்கு மாண்மை சொல்லலாம்" *(சீவக. 435).*

[சொல் + பழுத்தவர்]

சொற்பாடு[1] *šoṟ-pāḍu,* பெ. (n.) *1.* உடன்படிக்கை; agreement, mutual understanding. "தூமொழியாளுட னொலையாத காலத்தோர் சொற்பாடாய் வந்து . . . இலங்கையர்கோன் வரையெடுக்க" *(தேவா. 677, 7.).* *2.* பழிச்சொல் (இ.வ.); stigma.

[சொல் + பாடு]

சொற்பாடு[2] *šoṟ-pāḍu,* பெ. (n.) புகழ்; fame. "குலந்தனிலிட்ட சொற்பாடும்" *(சொக்க. உலா, 259).*

[சொல் + பாடு]

சொற்பிழை *šoṟ-piḻai,* பெ. (n.) *1.* சொற்குற்றம்; verbal mistake. "சொற்பிழை வராமலுனைக் கனக்கத் துதித்து" *(திருப்பு. 779).* *2.* எழுத்துப் பிழை (இ.வ.); spelling mistake.

[சொல் + பிழை]

சொற்பிறப்பியல் *šoṟ-piṟappiyal,* பெ. (n.) சொல்லின் வேர், தோற்றம், வளர்ச்சி, மாற்றம் பற்றிய மொழியியற் பிரிவு; study of the origin and history of words and their meanings, etymology.

மறுவ. வேர்ச்சொல்லாய்வு

[சொல் + பிறப்பு + இயல்]

சொற்பிறப்புவகைப்படு-த்தல் *šoṟpiṟappu-vagai-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) வேர்ச்சொற் பிறப்பினைத் தொகுத்தல்; etymological compilation classification.

[சொற்பிறப்பு + வகைப்படு-த்தல்]

சொற்பின்வருநிலை *šoṟ-piṉ-varu-nilai,* பெ. (n.) ஒரு சொல் வெவ்வேறு பொருளிற் பல முறைவரும் அணி (தண்டி. 41, உரை); repetition of the same word with different meanings, as in a verse.

[சொல் + பின் + வருநிலை]

எ-டு.

மால்கரி காத்தளித்த மாலுடைய மாலைசூழ்
மால்வரைத்தோ ளாதரித்த மாலையார்-
மாலிருள்சூழ்
மாலையின் மால்கட லார்ப்ப மதன்றொடுக்கு
மாலையின் வாளி மலர்.

சொற்பு *šoṟpu,* பெ. (n.) சொல்லுகை; saying, speaking. "சொற்புறுத்தற் குரியன" (கம்பரா. நகர்நீ. 16).

[சொல் → சொற்பு]

சொற்புத்தி *šoṟ-putti,* பெ. (n.) அறிவுரை (வின்.); advice; admonition.

[சொல் + புத்தி]

Skt. buddhi → த. புத்தி

சொற்புரட்டு *šoṟ-puraṭṭu,* பெ. (n.) பொய்; falsehood, lie. "சொற்புரட் டைந்திடத்தே சொல்லலா மெய்யதாமே" (தனிப்பா.).

[சொல் + புரட்டு]

சொற்புள் *šoṟ-puḷ,* பெ. (n.) காக்கை (பின்வருவதைச் சொல்லுதலுடைய பறவை); crow, as foretelling events like the coming of guests. "நற்றாய் நயந்து சொற்புட் பராயது" (திருக்கோ. 235, கொளு).

[சொல் + புள்]

சொற்பெருக்கு *šoṟ-perukku,* பெ. (n.) விரிவுரை; lecture.

[சொல் + பெருக்கு]

சொற்பொருட்பின்வருநிலை *šoṟ-poruṭ-piṉ-varu-nilai,* பெ. (n.) ஒரு சொல் ஒரு பொருளிலேயே பலமுறை வரும் அணி (தண்டி. 41, உரை); repetition of a word in the same meaning as in a verse.

[சொல் + பொருள் + பின் + வருநிலை]

எ-டு:

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்
அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை. (குறள், 411)

சொற்பொருத்தம் *šoṟ-poruttam,* பெ. (n.) செய்யுண் முதன்மொழிப் பொருத்தம் பத்தனுள், வகையுளி சேர்ந்ததும், சிறப்பில்லதும், பல்பொருட் கேற்பதும், பொருளில்லாததும் திரிதல் கெடுதல் என்னும் உறழ்ச்சியுடையது மாகாது, மூவசையுடைய மங்கலச்சொல் செய்யுளின் முதற்கண் அமைதலாகிய பொருத்தம் (வெண்பாப். முதன்3); rule of propriety which enjoins that the commencing word of a poem must be trisyllabic and auspicious and must not be capable of being split in scanning. inelegant, ambiguous, meaningless, or defective in form one of ten šeyyuṇ-mudaṉ-moḻi-p-poruttam.

[சொல் + பொருத்தம்]

சொற்பொருள்விரித்தல் *šoṟ-poruḷ-virittal,* பெ. (n.) உத்திகள் முப்பத்திரண்டனுள் சொல்லின் பொருள் வெளிப்படையாக விளங்கும்படி விரித்துக் கூறும் உத்தி (நன்.14); elaborating the etymological and semantic significance of a word in a treatise, one of 32 utti.

[சொல் + பொருள் + விரித்தல்]

சொற்பொழிவு *šoṟ-poḻivu,* பெ. (n.) நீண்டமேடைப் பேச்சு, சொற்பெருக்கு; lecture. சமயச் சொற்பொழிவு.

[சொல் + பொழிவு]

சொற்றல் *šoṟṟal,* பெ. (n.) சொல்லுகை; saying, telling. "இராக்கதர் கொற்றஞ் சொற்றல்" (கம்பரா. பொழிலிறுத். 58).

[சொல் → சொற்றல்]

சொற்றாமம் *šoṟṟāmam,* பெ. (n.) சொன் மாலை; garland of words. "நற்றாமஞ் சொற்றாம நயந்து சாத்தி" (திருத். பு. சா. 43).

[சொல் + தாமம்]

சொற்றிரிபு *šoṟṟiribu,* பெ. (n.) சொல்லின் கண் நிகழும் மாறுபாடு (வின்.); change in the form of a word.

[சொல் + திரிபு]

சொற்றிருத்தம் *šoṟṟiruttam,* பெ. (n.) 1. சொல்லின் சரியான பலுக்கம்; correct pronunciation distinct articulation. 2. எழுத்துப் பிழையின் திருத்தம்; correction of errors in writting.

[சொல் + திருத்தம்]

சொற்றிறமை *šoṟṟiṟamai,* பெ. (n.) 1. நாவன்மை; eloquence. 2. பேச்சு நயம்; ingenuity or artfulness, in the use of words, verbal subtlety.

[சொல் + திறமை]

சொற்றொடர் *šoṟṟoḍar*, பெ. (n.) 1. ஒரு சொல் நீர்மைத்தான தொடர்; sentence. 2. தன்னளவிலோ ஒரு சொற்றொடரிலோ ஒரு தனித்த அலகாக முழுமையடையாத சொற்றொகுதி; phrase, clause.

[சொல் + தொடர்]

சொற்றொடர்நிலைச்செய்யுள் *šoṟṟoḍar-nilai-c-ceyyuḷ*, பெ. (n.) ஒரு செய்யுளினிறுதி அடுத்த மற்றொரு செய்யுட்கு முதலாக வரத் தொடுப்பது (தண்டி. 11, உரை); a verse in which the last word or later of a stanza in repeated as the first of word or letter of the next stanza.

[சொல் + தொடர்நிலை + செய்யுள்]

சொற *šoṟa*, பெ. (n.) கடல் உயிரினம்; a kind of sea fish.

[சொறி → சொற.]

சங்கு குளிப்பவரின் உடலின்மேல் இவ்வுயிரினம் பட்டால் தாங்க முடியாத வலியும் எரிச்சலும் ஏற்படும் என்பது மீனவர் கூற்று.

சொறி[1]-தல் *šoṟi-*, 2 செ.குன்றாவி. (v.t.) 1. தினவு நீங்க நகத்தால் வறண்டுதல்; to scratch in order to allay itching. "ஓங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியும்" (சிறுபாண். 80). பேன் அரிப்புத் தாங்காமல் தலையைச் சொறிகிறான். 2. கெஞ்சிக் கேட்டல்; to crave, solicit meanly. அவனைச் சொறிந்து கொண்டிருக்கிறான்.

ம. சொறியுக; க. துறி, சூரு; தெ. துரத; து. கெரெபுனி, தொச்சி; பர். கிர்ப், சொத்; கோண். சோக்தானா, சொகன; ப. துரிசு, துருசு

[சுல் → சுர் → சுறு → சொறி → சொறி-தல்]

சொறி[2]-தல் *šoṟi-*, 2 செகுவி. (v.i.) தினவுண்டாதல் (வின்.); to itch, tingle.

[சொறி[1] → சொறி[2]]

சொறி[3] *šoṟi*, பெ. (n.) 1. தினவு; itching, tingling. 2. முட்போன்ற சிரங்கு புண்; deep itches. "சொறி கொண்டெழுந் தினவுமாற" (சேதுபு. முத்தீர். 5). சொறிபிடித்தவன். 3. மர முதலியவற்றிற் காணும் சுரசுரப்பு (வின்.); roughness of surface. 4. காஞ்சொறி (மலை); climbing nettle. 5. மீன்வகை; a kind of jelly fish. 6. அரிப்புடன் கூடிய தோல் நோய்; skin disease causing itching. சொறி நாய். 7. உயிரிகளின் கரடுமுரடான புறத்தோல்; roughness of the skin. சொறித் தவளை.

ம. சொறி; க. துரி, துரிசு; தெ. துரத; து. தொச்சி; கோத. செரிங்க.

[சுல் → சுர் → சுறு → சொறி]

சொறிக்கரப்பான் *šoṟi-k-karappāṉ*, பெ. (n.) தினவெடுக்கும் சிரங்கு வகை (சங்அக.); a kind of cutaneous eruption producing itching sensation.

மறுவ. சொறிசிரங்கு

[சொறி + கரப்பான்]

சொறிக்கல் *šoṟi-k-kal*, பெ. (n.) 1. செம்பாறாங்கல்; laterite. 2. மஞ்சளுரைக்குங்கல்; saffron stone. 3. சுக்கான்கல்; limestone.

[சொறி + கல்]

சொறிக்கிட்டம் *šoṟi-k-kiṭṭam*, பெ. (n.) இரும்புத் துரு; iron dross.

[சொறி + கிட்டம்]

சொறிக்கொட்டுக்கொட்டு-தல் *šoṟi-k-koṭṭu-k-koṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) மென்மையாக (இலேசாக) அடித்தல்; to beat lightly. சொறிக்கொட்டுக் கொட்டுவதனாற் பயனில்லை, பலமாக அடிக்க வேண்டும் (நாஞ்.).

[சொறி + கொட்டு + கொட்டு-.]

சொறிகட்டை *šoṟi-kaṭṭai*, பெ. (n.) ஆதீண்டு குற்றி; rubbing post for cattle.

[சொறி + கட்டை]

சொறிகட்டையானவன் *šoṟi-kaṭṭai-y-āṉavaṉ*, பெ. (n.) வலியற்றவன் (சவுங்கலானவன்) (யாழ்ப்.); a mean, spirit less person, as no better than a rubling post.

[சொறிகட்டை + ஆனவன்]

சொறிகண் *šoṟi-kaṇ*, பெ. (n.) கண்ணிமைகளில் உண்டாகுஞ் சொறிநோய் (வின்.); an itching complaint in the eyelids.

[சொறி + கண்]

சொறிகரப்பான் *šoṟi-karappāṉ,* பெ. (n.) சொறிக் கரப்பான் (சீவரட். 219) பார்க்க; see *šoṟi-k-karappāṉ*.

[சொறி + கரப்பான்]

சொறிகொள்ளிநாய் *šoṟi-koḷḷi-nāy,* பெ. (n.) (சொறி நோய் கொண்ட நாய்) பித்தேறிய நாய் (இ.வ.); mad dog, as being mangy.

[சொறி + கொள்ளி + நாய்]

சொறிசங்கு *šoṟi-šaṅgu,* பெ. (n.) சுற்று வெளிப்புறம் வழவழப்பாக இல்லாமல் சொர சொரப்பாக இருக்கும் சங்கு; rough surfaced conch.

[சொறி + சங்கு]



சொறிசங்கு

சொறிசிரங்கு *šoṟi-širaṅgu,* பெ. (n.) தோலில் சொரசொரப்பான தடித்த சுற்றுப் பகுதியை உடைய புண்களை உண்டாக்கி அரிப்பை ஏற்படுத்தும் ஒருநோய் (உ.வ.); a kind of itch that causes much annoyance, herpes, scab.

[சொறி + சிரங்கு]

சொறித்தவளை *šoṟi-t-tavaḷai,* பெ. (n.) தவளை வகை; Indian toad. "கேணி நீர்ப்படுஞ் சொறித்தவளை கூப்பிடுகுது" (முக்கூடற் பள்ளு, 90).

ம. சொறித்தவள

[சொறி + தவளை]

சொறித்தேமல் *šoṟi-t-tēmal,* பெ. (n.) படர்தாமரை (வின்.); ringworm.

[சொறி + தேமல்]

சொறிதேய்-த்தல் *šoṟi-dēy-,* 1 செ.குன்றாவி. (v.i.) 1. தினவுக்காக உரைசுதல் (யாழ்ப்.); to rub against a post, as a beast. 2. இழிவாய்க் கருதுதல்; to ignore, brush away, as a person. 3. சினமூட்டுதல்; to rub one the wrong way. என்னிடத்தில் சொறி தேய்க்க வருகிறான்.

[சொறி + தேய்-.]

சொறிந்துகொடு-த்தல் *šoṟindu-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. தூண்டுதல்; to urge, incite. 2. பிழைப்புக் கருதி ஒருவனையணுகி இச்சகமாகத்தொழில் செய்தல் (உ.வ.); to fawn servilely upon.

[சொறிந்து + கொடு-.]

சொறிப்பாறை *šoṟi-p-pāṟai,* பெ. (n.) கடலடியில் பூம்புகாருக்குக் கிழக்கே சற்றொப்ப 55 பாக ஆழத்தில் கிழக்கு மேற்காக நீண்டு வளர்ந்துள்ள பாறை; a rock outcrop situated 55 fathoms below sea level extended in the east west direction.

[சொறி + பாறை]

சொறிபுண் *šoṟi-puṇ,* பெ. (n.) சிறுபிள்ளை கட்கு உண்டாகும் கட்டுக் கரப்பான் (இ.வ.); a kind of eruption affecting children.

[சொறி + புண்]

சொறிமண்டலி *šoṟi-maṇḍali,* பெ. (n.) பாம்பு வகை (யாழ். அக.); a kind of snake.

[சொறி + மண்டலி]

சொறிமீன் *šoṟi-mīṉ,* பெ. (n.) இழுதுமீன், கூழ்மீன் (எலும்பில்லாமீன்); jelly fish.

ம. சொறிமீன்

[சொறி + மீன்]

சொறிமீன்

சொறியன் *šoṟiyaṉ,* பெ. (n.) 1. சொறி பிடித்தவன்; scabby person. 2. சொறித் தவளை; a kind of frog. 3. செந்தொட்டி (நாஞ்.); a kind of medicinal herb.

ம. சொறிபணம், சொறி யணங்ங

[சுர் → சுர → சுற → சொறி → சொறியன்]

சொறியெழும்பு-தல் *šoṟi-y-eḻumbu-,* 5 செ.கு.வி. (v.i.) மரம் முதலியவற்றில் சுரசுரப்புண்டாதல்; to become rough with fibres, as a piece of wood.

[சொறி + எழும்பு-.]

சொறிலை *šoṟilai,* பெ. (n.) சிறுமரவகை; medium hairy-nerved oblong acute-leaved fetid holly.

[சொறி + இலை]

சொறுண்டு-தல் *šoṟuṇḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சொறிதல்; to scratch. "செவி சொறுண்டார். . . பெரியா ரகத்து" (ஆசாரக் 76).

[சுரண்டு → சொறுண்டு-.]

சொன்ஞானம் *šoṉ-ñāṉam,* பெ. (n.) அறிவுடை மொழி; words of wisdom. "காரறிவாளர் முன் சொன் ஞானஞ் சோர விடல்" (நாலடி, 311).

[சொல் + ஞானம். Skt. jñāna → த. ஞானம்]

சொன்மகள் *šoṉ-magaḷ,* பெ. (n.) சொன் மடந்தை பார்க்க; see *šoṉ-maḍandai.* 'நும்முடைய நாவின் மேலிருக்குஞ் சொன்மகள் (பு.வெ.9:48, உரை).

மறுவ. சொல் மடந்தை

[சொல் + மகள்]

சொன்மடந்தை *šoṉ-maḍandai,* பெ. (n.) கலைமகள்; Kalaimagaḷ as the Goddess of Speech. (சொல்லுக்குரிய பெண் தெய்வம்) "நடையூறு சொன்மடந்தை நல்குவதும்" (பு.வெ. கடவுள். 1).

மறுவ. நாமகள், சொல்மகள்

[சொல் + மடந்தை]

சொன்மலைவு *šoṉ-malaivu,* பெ. (n.) முன்னுக்குப்பின் முரணாகக் கூறுகை; self contradictory statement. "சொல்லலன் யானெனச் சொல்லுவை யாயினுஞ் சொன்மலைவாம்" (நீலகேசி 384).

[சொல் + மலைவு]

சொன்மாலை *šoṉ-mālai,* பெ. (n.) 1. புகழ்ச்சி (திவா.); encomium, eulogy, praise. 2. புகழ் மாலை (சூடா.); laudatory poem, panegyric. "சுடராழி யானடிக்கே சூட்டினன் சொன்மாலை" (திவ். இயற். 1:1). 3. சொற்களின் அணிவகுப்பு; garland of words.

[சொல் + மாலை]

சொன்மிக்கணி *šoṉ-mikkaṇi,* பெ. (n.) சொற்பின்வருநிலை (தொன். வி. 314) பார்க்க; see *šoṟ-piṉ-varu-nilai.*

[சொல் + மிக்கணி.]

சொன்முதல் *šoṉ-mudal,* பெ. (n.) மாயை (நாதத்துக்குக் காரணமாவது) (சங்.அக.); Māyā, as the source of nādam.

[சொல் + முதல்]

சொன்முந்திரி *šoṉ-mundiri,* பெ. (n.) 1. கண்ணாடியிலை; sunder-tree. 2. கண்டலங் காய்; Malay karapa.

[சொல் + முந்திரி]

சொன்றி[1] *šoṉṟi,* பெ. (n.) சோறு; boiled riec. "வரகின் சொன்றியொடு பெறூஉம்" (புறநா. 197:12).

[சொல் → சொன்றி. சொல் = நெருப்புப் போல் அல்லது பொன் போல விளங்கித் தோன்றும் நெல்]

சொன்றி[2] *šoṉṟi,* பெ. (n.) சுக்கு (சங்.அக.); dried ginger.

[சுண்டி → சொண்டி → சொன்றி.]

சொன்னகாரன் *šoṉṉakāraṉ,* பெ. (n.) தட்டான் (பிங்.); goldsmith.

ம. சொன்னான்

[சொன்னம் + காரன்]

சொன்னதானம் *šoṉṉa-dāṉam,* பெ. (n.) பொன்னைக் கொடையாக வழங்குகை; gift of gold or money. "சொன்னதானப் பயனெனச் சொல்லுவர்" (கம்பரா. சிறப்பு).

[சொன்னம் + தானம்]

சொன்னபட்டி *šoṉṉa-paṭṭi,* பெ. (n.) நாக செண்பகம், சிறுமரவகை; common yellow, trumpet flower tree (செ.அக.).

சொன்னம்[1] *šoṉṉam,* பெ. (n.) பொன் (திவா.); gold.

க., பட. சின்ன

[சொல் → சொன் → சொன்னம் = பொன். வடவர் சு + வர்ண என்று பகுத்து நன்னிறமுள்ளது என்று பொருட் காரணங் காட்டுவர். இரட்டித்த னகரத்தை 'ர்ண' என்று திரிப்பது வடவர் மரபு. எ-டு. கன்னம் → கர்ண = காது. வண்ணம் → வர்ண]

சொன்னம்[2] *šoṉṉam,* பெ. (n.) கால்வாய் (திவா.); a channel.

E. channel; ME., OF. chanel; L. canalis.

சொன்னம்[3] *šoṉṉam,* பெ. (n.) சோளம்; great millet.

[சொன்னம்[1] → சொன்னம்[3]]

சொன்னமாக்கி *šoṉṉam-ākki,* பெ. (n.) பவள வைப்புநஞ்சு (சங்.அக.); a prepared arsenic.

சொன்னல்[1] *šoṉṉal,* பெ. (n.) இரும்பு (ஆ. நி.); iron.

[சொல் → சொன் → சொன்னல்]

சொன்னல்[2] *šoṉṉal,* பெ. (n.) சோளம் (சூடா.); great millet, cereal grass.

தெ. சொந்ந

[சொன்னம் → சொனனல்]

சொன்னி *šoṉṉi,* பெ. (n.) மணம் (அக.நி.); fragrance.

சொனகு *šoṉagu,* பெ. (n.) பெரும்புல் வகை (தைலவ. தைல.); a kind of large grass.

[சுணை → சோணை → சொனகு = சுணையுள்ள புல்வகை]

சொனாகம் *šoṉāgam,* பெ. (n.) வேலிப் பருத்தி (மலை.); stinking swallow-wort.

சோ

சோ[1] *cō/šō,* 'ச்' எனும் மெய்யெழுத்தும், 'ஓ' எனும் உயிரெழுத்தும் சேர்ந்தமைந்த உயிர் மெய்யெழுத்து; the compound of ō and c/š.

[ச் + ஓ = சோ]

சோ[2] *šō,* இடை. (part.) வியப்புப் பொருளைத் தரும் இடைச்சொல் (இ.வ.); an expletive signifying surprise.

சோ[3] *šō,* பெ. (n.) *1.* வாணாசுரன் நகர்; the city of Bāṇāšuran. "சோவி மையழித்த மகன்" (நான்மணி. 2.). *2.* அரண் (நன். 129, உரை.); fortification, fortress. *3.* துன்பம்; distress. *4.* மடி, சோம்பல்; idleness.

சோகநீக்கி *šōganīkki,* பெ. (n.) *1.* மாதவி (சங். அக.); common delight of the woods. *2.* குறிஞ்சா; spring creeper.

சோகசாவேரி *šōga-šāvēri,* பெ. (n.) பண்வகை (பரத. ராக. 55); a specific melody-type.

சோகம்[1] *šōgam,* பெ. (n.) ஒட்டகம்; camel.

[சோ³ → சோகம்]

சோகம்[2] *šōgam,* பெ. (n.) அசோகம்; asoka tree. "சொரி யிதழ் வனசோகம்" (கம்பரா. வனம்புகு.81).

[சே (= சிவப்பு) → சோ → சோகம் = சிவந்த தளிரையுடைய அசோக மரம்]

சோகம்[3] *šōgam,* பெ. (n.) தொடை (திவா.); thigh.

சோகமாதிரம் *šōga-mātiram,* பெ. (n.) கோங்கு; false tragacanth.

சோகா-த்தல்[1] *šōgā-,* 4 செ.கு.வி. (v.i.) துன்புறுதல்; to grive, suffer. "சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" (குறள். 127).

[சோ + கா-.]

சோகாத்தல் சிறையிற் காத்திருத்தல். அது கனகவிசயர் என்னும் ஆரிய மன்னர் தமிழ் வேந்தரைப் பழித்ததனால், சேரன் செங்குட்டுவனின் சீற்றத்திற்காளாகிச் சிறைப்பட்டது போல்வது.

'அடல்வேல் மன்னரா யிரு ருள்ளும்
கடலந் தானைக் காவல னுரைக்கும்
பாலகுமரன் மக்கள் மற்றவர்
காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடுங்கூடி
அருந்தமி ழாற்றல் அறிந்தில ராங்கெனக்
கூற்றங் கொண்டிச் சேனை செல்வது'
(சிலப். 26: 156-62)

"ஆரிய வரசரை யருஞ்சிறை நீக்கி"
(சிலப். 28:165)

சோ என்பது அரிய பொறிகள் ஏற்றப்பட்ட சிறந்த அரண். அஃது இராவணனின் இலங்காபுரியிலும் வாணனின் சோணித புரத்திலும் இருந்தது.

"தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த சேவகம்" (சிலப். ஆய்ச்சியர் குரவை)

"ஆனிரை தாங்கிய குன்றெடுத்தான் சோவின்
அருமை யழித்த மகன்" (நான்மணி. 2)

சோன் என்னும் சொல்லைப் பிற்காலத்தார் பொதுவான மதிற்பெயராகவும் ஆண்டு விட்டனர்.

"சோமே விருந்தொரு கோறா வெனின்"
(சி.சி. மறைஞான தேசிகர் உரை)

காத்தல் என்பது காத்திருத்தல் அல்லது நிலையில்லாது தங்கியிருத்தல். wait என்னும் ஆங்கிலச் சொற்கு tarry, stay என்று ஆக்கசுபோர்டு ஆங்கிலச் சிற்றகர முதலி பொருள் கூறியிருத்தல் காண்க.

சோகா என்னும் சொல்லை வடசொல் தொடர்பினதாகக் காட்டல் வேண்டி, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அரகமுதலி அதற்குச் சோகம் + யா என்று மூலங் குறித்திருப்பது பொருந்தாது. யாத்தல் கட்டுதல், அரையாப்பு, கழல் யாப்பு, மார்யாப்பு (மாராப்பு), விதலை யாப்பு முதலிய கூட்டுச் சொற்கள் போல் சோக(ம்) யாப்பு என்றொரு சொல்லின்மையும், அவ்விரு பிறப்பியல் (hybrid) யாப்பு என்னும் சொல் இயற்கையாகப் பொருந்தாமையும் நோக்குக. இனி, சோ என்னும் சொல்லையும், வாணன்

தலைநகர்ப் பெயரான சோணிதபுரம் என்பதன் சிதைவாக அவ்வகரமுதலி காட்டியிருப்பதும் குறும்புத்தனமாம் வாணனுக்கு முந்தின இராவணன் காலத்திலேயே சோவரண் இருந்தமையை நோக்குக (தி.ம. 105-6).

சோகாகக்கனகம் *sōgāga-k-kaṉagam,* பெ. (n.) *பிள்ளைத் தாய்ச்சிச்செடி;* any plant in which the legumes contain large and projecting seeds. *(சா.அக.).*

சோகாப்பு *sōgāppu,* பெ. (n.) **துன்பம்** *(சங்.அக.);* sorrow, grief. "சோகாப்பர் சொல் இழுக்குப் பட்டு" *(குறள், 127).*

[சோகா → சோகாப்பு]

சோகாரம் *sōgāram,* பெ. (n.) *குங்குமச் செவ்வந்தி;* crimson coloured chamomile flower *(சா.அக.).*

[சே → சோ → சோகாரம்]

சோகாரி *sōgāri,* பெ. (n.) *கடம்பு, கடம்பமரம்* *(மலை.);* commom Indian oak.

சோகி[1]-த்தல் *sōgi-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* **துன்பப்படுதல்;** to grieve; to be depressed in mind. "முகமெலாங் கண்ணீர் வாரச் சோகித்தார்" *(கோயிற்பு. நடராச. 9).* 2. **மயங்குதல்** (வின்.); to faint, swoon.

[சோகா → சோகி-.]

சோகி[2] *sōgi,* பெ. (n.) *1.* **பலகறை** (M.M.238); cowry, small shell, white or coloured. "முத்தக்கழற் சோகியாகி" *(உபதேசகா. சிவபுண். 91).* *2.* **சோர்ந்தூர்ந்து செல்லு மொரு கடல் முத்து;** a sea pearl moving slowly.

[சோழி → சோகி.]

சோகி[3] *sōgi,* பெ. (n.) **மாயமந்திர விச்சைகளில் தேர்ச்சியுற்றுப் பாம்பைப் பிடித்தாட்டி வயிறு வளர்க்கும் தொட்டிய இனப் பிச்சைக்காரன்** (E.T. II,494) (இ.வ.); a caste of itinerant Teluge mendicants, who are dexterous jugglers and snake-charmer, and claim a profound knowledge of charms and medicine.

க. சோசி, யோகின்

சோகிக்கீரை *sōgi-k-kīrai,* பெ. (n.) பெருஞ் *சீரகம்* (M.M. 845); sweet fennel.

சோகிகா *sōgigā,* பெ. (n.) **மகிழம்பூ;** West Indian medlar *(சா.அக.).*

சோகித்தலம் *sōgi-t-talam,* பெ. (n.) *காற்சிகைப்பூடு;* an unknown plant *(சா.அக.).*

சோகிதன் *sōgidaṉ,* பெ. (n.) **துன்பமுற்றவன்** *(பாரத வெண். 28, உரை);* one who is sorrowful.

[சோகி[3] → சோகிதன்]

சோகு *sōgu,* பெ. (n.) பேய் *(பிங்.);* vampire, devil, goblin. "கானத்தி லுற்பவித்துறுஞ் சோகாயுலைவரே" *(சிவரக. நந்திகேசுரர். நமனுக்கு. 8).*

தெ. சோகு

[சோகி[1] → சோகு = துன்பந்தரும்பேய்]

சோகுவாகு *sōgu-vāgu,* பெ. (n.) **வாலுளுவை யரிசி;** seeds of spindle tree.

சோகை *sōgai,* பெ. (n.) *1.* **அரத்தக் குறைவால் முகம் வெளுத்து ஊதுமாறு செய்யும் நோய் வகை** (M.L.); anaemia, a disease characteised by pale and bloated face. *2.* **அறிவுக் குறைந்தவன்** *(அப்பிராணி)* *(சங்.அக.);* feeble or impotent person.

[சோ → சோகை]

சோ என்றால் மடி அல்லது சோம்பல் என்ற பொருளாகும். இந்நோய் பீடிக்கப் பட்டவனும் விறுவிறுப்பின்றி சோம்பிக் கிடப்பதால் இந்நோய்க்கு சோகை என்ற பெயர் வந்தது.

சோகைப்பாண்டு *sōgai-p-pāṇḍu,* பெ. (n.) **அரத்தமின்மையால் ஏற்படும் பாண்டு நோய்;** dropsy due to anemic condition of the body, anemic dropsy *(சா.அக.).*

[சோகை + பாண்டு]

சோகைப்பாண்டுநாசினி *sōgai-p-pāṇḍu-nāśiṉi,* பெ. (n.) **நறுந்தாளிப் பூண்டு;** binweed - convolvulus genus. it is so called from its virtue of curing anemic dropsy *(சா.அக.).*

[சோகைப்பாண்டு + நாசினி]

சோகைமுஞ்சி *šōgai-mūñji*, பெ. (n.) 1. ஊதின முகம்; swollen face. 2. நீர்க்கோர்வையினால் வீங்கிக்காணும் முகம்; face grown turgid or swollen up as with water-bloated face (சா.அக.).

[சோகை + முஞ்சி]

சோகையன் *šōgaiyaṉ*, பெ. (n.) சோகை நோயால் வருந்துபவன் (யாழ்.அக.); person affected with anaemia.

[சோகை → சோகையன்]

சோகைவீக்கம் *šōgai-vīkkam*, பெ. (n.) நச்சூதை நோய் (விஷப்பாண்டு ரோகம்) (M.L.); dropsy.

[சோகை + வீக்கம்]

சோங்கண் *šōṅgaṇ*, பெ. (n.) மாறுகண் (நாஞ்.); squint eye.

மறுவ. சாய்ந்த கண்

[சோங்கு + கண் → சோங்கண்]

சோங்கம்[1] *šōṅgam*, பெ. (n.) அகில் (மலை.); blinding - tree.

சோங்கம்[2] *šōṅgam*, பெ. (n.) கிச்சிலிக் கிழங்கு (சங். அக.); camphor zedoary.

சோங்கல் *šōṅgal*, பெ. (n.) 1. மறந்துவிடல்; forgetfullness. 2. மறதி; non-rememberance (சா.அக.).

[சோங்கு → சோங்கல்]

சோங்கு[1] *šōṅgu*, பெ. (n.) கோங்கிலவு (வின்.); false tragacanth.

சோங்கு[2] *šōṅgu*, பெ. (n.) மறதி (சங்.அக.); forgetfulness, oblivion.

[சோ → சோங்கு]

சோ என்ற சொல் சோம்பல், சொக்குதல் (தூக்கக் கலக்கம்) போன்ற சொற்களை உருவாக்கும். சோம்பலால் மறதி ஏற்படுவது இயல்பு.

சோங்கு[3] *šōṅgu*, பெ. (n.) கானாறு சூழ்ந்து விளங்கும் மலைச் சோலை (வின்.); hilly tract thickly clustered with trees and watered by streams or cataracts.

சோங்கு[4] *šōṅgu*, பெ. (n.) உயரம்; height. பாரி சோங்கான ஆள். இந்த மரம் சோங்காக உள்ளது (வழ. சொ. அ.).

சோங்கு[5] *šōṅgu*, பெ. (n.) நாரை (அக. நி.); heron.

தெ. கொங்க

சோங்கு[6] *šōṅgu*, பெ. (n.) 1. மரக்கலம்; boat, vessel, junk. "சோங்கினை மேலிடுசரக்கொடுங் கவிழமுட்டும்" (திருவிளை. வலைவீ. 34). 2. துமுக்கிக் கட்டை (யாழ்ப்.); gunstock.

க. சோக; தெ. சோகு

சோங்கு[7]**-தல்** *šōṅgu-*, 5 செ.கு.வி. (v.i) சரிவாதல் (நாஞ்.); to incline; to be oblique.

சோங்குவெட்டு *šōṅgu-veṭṭu*, பெ. (n.) சரிவான வெட்டு (வின்.); rough dressing of timber; slanting cut, as of rafters.

[சோங்கு + வெட்டு - சோங்குவெட்டு]

சோச்சி *šōcci*, பெ. (n.) சோறு (நாஞ்.); boiled rice.

[சோறு → சோச்சி]

சோச்சிபாச்சி *šōcci-pācci*, பெ. (n.) அன்னமும் பாலும்; boiled rice and milk.

[சோறு → சோச்சி + பாச்சி]

சோச்சியகன் *šōcciyagaṉ*, பெ. (n.) கீழ்மகன் (யாழ். அக.); low-caste person.

சோசக்காய் *šōšakkāi*, பெ. (n.) தேங்காய்; coconut (சா.அக.).

சோசகம் *šōcagam*, பெ. (n.) மரப்பட்டை (யாழ்.அக.); bark of trees.

சோசம் *šōšam*, பெ. (n.) தென்னை; coconut-palm; "பத்துப்பத் தடுக்கிய சோசக்காய் நீரை" (தைலவ. தைல. 134).

சோசனம் *šōšaṉam*, பெ. (n.) வெள்ளை வெங்காயம் (மலை.); white onion.

சோசாங்கினி *šōšāṅgiṉi*, பெ. (n.) துளசி; sacred basil.

சோசி[1]**-த்தல்** *šōši-*, 4 செ.கு.வி. (v.i.) வற்றுதல் (வின்.); to dry up, go dry.

[சோ[3] → சோசி]

சோசி[2]**-த்தல்** *šōši-*, 4 செ.கு.வி. (v.i.) 1. துன்பப்படுதல் (வின்.); to grieve, sorrow. 2. சோர்வடைதல்; to languish, faint.

[சோ[3] → சோசி]

சோசியார்திருவடி *sōšiyār-diruvaḍi,* பெ. (n.) அரசுப்பணியாளருள் ஒரு பிரிவினர் (S.I.I.V. 339); an officer of the government.

[சோசியார் + திருவடி.]

சோட்டா *sōṭṭā,* பெ. (n.) சோட்டாத்தடி (சங். அக.) பார்க்க; see *sōṭṭā-t-taḍi.*

சோட்டாத்தடி *sōṭṭā-t-taḍi,* பெ. (n.) 1. திரண்ட தடி; club, rod. 2. சிறுகழி (வின்.); small stick, baton with a curved end, walking stick.

H.,U. chōṭṭa

[சுள் → (சொள்) → சோடு → சோட்டா + தடி.]

சோட்டுப்பப்பளி *sōṭṭu-p-pappaḷi,* பெ. (n.) சேலைவகை (உ.வ.); a kind of saree.

சோட்டை *sōṭṭai,* பெ. (n.) 1. பேராவல்; eagerness desire, longing, yearning. 2. அன்பு; fondness, devation.

[ஏட்டை → சோட்டை]

சோட்டைப்பண்டம் *sōṭṭai-p-paṇḍam,* பெ. (n.) ஆசையுணவு (யாழ்ப்.); favourite food.

[சோட்டை + பண்டம்]

சோட்டையன் *sōṭṭaiyaṉ,* பெ. (n.) பயனற்ற ஆள் (நெல்லை); useless fellow.

[சொட்டை → சோட்டை → சோட்டையன்]

சோடசம் *sōḍašam,* பெ. (n.) 1. மரப்பட்டை; bark of a tree. 2. நார்; fibre (சா.அக.).

[சோசகம் → சோடகம்]

சோடசவாண்டுமூலி *sōḍašavāṇdu-mūli,* பெ. (n.) பசியெடுக்காதிருக்கச் சித்தர்கள் உண்ணும் மூலிகை; a rare drug used by Šiddhars to keep them off from hunger and thirst (சா.அக.).

சோடம்[1] *sōḍam,* பெ. (n.) முலைக்கச்சு வகை (புதுவை.); a kind of corset.

சோடம்[2] *sōḍam,* பெ. (n.) பொறுமை (யாழ்.அக.); patience, endurance.

சோடல் *sōḍal,* பெ. (n.) புடைவை (அக.நி); saree.

மறுவ. சீலை, சீரை, சேலை

சோடன் *sōḍaṉ,* பெ. (n.) 1. கீழ்மகன் (சங்.அக.); low-bred man. 2. சோம்பன்; idle fellow. 3. மூடன்; fool, idiot.

[சோடை → சோடன் = சோம்பேறி]

சோடாப்புல் *sōḍā-p-pul,* பெ. (n.) ஒருவகை நீர்ப் புல்; a grass growing in water.

சோடி[1]**-த்தல்** *sōḍi-,* 4 செ.கு.வி. (v.i.) வற்றுதல் (சங்.அக.); to dry up.

[சுடு → சூடு → சோடு → சோடி → சோடி-த்தல் = காய்தல், வற்றுதல்]

சோடி[2]**-த்தல்** *sōḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. அணியழகு செய்தல் (யாழ்.அக.); to adorn, beautify, decorate, as a town, a street, a dwelling, a person. 2. கற்பித்தல் (உ.வ.); to prepare carefully, concoct, arrange. அவன் பேரில் வழக்குச் சோடித்தார்கள். 3. புனைந்து பேசுதல் (வின்.); to exaggerate, elaborate, as speech.

க., பட. சோடிசு

[சுவடி → சோடி. சுவடித்தல் = அழகு செய்தல், ஒப்பனை செய்தல்]

சோடி[3] *sōḍi,* பெ. (n.) 1. இணை, இரட்டை (இ.வ.); couple, pair. 2. ஒப்பு; similarity, match.

ம., க., பட. சோடி; H. jōḍī

[சுவள் → சுவடி → சோடி.]

சோடி[4] *sōḍi,* பெ. (n.) உசிலம்பொடி (சங்.அக.); powder of the dried leaves of black sirissa.

சோடிகாமுத்திரை *sōḍigā-muttirai,* பெ. (n.) அன்றாட இறைவழிபாட்டின் போது கட்டை விரலால் பெருவிரலைத் தெறிக்கும் முத்திரை (செந். x. 424); a finger-pose during prayer, which consists in joining the tip of the thumb with the middle finger and snapping.

சோடிசேர்[1]**-த்தல்** *sōḍi-šēr-,* 4 செ.குன்றாவி. (v.t.) பொலிகாளையோடு பெற்றத்தைப் புணர விடுதல்; to let a cow and a bull cover.

[சோடி + சேர்-.]

சோடிசேர்[2]**-த்தல்** *sōḍi-šēr-,* 4 செ.கு.வி. (v.i.) ஒரு மாட்டிற்கு இணை சேர்த்தல்; to select a bull as match for another.

[சோடி + சேர்-.]

சோடிபார்-த்தல் *śōḍi-pār-, 4* செ.குன்றாவி. (v.i.) சோடிசேர்-த்தல் பார்க்க; see *śōḍi-śēr-.*

[சோடி³ + பார்-.]

சோடினை *śōḍiṉai,* பெ. (n.) *1.* அழகு படுத்துகை (வின்.); adorning decoration; attire for a play. *2.* ஒப்பனையால் தோன்றும் அழகு; beauty due to decoration. 'உடைமை சோடினையாப் பூட்டி' (விறலிவிடு. 375). *3.* ஏறிட்டுக் கற்பிக்கை (இ.வ.); concoction, as of a false case.

[சுவடி → சோடி → சோடினை. சுவடி = ஒப்பனை செய்கை]

சோடினைக்காரன் *śōḍiṉai-k-kāraṉ,* பெ. (n.) *1.* நாடகம் நடிப்போர்க்கான உடைகளை ஆயத்தம் செய்பவன் (வின்.); maker of costumes for actors in a play; one who dresses actors for the stage. *2.* கற்பனை செய்பவன் (இவ.); one who concocts or fabricates.

[சோடினை + காரன்]

சோடினைகட்டு-தல் *śōḍiṉai-kaṭṭu-, 5* செ.குவி. (v.i.) நாடகம் நடித்தற்கு வேண்டிய உடையுடுத்தல் (யாழ்ப்.); to attire oneself for a play.

[சோடினை + கட்டு-.]

சோடு¹ *śōḍu,* பெ. (n.) *1.* காற்கவசம்; a kind of legging for warriors. "காலார் சோடற்ற கழற்கால்" (களவழி, 9). *2.* கவசம்; coat of mail. "தலைச் சோடு வஜ்ரச் சோடிட்டு" (கூளப்ப. 43). *3.* நாலுபட்டணம்படி கொண்ட அளவு (இ.வ.); a measure of capacity equal to four Madras measures. *4.* 360 நெற்கனமுள்ள ஓர் எடை; weight equal to 360 grains of paddy. *5.* திரட்சி; rotundity. இந்தச்சோடு (உ.வ.).

[சுள் → (சொள்) → சுவடு → சோடு.]

சோடு² *śōḍu,* பெ. (n.) *1.* இணை, இரட்டை; pair, cuple, brace, set. "சோடுற்றத் தாமரை மாமுகை போல" (திருப்பு. 806). *2.* பறவை முதலியவற்றின் ஆண் பெண்ணிரட்டைகளுள் ஒன்று; mate, partner. "சோடுகாணாத பேடு" (குமரேசசத. 29). *3.* சுவடு (உ.வ.); trace, mark, foot-print. *4.* மிதியடி வகை; pair of shoes, slippers. *5.* ஒப்பு; equal. "அவளுக்கவள் சோடு" (இராமநா. ஆரணி. 15). *6.* ஓரிணை வரிசை (வின்.); gradual increase or decrease of things in a scries.

ம., க., பட. சோடு; H. jōḍ

[சுவள் → சுவடு → சோடு. சுவடு = காலடித் தடமாகும் இதுவே காலணிக்கும் பெயர் ஆயிற்று.]

சோடுகட்டு-தல் *śōḍu-kaṭṭu-, 5* செ.குவி. (v.i.) *1.* இணை சேர்த்தல் (வின்.); to join or unite two similar things. *2.* இரட்டையாக்குதல்; to make or form a set, pair or couple.

[சோடு² + கட்டு-.]

சோடுபறிபூண்டு *śōḍu-paṟi-pūṇḍu,* பெ. (n.) பேய்ப்புடலை; devil's gourd (சா.அக.).

[சோடுபறி + பூண்டு]

சோடுபார்-த்தல் *śōḍu-pār-, 4* செ.குவி. (v.i.) இருவர் அல்லது இரண்டு பொருள்கள் தம்முள் நிகரொத்துள்ளமையைக் கவனித்தல்; to see whether two persons or things are well matched. சேர்க்கும்போது சோடுபார்த்துச் சேர்க்க வேண்டும் (இ.வ.).

[சோடு² + பார்-.]

சோடுபிரிவு *śōḍu-pirivu,* பெ. (n.) *1.* ஆணும் பெண்ணும் பிரிதல்; separation of the couple as that of bird. *2.* கணவனும் மனைவியும் சேர்ந்து வாழாமல் செய்யும் மந்திரம்; a magic for separation of wife and husband (சா.அக.).

[சோடு² + பிரிவு]

சோடுபெயர்ந்தகாய் *śōḍu-peyarnda-kāy,* பெ. (n.) முதலில் இணையாக வைக்கப்பட்டும் பின்னர்த் தாயம் வேண்டியவாறு விழாமையால் தனியாகப் பிரிக்கப்பட்டதுமான காய் (உ.வ.); piece in a game of draughts moving in pair but separated owing to the unlucky fall of the dice.

[சோடு + பெயர்ந்தகாய்]

சோடை¹ *śōḍai,* பெ. (n.) *1.* வறட்சி (சங்.அக.); drought, heat, dryness. *2.* காய்த்து ஓய்ந்த மரம் (யாழ்ப்.); tree which has ceased to yield, withered tree. *3.* சோர்வு (உ.வ.); faintness, languor. *4.* அறிவிலி; person of imperfect or weak understanding, booby. "சோடைகள்

நன்னெறி சொல்லார்" (தேவா. 220, 10). 5. செயற்கேடு (வின்.); failure, as in the accomplishment of an object. 6. ஒருவகை நோய்; a kind of disease. "ஓதிய சோடையுடனஞ்சுமாம்" (சினேந். 229). 7. வாழை நோய் வகை (இ.வ.); a blight affecting the plantain.

Skt. šōṣa

[சுடு → சூடு → சோடு → சோடை = வறட்சி, சோர்வு வடவர் சுஷ் என்பதை மூலமாகக் காட்டுவர். அது சுள் என்பதன் திரிபு.]

சோடை[2] *šōḍai*, பெ. (n.) 1. கோடைக் காலத்தில் வயல் வழியே செல்லும் வண்டிப்பாதை; cart-track lying through a field in summer. வயல் வழியாகச் சோடை போகிறதா? (இ.வ.). 2. பாதையில் வண்டி சென்ற தடம் (இ.வ.); rut in a road. 3. சுவடு (இ.வ.); trace.

[சோடு[2] → சோடை.]

சோடை[3] *šōḍai*, பெ. (n.) 1. விருப்பம்; eager desire. "சமர்புரி சோடை கொண்டனன்" (விநாயகபு. 74:64). 2. மகிழ்ச்சி; delight, ecstasy. "மன்றலின் சோடையிற் பயின்ற நான்" (விநாயகபு. 80:119). 3. தொழில்; duty. "உறமுறை செலுத்துஞ் சோடை யினீங்கி" (விநாயகபு. 47:2).

[சோட்டை → சோடை.]

சோடை[4] *šōḍai*, பெ. (n.) 1. சொத்தை; that which is withered, blighted or decayed. 2. பயனற்றவ-ன்-ள்; useless, good-for-nothing person. 3. உடல் வலியற்றவை-ன்-ள்; weak. emaciated person. 4. உள்ளீடு இல்லாமை; hollow. அவன் ஒன்றும் சோடையில்லை (உ.வ.).

[சொள்ளை → சொட்டை → சோடை]

நிலக்கடலையுள் பருப்பு இல்லாமல் வெற்றுக் கூடாக இருப்பது சோடை எனப்படும். அறிவாற்றல் தேர்ச்சி இன்மையும் சோடை யாகும் (வழ. சொ. அக.)

சோடைபற்று-தல் *šōḍai-paṟṟu-*, 5 செ.குவி. (v.i.) நறுங்கிப் பலனற்றுப் போதல் (யாழ்ப்.); to become stunned, unfruitful.

[சோடை[4] + பற்று-.]

சோடையன் *šōḍaiyaṉ*, பெ. (n.) பலவீனன் (வின்.); weak, sickly person.

[சோடை → சோடையன்.]

சோணகத்திருக்கை *šōṇaga-t-tirukkai*, பெ. (n.) முதுகில் முள் வாய்ந்த ஒரு வகைக் கடல் திருக்கை மீன்; a species of thorn back sea fish.

சோணகத்திருக்கை



சோணகவாளை *šōṇagavāḷai*, பெ. (n.) வாளை மீன் வகை (M.M.); a kind of vāḷai fish.

சோணகாரி *šōṇagāri*, பெ. (n.) பட்ட இடத்தை சிவப்பாக்கி எரிச்சலை உண்டாக்கும் மருந்து; rubefacient.

[சோணம் = சிவப்பு) + காரி]

சோணகிரி *šōṇagiri*, பெ. (n.) திருவண்ணாமலை; Tiruvaṇṇāmalai hill in South Arcot District, sacred to Šivaṉ. "சோணகிரி வித்தகா" (பட்டினத். தாயார்தகன. 9).

[சோணம் + கிரி]

சோணம் = தீ; சிவப்பு. இதனால் தான் திருவண்ணாமலையில் சிறப்பு நாளில் தீ வழிபாடு, தீப வழிபாடு நடைபெறுகிறது.

Skt. giri → த. கிரி

சோணங்கி *šōṇaṅgi*, பெ. (n.) 1. மெலிந்த-வன்-வள்-து (இ.வ.); lean person or animal. 2. சோர்வற்றவன்; one who get tired. 3. சோணங்கிநாய் (வின்.) பார்க்க; see *šōṇaṅgi-nāy*.

[சுணங்கு → சுணங்கி → சோணங்கி. சுணங்கு = மெலிவு]

[சுள் → சொள் → (சோள்) → சோணங்கி.]

சோணங்கிநாய் *šōṇaṅgi-nāy*, பெ. (n.) நாய் வகை (வின்.); a breed of dog.

[சோணங்கி + நாய்]

சோணசைலம் *šōṇa-šailam*, பெ. (n.) சோணகிரி பார்க்க; see *šōṇa-giri*. சோண சைல மாலை.

மறுவ. திருவண்ணாமலை

[சோணம் + அசைலம்]

Skt. šaila → த. சைலம்

சோணப்பூ *šōṇa-p-pū*, பெ. (n.) செம்பருத்திப்பூ; red cotton. "வாசப்பளிதமுஞ் சோணப்பூவும்" (பெருங். மகத. 17:133).

[சோணம் (செந்நிறம்) + பூ]

சோணம் = சிவப்பு. செம்பருத்திப்பூ செந்நிறமாய் இருப்பதால் சோணப்பூ எனப்பட்டது.

சோணம்[1] *šōṇam*, பெ. (n.) சிவப்பு (பிங்.); red colour, crimson.

[சல் (சிவத்தல்) → சள் → (சொள்) → சோண் → சோணம்.]

சோணம்[2] *šōṇam*, பெ. (n.) சோணை[2] பார்க்க; see *šōṇai*[2]. "சிலம்பு சூழுங்காற் சோணமாந் தெரிவையை" (கம்பரா. அகலிகை. 1).

[சோணம்[1] → சோணம்[2].]

சோணம்[3] *šōṇam*, பெ. (n.) பொன்; gold. "சோணந்தரு கும்பங்கிளர் துணைமாளிகை" (திருவாத. பு. திருவம்பல. 51).

Skt. svarṇa; H.,U. sōnā

[சோணம்[1] → சோணம்[3].]

சோணமலை *šōṇa-malai*, பெ. (n.) அருணமலை; Aruṇamalai.

[சோணம்+ மலை = திருவண்ணாமலை]

சோணாகம் *šōṇāgam*, பெ. (n.) பெருவாகை (மலை.); siris.

சோணாசலங்கம்பு *šōṇāšalaṅ-gambu*, பெ. (n.) கம்புப் பயிர் வகை (G.sm. D.I.i, 219); a variety of kambu.

சோணாட்டுப்பூஞ்சாற்றூர்ப்பார்ப்பான் கௌணியன்விண்ணந்தாயன் *šōṇāṭṭu-p-pūñjāṟṟūr-p-pārppāṉ-kauṇiyaṉ-viṇṇandāyaṉ*, பெ. (n.) ஆவூர் மூலங்கிழாரால் பாடப்பட்ட ஒரு வள்ளல்; a donor sung by Āvūr-Mūlangiḻār.

[சோணாட்டு + பூஞ்சாற்றூர் + பார்ப்பான் + கௌணியன் விண்ணந்தாயன்]

சோணாடு *šōṇāḍu*, பெ. (n.) சோழ நாடு; the Chola country. "குறும்பல்லூர் நெடுஞ் சோணாட்டு" (பட்டினப். 28).

[சோழன் + நாடு]

சோணாலு *šōṇālu*, பெ. (n.) தாயம் முதலிய விளையாட்டில் விழும் ஒரு நற்குறி (விருத்தம்) (உ.வ.); a lucky fall of dice or cowries, as in the game of tāyam, dist. fr. pāṇālu.

சோணி *šōṇi*, பெ. (n.) பலகறை (இ.வ.); cowrie.

[சோழி → சோணி]

சோணேசன் *šōṇēšaṉ*, பெ. (n.) திருவண்ணாமலையிற் கோயில் கொண்ட சிவன்; Šivaṉ, as the Lord of Šōṇācalam or Tiruvaṇṇāmalai. "காட்டுமோ சோணேசன் கஞ்சமலர்த் தாளிணையை" (அருணகிரியந். 25).

[சோணம் → சோணேசன்]

சோணை[1] *šōṇai*, பெ. (n.) 1. காதினடித்தண்டு (யாழ்ப்.); lobe of the ear, thick ear-lobes. "சோணையழகியார்" (திவ். பெரியதி. 10.8:1,வியா). 2. மண் வெட்டியிற் காம்பு சொருகுமடிப் பகுதி (வின்.); extremities of the sides of a hoe near the haft. 3. புகையிலை முதலியவற்றின் காம்பினடி (யாழ்.அக.); base of a leaf or leaf-stalk which grows from the branch without a stem, as of tobacco.

[சுணை → சோணை.]

சோணை[2] *šōṇai*, பெ. (n.) பாடலிபுத்திரத்துக் கருகில் கங்கையொடு கலக்கும் ஒரு ஆறு (பிங்.); the river Sōṇai which mingle with the Ganges near Pādaliputra.

[சோணம்[2] → சோணை]

சோணை[3] *šōṇai*, பெ. (n.) 1. சிவப்பு; red. 2. சோணகிரி (யாழ்.அக.) பார்க்க; see *šōṇagiri*.

சோணை[4] *šōṇai*, பெ. (n.) முக்கோல் எனப்படும் இருபத்திரண்டாவது நாண்மீன் (திருவோணம்) (சூடா.); the 22nd nakṣatra.

சோணை[5] *šōṇai*, பெ. (n.) சோணாலு (இ.வ.) பார்க்க; see *šōṇālu*.

சோணை[6] *šōṇai*, பெ. (n.) சோனை[3] பார்க்க; see *šōṉai*.

[சோனை → சோணை]

சோணை[7] *šōṇai,* பெ. (n.) அணிகலன் அணிவதற்காகக் காது மற்றும் மூக்கில் இட்ட துளை தூர்ந்து போகாமலிருக்க இடப்படும் சிறு குச்சி; small stick which prevents the hole provided in the ear or nose from closing.

[சுணை → சோணை. சுணை = முள், குச்சி]

சோணைக்காது *šōṇai-k-kādu,* பெ. (n.) அடிபெருத்த காது (யாழ்ப்.); large-lobed ear.

[சோணை + காது]

சோத்தாள் *šōttāḷ,* பெ. (n.) வேலை செய்யாத சோம்பேறி (உ.வ.); lazy, indolent person, fit for eating only.

[சோறு + ஆள்]

சோத்துப்பக்காளி *šōttu-p-pakkāḷi,* பெ. (n.) சோற்றுப்பக்காளி பார்க்க; see *šōṟṟu-p-pakkāḷi.*

சோத்துப்புட்டி *šōttu-p-puṭṭi,* பெ. (n.) மீனவர் கட்டுச்சோறு எடுத்துச் செல்லப் பயன்படுத்தும் கோரையினால் ஆன பெட்டி; small box made of sedge to convey packed meals.

[சோறு → சோத்து + புட்டி. பெட்டி → புட்டி]

சோத்துவெள்ளி *šōttu-veḷḷi,* பெ. (n.) மீனவர் இரவில் உணவு உண்ணுவதற்கான நேரம் கணிக்கப் பயன்படும் வெள்ளி விண்மீன்; the silverstar, which is seen to determine the time for night meals by fishermen in sea.

[சோறு → சோற்று → சோத்து + வெள்ளி]

சோதிகம் *šōdigam,* பெ. (n.) வாலுளுவை; spindle tree.

சோந்தை[1] *šōndai,* பெ. (n.) 1. பற்று; interest, concern, connection. எனக்கு அதிலே சோந்தையில்லை (வின்.). 2. குடியானவனுக்குத் தன்மீது பற்று அதிகப்படுமாறு நிலவுடைமை யாளர் முன்னதாகக் கொடுத்து உதவும் நெல் முதலியன (இ.வ.); advance in cash or kind given by a land-owner to his cultivating tenant in order that the latter may remain continually attached to him.

[சொந்தம் → சோந்தை.]

சோந்தை[2] *šōndai,* பெ. (n.) இடையூறு; impediment, difficulty. அவன் சோந்தை பண்ணுகிறான் (வின்.).

சோந்தைக்காரன் *šōndai-k-kāraṉ,* பெ. (n.) பற்றுள்ளவன் (யாழ்ப்.); interested person.

[சோந்தை + காரன்.]

சோநிசி *šōnisi,* பெ. (n.) குகை (சங். அக.); cave, cavern.

சோப்பளாங்கி *šōppaḷāṅgi,* பெ. (n.) 1. பயனற்றவன்; lazy, worthless fellow. 2. வலுவற்றவன் (இ.வ.); weak person.

க. சோப.

[சோம்பு → சோப்பு → சோப்பளாங்கி]

சோப்பறுதி *šōppaṟudi,* பெ. (n.) சோர்வு (வின்.); languor, lassitude, fatigue, prostration.

[சோம்பு → சோப்பு + அறுதி]

சோப்பி *šōppi,* பெ. (n.) ஈயோட்டி (யாழ்ப்.); flapper.

[சோப்பு[1] → சோப்பி]

சோப்பு[1]**-தல்** *šōppu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சோர்வுறச் செய்தல் (யாழ்ப்.); to cause to droop or languish.

க. சோப்பிசு; தெ. சோபு

[சோம்பு → சோப்பு-.]

சோப்பு[2]**-தல்** *šōppu-,* 5 செ.குன்றாவி. (v.t.) அடித்தல் (வின்.); to beat, flog, give a drubbing.

சோப்பு[3] *šōppu,* பெ. (n.) அடி; blow. "நந்தன் மனைவி கடைதாம்பாற் சோப்புண்டு" (திவ். பெரியாழ். 2. 1:5).

[சோப்பு[2] → சோப்பு[3]]

சோபக்கினி *šōba-k-kiṉi,* பெ. (n.) நிலவேம்பு; ground neem.

சோபநாசனி *šōbanāšaṉi,* பெ. (n.) கழற்கொடி; bonduc creeper.

சோபம்[1] *šōbam,* பெ. (n.) பத்துக்கோடி கோடாகோடி (வின்.); a large number ten thousand trillions.

சோபம்[2] *sōbam,* பெ. (n.) 1. கள்; toddy. 2. மயக்கம்; fainting. 3. களைப்பு; fatigue. 4. சோம்பல்; drowsiness. 5. ஒளி; lustre. 6. தளர்ச்சி; languor. 7. அரத்தத்தைக் குறைக்கும் நோய்வகை; disease causing bloodlessness-anaemia (சா.அக.).

[சோபலம் → சோபம்]

சோபலம்[1] *sōbalam,* பெ. (n.) சோம்பல் (சங்.அக.); laziness, sluggishness.

[சோம்பல் → சோம்பலம் → சோபலம்]

சோபலம்[2] *sōbalam,* பெ. (n.) சோம்பு[3] (சங்.அக.) பார்க்க; see *sōmbu*[3].

சோபலாங்கி *sōbalangi,* பெ. (n.) சோப்பளாங்கி (வின்.) பார்க்க; see *sōppaḷāngi.*

[சோப்பளாங்கி → சோபலாங்கி]

சோபாஞ்சனம் *sōbañjanam,* பெ. (n.) முருங்கை; drumstick tree.

சோபாலிகை *sōbāligai,* பெ. (n.) 1. குடை மேற்குடைச் செடி; an unknown plant. 2. அடம்பு; hare-leaf plant. "சுனைநீலஞ் சோபாலிகை" (திணைமாலை. 2). 3. சுவாலை; fire flame.

சோம்பரக்கு *sōmbarakku,* பெ. (n.) சோம்புத்திநீர் பார்க்க; see *sōmbuttinīr.*

சோம்பரை *sōmbarai,* பெ. (n.) சோம்பல்; laziness, drowsiness.

[சோம்பல் → சோம்பர் → சோம்பரை]

சோம்பல் *sōmbal,* பெ. (n.) 1. சோம்பு[2] பார்க்க; see *sōmbu*[2]. காணிக்குச் சோம்பல் கோடிக்குக் கேடு (உ.வ.). 2. மயக்கம் (வின்.); drowsiness, stupor. 3. சின்னம்மைநோய் (வைசூரி) (யாழ்ப்.); small-pox, as causing stupor.

சோம்பல் = மந்தத்தன்மை, மடிமைத்தன்மை

[சூம்பு → சோம்பு → சோம்பல்]

சோம்பல்முறி-த்தல் *sōmbal-muṟi-,* 4 செ.குவி. (v.i.) சோம்பற்குறியாக உடம்பை முடக்கு வாங்குதல் (உ. வ.); to stretch or twist oneself due to excessive idleness.

[சோம்பல் + முறி-]

சோம்பலம் *sōmbalam,* பெ. (n.) சேங்கொட்டை (மலை.); marking-nut tree.

[சே → சோ → சோம்பலம்]

சோம்பலம்பலம் *sōmbalampalam,* பெ. (n.) சோம்பற்சாவடி,2 பார்க்க; see *sōmbaṟsāvaḍi,2.*

[சோம்பல் + அம்பலம்]

சோம்பலாளி *sōmbal-āḷi,* பெ. (n.) சோம்பேறி[1] (வின்.) பார்க்க; see *sōmbēṟi,1.*

மறுவ. சோம்பற்காரன்

[சோம்பல் + ஆளி]

சோம்பற்காரன் *sōmbaṟkāraṉ,* பெ. (n.) 1. சோம்பேறி[1] (வின்.) பார்க்க; see *sōmbēṟi*[1]. 2. சின்னம்மை நோயால் வருந்துவோன் (யாழ்ப்.); person suffering from small pox.

[சோம்பல் + காரன்]

சோம்பற்சாவடி *sōmbaṟ-cāvaḍi,* பெ. (n.) 1. சோம்பேறி[1] பார்க்க; see *sōmbēṟi*[1]. 2. சோம்பேறிகள் கூடுமிடம்; place where idlers meet.

[சோம்பல் + சாவடி]

சோம்பற்றழும்பு *sōmbaṟ-ṟaḻumbu,* பெ. (n.) அம்மைத் தழும்பு; scar or pitted marks of small pox.

[சோம்பல் + தழும்பு]

சோம்பறை *sōmbaṟai,* பெ. (n.) 1. சோம்பல்,1 பார்க்க; see *sōmbal,1.* 2. முரி நிமிர்கை; stretching oneself in idleness. 3. சோம்பேறி[1] பார்க்க; see *sōmbēṟi.*

[சோம்பல் → சோம்பறை]

சோம்பன் *sōmbaṉ,* பெ. (n.) சோம்பேறி[1] (சங். அக.) பார்க்க; see *sōmbēṟi*[1].

[சோம்பு → சோம்பன்]

சோம்பாகம் *sōmbāgam,* பெ. (n.) பிள்ளை மருது; flowering murdah.

சோம்பி *sōmbi,* பெ. (n.) சோம்பேறி[1] (உ.வ.) பார்க்க; see *sōmbēṟi*[1].

[சோம்பு → சோம்பி]

சோம்பிரு-த்தல் *sōmbiru-*, 3 செ.கு.வி. (v.i.) வேலைக்கு வாராது நின்றுவிடுதல் (தஞ்சை.); to stay away from work.

[சோம்பு + இரு-.]

சோம்புத்தனம் *sōmbu-t-taṉam*, பெ. (n.) சோம்பல்,1 (வின்.) பார்க்க; see *sōmbal,l.*

[சோம்பு + (தன்மை→) தனம்]

சோம்பு[1]-தல் *sōmbu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. வினைமடிந்திருத்தல்; to be idle, indolent, slotthful. "சோம்பியிருந்ததக் குரங்கு மென்றார்" (கம்பரா. சுந்தரபஞ்சசே. 67). 2. அறிவு மந்தமாதல் (வின்.); to be lethargic, apathetic, dull. 3. மனவுறுதி குறைதல்; to be cast down, dejected, dispirited. "சூல மன்னதோர் வாளியாற் சோம்பினன் சாம்பன்" (கம்பரா. யுத்த முதற்போர். 199). 4. வாடுதல் (வின்.); to droop, fade, as persons, plants. 5. கெடுதல்; to be spoiled, marred. "அரிவையர் கற்புச் சோம்பி" (கலிங். 247). 6. பின்வாங்குதல்; to stint. ஒரு காசுக்குச் சோம்புகிறான்.

வ. ஸ்வப் = தூங்கு, கனவு காண்

சோம்புதல் = வினை செய்யாதிருத்தல், சுறுசுறுப்பின்மை, கால நீட்டித்தல், தூங்க விரும்புதல். ஒ.நோ. தூங்குதல் = உறங்குதல், காலந்தாழ்த்து வினை செய்தல், மந்த மாதல்.

L. somnus; Slav. supati; Lith. sapnus; AS. swef; GK. hupnos (sleep)

[சூம்பு → சோம்பு → சோம்பு-.]

வெப்பத்தினால் மந்தமும் மடிமையும் உண்டாகுமாதலால், வெப்பக் கருத்தில் சோம்பற் கருத்துத் தோன்றிற்று. வெப்பக் காலத்திலும் வெப்ப நாட்டிலும் வினை முயற்சி குன்றுவதையும், குளிர் காலத்திலும் குளிர் நாட்டிலும் அது மிகுவதையும், உலகியலை நோக்கிக் காணலாம்.

சோம்பு[2] *sōmbu*, பெ. (n.) 1. மடிமை (தொல். பொருள். 260, உரை.); sloth, idleness, inactivity. 2. மந்தம்; lethargy, dullness, sluggishness of the system. "சோம்பு தவிர்ப்பிக்கும்" (திருமந். 566). 3. தூக்க மயக்கம்; sleeping-giddiness. 4. மயக்கம்; giddiness.

Gk. somnus (sleep)

[சூம்பு → சோம்பு]

சோம்பு[3] *sōmbu*, பெ. (n.) பெருஞ்சீரகம்; common anise.

தெ. சோபு

சோம்புத்தீநீர் *sōmbu-t-tīnīr*, பெ. (n.) பெருஞ்சீரகத்தால் ஆகிய மருந்து நீர் (பைஷஜ); medicinal extract of aniseed.

[சோம்பு[3] + தீநீர்]

சோம்பூசிகம் *sōmbusigam*, பெ. (n.) கருப்பு மந்தாரை; black mountain ebony.

சோம்பேறி[1] *sōmbēṟi*, பெ. (n.) சோம்பலுள்ளவன்; sluggard, idler.

க. சோமாரி

[சோம்பு → சோம்பேறி = சோம்பு எறியவன்]

சோம்பேறி[2] *sōmbēṟi*, பெ. (n.) பொன்னைக் கரைக்கும் அமிலம் (வின்.); aqua regia.

சோமகுண்டம் *sōma-guṇḍam*, பெ. (n.) காவிரிப் பூம்பட்டினத்திலுள்ள ஒரு நன்னீர்க் குளம் (புண்ணிய தீர்த்தம்); a sacred tank in Kāviri-p-pūm-paṭṭiṉam.

சோமசபன்னி *sōmasapaṉṉi*, பெ. (n.) குங்கிலியம்; Indian damer resin.

சோமசுந்தரம் *sōma-sundram*, பெ. (n.) பண்வகை (சங். அக.); a specific melody type.

சோமதனம் *sōmadaṉam*, பெ. (n.) செம்மரம் (L.); Coromandel red-wood.

தெ. சோமித

[சே = சிவப்பு. சே → சோ → சோமதனம்]

சோமநாதி *sōmanādi*, பெ. (n.) ஒருவகைப் பெருங்காயம் (வின்.); a kind of asafoetida.

ம. சோமநாதிகாயம்; து. சோமநாதிகாயி

சோமம் *sōmam*, பெ. (n.) 1. கள் (வின்.); toddy. 2. கொடிக்கள்ளி; moon creeper.

சோமலதை *sōmaladai*, பெ. (n.) கொடிக்கள்ளி; creeping milk hedge.

சோமவல்லரி *sōmavallari*, பெ. (n.) பொன்னாங் காணி (மலை.); a plant.

சோமவல்லி *sōmavalli*, பெ.(n.) சீந்தில் (மலை.); gulancha.

சோமவலக்கம் *šōmavalakkam*, பெ. (n.) பெருங்குமிழ்; Cashmere tree.

சோமவுலுக்கம் *šōmavulukkam*, பெ. (n.) தேக்கு (மூ.அ.); teak.

சோமாக்கியம் *šōmākkiyam*, பெ. (n.) *1.* செந்தாமரை; red lotus. *2.* செவ்வல்லி; red Indian water-lily.

சோமாறி[1] *šōmāri*, பெ. (n.) சோம்பேறி; idle fellow, sluggard.

ம. சோமாரி; க., து. சோமாரி; தெ. சோமரி

[சோமாறு → சோமாறி]

சோமாறி[2] *šōmāri*, பெ. (n.) **சமையற்காரன்** (இ.வ.); cook.

[சோமாறு → சோமாறி]

சோமாறி[3] *šōmāri*, பெ. (n.) **ஏனாதியர் வகை** (E.T.vi, *392*); a subsect of Ēnādi caste.

சோமாறித்தனம் *šōmāri-t-tanam*, பெ. (n.) சோம்பல் (உ.வ.); slothfulness, indolence, idleness.

மறுவ. சோம்பேறித்தனம்

[சோமாறி + தனம்]

சோமாறு[1]**-தல்** *šōmāru-*, 5 செ.குன்றாவி. (v.t.) *1.* **ஒரு ஏனத்திலிருப்பதை மற்றொன்றிற் பகிர்ந்து வைத்தல்** (இ.வ.); to transfer part of the contents of one vessel to another. *2.* **திருடுதல்** (யாழ்ப்.); to steal, pilfer; to exchange stealthily. *3.* **பிறர் உடை நகை முதலியவற்றை இரவல் வாங்கி மனம்போன போக்கில் பயன்படுத்துதல்** (யாழ்ப்.); to use indiscriminately, as another's utensils, jewels, cloths etc. *4.* **ஒரே ஏனத்தைப் (பாத்திரத்தைப்) பல வேலைகளுக்கும் பயன்படுத்துதல்** (யாழ்ப்.); to use the same, utensil for various purposes. *5.* **ஒருத்தியைப் பலர் புணர்தல்** (யாழ்ப்.); to cohabit with a woman in common with others. *6.* **பண்டமாற்றுதல்** (யாழ்ப்.); to exchange goods and articles.

[சொம் + மாறு-.]

சோமாறு[2]**-தல்** *šōmāru-*, 5 செ.கு.வி. (v.i.) *1.* **சோம்புதல்**; to be lazy. *2.* **பின்வாங்குதல்**; to draw back, shirk, backsdilde. *அவன் வேலையைச் செய்யச் சோமாறுகிறான்.*

க. சோமாரி

[சோம்பு + சோமாறு → சோமாறு-தல்]

சோயிக்கீரை *šōyi-k-kīrai*, பெ. (n.) **சதகுப்பி** (M.M.*852*); dill.

சோர்[1]**-தல்** *šōr-*, 2 செ.கு.வி. (v.i.) *1.* **உடல் அல்லது மனம் மேற் கொண்டு செயல்பட ஆற்றலற்று தளர்தல்**; to languish, droop; to be prostrate or relaxed, as the limbs in sleep; to be weary, exhausted. "*கடியு மிடந்தேற்றாள் சோர்ந்தனள் கை*" (*கலித். 92:50*). கவலையால் சோர்ந்து விட்டான். *2.* **மனந்தளர்தல்**; to be dejected, dispirited, depressed in spirits. *3.* **மயக்கமாதல்**; to faint, swoon. "*அரசன் சோர்ந்தான்*" (*கம்பரா. தைலமாட்டு. 59*).

க. சோர் (துளை); தெ. சோலு

[சொள் → சோள் → சோர் → சோர்-தல் = குழைத்தல்]

சோர்[2]**-தல்** *šōr-*, 2 செ.கு.வி. (v.i.) *1.* **நழுவுதல்**; to slip off slip down, as clothes. "துகிலிறையே சோர்ந்தவாறும்" (*திருவாச. 5:57*). *2.* **கண்ணீர் முதலியன வடிதல்**; to trickle down, as tears, blood, milk. "அயறு சோருமிருஞ் சென்னிய" (*புறநா. 22: 7*). *3.* **விழுதல்** (வின்.); to fall drop; to be dropped. *4.* **கசிதல்**; to exude, to ooze out. "மலஞ்சோரு மொன்பது வாயில்" (*திருவாச. 1:54*). *5.* **கழலுதல்**; to become loose, as rings; to grow slacek,as a grip. "பைந்தொடி சோரும்" (*குறள், 1234*).

ம. சோருக; க. சோரு, சோரு; தெ. தொறகு, தொறுகு; து. சோருனி, தோருனி; கோத. சொர்; குட. தொர்; கோண். தோரானா; பர். சோர்; கட. சோர்; குரு. சுர்க்கை; மா. சுர்கெ; பட. சோரு

[சொள் → சோள் → சோர் → சோர்-தல். சொள் → சொள்ளை = துளை]

சோர்[3]**-தல்** *šōr-*, 2 செ.கு.வி. (v.i.) *1.* **வாடுதல்**; to fade, wither. "எரியிதழ் சோர்ந்துக" (*கலித். 78*). *2.* **மெலிதல்**; to be emaciated, grow thin. "காம்பேர் தோளி கண்டு சோர்ந்தன்று" (*பு.வெ.

11, பெண்பாற். 1, கொளு.). 3. தள்ளாடுதல்; to totter. "கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்" (நாலடி., 13.). 4. தடுமாறுதல்; to falter, as words; to be confused. 5. துன்பப்படுதல் (இ.வ.); to be stricken with grief. 6. இறத்தல்; to dic. "பாலகன்றான் சோர" (சிலப். 9:6).

[சொள் → சோள் → சோர் → சோர்-தல்]

சோர்[4]-தல் *śōr-*, 2 செ.குன்றாவி. (v.t.) விட்டொழிதல்; to give up, abandon. "சூதரைச் சோர்த லினிது" (இனி. நாற். 24).

[சொள் → சோள் → சோர் → சோர்-தல். சொள் = விழுதல், நீங்குதல்]

சோர்[5]-தல் *śōr-*, 2 செ.கு.வி. (v.i.) உடம்பில் எண்ணெய் முதலியன இறங்குதல்; to be absorbed in the system, as oil. "எண்ணெய் சோரத் தேய்க்கிறான்" (வின்.).

[கொள் = வடிதல். சொள் → சோள் → சோர் → சோர்-தல்]

சோர்[6] *śōr*, பெ. (n.) ஏய்ப்பு (வஞ்சகம்); guile. "மாவலிபாற் சோரா யிரந்தவனை" (அஷ்டப். அழகர். 33).

சோர்[7]-த்தல் *śōr-*, திருடுதல்; to steal, to embezzle.

[சூர் → சோர்-.]

சோர்ச்சி *śōrcci*, பெ. (n.) ஏய்ப்பு (வஞ்சகம்); deceit, guile. "சோர்ச்சி சேர்மடவார்" (குற்றா. தல. கவுற்சன. 10).

[சோர் → சோர்ச்சி]

சோர்பதன் *śōr-padaṉ*, பெ. (n.) தளர்ந்த காலம்; one's weak moments. "வலையர் போலச் சோர்பத னொற்றி" (கலித். 55).

[சோர்' + பதன்]

சோர்பு *śōrbu*, பெ. (n.) சோர்வு' பார்க்க; see *śōrvu*. "அவன் சோர்பு காத்தல் கடனெனப் படுதலின்" (தொல். பொருள். 174).

[சோர்' → சோர்பு]

சோர்பொழுது *śōr-poḻudu*, பெ. (n.) மாலைக் காலம்; evening time. "சோர்பொழு தணிநகர் துறுகுவர்" (கம்பரா. திருவவ. 132).

[சோர்' + பொழுது]

சோர்வாதம் *śōr-vādam*, பெ. (n.) கை, கால்களில் அயர்ச்சியுண்டுபண்ணும் முடக்கு நோய் வகை (யாழ்ப்.); a disease causing loss of power in the limbs.

[சோர்' + வாதம்]

சோர்வு *śōrvu*, பெ. (n.) 1. அறுவகை உவர்ப்புக்களில் ஒன்றாகிய தளர்ச்சி (சது.); languishing. drooping, one of *six uvarppu*. 2. மெலிவு (இ.வ); weakness, debility. 3. மறதி; carelessness, negligence, forgetfulness. "உவகை மகிழ்ச்சியிற் சோர்வு" (குறள், 531). 4. இழுக்கு (பிங்.); fault, slip, remissness. 5. சொரிகை; falling pouring, as rain. "வான்சோர் வினிதே" (இனி. நாற்.16).

[சோர் → சோர்வு]

சோர்வுபார்-த்தல் *śōrvu-pār-*, 4 செ.கு.வி. (v.i.) ஏமாறும் நேரம் பார்த்தல்; to watch for an opportunity to deceive a person. "சோர்வு பார்த்து மாயந்தன்னால் வலைப் படுக்கில்" (திவ். பெரியாழ். 2.2:5).

[சோர்வு + பார்-.]

சோரக்கதண்டு *śōra-k-kataṇḍu*, பெ. (n.) கரு வண்டு; a kind of black bettle.

சோரகம் *śōragam*, பெ. (n.) ஒருவகைப் புல்; a kind of grass.

சோரகுறுவை *śōra-kuṟuvai*, பெ. (n.) குறுவை நெல்வகை (A.); a kind of paddy.

சோரங்கொடு-த்தல் *śōraṅ-goḍu-*, 4 செ.கு.வி. (v.i.) துன்புறுதல் (யாழ்ப்); to be suffering.

[சோர்' + அம் + கொடு-.]

சோரப்பெய்-தல் *śōra-p-pey-*, 1 செ.கு.வி. (v.i.) மழை மிகுதியாகப் பொழிதல் (இ.வ.); to rain profusely.

[சேர் → சேர + பெய்]

சோரப்போடு-தல் *śōra-p-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) காரியத்தை ஆறவிடுதல் (உ.வ.); to leave a matter to rest.

[சோர் → சோர + போடு-.]

சோரல் *śōral*, பெ. (n.) 1. தளர்கை; drooping, fainting. 2. கெடுகை (சூடா.); perishing.

[சோர் → சோரல்]

சோரநஞ்சு *sōra-nañju,* பெ. (n.) வைப்புநஞ்சு வகையுளொன்று *(வின்.);* a prepared arsenic.

சோரன் *sōraṉ,* பெ. (n.) ஆட்டுக்குட்டி *(திவா.);* lamb, kid.

சோராக்கண்துடிப்பு *sōrā-k-kaṇ-tuḍipu,* பெ. (n.) கண்ணின் பார்வைக் கடுத்துக் குத்தலுண்டாகி இமைகனத்து நீர் வடிந்து கிடைகொள்ளாமலும், தூக்கம் பிடிக்காமலும் அடிக்கடிக் கண் சிவந்து துன்புறுத்துமோர் கண்ணோய்; an eye disease marked by irritation of the lens boring pain swelling thickening of the eye lid watery discharge restlessness, sleep lessness, frequent inflammation of the eyes.

[சோராக்கண் + துடிப்பு]

சோராவொற்றி *sōrā-v-oṟṟi,* பெ. (n.) மீட்க முடியாத ஒற்றிவகை *(நாஞ்.);* an irrecoverable form of mortgage.

[சோர் + ஆ + ஒற்றி]

சோரி[1] *sōri,* பெ. (n.) *1.* சிந்தும் அரத்தம்; blood "ஓசைச் சோரியை நோக்கினன்" *(கம்பரா. கிட்கிந். வாலிவதை. 69). 2.* மழை *(அரு. நி.);* rain, shower.

ம. சோரி

[சுல் → (சோல்) → சோர் → சோரி = அரத்தம்]

சோரி[2] *sōri,* பெ. (n.) சிறு செருப்படி *(மூஅ.);* a medicinal plant with small leaves.

சோரியிளநீர் *sōri-y-iḷanīr,* பெ. (n.) செவ்விளநீர் *(பதார்த்த. 69);* milk of reddish tender coconut.

[சோரி' + இளநீர்]

சோரிவரி *sōri-vari,* பெ. (n.) அரத்தப் படலத்துடன் வலியையுண்டாக்கும் கண்ணோய் வகை *(சீவரட்.);* an eye disease producing irritaion with red streaks.

[சோரி + வரி]

சோரிவீழல் *sōri-vīḻal,* பெ. (n.) அரத்தம் ஒழுகியமூக்கு *(தைலவ. தைல. 53);* bleeding of the nose.

[சோரி' + வீழல்]

சோல்(லு)-தல் *sōl-, 7* செ.குன்றாவி. (v.t.) *1.* கவர்ந்து கொள்ளுதல்; to plunder, seize. "நல்கிற்றை யெல்லாஞ் சோல்வான் புகுந்து" *(திவ். இயற். திருவிருத். 35). 2.* மீட்டுக் கொள்ளுதல்; to redeem, as a mortgage. "ஒற்றியெல்லாம் சோன்று கொண்டாய்" *(தேவா. 1040. 9).*

[சூல் → சோல்-.]

சோலா *sōlā,* பெ. (n.) முலைக்கச்சு வகை *(பாண்டி);* a kind of corset.

சோலி[1] *sōli,* பெ. (n.) *1.* செயல்; business, concern affair. "தெரியுமோ ராட்சத சோலி" *(இராமநா. ஆரணி. 8). 2.* தொந்தரவு *(யாழ்ப்.);* difficulty, annoyance.

ம., க., தெ., பட. சோலி

[செயல் → சொல் → சோல் → சோலி]

சோலி[2] *sōli,* பெ. (n.) தோணியில் ஒதுக்கிடம் அல்லது கழிவறை *(வின்.);* latrine in a boat.

சோலிக்காய் *sōli-k-kāy,* பெ. (n.) கற்றேக்கு (L.); racemed fish - bonetree.

சோலிக்காரன் *sōli-k-kāraṉ,* பெ. (n.) *1.* செயல் முனைவோன் *(வின்.);* man of business. *2.* தொந்தரவு செய்வோன் *(யாழ்ப்.);* troublesome person.

ம. சோலிக்காரன்

[சோலி' + காரன்]

சோலிசெய்-தல் *sōli-śey-, 1* செ.கு.வி. (v.i.) *1.* வேலை செய்தல் *(இ.வ.);* to do work or business. *2.* நேரம் போக்குதல் *(யாழ்ப்.);* to delay, waste time.

[சோலி + செய்-.]

சோலிப்படு-தல் *sōli-p-paḍu-, 20* செ.கு.வி. (v.i.) தொந்தரவிற்குள்ளாதல் *(யாழ்ப்.);* to be in difficulty, in truble.

[சோலி + படு-.]

சோலிமாலி *sōli-māli,* பெ. (n.) தொந்தரவு *(வின்.);* trouble, annoyance.

ம. சோலாமாலி.

சோலை *sōlai,* பெ. (n.) மனதிற்கு மகிழ்ச்சி ஏற்படுத்தும் வகையில் மரங்கள் செறிந்து நிழல் செய்யும் இடம்; flower garden, grove. "காடுகால் யாத்த நீடுமரச் சோலை" *(அகநா. 109).* பூஞ்சோலை, சோலைக்குயில்

ம. சோல; பட. சோலெ; குரு. சாலா; மா. சலெ

[சல் → (சோல்) → சோலை.]

சோலைக்கொடுக்காய்ப்புளி *šōlai-k-kodukkāy-p-puli*, பெ. (n.) மரவகை (L.); slender-nerved broad medium-leaved gamboge.

[சோலை + கொடுக்காய்புளி]

சோலைதேவியார் *šōlai-dēviyār*, பெ. (n.) திருவரங்க இறைவனுக்கு மாலை சூட்டும் உரிமை பெற்றவர்கள்; ladies who got the right of garlanding the deity (Thirumāl) of Thiru arangam. 'அரியபிள்ளை தண்டநாயக் கன்மக்கள் சோலை தேவியார்' (தெ.க.தொ.24, கல்: 270-1)

[சோலை + தேவியார்]

சோலைநுகர்வு *šōlai-nugarvu*, பெ. (n.) வேனிற் காலத்துச் சோலையின் குளிர்ச்சியின்பம் நுகர்கை (சீவக. 2707, தலைப்பு); enjoyment in the pleasure - grove during summer.

[சோலை + நுகர்வு]

சோலைப்புளி *šōlai-p-puli*, பெ. (n.) இரேவற்சின்னி; Ceylon gamboge.

[சோலை + புளி]

சோலைமலை *šōlai-malai*, பெ. (n.) அழகர்மலை; Alagarmalai near Madurai. "வளர்சோலைமலைக் கண்ணினன்" (அஷ்டப். அழகர். 26).

[சோலை + மலை]

சோலைவேங்கை *šōlai-vēngai*, பெ. (n.) காட்டுச் சாதிக்காய்; wild mace.

[சோலை + வேங்கை]

சோவன்னமில்பொரி *šōvannamilpori*, பெ. (n.) பாதாளகருடன்; common snake dog-bane.

சோவாசி *šōvāci*, பெ. (n.) பயிரிடுங் குடியானவன்; cultivating tenant.

[சோ + வாசி]

சோவாரி *šōvāri*, பெ. (n.) சோமாறி' (இ.வ.) பார்க்க; see *šōmāri*.

[சோமாறி + சோவாரி]

சோவானை *šōvānai*, பெ. (n.) மங்களகரமான ஆரத்திப்பாட்டு; a benedictory song. சோவானை பாடி ஆரத்தி எடுத்தாள் (இ.வ.).

தெ. சோபாநு; க. சோபாநே.

சோவி *šōvi*, பெ. (n.) பலகறை (இ.வ.); cowry.

[சோகி → சோவி]

சோவெனல் *šōvenal*, பெ. (n.) ஒலிக்குறிப்பு; onom. expr. of pattering, as of rain. சோவென்று மழை பெய்தது (உ.வ.).

[சோ + எனல்]

சோவை *šōvai*, பெ. (n.) சோகை பார்க்க; see *šōgai*.

[சோகை → சோவை]

சோழக்கரைக்காற்று *šōlakkarai-k-kārru*, பெ. (n.) தென்மேற்கு திசையிலிருந்து வீசுங்காற்று; the wind blowing from South West direction.

[சோழக்கரை + காற்று]

சோழகக்கச்சான் *šōlaga-k-kaccān*, பெ. (n.) சோழக்கரைக்காற்று (யாழ்ப்.) பார்க்க; see *šōla-k-kari-k-kārru*.

[சோழகம் + கச்சான்]

சோழகக்கொண்டல் *šōlaga-k-kondal*, பெ. (n.) தென்கிழ்க்காற்று (வின்.); the Southeast wind.

[சோழகம் + கொண்டல். கொண்டல் = காற்று]

சோழகம் *šōlagam*, பெ. (n.) தென்காற்று (வின்.); south wind, wind that blows during the South West monsoon.

[சோழம் + அகம்]

சோழகர் *šōlagar*, பெ. (n.) கோவை மாவட்ட எல்லைப்பகுதியில் வாழும் பழங்குடியினர்; a tribal people in Koyambuttūr dt.

சோழகுலவல்லிவதி *šōlakulavalli-vadi*, பெ. (n.) அரியலூர் வட்டத்தில் ஓர் அரசியின் பெயரால் அமைந்த பாசன வடிகால்; an irrigation drainage named after a Chola queen in the Ariyalur region. "சோழ குல வல்லி வதிக்கு கிழக்கு சோழ பாண்டிய வாய்க்காலுக்கு வடக்கு" (ஆவணம் 10-3 (1)).

[சோழன் குலம் வல்லி + வதி]

சோழகேரளவாய்க்கால் *šōla-kērala-vāykkāl*, பெ. (n.) அரியலூர் வட்டாரத்தில் சோழ அரசரின் பட்டப்பெயரில் அமைந்த பாசன

வாய்க்கால்; an irrigation channel named after one of the titles of a Chola kings in the Ariyalur region. "இவ்வதிக்கு மேற்கு சோழ கேரள வாய்க்காலுக்கு வடக்கு" (ஆவணம் 10-3 (1)).

[சோழன் + கேரளன் + வாய்க்கால்]

சோழங்கவைப்புநஞ்சு *šōlanga-vaippu-nañju,* பெ. (n.) வைப்பு நஞ்சு வகையுள் ஒன்று (சங்அக.); a kind of mineral poison.

சோழங்கன் *šōlangan,* பெ. (n.) சோழன் (வின்.); Chōla king.

[சோழன் → சோழங்கன்]

சோழசிகாமணிவதி *šōlašigāmaṇi-vadi,* பெ. (n.) அரியலூர் வட்டாரத்தில் ஓர் அரசியின் பெயரால் அமைந்த பாசன வடிகால்; an irrigation drainage named after a Chola queen in the Ariyalur region. "சோழ சிகாமணி வதிக்கு மேற்கு முடிகொண்ட சோழ பாண்டிய வாய்க்காலுக்கு தெற்கு" (ஆவணம் 10-3 (1)).

[சோழன் + சிகாமணி + வதி]

சோழசிராமணி *šōla-širāmaṇi,* பெ. (n.) நாமக்கல் மாவட்டச் சிற்றூர்; a village in Namakkal district.

[சோழன் + (சிரோன்மணி →) சிராமணி]

சோழநாடு *šōla-nāḍu,* பெ. (n.) சோழர் ஆண்ட தமிழ்நாட்டுப்பகுதி; the country of the ancient Chōla dynasty in South India.

[சோழன் + நாடு.]

சேலம் மாவட்டத்தில் தோன்றிக் கடலூர் மாவட்டத்தில் ஓடும் வட வெள்ளாற்றுக்கும் தஞ்சை மாவட்டத்தின் தெற்கிற் பாயும் தென்வெள்ளாற்றுக்கும் இடையிலுள்ள வளமான நாடு சோழநாடு. இக்கால திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களும் கடலூர் மாவட்டத்தின் ஒரு பகுதியும் அடங்கிய நிலப்பரப்பே பண்டைய சோழநாடு எனலாம். காவிரியிலும் அதன் துணையாறுகளாலும் வளம்பெறும் இந்நாடு பொன்நாடு, காவிரிநாடு எனவும் வழங்கப்பெறும். இந்நாட்டில் கிடைத்த நெல்வளத்தைப் பாராட்டி, 'சோழநாடு சோறுடைத்து' என ஒளவையாரும் பாடினார்.

சோழபாண்டியவாய்க்கால் *šōla-paṇḍya-vāykkāl,* பெ. (n.) அரியலூர் வட்டத்தில் சோழ அரசரின் பட்டப்பெயரில் அமைந்த பாசன வாய்க்கால்; an irrigation channel named after one of the titles of a Chola kings in the Ariyalur region. "சோழகுல வல்லி வதிக்குக் கிழக்கு சோழபாண்டிய வாய்க்காலுக்கு வடக்கு" (ஆவணம் 10-3 (1)).

[சோழன் + பாண்டியன் + வாய்க்கால்]

சோழபுரம் *šōlapuram,* பெ. (n.) வேளாள வகையினர்; a subsect of Vēḷāḷa caste.

[சோழன் + புரம்]

சோழம் *šōlam,* பெ. (n.) சோழநாடு பார்க்க; see šōla-nāḍu. "ஈரிருபதாஞ் சோழம்" (அட்டப். நூற்றெட். திருப். நூன்முகம், 6).

[சோழன் → சோழம்.]

சோழமண்டலக்கரை *šōla-maṇḍala-k-karai,* பெ. (n.) சோழநாட்டின் கடற்கரை; Coromandel coast.

[சோழன் + மண்டலம் + கரை]

சோழமண்டலசதகம் *šōla-maṇḍala-šadagam,* பெ. (n.) சோழநாட்டின் பெருமையைப் பற்றி 17ஆம் நூற்றாண்டில் ஆன்மநாத தேசிகரால் நூறுபாக்களிற் பாடப்பட்ட தமிழ்நூல்; a Tamil poem of one hundred stanzas dealing with the greatness of Cōla-nāḍu, by Ānmanāda-dēšigar, 17th c.

[சோழன் + மண்டலம் + சதகம்]

சோழமண்டலம் *šōla-maṇḍalam,* பெ. (n.) சோழநாடு (சோழமண். சத.) பார்க்க; see šōla-nāḍu.

[சோழன் + மண்டலம்]

சோழமாராசன்கட்டிநுளம்பன் *šōla-mārāšan-kaṭṭi-nuḷamban,* பெ. (n.) திருஅத்தியூர் நின்றருளின பெருமாளுக்கு நந்தவனம் அமைக்க 250 குழி நிலம் கொடுத்தவன்; a land donar. "ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற் கோட்டத்து எயில் நாட்டு திருஅத்தியூர் நிறைருளின அருளைப் பெருமாளுக்கு கங்க மண்டலத்து மகா மண்டலகன் சோழமா ராசன் கட்டி நுளம்பன் திருநந்தவனம் செய்கைக்கு கொண்ட குழி

இருநூற்று ஐம்பது குழிநிலம்" (தெக.தொ. 4, கல். 861).

[சோழன் + மாராசன்]

சோழர் *šōḻar,* பெ. (n.) சோழன் பார்க்க; see *šōḻaṉ.*

தமிழ்நாட்டைச் சிறப்புடன் ஆண்ட சோழர்களைக் கழகக் காலச் சோழர், விசயாலயன் வழிவந்த சோழர், சாளுக்கியச் சோழர் என மூன்று வகையாகப் பிரிக்கலாம். கழகக் காலச் சோழரின் தலைநகரம் உறையூர், புகார். விசயாலயச் சோழர்களின் தலைநகரம் தஞ்சாவூர். கழகக் காலச் சோழர்களில் சிறந்தவன் கரிகாலன். விசயாலயன் வழிவந்தவர்களில் முதலாம் ராசராசன் சிறந்தவன். சாளுக்கியச் சோழர்களில் முதலாம் குலோத்துங்கன் சிறந்தவன். கழகக் காலத்தில் தோன்றிய சோழர்கள் ஆட்சி மூன்றாம் இராசேந்திரன் காலத்தோடு (கி.பி. 1256 - 1279) முடிவுற்றது.

சோழவக்கொண்டல் *šōḻava-k-koṇḍal,* பெ. (n.) சோழகக்கொண்டல் பார்க்க; see *šōḻaga-k-koṇḍal.*

சோழவரம் *šōḻavaram,* பெ. (n.) சோழபுரம் (E.T.ii, 103) பார்க்க; see *šōḻa-puram.*

[சோழன் + புரம்]

சோழன் *šōḻaṉ,* பெ. (n.) முற்காலத்தில் புலியை அரசுச் சின்னமாகக் கொண்டு காவிரி ஆற்றைச் சார்ந்த பகுதிகளை ஆண்ட மன்னன்; any king of the Chola dynasty that ruled over the cauvery delta. "நற்றார்க் கள்ளின் சோழன் கோயில்" (புறநா. 378).

ம. சோழன், சோனன்; க. சோள; தெ. சோட

[சொல் (=நெல்) → சோல் → சோழன்]

சோழன்இராசசூயம்வேட்டபெருநற்கிள்ளி *šōḻaṉ-irāša-šūyam-vēṭṭa-perunar-kiḷḷi,* பெ. (n.) கழகக் காலச் சோழ மன்னன்; a Cōḻā king in Šaṅgam age.

[சோழன் + இராசசூயம் + வேட்ட பெருநற்கிள்ளி]

இவன் அரசர்கள் செய்யும் பெரிய வேள்வியைச் செய்து பெயர் பெற்றான். புறநானூறு 16, 377, 125 ஆகிய எண்ணுடைய பாடல்களில் இவனைப் பற்றி அறிய முடிகிறது.

சோழன்உருவப்பஃறேர்இளஞ்சேட்சென்னி *šōḻaṉ-uruvappakvēr-iḷañjēṭ-šeṉṉi,* பெ. (n.) கழகக் காலச் சோழ மன்னன்; a Cōḻā king in Šaṅgam age.

[சோழன் + உருவப்பஃறேர் + இளஞ்சேட் சென்னி]

இவனிடம் இருந்த தேர்ப்படையால் உருவப்பல்தேர் என்ற அடை மொழியைப் பெற்றிருக்கலாம். இவனைப் பரணரும், பெருங்குன்றூர் கிழாரும் புறநானூற்றில் (4, 366) பாடியுள்ளனர்.

சோழன்குராப்பள்ளித்துஞ்சியகிள்ளிவளவன் *šōḻaṉ-kurā-p-paḷḷi-t-tañjiya-kiḷḷi-vaḷavaṉ,* பெ. (n.) கழகக் காலச் சோழ மன்னன்; a Cōḻā king in Šaṅgam period.

[சோழன் + குராப்பள்ளி + துஞ்சிய + கிள்ளிவளவன்]

கிள்ளி, வளவன் என்பன சோழ மன்னர்களைக் குறிக்கும் பெயர்கள். குராப்பள்ளி துஞ்சிய குராப்பள்ளி என்னும் இடத்தில் இறந்த - இறந்தவன். புறநானூறு 373ஆம் பாடல் இவனைக் குறிக்கிறது.

சோழன்குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவன் *šōḻaṉ-kuḷamuṟṟattu-t-tuñjiya-kiḷḷi-vaḷavaṉ,* பெ. (n.) கழகக் காலச் சோழ மன்னன்; a Cōḻā king in Šaṅgam period.

[சோழன் + குளமுற்றத்து + துஞ்சிய + கிள்ளிவளவன்]

குளமுற்றம் என்ற இடத்தில இறந்தவன்

சோழன்செங்கணான் *šōḻaṉ-ceṅgaṇāṉ,* பெ. (n.) களவழி நாற்பது என்ற நூலின் பாட்டுடைத் தலைவனான சோழவரசன் (புறநா. 74, உரை.); a Chōḻā king, the hero of the poem *Kaḷa-vaḻi-nāṟpatu.*

[சோழன் + செங்கணான்]

சோழன்செருப்பாழிஎறிந்தஇளஞ்சேட்சென்னி *šōḻaṉ-šeruppāḻi-eṟinda-iḷañjēṭ-šeṉṉi,* பெ. (n.) கழகக் காலச் சோழ மன்னன்; a Cōḻā king in Šaṅgam age.

மறுவ. இளம்பெருஞ்சென்னி

[சோழன் + செருப்பாழி + எறிந்த + இளஞ்சேட்சென்னி]

பாழி என்னும் இடத்தை தமக்கிடமாகக் கொண்டு பொருத வடுகரைத் தம்படை வலியால் அழித்துப் பாழி நகரைச் சிதைத்ததால் செருப்பாழி எறிந்த என்னும் அடையைத் தன் பெயரில் கொண்டவன். அகநானூறு 375ஆம் பாடலும், புறநானூறு 370, 378 ஆகிய பாடல்களும் இவனைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன.

சோழன்நல்லுருத்திரன் *šōlaṉ-nalluruttiraṉ,* பெ. (n.) *கழகக் காலச் சோழ மன்னன்;* a Cōlā king in Šaṅgam age.

[சோழன் + நல் + உருத்திரன்]

இவர் பாடிய ஒரே பாடல் புறநானூறு 190 ஆகும்.

சோழன்நலங்கிள்ளி *šōlaṉ-nalaṅgiḷḷi,* பெ. (n.) *கழகக் காலச் சோழ மன்னன்;* a Cōlā king in Šaṅgam age.

மறுவ. சேட்சென்னி நலங்கிள்ளி, தேர்வண் கிள்ளி, புட்பகை

[சோழன் + நலங்கிள்ளி]

ஆலந்தூர்கிழான், முதுகண்ணன் சாத்தன் போன்றோர் இவனைப் பாடியுள்ளனர். இவன் அரசப் புலவனாகவும் இருந்தான். இவன் பாடியதாக புறநானூற்றில் இருபாடல்கள் (73, 75) உள்ளன.

சோழன்நெய்தலங்கானல்இளஞ்சேட்சென்னி *šōlaṉ-neydalaṅgāṉal-iḷañjēt-šeṉṉi,* பெ. (n.) *கழகக் காலச் சோழ மன்னன்;* a Cōlā king in Šaṅgam age.

[சோழன் + நெய்தலங்கானல் + இளஞ்சேட்சென்னி]

நெய்தலங்கானல் இம்மன்னனின் ஊராகும். புறநானூறு பத்தாம் பாடல் இவனைப் பற்றிக் கூறுகிறது.

சோழன்மணக்கிள்ளி *šōlaṉ-maṇakkiḷḷi,* பெ. (n.) *கழகக் காலச் சோழ மன்னன்;* a Cōlā king in Šaṅgam age.

[சோழன் + மணக்கிள்ளி]

இவன் சேரன் செங்குட்டுவனின் தாய்வழிப் பாட்டன். சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டம் வாழ்த்துரைக் காதை, உரைப்பாட்டு மடை 'திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்ற மைந்தன் செங்குட்டுவன்' என்று குறிக்கிறது.

சோழி *šōḻi,* பெ. (n.) *மாலையாகக் கோக்கவோ, விளையாடவோ பயன்படும் கடல்வாழ் சிறு உயிரிகளின் வெள்ளை அல்லது பழுப்பு நிற ஓடு, பலகறை (இ.வ.);* cowry.

மறுவ. சோவி

[சோகி → சோவி → சோழி]

சோழிக்கூடு *šōḻi-k-kūḍu,* பெ. (n.) *நடுவில் துளையிடப்பட்டு, நான்கு மூலைகளிலும் கயிறுகளால்கட்டப்பெற்ற பலகை;* a plank with a hole in the middle, tied at all four corners.

[சோலி → சோழி + கூடு]

தோணியின் விளிம்புக்கு வெளியே நீட்டி மலங்கழிக்கப் பயன்படுத்தும் பலகை.

சோழிச்சி *šōḻicci,* பெ. (n.) *1. சோழநாட்டுப் பெண் (நன். 276, மயிலை);* woman of the Chōla country. *2. சோழிய வேளாளர் பெண் (தஞ்சை.);* a woman of *šōḻiya-vēḷāḷa* caste.

[சோழியன் → சோழிச்சி]

சோழிசொங்கமான் *šōḻi-šoṅgamāṉ,* பெ. (n.) *நாடோடிக்குரிய பை, சோழி முதலிய அடையாளங்கள் (உ.வ.);* cowries, bag, etc, as the belongings of a *paradēši.*

[சோழி + சொங்கமான்]

சோழிப்பல் *šōḻi-p-pal,* பெ. (n.) *பலகறை போன்ற பல்;* cowry-like tooth.

[சோழி + பல்]

சோழியக்கடகம் *šōḻiya-k-kaḍagam,* பெ. (n.) *1. மண்ணள்ளுங் கூடை;* basket for carrying loose earth. *2. சாட்டுக்கூடை;* a large basket.

[சோழியன் + கடகம்]

சோழியக்காசு *šōḻiya-k-kāšu,* பெ. (n.) *13ஆம் நூற்றாண்டில் வழங்கியதும் ஒரு பணத்தின் நூற்றிலொரு பகுதியுமான நாணயவகை* (I.M.P.Sm.32); an old coin of the 13th century, one-hundredth of a *paṇam.*

மறுவ. சோழியன்காசு

ம. சோழியர்காசு

[சோழியன் + காசு]

சோழியக்கூடை *šōḻiya-k-kūḍai,* பெ. (n.) *சோழியக்கடகம் (யாழ்ப்.) பார்க்க;* see *šōḻiya-k-kaḍagam.*

[சோழியன் + கூடை]

சோழியநாழி *šōḻiya-nāḻi,* பெ. (n.) நெல் அளக்கப் பயன்படும் நாழியின் பெயர்; a vessel to measure paddy etc. "நெல் சோழிய நாழியால், நெல் ஆழாக்கும் அட்டுவதாக" (தெ. க. தொ. 14, கல். 80).

[சோழியன் + நாழி]

சோழியப்பல் *šōḻiya-p-pal,* பெ. (n.) சோழிப்பல் (யாழ்ப்.) பார்க்க; see *šōḻi-p-pal.*

சோழியப்பாரை *šōḻiya-p-pārai,* பெ. (n.) மண்வெட்டி வகை (கட்டட. நாமா. 43); a kind of spade.

[சோழியன் + பாரை]

சோழியப்பிராமணன் *šōḻiya-p-pirāmaṇaṉ,* பெ. (n.) முன்குடுமிப் பார்ப்பான்; a Brahmin sub-caste who have the hair-tuft in front.

[சோழியன் + பிராமணன்]

சோழியப்பை *šōḻiya-p-pai,* பெ. (n.) நாடோடிகள் பிச்சை ஏற்கும் பை (வின்.); a large kind of bag used by mendicants.

இந்தி. சோல்னா

[தோள் + பை → தோளியப்பை → சோழியப் பை]

தற்போது சோல்னாப்பை என்று இந்தியில் வழங்குகிறது. தொடக்கத்தில் துணியின் நான்கு முனைகளையும் முடிந்து தோளில் மாட்டி கொண்டனர். தற்போது பை தைத்து தோளில் மாட்டி கொண்டனர்.

குறி சொல்வோர் தோளில் மாட்டும் துணியில் குறி சொல்லப் பயன்படும் சோழிகளை எடுத்துச் செல்லப் பயன்பட்டதால் சோழிப்பை என்ற பெயர் சோழியப்பை என்றாயிற்று என்பாருமுளர்.

சோழியமணம் *šōḻiya-maṇam,* பெ. (n.) 20,000 பாக்குக் கொண்ட அளவு (வின்.); a term used for twenty thousand areca-nuts.

[சோழம் + அமணம்]

சோழியவெள்ளாளர் *šōḻiya-veḷḷāḷar,* பெ. (n.) வேளாள வகையார்; a sub-caste of Vēḷāḷas of Chōḻa country.

[சோழியன் + வெள்ளாளர்]

சோழியன்[1] *šōḻiyaṉ,* பெ. (n.) 1. சோழ நாட்டான் (தொல். சொல். 167); man of the Chōḻa country. 2. பார்ப்பனர், வேளாளர் முதலியோருட் சில வகுப்பினர்க்கு வழங்கும் பெயர் (E.T.vi, 391); the title of certain sub-castes of Brahmins, Vēḷālas, etc.

ம. சோழியன்

[சோழம் → சோழியன்]

சோழியன்[2] *šōḻiyaṉ,* பெ. (n.) ஒருவகை மண்வெட்டி (யாழ்ப்.); a kind of spade.

[சோழம் → சோழியன்]

சோழியன்காசு *šōḻiyaṉ-kāšu,* பெ. (n.) சோழியக்காசு பார்க்க; see *šōḻiya-k-kāšu.*

[சோழியன் + காசு]

சோழியன்வெட்டு *šōḻiyaṉ-veṭṭu,* பெ. (n.) பழைய காசு வகை (பணவிடு 134); an ancient coin.

[சோழியன் + வெட்டு]

சோழியாவணம் *šōḻiyāvaṇam,* பெ. (n.) சோழியமணம் (வின்.) பார்க்க; see *šōḻiya-maṇam.*

[சோழியமணம் → சோழியாவணம்]

சோவென்று *šō-v-eṉṟu,* வி.எ. (adv.) வேகமாக இரைச்சலுடன்; in a downpour. மழைசோ வென்று பெய்யத் தொடங்கியது.

[சோ + என்று. சோ. ஒலிக்குறிப்பு]

சோளக்கூழ் *šōḷa-k-kūḻ,* பெ. (n.) சோளத் தவசத்தை மாவாக அரைத்துச் செய்யும் கூழ்; food prepared from maize.

[சோளம் + கூழ்]

சோளக்கொண்டை *šōḷa-k-koṇḍai,* பெ. (n.) சோளக்கதிர் (உ.வ.); ear of the maize.

[சோளம் + கொண்டை]

சோளக்கொல்லைபொம்மை *šōḷa-k-kollai-pommai,* பெ. (n.) கம்பு, சோளம் முதலியவை விளையும் நிலத்தில் பறவைகளை விரட்டுவதற்காக உயரமான கழியில் நிறுத்தி

வைக்கப்பட்டிருக்கும் துணி அல்லது வைக்கோல் அடைத்த மனித உருவத்தை ஒத்த பொம்மை; scarecrow.

[சோளம் + கொல்லை + பொம்மை]



சோளகம் *śōḷagam,* பெ. (n.) குடுமி வைக்கும் விழா *(சங்.அக.);* ceremony of tonsure.

வ. சௌல

சோளகாண்டம் *śōḷa-kāṇḍam,* பெ. (n.) நீர்க்கடம்பு; water cadamba.

சோளச்சொறி *śōḷa-c-coṟi,* பெ. (n.) சோளக்கூழ் அதிகமாக குடிப்பதால் உடம்பில் ஏற்படும் சொறி சிரங்கு; a kind of skin disease due to the free use of maize as prinicipal food.

[சோளம் + சொறி]

சோளச்சோறு *śōḷa-c-cōṟu,* பெ. (n.) சோளமணிகளை (தவசம்)க் கொண்டு சமைக்குஞ்சோறு: food prepared from maize.

[சோளம் + சோறு]

சோளத் தவசத்தை மாவாக அரைத்துச் செய்யப்படுவது சோளக்கூழ். சோள மணிகளை சோறாக சமைப்பது சோளச் சோறு.

சோளத்தட்டு *śōḷa-t-taṭṭu,* பெ. (n.) சோளத் தட்டை (வின்) பார்க்க; see *śōḷa-t-taṭṭai.*

[சோளத்தட்டை → சோளத்தட்டு]

சோளத்தட்டை *śōḷa-t-taṭṭai,* பெ. (n.) சோளத்தின் அரிதாள் (உ.வ.); stalks of maize.

[சோளம் + தட்டை]

சோளப்பொரி *śōḷa-p-pori,* பெ. (n.) உப்பும் மஞ்சள் பொடியும் தூவி வறுத்த சோளம்; popcorn.

[சோளம் + பொரி]

சோளம்[1] *śōḷam,* பெ. (n.) உருண்டையான தனித்தனி மணிகளைக் கொண்ட ஒருவகைத் தவசம் *(பதார்த்த. 1399);* maize, great millet.

ம. சோளம்; க., து., குட., சோள; தெ. சொன; துட. ச்விளம்; கோண். சொனா; கொலா. சொன்ன; பர். சென்ன; கட. சோனல்; பட. சோளு

[சுள் → (சொள்) → சோளம்]

சோளம்[2] *śōḷam,* பெ. (n.) சோழம் (இ.வ.) பார்க்க; see *śōḻam.*

சோளவலைக்கட்டை *śōḷavalai-k-kaṭṭai,* பெ. (n.) வலையின் முற்பகுதியில் கட்டப் பட்டிருக்கும் மிதப்புக் கட்டை; float tied in the front portion of the net.

[சோளவலை + கட்டை]

மிதப்பதற்கு ஏற்ற, கனமில்லாத கட்டை, தலைவலைக் கட்டை, தொங்கு வலைக் கட்டை, கெடமால் கட்டை, மோப்புக் கட்டை என்பன பிற மிதப்புக் கட்டைகளாகும்.

சோளன்[1] *śōḷaṉ,* பெ. (n.) சோழன் (இ.வ.) பார்க்க; see *śōḻaṉ.*

[சோழன் → சோளன்]

சோளன்[2] *śōḷaṉ,* பெ. (n.) சோளம்[1] (யாழ்ப்.) பார்க்க; see *śōḷam,1. 2.* மக்காச்சோளம்; Indian corn.

[சோளம் → சோளன்]

சோளி *śōḷi,* பெ. (n.) கிளிஞ்சல் வகை; a kind of shell.

மறுவ. சோவி

[சோழி → சோளி.]

சோளி[2] *śōḷi,* பெ. (n.) சோளிகை பார்க்க; see *śōḷigai.*

து. சோலி; H. jōli

[சொள் (துளை) → (சோள்) → சோளி. ஒ.நோ. பொள் → பொய் → (பய்) → பை = துளை, துளையுள்ளது; துளை போல் தையல் கொண்டது.]

சோளிகை *śōḷigai,* பெ. (n.) இரப்போன் பெரும்பை; satchel, bag, as of a beggar. 'ஒருவன் மாளிகைக்காரனாக இருக்க வேண்டும், ஒருவன் சோளிகைக்காரனாக இருக்க வேண்டும்' (பழமொழி.).

க. சோலிகெ; து. சோலிகெ; தெ. சோலிய

[சோளி → சோளிகை.]

சோளிச்சங்கு *śōḷi-c-caṅgu,* பெ. (n.) சங்கு வகை; a kind of conch.

[சோளி' + சங்கு]

சோளியல் *śōḷiyal,* பெ. (n.) சோளிகை (நெல்விடு.); bag, pouch.

[சோளி² → சோளியல்.]

சோற்றடைப்பு *śōṟṟaḍaippu,* பெ. (n.) சோற்றறம் (அன்னதானக் கட்டளை); endowment for free feeding. "சோற்றடைப்புக்கு உடலாம் போனகப் பழநெல்" (தெ.க.தொ. 7. 299).

[சோறு + அடைப்பு]

சோற்றப்பளம் *śōṟṟappaḷam,* பெ. (n.) இலைவடகம் (இ.வ.); cake prepared from boiled rice-flour and dried in the sun.

[சோறு + அப்பளம்]

சோற்றமலை *śōṟṟamalai,* பெ. (n.) சோற்றுக் கட்டி பார்க்க; see *śōṟṟu-k-kaṭṭi.* 'பழஞ் சோற்றமலை' (பெரும்பாண். 224).

[சோறு + அமலை. அமலை = மிகுதி.]

சோற்றலகு *śōṟṟalagu,* பெ. (n.) 1. மரத்தில் வயிரமில்லாத பாகம்; pith of a palmyra tree, as distinct from the hard or indurated part. 2. சிப்பல்; colander.

[சோறு + அலகு. அலகு = பாகம், அளவு]

சோற்றாலாத்தி *śōṟṟālātti,* பெ. (n.) கடவுள் மணமக்கள் முதலியோர் முன்பு கண்ணேறு படுதற் பொருட்டுச் சுழற்றும் ஆலத்திவகை (வின்.); boiled rice waved before an idol, a married couple, etc., to avert the evil eye.

[சோறு + ஆலாத்தி]

சோற்றாவி *śōṟṟāvi,* பெ. (n.) தேவருணவு (அவியுணவு) முதலியற்றின் ஆவி (சிலப். 10:144, அரும்.); vapour emitted by boiled rice or sacrificial offering to the gods.

[சோறு + ஆவி]

சோற்றி *śōṟṟi,* பெ. (n.) 1. மரத்தினுள் இருக்கும் மென்சோறு (யாழ்ப்.); pith of trees. 2. வயிரமற்ற கட்டை; soft wood. 3. பழத்தின் சதைப்பகுதி; fleshy part of some fruits. 4. பச்சிலை வகை (நாஞ்.); a medicinal herb.

[சோறு → சோற்றி]

சோற்றியற்ற *śōṟṟiyaṟṟa,* பெ.எ. (adj.) சதைப் பற்றில்லாத; pithless.

[சோறு → சோற்றி + அற்ற.]

சோற்றிலை *śōṟṟilai,* பெ. (n.) சோற்றுக் கற்றாழை (மூ.அ.); yellow-flowered aloe.

[சோறு + இலை]

சோற்றிறக்கம் *śōṟṟiṟakkam,* பெ. (n.) பசியுணர்ச்சி; appetite for food.

[சோறு + இறக்கம்]

சோற்றுக்கட்டி *śōṟṟu-k-kaṭṭi,* பெ. (n.) சோற்று உருண்டை (அன்னவுருண்டை); lump of boiled rice. 'புதிய வெண்சோற்றுக் கட்டியை' (புறநா. 177, உரை).

மறுவ. சோற்றுக்கவளம்

ம. சோற்றுருள

[சோறு + கட்டி]

சோற்றுக்கடன் *śōṟṟu-k-kaḍaṉ,* பெ. (n.) 1. உண்ட சோற்றுக்குக் கைம்மாறாகச் செய்யும் நன்றி (வின்.); duty or obligation in return for having been fed. 2. கடமையாக மாத்திரம் இடுஞ்சோறு (இ.வ.); food provided only under duty.

[சோறு + கடன்]

சோற்றுக்கடை *śōṟṟu-k-kaḍai,* பெ. (n.) 1. சோறு விற்குமிடம்; hotel. 2. சோறிடுகை; feeding. சோற்றுக்கடை இன்னும் ஒழியவில்லை (உ.வ.).

ம. சோற்று கச்சவடம் (சோற்று வணிகம்)

[சோறு + கடை]

சோற்றுக்கத்தலை *šōṟṟu-k-kattalai,* பெ. (n.) கடல்மீன் வகை (வின்.); a genus of sea-fish.

[சோறு + கத்தலை]

சோற்றுக்கற்றாழை *šōṟṟu-k-kaṟṟāḻai,* பெ. (n.) குட்டையான அடித்தண்டையும் வெண்ணிறச் சதைப் பற்றான மடல்களையும் கொண்ட ஒருவகைக் கற்றாழை; thick leaved Indian aloe.

[சோறு + கற்றாழை]

சோற்றுக்கற்றாழை

சோற்றுக்காரி *šōṟṟu-k-kāri,* பெ. (n.) 1. சோற்றுக் கடை வைத்திருப்பவள் (வின்.); a woman hotel-keeper. 2. சோறு கொண்டு வரும் வேலைக்காரி (உ.வ.); maid-servant employed to carry food.

ம. சோற்றுகச்சவடக்காரி

[சோறு + காரி]

சோற்றுக்குடலை *šōṟṟu-k-kuḍalai,* பெ. (n.) சோறு கொண்டு செல்லுங் கூடை (யாழ்ப்.); basket of plaited leaf for carrying boiled rice.

[சோறு + குடலை]

சோற்றுக்குவால் *šōṟṟu-k-kuvāl,* பெ. (n.) சோற்றுக் குவியல்; heap of cooked rice. "அந்தணர்க் காக்கிய சோற்றுக் குவாலினை" (சீவக. 934).

[சோறு + (குவியல் →) குவால்]

சோற்றுக்குவீங்கி *šōṟṟukku-vīṅgi,* பெ. (n.) சோற்றுக்கு ஏங்கியிருப்பவன் (உ.வ.); one who hankers after food, used in derision about a person willing to eat anywhere.

ம. சோற்றுமாடன் (மிகுதியாக உண்டாலும் பொந்திகை கொள்ளாதவன்)

[சோறு + கு + வீங்கி]

சோற்றுக்குழி *šōṟṟu-k-kuḻi,* பெ. (n.) இரைப்பை; stomach which is membraneous sac or receptacle for receiving the food taken in.

[சோறு + குழி]

சோற்றுக்கை *šōṟṟu-k-kai,* பெ. (n.) வலக்கை (சோற்றை எடுத்துண்ணுங் கை); right hand, as used in taking food.

ம. சோற்றுகை

[சோறு + கை]

சோற்றுச்சட்டி *šōṟṟu-c-caṭṭi,* பெ. (n.) சோற்றுப் பானை (வின்.) பார்க்க; see *šōṟṟu-p-pāṉai.*

ம. சோற்றுகலம்

[சோறு + சட்டி]

சோற்றுச்செறுக்கு *šōṟṟu-c-ceṟukku,* பெ. (n.) வயிறு நிரம்பக் கிடைக்கும் உணவினால் ஏற்படும் பெருமிதம்; a pride on the assured supply of food throughout. "காங்கேயர் கோனளித்த சோற்றுச் செறுக்கல்லவோ மூன்றரை கண்டதுவே" (சிலப்பதிகார உரைக்கு அடியார்க்கு நல்லாரின் பாயிரம்).

[சோறு + செறுக்கு]

சோற்றுத்தட்டு *šōṟṟu-t-taṭṭu,* பெ. (n.) சிப்பல் (வின்.); colander.

மறவ. வடித்தட்டு

[சோறு + தட்டு. தட்டு = சோறுவடித்தல் போன்றவற்றுக்குதவும் சிறுதட்டு]



சோற்றுத்தட்டு

சோற்றுத்தடி *šōṟṟu-t-taḍi,* பெ. (n.) சோற்றமலை பார்க்க; see *šōṟṟamalai.* 'சோற்றுத்தடியை.. நாடோறும் பெறுகுவிர்' (மலைபடு. 441, உரை).

[சோறு + தடி]

சோற்றுத்திரளை *šōṟṟu-t-tiraḷai,* பெ. (n.) சோற்றுக்கட்டி பார்க்க; see *šōṟṟu-k-kaṭṭi.* 'பெருஞ் சோற்றுத்திரளையைப் பாண் சுற்றத்தை ஊட்டும்' *(புறநா. 33, உரை).*

[சோறு + திரளை]

சோற்றுத்துருத்தி *šōṟṟu-t-turutti,* பெ. (n.) உடம்பு *(சோற்றால் நிரப்பிய துருத்தி);* body, as a bladder filled with food. "சோற்றுத் துருத்தியைச் சதமெனவும்" *(தாயு. பரிபூரண. 7).*

[சோறு + துருத்தி]

சோற்றுத்தூக்கம் *šōṟṟu-t-tūkkam,* பெ. (n.) பேருணவு உண்டமையால் வரும் தூக்கம் *(யாழ்ப்.);* sleep induced by over-eating.

[சோறு + தூக்கம்]

சோற்றுப்பக்கரை *šōṟṟu-p-pakkarai,* பெ. (n.) மிகுதியாக உண்பவன் *(சாப்பாட்டு இராமன்) (இ.வ.);* a glutton, as a bag for food.

[சோறு + பக்கரை]

சோற்றுப்பக்காளி *šōṟṟu-p-pakkāḷi,* பெ. (n.) சோற்றுப்பக்கரை பார்க்க; see *šōṟṟu-p-pakkarai.*

[சோறு + பக்காளி]

சோற்றுப்பசை *šōṟṟu-p-pašai,* பெ. (n.) 1. சோற்றால் ஆகும் பசை; rice paste. 2. வாழ்வுக்குப் (சீவனத்துக்குப்) போதுமான வருவாய்; income sufficient for one's maintenance. அவனுக்குச் சோற்றுப்பசை உண்டு *(உ.வ.).*

[சோறு + பசை]

சோற்றுப்பட்டாளம் *šōṟṟu-p-paṭṭāḷam,* பெ. (n.) எந்த வேலையும் செய்யாமல் உணவுக்காக மட்டும் ஒருவரை அண்டி வாழும் கும்பல்; hangers on for food.

[சோறு + பட்டாளம்]

சோற்றுப்படி *šōṟṟu-p-paḍi,* பெ. (n.) சான்றாளர் (சாட்சி) முதலானவர்க்கு உணவு முதலிய வற்றிற்காகக் கொடுக்கும் தொகை; batta.

[சோறு + படி]

சோற்றுப்பதம் *šōṟṟu-p-padam,* பெ. (n.) அரிசி வெந்த நிலைமை; the stage of which the rice is sufficiently boiled.

[சோறு + பதம்]

சோற்றுப்பருக்கை *šōṟṟu-p-parukkai,* பெ. (n.) சோற்றவிழ், வெந்த சோற்றின் பருக்கை; grains of boiled rice.

[சோறு + பருக்கை]

சோற்றுப்பலகை *šōṟṟu-p-palagai,* பெ. (n.) வடிபலகை *(நாஞ்.);* a wooden strainer, used in cooking rice.

[சோறு + பலகை]

சோற்றுப்பற்று *šōṟṟu-p-paṟṟu,* பெ. (n.) சோற்றுப்பருக்கை பார்க்க; see *šōṟṟu-p-parukkai.*

[சோறு + பற்று]

சோற்றுப்பனை *šōṟṟu-p-paṉai,* பெ. (n.) வைரமற்ற பனை மரம்; palymyra with a soft interior.

[சோறு + பனை]

சோற்றுப்பாளையம் *šōṟṟu-p-pāḷaiyam,* பெ. (n.) 1. முகாமில் சமையல் செய்யும் இடம் *(வின்.);* that part of a camp where food is prepared. 2. பயனற்றகூட்டம் (சோற்றை யுண்ண மட்டும் தகுதியுள்ள கூட்டம்) *(இ.வ.);* unserviceable or useless crowd of dependants, as fit only for eating.

ம. சோற்றுப்பாளயம்

[சோறு + பாளையம்]

சோற்றுப்பானை *šōṟṟu-p-pāṉai,* பெ. (n.) 1. சோறாக்கும் மட்பாண்டம்; cooking pot. 2. பெருந்தீனிக்காரன்; glutton.

[சோறு + பானை]

சோற்றுப்பிச்சை *šōṟṟu-p-piccai,* பெ. (n.) இரப்போர்க்குப் பிச்சையாக இடும் சோறு *(உ.வ.);* boiled rice given as alms.

ம. சோற்றுபிச்ச

[சோறு + பிச்சை]

சோற்றுப்பு *šōṟṟuppu,* பெ. (n.) உணவிலிடும் உப்பு; salt used in food.

[சோறு + உப்பு]

சோற்றுப்புரை *šōṟṟu-p-purai,* பெ. (n.) மடைப் பள்ளி, சமையலறை; kitchen. "சோற்றுப்புரை மணியஞ் சூரியன்" (தெய்வச். விறலிவிடு. 388).

[சோறு + புரை]

சோற்றுப்பெட்டி *šōṟṟu-p-peṭṭi*, பெ. (n.) படகில் செல்லும்போது உணவுப் பொருள் வைப்பதற்குரிய கோரைப்பெட்டி; a box made of *koraippul* for carrying food materials in boat.

[சோறு + பெட்டி]

சோற்றுப்பை *šōṟṟu-p-pai*, பெ. (n.) இரைப்பை; stomach as a receptacle for food.

[சோறு + பை]

சோற்றுப்பொதி *šōṟṟu-p-podi*, பெ. (n.) பொதிச்சோறு (இ.வ.); food tied up in a cloth for use on journey.

ம. சோற்றுப்பொதி

[சோறு + பொதி]

சோற்றுமயக்கம் *šōṟṟu-mayakkam*, பெ. (n.) சோற்றுத்தூக்கம் பார்க்க; see *šōṟṟu-t-tūkkam*.

ம. சோற்றுமயக்கம்

[சோறு + மயக்கம்]

சோற்றுமரம் *šōṟṟu-maram*, பெ. (n.) உறுதியில்லாத (வைரமில்லாத) மரம் (வின்.); tree which is all sap-wood.

[சோறு + மரம்]

சோற்றுமாடு *šōṟṟu-māḍu*, பெ. (n.) பயன்பாடற்றவன் (வின்.) (சோறு தின்பதற்கு மாத்திரமுள்ள மாடு போன்றவன்); worthless fellow, as fit for nothing but eating.

[சோறு + மாடு]

சோற்றுமுத்து *šōṟṟu-muttu*, பெ. (n.) போலி முத்து (இ.வ.); artificial pearl.

[சோறு + முத்து]

சோற்றுருவி *šōṟṟuruvi*, பெ. (n.) உடல்; body.

[சோறு + (உரு→) உருவி]

சோற்றுறக்கம் *šōṟṟuṟakkam*, பெ. (n.) சோற்றுத் தூக்கம் (இ.வ.) பார்க்க; see *šōṟṟu-t-tūkkam*.

[சோறு + உறக்கம்]

சோறாக்கி *šōṟākki*, பெ. (n.) சமையற்காரன் (இ.வ.); cook.

[சோறு + ஆக்கி (ஆக்குபவன்)]

சோறாக்கு-தல் *šōṟākku-*, 5 செ.கு.வி. (v.i.) உணவு சமைத்தல்; to cook food.

ம. சோறாக்குக

[சோறு + ஆக்கு]

சோறாள்வி *šōṟāḷvi*, பெ. (n.) சோறாக்கி பார்க்க; see *šōṟākki*. "ஆண்பிள்ளைச் சோறாள்வியை" (திவ். பெரியதி. 2. 5:1, வியா.).

[சோறு + ஆள்வி]

சோறு[1] *šōṟu*, பெ. (n.) 1. சமைத்த அரிசி (அன்னம்); boiled or cooked rice (used also to the sense of food in general). "ஏற்றுக வுலையே வாக்குக சோறே" (புறநா. 172). ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம். 2. பனை முதலியவற்றின் உள்ளீடு; pith in palms and other plants, as soft and white like boiled rice. 3. தாழைமடல் முதலியவற்றின் உள்ளீடு; filament, as of the flower of the screw-pine. 'சோறவிழ்ப்பன மடற்கைதை' (பெரியபு. திருக்குறிப். 36). 4. வீடுபேறு; final bliss, beatitude. "பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்" (திருவாச. 15:7). 5. உணவு; food. ஒரு வேளைச் சோற்றுக்கே வழியில்லை.

ம. சோறு, சோர்; க. சோறு; எர. சோறு; துட. த்விர்

[சொல் (நெல்) → சோறு]

சோறு[2] *šōṟu*, பெ. (n.) தாழி (பரணி)நாண்மீன்; the second nakṣatra. "சதயமுதற் சோறளவும் வஞ்சிக்கும்" (இலக். வி. 881).

[சோறு [1] → சோறு [2]]

சோறு[3] *šōṟu*, பெ. (n.) வங்கியத்தின் (மிருதங்கத்தின்) நடுப்பாகத்திற் பூசுங் கலவைச் சாந்து (கலைமகள். 12, 401); paste used in drums.

[சோறு [1] → சோறு [3]]

சோறுகவிழ்-த்தல் *šōṟu-kaviḻ-*, 4 செ.கு.வி. (v.i.) சோறாக்கு (நாஞ்.) பார்க்க; see *šōṟākku*.

[சோறு + கவிழ்-.]

சோறுகொல்லி *šōṟu-kolli*, பெ. (n.) 1. பெருந்தீனிக்காரன்; glutton. 2. மருந்துச் சரக்கு வகை (அன்னபேதி); green vitriol.

[சோறு + கொல்லி]

சோறுபடை-த்தல் *šōṟu-paḍai-*, 4 செ.கு.வி. (v.i.) சோறு பகிர்ந்தளித்தல் (உ.வ.); to serve boiled rice on plates or leaves.

[சோறு + படை-.]

சோறுபொங்கு-தல் *šōṟu-poṅgu*, 5 செ.கு.வி. (v.i.) சோறாக்கு-தல் பார்க்க; see *šōṟākku.*

[சோறு + பொங்கு-.]

சோறுபொலிதல் *šōṟu-polidal*, பெ. (n.) சோறு மலர்தல்,1 (வின்.) பார்க்க; see *šōṟu-malardal,1.*

[சோறு + பொலிதல்]

சோறுமலர்தல் *šōṟu-malardal*, பெ. (n.) 1. அரிசி நன்றாய்ப் பதப்படுகை; the state of rice being well-cooked. 2. சமைக்கும்போது சோறு பொங்கி வழிகை; the overflow of rice in boiling.

[சோறு + மலர்தல்]

சோறுமாட்டு *šōṟu-māṭṭu*, பெ. (n.) பிற்காலச் சோழர் காலத்து வழங்கிய வரிவகை (தெ.க.தொ. 3, 142); a tax levied during the time of the later Cōḻas.

[சோறு + மாட்டு]

சோறுமாடு *šōṟu-māḍu*, பெ. (n.) வரிவகை (தெ.க.தொ. 3, 27); a kind of tax.

[சோறு + மாடு]

சோறுவடி-த்தல் *šōṟu-vaḍi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. சோறாக்கு-தல் (இ.வ.) பார்க்க; see *šōṟākku.* 2. சமைத்த சோற்றினின்று கஞ்சியை வடித்தல் (வின்.); to strain conjee water from boiled rice.

ம. சோறுவார்க்குக

[சோறு + வடி]

சோறுவாய்-த்தல் *šōṟu-vāy-*, 4 செ.கு.வி. (v.i.) செஞ்சோற்றுக் கடன் கழித்தல்; to render a suitable return to one who has provided food. "சோறுவாய்த் தொழிந்தோர்" (முல்லைப். 72).

[சோறு + வாய்]

சோறூட்டல் *šōṟūṭṭal*, பெ. (n.) குழந்தைக்கு முதன் முறையாகச் சோறூட்டுகை; first feeding of an infant with boiled rice.

[சோறு + ஊட்டல்]

சோறூறுதல் *šōṟūṟudal*, பெ. (n.) தீக்குறைவால் சோறு பதமாகாமை (யாழ்ப்.); the state of rice being too much soaked over insufficient fire.

[சோறு + ஊறுதல்]

சோனகத்திருக்கை *šōṉaga-t-tirukkai*, பெ. (n.) மஞ்சட் பழுப்பு நிறமுள்ளதும் 13 அடி நீளமும் 5 அடி குறுக்கும் வளரக்கூடியதுமான திருக்கை மீன் வகை; sting ray yellowish brown, attaining 13ft. in length, 5 ft. across the disc.

சோனகப்புல் *šōṉagappul*, பெ. (n.) திராய்ப்புல்; a kind of straw plant.

ம. சோனகப்புல்லு

சோனகப்பூ *šōṉagappū*, பெ. (n.) நாகப்பூ; scarlet flowered plant.

சோனகம் *šōṉagam*, பெ. (n.) தென்கிழக்குக் காற்று; wind from southeast.

[சோனம் → சோனகம்]

சோனகவாளை *šōṉaga-vāḷai*, பெ. (n.) ஒரு வகை வெண்ணிறமுள்ளதும் 26 விரலம் வரை வளரக்கூடியதுமான வாளை மீன்; sea-fish, burnished silvery, attaining 26 in. in length.



சோனகவாளை

சோனம் *šōṉam*, பெ. (n.) முகில்; cloud. "சோனந்தரு குழலார்" (பதினொ. ஆளு. மும். 12).

க. சோனெ; தெ. சோன

[சோனை → சோனம்.]

சோனாகம் *šōṉāgam*, பெ. (n.) பெருவாகை; common sirissa.

சோனாமாரி *šōṉāmāri,* பெ. (n.) விடாப் பெருமழை; incessant downpour of rain. சோனா மாரியாய்ச் சொரிகிறதே (உவ.)

[சோனைமாரி → சோனாமாரி]

சோனாமேகம் *šōṉā-mēgam,* பெ. (n.) விடாமழை பொழியும் முகில்; clouds incessantly pouring rain. "சோனாமேகம் பொழிவது போல்" (பாரத. பதினேழாம் 135).

[சோனைமேகம் → சோனாமேகம்]

சோனாவாரி *šōṉā-vāri,* பெ. (n.) சோனாமாரி (யாழ்ப்) பார்க்க; see *šōṉā-māri.*

[சோனாமாரி → சோனாவாரி]

சோனி *šōṉi,* பெ. (n.) *1.* வளர்ச்சியற்றது; that which is stunted. *2.* மெலிந்தவன்-ள்; thin or lean person. ஏன் இப்படிச் சோனியாக இருக்கிறாய்.

[சோர் → (சோ) → சோனம்.]

சோனிக்கரைச்சல் *šōṉi-k-karaiccal,* பெ. (n.) தெற்கிலிருந்து வடக்காய் செல்லும் கடல் நீரோட்டம்; an undercurrent in the sea running from south to north.

[சோனம் → சோனி + கரைச்சல்]

சோனிக்கரையெடுப்பு *šōṉi-k-karai-y-eḍuppu,* பெ. (n.) தென்கிழக்கிலிருந்து தென் மேற்காய் செல்லும் கடல் நீரோட்டம்; an undercurrent in the sea running from southeast to southwest.

[சோனி + கரையெடுப்பு]

சோனிசி *šōṉiši,* பெ. (n.) குகை (யாழ். அக.); cave.

[சோனி → சோனிசி]

சோனிமேமுறி *šōṉi-mēmuṟi,* பெ. (n.) தென்மேற்கிலிருந்து வடகிழக்காய் செல்லும் கடல் நீரோட்டம்; an undercurrent in the sea running from south west to south east.

[சோனி + மேமுறி]

சோனிமேமுறி வெள்ளம் *šōṉi-mēmuṟi-veḷḷam,* பெ. (n.) மேற்கு திசையிலிருந்து வடகிழக்கு திசை நோக்கி ஓடும் கடல் நீரோட்டம் (மீனவ.); an undercurrent in the sea running from west to north east.

[சோனி + மேல் + முறி + வெள்ளம்]

சோனிவெள்ளம் *šōṉi-veḷḷam,* பெ. (n.) தென்திசையிலிருந்து வடதிசை நோக்கி ஓடும் கடல் நீரோட்டம் (மீனவ.); an undercurrent in the sea running from south to north.

[சோனி + வெள்ளம்]

சோனை[1] *šōṉai,* பெ. (n.) *1.* கார்முகில்; dark, moisture-laden clouds. "சோனை வார் குழலினார்" (கம்பரா. நீர்விளை. 14). *2.* சோனாமாரி (பிங்.) பார்க்க; see *šōṉā-māri.* "மேகஞ்சோனைபட" (கம்பரா. குகப். 20). *3.* வானினின்று நீருற்றுச் சொரிவது போன்ற விடாப் பெரும் பெயல்; pouring rain, rain falling in torrents. *4.* மலையடிவார விடா மழைச்சாரல்; constant drizzle from clouds gathering on hill-tops.

க. சோனெ; தெ. சோன

[சுனை → (சொனை) → சோனை. சுல் (துளைத்தல்) → (சுன்) → சுனை = நீரூற்று]

சோனை[2] *šōṉai,* பெ. (n.) முக்கோல் (திருவோணம்) விண்மீன் (பிங்.) பார்க்க; see *tiruvōṇam,* the 22nd nakṣatra.

சோனை[3] *šōṉai,* பெ. (n.) கைப்பிடிச் சுவர் (இ.வ.); parapet wall.

[சோ → சோனை. சோ = மதில்.]

சோனைகட்டுதல் *šōṉai-kaṭṭutal,* பெ. (n.) தூரத்தில் மழை பெய்யுங் குறிப்பாக ஓரிடத்தில் மேகம் மூடியிருக்கை (உ.வ.); darkening with moisture - laden clouds, as an indication of heavy shower at distance.

[சோனை + கட்டுதல்]

சோனைத்தூற்றல் *šōṉai-t-tūṟṟal,* பெ. (n.) மழை தூற்றல் (உ.வ.); drizzle.

[சோனை[1] + (தூறல் →) தூற்றல்]

சோனைப்புல் *šōṉai-p-pul,* பெ. (n.) புல் வகை; Guinea grass.

சோனைமழை *šōṉai-maḻai,* பெ. (n.)

சோனைமழை *šōṉai-maḻai,* பெ. (n.) 1. பெருமழை; heavy rain. 2. விடா மழை; continuous rain.

பட. சோனெமே

[சோனை¹ + மழை]

சோனைமாரி *šōṉai-māri,* பெ. (n.) சோனாமாரி பார்க்க; see šōṉā-māri. "சோனைமாரியிற் சொரிந்தனன்" (கம்பரா. பிரமாத்திர. 59).

[சோனை¹ + மாரி]

சோனைமேகம் *šōṉai-mēgam,* பெ. (n.) சோனாமேகம் பார்க்க; see šōṉā-mēgam. "சொரிந்தது சோனைமேகம்" (பாரத. சம்பவ. 79).

[சோனை + மேகம்].

சௌ

சௌ *cau/šau,* பெ. (n.) 'ச்' என்ற மெய்யொலியும், 'ஔ' என்ற உயிரொலியும் சேர்ந்தமைந்த உயிர் மெய்யெழுத்து; the compound of 'c', 'š' and 'au'.

[ச் + ஔ - சௌ]

சௌடு *šaudu,* பெ. (n.) 1. உவர்மண்; fuller's earth. 2. வண்டல்; sediment.

[சவடு → சௌடு]

ஞ்

ஞ் *ñ,* தமிழ் நெடுங்கணக்கில், நான்காவதும் இடையண்ண ஒலிப்புடையதுமான மெல்லின இரண்டாம் மெய்யெழுத்து; the fourth consonant being the palatal nasal.

ஞ

ஞ *ña,* தமிழ் நெடுங்கணக்கில், 'ஞ்'கர மெய்யொலியும் 'அ'கர உயிரொலியும் சேர்ந்த உயிர்மெய் யெழுத்து; the compound of ñ and a, palatal naral.

[ஞ் + அ - ஞ]

ஞஃகான் *ñakkāṉ,* பெ. (n.) 'ஞ' என்னும் எழுத்து; the letter 'ña'. 'ஞஃகா னுறழும்' (நன். 124).

ஞஞ்ஞை *naññai,* பெ. (n.) மயக்கம்; delirium. 'ஞஞ்ஞை யுற்றோ னவிநயம் (சிலப். 3-13), உரை).

ஞஞ்ஞையெனல் *ñaññai-y-eṉal,* பெ. (n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. of running at the nose, speaking through one's nose, crying of a child.

[ஞஞ்ஞை + எனல்]

ஞண்டு *ñaṇḍu,* பெ. (n.) 1. நண்டு (தொல். சொல். 452, உரை); crab, lobster. 2. கற்கடக ஓரை (சோதிடக்.); Cancer in the zodiac.

மறுவ. கற்கடகம், அலவன்

ம. ஞண்டு; க. எண்ட்ரகாயி, ஏடி, எசடி; தெ. எண்ட்ரி, எண்ட்ரகாயி, எண்ட்ரிக; குட. ஞண்டி; கோத. நய்ள்; கோண். ஏடே, யந்தீ; நா. எண்டெ; கொலா. என்டெ, எந்தெ; பர். இர்தி; கட. இரித்

[ஞெண்டு → ஞண்டு]

ஞமகண்டன் *ñama-kaṇḍaṉ,* பெ. (n.) ஒரு காணாக்கோள் (வின்.); an invisible inauspicious planet.

[ஞமன் + கண்டன்]

ஞமர்-தல் *ñamar-,* 2 செ.கு.வி. (v.i.) ஞெமிர்-பார்க்க; see ñemir-. "வரிமணன் ஞமர" (புறநா. 90).

[ஞெமிர் → ஞமர்-]

ஞமலி *ñamali,* பெ. (n.) 1. நாய்; dog. 'கூருகிர் ஞமலி' (பட்டினப். 140). 2. மயில் (பிங்.); peacock. 3. கள் (சூடா.); toddy.

ம. ஞமலி; க. நவல், நவில், நவலு, நவிலு, நெமலி; தெ. நமிலி, நெமலி, நெமிலி, நெவிலி; து. நெயிலு; நா. நம்லி, லம்லி; பட. நவிலு; கொலா. நம்லீ, நம்லி

[ஞெமல் → ஞமலி]

ஞமன்[1] *ñaman*, பெ. (n.) கூற்றுவன்; Yamā, the god of Death. "ஞமற்கோலை வைத்தன்ன வொண்டிற லாற்றலான்" *(சீவக. 251)*.

ம. ஞமன்

[யமன் → ஞமன்]

ஞமன்[2] *ñaman*, பெ. (n.) துலைக்கோலின் சமன்வாய்; pointer of a balance. "தெரிகோன் ஞமன்ன் போல" *(புறநா. 6:9)*.

[சமன் → ஞமன்]

ஞயம் *ñayam*, பெ. (n.) 1. இனிமை; pleasantness, refinement. ஞயம்பட்வுரை (ஆத்திசூடி.). 2. நயம்; cheapness. 3. மேன்மை; greatness.

[நயம் → ஞயம்]

ஞரல்(லு)-தல் *ñaral-*, 5 செ.கு.வி. (v.i.) முழங்குதல்; to sound, make noise. "புணரி வளைஞரல" *(பதிற்றுப். 30:6)*.

ம. ஞரங்ஙுக; க. நாகு, நரல், நெரளு; தெ. நாக; து. நரகுனி, நர்குனி, நரலுனி, நெர்லுனி, நர்லுனி; குட. நெரக்; குரு. நர்யானா; மா. நிரெ; பட. நரகு

ஞரல்வு *ñaralvu*, பெ. (n.) ஒலி; sound.

மறுவ. ஓசை, முழக்கம்

[ஞரல் → ஞரல்வு]

ஞரிவாளை[1] *ñari-vāḷai*, பெ. (n.) பூடுவகை; bushy fire-brand teak.

ஞரிவாளை[2] *ñari-vāḷai*, பெ. (n.) சிறுதேக்கு (M.M.95); long-flowered lance-leaved glory tree.

[நரி + வேளை ~ நரிவேளை → ஞரிவாளை]

ஞலவல் *ñalaval*, பெ. (n.) 1. கொசுகுவகை (பிங்.); a species of gnat. 2. மின்மினிப்பூச்சி (அக.நி.); firefly, glow-worm.

ஞவல் *ñaval*, பெ. (n.) ஞலவல் (அக.நி.) பார்க்க; see *ñalaval*.

ஞறா *ñaṟā*, பெ. (n.) மயிற்குரல் (சது.); peacock's cry.

ஞா

ஞா[1] *ñā*, தமிழ் நெடுங்கணக்கில், 'ஞ்' என்ற மெய்யொலியும் 'ஆ' வெனும் உயிரொலியும் சேர்ந்தமைந்த உயிர்மெய்யெழுத்து; the syllable formed by the addition of the long vowel 'ā' to the consonant 'ñ'.

[ஞ் + ஆ ~ ஞா]

ஞா[2] *ñā*, 1. கட்டு; bind. 2. பொருந்து; joint (சா.அக.).

ஞா[3]**-த்தல்** *ñā-*, 4 செ.குன்றாவி (v.t.) கட்டுதல் (யாழ்.அக.); to tie, fasten.

ஞா[4]**-த்தல்** *ñā-*, 4 செ.கு.வி (v.i.) பொருந்துதல்; to stick, adhere. 'மண் ஞாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே' *(தொல். எழுத்து. 146. உரை)*.

ஞாங்கர்[1] *ñāṅgar*, பெ. (n.) 1. பக்கம் (திவா.); side. 2. இடம் (திவா.); place, situation, locality. 3. வேற்படை; lance, dart. "ஞாங்கர் வினைப்பூண் டெண்மணி வீழ்ந்தன" *(நற். 171)*. 4. கரை; bank. "ஞாநமா தீர்த்தஞாங் கரிருந்தவை நயந்து செய்யில்" *(திருவிளை. தீர்த்த விசேட. 23)*.

[ஆங்கு → ஞாங்கு → ஞாங்கர்]

ஞாங்கர்[2] *ñāṅgar*, கு.வி.எ. (adv.) 1. மேல்; above, on, over. "ஞாங்கர் . . . உழவர் . . . பெரும்பகடு புதவிற்பூட்டி" *(பெரும்பாண். 196)*. 2. அங்கே; there. "ஞாங்கர் வருடை மடமறி யூர்விடைத் துஞ்சும்" *(கலித். 50)*. 3. முன்; before, forward, in front. "ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக" *(தொல். பொருள். 141)*. 4. இனி (சங். அக.); henceforth, henceforward, hereafter.

[ஆங்கு → ஞாங்கு → ஞாங்கர்]

ஞாஞ்சில் *ñāñjil*, பெ. (n.) 1. கலப்பை (அக.நி.); plough. 2. மதிலுறுப்பு; a component part of a fortification.

ம. ஞேங்ஙோல்; க. நேகல், நேகில், நேகில; தெ. நாகலி, நாகெலு, நாகேலு; து. நயெரு;

குட. நெங்கி; கோத. நேல்க்; கோண். நாங்கேல்; கூ. நான்கெலி; குவி. நன்கெல்லி; நா. நாங்கர்; கொலா. நாங்கலி, நாங்ஙலி; பர். நாகில்

Skt. lāṅgala; pāli. naṅgala

[நாஞ்சில் → ஞாஞ்சில்]

ஞாட்பு *ñāṭpu*, பெ. (n.) 1. போர்; battle, fight. "கடல் வயிறு கலக்கிய ஞாட்பும்" (சிலப். 26:237). 2. போர்க்களம்; battlefield. "ஞாட்பினு ளண்ணாரு முட்குமென் பீடு" (குறள், 1088). 3. படை; army. 4. கூட்டம் (சூடா.); assemblage, crowd. "வந்தனர் மண ஞாட்பின்" (காஞ்சிப்பு தழுவக். 279). 5. கனம் (பிங்.); thickness, heaviness. 6. வன்மை (வின்.); power, strength, force.

ஞாடு *ñāḍu*, பெ. (n.) நாட்டுப்பகுதி; district, country. "வேங்கைஞ்ஞாடும்" (தெ.க.தொ. 3,5).

[நாடு → ஞாடு]

ஞாண் *ñāṉ*, பெ. (n.) 1. கயிறு; string, cord. "திண்ஞா ணெழினி வாங்கிய" (முல்லைப். 63). 2. வில்லின் நாண்; bowstring. "சாப நோன் ஞாண்" (புறநா. 14:9).

ம. ஞாண், ஞாணு; க. நேணு, நேண்; தெ. நானு (ஒருவகைக் கழுத்தணி); து. நேணு;கோண். நோனே; கூ. நோணு, நோசு

[நாண் → ஞாண்]

ஞாண்டு *ñāṇḍu*, பெ. (n.) நண்டு; crab (சா.அக.).

மறுவ. அலவன், கற்கடகம்.

[நண்டு → ஞண்டு → ஞெண்டு → ஞாண்டு]

ஞாய் *ñāy*, பெ. (n.) தாய்; mother. "ஞாயையு மஞ்சுதி யாயின்" (கலித். 107).

[யாய் → ஞாய்]

ஞாயம் *ñāyam*, பெ. (n.) நேர்மை, உண்மை; honesty, truth. "நன்று நன்றரசர் ஞாயமே" (பாரத. கிருட்டிண. 122).

[நயம் → நாயம் → ஞாயம்]

ஞாயில் *ñāyil*, பெ. (n.) 1. கோட்டையின் ஏவறை; breast-work in fortification, bastion. "ஞாயிலுஞ் சிறந்து" (சிலப். 15:217). 2. மதில் (திருவிளை. நரிபரி. 86); fort-wall..

ம. ஞாயில்

ஞாயில்காவல் *ñāyil-kāval*, பெ. (n.) நகர்ப்பாது காப்பு (W.G.); guarding a town, as keeping watch over its fortress.

[ஞாயில் + காவல்]

ஞாயிற்றுக்கிழமை *ñāyiṟṟu-k-kiḻamai*, பெ. (n.) கிழமை (வார) நாட்களுள் முதலாவது; sunday, first day of the week.

[ஞாயிறு + கிழமை]

ஞாயிற்றுக்கிழமைநோன்பு *ñāyiṟṟu-k-kiḻamai-nōṉbu*, பெ. (n.) கண்ணோய் வராதிருத்தற் பொருட்டுக் கதிரவனைக் குறித்து ஞாயிற்றுக் கிழமையில் மேற்கொள்ளும் நோன்பு; sunday fast in honour of the Sun, observed primarily for the prevention of eye-disease.

[ஞாயிற்றுக்கிழமை + நோன்பு]

ஞாயிறு *ñāyiṟu*, பெ. (n.) 1. கதிரவன்; the sun. "ஞாயிறு போல விளங்குதி" (பதிற்றுப். 88:38). 2. ஞாயிற்றுக்கிழமை பார்க்க; see *ñāyiṟṟu-k-kiḻamai*.

மறுவ. பகலவன், செங்கதிர்ச் செல்வன், கதிரவன்.

ம. ஞாயர்; க. நேசர், நேசரு; து. நெசுரு (காலை); மா. நீறு (ஞாயிற்றொளி); துட. நொர்; Pkt. ṇesar

[நாயர் → (நாயிர்) → நாயிறு → ஞாயிறு (வ.மொ.வ.337)]

ஞாயிறுதிரும்பி *ñāyiṟu-tirumbi*, பெ. (n.) 1. சூரியகாந்தி (மலை.); sunflower. 2. நெருஞ்சி; cow's thorn.

[ஞாயிறு + திரும்பி]

ஞாயிறுபோது *ñāyiṟu-pōtu*, பெ. (n.) உச்சிப் போது; midday. "விடிவோரை நட்டு ஞாயிறு போது வந்து பார்த்தால்" (திவ். திருப்பா. 3:62, வியா.) .

[ஞாயிறு + (பொழ்து →) போது]

ஞாயிறுவணங்கி *ñāyiṟu-vaṇaṅgi,* பெ. (n.) கொள்ளுக்காய் வேளை; purple wild indigo.

[ஞாயிறு + வணங்கி]

ஞால்(லு)-தல் *ñāl-,* 5 செ.கு.வி. (v.i.) 1. தொங்குதல்; to hang. "ஞான்றன வயிரமாலை" *(சீவக. 140).* 2. பொழுது சாய்தல்; to decline, descend, as the sun. "பட்ட மாரி ஞான்ற ஞாயிற்று" *(புறநா. 82:2).*

ம. ஞாலுக; க. நேல்; தெ. வாலு, வோலு; து. நேலுனி, நெல்புனி; குட. நேர், நேத்; கோத. நேத்; பட. நேனு

[நால் → ஞால்]

ஞாலம் *ñālam,* பெ. (n.) 1. நிலம் (பூமி); earth. "மண்டிணி ஞாலத்து" *(பு.வெ. 2:14, கொளு).* 2. உலகம்; world, universe. "ஞால மூன்றடித் தாயமுதல்வற்கு" *(கலித். 124).* 3. உயர்ந்தோர்; the great, the wise. "இம்மூவர் ஞாலமெனப் படுவார்" *(திரிகடு. 26).* 4. தோணி அசையாது நிலைத்து நிற்பதற்கு இடும் மண் முதலிய சுமை; ballast of a dhoney, as sand. தோணிக்கு ஞாலமேற்றி னான் *(யாழ்ப்.).*

ம. ஞாலம்; தெ. நேல; கோண். நேலி; கூ. நேல, நேத; குவி. நேல; நா. ஏல்; கொலா. என்; குரு. நால் (மட்டமான நிலம்)

[ஞால் → ஞாலம் (த.வ.146)]

ஞாலம் *ñālam,* பெ. (n.) 1. ஊமத்தை; purple stramony.

ஞாலமுண்டோன் *ñālam-uṇḍōṉ,* பெ. (n.) திருமால்; Thirumāl.

[ஞாலம்' + உண்டோன்]

ஞாலல்[1] *ñālal,* பெ. (n.) மின்மினிப்பூச்சி; firefly or glowworm *(சா.அக.).*

[ஞலவல் → ஞாலல்]

ஞாலல்[2] *ñālal,* பெ. (n.) தொங்குதல்; hanging.

[ஞால் → ஞாலல்]

ஞாலற்பூ *ñālaṟpū,* பெ. (n.) ஞாழல்பூ பார்க்க; see *ñāḻalpū (சா.அக.).*

ஞாலித்தட்டு *ñāli-t-taṭṭu,* பெ. (n.) சிற்றுருக்களோடு சேர்த்து மகளிர் கழுத்திலணியும் அணிவகை (நாஞ்.); a kind of woman's ornament, worn along with ciṟṟuru.

[ஞால் → ஞாலி + கட்டு]

ஞாலுத்தட்டு *ñālu-t-taṭṭu,* பெ. (n.) ஞாலித் தட்டு (நாஞ்.) பார்க்க; see *ñāli-t-taṭṭu.*

ஞாழ் *ñāḻ,* பெ. (n.) யாழ்; a stringed musical instrument. "தன் ஞாழ் நவிற்றிய தாமரை யங்கை" *(பெருங். மகத. 6:17).*

[யாழ் → ஞாழ்]

ஞாழல் *ñāḻal,* பெ. (n.) 1. புலிநகக்கொன்றை; orange-cup-calyxed brasiletto climber wagaty. "குவியிணர் ஞாழல்" *(பதிற்றுப். 51:5).* 2. மயிற் கொன்றை (மலை.); peacock's crest. 3. பொன்னாவிரை (மலை.); fetid cassia. 4. கோங்கு (திவா); false tragacanth. 5. மல்லிகை வகை (வின்.); jasmine. 6. கொடி வகை (வின்.); cinnamon. 7. குங்குமம் (அக.நி.); saffron. 8. மரவாயிரம் (வின்.); heart-wood. 9. ஆண்மரம் (அக.நி.); hard, solid wood.

ம. ஞாழல்; க. நேழல், நெழல்

ஞாழல்பூ *ñāḻalpū,* பெ. (n.) குங்குமப்பூ; saffron *(சா.அக.).*

ஞாழல்மா *ñāḻalmā,* பெ. (n.) ஒட்டுமாமரம்; grafted mango tree *(சா.அக.).*

[ஞாழல் + மா. மா = மாமரம்]

ஞாழல்மாது *ñāḻal-mādu,* பெ. (n.) ஊமத்தை (மலை.); trumpet flower.

ஞாழல்வாசுகி *ñāḻal-vāśugi,* பெ. (n.) பெரியாநங்கை; polygala elongata *(சா.அக.).*

ஞாழல்விரை *ñāḻal-virai,* பெ. (n.) பொன்னா விரை; cassia siamea *(சா.அக.).*

ஞாழி *ñāḻi,* பெ. (n.) வள்ளைக் கொடி (மலை.); aquatic convolvulus.

ஞாளம்[1] *ñāḷam,* பெ. (n.) தண்டு; flower-stalk. "அம்புய ஞாளநூலாலே" *(ஞானவா. உற்ப. 30).*

[நாளம் → ஞாளம்]

ஞாளம்[2] *ñāḷam,* பெ. (n.) பொன்னாக்கத்தில் மாழை உருக்குவதற்கான குகை; crucible as in. "ஞாளத்தில் வைத்தூதல்" *(in alchemy)* (சா.அக.).

[நாளம் → ஞாளம்]

ஞாளம்[3] *ñāḷam,* பெ. (n.) படர்கொடி; creeper.

[நாளம் → ஞாளம்]

ஞாளி[1] *ñāḷi,* பெ. (n.) நாய்; dog. "வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழும்" *(அகநா.122).*

[ஞமலி → ஞாளி]

ஞாளி[2] *ñāḷi,* பெ. (n.) கள் (பிங்.); toddy.

ஞாளி[3] *ñāḷi,* பெ. (n.) கோழி; fowl (சா.அக.).

ஞாளி[4] *ñāḷi,* பெ. (n.) ஞாழி (வின்.) பார்க்க; see *ñāḻi.*

[ஞாழி → ஞாளி]

ஞாளிகம் *ñāḷikam,* பெ. (n.) வள்ளைக் கொடி; a creeper, convolvulus repens (சா.அக.).

[ஞாளி[4] → ஞாளிகம்]

ஞாளியாதனம் *ñāḷi-y-ādaṉam,* பெ. (n.) ஒரு விருக்கை வகையுளொன்று (தத்துவப். 108, உரை.); a yogic posture.

[ஞாளி[1] + ஆதனம். Skt. āsana → த. ஆதனம்]

ஞாளியூர்தி *ñāḷi-y-ūrdi,* பெ. (n.) நாயை ஊர்தியாக உடைய வைரவன் (பிங்.); Bhairava, as riding a dog.

[ஞாளி[1] + ஊர்தி]

ஞாற்சி *ñāṟci,* பெ. (n.) தொங்குகை; hanging, pending. "ஞாற்சியிற் றிரண்டவந் நாகம்" *(சேதுபு. கந்தமா. 27).*

[நால் → ஞால் → ஞாற்சி]

ஞாற்று[1]**-தல்** *ñāṟṟu-,* 6 செ.குன்றாவி. (v.t.) தொங்கவிடுதல்; to hang up, suspend. 'பூஞாற்றினார்' *(தொல்.எழுத்து. 145, உரை).*

ம. ஞாற்றுக

[நால் → நாற்று → ஞாற்று-.]

ஞாற்று *ñāṟṟu,* பெ. (n.) ஞாற்சி பார்க்க; see *ñāṟci.* "வாவன் ஞாற்றே" (பிங். 3:56).

[ஞால் → ஞாற்று]

ஞாறு-தல் *ñāṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மணம் வீசுதல்; to smell, emit an odour. "விரை ஞாற வருதென்றல்" *(குளா. இரத். 54).* 2. தோன்றுதல்; "கண்ணிழல் ஞாறிய காமர் பள்ளியுள்" *(பெருங். இலாவாண. 11:15).*

[நாறு → ஞாறு-.]

ஞான்றஞாயிறு *ñāṉṟa-ñāyiṟu,* பெ. (n.) கதிரவன் மறையும் நேரம்; sunset. "ஞான்ற ஞாயிற்றுக் கட்டி னிணக்கு மிழிசினன்" *(புறநா. 82).*

[ஞால் + ஞாயிறு - ஞான்ற ஞாயிறு.]

ஞான்று[1] *ñāṉṟu,* பெ. (n.) 1. பொழுது; time. 2. நாள்; day. "ஊசலூர்ந்தாட வொரு ஞான்று வந்தானை" *(கலித். 37).*

ம. ஞாந்நு

ஞான்று[2] *ñāṉṟu,* கு.வி.எ. (adv.) காலத்தில்; at the time of. "அம்மனைக்கோ லாகிய ஞான்று" *(நாலடி. 14).*

ம. ஞாந்நு

ஞான்றுகொள்(ளு)-தல் *ñāṉṟu-koḷ-,* 16 செ.கு.வி. (v.i.) கழுத்திற் சுருக்கிட்டுச் சாதல்; to hang oneself, commit suicide. "ஞான்று கொள்வேனன்றி யாது செய்வேன்" *(அருட்பா. 2, பிரார்த்தனைப். 2).*

[ஞால் → ஞான்று]

ஞான்றை *ñāṉṟai,* பெ. (n.) ஞான்று பார்க்க; see *ñāṉṟu.* "அரக்கன் வவ்விய ஞான்றை" *(புறநா. 378).*

[ஞான்று → ஞான்றை]

ஞி

ஞி *ñi,* 'ஞ்'கர மெய்யொலியும் 'இ'கர உயிரொலியும் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து; the syllable formed by adding the short vowel 'i' tothe consonant 'ñ'.

[ஞ் + இ - ஞி]

ஞிமிர்[1]**-தல்** *ñimir-,* 2 செ.கு.வி, (v.i.) நிமிர்தல் (சங்.அக.); to be erect.

[நிமிர் → ஞிமிர்-.]

ஞிமிர்²-தல் *ñimir-,* 8 செ.கு.வி. (v.i.) வண்டு முதலியன ஒலித்தல் (சங்.அக.); to sound, buzz, hum, as bees.

[இமிர்- → ஞிமிர்]

ஞிமிர்³ *ñimir,* பெ. (n.) ஒலி (வின்.); sound.

[இமிர் → ஞிமிர்]

ஞிமிறு *ñimiṟu,* பெ. (n.) தேனீ; bee, honey bee. "வரிஞி மிறார்க்கும் வாய்புகு கடாஅத்து" (புறநா. 93:12).

[ஞிமிர்² → ஞிமிறு]

ஞீ

ஞீ *ñī,* 'ஞ'கர மெய்யொலியும் 'ஈ'கார உயிரொலியும் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து; the syllable formed by adding the long vowel 'ī' to the consonant 'ñ'.

[ஞ் + ஈ - ஞீ]

ஞு

ஞு *ñu,* 'ஞ'கர மெய்யொலியும் 'உ' கர உயிரொலியும் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ñ' and 'u'.

[ஞ் + உ - ஞு]

ஞூ

ஞூ *ñū,* 'ஞ'கர மெய்யொலியும் 'ஊ' கார உயிரொலியும் சேர்ந்தமைந்த உயிர்மெய் யெழுத்து; the compound of 'ñ' and 'ū'.

[ஞ் + ஊ - ஞூ]

ஞெ

ஞெ *ñe,* 'ஞ'கர மெய்யொலியும் 'எ' கர உயிரொலியும் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து; the syllable formed by adding the short vowel 'e' to the consonant 'ñ'.

[ஞ் + எ - ஞெ]

ஞெகிழ்-தல் *ñegiḻ-,* 2 செ.கு.வி. (v.i.) 1. கழலுதல்; to become loose, slip off, as bangles. "ஞெகிழ்தொடி யிளையவர்" (கலித். 73:8). 2. தளர்தல் (வின்.); to languish, faint. 3. மனமிளகுதல் (தொல். பொருள். 72, உரை.); to be tender hearted. 4. மலர்தல்; to blossom. "ஞெகிழிதழ்க் கோடலும்" (கலித். 101). 5. உருகுதல்; to melt, as wax. "தீயுறு மெழுகின் ஞெகிழ்வனர்" (ஐங்குறு. 32). 6. மெலிதல்; to become thin, emaciated. "தோண் ஞெகிழ்பு" (கலித். 146:6). 7. சோம்புதல் (பிங்.); to be lazy.

ம. ஞெகிழுக; மா. நெத்கெ

[நெகிழ் → ஞெகிழ்-.]

ஞெகிழம் *ñegiḻam,* பெ. (n.) ஞெகிழி,6 பார்க்க; see ñegiḻi,6. "சீரார் ஞெகிழஞ் சிலம்ப" (கலித். 90).

ம. ஞெகிழம்

[நெகிழ் → ஞெகிழம்]

ஞெகிழி¹ *ñegiḻi,* பெ. (n.) 1. கடைக்கொள்ளி; fire brand. "விடுபொறி ஞெகிழியிற் கொடிபட மின்னி" (அகநா. 108). 2. தீக்கடை கோல்; piece of wood used for kindling fire by friction. "கானவர் . . . ஞெகிழி பொத்த" (குறிஞ்சிப். 226). 3. தீ (பிங்.); fire. 4. விறகு (பிங்.); fuel, fire-wood. 5. கொடுவேலி (மலை.); Ceylon leadwort. 6. சிலம்பு (பிங்.); tinkling anklet.

ம. ஞெகிழி; க. நெகள்; தெ. நெகடி, நெரெ

[நெகிழ் → ஞெகிழி]

ஞெகிழி[2] *ñegiḻi,* பெ. (n.) வெள்ளைச் சோளம்; white maize corn *(சா.அக.).*

ஞெண்டு[1]**-தல்** *ñeṇḍu-,* 5 செ.குன்றாவி, (v.t.) கிண்டுதல் *(கூடா.);* to scratch up, as a hen.

[நெண்டு → ஞெண்டு]

ஞெண்டு[2] *ñeṇḍu,* பெ. (n.) 1. நண்டு; crab. "வேப்பு நனையன்ன நெடுங்க ணீர்ஞெண்டு" *(அகநா. 176).* 2. கடகவோரை *(திவா.);* Cancer in the zodiac.

ம. ஞெண்டு

[நெண்டு → ஞெண்டு]

ஞெண்டுகம் *ñeṇḍugam,* பெ. (n.) பெருவாகை *(மலை.);* siris, a tree.

ஞெமர்-தல் *ñemar-,* 2 செ.கு.வி, (v.i.) 1. பரத்தல்; to spread, extend. "நீர்ஞெமர வந்தீண்டி" *(பதிற்றுப். 72:9).* 2. நிறைதல்; to be full. "இலம்படு புலவ ரேற்றகை ஞெமர" *(பரிபா. 10:126).*

[நிமிர் → ஞெமர்-.]

ஞெமல்[1]**(லு)-தல்** *ñemal-,* 13 செ.கு.வி. (v.i.) 1. திரிதல்; to wander, roam about. "அலர் ஞெமன் மகன்றில்" *(பரிபா. 8:44).*

ஞெமல்[2] *ñemal,* பெ, (n.) சருகு; dry leaf. "படுஞெமல் புதையப் பொத்தி" *(அகநா. 39:7).*

ஞெமலி *ñemali,* பெ, (n.) கொடுநுகம் நாண்மீன் (மகம்) (வீமேசு. உள். நட்சத். 3).

[ஞெமல் (= வளைவு) → ஞெமலி]

ஞெமன்கோல் *ñemaṉ-kōl,* பெ. (n.) துலாக்கோல்; balance, steelyard. "ஞெமன்கோ லன்ன செம்மைத்தாகி" *(மதுரைக். 491).*

[சமன் → ஞெமன் + கோல்]

ஞெமி-தல் *ñemi-,* 2 செ.கு.வி (v.i.) நெரிதல்; to break, to give way, as under a weight. "தேம்பலிடை ஞெமிய" *(திருச்கோ. 165).*

ஞெமிடு-தல் *ñemiḍu,* 5 செ.குன்றாவி. (v.t.) கசக்குதல்; to crush, press out with the hands; to rub. "அங்கை நிறைய ஞெமிடிக் கொண்டுதன்" *(நற். 22).*

[நிமிண்டு → ஞெமிண்டு → ஞெமிடு]

ஞெமிர்[1]**-தல்** *ñemir-,* 2 செ.கு.வி (v.i.) 1. பரத்தல்; to spread, extend. "தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து" *(நெடுநல். 90).* 2. தங்குதல்; to rest, stay. "திருஞெமி ரகலத்து" *(சிலப். 28:157).* 3. முற்றுதல் *(அக.நி.);* to be mature, ripe. 4. ஒடிதல்; to break, snap off. 5. நெரிதல்; to be crushed, compressed; to be pressed out, as pulp. "மார்புறு முயக்கிடை ஞெமிர்ந்த சோர்குழை" *(நற். 20).*

[நிமிர் → ஞெமிர்-.]

ஞெமிர்[2]**-த்தல்** *ñemir-,* 4 செ.குன்றாவி (v.t.) 1. ஒடித்தல் *(திவா.);* to snap, break off. 2. நெரித்தல்; to press with the hands. "சிறுமந்தி . . . தந்தையை . . . விரலான் ஞெமிர்த்திட்டு" *(நாலடி.237).*

[நிமிர் → ஞெமிர்-.]

ஞெமிர்தம் *ñemirdam,* பெ. (n.) உடலுக்கு வரக்கூடிய பற்பல நோய்களைத் தடுக்கும் தன்மை கொண்ட நாற்பக்க பிரண்டை; variety of kitis quadran gularis with square stem *(சா.அக.).*

ஞெமுக்கம் *ñemukkam,* பெ. (n.) அழுந்துகை *(சங். அக.);* yielding to pressure.

[ஞெமுங்கு → ஞெமுக்கம்]

ஞெமுக்கு-தல் *ñemukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) நெருக்கி வருத்துதல்; to press hard. "ஒண்டொடி ஞெமுக்காதீமோ" *(அகநா. 60).*

[ஞெமி → ஞெமு → ஞெமுக்கு-.]

ஞெமுங்கு-தல் *ñemuṅgu-,* 5 செ.கு.வி (v.i.) 1. அழுந்துதல்; to yield, to pressure, to be pressed in, squeezed as ripe fruit. "வளைந்துவர விளமுலை ஞெமுங்க" *(அகநா. 58).* 2. செறிதல் *(திவா.);* to be compact, in close contact.

ம. நமுங்க

[ஞெமுக்கு → ஞெமுங்கு-.]

ஞெமை *ñemai,* பெ. (n.) மரவகை; a tree. "திருந்தரை ஞெமைய பெரும்புனற் குன்றத்து" *(அகநா. 395).*

ஞெயம் *ñeyam,* பெ. (n.) நெய்; ghee.

[நெய் → நெயம் → ஞெயம்]

ஞெரல் *ñeral,* பெ. (n.) *1.* ஒலி; sound, noise. *2.* விரைவு; haste, quickness.

[ஞரல் → ஞெரல்-.]

ஞெரி[1]-தல் *ñeri-,* 2 செ.கு.வி (v.i.) முறிதல் (சங்.அக.); to break, snap off, to be crushed.

ம. ஞெரியுக.

[நெறி → ஞெறி-.]

ஞெரி[2]-த்தல் *ñeri-,* 4 செ.குன்றாவி. (v.t.) நெறித்தல்; to be crushed.

[நெறி → ஞெறி → ஞெரி-.]

ஞெரி[3] *ñeri,* பெ. (n.) முறிந்த துண்டு; cut or broken piece. "முண்ஞெரி" *(நன். 227, விருத்.)*

தெ. நெரிய

[நெறி → ஞெறி → ஞெரி]

ஞெரேரெனல் *ñerēr-eṉal,* பெ. (n.) *1.* விரைவுக் குறிப்பு; onom. expr. of haste. "ஞெரேரெனக் குணக் கெழு திங்கள் கனையிரு ளகற்ற" *(புறநா. 376:7).* *2.* பொதுக்கெனல் (அகநா. 32); suddenness.

[சரேல் → ஞெரேல் → ஞெரேர் + எனல்]

ஞெரேலெனல் *ñerēl-eṉal,* பெ. (n.) *1.* விரைவுக் குறிப்பு; expr. of haste. "சிலைகாலூன்றி ஞெரேலென வளைத்து" *(கந்தபு. அக்கினிமுக. 139).* *2.* அச்சக்குறிப்பு (திவா.); quivering with fear. *3.* ஒலிக்குறிப்பு (பிங்.); sounding, tinkling, rattling. *4.* தண்மைக்குறிப்பு (அக.நி.); being chill.

[சரேல் (விரைவுக்குறிப்பு) → ஞெரேல் + எனல்]

ஞெலி[1]-தல் *ñeli-,* 2 செகுன்றாவி (v.t.) *1.* தீக் கடைதல்; to rub one stick on another for producing fire by friction "ஞெலிதீ விளக்கத்து" *(புறநா. 247:2).* *2.* குடைதல் (அக.நி.); to make hollow.

[நெலி → ஞெலி-.]

ஞெலி[2]-தல் *ñeli-,* 2 செ.கு.வி (v.i.) உரசுதல்; to rub, grate, as bamboos. "ஞெலிகழை" *(ஐங்குறு. 307).*

[நெலி → ஞெலி-.]

ஞெலி[3] *ñeli,* பெ. (n.) கடையப்பட்ட மூங்கில்; grated bamboo. 'ஞெலிசொரி யொண் பொறி' *(அகநா. 39, உரை).*

[நெலி → ஞெலி-.]

ஞெலிகோல் *ñeli-kōl,* பெ. (n.) தீக்கடை கோல்; piece of wood for producing fire by friction. "ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழி" *(பெரும்பாண். 178).*

மறுவ. ஞெகிழி, தீக்கடைகோல், தீக்கோல்

பட. நெலிகோலு

[ஞெலி + கோல்]



ஞெலுவல் *ñeluval,* பெ. (n.) செத்தல் (யாழ்.அக.); dying.

ஞெலுவன் *ñeluvaṉ,* பெ. (n.) தோழன் (சங். அக.); male companion.

[எலுவன் → ஞெலுவன்]

ஞெள்(ளு)-தல் *ñeḷ-,* 15 செ.கு.வி (v.i.) *1.* பள்ளமாதல் (வின்.); to become hollow. *2.* ஒலித்தல் (வின்.); to sound. *3.* உடன்படுதல் (அக.நி.); to agree, yield, consent.

[நொள் (= பள்ளம்) → ஞெள்-.]

ஞெள்ளல்[1] *ñeḷḷal,* பெ. (n.) *1.* குற்றம்; defect, fault. "ஞெள்ளற்பை" *(திருப்பு. 289).* *2.* பள்ளம் (பிங்.); hole, hollow, pit, depression. *3.* பள்ளம் விழுந்த சாலை; road, way. "கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்" *(புறநா. 15).* *4.* மேன்மை (திவா.); greatness. *5.* உடன் படுகை (திவா.); yielding, consenting. *6.* விரைவு (சூடா.); quickness, haste. *7.* மிகுதி (திவா.); abundance.

8. ஒலிக்கை (திவா.); sounding. 9. பூசல் (அக.நி.); fight, strife.

[நொள் → நெள் → ஞெள் → ஞெள்ளல்]

ஞெள்ளல்[2] *ñeḷḷal*, பெ. (n.) சோர்வு; weakness, exhaustion.

[நொள்கு- → நொள்ளல் → நெள்ளல். நொள்கு-தல் = இளைத்தல், சுருங்குதல்-.]

ஞெள்ளெனல் *ñeḷḷeṉal*, பெ. (n.) ஒலிக்குறிப்பு (திவா.); an imitative sound.

[ஞெள் (= ஒலி) + எனல்]

ஞெள்ளை *ñeḷḷai*, பெ. (n.) நாய் (தொல். சொல்.400, உரை); dog.

மறுவ. ஞமலி, குக்கல்

[ஞெள் → ஞெள்ளை]

ஞெளி-தல் *ñeḷi-*, 2 செ.கு.வி (v.i.) 1. நெளிதல் (நன். 104, மயிலை.) பார்க்க; see *ñeḷi-*. 2. பிணங்குதல்; non accepting other's desire be at variance.

[நெளி → ஞெளி]

ஞெளிர்[1]**-தல்** *ñeḷir-*, 2 செ.கு.வி. (v.i.) எடுத்தலோசையுடன் ஒலித்தல் (பிங்.); to sound in a high pitch.

[ஞெள் → ஞெளிர்-.]

ஞெளிர்[2] *ñeḷir*, பெ. (n.) 1. யாழ் முதலியவற்றின் உள்ளோசை (பிங்.); gentle, vibrant, sound as of yāḻ. 2. ஒலி (வின்.); sound.

[ஞெள் → ஞெளிர்]

ஞே

ஞே *ñē*, 'ஞ்'கர மெய்யொலியும் 'ஏ'கார உயிரொலியும் சேர்ந்த உயிர்மெய் யெழுத்து; the syllable formed by adding the long vowel 'ē' to the consonant 'ñ'.

[ஞ் + ஏ - ஞே]

ஞேயம்[1] *ñēyam*, பெ. (n.) கடவுள் (அறிதற் குரியது); God, as the chief objective of knowledge.

[நேயம் → ஞேயம்]

ஞேயம்[2] *ñēyam*, பெ. (n.) 1. நட்பு (அக.நி.); friendship. 2. அன்பு; love.

[நேயம் → ஞேயம்]

ஞேயம்[3] *ñēyam*, பெ. (n.) நெய்; ghee (சா.அக.).

[நேயம் → ஞேயம்]

ஞேயர்[1] *ñēyar*, பெ. (n.) நண்பர் (யாழ்.அக.); friends.

[நேயம் → ஞேயர்]

ஞேயர்[2] *ñēyar*, பெ. (n.) அறிவுடையோர் (யாழ்.அக.); wise persons.

[நேயம் → ஞேயர்]

ஞேயா *ñēyā*, பெ. (n.) பெருமருந்து (மலை.); Indian birthwort.

ஞேயாசிதம் *ñēyāsidam*, பெ. (n.) தேள் கொடுக்கு மூலிகை; scorpion stink plant (சா.அக.).]

ஞை

ஞை *ñai*, 'ஞ்' என்ற மெய்யொலியும் 'ஐ' என்ற உயிர்க்கூட்டொலியும் சேர்ந்த உயிர் மெய்யெழுத்து; the syllable formed by adding the diphthong 'ai' to the consonant 'ñ'.

[ஞ் + ஐ - ஞை]

ஞைஞையெனல் *ñaiñai-y-eṉal*, பெ. (n.) 1. இகழ்ச்சிக் குறிப்பு (வின்.); onom. expr. of ridiculing, mocking with the sound ñai; 2. கெஞ்சுதற்குறிப்பு (இ.வ.); cringing, beseeching. 3. அழுதற்குறிப்பு (இ.வ.) whining, as a child.

[நைநை → ஞைஞை + எனல்]

ஞொ

ஞொ ño, 'ஞ்' என்ற மெய்யொலியும் 'ஒ' என்ற உயிரொலியும் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ñ' and 'o'.

[ஞ் + ஒ - ஞொ]

ஞொள்கு-தல் ñoḷgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. மெலிதல் (திவா.); to languish, become weak, faint, be worn out. 2. குறைவுபடுதல்; to diminish. "புலங்கடைமடங்கத் தெறுதலின் ஞொள்கி" (அகநா. 31). 3. சோம்புதல் (திவா.); to be lazy, dull. 4. அஞ்சுதல் (திவா.); to fear, to be timid, agitated. 5. அலைதல் (பிங்.); to wander. 6. குலைதல் (பிங்.); to be disarranged, thrown into confusion.

[நொள் → நொள்கு → ஞொள்கு-. (சு.வி.59)]

ஞொள்ளெனல் ñoḷ-ḷ-eṉal, பெ. (n.) ஓர் ஒலிக்குறிப்பு (பிங்.); an imitative sound.

[ஞொள் + எனல்]

ஞோ

ஞோ ñō, 'ஞ்' என்ற மெய்யொலியும் 'ஓ' என்ற உயிரொலியும் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ñ' and 'ō'.

[ஞ் + ஓ - ஞோ]

ஞோள்கல் ñōḷkal, பெ. (n.) 1. இளைத்தல்; becoming weak. 2. குறைவுபடுதல்; being diminished. 3. மெலிதல்; emaciation (சாஅக.).

ஞௌ

ஞௌ ñau, 'ஞ்' என்ற மெய்யொலியும் 'ஔ' என்ற உயிரொலியும் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ñ' and 'au'.

[ஞ் + ஔ - ஞௌ]

ட்

ட் ṭ/ḍ. தமிழ்நெடுங்கணக்கின் ஐந்தாவதாகிய வல்லின மெய்யெழுத்து; the fifth consonant, being the cerebral stop.

ட

ட ṭa/ḍa. டகர மெய்யெழுத்தும் அகர உயிரெழுத்தும் சேர்நது பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṭ/ḍ' and 'a'.

[ட் + அ - ட.]

மொழியிடையில் இரட்டித்து வரும்பொழுது ஒலிப்பில்லா ஒலியாக ஒலிக்கப்படும். எ.டு. கட்டம், பட்டம்.

மொழியிடையில் தனித்து வரும்பொது ஒலிப்பு ஒலியாக வரும். எ.டு. படம், இடம்.

டா

டா ṭā/ḍā. டகர மெய்யும் ஆகார உயிரும்சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṭ/ḍ' and 'a'.

[ட் + ஆ - டா.]

டி

டி ṭi/ḍi. டகரமெய்யும் இகர உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṭ/ḍ' and 'i'.

[ட் + இ - டி.]

டீ

டீ ṭī/ḍī. டகரமெய்யும் ஈகார உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṭ/ḍ' and 'ī'.

[ட் + ஈ - டீ.]

டு

டு ṭu/ḍu. டகரமெய்யும் உகர உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṭ/ḍ' and 'u'.

[ட் + உ - டு.]

டூ

டூ ṭū/ḍū. டகரமெய்யும் ஊகார உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṭ/ḍ' and 'ū'.

[ட் + ஊ - டூ.]

டெ

டெ ṭe/ḍe. டகரமெய்யும் எகர உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṭ/ḍ' and 'e'.

[ட் + எ - டெ.]

டே

டே ṭē/ḍē. டகரமெய்யும் ஏகார உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṭ/ḍ' and 'ē'.

[ட் + ஏ - டே.]

டை

டை ṭai/ḍai. டகரமெய்யும் ஐகார உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṭ/ḍ' and 'ai'.

[ட் + ஐ - டை.]

டொ

டொ ṭo/ḍo. டகரமெய்யும் ஒகர உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṭ/ḍ' and 'o'.

[ட் + ஒ - டொ.]

டோ

டோ ṭō/ḍō. டகரமெய்யும் ஓகார உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṭ/ḍ' and 'ō'.

[ட் + ஓ - டோ.]

டௌ

டௌ ṭau/ḍau. டகரமெய்யும் ஔகார உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṭ/ḍ' and 'au'.

[ட் + ஔ - டௌ.]

ண்

ண் ṇ. தமிழ் நெடுங்கணக்கின் மெய்யெழுத்துகளுள் ஆறாவது மெல்லெழுத்து; the sixth consonant, being the cerebral nasal.

[ட் + ஈ - டீ.]

ண

ண ṇa. ணகர மெய்யும் அகர உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṇ' and 'a'.

[ண் + அ - ண]

ணா

ணா ṇā. ணகர மெய்யும் ஆகார உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṇ' and 'ā'.

[ண் + ஆ - ணா]

ணி

ணி ṇi. ணகர மெய்யும் இகர உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṇ' and 'i'.

[ண் + இ - ணி]

ணீ

ணீ ṇī. ணகர மெய்யும் ஈகார உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṇ' and 'ī'.

[ண் + ஈ - ணீ]

ணு

ணு ṇu. ணகர மெய்யும் உகர உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṇ' and 'u'.

[ண் + உ - ணு]

ணூ

ணூ ṇū. ணகர மெய்யும் ஊகார உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṇ' and 'ū'.

[ண் + ஊ - ணூ]

ணெ

ணெ ṇe. ணகர மெய்யும் எகர உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṇ' and 'e'.

[ண் + எ - ணெ]

ணே

ணே ṇē. ணகர மெய்யும் ஏகார உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṇ' and 'ē'.

[ண் + ஏ - ணே]

ணை

ணை ṇai. ணகர மெய்யும் ஐகார உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṇ' and 'ai'.

[ண் + ஐ - ணை]

ணொ

ணொ ṇo. ணகர மெய்யும் ஒகர உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṇ' and 'o'.

[ண் + ஒ - ணொ]

ணோ

ணோ *ṇō*. ணகர மெய்யும் ஓகார உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṇ' and 'ō'.

[ண் + ஓ – ணோ]

ணௌ

ணௌ *ṇau*. ணகர மெய்யும் ஔகார உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'ṇ' and 'au'.

[ண் + ஔ – ணௌ]

CPL600910

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

நான்காம் மடலம் - முதற் பாகம்

தூ, தூ

Vol. IV - Part - I

பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை

தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு

2004

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

த

த் *1*, ஒலிப்பிலா வல்லினப் பல்வெடிப் பொலியான, ஏழாம் மெய்யெழுத்து; the seventh consonant being the voiceless dental stop.

தகர உயிர்மெய்யின் வரிவடிவம், இரு நிலைகளில் கல்வெட்டுக்களில் காணப் படுகிறது. 1) கி.மு. 3-ஆம் நூற்றாண்டை சேர்ந்த தமிழியெழுத்தினின்று வளர்ந்த நிலை. 2) கண்ணெழுத்து அல்லது வட்டெழுத்தினின்று வளர்ந்த நிலை. வட்டெழுத்தினை, மொழிஞாயிறு வெட்டெழுத்து என்று குறித்துள்ளார்.

கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழி யெழுத்தை, முன்னாளில் அசோகன் குகையிற் காணப்படும், பிராமி வரிவடிவத்துடன் ஒப்பிடுவர். முதுபெரும் கல்வெட்டறிஞர் கே.வி. சுப்பிரமணிய ஐயர், தமிழியெழுத்து என்று நிறுவியுள்ளார். இவர் மதுரை மாவட்டத்திலுள்ள திருப்பரங்குன்றம், ஆனைமலை, அழகர்மலை, மீனாட்சிபுரம் போன்ற இடங்களிற் காணப்படும், தமிழிக் கல்வெட்டில் உள்ள த, ற, ழ, ள, ன ( ) முதலான உயிர்மெய் வரிவடிங்களைக் காட்டி, தமிழியென்று உறுதிப்படுத்துகிறார்.

வரிவடிவம் வருமாறு வெட்டெழுத்து

கி.மு. 3 - மதுரை மாவட்டத்திற் காணப்படும் வரி வடிவம்

அசோகன் குகையெழுத்துக் கல்வெட்டில்

கி.பி. 5 இல்

கோமாசி மாறன் வெட்டெழுத்துக் கல்வெட்டில்



கி.பி. 7 இல் பிற கல்வெட்டில்

கி.பி.7 இல் பல்லவர் கல்வெட்டில்

கி.பி. 8 இல்

செங்கம் மாவட்டம் இருளப்பட்டிக் கல்வெட்டில்

கி.பி. 9 இல்

செங்கம் நடுகற் கல்வெட்டில்

பராந்தகன் கி.பி. 10இல் கல்வெட்டு

பாண்டியன் தளவாய்புரச் செப்பேட்டில், கி.பி. 10 இல்

கி.பி. 11 இல் தமிழி யெழுத்து

கி.பி. 11 இல் சோழர் பாண்டியர் கல்வெட்டுகளில்

கி.பி. 12 இல் தமிழி யெழுத்து இன்றைய நிலையையடைந்தது

கி.பி. 13 இல் முழு வடிவம் பெற்றது

கி.பி. 15 இல்



தமிழியெழுத்து: *கீழ்க்கவித்த போன்றதின் மேற்கோடு, வலப்புறம் சாய்ந்தது; பின் வலப்புறக்கோடு 'டு' என்பதில் போல, இடஞ் சொல்லும் வளைவாயிற்று. பின் இடையே ஒரு சுழி வளர்ந்தது. கீழ் நோக்கிய வளைவு அளவில் குறைந்து நின்று, சிறிது சிறிதாக ஒரு கோடு, இடமாகச் சென்றது. கீழ்நோக்கிய வளைவு இடமாகச் சென்று நீண்ட கோடாயிற்று. முடிவில் மேற்புறத்தே இடமாகச் சென்ற கோடும் கீழிறங்கி, இன்றைய வடிவினை அடைந்தது. (தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி - 14).*

[தக்கு + அடை → தக்கடை → தக்கடி. தக்கு = தக்கது, நேரானது, சீரானது, சமமானது.]

தக்கடிவித்தை *takkaḍi-vittai,* பெ. (n.) 1. செப்படிவித்தை; juggling, sleight of hand. 2. ஏமாற்றுமுறை; deceitful tricks, deception (செ.அக.).

[தக்கடி + வித்தை]

தக்கடை *takkaḍai,* பெ. (n.) இரட்டைத் தட்டுள்ள நிறைகோல் (C.G. 91.); a pair of scales.

தெ. தக்கெடா

[தக்கு + அடை → தக்கடை]



தக்கடைக்கல் *takkaḍai-k-kal,* பெ. (n.) நிறைகல் (C.G.); stone - weights used in scales.

[தக்கடை + கல்]

தக்கடைக்குண்டு *takkaḍai-k-kuṇḍu,* பெ. (n.) தக்கடைக்கல் (C.G.) பார்க்க; see takkaḍai- k-kal.

[தக்கடை + குண்டு]

தக்கடைப்பில்லை *takkaḍai-p-pillai,* பெ. (n.) துலைத்தட்டு (C.G.); scale pan.

[தக்கடை + பில்லை]

தக்கணஅவசரம் *takkaṇa-avaśaram,* பெ. (n.) கருப்பையில் விரைந்து உலவும் கரு; moving in the pregnent emergency womb as foctus (சா. அக.).

தக்கணகெளளி *takkaṇa-kauḷi,* பெ. (n.) நற்குறியாகத் தெற்கிலிருந்தேனும் வலப் பக்கத்திலிருந்தேனும், ஒலியெழுப்பும் பல்லி (வின்.); lizard chirping from the south or the right side, considered auspicious.

[தக்கு + அணம் → தக்கணம் + கெளளி. Skt. கெளளி]

தக்கணத்துப்புலவன் *takkaṇattu-p-pulavaṉ,* பெ. (n.) அகத்தியன்; a sage Agattiyaṉ an erudite scholar of the south.

[தக்கணம் + அத்து + புலவன்]

தக்கணநட்சத்திரவோரை *takkaṇa-naṭcattira-v-ōrai,* பெ. (n.) தென்மண்டல ஓரைகளின் விண்மீன் தொகுதி; the southern constellation (M.Navi. 109).

[தக்கணம் + நட்சத்திரம் + ஓரை. தென்பகுதியிலமைந்துள்ள ஓரைகளின், விண்மீன் குழுமம்]

தக்கணநடுவண்பூமி *takkaṇa-naḍuvaṇ-būmi,* பெ. (n.) தென்திசை சமதட்ப வெப்பநிலை நிலப்பரப்பு; south temperature zone.

[தக்கு + அணம் → தக்கணம் + நடுவண் + பூமி → தக்கணநடுவண்பூமி]

தக்கணநாடு *takkaṇa-nāḍu,* பெ. (n.) 1. இந்தியத் தீவ(வு)க்குறையின் தென்பகுதி (இந்தியாவின் தென்பகுதி); Southern part of the Indian peninsula. 2. கிழக்கு, மேற்கு மலைத் தொடருக்கு இடையில் உள்ள நிலப்பரப்பு (வின்.); deccan, the table land between the Eastern and the Western Ghats.

[தக்கணம் + நாடு]

தக்கணநீர் *takkaṇa-nīr,* பெ. (n.) காவிரி; water of the south (the river cauvery).

[தக்கணம் + நீர்]

தக்கணப்பயணம் *takkaṇa-p-payaṇam,* பெ. (n.) கடகத்திருப்பத்திலிருந்து சுறவ (மகர)த் திருப்பம் வரை, ஆன பரிதியின் பயணகாலம்; கடகம் (ஆடி) முதல் ஆறு திங்கள்; travel period of the Sun from Tropic of Cancer to Tropic of Capricon.

தக்கணம் + பயணம் → Skt. தட்சணாயனம். தக்கு → தக்கணம் → Skt. தட்சணம்.

பரிதி நிலையாகவும், புவிக்கோளம் ஆண்டிற் கொருமுறைப் பரிதியைச் சுற்றி வருகிறது. புவியிலிருப்போருக்குப் பரிதி சுற்றுவது போலத் தோன்றும். புவிக்கோளத்தின் அச்சு 23 1/2 பாகை சாய்ந்திருப்பதால், பரிதி வடக்கிலிருந்து தெற்காகவும், தெற்கிலிருந்து வடக்காகவும் பயணிப்பது போலத் தோன்றுகிறது. தெற்கு நோக்கிய பயணம் தக்கணப்பயணம் என்றும், வடக்கு நோக்கிய பயணம் உத்திரப்பயணம் என்றும் பெயர் பெறும்.

தக்கணப்புல் *takkaṇa-p-pul,* பெ. (n.) சானம்; deccany grass (சா.அக.).

[தக்கணம் + புல்]

தக்கணப்பகுதி *takkaṇa-p-pagudi,* பெ. (n.) உலகவுருண்டையின் தெற்குப்பகுதி (வின்.); the south pole, Antartic zone.

[தக்கணம் + பகுதி → தக்கணப்பகுதி. ஞாலத்தின் தென்புறமுள்ள பனிப்பகுதி]

தக்கணப்பந்தம் *takkaṇa-p-pandam,* பெ. (n.) மூவகைக் கட்டுகளுள் ஒன்று; one of the three kinds of bondage (சா.அக.).

[தக்கணம் + பந்தம்]

தக்கணம்[1] *takkaṇam,* பெ. (n.) 1. தெற்கு; south. "தக்கண மதுரை" (மணிமே. 22: 121). 2. தக்கண நாடு பார்க்க; *takkaṇa-nāḍu*[1]. 3. வலப்பக்கம்; right side. "தக்கண கணைக்கால்" (சூத. ஞான. 15: 3).

த. தக்கணம் → வ. தக்ஷிண

[தக்கு (தாழ்வு) + அணம் → தக்கணம்.]

கிழக்கு நோக்கும்போது தென்றிசை வலமும், வடதிசை இடமுமிருப்பதால், தக்கணம் என்னும் சொற்கு வலதிசைப்பொருளும் உத்தரம் என்னும் சொற்கு இடதிசைப் பொருளும் தோன்றன (வ.மொ.வ. 170).

தக்கணம்[2] *takkaṇam,* குவி.எ. (adv.) உடனே, அதே காலத்தில் (இ.வ.); at the same moment, immediately, instantaneously.

[சடக்கெனல் = விரைவை உணர்த்தும் ஒலிக்குறிப்புச் சொல். சடக்கென → தடக்கென → தக்கென → தக்கணம். ஒருகா. கணம் – நொடிப்பொழுது, நேர அலகு. அக்கணம் → தக்கணம்]

தக்கணம்[3] *takkaṇam,* பெ. (n.) தாள உயிர்ப்பின் உட்பிரிவு (யாழ். அக.); a unit of time-measure.

தக்கணமார்க்கம் *takkaṇa-mārkkam,* பெ. (n.) சிவசமயத்தின் உட்பிரிவுகளுள் ஒன்றான காளாமுகம்; a minor system of Šaivism.

[தக்கணம் + Skt. மார்க்கம் → தக்கண மார்க்கம். சைவ சமயத்தின் உட்பிரிவு. இச் சமயத்தினைச் சிறுபான்மையினரே தழுவியுள்ளனர்.]

தக்கணவர்த்தகம் *takkaṇa-varttagam,* பெ.(n.) பூனைக்காஞ்சொறிச் செடிவகை; climbing nettle (சா.அக.).

தக்கணன் *takkaṇaṉ,* பெ. (n.) சிவன்; Šivaṉ. "தக்கணா போற்றி தருமா போற்றி" (தேவா. 968, 10).

மறுவ: அறமுரைத்தபட்டன், ஆலமர் செல்வன், தக்கணநம்பி, தக்கணமுகநம்பி, தென்முகநம்பி

[தக்கணம் → தக்கணன். திருக்கோயிலில் தெற்குநோக்கியமர்ந்து, அனைவருக்கும் அறமுரைக்கும் ஆசிரியனாகத் திகழும் சிவத்திருவுருவம்]

தக்கணாக்கினி *takkaṇākkiṉi,* பெ. (n.) தக்கிணாக்கினி (சூடா.) பார்க்க; see *takkiṇākkiṉi.*

[தக்கிணாக்கினி → தக்கணாக்கினி]

தக்கணாக்கினியம் *takkaṇā-k-kiṉiyam,* பெ. (n.) தக்கிணாக்கினி பார்க்க; see *takkiṇākkiṉi.*

[தக்கணாக்கினி → தக்கணாக்கினியம்]

தக்கணாதி *takkaṇādi,* பெ. (n.) குறிஞ்சியாழ்த் திறங்களுள் ஒன்று (பிங்.); an ancient melody type of the Kuriñji class.

தக்கணாமுட்டி *takkaṇā-muṭṭi,* பெ. (n.) ஒன்றுக்கும் உதவாத சோம்பேறி (மடியன்) (தஞ்சை.); lazy, good-for-nothing fellow.

எச்செயலிலும் காலூன்றி நில்லாதவன். திறம்பட வினையாற்ற மனமின்றி, வீணே மந்தமாய்த் திகழ்பவன்.

[தக்கு (தாழ்வு) + முட்டி. முட்டி = மூடன்]

தக்கணாமூர்த்தம் *takkaṇā-mūrttam,* பெ. (n.) தக்கணாமூர்த்தி பார்க்க; see *takkaṇā-mūrtti.*

[தக்கணம் → தக்கணன் + மூர்த்தம் → தக்கணமூர்த்தம் → தக்கணாமூர்த்தம்]

தக்கணாமூர்த்தி *takkaṇā-mūrtti,* பெ. (n.) தக்கணன் பார்க்க; see *takkaṇaṉ.*

மறுவ. தென்முகநம்பி, அறமுரைத்த கடவுள், ஆலமர்செல்வன்

[தக்கணம் + Skt. மூர்த்தி. தென்முகமாக வீற்றிருந்து அனைத்து ஆதன்கட்கும் (ஆன்மாக்கட்கும்) அறமுரைக்குங் கடவுள்]

தக்கணாமூர்த்தித்தேவர் *takkaṇāmūrtti-t-tēvar,* பெ. (n.) தக்கணன் பார்க்க; see *takkaṇaṉ.* "தக்கணா மூர்த்தித் தேவர் தாமிருந்த ஆலமரத்தே" (கலித். 131, உரை.).

[தக்கணன் + மூர்த்தி + தேவர் → தக்கணாமூர்த்தித்தேவர்]

தக்கணாயனம் *takkaṇāyaṉam,* பெ. (n.) தக்கணப்பயணம் பார்க்க; see *takkaṇa-p-payaṇam.* "அயன முத்தராயனமும் . . . தக்கணாயனமுமென விரண்டாம்" (கூர்மபு. பிரமா. 4).

[தக்கணம் + அயனம்]

தக்கணை *takkaṇai,* பெ. (n.) **பெரியவர்கட்கு வழங்கும் பொருள்;** offering. "வேள்வியாய்த் தக்கணையாய்த் தானுமானான்" (திவ். பெரியாழ். 4: 9: 5) .

தக்கத்தடி-த்தல் *takka-t-taḍi-,* 4 செ.குவி. (v.i.) **மிகப்பருத்தல்;** to swell to an enormous size or extent. "தக்கத்தடித்து பக்கப்பருத்து என்னுமா போலே கத்தக்கதித்தென்று ஒரு முழுச் சொல்லாய்" (திவ். பெரியாழ். 1. 9: 3: வியா).

[தகு → தக்க + தடி-.]

தக்கது *takkadu,* பெ. (n.) 1. தகுதி (திவா.) பார்க்க; see *tagudi.* 2. **தகுதியானது;** that which is fit or proper. "தக்கதே நினைந்தான் றாதை" (கம்பரா. கைகேயி. 102).

[தகு → தக்கது.]

தக்கப்பண்ணு[1]-தல் *takka-p-paṇṇu-,* 5 செ. குன்றாவி. (v.t.) 1. **நிலைக்கச் செய்தல்;** to keep securely and permanently. 2. **வயப்படுத்துதல்** (இராட்.); to secure a thing, appropriate. 3. **கருக் கலையாமல் பார்த்துக் கொள்ளல்;** to retain the foetus in the womb, by preventing abortion. 5. **பிறந்தகுழந்தை இறவாதபடி செய்தல்;** to treat the new born and keep it alive (சா.அக.).

[தக்கு → தக்க + பண்ணு-.]

தக்கப்பண்ணு[2]-தல் *takka-p-paṇṇu-,* 5 செ.குவி. (v.i.) **ஒருவனது தகுதியைக் காட்டுதல்;** to show one's fitness. ஒருவேலையில் தலையிட்டால் அதற்குத் தன்னைத் தக்கப்பண்ண வேண்டாமா? (இ.வ.).

[தக்க + பண்ணு-.]

தக்கபருவம் *takka-paruvam,* பெ.(n.) **இளமைப் பருவம்;** adult age (சா.அக.).

மறுவ. விடலைப்பருவம்

[தக்க + பருவம்]

தக்கபிக்கவெனல் *takka-pikka-v-eṉal,* பெ.(n.) **தாறுமாறாதற்குறிப்பு;** onom. expr. of being unruly, disorderly, improper or awkward. தக்கபிக்கவென்று உளறுகிறான் (உ.வ.).

[தக்க + பிக்க + எனல்]

தக்கம்[1] *takkam,* பெ. (n.) 1. **நிலைபேறு;** stability. "தக்கமில் செய்கைப்பொருள்" (பழ. 362.). 2. **பற்று;** attachment. "தக்கம் படாமை தவம்" (சிறுபஞ்ச. 77). 3. **பல்லாங்குழி விளையாட்டில் காய்கள் இல்லாதிருக்குங் குழி** (நெல்லை); empty cavity in the pallāṅguḻi board during a game. 4. **ஏனத்தின் அடியில் தங்கின உணவு நீர்** (அந்தண.); semi-liquid food at the bottom of a vessel.

[தங்கு → தக்கு → தக்கம்]

தக்கம்[2] *takkam,* கு.வி.எ. (adv.) தொடக்கம் முதல்; forwards, from. நாளைத்தக்கம் நீ வரவேண்டும் (செ.அக.).

[துவக்கம் → தவக்கம் → தக்கம் (உ.வ.)]

தக்கம்[3] *takkam,* பெ. (n.) உறழ்வு, சொற்போர் (இ.வ.); dispute.

[தருக்கம் → தக்கம்]

தக்கம்[4] *takkam,* பெ. (n.) தடை; objection. பல்லாங்குழி விளையாடும் செல்வி 'இது தக்கம்' என்றாள் (உ.வ.).

[தக்கு - தாழ்வு. தாழ்ந்த நிலையில் ஏற்படுந்தடை. தக்கு → தக்கம்]

தக்கம்[5] *takkam,* பெ. (n.) அறநூல் பதினெட்டனுள் ஒன்று (திவா.); a Sanskrit text-book of Hindu law, ascribed to Dakṣa, one of 18 taruma-nūl.

[தருக்கம் → தக்கம்]

தக்கயாகப்பரணி *takkayāga-p-paraṇi,* பெ. (n.) வீரபத்திரன் தக்கனுடைய வேள்வியை அழித்து வென்றதைப் பற்றிப் புலவர் ஒட்டக்கூத்தர் பாடிய, பரணிநூல்; a poem on Virabhadra's destruction of Dakṣa's sacrifice by Oṭṭa-k-kūttar.

[தக்கன் + யாகம் + பரணி]

தக்கர் *takkar,* பெ. (n.) கைப்பிடியுள்ளதும், மூடியுடன் கூடியதுமான சிறிய குவளை, சாடி (வின்.); jar.

[தகு → தக்கு → தக்கர்]

நீர்மப்பொருட்களை நிறுத்தித் தடுத்து வைத்தலால், தங்குதற்கருத்தினின்று இவ் வேரடி கிளைத்த தெனலாம்.

தக்கரபுக்கரவெனல் *takkara-pukkara-v-eṉal,* பெ. (n.) தக்கடாபிக்கடாவெனல் பார்க்க; see *takkaḍā-pikkaḍā-v-eṉal.*

தக்கரம் *takkaram,* பெ. (n.) *1.* களவு; theft, pilfering. *2.* ஏய்ப்பு; சூழ்ச்சி; trickery, guile. "தக்கர மொப்பச் செப்பி" (திருவாலவா. 13, 11).

Skt., Pkt. taskara

[தக்கடி → தக்கடம் → தக்கரம் - தக்கடி = ஏமாற்றுகை, சூழ்ச்சிசெய்கை, இரண்டகம்செய்கை.]

தக்கராகம் *takka-rāgam,* பெ. (n.) பாலைப் பண் வகை (திவா.); an ancient secondary, melody - type of the Pālai class.

[தக்கம் → தக்கராகம். Skt. ராகம்]

தக்கல் *takkal,* பெ. (n.) அடைப்பு (வின்.); plug.

[தக்கை → தக்கல்]

தக்கவயதோர் *takka-vayadōr,* பெ. (n.) இளைஞர்; youth (சா.அக.).

[தக்க + வயதோர்]

தக்கவர் *takkavar,* பெ. (n.) தக்கோர் பார்க்க; see *takkōr.* "தக்காருந் தக்கவரல்லாரும்" (நாலடி, 112).

ம. தக்கவர்

[தகு → தக்கு + அவர் = தக்கவர்]

தக்கவை-த்தல் *takka-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஒன்றை இழக்காமல் தொடர்ந்து வைத்திருத்தல்; to retain (a seat, title, etc., in a contest, election, etc.), to subjugate. விளையாட்டுப் போட்டியில் சிறந்த அணி என்ற சிறப்பினைத் தமிழ்நாடு தக்க வைத்துக் கொண்டது.

[தங்க → தக்க + வை-.]

தக்களி *takkaḷi,* பெ. (n.) (கையால் பஞ்சிலிருந்து நூல்நூற்கப் பயன்படும்) கம்பியின், மேற் பகுதியில் கொக்கிபோலக் கூர்மையாக வளைத்துக் கீழ்ப்புறம் தட்டுப்போன்ற ஒரு சிறு பகுதியை இணைத்த சிறுகருவி; kind of spindle (for spinning).

[தக்கு → தக்களி : நூல்இழையினைத் தம்முள் தக்கவைக்கும் நூலிழைக் கருவி]



தக்கன்[1] *takkaṉ*, பெ. (n.) திறமையாளன் (இலக். அக.): clever person.

[தகு → தக்கன்]

தக்கன்[2] *takkaṉ*, பெ. (n.) எண்வகைப் பாம்புகளிலொன்று (பிங்.); a divine serpent, one of aṭṭā-mā-nāgam.

தக்கன்[3] *takkaṉ*, பெ. (n.) கள்வன்; thief. "தண்ட மென்றொரு பொருட் குரிய தக்கரை" (கம்பரா. யுத்த. மந்திரப். 18.).

[தள் → தள்ளுதல், களைதல், விலக்குதல் தள் → தள்கு → தட்கு + ஆன் = தட்கான் → தக்கன்]

தக்கன்[4] *takkaṉ*, பெ. (n.) நாவலந்தேயத்தின் தென்பகுதியை ஆட்சிசெய்த மன்னன்; the king who ruled the Southern part of India.

[தகு → தக்கு → தக்கன். தக்கு - தாழ்வு. தாழ்வான தென்பகுதியைக் கோலோச்சியவன்]

தக்கன்று *takkaṉṟu*, பெ.எ. (adj.) சரியன்று; incorrect. "சிறை தக்கன்று செங்கோல் வேற்றென" (மணிமே. சிறைவிடு. 30).

[தக்கதன்று → தக்கன்று]

தக்கனை *takkaṉai*, கு.வி.எ. (adv.) தக்காங்கு, 1 பார்க்க; see *takkāṅgu*, *1*. வேலைக்குத் தக்கனை கூலி (உ.வ.).

[தகு + அனை. அனை = சொல்லாக்க ஈறு]

தக்கனைக்கொன்றான் *takkaṉai-k-koṉṟāṉ*, பெ. (n.) சிவனார்வேம்பு; Shiva's neem (சா.அக.).

தக்காங்கு *takkāṅgu*, கு.வி.எ. (adv.) 1. தக்கபடி; suitably, regularly, in an orderly manner. 2. நடுவுநிலையாக; impartially. "தக்காங்கு நாடி" (குறள். 561.).

[தக்கு + ஆங்கு]

தக்காணம் *takkāṇam*, பெ. (n.) தக்கணம்[1], 1,2 பார்க்க; see *takkaṇam*[1] *1,2*. தக்காணத்துத் தொல் பழங்கதைகள்.

[தக்கணம் → தக்காணம்]

தக்காணியம் *takkāṇiyam*, பெ. (n.) வழக்கிழந்த தமிழிலக்கண நூல் (யாப். வி. 96: 537); a grammatical treatise in Tamil, not extant.

தக்காபிக்காவெனல் *takkā-pikkā-v-eṉal*, பெ. (n.) தக்கபிக்கவெனல் பார்க்க; see *takka-pikka-v-eṉal*.

தக்காமுக்கி *takkā-mukki*, பெ. (n.) 1. சிக்கலான நிலை; perplexity. 2. பேரிடரான நிலை; state of being at a loss, dangerous state. தக்காமுக்கியில் மாட்டிக்கொண்டான் (சா.அக.).

தக்காமை *takkāmai*, பெ. (n.) நிலைக்காமை; lost. பிள்ளை தக்காமை.

[தக்கு ஆ + மை. 'ஆ' எதிர்மறை இடைநிலை. 'மை' சொல்லாக்க ஈறு. (ஒ.நோ.) செல்லாமை, கொள்ளாமை, செய்யாமை]

தக்கார்[1] *takkār*, பெ. (n.) 1. மேன்மக்கள்; worthy, virtuous persons, the noble. "தக்கா ரினத்தனாய்" (குறள்.446). 2. நடுவுநிலையுடையார்; impartial, upright persons. "தக்கார் தகவில ரென்பது" (குறள், 114). 3. உறவினர் (வின்.); relations.

தெ. தகுநவாரு க. தக்கவாரு

[தகு → தக்கு → தக்கார்]

தக்கார்[2] *takkār*, பெ. (n.) (மரபுவழியிலோ, அறங்காவலராலோ, ஆளுகைப்படாத பெரிய திருக்கோவில்களில்) பூசை, வருவாய், நகை முதலியவற்றைப் பொறுப்பாகக் கவனித்துக் கொள்ள, அரசால் பணியமர்த்தம் செய்யப்படும் உள்ளூர்ப் பெருமகனார்; one of the local public nominated by the government in the absence of trustee for the management of temples (in India) fit-person.

[தகு → தக்கு + ஆர்.]

தக்கார்[3] *takkār*, பெ. (n.) பெருமையிற் சிறந்தோர்; great personality.

மறுவ. அறிஞர், உரவோர்

[தக்கு + ஆர் → தக்கார்]

தக்காரி *takkāri*, பெ. (n.) 1. தழுதாழை (மலை.); controller of gasteric troubles. 2. முன்னை; Indian head-ache tree - Bremna integrifolia.

தக்காரிகை *takkārigai,* பெ. (n.) தக்காரி பார்க்க; see *takkāri.*

[தக்காரி → தக்காரிகை]

தக்காலனா *takkālaṉā,* பெ. (n.) தக்காரி பார்க்க; see *takkāri* (சா.அக.).

தக்காவி *takkāvi,* பெ. (n.) செஞ்சோளம்; red maize (சா.அக.).

தக்காள் *takkāḷ,* பெ. (n.) சிறந்தவள்; the noble woman.

[தகு → தக்காள்.]

தக்காளி *takkāḷi,* பெ. (n.) உருண்டை வடிவத்தில் சிவப்பு வண்ணத்தில், புளிப்பு, இனிப்புச் சுவையுடைய சமையலுக்கான பழம்; அப் பழம் விளையும் செடி; tomato, the fruit and plants. 2. மணித்தக்காளி; Indian winter-cherry.

தெ. தக்கிளி; ம., க. தக்காளி; Sinh. takkāḷ; Skt. tarkāri

[தக்கு + ஆள் + இ → தக்காளி. தக்க = தகுந்த, ஏற்ற. உடம்பிற்கு ஏற்ற ஊட்டப்பொருள் தரும் பழம். தக்க ஆளுமைக்குரிய வளப்புத்தரும் பழம். 'இ' சொல்லாக்க விகுதி.]



தக்காளி வகை:–

1. பெருந்தக்காளி - edible Indian winter cherry- Physallis edulis
2. சிறுதக்காளி - small takkauly, small winter cherry - physallis minima
3. எருமைத் தக்காளி - buffalo winter cherry- Lycopersicum esculentum
4. பேய்த்தக்காளி அல்லது நாற்றத் தக்காளி - demon takkauly
5. மிளகுத்தக்காளி
6. மணித்தக்காளி - Indian hounds berry - Solanum nigrum
7. சீமைத்தக்காளி - Europe brinjal tomato- Lycopersicum solanum
8. பிள்ளைத்தக்காளி : குட்டித்தக்காளி பார்க்க; see *kaṭṭittakkāḷi.*
9. குட்டித்தக்காளி - black berried solanum
10. பசுந்தக்காளி - green tomato
11. சிவப்புத்தக்காளி - red physalis- Amatula rubra.
12. நல்லதக்காளி - தக்காளி பார்க்க; see *takkāḷi.*
13. சீமை மணித்தக்காளி - சீமைத்தக்காளி பார்க்க; see *sīmaittakkāḷi.*

தக்காளிப்பழம் *takkāḷi-p-paḻam,* பெ. (n.) தக்காளி பார்க்க; see *takkāḷi* (சா.அக.).

[தக்காளி + பழம்]

தக்காளிப்பிள்ளை *takkāḷi-p-piḷḷai,* பெ. (n.) பிள்ளைப்பூச்சி (வின்.); grillus, a kind of insect.

[தக்காளி + பிள்ளை]

தக்காளியுழுவான் *takkāḷi-y-uḻuvāṉ,* பெ. (n.) தக்காளிப்பிள்ளை பார்க்க; see *takkāḷi-p-piḷḷai.*

[தக்காளி + உழுவான்]

தக்காற்போல *takkāṟ-pōla,* கு.வி.எ. (adv.) தக்காங்கு 1 பார்க்க; see *takkāṅgu 1.* 'எனக்குத் தக்காற் போலவன்றோ நீயும் இருப்பது' (ஈடு. 1: 4: 7).

[தகு → தக்கு + ஆன் + போல.]

தக்கானியம் *takkāṉiyam,* பெ. (n.) கொத்து மல்லி; coriander - Coriandrum sativam (சா.அக.).

தனியா என்பது வட்டார வழக்கு.

தக்கிடி *takkiḍi,* பெ. (n.) தக்கடி[2] (இ.வ.) பார்க்க; see *takkaḍi*[2].

[தக்கடி → தக்கிடி.]

தக்கிணபூமி *takkiṇa-būmi,* பெ. (n.) தக்கணப்பகுதி பார்க்க; see *takkaṇa-p-pagudi.*

[தக்கு (தெற்கு) + அணம் → தக்கணம் + Skt. பூமி. தக்கணபூமி → தக்கிணபூமி]

தக்கிணம் *takkiṇam*, பெ. (n.) தக்கணம்[1] பார்க்க; see *takkaṇam*[1] (செ.அக.).

[தக்கணம் → தக்கிணம்]

தக்கிணமார்க்கம் *takkiṇa-mārkkam*, பெ. (n.) தக்கணமார்க்கம் பார்க்க; see *takkaṇa-mārkkam*.

[தக்கணம் → தக்கிணம் + மார்க்கம் - வழி, பிரிவு. தக்கிணமார்க்கம் → தக்கணமார்க்கம்]

தக்கிணன் *takkiṇaṉ*, பெ. (n.) 1. தென்முகமாக இருக்கும் சிவன்; Śivaṉ. "ஆலமர் செல்வன் பெயர்கொண்டு வளர்ந்தோன்....தக்கிணன் றன்னை" (சிலப். 23, 91-95). 2. திறமையாளன் (இ.வ.): clever person.

[தக்கணன் → தக்கிணன்]

தக்கிணாக்கினி *takkiṇā-k-kiṉi*, பெ. (n.) வேள்வித்தீ மூன்றனுள் ஒன்று (திருமுரு. 181, உரை): one of the three sacred fires of Vēdic sacrifice.

[தக்கணம் → தக்கிணம் + அக்கினி]

தக்கிணாட்சம் *takkiṇāṭcam*, பெ. (n.) நிலப்பரப்பின் தென்பகுதி; south latitude..

[தக்கணம் → தக்கிணம் + அக்கம் - தக்கிணாக்கம் → தக்கிணாட்சம். த. அக்கம் → Skt. அட்சம்]

தக்கிணாமூர்த்தி *takkiṇā-mūrtti*, பெ. (n.) தென்முகமாயிருக்கும் சிவன்; Śiva facing the south (செ.அக.).

[தக்கணம் → தக்கிணம் + மூர்த்தி]

தக்கிணாயனம் *takkiṇāyaṉam*, பெ.(n.) தக்கணாயணம் பார்க்க; see *takkaṇāyaṇam*.

[தக்கணம் → தக்கிணம் + அயனம்]

தக்கிணி *takkiṇi*, கு.வி.எ. (adv.) சிறிதளவு; a small quantity, a little. அவன் எனக்குத் தக்கிணிதான் கொடுத்தான் (சென்னை)..

து. தக்கண

[துக்குணி → தக்கிணி]

தக்கிணை *takkiṇai*, பெ.(n.) தக்கணை பார்க்க; see *takkaṇai*. "தவமெலாங் கொள்க தக்கிணையா வென்றான்" (கம்பரா. அகத். 31).

தக்கிப்போ-தல் *takki-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) தக்கு[2]-, 1 (வின்.) பார்க்க; see *takku*[2]-1.

[தக்கு → தக்கி + போ-.]

தக்கிரம் *takkiram*, பெ. (n.) 1. மோர் (திவா.); butter milk. 2. தயிர்; curd (சா.அக.).

தக்கிரமா *takkiramā*, பெ. (n.) சேங்கொட்டை; marking nut, dhoby's nut (சா.அக.).

தக்கிராடம் *takkirāḍam*, பெ. (n.) மத்து (யாழ். அக.); churning stick.

[தக்கிரம் → தக்கிராடம்]

தக்கிரு-த்தல் *takkiru-*, 3 செ.கு.வி. (v.i.) தனக்குத் தகவொழுகுதல்; to behave in a worthy manner. 'எம்முடைய வள்ளல் இன்று தக்கிருந் திலன்' (திருக்கோ. 376, உரை).

[தகு + இரு-]

தக்கின்று *takkiṉṟu*, பெ. (n.) தக்கதன்று; incorrect. "வடுத்தான் வகிர் மலர்க்கண்ணிக்குத் தக்கின்று" (திருக்கோ. 226).

[தக்கன்று → தக்கின்று]

தக்கினி *takkiṉi*, பெ. (n.) 1. மண்பானை; earthern pot. 2. பாண்டம்; vessel.

தக்கு[1]-தல் *takku-*, 5 செ.கு.வி. (v.i.) ஏற்றதாதல்; to be fit, suitable, becoming (செ.அக.).

க., தெ. தகு

[தகு → தக்கு]

தக்கு[2]-தல் *takku-*, 5 செ.கு.வி. (v.i.) 1. நிலை பெறுதல்; to come to stay; to become permanent, to be lasting, as a possession or acquisition; to be retained. "அணைந்தாலிவளாவி தக்கும்" (தனிப்பா. i. 353, 78) 2. பயன்படுதல் (வின்.); to be profitable. 3. பிறந்த குழவி நிலைத்தல்; survive of the new born baby.

ம. தக்குக; க. தக்கு; தெ. தக்கு

[தங்கு → தக்கு]

தக்கு[3]-தல் *takku-*, 5 செ.கு.வி. (v.i.) வயப்படுதல் (யாழ். அக.): to yield; to be submissive.

க., தெ. தக்கு

[தங்கு → தக்கு]

தக்கு[4] *takku*, பெ. (n.) *இசையின் தாழ்ந்த ஓசை;* low voice in singing, low pitch, low key in music. *தக்கிலே பாடுகிறார் (உ.வ.).*

[தங்கு → தக்கு = தங்குதல் = மெல்லிதாதல், இழைதல், இனிமையாதல்]

தக்கு[5] *takku*, பெ. (n.) *சூழ்ச்சி, வஞ்சம்;* dodge, trick. *அவனுக்கு நிரம்பத் தக்குத் தெரியும் (செ.அக.)*

க., தெ. தக்கு

தக்குசுருதி *takku-šurudi*, பெ. (n.) தக்கு[3] பார்க்க; see *takku*[4].

தக்குத்தக்கெனல் *takku-t-takkenal*, பெ. (n.) *ஓர் அடுக்கொலிக் குறிப்பு;* onom. expr. of repeated thumping sound. *தக்குத்தக் கென்று நடக்கிறான் (இ.வ.).*

[தக்குத்தக்கு + எனல்]

தக்குத்தடவல் *takku-t-taḍaval*, பெ. (n.) 1. *தடவிநடக்கை (இ.வ.);* groping, as in darkness. 2. *தடுமாறிபடிக்கை (யாழ்ப்.);* stumbling in reading, want of fluency.

[தக்கு + தடவல்]

தக்குப்புக்கெனல் *takku-p-pukkenal*, பெ. (n.) தக்குத்தக்கெனல் (நெல்லை) பார்க்க; see *takku-t-takkenal.*

[தக்கு + புக்கு + எனல்]

தக்குப்பொக்கெனல் *takku-p-pokkenal*, பெ.(n.) தக்குத்தக்கெனல் (வின்.) பார்க்க; see *takku-t-takkenal.*

[தக்கு + பொக்கு + எனல்]

தக்குமான் *takkumāṉ*, பெ. (n.) *உடம்பில் குருக்களை எழுப்பும் நோய்;* a disease or case of diseases characterised by skin eruptions (சா.அக.).

[தக்கு → தக்குமான்.]

தக்குவித்தல்[1] *takkuvittal*, பெ. (n.) *நிலைக்கும்படி செய்கை;* causing to escape failure. (சா.அக.)

[தக்கு → தக்குவித்தல்]

தக்குவித்தல்[2] *takkuvittal*, பெ. (n.) *ஆட்சிக்குட் படுகை;* subjugation.

தக்கெனல் *takkeṉal*, பெ. (n.) *ஓர் ஒலிக்குறிப்பு;* onom. expr. of thumping sound (செ.அக.).

[தக்கு + எனல்]

தக்கேசி *takkēši*, பெ. (n.) *மருதநிலப்பண் வகை* (பிங்.): a melody type of the marudam class.

தக்கை[1] *takkai*, பெ. (n.) 1. *அகப்புறமுழவு (தண்ணமை, தக்கை, தகுணிச்சம்) மூன்றனுள் ஒன்றாகிய ஒருவகைப் பறை* (பிங்.) (சிலப். 3: 26, உரை); a kind of drum, one of the three agappura-mulavu. 2. *பறை* (சூடா.); drum.

தக்கை[2] *takkai*, பெ. (n.) 1. *காதிலிடுங் குதம்பை;* roll of palm leaves or plug, put into a perforation of the ear-lobe to enlarge it. 2. *நீரிலுள்ள நிலைத்திணையிலிருந்து அல்லது ஒருவகை மரத்திலிருந்து எடுக்கப்படும் எடையில்லாதததும், நீரில் மிதக்கக்கூடிய தன்மை உடையதுமான பொருள், அடைப்பான்;* cork. 3. *அடைப்பு;* plug to stop up a crack, leak, etc. 4. *மரை* (இ.வ.); nut. 5. *நெட்டி வகை;* hard sola pith. 6. *நெட்டி* (யாழ்.அக.); sola pith. 7. *தூண்டிலோடு சேர்த்து மிதக்கவிடும் மிதப்புச் சக்கைத்துண்டு;* a piece of pith attached to a fishing rod. *தூண்டில் போட்டவனுக்கத் தக்கை மேலே கண் (உ.வ.).* 8. *சோளம், ஆமணக்கு முதலியவற்றின் உலர்ந்ததட்டை;* dried stalk of great millet or castor plant, used as tinder. 9. *கிழிந்த சீலையில் தைக்கும் ஒட்டுத்துண்டு* (வின்.); patch on cloth. 10. *கட்டி;* clot, congealed mass. *அரத்தம் தக்கை தக்கையாய் விழுந்தது (வின்.).* 11. *தெப்பம்* (யாழ். அக.); float, raft. 12. *பாலமாக இடும் பனையின் அடிமரம்* (இ.வ.); trunk of a palm tree thrown across a channel to bridge it.

ம. தக்க

[தணக்கு → தணக்கை → தக்கை = உலர்ந்தது = காய்ந்தது, அகன்றது]

தக்கைஇராமாயணம் *takkai-irāmāyaṇam*, பெ. (n.) *தக்கைப் பறையை முழக்கிப் பாடப்பெற்ற இராமாயணம்;* Rāmāyaṇam sung in the drum of takkai, (a musical drum).

[தக்கை + இராமாயணம்]

இந் நூலின் ஆசிரியர் புலவர் எம்பெருமான் என்பவர் திருச்செங்கோடு அருகிலுள்ள மோடூரில் பிறந்தவர். இங்கிருந்த காங்கேயர்கள், இவருக்கு உற்றுழியுதவி உறுபொருள் கொடுத்து, இவரை வாழ்வித்தனர். இவரது காலம் கி.பி. 1600. காங்கேயர்தம் ஈகத்திற்கு கைம்மாறாக, கம்பரது இராமாயணத்தைத் தழுவி, எளிய இசையில் கல்லாதவரும் கேட்டு மகிழும் வண்ணம், தக்கை இராமாயணத்தைப் பாடியருளினார்.

தக்கைக்கயிறு *takkai-k-kayiṟu,* பெ. (n.) **வலை மிதவை பிணைக்கப்பட்ட கயிறு** *(முகவை. மீன.);* a rope tied with net-pith.

[தக்கை + கயிறு. தக்கை = வலைமிதவை]

தக்கைக்கல் *takkai-k-kal,* பெ. (n.) *சுதைமா;* lime-stone.

[தக்கை + கல்]

தக்கைப்பூடு *takkai-p-pūḍu,* பெ. (n.) **நெட்டி, குதம்பை;** dianchra *(சா.அக.).*

[தக்கை + பூடு]

தக்கைமுறுக்கி *takkai-muṟukki,* பெ. (n.) **வில்லைமுறுக்கி** *(நாஞ்.);* spanner.

[தக்கை + முறுக்கி]

தக்கையுடம்பு *takkai-y-uḍambu,* பெ. (n.) **மிகவும் ஒல்லியான (இலகுவான) உடம்பு;** a very light body - body light like pith *(சா.அக.).*

[தக்கை + உடம்பு]

தக்கையுருவம் *takkai-y-uruvam,* பெ. (n.) **உயிரற்றவுடலம்;** body.

மறுவ. உடற்கட்டை, கட்டையுடம்பு

[தக்கை + உருவம்]

தக்கோர் *takkōr,* பெ. (n.) **தகுதிவாய்ந்தவர்;** worthy persons. "தக்கோர்முன்" *(கம்பரா. கும்ப கருண: 328).*

[தகு → தக்கார் → தக்கோர்.]

தக்கோர்மை *takkōrmai,* பெ (n.) *1.* **முறைமை (நியாயம்);** justice, as the quality of the wise. "தக்கோர்மை செய்தா யில்லையே" *(ஈடு. 6: 2: 9).* *2.* **நன்மை;** good, benefit. பூமிக்கு என்ன தக்கோர்மை யுண்டாய் நீ செய்தது *(ஈடு. 5: 7: 4).*

க. தக்கூர்மை

[தக்கோர் → தக்கோர்மை. தக்கவர் தன்மை.]

தக்கோலப்பொட்டு *takkōla-p-poṭṭu,* பெ. (n.) தக்கோலம் பார்க்க; see *takkōlam (சா.அக.).*

[தக்கோலம் + பொட்டு.]

தக்கோலம்[1] *takkōlam,* பெ. (n.) *1.* **ஒரு நறுமணச் சரக்கு;** a fragrant stuff. "தக்கோலந் தீம்பூத் தகைசாலிலவங்கங் கப்பூரஞ் சாதியோ டைந்து" *(சிலப். 5:26, உரை).* "இலவங்கம் . . . . . தக்கோலம். . . . . ஓமாலிகை" *(சிலப். 6:77, உரை).* *2.* **தாம்பூலம்;** betel leaf and areca-nut. "தக்கோலந் தின்று" *(நாலடி. 43).* *3.* **சிறுநாவல்** (L.); ruddy black plum. *4.* **நாவல்** (L.); jaman - plum. *5.* **திப்பிலி** *(வின்.);* long pepper. *6.* **வால்மிளகு;** cubeb. *7.* **காட்டுவெற்றிலை;** wild-betal. *8.* **சாதிக்காய்;** nutmeg. *9.* **பெருநாவற்பூ;** the fragant and plesant tasted flowers of a plant-calyptranthes jawbolana. *10.* **வெற்றிலை, பாக்கு, ஏலம், வால்மிளகு-முதலியவற்றின் நறுமணக்கலவை;** a fragrant mixture of cardamom and cubeb chewed with betal and nut. *11.* **சங்கக்குப்பி;** smooth volkameria - Cleodenon inerme. *12.* **சீன மிளகு;** China pepper, pimento acris *(சா.அக.).*

மறுவ. தக்கோலப்பொட்டு

ம. தக்கோலம்; க. தக்கோல

தக்கோலம்[2] *takkōlam,* பெ. (n.) **வடவார்க்காடு மாவட்டத்திலுள்ள வரலாற்றுச்சிறப்பு மிக்க ஊர்;** Takkōlam a famous historical place in North Arcot district.

மறுவ. திருவூறல்

[தக்கோலம் : திருஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய தேவாரத் திருக்கடைக்காப்பில் "திருவூறல்" என்று குறிக்கப்பெற்றுள்ளது. "தஞ்சை உண்ட பிரான் அமருந் திருவூறலை யுள்குதுமே" எனத் திருவருள் திகழும்

திருவூறல் பெருமானைப் பதினொரு பாடல்களால், போற்றிப் பரவுகின்றார்.

இத் தகு பெருமைமிக்க தக்கோலத்தில் தான், கி.பி. 949ஆம் ஆண்டு, பராந்தகச் சோழன் மகன் இராசாதித்தியனுக்கும், இராட்டிரக்கூட மன்னன் கன்னர தேவனுக்குமிடையே வரலாற்றுப் புகழ்மிக்க, கடும்போர் நிகழ்ந்தது.]

தக்கோலி *takkōli*, பெ. (n.) அகில்வகை (சிலப். 14: 108, உரை); a kind of eagle-wood, used as incense.

[தக்கோலம் → தக்கோலி (நறுமணச் சரக்கு.]

தக *taga*, கு.வி.எ. (adv.) பொருந்த; be appropriate (யாழ்ப்.).

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (குறள், 391)

[தகு → தக]

தகசு[1] *tagašu*, பெ. (n.) ஒரு மெல்லியதகடு (யாழ்ப்.); a thin plate lamina.

[தகடு → தகசு]

தகசு[2] *tagašu*, பெ. (n.) தவழ்கரடி யென்னும் விலங்கு (M.M. 363); badger, Indian ratel, Mellivora indica.

[தவழ் → தவழு → தவக → தகசு]

தகட்டகப்பை *tagaṭṭagappai*, பெ. (n.) பரந்து வட்டமாயுள்ள அகப்பைவகை (தைலவ. பாயி. 37); a kind of round shallow ladle.

[தகடு + அகப்பை.]

தகட்டரிதாரம் *tagaṭṭaridāram*, பெ. (n.) பிறவிக் கனிமநஞ்சு (மூ.அ); a mineral poison.

[தகடு + அரிதாரம்]

தகட்டுஉளி *tagaṭṭu-uḷi*, பெ. (n.) தச்சுக் கருவிகளுள் பட்டை செதுக்கப் பயன்படும் கருவி; a small chisel.

க. கிட்டுளி

[தகட்டு + உளி]



தகட்டுக்கதவு *tagaṭṭu-k-kadavu*, பெ. (n.) மரப் பலகைக்குப் பகரமாக இரும்புத்தகடுள்ள கதவு; door made with steel plate instead of wooden plank.

[தகடு + கதவு]

தகட்டுக்குழை *tagaṭṭu-k-kuḻai*, பெ. (n.) கழுத்தணி உறுப்பு வகை (S.I.I. viii, 128); a part of necklace.

[தகடு + குழை.]

தகட்டுச்சட்டை *tagaṭṭu-c-caṭṭai*, பெ. (n.) இரும்புத்துகள்; iron-dress (சா.அக.).

[தகடு + சட்டை]

தகட்டுத்தாளகம் *tagaṭṭu-t-tāḷagam*, பெ. (n.) தகட்டரிதாரம் (யாழ். அக.) பார்க்க; see *tagaṭṭaridāram*.

[தகடு + தாளகம்]

தகட்டுத்தோல் *tagaṭṭu-t-tōl*, பெ. (n.) மீன் செதிள்; covered with bony fish plates.

[தகடு + தோல்]

தகட்டுப்பலகை *tagaṭṭu-p-palagai*, பெ. (n.) சிவிய பலகைகளை ஒட்டி, இயந்திரத்தில் நன்றாக அழுத்திச் செய்யப்பட்ட பலகை; plywood.

[தகடு + பலகை]

தகட்டுப்பொன் *tagaṭṭu-p-poṉ*, பெ. (n.) தகடாக இழைத்த பொன்; golden-plate. "முடி

ஒன்றில் கட்டின தகட்டுப் பொன் முக்கழஞ்சும்" (S.I.I.V, 523).

மறுவ. பொற்றகடு

[தகடு + பொன் – தகட்டுப்பொன்]

தகட்டுமுளை *tagaṭṭu-muḷai*, பெ. (n.) கொக்கி வகை (C.E.M.); plate-hook.

[தகடு + முளை]

தகட்டுவைரம் *tagaṭṭu-vairam*, பெ. (n.) பட்டை தேய்க்கப்பெறாத வைரம் (நாஞ்.); uncut diamond.

[தகடு + வைரம்]

தகட்டெலும்பு *tagaṭṭelumbu*, பெ. (n.) தடிப்பற்று, அகன்று, தகடு போலிருக்கும் ஒரு வகை யெலும்பு; a thin broad flat bone (சா.அக.).

[தகடு + எலும்பு]

தகடாக்கல் *tagaḍākkal*, தொ. பெ. (vbl. n.) இலையைப் போன்ற நொய்தலான மாழைகளைத் (உலோகங்கள்) தட்டியகலிக்கை; beating into a thin plate or lamina foliating (சா.அக.).

[தகடு + ஆக்கல்]

தகடி[1] *tagaḍi*, பெ. (n.) பொன்னாடை (இ.வ.); gold-embroidered silk.

தெ. தகடி

[தகடு → தகடி. பொன்னிழையில், பூ வேலைப்பாடு அமைந்த பட்டாடை.]

தகடி[2] *tagaḍi*, பெ. (n.) நீர் (பிங்.); water.

[தக → தகம் → தாகம் = நீர்வேட்கை. தகம் + தி → தகதி → தகடி = தாகத்தைத் தீர்க்கும் நீர் (வ. வ.)]

தகடி[3] *tagaḍi*, பெ. (n.) ஏமாற்றுகை (இ.வ.); deception.

தகடு[1] *tagaḍu*, பெ. (n.) 1. இலை; leaf blade. 2. பூவின் புறவிதழ்; outer petal "கருந்தகட்டுளைப் பூமருதின்" (திருமுருகு. 27).

[அடகு (இலை) → அகடு → தகடு]

இச் சொல், வட்டமானது என்னும் பொருளிலும், தட்டையானது என்னும் பொருளிலும் புடைபெயரும்.

தகடு[2] *tagaḍu*, பெ. (n.) 1. மென்மையுந் தட்டையுமான வடிவு (பிங்.); quality of being thin and flat, as plate of metal. 2. மாழைத் தட்டு; metal plate. "தமனியத் தகடுவேய்ந்தென" (கம்பரா. நகர்நீ. 28). 3. வண்ணத்தகடு; foil set below a precious stone to enhance its lustre. தகட்டி லழுத்தின மாணிக்கம்போலே (ஈடு.). 4. கம்மார் வெற்றிலை (தைலவ. தைல. 85); black betel - leaf. 5. மண்படை (யாழ்ப்.); layer of earth. 6. அடர்த்தி (யாழ். அக.); closeness, thickness, as of hair.

ம., க., தெ., து. தகடு; Mar. takaṭ, takaṭē.

[அடகு → அகடு → தகடு]

தகடு[3] *tagaḍu*, பெ. (n.) 1. வட்டமானது; anything round with shape. 2. வண்டியின் உருளை; wheel of a cart.

து. தகடு

[தகடு[1] → தகடு[2] = ஆரக்கால்களின்றி வட்டமாயுந் தட்டையாயுந் திண்ணிய வடிவிற் செய்யப்பட்ட வண்டிச்சக்கரம் அல்லது தேர்ச்சக்கரம் தகடு எனப்பட்டது]

தகடு[4] *tagaḍu*, பெ. (n.) வாழையிலையின் நடுப்பகுதியை, நறுக்கிய ஏடு (தஞ்சை.); the middle portion of a plantain leaf, cut longitudinally.

ம., க. தகடு

மறுவ: ஏடு

[அகடு → தகடு]

தகடு[5] *tagaḍu*, பெ. (n.) மந்திரமெழுதிய செப்புத் தகடு; a metal plate engraved with mystic diagrams, as amulet.

தகடு[6] *tagaḍu*, பெ. (n.) தகட்டரிதாரம் பார்க்க; see *tagaṭṭaridāram*.

தகடுகட்டு-தல் *tagaḍu-kaṭṭu-*, 5 செ.குவி. (v.i.) மந்திரத்தகடு கொண்டு காப்புக்கட்டுதல்; to tie a metal plate engraved with mystic diagrams, as amulet.

[தகடு[5] + கட்டு-.]

தகடுதை-த்தல் *tagaḍu-tai-,* 4 செ.கு.வி. (v.i.) *மரப்பெட்டி முதலியவற்றிற்குப் பட்டமடித்தல்;* to fasten corner-braces, as to a wooden box.

[தகடு + தை-.]

தகடுமதி *tagaḍu-madi,* பெ. (n.) **வெள்ளித்தகடு;** silver-plate (சா.அக.).

[தகடு + மதி.]

தகடூர் *tagaḍūr,* பெ. (n.) கடையேழு வள்ளல்களில் ஒருவனான அதியமானின் தலைநகரம்; தற்காலத் தருமபுரி (பதிற்றுப். 80, பதி.); capital of Adiyamāṉ, a Tamiḻian chieftain of ancient times, now identified as Dharmapuri.

து. தகடு

[தகடு + ஊர். தகடு = சக்கரம், தேர்ச் சக்கரம், வண்டிச் சக்கரம். தகடூர் = தேர்ச் சக்கரங்கள் மிகுதியாகச் செய்யப்பட்ட ஊர். துளு மொழியில் தகடு என்னுஞ் சொல் வண்டிச் சக்கரத்தைக் குறித்தலைக் காண்க. இச் சொல் நாளடைவில் சகடு → சாகாடு எனத்திரிந்தது. "பீலிபெய்சாகாடும்" (குறள், 475)]

தகடூர்யாத்திரை *tagaḍūr-yāttirai,* பெ. (n.) அதியமான் மீது பெருஞ்சேரலிரும்பொறை என்ற சேரமான் படையெடுத்துச் சென்று, புரிந்த போர்ச்செய்தி கூறுந் தமிழ்நூல்; a Tamiḻ poem describing the expedition of the Cēra king Peruñ-jēral-irum-poṟai against Tagaḍūr the capital of Adiyamāṉ.

[தகடூர் + யாத்திரை]

தகண்[1] *tagaṇ,* பெ. (n.) *1. தடை;* limitation, limit. "தகணிலாக் கேள்வி யான்கண்" (சீவக. 1052). *2. தழும்பு;* scar, impression, dint.

[தகை → தக → தகண் = தகைத்தல், மோதுதல், தாக்குதல்; அவ்வாறு தாக்குவதால் விளைந்த புண் அல்லது தழும்பு]

தகண்[2] *tagaṇ,* பெ. (n.) **பழக்கம்;** addiction. 'இரப்பிலே தகணேறினபடி' (ஈடு, 4. 8: 6).

[தகு → தகல் → தகண். தகுதியான, தக்கதான பழக்கம்]

தகண்[3] *tagaṇ,* பெ. (n.) *கிழங்குவிழுந்த பனங்கொட்டையின் உள்ளீடு;* white pulpy matter in the palmyra nut, after rooting.

தகண்டசகம் *tagaṇḍašagam,* பெ. (n.) *நரிப்பயறு;* fox-gram (சா.அக.).

தகணிதம்[1] *tagaṇidam,* பெ. (n.) *துந்துபி முரசு* (பிங்.); a large-drum.

மறுவ. தகுணிதம், தகுணிச்சம்

[அகணை → தகணை → தகணி → தகணிதம். வாயகன்ற பெருமுரசு]

தகணிதம்[2] *tagaṇidam,* பெ. (n.) **மாழைமணல்** (விவ.ரசா.5.); oxide of metals.

[தகணை → தகணி → தகணிதம்]

தகணேறு[1]**-தல்** *tagaṇ-ēṟu-,* 5 செ.கு.வி. (v.i.) *தழும்புபடுதல்;* to become scarred. "இவற்றின் கையிலே யடியுண்டு தகணேறின இவள்" (திவ். பெரியதி. 8. 2: 7.).

[தகண்[1] → ஏறு-.]

தகணேறு[2]**-தல்** *tagaṇ-ēṟu-,* 5 செ.கு.வி. (v.i.) *1. பழக்கமாதல்;* to become addicted. *2. பழுத்தல் முற்றுதல்;* to become ripe, mature. "தீம்பிலே தகணேறும்படியாக வாய்த்து உரப்புவது" (திவ். திருப்பா. 1: வியா.).

[தகண்[2] + ஏறு-.]

தகணை *tagaṇai,* பெ. (n.) **மாழைக்கட்டி** (பிங்.); ore, lump of metal.

[தகண் → தகணை]

தகத்து *tagattu,* பெ. (n.) *1. அரியாசனம்* (வின்.); throne. *2. திருமணத்திற்குரிய அழகுசெய் ஊர்தி* (இவ.); decorated chariot or dais used in weddings. *3. சிறந்த இடம்;* excellent place. 'அது ஒரு தகத்தான இடம்' (வின்.) *4. பெருமை;* superior status or position. அவனுக்கு இப்போது என்ன தகத்து வந்துவிட்டது (இவ.).

[தக்கது → தகது → தகு → தகத்து. தகு = தக்கது, தகுதி. தகுதியுஞ் சிறப்பு மிக்கோர், பெருமையுடன் வீற்றிருப்பது]

தகதகவென்று *taga-taga-v-eṉṟu,* கு.வி.எ. (adv.) (நெருப்பைக் குறிக்கையில்) மிகுதியாகக்

கொழுந்துவிட்டு; (of fire burning) brightly, a flame. தீ தகதகவென்று எரிந்து கொண்டிருந்தது (உ.வ.).

[தகதக + என்று → தகதகவென்று, ஒலிக் குறிப்பால் வரும் இரட்டைக்கிளவி. தழதழவென்று எரிதல், தகதகவென்று எரிதல், சுடர்தல், எனினுமாம் - தழதழ → தகதக + என்று]

தகநன் *taganan*, பெ. (n.) 1. நெருப்புக்கடவுள்; god of fire. 2. கொடியன்; wicked person.

[தக + நன். அழல் → தழல் → தழ → தக + நன்]

தகதகவெனல் *taga-taga-v-enal*, பெ. (n.) தகதகெனல் பார்க்க; see *tagatagenal*.

[தழ → தக. தகதகவெனல் → தகதகெனல் (திரு. தமி. மர. 155)]

தகதகெனல் *taga-tagenal*, பெ. (n.) 1. ஒளிருதற் குறிப்பு; onom. expr. of dazzling, glowing glittering. தகதகென்று மின்னுகிறது. 2. ஒலிக்குறிப்பு; onom. expr. of boiling, as water, bubbling (செ.அக.).

மறுவ. தகதகவெனல்

தெ., ம., து., தகதக; க. தக்கனெ

[தழ → தக → தகதக → தகதகெனல். விளங்குதற் கருத்தினின்று தோன்றிய வேரடியாகும். விளங்கும்பொருள் எரியுந் தன்மைத்து. எரியும்பொருள் தகதகென்று ஒளிரும். ஒநோ. தகதகவெனல் → தகதகெனல். 'வ' - இடைக்குறை]

தகதாருகம் *tagadārugam*, பெ. (n.) தழுதாழை; creeping screw-pine - Cleodendron phlomoides (சா.அக.).

[தகதார் + உகம் - தகதகக்கும் அல்லது பளபளக்குந் தன்மையுடைய தாழை]

தகப்படு-தல் *taga-p-padu-*, 20 செ.குவி. (v.i.) மேன்மைதங்குதல்; to be eminent, distinguished. "தகப்படுஞ் சராசனத் தனஞ்சயன்" (பாரத. வாரணா; 80).

[தக → தகு → தகுதி + படு-. எச்செய்கையினையும், மேம்படச் செய்யும் திறமையுடைமை. தகுதிப்படு → தகப்படு.]

தகப்பன் *tagappan*, பெ. (n.) தந்தை; father. "இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் றகப்பன்" (திருவாச. 9:13). முருகனைத் தகப்பன்சாமி என்பர். தகப்பன் வெட்டின கிணறென்று தலை கீழாய் விழலாமா? (பழ.).

ம. தவப்பன்

[ஒருகா: தம் + அப்பன் → தமப்பன் → (தவப்பன்) → தகப்பன் (த.வ.139)]

தந்தையென்ற பொருளில் வழங்கும் தகப்பன் என்னும் முறைப்பெயர், கன்னெஞ்சையுங் கனிந்துருகச் செய்யும், திருவாசகம் அருளிய மணிவாசகரின் இலக்கிய வழக்கில், "இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்" என்றும், அருணாகிரியார் இயற்றிய திருப்புகழென்னும் தெய்வப்பனுவலில், "தகப்பன்சாமி எனவரு பெருமாளே" என்றும் குறிப்பிட்டுள்ளது.

பன்னெடுங் காலமாக மாந்தர்தம் நெஞ்சகத்தே கருக்கொண்டு, வாய்மொழி யிலக்கியமாக உருக்கொண்ட,

தகப்பன் வெட்டின கிணறென்று தலைகீழாய் விழலாமா?

தகப்பன் பட்டம் பிள்ளைக்கு அல்லவா?

தாயும் தகப்பனும் தவிர எல்லாம் வாங்கலாம்.

தாயும் தகப்பனும் தள்ளிவிட்ட காலத்தில் வாவென்று அழைத்த வங்கார வாசி

போன்ற பழமொழிகளிலும், இச் சொல், பரக்கக் காணப்படுகிறது.

திராவிடமொழிகட்கு, இனச்சொற்களை இயம்பவந்த, பரோஎனனோவர்தம் சொற் பிறப்பியல் அகரமுதலியில் (1961) தகப்பன் குறித்த விளத்தம், தவறாக உள்ளது.

" 'பரோ எமனொ'வரின் சொற்பிரிப்புமுறை பொருண்மையற்றது; ஒலியியல்பிற்கு மாறானது" பிழையுடைத்து என்பார் மொழிஞாயிறு.

(எ.டு.) தகு + அப்பன் → தகப்பன்.

இச் சொல்லின் பிற்பகுதியில் உள்ள அப்பன் தெள்ளத் தெளிவாய் அமைந்துள்ளது. முற்பகுதியிலுள்ள 'தகு' என்பது பற்றி, இரு வேறுபட்ட கருத்துக்களை மொழியியலார் மொழிகின்றனர்.

கால்டுவெல் கண்காணியர், வின்சன் போன்றோர், தம் + அப்பன் எனப் பிரித்துப் பொருளுரைப்பர். இவ்வாறு பிரிப்பதால், தமப்பன் → தகப்பன் என்று மாறியதாகக்

காட்டவேண்டும். அஃதாவது ம → க ஆக மாறிற்றென்று கொள்ளவேண்டும். பரோ எமனோவரின் சொற்பிரிப்பு மாறாக உள்ளது. ஆனால், தகு + அப்பன் என்று பிரிப்பதை நிலைநாட்டத் தமிழிலும், திராவிட மொழிகளிலும் அமைந்துள்ள பொருண்மையினைப் பின்வருமாறு கூறி விளக்குவர். "தகு" என்பதற்குத் தகுந்த, போன்ற, தகுதிவாய்ந்த, உரித்தான, சிறப்புமிக்க, மேன்மைசான்ற, முதலான சொற்கள், மக்களிடையே வழக்கூன்றியுள்ளதால், இதனடிப்படையில் வரலாறு வரைவதே பொருத்தமுடைத்து" என்பர்.

தகப்பன் என்ற முறைப்பெயருக்கு இணையாகத் தமிழில், தந்தை, தம்பி, தங்கை போன்ற முறைப்பெயர்கள், மக்களிடையே வழங்குகின்றன. இச்சொற்களை முறையே, தம்+தை, தம்+பி, தம்+கை என்று பிரித்துப் பொருள் காண்பதே, இயன்மொழியாம், தமிழ்மொழிக்கு ஏற்ற முறையாகும்.

நெடில் முதலாவுள்ள ஓரசைச் சொற்கள் வருமொழியில், உயிர் முதற்கண் பயின்று வருங்கால், முதல் குறுகுவது, சிறப்பாகத் தமிழிலும், பொதுவாகத் திராவிட மொழிகளிலும் காணப்படும் இயல்பாகும்.

(எ-டு.) தாம் → தம்; தான் → தன்

'தகப்பன்' என்பதைத் 'தவப்பன்' என்று பலுக்கும் நிலையினைச், சிற்றூர் மாந்தரிடையே இன்றும் காணலாம். மலையாளத்திலும், தவப்பன் என்று பேசும் வழக்கு வேரூன்றியுள்ளது.

கல்லாதார் பேச்சில் வழக்கூன்றியுள்ள 'தவப்பன்' என்னும் வடிவம், ம → க ஆக மாறிய தகப்பன் என்ற சொல்லின், ஒலிமாற்ற நிலையைக் காட்டவேண்டிய தேவையின்மையை, உறுதிப்படுத்தும் பான்மையில், அமைந்துள்ளது.

தகப்பன் என்ற சொல்லில், இரு படிநிலைகளில் ஒலிமாற்றம் நிகழ்கிறது. முதனிலை ம → க ஆக மாறுகை. இரண்டாம் நிலை வ → க ஆக மாறுதல். மேற்குறித்த மாற்றங்கள் ஒலிமாற்ற இயல்பிற்கு ஏற்றவாறு அமைந்துள்ளன.

தம் + அப்பன் → தமப்பன் → தகப்பன் என்று வழங்குவதே, பொருண்மை நிலையிலும், ஒலிமாற்ற நிலையிலும், மரபிற்கேற்ற வண்ணம் அமைந்துள்ளமை கண்டுகொள்க (த.வ. 140).

தகப்பன்சாமி *tagappaṉ-sāmi*, பெ. (n.) 1. தந்தைக்குக் குருவான முருகன்; Lord Murugaṉ. "தகப்பன்சாமி எனவரு பெருமாளே" (திருப்பு. 1094). 2. அடங்காப்பையன் (உவ.); head-strong, presumptuous boy.

[தகப்பன் + சாமி]

தகப்பன்மார் *tagappaṉ-mār*, பெ. (n.) முதுவர் என்னும் மலைக்குலத்தார்க்குப் பிறர் வழங்கும் பட்டப்பெயர் (E.T. v. 86); title of Muduvar, a hill tribes used by outsiders.

[தகப்பனார் - உயர்வொருமையாகவும், தகப்பன்மார் - பன்மையாகவும், வழங்குவதறிக. தகப்பன் + மார்]

தகம்[1] *tagam*, பெ. (n.) 1. தகுதி; adequacy. 2. தன்மை; nature, abstract quality.

[தகு → தகம்]

தகம்[2] *tagam*, பெ. (n.) 1. வெப்பம் (வின்.); heat. 2. எரிவு (சது); combustion,burning. 3. நீர் வேட்கை; thirst. 4 தூக்கம்; sleep.

[தக → Skt. தஹ். தக → தகம் (வ.மொ. வ. 169)]

தகம்[3] *tagam*, பெ. (n.) 1. கந்தகம்; sulphur. 2. மிகுவிரைவு; hurry.

[தக + அம். தக- எரிகை, 'அம்' சாரியை]

தகம்புவியார்த்தம் *tagambu-viyārttam*, பெ. (n.) 1. தவிடு; husk. 2. மஞ்சள்வண்ண மாணிக்கக் கல் வகை; cinnomon stone (சா.அக.).

[தகம்பு + வியார்த்தம்]

தகமை *tagamai*, பெ. (n.) தகைமை பார்க்க; see *tagaimai*.

மறுவ. வகைமை

ம. தகம

[தகைமை → தகமை]

தகர்[1]**-தல்** *tagar-*, 4 செகுவி. 1. நொறுங்குதல்; to be broken to pieces, as skull-bone, earthen vessels. "தலைபத்துந் தகரவூன்றி" (தேவா. 777: 10). 2. உடைதல்; to be shattered, demolished. வெடிகுண்டு வீச்சினால் வீடுகள் தகர்ந்தன.

குழுகாயம் மாறும்போது பல மதிப்பீடுகள் தகர்ந்து போகின்றன. (உ.வ.). என்னுடைய நம்பிக்கையெல்லாம் பேச்சு வார்த்தைகளுக்குப் பின் தகர்ந்துவிட்டது. 3. நெரிதல் (வின்.); to be crushed, bruised. 4. சிதறுதல் (வின்.); to be scattered, as the ranks of an army. 5. அழிதல் (வின்.); to be breached, as a dam, a bank. 6. சாய்ந்துவிழுதல்; to be uprooted. "சந்தனங்க டகர்ந்தன தாள்பட" (கம்பரா. பொழிலிறு. 26).

ம. தகருக

[தகல் → தகர்-.]

தகர்²-த்தல் *tagar-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. நொறுக்குதல்; to break to pieces. வரலாற்றுப் புகழ்மிக்க கவின்கலைக் கூடத்தை வெடிகுண்டு வைத்துத் தகர்க்கச் சதி (இக். வ). "ஞாயிற்றின் பல்லனைத்துந் தகர்த்தார்" (தேவா. 576: 2). 2. புடைத்தல்; to srtike, dash to the ground. "முன்றகர்த்தெல்லா விமையோரையும்" (திருக்கோ. 92). 3. குட்டுதல் (திவா.); to cuff, strike with the knuckles, as on the head. 4. நெரித்தல் (வின்.); to bruise, fracture, as a bone. 5. சிதறடித்தல்; to break the ranks of an army, defeat, rout. "தாருகன் பண்டு தேவரைத் தகர்த்தது" (கம்பரா. இராவணன்வதை. 105). 6. அழித்தல்; to ruin,destroy. "நீண்ட வசுர ருயிரெல்லாந் தகர்த்து" (திவ். திருவாய். 8. 10: 6). 7. பருமுதலிய கட்டிகளைத் திறத்தல் (வின்.); to break open a blister, a boil. 8. முறியடித்தல்; to break the record.

[தகல் → தகர்-.]

தகர்³-த்தல் *tagar-*, 4 செ.குவி. (v.i.) மெச்சும்படி ஆற்றல் காட்டுதல் (இவ.); to show off one's ability.

ம. தகர்க்க

[தகல் → தகர்-.]

தகர்⁴ *tagar*, பெ. (n.) 1. பொடி (திவா.) தூள்; dust, powder. 2. சிறுதுண்டு (யாழ்ப்.); shiver, fragment.

[தகல் → தகர். தகர்ந்தபொருள் துகளாகுந் தன்மைத்து; தகர்த்தற்கருத்தினின்று துகளாதற்கருத்துத் தோன்றும்]

தகர்⁵ *tagar*, பெ. (n.) 1. ஆட்டின்பொது (திவா.); sheep. 2. செம்மறியாட்டுக்கடா (திவா.); ram. "பொருதகர் தாக்கற்குப்பேருந் தகைத்து" (குறள், 486). 3. வெள்ளாடு (உரிநி.); goat. 4. மேழ ஓரை (வின்.); Aries in the zodiac. 5. ஆண்யாளி; male yāḷi. 6. ஆண்யானை (பிங்.); male elephant. 7. ஆண்சுறா (சூடா.); male shark.

தெ., து. தகரு, க. தகர்; ம. தகரன

[தகல் → தகர். திகழ்தல் அல்லது இலங்குதற் கருத்துவேராகும். ஒருகா. தகு → தகர்.]

தகர்⁶ *tagar*, பெ. (n.) 1. மேட்டுநிலம்; elevated ground. "வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தகர்" (பெரும்பாண். 87). 2. நிலம் (சது.); earth. 3. பலாசுமரம்; palas tree.

[துகல் → தகல் → தகர் = நிலைபெறுதற் கருத்துவேர்.]

தகர்⁷ *tagar*, பெ. (n.) 1. துருவாட்டேறு; raw of flesh sheep. ஊக்கமுடையா னொழுக்கம் பொருதகர் தாக்காக்கும் பேருந்தகைத்து (குறள், 486) 2. தூசு; dust, powder (சா.அக.).

மறுவ. துகள்

தகர்⁸ *tagar*, பெ. (n.) இடுமணல் மணற்குன்று; hillock. "நெடுந்தகர் ஈத்து" (பெரும்பா. 81).

தகர்ச்சி *tagarcci*, பெ. (n.) தகர்வு பார்க்க; see *tagarvu*.

[தகர் → தகர்ச்சி]

தகர்ப்பொறி *tagar-p-poṟi*, பெ. (n.) கோட்டை மதிலிற் காப்பாக வைக்கும் ஆட்டின் வடிவான எந்திரவகை. (சிலப். 15: 216: உரை); a defensive machine mounted on fort-wall, probably in the shape of a ram.

[தகர் + பொறி]

தகர்வு *tagarvu*, பெ. (n.) 1. உடைவு; break. 2. சிதைவு பார்க்க; see *śidaivu*.

[தகர் → தகர்வு]

தகரக்குடம் *tagara-k-kuḍam*, பெ. (n.) தகரத்தாலான சதுரவடிவக் குடம் (இவ.); square tin-pot.

[தகரம் + குடம்]

தகரக்கொட்டகை *tagara-k-koṭṭagai,* பெ. (n.) இரும்புத் தகடாலான கூரைக் கட்டடம்; steel-roofed building.

[தகரம் + கொட்டகை.]

தகரங்கவித்து *tagaraṅgavittu,* பெ. (n.) சிறு தும்மட்டிக்காய்; a small species of bryonia (சா.அக.).

தகரச்சி *tagaracci,* பெ. (n.) தகரை பார்க்க; see *tagarai* (சா.அக.).

தகரஞாழல் *tagara-ñālal,* பெ. (n.) மயிர்ச் சாந்து வகை (நன். 368, மயிலை); an aromatic unguent for the hair.

[தகரம் + ஞாழல். தகரம் = தூளாக்கப் பட்ட நறுமணப்பொடி, தகர் → தகரம்]

தகரடி *tagar-aḍi,* பெ. (n.) 1. சிதறவடிக்கை (யாழ்ப்.); breaking, shattering to pieces, smashing. 2. பெருமிதப்பேச்சு (இவ); tall-talk.

[தகர் + அடி]

தகரப்பானை *tagara-p-pāṉai,* பெ. (n.) தகரத்தால் செய்த பாண்டம்; tin-pan (சா.அக.).

[தகரம் + பானை]

தகரப்பூண்டு *tagara-p-pūṇḍu,* பெ. (n.) பவளப்பூண்டு; gloss wort - Arthrocnemum indicum (சா.அக.).

[தகரம் + பூண்டு]

தகரப்பொடி *tagara-p-poḍi,* பெ. (n.) மணத் தூள்; fragrant powder (சா.அக.).

மறுவ. நறுமணத்தூள்

[தகரம் + பொடி]

தகரம்[1] *tagaram,* பெ. (n.) 1. நறுமணமரம்; wax flower dog-bane, Tabernae montana. "திருந்து தகரச் செந்நெருப்பில்" (சீவக. 349). 2. மயிர்ச் சாந்து; aromatic unguent for the hair. "தண்ணறுந் தகரங் கமழ மண்ணி" (குறிஞ்சிப். 108). 3. நறுமணம் (அக. நி.); fragrance. 4. தகரைச் செடி; a plant.

[தகர் + அம் - தகரம் = இடித்துத் தூளாக்கப்பட்ட நறுமணப்பொடி]

தகரம்[2] *tagaram,* பெ. (n.) 1. எளிதில் உருகக் கூடிய, தகடாக அடிக்கக்கூடிய, வெள்ளை நிற மாழை (உலோகம்), வெள்ளீயம் அணு எண் 50, குறியீடு; a silvery white, casily fusible, malleable metal, symbol atomic no. 50. 2. தகரத்தாலான கொள்கலன்; container made up of tin sheet (செ.அக.).

க. தகர. தமர, தவர; தெ. தகரமு, தமரமு, தவரமு; து. தமரு, தமர, தவர;. ம. தகரம்; கோத. தகரம்; பட. தகர; Skt. tamaram

[தழ → தக + ர் + அம். (ஒ.நோ.) மழ → மக. தள → தழ = ஒளிருதற்பொருள் (வடமொழி வரலாறு)]

தகரம்[3] *tagaram,* பெ. (n.) நெஞ்சகத்தின் உள்ளிடம்; the cavity of the heart. "தகரத்தந்தச் சிகரத் தொன்றி" (திருப்பு. 86).

[தங்கு → தங்கல் → தகல் → தகர் + அம். "அம்" பெருமைப்பொருட் பின்னொட்டு.]

தகரம்[4] *tagaram,* பெ. (n.) விலங்கின்குட்டி (யாழ்.அக.); young of an animal.

தகரம்[5] *tagaram,* பெ.(n.) 1. நந்தியா வட்டம்; Indian rosebay. 2. தகைமைவிதை; ringworm seed.

தகரரேக்கு *tagara-rēkku,* பெ. (n.) தகரத்தை இலையைப்போல் வெட்டிய தகடு; tin foil (சா.அக.).

[தகரம் + ரேக்கு]

தகரவித்தை *tagara-vittai,* பெ. (n.) இறைவனை நெஞ்சகத்தில் வைத்து ஊழ்கம் செய்யும் முறையை உணர்த்தும் வித்தை; the mystic contemplation of the deity in tagarāgāšam. "ஏய்ந்த சீர்த்தகரவித்தை முறைப்படி" (காஞ்சிப்பு. நகர. 119).

மறுவ. தகராலயம்

[தகரம் + வித்தை]

தகராகாசம் *tagarāgāšam,* பெ. (n.) தகரம்[3] பார்க்க; see *tagaram*[3] (செ.அக.).

[தகர் + ஆகாசம்]

தகராஞ்சிரம் *tagarāñjiram,* பெ. (n.) பெருந் தகரை; West Indian bead tree.

மறுவ. குமிழ்மணிமரம்

[தகரை + அஞ்சிரம்]

தகராறு *tagarāṟu*, பெ. (n.) *1.* கருத்து வேறுபாடு முதலியவற்றால் உருவாகும் சிறுசண்டை; dispute between two groups or nations; skirmish; affray. வாடகைத் தகராறு ஏதுமில்லை (உவ.). *2.* மாறான போக்கால் அல்லது ஒழுங்கு தவறுவதால் ஏற்படும் குழப்பம்; wrangle; quarrel. குடித்துவிட்டுத் தகராறு செய்தான்(உவ.). *3.* எந்திரம் ஒழுங்காக இயங்காமல் தகராறு செய்கிறது; when referring to mechanical failures; trouble. 'பேருந்து கிளம்பாமல் தகராறு செய்தது' (இ.வ.).

த. தகராறு → Arab. tagarar.

[தகர் + ஆறு = மாறுபாடு, வேறுபாடு, முதலியவற்றைத் தகர்க்கின்ற வழி]

தகரி *tagari*, பெ. (n.) முத்திரை எனும் மரம் (L.); Pinnate - leaved honey sweet tree - Meliosma arnottiana.

தகரிடம் *tagaridam*, பெ. (n.) தகரை பார்க்க; see *tagarai* (சா.அக.).

தகரு *tagaru*, பெ. (n.) புனமுருக்கு (மலை.); palas tree.

தகரூகிகம் *tagarūgigam*, பெ. (n.) சாயப்பாக்கு; dyed areca-nut. (சா.அக.).

தகரை *tagarai*, பெ. (n.) *1.* பெருந்தகரை; west Indian bead tree. *2.* கையாந்தகரை; eclipseplant - Eclypta prostata. *3.* தகரம்[5]-1 பார்க்க; see *tagaram*[5]-1 (சா.அக.).



தகரை வகை:

1.	பெருந்தகரை	- large tagaray-Cassia sophera.
2.	கருந்தகரை	- black cassia - Cassia pumila.
3.	காட்டுத்தகரை	- wild-cassia - Cassia occidentabis.
4.	வெண்டகரை (அ) வெள்ளைத்தகரை	cassia glauca
5.	பூந்தகரை	-
6.	சிறுதகரை	- same as தகரை which see
7.	சுற்றகரை	-
8.	பன்றித்தகரை	-
9.	ஊசித்தகரை	- needle chakondah-pharcolus semierectus
10.	செந்தகரை	-
11.	புளித்தகரை	-
12.	நாற்றத்தகரை	- foetid cassia
13.	சீனத்தகரை	- chinna cassia - Cassia chinensis
14.	பொன் அல்லது பொன்தகரை	- cassia glauca

தகல்[1] *tagal*, பெ. (n.) தகுதி; fitness. "துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா" (நாலடி, 167).

[தகு → தகல்]

தகல்[2] *tagal*, பெ. (n.) தடை (இலக். அக.); obstruction.

[தகையல் → தகல்]

தகல்[3] *tagal*, பெ. (n.) *1.* பவளப்பூண்டு; a species of glasswort. *2.* கீரைவகை; a profusely branching prostrate herb. Mollugo spugula.

[தகை → தக → தகல்]

தகல்[4] *tagal*, பெ. (n.) ஒளி; light.

[தக → தகல். தகல் = தகதகவென்று எரிதல், சுடருதல்]

தகல்[5] *tagal*, பெ. (n.) உமரி; glasswort - Arthroenemum indicum (சா.அக.).

[தகு + அல்]

தகலக்கட்டு-தல் *tagala-k-kaṭṭu-*, 5 செ. குன்றாவி. (v.t.) ஏமாற்றுதல் (இ.வ.); to cheat any one, as by selling him a bad article.

தகலாவணிகம் *tagalāvaṇigam,* பெ. (n.) தண்ணீரும் உப்பும் கலத்தல்; preparing a solution with salt and water (சா.அக.).

[தகல் + ஆம் + வணிகம் - தகலாவணிகம். 'ஆம்' - மகரக்குறுக்கம்.]

தகலுப்பு *tagaluppu,* பெ. (n.) ஏமாற்றுகை (வின்.); pretending, cheating, seducing.

[தகு + அல் + உப்பு - தகலுப்பு. தரமற்ற ஒன்றைத் தகுதியானது என்று கொடுத்து ஏமாற்றுகை.]

தகலுபாசி *tagalupāsi,* பெ. (n.) தகல்பாச்சி (வின்.) பார்க்க; see *tagal-pācci.*

தகலோன் *tagalōṉ,* பெ. (n.) தகுதியுடையவன்; one who is eminently fitted, suitable or worthy. "எவரும் புலகத் தகலோன்" (திருக்கோ. 188).

[தகு → தகல் + (ஆன் →) ஓன் - தகலோன்]

தகவமை-த்தல் *tagavamai-,* 4 செ.குன்றாவி. (v.t.) சூழலுக்கேற்ப ஒத்துப்போகும் வண்ணம் மாற்றிக்கொள்ளுதல்; to adopt or adjust. சூழ்நிலைக்கேற்ப தகவமைத்துக் கொள்ளும் மாந்தரே வெற்றி பெறுகின்றனர் (உ.வ.). சில விலங்குகள் கடுங்குளிரிலும், தங்களைத் தகவமைத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றிருக்கின்றன (உ.வ.).

[தகவு + அமை-.]

தகவல் *tagaval,* பெ. (n.) 1. செய்தி; information, intimation. ஒரு தகவலும் எனக்கு வரவில்லை (இ.வ.). 2. சான்று (வின்.); citation; illustration, example. 3. நேரியவிடை (வின்.); appropriate answer.

[தரு → தரம் = வரும்வழி, மூலம். தரம் → தரவு = செய்தி. தரவு → தகவு = தகவல்.]

தகவல்தொடர்பு[1] *tagaval-toḍarbu,* பெ. (n.). தகவல்களைப் பரிமாறிக் கொள்ளப் பயன்படுத்தும் அமைப்பு; information and communication, telecomunication. செயற்கைக் கோளின் கண்டுபிடிப்பினால் உலகளாவிய தொலைத்தொடர்பு எளிதாகியுள்ளது.

[தரு → தரவல் → தகவல் + தொடர்பு]

தகவல்தொடர்பு[2] *tagaval-toḍarbu,* பெ. (n.) உரியசெய்தி ஓரிடத்தினின்றும், பிறிதோரிடத்திற்குப் பரிமாறிக்கொள்ளப் பயன்படுத்தும் (தொலைபேசி, கம்பியில்லாத் தொலைவரி முதலிய) அமைப்பு; telecommunications. செயற்கைக்கோளின் கண்டுபிடிப்பினால் உலகளாவிய தகவல் தொடர்புக் கருவிகள், எளிதில் செய்திகளைப் பரப்பி விடுகின்றன.

[தரு → தரவல் → தகவல் + தொடர்பு]

தகவலாளி[1] *tagavalāḷi,* பெ. (n.) உளவு சொல்பவர்; informer.

மறுவ. ஒற்றன், உளவாளி,

[தரவல் → தகவல் + ஆளி = தகவல் தரும் ஆள். "இ" உடைமைப்பெயரீறு]

மாற்றார்நாட்டினின்று தகவல் தருபவர், அல்லது தாய்நாட்டினின்று சூழ்ச்சி செய்பவர்; வேற்றுநாட்டவர்க்கு, மந்தணச் செய்திகளை விற்றுப் பணஞ்சேர்க்கும் தியோரைக் காட்டிக்கொடுப்பவரும் தகவலாளியேயாம்.

தகவலாளி என்பவருள் ஒருசாரார், குற்றம் கண்டுரைக்கும் பணி மேற்கொண்டவரெனலாம். காவல்துறையினருக்கு உளவுச் செய்திகளையுரைப்போரும், தகவலாளிகளேயாவர்.

தகவலாளி[2] *tagavalāḷi,* பெ. (n.) ஆராய்ச்சி செய்வோருக்கு உதவுபவர்; informant; இது தகவலாளி சொன்ன கதையின் அடிப்படையில் எழுதப்பட்ட கட்டுரையாகும் (உ.வ.).

[தரவல் → தகவல் + ஆள் + இ. தகவலாளி. நய(நீதி) மன்றத்தில் அல்லது ஆய்வுப் புலத்தில் தகவல்களை ஆய்வு செய்பவருக்குத் தரவுகளை அல்லது, சட்ட நுணுக்கங்களைத் தந்துதவுபவர்.]

தகவன் *tagavaṉ,* பெ. (n.) தகுதியுடைவன்; worthy man. "தகவா தகவல்லது செய்தனையே" (சீவக. 1382).

[தகவு → தகவன்]

தகவிலர் *tagavilar,* பெ. (n.) நடுவுநிலையில்லாதவர்; injustice people.

[தகவு + இல் + அர்]

தகவிலை *tagavilai,* பெ. (n.) *1.* **தகவின்மை யுடைமை;** unworthiness. *2.* **தகவின்மை** பார்க்க; see *tagavinmai.*

[தகவு + விலை]

தகவின்மை *tagavinmai,* பெ. (n.) *1.* **தகுதியின்மை;** unworthiness, unsuitability. *2.* **நடுநிலையின்மை;** injustice, partiality. *3.* **துன்பம்;** trouble, anxiety. "தணிவாய் நின்றக வின்மை" (தஞ்சைவா. 50).

[தகவு + இன்மை]

தகவு *tagavu,* பெ. (n.) *1.* **தகுதி;** suitability, fitness, worthiness. "தகவிலை கொல்லோ சம்பாபதியென" (மணிமே. 6: 138). *2.* **உவமை** (சூடா.); similitude, resemblance, comparison. *3.* **குணம்** (பிங்.); quality, state, condition, manner. *4.* **பெருமை;** eminence, greatness. "தகவேயுடையான் றனைச்சார" (திருவாச. 45: 2). *5.* **அருள்** (சூடா.); mercy, kindness. *6.* **நடுவு நிலை;** justice, equity, impartiality. "தக்கார் தகவிலரென்பது" (குறள், 114). *7.* **வலிமை;** strength, ability. "வாரிகடக்குந் தகவின்மை" (கம்பரா. மகேந். 4). *8.* **அறிவு** (அரு.நி.); knowledge, wisdom. "தக்கதே நினைந்தனை தகவோய்" (கம்பரா. அயோத். மந்திரப். 35). *9.* **தெளிவு** (அரு. நி.); clarity. *10.* **கற்பு;** chastity. "தகவுடை மங்கையர்" (பரிபா. 20: 88). *11.* **நல்லொழுக்கம்** (யாழ். அக.); discipline, good behaviour.

தெ. தகவு

[தகு → தகவு]

தகவுரை *taga-v-urai,* பெ. (n.) **பரிந்துரை;** recommendation. "தன்மார் பிருப்பாள் தகவுரையாலே" (அஷ்டப். நூற்றெட். 78).

[தகவு + உரை - தகவுரை - தகுதியுடைய வருக்கு, ஒருவர் முறையாக நல்கும் பரிந்துரை]

தகவை *tagavai,* பெ. (n.) **சாயக்கட்டி;** a piece of dye. "மரகதத் தகவையும்" (பெருங். மகத. 1: 96).

[தகு - மெய்ம்மை முறைமை. தகு → தகவை - முறையான வண்ணம்]

தகழி *tagali,* பெ. (n.) *1.* **அகல்** (திவா.); bowl of a lamp. "அன்பே தகழியா" (திவ்.). *2.* **உண்கலம்** (சது.); plate from which food is eaten, dish.

ம. தகழி

[அகல் → தகல் → தகலி → தகழி]

தகழிச்சி *tagalicci,* பெ. (n.) **எரியணம்** (மூ.அ.); camphor.

மறுவ. கருப்பூரம்

[தழல் → தழலி → தகலி → தகழி → தகழிச்சி]

தகளி[1] *tagali,* பெ. (n.) **தக்களி** பார்க்க; see *takkali.*

தொங்கும் விளக்காய தகளிபோல் திரிக்குங்கால் ஆடலானும், தொங்கலானும், தகளி யென்னுஞ் சொல் தக்களி யென இவ் வகை நூற்புக்கருவிக்கு ஆகியது.

தகளி[2] *tagali,* பெ. (n.) **தகழி** பார்க்க; see *tagali.* "வையந் தகளியா" (திவ். இயற். 1: 1).

[தகழி → தகளி]

தகன்[1] *tagan,* பெ. (n.) *1.* **வேர்விட்ட பனங் கொட்டை** (யாழ்ப்.); palmyra nut planted and rooted. *2.* **கிழங்குவிழுந்த பனங்கொட்டையின் உள்ளீடு** (நெல்லை); white pulpy matter in the palmyra nut. *3.* **திராய் (கீரை வகை)** (மலை.); a profusely branching prostrate herb.

[தகு → தகன்]

தகன்[2] *tagan,* பெ. (n.) *1.* **தீ;** fire. *2.* **பூரான்;** pūrān, a centipede (சா.அக.).

[தழல் → தகல் → தகன். எரிதல் தன்மையால் தீ. கடிப்பதால் எரிச்சலுண்டாக்கும் பூரான்]

தகன்[3] *tagan,* பெ. (n.) **ஒழுக்கத்தான்;** characteristic person.

மறுவ. நெறியன், தன்மையன்.

[தகு → தகம் → தகன்]

தகனக்கிரியை *tagana-k-kiriyai,* பெ. (n.) **பிணத்தை எரிக்கும் நிகழ்ச்சி;** cremation rites.

[தகனம் + Skt. கிரியை]

தகனகரம் *tagaṉa-garam,* பெ. (n.) உயிர்வளி (பிராணவாயு) (விவ. ரசா. 5); oxygen.

[தகனகரம் – ஒக நிலையில் மூக்கின் வலத்துளையில் வரும் காற்று வெப்பமாகவும், இடத்துளையில் வரும்காற்று குளிராகவும் இருக்கும்]

தகனசேதனம் *tagaṉa-šēdaṉam,* பெ. (n.) புகை; smoke (சா.அக.).

தகனபலி *tagaṉa-pali,* பெ. (n.) நெருப்பிலிட்டுச் செய்யும் பலி (கிறித்.); burnt-offering.

[தகனம் + பலி]

தகனபலிபீடம் *tagaṉa-pali-pīḍam,* பெ. (n.) நெருப்பிலிட்டுப் பலி செய்தற்குரிய அடிமனை (கிறித்.); altar for burnt-offerings.

[தகனம் + பலி + பீடம்]

தகனப்பிரியை *tagaṉa-p-piriyai,* பெ. (n.) தீக்கடவுள் மனைவி; fire god's consort.

[தகனம் + பிரியை]

தகனபைத்தியம் *tagaṉa-paittiyam,* பெ. (n.) நெருப்பைக் கண்டவுடன் மனப்பிறழ்ச்சி ஏற்படுகை; derangement of mind at the sight of fire (சா.அக.).

[தகனம் + பைத்தியம்]

தகனம் *tagaṉam,* பெ. (n.) 1. எரிக்கை; burning, combustion, consumption by fire. 2. பிணஞ் சுடுகை; cremation, burning of a corpse. 3. எரித்தலாகிய தூய்மைப்படு கருமியம் (வாயு. சங். பஞ்சாக். 46); purification by burning, one of *šutti-karaṇa-k-kiriyai.* 4. செரித்தல் (நாஞ்.); digestion. 5. உணவு; food. மாடுகளுக்குப் போதுமான தகனங் கிடைப்பதில்லை (கோவை.).

[தக → தகன் + அம் – தகனம். எரிக்கும் பசியில், செரிக்கும் உணவு]

தகனன் *tagaṉaṉ,* பெ. (n.) நெருப்புக்கடவுள் (சூடா.); Agni, the fire God.

[அழல் → தழல் → தகல் → தகன் + அன். ஒருகா: தழலன் → தகனன்]

தகனாஞ்சு *tagaṉāñju,* பெ. (n.) பற்களை ஒளிரச்செய்யும் கட்டியான மேற்பூச்சு; glossy hard coating of the teeth-Enamel (சா.அக.).

[தகன் → தகனாஞ்சு – மின்னும் வயிரம் போல் உறுதியான பல்.]

தகனாராதி *tagaṉārādi,* பெ. (n.) நீர்; water (சா.அக.).

[தகன் + அல் + நார் + ஆதி – தகனாராதி. வெப்பமற்ற தன்மையது.]

தகனானுவளி *tagaṉāṉu-vaḷi,* பெ. (n.) உயிர்வளி (பிராண வாயு); oxygen gas (சா.அக.).

தகனி-த்தல் *tagaṉi-,* 4 செ.குன்றாவி. (v.t.) எரித்தல் (யாழ்.அக.); to burn, consume by fire.

[தழல் → தகன் → தகனி-.]

தகனை *tagaṉai,* பெ. (n.) தகணை (யாழ்.ப்.) பார்க்க; see *tagaṇai.*

[தகன் → தகனை.]

தகனோபகரணம் *tagaṉōbagaraṇam,* பெ. (n.) சூட்டுக்கோல்; an instrument for caterising (சா.அக.).

[தழல் → தகன் + உபகரணம்]

தகனோபலம் *tagaṉōpalam,* பெ. (n.) 1. சூரியகாந்திக்கல் (யாழ்.அக.); sun-stone. 2. பொழுது வணங்கிப்பூ (சூரியகாந்தி); sun-flower.

தகா[1] *tagā,* பெ. (n.) 1. பசி நீர்வேட்கை (வின்.); thirst; hunger, appetite. 2. மிக்கஆசை; intense desire, eagerness, craving. 3. பேராசை, பெண்ணாசை; lust, venereal desire. 4. பொருளாசை; avarice, cupidity (செ.அக.).

[தகு → தகா – தகாத தன்மை]

தகா[2] *tagā,* பெ. (n.) ஏமாற்று, ஏய்ப்பு (C.G.); cheating, fraud.

[தகு → தகா = தகுதியற்ற, முறையற்ற செயல்]

தகாக்காட்டு-தல் *tagā-k-kāṭṭu-,* 5 செகுவி. (v.i.) ஆசைகாட்டுதல்; to excite desire.

[தகு → தகா + காட்டு-.]

தகாத *tagāda,* பெ. (n.) *1.* தகுதியற்ற; முறையற்ற; பொருத்தமற்ற; unproper, unfair, unbecoming. *தகாதமுறைகளைப் பின்பற்றித் தேர்தலில் வெற்றிபெற முயல்வது இழுக்கன்றோ? (உ.வ.)* *2.* தரக்குறைவான; அருவருக்கத்தக்க; obscure; unvulgar. *தகாத சொற்களால் திட்டலாமா? (உ.வ.)*

[தகு + ஆ - தகா.]

தகாதது *tagādadu,* பெ. (n.) ஒழுங்கற்ற செயல்; indecent act.

[தகு → தகா → தகாத + அது]

தகாதவன் *tagādavan,* பெ. (n.) ஒழுக்கமற்றவன்; indisciplined man.

[தகு → தகா → தகாத + அவன். தகாத - முறையற்ற]

தகாதா *tagādā,* பெ. (n.) *1.* குற்றம்; harm. *இனி, நான் இருந்தாலும், இராவிட்டாலும் தகாதா யாதும் இல்லை (செ.வ.)* *2.* குற்றவியல் வழக்கு (வின்.); criminal proceeding, law suit. *3.* நெருக்குகை (W.G.); trouble-some importunity in urging the settlement of a claim or payment of a debt, dunning.

[தகு → தகாது + ஆ. "ஆ" எதிர்மறைப் பின்னொட்டு = முறையற்றது: நேர்மையற்ற செய்கை]

தகாதி *tagādi,* பெ. (n.) தகாதா (வின்.) பார்க்க; see *tagādā.*

[தகு → தகா → தகாதி]

தகாபேசி *tagāpēši,* பெ. (n.) எழுச்சியை உண்டாக்கும் நரம்பு; nerve causing lust or erection of penis (சா.அக.).

[தகு → தகா + (பேசு →) பேசி. 'இ' சொல்லாக்க விகுதி. தகுதியற்ற பேச்சினைத் தூண்டும் முதிய நரம்பு]

தகாமை[2] *tagāmai,* பெ. (n.) *1.* ஒழுங்கற்ற தன்மை; immorality. *2.* தகுதியின்மை; ingravity. *3.* இயல்பாக நிகழக்கூடாமை; unlikeliness.

[தகு + ஆ + மை]

தகாயத்து *tagāyattu,* பெ. (n.) அது (இது) வரை (C.G.); since, until, upto.

[தகு + ஆய் + அத்து - தகாயத்து.].

தகாவளி *tagāvaḷi,* பெ. (n.) உட்கொள்ளக் கூடாத காற்று; a gas unfit for respiration (சா.அக.).

[தகு → தகா + வளி.]

தகாவி *tagāvi,* பெ. (n.) மரமஞ்சள்; tree turmeric (சா.அக.).

தகான் *tagān,* பெ. (n.) தகுதியில்லாதவன்; unqualified person. "தகாஅன் போலத் தான்றிது மொழியிலும்" (குறுந். 29.).

[தகு → தகான் ஒ.நோ. நகு → நகான்]

தகான்பண்ணு-தல் *tagān-paṇṇu-,* 5 செகுவி. (v.i.) மிகு துன்பத்துடன் ஒன்றை நிறைவேற்றுதல்; to manage in the face of difficulties.

[தகு + ஆன் + பண்ணு-.]

தகி[1]-த்தல் tagi-, 4 செகுன்றாவி. (v.t.) *1.* எரித்தல்; to burn, as fire. *2.* பிணஞ்சுடுதல்; to cremate. *மிகு வெப்பத்தால் உடம்பு தகிக்கிறது (உ.வ.)*

[தழ → தக → தகு → தகி-.]

தகி[2]-த்தல் tagi-, 4 செகுவி. (v.i.) *1.* வெப்பஞ் செய்தல்; to burn, to be hot. *வெயில் தகிக்கிறது (உ.வ.)* *2.* செரித்தல் (யாழ். அக.); to be digested.

[தகதக → தக → தகு → தகி-. தக → தகம் = எரிவு, சூடு, தகித்தல், எரிதல், சுடுதல். ஒ.நோ. குழ → குக : மழ → மக]

தகி[3] *tagi,* பெ. (n.) *1.* வேப்பம்பட்டை; bark or margosa tree. *2.* வெறிநீர் (சாராயம்); arrack. (சா.அக.)

[தக → தகி]

தகிடி *tagiḍi*, பெ. (n.) தகிடிக்கை (வின்.) பார்க்க; see *tagiḍikkai*.

[தக்க → தக + இடு + இ - தகடி → தகிடி. நடனக் குறிப்பு.]

தகிடிக்கை *tagiḍikkai*, பெ. (n.) சினம், வியப்பு முதலியவற்றின் குறிப்புச்சொல் (வின்.); exclamation of defiance, surprise, etc.

[தகிடி → தகிடிக்கை]

தகிடிப்பிச்சை *tagiḍi-p-piccai*, பெ. (n.) 1. இடைவிடாது இரந்துகேட்டல்; importunate begging. 2. அதிகாரப்பிச்சை (இ.வ.); imperious behaviour in begging.

[தகிடி + பிச்சை]

தகிடுதத்தம் *tagiḍu-tattam*, பெ. (n.) தவறான வழிகளைப் பின்பற்றும் செயல்; முறையற்ற குறுக்குவழி; manipulation; underhand dealings. தகிடுதத்தம் செய்து பணம் சேர்த்துவிட்டான் (உ.வ.).

[தகடு + தங்கம் → தகிடுதத்தம். தகடைத் தங்கமென்று கூறி ஏமாற்றுகை. (ஒ.நோ.) பித்தளை + ஆடகம் → பித்தலாட்டம். பித்தளையைத் தங்கமென்று கூறி ஏய்க்கை]

தகிப்பு *tagippu*, பெ. (n.) 1. எரிப்பு; combustion. 2. சுடுகை; burning.

[தக → தகம் - எரிவு, சூடு. தகு → தகி → தகிப்பு.]

தகிரியம் *tagiriyam*, பெ. (n.) துணிச்சல் (பேச்சு வழக்கு); courage.

[தகர் + இயம் → தகரியம் → தகிரியம்.]

தகிலன் *tagilaṉ*, பெ. (n.) ஏமாற்றுவோன் (யாழ். அக.); cheat, deceiver.

[தகு + இல் + அன் → தகிலன். தகவு இல்லாதவன்]

தகிலாயக்காரன் *tagilāya-k-kāraṉ*, பெ. (n.) நண்பன் (வின்.); friend.

[தகு → தகி → தகில் + ஆயம் + காரன்]

தகிலாயம் *tagilāyam*, பெ. (n.) 1. அன்பு, நட்புரிமை (யாழ். அக.); friendship. 2. நன்றி; gratitude.

[தகில் + ஆயம்]

தகிலி-த்தல் *tagili-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. வஞ்சித்தல் (வின்.); to cheat. 2. திருடிக் கொடுத்தல்; to give stolen articles. 3. பண்டமாற்றிக் கொள்ளுதல் (வின்.); to give in exchange. 4. உட்புகுத்துதல் (யாழ்ப்.); to cause to enter or penetrate. 5. உழக்குதல் (வின்.); to trample down, smash. 6. குற்றஞ்சாட்டுதல் (வின்.); to throw blame on a person.

[தகு → தகி + அல் - முறையற்ற. தகல் → தகிலி-]

தகிலிப்பு *tagilippu*, பெ. (n.) உட்செலுத்துகை; insertion.

[தகு → தகில் → தகிலி → தகிலிப்பு.]

தகிலிமா *tagilimā*, பெ. (n.) குறியிடும் சேங்கொட்டை மரம் (வின்.); marking nut tree.

[தகிலி + மா.]

தகு[1]-தல் *tagu-*, 5 செ.குவி. (v.i.) 1. ஏற்றதாதல்; to be fit, appropriate, suitable, proper, worthy, adequate, proportionat. "கற்றபி னிற்க வதற்குத் தக" (குறள், 391). 2. மேம்படுதல்; to be excellent. "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" (குறள், 54). 3. தொடங்குதல்; to begin, get ready "புல்லாள் புலத்தக்களள்" (குறள், 1316). 4. கிட்டுதல்; to be obtained. "துன்புறி னல்லது சுகந்தகாது" (திருவானைக். நாட்டு. 115). 5. தகுதியாதல்; to be deserved. இந்தப் பெருமை அவனுக்குத் தகாது. (இச்.வ.).

க., தெ. தகு; ம. தகு

[தக → தகு-. (வ. மொ. வ.169)]

தகு[2]-தல் *tagu-*, 5 செகுன்றாவி. (v.t.) பொருந்துதல்; ஒத்திருத்தல்; to resemble. "புண்டரிகந் தகுபத யுகளம்" (கோயிற்பு. பதஞ்சலி. 40).

[துள் → தள் → தழு → தகு-. ஒத்தல், பொருந்துதல். ஒத்தற் கருத்திலின்று பொருந்துதற் கருத்து முகிழ்த்தது. ஒத்த பொருள் பொருந்தும் இயல்புடைத்து (மு.தா. 99)]

தகு³ *tagu*, பெ. (n.) 1. நன்னாரி வேர்; dasaparilla - Hemidesmus indicus. 2. ஒரு வகைப் பலா; artocarpus lakucha. (சா.அக.).

[தரு → தகு.]

தகு⁴ *tagu*, பெ.எ. (adj.) தகுந்த; worthy of. வியத்தகு நிகழ்ச்சிகள், போற்றத்தகு புலவர் (உ.வ.).

[தக → தகு.]

தகுணி *taguṇi*, பெ. (n.) இசைக்கருவி; a kind of drum. "சங்கம் பொற்றாளம் தகுணி துடிபடகம்" (சிவக். பிரபந். தஞ்சைப் பெரு. 51).

[தகுணிச்சம் → தகுணி.]

தகுணிச்சம் *taguṇiccam*, பெ. (n.) 1. பறைப் பொது (சூடா.); drum. 2. அகப்புறமுழவு மூன்றனுள் ஒன்று (சிலப். 327, உரை); a kind of drum, one of the three agappuṟa-muḻavu. 3. ஒருவகை வரிக்கூத்து (சிலப். 3: 13: உரை); a masquerade dance.

[தகுணிதம் → தகுணிச்சம்]

தகுணிதம் *taguṇidam*, பெ. (n.) பறைப்பொது (தகுணிச்சம்); drum. "தகுணிதந் துந்துபி தாளம் வீணை" (பதினொ. காரைக்கா. திருவாலங். 9).

[தக்க → தக → தகு + அணி + தம் – தகுணிதம். 'தம்' – தாளக்குறிப்பு. தாளத்தை ஒழுங்கு முறையுடன், நிரல்பட வெளிப் படுத்தும் பறை]

தகுதி *tagudi*, பெ. (n.) 1. பொருத்தம்; fitness, suitability, appropriateness, adequacy, propriety. "மற்றதன் றகுதி கேளினி" (புறநா. 18: 17). 2. தகுதி வழக்கு பார்க்க (இலக்.); see *tagudi-vaḻakku*. "தகுதியும் வழக்குந் தழீஇயின ஒழுகும் பகுதிக்கிளவி வரைநிலை இலவே" (தொல். சொல்.17). 3. குணம் (பிங்.); nature, property. 4. மேன்மை; worthyness, excellence, greatness. 5. நல்லொழுக்கம் (அக.நி.); good conduct, morality. 6. நடுவுநிலைமை; equity, justice, impartiality. "தகுதி யென வொன்று நன்றே" (குறள், 111). 7. பொறுமை; forbearance, patience. "தாந்தந் தகுதியான் வென்றுவிடல்" (குறள், 158). 8. ஆற்றல்; capacity, pecuniary, ability. 9. நிலைமை; position, status. தகுதிக்குத் தக்கபடிசெய்தான் (இ.வ.). 10. அறிவு (யாழ்.அக.); knowledge, learning, wisdom. 11. கூட்டம்; multitude. "அதிர்ந்தன வானவர் தகுதி" (குற்றா. தல. தக்கன் வேள்விய.:20). 12. தடவை; occasion, time. பலதகுதி அவனைத் தேடினேன் (இ.வ.).

[துள் → தள் → தழு → தகு → தகுதி. (மு. தா. 197).]

தகுதிநிலை *tagudi-nilai*, பெ. (n.) தரப்படுத்தப் பட்ட வரிசை; grade, rank. பள்ளித்தேர்வுகளில் மதிப்பெண்களுடன் தகுதி நிலையும் கொடுக்கப்பட்டுள்ளது.

[தகு → தகுதி + நிலை – தகுதிநிலை]

தகுதிநிலைமை *tagudi-nilaimai*, பெ. (n.) தகுதிநிலை பார்க்க; see *tagudi-nilai*.

[தகுதி + நிலைமை.]

தகுதிப்பொருள் *tagudi-p-poruḷ*, பெ. (n.) தக்க பொருள்; appropriate things.

[தகுதி + பொருள்]

தகுதியணி *tagudi-y-aṇi*, பெ. (n.) தக்க இரண்டு பொருள்களின் சேர்க்கையை உணர்த்தும் அணி (அணியி. 39); a figure of speech which consists in expressing the congruity of the association of one object with another.

[தகுதி + அணி]

தகுதியர் *tagudiyar*, பெ. (n.) 1. நடுவு நிலைமையாளர்; impartiality person. 2. தகுதியோர் பார்க்க; see *tagudiyōr*.

[தகு → தகுதி + அர்]

தகுதியின்மையணி *tagudi-y-iṉmai-y-aṇi*, பெ. (n.) தகாத இரண்டு பொருள்களின் சேர்க்கையை உணர்த்தும் அணி (அணியி. 38); a figure of speech which consists in expressing the incongruity of the association of one object with another.

[தகுதி + இன்மை + அணி]

தகுதியோர் *tagudiyōr*, பெ. (n.) அறிஞர் (சூடா.); wise, learned persons.

[தகுதி + (ஆர் →) ஓர்]

தகுதிவழக்கு *tagudi-vaḻakku*, பெ. (n.) பொருள்களுக்கு இயல்பாயமைந்த சொற்களை யொழித்துத், தகுதியான வேறு சொற்களாற்

கூறும் இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என்ற மூவகை வழக்கு *(நன், 267);* the usage of a conventional substitute for the proper name of an object or action, of three kinds, viz., iḍakkaraḍakkal, maṅgalam, kuḻūu-k-kuṟi, dist. fr. iyalbu-vaḻakku.

[தகுதி + வழக்கு]

தகுந்த *tagunda*, பெ.எ. (adj.) 1. பொருத்தமான; ஏற்ற; உரிய; appropriate; suitable. விழாவுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டனவா?. 2. தகுதியுடைய; worthy of. மக்களிடையே வரவேற்கத் தகுந்த மாற்றம் காணப்படுவது பாராட்டத்தக்கது. பாராட்டத்தகுந்த செயல். (உ.வ.).

[தகு → தகுந்த - செய என்னும் வாய் பாட்டு வினையெச்சத்தின் பின்வரும் சொல்.]

தகுந்தகுமெனல் *tagun-tagu-m-eṉal*, பெ. (n.) 1. ஒலியோடு எரிதற்குறிப்பு; onom. expr. of crackling sound of fire. மழுவலந் தகுந்தகு மென்று தயங்குற *(பிரபுலிங். கைலாச. 13).* 2. ஒளி வீசுதற்குறிப்பு; dazzling brilliance. 3. முழவு முதலியன ஒலித்தற்குறிப்பு; beating sound as of a drum.

[தகும் + தகும் + எனல்]

தகுந்தபுள்ளி *tagunda-puḷḷi*, பெ. (n.) செல்வம் முதலியவற்றால் தகுதியுள்ளவ-ன்-ள்; competent person, person of substance or worth.

[தகு → தகுந்த + புள்ளி]

தகுந்தவர் *tagunḍavar*, பெ. (n.) 1. ஒழுக்க முடையோர்; good conduct person. 2. தகுதியானவர்; eligible person.

[தகு → தகுந்த + அவர்]

தகுந *taguna*, பெ. (n.) 1. தகுந்தவை; competent. 2. மதிப்புடைய; worthy.

[தகு → தகுந.]

தகும் *tagum*, கு.வி.மு. (adv.) ஏற்றதாகும்; பொருந்தும்; (is) appropriate or worth or well deserved. உங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். (உ.வ.).

[தகு → தகும்.]

தகுமானபுள்ளி *tagumāṉa-puḷḷi*, பெ. (n.) தகுந்த புள்ளி பார்க்க; see *tagunda-puḷḷi.*

[தகும் + ஆன + புள்ளி. புள்ளி = ஆள்]

தகுமூலி *tagu-mūli*, பெ. (n.) கும்பாங்கொடி; gmelina asiatica.

தகுலிமா *tagulimā*, பெ. (n.) தகிலிமா பார்க்க; see *tagilimā.*

[தகிலிமா → தகுலிமா.]

தகுவர் *taguvar*, பெ. (n.) தகுவன் பார்க்க; see *taguvaṉ.*

[தகு → தகுவர்.]

தகுவல் *taguval*, பெ. (n.) தகவல் (வின்.) பார்க்க; see *tagaval.*

[தகவல் → தகுவல் - திரிபு வழக்கு..]

தகுவன் *taguvaṉ*, பெ. (n.) 1. தகுதியாளன், தக்கவன்; suitable person. 2. அரக்கன்; Ašuraṉ. "தகுவர் தங்களுக் கஞ்சலை" *(கந்தபு. இந்திரன் மீட்.1).*

[தகு + அன் - தகுவன், தகுந்தவன், தகுதியானவன்]

தகுவி[2] *taguvi*, பெ. (n.) தகுதியுடைய பரத்தை; suitable prostitue. "நின்னலத் தகுவியை முயங்கிய மார்பே" *(அகநா. 196 : 13)*

[தகு → தகுவி.]

தகுவியர் *taguviyar*, பெ. (n.) அரக்க மகளிர்; Ašura women. "தகுவியர் மைதோயும் வாட்கண்" *(சங். அக. சிவராத்திரிபு. கடவுள்: 4).*

[தகுவன் → தகுவியர்.]

தகுளம் *taguḷam*, பெ. (n.) மகளிர் விளையாட்டு (பிங்.); women's sports.

தகை[1]-தல் *tagai-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. தடுத்தல்; to stop, resist, check, deter. "தருதல் தகையாதான் மற்று" *(கலித். 92:9).* 2. ஆணையிட்டுத் தடுத்தல் (வின்.); to obstruct or forbid by oath. 3. பிடித்தல்; to seize take hold of. "தடக்கையால் வளைக் கரந் தகைந்தான்" *(பாரத அருச்சுனன் தீர். 70).* 4. அடக்குதல்; to overpower, subdue. "ஆழிதகைந்த தனுத்தொழிலான்" *(கம்பரா. அதிகாய. 62).* 5. உள்ளடக்குதல்; to shut in,

enclose, include. "தண்கேணித் தகைமுற்றத்து" (பட்டினப். 51). 6. பிணைத்தல் (இ.வ.); to bind, fasten, yoke. 7. ஒத்தல் (தொல். பொருள். 287); to resemble.

க. தகெ.

[அகை- → தகை-.]

தகை²-தல் *tagai-*, 4 செ.குவி. (v.i.) தளர்தல் (யாழ்.); to falter, faint, be weary.

மறுவ. திகைதல்

[அகை- → தகை-.]

தகை³-த்தல் *tagai-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. தடுத்தல்; to check, resist, stop, deter. "நின்னைத் தகைத்தனென்" (கலித். 108: 20). 2. கட்டுதல்; to bind, fasten. "நுண் கோற்றகைத்த தெண்கண் மாக்கிணை" (புறநா. 70: 3). 3. சுற்றுதல்; to wind round, coil. "தகைத் தார்" (புறநா. 69). 4. வாட்டுதல் (யாழ். அக.); to tease, tire out. 5. அரிதல்; to mince. "மயிரிற் றகைத்து வறுத்தெரித் திடிப்பினும்" (ஞானா. 31: 10).

[அகை- → தகை-.]

தகை⁴-த்தல் *tagai-*, 4 செ.குவி. (v.i.) அழகு பெற்றிருத்தல்; to be beautiful, lovely. "பிடவுமுகை தகைய" (ஐங்குறு. 461).

[தகு → தகை-.]

தகை⁵-த்தல் *tagai-*, 4 செ.கு.வி. (v.i.) 1. நெருங்கப்பெறுதல்; to be crowded. "சனத்தினாற் றகைத்திடம் பெறாது" (சீவக. 825). 2. களைத்தல் (யாழ். அக.); to be fatigued, wearied.

[அகை- → தகை-.]

தகை⁶ *tagai*, பெ. (n.) 1. பொருத்தம்; fitness, suitablity, propriety. "காண்டகைய செல்வக் கடம்பவனத்து" (குமர. பிர. மதுரைக். 96). 2. ஒப்பு; likeness, resemblance. "புலித்தகைப் பாய்த்துள்" (தொல். பொருள். 287, உரை). 3. மேம்பாடு; worthiness, excellence. "தகைமாண் குடுமி" (புறநா. 6: 26). 4. பெருமை (திவா.); greatness, superiority, dignity. 5. அருள் (பிங்.); mercy, grace. 6. அன்பு (சூடா.); love, affection, kindness. 7. அழகு; beauty, loveliness. "தாடோய் தடக்கைத் தகைமாண் வழுதி" (புறநா. 59: 2). 8. நன்மை; goodness. "தகைசான்ற சொற்காத்து" (குறள். 56). 9. பண்பு (பிங்.); quality, character. 10. இயல்பு; nature. "பொருகளி றன்ன தகைசாம்பி" (கலித். 60). 11. நிகழ்ச்சி; fact, event. "போனான் வனமென்னுந் தகையு முணர்ந்தார்" (கம்பரா. தைல. 84).

[தகு → தகை]

தகை⁷ *tagai*, பெ. (n.) 1. கட்டுகை; binding, fastening. "தகைமலர்த் தாரோன்" (மணிமே. 24: 175). 2. மாலை; garland. "முகைவா யவிழ்ந்த தகைசூ ழாகத்து" (திருமுருகு. 139). 3. தடை; obstruction, check, hindrance. "மணஞ் செய்வதற்கு நின்னாற் றகையிலை யென்னின்" (பிரபோத. 8: 11). 4. கவசம் (வின்.); armour, coat of mail. 5. தளர்ச்சி; weariness, faintess. "தகைதீர் சிலம்பாறு" (அழகர்கலம். 47). 6. நீர்வேட்கை; thirst. 7. மூச்சிளைப்பு (இ.வ.); shortness of breath, difficulty of breathing.

க. தகெ.

[அகை- → தகை-.]

தகைத்துவம் *tagaittuvam*, பெ. (n.) மருகு; a fragrant plant - Origanum majoranum (சா.அக.).

தகைப்பு¹ *tagaippu*, பெ. (n.) 1. தகை⁷ 3. பார்க்க (யாழ். அக.); see *tagai⁷*. 2. மதிற்சுற்று (திவா.); surrounding wall, fortress. 3. மாளிகைக் கட்டடம்; palatial building. "களிறு முணைஇய தாரருந் தகைப்பின்" (பதிற்றுப். 64: 7). 4. வீட்டின் கணுள்ள கட்டு, அடுக்ககம்; section of a house, apartment. "பஃறகைப்பின் புழைவாயில் போகிடைகழி மழைதோயும் உயர்மாடத்து" (பட்டினப். 145). 5. படைவகுப்பு; battle array of an army. "உறுமுரண் டாங்கிய தாரருந் தகைப்பின்" (பதிற்றுப். 66: 10).

ம. தகப்பு

[தகை¹ → தகைப்பு.]

தகைப்பு² *tagaippu*, பெ. (n.) இளைப்பு; weariness, fainting (சா.அக.).

தகைப்பு³ *tagaippu*, பெ. (n.) யாழின் ஓர் உறுப்பு; the part of a lute (சா.அக.).

[தகை → தகைப்பு.]

தகைபாடு-தல் *tagai-pāḍu-,* 5 செ.குவி. (v.i.) தலைவன் தலைவியின் நலம் பாராட்டுதல்; to descant upon the beauty of one's lady love. "தகை பாடவலாய்" *(சீவக. 1379).*

[தகை + பாடு-.]

தகைமலர் *tagai-malar,* பெ. (n.) அழகுமலர்; beautiful flower.

[தகை = அழகு. தகை + மலர்.]

தகைமுற்றம் *tagai-muṟṟam,* பெ. (n.) முன்றில் கட்டு; courtyard in a house. "தண்கேணித்தகை முற்றத்துப் பகட்டெருத்தின் பலசாலை" *(பட்டினப். 53)*

[தகை + முற்றம்]

தகைமை *tagaimai,* பெ. (n.) 1. தகுதி; fitness. "தகைமை சேர்தரு தோத்திரம்" *(சிவரக. காயத்திரி. 12).* தகைமை சான்ற தலைவர் (இக். வ.). 2. பெருமை (பிங்.); greatness, excellence. 3. பண்பு (பிங்.); nature, quality, character. 4. மதிப்பு; esteem, worth. "கல்லா வொருவன் றகைமை" *(குறள், 405).* 5. அழகு (பிங்.); beauty, loveliness. "ஆடுவா டகைமையின்" *(பரிபா. 21: 20).* 6. ஒழுக்கம்; conduct, behaviour. "தன்குணங் குன்றாத் தகைமையும்" *(திரிகடு. 2).* 7. ஒழுங்கு; manner, order, method. அத்தகைமைபோல (உ.வ.). 8. நிகழ்ச்சி; fact, event. "உற்றவித் தகைமை முன்னே யுணரும்" *(திருவாத. மண்: 14).*

க. தக்குமெ

[தகு → தகை → தகைமை.]

தகைமைப்பாடு *tagaimai-p-pāḍu,* பெ.(n.) பெருமை; excellence.

[தகைமை + பாடு. பாடு = சொல்வாக்க வீறு. ஒ.நோ. வகைமைப்பாடு. நிலைமைப் பாடு]

தகையணங்குறுத்தல் *tagai-y-aṇaṅguṟuttal,* பெ. (n.) தலைவியின் அழகு, தலைவனுக்கு வருத்தமுறுத்தலைக் கூறும் அகத்துறை (குறள், 109, அதி.); theme describing a lover's distraction caused by the beauty of his lady-love.

[தகை + அணங்குறுத்தல்]

தகையல் *tagaiyal,* பெ. (n.) தடை; obstacle; restraint. "தகைஇய சென்றவென் நிலையில் நெஞ்சம்" *(அகநா. 330: 80).*

[தகை → தகையல்.]

தகையிழைப்பு *tagai-y-iḻaippu,* பெ. (n.) ஈளைநோய்; bronchial asthma.

[தகை + இழைப்பு/]

தகையுமிழைப்பும் *tagaiyum-iḻaippum,* பெ. (n.) தகையிழைப்பு பார்க்க; see *tagai-y-iḻaippu.*

[தகையும் + இழைப்பும் = இடையரவு படாதேற்படும் ஈளைநோய்]

தகைவிலாங்குருவி *tagai-vilāṅ-guruvi,* பெ. (n.) தரையில் தங்காமல் பெரும்பாலும் பறந்து கொண்டேயிருக்கும் குருவிவகை; swift, Cypselinae.

மறுவ. தரையில்லாக் குருவி; அடைக்கலாங் குருவி

[தரை → தகை + இலான் + குருவி]



தகைவு *tagaivu,* பெ. (n.) 1. தடை (யாழ். அக.); restraint. 2. களைப்பு, இளைப்பு; fatigue, emaciation weariness. 3. அழுத்தம்; stress.

[தகை → தகைவு.]

தகோதரம் *tagōdaram,* பெ. (n.) நீர் சேர்ந்த வயிறு; accumulation of fluid in the abdomen (சா.அக.).

[தக + Skt. உதரம் → தகோதரம்.]

இது வடமொழியில் குணசந்தி என்று கூறப்படும்.

தகோன்மத்தம் *tagōṉ-mattam,* பெ. (n.) தகனக் கிறுக்கு; derangement of mind.

மறுவ. தகனப்பைத்தியம்

[தக → உன்மத்தம்]

தங்கக்கட்டி *taṅga-k-kaṭṭi,* பெ.(n.) 1. சொக்கத் தங்கம், செம்பு கலவாத தங்கம் (24 மாற்றுத் தங்கம்); pure gold, not mixed with copper. 2. மிக நல்லவ –ன் –ள் (உ.வ.); excellent person. அவன் குறையே சொல்லமுடியாத தங்கக்கட்டி (உ.வ.).

மறுவ. சொக்கத்தங்கம்

[தங்கம் + கட்டி.]

தங்கக்கம்பி[1] *taṅga-k-kambi,* பெ.(n.) 1. பொற் கம்பி; gold-wire. 2. தங்கக்கட்டி பார்க்க; see *taṅga-k-kaṭṭi.*

[தங்கம் + கம்பி.]

தங்கக்கம்பி[2] *taṅga-k-kambi,* பெ.(n.) 1. வணக்க வொடுக்க முள்ளவன் (உ. வ.); docile person. 2. நல்ல குணமுடையவ–ன்–ள்; person of amiable character. "தம்பிமேலே சங்கையு மன்புள்ளவன் தங்கக்கம்பி" (பெண்மதிமாலை, பக். 6). தம்பி குணத்திலே தங்கக்கம்பி (பழ.).

[தங்கம் + கம்பி = தங்கக்கம்பி. பொன் வண்ணத்தால் ஒளிர்வது போன்று, நல்ல எண்ணத்தால், சீர்சால் குணத்தால் மிளிருந்தன்மையுடையவர் தங்கக்கம்பி எனும்பெயர் பெற்றவராயினர்]

தங்கக்கலசம் *taṅga-k-kalaśam,* பெ.(n.) கோபுரம், உண்ணாழிகை முதலியவற்றின் உச்சியிலமைக்கும் தங்கப்பூச்சுக் கொண்ட கும்பம்; gilded pot set ornamentally on the top of a temple tower, etc. (செ.அக.).

[தங்கம் + கலசம்]

ஐம்பொன்னால் வடிவமைத்து, தங்கப்பூச்சு செய்து வைக்கும் கோபுரக்கலசத்திலுள்ள முழுத்தங்கம் களவாடப்பட்டமையால் வந்த வழக்கமென் றறிக.

தங்கக்காசு *taṅga-k-kāśu,* பெ.(n.) 8 மாற்று பொன்நாணயம்; 8ct. gold coin, it is mixed with copper (சா.அக.).

மறுவ. பொற்காசு

[தங்கம் + காசு]

தங்கக்காறு *taṅga-k-kāṟu,* பெ. (n.) தங்க வார்ப்புக்கட்டி, தங்கக்கொழு (இ.வ.); gold in bars, ingot.

மறுவ. பொற்கட்டி, தங்கக் கட்டி

[தங்கம் + காறு]

தங்கக்கிருட்டிணம் *taṅga-k-kiruṭṭiṇam,* பெ. (n.) யானைத்திப்பிலி; elephant pepper- Pathos officinalis (சா.அக.).

தங்கக்குகை *taṅga-k-kugai,* பெ. (n.) பொன்னுருக்கும் மூசை; crucible intended for melting gold (சா.அக.).

[தங்கம் + குகை]

தங்கக்குடம் *taṅga-k-kuḍam,* பெ.(n.) 1. மிக நல்லவ–ன்–ள் (உ.வ.); most excellent person. 2. அனைவராலும் விரும்பப் படுகை; a term of endearment. 3. பொற்குடம்; gold pot.

மறுவ. தங்கக்கட்டி, தங்கக்கம்பி

[தங்கம் + குடம்; எல்லோராலும் விரும்பப்படும் தங்கக்குடம் போல், நிறைவான பண்புகளால் அனைவரும் போற்றுந் தன்மையனாதல்; தங்கம் நிறத்தால் தகதகவென மிளிர்தல்போல், உயர்ந்த பண்பால், மிளிரும் மாந்தர். ஈங்கு விலைமதிப்பற்ற நற்பண்பு, மதிப்புறு பொன்னிற்கு, ஒப்புமையாக்கப்பட்டது]

தங்கக்குணம்[1] *taṅga-k-kuṇam,* பெ. (n.) சிறந்த குணம், ஒப்புமையற்ற பண்பு (உ.வ.); excellent character or nature.

மறுவ. நற்குணம், உயர்குணம்.

[தங்கம் + குணம் – தங்கக்குணம். மன்பதை மாந்தர்களால் விரும்பப்படும் ஒப்புமையற்ற, சீர்சால் உயர்பண்பு]

தங்கக்குணம்[2] *taṅga-k-kuṇam,* பெ. (n.) நாகமலை; mountain containg zinc ores (சா.அக.)

தங்ககேசரம் *taṅga-kēśaram,* பெ. (n.) பின்னை; common poon - Calophyllum inophyllum (சா.அக.).

தங்கச்சத்துமூலி *taṅga-c-cattumūli,* பெ. (n.) சிவனார் வேம்பு, குப்பைமேனி, கற்றாமரை, பொன்னூமத்தை, பொன்னாங்காணி;

Siva's neem, Acalpha indica Nelumbium speciosum. Dhatura Fastuosa and Alternanthera sessile alia's illecebrum sessile (சா.அக.).

[தங்கச்சத்து + மூலி]

தங்கச்சத்துரு *taṅga-c-catturu*, பெ.(n.) பொன்னுக்குப் பகைச் சரக்குகள்; அவையாவன; enemical drugs of gold viz.

1. நாகம் zinc
2. துருசு copper sulphate
3. இலிங்கம் cinnabar
4. வெடியுப்பு potassium nitrate
5. வெள்ளைநஞ்சு white arsenic
6. இதளியம் (சூதம்) mercury
7. கெந்தி sulphur

[தங்கம் + சத்துரு]

தங்கச்சம்பா *taṅga-c-campā*, பெ. (n.) சம்பாநெல் வகை; a species of campā paddy. "தைப்பிறந்தா வழிபிறக்கும் தங்கமே தங்கம் தங்கச் சம்பாநெல் விளையுந் தங்கமே தங்கம்" (பட்டுக்கோட்டையார் பாடல்).

மறுவ. பொன்னி

[தங்கம் + சம்பா. பொன்னிற நெல் எனும் இன்றைய வழக்காறே, பொன்னி ஆயிற்று]

தங்கச்சலாகை *taṅga-c-calāgai*, பெ. (n.) தங்க ஊசி; probe made of gold (சா.அக.).

[தங்கம் + சலாகை]

தங்கச்சாயல் *taṅga-c-cāyal*, பெ. (n.) 1. மினுமினுப்பு; good lustre. 2. பொன்மேனி; body shining like gold (சா.அக.).

தங்கச்சி[1] *taṅgacci*, பெ. (n.) தங்கை (உவ.) பார்க்க; see *taṅgai*.

[தங்கை + அச்சி. 'அச்சி' பெண்பாலீறு]

தங்கச்சி[2] *taṅgacci*, பெ. (n.) குவளை மலர்; water-lily - Pontederia (சா.அக.).

தங்கச்சிந்தூரம் *taṅga-c-cindūram*, பெ. (n.) பொன்னாற் செய்த மருந்து வகை; a red medicinal powder made of gold (செ.அக.).

[தங்கம் + செந்தூரம் → சிந்தூரம்]

தங்கசாலை *taṅga-śālai*, பெ.(n.) 1. காசு அச்சிடும் இடம்; mint, place where money is coined. 2. சென்னையிலுள்ள மிக நீண்ட தெருக்களில் ஒன்று; one of the longest streets in Chennai.

மறுவ. அக்கசாலை

[தங்கம் + சாலை]

தங்கச்சுண்ணம் *taṅga-c-cuṇṇam*, பெ.(n.) தமிழ் மருத்துவத்தில் கூறியுள்ள பொன்னைக் கொண்டு, புடமிட்டு அணியமாக்கும் ஒரு சுண்ணமருந்து; a calcium compound of gold prepared with gold as chief ingredient according to the process contemplated in Tamil Siddha medicine.

[தங்கம் + சுண்ணம் = தங்கச்சுண்ணம். அணிகலன்களைச் செய்வதற்காகப் பொன்னைப் புடமிடப் பயன்படுத்தும் மருந்துக்கலவை]

தங்கச்செந்தூரி *taṅga-c-cendūri*, பெ.(n.) பொன்னைச் செந்தூரமாக்கும் மருந்து அல்லது மூலிகை; any drug or medicine capable of turning or reducing gold into a red oxide (சா.அக.).

[தங்கம் + (சிந்தூரி →) செந்தூரி]

தங்கச்செம்பி *taṅga-c-cembi*, பெ.(n.) தங்கம் செம்பாக்கி பார்க்க; see *taṅgam-śembākki* (சா.அக.).

[தங்கம் + செம்பி]

தங்கச்செம்பு *taṅga-c-cembu*, பெ. (n.) தூய்மைப்படுத்திய செம்புநிறமுள்ள பொன் (சா.அக.); a refined gold, mixed with copper.

[தங்கம் + செம்பு]

தங்கஞ்சலமாக்கி *taṅgañ-jalam-ākki*, பெ.(n.) தங்கக்கழிச்சல் (சுவர்ணபேதி) (யாழ். அக.); Aqua regia.

[தங்கம் + சலம் + (ஆக்கு →) ஆக்கி]

தங்கணர் *taṅgaṇar*, பெ.(n.) தங்கண நாட்டார்; people of the country of Taṅgaṇar. "பல்லவருந் தங்கணரும்" (பாரதவெண். 773).

தங்கத்தகடு *taṅga-t-tagaḍu*, பெ.(n.) *1.* பொன் தகடு; gold plate. *2.* தங்க மெருகிட்ட தகடு; gold foil (சா.அக.).

மறுவ. பொற்றகடு

[தங்கம் + தகடு]

தங்கத்தி *taṅgatti*, பெ.(n.) குங்கும வைப்பு நஞ்சு (மூ. அ.): a prepared arsenic.

தங்கத்திருமேனி *taṅga-t-tirumēṉi*, பெ. (n.) தங்கமேனி; gold coloured body (சா.அக.).

[தங்கம் + திருமேனி]

தங்கத்தைவெண்ணெயாக்கி *taṅgattai-veṇṇai-y-ākki*, பெ. (n.) கங்குளா என்னும் மருந்து; drug kaṅgula capable of reducing mercury into a colloid (சா.அக.).

தங்கநிமிளை *taṅga-nimiḷai*, பெ. (n.) பொன்னிமிளை; yellow bismuth (சா.அக.).

[தங்கம் + நிமிளை]

தங்கநீர் *taṅga-nīr*, பெ.(n.) பொன்னிறம் போன்ற சிறுநீர்; high coloured urine. *2.* பொன்கரைந்த நீர்; a mineral water containing gold in solution (சா.அக.).

[தங்கம் + நீர் - தங்கநீர்; மஞ்சள் வண்ணத்திலுள்ள சிறுநீர்]

தங்கநீற்றி *taṅga-nīṟṟi*, பெ. (n.) பொன்னைத் தூளாக்கும் பொன்னிமிளை; gold bismuth capable of reducing gold into an oxide (சா.அக.).

[தங்கம் + நீற்றி.]

தங்கப்பட்டை *taṅga-p-paṭṭai*, பெ.(n.) சேணங்கட்டுங்கச்சு (யாழ். அக.): strap for the saddle.

[தங்கு + பட்டை - தங்குபட்டை → தங்கப்பட்டை]

தங்கப்பாப்பா *taṅga-p-pāppā*, பெ. (n.) விலை மதிப்புள்ள மீன் வகையு ளொன்று; a kind of valuable fish.

[தங்கம் + பாப்பா]

தங்கப்பாரை *taṅga-p-pārai*, பெ.(n.) *1.* எட்டு விரலம் நீளமும், பசிய நீலநிறமுள்ள கன்னப்பாரைமீன்; horse mackerel, bluish - green, attaining 8 in. in length, Caranx kalla. *2.* 20 விரலம் நீளம் வளரும் கன்னப்பாரை மீன்வகை; horse mackerel bluish green, attaining 20 in. in length, Caranx armatus (செ.அக.).

[தங்கம் + பாரை]



தங்கப்பாளம் *taṅga-p-pāḷam*, பெ. (n.) தங்கக் கட்டி; ingot of gold (சா.அக.).

மறுவ. பொற்கட்டி

[தங்கம் + பாளம்]

தங்கப்பாறை *taṅga-p-pāṟai*, பெ.(n.) தங்கப்பாரை பார்க்க; see *taṅga-p-pārai*.

[தங்கம் + பாறை]

தங்கப்புகைகாட்டு-தல் *taṅga-p-pugai-kāṭṭu-* 5 செ.குன்றாவி. (v.t.) தங்கப்பூச்சு (தங்க முலாம்)ப் பூசுதல் (வின்.); to gild.

[தங்கம் + புகை + காட்டு-,]

தங்கப்புடம் *taṅga-p-puḍam*, பெ. (n.) தங்கத்தைத் தூய்மைப்படுத்தும் கலம்; the gold refining vessel. தங்கம் புடத்தில் வைத்தாலும் தன்னிறம் போகாது (உவ.).

[தங்கம் + புடம்]

தங்கப்புரை *taṅga-p-purai*, பெ. (n.) பொன் பூச்சு (முலாம்); gold or gilt electro plated gold (சா.அக.).

[தங்கம் + புரை]

தங்கப்பூச்சு *taṅga-p-pūccu*, பெ. (n.) பொன் பூச்சு (உவ.); gilding, gilt.

[தங்கம் + பூச்சு]

தங்கப்பூவராகன் *taṅgappū-varāgaṉ*, பெ.(n.) பொற்காசு வகை (யாழ். அக.); a kind of gold coin.

[தங்கம் + பூ + வராகன்]

தங்கபற்பம்[1] *taṅga-paṟpam*, பெ. (n.) *1.* தங்கத்தை நீற்றிய பொடி; calcinated powder of gold. *2.* தங்கத்தைச் சித்த மருத்துவ முறையில் புடமிட்டு எடுத்த நீற்றுமானப் பொருள்; calcined gold oxide prepared as per process of Siddha medicine (சா.அக.).

மறுவ. தங்கத்தூள், பொன்துகள்

[தங்கம் + பற்பம்]

தங்கபற்பம்[2] *taṅga-paṟpam*, பெ. (n.) தங்கத்தகடு ½ வராகனிடை தூய்மை செய்த சிற்றண்டவோடு; purified gold-leaf (சா.அக.).

[தங்கம் + பற்பம்]

தங்கபற்பி *taṅga-paṟpi*, பெ. (n.) பொன்னைத் தூளாக்கும் மூலிகை அல்லது மருந்துகள்; drugs or medicines capable of converting gold into oxide (சா.அக.).

[தங்கம் + (பற்பம் →) பற்பி]

தங்கம் *taṅgam*, பெ.(n.) *1.* அடர்த்தி மிகு மஞ்சள் நிற மூலகம், மாழை; இதன் குறியீடு Au. அணுவெண் 70; heavy yellow element, metal symbol Au. atomic No.79. *2.* பசும்பொன்; pure gold. "தங்கத்தானை..... அரங்கனை" (அஷ்டப்: திருவரங்கத்தந். 11). *3.* சிறந்தது; that which is precious of great worth. அவள் தங்கமான பெண் (உ.வ.). தங்கமுடி சூட்டினாலும் தங்கள் குணம்விடார் கயவர் (பழ.). *4.* அன்பின் மிகுதியால் விளிக்கப்படும் சொல்; a word of endearment. காதலியைத் தங்கமே என்றழைத்தார் (உ.வ.).

மறுவ. பொன்

ம. தங்கம்

[தக → தகம் = எரிவு, சூடு. தகம் → தங்கம் = விளங்கும் பொன். தங்கம் என்னுஞ் சொல்லிற்கான வேர் விளங்குதற் கருத்தினின்று கிளைத்தது. விளங்கும் பொருள் எரியுந்தன்மைத்து. அதனாற்றான் வள்ளுவப் பெருந்தகையும் "சுடச்சுடரும் பொன்போல்" (குறள், 267) என்றார்.]

தழ → தக. ஒ.நோ. மழ → மக. தங்கம் தகதகவென்று சொலிக்கிறது என்பது உலகவழக்காகும் (வ.வ. 2).

விளங்குதற் கருத்தினின்று எரிதற்கருத்தும், எரிதற்கருத்தினின்று சொலித்தற் கருத்தும், சொலித்தற் கருத்தினின்று தகதகக்கும், தங்க மெனுஞ் சொல் கிளைத்தது. ஒருகால், எஞ்ஞான்றும் ஒளி தங்குவதால், தங்கமென்று பெயர் பெற்றிருக்கலாம்.

'தங்கம் தகவென்று சொலிக்கும், பித்தளை பல்லை இளிக்கும்" என்னும் கல்லாதார் நாவில் வழங்கும் நல்ல தமிழ்வழக்கு, தேவநேயர்தம் வேர்ச்சொல்லாய்விற்கு, வலுவூட்டுகின்ற தெனலாம். ஒருகா (தங்கு + அம் → தங்கம். மண்ணில் தங்கி இருப்பது.

தங்கம்செம்பாக்கி *taṅgamsembākki*, பெ. (n.) பொன்னைச் செம்புநிறம்போல் சிவப்பாக்கும், செங்கத்தரிப் பூச்சாறு; flowers capable of turning the yellow colour of gold into red (சா.அக.).

[தங்கம் + செம்பு + ஆக்கு → ஆக்கி]

தங்கம்வெள்ளை *taṅgam-veḷḷai*, பெ. (n.) சென்னையில் அரை உருபாவைக் குறிக்க வழங்கும் குழூஉக்குறி (E.T. ii, 96); slang for half a rupee, in use among shroffs in Chennai.

[தங்கம் + வெள்ளை. தங்கான் → தங்கன் → தங்கம். வெள்ளி → வெள்ளை]

தங்கமலை *taṅga-malai*, பெ. (n.) மாமேருமலை; mountain Māmēru.

[தங்கம் + மலை.]

தங்கமழுத்து-தல் *taṅgam-aḻuttu-*, 4 செ.குன்றாவி. (v.i.) பொன்னை இழைத்து மிளிரச் செய்தல்; to polish gold.

[தங்கம் + அழுத்து-.]

தங்கமாவாரை *taṅgamāvārai*, பெ.(n.) பொன்னாவாரை; tanner's bark; plant yielding yellow flowers - Cassia auriculata (சா.அக.).

தங்கமான *taṅgam-āṉa*, கு.பெ.எ. (adj.) எவ்விதக் குறையுமற்ற, மாசுமறுவற்ற; having a heart of gold. ஆசிரியருக்குத் தங்கமான மனசு (உ.வ.).

[தங்கம் + ஆன]

தங்கமானிசியம் *taṅgamāṉišiyam,* பெ. (n.) கரும்பு; sugar-cane (சா.அக.).

தங்கமிடு-தல் *taṅgam-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) மணிகள் பதியுமாறு, தங்கத்தில் குயிற்றுதல் (நாஞ்.); to chisel gold for insetting gems.

[தங்கம் + இடு-.]

தங்கமித்துரு *taṅgamitturu,* பெ. (n.) பொன்னுக்கு எதிரான சரக்குகள் நீங்கலாக உடன்பாடான சரக்குகள்; all other drugs except those that are enemical to gold are its friendly drugs (சா.அக.).

[தங்கம் + Skt. மித்துரு]

தங்கமிருதியாதி *taṅgamirudiyādi,* பெ. (n.) 1. பொன்செந்தூரம்; red oxide of gold. 2. தங்கபற்பம்; per oxide of gold (சா.அக.).

தங்கமீன் *taṅga-mīṉ,* பெ.(n.) தங்கநிறத்திலுள்ள மீன்; gold-coloured fish.

[தங்கம் + மீன்]

தங்கமுலாம் *taṅga-mulām,* பெ. (n.) தங்கப்பூச்சு பார்க்க; see *taṅga-p-pūccu.*

[தங்கம் + முலாம்]

தங்கமூலிகை *taṅga-mūligai,* பெ. (n.) தங்கச்சார மூலி; Siva's neem.

மறுவ. சிவனார் வேம்பு

[தங்கம் + மூலிகை]

தங்கமேனி *taṅga-mēṉi,* பெ. (n.) பொன் மயமான உடம்பு; gold-coloured body (சா.அக.).

[தங்கம் + மேனி.]

தங்கமோறா *taṅgamōṟā,* பெ. (n.) முகமதியர் காலத்தில் புழக்கத்திலிருந்த பொற்காசு; gold Mohara's prevailed during Mughal period.

[தங்கம் + மோறா.]

தங்கரசக்கலவை *taṅgarasa-k-kalavi,* பெ.(n.) பொன்னும், இதளியமும் சேர்ந்த ஒருவகை வேதியியற் கலப்பு; a chemical compound of gold and mercury (சா.அக.).

[தங்கரசம் + கலவை]

தங்கரசிதக்களங்கு *taṅga-rašida-k-kaḷaṅgu,* பெ. (n.) பொன், வெள்ளி இவைகளினின்று கொங்கணவர் முறைப்படி அணியமாக்கும் ஓர் அரியமருந்து; a rare preparation made according to the process laid down in Koṅgaṇava's work on Alchemy with gold and silver as it chief ingredients (சா.அக.).

[தங்கரசிதம் + களங்கு]

தங்கரவிப்பொடி *taṅgaravi-p-poḍi,* பெ. (n.) பொன்னறுத்த பொடி; gold filings, gold dust (சா.அக.).

[தங்கரவி + பொடி]

தங்கரளி *taṅgaraḷi,* பெ. (n.) நாகசெண்பகம்; common yellow trumpet flowered tree (செ.அக.).

மறுவ. பொன்னரளி, மஞ்சளரளி

[தங்கம் + அரளி = தங்கரளி; பொன் வண்ணப் பூ பூக்கும் அரளி]

தங்கராசிகம் *taṅgarāšigam,* பெ. (n.) மஞ்சள் அந்தி மல்லிகை; 4 'o' clock plant with yellow flowers - Mirabilis jalappa (சா.அக.).

தங்கரி-த்தல் *taṅgari-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. காப்பாக வைத்தல்; to keep in safe custody. 2. சேமித்தல்; to make a saving (செ.அக.).

ம. தங்கரிக்கா

[தங்கம் + அரி. தங்கம் = விலைமதிப்பு மிக்க அரியமாழை. அரி = ஒன்றுசேர், சேர்த்துவை.]

தங்கரியம் *taṅgariyam,* பெ. (n.) 1. காப்பு; safety, safe custody. 2. சேர்த்தபொருள்; savings (செ.அக.).

[தங்கம் + அரியம். அரியம் = அரிதாகக் கிடைத்தவற்றைத் திரட்டி வைத்தல்]

தங்கரேக்கு *taṅga-rēkku,* பெ. (n.) தங்கத் தாலியன்ற, மிகு நுண்மென் தகடு; gold leaf. "தங்கரேக்காற் சமைத்திட்ட" (தனிப்பா. i:378: 21).

[தங்கம் + ரேக்கு]

தங்கல்[1] *taṅgal,* பெ. (n.) 1. பயணத்தை இடையில் நிறுத்துதல்; stopping, halting, நேற்றிரவு எங்கே தங்கல்? 2. காலக்கடத்தம்

delay, procrastination. 3. தங்குமிடம்; halting place, rest-house. "தலையே தவமுயன்று வாழ்தல், ஒருவர்க்கிடையே இனியார்கட் தங்கல்" (நாலடி. 365). 4. கெடி; stage in a journey. 5. நிலை பெறுகை (பொருந. 173: உரை); persistence, stability. 6. அடியிற் படிந்திருப்பது (இ.வ.); precipitate; sediment. 7. சல்லடையில் கீழ்ச்சென்றது போக எஞ்சி நிற்பவை; residual material in a sieve.

ம. தங்கல்.

[தங்கு → தங்கல். ஒ.நோ. மங்கு → மங்கல், பொங்கு → பொங்கல். திருத்தங்கல்]

தங்கல்[2] *taṅgal*, பெ. (n.) மீன்பிடி கருவி; fishing rod; fishing tackle.

மறுவ. தூண்டிற்கோல்

[தங்கு → தங்கல். மீன்களைத் தங்கச் செய்யும் அமைப்புடைய தூண்டிற்கோல்]

தங்கலர் *taṅgalar*, பெ.(n.) 1. பகைவர்; enemies. "தங்கலரென்னு மச்சூர்க்குலம் வீட்டி" (திருப்போ. சந். குறுங்கழி. (8) 8). 2. தங்கார்; person not staying. "நந்தன் வெறுக்கை யெய்தினும் மற்றவண் தங்கலர்" (அகநா. 251-6).

[தங்கு + அலர்]

தங்கலரி *taṅgalari*, பெ.(n.) 1. ஈழத்தலரி; pagoda tree. 2. பொன்னலரி; exile oleander. (செ.அக.).

மறுவ. மஞ்சளலரி

[தங்கம் + அலரி]

தங்கலான் *taṅgalāṉ*, பெ.(n.) தங்களான் (E.T. vii, 12) பார்க்க; see *taṅgaḷāṉ*.

[தங்கல் + ஆன்]

தங்கலுக்குப்போ-தல் *taṅgalukku-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) கடலில் மூன்றுநாள் தங்கியிருந்து, கோலாமீன் வலைத்தற் பொருட்டுச் செல்லுதல்; to proceed to catch kōlā-fish by staying there (at sea), for three days.

மறுவ. தங்குகடற் செல்லுதல்

[தங்கல் + கு + போ-.]

தங்கவராகன் *taṅga-varāgaṉ*, பெ. (n.) பகோடா பெயரில் வழங்கிய, 3½ உருபா பெறுமான, வராகன் என்னும் பொன்னாணயம்; pagōḍa as varāgaṉ 3 ½ including a gold coin.

[தங்கம் + (வராகம் →) வராகன். வராகம் = பன்றி. பன்றியுருவம் பொறித்த காசு தங்கவராகனாகும். உருபாயும், வராகனும் புழக்கத்திலிருந்த காலத்தில், வராகனின் மதிப்பு 3½ உருபாவாகும். அதே காலத்தில், வராகனுக்குச் சமமாகப் புழக்கத்திலிருந்த நாணயம் 'பகோடா' என்றழைக்கப்பட்டது.]

தங்கவாழைப்பூ *taṅga-vāḻai-p-pū*, பெ. (n.) புடைவை வகை (இ.வ.); a kind of saree.

[தங்கம் + வாழை + பூ. ஒருகா. சேலையின் கரையில் பொன்னிற இழைகளால் வாழைப்பூ வடிவம் அமைக்கப்பட்டமை கருதி இவ்வாறு அழைக்கப்பட்டிருக்கலாம்.]

தங்கள்[1] *taṅgaḷ*, ப.பெ. (pron.) 1. உங்களுடைய; yours. 2. படர்க்கை ஈறு; third person suffix. "தன்னிகரிலாத வென்றித் தம்பியும் தாயர் தங்கள் பொன்னடித் தலத்தில் வீழ" (கம்பரா. மீட்சிப் 344). 3. படர்க்கைப் பன்மை, மதிப்புறுநிலையில் முன்னிலைப் பன்மையாய் வரும்சொல்; third person plural used as second person honorific plural. 4. கடிதத்திற் கையெழுத்திடுவதற்கு முன் எழுதப்பெறும் ஒருவழக்குமொழி; epistolary formula preceding signature. "தங்கள் செங்குட்டுவன்"

[தாம் + கள் → தாங்கள் → தங்கள்]

தாங்கள் என்பதன் உருபேற்ற வடிவம்: தாம் என்பதே படர்க்கைப் பன்மை. இதனுடன் பன்மை விகுதிகள் சேர்த்து, தாங்கள் என்று குறிப்பது இரட்டைப் பன்மை; தாம் என்பது உருபேற்குங்கால் தம்மை யென்றாகும்; தாங்கள் உருபேற்கும்போது, தங்கள் என்றாகும்.

தங்கள்[2] *taṅgaḷ*, பெ. (n.) மகமதியக் குருக்கள் (இ.வ.); head-priest of a mosque.

தங்கள்[3] *taṅgaḷ*, பெ. (n.) உருபேற்கும்போது திரியும் 'தாங்கள்' வடிவம்; the form of the

second person and third person honorific pronoun.

[தாங்கள் → தங்கள்]

தங்களரி *taṅgaḷari*, பெ. (n.) தங்கலரி பார்க்க; see *taṅgalari* (சா.அக.).

[தங்கம் + அளரி.]

தங்களான் *taṅgaḷāṉ*, பெ. (n.) மறவருள், ஒரு பிரிவினர்க்குரிய பட்டப்பெயர் (இ.வ.); title of a marava subsect.

[தங்கல் → தங்கள் + ஆன்]

தங்கார் *taṅgār*, பெ. (n.) இராப்பொழுது எங்கும் இளைப்பாராதவர்; person not staying anywhere outside. "புண்வார் குருதியார் கைபிசைந்து மெய்திமிறித் தங்கார் பொதுவர்" (கலித். 106:23).

[தங்கு + ஆர் – தங்கார். 'ஆர்' எதிர்மறை ஈறு]

தங்காரி *taṅgāri*, பெ. (n.) மருந்துச் செடி; a medicinal plant - physalis peruviana (சா.அக.).

தங்காலம் *taṅgālam*, பெ. (n.) மீன்பாடு மிகக் குறைந்த கும்ப, மீன (மாசி, பங்குனி) மாதங்கள்; கடல்தொழிலாளரின் வறுமைக் காலம்; the poverty period of fishing - people.

தங்காள் *taṅgāḷ*, பெ. (n.) 1. தங்கை; younger sister. நல்லத் தங்காள் கதை, சிறந்த நாட்டுப்புற இலக்கியம் 2. அம்மா (யாழ்.); a honorific term, meaning madam.

தங்கான் *taṅgāṉ*, பெ. (n.) 1. அரையென்னுங் குழூஉக்குறி; slang for half. "செந்தலை கருந்தலை தங்கான்றிரிக் கால்" (தனிப்பா. 1, 87: 171). 2. கொள்முதல்; cost price. தங்கானுக்குத் தங்கான் கூடக் கிடைக்கவில்லை (இ.வ.).

தங்கி[1] *taṅgi*, பெ. (n.) அடிப்படையானது (புதுவை); support, stay.

[தாங்கி → தங்கி]

தங்கி[2] *taṅgi*, கு.வி.எ. (adv.) 1. இருந்து; stay. "பன்னாட்டங்கிச் சென்னா ளொருநாள்" (சிலப். 10: 155). 2. ஆய்ந்துணர்ந்து; cognizing. "ஒல்வதறிவ தறிந்ததன் கட்டங்கிச் செல்வார்க்கு" (குறள், 472).

[தங்கு → தங்கி]

தங்கிநின்றமழை *taṅgi-niṉṟa-maḻai*, பெ. (n.) காலந்தப்பிய மழை (யாழ்ப்.); belated rain.

[தங்கு → தங்கி + நின்ற + மழை]

தங்கு[1]**-தல்** *taṅgu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. வைகுதல்; to stay, sojourn, abide, remain. "பண்புடை வேந்தன் கவிகைக் கீழ்த் தங்கு முலகு" (குறள். 389). 2. நிலைபெறுதல்; to be stable, to be firmly established, to be retained in the mind. "தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே" (குறள், 613). 3. உளதாதல்; to exist. "தானந்தவமிரண்டுந் தங்கா வியனுலகம்" (குறள், 19). 4. அடங்குதல்; to be under control; to be obedient. "பண்புடை யாளன் றகைமைக்கட் டங்கிற் றுலகு" (குறள், 874). 5. தணிதல்; to be diminished, abated, quenched, as thirst. "தங்காவேட்கை தனையவள் தணித்த தூஉம்" (மணிமே. 18: 96). 6. காலந்தாழ்த்துதல் (பொருந.177: உரை); to halt; to wait; to delay. 7. தடைப்படுதல் (வின்.); to cease to flow, as the menses; to be obstructed, as water; to be stopped; to be fixed, as substance between the teeth; to adhere. 8. இருப்பாயிருத்தல் (வின்.); to be reserved or kept back; to remain due. 9. அடியிற் படிதல்; to settle at the bottom, as sediment. 10. சார்ந்திருத்தல் (வின்.); to rely, depend; to be dependent. "சொலை முனிந்து பொய்ம்மயக்கஞ் சூதின்கண் தங்கல்" (திரிகடு. 39).

க. தங்கு; ம. தங்ஙுக

தங்கு[2] *taṅgu*, பெ. (n.) தங்குகை (வின்.); staying, stopping.

தங்குகடல் *taṅgu-kaḍal*, பெ. (n.) இரண்டொரு இரவோ அல்லது அதற்குமேலுமாகவோ கடற்றொழில் மேற்செல்வார் ஆழ்கடற் பரப்பிலேயே மீன் பிடித்தற்காக கடலிற் தங்குகை; to go and stay on a fishing trip for a few days.

[தங்கு + கடல்]

தங்குகடலுக்குப்போ-தல் *taṅgu-kaḍalukku-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) சிலநாள் வரை கடலில் தங்கியிருந்து மீன்பிடித்தல் (யாழ்ப்.); to go on a fishing trip for a few days.

[தங்கு + கடல் + கு + போ-.]

தங்குடிச்சுற்றம் *taṅguḍi-c-cuṟṟam*, பெ. (n.) தங்குடித்தமர் பார்க்க; see *taṅguḍi-t-tamar.*

[தன்குடி + சுற்றம்]

தங்குடித்தமர் *taṅkuḍi-t-tamar*, பெ. (n.) தந்தைவழி (தாயாதி)ச் சுற்றத்தார்; agnates.

[தம் + குடி + தமர்]

தங்குத்தடவல் *taṅgu-t-taḍaval*, பெ. (n.) தங்குதடை (இ.வ.) பார்க்க; see *taṅgu-taḍai.*

[தங்கு + தடவல்]

தங்குதடை *taṅgu-taḍai*, பெ. (n.) *1.* தடங்கல்; impediment. *2.* தடுமாற்றம்; hesitation. அறிஞர் அண்ணா ஆங்கிலத்திலும்., தமிழிலும் தங்கு தடையின்றி உரையாற்றுந் திறன் மிக்கவர் (உ.வ.).

[தங்கு + தடை]

தங்குதண்ணீர் *taṅgu-taṇṇīr*, பெ. (n.) *1.* கிணறு முதலியவற்றில் தேங்கியநீர்; standing water, as in hollows, wells, etc. *2.* தடை நீங்கியபின் விரைந்துசெல்லும் நீர்; water stagnant for a time and flowing with force, on the removal of the obstruction. *3.* காலந்தவறி வயலுக்குப் பாய்ச்சின நீர்; water used in irrigation after lapse of proper time. *4.* கூரைத்தண்ணீர்; rain-water dripping from roof, foliage, etc. *5.* மரஞ் செடி முதலியவற்றில் தங்கிய மழைத்துளி; rain drops lingering in the leaves. அக்கிணற்றிலிருப்பது தங்குதண்ணீராதலின் குடிநீருக்குதவாது (உ.வ.).

[தங்கு + தண்ணீர் → தங்குதண்ணீர் = குளம், ஏரி, முதலானவற்றில் நிலையாகத் தேங்கியுள்ள நீர்]

தங்குதரி *taṅgu-tari*, பெ. (n.) *1.* தங்குதடை (வின்.) பார்க்க; see *taṅgu-taḍai. 2.* நிலையான இருப்பிடம் (இ.வ.); permanent habitation.

[தங்கு + தரி. தங்கி வாழுமிடம். தரி → தரித்தல் = நிலைத்தல்]

தங்குதரிப்பு *taṅgu-tarippu*, பெ. (n.) *1.* தங்குதடை (இ.வ.) பார்க்க; see *taṅgu-taḍai. 2.* அடக்கம்,; control, restraint. தங்குதரிப்பில் லாமற் பேசுகிறான் (இ.வ.).

[தங்கு + தரிப்பு]

தங்குதுறை *taṅgu-tuṟai*, பெ.(n.) கப்பல் தங்கிச் செல்லுந்துறை (யாழ்.); port of call.

[தங்கு + துறை]

தங்குதேர்ப்படு-தல் *taṅgu-tēr-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) *1.* தேரிழுப்பில் நிலையை யடையாது ஓரிடத்துத் தங்கும் தேராதல்; lit., to be like a temple-car delayed in running. *2.* இடையே காலந்தாழ்த்துதல் (நாஞ்.); to be delayed in the interval.

[தங்கு + தேர் + படு-. தேரோட்டந் தடைப் படுதல், செயற்பாடு காலந்தாழ்த்துகைக்கு ஒப்பாகக் கூறப்பட்டது, உய்த்துணரத்தக்க வொன்றேயாம். தேர் திருக்கண், தெருக்கள் தோறும் தங்கிச்செல்லுதல் போல், விட்டுவிட்டுச் செய்யும் காலச்சுணக்கமான செயற்பாடு.]

தங்குதோணிக்குப்போ-தல் *taṅgu-tōṇikku-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) தங்குகடலுக்குப்போ-தல் (யாழ்ப்.) பார்க்க; see *taṅgu-kaḍalukku-p-pō-.*

[தங்கு + தோணிக்கு + போ-.]

தங்குநடை *taṅgu-naḍai*, பெ. (n.) தங்கித்தங்கிச் செல்லும் பயணம்; journey by stages. தங்கு நடையா அஞ்சல் நடையா (இ.வ.).

[தங்கு + நடை = தங்குநடை; இளைப்பாறிச் செல்லும் நடை]

தங்குபடி *taṅgu-paḍi*, பெ. (n.) எச்சமிச்சம்; மீதிக்கழிவு; remnant, as of unsold goods. சரக்குத் தங்குபடி யில்லாமற் செலவாகி விட்டது (நாஞ்.)

[தங்குபடி = விற்கப்பெறாத அனைத்துப் பொருளும் விற்றுத்தீர்தல், தங்குபடியின்றிச் செலவாதலாகும்.]

தங்குபிண்டம் *taṅgu-piṇḍam*, பெ. (n.) மாதவிலக்கு வெளிப்படுங்கால் தேய்ந்து தங்கியிருக்கும் கருவுரு (சீவரட். 206); embryo

shrunk in size owing to menstrual discharge during the period of gestation.

[தங்கு + பிண்டம்.]

தங்குபொழுது *taṅgu-poḻudu,* பெ. (n.) மாலைப் பொழுது; evening.

[தங்கு + பொழுது = பறவை விலங்கு முதலானவை தமதிருப்பிடம் நோக்கித் தங்குவதற்காகச் செல்லும், அந்திமாலைப் பொழுது.]

தங்குமூச்சு *taṅgu-mūccu,* பெ. (n.) இறப்புக் காலத்தில் நின்று நின்று வரும், மூச்சுக்காற்று (இ.வ.); last gasps of a dying person. தங்கித்தங்கி வெளிப்படும் மூச்சு திசைமாறிப் போனாலும் போச்சு (பழ.).

[தங்கு + மூச்சு : இறக்குந் தருவாயிற் சிறிது சிறிதாக, மூச்சுக்குழலிற் தங்கித் திணறி வெளிப்படும் மூச்சு]

தங்குலம்வெட்டி *taṅ-gulam-veṭṭi,* பெ.(n.) தன்குலத்தையே அழிப்பவ-ன்-ள் (யாழ்ப்.); person who ruins his own family.

[தன் + குலம் + வெட்டி]

தங்குவலை *taṅgu-valai,* பெ. (n.) கடலிற் குறிப்பிட்ட சிறிதுநேரம் மட்டும் விரித்து வைத்திருக்கும் வலை வகை (யாழ்ப்.); fishing net cast into the sea and left there for some hours.

மறுவ. கோலாவலை

[தங்கு + வலை]

தங்குவேட்டை *taṅgu-vēṭṭai,* பெ. (n.) நெடுந்தொலைவு வேட்டைக்குச் செல்பவர்கள் நடுவில், சிலகாலம் தங்கி, வேட்டையாடித் தொடருதல்; a temporary halt and hunting in a long jouney for hunt.

[தங்கு + வேட்டை.]

தங்கூசு *taṅgūsu,* பெ.(n.) தூண்டிலிற் கட்டுங் கயிறு (இ.வ.); string tied to fishing tackle.

தங்கை[1] *taṅgai,* பெ. (n.) *1.* தன்பின் பிறந்த பெண் மகள்; younger sister. "தங்கையை மூக்குந் தமையனைத் தலையுந் தடிந்த" (திவ். பெரியாழ். 4.7:1). *2.* தங்கை முறையாள்; a female standing in the relationship of a younger sister to a person, as daughter of a paternal uncle or a maternal aunt. "கலைவாணித் தங்கைபுயம் புகழ்ந்து வாழ்த்த" (திருப்போ. சந். ஊசல். 6). *3.* குடியிற் பிறந்த பெண்; daughter of a clan, "வல்விற் கானவர்,தங்கை" (குறுந்-335). "நுளரெறி நுண்டுகட் கணைஞர் தங்கை" (குறுந். 392). "கொலைவில் எயினர் தங்கை" (ஐங்குறு.363). *4.* இளையாள்; junior co-wife.

மறுவ. தங்கைச்சி

க. தங்கி; ம. தங்கா

[தம் + கை. கை = சிறிய]

தங்கை[2] *taṅgai,* பெ. (n.) *1.* குவளை மலர்; Indian water lily - Pontederia *2.* கருங்குவளை; blue nelumbo pontederia - Vaginalis (சா.அக.).

தங்கைச்சி[1] *taṅgaicci,* பெ.(n.) தங்கை பார்க்க; see *taṅgai.* தங்கைச்சி பிள்ளை, தன்பிள்ளை ஆனால், தவத்துக்குப் போவான் ஏன் (பழ.).

[தங்கை + அச்சி]

தங்கைச்சி[2] *taṅgaicci,* பெ. (n.) தங்கை[2] பார்க்க; see *taṅgai*[2].

தங்கையைக்கொல்லி *taṅgaiyai-k-kolli,* பெ. (n.) சிறியாணங்கை (மலை); small species of milk wort.

சித்தமருத்துவக் கலைச்சொல். சிறியா நங்கை மூலிகைக்கு மறைபொருளாகச் சிறிய நங்கை எனப் பொருள் கொள்ள, 'தங்கை' என்னும் சொல்லைப் பயன்படுத்தினர் என்றறிக.

தச்சக்காணி *tacca-k-kāṇi,* பெ. (n.) தச்சர்கட்குரிய காணியாட்சிநிலம்; carpenter's hereditary property. "இவ்வூர்த் தச்சக்காணி செம்பாதியுடைய தச்சன் வடுகனாதன் திருவாய்க்குலமான் தொண்டை நாட்டாசாரியநேன்" (S.I.I. iii: 1, 35).

[தச்சன் + காணி = தச்சக்காணி, கதிரவனும், நிலவனும் உள்ளமட்டும், ஆண்டாண்டு காலமாகத் தச்சர்கள் பயன் கொள்ளும் பொருட்டு, ஊரவையாரால் ஒதுக்கப்பட்ட நிலம்.]

தச்சக்கோல் *tacca-k-kōl*, பெ. (n.) பண்டைத் தமிழ்நாட்டின் செந்தரப்படுத்தப்பட்ட 33 விரலங்கொண்ட நீட்டலளவு; standardized linear measurement of ancient TamiḻNāḍu, equivalent to 33 inches of FPS units.

மறுவ. தச்சமுழம்.

[தச்சன் + கோல்.]

கட்டுமானப் பணிகளில், தமிழ்நாட்டுத் தச்சர்கள் பயன்படுத்திய அளவு, விரல், சாண், முழம் என்ற சொற்களால், பொதுவாக வழங்கப்பட்டுப் பின் நாளடைவில் செந்தரப்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் கருங்கற் சுவர்களில் குறித்து வைக்கப்பட்ட அளவுகளிலிருந்து, நீளம் துல்லியமாகக் கணக்கிடப்பட்டுள்ளது தெரிகிறது. பூம்புகாரில், வானகிரியில் அகழ்ந்தெடுக்கப் பட்ட மதகின் வாய், ஒரு தச்சக்கோல் நீளம் கொண்டது. ஒரு தச்சக்கோல் = 33" (விரலம்.)

தச்சச்சி *taccacci*, பெ. (n.) தச்சர்குடிப்பெண் (நன். 140, மயிலை); woman of taccar caste.

மறுவ. தச்சிச்சி

[தச்சன் + அச்சி. "அச்சி" – பெண்பால் ஈறு. வீரசோழியம், சொல். 4]

தச்சத்தரு *tacca-t-taru*, பெ. (n.) ஆமணக்கு; castor-plant (சா.அக.).

தச்சத்தி *taccatti*, பெ.(n.) தச்சச்சி (நன். 420, சங்கரந.) பார்க்க; see *taccacci*.

[தச்சன் + அத்தி. 'அத்தி' = பெண்பால் ஈறு. ஒ.நோ. ஆட்டன் + அத்தி = ஆட்டனத்தி. வீரசோழியம், சொல்.4]

தச்சதுலாம் *tacca-tulām*, பெ.(n.) பழைய வரிவகை (S.I. I. iv. 79); an ancient tax.

தச்சநாசன் *tacca-nāšan*, பெ. (n.) பொன்னம்பர்; yellow coloured amber (சா.அக.).

தச்சநூல் *tacca-nūl*, பெ. (n.) கட்டுமானத் தொழில் பற்றிய பட்டாங்கு நூல்; treatise on construction.

[தச்சு + நூல். மயமத மெனும் நூலின் வாயிலாகப் பண்டையத் தமிழகத் திலுள்ள கட்டடம், சிற்பம் முதலான கட்டுமானச்செய்திகள் விளக்கம் பெறுகின்றன; முன்னைத்தமிழ் நூல். வடமொழியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இதனைத், தச்சநூல் என்பர்.]

தச்சம் *taccam*, பெ. (n.) அதிமதுரம்; licorice plant (சா.அக.).

தச்சமுழம் *tacca-muḻam*, பெ. (n.) பண்டைத் தமிழகத்தில் கட்டுமானத்தொழிலில் பயன் படுத்திய நீட்டலளவுகோல்; linear measurement scale used in the construction, industry of ancient TamiḻNāḍu.

[தச்சன் + முழம். விரலம், சாண், முழம் போன்ற உடலுறுப்புச் சொற்கள் தொடக்கத்தில் நீட்டலளவுக்குப் பயன் படுத்தப்பட்டன. பின்னர், அவற்றிற்குக் குறிப்பிட்ட அளவுகள் என்று வரையறை பெற்றன. விரல் = 1 $^{3}/_{8}$ விரலம் (அங்குலம்). சாண். 8 $^{1}/_{4}$ விரலம்; முழம் = 33 விரலம். இந்த அளவுகள், பல திருக்கோயில்களில் குறித்து வைக்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் வைகுந்த நாதப்பெருமாள் கோயிலின் கண்ணாடி மாளிகையில், 'தச்ச முழம்' என்ற எழுத்தும், அளவும் செதுக்கப் பட்டுள்ளன. வடநாட்டில் வித(ஸ்)தி (சாண்.) = 12 விரலம், அத்தம் (முழம்) = 33 விரலம் என்று வழங்குகிறது. இதில் பாதி அளவையே அங்கு எடுத்துக் கொள்கிறார்கள். இது ஆய்வுக்குரிய பிறழ்வு ஆகும்.]

தச்சர் *taccar*, பெ. (n.) தச்சன் பார்க்க; see *taccaṉ*.

[தை → தைத்தல் – தொழிற்பெயர். தைத்து → தைச்சு → தச்சு → தச்சர்]

தச்சவாசாரியன் *tacca-v-āšāriyaṉ*, பெ. (n.) கல்லில் நுணக்கமாய்த் தொழில் செய்யும் ஆசாரி; blacksmith. "ஸ்தானத்தார் அருளிச் செய்ய இவ்வெட்டு வெட்டிநேந் இக்கோயிலில் தச்சவா சாரியந் மழுவாடி வீரநாத கொட்டையூர் ஆசாரிய" (*S.I.I.* v. 632).

[தச்சன் + ஆசாரியன். ஆசிரியன் → ஆசாரியன்]

தச்சவாடி *tacca-vāḍi*, பெ. (n.) *1.* தச்சர்வேலை செய்யும் இடம்; carpenter's yard. *2.* தச்சர் குடியிருக்கும் இடம்; colony of taccar.

[தச்சர் + (பாடி →) வாடி]

தச்சவேலை *tacca-vēlai*, பெ. (n.) தச்சருக்குரிய மரவேலைத் தொழில்; carpentry.

மறுவ. தச்சுவேலை

[தச்சர் + வேலை]

தச்சன் *taccaṉ*, பெ.(n.) *1.* மரத்தில் வேலை செய்பவன்; carpenter. "மரங்கொல் றச்சரும்" (மணிமே. 28: 37). 'தச்சன் அடித்த தலைவாசல் எல்லாம் உச்சியிடிக்க உலவித் திரிந்தேன்' (பழ.). *2.* தச்சுவேலை செய்யும் குடிமகன்; person of carpenter clan. *3.* விசுவகருமாவுக்குரிய நெய்ம்மீன் (விண்மீன்) (சித்திரை. நாள்) (பிங்.); the 14th nakṣatra chittirai as pertaining to Viśvakarma.

[தை → தைச்சு → தைச்சன் → தச்சன். மரத்துண்டுகளை, ஒன்றுடன் ஒன்று செவ்வியமுறையில் தைத்துக் கட்டுமானக் கருவிகள் செய்பவருக்கு வழங்கிய விச்சொல்லே, காலப்போக்கில் கருங்கொல்லர், பொற்கொல்லர் போன்ற கம்மியரையும் சுட்டுவதாயிற்று.]

தச்சன்குருவி[1] *taccaṉ-kuruvi*, பெ. (n.) மரங்கொத்தி (யாழ். அக.); wood -pecker.

மறுவ. மரங்குத்திப் புள்.

[தச்சன் + குருவி]

துளைத்தற் கருத்து: தச்சன்போல், மரத்தைத் துளைக்குங் காரணத்தால், தச்சன்குருவி எனப் பெயர் பெற்றது.



தச்சன்மூலி *taccaṉ-mūli*, பெ. (n.) மூலிகை வகையுளொன்று; a kind of medicinal plant.

[தச்சன் + மூலி - தச்சன்மூலி. இம் மூலிகையைப் பொடியாக்கிச் சூரணம் செய்து, திரிகடுகுடன் சேர்த்து உண்டால், வாணாள் பெருகும். கிழப்பருவத்தினர் இம் மூலிகைப் பொடியினைத் தேனுடன் சேர்த்து உண்டு வந்தால், எழிமிகு இளமைத்தோற்றம் பெறுவர் என்று சா.அக. கூறும்]

தச்சனைமூலி *taccaṉai-mūli*, பெ. (n.) தச்சன் மூலி பார்க்க; see *taccaṉ-mūli*.

[தச்சன்மூலி → தச்சனைமூலி.]

தச்சாசாரி *tac-c-āśāri*, பெ. (n.) தச்சன் பார்க்க; see *taccaṉ*.

[தச்சன் + ஆசாரி. ஆசு = ஒட்டு, பற்று எனும் பொருளில் வழக்கூன்றிய இச்சொல், நாளடைவில், மரத்துண்டுகளை ஒன்றுட னொன்று இணைத்துக் கட்டுமானக் கருவிகள் செய்பவருக்கும், ஆகிவந்த தெனலாம். 'இ' மதிப்புறு பின்னொட்டு (ஓ.நோ.) பூசாரி.]

தச்சாசாரியம் *tac-c-āśāriyam*, பெ. (n.) தச்சத் தலைமை (S.I.I. ii, 278, 17); status or position of a master-carpenter.

[தச்சர் + ஆசாரியம். ஆசாரியன் → ஆசாரியம் = தலைமைப் பணி.]

தச்சி[1] *tacci*, பெ. (n.) தயிர் (குழந்தை.); curds.

[தோய்ச்சி → தைச்சி → தச்சி. காய்ச்சிய பாலில் பிரைக்குத்தப்பட்டு, நன்கு தோய்ந்துறைந்த தயிர்.]

தச்சி[2] *tacci*, பெ. (n.) தாயக்கட்ட ஆட்டத்தில் எல்லாக் காய்களும் நிமிர்ந்து விழும் விருத்தம்; a throw in the game of tacci -pārā, when all the cowries or pieces are turned up (செ.அக.).

தெ., க. தச்சி

[தச்சு → தச்சி]

தச்சிச்சி *taccicci*, பெ. (n.) தச்சர்குடிப்பெண் (நன். 140. மயிலை); women of taccaṉ clan.

[தைச்சர் → தச்சர் + அத்தி; அத்தி → அச்சி. தச்சர் → தச்சி + அச்சி - தச்சிச்சி]

தச்சிப்பார் *tacci-p-pār,* பெ. (n.) தாயக்கட்ட விளையாட்டு வகை; a game played with cowries or pieces on a diagram like a chess - board.

ஒ.நோ. வண்டிப்பார்

[தச்சி + பார் = தச்சிப்பார்.]

தச்சினியம் *tacciṉiyam,* பெ. (n.) உருவம்; figure (சா.அக.).

தச்சு *taccu,* பெ. (n.) 1. தச்சன்றொழில்; carpenter's work. "தச்சு விடுத்தலும்" (திருவாச. 14, 3). 2. தச்சனது ஒரு நாள் வேலையளவு; day's work of a carpenter. இந்த நிலைக்கதவைச் செய்ய எத்தனை தச்சு ஆகும் (உ.வ.).

[தைச்சு → தச்சு]

தச்சுக்கடன் *taccu-k-kaḍaṉ,* பெ. (n.) பயிர்க் கடன்; loan for agricultural expenses given by farmers.

[தச்சு + கடன்]

தச்சுக்கழித்தல் *taccu-k-kaḻittal,* பெ. (n.) புதுமனை புகுமுன்பு, கட்டடத்தைத் தூய்மைப் படுத்துதற்குத் தச்சர்கள் செய்யுஞ் சடங்கு (நாஞ்.); a ceremony performed by carpenters prior to house-warming, with a view to spiritually cleaning the building (செ.அக.).

[தச்சு + கழித்தல்]

தச்சுக்கூலி *taccu-k-kūli,* பெ. (n.) பயிர்த் தொழிலில் தச்சர் பெறுங்கூலி; wage for carpenter's in cultivation.

[தச்சு + கூலி]

தச்சுக்கோல் *taccu-k-kōl,* பெ. (n.) தச்சக்கோல் (G.Tn. D.I. 239) பார்க்க; see *tacca-k-kōl.*

[தச்சு + கோல்]

தச்சுசெய்-தல் *taccu-šey-,* 1 செ.குன்றாவி. (v.t.) மனை கோலும்போது, வீடு அமையும் இடத்தில் நல்லநாளில், இறைவனை வேண்டிச் செய்யும் மனைவழிபாடு; inaugurating the construction work of a building with a puja, invoking the blessings of god for successful completion.

[தச்சு + செய்-.]

தச்சுத்தேவை *taccu-t-tēvai,* பெ. (n.) ஊர் வளர்ச்சிப் பணிக்காக காணியாட்சி பெற்றிருக்கும் தச்சர் செலுத்திய வரி; tax paid by carpenter who has heriditary right, work done for common development of village.

"காத்திகைப் பச்சைப் பிள்ளையார் நொன்பு (ந) ந் (து) வன(ப்பச்சை) எடுத்துக் காட்டும் பச்சை ஆட்த் தெவை மதிட்தெவை தச்சுத்தெவை ஆனைச்சாலை குதிரைப்பந்தி" (S.I.I.iv. 369).

மறுவ. தட்டொலி

[தச்சு + தேவை]

தச்சுப்பட்டறை *taccu-p-paṭṭaṟai,* பெ. (n.) தச்சர் பணிமனை; carpentry work-shop.

மறுவ. கொல்லுப்பட்டறை

[தச்சு + பட்டறை]

தச்சுமுழம் *taccu-muḻam,* பெ. (n.) தச்சமுழம் பார்க்க; see *tacca-muḻam* (செ.அக.).

[தச்சு + முழம்.]

தச்சுவாடி *taccu-vāḍi,* பெ. (n.) 1. தச்சவாடி பார்க்க; see *tacca-vāḍi.* 2. வாடகை வண்டிகள் நிற்கும் இடம் (இ.வ.); stand for hackney carriages. 3. விறகுக்கடை (இ.வ.); fuel-depot.

[தைச்சு → தச்சு + வாடி; பாடி → வாடி.]

தச்சுவினைமாக்கள் *taccu-viṉai-mākkaḷ,* பெ. (n.) தச்சர் (தொல். பொருள். 393, உரை); carpenters.

[தச்சுவினை + மாக்கள்]

தச்சுவேலை *taccu-vēlai,* பெ. (n.) தச்சவேலை பார்க்க; see *tacca-vēlai* (செ.அக.).

[தச்சு + வேலை. ஒருகா. தச்சவேலை → தச்சுவேலை]

தச்சுவை *taccuvai,* பெ. (n.) சேலை; a piece of cloth (சா.அக.).

தச்சுளி *taccuḷi,* பெ. (n.) உளி வகைகளிளொன்று (உ.வ.); a kind of chisel.

[தச்சு + உளி]

தச்சூர் *taccūr*, பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள சிற்றூர்; a village in Viluppuram district.

[தைச்சு → தச்சு + ஊர் = தச்சர் மிகுதியாகப் பிறந்து வாழுமூர்]

தசம் *tašam*, பெ. (n.) பல்லக்கு (சது.); palanquin.

[தை → தச → தசம். துறவியோ, அரசனோ இவர்ந்து செல்வதற்கு ஏற்றவண்ணம் அமைக்கப்பட்டதும், தோளில் தூக்கு வதற்கு வாய்ப்பாக குறுக்கு வாட்டத்தில் வளைதண்டு குத்தப்பட்டதுமான கூடு (பல்லக்கு).]

தசமைக்கண்ணி *tašaimai-k-kaṇṇi*, பெ. (n.) பொன்னாங்கண்ணி; sessile plant - Illecibrum sessile (சா.அக.).

மறுவ. தங்கமேனிக்கீரை, பொன்னாங்காணி.

தசரம் *tašaram*, பெ. (n.) அரத்தம், ஊனீர் போன்றவை ஓடும் குழாய்; vessels carrying blood lymph etc in the system of animals (சா.அக.).

தசனவாசம் *tašaṉavāšam*, பெ. (n.) உதடு; lip (சா.அக.).

[தசனம் + வாசம் – தசனவாசம். வாயில் → வாசல் → வாசம். (ஒ.நோ.) வாயிற்கதவு → வாசற்கதவு. மதுர வாயில் → மதுரவாசல்.]

தசனாத்தியம் *tašaṉāttiyam*, பெ. (n.) புளியாரை; sore sorrel - Oxalis corniculata (சா.அக.).

தசா *tašā*, பெ.(n.) மீன்பிடி கலத்தின் பின்பகுதி (முகவை.); the back portion of the fishing- boat.

[தை → தச → தசா.]

தசாக்கரி *tašākkari*, பெ. (n.) பண்வகை (சிலப். 13, 112, உரை); a melody.

[தை → தச → தசாக்கரி. = மாந்தனின் இனிய குரலுக்குச் சான்றாக அமைந்த பண்.]

தசாபிசாவெனல் *tašā-pišā-v-eṉal*, பெ. (n.) ஒருவனுக்குத் தெரியாத மொழியில் அவனை மருட்டுங் குறிப்பு (வின்.); onom. expr. of violent threatening in a foreign language.

[தசாபிசா + எனல்.]

தசார்த்தம் *tašārttam*, பெ.(n.) இறந்தபின் உடல் ஐவகை பூதங்களாகப் பிரிந்துபோகை; the dissolution of the body into five elements. The resolution of the body into its constituent elements after death (சா.அக.).

[தை → தச → தசார்த்தம் – ஐம்பூதங்களின் வழி உடல் தைத்து ஒன்றுகை.]

தசிரகம் *taširagam*, பெ. (n.) அரத்தநாளங்கள்; tubes or vessels of circulatary system.

[தசிர் + அகம் → தசிரகம். குருதி நாளங்கள், நெஞ்சாங்குலையிலும், உள்ளுறுப்புக்களிலும் தைத்துக் கிடக்குந் தன்மைபற்றி யுருவாகிய சொல்லென்றறிக.]

தசிரத்துவம் *taširattuvam*, பெ. (n.) நாளங்கள் வழியே ஏற்படும் குருதியோட்டம்; circulation of blood through the tubes and vessels of animals or plants-Vascularity (சா.அக.).

[தசிரம் + அத்து + அம்.]

தசிரம்[1] *taširam*, பெ. (n.) 1. அரத்தக்குழாய்; the tubes or vessels carrying blood. 2. உட்டுளை; hollowness.

[தசி → தசிர் + அம்.]

தசிரம்[2] *taširam*, பெ. (n.) 1. இரும்புத்தூள் (யாழ். அக.); iron-dust. 2. மழைத்தூறல்; drizzling.

[தசிர் + அம்.]

தசிவம் *tašivam*, பெ.(n.) வரிதண்டும் பணியாளர் செலுத்தற்குரிய வரிநிலுவை (R.T.); arrears of revenue, due from the tax - collectors.

[தய → தயங்கு. தய → தச → தசி + அம் → தசிவம். (ஒ.நோ.) வாயில் → வாசல்]

தசிவேர் *tašivēr*, பெ. (n.) 1. தவசுமுருங்கை; a medicinal plant with roundish small leaves - Justicia tranqubariensis. 2. புண்ணாக்குப் பூண்டு; a prostate plant (சா.அக.).

[தசை → தசி + வேர்]

தசுக்கூலி *tašu-k-kūli*, பெ. (n.) வேளாண்மை செய்வதற்குக் கொடுக்கும் கடன் (C.G.); loan for agricultural expenses given by land - owners to tenants.

[தவசக்கூலி → தசக்கூலி → தசுக்கூலி.]

தசுகரம் *tašugaram*, பெ. (n.) களவு; theft.

[தை → தசி → தசு. தசு + கரு + அம். தைக்கை, பொருந்துகை, பொருந்தி எடுக்கை.]

தசும்பர் *tašumbar*, பெ. (n.) தசும்பு பார்க்க; see *tašumbu*. "அமுதம் பெய்த வாடகத் தசும்பர்" (சேதுபு. சேதுமா. 71).

[தசு → தசும்பு → தசும்பர்]

தசும்பு *tašumbu*, பெ. (n.) *1.* குடம்; pot, water-pot. "துணைபுண ராயமொடு தசும்புடன் றொலைச்சி" (புறநா. 224: 2). *2.* மிடா; a big pot. "துளங்கு தசும்பு வாக்கிய பசும்பொதித் தேறல்" (மலைபடு.463). *3.* கோபுரவுச்சிக் கல(ச)ம்; ornamental metallic pot set at the top of a tower. "சூழ்சுடர்ச் சிரத்து நன்மணித் தசும்பு தோன்றலால்" (கம்பரா. நகர. 26). *4.* பொன் (அக. நி.); gold.

[தசு → தசும்பு]

தசும்புசுமெனல் *tašum-pušum-enal*, பெ. (n.) ஆடை, சட்டை முதலியன நெகிழ்ந்து தொங்குதற்குறிப்பு (இ.வ.); onom. expr. signifying the loose hanging of garments on a person.

[தசும் + புசும் + எனல்.]

தசுமண் *tašuman*, பெ. (n.) *1.* கள்வன்; thief. *2.* வேள்வி செய்விப்போன்; priest who conducts a sacrifice.

[தசு → தசுமண்]

தசுமம் *tašumam*, பெ. (n.) *1.* பொன்; gold. *2.* குடம்; pot. *3.* மிடா; a big water-pot. *4.* கொப்பரை; brass-boiler. *5.* தீ; fire (சா.அக.).

[தசு → தசுமம்]

தசை[1]-தல் *tašai-*, 4 செ.கு.வி. (v.i.) தசைப் பற்றாதல்; to be fleshy. "நறுமலர்த் தாள்க ளொத்துத் தசைந்து" (காசிக. சிவ. அக். 22). *2.* தடிப்பேறுதல்; to grow stout.

[துள் → தள் → தயை → தசை-.]

தசை[2]-த்தல் *tašai-*, 4 செ.கு.வி. (v.i.) சதை பிடித்தல் (யாழ். அக.); to grow fleshy.

[தள் → தயை → தசை-.]

தசை[3] *tašai*, பெ. (n.) *1.* இறைச்சி (மாமிசம்) (நன். 268, உரை) (சூடா.); flesh, muscle. *2.* வெப்பத்தால் குருதி மாறுதலடைந்து காற்றினால் இறுகி உண்டாகும் தசை; flesh formed from blood by the action of heat and wind. *3.* முடைநாற்றம் (திவா.); bad odour. *4.* பழச்சதை (இ.வ.); pulp or fleshy part of a fruit.

ம. தச

[தயை → தசை.]

தசை[4] *tašai*, பெ. (n.) *1.* நிலைமை; state, condition. என் தசையைக் கண்டால் இவற்றுக்கு வாய்புதைக்க வேண்டாவோ (ஈடு. 10. 3: 1). *2.* கோள்களின் ஆட்சிக்காலம் (கணியம்); regnal period of a planet. "வினைமேம்படூஉ மேற்றசை நாளுள்" (பெருங். வத்தவ. 11: 61). *3.* ஆகூழ்காலம்; period of good fortune. *4.* திரி; wick.

[திசை → தசை - கோள்கள் சுழலுந் திசைநோக்கிக் கணித்துக் கூறும் கணிப்பு]

தசைஒட்டல் *tašai-oṭṭal*, பெ. (n.) தசையை ஒட்ட வைத்தல்; auto transplantation.

[தசை + ஒட்டல்]

தசைக்கட்டு *tašai-k-kaṭṭu*, பெ.(n.) தசையுறுதி; muscular strength. (சா.அக.)

[தசை + கட்டு]

தசைக்கருப்பம் *tašai-k-karuppam*, பெ. (n.) எல்லா வடிவங்களும், கனமுடையனவாகி, எல்லாம் கறுத்த அரத்தமாகக் காணப்படும் ஒருவகைத் தசைக்குறி; protruberance of felshy masses of various shapes and density gorged with dark blood-Moles (சா.அக.).

[தசை + கருப்பம்]

தசைக்கற்றை *tašai-k-kaṟṟai*, பெ. (n.) ஒரே தன்மையுள்ள தசைத்தொகுதி; myotomes.

[தசை + கற்றை]

தசைக்கனி *tašai-k-kaṉi*, பெ. (n.) சதைப் பற்றுள்ள பழம்: berry, as being pulpy (செ.அக.).

[தசை + கனி]

தசைகொள்ளுதல் *tašai-koḷḷudal,* பெ. (n.) தசைபூரித்தல் பார்க்க; see *tašai-pūrittal.*

[தசை + கொள்ளுதல்.]

தசைத்தல் *tašaittal,* பெ.(n.) *1.* தசைபிடித்தல்; growing flesh. *2.* கொழுத்தல்; becoming fatty.

[தயை → தசை → தசைத்தல்]

தசைத்திட்டு *tašai-t-tiṭṭu,* பெ. (n.) ஒரே சீரான உடற்கூறு; a metamere.

[தசை + திட்டு.]

தசைநரம்பு[1] *tašai-narambu,* பெ. (n.) பிரித்தெடுக்குந் தன்மையிலமைந்த நரம்பு; separating abduct.

மறுவ. சதைநார்

[தசை + நரம்பு]

தசைநரம்பு[2] *tašai-narambu,* பெ. (n.) அசைவு கொடுக்கும் நரம்பு; muscle, tendon.

[தசை + நரம்பு]

தசைநாண் *tašai-nāṉ,* பெ. (n.) எலும்பு, தசைகளை இணைக்கும் நாண்போன்ற திசுத்தொகுப்பு; tendon.

[தசை + நாண்]

தசைநார் *tašai-nār,* பெ. (n.) சதையிலுள்ள நார்ப்பொருள்; fibrous nature of muscle.

[தசை + நார்]

தசைநார்க்கயிறு *tašai-nār-k-kayiṟu,* பெ. (n.) எலும்பையும் தசையையும் இணைக்கும் நார்போன்ற கயிறு; a flexible cord by which a muscle is attached to a born - Tendon (சா.அக.).

[தசை + நார் + கயிறு]

தசைநீர் *tašai-nīr,* பெ. (n.) *1.* கொழுப்புச் சதையினின்று வரும் நீர்; serum. *2.* ஊணீர்; fluid oozing from th flesh, the liquid matter that drips from flesh in cooking - Gravy.

மறுவ. சதைநீர்

[தசை + நீர்]

தசைநீளமுனை *tašai-nīḷa-muṉai,* பெ. (n.) நெஞ்சாங்குலையில் நீட்டிக் கொண்டிருக்கும் இறைச்சிமுனை; name for some of the columnae carneae of the heart ventricles - Musculi-papillaris.

[தசை + நீளம் + முனை]

தசைப்பகந்தரம் *tašaippagandaram,* பெ.(n.) புரையோடிய புண்; fistula in the muscle.

[தசை + பகந்தரம். பகு → பகம் → பகந்தரம் – தசையைப் பகுத்துக் கொண்டு புரையோடிய புண்.]

தசைப்பற்றிடம் *tašai-p-paṟṟiḍam,* பெ. (n.) தசைப்பற்றானவிடம்; the fleshy muscular part of the body-Brawn (சா.அக.).

[தசைப்பற்று + இடம்]

தசைப்பற்று *tašai-p-paṟṟu,* பெ. (n.) *1.* தசை பிடிக்கை; fleshiness. *2.* தசை; flesh pulp. *3.* தசையுள்ள பகுதி; the fleshy portion (சா.அக.).

[தசை + பற்று]

தசைப்பிடி *tašai-p-piḍi,* பெ. (n.) *1.* தசைப்பற்று; pulpiness. *2.* கொழுக்கை; corpulent.

[தசை + பிடி.]

தசைப்பிடித்த *tašai-p-piḍitta,* கு.பெ.எ. (adj.) கொழுத்த; corpulent (சா.அக.).

தசைப்பிடித்திருத்தல் *tašai-p-piḍittiruttal,* பெ. (n.) கொழுத்திருத்தல், பருத்திருத்தல்; being corpulent (சா.அக.).

தசைப்பிடிப்பில்லாத *tašai-p-piḍippillāda,* பெ.எ. (adj.) தசையற்ற; raw boned (சா.அக.).

[தசை + பிடிப்பு + இல்லாத]

தசைப்பிடிப்பு[1] *tašai-p-piḍippu,* பெ. (n.) தசைப்பற்றுகை; growing fleshy (சா.அக.).

மறுவ. தசைப்பற்று

[தசை + பிடிப்பு]

தசைப்பிடிப்பு[2] *tašai-p-piḍippu,* பெ. (n.) தசை இறுகுவதால் ஏற்படும் வலி; cramp.

[தசை + பிடிப்பு]

தசைப்பிடியுள்ள *tašai-p-piḍiyuḷḷa,* பெ.எ. (adj.) உறுதியான, வலுவான; brawny (சா.அக.).

[தசை + பிடி + உள்ள]

தசைப்பு *tašaippu,* பெ. (n.) 1. தசைபிடி; pulpiness. 2. கொழுப்பு; sauciness, fat.

[தசை → தசைப்பு]

தசைப்புடைப்பு *tašai-p-puḍaippu,* பெ. (n.) தசை வீக்கம்; fleshy excrescence - Sarcoma (சா.அக.).

[தசை + புடைப்பு]

தசைபிடி *tašai-piḍi,* பெ. (n.) சதைபிடிக்கை (யாழ். அக.); fleshiness, pulpiness.

[தசை + பிடி]

தசைபூரித்தல் *tašai-pūrittal,* பெ. (n.) சதைப் பற்றாதல்; to grow in flesh (சா.அக.).

[தசை + பூரித்தல்]

தசைமுற்றுதல் *tašai-muṟṟudal,* பெ. (n.) கொழுப்பேறல்; being are becoming fatent (சா.அக.).

[தசை + முற்றுதல்.]

தசையடைப்பு *tašai-y-aḍaippu,* பெ. (n.) 1. தசை வளர்ச்சி; growing muscle. 2. கொழுப்புப் பிடிக்கை (இ.வ.); stout, growing fat.

[தசை + அடைப்பு.]

தசையடைப்புநோய் *tašai-y-aḍaippu-nōy,* பெ. (n.) சிறுநீர்க் குழாய் அடைபடுதலாகிய நோய் (M.L.); stricture in urethra.

[தசையடைப்பு + நோய்]

தசையண்டம்[1] *tašai-y-aṇḍam,* பெ. (n.) நீர் கட்டிய அண்டவூதை (பைஷஜ. 265); hydrocele.

[தசை + அண்டம்]

தசையண்டம்[2] *tašai-y-aṇḍam,* பெ. (n.) கூதை நோய்; morbid enlargment (சா.அக.).

[தசை + அண்டம்]

தசையத்தி *tašaiatti,* பெ. (n.) சீமையத்தி. (சேய்மையத்தி); இது, குருதிமைச் சீர்மை யாக்கும், உடலை வளப்படுத்தும்; foreign fig- Ficus Glomerata (சா.அக.).

[தசை + அத்தி. தசையத்தி = குருதியின் மாசகற்றி, உடலுக்கு உரமூட்டும் அத்திப் பழம்]

தசையிதம் *tašaiyidam,* பெ. (n.) தசைகளினின்று வேகவைத்தெடுத்த மஞ்சள் நிறப்பசை; elastine (சா.அக.).

தசையில்விலா *tašayil-vilā,* பெ. (n.) தசையில்லாத விலாப்பகுதி; spare rib (சா.அக.).

[தசை + இல் + விலா]

தசையூறு-தல் *tašai-y-ūṟu-,* 5 செ.கு.வி. (v.i.) உடம்பில் தினவெடுத்தல்; itching.

[தசை + ஊறு-.]

தசையெடுப்பு *tasai-y-eḍuppu,* பெ. (n.) கோளின் ஆட்சிக்காலத் தொடக்கம் (நாஞ்.); beginning of regnal period of a planet.

[திசை → தசை + எடுப்பு.]

தசையொட்டியிலை *tašai-y-oṭṭi-y-ilai,* பெ. (n.) சதையொட்டி பார்க்க; see *sadai-y-oṭṭi* (சா.அக.).

[தசை + ஒட்டி + இலை]

தசைவலி *tašai-vali,* பெ.(n.) சதையில் உண்டாகும் நோவு; muscular rheumatism, Myalgia.

மறுவ. சதைநோவு

[தசை + வலி]

தசைவளர்ச்சி *tašai-vaḷarcci,* பெ. (n.) 1. சதைப் பற்றுண்டாகை; forming of flesh, carnification. 2. புண்ணை மூடிச் சதையிடுகை; growing of proud flesh. 3. சிறுநீர்த் துளையை அடைத்துக்கொண்டு தசைவளர்கை; fungus or fleshy formation at the tip of the penis obstructing discharges. 4. காய்ப்புண்டாகுகை; formation of a hard horny excresc ence on a toe or foot (செ.அக.).

மறுவ. சதைப்பிடிப்பு

[தசை + வளர்ச்சி]

தசைவளர்த்தி *tašai-vaḷartti,* பெ. (n.) தசைவளர்ச்சி பார்க்க; see *tašai-vaḷarcci.*

[தசை + (வளர்ச்சி →) வளர்த்தி (இ.வ.)]

தசைவிறைப்பு *tašai-viṟaippu,* பெ. (n.) நரம்பிசிவு நோய்; tetanus.

[தசை + விறைப்பு]

தசைவிறைப்புஇசிவுநோய் *tašai-viṟaippu-isivu-nōy,* பெ. (n.) காயத்தின் மூலம் ஏற்படும் தொற்றுநோய்; lockjaw

[தசைவிறைப்பு + இசிவுநோய்]

தசைவீக்கம் *tašai-vīkkam,* பெ. (n.) ஊன் வீக்கம்; swelling of the flesh or muscle (சா.அக.).

[தசை + வீக்கம்]

தசைவேர் *tašai-vēr,* பெ. (n.) 1. தசைப்பற்றுள்ள வேர்; minute elementary part of the muscle. 2. கிழங்குவேர்; bulbous root. 3. ஈராண்டுப் பயிர்களின் வேர்; the fleshy root of plants of two years growth.

[தசை + வேர்]

தசைவைத்தல் *tašai-vaittal,* பெ. (n.) தசை கொள்ளுதல்; to pick up flesh (சா.அக.).

தசைவைப்பு *tašai-vaippu,* பெ. (n.) கோளின் ஆட்சிமுடிவு (நாஞ்.); close of regnal period of a planet.

[திசைவைப்பு → தசைவைப்பு : பன்னிரு ஓரைகளில், ஒவ்வொரு கோளும் செயற்படும், காலப்பகுதி]

தஞ்சக்கேடு *tañja-k-kēḍu,* பெ. (n.) 1. வலுக்குறை; debility, weakness. 2. வறுமை; poverty, helplessness.

[தஞ்சம் + கேடு.]

தஞ்சம் *tañjam,* பெ. (n.) 1. அடைக்கலப் பொருள்; refuge; deposit. 2. எளிது; simple, matter. "தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே" (தொல். சொல். 268). 3. தாழ்வு (பிங்.); degradation, discomfiture. "தஞ்சநம்பால் வாத்தக்கதோ" (விநாயகபு. 65, 39). 4. சிற்றளவினது; smallness, littleness."தஞ்ச முண்ணி வஞ்சாந் தடமொன்று" (பெரியபு. திருக். குறிப். 80). 5. பற்றுக்கோடு; support, help, prop. refuge. "ஒருவரைத் தஞ்ச மென்றெண்ணாது" (தேவா. 1197, 4). தஞ்சம் என்று வந்தவனை வஞ்சித்தல் ஆகாது (பழ.). 6. உறுதி (நிச்சயம்); certainty. "தஞ்சமிவற்கென் வளையுநில்லா" (திவ். பெரியதி. 2: 8: 9). 7. பெருமை (யாழ். அக.); greatness.

[தங்கு → தஞ்சு → தஞ்சம். தங்கு - நலிந்தவன் வலிந்தவனிடம் அடைக்கல மாகத் தங்குகை. ஒருவரிடம் பணிந்து வணங்குகை. 'அடைக்கலம் புகுதல்', 'தஞ்சம் புகுதல்', 'தஞ்சமடைதல்' என்னும் வழக்குகள் கல்லாதார் நாவில் இன்றும் பயின்றுவழங்கும் பான்மையால் அறியலாம்.]

தஞ்சன்பொளி *tañjaṉ-poḷi,* பெ. (n.) துரிசு (யாழ். அக.); blue vitriol, copper hydrows sulphate. (chambers.).

[தஞ்சன் + பொளி]

தஞ்சனம் *tañjaṉam,* பெ. (n.) தன்னையறிதல்; to known oneself.

[தன் + சன் + அம். சன் → சன்னம் = கூர்மை, நுண்மை. தன்னைப் பற்றி, உண்மையாக நுணுகி அறிகை. 'அம்' - சொல்லாக்க ஈறு]

தஞ்சாக்கூர் *tañjākkūr,* பெ. (n.) பொய்யா மொழிப் புலவர் இயற்றிய தஞ்சைவாணன் கோவையின் பாட்டுடைத் தலைவனான சந்திரவாணனது ஊர்; native place of Chandiravāṇaṉ the hero of Thañjaivāṇaṉ kōvai authored by Poyyāmozhi-p-pulavar.

மறுவ. தஞ்சை

பாண்டிநாட்டில் கொற்கை, வல்லம், தஞ்சாக்கூர், மல்லை எனும் நான்கு ஊருக்கும் இடைப்பட்ட, பொருநையாற்றங் கரையிலுள்ள நாடு, மாறைநாடு ஆகும். இப் பகுதித் தலைவனான சந்திரவாணன், தஞ்சைவாணன் என்று சிறப்புப்பெயர் பெற்றிருந்தான். கோமாற வர்மர் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகரதேவருக்கு படைத்தலைவராகவும், அமைச்சராகவும், இருந்தார். இவர் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு.

தஞ்சாபியம் *tañjābiyam,* பெ. (n.) நறும்பிசின்; a fragrant resin.

[தங்கு → தஞ்சு + (அப்பு →) அபு + இயம் → தஞ்சாபியம் - மரப்பட்டையில் தங்கியிருக்கும் பிசின். 'இயம்' - சொல்லாக்க ஈறு. (ஒ.நோ.) இலக்கியம்.]

தஞ்சாவூர் *tañjāvūr*, பெ. (n.) சோழர் தலைநகரங்களுள் ஒன்று (S.I.I. iii, 14); a chōla capital. தஞ்சாவூர் எத்தனும் திருவாரூர் எத்தனும் கூடினாற் போல (பழ.).

மறுவ. தஞ்சை

[ஒருகா. தஞ்சம் + ஆவூர் - தஞ்சாவூர். சோழப்பேரரசின் நெற்களஞ்சிமாயின தஞ்சாவூர், பல்லவர்களிடமிருந்து விசயாலயச் சோழனால் மீட்கப்பட்டது; அந்நாள் தொட்டு முதல் இராசராசன் காலம் வரை சோழர்தம் தலைநகராகத் திகழ்ந்தது. சோழர் குடும்பத்து மூத்தவன் நலங்கிள்ளி உறையூரைத் தலைநகராகக் கொண்டு, பாதிச் சோழநாட்டை ஆள, குடந்தைக்கு அருகில் உள்ள ஆவூரைத் தலைநகராகக் கொண்டு நெடுங்கிள்ளி, மீதிச் சோழநாட்டை ஆண்ட போது, நேர்ந்த போரில், அஞ்சிய ஆவூர் மக்கள் தஞ்சமாக அடைந்த ஊர், தஞ்சாவூர்]

தஞ்சாவூர்உடையார்பண்டாரம் *tañjāvūr-uḍaiyār-paṇḍāram*, பெ. (n.) முதல்இராசன் பெயரால் அமைந்த பண்டாரம் (கருவூலம்); the chief treasury of Rājarāja I. "தஞ்சாவூர் உடையார் பெரும் பண்டாரத்தே ஆட்டைவட்டம் காசு ஒன்றுக்கு முக்குறுணி" (*S.I.I. vol. ii: 2, 35*).

[தஞ்சாவூர் + உடையார் + பண்டாரம் உடையார் = அரசர்க்குரிய மதிப்புரவுச் சொல்]

தஞ்சாவூர்க்கிட்டம் *tañjāvūr-k-kiṭṭam*, பெ.(n.) தஞ்சாவூரில் காணும் இரும்புச்சிட்டம்; scum of iron found in Tañjore (சா.அக.).

[தஞ்சாவூர் + கிட்டம்]

தஞ்சாவூர்த்தட்டு *tañjāvūr-t-taṭṭu*, பெ. (n.) தஞ்சாவூரில் செய்யப்படும் மாழையினாலாகிய கலைநுணுக்கம் நிறைந்த தட்டு; ornamental metal plate. 2. தஞ்சாவூரில் அணியம் செய்யப்படும் வேலைப் பாடுகளமைந்த வட்டவடிவமான அளிப் பொருள்; ornamental metal plate embossed with designs, originally of Thanjāvūr.

[தஞ்சாவூர் + தட்டு - கலைவல்லுநர்க்கும் பல்துறை அறிவுப்புலத்தில், சீர்மையுடன் தன்னிகரற்றுத் திகழும் அறிஞர்கட்கும், அளிக்கப்படும் கொடைப்பொருள்.]



தஞ்சாவூர்முறுக்கு *tañjāvūr-murukku*, பெ. (n.) சீப்புப்பண்ணியம் (சென்னை.); a kind of pastry.

[தஞ்சாவூர் + முறுக்கு]

தஞ்சாவூர்வாழைப்பூ *tañjāvūr-vāḻai-p-pū*, பெ. (n.) நெடுங்கோட்டுப் புடவைவகை; a kind of striped saree. 2. வறுமை: poverty, helplessness (செ.அக.).

மறுவ. சுந்தர வாழைப்பூ

[தஞ்சாவூர் + வாழைப்பூ - தஞ்சாவூர் வாழைப்பூ. புடவைக் கரையில், வாழைப்பூ வடிவங்கள் தொடர்ந்து வடிவமைக்கப்பட்டு இருந்ததால், இப் பெயர் பெற்றிருக்கலாம்.]

தஞ்சி[1] *tañji*, பெ.(n.) உடல் வலிமைக்கும் வயிற்றுப் பூச்சிகளைக் கொல்லவும், பயன்படுத்தும் மருந்துப்பூடு; a composite herb with yellow flowers formerly used as a tonic and anthelmentic - Tansy.

தஞ்சி[2] *tañji*, பெ. (n.) பை; a bag. "வெற்றிலைத் தஞ்சி" (நாஞ்.).

தஞ்சு *tañju*, பெ. (n.) 1. பற்றுக்கோடு; support. 2. அடைக்கலம்; refuge. "அது தஞ்சென வுணர்ந்திலை" (*கம்பரா. யுத். மந்திர. 16*).

தஞ்செலவு *tañjelavu*, பெ. (n.) தற்செயலாக நிகழுஞ் சிறுசெலவுகள் (நாஞ்.); contingent expense.

[தன்செலவு → தஞ்செலவு. இயல்பாக ஏற்படுஞ் செலவு.]

தஞ்சை[1] *tañjai*, பெ. (n.) தஞ்சாவூர் பார்க்க; see *Tañjāvūr*. "தஞ்சை மாமணிக் கோயிலே வணங்கி" (திவ்.பெரிய. தி. 1: 1: 6). "தஞ்சைத் தளிக்குலத்தார் தக்களூரார்" (தேவா. மும்மணிக்கோவை).

[தன் + செய் → தன்செய் → தஞ்சை – குளிர்ந்த தண்ணறும் வயல் சூழ்ந்த ஊர்.]

தஞ்சை[2] *tañjai*, பெ. (n.) தஞ்சாக்கூர் பார்க்க; see *Tañjākkūr*. "வாணன் றமிழ்த் தஞ்சை" (தஞ்சைவா. 17).

தஞ்சைமாமணிக்கோவில் *tañjai-māmaṇi-k-kōvil*, பெ. (n.) காவிரிக்குத் தென்கரையில் உள்ள, திருமால் கோவில்; பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற தலம்; one of the Thirumāl pilgrimage centre, situated on the south bank of Cauvery, adorned by Būdattālvār and Tirumaṅgaiyālvār.

[தஞ்சை + மாமணிக்கோவில்]

தஞ்சைமுழம் *tañjai-muḻam*, பெ. (n.) தஞ்சைப் பெரியகோவிலை அமைக்கப் பயன்பட்ட 24 விரலளவு கொண்ட முழம்; a measure consists of 24 inch used to built and measure the big temple of Tañjore.

[தஞ்சை + முழம்.]

தஞ்சைவாணன் *tañjai-vāṇaṉ*, பெ. (n.) கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த பொய்யாமொழிப் புலவர் இயற்றிய தஞ்சைவாணன் கோவையின் பாட்டுடைத் தலைவன்; the hero of Tañjaivāṇaṉ-kōvai authored by Poyyā-moḻi-p-pulavar by 13th C. A.D.

[தஞ்சை + வாணன்.]

தஞ்சைவாணன்கோவை *tañjai-vāṇaṉ-kōvai*, பெ. (n.) தஞ்சைவாணன் மீது பொய்யாமொழிப் புலவரியற்றிய கோவைச்சிற்றிலக்கியம்; a poem on Tañjaivāṇaṉ by Poyyā-moḻi-p-pulavar (செ.அக.).

[தஞ்சைவாணன் + கோவை. திருக்கோவையார், தொல்காப்பியத்திற்கு எடுத்துக்காட்டாதல் போல், நம்பியகப் பொருளுக்கு, இது நற்சான்றாகும்.]

தஞ்ஞன் *taññaṉ*, பெ. (n.) அறிஞன்; intellectual.

[தங்கு → தங்கன் → தஞ்ஞன் – மூளையில் படிப்பறிவும், பட்டறிவும் தங்கிக் கிடக்குந்தன்மையன்]

தஞ்ஞனம் *taññaṉam*, பெ. (n.) தன்னை யறிந்தவன்; to know onelself. 'know thyself'.

[தஞ்ஞன் + அம் – தஞ்ஞனம்]

தட்கு[1]**-தல்** *taṭku-*, 5 செ.குன்றாவி. (v.i.) தங்குதல்; to remain; to abide. "அஞ்சுவரத் தட்கு மணங்குடைத்துப்பின்" (மதுரைக். 140).

[தங்கு → தக்கு → தட்கு-. தட்குதல் = எஞ்சுதல். அடியில் தங்குதல், மீந்துபோதல்.]

தட்கு[2]**-தல்** *taṭku-*, 5 செ.குன்றாவி. (v.t.) கட்டுதல்; to bind, enchain. "ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே" (புறநா. 193: 4.).

[தள் + கு → தட்கு-. தள் → தளை – தட்கு. ஒ.நோ. உள் + கு = உட்கு..]

தட்டக்கல் *taṭṭakkal*, பெ. (n.) தருமபுரி மாவட்டத்திலுள்ள ஓரூர்; a place in Dharumapuri district.

[தட்டக்கல் = இவ்வூர், வட்டவடிவமான மலைபோன்ற தோற்றத்தையுடையதால், தட்டக்கல் என்றழைக்கப்பட்டிருக்கலாம்.]

தட்டக்கிருமி *taṭṭa-k-kirumi*, பெ. (n.) நுண்ணுயிரி வகை; tape worms (சா.அக.).

[தட்டம் + கிருமி]

தட்டகப்பை *taṭṭagappai*, பெ. (n.) 1. தோசைத் திருப்பி (வின்.); spatula - like ladle for taking a baked dōsai from the frying pan. 2. சப்பை யகப்பை; flat ladle.

[தட்டு + அகப்பை.]

தட்டச்சர் *taṭṭaccar*, பெ. (n.) தட்டச்சுப் பணியாளர்; typist.

[தட்டு + அச்சு – தட்டச்சு → தட்டச்சர்.]

தட்டச்சு *taṭṭaccu*, பெ. (n.) தட்டச்சுப்பொறி தொடர்பானது; typewriting. தட்டச்சுத் தேர்வு (உ.வ.). தட்டச்சுப் பயிலகம், தட்டச்சுப்பணி (இ.வ.).

[தட்டு + அச்சு.]

தட்டச்சுசெய்-தல் *taṭṭaccu-šcy-*, 1 செ. குன்றாவி. (v.t.) *எழுத்துக்களைப் பதிவு செய்தல்;* to type on a type-writer. விண்ணப்பம் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது (இ.வ.).

[தட்டச்சு + செய்-.]

தட்டச்சுப்பொறி *taṭṭaccu-p-poṟi*, பெ. (n.) *தட்டச்சு செய்யும்பொறி;* type-writer.

[தட்டச்சு + பொறி.]



தட்டஞ்சுற்று-தல் *taṭṭañ-juṟṟu-*, 5 செ.குவி. (v.i.) *மாலையில் விளக்குத்தட்டுடன் கடவுளை வலம் வருதல்* (இ.வ.); to go round the deity in a temple with a lighted salver in hand, during the evening service.

[தட்டம் + சுற்று-.]

தட்டட்டி[1] *taṭṭaṭṭi*, பெ. (n.) *செங்கல் குத்தி அமைத்த மச்சு;* Chennai terrace.

மறுவ. தாருசு, இலாகடம், தட்டுமச்சு.

[தட்டு + (அட்டு →) ஒட்டி = தட்டொட்டி → தட்டட்டி. தமிழ்நாட்டின் கூரை வகைகளுள் தலையாயது; சுவரின் மீது அருகருகாகத், துலாக்கட்டை அமைத்து, அதன் மீது, செங்கல்லைக் குத்துவசமாக ஒட்டி அமைக்கப்படும். கடுக்காய் நீர், கருப்பட்டிச்சாறு கலந்த, சுண்ணாம்புக் காரை பயன்படுத்தப்படும். துலாக்கட்டை பயன்பாடு கருதி, இலாகடம் ஒட்டுதல் என்று பேச்சு வழக்கிலுள்ளது. Terrace *என்ற ஆங்கிலச்சொல் 'தாருசு ஒட்டுதல்' எனக் கொத்தனார்களிடையே வழங்குகிறது]*

தட்டட்டி[2] *taṭṭaṭṭi*, பெ.(n.) *மாடியின் தளப்பகுதி;* (நெல்லை.); terraced-roof.

[தட்டு + (அட்டு →) அட்டி]

தட்டட்டிபோட்டவீடு *taṭṭaṭṭi-pōṭṭa-vīḍu*, பெ. (n.) *மாடித்தளம் உள்ள வீடு* (முகவை.); terraced roof house.

மறுவ. மாடிவீடு, மச்சுவீடு

[தட்டட்டி + போட்ட + வீடு]

தட்டடி *taṭṭaḍi*, பெ. (n.) *கூத்தாட்ட வகையுளொன்று* (யாழ். அக.); a kind of dance.

[தட்டு + அடி. தப்பட்டை யெனுந் தட்டையான இசைக்கருவியில், கையால் அடித்து எழுப்பும் ஒவ்வொரு அடி யோசைக்கு ஏற்றவண்ணம், ஆடுங் கூத்து]

தட்டடி-த்தல் *taṭṭu-aḍi-*, 4 செ.கு.வி.(v.i.) *கதவுகளுக்காக, மரச்சட்டங்களைப் பொருத்துதற்கு, மரத்தில் பள்ளம்செய்தல்;* to cut out or make a notch or mortise in the edge of wooden board.

[தட்டு + அடி-.]

தட்டடிதாளம் *taṭṭaḍi-tāḷam*, பெ. (n.) *ஆடல் வகையுளொன்று;* a kind of dance.

தட்டடிதாளம்: இன்னியத்திற்கு இயைந்தாடும் ஆட்டமாகும். தாளத்திற்கேற்ற வண்ணம் அடியெடுத்து வைத்து, தாளமும் ஆட்டமும் ஒரே நிரலில் அமையும் பாங்கினதாகும்.

[தட்டு + அடி + தாளம்..]

தட்டடுவு *taṭṭaḍuvu*, பெ. (n.) *வரிவகை* (TAS iii. 216); a tax.

[தட்டு + அடவு.]

தட்டப்படகு *taṭṭa-p-paḍagu*, பெ. (n.) *தட்டைப்படகு;* pontoon.

[தட்டை + படகு]

தட்டத்தனி *taṭṭattaṉi*, பெ. (n.) *தன்னந்தனி* (வின்.); loneliness.

[தன் → தட்டு → தட்டம் + தனி - தட்டத்தனி]

தட்டத்துத்தி *taṭṭa-t-tutti*, பெ.(n.) *தட்டையான துத்தி;* a species of mallow.

[தட்டம் + துத்தி]

தட்டப்பைவலை *tatta-p-pai-valai,* பெ. (n.) தட்டையான பை போன்ற மீன்பிடிவலை; flat trawl.

[தட்டை + பை + வலை – தட்டைப் பை வலை. தோளில் மாட்டிக்கொண்டு மீன் பிடிக்கும் வாயகன்ற வலை.]

தட்டம்[1] *tattam,* பெ. (n.) *1.* உண்கலம் (சூடா.); porringer eating plate. *2.* தாம்பாளம்; salver (S.I.I. II 419). வெற்றிலைத் தட்டம் (இ.வ.). சாப்பிட்ட பின் தட்டத்தைக் கழுவி வை. (உ.வ.) *3.* பரந்த இதழையுடைய கோங்கு போன்ற பூ; flower, broad-petalled, as of koṅgu. "கோங்கின் றட்டமும்" (பெருங். உஞ்சைக். 57: 98). *4.* துயிலும்இடம் (பிங்.): sleeping room. *5.* படுக்கை (சது.); bed, bedding. *6.* கச்சு; broad tape. "புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்து" (நெடுநல். 126). *7.* கைகொட்டுகை; clapping of the hands. "வணங்கித் தட்டமு மிட்டெதிர் நடித்து" (விநாயகபு. 29: 7). *8.* தாடி (சா.அக.); beard. *9.* அல்குல்; female genital organ. *10.* வெள்ளை; whiteness.

க. தட்டே; ம. தட்டம்; தெ. தட்ட

[தட்டு → தட்டம்; தட்டம் = தட்டையான கிண்ணம். 'அம்' சொல்லாக்க ஈறு. ஒ.நோ. வட்டு → வட்டம்; கட்டு → கட்டம்; மட்டு → மட்டம் (மு.தா. 121).]

தட்டம்[2] *tattam,* பெ. (n.) குளம், நீர்நிலை; tank, pond. "தட்டத்து நீரிலே தாமரை" (திருமந். 2904).

[தட்டம் : வட்டமாக அமைந்த நீர்நிலை, வட்டு = தட்டு + அம் – தட்டம் "அம்" சொல்லாக்க ஈறு, ஒ.நோ. கட்டம்]

தட்டம்[3] *tattam,* பெ. (n.) *1.* பல் (திவா.); tooth. *2.* பாம்பின் மேல்வாய் நச்சுப்பல்: fangs of a snake in the upper row. "பிழிந்துயி ருண்ணுந் தட்டம்" (சீவக. 1286, உரை.).

[தட்டு = பல்வரிசைத் தட்டு. தட்டு → தட்டம்]

தட்டம்[4] *tattam,* பெ. (n.) *1.* நிலத்தில் விழுந்து வணங்குகை; prostration in worship. "கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே" (சி.சி. 12: 2: மறைஞா.). *2.* யானை செல்லும் வழி (சங். அக.): elephants path.

[தண்டம் → தட்டம். தட்டம் – தடிபோற் கீழேவிழுந்து வணங்குதல், தட்டுத் தடுமாறி விழுதல் (உ.வ.)]

தட்டம்[5] *tattam,* பெ. (n.) மோவாய் (யாழ். அக.); chin.

[தட்டு → தட்டம்]

தட்டம்மன் *tattamman,* பெ. (n.) தட்டம்மை பார்க்க; see *tattammai.*

[அம்மை, மாரியம்மனின் சீற்றத்தால் தோன்றுகிறதென்ற எண்ணத்தால், தட்டம்மை → தட்டம்மன் என வழங்கலாயிற்று. ஒருகா. வட்டமாகத் திட்டுத்திட்டாகப் பெரியளவிற், புடைப்பாக உடம்பிற் காணப்படுவதால், இப் பெயர் பெற்றிருக்கலாம்.]

தட்டம்மை *tattammai,* பெ. (n.) வெப்புநோய் வகை; chicken pox, measles. குழந்தைகளுக்கும் ஊட்டக்குறைவு உடையவர்களுக்கும் தட்டம்மை மிகுதியாக வருகிறது. (உ.வ.).

மறுவ. தட்டம்மன, சிச்சிலுப்பான், மணல்வாரி

தெ. தட்டம்ம

[தட்டு + அம்மை = தட்டம்மை. தள் → தட்டு = புடைத்தல் (மு. தா. 121).]

தட்டல்[1] *tattal,* பெ.(n.) *1.* கை முதலியவற்றால் தட்டுகை; knocking, striking, clapping, tapping. *2.* தாளமிடுகை (திவா.); beating time. *3.* தடுக்கை (திவா); checking, obstructing, rejecting. *4.* முட்டுப்பாடு; lack, scarcity. சோற்றுக்குத் தட்டலாயிருக்கிறது (உ.வ.). *5.* ஒன்றிலுள்ளதை வெளியிற்கொட்டுகை; emptying, discharging. *6.* தாலம் (வின்.); salver, tray. *7.* ஐந்து என்பதன் குழூஉக்குறி (யாழ்ப்.): five, a slang term. *8.* வயிறு தட்டல்; tapping the abdomen as in ascites.

[தட்டு → தட்டல் = கையாலும் கருவியாலும் தட்டல். தட்டல் கருத்து, முட்டல் கருத்தினின்று முகிழ்த்தது. இரண்டு கைகள் ஒன்றோடொன்று முட்டுவதாலும், தட்டல் ஏற்படுகிறது. தப்பட்டை முதலான இசைக் கருவியில், கையாலும், கோலாலும் தட்டுவதாலும்,

முட்டற் கருத்தினின்று தட்டல் கருத்து உருவாகிறது எனலாம். இத்தட்டற் கருத்தே தடுக்குங்கால் தடைக்கருத்தைத் தோற்றுவிக்கிறது.]

தட்டல்தடவல் *taṭṭal-taḍaval,* பெ. (n.) 1. முட்டுப்பாடு; scantiness, lack. என் பையிலே பணம் தட்டல் தடவலாயிருக்கிறது (வின்.). 2. நடைதடுமாறுகை; stumbling in gait, groping (செ.அக.).

மறுவ. பணப்பற்றாக்குறை, பணமுடை, பணநெருக்கடி

[தட்டல் + தடவல் → தட்டல்தடவல் = பணத்தட்டுப்பாடு. தட்டுத்தடவிச் செலவு செய்கை.]

தட்டவை[2]-த்தல் *taṭṭa-vai-,* 4 செ.கு.வி. (v.i.) பொறுக்கவிடுதல்; to pick up here and there, glen.

[தட்ட + வை-.]

தட்டழி[1]-தல் *taṭṭaḻi-,* 4 செ.கு.வி. (v.i.) சீர்கெடுதல்; to deteriorate. 'சாப்பாடு மெல்ல மெல்லத் தட்டழிந்து' (பஞ்ச. திருமுக. 274).

[தட்டு + அழி-. நிலை குலைதல். கட்டமைப்புத் தளர்தல், பதனழிதல். உறுதி கெடுதல்]

தட்டழி[2]-தல் *taṭṭaḻi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. நிலை குலைதல்; to loose stability, put out of order, to be ruined. "தட்டழிந்தன பாரகம்" (கந்தபு. வச்சிரவாகு. 63). 2. திகைத்தல்; to be perplexed, disconcerted. "தட்டழிந் துளறுவார்" (தாயு. பரிபூரண. 3). 3. தோல்வியுறுதல் (வின்.); to be defeated, worsted as in a lawsuit, argument, etc. 4. அல்லல்படுதல், தடுமாறுதல்; to struggle with. சிறுசிறு வேலைக்கெல்லாம் தட்டழிய வேண்டியிருக்கிறது (உ.வ.).

ம. தட்டழியுக

[தட்டு + அழி-,]

தட்டழி[3]-தல் *taṭṭaḻi-,* 4 செ.கு.வி.(v.i.) நிறைகோலிலுள்ள தட்டு, மேல்கீழாதல்; to move up and down as the plates of a scale.

[தட்டு + அழி-. தட்டு = நிலை. அழிதல் = மாறுதல்.]

தட்டழி[4] *taṭṭaḻi,* பெ. (n.) ஒருவகை இசைக்கருவி; a kind of drum. "தட்டழி கொட்டிகள்" (S.I.I.ii, 527).

மறுவ. தம்பட்டம்

ம. தட்டழி

[தட்டு + அழி = தட்டிமுழக்கும் ஒருமுகத் தோற்பறை.]

தட்டழி[5] *taṭṭaḻi,* பெ. (n.) வரிவகையுளொன்று; a kind of tax.

தட்டழிகொட்டிகள் *taṭṭaḻi-koṭṭigaḷ,* பெ. (n.) தட்டழியெனுந் தோற்கருவியினை இசைப்பவர்; drummer. "திருவோணம் பெருவிழாவாக ஏழு நாளும் நிசதி நூறு விளக்கும், பதினாநாள் தட்டழி கொட்டிகளையும், கொண்டு செய்வித்து" (கம்பவர்மன் கல்வெட்டு.) (S.I.I. vii. 421)

மறுவ. கொட்டிமுழக்கிகள்; உவச்சர்; தப்பட்டைகொட்டிகள்

[தட்டழி + கொட்டிகள். கொட்டு → கொட்டி = தோற்கருவி கொட்டுபவர்]

தட்டழிவு *taṭṭaḻivu,* பெ.(n.) 1. கலக்கம்; confusion. 2. மனக்குழப்பம்; derangement, perplexity. 3. தோல்வி; defeat; ruin (செ.அக.).

மறுவ. இரண்டக நிலை, நிலைகுலைவு, தடுமாற்றம்

ம. தட்டழிவு; க. தத்தற; தெ. தத்தறமு

[தட்டு + அழிவு]

தட்டளை *taṭṭaḷai,* பெ. (n.) வயலில் நீர் வடிய வெட்டப்படும் வடிகால்; outlet, drain.

[தண் + தளை → தட்டளை]

தட்டறை *taṭṭaṟai,* பெ. (n.) அடைப்பை முதலியவற்றிலுள்ள சிறிய உட்பை; small inner pouch in a bag. "கைவாளத் தட்டறையிற் சோதித்தேன்" (விறலிவிடு. 832).

[தட்டு + அறை. தட்டு = தடுப்பு, அடுக்கு.]

தட்டாக்குடி *taṭṭā-k-kuḍi,* பெ. (n.) பொற்கொல்லர்களின் இருப்பிடம் (இ.வ.); goldsmith's quarters.

[தட்டான் + குடி.]

தட்டாங்காரல் *taṭṭāṅ-gāral,* பெ. (n.) வெண்ணிறமுள்ள சிறிய கடல்மீன் வகை; small sea-fish, silvery olive, Equla bindus.

[தட்டு + ஆங்கு + ஆரல். ஆரல்மீன் வகை]



தட்டாடை *taṭṭāḍai,* பெ.(n.) இடையில் அணியும் வேட்டி; cloth worn undivided about the loins.

மறுவ. அடையவளைந்தானுடை

[தட்டு + ஆடை. தட்டு = அடுக்கு, நடுவிடம், நடு, இடை. இடையில் அணியும் ஆடை. ஆடு → ஆடை.]

தட்டாத்தி *taṭṭātti,* பெ. (n.) பொற்கொல்லர் குடிமகள்; woman of goldsmith caste (செ.அக.).

[தட்டார் + அத்தி → தட்டாரத்தி → தட்டாத்தி. அத்தி = பெண்பால் விகுதி. ஒ.நோ. மறத்தி, குயத்தி, ஆட்டனத்தி.]

தட்டாமல்வைத்தல் *taṭṭāmal-vaittal,* பெ. (n.) ஒன்றோடொன்று தொடர்பின்றி வைத்தல்; keeping away from being united (சா.அக.).

[தட்டாமல் + வைத்தல்]

தட்டாமாலை *taṭṭāmālai,* பெ. (n.) 'தட்டாமாலை தாமரைப்பூ' என்று சொல்லிக்கொண்டு, சுற்றுதலாகிய பிள்ளை விளையாட்டுவகை (இ.வ.); children's play of whirling round, uttering *taṭṭāmālai-tāmarai-p-pū.*

தட்டாமாலை: கீழ்ப்பகுதி இணைக்கப்படாத மாலை. இம் மாலை போன்று, இணையாமல், ஒன்று சேராமல், சிறுவர் ஆடும் விளையாட்டு.

தட்டார்பாட்டம் *taṭṭār-pāṭṭam,* பெ. (n.) தட்டார் இறுக்கும் அரசிறைவகை; profession tax on goldsmiths. "இனவரி தறியிறை தட்டார்பாட்டம் எப்பேற்பட்ட வரிகளும்" (தெ. கல். தொ. III. 109).

[தட்டார் + பாட்டம். பொற்கொல்லர் அரசிற்கு இறுத்திய இறை; பகுதி பகுதியாகச் செலுத்தும் இறையே, பாட்டமாகும். விட்டுவிட்டுக் கால இடைவெளிக்கிடையே செலுத்தும் பாட்டம். ஒ.நோ. பாட்டம் பாட்டமாக மழை பெய்தது.]

தட்டார்வெள்ளை *taṭṭār veḷḷai,* பெ. (n.) நெல் வகை (நாஞ்.); a kind of paddy.

ம. தட்டாரவெள்ள

[தட்டார் + வெள்ளை – வெண்மை நிறமுள்ள நெல்வகை]

தட்டாரக்காணி *taṭṭāra-k-kāṇi,* பெ. (n.) கோவிலுக்குரிய அணிகலன்களைச் செய்யும் தட்டானுக்குரிய, இறையிலி நிலம்; the tax free land donated to the temple's goldsmith. "உலோ மாதேவீச்சரத்து தட்டாரப்பணி செய் காணி தட்டான் சக்கடி சமுதையனான செம்பியன் மாதேவிப் பெருந்தட்டான்" (S.I.I. V.515).

[தட்டார் + காணி.]

தட்டாரச்சித்து *taṭṭāra-c-cittu,* பெ. (n.) பொற்கொல்லுப் பட்டறையில் உள்ள பொன் துகள்; gold-dust found at goldsmith's place. தட்டாரச் சித்து தரையிலே (பழ).

மறுவ. பட்டறைப்பொடி

[தட்டார் + சித்து]

தட்டாரநாயகன் *taṭṭāra-nāyagaṉ,* பெ. (n.) பழைய நாணய வகை (சரவண, பணவிடு, 58); an ancient coin.

[தட்டார் + நாயகன்]

தட்டாரப்பாட்டம் *taṭṭāra-p-pāṭṭam,* பெ. (n.) தட்டார்பாட்டம் (S.I.I. iii, 115) பார்க்க; see *taṭṭār-pāṭṭam* (செ.அக.).

ம. தட்டாரப்பாட்டம்

[தட்டார்பாட்டம் → தட்டாரப்பாட்டம். பொற்கொல்லர், வேந்தர்க்குச் சிறிது சிறிதாகச் செலுத்திய இறையே, பாட்டமாகும்]

தட்டாரப்பூச்சி *taṭṭāra-p-pūcci*, பெ. (n.) 1. பளபளப்பான கண்களும், உருண்டையான தலையும், நான்கு அகண்ட இறகுகளும், நீண்டவாலும் கொண்ட, பறக்கும் பூச்சி; dragon-fly, Libellula rimaculata. 2. நுண்ணியிரி வகை; miller moth.

மறுவ. தட்டான், வண்ணத்துப் பூச்சி, தும்பி



தட்டாரப்பொட்டு *taṭṭāra-p-poṭṭu*, பெ. (n.) 1. புறப்புனைவு (யாழ். அக.); ostentation, show. 2. வெளித்தோற்றம்; outward.

[தட்டார் + பொட்டு]

தட்டான்[1] *taṭṭāṉ*, பெ. (n.) பொற்கொல்லன் (திவா.); gold or silversmith. "தட்டான் தாய்ப்பொன்னிலும் மாப்பொன் திருடுவான்" (பழ.).

ம. தட்டார்; இ. தட்டான்; தெ. தட்ரவாடு; குட. தட்டெ; பட. தட்ட; துட. தொட்ங்கன், தொட்ங்கின்; பிரா. டாடார்

[துட்டு → தட்டு → தட்டான் = பொன்னை உருக்கித்தட்டி அணிகலன் செய்பவன்.]

தட்டான்[2] *taṭṭāṉ*, பெ. (n.) புடலை; common snake-gourd.

மறுவ. தட்டான் கொட்டோசை

[தட்டான் – தட்டையான நீண்டகாய்]

தட்டான்[3] *taṭṭāṉ*, பெ. (n.) 1. தட்டாரப்பூச்சி பார்க்க; see *taṭṭāra-p-pūcci*. "தட்டான் தாழப்பறந்தால் தப்பாமல் மழைவரும்" (பழ.). 2. வெண்கோட்டம் (மலை); Arabian costume. 3. பாம்பு; snake (செ.அக.).

[தட்டார் → தட்டான். உருக்கித் தட்டிய பொன்போல் மின்னும், வண்ணத்துப்பூச்சி]

தட்டான்[4] *taṭṭāṉ*, பெ. (n.) கிழக்குரங்கு; age worn monkey. "இந்த நரைத்தட்டானை வந்து" (விறலிவிடு. 890).

தட்டான்[5] *taṭṭāṉ*, பெ. (n.) தட்டைப்பயிறு என்னும், ஒருவகைக் கூலம்; a variety of green gram.

ம. தட்டபயறு

[தட்டை → தட்டான்.]

தட்டான்காய் *taṭṭāṉ-kāy*, பெ. (n.) பச்சைத் தட்டைப்பயற்றங்காய்; a variety of green gram (சா.அக.).

[தட்டான் + காய். முற்றாத நிலையிற் பொறிக்கறி சமைக்கப் பயன்படுங்காய். ஒருகா. தட்டாங்காய் → தட்டான்காய்]

தட்டான்குப்பம் *taṭṭāṉ-kuppam*, பெ.(n.) செங்கை மாவட்டத்திலுள்ள ஓரூர்; a village in Cheṅgalpaṭṭu district.

[தட்டான் + குப்பம். தட்டார் குழுமி வாழுமிடம். குப்பை யென்னும் வழக்கே குப்பமென்று திரிந்தது. ஒருகா: கும்பல் → குப்பல் → குப்பம்]

தட்டான்கொட்டோசை *taṭṭāṉ-koṭṭōšai*, பெ. (n.) பாம்புப் புடோல் (மலை); common snake-gourd.

மறுவ. தட்டான்

தட்டான்பட்டு *taṭṭāṉ-paṭṭu*, பெ. (n.) செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஓரூர்; a village in Cheṅgalpaṭṭu district.

[தட்டான்பட்டு = செங்கற்பட்டு மாவட்டத்தில் வேளாண் தொழில் ஓங்கியிருத்தலானும், தட்டாரும் பெரும் பான்மையாக வதிந்திருத்தலானும், இப் பெயர் பெற்றதென்றறிக.]

தட்டான்பூச்சி *taṭṭāṉ-pūcci*, பெ. (n.) தட்டாரப்பூச்சி பார்க்க; see *taṭṭāra-p-pūcci*.

மறுவ. தட்டாரப்பூச்சி, வண்ணத்துப்பூச்சி, தும்பி

ம. தட்டான்பக்கி

[தட்டான் பூச்சி = உருக்கிய பொன்போல் மின்னும் வண்ணத்துப் பூச்சி]

தட்டானுப்பி *taṭṭāṉuppi,* பெ. (n.) படர் கொடிவகை (வின்.); a kind of creeper.

[தட்டானுப்பி = நீண்டு செல்லும் படர் கொடி வகை]

தட்டி[1] *taṭṭi,* பெ.(n.) *1.* காவல் (சூடா.); defence, safe-guard. *2.* சிறை; jail, prison. "தட்டியிலிருந்தவன் முடிசூடினாற்போலே" (ஈடு, 5, 7,1). *3.* கதவு (இலக். அக.); door. *4.* பிரம்பு முதலியவற்றாற் பின்னிய மறைப்புத்தடுக்கு: screen, as of cuscuss grass, rattan, etc. 'அங்கே தட்டி கட்டவேண்டும்'. *5.* கேடகம் (பிங்.); shield. *6.* போர்க்கருவி வகை; a weapon. "எழுவே தட்டி" (கந்தபு. சூரப. இரண்டாநாள். 6). *7.* இசைக் கருவி வகை; a kind of drum. "வியன்றுடி திமலை தட்டி" (பெரியபு. எறிபத். 3). *8.* அரைச் சல்லடம் (இலக். அக.); drawers. *9.* தாம்பாளம் (இ.வ.): salver, tray.

ம., பட. தட்டி; க. தட்டி, தடகு, தடிகெ; தெ. தடக, தடி; து. தட்டி, தடெ; H. taṭṭi; Pkt. ṭaṭṭī

[துள் → தள் → தட்டு. தட்டுதல் = தடுத்தல், நீருள் மூழ்கினவனுக்குத் தரை தட்டுதலும், முற்செல்பவனுக்குச் சுவர் தட்டுதலும், தடையாகும். தட்டு → தட்டி = அறையை அல்லது வழியைத் தடுக்கும், மூங்கிற்பாய் அல்லது தென்னங்கிடுகு (மு.தா. 93). தட்டு → தட்டி (மு. தா. 101). முற்செல்வதைத் தடுக்கும் கட்டு; முற்செல்பவனைத் தடுத்து சுவர்கட்டி அமைக்கும் பகுதி, அறை; அறையை அல்லது வழியைத் தடுக்கும் மூங்கிற்பாய் அல்லது தென்னங்கிடுகால் ஆகியது, தட்டி எனப்பட்டது. பகைவர்தம் தாக்குதலைத் தடுத்துத் தாங்கும் தட்டி, கேடகம் எனப்பட்டது.]

தட்டி[2] *taṭṭi,* பெ.(n.) *1.* வெண்கோட்டம் (ஒரு செடிவகை); Arabian costum. *2.* வெற்றிலைக் கட்டு (யாழ்ப்.); bundle of betel.

[தள் → தட்டி]

தட்டி[3] *taṭṭi,* பெ. (n.) வெட்டிவேர்த் தட்டி; cuscuss screen made of fragrant roots of cuscuss grass (சா.அக.).

[தட்டு → தட்டி]

தட்டி[2] *taṭṭi,* பெ. (n.) விளம்பரம் செய்ய வைக்கப் படும் மூங்கில் போன்றவற்றால் செய்யப்படும் அமைப்பு; arch like, banner like structure of plaited bamboos etc. தலைவர் வருகையை முன்னிட்டு ஏராளமான தட்டிகள் வைக்கப் பட்டிருந்தன (உவ.).

[தட்டு → தட்டி]

தட்டிக்கதவு *taṭṭi-k-kadavu,* பெ. (n.) மூங்கில், பனை, தென்னை ஒலைகளால் செய்யப் பெற்ற கதவு போன்ற தட்டி; screen, as of cuscuss, palmyra and coconut leaves, grass, rattan, etc., tatty. மூங்கில் பாயை அடைத்து, மூங்கில் பட்டையால், செய்யப்பட்ட கதவு (பொ. வ.).

[தட்டு → தட்டி + கதவு.]

தட்டிக்கவி *taṭṭi-k-kavi,* பெ. (n.) கருப்பூர ஆலத்திப்பாட்டு (கோயிலொ. 66); poem recited while offering camphor incense to an idol (செ.அக.).

மறுவ. பூசைப்பாட்டு

[தட்டு → தட்டி + கவி.]

தட்டிக்கழி[1]**-த்தல்** *taṭṭi-k-kaḻi-,* 4 செ. குன்றாவி. (v.t.) *1.* விலக்குதல்; to repel, get rid of. ஒட்டிக் கொண்டு போனாலுந் தட்டிக்கழிக்கிறான். *2.* ஒருவனுக்கு வரவேண்டிய தொகையிலிருந்து அவனாற் செல்லவேண்டிய (கொடுக்க வேண்டிய) தொகையைக் கழித்துக் கணக்கு முடித்தல் (இ.வ.): to give credit for a sum claimed.

[தட்டி + கழி-.]

தட்டிக்கழி[2]**-த்தல்** *taṭṭi-k-kaḻi-,* 4 செ.குவி. (v.i.) சாக்குப்போக்குச் சொல்லுதல் (இ.வ.); to give lame excuses.

[தட்டு → தட்டி + கழி-.]

தட்டிக்கிளம்பு-தல் *taṭṭi-k-kiḷambu-,* 5 செ.குவி. (v.i.) *1.* வளர்தல்; to rise, grow high, become tall. *2.* மேம்படுதல்; to rise to position or influence. *3.* மூண்டெழுதல்; to be animated with joy, with zeal for an enterprise, to be roused to anger (செ.அக.).

[தட்டி + கிளம்பு-.]

தட்டிக்கேள்-தல் (தட்டிக்கேட்டல்) *taṭṭi-k-kel-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **அடக்கியாளுதல்;** to check, control. *தட்டிக்கேட்க ஆளில்லாமற் போனால் தம்பி சண்டப்பிரசண்டம் பண்ணுவான் (பழ.).* 2. **தட்டிச்சொல்-, 1** பார்க்க; see *taṭṭi-c-col- 1.* 3. **கண்டித்தல்** (வின்.); to remonstrate. *தட்டிக்கேட்க ஆள் இல்லாததால் அவன் கெட்டு அலைகிறான் (உ.வ.). அரசின் தவறான போக்கைத் தட்டிக் கேட்கும் உரிமை மக்களுக்கு உண்டு (இ.வ.).*

[தட்டு → தட்டி + கேள்-.]

தட்டிக்கொடு-த்தல் *taṭṭi-k-koḍu-*, 4 செ. குன்றாவி. (v.t.) 1. **அமைதி பண்ணுதல்** (இ.வ.); to quiet, lull by gently tapping. 2. **ஊக்கப் படுத்துதல்** (இ.வ.): to cheer, encourage, urge on, as by patting. *முதலாளி தொழிலாளர்களைத் தட்டிக்கொடுத்து வேலை வாங்கவேண்டும். (உ.வ.).* 3. **தூண்டுதல்;** to incite. 4. **ஒருவர்மீது தட்டிக் குறிப்புக்காட்டுதல்** (வின்.); to indicate or betray a person by tapping him.

ம. தட்டிக்கொடுக்க

[தட்டி + கொடு-.]

தட்டிக்கொள்(ளு)¹-தல் *taṭṭi-k-koḷ(ḷu)-*, 7 செ. குன்றாவி. (v.t.) 1. **பறித்தல்;** to grasp anything within reach. *என்பொருளை வலக்காரமாகத் தட்டிக் கொண்டான்.* 2. **திருடுதல்** (இ.வ.); to steal.

[தட்டி + கொள்-.]

தட்டிக்கொள்(ளு)²-தல் *taṭṭi-k-koḷḷu-*, 6 செகுவி. (v.i.) 1. **தளர்தல்** (வின்); to be exhausted; to be in want. 2. **மோதிக்கொள்ளுதல்;** to strike against; to be resisted by an obstacle; to run aground, as a ship. 3. **தடைப்படுதல்;** to be obstructed, hindered, as in reading, speaking, etc. 4. **பற்றாமற்போதல்** (இ.வ.): to fail, prove inadequate.

[தட்டி + கொள்-.]

தட்டிகம் *taṭṭigam*, பெ. (n.) **நிலப்பனை;** ground palm black musale.

தட்டிகமாலு *taṭṭiga-mālu*, பெ. (n.) **தட்டிகம்** பார்க்க; see *taṭṭigam.*

தட்டிகா *taṭṭigā*, பெ. (n.) **காசித்தும்பை;** Baneras lencas-Bolsom (சா.அக.).

தட்டிச்சல்லடம் *taṭṭi-c-calladam*, பெ.(n.) **ஒட்டுச்சல்லடம்** (வின்.); short drawers worn by wrestlers.

ம. தட்டிச்சல்லடம்; க. தட்டி; தெ. தட்டி சல்லடமு; து. தட்டி

[தட்டி + சல்லடம்]

தட்டிச்சிந்து *taṭṭi-c-cindu*, பெ. (n.) **தட்டிக்கவி** (யாழ்ப்.) பார்க்க; see *taṭṭi-k-kavi* (செ.அக.).

[தட்டி + சிந்து]

தட்டிச்சுற்று¹-தல் *taṭṭi-c-cuṟṟu-*, 8 செ.குன்றாவி. (v.t.) **கொள்ளையடித்தல்** (இ.வ.); to plunder.

[தட்டு → தட்டி + சுற்று-.]

தட்டிசுற்று²-தல் *taṭṭi-cuṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) **ஆலத்திசுற்றுதல்** (யாழ்ப்.); to wave plate with water mixed with turmeric powder and lime in welcoming.

[தட்டு + சுற்றுதல் - தட்டுச்சுற்றுதல் → தட்டிச்சுற்றுதல், வட்டக்கருத்தினின்று சுற்றுதற்கருத் தோன்றிற்று. தட்டிச்சுற்றி யெடுக்கும் ஆலத்தியையும், காலப்போக்கிற் குறிப்பதாயிற்று]

தட்டிச்செல்லு¹-தல் *taṭṭi-c-cel(l)u-*, 13 செ.கு.வி. (v.i.) **திறப்பாட்டால் வெல்லுதல்;** to succeed. *மகளிர் கால்பந்து விளையாட்டில், தமிழ்நாடு முதலிடத்தைத் தட்டிச் சென்றது. உலகத்தடகளப் போட்டிகளில் சில நாடுகளே தங்கப் பதக்கங்களைத் தட்டிச் செல்கின்றன (இ.வ.).*

[தட்டு → தட்டி + செல்-.]

தட்டிச்செல்லு²-தல் *taṭṭi-c-cel-*, 7 செ. குன்றாவி. (v.t.) **வெல்லுதல்; ஒன்றைப் பெறுதல்;** (of competitions) to succeed (with ease); walk away with price. *மட்டைப் பந்துப் போட்டியில் ஆத்திரேலியா கோப்பையைத் தட்டிச் சென்றது.*

[தட்டு → தட்டி + செல்-.]

தட்டிச்சொல்(லு)¹-தல் *taṭṭi-c-col(lu)-*, செ.கு.வி. (v.i.) **திக்கிப் பேசுதல்;** to stammer (சா.அக.).

[தட்டு → தட்டி + சொல்லு-.]

தட்டிச்சொல்(லு)-தல் *taṭṭi-c-col-*, 8 செ.குன்றாவி. (v.t.) *1.* **மறுத்துரைத்தல்;** to contradict, oppose, remonstrate, object to, protest against. எதற்கெடுத்தாலும் தட்டிச் சொல்லுதலே அவன் வழக்கமாகிவிட்டது (உவ.). *2.* **தட்டிக்கேள்-1** பார்க்க; see *taṭṭi-k-kēḷ- 1.* *3.* **கூறியது கூறுதல்** (யாழ்ப்.); to speak or repeat a lesson haltingly.

[தட்டி + சொல்-.]

தட்டிணைப்பு *taṭṭiṇaippu,* பெ.(n.) இரண்டு மரச் சட்டங்கள் குறுக்குநெடுக்கில் அமைக்கும் போது, இடையில் இரண்டையும் பொருத்தும் இணைப்புத் துண்டு; piece or slice of wood to join or fasten.

[தட்டி + இணைப்பு]

தட்டித்தடவு-தல் *taṭṭi-t-taḍavu-*, 5 செ.குவி. (v.i.) **தடுமாறுதல்;** to stumble and grope about, fumble. தட்டித்தடவி வாசிக்கிறான் (உவ.).

[தட்டு + தடவு - தட்டுத்தடவு → தட்டித் தடவு-.]

தட்டித்தடுமாறு-தல் *taṭṭi-t-taḍumāṟu-*, 5 செ.குவி. (v.i.) **தட்டித்தடவு-தல்** பார்க்க; see *taṭṭi-t-taḍavu-.*

[தட்டு → தட்டி + தடுமாறு-.]

தட்டித்திரி-தல் *taṭṭi-t-tiri-*, 2 செ.கு.வி. (v.i.) **துன்பமுற்றலைதல்;** to knock about, go about in distress. "பகலெல்லாம் தட்டித் திரிந்து" (திவ். திருமாலை: 5: வ்யா.).

[தட்டு → தட்டி + திரி-.]

தட்டிப்பறி-த்தல் *taṭṭi-p-paṟi-*, 4 செ. குன்றாவி. (v.t.) *1.* **அடித்துப் பிடுங்குதல்;** to rob by force. அவன் கைப்பொருளைத் தட்டிப் பறித்துக் கொண்டு துரத்திவிட்டார்கள். *2.* **வலக்காரமாய்ப் பறித்தல்;** to get by stratagem. *3.* **கவர்ந்து செல்லுதல்;** to snatch away. குழந்தையின் கையில் இருந்த முறுக்கைக் காக்கை தட்டிப் பறித்துப் பறந்தது (உவ.).

[தட்டு → தட்டி + பறி-.]

தட்டிப்பார்-த்தல் *taṭṭi-p-pār-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* **தேங்காய், கட்டபானை, காசு (நாணயம்) முதலியவற்றைச் சுண்டிப்பார்த்து வரும் ஒலியிலிருந்து, அவற்றின் இயல்பை அறிதல்;** to test the soundness, as of coconut or genuineness, as of coin, by tapping or flipping with the fingers. பானையைத் தட்டிப்பார், காசை (நாணயத்தை)ச் சுண்டிப்பார். *2.* **கமுக்கம் (மந்தணம்) அறிய முயலுதல்** (வின்.); to try to find out secrets.

[தட்டு → தட்டி + பார்-.]

தட்டிப்புடை-த்தல் *taṭṭi-p-puḍai-*, 4 செகுன்றாவி. (v.t.) **முறத்தாற் கொழித்து நெல், பதர் முதலியவற்றைப் பிரித்தெடுத்தல்;** to separate grain from chaff by winnowing.

மறுவ. தட்டுப்புடை

[தட்டு + தட்டி + புடை-.]

தட்டிப்பேசு-தல் *taṭṭi-p-pēsu-*, 5 செ. குன்றாவி. (v.t.) **தட்டிச்சொல்(லு)-தல் 1,** (வின்.) பார்க்க; see *tatti-c-col-l.* தட்டிப் பேச ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் (பழ.).

[தட்டு → தட்டி + பேசு-.]

தட்டிப்போ-தல் *taṭṭi-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) **நிறைவேறாமல் தள்ளிப்போதல்;** to fall through; miscarry. வீடு கிடைக்கும் என்றிருந்த கட்டத்தில், ஏதோ காரணியத்தால் தட்டிப்போய் விட்டது (இ.வ.). ஒவ்வொரு முறையும் வேலை கிடைப்பது போலிருந்து, தட்டிப்போகிறது. (உவ.).

[தட்டு → தட்டி + போ-.]

தட்டிப்போடு[1]-தல் *taṭṭi-p-pōḍu-*, 19 செ. குன்றாவி. (v.t.) *1.* **கவிழச்செய்தல்;** to strike and spill, overturn. தட்டிப்போட்ட வறட்டியைப் புரட்டிப் போடக் காரணவ ரில்லை (பழ.). *2.* **வெல்லுதல்** (வின்.); to overcome, as in a game. *3.* **மறுத்தல்;** to disregard, reject. நான் சொன்னதைத் தட்டிப்போட்டான் (இ.வ.).

[தட்டு → தட்டி + போடு-.]

தட்டிப்போடு[2]-தல் *taṭṭi-p-pōḍu-*, 19 செ. குன்றாவி. (v.t.) *1.* **தப்புதல்;** to elude, escape. இந்தப் பொருள் தோன்றாமல் தட்டிவிட்டது. *2.* **உழுதசாலில் திரும்ப உழுதல்** (யாழ்ப்.): to turn back the plough on the furrow and deepen it.

[தட்டு → (தட்டி) + போடு-.]

தட்டிப்போடுதல் *taṭṭi-p-pōḍudal,* பெ. (n.) இடித்து அல்லது நசுக்கிப்போடுதல்; striking or pounding flat and putting as drugs to prepare decoction.

[தட்டு → தட்டி + போடு-.]

தட்டிமாறு-தல் *taṭṭi-māṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. குற்றம் முதலியவற்றிற்கு விலகப் பார்த்தல்; to evade, shift a fault upon another; to give one the slip. 2. வலுவாயடித்தல்: to strike a heavy blow (செ.அக.).

[தட்டு → தட்டி + மாறு-.]

தட்டியம் *taṭṭiyam,* பெ. (n.) மதிப்புறு அரசச் சின்னங்களுள் ஒன்றான, நெடும்பரிசை (திவா.); large shield.

மறுவ. மரக்கேடயம்

[தட்டு + இயம்; தட்டு = தடுப்பு, தடுக்கை. 'இயம்' - சொல்லாக்க ஈறு, ஒ.நோ. பெருவங்கியம், தமிழியம், ஐம்பெருங் காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம்]

தட்டியழை-த்தல் *taṭṭi-y-aḻai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கைகொட்டிக் கூப்பிடுதல்; to call by clapping the hands. 2. போருக்கழைத்தல் (சீவக. 1109, உரை): to challenge to combat.

[தட்டு → தட்டி + அழை-.]

தட்டியள-த்தல் *taṭṭi-y-aḷa-,* 3 செ.குன்றாவி. (v.t.) தலையை வழித்துக் கூலம் முதலியவற்றை அளத்தல்; to measure grain, etc., striking off the heaped-up part at the top of a measure.

[தட்டு → தட்டி + அள-. (தட்டி = சமமாகப் படியைத் தடவி)]

தட்டியிழை-த்தல் *taṭṭiyiḻai-,* 4 செ.குன்றாவி. (v.t.) சமச்சீராக இழைத்தல்; to plane, scrape.

[தட்டி + இழை-.]

தட்டியிழைப்புளி *taṭṭi-y-iḻaippuḷi,* பெ. (n.) தச்சுக்கருவி வகை (C.E.M.); rabbet plane.

மறுவ. தட்டிழைப்புளி

[தட்டு + இன் → இழை → இழைப்பு + உளி. அனைத்துப் பரப்பினையுஞ் சமமாக இழைக்குந் தச்சுக்கருவி.]



தட்டியெழுப்பு-தல் *taṭṭi-y-eḻuppu-,* 5 செ. குன்றாவி. (v.t.) 1. தூங்குகிறவனைத் தட்டி யெழுப்புதல்; to make a sleeping man rise by tapping him. 2. தூண்டியெழுச்சி பெறச் செய்தல்; to arouse, to awake; to shake. பாவேந்தரின் பாக்கள் மக்களைத் தட்டி யெழுப்பின. தலைவரின் திறன்மிக்க அறிவு சான்ற பேச்சு தொண்டர்களைத் தட்டியெழுப்புவதாக இருந்தது.

[தட்டு + எழுப்பு-.]

தட்டியோட்டு-தல் *taṭṭi-y-ōṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) மாட்டையடித்து வண்டியை விரைவாகச் செலுத்துதல்; to drive bullocks by beating.

[தட்டு → தட்டி + ஓட்டு-. விரைவுக்குறிப்பு. விரைவாகச் செலுத்துதல்]

தட்டிலம் *taṭṭilam,* பெ. (n.) 1. சதகுப்பை; dill-seed. 2. ஓமம்; sisonammi alias carum coticum.

தட்டிவிடு[1]-தல் *taṭṭi-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. மகிழ்ச்சியூட்டுதல்; to cheer up by patting; to encourage. 2. தட்டியோட்டு-தல் பார்க்க; see *taṭṭi-ōṭṭu-.* 3. விரைந்துசெய்தல்; to hurry up. இனி உன் வேலையைத் தட்டிவிடு (உ.வ.). 4. கவிழச்செய்தல்; to strike and spill. 5. குலையச்செய்தல்; to frustrate. செயல் நடவாதபடி தட்டி விட்டான். 6. மறுத்தல் (வின்.); to disregard. 7. உழவில் ஏர்களை முன்பின்னாக மாற்றுதல் (யாழ்ப்.): to change the position of different yokes of oxen, in ploughing. 8. வெட்டிவிடுதல்; to chop off. செல்வதற்குத் தடையாயிருப்பதால் மரக்கிளை களைத் தட்டிவிடுதல் நலம். 9. பின்வாங்கச்

செய்தல்; to dissuade. உதவிசெய்வதாகச் சொன்னவனைத் தட்டிவிட்டான் (உவ.).

[தட்டு → தட்டி + விடு-.]

தட்டிவிடு²-தல் *tatti-vidu-,* 20 செ.குவி. (v.t.) *1.* தப்புதல்; to elude, to escape. இந்தப் பொருள் தோன்றாமல் தட்டிவிட்டது (உவ.). *2.* உழுதசாலில் திரும்ப உழுதல் (யாழ்ப்.); to turn back the plough on the furrow and deepen it.

[தட்டு → தட்டி + விடு-.]

தட்டிவை-த்தல் *tatti-vai-,* 4 செ. குன்றாவி. (v.t.) குறிப்பாகச் சொல்லுதல் (யாழ்ப்.); to suggest, broach a subject. (செ.அக.)

[தட்டு → தட்டி + வை-.]

தட்டிழைப்புளி *tattilaippuli,* பெ. (n.) தட்டியிழைப்புளி பார்க்க; see *tatti-y-ilaippuli.* (செ.அக.)

[துட்டு → தட்டு → தட்டி + இழைப்பு + உளி (மு.தா. 120).]

தட்டு¹-தல் *tattu-,* 5 செ. குன்றாவி. (v.t.) *1.* கதவு முதலியவற்றைப் புடைத்தல்; to knock at, rap at; to tap, pat. புரையேறிவிட்டால் தலையில் தட்டுவார்கள் (உவ.). 'நன்றாக வரைந்திருக்கிறாய்' என்று கூறி மாணவனின் முதுகில் ஆசிரியர் தட்டினார் (உவ.). *2.* மோதுதல்; to strike against, dash against, run around, as a vessel. மரக்கலம் தரைதட்டிப் போயிற்று (உவ.). தேங்காயைத் தட்டிப்பார்த்து வாங்கு (இக்.வ.). கதவை இருமுறை தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான். (உவ.). *3.* கிட்டுதல் (சூடா.); to approach, come in contact with. *4.* கொட்டுதல்: to strike or beat, as drum, tambourine. "கிணை வள்ளியோன் முன்கடை தட்டி" (பு.வெ.9:58). காவலர் தட்டிய தட்டில் அவன் உண்மையைச் சொல்லிவிட்டான் (இவ.). *5.* உட்செல்லுமாறு அடித்தல்; to drive in by hammering. "தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா வுளி" (நாலடி. 355). *6.* அடித்து வீழ்த்துதல்; to beat down from trees, as fruits, leaves; to thresh out, as grain, pulse, ground-nuts. மரத்திலிருந்து புளிதட்ட ஆள் வேண்டும் (உவ.). *7.* தட்டித் தூசி போக்குதல்; to dust, as bed. படுக்கையைத் தட்டிப்போடு. *8.* நொறுக்குதல் (வின்.); to crush by beating, as palmyra fruit. *9.* உடைத்தல் (தைலவ. தைல.); to beat and break, as nut-shells. *10.* தட்டை யாக்குதல்: to hammer out, flatten, as malleable metal. ஆணியைத் தட்டி நேராக்கிக் கொடு (உவ.). *11.* பரம்படித்தவயலைச் சீராக்குதல் (நாஞ்.); to level up a harrowed field. *12.* அடித்துக் கூர்மையாக்குதல்; to sharpen by beating, as with hammer. கொழுத் தட்டுதல் (உவ.). *13.* களிமண்ணைக் கையால் தட்டி உருவாக்குதல்; to mould with the hands by tapping, as clay. *14.* சாணிமுட்டை முதலியன செய்தல்; to beat into flat cakes, as dough, cattle-dung, etc. *15.* நீரெற்றுதல் (யாழ்ப்.): to throw out water with the foot or hand or basket. *16.* கொட்டி விடுதல்; to empty, pour out, as a sack of grain. *17.* கவர்தல்; to steal, pilfer, swindle; get by stratagem. "தட்டிக்கொண்டு போனான்" (இராமநா. ஆரணி: 24). *18.* தள்ளுதல்; to overturn, trip up. தன் வலிமையால் எதிரியைத் தட்டிவிட்டான் (உவ.). *19.* இடித்து விடுதல்; to batter, demolish. சுவரைத் தட்டிவிடு. *20.* அகற்றுதல் (வின்.); to get - dismissed, as a servant. *21.* முறியடித்தல் (வின்.); to out-beat, to vanquish. *22.* தடுத்தல்; to obstruct, hinder, ward off. "தகையினாற் காறட்டி வீழ்க்கும்" (கலித். 97, 17). *23.* மறுத்தல்; to oppose, contradict, disobey, reject, refuse. "தட்டாது முன்னந்தருந் தெய்வம்" (குலோத். கோ. 37). *24.* புரட்டுதல் (வின்.); to equivocate, palliate. *25.* குலையச் செய்தல்; to frustrate,thwart. என் முயற்சியை யெல்லாந் தட்டிவிட்டான். *26.* பின் வாங்கச் செய்தல்; to dissuade. உதவிசெய்வதாகச் சொன்னவனைத் தட்டிவிட்டான் (உவ).

மறுவ. பட்டுதல்

[தள் → தட்டு-. தட்டுதல் = கையால் அல்லது கருவியால் கொட்டுதல்; அஃதாவது ஒன்றை இன்னொன்றில் வலிதாய் முட்டச் செய்தல், தடுத்தல், நீருள் மூழ்கியவனுக்குத் தரை தட்டுதலும் முற்செல்பவனுக்குச் சுவர் தட்டுவதும், தட்டுதற்கருத்தின் நீட்சிப் பொருள் என்றறிக.

தட்டுதற் பொருளின் பண்டை வினைச்சொல், பட்டுதல் ஆகும். இன்று வழக்கற்றது. பட்டுதற்கு அடையாக வைத்துக் கொள்ளும் கல் பட்டடை என்றும், பட்டும் (தட்டும்) அறை, பட்டறை என்றும், பட்டும் சாலை பட்டசாலை என்றும் வழங்குதல் காண்க. (மு.தா. 122).]

தட்டு[2]**-தல்** *taṭṭu-*, 5 செ.குவி. (v.i.) *1. தப்புதல்;* to elude, escape. இந்தப் பொருள் தோன்றாமல் தட்டிவிட்டது *(உ.வ.)*. *2.* பொருள்படாதிருத்தல்; to be unintelligible. இந்தத்தொடர் தட்டுகிறது *(உ.வ.)*. *3.* குறைவுபடுதல்; to be scanty; to be scarce, as rain, cash. இவ்வாண்டு விளைவு தட்டிவிட்டது. *(உ.வ.)*. *4.* மேலேபடுதல்; to fall upon, as the rays of the sun. வெயில் தட்டாதபடி (ஈடு). *5.* தோன்றுதல்; to appear, to exist; to arise, as a doubt. *6.* நினைவு எழுப்புதல்; to suggest a thought. மறந்திருக்கையில் தட்டிக் காட்டினான். *7.* தடைபடுதல்; to be at fault; to fail; halt, as the hand in playing on an instrument, writing, performing an operation, as the tongue in reading or speaking. *8.* தளைதட்டுதல்; to hobble; to be halting, as verse.

ம. தட்டுக; தெ., க., பட. தட்டு; கோத. தட்; துட. தொட்; து. தட்டு, தட்டாவுனி; மா. தட்சை; குரு. தட்னா.

[தள் (துட்டு) → தட்டு-.]

தட்டு[3] *taṭṭu*, பெ. (n.) *1.* தட்டுகை; knocking patting, breaking. *2.* அடி; stroke, beat, rap. "கடைக்கட் டட்டுக்கு உரித்தாகலின்" *(சிலப். 3: 27, உரை)*. *3.* மோதுகை; striking against, collision. *4.* தாளம்போடுகை (சூடா.); beating time. *5.* விலக்குகை (வின்.); warding off, averting, evasion. *6.* முட்டுப்பாடு; scarcity, straits, lack. நெல்லுக்குத் தட்டாக இருக்கிறது. *7.* தடை; opposition; impediment; frustration. 'விரோதிபோகைக்குத் தட்டில்லை' *(ஈடு. 1. 2: 3)*. *8.* குற்றம் (சூடா.); defect, blemish, fault. *9.* தீமை (சூடா.); evil. *10.* மறைவு; screen, folded or plain. *11.* வீட்டின்அறை (நாஞ்.); compartment, as of a house. *12.* காவல் (பிங்.); guard. *13.* வலக்காரம் (வின்.); dexterous performance or manoeuvre, stratagem, trick. *14.* ஊதியம்; profit. அவனுக்கு நல்ல தட்டு. *15.* பயிர்த்தட்டை (வின்.); stalk of grain. *16.* ஒத்த நிலம்; சமப்பரப்புப் பகுதி (வின்.); area, plain surface. *17.* சிறுசெய்; plot of a field, of a garden-bed. *18.* தகடு; anything flat. *19.* தட்டம்; salver of metal or wood, tray. *20.* நிறைகோல் தட்டு; scales of a balance. *21.* வட்டம் (பிங்.); circle. *22.* வளைவு (சூடா.); curve or bend. *23.* கேடகம் (பிங்.); shield, buckler. *24.* குயவன் திரிகை (பிங்.); potter's wheel. *25.* இயந்திரம் (வின்.); hand mill. *26.* முறம் (சூடா.); winnowing or sifting pan. *27.* ஒருவகைக் கூடை; broad, shallow basket. *28.* பரண்தட்டு; shelf. *29.* தேர் முதலியவற்றின் நடுவிடம்; loft or range of a temple car, floor of a carriage; flat surface of a palanquin. "தட்டுடைப் பொலிந்த திண்டேர்" *(சீவக. 767)*. *30.* கட்டடத்தின் மேனிலை; upper storey of a building. *31.* உயர்விடம்; platform, balcony, piazza. *32.* உட்காரும் தடுக்கு; mat to sit on. 'தட்டிடுக்கி யுறிதூக்கிய" *(தேவா. 439: 10)*. *33.* கப்பற்றட்டு; deck, as of a ship. *34.* அடுக்கு; lamina; layer; stratum. *35.* நெடுங்கை; common rafter. "சந்துபோழ்ந் தியற்றியதட்டு வேய்ந்து" *(சீவக. 155)*. *36.* பலகணி முதலியவற்றின் தட்டு; panel of a door, pane of glass. *37.* கழுத்தணித் தட்டு; square pieces of a necklace. *38.* பறவை பிடித்தற்குரிய வலையைச் சேர்ந்த சதுரத்தட்டு (வின்.); square frame to which snares are fastened to catch birds. *39.* மரச்சட்டத்திலுள்ள துளை; mortise in a wooden frame-work. *40.* தகரத்தில் துளையிட்டுச் செய்த கோலத் தட்டு; perforated tin stencil for drawing ornamental figures. *41.* பூவிதழ்; petal of flowers. "தட்டலர்த்த பொன்னே யலர் கோங்கின்" *(திவ். பெரிய. தி. 7: 3: 6)*. *42.* பக்கம்; side, direction. இரண்டு தட்டிலும் *(உ.வ.)*. *43.* உப்பளம்; salte-pans.

ம. தட்டுக; க., தெ. தட்டு

[துள் → தள் → தட்டு. ஒன்றைத் துளைத்தல்; துளைத்து வளைத்துத் தட்டுதல். ஒ.நோ. வள் → வட்டு. தட்டு =

தட்டையானது, வலைத்தட்டு, தேர்த்தட்டு, பூத்தட்டு, வெற்றிலைத்தட்டு முதலிய வற்றினை நோக்குக. பாத்தி= வரிசையான நிலப்பகுதியும் தட்டு எனப்படும் (மு. தா. 112).]

தட்டுக்கடுதாசி *tattu-k-kadudāśi,* பெ. (n.) தனித்தாள் (புதுவை); single sheet of paper.

[தட்டு + கடுதாசி]

தட்டுக்கல் *tattu-k-kal,* பெ. (n.) 1. குயவர் பாண்டந்தட்டுகையில், உட்பக்கம் துணையாகக் கொள்ளும் (ஆதாரமாகக் கொள்ளும்) செதுக்கிய, சிறு கருங்கல் (இ.வ.); a stone used by potter while beating clay into shape. 2. வெற்றிலைபாக்குத் தட்டுதற்குரிய, குழவியும் கல்லும் (இ.வ.); a small mortar and pestle for pounding together areca-nut, betel, etc.

[தட்டு + கல்.]

குயவர் கோயில்களுக்கு நன்கொடை வழங்குகையில் கல், தட்டுப்பலகை வடிவங்களை அடையாளமாகச் செதுக்கி வைப்பதைத் திருச்செங்கோடு, நிலத்தம்பிரான் கோயிலினுள் அமைந்துள்ள, முக்குறுனிப் பிள்ளையார் காலடியில், இன்றுங் காணலாம்.

தட்டுக்காயம் *tattu-k-kāyam,* பெ. (n.) முற்காலத்து வழங்கிய வரிவகை; an ancient tax. "கண்ணாலக் காணமும் ஊரெட்டும் குசக்காணமும் தட்டுக்காயம்" (S.I.I.II. 521).

[தட்டு + கு + ஆயம்]

தட்டுக்காரன் *tattu-k-kāran,* பெ. (n.) 1. ஏமாற்றுக்காரன்; cheat. 2. வலக்காரன், சூழ்ச்சிக்காரன்; cunning fellow. 3. முரடன்; rouge.

மறுவ. தட்டுமாரி

[தட்டு + காரன்; ஒ.நோ. வீட்டுக்காரன் மாட்டுக்காரன் "காரன்" உடைமைப் பெயரீறு. தட்டு மாறுந்தன்மைத்து. தட்டுமாறுவது போல் ஏமாற்றிச் சூழ்ச்சி செய்பவன் என்றறிக]

தட்டுக்காவனம் *tattu-k-kāvanam,* பெ. (n.) சமதளக் கூரையுடைய பந்தல்; equally erected pandals.

தட்டுக்கிளி *tattu-k-kili,* பெ. (n.) 1. நிலத்திற் சதுரக்கோடு கீறி ஆடும், "உப்புக்கொடு" என்னும் விளையாட்டு; the boy's game. 2. கிளித்தட்டில் ஒருபக்கத்துத் தலைவன்; leader of a party in the game of kili-t-tattu (செ.அக.).

[தட்டு + கிளி]



தட்டுக்கிளிபாய்தல் *tattu-k-kili-pāydal,* பெ. (n.) தட்டுக்கிளி, 1 (யாழ்.அக.) பார்க்க; see *tattukkili,1.*

[தட்டுக்கிளி + பாய்தல்]

தட்டுக்குச்சு *tattu-k-kuccu,* பெ. (n.) 1. காதிலணியும் திருகாணியென்னும் அணிகலன் (நெல்லை); a small ear-ornament. 2. காதணித்துளை தூர்ந்துபோகாமல் இருக்க, அத்துளையில் செருகப்படும் குச்சி அல்லது ஓலைச்சுருள்; a short piece of splinter or palm leave roll to keep the hole in the ear for ornaments, alive.

மறுவ. தட்டுககுச்சு

[தட்டு + குச்சி → குச்சு.]

தட்டுக்குதிரை *tattu-k-kudirai,* பெ. (n.) குதிரை வகை (இ.வ.); pony.

[தட்டு + குதிரை]

தட்டுக்குழம்பு-தல் *tattu-k-kulambu-,* 5 செ.குவி. (v.i.) தட்டுக்கெடு-தல் (நாஞ்.) பார்க்க; see *tattu-k-kedu-.*

[தட்டு + குழம்பு-.]

தட்டுக்கூடை[1] *tattu-k-kūdai,* பெ. (n.) அகன்ற கூடை வகை; broad, shallow basket (செ.அக.).

[தட்டு + கூடை. வாயகன்ற, தட்டையான கூடை]



தட்டுக்கூடை[2] *tattu-k-kūdai,* பெ. (n.) 1. தட்டுவாணி, 3 (இ.வ.) பார்க்க; see *tattu-vāṇi,3.* 2. மீனவர்கூடை (தஞ்சை. மீன.); fisherman's basket.

[தட்டு + கூடை.]

தட்டுக்கெடு-தல் *tattu-k-kedu-,* 20 செ.குவி. (v.i.) 1. மனங்கலங்குதல்; to be greatly alarmed, perplexed, distracted, bewildered. 2. வறுமையால் நிலைகெடுதல்; to be in great straits; to be shattered, broken down by poverty. 3. தடுமாறிப் போதல்; to be misled, mistaken. 4. இழப்படைதல் (வின்.); to suffer loss. 5. தாறுமாறாதல்; to be disjointed. 6. தட்டுண்டுபோ-. 3 பார்க்க; see tattuṇḍu-pō- 3. 'தட்டுக்கெட்டு முறுக்குப் பாய்ஞ்சு (பாய்ந்து) கிடக்கிறது' (பழ.).

[தட்டு + கெடு-.]

தட்டுக்கேடு *tattu-k-kēdu,* பெ.(n.) 1. குழப்பம்; perplexity, bewilderment. 2. வறுமை; want, destitution. 3. இழப்பு; loss. 4.அழிவு; defeat, discomfiture, ruin. அன்று வளமாக வாழ்ந்தவன் இன்று தட்டுக்கெட்டுப் போய்விட்டான் (உ.வ.).

மறுவ. தட்டுக்கேடு

[தட்டு + கேடு. கெடு → கேடு.]

தட்டுக்கொட்டு *tattu-k-kottu,* பெ. (n.) 1. கொட்டு முழக்கு (இ.வ.); playing of drums and pipes. 2. போலிநடிப்பு (யாழ்ப்.); empty show. 3. மினுக்குப்பொருள் (வின்.); bauble, gewgaw. 4. சூழ்ச்சி (யாழ்.அக.); trick, stratagem.

[தட்டு + கொட்டு]

தட்டுக்கொடி *tattu-k-kōdi,* பெ. (n.) எட்டு மூலையுள்ள பட்டம் (யாழ்ப்.); octagonal paper-kite.

[தட்டு + கொடி]

தட்டுக்கோல் *tattu-k-kōl,* பெ. (n.) குயவரின் திரிகை சுற்றும் கோல் (இ.வ.); turning stick of the potter's wheel.

[தட்டு + கோல்]

தட்டுச்சரி *tattu-c-cari,* பெ. (n.) மகளிர் முன் கையில் அணியும் அணிவகை; a kind of ornament worn by women on the forearm. "தட்டுச் சரியைச் சரியாகக் கைக்கணிந்து" (கூளப்ப. 136).

[தட்டு + சரி]

தட்டுச்சீட்டு *tattu-c-cīttu,* பெ.(n.) குலுக்கி எடுக்கும் சீட்டு; a kind of chit transaction, where prize is determined by drawing of lots (செ.அக.).

மறுவ. கொட்டுச் சீட்டு

[தட்டு + சீட்டு]

தட்டுச்சுளகு *tattu-c-culagu,* பெ. (n.) அகன்ற முறவகை; broad winnowing-fan (செ.அக.)

[தட்டு + சுளகு. அல் → கல் → சுள் + கு = சுளகு, தட்டு = அளவு]



தட்டுச்சுற்று *tattu-c-curru,* பெ.(n.) 1. எரியணைத் தட்டுச் (சூடன்.) சுற்றுகை; waving a salver with lighted camphor before an idol. 2. தட்டுடை பார்க்க; see *tattudai.*

க. தட்டிச்சுட்டு

[தட்டு + சுற்று]

தட்டுடை *taṭṭuḍai,* பெ. (n.) வேட்டி; cloth worn round the loins, without passing it between the legs; "வேறு மடியொன்றைத் தட்டுடையாக உடுத்திக்கொண்டு" (மீனாட். சரித். ii, 152).

மறுவ. தட்டாடை, அடையவளைந்தானுடை

[தட்டு + உடை]

தட்டுண்டுபோ-தல் *taṭṭuṇḍu-pō-,* 8 செ.குவி. (v.i.) 1. சிதறுண்ணுதல் (வின்.); to be beaten off, scattered. 2. கதிரடிபடுதல் (வின்.); to be threshed out, as rape seed. 3. தடைப்படுதல்; to be thwarted; to fail, as an expected good. காரியம் தட்டுண்டு போயிற்று (உ.வ.). 4. கலங்குதல்; to be upset. அவன் தட்டுண்டு போனான் (இ.வ.). 5. சரக்கு மோசடியாய் மாற்றப்படுதல் (வின்.); to be exchanged clandestinely and fraudulently, as commodities.

[தட்டுண்டு + போ-.]

தட்டுண்ணல் *taṭṭuṇṇal,* பெ. (n.) குறைந்து போதல்; becoming decreased.

[தட்டு + உண்ணல்]

தட்டுத்தடக்கு taṭṭu-t-taḍakku, பெ.(n.) தட்டுத் தடை (வின்.) பார்க்க; see *taṭṭu-t-taḍai.*

[தட்டு + தடக்கு]

தட்டுத்தடங்கல் *taṭṭu-t-taḍaṅgal,* பெ. (n.) தட்டுத்தடை (இ. வ.) பார்க்க; see *taṭṭu-t-taḍai.*

மறுவ. தட்டுத்தடை

[தடு → தடக்கு → தடங்கு → தடங்கல். தட்டுத்தடங்கல் என்பது மரபுத்தொடர் (மு.தா. 101.).]

தட்டுத்தடவல் *taṭṭu-t-taḍval,* பெ. (n.) 1. தட்டுத் தடை பார்க்க; see *taṭṭu-t-taḍai.* 2. குறைவு; insufficiency, scantiness.

மறுவ. தட்டுத்தடக்கு, மிகக்குறைவு

[தட்டு + தடவல்]

தட்டுத்தடுமாறு-தல் *taṭṭu-t-taḍumāṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. இயல்பாகச் செய்ய முடியாமல் திணறுதல்; to struggle; fumble. இருட்டில் தட்டுத் தடுமாறிப் படியேறினான் (உ.வ.). 2. தடுமாறுதல்; to stumble and grope about totter.

[தட்டு + தடுமாறு-.]

தட்டுத்தடை *taṭṭu-t-taḍai,* பெ. (n.) 1. தடை; hindrance, impediment. 2. தடுமாற்றம்; hestitation.

மறுவ. தட்டுத்தடவம், தட்டுத்தடங்கல், தட்டுத்தடக்கு.

[தட்டு + தடை]

தட்டுத்தாவரம் *taṭṭu-t-tāvaram,* பெ. (n.) புகலிடம் (யாழ்ப்.); resort, refuge.

[தட்டு + Skt. தாவரம்]

தட்டுப்படி *taṭṭu-p-paḍi,* பெ.(n.) மரக்கட்டில் (நாஞ்.); wooden-cot.

ம. தட்டுபடி

[தட்டு + படி]

தட்டுப்படு-தல் *taṭṭu-p-paḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. தடைப்படுதல்; to be stopped, checked, obstructed. "அதிலே வந்தவாறே தட்டுப்படும்" (ஈடு. 4. 9: 6). 2. குறைவுபடுதல்; to be lacking, wanting, as stores, money, rain. எனக்குப் பணம் தட்டுப்படுகிறது (உ.வ.). 3. புலன்களுக்கு செய்தியாதல்; to be perceived by the senses or the intellect (செ.அக.).

[தட்டு + படு-.]

தட்டுப்பலகை *taṭṭu-p-palagai,* பெ. (n.) 1. இளகியத் தரையைக் கெட்டிக்குங்கட்டை (முக. வழக்.); rammer plank. 2. கூரைவீடுகளில் கூரை வேயும்போது, தட்டையைத் தட்டிச் சரி செய்யப் பயன்படும் மரப்பலகை (முக. வழக்.); a wooden plank used for levelling hay.

ம. தட்டுபலக



[தட்டு + பலகை. தட்டு = ஒன்றோடு ஒன்று முட்டி, அடித்துச்சேர்த்தல்:

முட்டுதற்கருத்தினின்று முகிழ்த்த வேரடியாகும். முட்டும்பொருள் ஒன்று சேருந்தன்மைத்து. நிலத்தையோ, கூரையையோ சமப்படுத்தும் முட்டுப் பலகை, தட்டுப்பலகை ஆயிற்று.]

தட்டுப்பலா *taṭṭu-p-palā*, பெ. (n.) தந்தப்பலா (பலாவின் ஒருவகை); a kind of jack-fruit.

[தட்டு + பலா]

தட்டுப்பற-த்தல் *taṭṭu-p-paṟa-*, 3 செ.குவி. (v.i.) திடீரென மறைந்தொழிதல் (இ.வ.); to disappear suddenly, vanish, as taking wings all of a sudden.

[தட்டு + பற-.]

தட்டுப்பனாட்டு *taṭṭu-p-paṉāṭṭu*, பெ. (n.) *1.* உலரவைத்த பனம்பழச்சாறு; dried cakes of the fruit of palmyra. *2.* பனைவெல்லக் கட்டி (யாழ்ப்.); dried cakes of palmyra sugar.

[தட்டு + பனாட்டு]

பனாட்டு யாழ்ப்பாணத்தின் சிறப்புணவு வகையாகும். தற்போது, தருமபுரி மாவட்டத்தில், மாம்பழச்சாற்றைப் பிழிந்து, உலரவைத்து அவற்றின் மூலமாக இன்சுவைப் பண்டஞ் செய்து, பெருவிலைக்கு விற்கின்றனர்.

தட்டுப்பா *taṭṭu-p-pā*, பெ. (n.) தேரின் மேலிடும் பரப்பு (திவா.); a kind of seat in a chariot.

[தட்டு + பாய் = தட்டுப்பாய் → தட்டுப்பா.]

தட்டுப்பாடல் *taṭṭu-p-pāḍal*, பெ. (n.) *1.* தட்டி மினுக்கின புடைவை (யாழ். அக.); saree brushed and polished. *2.* தட்டுப்பாடன் பார்க்க; see *taṭṭu-p-pāḍaṉ* (செ.அக.).

[தட்டு + பாடல்]

தட்டுப்பாடன் *taṭṭu-p-pāḍaṉ*, பெ. (n.) பளபளக்கும் முகப்புள்ள புடைவை; the glittering border saree.

[தட்டுப்பாடன் = பொன், வெள்ளி இழைகள், மின்னும்வண்ணம், இருமருங்கும் கலையழகுடன் முகப்பமைந்த, புடைவை]

தட்டுப்பாடு *taṭṭu-p-pāḍu*, பெ. (n.) குறைவு; shortage.

[தட்டு + பாடு. பாடு = சொல்லாக்க ஈறு]

தட்டுப்பாய்தல் *taṭṭu-p-pāydal*, பெ. (n.) கிளித்தட்டு (இ.வ.) விளையாட்டு; a boy's game.

[தட்டு + பாய்தல்]

தட்டுப்பிழா *taṭṭu-p-piḻā*, பெ. (n.) வட்டமாய் முடைந்த பெட்டிவகை; a round wicker basket or tray. "தட்டுப் பிழாவிலே உலர வாற்றி" (பெரும்பாண். 276, உரை.).

[தட்டு + பிழா.]

தட்டுப்புடை *taṭṭu-p-puḍai*, பெ. (n.) தவசத்தை முறம் முதலியவற்றாற், புடைக்கை (தொல். சொல். 77, இளம்பூ., பி.வி. 16, உரை); winnowing and sifting grain with fan.

[தட்டிப்புடை → தட்டுப்புடை]

தட்டுப்புழுகு *taṭṭu-p-puḻugu*, பெ.(n.) புனுகுப் பூனையின் உடலினின்று கொய்த பாகத்திலிருந்து நறுக்கியெடுக்கும் புழுகு (வின்.); civet extracted from the dried and beaten flesh of the civet cat. *2.* புனுகுச் சட்டம்; secretion from the gland in the anal pouch of the civet cat. "தட்டுப்புழுகுஞ் சாத்தி" (S.I.I, viii, 186).

ம. தட்டுப்புழுகு

[தட்டு + புழுகு]

தட்டுப்பொருத்துதல் *taṭṭu-p-pōruttudal*, பெ. (n.) பலகை, சட்டம் ஆகியவற்றை இணைப்புத் தெரியாமல் சேர்த்து ஒட்டுதல் (இ.வ); connecting frame, as of plank door etc.

[தட்டு + பொருத்துதல்]

தட்டுப்போடு-தல் *taṭṭu-p-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) சேலையின் முன்றானையை இருவர் பற்றி, மீன்பிடித்தல் (இ.வ.); to catch fish by means of a cloth held by two persons at the ends.

[தட்டு + போடு-.]

தட்டுபடி taṭṭu-paḍi, பெ. (n.) தட்டுப்படி (நாஞ்.) பார்க்க; see taṭṭu-p-paḍi.

[தட்டு + படி]

தட்டுமடி[1] taṭṭu-maḍi, பெ.(n.) ஆழமான கடலில் இடும் வலைவகை (வின்.); fishing net used in deep sea, dist. fr. karai-maḍi.

[தட்டு + மடி]

தட்டுமடி[2] taṭṭumaḍi, பெ. (n.) 1. தட்டுமடிவலை பார்க்க; see taṭṭumaḍi-valai. 2. மீன்பிடிவலைப் பை; a shore net-bag.

ம. தட்டுமடி

[தட்டு + மடி. மடி = வலைப்பட்ட மீன் இறங்கும், வலைக்கூறு]

தட்டுமடிவலை taṭṭu-maḍi-valai, பெ. (n.) மிகச் சிறுமீன்கள் மட்டுமே வலைப்படும், சிறு கண்களுடைய மீன்பிடிவலை (குமரி. மீன.); a short net-bag with small holes.

மறுவ. சிறுகண் வலை

[தட்டு + மடி + வலை. மடி = வலைப்பட்ட மீன் சென்றடையுங் கடைக்கூறு]

தட்டுமணி taṭṭu-maṇi, பெ. (n.) பொற் றட்டுகளாலாகிய கழுத்தணி (யாழ். அக.); small necklace of square pieces of gold.

[தட்டு + மணி]

தட்டுமறி-த்தல் taṭṭu-maṟi-, 4 செ.கு.வி. (v.i.) கிளித்தட்டு விளையாடுதல் (இ.வ.); to play the game of kiḷi-t-taṭṭu.

[தட்டு + மறி-.]

தட்டுமாது taṭṭu-mādu, பெ. (n.) பால்வினைநோய் தீர்க்கும் மருந்து; a curative medicine for venereal disease (சா.அக.)

[தட்டு + மாது]

தட்டுமாற்று taṭṭu-māṟṟu, பெ. (n.) சூழ்ச்சி (வின்.); stratagem.

[தட்டு + மாற்று]

தட்டுமாற்று-தல் taṭṭu-maṟṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) பட்டிழை அணியம்செய்யும்போது, அல்லது பட்டுப்பூச்சி வளர்ப்பின்போது, தட்டைத் தூய்மை செய்து மாற்றுதல்; to clean the plate in sericulture (செங். க.).

[தட்டு + மாற்று-.]

தட்டுமாறி[1] taṭṭu-māṟi, பெ. (n.) ஏமாற்றுபவ-ன்-ள் (வின்.); cheat.

[தட்டு + மாறி]

தட்டுமாறி[2] taṭṭu-māṟi, பெ. (n.) நிலை குலைந்த பெண்; unchaste woman (சா.அக.).

மறுவ. கட்டுக்குலைந்தவள், ஆள்மாறி

[தட்டு + மாறி. கற்பு நெறியினின்று வழுவியவள்]

தட்டுமாறு-தல் taṭṭu-māṟu-, 5 செ.கு.வி. (v.i.) 1. நிலைகெடுதல்; to be upset, overturned. "வானாடழிந்து தட்டுமாறிடினும்" (கொண்டல் விடு. 278). 2. கெட்டுப்போதல்; to become corrupt morally.

[தட்டு + மாறு-.]

தட்டுமானம் taṭṭu-māṉam, பெ. (n.) 1. ஏமாற்று (நாஞ்.); cheating. 2. சூழ்ச்சி (இ.வ.): cunning ways.

[தட்டு + மானம். 'மானம்'- சொல்லாக்க ஈறு. (ஓ.நோ.) கட்டுமானம், வருமானம்]

தட்டுமிளகுதண்ணீர் taṭṭumiḷagu-taṇṇir, பெ. (n.) காரமுள்ள கொதி வகை; a hot juice of pepper, etc.

[தட்டுமிளகு + தண்ணீர்]

தட்டுமுட்டு taṭṭu-muṭṭu, பெ. (n.) 1. அறைகலன்; furniture, goods and chattels, articles of various

kinds. "தட்டுமுட்டு விற்று மாற்றாது" (பணவிடு. 225). 2. கருவிகள்; apparatus, tools, instruments, utensils. 3. மூட்டைமுடிச்சு (வின்.); luggage, baggage.

ம. தட்டுமுட்டு; தெ. தட்டுமுட்டு; து. முட்டு, தட்டுமுட்டு, தட்டிமுட்டு.

[தட்டு + முட்டு]

தட்டுமுறிதல் *tattu-muridal,* பெ. (n.) *தரைக்குக் கீழ், பாறையமைப்பில் தோன்றும் மாற்றம்;* the underground change of rock position.

[தட்டு + முறிதல்]

தட்டுமேடு *tattu-mēdu,* பெ. (n.) உப்பு கொட்டிவைக்கப் பயன்படும் மேட்டு நிலம்; raised platform to keep salt.

மறுவ. உப்பு மேடு

[தட்டு + மேடு]

தட்டுருவு-தல் *tatturuvu-,* 5 செ.குன்றாவி. (v.i.) ஊடுசெல்லுதல் (யாழ். அக.); to pass through, penetrate.

[தட்டு + உருவு-.]

தட்டுரொட்டி *tattu-rotti,* பெ. (n.) கையால் தட்டிய சூட்டடை (ரொட்டி); hand made bread (சா.அக.).

மறுவ. ஈரட்டி

[தட்டு + ரொட்டி. இரட்டி → ரொட்டி. தட்டுரொட்டி. - மாவினைத் தட்டி, இரு மருங்கிலும் அட்டிச் சுடப்படும், சூட்டடை]

தட்டுவம் *tattuvam,* பெ. (n.) பனையோலை யாற் செய்த உண்கலம் (யாழ்ப்.); palmyra leaves plaited like a plate for holding food.

[தட்டு → தட்டுவம். "அம்" சொல்லாக்க ஈறு. ஒ.நோ: சட்டுவம்]

தட்டுவாணி[1] *tattu-vāni,* பெ.(n.) 1. மட்டக் குதிரை; Indian-bred pony. 2. மராட்டிய நாட்டுக் குதிரை (அகவசா. 3); horse of the Marātti country. 3. விலைமகள் (இ.வ.); prostitute. 4. கணவனுக்கடங்காத மனைவி; jade (செ.அக.).

[தட்டு + வாணி. படைவீரனுக்கடங்காத குதிரைக்குத் 'தட்டுவாணி' என்றும், 'சண்டி' என்றும் பெயர். அப் பெயர், கணவனுக்கு அடங்காத மனைவியையுங் குறிக்கும். jade என்ற ஆங்கிலச்சொல் அடங்காக் குதிரையையும் அடங்கா மனைவியையும் குறித்தது ஒப்பு நோக்கத்தக்கது. (சொ. ஆ.க. பக். 100)]

தட்டுவாணி[2] *tattu-vāni,* பெ. (n.) கலைமகள்; goddess of knowledge.

[தட்டு + வாணி. தட்டு = இதழ், தாமரை. வாணி = வாழ்பவள்; தாமரையில் வாழும் கலைமகள்]

தட்டுவாய்விரிதல் *tattuvāy-viridal,* பெ. (n.) பொன்னாக்க (வாத) முறைப்படி செய்யாத குற்றத்தால், சுத்திகொண்டு பொன்னைத் தட்டும்போது, நசிந்து ஒடியாது, வாய் பிளத்தல்; a defect in the composition of gold arising from want of malleability by which a metal is rendered in capable of being shaped or beaten flat with a hammer (சா.அக.).

[தட்டுவாய் + விரிதல்]

தட்டுவிக்கினம் *tattu-vikkinam,* பெ. (n.) தட்டம், மேனிலை; strater, higher.

[தட்டு + Skt. விக்கினம்]

தட்டுவேலி *tattu-vēli,* பெ.(n.) மறைப்புவேலி; fence.

[தட்டு + வேலி. தட்டு - தடுத்து மறைக்கை, தடுப்பு]

தட்டுளுப்பு *taṭṭuḷuppu,* பெ. (n.) தடுமாற்றம்; disturbed condition, as of mind. bewilderment. "தத்த மதங்களிற் றட்டுளுப்புப் பட்டுநிற்க" (திருவாச. 15: 6).

[தட்டு + உளுப்பு. உளுப்பு = நிலை தடுமாறுகை]

தட்டெடு-த்தல் *taṭṭeḍu-,* 4 செ.கு.வி. (v.i.) தோட்டம் முதலியவற்றில் வரப்பெடுத்தல் (நாஞ்.); to put up ridges with a view to divide into beds, as a garden.

[தட்டு + எடு-.]

தட்டெழுத்தர் *taṭṭeḻuttar,* பெ. (n.) தட்டச்சர்; typist.

[தட்டு + எழுத்தர்]

தட்டெழுத்து *taṭṭeḻuttu,* பெ. (n.) தட்டச்சு பார்க்க; see *taṭṭaccu.*

[தட்டு + எழுத்து]

தட்டெழுத்துஇயந்திரம் *taṭṭeḻuttu-iyandiram,* பெ. (n.) தட்டச்சுப்பொறி; type-writer (கிரி. அக.).

[தட்டெழுத்து + இயந்திரம்]

தட்டை[1] *taṭṭai,* பெ. (n.) 1. பரந்தவடிவம்; flatness. 2. முறம் (பிங்.): winnowing-fan. 3. திருகாணி என்னும் அணிகலன்; small ear - ornament like a tack, worn in the upper helix. "மறுவில் செம்பொன் மணிசெழு தட்டைகள்" (கந்தபு.தானப். 17). 4. தினை முதலியவற்றின் தாள் (பிங்.); stalk, stubble. 5. மூங்கில்; spiny bamboo. "தட்டைத் தீயின்" (ஐங்குறு 340). 6. கிளிகடிகருவி; a mechanism made of split bamboo for scaring away parrots from grain field. "புனவர் தட்டைப்புடைப்பின்" (புறநா. 49: 4). 7. கவண் (திவா.); sling. 8. கரடிகைப் பறை; a kind of drum. "நடுவு நின்றிசைக்கு மரிக்குரற் றட்டை" (மலைபடு. 9). 9. மொட்டை (சூடா.); baldness. 10. அறிவிலி; fool, empty-headed person. "கைவிரிந்து தாழ்விடத்து நேர்கருதுந் தட்டையும்" (திரிகடு. 15). 11. தீ (அக. நி.); fire. 12. கொட்டைக்கரந்தை; madras absinth.

ம. தட்ட; க. தட்டெ; தெ. தட்ட; குட. தட்டெ

[தள் → தட்டு → தட்டை. தட்டை = சோளம், கரும்பு முதலிய பயிர்களின் அடி.]

தட்டை[2] *taṭṭai,* பெ. (n.) ஒருகாலணி; a tinkling anklet. "தட்டை ஞெகிழங்கழல்" (கந்தபு. திருவிளை. 2).

ம. தட்ட

[தண்டை → தட்டை - சல்சல்லென ஒலிக்குஞ் சிலம்பம்]

தட்டைக்கருங்கொள்ளு *taṭṭai-k-karuṅ-koḷḷu,* பெ. (n.) அவுரிச்செடிவகை; a kind of indigo, Indigofera hirsuta.

[தட்டை + கருமை + கொள்ளு; கருமை நிறங்கொண்ட, தட்டையான பயறு]

தட்டைக்கச்சா *taṭṭai-k-kaccā,* பெ. (n.) தட்டையான ஆற்று மீன் (தஞ்சை. மீன); river-fish.

மறுவ. அயிரைமீன்

[தட்டை + கச்சா]

தட்டைக்கரும்பு *taṭṭai-k-karumbu,* பெ. (n.) சுவையற்ற கரும்பின் மேற்பகுதி; tasteless upper part of sugarcane (சா.அக.).

மறுவ. கொழுந்தாடை

[தட்டை + கரும்பு]

தட்டைக்கல் *taṭṭai-k-kal,* பெ. (n.) தரையிலும், சுவரிலும், பாவுதற்குப் பயன்படும் பாவுகல்; the polished and designed marble tiles.

[தட்டை + கல்]

தட்டைக்கவலை *taṭṭai-k-kavalai,* பெ. (n.) தட்டைவடிவமான கவலைமீன்; Malabar sea fish.

[தட்டை + கவலை]

தட்டைக்கவலைவலை *taṭṭai-k-kavalai-valai,* பெ. (n.) மீன்பிடி வலை; Malabar fish-net.

[தட்டை + கவலை + வலை]

தட்டைக்காரை *taṭṭai-k-kārai,* பெ. (n.) தட்டைக் காறை பார்க்க; see *taṭṭai-k-kāṟai.*

மறுவ. காரல் மீன்

[தட்டை + காரை]

தட்டைக்காறை *taṭṭai-k-kāṟai,* பெ. (n.) மீன் வகை (சங். அக.); a kind of fish.

[தட்டை + காறை]

தட்டைக்கிருமி *taṭṭai-k-kirumi,* பெ. (n.) குடலிலுள்ள ஒருவகைக் கிருமி; a kind of flat worm found in the intestines - Platy helminthes.

[தட்டை + கிருமி]

தட்டைக்கிருமிநோய் *taṭṭai-k-kirumi-nōy,* பெ. (n.) உடம்பில் தட்டைநோய் உயிரி மிகுவதால், அடிவயிற்றில் ஏற்படும், நோய்; disease arising from the presence of abnormal number of flat worms in the abdomen (சா.அக.).

[தட்டை + கிருமி + நோய்]

தட்டைக்கோரைக்கிழங்கு *taṭṭai-k-kōrai-k-kiḻaṅgu,* பெ. (n.) கோரைப்புல்லின் கிழங்கு; the bulbous root of cyprus grass (சா.அக.).

[தட்டைக்கோரை + கிழங்கு]

தட்டைச்சம்பங்கி *taṭṭai-c-cambaṅgi,* பெ. (n.) சம்பங்கி வகை; tuberose, garden bulp, Polianthes tuberosa (செ.அக.).

[தட்டை + சம்பங்கி]

தட்டைச்சிட்டு *taṭṭai-c-ciṭṭu,* பெ. (n.) சிட்டுக் குருவிவகை; a kind of house sparrow, passer indicus.

[தட்டை + சிட்டு]

தட்டைத்தலை *taṭṭai-t-talai,* பெ. (n.) தட்டையான பெரியதலை (வின்.); large, flat head.

[தட்டை + தலை]

தட்டைத்திருப்பு *taṭṭai-t-tiruppu,* பெ. (n.) அணிகலன் வகை (யாழ். அக.); a kind of ornament.

[தட்டை + திருப்பு]

தட்டைநாக்குப்பூச்சி *taṭṭai-nākku-p-pūcci,* பெ. (n.) நாடாப்புழு உயிரிவகை (m.m. 960); a kind of tape-worm, Taenia solium. (செ.அக.)

[தட்டை + நாக்குப் பூச்சி]

தட்டைப்படகு *taṭṭai-p-paḍagu,* பெ. (n.) மரக்கல வகை; a kind of boat.

[தட்டை + படகு]

தட்டைப்பயறு *taṭṭai-p-payaṟu,* பெ. (n.) பெரும்பயறு, பயறுவகை (பதார்த்த, 841); chowlee bean.

மறுவ. காராமணி

ம. தட்டப்பயறு

[தட்டை + பயறு]

தட்டைப்பாம்பு *taṭṭai-p-pāmbu,* பெ. (n.) தட்டையாயிருக்கும் கடற்பாம்பு வகை; a kind of flat sea-snake - Hydrophis.

[தட்டை + பாம்பு]



தட்டைப்பீருகம் *taṭṭai-p-pīrugam,* பெ. (n.) கம்பரிசி; rice of kambu.

[தட்டை + பீருகம்]

தட்டைப்பீலி *taṭṭai-p-pīli,* பெ. (n.) சுண்டு விரலுக்கடுத்த விரலில் அணியும் தட்டை முகமுள்ள அணி (இ.வ.); flat - faced, ring-worm on the fourth toe.

[தட்டை + பீலி]

தட்டைப்புடையுநர் *taṭṭai-p-puḍaiyunar,* பெ. (n.) பறவையோட்டுங் கருவியையுடைய மகளிர்; the women who has chasing bat.

[தட்டை + புடையுநர்]

தட்டைப்புழு *taṭṭai-p-puḻu,* பெ. (n.) உண்ணும் இறைச்சி மூலம், மனிதஉடலினுள் சென்று வாழும் ஒரு வகைப்புழு;; tape-worm (கிரி. அக.).

[தட்டை + புழு]

தட்டைப்புன்கு *taṭṭai-p-puṉgu,* பெ. (n.) புன்னைமர வகை; Indian beech, l.tr., Pongamia glabra.

மறுவ. பால்புன்கு

[தட்டை + புன்கு]

தட்டைப்பூச்சி *taṭṭai-p-pūcci,* பெ. (n.) தட்டை நாக்குப்பூச்சி பார்க்க; see *taṭṭai-nākku-p-pūcci.*

[தட்டை + பூச்சி]

தட்டைப்பைவலை *taṭṭai-p-pai-valai,* பெ.(n.) வலை வகை; flat trawl.

தட்டைமூங்கில் *taṭṭai-mūṅgil,* பெ.(n.) மூங்கில் வகை; spiny bamboo (சா.அக.).

[தட்டை + மூங்கில்]

தட்டையம்மை *taṭṭai-y-ammai,* பெ. (n.) தட்டம்மை (வின்.) பார்க்க; see *taṭṭammai.*

[தட்டை + அம்மை]

தட்டையரம் *taṭṭai-y-aram,* பெ. (n.) மாழைகளையும் வன்பொருள்களையும் அராவும் இரும்புக்கருவி; flat rasp.

[தட்டை + அரம்]

மறுவ. முரட்டு அரம்

நுணுகிய அருங்கலைப்பணியினைச் செய்வதற்கும், விலைமதிப்புள்ள பொருட்களை அராவுதற்கும், பயன்படும் தட்டையான அரம்.

தட்டையாதீதம் *taṭṭaiyādīdam,* பெ. (n.) சோளம்; great millet.

தட்டையாமணக்கு *taṭṭai-y-āmaṇakku,* பெ. (n.) குச்சியாமணக்கு; a kind of castor plant (சா.அக.).

[தட்டை + ஆமணக்கு]

தட்டையிழைப்புளி *taṭṭai-y-iḻaippuḷi,* பெ. (n.) மரம் இழைக்கும் இழைப்புளி வகை (கட்டட நாமா: 39); priming plane.

[தட்டு (தட்டை) + இழைப்பு + உளி. அடிப்பாகம் தட்டையாய் அமைந்ததும், நிலைக்கதவம், சாளரம், கட்டில் போன்ற மரவுருப்படிகளை இழைப்பதற்குப் பயன்படுவதுமான, இழைப்புளி வகை.]

தட்டையெலும்பு *taṭṭai-y-elumbu,* பெ. (n.) தகட்டெலும்பு; flat bone (சா.அக.).

[தட்டை + எலும்பு]

தட்டைவளைவு *taṭṭai-vaḷaivu,* பெ. (n.) தட்டையான வளைவு வகை; a kind of flat curve.

[தட்டை + வளைவு]

தட்டொட்டி *taṭṭoṭṭi,* பெ. (n.) தட்டட்டி (இ.வ.); terraced-roof.

[தட்டொட்டு → தட்டொட்டி = தட்டையான ஓடு மேய்ந்த, மேற்கூரை]

தட்டொட்டு *taṭṭoṭṭu,* பெ. (n.) சுட்ட ஓடு (பொ. வழ.); burnt-tile.

மறுவ. சீமையோடு, தட்டோடு

[தட்டையாக அட்டிச் செய்யப்பட்ட ஓடு]

தட்டொலி[1] *taṭṭoli,* பெ. (n.) வரி வகை (S.I.I. ii, 114); an ancient tax.

[தட்டு: + ஒலி = இன்னியம் பாடுவோர் செலுத்திய வரி]

தட்டொலி[2] *taṭṭoli,* பெ. (n.) பட்டறை அமைத்துத் தொழில் செய்யும் கம்மாளர், கொல்லர் போன்றோர் இறுக்கும் வரி (கல்); professional tax on black smiths.

தட்டொளி *taṭṭoḷi,* பெ. (n.) மாழையால் (உலோகத்தால்) ஆன கண்ணாடி வகை; metal mirror. "உக்கமுந் தட்டொளியுந் தந்து" *(திவ். திருப்பா. 20).*

[தட்டு + ஒளி. தட்டைவடிவாயுள்ள கண்ணாடியினின்று பெறப்படும் ஒளி: ஒளிபோல் மிளிரும் மாழையாலாகிய கண்ணாடி]

தட்டோட்டுவீடு *taṭṭōṭṭu-vīḍu,* பெ. (n.) 1. நாட்டுஓடுகளாலான கூரையுடைய வீடு (செங்கை.); burnt-tile terraced house. 2. தட்டோடு பார்க்க; see *taṭṭōḍu.*

[தட்டோட்டு + வீடு]



தட்டோடு *taṭṭōḍu,* பெ. (n.) 1. தட்டை ஓடு (சிலப். 5. 7: அரும்.); pantile. 2. கூரையை மூடுமாறு இடும், வளைவுள்ள ஓடு; common country tile.

மறுவ. சீமையோடு

[தட்டு → தட்டை (தட்டையாகச் செய்த) + ஓடு]

தட்டோட்டுக்கட்டுக்கோப்புவீடு *taṭṭōṭṭu-k-kaṭṭu-k-kōppu-vīḍu,* பெ. (n.) நாட்டு ஓடுகளால் வேயப்பட்ட கூரையும், அனைத்து அமைப்புகளும் அமைந்த பெரியவீடு (செங்கை.); a big house with all facilities and roofed with country tiles.

[தட்டோடு + கட்டுக்கோப்பு + வீடு]

தட்பம் *taṭpam,* பெ. (n.) 1. குளிர்ச்சி; cold, coolness. 2. விசிறுதல் முதலிய உடற் களைப்பைப் போக்கும் அருட்பணிவிடை; fanning and other acts necessary for cooling the body. "பலதட்பந் தாஞ்செய்ய" *(சீவக. 1810).* 3. அன்பு, அருள்; love, mercy. "அழகிய தட்பத்தினை யுடையார்" *(குறள், 30, உரை).*

க. தண்பு

[துள் → தள் → தண் → தணம். தண் → தட்பு → தட்பம். குளிர்ச்சி சூட்டைத் தணிப்பதால் தணித்தற்கருத்தில், குளிர்ச்சிக் கருத்துப் பிறந்தது. வெப்ப நாட்டில் சூடு, தணிவு மிக முதன்மையாகக் கருதப்படும் (மு. தா. 271).]

தட்பவெப்பநிலை *taṭpa-veppa-nilai,* பெ. (n.) ஒரு பகுதியில் நிலவும் வெப்பம், காற்று, குளிர் முதலியவற்றின் நிலை; climate, climatic condition. உள்நாட்டுத் தட்பவெப்பநிலைக்குப் பொருந்தாத முறையில் வீடுகள் கட்டப்படுகின்றன (இக்.வ.).

மறுவ. பருவநிலை

[தட்பவெப்பம் + நிலை]

தட்பவெப்பம் *taṭpa-veppam,* பெ. (n.) தட்பவெப்பநிலை பார்க்க; see *taṭpa-veppa-nilai.*

[தட்பம் + வெப்பம்]

தட்பவெப்பமாற்றம் *taṭpa-veppa-māṟṟam,* பெ. (n.) பருவநிலையி லேற்படும் மாறுபாடு; climatic change.

[தட்பவெப்பம் + மாற்றம்]

தட்டோர் *taṭṭōr,* பெ. (n.) தடைப்படச் செய்தோர்; the people who obstructed or hindered.

தட[1] *taḍa,* கு.பெ.எ. (adj.) மெல்லிய; soft, tender. "தடந்தா ளென்பது மெல்லிய வாகிய ஸ்ரீபாத மென்றவாறு" *(நீலகேசி, அவையடக்கம், 1, உரை.)*

தட[2] *taḍa,* கு.பெ.எ. (adj.) பெரிய; large, broad, full. "தாடோய் தடக்கை" *(புறநா. 14: 11).* 2. வளைந்த; bent, curved. "தடங்கோட் டெருமை" *(ஐங்குறு. 98).*

தடக்கம் *taḍakkam,* பெ. (n.) தடக்கு (இவ.) பார்க்க; see *taḍakku.*

தடக்கிப்பேசு-தல் *taḍakki-p-pēšu-,* 5 செ.கு.வி. (v.i.) திக்கிப்பேசுதல் (வின்.); to stutter, speak with hesitation.

மறுவ. தெற்றிப்பேசுதல்

[தடு → தட → தடக்கு + பேசு-. தட்டுத் தடுமாறிப் பேசுதல்.]

தடக்கு[1]-தல் *taḍakku-,* 5 செ.கு.வி. (v.i.) தடைப்படுதல் (வின்.); to be obstructed, impeded, detained.

[தடு → தட → தடக்கு-.]

தடக்கு[2]-தல் *taḍakku-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. தடைபண்ணுதல் (யாழ்.அக.); to obstruct, hinder, detain. 2. இடறுதல் (யாழ்ப்.); to trip up.

[தடு → தட → தடக்கு-.]

தடக்கு[3] *taḍakku,* பெ. (n.) தடை; obstacle, hindrance, impediment (செ.அக.).

[தடு → தட → தடக்கு]

தடகம் *taḍagam,* பெ. (n.) 1. ஏரி; lake. 2. தடாகம் பார்க்க; see *taḍāgam.*

[(துட்டு →) தட்டு → தட்டம் → தடம் = அகலம். அகன்ற குளம். தடம் → தடகம் (மு.தா. 117). தடாகம் → தடகம்.]

தடகளப்போட்டிகள் *taḍa-kaḷa-p-pōṭṭigaḷ,* பெ. (n.) தடங்களின் வழியாக நடத்தப்படும் போட்டிகள்; track and field events.

[தடகளம் + போட்டி]

தடங்கண் *taḍaṅgaṇ,* பெ. (n.) பெரியகண்; large-eyes.

[தட = பெரிய. தட → தடம் + கண்]

தடங்கண்ணி *taḍaṅgaṇṇi,* பெ. (n.) பெருங் கண்களையுடையவள்; large eyed woman.

[தட → தடம் + கண்ணி]

தடங்கல் *taḍaṅgal,* பெ. (n.) 1. தடை; hindrance, impediment, obstruction. "*தடங்கலின்றி யடுசரமே மிடைந்த*" (சூளா. அரசி. 212). ஊழியர்களின் வேலைநிறுத்தத்தினால் குடிநீர் வழங்குவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. (இவ.). 2. தடை (வின்.); objection. 3. அடைப்பு; confinement, detention, as of stray cattle. 4. காலநீட்டம் (தாமதம்) (யாழ்.அக.); delay. 5. வேலையின்றியிருக்கை (வின்.); stagnation, inactive condition. தடங்கலுக்கு வருந்துகிறோம் (வானொலி மொழி).

[தடு → தடக்கு → தடங்கு → தடங்கல்.]

தடங்கல்பண்ணு-தல் *taḍaṅgal-paṇṇu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நிறுத்திவைத்தல்; to detain, to prevent, to put a legal stop to a proceeding. 2. தடைசெய்தல்; to urge an objection (செ.அக.).

[தடங்கல் + பண்ணு-.]

தடங்கலுத்தரவு *taḍaṅgal-uttaravu,* பெ. (n.) தடையாணை பார்க்க; see taḍai-y-āṇai.

[தடங்கல் + உத்தரவு.]

தடங்கு-தல் *taḍaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) தடக்கு (இவ.) பார்க்க; see *taḍakku* (செ.அக.).

[தடங்கு → தடங்கு-.]

தடங்குநாடி *taḍaṅgu-nāḍi,* பெ. (n.) விட்டுவிட்டு அடிக்கும் நாடி; pulse beating at intervals, intermittent pulse.

[தடங்கு + நாடி.]

தடங்கோலு-தல் *taḍaṅgōlu-,* 5 செ.கு.வி.. (v.i.) 1. வழியமைத்தல்; to pave way for. 2. அடுத்தவனைக் கெடுக்க வழிதேடுதல் (யாழ்ப்.); to plot one's ruin.

[தடு → தடம் + கோலு-.]

தடச்சி *taḍacci,* பெ. (n.) பருங்கண்களுடைய பெரியவலைப் பின்னுவதற்கும், கட்டுவதற்கும், பயன்படும் உறுதியான நூல்; a strong thread used to weave and knot big fishing-net.

[தடை → தட → தடச்சி]

தடசல்[1] *taḍašal,* பெ. (n.) 1. நெட்டிப்புல் (மலை); soil-pith. 2. கீரிப்பூண்டு; indian snake root. 3. புளியாரை (மு.அ.); yellow wood sorrel.

தடசல்[2] *taḍašal,* பெ. (n.) தாதுப்பொருள் வகை (சடைச்சி); common Indian lindan - Grewia tilacfotia.

தடசு *taḍašu,* பெ. (n.) தடசல் பார்க்க; see *taḍašal.*

தடசுமரம் *taḍašu-maram,* பெ. (n.) கட்டடப் பணிகளுக்குப் பயன்படும் மரவகைகளுள் ஒன்று (மதுரை மாவட்டம்.); a kind of wood, used for constructing buildings.

[தடசு + மரம்.]

தடத்தம்[1] *taḍattam,* பெ. (n.) உற்றார், உலகோர் குடும்ப உறவிலிருந்து விடுபடுகை; to be free from family and wordly attachments.

[தடு → தடத்தம் = இல்லற வாழ்வினின்று விடுபட்டுத் துறவுவாழ்வில், ஈடுபடுதல்]

தடத்தம்[2] *taḍattam,* பெ. (n.) தடை (நாஞ்.); hindrance, obstacle; objection.

[தடு → தடத்தம்.]

தடத்தம்[3] *taḍattam,* பெ. (n.) 1. நடுநிலை; indifference, neutrality. "தடத்தமாய் நின்றொளிர் நிரஞ்சன நிராமயத்தை" (தாயு. திருவருள் விலாசப் பரசிவ.).

[தட + த் + அம். தட = அகலம், பெருமை, நடுநிலை குறித்ததென்க.]

தடத்தர் *taḍattar,* பெ. (n.) தடத்தன் பார்க்க; see *taḍattan.*

[தடு → தடத்தர்.]

தடத்தல் *taḍattal,* பெ. (n.) உலகக் கவலைகளை விட்டொழித்தல்; detached towards the worldly affairs.

[தடு → தடத்தல் - இறையியல் வாழ்விற்குத் தடையாயுள்ள உலகக் கவலைகளை ஒழித்து, இறைச் சிந்தனையில் மூழ்குதல். அவ்வாறு மூழ்குபவனே, தடத்தன் என்றறிக.]

தடத்தன் *taḍattan,* பெ. (n.) 1. நடுவர்; neutral, indifferent person, umpire. 2. மேலோன் (வின்.); honourable person.

[தடு → தட + அன் = தடத்தன், மேலானவன். தட = பெரிய, மேலான.]

தடதட-த்தல் *taḍa-taḍa-,* 4 செ.கு.வி. (v.i.) 1. தள்ளாடுதல்; to totter from age, weakness, etc. 2. குழறுதல்; to be disconcerted; to be confused in speech. 3. தளர்வாதல்; to be loose (செ.அக.).

[தட → தடதட-.]

தடதடத்தல் *taḍa-taḍattal,* பெ. (n.) 1. அச்சத்தால் நடுங்குதல்; becoming nervous. 2. நாக்குத் தட்டல்; sounding the tongue while tasting. 3. வாய் குழறுதல்; becoming confused in speech. 4. கைகால் சோர்வடைதல்; trembling of the limbs through weakness (சா. அக.).

[தடதட → தடதடத்தல்.]

தடதடப்பு[1] *taḍataḍappu,* தள்ளாட்டம்; a symptom consisting of inability to stand or walk in a normal manner.

[தடதட → தடதடப்பு]

தடதடப்பு[2] *taḍataḍappu,* பெ. (n.) தடதடத்தல் பார்க்க; see *taḍataḍattal.*

[தடதட → தடதடப்பு]

தடதடெனல்[1] *taḍa-taḍeṉal,* பெ. (n.) 1. விரைவுக் குறிப்பு; fluency, ease, as in reading; swiftness, as in walking. 2. ஒலிக்குறிப்பு; faling sound. "தாளான் மிதித்துத் தடதடென்று" (கொண்டல் விடு. 186).

ம. தடபடல்; க. தடதடனெ; தெ. தடதட; து. தடபட, தடபடி

[தடதட + எனல். தொகுத்தல் திரிபு]

தடதடெனல்[2] *taḍataḍeṉal,* பெ. (n.) தள்ளாடுதல்; tattering.

தடந்தேடு-தல் *taḍan-tēḍu-,* 5 செ.கு.வி. (v.i.) தடங்கோலு-தல் (யாழ்ப்) பார்க்க; see *taḍaṅ-kōlu-.*

[தடம் + தேடு-.]

தடநார் *taḍa-nār,* பெ. (n.) பனையேறிகள் காலில் மாட்டிக் கொள்ளும், பனைநாரினாற் செய்யப்பட்ட கயிறு (யாழ்.அக.); foot-brace used by climbers of palmyras.

[தடைநார் → தடநார். 'ஐ' - ஐகாரக் குறுக்கம்]

தடபட-த்தல் *taḍa-paḍa-,* 20 செ.கு.வி. (v.i.) 1. தளம்புதல் (யாழ்.அக.); to shake, tremble, oscillate. 2. விரைவு (இவ.); to be hasty.

[தடதட → தடபட-.]

தடபடல் taḍa-paḍal, பெ. (n.) தடபுடல் பார்க்க; see *taḍa-puḍal.*

[தட + படல்]

தடபடெனல் *taḍa-paḍeṉal,* பெ. (n.) 1. ஒலிக் குறிப்பு; patting sound. "வருவார் தலையிற் றடபடெனப் படுகுட்டொடு" (*கந்தரலங்.காப்பு.*). 2. தள்ளாடற்குறிப்பு (யாழ்.அக.); tottering. 3. தடபட-த்தல் பார்க்க; see *taḍapaḍa-.*

[தடபட + எனல்]

தடபுடல் *taḍa-puḍal,* பெ. (n.) 1. விரைவு; hastiness, precipitancy. 2. சந்தடி, சுறுசுறுப்பு; bustle, clamour, hubbub, fuss, eclat. 3. ஆரவாரம் (அமளி) (இ.வ.); ostentation, show. "மாண்புமிகு அமைச்சர் வருகையின் போது தடபுடலான வரவேற்பு வழங்கப்பட்டது" (*உ.வ.*). 4. பேரிடர்; critical condition, as a person seriously ill (செ.அக.). பெரியவரின் நிலைமை இன்றோ, நாளையோ எனத் தடபுடலாகவுள்ளது (உ.வ.).

[தடபட → தடபுட → தடபுடல்.]

தடம்[1] *taḍam,* பெ. (n.) 1. பெருமை (திவா.); greatness, largeness. "தடவும் கயவும் நளியும் பெருமை" (*தொல்.சொல். 314*). 2. அகலம் (சூடா.)); width, expanse. 3. செல்வப்பகுதி (பிங்.); richness. 4. வளைவு (திவா.); curve, bend. "தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்" (*தொல். உரி. 32*). "தடமருப் பெருமை" (*நற். 120*).

[துட்டு → தட்டு → தட்டம் → தடம் (மு.தா.117). துள் → துட → துடம் → தடம். தடம் = வளைவு, பெருமை. தடம் = பருமை: வளைதற் கருத்தினின்று பருமைக் கருத்து முகிழ்த்தது. பருமையுடையது, பெருமை பெறுந்தன்மைத்து. இப் பொருண்மையில் பெருமைமிக்க செல்வத்தையுங் குறித்து வழங்கிற்றென்க. வளம் → தளம் → தடம் (வே.க. 258).]

தெ. தொளங்கு ம. துலகு.

தடம்[2] *taḍam,* பெ. (n.) 1. கரை (சூடா.); bank, shore. 2. நீர்நிலை (பிங்.); tank, bathing-ghat. 3. வேள்விக்குழி (வின்.); sacrificial pit. 4. வரம்பு (வின்.); ridge, as in a field; dam, causeway. 5. தாழ்வரை (திருக்கோ. 70, உரை); mountain slope. 6. மலை (சூடா.); hill, mountain. 7. மூங்கில் (பிங்.); bamboo. 8. உயர்ந்தவிடம் (திருக்கோ. 4).; elvated place, prominence. 9. இடம்; place. "செய்மைத் தடத்து" (*பிரபுலிங். மாயைகோ. 35*). 10. வெளியிடம் (வின்.); open site. 11. வழி (சூடா.); road, way, path, route. 12. மனைவாயில் (பிங்.); door-way, gate. 13. சுவடு; foot-step, track. "வழித்தடந் தப்பி" (*காஞ்சிப்பு. பன்னிரு. 374*). 14. பேருந்து விழித்தடம்; bus route.

த. தடம் → Skt. தட (t).

[தட்டு → தட்டம் → தடம் (மு.தா. 117)]

தடம்[3] *taḍam,* பெ. (n.) 1. கண்ணி (யாழ்ப்.); noose, gin, snare, trap, toil. 2. சுருக்கு (யாழ்ப்.); knot, loop. 3. கடம்புவகை; panicled Indian linden, m.tr., Grewia microcos.

[தள் → தளம் → தடம். தடம் - கழுத்துத் தடத்தில் இடப்படும், கண்ணி அல்லது கயிறு]

தடம்படு-தல் *taḍam-pāḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. தழும்புபடுதல்; to be marked with impressions or scar. 2. பயிற்சியால் ஆற்றல்மிகுதல்; to become skilled by practice.

[தடு → தடம் + படு-.]

தடம்பார்[1]**-த்தல்** *taḍam-pār-,* 18 செ.குன்றா.வி. (v.t.) அடிச்சுவடு பார்த்தல்; to track the footsteps, as of a thief.

தடம்பார்[2]**-த்தல்** *taḍam-pār-,* 4 செ.கு.வி. (v.i) துன்பத்தில் (ஆபத்தில்) உதவி தேடுதல்; to seek means of relief from trouble.

[துளம் → தளம் → தடம் + பார்-. ஒருகா. தட்டம் → தடம் + பார்-.]

தடம்பிடி-த்தல் *taḍam-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) தடம்பார்-த்தல் (இ.வ.) பார்க்க; see *taḍam -pār-*

[தடம் + பிடி-.]

தடம்புரள்-தல் taḍam-puraḷ-, 4 செ.கு.வி. (v.i.) நிலைகெடுதல்; to be disturbe from ones situation.

[தடம் + புரள்-.]

தடம்புரள்(ளு)-தல் *taḍam-pura!(!u)-*, 12 செ.குவி. (v.i.) பாதநரம்பு பிசகுதல் (இவ.); to be sprained in the foot. 2. தொடர் வண்டி தண்டவாளத் திலிருந்து இறங்குதல்; derailment. 3. கொண்ட கொள்கையிலிருந்து பிறழ்தல்; to deviate from the principles (செ.அக.).

[தடம் + 'புரள்(ளு)-.]

தடம்பொங்கத்தம்பொங்கோ *taḍam-poṅgattam-poṅgō-*, இடை (int.) பொங்கத்தம் பொங்கோ (திவ். பெரியதி. 10: 2: 1) பார்க்க; see poṅgattam-poṅgō; exclamation of surrender by the vanquished (செ.அக.).

தடம்போடு-தல் *taḍam-pōḍu-*, 20 செ.குவி. (v.i.) 1. சிறுவிலங்குகளைப் பிடிக்கக் கண்ணி வைத்தல்; to set a strap for catching small animals. 2. கெடுக்க வழிதேடுதல்; to contrive another's ruin. 3. நன்மையுருவாக ஏற்பாடு செய்தல்; to pave way good deeds. அவன் வெற்றிக்குத் தடம்போட்டான் (உ.வ.).

[தடம் + போடு-.]

தடமண் *taḍamaṇ*, பெ. (n.) சுதைமண் (யாழ்.அக.); earth used for plastering.

[தடவு + மண் → தடமண்.]

தடமாண்டுபோ-தல் *taḍamāṇḍu-pō-*, 8 செ.குவி. (v.i.) அடையாளந் தெரியாதபடி முற்றும் அழிந்துபோதல் (நாஞ்.); to be ruined utterly, as leaving no trace behind.

[தடம் + மாண்டு + போ = தடமாண்டு போதல். மாளுதல், மடிதல், அழிதல். தடம்மாறுதல். எச்சமின்றிச் செயற்பாடு முற்றுமழிதல்.]

தடம்மாறு-தல் *taḍam māṟu-*, 5 செ.குவி. (v.i.) 1. ஒழுங்கற்றமுறையில் நடத்தல்; 2. ஓட்டப் பந்தயத்தில் செல்ல வேண்டிய தடத்தை விட்டுவிட்டு மாறியோடுதல்; to play foul in running race. தடம் மாறியவர்கள், வாழ்க்கையில் வெற்றியை நோக்கிச்செல்வது, எளிதன்று.

[தடம் + மாறு-.]

தடமெடு-த்தல் *taḍam-eḍu-*, 4 செ.குவி. (v.i.) தடம்பார்-த்தல் பார்க்க; see *taḍam-pār-*.

[தடம் + எடு-.]

தடயஅறிவியல் *taḍaya-aṟiviyal*, பெ. (n.) தடயங்கள் வழிக் குற்றங்களைத் துப்புத் துலக்க உதவும் அறிவியல் துறை; forensic science. தடயஅறிவியல் ஆய்விற்கு மண்டையோடு இன்றியமையாதது (இக்.வ.). பெருங்கொள்ளை, கொலை போன்றவற்றைத் துப்புத்துலக்குவதில் தடயஅறிவியல், சிறந்த நிலைக்களனாகத் திகழ்கிறது. (இக்.வ.).

[துளம் → தளம் → தடம் → தடயம் + அறிவியல் - தடயஅறிவியல்]

தடயம்[1] *taḍayam*, பெ. (n.) 1. நடந்ததை அறிந்துகொள்ளும் வகையில் எஞ்சியிருப்பது அல்லது கிடைப்பது (இக்.வ.); trace. முறிந்து தொங்கும் கிளைகள் யானை வந்து போனதற்கான தடயம் (இக்.வ.). 2. பலபண்டம் (சங்.அக.); goods, furniture, articles, things. 3. அணிகலன்கள் (ஆபரணங்கள்) (நெல்லை); ornaments. 4. களவுபோய்த் திரும்பிக்கிடைத்த பொருள் (இ.வ.); recovered stolen property. 5. சான்று; clue. நேற்று நடந்த திருட்டு வழக்கில் திருடனைப் பற்றிய தடயங்கள் கிடைத்தன. (உ.வ.)

[தளம் → தடம் → தடயம்]

தடயம்[2] *taḍayam*, பெ. (n.) விலங்கு (இவ.); fetters.

[தடை → தடயம்]

தடல்[1] *taḍal*, பெ. (n.) 1. அளவுகோல்; scale. 2. நார்; fibre.

தடல்[2] *taḍal*, பெ. (n.) 1. வாழைமடல் (இ.வ.); sheathing petioles of the plantain tree. 2. விலங்கு, மரமுதலியவற்றின் தோல் (யாழ்ப்.); flake, peel, splinter. 3. பலாப்பழச் சுளையினைச் சுற்றியுள்ள செதிள் (யாழ்.அக.); refuse of jack fruit, especially the spongy internal part. 4. மேட்டு நிலம் (இ.வ.); high land.

[தடு → தட → தடல்]

தடல்புஞ்செய் *taḍal-puñjey*, பெ. (n.) பயிரிடுவதற்கேற்றதாகாத மேட்டுநிலம் (இராட்.); high land unsuitable for cultivation.

[தடல் + புன்செய்]

தடலடி *taḍalaḍi*, பெ. (n.) *முரட்டுத்தனம்;* rough and rude. தடலடியா பேசித் தள்ளிட்டான் *(இவ.).*

மறுவ. அடாவடி தடாலடி.

[அடாவடி → தடாதடி → தடாலடி → தடலடி.]

தடலை *taḍalai*, பெ. (n.) *பிடிப்பு;* attachment.

தடவக்கொடு-த்தல் *taḍava-k-koḍu-*, 4 செ.குன்றாவி. (v.i.) *1. முதுகைத்தடவ இடங் கொடுத்தல்;* to let one to stroke the back. *2. மிக இணங்குதல்* (இவ.); to yield too much, to be too submissive.

[தடவு + கொடு-.]

தடவங்கம் *taḍavaṅgam*, பெ. (n.) *கருப்பு ஈயம் (காரீயம்);* black-lead *(சா.அக.).*

தடவம் *taḍavam*, பெ. (n.) *1. அருமை;* rareness. *2. ஆறு; வழி;* path or way. *3. மெய்தீண்டுதல்;* to touch affectionately, as the body of a child; to caress. *4. வீணைமீட்டுதல்;* to tune the yāl.

[தட → தடவு → தடவம்]

தடவரல் *taḍavaral*, பெ. (n.) *வளைவு;* bending, curving. "தடவரல் கொண்ட தலைமெல் லொதுக்கின் *(புறநா. 135: 3).*

[தடவு → தடவி + வரல் - தடவிவரல் → தடவரல். தடவு = வளைவு]

தடவல்[1] *taḍaval*, பெ. (n.) *பண முதலியவற்றின் முட்டுப்பாடு* (வின்.); scantiness, searcity, as of money *(செ.அக.).*

[தடவு → தடவல்]

தடவல்[2] *taḍaval*, பெ. (n.) *தடவை, 1 பார்க்க;* see *taḍavai, 1.* "தருமபுத்திரன் ஒரு தடவல் பொய் சொல்லி" *(ஈடு, 5. 5: 7).*

[தரவல் → தரமல் → தடவல்]

தடவல்[3] *taḍaval*, பெ. (n.) *1. ஆறு என்ற எண்ணின் குழூஉக்குறி* (சங்.அக.); six, a slang term. *2. பொங்கல் முதலிய உணவு வகை* (இவ.); a delicious preparation of rice.

தடவல்[4] *taḍaval*, பெ. (n.) *பூசுதல்;* anointing, smearing, rubbing.

[தடவு = மேற்பூச்சு. தடவு → தடவல்]

தடவலை *taḍa-valai*, பெ. (n.) *மீன்பிடி வலை வகையுளொன்று;* a kind of fishing-net.

[தடை + வலை = தடைவலை → தடவலை.]

தடவற்புலு *taḍavaṟpulu*, பெ. (n.) *அறுபது;* sixty.

[தடவல் → தடவற்புலு.]

தடவா-தல் (தடவருதல்) *taḍāvā-*, 15 செ.குன்றாவி. (v.t.) *1. தடவுதல்;* to stroke; to blow gently over. "மந்தமாருதம்........ தடவந்து வலிசெய்வது" *(திவ்.பெரியதி. 8: 5: 1).* *2. பூசுதல்;* to rub, besmear. "நீறு தடவந்திடப மேறி" *(தேவா. 774: 1).* *3. தேடுதல்;* to seek. "பழமறையுந் தடவர" *(அழகர்கலம். 15).* *4. யாழ் முதலியன வாசித்தல்* (வின்.); to play, as on a lute.

[தடவு + வரு-.]

தடவிக்கட்டினகல் *taḍavi-k-kaṭṭiṉa-kal*, (கலை) பெ. (n.) *பொன்னணியில் தெரிந்தெடுத்துப் பதித்த வயிரக்கல்;* to enclose diamond stone set in gold ornament. "திருமாலையில் தடவிக்கட்டின கல்லு" *(தெ.கல்.தொ. 23 கல். 46).*

மறுவ. தளம்

[தடவி + கட்டின + கல். சொக்கத் தங்கத்தில் செய்த பொன்னணியில் பளிங்கு வயிரம் பதிக்கை. தடவிக் கட்டுகை - மிக நுணுக்கமாகச் செய்யும் வேலைப்பாடு]

தடவிக்கட்டினபளிங்கு *taḍavi-k-kaṭṭiṉa paḷiṅgu*, (கலை) பெ. (n.) *பட்டைதிட்டிய பளிங்கு வயிரம் கட்டிய பொற்சரடு;* to set well cut diamond in a polished golden chain. "தடவிக் கட்டின பளிங்கு பதினெட்டினால் நிறைநாலு மஞ்சாடியும் குன்றியும்" *(தெ.கல்.தொ 2, கல். 3).*

மறுவ. பளிக்குவயிரம்

[தடவி + கட்டின + பளிங்கு - பட்டை திட்டின வைரம்.]

தடவிக்கட்டு-தல் *taḍavi-k-kaṭṭu-*, 5 செ. குன்றாவி. (v.t.) *1. பதித்தல்;* to enchase, set in. "கிளியொன்றிற் கண்ணில் தடவிக்கட்டின கல்

(S.I.I.II.46.). திருமாலையில் தடவிக் கட்டின கல்லு (S.I.I.XXIII.46.).

[தடவி → கட்டு]

தடவிக்கொடு¹-த்தல் *taḍavi-k-koḍu-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* தடவுதல்; to sroke. *2.* ஊக்கப்படுத்துதல்; to encourage. *3.* அமைதியூட்டுதல்; to pacify. *4.* குறையக்கொடுத்தல்; to give sparingly (செ.அக.).

[தடவி + கொடு-.]

தடவிக்கொடு²-த்தல் *taḍavi-k-koḍu-*, 4 செ.குன்றாவி. (v.t.) விளக்கெண்ணெய் போன்ற மருந்தை, வாந்தி வராமல், வயிற்றையும் நெஞ்சையும் தடவுதல்; to anoint the hand over the abdomen and chest to prevent vomitting as in administering medicine like castor oil.

[தடவி + கொடு-.]

தடவித்தட்டிப்பார்-த்தல் *taḍavi-t-taṭṭi-p-pār-*, 4 செகுவி. (v.t.) வயிற்றைக் கையினால் வருடிப் பின் தட்டி, ஆராய்தல்; to pass the hands gently over the abdomen and tap (சா.அக.).

[தடவி + தட்டி + பார்-]

தடவித்தேடு-தல் *taḍavi-t-tēḍu-*, 4 செ. குன்றாவி. (v.t.) இருட்டில் தடவிப்பார்த்து தேடுதல்; to grope around. இருளில் காலால் தடவித்தேடிப் பார்த்து, அடியெடுத்து வைத்தார் (உ.வ.).

[தடவி + தட்டி + பார்-]

தடவிப்பார்-த்தல் *taḍavi-p-pār-*, 4 செ.குன்றாவி. (v.t.) கையினால் உடம்பைத் தடவிஆராய்தல்; to examine palpate by manual.

[தடவி + பார்-.]

தடவிப்பிடி-த்தல் *taḍavi-p-piḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) தடவித்தேடு-தல் பார்க்க; see *taḍavi-t-tēḍu-*. தடவிப்பிடிக்கக் கையில்லை. அவன் பெயர் சௌரியப்பெருமாள் (பழ.).

[தடவி + பிடி-.]

தடவு¹-தல் *taḍavu-*, 5 செ.குன்றா.வி. (v.t.) *1.* வருடுதல் (திவா.); to sroke. "தன் நெஞ்சந் தாமே தடவாரோ தானவர்கள்" (கம்பரா. மாயாசனக. 80). *2.* பூசுதல்; to anoint, as with liniment; to smear, spread on, plaster. "தலைக்குத் தேங்காயெண்ணெய் தடவிக்கொண்டான்" (உ.வ.). 'பசைதடவிப் படத்தை ஒட்டினான்' (இக்.வ.). *3.* தகட்டுப்பணிகாரஞ் செய்தல் (யாழ்ப்.); to make into thin pancakes. *4.* இருட்டில் கை கால் முதலியவற்றால், துழாவுதல்; to grope, feel one's way with hands or feet, as in the dark. "காலினாற் றடவிச் சென்று" (பெரியபு. இளையான்குடி. 18). *5.* தேடுதல்; to seek. "பிலந்தடவி" (கம்பரா. நட்புக்கோ. 53). *6.* குறைத்தளத்தல்; to measure closely or stintingly. *7.* யாழ் முதலியன வாசித்தல்; to play, as on a lute. *8.* திருடுதல்; to steal. *9.* உரிமையல்லாதவளைப் புணர்தல்; to have illicit intercourse with a woman.

ம. தடவுக; க. தடவு, தொடே, தடகு; தெ. தடவு, தடமு; கோத. தட்வத்; துட. தொட்பொர்; குட. தவ்ட்; பட. தடவு

[தொடு → துடவு → தடவு - தொடுதற் கருத்து வேராகும். துடவுதல் → தடவுதல் - பூசுதல், தேய்த்தல்.]

தடவு²-தல் *taḍavu-*, 5 செ.கு.வி. (v.i.) *1.* அசைதல்; to sway to and fro, as a drunken man. "களிப்பட்டானிலையே போற் றடவுபு" (கலித். 101). *2.* தடுமாறுதல்; to be halting; to hesitate. தடவிப் படிக்கிறான் (உ.வ.). *3.* முட்டுப்பாடாயிருத்தல்; to be scarce.

ம. தடவுக; தெ. தடவு

[துடவு → தடவு → தடவு- (வே.க. 277)]

தடவு³-தல் *taḍavu-*, 5 செ.குன்றா.வி. (v.t.) அடை தட்டுதல்; to prepare thin sweet-cakes.

[துடவு → தடவு-.]

தடவு⁴ *taḍavu*, பெ. (n.) *1.* தடா, பருமை; largeness. "ஆலத்துத் தடவுச்சினைப் பல்பழம்" (புறநா. 199). *2.* பகுதி (பிங்.); portion. *3.* வளைவு (பிங்.); curve, bend. *4.* வேள்விக்குழி; sacrificial pit. "தடவு நிமிர்முத்தீப் பேணிய" (பரிபா. 5: 42). *5.* கணப்புச்சட்டி; pot with holes with burning grate. "மடவரன் மகளிர் தடவுநெருப் பமர்ந்து (சிலப். 14: 99). *6.* நறும்புகைக்கால் (வின்.); censer. *7.* மரவகை; a tree. "தடவும் பிடவுந் தாழச் சாய்த்து" (பெருங். உஞ்சைக். 51: 43).

[(துட்டு →) தட்டு → தட்டம் → தடம் = அகலம், பெருமை, அகன்றகுளம் (மு.தா.117). தடம் → தடவு.]

தடவு[4] *taḍavu,* பெ. (n.) சிறைச்சாலை (நாஞ்.); prison.

[தடு → தடை → தடவு]

தடவுச்சினை *taḍavu-c-ciṉai,* பெ. (n.) பெரிய கொம்பு; big staff.

[தடவு + சினை]

தடவுச்செவி *taḍavu-c-cevi,* பெ. (n.) பெரிய காது; large ears.

[தடவு + செவி. தடம் = பெருமை, பருமை.]

தடவுத்தாழி *taḍavu-t-tāḻi,* பெ. (n.) பெருஞ்சாடி; big jar. "தடவுத்தாழி நெட்டுறியின்" *(அழகர்பிள்.).*

மறுவ. சாடி

[தடவு + தாழி]

தடவுநிலை *taḍavu-nilai,* பெ. (n.) மேலுலகம், துறக்கம்; Indra's paradise. "கடவுள் கண்ணிய தடவுநிலைக் கோட்டம்" *(ஞானா. 17: 44).*

[தடவு + நிலை]

தடவுபருத்தி *taḍavu-parutti,* பெ. (n.) பருத்தித் தட்டுப்பாடு (இ.வ.); scarcity of cotton.

[தடவு + பருத்தி. ஒருகா. பருத்திக்காட்டில், முதல்தரமான பருத்தியினை எடுத்தபிறகு, அங்கொன்றும், இங்கொன்றுமாய் உள்ள பருத்தியைத் தேடியெடுத்தல்]

தடவுவாய் *taḍavu-vāy,* பெ. (n.) மலைச்சுனை; mountain pool. "தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை" *(புறநா. 105).*

[தடவு + வாய்]

தடவை *taḍavai,* பெ (n.) *1.* முறை (இ.வ.); time, turn. *2.* தவணை *(யாழ்ப்.);* instalment. எத்தனை தடவை சொல்லிக்கொடுத்தாலும், இந்த மாணவர்களுக்குப் புரிவதேயில்லை *(உ.வ.).* இந்த ஊருக்கு நான் பல தடவை வந்திருக்கிறேன் *(இக்.வ.).*

தெ. தடவ

[தடம் → தடவை. தடவை = முறை (மு.தா.258)]

தடறு *taḍaṟu,* பெ. (n.) *1.* போர்க்கருவியுறை; sheath, scabbard, case. "தடற்றிடங் கொள்வாள்" *(களவழி. 18). 2.* தொண்டகப்பறை (அக.நி.); a kind of drum.

தடனம் *taḍaṉam,* பெ. (n.) தாடனம்; patting, tapping. "ஒருகை எத்து தடனத்தொனி யெடுத் தெறிய" *(நெல்விடு. 286).*

தடா *taḍā,* பெ. (n.) *1.* பானை (திவா.); pot. *2.* மிடா (திவா.); big pot. "நறுநெய் யொரோதடா வுண்ண" *(திவ். பெரியாழ். 1: 2: 4). 3.* கணப்புச்சட்டி *(சிலப். 14: 99: உரை);* a kind of earthen grate. *4.* பருமை; largeness, greatness. "தடாவுட லும்பர்" *(கல்லா. 8: 15). 5.* மிடாவினும் பெரிதான ஏனம் (பாத்திரம்); a vessel larger than a miḍā. "அந்தப் பாலையெல்லாம் காய்ச்சுகைக்காக மிடாக்களோடும் தடாக்களோடும் அடுப்பிலே ஏற்றிவைத்து" *(திவ். பெரியாழ். 2: 9: 5 வியா. பக். 463).*

[முழுமைக்கருத்தினின்று தோன்றிய பருமைக்கருத்துவேர்; முழுதும் திரண்ட பொருள், பருத்திருக்கும். துள் → துடம் → தடம் → தட → தடா (மு.தா. 236)]



தடாககருமம் *taḍāga-karumam,* பெ. (n.) குளத்துக்குப் போதல்; going to stools to washing the posteriors.

மறுவ. மலங்கழிக்கை, கால்கழுவுகை.

[தடம் → தடாகம் + கருமம் (வ.வ. 170)]

தடாகத்தாடுயர் *taḍāga-t-tāḍuyar,* பெ. (n.) தாமரையிலை; lotus leaf.

[தடாகத்து + ஆடுயர்]

தடாகப்பிரதிட்டை *taḍāga-p-piradiṭṭai,* பெ. (n.) ஏழு வகைக் கொடைகளுள் ஒன்றாகிய குளம் வெட்டுகை; sinking or digging tanks, one of eḻu-vagai-k-koḍai.

[தடாகம் + பிரதிட்டை]

தடாகம்[1] *taḍāgam,* பெ. (n.) குளம் (பிங்.); pond, pool, tank. "சங்கொலியுண்டாக்குந் தடாகமே" *(பணவிடு. 268).* "செம்மைப் புதுப்புனல் தடாக மேற்ற தண்சுனைப் பாங்கர்" *(பரி. 9: 27-28).* தடவும் "கயவும் நளியும் பெருமை" *(தொல். சொல். 22).* உத்திரமேரூரில் உள்ள ஏரியின் பெயர் வைரமேகத் தடாகம்.

ம. தடாகம்

[தட்டம் → தடம் → தடாகம்; தடாகம் = அகலம், அகன்ற குளம் (வ.வ. 170)]

தடாகம்[2] *taḍāgam,* பெ. (n.) நீர்முள்ளி; water thorn.

தடாகயோகம் *taḍāga-y-ōgam,* பெ. (n.) பிறப்பு ஓரையிலிருந்து 2, 5, 8ஆம் வீடுகளிலேனும், 3, 6, 9ஆம் வீடுகளிலேனும், ஏழு கோள்கள் கூடியிருந்து, பெருஞ்செல்வமுள்ளவனாயினும் இவறியாவானென்பதைக் குறிக்கும் தீமை (அவயோகம்) *(சாதகசிந். 2036);* inauspicious yōga when the 7 planets appear promiscuously either in the second, fifth and eighth houses or in the third, sixth and ninth houses from the ascendant, indicative of miserliness.

[தடாகம் + ஓகம்]

தடாகவாதாரம் *taḍāga-v-ādāram,* பெ. (n.) ஏரிப்பாய்ச்சலுள்ள நிலம்; land irrigated by a tank or lake.

[தடாகம் + ஆதாரம்; தடாகத்தை ஆதாரமாக கொண்டது.]

மன்பதைக்கு ஆதாரமாகத் திகழ்வது நிலமேயாகும். ஏரிப்பாய்ச்சலுள்ள நிலமே பசியும் பிணியுமற்றுப் பல்வளமும் செழித் தோங்கும், பாரினுக்கு ஆதாரமாகும்.

தடாதகை *taḍā-tagai,* பெ. (n.) அங்கயற் கண்ணியம்மை (திருவிளை. தடாதகைப். 4); Mīṉāṭci, the Goddess of Madurai, as endowed with irresistible valour.

[தடா + தகை. பெருமைசான்ற தண்ணளி தவழும் அங்கயற்கண்ணி]

தடாதடி *taḍādaḍi,* பெ. (n.) 1. குழப்பம் (யாழ்.அக.); disturbance, confusion. 2. கலக்கம்; agitation of mind.

மறுவ. தடாலடி.

[தடா + தடி. தடாதடி = நிலை தடுமாறி மனம் பேதுறுவதால், ஏற்படும் மன வுளைச்சல்]

தடாதடிக்காரன் *taḍādaḍi-k-kāraṉ,* பெ. (n.) புறநெறி வன்மையாளன் (வின்.); one who uses unlawful force.

மறுவ. தடாலடிக்காரன், அடாவடிக்காரன்

[தடாதடி + காரன்; காரன் = உடைமைப் பெயரீறு. ஒருகா. அடாவடி → தடாவடி → தடாதடி + காரன்]

தடாதிவங்குசம் *taḍādi-vaṅgušam,* பெ. (n.) பறவைகளின் பறக்கும்திறன் வகைகளில் (பறவைக்கதிகளுள்) ஒன்று (காசிக. திரிலோ. 6); a mode of bird's flight.

[தடாதி + அங்குசம்]

தடாபுடாவெனல் *taḍāpuḍā-v-eṉal,* பெ. (n.) 1. சினந்து பேசுங்குறிப்பு; onom. expr. of blustering, scolding or abusing. 2. கீழ்விழும் ஒலிக்குறிப்பு; tumbling down. 3. ஆரவாரக் குறிப்பு; pompous manner. 'தடாபுடாவென்று வந்தான்' (இவ.).

[தடாபுடா + எனல்]

தடாம் *taḍām,* பெ. (n.) வளைவு; curve, bend. "தடாம் பிறை மருப்பு" *(சீவக. 806).*

[தடு → தட → தடாம்]

தடாய்-த்தல் *taṭāy-,* 4 செ.குன்றாவி. (v.t.) பெருகச்செய்தல்; to cause to swell or increase. "குண்டோதரன் போல் மாரைத் தடாய்த்து" *(மதி. க. 1: 66).*

[தடு → தடா → தடாய்-.]

தடாயகருப்பம் *taḍāya-karuppam,* பெ. (n.) **உடற்குறைக்கு உட்படும் கரு;** embryo subject to deformities.

[தடாயம் + கருப்பம்]

தடாயின *taḍāyiṉa,* கு.பெ.எ. (adj.) **வளைந்த;** curved. "பொன்னனார் தங்கண்ணிடங் கொண்ட மார்பிற் றடாயினகாது கொள்வேல்" *(சீவக. 255).*

[தடாம் → தடாயின]

தடாரம் *taḍāram,* பெ. (n.) *1.* **ஈரொத்துத்தாளம்** *(சிலப். 6: 35: உரை);* a time measure of double beating. *2.* **சின்னம்மை** (இ.வ.); measles.

[தட → தடா → தடாரம்]

தடாரி[1]-த்தல் *taḍāri-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1.* **ஊடுருவுதல்;** to bore, pierce through. "தடாரிக்கு தந்தம்பு" *(தனிப்பா. 1, 380: 26). 2.* **மிகக்கண்டித்தல்** *(வின்.);* to give a good scolding.

க. தடாயிசு, தெ. தடாயிஞ்சு

[தடா → தடார் → தடாரி-.]

தடாரி[2] *taḍāri,* பெ. (n.) *1.* **உடுக்கை;** drum shaped like an hour-glass. "கைக்கச டிருந்தவென் கண்ணகன் றடாரி" *(பொருந 70). 2.* **கிணைப்பறை;** a drum or tabor of the agricultural tract. "தெண்கட் டடாரிப் பொருவில் பொருந" *(பு.வெ. 9. 30). 3.* **பம்பையென்னும் பறை** (பிங்.); a kind of drum. "கடாஅ யானைக் கால்வழியன்னவென் தெடாரித் தெண்கண் தெளிர்ப்ப வொற்றி" *(புறநா. 368: 14-15). 4.* **பறையென்னும் பொது** (பிங்.); drum. "சிதாஅர் வள்பிற் சிதர்ப்புறத் தடாரி" *(புறநா. 381).*

ம. தடாரி

[தெடாரி → தடாரி = தெளிந்த கண்ணை உடைய பறை. (வே.க. 298)]



தடாரிக்கல் *taḍāri-k-kal,* பெ. (n.) **ஊடுருவல்;** piercing *(சா.அக.).*

[தடாரி + கல்]

தடாவு-தல் *taḍāvu-,* 5 செ.குவி. (v.i.) **வளைதல்;** to bend, curve. "தடாவிய வம்பும்" *(திவ். இயற். திருவிருத். 6).*

[துளம் → துடம் → தடம் → தட → தடா → தடாவு; தடாவு = வளைதல் (வே.க. 268) (வ. வ. 170)]

தடானனம் *taḍāṉaṉam,* பெ. (n.) செங்கிலுகிலுப்பை; red species of rattlewort *(சா. அக).*

தடி[1]-தல் *taḍi-,* 2 செ.குன்றாவி. (v.t.) *1.* வெட்டுதல்; to hew down, cut down, cut off. "வாளோச்சிமிகத் தடிந்தாள்" *(பு.வெ. 5: 8). 2.* அழித்தல்; to kill, destroy. "மன்குலத்தொடு தடிந்து" *(பாரத. இராசசூய. 43). 3.* குறைத்தல்; to reduce, diminish. "தடிந்தெழிலி தானல்காதாகி விடின்" *(குறள், 17).*

[தடு → தடி-.]

தடி[2] taḍi, பெ. (n.) *1.* **நீட்டலளவு வகை;** a linear measure. "தடி நான்கிற் பரந்தன" *(மேரு. மந். 1153). 2.* **குச்சி;** stick. தடியெடுத்தவன் தண்டல்காரன் (செ.அக.).

மறுவ. அளவுத்தடி.

[தண்டு → தண்டி → தடி (வ.வ. 171).]

திண்டிவனம் வட்டத்திலுள்ள ஏரியின் உட்பாறையில் செதுக்கப்பட்ட நிலவளவு; இவ் வளவைச் செய்வோர், காய்ந்த அகத்திக் குச்சியை அந்த அளவிற்குச் சரியாக ஒடித்துக் கொண்டு, அளக்கை செய்வர். அது அளவுத் தடி எனப்படும்.

தடி[3] *taḍi,* பெ. (n.) **ஆண்குறி;** a slang term for penis *(சா.அக.).*

[தண்டு → தண்டி → தடி]

தடி[4] *taḍi,* பெ. (n.) *1.* **கழி** *(இ.வ.);* stick, staff, rod, cane. *2.* **தண்டாயுதம்** *(திவா.);* club, cudgel, bludgeon. *3.* **மரம் முதலியவற்றின் பிளந்த துண்டம்;** a piece, as of wood. "ஒடிதூரட் டடியொடு" *(பரிபா. 4: 20). 4.* **அளவுகோல்** (நன். 290, விருத்.); measuring rod. *5.* **உலக்கை** (திவா.); pestle. *6.* **தடிமன்;** cold. *7.* **வில்** *(பிங்.);* bow.

"மிகுகணை முடுகிய தடியினில்" (இரகு. யாக. 79). 8. வயல் (திவா.); rice-field. "பங்கமிட் டெறிந்தன தடிகள்" (இரகு. நாட். 21). 9. பாத்தி (வின்.); plot of a field. 10. தசை; flesh. 'புலவு நாற்றத்த பைந்தடி" (புறநா. 14: 12). 11. கருவாடு (அகநா. 60, உரை); dried fish. 12. உடும்பு (பிங்.); iguana. 13. ஆடவை ஓரை (விதான. பஞ்சாங்க., 14); Gemini in the Zodiac. 4. கீறற்கையெழுத்து (இ.வ.); signature-mark of an illiterate person.

ம. தடி; க. தடி, தடி; தெ. தாடி, தடி; து. தட; கோத. தய்ட், தச்; துட. தொடு; பட. தடி

[தண்டு → தண்டி → தடி (வ. மொ. வ. 171).]

தடி[5]-த்தல் *taḍi-*, பெ. (n.) 1. பெருத்தல் (பிங்.); to grow large, full; to become stout, to swell. "உண்டா ளுடறடித்தாள்" (கம்பரா. மாயாசனக. 89). 2. மிகுதல்; to become enhanced; to increase, grow. "நெருப்புத் தடிப்பது போல்" (ஞானவா. கற்க. 3). 3. கெட்டிப்படுதல், உறைதல்; to thicken, as a liquid milk on boiling to congeal, to be inspissated. "பாலைத் தடிக்கக் காய்ச்சினான்" (உ.வ.). 4. திரளுதல் (வின்.); to cohere, gather together, consolidate, assume a tangible form. 5. நச்சுக் கடியினால் தோல் வீங்குதல்; to swell in patches, as the skin by slight poison. 6. மரத்தல்; to grow stiff or rigid, as the tongue by chewing betel; to be hard, as a board. என்ன கடித்ததோ தெரியவில்லை, உடம்பு முழுவதும் திட்டுத்திட்டாகத் தடித்துவிட்டாது (உ.வ.). வெற்றிலை தின்றதனால் நாக்குத் தடித்து விட்டது. 7. மனம் கடுத்தல்; to become hard, unfeeling. அவன் மனம் தடித்திருக்கிறது. 8. உரக்கப்பேசுதல்; to be loud, harsh. "தடித்த சொல்லார்" (கம்பரா. எழுச்சி. 65). இயல்பாக ஆரம்பித்த பேச்சு தடித்துச் சண்டையில் முடிந்தது (உ.வ.). 9. காலந் தாழ்த்தல் (வின்.); to delay, linger; to be protracted.

ம. தடிக்குக; த. தட்டயிசு; தெ. தட்டமு; து. தட்டியுணி, தட்ட்யுனி; கோத. தட்வ்; கூ. டாட; Mar. dāṭ.

[தண்டு → தண்டி → தடி-. (வ.வ. 171) தடித்தல் – பருத்தல். பருத்துத்தடித்தல் : தடித்து நீளுதல் – பருமனாதல். பருமனாகிக் கெட்டிப்படுதல் → கெட்டிப்பட்டுத் திரளுதல். தடித்தல் = நச்சுக் கடியினால் தோல் தடித்தல் : நாக்குக்கடித்தல், தடித்து வீங்குதல்; வீங்குவதாலேற்பட்ட மரத்தல் போன்ற பொருட்பாகுபாட்டில், தடித்தல் என்னுஞ் சொல் புடைபெயரும் என்றறிக]

தடி[6] *taḍi*, பெ. (n.) மின்னல்; lightning. "தடியுடை முகிற்குலம்" (கம்பரா. தாட. 37).

தடி[7] *taḍi*, பெ. (n.) கஞ்சிபோடும் நெசவாளர் பயன்படுத்தும் நீண்டகோல்; weaver's starch-stick (செங்கை.).

தடிக்கந்தகம் *taḍi-k-kandagam*, பெ. (n.) உருளைக்கந்தகம்; roll sulphur (சா.அக.).

[தண்டி → தடி + கந்தகம்]

தடிக்கம்பு *taḍi-k-kambu*, பெ. (n.) கைக்கழி; cane, walking-stick (செ.அக.).

[தடி[2] + கம்பு; மீமிசைச் சொல்]

தடிக்கல் *taḍi-k-kal*, பெ. (n.) தடிக்கை, வீங்குகை; swelling.

[தண்டி → தடி + கல் = தடிக்கல் = பருத்துப் புடைத்துத்தடிக்கை (வ. வ. 171). பருமைக் கருத்துவேர் வீங்குதற்பொருளில் வந்துள்ளது]

தடிக்காரன் *taḍi-k-kāraṉ*, பெ. (n.) சுறாமீன்; shark-fish.

[தம் குழுவினர் (பட்டினவர்) மட்டும், அறிந்து கொள்ளுதற்குரிய, குழூஉக்குறிப் பெயர்.]



தடிக்கொம்பு *taḍi-k-kombu,* பெ. (n.) மாட்டுக் குற்றவகை (பெரியமாட். 16); a defect in cattle.

[தண்டு → தண்டி → தடி + கொம்பு (வ. வ. 171).]

தடிக்கொன்றை *taḍi-k-koṉṟai,* பெ. (n.) பெருங் கொன்றை; large variety of cassia (சா.அக.).

[தடி + கொன்றை]

தடிகாரன் *taḍi-kāraṉ,* பெ. (n.) அழிப்பவன்; destroyer, as one with a cudgel. "தடிகாரனான யமன்" (தாயு. சிற்சு. 1).

ம. தடிக்காரன் (கடைநிலை அரசு ஊழியன்)

[தடி + காரன்; காரன் = உடைமை பெயரீறு. ஒ.நோ.: மாட்டுக்காரன், வீட்டுக்காரன், கடைக்காரன்]

தடிகை *taḍi-gai,* பெ. (n.) மின்னல்; lightning.

[தடி → தடிகை]

தடிகைபாடி *taḍigai-pāḍi,* பெ. (n.) இராசராசன் வென்றெடுத்த நாடுகளுள் ஒன்று; one of the country invaded by Rājarāja Chōḻaṉ. "தடிகைபாடியும் நுளம்பபாடியும்" (முதல் இராசராசன் மெய்க்சீர்த்தி).

[தடிகை + பாடி]

இது, சங்கரபாடிக்கும் நுளம்பபாடிக்கும் இடையிலுள்ளதோர் சிறுநாடு.

தடிச்சம்பா *taḍi-c-cambā,* பெ. (n.) எட்டு மாதத்தில் விளையும் நெல்வகை; a kind of paddy maturing in 8 months (செ.அக.).

[தடிச்சம்பா = பருமையான நீண்டகால வித்து]

தடிச்சூலை *taḍi-c-cūlai,* பெ. (n.) நடக்க முடியாதபடி, தடியை ஊன்றிச்செல்ல வைக்கும் வயிற்றுநோய்; a kind of gout rendering, one unable to move about without a stick.

[தடி + சூலை. தடிச்சூலை = தடியின் உதவியுடன் நடக்கவியலாத் தன்மையுள்ள வயிற்றுநோய்]

தடிச்சை *taḍi-c-cai,* பெ. (n.) தடசல் பார்க்க; see *taḍašal* (சா.அக.).

தடிசு *taḍišu,* பெ. (n.) 1. தாடி பார்க்க; see *tāḍi.* 2. உடும்பு; guana.

[தடி → தடிசு]

தடிசாத்து¯-தல் *taḍi-šāttu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. கையெழுத்துக் குறியிடுதல் (இ.வ.); to affix signature - mark. 2. தடியால் அடித்தல்; to beat with staff.

[தடி + (சார்த்து →) சாத்து¯-.]

தடித்ததேகம் *taḍitta-tēgam,* பெ. (n.) பருத்த உடம்பு; stout body (சா.அக.).

Skt. deha → த. தேகம்.

[தடி → தடித்த + தேகம்.]

தடித்தநாக்கு *taḍitta-nākku,* பெ. (n.) வீங்கிய நாக்கு. இது நோயினால் அல்லது நஞ்சுண்டதால் ஏற்படும் அறிகுறி; swollen tongue, it is a symptom prominent in a case of poisoning or sometimes from a disease. (சா.அக.)

[தடி → தடித்த + நாக்கு.]

தடித்தநாளம் *taḍitta-nāḷam,* பெ. (n.) பருத்து நெளிந்து, முடிச்சு முடிச்சாகக் காணப்படும் நாளம்; veins exhibiting a morbid enlargement of dilation and knotty and irregular appearance especially in the lower extremities.

[தடித்த + நாளம்]

தடித்தமண்ணெண்ணெய் *taḍitta-maṇṇeṇṇey,* பெ. (n.) மண் நெய்மம் (தைலம்); a dark green kerosene oil commonly used for all engines - crude oil.

[தடித்த + மண் + எண்ணெய். எள் + நெய் – எண்ணெய்.]

தடித்தமலடி *taḍitta-malaḍi,* பெ. (n.) குழந்தை பெறாது பருத்த பெண்; a stout sterile woman.

[தடித்த + மலடி]

தடித்தனம் *taḍi-t-taṉam,* பெ. (n.) 1. முரட்டுத்தனம்; rashness, rudeness. 2. மட்டித்தனம் (இ.வ.); foolishness, stupidity. 3. மடிமை (தஞ்சை.); laziness.

[தடி + தனம். தடி = பருமை. தனம் = சொல்லாக்க விகுதி. ஒ.நோ. அடாவடித் தனம், சூரத்தனம், மடிமைத்தனம்]

தடித்தாண்டவராயன் *tadi-t-tāṇḍavarāyaṉ,* பெ. (n.) கொழுத்த மடையன் (உ. வ.); sturdy but idle vagabond, a term of reproach.

[தடி = தின்று, தசை மிகுந்து, கொழுத்துத் திரியும் மடையன். தடி + தாண்டவம் + ராயன். அரையன் → ராயன்]

தடித்து *taḍittu,* பெ. (n.) மின்னல்; lightning. "தரங்கநீர் வேலையிற் றடித்து வீழ்ந்தென" (கம்பரா. இராவணன்வதை. 237).

[தடி → தடித்து]

தடித்துபதி *taḍittubadi,* பெ. (n.) மேகம்; cloud.

தடிநாங்கு *taḍi-nāṅgu,* பெ. (n.) சிறுநாகப்பூ; long pointed broad-leaved-Ceylon iron-wood. (செ.அக.)

[தடி + நாங்கு]

தடிநான்கு *taḍināṉgu,* பெ. (n.) தடிநாங்கு பார்க்க; see *taḍi-nāṅgu.*

[தடி + நான்கு]

தடிநி *taḍini,* பெ. (n.) ஆறு; river. "குடிதடிநியசைய இசை பொங்க" (திருப்பு. 19).

[தடி → தடிநி]

தடிநிலன் *taḍi-nilaṉ,* பெ. (n.) அளந்து வரப்பிடப்பட்ட நிலம்; measured land for the field. "கீழ்புலச் செய்தடி : நிலன்" (S.I.I, 13, 41/14).

[தடி + நிலன்]

வகுத்தல் (:) அடையாள வரம்பிட்டுப் பிரித்தமையை, யுணர்த்துங் குறி.

தடிப்பதக்கு *taḍi-p-padakku,* பெ. (n.) பழைய வரி வகை (S.I.I. V, 114); a tax.

[தடி + பதக்கு; தடி = நிலங்குறித்த அளவு; பதக்கு = ஒவ்வொரு அளவிற்குஞ் செலுத்திய வரி]

தடிப்பம் *taḍippam,* பெ. (n.) 1. பருமை; thickness, bulkiness. தடிப்பமான தோல். 2. வீக்கம்; swelling.

[தடி → தடிப்பு → தடிப்பம்]

தடிப்பயல் *taḍippayal,* பெ. (n.) 1. கொழுத்தவன்; stout fellow. 2. முரடன்; stubborn, senseless person. 3. மட்டி; blockhead (செ.அக.).

மறுவ. தடித்தாண்டவராயன்

[தடி + பயல்]

தடிப்பானபேச்சு *taḍippāṉa-pēccu,* பெ. (n.) 1. முரட்டுப்பேச்சு; impudent talk. 2. நாணமில்லாப் பேச்சு (இ.வ.); shameless speech.

[தடிப்பு + ஆன + பேச்சு. தடி → தடிப்பு = பருமை: பருமையாலேற்படும் சோம்பல், சோம்பலாலுண்டான நாணமற்ற தன்மை. நாணத்தைவிட்டவன் ஞாலத்தில் பெரியவன், என்னும் வழக்கை நோக்குக,]

தடிப்பு *taḍippu,* பெ. (n.) 1. கெட்டித்தன்மை; thickness, as of liquids, inspissation. 2. வீக்கம்; swelling, as from a blow; protuberance, hypertrophy, callosity, inflammation. 3. பருமன்; thickness of a solid substance, as a board. 4. உடற்றழும்பு; a disease causing eruptions in the body - Urticaria. கம்பளிப்பூச்சி கடித்ததனால் உடம்பெல்லாம் தடிப்பாய் இருக்கிறது (உவ.). 5. பூரிப்பு; plumpness, as of a person, of the breast. 6. செருக்கு (இ.வ.); pride.

ம. தடிப்பு; க. தடுமு; தெ. தட்டமு; து. தடிகெ; துட. தடி (அடி போன்றவற்றால் உடலில் ஏற்படும் வடு).

[தடி → தடிப்பு; 'தடிப்பு' தொழிற்பெயர். 'பு' தொ. பெ. ஈறு.]

தடிப்புத்தி *taḍi-p-putti,* பெ. (n.) மந்தபுத்தி (உவ.); thick headedness.

[தடி + புத்தி]

Skt. buddhi → த. புத்தி

தடிப்புநோய் *taḍippu-nōy,* பெ. (n.) கண்ணோய்; an eye disease.

[தடிப்பு + நோய்]

இந் நோய் 1. இமைதடிப்பு, 2. இளிச்சற் கண், 3. முடமயிர் என மூவகைப்படுமென்று சாம்பசிவம் மருத்துவ அகரமுதலி கூறும்.

தடிப்புப்படை *tadippu-p-padai,* பெ. (n.) *1.* உடம்பில் தசைத்தடிப்பை உண்டாக்கும் ஒருவகைப் படைநோய்; thickening of the skin on different parts of the body. *2.* வண்டு அல்லது சில்நஞ்சுக்கடி; a contagious skin disease forming in the shape of rings due to bites of beetle or other poisonous reptiles and insects. *3.* பித்தத்தடிப்பு; urticaria.

மறுவ. சொறிசிரங்கு

[தடிப்பு + படை; படை திரள்வதுபோல் திட்டுத்திட்டாகத் தடித்துள்ள சொறி சிரங்கு]

தடிப்பேறு-தல் *tadi-p-pēru-,5* செ.குன்றாவி. (v.i.) தடித்துக் கொண்டே போதல்; to grow thicker and thicker.

[தடிப்பு + ஏறு-.]

தடிபிணக்கு *tadi-piṇakku,* பெ. (n.) அடிதடி; fighting with clubs. "ஒருநான்றுதடி பிணக்கே" (திவ். திருவாய். 6: 2: 7).

[தடி + பிணக்கு]

தடிபோடு-தல் tadi-pōdu-, *20* செ.குவி. (v.i.) *1.* நிலமளத்தல் (வின்.); to measure ground, as in the game of tipcat. *2.* தேரை, மரக்கட்டையால் நெம்பிக் கிளப்புதல் (இ.வ.); to apply the leverbeam to the wheels in starting a temple car. *3.* வருந்தி முயன்று, ஒருவனை வேலையில் மூட்டுதல்; to set a person to work, with great difficulty. *4.* இடையூறு செய்தல் (இ.வ.); to raise objections; to put obstacles in the way.

[தடி + போடு-.]

தடிமம் *tadimam,* பெ. (n.) *1.* மருந்துப் பூடு; an medicinal plant. *2.* சளி; phlegm.

[தண் → தடுமம் → தடிமம்.]

தடிமரை *tadi-marai,* பெ. (n.) மாட்டுக்குற்ற வகை (பெரியமாட். 19.); a defect in cattle.

தடிமல் *tadimal,* பெ. (n.) தடிமன்[1] (இ.வ.) பார்க்க; see *tadiman*[1].

தடிமன்[1] *tadiman,* பெ. (n.) நீர்க்கோவை (வின்); cold, catarrh.

மறுவ. தடுமல், தடுமம், தடுமன்

[தண் = குளிர்ச்சி, நீர்கோர்ப்பு; தண் → தடு → தடுமம் → தடிமம் → தடிமன் (மு.தா. 299)]

தடிமன்[2] *tadiman,* பெ. (n.) பருமன் (உ.வ.); thickness.

தெ. தடமு

[தண்டி → தடி → தடிமன் (வ.வ. 171)]

தடிமாடன் *tadi-mādan,* பெ. (n.) தடியன் பார்க்க; see *tadiyan.*

மறுவ. ஊர்சுற்றி

ம. தடிமாடன்; க. தடும

[தடி + மாடன். ஊர்க்காலி மாடுபோன்று கண்ணில் கண்டதைத் தின்று, கொழுத்துப் பெருத்துத் திரிபவன்]

தடிமாடு *tadi-mādu,* பெ. (n.) தடியன் பார்க்க; see *tadiyan* (செ.அக.).

[தடி + மாடு]

தடிமிண்டன் *tadi-mindan,* பெ. (n.) தடியன் பார்க்க; see *tadiyan.*

மறுவ. தடிமாடன், தடியன்

[தடி + மிண்டன்]

தடிமூக்குள்ளான் *tadi-mūkkullān,* பெ. (n.) பருத்தமூக்குள்ள பறவைவகை (வின்.); snipe with a stout bill.

[தடிமூக்கு + உள்ளான்]



தடியங்காய் *taḍiyaṅgāy,* பெ. (n.) சாம்பற்பூசணி (நெல்லை); white-gourd melon.

மறுவ. தடியன், தடியன்காய், பரங்கிக்காய்.

தடியடி *taḍi-y-aḍi,* பெ. (n.) 1. தடிப்பிணக்கு (உவ) பார்க்க; see *taḍi-p-piṇakku.* 2. கூட்டத்தைக் கலைக்க காவலர் கையாளும் வன்முறை வகை; lathi charge by police men to disburse unruly crowd. சட்டத்திற்கு புறம்பான கூட்டத்தைக் கலைக்கக் காவலர் தடியடி நடத்தினர்.

[தடி + அடி]

அடிதடி = மக்கள் செய்வது

தடியடி = காவலர் நிகழ்த்துவது

தடியடிமிடாவடி *taḍi-y-aḍi-miḍā-v-aḍi,* பெ. (n.) நெறியற்ற முரட்டுப்பேச்சு; unreasonable violent talk, bluster. 'தடியடிமிடாவடி யடிக்கிறான்'.

[தடியடி + மிடா + அடி.]

வெறும் பானையை அடித்தது போன்ற கடும்ஒலியால் கூறத் தகாத சொற்களைக் கூறுவது.

தடியடிமுண்டம் *taḍi-y-aḍi-muṇḍam,* பெ. (n.) துணிவுள்ள உடல்வலு; body's strength and courage.

[தடியடி + முண்டம்]

தடியம் *taḍiyam,* பெ. (n.) இரண்டு வீசை கொண்ட நிறை (G.Sm.D.I.i,283); standard weight of 2 viss.

தெ. தடியமு; க. தடய

[தடி + அம் = "அம்" சொல்லாக்க ஈறு]

தடியரைஞ்சான் *taḍi-y-araiñjāṉ,* பெ. (n.) கடலில் வாழும் 12 அடிநீளமுள்ள நச்சுப்பாம்பு; sea-bungar, venomous snake, attaining twelve ft. (தஞ்சை.)

[தடி + அரைஞ்சான்; நீளமுள்ள நச்சுப் பாம்புயிரி. தஞ்சைக் கடற்கரையில் மிகுதியாகக் காணப்படும்]

தடியன் *taḍiyaṉ,* பெ. (n.) 1. கொழுத்தவன்; stout, fat person. "தடியர் கழுந்தரென்னலாய்" (ஈடு, 4. 8: 8). 2. பயனற்றவன், முரடன்; rude, senseless fellow.

மறுவ. தடிமிண்டன், தடிமாடு, தடிமாடன், தடியாண்பிள்ளை, தடியாபிள்ளை, தடிராமன், தடிராயன், தடித்தாண்டவராயன்.

ம. தடியன்

[தண்டி → தடியன் (வ.மொ.வ. 171); கொழுத்துத் திரியும் ஊரா (கொண்டி மாடு) போல, பிறர்பொருளைக் கவர்பவன். உடம்புகொழுத்த மூடனைக் குறிக்கும் வசைச்சொல்.]

தடியன்காய் *taḍiyaṉ-gāy,* பெ. (n.) தடியங்காய் பார்க்க; see *taḍiyaṅgāy* (செ.அக.)

மறுவ. கலியாணப் பூசுணை

[தடி → தடியன் + காய். பருத்துத்திரண்ட, பருமைத்தோற்றங் குறித்து வழங்கிய பெயர்]

தடியன்சீலா *taḍiyaṉ-šīlā,* பெ. (n.) பசிய நிறமுள்ள கடல்மீன்வகை; sea-fish, greyish-green, Sphyraena obtusata (செ.அக.).



தடியாண்பிள்ளை *taḍi-y-āṇ-piḷḷai,* பெ. (n.) தடியன் பார்க்க; see *taḍiyaṉ.*

[தடி + ஆண் + பிள்ளை]

தடியாத்தடை *taḍiyā-t-taḍai* பெ. (n.) ஆடாதோடை; Malabar winter cherry.

தடியாபிள்ளை *taḍiyā-piḷḷai,* பெ. (n.) தடியன் பார்க்க (இ.வ.); see *taḍiyaṉ.*

ம. தடியாபிள்ளை

[தடி + ஆண் + பிள்ளை – தடியாண் பிள்ளை → தடியாபிள்ளை]

தடிராமன் *taḍi-rāmaṉ,* பெ. (n.) 1. புல்லுருவி; parasite; Viscum monoicum. 2. தடியன் பார்க்க; see *taḍiyaṉ.*

[தடி + ராமன்; இராமன் = ஏதேனும் ஓர் ஆளைக் குறிப்பதற்கான, பொதுச்சொல்.

பெருந்தீனி தின்று, வீண்பேச்சுப் பேசி ஊர்வம்பு இழுப்பவன். 'தண்டச்சோறு தடிராமன்' என்னும் வழக்கை நோக்குக.]

தடிராயன் *taḍi-rāyaṉ,* பெ. (n.) தடியன் பார்க்க; see *taḍiyaṉ.*

[தடி + (அரையன் →) ராயன்.]

தடிவழக்கு *taḍi-vaḻakku,* பெ. (n.) முரட்டு வழக்கு (நாஞ்.); unreasonable, senseless contention.

[தடி + வழக்கு]

தடிவழி *taḍi-vaḻi,* பெ. (n.) *1.* நெடுஞ்சாலை; highway. *2.* வயல்களுக்கிடையே செல்லும் வரப்புப்பாதை; foot-path, on the ridge of fields.

[தடி + வழி]

தடிவழிவாரியம் *taḍi-vaḻi-vāriyam,* பெ. (n.) வயல்வழிப் பாதைகளை அளந்து இசைவளிக்கும் உரிமைபெற்ற குழுவினர்; officials who engage to measure the foot-paths of paddy fields. "சுவநி நாவியணச் சதுர்வேதி மங்கலத்துள் - கலிங்கு வாரியப் பெருமக்களும் தடிவழிவாரியப் பெருமக்களும் கூடியிருக்க" *(S.I.I. iii. 156).*

[தடி + வழி + வாரியம்]

தடிவால் *taḍi-vāl,* பெ. (n.) மாட்டுக் குற்றவகை (பெரிய. மாட். 18); a defect in cattle.

[தண்டி → தடி + வால்]

தடிவிலை *taḍi-vilai,* பெ. (n.) மரவிலை; tree value.

[தடி + விலை]

தடிவு *taḍivu,* பெ. (n.) *1.* வெட்டுகை; cutting. *2.* அழிக்கை; killing, destroying.

[தடி → தடிவு]

தடிவெட்டிப்போடு-தல் *taḍi-veṭṭi-p-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) தடிபோடு 4. (இவ.) பார்க்க; see *taḍi-pōḍu 4.*

[தடிவெட்டி + போடு-.]

தடிவை-த்தல் *taḍi-vai-,* 4 செ.கு.வி. (v.i.) தென்னை வளர்ப்பில் முதலாவதாகக் குழியிலிருந்து மரம் தோன்றுதல் (நாஞ்.); to form stem, as coconut palm, in cultivation.

[தடி + வை-.]

தடினி *taḍiṉi,* பெ. (n.) ஆறு (பிங்.); river. "ஓடும் நஞ்சத்தடினி" *(திருவாலவா. 36: 13.).*

[தடி → தடினி.]

தடு[1]-த்தல் *taḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1.* தடை செய்தல் (பிங்.); to hinder, stop, obstruct; to forbid, prohibit, to resist. "இயங்கறத் தடுமின்" *(கம்பரா. முதற்போர். 3).* 'அரசர்கட்குள்ளே எழும் போர்களைப் புலவர்கள் தடுப்பது வழக்கம்' (உ.வ.). *2.* அடைத்தல்; to dam, block up. *3.* வேறுபிரித்தல்; to partition off. அந்த அறையைத் தடுத்திருக்கிறான் (உவ.); *4.* நிறுத்தி வைத்தல்; to detain. *5.* அடக்குதல்; to curb, check, restrain, control. "தடுக்கலாகலாத் துயரம்" *(கம்பரா. பள்ளியடை 133).* *6.* விலக்குதல்; to ward off, avert. "சாபத்தை நக்கனே கொலாந் தடுக்கவல்லான்" *(கந்தபு. சந்திர. 49).* *7.* எதிர்த்தல்; to oppose. *8.* மறுத்தல்; to contradict, rebut, repel. *9.* பயனறச்செய்தல் (வின்.); to baffle, frustrate. *10.* எண்ணம் மாறச்செய்தல்; to dissuade.

ம. தடுக்குக; க. தடவு, தடசு; தெ. தடயு; து. தடெபினி, தடெபுனி; கோத., துட. தட்வ; குட., பட., தடெ; குரு. டண்ட்னா.

[துல் → தல் → தள் → தடு-.]

தடு[2]-தல் *taḍu-,* 4 செ.கு.வி. (v.i.) இசைதல் (யாழ். அக.); to be agreeable.

[தள் → தடு-.]

தடு[3] *taḍu,* பெ. (n.) தடுக்கை; hindering, checking, resisting. "தடுவரி யன்போடு" *(திருக்கோ. 164, கொளு.).*

[தள் → தடு]

தடுக்கல் *taḍu-k-kal,* பெ. (n.) தடை (வின்.); stumbling block, impediment.

[தடு → தடுக்கல்.]

தடுக்கிநில்-தல் *taḍukki-nil-,* 14 செ.கு.வி. (v.i.) *தடையால் நின்றுபோதல்* (வின்.); to come to a standstill, as by an obstacle.

[தடுக்கு + நில்-.]

தடுக்கு[1]-தல் *taḍukku,* 5 செ. குன்றாவி. (v.t.) *இடறுதல்;* to obstruct, impede, hit against, trip up (செ.அக.).

[தள் → தடு → தடுக்கு-.]

தடுக்கு[2] *taḍukku-,* பெ. (n.) 1. *இடறுகை;* impeding, tripping. 2. *தட்டி* (இ.வ.); screen. "தென்னோலை தடுக்குப்பின்ன மிகவும் ஏற்றது" (உ.வ.). 3. *பாய்;* mat. "தடுக்குடுத்துத் தலையைப் பறிப்பார்" (தேவா. 80: 10). 4. *தகடு;* thin flat layer. 5. *இருக்கை (தவிசு)* (சிலப். 16. 37: உரை.); seat.

மறுவ. தட்டி, தவிசு.

ம. தடுக்கு; க. தடிகெ; தெ. தடக

[தடு → தடுக்கு. அமரும் அளவில் தட்டையாகச் சிறிதாக முடையப்படும் தடுக்கு, தவிசு எனப்பட்டது. சிறுதட்டி போன்ற பாய். (மு.தா. 93).]

தடுக்கு[3] *taḍukku,* பெ. (n.) *இடக்கை;* left hand.

[தடு → தடுக்கு]

தடுக்குத்தள்ளு-தல் *taḍukku-t-taḷḷu-,* 5 செ.குவி. (v.i.) *முகமன் கூறுதல்* (வின்.); to flatter.

[தடுக்கு + தள்ளு-.]

தடுக்குப்பாய் *taḍukku-p-pāy,* பெ. (n.) 1. *சிறுபாய்* (இ.வ.); small mat. 2. *கோரை, சம்பை போன்ற புல்வகை அல்லாது, தென்னோலை, மூங்கிற்பட்டை, பனையோலை போன்றவைகளால் முடையப்படும் பாய்;* mat made up of ribbon like palm leaves, coconut leaves or bamboo ribs instead of kōrai or šambai.

[தடு → தடுக்கு + பாய்]

தடுக்குவேட்டி *taḍukku-vēṭṭi,* பெ. (n.) *நடக்கும்போது காலில் தடுக்கும் ஆடை;* cloth wound undivided round the lions, as hindering one in walk.

மறுவ. அடையவளைந்தான் உடை

[தடு → தடுக்கு + வேட்டி]

தடுகுட்டம் *taḍu-kuṭṭam,* பெ. (n.) *குணாலைக் கூத்துவகை;* a kind of dance. "தடுகுட்டமாய்ப் பறவாதார்" (திவ். திருவாய். 3: 5: 3).

[தடு + குட்டம்]

தடுசூடுவல்லி *taḍu-šūḍu-valli,* பெ. (n.) 1. *மருந்துக்கொடி;* medicinal creeper. 2. *முல்லை;* jasmine.

தடுத்தாட்கொண்டவூர் taḍu-t-tāṭkoṇḍavūr, பெ. (n.) *தென்னார்க்காடு மாவட்டம், திருக்கோவிலூர் வட்டத்தில், திருவெண்ணெய் நல்லூருக்கு அருகேயுள்ள ஓரூர்;* a place in Tennārkkāḍu district at Tirukkōvilūr taluk, near to Thiruveṇṇeynallūr.

[தடுத்து + ஆட்கொண்ட + ஊர்.]

வன்னெஞ்சை நெகிழ்ந்துருகச் செய்யுந் தீந்தமிழ்த் திருப்பாட்டால், தேவாரம் பாடிய சுந்தரரை, இறைவன் தடுத்தாட்கொண்ட இடம்; சுந்தரர் சடங்கவிசிவாச்சாரியார் மகளை மணமுடிக்க முனைந்தஞான்று, திருமணம் நிகழாவண்ணம், இறைவனால் தடுத்தாளப்பட்ட ஊர்.

தடுத்தாட்கொள்(ளு)-தல் *taḍu-t-tāṭ-koḷ(ḷu)-,* 16 செ.குன்றாவி. (v.t.) *எதிர்நோக்கும் வினையன்றி, வேறுவினை மேற்கொள்ளுங்கால், அவ்வினையைத் தடுத்து, தன்வயம் வைத்துக் கொள்ளல்;* to prevent from doing unexpected thing and taking to one's side.

[தடுத்து + (ஆள்கொள்ளு →) ஆட்கொள்ளு-.]

சுந்தரமூர்த்தி நாயனார், இறைபணி மறந்து திருமணம் செய்துகொள்ள முயன்றபோது, இறைவன் முதியோர் வடிவம்பூண்டு, திருமணஞ் செய்வதைத் தடுத்து, தன்பால் ஆட்கொண்ட செய்தியினைச் சுந்தரரின் திருப்பாட்டு தெரிவிக்கின்றது; தமிழ்நாட்டில் மக்களை அடிமைகொள்ளும் முறை இருந்ததையும், அதற்கு அந்தணர்களும் விலக்கல்ல என்னும் வாழ்வியல் முறைமையினையும், தேவாரத்திருப்பாக்கள் வாயிலாக, நாம் அறிகின்றோம்.

தடுத்தாள்(ளு)-தல் *taḍu-t-tāḷ(ḷu)-,* 16 செ.குன்றாவி. (v.i.) *திருத்தி மீட்டுக்கொளல்;* to reclaim, redeem, as a person from his evil ways.

[தடு → தடுத்து + ஆள்(ளு)-.]

தடுத்தாளி *taḍu-t-tāḷi,* பெ. (n.) விரைவு; swiftness.

[சடு → தடு → தடுத்தாளி.]

தடுத்துவை-த்தல் *taḍu-t-tu-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) தடைசெய்து நிறுத்தி வைத்தல் (வின்.); to put off, postpone.

[தடு → தடுத்து + வை-..]

தடுதலை *taḍu-talai,* பெ. (n.) தங்குதடை; impediment. "அவர்கள் தடுதலையின்றி எங்கும் போவார்கள்" (எங்களூர், 24).

[தடு + தலை]

தடுதாளி *taḍu-tāḷi,* பெ. (n.) சடுத்தம் (அவசரம்); haste, hurry. 'இந்தத் தடுதாளியில் ஒன்றும் முடியாது' (நெல்லை).

[தடுதாளி = தடுக்கின்ற ஆள்; ஒருகா. சடுதாள் → சடுதாளி → தடுதாளி]

தடுப்பு *taḍuppu,* பெ. (n.) 1. இடையீடு, தடுக்கை; hindering, obstructing, resisting, prohibiting. "தடுப்பருஞ் சாபம்" (கம்பரா. அகலிகை. 75). 2. தடை; check, hindrance, restraint. கடத்தல் தடுப்புப் பிரிவு (இக்வ.).

[தடு → தடுப்பு]

தடுப்புக்காவல் *taḍuppu-k-kāval,* பெ. (n.) குற்றம்செய்தவர் என்று நம்பப்படுபவரை, முன்னெச்சரிக்கையாகக் கேட்டாய்வின்றிக் குறிப்பிட்ட காலம்வரை, சிறையில் வைத்தல்; detaining a person without trail as a preventive measure; preventive detention. ஓராண்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். (கிரி. அக.)

[தடுப்பு + காவல்]

தடுப்புச்சுவர் *taḍuppu-c-cuvar,* பெ. (n.) மண்ணரிப்பு, வெள்ளம் ஆகியவற்றைத் தடுக்கும் சுவர் (பொ.வழ.), மறைப்புக்காகக் கட்டப்படும் சுவர்; wall.

[தடுப்பு + சுவர்]

தடுப்பூசி *taḍuppūsi,* பெ. (n.) முன்விழிப்போடு போடப்படும் ஊசி; vaccination, inoculation.

[தடுப்பு + ஊசி]

தடுபடை *taḍu-paḍai,* பெ. (n.) மாற்றுப்படை; spare army, part of an army.

[தடு + படை]

தடுபுடு-த்தல் *taḍupuḍu-,* 4 செ.கு.வி. (v.i.) விரைவுபடுத்தல் (யாழ். அக.); to be hasty.

[தடு → தடுபுடு-. ஒருகா. தடுபடு → தடுபுடு-..]

தடுபுடுதாயம் *taḍu-puḍu-tāyam,* பெ. (n.) சடுத்தம், விரைவு (யாழ். அக.); hastiness.

[தடுபுடு + தாயம்]

தடுபொடு-த்தல் *taḍupoḍu-,* 4 செ.கு.வி. (v.i.) விரைவுபடுதல்; to urge.

[தடு + பொடு-.]

தடுபொடெனல் *taḍu-poḍeṉal,* பெ. (n.) 1. ஒலிக்குறிப்பு; onom. expr. of patting or rattling sound. 2. தடபுடெனல் பார்க்க; see *taḍa-puḍeṉal.*

[தடு + பொடு + எனல்]

தடுபொடுதாயம் *taḍupoḍu-tāyam,* பெ. (n.) விரைவு; speed.

[தடுபுடு → தடுபொடு + தாயம்]

தடுபொறி *taḍu-poṟi,* பெ. (n.) மிகுசுருக்கு, மிகு விரைவு; break point.

[தடை → தடு + பொறி]

தடுமம் *taḍumam,* பெ. (n.) 1. குளிர்ச்சி; coolness. 2. நீர்க்கோப்பு; cold.

மறுவ. குளுமம், நீர்க்கோவை.

[தண் → தடு → தடுமம் (மு.தா. 299).]

தடுமல் *taḍumal,* பெ. (n.) தடுமம் (நெல்லை) பார்க்க; see *taḍumam.*

ம. தடுமல்; க. தடி (ஈரம்); தெ. தடி

[தடுமம் → தடுமல்.]

தடுமன் *taḍumaṉ,* பெ. (n.) தடுமம் (நெல்லை) பார்க்க; see *taḍumam.*

[தடுமம் → தடுமன்]

தடுமாற்றம் *taḍu-māṟṟam,* பெ. (n.) *1.* **ஒழுங்கின்மை;** disorder, as of things, derangement, inconsistency, as in speech. "சொற்றடு மாற்றத் தொடர்ச்சியை விட்டு" (மணிமே 27: 166). *2.* **தள்ளாடுகை;** tottering, unsteadiness, stumbling, staggering, slipping. *3.* **மனக்கலக்கம்;** perplexity, confusion, bewilderment, mental disorder. "தடுமாற்றம் போஒந் துணையறிவா ரில்" (நாலடி. 140). *4.* **ஐயுறவு** (வின்.); doubt, hesitation. *5.* **தவறு** (வின்.); mistake; proneness to mistake.

ம. தடுமாறு; தெ. தடமாடு

[தடுமாறு → தடுமாற்றம்]

தடுமாற்று *taḍumāṟṟu,* பெ. (n.) தடுமாற்றம் பார்க்க; see *taḍumāṟṟam.* "தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரம்" (கலித். 6).

[தடுமாற்றம் → தடுமாற்று]

தடுமாறு-தல் *taḍumāṟu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* **ஒழுங்கற்றிருத்தல்;** to be deranged. *2.* **நெறியின்றிக் கலந்து கிடத்தல்;** to be thrown in a jumble. "எல்லா மிடைதடுமாறு நீரால்" (கம்பரா. ஆற்றுப். 17). *3.* **சறுக்குதல், வழுக்குதல்;** to slip. *4.* **தள்ளாடுதல்;** to totter, stagger, be unsteady. "இடை தடுமாற வேகி" (கம்பரா. ஊர்தேடு. 184). *5.* **சுண்டியெறிதல்;** to be tossed about. *6.* **துன்பத்திற்குள்ளாதல்;** to be troubled. "வினைக்கடலிற் றடுமாறு முயிர்க்கு". (தேவா. 974: 7). *7.* **தாறுமாறாக்குதல், மலைப்பூட்டுதல், உள்ளங்குழம்புதல்;** to be confused. *8.* **மனங் கலங்குதல்;** to be puzzled. "எண்ணந்தான் தடுமாறி" (திருவாச. 5:25). *9.* **சிக்கலாக்குதல், சிக்கவைத்தல், பின்னிக்கொள்ளுதல்;** to be perplexed. *10.* **கெடுத்தல், குலைத்தல்;** to be disconcerted. *11.* **ஐயங்கொள்ளுதல், தயங்குதல்** (வின்.); to hesitate, to doubt; to be in suspense. *12.* **தவறுதல்** (வின்.); to be mistaken, to be inconsistent, to err.

[தள் → தடு → தடுமாறு-.]

தடுமாறுத்தி *taḍu-māṟutti,* பெ. (n.) **கருமியத்தைக் கரணியமெனத் தடுமாறக் கூறும், அணிவகை** (மாறனலங், சொல்: 205); a figure of speech in which cause and effect are inverted.

[தடுமாறு + உத்தி]

தடுமாறுவமம் *taḍumāṟuvamam,* பெ. (n.) *1.* **ஐயவணி** (தொல். பொருள். 310. உரை); a figure of speech in which a close resemblance between two objects leads to one of them being spoken of as if it were mistaken for the other. *2.* **எதிர்நிலையணி** (தொல். பொருள். 310, உரை.); a figure of speech in which the usual form of comparison is inverted, the uvamāṉam being compared to the uvamēyam.

[தடுமாறு + உவமம்]

தடுமாறுவமை *taḍumāṟuvamai,* பெ. (n.) **தடுமாறுவமம்** (இலக். வி: 640) பார்க்க; see *taḍumāṟuvamam.*

[தடுமாறு + உவமை]

தடை[1] *taḍai,* பெ. (n.) *1.* **தடுக்கை;** resisting, obstructing. "தடையேதுமில் சூலம்" (கம்பரா. அதிகாயன்: 251). *2.* **இடையூறு;** hindrance, obstacle, impediment, interruption. "தடையொரு சிறிதின் றாகி" (கம்பரா. மீட்சி: 163). *3.* **மறுப்பு;** objection. தடைவிடை. *4.* **காப்பாடை** (அருநி.); coat of mail. *5.* **காப்பு;** armlet or anklet worn as a charm. *6.* **காவல்;** guard, watch. "தம் பரிசனங்கள் சூழத் தனித்தடையோடுஞ் சென்று" (பெரியபு. திருஞான. 647). *7.* **வாயில்;** door, gate. "தனித்தடையின் வைகும் நந்தி" (காஞ்சிப்பு. மணிக.31). *8.* **அணை;** bund, embankment. "தாங்குதடை பொருது" (பரிபா. 7: 19). *9.* **அடைப்பு;** that which keeps a thing in its place, as a linchpin, catch, bolt, etc. *10.* **மந்திரத்தடை;** charm, magic spell, as an obstacle. *11.* **மனைவி** (அகநி.); wife. *12.* **தடையம்** *1.* பார்க்க; see *taḍaiyam 1.* *13.* **எண்பது பலங்கொண்ட அளவு;** a measure of weight = 80 palams. *14.* **வெண்ணாங்கு;** creamy-leaved lance wood, m.tr., Pterospermum suberifolium. *15.* **வாழை மடல்;** sheathing petioles of the plantain tree. வாழைத்தடை (இ.வ.).

ம. தெ. தட; க. தடெ, தட; து. குட, பட. தடெ; கோத. தட்வ்; துட. தட்ப்; கோண். தட்டி; குரு. டண்ட்னா; பிரா. தட்.

[தள் → தடு → தடை (மு.தா. 102), முட்டற்கருத்து → தட்டல்கருத்து →

தடைக் கருத்து. இஃது, தடைக்கருத்து வளர்ந்த முறையாகும். தட்டுத்தடை யென்பெது மரபுத்தொடர். தீயதைக் காண்டலும், கேட்டலும், நல்வினைக்குத் தடையாகக் கருதிய சமணர் கண்டுமுட்டு; கேட்டு முட்டு போன்ற சொற்களைப் புனைந்தனர் என்பதறிக]

தடை[2]-தல் *taḍai-*, 4 செ.குன்றாவி. (v.t.) தடுத்தல்; to hinder, stop. "எண்வழி தடைந்து" *(கல்லா. 31:1).*

க. தடெ.

[தடு → தடை-.]

தடை[3]-த்தல் *taḍai-*, 4 செ.குன்றாவி. (v.t.) இடையூறு செய்தல்; to hindrance. "மழைவந் தெழுநாள் பெய்து மாத்தடைப்ப" *(திவ். பெரியாழ். 3. 5: 2).*

[தடு → தடை-.]

தடை[4] *taḍai*, பெ. (n.) வாழைப்பட்டை; the bark of banana tree.

[தட்டை → தடை; வாழைப்பட்டையை வாழைத்தடை என்பர் (மு.தா. 112). ஒருகா: தடு → தடை; வாழைமரத்தின் உள்ளே உள்ள தண்டுப்பகுதியை மறைத்து வளர்ந்துள்ள மட்டைப்பகுதி தட்டை அல்லது, வாழைத்தடை யென்று பெயர் பெற்றிருக்கலாம்.]

தடை[5] *taḍai*, பெ. (n.) தடுப்புச்சுவர் பார்க்க; see *taḍuppu-c-cuvar.*

[தடு → தடை]

தடைஇ *taḍaii*, கு.வி.எ. (adv.) 1. சரிந்து; bent down, drooped. 2. பருத்து; plump. "புதல்வற் றடுத்த பாலொடு தடைஇத் திதலை யணிந்த தேங்கொண் மென்முலை" *(அகநா. 26).*

[தடு → தட → தடை → தடைஇ]

தடைஇய *taḍaiiya*, பெ.எ. (adj.) 1. பருத்த; plumpy. "நன்றுந் தடைஇய மென்றோள்" *(கலித். 93).* 2. திரண்ட; rounded. "அம்பணைத் தடைஇய மென்றோள்" *(நெடுநல். 149).*

தடைஇய என்பதற்குச் சரிந்த, வளைந்த என்று பொருள் கொள்ளின், தட வென்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த எச்சமாகக் கொள்க. இனித் தடைஇய என்பதற்குப் பருத்த என்னும் பொருளுண்மையை "தடைஇய மென்றோளாய் கேட்டீவாயாயின" (கலித். 93) எனவும் வருமிடங்களில் காண்க. (அகநா. 26. பொ. வே. சோ. உரை.)

[தடு → தடை → தடைஇய]

தடைஓட்டம் *taḍai-ōṭṭam*, பெ. (n.) தடையோட்டம் பார்க்க; see *taḍai-y-ōṭṭam.*

[தடு → தடை + ஓட்டம்]

தடைக்கல் *taḍai-k-kal*, பெ. (n.) இடையூறு; stumbling block. தமிழ்ப்பற்றின்மையே தமிழ் வளர்ச்சிக்குத் தடைக்கல்லாக உள்ளது *(உ.வ.).*

[தடு → தடை + கல்]

தடைக்காப்பு *taḍai-k-kāppu*, பெ. (n.) பயிர்கட்கு வருந்தொற்று நோய்; disinfection.

[தடு → தடை + காப்பு]

தடைகட்டு[1]-தல் *taḍai-kaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. பாம்பு முதலியவற்றை மந்திரத்தால் தடுத்தல்; to control or check by magic spell, as a cobra. 2. துலைக்கோலில் எடைத்தடைய மிடுதல்; to put equivalent weight of the container in the other plate of the scale to equalise.

[தடு → தடை + கட்டு-.]

தடைகட்டு[2] *taḍai-kaṭṭu*, பெ. (n.) நிறை யளவுகளை ஆய்வுசெய்யும் பணி; office of inspector of weights measures, etc. "தடைகட்டு மாலையப்ப பிள்ளையோ" *(விறலிவிடு. 453).*

[தடை + கட்டு]

தடைகருப்பாசயம் *taḍai-karuppāšayam*, பெ. (n.) கருத்தரிக்கும்போது ஏற்படும் உடலுறுப்புக் கேடு; embryo subjected to deformity.

[தடை + கருப்பாசயம்]

தடைச்சிவலை *taḍai-c-civalai*, பெ. (n.) மீன் பிடி வலை (மீனவ.); fishing-net.

[தடு → தடை + ச் + ச் + இ + வலை]

தடைசெய்-தல் *tadai-šey-*, பெ. (n.) தடு[1]-த்தல் பார்க்க; see *tadu*[1]-. "நில்லிங் கெனவே தடை செய்த நிலை" (கந்தபு. தக்கன் கயிலை. 18).

[தடை + செய்-.]

தடைநீக்கி *tadai-nīkki*, பெ. (n.) 1. வயிற்றுப் போக்கு மருந்து; medicine for opening the bowels. 2. உடற்கழிவுநீரைத் தடை செய்தல்; medicine having the powder of clearing opening or controlling the natural ducts of the fluids and secretion of the body.

[தடை + நீக்கி]

தடைபடுத்து-தல் *tadai-paduttu-*, 4 செகுன்றாவி. (v.t.) தடுத்தல்; to prevent.

[தடை + படுத்து-. 'படுத்து' துணைவினை]

தடைபண்ணு-தல் *tadai-pannu-*, 4 செகுன்றாவி. (v.t.) 1. இடையூறு செய்தல்; to hinder, interpose obstacles, prevent. 2. காவற்படுத்துதல்; to arrest, confine. 3. தடுத்தல்; to stop, exclude, interrupt, possession.

[தடை + பண்ணு-. 'பண்ணு' துணை வினை]

தடைமரம்[1] *tadai-maram*, பெ. (n.) நெய்த துணியைச் சுருட்டுவதற்குத் தறியில் அமைக்கப்பட்ட குறுக்குச்சட்டம் (இ.வ.); cross-piece in a loom, used for rolling the cloth when woven.

மறுவ. இடைமரம், படமரம்

[தடை + மரம்]



தடைமரம்[2] *tadai-maram*, பெ. (n.) மரவகை; a kind of tree - Pterospermum suberifolium.

தடைமருந்து *tadai-marundu*, பெ. (n.) தடுப்பு மருந்து; preventive medicine.

[தடை + மருந்து]

தடைமோதிரம் *tadai-mōdiram*, பெ. (n.) பெரிய கணையாழியைத் தடுத்துநிற்குஞ் சிறு கணையாழி; keeper.

[தடை + மோதிரம்.]

தடையம் *tadai-yam*, பெ. (n.) 1. நிறுக்கப் போகும் பொருளை வைத்திருக்கும் ஏனம் முதலியவற்றிற்குரிய எடை (வின்.); allowance weight to balance the vessel containing the articles to be weighed. "தடையமென்றுந் தூக்கித் தராசானிறுக்க" (பணவிடு. 181). 2. பெற்றுக் கொண்ட பொன்னுக்குத் தட்டார் கொடுக்கும் பொன் னிறைகல் (இ.வ.); token weight given by a goldsmith, as showing the amount of gold delivered to him. 3. அணிகலன்கள் (நெல்லை); ornaments. 4. தட்டுமுட்டு (இ.வ.); utensils, articles. 5. களவு முதலிய குற்றங்களில் தொடர்புடைய பொருள் (இ.வ.); stolen property; material object concerned in a crime. 6. கொதுவைப்பண்டம் (இவ.); pawned goods. 7. கத்திப்பிடி (வின்.); hilt of a sword.

[தடை + அம்; 'அம்' = சொல்லாக்க ஈறு]

தடையறு-த்தல் *tadai-y-aru-*, 4 செ.குவி. (v.i.) 1. மந்திரத்தடை நீக்குதல்; to remove magic spells by counter charms. 2. இடையூறு விலக்குதல்; to obviate or remove difficulties.

[தடை + அறு-.]

தடையாணை *tadai-y-āṇai*, பெ. (n.) 1. ஒன்றைச் செய் அல்லது செய்யற்க என, அறமன்றம் இடும்ஆணை; injunction. 2. பொதுஅமைதி கருதி ஊர்வலம், கூட்டம் போன்றவற்றை நடத்தத் தடைவிதித்து, அதிகாரிகளிடும் ஆணை; prohibitory order.

[தடு → தடை + ஆணை]

தடையோட்டம் *tadai-y-ōttam*, பெ. (n.) தடகளப் போட்டியில் ஏற்படும் தடைகளைத் தாண்டி ஓடுகிற ஓட்டம்; hurdles.

[தடை + ஓட்டம்]

தடைவாங்கு-தல் *taḍai-vāṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வண்டிச்சக்கரத்தில் கம்பியைப் பொருத்துதல் (செங்கை.); to spoke in its axle point.

[தடை + வாங்கு-.]

தடைவிடை *taḍai-viḍai,* பெ. (n.) 1. மறுப்பும், விடையும்; objection and reply. 2. உடன்பாடும் மாறுபாடும்; pros and cons.

[தடை + விடை]

தண் *taṇ,* பெ. (n.) 1. குளிர்ச்சி (பிங்.); coolness, coldness. 2. நீர்; water. 3. அருள்; grace; love. "தண்கலந்த சிந்தையோடு" (சேதுபு. சீதைகுண்ட.5).

க., ம. தண்.

தண்கடல் *taṇ-kaḍal,* பெ. (n.) சிறுநீர் (சித். குழூஉ); urine.

[தண் + கடல்]

தண்கடற்சேர்ப்பன் *taṇ-kaḍaṟ-šērppaṉ,* பெ. (n.) நெய்தல்நிலத் தலைமகன்; chief of the maritime tract. "முண்டக மலருந் தண்கடற் சேர்ப்பன்" (ஐங்குறு. 108).

[தண்கடல் + சேர்ப்பன்]

தண்கதிர் *taṇ-kadir,* பெ. (n.) தண்சுடர்க் கலையோன் பார்க்க; see *taṇ-šuḍar-k-kalaiyōṉ.* "தன்னிழலோ ரெல்லார்க் குந்தண் கதிராம்" (பு. வெ. 9:34).

மறுவ. குளிர்கதிர், தண்சுடர்

[தண் + கதிர்]

தண்கயம் *taṉkayam,* பெ. (n.) குளிர்ந்த குளம்; cool pond. "நறுவீயைம்பான் மகளிராடும் தைஇத் தண்கயம் போல" (ஐங்குறு. 84).

[தண் + கயம். கயம் = குளம்]

தண்கான் *taṉkāṉ,* பெ. (n.) இழிந்தகாடு; thinning forest. "வெஞ்சுடர் அன்னானை யான் கண்டேன்" (கலித்.).

[தண் + கான்]

தண்சுடர் *taṇ-šuḍar,* பெ. (n.) தண்சுடர்க் கலையோன் பார்க்க; see *taṇ-šuḍar-k-kalai-yōṉ.* "தண்சுடர் அன்னாளைத் தான் கண்டாளாம்" (கலித்.).

[தண் + சுடர்.]

தண்சுடர்க்கலையோன் *taṇ-šuḍar-k-kalai-yōṉ,* பெ. (n.) நிலவு (திவா.); moon.

மறுவ. குளிர்மதியன், தண்ணிலவன், அம்புலி

[தண்சுடர் + கலையோன். குளிரும் ஒளியுஞ் சான்ற கதிர்களையுடையவன்]

தண்சொரிவு *taṇ-šorivu,* பெ. (n.) 1. குளிர்ச்சியான தண்ணீர்ப்பீச்சல்; cold douche. 2. சில்லெனக் குழாய்த்தண்ணீர்ச் சொரிவு; cold shower bath (சா.அக.).

[தண் = குளிர்மைத் தன்மை; தண் + சொரிவு.]

தண்டக்கட்டு *taṇḍa-k-kaṭṭu,* பெ. (n.). களத்திற் பொலிவீசுஞ் சமையத்துக் காற்று அடித்துக் கொண்டுபோன நெல்லைத் தூற்றுவோர் அடைதற்குரிய உரிமை (G. Sm. D. I, ii, 49); ryot's perquisite of the grains carried away by wind while winnowing.

[தண்டம் + கட்டு]

தண்டக்காரன் *taṇḍa-k-kāraṉ,* பெ. (n.) வேலைக்காரன் (மீனவ.); servant.

[தண்டம் + காரன். 'காரன்' - உடைமைப் பெயரீறு. ஒ.நோ. வேலைக்காரன், மாட்டுக்காரன், வீட்டுக்காரன்]

தண்டக்காரி[1] *taṇḍa-k-kāri,* பெ. (n.) வேலைக்காரி; maid servant.

[தண்டக்காரன் (ஆ.பா.) - தண்டக்காரி (பெ.பா.)]

தண்டக்காரி[2] *taṇḍa-k-kāri,* பெ. (n.) தொட்டால் வாடி; prickly sensitive plant (சா.அக.).

[தண்டம் + காரி]

தண்டக்குற்றம் *taṇḍa-k-kuṟṟam,* பெ. (n.) தண்டனைக்குரிய குற்றம்; punishable offence. "குற்றம் செய்தாரைக் கொள்ளும் தண்டமும்" (S.I.I. 8. 469).

[தண்டம் + குற்றம்]

தண்டக்கூற்றம் *taṇḍa-k-kūṟṟam,* பெ. (n.) வரிவகை (I.M.P.Cm.454); an ancient tax.

[தண்டம் + கூற்றம்]

தண்டகநாடு *taṇḍaga-nāḍu,* பெ. (n.) தொண்டைமண்டலம் பார்க்க; see *toṇḍai-maṇḍalam.* "வார்புனற் றெண்டிரைத் தண்டகநாடு" (கம்பரா. ஆறுசெல். 38).

[தொண்டைநாடு → தொண்டநாடு → தண்டநாடு → தண்டகநாடு]

தண்டகபுரம் *taṇḍagapuram,* பெ. (n.) காஞ்சி நகருக்குள்ள பதின்மூன்று பெயர்களுள் ஒன்று; one of the thirteen names of Kāñjipuram.

தண்டகம்[1] *taṇḍagam,* பெ. (n.). 1. தொண்டை நாடு; toṇḍai-maṇḍalam. 2. தண்டகாரணியம் பார்க்க; see *taṇḍa-kāraṇiyam.* "தண்டகமா மடவியாகி" (உத்தரரா. சம்புவன்வ. 65). 3. தண்டனை; punishment. "எம்பிரான் றண்டகஞ் செய் தலையளி யாகுமால்" (கந்தபு. ததீசியு. 196). 4. ஒரு வகை வடமொழிச் செய்யுள் (வீரசோ. யாப். 34, உரை); a kind of Sanskrit verse. 5. முதுகெலும்பு; spinal cord, as the seat of a mystic centre. "தண்டகத் துள்ளவை" (திருமந். 1385).

தண்டகம்[2] *taṇḍagam,* பெ. (n.). 1. கரிக்குருவி; black sparrow. 2. நுரை; foam. 3. அகத்தியர், இராமதேவர் முதலானோர் செய்த தமிழ் மருத்துவநூல்; the name of a treatise on medicine written by Agattiyar and Ramadevar. 4. இசிவுநோய் வகையுளொன்று; a kind of spasm. 5. உடல்விறைப்பு; stiffness of the whole body (சா.அக.).

தண்டகமாலை *taṇḍaga-mālai,* பெ. (n.) தொண்ணூற்றாறுவகைச் சிற்றிலக்கியங்களுள் முந்நூறு வெண்பாக்களாலியன்ற சிற்றிலக்கிய வகை (தொன். வி. 283, உரை); poem of 300 stanzas in veṇpā metre, one of 96 pirabandam.

[தண்டகம் + மாலை]

தண்டகவூதை *taṇḍaga-v-ūdai,* பெ. (n.) முடக்குநோய் வகை (சீவரப்); a kind of paralysis.

[தண்டகம் + ஊதை]

தண்டகன்[1] taṇḍagaṉ, பெ. (n.). 1. தண்டகாரணியம், தண்டகநாடு, இவற்றின் பெயருக்குக் காரணமான அரசன் (கந்தபு. திருநகர. 374); a king, after whom Taṇḍagāraṇiyam and Taṇḍaganāḍu took their names. 2. கூற்றுவன்; Yamaṉ. "தண்டகன் வெருட்சி யெய்தினான்" (கந்தபு. மார்க். 215).

[தண்டகம் → தண்டகன்]

தண்டகாகம் *taṇḍa-kāgam,* பெ. (n.) செம்போத்து (சங்.அக.); crow pheasant.



தண்டகாரணியம் *taṉṭakāraṇiyam,* பெ. (n.) தென்தேயத்தில், துறவிகள் மிக்கு வதிந்த காடு; the forest of Daṇḍagam in Deccaṇ, a famous resort of ascetics. "தண்டகாரணியம் புகுந்து" (திவ். பெரியதி. 11. 2:3).

[தண்டகம் + ஆரணியம்]

Skt. araṇya → த. ஆரணியம்

தண்டகிவைப்புநஞ்சு *taṇḍagi-vaippu-nañju,* பெ. (n.) தீமுருகல் நஞ்சு; phosphorus (செ.அக.).

[தண்டகி + வைப்புநஞ்சு]

தண்டகை *taṇḍagai,* பெ. (n.) தண்டகாரணியம் (சங்.அக.) பார்க்க; see *taṇḍagāraṇiyam.*

தண்டங்கீரை *taṇḍaṅ-kīrai,* பெ. (n.) தண்டுக் கீரை; common spinach.

[தண்டு + கீரை]

தண்டங்கொடு[1]**-த்தல்** *taṇḍaṅ-koḍu-,* 4 செ.குன்றாவி (v.t.) 1. ஒறுப்புக் கட்டணம் செலுத்துதல்; to pay a fine, suffer a penalty. 2. இழத்தல் (இ.வ.); to suffer loss.

[தண்டம் + கொடு-,]

தண்டங்கொடு[2]**-த்தல்** *taṇḍaṅ-koḍu-,* 4 செ.குவி. (v.i.) இழப்புக்கு ஈடு கொடுத்தல் (உ. வ.) ; to make good a loss.

[தண்டகம் + கொடு-,]

தண்டச்சோறு *taṇḍa-c-cōṟu,* பெ (n.). 1. பயனற்றவனுக்கு இடும் உணவு; food offered to useless persons under compulsion.

2. இலவயமாகக் கொடுக்குஞ் சோறு (இ.வ.); food given gratis. 3. புல்லுருவி பார்க்க; see *pulluruvi.*

மறுவ. வீண்சோறு, வெட்டிச்சோறு

[தண்டம் + சோறு]

தண்டசக்கரம் *tanḍa-šakkaram,* பெ (n.) குயவனது திருகையும் கோலும் (நன். 297, உரை.); potter's stick and wheel (செ.அக.).

[தண்டம் + சக்கரம்]



தண்டசம் *tanḍašam,* பெ (n.) கொல்லுலை; blacksmith's forge.

தண்டஞ்செய்-தல் *tanḍañ-šey-,* 1 செ.குன்றாவி. (v.t.). 1. தண்டித்தல்; to punish. 2. கோலால் அளத்தல்; to measure with a rod. "கணக்கருடன் கூடி . . . தண்டஞ்செய்து" (திருவாலவா. 30, 7). 3. நிலத்தில் வீழ்ந்து வணங்குதல்; to make obeisance by prostration.

[தண்டம் + செய்-.]

தண்டட்டி *tanḍaṭṭi,* பெ. (n.) தண்டொட்டி (நெல்லை); a woman's ear ornament.

[தண்டொட்டி → தண்டட்டி. காதுத் தண்டினையொட்டி மாதர் அணியுங் காதணி; இன்றும் தென்பாண்டிப் பகுதியில் மக்கள் வழக்கத்திலுள்ளது]

தண்டடி-த்தல் *tanḍaḍi-,* 4 செ.குவி. (v.i.) படை, படைவீட்டில் தங்குதல்; to encamp, as an invading army.

[தண்டு + அடி-.]

தண்டத்தலைவன் *tanḍa-t-talaivan,* பெ. (n.) படைத்தலைவன்; commander of an army. "தண்டத்தலைவருந் தலைத்தார்ச் சேனையும்" (சிலப். 26, 80).

[தண்டு → தண்டம் + தலைவன்]

தண்டத்தான் *tanḍattān,* பெ. (n.) கூற்றுவன்; yaman. "அவண்ணந் தண்டத்தான் கூற" (பிரமோத் 3: 23).

மறுவ. காலன்; கூற்றுவன்

[தண்டு → தண்டம் + அத்து + ஆன். படைக்கலனுடைய எமன்.]

தண்டத்தீர்வை *tanḍa-t-tīrvai,* பெ. (n.). தண்டனையாகச் செலுத்தும் வரி; penal assessment.

[தண்டம் + தீர்வை]

தண்டத்துக்கழு-தல் *tanḍattu-k-kaḻu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. பொருள் முதலியன வற்றைப் பயனின்றிக் கொடுத்தல்; to give money etc., uselessly and under compulsion. 2. இழப்பாக இறுத்தல்; to suffer penalty.

[தண்டத்துக்கு + அழு-.]

தண்டதரன் *tanḍa-daran,* பெ. (n.) 1. கூற்றுவன் (தண்டிப்பவன்) (பிங்.); yaman, as one who punishes. "தண்டதரன்செல் கரும்பகடு" (குமர. பிர. மீனாட். பிள். 38). 2. வீமன் (வின்.) (கதாயுதத்தையுடையவன்); Bhiman, as club - bearer. 3. அரசன் (யாழ்.அக.); king. 4. குயவன் (யாழ்.அக.); potter.

[தண்டம் + தரன்]

தண்டதாசன் *tanḍa-dāšan,* பெ. (n.) அடிமை (யாழ்.அக.); slave.

[தண்டம் + தாசன்]

தண்டதாமிரி *tanḍa-dāmiri,* பெ. (n.) காலம் காட்டும் கருவியாகிய கன்னல் வட்டில் (யாழ்.அக.); hour-glass.

[தண்டம் + தாமிரி. தண்டம் - துளை; தாமிரி - தாமிரம்]

தண்டதாரணம் *taṇḍa-dāraṇam,* பெ. (n.) ஆணை; order.

[தண்டம் + தாரணம்]

தண்டந்தீர்வை *taṇṭan-tīrvai,* பெ. (n.) தண்டத்தீர்வை பார்க்க; see *taṇḍa-t-tīrvai* (செ.அக.).

[தண்டம் + தீர்வை]

தண்டநாயகம் *taṇḍa-nāyagam,* பெ. (n.) 1. படைத் தலைமைப் பணி; commandership of an army. "தண்ட நாயகம் பரகேசரி பல்லவவரையற்கு" (S.I.I. ii. 306). 2. அரசன்; king, as the lord who punishes.

[தண்டு → தண்டம் + நாயகம்]

தண்டநாயகன் *taṇḍa-nāyagan,* பெ. (n.) 1. தண்ட நாயகம் பார்க்க; see *taṇḍa-nāyagam.* 2. நந்தி; Nandhi, as the chief of Šivan's host.

[தண்டு → தண்டம் + நாயகன்]

தண்டநீதி *taṇḍa-nīdi,* பெ. (n.) அரசியல் கூறும் நூல்; science of polity. தண்ட நீதியா மனுநீதி" (பிரபோத. 13, 13).

[தண்டு + நீதி]

தண்டப்படு-தல் *taṇḍa-p-paḍu-,* 20 செகுவி. (v.i.) ஒறுப்புக்கட்டணம் வரையறை செய்தல்; to be fined, punished. "சட்டரைப் பிழைக்கப் பேசுவார் ஒருகாசு தண்டப் படுவது" (T.A.S.i. 9).

[தண்டம் + படு-]

தண்டப்பாசிகன் *taṇḍa-p-pāšigan,* பெ. (n.) கொலைகாரன் (யாழ்.அக.); murderer.

[தண்டம் + பாசிகன்]

தண்டப்பேர் *taṇḍa-p-pēr,* பெ. (n.) குடிகளிடமிருந்து வாங்கும் வரியின் பட்டிகை (நாஞ்.); rent-roll, showing the tax due from the ryots.

[தண்டம் + பேர்]

தண்டப்பொருள் *taṇḍa-p-poruḷ,* பெ. (n.) ஒறுப்புக்கட்டணமாக வாங்கும் பொருள் (பிங்.); money collected as fines.

[தள் → தண்டு → தண்டம் + பொருள்]

தண்டபாணி *taṇḍa-bāṇi,* பெ. (n.). 1. முருகக் கடவுள்; Lord Murugan. 2. திருமால் (வின்.); Thirumāl. 3. கூற்றுவன் (வின்.); Yaman.

[தண்டம் + பாணி; தண்டத்தைக் கையில் கொண்டவன்]

தண்டபாலகம் *taṇḍa-pālagam,* பெ. (n.) வாயிற் காவல்; gate-keeping.

தண்டபாலன் *taṇḍa-pālan,* பெ. (n.) வாயிற் காப்போர் (யாழ்.அக.); gate-keeper.

தண்டபிண்டம் *taṇḍa-piṇḍam,* பெ. (n.) பயனற்றவர்க்கு இடும் வீண்சோறு (இவ.); food wasted on useless persons.

[தண்டம் + பிண்டம்.]

தண்டபுத்தி *taṇḍa-putti,* பெ. (n.) பீகார் மாநில ஒட்டரப்பகுதிக்கும், வங்கத்திற்கும் நடுவில் உள்ள பகுதி; a place in between northern Bihār and Bengal. "தன்ம பாலனை வெம்முனை யழிக்க வண்டுறை சோலை தண்ட புத்தியும்" (முதல் இராசேந்திரன் மெய்கீர்த்தி) (கல்.வெ.அக.).

தண்டம்[1] *taṇḍam,* பெ. (n.) செங்கோல் (சுக்கிர நீதி, 22); sceptre.

[தண்டு → தண்டம்]

தண்டம்[2] *taṇḍam,* பெ. (n.) ஒறுப்புக்கட்டணம் (இ.வ.); fine. "திருக்கைக் காறை பொன்னின் பட்டை மேற்குண்டங் கெவணமும் வைத்து விளக்கிற்று ஒன்றில் தண்டம் இரண்டில்" (S.I.I. ii, 51).

தண்டம்[3] *taṇḍam,* பெ. (n.) 1. கோல்; cane, staff, rod, walking-stick. "தண்டங் கமண்டலங் கொண்டு" (பழமொ.) 2. தண்டாய்தம் (சூடா.); club, bludgeon, a weapon. "தண்டமுடைத் தருமன்" (தேவா. 1055: 6). 3. குடைக்காம்பு (சூடா.); handle of an umbrella or parasol. 4. உலக்கை; pestle. "தண்ட மிடித்த பராகம்" (தைலவ. தைல. 56). 5. படகுத்துடுப்பு (இவ.); oar. 6. மத்து (யாழ்.அக); churning rod. 7. ஓகியர் அமர்ந்த நிலையில் இடக்கையைத் தாங்கும் கவைக்கோல்; stick to hold the left hand of samyasis. 8. உடம்பு; body. "நீற்றுத்

தண்டத்தராய் நினைவார்க்கு" *(தேவா. 1107, 3).* **9. படை** *(திவா.);* army. **10. படை வகுப்பு வகை** *(குறள், 767, உரை);* array of troops in column. **11. திரள்** *(அக.நி);* crowd. **12. எதிரிகளைக் கையாளும் நான்கு வகை வழிகளில், இறுதியாக ஒறுத்து அடக்குகை** *(சீவக. 747, உரை.);* one among the four ways of dealing the opponents. **13. ஒறுப்பு** *(தண்டனை);* punishment, penalty. "தண்டமுந் தணிதி பண்டையிற் பெரிதே" *(புறநா. 10:6).* **14. வரி;** impost, tax. **16. தேவையில்லாமல் ஏற்படும் இழப்பு;** loss; useless expense. அவன் செலவழித்தது தண்டமாய்ப் போய்விட்டது. **17. கருவூலம், மூலபண்டாரம்;** treasury. **18. வணக்கம்;** obeisance, adoration, prostration. தண்டமிட்டுச் செய்த விண்ணப்பம். **19. யானை கட்டும் இடம்** *(சூடா.);* elephant's stable. **20. யானைசெல்வழி** *(திவா.);* elephant's track or way. "வனகரி தண்டத்தைத் தடவி" *(கம்பரா. வரைக்காட்சி. 5).* **21. ஒரு நாழிகை நேரம்** *(யாழ்.அக.);* a unit of time, nāḻigai. **22. வீண்;** waste. தண்டச்சோறு *(உ. வ.).* **23. ஆளொன்றின் உயரமாய் நான்கு முழங்கொண்ட ஒரு நீட்டலளவை;** pole as a linear measure = the height of a man = 4 cubits = 2 taṉu.

தெ. தண்டமு

[துள் → தள் → தண்டி → தண்டம் (வ.வ. 171)]

தண்டம்⁴ *taṇḍam,* பெ. (n.) **தூணின் கனஅளவு;** cubic measure of the pillar. தண்டியாக இருக்கிறது.

[தண்டு → தண்டி → தண்டம் (வ.வ.)]

தண்டம்⁵ *taṇḍam,* பெ. (n.) **பண்டைத் தமிழ்நாட்டு நீட்டலளவு;** a linear measure of ancient Tamilnāḍu. "தனுவிரண் டதுவோர் தண்டம்" *(கந்தபு. அண்டகோ. 6).*

மறுவ. தோல்

[தண்டு → தண்டி → தண்டம் (வ.வ.171)]

பண்டைத் தமிழ்நாட்டில், விரல், சாண், முழம் ஆகிய உடலுறுப்புகள் அளவுகளாகப் பயன்பட்டன. அவைச் செந்தரப்பட்டு குறிப்பிட்ட அளவுகளை மட்டும் குறிக்கத் தொடங்கின. ஒரு கோல் என்பது 2'-9" நீளம் ஆகும். சோழர்காலக் கோயில்களின் பீடச் சுவர்களில் அளவுகள் செதுக்கப்பட்டிருக்கும். பெரம்பலூர் மாவட்டம் வாலிகண்டாபுரம் சிவன் கோயிலில் 3.37மீ நீளக்கோல் வெட்டப்பட்டுள்ளது. இது, ஒரு தண்டம் ஆகும்.

நீட்டல் அளவு வாய்பாடு வருமாறு:

1 விரல்		- 1 ³/₈"	35 செமீ. (3.48958)
6 விரல்	- ஒரு சாண்	- 8 ¹/₄"	21 செமீ.
2 சாண்	- ஒரு முழம்	- 16 ¹/₂"	42 செமீ.
2 முழம்	- ஒரு கோல்	- 33"	84 செமீ.
4 கோல்	- ஒரு தண்டம்	- 11'-0"	335 மீ.
8 தண்டம்	- ஒரு கயிறு	- 88'-0"	2682 மீ.
500 தண்டம்	- ஒரு கூப்பிடு தூரம்	- 1 மைல் 1675 கிமீ. 220 அடி	
4 கூப்பிடு தூரம்	ஒரு காதம்	- 4 மைல் 67 கிமீ 1 பர் 220 அடி	
4 காதம்	- ஒரு ஓசனை	- 16 மைல் 268 கிமீ. 5 பர்; 220 அடி	

கோல் என்பது வில் (தனு) எனும், சொல்லாலும் குறிக்கப்படும். இரண்டு தனுவில் (தனு) ஒரு ஆளுயரம் (5'-6"). இதனைத் தண்டம் எனக் கந்தபுராணம் குறிப்பது வடநாட்டு வழக்காகும். ஆளுயர அளவை நரன் என்னும் சொல்லால் வடவர் குறிப்பர்.

தண்டம் எனும் சொல்லிற்குப் பதிலாக கோல் என்ற சொல்லும் வழங்கி வந்துள்ளது. செந்தர அளவுகளோடு பிற அளவுகளும் வழக்கத்தில் இருந்துள்ளன.

24 விரல்	வில் முழம்
25 விரல்	பிரசாபத்யம்
26 விரல்	வில் முனை
27 விரல்	தனு கிரகம்

திண்டிவனம் வட்டம் கீழ் எடையாளம் ஏரியில் 3.76 நீளக்கோடு வெட்டி "உடையார் ஸ்ரீ ராசேந்திர தேவற்கு யாண்டு 16வது. கழனி தரமிட நிலமளந்த பதினாறு சாண் கோல்" எனச் செதுக்கப்பட்டுள்ளது. இந்த நீளம் 27 விரல் கோலால் 4, கொண்டது. ஒரு சாண் நீளம் 23.5 மி.மீ. ஆகும் தண்டம் இங்கு கோல் எனப்பட்டது. தண்டத்தை முழு நீளமாகக் கொண்டு, சிறு அளவுகள் வகுத்துக் கொள்ளப்பட்டன.

தண்டம்செய்-தல் *taṇḍam-šcy-, 1* செ.குன்றாவி. (v.t.) *பகைவரை அழித்தல்;* to destroy enemy.

[தன் → தண்டி → தண்டம் + செய்-.]

தண்டம்பண்ணு-தல் *taṇḍam-paṇṇu-, 5* செ.குன்றாவி. (v.t.) *அடிவீழ்ந்து வணங்குதல்;* to worship by prostration. "மேனிபாதி செய்த வரைத் தண்டம்பண்ணி" *(கொக்கோ. பாயி. 4.).*

[தண்டம் + பண்ணு-.]



தண்டம்பிடி-த்தல் *taṇḍam-piḍi-, 4* செ.குன்றாவி. (v.t.) *தண்டம் வாங்குதல் (இ.வ.);* to collect fine.

[தண்டம் + பிடி-.]

தண்டம்போடு[1]-தல் *taṇḍam-pōḍu-, 19* செ.குன்றாவி. (v.t.) *ஒறுப்புக்கட்டணமிடுதல்;* to impose fine.

[தண்டம் + போடு-.]

தண்டம்போடு[2]-தல் *taṇḍam-pōḍu-, 19* செ.குவி. & செ.குன்றாவி. (v.i. & v.t.) *வணங்குதல்;* to prostrate in worship, as a devotee.

[தண்டம் + போடு-.]

தண்டமாதங்கம் *taṇḍa-mādaṅgam,* பெ. (n.) *நந்தியாவட்டம்;* common wax flower.

[தண்டு + மாதங்கம்]

தண்டமானங்கொட்டு-தல் *taṇḍamāṉaṅ-koṭṭu-, 5* செ.கு.வி. (v.i.) *செருக்கோடு முழங்குதல்;* to bluster arrogantly. *நீ தண்ட மானங் கொட்டினாலும், ஒருவரும் பயப்பட மாட்டார்கள் (தாஞ்.).*

[தண்டமானம் + கொட்டு-.]

தண்டமானம் *taṇḍa-māṉam,* பெ. (n.) *தண்டை மானம் (யாழ்.அக.) பார்க்க;* see *taṇḍai-māṉam.*

[தண்டுமானம் → தண்டமானம்]

தண்டயக்குச்சி *taṇḍaya-k-kucci,* பெ. (n.) *சுவரின் உச்சியில் கூரையின் அடிப்பாகத்தைத் தாங்கும் மரக்கட்டை;* cross pole for the roof of a wall.

[தண்டு → தண்டயம் + குச்சி]

தண்டயச்சில்லு *taṇḍaya-c-cillu,* பெ. (n.) *சுவரின் மேற்பகுதியில் அழகுக்காகவும், காப்புக்காகவும் பொருத்தப்படும், 3/4' சதுர அடி அளவுள்ள, சிறுகல் வரிசை:* 3/4 square feet bricks-row used on the upper-surface of a wall, for decoration and protection *(முகவை).*

[தண்டயம் + சில்லு]

தண்டயமரம் *taṇḍaya-maram,* பெ. (n.) *1. கோக்காலி (நாஞ்.);* wall bracket. *2. மரக் கட்டை பாவிய பரண்;* wooden-loft.

[தண்டயம் + மரம்]

தண்டயப்பூடு *taṇḍaya-p-pūḍu,* பெ. (n.) *சுவரில் முளைக்குஞ் செடி;* the plant growing on the wall.

[தண்டயம் + பூடு]

தண்டயல் *taṇḍayal,* பெ. (n.) *தோணிக்குச் சுக்கான் பிடிப்பவர்;* helms-man of the boat.

சூரக்கிளை வலை ஏலேலோ சுணக்கமென்ன
தண்டயலே ஏலேலோ (நாட்டார் பாடல்)

[தண்டயம் → தண்டயல்]

தண்டயாத்திரை *taṇḍa-yāttirai,* பெ. (n.) *படையெடுத்துச் செல்லுகை;* military expedition. "எழுந்தனன் றண்டயாத்திரை" *(அருணா.பு. பிரதத்த. 7).*

[தண்டம் + Skt. யாத்திரை]

தண்டயாமன் *taṇḍa-yāmaṉ,* பெ. (n.) *அகத்தியன்;* the great sage Agattiyaṉ, the chief of Šiddha school of thought *(சா.அக.).*

தண்டயோகம் *taṇḍa-y-ōgam,* பெ. (n.) *ஒக வகை (சாதகசிந். 1975);* an auspicious ōgam.

தண்டர் *taṇḍar,* பெ. (n.) தண்டனை செய்வோர்; those who impose punishment. "தண்டருங் காணத் தந்தாண்டருள்" *(மருதூரந். 38).*

[தண்டம் → தண்டர்.]

தண்டரை *taṇḍarai,* பெ. (n.) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தக வட்டத்திலுள்ள ஊர்; a place in Cheṅgalpaṭṭu district at Madurāndagam taluk.

[தண்டலை → தண்டரை]

குளிர்ந்த சோலைகள் அடர்ந்துள்ள பகுதி; அஃதாவது, கதிரவனொளியும் புகாவண்ணம் அடர்ந்தும், குயில்கள் புகுதற்கேதுவாகவும் உள்ள, தண்ணறுங்கா.

தண்டல்[1] *taṇḍal,* பெ. (n.) *1.* தண்டுகை; collecting, as tax. *2.* தண்டும் பொருள்; collection, amount collected. *3.* வரியைத் தண்டுபவன்; tax-collector. *4.* வட்டியைப் பிடித்துக் கொண்டு, தரும் கடன்; loan from which the interest is deducted in advance. *5.* தவறுகை (பிங்.); failure, omission. "தண்டலிறவஞ் செய்வோர்" *(கம்பரா. மாரீசன். 162). 6.* தடை; obstruction, hindrance. "தண்டலில்லா துடன்கூட்டல்" *(கூர்மபு. சூதகா. 33). 7.* எதிர்க்கை; resisting, opposing. "தண்டலை நாகந்தவிர்" *(மருதூரந். 60).*

[தண்டு → தண்டல்]

தண்டல்[2] *taṇḍal,* பெ. (n.) ஒறுப்பு (தண்டனை); punishment. "யான்செய் தண்டலே தகவிலாமை" *(திருவாத. பு. மண்சுமந்த. 13).*

[தண்டம் → தண்டல்]

தண்டல்[3] *taṇḍal,* பெ. (n.) படகுத்தலைவன் (வின்.); chief of a small vessel or ship.

தெ. த்ண்டெலு ம. தண்டல்

Mhr. taṇḍal; U. taṇḍel

[தள் → தண்டு → தண்டம் → தண்டல்]

தண்டல்[4] *taṇḍal,* பெ. (n.) சிறைச்சாலை; prison. "இன்னாள் வரையும் வல்லத்துத் தண்டலில் வைத்து நாங்கள், நெடு நாள்படகிடந்து மிறுக்குப் படுகையில்" *(தெ. கல். தொ. xii: 224).*

[தண்டம் → தண்டல்]

தண்டல்கழனி *taṇḍal-kaḻaṇi,* பெ. (n.) செங்கை மாவட்டத்திலுள்ள சைதாப்பேட்டை வட்டத்து ஓரூர்; a place in Cheṅgalpaṭṭu district at Saidapet taluk.

[தண்டல் + கழனி = வரிதண்டும், தண்டல் நாயகத்திற்கு வழங்கிய கழனி, தண்டல்கழனி எனப்பட்டது.]

தண்டல்நாயகம் *taṇḍal-nāyagam,* பெ. (n.) அரசர்க்குரிய இறை, வருவாய், தண்டும் தலைமையதிகாரி; the chief tax-collector. "இலைப்புணைப்பட்ட கரைப்படையிலார் கட்டு தண்டல்நாயகம்" *(முதற்குலோத்துங்கன் கி. பி. 1079 (S.I.I. v. 990).*

[தண்டல் + நாயகம்]

தண்டல்பக்கம் *taṇḍal-pakkam,* பெ. (n.) தோணியில் தண்டலிருக்குமிடம்; paddle - pointed place for punting a boat.

[தண்டல் + பக்கம்]

தண்டல்மேனி *taṇḍal-mēṉi,* பெ. (n.) வரிவகை; a tax (செ.அக.).

தண்டலம்[1] *taṇḍalam,* பெ. (n.) உடலுக்கு நலம் நல்கும், குளிர்மை நிறைந்த இடம்; a cool and healthy place (சா.அக.).

மறுவ. பூந்தோட்டம்

[தண்டல் + அம் = உடலுக்கு வளமும் நலமும் ஊட்டும், மலர்கள் செறிந்த தண்ணறுங்கா சூழ்ந்தவிடம். 'அம்' சாரியை]

தண்டலம்[2] *taṇḍalam,* பெ. (n.) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஓரூர்; a village in Kāñjipuram dt.

[தண்டலை → தண்டலம். 'அம்' சாரியை.]

சோலையைக் குறிக்கும் மற்றொரு தமிழ்ச் சொல். அது தண்டலை எனவும், தண்டலம் எனவும் வழங்கும்.

தண்டலர் *taṇḍalar,* பெ. (n.) பகைவர்; enemies. "தாணிழ னீங்கிய தண்டல ரானோர்" *(சேதுபு. மங்கலதீர்த். 8).*

[தண்டு → தண்டல் + அர். தண்டு = படைக்கலம். தண்டலர் = படைக்கலத்தை

உடையவர். குளிர்மை தவிர்ந்த குணத்தவரே பகைவர். எஞ்ஞான்றும் வெஞ்சினத்தி லாழ்ந்து, அருளற்ற பண்பில ராய்த் திகழ்வர். ஒருகா. தண்டு + அல் → அர் - தண்டலர். 'அல்' எதிர்மறை நிலையில் - ஈங்கு சொற்சாரியையாக வருவது கண்டுகொள்க.]

தண்டலாளன் *taṇḍal-āḷaṉ,* பெ. (n.) வரி தண்டுவோன்; tax-collector. "தனத்தை யெல்லாம் வாங்குமின் றண்டலாளர்" *(திருவாத. பு. திருப் பெருந். 116).*

[தண்டல் + ஆளன்]

தண்டலிலக்கை *taṇḍal-ilakkai,* பெ. (n.) பழைய வரிவகை *(கல்.);* an ancient tax.

தண்டலிற்கடமை *taṇḍaliṟ-kaḍamai,* பெ. (n.) மக்கள் தாமே செலுத்தும் வரி; a kind of tax.

மறுவ. அந்தராயம்

[தண்டு → தண்டல் + இல் + கடமை. தண்டல் = வரி செலுத்துதல்]

தண்டலை *taṇḍalai,* பெ. (n.) 1. சோலை; grove. "சிறுகுடித் தண்டலை கமழுங் கூந்தல்" *(அகநா. 204).* 2. பூந்தோட்டம்; flower garden. "பல்வேறு பூத்திரட் டண்டலை சுற்றி" *(மதுரைக். 341).* 3. சிவன்கோயில் உள்ள இடம்; an ancient Siva shrine.

மறுவ. தண்டரை; தண்டலம்

[தண்டல் → தண்டலை]

தண்டலைக்கொட்டி *taṇḍalai-k-koṭṭi,* பெ. (n.) தந்தலைக்கொட்டி (வட்டக் கிலுகிலுப்பை); rattle nail dye *(சா.அக.).*

[தண்டலை + கொட்டி]

தண்டலைநாமத்தி *taṇḍalai-nāmatti,* பெ. (n.) தண்டிலைநாமத்தி பார்க்க; see *taṇḍilai-nāmatti.*

தண்டலையார்சதகம் *taṇḍalaiyār-šadagam,* பெ. (n.) சாந்தலிங்கக் கவிராயர் இயற்றிய நூறு பாக்களால் ஆகிய ஒரு நூல்; a poem of 100 stanzas by Šāndaliṅga-k-kavirāyar.

[தண்டலையார் + சதகம்]

தண்டவந்தார் *taṇḍa-vandār,* பெ. (n.) வரி தண்டுதற்கு வந்தவர்கள்; tax collectors. "இந்நெல் தண்டவந்தார்க்கு மெய்கண்டு சோறிடுவதாகவும்" *(S.I.I. iv. 867).*

தண்டவாணி[1] *taṇḍa-vāṇi,* பெ. (n.) பொன் மாற்றறிய உதவும் ஆணி (S.I.I.ii, 237); golden needle for testing the standard of gold.

தண்டவாணி[2] *taṇḍa-vāṇi,* பெ. (n.) மாற்றுக் குறைந்த குற்ற வாணிகத்திற்குரிய பொன்; degrade and faulted gold. "தண்டவாணிக்குக் கால்மாற்றுத் தண்ணிய பொன்" *(S.I.I.iv.867).*

[தண் → தண்ட + வாணி. தண் → தண்ணிய= மாற்றுக் குறைந்த தரங்குன்றிய, வாணி = வாணிகப்பொன்]

தண்டவாணிகம் *taṇḍa-vāṇigam,* பெ. (n.) தண்டம் பெறுவதற்கான, குற்றவணிகம்; punishable and faulted trade.

[தண்டம் + வாணிகம்]

தண்டவால் *taṇḍa-vāl,* பெ. (n.) தண்டைமானம் (வின்.) பார்க்க; see *taṇḍai-māṉam.*

[தண்டை + வால்]

தண்டவாலதி *taṇḍa-vāladi,* பெ. (n.) யானை; elephant.

[தண்டை + வால் + அது + இ.]

தண்டவாளச்செந்தூரம் *taṇḍavāḷā-c-cendūram,* பெ. (n.) தண்டவாளத்தைத் துண்டுகளாக்கி, கொல்லனுலையில் ஊதி, அதனுடன் கந்தகம், வீரம் சேர்த்துப் புடமிட்ட செந்தூள்; the cast iron is calcified into red oxide by the process contemplated in Šiddha medicine and given for gunmam, anemia, diarrhoea and loss of appetite *(சா.அக.).*

[தண்டவாளம் + செந்தூரம்]

தண்டவாளம் *taṇḍa-vāḷam,* பெ. (n.) 1. உருக்கிரும்பு (வின்.); cast steel. 2. இருப்புச் சட்டம் (இ.வ.); iron rail, girder. 3. புடைவை வகை (இ.வ.); a kind of saree.

க. தண்டவாள



[தட்டை வாளம் → தண்டவாளம்]

தண்டற்கடமை *taṇḍar̲-kaḍamai,* பெ. (n.) வரி தண்டுவோர் மீதிட்ட பழைய வரிவகை (S.I.I.iii, 115); tax on rent-farming.

தண்டற்காரன்[1] *taṇḍar̲-kāran̲,* பெ. (n.) 1. வரி முதலியன தண்டுவோன்; collector of village revenue; one who collects amounts due from creditors. 2. வரியீட்டல் செய்யும் சிற்றூர் பணியாளர்; a village servant under the headman of a village, employed in collecting revenue. தடியெடுத்தவனெல்லாம் தண்டற் காரனா? (பழ.). 3. கந்துவட்டிக் கடனை திரட்டுபவர்; oned who collects the repayments on loan. கடைக்குத் தண்டல்காரன் வந்தால் பணம் கொடுத்துவிடு (உ.வ.).

தண்டற்காரன்[2] *taṇḍar̲-kāran̲,* பெ. (n.) தண்டல்[3] (இ. வ.) பார்க்க; see *taṇḍal*[1].

[தண்டல் + காரன்]

தண்டற்காரன்[3] *taṇḍar̲-kāran̲,* பெ. (n.) சலவைத் தொழிலாளர்களின் தலைவன்; chief of a washermen's group.

[தண்டல் + காரன்]

தண்டற்குறிப்பு *taṇḍar̲-kur̲ippu,* பெ. (n.) வரிப்பதிவுப் பதிவேடு; account of rents, tribute or other dues.

[தண்டல்+ குறிப்பு]

தண்டற்கொட்டி *taṇḍar̲-koṭṭi,* பெ. (n.) நீர்ப்பூடுவகை; aquatic plant of the species aponogeton.

மறுவ. கொட்டிக்கிழங்கு

[தண்டல் + கொட்டி]

தண்டன் *taṇḍan̲,* பெ. (n.) 1. கோல்; staff. 2. வணக்கம் (பிங்.); salutation, prostration by way of worship.

[தண்டம் → தண்டன்]

தண்டன்சமர்ப்பி-த்தல் *taṇḍan̲-šamarppi-,* 4 செ.குன்றாவி. (v.t.) தண்டனிடு-தல் பார்க்க; see *taṇḍan̲-iḍu-*. "மன்னனார் முன்புசென்று தண்டன் சமர்ப்பித்து (குருபரம். 168).

[தண்டன் + சமர்ப்பி-.]

தண்டனம் *taṇḍan̲am,* பெ. (n.) ஒறுப்பு (தண்டனை); punishment. "பாவர் தண்டனஞ் செய்வான்" (குற்றா. தல. கவுற்சன. 95).

[தண்டி → தண்டனம் (வ. வ. 171)]

தண்டனிடு-தல் *taṇḍan̲-iḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) நெடுஞ்சாண் கடையாகவிழுந்து வணங்குதல், மார்பு நிலத்துற விழுந்து வணங்குதல் (சிலப். 23: 121: அரும்.); to make obeisance by prostration.

[தண்டம் → தண்டன் + இடு-. தடிபோற் கிழே விழுந்து வணங்குதல் (வ.வ. 172)]

தண்டனை *taṇḍan̲ai,* பெ. (n.) ஒறுப்பு; punishment, penalty. "முறைமையிற் றண்டனை புரிவேன்" (சிவரக. தேவர்முறை. 5).

[தண்டம் → தண்டன் → தண்டனம் → தண்டனை (வ.வ. 171). ஒருகா. தண்டு + அன் + ஐ. தண்டுகொண்டு தண்டிக்கை இத்தன்மைத்து.]

தண்டா[1] *taṇḍā,* பெ. (n.) 1. நச்சரவு (இ.வ.); difficulty, mischief, vexation. அவன் தப்புத் தண்டாவிலெல்லாம் மாட்டிக் கொள்ளாதவன். 2. சண்டை (இ.வ.); dispute, squabble. 3. சிக்கல் (இ.வ.); puzzle, intricacy, trammel. 4. கதவை யடைத்து இடும் இருப்புத்தடி (நெல்லை); iron bar used in bolting a door.

[தண்டு → தண்டாம் → தண்டா (வ.வ. 171)]

தண்டா எனுஞ்சொல் உருதுமொழியிலிருந்து வந்ததாகச் சென்னை அகரமுதலியிற் குறிக்கப் பட்டுள்ளது. தண்டம் என்ற நேர் பொருளிலேயே தமிழில் வழங்குகிறது. தண்டம் என்பதன் மரூஉ எனக் கொள்வதே பொருந்தும். அஃதே போன்று தண்டு → தண்டை, தண்டம் → தடி எனும் பொருட் கூறுகள் தமிழ் சார்ந்தவையே.

தண்டா[2] *taṇḍā,* பெ. (n.) தண்டால் (இவ.) பார்க்க; see *taṇḍāl.*

தெ. தண்டமு

[தண்டி → தண்டா.]

தண்டாக்காரன் *taṇḍā-k-kāraṉ,* பெ. (n.) தொந்தரை செய்தவன்; troublesome person, quarrelsome.

[தடி → தண்டு → தண்டா + காரன். தடி போன்றவற்றால் அடித்துத் தொல்லை கொடுப்பவன்]

தண்டாக்கோர் *taṇḍā-k-kōr,* பெ. (n.) தண்டாக்காரன் பார்க்க; see *taṇḍā-k-kāraṉ.*

[தண்டா + கோர்.]

தண்டாகதம் *taṇḍāgadam,* பெ. (n.) மோர்; butter-milk (சா.அக.).

தண்டாகாரம் *taṇḍā-gāram,* பெ. (n.) *1.* உடம்பு வளைவின்றி நேராயிருக்கும் நிலை; straight and stiff pose of the body, as rod-like. *2.* விட்டிசையின்மை; continuous, unbroken flow of words. "தண்டாகாரமாய்ச் சொன்னான்" *3.* முறைப்படி நேராகச் சோழி வைத்துக் கணிக்கும் முறை; arrangement of cowries in a straight-line, representing numbers in calculation, opp to šarppāgāram (செ.அக.).

[தண்டம் + அகம் + ஆர் + அம் - தண்டாகாரம். 'ஆர்' நிறைவு குறித்த சொற்பேறு. 'அம்' சொல்லாக்க விகுதி.]

தண்டாங்கட்டைப்புல் *taṇḍāṅ-kaṭṭai-p-pul,* பெ. (n.) இஞ்சிவேர்ப் புல்வகை; ginger-grass, Panicum repens.

[தண்டு + ஆம் + கட்டை + புல்.]

தண்டாங்கீரை *taṇḍāṅ-kīrai,* பெ. (n.) தண்டுக் கீரை (இவ.) பார்க்க; see *taṇḍu-k-kīrai.*

[தண்டு → தண்டம் + கீரை - தண்டங் கீரை → தண்டாங்கீரை]

தண்டாங்கோரை *taṇḍāṅ-kōrai,* பெ. (n.) ஒரு வகை கோரைப்புல்; a kind of sedge grass (சா.அக.).

[தண்டு + ஆம் + கோரை - தண்டாங் கோரை]

தண்டாதனம் *taṇḍādaṉam,* பெ. (n.) இருக்கை (ஆசனம்) (தத்துவப். 107, உரை.); a yogic posture.

[தண்டு + ஆசனம் → ஆதனம் - ச → த திரிபு. தண்டாதனம்: தண்டு நிலத்திற் கிடத்தல் போலிருக்கும் ஓக, நிலை.]

தண்டாது *taṇḍādu,* பெ. (n.) படாதபடி; without touching (சா.அக.).

[தண்டி → தண்டாது.]

தண்டாது: பட்டும்படாதும், தொட்டுந் தொடாதிருத்தல் போல், செயற்படுதல்.

தண்டாபதானகம் *taṇḍā-badāṉagam,* பெ. (n.) காக்கைவலிப்பு நோயினால், உடம்பை மடக்கும் ஆற்றலற்று, அசைவற்றிருக்கும் விறைத்த நிலைமை; a condition in which the attack of epilepsy with convalsion deprives the body of its power of movement and flexibility making it stiff and rigid like rod (சா.அக.).

[தடி → தண்டி → தண்டு + ஆபதானகம்]

தண்டாமரை *taṇḍāmarai,* பெ. (n.) *1.* குளிர்ச்சியான தாமரை; lotus of a cooling nature. *2.* ஒரு வகைக் கோரை; a kind of sedge grass (சா.அக.).

[தண் + தாமரை.]

தண்டாமரைக்கோரை *taṇḍā-marai-k-kōrai,* பெ. (n.) கோரை வகை (யாழ்.அக.); a kind of sedge, cyprus.

[தண் + தாமரை + கோரை]

தண்டாமற்சாப்பிடல் *taṇḍāmaṟ-šāppiḍal,* பெ. (n.) பல்லிற் படாதபடி விழுங்குதல்; to swallow without touching the teeth (சா.அக.).

[தண்டாமல் + சாப்பிடல்]

தண்டாமுண்டா *taṇḍā-muṇḍā,* பெ. (n.) தண்டுமிண்டு பார்க்க; see *taṇḍu-miṇḍu.* தண்டா முண்டாப் பேர்வழி (இவ.).

[தண்டுமிண்டு → தண்டாமுண்டா. முரட்டுக்குணமுள்ள, அடிதடிப் பேர்வழி]

தண்டாமை *taṇḍāmai,* பெ. (n.) *1.* நீங்காமை (சூடா.); in separableness, unbroken contact, as with object, place or work. *2.* படாமை; not touching.

[தண்டு → தண்டாமை]

தண்டாய்தபாணி *taṇḍāyda-pāṇi,* பெ. (n.). முருகக்கடவுள் (தண்டத்தைக் கையிலுடையவர்); Murugan, as holding a club (செ.அக.).

[தண்டம் + ஆயுதம் + பாணி]

முருகனின் பிள்ளைவிளையாட்டில், தண்டம் ஊன்றுகோலாகவே பயன்பட்டது. அது சண்டைக்கருவியாகப் பயன்படாதபோதும் பொதுவழக்காக, தண்டாய்தபாணி என வழங்கப்படுகிறது. பாணி - கையில் கொண்டவன் (வ.வ.).

தண்டாய்தம் *taṇḍāydam,* பெ. (n.) 1. கதைப் படை; club, as a weapon. "தண்டாய்தமுந் திரிசூலமும் விழ" (கந்தரலங். 25). 2. தண்டாயம் (இ.வ.) பார்க்க; see *taṇḍāyam.*

[தண்டம் + ஆய்தம்]

தண்டாய்தன் *taṇḍāydan,* பெ. (n.) முருகக் கடவுள் (தண்டத்தை உடையவன்); Lord Murugan. 2. வைரவக் கடவுள்; Lord Vairavar. 3. ஐயனார்; Aiyanār. 4. வீமன்; Bhiman (செ.அக.).

[தண்டு → தண்டம் + ஆய்தன்]

தண்டாயம்[1] *taṇḍāyam,* பெ. (n.) தவணைப்பகுதி (வின்.); instalment.

[தண்டு + ஆயம்]

தண்டாயம்[2] *taṇḍāyam,* பெ. (n.) சுமைத் தாங்குந் தண்டு (இ.வ.); pole for carrying a burden or vehicle, yoke.

ம. தண்டாயம்

[தண்டு + ஆயம்]

தண்டாயம்[3] *taṇḍāyam,* பெ. (n.) குறடுவகை; a kind of pincers. "திருவிலர் நாவினை வாங்க வாங்கு தண்டாயத்தினால் வலித்து" (பெரியபு. சத்தி. 4).

[தண்டு + ஆயம்]



தண்டாயம்[4] *taṇḍāyam,* பெ. (n.) ஏம மணல்; sand mixed with gold - gold ore (சா.அக.).

தண்டார் *taṇḍār,* பெ. (n.) தாமரை; lotus(சா.அக.).

[தண்டு → தண்டார்]

தண்டார்மூப்பு *taṇḍār-mūppu,* பெ. (n.) கோலூன்றி நடக்கும் கிழப்பருவம்; old-age, decrepitude. "தண்டார்மூப்பு வந்துன்னைத் தளரச் செய்து நில்லாமுன், உண்டேல் உண்டு மிக்கது உலகம் அறிய வைம்மினேய்" (கல்வெட்டு).

[தண்டு + ஆர் + மூப்பு.]

தண்டாரணியம் *taṇḍāraṇiyam,* பெ. (n.) 1. தண்டகாரணியம் பார்க்க; see *taṇḍa-gāraṇiyam.* "தண்டாரணியத்துத் தாபதப் பள்ளி" (சீவக. 337).

[தண்டம் + ஆரணியம். தண்டு → தண்டம். Skt. araṇyā → த. ஆரணியம்.]

தண்டாரம் *taṇḍāram,* பெ. (n.) 1. குயவர் சுழலாழி; potter's wheel. 2. மதயானை; elephant in rut. 3. வில்; bow. 4. வண்டி; carriage. 5. தோணி; boat (செ.அக.).

குயவர் சுழலாழி, கோல் கொண்டு சுற்றப்படுவதால், தண்டாரம் எனப்பட்டது. கொங்குப்பகுதியில் திருவை கோலால் சுற்றப்படுவதில்லை. குயவனார் வனையும் போது, அவர் மனைவி கைகளால் சுற்றுவார்.

[தண்டு → தண்டம் + ஆயம் → ஆரம் → தண்டாரம்]

தண்டால் *taṇḍāl,* பெ. (n.) உடற்பயிற்சி வகை; a kind of excercise in Indian gymnastics (செ.அக.).

க. தண்டால்.

[தடி → தண்டி → தண்டால்]



தண்டாலசகநோய் *taṇḍāla-šaganōy,* பெ. (n.) உடலைத் தண்டத்தைப்போல் நீட்டி, விரைவில் கொல்லும் ஒரு நோய்; a prostating disease bringing collapse and death (சா.அக.).

தண்டாலரத்தம்விழல் *taṇḍālarattam-viḻal,* பெ. (n.) ஆண்குறியின் வழியாக அரத்தம் கசிதல்; a venereal disease followed by discharge of blood, through the penis (சா.அக.).

[தண்டால் + இல் + அரத்தம் + விழல்]

தண்டாலு *taṇṭālu,* பெ. (n.) யாமிகக் கிழங்கு, தட்டையான திரண்ட தண்டுள்ள கிழங்கு; yam.

[தண்டு → தண்டாலு.]

தண்டாளர்முதல் *taṇṭāḷar-mudal,* பெ. (n.) பழைய வரி வகை; an ancient tax.

[தண்டாளர் + முதல். தண்டுதல் - வரி செலுத்துதல். தண்டு + ஆளர் - வரி செலுத்துபவர்]

தண்டான் *taṇḍāṉ,* பெ. (n.). 1. கோரை வகை; a species of sedge, Cyperus rotundus - tuberosus. "தண்டானாகிய கோரையை" (பெரும்பாண். 217, உரை). 2. புடலங்காய் வகை (சங்.அக.); a kind of snake-gourd.

[தள் → தண்டு → தண்டன் → தண்டான் தடித்த, தண்டுள்ள கீரைவகை, தண்டு போல் உருண்டு திரண்ட புடலை.]

தண்டான்கட்டைப்புல் *taṇḍāṉ-kaṭṭai-p-pul,* பெ. (n.) இஞ்சி வேர்ப்புல்; ginger grass (செ.அக.).

தண்டான்வேர் *taṇḍāṉ-vēr,* பெ. (n.) மருந்து வேர்; herbal root (சா.அக.).

தண்டி[1] *taṇḍi,* பெ. (n.) தண்டற்காரன் (யாழ்ப்.); collector of dues, tax-collector (செ.அக.).

[தண்டு → தண்டி]

தண்டி[2]**-த்தல்** *taṇḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஒறுத்தல்; to chastise, scourge, punish. "நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்" (திருவாச. 12:4). 2. வெட்டுதல் (வின்.); to cut off, sever, mutilate, hack. "தாறந் தண்டித்த தண்டி" (சிவரக. பாயி. 7). 3. கட்டளையிடுதல்; to order, direct. அவனை அவ்விதஞ் செய்யத் தண்டித்தேன் (இ.வ.).

[தள் → தண் → தண்டு → தண்டம் → தண்டி-.]

தண்டி[3]**-த்தல்** *taṇḍi-,* 4 செ.கு.வி. (v.i.) வருந்தி முயலுதல்; to take pains, try hard. "இதிலே நன்றாய்த் தண்டிக்கிறான்" (யாழ்ப்.).

[தள் → தண் → தண்டு → தண்டம் → தண்டி-.]

தண்டி[4] *taṇḍi,* பெ. (n.) 1. பருமன்; thickness, bigness. "எத்தனை தண்டி" (வின்.). 2. மிகுதி; abundance, plenty. மழை தண்டியாய்ப் பெய்தது (உ.வ.). 3. தரம்; degree of competence, quality, etc., of persons or things compared with each other. அவன் தண்டிக்கு இவனில்லை (வின்.).

[தடி → தண்டி]

தண்டி[5]**-த்தல்** *taṇḍi-,* 4 செ.கு.வி. (v.i.) பருத்தல்; to become fat, plump, to swell in size. ஆள் தண்டித்துவிட்டான் (உ.வ.) (செ.அக.).

[தள் → தண் → தடி → தண்டி-.]

தண்டி[6] *taṇḍi,* பெ. (n.) 1. தண்டியலங்காரத்தைத் தமிழிற் செய்த ஆசிரியர்; author of Taṇḍi-y-alaṅgāram, a work on rhetoric, translated from Šanskrit in to Tamiḻ. 2. நாயன்மார் அறுபத்து மூவரில் ஒருவர், a canonised Šaiva šaint, one of 63. "நாட்ட மிகு தண்டிக்கு மூர்க்கற்கு

மடியேன்" (தேவா. 737, 5). 3. கூற்றுவன்; Yaman. "தண்டி நன்காஞ்சுகர் வினை செய்ய" (திருவிளை. திருமண. 108). 4. செருக்குள்ளவன்-ள்; proud person. "தன்சொல்லே மேற்படுப்பான் தண்டிதடி பிணக்கன்" (அறநெறி. 5).

[தன் → தண் → தண்டி.]

தண்டி[7] *taṇḍi,* பெ. (n.) சிவனடியார் அறுபத்து மூவரில் ஒருவரான சண்டேசுரர்; a canonised Šaiva šaint. "அண்ணலந் தண்டித னடிகள் போற்றுவாம்" (தணிகைப்பு. கடவுள்வா. 9).

மறுவ. சண்டேசுரர், தண்டீசர்

தண்டி[8] *taṇḍi,* பெ. (n.) எட்டடியுள்ள இசைப் பாட்டு வகை; a kind of metrical composition in eight lines, the last containing the burden of the song.

[தண்டு + இ. தண்டு = தண்டு கொண்டு தாளமிட்டுப் பாடும் பாடல்.]

தண்டி[9] *taṇḍi,* பெ. (n.) 1930ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் காந்தியடிகள் உப்பெடுத்த கூர்ச்சரம்; கடலோர ஊர்; a seashore place in Gujarat state where Gandhi conducted salt satyagraha.

தண்டி[10] *taṇḍi,* பெ. (n.) தண்டிகை பார்க்க; see *taṇḍigai.* வால் நீண்ட கரிக்குருவி வலமிருந்து இடஞ்சென்றால் கால்நடையாய்ச் சென்றவரும் கனதண்டி யேறுவரே (பழ.).

[தன் → தண்டு → தண்டி; தண்டால் தூக்கப்பெறும் பல்லக்கு (வ.வ.)]

தண்டிக்கா *taṇḍi-k-kā,* பெ. (n.) தண்டுக்கோல் பார்க்க; see *taṇḍu-k-kōl.*

தண்டிக்கால் *taṇḍi-k-kāl,* பெ. (n.) தண்டுக் கோல் பார்க்க; see *taṇḍu-k-kōl.*

தண்டிகொள்(ளு)-தல் *taṇḍi-koḷ(ḷu)-,* 16 செ. குன்றாவி. (v.t.) தண்டு[1]-தல் பார்க்க; see taṇḍu[1]-. நாலு வேலிக்கும் உள்பட்ட மனையால் மாதம்தொறும் இருநாழி அரிசி தண்டிக் கொள்ளக் கடவதாகவும் தண்டும் இடத்து இதுக்குத் தாழ்வு சொன்னாருண்டாகில் (S.I.I. iv. 399/1986).

[தண்டு → தண்டி + கொள்-.]

தண்டிகம்[1] *taṇḍigam,* பெ. (n.) மீன்வகை; a kind of fish (சா.அக.).

[தண்டு → தண்டிகம் - தட்டையான சதைப்பற்றுள்ள மீன்]

தண்டிகம்[2] *taṇḍigam,* பெ. (n.) முத்துச்சரம்; wreath of pearls.

தண்டிகை *taṇḍigai,* பெ. (n.) பல்லக்கு வகை; a kind of palanquin. "பொற்றண்டிகை திரள்தாங்க (குளா. கல். 23).

க. தண்டிகெ.

[தண்டு → தண்டி → தண்டிகை]



தண்டிகைக்குச்சு *taṇḍigai-k-kuccu,* பெ. (n.) தாழ்வாரந் தாங்கி; staff bearer (செ.அக.).

[தண்டிகை + குச்சு]



தண்டிதரம் *taṇḍi-daram,* பெ. (n.) ஆற்றல் (யாழ்ப்.) வல்லமை; worth, ability, capacity.

[தண்டி[4] + தரம்]

தண்டிப்பன்னா *taṇḍi-p-paṉṉā,* பெ. (n.) 'பன்னா' வகைக்கடல் மீன் (நெல்லை. மீனவ.): a kind of sea-fish.

தண்டிப்பு *taṇḍippu,* பெ. (n.) *1.* தண்டனை; chastisement, punishment. *2.* வெட்டுகை (யாழ்.அக.); cutting.

[தண்டி² → தண்டிப்பு]

தண்டியக்கட்டு *taṇḍiya-k-kaṭṭu,* பெ. (n.) கல்லுக்குக் கல் நீட்டிக்கொண்டே வந்து அமைக்கும் கட்டுமானம்; a kind of stone architecture.

[தண்டியம் + கட்டு]

தண்டியக்கொம்பு *taṇḍiya-k-kombu,* பெ. (n.) *1.* நடிக்கப் பழகுவோர் ஆதரவாகக் கொள்ளுங்கழி (யாழ்ப்.); staff to support beginners learning to dance. *2.* கூரைதாங்குங் குறுக்குகட்டை (யாழ்ப்.); cross-pole for the roof of a house. *3.* மக்கள் நெருக்கியுட் புகாதபடி இடும் குறுக்குமரம் (யாழ்ப்.); wooden cross-bar on props to prevent people from crowding upon a reserved place. *4.* பல்லக்குக்கொம்பு (நாஞ்.); palanquin-poles.

[தண்டியம் + கொம்பு]

தண்டியடிகணாயனார் *taṇḍi-y-aḍiga-ṇāyaṉār,* பெ. (n.) அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்; Šaiva šaint one of 63.

[தண்டி + அடிகள் + நாயனார்]

தண்டியபாலி *taṇḍiyapāḷi,* பெ. (n.) சிவப்புச் சதுரக்கள்ளி; a red variety of square spurge (சா.அக.).

தண்டியம் *taṇḍiyam,* பெ. (n.) *1.* கச்சூர்க்கட்டை (C.G.); under-prop of a bracket. *2.* வாசற்படியின் மேற்கட்டை; lintel. "வாசற் கடையில் தண்டியத்தைப் பற்றிக்கிடக்கிற" (திவ். திருப்பா. 123: வியா.). *3.* புறக்கூரையைத் தாங்குங்கட்டை (இ.வ.); corbel. *4.* தண்டியக்கொம்பு, 1 (சிலப். 3. 10: உரை.); see *taṇḍiya-k-kombu, 1.*

[தண்டு → தண்டியம் (வ.வ. 171)]

தண்டியமரம் *taṇḍiya-maram,* பெ. (n.) தண்டய மரம்; wall bracket (செ.அக.).

மறுவ. கோக்காலி

[தண்டயமரம் → தண்டியமரம்]

தண்டியல் *taṇḍiyal,* பெ. (n.) *1.* பெரிய வீடு (C.N.); large house. *2.* பல்லக்கு (இவ.); palanquin.

[தண்டியம் → தண்டியல்.]

தண்டியலங்காரம் *taṇḍi-y-alaṅgāram,* பெ. (n.) வடமொழியில் தண்டியாசிரியரால் இயற்றப் பெற்ற காவியாதரிசமென்னும் அணிநூலின் மொழி பெயர்ப்பாகிய தமிழ்நூல்; a tamil treatise on rhetoric being a translation of Daṇḍi's Kāvyādaršam in Šanskrit (செ.அக.).

[தண்டி + அலங்காரம்]

தண்டியிற்புண் *taṇḍiyiṟ-puṇ,* பெ. (n.) ஆண் குறியில் வரும் புண்வகை; chancre (செ.அக.).

தண்டிலம் *taṇḍilam,* பெ. (n.) சிவபூசனை செய்ததற்காக அமைத்துக்கொண்ட இடம்; place designed for worshipping Šivaṉ.

[தண்டி → தண்டிலம்]

தண்டிலைநாமத்தி *taṇḍilai-nāmatti,* பெ. (n.). கண்டங்கத்திரி; prickly brinjal (சா.அக.).

தண்டிற்கொட்டி *taṇḍiṟ-koṭṭi,* பெ. (n.) மருந்துப்பூடு வகை; a kind of herbal plant (சா.அக.).

தண்டினம் *taṇḍiṉam,* பெ. (n.) நீர்மேற்படர் கொடி; water weed (சா.அக.).

தண்டீசுரன் *taṇḍī-šuraṉ,* பெ. (n.) அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்; name of a canonized Šaiva šaint, one of 63. தண்டீசுரனோலை (கல்.).

[தண்டி + ஈசுரன்]

தண்டீத்து *taṇḍīttu,* பெ. (n.) நெல்லின் தாளினை இற்றுவிழச் செய்யும் நோய் (இ.வ.); a hardening disease in the stalks of paddy.

[தண்டு + ஈத்து. தாளடி நெற்பயிரின் தண்டுப்பகுதியைத் தாக்கும் நோய். ஈற்று → ஈத்து. ஒ.நோ. காற்று → காத்து; மாற்று → மாத்து.]

தண்டு¹-தல் *taṇḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* சேர்த்தல், திரட்டுதல்; to collect, levy, gather, recover, as debts, rents, taxes etc., "தண்ட நிச்சயித்த காசில்" (S.I.I. iii. 2ll.). *2.* வருத்துதல்;

to insist, trouble "பருகெனத் தண்டி" *(பொருந. 104).* 3. இணைத்தல்; to join, attach; "வாசுகியைத் தண்டி யமரர் கடைந்த கடல்" *(தேவா. 387: 10).* 4. நீங்குதல்; to leave, abandon; "கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்" *(முது. காஞ். 10.3).*

[தள் → தண்டு-. தண்டுதல் = சேர்த்தல், திரட்டுதல்.]

தண்டு[2]**-தல்** *taṇḍu-,* 4 செ.குவி. (v.i.) 1. தணிதல்; to decrease, diminish. "தண்டுத லின்றி யொன்றி" *(கம்பரா. மிதிலை. 8).* 2. கெடுதல்; to perish. "தண்டாக் காதல்" *(பு.வெ.9.45.கொளு).* 3. தடைப் படுதல்; to be hindered; "தண்டாதி யாருந் தாம்வேண்டிய" *(ஞான. 15: 6).* 4. விலகுதல்; to be in seclusion, to separate. "எவனொருவன் தண்டித் தனிப்பகை கோள்" *(நாலடி. 324).* 5. தொடுதல்; to come in contact. "நாக்கிலே தண்டாமல் மருந்தைச் சாப்பிட்டான்" *(வின்.)* 6. மனமமைதல்; to be satisfied. "கண்டு தண்டாக் கட்கின்பத்து" *(மதுரைக். 16).* 7. விருப்பங்கொள்ளுதல்; to be eager, keenly desirous. "தண்டித் தண்டிற் றாஅய்ச் செல்வாரும்" *(பரிபா. 10: 100).* 8. சின மூண்டெழுதல்; to rise in fury. "செங்கண் மழவிடையிற் றண்டி" *(பு.வெ. 3: 1).*

ம. தண்டுக; தெ. தண்டு, தண்டு; து. தண்டியுனி; கோத. தண்ட்; துட. தொட்; பட. துண்டு.

[தள் → தண்டு-.]

தண்டு[3] *taṇḍu*, பெ. (n.) 1. கோல்; cane, staff, stick. "தண்டுகா லூன்றிய தனிநிலையிடையன்" *(அகநா. 274).* 2. மரக்கொம்பு; branch of a tree. 3. திருமால் முதலியோருக்கான படைக்கலம்; bludgeon, club, as a weapon especially of Thirumāl. "சங்குமலி தண்டுமுதற் சக்கரமு னேந்தும்" *(திவ். பெரியதி. 3.9:10).* 4. தண்டுக்கோல் பார்க்க; see *taṇḍu-k-kōl.* (இவ.). 5. தண்டாயம்; pole of a palanquin or other vehicle. "இடையிடை தண்டிற் றாங்கினர்" *(கம்பரா. கார்முக. 3).* 6. பல்லக்கு; palanquin. எனக்குத் . . தண்டேற வேணும் *(ஈடு. 4. 6:2).* 7. உலக்கை; pestle. *(பிங்.)* 8. செடி, முதலியவற்றின் தாள்; stalk, stem. கீரைத்தண்டு. 9. விளக்குத்தண்டு; lampstand. "தண்டினின் றெரியுந் தகளி" *(கல்லா. 23:33).* 10. வீணை; lute. *(பிங்.)* "சரிகமபதநிப் பாடற் றண்டுதைவரு செங்கையோன்" *(பாரத. இந். 42).* 11. செவித்தண்டு; ear-lobe. 12. மூக்குத் தண்டு; bridge of the nose. 13. முதுகந்தண்டு; spinal cord. "தண்டுட னோடித் தலைப்பட்ட யோகி" *(திருமந். 612).* 14. ஆண்குறி (இவ.); penis. 15. வரம்பு; ridge, embankment in fields *(அகநி.)* 16. பச்சோந்தி *(பிங்.)*; chameleon. 17. தொளை யுடைப் பொருள் *(பிங்.)*; tube, anything tubular. 18. மூங்கிற்குழாய்; bamboo receptacle. "மதுப்பெய் தண்டும்" *(காஞ்சிப்பு. திருக்கண். 36).* 19. மூங்கில் *(மலை.)*; bamboo. 20. ஆடவை யோரை *(பிங்.)*; gemini in the zodiac. 21. செருக்கு; pride. அவனுக்குத் தண்டு அதிகப்பட்டிருக்கிறது (நாஞ்). 22. தண்டீத்து பார்க்க; see *taṇḍittu.* 23. பூவிதழ் *(பிங்.)*; petal of flowers. 24. படை *(பிங்.)*; army, troops.

[துள் → தள் → தண்டு. திரட்சிக் கருத்தினின்று கிளைத்த வேரடி திரண்ட அடியினையுடைய வாழைத் தண்டு; விளக்குத் தண்டு. திரண்ட பொருள் உருளுந்தன்மைத்து. உருண்டு திரண்ட ஊன்றுகோல், திரண்ட உலக்கைப்பண்ட முதலானவை. உருட்சியையும், திரட்சியையும் ஒருங்கே குறித்தன. உருட்சியும் திரட்சியும் உடையவை நீளுந்தன்மையுள்ள நிலையில் முதுகந் தண்டு, வீணைத்தண்டு முதலான உருட்சி → திரட்சி = சொற்களை நீட்சிக்கருத்தில் தோற்றுவித்தன.

உருட்சியுந் திரட்சியுமிக்க (தள் → தண்டு → தண்டம் = படைக்கலம்) பருத்துத் திரண்டகம்பு, திரண்டபடை; படைக்கலன்களுடன் கூடிய திரண்ட படை. தண்டநாயகன் = படைத்தலைவன். படையெடுத்தலைக் குறிக்கத் தண்டு-தல் என்னும் வழக்கு ஏற்பட்டது. தண்டுதல் = சேர்த்தல், திரட்டுதல். வரிதண்டுபவன், தண்டற்காரன் போன்ற சொற்கள் மக்களிடையே இன்றும் வழக்கூன்றி யுள்ளன. (மு.தா. 232)]

தண்டின் வகைகள்

அ. தரைக்குமேல் வளருந்தண்டு; shoot system

1. நிமிர்தண்டு; caudex
2. தென்னை, பனை, மா போன்றவற்றின் தண்டு;
3. மூங்கில்தண்டு; culm
4. பூக்குந்தண்டு; scape
5. நொய்யதண்டு அல்லது படர்தண்டு - பிரண்டை; trailing
6. கிடைத்தண்டு; prostrate
7. சாய்தண்டு; decumbent
8. பரவுதண்டு; diffuse
9. ஊர்தண்டு; creeping
10. ஓடுகொடித்தண்டு; runner
11. ஓடுதண்டு; stolen
12. குட்டையோட்டுத்தண்டு; offset
13. குருத்துத்தண்டு; sucker
   இலைக்கறி (முட்டைக்கோசு)
   பூங்கறி (காலிபிளவர்)

ஆ. தரைக்கீழ்தண்டு; subter ranean shoots
இஞ்சி, உருளை, சேம்பு, கிழங்குவகைகள் பூண்டு முதலானவை இவற்றுள் அடங்கும்.

தண்டு[4] *tandu*, பெ. (n.) 1. திரட்டும் பணம், (தானியம்) போன்றவை; collection, as of money or grain. "தனிசு தண்டுகள் வாங்கிக் கொடுத்து" (*S.I.I. V.321*). 2. படைதங்கும் இடம்; cantonment. "இவரிருந்த இடம் பங்களூர்த்தண்டு" (*மீனாட். சரித். i:118*).

[தள் → தண்டு]

தண்டு[5] *tandu*, பெ. (n.) நடுநாடி; a principal tubular vessel of the human body. "பொட்டெழக் கத்தி பொறியெழத் தண்டிட்டு நட்டிடுவார்க்கு நமனில்லை தானே" (*திருமந். 691*).

[தள் → தண்டு.]

தண்டுஇழு-த்தல் *tandu-ilu-*, 4 செ.குன்றாவி. (v.t.) தண்டு வலித்தல்; to pull a paddle.

ஈரவலை ஏத்தி ஏலேலோ
நால்வரும் தண்டிழுக்க ஏலேலோ
- நாட்டார் பாடல்

[தண்டு + இழு-]

தண்டுக்காரன் *tandu-k-kāraṉ*, பெ. (n.) மரக்கலத்தை இயக்கத் தண்டுபிடிப்பவன்; கொம்பால் கட்டுமரத்தைச் செலுத்துபவன்; boat-man.

ம. தண்டுகாரன்

[தண்டு + காரன்]

தண்டுக்கீரை *tandu-k-kīrai*, பெ. (n.)
1. வெள்ளைத் தண்டுக்கீரை; common spinach.
2. தண்டங்கீரை பார்க்க; see *tandaṅkīrai*.
3. குள்ளத்தண்டுக் கீரை; stunted spinach.

ம. தண்டன்சீர

[தள் → தண்டு + கீரை = திரண்டு உருண்ட கீரைத்தண்டு]

தண்டுக்காரி *tandu-k-kāri*, பெ. (n.) தொட்டாற் கருங்கி; touch-me-not plant.

[தண்டு + காரி]



தண்டுக்குத்தண்டு *tandukku-t-tandu*, பெ. (n.) போட்டியிட்டு கொண்டு, தண்டு வலிக்கை; to push and pull an oar.

தண்டுக்குத் தண்டு ஏலேலோ
மாறுதண்டு ஏலேலோ
அணியத் தண்டு ஏலேலோ
போட்டு வலிக்கணும் ஏலேலோ
- நாட்டார் பாடல்

தண்டுக்கை *tandukkai*, பெ. (n.) துடுப்பில் பொருத்தப்பட்டிருக்கும் தடி; paddles joint pole.

[தண்டு + கை.]

கள்ளியின் தின்னம்பால் ஏலேலோ
ஒக்கம தண்டுக்கை ஏலேலோ
-நாட்டார் பாடல்

தண்டுக்கோல் *taṇḍu-k-kōl,* பெ. (n.) 1. படகுத் துடுப்பு; oar, paddle. 2. படகு தள்ளுதற்குரிய சவளமரம் (வின்.); iron-pointed pole for punting a boat (செ.அக.).

[தண்டு + கோல்]

தண்டுகட்டு-தல் *taṇḍu-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) மந்திர வித்தையினால் ஆண் தன்மையைப் போக்குதல் (யாழ்ப்.); to deprive a man of his virility, by magic. 2. ஒரு செயலுக்குத் தீவிர முயற்சி மேற்கொள்ளல்; to venture for a particular deed earnestly (இ.வ.). பக்கத்தூர் திருவிழாவை நடத்தவிடாமல் நிறுத்தியே தீருவதென்று தண்டுகட்டிக்கொண்டு புறப்பட்டனர். 3. அம்மன் கோயிலுக்கான சுடுமண் குதிரையைக் கோயிலுக்குத் தூக்கிச்செல்ல, இருபுறமும் மூங்கில்வாரைக் கோர்த்துக் கட்டுதல்; to attach bamboo beams on both sides of terracotta horse to enable it to convey to the temple.

[தண்டு + கட்டு-.]

தண்டுகை *taṇḍugai,* பெ. (n.) வரி ஈட்டுகை; tax collecting.

[தண்டு → தண்டுகை]

தண்டுச்சாறு *taṇḍu-c-cāṟu,* பெ. (n.) செடித் தண்டின் சாறு; juice from the stem of the plant (சா.அக.).

[தண்டு + சாறு]

தண்டுசுரம் *taṇḍu-šuram,* பெ. (n.) ஆண்குறி வீக்கத்தால் உண்டாகும் சுரம்; fever due to inflammation of penis (சா.அக.).

[தண்டு + சுரம்]

தண்டுசூலை *taṇḍu-šūlai,* பெ. (n.) ஆண் குறியில் ஏற்படும் ஒரு குத்தல்நோய்; pricking pain in the penis (சா.அக.).

[தண்டு + சூலை]

தண்டுத்துளை *taṇḍu-t-tuḷai,* பெ. (n.) சிறுநீர் நாளம்; urethral oritice (சா.அக.).

[தண்டு + தொளை → துளை.]

தண்டுதல் *taṇḍudal,* பெ. (n.) உண்ணாக்குத் தொடுதல்; touching of the uvula (சா.அக.).

தண்டுத்துளைத்தாசி *taṇḍu-t-tuḷai-tāši,* பெ. (n.) தாமரையிலை; lotus leaf (சா.அக.).

தண்டுநிமிற்று-தல் *taṇḍu-nimiṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) மரக்கலத்தைச் செலுத்தத் துணைக்கருவியைச் செயற்படுத்துதல் (செங்கை.மீன); to row a oar.

[தண்டு + நிமிர்த்து → நிமிற்று-.]

தண்டுநீர் *taṇḍu-nīr,* பெ. (n.) பூணூலணியும் விழாவில், நான்காம் நாள் நடைமுறை; a ceremony on the fourth day of upanayaṉam, among certain Brahmin sects (செ.அக.).

[தண்டு + நீர்]

தண்டுநோய் *taṇḍu-nōy,* பெ. (n.) ஆண்குறியின் வலிவுகுறைந்து, எரிச்சலையும், வலியையும் உண்டாக்கிப், புணர்ச்சியின்போது வெறுப்பு ஏற்படுத்தி, விதைப்பைக்கேடும், வீக்கமும் உண்டாக்கும், ஒரு வகை வளி நோய்; a disease of the male genital marked by pain, burning sensation, disinclination to sexual intercourse, swelling of the penis and the scrotum, supression of urine etc., (சா.அக.).

[தண்டு + நோய்.]

தண்டுப்பசை *taṇṭu-p-pašai,* பெ. (n.) தண்டுப்பீ பார்க்க; see *taṇḍuppī* (சா.அக.).

[தண்டு + பசை.]

தண்டுப்பற்று *taṇḍu-p-paṟṟu,* பெ. (n.) ஆண்குறி நோய்; disease of the penis (சா.அக.).

[தண்டு + பற்று.]

தண்டுப்பிளவை *taṇḍu-p-piḷavai,* பெ. (n.) ஆண்குறியிலுண்டாகும் ஒரு வகை நோய் (யாழ்.அக.); scirrhus of the penis.

[தண்டு + பிளவை.]

தண்டுப்பீ *taṇḍu-p-pī,* பெ. (n.) ஆண்குறியின் முன்தோலின், கீழ் படியும் நாற்றமுள்ள பசை; smegma (சா.அக.).

தண்டுப்பீர்க்கு *taṇḍu-p-pīrkku,* பெ. (n.) மருந்துச்செடி வகை (இராச. வைத். 99, உரை); a medicinal plant.

[தண்டு + பீர்க்கு]

தண்டுப்புண் *tandu-p-puṇ,* பெ. (n.) ஆண்குறிப் புண்; ulcer penis (சா.அக.).

[தண்டு + புண்]

தண்டுப்புற்று *taṇḍu-p-puṟṟu,* பெ. (n.). ஆண்குறி நோய் வகை (யாழ்.அக.); a venereal ulcer at the tip of the penis chancre.

[தண்டு + புற்று]

தண்டுபரு-த்தல் *taṇḍu-paru-,* 4 செ.குன்றாவி. (v. t.) ஆண்குறி காமவிருப்பால் விம்முதல்; to erect of the penis due to lust (சா.அக.).

[தண்டு + பரு-.]

தண்டுபீசம் *taṇḍu-pīšam,* பெ. (n.) சிறுகீரை; Pig greens (சா.அக.).

தண்டுபோடு-தல் *taṇḍu-pōḍu-,* 20 செ.குவி. (v.i.). 1. தண்டுவலி (வின்.) பார்க்க; see *taṇḍu-vali.* 2. ஊர்தி சுமத்தல் (இ.வ.); to carry a vehicle by its poles.

[தண்டு + போடு-.]

தண்டுமரம் *taṇḍu-maram,* பெ. (n.) தண்டுக் கோல் (இ.வ.) பார்க்க; see *taṇḍu-k-kōl.*

[தண்டு + மரம்]

தண்டுமலர் *taṇḍu-malar,* பெ. (n.) ஆண்குறி மலர்; glans penis (சா.அக.).

தண்டுமாரி *taṇḍu-māri,* பெ. (n.). 1. ஊரகத் தாய்த்தெய்வம்; a village goddess. 2. அடக்க மற்ற பெண்; bold, headstrong woman, virago. பெண்கள் தனிவழியே தண்டுமாரியாத் திரியலாகாது (இ.வ.).

[தண்டு + மாரி. தண்டு = படைக்கலம். மாரி = ஊரகத் தாய்த்தெய்வம்]

தண்டுமிண்டு *taṇḍu-miṇḍu,* பெ. (n.) எளிதிலடங்காமை (இ.வ.); obstinacy, stubbornness, insubordination, contumacy.

மறுவ. தண்டாமுண்டா

[தண்டு + மிண்டு]

தண்டுமுடுக்கம் *taṇḍu-muḍukkam,* பெ. (n.) குறி எழுச்சி; erection of the penis (சா.அக.).

[தண்டு + முடுக்கம்]

தண்டுமுடுகிநிற்றல் *taṇḍu-muḍukiniṟṟal,* பெ. (n.) ஆண்குறி விறைத்து நிற்றல்; penis remaining in the irection posture (சா.அக.).

[தண்டு + முடுகி + நிற்றல்]

தண்டுமுறி *taṇḍu-muṟi,* பெ. (n.) செடி நோய் வகை (இ.வ.); a blight affecting plants.

[தண்டு + முறி. தண்டுப்பகுதியை முறித்து விழச்செய்யும், செடிநோய்]

தண்டுரிணம் *taṇḍuriṇam,* பெ. (n.) அரிசிக் கழுநீர்; rice washed water (சா.அக.).

தண்டுலபலை *taṇḍulapalai,* பெ. (n.) திப்பிலி; long pepper - Piper longum (சா.அக.).

[தண்டுலம் → தண்டுலபலை]

தண்டுலம்[1] *taṇḍulam,* பெ. (n.) 1. அரிசி; rice. "தண்டுலம் விரித்துநற் றருப்பை சாத்தியே" (கம்பரா. கடிமண. 85). 2. நெல்; paddy. 3. சிறு கீரை; pig. greens.

[தண்டுதல் = விலக்குதல், நீக்குதல். தண்டு → தண்டுலம். பிணையடித்துப் புடைத்துப் பின் குத்தித் தவிடு போன்றவற்றை நீக்கியபின், மிஞ்சும் தவசமணி, அரிசி.

த. தண்டுலம் → Skt. taṇḍula]

தண்டுலம்[2] *taṇḍulam,* பெ. (n.) 1. வேள்வி செய்யும் இடம்; place to do Homam. 2. தண்டிலம் பார்க்க; see *taṇḍilam.* "தருமணன் மணி முத்தாகத் தண்டுல மியற்றி" (சூளா. சுயம்வர. 277). 3. மூங்கில்; bamboo.

[தண்டிலம் → தண்டுலம்]

தண்டுலம்பு *taṇḍulambu,* பெ. (n.) அரிசிக் கழுநீர்; rice cleaned water (சா.அக.).

தண்டுலாகன் *taṇḍulāgaṉ,* பெ. (n.) கடல் மீன் வகை; a kind of sea - fish.

தண்டுலாம்பு *taṇḍulāmbu,* பெ. (n.) அரிசிக் கஞ்சி (யாழ்.அக.); rice gruel (செ.அக.).

[தண்டுலம் + அம்பு = தண்டுலம்பு → தண்டுலாம்பு. தண்டுலம் = அரிசி]

தண்டுலி *taṇḍuli,* பெ. (n.) 1. திப்பிலி; long-pepper. 2. தண்டுக்கீரை; common spinach (சா.அக.).

தண்டுலியகம் *taṇḍuliyagam*, பெ. (n.) *சிறுகீரை;* pig greens *(சா.அக.).*

மறுவ. தண்டுலியம்

தண்டுலீகம் *taṇḍulīgam*, பெ. (n.) வாய் விளங்கம் *(சங்.அக.);* worm - killer *(செ.அக.).*

தண்டுலீயம் *taṇḍulīyam*, பெ. (n.) தண்டுலீகம் *பார்க்க;* see *taṇḍulīgam.*

தண்டுலேரம் *taṇḍulēram*, பெ. (n.) ஒருவகைக் கீரை; a variety of of greens *(சா.அக.)*

தண்டுலோகம் *taṇḍulōgam*, பெ. (n.) தண்டுலாம்பு; metal.

தண்டுலோதகம் *taṇḍulōdagam*, பெ. (n.) *1.* தண்டுலாம்பு *(யாழ்.அக.) பார்க்க;* see *taṇḍulāmbu. 2.* அரிசிக்கஞ்சி; rice-gruel.

[தண்டுலம் + ஓதகம். தண்டுலம் = அரிசி]

தண்டுவடம் *taṇḍu-vaḍam*, பெ. (n.) மூளையிலிருந்து உடல் முழுதும் உணர்வு களைக் கொண்டுசெல்லும், முதுகெலும்பினுள் அமைந்திருக்கும் நரம்புத்தொகுப்பு; spinal cord.

[தண்டு + வடம்.]

தண்டுவலி[1]-த்தல் *taṇḍu-vali-*, 4 செகுவி. (v.i.) படகுத்துடுப்புத் தள்ளுதல்; to row, paddle.

மறுவ. தளாதோவுதல்

[தண்டு + வலி-.]

தண்டுவலித்தல்[2] *taṇḍu-vali*, பெ. (n.) *1.* ஆண்குறி நீளுதல்; elongation of the penis. *2.* ஆண்குறி வலி; pain in the penis.

[தண்டு + வலித்தல்.]

தண்டுவாரம் *taṇḍu-vāram*, பெ. (n.) மேல்வார தாரருக்குக் கொடுக்கும் துண்டுவாரம்; land lords right *(செ.அக.).*

மறுவ. சாமிவாரம்

ம. தண்டுவாரம்

[தண்டு + வாரம்]

தண்டுவிடுதல் *taṇḍu-viḍudal*, பெ. (n.) கட்டடிக்கப்பட்ட நெல்லில் கருக்காய், பதர் நீங்கத், தூற்றுதலில் மேற்கொள்ளும் செயல்; to clean the paddy to remove the husk.

[தண்டு + விடுதல்]

தண்டூலியம் *taṇḍūliyam*, பெ. (n.) சிறுகீரை *(மலை);* species of amaranth.

மறுவ. தண்டுலோரம்

தண்டெடு-த்தல் *taṇḍeḍu-*, 4 செ.குன்றாவி. (v.i.) படையெடுத்தல்; to make a military expedition. "மன்னவர்க்குத் தண்டுபோல்" *(பெரியபு. கலிப்பகை.)*

மறுவ. போர் தொடுத்தல்

[தண்டு + எடு-. இஃதும், திரட்சிக்கருத்து பற்றியதே. திரண்ட படையுடன் சென்று பகைவருடன், போர்தொடுத்தல். தண்டெடுத்தல் என்றறிக.]

தண்டெடுப்பார் *taṇḍeḍuppār*, பெ. (n.) பல்லக்குச் சுமப்பவர் (M.E.R. 570 - 26); palanquin bearers.

[தண்டு + எடுப்பார் – தண்டெடுப்பார். தண்டு = பல்லக்கு. எடுப்பார் = சுமப்பவர்]

தண்டெரிவு *taṇḍerivu*, பெ. (n.) ஆண்குறி யெரிச்சல்; burning sensation of the penis *(சா.அக.).*

[தண்டு + எரிவு]

தண்டெலும்பு[1] *taṇḍelumbu*, பெ. (n.) முதுகெலும்பு *(யாழ்.அக.);* spine, back-bone.

ம. தண்டெல்லு

[தண்டு + எலும்பு]

தண்டெலும்பு[2] *taṇḍelumbu*, பெ. (n.) முள்ளந் தண்டெலும்பு; spine bone of the vertebral column *(சா.அக.).*

மறுவ. முள்ளெலும்பு, முதுகந்தண்டு

ம. தண்டெலும்பு, தண்டெல்லு

[தண்டு + எலும்பு]

தண்டேசன் *taṇḍēšaṉ*, பெ. (n.) சண்டேசுர நாயனார் (வின்.) பார்க்க; see *taṇḍēšura-nāyaṉār*, a Šaiva šaint.

மறுவ. சண்டீசர், தண்டியடிகள்

[தண்டு = படைக்கலம். தண்டு + ஈசன் = தண்டீசன் → தண்டேசன்]

தண்டேசுரப்பெருவிலை *taṇḍēšura-p-peru-vilai*, பெ. (n.) கோயிலதிகாரிகள் உறுதிப் படுத்தும் விலை (S.I.I. iv. 129); price fixed by the temple authorities *(செ.அக.).*

[தண்டேசுரம் + பெருவிலை → தண்டேசுவர பெருவிலை. தண்டேசுரர் கோயில் உடைமைகளை. மேற்பார்வை யிடும் அதிகாரிகள். இறுதியாக உறுதிப் படுத்தும் விலை. இவ்விலையினை அதிகாரிகள் இறுதியாக்கிய பின்பு, யாவராலும் கூட்டவோ, குறைக்கவோ முடியாது.]

தண்டேசுரன் *taṇḍēśuraṉ*, பெ. (n.) சண்டேசுர நாயனார் (வின்.) பார்க்க; see *šaṇḍēšura-nāyaṉār.*

மறுவ. சண்டீசுரன்

[தண்டு + ஈசுரன் = தண்டீசுரன் → தண்டேசுரன்]

தண்டேல் *taṇḍēl*, பெ. (n.) தண்டல்[3] (இ.வ.) பார்க்க; see *taṇḍal*[3] (செ.அக.).

[தண்டு → தண்டேல்]

தண்டேறு[1]-தல் *taṇḍēṟu-*, 5 செ.கு.வி. (v.i.) பல்லக் கேறுதல்; to ride in a palanquin. "நன்மைக்குத் தண்டேறப் பெறுவார்களாகவும்" *(S.I.I. v, 103).*

[தண்டு + ஏறு-.]

தண்டேறு[2] *taṇḍēṟu*, பெ. (n.) எலும்பு (யாழ்.அக.); bone.

தண்டேறுவரிசை *taṇḍēṟu-varišai*, பெ. (n.) பல்லக்கு ஏறும் உரிமை; the right to climb into the palanquin. "இவனுக்கு தண்டேறு வரிசையுங் குடுக்க"

[தண்டு + ஏறு + வரிசை]

தண்டை[1] *taṇḍai*, பெ. (n.) 1. குழந்தைகள், பெண்கள் ஆகியோர் காலில் அணிவதும், ஒன்றிற்கொன்று தொட்டாற்போலுள்ள முனைகளைக் கொண்டதும், உருட்டுக்கம்பி வடிவிலோ, அல்லது குழல் வடிவிலோ அமைந்த, வெள்ளியாற் செய்த காலணி; a kind of hollow anklet, made of silver worn by childred or girls. 2. வெள்ளியாற் செய்த குதிரைக் காலணிவகை (வின்.); a silver ornament put round the feet of horses. 3. கேடகம்; shield. "வள்ளித் தண்டையும்" *(சீவக. 2218).* 4. வால்; tail. "வேங்கைவரித் தண்டை" *(திருவாலவா. 46, 19).* 5. தண்டைமாலை (இ.வ.) பார்க்க; see *taṇḍai-malai.*

க. தண்டெ

[தண்டு → தண்டை (வ.வ.171)]

தண்டை[2] *taṇḍai*, பெ. (n.) நச்சரிப்பு (வின்.); trouble, vexation.

க. தண்டெ; Mar., H. taṇṭā

[தண்டு → தண்டை. தண்டெடுத்து ஏமாற்றித் திரியும் வல்லாண்மைக் காரனைத் தொந்தரைக்காரன் என்று, ஊர்ப்புறத்தே இன்றும் வழங்கி வருகின்றனர்]

தண்டைக்காரன் *taṇḍai-k-kāraṉ*, பெ. (n.) 1. நச்சரிப்போன்; troublesome fellow. 2. ஏமாற்றுக்காரன் (யாழ்.அக.); crafty person (செ.அக.).

க. தண்டெயவ

[தள் → தண் → தண்டை + காரன்]

தண்டைச்சுறா *taṇḍai-c-curā*, பெ. (n.) சுறாமீன் வகையுளொன்று; a kind of shark fish.

[தண்டை + சுறா]

இச் சுறா சங்கு குளிக்கும் 'முக்குவர்'க்குப் பெருந்தொந்தரை செய்யக்கூடியது. அதற்குப் பெரிதும் அஞ்சுவர். எனினும், எவ்வெதன் தீங்கினையும் பொருட்டாகக் கருதாமல், சங்கு குளிப்பார்தம் அருங்கலைத் தொழில் திறப்பாடுடைய தெனப் போற்றத்தக்கது.



தண்டைச்சுறவு *taṇḍai-c-curavu*, பெ. (n.) மீன்வகை; a kind of fish. வெள்ளிறால் தண்டைச்சுறவு.

[தண்டை + சுறா → சுறவு]

தண்டைநோய்[1] *taṇḍai-nōy*, பெ. (n.) நோய்வகை; a disease. "தண்டைநோய் பிரமேகம்" *(திருவாலவா. 27:14).*

[தண்டை + நோய்]

தண்டைநோய்[2] *taṇḍai-nōy*, பெ. (n.) அருவருக்கத்தக்க நோய்; vexatious disease.

[தண்டை + நோய்]

தண்டைப்பூடு *taṇḍai-p-pūḍu*, பெ. (n.) சுவரில் ஒட்டி வளரும் உயிரினம் (தெய்வச்.406); a parasitic plant growing on walls.

[தண்டை + பூடு]

தண்டைமாரம் *taṇḍai-māram*, பெ. (n.) தண்டைமானம் (யாழ்அக.) பார்க்க; see *taṇḍai-māṉam.*

[தண்டை + மாரம்]

தண்டைமாலை *taṇḍai-mālai*, பெ. (n.) பூமாலை வகை (கோயிலொ. 87.); a kind of small wreath.

[தண்டு → தண்டை + மாலை]

தண்டைமானம் *taṇḍai-māṉam*, பெ.(n.) விலங்குகள் வால்முறுக்குதல்; raising, coiling, and waving of the tail, as of beasts when mettlesome or angry. "தண்டை மானங் கொண்ட புலி".

[தண்டு → தண்டை + மானம்
மானம் : சொல்லாக்க விகுதி
ஒ.நோ. வருமானம், வெகுமானம்]

தண்டையம்புல் *taṇḍai-y-ambul*, பெ. (n.) ஒருவகைப்புல்; a kind of grass (சா.அக.).

[தண்டை + அம்பல்]

தண்டையல் *taṇḍai-yal*, பெ. (n.) வள்ளத்திற்கு, உரிமையாளன் (யாழ்ப்.); the owner of a boat.

மறுவ. மரக்கலம், கட்டுமரம்

தண்டைவெட்டி *taṇḍai-veṭṭi*, பெ. (n.) தண்டொட்டி (இ.வ.) பார்க்க; see *taṇḍoṭṭi*.

ம. தண்டொட்டி

[தண்டை + வெட்டி]

தண்டொட்டி *taṇḍoṭṭi*, பெ. (n.) மகளிர் காதணி வகை; a kind of women's ear-ornament. "வயிரத்தண்டொட்டி தந்தான்" (விறலிவிடு. 1116) (செ.அக.).

மறுவ. தண்டட்டி

ம. தண்டொட்டி

[தண்டு + ஒட்டி. தண்டு = காதுத்தண்டு ஒருகா. தண்டட்டி → தண்டொட்டி]



தண்டோபாயம் *taṇḍōbāyam*, பெ. (n.) 1. தண்டம்[4] பார்க்க; see *taṇḍam*[4]. 2. எதிரிகளைக் கையாளும் நான்கு வகை வழிகளில் இறுதியான, ஒறுத்து அடக்குகை; fourth way of handling enemies, by force in four ways of handling enemies.

[தண்டம் = ஒறுத்தல். உபாயம் = வழிகாட்டல், தண்டோபாயம் = ஒறுத்து வழிகாட்டல்]

தண்டோரா *taṇḍōrā*, பெ. (n.) பறையறைந்து மக்களைக்கூட்டிச் செய்தி கூறுதல்; proclamation by beat of tom-tom (செ.அக.).

மறுவ. தமுக்கடித்தல்

[தண்ணம் = ஒருகண் பறை. தண்ணம் + ஒலி - தண்ணொலி → தண்டொலி → தண்டோலி → தண்டோரா.]

தமிழ்நாட்டில், இச் சொல் ஊரக மாந்தரிடையே இரண்டறக் கலந்துவிட்டது. தமுக்கடித்தல் என்பதன் மறுவழக்கு தண்டோராப் போடுதலாகும். தப்பட்டை என்னும் பறையில் தட்டி எழுப்பும் ஒலி.

தண்டோராப்போடு-தல் *taṇḍōrā-p-pōḍu-*, 19 செ.குன்றாவி. (v.t.) 1. தமுக்கடித்தல்; notify the public by the beat of tom-tom. 2. பரப்புதல்: tom-tom, make public. வேலை கிடைத்த செய்தியை அதற்குள் ஊர் முழுக்க; தண்டோரா போட்டு விட்டாயா? (உ.வ.).

[தண்டோரா + போடு-.]

தண்டோற்பலம் *taṇḍōṟpalam*, பெ. (n.) ஒரு பூடு; conscora decussata. 2. மஞ்சணிற மருந்து வகை; yellow variety of sida rhom boidia. (சா.அக.)

தண்ண *taṇṇa*, கு.வி.எ. (adv.) எளிமையுடைய; sorely, distressingly. "எனதுள்ளந் தண்ண மெலிவிக்குமே" *(இறை. 52: 293).*

[தண் → தண்ண]

தண்ணகாரர் *taṇṇagārar*, பெ. (n.) பழைய புத்தரிலொவருவர்; one of the ancient Buddhas.

[தண்ணகாரர் - மனங்குளிர்மையாளர்]

தண்ணடை¹ *taṇṇaḍai*, பெ. (n.) *1.* நாடு *(திவா.)*; country. *2.* மருதநிலத்தூர் *(திவா.)*; village in an agricultural tract. "பிணங்குகதி ரலமருங் கழனித் தண்ணடை" *(புறநா. 285).* *3.* சிற்றூர் *(பிங்.)*; a small town. *4.* பச்சிலை *(திவா.)*; green leaves, foliage,herbage. *5.* காடு *(அக.நி.)*; forest.

[தண் → தண்ணடை]

தண்ணடை² *taṉ-ṉ-aḍai*, பெ. (n.) உடுக்கை வகை *(அக.நி.)*; a kind of drum *(செ.அக.)*.

[தண்ணம் → தண்ணடை]

தண்ணம்¹ *taṇṇam*, பெ. (n.) *1.* ஒருகட்பறை; drum with one head, used at funerals. *2.* மழு *(திவா.)*; battle-axe *(செ.அக.)*.

[தண் → தண்ணம்]

தண்ணம்² *taṇṇam*, பெ. (n.) *1.* குளிர்ச்சி; coldness, coolness. "தண்ணநின் றுதவலி னிறைமதி யாகி" *(கல்லா. 48: 2).* *2.* காடு *(யாழ்.அக.)*; forest.

[தண் + அம். தண் = குளிர்மை.]

தண்ணவன் *taṇṇavaṉ*, பெ. (n.) நிலவன் *(பிங்.)* *(குளிர்ந்தவன்)*; moon, as cool.

ம. தண்ணவன்

[தண் + அவன். குளிர்ச்சி பொருந்திய மதியன்]

தண்ணளி *taṉ-ṉ-aḷi*, பெ. (n.) அருள்; mercy, benevolence. "தண்ணளி வெண்குடை . . . வேந்தன்" *(பெரியபு. மநுநீதி. 45).*

ம. தண்ணளி

[தண் + அளி]

தண்ணா-த்தல் *taṇṇā-*, 4 செ.கு.வி. (v.i.) தாழ்த்தல்; to delay. "தண்ணாவா தடியேனைப் பணிகண்டாய்" *(திவ். திருவாய். 49:1).*

தண்ணாயகர்மகமை *taṇṇāyagar-magamai*, பெ. (n.) படைவரிவகை (M.E. R. 510 of 1921); a tax or contribution payable to the military activities.

[தண்டு + நாயகர் = தண்டநாயகர் → தண்ணாயகர் + மகமை]

தண்ணி *taṇṇi*, பெ. (n.) *1.* தண்ணீர் (இவ.) பார்க்க; see *taṇṇīr*. *2.* கள்; toddy. *3.* ஏலக்காய் புத்தோடு; cardamon husk *(செ.அக.)*

[தண்ணீர் → தண்ணி. மரூஉவழக்கு]

தண்ணிச்சாகை *taṇṇi-c-cāgai*, பெ. (n.) நீர் சார்ந்த இடப்பகுதி; seat of watter with place. "மூன்று மாவும் நிலம் தண்ணிச் சாகையினால்" *(S.I.I. II. 4.).*

[தண்ணி + சாகை]

தண்ணித்திருக்கை *taṇṇi-t-tirukkai*, பெ. (n.) அளவின் மிகுதியாய் உப்புநீராய்ச் சொரியுமொரு திருக்கைமீன் (நெல்லை.); a kind of electrical ray-fish.

தண்ணிப்பன்னா *taṇṇi-p-paṉṉā*, பெ. (n.) கடல் மீன்களுளொன்று *(முகவை. மீன.)*; a kind of sea-fish.

தண்ணிமை *taṇṇimai*, பெ. (n.) தாழ்வு; inferiority. 'கால்மாற்று தண்ணியபொன்" *(S.I.I. ii, 22)* (செ.அக.).

[தன் → தண் → தணி → தண்ணிமை. தணிவு - குறைவு, தாழ்வு. தண்ணிமை - தரங் குறைகை.]

தண்ணியசொல் *taṇṇiya-šol*, பெ. (n.) அமைதிப் படுத்துஞ் சொல் *(சீவக. 747)*; words of reconciliation.

[தன் → தண் → தணி → தண்ணிய + சொல் - தண்ணியசொல். தண் → தண்ணிய = குளிர்ந்த, அமைதியான, இணங்கிய. அமைதியூட்டிச், சினம் தவிர்த்து நெஞ்சகத்தைக் குளிர்மைப் படுத்தும் இணக்கமான சொல்.]

தண்ணியகுலம் *taṇṇiya-kulam*, பெ. (n.) கீழ்க்குலம்; lower stratea (untouchable).

[தன் → தண் → தணி → தண்ணிய + குலம் - தண்ணியகுலம் = தாழ்ந்தகுலம். தணிவு = தாழ்வு. தண்ணிய = தாழ்ந்த, கீழான]

தண்ணியபொன் *taṇṇiya-poṉ*, பெ. (n.) மாற்றுக் குறைந்த பொன்; inferior-gold. "பண்டாரத்துப் பொன்கொடு செய்த திருப்பட்டிகை ஒன்று தண்டவாணிக்குக் கால்மாற்றுத் தண்ணியபொன் பதின்கழஞ்சே முக்காலே மஞ்சாடியும்" *(S.I.I. II. 59.)*

[தண் → தணி → தண்ணிய + பொன். தண்ணிய = தரங்குறைந்த, மாற்றுக் குறைந்த. தண்ணியபொன் = தரங்குன்றிய பொன்.]

தண்ணியது *tanniyadu,* பெ. (n.) 1. குளிர்ந்தது, தாழ்ந்தது; cold, coolness, least. "தண்ணிய சாதியினார்க்கு அவுத்திரியாகாமையின்" (சி.சி.சு. 3 மறை).

[தள் → தண் → தண்ணிய + அது - தண்ணியது. தண்ணிய = குளிர்ந்த, அமைதியான. தணிவு = தாழ்வு. தண்ணிய = தாழ்ந்த. தண்ணியது = தாழ்ந்தது]

தண்ணியமரவேர் *tanniya-mara-vēr,* பெ. (n.) உடம்பினரம்பு; nerves in the body (சா.அக.).

[தண்ணிய + மரவேர்]

தண்ணியர் *tanniyar,* பெ. (n.) தாழ்ந்த குலத்தார்; low-caste. "தண்ணியராகையுமின்று சமைப்பாம்" (சிவதரு.சுவர்க்கநரக சேட.).

[தணி → தண்ணியர் - தாழ்ந்தவர்.]

தண்ணீர் *tannīr,* பெ. (n.) 1. குளிர்ந்த நீர்; cold fresh water. 2. நீர்; water. தண்ணீர், சுடு தண்ணீர் (உ.வ.).

[தண் + நீர் - தண்ணீர். தண் = குளிர்மை.]

தண்ணீர் வகைமை:
1. உப்புத்தண்ணீர்; salt water.
2. நல்லதண்ணீர்; fresh water.
3. ஆற்றுத்தண்ணீர்; river water.
4. ஊற்றுத்தண்ணீர்; spring water.
5. மழைத்தண்ணீர்; rain water.
6. பனித்தண்ணீர்; dew water.
7. கடல்தண்ணீர்; sea water.
8. கனிமத்தண்ணீர்; mineral water. (கனிச்சாரம் மிகுந்த நீர்).
9. ஆலங்கட்டி நீர்; ice melted water.
10. கொதிநீர்; boiled water.
11. வெந்நீர்; warm-water.
12. குளிர்நீர்; cold-water .
13. தூயநீர்; distilled-water.
14. குடிநீர்; decotion.
15. வாலைநீர்; pure distilled water.

[தண் + நீர்.]

தண்ணீர்அட்டுவார் *tannīr-attuvār,* பெ. (n.) தண்ணீர் கொடுப்பவர்; the philanthropist donating drinking water for public. "ஸ்ரீ ராஜராஜன் தண்ணீர் அட்டுவார்க்கு நிசதம் நெல் குறுணி" (S.I.I. ii. 59.).

[தண்ணீர் + அட்டுவார்]

தண்ணீர்அறஓடு-தல் *tannīr-ara-ōdu-,* 5 செ.குவி. (v.i.) கடல்நீர், கரைப்பகுதிகளில் எண்மி, காருவா, வெள்ளுவா நாள்களில் (அஷ்டமி, அமாவாசை பௌர்ணமி) மேலேறி இறங்கிப் பொங்குதல்; the water flowing to the seashore during auspicious (full-moon and the new-moon) days etc.

[தண்ணீர் + அற + ஓடு.]

தண்ணீர்ஊற்று *tannīr-ūrru,* பெ. (n.) நீரூற்று வருதல்; இயற்கையாக ஊறும் நீரூற்று; natural spiring-water (இ.வ.).

[தண்ணீர் + ஊற்று.]

தண்ணீர்க்கசிவு *tannīr-k-kasivu,* பெ. (n.) நீர் ஊறி வெளியேறுகை; oozing (செ.அக.)

[தண்ணீர் + கசிவு.]

தண்ணீர்க்கட்டு *tannīr-k-kattu,* பெ. (n.) வயல் நீர் வெளியேறாமல் மடைகளை அடைத்து வைக்கை; the temperary stop-gap in the irrigation canal in paddy-fields.

[தண்ணீர் + கட்டு.]

தண்ணீர்க்கண்டம் *tannīr-k-kandam,* பெ. (n.) நீரில் மூழ்கிப்போதல் போன்ற நேர்ச்சி (விபத்து); peril by water, as drowning (செ.அக.)

[தண்ணீர் + கண்டம்]

தண்ணீர்க்கதவு *tannīr-k-kadavu,* பெ. (n.) ஏரி முதலியவற்றிலிருந்து நீர் விடுதற்குரிய கதவு (C.E.M.); flood - gate.

[தண்ணீர் + கதவு]



தண்ணீர்க்கரை *taṇṇīr-k-karai,* பெ. (n.) சுழல் வண்டு; whirling insect *(சா.அக.).*

தண்ணீர்க்காணான்இலை *taṇṇīr-k-kāṇāṉ-ilai,* பெ. (n.) மருந்திலை மூலி; a kind of medicinal herb *(சா.அக.).*

தண்ணீர்க்காரன் *taṇṇīr-k-kāraṉ,* பெ. (n.) நீர் சுமந்து கொடுப்போன்; waterman *(செ.அக.).*

[தண்ணீர் + காரன்]

தண்ணீர்க்காரி *taṇṇīr-k-kāri,* பெ. (n.) நீர் சுமந்து கொடுப்பவள்; woman supplying water. *(செ.அக.)*

[தண்ணீர் + காரி. 'காரி' = உடைமை குறித்த 'உயர்திணைப் பெண்பாலீறு. ஒ.நோ. கீரைக்காரி; வீட்டுக்காரி, பூக்காரி]

தண்ணீர்க்காரிச்சி *taṇṇīr-k-kāricci,* பெ. (n.) தண்ணீர்க்காரி (இவ.) பார்க்க; see *taṇṇīr-k-kāri.*

[தண்ணீர் + காரி + இச்சி – தண்ணீர்க்காரிச்சி. 'இச்சி' சொல்லாக்க ஈறு. (ஒ.நோ.) இடைச்சி, சடைச்சி.]

தண்ணீர்க்கால் *taṇṇīr-k-kāl,* பெ. (n.) நீரோடும் வழி (C.E.M.); water course *(செ.அக.).*

[தண்ணீர் + கால்]

தண்ணீர்க்குடம்[1] *taṇṇīr-k-kuḍam,* பெ. (n.) *1.* நீர் முகக்குங் குடம்; water-pot. *2.* நீர்வாழை (பிங்.); traveller's palm *(செ.அக.).*

ம. தண்ணீர்க்குடம்

[தண்ணீர் + குடம்]

தண்ணீர்க்குடம்[2] *taṇṇīr-k-kuḍam,* பெ. (n.) பனிக்குடம்; amniotic fluid *(சா.அக.).*

[தண்ணீர் + குடம்]

தண்ணீர்க்குத்திவிழல் *taṇṇīr-k-kutti-viḻal,* பெ. (n.) ஒருவகைக் கண்ணோய்; a kind of eye disease *(சா.அக.)*

தண்ணீர்க்குளம் *taṇṇīr-k-kuḷam,* பெ. (n.) செங்கை மாவட்டத்திலுள்ள ஒரூர்; a village in Cheṅgalpaṭṭu dt.

[தண்ணீர் தேங்கிநிற்கும் தாழ்வான நிலப்பரப்பினையுடைய பகுதி.]

தண்ணீர்க்கொப்பு *taṇṇīr-k-koppu,* பெ. (n.) புத்த மதத்தினர் கைக்கொள்ளும் ஒருவகை ஏனம் *(நீலகேசி, 250, உரை);* a water - vessel used by Buddhists *(செ.அக.).*

[தண்ணீர் + கொப்பு]

தண்ணீர்கட்டல் *taṇṇīr-kaṭṭal,* பெ. (n.) *1.* தடுமம் பிடித்தல்; being attacked with cold. *2.* தலைப் பாரம்; heaviness of the head. *3.* கொப்புளங் கொள்ளல்; formation of a boil.

[தண்ணீர் + கட்டல்]

தண்ணீர்கட்டு-தல் *taṇṇīr-kaṭṭu-,* 5 செகுவி. (v.i.) *1.* வயல் முதலியவற்றில் மடைமாற்றி நீர் பாய்ச்சுதல்; to irrigate a field, garden bed, etc. *2.* புண்ணில் நீர்க் கொப்புளங்கொள்ளுதல் *(யாழ்அக.);* to form pus.

[தண்ணீர் + கட்டு-.]

தண்ணீர்கழித்-தல் *taṇṇīr-kaḻi-,* 4 செகுவி. (v.i.) உப்புப் பாத்திகளிலிருந்து நீரை வெளி யேற்றுதல்; to let out water from salt-pan.

தண்ணீர்காட்டு-தல் *taṇṇīr-kāṭṭu-,* 5 செகுன்றாவி. (v.t.) *1.* கால்நடைகளுக்கு குடிநீர் காட்டுதல்; to water, as beasts. *2.* ஏமாற்றுதல், நீரைக் காட்டிக் குடிக்கவொட்டாது செய்தல்; to deceive, overreach, as showing water without allowing one to drink. "முடிவில் உனக்குத் தண்ணீர்காட்டி விடுவான்" (வின்.). *3.* அலைக் கழித்தல் (இவ.); to tantalize, harass. வாங்கிய கடனை ஒழுங்காகத் திருப்பித் தராமல் எனக்குத் தண்ணீர் காட்டுகிறான் *(உ.வ.).*

[தண்ணீர் + காட்டு-.]

தண்ணீர்கால் *taṇṇīr-kāl,* பெ. (n.) வழிப் போக்கர்தம் நீர்வேட்கை தணித்தற்குப் பயன்படும் மூங்கிலினாலான நீள் குழல்மரம்; a water-pipe made of a bamboo, given gratis to travellers.

[தண்ணீர்கோல் → தண்ணீர்கால்]

தண்ணீர்குத்து-தல் *taṇṇīr-kuttu-,* 5 செகுன்றாவி. (v.t.) தொட்டானிலிருந்து உப்புநீரைப் பாத்திக்குத் திறந்துவிடுதல்; to let off the salt-water to the salt-pan.

தண்ணீர்கொள்ளல் *taṇṇīr-koḷḷal,* பெ. (n.) கொப்புளத்தில் நீர்கட்டுதல்; a boil filled with the water. 2. சீழ்கொள்ளல்; forming pus.

[தண்ணீர் + கொள்ளல்]

தண்ணீர்கோலு-தல் *taṇṇīr-kōlu-,* 5 செ.குவி. (v.i.) கிணற்றிலிருந்து நீரிறைத்தல் (இ.வ.); to take up or bale water.

[தண்ணீர் + கோலு-.]

தண்ணீர்ச்சாயையான் *taṇṇīr-c-cāyaiyāṉ,* பெ. (n.) நீலக்கல்; sapphire (சா.அக.).

[தண்ணீர் + சாயையான்.]

தண்ணீர்ச்சாரை *taṇṇīr-c-cārai,* பெ. (n.) குளத்தில் வசிக்கும் நீர்ப்பாம்பு; rate-snake Yaocys mucosus.

[தண்ணீர் + சாரை.]

தண்ணீர்ச்சாலை *taṇṇīr-c-cālai,* பெ. (n.) நீர்ச்சாலை, தண்ணீர்ப்பந்தல்; water pantar.

[தண்ணீர் + சாலை]

தண்ணீர்ச்சுண்டிப்போதல் *taṇṇīr-c-cuṇḍi-p-pōdal,* பெ. (n.) நூல் வேகவைக்கும்போது, நீர் வற்றிப்போதல் (செங்கை.); vapour of water, when boiling thread.

தண்ணீர்ச்சோறு *taṇṇīr-c-cōṟu,* பெ. (n.) நீர் விட்ட சோறு (யாழ்ப்.); left-over rice mixed with water.

மறுவ. பழையசோறு

[தண்ணீர் + சோறு]

தண்ணீர்சேர்வேராக்கி *taṇṇīršer-vērākki,* பெ. (n.) தேத்தான்கொட்டை; water cleaning nut (சா.அக.).

தண்ணீர்த்தட்டு *taṇṇīr-t-taṭṭu,* பெ. (n.) தண்ணீர்ப் பற்றாக்குறை (இ.வ.); scarcity of water.

மறுவ. நீர்த்தட்டுப்பாடு

[தண்ணீர் + தட்டு]

தண்ணீர்த்தடாகத்துச்செல்வி *taṇṇīr-t-taḍāgatt-c-celvi,* பெ. (n.) நாகசிங்கி; a kind of rare medicinal plant (சா.அக.).

தண்ணீர்த்தவளம் *taṇṇīr-t-tavaḷam,* பெ. (n.) நீர்வேட்கை; thirst for water (சா.அக.).

[தண்ணீர் + தவளம் = நாவறட்சி.]

தண்ணீர்த்தாகம் *taṇṇīr-t-tāgam,* பெ. (n.) நீர்வேட்கை; thirst (சா.அக.).

ம. தண்ணீர்த்தாகம்

[தண்ணீர் + தாவம் + தாகம்.]

தண்ணீர்த்திப்பிலி *taṇṇīr-t-tippili,* பெ. (n.) துணைநஞ்சு ஏழிலொன்று; one of the seven sub-poisonous drugs (சா.அக.).

[தண்ணீர் + திப்பிலி]

தண்ணீர்த்திருக்கை *taṇṇīr-t-tirukkai,* பெ. (n.) அளவின் மிகுதியாய் உப்படிக்க நீராய்ச் சொரியும் திருக்கை (நெல்லை); a kind of ray-fish.

[தண்ணீர் + திருக்கை]

தண்ணீர்த்துரும்பு *taṇṇīr-t-turumbu,* பெ. (n.) இடையூறு (பருகுந் தண்ணீரிலுள்ள துரும்பு); obstruction, as a weed in drinking water. "தேவரீர் கிருபைக்குத் தண்ணீர்த் துரும்பாக" (ஈடு. 1, 4, 7).

[தண்ணீர் + துரும்பு]

செ.ப.க அகரமுதலி: straw என்று கூறுகிறது. இதற்கு உறிஞ்சுகுழல் என்ற பொருள் வந்துவிட்டது. குழல் இடையூறு அன்று.

தண்ணீர்த்துறை *taṇṇīr-t-tuṟai,* பெ. (n.) நீர் நிலையில், இறங்குமிடம் (இ.வ.); ghat, path of descent to a tank or river. தாயைத் தண்ணீர்த் துறையில் பார்த்தால், மகளை வீட்டில் பார்க்க வேண்டியதில்லை (பழ.).

[தண்ணீர் + துறை. தண்ணீர்த்துறை = நீர் நிறைந்த துறை : படித்துறை : வழி]

தண்ணீர்த்துறையேறு-தல் *taṇṇīr-t-tuṟai-y-ēṟu,* 5 செ.கு.வி. (v.i.) மாதவிலக்காதல் (மூ.அ. அனுபந்.); to be in one's (lady) menstural periods.

[தண்ணீர் + துறை + ஏறு-.]

தண்ணீர்த்தொட்டி *taṇṇīr-t-toṭṭi,* பெ. (n.) தண்ணீரைத் தேக்கிவைக்கும் தொட்டி; water cistern.

[தண்ணீர் + தொட்டி.]

தண்ணீர்த்தேள் *taṇṇīr-t-tēḷ*, பெ. (n.) நீர்வாழ் உயிரிவகை; water-scorpion (செ.அக.)

மறுவ. நீரி

[தண்ணீர் + தேள். நீரில் வாழ்பவை]

தண்ணீர்த்தேற்றி *taṇṇīr-t-tēṟṟi*, பெ. (n.) தேற்றாங்கொட்டை; water clearing nut (சா.அக.).

மறுவ. தண்ணீர் சேர்வேராக்கி

தண்ணீர்தெளி[1]-த்தல் *taṇṇīr-teḷi-*, 4 செகுன்றாவி. (v.t.) தூய்மையின் பொருட்டு நீர் தெளித்தல்(வின்.); to sprinkle water for purification.

[தண்ணீர் + தெளி-.]

வீட்டுவாயிலில், தூசு பறக்காமல் படிவதற்காக, நாடோறும் காலையில் தண்ணீர்தெளித்து வைத்தல் தமிழ்நாட்டுப் பழக்கம். தண்ணீரோடு, சாணமும் கலந்து கொள்வதுண்டு. அதன் மீது கோலமும் இடுவர்.

தண்ணீர்தெளி[2]-த்தல் *taṇṇīrteḷi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஒதுக்குதல், புறக்கணித்தல்; to wash (one's hands) of. அப்பா அண்ணனை என்றோ தண்ணீர் தெளித்துவிட்டுவிட்டார் (உ.வ.). 'உன்னைத் தண்ணீர்தெளித்து விட்டார்கள்' என்றால் கைவிட்டு விட்டார்கள், என்பது வெள்ளிடை மலை.

'தாரை வார்த்தல்' என்பது, தண்ணீர்தெளித்து உடைமையைத் துறத்தல் என்ற பொருண்மையிலேயே, தமிழகத்தில் நாட்டுபுறத்தில் வழக்கூன்றியதென்பதை ஓர்ந்துணர்க; உரிமைப்பொருளை விடுதல் என்பது அதன் உட்கிடையாகும்.

தண்ணீர்தெளித்துவிடு-தல் *taṇṇīr-teḷttu-viḍu-* 18 செ.குன்றாவி. (v.t.) ஒருவனைத் தன் விருப்பப்படிச் செல்லும்படி விடுதல் (இ.வ.); to leave one to oneself. நாட்டு விடுதலைக் காலத்தில் பலர், தம் மக்களை நாட்டுப் பணிக்கெனத் தண்ணீர்தெளித்து விட்டனர் (உ.வ.)

தண்ணீர்தெளிதல் *taṇṇīr-teḷidal*, பெ. (n.) தண்ணீர்க்கசடு நீங்குதல்; cleaning of water from impurities (சா.அக.).

[தண்ணீர் + தெளிதல்]

தண்ணீர்ப்பகை *taṇṇīr-p-pagai*, பெ. (n.) 1. உடம்புக்குச் சிலநீர் ஒத்துக் கொள்ளாமை யாலாகிய மாறுபாடு (இ.வ.); injuriousness of some kinds of water, allergy due to water. 2. தண்ணீராலேற்படுங்குற்றம்; morbid affections due to drinking or using water.

[தண்ணீர் + பகை]

தண்ணீர்ப்பட்டி *taṇṇīr-p-paṭṭi*, பெ. (n.) 1. தண்ணீர்ப் பந்தலறத்துக்கு விட்ட நிலம் (S.I.I. III. 365); gift for providing drinking water. 2. கால்வாயில் நீர்மட்டத்தை ஏற்றி இறக்குவதன் மூலம், படகுப்போக்குவரத்தை ஒழுங்கு படுத்தும் நீரடைப்பு; lock to regulate boat transportation by raising or lowering water level in the canal.

[தண்ணீர் + பட்டி.]

தண்ணீர்ப்பத்தாயம் *taṇṇīr-p-pattāyam*, பெ. (n.) நீர்த்தொட்டி (இ.வ.); cistern, reservoir of water.

[தண்ணீர் + பத்தாயம்]

தண்ணீர்ப்பந்தர்[1] *taṇṇīr-p-pandar*, பெ. (n.) தண்ணீர்பந்தல் பார்க்க; see *taṇṇīr-p-pandal*. 'தண்ணீர் பந்தர் சயம்பெற வைத்து" (திருவாச. 2: 58).

[தண்ணீர் + பந்தல் → பந்தர்]

தண்ணீர்பந்தல் *taṇṇīr-p-pandal*, பெ. (n.) வெயிற்காலத்தில் வழிச்செல் வோர்க்குக் குடிநீர், மோர் முதலியன உதவும் அறச்சாலை; place where drinking water, buttermilk, etc. are given gratis to passers - by during the hot season. தண்ணீர்ப் பந்தலில் நீர் மோர் வழங்குவது பேரறம் ஆகும் (உ.வ.).

ம. தண்ணீர்ப்பந்தல்

[தண்ணீர் + பந்தல்]

தண்ணீர்ப்பன்னா *taṇṇīr-p-paṉṉā*, பெ. (n.) தண்ணீர்ப்பன்னா மீன்; a kind of sea-fish.

தண்ணீர்ப்பாசி *taṇṇīr-p-pāśi*, பெ. (n.) தண்ணீரிலுள்ள பாசி; water-moss (சா.அக.).

[தண்ணீர் + பாசி]

தண்ணீர்ப்பாடம் *taṇṇīr-p-pāḍam,* பெ. (n.) 1. நன்றாக மனப்பாடமானது (இ.வ.); anything well learnt, as a lesson or science. 2. ஏதேனும் நோய்வாய்ப்பட்ட காலத்தில், ஒரு குவளையில் தண்ணீர் நிரப்பித் துணியால் மூடி, ஒரு குச்சிகொண்டு கலக்கி, மந்திரஞ் சொல்வது போல் உச்சரித்துப் பருகத் தரும் நீர்; a tumbler of water, supposed to immune with mantrās, and allowed to drink, during period of illness.

[தண்ணீர் + பாடம்]

தண்ணீர்ப்பாம்பு *taṇṇīr-p-pāmbu,* பெ. (n.) நீர்ப் பாம்பு; water-snake. அவனைத் தண்ணீர்ப் பாம்பென்று விட்டுவிடக் கூடாது (உ.வ.).

[தண்ணீர் + பாம்பு]



தண்ணீர்ப்பிடி *taṇṇīr-p-piḍi,* பெ. (n.) தண்ணீர்ப் பிடிப்பு (வின்.) பார்க்க; see *taṇṇīr-p-piḍippu.*

[தண்ணீர் + பிடி]

தண்ணீர்ப்பிடிப்பு *taṇṇīr-p-piḍippu,* பெ. (n.) 1. குளத்திற் கொள்ளும் நீரினளவு; water capacity of a tank. 2. குளம் முதலியவற்றில் நீர் பிடித்துள்ள, பரப்பளவு; quantity of water spread of a tank. 3. உணவு முதலியவற்றின் நீர்மத்தன்மை (வின்.); watery condition, as of food, of fruit, etc.

[தண்ணீர் + பிடிப்பு]

தண்ணீர்ப்புரசு *taṇṇīr-p-purašu,* பெ. (n.) ஒரு வகைப் புரசு; a kind of portia tree (சா.அக.).

[தண்ணீர் + புரசு]

தண்ணீர்ப்புரளி *taṇṇīr-p-puraḷi,* பெ.(n.) கண்மாயில் நீரின் பரப்பளவு; the catchment area of water in bund.

மறுவ. நீர்ப்பிடிப்புப் பகுதி

[தண்ணீர் + புரளி – தண்ணீர்ப்புரளி. செட்டிநாட்டுப் பகுதியில், கண்மாயிலுள்ள, நீர்பிடிப்புப் பகுதியை இன்றும், தண்ணீர்ப்புரளி என்று, அழைக்கின்றனர்.]

தண்ணீர்ப்பேதி *taṇṇīr-p-pēdi,* பெ. (n.) நீராக ஆகும் கழிச்சல்; water stool (சா.அக.).

[தண்ணீர் + பேதி]

தண்ணீர்ப்பட்டபாடு *taṇṇīr-p-paṭṭa-pāḍu,* பெ. (n.) எளிதாகச் செய்யக்கூடிய செயல்; that which can be easily done or performed; easy work."செய்யுளியற்றுவது இவர்க்குத் தண்ணீர் பட்டபாடு" (மீனாட். சரித். ii. 278). (செ.அக.)

[தண்ணீர் + படு → பாடு; பாவேந்தருக்குப் பாவியம் பாடுவது, தண்ணீர் பட்டபாடாக இருந்தது.]

தண்ணீர்பாய்ச்சல் *taṇṇīr-payccal,* பெ. (n.) நிலத்திற்கு நீர் பாய்ச்சுகை; irrigating paddy-field.

[தண்ணீர் + பாய்ச்சல்.]

தண்ணீர்போட்டுமிதி-த்தல் *taṇṇīr-pōṭṭu-midi-* 4 செ.குன்றாவி. (v.t.) உப்பளப் பாத்தியில் உழப்பு முடிந்ததும் தண்ணீர் விட்டு அடுக்கடுக்காக மிதித்தல்; to press the ground of salt-pan at stages, while letting salt water intermediately.

தண்ணீர்மட்டம் *taṇṇīr-maṭṭam,* பெ. (n.) நீர் மட்டம் என்னுங் கருவி; spirit-level (செ.அக.).

மறுவ. நீர்மட்டம், இதளியமட்டம்

[தண்ணீர் + மட்டம்]

இயல்பான காற்றழுத்தம், வெப்பங் கொண்ட சூழலில், தொடர்ச்சியாக உள்ள நீர்மத்தின் மேல்மட்டம், சீரான ஒரே அளவினதாக இருக்கும். கட்டடங்களின் உயரங்களை அளப்பதற்கும், இணைமட்டம் வைப்பதற்கும், இக்கொள்கை பயன்படுகிறது. கொத்தனார் இதற்கெனப் பயன்படுத்தும் கருவி, தண்ணீர்மட்டம் (நீர்மட்டம்) (இரசமட்டம்) ஆகும். மூடிய கண்ணாடிக் குழாய்க்குள்ளாக, நிரப்பப்படும் சாராயத்தின் நடுவில் உள்ள வெற்றிடக்குமிழ்கொண்டு, மட்டம் அறியப்படுகிறது. புவியின் பல்வேறு

இடங்களின் அமைவு, கடல்மட்டத்திற்கு மேல் எவ்வளவு உயரத்தில் உள்ளது என்பதைக் காண்பதற்கு, இக்கருவி பயன்படுகிறது.

தண்ணீர்மருந்து *taṇṇīr-marundu,* பெ. (n.) தண்ணீரை மந்திரித்துக் கொடுக்கும் குடிப்பு; water cure (சா.அக.).

[தண்ணீர் + மருந்து]

தண்ணீர்மாற்று-தல் *taṇṇīr-māṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கருவாடு அணியம் செய்யும் போது, அடிக்கடி உப்புநீரை மாற்றுதல்; to change salt-water to process karuvāḍu, dried fish.

[தண்ணீர் + மாற்று-.]

தண்ணீர்மாறு-தல் *taṇṇīr-māṟu-,* 5 செ. குன்றாவி. (v.t.) ஓரிடத்திலிருந்து, மற்றோரிடத்திற்கு நீரை மடைமாற்றிப் பாய்ச்சுதல் (யாழ்ப்.); to lead water, as from one field to another, from one channel to another. ஒவ்வொரு நாளும் வயல்களுக்குச் சீராகத் தண்ணீர் மாற்றுதல் நீர்பாய்ச்சுபவனின் வேலை (உ.வ.).

[தண்ணீர் + மாறு-.]

தண்ணீர்மீட்டான்கிழங்கு *taṇṇīr-mīṭṭāṉ-kiḻaṅgu,* பெ. (n.) தண்ணீர்விட்டான்கிழங்கு பார்க்க; see *taṇṇīrviṭṭāṉ-kiḻaṅgu* (சா.அக.).

[தண்ணீர் + மீட்டான் + கிழங்கு.]

தண்ணீர்மீன் *taṇṇīr- mīṉ,* பெ. (n.) ஓங்கில் மீன்; turny-fish (சா.அக.).

[தண்ணீர் + மீன்.]



தண்ணீர்முட்டான் *taṇṇīr-muṭṭāṉ,* பெ. (n.) தண்ணீர்விட்டான் பார்க்க; see *taṇṇīr-viṭṭāṉ* (செ.அக.).

தண்ணீர்மேலேற்று-தல் *taṇṇīr-mēlēṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தொலைத்தீவு தண்டனை விதித்தல் (கடலின் மீது அனுப்புதல்); to sentence one to transportation, as sending across the water. விடுதலைப் போராட்டத்திற்காக வீரசாவர்க்கரைத் தண்ணீர் மேலேற்றி, அந்தமான் சிறையிலடைத்தனர்.

[தண்ணீர் + மேல் + ஏற்று-.]

தண்ணீர்வரி *taṇṇīr-vari,* பெ. (n.) நீரின் பொருட்டு விதிக்கும் வரிவகை; water-rate, water - cess. இந்த அரையாண்டிற்கான தண்ணீர் வரி கட்டிவிட்டீர்களா? (இ.வ.).

[தண்ணீர் + வரி]

தண்ணீர்வாட்டம் *taṇṇīr-vāṭṭam,* பெ. (n.) கட்டடம் முதலியவற்றில், தண்ணீர் தானே யோடுதற்கு அமைந்த சரிவு; water-fall, amount of slope required for unobstructed flow of water, gradient. தண்ணீர் வாட்டம் சரியாயிராததால், இங்கு நீர் தேங்குகிறது (உ.வ.).

[தண்ணீர் + வாட்டம்]

தண்ணீர்வார்[1]-த்தல் *taṇṇīr-vār-,* 4 செ.குவி. (v.i.) 1. வழிச்செல்வோர் முதலாயினோர்க்கு, நா வறட்சி தீர்த்திட நீர்தருதல்; to give water for drinking, as to travellers. 2. நோய் நீங்கினோர் முதலாயினோரை, நீராட்டுவித்தல் (வ.); to give a bath, as to a convalescent.

தண்ணீர்வார்[2]-த்தல் *taṇṇīr-vār,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. நோயினர், பேறுகாலமான பெண், மாதவிலக்கான பெண், இவர்களைக் குளிப்பாட்டுவித்தல்; to give a ceremonious bath to convelscents, delivered woman, menses woman etc. 2. தொடர்பற நீக்கிவிடுதல்; to wash one's hands of, give up, as a person.

[தண்ணீர் + வார்-.]

தண்ணீர்விட்டான் *taṇṇīr-viṭṭāṉ,* பெ. (n.) கொடிவகை (பதார்த்த. 429); climbing asparagus, m.cl., Asparagus racemosus.

தண்ணீர்விட்டான்கிழங்கு *taṇṇīr-viṭṭāṉ-kiḻaṅgu,* பெ. (n.) சதாமூலிக் கிழங்கு; water-root.

[தண்ணீர்விட்டான் + கிழங்கு = தாறுமாறாகக் கொடிவிட்டுப் படரும் பூண்டு வகை; பித்தநோய் தீர்ப்பதற்கு தண்ணீர்விட்டான் கிழங்கு கைகண்ட மருந்தாகும். இக் கிழங்கு நீளமாகவும் வெண்ணிறமாகவும், சதைப்பற்றுத் மிக்கதாயு மிருக்கும்.அம்மைநோயகல, இக் கிழங்கினைத் தண்ணீரில் ஊறவைத்துத் துகளாக்கிப் பாலில் கலந்து பருகுவர். இக் கிழங்கு உடம்பிலுள்ள நீரிழிவு; எலும்புருக்கி, கவட்டைச்சூடு, மிகுசளி முதலான அனைத்து நோய்களையும் போக்கி, ஆண்மையைப் பெருக்கும் என சாம்பசிவ மருத்துவ அகரமுதலி கூறும்.]

தண்ணீர்விடாய் *taṇṇīr-viḍāy,* பெ. (n.) தண்ணீர்வேட்கை பார்க்க; see *taṇṇīr-vēṭkai* (சா.அக.).

[தண்ணீர் + விடாய்.]

தண்ணீர்விடு-தல் *taṇṇīr-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) *நீர்கசிந்து பண்டங்கெடுதல்;* to become stale or putrid. சோறு தண்ணீர்விட்டுப் போயிற்று (வின்.).

[தண்ணீர் + விடு-.]

தண்ணீர்வேட்கை *taṇṇīr-vēṭkai,* பெ. (n.) *நாவறட்சி;* thirst for water (சா.அக.).

மறுவ. தண்ணீர்த்தாகம்

[தண்ணீர் + வேட்கை]

தண்ணீரா-தல் *taṇṇīr-ā-,* 5 செ.கு.வி. (v.i.) *1. நீர் வடிவாய்ப்போதல்;* to become watery, diluted. *2. நெட்டுருவாதல்;* to be committed to memory. பாடம் தண்ணீராயிருக்கிறது (இ.வ.).

[தண்ணீர் + ஆ-.]

தண்ணீராக்கு-தல் *taṇṇīr-ākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1. ஒருவனை இரக்கங் கொள்ளும்படி செய்தல்;* to make one pity. *2. மாழைகளை நீர்மவடிவிலாக்குதல்;* to melt, dissolve, as metals. *3. பால் முதலியவற்றில் நீர் கலத்தல்;* to dilute, as milk. *4. நெட்டுருப் பண்ணுதல்;* to get by heart. பாடத்தைத் தண்ணீராக்கி விட்டான் (உ.வ.). 5. *கரையச்செய்தல்;* to dissolve as sugar (சா.அக.).

[தண்ணீர் + ஆக்கு-.]

தண்ணீராகஅடித்தல் *taṇṇīr-āga-aḍittal,* பெ. (n.) *தண்ணீராக மலம் வெளியேறுதல்;* water motions (சா.அக.).

[தண்ணீர் + ஆக + அடித்தல்]

தண்ணீரில்லாக்காடு *taṇṇīr-illā-k-kāḍu,* பெ. (n.) *ஏந்துகளற்ற இடம்;* a place without basic amenition. அவரைப் பழிவாங்கக் கருதி தண்ணீரில்லாக் காட்டுக்கு அனுப்பிவிட்டார்கள் (உ.வ.).

[தண்ணீர் + இல்லா + காடு]

தண்ணீருத்தாங்கல் *taṇṇīru-t-tāṅgal,* பெ. (n.) *கரிசலாங்கண்ணி;* eclipse plant (சா.அக.).

தண்ணீரூரி *taṇṇīr-ūri,* பெ. (n.) *தண்ணீர்க் கொடி;* water-root (சா.அக.).

[தண்ணீர் + ஊரி]

தண்ணீரூற்றிக்கொள்ளல் *taṇṇīr-ūṟṟi-k-koḷḷal,* பெ. (n.) *1. குளித்தல்;* bathing. *2. கள் முதலியவைக் குடித்தல்;* drinking toddy etc. (சா.அக.).

மறுவ. தண்ணீர் போடுதல்

[தண்ணீர் + ஊற்றிக்கொள்ளல்.]

தண்ணீரைச்சுருக்கி *taṇṇīrai-c-curukki,* பெ. (n.) *ஆரை;* pseudo ferns (சா.அக.).

[தண்ணீர் + ஐ + சுருக்கி]

தண்ணீரொவ்வாமை *taṇṇīr-ovvāmai,* பெ.(n.) *நீர் உடல் நலத்திற்கு ஒவ்வாமை;* water disagreeable to ones health.

[தண்ணீர் + ஒவ்வாமை]

தண்ணீரோதல் *taṇṇīrōdal,* பெ. (n.) *நீர் மந்திரித்துக் கொடுத்தல்;* consecrating water by mantrās and given as water, cure as to a woman in labour or one possessed with devil (சா.அக.).

[தண்ணீர் + ஓதல்]

தண்ணீரோது-தல் *taṇṇīr-ōdu-,* 5 செ.குவி. (v.i.) பேறுகாலத்தில் துன்பப்படும் பெண்டிர் முதலியோர்க்குக் கொடுக்க, நீரில் மந்திரம் ஓதித்தருதல் (வின்.); to consecrate water by mantras, for being given to a woman in labour.

நோயாளிகளின் உள்ளத்திட்பத்தைக் கூட்டுவதற்காக, ஊரகப்புறங்களில் செய்யும் நடவடிக்கை. மந்திரம் ஓதிய நீரை அருந்தினால், பிணி தீரும் என உள்ளத்தில் தோன்றும் நம்பிக்கையே, மருந்தாம்.

[தண்ணீர் + ஓது-.]

தண்ணீனி *taṇṇīṇi,* பெ. (n.) வேங்கை மரம்; kina tree.

தண்ணுமை *taṇṇumai,* பெ. (n.) 1. அகப் புறமுழவுள் ஒன்றாகிய மத்தளம்; a kind of drum, one of aga-p-puṟa-muḻavu. "தண்ணுமைப் பின்வழி நின்றது முழவே" (சிலப். 3: 140). 2. முழவு; a large drum. "தண்ணுமை வளிபொருதெண்கண் கேட்பின்" (புறநா. 89: 7). 3. உடுக்கை (சூடா); the hour glass drum. 4. ஒருகட்புறை (வின்.): one-headed drum.

ம. தண்ணும

[தண் → தண்ணுமை. "தண்" என்னும் ஒலிக்குறிப்பு வேரினின்று, முகிழ்த்த சொல்லாகும். ஒ.நோ. விண் → வீணை. 'விண்' என்னும் ஒலியினின்று வீணை என்னும் சொல்பிறந்ததை ஒக்கும்.]

தண்ணுமையோன் *taṇṇumaiyōṉ,* பெ. (n.) மத்தள ஆசிரியன் (சிலப். 3: 45, உரை, தலைப்பு); drummer in a dancing group.

[தண்ணுமை + ஓன்]

தண்ணுமையோனமைதி *taṇṇumayōṉamaidi,* பெ. (n.) தண்ணுமையோன் பார்க்க; see *taṇṇumaiyōṉ.*

[தண்ணுமையோன் + அமைதி]

தண்ணெனல்[1] *taṇṇeṉal,* பெ. (n.) 1. குளிர்ச்சிக் குறிப்பு; being cool, refreshing. "குறுகுங் காற றண்ணென்னும்" (குறள், 1104). 2. இரங்கற்குறிப்பு; being-merciful.

[தண் + எனல்]

தண்ணெனல்[2] *taṇṇeṉal,* பெ. (n.) தட்டுகைக் குறிப்பு; onom, expr. of tapping.

[தண் + எனல்]

தண்ணெனவு *taṇ-ṇ-eṉavu,* பெ. (n.) 1. குளிர்ந்திருக்கை; being cool or refreshing. 2. இரங்குகை; being merciful. "தண்ணென வில்லை நமன்றமர்கள்" (திவ். பெரியதி. 4. 10:6).

[தண் + எனவு]

தண்பகம் *taṇbagam,* பெ. (n.) ஒருவகை மரம்; a kind of tree. "சண்பகந் தண்பகம் பாடலம்" (மேருமந். 585).

[தண் + பகம் → தண்பகம்.]

தண்பணை *taṇ-paṇai,* பெ. (n.) மருதநிலம்; agricultural tract. "நன்மதி வேட்கோட் சிறாஅர் தேர்க்கால் வைத்த பசுமண் குருஉத்திரள்போல அவன் கொண்ட குடுமித்து இத் தண்பனை நாடே" (புறநா. 32). "கரும்பல்லது காடறியாப் பெருந்தண்பணை பாழாக ஏம நன்னாடொள் ளெரி யூட்டினை" (புற. 16).

[தண்பண்ணை → தண்பணை - குளிர்ந்த, செய்களையுடைய பண்ணை. பண்ணை → பணை. பண்ணைக்கு அடியான 'பண்' என்ற சொல்லும், 'செய்'யெனும் சொல்லும் முதற்கண் ஒரு தொழிலைக் குறித்துப் பின்பு, அத் தொழிலுக்கு, நிலைக்களனான இடத்தையும் குறித்ததெனலாம். செழித்த வேளாண் நிலம் சூழ்ந்த பகுதி]

தண்பதம் *taṇ-padam,* பெ. (n.) 1. புதுப்புனல்; freshet in a river. "தாழ்பொழி லுடுத்த தண்பதப் பெருவழி" (சிலப். 10, 32). 2. புதுப்புனல் விழவு "தண்பதங் கொள்ளுந் தலைநாட்போல" (சிலப். 6:160). 3. தாழ்ந்தநிலை; low condition. "தண்பதத்தாற் றானே கெடும்" (குறள், 548).

[தண் + பதம்]

தண்பதங்கொளுந்தலைநாள் *taṇpadaṅgoḷḷun-dalai-nāḷ,* பெ. (n.) புதுப்புனல் விழவு கொண்டாடுந் தலைநாள்; festival celebrated on the bank of a river.

[தண்பதம் + கொள்ளும் + தலைநாள்.]

தண்பதப்பெருவழி *taṇ-pada-p-peruvaḻi*, பெ. (n.) புதுப்புனலாடச் செல்லும் பெரிய வீதி; broad street (like a sheet of water.)

[தண்பதம் + பெருவழி.]

தண்பு *taṇbu*, பெ. (n.) குளிர்ச்சி; coldness, coolness. "தண்பாரு முனதருளை" *(திருப்பு. 368).*

ம., க. தண்பு

[தண் → தண்பு]

தண்புகை *taṇpugai*, பெ. (n.) தண்புகைமரம் பார்க்க; see *taṇpugai-maram* (சா.அக.).

தண்புகைமரம் *taṇpugai-maram*, பெ. (n.) கருப்புக்குங்கிலிய மரம்; saul tree.

தண்பொருநை *taṇ-porunai*, பெ. (n.) *1.* தாம்பிரபரணி ஆறு; the river Tāmpirabaraṇi. "தண்பொருநையும் ஆன்பொருநையும்" *(தொல். பொருள். 191, உரை). 2.* ஆன்பொருந்தம் (அமராவதி) என்ற ஆறு; the river Amarāvati. "தண்பொருநைப் புனற்பாயும் விண்பொரு புகழ் விறல்வஞ்சி" *(புறநா. 11).*

தண்பொருநை: தொல்காப்பியத்துள் குறிக்கப் பெற்றதும், தொன்மப்புகழ் மிக்கதுமான தாமிரபரணி; மேற்குறித்தவாறு, சோர்தம் தலை நகராம் விறல்வஞ்சியினை, வளப் படுத்துந் தண் பொருநையாய்த் திகழ்ந்ததெனப், புறநானூறு புகல்கிறது.

தண்மை *taṇmai*, பெ. (n.) *1.* குளிர்ச்சி; coldness; coolness. "மதியிற் றண்மை வைத்தோன்" *(திருவாச. 3: 21). 2.* அமைதி; calmness, self-possession, tranquillity of mind, gentleness. "இன்னா தண்மையி லாளர் பகை" *(இன். நாற். 32). 3.* இன்பம்; pleasantness, agreeableness. *4.* மென்மை (குறள், 1239, உரை): slendernes, gentleness. *5.* தாழ்வு (பிங்.); baseness, meanness, inferiority. (நாஞ்.). *6.* விளைவுக் குறைவு; poorness of yield. "கேடுகரிவுந் தண்மையும் நீக்கிக் கலம் நெல்" *(நாஞ்.). 7.* அறிவின்மை (திவா.); ignorane, shallowness.

ம. தண்ம; க. தண்பு; தெ. தழைபு; து. தம்பு; கோத. தண்; துட. தண்வ்; குட. தணிமி; பட. தணுபு

[தண் → தண்மை. (மு.தா. 299)]

தண்மைச்சுறா *taṇmai-c-cuṟā*, பெ. (n.) ஒருவகைச் சுறாமீன்; a kind of shark fish.

[தண்மை + சுறா.]



தண[1]**-த்தல்** *taṇa-*, 3 செ.குவி.(v.i.) *1.* நீங்குதல்; to depart, go away. "தங்குதிமல நாளுந் தணந்திடும்" *(பிரமோத். 10:38). 2.* போதல்; to go; to pass.

[தள் → தண் → தண-.]

தண[2]**-த்தல்** *taṇa-*, 3 செ.குன்றாவி. (v.i.) *1.* நீக்குதல்; to put away, remove. "மெலிவைத் தணப்பான்" *(தணிகைப்பு. கள. 340). 2.* பிரிதல்; to leave, separate from. "தணந்தமை சால வறிவிப்ப போலும்" *(குறள். 1233).*

[தள் → தண் → தண-.]

தணத்தல்[3] *taṇattal*, பெ. (n.) ஓதல் முதலியவற்றில் சென்றது குறித்துக்கூறும் பருவம்பொய்த்தல் (அடி. சிலம்பு. 8; 61); unseasonal late-arrival of šaṅgam literary hero for the sake of education.

[தள் → தண் → தணத்தல்: காலந் தாழ்த்தல்; தாழ்த்தல்.]

தணக்கம் *taṇakkam*, பெ.(n.) தணக்கு[2].1 பார்க்க; see *taṇakku*[2]-*l*. "பல்பூந் தணக்கம்" *(குறிஞ்சிப். 850).*

தணக்காசிகம் *taṇa-k-kāsigam*, பெ. (n.) இந்திய முசுக்கட்டை மரம்; Indian mulberry (சா.அக.).

தணக்கு[1] *taṇakku*, பெ. (n.) தடவுமரம்; இதன் விதைகள் மன்றாட்டு (செபம்) மாலையாகக் கோக்கப்படும்; catamaran,wood tree; necklace and rosaries are made from the seeds.

தணக்கு வகைகள்:

1. *சாம்பல்தணக்கு;* white catamaran tree
2. *செந்தணக்கு;* false kuteerah
3. *வெண்தணக்கு;* white tanak
4. *கொட்டைத்தணக்கு;* whirling nut
5. *மலைத்தணக்கு;* bastard cedar
   வெள்ளைக்கடம்பு : bridal conch plant
6. *மஞ்சள்தணக்கு;* yellow flowered silk cotton
7. புல்தணக்கு
8. *பஞ்சுத்தணக்கு;* same as no. 6.
9. *யானைவயிற்றுத்தணக்கு;* elephant rope tree
10. *நுணாத்தணக்கு;* small ach root
11. வண்டுளைத்தணக்கு
12. *சாம்பரித்தணக்கு;* same as no. 1
13. *முனுவுத்தணக்கு;* potters tree
14. *சிறுதணக்கு;* small dying mulberry
15. *முட்டைத்தணக்கு;* same as no. 4
16. *வெள்ளைத்தணக்கு;* same as no. 13
17. *சம்பீரத்தணக்கு;* same as no. 1 *(சா.அக.)*

தணக்கு[2] *tanakku,* பெ.(n.) *1.* நுணா என்னுங் கொடி (L.); small ach root s.cl., Morinda umbellata. *2.* முட்டைக்கோங்கு என்னுமரம்; whirling nut. *3.* கோங்கிலவு; false tragacanth. *4.* ஒடல்[2] பார்க்க; see *ōdal*[2], elephant rope tree. *5.* வால்; tail. "தணக்கிறப் பறித்த போதும்" *(சீவக. 2887).*

ம. தணக்கு

[தண் → தண → தணக்கு.]

தணக்குப்பருத்தி *tanakku-parutti,* பெ. (n.) கோங்கிலவு; whirling nut *(சா.அக.).*

[தணக்கு + பருத்தி.]

தணக்குப்பிசின் *tanakku-p-pisin,* பெ. (n.) *1.* வெண்மை, கருமை, செம்மை, நீலம்- வண்ணங்களுள்ள மரப்பிசின். செம்மை, வெண்மை சிறந்தது. சளிக்கோழையை நீக்கும். இளகியத்தைப் பயன்படுத்த ஆண்மை, வலுப்பெறும். நீர்ச்சுருக்கு, தொண்டைப் புகைச்சல் போன்ற நோய்களை நீக்கும். இது துவர்ப்பாகலின், குருதிப் போக்கை நிறுத்தும்; an excellent gum of false tragacanth tree. The other gum varieties are red black and purple. The red and white gum varieties are used with great advantage in suppressing phlegm in case of consumption. It is very useful in the irritation of the mucous membranes of the pulmonary and ganitourinary organs. Being an astringent it arrests bleeding. *2.* *வாதுமைக்கொண்டைப் பிசின்;* true tragacanth or gum of almond tree.

[தணக்கு + பிசின்.]

தணப்பு[1] *tanappu,* பெ. (n.) *செலவு; பிரிவு;* to spend, to separate.

[தண → தணப்பு.]

தணப்பு[2] *tanappu,* பெ. (n.) *1.* *நீங்குகை;* parting; separation. "தணப்பிலாக் கன்னிமுகங் கருக" *(திருவானை. உலா, 116).* *2.* *தடை;* hindrance. "தணப்பறக் கொடுத்த பின்றை" *(சீவக. 373).* *3.* செல்லுகை *(வின்.);* going, passing.

[தண → தணப்பு.]

தணல்[1] *tanal,* பெ. (n.) *1.* *கனிந்தநெருப்பு;* live coals, embers, cinders. "தணல் முழுகு பொடியாடுஞ் செக்கர்மேனி" *(தேவா. 1090, 7).* *2.* *நெருப்பு;* fire. "வீதியெல்லாந் தணல்" *(இராமநா. உயுத். 13).*

[தழல் → தணல்; ஒ.நோ. அழல் → அனல். புழல் → புனல்]

தணல்[2] *tanal,* பெ. (n.) நிழலிடம் *(நாஞ்.);* shade, shady-spot.

ம. தணல்

[தண் = குளிர்ச்சி. தண் → தண்மை = குளிர்மை. குளிர்மையுடைய நிழல். தண் → தண → தணல்]

தணல்விழுங்கி *tanal-vilungi,* பெ. (n.) தீக்கோழி *(வின்.)* (தணலை விழுங்குவது); ostrich, as eating cinders *(செ.அக.).*

[தணல் + விழுங்கு. தணல் = நெருப்பு விழுங்கி = விழுங்குவது]

தணலம் *tanalam,* பெ. (n.) எருக்கு *(மலை);* madar plant.

தணலாற்றி *taṇal-āṟṟi,* பெ. (n.) *1.* கொடிவேலி; lead wort. *2.* மணித்தக்காளி; black berried solanum (சா.அக.).

[தழல் → தணல் + ஆற்றி. சூட்டைத் தணிக்கும் மணித்தக்காளி]

தணலி *taṇali,* பெ. (n.) *1.* தணலம் பார்க்க; see *taṇalam. 2.* நெருப்பு; fire.

[தழல் → தணல் → தணலி.]

தணவகா *taṇavagā,* பெ. (n.) *1.* மஞ்சள்கிழங்கு; yellow bulbous root. *2.* மஞ்சள் சிற்றகத்தி மரம்; sesbania aegyptica with the yellow flowers (சா.அக.).

தணவம் *taṇavam,* பெ. (n.) அரசு (மலை.); pipal tree.

தணவையாதம் *taṇavaiyādam,* பெ.(n.) *1.* ஆகாய கருடன்; skyroot. *2.* சிறுகாஞ்சொறி; small climbing nettle (சா.அக.).

தணன் *taṇaṉ,* பெ.(n.) குளிர்ந்த அருளாளன்; merciful person.

[தண் → தணம் → தணன்.]

தணி[1]**-தல்** *taṇi-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* ஆறுதல்; to be allayed, mitigated, alleviated, softened, appeased, pacified, soothed. "சினந் தணிந்திகென" (கலித். 16). *2.* குறைதல்; to be reduced. "தணியாத் துன்பந் தலைத்தலை மேல்வர" (மணிமே. 2:5). *3.* வற்றுதல்; to grow dry. "தணிவருங் கயத்துப் பூத்த" (சீவக. 1582). *4.* விளக்கு முதலியன அவிதல் (இ.வ.); to die out, expire, as flame. *5.* வேலை முதலியவற்றினின்றும் நீங்குதல்; to be free, as from work. "தணியும் பொழுதின்றி நீரணங் காடுதிர்" (திவ். திருவாய். 4:6:6). *6.* காலந் தாழ்த்துகை, தவக்கம்; to delay, slacken. "தணியா தொல்லை தான்வந்தருளி" (திருவாச. 32:8). *7.* தாழ்தல்; to yield, submit oneself. அவன் இவனுக்குத் தணியான். *8.* ஒன்றோடொன்று இசைதல் (வின்.); to be adapted, as the angle of a hoe to the haft, as the coulter to the plough. *9.* நிறைதல்; to abound; to be profuse. "தணிபொன் சொரியும்" (தஞ்சைவா. 25). *10.* பொந்திகையடைதல்; to be satisfied, fulfilled, as a desire. "தணியா வேட்கை தணித்தற் கரிதாய்" (மணிமே. 25:121). *11.* பருத்தல்; to increase in size, grow fat. இந்த மருந்தால் உடம்பு தணியும் (உ.வ.).

தெ. தணியு; க. தணி; ம. தணியுக

[தள் → தண் → தணி-.]

தணி[2]**-த்தல்** *taṇi-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1.* ஆற்றுதல்; to relieve, appease, satisfy, heal. "நெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென" (மலைபடு. 303). *2.* குறைத்தல்; to cause to diminish, to moderate. *3.* தாழ்த்துதல்; to lower in height, set lower, strike, as a flag. *4.* புதைத்தல் (சூடா.); to bury. *5.* அவித்தல்; to extinguish, quench, as fire. *6.* தீர்த்தல்; to remove, cure. "நோய்முதனாடி யது தணிக்கும் வாய்நாடி" (குறள், 948). *7.* தண்டித்தல்; to punish. "தணித்தலு மளித்தலுந் தடிந்தோன்" (ஞானா. 48:20).

[தள் → தண் → தணி-.]

தணி[3]**-த்தல்** *taṇi-,* 2 செ.கு.வி. (v.t.) பொறுத்தல்; to bear. "மின்னு ... துன்னுவாட்டடந் தணித்தலின்" (சீவக. 867).

[தள் → தணி-.]

தணி[4] *taṇi,* பெ. (n.) மலை (அக.நி.); mountain.

[தண் → திண் → தணி.]

தணி[5] *taṇi,* பெ. (n.) குளிர்ச்சி; coolness, coldness. "தணி புனலாடுந் தரைமிகு போர்க்கண்" (பரிபா. 6:29).

[தண் → தண்மை = குளிர்மை. தள் → தண் → தணி: நீர்வேட்கையைத் தணித்துக் குளிர்ச்சியூட்டல்]

தணி[6] *taṇi,* பெ.(n.) தேர்நெம்புங் கட்டை (இ.வ.); lever - beam for starting a chariot.

[தடி → தணி.]

தணிக்கை *taṇikkai,* பெ. (n.) *1.* அறத்திற்கு எதிரான பகுதியைத் திரைப்படம் போன்ற வற்றிலிருந்து நீக்குதல்; censorship. இந்தத் திரைப்படத்துக்குத் தணிக்கைச் சான்றிதழ் இதுவரை கிடைக்கவில்லை. *2.* கணக்குகளைச் சரிபார்த்தல்; auditing. *3.* மேற்பார்வையிடுகை;

inspection, inquiry, supervision. வனத்துறை அலுவலர், தணிக்கைக்காக நாளை வருவார் (உ.வ.).

[தண் → தணி → தணிக்கை = பணியை மேற்பார்த்துக் கணித்தல். ஒ.நோ. கண் → கணி → கணிக்கை. ஒருகா. கணிக்கை → தணிக்கை]

தணிகி *taṇiki,* பெ. (n.) தணிக்கை பார்க்க; see *taṇikkai.*

[தணிக்கை → தணிகி.]

தணிகை *taṇigai,* பெ. (n.) திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள, திருத்தணிகையென்னும் முருகன் திருக்கோவிலுள்ள இடம்; Murugan temple in Tiruvaḷḷūre District (செ.அக.).

தணிகைப்புராணம் *taṇigai-p-purāṇam,* பெ. (n.) திருத்தணிகையென்னும் இடத்தைப் பற்றிப் பத்தொன்பதாம் நூற்றாண்டில், கச்சியப்ப முனிவர் இயற்றிய தொன்மம்; a toṉmam on Thiruttaṇigai shrine, by Kacciyappa-muṉivar 19th c.

[தணிகை = திருத்தணிகை. புராணம் = தொன்மம்]

Skt. purāṇa → த. புராணம்

தணிசு *taṇišu,* பெ. (n.) *1.* விலைமலிவு (வின்.); moderation, cheapness. *2.* சதைபிடிக்கை (தஞ்.); picking up, putting on flesh. *3.* வளைவு (வின்.); bending, as of a hoe, opp. to kaṭišu.

[தணி → தணிவு = குறைவு. தணிவு → தணிசு = பொருட்களின் மிகு விளைச்சலால், விலை தணிவது, இயல்பேயாம்]

தணிந்தவேளை *taṇinda-vēḷai,* பெ. (n.) சாயுங்காலம்; மாலைப்பொழுது (வின்.) (குளிர்ந்திருக்கும் நேரம்); evening, as being the cool part of the day.

[தண் → தணி → தணிந்த + வேளை.]

தணிந்திரு-த்தல் *taṇindiru-,* 4 செ.குவி. (v.i.) சதைபிடித்தல்; to pick up flesh.

[தணி → தணிந்து + இரு-.]

தணிப்பு[1] *taṇippu,* பெ. (n.) *1.* தணிவு பார்க்க; see *taṇivu.* *2.* அதிமதுரம் முதலியவற்றைக் கருக்குநீரிட்டுச் செய்த ஒருவகை மருந்து; demulcent extracted from liquorice and other herbs.

[தண் → தணி → தணிப்பு = தொண்டைக் கம்மலைத் தணிக்க, நீர்கருக்கிச் செய்த மருந்து]

தணிப்பு[2] *taṇippu,* பெ. (n.) அழற்சியைத் தணிக்கும் மருந்து; any medicine that lessens the effect of irritation.

The following are the examples.

1. குன்றிமணி: Indian liquorice
2. முள்ளுக்கீரை; thorny spinach
3. சதமூலி: Indian salap காட்டுக் காரட் கிழங்கு
4. கருங்காக்கணம்; crow creeper
5. பேதனா; bedaunea
6. கடற்பாசி: sea moss
7. வெண்டிக்காய்; common bendy
8. திருநீற்றுப்பச்சை (சப்ஜா): fragrant basil
9. இராமதுளசி; Rama thulasy
10. நெல்: paddy
11. ஆனைநெருஞ்சில்; elephant caltrope
12. இசுபகோல்; spogel seed
13. எள்: gingelly seed
14. கழுதைத்தும்பை; donkey leucas.

(சா.அக.)

[தண் → தணி → தணிப்பு]

தணிமரம் *taṇimaram,* பெ. (n.) தேர் நெம்புதடி (ஈடு, 1,4, 6 ஜீ. அரும்.); lever beam for starting temple car.

[தடி → தணி + மரம்.]



தணிமார் *tanimār,* பெ. (n.) ஆற்றுகை; relieve. "நெடுவசி விழுப்புண்டணிமார் காப்பென" (மலைபடு. 909).

[தணி + மார்.]

தணியல்[1] *taniyal,* பெ. (n.) தணிவு பார்க்க; see *tanivu.* (செ.அக.).

[தணி → தணியல்.]

தணியல்[2] *taniyal,* பெ. (n.) திருத்தணிகை; Murugan temple. "தணியல் மேவி" (குற்றா. தல. திருமண. 161).

[தணி → தணியல்]

தணியல்[3] *taniyal,* பெ. (n.) கள்; toddy. "அருந்தினன் றணியல்" (ஞானா. 33, 16).

[தெளி → தளி → தணி → தணியல்]

தணியாமை *taniyāmai,* பெ. (n.) காலந் தாழ்த்தாமை; without delay. "தணியா தொல்லை வந்தருளி" (திருவாத. பிரார்த்தனை. 8).

[தணி + ஆ + மை − தணியாமை. 'ஆ' − எதிர்மறை இடைநிலை. 'மை' − சொல்லாக்க ஈறு. (ஒ.நோ.) போகாமை : குறையாமை.]

தணிவு *tanivu,* பெ. (n.) 1. குறைகை; abatement, modification, mitigation, alleviation, diminution. "தணிவில் வெம்பசி" (மணிமே. 17:73). 2. அமைதி; calmness, mildness, coolness, softness. "கடலிற்றணி வெய்தி" (கம்பரா. நகர்நீ. 141). 3. வணக்கம்; reverence, worship, submission. "தணிவளிக்கி னுயர்வளிக்கும்" (காஞ்சிப்பு. கழுவா. 307). 4. நீர்வற்றுகை; becoming dry. "தணிவருங் கயத்துப் பூத்த" (சீவக. 1582). 5. இழிவு (வின்.); inferiority in quality or performance. 6. தாழ்வு (இ.வ.); lowness, as of height, price. தணிந்த வில்லுதான் தைக்கும் (பழ.).

[தள் → தண் → தணி → தணிவு (மு.தா. 299)]

தணிவுசுரம் *tanivu-šuram,* பெ. (n.) முறைக் காய்ச்சல்; intermittent fever.

மறுவ. முறைக்காய்ச்சல்

[தணிவு + சுரம். ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில், தொடர்ந்து வரும் காய்ச்சல். விட்டுவிட்டு வருஞ் சுரம்]

தணு *tanu,* பெ. (n.) பொழுதுவணங்கி; sun-flower (சா.அக.).

[தள் → தண் → தணு. கதிரவனைக் கண்டதும் தணிவாகத் தலையைத் தாழ்த்தி நிற்கும், மலர்.]

தணுப்பு *tanuppu,* பெ. (n.) 1. குளிர்ச்சி (நாஞ்.); chillness. 2. நீர்க்கோவை: cold.

[தண் → தணு → தணுப்பு. 'பு'− சொல்லாக்க ஈறு. ஒ.நோ. கடுப்பு; விடுப்பு; அலுப்பு; வெளுப்பு.]

தத்[1] *tat,* பொறுமையின்மை, வெறுப்பைக் காட்டும் அதட்டற் குறிப்பு (இ.வ.); exclamation meaning tut.

க. தத்

[தத் = ஒலிக்குறிப்புச் சொல்லினின்று கிளைத்த வேரடி.]

தத்[2] *tat,* கு.பெ.எ. (adj.) 1. அந்த; that. "தத்திருப்பதி" (திருப்பு. 124). 2. அது; that. "தத்தொமசி" (வேதா. சூ. 117).

[தான் → தத் (வ.வ. 156)]

தத்சுத்தி *tatšutti,* பெ. (n.) உண்மையை உள்ளபடி அறிதல்; ascertainment or correct knowledge of truth.

[தான் → தத் + சுத்தி − தத்சுத்தி (வ.வ. 156)]

தத்தக்கபித்தக்கக்குத்துதல் *tattakka-pittakka-k-kuttudal,* பெ. (n.) ஒருவன் மற்றொருவன் புறங்கையிற் குத்தும்போது, அந்தக்குத்துக் கைம்மேற்படாமல், அடித்தவனதுகை தரையைத் தாக்கும்படி கையை இழுத்துக் கொள்ளும் விளையாட்டு (யாழ்ப்); a game in which one tries to strike on another's hand and the other draws it back, evading the blow.

[தத்தக்க + பித்தக்க + குத்துதல்.]

தத்தக்கபித்தக்கவெனல் *tattakka-pittakka-v-enal,* பெ. (n.) 1. நடைதளர்தற் குறிப்பு; wobbling, as of a child. அவன் தத்தக்கபித்தக்க வென்று நடக்கிறான் (உ.வ.) 2. பேச்சுத் தடுமாறற் குறிப்பு; babbling, faltering in speech. தத்தக்கபித்தக்கவென்று பேசுகிறான் (உ.வ.).

[தத்தக்க + பித்தக்க + எனல் − தத்தக்க பித்தக்கவெனல்]

ஒலிக்குறிப்பு வேரடியினின்று கிளைத்த சொல்லாகும். தத்தித்தத்திப் பேசும் பாங்கு, கொஞ்சுமொழி பயிலுங் குழவிகட்கே யுரியது. குறுகுறுநடந்து, சிறுகைநீட்டிக் குதலை மொழி பேசுங் குழவியைப் போன்றதே, அகவைமுதிர்ந்த, குடுகுடு கிழவர்தம் நடையும் பேச்சுமெனலாம். தளர்நடை நடக்கும் அகவைமுதிர்ந்தோர்தம், தத்துநடையும், பேச்சும், கிள்ளைமொழி பயிற்றும் பிள்ளைகளைப் போன்றதெனில், மிகையன்று.

சேக்சுபியர் Seven Stages of Men, என்னும் பாடலிலும், இக் கருத்தைக் கூறியுள்ளார். குரானில் நபி - முதுமை மிகுதியால் வாழ வாய்ப்புத்தரும் இயற்கை குழந்தைபோல் தவழ வைக்கும் என்று, இக் கருத்தையே கூறுகிறார்.

தத்தகன் *tattagaṉ*, பெ. (n.) மகவுக் கொடையிடப்பட்ட மகன்; adopted son, son given by his parents to a person, who legally adopts him.

மறுவ. தத்துமகன், தத்துப்பிள்ளை

[தத்து + அகம் → அகன் → தத்தகம் → தத்தகன் - மற்றொருவர் வீட்டிற்கு மகனாகக் கொடை கொடுக்கப்பட்டவன்]

தத்தகாபுத்தகா *tattagā-puttagā*, பெ. (n.) குழந்தையின் ஒழுங்கற்ற, குறுகுறு நடை; wobbling walk of a child; toddling. தத்தகா புத்தகா நாலுகாலு (இ.வ.).

[தத்தகா + புத்தகா.]

தத்தங்கொடு-த்தல் *tattaṅ-koḍu-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. மகவுக்கொடை கொடுத்தல் (வின்.). to give in adoption. 2. தத்தம்பண்ணு பார்க்க; see *tattam-paṇṇu-*.

மறுவ. தத்துக்கொடுத்தல், மகவுக் கொடையளித்தல்

[தத்தம் + கொடு-.]

தத்தஞ்செய்-தல் *tattañ-šey-*, 1 செ.குன்றாவி (v.t.) தத்தம்பண்ணு-தல் பார்க்க; see *tattam-paṇṇu-* எல்லாவற்றையும் தத்தம் செய்துவிட்டு துறவியாகிவிட்டார் (உ.வ.). "புனிதவுன் றனதெனத் தத்தஞ் செய்து" (அறப். சத 6).

[தத்தம் + செய்-.]

தத்தடி *tattaḍi*, பெ. (n.) குழந்தையின் தளர்நடை (இ.வ.); wobbling of a child.

[தத்தி → தத்து + அடி = தத்தித்தத்தித் தளர்நடை பயிலும் குழவியின்நடையைத் தத்தடி என்று வழங்குவர். இவ் வழக்கு கல்லாதார் நாவில் வழங்கும், நல்லதமிழ் வழக்காகும். "தத்தித் தத்தி நடந்துவருஞ் சின்னப்பாப்பா" என்னுந் திரைப்படப் பாடல்வழக்கை நோக்குக]

தத்தபித்தவெனல் *tatta-pitta-v-eṉal*, பெ. (n.) தத்தக்கபித்தக்கவெனல் (இவ.) பார்க்க; see *tattakka-pittakka-v-eṉal*.

[தத்தக்கபித்தக்க → தத்தபித்த + எனல்]

தத்தநாகம் *tatta-nāgam*, பெ. (n.) தயிர்; curd.

தத்தபுத்திரன் *tatta-puttiraṉ*, பெ. (n.) தத்தகன் பார்க்க; see *tattagaṉ* (செ.அக.).

மறுவ. தத்துப்புத்திரன், தத்துப்பையன்

[தத்து + புத்திரன். தத்துப்புத்திரன் → தத்தபுத்திரன்]

தத்தம்[1] *tattam*, பெ. (n.) 1. புல்லுருவி (புல்லூரி); parasite. 2. ஒவ்வொன்று; each.

தத்தம்[2] *tattam*, பெ. (n.) நீர்வார்த்துக் கொடுக்கும் கொடை (இ.வ.); gift, offering, etc, given away with water.

[தத்து + அம் - தத்தம். தத்து = கொடை. 'அம்' பெருமைப்பொருள் பின்னொட்டு]

தத்தம்பண்ணு-தல் *tattam-paṇṇu-*, 12 செ.குன்றாவி. (v.t.) 1. நீர்வார்த்துக் கொடை கொடுத்தல்; to give away in charity by pouring water into the hands of the recipient. 2. இறந்தார்க்கு எள்ளுந் தண்ணீரும் இறைத்தல்; to give oblations to manes with water. 3. பொருளைத் திரும்பப் பெறாதபடி கொடுத்துவிடுதல்; to give absolutely, lose entirely without any hope of regaining.

[தற்று → தத்து → தத்தம் + பண்ணு-.]

தத்தம்மை *tattammai*, பெ. (n.) தத்தை[1] (நாஞ்) பார்க்க; see *tattai*[1].

[தத்தை + அம்மை - தத்தம்மை.]

தத்தமணியம் *tatta-maṇiyam,* பெ. (n.) தொட்டாற்சுருங்கியை உள்ளடக்கிய துவரையினக் குத்துச்செடிவகை (விடத்தேர்); mimosa cinerea.

[தத்தம் + மணியம்.]

தத்தமாழை *tatta-māḻai,* பெ. (n.) உருக்கு; steel.

[தத்தம் + மாழை.]

தத்தரசமயம் *tattara-šamayam,* பெ. (n.) நெருக்கடியான நேரம் (இ.வ.); pressing occasion, critical moment.

[தத்தரம் + சமயம்]

தத்தரம்[1] *tattaram,* பெ. (n.) *1.* நடுக்கம் (இவ.); tremulousness, quivering. *2.* மிகுவிரைவு; over hastiness, flurry. "தத்தரமாய்க் காலிலிட்ட தண்டைகளும்" *(விறலிவிடு. 1052).*

தெ., த. தத்தர

[தத்து → தத்தம் → தத்தரம். தத்து – நடுக்கம், அதிர்வு. தத்துகை – நடுங்குகை, அதிர்கை. நிலநடுக்கத்தால், அனைத்தும் அதிர்கை.]

தத்தரம்[2] *tattaram,* பெ. (n.) வலக்காரம்; artfulness, cunning. "செலவுக்குத் தத்தரமாக் கேட்டாள்" *(விறலிவிடு. 755).*

[தத்தம் → தத்தரம்.]

தத்தரம்[3] *tatta-ram,* பெ. (n.) மிகுபுணர்ச்சி (தெய்வச். விறலி. விடு. 256); a mode of coition.

தத்தல் *tattal,* பெ. (n.) *1.* தத்து-தல் பார்க்க; see *tattu-. 2.* தவளை; frog *(சா.அக.).*

தத்தவா *tattavā,* பெ. (n.) பெருங்குறிஞ்சி; scammony swallow wort.

தத்தவோகம் *tatta-vōgam,* பெ. (n.) தீய வினைகளுள் ஒன்று; conjunction of a week day with certain date; considered inauspicious. "ஆன் பெரியோர் பழமையாய் வந்த நேயமதை யகல்வதே தத்தயோகம்" *(திருவேங்.சத. 39).*

[தம்தம் → தத்தம் + ஓகம் → தத்தவோகம்]

தத்தவோமம் *tatta-v-ōmam,* பெ. (n.) பிள்ளையை மகவுக்கொடையாகப் பெறும் போது, தீவார்த்துச் செய்யப்படும் வேள்விச் சடங்கு; an oblation in fire performed at the adoption of a son *(செ.அக.).*

[தற்று – நீர்வார்க்கை. தற்று → தற்றம் → தத்தம் + ஓமம்.]

தத்தளங்கெனல் *tattaḷaṅ-k-eṉal,* பெ. (n.) மத்தளவொலிக் குறிப்பு; onom. expr. signifying drum-beat. "தத்தளங்கென்றே பரதஞ் சாதிப்ப" *(கடம்ப. உலா. 107).*

[தத்தளம் + எனல்]

தத்தளபஞ்சமம் *tattaḷa-pañjamam,* பெ. (n.) மருதப்பண் வகை (பிங்.); an ancient melody-type of the marudam class.

[தத்தளம் + பஞ்சமம்.]

தத்தளம் *tattaḷam,* பெ. (n.) கட்டடத் தளங்களின் நெகிழ்ந்த நிலை (இ.வ.); loose or spoiled condition of floor, terrace, etc.

[தத்தம் + அளம் → தத்தளம்.]

தத்தளி-த்தல் *taṭṭaḷi-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* எதிர்பாராத நேர்ச்சியில் (விபத்து) அகப்பட்டுத் திகைத்தல்; to struggle for life, to gasp for breath, as a drowning person; to be at one's wit's end; to be greatly agitated. "ஒன்னார்கள் முறையிடத் தத்தளிக்கப் பொரும்" *(தனிப்பா, I: 355). 2.* பஞ்சம் முதலியவற்றால் வருந்துதல் (இ.வ.); to be in great straits, as persons in times of drought, famine or epidemic. அடைமழை பெய்ததால் மக்கள் வீடுகளை இழந்து தத்தளிக்கின்றனர் *(உ.வ.). 3.* மனங் கலங்குதல்; to be agitated in mind. *4.* மூச்சுத் திணறல்; to gasp for breath, to struggle for life. நீரில் தத்தளித்து மூழ்க இருந்தவரை மீனவர்கள் காப்பாற்றினர் *(உ.வ.).* புயலில் சிக்கிக் கப்பல் தத்தளித்தது *(உ.வ.).*

தெ. தத்தரில்லுபடு; க. தத்தளிசு

[தத்து + அளி-.]

தத்தளிப்பு *tattaḷippu*, பெ. (n.) 1. உயிர் தப்பவேண்டித் திகைக்கை; struggling for life. 2. மனங்கலங்குகை; perturbation, agitation. பள்ளிக்குச் சென்ற பிள்ளை, உரிய நேரத்தில் திரும்பாமை கண்டு, அன்னையின் உள்ளத் தத்தளிப்பிற்கு அளவே இல்லை (உ.வ.).

[தத்தளி → தத்தளிப்பு.]

தத்தறிவு *tattaṟivu*, பெ. (n.) காலவேறுபாடு, அகவைவேறுபாடு, நோயின்தன்மை ஆகிய வற்றை உணர்தல்; the knowledge of timely warning of the great complications likely to happen in the physical state of the doshas at the different periods of the year and at the different ages of the patient and the stages of the disease.

[தத்து + அறிவு.]

தத்தன் *tattaṉ*, பெ. (n.) 1. ஆண்பாற் பெயர்ச் சொல்; masculine proper name. "தத்தா இவர் நமர்" (பெரியபு.). 2. மகவுக்கொடைப் பிள்ளை; adopted son. "தத்தன் சகோடன்" (ஏலா. 31).

[தத்து + அன். தத்து = மகவுக்கொடை. 'அன்' - ஆண்பாற் பெயரீறு.]

தத்தனம் *tattaṉam*, பெ. (n.) இவறன்; miser.

[தத்து + அனம். (ஒ.நோ.) மெத்தனம். 'அனம்' சொல்லாக்க ஈறு.]

தத்தனேரி *tattaṉēri*, பெ. (n.) மதுரை மாவட்டத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்; an historical place in Madurai Dt.

[தத்து + நரி = தத்தநரி → தத்தனேரி]

மதுரை மாவட்டத்தின் தென்பகுதியில், இவ்வூர் அமைந்துள்ளது. கி.பி. 862 முதல் 885 வரை பாண்டியநாட்டை இரண்டாம் வரகுணவருமன் கோலோச்சியநாக, வரலாற்று வல்லுநர் கருதுகின்றனர். கல்லா மனத்தைக் கனிவிக்குந் திருவாசகமியற்றிய, மணிவாசகப் பெருமான், வரகுணரின் அமைச்சராவார். நரியைப் பரியாக்கிய நிகழ்வு, தத்தனேரியில் நிகழ்ந்ததாகத் திருவிளையாடற் புராணம் புகலும். மணிவாசகருந் தம் பாடலில் "நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்து" என்று, குறித்துள்ளார்.

இவ்வூருக்கு முதற்கண் அமைந்த பெயர் தத்துநரி என்பதாகும். இதுவே காலப்போக்கில், தத்துநரி → தத்தனேரியாக மாறியதென்பர்.

தத்தா *tattā*, பெ. (n.) புல்லுருவி (புல்லூரி); parasite.

தத்தாங்கி *tattāṅgi*, பெ. (n.) 1. சிறு குழந்தைகள் கைகொட்டுகை (இ.வ.); clapping of hands by children. 2. சிறுமியர் கைகொட்டிப்பாடும் ஒருவிளையாட்டு (யாழ்ப்.); a girls game of clapping hands and singing.

மறுவ. சப்பாணி கொட்டல்

[தத்து → தத்தாங்கி = தத்துத்தத்தென்று சிறுகை நீட்டி, குறுகுறு நடந்து, தளர்நடை பயிலுதல், குழவிப்பருவத்திற் குரிய இயல்பாகும். இஃதும், ஒலிக்குறிப்பு வேரடியினின்று பிறந்த சொல்லாகும்.]

தத்தாத்திரயன் *tattāttirayaṉ*, பெ. (n.) அத்திரியின் மகனும், திருமாலின் தோற்றரவுமான ஒரு முனிவன்; a sage, son of attiri, considered an incarnation of Tirumāl. "தத்தாத்திரயனாய் . . . அத்திரிக்கு நன்மகனென வுதித்து" (பாகவ. முதற். மாய வனமி. 26) (செ.அக.).

தத்தாத்துமன் *tat-t-āttumaṉ*, பெ. (n.) தானாகவே மகவுக்கொடையானவன்; son self-given, one who offers himself of his own accord to be adopted (R.F.).

[தத்து + ஆத்துமன் - மனம்விரும்பி, பிறர் வீட்டிற்கு மகனாகச் சென்றவன்]

தத்தாரி *tattāri*, பெ. (n.) கண்டபடி திரிபவ-ன்-ள் (இ.வ.); a wanton, self-willed person, vagabond.

[தத்து → தத்தாரி]

தத்தித்தாவிச் செல்லுதல், ஒழுங்கின்றிச் செல்லுதல்.

கால்போன போக்கில், குழவி நடைபயில்வது போன்று, வாழ்க்கையில் வாழும்வழி தெரியாது, குறிக்கோள் ஏதுமின்றி, வீணே சுற்றித்திரிபவன்.

தத்தி[1] *tatti*, பெ. (n.) கொடை (யாழ்.அக.); gift.

[தத்து → தத்தி]

தத்தி[2] *tatti*, பெ. (n.) சுறுசுறுப்பில்லாதவ-ன்-ள்; lazy person.

[தடி → தத்தி. ட → த திரிபு. (ஒ.நோ.) ததிப்பயல் → தத்திப்பயல்.]

தத்தி[3] *tatti*, பெ. (n.) *1.* பகுதி; part. *2.* தொகுதி; bunch.

தத்திகாரம் *tatti-gāram*, பெ. (n.) பொய் (பிங்.); lie, falsehood.

[தந்து = உட்டுளை, உள்ளீடற்றல் உண்மையற்றது. துந்தி → துத்தி → தத்தி + காரம் – தத்திகாரம்.]

தத்திசத்திவிடங்கி *tatti-šatti-viḍaṅgi*, பெ. (n.) இராசஇராசசோழனுடைய மனைவி; the wife of Rāja Rāja Chōlan.

தத்திதம் *tattidam*, பெ. (n.) பெரும்பான்மை பெயர்ச்சொல்லின் மேல்வரும், விகுதி (தொல். விருத். முதற்: 55); affix forming nouns generally from other nouns.

[தத்தி → தத்திதம்.]

தத்திதன் *tattidan*, பெ. (n.) தத்திதம் பார்க்க; see *tattidam*. "தத்திதன் வேறாமால்" (பி.வி.30).

[தத்திதம் → தத்திதன்]

தத்திதாந்தம் *tattitāndam*, பெ. (n.) பெயர்ச் சொல்லின் விகுதியைக் கொண்ட பெயர் (பி.வி. 29); nouns formed with the tattidam affix.

[தத்தம் → தத்து → தத்திதம் + அந்தம் – தன்மைக் குறிக்கும் பெயர்ச்சொல்லின் விகுதி யென்றறிக.]

தத்தியம்[1] *tattiyam*, பெ. (n.) மெய் (யாழ்.அக.); truth.

[தத்து → தத்தி + அம்.]

தத்தியம்[2] *tattiyam*, பெ. (n.) துகில்வகை (சிலப். 14 108: உரை.); a kind of cloth.

[தத்தி + அம். "அம்" சொல்லாக்க ஈறு]

தத்தியன் *tattiyan*, பெ. (n.) மெய்யன்; one who talks truth.

[தம்தம் → தத்தம் → தத்து → தத்தி + அன் – தத்தியன். தத்து – மெய். தத்தியன்– மெய்மையை அறிந்து, மெய்பேசும் மெய்யன்.]

தத்திரம் *tattiram*, பெ. (n.) மறுமொழி (பதில்); answer.

[தத்தி → தத்திரம்.]

தத்திரயமயம் *tattiraya-mayam*, பெ. (n.) மூன்று உண்மைப் பொருள்களையடக்கியது; that which consists of three realities.

[தத்திரையம் → தத்திரயம் + மயம்]

தத்திருக்கி *tattirukki*, பெ. (n.) புகையிலை; tobacco.

[தத்தி + உருக்கி → இருக்கி. எலும்புருக்கி, ஈளை முதலான நோயை யுண்டாக்கும் புகையிலை.]

தத்தினம் *tattinam*, பெ. (n.) நாள்தோறும்; daily.

தெ. தத்தினமு

தத்து[1]**-தல்** *tattu-*, 5 செ.குன்றாவி. (v.i.) *1.* குதித்தல்; to leap, jump, skip, hop. "தத்தாவுறு தடந்தேரினைத் தொடர்ந்தான்" (கம்பரா. நிகும்பலை: 121). *2.* தாவிச்செல்லுதல்; to go by leaps and jumps; to move by jerks and starts, as cockroaches. "தத்திப்புக வரும் பொங்குளைப் புள்ளியன் மாவும்" (பரிபா. 10:14). *3.* தாவி யேறுதல்; to jump over. "ஏற்றுப்பிண ரெருத்திற் றத்துபு" (கலித். 103:34). *4.* அடியால் அளத்தல்; to measure, as in pacing. "ஞாலந் தத்தும் பாதனை" (திருவிருத். 79). *5.* ததும்புதல்; to be agitated; to heave, shake, as water in a jar. "தத்து நீர்க்கடல்" (கம்பரா. படைத்தலைவ: 54). *6.* பரவுதல்; to spread. "தத்தரி நெடுங்கண்" (மணிமே. 2:7). *7.* ஒளி முதலியன வீசுதல்; to be emitted, as lusture. "தத்தொளி மணிமுடி" (சீவக: 144).

ம. தத்துக

[தத்தி → தத்து-.]

தத்து[2] *tattu*, பெ. (n.) *1.* தாவி நடக்கை; springing forward, hopping, moving by jerks, as cockroaches, as cattle tied by the forefeet. *2.* மனக்கவலை; anxiety. "தத்துற லொழி நீ" (கம்பரா. மிதிலைக்: 125). *3.* பிறப்பியத்தின்படி (சாதகத்தில்) நேரும் இடுக்கண்; peril, misfortune, critical period of one's life, as shown by the horoscope. *4.* தவறு; mistake, error. "தத்தின்றி யின்று னியல்புள்ளவாறு தமிழேனுணர்ந்து (விநாயகபு: 82.4). *5.* வாய்க்காலின் குறுக்கே இடும் அணையில் நீர், சிறுகப் பாய்வதற்காகக் குடைந்த துவாரம் (நாஞ்.); a small opening in a dam thrown across a canal,

through which a small quantity of water is allowed to flow during the drought season.

க. தத்து

[தத்தி → தத்து-.]

தத்து[3] *tattu,* பெ. (n.) பூச்சிக்கடியாலாகிய தடிப்பு (இ.வ.); blotch, slight swelling, as from the bite of an insect.

தத்து[4] *tattu,* பெ. (n.) 1. மகட்கொடை (தத்1); adoption. "தத்துக் கொண்டாள் கொலோ தானே பெற்றாள் கொலோ" (திவ். பெரியாழ். 2: 1: 7). 2. தத்துப்பிள்ளை பார்க்க; see *tattu-p-piḷḷai.* இவன் அவருக்குத் தத்து (உ.வ.).

க. தத்து

[தன் → (தர்) → தா → த. தரு = தருகிறான், தருவான், தருகை, தரவு. தா = தானம். த = தந்தான், தத்தம் → தத்து (வ.வ. 175). ஒருகா. தற்று → தத்து = மகட்கொடையில் கையால் நீர்வார்த்துத் தருதல்.]

தத்துக்கல் *tattu-k-kal,* பெ. (n.) அருவிநீர் தத்தி விழுவதற்கான கல் (வின்.); stone obstructing waterfall and making it leap anew.

[தத்து + கல்]

தத்துக்கிளி *tattu-k-kiḷi,* பெ. (n.) 1. வெட்டுக்கிளி (வின்.); grasshopper, locust. 2. கிளிப்பிள்ளை (வின்.); parrot. 3. பிள்ளைகளின் விளையாட்டு வகை (இ.வ.); game of leapfrog.

[தத்து + கிளி]



தத்துகபித்தநோய் *tattuga-pitta-nōy,* பெ. (n.) உடலில் தடித்தலுடன், நமைச்சல், நாக்கு, வாய் உலரல், மயிர்ச்சிலிர்ப்பு, சுரம், வியர்வை, இருமல் முதலியவைகளை உண்டாக்குமோர் பித்தநோய்; a form of bilious disease marked by pain of entire body with itching, parched tongue and mouth, horripillation, fever, sweating cough, etc.

[தத்துரு + பித்தநோய்]

தத்துநீர் *tattu-nīr,* பெ. (n.) கடற்கரையைத் தொட்டுக்கொண்டு, அலைபுரளும் கடல்நீர்; sea-water dashing against the shore. "தத்துநீர் வரைப்பின் கொற்கைக் கோமான்" (சிறுபாண்.) (செ.அக.).

[தத்து + நீர்]

தத்துப்பத்திரம் *tattu-p-pattiram,* பெ. (n.) மகட்கொடையை உறுதி செய்யும் ஆவணம் (இ.வ.); deed of adoption, document evidencing the fact of an adoption.

[தத்து + பத்திரம்]

Skt. pathra → த. பத்திரம்

தத்துப்பித்துஎன்று *tattu-p-pittu-eṉṟu,* கு.வி.எ. (adv.) முன்னுக்குப்பின் முரணாக; babblingly. அவரிடம் போய் தத்துப்பித்தென்று பேசிக் காரியத்தைக் கெடுத்துவிட்டான் (உ.வ.).

[தத்து + பித்து + என்று - தத்துப்பித்து என்று. ஒரு வேலையை முறைமாற்றிச் செய்து, குழப்புதல்]

தத்துப்பிள்ளை *tattu-p-piḷḷai,* பெ. (n.) மகட்கொடை எடுத்த மகன்; adopted son (செ.அக.).

[தத்து + பிள்ளை]

தத்துப்புத்திரன் *tattu-p-puttiraṉ,* பெ. (n.) தத்துபிள்ளை பார்க்க; see *tattu-p-piḷḷai* (செ.அக.).

[தத்து + புத்திரன்]

Skt. putra → த. புத்திரன்

தத்துப்புரட்சி *tattu-p-puraṭci,* பெ. (n.) (கணிய) காலச்சக்கர முறையில் கோள்களின் போக்கு ஒழுங்குதவறி இயல்வது (வின்.); irregularities by gaps or otherwise in the sequence of planetary regnal periods in the method of kāla-c-cakkaram.

[தத்து + புரட்சி]

தத்துப்பூச்சி *tattu-p-pūcci,* பெ. (n.) *1.* பழுப்பு நிறப்புள்ளிகளையுடைய தாவிச் செல்லும் ஒருவகைப் பூச்சி (வின்.); brown-spotted leaping insect with long antennae. *2.* விட்டில் பூச்சி; locust.

மறுவ. தத்து வெட்டியன், தத்துவண்டியன்

[தத்து + பூச்சி]

தத்துமடை *tattu-maḍai,* பெ. (n.) நீர் வாய்க் காலின் பக்கத்து மடை (வின்.); side-course in a water channel.

[தத்து + மடை]

தத்துமீள்[1]-தல் (தத்துமீட்டல்) *tattumīḷ-,* 10 செ.குன்றாவி. (v.t.) நோயாளியை இக்கட்டில் (ஆபத்தில்) இருந்து காத்தல் (யாழ்ப்.); to save one from a critical, ill-patient.

[தத்து + மீள்-.]

தத்துமீள்[2]-தல் (தத்துமீட்டல்) *tattumīḷ-,* 16 செ.குவி. (v.i.) கண்டம் என்று கருதப்பட்ட காலத்தைக் கடத்தல் (வின்.); to pass a critical period, indicated as critical in one's horoscope.

[தத்து + மீள்-.]

தத்துரு *tatturu,* பெ. (n.) *1.* தடிப்பு; swelling. *2.* ஆமை; tortoise. *3.* ஒருவகை குட்டம்; a kind of leprosy. *4.* தத்துருகுட்டம் பார்க்க; see *tatturu-k-kuṭṭam. 5.* படர்தாமரை; ring-worm.

[தத்து + உரு]

தத்துருக்கினம் *tatturu-k-kiṉam,* பெ. (n.) சீமை (சேய்மை) யகத்தி; foreign agatti ring-worm plant.

[தத்துரு + உருக்கினம்.]

தத்துருகுட்டம் *tatturu-kuṭṭam,* பெ. (n.) சிவந்து, தடித்துப் பின் கறுத்துத் தடிக்கும், ஒரு வகைக் குட்டநோய் (தொழுநோய்); a kind of leprosy marked by reddish swelling and ulceration in several parts of the body.

[தத்துரு + குட்டம்.]

தத்துருநோய் *tatturu-nōy,* பெ. (n.) சுணைத் தடிப்பு (சீவரட். 149); nettle-rash, urticaria.

[தத்துரு + நோய்]

தத்துருபித்தநோய் *tatturu-pitta-nōy,* பெ. (n.) உடல் முழுவதும் அரிப்பு ஏற்பட்டு, மிகு தடிப்பு, இருமல், காய்ச்சல், நாக்குளறுகை, மயிர்சிலிர்க்கை முதலானவற்றை உண்டாக்கும் நோய்; a form of bilious disease marked by pain of entire body with itching parched tongue and mouth, horripillation, fever, sweating, cough, etc.

[தத்தம் → தத்து → தத்துரு + பித்தம் + நோய் - தத்துருபித்தநோய்]

தத்துருமாரி *tatturumāri,* பெ. (n.) கொக்கிலித்திப் புல்; a kind of grass.

[தத்துரு → தத்துருமாரி.]

தத்துரூக்கினம் *tatturūkkiṉam,* பெ. (n.) குட்டத்தைக் (தொழுநோய்) குணப் படுத்துகை; remeding or curing leprosy.

தத்துவக்கட்டளை *tattuva-k-kaṭṭaḷai,* பெ. (n.) உடற்கோட்பாடுகளைப் பற்றிய நூல்; book on the function of the 96 constitutents principles of the body.

[தத்து + அம் + கட்டளை - தத்துவக் கட்டளை. உடலின் அடிப்படை மெய்மைகளை உரைக்கும் நூல்.]

தத்துவக்கடுதாசி *tattuva-k-kaḍu-dāsi,* பெ. (n.) *1.* செயலுரிமை ஆவணம்; power of attorney. *2.* பதிலி ஆவணம்; writ or authority of proxy. *3.* முறைமன்றத்திலிருந்து அதிகார முறையிற் பிறப்பிக்குங் கட்டளை; பிடியாணை; warrant.

[தத்துவம் + கடுதாசி]

தத்துவக்கியானம் *tattuva-k-kiyāṉam,* பெ. (n.) உண்மை விளக்கம்; knowledge of truth through knowledge or insight into the true principles of philosophy.

தத்துவக்கினி *tattuvakkiṉi,* பெ. (n.) செரிமானப் பொருள் வகை; enzyme.

தத்துவக்கருவி *tattuva-karuvi,* பெ. (n.) திறமிக்க உடல்; a strong body.

தத்துவங்கு *tattuvaṅgu,* பெ. (n.) பரங்கிப் பாடாணம்; a kind of arsenic.

தத்துவசதுக்கம் *tattuva-šadukkam,* பெ. (n.) மணமேடை (இ.வ.); marriage dais.

[தத்துவம் + சதுக்கம்.]

தத்துவசாத்திரம் *tattuva-šattiram,* பெ. (n.) உடல், அறிவு முதலானவற்றின் உண்மையினை உரைக்கும் நூல்; philosophy, as the science, including ontology, epistemology etc.

[தத்துவம் + சாத்திரம்.]

தத்துவசாலி *tattuva-šāli,* பெ. (n.) செயற் படுத்தும் உரிமை பெற்றோன் (யாழ்.அக.); one who has obtained power of attorney.

[தத்துவம் + சாலி]

தத்துவஞானம் *tattuva-ñāṉam,* பெ. (n.) முடிவான உண்மையுணர்வு (குறள், 36, அதி. உரை.); knowledge of the ultimate truth.

[தத்துவம் + ஞானம். முடிவான வரையறுத்த உண்மை, மேலான பரம்; பரம்பொருள் பற்றிய மெய்மையான அறிவு.]

தத்துவஞானி *tattuva-ñāṉi,* பெ. (n.) முடிவான உண்மையை உணர்ந்தோன்; one who has realised the ultimate truth. "திருக்கூத்துக்கிசைய மகிழ்ந்திசை பாடுந் தத்துவஞானி" (பாரத. இராசசூய. 11).

[தத்துவம் + ஞானி. மேலான பரம் பொருளை மெய்மையாக, முழுதும் உணர்ந்து அறிந்தவன்.]

தத்துவண்டியன் *tattu-vaṇḍiyaṉ,* பெ. (n.) ஒருவகைப் பூச்சி (யாழ்.அக.); a kind of insect.

[தத்து + வண்டியன்.]

தத்துவதி *tattuvadi,* பெ. (n.) ஒருவகைக் கழு; a kind of punishment mast.

[தத்து + வதி]

தத்துவநூல் *tattuva-nūl,* பெ. (n.) தத்துவ உண்மைகளையுரைக்கும் நூல்; a treatise on philosophical truths.

[தத்துவம் + நூல். வாழ்வியல் மெய்மையை ஆதன் உணர்ந்து மேற்கொள்ளும்வண்ணம் உரைக்கும் நூல்.]

தத்துவப்பிரகாசம் *tattuva-p-piragāšam,* பெ. (n.) தத்துவப்பிரகாசர் இயற்றிய சைவக்கொண் முடிவு நூல்; a Šaiva treatise by Tattuva-p-piragāšar.

[தத்துவம் + பிரகாசம். ஆதனின் தன்மையை, வாழ்வியல் மெய்மையை, உண்மையாக உணர்ந்து மேற்கொள்ளும் ஒழுகலாறுகளையுரைக்கும் நூல். ஆதன் இறைவன், இவ் விரண்டிற்குமுரிய உறவுகளையும் விளக்கும் நூலென்றறிக.]

தத்துவப்பிரகாசர் *tattuva-p-piragāšar,* பெ. (n.) கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்தவரும், தத்துவப்பிரகாசம் முதலிய சிவக்கொண் முடிவு நூல்களை இயற்றியவருமான சைவத் துறவி; a Šaiva šaint and poet of the 16th C., author of Tattuva-p-piragāšam and other works on Šaiva philosophy.

தத்துவப்பொருள் *tattuva-p-poruḷ,* பெ. (n.) மெய்ப்பொருள் பார்க்க; see *mey-p-poruḷ.*

[தத்துவம் + பொருள்]

தத்துவபோதகன் *tattuva-pōdagaṉ,* பெ. (n.) மெய்ப்பொருளைக் கற்பிப்பவன்; teacher of philosophy (செ.அக.).

மறுவ. தத்துவஆசான், தத்துவஆசிரியன்

[தத்துவம் + போதகன் – தத்துவபோதகன். மெய்மையை, இறையுண்மையை ஆதனுக்கு உரைப்பவன். மெய்மையாம் உழவைச் செய்து, வாழ்வாங்கு வாழவைக்கும் வாழ்வியல் உண்மையை, ஆசிரியனாக இருந்து உரைப்பவன்.]

தத்துவம் *tattuvam,* பெ. (n.) 1. உண்மை; truth. தமிழுக்கு இருவர் தத்துவத்திற்கு ஒருவர் (பழ.). 2. மெய்மை அல்லது பொருளின் மூலவியல்பு; reality. 3. பொருள்; substance. 4. பொருள்களின் குணம்; essential nature of things, quality. 5. இயல்பான அமைப்பு; constitution. 6. உடல் வலிமை, ஆற்றல் (யாழ்.அக.); bodily, vigour strength. 7. புலன்களின் ஆற்றல்; sexual energy or potency. 8. அதிகாரம் (யாழ்ப்.); power, authority. 9. தத்துவக்கடுதாசி பார்க்க; see *tattuva-k-kaḍudāši.*

[தம்தம் → தத்தம் → தத்து + அம் − தத்துவம். 'வ' உடம்படுமெய். 'அம்' சாரியை. 'தம்' என்னும் வேரடி, சொந்தம் அல்லது உடைமை யென்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. ஆதனுக்கு (ஆன்மா), எஞ்ஞான்றும் வேண்டப்படுவது, உண்மைத் தன்மையே.

உண்மைத் தன்மையே, ஆதனின் மெய்மையான உடைமை; உண்மையாக உள்ளுபவர்தம் உள்ளத்தில்தான் மேலான பரம்பொருள் வீற்றிருக்கின்றான். பரம்பொருள் உள்ளத்தின் கண்ணே. வதிவதால்தான் "உள்ளம் பெருங்கோயில்" என்று திருமூலர் உரைத்தார். இந்த உள்ளத்தின் உள்ளே மெய்யாம் பரம் பொருள், நிலைபெற்றுத் திகழ்வதால், வள்ளுவரும் யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும் வாய்மையின் நல்லபிற (குறள், 300) என்றார். உடல் ஆற்றல், உடல்வலிமை, உடம்பினுக்கே யுரிய உடைமையாகும். உடலைஆற்றலுடன் வளர்த்தால்தான், ஓங்குபுகழுடன் மன்பதையில் சிறக்கலாம். அதனால்தான் திருமூலர் உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் என்கிறார். இத்தகு ஈடில்லாச் சிறப்புப்பெற்ற உடலை, இனிது ஓம்பினால்தான் இறைவன் உறையும் பேரின்பமாக உள்ளம் மாறும். உடம்பினுக்குள்ளே உத்தமன் உறைவான்.

உடலினை மேலான, பரம்பொருள், உடைமையாகக் கொண்டுள்ளதால், உடலுக்கு வலிமை கூடுகின்றது. செ.ப.க. அகரமுதலியும் தத்துவம் என்னுஞ் சொல்லிற்கு உண்மை, பொருளின் தன்மை, மெய்மையின் மூலவியல்பு, இணைவிழைச்சுப் புலன்களின் வலிமை, மேலாம் பரத்தின் மெய்மைநிலை, உடலுக்கே சொந்தமான ஆற்றல் போன்ற பொருள்களைக் குறித்துள்ளது.

வடமொழியாளர் காட்டும் 'தத்' (that) (அது) என்னும் 'வேரடி', படர்க்கைப் பொருளையே சுட்டுகிறது. பொருளின் உண்மை நிலையையோ, மேலான பரம்பொருளின் உண்மைத்தன்மையையோ, அல்லது இணைவிழைச்சு புலன்களின் ஈடில்லாத் தன்மையையோ, உடல் வலிமையையோ ஓரிடத்துஞ் சுட்ட வில்லை. தமிழில் ஒருமையைக் குறிக்க தம்தம் (தந்தம்) என்றும், பன்மையைக் குறிக்கத் 'தத்தம்' என்றும் வருவது இயல்பே.

தமிழில் குறிக்கப்பெறும் பொருள் என்னுஞ்சொல் பால்பகா அஃறிணையைக் குறிப்பதாகும். இஃது ஒருமைக்கும் பன்மைக்கும் பொது என்னும் பொருண்மைத்து; மேலையாரிய மொழிகள் தோற்றநிலையில் இருந்த ஞான்று, ஒண்டீந்தமிழ், கற்றுத்துறை போகிய புலமக்களின் ஆய்வுநிலையில் இருந்தது. மணிவாசகரும், அருளியல்துறை (இறையியல்துறை) ஆய்வுநிலையில் இருந்த பான்மையினை, "ஒண்டீந்தமிழின் துறை" முதலான பல்வேறு துறைகளை, திருக்கோவையாரில் குறித்துள்ளார்.

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்து
மென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலினாய்ந்த
வொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி
யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்
கொலாம்புகுந் தெய்தியதே"

இப்பாடலின் மூலம், ஒண்டீந்தமிழின் துறை என்று பொருளிலக்கணத்தையும், 'ஏழிசைச்சூழல்' என்று இசைத்தமிழையும், இறுதிவரியில் அகப்பொருட்டுறையையும், மணிவாசகர் எடுத்துக்காட்டுகின்றார்.

தமிழ்மொழியில், தத்துவம் என்னுஞ் சொல், இறைவனுக்கும், ஆதனுக்கும் உரிய வாழ்வியல்உறவை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. மேற்குறித்த பாடல் தலைவன் − தலைவியர்தம் அக வாழ்வினையும், இணைக்கும்பான்மையில் அமைந்துள்ளது.

தமிழில் உள்ள தத்துவ நூல்கள், இயல்பாக மறைந்திருக்கலாம்; அல்லது வடமொழியாளரால் மறைக்கப்பட்டு இருக்கலாம் என்று மொழிஞாயிறு கருதுகின்றார். இதுபற்றி அவர், வடமொழி வரலாறு என்னும் நூலில் மேலும் விளக்குங்கால்,

"வடமொழி பேச்சுமொழி அன்று; பிராமணர் தம் கூட்டரவியல் மேம்பாட்டைப் போற்றிக்காக்க, இன்றும், வடமொழியில், வேதவியாகரணம் பற்றிய கட்டுரை, வரவேற்பிதழ், திருமுகம், நூல் போன்றவை இயற்றித் தமது ஒப்புயர்வற்ற மொழிவெறியை, உலகுக்கு உணர்த்தி வருகின்றனர்.

கதிரவன் கரந்தபின் திங்கள் திகழ்வது போல், தென்னூல்கள் மறைந்தபின், அல்லது வடமொழியாளரால் மறைக்கப் பட்ட பின், வடமொழிச் சொற்களும், வியாகரணங்களும், தமிழகத்தில் தழைத்தன. சிவனியமும் மாலியமும் தமிழருக்கே யுரிய, தனிப்பெருஞ் சமையங்களாகும்" என்று கூறுகின்றார். 'தத்' (that) எனும் வேரடி பற்றி மேலுங் கூறுங்கால்,

வடமொழிப் பட்டாங்கு நூல்களில், பெருந்தொடரியம் (மஹாவாக்ய) எனப் பறைசாற்றப் பெறும் தத் த்வம் அஸி என்னும் சொற்றொடரே, முற்றும் தமிழ்த் திரிபாயிருந்து, வடமொழியாளரைத் தலைகவிழச் செய்கிறது. தான் → தத்; நூம் → நும் → தும் → த்வம், இரு → இஸ் (தியூத்) → எஸ் (இலத். கி.) → அஸ் (வ.), தி (முன்னிலையொருமையீறு) → ஸி (வ.வ. 156).

மேற்குறித்தவற்றால், 'தத்துவம்' தூய தென்சொல் என்று துணியலாம். தம்தம், தத்தம் என்னும் வேரடியினின்று கிளைத்தனவெனலாம். நீண்ட தொடர்ச்சியான, தமிழ்மொழியின் வரலாற்றை, மேலையாரியர் மறைத்துள்ளதால், தத்துவம் முதலான தமிழ் மொழிக்குப் பொருத்தமான சொற்களை, நிறுவுதல் தவறில்லையென்றறிக.]

தத்துவயம் *tattuvayam*, பெ. (n.) குருணி; one marakkal or 2 madras measures.

தத்துவராயர் *tattuva-rāyar*, பெ. (n.) பதினாறாம் நூற்றாண்டிலிருந்தவரும், பாடுதுறை முதலிய மெய்ந்நூல்களை இயற்றியவருமான ஆசிரியர்; a Šaint, author of Pāḍuturai and other philosphical works in Tamil, 16th C. (செ.அக.).

[தத்துவம் + அரையர் → ராயர்.]

தத்துவவடிவம் *tattuva-vaḍivam*, பெ. (n.) மெய்வடிவினை ஆதன் காணும் ஒரு பட்டறிவு நிலை; a spiritual experience of the soul in which it is cognizant of the operations of the 36 tattuvas or reals.

[தத்தம் → தத்து + அம் + வடிவம் – தத்துவ வடிவம்.]

தத்துவவாதம் *tattuva-vādam*, பெ. (n.) இயற்கையே இறைவனென்னும் ஏரணம்; a philosophical discussion, that nature is God.

[தத்தம் → தத்துவம் + வாதம் – தத்துவ வாதம்]

தத்துவவாதி *tattuva-vādi*, பெ. (n.) இயற்கையே இறையென்னுங் கொள்கையை உடையவன் (வின்.); one who prof esses that nature is God.

[தத்துவம் + Skt. வாதி]

தத்துவவிளக்கம்[1] *tattuva-viḷakkam*, பெ. (n.) மெய்ப்பொருளை விளக்கும் ஒரு நூல்; a book on phylosophical explanation.

[தத்துவம் + விளக்கம்.]

தத்துவவிளக்கம்[2] *tattuva-viḷakkam*, பெ. (n.) உயிரிகளின் இயல்பினை விளக்கும் நூல் (உயிரியல்); the science dealing with the function of living beings.

[தத்துவம் + விளக்கம்]

தத்துவன் *tattuvan*, பெ. (n.) பேருண்மையா யுள்ள கடவுள்; God as the ultimate reality. "தத்துவனைத் தேனைப் பாலை" (தேவா. 12: 1).

[தத்தம் → தத்து + அன்]

தத்துவாக்கினி *tattuvākkini*, பெ. (n.) உயிருக்கு அடிப்படையான பொருள்; a substance

consisting the books of living matter of animals and plants.

தத்துவாகமம் *tattuvāgamam*, பெ. (n.) உடற் கூற்றியல்; anatomical physiology.

[தத்துவம் + ஆகமம்.]

தத்துவி *tattuvi*, பெ. (n.) தத்துவங்களையுடைய உருவும், அருவுமாகிய உயிர்கள்; souls. "தத்துவம் பலவாய் தத்துவி பலவாய் இத்தகை விளங்கும் என்தனித் தந்தையே" (அருட்பா. 4615, 1220).

[தத்தம் → தத்து + இ]

தத்துவெட்டியன் *tattu-vettiyan*, பெ. (n.) தத்துப்பூச்சி (யாழ்ப்.); brown-spotted leaping insect with long antennae.

[தத்து + வெட்டியன்]

தத்துவெடியன் *tattu-vediyan*, பெ. (n.) தத்து வெட்டியன் (யாழ்.அக.) பார்க்க; see *tattuvettiyan*.

மறுவ. தத்துப்பூச்சி

[தத்து + வெட்டியன் → வெடியன்]

தத்துவோன்மதம் (தத்துவஉன்மதம்) *tattuvōn madam*, பெ. (n.) 1. மருள்; religious excitement when crying a loud in praise of God. 2. மருள் பார்க்க; see *maruḷ*.

[தத்துவம் + உன்மதம்.]

தத்துறு-தல் *tatturu-*, 2 செ.குவி. (v.i.) 1. தத்தி வருதல்; to spring or leap forward, as a waterfall. "தத்துற்று நன்பொன் மணிநிறங் கிளர" (திருமுரு. 305). 2. வருத்தப்படுதல்; to be disturbed in mind; to suffer, as from difficulties. "தத்துற லொழிநீ" (கம்பரா. மிதிலைக். 125). 3. நேர்தல்; to happen, befall. "நண்ணா நாளவை தத்துறு மாகில்" (திவ்.பெரியாழ். 5. 1:6).

[தத்து + உறு-.]

தத்துறு-தல் *tatturu-*, 18 செ.குன்றாவி. (v.t.) கிட்டுதல்; to approach, meet. "சொல்லா யானுன்னைத் தத்துறுமாறே" (திவ். பெரியதி. 5. 1:7).

[தத்து + உறு-.]

தத்தூரன் *tattūran*, பெ. (n.) தவளை; frog.

[தத்து + ஊரன் - தத்தூரன்]

தத்தூரி *tattūri*, பெ. (n.) 1. பொன்னூமத்தை; yellow flowered datura. 2. ஊமத்தை; datura.

[தத்து → தத்தூரி.]

தத்தூரித்தைலம் *tattūri-t-tailam*, பெ. (n.) ஊமத்தைநெய்மம்; medicated oil extracted form the seeds of datura.

[தத்தூரி + தைலம்]

தத்தெடு-த்தல் *tatteḍu-*, 4 செ.குன்றாவி. (v.t.) மகவுக்கொடை பெறுதல் (கொ.வ.); to adopt.

[தத்து + எடு-.]

தத்தெறி-தல் *tatteri-*, 4 செ.குவி. (v.i.) 1. நீரில் தத்திச் செல்லும்படி ஓட்டுச் சில்லெறிதல்; to play ducks and drakes. 2. அலையெழுப்புதல்; to cast up waves, as the sea.

[தத்து + எறி-.]

தத்தை[1] *tattai*, பெ. (n.) கிளி; parrot, parakeet, Palaornis. "செவ்வாய்க் கிளியைத் தத்தை யென்றலும்" (தொல். பொருள். 623).

ம. தத்த; H. tōttā.

[தொத்து → தொத்தை → தத்தை இலையைப் பற்றிக்கொண்டு தொங்கும் கிளி (வேக. 261)]

தத்தை[2] *tattai*, பெ. (n.) தமக்கை (பிங்.); elder sister.

[தம் + த் + ஐ → தத்தை.]

தத்தை[3] *tattai*, பெ. (n.) ஊருகை, படருகை; creeping.

[தொத்தை → தித்தை → தத்தை.]

தத்தைமூக்கு *tattai-mūkku*, பெ. (n.) ஏகம்பச் சாரம் பார்க்க; see *ēgamba-c-cāram*.

[தத்தை + மூக்கு.]

ததகம் *tadagam*, பெ. (n.) காற்று; wind.

ததச்சதை *tata-c-cadai*, பெ. (n.) 1. வாழைமரம்; plantain tree. 2. வாழைத்தண்டு; plantain-stalk.

ததநம் *tadanam*, பெ. (n.) கொடை; donation.

ததம்[1] *tadam,* பெ. (n.) வாழைமரம்; plantain tree.

ததம்[2] *tadam,* பெ. (n.) *1.* அகலம்; width. *2.* பின்பு; back. *3.* விரிவு; extension.

ததர்[1]**-தல்** *tadar-,* 4 செ.குவி. (v.i.) நெரிதல்; to be crushed. "ஊனுடை மல்லர் ததர்ந்த வொலி" (திவ். திருவாய். 7. 4:5).

[தகர் → ததர். க → த-வாக மாறிற்று. ததர்தல் - சிதர்தல்]

ததர்[2]**-த்தல்** *tadar-,* 4 செ.குன்றாவி. (v.t.) வருத்துதல்; to vex, annoy, trouble. "என்னைத் ததர்த்தாதே நீயுங் குயிலே" (திவ். நாய்ச். 5, 10).

[ததல் → ததர்-.]

ததர்[3] *tadar,* பெ. (n.) *1.* செறிவு; denseness. "சினைத் ததர் வீழ்பு" (மணிமே. 3: 107). *2.* கொத்து; cluster, bunch. "சிதர்நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத் ததர்" (சிறுபாண். 255). *3.* சிதறுகை; scattering, sprinkling. "ததர்ப்பட்ட சாந்தமும்" (கலித். 91). (செ.அக.).

[தகு → தகர் → ததர் - செறிவான அறிவு. தகர் → ததர் - பிறர் கருத்தைத் தகர்க்கும் செறிவான அறிவு; செறிந்து அடர்ந்துள்ள பூங்கொத்து. தகர் → ததர்]

ததர்ப்பணம் *tadarppaṇam,* பெ. (n.) கொடுத்துப் பறிக்கை; give and flick.

[தகர்ப்பு → ததர்ப்பு + அணம். 'அணம்' - சொல்லாக்க ஈறு]

ததர்முகம் *tadar-mugam,* பெ. (n.) தொடக்கம்; beginning.

[அதர் = வழி, தொடக்கம். அதர் → ததர் + முகம் - ததர்முகம்.]

ததல் *tadal,* பெ. (n.) தளராநிலை (சது); stability, firmness, durability.

[தக → தத → தது + அல் - ததல். 'அல்' - எதிர்மறை ஈறு.]

ததனந்தரம் *tadaṉandaram,* பெ. (n.) அதன்பின்; after that.

[ததன் + அந்தரம்.]

ததா *tadā,* பெ. (n.) அப்படி; likewise.

[ததி → ததா.]

ததாகதன் *tadāgadaṉ,* பெ. (n.) புத்தன் (சூடா.); Buddha.

ததாகாரம் *tadāgāram,* பெ. (n.) விரிவாக; extensively.

[ததா → ததாகாரம்.]

ததாமுகம் *tadāmugam,* பெ. (n.) தொடக்கம்; beginning.

ததாரி *tadāri,* பெ. (n.) இறிரக்கிழங்கு (காட்டு கருணைக் கிழங்கு); yam.

[ததா → ததாரி.]

ததி[1] *tadi,* பெ. (n.) தக்கசமயம்; season, opportunity, suitable time. "ததியுறப் புகுந்து" (பாரத. அருச்சுனன்றீர். 76).

தெ. ததி.

[தக்க → தக → தத → ததி.]

ததி[2] *tadi,* பெ. (n.) தயிர்; curdled milk, curds. "பாலுந் ததியும்" (கந்தபு. அசுரர்யாக. 70).

[ஒருகா. தை → தயிர் → ததி. ஒ.நோ. ஐ - அயிர் (நுண்மை) மை → மயிர் (கூரியது) வை - வயிர் (கூர்மை). பை → பயிர் (பசியது). பாலிற்கு உறைமோரிடுதலை உறைகுத்துதல் பிரை குத்துதல் என்பது வழக்கு (வ.வ. 4). தயிர் → தசிர் → ததி. ச, த, ம, வ எனும் உயிர்மெய்யொலிகளை, ஒத்த ஒலியுடையனவென்று, யாப்பருங்கலம் வரையறுத்தலால், இதன் ஓசைத்தன்மையை நுண்ணிதின் உணரலாம். தயிர் → தசிர் → ததிர். ஈங்கு, இறுதி 'ர' கரம் குன்றித் 'ததி' என்று மக்கள் வழக்கில் வந்ததென்றறிக. ஒ.நோ. ய → ச. தோயை → தோசை, நெயவு → நெசவு..]

ததி[3] *tadi,* பெ. (n.) *1.* ஆற்றல்; strength, power, influence. "அவன் ததியுள்ளவன் (யாழ்ப்.). *2.* பிசின் (சா.அக.); a kind of resin.

[தடி → தத்தி → ததி. அறிவு தடித்துள்ளது (உ.வ.)]

ததிகமா *tadigamā,* பெ. (n.) தேற்றான் கொட்டை; water cleaning nut.

ததிகூர்ச்சிகை *tadikūrccigai,* பெ. (n.) *1.* தயிர்ச் சோறு; rice mixed curd. *2.* தயிர்ப்பொங்கல்; rice boiled with ghee and curd.

[தயிர் → தசிர் → ததி + கூர்ச்சிகை → ததிகூர்ச்சிகை]

ததிகேடு *tadikēḍu,* பெ. (n.) *1.* வலியின்மை; weakness, infirmity inability. *2.* செல்வக் குறைவு; want of pecuniary means or influence.

[ததி + கேடு]

ததிசம் *tadišam,* பெ. (n.) *1.* வெண்ணெய்; butter. *2.* மோர்; butter-milk.

[ததி → ததிசம். ததி = மோர், தயிர் இவற்றினின்று எடுத்த வெண்ணெய்]

ததிசாரம் *tadišāram,* பெ. (n.) ததிசம் பார்க்க; see *tadišam.*

[ததி + சாரம்]

ததிசி *tadiši,* பெ. (n.) வைரம்; diamond.

[ததி → ததிசி]

ததிசுவேதம் *tadi-šuvēdam,* பெ. (n.) மோர்; butter-milk.

[ததி + Skt. சுவேதம். ததி = மோர்]

ததிசோணம் *tadišoṇam,* பெ. (n.) செங்குரங்கு; red faced monkey.

[தத்தி → ததி + சோணம்]

ததிபத்திரி *tadipattiri,* பெ. (n.) வாழையிலை; plantain leaf.

[ததி + பத்திரி]

ததிபலம் *tadipalam,* பெ. (n.) விளா (சங்.அக); wood apple.

[ததி → ததிபலம் - நெஞ்சாங்குலைக்கு வலுவினைத் தரும்பழம்]

ததிபுனல் *tadi-puṉal,* பெ. (n.) தயிர்த் தண்ணீர்; water dripping from curd.

[ததி + புனல்]

ததிமண்டம் *tadi-manḍam,* பெ. (n.) ததிசுவேதம் பார்க்க; see *tadi-šuvēdam.*

ததிமண்டரம் *tadimanḍaram,* பெ. (n.) ஆமணக்கு; caster-plant.

[ததி + மண்டரம்]

ததிமண்டலம் *tadimanḍalam,* பெ. (n.) மோர்; butter-milk.

[ததி + மண்டலம்]

ததிமத்து *tadimattu,* பெ. (n.) *1.* ஆவின் தயிரைத் துணியில் முடிந்து, உயரக்கட்டி வடித்து எடுத்த நீர்; the fluid dripping from the cow's curd tied in a cloth and hung up. *2.* ததிபுனல் பார்க்க; see *tadi-puṉal.*

[ததி + மத்து]

ததுமல் *tadumal,* பெ. (n.) ததும்பல்; increase.

[ததும் → ததும் → ததுமல்]

ததிமேரு *tadimēru,* பெ. (n.) குடைவேல் மர வகை; a kind of tree.

ததியர் *tadiyar,* பெ. (n.) அடியார்; devotees. "தமிழ்வேதந் ததியர் பாட" (அஷ்டப். சிரங்கநாயகர். ஊச. 6). (செ.அக.)

ததியாராதனை *tadi-y-ārādaṉai,* பெ. (n.) திருமாலடியார்க்கு இடும் விருந்துணவு; feast offered to Thirumāl devotees (செ.அக.).

[ததி + Skt. ஆராதனை]

ததியோதனம் *tadi-y-ōdaṉam,* பெ. (n.) புளித்த தயிர்ச்சோறு; sour curd rice.

[ததி + ஓதனம்]

ததீசி *tatīši,* பெ. (n.) அசுரரைக் கொல்வதற்காக வச்சிராயுதமாக்கும் பொருட்டு, தம் முதுகெலும்பைத் தேவர்க்குக் களிப்புடன் கொடுத்த ஓர் முனிவர் (திருவிளை. இந்திரன். 25); a riṣi who willingly gave his backbone to the gods for making vaccira weapon to destroy the ašuras.

ததீயாராதனம் *tadīyārādaṉam,* பெ. (n.) ததீயாராதனை (நோயிலோ. 19) பார்க்க; see *tadī-y-ārādaṉai.*

[ததி → ததீ. Skt. ஆராதனம்]

ததீயாராதனை *tadī-y-ārādaṉai,* பெ. (n.) ததியாராதனை பார்க்க; see *tadi-y-ārādaṉai.*

[ததி → ததீ. Skt. ஆராதனை]

ததும்பு-தல் *tadumbu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* மிகுதல்; to increase. "போர்ததும்பு மரவம்போல" (பரிபா. 18: 44). *2.* நிறைதல்; to fill, become full. "நீர்மணி தெளித்தனையது ததும்பி" (சீவக. 1566). *3.* நிரம்பி வழிதல்; to

overflow, to heave with fulness. "நீர் ததும்புவன சுனை" (பரிபா. 18:32). 4. மன நிரம்புதல்; to be satisfied. "குறும்பிற் றதும்ப வைகி" (புறநா. 177:7). 5. அசைதல்; to wave, as a flag; to wobble, swing to and fro, as breasts. "கொங்கைக டதும்பிட நடந்தார்" (கம்பரா. மாரீ. 42). 6. முழங்குதல்; to resound, roar. "முழவிற் றதும்பின" (சீவக. 1560).

[தள் → தள → தளம்பு → ததம்பு → ததும்பு-.]

ததுளன் *tadu***ḷ***an*, பெ. (n.) 1. காற்று; air. 2. இளைஞன்; youth.

ததை[1]-தல் *tadai-*, 5 செ.குன்றாவி. (v.i.) 1. நெருங்குதல் (திவா.); to be thickset, crowded, densely packed. "ததையிலை வாழை" (ஐங்குறு. 460). 2. சிதைதல்; to be shattered, made fruitless. "சமந் ததைந்தவேல்" (பதிற்றுப். 70:3).

[துதை → ததை (வே.க. 261)]

ததை[2]-த்தல் *tadai-*, 4 செ.குன்றாவி. (v.i.) நிறைதல்; to be full abundant. "தண்டார் ததைக்கின்ற தண்ணந்துழாய்" (திவ்.இயற்.திருவிருத்.340).

[துதை → ததை-.]

ததைவு *tadaivu*, பெ. (n.) சிதைவு; scatter.

[துதை → ததை → ததைவு]

தந்தக்கட்டி *tanda-k-kaṭṭi*, பெ. (n.) 1. தந்தசூலை (இ.வ.) பார்க்க; see *tanda-šūlai*. 2. பல்லில் உண்டாகும் கட்டி; an abcess on the gum of the teeth gum abscess, gum-boil.

[தம் + த் + இ → தந்தி. 'தம்' என்னும் வேரடி, தருதற்கருத்துச் சொற்களுக்கு மூலமானது. ஒருகா. தந்தி → தந்தம் + கட்டி → தந்தக்கட்டி. தந்தம் = பல். கட்டி = சிலந்தி. பல்லிலேற்படும் கட்டி]

தந்தக்கட்டில்[1] *tanda-k-kaṭṭil*, பெ. (n.) 1. யானைமருப்பினாலியன்ற கட்டில்; ivory cot. 2. உயர்ந்த கட்டில் (இவ.): any fashionable cot.

[தம் + த் + தி → தந்தி → தந்தம் + கட்டில் → தந்தக்கட்டில். தந்தி = ஆண் யானை. ஆண் யானைக்கு மருப்பினை, இயற்கை தந்ததால், வந்த பெயர். மருப்பினை யுடையது தந்தி. தந்தக் கட்டில் = யானைத் தந்தத்தினாற் செய்யப்பட்ட உயர்ந்த கட்டில்]

தந்தக்காரி *tanda-k-kāri*, பெ. (n.) வாதமடக்கி (மலை) பார்க்க; see *vādamaḍakki;* sensitive plant.

[தம் + தம் → தந்தம் + காரி → தந்தக்காரி]

தந்தக்கிருமி *tanda-kirumi*, பெ. (n.) பற்புழு அல்லது பற்பூச்சி; worm found in the tooth (சா.அக.).

[தந்தம் + கிருமி → தந்தக்கிருமி. தந்தம் = பல். Skt. *kirumi*. தந்தக்கிருமி = பல்லிலுண்டாகும், நுண்ணுயிரி]

தந்தக்குச்சி *tanda-k-kucci*, பெ. (n.) பற்குச்சி; twig of a plant used for cleaning teeth (சா.அக.).

[தந்தம் + குச்சி]

தந்தக்குறி *tanda-k-kuṟi*, பெ. (n.) புணர்ச்சிக் காலத்திற் பல்லால் உண்டான, அடையாளம் (கொக்கோ.); marks made by the teeth of the lover on the limbs of his beloved.

மறுவ. பற்குறி

[தந்தம் + குறி = பல்லால் ஏற்படுங்குறி: கழககால அகப்பாடல்களில், தலைவன் களவுப்புணர்ச்சியின்கண்ணே, தலைவியின் கன்னத்தில் ஏற்படுத்துங் குறி]

தந்தக்கோரை *tanda-k-kōrai*, பெ. (n.) கோரை வகை (சங்.அக.); a kind of sedge.

[தந்தம் + கோரை]

தந்தகபாலிகாநோய் *tanda-kabāligā-nōy*, பெ. (n.) பற்களின் முனைகள் தேய்ந்து வெடித்துப் பொடிப்பொடியாக உதிரும் நோய்; a disease in which the edges of the teeth are softened cracked and sometimes crushed and dropped in pieces of particles.

தந்தகராளநோய் *tanda-karāḷa-nōy*, பெ. (n.) பல்லீறுகள் தேய்ந்து தந்தங்களை வெளியில் சாய்க்கும் ஒருவகைப் பல்நோய்; a disease in which the gums are eaten away leaving the teeth exposed to its full length.

[தந்தகராளம் + நோய்]

தந்தகரிசனம் *tanda-karišaṉam,* பெ. (n.) சுண்ணாம்பு; lime, calcium carbonate.

[தந்தம் + கரிசனம்]

தந்தகரிடநோய் *tanda-kariḍa-nōy,* பெ. (n.) பல்நோய் வகை; a disease of the teeth.

[தந்தகரிடம் + நோய் = பற்களை இற்றுவிழச் செய்யும் பல்நோய்]

தந்தகரிநோய் *tandagari-nōy,* பெ. (n.) பல் நோய்; a disease of the teeth.

[தந்தகரி + நோய்]

தந்தகாட்டம் *tanda-kāṭṭam,* பெ.(n.) *1.* காசுக் கட்டி; black catechu - Terminalia alata. *2.* கருமை மருதம்; black marudam (சா.அக.).

[தந்தம் + காட்டம்]

தந்தங்கூசுதல் *tandaṅ-kūšudal,* பெ. (n.) பல் கூசுதல்; a sort of morbid sensitive feeling in the tooth.

[தந்தம் + கூசுதல்]

தந்தச்சவ்வு *tanda-c-cavvu,* பெ. (n.) தேயாத பற்களில் மேற்பகுதிச் சவ்வு; the membrane covering the enamel of an unworn tooth.

[தந்தம் + சவ்வு]

தந்தச்சிமிழ் *tanda-c-cimiḻ,* பெ. (n.) கண்மை போன்றவற்றை அடைக்கும் சிமிழ்; a small ivory box for preserving collyrium for eye etc.

[தந்தம் + சிமிழ். தந்தச் சிமிழ், தந்தம் = மருப்பு. யானையின் மருப்பிற் செய்த சிமிழ்]

தந்தச்சீப்பு *tanda-c-cīppu,* பெ. (n.) மருப்பு அல்லது கொம்பினாற் செய்த சீப்பு; comb of horn or ivory (செ.அக.).

[தந்தம் + சீப்பு. தந்தச் சீப்பு = யானைக் கொம்பிற் செய்து, செல்வர் பயன் படுத்தும் சீப்பு]

தந்தசடம் *tanda-šaḍam,* பெ. (n.) *1.* எலுமிச்சை (தைலவ.தைல. 85); bergamotte-orange. *2.* விளா (மூ.அ.); wood-apple. *3.* தமரத்தம் பழம்; sweet blimbing, coromandal carambola - Carambola apple.

தந்தசடை *tanda-šaḍai,* பெ. (n.) புளியாரை (M.M. 58) பார்க்க; see *puḷiyārai;* yellow wood-sorrel.

தந்தசம் *tantašam,* பெ. (n.) *1.* பல்லீறு; gum of teeth. *2.* யானைக் கொம்பு; elephant tusk.

மறுவ. தந்தச்சதை

தந்தசருக்கரை *tanda-šarukkarai,* பெ. (n.) பல் ஊத்தை (சீவரட்.); tartar on the teeth (செ.அக.).

மறுவ. பற்காறை

[தந்தம் + சருக்கரை தந்தம் = பல். சருக்கரை அழுக்கு. பல்லின்கண் உண்ணுங்கால் ஏற்படும் அழுக்கு.]

தந்தசருக்கரைநோய் *tandašarukkarai-nōy,* பெ. (n.) பற்களின் பின்புறம் கரடுகட்டிய செதில்கள் போன்ற காறை; a hard reddish crust, which is sometimes formed behind the teeth.

[தந்தம் + சருக்கரை + நோய்]

தந்தசலனநோய் *tanda-šalaṉa-nōy,* பெ. (n.) தந்தநோய்[2] பார்க்க; see *tanda-nōy.*

தந்தசவுத்தாமா *tandašavuttāmā,* பெ. (n.) தந்தசிகம் பார்க்க; see *tanda-šigam.*

தந்தசானம் *tanda-šāṉam,* பெ. (n.) பற்பொடி; tooth-powder.

[தந்தம் + சானம்]

தந்தசிகம் *tanda-šigam,* பெ. (n.) எலுமிச்சை; lime fruit.

தந்தசிரம் *tanda-širam,* பெ. (n.) தந்தசீரை (யாழ். அக.) பார்க்க; see *tanda-širai,* gum of the teeth.

தந்தசிரா *tanda-širā,* பெ. (n.) பின்பல்; bak teeth.

[தந்தம் + சிரை → சிரா → தந்தசிரா]

தந்தசீரை *tanda-šīrai,* பெ. (n.) பல்லின் ஈறு (வின்.); gum of teeth (செ.அக.).

[தந்தத் + சீரை]

தந்தசூகம் *tanda-šūgam,* பெ. (n.) *1.* பாம்பு (வின்.); snake. *2.* பாம்புகள் நிரம்பிய நிரையம்

(சேதுபு. துனுக்கோ.4): a hell infested with serpents. 3. நச்சுயிரி; reptile.

[தந்தம் + சூகம்]

தந்தசூகன் *tanda-šūgan*, பெ. (n.) கொடியவன் (யாழ்.அக.); malignant person.

[தந்தம் + சூகன்]

தந்தசூலை *tanda-šūlai*, பெ. (n.) 1. பல்வலி (இங். வை. 369); tooth-ache, inflammation of the dental pulp, Odontalgia. 2. பல்நரம்பில் உண்டாகும் குத்தல்நோய்; a nervous pain experienced in the gum of the teeth (சா. அக.).

[தந்தம் + சூலை - தந்த சூலை. தந்தம் = பல். சூலை = பல்லிலேற்படும் வலி]

தந்தசைவு *tanda-šaivu*, பெ. (n.) பல்லாட்டம்; looseness of teeth.

[தந்தம் + அசைவு]

தந்தசைவுஇறுகப்பிடித்தல் *tanda-šaivu-iruga-p-piḍittal*, தொ.பெ. (vbl.n) பல்லீறுகள்; strengthening of the gum and teeth.

[தந்தசைவு + இறுகப்பிடித்தல்]

தந்தத்தண்ணீர்[1] *tanda-t-taṇṇīr*, பெ. (n.) அத்திபேதி; a medicine which dissolves bone.

[தந்தம் + தண்ணீர்]

தந்தத்தண்ணீர்[2] *tanda-t-taṇṇīr*, பெ. (n.) யானைக் கழிச்சல் (யாழ்.அக.); purgative for elephants.

[தந்தம் + தண்ணீர்]

தந்தத்தையுதிரப்பண்ணி *tandattai-y-udira-p-paṇṇi*, பெ. (n.) தில்லைமரம், பால்பற்களை விழச்செய்யும் மரம்; tigers spurge for its milky juice is capable of making the teeth fall when coming in contact with.

மறுவ. பாற்பல் உதிரப்பண்ணி

[தந்தத்தை + உதிரப்பண்ணி.]

தந்ததாவனம் *tanda-tāvaṉam*, பெ. (n.) 1. பல் விளக்குகை; cleansing the teeth. 2. பற்குச்சி (வின்.); stick used as tooth-brush. 3. கருங்காலி வகை (மலை); glabrous-foliaged cutch, m. tr., Acacia catechu - sundra.

[தந்தம் + தாவனம்]

தந்ததாளனநோய் *tanda-tāḷaṉa-nōy*, பெ. (n.) பல் குத்தல்; acute pain of teeth.

[தந்ததாளனம் + நோய்]

தந்ததாளி *tanda-tāḷi*, பெ. (n.) பல்நோய்வகை (பரராச. i, 218); a kind of tooth-ache.

[தந்தம் + தாளி]

தந்ததி *tandadi*, பெ. (n.) மரபுவழி; lineage. "இரவி சிரிகண்டன் தந்ததிப் பிர கிருதியாய்" (T.A.S. ii. 175).

[சந்ததி → தந்ததி. ச → த]

தந்தநாகம் *tanda-nāgam*, பெ. (n.) துத்தநாகம்; zinc.

[தத்தநாகம் → தந்தநாகம் - த → ந திரிபு]

தந்தநாடி *tanda-nāḍi*, பெ. (n.) பல்துளை; sinus in the teeth.

[தந்தம் + நாடி.]

தந்தநோய்[1] *tanda-nōy*, பெ. (n.) தந்தசூலை பார்க்க; see *tanda-šūlai* (செ.அக.).

[தந்தம் + நோய்.]

தந்தநோய்[2] *tanda-nōy*, பெ. (n.) 1. மிகு வலியுடன் பற்கள் ஆடும் ஒருவகை நோய்; a disease in which the teeth are rendered loose and painful. 2. பற்குத்தல் நோய்; a disease of the teeth causing acute pain, Pyorrhoea.

[தந்தம் + நோய்]

தந்தப்பல்லக்கு *tanda-p-pallakku*, பெ. (n.) மருப்பினால் வேலை செய்யப்பெற்ற சிவிகை வகை; palanquin made of, or ornamented with, ivory.

[தந்தம் + பல்லக்கு. தந்தப் பல்லக்கு. யானையின் மருப்பினால், நுணுக்க வேலைப்பாட்டுடன் அமைக்கப்பட்ட பல்லக்கு]

தந்தப்பிரலூனம் *tanda-p-piralūṉam,* பெ. (n.) பல்லரணை; a disease of the gum marked by small boils in between teeth, swelling of the gum and oozing of pus and blood and sometimes worms are seen.

[தந்தம் + பிரலூனம் − தந்தப்பிரலூனம். பல்லிடுக்குகளில் ஏற்படும் நோய். இந் நோயின் விளைவால், பற்சந்துகளில் கொப்புளங்கள் ஏற்படும். தாடை வீங்கும். பல்லீறுகளில் அரத்தக் கசிவு ஏற்படும் என்று சா.அக. கூறும்]

தந்தப்புழு *tanda-p-puḻu,* பெ. (n.) பற்பூச்சி; worm of falling from the gum of the teeth.

[தந்தம் + புழு → தந்தப்புழு = பல்லீறுகளில் கட்டிகளையேற்படுத்திச் சீழ்ப்பிடிக்கக் காரணமான உயிரி.]

தந்தப்புழுநீர்தோசம் *tanda-p-puḻu-nīr-tōšam,* பெ. (n.) பற்புழுத் தடுமன்; cold due to pyorrhoea.

[தந்தம் + புழு + நீர் + தோசம்.]

தந்தப்பூண் *tanda-p-pūṇ,* பெ. (n.) யானைக் கொம்பில் அணியும் கிம்புரி (சூடா. 11, 146); ferrule or metal cap on the tip of an elephant's tusk.

[தந்தம் + பூண்]

தந்தபத்தி *tanda-patti,* பெ.(n.) பல்வரிசை; row of teeth.

[தந்தம் + பத்தி]

தந்தபத்திரம் *tanda-pattiram,* பெ. (n.) மல்லிகை வகை (வின்.); a kind of jasmine.

[தந்தபத்திரம் = வெண்மைமிக்க தந்தம் போன்ற மல்லிகை; இச்சொல்லின் கண்ணே வெண்மை மல்லிகையின் நிறத்தை யொக்கும், ஒருபுடையொப்புமை யாகும்.]

தந்தபத்திரி *tanda-pattiri,* பெ. (n.) வாழைமரம்; plantain tree.

[தந்தம் + பத்திரி]

தந்தபலம் *tanda-palam,* பெ. (n.) விளா; wood-apple.

[தந்தம் + பலம்]

தந்தபலை *tanda-palai,* பெ. (n.) திப்பிலி; long-pepper.

[தந்தம் + பலை]

தந்தபாகம் *tanda-pāgam,* பெ. (n.) யானையின் மத்தகம் (யாழ்.அக.); elephant's forehead.

[தந்தம் + பாகம்]

தந்தபாலிநோய் *tanda-palinōy,* பெ. (n.) குழந்தையின் பல்லீறுகளில் ஏற்படும் நோய்; the dental disease of the child.

[தந்தபாலி + நோய்]

தந்தபாலினி *tanda-pāliṉi,* பெ. (n.) இசங்கு; sangu plant.

[தந்தம் + பாலினி]

தந்தபீசகம் *tanda-pīsagam,* பெ. (n.) மாதுளை (சங். அக.) பார்க்க; pomegranate. see *māduḷai.*

[தந்தம் + பீசகம்]

தந்தபுட்பம் *tanda-puṭpam,* பெ. (n.) தேற்றா; water clearing nut.

[தந்தம் + புட்பம்]

தந்தபுடநோய் *tanda-puḍa-nōy,* பெ. (n.) பல்லீறு புடைத்துப் புண்ணாகி வலியுண்டாக்கும் நோய்; a dental disease marked by a growth of morbid flesh.

[தந்தபுடம் + நோய்]

தந்தபுற்பம் *tanda-puṟpam,* பெ. (n.) பல்நோய் வகை (பரராச. ஞ், 218); a kind of tooth-ache.

[தந்தம் + புற்பம்]

தந்தபேதநோய் *tanda-pēda-nōy,* பெ.(n.) பல்வேறு பல்நோய்கள்; different diseases of the teeth.

தந்தம்[1] *tandam,* பெ. (n.) 1. யானையின் மருப்பு; tusk, as of elephant. "காழுற்ற தந்த மின்ன" (கந்தபு. தெய்வயா. 105). 2. பன்றியின் மருப்பு; hog's horn. 3. மலைமுகடு (யாழ்.அக.); peak of a mountain. 4. பல் (திவா.); tooth.

[ஒருகா. தம் + த் + இ → தந்தி → தந்தம் = மருப்பு. தும்பு → துந்து → துந்தி → தந்தி = தும்பிக்கையுடைய யானை; தந்தி → தந்தம் = யானையின்

மருப்பு; தந்தம் என்பது முதற்கண் யானையின் மருப்பினையே குறித்து வழங்கியது; தந்தத்தை, மருப்பு என்று வழங்குவது, பழந்தமிழ் இலக்கிய மரபாகும்; நாளடைவில் மருப்பென்பது முதனிலைப் பொருளாகவும், 'பல்' என்பது வழிநிலைப் பொருளாகவும் வளர்ந்த தெனலாம்.]

தந்தம்[2] *tandam*, பெ. (n.) நறுக்கி வைத்திருக்கும் பழந்துண்டம்; piece of a fruit, as cut for sale or use.

[துண்டம் → துந்தம் → தந்தம்]

தந்தமலம் *tanda-malam*, பெ. (n.) ஊத்தை அல்லது பல்லழுக்கு; dirt of tooth.

[தந்தம் + மலம்; மலம் = ஊத்தை]

தந்தமா *tandā-mā*, பெ. (n.) யானை (தந்தத்தையுடைய விலங்கு); elephant, as the animal having tusks.

மறுவ. மத்தகமா; மருப்புமா

[தந்தி → தந்தம் + மா : தந்தமா, தும்பி = யானையின் தும்பிக்கை, துல் → துள் → துண்பு → தும்பு = உட்டுளை. துளை உள்ள உறுப்பு; உறிஞ்சி; தும்பு → துந்து → துந்தி → தந்தி → தந்தம். தந்தம் = யானையின் மருப்பு. மா = யானை = வெண்மையான மருப்பினை யுடைய யானை. ஒருகா. தம் + த் + இ → தந்தி → தந்தம் + மா = மருப்பினை உடைய யானை]

தந்தமாமிசம் *tanda-māmišam*, பெ. (n.) 1. பல்லின் ஈறு (யாழ்.அக.); gum of teeth. 2. பல்முரசு; gums of the upper and the lower jaw.

[தந்தம் + மாமிசம். தந்தம் = பல். மாமிசம் = ஈறு]

தந்தமாய்ச்சாய் *tandamāyccāy*, பெ. (n.) செவ்வலரி; red oleander.

தந்தமிறக்கம் *tanda-mirakkam*, பெ. (n.) இருபிளவான தாடித்தசை; double chin.

[தந்தம் + இறக்கம்]

தந்தமிறங்கு-தல் *tandam-irangu-*, 5 செ.கு.வி. (v.i.) தாடிச் சதை பற்றுதல் (யாழ்ப்.); to have a double chin.

[தந்தம் + இறங்கு-.]

தந்தமுத்து *tanda-muttu*, பெ. (n.) யானை மருப்பிலிருந்து தோன்றும் முத்து; pearl formed, about the tusk of elephant.

[தந்தம் + முத்து]

தந்தமூலநோய் *tanda-mūla-nōy*, பெ .(n.) பல்லழற்சி; a dental disease due to inflammation of the roots of the teeth.

மறுவ. பல்லீறு நோய்

[தந்தமூலம் + நோய்.]

தந்தமூலம் *tanda-mūlam*, பெ. (n.) பல்வேர்; root of the tooth.

[தந்தம் + மூலம். மூலம் = வேர், அடி]

தந்தயாவனம் *tanda-y-āvanam*, பெ. (n.) கருங்காலி மரம்; ebony wood.

தந்தயோடதம் *tanda-y-ōḍadam*, பெ. (n.) பல், உதடு போன்றவற்றின் தொடர்பு; relation to teeth and the lip - Dentilabial.

தந்தரீணம் *tanda-rīṇam*, பெ. (n.) அரிசிக் கழுநீர்; rice cleaned water.

தந்தரூடி *tanda-rūḍi*, பெ. (n.) பல்வேர் புண்ணாகித் தீநாற்றம் வீசும் நோய்; a disease of the teeth marked by ulceration at the root followed by a discharge of pus and blood with fetid smell - Pyorrhoea.

தந்தரோகம் *tanda-rōgam*, பெ. (n.) தந்தநோய் பார்க்க; see *tanda-nōy*.

[தந்தம் + Skt. ரோகம்.]

தந்தலக்கம் *tanda-lakkam*, பெ. (n.) அடக்கமான பண்பு (இ.வ.); modesty; self-control.

தந்தலைக்கொட்டி *tandalai-k-koṭṭi*, பெ. (n.) வட்டக்கிலுகிலுப்பை; rattle nail dye.

தந்தவக்கிரன் *tanda-vakkiran*, பெ. (n.) இடை வள்ளல்கள், எழுவரில் ஒருவன் (சூடா.); a liberal chief, one of seven iḍai-vaḷḷalgaḷ.

[தந்தவக்கிரன் = வக்கரன் என்ற பெயரை, மக்கள் வைத்துக் கொள்ளும் பழக்கம், காலங்காலமாகத் தொடர்ந்துள்ளதாகத் தெரிகிறது. திருக்கோவலூரை அடுத்துள்ள ஆயந்தூர் என்னுமிடத்திலுள்ள, ஏரியின் மதகைச் செப்பம் செய்தவன் பெயர். "வக்கரன் பாக்கமுடையான் கொங்கராயன்" என்று மதகுக்கல்லில், இக் கல்வெட்டு செதுக்கப்பட்டுள்ளது. கி.பி. பதினான்காம் நூற்றாண்டைச் சார்ந்தது]

தந்தவத்திரம் *tanda-vattiram,* பெ. (n.) இதழ்; lips covering the teeth.

தந்தவத்திரன் *tanda-vattiran,* பெ. (n.) சிவன்; Šivan.

தந்தவலகம் *tanda-valagam,* பெ. (n.) பல் மினுக்கு; enamel of the teeth.

தந்தவள் *tandavaḷ,* பெ. (n.) தாய்; mother. "தந்தவளைப் பணிந்தவளுந் தபோவனத்தினிடைச் சார்ந்தாள்" (சேதுபு. தேவிபுர. 7).

[தந்த + அவள் = தருதற் கருத்து வேரினின்று, இச் சொல் கிளைத்தது. புகுந்தகுடிக்குப் பிள்ளைநிலையில் மகவினைத் தந்தவள் தாய்]

தந்தவன் *tandavan,* பெ. (n.) தகப்பன்; father. தந்தவன் இல்லை யென்றால் வந்தவன் என்ன செய்வான் (உ.வ.).

[தந்த + அவன் = இஃதும், தருதற்கருத்து வேரினின்று பிறந்த சொல்லாகும்; தாய், ஈன்று புறந்தரக் கரணியமான, வெண்ணீர் (விந்து) நிலையைத் தந்தவன் தந்தை என்பார், மொழி ஞாயிறு.]

தந்தவாசம் *tandavāsam,* பெ. (n.) உதடு; lip.

தந்தவாதம் *tanda-vādam,* பெ. (n.) தந்தசூலை (வின்.) பார்க்க; see *tanda-šūlai.*

[தந்தம் + Skt. வாதம்]

தந்தவிதர்ப்பம் *tanda-vidarppam,* பெ. (n.) பல்லாட்டம்; a disease which is consequent upon the friction of the gums marked by the appearance of violent swelling.

[தந்தம் + விதர்ப்பம்]

தந்தவியசனம் *tanda-viyāšanam,* பெ. (n.) பல் சொத்தை; decay of tooth.

தந்தவிரிசம் *tanda-virišam,* பெ. (n.) தந்தங்கூசு-தல் பார்க்க; see *tandaṅ-kūšu-.*

தந்தவேட்டம் *tanda-vēṭṭam,* பெ. (n.) பல்லீறு (யாழ்.அக.); the gums.

மறுவ. பல்முரசு

[தந்தம் + வேட்டம்]

தந்தவைதர்ப்பம் *tanda-vaidarppam,* பெ. (n.) அழற்சியினாலேற்படும் பல்லாட்டம்; looseness of the teeth, through external injury.

தந்தன் *tandan,* பெ. (n.) 1. தாடியுள்ளவன்; a men with beard. 2. நாலுணர்வினன்; one provided with only four senses. 3. நூலுணர்வினன்; one with scientific knowledge.

தந்தனத்தான்பாட்டு *tandanattān-pāṭṭu,* பெ. (n.) தந்தனப்பாட்டு பார்க்க; see *tandana-p-pāṭṭu.* (செ.அக.).

[தந்தனத்தான் + பாட்டு. தும்தனத்தான் → துந்தனத்தான் → தந்தனத்தான் + பாட்டு. ஒரு.கா. துந்தனம் → தந்தனம்]

தந்தனப்பாட்டு *tandana-p-pāṭṭu,* பெ. (n.) பெரும்பாலும் பிச்சைக்காரச் சிறுவர்கள் பாடும் பாட்டுவகை (இ.வ.); a kind of song, generally sung by beggar-boys.

க. தந்தனகாடு; தெ. தந்தனமு

[தம்தனம் → தந்தனம் + பாட்டு. ஒருகா. துந்தனம் → தந்தனம்]

தந்தனப்பாட்டுப்பாடு-தல் *tandana-p-pāṭṭu-p-paḍu-,* 5 செ.குவி. (v.i.) ஏழைபோல் நடித்தல் (இ.வ.); to play the part of a beggar.

[தந்தன எனும் எளிய நாட்டுப்புறப் பாட்டு இசை, இரவலர்தம் கைவந்த கலையாகும். 'துந்தனா' எனும் கம்பிக் கருவி கொண்டு, இசைபாடி வருவது இரவலர் வழக்கம். அவர் பாடும் பாட்டு. துந்தனப்பாட்டு → தந்தனப்பாட்டு → தந்தனாப்பாட்டுப் பாடுதல், என்றாயிற்று. தந்தனம் + பாட்டு + பாடு-.]

தந்தனம்[1] *tandanam,* பெ. (n.) வலக்காரம் (தந்திரம்); stratagem, trick, device, scheme. "பண்ணுந் தந்தனத்துக் குள்ளாய்த் தளர்வாரும்"

(விறலிவிடு. 324). 2. தெம்மாங்கு இசை வடிவம்; base for folk musical form (செஅக.).

[தம் + தம் + அனம். எளிய இசைக் கருவியில் எழும்பும் ஒலிக்குறி. உணர்ச்சிப் பெருக்கின் போது நாட்டுப்புற மக்கள் எளிய இசைக்கருவியைக், கையால் தட்டிக்கொண்டே பாடத் தொடங்கினர். தந்தன, தனனன, தன்ன, தன்னன்ன போன்ற பல இசைவடிவங்கள் தனித்தும், கூடியும், செய்யுள் வரிகளுக்கு, அடிப்படையாக அமைந்தன. திருப்புகழ் போன்ற சந்தம் நிறைந்த பாடல்களுக் கெல்லாம் அடிப்படை ஒலியாயின.]

தந்தனம்[2] *tandanam,* பெ. (n.) 1. அடிப்படை யின்மை; lack of foundation, support. அது தந்தனமாய் நிற்கின்றது. 2. தற்பெருமை; self - conceit. 3. பாராமுகம்; indifference. 4. சூழ்ச்சி; stratagem, trick, device, scheme. "பண்ணுந் தந்தனத்துக் குள்ளாய்த் தளர்வாரும்" (விறலி விடு. 324).

[தம்தனம் → தந்தனம் = எளிய இசை வடிவமாதலால், இரவலர், பரவலாகப் பாடத் தலைப்பட்டனர். ஏழை பாடும் பாட்டானதாலும். ஏழைகளைப் போற்று வாரின்மையாலும், அடிப்படையின்மை என்ற பொருள் வந்துவிட்டது. எளிய இசையிலேயே, பிறரை மயக்கும் பெற்றி வந்துவிட்டதால், தற்பெருமையையும் குறிக்கலாயிற்று. பிறரால் மதிக்கப் படாமை கருதி 'பாராமுகம்' (வடமொழியில் பராமுகம் என்பர்) என்ற பொருளையும் ஏற்றது. பாராமுகத்தின் விளைவு, சூழ்ச்சி ஆயிற்று.]

தந்தனவெனல் *tandana-v-enal,* பெ. (n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. of stamping sound. "'தந்தனவென்று கூத்தாடினனே" (அருட்பா. VI, நாம. 136).

[துந்தனவெனல் → தம்தனவெனல் → தந்தனவெனல்]

தந்தாம் *tandām,* பெ.(n.) தங்கள்; தங்களுடைய; theirs, severally or individually. "ராஜசேவை பண்ணுவார் தந்தாம் அடையாளங்களோடே" (ஈடு, 2. 2: 10).

[தம்தாம் → தந்தாம்]

தந்தாயுதம் *tandāyudam,* பெ. (n.) 1. தந்தத்தை ஆயுதமாக உடைய யானை; elephant. 2. ஆண் பன்றி (யாழ்.அக.): hog.

[தந்தம் + ஆயுதம்.]

தந்தார் *tandār,* பெ. (n.) பெற்றோர்; parents. "தந்தா ரவரொடும்" (பரிபா. 15: 46).

[தந்த + அவர் = ஈன்று புறந்தந்தோர்]

தந்தாலிகை *tandāligai,* பெ. (n.) கடிவாளம்; horse-bit, bridle.



தந்தாவளம் *tandāvāḷam,* பெ. (n.) யானை (சூடா.); elephant. "தந்தாவள சேனை" (பாரத. நான்காம். 9).

[தந்தம் + ஆவளம்]

தந்தாவனம் *tandā-vanam,* பெ. (n.) 1. குச்சியால் பல்துலக்குதல்; cleaning the teeth with twigs. 2. பற்குச்சி; any twig of plant used as tooth brush. 3. கருங்காலி; glabros foliaged cutech.

தந்தாந்தம் *tandāndam,* பெ. (n.) தொட்டி நஞ்சு; red arsenic.

தந்தி[1] *tandi,* பெ. (n.) 1. ஆண்யானை, களிறு (பிங்); male elephant. "தந்தியும் பிடிகளுந் தடங்க ணோக்கின" (கம்பரா. சித்திரக்கூட: 43). 2. பாம்பு (நச்சுப் பற்களையுடையது); snake, as having fangs. "தந்தி நஞ்சந் தலைக்கொளச் சாய்ந்தவர்" (கந்தபு. சயந்தன்கனவு. 21).

[தந்தி = தும்பிக்கையுடைய ஆண் யானை தும்பு = யானையின் தும்பிக்கை. தும்பு → துந்து → துந்தி → தந்தி. ஒருகா. தம் + த் + இ → தந்தம் → தந்தி. 'த்' இடைநிலை. 'இ' சொல்லாக்க ஈறு. தந்தி என்பது மருப்பினையுடையது எனும் பொருளில் வந்தது]

தந்தி[2] *tandi,* பெ. (n.) *1.* *கம்பி;* wire. "நார் தந்திமிடையப் பின்னி" *(தைலவ. பாயி. 22). 2.* *யாழ் நரம்பு* (வின்.); catgut, string of a musical instrument. *3.* *நரம்பு;* sinew, tendon. குதிகால் தந்தியை அறுத்து விடுவேன் (இவ). *4.* *தொலைவரி (மின்கம்பிவழி யனுப்புஞ்செய்தி);* telegram. *5.* *யாழ்* (பிங்.); lute.

[தந்தி = துளை வழியே இழுக்கப்பட்ட மெல்லிய மாழைக்கம்பி; உல் → துல் → துளை. துளைத்தக் கம்பிகள் பொருத்தப் பட்டதும், 'விண்' 'விண்' என்று இசை தருவதுமான வீணை அல்லது யாழ்.

ஒருகா. தம் + த் + இ - தந்தி. இஃதும் தருதற்கருத்து வேரினை அடிப்படையாகக் கொண்டு, பொருள்தருஞ் சொல்லாகும். 'இ' சொல்லாக்க ஈறு. 'த்' இடைநிலை, இன்னியங்களில் தருதற்கருத்து அடிப் படையில், தந்தியிழை அல்லது கம்பி இசையைத் தருகிறது. அறிவியல் வளர்ச்சியில் கம்பியில்லாத் தந்தி செய்தியினைத், தருகிறது. இவ்வாறு 'தம்' எனும் தருதற்கருத்து வேரடி, இன்னியக் கருவிகளில், இசையைத் தரும் பான்மையிலும், அறிவியல் வளர்ச்சியில், தொலைவரி, தொலைக் காட்சி முதலான வற்றில், ஒலி, ஒளி, அனைத்தையுந்தரும் பான்மையில் அமைந்துள்ளமை அறிதற் பாலது. தமிழ் மொழியின் சொற் கட்டமைப்பு, முன்னைப் பழைமைக்கும், பின்னைப் புதுமைக்கும், ஈடுகொடுக்கும் வண்ணம் இயைந்து அமைந்துள்ளமையை, 'தரு' என்னும் வேரடி, விளக்குகிறது.]

தந்தி[4] *tandi,* பெ. (n.) தந்திவருமா பல்லவன் (கி.பி. 796-846) நாணயத்தில் உள்ள பெயர்; name found in thd coin of Tandivaruman, 796-846 AD.

தமிழ் எழுத்தில் 'த' எழுத்தும், 'ந்தி' என்ற கூட்டெழுத்தும், பல்லவகிரந்தத்தில் உள்ளன. பல்லவமன்னர்கள், அரசுப்பணிகளில் கிரந்தத்தைப் பயன்படுத்தியதை இந்த நாணயம் காட்டுகிறது.

[அளக்குடி - தமிழகத் தொல்லியல் சான்றுகள்]

தந்தி[4] *tandi,* பெ. (n.) *தந்திபீசம்* (மலை.) பார்க்க; see *tandi-pīšam.*

தந்தி[5] *tandi,* பெ. (n.) *1.* *வட்டக்கிலுகிலுப்பை;* rattle wort. *2.* *நாடி;* pulse. *3.* *சீமையாமணக்கு;* foreign castor. *4.* *வாலுளுவை;* thorny staff tree. *5.* *சிவதை;* turpeth root.

தந்திக்கடவுள் *tandi-k-kaḍavuḷ,* பெ. (n.) பிள்ளையார் (பிங்) (யானை முகத்தையுடைய கடவுள்); Gaṇēšaṉ, as elephant - faced, God.

[தந்தி + கடவுள் → தந்தி = யானை. யானை முகத்தோன்]

தந்திக்கம்பி *tandi-k-kambi,* பெ. (n.) *1.* வீணை முதலியவற்றின் நரம்பு; string of a lute. *2.* தொலைவரி அல்லது தொலைபேசிக் கம்பி: telegraph or telephone wire. *3.* புடைவை வகை; a kind of saree.

[தந்தி + கம்பி = ஒரு பொருட்பன்மொழி]



தந்திக்கள்ளன் *tandi-k-kaḷḷaṉ,* பெ. (n.) உரித்துலுக்கன் (m.m.375) பார்க்க; see *urittu-lukkaṉ.*

[தந்தி + கள்ளன்]

தந்திகர்ணி *tandi-garṇi,* பெ. (n.) வெருகங் கிழங்கு (தைலவ. தைல. 23); a tuberous-rooted herb.

மறுவ. மெருகன் கிழங்கு

த. கரணை → வ. கர்ணி.

[தந்தி + கரணை = காருதற் சுவையுள்ள நீண்ட கிழங்கு]

தந்தித்தீ *tandi-t-tī*, பெ. (n.) யானைத்தி யென்னும் பசிநோய்; morbid appetite, as elephantine. "தந்தித் தியாற் றனித்துய ருழந்து" (மணிமே. 17:44).

[தந்தி + தீ.]

தந்திதந்தியாய் *tandi-tandi-y-āy*, கு.வி.எ. (adv.) வரிசைவரிசையாய்; row after row. "தந்தி தந்தியாய் வருங்கைத் தந்திகளின்" (கொண்டல் விடு. 397).

[தந்தி = வரிசை. தந்தி + தந்தி + ஆய்.]

தந்திப்படு-தல் *tandi-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) எரிச்சற்படுதல் (யாழ்.அக.); to be irritated.

[தந்தி + படு-.]

தந்திப்பிரமேகம் *tandi-p-piramēgam*, பெ. (n.) அடிவயிற்று நோவால், ஆண்குறி வழியாய்ச் சளியைப்போலொழுகும் நோய்; a transparent mucous wiry discharge from the urethra.

மறுவ. இணைவிழைச்சு நோய்

[தந்தி + பிரமேகம்]

தந்திபீசம் *tandi-pīšam*, பெ. (n.) நேர்வாளம் (தைலவ. தைல. 116) சிறுமர வகை; a kind of tree. Croton oil-plant.

தந்திபூட்டு-தல் *tandi-pūṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) வீணை, யாழ் முதலியவற்றிற்குக் கம்பி யமைத்தல் (வின்.); to fit up with strings, as in a lute.

[தந்தி + பூட்டு-.]

தந்திபேசல் *tandi-pēšal*, தொ.பெ. (vbl.n.) நாடியடித்தல்; beating of the pulse.

[தந்தி + பேசு + த் + அல். அல் = தொ.பொ. ஈறு]

தந்திபேசு-தல் *tandi-pēšu-*, 5 செ.கு.வி. (v.i.) தொலைவரி பார்க்க; see *tolai-vari*.

[தந்தி + பேசு-.]

தந்திபோல்தெரித்தல் *tandi-pōl-terittal*, பெ. (n.) விட்டுவிட்டுச் சுரீர்என நோதல்; a sort of pain experienced in hemicrania.

[தந்தி + போல் + தெரித்தல்.]

தந்திமதம் *tandimadam*, பெ. (n.) யானைமதம்; elephant with desere.

[தந்தி + மதம்]

தந்திமருப்பு[1] *tandi-maruppu*, பெ.(n.) முள்ளங்கி (தைலவ. தைல. 135) பார்க்க; see *mullaṅgi*.

[தந்தி + மருப்பு]

தந்திமருப்பு[2] *tandi-maruppu*, பெ. (n.) யானைக் கொம்பு; tusk of elephant.

[தந்தி + மருப்பு]

தந்திமுகன் *tandi-mugaṉ*, பெ. (n.) யானைமுகக் கடவுள் (திவா. காப்பு.); elephant faced God.

மறுவ. தந்திக்கடவுள்

[தந்தி + முகன். மருப்பினை முகத்திலுடையவன்]

தந்திமுறுக்கு[1]**-தல்** *tandi-muṟukku-*, 5 செ. குன்றாவி. (v.t.) யாழ்நரம்பை இறுக்குதல்; to tighten the lute-string.

தந்திமுறுக்கு[2]**-தல்** *tandi-muṟukku-*, 5 செ.கு.வி. (v.i.) தீச்செயலில் தூண்டி விடுதல்; to egg on, instigate to evil (செ.அக.).

[தந்தி + முறுக்கு-.]

தந்திமுறுக்குதல்[3] *tandi-muṟukkudal*, பெ. (n.) நரம்பிற்குச் சுறுசுறுப்பையுண்டாக்கல்; stimulating the nerves.

[தந்தி + முறுக்குதல்.]

தந்திமேகம் *tandi-mēgam*, பெ. (n.) தந்தி வெட்டை பார்க்க; see *tandi-veṭṭai* (செ.அக.).

[தந்தி + மேகம்.]

தந்தியடி[1]**-த்தல்** *tandi-y-aḍi-*, 4 செ.கு.வி. (v.i.) தொலைவரிச் செய்தியனுப்புதல்; to send a telegram, wire (செ.அக.).

[தந்தி + அடி-.]

தந்தியடி[2]**-த்தல்** *tandi-y-aḍi-*, 4 செ.கு.வி. (v.i.) வீணை, யாழ் முதலியவனவற்றில் மீட்டும் மெல்லிய கம்பியை மேலுங்கீழுமாக அசைப்பது போன்று ஆட்டுதல்; to tremble.

[தந்தி + அடி-.]

தந்தியடி[3]**-த்தல்** *tandi-y-aḍi-*, 4 செ.கு.வி. (v.i.) நாடிபேசல்; to beat the pulse.

[தந்தி + அடி-.]

தந்தியம்[1] *tandi-y-am,* பெ. (n.) *பல்லடுக்கு;* filth in the teeth.

[தந்தி → தந்தியம்.]

தந்தியம்[2] *tandi-y-am,* பெ. (n.) *முலைப்பால்;* woman's breast milk.

தந்தியறுதல் *tandi-y-aṟudal,* பெ. (n.) *1. நாடிவிழல்;* dropping of the pulse. *2. நரம்புவீழ்ச்சி;* nervous break down.

[தந்தி + அறுதல்]

தந்தியாரிட்டம் *tandiyāriṭṭam,* பெ. (n.) *மூலநோய்க்கான ஆயுள்வேதமருந்து;* an āyurvēdic wine prescribed for piles.

தந்தியுரியோன் *tandi-y-uriyōṉ,* பெ. (n.) *சிவன்* (சூடா.) *(யானைத் தோலைப் போர்த்தவன்);* Šivaṉ, as wearning elephant's skin.

[தந்தியுரி = யானைத் தோல். தந்தியுரி → தந்தியுரியோன்]

தந்தியூசிவன்னச்சேலை *tandi-y-ūsi-v-vaṉṉa-c-cēlai,* பெ.(n.) *கம்பியூசிபோலும் மெல்லிய கோடுகள் அமைக்கப்பெற்ற, புடைவை வகை* (இ.வ.); a kind of saree with needle-like stripes.

[தந்தி + ஊசி + அன்ன + சேலை (அன்ன = உருபினுளொன்று) – தந்தியூசியன்னச் சேலை → தந்தியூசிவன்னச்சேலை]

தந்திரக்காரன் *tandira-k-kāraṉ,* பெ. (n.) *1. சூழ்ச்சியுள்ளவன்;* cunning man, crafty fellow. *2. நுண்மான் நுழைபுலமிக்கவன்;* a person of subtle mind.

[தந்திரம் + காரன் = தந்திரக்காரன் கரவாளன். கரவு = மறைப்பு. கரவாளன் = மறைத்துப் பேசுவதில் திறமையாளன். காரன் = உடைமைப் பெயரீறு. ஒ.நோ மந்திரக்காரன்]

தந்திரகம் *tandiragam,* பெ. (n.) *சீந்தில்* (மலை) *படர்கொடிவகை;* gulancha (செ.அக.).

[தந்தி → தந்திரகம்]

தந்திரகரணம் *tandira-karaṇam,* பெ.(n.) *1. திருட்டைப் பற்றிய நூல்;* treatise dealing with the art of thieving. *2. திருட்டைப் பற்றிய நூலில் சொல்லப்படுந் தொழில்கள்;* acts prescribed in the treatise on theft. "தந்திரகரண மெண்ணுவராயன்" (சிலப். 16:180).

[தந்திரம் + கரணம்]

தந்திரகலை *tandira-kalai,* பெ. (n.) *கரணங்களைப் பற்றிக் கூறும் தோன்றியம் (ஆகமப்பகுதி)* (வின்.); a section of the Āgamā's treating of rites and ceremonies.

[தந்திரம் + கலை]

தந்திரசாத்திரம் *tandira-šāttiram,* பெ. (n.) *தெய்வபூசைக்குரிய மந்திர தந்திரங்களைக் கூறும் நூல்;* treatise on mantrā's or magical and mystical formulae for the worship of deities.

[தந்திரம் + சாத்திரம்]

தந்திரநூல் *tandira-nūl,* பெ. (n.) *வெற்றிக்கான வழிமுறை பற்றிக் கூறும் நூல்;* tantric science.

[தந்திரம் + நூல்.]

தந்திரபாலன் *tandira-pālaṉ,* பெ. (n.) *படைத் தலைவன்* (வின்.); commander of an army.

[தந்திரம் + பாலன் = பல்கலை வல்லுநன்]

தந்திரம்[1] *tandiram,* பெ. (n.) *1. வழிவகை;* stratagem, scheme, expedient, means. "இத்தந்திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்கு" (திருவாச. 3:131). *2. தொழிற்றிறமை;* craft, handicraft, workmanship. "தந்திரத்தாற் றமநூல் கரைகண்டவன்" (சீவக. 234). *3. ஊகம்;* intellectual subtlety. *4. உருமாற்றுப் பாசாங்கு, ஏய்ப்பு* (வின்); dissembling, dissimulation. வருமானவரி கட்டாமல் ஏய்ப்பதற்கு இழப்புக்கணக்கு காட்டுவது ஒரு தந்திரம் (உ.வ.). அவனுடைய தந்திரமான பேச்சில் மயங்கிவிடாதே (இ.வ.). *5. கல்விநூல்* (சூடா.); treatise, literary, scientific or religious. "தந்திரத்தின் வாழுந் தவசிகள்" (இனி. நாற். 19). *6. தந்திரசாத்திரம்* பார்க்க: see *tandira-šāttiram.* *7. கடவுள்வழிபாட்டிற் காட்டுங் கைச்செய்கை* (இ.வ.); manual acts in performing sacrifices, worship, etc., *8. படை* (பிங்.); army, forces. "தந்திரவினைஞரும்" (சிலப். 26:41). *9. காலாள்;* infantry. "இவுளியானை தந்திரம்" (கோயிற்பு.

இரணி: 117). **10. யாழ்நரம்பு** *(வின்.);* wire or string of a lute.

[தம் → தன்; துல் → தில் → திர் → திரள் → திரம். ஒருகா. தன் + திறம் → திரம் → தந்திரம் ஒருவனது திறமையினை பல்கலைப் பயிற்சியினை, நுண்மாண் நுழைபுலத்தை, வாழ்வாங்கு வாழும் வழிவகைமையினை, எழிலுற இயம்புவது தந்திரமாகும். தந்திரம். துல் → தில் → திர் → திரள் → திரம். திரம் = 1. உரம் 2. வலிமை 3. உறுதி 4. நிலைபேறு 5. மலை 6. பேரின்பவீடு 7. ஒரு தொழிற் பெயர் ஈறு]

த. திரம் → வ. ஸ்திர

திறம் → திரம் = 1. உறுதி. 2. வலிமை. 3. நிலைபேறு, 4. கற்பு, 5. சமர்த்து, 6. கூட்டம், 7. ஆடு, மாடு, எருமை எவ்வெண்பது கூடின கூட்டம், 8. மிகுதி., 9. இயல்பு, 10. வகை, 11. கூறுபாடு, 12. சார்பு, 13. கிளைப்பண், 14. செயல், 15. கோலம், 16. கொள்கை, 17. இடையாட்டம் (விஷயம்), 18 செய்தி, 19. ஆம்புடை (உபாயம்), 20. திருவம் (பாக்கியம்), 21. பக்கம், 22 படித்தரம்.

தன் + திரம் - தந்திரம். தன்னாற்றல்; தன்னாற்றல் மிக்கவன், கூர்த்த அறிவினன்

தந்திரி; தந்திரவாதி அவன் கையாளும் வழிவகைகள், கூர்த்த அறிவுத்திறம் மிக்கவை. தொழிலில் காட்டும் தந்திரம், திறமைக்கு வழி கோலும். வெற்றிக்கான அவ்வழிகளை நூலாக்கினால், அதுவும் தந்திரம் எனப்படும். வடநூலார், தந்திரசாத்திரம் என்பர். கடவுள் வழிபாட்டின்போது, காட்டும் கைச் செய்கைகள், தந்திரம் எனப்படும். போர்க் களத்திற்கனுப்பும் படைகளும் தந்திரம் எனப்படும்.

நல்வழி தவிர, அல்வழியையும் சுட்டும் வகையில், திருட்டையும் தந்திரமென்னுஞ் சொல் குறித்தது. திருட்டைப் பற்றிய நூல் தந்திரகரணம் எனப்பட்டது.

தந்திரம், திருக்கோயில் வினைகளுக்குப் பயன்படும்போது, பேரின்பம் தொடர்புடைய தாகிறது. கோயில் பூசனை செய்வோன் தந்திரி ஆகிறான்.

தந்திரம்[2] *tandiram,* பெ. (n.) **மறையின் ஒரு பகுதி நூல்;** a tantric science which is a branch of Vēda.

[தன் + திரம்.]

தந்திரமணம் *tandira-maṇam,* பெ. (n.) **மெதுவான நடை** *(யாழ்.அக.);* slow pace.

[தந்திரம் + மணம்]

தந்திரமா *tandira-mā,* பெ. (n.) **நரி (சூழ்ச்சி செய்யும் விலங்கு)** *(சங்.அக.);* fox, as a cunning animal.

[தந்திரம் + மா.]

தந்திரர் *tandirar,* பெ. (n.) **கந்தருவர் (யாழ் வாசிப்போர்)** *(திவா.);* celestial musicians, as lute - players. "தந்திரர்க் குரிய பாணந் தருகுவன்" *(இரகு. அயனெ: 17).*

[தந்தி = யாழ்நரம்பு. தந்தி → தந்திரர்]

தந்திரவாக்கியம் *tandiira-vākkiyam,* பெ. (n.) **நகைச்சுவை தோற்றும் ஒருபழைய தமிழ்நூல்** *(தொல். பொருள். 485, உரை.);* a humorous work in Tamil, now extant.

[தந்திரம் + வாக்கியம்]

தந்திரவாதம் *tandira-vādam,* பெ. (n.) **ஒரு சமயம்;** a religion.

[தந்திரம் + வாதம்]

தந்திரவாதி *tandira-vādi,* பெ. (n.) **கூர்த்த அறிவினன்;** clever, subtle person *(செ.அக.).*

[தந்திரம் + வாதி]

மறுவ. நுண்ணறிவாளன்

[தம் + திறம் → திரம் + வாதி]

தந்திரவாயன் *tandira-vāyaṉ,* பெ. (n.) **1. சிலந்தி;** spider. **2. நெசவுகாரன்;** weaver *(செ.அக.).*

[தந்திரம் + வாயன் − தந்தி = நூல், இழை]

நூல், இழை முதலானவற்றைக் கொண்டு நெசவுத் தொழிலாற்றுபவன்

தந்திரவியன் *tandiraviyaṉ,* பெ. (n.) **நெய்வோன்;** weaver.

[தந்தி → தந்திரம் + இயன் → தந்திரவியன்]

தந்திரவுத்தி[1] *tandira-v-utti,* பெ. (n.) **உத்தி**[4]**−3** *(நன்.15)* பார்க்க; see *utti*[4] *3,* devices employed in standard literary works *(செ.அக.).*

[தந்திரம் + உத்தி]

தந்திரவுத்தி[2] *tandira-v-utti,* பெ. (n.) குழூஉக் குறி; code-words.

[தந்திரம் + உத்தி]

தந்திரன் *tandiran,* பெ. (n.) கூர்த்த அறிவினன்; schemer, crafty person (செ.அக.).

[தந்திரம் → தந்திரன் = பல்கலை வல்லுநன்]

தந்திரி[1] *tandiri,* பெ. (n.) 1. சூழ்ச்சியாளன்; schemer; crafty person. 2. படைத்தலைவன்: commander of an army. 3. அமைச்சர் (யாழ்.அக.); minister. 4. கோயிலில் பூசனை செய்பவன் (நாஞ்.); arch-priest of a temple. 5. யாழ்; lute. "நிரைந்த தந்திரி திருத்தி" (திருவாலவா. 57: 24). 6. குழலின்துளை; holes of a flute. "தந்திரிகண் மெலிவித்துஞ் சமங் கொண்டும் வலிவித்தும்" (பெரியபு. ஆனாய. 27).

[தம் + திறன் → தந்திரன் → தந்திரி]

தந்திரி[2] *tandiri,* பெ. (n.) யாழ்நரம்பு; string of musical instruments. "வீணைத் தந்திரியும்" (பிரமோத். 2, 62).

[தந்தி → தந்திரி]



தந்திரி[3] *tandiri,* பெ. (n.) சுறாமீன்; shark fish (சா.அக.).

தந்திரிகம் *tandirigam,* பெ. (n.) தந்திரிகரம் பார்க்க; see *tandirigaram;* string of a musical instrument.

[தந்தி → தந்திரி → தந்திரிகம்.]

தந்திரிகரம் *tandiri-garam,* பெ. (n.) செங்கோட்டியாழ் உறுப்புகளில் ஒன்று; a part of seṅgōṭṭiyāḻ. "செங்கோட்டியாழிற் றந்திரிகரத் தொடு" (சிலப். 13:107).

[தந்தி → தந்திரி → தந்திரிகரம்.]

தந்திரிகன் *tandirigan,* பெ. (n.) 1. (சாக்தம்) காளிய வழிபாட்டினன்; worshippers of the energy. 2. எந்திர மந்திரத்தைக்கொண்டு வேலை செய்பவன்; a magician working with the aid or mystic diagrams. 3. பில்லி சூனியக் காரன்; one skilled in witch craft and sorcery.

[தந்திரி → தந்திரிகன்.]

தந்திரிகை *tandirigai,* பெ. (n.) கம்பி; wire "தந்திரிகை சுற்றி" (தைலவ. தைல. 41) (செ.அக.).

[தந்திரி → தந்திரிகை]

தந்திரிகை[2] tandirigai, பெ.(n.) 1. தூக்கம்; sleep. 2. மடி (சோம்பல்); laziness. 3. நூல்; science in general.

[தந்திரி → தந்திரிகை.]

தந்திரிபாலன் *tandiripālan,* பெ. (n.) சகாதேவனின் ஒருபெயர்; another name for *šahādēvan.*

தந்திரீகம் *tandirīgam,* பெ. (n.) உலர்ந்த பேரீச்சம்பழம்; dried date fruit.

[தந்திரி → தந்திரீகம்]

தந்திரீதம் *tandirīdam,* பெ. (n.) குந்துருக்கம் (வெள்ளைப் பிசின்); white dammer.

[தந்திரீகம் → தந்திரீதம்]

தந்திரை *tandirai,* பெ. (n.) 1. மடி; laziness. 2. துயிலுதல்; sleep.

தந்திலத்தி *tandilatti,* பெ. (n.) யானைக்கழிவு; elephants excreta.

[தந்தி: யானை; இலத்தி: கழிவு; தந்தி + லத்தி.]

தந்திவந்தறம் *tandivandaram,* பெ. (n.) மேலுலகம்; heaven above.

தந்திவன்னம் *tandi-vannam,* பெ. (n.) தந்தியூசி வன்னச்சேலை (இவ.) பார்க்க; see *tandi-y-ūši-vanna-c-cēlai.*

[தந்தி + வன்னம்.]

தந்திவாளம் *tandi-vāḷam,* பெ. (n.) நேர்வாளம்; croton seed.

[தந்தி + வாளம்.]

தந்திவிரை *tandivirai,* பெ. (n.) நேர்வாள விதை; croton seed.

[தந்தி + விதை → விரை.]

தந்திவீழுரியோன் *tandivīḻuriyōṉ,* பெ. (n.) சிவன்; lord Šivaṉ.

[தந்திவீழ் + உரியோன்.]

தந்திவெட்டை *tandi-veṭṭai,* பெ. (n.) ஆணுறுப்பு நோய் வகை (M.L.); gleet, partial hardening of the penis, chordee *(செ.அக.).*

[தந்தி + வெட்டை]

தந்திவெள்ளை *tandi-veḷḷai,* பெ. (n.) தந்தி வெட்டை (M.L.) பார்க்க; see *tandi-veṭṭai.*

[தந்தி + வெள்ளை]

தந்து[1] *tandu,* பெ. (n.) *1.* நூல்; thread. *"வேரிக் கமலத்தின் றந்துவினாற்கட்டச் சமைவ தொக்கும்" (நள. பாயி.6).* *2.* கயிறு; string, cord. *"தந்து வீசியுடல் சிந்துமால்" (திருவிளை. நகரப்: 26).* *3.* கல்விநூல் *(திவா.);* science, scientific or literary treatise. *4.* கான்முளை (சந்ததி) *(யாழ்.அக.);* descendant, progeny.

[தந்தி → தந்து.]

தந்து[2] *tandu,* பெ.(n.) தந்திரம் *1,2,3.* பார்க்க; see *tandiram.1,2,3.* "தந்துபண்ணுகிறான்" *(வின்.)*

[தந்திரம் → தந்து]

தந்து[3] *tandu,* பெ. (n.) தம்பலப்பூச்சி; a scarlet insect appearing after rain in the cochineal.

தந்துக்காரன் *tandu-k-kāraṉ,* பெ. (n.) நகைக்சுவையாளன் *(வின்.);* witty person.

[தந்து + காரன். "காரன்" உடைமைப் பெயரீறு. ஒ.நோ. தந்திரக்காரன், மந்திரக்காரன்]

தந்துக *tanduga,* பெ.எ. (adj.) சிறு துளையுள்ள; capillary.

தந்துகக்கவர்ச்சி *tanduga-k-kavarcci,* பெ. (n.) நுண்ணிய அரத்தக் குழலின் கவர்ச்சி; spontaneous elevation of liquids in fine hair like tubes - Capillary attraction.

[தந்துகம் + கவர்ச்சி.]

தந்துகக்குழல் *tanduga-k-kuḻal,* பெ. (n.) சிறுதுளையுள்ள குழல்; capillary vessel.

[தந்துகம் + குழல்.]

தந்துகடம் *tandugaḍam,* பெ. (n.) சிலந்தி *(யாழ்.அக.);* spider.

[தந்து → தந்துகடம்]

தந்துகநுகர்ச்சி *tanduga-nugarcci,* பெ. (n.) நுண்ணிய அரத்தக் குழலின் விலக்கு; capillary repulsion.

[தந்துகம் + நுகர்ச்சி.]

தந்துகம் *tandugam,* பெ. (n.) *1.* கடுகு *(மலை.);* Indian mustard. *2.* தூக்கணங்குருவி; Indian tailor bird.

[தந்து → தந்துகம்]

தந்துகாசிதம் *tandugāšidam,* பெ. (n.) மகர வாழை; a kind of plantain tree.

தந்துகி *tandugi,* பெ. (n.) நாடி நுட்பக்குழல்கள் *(சங்.அக.);* capillaries.

[தந்து → தந்துகி]

தந்துகிசஞ்சயம் *tandugi-šañjayam,* பெ. (n.) நுண்ணிய அரத்தக் குழலின் திரட்சி; capillary congestion.

தந்துகிப்புடைப்பு *tandugi-p-puḍaippu,* பெ. (n.) தந்துகிக் குழல் பெரிதாதல்; enlargement of capillaries.

[தந்துகி + புடைப்பு.]

தந்துகிப்பொசிவு *tandugi-p-pošivu,* பெ. (n.) நுண்ணிய அரத்தக்குழல் கசிவு; capillary infilteration.

[தந்துகி + பொசிவு.]

தந்துகிருமி *tandu-kirumi,* பெ. (n.) புழுப்போன்ற நுண்ணுயிரிகள்; vermicularis.

[தந்து + கிருமி.]

தந்துகிவிரிவு *tandugi-virivu,* பெ. (n.) நுண்ணிய அரத்தக்குழாய் விரிகை; dilatation of capillary vessels.

[தந்துகி + விரிவு.]

தந்துகீடம் *tandu-kīḍam,* பெ. (n.) சிலந்திப்பூச்சி (சங்.அக.); spider, as a spinning creature.

மறுவ. நூலிழைக்கும் பூச்சி.

[தந்து = நூலிழை; தந்து + கீடம்]

தந்துசாரம் *tandu-šāram,* பெ. (n.) கமுகு (மலை.); areca-palm.

[தந்து + சாரம்]

தந்துசாலை *tandu-šālai,* பெ. (n.) நெசவு வீடு; weaving quarters.

[தந்து + சாலை.]

தந்துசீர் *tandušīr,* பெ. (n.) மாமேதை என்னும் அறியப்படா மரம்; an unknown tree.

தந்துநாபம் *tandu-nābam,* பெ. (n.) ஆவின்கன்று; cow calf.

தந்துநிறை *tandu-niṟai,* பெ.(n.) பகையிடத்தினின்று, ஆனிரையை வீரர் தம்மூர்ப்புறத்துத் தந்துநிறுத்துதலைக் கூறும் புறத்துறை (தொல். பொருள். 58); theme which describes the capturing of cows from the enemy's territory and securing them within the confines of one's own country (செ.அக.).

[தந்து + நிறை. தந்து = படை]

தந்துப்பிரமேகம் *tandu-p-piramēgam,* பெ. (n.) சிறுநீர்க் கடுத்துத் துளித் துளியாய் விழல்; stricture of urethra.

தந்துபம் *tandubam,* பெ. (n.) கடுகு (மலை.); mustard.

மறுவ. தந்துகம்

[தந்துகம் → தந்துபம்.]

தந்துபலை *tandu-palai,* பெ. (n.) திப்பிலி; long pepper.

தந்துபாகம் *tandu-pāgam,* பெ. (n.) நூல்போல் வரும் மருந்தின் பக்குவம் (பைஷஜ9); a stage in the prepration of medicine, when it can be drawn out like thread.

[தந்து + பாகம். தந்து = நூல்]

தந்துமந்து *tandumandu,* பெ. (n.) குழப்பம் (யாழ். அக.); confusion.

[தந்து + மந்து.]

தந்துரம்[1] *tanduram,* பெ. (n.) ஒழுங்கின்மை; irregularity, disorderliness. "தந்துர சங்க்ரம நிருதர்" (திருப்பு. 1091).

[தந்து → தந்துரம்]

தந்துரம்[2] *tanduram,* பெ. (n.) தாமரைக்கொடி; lotus creeper.

தந்துரன் *tanduraṉ,* பெ. (n.) உயர் பல்லன்; one having prominent teeth.

தந்துருமம் *tandurumam,* பெ. (n.) பிரண்டை; adamantine creeper.

[தந்துரு → தந்துருமம்.]

தந்துரை[1]**-த்தல்** *tandurai-,* 4 செ.கு.வி. (v.i.) மூலத்திற் கூறப்படாத சொற்பொருள் முதலியவற்றை, வருவித்துரைத்தல்; to supply the ellipses and bring out the implications of a text, as in commentary.

[தா → தந்து + உரை-.]

தந்துரை[2] *tandurai,* பெ. (n.) பாயிரம் (நன்.1) (நூற்குள் நுதலிய பொருளல்லாதனவற்றைத் தந்து கூறுவது); preface, introduction, as giving what is not mentioned in the body of the work.

மறுவ. பாயிரம்.

[தா + உரை = தந்துரை; ஒருகா. தன் + உரை = தந்துரை எனினுமாம்]

தந்துரைக்கிளவன் *tandurai-k-kiḷavaṉ,* பெ. (n.) பல்லுயிர் போல் குரல் மாற்றிப் பேசுபவன்; one who is skilled in ventriloquial is the art of imiating the voice of living animals, birds, etc.

தந்துரைக்கிளவி *tandurai-k-kiḷavi,* பெ. (n.) பிறவுயிர்களைப் போன்று செய்யும் ஒலி; ventriloquial sound. "தந்துரைக் கிளவியிற் றந்துரை முடித்த .... ஆயம்" (பெருங். உஞ்சைக் 54:31).

[தன் + உரை + கிளவி]

தந்துலம் *tandulam,* பெ. (n.) தந்துரம் பார்க்க; see *tanduram.*

தந்துவர் *tanduvar,* பெ. (n.) தந்துவாயர் (வின்.) பார்க்க; see *tandu-vāyar.*

[தந்து → தந்துவர்]

தந்துவாயர்[1] *tandu-vāyar,* பெ. (n.) கைக்கோளர் (திவா.) (நெசவுத்) தொழிலையுடையவர்; the kaikkōḷar caste whose profession is weaving.

[தந்து + வாயர்]

தந்துவாயர்[2] *tanduvāyar,* பெ. (n.) சிலம்பி; spider.

[தந்தி → தந்து. தந்தி = நூல், இழை. நூலிழையால் ஆடை நெய்பவர் தந்திவாயர். தந்திவாயர் என்பது தந்துவாயராயிற்று. நூலிழையில் ஆடை நெய்வதுபோல், சிலந்திப்பூச்சி, தமது உடலினின்று வெளிப்பட்ட மெல்லிழை கொண்டு, கூடு கட்டுவதால், இப் பெயர் பெற்றதெனலாம்.]

தந்துவாயி *tanduvāyi,* பெ. (n.) *1.* நெய்வோன்; weaver. *2.* தந்துவாயர் பார்க்க; see *tandu-vāyar.*

தந்துவிக்கிரியை *tandu-vikkiriyai,* பெ. (n.) வாழை (மலை); plantain, Musa.

[தந்துவி + கிரியை]

தந்துவிகா *tandu-vigā,* பெ. (n.) தந்துவிக்கிரியை பார்க்க; see *tanduvi-k-kiriyai.*

தந்துவை *tanduvai,* பெ. (n.) *1.* தம்மாமி, தாய்மாமனின் மனைவி (தொல். சொல். 400, உரை); mother's brother's wife. *2.* மாமியார்; mother-in-law.

[தா + அவ்வை = தந்துவை]

தந்தை *tandai,* பெ. (n.) தகப்பன்; father. "தந்தையுந் தன்னையும்" (தொல்.பொருள். 137).

தெ. தந்தரி; க. தந்தெ; ம. தந்த

[தம் + ஐ = தந்தை]

விந்து நிலையில், மனைவிக்கு பிள்ளையைத் தருபவனே தந்தை.

தந்தைபெயரன் *tandai-peyaran,* பெ. (n.) மகன் (தன் தந்தையின் பெயரினையுடையான்); son, as bearing his grand-father's name. "தந்தைபெயரன் . . . சிறு தேருருட்டுந் தளர்நடை" (ஐங்குறு: 403).

[தந்தை + பெயரன்]

தந்தையர் *tandaiyar,* பெ. (n.) தந்தையரைவர் பார்க்க; see *tandai-y-araivar.*

[தந்தை + அர் → தந்தையர்]

தந்தையரைவர் *tandai-y-araivar,* பெ. (n.) அரசன், தலைவன், தந்தை, முன்னோன், குரவன் (பிங்.); அரசன், ஆசிரியன், தாய், தந்தை தம்முன் (ஆசாரக்.); பிறப்பித்தோன், கற்பித்தோன், மணமுடிப்பித்தோன், உணவு தந்தோன், பேரிடருக்கு உதவினோன் (வின்.) என்ற ஐவகைத் தந்தையர்; five fathers, viz, king, cheif, father, elder brother and preceptor according to Piaṅgalandai king, preceptor, mother, father and elder brother according to Āšāra -k-kōvai; father, teacher, father-in-law, food-giver and helper in danger according to Winslow.

[தந்தையர் + ஐவர்]

தந்தையன் *tandaiyan,* பெ. (n.) தந்தை பார்க்க; see *tandai.* "தந்தையன் றனக்கு முதவினன்" (திருவாலவா. 49:12).

[தம் + ஐ + அன்.]

தந்தோமம் *tandōmam,* பெ. (n.) நரம்புக் கட்டி; fibroma.

தந்தோற்பவரோகம் *tandōṟpava-rōgam,* பெ. (n.) குழந்தைகள் நூல், கயிறு, மயிர் போன்ற வற்றை விழுங்குவதால் உண்டாகும் நோய்கள்; a disease in children marked by fever vomitting due to swallowing thread, cord hairs etc.

தந்நகரம் *tannagaram,* பெ. (n.) 'ந' என்ற மூக்கொலி எழுத்து; the dental nasal 'n', as dist. fr. ṟaṉṉagaram (செ.அக.).

தந்நாகமம் *tannāgamam,* பெ. (n.) சமய நிகழ்வுகளைப் பற்றிய ஆகமநூல்; one of the divition of the Āgama Philosophy treating on rite operation of diagrams.

தந்நீர் *tannīr,* பெ. (n.) தன்னுடைய சிறுநீர்; self urine.

[தன்னீர் → தந்நீர்]

தந்நுகர்ச்சி *tannugarcci,* பெ. (n.) *1.* தானே நுகர்ந்து மகிழ்தல்; self enjoyment. *2.* நுகர்வினை; experience of ones pleasure or pain from farmer deeds.

தப்பக்குட்டித்திருக்கை *tappa-k-kuṭṭi-t-tirukkai,* பெ. (n.) 1. சப்பைத்திருக்கை பார்க்க; see *sappai-t-tirukkai,* a kind of sea-fish. 2. செம்பழுப்பு நிறமும், ஆறடி அகலமும், மூன்றடி நீளமும் உள்ள மீன்வகை; sting - ray, reddish-brown, attaining 6 ft. across, 3 ft. in length, Pteroplatea micrura.

மறுவ. தப்பக்குழி.

தெ. தப்புக்குட்டி

[தப்பைக்குட்டி → தப்பக்குட்டி + திருக்கை]

தப்பக்குழி *tappa-k-kuḻi,* பெ. (n.) தப்பக்குட்டித் திருக்கை பார்க்க; see *tappa-k-kuṭṭi-t-tirukkai* (செ.அக.).

[சப்பை → தப்பை + குழி. சப்பை - ஆழக்கடலின் சிறுபள்ளத்தில் தங்கும் திருக்கைமீன்]

தப்பட்டம் *tappaṭṭam,* பெ. (n.) தப்பட்டை பார்க்க; see *tappaṭṭai.*

[தப்பட்டை → தப்பட்டம்]

தப்பட்டை *tappaṭṭai,* பெ. (n.). 1. ஒருகட்பறை; one-headed drum. 2. இடத்தோளில் மாட்டிக் கொண்டு, குறுந்தடியால் அடிக்கப்படும் சிறுபறை வகை; a small drum hung from the left - shoulder and beaten with a small stick.

மறுவ. சிறுகொட்டு

தெ. தப்பெட்ட; க. தப்பட்டே; ம. தப்பிட்ட

[தப்பட்டை - சிற்றூர்களிற் சிறப்புச் செய்தியினைத் தப்புத் தப்பென்றுத் தப்பியடித்து, அறிவிக்கப் பயன்படுஞ் சிறுபறை]



தப்பட்டைக்காரன் *tappaṭṭai-k-kāraṉ,* பெ. (n.). பறையடிப்போன்; drummer (செ.அக.).

[தப்பட்டை + காரன். 'காரன்' உடைமைப் பெயரீறு. ஒ.நோ. கொட்டுக்காரன் தோட்டக்காரன்]

தப்பட்டைமேளம் *tappaṭṭai-mēḷam,* பெ. (n.) 1. சிறுபறை வகை; small tomtom. 2. பறை தட்டி இசைக்கும் குழு; group to beat drums.

[தப்பட்டை + மேளம் = தப்பட்டை மேளம் போன்றவற்றைக் கொண்டு இசைக்கும் இன்னியக்குழு.]

தப்படி *tappaḍi,* பெ. (n.) 1. தவறான செய்கை (வின்.); false step. 2. விரைந்த நடையில் ஒரெட்டுத் தூரம்; one step distance in fast walking. 3. ஐந்தடி அல்லது மூன்றடி கொண்ட கால்வைப்பு; stride pace of five or three feet.

க. தப்படி.

[தப்பு + அடி - தப்படி]

தப்பணம் *tappaṇam,* பெ. (n.) கோணியூசி (C.G.); tacking needle.

தெ. தப்பனமு; க. தப்பல

தப்பல்[1] *tappal,* பெ. (n.) குற்றம்; fault, mistake, crime. "புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்கு" *(குறுந். 292).*

தெ. தப்புட்டு; ம. தப்பல்

[தப்பு → தப்பல்]

தப்பல்[2] *tappal,* பெ. (n.) அடி; blow (செ.அக.).

[தப்பு → தப்பல். தப்பு = தப்புத் தப்பென்று தப்புதல், அடித்தல், எனினும் ஒன்றேயாகும்.]

தப்பளங்கொட்டு-தல் *tappaḷaṅ-koṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.i.) தப்பளைகொட்டு பார்க்க; see *tappaḷai-koṭṭu* (செ.அக.).

[தப்பளம் + கொட்டு-.]

தப்பளம்[1] *tappaḷam,* பெ. (n.) எண்ணெய் முதலியன நிரம்பத் தேய்க்கை (இ.வ.); smearing, rubbing, as oil.

[தப்பு → தப்பளம்]

தப்பளம்[2] *tappaḷam,* பெ. (n.) பல காய் கறிகளைப் புளியிலிட்டுப் பதப்படுத்திய குழம்பு (இ.வ.); tamarind soup containing pieces of vegetables.

[தப்பு → தப்பளம் (மு.தா. 122)]

தப்பளம்[3] *tappaḷam,* பெ. (n.) பற்று; grasp, grip.

[தப்பு → தப்பளம் (மு.தா. 122)]

தப்பளம்போடு-தல் *tappaḷam-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) எண்ணெய் முதலியன நிரம்பத் தேய்த்தல் (இ.வ.); to smear profusely, as oil.

[தப்பளம் + போடு. தப்பு + அளம் – தப்பளம் = தப்புகை, தேய்க்கை, அரைக்கை, தோய்க்கை "அளம்" சொல்லாக்க ஈறு]

தப்பளாக்கட்டை *tappaḷā-k-kaṭṭai,* பெ. (n.) சப்பளாக்கட்டை (நாஞ்.) தாளக்கருவி; a pair of wooden pieces a set of musical instruments.

[தப்பளம் + கட்டை. தப்பு → தப்பளம். கட்டையை ஒன்றோடொன்று பொருத்திச் சேர்த்து அடித்தல். அடித்தற் கருத்தினின்று ஒலித்தற் கருத்து தோன்றியது 'பண்' பொருந்த இசைபாடுதற்குத் தப்பளாக்கட்டை பேருதவி, புரிந்தது]



தப்பளை *tappaḷai,* பெ. (n.) 1. தவளை; frog. 2. பெருவயிறு (வின்.); big belly. 3. அடித்த விடத்துப் பெருத்துத் தோன்றும் சதைப்பகுதி; protruding biceps when struck. 4. மீன் வகை (இ.வ.); a kind of fish.

க. தப்பலெ

[தவளை → தப்பளை]

தப்பளைக்கொக்கி *tappaḷai-k-kokki,* பெ. (n.) அணியின் கொக்குவாய் வகை; a kind of hook in jewels (செ.அக.).

[தப்பளை + கோக்கி – தப்பளைக்கோக்கி → தப்பளைக்கொக்கி. அணிகலனின் ஒரு முனையுடன் பிறிதொரு முனையைக் கோர்க்கும் கோக்கை. கோக்கை → கோக்கி → கொக்கி]



தப்பளைகொட்டு-தல் *tappaḷai-koṭṭu-,* 5 செ.குவி. (v.i.) நீந்துகையில் கை கால்களை யடித்தல் (நாஞ்.); to strike out in swimming.

மறுவ. தப்பளங்கொட்டுதல்

[தப்பு → தப்பளை + கொட்டு-. நீந்துங்கால், தப்புத்தப்பென்று நீரினைக் கையினாலும் காலாலும் துழாவி, நீச்சற் பயிலுதல்]

தப்பளைப்பூட்டு *tappaḷai-p-pūṭṭu,* பெ. (n.) பூட்டுவகை; a kind of padlock (செ.அக.).

[தப்பளை + பூட்டு. தப்பளை = தட்டையான அமைப்பு. தட்டையாக அமைந்த பூட்டு.]

தப்பறை *tappaṟai,* பெ. (n.) 1. பொய் (வின்.); lie, falsehood. 2. ஏமாற்றுகை; deception fraud. "தப்பறைக் காரியென்று சண்டைக்கு வாய் திறந்தான்" (விறலிவிடு. 733). 3. தப்பு (வின்.); irregularity, error. 4. கெட்டப் பேச்சு (வின்.); obscenity, obscene language.

தெ. தப்பற; I. tabbara.

[தப்பு + அறை. தப்பு = சூழ்ச்சி. அறைகை = பேசுகை; சூழ்ச்சியாகப் பேசுகை]

தப்பறைக்காரன் *tappaṟai-k-kāraṉ,* பெ. (n.) பொய்யன்; liar (செ.அக.).

[தப்பறை + காரன். தப்பு → தப்பறை = பொய்மை மூலதனமாக வைத்துப் பிழைப்பவன். "காரன்" உடைமைப் பெயரீறு.]

தப்பாமல் *tappāmal*, பெ. (n.) *1.* தவறாமல்; without fail. *2.* இம்மியும் பிசகாமல்; without the slightest deviation. அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கு *(பழ.)*.

தப்பி-த்தல் *tappi-*, 4 செ.குன்றாவி. (v.i.) குற்ற முதலியவற்றினின்று விலகுதல்; to escape, get-free.

தெ. தப்பிஞ்சுகொனு; ம. தப்புக

[தப்பு = தவறுதல், விலகுதல்; தப்பு → தப்பி-.]

தப்பிச்சி *tappicci*, பெ. (n.) ஆவி; an unknown tree.

தப்பித்தவறி *tappi-t-tavaṟi*, கு.வி.எ. (adv.) *1.* தவறுதலாய்; by mistake; unintentionally. அந்தச் செய்தியைத் தப்பித்தவறிக் கூட அவனிடம் சொல்லி விடாதே *(இ.வ.)*. *2.* தற்செயலாய்; by chance.

[தப்பு + தவறு → தப்புத்தவறு → தப்பித்தவறி]

தப்பித்தான் *tappittāṉ*, பெ. (n.) தப்புச் செய்தவன்; one who commits blunders. "தப்பித் தான் பொருளே போற் றமியவே தேயுமால்" *(கலித். 149:5)*.

[தப்பு + இழைத்தான் - தப்பிழைத்தான் → தப்பித்தான்]

தப்பிதம் *tappidam*, பெ. (n.) *1.* தவறு; blunder, mistake, error, wrong. "என்ன தப்பிதம் சொன்னேன்" *(இராமநா. அயோத். 8, சரணம். 16)*. *2.* நெறிதவறுங் குற்றம்; evil-doing, deviation from moral rectitude, violation of rule .

மறுவ. தவறு

தெ. தப்பிதமு; ம. தப்பிதம்; க. தப்பித

[தப்பு + இதம். இதம் = சொல்லாக்க ஈறு]

தப்பிப்பிழைத்தல் *tappi-p-piḻaittal*, பெ. (n.) உயிர் பிழைக்கை; escaping death.

தப்பியார் *tappiyār*, பெ. (n.) *1.* குற்றம் செய்தோர்; those who have committed a crime. *2.* பகைவர்; enemies. "தப்பியா ரட்ட களத்து" *(களவழி. 5)*.

[தப்பு → தப்பி + ஆர் - தப்பியார்]

தப்பிலாவேளான் *tappilā-vēḷāṉ*, பெ. (n.) திருமயம் வட்டம் பொன்னமராவதியில் உள்ள திருமால் கோயிலின் கணக்கை வைத்திருக்கும் அதிகாரி; an officer of the Thirumāl temple at Poṉṉamarāvadi in Thirumayam taluk. "இப்படிக்கு கோயில் கணக்கு தப்பிலா வேளான் எழுத்து" *(S.I.I. xxvi. 15 - 17)*

[தப்பு + இலா + வேளான். வேளான் என்பது குலாலர் குடியினரின் பட்டப் பெயர்]

தப்பிலி[1] *tappili*, பெ. (n.) குற்றமற்றவன்; faultless person *(செ.அக.)*.

[தப்பு + இலி]

தப்பிலி[2] *tappili*, பெ. (n.) போக்கிலி; knave, rogue *(செ.அக.)*.

தெ. தப்பிலி, க. தப்பிலி

தப்பு[1]**-தல்** *tappu-*, 5 செ.குன்றாவி. (v.i.) *1.* தவறுதல்; to err, mistake, blunder, fail. "தப்பாமே தாளடைந்தார்" *(திருவாச. 8:11)*. **2.** பயன்படாது போதல்; to be unserviceable, fruitless or valueless. "மருந்தாகித் தப்பா மரத்தற்றால்" *(குறள், 217)*. **3.** பிறழ்தல்; to go wrong, as a tune, a recitation, a calculation. பாடந் தப்பி விட்டது **4.** விட்டுப்போதல்; to be omitted. "முற்றும் பற்றித் தப்புதலின்றிக் கொன்று" *(கம்பரா. இரணிய. 142)*. **5.** பேரிடரினின்று காப்பாக நீங்குதல்; to escape injury; to be saved, rescued, preserved ஓடம் கவிழ்ந்தபோது அவனொருவனே நீந்தித் தப்பினான். **6.** காணாமற் போதல்; to be lost. **7.** இறத்தல்; to die. "சாவதுறுதியான் றப்பிய பின்றை" *(பெருங். உஞ்சைக். 36, 65)*. **8.** தடவுதல்; to grope, feel about.

ம. தப்புக; தெ. தப்பு; க. தப்பு, தப்பிக; து. தப்புனி

[தபு → தப்பு-.]

தப்பு[2]**-தல்** *tappu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **பிழை செய்தல்;** to offend, commit, offence against. "பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்" *(புறநா. 34).* 2. **அழித்தல்;** to kill, destroy. "அரவுந்தப்பா" *(பெரும்பாண். 42).* 3. **அடித்தல்;** to strike. அவனைத் தேவையின்றித் தப்புகிறான் *(உ.வ.).* 4. **துணி துவைத்தல்;** to beat on a stone, as in washing clothes. "நாமதனைத் தப்பினா னம்மையது தப்பாதோ" *(பெருந்தொ. 1576).* 5. **அப்பம் முதலியன தட்டுதல்** *(யாழ்ப்.);* to beat into cakes, as flour, mud. 6. **கையால் தட்டுதல்;** to pat, clap. 7. **தடவிப்பார்த்தல்** *(இ.வ.);* to feel about and search. 8. **அப்புதல்** *(யாழ்ப்.);* to smear, as sandal paste; to put on and rub, as cooling ingredients. 9. **விட்டு விலகுதல்** *(பெருந்தொ. 1576);* to escape, slip away from. எதிர்பாராத நேர்ச்சியில், தலை தப்பினார் *(உ.வ.).* 10. **செய்யத்தவறுதல்;** to fail to do. "தப்புதி யறத்தை யேழாய்" *(கம்பரா. நிந்தனை. 54).* 11. **தண்டுதல்** *(பிங்.);* to collect, as money.

தெ., க. தப்பு; து. தப்புனி; ம. தப்புக; U. தப்னா

[ஒருகா. தொப்பு → தப்பு-. (மு.தா. 112).]

தப்பு[3] *tappu,* பெ. (n.) 1. **குற்றம், தவறு;** fault, error, mistake, misdeed, misdemeanour, slip, failure. "தன்கைகால் தப்புச்செய்த தென்று பொடிய" *(திவ். திருப்பா. 28, வ்யா. பக். 244).* தப்பில் ஆனவனை உப்பிலே போடு *(பழ.).* 2. **பொய்;** lie, falsehood. 3. **ஏமாற்றுகை** *(வின்.);* fraud, deception. தப்பும் திப்பும் தாறுமாறும் *(பழ.).* 4. **தப்பித்துக் கொள்ளுகை** *(வின்.);* escape, flight, slipping away, release, extrication. 5. **துவைக்கை** *(இ.வ.);* beating clothes in washing. 6. **ஒருவகைப் பறை;** a small tomtom. "தப்பென வங்கை கொட்டி" *(திருவாலவா. 58:6).* தப்பு அடித்தவன் தாதன், சங்கு ஊதினவன் ஆண்டி *(பழ.).*

தெ., க., ம., து. தப்பு

[தொப்பு → தப்பு]

தப்புக்கணக்கு *tappu-k-kaṇakku,* பெ. (n.) **உண்மைக்கு மாறான மதிப்பீடு;** miscalcula tion assessment wrongly.

[தப்பு + கணக்கு]

தப்புக்கணக்குப்போடு-தல் *tappu-k-kaṇakku-p-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) **ஒன்றைக் குறித்துத் தவறாக மதிப்பிடுதல்;** to assess wrongly. அவனைப் பற்றித் தப்புக்கணக்குப் போடாதே *(உ.வ.).*

[தப்பு + கணக்கு + போடு-.]

தப்புக்காய்ப்பு *tappu-k-kāyppu,* பெ. (n.) 1. **காலந்தவறிக் காய்க்கை** *(இ.வ.);* fruitage out of season. 2. **எண்ணும்போது விடுபட்ட பொருள்;** left out article during counting.

[தப்பு + காய்ப்பு. தப்புகை = பருவந் தவறுகை]

தப்புக்குட்டித்திருக்கை *tappu-k-kuṭṭi-t-tirukkai,* பெ. (n.) 1. **சப்பைத்திருக்கை மீன்;** a kind of flat ray fish. 2. **ஒரு வகைச் சிவப்புக் கடல் மீன்;** sting ray fish.

மறுவ. தப்புக்கூலி

[தப்புக்குட்டி + திருக்கை]



தப்புக்கூலி *tappu-k-kūli,* பெ. (n.) **சப்பைத் திருக்கை;** sea fish.

மறுவ. சப்பைத் திருக்கை

[தப்பு + கூலி]

தப்புக்கொட்டை *tappu-k-koṭṭai,* பெ. (n.) **அறுவடைக் காலத்தில் சிதறிப்போன நிலக் கடலை;** ground-nuts left in the ground after harvest. 2. **தப்புச்செடி** பார்க்க; see *tappu-c-cedi.*

தப்புச்செடி *tappu-c-cedi,* பெ. (n.) **தானே தோன்றிய செடி;** self-sown, uncultivated plant *(செ.அக.).*

[தப்பு + செடி]

தப்புத்தண்டா *tappu-t-taṇḍā,* பெ. (n.) *1.* குற்றம்; misdemeanour. *2.* தொந்தரை; trouble *(செ.அக.).*

[தப்பு + தண்டா]

தப்புத்தண்ணீர் *tappu-t-taṇṇīr,* பெ. (n.) பள்ளங்களிலுள்ள ஆழமில்லாத நீர் *(வின்.)*; shallow, stagnant water, as in hallows. *2.* பரவு நீர்; spreading water.

[தப்பு + தண்ணீர் = இயல்பாகவமைந்த ஆழமற்ற பள்ளப்பகுதிகளில் உள்ள நீர். இந்நீர் பள்ளப்பகுதியிலூறியதும், மழைக்காலத்தே தேங்கியதுமாகும்]

தப்புந்தவறுமாக *tappun-tavaṟum-āga,* கு.வி.எ. (adv.) மிகையான தவறுகளுடன்; faultily; in a faulty way. மிகுவிரைவில் எல்லாவற்றையுமே தப்புந்தவறுமாகச் செய்துவிட்டான் *(உ.வ.).*

[தப்பும் + தவறும் + ஆக]

தப்புநடத்தை *tappu-naḍattai,* பெ. (n.) தீயவொழுக்கம் *(இ.வ.)*; bad conduct.

[தப்பு + நடத்தை]

தப்புமீன் *tappu-mīṉ,* பெ. (n.) காலந்தவறி கடற்பரப்பில் வலைப்படும் மீன் *(செங்கை)*; a kind of fish.

[தப்பு + மீன்]

தப்புமுதல் *tappu-mudal,* பெ. (n.) வயல்களில் தானே முளைக்கும் பயிர் *(தஞ்சை.)*; casual growth in fields.

[தப்பு + முதல்]

தப்புமேளம் *tappu-mēḷam,* பெ. (n.) ஒருவகைப் பறை; a small tom-tom.

[தப்பு + மேளம். தப்பு = கொட்டு]

தப்புவிரால் *tappuvirāl,* பெ. (n.) பூசிப்புணர்தல்; to besmear and embrace.

தப்புவீணை *tappu-vīṇai,* பெ. (n.) வீணை வகை *(யாழ்.அக.)*; a kind of lute.

[தப்பு + வீணை]

தப்பெண்ணம் *tappeṇṇam,* பெ. (n.) தவறான எண்ணம் *(இ.வ.)*; mistaken opinion; wrong idea; prejudice.

[தப்பு + எண்ணம்.]

தப்பை[1] *tappai,* பெ. (n.) மாலிய அடியார் கையிற் கொள்ளுஞ் சிறுபறை வகை; tabret, used by vaishnava mendicants *(செ.அக.).*

[தப்பு → தப்பை]

தப்பை[2] *tappai,* பெ. (n.) *1.* மூங்கிலை நெடுகப் பிளந்த பிளாச்சு; reapers obtained by splitting the bamboos longitudinally. *2.* முறிந்த எலும்பு பொருந்தும்படி வைத்துக்கட்டும் மூங்கிற் பற்றை *(வின்.)*; bamboo splints for a broken bone. தப்பை வைத்துக் கட்டுதல் *(உ.வ.)*; தப்பை வைத்துக் கட்டினர் *(உ.வ.). 3.* கூரைக்குரிய மூங்கிற்சட்டம் *(இ.வ.)*; bamboo splits for roofing.

தெ. தப்ப; க. தப்பெ.

[சப்பை → தப்பை (மு.தா. 122)]

தப்பை[3] *tappai,* பெ. (n.) அடி *(இ.வ.)*; blow.

தெ. தப்ப.

[தப்பு → தப்பை (மு.தா. 112)]

தப்பைக்காய் *tappai-k-kāy,* பெ. (n.) நாரத்தங்காய்; bitter orange.

[தப்பை + காய்]

தபச்சரணம் *taba-c-caraṇam,* பெ. (n.) தவஞ் செய்கை; practice of penance. "தபச்சரணம் பண்ணி யருளாநின்ற பகவானை" *(மணிமே. பக். 155. ஸ்ரீபுராணம்).*

[தவம் → தபம் + சரணம்]

தபசம் *tabašam,* பெ. (n.) பறவை; bird *(சா.அக.).*

தபசி[1] *tabašī,* பெ. (n.) தவசி பார்க்க *(இ.அ.)*; see *tavaši.*

[தவசி → தபசி]

தபசி[2] *tabašī,* பெ. (n.) ஆயா மரம்; entire- leaved elm *(செ.அக.).*

[தப → தபசி]

தபசியம் *tabašiyam,* பெ. (n.) 1. மீன மாதம் (பங்குனி) (சங்.அக.); the Tamil month Panguni. 2. முல்லை (மூ.அ.) காட்டுமல்லிகை; wild jasmine.

[தபசி → தபசியம்]

தபசிலே *tabašilē,* குவி.எ. (adv.) முன்பாக (இ.வ.); at the head.

[தபசில் + ஏ]

தபசு *tabašu,* பெ. (n.) தவம் (இ.வ.) பார்க்க; see *tavam.*

[தவம் → தபம் → தபசு]

தபசுகாலம் *tabašu-kālam,* பெ. (n.) கிறித்தவர் கொண்டாடும் நோன்பு நாட்கள்; lent, as the period of fasting.

தபசுநாள் *tabašu-nāḷ,* பெ. (n.) தபசுகாலம் பார்க்க; see *tabašu-kālam* (செ.அக.).

தபசுநாளொருசந்தி *tapašunāḷ-oru-šandi,* பெ. (n.) தபசு நாட்களில் ஒரு பொழுது உண்ணுதல்; lent fast (செ.அக.).

[தவசு → தபசு + நாள் + ஒருசந்தி]

தபசுவினி *tapašuviṉi,* பெ. (n.) சடாமாஞ்சில்; Indian spikenard, valeriane root (சா.அக.).

தபதபவெனல் *tapa-tapa-v-eṉal,* பெ. (n.) விரைவாகத் தொடர்தற் குறிப்பு (இ.வ.); expr. signifying quick succession.

தபநீயம் *tapanīyam,* பெ. (n.) பொன்; gold (சா.அக.).

[தகதக → தக → தகநீயம் → தபநீயம். தகதக - தகதகவென்று எரிகை. 'தீ' போல் மின்னுகை. மின்னும் பொன்]

தபம்[1] *tapam,* பெ. (n.) 1. தவம் பார்க்க; see *tavam.* "தபநய நட்பிற்றாய தாபதன்" (இரகு. இரகுவற். 40). 2. மாசிமாதம் (வின்.); the tamil month māši.

[தவம் → தபம்]

தபம்[2] *tapam,* பெ. (n.) 1. வெப்பம்; heat. 2. வேனிற் காலம்; summer.

[தகம் = எரிவு, சூடு. தகம் → தபம்]

தபமேதம் *tabamēdam,* பெ. (n.) செந்நாய்; hound, a ferocious dog.

தபரியோன் *tabariyōṉ,* பெ. (n.) பச்சைப்பாம்பு; green snake (சா.அக.).

தபலத்தி *tapalatti,* பெ. (n.) காளி; the Goddess Šakti (சா.அக.).

தபலை[1] *tapalai,* பெ. (n.) ஏனவகை; a kind of metal vessel. "தம்பிக்கை யென்றுந் தவலை யென்றும்" (விறலிவிடு. 747).

தெ. தபெல. க. தபல

தபற்சனதேக்கம் *tapaṟšaṉa-tēkkam,* பெ. (n.) மரவட்டை; a kind of milli pedes.

தபன் *tapaṉ,* பெ. (n.) ஞாயிறு (யாழ்.அக.); sun.

மறுவ. கதிரவன், செஞ்சுடரோன்

[தகம் → தவம் → தபம் → தபன். தகம் = எரிவு, சூடு.

ஒருகா. தகன் → தபன் - சுட்டெரிக்கும் கதிர்களையுடைய செஞ்சுடரோன்]

தபனகம் *tapaṉagam,* பெ. (n.) கொடுவேலி; hedge creeper Leadwort (சா.அக.).

தபனம் *tabaṉam,* பெ. (n.) 1. வெப்பம்; heat. 2. வேனிற்காலம் (யாழ்.அக.); hot season. 3. நீர்வேட்கை (வின்.); thirst. 4. அளறு (மணிமே. 5: 181, அரும்.); a hell. 6. மனத்துயர்; grief.

[தகம் → தவம் → தபம் → தபன் → தபனம். தகம் = எரிவு, சூடு. ஒருகா. தகனம் → தபனம். தபம் = மிகுதியான வெப்பம்; வெப்பம் முழுமையாகச் சுட்டெரிக்கும் வேனிற்காலம். மிகுதியான வெப்பத்தாலேற்படும் தாகம்; தாகத்தினாலேற்படும் தவிப்பு, முதலான பொருண்மையில் வருவது கண்டுகொள்க]

தபனமண்டபம் *tapaṉa-maṇḍapam,* பெ. (n.) மகிழ்மண்டபம், இளவேனில் மண்டபம்; a maṇḍapam where the spring festival of a temple is celebrated (செ.அக.).

[தகம் → தவம் → தபம் → தபன் → தபனம் + மண்டபம். தபன் + 'அம்' பெருமைப் பெயரொட்டு. தகனம் → தபனம் = எரிவு; வெப்பம்; சூடு.

வெப்பத்திலிருந்து விலகிச்சென்று இளைப்பாறி, மகிழ்ந்திருக்கும் நிழல் மண்டபம். ஒருகா: தகனமண்டபம் → தபனமண்டபம்]

தபனமணி *tapaṉa-maṇi*, பெ. (n.) சூரியகாந்தக் கல் *(யாழ்.அக.)*; sun-stone.

[தபனம் + மணி]

தபனற்கஞ்சி *tapaṉaṟkañji*, பெ. (n.) மஞ்சள் *(தைலவ.தைல.)*; (வெயிலில் நிறமிழப்பது); saffron, as losing its colour in the sun *(செ.அக.)*.

[தபனன் + கு + அஞ்சி]

தபனன் *tabaṉaṉ*, பெ. (n.) *1.* ஞாயிறு; sun. "தங்கள்குலக் கலைமதியைத் தபன னென்னும்" *(பாரத. அருச்சுனன்றீர். 32)*. 2. தீக்கடவுள் (திவா.); Agni, the god of fire. *3.* கொடுவேலி *(மலை.)*; leadwort.

[தகம் → தவம் → தபம் → தபனன். தகம் = எரிவு, சூடு, சூடு தரும் பரிதி. தபனம் → தபனன் "அன்" ஆண்பாற் பெயரீறு. ஒருகா. தகன் → தபன் + அன்]

தபனாக்கினி *tapaṉā-k-kiṉi*, பெ. (n.) சேங்கொட்டை; marking-nut *(சா.அக.)*.

தபனியம் *tapaṉiyam*, பெ. (n.) பொன்; gold. "தபனியப்பொது" *(கந்தபு. சூரனரசி. 2)*.

[தகன் → தபன் + இயம். பொன்னின் ஒளிருந்தன்மையால் தமனியம் எனப்பட்டது. இயம் = சொல்லாக்க ஈறு]

தபனீயகம் *tapaṉīyagam*, பெ. (n.) தபனியம் பார்க்க; see *tapaṉiyam*.

[தபனியம் → தபனீயகம்]

தபாற்கஞ்சி *tapāṟkañji*, பெ. (n.) மஞ்சள்; saffron *(சா.அக.)*.

தபி-த்தல் *tapi-*, 4 செ.குவி. (v.i.) *1.* காய்தல்; to be hot, as the sun. சூரியன் தபிக்கிறான் *(உ.வ.)*. *2.* வருந்துதல்; to be distressed. "தண்ட மோதத் தபித்து" *(சேதுபு. சேதுசரு. 27)*.

[தகம் = எரிவு, சூடு. தகி → தபி-. மிகு வெப்பத்திலும், கடுந் துன்பத்திலும் ஆட்பட்டு உழலுதல்]

தபிஞ்சம் *tapiñjam*, பெ. (n.) *1.* பச்சிலை; green leaf. *2.* ஆமணக்கு; castor seed *(சா.அக.)*.

தபு[1]-தல் *tapu-*, 4 செ.குவி. (v.i.) *1.* கெடுதல் *(சூடா.)*; to perish, come to an end. "புரைதபு நாளொடு" *(கம்பரா. மந்தரை. 86)*. 2. இறத்தல்; to die. "தாய்தபுநிலை" *(பு. வெ. 10, சிறப்பிற் பொதுவி. 5: கொளு)*.

க. தவு

[தகு → தவு → தபு (வ.வ. 171)]

த. தபு → Skt. dabh = இருக்கு வேதம்.

தபு[2]-த்தல் *tapu-*, 4 செ.குவி. (v.i.) கெடுத்தல்; to destroy. "உள்ளமழியய வூக்குநர் மிடறபுத்து" *(பதிற்றுப். 13:18)*.

[தகு → தவு → தபு-. (வ. மொ. வ. 172)]

ஒருகா. தபு - தல் → தபு-த்தல்; கெடு-தல் → கெடு-த்தல்

தபுக்கெனல் *tabu-k-keṉal*, பெ. (n.) *1.* விழுதல் முதலியவற்றின் விரைவுக்குறிப்பு; expr. signifying haste, rashess, etc., as in falling. *2.* ஓர் ஒலிக்குறிப்பு; Onom. expr. of sharp sound.

க. தபக்கனெ

[தபுக்கு + எனல்]

தபுத்து-தல் *tabuttu-*, 4 செ.குன்றாவி. (v.t.) ஈரம் புலர்த்துதல்; to warm. "முழுக்கியுந் தபுத்தியும்" *(கல்லா. 53: 16)*.

[தபம் → தபுத்து. தபம் = வெப்பம். தபு = காய்தல்]

தபுதாரநிலை *tabu-tāra-nilai*, பெ. (n.) கணவன் தன் துணையிழந்து, துயருறும் நிலையைக் கூறும் புறத்துறை; theme describing the grief of a husband at the death of his wife. "காதலி யிழந்த தபுதார நிலையும்" *(தொல். பொருள். 79)*.

[த. தபு → வ. தப் (இருக்குவேதம்). தபு-தல் = கெடுதல். "அதங்கோட்டா சாற்கரில் தபத் தெரிந்து" (தொல். சிறப்புப். (வ. மொ. வ. 171). தபுதாரம் + நிலை]

தபுதி *tabudi*, பெ. (n.) அழிவு; ruin, death. "தலைவர் தபுதிப் பக்கமும்" *(தொல். பொருள். 72)*.

க. தவுதி

[தபு → தபுதி]

தபோக்கினி *tabōkkiṉi,* பெ. (n.) *1.* தவத்தால் தோன்றும் கனல்; fire of austere penance. *2.* தவஞ்செய்தற்கு வளர்க்கும் தீ; fires kindled for doing penance *(செ.அக.).*

[தவம் → தபம் + அக்கினி. தவம் + அக்கினி → தவக்கினி → தபக்கினி → தபோக்கினி. தவம்செய்பவரே உண்மையில் தம் கருமம் செய்பவர் ஆவார். இது வள்ளுவரின் வாய்மொழி. தீராப்பசியடக்கிப் பிறவுயிர்கட்குத் தீங்கு செய்யாதிருத்தலே பேரறம். தவஞ் செய்பவர், காமத்தையும், பசியையும் அடக்குங்கால், சுடச்சுடரும் பொன்போல் உள்ளமும், உடலும், மிளிர்கின்ற தென்பதே, இச் சொல்லின் உட்கிடக்கை]

தபோதன் *tabōdaṉ,* பெ. (n.) தபோதனன் பார்க்க; see *tabōdaṉaṉ.* "தபோதரிற் பெரியோன்" *(கம்பரா. மீட்சிப். 189).*

[தகம் → தவம் → தபம் + உதன் → தபோதன்]

தபோதனன் *tabō-daṉaṉ,* பெ. (n.) முனிவன்; hermit, ascetic. "தங்கி வைகுந் தபோதனர்" *(கம்பரா. கங்கை, 10).*

[தகம் → தவம் → தபம் → தபன் + உதன் → தபோதன் → தபோதனன்.

ஒருகா. காமத்தையும், மிகு பசியினையுந் தாங்கிநிற்குந் தன்மையன், காமத்தையும், பசியையுந் தாங்கித் துறவு மேற் கொள்பவனே, கடுந்துறவி ஆவான். தவம்:

"உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண்
செய்யாமை அற்றே தவத்திற்குரு"
(குறள், 261).

உற்ற நோயுள், வெயிலின் வெம்மையும், பசிப்பிணியாலுண்டாகும் உடம்பின் வெம்மையும், அடங்கும் (வ. மொ. வ. 175)]

தபோதனி *tabōdaṉi,* பெ. (n.) முனிவன் *(யாழ்.அக.);* sage, anchorite.

மறுவ. துறவி

[தவோதனன் → தவோதனி → தபோதனி]

தபோதி *tabōdi,* பெ. (n.) தவத்தி *(யாழ்.அக.);* female ascetic.

மறுவ. தபோதனி.

[தவோதனன் → தபோதனன் → தபோதி]

தபோதுக்கம் *tabōtukkam,* பெ. (n.) உலக வெறுப்பு; disgust with the world *(சா.அக.).*

[தவம் → தபம் + துக்கம் → தபதுக்கம் → தபோதுக்கம்]

தபோநிதி *tabōnidi,* பெ. (n.) தபோதனன் பார்க்க; see *tabōdaṉaṉ* (செ.அக.).

தபோபலம்[1] *tabō-palam,* பெ. (n.) தவப்பயன்; fruits of penance or religious austerities. "மணிதன்னை யணிந்த தபோபலத்தின் றன்மையான்" *(பிரமோத். 20, 71).*

[தவம் → தபம் + பலம். தபபலம் → தபோபலம். தபம் + 'அம்' பெருமைப் பெயரொட்டு. தவம் செய்பவர்தம் பலத்தால் கூற்றையுங் காலால் உதைப்பர். வேண்டியதை வேண்டுபவர்க்கு நல்குவர்]

தபோபலம்[2] *tabō-palam,* பெ. (n.) தவத்தால் உண்டாம் வல்லமை; power resulting from penance or religious austerities. தபோபலத்தால் எதனையும் சாதிக்கலாம் *(உ.வ.)* (செ.அக.).

[தவம் → வ. தபம். தவபலம் → தபோபலம்]

தபோயாகம் *tabō-yāgam,* பெ. (n.) ஐவகை வேள்விகளுளொன்று (சிவதரு. ஐவகை. 11, உரை.); one of aivagai-vēḷvi.

[தவயாகம் → தபோயாகம்]

தபோலோகம் *tabō-lōgam,* பெ. (n.) தவவுலகம்; an upper world, sixth of mēl-ēḻ-ulagam.

[தவம் → தபம் + உலகம்]

தம்[1] *tam,* இடை. (part.) பெரும்பான்மை படர்க்கைப் பன்மையுடன் சேர்ந்துவரும் சாரியை; flexional increment generally used along with the nouns of third pers. pl."தம்மிடை வரூஉம் படர்க்கை மேன" *(தொல். எழுத்து. 191).*

[தாம் → தம்]

தம்[2] *tam,* இடை (part.) *1.* மூச்சடக்குகை; holding the breath. *2.* மூச்சு; breath. அவன் தம் பிடிக்கிறான் *(உ.வ.).*

[உம் → தம். மகரமெய் ஒலிப்பின் மூலம் ஒட்டிக் கொள்வதால், வாய்வழியே மூச்சு விட இயலாது. மூச்சை அடக்குவதற்கும் ஆகி வந்தது.]

தம்அடி-த்தல் *tam-adittal,* பெ. (n.) பீடி வெண் சுருட்டுப் போன்ற புகைபிடித்தல் (இவ.); bidi or cigarette smoking. பணியிடையே ஒரு தம்மடித்தால்தான் சுறுசுறுப்பே வருகிறது (உ.வ.).

[தம் + அடி-.]

தம்நியமத்துஇயற்று-தல் *tam-niyamattu-iyarru-,* 5 செ.குன்றாவி. (v.t.) தன் முன்னோர் வழிமுறைப்படி ஆட்சியேற்றல்; to be sworn in as per ancestral tradition. "கங்காபுரி புரிந்தருளி தராதி பராகத் தம் நியமத்தியற்றி" (வீரராசேந்திரன் மெய்க்கீர்த்தி).

[தம்நியமத்து + இயற்று-.]

தம்பக்காமாலை *tamba-k-kāmālai,* பெ. (n.) காமாலை வகை (தஞ்.சர.122); a kind of jaundice.

[தம்பம் + காமாலை]

தம்பகம் *tambagam,* பெ. (n.) கருப்புக்குங்கிலிய மரம்; saul tree (சா.அக.).

தம்பசும்பால் *tampašum-pāl,* பெ. (n.) கலப்பில்லாத ஆவின்பால்; unadulterated cow's milk (சா.அக.).

[தம் + பசும்பால்]

தம்பட்டங்காய் *tampaṭṭaṅ-gāy,* பெ. (n.) வாளவரை (வின்.); sword-bean.

[தம்பட்டம் + காய்]

தம்பட்டம்[1] *tambaṭṭam,* பெ. (n.) ஒரு வகைப் பறை (பிங்.); a small drum, tomtom. "பறை திமிலை திமிர்தமிகு தம்பட்டம்" (திருப்பு. 18).

தெ. தம்பட்டமு

[தப்பு = பறை. தப்பட்டம் → தம்பட்டம்]

தம்பட்டம்[2] *tambaṭṭam,* பெ. (n.) தம்பட்டங்காய் பார்க்க; see *tampattaṅ-gay.*

மறுவ. வாளவரை, தம்பட்டை, தம்பட்டங்காய்.

[தம்பட்டை → தம்பட்டம்]

தம்பட்டம்[3] *tambaṭṭam,* பெ. (n.) தன் பெருமைகளைத் தாமே கூறிக்கொள்ளுதல்; tom-tom boast. இவன் தம்பட்டம் அடித்துக் கொள்கிறான் (உ.வ.).

[தம் + பட்டம். தம் = தன். பட்டம் = தகுதிகள்]

தம்பட்டமடி-த்தல் *tambaṭṭam-adi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. பலரறியப் பரப்புதல்; to spread the news. 2. தற்பெருமையுடன் கூறுதல்; tom-tom boast. வீடுவாங்கி இருப்பதை ஊர் முழுக்கத் தம்பட்டமடிக்காதே (உ.வ.).

[தம்பட்டம் + அடி-.]

தம்பட்டன்கொடி *tambaṭṭaṉ-kodi,* பெ. (n.) தம்பட்டை பார்க்க; see *tambaṭṭai* (சா.அக.).

[தம்பட்டன் + கொடி]

தம்பட்டை *tambaṭṭai,* பெ. (n.) தம்பட்டங்காய் பார்க்க; see *tambaṭṭaṅ-gāy.*

[தம்பட்டம் → தம்பட்டை]



தம்படி *tambaḍi,* பெ. (n.) அணாவில் பன்னிரண்டில், ஒன்றாகிய காசு; cash, a small coin - 1/12 anna (செ.அக.).

மறுவ. காசு, சல்லி

12 காசு = ஓரணா, 16 அணா = ஒரு ரூபாய் என்று நாணயவழக்கு இருந்த நாளில், தம்படி எனப்பட்டது.

தம்பதங்கம் *tambadaṅgam,* பெ. (n.) விருசு; an unknown tree (சா.அக.).

தம்பதி[1] *tambadi,* பெ. (n.) மருது (யாழ். அக.); arjun tree.

தம்பதி[2] *tambadi,* பெ. (n.) இணையர்; கணவனும் மனைவியும் (சூடா.); wedded couple, husband and wife.

தம்பதிபூசை *tambadi-pūšai,* பெ. (n.) சிவனும் மலைமகளுமாக எண்ணி, இணையர்களுக்குச் செய்யும் பூசை; ceremony in which a wedded couple is worshipped as representing Umai and Šivan.

மறுவ. அம்மையப்பர் பூசை

[தம்பதி + பூசை = தம்பதியரை அம்மையப்பர் வடிவிற்கண்டு, அவர்கட்குச் செய்யும் வழிபாடு. இருமுது குரவரை அம்மையப்பராகக் கருதிச் செய்யும் வழிபாடு, தமிழர்கட்கேயுரிய தனிப் பெரும் பண்பாட்டைச் சுட்டு மென்றறிக]

தம்பநிறுத்து-தல் *tamba-niruttu-,* 4 செ.குவி. (v.i.) வெற்றி, கொடை முதலியவற்றை விளக்குமாறு அடையாளத்தூண் நாட்டுதல்; to set up a post or pillar in celebration of a victory or as a memorial of a munificent deed.

மறுவ. தூண்நாட்டல்

[கம்பம் → தம்பம்; தம்பம் + நிறுத்து-.]

தம்பம்[1] *tambam,* பெ. (n.) 1. தூண்; pillar, column. "தம்பத்தி னனக மாநர மடங்கலா யவதரித்து" (பாகவத. 1. 1:31). 2. யானை முதலியன கட்டுந் தறி; post to which elephants, etc., are tied. 3. விளக்குத்தண்டு (திவா.); lamp-post. 4. கோயில் கொடிக்கம்பம்; flagstaff, mast, temple flag-pole. "நின்றிருவாயிற் றனித்தம்பமே" (திருநூற்.22). 5. பற்றுக்கோடு; support. "தம்பமில்லை நமக்கு" (உத்தரரா. இராவணன்பிற. 31). 6. தம்புகை பார்க்க; see *tambugai.* 7. தம்பனம் பார்க்க; see *tambanam.* "அக்கினித் தம்பம்".

[கம்பம் → தம்பம்]

தம்பம்[2] *tambam,* பெ. (n.) காப்புடை (பிங்.); armour, coat of mail.

மறுவ. படைக்கவசம், போர்ச்சட்டை, புறச் சட்டை

[தம் → தம்பு → தம்பம். தம்பம் = காப்புடை அல்லது கவசம். வீரனது மார்பில் எஞ்ஞான்றும், கவ்வுந்தன்மையது. இக் காப்புடை வீரர்க்கே உடைமையானது. இங்கு 'தம்' என்றும் வேரடி, உடைமை. உரிமைப்பொருளில் வந்துள்ளமை, கண்கூடு]

தம்பம்[3] *tambam,* பெ. (n.) ஊருணி (Rd); pond, tank, natural spring (செ.அக.).

[கம் → தம் → தம்பு + அம் → தம்பம். கமம் நிறைந்து இயலுமென்பார் தொல்காப்பியர்.

ஒருகா. கமம் → தமம் → தம்பம். நீர்நிறைந்த ஊருணி. இச் சொல் தருதற் பொருளையும், நிறைதல் பொருளையுங் குறித்து நின்றது. ஊரார்க்கு நீரைத் தருவது தம்பம். ஊரார் உண்பதற்கு நீர் நிறைந்து திகழ்வதும் தம்பமே (ஊருணியே) என்றறிக.]

தம்பர் *tambar,* பெ. (n.) தம்பல்[1] பார்க்க; see *tambal*[1].

தெ. தம்ம.

[தம்பல் → தம்பர். வெற்றிலை தின்று சிவந்த எச்சில் (மாறனலங். 470)]

தம்பல்[1] *tambal,* பெ. (n.) தம்பலம்,2 பார்க்க; see *tambalam,2.* "வெள்ளிலைத் தம்பல்" (கம்பரா. வரைக்கா. 49).

[ஒருகா. தம்பலம் → தம்பல். தும் → தம் → தம்பு + அல் → தம்பல். தும் = சிவப்பு]

தம்பல்[2] *tambal,* பெ. (n.) மழையால் வயல் இறுகுகை (யாழ்ப்.); hardening of rice-fields after heavy rain (செ.அக.).

தெ. தம்பு

[தம்பர் → தம்பல்]

தம்பலக்கருதம் *tambala-k-karudam,* பெ. (n.) வட்டக்கிலுகிலுப்பை; a round shaped rattle box.

[தம்பலம் + கிருதம் → கருதம் → தம்பலக் கருதம். தம்பல் = வட்டம். தம்பலம் வட்டவடிவமான, கிலுகிலுப்பை]

தம்பலங்காய் *tambalaṅ-gāy,* பெ. (n.) பூவரசு மரத்தின் காய் (நாஞ்.); seed pod of portia tree.

[தம்பல் + அம் + காய்]

தம்பலச்சாறு *tambala-c-cāṟu,* பெ. (n.) வெற்றிலைச் சாறு; betel juice.

[தம்பலம் + சாறு]

தம்பலடி-த்தல் *tambal-adi-,* 4 செ.குவி. (v.i.) *1.* பெருமழையால் இறுகின வயலை உழுதல்; to plough a field after it has been hardened, by rain. *2.* வயலிறுகித் திணிதல்; to become even and hardened, as a field after rain.

[தம்பல் + அடி-.]

தம்பலப்படிகம் *tampala-p-paṭikam,* பெ. (n.) எச்சிலுமிழும் ஏனம்; a vessel to receive discharges of spittle (சா.அக.).

[தம்பலம் + படிகம்; தம்பலம் = தாம்பூல எச்சில். படிக்கம் → படிகம் = ஏனம்]

தம்பலப்பூச்சி *tambala-p-pūcci,* பெ. (n.) *1.* பூச்சிவகை; scarlet moth, Mutilla occidentalis. *2.* இந்திரகோபம்; cochineal, Coccus cacti.

மறுவ. செம்பூச்சி, அந்துப்பூச்சி

[தம்பலம் + பூச்சி]

தம்பலம்[1] *tambalam,* பெ. (n.) *1.* வெற்றிலை பாக்கு; betel with areca-nut. "தையா றம்பலந் தின்றியோ" (கலித். 65). *2.* தம்பல எச்சில்; red spittle caused by chewing betel; refuse of chewed betel. "தில்லைநல்லார் பொதுத்தம்பலங் கொணர்ந்தோ" (திருக்கோ. 396). *3.* தம்பலப்பூச்சி பார்க்க; see *tambala-p-pūcci.*

தெ. தம்ம; த. தம்பல்

[தம்பலம் → வ. தாம்பூல. தம்பரம் → தம்பலம் (தமி. வ. 58)]

தம்பலம்[2] *tambalam,* பெ. (n.) இலந்தை; jujube (சா.அக.).

[தம்பல் → தம்பலம்]

தம்பலாடு-தல் *tambal-āḍu-,* 5 செ.குவி. (v.i.) வயலில் நீர்பாய்ச்சி மிதித்துச் சேறாக்குதல் (யாழ்ப்.); to water a field and turn it soft and muddy by trampling.

[தம்பல் + ஆடு-.]

தம்பலி *tambali,* பெ. (n.) மருதமரம்; a species of the (Termimalia alata) (சா.அக.).

[தம்பல் → தம்பலி]

தம்பலை[1] *tambalai,* பெ. (n.) நிலவிலந்தை (மலை.); a small shrub.

[தும் → தம் → தம்பல் → தம்பலை. பழுக்கும் முட் செடியிலுள்ள சிவந்த இலந்தைப் பழம் (தமி.வ.58)]

தம்பலை[2] *tambalai,* பெ. (n.) பாக்குவெட்டி மரம்; a tree resembling the nut cracker.

[தம்பல் → தம்பலை]

தம்பனகாரன் *tambaṉa-kāraṉ,* பெ. (n.) பொருள்களின் இயற்கையைக் கட்டுப்படுத்தும் மந்திரவாதி; magician, conjurer exercising magic powers to arrest or control nature's forces.

மறுவ. கண்கட்டு வித்தைக்காரன்

[தம்பனம் + காரன். தம்பனம் = மறைப்பு. "காரன்" உயர்திணையொருமையீறு. ஒ.நோ. தந்திரக்காரன், மந்திரக்காரன்]

தம்பனகுளிகை *tambaṉa-kuḷigai,* பெ. (n.) செயலிழக்கச் செய்யும்பொருட்டு மந்திரவாதி பயன்படுத்தும் மாத்திரை; magical pill used to arrest the natural forces.

[தம்பனம் + குளிகை]

தம்பனசக்தி *tambaṉa-śakti,* பெ. (n.) பொருள்களைக் கட்டச்செய்யும் ஒரு மந்திரம்; the art of binding a thing motionless through magic (சா.அக.).

[தம்பனம் + சக்தி. தம்பனம் = ஒருவன் இயக்கத்தை மந்திரத்தால் கட்டுகை]

தம்பனத்தொழில் *tambaṉa-t-toḻil,* பெ. (n.) ஒன்றின் அல்லது ஒருவனுடைய இயக்கத்தை தடுத்து நிறுத்துஞ் செயல்; the art of making

one incapable to speak or rendering him unable to speak and move about by arresting his limbs.

1. நெருப்பைக்கட்டுதல்; restraining the power of fire.
2. வாயைக்கட்டுதல்; checking the ferocity of wild animals.
3. அசைவறநிறுத்துதல்; causing one to stand motionless.
4. கைகால் விழச்செயல்; arresting the faculties.
5. நாவெழாமற்செய்தல்; depriving the power of speech etc.
6. சிறுநீர், அரத்தம் ஓடாமற்செய்தல்; stopping the flow of urine or blood.
7. இயற்கைப் பண்பை நிறுத்தல்; suspending the natural qualities.
8. மலங்கட்டுதல்; bring about constipation.
9. விந்தைக்கட்டுதல்; suppressing the secretion of semen.

மறுவ. தம்பனக் கலை

[தம்பனம் + தொழில். தம் → தம்பு + அனம் + தொழில் → தம்பனத்தொழில் – கண்கட்டும் கலை; தந்திரக்கலை; ஒருவர்தம் இயக்கத்தைத் தடுத்து நிறுத்தும் கலையைப் பயின்று, அக்கலையினை தமதுடைமையாக்கி, தமக்குச் சொந்தமாக்கி, பிறர் பொருளை, உடைமையைக் கவர்தல் என்று கொள்க]

தம்பனம்[1] *tampanam,* பெ. (n.) 1. இயக்கத்தைத் தடுத்துச் செயலிழக்கச் செய்கை; arresting the natural forces; making stiff or rigid; paralysing. 2. எட்டுவகைக் கருமத்துள் ஒருவனியக்கத்தை மந்திரத்தால் தடுத்துக் கட்டுகை; magic art of paralysing a person's activity, one of eṇ-karumam *(செ.அக.).*

[தம் → தம்பு + அனம் → தம்பனம்.

தம் – சொந்தம்; உடைமை, உரிமை பற்றிய பொருள்களைக் குறிக்கும் வேரடி என்று மொழி ஞாயிறு கூறுகின்றார்.

ஒ.நோ. தம் + இல் → தமில் → தமிள் → தமிழ், தமிழருக்குச் சொந்தமான மொழி. ஒருவர் தம் இயக்கத்தைத் தடுத்து நிறுத்தும் கலைக்குச் சொந்தக்காரன். தம்பனக்காரன் = கண்கட்டும் கலைக்கு உரியவன். 'அனம்' – சொல்லாக்க ஈறு.]

தம்பனம்[2] *tambaṉam,* பெ. (n.) 1. உடலிலுள்ள எல்லாத் துளைகளையும் சுருக்குதல்; contraction of all the pores or passages. 2. தூய்மைசெய்யும் ஐவகைக் கருமியங்கள்; the cleaning processes of the body.

1. கக்கலுண்டாக்கல்; vomitting.
2. கழிச்சலுண்டாக்கல்; purging.
3. குடற்றூய்மைப்படுத்தல்; enema.
4. மூக்கில் பீச்சாங்குழலிடல்; nasal douche.
5. அரத்தத்தை வெளியாக்கல்; blood letting *(சா.அக.).*

[தம் → தம்பனம். தம் = உயிர்ப்பு மற்றும் உணர்வோட்ட மடக்குகை]

தம்பனமூலிகை *tambaṉa-mūligai,* பெ. (n.) ஒருவர் தம் இயக்கத்தைத் தடுத்து நிறுத்தத் தம்பனத்தொழில் செய்வார் கையாளும் மூலிகை; the magician's herbal medicine to prevent once activities *(சா.அக.).*

1. கட்டுக்கொடி
2. பாற்புரண்டி
3. பரட்டைச்செடி
4. நீர்முள்ளி
5. நத்தைச்சூரி
6. சத்திசாரணை
7. சருக்கரைக்கிழங்கு
8. குதிரைவாலி

[தம்பனம் + மூலிகை = தம்பனத் தொழில் செய்பவர் பயன்படுத்தும் மூலிகை]

தம்பனவாதம் *tambaṉa-vādam,* பெ. (n.) 1. திருத்தமாகப் பேசவொட்டாமல் நாக்கை இழுத்துக்கொள்ளும் நோய்; paralysis of the tongue. 2. இரும்பு, செம்பு போன்ற மாழைகளைப் பொன்னாக்கும் வாதம்; transmutation of inferior metals, such as iron copper into gold.

[தம் → தம்பு → தம்பனம் + வாதம் → தம்பனவாதம். தம் = தருதற் கருத்து வேர். இங்கு சொந்தம்: உடைமைக் கருத்தும் பொருந்தும். இரும்பைப் பொன்னாக்கித் தரும் கலை. தம்பனத்தொழில் புரிவோர் இரும்பு முதலான மாழைகளைப் பொன் னாக்கித் தருங்கால், தருதல்கருத்தும் தந்தபின்பு, சொந்தம், உரிமை முதலான உடைமைக்கருத்தும் பொருந்துவதறிக.]

தம்பனவித்தகன் *tambaṉa-vittagaṉ,* பெ. (n.) *1.* கண்கட்டிக்கலைஞன்; magician *2.* செய் வினைக்காரன்; sorcerer *(சா.அக.).*

[தம்பனம் + வித்தகன்]

தம்பனவித்தை *tambaṉa-vittai,* பெ. (n.) *1.* மந்திரத்தால் நாவெழாமற் செய்தல்; the art of making one incapable to speak. *2.* நெருப்புக்கு ஓடும் பொருள்களை, ஓடாது நிறுத்துதல்; the art of consolidating from evapourating substances. *3.* கண்கட்டுக் கலை; the art of creating illusion and making one beleive what he would not do in the ordinary course *(சா.அக.).*

[தம்பனம் + வித்தை]

தம்பனவித்தைக்காரன் *tambaṉa-vittai-k-kāraṉ,* பெ. (n.) மந்திரத்தால் கட்டுபவன்; Magician, who ties with his mantras *(சா.அக.).*

[தம்பனம் + வித்தைக்காரன்]

தம்பனை[1] *tambaṉai,* பெ. (n.) தம்பனம்2 பார்க்க; see *tambaṉam*[2]. "அங்கித்தம்பனை வல்லார்க்கு" *(சி. சி. 10:6).*

[தம்பனம் → தம்பனை]

தம்பனை[2] *tambaṉai,* பெ. (n.) தமன மரவகை; long leathery linear - oblong - obtuse - leaved tamana tree.

[தம் + பனை]

தம்பா *tambā,* பெ. (n.) கள்ளளக்குங் கருவி (இ.வ.); a measure of capacity used in liquor shops.

[தம்பு → தம்பா]

தம்பாக்கு *tambākku,* பெ. (n.) செப்பும் அளமியமும் கலந்த மாழை (m.m. 872); tambac, a kind of copper and zinc alloy.

தம்பி[1]**-த்தல்** *tambi-,* 4 செ.குன்றாவி. (v.t.) மந்திர ஆற்றல் முதலியவற்றால் தடுத்தல்; to stop, check, suspend, restrain, counteract, by magical incantations. "உச்சுவாச நிச்சுவாசமாகிய வாயு இரண்டனையுந் தம்பித்து" *(சி. சி. 8: 21: சுப்பிர.).*

[தம் → தம்பு → தம்பி-. தந்திரக்கலைக்கு உரியவனாக, உடைமையாளனாக இருந்து, பிறர் செயற்பாட்டைத் தடுத்தல்]

தம்பி[2] *tambi,* பெ. (n.) *1.* இளையவன்; younger brother. "மரவடியைத் தம்பிக்கு வான்பணையம் வைத்துப்போய்" *(திவ். பெரியாழ். 4. 9:1). 2.* தம்பி முறையான்; younger male cousin, who is the son of a paternal uncle or maternal aunt. *3.* வயதிற் சிறியவனைக் குறிக்கும்சொல்; term of endearment applied to a younger male *(செ.அக.).*

தெ. தம்பு; க. தம்ம; ம. தம்பி

[தம் + பின் – தம்பின் → தம்பி]

தம்பிக்கை *tambikkai,* பெ. (n.) தம்பிகை பார்க்க; see *tambigai.* "வெள்ளித் தம்பிக்கை யென்றுந் தபலையென்றும்" *(விறலிவிடு. 747).*

தம்பிகை *tambigai,* பெ. (n.) ஒருவகைச் சிறுசெம்பு; a kind of small water-pot. "செம்பு தம்பிகை கெண்டிகை" *(பிரபோத. 11:31).*

தெ. தம்புக; க. தம்பிகெ

[தம்பி + கை = தம்பிகை. தம்பி = இளையவன், சிறியவன். கை = சிறுமைப் பொருள் பின்னொட்டு]

தம்பிசெட்டிவெட்டு *tambi-šeṭṭi-veṭṭu,* பெ. (n.) பழைய நாணயவகை (சரவண பணவிடு. 56); an ancient coin.

தம்பிடி[1] *tampiḍi,* பெ. (n.) தம்படி (இ.வ.) பார்க்க; see *tambaḍi.*

தம்பித்தோழன் *tambi-t-tōḻaṉ,* பெ. (n.) ஆண் குழந்தைகளின் அரையிற்கட்டும் குஞ்சுமணி *(உ.வ.);* ornament for the waist of male infants resembling the membrum virile.

[தம்பி + தோழன்]

தம்பிராட்டி *tampi-rāṭṭi,* பெ. (n.) *1.* தலைவி; mistress, queen. *2.* உடன்கட்டையேறுபவள்; sattee *(செ.அக.).*

[தம் + பிராட்டி. பெருமாட்டி → பிராட்டி]

தம்பிரான் *tam-birāṉ,* பெ. (n.) *1.* கடவுள்; god. "தம்பிரா னடிமைத் திறத்து" *(பெரியபு. இளையான்குடி. 1). 2.* தலைவன்; master, lord, king. "தம்பிரா னமரர்க்கு" *(திவ். பெருமாள். 3, 5). 3.* திருவிதாங்கோட்டு அரசர்க்கு வழங்கும் பட்டம் *(நாஞ்.);* title of Travancore kings.

4. மடங்களிலுள்ள சைவத்துறவி; non-brahman monk of Saiva mutt. 5. துறவிகட்குத் தலைவர் (யாழ்ப்.); overseer of monks.

ம. தம்புரான்

[தம் + பிரான் (பெருமான் என்பதன் திரிபு). திருச்செங்கோட்டில், மலைமேலல்லாமல் தரையில் அமைந்திருக்கும் சிவன்கோயில், நிலத்தம்பிரான்கோயில், என்றழைக்கப் படுகிறது.]

தம்பிரான்தோழன் *tambirāṉ-tōḻaṉ*, பெ. (n.) (சிவனுக்குத் தோழனான) சுந்தரமூர்த்தி நாயனார்; Šundara-mūrtti-nāyaṉār as the friend of Šivaṉ. "தம்பிரான் றோழனார் நம்பியென்றார்" (பெரியபு. தடுத்தாட். 171).

[தம்பிரான் + தோழன்]

தம்பிரான்பூடு *tambirāṉ-pūḍu*, பெ. (n.) கருமத்தை; a black variety of datura (சா.அக.).

தம்பிரான்மாடு *tambirāṉ-māḍu*, பெ. (n.) மதுரை மாவட்டத்தில், கம்பம் பகுதியில் காப்பிலியரால் கொண்டு வரப்படும், மாட்டுத் தொகுதிகளில் தலைமை மாடு; leader of the herd of cattle brought by the Kāppiliyar, when they originally migrated to the Kambam Valley in Madura district (செ.அக.).

[தம்பிரான் + மாடு]

தம்பு-தல் *tambu-*, 5 செகுன்றாவி. (v.t.) கிட்டுதல் (யாழ்.அக.); to approach.

[தம் → தம்பு-.]

தம்புகை *tambugai*, பெ. (n.) மரவகை; green dammar (செ.அக.).

[தம்பு → தம்புகை]

தம்புசிந்தாமணி *tambu-šindāmaṇi*, பெ. (n.) வேங்கடசுப்பு பிள்ளை எழுதிய தமிழ்நூல்; a book written by Vēṅkaḍa-subbu-piḷḷai.

[தம்பு → சிந்தாமணி]

தம்புரா *tamburā*, பெ. (n.) தம்புரு பார்க்க; see *tamburu* (செ.அக.).

[தம்புரு → தம்புரா]

தம்புரு *tamburu*, பெ. (n.) இசைநிகழ்ச்சியில் ஒலியைக் குறிப்பிட்ட கட்டை அளவில் ஒத்திருப்பதற்காக, இசைக்கப்படும் நரம்புக் கருவி வகை; a kind of guitar producing the key-note. "தம்புரு கின்னரங்கள்" (குற்றா. குற. 13).

மறுவ. தம்புரா, தம்பூர், தம்பூரா, தம்பூரு

[தம்புரு – என்னும் இசைக்கருவி நரம்புக் கருவியாகும். தம் + புரு – இன்னிசையைத் தரும் தந்தி அல்லது இழையால், அமைக்கப்பட்ட கருவியே, தம்புரு அல்லது தம்புரா – ஆகும். தருதல் கருத்தைத் தந்து கொண்டிருக்கும் தந்தியினையுடைய நரம்புக்கருவி, தம்புரு எனப்படும்]



தம்புவான் *tambuvāṉ*, பெ. (n.) வெளிர்சிவப்பு நிறமும், 9 அங்குல நீளமும், உள்ள கடல்மீன் வகை; sea-fish, rosyscarlet attaining 9 in. in length, Holocentrum andamanense (செ.அக.).

தம்பூர்[1] *tambūr*, பெ. (n.) தம்புரு பார்க்க; see *tamburu*.

[தம்புர் → தம்பூர் – இன்னிசை தரும் தன்மையில் அமைக்கப்பட்ட தந்தியினை யுடைய தம்பூர் அல்லது தம்புரா என்றறிக]

தம்பூர்[2] *tambūr*, பெ. (n.) பறைவகை (இ.வ.); a drum.

[தம்புர் → தம்பூர்]

தம்பூரா *tambūrā*, பெ. (n.) தம்புரு பார்க்க; see *tamburu* (செ.அக.).

[தம்புரா → தம்பூரா]

தம்பூரு *tambūru*, பெ. (n.) தம்புரு பார்க்க; see *tamburu*. "தம்பூருமுழங்க" (கொண்டல் விடு. 511).

[தம்புரு → தம்பூரு]

தம்பைக்காய் *tambai-k-kāy,* பெ. (n.) நாரத்தை; bitter orange (சா.அக.).

[தம்பை + காய்]

தம்போலி *tambōli,* பெ. (n.) மின்னலின் கருக்கூறு எனக் கருதப்படும் கோல்; thunder bolt.

மறுவ. இடியேறு

தம்மட்டை *tammaṭṭai,* பெ. (n.) நச்சுண்டை, மஞ்சள் நிறமுள்ள பிசின்மரம்; yellow flowered resin wood (சா.அக.).

தம்மடக்கு-தல் *tam-m-aḍakku-,* 5 செ.குன்றாவி. (v.i.) மூச்சடக்குதல்; to hold one's breath (செ.அக.).

[தம் = உயிர்ப்பு. தம் + அடக்கு-,]

தம்மதம்[1] *tammadam,* பெ. (n.) சம்மதம் (நாஞ்.) பார்க்க; see *sammadam.*

[சம்மதம் → தம்மதம்]

தம்மதம்[2] *tammadam,* பெ. (n.) நஞ்சுண்டை பார்க்க; see *nañjuṇḍai.*

தம்மம் *tammam,* பெ. (n.) தருமம் பார்க்க; see *tarumam.* "தம்ம தம்மத்தி" (மேருமந். வைசயந். 92).

Pkt. dammam

[தருமம் → தம்மம்]

தம்மலை *tammalai,* பெ. (n.) இலந்தை; jujube tree (சா.அக.).

தம்மவன் *tam-m-avaṉ,* பெ. (n.) தமன் பார்க்க; see *tamaṉ* (செ.அக.).

க. தம்மவனு

[தம்மவன் – தமன்]

தம்மனை *tam-m-aṉai,* பெ. (n.) தாய்; mother. "தம்மனை தம்முன் வீழ்ந்து மெய் வைத்தலும்" (மணிமே. 6, 131).

[தம் + அன்னை – தம்மன்னை – தம்மனை]

தம்மாகும்மா *tammā-gummā,* இடை. (int.) மகிழ்ச்சிக் குறிப்பு; expr. signifying delight, enjoyment. ஆட்டுக் கறியும் நெல்லுச் சோறுந் தம்மாகும்மா (உ.வ.) தம்மாகும்மாவென்று செலவு செய்கிறான் (உ.வ.).

[தம்மா + கும்மா]

தம்மாகும்மாசெய்-தல் *tammā-gummā-šey-,* 1 செ.குன்றாவி. (v.t.) வீண்செலவு செய்தல்; to squander, waste. "பொருளை யெல்லாம் தம்மாகும்மா செய்கிறான்" (இ.வ.).

[தம்மாகும்மா = மரபிணை மொழி. தம்மாகும்மா + செய்-.]

தம்மான் *tammāṉ,* பெ. (n.) தலைவன்; lord, chief. "தம்மானை யறியாத சாதியாருளரே" (தேவா. 973, 1).

[அம் → தம் + ஆன் = தம்மான். (ஒ.நோ.) பெம்மான், எம்மான்.]

தம்மி *tammi,* பெ. (n.) தாமரை பார்க்க; see *tāmarai,* lotus. "தாண்மிடைந்தன தம்மி மிடைந்தென" (கம்பரா. எழுச்சி. 30)

தெ. தம்மி

[தும் → தம். தும் = சிவப்பு]

தம்மிடுதல் *tammiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. நிறுத்தப்படுதல்; to be stopped, impeded, interrupted. 2. தணிதல்; to be abated, reduced, lessened.

[தம் + இடு-.]

தம்மிலம் *tammilam,* பெ. (n.) மகளிரின் மயிரிற் செய்த கொண்டை முடி (பிங்.); woman's hair done up into a knot.

தம்முன் *tam-muṉ,* பெ. (n.) அண்ணன்; elder brother. "மருதிபொருட்டான் மடிந்தோன் றம்முன்" (மணிமே. 22, 147).

[தம் + முன்]

தம்மோய் *tam-mōy,* பெ. (n.) தாய்; mother. "தம்மோய் விளங்குதோள் பிணிப்ப" (சீவக. 1138)

[அம்மை → தம்மை + ஓய் = 'ஓய்' படர்க்கை விளியீறு தம் + ஆய் = தம்மாய் → தம்மோய். ('ஆ'காரம் ஓகாரமாதல் செய்யுள் வழக்கென்க).

ஒருகா. அம்மோய் → தம்மோய்]

தம்மோன் *tam-mōṉ,* பெ. (n.) தம்மான் பார்க்க; see *tammāṉ.* "தம்மோன் கொடுமை நம்வயி னேற்றி" (நற். 88).

[தம்மான் → தம்மோன்]

தம-த்தல் *tama-,* 4 செ.குவி. (v.i.) 1. **தணிதல்;** to be abated, appeased, dulled, as appetite. பசி தமத்துப் போயிற்று (உ.வ.). 2. **விலை மலிதல்;** to become cheap. தவசம் தமத்தது (உ.வ.). 3. நிரம்புதல்; to be filled up. உண்டு வயிறு தமத்தது (உ.வ.) (செ.அக.).

[நமுத்தல் → நமத்தல் → தமத்தல். ஈரம் ஏறுதல் நமுத்தல் ஆகும். கடுமையைக் குறைக்கும் பொருளில், பசி தணிதலைக் குறித்தது. விலைமலிதலும் அவ்வாறே. பசிதணிதல், வயிறு நிரம்புதலுக்கு முன்பு நிகழ்வதாகும்; முதற்கண் தணிதற் கருத்தும், அவற்றினின்று மலிதற்கருத்தும், மலிவின் விளைவால், வயிறு நிறைதலாகிய முழுமைக்கருத்துந் தோன்றிற்று எனலாம்.]

தமக்கு *tamakku,* பெ. (n.) தமுக்கு பார்க்க; see *tamukku* (செ.அக.).

தமக்கை *tamakkai,* பெ. (n.) 1. **அக்காள்;** elder sister. "நேசத்தொடு தமக்கையர்" (பதினொ. திருநாவுக். திருவேகாதச. 1). 2. **தமக்கை முறையாள்;** elder female cousin who is the daughter of a paternal uncle or a maternal aunt. தங்கையைப் போன்று தமக்கையும் தளதளக்கிறாள் (உ.வ.) (செ.அக.).

[தம் + அக்கை]

தமகசுவாசம் *tamaga-šuvāšam,* பெ. (n.) ஈளைநோய், ஒவ்வாமை; asthma (செ.அக.).

[தமகம் + சுவாசம்]

தமகன் *tamagan,* பெ. (n.) **கொல்லன்** (யாழ். அக.); smith.

[கும்மம் → தம்மம் → தமகன்]

தமசம் *tamašam,* பெ. (n.) **தமசு** (யாழ்.அக.) பார்க்க; see *tamašu.*

தமசு *tamašu,* பெ. (n.) 1. **இருள்;** darkness. 2. **மந்தகுணம்** (வின்.); mental blindness, delusion.

மறுவ. மருட் குணம்.

[கமம் → தமம் → தமசு]

'கம்'மிருட்டு கருங்கும்மிருட்டு ஊரக மக்களிடையே வழக்கூன்றி இருப்பது, நாம் அறிந்த வொன்றேயாம். "கமம் நிறைந்து இயலும்" என்ற தொல்காப்பிய நூற்பாவும் இக்கருத்திற்கு, அரணமைக்கின்ற தெனலாம்.

தமட்டன் *tamaṭṭaṉ,* பெ. (n.) **வாளவரங்காய்;** Canavalica unsiformis (செ.அக.).

[தமுக்கு அடிப்பதற்கான, வார் போன்றிருக்கும் காய்.]

தமதம் *tamadam,* பெ. (n.) **ஐம்பொறி வெறுப்பு;** preventing the action of the five senses, showing disgust with operation of the five senses.

தமதமவெனல் *tama-tama-v-eṉal,* பெ. (n.) நெருப்பு முழங்கியெரியும் ஒலிக்குறிப்பு; Onom. expr. of crackling, roaring sound, as of burning fire (செ.அக.).

[தகதகவெனல் → தமதமவெனல். தழல் எரியுங்கால் 'தகதக' வென்று எரிகின்ற தென்பது, தென்பகுதியில் பேசப்படும் பெருவழக்காகும், கோடை வெயில் தகிக்கின்ற தென்பதும், உய்த்துணரத் தக்க வொன்றேயாம்.]

தமப்பன் *tam-appaṉ,* பெ. (n.) **தந்தை;** father. "தமப்பன்மார் கற்றானிரைப் பின்பு போவர்" (திவ். பெரியாழ். 3. 1:9).

[தம் + அப்பன்]

தமத்தமப்பிரபை *tama-t-tama-p-pirabai,* பெ. (n.) **எழு நிரைய வட்டங்களுள், இருள் நிறைந்த பகுதி** (சீவக. 2817, உரை); a hell of darkness, one of ēḻu-naragam (செ.அக.).

[தமம் + தமம் + பிரபை]

தமம்[1] *tamam,* பெ. (n.) 1. **இருள்** (பிங்.); darkness, gloom. "தமந்திரண் டுலகியாவையும்" (கம்பரா. மிதிலைக். 132). 2. **தமசு,**[1] 2 பார்க்க; see *tamašu,*[1] 2. "சீவசேதன மறைத்துத் தமமயலாகிய வுலகத்திற் செல்லாம்" (வேதாரு. 60). 3. **கருங்கோள்** (இராகு) (பிங்.); moon's ascending node. 4. **சேறு** (யாழ். அக.); mire. 5. **கள்வரை வாட்டும் ஒரு நிரையம்;** a hell for thieves. "திருடும் வஞ்சகனை . . . தமத்திடுவர்" (சேதுபு. தனுக்கோ. 6).

[கமம் → தமம். கருமைக்கருத்து வேரான "கமம்" எனுஞ் சொல்லினின்றே தமம் வந்ததெனலாம். கருமைக்கருத்தினின்றே இருண்மைக்கருத்தும், கருங்கோட் கடவுளுக்கும் உரிய, அடிப்படைக் கருத்தாகும். "கமம் நிறைந்து இயலும்" (தொல்.சொல். 838) என்ற தொல்காப்பிய நூற்பாவும் நினைவு கூரத்தக்கது.]

தமம்[2] *tamam,* இடை. (part.) மேம்பட்டது என்னும் பொருளில் வரும் வடமொழி விகுதி; a Šanskrit particle, denoting superlative degree. "மந்ததமம்".

த. கமம் → வ. தமம்

தமம்[3] *tamam,* பெ. (n.) தமை பார்க்க; see *tamai.* "தமம்புறக் கரணதண்டம்" *(கைவல். தத்துவ. 9).*

தமயந்தி *tamayandi,* பெ. (n.) *1.* நளவெண்பாவின் கதைத் தலைவி *(நள. 29);* Damayandi, wife of Naḷan̲ and heroine of Naḷavēṇbā by Pugazhendhi pulavar. *2.* மல்லிகை வகை; a kind of jasmine.

[கமம் → தமம் → தமயந்தி.]

தமயந்திவிசிறி *tamayandi-viširi,* பெ. (n.). சேலை வகை (இ.வ.); a kind of saree.

[தமயந்தி + விசிறி]

தமயன் *tamayan̲,* பெ. (n.) தமையன் பார்க்க; see *tamaiyan̲* (செ.அக.).

[தம் → ஐயன் → தமையன் → தமயன்]

தமர்[1] *tamar,* பெ. (n.) *1.* சுற்றத்தார்; relations, kindred. "தமருட் டலையாதல்" *(பு. வெ. 3: 6). 2.* தமக்கு வேண்டியோர்; friends, well-wishers. "தமர்தற் றப்பி னதுநோன் றல்லும்" *(புறநா. 157). 3.* சிறந்தார்; counsellors, men guiding one's affairs. "தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்" *(குறள், 444). 4.* பணியாளர்; servants. "நலியார் நமன்றமர்" *(தேவா. 907: 1). 5.* நம்மவர்; kith and kin. "நீண்ட கையாற் றறைப்படு மளவிற் றத்தா நமரெனத் தடுத்து வீழ்ந்தார்" *(பெரியபு. மெய்ப்பொ. 16).*

க., ம. தமர்.

[தம் → தமர் = சுற்றத்தார். உற்றார் உறவினர். தமக்குப் பணி செய்பவர்]

தமர்[2] *tamar,* பெ. (n.) *1.* கருவியால் அமைத்த துளை; hole, as in a plank, commonly bored or cut. "தமரிடு கருவியாம்" *(திருவிளை. மாணிக்க. 61). 2.* துளையிடுங் கருவி; gimlet, spring awl, boring instrument.

ம. தமர்.

[உல் - துளைத்தற் கருத்துவேர் உல் → துல். தும் → தம் → தமர் = துளை. துளையிடு கருவி]



தமர்[3] *tamar,* பெ. (n.) மயிரூடுதுளை; hair follicle.

[தும் → தம் → தமர்]

தமர்காயாச்சிலந்தி *tamar-kāyā-c-cilandi,* பெ. (n.) துளை ஆறாத குழிப்புண்; an ulcer in which the sinus is not healed, the opening of the sarpent.

[தமர் + காயா + சிலந்தி]

தமர்ப்படு-தல் *tamar-p-paḍu-,* 20 செ.குவி. (v.i.) *1.* இணங்குதல்; to agree. *2.* விரும்புதல்; to desire; to like.

[தம் → தமர் → தமர்ப்படு-.]

தமர்மை *tamarmai,* பெ. (n.) நட்பு; friendship. "கல்வியில்லாத புரவிபோல் வாரது தமர்மையில்" *(குறள், 814, உரை).*

[தமர் → தமர்மை. "மை" பண்புப்பெயரீறு.]

தமர்வாசல் *tamar-vāšal,* பெ. (n.) *1.* குண்டலி ஆற்றலின் வாய்; power at the base of the vertebral colum. *2.* மேல்வாய்க்கு அடியிலுள்ள துளை; opening in the upper part of the mouth.

[தம் → தமர் + வாசல் → தமர்வாசல்]

தமர்வாயு *tamar-vāyu,* பெ. (n.) நெஞ்சாங்குலை நோய் வகை; heart disease, heart affections, whether organic or functional.

மறுவ. தமரூதை

[தமர் + வாயு. தமர் = துளைத்தல். குத்தல் பொருளின்று தொளைத்தற்பொருள் தோன்றியது. மரத்தைத் தொளைக்கும் தமர் போன்று நெஞ்சகத்தைத் தொளைத்துக் குத்தி வருத்தும் வளி நோய்]

தமரகசாகைநாடி *tamaraga-šāgai-nāḍi*, பெ. (n.) காற்றுக்குழல் நாடி; wind-pipe pulse.

[தமரகம் + சாகை + நாடி.]

தமரகசுவாசம் *tamaraga-šuvāšam*, பெ. (n.) 1. கோழையை இளைப்போடு வெளியேற்றும் மேல்மூச்சு; difficulty in breathing attended with fatigue due to frequent exertion in coughing to bring out the phlegm obstructing the bronchial tubes. 2. ஈளைநோய்; an attack of āsthma during the rainy season.

[தம் → தமர் + அகம் + சுவாசம்]

தமரகதபம் *tamaraga-dabam*, பெ. (n.) காற்றுக் குழல் அழற்சி; inflammation the wind pipe.

[தமரகம் + தபம்]

தமரகம்[1] *tamaragam*, பெ. (n.) 1. மூச்சுக்குழல்; windpipe, trachea. 2. தமருகம் (யாழ்.அக.) பார்க்க; see *tamarugam*.

[தமர் + அகம்]

தமரகம்[2] *tamaragam*, பெ. (n.) தமருகம் (யாழ்.அக.) பார்க்க; see *tamarugam* (செ.அக.).

[தமரகம் → தமருகம். "அம்" பெருமைப் பொருளீறு]

தமரகம்[3] *tamaragam*, பெ. (n.) நெஞ்சாங்குலை; heart.

மறுவ. நெஞ்சுக்காய்; நெஞ்சுப்பை

[தமர் + அகம் → தமரகம். நெஞ்சகத்தே, தமர் தொளைத்தாற் போன்று உட்டுளையாய் அமைந்துள்ள நெஞ்சாங்குலை]

தமரகம்[4] *tamaragam*, பெ. (n.) உடுக்கை; kettle-drum.

மறுவ. நெஞ்சுக்காய்; நெஞ்சுப்பை

[தமருகம் → தமரகம்]



தமரகலம் *tamaragalam*, பெ. (n.) மூச்சுக்குழல் திறப்பு; openingof the treaches.

[தமர் + அகலம்.]

தமரகவளி *tamaraga-vaḷi*, பெ. (n.) 1. மார்பு நோய்; chestpain. 2. மாரடைப்பு; angina pectoris. 2. ஈழைநோய்; āsthma.

தமரகவாயு *tamaraga-vāyu*, பெ. (n.) 1. தமரகவளி பார்க்க; see *tamaraga-vaḷi*. 2. மூச்சுவிட முடியாமை; difficulty in breathing.

தமரகவொலி *tamaraga-v-oli*, பெ. (n.) கிலுகிலுப்பை (மலை.); rattle-wort.

[தமரகம்[4] + ஒலி]

தமரகி *tamaragi*, பெ. (n.) கொடுவேலி; leand-wort (சா.அக.).

தமரத்தை *tamarattai*, பெ. (n.) மரவகை (பதார்த்த. 7443); carambola tree.

ம. தமரத்த

[தமரத்தம் → தமரத்தை]

தமரத்தம் மரத்தை, தமரத்தை என்று சா.அக. அழைக்கிறது. இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு கொண்டு வந்து பயிராக்கப் பட்ட மரம். இம் மரத்தின், இலை, பூ, காய், பழம், விதை முதலானவை, மாந்தருக்கு முழுமையான பயனைத் தருபவை. மனிதருக்கு ஏற்படும் மிகுகுளுமையைத் தவிர்க்க, தமரத்தம் மரத்தின் வேர், காய், பட்டை கலந்த மருந்து பயன்படும்.

தமரத்தம்பழம், ஊறுகாய்க்கு உதவுந் தன்மைத்து. தமரத்த மரத்தின் இலையை உணவில் புளிக்கு மாற்றாகப் பயன்படுத்துவர். தமரத்தங்காய் மிகு துவர்ப்புடையது. இலங்கையில் காரச்

சுவைக்காக, உணவில் பயன்படுத்துவர். இக் காயின் சாறு, துணியிலேற்பட்ட இருப்புக் கறையை அகற்றும். தமரத்தம் பழத்தின் சாறு இனியபருகம் (சர்பத்) காய்ச்சப் பயன்படும். இப் பழச்சாறு பித்தத்திற்கு கைகண்ட மருந்து.

தமரத்தம் பழச்சாற்றுடன், சருக்கரை கலந்து, மருந்துசெய்து, உட்கொண்டால், வாந்தி மனக்கோட்டம் (சித்தப் பிரமை) பித்தம், குரல்கம்மல் போன்ற நோய்கள், அகலும், தமரத்தங்காய், இலை, பட்டை, வேர், தேன் முதலியவற்றைச் சேர்த்துக் காய்ச்சிய கருக்கு (கியாழம்) நீர், (விந்து) வெண்ணீர்க்குறைவு மிகுகோழை, அரத்தமூலம் முதலான நோய்களைப் போக்கும் என்று சா.அக. கூறும்.

தமரம்[1] *tamaram,* பெ. (n.) ஒலி (பிங்.); noise, din, sound. "தமரம துடன்வளர் சதுமறை" (கம்பரா. திருவ. 126).

[சமர் → தமர் + அம் → தமரம்]

தமரம்[2] *tamaram,* பெ. (n.) 1. தமரத்தை பார்க்க; see *tamarattai.* 2. அரக்கு (அகநி); lac, gum-lac, sealing-wax. 3. ஈயம்; lead.

தமரல் *tamaral,* பெ. (n.) பெரிதொலித்தல்; blaring.

[தமர் + அல் → தமரல் = ஆரவாரம்; பேரொலி. அமர்க்களத்தில் உண்டாகும் பேரொலி.]

தமரவர் *tamaravar,* பெ. (n.) உறவினர்; neighbour. "அன்பர் - தமரவர்க்கு வயன்மருதூர்" (மரு. தி. 67).

[தமர் + அவர் → தமரவர். தம்மவர், உற்றார், உறவினர்]

தமராக்கவம் *tamarākkavam,* பெ. (n.) பீர்க்கு; luffa gourd (சா.அக.).

தமராசம் *tamarāšam,* பெ. (n.) ஒருவகைச் சருக்கரை; a kind of sugar (சா.அக.).

தமராணி *tamar-āṇi,* பெ. (n.) 1. தமரில் மாட்டித் துளையிடும் தமரூசி; tool for the gimlet or drill.

[தமர் + ஆணி = துளைக்கப் பயன்படும் ஆணி]

தமரி-த்தல் *tamari-,* 4 செ. கு. வி. (v.i.). ஒலித்தல்; to sound. "சங்கமன்பர் வந்தாரென்று . . . தமரித்து" (குலோத். கோ. 320).

[அமரி → சமரி → தமரி-. அமர்க்களம் போன்று ஆரவாரித்தல்]

தமரிடு-தல் *tamariḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) துளையிடுதல்; to drill. "தமரிடு கருவியாம்' (திருவிளை. மாணிக்க. 61).

[தமர் + இடு-.]

தமரிப்பு *tamarippu,* பெ. (n.) 1. ஒலி; sound. "வேழத் தமரிப்பும்" (கோயிற்பு. இரணிய. 121). 2. விருப்பம் (யாழ். அக.); desire.

[அமரிப்பு → சமரிப்பு → தமரிப்பு]

தமரு *tamaru,* பெ. (n.) தமருகம் பார்க்க; see *tamarugam.*

[தமர் → தமரு]

தமருகம் *tamarugam,* பெ. (n.) உடுக்கை; kettle-drum. "மொகுமொகென் றொலிமிகுந் தமருகங்கள் பலவே" (கலிங். 100).

மறுவ. இடைசுருங்கு பறை

[தமரகம் → தமருகம் = தோலினால் தொளைத்துத் தைக்கப்பட்ட உடுக்கை]

தமரூசி *tamar-ūši,* பெ. (n.) தமரில் மாட்டும் ஆணி; bits of a brace (செ.அக.).

[தமர் + ஊசி]

தமரோசை *tamar-ošai,* பெ. (n.) கிலுகிலுப்பை[2] 2 (மலை.) பார்க்க; see *kilu-kiluppai*[2].

[தமர் + ஓசை]

தமலி *tamali,* பெ. (n.) சட்டுவம் (அக.நி.); ladle.

தமள் *tamaḷ,* பெ. (n.) உற்றாள் (நன். 276, உரை.) நம்மவள்; a female relative or friend.

[தமர் = உற்றார்: உறவினவர். தமர் → தமல் → தமள்]

தமற்காவம் *tamaṟ-kāvam,* பெ. (n.) சுக்கு; dried ginger (சா.அக.).

தமறைவாகி *tamaṟaivāgi,* பெ. (n.) வேங்கை மரம்; kino-tree (சா.அக.).

தமன் *tamaṉ,* பெ. (n.) உற்றான்; a male relative or friend. "ஆழிப்படை யுடையான்றமன்" (சூளா. அரசி. 182).

[தமர் → தமன்.]

தமனகக்கொழுந்து *tamanaga-k-kolundu,* பெ. (n.) தமனகம் (சீவக. 827, உரை) பார்க்க; see *tamanagam.*

[தமனகம் + கொழுந்து]

தமனகம் *tamanagam,* பெ. (n.). மருக்கொழுந்து; southern wood. "பச்சைத் தமனகத்தோடு பாதிரிப்பூச் சூட்டவாராய்" *(திவ். பெரியாழ். 2: 7: 3).*

தமனகன் *tamanagan,* பெ. (n.) ஒரு வகை நரி; a kind of jackal. "புலம்பிய பிங்கலன் தமனகன் போய்ப் பொருமவனைக் கொன்று புலம்புவதே" *(பஞ்சதந். மித்திரபே 206).*

[தமன் + அகன் → தமனகன்]

தமனசதுர்த்தசி *tamana-saturttasi,* பெ. (n.) மீன மாத வளர்பிறை (நவமி) ஒன்பதாம் நாளன்று, மருக்கொழுந்து முதலியவற்றாற் பூசிக்கும் ஒரு நோன்பு *(பஞ்.);* a fast on the fourteenth day of the bright fortnight of the lunar month phālgunam, when worship is performed with marikkolundu and flowers.

[தமனம் + சதுர்த்தசி]

தமனம்[1] *tamanam,* பெ. (n.) 1. தமனகம் பார்க்க; see *tamanagam.* 2. கண்டங்கத்திரி; prickly night shade. 3. நெஞ்சாங்குலை; heart.

[தம் + அன் + இ → தமன் + அம் → தமனம். 'அம்' சாரியை. இஃதும், தருதற் கருத்து வேரடி. உடலுறுப்புகள் சீராக இயங்கும் பொருட்டுத், தூய்மையான அரத்தத்தை தருவது தமனி. இந்தத் தமனி நெஞ்சாங்குலை வாயிலாக, உடலுறுப்பு களுக்குத் தூய அரத்தத்தை தருவதால், தமன் + அம் → தமனம் ஆயிற்று]

தமனம்[2] *tamanam,* பெ. (n.) 1. மருக்கொழுந்து; southern wood *(சா.அக.).* 2. சாரைப்பாம்பு; rat snake.

[தமன் → தமனம்]

தமனி[1] *tamani,* பெ. (n.) வன்னி (அக. நி.) பார்க்க; see *vanni.*

[தமன் + இ → தமனி.]

தமனி[2] *tamani,* பெ. (n.) 1. தூய அரத்தம் ஓடும் குழாய்; blood vessel carrying blood away from the heart. 2. நீரோடும் கால்வாய்; canal by which fluid is conveyed duct. 3. காற்றுக்குழல்; wind pipe. 4. மூச்சுக்குழலின் கிளை; one of the bifurcations of the wind pipe. 5. வெண்ணீர்க் (விந்துக்) குழாய்; spermatic card. 6. நரம்புத் தொடரி; nerve chain *(சா.அக.).*

[தம் + அன் + இ → தமனி = தூய்மையான அரத்தத்தை நெஞ்சாங் குலையினின்று, உடலின் ஏனைய உறுப்புகளுக்குத் தருவது தமனி. 'அன்' சாரியை. 'இ' சொல்லாக்க விகுதி. இச் சொல்லிலும் தருதற்கருத்தே அடிப்படையாக உள்ளது. உடலுக்குள் இருக்கும் உறுப்புகள் சீர்மையாகக் கட்டுக்கோப்புடன், இயங்குதற் பொருட்டுத், தூய்மையான அரத்தத்தை தரும் பணியினைத் தமனி ஆற்றுகிறது. "வம்மின்கள் தாயரீர் மாலை அது வாங்கித் தம்மின்கள்" என்ற விக்கிரமச் சோழனுலாப் பாடல் தருதற்கருத்து இலக்கியத்தில் பயின்று வருவதைக் காட்டுகிறது. 'தம்' ஈங்கு, படர்க்கைப் பன்மையாகும்.]

தமனித்தமனி *tamanittamani,* பெ. (n.) அரத்தக் குழாய்களைக் காக்கும் சிறிய நாடி, தந்துகி, நாளம் முதலானவை; the small nutrient arteries and veins in the walls of the large blood vessels.

[தமனி + தமனி]

தமனிதா *tamanidā,* பெ. (n.) கொட்டைப் பாக்கு; areca-nut *(சா.அக.).*

[தமனி → தமனிதா.]

தமனிதி *tamanidi,* பெ. (n.) 1. தமனி பார்க்க; see *tamani.* 2. தொண்டை; throat. 3. கழுத்து; neck. 4. ஒரு வகை மணம்; a kind of scent. 5. மஞ்சள்; turmeric.

[தமனி → தமனிதி.]

தமனியக்கநரம்பு *tamaniyakka-narambu,* பெ. (n.) அரத்தக்குழாய்களைக் கட்டுப் படுத்தும் நரம்பு; nerve the controls the blood vessels.

[தமனியக்கம் + நரம்பு]

தமனியக்கமாக்கு-தல் *tamaṉiyakkam-ākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) பொன்னாக்குதல்; to transmit into gold.

[தமனியக்கம் + ஆக்கு-.]

தமனியக்கூடம் *tamaṉiya-k-kūḍam,* பெ. (n.) தமனியப்பொதியில் பார்க்க; see *tamaṉiya-p-podiyil.* "இணையற வகுத்த தமனியக்கூடத்து" *(பெருங். உஞ்சைக். 33: 101).*

[தமனியம் + கூடம்]

தமனியப்பொதியில் *tamaṉiya-p-podiyil,* பெ. (n.) பலர் கூடுதற்குரிய பொன் வேய்ந்த அம்பலம்; golden roofed assembly hall. "சாலையுங் கூடமுந் தமனியப் பொதியிலும்" *(மணிமே. 28: 66).*

மறுவ. பொற்சபை; பொன்னம்பலம்.

[தமனியம் + பொதியில்]

தமனியம் *tamaṉiyam,* பெ. (n.) பொன் (திவா.); gold.

[தமனி → தமனியம்]

தமனியன் *tamaṉiyaṉ,* பெ. (n.) 1. குரு (சாதகசிந். 3); Jupiter. 2. காரி (யாழ்.அக.); Saturn. 3. நான்முகன்; Brahmāṉ. 4. இரணியன்; Iraṇiyaṉ, an Ašura

[தமனியம் → தமனியன்..]

தமனோயிருத்தி *tamaṉōyirutti,* பெ. (n.) ஏழிலைப்புன்னை; a kind of puṉṉai tree (சா.அக.).

[தமன் + ஓ + இருத்தி.]

தமனோருபனி *tamaṉōrupaṉi,* பெ. (n.) வேளைச்செடி; five leaved cleome.

[தமன் + ஓ + உருபனி - தனனோருபனி. தமன் = பொன். பொன்போன்ற இலைகளையுடைய வேளைச்செடி.]

தமா *tama,* பெ. (n.) கசகசா; poppy seeds (சா.அக.).

தமார்க்கதம் *tamār-k-kadam,* பெ. (n.) தமார்க்கவம்,1 பார்க்க; see *tamārkkavam,1.*

தமார்க்கவம் *tamārkkavam,* பெ. (n.) 1. பீர்க்கு (மலை.); common luffa. 2. வேங்கை; kino-tree.

[தள் → தம் → தமார்க்கு + அவம் - தமார்க்கவம்..]

தமால் *tamāl,* பெ. (n.) மக்கி மரவகை; a kind of makki tree.

[தம் + ஆல் → தமால்..]

தமாலகம் *tamālagam,* பெ. (n.) தாளிசபத்திரி; Himalayan silver tin.

[தமால் + அகம் → தமாலகம்..]

தமாலகி *tamālagi,* பெ. (n.) கீழ்க்காய்நெல்லி (தைலவ. தைல.) பார்க்க; see *kīḻ-k-kāy-nelli.* forest small-leaved featherfoil.

[தமாலகம் → தமாலகி..]

தமாலகிரி *tamālagiri,* பெ. (n.) தமாலகி (சங். அக.) பார்க்க; see *tamālagi.*

[தமாலகி → தமாலகிரி..]

தமாலதளம் *tamālataḷam,* பெ. (n.) பச்சிலை; green herb (சா.அக.).

[தமாலம் + தளம் - தமாலதளம்..]

தமாலபத்திரி *tamālapattiri,* பெ. (n.) 1. திலக மரம்; wild cinnamum tree. 2. பெரிய இலவங்கப் பட்டை; Cassia cinnamn.

[தமாலம் + பத்திரி - தமாலபத்திரி. காய்ச்சல், கோழை, நச்சுத்தன்மை, இடைவிடாத சொறி போன்ற, நோயினைத் தணிக்கும் மருந்து.]

தமாலம் *tamālam,* பெ. (n.) 1. மூங்கில்தோல்; bamboo skin. 2. மலைப்பச்சை அல்லது மலைப்புளி; yellow mangosteen, hill green (சா.அக.). 3. பச்சிலை பார்க்க; see *paccilai.* "சம்பக மாதவி தமாலங் கருமுகை" *(சிலப். 8, 45).* 4. இலை (திவா.); leaf.

[தமால் + அம் → தமாலம்.]

தமாலோமயம் *tamālōmayam,* பெ. (n.) செம்பரத்தை; shoe-flower.

[தும் → தம் = செம். தம் → தமர் = சிவப்பு. தமலம் → தமாலம் → தமாலோமயம். சிவப்பு வண்ணமுள்ள செம்பரத்தை மலர்.]

தமி[1]-த்தல் tami-, 4 செ.குவி. (v.i.) தனியாதல்; to be alone, lonely. "நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே" *(புறநா. 184: 3).*

[தனி → தமி-.]

தமி²-த்தல் *tami-,* 4 செ.குன்றாவி. (v.t.) தண்டித்தல்; to punish. "என் குற்றத்தைப் பார்த்துத் தமிக்க நினைத்தாராகில்" *(ஈடு. 1. 4:7).*

[தண்டி → தண்மி → தமி-.]

தமி³ *tami,* பெ. (n.) *1.* தனிமை; solitude, loneliness. "தமிநின்று" *(திருக்கோ. 167). 2.* ஒப்பின்மை *(சங். அக.);* inequality. *3.* துணையின்மை *(யாழ்ப்.);* destitution, helplessness.

[தனி → தமி. தனித்தியங்குந் தன்மை பெற்ற, தன்னேரில்லாத் தமிழ்மொழி, ஒப்புயர்வில்லா ஞாலமுதன்மொழி.]

தமி⁴ *tami,* பெ. (n.) இரவு *(அக. நி.);* night.

[தனி → தமி.]

தமிசிரம் *tamiśiram,* பெ. (n.) *1.* இருள்; darkness. *2.* குறைவு *(யாழ். அக.);* deficiency.

[தமி → தமிசிரம்]

தமிசு *tamiśu,* பெ. (n.) வேங்கை *(அக. நி.);* Indian kino.

[தமி → தமிசு.]

தமிட்டம் *tamiṭṭam,* பெ. (n.) தம்பட்டம் பார்க்க; see *tambaṭṭam.* "தமிட்ட ராணுவம் பெருக்கி" *(தனிப்பா. i, 318, 9).*

[தமட்டம் → தமிட்டம்]

தமியம் *tamiyam,* பெ. (n.) *1.* கள் *(மூ.அ);* toddy, spirituous liquor. *2.* பதனீர்; sap of palm tree.

[தனியம் → தமியம். பனங்கள்ளில் சுண்ணாம்பு கலந்து அனைவரும் பருகும் வண்ணம் மாற்றப்பட்ட பருகம்.]

தமியவம் *tamiyavam,* பெ. (n.) விடமருது; a kind of murdah *(சா.அக.).*

தமியள் *tamiyaḷ,* பெ. (n.). தனியா யிருப்பவள்; solitary, lonely woman. "தமியளாய சீதைக்கும்" *(கம்பரா. மாயாசீதை. 80).*

[தனி → தமி → தமியள். எஞ்ஞான்றும் துணையின்றித் தனித்திருப்பவள்.]

தமியன் *tamiyaṉ,* பெ. (n.) *1.* தனித்திருப்பவன்; solitary, lonely person. "தானேதமியன் வந்தன னளியன்" *(மணிமே. 16: 58). 2.* துணையற்றவன்; destitute person. "தமியனேன் தனிமை தீர்த்தே" *(திருவாச. 5: 18) (செ.அக.).*

[தனி → தமி → தமியன் - மனைவியின்றித் தனித்திருக்கும் தன்மையன்.]

தமியாட்டி *tami-y-āṭṭi,* பெ. (n.) தமியள் பார்க்க; see *tamiyaḷ.* "தமியாட்டி தளர்ந்ததுவே" *(திவ். இயற். திருவிருத். 73).*

[தனி → தமி → தமியள் + ஆட்டி → தமியாட்டி. ஒ.நோ. மணவாட்டி, பெருமாட்டி]

தமிரவிருட்சம் *tamira-viruṭcam,* பெ. (n.) வேங்கை; east Indian Kino.

மறுவ. தமிசு

[தமிரம் + Skt. விருட்சம்.]

தமிரவேதை *tamira-vēdai,* பெ. (n.) பொன்னாக்க மருந்து வகை (T. C. M. ii, 2, 441); a kind of drug used in alchemy *(செ.அக.).*

[தமிரம் + வேதி → வேதை → தமிரவேதை.]

தமிழ் *tamiḻ,* பெ. (n.) *1.* இனிமை *(பிங்.);* sweetness, melodiousness. *2.* நீர்மை *(பிங்.);* refined quality. *3.* இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூவகையாக வழங்கும் மொழி; Tamiḻ language, being divided into iyaṟ-ṟamiḻ, išai-t-tamiḻ, nāḍaga-t-tamiḻ. *4.* ஒப்பிலாது தனித்துநிற்றல்; independent and that which has no parallel. *5.* தமிழ் நூல் ; Tamiḻ literature, Tamiḻ work. *6.* தமிழர்; The Tamiḻs. "அருந்தமி ழாற்ற லறிந்திலர்" *(சிலப். 26: 161). 7.* தமிழ்நாடு; the Tamiḻ country. "தண்டமிழ் வினைஞர்" *(மணிமே. 19: 109).*

[தம் + இல் → தம்மில் → தமில் → தமிள் → தமிழ். ஒருகா. தனி → தமி + ழ். தம் + இழ் → தமிழ். ஒ.நோ. மால் → மாழை. ஏலா → ஏழா. கல் → கள் → காள் → காழ். நாளிகை → நாளம் → நாழி.]

கி.மு. 10,000 ஆண்டுகட்கு முன்பே, குமரிக்கண்டத்தில் வாழ்ந்த தமிழர்தம் இல்லத்தில் அல்லது நாட்டில் தோன்றி வளர்ந்த இயன்மொழியே, தமிழ். வடவர் வருகைக்குப் பின்னரே, வேற்றுமொழி

வழக்கு, தென்னகத்தில் புகுந்தது. ஆரியர் வரும்வரை, தம் வீட்டிலும், நாட்டிலும், பேசும் தனிப்பெரும் மொழியாகத், தமிழ் திகழ்ந்தது.

மொழிகட்குப் பெயர், முதற்கண் நாடுபற்றியும், பின்பு மக்கள் பற்றியும், அதன்பின், மொழியின் தன்மைபற்றியும், தோன்றியுள்ளன. கருநடம் (கன்னடம்), குடகு முதலியவை நாடுபற்றித் தோன்றியவை. மலையாளம், ஆங்கிலம் முதலியவை, மக்களை அடிப்படையாகக் கொண்டு முகிழ்த்தவை. பிராகிருதம், சமற்கிருதம் போன்றவை, மொழியின் தன்மையால் பெயர்பெற்றவை. வடமொழி, தென்மொழி எனும் பாகுபாடு திசை பற்றியும், உருது (பாளையம்) என்பன இடம்பற்றியும், பெயர் பெறுவது, நாட்டினாற் பெயர் பெறுவது போன்றதே. வழக்கற்ற மொழியாயின், வேதமொழி என்பதுபோல், நூலாலும் பெயர்பெறும். தேவமொழி என்பது, ஏமாற்றுப் பற்றிய கருத்தென்பார், மொழிஞாயிறு.

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகத்து"

என்று தொல்காப்பியம் கூறுவதினின்று, கி.மு. 7ஆம் நூற்றாண்டில், வேங்கடத்திற்குத் தெற்கில், தமிழ் தவிர, வேறொரு மொழியும் வழங்கவில்லை. கடைக்கழகக் காலத்திலும், இந் நிலைமையேயிருந்தமை, கழகச்செய்யுள் களாலும், கழக மருவிய வனப்புகளாலும் அறியப்படும். திராவிடம் (தமிழ்), ஆந்திரம், கன்னடம், மராட்டி, கூர்ச்சரம் என்னும் ஐந்தையும் பஞ்சதிராவிடம் என்று, பண்டுதொட்டே, வடவர் வழங்குவர். ஆரியர் வந்தபின்பும், விந்தியமலை வரையும், தமிழும், அதன் திரிபான திரவிடமுமே வழங்கியமை பெறப்படும். அவர் வருகைக் காலத்திலோ, வடஇந்தியாவிலும், திரவிடம் வழங்கியதை, பிராகுவீயும், இராசமாகலும் இன்றும் காட்டும்.

பல்துறை அறிஞர்தம் கருத்துக்களை, மக்கள் வழக்கு, இலக்கியவழக்கு, மொழி யியல் வழக்கு முதலானவற்றின் அடிப் படையில் ஆய்வுசெய்து, "தமிழருக்கே தமிழ்மொழி சொந்தமானது" என்று மொழிஞாயிறு நிறுவுவது, வருமாறு:-

இராமச்சந்திர தீட்சதர் கருத்து: தமிழ் அல்லாத ஒருமொழி, திரவிடத்தாயாகத், தமிழுக்கு முற்பட்டு இருந்ததேயில்லை; மொழித்துறைக்குச் சொன்னதே, இனத் துறைக்கும். "திரவிட முன்னையர்" (*Pre-Dravidians*) என்றோ, "மூலத்திரவிடர்" (*Protp-Dravidians*) என்றோ, வேறுபாடு இருந்ததாக நமக்குத் தோன்றவில்லை. இவர்கள் எல்லாம், புதுக்கற்காலத்தினின்றும், அதற்கு முன்பிருந்தும், வந்த மக்களின் நேர்வழித் தோன்றிய ஓரினத்தாரே" என்பார். (*Pre-Historic South India - p. 246*).

மொழிஞாயிறு கருத்து: தமிழ் குமரிக் கண்டத்தில் தானே தோன்றிய மொழி. தென்னாட்டில், ஆரியர் வரும்வரை, வேற்றுமொழி யென்று எதுவும், எங்கும் வழங்கப்படவில்லை, தமிழவணிகர் மொழி பெயர் தேயம் செல்லும்வரை, அல்லது அயலாரொடு, அரசியல் அல்லது வணிகத் தொடர்பு கொள்ளும்வரை, மொழி அல்லது பேச்சு என்னும் பொதுப்பெயர் தவிர, யாதொரு சிறப்புப்பெயரும், தமிழுக்கு வழங்கியிருக்க முடியாது.

தமிழ்மொழியின் சிறப்புப்பெயர், தமிழ் (தமிழம்), திரவிடம் என்னும், இரு வடிவில் காணப்படுகின்றது. இவ்விரண்டும் வெவ்வேறு சொற்போல் தோன்றினும், உண்மையில் ஒரே சொல்லின் இருவேறு வடிவங்களாகும். இவற்றுள் முன்னையது தமிழ் என்பதே; சான்றுகள் வருமாறு.

I. தமிழ் என்னும் பொருண்மையிலேயே திராவிடம் என்னும் சொல் வழங்கியமை.

1. வடநூலார் தமிழைத் திரவிடம் என்ற சொல்லாலேயே, குறித்துள்ளனர். தமிழை வடநூலார், ஒரு பிராகிருதமாகக் கொண்ட போது, 'த்ராவிடீ' என அழைத்தனர்.
2. பாகவதபுராணத்தில், குறிக்கப்பெறும், சத்தியவிரதன் என்னும் அரசன், 'திரவிடபதி' என்று அழைக்கப்படுகின்றான்.
3. கி.பி.470-இல், வச்சிரநந்தி என்னும் சமணர், மதுரையில் நிறுவிய தமிழ்க்கழகம், 'திரவிடசங்கம்' என்று அழைக்கப்பட்டது.
4. 500 ஆண்டுகட்கு முன்பு, பெரிய திருமொழிச் சிறப்புப்பாயிரத்திற்கு, உரை வரைந்த பிள்ளை லோகாசார்யசீயர், தமிழிலக்கணத்தைத் திரவிடசாஸ்திரம் என்று குறித்துள்ளார்.
5. நாலாயிரத் தெய்வப்பனுவல் - திரவிட வேதம் என்று குறிக்கப்படுகிறது.
6. சிவஞானமுனிவரின் மெய்கண்டான் நூல் அகலவுரை, 'திரவிடமாபாடியம்' என்று பெயர்பெற்றுள்ளது.

7. சபாபதி நாவலரின், 'தமிழிலக்கிய வரலாறு' 'திராவிடப் பிரகாசிகை' என்று அழைக்கப் படுகிறது.
8. தாயுமானவர், "கல்லாத பேர்களே நல்லவர்கள்" என்னும் பாட்டில், தமிழைத், 'திராவிடம்' எனக் குறித்துள்ளார்.
9. கிறித்துவிற்கு முன்பு இலக்கியம்பெற்ற மொழி தமிழேயாம். திராவிடமொழியில் கிறித்துவிற்கு முந்தைய இலக்கியம் ஏதுமில்லை. ஆகையால் வடவர், திரவிடம் என்னும் பெயரால், தமிழையே தலைமையாகக் குறித்தனர்.
10. கி.பி 7இல், குமரிலபட்டர், தெலுங்கைத் தமிழினின்று பிரித்து, "ஆந்திர-திராவிட பாஷா" என்று அழைத்தார்.

II. **வெளிநாடுகளில் தமிழ் என்னும் சொல்லையொத்த பெயர்களே வழங்கியமை.**

1. கி.மு. 4-இல், எழுதப்பட்ட பெரிப்புளுசு என்னும் கிரேக்கநூல், 'தமிராய்' என்று, தமிழை அழைக்கிறது.
2. உரோமஞாலப் படத்தில் தமிழகம், 'தமிரிக்கே' எனக், குறிக்கப்பட்டுள்ளது.
3. கி.பி. 139-61-இல் வதிந்த, தாலமி என்னும் வரலாற்று வல்லுநர், 'திமிரிக்கே' என்னும் பெயரைத் தவறுதலாக, 'லுமிரிக்கி' என்று, எழுதிய ஞான்றும், அவருக்குப் பின்பு வந்த, ரேவண்ணா என்பவர், 'தமிரிக்கா' எனத் திருத்திக் கொண்டார்.
4. கி.பி. 7-இல், இவென்திசாங் என்னும், சீன வழிப்போக்கர் குறிப்பில், 'சிமொலொ' என்று, தமிழ் குறிக்கப்பட்டுள்ளது.
5. கால்டுவெல் கண்காணியர், 'திமில' அல்லது 'திமிர' என்று தமிழைக் குறிக்கின்றார்.
6. இலங்கை மகாவம்ச வரலாற்றில், 'தமிலோ' என்ற குறிப்புக் காணப்படுகிறது.
7. ஐரோப்பியர் 'தமுல்' என்று, தமிழை அழைத்தனர்.
8. தேனியவிடையூழியர் 'தமுலிக்க மொழி' என்று தமிழைக் குறித்துள்ளனர்.
9. ஆங்கிலத்தில் 'தமில்' (Tamil) என்ற வடிவம் காணப்படுகிறது. இது பாவணர் குறித்த, தொன்முது வடிவமாகும்.
10. மாக்சுமுல்லர், தென்மொழிக் குடும்பத்திற்கு, 'தமுலிக்கு' என்று, பெயர் சூட்டியுள்ளார்.

III. **திராவிடம் என்னும் சொல் தமிழ் என்னுஞ் சொல்லிற்கு நெருங்கிய, 'திரமிலங்' (திரமிளம்) என்னும் வடிவில் வழங்கியமை.**

குண்டெர்ட்டுப் பண்டாரகர் கூற்றாக கால்டுவெல் கூறுவது:

1. கி.பி. 6-இல் எழுதப்பட்ட, வராகமிகிரரின் பழைய கையெழுத்துப் படிகளில், 'த்ரமிட' என்னும் வடிவம் உள்ளது.
2. மங்கலேச மன்னனின் பட்டங்களில் 'த்ரமில' வடிவம் காணப்படுகிறது.
3. கி.பி. 1573-இல், தாரநாதர் திபெத்தில் எழுதிய 'இந்தியாவில் புத்தமதத்தைப் பரப்பின வரலாறு' என்னும் நூலில் திராவிடர், 'திரமிலர்' என்று, குறிக்கப் பட்டுள்ளனர்.
4. பழைய தொன்மமொழிபெயர்ப்புகளில், திராவிடர், 'திரமிலர்' என்றும், திரவிடம் 'த்ரமிட' என்றும் குண்டர்ட் பண்டாரகர் குறித்துள்ளதாகக் கால்டுவெல் கண்காணியர் தமது, 'திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் நூலில் குறித்துள்ளார். 'த்ரமிட' என்பது திரவிடம் என்பதன் மிகப்பழைய வடிவம். இது தமிழ் என்னும் பொருண்மையில் வழக்கூன்றிய தாகக் கால்டுவெல் குறித்துள்ளார்.

'அம் ஈற்றின் பெற்றிமை' 'அம்' ஈறு தமிழ் மொழிக்குரிய தனிப்பெரும் சொல்லாக்க ஈறாகப் பயின்று வந்துள்ளது. நாட்டுப் பெயர்களும், மொழிப்பெயர்களும் பண்டைக் காலத்தில் பெரும்பாலும், 'அம்' ஈறு பெற்றுத் தமிழில் வழங்கியதை நோக்கும்போது, 'தமிழ்' என்னும் சொல்லும், சிறுபான்மை (தமிழ் + அம்) தமிழம் என்றும், வழங்கியதாகக் கருதலாம்.

தமிழ் + அம் - தமிழம் - த்ரமிலம் → த்ரமிளம் → த்ரமிடம் → த்ரவிடம் என்னும் வடிவுகளை முறையே நோக்கின், 'தமிழ்' என்பதன் திரிபே, திரவிடம் என்று, வளர்ந்துள்ளமை கண்கூடு. ஆயின் கால்டுவெலார், இவ் வெளிய முறையில் உண்மையைக் காணாமல், இயற்கைக்கு மாறாகத் தலைகீழாய் நோக்கி, திரவிடம் → த்ரமிடம் → த்ரமிளம் → த்ரமிலம் → தமிழம் → தமிழ் என்று, திரிந்ததாக முடிவு செய்துவிட்டார். கால்டுவெலாரின், இத் தலைகீழாய்வை,

கிரையர்சன் திருத்தியமைத்துவிட்டதாக மொழிஞாயிறு, குறித்துள்ளார். (த.வ. 33).

மேலும், "த்ரமிளம் என்பது, தமிழ் எனத் திரிதலும் அது" என்று பிரயோக நூலார் (பக். 4) குறித்துள்ளது. அவரது தமிழ் வெறுப்பையே காட்டும்.

IV. தமிழ்நாட்டுலக வழக்கில், திராவிடம் என்னும் வடிவம் அருகியும் வழங்காமை குறிக்கத்தக்கவொன்றாகும்.

V. வடமொழி நாடகங்களிலும், சமண நூல்களிலும் 'த்ரமிடம்', 'த்ரவிடம்' என்னும் ரகரமேற்றிய வடிவுகளே யன்றி, 'தபிள', 'தவிட' என்னும் மிக நெருங்கிய வடிவுகளும், காணப்படுகின்றன.

'தமிழ்' என்னும் சொல்வழக்கு: மொழியியல் அறிஞர்கள் கருத்து:

1. கிரேக்க நாட்டில் வழங்கிய 'தெர்மிலே', அல்லது 'தெர்மிலர்' அல்லது 'திரிமிலர்' என்னும் இனப்பெயரினின்று திரிந்த சொல்லே 'தமிழ்' என்பார், ஞானப்பிரகாசக் குரவர்.
2. 'தம்ரலித்தி' என்னும் வங்கநாட்டு நகர்ப் பெயரினின்று, 'தமிழ்' என்னுஞ்சொல், வந்தது என்று, கனகசபைப்பிள்ளை கருதுகின்றார்.
3. ஈழநாட்டுத் தமிழறிஞர் கந்தையாப் பிள்ளை, "தாமம்", (ஞாயிறு + ஈழம் (இலங்கை) என்னும் இருசொல்லும் சேர்ந்து முறையே, தாம் + ஈழம் → 'தமிழ்' என மருவி வழங்கியதாகக் கூறுகிறார்.
4. தமிழ் என்னும் சொல்லின் முதனிலை 'தமி' யென்னும் சொல்லினின்று, முகிழ்த்ததாகும். இஃது தன்னேரில்லாத் தன்மைத்து; ஒப்பற்றதெனப் பொருள்படும் என்று, ஒரு சாரார் நிறுவுகின்றனர்.
5. வலிமெலியிடையாகிய, மூவினமெய்களைக் கொண்ட நிலையினைக் குறிக்குமென்று, மற்றொரு சாரார் கருதுவர்.
6. கிரேக்க நாட்டிலிருந்து, தமிழ் வந்தது என்பதற்கும், கிரேக்கநாட்டில் தமிழர் வாழ்ந்தனர் என்பதற்கும், அடிப்படையான ஆதாரம் எதுவுமில்லையென்று, மொழி ஞாயிறு மொழிகின்றார்.

'தெர்மில' என்னும் சொல்லினின்று 'தமிழ்' தோன்றவில்லை.

தமிழ்ச்சொற்களும், தமிழர் பழக்க வழக்கங்களும், கிரேக்க நாட்டில் மட்டுமின்றி, உலகத்தில், பல இனத்தாரிடையும் காணப் படுவதாலும், கிரேக்க நாட்டிற்கும், இந்தியாவிற்கும் இடையில், ஒரு திரவிட மொழியும் வழங்காமையானும், "தெர்மில்" என்னும் சொல்லைத் திர + இல் + அர் என்று பிரித்துக் கடற்கரையில் குடிகொண்டவர் என்று பொருள் கூறுவது, 'கேசவக் கிருட்டிணனே ஏசுக் கிறித்து' என்று சொல்வ தொக்கும். (த.வ. 34).

"ஒருசொல்லின் (திர + இல் + அர் - திரமிலர்) ஒருபுடையொப்புமையைச் சுட்டிக்காட்டி, ஒரு நாட்டவரை 5000 கல் தொலைவினின்று வந்தவராகக் கொள்வது, மொழிநூன்முறைக்கு முற்றிலும் முரணானது" (த.வ. 34).

"தம்ரலித்தி" அல்லது "தமிலப்தி" அல்லது "தமிலூக்" என்பதினின்று, தமிழ் தோன்ற வில்லை

வங்கநாட்டில் திரவிடரேயன்றித் தமிழர், ஒருகாலும் வாழ்ந்ததில்லை. இற்றை வங்க மொழி, ஆரியவண்ணமாய் மாறிவிட்டது. காசி என்னுஞ் சொற்குக், "காஞ்சி" என்னும் சொல்லோடுள்ள தொடர்புப்போன்றதே, 'தம்ரலித்தி' அல்லது 'தமிலப்தி' என்னுஞ் சொல்லினின்று 'தமிழ்' வந்தது, என்று கூறுவது. (த.வ. 34).

"விருப்பக்கருத்தும்" – தவறேயாகும்

தமிழர் நாகரிகமடைந்த காலந்தொட்டுத் தமிழகம்,சேரசோழபாண்டியராட்சிக்குட்பட்ட முத்தமிழ் நாடாயிருந்து வந்துள்ளது. கி.மு. 7ஆம் நூற்றாண்டினரான தொல்காப்பியரும்,

> வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
> நாற்பெயர் எல்லை யகம் *(தொல். 1336)*

என்று தமிழகத்தின் எல்லையை வரையறை செய்துள்ளார். இலங்கை, வரலாற்றுக் காலந்தொட்டு, குடியேற்ற நாடாகவிருந்து, அந்நியரால் ஆளப்பட்டு வந்துள்ளது. தமிழ் என்னும் பெயர், குமரிக்கண்டமாந்தன் தமது இல்லத்துமொழிக்கு அமைத்துக்கொண்ட பெயர். 'தாமமெல்லாம்' அல்லது 'தாமீழம்' என்பது, இலங்கையை நோக்கிப் புதுவதாகப் படைத்த, பொருந்தாப் புணர்ப்பாகும்.

இத்தகைய பொருந்தாப்புணர்ப்புச் சொல்லினின்று, தமிழ் என்னும்பெயர் தோன்றிற்றென்பது, நாட்டுப்பற்றினால் எழுந்த விருப்பக்கருத்தே யாகும். ஆகையால், இதுவும் தவறேயாகுமென்றறிக. *(த.வ. 34).*

"ஒப்புயர்வற்றது" என்ற கருத்தும் பொருந்தாது

பிறமொழிகள் தோன்றியபின்பே, அம் மொழிகளோடு ஒப்புமைகாட்டித், தமிழ்

மொழியின் உயர்வுகண்டு, 'தமிழ்' எனப் பெயரிட்டதாக வரையறை செய்யவேண்டும். பெயரீட்டுநிகழ்ச்சி மிகப் பிந்தியதாக அமைந்துவிடுவதால், இக்கருத்து ஏற்புடைத் தன்று.

மூவினமெய் பற்றிய கருத்தும் பொருந்தாது

மூவினமெய் எல்லா மொழிகட்கும் பொதுவானது. தமிழ் என்னும் பெயர், அது குறித்துத் தோன்றிற்று என்பதும் தவறானதே.

இனிமைக் கருத்தும் ஏற்புடைத்தன்று

தம் + இழ் - தமிழ். சொல்லமைப்பிலேயே இனிமை இயைந்துள்ளது என்பார் எசு. சீநிவாசையங்கார். 'இழ்' என்னும் ஈறு இனிமைப் பொருள்தரும், 'இழும்' என்பதன் சிதைவே. இன்னும் சிலர், ''இனிமையு நீர்மையுந் தமிழென லாகும்'' என்னும் பிங்கலந்தை நூற்பாவைத் தழுவி, "தமிழ் என்றாலே இனிமை; இனிமை என்றாலே தமிழ். இனிமையுந் தமிழும் இரண்டறக் கலந்தது. பின்னிப் பிணைந்தது. பிரிக்க வியலாதது" என்று கூறுவர். தமிழ் அன்பின் மொழி, அருளின் இருப்பிடம், பண்பின் விளைநிலம். அதனாற்றான் திருமூலரும், "என்னை நன்றாக இறைவன் படைத்தனன். தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே'' என்று திருவாய் மலர்ந்தருளினார். எல்லா மொழியாளரும், தத்தம் மொழியே இனிமையுடைத்தென்பர். மாடு என்னுஞ் சொற்குச் செல்வம் என்னும் பொருள் தோன்றியதுபோல், தமிழ் என்னும் சொற்கு இனிமை என்பது மதிப்பும், பற்றும் பற்றித் தோன்றிய வழிப்பொருளேயாகும்; தம் + இம் (இழும்) என்னும் சொற்பகுப்பில், 'தம்' என்னும் முன்னொட்டு தொடர்பற்றும், 'இழும்' என்னும் தலைமைச்சொல், ஈறாகக் குன்றியும் இருக்க வேண்டிய சூழல் ஏற்படுவதால், இனிமைப்பொருட் கரணியமும், பொருந்தாதென்றறிக *(தவ. 35).*

(எ.கா.) இழும் = இனிமை.

இழுமெனல் = இனிதாயிருத்தல்
இழுது = தேன், தித்திப்பு

சிறப்பு 'ழ'கரக்கருத்தும் சிறப்புடைத்தன்று

தனிமையாக 'ழ'கரத்தைக் கொண்ட தன்னேரில்லா மொழி தமிழ்மொழி. மேலோட்டமாக நோக்கினால், பொருந்துவது போல் தோன்றும். ஏனைய மொழிகளுடன் நோக்கினால், இஃதும், ஏற்புடைத்தன்று. குமரிக்கண்டத்திலேயே தமிழ் என்னும் பெயர் ஏற்பட்டுவிட்டது. தமிழ் என்னுஞ் சொல்லில் 'ழ்' இயல்பீறன்று.

(ஒ.நோ.) அம் + இழ் - அமிழ்
இம் + இழ் - இமிழ்
உம் + இழ் - உமிழ்
கும் + இழ் - குமிழ்
சிம் + இழ் - சிமிழ்

என்பவற்றிற்போல், (தம் + இழ் → தமிழ்) 'இழ்' என்பது 'இல்' என்பதன் திரிபு. தனிமையாக 'ழ'கரத்தைக் கொண்டதென்னும் பொருளில், 'தமிழ்' என்பது, தமி + ழ் என்று பிரிதல் வேண்டும். தமி = தனிமை. 'ழ' கரம், இனிதாய் ஒலிப்பதால், தனிமையாக 'ழ'கரத்தைக் கொண்ட தென்னுங் கூற்றும், இனிமைக் கருத்தைத் தழுவியதே.

இனிமையென்பது தமிழுக்கு 'ழ'கரத்தால் மட்டும் ஏற்பட்டதன்று. எழுத்தினிமை போன்றே, சொல்லினிமை உண்டு. இதுபற்றி, மாணிக்கவாசகர், தமது திருக்கோவைச் செய்யுளில்,

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலி னாய்ந்தவொண்
டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி
யேழிசைச் சூழல் புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென் கொலாம்
புகுந் தெய்தியதே'

என்று பாடியுள்ளார். ஈங்கு, "ஒண்டீந்தமிழின் துறை" என்று, ஏனைய மொழிகட்கு இல்லாத பொருளிலக்கணமும், ''ஏழிசைச்சூழல்'' என்று இசைத்தமிழும், இன்பத்துறைகளாகக் குறிக்கப்பட்டுள்ளமையால், தமிழின் தனிச் சிறப்புகள், நன்கு புலனாகும். ஏனென்றால், மாணிக்கவாசகர் காலத்தே, ஆரியமொழிகள் மேற்குறித்த ஆய்வுப்புலத்தை எட்டியிருத்தல் அரிதினும் அரிதாகும்.

ஒருநாட்டில், ஒரே மொழி வழங்குமாயின், அதற்குச் சிறப்புப்பெயர் தோன்றாது. பேச்சு அல்லது மொழி என்னும் பொதுப்பெயரே அதற்கு வழங்கும். ஓர் ஊரில், ஒரே ஓர் ஆறிருப்பின், அதை ஆறென்று, பொதுப் பெயரலாலேயே குறிப்பர். ஒரு மொழி ஆயிரங்கல் தொலைவிற்கு, அப்பாற் படரின், பல்வேறு கரணியம் பற்றித் திரிதல் இயல்பு. அத் திரிபு திடுதிப்பென்று, சின்னாளில் தோன்றாது. மெல்லமெல்லப் படிப்படியாகத் தோன்றும். அது மொழிபெயர்தல் எனப்படும். கீழ்க்காணும் கழகவிலக்கியப் பாக்கள், தமிழர்தம் மொழிபெயர்தேயச் செலவினைத் தெளிவுறுத்துகின்றன.

"குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற்கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே"
(குறுந். 11: 5-8)

"மொழிபெயர் பன்மலை யிறப்பினும்
ஒழிதல் செல்லா தொண்டொடி குணனே"
(ஐங். 321: 4-5)

"தமிழ்கெழு மூவர் காக்கும்"
மொரீபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே"
(அகம் 31: 14 - 15)

"பனிபடு சோலை வேங்கடத் தும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும் நல்குவர்"
(அகம் 211: 7 - 8)

தொன்றுதொட்டுத் தமிழுக்கு அடுத்த நிலையில், வடபால்வழங்கும் மொழி தெலுங்கு. தமிழர், தெலுங்கை, 'வடகு' என்றனர். வடகு உயிரியைபு மாற்றத்தால் 'வடுகு' என்று மாறும். நீலமலையில் வாழும் கன்னடத் திரவிடரைக் குறிக்கும் 'படகர்' என்னும் பெயர், வடகர் என்பதன் திரிபே. தெலுங்கையடுத்துத் திரிந்த பெருந்திரவிட மொழி கன்னடமே.

தமிழவணிகர் வடக்கிலுள்ள மொழிபெயர் நாட்டிற்குச் சென்றபோது, அந் நாட்டார், அவ் வணிகர் பேச்சைத் 'தம்மில்' (தம் + இல்) என்று குறித்திருக்கலாம். 'இல்' என்பது வீட்டையுங் குடியையும், ஊரையும் உணர்த்தும். (ஒ.நோ.) அன்பில், கிடங்கில், பொருந்தில்.

இற்பிறந்தார் = குடிப்பிறந்தார் என்னும் பொருண்மையில் பாடல்களில் பயின் றுள்ளமை காண்க.

திருவள்ளுவர் குறிப்பது கீழ்வருமாறு: (எ.கா.)

"இற்பிறந்தார் கண் அல்லது இல்லை
இயல்பாகச்"
செப்பமும் நாணும் ஒருங்கு" *(குறள், 951)*

"இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை
இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்"*(குறள்,1044)*

தம் இல் மொழியாவது, தம் வீட்டில் அல்லது நாட்டில் பேசும் மொழி.

தம்மில் → தமில். 'தம்மில்' என்பதே 'தமில்' எனத் தொக்குத் 'தமிழ்' என்று திரிந்தது. (ஒநோ.) வெய்யில் → வெயில் எனத் தொக்கு வழங்குதலை நோக்குக.

தமிழ் என்னும் திரிபில், மொழிப்பெயர்த் தன்மை முற்றிவிட்டது என்றறிக. *(தவ. 38)*

"தெலுங்கு என்னும் வடுகு, முதற்காலத்தில் தமிழினின்று மிக வேறுபட்டிருக்க முடியாது. இதைக் கீழ்க்காணும் பாடல் வரியால் அறியலாம்.

"வேங்கடத்தும்பர் மொழிபெயர் தேயம்" என்றது, வடுகு நாட்டையே என்பது தெளிவுறு தேற்றம். தாம் என்பது தாமு என்றும், தம் என்பது தம என்றும், தம்பின் என்பது தம்முடு என்றும், இல் என்பது இல்லு என்றும், இன்றும் தெலுங்கில் வழங்குவதால் தம்மில் என்பது தமில் என்னும் கூட்டுச்சொல், அக்கால வடுகிற்கு இயல்பானதே யென அறிக." (தவ. 38).

அலர்மேல் மங்கை →அலர்மேல்

என்று குறுகியது போல்,

தமில்மொழி → தமில்

என்று குறுகியது. 'தமில் → தமிள் → தமிழ்'. என்று நாளடைவில் குறுகி வழங்குதல் இயல்பே. 'ல → ள → ழ'கரத் திரிபு. பொருட் பொருத்தப்பாட்டிற்கு, முற்றிலும் ஒத்த நிலையில் அமைந்துள்ளது. லகரத்தினின்றே ளகரமும், ளகரத்தினின்றே ழகரமும் தோன்றி யிருத்தலால், லகரம் நேரடியாகவோ, ளகர வாயிலாகவோ, ழகரமாய்த் திரிதலுண்டு.

(எ.கா.)

மால் → மாழை; ஏலா → ஏழா (பழங்குடியினர் மனைவியை விளிக்கும் சொல்.) கல் → கள் → காள் → காழ் (கருப்பு). நாவிகை (மூங்கில்) → நாளம் (உட்டுளை) → நாழி (உட்டுளையுள்ளபடி).

ழகரம் லகரத்தின் மிகப் பிந்தியதாதலின், 'தமில்' என்னும் 'ல'கா வீற்று வடிவம், அப் பெயரின் தொன்மையையும் சுட்டும்.

'தன்மானம்', 'தமர்' என்னும் சொற்களில், தன், தம் என்பன படர்க்கை சுட்டாது சொந்த என்று பொருள்படுதல் போல், தமிழ் என்னும் சொல்லிலுள்ள 'தம்' என்னும் முன்னொட்டு, சொந்தம், உடைமை என்னும் பொருள்களைத் தரும்பான்மையில் உள்ளது. இதுவே, பொருட்பொருத்தப்பாட்டிற்கும் இயல்பானது. தமிழ்மொழி இயன்மொழி என்பதற்கும், நற்சான்று நல்குகிறது.

பாவாணரின் கொண்முடிபு

தமிழரே 'தமில்' என்னும் சொல்லில், 'சொந்த' என்று பொருள்தருமாறு, தம் மொழிக்கு, அப் பெயரை இட்டுக்கொண்டனர். (ஒ.நோ.)

சாயுங்காலம் → சாயங்காலம் என்று திரிவது போல், சாயம் என்னும் பெயரெச்சமே வடமொழியில் சாயுங்காலத்தைக் குறித்தல் போல், 'தமிழ்' என்னும் பெயரடை பெயர்த் தன்மைப்பட்டு, மொழியைக் குறித்ததென்க.

Skt. ஸாயம் → Hindi. ஸாம்

இதுகாறும், கூறியவற்றால், தமிழ் என்னும் பெயருக்குக் கூறப்பட்ட பொருட் கரணியங்கள், எல்லாவற்றுள்ளும், தனியாக 'ழ'கரத்தையுடையது, 'தந்நாட்டு மொழி' - என்னும் இரண்டே பொருத்தமானவை யென்றறிக. இவற்றினும், சிறந்தது தோன்றும் வரை, இவையே கொள்ளத்தக்கன வென்றும் எண்ணிக் கொள்க (த.வ. 39).

தமிழ்க்குச்சரி *tamil-k-kuccari*, பெ. (n.) குறிஞ்சி யாழ்த்திறவகை (பிங்.); a secondary melody - type of the kuriñji class.

[தமிழ் + குச்சரி]

தமிழ்க்கூத்தர் *tamil-k-kūttar*, பெ. (n.) தமிழக்கூத்து ஆடுபவர் (திவா.); dancers of the Tamils.

[தமிழ் + கூத்தர்]

தமிழ்க்கோன் *tamil-k-kōn*, பெ. (n.) சிவகங்கை வட்டம் சோழபுரம்கோயில் தான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்; a signatory of an agreement, recorded in the temple at Chōlapuram in Šivagangai Taluk. "இவை தமிழ்க்கோன் எழுத்து" (S.I.I. 26. 517).

[தமிழ் + கோன்]

தமிழ்ச்செய்-தல் *tamil-c-cey-*, 1 செ.குன்றாவி. (v.t.) தமிழில் அருளியற் பாக்களை இயற்றுதல்; to compose the eternal blissful hymns in Tamil. "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே" (திருமந்திரம்).

[தமிழ் + செய்-. தமிழில் அருள்நலம். செழுமிய பாக்களைப் பாடியவர் திருமூலர். தமிழின் பல்வகைச் சிறப்புகளைக் கூறுங்கால், "திருமை" என்னும் திருவருட் சிறப்பினையும் பாவாணர் குறிக்கின்றார் (த.வ.XXVi). தமிழ் என்றாலே திருமையென்னும், திருவருள் நிறைந்தது. தமிழ்ச்செய்தல் என்றால், திருவருளை வழிபடுதல். திருவருளில் இரண்டறக் கலத்தல். தமிழென்னும் திருவருளில் திளைப்பதற்குத் தான் இறைவன் என்னைப் படைத்தான் என்று, திருமூலர் கூறுகிறார். தமிழ் என்னும், திருவருளைத் தாமும் துய்த்துப் பிறரையுந் துய்க்குமுகத்தான், திருமந்திரம் இயற்றினார் என்றறிக.]

தமிழ்நடவை *tamil-naḍavai*, பெ. (n.) தமிழ் வழங்குமிடம்; the place where Tamil prevails.

[தமிழ் + நடவை]

தமிழ்நதி *tamil-nadi*, பெ. (n.) வைகையாறு; the Vaigai, as the river in the Šentamil country. "புதுநீர்த் தமிழ்நதிப்பால்" (திருவாலவா. திருநாட். 7).

[தமிழ் + நதி. செந்தமிழ் நாட்டிற்குரிய ஆறு]

தமிழ்நர் *tamilnar*, பெ. (n.) தமிழர்; the Tamils. "திந்தமிழ்நர் கோமான்" (இறை, 3, 49).

[தமிழ் → தமிழ்நர்]

தமிழ்நாடன் *tamilnāḍan*, பெ. (n.) 1. தமிழ் நாட்டு வேந்தன்; king of the Tamil country. "குரங்கிள நீர் தனைக்கொண்டெறியுந் தமிழ்நாடா" (தனிச்செய்யுட். 59:7). 2. பாண்டியவரசன் (திவா.); king of the Pāṇḍya family. 3. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்; one from Tamil country. 4. ஒரு தமிழ்க்கவிஞர்; one Tamil poet.

[தமிழ் + நாடன்]

தமிழ்நாவலர்சரிதை *tamil-nāvalar-šaridai*, பெ. (n.) புலவர் பலர் பாடிய தனிச் செய்யுட்களை, அவை பாடப்பெற்ற வரலாற்றுக் குறிப்புடன் கூறும், ஒரு தொகை நூல்; a collection of Tamil poems of various poets, along with their history.

[தமிழ் + நாவலர் + சரிதை]

தமிழ்நாடு *tamil-nāḍu*, பெ. (n.) தமிழ்மொழி பேசுவோர் வாழும், கிழக்குக் கடற்கரையை ஒட்டித் தென்முனைவரையில் உள்ள மாநிலம்; state of Tamil Nāḍu.

[தமிழ் + நாடு - தமிழ்நாடு. முன்னாள் தமிழக முதல்வர், பேரறிஞர் அண்ணா அவர்களால், 1969-ஆம் ஆண்டு, சென்னை மாநிலம் என்ற பெயர், தமிழ்நாடு என்று, மாற்றம் பெற்றது.]

தமிழ்ப்படுத்து-தல் *tamil-p-paḍuttu-*, 4 செ.குன்றாவி. (v.t.) *பிறமொழியிலுள்ளதனைத் தமிழில் மொழியாக்கம் செய்தல்;* to translate into Tamil.

[தமிழ் + படுத்து-.]

தமிழ்ப்பரணிகொண்டோன் *tamil-p-paraṇi-koṇḍōṉ*, பெ. (n.) 'பரணி' யெனுஞ் சிற்றிலக்கிய வகை மூலமாக, புலவர்தம் பாடு புகழ்க்குரிய (நாடுபல வென்றெடுத்த), இராசாதிராசன்; Rājādirājaṉ, the greatest and famous Tamil chōla-king.

தமிழ்ப்பொழில் *tamil-polil*, பெ. (n.) *காலாண்டுத் தமிழ் ஆய்விதழ்;* quarterly Tamil research edition.

[தமிழ் + பொழில்]

தமிழ்மருந்து *tamil-marundu*, பெ. (n.) *தமிழ் மருத்துவ நூல்களிற் கூறியவாறு செய்யப் பட்ட சித்தமருத்துவம்;* medicine prepared according to the Tamil medical system, dist. fr. šiṅgaḷa-marundu, allopathy, homeopathy etc., *(செ.அக.).*

மறுவ. சித்தமருந்து, கைமருந்து, மூலிகை மருந்து

[தமிழ் + மருந்து]

தமிழ்மலை *tamil-malai*, பெ. (n.) *திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பொதிய மலை (சங். அக.);* mount podiyam in Thirunelvēly, District.

[தமிழ் + மலை]

தமிழ்மறை[1] *tamil-maṟai*, பெ. (n.) *திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள்;* Thirukkuraḷ composed by Thiruvaḷḷuvar.

[தமிழ் + மறை]

தமிழ்மறை[2] *tamil-maṟai*, பெ. (n.) *திருஞான சம்பந்தப் பெருமானால் இயற்றப்பட்ட முதல்மூன்று திருமுறை;* the first three parts of Thirumuṟai by Thiruñāṉa Šambandar. "பன்னு தமிழ்மறையாம் பதிகம்பாடி" *(பெரியபு. திருஞான. 319)*

[தமிழ் + மறை → தமிழ்மறை. பன்னிரு திருமுறைகளுள், முதல்மூன்று திருமுறை.]

தமிழ்முத்தரையர்கோவை *tamil-muttaraiyar-kōvai*, பெ. (n.) *முத்தரையர் என்ற தமிழ்த் தலைவர் மேல் இயற்றப்பெற்ற கோவைநூல் (யாப். வி. 486);* a kōvai poem on certain Tamil chiefs called Muttaraiyar.

[தமிழ் + முத்தரையர் + கோவை]

தமிழ்முனி *tamil-muṉi*, பெ. (n.) தமிழ்முனிவர் பார்க்க; see *tamil-muṉivar.*

[தமிழ் + முனி]

தமிழ்முனிவர் *tamil-muṉivar*, பெ. (n.) *தமிழ் மொழியை இலக்கணத்தாற் செப்பஞ்செய்த அகத்திய முனிவர்;* Agaštya, as the sage, who wrote the first Tamil-grammar. "ஒண்டமிழ் முனிவனுண்ண" *(கந்தபு. சூரபன். வதை. 289).*

[தமிழ் + முனிவர். அகத்தியர், பன்னெடுங் காலத்திற்கு முன்பு யாத்த தலைக் கழக இலக்கணம் அகத்தியம். இந்நூல் ஆரியர் வருகைக்குப் பன்னெடுங் காலம் முந்தியது. இவர் பொதியமலையில் வாழ்ந்தவர். சித்த மருத்துவம் இவரோடு, தொடர்புடையது. பிற்காலத்தில், ஆரியக்கதைகளுள், வரும் அகத்தியரோடு இவரை ஒப்பிட்டு மயங்குதல், சரியன்று.]

தமிழ்மூவாயிரம் *tamil-mūvāyiram*, பெ. (n.) *பத்தாவது திருமுறையான திருமந்திரம்;* Tirumandiram, the 10th Thirumuṟai.

[தமிழ் + மூவாயிரம். தமிழ் = திருமந்திரம்.]

தமிழ்மூன்று *tamil-mūṉṟu*, பெ. (n.) *இயலிசை நாடகம் என முத்தமிழ்;* tamil language being divided into iyarramil, išai-t-tamil, nāḍaga-t tamil. "சங்கத் தமிழ் மூன்று" *(ஔவைப் பாட்டு).*

[தமிழ் + மூன்று]

தமிழ்வழிக்கல்வி *tamil-vali-k-kalvi*, பெ. (n.) *தமிழ் வாயிலாக அறிவியல் தொழில்நுட்பம் பயிலுகை;* learning science and technology through Tamil.

[தமிழ்வழி + கல்வி.]

தமிழ்வாணன் *tamil-vāṇaṉ*, பெ. (n.) *தமிழால் வாழ்கிறவன்;* Tamil poet or scholar. "தெள்ளு

தமிழ்வாண ரிசைவாணர் சூழ" (திருவாலவா. 57, 22).

[தமிழ் + வாழ்நன் → வாணன். (ஒ. நோ.) இசைவாணன்.]

தமிழ்வாழ்நர் *tamil-vālnar,* பெ. (n.) *தமிழ்ப் புலவர்;* Tamil-poets.

[தமிழ் + வாழ்நர்]

தமிழ்விரகன் *tamil-viragan,* பெ. (n.) *திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் (தமிழில் வல்லவன்);* Šaint Šambandhar, as proficient in Tamil. *"தமிழ்விரகன் மொழிகள்" (தேவா. 132: 11).*

[தமிழ் + விரகன். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பியதால், தமிழ்விரகன் என்றழைக்கப்பட்டார்]

தமிழ்வேதம் *tamil-vēdam,* பெ. (n.) 1. *திருவள்ளுவரின் திருக்குறள்;* the Kural of Tiruvalluvar. 2. *தேவாரம் முதலிய சிவத் திருமுறைகள்;* Tēvāram and other sacred hymns of the Šaivās. *"தமிழ் வேதம் பாடினார்" (பெரியபு. திருஞான. 260).* 3. *நம்மாழ்வார் அருளிச் செய்த, திவ்யப்பிரபந்தங்கள்;* tivya-p-pirapandam by Nammālvār. *"தமிழ் வேத பாராயணா சடகோபா" (அஷ்டப். திருவேங். மா. காப்பு).*

[தமில் → தமிள் → தமிழ் + வேதம்]

தமிழ்வேளர்கொல்லி *tamil-vēlar-kolli,* பெ. (n.). *மருதயாழ்த்திறவகை (பிங்.);* a secondary melody-type of the marudam class.

[தமிழ் + வேளர் + கொல்லி]

தமிழக்கூத்து *tamila-k-kūttu,* பெ. (n.) *தமிழ் நாட்டுக்குரிய கூத்து (தொல். எழுத். 385, உரை.);* dance system of the Tamils.

[தமிழ் + கூத்து]

தமிழகம் *tamil-agam,* பெ. (n.) *தமிழ்நாடு பார்க்க;* see *Tamilnādu.* *"வையக வரைப்பிற் றமிழகங் கேட்ப" (புறநா. 168: 18).*

[தமிழ் + அகம்]



தமிழச்சி *tamilacci,* பெ. (n.) *தமிழ்ப்பெண்;* lady of the Tamil clan.

[தமிழ் + அச்சி. அத்தி → அச்சி. ஒ. நோ. செட்டிச்சி. 'அச்சி' - சொல்லாக்க ஈறு]

தமிழத்தி *tamilatti,* பெ. (n.) *தமிழச்சி பார்க்க;* see *tamilacci.*

[தமிழ் + அத்தி. 'அத்தி' - சொல்லாக்க ஈறு]

ஒ.நோ. மறத்தி, குயத்தி

தமிழதரையன் *tamila-taraiyan,* பெ. (n.) *பழைய பட்டப்பெயர்களுளொன்று;* an ancient title. *"ஆதிராசேந்திரத் தமிழ தரையன்" (S.I.I. iii, 116).*

தமிழப்பல்லவதரையர் *tamila-p-palla-va-daraiyar,* பெ. (n.) *தமிழ்நாட்டுப் பல்லவரைசர் (நன். 164, மயிலை.);* The Pallavās of the Tamil country.

[தமிழ் + பல்லவ + தரையர்]

தமிழர் *tamilar,* பெ. (n.) *தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட மக்கள்;* people whose mother tongue is Tamil.

[தமிழ் + அர்]

சென்னைப் பல்கலைத் தமிழ்ப் பேரகர முதலியில் ஆங்கிலச் சொல்லான Tumbler என்பதற்கு, இணையாகக் கருதி, விளிம்பில்லாத நீர்க் குவளை என்று கூறியுள்ளனர். அதுவும் சரியன்று; தரையில் நிற்க இயலாத, வளைந்த அடிப்பாகம் கொண்ட குவளையைத்தான் குறிக்கும்; விளிம்பின்மை பற்றிய கருத்து இல்லை.

தமிழன் என்பதற்குப் பொருள் கூறித் தமிழர் என்னும் சொல்லை விடுத்தது, வியப்பாக உள்ளது. குவளை (டம்ளர்) போன்றவர் தமிழர் என்று இகழ்ந்து கூறுவது மடமை யென்றறியார் போலும்.

தமிழலங்காரம் *tamilalaṅgāram,* பெ. (n.) வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளாரால் (சுவாமிகள்) எழுதப்பட்ட நூல்; a book written by vaṇṇa-c-carabam-Thaṇḍapāṇi-aḍigaḷār.

[தமிழ் + அலங்காரம்]

தமிழவேள் *tamila-vēḷ,* பெ. (n.) காஞ்சியைப் பிறந்தகமாகக் கொண்டு, வீரபாண்டியன் ஆட்சியில் அமைச்சனாக, சேனைத் தலைவனாகப் புலமை நிரம்பிய கல்வியாளனாக, இருந்தவன்; Tamila-vēḷ, who was a native of Kāñci. served under Virapāṇḍiyan was an able administrator, great Tamil-scholar and also the chief of the army. "தண்டமிழோ டாரியநூல் வல்ல தமிழவேள்" *(S.I.I. v.xiv. 87).*

தமிழறியும்பெருமாள்கதை *tamil-ariyum-perumāḷ-kadai,* பெ. (n.) ஒரு தமிழ் உரைநடை நூல்; a prose work in Tamil (செ.அக.).

[தமிழ் + அறியும் + பெருமாள் + கதை]

தமிழன் *tamilan,* பெ. (n.) 1. தமிழைத் தாய் மொழியாக உடையவன்; one whose mother tongue is Tamil. 2. தமிழ் பேசுவோரில் பார்ப்பனர், அல்லாதார்; a Tamilian, as dist. fr. āriyan. "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" *(தேவா. 744:5).* சைவத்தைச் சிவனியம் என்றும், வைணவத்தை மாலியம் என்றும், மொழி பெயர்த்த பாவாணர், பார்ப்பனர் என்பதற்கு முன்பே மொழிபெயர்ப்பிருப்பினும், வட மொழிக்குத் தமிழில் மூலமான உயிர்மெய்யையும் தென்மொழிகளுக்குத் திணிப்பு முயற்சியாகவும் இருந்த சமற்கிருதத்தைத் தாய்மொழியாகக் கருதும் ஆரியப் பார்ப்பனப் பூசாரியை பிராமணர் என்றே, பாவாணர் எழுதினார்.

[தமிழ் + அன் = தமிழைத் தாய்மொழி யாகவோ, பண்பாட்டு – பயன்பாட்டு மொழியாகவோ, கொண்டவன்; தமிழ் மூதாதையர் வழி வந்தவன்.]

தமிழாக்கம் *tamil-ākkam,* பெ. (n.) பிறமொழிச் சொற்கள், தொடர்கள், கருத்துக்களைத் தமிழ்மைப்படுத்தல்; தமிழ் ஒலிப்படுத்துகை; Tamil translation/tamilization.

[தமிழ் + ஆக்கம்]

தமிழாகரன் *tamil-āgaran,* பெ. (n.) (தமிழுக்கு நிலைக்களமானவன்) திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்; Šaint Šambandhar, as the mine of Tamil learning. "தமிழாகரன்றன் புகலி" *(பதினொ. ஆளுடை. 35).*

[தமிழ் + ஆகு + அரன். அரன் = நிலைக்கள மானவன். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பி, ஊர்தோறுஞ் சென்று அருளியற்றமிழை வளர்த்தவர்.]

தமிழாசான் *tamil-āšān,* பெ. (n.) தமிழ்முனிவர் பார்க்க; see *tamil-munivar.*

[தமிழ் + ஆசான்]

தமிழி *tamili,* பெ. (n.) தமிழ்மொழியின், தொன்முது வரிவடிவம்; the earliest Tamil letter.

[தமிலி → தமிளி → தமிழி – வடமொழி வரவிற்கும், அசோகக் கல்வெட்டில் காணப்படும் பிராமி எழுத்திற்கும் முற்பட்ட எழுத்து. தமிழ்மொழியின் முதல் வரிவடிவம். இதன் காலம் கி.மு. 4.]

தமிழிச்சி *tamilicci,* பெ. (n.) தமிழச்சி பார்க்க; see *tamilacci* (செ.அக.).

[தமிழச்சி → தமிழிச்சி]

தமிழியக்கம் *tamil-iyakkam,* பெ. (n.) புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் இயற்றப்பட்ட நூல்; a remarkable poetic verse, written by Puraṭci-k-kaviñar Bhāradidāsan.

[தமிழ் + இயக்கம். தமிழின் விடுதலை குறித்து எழுதப்பட்ட பாவியம். இக்கவிதை நூலுள் பாரதிதாசன், தமிழ்நாட்டின் தமிழ்த்தெருவில் தமிழ் இல்லாத நிலையினை, மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். "வீசுகின்ற காற்றினிலே குளிராயில்லை . . . மாந்தோப்பில் நிழலாயில்லை . . . தமிழ்நாட்டின் தமிழ்த் தெருவில் தமிழ்தானில்லை". தமிழரின்

முன்னேற்றமே, தமிழின் முன்னேற்றம் என்பது இக்கவிதை நூலுள் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.]

தமிழியல் *tamil-iyal,* பெ. (n.) தமிழ்மொழி, மக்கள், பண்பாடு முதலியன பற்றிய ஆய்வு; study related to Tamil language, people and culture, Tamilology.

[தமிழ் + இயல். தமிழர் தம் வாழ்வியற் புலம்]

தமிழியல்வழக்கு *tamil-iyal-valakku,* பெ. (n.) பண்டைக்காலத்துத் தமிழ்நூல்களிற் கூறப்படும் அகவாழ்க்கை; a system of love-marriage set forth in ancient Tamil works. "தமிழியல் வழக்கினன் றணப்புமிகப் பெருக்கி" (பெருங். வத்தவ. 17: 67).

[தமிழ் + இயல் + வழக்கு]

தமிழெல்லை *tamilellai,* பெ. (n.) தமிழ் உரிமையாய் வழங்கும் நிலம்; the frontier of the Tamil. "குமரி கடல் குமரி குடகம் வேங்கட" மென்பது (நன். சிறப்பா.)

[தமிழ் + எல்லை]

தமிழோர் *tamilōr,* பெ. (n.) 1. தமிழ்மக்கள்; the Tamils. 2. தமிழ்ப்புலவர்; Tamil poets or scholars. "மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்" (நீதிநெறி. 7).

[தமிழார் → தமிழோர்]

தமினியம் *taminiyam,* பெ. (n.) பேய்; devil.

தமுக்கடி-த்தல் *tamukkadi-,* 4 செ.கு.வி. & செ.குன்றாவி. (v.i & v.t.) 1. பறைசாற்றிச் செய்தி அறிவித்தல்; to tomtom, publish orders by beat of drum. 2. தேவையில்லாத போதும், பிறருக்கு அறிவித்தல் (இவ.); to give unnecessary publicity to a news.

[தமுக்கு + அடி. தமுக்கு = செய்தி தெரிவிக்க முழக்கும், ஒருகட்பறை]

தமுக்கம் *tamukkam,* பெ. (n.) 1. யானையைப் போருக்கும் அனுப்பும் தாவளம் (வின்.); place where elephants are sent together to battle. 2. மதுரையில் திருமலை நாயக்கர் கட்டியது போன்ற, வசந்தமாளிகை; summer house, royal pavilion, as the Thirumalai Nāyak building at Madurai.

தெ. தமகமு; ம. தமுக்கம்

[தள் → தளம் = இடம். தள் → தம் → தமம். தமுக்கு + அம் – தமுக்கம்]

தமுக்கு *tamukku,* பெ. (n.) செய்தி தெரிவிக்க முழக்கும் ஒருகட் பறை; a musical instrument in use for collecting people to pass on a message (செ.அக.).

[தமுக்கு = தொம் தொம் என்றொலித்து முழக்கும், இசைக்கருவி. தும் → தொம் → தொமுக்கு → தமுக்கு]



தமுக்குப்போடு-தல் *tamukku-p-pōdu-,* 8 செ.கு.வி. & 19 செ.குன்றாவி. (v.i & v.t) செய்தி கூறுவதற்காக மக்களைத் திரட்ட, தமுக்கு என்னும் ஒருகட் பறையில், ஒலி எழுப்புதல்; to raise sound by beating the tamukku to collect people for propagation of a news (செ.அக.).

மறுவ. தமுக்கடிக்கடித்தல்.

[தமுக்கு + போடு-.]

தமுக்கை *tamukkai,* பெ. (n.) தமுக்கு (இ.வ.) பார்க்க; see *tamukku.*

[தமுக்கு → தமுக்கை.]

தமுழநாடு *tamulanādu,* பெ. (n.) காஞ்சிபுர வட்டத்தில், திருக்கச்சூர் அருகில் இருந்த சிறுநாட்டுப்பகுதி; name of a small region near Thirukkaccūr in Kāñjipuram taluk; "இன்னாட்டு ஆமூர்க் கோட்டத்து தமுழனாட்டு உத்திப்பாக்கம் ஆன ஆதினாயகச் சதுர்வேலி மங்கலத்து" (S.I.I.xvi. 333.).

[தமிழ் + நாடு → தமிழநாடு → தமுழநாடு]

தமை[1] *tamai,* பெ. (n.) *ஆசை;* passion, desire. "அவனுக்கு அதிகத் தமையிருக்கிறது".

தெ. தமி.

[அமை → தமை; தமை = ஆசை வசப்படுகை]

தமை[2] *tamai,* பெ. (n.) *அறிவுப்புலம், வினைப் புலம் ஆகியவற்றை அடக்குகை;* restraint of ñānēndiriyam and kaṉmēndiriyam. "தமைதான் புறக்கரண மடக்கல்" *(வேதா. சூ. 11).*

[தம் + ஐ → தமை.]

தமையம் *tamaiyam,* பெ. (n.) *அரிதாரம்* (வின்.) *தாளகச் செய்நஞ்சு;* yellow arpiment.

[தமை + அம் → தமையம்.]

தமையன் *tam-aiyaṉ,* பெ. (n.) *1. தன் முன் பிறந்தவன், அண்ணன்;* elder brother. "தமைய னெம்மையன்" *(திருவாச. 9: 13).* *2. அண்ணன் முறையான்;* elder male cousin, who is the son of a paternal uncle or maternal aunt.

ம. தமயன்

[தம் + ஐயன், ஐயன் = அண்ணன்]

தமோகுணம் *tamō-kuṇam,* பெ. (n.) *முக் குணங்களுள் காமம், வெகுளி, மயக்கம் முதலிய தீய பண்புகளுக்குக் காரணமாயிருப்பது;* the subtle quality of darkness or ignorance manifested in torpor, sleep, lust, anger, etc., one of mu-k-kuṇam *(செ.அக.).*

[தம்குணம் → தமோகுணம். தமை = காமம், வெகுளி, மயக்கம் ஆகியவற்றின் அடிப்படையான ஆசை, பாசம்.]

தய்யான் *tayyāṉ,* பெ. (n.) *தையற்காரன்;* tailor. "தையானொரு வனுக்கு... பங்கு ஒன்றும்" (S.I.I. ii, 277).

மறுவ. துன்னற்காரன்

[தை → தய் → தய்யன் → தய்யான். ஒருகா. தைய்யன் → தய்யன் → தய்யான்.]

தயக்கம்[1] *tayakkam,* பெ. (n.) *1. ஒளிவிடுகை;* glittering, shining. *2. தோற்றம்;* appearance, manifestation. "அளகைமா நகருறை தயக்க மொக்கும்" *(திருவிளை. நகரப். 69).*

[துளங்கு → தளங்கு → தயங்கு → தயக்கம் (மு.தா. 147)]

தயக்கம்[2] *tayakkam,* பெ. (n.) *1. கலக்கம்;* perplexity, dejection. *2. அசைவு;* wavering, flexibility. *3. தடுமாற்றம்;* staggering. உண்மையை எப்படி உரைப்பது என்ற தயக்கம் அவர் கண்ணில் தெரிந்தது *(உ.வ.).*

[துளங்கு → தளங்கு = அசைவு. தளங்கு → தயங்கு = கலங்கு. கலக்கம். (மு.தா. 147) தயங்கு → தயக்கம்]

தயக்கம்[3] *tayakkam,* பெ. (n.) *உடனடியாகச் செய்யவிரும்பாமல் காலந்தாழ்த்தும் உள்நோக்கம்;* hesitation. கேட்ட கேள்விக்கு விடையிறுக்கத் தயக்கம் காட்டக் கூடாது (இ.வ.). சிக்கலைத் தீர்ப்பதில் நிருவாகம் ஏன் தயக்கம் காட்டுகிறது என்று தெரியவில்லை *(உ.வ.).*

[துளங்கு → தளங்கு → தயங்கு → தயக்கம் = அசைதல்; உறுதியான முடிவு எடுக்க முடியாமை]

தயங்்கு[1]**-தல்** *tayaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) *1. ஒளிவிடுதல்;* to glitter, shine. "தயங்குதாரகை" *(கம்பரா. வாலிவதை. 53).* *2. தெளிவாயிருத்தல்;* to be clear, lucid. "தன்போல்வா ரில்லுட் டயங்குநீர்த் தண்புற்கை" *(நாலடி. 210).*

[துளங்கு → தளங்கு; தளங்குதல் = ஒளிருதல். தளங்கு → தயங்கு = கலக்கமற்றுத் தெளிதல். துளங்கு → தளங்கு → தயங்கு-. (வ.வ. 172)]

தயங்கு[2]**-தல்** *tayaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) *1. திகைத்தல்;* to be perplexed, agitated in mind, confused; to hesitate, waver. "தயங்கியே மயங்கி வீழ்வாள்" *(அரிச். பு. மயான. 17).* *2. வாடுதல்;* to droop; to lose heart. "தாமிடர்ப் பட்டுத் தளிர்போற் றயங்கினும்" *(திருமந். 544).* *3. அசைதல்;* to sway, move to and fro. "தயங்கிய களிற்றின்மேல்" *(கலித். 31: 10).* *4. காலந் தாழ்த்துதல்;* to delay. ஒரு முடிவு எடுத்தபின் தயங்குவது என்பது அவரிடம் கிடையாது *(உ.வ.).* *5. நடுங்குதல்;* to tremble.

[துளங்கு → தளங்கு → தயங்கு → தயங்கு-. = அசைதல்; (வ.வ.172).]

தயங்குவாளி *tayaṅgu-vāḷi,* பெ. (n.) *அரிதாரம் (மனோசிலை);* red orpiment.

மறுவ. தாளகம்

[தயங்கு + வாளி]

தயச்செவம் *taya-c-cevam,* பெ. (n.) அவல்; flaked rice.

தயந்திரம் *tayan-diram,* பெ. (n.) உறிஞ்சுகை; sucking.

தயநாதசாதி *taya-nāda-šādi,* பெ. (n.) நால்வகை ஆண் பிரிவினருள் ஒன்று; one of the four classes of man.

தயமணற்குன்றம் *tayamaṇaṟ-kuṉṟam,* பெ. (n.) கருமணல்; black-sand.

[தயமணல் + குன்றம்]

தயல் *tayal,* பெ. (n.) பெண்; woman. "தயல்வளர் மேனியன்" *(திருக்கோ. 117).*

[தையல் → தயல்]

தயவு *tayavu,* பெ. (n.) *1.* அருள்; grace, mercy; compassion. "கண்டித்தொடையான் தயவுடையான்" *(சிவரக. நைமிசா.47). 2.* அன்பு; love, passion. 'தாசிமேல் வைத்தேன் தயவு நான்" *(விறலிவிடு. 106). 3.* இறைப்பற்று; piety. "உயர்தயவி னினையுமவர்" *(திருப்போ. சந். பெரியகட். 2:2.).* 4. பிறர் கொடையுள்ளத்துடன் நடப்பதால், கிடைக்கும் ஆதரவு; favour that one wins or receives. உங்களுடைய தயவினால்தான் இன்று ஒரு நல்ல நிலையில் இருக்கிறேன். *(உ.வ.).*

[தாய் → தய் → தயய் → தயை → தயவு = தயையுடையவளே தாய். முதற்கண் தாயின் பண்பான அன்பையும் அருளையும், குறித்த இச் சொல், காலப் போக்கில், "தாயிற் சிறந்த தயவான தத்துவனே" என்று, இறைவனையுங் குறிக்க வழங்கிற்றெனலாம்]

தயவுசெய்து *tayavu-šeydu,* குவிஎ. (adv.) பணிவு, மரியாதை போன்றவற்றை வெளிப்படுத்துஞ் சொல்; polite form of request; 'please'. தயவு செய்து அமைதியாக இருங்கள் *(உ.வ.).*

[தவ → தய. தய + உ தயவு. வ → ய திரிவு. 'உ' சாரியை. தயவு + செய்து – பேச்சில் எழுத்தில், ஒன்றைச் செய்யுமாறு வேண்டும்போது, பணிவினையும், மரியாதையையும் வெளிக்காட்டும் பான்மையில், இச் சொல் பரவலாக பயன்படுத்தப்படுகிறது. தயவுசெய்து முழுமையாக என்னைப் புரிந்து கொள்ளுங்கள். தயவுசெய்து முழுப் பணத்தையும் அனுப்பிவையுங்கள். போன்ற வழக்குகள் அனைத்துப் பிரிவினரிடையேயும் வழங்குவது கண்கூடு.]

தயவுதாட்சண்யம் *tayavu-tāṭcaṇyam,* பெ. (n.) ஈவிரக்கம்; pity or consideration.

[தயவு + Skt. தாட்சண்யம் – பெரும் பாலும் எதிர்மறை வினை வடிவங்களுடன் இணைந்து, ஈவிரக்கம் என்னும் பொருளில், மக்களிடையே இச் சொல், வழக்கூன்றியுள்ளது. தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், தயவுதாட்சண்யம் பார்க்காமல் நடவடிக்கை எடுக்கப்படும் (உ.வ.).]

தயனியம் *tayaṉiyam,* பெ. (n.) இரங்கத்தக்கது; that which deserves one's pity. "தயனியக்கவி பாடுவோம்" *(தமிழ் நா. 231).*

[தயை → தயன் + இயம். 'தயம்' சொல்லாக்க ஈறு]

தயா *tayā,* பெ. (n.) அன்பு, அருள்; love, grace. "தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்" *(திருவாச. 13: 3).*

[தயவு → தயா. ஒ.நோ. நிலவு → நிலா; உலவு → உலா]

தயாகரம் *tayāgaram,* பெ. (n.) இரக்கம்; pity.

[தயை + ஆகரம்]

தயாகரன் *tayāgaraṉ,* பெ. (n.) அருளுணர்வு மிக்கவன்; store-house of mercy.

மறுவ. அருளாளன்

[தயை + ஆகரன். ஆகரன் = ஆண்பால் சொல்லாக்க ஈறு. ஒ.நோ. கருணாகரன்]

தயாகூர்ச்சன் *tayā-kūrccaṉ,* பெ. (n.) புத்தன்; Buddhaṉ.

[தயா + கூர்ச்சன். அன்பையும், அருளையும் மிக்குடையன்.]

தயாசமுத்திரம் *tayā-šamuttiram,* பெ. (n.) அருட்கடல்; ocean of mercy.

மறுவ. அருளாழி

[தயா + சமுத்திரம்]

தயாசீலன் *tayā-šīlan*, பெ.(n.) அருளாளன்; benevolent, merciful person (செ.அக.).

மறுவ. அருட்பண்பன்

[தயை → தயா + சீலன் = பேரருளான். அருளொழுக்கம் பூண்டு அன்பின் பிறப்பிடமிகத் திகழ்பவனே, தயாசீலன்]

தயாதருமம் *tayā-tarumam*, பெ.(n.) அருளாகிய அறம்; duty of love and mercy towards others. "அவனுக்குத் தயாதருமத்தை உபதேசஞ் செய்து" (மணிமே. 11: 10 உரை).

[தயா + தருமம்]

தயாநிதி[1] *tayā-nidi*, பெ. (n.) அருட்செல்வர்; benevolent, merciful. "இன்னருள் சேர் தயாநிதியே" (திருவாலவா. 24: 3).

மறுவ. அருணிதியான்

[தயா + நிதி]

தயாநிதி[2] *tayā-nidi*, பெ. (n.) மூச்சகப்பயிற்சி; regulation of respiration.

[தயா + நிதி → தயாநிதி]

தயாபம் *tayābam*, பெ. (n.) அருள் (புதுவை); grace, mercy.

[தயா → தயாபம்]

தயாபரன் *tayā-paran*, பெ. (n.) 1. கடவுள் (தயை மிக்கவன்); God, as All-merciful. "தானேயாகிய தயாபர னெம்மிறை" (திருவாச. 2:96). 2. தயாசீலன் பார்க்க; see *tayā-šīlan*

மறுவ. அருட்பரமன், அருட்பரன்

[தயா+பரம் → பரன் = தயாபரன், உயர்ந்தவன்; மேலான பரம்பொருள்: அருள்வடிவங் கொண்ட பேராளன்]

தயாவம் *tayāvam*, பெ. (n.) இரக்கம், அருள் (யாழ். அக.); mercy.

[தயா → தயவு → தயவம் → தயாவம். "அம்" பெருமைப் பெயரொட்டு]

தயாவீரன் *tayā-vīran*, பெ. (n.) புத்தன் (மணிமே. 30,11.உரை) (தயையில் (அருளில்) மேம் பட்டவன்); Buddhan, as heroic in acts of grace.

மறுவ. அறிவன். தனித்தந்தை

[தயை → தயா + வீரன் = அருட்பண்பில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாப் பேரருளான். அருட்பண்பில் உயர்ந்து நிற்கையும், வீரமென்றறிக.]

தயாவு *tayāvu*, பெ. (n.) அருள்; mercy. "தயாவு தாங்கலால்" (கம்பரா. மாரீச. 126).

[தயவு → தயாவு]

தயாளசிந்தை *tayāla-šindai*, பெ. (n.) பரந்த மனப்பான்மை; large heartedness. கலைவாணர் மிகுந்த தயாளச்சிந்தை படைத்தவர் (உ.வ.).

[தயை → தயா → தயாள் + அம் + சிந்தை தயாளசிந்தை. தயாளம் = ஈகம். 'அம்' பெருமைப்பொருள் பின்னொட்டு]

தயாளம் *tayāḷam*, பெ. (n.) 1. ஈகம்; தாராளம்; liberal. அவர் மிகுந்த தயாளகுணம் உடையவர் (உ.வ.). 2. பெருந்தன்மை; generosity. அவருடைய தயாளத்தைப் பாராட்டாதவர்களே இல்லை (உ.வ.).

மறுவ. அருண்மை, அருளாண்மை

[தயை → தயா → தயாளம். ஒருகா. தயாள் + அம் → தயாளம் = அருண்மை. "அம்" பெருமைப் பொருள் பின்னொட்டு]

தயாளன் *tayāḷan*, பெ. (n.) தாராளகுணம் கொண்டவன்; one who has liberal mind.

மறுவ. பேரருளாளன், அருள்நெஞ்சன்

[தயாளம் → தயாளன். தயாளன் = ஈகையாளன்]

தயாளு *tayāḷu*, பெ. (n.) தயாளன்; one who is very liberal. "குற்றங் குணமாகக் கொள்ளுந் தயாளு" (அருட்பா, i திருவருள். 11).

மறுவ. அருளம்மை

[தயாள் → தயாளு]

தயித்தமணி *tayitta-maṇi*, பெ. (n.) மரமஞ்சள்; tree turmeric.

[தயித்தம் + மணி]

தயித்தியர் *tayittiyar*, பெ. (n.) அரக்கர், அசுரர்; ašurar. "தயித்தியர்க் கிறைபால்" (கந்தபு. சயமுகனுற். 43).

[தயை → தயய் + த் + இயர். மிகுந்த இரக்கம் கொண்டஅரக்கர்]

தயித்தியன் *tayittiyan*, பெ. (n.) அன்பன்; kind, loving person. "தயித்தியனாத தமிழ்முள்ளி நாடன்" (நெல்விடு. 413).

[தயை → தயய் + த் + இயன். அருளையும், அன்பையும் அனைவரிடத்தும் பூண்டொழுகுபவன்]

தயித்திரியம் *tayi-t-tiriyam*, பெ. (n.) தைத்திரியரால் செய்யப்பட்ட நூல்; a poetic verse wrtten by Tayittiriyar.

தயிதன் *tayidan*, பெ. (n.) கணவன்; husband.

தயிதை *tayidai*, பெ. (n.) பெண்; woman.

தயிர் tayir, பெ. (n.) 1. பால் பிரைவிட்ட பின்னர் உறைந்த பண்டம்; curds, tyre. "தயிர்காயம் பெய்தடினும்" (நாலடி. 116). 2. மூளைக்கொழுப்பு; brain matter. "வீரர்மூளைத் தண்ட யிரினுடன்" (கலிங். 506).

தெ., ம. தயிர்

த. தயிர் Skt. தகி. ய → க: போலி

ஒ.நோ. எயிர் → எகிர், வயிர் → வகிர்

[தயிர் = பாலில் பிரைகுத்தியவுடன், தோயுந்தன்மை மிக்கதும் உடலுக்கு தண்மையூட்டுவதுந் தயிரேயாகும். தை → தய் → தயிர். தை → தயிர். ஒ.நோ. ஐ → அயிர் (நுண்மை); மை → மயிர் (கரியது). வை → வயிர் (கூர்மை); பை → பயிர் (பசியது). தைத்தல் = குத்துதல், முட்குத்துதல். "கானவேல்முட் டைக்குங் காடு" (பொய்யமொழிப் புலவர்). பாலிற்கு உறைமோரிடுதலை உறைகுத்துதல், பிரைகுத்துதல் என்பது வழக்கு (உ.வ.)]

தயிர் வகைகள்

I. ஆடையெடுத்த தயிர்: வெண்ணெய் அகற்றிய தயிர், பாலேடு நீக்கிய தயிர். அதிகச் சூட்டைத் தணிக்கும். வேனிற்காலத்தில் உட்கொண்டால், உடலுக்கு குளுமையேற் படும்.

1. சிறுநீர் எரிச்சலைப் போக்கும்
2. இணைவிழைச்சு(மேகம்) நோயினைத் தணிக்கும்.
3. தொழுநோயினுக்கு கைகண்ட மருந்து.
4. தோலினுக்கு மினுமினுப்பை உண்டாக்கும்.
5. ஆவின்தயிர் கோழையினை அகற்றும்.

II. ஆடையெடுக்காத (பாலேடு அகற்றாத) எருமைத் தயிரின் தன்மை வருமாறு

1. உடம்பினுக்கு கொழுப்பைக் கொடுக்கும்
2. மந்தநிலையை யுருவாக்கும்
3. மிகுசோம்பலையும், அளவிற்கு அதிகமான தூக்கத்தையும், கொடுக்கும்.
4. கரப்பான் நோயினைத் தரும்.
5. சளியை உருவாக்கும்.

III. வெள்ளாட்டுத் தயிர் உடம்பிற்குச் சூட்டினைத் தரும்.

தயிர்க்கடல் *tayir-k-kaḍal*, பெ. (n.) எழு கடல்களுள் ஒன்றாய்த் தயிர்வடிவான கடல் (பிங்.); ocean of curds, one of eḻu-kaḍal.

[தயிர் + கடல்]

தயிர்க்காய்ச்சி *tayir-k-kāycci*, பெ. (n.) ஒரு வகைத் தென்னை; a species of coconut tree.

[தயிர் + காய்ச்சி]

தயிர்க்கிச்சடி *tayir-k-kiccaḍi*, பெ. (n.) தயிரிற் செய்த கிச்சடிவகை; a kind of fluid relish made of curd and other ingredients.

[தயிர் + கிச்சடி]

தயிர்க்குழம்பு *tayir-k-kuḻambu*, பெ. (n.) காமாலை நோய்க்குப் பயன்படும் தயிர் கலந்த, மருந்துவகை (வின்.); a thick medicine, made chiefly of curds, used for jaundice.

[தயிர் + குழம்பு]

தயிர்க்கோல் *tayir-k-kōl*, பெ. (n.) மத்து (பிங்); churning rod.

மறுவ. தயிர்க்கம்பு, தயிர்த்தறி

[தயிர் + கோல்]



தயிர்கடைதறி *tayir-kaḍai-taṟi,* பெ. (n.) தயிர் கடைதற்குப் பயன்படுத்துந் தம்பம் (திவா.); fixed post used in churning curds.

மறுவ. தயிர்மத்து

[தயிர் + கடைதறி]

தயிர்கடைதாழி *tayir-kaḍai-tāḻi,* பெ. (n.) மத்திட்டுக்கடையும் தயிர்ப்பானை (திவா.); pot used in churning.

மறுவ. குடாகு

[தயிர் + கடை + தாழி]

தயிர்ச்சாதம் *tayir-c-cādam,* பெ. (n.) தயிர் கலந்த சோறு; rice mixed with curds.

மறுவ. தயிர்ச்சோறு

[தயிர் + சாதம்]

தயிர்ச்சுண்டி *tayir-c-cuṇḍi,* பெ. (n.) 1. நீரை வடித்த தயிர்; dehydrated solid-curd. 2. இறுகிய தயிர்; solid-curd. 3. புளித்தயிர்; sour-curd.

மறுவ. கட்டித்தயிர்

[தயிர் + சுண்டி → தயிர்ச் சுண்டி. சுண்டு → சுண்டி = நீர் வற்றுகை]

தயிர்ச்சுண்டிச்சூரணம் *tayir-c-cuṇḍi-c-cūraṇam,* பெ.(n.) மந்தம், வயிற்றுப்பொருமல், பசியின்மை, கழிச்சல் போன்ற நோய்களுக்குக் கொடுக்கும் ஐவகை உப்பும், சுக்கும் கலந்த மருந்து; a medicinal powder prepared with solid curd, five salts and dried ginger and given for dullness of appetite diarrhoea.

[தயிர்ச்சுண்டி + சூரணம்]

தயிர்த்தண்ணீர் *tayir-t-taṇṇīr,* பெ. (n.) தயிர்த்தேட்டை பார்க்க; see *tayir-t-teṭṭai.*

[தயிர் + தண்ணீர்]

தயிர்த்தேட்டை *tayir-t-tēṭṭai,* பெ. (n.) தயிரிலிறுத்த நீர்; the watery portion of the curd.

[தயிர் + தேட்டை]

தயிர்வடை *tayir-vaḍai,* பெ. (n.) தாளித்த தயிர் ஊறிய வடை; cake of black-gram pulse soaked in curds.

[தயிர் + வடை]

தயிர்வளை *tayir-vaḷai,* பெ. (n.) தயிர்வேளை பார்க்க; see *tayir-vēḷai.*

மறுவ. நல்லவேளை

[தைவேளை → தையில்வேளை → தயிர் வேளை → தயிர்வளை]

தயிர்வேளை *tayir-vēḷai,* பெ. (n.) தைவேளை (யாழ்ப்.); a sticky plant, balck vailay.

[தையிர்வேளை → தயிர்வேளை]

தயிரமுது *tayir-amudu,* பெ. (n.) கடவுட்கு அல்லது அடியார்க்குப் படைக்குந் தயிர்ச் சோறு (S.I.I. iii, 116); offering of curds as given to idols, devotees, etc.

[தை → தயிர் + 'முது = தயிரமுது]

தயிரமுர்து *tayir-amurdu,* பெ. (n.) தயிரமுது (S.I.I. iii, 102) பார்க்க; see *tayir-amudu.*

[தயிர் + அமுர்து = 'அமுர்து', கல்வெட்டு வழக்கு]

தயிரியம் *tayiriyam,* பெ. (n.) உள்ளத்திட்பம்; courage, "தயிரியமாஞ் சிவபத்தி பூண்டே" (சிவா.க. ஞானவாலன்கலியாணநி. 20).

[தகு → தகிர் → தயிர் + இயம் − தயிரியம், சமநிலையுடன் கூடிய மனத்திட்பம்]

தயிரிற்றிமிரல் *tayiṟ-ṟimiral,* பெ. (n.) தயிர்ச் சோறு (பிங்.); curd-rice.

[தயிர் + இல் + திமிரல்]

தயிரேடு *tayirēḍu,* பெ. (n.) தயிரின் மேற்படர்ந்த பாலாடை; cream over the curdled milk.

[தயிர் + ஏடு]

தயிலக்காப்பு *tayila-k-kāppu,* பெ. (n.) கடவுள் திருமேனிக்கு எண்ணெய் சாத்துகை (கோயிலொ. 8); smearing an idol with oil.

[தையிலம் → தயிலம் + காப்பு]

தயிலகித்தம் *tayilagittam,* பெ. (n.) பிண்ணாக்கு; oil-cake.

[தயிலம் + கிட்டித்தம் → இத்தம்]

தயிலகாதனம் *tayila-gādaṉam,* பெ. (n.) நஞ்சு நெய்; ghee prepared with aconite.

[தயிலம் + ஆகாதனம். உணவுக்கு ஆகாதது.]

தயிலத்தளுக்கு *tayila-t-taḷukku,* பெ. (n.) வயிரம்; diamond.

[தயிலம் + தளுக்கு.]

தயிலபாணிகம் *tayila-pāṇigam*, பெ.(n.) வெண்சந்தனம் *(மலை.)*; white sandal-wood.

மறுவ. சந்தனக்கட்டை

[தயிலம் + பாணிகம்]

தயிலபீதம் *tayila-pīdam*, பெ. (n.) அத்திப்பிசின் *(மலை.)*; milk of the fig-tree.

[தயிலம் + பீதம்]

தயிலம் *tayilam*, பெ. (n.) 1. வடித்த மருந்தெண்ணெய் *(சூடா.)*; ointment, medicated oil, balm. 2. எண்ணெய்; oil. "தயிலக்கடலின்றலை யுய்த்தார்" *(கம்பரா. தைலமாட்டு: 75).*

மறுவ. நெய்ம்மருந்து, வடிப்புநெய்மம்

[தயிர் → தயில் + அம் → தயிலம்]

தயில் = அடர்த்தி மிக்கது. 'அம்' சாரியை. ஒ.நோ. தயில் → தயிர். பந்தல் → பந்தர் (கடைப்போலி)

தயிலம்வடி-த்தல் *tayilam̄-vaḍi-*, 4 செ.குவி. (v.i.) தயிலமிறக்கு-தல் பார்க்க; see *tayilam-irakku-*.

[தைலம் → தயிலம் + வடி-.]

தயிலம்வை-த்தல் *tayilam-vai-*, 18 செ.குன்றாவி. (v.t.) தயிலமாட்டு *(யாழ்.அக.)* பார்க்க; see *tayilam-āṭṭu-*.

[தயிலம் + வை-.]

தயிலமாட்டு-தல் *tayilam-āṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) பிணத்தை எண்ணெயிலிட்டுக் கெடாமற் காத்தல்; to embalm, preserve in medicated oil, as a corpse. "தயிலமாட்டு புடலம்" *(கம்பரா.).*

[தையிலம் → தயிலம் + ஆட்டு-.]

தயிலமாடு-தல் *tayilam-āḍu-*, 5 செ.குவி. (v.i.) 1. செக்காட்டி எண்ணெயெடுத்தல் *(யாழ். அக.)*; to extract oil from oil-seeds, in an oil-press. 2. எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல்; to besmear one's body with oil.

[தையிலம் → தயிலம் + ஆடு-.]

தயிலமிறக்கு-தல் *tayilam-iṟakku-*, 5 செ.குவி. (v.i.) பொருள்களினின்று நெய்மம் எடுத்தல்; to extract essence.

மறுவ. தயிலம் வடித்தல்

[தையிலம் → தயிலம் + இறக்கு-.]

தயிலமெரி-த்தல் *tayilam-eri-*, 4 செ.குவி. (v.i.) 1. சுடரெண்ணெய் இறக்குதல்; to prepare šuḍareṇṇey. 2. மருந்தெண்ணெய் காய்ச்சுதல்; to heat and prepare medicated oil.

[தையிலம் → தயிலம் + எரி-.]

தயிலவருணம் *tayila-varuṇam*, பெ. (n.) தேன்; honey.

[தயிலம் + வருணம்]

தயிலவாரிப்பிரசாதனம் *tayilavāri-p-prašādaṉam*, பெ. (n.) தேற்றான்கொட்டை; water clearing nut.

[தயிலவாரி + பிரசாதனம்]

தயிலவினையாளன் *tayila-viṉai-y-āḷaṉ*, பெ. (n.) செக்கான் *(சேக்கிழார் 4: 36)*; oil-monger.

மறுவ. எண்ணை வாணிபன்

[தயிலம் + வினை +ஆளன். செக்காட்டி எண்ணெய் எடுப்பவன்; "ஆளன்" உடைமைப் பெயரீறு (ஒ.நோ.) பொறியாளன், பேராளன்]

தயிலி tayili, பெ.(n.) பணப்பை; purse, pouch "ரூபாயை ... தயிலியில் போட்டுக் கட்டி" *(P.T.L. 176).*

U. thaili.

[தையிலி→ தயிலி. தைக்கப்பட்ட பணப்பை]

தயினியம் *tayiṉiyam*, பெ. (n.) எளிமை வறுமை *(சங்.அக.)*; poverty.

தயை *tayai*, பெ. (n.) தயவு *(சூடா.)* பார்க்க; see *tayavu (செ.அக.).*

[தய - தயா → தயை]

தரக்கு *tarakku*, பெ. (n.) 1. புலி; tiger. "தழற்கட் டரக்கின்" *(கல்லா. 3:17).* 2. கழுதைப் புலி *(வின்.)*; hyena.

[தன் → தர → தரக்கு]

தரக்கேடு *tara-k-kēḍu*, பெ. (n.) இழிவு *(இ.வ.)*; degradation *(செ.அக.).*

ம. தரக்கேடு

[தரம் + கேடு]

தரகண்டிகை *tarakaṇḍigai*, பெ. (n.) ஆனை நெருஞ்சி *(மூ. அ.)* பார்க்க; see *āṉai-neruñji.*

[தரகண்டி → தரகண்டிகை]



தரகண்டிதம் *taragaṇḍidam,* பெ. (n.) தண்ணீர் விட்டான்; water root.

[தரகண்டி → தரகண்டிதம்]

தரகத்தி *taragatti,* பெ. (n.) தேரகத்தி; a kind of figtree (சா.அக.).

[தள் → தர → தரகத்தி]

தரகதி *tara-gadi,* பெ.(n.) தரம் (இவ.); class,rank.

தெ., க., ம. தரகதி.

[தரம் + கதி → தரகதி]

தரகம்புல் *taragam-pul,* பெ. (n.) மணப்புல்; fragrant grass.

[தரகம் + புல்]

தரகரி[1] *taragari,* பெ. (n.) அழகு (இவ.); beauty.

[தள் → தர → தரம் + கரி]

தரகரி[2] *tarakari,* பெ. (n.) தரகன் பார்க்க; see *taragaṉ.* "சரக்குகள் வாங்கித் தரகரியாயமைந்து" (ஆதியூரவதானி. 13).

தெ. தரகரி

[தரகு + அர் → தரகர் + இ → தரகரி. 'இ' சொல்லாக்க ஈறு]

தரகன் *taragaṉ,* பெ. (n.) பண்டமாற்றில் இடைநின்று தீர்த்துக் கொடுப்போன்; broker. "தரகர் அளக்கும் மரக்கால்" (சிலப். 14:209:உரை).

ம. தரகன்

[தரகு + அன் → தரகன். 'அன்' ஆண்பாலீறு]

தரகு[1] *taragu,* பெ. (n.) மணப்புல்வகை (இவ.); a kind of coarse fragrant grass.

[தள் → தரு → தர → தரகு. மணத்தைத் தரும் புல்]

தரகு[2] *taragu,* பெ. (n.) 1. தரகர் பெறுங் கூலி; brokerage, fee, commission to a middleman. "தரகு செய்வார் . . . திரிதர" (சிலப். 14: 209). 2. பணமாக வழங்கும்போது குறைத்துக் கொடுக்க அனுமதிக்கப்படும் தொகை; discount allowed in cash payment. 3. தரகன் பார்க்க; see *taragaṉ.* 4. தரகுபாட்டம் பார்க்க; see *taragu-pāṭṭam.* "மன்று பாடுந் தரகுந் தறிக்கூறையும்" (S.I.I.ii,509). 5. 2 படி கொண்ட முகத்தலளவுக் கருவி; a measure = nearly 2 paḍi.

ம., க., தரகு

[ஒருபடி = ஏறத்தாழ 2 லிட்டர். தா → தரு → தரகு.]

தரகுக்காசு *taragu-k-kāšu,* பெ. (n.) தரகுக்கூலி பார்க்க; see *taragu-k-kūli.*

மறுவ. தரகுப்பணம்

[தரகு + காசு.]

தரகுக்காரன் *taragu-k-kāraṉ,* பெ. (n.) தரகன் (உ. வ.) பார்க்க; see *taragaṉ.*

[தரகு + காரன். காரன் = உடைமைப் பெயரீறு]

தரகுக்கூலி *taragu-k-kūli,* பெ. (n.) தவசம் வாங்குவோன், அளப்பவனுக்கு வழங்கும் கூலி (இவ.); wages for a person who measures the grain in a sale.

மறுவ. தரகுக்காசு

[தரகு + கூலி]

தரகுபாட்டம் *taragu-pāṭṭam,* பெ. (n.) தரகரிடமிருந்து கொள்ளும் வரி (S.I.I. ii, 521); an ancient tax levied from brokers.

மறுவ. தரகுக்காரன்; தரகுக்கூலி; தரகுப்பணம்

[தரகு + பாட்டம். பாட்டம் = பகுதி பெறும் இறை.]

தரங்கம்[1] *tarańgam,* பெ. (n.) 1. அலை; wave, billow. "நீர்த்தரங்க நெடுங்கங்கை" (பெரியபு. தடுத்தாட். 165). 2. கடல்; ocean. 'தரங்கம் பரம பதம்'' (அஷ்டப். திருவேங்கடத்தந். 56). 3. மனக்கலக்கம்; distress, sorrow. 'தரங்கமெய்திச் சனங்களெல்லா மிரீஇ" (கந்தபு. நகரழி. 78). 4. இசையலைவு; modulation in music. "ஒண்டரங்க விசைபாடு மளியரசே" (தேவா. 87:1).

[த. தரங்கம் → வ. தரங்க = அலை. "அம்" பெருமைப்பொருள் பின்னொட்டு துளங்குதல் = அசைதல், நிலைகலங்குதல். துளங்கு → தளங்கு → தயங்கு, தயங்குதல் = அசைதல். தளங்கு → தரங்கு = அசைந்தியங்கும் அலை. தரங்கு → தரங்கம் = அலை, இசையலை. ஒ.நோ. அரங்கு → அரங்கம். அலைதல் = அசைதல். அலை = அலையும் நீர்த்திரை. அம்போதரங்கம் = கரைநோக்கி வரும் நீரலைபோல், வரவரச் சிறுத்து வரும், கலிப்பாவுறுப்பு. வடவர். தரம் + க (ga) என்று பகுத்து, குறுக்கே செல்வது என்று மூலப்பொருளுரைப்பர். தரம் என்பதன் மூலம் த்ரு. இது துருவு என்னும் தென் சொற்றிரிபு. 'க' என்பது 'ஏ' என்பதன் கான்முளை. ஏ-யா-ஜா-கா → க. (வ.மொ.வ. 172)]

தரங்கம்[2] *tarańgam,* பெ. (n.) ஈட்டி; spear. தரங்கத்தாற் பாம்பைக் குத்தினான்.

[தரங்கு → தரங்கம்]



தரங்கம்பாடி *tarangam-pāḍi,* பெ. (n.) நாகை மாவட்டத்திலுள்ள கடற்கரைப் பட்டணம் (வின்.); the sea-shore town of Tranquobar, it is in Nāgai district.

[தரங்கம் + பாடி - தரங்கம்பாடி. அலைவாய்க் கரையில் அமைந்துள்ள இப் பட்டணத்தில், வரலாற்றுச் சிறப்பு மிக்க தேனீசுக்கோட்டை உள்ளது.]

தரங்கம்மி *tarań-gammi,* பெ. (n.) 1. நிலத்தின் தாழ்ந்த தரம்; inferior quality or class of land. 2. நிலவரிக் குறைவு; reduction from taram assessment or genereal percentage; reduction in old survey rates.

[தரம் + கம்மி. தரம் = மதிப்பு. கம்மி = குறைவு]

தரங்கர் *tarańgar,* பெ. (n.) 1. அலை; wave, billow. 2. கடல்; ocean. 3. மனக்கலக்கம்; distress sorrow (யாழ். அக.).

[தரங்கம் → தரங்கர்]

தரங்கி-த்தல் *tarańgi-,* 4 செ.குவி. (v.i.) 1. அலை யுண்டாதல்; to break into waves. 2. மன மலைதல்; to be troubled, distressed. 'நின்று தரங்கிக்கின் றேற்கருள்வாய்" (அஷ்டப் அழகர். 24).

[தரங்கம் → தரங்கி]

தரங்கிணி *tarańgiṇi,* பெ. (n.) ஆறு (யாழ்.அக.); river.

[தளங்கு → தரங்கு = அசைந்து செல்லும் அலை. தரங்கு → தரங்கிணி = தண்ணீர் செல்லும், ஆறு]

தரங்கு[1] *tarańgu,* பெ. (n.) 1. வழி (பிங்.); way, path, road. 2. இருபலகைகள் இணைவதற்குச் செதுக்கும் வெட்டு (தஞ்.); lap-joint.

தரங்கு[2] *tarańgu,* பெ. (n.) 1. ஈட்டிமுனை (வின்.); point of in lance. 2. மண்வெட்டியிலை யினின்றும் நீண்டு, அதன் கையின் அடிப் புறத்தைச் சுற்றியிருக்கும், இரும்புக்கம்பி (நாஞ்.); the iron piece at the root of a mattock, wound round the handle.

[துளங்கு → தளங்கு → தரங்கு]

தரங்கு[3] *tarańgu,* பெ. (n.) அலை; wave, billow. "தரங்காடுந் தடநீர்" (தேவா. 463:1).

[துளங்கு → தளங்கு → தரங்கு = அசைந்தியங்கும் அலை. (வ.மொ.வ. 172)]

தரசம் *tarašam,* பெ. (n.) ஊன்; flesh *(சா.அக.).*

[தரசு + அம்]

தரசி *taraši,* பெ. (n.) ஒட்டுப்புல்; a kind of grass with little colts.

[துரசம் → தரசி]

தரட்டை *taraṭṭai,* பெ. (n.) சாம்பல் நிறத்துடன் பசுமைநிறங் கலந்ததும், 4 விரல நீளம் வளர்வதுமான கடல்மீன்; sea-fish, greyish green, attaining 4 in. in length, Ephippus orbis.

தரண் *taraṇ,* பெ. (n.) தூய்மையான பொன்; pure gold. "தரணென்று நன்றென்றாள்" *(நீலகேசி, 284).*

[தள் → தரு → தர → தரன்]

தரணம்[1] *taraṇam,* பெ. (n.) 1. தாண்டுகை; crossing over, passing, going across. "தரணம் என்னும் வடமொழி கடத்தலென்னும் பொருட்டாகலான்" *(சி.சி. 2:4, சிவஞா.).* 2. பாலம் *(யாழ்.அக.);* bridge.

[தா → தர → தரண் + அம் → தரணம்.]

தரணம்[2] *taraṇam,* பெ. (n.) 1. பற்றுகை, தரிக்கை; holding, bearing, possessing. 2. அரிசி *(யாழ்.அக.);* rice.

[தள் → தரு → தரண் + அம் → தரணம்.]

தரணி[1] *taraṇi,* பெ. (n.) 1. ஞாயிறு *(பிங்.);* the sun. "தரணியென விருளகல" *(திருப்போ.சந். பெரியகட். 2: 2).* 2. படகு; boat. 3. மருத்துவன்; physician. "மருத்துவனுக்குத் தரணி எனக் காரணக் குறியாயிற்று" *(சி.சி. 2:4: சிவஞா.).*

[தள் → தரு → தரண் → தரணி.]

தரணி[2] *taraṇi,* பெ. (n.) நிலம்; earth. 'தரணிமேற் றிலகமன்னாய்" *(சீவக. 1178).*

[தரை → தர → தரணி.]

தரணி[3] *taraṇi,* பெ. (n.) மலை *(பிங்.);* hill, mountain.

[தரை → தர → தரணி. தரையிலிருக்கும் மலை.]

தரணி[4] *taraṇi,* பெ. (n.) முட்பன்றிக் கொம்பு; quill or porcupine *(சா.அக.).*

[தரு → தரண் → தரணி]

தரணிகந்தம் *taraṇi-gandam,* பெ. (n.) கிழங்குச் செடி; esculent root of a bulbous plant *(சா.அக.).*

[தரணி + கந்தம் → தரணிகந்தம்.]

தரணிகளைக்கொம்பு *taraṇi-kaḷai-k-kombu,* பெ. (n.) பன்றிக்கொம்பு; hog's horn *(சா.அக.).*

[தரணி + களைக்கொம்பு.]

தரணிசம் *taraṇišam,* பெ. (n.) நுண்குழலிலான கண்விழி இடைத்தோல்; the vascular coat or layer of the eye *(சா.அக.).*

[தரணி → தரணிசம்]

தரணிநாதம் *taraṇi-nādam,* பெ. (n.) காந்தம்; magnet *(சா.அக.).*

[தரணி + நாதம்.]

தரணிநாதன் *taraṇi-nādaṉ,* பெ. (n.) உவர்மண்; fullers earth *(சா.அக.).*

[தரணி + நாதன்]

தரணிபன்[1] *taraṇibaṉ,* பெ. (n.) ஞாயிறு *(சாதக சிந். 27);* sun *(செ.அக.).*

[தள் → தரு → தரண் → தரணி → தரணிபன்]

தரணிபன்[2] *taraṇibaṉ,* பெ. (n.) அரசன்; king. "தரணிபன் சமைத்த பாவறை" *(ஞானவா. தாசு. 84)*

[தரை → தர → தரண் → தரணிபன். இந் நிலவுலகை ஆள்பவன்]

தரணிரத்தினம் *taraṇi-rattiṉam,* பெ.(n.) 1. மாணிக்கம்; a kind of ruby. 2. நாகமணி; that variety which is supposed to be on the head of certain cobras *(சா.அக.).*

[தரணி + இரத்தினம்]

தரணிவாரிக்கல் *taraṇi-vāri-k-kal,* பெ. (n.) மாழைக்கல் *(யாழ்.அக.);* a kind of metallic ore.

[தரணிவாரி + கல்]

தரணீதரம் *taraṇī-daram,* பெ. (n.) ஆமை; tortoise.

[தரணி → தரம் → தரணிதரம் → தரணீதரம்]

தரத்தீர்வை *tara-t-tīrvai,* பெ. (n.) தரம்தீர்வை பார்க்க; see *taram-tīrvai.*

[தரம் + தீர்வை]

தரதம் *taradam,* பெ. (n.) சாதிலிங்கம்; vermilion (சா.அக.).

[தரு → தர → தரதம்]

தரந்தம் *taraṇḍam,* பெ. (n.) தவளை (மூ.அ.); frog.

[தரை + அந்தம் → தரந்தம் = தரையை யொட்டித் தவழும் தவளை]

தரப்படி *tara-p-paḍi,* பெ. (n.) 1. சிற்றூர் நிலங்களின் தரப்பாகுபாட்டு முறை; classification, statement of village - lands as arranged in classess. 2. நடுத்தரம் (யாழ். அக.); middling sort.

ம. தரப்படி

[தரம் + படி]

தரப்படிக்கணக்கு *tarappaḍi-k-kaṇakku,* பெ. (n.) சிற்றூர் நிலங்களின் தரம், விளைச்சல் இறையிலி, வரி முதலியவற்றைக் குறிக்கும் கணக்கு; account of the village-lands distinguishing the varieties of soil, produce and tenure, and the ancient dues and perquisities of the village office and servants.

[தரப்படி + கணக்கு]

தரப்படுத்து-தல் *tara-p-paḍuttu-,* 5 செ.கு.வி. (v.t.) ஒரே சீராக்குதல்; standardize.

[தரம் → படுத்து-.]

தரப்புரட்டு *tara-p-puraṭṭu,* பெ. (n.) ஊரிலுள்ள நிலங்களைத் தரம் பிரிப்பதிற் செய்யும் ஏமாற்று; fraud in classifying the lands of a village (செ.அக.).

[தரம் + புரட்டு. புரட்டு = உண்மைக்குப் புறம்பானவை]

தரபடி[1] *tara-paḍi,* பெ. (n.) தரப்படி பார்க்க; see *tara-p-paḍi.*

[தன் → தரு → தரம் + படி]

தரபடி[2] *tara-paḍi,* பெ. (n.) உட்சட்டை (வின்.); an under-garment.

மறுவ. உள்ளாடை

[தரம் + படி]

தரம்[1] *taram,* பெ. (n.) 1. தகுதி; fitness, match. 'தந்தரத்திற்கு ஏற்ப' (சீவக. 11: 2, உரை). 2. தக்க சமயம்; opportune, moment. தரம்பார்த்து அடித்துக் கொண்டு போனான் (உ.வ.). 3. மேன்மை; superiority, excellence. "நீதரமா வருளுடையை" (கோயிற்பு. பாயி. 23). 4. தலை (யாழ்.அக.); head. 5. வலிமை (யாழ்.அக.); strength. 6. தெப்பம் (யாழ்.அக.); float. 7. விழுக்காடு (வீதம்) (வின்.); rate, proportion. 8. வகுப்பு; sort, kind, class. முதல் தரம் (உ.வ.). 9. நிலப்பண்புக்கேற்றபடி வரி விதிக்கப் பெற்ற ஊர் நிலப்பிரிவு; diffierent classes of village lands separately assessed according to the quality of the soil. 10. தீர்வை; assessment. தரம் பெற்ற நிலம் (இ.வ.). 11. மட்டம்; level. "அடியார் படுதயராயின வெல்லாம் நிலந்தரஞ் செய்யும்" (திவ்.பெரியதி. 11:9).

க., தர., ம. தரம்

[தடம் → தரம் = முறை: தகுதி. (மு.தா. 234).]

தரம்[2] *taram,* பெ. (n.) 1. தடவை; time, turn. "நல்குவது முத்தரம்" (தைலவ. பாயி. 65). 2. வரிசை; row, series. "பரி. . . . தரந்தர நடந்தன" (கம்பரா. கடிமண. 42). 3. கூட்டம்; company, assembly, party, gang, herd, drove. "ஆதரக்கன்று" (மருதூர். 89).

ம. தரம்; க. தர; தெ. தரமு.

[துடம் → தடம் = வளைவு, தடம் → தரம் = முறை ட → ர, போலி. ஒ.நோ. படவர் → பரவர். தடம் → தடவை = முறை (மு. தா.234)]

தரம்[3] *taram,* பெ. (n.) 1. அச்சம் (சூடா.); fear. 2. சங்கு (யாழ்.அக.); conch.

[தன் → தர் → தரு + அம் → தரம்]

தரம்[4] *taram,* பெ. (n.) 1. மலை; hill, mountain. "கொன்று தரங்குவித்தாய்" (அஷ்டப். அழகர். 24). 2. பருத்திப்பொதி (யாழ்.அக.); flock of cotton.

[தரை → தர் → தரு + அம் → தரம்]

தரம்[5] *taram,* பெ. (n.) நிலவுலகம் (பிங்.); earth.

[தரை → தரு + அம் → தரம்]

தரம்[6] *taram,* பெ. (n.) அரக்கு (மூ. அ.); scaling wax, lac.

[தரு + அம் → தரம்]

தரம்[7] *taram,* பெ. (n.) பூண்டு; small plant.

[தரை → தரு + அம் → தரம்]

தரம்[8] *taram,* பெ. (n.) கருப்பை; uterus.

[தரு + அம் → தரம் - குடிவியைத் தரும் கருப்பை]

தரம்[9] *taram,* பெ. (n.) உடம்பின் நாளம் அல்லது குழாய்; tubulare vessel of the body or vain.

[தன் → தர் → தரு + அம் → தரம் - அரத்தத்தைத் தரும் குழாய்]

தரம்சிட்டா *taram-šiṭṭā,* பெ. (n.) நிலங்களின் விலை அல்லது தரத்தின் குத்துமதிப்பு; valuation or classification of lands (செ.அக.).

[தரம் + சிட்டா. தரம் = நிலம், நில மதிப்பு. சிட்டா = நிலந்தொடர்பிலான குறிப்பேடு]

தரம்தரம் *taram-taram,* பெ. (n.) கால்வழி; generation after generation. தரம் தரமாய் மொட்டை, அவள் பெயர் கூந்தலழகி.

[தரம் + தரம். தரம் = வழி., வழிமுறை]

தரம்தார் *taram-dār,* பெ.(n.) வரிக்காக நிலத்தரம் ஏற்படுத்துவோன்; one who superintends the classification of lands for purposes of revenue assessment, classifier (செ.அக.).

[தரம் + தார். (தரம் = நிலம், நிலமதிப்பு தார் = சொல்லாக்க ஈறு]

தரம்தீர்வை *taram-tīrvai,* பெ. (n.) நிலவகைக் கேற்றபடி விதிக்கப்பட்ட வரி; an assessment made according to the class of land (செ.அக.).

மறுவ. நிலவரி, நிலத்தீர்வை

[தரம் + தீர்வை. தரம் = நிலம்; தீர்வை = வரி]

தரம்புகம் *tarampugam,* பெ. (n.) ஒருவகைச் செடி; citrullus vulgairs (சா.அக.).

[தன் → தரு + அம் + புகம்]

தரம்போடு-தல் *taram-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) தரவாரியாக வரி ஏற்படுத்துதல்; to assess land according to its class (செ.அக.).

[தரம் +போடு-.]

தரம்வாரி *taram-vāri,* பெ. (n.) நிலத்தை வகைப் படுத்துகை; arrangement according to classes, as of land (செ.அக.).

[தரம் + வாரி]

தரம்விட்டதாயாதி *taram-viṭṭa-tāyādi,* பெ. (n.) பிறப்பு இறப்புக் காலங்களில் தீட்டுக் கொள்ளாதபடி, பதினான்கு தலைமுறைக்கு மேற்பட்ட தாயாதி; agnates beyond the fourteenth remove who do not observe pollution, on occasions of birth or death in the house of the propositus. (செ.அக.)

[தரம் + விடு + தாயாதி. தாய் + ஆதி. தாயாதி. தாய் → தாயம் → தாயாதிகள்]

தரமிலிநிலம் *taram-ili-nilam,* பெ. (n.) தரப் படுத்தப்படாத நிலம் (S.I.I.viii,30); unclassified land.

[தரமிலி + நிலம். தரமற்ற = தாழ்ந்த நிலம், விலைமதிப்பற்ற நிலம்]

தரல் *taral,* தொ.பெ. (vb.n.) தருதல்; giving.

[தரு + அல் → தரல்]

தரவழி *tara-vaḻi,* பெ. (n.) 1. வகை; kind, sort, class, assortment. "அந்தந்தத் தரவழி" (வின்.). 2. நடுத்தரம் (யாழ்.அக.); middling sort.

[தரம் + வழி]

தரவாரி *tara-vāri,* பெ. (n.) ஆங்கிலேயர் காலத்தின் வரிவசூல் முறை; settlement with each individual cultivator without the intervention of a third party (செ.அக.).

தெ. தரவாரி

[தரம் + வாரி. (வாரி = முறையில் என்னும் பொருளில் வரும்சொல்) ஒ.நோ. வகுப்புவாரி]

தரவிடுநெல் *taraviḍu-nel,* பெ. (n.) கூலியாக அளக்கும் நெல்; paddy measured out in lieu of wages. "ஒருகூறு நெல்லு நிமந்தக் காரருக்குத் தரவிடு நெல்லாக இறுக்கவும்" (S.I.I. vii, 487).

[தரகு → தரவு + இடு + நெல்]

தரவிணைக்கொச்சகம் *taraviṇai-k-koccagam,* பெ. (n.) இரண்டு தரவு கொண்ட கொச்சகக் கலிப்பா வகை (கலித். 133, உரை); a species of koccaga-k-kali verse with two taravu.

[தரவு + இணை + கொச்சகம். தரவு = கலிப்பாவின் முதலுறுப்பு. கொச்சகம் = அம்போதரங்க உறுப்புக்களுளொன்று)]

"முன்னைப் பழம்பொருட்டு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்னகுறையும் இலோமேலோர் எம்பாவாய்"

(திருவாசகம் - திருவெம்பாவை)

தரவு[1] *taravu,* பெ. (n.) 1. தருகை; giving, handing over. "புனிற்றான் றரவி னிளையர் பெருமகன்" (அகநா. 338). 2. கலிப்பாவின் முதலுறுப்பு (தொல்.பொருள். 444); first member of kali verse. 3. கட்டளை (கல்வெட்டு); order. 4. ஆய்விற்குத் தரப்படுபவை; data.

[தா → தரு → தரவு.]

தரவு[2] *taravu,* பெ. (n.) 1. தரகர் பெறுங் கூலி; brokerage, fee, commission to a middleman. 2. முழுவிலையையும் பணமாக உடனடியாகத் தரும்போது, குறைத்துக்கொள்ள அனுமதிக்கப் பட்ட தொகை; discount allowed in cash payment. 3. பண்டமாற்றில் இடைநின்று தீர்த்துக் கொடுப்போன்; broker. 4. தரகரிடமிருந்து கொள்ளும் வரி; ancient tax levied from brokers. "தரவு தான்யம்" (குருபரம். 115). 5 வரிதண்டுகை (வின்.); collecting, tax-gathering.

[தரகு → தரவு = புதுவரவு]

தரவு[3] *taravu,* பெ. (n.) பிடரி (வின்.); nape of the neck.

தரவுக்காரன் *taravu-k-kāraṉ,* பெ. (n.) தண்டக் கட்டளையை நிறைவேற்றுவோன்; one who executes the command of a chief. "கப்பம் வாங்கி வரும்படி தரவுக்காரரை அனுப்ப" (குருபரம். பக். 190).

[தரவு + காரன். "காரன்" உடைமைப் பெயரீறு.]

தரவுகொச்சகம் *taravu-koccagam,* பெ. (n.) கொச்சகக்கலிப்பாவகை (காரிகை, செய். 12, உரை); a species of koccaga-k-kali verse.

[தரவு + கொச்சகம். தரவு = கலிப்பாவின் முதலுறுப்பு.]

ஊனாய் உயிராய் உணர்வாய் என்னுட்கலந்து
தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோர் அறியா வழியெமக்குத் தந்தருளும்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனாஅறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்கும்
கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய்

(திருவாசகம் - திருவம்மானை)

தரவுகொள்(ளு)-தல் *taravu-koḷ-,* 13 செ.கு.வி. (v.i.) பற்றுச்சீட்டு பெறுதல்; to take a receipt. "இவர் கையால் தரவுகொள்வோ மாகவும்" (S.I.I. V, 143).

[தரவு + கொள்-.]

தரவுசாத்து *taravu-šāttu,* பெ. (n.) சோழ அரசின் அதிகாரிகளுள் ஒருவர் (M.E.R. 119 of 1916); an officer in the Cōla administration.

[தரவு + சாத்து]

தரவூடான் *taravūḍāṉ,* பெ. (n.) வெண்ணிற முள்ள கடல்மீன்வகை; sea-fish, silvery.



தரவை *taravai,* பெ. (n.) *1. கரம்புநிலம்;* waste or uncultivated land. *2. களை மூடிய உவர் நிலம்;* saline soil overgrown with weeds.

[தரை → தர → தரவை]

தரளதரம் *taraḷa-daram,* பெ.(n.) *அளறு (சிவதரு. சுவர்க்கநரக. 107);* a kind of hell.

மறுவ. நிரையம்

[தரளம் + தரை → தரம் → தரளதரம்]

தரளநீராஞ்சனம் *taraḷa-nirāñjaṉam,* பெ. (n.) *முத்தாரத்தி;* waving a tray containing lighted lamps surrounded by pearls or beads as round an idol. *"மரகதக்கலத் தரளநீராஞ்சனம் வளைப்ப" (திருவிளை.திருநகரப்: 10).*

[தரளம் + நீராஞ்சனம்.]

தரளம்[1] *taraḷam,* பெ. (n.) *1. நடுக்கம் (உரி.நி.);* tremulousness. quaking. *2. முத்து (பிங்.);* pearl. "வாரித்தரள நகை செய்து" *(சிலப். 7: 38).* *3. உருட்சி; திரட்சி (சூடா.);* globularity.

[திரள் → தரள் + அம் = தரளம் = உருண்டு திரண்டது]

தரளம்[2] *taraḷam,* பெ. (n.) *அரக்கு;* lac *(சா.அக.).*

[தரள் + அம் → தரளம்]

தரளை *taraḷai,* பெ. (n.) *1. கஞ்சி;* boiled liquid rice. *2. கள்;* toddy. *3. மது;* any fermented liquor *(சா.அக.).*

[தரள் → தரளை]

தரா[1] *tarā,* பெ. (n.) **எட்டுப்பங்கு செம்பும், ஐந்து பங்கு காரீயமுங் கலந்த ஒரு மாழை** (திவா.); alloy of 8 parts of copper to 5 of tin, used for making metal vessels. "புகழ்தராப் போக்கில்லை" *(சினேந். : 169).*

[தரை → தரா]

தரா[2] *tarā,* பெ. (n.) **திராய்** (தைலவ. தைல. 76) பார்க்க; see *tirāy.*

[தரு → தர → தரா]

தரா[3] *tarā,* பெ. (n.) *நிலவுலகம்;* earth. தராபதி.

[தரை → தரா.]

தரா[4] *tarā,* பெ. (n.) *சங்கு (அக.நி.);* conch.

[தன் → தரு → தரா]

தரா[5] *tarā,* பெ. (n.) *வகை;* sort, kind, manner, mode.

[தரம் → தரா.]

தரா[6] *tarā,* பெ. (n.) *ஒருவகைக் கசப்புக்கீரை;* a kind of bitter green a low spreading bitter herb resembling chick weed *(சா.அக.).*

[தன் → தரு → தரா]

தரா[7] *tarā,* பெ.(n.) **எங்கும் படரும் ஒரு வகைக் கொடி;** common fumitory *(சா.அக.).*

மறுவ. துரா, பம்பந்திராய், மதுகம், செந்திராய்



படர்கொடி வகையைச் சார்ந்த இம் மூலிகை, உழுத நிலங்களில் செழித்து வளருந் தன்மைத்து. உடம்பினின்று வியர்வை, சிறுநீர் போன்ற கழிவுகளை அகற்றும், மிகச்சிறந்த நச்சுக்கொல்லி. மகளிர்தம் மாதவிடாய்ச் சிக்கலைப் போக்கும். கண்எரிச்சல், கண் காசம், உடம்பினில் உருவாகும் வேனற்கட்டி ஆகியவற்றிற்குக் கைகண்ட மருந்து.

தாய்மார்களுக்குத் தாய்ப்பாலை அதிகரிக்கச் செய்யும். மேலும் இம் மூலி சிறுவர் முதல் முதியவர் வரை, அனைவருக்கும் பயன்படும். மிகுதாகம், நீர்த்தாரையெரிச்சல், களைப்பு போன்ற நோய்களைப் போக்கும். சிவப்பு, நிறமுள்ள செந்தரா என்னும் மூலி, செம்புத் தகட்டைப் புடமிடப் பயன்படும்.

செந்தரா இலைகளைக் கருக்கு நீரிட்டுக் (கியாழம் செய்து) குடித்தால், மலக்கட்டு அகலும். செந்தரா இலையுடன், பன்னீர்ப்பூ சேர்த்துச் சுண்டக்காய்ச்சிக் குடித்தால், வெண்குட்டம் மாறும். பெரிய பிளவைக் கட்டிகளுக்கு, மஞ்சள் சேர்த்து, அரைத்துக் கட்டினால், இனிது உடைந்து, புண்ணீர்

வெளியேறும். காமாலை, கடுஞ்சுரம் போன்றவற்றிற்குச் செந்தராச் சூரணம் மிகச்சிறந்த மருந்து என்று, சா.அக. கூறும்.

[தரை → தரா – தரையின் மீது படர்வது]

தராகதம்பம் *tarā-kadambam,* பெ. (n.) கடம்பு வகை *(மலை);* common Indian oak.

[தரை → தரா + கதம்பம்]

தராங்கம் *tarāṅgam,* பெ. (n.) மலை *(யாழ்.அக.);* mountain.

[தரை + அங்கம் → தராங்கம்]

தராச்சா *tarāccā,* பெ. (n.) முந்திரி; grapes.

[தரை → தரா → தராச்சா]

தராசத்து *tarā-šattu,* பெ. (n.) மண்ணிலிருந்து வெட்டியெடுக்கப்படும் பொருள்; anything due out of the earth in the condition of fossic *(சா.அக.).*

[தரை → தரா + சத்து → தராசத்து]

தராசதம் *tarāšadam,* பெ. (n.) கொடுக்காய்ப் புளி; manilla tamarind *(சா.அக.).*

[தள் → தரு → தரா → தராசதம்]

தராசம் *tarāšam,* பெ. (n.) 1. வயிரக் குணங்களுள் ஒன்று; a quality in diamonds. "இலகிய தாரையுஞ் சுத்தியுந் தராசமும்" *(சிலப். 14:180, உரை).* 2. மரகதக்குற்றம் எட்டனுள் ஒன்று *(சிலப். 14:184, உரை);* a flaw in emeralds, one of eight maragada-k-kuṟṟam.

[தரை → தரா → தராசதம்]

தராசிகம் *tarā-šigam,* பெ. (n.) பெருமருந்துப் பூடு; great medicine, Indian birth-wort.

மறுவ. இறைமூலி

[தர் → தரு → தரா → தராசிகம்]

தராசிதா *tarā-šidā,* பெ. (n.) கொட்டாஞ்சி; a kind of fruit *(சா.அக.).*

[தர் → தரு → தரா → தராசிதா]

தராணி *tarāṇi,* பெ. (n.) எருக்கு; madar plant.

[தரை → தரா + ண் + இ → தராணி.]

தராதரம்[1] *tarādaram,* பெ. (n.) மலை; mountain. "கடதராதரநிகர்" *(இரகு. குலமு. 1).*

[தரை → தரா + தரம் → தராதரம். ஒ.நோ. சரி + சரி → சராசரி]

தராதரம்[2] *tarā- taram,* பெ. (n.) 1. ஏற்றத்தாழ்வு; distinction of rank, place, class or other particulars. "தராதரந் தெரிந்து" *(திருவிளை. திருமண. 94).* 2. நிலைமை (தகுதி) *(இவ.);* status, position.

ம. தராதரம்

[தரம் + தரம் → தராதரம். ஒ.நோ. சரி + சரி → சராசரி. பரம் + பரம் → பராபரம்]

தராதரம்[3] *tarā-taram,* பெ. (n.) மூல மையங்கள்; one of the six psychic centres of the human body.

[தரம் + தரம் → தராதரம்]

தராதலம்[1] *tarā-talam,* பெ. (n.) நிலவுலகம்; earth. "தராதலமுத லுலகனைத்தும்" *(கம்பரா. கடிமண. 47).*

[தரை + தளம் → தலம் → தராதலம்.]

தராதலம்[2] *tarā-talam,* பெ. (n.) கீழேழுலகத் தொன்று *(பிங்.);* a nether - world, fourth of kīḻ-ēḻ-ulgam.

[தரை + தளம் → தலம் → தராதலம்.]

தராதிபன் *tarādibaṉ,* பெ. (n.) அரசன்; king. *(செ.அக.)*

[தரை + அதிபன் → தராதிபன்]

தராப்பு *tarāppu,* பெ.(n.) கப்பலின் வெளியே வைக்கப்பட்டிருக்கும் ஏணி (M. Navi. 174); accomodation ladder.

[தரை → தரா → தராபகம்]

தராப்பூடு *tarā-p-pūḍu,* பெ. (n.) நாரத்தை; bitter orange *(சா.அக.).*

[தள் → தரு → தரா + பூடு]

தராபகம் *tarā-bagam,* பெ. (n.) இடம் விட்டுப் பாய்தல்; the escape of anything from its proper place *(சா.அக.).*

[தரை → தரா → தராபகம்.]

தராபத்திரம் *tarā-pattiram*, பெ. (n.) *தருப்பைப் புல்;* sacred grass *(சா.அக.).*

[தரை → தரா + பத்திரம் → தராபத்திரம்.]

தராபதி *tarā-padi*, பெ. (n.) *அரசன்;* king, ruler. "இவர்குலத் தராபதி காண்" *(கம்பரா. குலமுறை: 1).*

[தரை → தரா + பதி.]

தராபற்று *tarā-paṟṟu*, பெ. (n.) *தராசேர்ந்த ஒரு கலவை மாழை;* any alloy of tarā *(சா.அக.).*

[தரு → தரா + பற்று]

தராமண்டலம் *tarā-maṇḍalam*, பெ. (n.) *1. நிலவுலகு;* earth. *2. மூல அடிப்படை;* the lowest situated centre or support of the body *(சா. அக.).*

[தரை → தரா + மண்டலம்]

தராமணல் *tarā-maṇal*, பெ. (n.) *வெள்ளி மணல்;* sand mixed with silver *(சா.அக.).*

[தரை → தரா + மணல்]

தராமலை *tarā-malai*, பெ. (n.) *நாகம் கிடைக்கும் மலை;* mountain in which zinc is found *(சா.அக.).*

[தரை → தரா + மலை.]

தராய்[1] *tarāy*, பெ. (n.) *மேட்டுநிலம்;* mound, elevated place. "தராய்க்கண் வைத்த விலங்க லன்னபோர்" *(மலைபடு. 460).*

[தரை → தராய்]

தராய்[2] *tarāy*, பெ. (n.) *1. திராய், கீரை வகை (சீவக. 2703, உரை.);* Indian chickweed. *2. பிரமிப் பூண்டு;* hedge hyssop. 'காடியாட்டித் தராய்ச் சாறும்" *(சீவக. 2703).*

[தரை → தராய்]

தரி[1]**-த்தல்** *tari-*, 4 செ.குவி. (v.i.) *1. நிலை பெற்று நிற்றல்;* to stop, stand still, rest. "தரியாதே ஓடாநின்றது" *(பு.வெ. 11, ஆண்பாற். 7, உரை). 2. இருப்புக்கொள்ளுதல்;* to abide. "வணிகன் கண்ட வண்தரித்து" *(கடம்ப. பு. இலீலா. 53). 3. ஊன்றிநிற்றல்;* to stand firm; to be firm. வேர் தரித்திருக்கிறது.

[தரை → தரி-.]

தரி[2]**-த்தல்** *tari-*, 4 செகுன்றாவி. (v.t.) *1. அணிதல்;* to invest, put on, as dress, flowers, etc. ஆபரணந் தரித்தாள் *(உ.வ.). 2. தாங்குதல்;* to keep, support, carry. "உமையோர் பாகந் தரித்தானை" *(தேவா. 442: 2). 3. பொறுத்தல்;* to bear patiently, endure. "தார்க்குவளை கண்டு தரியா விவண் முகத்துக் கார்க்குவளை" *(பு.வெ. 12, பெண்பாற். 11). 4. அடக்கிக்கொள்ளுதல்;* to control. "மருதரைத் தரியா தேத்துவார்" *(தேவா. 447:4). 5. மறவாது உள்ளத்துக் கொள்ளுதல்;* to remember, bear in mind. "கல்விகளையும் அவற்றின் பொருட் கேள்விகளையுங் கற்றுந் தரித்தும்" *(சிலப். 9: 30: உரை). 6. தாம்பூலம் போடுதல்;* to chew, as betel. தாம்பூலந் தரிக்கவேண்டும் *(உ.வ.). 7. சூலுண்டாகிப் பிறத்தல்;* to be conceive and born.

[தள் → தரை → தரி-.]

தரி[3] *tari*, பெ.(n.) *இருப்பு (யாழ்ப்.);* abiding, tarrying rest.

[தரை → தரி.]

தரிகொடு-த்தல் *tari-koḍu-*, 4 செ.குவி. (v.i.) *இடங்கொடுத்தல் (யாழ்ப்.);* to allow, give room. *(செ.அக.)*

[தரை → தரி + கொடு-.]

தரிகொள்(ளு)-தல் *tari-koḷ(ḷ)u-*, 13 செ.குவி. (v.i.) *இருப்புக்கொள்ளுதல்;* to become settled, permanent; to abide, rest still; to be fixed, stationary. "தரிகொளாது கண்க ணீர்ததும்பி" *(சேதுபு. இராமதீர். 71).*

[தரி + கொள்(ளு)-.]

தரிசநரம்பு *tariśa-narambu*, பெ. (n.) *பார்வை நரம்பு;* optic nerve.

[தள் → தரி → தரிசம் + நரம்பு]

தரிசநரம்புச்சாலம் *tariša-narambu-c-cālam,* பெ. (n.) பார்வைநரம்புகள் சேர்ந்த வலை போன்ற, பின்னல்கள்; a fine network of optic nerve (சா.அக.).

[தள் → தரி → தரிசம் + நரம்பு + சாலம்.]

தரிசநூல் *tariša-nūl,* பெ. (n.) கண்பார்வை நூல்; the science of the nature and laws of vision and light (சா.அக.).

[தள் → தர் → தரி → தரிசம் + நூல்]

தரிசம் *tarišam,* பெ. (n.) 1. வலுவின்மை; weakness. 2. அலித்தன்மை; impotence. 3. பேடி; eunuch (சா.அக.).

[தள் → தர் → தரி → தரிசம்]

தரிசவம் *tarišavam,* பெ. (n.) சந்திரகாந்தச் செடி; a plant (சா.அக.).

[தள் → தரி → தரிசவம்]

தரிசாப்பள்ளி *tarišā-p-paḷḷi,* பெ. (n.) 9-ம் நூற்றாண்டிலே கொல்லத்தில் இருந்த சிரியன் கிறித்துவக் கோயில்; ancient Šyrian church at Quilon 9th c. "மருவான் சபீரீசோ செய்விச்ச தரிசாப்பள்ளி" (T.A.S. ii. 80).

[தரிசா + பள்ளி]

தரிசி *tariši,* பெ. (n.) 1. பார்வை தெரியும்படியாக கண்ணில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு; the innermost perceptive sturcture of the eye. 2. தரிசநரம்பு பார்க்க; see *tariša-narambu.*

[தள் → தர் → தரி → தரிசி.]

தரிசியம் *tarišiyam,* பெ. (n.) விழித்திரை; retina (சா.அக.).

[தள் → தர் → தரி → தரிசி + இயம் → தரிசியம்.]

தரிசு[1] *tarišu,* பெ.(n.) பயிரிடப்பெறாத நிலம்; land lying waste or fallow. "தரிசுகிடந்த தரசுதரையை" (ஈடு. 2. 7:4).

ம. தரிசு; க. தரசு

[தரை → தரி → தரிசு. மாந்தருக்குத் தவசம் தருவது.]

தரிசு[2] *tarišu,* பெ. (n.) உள்ளீடுபரல்; pebbles, pieces of metal put into anklets for tinkling. "திருச்சிலம்புகளுக்குத் தரிசாகத் திருவடியிலே சாத்தியருளி" (கோயிற்பு. பதஞ்சலி. 36, உரை). (யாழ்ப்).

[தர் → தரி → தரிசு.]

தரிசுதூறுவிடு-தல் *tarišu-tūṟu-viḍu-,* 18 செ. குன்றாவி. (v.t.) தரிசு[1] பார்க்க; see *tarišu[1]*.

[தரிசு + தூறு + விடு-.]

தரிஞ்சகம் *tarĩñ-jagam,* பெ. (n.) அன்றில் (அகநி.); inantigale of India.

தரிஞ்சி *tariñji,* பெ. (n.) சுரபுன்னை; sorra poon, fragrant poon.

[தள் → தர் → தரி → தரிஞ்சி]

தரித்திரி *tari-t-tiri,* பெ. (n.) நிலவுலகம் (பிங்.); earth.

[தரை + த் + திரி → தரித்திரி. 'த்' சாரியை]

தரிப்பு[1] *tari-p-pu,* பெ. (n.) 1. தங்குகை; staying abiding, remaining, halting, tarrying. அங்கே அவனுக்குத் தரிப்புக் கொள்ளவில்லை. (உ.வ.) 2. நினைவில்வைக்கை (வின்.); retaining in the mind or memory. 3. மனம் பொறுக்கை; bearing, enduring, tolerating. "தரிப்பரி தென்ன" (திருவாத. பு. மண். 15). 4. உறுதி (திவா.); certainty. 5. படிக்கும்போதும் பேசும்போதும் இடமறிந்து நிறுத்துகை (வின்.); pause, as in reading or speaking. 6. இருப்பிடம்; lodging, resting-place, footing. அவனுக்கு எங்குந் தரிப்பில்லை (உ.வ.). 7. கையிருப்பு; stock of money, cash in hand. அவனுக்குக் கையிலே தரிப்பு உண்டா? (இ.வ.). 8. கரு உண்டாதல்; to the pregnant.

[தள் → தர் → தரி → தரிப்பு. தரிப்பு என்னுஞ் சொல், வடமொழி வேரடியினின்று வேறுபட்டுக் குலப் பண்புகளைத் தாங்குகை என்னும் தூயதென் சொற் பொருள் தந்து வழங்குகை அறிக]

தரிப்பு[2] *tari-p-pu,* பெ. (n.) தருப்பு பார்க்க; see *taruppu.*

[தரி → தரிப்பு]

தரிப்பு[3] *tari-p-pu,* பெ. (n.) நிறுத்துகை; retention (சா.அக.).

[தரை → தரி → தரிப்பு]

தரிப்புத்தட்டான் *tarippu-t-taṭṭāṉ*, பெ.(n.) செல்வன் *(வின்.)*; monied man.

[தரிப்பு + தட்டான்]

தரிபடு-தல் *tari-paḍu-*, 20 செ.குவி. (v.i.) நிலை பெறுதல்; to stop, stay permanently. "விண்ணவ ரோடினர் தரிபடா துலைந்து" *(குற்றா. தல. தக்கன் வேள்வி. 31)*.

[தரி + படு-.]

தரிபெறு-தல் *tari-peṟu-*, 20 செ.குவி. (v.i.) தரிபடு பார்க்க; see *tari-paḍu*. "சீர்மதுரை தரிபெற வேண்டும்" *(திருவாலவா. திருவிளையாடற் பயகர மாலை: 11)*.

[தரி + பெறு-.]

தரியலர் *tariyalar*, பெ. (n.) பகைவர்; enemies, foes. "தரியலர் தம்புர மெய்தானை" *(தேவா. 442: 2)*.

மறுவ. தரியலார், தரியார்

[தரி + அலர் → தரியலர்]

தரியலார் *tariyalār*, பெ. (n.) தரியலர் *(சூடா.)* பார்க்க; see *tariyalar*.

[தரியலர் → தரியலார்]

தரியார் *tariyār*, பெ. (n.) தரியலர் பார்க்க; see *tariyalar*. "விடை யொன்றேறித் தரியார்புர மெய்தார்" *(தேவா. 1026: 4)*.

[தர் → தரி + ஆர் → தரியார்]

தரியிடு-தல் *tari-y-iḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) நிலைநிறுத்துதல்; to estabilish securely. "தொண்டர் குழாஞ் சற்றுமலை யாமல் தரியிட்டான்" *(நெல்விடுதூது, 63)*.

[தரை → தரி = நிலைப்பு. தரி + இடு-.]

தரு[1] *taru*, பெ. (n.) மரக்கலப்பாய் இறக்குகை; striking of sail.

[தா → தரு]

தரு[2] *taru*, பெ. (n.) 1. மரம்; tree. "தருவனத்துள்" *(கம்பரா. கையடைப். 10)*. 2. கற்பகமரம்; the kaṟpagam tree of Švarga. "தருநிலை" *(மணிமே. 5:114)*.

[தா → தரு]

தரு[3] *taru*, பெ. (n.) 1. இசைப்பாட்டு வகை *(இராமநா. பாலகா. 3)*; a stage-song in a peculiar metre and tune. 2. ஒரு வகைச் சந்தம் *(வின்.)*; meaningless syllable sung to a tune as an interlude, formed of the letters த், ந், ன் combined with a long or short vowel.

க. தருவு

[தா → தரு - பண்ணோடு இயைந்து இசையைத் தருவது]

தரு[4] *taru*, பெ. (n.) தேவதாரு *(தைலங். தைல. 17)* பார்க்க; see *tēva-tāru*.

[தா → தரு]

தருக்கசங்கிரகம் *tarukka-šaṅgiragam*, பெ. (n.) வடமொழித் தருக்கசங்கிரகத்திலிருந்து சிவஞான முனிவர் செய்த தமிழ்மொழி பெயர்ப்பு நூல்; a Tamiḻ translation of the Šānskrit Tarukkam šaṅgraham by Šivañāṉa-muṉivar.

[தருக்கம் + சங்கிரகம்]

தருக்கசாத்திரம் *tarukka-šāttiram*, பெ. (n.) அளவை நூல், சொற்போர் பற்றிய நூல்; treatise on logic or dialectics, science of reasoning *(செ.அக.)*.

த. தருக்கம் → வ. தர்க்கம்

[தருக்கம் + சாத்திரம். தருக்கு → தருக்கம் = சொற்போர், தருக்க நூல். தமிழ்த் தருக்க நூல் அளவை, சொற்போர் முதலான பொருட் பாகுபாட்டை, அடிப்படையாகக் கொண்டது. "தர்க்க பரிபாஷை" என்னும் நூலிற் காட்டப்பெற்றுள்ள, அகத்தியத் தருக்க நூற்பாக்களைக் காண்க. தமிழ்த் தருக்க நூலையே வடவர் வைசேடிகம் என வகுத்தனர். (வ.மொ. வ. 173)]

தருக்கசாத்திரி *tarukka-šāttiri*, பெ. (n.) தருக்க நூல் வல்லோன்; logician. *(செ.அக.)*

[தருக்கம் + சாத்திரி]

தருக்கம்[1] *taru-k-kam*, பெ. (n.) மேம்பாடு; pre-eminence. "தவம்புரி தருக்கத்து" *(பெருங். இலாவாண, 2:23)*.

[த. தருக்கம் → வ. தர்க்க. தருக்கு → தருக்கம்]

தருக்கம்[2] *tarukkam,* பெ.(n.) 1. *அளவையியல், சொற்போர் இயல்;* reasoning, arguing, discussion, debate, disputation. "பொருவரு தருக்கஞ் செய்யப் போயினர்" *(கந்தபு. ததீசியுத். 157).* 2. *சொற்போர்;* controversy, dispute, contention, wrangling. 3. **தருக்கசாத்திரம்** பார்க்க; see *tarukka-šāttiram.* (செ.அக.)

மறுவ. தக்கம்

[தருக்கு → தருக்கம்]

த. தருக்கம் → வ. தர்க்கம்.

தருக்கவாதம் *tarukka-vādam,* பெ. (n.) 1. *சொல்லாடுகை;* reasoning, arguing, discussion, detate, disputation. 2. *சொற்போர்;* controversy, dispute, contention, wrangling.

மறுவ. சொற்போர்

[தருக்கம் + வாதம்]

தருக்கி[1] *tarukki,* பெ. (n.) செருக்குள்ளவ-ன்-ள் (இ.வ.); proud, self-conceited person.

[தருக்கம் → தருக்கி]

தருக்கி[2]**-த்தல்** *tarukki-,* 4 செ.கு.வி. (v.i.) *சொல்லாடுதல்;* to dispute, debate, argue, reason.

[தருக்கம் → தருக்கி-.]

தருக்கி[3] *tarukki,* பெ. (n.) 1. தருக்கசாத்திரி (யாழ்.அக.) பார்க்க; see *tarukka-šāttiri.* 2. சொற்போரிடுவோன் (வின்.); disputer, debater.

மறுவ. வாயாடி

[தருக்கு → தருக்கி]

தருக்கு[1]**-தல்** *tarukku-,* 5 செ.கு.வி. (v.i.) 1. *செருக்குக்கொளல்;* to be proud, vain, arrogant. "தன்னை வியந்து தருக்கலும்" *(திரிகடு. 38).* 2. **களித்தல்** *(பிங்.);* to be elated, intoxicated; to exult. "அவஞ்செய்து தருக்கினேனே" *(தேவா. 698: 9).* 3. **ஊக்கமிகுத்தல்;** to be zealous, enthusiastic. "வெம்போர்த் தருக்கினார் மைந்தர்" *(சீவக. 1679).*

[தருக்கி → தருக்கு-.]

தருக்கு[2]**-தல்** *tarukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. *பெருகச்செய்தல்;* to enhance, enlarge. "தன்னொடு மவளொடுந் தருக்கிய புணர்த்து" *(தொல். பொருள். 50).* 2. **இடித்தல்;** to pound. "தண்மருப்பால் வெண்பிண்டி சேரத் தருக்கி மதுக்கலந்து" *(பதினொ. திருவீங்கோய். 40).* 3. *வருத்துதல்;* to injure, torment. "மேலால் தருக்கு மிடம்பாட்டி னொடும்" *(திவ். இயற். பெரியதிருவந். 22).* 4. **உடைத்துவிடுதல்;** to break, pierce. "மரக்கல மியங்கவேண்டி . . . . தருக்கிய விடத்து" *(கம்பரா. மீட்சிப். 171).* 5. **மேற்கொள்ளுதல்;** to take to, have resort to. "கவறுங் கழகமுங் கையுந் தருக்கி" *(குறள், 935).*

[தருக்கி → தருக்கு-. தருக்குதல் = செருக்குதல், மிகுத்துக் கூறுதல், போரூக்கங் கொள்ளுதல், தாக்குதல், இடித்தல், தகர்த்தல், (வ.மொ. வ. 173).]

தருக்கு[3] *tarukku,* பெ. (n.) 1. *செருக்கு;* pride, arrogance, ostentation, self-conceit, superciliousness. "தருக்கினர் கெடுவரன்றே" *(கம்பரா. மாரீச. 201).* 2. **வலிமை;** ability, power, boldness. "எதிர்செயுந் தருக்கி லாமையின்" *(கம்பரா. தாடகை. 40).* 3. **களிப்பு** *(சூடா.);* elation, exultation.

[செருக்கு → தருக்கு. தருக்கு என்னுஞ் சொல், செருக்கித்திரிதல், வலிமையுடன் பொருதுதல், பொருதி மாற்றாரை அழித்து மேம்படுதல் என்னும் பொருளில் இலக்கியத்துள், ஆளப்பட்டுள்ளது]

தருக்கு[4] *tarukku,* பெ. (n.) **தருக்கம்;** disputation. "தருக்கினாற் சமண்செய்து" *(திவ். பெரியதி. 2. 1:7).*

[தருக்கி → தருக்கு]

தருக்குப்புடம் *tarukku-p-pudam,* பெ.(n.) *குறைந்த நெருப்பால் போடும் புடம்;* calcination effected with small fire.

[தருக்கு + புடம்]

தருக்கோட்டம் *taru-k-kōttam,* பெ. (n.) தருநிலைக்கோட்டம் பார்க்க (சிலப். 5:145 - 6, உரை); see *tarunilai-k-kōttam.*

[தருக்கு + கோட்டம்]

தருகண்ணி *tarukaṇṇi*, பெ. (n.) ஒருவகைச் சிப்பி; a kind of mussel, shell creeper.

[தரு + கண்ணி]

தருகு¹-தல் *tarugu-*, 5 செ.குவி. (v.i.) 1. தங்குதல்; to stay. 2. நிலைத்தல்; to continue (செ.அக.).

[தரு → தருகு-.]

தருச்சா *taruccā*, பெ. (n.) எரியணம் (கருப்பூரம்); camphor (சா.அக.).

தருச்சாயி *taru-c-cāyi*, பெ. (n.) பறவை; bird.

தருச்சாரம் *taru-c-cāram*, பெ.(n.) எரியணம் (கருப்பூரம்) (சங்.அக.) (மரத்தின் சாரமாயுள்ளது); camphor, as the essence of a tree.

[தரு + சாரம். சாறு → சாரம்]

தருசாப்பள்ளி *tarušā-p-paḷḷi*, பெ. (n.) தரிசாப் பள்ளி (T.A.S. ii, 67) பார்க்க; see *tarišа-p-paḷḷi*. (செ.அக.)

[தருசு + பள்ளி]

தருசு *tarušu*, பெ. (n.) நெருங்கிய இழை; closely woven texture.

தெ. தருசு

[தரு → தருசு]

தருடம் *tarudam*, பெ. (n.) தாமரை; lotus.

[தரு → தருடம்]

தருணக்கஞ்சி *taruṇa-k-kañji*, பெ. (n.) உரிமைக்கஞ்சி; a liquid food administered to a patient at the last moment of death.

[தருணம் + கஞ்சி = இறக்குங் காலத்தே கொடுக்குங் கஞ்சி]

தருணகமாதி *taruṇa-gamādi*, பெ. (n.) ஆமணக்கு; castor seed.

தருணகாகித்தம் *taruṇa-gāgittam*, பெ. (n.) குறண்டி; corandy.

தருணசீரம் *taruṇa-šīram*, பெ. (n.) பெருஞ்சீரகம்; large cumin.

தருணசுரம் *taruṇa-šuram*, பெ. (n.) 1. ஒன்பது நாள் காயுஞ் (காய்ச்சல்) சுரவகை (ஜீவரட். 30); a fever of nine day's duration. 2. தொடக்கக் காய்ச்சல்; incipient fever, slight fever.

[தருணம் + சுரம்]

தருணசேபிகம் *taruṇa-šēbigam*, பெ. (n.) குறட்டை; a kind of gourd (சா.அக.).

[தருணம் + சேபிகம்]

தருணத்தி *taruṇatti*, பெ. (n.) முருந்து எலும்புக் குருத்து; cartilage (சா.அக.).

[தருணம் → தருணத்தி]

தருணநாரி *taruṇa-nāri*, பெ. (n.) சிறு நன்னாரி; small leaved sarsaparilla.

தருணப்பிரசவம் *taruṇa-p-pirašavam*, பெ. (n.) மிக நெருங்கிய பேறுகாலநேரம்; pregnancy in which delivery is expected every day.

[தருணம் = காலம், பொழுது. தருணம் + Skt.பிரசவம்]

தருணம் *taruṇam*, பெ. (n.) 1. இளமை; prime of life, youthfulness. "தருண வஞ்சிக் கொம்பு" (கம்பரா. தைலமாட்டு. 15). 2. ஏற்றபொழுது; right time, proper season. "வெஞ்சமர் தொடர்ந்த தத்தருணமாம்" (சங்.அக.). "நல்ல தருண மிது நழுவிடலாமோ". 3. நல்லெண்ணம்; good intention. தருணங் கெட்டவன் (இ.வ.). 4. பெருஞ்சீரகம் (மலை); large cumin seed. 5. ஆமணக்கு (மூ.அக.); castor - plant.

[தள் → தரு → தருள் → தருண் + அம். இச்சொல்லும் தருதற் கருத்தினின்று பிறந்த சொல்லேயாகும். தரு = தருகை. தருதல். தரு → தருணம். தருணம் = செயலுக்குத் தக்கநேரம். (ஒ.நோ.) மருள் → மருண். உடல் வனப்பிற்குரிய இளமையைத் தரும் பருவம். உடலின் கண்ணே வனப்புடன் மிளிரும் அழகை, ஆற்றலுடன் திகழும் இளமையாற்றலை, நற்செயல்கட்கு, நல்லெண்ணத்துடன் பயன்படுத்தும் பருவம். இளமையை வெளிக்கொணரும் உரிய பருவமென்றறிக]

தருணவக்கினி *taruṇa-v-akkiṉi*, பெ. (n.) சித்திரமூலம்; Ceylon lead-wort (சா.அக.).

தருணன் *taruṇaṉ*, பெ. (n.) இளைஞன்; young man. "அறவுந்தருண னறவும் விருத்தன்" (சைவச. ஆசா. 16).

[தருணம் → தருணன்]

தருணி[1] *taruṇi,* பெ. (n.) *1.* இளமைப்பருவ முடையவள்; young lady. *2. 16* முதல் *30* ஆண்டு வரையுள்ள, மகளிர்பருவம் (திவா.); the period from the 16th to the 30th year in the lifetime of a woman. *3.* கற்றாழை (மலை); curacoa aloes.

[தரு → தருணி]

தருணி[2] *taruṇi,* பெ. (n.) ஒருசெடி வகை; rosa alba.

[தா → தரு → தருணி]

தருணிகம் *taruṇigam,* பெ. (n.) *1.* தருணி பார்க்க; see *taruṇi. 2.* தகரை; ring-worm plant (சா.அக.).

[தருணி → தருணிகம்]

தருணிமான் *taruṇi-māṉ,* பெ. (n.) இளமை; youth.

[தரு → தருணி + மான் → தருணிமான்.]

தருணீர் *taruṇīr,* பெ.(n.) குங்குமச் செவ்வந்தி; red chamomile (சா.அக.).

தருணை *taruṇai,* பெ. (n.) *16* முதல் *30* வயது வரையுள்ள பெண்; young woman between 16 and 30. "தரித்த வாலை தருணை பிரவுடை விருத்தை யாகும்வியன் பருவங்களின்" (சுந்தபு. இந்திரபுரி. 33).

[தருணி → தருணை]

தருத்தமனி *taru-t-tamaṉi,* பெ. (n.) மரமஞ்சள் (மலை); tree turmeric.

தருதல் *tarudal,* பெ. (n.) *1.* கொடை (சூடா.); gift. *2.* வழங்குதல்; to give.

[தள் → (தர்) → தரு. ஒ.நோ. கள் → கரு. தருதற் கருத்துவேர்; ஈன்று புரந்தவள் தாய்; வையகம் வாழ்வாங்கு வாழ்ந்து, வசியும் வளனுந் சுரப்பதற்கு, வானம், மழை தந்தது. பரிசில் வேண்டி வந்த பாணர்தம் துன்னர் சிதாரையகற்றிக் கொட்டைக்கரையப் பட்டுடை தந்தவர் பண்டைத்தமிழ் மன்னராவர். இவ்வாறு தருதற்கருத்து, பண்டைத்தமிழர் தம் வாழ்வியலில், இயைந்துள்ளமை காண்க]

தருதித்தம் *taru-tittam,* பெ. (n.) அவுரிச்செடி; the indigo plant (சா.அக.).

தருநன் *tarunaṉ,* பெ. (n.) கொடுப்பவன்; giver, donor. "எல்லை தருநன்" (பொருந. 233).

மறுவ. வள்ளல், கொடையாளி

[தரு → தருநன் = பசிப்பிணியாளர்க்கும், புலவர்க்கும், பொருள் தருபவன்; வாரி வழங்கும் வள்ளல்.]

தருநாடகம் *taru-nāḍagam,* பெ. (n.) ஒரு மருத்துவ நூல்; a Tamil treatise on medicine.

[தரு = மூலிகை. தரு + நாடகம்]

தருநிலைக்கோட்டம் *taru-nilai-k-kōṭṭam,* பெ. (n.) காவிரிப்பூம்பட்டினத்தில், கற்பகத்தரு நின்று விளங்கிய கோயில்; temple of the Kaṟpaga-t-taru in Kāviri-p-pūm-paṭṭiṉam. "தருநிலைக் கோட்டத்து மங்கல நெடுங்கொடி" (சிலப். 5:145-6).

[தருநிலை + கோட்டம். கோட்டம் = கோயில். தருநிலைக்கோட்டமாவது, வேண்டுவார்க்கு வேண்டியதை, வேண்டியாங்கு நல்கும், கற்பகத்தரு வீற்றிருக்குங் கோவில்]

தருநிறப்பஞ்சரம் *taru-niṟa-p-pañjaram,* பெ. (n.) *1.* காந்தம் (யாழ்.அக.); magnet. *2.* காந்தநஞ்சு; a kind of arsenic.

[தருநிறம் + பஞ்சரம்]

தருப்பகச்சிலேட்டுமம் *taru-p-paga-c-cilēṭṭumam,* பெ. (n.) உடலைக்காக்குந் தலையிலுள்ள, ஒரு பகுதி; cerebral-ventricles.

[தருப்பகம் + சிலேட்டுமம்]

தருப்பகம் *taru-p-pagam,* பெ. (n.) தாழ்வு (யாழ்.அக.); inferiority.

[தா → தரு → தருப்பு + அகம்]

தருப்பகன் *taru-p-pagaṉ,* பெ. (n.) காமவேள் (மன்மதன்) (சங்.அக.); God of love.

[தரு → தருப்பு + அகன் = தருப்பகன் இன்பத்தைத் தருபவன்]

தருப்பசயனம் *taruppa-šayaṉam,* பெ. (n.) திருமால் தருப்பைப்புல்லின் மீதுறங்கும்

நிலையிலுள்ள, திருப்புல்லாணி; a Thirumāl shrine in Ramnād District. "சேதுமூல நயங்கொ டருப்பசயனம்" (சேதுபு. சேதுவந்த. 42).

[தருப்பம் + சயனம். தருப்பம் → தருப்பை. Skt. சயனம் = படுக்கை.]

தருப்படன் *taru-p-paḍan*, பெ. (n.) ஊர்க்காவற் காரன் (யாழ்அக); village-watchman.

[தளம் → தலம். தலப்படன் → தருப்படன்]

தருப்பம்[1] *taruppam*, பெ. (n.) 1. செருக்கு (கருவம்); arrogance, self-conceit. "தருப்பமிகு சலந்தரன்" (தேவா. 575:8). 2. புனுகுச்சட்டம் (யாழ்.அக.); musk.

[தருக்கம் → தருப்பம். த. தருக்கம் → வ. தர்ப்ப.]

தருப்பம்[2] *taruppam*, பெ. (n.) தருப்பைப் புல், குசைப்புல்; kaus. the sacred grass.

[தரு → தருப்பம்]

தருப்பி[1] *taruppi*, பெ. (n.) தருவி (யாழ்.அக.) பார்க்க; see *taruvi*.

[தருவி → தருப்பி]

தருப்பி[2] *taruppi*, பெ. (n.) அகப்பை; wooden spoon.

[தரு → தருப்பி]

தருப்பு *taruppu*, பெ. (n.) குறைந்த விலையுள்ள ஒரு வகை வெள்ளைக்கல் (S.I.I.ii, 214,18); a white stone of inferior value.

தெ., க. தருப்பு

[தரு → தருப்பு]

தருப்பூசணி *taru-p-pūšaṇi*, பெ. (n.) சருக்கரைக்கொம்மட்டி; sweet water melon.

மறுவ. பிச்சப்பழம்

[தரு + பூசணி → தருப்பூசணி. இன் சுவையைத் தரும் பூசணி. பூசணிக்காய்த் தோற்றத்துடன் திகழும் இப் பழம், கோடைக்காலத்தில் அனைவருடைய தாகத்தையும் தீர்க்கும். இப் பழத்தினால் உடம்பில் உள்ள வேண்டாத கழிவு நீர்மம் அகலும். உடம்பு கலகலவென்று களைப்பற்று, இருக்கும். இதன் பழச்சாறு உடம்பிற்கு மிகுந்த குளிர்ச்சியைக் கொடுக்கும். சிறுநீர்ப்பையின் நோயினை அகற்றும். சிறுநீரை அதிகமாகப் பிரிக்குந் தன்மைத்து. தருப்பூசணியின் விதை, உடம்பிற்கு வலிமையை அளிக்கும். ஆண்மை (விந்து) வெண்ணீரை அதிகரிக்கும். ஆண் மலட்டைப் போக்கும் என்று சா.அக. கூறும்]



தருப்பூசை *taru-p-pūšai*, பெ. (n.) தெங்கம் பழத்தின் ஓடு; a variety of coconut tree which bears big fruits whose shell is used by beggars or medicants as bowl (சா.அக.).

[தரு + பூசை → தருப்பூசை]

தருப்பை *taruppai*, பெ. (n.) குசைப்புல்; kaus the sacred grass. "வசிட்டன் றருப்பையோ டினித னெய்தினான்" (கம்பரா. கடிமண. 84).

மறுவ. தருப்பம்

[தருப்பம் → தருப்பை]

தருப்பைமுனை *taruppai-muṉai*, பெ. (n.) நுண்ணறிவு; a sharp intellect of a clever man (சா.அக.).

[தருப்பம் + முனை]

தருபகா *tarupagā*, பெ. (n.) செம்பரத்தை; shoe-flowers shrub. (சா.அக.)

தருபதில் *tarupadil*, பெ. (n.) தொண்மணிகளுள் ஒன்று; one of nine gems.

[தரு + பதில்]

தரும்பாறை *tarum-pāṟai*, பெ. (n.) கருஞ் சுக்கான்கல்; black lime-stone.

[இரும் → தரும் + பாறை; இறுகிய கரும்பாறை]

தருமக்கட்டு *taruma-k-kaṭṭu,* பெ. (n.) காப்பிலியர் பிரிவுவகை (E.T. iii, 216); a sub-division of the Kāppiliyar cast.

[தருமம் + கட்டு]

தருமக்கட்டை *taruma-k-kaṭṭai,* பெ. (n.) *1.* ஏதிலியர் (ஆதரவற்றோர்) (பிறர் தருமத்தால் வாழும் உடல்); orphan, as supported by charity. *2.* ஆவுரிஞ்சு தறி; rubbing post for cattle, set up as a charity.

[தருமம் + கட்டை]

தருமக்கல் *taruma-k-kal,* பெ. (n.) ஒருவன் செய்த அறச்செயல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு (இ.வ.); memorial slab inscribed with the charitable deeds of a person.

[தருமம் + கல்]

தருமக்கிழத்தி *taruma-k-kiḻatti,* பெ. (n.) தருமதேவதை [1] (சங்.அக.) பார்க்க; see *taruma-tēvadai*[1].

[தருமம் + கிழத்தி]

தருமக்கிழவர் *taruma-k-kiḻavar,* பெ. (n.) *1.* அறத்தைக் காப்பவர் (சங்.அக.); guardians of virtue. *2.* வணிகர் (பிங்.) (தருமம் செய்வதற்கான பொருள் வசதி உள்ளவர்); Vaišiyar, with wealth for giving donations.

[தருமம் + கிழவர்]

தருமக்குரல் *taruma-k-kural,* பெ. (n.) இலவச உணவுக்காக விடுக்கப்படும் பொது அழைப்பு; general call or invitation, as in a free distribution of food.

[தருமம் + குரல்]

தருமக்கூச்சல் *taruma-k-kūccal,* பெ. (n.) தருமக்குரல் பார்க்க; see *taruma-k-kural.*

[தருமம் + கூச்சல்]

தருமக்கொள்ளி *taruma-k-koḷḷi,* பெ. (n.) அறநிலையத்தார் செய்யும் ஈமக்கடன்; cremation, in charity, of a person who dies homeless.

[தருமம் + கொள்ளி]

தருமக்கோள் *taruma-k-kōḷ,* பெ. (n.) மறைமுகமாகச் செய்த குற்றத்தை குறிப்பாக வெளிப்படுத்தல் (யாழ்ப்.); indirect information as to a secret crime.

மறுவ. கோள்மூட்டி

[தருமம் + கோள்]

தருமகருத்தா *taruma-karuttā,* பெ. (n.) *1.* அறங்காவலர், திருக்கோயில் ஆட்சித் தலைவர்; manager or trustee of a Hindu temple. *2.* அறமுரைப்பவர், நீதியரசர் (R.T.); judge, arbitrator, magistrate.

[தருமம் + கருத்தா. த. கருத்தன் → கருத்தா → வ. கர்த்தா.]

தருமகாரியம் *taruma-kāriyam,* பெ. (n.) அறச்செயல்; act of charity.

[தருமம் + காரியம்]

தருமச்செல்வி *taruma-c-celvi,* பெ. (n.) *1.* அறச்செல்வி; Hindu deity of justice and righteousness. *2.* மலைமகள்; Pārvati.

[தருமம் + செல்வி]

தருமச்செலவு *taruma-c-celavu,* பெ. (n.) அறத்திற்காகச் செலவிடுஞ் தொகை; expenditure on charity.

[தருமம் + செலவு]

தருமச்சேட்டை *taruma-c-cēṭṭai,* பெ. (n.) நெற்களத்தில் ஏழைகட்குக் கொடுக்க வேண்டி முறத்தில் தனியே வைக்கப் பட்டுள்ள கூலம்; corn set apart in a winnowing fan at the threshing - floor to be given to the poor.

மறுவ. அறக்கொடை, அறச்செலவு

[தருமம் + சேட்டை. நெற்கோட்டை = நெல்லளக்குங்களம். கோட்டை → சேட்டை. 'கோட்டை போடுதல்' 'கோட்டை கொடுத்தல்' மதுரை வழக்கு]

தருமசக்கரம் *taruma-cakkaram,* பெ. (n.) அறவாழி; Buddham and Jaina the wheel of Dharmam. "தருமசக்கர முருட்டினன் வருவோன்" *(மணிமே. 10:26).*



மறுவ. அறச்சக்கரம்

[தருமம் + சக்கரம்]

தருமசங்கடம் *taruma-šaṅgaḍam,* பெ. (n.) மாறுபட்ட இரண்டு கடமைகளுள், எதனை முடிப்பது என்று தெரியாத நிலைமை, அறத் தடுமாற்றம்; difficulty of discerning which of two contradictory duties is proper.

[தருமம் + சங்கடம்]

தருமசத்திரம் *taruma-cattiram,* பெ. (n.) வழிப்போக்கருக்கு இலவயமாக உணவு வழங்கும் இடம்; rest-house for travellers with free provision for food.

மறுவ. அறச்சாலை, ஊட்டுப்புரை

[தருமம் + சத்தரம்]

தருமசந்நிதி *taruma-šannidi,* பெ.(n.) ஆயிரங் காய்ச்சித் தென்னை; a variety of coconut tree yielding abundant fruit. (சா.அக.)

தருமசபை *taruma-šabai,* பெ. (n.) முறை மன்றம்; council of arbitrators, court of justice, tribunal.

மறுவ. அறமன்றம், அறங்கூறவையம்.

[தரு + ம் + அம் → தருமம் + சபை - தருமசபை. தருமம் = முறை; அறம். அவை → சபை. ஒ.நோ. அமர் → சமர்; அமை → சமை; சவை → சபை. தமிழில் தருதற்கருத்தினடிப்படையாகப் பிறந்த சொல்லே தருமம்; குறிலுக்கு அருகில் 'ர' கரம், 'ற' கரம், குற்றொற்றாக வாராது. (ஒ.நோ.) கருமம், பருமம், மருமம். சபா (sabha-) என்னுஞ் சொல்லிற்கு, வட மொழியில் வழங்கும் பொருள், 'விளக்கத்தோடு கூடியது' என்பதாகும். ஸ = கூட. பா (bha) = விளங்கு. ஈங்கு, தருமசபை என்பது, தென்சொல்லே யாகும். அறங்கூறுவோர் முறையுடன் கூடி நிறைந்துள்ள அவையே, தருமசபையாகும்.]

தருமசாட்சி *taruma-šāṭci,* பெ. (n.) 1. அறமன்றத்தாரால் அழைக்கப்பட்டுக் கேட்கப்படும் சான்று (இ.வ.); king's evidence, court witness. 2. அறமகளறியக் கூறுஞ்சாட்சி; testimony given in the name of the Goddess of virtue.

[தருமம் + சாட்சி]

தருமசாடி *taruma-šāḍi,* பெ. (n.) தருமக்கோள் (வின்.) பார்க்க; see *taruma-k-kōḷ.*

[தருமம் + சாடை - தருமசாடை → தருமசாடி.]

தருமசாத்திரம் *taruma-šāttiram,* பெ. (n.) தருமநூல் பார்க்க; see *taruma-nūl.*

மறுவ. அறநூல்

[தருமம் + சாத்திரம்]

தருமசாதனம் *taruma-šādaṉam,* பெ. (n.) அறச் செயலைக் குறிக்குஞ் செப்புப் பட்டயம்; deed of endowment inscribed on a copper - plate.

[தருமம் + சாதனம். தருமம் = அறம். சாசனம் → சாதனம்]

தருமசாலி *taruma-šāli,* பெ. (n.) அறவோன்; charitable person.

மறுவ. குணசாலி

[தருமம் + சாலி. தருமம் = அறம். சால் → சாலி. சாலுதல் = நிறைந்து விளங்குதல்]

தருமசாலை *taruma-šālai,* பெ. (n.) தருமசத்திரம் பார்க்க; see *taruma-šattiram.*

மறுவ. அறச்சாலை

[தருமம் + சாலை]

தருமசிந்தை *taruma-šindai,* பெ. (n.) அறம் புரியும் எண்ணம்; charitable or virtuous disposition.

[தருமம் + சிந்தை]

தருமசீலன் *taruma-šīlaṉ,* பெ. (n.) தருமசாலி பார்க்க; see *taruma-šāli.*

மறுவ. கொடையாளி, அறவன்

[தருமம் + சீலன்]

தருமசீலி *taruma-šīli,* பெ. (n.) *அறம்புரிபவள்;* charitable woman.

[தருமம் + சீலி]

தருமசூட்சுமம் *taruma-šūṭcumam,* பெ. (n.) *நுணுகி அறிதற்குரிய அறவியல்;* a subtle point in ethics.

[தருமம் + சூட்சுமம்]

தருமணம் *tarumaṇam,* பெ. (n.) *சடைச்சி;* matted hair plant.

தருமணல் *taru-maṇal,* பெ. (n.) திருவிழா முதலியவற்றிற் புதிதாகக் கொண்டுவந்து பரப்பும் மணல்; sand newly spread, as on festive occasions. "தருமணன் முற்றம்" *(மதுரைக். 684).*

மறுவ. போடு(ம்) மண்

[தரு + மணல்]

தருமணற்சுக்கான் *tarumaṇaṟ-šukkāṉ,* பெ. (n.) *கருப்புச் சுக்கான்கல்;* black lime stone *(சா.அக.).*

[தருமணல் + சுக்கான்]

தருமத்தியானம் *taruma-t-tiyāṉam,* பெ. (n.) ஆதனின் இயல்பு, அதன் இன்ப துன்ப உணர்வு, அது நல்வழியடை தலைத் தடுக்கும் தடைகள், அது முடிவில் நிலையாய இன்பத்தை எய்துகை ஆகிய மெய்ப் பொருளைப் பற்றிய உணர்வு; (Jainam) knowledge of the nature of the soul, its experiences of god and evil, the impediments in its progress, and its final attainment of eternal bliss. "இதனை ஆருகதர் தருமத்தியானம் என்ப" *(குறள், 286, உரை).*

[தருமம் + தியானம்]

தருமதலைவன் *taruma-talaivaṉ,* பெ. (n.) புத்தன் (தருமத்திற்கு உரிய தலைவன்); Buddham, as Supreme in virtue. "தருமத்தலைவன் றலைமையா னுரைத்த" *(மணிமே. 11: 30).*

[தருமம் + தலைவன்]

தருமதனம் *taruma-taṉam,* பெ. (n.) *கன்னல் சருக்கரை;* sugar obtained from sugercane.

[தருமம் + தனம் → தருமதனம்]

தருமதாயம் *taruma-tāyam,* பெ. (n.) அறத் திற்காக விடும் இறையிலி நிலம் (W.G.137.); inam granted for any charitable purpose; property or funds bequeathed and dedicated to pious uses.

[தருமம் + தாயம்]

தருமதானம் *taruma-tāṉam,* பெ. (n.) சமய நடை முறைப்படி செய்யும் கொடை; charity according to prescribed texts. 'எங்கோன் முற்பவத்திற் புண்ணியத்தையுந் தரும தானத்தையுஞ் செய்தோ னாதலின" *(சிலப். 15: 30: உரை).*

மறுவ. அறக்கொடை

[தருமம் + தானம்]

தருமதி *tarumadi,* பெ. (n.) நிலுவை *(யாழ்ப்.);* that which is due in money or goods, balance due.

[தரு + மதி]

தருமதேவதை *taruma-tēvadai,* பெ. (n.) *1.* இயக்கி (சூடா.); Jaina Goddess of Benevolence. *2.* யமன்; yaman. "தனைப்பயந்த நற்றருமதேவதை திருவருளால்" *(பாரத. நச்சுப்.47).* *(செ.அக.)*

[தருமம் + தேவதை]

தருமநாள் *taruma-nāḷ,* பெ. (n.) தாழி (பரணி) நாள் (பிங்.); the second star out of 27.

[தருமம் + நாள்]

தருமநீதி *taruma-nīti,* பெ. (n.) சட்ட நூல்களில் கூறப்படும் அறம்; justice, as based on the legal codes.

மறுவ. அறவுரை

[தருமம் + நீதி]

தருமப்பள்ளி *taruma-p-paḷḷi,* பெ. (n.) இலவயமாகக் கல்வி கற்பிக்கும் இடம்; charity school.

[தருமம் + பள்ளி]

தருமப்பிணம் *taruma-p-piṇam,* பெ.(n.) சுற்றம் இன்மையால், எரியூட்டப்படும் பிணம் (வின்.); corpse buried or cremated at the expenses of the public.

[தருமம் + பிணம்]

தருமப்பிரபு *taruma-p-pirabu,* பெ. (n.) வள்ளல்; benefactor, benevolent lord.

மறுவ. அறக்காவலன்

[தருமம் + பிரபு]

தருமப்பிள்ளை *taruma-p-piḷḷai,* பெ. (n.) கழைக் கூத்தரின் வளர்ப்புப் பிள்ளை (வின்.); one brought up by public charity in the profession of pole - dancing.

[தருமம் + பிள்ளை]

தருமப்பூணூல் *taruma-p-pūṇūl,* பெ. (n.) ஏழைப் பார்ப்பனப் பிள்ளைக்கு இலவயமாகச் செய்விக்கும் நூலணி விழா; investiture of a poor Brahmin boy with the sacred thread, performed in charity.

[தருமம் + பூணூல்]

தருமப்பெட்டி *taruma-p-peṭṭi,* பெ. (n.) அறக் காணிக்கையிடும் பெட்டி; charity - box, contribution boxes.

மறுவ. அறவுண்டி

[தருமம் + பெட்டி]

தருமபத்திரம் *taruma-pattiram,* பெ. (n.) அத்தி; fig-tree.

[தருமம் + பத்திரம்]

தருமபத்தினி *taruma-pattiṉi,* பெ. (n.) முறைப்படி திருமணஞ் செய்த மனைவி; legitimate wife entitled to take part along with her husband in all rituals.

மறுவ. வாழ்வரசி

[தருமம் + பத்தினி]

தருமபீடிகை *taruma-pīḍigai,* பெ. (n.) புத்தரது இணையடி அமைந்த இருக்கை–மேடை; pedestal bearing Buddha's feet, worshipped in many places. "புரையோ ரேத்துந் தருமபீடிகை தோன்றியது" (மணிமே. 8: 63).

[தருமம் + பீடிகை]

தருமபுத்திரன் *taruma-puttiraṉ,* பெ. (n.) 1. மகாபாரதக் கதையில் பாண்டவர்களுள் மூத்தவன்; the eldest of the Pāṇḍavās of Mahābāratham. 2. முறைப்படி மணந்து கொண்ட மனைவியின் மகன்; lawful son, son of legally wedded wife. (செ.அக.)

[தருமம் + புத்திரன்]

தருமபுரம் *taruma-puram,* பெ. (n.) 1. கூற்றுவன் நகர்; city of yamaṉ. 2. புகழ்மிக்க சிவ மடமுள்ள ஒரு சோணாட்டு ஊர்; தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் இருக்கிறது; a Šiva shrine near Mayilāḍuturai, Tañjāvūr district, famous for Šaiva mutt.

தருமம் *tarumam,* பெ. (n.) 1. கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறை; procedure to be followed by people. நெடுஞ்செழியன் அரச தருமத்தின்படி நடந்து கொள்ளவில்லை. 2. அறநெறி; righteous path. 3. நற்செயல் (பிங்.); virtuous deed. 4. நெறி (விதி) (உரி.நி.); statute, ordinance, law, sacred law. 5. அறநூல் (உரி.நி.); ancient text books on Hindu law. 6. ஒழுக்கம் (உரி.நி.); usage, practice, prescribed conduct. 7. கடமை; duty. "உன் தருமப்படி நீ நடந்து கொள்". 8. அறம், நேர்மை (நீதி); justice, righteousness. "பொருது மென்கை தருமமோ" (பாரத. சூதுபோர். 186). 9. தான முதலிய அறம்; charity, benevolence. "தருமமுந் தக்கார்க்கே செய்யா" (நாலடி, 250). 10. இயற்கை (உரி.நி.); nature; inherent qualities characteristics, instinct. 'தருமமிஃதெனப் பன்னா மரபெனின்" (ஞானா. 11. 23).

[தரு + ம் + அம் → தருமம். தருதற்கருத்தே தருமம் என்னும் சொல்லிற்கு அடிப்படை. 'தரு' என்னும் வேரடிக்கு, ஒத்தசொல், வடமொழியில் இல்லை. வடமொழியில் உள்ள வேரடியின் பொருள், தாங்கு என்பது. தருதல் வேறு, தாங்குதல் வேறு. தமிழில் உள்ள 'தரு' என்னும் வேரடியே பொருட் பொருத்தப்பாட்டிற்கு உகந்தது. குறிலுக்கு அருகில், 'ர'கரம், 'ற'கரம் குற்றொற்றாக வாராமையறிக. (ஒ.நோ.) கருமம்; பருமம்; மருமம்]

அறு → ஆறு = வழி; அறு → அரு

தருமம் எனுஞ்சொல்லின் எல்லாப் பொருளும் நல்லாறு, நல்வழி என்னும் பொருளிலேயே வருதல் காண்க. "கல்பொருதிரங்கு மல்லல் பேர்யாற்று நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர் முறை வழிப்படூஉம்" (புறநா.)விதி என்னும் பொருளும், இதனால் பெறும்.

தர்மின் என்ற வடமொழிச் சொல்லின் மூலம் த்ரி → தர என்பதாகும். தாங்கு என்பதே. இதன் பொருள். இந்த வேர்மூலம் தருமம் என்பதற்குப் பொருந்தாமை காண்க. *(சர் மோனியர் மோனியர் வில்லியம்ஸ்: சமக்கிருதம் - ஆங்கில அகரமுதலி).*

தருமமன்று *taruma-manṟu,* பெ. (n.) அற (நீதி) மன்றம்; court of justice. "ஓரடியிடாமற் றடுத்துவா தரும மன்றுள்" *(திருவாலவா. 41, 10).*

மறுவ. நீதிமன்றம்

[தருமம் + மன்று]

தருமமுதல்வன் *taruma-mudalvaṉ,* பெ. (n.) அருகக் கடவுள்; Arhat. "சித்தன் பகவன் தருமமுதல்வன்" *(சிலப். 10:178).*

மறுவ. அறமுதல்வன், அறத்தலைவன்

[தருமம் + முதல்வன்]

தருமமூர்த்தி *taruma-mūrtti,* பெ. (n.) அறமே உருவானவன்; embodiment of Dharma. 'நந்த மாலவாய்த் தருமமூர்த்தி" *(திருவாலவா. 20, 8)* (செ.அக.).

மறுவ. அறத்தலைவன், அறத்தேவன் (வின்.).

[தருமம் + மூர்த்தி]

தருமமைந்தன் *taruma-maindaṉ,* பெ. (n.) தருமபுத்திரன் (பிங்.) பார்க்க; see *taruma-puttiraṉ* (செ.அக.).

மறுவ. அறமைந்தன்

[தருமம் + மைந்தன்]

தருமராச்சியம் *taruma-rācciyam,* பெ.(n.) அற வழியில் முன்னேறும் நாடு; country of righteous rule state.

மறுவ. நீதியரசு, அறவாட்சி

[தருமம் + இராச்சியம்]

தருமராசன் *taruma-rāsaṉ,* பெ. (n.) 1. தருமன் (சூடா.) பார்க்க; see *tarumaṉ.* "விண்ணிடைத் தருமராசன் விரும்பினால் விலக்குவாரார்" *(தேவா. 523:2).* 2. பாலை (மலை); silvery - leaved ape flower.

மறுவ. அறமன்னன்

[தருமம் + அரசன் → தருமரசன் → தருமராசன், த. அரசன் → வ. ராசன்]

தருமராசன் *taruma-rāšaṉ,* பெ. (n.) பாலை மரம்; iron wood tree.

தருமராசாக்கல் *taruma-rāšā-k-kal,* பெ. (n.) சமந்த கூடம்; இலங்கையிலுள்ள ஆதம் மலை; adam's Peak in Ceylon.

தருமரேகை *taruma-rēgai,* பெ. (n.) அறஞ்செய் குணத்தைக் குறிக்கும் கை வரைவு (திருவாரூ. குற. mss); (palmistry.) a line is a person's palm indicating his benevolent disposition.

[தருமம் + இரேகை (இரேகை = கையிலமைந்திருக்கும் வரைவு)]

தருமலோபம் *taruma-lōpam,* பெ. (n.) அறக்கடமை தவறுகை; omission to do one's duty.

[தருமம் + லோபம். லோபம் = ஈகையிலாமை]

தருமவட்டி *taruma-vaṭṭi,* பெ. (n.) முறையான வட்டி; equitable, fair rate of interest.

மறுவ. நேர்வட்டி, அறவட்டி

[தருமம் + வட்டி. (வட்டி = பணத்தைப் பிறர் பயன்பாட்டிற்காகப் பெறும் ஊதியம்)]

தருமவதி *taruma-vadi,* பெ. (n.) ஈகைக்குணம் மிகுந்த பெண்; charitable and virtuous woman.

மறுவ. அறச்செல்வி

[தருமம் + விதி]

தருமவந்தன் *taruma-vandaṉ,* பெ. (n.) தருமவான் பார்க்க; see *tarumavāṉ.*

தருமவாகனன் *taruma-vāgaṉaṉ,* பெ. (n.) தரும வடிவான காளையை, ஊர்தியாகக் கொண்ட சிவன் (யாழ்.அக.); Šivaṉ, as riding on bull which is Tarumam personified.

[தருமம் + வாகனன் → தருமவாகனன்]

தருமவாசனம் *taruma-v-āšaṉam,* பெ. (n.) **முறை மன்றம்;** court. 'தருமவாச னத்தி லேற" (திருவாலவா. 41, 13).

[தருமம் + ஆசனம் (ஆசனம் = இருக்கை)]

தருமவாட்டி *taruma-v-āṭṭi,* பெ.(n.) **அறவழி நடக்கும் தலைவி;** lady in the righteous way.

[தருமம் + ஆட்டி. (ஆட்டி = பெண், தலைவி). ஒ.நோ. தேவராட்டி.]

தருமவாடி *taruma-vāḍi,* பெ. (n.) **ஈகைக்கூடம்;** place in which alms are given.

[தருமம் + வாடி]

தருமவாளன் *taruma-v-āḷaṉ,* பெ. (n.) **அறவழி நிற்கும் தலைவன்;** a person in the righteous way.

[தருமம் + ஆள் + அன் → தருமவாளன்]

தருமவாளி *taruma-v-āḷi,* பெ. (n.) **தருமவாளன்** பார்க்க; see *taruma-vāḷaṉ.*

மறுவ. அறவன், அறவாளி, அந்தணன்

[தருமம் + ஆளி. ஆளி = ஆள்வோன்]

தருமவான் *taruma-vāṉ,* பெ. (n.) **அற நோக்குடையோன்;** charitable and virtuous man. "தணிகைவாழ் தருமவானையே" (அருட்பா, V, பணித்திறஞ் சாலாமை, 1).

மறுவ. அறவான், புண்ணியன்

தருமவினைஞர் *taruma-viṉaiñar,* பெ. (n.) **அறப்புறங்களைப் மேற்பார்க்கும் அரசு அலுவலர்கள்;** officers in charge of charities. "தரும வினைஞருந் தந்திர வினைஞரும்" (சிலப். 26: 41).

[தருமம் + வினைஞர்]

தருமவைத்தியசாலை *taruma-vaitiya-šālai,* பெ. (n.) **இலவய மருத்துவமனை, பணமின்றி மருத்துவம் செய்யுமிடம்;** hospital of free dispensory.

[தருமம் + வைத்தியசாலை]

தருமன் *tarumaṉ,* பெ. (n.) 1. **அறக்கடவுள்;** god of justice and righteousness. "தருமன் றண்ணளியால்" (சீவக. 160). 2. **எமன்** (பிங்.); yamaṉ. "தருமனு மடங்கலும்" (பரிபா. 3:8). 3. **பாண்டவர்களுள் மூத்தவன்;** elder brother of Pāṇḍavars. "தரும னித்தனை நாட்செய்த தருமமும் பொய்யோ" (பாரத. சூது. 191). 4. **புத்தன்** (பிங்.); buddhaṉ. 5. **அருகன்;** arhat. "தருமன் பொருளன்" (சிலப். 10:178). 6. **திருக்குறளுரை காரருள் ஒருவர்;** one of the commentators on Kuṟaḷ. "தருமர் மணக்குடவர்" (தனிப்பா.).

தருமாசனத்தார் *tarumā-šaṉattār,* பெ. (n.) **நடுவர்கள்;** judges."அறங்கூறுந் தருமாசனத்தார் உரைக்கும் நடுவுநிலைமை" (சிலப். 5: 135: உரை).

[தருமம் + ஆசனத்தார்]

தருமாசனத்துக்கருத்தாக்கள் *tarumā-šaṉattu-k-karuttākkaḷ,* பெ.(n.) **தருமாசனத்தார்** (சிலப். 22: 8: அரும்) பார்க்க; see *tarumā-šaṉattār.*

[தருமம் + ஆசனம் + கருத்தாக்கள்]

தருமாசனம் *tarumā-šaṉam,* பெ. (n.) **தருமசபை** பார்க்க (சிலப். 10, கட்டுரை, 3,அரும்); see *taruma-šabai.*

[தருமம் + ஆசனம்]

தருமாத்திகாயம் *tarumāttigāyam,* பெ. (n.) **அறவழி நடக்கத் தேவையான பொருள்;** money required to live in the righteous way. "தருமாத்தி காயந் தானெங்கு முளதாய்" (மணிமே. 27: 187).

[தருமம் + ஆஸ்தி + காயம். Skt. ஆஸ்தி – சொத்து]

தருமாத்துமா *tarumā-t-tumā,* பெ. (n.) **தருமவான்** பார்க்க; see *taruma-vāṉ.*

[தருமம் + ஆத்துமா]

தருமாதருமம் *tarumā-tarumam,* பெ.(n.) **அறமும் அறமல்லாததும், அறமும், மறமும்;** justice and injustice, virtue and vice.

[தருமம் + அதருமம்]

தருமாதிரை *tarumādirai,* பெ. (n.) **இலவங்கப்பூ;** flower of cloves (சா.அக.).

தருமி *tarumi,* பெ. (n.) 1. **'கொங்குதேர் வாழ்க்கை' எனத்தொடங்கும் குறுந்தொகைப் பாடலைக் கடைக்கழகப் புலவர்களிடையே படித்துப் பாண்டியரசனிடம் பொற்கிழி**

பெற்ற கோயில் பூசாரி; person in the righteous temple priest, who read the poem commencing with "koṅgu tēr vāzhkkai" in front of Šaṅgam poets and received a purse from the pāṇḍiyan king. "நன்பாட்டுப் புலவனாயச் சங்கமேறி நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்" (தேவா. 885: 3). 2. அறவழி வந்த பொருள் (சி.போ.சிற்: 2, 4, பக். 73); concrete object, as possessing qualities.

[தருமம் + இ → தருமி. 'அம்' சாரியை கெட்டு. 'இ' கர விகுதியேற்று, 'தருமி' என்றானது. இதற்குத் தரப்படுவோன் என்று பொருள். (ஒ.நோ.) "ஆறுவது சினம்" ஆற்றப்படுவது சினம் என்ற பொருளில் வந்துள்ளமை காண்க. செயப்பாட்டு வினை, செய்வினை வடிவத்தில் வந்தது, என்றறிக.]

தருமிருகம் *taru-mirugam,* பெ. (n.) குரங்கு; monkey.

தருமூலம் *taru-mūlam,* பெ. (n.) மரவேர்; root of a tree (சா.அக.).

[தரு + மூலம்]

தருராகம் *taru-rāgam,* பெ. (n.) 1. தளிர்; tender leaves. 2. தழை; sprout.

[தரு + இராகம்]

தருராசம் *taru-rāsam,* பெ. (n.) பனைமரம்; palmyra tree.

[தா → தரு + ராசம்]

தருராசன் *taru-rāšan,* பெ. (n.) பனை (மலை.) (மரங்களின் அரசன்); palmyra - palm, as king of trees.

[தரு → தருமம் + ராசன். பனைபொருட்கள் அனைத்தும், மாந்தர்க்குப் பல்லாற்றானும் பயன்படுதலால், பனைமரம் மரங்களின் அரசன் எனச் சிறப்புற்றதெனலாம். தருமம் + அரசன் → தருமராசன். த. அரசன் → Skt. ராசன்.]

தருவதச்சுருட்டி *taruvada-c-curuṭṭi,* பெ. (n.) மயில் சிகைப்பூடு; peacock's crest plant (சா.அக.).

[தருவதம் + சுருட்டி]

தருவாய் *taru-vāy,* பெ. (n.) தக்கநேரம்; right time, opportunity. "அத்தருவாயி லாருயிர் வழங்கிய" (பெருங். வத்தவ. 9:55).

தெ. தருவாயி; க. தருவாய்

[தரு → தருவாய்]

தருவாரி *taru-vāri,* பெ. (n.) கல்லுப்பு (சங்.அக.); rock-salt (சா.அக.).

[தரு + வாரி → தருவாரி]

தருவாளி *taru-vāḷi,* பெ. (n.) வேளைப்பூடு; vailay plant (சா.அக.).

[தரு + வாளி]

தருவி[1]-த்தல் *taruvi-,* 4 செ.குன்றாவி. (v.i.) வருவித்தல்; to cause to bring. (செ.அக.)

க. தரிசு

[தரு → தருவி-.]

தருவி[2] *taruvi,* பெ. (n.) 1. துடுப்பு (சீவக. 2466, உரை); a ladle. 2. வேள்வியிற் கொள்ளும் இலைக்கரண்டி; leaf-spoon, used in vēdic sacrifices. 3. பெயரளவில் மட்டும் உள்ளது; that which is nominal, that which saves appearances. அதனைத் தருவிக்கு வைத்துக் கொண்டு நடத்துகிறான்.

[துருவி → தருவி.]

தருவிராகம் *taruvi-rāgam,* பெ. (n.) பனை; palmyra tree.

தருவிராகிகம் *taruvi-rāgigam,* பெ. (n.) நில வாகை மரம்; a variety of cassia.

மறுவ. கொன்ன மரம்

தருவிராசன் *taruvi-rāšan,* பெ. (n.) பாலை மரம்; iron wood tree. (சா.அக.)

தருவீகரசர்ப்பம் *taruvīgarašarppam,* பெ. (n.) உடலைக் கறுப்பாக்கி, வீங்கச் செய்யும் நச்சுப் பாம்பு; a snake which when bites causes the body, to swell and become black.

தருவை *taruvai,* பெ. (n.) பேரேரி; big lake.

தரூடம் *tarūḍam,* பெ. (n.) தாமரைப்பூ (மலை); lotus flower.

தரை[1]-தல் *tarai-,* 4 செ.குன்றாவி. (v.t.) **சம்மட்டியால் அடித்தல்** *(யாழ்ப்.);* to rivet with a hammer.

[தள் → தறை → தரை-.]

தரை[2] *tarai,* பெ. (n.) **கருப்பை;** womb - uterus. *2.* **நரம்பு;** nerve.

[தரு → தரை]

தரை[3] *tarai,* பெ. (n.) **ஆணித்தலை** *(வின்.);* head of a nail, of a rivet.

[தலை → தரை]

தரை[4] *tarai,* பெ. (n.) *1.* **நிலவுலகம்;** the earth. "தரையொடு திரிதல நலிதரு. . . சலதரன்" *(தேவா. 568:2). 2.* **நிலம்;** soil, land, ground. "தரையில் விழுந்து பணிந்தனர்" *(கோயிற்பு. பதஞ்ச. 43). 3.* **கரை;** shore. கப்பல் தரை தட்டிவிட்டது *(உ.வ.).*

தரைக்கருக்குநீர் *tarai-k-karukku-nīr,* பெ. (n.) **மூலிகை சேர்த்துச் சுண்டக் காய்ச்சிய நீர்;** infusion made by steeping articles in hot water.

[தரை + கருக்குநீர்]

தரைக்காரன் *tarai-k-kāraṉ,* பெ. (n.) **நிலத்துக்குரியவன்** *(யாழ்ப்.);* owner of the land.

[தரை + காரன். தரை = நிலம். "காரன்" உடைமைப் பெயரீறு. ஒ.நோ. கடைக் காரன். வீட்டுக்காரன், ஊர்க்காரன், மாட்டுக்காரன்]

தரைக்காற்று *tarai-k-kāṟṟu,* பெ. (n.) **தரையிலிருந்து கடல்நோக்கி வீசுங்காற்று;** land-breeze, as dist. from sea breeze.

மறுவ. கோடைக்காற்று

[தரை + காற்று]

தரைகாண்(ணு)-தல் *tarai-kāṇṇu-,* 16 செ.குன்றாவி. (v.t.) *1.* **அளவிடுதல்;** to measure. "இன்னம் மேன்மை தரைகாணலாம், நீர்மை தரைகாண வொண்ணாது" *(ஈடு, 1:3:1). 2.* **கீழ் விழுதல்;** to drop or fall to the ground. "காலுங் கரமுந் தரைகண்டனவால்" *(கம்பரா. நிகும்பலை. 24). 3.* **கரைதெரிதல்;** to sight the shore, while in the sea.

[தரை + காண்-.]

தரைச்சக்கரம் *tarai-c-cakkaram,* பெ. (n.) **தரையில் சுழலும் ஒருவகை வெடி;** a cracker with a knob that spins on the floor.



[தரை + சக்கரம். சக்கரம் = வட்டம்]

தரைச்சம்பங்கி *tarai-c-campaṅgi,* பெ. (n.) **சம்பங்கி வகை;** a white - flowering, creeper, Pergularia.

[தரை + சம்பங்கி]

தரைச்சேனை *tarai-c-cēṉai,* பெ. (n.) **தரையில் போர் செய்யவல்ல படை** (M.Navi. 26); army, land-force, dist. fr. sea-force; infantry.

மறுவ. தரைப்படை

[தரை + சேனை]

தரைத்தளம் *tarai-t-taḷam,* பெ. (n.) **முதல்தளம்;** ground-floor.

[தரை + தளம் (தரை = நிலம்]

தரைத்தேவர் *tarai-t-tēvar,* பெ. (n.) **அந்தணர்** *(பூசுரர்);* Andaṇar, as Gods on earth. "தரைத்தேவர் பணி சண்பை" *(தேவா. 145:5).*

[தரை + தேவர்]

தரைதட்டு-தல் *tarai-taṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) **கப்பல் தரையில் மோதுதல்;** to run aground, as a ship. தரைதட்டின கப்பல் போல *(உ.வ.).*

[தரை + தட்டு- (தட்டுதல் = மோதுதல்)]

தரைப்பங்கு *tarai-p-paṅgu,* பெ. (n.) **விளைச்சலில், நில உரிமையாளனுக்குரியது;** owner's share in the produce.

மறுவ. தரைவாரம் (யாழ்.), மேல்வாரம், நிலக்கூலி (கல்)

[தரை + பங்கு → தரைப்பங்கு. களத்திற் குவித்துள்ள நெற்பொலியில், அளந்தது போகத் தரையிற் கிடக்கும், குறிப்பிட்ட நெல்.]

தரைப்பசலி *tarai-p-pašali*, பெ.(n.) *தரையில் படரும் பசலிக்கீரை;* low spreading spinach.

[தரை + பசலி]

தரைப்படர்மரம் *tarai-p-paḍar-maram*, பெ. (n.) *கொடிமாமரம்;* creeper mango.

[தரைபடர் + மாமரம் = தரையிற் தாழ்ந்து காய்க்கும், மாமரம்]

தரைப்படு-தல் *tarai-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) *1. கீழேவீழ்தல்;* to prostrate, to fall on the ground. "தரைப்படுமளவிற் றத்தா நமரெனத் தடுத்து வீழ்ந்தார்" *(பெரியபு. மெய்ப்பொரு. 16).* "இவ்வுக்தியோடே தரைப்பட்டு" *(ஈடு, 7.4:10).* *2. அழுந்துதல்;* to be immersed. "அழுந்தி - தரைப்பட்டு" *(திவ். பெரியாழ். 5:3:7, வியா.).*

[தரை + படு-.]

தரைப்படுத்து-தல் *tarai-p-paḍuttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *தோற்கச்செய்தல்;* to make one fall flat on the ground; to defeat. "கசதுரங்க பலத்தையுந் தரைப்படுத்தி" *(பாரதவெண். 785).*

[தரை + படுத்து-.]

தரைப்படை *tarai-p-paḍai*, பெ. (n.) *போர்க் கருவிகள், அணிகங்கள் (வாகனங்கள்) அடங்கிய போர்ப்படைப் பிரிவு;* army.

[தரை + படை]

தரைப்பற்று *tarai-p-paṟṟu*, பெ. (n.) *சமவெளி (இ.வ.);* plains.

[தரை + பற்று.]

தரைப்பனை *tarai-p-paṉai*, பெ. (n.) *நிலப் பனை;* ground-palm.

[தரை + பனை (தரை = நிலம்)]



தரைமகன் *tarai-magaṉ*, பெ. (n.) *செவ்வாய் (பூமகளின் மகன்) (விதான. பஞ்சாங்க. 17);* Mars, as son of earth.

மறுவ. மண்ணின் மைந்தன்

[தரை + மகன்]

தரைமட்டம்[1] *tarai-maṭṭam*, பெ. (n.) *1. நில மட்டம் (வின்.);* ground level. *2. கட்டுமானக் காலங்களில், கட்டடங்களின் சுற்றுப்புறத்தில் அமையும் புதியமட்டம்;* newly designed ground level around newly constructions. *3. கடல் நடுமட்டத்திற்கு மேல், தரை உள்ள உயரம்;* mean sea-level.

மறுவ. நிலமட்டம்

[தரை + மட்டம் = தரைமட்டம். கட்டடங்கள் அமைக்குங்கால், சுற்றுத் தரை தாழ்வாக விருப்பது இயல்பேயாகும். அங்கு மண்நிரப்பி, நிலத்தை உயர்த்தி, அமைக்கப்படும் பகுதி, தரைமட்டம் எனப்படும்.

மழைநீர் எளிதில் வடியும் வண்ணம், முன்புள்ள பகுதியைப் பின்னர் புதுப்பிக்குங்கால், உயரும் மட்டத்தைவிடச் சற்று உயர்த்தி, புதுத் தரைமட்டம் அமைப்பது, நெஞ்சில் நிறுத்த வேண்டிய ஒன்றாகும்.

கடல் ஓதங்களால், ஏறி இறங்கும் ஏற்றம், இறக்கம் ஆகியவற்றின் அடிப்படையில், நடுமட்டம் (அடிப்படைப் பாழ்-சுழியம்) அளவாக எடுத்துக் கொள்ளப்படும். பின்னர் பொறியியல் மரபுப்படி, குறிப்பிட்ட இடத்தினின்று, தரைமட்டம் எவ்வளவு உயரத்தில் உள்ளதெனக் கணக்கிடப்படும். MSL + 122மீ. என்று குறிப்பிட்டு, கனம் + 122 மீ எனக் கணக்கிடுவர்.]

தரைமட்டம்[2] *tarai-maṭṭam*, பெ. (n.) *நிலப் பரப்பையொட்டிய நிலை;* being of the level of the ground.

[தரை + மட்டம் (மட்டம் = அளவு)]

தரைமாது *tarai-mādu*, பெ. (n.) *1. கஞ்சா;* gunjah plant. *2. நரம்பு;* nerve. *3. நாளம்;* vein *(சா.அக.).*

தரையர் *taraiyar,* பெ. (n.) நிலவுலகி லுள்ளோர்; people on the earth, earthly beings. *"வானத்தரு மானத் தரையரை வைப்பர்" (மருது: 98).*

[தரை + அர். தரை = நிலம். "அர்" படர்க்கைப் பலர்பாலீறு]

தரையாணி *tarai-y-āṇi,* பெ. (n.) ஆணிவகை *(வின்.);* a double-headed spike, clinched and headed at the smaller end after being driven in.

[தரை + ஆணி]

தரையாமை *tarai-y-āmai,* பெ. (n.) ஆமை வகை; land - tortoise, Testudo elegans.

மறுவ. நிலத்தாமை

[தரை + ஆமை]



தரையிடு-தல் *tarai-y-iḍu-,* 18 செகுன்றாவி. (v.t.) அடித்தஆணியின் இருபுறத்தையும் மடக்குதல் *(இ.வ.);* to rivet a nail at both ends after fixing it.

[தரை + இடு-.]

தரையில்லாக்குருவி *tarai-y-illā-k-kuruvi,* பெ. (n.) *1.* தரையில் தங்காது பெரும்பாலும் பறந்துகொண்டே இருக்குங் குருவிவகை *(வின்.);* swallow, Hirundinidae. *2.* தகைவிலான் குருவி வகை; swift, Cypselinae.

[தரை + இல்லா + குருவி]

தரையிறங்கு-தல் *tarai-y-iṟaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) வானூர்தி ஓடுதளத்தில் இறங்குதல்; to land touch-down. (of planes). வானூர்தி தரையிறங்க இன்னும் சில மணித்துளிகளே உள்ளன *(உ.வ.).*

[தரை + இறங்கு-. தரை = நிலம், ஓடுதளம்]

தரையோடு *tarai-y-ōḍu,* பெ. (n.) தரையிற் பாவுதற்குரிய ஓடு; flooring tiles.

மறுவ. தளவோடு

[தரை + ஓடு.]

தரைவாரம் *tarai-vāram,* பெ. (n.) மேல்வாரம் *(யாழ்ப்.);* owner's share of agricultural produce.

மறுவ. தரைப்பங்கு

[தரை + வாரம்]

தரைவிளாம் *taraiviḷām,* பெ. (n.) நரிவிளா;

தரோகம் *tarōgam,* பெ. (n.) நீர்க்கடம்பு; water cadambu *(சா.அக.).*

தல்லம் *tallam,* பெ. (n.) *1.* குழி; pit. *2.* நீரிருக்கும் பள்ளம்; pond.

[துள் = துளைக்கை; துளைத்தலால் உண்டான குழி. துள் → தள் → தள்ளம் → தல்லம்]

தல்லி *talli,* பெ. (n.) தாய் *(அக.நி.);* mother. தில்லிக்குப் பாச்சாவானாலுந் தல்லிக்குப் பிள்ளைதான்.

மறுவ. தள்ள

தெ. தல்லி

[தள்ளுதல் = ஈனுதல் (உள்ளிருந்ததை வெளித்தள்ளுதல்) (வாழை) குலை தள்ளுதல் என்னும் வழக்கை நோக்குக. தள் → தள்ளை = தாய். (வ.வ. 174). தள் → தள்ளி → தல்லி. மகவினை ஈன்றவள்]

தல்லு *tallu,* பெ. (n.) புணர்ச்சி *(யாழ்ப்.);* sexual intercourse.

[தல் → தல்லு.]

தல்லு-தல் *tallu-,* 5 செகுன்றாவி. (v.t.) *1.* இடித்து நசுக்குதல்; to beat, crush. *"இஞ்சியைத் தல்லிப் பிழிந்து சாறெடுத் தான்" (நாஞ்.). 2.* புணர்தல்; to copulate.

[தல் → தல்லு-.]

தல்லுநீர் *tallu-nīr,* பெ. (n.) வெண்ணீர் (விந்து); semen *(சா.அக.).*

[தல்லு + நீர்]

தல்லுமெல்லு *tallu-mellu,* பெ. (n.) இழுபறி (யாழ். அக.); scuffle.

மறுவ. போராட்டம்

[தல்லுமெல்லு : மரபிணைமொழி. மகள் திருமணத்திற்கு நகை வாங்கப் பணம் தல்லுமெல்லாக இருந்தது (உ.வ.).]

தல்லை *tallai,* பெ. (n.) 1. இளம்பெண்; young woman. 2. தெப்பம்; float.

[தள்ளை = தாய். தள்ளை → (பெண்) தல்லை]

தலக்கம் *talakkam,* பெ. (n.) இழிசெயல்; base conduct. "தலக்கமேசெய்து வாழ்ந்து" (தேவா. 523: 5).

[தல் → தலக்கு → தலக்கம்.]

தலக்காவல் *tala-k-kāval,* பெ.(n.) 1. கொள்ளைக் காரர்களுக்கு இடங்கொடாது செய்யும் நாட்டுக்காவல்; system of guarding a tract of country against open marauders. 2. விளைச்சல் (மாசூல்) முதலியவற்றின், காவல்வேலை; office of watching produce and performing general duties; as collecting revenue.

[தலம் + காவல். ஒருகா. தலைக்காவல் → தலக்காவல்.]

தலக்கிருதயம் *tala-k-kirudayam,* பெ. (n.) உள்ளங்கால்; sole of foot.

[தலக்கு + Skt. இருதயம்]

தலக்கு *talakku,* பெ.(n.) இலச்சை, வெட்க உணர்வு; sense of shame. "தலக்கற்றுச் சொல்லும்படியான ஆற்றாமை" (ஈடு. 10, 10, ப்ர.).

தெ. தலக்கு

[தல → தலக்கு]

தலகபுட்பம் *talagaputpam,* பெ. (n.) சதல புட்பம் பார்க்க; see *šadala-putpam* (சா.அக.).

[தலகம் + புட்பம்]

தலகாணி *talagāṇi,* பெ. (n.) தலையணை (இவ.); pillow (செ.அக.).

[தலையணை → தலையாணி → தலகாணி]

தலகிதம் *talagidam,* பெ. (n.) சிலந்தி; spider (சா.அக.).

[தல → தலகிதம்.]

தலச்சன் *talaccan̠,* பெ. (n.) தலைச்சன் பார்க்க; see *talaiccan̠* (சா.அக.).

[தலை = முதல். தல → தலச்சன்.]

தலசம் *talašam,* பெ. (n.) நிலமுத்து (திருவலாவா. 25, 16, அரும்.); pearls produced in the earth.

[தளம் - இடம், நிலம். தளசம் → தலசம்]

தலசயனம் *tala-šayan̠am,* பெ. (n.) மாமல்ல புரத்தில், திருமால் நிலத்திற் பள்ளிகொண்ட திருக்கோலம்; shrine where the image of Viṣṇu is in the sleeping posture, Māmallapuram. "மல்லைத் தலசயனம்" (திவ். பெரியதி. 2: 5: 1).

[தலம் + சயனம்]

தலசுத்தி *tala-šutti,* பெ. (n.) 1. உண்கலஞ் சேர்ப்பதற்குமுன், அது வைக்குமிடத்தை நீரிட்டுக் கழுவுகை; cleansing the place where leaves are spread for serving food. 2. பிறப்பிறப்புகள் நிகழ்ந்த வீட்டை மந்திரநீர் தெளித்துக் காப்புச்செய்கை (வின்.); ceremonial purification of a house, as after a death or - birth.

[தலம் + சுத்தி. Skt. சுத்தி = தூய்மை செய்கை]

தலத்தாது *tala-t-tādu,* பெ.(n.) நிலப்பனை (மலை.); ground-palm.

[தலம் + தாது - தலத்தாது = நிலம் படு பொருள்]

தலத்தார் *talattār,* பெ. (n.) கோயிலதிகாரிகள்; officers of a temple. "சாந்திக்காரர் பிள்ளைமார் தலத்தார்" (T.A.S. iv, 114).

[தலம் + த் + ஆர். 'த்' - சாரியை. 'ஆர்' பலர்பாலீறு.]

தலதம்பவாதம் *talatamba-vādam,* பெ. (n.) உள்ளங்காலில் குடைச்சலை ஏற்படுத்தும் ஊதைநோய் வகை; a kind of rheumatism.

[தளம் → தலம் → இடம், நிலம், நிலத்தில் பதியும் கால். தலம்பம் + வாதம்]

தலதரிசனம் *tala-tarišaṉam,* பெ. (n.) 1. பல இடங்களுக்குச் செல்லுதல்; tour to see places. 2. திருதலச் சுற்றுலா; religious tour.

[தளம் → தலம் + தரிசனம். (தரிசனம் = தெய்வம் மற்றும் பெரியோர்களைக் காணுகை.]

தலதாலம் *tala-tālam,* பெ. (n.) பனைமரம்; palmyra tree.

[தலம் + தாலம்]

தலநீலி *tala-nīli,* பெ. (n.) வேரில்லாத தாளி; Sita's knot (சா.அக.).

[தளம் = இடம். தளம் → தலம் + நீலி]

தலப்பம் *talappam,* பெ. (n.) தாளிப்பனை; South Indian talipot-palm.

மறுவ. கூந்தற்பனை

ம. தவப்பம்

[தல → தலப்பம். 'அம்' பெருமைப் பெயரொட்டு]

தலப்பு *talappu,* பெ. (n.) சம்பளம் (W.G. 504); salary, pay. 2. கூச்சம்; delicate (செ.அக.).

[தலைப்பு → தலப்பு. பழங்காலத்தில், தலையைக் கணக்கிட்டே, தவசத்தை அல்லது காசினைச் சம்பளமாகக் கொடுத்ததைப் பண்டைய கல்வெட்டுகள் வாயிலாக, நாம் அறியுஞ் செய்தியாகும்.]

தலபம் *talapam,* பெ. (n.) பொன்; gold (சா.அக.).

தலபாடம் *tala-pāḍam,* பெ. (n.) கடை தலைப்பாடம் (நெல்லை); that which is thoroughly learnt, as a lesson (செ.அக.).

[தலை → தல + பாடம்]

தலபுட்பம் *tala-puṭpam,* பெ. (n.) தாழை; fragrant screw-pine.

[தளம் → தலம் + புட்பம்]

தலபுராணம் *tala-purāṇam,* பெ. (n.) புனை கதைகள் மூலம் ஊர்ப்பெருமைகளையும், வரலாற்றுச் சிறப்புகளையும் கூறும் நூல். இது பெரும்பாலும் கோயில் சார்ந்ததாக அமையும்; literature to adore a place, particularly temple towns, with imaginative historical fame.

[தளம் → தலம் = கோவில். புராணம் = தொன்மம். கோவில் குறித்த தொன்மச் செய்திகளையும், ஊர் பற்றிய பண்பாட்டு, அரசியல் வரலாற்றினையும் உரைக்கும் நூல்.]

தலபேதம் *tala-pēḍam,* பெ. (n.) இட மாறுபாட்டு நோய்; ill health due to change of place (சா.அக.).

[தளம் → தலம் + பேதம்]

தலபோடம் *tala-pōḍam,* பெ. (n.) பொடுதலை (சங்.அக.); a small creeping plant.

[தளம் → தலம் + போடம்]

தலபோடகம் *tala-pōḍagam,* பெ. (n.) ஆவிரை; tanner's senna.

[தலபோடம் → தலபோடகம்]

தலம்[1] *talam,* பெ. (n.) 1. இடம் (பிங்.); place, site. 2. வணங்கும் தூய இடம்; sacred place, shrine. "பின்னரே தலத்தின் வீறும்" (பிரமோத். பஞ்சா: 42). 3. நிலவுலகம் (பிங்.); earth, land. 4. உலகம்; world. "ஏழ்தல முருவ விடைந்து" (திருவாச. 4: 7). 5. உடலுறுப்பு; region of the body, used in compounds like kai-t-talam, cevi-t-talam, etc. 6. செய், வேளாண்நிலம்; land under cultivation, as divided into plots. 7. வீடு; house. "தலமடைசு சாளரம்" (திருப்புகழ்த். 99). 8. தலைமை நகரம் (யாழ்ப்.); chief or principal place as the metropolis, head-quarters, the court; that part of a town, where the authorities reside. 9. பனை மரம்; palmyra tree.

[தளம் → தலம். வடமொழியில் 'ஸ்தல' என்பதற்குள்ள பொருள்கள், பெரும்பாலும், தளம் என்னும் தமிழ்ச் சொல்லிற்கே பொருந்துபவை; செயற்கையில், மேடாக்கிய தரை, மேட்டு நிலம், இடம், வறண்டநிலம், சமப்பரப்பு, கூரைத்தளம், ஆகியவை, 'ஸ்தல்' எனும் வடமொழிச் சொல்லிற்குரிய பொருளாகும், (மோனியர் வில்லியம்சு). எனவே, தளம் என்ற சொல்லே வடமொழிக்குச் சென்று, 'ஸ்தல' என்னும் வடிவைப் பெற்றுள்ளது. ஒ.நோ. தலை → தல → தலம். (எ.டு.) அருவாவடதலை சீத்தலைப் பேட்டை வாய்த்தலை, தண்டலை போன்றவை இடப் பெயர்களாகும்.]

தலம்[2] *talam,* பெ. (n.) இலை *(சூடா.);* leaf, foliage.

[தள் → தல → தலம்]

தலம்[3] *talam,* பெ. (n.) இதழ் *(திவ். திருச்சந்த. 25, வ்யா. பக். 74);* petal.

[தள் → தல → தலம்]

தலமாற்றம் *tala-māṟṟam,* பெ. (n.) அரசு வேலையில் உள்ள ஒருவரை, ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்கு மாற்றுகை (இவ.); transfer, as of a government servant, from one place to another.

மறுவ. இடமாற்றம்

[தளம் → தலம் + மாற்றம். மாற்றம் = இடமாற்றம், பணிமாற்றுகை]

தலமுகம் *tala-mugam,* பெ. (n.) நாட்டிய முத்திரை *(சிலப். 3: பக். 81: கீழ்க்குறிப்பு);* a hand pose.

[தலம் + முகம்.]

தலரூபகத்தாதி *talarūpāgattādi,* பெ. (n.) ஆமணக்கு வேர்; root of castor plant *(சா.அக.).*

[தலரூபகம் + அத்து + ஆதி. 'அத்து' சாரியை ஆதி = மூலம், வேர்]

தலரூபகம் *tala-rūpagam,* பெ. (n.) சிற்றா மணக்கு *(தைலவ. தைல. 85)* பார்க்க; see *ciṟṟāmaṇakku.*

[தலம் + ரூபகம்]

தலவாசம் *tala-vāsam,* பெ. (n.) தூய இடத்தில் குடியிருக்கை; residence in a sacred shrine. "செண்பக வனத்தி லோர்நாட் செயுந் தல வாசம்" *(குற்றா. தல. திருக்குற். 46).*

[தளம் → தலம் = இடம். த. வசி → Skt. வாசம். தூய்மையான இடத்திற் குடியிருத்தல்.]

தலவாடம் *tala-vāḍam,* பெ.(n.) தளவாடம் பார்க்க; see *taḷa-vāḍam (செ.அக.)*

[தளவாடம் → தலவாடம்]

தலவாரி *tala-vāri,* பெ. (n.) வயல்வாரி *(வின்.);* enumeration of cultivated lands.

[தலம் + வாரி.]

தலவாரியம் *tala-vāriyam,* பெ. (n.) விளைநிலைக் கணக்கு *(வின்.);* enumeration of cultivated lands.

[தலம் = விளைச்சல் நிலம். வாரி → வாரியம் = ஊரிலுள்ள விளைச்சல் நிலம் பற்றிய கணக்குகளை, மேற்கொள்ளும் குழு.]

தலவிருச்சம் *talaviruccam,* பெ. (n.) கோ(யில்) மரம்; sacred tree related to a temple *(கிரி. அக.)*

[தளம் → தலம் + விருச்சம்.]

தலன் *talaṉ,* பெ.(n.) கீழானவன்; mean person. "தலன்குண்டன்" *(திருப்பு. 561).*

மறுவ. கீழ் (குறள்)

[தளம் → தலம் → தலன். கீழ்ப்பகுதி, கீழான குணம், போன்ற சொல்லாட்சிகள் ஒப்பு நோக்கத்தக்கனவாம்.]

தலனம் *talaṉam,* பெ. (n.) மான்; deer *(சா.அக.).*

தலா talā, பெ. (n.) ஒவ்வொருவருக்கும், அல்லது ஒவ்வொன்றுக்கும்; each.

தலாகினி *talāgiṉi,* பெ. (n.) நிலநெல்லி; Indian gooseberry tree *(சா.அக.).*

தலாடகம் *talāḍagam,* பெ. (n.) 1. தலாடம் பார்க்க; see *talāḍam.* 2. காட்டெள்; wild sesamum seed *(சா.அக.).*

தலாடம் *talāḍam,* பெ. (n.) அணில்; squirrel.

தலாதலம் *talā-talam,* பெ. (n.) தராதலம்[2] பார்க்க; see *tarātalam*[2] *(செ.அக.).*

தலாமலம் *talā-malam,* பெ. (n.) மருக்கொழுந்து; southern wood *(சா.அக.).*

மறுவ. தவனம்

தலிகம் *taligam,* பெ. (n.) 1. விறகு; fuel. 2. மரம்; tree *(சா.அக.).*

தலிதம் *talidam,* பெ. (n.) மலர்ந்தது; blossomed.

[தலிகம் → தலிதம்]

தலூரப்பனை *talūra-p-paṉai,* பெ. (n.) தாளிப்பனை பார்க்க; see *tāḷippaṉai.*

தலூரம் *talūram,* பெ. (n.) 1. கருமருது; bastard saul, L.tr. Shorea talura. 2. பச்சையரக்கு; raw lac.

தலை[1] *talai,* பெ. (n.) 1. மனிதன் அல்லது விலங்குகளின் உடலின் மேலுறுப்பு; head the upper most part of the human or animal body. 2. சிறந்தது; that which is first, best, highest. "தலையே தவமுயன்று வாழ்தல்" *(நாலடி, 365).* 3. உயர்ந்தோன்; person of highest quality and

rank. "தலையெலாஞ் சொற்பழி யஞ்சிவிடும்" (நாலடி, 297). 4. **தலைவன்;** leader; husband. "தலையிழந்த பெண்டாட்டி" (ஏலாதி. 78). 5. **முதல்** (பிங்.); origin, beginning, source, commencement. "உயர்ந்தோர் தலையா விழிந்தோ ரீறா" (பெருங். வத்தவ. 2: 51). 6. **உச்சி;** top, apex. "தலையு மாகமுந் தாளுந் தழீஇ" (கம்பரா. ஆற்றுப். 6). 7. **நுனி;** end, tip. "தலைவிரல் தாக்க" (கல்லா. 8). 8. **முடிவு;** finish, close. "தலைவைத்த காப்பு விஞ்சை" (சீவக. 1881). 9. **ஒப்பு** (பு. வெ. 4.12: உரை); resemblance. 10. **வானம்** (பிங்.); sky, ethereal region. "தலையின் மின் கறுத்ததென்ன" (அரிச். பு. சூழ்வினை. 5). 11. **ஆள்;** unit, person, hand. தலைவரி. 12. **அஞ்சலில் ஒட்டும் முத்திரைத் தலை;** postage stamp, as bearing the figure of a king's head. 13. **மண்டையோடு;** skull. "தலைக்கலத் திரந்தது" (கம்பரா. சடாயுவு. 195). 14. **தலைமயிர்;** hair. தலையவிழ்ந்து கிடக்கிறது (இ.வ.). 15. **ஏழாம்வேற்றுமைச் சொல்லுருபு;** (gram) word used as a locative case-suffix. "முன்னிடை கடைதலை" (தொல். சொல். 77).

- கு.வி.எ. (adv.). **மேலே;** in addition to. "அகன்றலை......... சான்றோர் பலர் யான் வாழு மூரே" (புறநா. 191). /

- இடை. (part.) **வினைகட்கு முன் வரும் ஓர் இடைச்சொல்** (பி.வி. 45) ; prefix with the force of preposition.

தெ., ம., துட. தல; க. தலெ.

[உல் → துல் → தல் → தலை]

தலையென்னும் வேரடி, பொருந்துதற் கருத்தினின்று முகிழ்த்தது : முதற்கண் உயரம், நுனி, உச்சி மனிதன் அல்லது விலங்கின் மேலுறுப்பு முதலானவற்றைக் குறித்தது. அடுத்த நிலையில் இருதலை மணியன், இருதலைக் கொள்ளி, இருதலைக்காமம், முதலிய தொடர்களில், தலை என்பது முனையை அல்லது கடையைக் குறித்தல் காண்க (மு.தா. 103).

தலை வகைகள்:

1. சட்டித்தலை; large sized head.
2. பறட்டைத்தலை; head with very little over spread loose hair.
3. சுருட்டைத்தலை; curly hair head.
4. உருக்கைத்தலை; hour glass head.
5. பொடுகுத்தலை; scald head.
6. கோபுரத்தலை; tower head.
7. வழுக்கைத்தலை; bald head.
8. சொட்டைத்தலை; head with depression.
9. மாங்காய்த்தலை; tiny head.
10. பெருந்தலை; large sized head.
11. மொட்டைத்தலை; clean shaven head.
12. இரட்டைத்தலை; head of an oblong shaped head.

தலை[2] *talai,* பெ. (n.) **இடம்;** place. "நனந்தலை நல்லெயில்" (புறநா. 15).

[தல் → தலை.]

தலை[3] *talai,* பெ. (n.) **ஞாயிற்றின் கலை** (பிங்.); phase of the sun. "காலுந் தலையு மறிந்து கலந்திடில் சாலவும் நல்லது தான்" (ஔவை. குறள், 266).

இச்சொல் ஒகம் தொடர்பிலான குழூஉக்குறி.

தலை[4]**-தல்** *talai-,* 2 செ.கு.வி. (v.i.) 1. **மேன்மையாதல்;** to be exalted; to be superior. "தலைஇய நற்கருமஞ் செய்யுங்கால்" (ஆசாரக். 93). 2. **கூடுதல்;** to join, mix. "வளித்தலைஇய தீயும்" (புறநா. 2: 4). 3. **மழைபெய்தல்;** to rain. "எழிலி தலையாதாயினும்" (பதிற்றுப். 20, 25). 4. **மிகக் கொடுத்தல்;** to give away liberally. "கலந்தலைஇய" (புறநா. 361). 5. **பரத்தல்;** to spread. "மலிர்புனல் தலைத்தலைஇ" (பரிபா. 6: 3).

[துல் → தல் → தலை-.]

தலைக்கட்டியமொழி *talai-k-kaṭṭiya-moḻi,* பெ. (n.) **இருபத்தெட்டணிகளுள் ஒன்று** (பிங்.); one of 28 alaṅgārams (திவா.).

[தலை + கட்டிய + மொழி]

தலைக்கட்டு[1]**-தல்** *talai-k-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. **நிறைவேறுதல்;** to succeed, to be accomplished. "இது ரக்ஷணமாய்த் தலைக் கட்டின வித்தனை" (ஈடு. 4. 2: 1). 2. **இறப்பு நிகழ்ச்சியின் இறுதியில் தலைப்பாகை கட்டுதல்** (வின்.); to perform the ceremony of putting on the turban at the end of the period of mourning.

[தல் → தலை + கட்டு-.]

தலைக்கட்டு[2]**-தல்** *talai-k-kaṭṭu-,* 5 செகுன்றாவி. (v.t.) 1. **நிறைவேற்றுதல்;** to accomplish, complete, finish. 2. **ஆதரவாய் நடத்துதல்;** to treat kindly. தன்னை யடுத்தவர்களைத் தலைக் கட்ட வேணும் (நெல்லை). 3. **காப்பாற்றுதல்;** to protect. தருமம் தலைக்கட்டும் (உ.வ.) 4. **ஒப்புவித்தல்;** to entrust. இதை அவனிடம் தலைக்கட்ட வேண்டும் (இ.வ.).

[தல் → தலை + கட்டு-.]

தலைக்கட்டு[3] *talai-k-kaṭṭu,* பெ. (n.) 1. முடிவு; completion. "தலைக்கட்டின் றிக்கே" (ஈடு. 7.2:7). 2. குடும்பம்; family taken as a unit. இந்த ஊரில் முந்நூறு தலைக்கட்டு உண்டு (உ.வ.). 3. தலைப் பாகை; turban. "தலைக்கட்டினை யுடைய பாகர் புரவிகளைத் தேருடனே பிணித்துப் பண்ணினார்" (சீவக. 2213, உரை.) 4. நீத்தார் கடனிறுதியில் தலைப்பாகை கட்டும் நன்னிகழ்வு (வின்.); ceremony of putting on the turban at the end of the period of mourning. 5. வீட்டின் முதற்கட்டு; front quadrangle of a house.

க. தலெக்கட்டு; ம. தலக்(ெ)கட்டு

[தலை + கட்டு]

தலையில் துணி முடிகட்டியும், கழுத்தில் தாலிகட்டியும், இறுதியில் கோடித் துணியைக் குறித்து வழங்கும் சொல்லாட்சி.

தலைக்கட்டு *talai-k-kaṭṭu,* பெ. (n.) பெற்றோரும், திருமணம் ஆகாத பிள்ளைகளும் கொண்ட குடும்பம்; family both the parents and unmarried children taken as a unit.

[தலை + கட்டு.]

தலைக்கட்டுமாறி *talai-k-kaṭṭu-māṟi,* பெ. (n.). ஏமாற்றுக்காரன்; cheat.

மறுவ. தலைகொட்டினமாறி.

[தலைக்கட்டு + மாறு → மாறி - தலைக்கட்டுமாறி. கட்டுமாறி = வன்னெஞ்சக் கள்வர், பிறழ்ந்து பேசுபவர்]

தலைக்கட்டுவரி *talai-k-kaṭṭu-vari,* பெ. (n.). குடும்பவரி ; tax paid by each family (செ.அக.).

மறுவ. ஆள் வரி, தலைவரி

[தலைக்கட்டு + வரி (தலைக்கட்டு = குடும்பம்)]

ஆடவன் ஒரு தலைக்கட்டாகக் கணிக்கப் படுகிறான். திருமணமாகாதவர் தந்தையின் தலைக்கட்டைச் சேர்ந்தவராவார்; திருமணமான பெண்கள், தத்தம் கணவர்தம் தலைக்கட்டில், இயல்பாய்ச் சேர்ந்துவிடுகின்றனர்.

தலைக்கடுவன் *talai-k-kaḍuvaṉ,* பெ. (n.). மண்டைத்தோலரிப்பு; irritation of the scalp (சா.அக.).

[தலை + கடுவன்]

தலைக்கடை *talai-k-kaḍai,* பெ. (n.) முதல் வாசல்; front entrance of a house, opp. to pulai-k-kaḍai "தம்மகம் புகுதாதே கோயிற்றலைக்கடைச் சென்று" (இறை. பக். 117).

மறுவ. தலைவாசல்

[தலை + கடை]

தலைக்கண்விருத்தி *talai-k-kaṇ-virutti,* பெ. (n.) ஒகநிலையில் தாமரையிருக்கை (பத்மசானம்); one of the poses in yoga (சா.அக.).

[தலைக்கண் + விருத்தி]

தலைக்கணை[1] *talaikkaṇai,* பெ. (n.). தலையணை பார்க்க; see *talai-y-aṇai* (சா.அக.).

தெ. தலகட; ம. தலெக்கண.

[தலையணை → தலைக்கணை = அணையாயிருந்து, தலையைத் தாங்குவது தலையணையாகும். தலை + கு + அணை]

தலைக்கணை[2] *talai-k-kaṇai,* பெ. (n.) மொச்சைக்காய்; country bean (சா.அக.).

தலைக்கணைமந்திரம் *talai-k-kaṇai-mandiram,* பெ. (n.) படுக்கையறையில் மனைவி, முன் நடைமுறைக்கு எதிராக, கணவனை மாற்றப் பயன்படுத்தும் சொற்கள்; entising words of the wife, while the husband and wife are in the bed.

மறுவ. தலையணை மந்திரம்

[தலை + கு + அணை + மந்திரம்]

தலைக்கயிறு[1] *talai-k-kayiṟu,* பெ. (n.) மாட்டின் மூக்குக்கயிற்றிற் கட்டப்பட்டுக் கையிற் பிடிக்குங் கயிறு (இ.வ.); reins of a bullock.

[தலை + கயிறு]



தலைக்கயிறு[2] *talai-k-kayiṟu,* பெ. (n.) மாட்டின் கழுத்துக்கயிறு, மூக்கணாங்கயிறு ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட கயிறு; rope used for tethering cow, etc., to a post. *மாடு தலைக்கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடியது (உ.வ.)*

மறுவ. தாம்புக்கயிறு, தாமணிக்கயிறு

[தலை + கயிறு.]

தலைக்கருவி *talai-k-karuvi,* பெ. (n.) தலைக் கவசம்; helmet *(செ.அக.).*

மறுவ. தலைச்சீரா.

[தலை + கருவி]

தலைக்கரை *talai-k-karai,* பெ. (n.) வயலை அடுத்துள்ள நிலம்; land adjoining a field. "இதன் றலைக்கரையும்"(T. A. S. i. 199).

[தலை + கரை]

தலைக்கல் *talai-k-kal,* பெ. (n.) 1. கட்டட வளைவின் முதன்மையானக் கல்; key stone. 2. ஏந்திரத்தின் மேற்பாகமான ஆட்டுக்கல்; upper mill-stone.

[தலை + கல்]

தலைக்கவசம் *talai-k-kavašam,* பெ. (n.) தலைக்காப்புக் கவிப்பு; helmet.

மறுவ. தலைக்கருவி

[தலை + கவசம்]



தலைக்கழல் *talai-k-kaḻal,* பெ. (n.) தலைக் கட்டி; kind of tumour in the head. *(சா.அக.).*

மறுவ. தலைத்தோற்கழலை, தலைக்கழலை

[தலை + கழல்]

தலைக்கழி-தல் *talai-k-kaḻi-,* செ.கு.வி. (v.i.) பிரிதல்; to depart. "கொண்டு தலைக் கழியினும்" *(தொல். பொருள். 15).*

[தலை + கழிதல்]

தலைக்கறிச்சாறு *talai-k-kaṟi-c-cāṟu,* பெ. (n.) ஆட்டின் தலைக்கறியை கொதிக்கவைத்து இறுத்த சாறு; essence from the flesh and bones of sheep's head *(சா.அக.).*

மறுவ. மண்டைச்சாறு

[தலைக்கறி + சாறு]

தலைக்கனப்பு[1] *talai-k-kaṉappu,* பெ. (n.). தலைக்கனம் பார்க்க; see *talai-k-kaṉam*

[தலை + கனப்பு]

தலைக்கனப்பு[2] *talai-k-kaṉappu,* பெ. (n.) நீர்க் கோவையால் ஏற்படும் தலைக்கனம்; heaviness of head from cold *(சா.அக.).*

மறுவ. தலைக்குத்து; மண்டையிடி; மண்டைக்கனம்; மண்டைவலி

[தலை + கனப்பு]

தலைக்கனம் *talai-k-kaṉam,* பெ. (n.) 1. தலை நோவு; heaviness of head. "பிரமேகந் தலைக்கனம்" *(திருவாலவா. 27: 14).* 2. தானுணர்வு, செருக்கு; head-weight, ego, self-conceit. *பணம் வந்ததும், அவனுக்குத் தலைக்கனம் கூடிவிட்டது (உ.வ.).*

மறுவ. தன்முனைப்பு, செருக்கு

[தலை + கனம் , கனம் = இறுமாப்பு, அகந்தை, ஆணவம்]

தலைக்காஞ்சி *talai-k-kāñji,* பெ. (n.) பகைவரை யழித்துப்பட்ட வீரனது தலையைப் புகழ்ந்து கூறும் புறத்துறை *(பு.வெ. 4: 11);* theme describing the head of a great warrior, who destroyed his foes but lost his life.

[தலை + காஞ்சி]

தலைக்காநாள் *talai-k-kā-nāḷ,* பெ. (n.) முந்தின நாள் *(நாஞ்.);* the previous day.

[தலைக்கு + ஆ + நாள்]

தலைக்காய்[1] *talai-k-kāy,* பெ. (n.) முதலிற் காய்த்த நற்காய் (இ. வ.); the first fruits of a tree.

மறுவ. முதலறுப்பு, முதற்காய்ப்பு, முதல் போகம், முதல் விளைச்சல்.

ஒ. நோ. தலை நாள் = முதல் நாள்.

[தலை + காய்]

தலைக்காய்[2] *talai-k-kāy,* பெ. (n.) தலைக்கழலை; a tumour of the head (சா.அக.).

[தலை + காய்]

தலைக்காவல் *talai-k-kāval,* பெ. (n.) முதன்மைக்காவல் (சூடா.); main guard. "தொண்டர் தலைக்காவல்" *(திருக்களிற்றுப். 96).*

மறுவ. முதற்காவல்

[தலை + காவல்]

தலைக்காவேரி *talai-k-kāvēri,* பெ. (n.) காவேரியின் பிறப்பிடம்; source of the Cāuvēry (செ.அக.).

[தலை + காவேரி]

தலைக்கிறுகிறுப்பு *talai-k-kiṟu-kiṟuppu,* பெ. (n.) *1.* பித்தமயக்கம்; dizziness, biliousness. *2.* தன் முனைப்பு (இ.வ.); arrogance. *3.* தலைநடுக்கம்; dizziness of the brain.

மறுவ. தலைமயக்கம், தலைச்சுற்று, தலை நடுக்கம்.

[தலை + கிறுகிறுப்பு]

தலைக்கீட்டுயர்மொழி *talai-k-kīṭṭuyar-moḻi,* பெ. (n.) தலைக்கட்டியமொழி பார்க்க; see *talai-k-kaṭṭiya-moḻi.*

[தலைக்கீடு + உயர்மொழி]

தலைக்கீடு[1] *talai-k-kīḍu,* பெ. (n.) காரணம்; cause. "இறைதரியாரெனு நிலைமை தலைக்கீடா" *(பெரியபு. திருஞான. 61).*

மறுவ. கரணியம்

[தலை + இடு → ஈடு]

தலைக்கீடு[2] *talai-k-kīḍu,* பெ. (n.) *1.* போலிக் காரணம்; pretext, alleged cause. "புள்ளோப்புத றலைக்கீடாக" *(சிலப். 7: 9). 2.* தலைப்பாகை *(சிலப். 26: 137)*; turban, warrior's head-dress.

மறுவ. சாக்குப்போக்கு

[தலையிடு → தலைக்கீடு]

தலைக்குசரம் *talai-k-kušaram,* பெ. (n.) தலையணை பார்க்க; see *talai-y-aṇai.*

மறுவ. தலைக்குயரம்

ம. தலெக்குயரம்

[தலை + கு + உயரம் = தலைக்குயரம் → தலைக்குசரம்.]

தலைக்குட்டை *talai-k-kuṭṭai,* பெ. (n.) தலைப்பாகை; turban (செ.அக.).

க. தலகுட்டெ; **தெ.** தலகுட்டா.

[தலை + குட்டை]

தலைக்குடை *talai-k-kuḍai,* பெ. (n.) தலையில் வைத்துக் கொள்ளும் ஓலைக்குடை (நாஞ்.); cover of plaited palmyra leaves used as a protection for the head against rain.

[தலை + குடை]

தலைக்குடைச்சல் *talai-k-kuḍaiccal,* பெ. (n.) தலைக்குள் குடைச்சல், வலி ஏற்படுத்தும் நோய்; boring pain in the region of the head (சா.அக.).

மறுவ. தலைநோவு, தலைக்குத்து

[தலை + குடைச்சல்]

தலைக்குத்தண்ணீர்விடுதல் *talaikku-t-taṇṇīr-viḍudal,* பெ. (n.) நோய் நீங்கியபின் தலையை நனைத்துக் குளித்தல்; take a bath on recovering from illness.

[தலைக்கு + தண்ணீர் + விடுதல்]

தலைக்குத்து *talai-k-kuttu,* பெ. (n.) தலைவலி; head-ache. "தலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு" *(வள்ளுவமா. 11).*

மறுவ. மண்டைக் குத்து தலைக்குடைச்சல்

[தலை + குத்து]

தலைக்குமேலே *talaikku-mēlē,* கு.வி.மு. (adv.) அளவுக்கு மிஞ்சி; exceeding all bounds, as price, anger, shame, pride, etc., தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாண் என்ன முழம் என்ன? (உ.வ.).

[தலை + கு + மேலே]

தலைக்குயர்ந்தபிள்ளை *talai-k-kuyarnda-piḷḷai,* பெ. (n.) ஆளாக வளர்ந்த பிள்ளை (இ.வ.); one who has attained maturity.

[தலை + கு + உயர்ந்த + பிள்ளை]

தலைக்குலை[1] *talai-k-kulai,* பெ. (n.) 1. முதற் குலை (வின்.); first-bunch of the season. 2. குலையின் நுனிப்பாகம் (யாழ்ப்.); tip of a bunch of fruit.

[தலை + குலை → தலைக்கலை = முதற்கண் ஈனுங்குலை = குலையின் நுனிப்பகுதி]

தலைக்குலை[2] *talai-k-kulai,* பெ. (n.) தென்னை, பனை முதலியவற்றிலிடும் முதற் குலை; the first bunch yielded by cocanut tree or palmyra tree (சா.அக.).

[தலை + குலை (தலை = முதல்)]

தலைக்குழம்பு *talai-k-kuḻambu,* பெ. (n.) தலையில் மட்டும் தேய்த்துக்கொள்ள உதவும் மருந்தெண்ணெய் (நாஞ்.); a medicinal oil used for applying on the head only.

[தலை + குழம்பு]

தலைக்குற்றல் *talai-k-kuṟṟal,* பெ. (n.) தலைக் குத்தல் பார்க்க; see *talai-k-kuttal.*

[தலை + (குத்தல் →) குற்றல்]

தலைக்குறை[1] *talai-k-kuṟai,* பெ. (n.) சொல்லின் முதற்குறை (சீவக. 365, உரை.); aphaeresis.

மறுவ. முதற்குறை

[தலை + குறை. தலை = முதல்]

தலைக்குறை[2] *talai-k-kuṟai,* பெ. (n.) 1. தலையின் வடிவத்திலேற்படும் குறைவு; diminution of head. 2. சிறியதலை; abnormally small head (சா.அக.).

[தலை + குறை]

தலைக்குனிவு *talai-k-kuṉivu,* பெ. (n.) மானக்கேடு; humiliation, loss of face.

[தலை + குனிவு.]

தலைக்கூட்டு[1]**-தல்** *talai-k-kūṭṭu-,* 5 செகுன்றாவி. (v.t.) 1. கூட்டுவித்தல்; to unite. 2. நிறை வேற்றுதல்; to accomplish an object. "தலைக்கூட் டுபாயமொடு" (பெருங். உஞ்சைக். 33:15).

[தலை + கூட்டு-.]

தலைக்கூட்டு[2] *talai-k-kūṭṭu-,* பெ. (n.) 1. வாணிபத்தின் தலைமைப் பங்கினர் (இ.வ.); principal partner in a business. 2. தலைக் கட்டிய மொழி (சூடா.) பார்க்க; see *talai-k-kaṭṭiya-moḻi.*

மறுவ. முதற்கூட்டு

[தலைக்கூடு → தலைக்கூட்டு = இருவர் இணைந்து வணிகஞ் செய்யுங்கால், பணத்தை முதலீடு செய்பவர், தலைக் கூட்டாளி எனப்படுவர்.]

தலைக்கூடு-தல் *talai-k-kūḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ஒன்றுசேர்தல்; to assemble, join, come into association. "உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்" (குறள், 394). 2. நிறைவேறுதல்; to be accomplished, to succeed. காரியந் தலைக்கூடும் (உ.வ.).

[தலை + கூடு]

தலைக்கூற்றல் *talai-k-kūṟṟal,* பெ. (n.) தலை முழுக்காட்டல்; giving a head bath (சா.அக.).

[தலைக்கு + ஊற்றல்]

தலைக்கெண்ணெய் *talai-k-keṇṇey,* பெ. (n.) முப்பத்திரண்டறங்களுள், தலையில் தேய்த்துக்கொள்ள எண்ணெய் உதவும் அறச்செயல் (திவா.); distributing oil for the head, one of muppattiranḍaṟam.

[தலை + கு + எண்ணெய்]

தலைக்கேறல் *talai-k-kēṟal,* பெ. (n.) மண்டைக்கேறல்; ascending to the cerebral region as bile (சா.அக.).

[தலை + கு + ஏறல்.]

தலைக்கேறு[1]-தல் talai-k-kēṟu-, 5 செ.குவி. (v.i.) அளவிற்கதிகமாகுதல்; முதிர்தல்; to grow in intensity. அவனுக்கு செருக்கு தலைக்கேறியிருக்கிறது (உ.வ.).

[தலை + கு + ஏறு-.]

தலைக்கேறு[2]-தல் talai-k-kēṟu, 5 செ.குன்றாவி. (v.t.) விரைவாக மிகுதல்; to increase in intensity.

[தலை + கு + ஏறு-.]

தலைக்கை talai-k-kai, பெ. (n.) தலைமையானவ-ன்-ள்; most eminent person. "தூரப்பாலமைச்சர் மேற்பாலறிவிற் றலைக்கையாகிய . . . சாலங்காயன்" (பெருங். நரவாண. 7:83).

[தலை + கை. முதன்மையானவன், செயற்பாடுடையவன்.]

தலைக்கைதா-தல் (தலைக்கை தருதல்) talai-k-kai-tā-, 18 செ.குவி. (v.i.) கையால் தழுவி அன்பு காட்டுதல்; to show one's great love, as to a woman, by clasping in the arms. "எல்வளை மகளிர்க்குத் தலைக்கை தரூஉந்து" (புறநா. 24:9).

[தலை + கை + தா-.]

தலைக்கொம்பு talai-k-kombu, பெ. (n.) 1. பல்லக்குத்தண்டின் வளைந்த முன்பாகம்; the bent front of a palanquin pole. 2. பல்லக்குச் சுமப்போரின் முதற்றானம்; front place among palanquin - bearers. 3. சிறந்தவ-ன்-ள்; superior person.

[தலை + கொம்பு = ஒரு செயலின், அல்லது பொருளின், முதன்மைச் சிறப்பினை, இச்சொல் உணர்த்திற்று எனலாம். இங்கு தலைக்கொம்பு என்பது சிறப்பாகப் பல்லக்கின் முதற்பகுதியையும், அதைச் சுமப்பவரின் முதன்மைத் தன்மையையுங் குறித்து நின்றது. பொருளின் முதற்பகுதிக்காகி வந்த இச் சொல், நாளடைவில் தலைமைப்பண்பு சான்ற பெரியோரையுங் குறித்து வழங்கலாயிற்று]



தலைக்கொள்(ளு)[1]-தல் talai-k-koḷ(ḷu)-, 13 செ.குவி. (v.i.) 1. தலைக்கேறுதல்; to rise to the head, affect the head, as poison, bile, liquor. 2. மிகுதல்; to overflow, as a torrent, to grow in abundance. "காமச் செந்தீத் தலைக்கொளச் சாம்பினாளே" (சீவக. 1259). 3. இறத்தல்; to die. "தாப்புலி யொப்பத் தலைக்கொண்டான்" (பு. வெ. 2, 10).

[தல் → தலை + கொள்(ளு)-,]

தலைக்கொள்(ளு)[1]-தல் talai-k-koḷ(ḷu)-, 7 செ.குன்றாவி. (v.t.) 1. வெல்லுதல்; to overcome. 2. மேற்கொள்ளுதல்; to undertake. "வேந்தன் போர்தலைக்கொண்ட பிற்றை ஞான்று" (தொல். பொருள். 63). 3. கிட்டுதல்; to approach, go near. "கொள்ளைகொ ளாயந் தலைக் கொண்டார்" (பு.வெ.2: 7). 4. கைப்பற்றுதல்; to capture, take possession of. "தலைக் கொண்ட நிரை பெயர்த்தன்று" (பு. வெ. 2, 1, கொளு). 5. தொடங்குதல்; to commence. "சாறு தலைக்கொண்டென" (புறநா. 82). 6. கெடுத்தல்; to destroy. "ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்" (புறநா. 15, 14).

[தல் → தலை + கொள்(ளு)-.]

தலைக்கோடி talai-k-kōḍi, பெ. (n.) மணமகனுக்கு முதல்திருவிழா நாளிற் கொடுக்கும் புதுவேட்டி (நாஞ்.); new clothes presented to the bridegroom on the day of the first festival.

[தலை + கோடி]

தலைக்கோடை talai-k-kōḍai, பெ. (n.) தலைச்சோழகம் (வின்.) பார்க்க; see talai-c-cōḻagam.

[தலை + கோடை]

தலைக்கோதை talai-k-kōdai, பெ. (n.) நெற்றிக் கட்டு மாலை; wreath worn by women on their foreheads. "தார்கொண்டா டலைக் கோதை" (கலித். 66:15).

மறுவ. நெற்றிப்பட்டம், நெற்றிப்பொட்டு, தலைப்பட்டம், தலைப்பொட்டு

[தலை + கோதை]

தலைக்கோல் *talai-k-kōl*, பெ. (n.) **ஆடற் கணிகையர் பெறும் பட்டம்**; title given to a dancing - girl, who is an adept in her profession. "மலைப்பருஞ் சிறப்பிற் றலைக்கோ லரிவையும்" *(சிலப். 14: 154)*.

[தலை + கோல்]



தலைக்கோலம் *talai-k-kōlam*, பெ. (n.) **மகளிர் தலையணிவகை** (பிங்.); a kind of head-ornament worn by women. "தலைக்கோலமாகிய முத்தும்" *(சீவக. 349, உரை.)*.

[தலை + கோலம்]

தலைக்கோலம் - தலையிலுள்ள முடியினை அள்ளிச் சொருகி தலைக்கு மென்மேலும் எழிலூட்டுதற் பொருட்டு, செயற்கை முடியினைக் கொண்டு அழகுபடுத்துவது. மாழையால் (உலோகம்) அமைக்கப்பட்ட, தலைக்கோலங்கள் பற்றிய சிறப்புச் செய்தியினை, சிற்பச்செந்நூல் எழிலுற இயம்புகின்றது. இத் தலைக் கோலங்கள் அனைத்தும், செயற்கை வடிவங்கள் அன்று. கற்பனைப் படைப்புகள் என்று கருதி ஒதுக்கி விட முடியாது. அரச மகளிரும், செல்வப் பெண்டிரும் செய்து கொண்டவை. இதன் வகைகள் வருமாறு:-



1. சடை மகுடம்
2. சடைபார மகுடம்
3. சடை மண்டல மகுடம்
4. சடைப்பந்து மகுடம்
5. விரிசடை மகுடம்
6. சுடர்முடி மகுடம்
7. முடிக்கட்டு மகுடம்
8. நீர்க்குமிழ்ச் சடை மகுடம்
9. குந்தள மகுடம்
10. தமிழமகுடம் (தம்மில்ல மகுடம்)
11. சுருள்முடி மகுடம்
12. முடிக்கோல மகுடம்
13. கரண்ட மகுடம்

மேற்குறித்த 13 வகைக் கோலங்களும், பொதுவாக முடி என்றும் சிறப்பாக மகுடம் (மௌலி) என்றும், பெயர்பெறும். இத் தலைக் கோலங்கள் கலைநலம் மிளிருங் கவின்மிகு சிற்பங்களின் அருங்காட்சியகமாக விளங்கும் திருக்கோயில்களில் காணப்படும் கருவூல மென்றறிக.

தலைக்கோலாசான் *talai-k-kōl-āšāṉ*, பெ. (n.) நட்டுவன்; one who gives training in dancing, dancing - master. "தலைக்கோ லாசான் பின்னுள னாக" *(சிலப். 30: 20.)*.

மறுவ. நட்டுவனார்.

[தலைக்கோல் + ஆசான் (ஆசான் = ஆசிரியன்)]

தலைக்கோலி *talai-k-kōli*, பெ. (n.) **தலைக் கோல் பட்டம் பெற்ற, ஆடி முதிர்ந்த கணிகை**; dancing woman who is an adept in her profession. "கூத்தன் நம்பிராட்டி யான மனஞ் செய்த பெருமாள் தலைக்கோலி" *(S.I.I. V. 145)*.

[தலை + கோலி. தலைக்கோல் பட்டம் பெற்றவள் தலைக்கோலி. ஆடற் கலையிலும், நட்டுவாங்கஞ் செய்வதிலும், தன்னிகரற்றுத் திகழும் ஆடற்கணிகை யரைக் குறிக்கப் பொதுவாக வழங்கிய இச் சொல், அரசர்க்கரசன் இராசராசன் காலத்தில் சிறப்பாகத் திருக்கோயிலில், கூத்தப்பெருமான் திருமுன்பு, திருநட்டம் பயிலும், ஆடல் அணங்குளைக் குறித்து வழங்கிய தெனலாம். இளங்கோவடிகள் காலத்தே, இச் சொல் வழக்கூன்றி இருந்தது. "மாந்தளிர் மேனி மாதவி மடந்தை" தலைக்கோற் பட்டம் பெற்றவள் என்பது சிலப்பதிகாரம் காட்டும் வரலாற்றுண்மையாகும்.]

தலைக்கோழி *talai-k-kōḻi,* பெ. (n.) வைகறையில் முதலிற் கூவுங்கோழி; cock that crows first in the early morning. தலைக்கோழி கூவும் நேரம்.

மறுவ. சாமக்கோழி

[தலை + கோழி]



தலைக்கோற்றானம் *talai-k-kōṟṟāṉam,* பெ. (n.) நாடக அரங்கு; stage for dancing. "தலைக்கோற் றானத்துச் சாபநீங்கிய.. மாதவி" *(சிலப்.3:3 அரும்.).*

[தலைக்கோல் + தானம்]

தலைகட்டு-தல் *talai-kaṭṭu-,* 5 செ.குவி. (v.i.) *1.* மயிர்முடித்தல்; to dress the hair. *2.* விளிம்பு கட்டுதல் *(வின்.)*; to make selvage for a mat, a cloth, etc., *3.* கணக்குப்புத்தகம் முதலியவற்றில் தலைப்பெழுதுதல் *(இ.வ.)*; to write headings, as in books, accounts.

[தலை + கட்டு-.]

தலைகவிழ்-தல் *talai-kaviḻ-,* 2 செ.குவி. (v.i.) *1.* நாணம் முதலியவற்றால் தலைசாய்த்தல்; to hang down one's head, as through shame, discomfiture, etc., *2.* மேல்கீழாதல்; to be turned upside down, topsy - turvy. *3.* மானக் கேட்டால் தலைகவிழ்தல்; to bow down due to shame. மகன் செய்த பிழைக்காகத் தகப்பன் தலை கவிழ்ந்தான் *(உ.வ.)*. *4.* செறுக்குருதல்; to be proud. அந்தப் பணிஉயர்வு வந்ததும் தலை கவிழ்ந்திருக்கிறான் *(உ.வ.)*.

[தலை + கவிழ்-.]

தலைகழி-த்தல் *talai-kaḻi-,* 4 செகுன்றாவி. (v.t.) *1.* கடமை முதலியவற்றைச் செய்துதீர்த்தல்; to discharge fully, as one's duty, debt. "கழிந்தோர்க் கொத்தகடந் தலைகழிக்கென" *(பெருங். வத்தவ. 1, 29)*. *2.* தலைமுடிகழித்தல் *(இ.வ.)*; to get one's head shaved.

[தலை + கழி-.]

தலைகாட்டல் *talai-kāṭṭal,* தொ. பெ. (vbl.n.) நோய்க்குறி காட்டுதல்; showing symtoms as diseases *(சா.அக.).*

[தலை + காட்டல்.]

தலைகாட்டாதோடல் *talai-kāṭṭādōḍal,* பெ. (n.). முழுதும் நீங்கல்; being cured radically as diseases *(சா.அக.).*

[தலை + காட்டாது + ஓடல்.]

தலைகாட்டு-தல் *talai-kaṭṭu-,* 5 செ.குவி. (v.i.) *1.* சிறிது நேரம் வந்து தங்கியிருத்தல்; to attend for a short time, give attendance. திருமண வரங்கு வந்து தலை காட்டி விட்டுச் சென்றார் *(உ. வ.)*. *2.* பலருமறிய வெளி வருதல் ; to appear in public. அந்த அவமானத்தால் தலைகாட்டக் கூடவில்லை *(உ.வ.)*. *3.* நன்னிலைமைக்கு வரத் தொடங்குதல் *(இ.வ.)*; to rise to prominence.

மறுவ. தலை தூக்குதல்

[தலை + காட்டு-.]

தலைகாண்(ணு)-தல் *talai-kāṇ(ṇu)-,* 16 செகுன்றாவி. (v.t.) காத்தல்; to patronize, protect, maintain. "தண்டமிழ்நூல் கலங்காமற் றலைகண்டானே" *(பாரத. சிறப்புப். 18).*

[தலை + காண்-.]

தலைகிழக்கா-தல் *talai-kiḻakkā-,* 6 செ.குவி. (v.i.) *1.* அழிவடைதல் *(குறள், 488);* to perish. "இறுவரைக் காணிற் கிழக்காந் தலை" *(குறள், 488).* *2.* தலைகீழாக மாறுதல்; to reversal of position. *3.* மீண்டும் தோன்றுதல்; to reappear.

[தலை + கிழக்கு + ஆ-.]

தலைகீழ்த்தொங்கி *talai-kīḻ-t-toṅgi,* பெ. (n.) வௌவால்; bat.

மறுவ. பாலூட்டி

[தலைகீழ் + தொங்கி = குட்டிப்போட்டுப் பாலூட்டுவதில் விலங்கு போன்றும், பறக்கும் இயல்புள்ள வௌவாலைத் தலைகீழ்த் தொங்கும் பறவை என்றும் சா.அக. கூறும்..]

தலைகீழாய் *talai-kīḻ-āy,* கு.வி.எ. (adv.) *1.* நேர் நிலை தவறி; upside, down. அவன் நிலைமை தலைகீழாய் மாறிவிட்டது. *(உ.வ.). 2.* முற்றவும் நன்றாய் (நுனி முதல் அடி வரை); perfectly, through and through, as from top to bottom. தலைகீழாய்ப் படித்திருக்கிறான் *(உ. வ.).*

[தலை + கீழ் + ஆய்]

தலைகீழாய்நில்-தல் (தலைகீழாய்நிற்றல்) *talai-kiḻāy-nil-,* 14 செ.கு.வி. (v.i) *1.* மிகுதியாகத் இறுமாப்புக் கொள்ளுதல்; to be arrogant. *2.* பெருமுயற்சியெடுத்தல் (இ.வ.); to take pains. தொட்ட காரியத்தை முடிப்பதில் அவன் தலைகீழாய் நிற்கின்றான். நீ தலைகீழாய் நின்றாலும் அந்தக் கல்லூரியில் இடம் வாங்க முடியாது *(உ.வ.).*

[தலை + கீழாய் + நில்-.]

தலைகுப்புற *talai-kuppuṟa,* கு.வி.எ. (adv.) தலை அல்லது முன்பகுதி முதலில் விழும் முறையில் நிற்றல்; head first down; headlong. பேருந்து பள்ளத்தாக்கில் தலைகுப்புற விழுந்து உருண்டது *(உ.வ.).*

[தலை + குப்புற.]

தலைகுலை-தல் *talai-kulai-,* 2 செ.கு.வி. (v.i.) நிலைகெடுதல்; to be routed. "உளைந்தமரர். . . தலைகுலைந்தோடி" *(சேதுபு. தேவிபு. 15).*

மறுவ. நிலைகுலைதல், தட்டழி-தல்

[தலை + குலை-.]

தலைகுலுக்கம் *talai-kulukkam,* பெ. (n.) தலைநடுக்கம் பார்க்க; see *talai-naḍukkam* *(சா.அக.).*

[தலை + குலுக்கம்]

தலைகுனி[1]-தல் *talai-kuṉi-,* 2 செ.குன்றாவி. (v.t.) *1.* தலைவணங்குதல்; to bow one's head in respect.

[தலை + குனி-.]

தலைகுனி[2]-தல் *talai-kuṉi-,* 2 செ.கு.வி (v.i.) நாணம் முதலியவற்றால் தலை கவிழ்ந் திருத்தல்; to bow down due to modesty, shyness. மணமகள் நாணித் தலைகுனிதல். *3.* மானக் கேட்டால் தலைகுனிதல்; to bow down due to shame. திருட்டுப் பழி வந்து விட்டதால் அவன் தலைகுனிந்து நடக்கிறான் *(உ.வ.).*

[தலை + குனி-.]

தலைகெட்டநூல் *talai-keṭṭa-nūl,* பெ. (n.) நுனி அகப்படாத நூல்; tangle thread. "தலைகெட்ட நூலதுபோல் தட்டழிந்தாய் நெஞ்சமே" *(பட்டினத். நெஞ்சொடு. 21).*

மறுவ. சிக்குநூல்

[தலை + கெடு + நூல்]

தலைகெட்டோடு-தல் *talai-keṭṭu-ōḍu-,* 5 செ.கு.வி. (v.i.) முற்றும் நோய்நீங்குதல்; to be radically cure from a disease *(சா.அக.).*

[தலைகெட்டு + ஓடு-.]

தலைகொட்டினமாறி *talai-koṭṭiṉa-māṟi,* பெ. (n.) தலைக்கட்டுமாறி பார்க்க; see *talai-k-kaṭṭu-māṟi* *(சா.அக.).*

தெ. தலகொட்லமாறி

[தலை + கொட்டினமாறி]

தலைகொடு-த்தல் *talai-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* செயலை முடிக்க முழுப்பொறுப்பேற்றல்; to undertake entire responsibility. *2.* பிறர் செயல்களில் தேவை நேராதபோதும், இடைப் புகுதல்; to interfere unnecessarily in another's affairs. *3.* பிறரது அல்லல் காலங்களில், தன் உயிர்பொருள்களின் கேடுகளை நோக்காமல், உதவிபுரிதல்; to help another in an emergency even at one's own risk.

மறுவ. தோள்கொடுத்தல்

[தலை + கொடு-.]

தலைகொழு-த்தல் *talai-koḻu-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* செருக்குடனிருத்தல்; to be haughty; to have a swelled head.

[தலை + கொழு-.]

தலைச்சங்கம் *talai-c-caṅgam,* பெ. (n.) கடல் கொள்ளப்பட்ட தென்மதுரையில் இருந்ததாகச் சொல்லப்படும், முதலாந் தமிழ்ச்சங்கம் (இறை. *1, உரை.);* the earliest Šaṅgam, first of the three ancient Tamiḻ academies, said to have flourished at South Madurai now under sea.

மறுவ. முதற்சங்கம்.

[தலை + சங்கம் = தலைச்சங்கம். தன்னேரில்லாத் தமிழ்மொழியின் தலைச் சங்கம், குமரிக்கண்டத்திற்குத் தென்பால்

கடல்கொண்ட, தென்மதுரையிலிருந்தது. இச்சங்கத்தைக் காய்சினவழுதி முதல் கடுங்கோன்மாறன் ஈறாகவுள்ள, எண்பத் தொன்பது பாண்டிய மன்னர்கள் வளர்த்தனர். ஏழு பாண்டிய மன்னர்கள் அவைக்களப் புலவர்களாக வீற்றிருந்தனர். மேலுமிச் சங்கத்தில் சிவமூர்த்தி, குமரவேள், அகத்தியர் முரிஞ்சியூர் முடிநாகராயர் முதலான 549 புலவர்கள் தமிழாய்ந்தனர். இவர்களை யுள்ளிட்ட 4449 புலவர்கள், பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை போன்ற நூல்களை இயற்றினர். அச்சங்கம், 4440 ஆண்டுகள் செயல்பட்டதென்றும், அகத்தியமே இலக்கணநூலாகப் பின்பற்றப்பற்றதென்றும், இறையனார் களவியலுரை, இயம்புகின்றது.]

தலைச்சம்மாடு *talai-c-cammāḍu,* பெ. (n.) பொறுப்பு; responsibility. "இப் பொன்னுக்குத் தலைச்சம்மாடாய் ஒரு நொந்தாவிளக் கெரிப்போம்" *(S.I.I.V. 238).*

[தலை + சும்மாடு → சம்மாடு]

தலைச்சவரம் *talai-c-cavaram,* பெ. (n.) தலை முழுதும் மழிக்கை; shaving of the head. "தலைச்சவரம் பண்ணுவதேன்?"

[தலை + சவரம்.]

தலைச்சன் *talaiccan̲,* பெ. (n.) முதற்பிள்ளை (இ.வ.); first born. தலைச்சன் பிறந்து பத்தாண்டிற்குப் பின்னரே, அடுத்தவன் பிறந்தான். தலைச்சன் பிள்ளை. பெண்தான் உனக்குத் தலைச்சனா? *(உ.வ.).*

மறுவ. தலைப்பிள்ளை, மூத்தப்பிள்ளை, முதற்பிள்ளை, தலைக்குழந்தை

[தலை → தலைச்சன். 'தலை' யென்னுஞ் சொல் 'முதல்', "மூத்த" என்னும், பொருளது; "அன்" ஆண் பாலொருமை ஈறு]

தலைச்சன்பிள்ளை *talaiccan̲-piḷḷai,* பெ. (n.) தலைச்சன் பார்க்க; see *talaiccan̲.*

தலைச்சன்பிள்ளைத்தாச்சி *talaiccan̲-piḷḷai-t-tācci,* பெ. (n.) முதற்கருப்பமுற்ற பெண்; female being pregnant for the first time *(சா.அக.).*

[தலைச்சன் + பிள்ளை + (தாய்ச்சி→) தாச்சி]

தலைச்சாத்து *talai-c-cāttu,* பெ. (n.) தலைப் பாகை; head-dress, turban. "மென்றலைச் சாத்தணிந்து" *(பிரபுலிங். பிரபுதே. 7).*

[தலை + (சார்த்து →) சாத்து. தலையை யொட்டிச் சார்த்திக் கட்டப்படுவது, தலைச்சாத்தாகும்.]

தலைச்சாமான் *talai-c-cāmān̲,* பெ. (n.) இடப் பக்கம் மதிப்பிறை போலவும், வலப்பக்கம் சூரியன் போலவும் உள்ளதும், நடுக்கோடு வகிர்மேற் செல்வதுமான, மகளிர் தலையணி வகை; set of jewels consisting of a central piece lying along the parting of the hair, a left limb in the form of the cresent moon and a right limb in the form of the sun *(செ.அக.).*

மறுவ. தலைச்சுட்டி, தலைக்கோலம்

[தலை + சாமான்]

தலைச்சாவகன் *talai-c-cāvagan̲,* பெ. (n.) முதல் மாணாக்கன்; chief pupil. "பெரியோன்றனக்குத் தலைச்சாவகனாய்" *(மணிமே. 21: 179).*

மறுவ. தலைமாணாக்கன்.

[தலை + சாவகன்]

தலைச்சாவிவெட்டு-தல் *talai-c-cāvi-veṭṭu-,* 5 செ.குவி. (v.i.) பயிர் மதர்த்துப் போகாதபடி நுனியை வெட்டுதல்; to poll the plants preventing overgrowth. "செருக்குக்குத் தலைச்சாவிவெட்டி யாடினபடி" *(ஈடு. 2. 7: 4).*

மறுவ. வெண்ஞ்சாவி வெட்டுதல் , பூட்டை வெட்டுதல்

[தலைச்சாவி + வெட்டு-. சாவி = பயிரின் உள்ளீடில்லாப் பதரான பகுதி]

தலைச்சி[1] *talaicci,* பெ. (n.) தலைமூத்த மகள்; eldest daughter, first-born daughter. தலைச்சனுக்கும் தலைச்சிக்கும் திருமணம் செய்தால் ஆகாது *(உ. வ.).*

[தலை → தலைச்சி. தலை = முதல், 'மூத்த' என்னும் பொருளது. 'இ' பெண்பால் ஒருமையீறு]

தலைச்சி[2] *talaicci,* பெ. (n.) பத்துவகை நாடியுளொன்றான சங்கினிநாடி; one of the ten tubular vessels in the region of the heart, said to raise from (šuḻi-mun̲ai) the spot between the eye-brows and terminate ingenitalibus etano.

தலைச்சிரங்கு *talai-c-cirangu,* பெ. (n.) தலையில் வரும் புண்; eczema, scald head, Taenia capitis.

[தலை + சிரங்கு. சிரங்கு = புண்]

தலைச்சிற-த்தல் *talai-c-cira-,* 3 செ.குவி. (v.i.) 1. மிகப்பெருகுதல்; to increase. "நன்முனிவ ரின்பந் தலைச்சிறப்ப" (திவ். திருவாய். 10:7:5). 2. மேன்மை யுறுதல்; to become prominent. "தானநகர்கள் தலைச்சிறந்து" (திவ். திருவாய். 8. 6: 9).

மறுவ. தலை சிறத்தல்.

யாப்பிற்காகச் சகர ஒற்று மிகுந்தது, எனக் கொள்க. இது முற்காலவழக்கு. தற்காலத்தில் ஒற்றில்லாமல் பேசுவதும், எழுவதும் வழக்குமாகிவிட்டது.

[தலை + சிற-,]

தலைச்சீரன் *talai-c-cīran,* பெ. (n.) கூகைநீறு; Malabar arrowroot flour (சா.அக.).

தலைச்சீரா *talai-c-cīrā,* பெ. (n.) தலைக் காப்பணி (சூடா.); helmet, head-piece.

[தலை + சீரா]

தலைச்சீலை *talai-c-cīlai,* பெ. (n.) 1. தலைப் பாகை; turban, head-dress. 2. மேலாடை (நாஞ்.); upper cloth. பஞ்சாபியரின் தலைச்சீலை 16 முழம் நீளம்.

மறுவ. தலைச்சாத்து

[தலை + சீலை]

தலைச்சுட்டி *talai-c-cutti,* பெ. (n.) தலையில் அணியப்பெறும் பொன்னணி; an ornament worn on the forehead by women and children.

மறுவ. நெற்றிச்சுட்டி, தலையணி, தலைச் சாமான்

[தலை + சுட்டி]



தலைச்சுண்டு *talai-c-cundu,* பெ. (n.) பொடுகு; scurvy head, dandruff (செ.அக.).

[தலை + சுண்டு]

தலைச்சுமடு *talai-c-cumadu,* பெ. (n.) தலைச் சுமை பார்க்க; see *talai-c-cumai.*

[தலை + (சும்மாடு →) சுமடு. ஒருகா. சுமைமேடு → சும்மாடு → சுமாடு → சுமடு. சுமையைத் தாங்கும் சும்மாடு மேடே சுமடு என்றறிக.]

தலைச்சுமை *talai-c-cumai,* பெ. (n.) 1. பாரம்; load. 2. தலையில் தூக்கிச்செல்லும் பாரம்; head-load.

மறுவ. தலைப்பாரம்.

[தலை + சுமை]

தலைச்சுருணி *talai-c-curuni,* பெ. (n.) தலைச்சுருளி பார்க்க; see *talai-c-curuli.*

[தலை + சுருணி]

தலைச்சுருள் *talai-c-curul,* பெ. (n.) தலைச் சுருளி பார்க்க; see *talai-c-curuli* (சா.அக.).

[தலை + சுருள்]

தலைச்சுருள்வல்லி *talai-c-curul-valli,* பெ. (n.) தலைச்சுருள்வள்ளி பார்க்க; see *talai-c-curul-valli.*

[தலைச்சுருள்வள்ளி → தலைச்சுருள்வல்லி]

தலைச்சுருள்வள்ளி *talai-c-curul-valli,* பெ. (n.) ஈசுரமூலி (பிங்.); a herb. Indian birth - wort.

[தலைச்சுருள் + வள்ளி]

தலைச்சுருளி[1] *talai-c-curuli,* பெ. (n.) தலைச் சுருள்வள்ளி (பதார்த்த. 281), ஈசுரமூலி; a herb.

[தலைச்சுருள் → தலைச்சுருளி]

தலைச்சுருளி[2] *talai-c-curuḷi,* பெ. (n.) 1. பெரு மருந்துப்பூடு; great medicine Indian birth wort. 2. சீந்தில்; moon-creeper. 3. கலப்பைக்கிழங்கு; plough root (சா.அக.).

மறுவ. தலைச்சூடுவல்லி, தலைச்சுருணி, தலைச்சுருள்வள்ளி

[தலை + சுருளி]

தலைச்சுருளிவள்ளி *talai-c-curuḷi-vaḷḷi,* பெ. (n.) கருடக்கொடி; braminy kit-creeper (சா.அக.).

[தலைச்சுருளி + வள்ளி]

தலைச்சுழல்[1] *talai-c-cuḻal,* பெ. (n.) தலைச் சுற்றல் பார்க்க; see *talai-c-cuṟṟal.*

[தலை + சுழல்]

தலைச்சுழல் *talai-c-cuḻal,* பெ. (n.) தலைச் சுழற்சி பார்க்க; see *talai-c-cuḻaṟci.*

[தலை + சுழல்]

தலைச்சுழல்மூலி *talai-c-cuḻal-mūli,* பெ. (n.) கஞ்சாங்கோரை; white-basil (சா.அக.).

[தலைச்சுழல் + மூலி]

தலைச்சுழற்சி *talai-c-cuḻaṟci,* பெ. (n.) 1. தலைச்சுற்றல் (வின்.) பார்க்க; see *talai-c-cuṟṟal.* 2. தலைமயக்கம்; giddiness.

மறுவ. தலைக் கிறுகிறுப்பு

[தலைச்சுழல் → தலைச்சுழற்சி. ஒ.நோ. அழல் → அழற்சி]

தலைச்சுழி *talai-c-cuḻi,* பெ. (n.) தலையெழுத்து (இ.வ.); fate.

[தலை + சுழி]

தலைச்சுற்றல் *talai-c-cuṟṟal,* பெ. (n.) 1. தலைக் கிறுகிறுப்பு; vertigo, giddiness, dizziness. 2. உள்ளம் குழம்பிப்போய், முடிவெடுக்க முடியாமல் இருத்தல்; confused stage of mind, not possible to take a decision. 3. ஆட்டுநோய் வகை (இ.வ.); turnsick, staggers, a disease of sheep.

[தலை + (சுற்று →) சுற்றல்]

தலைச்சுற்று *talai-c-cuṟṟu,* பெ. (n.) 1. தலைச் சுற்றல் பார்க்க; see *talai-c-cuṟṟal.* 2. மரத்தின் அடிச்சுற்றளவு (யாழ்ப்.); circumference of the buttend of a tree.

[தலை + சுற்று]

தலைச்சூடி *talai-c-cūḍi,* பெ. (n.) கொன்றை; cassia tree.

[தலை + சூடி]

தலைச்சூடுவல்லி *talai-c-cūḍu-valli,* பெ. (n.) தலைச்சுருளி பார்க்க; see *talai-c-curuḷi* (சா.அக.).

[தலைச்சூடு + வல்லி]

தலைச்சூல் *talai-c-cūl,* பெ. (n.) முதன் முதலிற் கொள்ளும் கருப்பம்; first pregnancy.

மறுவ. முதற்சூல், தலைக்கருப்பம்

[தலை + சூல்]

தலைச்சூலை *talai-c-cūlai,* பெ. (n.) கடுந்தலைவலி; severe head-ache (சா.அக.).

மறுவ. தலைக்குத்து, தலைவலி

[தலை + சூலை]

தலைச்செல்(லு)-தல் *talai-c-cel(lu-),* 7 செ.குன்றாவி. (v.t.) 1. முற்சென்று வரவேற்றல்; கூடுதல்; to go and meet in advance. "தன்னொப்பாரை யில்லானைத் தலைச்சென்று" (சீவக. 1365). 2. எதிர்த்துச்செல்லுதல்; to attack. "பகைவர்பணிவிட நோக்கி . . . தலைச்செல்லார்" (நாலடி, 241).

[தலை + செல்லு-. பெரியோர், நல்லோர்களை, எதிர்கொள்ளும்போது, இருந்த இடத்திலிருந்து சற்று முன்னேறி வரவேற்பது மரபு. அதனால் தலைச் செல்லுதல், என்று வழங்கலாயிற்று.]

தலைச்செறி *talai-c-ceri,* பெ. (n.) தலைச்சீரன் பார்க்க; see *talai-c-cīraṉ.*

தலைச்சேர்வை *talai-c-cērvai,* பெ. (n.) ஒரு செய்தியின் தலைப்பெயர் (வின்.); title, heading.

மறுவ. தலைப்பு

[தலை + சேர்வை]

தலைச்சேரிப்பட்டை *talai-c-cēri-p-paṭṭai,* பெ. (n.) கசப்புவெப்பாலை; tellicherry bark Nerium-antidum.

[தலைச்சேரி + பட்டை]

தலைச்சொறி *talai-šoṟi*, பெ. (n.) *1.* தலையில் ஏற்படும் சொறி; scurf which forms on the head attended with itching. *2.* தலைச்சுண்டு; dandruff.

[தலை + சொறி]

தலைச்சோடு *talai-c-cōḍu*, பெ. (n.) தலைச்சீரா (வின்.) தலைப்பாகை; helmet.

[தலை + சோடு]

தலைச்சோழகம் *talai-c-cōḻagam*, பெ. (n.) தென் மேல்காற்றின் தொடக்கம் (வின்.); the setting-in of the south - west monsoon (செ.அக.).

[தலை + சோழகம் (சோழகம் = தென்காற்று)]

தலைச்சோறு *talai-c-cōṟu*, பெ. (n.) மூளை (நாஞ்.); brain.

[தலை + சோறு]

தலைசாமான் *talai-šāmāṉ*, பெ. (n.) தலைச் சாமான் (இ.வ.) பார்க்க; see *talai-c-cāmāṉ*.

[தலைச்சாமான் → தலைசாமான்]

தலைசாய்[1]-தல் *talai-šāy-*, 1 செ.கு.வி. (v.i.) *1.* நாணுதல்; to bow one's head, as in shame, modesty, etc., "ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்" (இலக். வி. 738, உரை, பக். 751). *2.* இறத்தல் (இ.வ.); to die. *3.* உறங்குதல்; to sleep.

[தலை + சாய்-.]

தலைசாய்[2]-த்தல் *talai-šāy-*, 4 செ.கு.வி. (v.i.) *1.* தலைசாய்[1] பார்க்க; see *talai-šāy[1]-* "தம் புகழ் கேட்டார்போற் றலைசாய்த்து மரநந்த" (கலித். 119). *2.* வணங்குதல்; to bow one's head in reverence. "முனி திருக்கழலில்.... தலைசாய்த்து" (பாரத. நாடுகரந். 18). *3.* கீழேபடுத்தல்; to lie down in rest. தலைசாய்க்க நேரமில்லை (உ.வ.).

[தலை + சாய்-.]

தலைசாய்ந்தவளி *talai-šāynda-vaḷi*, பெ. (n.) *1.* தலையை ஒரு பக்கமாகச் சாய்க்க வைக்கும் வளி; a disease causing the head to incline on one side. *2.* வலிப்பினால் தலைசாய்க்க வைக்கும் நோய்; a kind of fits causing contortion of the head (சா.அக.).

[தலைசாய்ந்த + வளி]

தலைசிற-த்தல் *talai-šiṟa-*, 3 செ.கு.வி. (v.i.) தலைச்சிற பார்க்க; see *talai-c-ciṟa-*.

[தலை + சிற-. ஒற்றுடன் புணரும் முற்கால வழக்கம் இன்றில்லை]

தலைசிறந்த *talai-šiṟanda-*, கு.பெ.எ. (adj.) சிறப்பு வாய்ந்த; be outstanding.

[தலை + சிறந்த]

தலைசீய்[1]-த்தல் *talai-šīy-*, 4 செ.குன்றாவி. (v.t.) முற்றுந்துடைத்தல், துப்புரவுசெய்தல்; to sweep completely.

[தலை + சீய்-.]

தலைசீய்[2]-த்தல் *talai-šīy-*, 4 செ.கு.வி. (v.i.) வருந்துதல்; to grieve. "நாம் மறுத்துப் போந்தோம் என்று ... தலைசீய்க்கும் விஷயத்தை" (ஈடு. 4. 1:3).

[தலை + சீய்-.]

தலைசீவுதல் *talai-šīvu-*, 5 செ.கு.வி. (v.i.) *1.* தலைமுடி வாருதல்; to comb the hair. *2.* தலையைத் துண்டித்துக் கொலைசெய்தல்; to murder by cutting the head. தன் மனைவியின் நடத்தையில் ஐயங்கொண்ட கணவன், அவள் தலையைச் சீவிக் கையில் எடுத்து சென்று காவல் நிலையத்தில் கொடுவாளுடன் சரணடைந்தான். (உ.வ.).

மறுவ. தலைவாங்குதல்

[தலை + சீவு]

தருமபுரி மாவட்டம் பஞ்சப்பள்ளி அணையின் கீழ்ப்பகுதியில் உள்ள குடியிருப்பு களின் அருகில், ஒரு வீரன் இடதுகையில் வெட்டப்பட்ட தலக்குடுமியைப் பிடித்துக் கொண்டு, வலக்கையில் வாளொடும் நடப்பது போன்ற, புடைப்புப்பலகைக் கற்சிற்பம் உள்ளது. அந்த நடுகல்லில் எழுத்து எதுவும் இல்லை.

தலைசுருளி *talai-šuruḷi-*, பெ. (n.) பூடுவகை (யாழ்.அக.); a herb.

தலைசுழி *talai-šuḻi*, பெ. (n.) *1.* விதி; ஊழ்; fate. *2.* மண்டையோடுகளின் இணைப்பு; joints of parts of skull with one another (lit.).

மறுவ. தலையெழுத்து, தலைவிதி

[தலை + சுழி = தலைச்சுழி ; பல துண்டங்களாகவுள்ள மண்டையோட்டின் பொருத்துவாயின் இணைப்புப்பகுதியில், நெளிவுசுழிவுகள், காணப்படுவது இயல்பேயாகும்; அவை சுழி சுழியாகத் தென்படுவதால், தலைச்சுழி எனப் பெயர் பெற்றது. யாவராலுங் கணிக்கவியலாத எதிர்காலம், இச்சுழியின் கண்ணே பொதிந்து இருக்கின்றதெனும், மூட நம்பிக்கை, மக்களிடையே தொன்று தொட்டுப் பல்கிப்பெருகியுள்ளது. அவ் வரைவுகளை விதியின் குறியீடென்று விதந்து பேசலாயினர். இக் கோடுகள், கிறுக்கெழுத்துப் போலிருப்பதால், "மாந்தர்தம் தலையெழுத்து" என்று பேசத் தலைப்பட்டனர்]

தலைசுற்றியாடு-தல் *talai-šuṟṟi-y-āḍu-, 5* செ.குன்றாவி. (v.i.) **இறுமாப்புக் கொள்ளுதல்;** to have one's head turned, to exhibit arrogance. "பூமியிடைபோந்து தலைசுற்றியாடும்" *(தாயு. எங்குநிறை. 4).*

[தலை + சுற்றி + ஆடு-.]

தலைசூடுவல்லி *talai-šūḍu-valli,* பெ. (n.) ஈசுரமூலி *(மலை.);* a herb; Indian birth-wort.

[தலை + சூடுவல்லி]

தலைசெய்-தல் *talai-šey-, 1* செ.கு.வி. (v.i.) *1.* **தலைமை ஏற்றல்;** to take the lead. "தலை செயுமென்னை" *(தமிழ்நா. 206).* **2. தலை யெடுத்தல்;** to grow, flourish, as a plant. "கானந் தலைசெயக் காப்பார் குழறோன்ற" *(திணைமாலை 122). 3.* **தலைவைத்துப்படுத்தல்;** to lie down, as in sleeping. "வடக்கொடு கோணந் தலை செய்யார்" *(ஆசாரக். 31).*

[தலை + செய்-.]

தலைசெய்துகொள்(ளு)-தல் *talai-šeydu-koḷ(ḷu)-, 13* செ.கு.வி. (v.i.) *1.* **(தலை முடி) மழித்துக் கொள்ளுதல்;** to get one's head shaved.

மறுவ. மொட்டையடித்தல்

[தலை + செய்துகொள்-.]

தலைத்தரம் *talai-t-taram,* பெ. (n.) **முதல்தரம்;** that which is first, of the highest grade. "தலைத் தரமான கழனிகளை" *(திவ். திருவாய். 8. 9.9, அறா.).*

மறுவ. தலைநிலம்; முதல் நிலம்.

[தலை + தரம்]

தலைத்தலை[1] *talai-t-talai,* கு.வி.எ. (adj.) **ஒவ்வொரு வரும்;** each one. "தண்டா ரகலந் தலைத் தலைக் கொளவே" *(ஐங்குறு. 33).*

[தலை + தலை]

தலைத்தலை[2] *talai-t-talai,* கு.வி.எ. (adv.) *1.* **மேன் மேல்;** more and more. "தாழ்வி லுள்ளந் தலைத்தலைச் சிறப்ப" *(அகநா.29).* **2. இடந் தோறும்;** in all places, every where. "தத்தரிக் கண்ணார் தலைத்தலை வருமே" *(பரிபா. 16: 10).*

[தலை + தலை]

தலைத்தா-தல் (தலைத்தருதல்) *talai-t-tā-, 2* செ.கு.வி. (v.i.) **தலைமையான அன்பினைக் கையால் தழுவிக்காட்டுதல்;** to show one's great love to a woman by clasping here in the arms. "மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து" *(திருமுரு. 216).*

[தலை + (தரு →) தா-.]

தலைத்தாது *talai-t-tādu,* பெ. (n.) **நிலப்பனை** *(மலை.)* பார்க்க; see *nila-p-paṉai;* ground-palm.

[தலை + தாது]

தலைத்தாழ்வு *talai-t-tāḻvu,* பெ. (n.) **இழிவு (தலைகவிழ்க்கச் செய்வது);** disgrace, as causing one to hang down his head. "மற்றவரைச் சேர்ந்தவர்க்கும் வந்த தலைத்தாழ்வு" *(அருட்பா, 6, நாமாவளி, 163).*

[தலை + தாழ்வு]

தலைத்தாள்[1] *talai-t-tāḷ,* பெ. (n.) *(அடிமுன்பு)* **பெரியவ-ன்-ள்;** lit., front of the foot. Great personage. "சாவக மாளுந் தலைத்தாள் வேந்தன்" *(மணிமே. 14, 103).*

[தலை + தாள்]

தலைத்தாள்[2] *talai-t-tāḷ,* கு.வி.எ. (adv.) **முன்னிலையில்** *(திவா.);* before, in the presence of. "மனைவி தலைத்தாள்" *(தொல். பொருள். 165).*

[தலை + தாள் = தலைத்தாள் ; பெரியோர் தம் தாள்முன்பு, தலையைத்தாழ்த்தி வைத்து வணங்கும் பண்பு தென்னாட்டிற்கேயுரிய தனிப்பெரும் பண்பாகும். முன்னிலையிலென்றதும், அவ்வாறேயாகும்.]

தலைத்திண்ணை *talai-t-tiṇṇai,* பெ. (n.) முகப்புத்திண்ணை; front pial (செ.அக.).

மறுவ. திண்ணைமுகப்பு; திண்ணைத்திண்டு

[தலை + திண்ணை = தலைத்திண்ணை திண்ணைகளிற் திண்டுவைத்துக் கட்டும் பாங்கினைச் சிறப்பாகத் தமிழகத்துச் செட்டிநாட்டார் வீடுகளிற் பரவலாக இன்றும் காணலாம்]



தலைத்திமிர் *talai-t-timir,* பெ. (n.) 1. தலைக் கனம் (வின்.); heaviness of the heads, as through cold. 2. கொழுப்பு; arrogance, headstrongness.

மறுவ. தலைக்கொழுப்பு; மண்டைக் கொழுப்பு, மண்டைக்கனம்.

[தலை + திமிர்]

தலைத்திராணம் *talai-t-tirāṇam,* பெ. (n.) தலைச்சிரா (சூடா.) தலைப்பாகை; head dress.

[தலை + திராணம்]

தலைத்திருப்பம்[1] *talai-t-tiruppam,* பெ. (n.) தலைச்சுற்றல் பார்க்க; see *talai-c-cuṟṟal.*

[தலை + திருப்பம்]

தலைத்திருப்பம்[2] *talai-t-tiruppam,* பெ. (n.) குழந்தைத் தலையினைக் கருப்பையினுள் விரல் விட்டுத் திருப்புதல்; the manual turning of foetus by which the foetal head is caused to present. 2. மயக்கம்; giddiness (சா.அக.).

[தலை + திருப்பம் (திருப்பம் = முறை மாறுகை)]

தலைத்திருப்பு *talai-t-tiruppu,* பெ. (n.) 1. தலைச் சுற்றல்; giddinesss. 2. மூளையில் பரவும், அரத்தத்தால் ஏற்படும் தலைமயக்கம்; dizziness in the head due to some disorder in the circulation of blood in cerebral region. 3. ஒரு பனை; a kind of palmyra (சா.அக.).

[தலை + திருப்பு]

தலைத்திவசம் *talai-t-tivašam,* பெ. (n.) இறந்தவர் பொருட்டு நிகழ்த்தும், முதல் நினைவுநாள்; first annual ceremony of a deceased person.

மறுவ. முதல் நினைவுநாள்

[தலை + Skt. திவசம்]

தலைத்தீபாவளி *talai-t-tīpāvaḷi,* பெ. (n.) திருமணமானபின், மணமகள்வீட்டில் முதன் முதற் கொண்டாடுந் தீபாவளிவிழா; the first tīpāvaḷi festival after marriage, celebrated at the bride's house.

மறுவ. முதல் தீபாவளி

[தலை + தீபம் + ஆவளி – தலைத் தீபாவளி. (ஆவளி = உரிமை, ஒழுங்கு, வரிசை]

தலைத்துலுக்கம் *talai-t-tulukkam,* பெ. (n.) தலையாட்டம்; nodding one's head, as in agreement. "தலைத்துலுக்கங் கொண்டுதன் விசுவாசம்போல்" (சரவண. பணவிடு. 115).

மறுவ. தலைக்குலுக்கு

[தலை + துலுக்கம். ஆடு, கோழி, பலியிடும் போது, அவற்றின் தலையில் தண்ணீர் தெளிப்பர். அத் தண்ணீரை அகற்று வதற்காகத் தலையை அவை குலுக்கும். அதனையே 'துலுக்குதல்' என்பர். தன்னை வெட்டுவதற்குத் தானே இசைவு தெரிவித்ததாக எடுத்துக் கொள்வர்.]

தலைத்தூகம் *talai-t-tūgam,* பெ. (n.) இரும்பகம்; black rats ear plant (சா.அக.).

தலைத்தோற்கழலை *talai-t-tōṟ-kaḻalai,* பெ. (n.) **தலையில் உண்டாம் தசைத்திரளை** *(m.l);* wen on the scalp.

மறுவ. தலைக்கழலை

[தலை + தோல் + கழலை]

தலைத்தோற்றம் *talai-t-tōṟṟam,* பெ. (n.). **வீரனொருவன் பகைவர் ஆனிரையைக் கைப்பற்றிவருதலறிந்து, அவனுறவு முறையார் மனமகிழ்தலைக்கூறும் ஒரு புறத்துறை** (புறநா. *262);* theme describing the exultation of a warrior's kinsmen over his exploits in capturing his enemy's cattle.

[தலை + தோற்றம்]

தலைதகர்-தல் *talai-tagar-, 4* செ.குவி. *(v.i.).* *முனைமுறிதல்;* to be broken at the top, as an instrument. "குன்றின்மேற் கொட்டுந் தறிபோற் றலைதகர்ந்து" *(நாலடி, 257).*

[தலை + தகர்-.]

தலைதட்டி *talai-taṭṭi,* கு.வி.எ. (adv.) **தவசம் முதலியவற்றை விளிம்புக்கு இணையாக வரும் வகையில் அல்லது தட்டி அகற்றி;** while using a measure with the portion of grain above the brim knocked off.

[தலை + தட்டி]

தலைதட்டு-தல் *talai-taṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* **அளவுப் படியின் தலை மீது கூம்பாகவுள்ள கூலத்தை வழித்தல்;** to strike off the excess of grain, at the top of measure, in measuring. *2.* **அடக்குதல்;** to put down (செ.அக.).

[தலை + தட்டு-.]



தலைதடவு-தல் *talai-taḍavu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* **தலையைத் தடவுதல்;** lit., to stroke the head. *2.* **வஞ்சித்துக் கெடுத்தல்;** to ruin a person by deceit. "தலைதடவி மூளைதனை யுறிஞ்சுவார்" *(விறலிவிடு. 750).* அவன் தலையைத் தடவியே எல்லாச் சொத்தையும் பறித்துக் கொண்டார். *(உ.வ.).*

மறுவ. இரண்டகவாதி, ஏமாற்றுப் பேர்வழி

[தலை + தடவு-.]

தலைதடுமாற்றம் *talai-taḍu-māṟṟam,* பெ. (n.) **பெருங்குழப்பம்;** utter confusion (செ.அக.).

[தலை + தடுமாற்றம்]

தலைதடுமாறு[1]-தல் *talai-taḍu-māṟu-,* 5 செ.குவி. (v.i.) *1.* **கலங்குதல்;** to be bewildered. "தலை தடுமாறா வீழ்ந்து புரண்டலறி" *(திருவாச. 3: 152).* *2.* **சீர்கேடடைதல்;** to be thrown into confusion. "தாரணி வழக்கமெல்லாந் தலை தடுமாறிற் றம்மமா" *(பிரபோத. 6, 45).*

[தலை + தடுமாறு-.]

தலைதடுமாறு[2] *talai-taḍu-māṟu,* பெ. (n.) **மயங்குகை;** daze, bewilderment. "தையனல்லா ரொடுந் தலைதடுமாறாகி" *(திருவாச. 41:2).*

[தலை + தடுமாறு]

தலைதடுமாறு[3]-தல் *talai-taḍu-māṟu-,* 5 செ.குவி. (v.i.) **ஒழுங்கு மாறுபடுதல்;** to become derange.

மறுவ. தலை மயங்குதல்

[தலை + தடுமாறு-.]

தலைதப்பு-தல் *talai-tappu-,* 5 செ.குவி. (v.i.) **உயிர்பிழைத்தல்;** to escape death. "தாசிவீடு வந்தவர்கள் தலைதப்பிப் போகிறதோ" *(கோவ. க. 42).* இந்த வழக்கில் அவன் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் *(உ.வ.).*

மறுவ. உயிர்தப்புதல்

[தலை + தப்பு-.]

தலைதப்பல் *talai-tappal,* தொ.பெ. (vbl.n.) **பேரிடரைக் கடத்தல்;** escaping a danger (சா.அக.).

[தலை + தப்பல்]

தலைதா[1]-தல் (தலைதரு-தல்) *talai-tā-*, 15 செ.குன்றாவி. (v.t.) முதன்மை அளித்தல்; to raise one to eminence. "தாடந்தபோதே தலைதந்த" (திருமுரு. 216).

[தலை + (தரு →) தா-.]

தலைதா[2]-தல் (தலைதரு-தல்) *talai-tā-*, 8 செ.கு.வி. (v.i.) தலைகொடு- பார்க்க; see *talai-koḍu-*.

[தலை + (தரு →) தா-.]

தலைதாங்கி *talai-tāṅgi*, பெ. (n.) கழுத்து உள்ளெலும்பு; the first vertebra of the neck, so named because it supports the head.

[தலை + தாங்கி-.]

தலைதாழ்-தல் *talai-tāḻ-*, 2 செ.கு.வி. (v.i.) 1. வணங்குதல்; to show reverence by bowing one's head. 2. நாணுதல்; to show modesty by inclining one's head, become shame - faced. 3. நிலைகெடுதல்; to be reduced in circumstances (செ.அக.).

[தலை + தாழ்-.]

தலைதின்(னு)-தல் *talai-tiṉ(ṉu)-*, 14 செ.குன்றாவி. (v.t.) 1. முற்றுங்கெடுத்தல்; lit., to eat one's head. to destroy utterly. 2. ஒருவர் பற்றிப் பொல்லாங்கு பேசுதல்; to speack ill of one. அடுத்தவர் தலையைத் தின்னுதலே அவன் பிழைப்பாகப் போய்விட்டது (உ. வ.).

[தலை + தின்(னு)-.]

தலைதுலக்குதல் *talai-tulakkudal*, தொ.பெ. (vbl.n.) அச்சத்தால் தலைநடுங்கல்; shaking of the head due to fear (சா.அக.).

[தலை + (துலுக்கு →) துலக்கு-.]

தலைதுலுக்கு-தல் *talai-tulukku-*, 5 செ. குன்றாவி. (v.t.) தலையசைத்து இசைவைக் காட்டுதல்; to nod one's head in agreement or approbation. "அவன் செய்கிறோமென்று தலைதுலுக்கினால்" (ஈ. டு:10, 1:ப்ர.).

மறுவ. தலை குலுக்குதல்

[தலை + துலுக்கு-. தலையில் விழும் நீரைப் போக்குவதற்காகத் தலையைக் குலுக்குதல், துலுக்குதல் எனப்படும். சிற்றூர்க் கோயில்களில் ஆடு, கோழி பலியிடும் முன்னர், அவற்றின் தலையில் தண்ணீர் தெளிப்பது, இன்றுங் காணப் படும் நிகழ்வேயாகும். அத் தண்ணீரை விலக்கிடத், தம் தலையையும் உடலையும் வேகமாகக் குலுக்குஞ் செயலை, அவற்றை வெட்டுவதற்கு, இறைவன் இசைவுதந்ததாக, எடுத்துக் கொள்ளுகின்றனர். துலுக்கா விடில் அவற்றை வெட்டமாட்டார்கள். இந் நிகழ்வு ஊர்ப்புறத்தே இன்றுங் காணப்படுகிறது]

தலைதுவட்டு-தல் *talai-tuvaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) தலைமயிரின் ஈரந்துடைத்தல்; to wipe and dry one's head after bath (செ.அக.).

மறுவ. தலையுணத்தல்; மயிருலர்த்தல்

[தலை + துவட்டு-.]

தலைதூக்காமை *talai-tūkkāmai*, மயக்கத்தால் தலைதூக்க முடியாமை; inability to raise the head due to dizziness (சா.அக.).

[தலை + தூக்காமை]

தலைதூக்கு-தல் *talai-tūkku-*, 5 செ.கு.வி. (v.i.) 1. தலைகாட்டுதல்; to show up. வீட்டை நெருங்க நெருங்க அப்பா அடிப்பாரோ என்ற பயம் தலைதூக்கியது (உ.வ.). 2. சற்று மேல் நிலைக்கு வருதல்; to lift oneself up. மூத்த பிள்ளை சம்பாதித்த பின்புதான் குடும்பம் தலை தூக்கியிருக்கிறது (உ. வ.).

[தலை + தூக்கு-.]

தலைதெறிக்க *talai-teṟikka*, கு.வி.எ. (adv.) பொறிகலங்கும்படி; head long, impetuously. தலைதெறிக்க ஓடினான் (உ. வ.).

[தலை + தெறிக்க. (தெறிக்க = சிதற, கலங்க = விரைவுக்குறிப்பு. பரபரப்புடன் விரைந்துசெல்லுதலைக் குறிக்கும், குறிப்பு. வினையெச்சச் சொல்லென்றறிக]

தலைதேய்த்தல் *talai-tēyttal*, தொ.பெ. (vbl.n.) நீராடல்; having a bath.

[தலை + தேய்த்தல்.]

தலைதொட்டபிதா *talai-toṭṭa-pidā*, பெ. (n.) அருள்பாலிக்குந் தந்தை (யாழ்.அக.); God-father.

[தலை + தொட்ட + பிதா]

தலைதொடு-தல் *talai-toḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. தலையைத் தொட்டு ஆணையிடுதல்; to take an oath by touching one's head. "தலை தொட்டேன் தண்பரங்குன்று" (பரிபா. 6: 95). 2. திருமுழுக்காட்டிற்காகத் தலையைத் தொட்டு அருள்புரிந்து, திருத்தந்தையாதல் (கிறித்து); to become sponsor for a child in baptism.

[தலை + தொடு-.]

தலைதோய்-தல் *talai-tōy-*, 1 செ.கு.வி. (v.i.) நீரில் தலைமுழுகுதல் (யாழ்ப்.); to bathe for ceremonial purification or for health.

[தலை + தோய்-.]

தலைநகரம் *talai-nagaram*, பெ. (n.) ஒரு நாட்டின் அல்லது மாநிலத்தின் ஆட்சிப் பணிகள் நடைபெறும் இடம்; capital city. சோழர்களின் தலைநகரம் முதலாம் இராசேந்திர சோழன்காலத்தில் தஞ்சையிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மாறிற்று.

மறுவ. முதன்மை நகர்.

[தலை + நகரம்]

தலைநகை *talai-nagai*, பெ. (n.) தலையணி வகை; a head ornament.

மறுவ. தலையணி, தலைச்ச

[துல் → தல் → தலை + நகை.]

தலைநசுக்குண்ணல் *talai-našukkuṇṇal*, பெ. (n.) பேறுகாலத்தில் குழந்தை தலை நொறுங்குகை; crushing of the foetal head (சா.அக.).

[தலை + நசுக்குண்ணல்]

தலைநஞ்சுக்கொடி *talai-nañju-k-koḍi*, பெ. (n.) தலைப்பிள்ளையின் நஞ்சுக்கொடி; the navel cord of the first born child (சா.அக.).

மறுவ. முதற்கொப்பூழ்க்கொடி, தலைச்சன் கொடி

[தலை = முதல். தலை + நஞ்சுக்கொடி]

தலைநடுக்கம் *talai-naḍukkam*, பெ. (n.) 1. கிறுகிறுப்பு; giddiness. 2. முதுமையில் உண்டாகும் தலையசைவு; shaking of head in old persons. 3. முடக்குஊதை நோய், தலையை நடுங்கச் செய்யும் ஊதைநோய்; giddiness, shaking palsy. 4. அச்சம்; fear.

மறுவ. தலையாட்டம்

[தலை + நடுக்கம்]

தலைநடுக்கு *talai-naḍukku*, பெ. (n.) தலை நடுக்கம்² பார்க்க; see *talai-naḍukkam²* (செ.அக.).

[தலை + நடுக்கு]

தலைநடுக்குவளி *talai-naḍukku-vaḷi*, பெ. (n.) ஊதை நோயினாலேற்படும் தலை நடுக்கம்; shaking palsy due to aggrevated vaḷi (vāyu) (சா.அக.).

[தலை + நடுக்கு + வளி]

தலைநடுக்குவூதை *talai-naḍukku-v-ūdai*, பெ. (n.) 1. தலையாட்டம்; shaking palsy. 2. தலைச்சுற்று; giddiness. 3. அச்சம்; fear (செ.அக.).

மறுவ. முடக்குவளிநோய்

[தலை + நடுக்கு + ஊதை.]

தலைநடுங்கு-தல் *talai-naḍuṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. மயக்கமுறுதல்; to be dizzy, giddy. 2. தலையாட்டமடைதல்; to suffer from palsy. 3. அச்சமுறுதல்; to fear (செ.அக.).

மறுவ. தலையாடுதல்.

[தலை + நடுங்கு-.]

தலைநறுக்கு *talai-naṟukku*, பெ. (n.) ஓலையின் முன் பாகம் (வின்.); the head part of a palm leave.

[தலை + நறுக்கு → தலைநறுக்கு. = பனை மடலின் தலைப்பகுதி. அஃதாவது அவிழ்பனையின், நுனிக்குருத்துப் பகுதி.]

தலைநாள் *talai-nāḷ*, பெ. (n.) 1. இரலை (அசுவதி) (பிங்.); the first star of 27 stars. 2. முதல்நாள்; the first day. "தலைநாட் போன்ற விருப்பினன்" (புறநா. 101). 3. முந்திய நாள்; the previous day. 4. முற்காலம்; early times, former days. 5. முற்பிறவி; previous birth. "வெட்டுப் பட்டாய் மகனே தலைநாளின் விதிப்படியே" (தனிப்பா. 1. 149: 54).

மறுவ. முதல்நாள்.

[தலை + நாள்]

தலைநான்கு *talai-nāṉgu,* பெ. (n.) ஊதை, பித்தம், கோழை ஆகியவற்றின் ஒருமித்த நிலை; wind, bile, phlegm and their combination (சா.அக.).

[தலை + நான்கு]

தலைநித்தம் *talai-nittam,* பெ. (n.) பித்தளை; brass (சா.அக.).

தலைநிம்பகி *talai-nimbagi,* பெ. (n.) நில வேம்பு; ground-neem (சா.அக.).

தலைநிம்பம் *talai-nimbam,* பெ. (n.) சிவனார் வேம்பு (மலை.); Shiva's neem.

[தலம் → தலை + நிம்பம். நிம்பம் = வேம்பு.]

தலைநிமிர்-தல் *talai-nimir-,* 2 செ.குவி. (v.i.) 1. தலையை உயர்த்துதல்; to carry one's head erect, as in pride. 2. நிலைமேம்படுதல்; to improve in circumstances. தன் பிள்ளை முதல் மதிப்பெண் பெற்றதால், தந்தை தலை நிமிர்ந்து நடக்கிறான் (இ.வ.).

[தலை + நிமிர்-.]

தலைநிமிர்ச்சி *talai-nimircci,* பெ. (n.) 1. நன்னிமித்தமாக ஆடுமாடு முதலியன தலையை உயர்த்துகை (வின்.); carrying the head erect, as a good sign in cattle. 2. உரிய பருவமடைகை (வின்.); being grown up, passed from childhood. 3. வளர்ச்சியுற்று முன்னேறுகை; improving in circumstances. 4. செருக்கு; pride, superciliousness.

[தலை + நிமிர்ச்சி]

தலைநிமிர்த்து-தல் *talai-nimirttu-,* 5 செ. குன்றாவி. (v.t.) 1. தலையை உயர்த்துதல்; to raise one's head. ஒரு குடும்பத்தில் பெண் தலை குனிந்து நடந்தால், ஆண் தலைநிமிர்ந்து நடப்பார் என்பது ஆணாதிக்கக் குமுகாயமொழி (உ.வ.). 2. நிலையை முன்னேற்றுதல்; to improve one's circumstances. 3. உரியபருவம் வரும்வரை வளர்த்தல்; to bring up a person, till he reaches manhood. 4. நிலைபெறச் செய்தல்; to establish one in business.

[தலை + நிமிர்த்து-.]

தலைநில்லாப்பருவம் *talai-nillā-p-paruvam,* குழவிகட்குத் தலைநில்லாத பருவம்; that state of infancy or early child-hood, when the head cannot support itself (சா.அக.).

[தலைநில்லா + பருவம்]

தலைநிலம் *talai-nilam,* பெ. (n.) முதன்மையான இடம்; first place. "தலைநிலத்து வைக்கப் படும்" (நாலடி, 133).

மறுவ. முதல்நஞ்சை, முதல்நிலம்

[தலை + நிலம்]

தலைநிலைக்கீற்று *talai-nilai-k-kīṟṟu,* பெ. (n.) முதலில் தோன்றும் குருத்து; white tender leaf of coconut, palm, etc.

[தலைநிலை + (கீத்து →) கீற்று → தலை நிலைக்கீற்று = தென்னை, பனை, வாழை போன்ற மரங்களின், விரியாத குருத்து நிலை]

தலைநிற்றல் *talai-niṟṟal,* பெ. (n.) குழந்தைகளது தலை, சோர்வின்றி நிற்கை; the child's head is capable of supporting itself and remaining errect (சா.அக.).

[தலை + நிற்றல்]

தலைநின்றொழுகு-தல் *talai-niṉṟ-oḻugu-,* 5 செ.குவி. (v.i.) தலைமையாக நின்று பணி செய்தல்; to serve in an intimate capacity. "தலைநின்றொழுகும் பரத்தையர்" (தொல். பொருள். 147, உரை.).

[தலை + நின்று + ஒழுகு-.]

தலைநீங்கு-தல் *talai-nīṅgu-,* 5 செ.குவி. (v.i.) விட்டொழிதல்; to abondon, renounce. "அரசு தலைநீங்கிய வருமறை யந்தணன்" (மணிமே.11:84).

[தலை + நீங்கு-.]

தலைநீட்டராசன் *talai-nīṭṭarāšaṉ,* ஓணான்; lizard (சா.அக.).

தலைநீட்டு-தல் *talai-nīṭṭu-,* 5 செ.குவி. (v.i.) 1. சிறிதுநேரம் வந்து கலந்துகொள்ளுதல்; to attend for a short time. நேற்று நடந்த ஈமச் சடங்கில், அவர் வந்து தலையை நீட்டிவிட்டுச் சென்று விட்டார் (உ. வ.).

[தலை + நீட்டு-.]

தலைநீர்க்கோவை *talai-nīr-k-kōvai,* பெ. (n.) 1. தலைநீரோட்டம் பார்க்க; see *talai-nīrōṭṭam.* 2. குளிர்ச்சியால் தலையில் நீர்க்கோர்க்கை; heaviness of the head, through affection of cold (சா.அக.).

மறுவ. மண்டைச்சளி, மண்டைத்தடுமம், தலைநீரோட்டம், தடுமன்.

[தலைநீர் + (கோர்வை →) கோவை]

தலைநீர்ப்பாடு *talai-nīr-p-pāḍu,* பெ. (n.) கிளைக்கால்கள் பிரியும் முதல்மடை; chief sluice of a tank, from which smaller channels branch out. "சௌந்தரிய சாகரத்தைத் தலைநீர்ப் பாட்டிலே அநுபவிக்கிறார்" (திவ். திருநெடுந். 18, வ்யா.).

[தலைநீர் + பாடு → தலைநீர்ப்பாடு. தலைநீர் = முதல்மடை நீர். பாடு = சொல்லாக்க ஈறு.]

தலைநீர்ப்பெருந்தளி *talai-nīr-p-peru-n-taḷi,* பெ. (n.) தண்ணீர்ப்பந்தல்; place where drinking water is given in charity. "தலைநீர்ப் பெருந்தளி நலனணிகொளீஇ" (பெருங். வத்தவ. 3: 21).

[தலைநீர் + பெருந்தளி]

தலைநீரேற்றம் *talai-nīrēṟṟam,* பெ. (n.) சளி; cold (சா.அக.).

[தலைநீர் + ஏற்றம்]

தலைநீரோட்டம் *talai-nīrōṭṭam,* பெ. (n.) மண்டையோட்டுள் ஏற்படும் நீரேற்றம்; water in the head Hydrocephalus (சா.அக.).

[தலைநீர் + ஓட்டம்]

தலைநெரிதல் (தலைநெரித்தல்) *talai-neridal talai-nerital,* பெ. (n.) தலைநசுக்குண்ணல் பார்க்க; see *talai-našu-k-kuṇṇal.*

[தலை + நெரிதல்]

தலைநெரிப்பிரசவம் *talai-neri-p-prašavam,* பெ. (n.) குழந்தையின் தலையை நசுக்கி வெளியேற்றுகை; delivery attended with the crushing of the foetal head.

[தலைநெரி + Skt. பிரசவம்]

தலைநோ *talai-nō,* பெ. (n.) தலைநோவு பார்க்க; see *talai-nōvu.*

மறுவ. தலைநோவு

[தலை + நோ]

தலைநோய் *talai-nōy,* பெ. (n.) தலைநோவு பார்க்க; see *talai-nōvu.*

மறுவ. தலைவலி, மண்டையடி

[தலை + நோய்]

தலைநோய்ச்செடி *talai-nōy-c-ceḍi,* பெ. (n.) மருளூமத்தை; head-ache tree (சா.அக.).

[தலை + நோய் + செடி]

தலைநோவு[1] *talai-nōvu,* பெ. (n.) 1. தலைவலி; head-ache. "தலைநோவுற்றோ னவிநயம்" (சிலப். பக். 87). 2. தலைநோய் வகை; neuritis.

மறுவ. தலைநோ, தலைநோய், மண்டைக் குத்து, மண்டையடி

தெ. தலநொப்பி

[தலை + நோவு]

தலைநோவு வகைகள்:

1. வளித்தலைவலி
2. பித்தத்தலைவலி
3. கோழைத்தலைவலி
4. முக்கோளாற்றுத்தலைவலி
5. அரத்தத்தலைவலி
6. மூளை, கொழுப்பு, அரத்தக்குறைவுத் தலைவலி
7. புழுக்களாலேற்படுந்தலைவலி
8. கொடுவெப்பத்தலைவலி
9. ஒற்றைத்தலைவலி
10. உயிர்க்கொல்லித்தலைவலி

என்று தலைநோவின் வகைமை பற்றி, சா.அக. கூறும்.

தலைப்பட்டை *talai-p-paṭṭai,* பெ. (n.) மீனவர் அணியும் கூம்புவடிவ ஓலைக்குல்லா (வின்.) ; conical basket-cap, worn by fishermen.

மறுவ. தலைக்குல்லா

[தலை + பட்டை]



தலைப்படி *talai-p-paḍi,* பெ. (n.) ஆறுபலங் கொண்ட நிறை (தைலவ. தைல. 121); measure of weight = 6 palam.

[தலை + படி. படி = எடைக்கல்]

தலைப்படு[1]-தல் *talai-p-paḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஒன்றுகூடுதல்; to unite, be in communion with. "சிவனைத் தலைப்பட்டுச் சென்றொடுங்கும் ஊழியிறுதி" (திருக்கோ. 25, உரை). "தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே" (தேவா.திருத்தாண்டகம்). 2. எதிர்ப்படுதல்; to meet, cross. "ஓர் வேட்டுவன் றலைப்பட்டானே" (சீவக. 1230). 3. மேற்கொள்ளு-தல்; to undertake, enter upon. "ஏவல் தலைப்பட விரும்பும்" (சேதுபு. துரா. 2). 4. பெறுதல்; to obtain, attain. "சிலரதன் செவ்வி தலைப்படுவார்" (குறள், 1289).

[தலை + படு-.]

தலைப்படு[2]-தல் *talai-p-paḍu-,* 20 செ.குவி. (v.i.) 1. முன்னேறுதல்; to advance; to improve in circumstances. 2. தலைமையாதல்; to be noble, exalted. "தலைப்படு சால்பினுக்குந் தளரேன்" (திருக்கோ. 25). 3. புகுதல்; to enter, as a character on the stage. "கூரிய பல்லினை யுடையாள் தலைப்பட்டாள்" (பு.வெ. 10, பொதுவி. 5, உரை). 4. வழிப்படுதல்; to follow. "தம்மிற் றலைப் பட்டார் பாலே தலைப்பட்டு" (திருக் களிற்றுப். 2). 5. தொடங்குதல்; to commence. "அந்தக் காரியத்தைச் செய்யத் தலைப்பட்டான்" (உ.வ.).

தெ. தலபடு.

[தலை + படு-.]

தலைப்படுத்து-தல் *talai-p-paḍuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கூட்டுதல்; to cause to gain, reach. "ஏதுமில்லாவிடந் தலைப்படுத்தினள்" (சிலப். 16: 16).

[தலை + படுத்து-.]

தலைப்படுதானம் *talai-p-paḍu-tāṉam,* பெ. (n.) நல்வழியில் ஈட்டிய பொருளைத் தக்கார்க்கு வழங்குகை; gift offered to worthy person, from the self earned wealth in the proper way (செ.அக.).

[தலைப்படு + தானம்]

தலைப்பணி *talai-p-paṇi,* பெ. (n.) 1. ஒருவகை தலையணி (நாஞ்.); a kind of head ornament. 2. முதல்வேலை; first work.

மறுவ. தலைக்கோலம் ; தலைச்சாமான்

[தலை + பணி. உடலில் முதலாவதாக அமைந்துள்ள தலையை அழகுபடுத்துகை. முதற்கண் ஆற்ற வேண்டிய பணியை, செய்துமுடிக்கும் தன்மையைக் குறிக்கும் முதன்மைக் கருத்தினின்று இவ்வேரடி தோன்றியுள்ளமை அறிக.]

தலைப்பணிலம் *talai-p-paṇilam,* பெ. (n.) வலம்புரிச்சங்கு; a superior kind of conch. "பலவளைசூழ் தலைப்பணிலம் பல்ல சூழும்" (தணிகைப்பு. நகரப். 61).

மறுவ. தலைக்கோலம்

[தலை + பணிலம். பணிலம் = சங்கு; வலம்புரிச்சங்கு]

தலைப்பதமிடல் *talai-p-padamiḍal,* தொ.பெ. (vbl.n.) 1. தலைக்கு எண்ணெயிடல்; anointing the head. 2. எண்ணெய்தேய்த்து முழுகல்; having an oil bath.

[தலை + பதமிடல்.]

தலைப்பந்தி *talai-p-pandi,* பெ. (n.) விருந்தின் போது உண்ணுவோரில் முதல்வரிசை; first set or row of guests entertained (செ.அக.).

மறுவ. முதல்வரிசை, முதற்பந்தி

[தலை + பந்தி]

தலைப்பளுவு *talai-p-paḷuvu,* பெ. (n.) தலைப்பாரம் பார்க்க; see *talai-p-pāram.*

[தலை + பளுவு]

தலைப்பற்று[1] *talai-p-paṟṟu,* பெ. (n.) தாளிப் பனையின் ஓலை (யாழ்ப்.); large leaf of the tali-pot tree.

மறுவ. நுனிக்குருத்து, தலைக்குருத்து, நுனியோலை, குருத்தோலை, முதற்குருத்து, முதலோலை

[தலம் → தலை + பற்று]

தலைப்பற்று[2] *talai-p-paṟṟu*, பெ. (n.) தலைக்கிடும் மருந்துப்பற்று; an application of ointment.

[தலை + பற்று = தலையில் ஏற்பட்ட நீர்க் கோர்வையின், பாரத்தைப் போக்குவதற்கு, மூலிகைகளால் இடப்படும், மருந்துப் பற்று.]

தலைப்பறை *talai-p-paṟai*, பெ. (n.) யானை முதலியவற்றின் முன்னே கொட்டும் பறை; tom - tom beaten in front, as of an elephant. "மத்த கஜமானது முன்னே தலைப்பறை கொட்ட வருமா போலே" *(ஈடு. 10. 3: 5).*

[தலை + பறை]

தலைப்பனி *talai-p-paṉi*, பெ. (n.) முன்பனி; the early part of the dew season.

மறுவ. முதற்பனி

[தலை + பனி]

தலைப்பா *talai-p-pā*, பெ. (n.) தலைப்பாகை பார்க்க; see *talai-p-pāgai.*

[தலை + பாகை → தலைப்பாகை. பாகை → பா. கடைக்குறை]

தலைப்பாக்கட்டிக்கோரை *talai-p-pā-k-kaṭṭi-k-kōrai*, பெ. (n.) பூங்கோரை (A); sedge with culms triquetrous at the base, Cyprus haspam.

[தலைப்பாக்கட்டி + கோரை]

தலைப்பாக்கட்டு-தல் *talai-p-pā-k-kaṭṭu-*, 5 செ.குவி. (v.i.) தலையில் உருமாலை கட்டுதல்; to tie a turban in the head (செ.அக.).

[தலைப்பா + கட்டு. ஊரக மக்களின் தீர்ப்பாயக் கூட்டத்தின்போது, அதில் கலந்து கொள்ளுதற்குரிய ஊர்ப் பெரியோர், தலையில் கட்டும் துணியாலாகிய உருமாலை]

தலைப்பாகு *talai-p-pāgu*, பெ. (n.) தலைப்பாகை பார்க்க; see *talai-p-pāgai.*

மறுவ. உருமால்கட்டு; தலைப்பாகைக்கட்டு, தலைக்கட்டு; மண்டைக்கட்டு

க. தலெபாகு

[தலைப்பாகை → தலைப்பாகு]

தலைப்பாகை *talai-p-pāgai*, பெ. (n.) தலையிற் கட்டுந் துணி; turban. "ஒன்று புகாத் தலைப்பாகு பற்ற" *(இரகு. அயனெ. 104).*

[தலைப்பாகு → தலைப்பாகை]



தலைப்பாட்டு *talai-p-pāṭṭu*, பெ. (n.) கூத்தின் முதலில் தொடங்கும் பாட்டு; the song sung first in a dance. "தலைப் பாட்டுக் கூத்தியும்" *(சிலப். 14:156).*

மறுவ. முதற்பாட்டு

[தலை + பாட்டு = ஊர்த்திருவிழாவின் போது, கூத்து அல்லது நாடகம் தொடங்கு முன்பு, கூத்தின் கருத்தமைவினைக் கூறும் முகப்புப்பாட்டு]

தலைப்பாடு *talai-p-pāḍu*, பெ. (n.) 1. கலந்திருக்கை; cordial intercourse. "தோழனைக் கண்டு தலைப்பாடெய்தி" *(பெருங். வத்தவ. 4, 99).* "தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே". *(தேவா. திருத்தாண்டகம்).* 2. தற்செயல் நிகழ்ச்சி; chance occurrence. "விறகொய் மாக்கள் பொன்பெற் றன்னதோர் தலைப் பாடன்றவ னீகை" *(புறநா. 70).*

[தலைப்படு → தலைப்பாடு = இருமன மொன்றித் திருமணம் புரிந்த காமக் காதலர், ஒருங்குகூடுதல் தலைப் பாடெனப்படும். ஆதன் இறையுணர்வுடன் ஒன்றுதலும், தலைப்பாடாகும்]

தலைப்பாத்தூக்கி *talai-p-pā-t-tūkki*, பெ. (n.) தலைப்பாமாட்டி பார்க்க; see *talai-p-pā-māṭṭi.* hanger for head dress.

[தலைப்பா + தூக்கி]

தலைப்பாமாட்டி *talai-p-pā-māṭṭi,* பெ. (n.) தலைப்பாகை முதலியவற்றை மாட்டுதற்கு உதவுங்கருவி; hat-rack, coat-stand (செ.அக.).

மறுவ. தலைப்பாத்தூக்கி

[தலைப்பா + மாட்டி]

தலைப்பாமாற்றி *talai-p-pā-māṟṟi,* பெ. (n.) தலைப்பாமாறி பார்க்க; see *talai-p-pā-māṟi*.

[தலைப்பா + மாற்றி]

தலைப்பாமாறி *talai-p-pā-māṟi,* பெ. (n.) 1. பெருமோசக்காரன் (தலைப்பாகை மாற்றுவோன்); lit., one who changes turban consummate cheat. 2. திறன்மிக்க திருடன்; clever thief.

[தலைப்பா + மாறி. நாடகமாந்தர் ஏற்றுள்ள வேடப்புனைவிற்கேற்பத் தலைப்பாகையை மாற்றுதல் போல், ஆளுக்குத் தகுந்தவண்ணம் சொற்களை மாற்றிப் பேசி, சூழ்ச்சி செய்யும் வன்னெஞ்சக் கள்வன். திறமை நிறைந்த திருடனையும், இச்சொல் குறிக்குமென்றறிக]

தலைப்பாரம் *talai-p-pāram,* பெ. (n.) 1. தலைச்சுமை; head-load. "புவியோ வரவினுக் கொரு தலைப்பாரம்" (தனிப்பா. i, 112, 56). 2. தலைக்கனம்; heaviness in the head from cold. 3. தோணியின் முற்பாகத்தில் மிக்க பாரத்தை யேற்றுகை (யாழ்ப்.); overloading of a vessel in the bow. 4. தலைவலி; head-ache.

மறுவ. மண்டைக்கனம், மண்டைச்சுமை, மண்டைப்பாரம்

[தலை + பாரம்]

தலைப்பாளை *talai-p-pāḷai,* பெ. (n.) 1. தென்னை முதலியவற்றில், முதலில் வரும்

பாளை; first spathe of the coconut and other palm trees. 2. மகளிர் தலையணி வகை; a kind fo head-ornament for women. "சிகை நடுவில் தலைப் பாளை நான்று" (சீவக. 2731, உரை.).

[தலை + பாளை]

தலைப்பிடித்தல் *talai-p-piḍittal,* பெ. (n.) கூட்டிக் கொடுத்தல்; ministering to the passions of others - Pandering (சா.அக.).

[தலை + பிடி-.]

தலைப்பிண்டச்செயநீர் *talai-p-piṇḍa-c-ceyanīr,* பெ. (n.) முத்திங்கள் தலைக்கருவின் உப்பை, இராப்பனியில் இறக்கி வடித்த செயநீர்; a strong alkaline salt prepared from the first foetus (3 month old) and exposed to night's dew to convert it into a liquid (சா.அக.).

[தலைப்பிண்டம் + செயநீர்.]

தலைப்பிணி *talai-p-piṇi,* பெ. (n.) 1. தலைச்சூலி; a women who is pregnant for the first time. 2. தலைநோய்; diseases in general of the head.

[தலை + பிணி]

தலைப்பித்தம் *talai-p-pittam,* பெ. (n.) தலைச்சுற்றல் (இ.வ.); giddiness of the head.

மறுவ. மண்டைப்பித்தம்; மண்டைநீர்; தலைநீர்

[தலை + பித்தம். தலையில் நிற்கும் பித்தம்.]

தலைப்பிரட்டை *talai-p-piraṭṭai,* பெ. (n.) தவளைவளர்ச்சியின் நான்கு நிலைகளுள் ஒன்று; tadpole.

[தலை + பிரட்டை]

தலைப்பிரி-தல் *talai-p-piri-,* 2 செ.குவி. (v.i.) நீங்குதல்; to separate, depart, deviate. "பண்பிற்றலைப் பிரியாதார்" (குறள், 810).

[தலை + பிரி-.]

தலைப்பில்முடிந்துகொள்(ளு)-தல் *talaippil-muḍindu-koḷ-(ḷu)-,* 7 செ.குன்றாவி. (v.t.) நினைவில் வைத்துக்கொள்ளுதல்; to remember, as by tying up a knot in the corner of one's cloth. இந்த வார்த்தையைத் தலைப்பில்

முடிந்து கொள் (உ.வ.). 2. கணவனை அடக்கி ஆளும் பெண்; woman who keeps her husband under control (செ.அக.).

[தலைப்பு + இல் + முடிந்து + கொள்(ளு)-.]

பெண்கள் முந்தானையிலோ, ஆண்கள் மேல் துண்டிலோ, ஒரு முடிச்சுப்போட்டு வைத்துக் கொள்ளும் வழக்கம், ஊர்ப்புறத்தே இன்றும் காணப்படும் பழக்கமாகும். அம் முடிச்சினைப் பின்பு கண்ணுறும்போது, எதையெண்ணி முடிந்தோமோ, அது, நினைவிற்கு வரும். கணவனைக் கட்டுக்குள் வைத்திருக்கும் பெண், அவனைத் தன் முன்றானையில் முடிந்து வைத்திருக்கிறாள் என்பது உலகவழக்கு இங்கு தலைப்பு என்பது முன்றானை அல்லது துணியின் நுனியைச் சுட்டும்.

தலைப்பில்வைத்துக்கொள்(ளு)-தல் *talaippil-vaittu-k-koḷ(ḷu)-,* 7 செ.குன்றாவி. (v.t.) தலைப்பில்முடிந்துகொள்(ளு)-தல் பார்க்க; see *talaippil muḍindu-koḷ(ḷu)-.*

[தலைப்பு + இல் + வைத்துக் + கொள்(ளு)-.]

தலைப்பிள்ளை *talai-p-piḷḷai,* பெ. (n.) முதல் மகன்; first son. "தனித்தலைவன் றலைப்பிள்ளை நானே" (அருட்பா. vi, திருமு. தான்பெற்றபேறு, 18).

மறுவ. முதற்பிள்ளை, மூத்தபிள்ளை, தலைச்சன்பிள்ளை

[தலை + பிள்ளை]

தலைப்பிள்ளைச்சூல் *talai-p-piḷḷai-c-cūl,* பெ. (n.) தலைச்சூல் பார்க்க; see *talai-c-cūl.*

மறுவ. முதற்சூல்

[தலை + பிள்ளை + சூல்]

தலைப்பிறை *talai-p-piṟai,* பெ. (n.) வளர் பிறையில் முதல்நாள்; the first day of the bright fortnight (செ.அக.).

மறுவ. முதற்பிறை

[தலை + பிறை]

தலைப்பு[1] *talaippu,* பெ. (n.) தோற்றுவாய்; source; origin, as of a river. கங்கைக்குத் தலைப்பாகிய இமவானில் (இ.வ.) வாய்க்கால் தலைப்பு மண்மூடிக் கிடக்கிறது (உ.வ.).

[உல் → துல் → தல் → தலை → தலைப்பு (ஒ. நோ.) மலைப்பு, களைப்பு, இளைப்பு]

தலைப்பு[2] *talaippu,* பெ. (n.) 1. நூலின்பெயர்; heading, title, as of a book. 2. தொடக்கம்; beginning. தலைப்பிலே சொன்னேன் (உ.வ.). 3. முன்றானை; front part of a woman's cloth. அவள் புடவைத் தலைப்பை இழுத்து மூடிக் கொண்டாள் (உ.வ.). 4. சீலைவிளிம்பு; end, edge or corner of a cloth.

[துல் → தல் → தலை → தலைப்பு. "பு" சொல்லாக்க ஈறு. (ஒ.நோ.) களைப்பு, உழைப்பு, வெளுப்பு, கொழுப்பு.]

தலைப்பு[3] *talaippu,* பெ. (n.) கதை, கட்டுரை, சொற்பொழிவு ஆகியவற்றின் பொருள் தலைப்பு; title song, essay, lecture etc., 2. குறிப்பானபொருள் தரும் சொல்,தொடர் அல்லது குறியீடு; caption under a picture photograph etc., ஓவியர் தன் ஓவியத்தின் தலைப்பாக ஒரு கேள்விக்குறி இட்டிருந்தார் (உ.வ.).

[தலை → தலைப்பு.]

தலைப்புச்செய்தி *talaippu-c-ceydi,* பெ. (n.) (வானொலி, தொலைக்காட்சி, இதழ்கள் ஆகியவற்றில்) முதன்மைச்செய்தி; headline of a news, bulletin or story in a newspaper.

[தலைப்பு + செய்தி]

தலைப்புணர்-த்தல் *talai-p-puṇar-,* 4 செ.குன்றாவி. (v.t.) பை முதலியவற்றின் வாயைக் கட்டுவதற்காகச் சுருக்குதல்; to pucker, gather. "தலைப்புணர்த்தசைத்த பல்தொகைக் கலப்பையர்" (அகநா. 301).

மறுவ. சுருக்குப்போடுதல்.

[தலை + புணர்-. சுருக்குப்பை என்பது தமிழக ஊரக மகளிர் வைத்திருக்கும் பை. இரண்டு அல்லது மூன்று அறைகள் இருக்கும். இருமுனையிலுள்ள குஞ்சங்களை இழுத்தால், பையின் வாய் சுருங்கி மூடிக் கொள்ளுந்தன்மையது. இடுப்பில் செருகி எடுத்துச்செல்வதற்கு, எளிதானது.]

தலைப்புணை *talai-p-puṇai,* பெ. (n.) சான்று; main prop. "தலைப்புணை தழீஇ" (அகநா. 166).

[தலை + புணை. முதன்மையான சான்று.]

தலைப்புரட்டல் *talai-p-puraṭṭal,* பெ. (n.) தலையை அடிக்கடி உருட்டும் சாவின் அறிகுறி; rolling the head very often.

[தலைப்புரட்டு → தலைப்புரட்டல்]

தலைப்புரட்டன் *talai-p-puraṭṭaṉ,* பெ. (n.) பெரும் பொய்யன்; audacious liar *(செ.அக.).*

மறுவ. அண்டப்புழுகன், பெரும்புழுகன்,

[ஒருகா. தலைப்புரட்டு → தலைப் புரட்டன்]

தலைப்புரட்டு *talai-p-puraṭṭu,* பெ. (n.) *1.* பெரும் பொய்; audacious lie. *2.* நச்சரவு (தொந்தரவு) *(வின்.)*; annoyance, vexation, trouble. *3.* குழப்பம்; agitation, as of river, torrent. *4.* கருவம்; haughtiness, insolence *(செ.அக.).*

மறுவ. அண்டப்புழுகு.

[தலை + புரட்டு → தலைப்புரட்டு = யாரையும் பொருட்படுத்தாது, தருக்கித் திரியும் இறுமாப்பு; வீண்செருக்கு.]

தலைப்புரட்டையெறும்பு *talai-p-puraṭṭai-y-eṟumbu,* பெ. (n.) கறுப்பெறும்பு வகை; black ant, as shaking its head, Camponotus compressus.

[தலைபுரட்டை + எறும்பு]

தலைப்புரள்(ளு)-தல் *talai-p-puraḷ(ḷu)-,* 16 செ.குவி. (v.i.) நீர் சுருண்டு பாய்தல்; to roll, flow impetuously, as the sea *(செ.அக.).*

[தலை + புரள்(ளு)-,]

தலைப்புழுவெட்டு *talai-p-puḻu-veṭṭu,* பெ. (n.) தலையை வழுக்கையாக்கும் நோய்; baldness, Alopecia.

மறுவ. பூச்சிகடி; கரப்பான்வெட்டு.

[தலை + புழுவெட்டு. புழுவெட்டு = மயிரை உதிரச்செய்யும் நோய்வகை)]

தலைப்புற்று *talai-p-puṟṟu,* பெ. (n.) *1.* தலையிலுண்டாகும் புற்றுநோய்; a disease attacking the scalp. *2.* தலையிலுண்டாகும் ஒருவகைபுண்; canker on the head. *3.* மண்டைக் கரப்பான்; scald head achor. *4.* ஒரு எறும்பு; a species of ant.

[தலை + புற்று. புற்று = புரை வைத்த புண்]

தலைப்பெட்டி *talai-p-peṭṭi,* பெ. (n.) தலையிற் கவிழ்த்துக் கொள்ளும், ஓலையாலான பெட்டி *(யாழ்அக.)*; a kind of palm ōla covering for the head.

[தலை + பெட்டி.]

தலைப்பெய்[1]-தல் *talai-p-pey-,* 1 செ.குவி. (v.i.) ஒன்று கூடுதல்; to gather together, as clouds. "தலைப்பெய்து குமுறிச் சலம்பொதி மேகம்" *(திவ். பெரியாழ். 4. 7:6).*

[தலை + பெய்-.]

தலைப்பெய்[2]-தல் *talai-p-pey-,* 1 செ.குன்றாவி. (v.t.) *1.* கிட்டுதல்; to meet, approach. "சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்" *(திவ். திருப்பா. 22). 2.* பெய்துரைத்தல், இடைச் செறுகல்; to interpolate, superadd. "பொய் தலைப்பெய்தலும்" (தொல். பொருள். 237). *3.* கூடுதல்; to join. "நும்மனை மடந்தையொடு தலைப்பெய்தீமே" *(ஐங்குறு. 86).*

[தலை + பெய்-.]

தலைப்பெய்தல் *talai-p-peydal,* பெ. (n.) மூலத்தைப் பிடித்தல்; getting to the origin.

[தலை + பெய்தல்]

தலைப்பெயர்-த்தல் *talai-p-peyar-,* 4 செ.குன்றாவி. (v.t.) மீளச்செய்தல்; to redeem, recover. "இயன்ற நெஞ்சந் தலைப்பெயர்த்து" *(தொல். பொருள். 147).*

[தலை + பெயர்-.]

தலைப்பெயல் *talai-p-peyal,* பெ. (n.) முதன் மழை; first-rains. "தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானத்து" *(திருமுரு. 9).*

[தலை + பெயல். வறட்சிக் காலத்தே முதன் முதலாகப் பெய்யும் புதுமழை]

தலைப்பெயலுவமை *talai-p-peyal-uvamai,* பெ. (n.) எதிர்நிலையணி (புறநா. 60, உரை.); a figure of speech in which uvamāṉam and uvamēyam are inverted *(செ.அக.).*

[தலைப்பெயல் + உவமை]

தலைப்பெயனிலை *talai-p-peyaṉilai,* பெ. (n.) *1.* மகப்பேறாகிய கடனையிறுத்து, தாய்இறந்த நிலையைக் கூறும் புறத்துறை (பு.வெ. 10, சிறப்பிற். 5) (puṟap); theme describing the death

of a mother on doing her duty of bringing forth a son. 2. (புறப்.) போர்க்களத்தினின்று புறங்காட்டிச் சென்ற மகனது செயற்காற்றாது, தாய் இறந்துபட்ட நிலைகூறும் புறத்துறை (தொல்.பொருள். 79, உரை.) (puṟap); theme describing the death of a mother in utter shame at the flight of her son from the battle-field.

[தலைப்பெய் + நிலை → தலைப் பெயனிலை]

தலைப்பேரண்டம் *talai-p-pēraṇḍam,* பெ. (n.) தலைப்பிள்ளையின் மண்டையோடு; the skull of the first-born child (சா.அக.).

தலைப்பேழை *talai-p-pēḻai,* பெ. (n.) வாய்க்காலின் தலைப்பு மதகு (S.I.I. i. 151.); head-sluice.

மறுவ. முதல்மதகு, தலைமதகு, முதன்மடை

[தலை + பேழை; பேழை = பெட்டி; மதகுப் பெட்டி. தளமுகட்டின் உட்குழிவான கண்ணறை]

மதகின் பின்புறம் பெட்டிபோன்று கட்டப் பட்டிருக்கும். வரும் நீரை எத்தனை காலாகப் பிரிக்க வேண்டுமோ, அத்தனை காலாகப் பிரிக்கத்தக்க துளைகள் இருக்கும். பேழை போன்ற கட்டுமானத்தைப் பின்புறம் பெற்றுள்ளதால், தலைமதகு, தலைப்பேழை ஆயிற்று.

தலைப்பேறு *talai-p-pēṟu,* பெ. (n.) 1. முதற் பிள்ளை; first issue, son or daughter. 2. முதல் மகப்பேறு (இ.வ.); first confinement.

மறுவ. முதற்பேறு, முதன்மகப்பேறு

[தலை + பேறு. பேறு = மகப்பெறுகை]

தலைப்பேன் *talai-p-pēṉ,* பெ. (n.) தலை முடியில் உள்ள பேன்; lice on the head, as dist. for. šilai-p-pēṉ (செ.அக.).

[தலை + பேன். பேன் = தலை மயிரிலுண்டாகுஞ், சிற்றுயிரி]

பேன் தலைமுடியிலும், அழுக்குத்துணியிலும் தோன்றும். தலைப்பேன், சீலைப்பேன் என்று வேறுபடுத்தப்படுகின்றது.

தலைப்பேன்சிரங்கு *talai-p-pēṉ-śiraṅgu,* பெ. (n.) தலையிற் பேனால் உண்டாஞ் சொறி சிரங்கு; itch caused by lice on the head.

[தலை + பேன் + சிரங்கு.]

தலைப்பொடிப்பு *talai-p-poḍippu,* பெ. (n.) தலைப்பொடுகு பார்க்க; see *talai-p-poḍugu*.

[தலை + பொடிப்பு]

தலைப்பொடுகு *talai-p-poḍugu,* பெ. (n.) தலைச்சுண்டு; dandruff (செ.அக.).

மறுவ. தலைப்பொடிப்பு.

[தலை + பொடுகு]

தலைப்பொத்தன் *talai-p-pottaṉ,* பெ. (n.) பத்தடி நீளத்துக்கு மேல் வளரும் குழிமீன்; conger eel, olive, attaining more than 10 ft. in length, Muraenesox talabon (செ.அக.).

தெ. தலபொனு

[தலை + பொத்தன்]



தலைப்போகு-தல் *talai-p-pōgu-,* 8 செ.கு.வி. (v.i.) இறுதி வரை செல்லல்; to reach the very end. "தலைப்போகன்மையிற் சிறுவழி மடங்கி" (புறநா. 223).

[தலை + போகு-.]

தலைப்போடகம் *talai-p-pōḍagam,* பெ. (n.) பொடுதலை; a small creeping plant found in damp places.

தலைப்போடம் *talai-p-pōḍam,* பெ. (n.) தலைப்போடகம் பார்க்க; see *talai-p-pōḍagam.*

[தலைப்போடகம் → தலைப்போடம்.]

தலைப்போடு-தல் *talai-p-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) மேற்கொள்ளுதல் (யாழ்ப்.); to engage in, take on oneself.

[தலை + போடு-.]

தலைமட்டம் *talai-maṭṭam,* பெ. (n.) *1.* மேல் மட்டம் (இ.வ.); top level. *2.* ஆளுயரம்; height of a person. வீட்டுச்சுவர் தலைமட்டம் வளர்ந்துவிட்டது (உ.வ.).

மறுவ. ஆள்மட்டம்

[தலை + மட்டம்]

தலைமடக்கு *talai-maḍakku,* பெ. (n.) *1.* (அணி) செய்யுளடியின் முதற்சீரே, அவ்வடியில் மடங்கிவரும், மடக்கணிவகை; repetition of the first foot in one and the same line of a stanza (rhet.). *2.* சாவடி முதலியவற்றின் காவற்காகப் பெண்டிர்க்குக் கொடுக்கும் களப்பரிசு (வின்.) (கட்டித் தலைமீது கொண்டு போகப்படுமளவு); grain given at the threshing-floor to a woman in charge of a rest-house, as tied up and carried away on her head (செ.அக.).

மறுவ. முதல்மடக்கு

[தலை + மடக்கு]

தலைமடங்கு-தல் *talai-maḍaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* தலைகுனிதல்; to hang down one's head. *2.* கீழ்ப்படிதல் (பதிற்றுப். 71:8, உரை.); to submit. *3.* கதிர் முதலியன சாய்தல்; to bend, bow, as ears of grain.

மறுவ. தலைசாய்தல்

[தலை + மடங்கு-.]

தலைமடி^{1}-தல் *talai-maḍi-,* 2 செ.கு.வி. (v.i.) *1.* இறத்தல்; to die. "இவ்வகை நூற்றிருபது புக்குத் தலைமடிய வேண்டுமென்பது" (இறை. 32, 150). *2.* கதிர் முதலியன சாய்தல்; to bend, bow, as ears of grain.

[தலை + மடி-. மடிதல் = சாய்தல், இறத்தல்]

தலைமடி^{2}-தல் *talai-maḍi-,* 2 செ.கு.வி. (v.i.) குறைதல்; to wane; to lose intensity. "ஆசை தலை மடிந்ததுமல்ல" (திவ். அமலனாதி. 2: வ்யா. பக். 31).

[தலை + மடி-.]

தலைமடு-த்தல் *talai-maḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) தலையணையாகக் கொள்ளுதல்; to have, as a head-rest or pillow. "ஒடு தலைமடுத்துக் கண்படை கொள்ளும்" (மணிமே. 13:114).

[தலை + மடு-.]

தலைமடை *talai-maḍai,* பெ. (n.) *1.* கிளைக் கால் பிரியும் முதல்மடை; head sluice of a tank, where a small channel branches off from the main channel, opp. to kaḍai-maḍai. *2.* நீர்ப்பாசனம் தொடங்கும் முதல்மடை; course of a channel where irrigation first begins.

மறுவ. தலைமதகு, கண்ணாறு (கல்.). முதல்மடை

தெ. தலமடவ

[தலை + மடை (மடை = மதகு)]

தலைமண்டை *talai-maṇḍai,* பெ. (n.) தலையோடு; skull (செ.அக.).

மறுவ. மண்டையோடு

[தலை + மண்டை]

தலைமண்டையிடு-தல் *talai-maṇḍai-y-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) மிதமிஞ்சுதல்; to exceed bounds. "பிரீதி தலைமண்டையிட்டுச் சொல்லுகிற வார்த்தை" (திவ்.திருமாலை. 44, 143: வ்யா.).

[தலை + மண்டை + இடு-.]

தலைமண-த்தல் *talai-maṇa-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* ஒன்றோடொன்று பின்னுதல்; to be intertwined together, entangled, as bamboos. "மூங்கில் தலைமணந்த காவற்காடு" (பு. வெ. 6, 20, கொளு, உரை). *2.* நெருங்கிக்கலத்தல்; to crowd, throng. "பகை தலைமணந்த பல்லதர்ச் செலவே" (அகநா. 105).

[தலை + மண-.]

தலைமதகு *talai-madagu,* பெ. (n.) ஏரி, கால்வாய் முதலியவற்றிலிருந்து தண்ணீர் திறந்து விடுவதற்கான கதவுள்ள, கட்டுமானம்; head sluice provided in the tanks and channel to let out water for irrigation, which has control to regulate supply of water (செ.அக.).

மறுவ. தலைமடை, தலைத்தூம்பு

[தலை + மதகு. பாசனத்திற்கு விடும் தண்ணீரைத் தேவைக்கேற்றபடித் தேக்கி வைத்துத் திறப்பதற்காகக் கட்டப்படும் மூடி அல்லது கதவு, மதகு எனப்படும். மழைக்காலங்களில் கட்டுப்பாடின்றி அலைபுரளுந் தண்ணீரை, ஒழுங்குபடுத்தித் திறந்துவிடும் கட்டுமானம் உள்ள அமைப்பினை, மடை அல்லது தூம்பு என்று நமது முன்னோர் குறித்தனர்.

தலைப்போர் *talai-p-pōr*, பெ. (n.) *1.* முற்செயல்; beginning, as of an act or process. *2.* முன்னிடம்; front.

[தலை + போர்]

தலைபணி-தல் *talai-paṇi-*, 2 செ.குன்றாவி. (v.t.) வணங்குதல்; to bow one's head.

மறுவ. தலைவணங்குதல்.

[தலை + பணி-. → தலைபணி-தல் = ஒருவரைக் கண்டு வணங்குங்கால், அவரவர்தம் பெருமை, சிறப்புகட்கேற்ப, தம் தலையைத் தாழ்த்திக்கொள்ளுதல் மரபாகும்; இறைமுன்பும், மதிப்புமிகு பெரியோர், பெற்றோர் முன்பும், நெடுஞ் சாண்கிடையாக விழுந்து வணங்குதல், தமிழகத்தின் தலையாய பண்புகளு ளொன்றாகும். பெற்றோர், ஆசிரியர், பெரியோர் முதலானோர், இதுகாறும் நடைபயின்று வந்த நல்வழியில், நானும் நடப்பேன் என்று நினைத்தலே, தலை பணிதலாகும். குனிந்து நிமிர்ந்து தலை பணிவதால், நிமிர்தற்கருத்தினின்று பணிதற்கருத்து உருவாயிற்றெனலாம்.]

தலைபரி-தல் *talai-pari-*, 4 செ.கு.வி. (v.i.) எல்லை கடத்தல் (பு.வெ.12:8. கொளு, ஆண்பாற்.); to go beyond the limit.

[தலை + பரி-.]

தலைபவனிவருவான் *talai-pavaṉi-varuvāṉ*, பெ. (n.) சுழல்வண்டு; beetle.

[தலைபவனி + வருவான்]

தலைபிடிக்கி *talai-piḍikki*, பெ. (n.) கூட்டி வைப்போன்; one who procures for another the means of gratifying his passions.

[தலை + பிடிக்கி]

தலைபிணங்கு-தல் *talai-piṇaṅgu-*, 5 செ.கு.வி. (v.t.) ஒன்றோடொன்று மாறுபடுதல்; to contend, compete, strive. "கூடிநிரந்து தலைபிணங்கி யோடி" *(ஐந். ஐம். 5).*

[தலை + பிணங்கு. பிணங்குதல் = மாறுபடுதல்.]

தலைபோகிற *talai-pōgiṟa*, கு.பெ.எ. (adj.) தவிர்க்க இயலாத; urgent, compelling. வேளா வேளைக்குச் சாப்பிடாமல் அப்படி என்ன தலைபோகிற வேலை *(உ.வ.).*

[தலை + போகிற]

தலைபோகுமண்டிலம் *talai-pōgu-maṇḍilam*, பெ. (n.) இசைப்பா வகை *(சிலப். 6: 35: உரை.)*; a kind of song.

[தலை + போகு + மண்டிலம்]

தலைபோதல் *talai-pōdal*, பெ. (n.) பெருங் கேடுறுகை; utter destruction. தலையே போகிறதென்றாலும், தொடங்கிய பணியை முடிக்காமல் விடமாட்டார் *(உ. வ.).*

[தலை + போதல்]

தலைமக்கள் *talai-makkaḷ*, பெ. (n.) *1.* மேன் மக்கள்; men of the first rank, great men, leaders. "தலைமக்க ளாகற் பாலார்" *(நாலடி, 205).* *2.* படைத்தலைவர்; commanders of armies. "தானை தலைமக்க ளில்வழி யில்" *(குறள், 770).*

மறுவ. உயர்ந்தோர்; சான்றோர்; அறவோர்; பெருமக்கள்

[தலை + மக்கள்]

தலைமகள் *talai-magaḷ*, பெ. (n.) *1.* மூத்தபெண்; eldest daughter. *2.* முதலாளி *(வின்.)*; lady, matron. *3.* *(அகப்.)* அகப்பொருட்டலைவி; heroine of a love poem. "தலைமகள் கற்பினொடு மாறு கொள்ளாமையும்" *(இறை. 14, 93, உரை).* *4.* மனைவி (வின்.); wife.

மறுவ. முதற்பெண்; மூத்தபெண்; தலைச்சி

[தலை + மகள்]

தலைமகன் *talai-magaṉ*, பெ. (n.) *1.* தலைவன்; gentleman, lord, king. "தலைமக னுரைத்தது" *(மணிமே. 3:97).* *2.* *(அகப்.)* அகப்பொருட் டலைவன்; hero of a love poem. *3.* கணவன்; husband. "பூப்பின்கட்சாராத் தலைமகனும்" *(திரிகடு. 17).* *4.* மூத்தமகன்; eldest son. அவன் தாய்க்குத் தலைமகன். *5.* ஆதன் *(ஆன்மா)*; soul. *6.* சிவன் *(சித். குழுஉக். அக.)*; Šivaṉ.

மறுவ. முதற்பையன்; தலைச்சன்

[தலை + மகன்]

"மடையும் அடைத்துத் தூம்பும் செய் வித்தான் பனைப்பூங்கிழான் தம்பி குமரன்" – திண்டிவனம் – கிடங்கில் காணப்படும் ஏரிக்கல்வெட்டு தொடக்கத்தில் இருப்பதால், தலைமதகு எனப்பட்டது.]

தலைமயக்கம் *talai-mayakkam,* பெ. (n.) *1.* தலைமயக்கு பார்க்க; see *talai-mayakku.* *2.* மனமயக்கம்; dizziness of the mind.

மறுவ. தலைச்சுற்று

[தலை + மயக்கம்]

தலைமயக்கு *talai-mayakku,* பெ. (n.) தலைச் சுற்று; dizziness, giddiness (செ.அக.).

தெ. தலமயகமு.

[தலை + மயக்கு]

தலைமயங்கு[1]-தல் *talai-mayaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) பிரிதல்; to go astray, as a deer from its herd. "இனந் தலைமயங்கி" *(புறநா. 157: 9).*

[தலை + மயங்கு-.]

தலைமயங்கு[2]-தல் *talai-mayaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* பெருகுதல்; to increase. "மறந்தலை மயங்கி" *(சூளா. மந்திர. 28).* *2.* கைகலத்தல்; to fight at close quarters. "தமிழ் தலைமயங்கிய தலையாலங்கானத்து" *(புறநா. 19: 2).* *3.* கலந்திருத்தல்; to be mixed up. "வளந்தலை மயங்கிய" *(சிலப். 14:178).* *4.* கெடுதல்; to be ruined, to perish. "அறந்தலைமயங்கி வைய மரும்பட ருழக்கும்" *(சூளா. மந்திர. 25)* (செ.அக.).

[தலை + மயங்கு-.]

தலைமயிர்வாங்கு-தல் *talai-mayir-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* கைம்பெண் தலைமயிரை முதலில் எடுப்பித்தல்; to shave a woman's head for the first time on her widowhood. *2.* முடியிறக்குதல்; to shave the hair in fulfilment of a vow (செ.அக.).

மறுவ. மழித்தல் (குறள்); மொட்டையடித்தல்

[தலைமயிர் + வாங்கு-.]

தலைமயிருதிரல் *talai-mayir-udiral,* பெ. (n.) தலையை வழுக்கையாக்கும் நோய் (பைஷ. ஜ. 194); baldness, Alopecia.

மறுவ. முடிகொட்டுதல்; தலைப்புழுவெட்டு வழுக்கைவிழுதல்

[தலை + மயிர் + உதிரல்]

தலைமழி-த்தல் *talai-maḻi-,* 4 செ.குன்றாவி. (v.t.) மொட்டையடித்தல்; to tonsure (செ.அக.).

[தலை + மழித்-.]

தலைமறி-தல் *talai-maṟi-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* நோய்முதலியன நீங்குதல்; to disappear, as disease, distress, etc., "மாயனைக் காணில் தலைமறியும்" *(திவ். நாய்ச். 12:2).* *2.* செருக்கால் மகிழ்தல் (இ.வ.); to be puffed up with pride.

[தலை + மறி-.]

தலைமறை-தல் *talai-maṟai-,* 2 செ.கு.வி. (v.i.) *1.* ஒளித்துக்கொள்ளுதல்; to be concealed. *2.* மறைந்துபோதல்; to abscond. விடுதலைப் போராட்ட காலத்தில், அரசின் அடக்கு முறைக்குப் பயந்து, பலர் தலைமறைந்து வாழ்ந்தனர் (உ.வ.).

மறுவ. தலைமறைவாதல்

[தலை + மறை-.]

தலைமறைவாகு-தல் *talai-maṟai-v-āgu-,* 5 செ.கு.வி. (v.i.) ஒளிந்துவாழுதல்; to go underground or into hiding abscond. அலுவலகப் பணத்தைக் கையாடிவிட்டுத் தலைமறைவாகி விட்டான் (உ.வ.).

[தலை + மறைவாகு-.]

தலைமறைவு *talai-maṟaivu-,* பெ. (n.) (காவல் துறையினரால் அல்லது எதிரிகளால் தேடப்பட்டு வரும் ஒருவர், அல்லது அரசால் தடைசெய்யப்பட்ட இயக்கம்) மந்தணமாகச் செயல்படுகை; (being secret of organization), underground. அந்தக்கட்சி சட்டப்படி தடை செய்யப்பட்டுவிட்டதால் தலைமறைவு இயக்கமாகச் செயல்படுகிறது (இ.வ.).

[தலை + மறைவு.]

தலைமாட்டுவைத்தியன் *talai-māṭṭu-vaittiyaṉ,* பெ. (n.) மருத்துவந் தெரியாது உயிருக்குத் தீங்கு விளைவிப்போன்; a pretender to medical skill likely to endanger life - Quack.

[தலைமாடு + வைத்தியன்]

தலைமாடு *talai-māḍu,* பெ. (n.) *1.* படுக்கையில் தலைப்பக்கம்; head of a bed. *2.* தூரவளவு; distance. ஏரை இரண்டுகாணித் தலைமாட்டிலே ஓட்டினேன் (இ.வ.). *3.* பக்கம்; end, side, as of land. மேலைத்தலை மாட்டின் எல்லை (இ.வ.).

மறுவ. தலைப்பக்கம்

[தலை + மாடு = பக்கம்]

ஒரு கட்டிலில் தலைவைத்துப் படுக்கும் பகுதி தலைமாடு; கால் இருக்கும் பகுதி கால்மாடு. தலையணை வைத்துப்படுப்பதால், தலை சற்று உயர்ந்திருக்கும். கண் விழித்தவுடன் கால்மாட்டில் அமர்ந்திருப்பவர் தெரிவார்; தலைமாட்டில் அமர்ந்திருப்பவர் தெரியார். மாபாரதக் கதையில் இச்சூழல் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

தலைமாணாக்கன் *talai-māṇākkaṉ,* பெ. (n.) முதல்மாணவன் (நன்.38); ideal pupil (செ.அக.).

[தலை + மாணாக்கன்]

தலைமாந்தம் *talai-māndam,* பெ. (n.) குழந்தைகட்குக் காணும் வயிற்றுநோய் (பாலவா. 37); a disease of children caused by indigestion.

[தலை + மாந்தம்]

தலைமாந்தநோய் *talai-mānda-nōy,* பெ. (n.) தலை, கழுத்து, வீங்கி உடலில் வலியை உண்டாக்கும் செரியாமைநோய்; a kind of dyspepsia attended with swelling of the head and the neck and pain all over the body.

[தலைமாந்தம் + நோய்]

தலைமாராயம் *talai-mārāyam,* பெ. (n.) (புறப்.) பகைவனது தலையைக் கொடுவந்தவன் மனமுவக்கும்படி, மன்னன் செல்வமளித்ததைக் கூறும் புறத்துறை (பு. வெ. 4, 12); (puṟap.) theme describing the bountiful reward bestowed by a king on a warrior, who brings in the head of an enemy.

[தலை + மாராயம்]

தலைமாலை *talai-mālai,* பெ. (n.) 1. தலைக் கணியும் கண்ணி; garland of flowers for the head. 2. சிவன் அணியுஞ் மண்டையோடுகள் கோர்த்த மாலை; garland of skulls worn by Šivaṉ. "தலைமாலை தலைக்கணிந்து" (தேவா. 1181: 1).

மறுவ. மண்டையோட்டு மாலை

[தலை + மாலை]

தலைமாறு *talai-māṟu,* பெ. (n.) மாற்றாள்; substitute, exchange. "அவ்விரண்டற்குந் தலைமாறாக, இக் காமநோயினையும் பசலையையும் எனக்குத் தந்து" (குறள், 1183, உரை).

[தலைமாற்று → தலைமாறு]

தலைமிதழ் *talai-midaḻ,* பெ. (n.) மூளை (C.G. 28); the brains; brain substance (செ.அக.).

தெ. மெதடு

மறுவ. தலைச்சோறு

[ஒருகா. தல் → தலை + இதழ் → தலையிதழ் → தலைமிதழ்]

தலைமுகறந்தளன் *talai-mugaṟandaḷaṉ,* பெ. (n.) தேற்றான்கொட்டை; water clearing nut.

தலைமுடி *talai-muḍi,* பெ. (n.) 1. தலையினுச்சி; crown of the head. 2. தலை மண்டையோடு; the skull. 3. தலைச்சிகை; lock of hair.

[தலை + முடி. ஒ.நோ. கொடுமுடி, முடி = உச்சி]

தலைமுடிச்சுண்ணம் *talai-muḍi-c-cuṇṇam,* பெ. (n.) 1. மயிர்ச்சுண்ணம்; any medicinal powder prepared from the skull. 2. தலைக் குழந்தை மண்டையோட்டிலிருந்து அணியமாக்கும் சுண்ணமருந்து; a calcined oxide prepared from the skull of the first bron child.

[தலைமுடி + சுண்ணம்]

தலைமுடியுப்பு *talai-muḍi-y-uppu,* பெ. (n.) தலைக்குழந்தை மண்டையோட்டை எரித்துச் சாம்பலிலிருந்து எடுக்கப்பட்ட உப்பு; salt extracted from the ash obtained by burning the skull of a first child.

[தலைமுடி + உப்பு]

தலைமுண்டு *talai-muṇḍu,* பெ. (n.) மேலாடை (நாஞ்.); upper cloth.

[தலை + முண்டு (முண்டு = சிறுவேட்டி)]

தலைமுள் *talai-muḷ,* பெ. (n.) முதலில் முளைக்கும் முள்; rostral spine.

மறுவ. முதல்முள்

[தலை + முள்]

தலைமுழுக்கு *talai-muḻukku*, பெ. (n.) 1. மெய்ம்முழுதுங் குளிக்கை; bathing head and all. 2. எண்ணெய்முழுக்கு; bathing with oil. 3. மகளிர் தீட்டு; catamenia, as requiring ceremonial bath. "பெண்கள் தலைமுழுக்க துண்டேல்" (சினேந். 460). 4. நோய்நீங்கிய பிறகு செய்யும் முதல்குளியல்; first bath in the convalescent stage. 5. கைவிடுதல்; abandon. காதலனுடன் ஓடிப்போன மகளுக்காக தலைமுழுக்கு போட்டுவிட்டார் (உ.வ.).

[தலை + முழுக்கு]

தலைமுழுகாமலிரு-த்தல் *talai-muḻugāmal-iru-*, 4 செ.குவி. (v.i.) கருப்பமாயிருத்தல் (இவ.); to be pregnant.

[தலை + முழுகாமல் + இரு-,]

தலைமுழுகு[1]-தல் *talai-muḻugu-*, 5 செ.குவி. (v.i.) 1. மெய்முழுதுங்குளித்தல்; to bathe head and all. 2. எண்ணெய்க்குளியல் செய்தல்; to take an oil-bath. 3. மாதவிலக்கு முடிவில் குளித்துத் தூய்மையாதல்; to take a ceremonial bath after menstruation. 4. நிலைகெடுதல் (இவ.); to be ruined utterly.

[தலை + முழுகு-.]

தலைமுழுகு[2]-தல் *talai-muḻugu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. உறவை வெட்டிக்கொள்ளல்; to server one's connection with, as a relative. 2. கை விடுதல்; to give up as ir-recoverable, as a loan. கொடுத்த கடன் வராதென்று தெரிந்தால் தலை முழுகி விட வேண்டியதுதான் (உ.வ.).

[தலை + முழுகு-.]

தலைமுறி[1] *talai-muṟi*, பெ. (n.) மீன் முதலியவற்றின் தலைக்கடுத்த துண்டம் (யாழ்ப்.); portion near the head, as of yam, fish, etc.

[தலை + முறி = முழுமைக்கருத்தினின்று முறித்தற்கருத்து தோன்றும்.]

தலைமுறி[2] *talai-muṟi*, பெ. (n.) ஆண்குறியின் நுனித்தோலையறுத்தல் (சுன்னத்து); circumcision.

[தலை + முறி. ஒ.நோ. நுனி → முனி, நுப்பது → முப்பது.]

தலைமுறியன் *talai-muṟiyaṉ*, பெ. (n.) சுன்னத்து செய்து கொண்டவன்; one who circumcised penis.

[தலை + முறியன் = நுனித் தோலை அறுத்துக் கொண்டவன்.]

தலைமுறை *talai-muṟai*, பெ. (n.) கால்வழி, வழிவழி; generation, lineal descent. "இவன் வழியாய்வரு மெட்டாந் தலைமுறையில்" (பிரமோத் 5, 38). கருப்புப்பன்றியை முழுதும் வெள்ளைப்பன்றியாக மாற்ற ஏழு தலைமுறை வேண்டும் (உ. வ.).

மறுவ. கொடிவழி.

[தலை + முறை]

தலைமுறைதத்துவமாய் *talai-muṟai-tattuvam-āy*, கு.வி.எ. (adv.) வழிவழியாய்; from generation to generation.

மறுவ. கொடிவழியாய், வாழையடி வாழையாய்.

[தலைமுறை + தத்துவம் + ஆய். தத்துவம் = அசைச்சொல்லாக நின்றது.]

தலைமுறைப்பட்டவன் *talai-muṟai-p-paṭṭavaṉ*, பெ. (n.) பழங்குடியிற் பிறந்தவன் (வின்.); scion of an ancient and honourable family.

[தலைமுறை + பட்டவன். தொன்று தொட்டு வருந்தொல்பழங்குடியினன்]

தலைமூத்த *talai-mūtta*, கு.பெ.எ. (adj.) முதலாவதாகப் பிறந்த; eldest-born (செஅக.).

[தலை + மூத்த]

தலைமூத்தமகன் *talai-mūtta-magaṉ*, பெ. (n.) முதல்மகன்; first-son.

மறுவ. தலைமகன்; தனையன்

[தலை + மூத்தமகன்]

தலைமூர்ச்சனை *talai-mūrccaṉai*, பெ. (n.) வருத்தம், துன்பம்; trouble, vexation, arduousness. "தலைமூர்ச்சனையான வேலை" (வின்.) (செஅக.).

மறுவ. தலைநோவு

[தலை + மூர்ச்சனை]

தலைமேற்கொள்(ளு)-தல் *talai-mēṟ-koḷ(ḷu)-*, 7 செ.குன்றாவி. (v.t.) 1. **தலையால் வகித்தல், பணிவுடன் செய்தல்;** to accept with respect, as a command, etc., "இப்பணி தலைமேற் கொண்டேன்" *(கம்பரா. கைகேசி. 110).* 2. **பொறுப்பையேற்றல்;** to undertake responsibility. அவன் எல்லாச் செயல்களையும் தலைமேற்கொண்டு பார்ப்பவன் *(உ. வ.).*

[தலைமேல் + கொள்(ளு)-.]

தலைமை[1] *talaimai,* பெ. (n.) 1. **முதன்மைத் தன்மை;** headship, leadership. "முறைசெய்யான் பெற்ற தலைமை" *(திரிகடு. 80).* 2. **மேன்மை;** superiority, pre-eminence, excellence. "சண்முகத் தலைமை மைந்தன்" *(சிவரக. மேரு. 21).* 3. **முதன்மையான நிலைமை;** priority, as of rank, birth, etc., 4. **உரிமை** (உரி.நி.); ownership.

[தல் → தலை + மை. "மை" பண்புப் பெயரீறு.]

தலைமை[2] *talaimai,* பெ. (n.) **அதிகாரங்கள் நிறைந்த முதன்மை;** leadership.

[தல் → தலை + மை.]

தலைமைஉரை *talaimai-urai,* பெ. (n.) **கூட்டத் தலைமை தாங்குபவர் நிகழ்த்தும் உரை;** address of the president.

[தலைமை + உரை]

தலைமைச்சிறியன் *talaimai-c-ciṟiyaṉ,* பெ. (n.) **தலைமாணாக்கன், சட்டாம்பிள்ளை** (யாழ்ப்.); senior pupil in a school or class; monitor.

மறுவ. முதல்மாணாக்கன்

[தலைமை + சிறியன். தலைமைப் பண்பினின்று கிளைத்த இச் சொல், அறிவு முதிர்ச்சியிலும், அகவையிலும் சிறந்த முதனிலைமாணவனைக் குறித்து வழங்கலாயிற்று]

தலைமைச்செயலகம் *talaimai-c-ceyalagam,* பெ. (n.) **அரசின் முதன்மை அலுவலகம்;** head-quarters, secretariat. ஐக்கிய நாடுகள் அவையின் தலைமைச்செயலகம், நியூயார்க்கில் அமைந்துள்ளது. தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலக ஊழியர் நலச்சங்கம் தலைமைச் செயலகக் கோட்டையில் உள்ளது.

[தலைமை + செயலகம்]

தலைமைஞ்சல்கொடி *talaimaiñjal-koḍi,* பெ. (n.) **தலைமைந்தக் கொடி;** a kind of creeper.

[தலைமைஞ்சல் + கொடி]

தலைமைதாங்கு-தல் *talaimai-tāṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **வழிநடத்தும் பொறுப் பேற்றல்;** preside over. நடக்கப் போகும் திரைப்பட வெள்ளிவிழாவிற்கு அமைச்சர் தலைமை தாங்குவார் *(உ.வ.).*

[தலைமை + தாங்கு-.]

தலைமைப்பாடு *talaimai-p-pāḍu,* பெ. (n.) **பெருமை;** greatness, excellence. "இவன் தலைமைப் பாட்டிற்குப் போதாதென" *(திருக்கோ. 22, உரை.).*

[தலைமை + பாடு - தலைமைப்பாடு. கொண்ட, அரும்பணிக்குப் பெருமையும், புகழுஞ் சேர்க்குமுகத்தான், அரும்பாடு பட்டு உழைத்தல்; "தேவநேயர்தம் தலைமைப்பாடு பேரகரமுதலிக்குப் பெருமை சேர்த்தது"]

தலைமையாசிரியர் *talaimai-y-āširiyar,* பெ. (n.) **பள்ளிக்குத் தலைமையேற்பவர்;** headmaster.

[தலைமை + ஆசிரியர்]

தலைமைவகை *talaimai-vagai,* பெ. (n.) **ஒன்றன் சார்பானன்றித் தலைமைப்பற்றிக் கூறும் முறை;** mode of stating a thing directly, dist. fr. šārttu-vagai. "அகத்திணைக்கட் சார்த்து வகையான் வந்தனவன்றித் தலைமைவகையாக வந்தில" *(தொல். பொருள். 54, உரை.).*

[தலைமை + வகை]

தலைமைவினை *talaimai-viṉai,* பெ. (n.) **முதன்மை நிலையைச் சுட்டும் வினை;** main verb.

[தலைமை + வினை.]

தலையகண்டம் *talai-y-agaṇḍam,* பெ. (n.) ஓணான்; lizard.



தலையகம் *talai-y-agam,* பெ. (n.) நெல் அறுவடையானவுடன் விற்கும் விலை; price of paddy prevailing immediately after the harvest. "நீக்கி நின்ற நெல்லுக்குத் தலையகப் படிகாசு இடவும்" *(S.I.I.vii, 499).*

[தலை + அக்கம் → தலையக்கம் → தலையகம் (அக்கம் = சிறுகாசு). தலையகம் = களத்துமேட்டில், அறுவடை யாகிக் குவித்துவைத்துள்ள, நெற்பொலிக்கு இடப்படும் வரி.]

தலையங்கம் *talai-y-aṅgam,* பெ. (n.) 1. செய்தித் தாள் ஆசிரியர் எழுதுங்கட்டுரை (editorial); leader, leading article. prevailing immediately after the harvest. 2. செய்தித்தாளின் தலைப்பில் செய்திகளைக் குறிப்பாக எடுத்துக்காட்டும் செய்திச்சுருக்கம்; heading; headline.

மறுவ. முகப்புரை

[தலை + அங்கம் = செய்தித்தாளின் ஆசிரியர் எழுதும் முகப்புக்கட்டுரை.]

தலையடி[1]-த்தல் *talai-y-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) அல்லற்படுத்துதல் (வின்.); to trouble, tease.

மறுவ. நெற்றியடி / துன்புறுத்துதல்.

[தலை + அடி-.]

தலையடி[2] *talai-y-aḍi,* பெ. (n.) தலையடிப்பு (வின்.) துன்பம், தொல்லை, தொந்தரவு; trouble, vexation, annoyance.

[தலை + அடி]

தலையடித்துக்கொள்(ளு)-தல் *talai-y-aḍittu-k-koḷ(ḷu)-,* 13 செ.குவி. (v.i.) தானே அல்லற்படுதல்; to trouble one-self. "தத்துவப் பேயோடே தலையடித்துக் கொள்ளாமல்" *(தாயு. உடல் பொய். 29).*

[தலை + அடித்து + கொள்(ளு)-.]

தலையடிநெல் *talai-y-aḍi-nel,* பெ. (n.) நெற் கதிரின் முதலடி நெல் (நெல்லை); paddy obtained at the first threshing of sheaves, considered superior (செ.அக.).

மறுவ. தலையடிப்பு

[தலை + அடி + நெல் → தலையடிநெல் அறுவடைக்குப்பின்பு, முதற்கண் அடித் தெடுக்கப்படும் நெல்; இரண்டாவது முறை அடிக்கப்படும் நெல் சூட்டடிநெல் லாகும்.]

தலையடிநெற்றாள் *talai-y-aḍi-neṟṟāḷ,* பெ. (n.) நெற்கதிர் முதலடிக்குப்பின் அடுக்கிவைக்கப் படும் வைக்கோற்போர்; hay stalk after first threshing.

மறுவ. வைக்கோற் போர்; வைக்கோற்படப்பு

[தலை + அடி + நெல் + தாள். தாள் = வைக்கோல்.]

தலையடிப்பு *talai-y-aḍippu,* பெ. (n.) 1. அலைக்கழிப்பு, தொந்தரவு (வின்.); trouble, vexation, annoyance. 2. நெற்கதிரின் முதலடி (இவ.); first threshing of paddy by beating the sheaves against the ground.

[தலை + அடிப்பு]

தலையடு-த்தல் *talai-y-aḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) சேர்த்துக் கூறுதல்; to add, as in speaking. "அன்பு தலையடுத்த வன்புறைக் கண்ணும்" *(தொல். பொருள். 114).*

[தலை + அடு-.]

தலையண்டக்கருவழுக்கை *talai-y-aṇḍa-k-karuvaḻukkai,* பெ. (n.) மூன்று திங்கள் நிரம்பிய தலைக்குழந்தைக் கரு; immature three month's first foetus.

மறுவ. இளவழுக்கை

[தலையண்டம் + கரு + வழுக்கை]

தலையண்டம் *talai-y-aṇḍam,* பெ. (n.) மண்டையோடு; skull bone.

தலையணி *talai-y-aṇi,* பெ. (n.) *1.* தலைப் பாகை; head dress. *2.* தலைக்கவசம்; helmet.

மறுவ. நெற்றிச்சுட்டி; தலைக்கோலம்

[தலை + அணி]



தலையணை *talai-y-aṇai,* பெ. (n.) *1.* தலை வைத்துப்படுப்பதற்குப் பஞ்சு முதலியன அடைத்துத் தைத்த பை (திவா.); pillow. *2.* ஆற்றுப்போக்கில், முதலில் உள்ள அணை; the very first dam or anicut near the source of a river (செ.அக.).

ம. தலயண

[தலை + அணை → தலையணை. அணை = தண்ணீரைத் தேக்கும் தடுப்பு. தலையணை = தலைக்கு அணையாக உள்ள பை.]

தலையணைகண்டம் *talai-y-aṇai-kaṇḍam,* பெ. (n.) முதிர்கரு; foetus.

[தலையணை + கண்டம் → தலையணை கண்டம் = குழவியுருவடைந்த முழுக்கரு.]

தலையணைதாங்கி *talai-y-aṇai-tāṅgi,* பெ. (n.) கட்டிலின் ஒருறுப்பு (யாழ்அக.); a constituent part of a cot.

[தலை + அணை + தாங்கி]

தலையணைமந்திரம் *talai-y-aṇai-mandiram,* பெ. (n.) மனைவி கணவனுக்கு இரவில் கமுக்கமாய்க் கூறும் அறிவுரை; curtain lectures, private advice of a wife to her husband, as given over the pillow. நான் சொன்னால் சரி என்று சொல்கிறவன் இன்று முடியாது என்கிறான். மருமகள் தலையணை மந்திரம் ஓதிவிட்டாளா? (உ.வ.).

[தலையணை + மந்திரம்]

தலையரங்கேறு-தல் *talai-y-araṅgēṟu-,* 5 செ.குவி. (v.i.) தான் கற்ற கலையை முதன் முறை அவையோர்க்குக் காட்டுதல்; to make one's first appearance on the stage as a performer. "தலைக்கோ லெய்தித் தலையரங்கேறி" (சிலப். 3: 161).

மறுவ. அரங்கேற்றம்

[தலை + அரங்கேறு-.]

தலையரட்டை *talai-y-araṭṭai,* பெ. (n.) *1.* செருக்குடன் வீண்பேச்சுப் பேசுபவன்; to vain babbler. *2.* வீண்பேச்சு; vain babbling (செ.அக.).

க. தலெகரதெ

[தலை + அரட்டை → தலையரட்டை = வீண்பேச்சு ஒன்றையே மூலதனமாக உடையவன். செயற்பாடு ஏதுமின்றி, செருக்குடன் பதர்மொழி பலபகன்று, கிடைத்தற்கரிய காலத்தை வீணாக்குபவன். தலையரட்டைக்காரன், தலையரட்டை பிடித்தவன் என்பது தென்மாவட்டங்களிற் காணப்படும், வழக்காகும்.]

தலையரை *talai-y-arai,* பெ. (n.) வரி வகை (S.I.I.vi, 155); a tax.

[தலை + அரை = தலையரை. ஊரிலுள்ள ஒவ்வொருவருக்கும், ஊரவையார் விதித்த வரி.]

தலையல் *talaiyal,* பெ. (n.) *1.* சொரிகை (சூடா.); pouring, raining. *2.* தலைப்பெய்மழை (பிங்.); first rains. *3.* மழைபெய்து விடுகை (திவா.); cessation of rain. *4.* புதுப்புனல் வரவு (அக.நி.); freshet.

மறுவ. தலைமழை, தலைப்பெயல், புதுப்பெயல்

[தலை + பெயல் – தலைப்பெயல் → தலையல் = முதன்மழை, புதுத்தூறல்; விண்ணின்று மாரி வளங் குன்றியஞான்று, அஃதாவது, நீண்ட இடைவெளிக்குப் பின்பு பெய்யும், முதன்மழை.]

தலையலங்காரம் *talai-y-alaṅgāram,* பெ. (n.) *1.* தலையை அழகு செய்தல் (இ.வ.); decoration of the head. *2.* தேர்க்கொடிஞ்சி (ஞானா. 7; உரை.); conical ornamental top of a car. "பொற்றே ரிருக்கத் தலையலங்காரம் புறப்பட்டதே" *(தனிப்பா. தி. i, 146: 45).*

மறுவ. தலைக்கோலம்.

[தலை + அலங்காரம்]

தலையவதாரம்பண்ணு-தல் *talai-y-avadāram-paṇṇu-,* 12 செ.குன்றாவி. (v.t.) தூக்கிடல்; to behead.

மறுவ. தலைவாங்குதல்.

[தலை + அவதாரம் + பண்ணு-.]

தலையழி[1]-தல் *talai-y-aḻi-,* 1 செ.கு.வி. (v.i.) அடியோடு கெடுதல், எச்சமின்றியழிதல், வசைமொழியாலழிதல்; to be ruined utterly ; to perish miserably, used in cursing.

மறுவ. முற்றுமழிதல், முழுதுங்கெடுதல்.

[தல் → தலை + அழி-. = முழுவது மழிதல், முற்றுங்கெடுதல்]

தலையழி[2]-த்தல் *talai-y-aḻi-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1.* அடியோடுகெடுத்தல்; to ruin utterly. "தானவரை யென்றுந் தலையழித்தான்" *(இலக். வி. 646, உரை). 2.* தலைமை தீர்த்தல்; to destroy one's power. "சென்று தலையழிக்குஞ் சிறப்பிற் றென்ப" *(தொல். பொருள். 70).*

மறுவ. முற்றுங்கெடுத்தல்; முழுவதும் ஒழித்தல்; அனைத்தையும் அழித்தல்

[தலை + அழி-.]

தலையழுக்கு[1] *talai-y-aḻukku,* பெ. (n.) தலைமுழுக்கு (வின்.) பார்க்க; see *talai-muḻukku.*

[தலை + அழுக்கு]

தலையழுக்கு[2] *talai-y-aḻukku,* பெ. (n.) முதல் மாதவிலக்கு; the first monthly menstural blood of a female - Catamenia.

[தலை + அழுக்கு]

தலையளி[1]-த்தல் *talai-y-aḷi-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1.* காத்தல்; to protect, save. "தானேவந் தெம்மைத் தலையளித்து" *(திருவாச. 7:6). 2.* அருளொடு நோக்குதல்; to regard with grace. "நாடுதலை யளிக்கு மளிமுகம்போல" *(புறநா. 67).*

[தல் → தலை + அளி-.]

தலையளி[2]-த்தல் *talai-y-aḷi-,* 4 செ.கு.வி. (v.i.) வரிசைசெய்தல்; to give presents. "தலைய ளித்தான் றண்ணடையுந் தந்து" *(பு. வெ. 2, 12).*

[தலை + அளி-.]

தலையளி[3] *taḷai-y-aḷi-,* பெ. (n.) *1.* முகமலர்ந்து இனிய கூறுகை; kind speech. "யாவர்க்குந் தலையளி செய்தலும்" *(குறள், 390). 2.* குறைவிலா அன்பு; ideal love. "ஆவிநீங்கின டலையளியாகிய ததுவன்றோ" *(கந்தபு. இரணியன்பு. 2). 3.* இரக்கங் காட்டுகை; அருள்பாலிப்பு; grace.

[தலை + அளி. தல் → தலை; அன் → அளி. - தலையளி]

எவ்வுயிருந் தம்முயிர்போ லெண்ணி அனைத்துயிர்களிடத்துங் காட்டும் மாசு மருவற்ற அன்பே, தலையைளி யெனப்படும்; அன்பின் முதிர்நிலை அருள்பாலித்தல்; உற்றார், அற்றார், பாராது எவரிடத்தும் அகமலர்ந்து, முகமலர்ந்து, நாம் நுவலுமினிய சொற்களே, மேற்கூறிய அனைத்திற்கும் அடிப்படை அறம்; இவ் வினிய சொற்களே, அறத்தின் முதுசெலும்பு; அனைவருக்கும் வேண்டப்படும் தனிப்பெரும் அறமும், இதுவேயாகும். இக் கருத்தினை, உலகத்தார்க்கு உணர்த்த விழைந்த வள்ளுவப் பேராசான், "முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானாம் இன்சொலினதே அறம்" என்றார்.

இத் தலையாய தலையளியைத்தான் திருவருட்பா வருளிய வடலூர் வள்ளற் பெருமானார், "அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்சோதி" என்றார்.

ஈகத்தின் கரணியமாகக் காட்சிதரும், இத் தலையளி ஒன்றே, ஆதன் (ஆன்மா) அனைத்திற்குமுரிய உயர்பண்பு. சமயங்கள் அனைத்தும் ஆதனைச் சமைத்துப் பக்குவ மாக்குவதோடு அமையாது, அன்பையும், அளியையும் பலவாறு பாராட்டிப் பேசும் பான்மையில் அமைந்துள்ளன.

அதனற்றான் சிவணியத்தார், "அன்பே சிவம்" என்றனர். இதனையே கிறித்துவர் "அன்பே கடவுள்" [Love is god] என்று விதந்தோதினர்.

தலையற்றநாள் *talai-y-arra-nāḷ,* பெ. (n.) **களை (புனர்பூசம்), சுள்கு (விசாகம்), முற்கொழுங்கால் (பூரட்டாதி) என்ற விண்மீன்கள்** *(சோதிடகிரக. 40);* the stars, punarpūcam, visāgam, pūraṭṭādi *(செஅக.).*

[தலை + அற்ற + நாள்.]

தலையற்றாள் *talai-y-arrāḷ,* பெ. (n.) **கைம்பெண் (நிகண்டு) (தலைவனை யிழந்தவள்);** widow, as one who has lost her husband *(செஅக.).*

மறுவ. அறுதாலி, அறுதலி

[தலை + அற்றாள் + தலையற்றாள்; தலை = தலைவன் அல்லது கணவன். கல்வாழ்விற்கு முதன்மையானவன் அற்றாள் = கணவனைத் துறந்தவள்]

தலையறை *talai-y-arai,* பெ. (n.) **உடற்குறை** *(நிகண்டு)* **முண்டம்;** headless body *(செஅக.).*

[தலை + அறை = அறுபட்ட தலையை யுடைய முண்டம். தலையில்லாவுடல்.]

தலையன்பு *talai-y-anbu,* பெ. (n.) **தலையளி**[3] *(திருவுந்தி. 7, உரை)* பார்க்க; see *talai-y-aḷi,*[3].

மறுவ. பேரன்பு, தலையளி.

[உல் → துல் → தல் → தலை. தலை + அல் + பு = தலையன்பு. 'பு' பண். பெ., தொ. பெ. ஈறு. ஒ. நோ: தெல் + பு = தென்பு, நல் + பு = நன்பு. உள்ளம் ஒன்றிப் பொருந்துவதன் விளைவே அன்பு.]

தலையன்பு: எவ்வுயிருந் தம்முயிர் போலெண்ணி, எஃலோரிடத்தும் முதல் அன்பு பூண்டொழுகுவதே தலையன்பு; எல்லாம் வல்ல பேரருளாளன் இறைவன்; நில்லா வுலகத்தில், நிலைத்த புகழ் பெறவிழையும், எல்லா மாந்தர்க்கும், முதற்கண் வேண்டற்பாலது, முதலன்பாம், இத்தலையன்பேயாகும். இப்பொதுப் பண்புாம் தலையன்பே, மன்பதை மாந்தர்க்குரிய அடிப்படை அன்பாகும். இத் தலையன்புடையாரே எல்லா முடையார். அதனாற்றான் வள்ளுவரும், "அன்புடையார் எல்லாம் உடையார்" என்றார்.

இத் 'தலையன்பு' முதற்கண் தொடர்புடையார் மாட்டுத் தோன்றிப் பின்ன ரனைவரிடத்துஞ் சுரக்கும் அருள்வெள்ளமாக மாறுமென்பார்" தேவநேயர். அன்பகத்தில்லாத உயிரின் வாழ்க்கையால், பயன் ஏதுமில்லை.

அதனாற்றன் மொழிஞாயிறு, தலைவன், தலைவியரிடத்தே, இத் தலையன்பு, முதற்கண் முகிழ்க்கு மென்கிறார். இதுவே நாளடைவில், அருளாக வளருமென்பார்.

இல்வாழ்வாரிடத்து முகிழ்த்த, இத் தலை யன்பே, காலப்போக்கில், குழவியர்தம் மழலையிற் கரைந்து, உற்றார், உறவினரிடத்தே பற்றிப்படர்ந்து, கொடிவழி மலர்ந்து, விருந்தோம்பிக் காத்து, இனியவை கூறித் துறந்தாரைப்பேணி, நடுவுநின்றோங்கி, ஒழுக்கத்துட் சிறந்து, ஒழுகியுயர்ந்து, தொடர்பற்றாரிடத்தும் அருளாகக் கனிந்து, மாந்தர்தமை வாழ்விக்கின்றது.

இவ் வையகத்தை வாழ்வாங்கு வாழ்விக்க வந்த தாயே, தலையன்பு; இதுவே அனைவருக்கும் வேண்டப்படும் முதலன்பு; இத் தாயீன்ற குழவியே அருள்! இவ் வருளின் வடிவமாகத் தோன்றும் மன்பதை மாந்தர், தலையன்பினைக் காக்குந் தாழ் ஆவர்.

இத்தலையாய கருத்தினை, நெஞ்சிற் கொண்ட முப்பாலுரைத்த வள்ளுவப் பேராசான், "அன்பின் வழியது உயிர்நிலை" என்றார். இங்கு உயிர்நிலை யென்றது, ஆதன் நிலையையே.

இவண், ஓர்ந்துணரத்தக்க செய்தியும் ஒன்றுண்டு. தலையுள்ள எல்லா ஆதனை (ஆன்மா)யுமே "உயிர்" என்றுரைத்தா ரெனலாம்.

தலையா-தல் *talai-y-ā-,* 6 செ.கு.வி. (v.i.) **மேன்மையாதல்;** to become prominent. "தமருட் டலையாதல்" *(பு. வெ. 3, 6).*

[தலை + ஆ-.

மாந்தரனைவரிடத்தும், அன்பும், அருளுங்கொண்டொழுகி, மேன்மையுடைத்தாதல். இதுவே, தலைமைத்தன்மைக்கு வேண்டப்படும் பண்புகளுள், தலையாய பண்பாகும்.]

தலையாகுமோனை *talai-y-āgu-mōnai,* பெ. (n.) **செய்யுளின் ஒரடியின் எல்லாச் சீரிலும், மோனையெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது** *(காரிகை, ஒழிபி. 6, உரை.);* (pros.) alliteration of the first letter of each foot in a line.

[தலையாகு + மோனை]

தலையாகெதுகை *talai-y-āgedugai,* பெ. (n.) முதற்சீர் முழுதும் ஒன்றிவரும் எதுகை (காரிகை. ஒழிபி. 6, உரை.); rhyming of the initial foot in each line of a stanza (செ.அக.).

[தலையாகு + எதுகை]

தலையாட்டம் *talai-y-āṭṭam,* பெ. (n.) 1. தலை நடுக்கம்; trembling of the head, as from palsy. "வந்த தலையாட்டமன்றி வந்தது பல்லாட்டம்" (அருட்பா. நாமாவளி. 164). 2. பேரச்சம் (இ.வ.); extreme fear. 3. செருக்கு (இ.வ.); arrogance. 4. குதிரைத் தலையணிவகை; plume of hair on a horse's head. "துஞ்சாகிய சிவந்த தலையாட்டத் தினையும்" (கலித். 96, உரை).

தெ. தலாயட்டமு; ம. தலையாட்டம்

[தலை + ஆட்டம்]

தலையாட்டி *taḷai-y-āṭṭi,* பெ. (n.) தலையாட்டிப்பொம்மை (இ.வ.) பார்க்க; see *talai-y-āṭṭi-p-pommai.*

[தலை + ஆட்டி]

தலையாட்டிப்பொம்மை *taḷai-y-āṭṭi-p-pommai,* பெ. (n.) எதற்கும் இணங்கி நடப்பவன் (இங்கு மங்கும் தலையசைத்தாடும் பொம்மை); lit., a doll moving its head to and fro. a servile person. நீ சொல்வதையெல்லாம் செய்வதற்கு நான் என்ன தலையாட்டிப் பொம்மையா? (உ.வ.).

மறுவ. தஞ்சாவூர்ப்பொம்மை

ஆமாம்சாமி போடுபவன்.

[தலை + ஆட்டி + பொம்மை = தலையாட்டிப் பொம்மை. வண்ணத் தாள்களை ஒட்டிச் செய்யப்படும் சுடுமண் பொம்மை; இப் பொம்மையின் அடித் தளம் எவ்வளவு சாய்த்தாலும், நிமிர்ந்து கொள்ளுந் தன்மையில் வளைவாகச் செய்யப்பட்டிருக்கும்; தஞ்சாவூர்ப் பகுதியில், இது மிகுதியாகச் செய்யப் படுவதால், "தஞ்சாவூர்த் தலையாட்டிப் பொம்மை" எனப்பெயர் பெற்றது.

இப் பொம்மை நிலையாக நிற்காது. இப் பொம்மை போன்று நிலையற்ற குணத்தன். எடுப்பார் கைப்பிள்ளை போன்று, அனைவர் பேச்சினுக்கும், செயல்பாட்டினுக்கும், ஆமாம்சாமி போடுந்தன்மையன். கொள்கையிலோ அறத்திலோ, ஊட்டமின்றி வளைந்து கொடுப்பவன்]



தலையாட்டு-தல் *talai-y-yāṭṭu-,* 5 செ.குவி. (v.i.) உடன்பாட்டை எளிதில் தெரிவித்தல்; nod, (as a gesture that he should agree to any proposal without thinking it over.) தன்னறிவு இல்லாதவன் யார் சொன்னாலும் தலையாட்டுவான் (உ.வ.).

[தலை + ஆட்டு-.]

தலையாடி *talai-y-āḍi,* பெ. (n.) 1. பனை மரத்தின் நுனிப்பாகம் (யாழ்ப்.); top most part of the trunk of a tree, commonly of a palm, as unfit for use. 2. ஒரு செய்யுளின் பிற்பகுதி (ஈடு, 7.5:10); latter half of a stanza. 3. திருமணமானபின் வரும் ஆடிப்பண்டிகை; the first āḍi month after marriage in which the bridegroom will receive gifts from father-in-law. 4. கடகத் (ஆடித்) திங்களின் முதல் நாள் - திருநாள்; the first day of the Tamiḻ āḍi month a festival (செ.அக.).

மறுவ. முதலாடி

[தலை + ஆடி]

தலையாடை *talai-y-āḍai,* பெ. (n.) கரும்பு முதலியவற்றின் நுனிப்பாகம்; தோகை; top portion of the stem of plants, like sugar - canes, etc., "எட்டுக் கண்ணான கரும்பிலே வேர்ப்பற்றுந் தலையாடையுங் கழிந்தால்" (ரஹஸ்ய. 820).

[தலை + ஆடை = தலையாடை. கரும்பு, சோளம், கம்பு முதலான பயிர்களிடைத்

தோன்றும் நுனித்தாள் பகுதி அல்லது முதற்குருத்துதாள், தலையாடை எனப்படும்]

தலையாண்டு *talai-y-āṇḍu,* பெ. (n.) *1.* **முதலாமாண்டு நினைவு நாள்;** first anniversary of a deceased person. *2.* **முந்தியஆண்டு;** previous year, as dist. fr. ta<u>nn</u>āṇḍu.

மறுவ. முதலாண்டு

[தலை + ஆண்டு]

தலையாப்பு *talai-y-āppu,* பெ. (n.) **வடிசோற்றின் மேற் பரந்துள்ள கஞ்சியாடை;** thin layer of crust formed over boiled rice gruel. "தலையாப்புப் பரத்தலை யுடைய அடிசிலை" *(பெரும்பாண். 476, உரை.).*

மறுவ. கஞ்சியேடு

[தலை + அப்பு = தலையாப்பு (அப்பு = நீர்)]

சோற்றுநீரை வடித்தெடுக்குங்கால், அந்நீற்றின் மேற்படர்ந்த ஆடை போன்ற மெல்லிய கஞ்சியேடு, 'தலையாப்பு' எனப்படும்.

தலையாய்ச்சல் *taḷai-y-āyccal,* பெ. (n.) **முன்னது** *(யாழ்ப்.);* first process; first time, front part.

[தலை + ஆய்ச்சல். ஒருகா. பாய்ச்சல் → ஆய்ச்சல்]

தலையாய *talai-y-āya,* பெகுஎ. (adj.) **முதன்மை வாய்ந்த; மிகச்சிறந்த;** foremost, principal. இவர் உலகின் தலையாய அறிவியல் வல்லுநர் *(உ.வ.).* ஊழல்களை வெளிப்படுத்தியதில், இந்தத் தாளிகைக்கு தலையாய பங்கு உண்டு *(உ.வ.).*

தலையாயார் *talai-y-āyār,* பெ. (n.) **பெரியோர்;** persons of the first rank, eminent persons. "கல்லாக் கழிப்பர் தலையாயார்" *(நாலடி., 36, 6).*

மறுவ. மேலோர்.

[தலை + ஆயவர் = தலையாயவர் → தலைலையாயார்

அனைத்துப் பண்பிலும், முதன்மையாகத் திகழுஞ் சான்றோர்]

தலையாரி[1] *talai-y-āri,* பெ. (n.) **ஊர்க் காவற்காரர்** (G. D. I. 208); village - watchman; one of the menial servants of a village administration, whose duty includes giving information of offences, guiding travellers etc., *(செ.அக.).*

தெ., க. தலாரி; ம. தலயாளி.

மறுவ. மேலோர்

[தலைமை + ஆர் = தலைமையார் → தலையார் → தலையாரி

தலையாரி : ஊரவையாரால் பணியமர்த்தஞ் செய்யப்பட்ட ஊர்க் காவலன்]

தலையாரி[2] *talai-y-āri,* பெ. (n.) **பம்பர விளையாட்டு வகையுளொன்று;** a kind of top-play.

[தலை + ஆரி → தலையாரி. ஆரி → ஆரித்தல் = ஆட்டுதல். தலையில் கயிறு சுற்றி ஆட்டும் சிறுவர் விளையாட்டு (செ.ப.சி. 20)]

தலையாரிக்கம் *taḷai-y-ārikkam,* பெ. (n.) **தலையாரிக் காவலுக்குச் செலுத்தும் வரி** (I. M. TJ. 1312); watchman's dues.

[தலை + ஆரிக்கம்: ஊர்க்காவல் செய்வோர்; அவர் செலுத்தும் வரி]

தலையாரிப்பு *taḷai-y-ārippu,* பெ. (n.) *1.* **கட்டிய கல்லுப்பு;** consolidated common-salt. *2.* **உப்பு மணி;** beads obtained by consolidated salt.

தலையாலங்காடு *taḷai-y-ālaṅgāḍu,* பெ. (n.) **தலையாலங்கானம்** *பார்க்க;* see *talai-y-ālaṅgā<u>n</u>am* (செ.அக.).

[தலை + ஆலங்காடு]

தலையாலங்கானம் *talai-y-ālaṅgā-<u>n</u>am,* பெ. (n.) **சோணாட்டில் பாண்டியன் நெடுஞ்செழியன் போர்புரிந்து வெற்றி கொண்ட ஓர் ஊர்;** a place in Tañjore district, where the Pāṇḍya<u>n</u> king Neḍuñ-šeḻiya<u>n</u> won a great victroy. "தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து" *(புறநா. 19: 2).*

மறுவ. ஆலங்கானம்; தலையாலங்காடு (அபிதா. சிந்.) ஆலங்காடு

[தலை + ஆலங்கானம் = தலையாலங் கானம். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், இருபெருவேந்தரையும், ஐம்பெருவேளிரையும், பொருதுவென்ற ஊர்]

தலையாறு *taḻai-y-āṟu,* பெ. (n.) ஆற்றின் தோற்றுவாய் (வின்.); source of a river.

[தலை + ஆறு = ஆற்றின் பிறப்பிடம்]

தலையானட-த்தல் *taḻai-y-āṉaḍa-,* 3 செ.கு.வி. (v.i.) 1. செறுக்குமிகுதல்; to be reckless, haughty. 2. பெருமுயற்சி செய்தல்; to put forth great efforts. 3. முழு ஈடுபாட்டுடன் பணி செய்தல் (இ.வ.); to render service whole heartedly (செ.அக.).

[தலை + ஆல் + நட-. ஆல் = மூன்றாம் வேற்றுமை உருபு.]

தலையிடி *talai-y-iḍi,* பெ. (n.) தலைவலி; head-ache. "பொன்றிணி கழற்கான்மைந்தன் றலையிடி பொருந்திப்பட்டான்" (உபதேசகா. சிவத்துரோ. 476).

மறுவ. மண்டையிடி தலைக்குத்து, தலைநோவு

[தலை + இடி. (இடி = குத்து நோவு)]

தலையிடிப்பு *talai-y-iḍippu,* பெ. (n.) தலையிடி பார்க்க; see *talai-iḍi* (செ.அக.).

[தலை + இடிப்பு]

தலையிடு¹-தல் *talai-y-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. நுழைதல்; to engage, venture, enter. "தலையிட்டு வாதுமுயல் சாக்கியர்" (அரிசமய. பாயி.) . 2. தேவையில்லாமல், பிறர்செயலில் புகுதல்; to meddle, interfere in other's affairs.

[தலை + இடு-.]

தலையிடு²-தல் *talai-y-iḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) கூட்டுதல்; to add, superimpose. "மூன்று தலையிட்ட முப்பத்திற் றெழுத்தின்" (தொல். எழுத். 103).

மறுவ. மூக்கு நுழைத்தல்

[தலை + இடு-.]

தலையில்லாச்சேவகன் *talai-y-illā-c-cēvagaṉ,* பெ. (n.) 1. நண்டு (யாழ்.அக.); crab. 2. தலை யில்லாத வேலையாள்; lit., headless servant (செ.அக.).

[தலை + இல்லா + சேவகன்]

தலையில்விடி-தல் *talai-y-il-viḍi-,* 2 செ. குன்றாவி. (v.t.) பிறர்பொறுப்பு தன்மேல் விழல்; toll to one's lot. எதிர்பாராது தந்தை இறந்ததால் குடும்பத்தை நிருவகிக்கும் பொறுப்பு அவன் தலையில் விடிந்தது (உ.வ.).

[தலையில் + விடி. பிறர் ஆற்ற வேண்டிய பணி, நிருவகிக்கும் பொறுப்பு முதலானவை, அவர் எதிர்பாராதவாறு அவரிடம் வந்து சேர்தல்]

தலையில்விழு-தல் *talai-y-il-viḻu-,* 2 செ.கு.வி. (v.i.) தலையில் விடி-தல் பார்க்க; see *talai-y-il-viḍi-.*

[தலை + இல் + விழு-.]

தலையிலடி-த்தல் *talai-y-il-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஒருவனது தலையைத் தொட்டு ஆணையிடுதல்; to swear, take an oath, as by striking on the head of a person. 2. நேர்மையற்ற செயல் செய்தல்; to do injustice, as in offering an absurdly low price.

[தலையில் + அடி-.]

தலையிலாக்குருவி *talai-y-ilā-k-kuruvi,* பெ. (n.) குருவிவகை (பிங்.); sparrow, Hirundinidae (செ.அக.).

மறுவ. மழைக்குயில், தூக்கணாங்குருவி

[தலை + இலா + குருவி]



தலையிலாவாணி *talai-y-ilā-v-āṇi,* பெ. (n.) ஆணி வகை (C.E.M.); broad nail.

[தலை + இலா + ஆணி = மேல் முகப்பில்லாத ஆணி]

தலையிலெழுத்து *talai-y-il-eḻuttu,* பெ. (n.) தலையெழுத்து பார்க்க; see *talai-y-eḻuttu* (செ.அக.).

[தலையில் + எழுத்து]

தலையிலெழுது-தல் *talai-y-il-eḻudu-,* 5 செ.கு.வி. (v.i.) **விதியமைத்தல்;** to predetermine one's fate or destiny, as writing on one's head (செ.அக.).

[தலையில் + எழுது-.]

தலையிற்கட்டு-தல் *talai-y-iṟ-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **ஒருவனை ஒன்றற்குப் பொறுப்பாக்குதல்;** to impose a responsibility upon another, as the care of a child, payment for goods, etc., நுகர்பொருள் அங்காடிக்குச் செல்லும் வேலையை யார் தலையில் கட்டலாம் என்று எண்ணுகிறாயா? (உ.வ.). இரண்டு பிள்ளைகளையும் என் தலையில் கட்டிவிட்டுத் திரைப்படத்திற்குச் சென்று விட்டார்கள் (இ.வ.). நீ சற்று ஏமாந்தால் கடைக்காரன் அழுகல் தக்காளியை உன் தலையில் கட்டிவிடுவான் (உ.வ.).

[தலையில் + கட்டு-.]

தலையிற்போடு-தல் *talai-y-iṟ-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) *1.* **உறுதியாக்குதல்;** to make responsible as putting on one's head. *2.* **பழி சுமத்துதல்;** to impute blame, accuse (செ.அக.).

[தலையில் + போடு-.]

தலையிறக்கம் *talai-y-iṟakkam,* பெ. (n.) *1.* **(தலைசாய்கை) சாவு;** grief, chagrin, as hanging down one's head. *2.* **தலை நாணுகை;** looseness of the head. நாணத்தால் வெட்கி தலைசாய்கை.

[தலை + இறக்கம். (இறக்கம் = இறப்பு). (ஒருகா உறக்கம் → இறக்கம்.]

"உறங்குவது போலும் சாக்காடு" (குறள், 339).

தலையிறக்கம்[2] *talai-y-iṟakkam,* பெ. (n.) **சாவுக்குண்டான அறிகுறி;** head hangs down a death symptom.

மறுவ. சாக்குறி, தலையுருட்டடல்.

[தலை + இறங்கு → தலையிறங்கு → தலையிறக்கம் (இறக்கம் = சாவு)]

தலையீடு[1] *talai-y-īḍu,* பெ. (n.) *1.* **தலையிடுகை;** engaging, undertaking. உங்கள் செயற்பாடு பற்றி, அவர் தெரிவித்த கருத்தைத் தலையீடு என்று கருத வேண்டாம் (உ.வ.). தொழிலாளர்கள் தங்கள் சம்பளத்தை முடிவு செய்ய, அரசின் தலையீட்டைக் கோரினர் (இ.வ.). *2.* **முதற்றரம்;** first quality, highest grade. தலையீட்டு நிலம் (உ.வ.).

[தலை + இடு → ஈடு]

தலையீடு[2] *talai-y-īḍu,* பெ. (n.) *1.* **தலைப்பி லிருப்பது;** that which is nearest or first. "ஆற்றங்கரையில் தலையீட்டுக் கொல்லையில்" (S.I.I. vii, 18). *2.* **முதலீற்று** (இ.வ.); first delivery or yeaning; first crop. *3.* **சுவரின் அழகுமுகடு;** (arch.) coping (செ.அக.).

[தலை + ஈடு]

தலையீண்டு-தல் *talai-y-īṇḍu-,* 12 செ.கு.வி. (v.i.) **ஒன்றுகூடுதல்;** to assemble, gather. "மாயிரு ஞாலத்தரசு தலையீண்டும்" (மணிமே. 1: 25) (செ.அக.).

[தலை + ஈண்டு-. (ஈண்டு-தல் = கூடுதல்)]

தலையீற்று *talai-y-īṟṟu,* பெ. (n.) *1.* **முதலீனுகை;** first calving, yeaning. *2.* **முதற்கன்று;** firstling of cattle.

ம. தலயீற்று

மறுவ. முதலீத்து.

[தலை + ஈத்து → ஈற்று (ஒ.நோ. காத்து → காற்று. மாத்து → மாற்று (ஈற்று = ஈனுகை)]

தலையீற்றுக்கடாரி *talai-y-īṟṟu-k-kaḍāri,* பெ. (n.) **முதலில் ஈன்ற பெண்கன்று;** first-born female calf (செ.அக.).

மறுவ. தலயீத்துக்கடாரி

[தலையீற்று + கடாரி. (கடாரி = ஆவின் பெண் கன்று)]

தலையீற்றுப்பசு *talai-y-īṟṟu-p-pašu,* பெ. (n.) **முதன்முதற் கன்றீன்ற பசு;** cow that has calved but once (செ.அக.).

[தலை + ஈத்து → ஈற்று + பசு]

தலையுடைத்துக்கொள்(ளு)-தல் *talai-y-uḍaittu-k-koḷ(ḷu)-,* 13 செ.கு.வி. (v.i.) **பெரும் முயற்சி எடுத்தல்;** to take great trouble, as breaking the head over a work.

[தலை + உடைத்து + கொள்-.]

தலையுடைப்பு *talai-y-uḍaippu,* பெ. (n.) 1. அல்லல்மிக்க வேலை; troublesome, intricate work. 2. தலையிடி பார்க்க; see *talai-y-iḍi.*

மறுவ. திருக்குமறுக்கு வேலை

[தலை + உடைப்பு = தலையுடைப்பு மென்மேலும் தொல்லை தருந் தன்மையுள்ள தெளிவற்ற வேலை.]

தலையுண்டம் *talai-y-uṇḍam,* பெ. (n.) தலைச்சவ்வு; membrane of the head (செ.அக.).

தலையுதயம் *talai-y-udayam,* பெ. (n.) பேறு காலத்தில், தலை வெளிப்படுகை; presentation of head in delivery.

தலையுதிர்நெல் *talai-y-udir-nel,* பெ. (n.) பெரும்பான்மையும் விதைக்குப் பயன் படுவதும், முதலடிப்பில் எடுக்கப்படுவதுமான நெல் (நாஞ்.); the paddy collected at the first threshing and used generally as seeds.

மறுவ. விதைநெல்; தலையடிநெல்

[தலை + உதிர் + நெல் = தலையுதிர்நெல். நன்கு முற்றித்திரண்டு, முதிர்ந்த நெல்மணி; முதலடிப்பிலேயே தெரிவுசெய்து எடுக்கப்பட்ட நேர்த்தியான விதைநெல்]

தலையுருட்டல் *talai-y-uruṭṭal,* பெ. (n.) தலையை உருட்டிக்கொண்டேயிருத்தல், சாவின் அறிகுறி; rolling of the head of a patient restlessly, while in bed which is considered as a symptom of death.

தலையுலாஞ்சல் *talai-y-ulañjal,* பெ. (n.) 1. தலைநடுக்கம்; involuntary trembling of the head. 2. தலை கிறுகிறுத்தல்; reeling of the head.

தலையுவா *talai-y-uvā,* பெ. (n.) காருவா; the new moon. "தலையுவாவிற் செய்யோ னாயிறெழ" (விதான. எச்ச. 38).

[தலை + உவா]

தலையெடு[1]-த்தல் *talai-y-eḍu-,* 4 செகுவி. (v.i.) 1. தலைநிமிர்தல்; to stand with head erect, as in pride. "தேவரெதிர் தலையெடுத்து விழியாமைச் சமைப்பதே" (கம்பரா. சூர்ப்பன. 101). 2. புகழ் பெறுதல்; to become eminent, celebrated, distinguished. "வானவர் தலையெடுத்திலர்" (கம்பரா. கும்பக. 338). 3. பெருகுதல்; to flourish, become prosperous. "மனுநெறி தலை யெடுக்கவே" (கலிங். 251). 4. தோன்றுதல்; to sprout, come into being. செடி தலையெடுக்கிற போதே (உ.வ.). 5. இழந்த நிலையைத் திரும்ப வடைதல்; to recover, as a lost position. "வானவர்கோன் றலையெடுக்க" (கம்பரா. இந்திரசி. 63).

[தலை + எடு-.]

தலையெடு[2]-த்தல் *talai-y-eḍu-,* 4 செகுன்றாவி. (v.t.) நீக்குதல்; to remove. "தாழ்தரு துன்பந் தலையெடுத்தா யென" (மணிமே. 22: 103).

தெ. தலயெட்டு

மறுவ. ஆட்படுதல் (த. சொ. அக.)

[தலை + எடு-.]

தலையெடு[3]-த்தல் *talai-y-eḍu-,* 4 செகுவி. (v.i.) 1. வாழ்க்கைக்கு வேண்டும் செயல்களைத் தொடங்குதல்; to begin one's life. பிள்ளை இப்படித் தலையெடுத்து விட்டான் (உ.வ.). 2. மயிர்வெட்டுதல்; to crop one's head. 3. தலை மழித்தல்; to shave one's head.

மறுவ. மொட்டையடித்தல்

[தலை + எடு-.]

தலையெடுப்பு *talai-y-eḍuppu,* பெ. (n.) 1. தலை நிமிர்ச்சி; holding the head erect. 2. செருக்கு; pride, arrogance. "அவட்கேது தலையெடுப்பே" (குமர. பிர. சிவகாமி. இரட். 14). 3. தக்கபருவ மெய்தி, ஒரு துறையில் நிலையுறுகை; growing up and establishing oneself in life, as a youth. 4. மேன்மை; loftiness, prominence, distinction. 5. தாழ்நிலையினின்று மேம்படுகை; improvement in circumstances, recovery from adversity.

[தலை + எடுப்பு-. இச்சொல் நிமிர்தற் கருத்தினின்று கிளைத்தது. ஒருவன் தொழிற்றுறையிலோ, அல்லது தாம் தெரிவுசெய்த வேறுதுறையிலோ, ஆழங்காற் பட்டு வளர்ந்து, தன்னிகரற்ற தனிச்சிறப்புடன் மேம்படுதலைக் குறித்த தெனலாம்.]

தலையெலும்பு *talai-y-elumbu,* பெ. (n.) மண்டையெலும்பு; cranial bone.

[தலை + எலும்பு]

தலையெழுத்து[1] *talai-y-eḻuttu,* பெ. (n.) *1.* மண்டையோடு இணையும் பகுதியில் தெரியும் வளைவுக்கோடு; the curved line in the joints of parts of skull. "தன றலையெழுத்தே யென்ன" (பிரபுலிங். அக்கமா. உற். 35). *2.* நூன் முகப்பு (வின்.); heading or title of a book.

[தலை + எழுத்து. மண்டையோட்டின் இணைப்புக்கோடு, பொருள் புரியா எழுத்தைப்போன்று தோன்றுவதால், தலையெழுத்து எனப்பட்டது. நாளை நடக்கப்போவதை யாரும் அறிந்து கொள்ள முடியாததாகலின், இதனைத் தலையெழுத்து என்று அழைக்கவாயினர்]

தலையெழுத்து[2] *talai-y-eḻuttu,* பெ. (n.) வாழ்க்கையை அமைப்பதாகக் கருதப்படும் விதி; ஊழாற்றல்; விலக்க இயலாத முடிவு; மாற்றமுடியா அமைவு; fate destiny. இப்பேறு பெற வேண்டும் என்று என் தலையெழுத்து இருந்தால் அதை யார் மாற்ற முடியும்? இப்படி அலைய வேண்டும் என்று என் தலையெழுத்து இருந்தால் அதை மாற்றுவார் யார்?

[தலை + எழுத்து]

தலையெழுத்து[3] *talai-y-eḻuttu,* பெ. (n.) உயிரெழுத்து (பேரகத். 8, உரை); vowels, as the primary letters.

[தலை+எழுத்து = மொழியின் முதலெழுத்து]

தலையேறுதண்டம் *talai-y-ēṟu-taṇḍam,* பெ. (n.) *1.* பொறுக்கக்கூடாத தண்டனை; unbearable punishment. *2.* துன்பப்படுத்தி வாங்கும் வேலை; கட்டாயமாகச் செய்யவிக்கும் பணி; heavy labour; compulsory service. *3.* மிக்க துன்பம்; excessive trouble.

[தலை + ஏறு + தண்டம்]

தலையைக்கொடு-த்தல் *talai-y-ai-k-koḍu-,* 4 செ.குவி. (v.i.) தலைகொடு-. பார்க்க; see *talai-koḍu-*

[தலையை + கொடு-.]

தலையைத்தடவு-தல் *talai-y-ai-t-taḍavu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ஏமாற்றிப் பொருளைப் பெற்றுக்கொள்ளுதல் (ஒருவனது தலையைத் தடவுதல்) (இ.வ.); lit., to stroke one's head. to cheat a person out of his money. கேளிக்கை விடுதிக்குச் செல்ல யார் தலையைத் தடவுவது? (உவ.) திரைப்படம் செல்ல யார் தலையைத் தடவலாம்? (இவ.)

மறுவ. ஏமாற்றுதல், தலையில் மிளகாயரைத்தல்.

[தலையை + தடவு-.]

தலையைவாங்கு-தல் *talaiyai-vāṅgu-,* 5 செ.குவி. (v.i.) *1.* தலையைவெட்டுதல் போன்ற கடுந்தண்டனை தருதல்; cause heads to roll. *2* சிறிய குற்றத்திற்கு எதிர்பாராவண்ணம் பெருந்தண்டனை தருதல்; in a context where one is convinced that a severe punishment cannot be given to a small crime. நான் உன்னை அடித்ததாகச் சொன்னால் உன் அப்பா என் தலையை வாங்கிவிடுவாரா? (உ.வ.).

[தலை + ஐ + வாங்கு-.]

தலையொடுமுடிதல் *talai-y-oḍu-muḍidal,* பெ. (n.) போர்க்களத்தில் மாண்ட கணவனது வெட்டுண்ட தலையைப் பிடித்துக்கொண்டு, இறந்துபட்ட மனைவியைப் பற்றிக் கூறும் புறத்துறை (பு.வெ. 4,13); (puṟap) theme describing a wife who dies clasping the severed head of her husband slain in battle (செ.அக.).

[தலையொடு + முடிதல்]

தலையோட்டுச்செயநீர் *talai-y-ōṭṭu-c-ceyanīr,* பெ. (n.) அண்டச்செயநீர்; a strong alkaline liquid prepared from the human skull.

தலையோட்டுப்பொருத்து *talai-y-ōṭṭu-p-poruttu,* பெ. (n.) தலையோடுகளை ஒன்றாகச் சேர்க்கும் பொருத்துகள்; seams or joints which unit the bones of the skull.

தலையோடு *talai-y-ōḍu,* பெ. (n.) மண்டையோடு; skull. "ஊன்முகமார் தலையோட்டுண்" (திவ். பெரியதி. 3:4:2).

மறுவ. மண்டையோடு.

ம. தலயோடு.

[தலை + ஓடு]

தலையோணம் *talai-y-ōṇam,* பெ. (n.) திருமணத்திற்குப்பின் வரும் முதல்ஓணம் பண்டிகை (நாஞ்.); the first ōṇam celebration after one's marriage.

மறுவ. முதல் ஓணம்

[தலை + ஓணம்]

தலைவட்டம் *talai-vaṭṭam,* பெ. (n.) நெற்கதிர் சூடடித்தலில் முதற்சுற்று (நாஞ்.); the first round in threshing grain.

மறுவ. முதல் வட்டம்

[தலை + வட்டம்]

தலைவடி *talai-vaḍi,* பெ. (n.) சாராயச் சத்து (புதுவை); alcohol.

[தலை + வடி]

தலைவணங்கு[1]-தல் *talai-vaṇaṅgu-,* 5 செகுன்றாவி. (v.t.) உரிய முறையில் மதித்து வணங்குதல்; to do homage; to bow the head. தேர்தலில் மக்கள் வழங்கிய தீர்ப்பிற்கு நாங்கள் தலை வணங்குகிறோம் (இக்.வ.).

தலைவணங்கு[2]-தல் *talai-vaṇaṅgu-,* 7 செ.கு.வி. (v.i.) பயிரின் தலை வளைதல்; to incline, bend down, as grain in the field. நெல்மணி முற்றித் தலை வணங்குதல் அறிவு சான்ற பெரியோர்தம் பணிவையொத்து இருந்தது (உ.வ.).

[தலை + வணங்கு-]

தலைவர் *talaivar,* பெ. (n.) 1. அணி, கட்சி முதலியவற்றின் செயற்பாடு, போக்கு, நிருவாகம் ஆகியவற்றிற்குக் கரணியமாக விருந்து, அனைவரையும் நன்முறையில் வழிநடத்திச் செல்பவர்; leader, head of an organization, party, etc. (எ.டு.) கட்சித் தலைவர், சமயத் தலைவர்; தொழிற்சங்கத் தலைவர். 2. வயதில் மூத்தவராகவும், பொருளீட்டுவதில் வல்லவராகவும் இருந்து, குடும்பத்தைத் தன்மேற்பார்வையில், கட்டிக்காக்கும் தலைவர்; head of a family. 3. கூட்டம், திருமணம் முதலானவற்றை, தலைமைதாங்கி நடத்தித் தருபவர்; one who presides over a meeting, council, etc.

[தல் → தலை + வ் + அர் − தலைவர். 'அர்' மரியாதை குறித்த ஈறு. 'வ்' சாரியை (ஒ.நோ.) இயக்குநர், கணவர்; நடத்துநர், ஒட்டுநர்]

தலைவரம்பு *talai-varambu,* பெ. (n.) மேலான எல்லை; கொடுமுடி; acme, highest point. "முன்பெருமைக்குத் தலைவரம்பாகிய பெருமை" (நீலகேசி. 180: உரை.).

[தலை + வரம்பு]

தலைவரி *talai-vari,* பெ. (n.) 1. மேல்வரிச் சட்டம்; set line, as in a copy-book. 2. ஆள் வரி; poll-tax.

ம. தலவரி.

மறுவ. தலைக்கட்டுவரி.

[தலை + வரி = தலைவரி. ஒவ்வொரு தலைக்கும் இடப்பட்ட வரி]

தலைவரிசை *talai-variśai,* பெ. (n.) உயர்ந்த பரிசு; magnificent gift. "காலன் கொடுத்த மிக்க தலைவரிசையால்" (சிலப். 15:2: உரை.).

மறுவ. முதற்பரிசு, முதல்மரியாதை.

[தலை + வரிசை = முதற்றரமான பரிசு.]

தலைவரை *talai-varai,* பெ. (n.) தரைமுனை (வின்.); headland, cape, promontory.

மறுவ. தரைக்கோடி

[தலை + வரை]

தலைவலி[1] *talai-vali,* பெ. (n.) 1. தலைநோவு; head-ache, Cephalalgis. "தலைவலி மருத்தீடு காமாலை" (திருப்பு. 153). 2. முகத்திலுள்ள நரம்புநோவு; facial neuralgia, Myalgia. 3. தொந்தரவு; painful task or labour. தலைவலியான காரியம் (உ.வ.) 4. தொந்தரவு தருகிற ஆள்; a person who action cause headache. அவன் ஒரு தலைவலியாயிருக்கிறான்.

[தலை + வலி]

தலைவலி[2] *talai-vali,* பெ. (n.) நீக்குவதற்கு வழி இல்லாத துன்பம் தரும் தொல்லை; painful task. புரட்சியாளர் அரசிற்குப் பெருந் தலை வலியாய் உள்ளனர் (உ.வ.).

[தலை + வலி. எஞ்ஞான்றும், எவ் வழியினும், தீர்க்கவியலாத தொல்லை தரும், துன்பத்தாலேற்படுத் தலைவலி]

தலைவலித்தான் *talai-valittāṉ,* பெ. (n.) தலைமையானவன்; pre-eminent, superior person, as one poweful in leadership. "தேவர்களில் தலைவலித்தானாயிருக்கிற" (ஈடு. 8. 4:9).

மறுவ. மேன்மையாளன், மேலோன்.

[தலை + வலித்தான்]

தலைவலிபோக்கி *talai-vali-pōkki,* பெ. (n.) 1. கிச்சிலிக்கிழங்கு; orange root. 2. மான் மணத்தி (கத்தூரி) மஞ்சள்; musk turmeric.

[தலைவலி + போக்கி]

தலைவலிமருந்து *talai-vali-marundu,* பெ. (n.) தலைவலியைப் போக்கும்பொருட்டு பயன்படுத்தப்படும் மருந்து; that which is acting remedically on the head; any medicine for head-ache.

மறுவ. தலைவலித் தைலம், தலைவலிச் சூரணம், தலைவலியுப்பு

[தலைவலி + மருந்து]

தலைவழி[1]-தல் *talai-vaḻi-,* 2 செ.கு.வி. (v.i.) நிரம்பிவழிதல்; to overflow. தலைவழிந்தது (உ.வ.).

மறுவ. பொங்கிவழிதல்.

[தலை + வழி-.]

தலைவழி[2]-த்தல் *talai-vaḻi-,* 4 செகுன்றாவி. (v.t.) 1. தலைமழித்தல் (இ.வ.); to shave one's head. 2. முகத்தல் அளவைகளில், கூம்பு வரை முழுமையாக அளக்காமல், விளிம்பு வரை மட்டமாகத்தட்டி அளத்தல்; to strike off the excess of grain at the top of measure, in measuring. தலைவழித்து ஒருபடி அரிசி கொடுத்தான் (உ.வ.)

மறுவ. மொட்டையடித்தல், மொட்டையாய் அளத்தல்

[தலை + வழி-.]

தலைவழுக்கு[1] *talai-vaḻukku,* பெ. (n.) தலைவழுக்கை பார்க்க; see *talai-vaḻukkai.*

[தலை + வழுக்கு]

தலைவழுக்கு[2] *taḷai-vaḻukku,* பெ. (n.) தலையழுக்கு பார்க்க; see *talai-y-aḻukku.*

[தலை + வழுக்கு]

தலைவழுக்கை *talai-vaḻukkai,* பெ. (n.) தலையை வழுக்கையாகச் செய்யும் நோய் வகை; baldness, Alopecia.

மறுவ. தலைப்புழுவெட்டு, பூச்சிகடி

[தலை + வழுக்கை]

தலைவள்ளல்கள் *talai-vaḷḷalgaḷ,* பெ. (n.) வரையாது வழங்கிய முதலேழு வள்ளல்கள்; munificent patrons of the first order (செ.அக.).

மறுவ. தலையேழு வள்ளல்கள்.

[தலை + வள்ளல்கள். வரையாது கொடுப் போராகிய செம்பியன், காரி, விராடன், நிருதி, துந்துமாரி, சக்ரன், நளன் ஆகிய ஏழு வள்ளல்கள்]

தலைவளர்-த்தல் *talai-vaḷar-,* 4 செ.கு.வி. (v.i.) நோன்பு முதலியவற்றில், தலைமுடி வளர்த்தல்; to let the hair grow as required ceremonially.

[தலை + வளர்-.]

தலைவறட்சி *talai-vaṟaṭci,* பெ. (n.) சூட்டினால் ஏற்படும் தலைவறட்சி; dryness in the head due to excess of constitutional heat.

தலைவறை *talai-vaṟai,* பெ. (n.) தலைவரை (வின்.) பார்க்க; see *talai-varai.*

[தலை + வறை]

தலைவன் *talaivaṉ,* பெ. (n.) 1. முதல்வன்; chief, headman, lord. "கயிலாய மென்னும் மலைத் தலைவா" (திருவாச. 6: 40). 2. அரசன் (பிங்.); king, ruler, governor. 3. கணவன் (சூடா.); husband. 4. ஆசிரியர் (பிங்.); preceptor. 5. அண்ணன் (திவா.); elder brother. 6. சிறந்தோன்; great person. "தரும முதல்வன் றலைவன்" (சிலப். 10: 178). 7. கடவுள்; God. "தலைவன் காக்கும்" (மணி. 21, 63). 8. அகப் பொருட்கிழவன்; hero of a love-poem. தலைவனும் தலைவியும் சந்திக்கும் இடம். காப்பியத் தலைவன் (இலக்.வ.). "தலைவனை இல்லிடத்தே வரக்காணினும்" (தொல். பொருள். 115: உரை.). 9. கதைத்தலைவன்; hero of a story. "தன்னேரில்லாத் தலைவனை யுடைத்தாய்" (தண்டி. 7).

ம. தலவன்.

[தல் → தலை + வ் + அன். ஆ.பா. ஓ.சுறு]

தலைவா-தல் (தலைவருதல்) *talai-vā-,* 18 செ.கு.வி. (v.i.) 1. தோன்றுதல்; to happen, be fall. "தலைவரும் விழுமநிலை" (தொல். பொருள்: 39). 2. மிகுதியாக நேர்தல்; to increase. "அழிவு தலைவரினும்" (தொல். பொருள்: 115). 3. எதிர்க்குமாறு முன்வருதல்; to advance for an attack. "தலைவந்த போர் தாங்குந்

தன்மையறிந்து" (குறள், 767). 4. மேன்மையாதல்; to be lofty, eminent. "தலைவரும் பொருளைத் தக்காங் குணர்த்தி" (பு.வெ. 10: காஞ்சி. 5: கொளு).

[தலை + வா-. (வரு-.)]

தலைவாங்கி *talai-vāṅgi,* பெ. (n.) 1. தூக்குப் போடுவோன்; hangman. 2. கேடு விளைவிப்பவன்; villain (இ.வ.).

[தலை + வாங்கி]

தலைவாங்கு[1]-தல் *talai-vāṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தலையை வெட்டுதல்; to behead.

[தலை + வாங்கு-.]

தலைவாங்கு[2]-தல் *talai-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) தலைமயிர்வாங்கு-தல் (இவ.) பார்க்க; see *talai-mayir-vāṅgu-.*

[தலை + வாங்கு-.]

தலைவாசகம் *talai-vāšagam,* பெ. (n.) பாயிரம் (வின்.); introduction to a writing, preface, invocation.

மறுவ. முன்னுரை, முகவுரை.

ம. தலவாசகம்.

[தலை + வாசகம்]

தலைவாசல் *talai-vāšal,* பெ. (n.) 1. தலைவாயில் பார்க்க; see *talai-vāyil.* "பகைவர் பொறுத்த லாற்றாத போரினை யுடைய தலைவாசலிலே" (மலைபடு. 529, உரை). "தன்னையும் தானே மறந்து தலைவாசல் தாழ்போட்டே உன்னை நினைத்துள்ளே உறங்குவதும் எக்காலம்" (பத்திரிகிரியார் பாடல், 214). தலைவாசலில் தோரணம் கட்டியிருந்தது (உ.வ.). தலைவாசலை இவ்வளவு உயரக்குறைவாகவா கட்டுவார்கள்? (உ.வ.).

மறுவ. முதல்வாசல்.

[தலை + வாசல்]

தலைவாதை *talai-vādai,* பெ. (n.) தலைநோய்; head-ache.

தலைவாய் *talai-vāy,* பெ. (n.) முதன்மடை; main-sluice. "தலைவா யோவிறந்து வரிக்கும்" (மலைபடு. 475).

மறுவ. முதல்மதகு, முதல்காண்ணாறு, தலைமடை.

[தலை + வாய்]

தலைவாய்ச்சேரி *talai-vāy-c-cēri,* பெ. (n.) முகப்பிலுள்ள ஊர்ப்பகுதி (S.I.I.ii,64); quarter near the gate of a village.

மறுவ. தலைச்சேறி, புறஞ்சேரி.

[தலை + வாய் + சேரி. ஊர்க்காவல் புரிவோர், ஊரின்கண்ணே நிகழும் சிறப்புப் பணிகளைத் திறம்படச் செய்வோர், ஊரின் முதல் பகுதியில் அல்லது தலைப்பகுதியில் சேர்ந்து வதியுமிடம், தலைவாய்ச்சேரி என்று கல்வெட்டுகள் கூறுகின்றன.]

தலைவாய்தல் *talai-vāydal,* பெ. (n.) தலைவாயில் பார்க்க; see *talai-vāyil.*

[தலை + வாய்தல்]

தலைவாயில் *talai-vāyil,* பெ. (n.) 1. முதல் வாயில்; main gate, as of a city, house. "தலைவாயி னிற்பள்" (தனிப்பா, ii. 160: 398). 2. வாயில்நிலையின் மேற்பகுதி; lintel. தச்சனடித்த தலைவாயிலெல்லாம் உச்சியிடிக்க உலாவித் திரிந்தான் (உ. வ.).

[தலை + வாயில்]

தலைவாரி *talai-vāri,* பெ. (n.) சீப்பு; comb.

ம. தலவாரி.

[தலை + வாரி]

தலைவாரு-தல் *talai-vāru-,* 5 செ.கு.வி. (v.i.) தலைமுடி வாருதல்; to comb the hair .

மறுவ. தலைசீவுதல்

[தலை + வாரு-.]

தலைவாருகை *talai-vārugai,* பெ. (n.) முதன்முறை கருவுற்ற பெண்ணுக்கு 4 அல்லது 6-ஆம் மாதத்தில், கணவன் வீட்டார் செய்யும் தலைக் கோலச் சடங்கு (இ.வ.); ceremony of adorning the head of a woman at the house of her father-in-law in the fourth or six month of her first pregnancy.

மறுவ. முதற்பூவைக்கை, தலைப்பூச் சூட்டுகை

[தலை + வாருகை]

தலைவாரை *talai-vārai,* பெ. (n.) தலை வாரைப்பட்டை பார்க்க; see *talai-vārai-p-paṭṭai.*

[தலை + வாரை]

தலைவாரைப்பட்டை *talai-vārai-p-paṭṭai,* பெ. (n.) **பனைஓலைத் தொப்பி** (யாழ்ப்.); head-cover made of palm-leaf.

மறுவ. தலைக்குடை.

[தலை + வாரை + பட்டை]



தலைவாழையிலை *talai-vāḻai-y-ilai,* பெ. (n.) **நுனியோடு கூடிய வாழையிலை;** plantain leaf with pointed end. மாப்பிள்ளைக்குத் தலை வாழையிலையில் விருந்து போடுதல், இன்றும் காணப்படும் மரபாகும்.

[தலை + வாழை + இலை]

தலைவாள் *talai-vāḷ,* பெ. (n.) **மீனெலும்பு;** fish-bone.

[தலை + வாள் → தலைவாள். வாள் போன்று நீண்ட கூரிய எலும்பு]

தலைவி *talaivi,* பெ. (n.) *1.* **தலைமைப் பெண்** (பிங்.); lady, mistress, matron. *2.* **மனைவி;** wife. *3.* **அகப்பொருட்கிழத்தி;** heroine of a love-poem. "தலைவிகூற்று நிகழ்த்துமாறு" *(தொல். பொருள். 111: உரை). 4.* **கதைத்தலைவி;** heroine of a story. *5.* **தலைவனின் மனைவி;** wife of hero.

[தலை + வி (பெண்பால் விகுதி)]

தமிழ்வழக்கின்படி, பெண் ஆணுக்கு அடங்கியவள் அல்லள்; கணவனுக்குச் சமமானவள் என்பதைத் தலைவன் தலைவி என்ற சொல்வழக்கால், அறியலாம். பல குடும்பங்களில் கணவனை அடக்கி ஆளும் தலைவியாகவும் உள்ளமை கண்கூடு.

தலைவிதி *talai-vidi,* பெ. (n.) **ஊழ்;** fate.

ம. தலவிதி.

[தலை + விதி]

இப்படித்தான் நிகழும் என்று (இறைவனால்) விதிக்கப்பட்டது, விதி என்பர். அதை யாராலும் முன்னரே கூற இயலாது. தலையில் மண்டை ஓட்டை இணைக்கும்கோடுகள் எழுத்துப்போல தோன்றினும், பொருளற்ற கோடுகள், விதி என்பது இன்றும் விளங்காத ஒன்றேயாம். தலையில் உள்ள விளங்கா எழுத்துப்போன்றது ஊழாகலின் "தலைவிதி" என்றாயிற்று.

தலைவிதிபாராயணம் *talai-vidi-pārāyaṇam,* பெ. (n.) **துயில்நிலை;** the highest degree next to absorption in which the ascetic attains entire quiescence.

தலைவிரிகோலம் *talai-viri-kōlam,* பெ. (n.) **தலைமுடியை வாரி முடியாமல் விரித்துப் போட்ட நிலை;** dishevelled hair, as of persons in fright or sorrow. நல்லநாளில் இது என்ன தலைவிரிகோலம்? தலைவிரி கோலமாக ஓடிவந்து தன் கணவனின் உடலின்மீது விழுந்து அழுதாள் *(உ.வ.).*

மறுவ. தலையவிழ்நிலை

[தலை + விரி + கோலம்]

தமிழ்நாட்டுப்பெண்கள், தலைமுடிக்கு எண்ணெயிட்டு வாரிமுடிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அல்லற் காலத்தும் தலையை முடித்து பின்னலிட்டு வாருவது, தமிழர்பண்பு. இந்தியாவின் வடபுலத்தில், தலைக்கு எண்ணெய் தடவிச் சீவுவது வழக்கமில்லை. எப்போதும் முழுநீள முடியும் காற்றில் தவழ்ந்து கொண்டிருக்கும்.

தலைவிரிச்சான் *talai-viriccāṉ,* பெ. (n.) *1.* **கூந்தல் முடியாதவன்;** person with dishevelled hair. *2.* **சாரணை** (மலை.); purslane - leaved trianthema. *3.* **செருப்படைவகை** (மலை.); a disffuse prostrate herb, Coldenia procumbens.

[தலை + விரிச்சான்]

முந்தைய காலத்தில் ஆண்கள் தலைநிறைய முடி வைத்திருப்பர். அதனைச் சீவிமுடித்து பக்கக்கொண்டையிட்டுக் கொள்வர். அவ்வாறின்றி வாராத்தலை கொண்டவர், தலைவிரிச்சான் எனப் பயர் பெற்றனர்.

தலைவிரிச்சான்சோளம் *talai-viriccāṉ-šōlam,* பெ. (n.) **மாட்டுத்தீனியின் பொருட்டு மானாமாரியாய்ப் பயிரிடும் சோளவகை**

(G.Sm.D.I, i, 220); a variety of millet that is rain-fed and grown for fodder (செ.அக.).

[தலை + விரிச்சான் + சோளம்]

தலைவிரித்தாடு-தல் *talai-viri-t-tāḍu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **பஞ்சம், கையூட்டு, வன்முறை முதலியவை கட்டுக்கடங்காமல் பரவிக்காணப்படுதல் அல்லது நிலவுதல்;** (of famine, bribe, etc.,) to be rampant. இரண்டு நாள் நடந்த இனக்கலவரத்தில் வன்முறை தலைவிரித் தாடியது (உ.வ.). குறுக்குவழியில் செல்வந்தன் ஆகிவிடவேண்டும் என்னும் வெறி நாட்டில் தலைவிரித்தாடுகிறது.

[தலைவிரித்து + ஆடு-.]

தலைவிரித்தான் *talai-virittāṉ*, பெ. (n.) **ஒரு மூலிகை;** herbal-plant.

[தலை + விரித்தான்]

தலைவிரிபறை *talai-viri-paṟai*, பெ. (n.) **பறை வகை** (பிங்.); a kind of drum.

[தலை + விரி + பறை]

தலைவிலை *talai-vilai*, பெ. (n.) *1.* **களத்தில் விற்கும் தானியவிலை;** price of grain fixed at the threshing floor. *2.* **அறுவடைக்கு முன் முடிவு செய்யும் நெல்விலை** (நாஞ்.); price of paddy fixed before harvest. *3.* **இனவரி** (T.A.S. iii, 215); taxes imposed or individuals. "தலைவிலையும் முலைவிலையும்" (*T.A.S. ii, 81*) *4.* **உயிர் ஒறுப்பு;** life sentence.

மறுவ. முதல்விலை

ம. தலவில

[தலை + விலை. "அற்றார், அழிபழி செய்தாரைக் குத்துதல், கொல்லுதலுக்குத் தலைவிலை யில்லையாக"]

தலைவிளை *talai-viḷai*, பெ. (n.) **வயலின் முதல் விளைச்சல்;** first crop of a cultivated field. "தலைவிளை கானவர் கொய்தனர்" (*ஐங்குறு. 270*).

மறுவ. முதல்போகம், முதலறுவடை முதல்விளைச்சல்

[தலை + விளை]

தலைவீச்சு *talai-vīccu*, பெ. (n.) *1.* **தலைச்சுழற்சி;** reeling of the head. *2.* **தலையாட்டம்;** shaking of the head. *3.* **நரம்புக் குறைபாட்டினால் ஏற்படும் தலையசைவு;** a spasmodic retroplexion of the head.

தலைவெட்டிக்கருவாடு *talai-veṭṭi-k-karuvāḍu*, பெ. (n.) *1.* **தலையில்லாது விற்கும் ஒருவகைக் கருவாடு;** the headless trunk of a (karuvāḍu) dried fish.

[தலைவெட்டி + கருவாடு]

தலைவெட்டி *talai-veṭṭi*, பெ. (n.) *1.* **தலை முடியைக் கத்திரித்துக்கொள்ளுவோன்;** one who has cropped his hair. *2.* **போக்கிரி;** vagabond. *3.* **நம்பிக்கை கொல்லி;** a treacherous person. *4.* **ஆட்டுநோய்வகை** (M.Cm.D. 249); a disease of sheep (செ.அக.).

மறுவ. கீழறுப்புக்காரன்

சூழ்ச்சியாளன்

[தலை + வெட்டி]

தலைவெட்டிமுனியப்பன் *talai-veṭṭi-muṉi-y-appaṉ*, பெ. (n.) **சேலம் குகைப்பகுதியில் உள்ள மாற்றுத்தலை பொறுத்திய சமணத் தீர்த்தங்கரர், முனியப்பன் எனும் பெயரில் வணங்கப்படுகிற சிலை;** a jain Thīrthaṅgarar statue with a replaced head, worshipped as Lord Muṉiyappar.

தலையில்லாமல், வீணே கிடந்த சமணத் தீர்த்தங்கரர் சிலைக்கு, வேறு ஒருதலை பொறுத்தப்பட்டு, உள்ளூர் மக்களால், முனியப்பராக வணங்கப்படுகிறது. ஆடு, கோழி பலியிடப்படுகிறது. சமணத் தீர்த்தங்கரர் என்று அடையாளங் காணப் பட்ட பின்னும், ஆடு, கோழி பலியிடுவதை, மக்கள் நிறுத்தவில்லை.

[தலை + வெட்டி]

தலைவெட்டு-தல் *talai-veṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *1.* **தலையைவெட்டுதல்;** to behead, decapitate. மடிமாங்காய் போட்டுத் தலை வெட்டுகிறது (பழ.) . *2.* **தலைதட்டு-,** (இ.வ.) பார்க்க; see *talai-taṭṭu-*, *3.* **மோசஞ்செய்தல்;** to do a treacherous act. *4.* **முறைமன்ற அஞ்சல் வில்லையில் குத்துதல்;** to punch a court fee stamp. *5.* **தலைமுடி சீர்த்திருத்தல்** (இவ.); to crop one's hair.

[தலை + வெட்டு-.]

தலைவை-த்தல் *talai-vai-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* **தலையிடு-,** *1. 2.* பார்க்க; see *talai-y-iḍu, l. 2;* to interfere. *2.* **நீர் முதலியன பாயத் தொடங்குதல்;** to begin to flow. இப்பொழுது தான் தண்ணீர் வயலில் தலைவைத்திருக்கிறது *(நாஞ்.)* அவன் அந்தப் பக்கமே தலைவைத்துப் படுப்பதில்லை *(உ. வ.)*

[தலை + வை-.]

தவ்வல் *tavval,* பெ. (n.) *1.* **சிறுகுழந்தை;** tiny infant. *2.* **விலங்கு மரமுதலியவற்றின் இளமை;** young of animals and plants.

தெ. தவ்வ

[தவழ்தல் → தவ்வல்.]

தவ்வி *tavvi,* பெ. (n.) **அகப்பை;** ladle. "கையாற் றவ்வி பிடித்துச் சமைத்து" *(தெய்வீகவுலா, 176).*

ம. தவ்வி.

[தவ் → தவ்வி.]



தவ்வு[1]-தல் *tavvu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* **குறைதல்** *(அக.நி.);* to lessen, decrease, shrink. *2.* **குவிதல்;** to close the petals, as a flower. "தவ்வா திரவும் பொலிதாமரையின்" *(கம்பரா. சரபங். 2).* *3.* **கெடுதல், அழிதல், உருக்குலைதல்;** to perish, decay, waste away. *4.* **தவறுதல்;** to fail. "எறிந்த வீச்சுத் தவ்விட" *(கம்பரா. அதிகாயன். 213).*

[தபு → தவ்வு-.]

தவ்வு[2] *tavvu,* பெ. (n.) *1.* **முற்றுமழிகை, கெடுகை;** shrinking, perishing, decay, failure. *2.* **பலகையிலிடுந் துளை;** hole in a board *(செ.அக.).*

[தபு → தவ்வு-.]

தவ்வு[3]-தல் *tavvu-,* செ.கு.வி. (v.i.) *1.* **தாவுதல்;** to leap, jump, spring. "தவ்வுபுனல்" *(திருவாலவா. 30:32).* *2.* **மெல்ல மிதித்தல்;** to tread gently. "தவ்விக் கொண்டெடுத்த வெல்லாம்" *(இரகு. ஆற்று. 19).* *3.* **தன்முனைப்பாதல்;** to boast; to be arrogant. அதிகமாகத் தவ்வாதே *(உ.வ.).*

க. தவு

[தாவு → தவ்வு-.]

தவ்வு[4] *tavvu,* பெ. (n.) **பாய்ச்சல், தாவுகை;** hopping, jumping, leaping. ஒரு தவ்வுத் தவ்வினான் *(உ.வ.).*

[தாவு + தவ்வு]

தவ்வெனல் *tav-v-eṉal,* பெ. (n.) *1.* **சுருங்குதற் குறிப்பு;** expr. denoting shrinking, withering, fading. "தவ்வென்னுந் தன்மை யிழந்து" *(குறள், 1144).* *2.* **மழையின் ஒலிக்குறிப்பு;** expr. denoting sound, as of rain, pattering. "தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப" *(நெடுநல். 185).*

[தாவு → தவ்வு + எனல்]

தவ்வை *tavvai,* பெ. (n.) *1.* **தாய்;** mother. "பட்டோன் றவ்வை படுதுயர் கண்டு" *(சிலப். 15: 80).* *2.* **தமக்கை;** elder sister. "தாரை தவ்வை தன்னொடு கூடிய" *(மணிமே. 7:104).* *3.* **மூதேவி** *(சூடா.)* **(இலக்குமியின் மூத்தாள்);** goddess of misfortune, as the elder sister of Thirumagal. "செய்யவ டவ்வையைக் காட்டிவிடும்" *(குறள், 167).*

தெ. அவ்வ

[அவ்வை → தவ்வை.]

தவ[1] *tava,* கு.வி.எ. (adv.) **மிக;** much, intensely. "உறுதவ நனியென" *(தொல். சொல். 301).*

க. தவெ

[தவ = மிகுதி குறித்து வழங்கும் உரிச்சொல்]

தவ[2]-த்தல் *tava-,* 4 செ.கு.வி. (v.i.) **நீங்குதல்;** to cease. "மயக்கந் தவந்த யோகியர்" *(விநாயகபு. 49, 21).*

க. தவெ

[தபு → தவ.]

தவக்கணக்கு *tava-k-kaṇakku,* பெ. (n.) **கோயிலவைக் கணக்கு** *(நாஞ்.);* account kept by the managing committee of a temple.

[அவை → சவை → தவை + கணக்கு]

தவக்கம் *tavakkam,* பெ. (n.) *1.* தடை, இடர்ப் பாடு, குறை; impediment, hindrance. *2.* இல்லாமை; scarcity, destitution, want, absolute need. தண்ணீர்த் தவக்கத்தால் விளை வில்லை *(உ.வ.). 3.* காலத்தாழ்வு (இ.வ.); delay. *4.* நெடுநீர்மை; procrastination. *5.* கவலை; anxiety, solicitude. அவன் தவக்கமாய்த் திரிகிறான்; சுதைமாவு (சிமிண்டு) கிடைக்காததால் கட்டுமானப் பணியில் தவக்கம் ஏற்பட்டது *(உ.வ.).*

க. தவக

[தவங்கு → தவக்கம்.]

தவக்கரடி *tavakkaradi,* பெ. (n.) தவழ்கரடி பார்க்க; see *taval-karadi* (சா.அக.).

தவக்களை *tavakkaḷai,* பெ. (n.) தவளை (இ.வ.); frog.

[தவழ் → தவளை → தவக்களை - தவழ்கையினாற் பெற்ற பெயர்]

தவக்காய் *tavakkāy,* பெ. (n.) தவளை பார்க்க; see *tavaḷai.*

[தவழ்க்காய் → தவக்காய்]

தவக்கிடை *tava-k-kiḍai,* பெ. (n.) நோன்பு கருதி உண்ணாமலிருத்தல் (நாஞ்.); observing a fast.

[தவம் + கிடை]

தவக்கு *tavakku,* பெ. (n.) நாணம்; sense of shame. “தவக்குற்று” *(மாறனலங். 279, பக்.202).*

[தவங்கு → தவக்கு]

தவக்குறை *tava-k-kuṟai,* பெ. (n.) முற்பிறப்பில் ஏற்பட்ட குறையை, இப் பிறப்பில் சமன் செய்தல்; a defect of penance in the former birth to be made up or compensated in the present birth *(சா.அக.).*

தவக்கை *tavakkai,* பெ.(n.) தவளை பார்க்க (வின்.); see *tavaḷai.*

[தவழ்கை → தவக்கை]

தவக்கொடி *tava-k-koḍi,* பெ. (n.) தவப்பெண்; female ascetic, nun. “மாபெருந் தவக்கொடி யீன்றனை” *(மணிமே. 7: 37.).*

[தவம் + கொடி]

தவகரடி *tavakaraḍi,* பெ. (n.) தவழ்கரடி பார்க்க; see *taval-karaḍi.*

[தவழ் + கரடி. 'ழ்' இடைக்குறை.]

தவங்கம் *tavaṅgam,* பெ. (n.) வருத்தம், துயர், துன்பம் (துக்கம்) (யாழ்ப்.); sorrow, sadness, grief.

[தவங்கு → தவங்கம்.]

தவங்கிடத்தல் *tavaṅkiḍattal,* பெ. (n.) தவ நிலையில் நிற்றல்; being in a state of resolved penance *(சா.அக.).*

[தவம் + கிடத்தல்]

தவங்கு-தல் *tavaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* தடைப்படுதல்; to be hindered, impeded. வேலை தவங்கிப் போயிற்று *(உ.வ.). 2.* பொருட் குறையால் வருந்துதல் (வின்.); to be in distress, as for necessaries of life. *3.* வாடுதல்; to be faint, sad, dejected, despondent.

தெ. தமகு

[தபு → தவ → தவங்கு-.]

தவச்சட்டை tava-c-caṭṭai, பெ. (n.) முரட்டுத் துணியாலான ஆடை (புதுவை); sack-cloth.

[தவம் + சட்டை]

தவச்சாலை *tava-c-cālai,* பெ. (n.) தவஞ் செய்யும் இடம்; hermitage, as a place for the performance of austerities. “விரதங்களை அனுட்டித்திருத்தற்குரிய தவச் சாலைகள்” *(மணிமே. 28:67, உரை).*

[தவம் + சாலை]

தவச்செறி *tava-c-ceṟi,* பெ. (n.) தலைச்செறி பார்க்க; see *talai-c-ceṟi* (சா.அக.).

தவசம் *tavaśam,* பெ. (n.) *1.* கூலம்; grain, especially dry. *2.* தொகுத்த கூலம்; grain and other provisions laid by in store. “சலவையோ பட்டோ தவச தானியமோ” *(குற்றா. குற. 70: 19).*

தெ. தவசமு, க. தவச.

தவசத்தொம்பை *tavaša-t-tombai,* பெ. (n.) நெற் களஞ்சியம்; granary.

மறுவ. தவசக்கோட்டகம்

[தவசம் + தொம்பை]



தவசவட்டி *tavaša-vaṭṭi,* பெ. (n.) கூல (தவச) மாகக் கொடுக்கும் வட்டி; interest payable in paddy.

[தவசம் + வட்டி. பண்டையநாளில் பணமாகச் செலுத்துதற்குப் பதிலாக வேளாண்மை செய்வோர், தங்களிடமுள்ள தவசத்தையே, வட்டியாகச் செலுத்தினர்.]

தவசி[1] *tavaši,* பெ. (n.) தவத்தோன்; ascetic, religious mendicant, recluse. "ஐயம் புகூஉந் தவசி" (நாலடி, 99).

மறுவ. துறவி, ஆண்டி

[தவம் → தவசி]

தவசி[2] *tavaši,* பெ.(n.) 1. நாரை; crane. 2. முருங்கை விதை; moringa seed. 3. முருங்கைப் பிசின்; gum of drum stick tree (சா.அக.).

தவசிப்பட்சி *tavaši-p-paṭci,* பெ. (n.) வவ்வால் (தவஞ்செய்யும் பறவை); flying fox, Pteropus giganteus, as seeming to perform penance.

மறுவ. தலைகீழ்த்தொங்கி

[தவம் → தவசி + Skt. பட்சி]

தவசிப்பிள்ளை *tavaši-p-piḷḷai,* பெ. (n.) 1. பூசைப்பணியாள்; Šaiva servant helping in the performance of pūjā. 2. சமையல் வேலை செய்வோன்; cook. 3. துறவிக்குச் சமைப்பவன்; a cook boy tending a ascetic.

மறுவ. மடையன், மடைப்பள்ளியாளன்

[தவம் → தவசி + பிள்ளை.]

தவசு *tavašu,* பெ.(n.) தவம்[1] பார்க்க; see *tavam*[1]; religious austerity. "தவசு வஞ்சித் துறையே" (பன்னிரு. பா. 211) (சூடா.).

மறுவ. துறவறம்

[தவம் → தவசு]

தவசுமரம் *tavašu-maram,* பெ. (n.) 1. நாட்டு வாதுமை மரம்; sage tree. 2. காட்டு மாமரம்; hermits tree (சா.அக.).

தவசுமுருங்கை *tavašu-muruṅgai,* பெ. (n.) மருந்துச்செடி (பதார்த்த. 542); Tranquebar gendarussa.

மறுவ. நரிமுருங்கை, புண்ணாக்குப் பூண்டு

[தவசி → தவசு + முருங்கை = நரிமுருங்கை என்று அழைக்கப்பெறும். இம்மரத்தின் இலை, பூ அனைத்தும் மருந்துக் குணமுடையவை. மஞ்சள் நிறமுள்ள இம் முருங்கை மரத்தின் இலைச்சாறு, உடம்பிற்கு குளிர்ச்சி பயக்கும். நாட்பட்ட கோழையைப் போக்கும். மலத்தை இளக்கும். இம் மரத்தின் இலையை வதக்கி நாட்பட்ட, அடிப்பட்ட வெளிப்புண்களில் வைத்துக் கட்டினால், விரைவில் ஆறும். ஈளை, இருமல், சிணுக்குருமல் போன்ற நோய்களுக்கு, இம் முருங்கை மர இலையினின்று வடித் தெடுக்கப்பட்ட கருக்குநீர் (கியாழம்) கைகண்ட மருந்தென்று சாம்பசிவ மருத்துவ அகரமுதலி கூறும்]

தவட்டை *tavaṭṭai,* பெ. (n.) கபிலப்பொடி (L); kamela dye.

தவடுமரம் *tavaḍu-maram,* பெ. (n.) தவசுமரம் பார்க்க; see *tavašu-maram* (செ.அக.).

[தவடு + மரம்.]

தவடை *tavaḍai,* பெ. (n.) கன்னம், தாடை; cheek, jaw.

தெ. தவட, க. தவடெ

[செவிடு → செவிடை → தவிடை → தவடை.]

தவடைசுத்தி *tavaḍai-šutti,* பெ. (n.) கன்னத்தில் விழும் அறை; a slap on the cheek .

[தவடை + சுத்தி]

தவண்[1] *tavaṇ,* பெ. (n.) கடித்த இடத்திலேயே நஞ்சு தங்குமாறு இடும், சுண்ணாம்புவட்டம் அல்லது கயிற்றுக்கட்டு (யாழ்ப்.); circle drawn with lime, or string tied round a limb, above the site of a poisonous bite with incantations to stop the spread of the poision.

[தங்கு → தகு → தகன் → தவண். தகன் → தவண்]

தவண்[2] *tavaṇ,* பெ. (n.) தகன், கிழங்கு விழுந்த பனங்கொட்டையின் உள்ளீடு; white pulpy matter in the palmyra nut.

[தகன் → தவண்]

தவண்டை[1] *tavaṇḍai,* பெ. (n.) 1. பேருடுக்கை; a small drum. *"தாரை நவுரி தவண்டைதுடி நாக சுரம்" (கூளப்ப. 282).* 2. நீரில் கைகால்களை அடித்துக்கொண்டு நீந்தும் நீச்சு; swimming by striking against the water with hands and feet. 3. வாழ்க்கைக்குரிய பொருள்கள் இல்லாமையால் ஏற்படும் தவிப்பு (யாழ்ப்.); anxiety and distress for want of the necessaries of life.

க. தவடெ

[தவழ் → தவண் → தவண்டை.]

தவண்டை[2] *tavaṇḍai,* பெ. (n.) தவடை (இ.வ.); cheek.

[தவண் → தவண்டை.]

தவண்டைப்படு-தல் *tavaṇḍai-p-paḍu-, 20* செ.கு.வி. (v.i.) தவண்டையடி-,2. (யாழ்ப்.) பார்க்க; see *tavaṇḍai-y-aḍi-2.*

[தவண்டை + படு-,]

தவண்டையடி-த்தல் *tavaṇḍai-y-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. நீர்விளையாடுதல்; to splash and play in the water, as children. 2. வறுமைப் படுதல்; to be in straits.

[தவண்டை + அடி-.]

தவண்டையாடு-தல் *tavaṇḍai-y-āḍu-, 5* செ.கு.வி. (v.i.) தவண்டையடி-. 2 பார்க்க; see *tavaṇḍai-y-aḍi-. 2.*

[தவண்டை + ஆடு-.]

தவணியம் *tavaṇiyam,* பெ. (n.) கந்தகம்; sulphur (சா.அக.).

[தகன் → தகண். எரிப்பது. தகணியம் → தவணியம்]

தவணை[1] *tavaṇai,* பெ. (n.) 1. சட்டம் பதிக்குங் காடி; joint, in carpentry. 2. கட்டுப்பானைத் தெப்பம் (வின்.); raft or float for crossing rivers, especially one made of earthen pots and bamboos.

[கவம் = காடி. கவண் → தவண் → தவணை]

தவணை[2] *tavaṇai,* பெ. (n.) 1. தொகை செலுத்துதல் முதலியவற்றிற்கு ஏற்படுத்திய கெடு; limited time, fixed term for payment of a due or instalment, period of revenue collection, especially of land tax. 'உறுவன்கூறுந் தவணை யன்றாதலாலே" *(சேதுபு. வேதாள. 70).* இந்த மின்விசிறியைத் தவணை முறையில் வாங்கினேன் *(இக்.வ.).* வங்கியில் வாங்கிய கடனைப் பத்துத் தவணைகளில் செலுத்திவிட வேண்டும் *(உ.வ.).* 2. தடவை, முறை; occasion, number of times. எத்தனை தவணைதான் இந்தத் திரைப்படத்தைப் பார்ப்பது? *(உ.வ.).*

தெ. தவந, ம. தவண.

[தவண் → தவணை.]

தவணைக்கடை *tavaṇai-k-kaḍai,* பெ. (n.) நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் வட்டிக்கடை (தஞ்சை.); banking house of a Nāṭṭukkōṭṭai šeṭṭi.

[தவணை + கடை.]

தவணைக்கணக்கு *tavaṇai-k-kaṇakku,* பெ. (n.) கெடுவிற் செலுத்தற்குரிய நிலவரியின் கணக்கு; periodical accounts of land-revenues.

[தவணை + கணக்கு]

தவணைக்காடி *tavaṇai-k-kāḍi,* பெ. (n.) வரி வகை; a kind of tax. *"தவணைக்காடி யென்றும்" (S.I.I. V, 383).*

[தவணை + காடி]

தவணைக்கிரயம் *tavaṇai-k-kirayam,* பெ. (n.) தவணைக்குள் ஒத்தித்தொகை செலுத்தா விடில், ஒத்திக்காரனுக்கே நிலம் உரிமையாவது என்ற, கட்டுப்பாட்டிற்குட்பட்ட ஒற்றி; mortgage by conditional sale.

[தவணை + கிரயம்]

தவணைகேட்டல் *tavaṇai-kēṭṭal,* பெ. (n.) தவணை² பார்க்க; see *tavaṇai²*.

[தவணை + கேட்டல்]

தவணைச்சீட்டு *tavaṇai-c-cīṭṭu,* பெ. (n.) கெடு வைத்தெழுதிய ஓலை; bond specifying a fixed term.

[தவணை + சீட்டு]

தவணைசெலுத்து-தல் *tavaṇai-šeluttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) முறையாகச் செலுத்துதல்; to be paid instalments. பொன்னட்டிகைக்கு மூன்றாவது தவணை செலுத்த யாரிடம் போய் கடன் பெறுவது? *(உ.வ.).*

[தவணை + செலுத்து-.]

தவணைத்திரட்டு *tavaṇai-t-tiraṭṭu,* பெ. (n.) விளைச்சல்வரி தண்டும் கணக்கு (நாஞ்.); kistbundy or account showing the demand and collection of each kist.

[தவணை + திரட்டு = ஒவ்வொரு அறுவடைக் காலத்தும், தவணை முறையிற் செலுத்தும் வரி.]

தவணைப்பணம் *tavaṇai-p-paṇam,* பெ. (n.) கெடுப்படி செலுத்தவேண்டிய தொகை; money payable in instalments, periodical payment. "கருது நிலுவைப்பணந் தவணைப் பணங்கள் . . . கொடுத்தும்" *(திருவேங். சத. 28).* தொலைக்காட்சிப் பெட்டிக்கு இரண்டாவது தவணைப் பணம் கட்ட வேண்டும் *(இக்.வ.).*

[தவணை + பணம்]

தவணைப்புளி¹ *tavaṇai-p-puḷi,* பெ. (n.) தவனப்புளி (நெல்லை.) பார்க்க; see *tavaṉa-p-puḷi.*

[தவணை + புளி]

தவணைப்பொருத்து *tavaṇai-p-poruttu,* பெ. (n.) கதவுநிலை முதலியவற்றிலுள்ள சந்து; a groove or mortise on the top of a gate or door-post.

[தவணை + பொருத்து]

தவணைபார்-த்தல் *tavaṇai-pār-,* 4 செ.கு.வி. (v.i.) விளைச்சல் கணக்குப் பார்த்தல்; to record and inspect the register of growing crops.

[தவணை + பார்-.]

தவணைமறியல் *tavaṇai-maṟiyal,* பெ. (n.) குறிப்பிட்ட காலம்வரை அடைக்குஞ் சிறைக் காவல் *(யாழ்ப்.);* imprisonment for a limited term.

[தவணை + மறியல்]

தவணைமுடக்கம் *tavaṇai-muḍakkam,* பெ. (n.) நிலவரி தண்டும் கணக்கு (நாஞ்.); annual account showing particulars of the demand, collection and balance of land-revenue, arrears and current.

[தவணை + முடக்கம்]

தவணைமுறை *tavaṇai-muṟai,* பெ. (n.) மொத்தமாகச் செலுத்தவேண்டிய பணத்தை வகைப்படுத்தி முறையாகப் பகுத்துக் கொண்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்துவது; hire-purchase. இந்த வீட்டு மனையைத் தவணைமுறையில் வாங்கினேன் *(உ.வ.).*

[தவணை + முறை]

தவணையுண்டி *tavaṇai-y-uṇḍi,* பெ. (n.) கெடுவில் கொடுத்தற்குரிய உண்டியற் சீட்டு; bill of exchange payable at a fixed period after presentation.

[தவணை + உண்டி]

தவணைவட்டி *tavaṇai-vaṭṭi,* பெ. (n.) வரையறுக்கப்பட்ட கெடுவுக்குள் திரும்பக் கொடுக்கும் பணத்துக்குரிய வட்டி (இ.வ.); interest on fixed deposit.

[தவணை + வட்டி. குறிப்பிட்ட காலத்திற் குரிய வட்டி.]

தவத்தர் *tavattar,* பெ. (n.) முனிவர்; ascetics. "தவத்த ரிரப்பெனக் கொண்டுசென்று குறுகினர்" (கந்தபு. ததீசியுத் 58).

[தவம் → தவத்தர் = தவ நிலையில் எஞ்ஞான்றும், மூழ்கியிருப்பவர். ஒருகா. தவம் + அத்து + அர் → தவத்தவர்]

தவத்தி *tavatti,* பெ. (n.) 1. தவப்பெண்; female ascetic. 2. மாதாகோயில் வேலைக்காரி; female care-taker in a Roman Catholic church.

[தவம் → தவத்தி]

தவத்திரு *tava-t-tiru,* பெ. (n.) சிவணிய மடங்களின் தலைவருக்கு வழங்கும் முன்னடை; வணக்கத்திற்குரிய என்னும் பொருளடை; title for the head of Šaiva mutt meaning 'His Holiness'.

[தவம் + திரு]

தவத்துப்பொலவு *tavattu-polavu,* பெ. (n.) மலையாளப் பூடு; Malabar croton (சா.அக.).

தவத்துமுருங்கை *tavattu-muruṅgai,* பெ. (n.) தவசுமுருங்கை பார்க்க; see *tavašu-muruṅgai.*

[தவத்து + முருங்கை]

தவந்து *tavandu,* பெ. (n.) தவசம் (யாழ்.அக.); grain.

[தவம் → தவந்து]

தவநிலை *tava-nilai,* பெ. (n.) தவச்செயல்; performance of penance. 'அருச்சுனன் தவ நிலைச் சருக்கம்" (பாரத.).

[தவம் + நிலை]

தவப்பழி *tava-p-paḻi,* பெ. (n.) நினைத்ததைப் பிறரிடம் பெறற்பொருட்டுக் கொலைப் பட்டினி கிடக்கை (கல்.); hunger - strike.

மறுவ. உண்ணாநோன்பு

[தவம் + பழி]

தவப்பள்ளி *tava-p-paḷḷi,* பெ. (n.) முனிவர் தவச்சாலை; hermitage. "எய்தினாள். தவப்பள்ளியே" (சீவக. 347).

மறுவ. தவச்சாலை

[தவம் + பள்ளி]

தவப்பெண் *tava-p-peṇ,* பெ. (n.) மடத்தில் வாழும் பெண், கன்னிப்பெண்; a virgin separated from the world-Nun (சா.அக.).

[தவம் + பெண்]

தவபோடகம் *tavapōḍagam,* பெ. (n.) ஆவிரை; tanners cassia (சா.அக.).

தவம்[1] *tavam,* பெ. (n.) 1. பற்றை நீக்கி, உடலை வருத்திக்கொண்டு, கடவுளை வழிபடுகை; penance, religious austerities. "தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்" (குறள், 266). இறவாவரம் வேண்டித் தவம் இருப்பவரை இக்காலத்தில் காண்பதரிது (இ.வ.). தவமிருந்து பெற்றபிள்ளை தாய்க்குச் சோறு போடவில்லை (உ.வ.). தலைவரைப் பார்க்கக் கட்சித் தொண்டர்கள் தவம் கிடக்க வேண்டியதாயிருந்தது. (இக். வ.). 2. நல்வினை (புண்ணியம்); result of menitorious deeds. "தவந்தீர் மருங்கிற் றனித்துயரு ழந்தோய்" (சிலப். 14: 26). 3. இல்லறம்; householder's life, dist. fr. naṟṟavam. "தவஞ்செய்வார்க்கு மஃதிடம்" (சீவக. 77). 4. கற்பு; chastity. "தேவியுள்ளத் தருந்தவ மமையச் சொல்லி" (கம்பரா. திருவடி. 9). 5. தவத்தைப் பற்றிக் கூறும் கலம்பகவுறுப்பு; a section of the *kalampagam* poem dealing with *tavam.* 6. வெப்பம்; heat.

தவி → தவம் = உடலை எரித்தாற்போல் வருத்துந் துறவறப் பயிற்சி; வெப்பத்தால் உடலை வருத்தி ஐம்புலனை அடக்குதல். "உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற் குரு" - குறள். 261. (திரு. தமி. மர. 155)

[த. தவம் → Skt. தபஸ். தவம் → தவம். உற்ற நோயுள், வெயிலின் வெம்மையும், பசிதாகத்தாலுண்டாகும், உடம்பின் வெம்மையும் அடங்கும் (வ.வ. 174)]



தவம்[2] *tavam*, பெ. (n.) **வாழ்த்திப்பாடுகை;** praise, adoration. "வேதபாதத் தவத்தால்" *(கோயிற்பு. இரணிய. 81).*

தவம்[3] *tavam*, பெ. (n.) *1.* **காடு;** forest. *2.* **வெண் கருங்காலி;** a whitish black wood.

தவம்புரிமாதர் *tavam-puri-mādar*, பெ. (n.) **கலைமான்;** the male red deer. முற்காலத்தே காட்டில் தவமியற்றும் மரபு காட்டில் வாழும் மானையும் தவமியற்றுதல் எனும் பொருண்மையில் குறித்திருக்கலாம்.

[தவம்புரி + மாதர் – தவம்புரிமாதர்]

தவமுதல்வி *tava-mudalvi*, பெ. (n.) தவமுதுமகள் பார்க்க; see *tava-mudu-magaḷ* "இருந்தவ முதல்வியொடு பின்னையு மல்லிடைப் பெயர்ந்தனர்" *(சிலப். 13: 135).*

[தவம் + முதல்வி]

தவமுதுமகள் *tava-mudu-magaḷ*, பெ. (n.) **தவத்தில் முதிர்ந்தவள்;** a female ripe in asceticism. "உரிமையோடு பயின்றாளொரு தவமுது மகளைவிட்டு" *(குறள், 501, உரை).*

[தவம் + முதுமகள்]

தவமுதுமகன் *tava-mudu-magan*, பெ. (n.) **தவத்தில் முதிர்ந்த முனிவன்;** a male ripe in asceticism. "தவமுதுமகனொடு கருமங் கூறி" *(பெருங். இலாவாண. 20: 69).*

[தவம் + முதுமகன்.]

தவமுருங்கை *tava-muruṅgai*, பெ. (n.) தவசு முருங்கை பார்க்க; see *tavašu-muruṅgai.*

[தவம் + முருங்கை.]

தவயாகம் *tava-yāgam*, பெ. (n.) **ஐவகை வேள்வி செய்து மேற்கொள்ளும் நோன்பு;** performance of penance or religious austerities, as a sacrifice, one of five kinds of vēlvi. "தவயாகமாவது உடல்வாடச் சாந்திராயண முதலிய விரதங்களை யனுட்டித்தல்" *(சிவதரு. ஐவகை. 2, உரை).*

[தவம் + யாகம்]

தவர்[1]**-தல்** *tavar-*, 4 செ.குன்றாவி. (v.t.) **துளைத்தல்;** to bore a hole. "வண் குறிஞ்சியிசை தவருமாலோ" *(திவ். திருவாய். 9. 9: 1).*

[தள் → தம் → திமர் → தமர் → தவர்-. தமர் = துளையிடுகருவி. தமர்தல் – துளையிடுதல்.]

தவர்[2] *tavar*, பெ. (n.) **துளை;** hole in a board.

[தமர் → தவர்.]

தவர்[3] *tavar*, பெ. (n.) வில் *(திவா.);* bow. "தவரிற் புரிநாணுற" *(பாரத. திரௌ. 47).*

[தமர் → தவர்.]

தவராசம் *tavarāšam*, பெ. (n.) **வெள்ளைச் சருக்கரை** *(மூ.அ.);* white sugar from Arabian manna.

[தவர் → தவராசம்.]

தவராசன் *tavarāšan*, பெ. (n.) தவராசம் பார்க்க; see *tavarāšam.*

[தவம் + ராசன்.]

தவருக்கம் *tavarukkam*, பெ. (n.) **வடமொழியில், தகர ஒலி நான்கும் நகரம் ஒன்றும் ஆகிய ஐந்து எழுத்துகள்;** the dental series in Šānskrit ai-varukkam.

[த + வருக்கம்]

தவல்[1]**(லு)-தல்** *taval(lu)-*, 3 செ.கு.வி. (v.i.) **நீங்குதல்;** to leave, depart. "அழுங்க றவலா வுள்ள மொடு" *(மணிமே. 4: 119).*

[தவல் → தவல்(லு)-.]

தவல்[2] *taval*, பெ. (n.) *1.* **குறைவு;** diminishing, decreasing. "தவலருங் கருநீர்க் குண்டகழ்" *(கல்லா. 54, 38).* 2. **கேடு;** failure. "தவலருஞ் செய்வினை" *(கலித். 19).* 3. **குற்றம்;** fault.

"தவலருந் தொல்கேள்வி" (நாலடி, 137). 4. இறப்பு; death. "அவலமறுசுழி மறுகலிற் றவலே நன்று" (புறநா. 238:18). 5. வறுமையால் வருந்துகை; suffering from poverty. "தவலுங் கெடலு நணித்து" (குறள், 856).

க. தவு

[தவி → தவல்.]

தவலம் *tavalam*, பெ. (n.) 1. அவுபல செய்நஞ்சு (யாழ்.அக.); an arsenic. 2. புறா வகை; a kind of dove.

[தவல் + அம் → தவலம்.]

தவலல் *tavalal*, பெ. (n.) தவல்² – 1, 4 பார்க்க; see *taval*² - 1. 4.

[தவல் + அல் → தவலல்.]

தவலி *tavali*, பெ. (n.) 1. எருது; bull. 2. ஒரு மீன்; a kind of fish. 3. வெள்ளை ஆ; white cow. 4. வெண்ணிறம்; white colour (சா.அக.).

[தவல் → தவலி.]

தவலிமன் *tavali-man̠*, பெ. (n.) வெண்ணிறம்; white colour (சா.அக.).

[தவலி → தவலிமன்.]

தவலை *tavalai*, பெ. (n.) அகன்ற வாயுடைய மாழையாலான ஏனவகை; metallic pot with a wide mouth.

தெ. தபெல; க. தபெலே; ம. தவல

[தவ → தவலை.]

தவலைச்செம்பு *tavalai-c-cembu*, பெ. (n.) செம்புவகை; a kind of vessel.

[தவலை + செம்பு.]

தவலைப்பானை *tavalai-p-pān̠ai*, பெ. (n.) தவலை (நெல்லை) பார்க்க; see *tavalai*.

[தவலை + பானை.]

தவலையடை *tavalai-y-aḍai*, பெ. (n.) தவலையிலிட்டுச் சமைத்த அடை வகை; rice-cake cooked in a tavalai.

[தவலை + அடை – தவலையடை. ஒருகா. தவளையடை → தவலையடை. தவளை போன்று தட்டையாயும், சிறிது தடித்து முள்ள வடை.]

தவலோகசீவன் *tavalōga-sīvan̠*, பெ. (n.) காந்தம்; magnet (சா.அக.).

[தவம் + Skt. லோகசீவன்]

தவலோகம் *tava-lōgam*, பெ. (n.) மேலேழுலகத்துள் ஆறாவது; an upper world, sixth of mēl-ēḻ-ulagam. "தவலோகங் கடந்துபோய்" (திருவிளை. மலயத்துவ. 28).

[தவம் + Skt. லோக]

தவவிளக்கு *tava-viḷakku*, பெ.(n.) தவமாகிய பெருவிளக்கு (முக்காலத்தையும் விளக்க வல்லது); penance, considered as a light illuminating the past, present and future. "எதிர்வது மிறந்தது மெய்திநின்றது மதிர்வறு தவவிளக்கெறிப்பக் கண்டவன்" (சீவக. 2850).

[தவம் + விளக்கு]

தவவீரர் *tava-vīrar*, பெ. (n.) தவம் இயற்றுவதில் வீரராயுள்ள முனிவர்; sages, as heroic in performing austerities. "தவவீரர் திசை சிலம்பத் துதியோதி" (சீவக. 3104).

மறுவ. தவத்தர்.

[தவம் + வீரர்]

தவவேடம் *tava-vēḍam*, பெ. (n.) முனிவர் கோலம்; ascetic's garb or guise. "தகவில தவவேடம்" (கம்பரா. வனம்புகு. 24).

மறுவ. தவக்கோலம்

[தவம் + வேடம்]

தவவேள்வி *tava-vēḷvi*, பெ. (n.) தவத்தில் செய்யப்படும் வேள்வி (யாகம்) (சி.சி. 8:23, சிவஞா.); performance of penance or religious austerities, as a sacrifice, one of aivagai-vēḷvi.

[தவம் + வேள்வி]

தவழ்-தல் *tavaḻ-*, 2 செ.குவி. (v.i.) 1. ஊர்தல், நகர்தல்; to creep, crawl, as infants, lizards, snakes. "தங்கள் பாடியில் வளர்ந்துமா மருதிடைத் தவழ்ந்த.... கருணையங்கடலே" (பாரத. கிருட்டிணன். 91). குழந்தை மெல்லத் தவழ்ந்து வந்து தந்தையின் கால்களைக் கட்டிக் கொண்டது. (உ.வ.). 2. தத்துதல்; to leap and flow, as waves. "ஓதங் கரைதவழ்நீர் வேலியுலகினுள்" (பு.வெ. 8: 9).

3. பரத்தல்; to extend, traverse, spread on all sides. 'உடன்று நோக்கும்வா யெரிதவழ" (புறநா. 38:5).

க. தெவள்

[தவ → தவழ்-.]

தவழ்கரடி *taval-karaḍi*, பெ. (n.) விலங்கு வகை; badger, Indian ratel, Mellivora indica, as a creeping bear.

[தவழ் + கரடி]

தவழ்சாதி *taval-šādi*, பெ. (n.) தவழுயிரி பார்க்க; see *tavaluyiri*.

[தவழ் + சாதி]

தவழ்புனல் *taval-punal*, பெ. (n.) மெல்லச் செல்லும் ஆற்று நீர்; water of a stream flowing gently. "தவழ் புனலிருதுாணி" (தைலவ. தைல. 13).

[தவழ் + புனல்]

தவழ்வன *tavalvana*, பெ. (n.) தவழுயிரி பார்க்க; see *tavaluyiri*.

[தவழ் → தவழ்வன]

தவழவாங்கிக்கட்டு-தல் *tavala-vāṅgi-k-kaṭṭu-* 5 செ.குன்றாவி. (v.t.) 1. மாட்டுக்காலைக் கழுத்துடன் பிணைத்துத் தளைதல்; to tie a bullock's neck to its forelegs to prevent straying. 2. தண்டனையாக சிறுவரின் கால்விரலையும் கழுத்தையும். கயிற்றால் பிணைத்தல்; to tie a string binding the neck of a boy and his toe together, as a punishment.

மறுவ. தாழக்கட்டு-தல்

[தவழ் + அ + வாங்கிக்கட்டு-.]

தவழவாங்கு-தல் *tavala-vāṅgu-*, 5 செகுன்றாவி. (v.t.) 1. ஒருவனைக் குனியவைத்து துன்புறுத்தி அவன்சொத்து முழுமையும், தமதாக்கிக் கொள்ளுதல் (யாழ்ப்.); to deprive a person of all his property, holding him down and robbing him. 2. மிகுதியாக வேலை கொடுத்து ஒருவனை வாட்டுதல் (இவ.); to weary a person by over work.

மறுவ. தாழவாங்குதல்

[தவழ் + அ + வாங்கு-.]

தவழுயிரி *tavaluyiri*, பெ. (n.) ஊர்ந்து செல்லும் உயிரினம்; class of creatures that more slowly on all fours. ஊருயிரி.

[தவழ் + உயிரி]

தவளச்சங்கு *tavaḷa-c-caṅgu*, பெ. (n.) வெண்சங்கு; white conch (சா.அக.).

[தவளம் + சங்கு]

தவளசத்திரம் *tavaḷa-šattiram*, பெ. (n.) அரசர்க்குரிய வெண்கொற்றக்குடை; white umbrella, one of the insignia of royalty. "தவளசத்திரத்தையுமுடைய வேந்தற்கு" (பு.வெ. 9, 23, உரை).

[தவளம் + சத்திரம்]

தவளத்திசைநாதம் *tavaḷattišai-nādam*, பெ. (n.) தவளச்சங்கு பார்க்க; see *tavaḷa-c-caṅgu*.

[தவளம் + திசைநாதம்]

தவளத்தொடை *tavaḷa-t-toḍai*, பெ. (n.) தும்பைமாலை (காளத். உலா, 132); garland of tumpai flowers.

[தவளம் + தொடை]

தவளநிறக்காக்கணம் *tavaḷa-niṟa-k-kākkaṇam*, பெ. (n.) வெள்ளைக்காக்கணம்; clitoria ternatia bearing white flowers (சா.அக.).

[தவளநிறம் + காக்கணம்]

தவளநீறு *tavaḷa-nīṟu*, பெ. (n.) வெண் சாம்பல்; white ash.

[தவளம் + நீறு]

தவளபக்கம் *tavaḷa-pakkam*, பெ. (n.) வெண்ணாரை; white crane (சா.அக.).

[தவளம் + பக்கம்]

தவளபாடலி *tavaḷa-pāḍali*, பெ. (n.) வெண் பாதிரிமரம்; white trumpet flower tree (சா.அக.).

[தவளம் + பாடலி]

தவளம் *tavaḷam*, பெ. (n.) 1. வெண்மை; white; ash-colour, grey. 'தவளவாணகை கோவல னிழப்ப" (சிலப். 4:55). 2. வெண்மிளகு (மலை.); white pepper, the mature seed of black pepper.

3. எரியணம் (கருப்பூரம்) (யாழ்.அக.); camphor. 4. சங்கநஞ்சு (யாழ்.அக.); an arsenic.

[தவள் + அம். 'அம்' சொல்லாக்க ஈறு. ஒ.நோ. பவளம்.]

தவளம்பண்ணி *tavaḷam-paṇṇi*, பெ. (n.) காட்டுத் துளசி; wild-basil.

[தவளம் + பண்ணி]

தவளமாகை *tavaḷam-āgai*, பெ. (n.) வெண்ணிறமாக மாறுகை; becoming white.

[தவளம் = வெண்மை. தவளம் → தவளமாகை]

தவளமாய்நீறு-தல் *tavaḷam-āy-nīṟu-*, 5 செகுன்றாவி (v.t.) 1. வெண்சாம்பலாய் போதல்; to be reduce to white ashes. 2. துகளாகுதல்; to become a full calcined powder.

[தவளம் + ஆய் + நீறு-.]

தவளமிருத்திகை *tavaḷa-miruttigai*, பெ. (n.) சுண்ணாம்பு (யாழ்.அக.); lime. 2. வெள்ளை நஞ்சு; white arsenic. 3. வெள்ளைமணல்; white sand (சா.அக.).

[தவளம் = வெண்மை. தவளம் + மிருத்திகை]

தவளமிளகு *tavaḷa-miḷagu*, பெ. (n.) வெண் மிளகு; white-pepper (சா.அக.).

[தவளம் = வெண்மை. தவளம் + மிளகு]

தவளவருணம் *tavaḷa-varuṇam*, பெ. (n.) தோல் நோய், இணைவிழைச்சு (மேக)நோய் 18 வகைகளுளொன்று; one of the 18 venerial diseases (சா.அக.).

[தவளம் + வருணம்]

தவளவைசூரி *tavaḷa-vaiśūri*, பெ.(n.) ஒரு வகை அம்மை நோய்; a kind of small pox (சா.அக.).

[தவளம் + வைசூரி]

தவளாங்கம் *tavaḷāṅgam*, பெ. (n.) 1. வெண்ணிறமானவுடம்பு; white body. 2. வெளுத்தவுடம்பு; pale-body.

[தவளம் + அங்கம். தவளம் = வெண்மை. ஒருகா. தவளங்கம் → தவளாங்கம்.]

தவளாம்பரி *tavaḷāmbari*, பெ. (n.) தலைமைப் பண்களுளொன்று; (மேளகருத்தாக்களு ளொன்று) (சங்.சந். 47); a primary rāga.

தவளாமுரிகம் *tavaḷā-murigam*, பெ.(n.) சிறுநீரக நோய்களிளொன்று; a disease of the kidneys.

[தவளாமுரிகம் = சிறுநீரில் மிகுதியான உப்புடன், முட்டையின் வெண்கருவைப் போல் நீர் பிரியும், நோய் என்று சா. அக. கூறும்.]

தவளிதம் *tavaḷidam*, பெ. (n.) வெண்மை (வின்.); whiteness.

[தவளி → தவளிதம்.]

தவளை *tavaḷai*, பெ. (n.) நீண்ட பின்னங் கால்களால் நிலத்தில் தாவியும், நீரில் நீந்தியும் செல்லும் உயிரி; animals of the frog and toad variety, Batrachia ecandata. "தவளைத் தண்டுறை கலங்கப் போகி" (பெருங். மகத., 3:21).

க., ம. தவள; வ. மண்டூகம்

[தவழ் → தவள் → தவளை = தாவிச் செல்வதால் பெற்றபெயர். சதுப்புநிலத்தில் பூச்சி புழுக்களைத் தின்று வாழுந் தன்மைத்து. வேனிற்காலத்தே வயற் பொந்துகளில் வாழும். காலற்ற சிறு தவளை, நீண்ட வாலின் உதவியால் உலா வரும். அழுகிய பொருட்களையுந் தின்னுந் தன்மைத்து என்று சா.அக. கூறும்.]



தவளை வகைகள்:

1. துடுப்புக்கால் தவளை;
2. மிடர்த்தவளை; bull frog.

3. சொறியாந்தவளை; flying frog.
4. குளத்துத்தவளை; tank frog.
5. கிணற்றுத்தவளை; well frog.
6. பச்சைத்தவளை; green frog.
6. மணற்றவளை; sand frog.
7. சிறுதவளை; small frog.
8. சிவப்புத்தவளை; red frog.
9. வறட்டுத்தவளை; ventriloquist frog.
10. நாமத்தவளை (சா.அக.)

தவளைக்கடி *tavaḷai-k-kaḍi*, பெ. (n.) 1. சொறிப் புண்வகை (தஞ். சர. iii, 159); a kind of eruption. 2. தவளைக் கடியினால் உண்டாகும் ஒருவகை நோய்; a kind of frog bite disease (சா.அக.).

[தவளை + கடி]

தவளைக்கல் *tavaḷai-k-kal*, பெ. (n.) சொறிக்கல் (வின்.); laterite.

மறுவ. இரும்பகக்களிமண்

[தவளை + கல்]

தவளைக்காய் *tavaḷai-k-kāy*, பெ. (n.) 1. தவளை; frog. 2. நீரில் தத்திச் செல்லும்படி எறியுங்கல்; flat tile ricochetting on the water. 3. புடைத்தல் முதலியன செய்யும்போது, மேற்கையில் எழும்பித் தோன்றிமறையுந் தன்மையுள்ள சதைத் திரட்சி; swelling of the biceps, as caused by a blow.

[தவழ் → தவளை + காய்]

தவளைக்கால் *tavaḷai-k-kāl*, பெ. (n.) தவளைக் குரங்கு (வின்.) பார்க்க; see *tavaḷai-k-kuraṅgu*.

[தவளை + கால்]

தவளைக்கிண்கிணி *tavaḷai-k-kiṇkiṇi*, பெ. (n.) தவளைபோல் ஒலிக்கும் கிண்கிணி கொண்ட காலணிவகை (சீவக. 2481); an anklet with bells giving the sound of a frog's croak. "தவளைக் கிண்கிணி ததும்பு சீறடியர்" (பெருங். உஞ்சைக். 46, 246).

[தவளை + கிண்கிணி]

தவளைக்குஞ்சு *tavaḷai-k-kuñju*, பெ. (n.) தவளைக்குட்டி பார்க்க; see *tavaḷai-k-kuṭṭi*.

[தவளை + குஞ்சு]

தவளைக்குட்டம் *tavaḷai-k-kuṭṭam*, பெ. (n.) தோல்நோய்; ஒருவகைப்பெருநோய்; a variety of leprosy (சா.அக.).

[தவளை + குட்டம்]

தவளைக்குட்டி *tavaḷai-k-kuṭṭi*, பெ. (n.) தவளையின் இளமை; tadpole, periwinkle. "தவளைக் குட்டியென வரும்" (தொல். பொருள். 561: உரை).

[தவளை + குட்டி]

தவளைக்குரங்கு *tavaḷai-k-kuraṅgu*, பெ. (n.) 1. பணிப்பூட்டுவகை (வின்.); a kind of clasp in a chian, in jewellery. 2. கொக்கித்தாழ்ப்பாள்; hook for fastenting a door. 3. இரட்டைக் கொக்கி; double iron-hook for suspending, as a cradle.

[தவளை + குரங்கு]

தவளைச்சங்கு *tavaḷai-c-caṅgu*, பெ. (n.) சொறிச்சங்கு; rough conch.

[தவளை + சங்கு.]



தவளைச்சுக்கான் *tavaḷai-c-cukkāṉ*, பெ. (n.) கருஞ்சுக்கான்; a black lime stone.

[தவளை + சுக்கான்]

தவளைச்சினை *tavaḷai-c-ciṉai*, பெ. (n.) தவளை வயிற்றிலுள்ள சினை; the ovum of a frog.

[தவளை + சினை.]

தவளைச்சொறி *tavaḷai-c-coṟi*, பெ. (n.) சொறி புண்வகை; a kind of eruption.

த. தவளைச்சொறி → வ. கண்டகரோகம்

[தவளை + சொறி → தவளைச்சொறி. உடம்பில் வலியோ புண்ணோ இல்லாமல், கருப்பாகத் தடிப்புடன், தாமரைக் கொடியின் சிறியமுள் போன்று தோற்றந்தரும் தோல்நோய்.]

தவளைதத்து-தல் *tavaḷai-tattu-,* 5 செகுவி. (v.i.) தத்திவிளையாடுதல் (வின்.); to play at leap frog.

மறுவ. பச்சைக் குதிரையாடுதல்; தவளைப் பாய்ச்சலாட்டம்; தவளைப்பாய்த்து (நன்.)

[தவளை + தத்து-.]

தவளைதின்னி *tavaḷai-tinni,* பெ. (n.) பறையருள் ஒரு பிரிவினர்; a subsect of Pariahs (G.Sm.D. I.I:110).

[தவளை + தின்னி.]

தவளைநஞ்சு *tavaḷai-nañju,* பெ. (n.) தவளை தோலில் உள்ள நஞ்சு; a poisonous principle contained in the skin of toads.

[தவளை + நஞ்சு.]

தவளைநுரை *tavaḷai-nurai,* பெ. (n.) முட்டையுடன் உள்ள தவளையெச்சில் (வின்.); frog's froth containing spawn.

[தவளை + நுரை]

தவளைநோய் *tavaḷai-nōy,* பெ. (n.) 1. வாழை நோய் வகை; a plantain disease. 2. காலை நீட்டுவிக்கும் மாட்டுநோய் வகை; a cattle disease that lengthens the foot.

மறுவ. தவளைச்சுருட்டி

[தவளை + நோய் → தவளைநோய். சொறித்தவளையின் மஞ்சள்தோல் போன்று சுருங்கியும், திட்டுதிட்டாய்த் தீய்ந்தும் காணப்படும், வாழைமர நோய்.]

தவளைப்பாய்ச்சல் *tavaḷai-p-pāyccal,* பெ. (n.) தவளைப்பாய்த்து பார்க்க; see *tavaḷai-p-pāyttu.*

[தவளை + பாய்ச்சல்]

தவளைப்பாய்த்து *tavaḷai-p-pāyttu,* பெ. (n.) நூற்பா நான்கனுள், தவளைப்பாய்ச்சல் போல இடைவிட்டுச் செல்லும் நிலை (நன்.19); the principle of the frog's leap, whereby a šūttiram is so constructed as to have reference to the next but one that follows it, one of four šūttira-nilai.

மறுவ. தவளைப்பாய்ச்சல்

[தவளை + பாய்த்து]

தவளைமுகம் *tavaḷai-mugam,* பெ. (n.) மூக்கால் ஏற்பட்ட சப்பைமுகம்; flatness of the face due to intra-nasal disease Frag face.

[தவளை + முகம்]

தவளைமூக்கடைப்பன் *tavaḷai-mūkkaḍaippaṉ,* பெ. (n.) மாட்டுநோய் வகை (மாட்டுவா. 32); a cattle disease.

[தவளை + மூக்கடைப்பன்]

தவளையம்மை *tavaḷai-y-ammai,* பெ. (n.) சின்ன அம்மை; measles (சா.அக.).

[தவளை + அம்மை.]

தவளையுடம்பு *tavaḷai-y-uḍambu,* பெ. (n.) சொறியுடல்; body with eruptive itch.

[தவளை + உடம்பு.]

தவளைவயிறு *tavaḷai-vayiṟu,* பெ. (n.) பருத்த வயிறு; frog-belly.

மறுவ. சூளவயிறு

[தவளை + வயிறு.]

தவளைவாய் *tavaḷai-vāy,* பெ. (n.) அணிகலன் வகை (S.I.I. V, 212); an ornament.

[தவளை + வாய்]

தவளைவெட்டு-தல் *tavaḷai-veṭṭu-,* 5 செகுவி. (v.i.) கைமுண்டாவில் சதைதிரளும்படி குத்துதல் (இ.வ.); to strike at the muscles of the arm so that they gather up into a protuberance.

[தவளை + வெட்டு-.]

தவளோற்பலம் *tavaḷōṟpalam,* பெ. (n.) வெள்ளாம்பல் (மலை); Indian white water-lily.

[தவளை + உற்பலம்]

தவறணை *tavaṟaṇai,* பெ.(n.) (இலங்கை வழக்கு) மதுக்கடை; place where liquor is sold or consumed. கள்ளுத் தவறணை (இ.வ.). சாராயத் தவறணை (யாழ்ப்.).

தவறவிடு-தல் *tavaṟa-viḍu-*, *18 செகுன்றாவி.* (v.t.) *1.* **விடும்படி நேர்தல்;** to miss. *இந்தப் பேருந்தைத் தவறவிட்டால், அலுவலகத்திற்கு உரிய நேரத்திற்குப் போகமுடியாது? (உ.வ.). 2.* **தொலைத்தல்;** to lose. *பொன் வளையலைத் தவறவிட்டு வந்து நிற்கிறாயே?*

[தவறு → தவற + விடு-.]

தவறாக *tavaṟāga*, *குவிஎ.* (adv.) **தெரியாமல்;** by mistake. *உங்களிடம் தரவேண்டிய கடிதத்தைத் தவறாக அவரிடம் கொடுத்துவிட்டேன் (உ.வ.).*

[தவறு + ஆக]

தவறாமல் *tavaṟāmal*, *பெ.* (n.) **தவிர்த்து விடாமல்;** without fail. *திருமணத்தில், தாங்கள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும். என்று நண்பர் கூறினார் (உ.வ.). 2.* **மாறாமல்;** without changing any. *ஆண்டுதோறும் தவறாமல் நான் என்று சொந்த ஊருக்குச் செல்வேன் (உ.வ.).*

[தவறு + ஆம் + அல்.]

தவறிப்பேசு-தல் *tavaṟi-p-pēsu-*, *5 செகுவி.* (v.i.) **பிழைபடக் கூறுதல்;** to slip of the tongue.

[தவறி + பேசு-.]

தவறிப்போ-தல் *tavaṟi-p-pō-*, *5 செகுன்றாவி.* (v.t.) *1.* **இறத்தல்;** to pass away. *அவருடைய தந்தை தவறிப்போய், ஆறு ஆண்டுகள் ஆகிறது (உ.வ.). 2.* **காணாமற் போதல்;** to be lost. *திருவிழாவில் குழந்தை தவறிப் போய்விட்டது (உ.வ.).*

[தவறு → தவறி + போ-.]

தவறு[1]-தல் *tavaṟu-*, *5 செகுவி.* (v.i.) *1.* **தப்பி விழுதல்;** to slip, miss, fall, tumble over, trip, lose one's hold. *"உள்ளத்தன்பு தவறிலான் பொருட்டு" (திருவிளை. மெய்க்கா: 36). 2.* **வாய்க்காமற்போதல்;** to fail, miscarry, prove abortive. *3.* **வெற்றிவாய்ப் பிழத்தல்;** to be unsuccessful. *4.* **குற்றப்படுதல்;** to fail in duty; to fall from moral rectitude; to transgress, sin. *5.* **காணமாற்போதல்;** to stray, lose the way; to be lost. *6.* **பிழையாதல்;** to err, mistake, blunder. *கணக்குப் போடுவதில் தவறினான் (உவ). 7.* **சாதல்;** to die. *8.* **குறைதல்;** to fall short.

தவறு[2]-தல் *tavaṟu-*, *5 செகுன்றாவி.* (v.t.) **தாண்டுதல்** *(பிங்.);* to pass over, go beyond.

[தாவு → தவல் → தவறு-.]

தவறு[3] *tavaṟu*, *பெ.* (n.) *1.* **பிழை;** mistake, error, blunder. *2.* **செயல்நடவாமை;** failure in purpose or accomplishment, as in an examination. *"தடுமாறுந் தாளாளர்க் குண்டோ தவறு" (நாலடி, 191). 3.* **நெறிதவறுகை;** fault, delinquency, misconduct, transgression. *"இல்லை தவறவர்க் காயினும்" (குறள், 1321). 4.* **அழுக்கு;** dirt, uncleanness. *"உடம்பினுறுந் தவறுதனை" (சேதுபு. இராமனருச், 132). 5.* **குறைவு;** want; trouble. *"நீயிருப்பவுண்டோ வெமக்குத் தவறென்றார்" (உத்தரரா. திருவோல: 22). 6.* **பஞ்சம்;** drought, famine. *"தவறு தீர்ந்து" (பெரியபு. திருநாவுக்: 262).*

க. தவிர்.

[தவ → தவல் → தவறு-.]

தவறுகம் *tavaṟugam*, *பெ.* (n.) **எரிசாலை;** a plant *(சா.அக.).*

[தவறு → தவறுகம்.]

தவறுதல் *tavarudal*, *பெ.* (n.) **தவறு** *பார்க்க;* see *tavaṟu* *(கிரி.அக.).*

[தவல் → தவறு-.]

தவறுதலாக *tavaṟudal-āga*, *குவிஎ.* (adv.) **தவறாக** *பார்க்க;* see *tavaṟāga*.

[தவறுதல் + ஆக.]

தவறை *tavaṟai*, *பெ.* (n.) **சிறுகப்பலிற் சங்கிலி சுற்றும் கருவி;** capstan, machine for winding up a cable in small craft (naut.).

தெ. தபற.

[தவர் → தவறை.]

தவறைப்பாள் *tavaṟai-p-pāḷ*, *பெ.* (n.) **தவறையைச் சுற்றாமல் நிறுத்தற்குரிய இருப்புப்பட்டை;** pawl, short bar which acts as a catch to a windlass (naut.).

E. Paul

[தவறை + பாள்]

தவறைமூட்டான் *tavaṟai-mūṭṭāṉ,* பெ. (n.) நங்கூரச்சங்கிலி; anchor-chain (naut.).

[தவறை + மூட்டான்]

தவறைவாரி *tavaṟai-vāri,* பெ. (n.) கப்பலின் இருப்புக்கருவி வகை; handspike (naut.).

[தவறை + வாரி]

தவன்[1] *tavaṉ,* பெ. (n.) தவசி; ascetic. "குலத் தலைவர் தவர்குறிப்புக் குறித்து ளார்போல்" *(பெரியபு. புராணசா. 22).*

[தவம் → தவன்.]

தவன்[2] *tavaṉ,* பெ. (n.) தவம்[1] பார்க்க; see *tavam*[1]. religious austerity. "தவன்செயத் தவன்செய்த தவனென்" *(கம்பரா. சூர்ப்ப: 18).*

[தவம் → தவன் = தவஞ்செய்தவன். மாதவன் = பெருந்தவஞ் செய்தவன். "மாதவர் நோன்பு மடவார் கற்பும்" (மணிமே. 22, 208) (வ.வ. 16)]

தவன்[3] *tavaṉ,* பெ. (n.) கணவன் (சூடா.); husband.

[தம் எனும் கருதற்கருத்து வேரடி. தம் → தமன் → தவன். அனைத்து நிலையிலும், அன்பினையும், அருளையுந் தந்து மனைவியைக் காத்து ஓம்புபவன். இல்லாளைக் காத்து, தவமியற்றுபவருக்கு உணவு தந்து வாழ்பவனே தவன்.]

தவனகம் *tavaṉ-agam,* பெ. (n.) 1. தவனம்[2] பார்க்க; see *tavaṉam*[2]. 2. மருக்கொழுந்து; warmwood, maidslove.

தவனகி *tavaṉagi,* பெ. (n.) 1. எரிபூடு; plant causing burning sensation. 2. எரியும்பூடு; burning bush.

[தகன் → தவன் → தவனகி.]

தவனச்செட்டி *tavaṉa-c-ceṭṭi,* பெ. (n.) செட்டி வகையினர் (S.I.I. viii, 98); a sect of setti caste.

[தவனம் + செட்டி.]

தவனட்சபுட்டம் *tavaṉaṭca-puṭṭam,* பெ. (n.) குயில்; Indian cuckoo.

[தவன் + Skt. அட்சம் + புட்டம்.]

தவனட்சம் *tavaṉaṭšam,* பெ. (n.) ஒரு மருந்துப் பூடு; a medicinal plant.

[தவனம் + அட்சம்.]

தவனட்சமாசி *tavaṉaṭšamāši,* பெ. (n.) இரவில் பூக்கும் சிறுவழுதலை; Indian night shade.

[தவனட்சம் → தவனட்சமாசி.]

தவனத்திராவகம் *tavaṉa-t-tirāvagam,* பெ. (n.) வெடியக்காடி; nitric acid (சா.அக.).

[தகனம் → தவனம் + திராவகம்.]

தவனப்புளி *tavaṉa-p-puḷi,* பெ. (n.) 1. மிளகாயும் உப்பும் சேர்த்திடித்த புளி; tamarind paste mixed with salt and chillies. 2. நீர்வேட்கையை நீக்கவல்ல புளி; acid preparation potent in quenching thirst.

[தவனம் + புளி]

தவனம்[1] *tavaṉam,* பெ. (n.) 1. வெப்பம்; heat. 'அனலூடே தவனப்படவிட்டு" *(திருப்புகழ்த். 308: 50).* 2. நீர்வேட்கை; thirst. "தவனமா பசியுடையவன்" *(திருவிளை. அன்னக்:2).* 3. ஆசை; longing, desire. "தவனசலதியின் முழுகியே" *(திருப்பு. 121).* 4. வருத்தம்; distress. "தவனமுன் றடைந்து" *(கைவல். தத். 12).*

[தவி → தவம் → தவன் → தவனம். தவம் = வெப்பம்]

தவனம்[2] *tavaṉam,* பெ. (n.) 1. மருக்கொழுந்து; southern wood, s. sh., Artemisia abrotanum. 2. காஞ்சிரை (மாசிப்பத்திரி); Indian absinth. 3. களைப்பு; fatigue (சா.அக.).

[தவன் → தவனம்.]

தவனம்தீர்-த்தல் *tavaṉam-tīr-,* 4 செ.குன்றாவி. (v.t.) நாவறட்சியைத் தணித்தல்; to quench the thirst.

மறுவ. தாகந்தணித்தல்

[தவி → தவன் → தவனம் + தீர்-.]

தவனமடங்கல் *tavaṉam-aḍaṅgal,* பெ. (n.) தாகம் தீரல்; thirst becoming quenched (சா.அக.).

மறுவ. நாவறட்சியடங்கல்.

[தவனம் + அடங்கல்.]

தவனமாயிருத்தல் *tavaṉam-āy-iruttal,* பெ. (n.) *தாகமாயிருத்தல்;* being thirsty.

மறுவ. நாவறட்சியாயிருக்கை

[தவனம் + ஆய் + இருத்தல்.]

தவனன் *tavaṉaṉ,* பெ. (n.) *1.* ஞாயிறு; sun. *2.* நெருப்பு; fire.

மறுவ. வெய்யோன், பகலவன், கதிரவன், ஞாயிறு, சூரியன், காய்கதிர்ச்செல்வன்.

[தவம் → தவன் + அவன். தவம் = வெப்பம்.]

தவனாட்சவல்லி *tavaṉāṭca-valli,* பெ. (n.) புன்குமரம்; poongu tree *(சா.அக.).*

[தவனாட்சம் + வல்லி.]

தவனி *tavaṉi,* பெ. (n.) உடற்கொதிப்புள்ளவள்; woman in a feverish condition. "வீதி விடங்கனைக் கண்டிவள் தவனியாயினவா றென்றன் றையலே" *(தேவா. 710:8).*

மறுவ. சூட்டுடம்பினள்

[தவி → தவம் → தவனம் →தவனி. 'இ' பெண்பாலீறு. தவம் = எரிவு, சூடு. தவனி = வெப்பமிக்கவுடம்பினள். எஞ்ஞான்றும் தகிக்கும் காங்கையான உடம்பு.]

தவனிபோதம் *tavaṉi-pōdam,* பெ. (n.) ஒருவகைப் புல்; a kind of grass *(சா.அக.).*

[தவனி + போதம்.]

தவனியம் *tavaṉiyam,* பெ. (n.) பொன்; gold. "தவனியப் பைம் பூண்" *(பெருங். இலாவண. 8, 169).*

[தவன் + இயம் = தவனியம். தவன் = சூரியன்; ஞாயிறு போன்று ஒளிருவதால் பொன், தவனியம் எனப்பட்டது. 'அம்' அருமைப் பெயரீறு. ஒருகா. தமனியம் → தவனியம்]

தவா *tavā,* பெ. (n.) தாதகி, காட்டத்தி; downy grislea *(சா.அக.).*

தவாக்கினி[1] *tavākkiṉi,* பெ. (n.) *1.* தவத்தால் தோன்றும் கனல்; fire of austere penance. *2.* தவஞ்செய்வதற்கு வளர்க்கும் தீ; fire kindled for doing penance.

[தவம் + அக்கினி]

தவாக்கினி[2] *tavākkiṉi,* பெ. (n.) காட்டுத் தீ *(யாழ்.அக.);* forest fire.

[தவம் + அக்கினி. அழனி → அக்கினி]

தவாங்கம் *tavāṅgam,* பெ. (n.) தவப்புனைவு *(மகாராஜாதுறவு, 66);* hermit's garb.

மறுவ. தவவேடம்

[தவம் + அங்கம் → தவாங்கம்.]

தவாட்சரி *tavāṭcari,* பெ. (n.) தவாட்சொரி பார்க்க; see *tavāṭcori (சா.அக.).*

[தவாட்சொரி → தவாட்சரி]

தவாட்சொரி *tavāṭcori,* பெ. (n.) ஒரு பூண்டு; an unknown plant *(சா.அக.).*

தவாணகம் *tavāṇagam,* பெ. (n.) காற்று; wind.

தவாநிலை *tavā-nilai,* பெ. (n.) உறுதிநிலை; stable condition *(செ.அக.).*

[தவு + ஆ. எ.ம.இ. நிலை. தவு = குன்றுகை, குறைகை.]

தவாவினை *tavā-viṉai,* பெ. (n.) *1.* வீடுபேறு; salvation, deliverance. *2.* மலை; hill, mountain *(செ.அக.).*

[தவம் + ஆ (எ.ம.இடைநிலை) + வினை) ஒருகா. தவம்வினை → தவாவினை.]

தவாளி[1]-த்தல் *tavāḷi-,* 4 செ.கு.வி. (v.i.) கால்வாய் முதலியன தோண்டுதல் *(யாழ்ப்.);* to make flutings or grooves, as in carpentry; to dig a channel.

[துவாளி → தவாளி-.]

தவாளி[2]-த்தல் *tavāḷi-,* 4 செ.குன்றாவி. (v.t.) தாக்குப்பிடிக்கவியலாது தத்தளித்தல் *(புதுவை);* to be unable to manage.

[தவு → தவா → தவாளி-.]

தவாளிப்பு[1] *tavāḷippu,* பெ. (n.) எழுதகக்குழி *(யாழ்ப்.);* cavity in a moulding, groove.

[தவா → தவாளி → தவாளிப்பு]

தவாளிப்பு[2] *tavāḷippu,* பெ. (n.) பார்வைக்கு மதிப்பாயிருக்கை *(யாழ்ப்.);* maintaining a seemingly creditable appearance.

[சமாளிப்பு → தவாளிப்பு]

தவி-த்தல் *tavi-,* 4 செ.குவி. (v.i.) 1. இல்லாமை பற்றி வருந்துதல்; to be distressed, to pant for. "தாகத்தாற் றடுமாறித் தவித்தேநின்று" *(சிவரக. பசாசு. 34).* 2. நீர்வேட்கையுண்டாதல்; to be feel thirst. தண்ணீர் தவிக்கிறது (உ.வ.). 3. இளைத்தல் (யாழ்.அக.); to be wearied; to languish.

த. தவி → Skt. தப்

[தவு → தவி-. தவித்தல் - வெப்பக் கருத்தினின்று கிளைத்த இச் சொல், தற்காலத்தே, மருத்துவச்செலவிற்குப் பணமின்றித் 'தவியாய்த் தவிக்கிறான்' போன்ற வழக்குகளில், வறுமைக் கருத்தையுங் குறித்தது]

தவிசணை *tavišaṇai,* பெ. (n.) கட்டில் (வின்.); bed, cot.

[தவிசு + அணை. தவிசு = இருக்கை]

தவிசம் *tavišam,* பெ. (n.) 1. கடல்; sea. 2. மேலுலகம்; deliverance from rebirth.

தவிசு[1] *tavišu,* பெ. (n.) 1. தடுக்கு முதலிய இருக்கை; small seat, stool, mat to sit on. "கோலத்தவிசின் மிதிக்கின்" *(திருக்கோ. 238).* 2. பாய்; mat. "செய்வினைத் தவிசின்" *(சிலப். 16: 37)* (வின்.). 3. மெத்தை (பிங்.); mattress. 4. யானை முதலியவற்றின் மேலிடும் மெத்தை (சூடா.); cushion, padded seat, saddle, as on an elephant. "அடுகளிற் றெருத்தினிட்ட வண்ணப்பூந் தவிசுதன்னை" *(சீவக. 202).* 5. பீடம் (பிங்.); platform.

மறுவ. சிற்றிருக்கை

Pers. divāsi

[தவி → தவிசு = தரையின் மீது அமரும் வண்ணம் அமைக்கப்படும் அமைப்பு.]

தவிசு[2] *tavišu,* பெ. (n.) நீர்மம்; distilled, liquid.

தவிட்டம்மை *tavittammai,* பெ. (n.) சின்னம்மை (இ.வ.); chicken-pox, measles, rash.

[தவிடு + அம்மை (தவிடு = சிறிய உலக்கையால் உரலில் இட்டுப் பொடியாக்கப்பட்ட பதர்போல் சிதறிக் கிடப்பதைக் குறிக்கும்.)]

தவிட்டான் *taviṭṭāṉ,* பெ. (n.) பட்டைவிரசு வகை (யாழ்.அக.); rough ovate - leaved ivory - wood, m.tr., Ehretia lacvisaspera. as having fruit like bran.

தவிட்டுக்களி *taviṭṭu-k-kaḷi,* பெ. (n.) தவிட்டாலாக்கிய களி; bran pap (செ.அக.).

[தவிடு + களி]

தவிட்டுக்கிளி *taviṭṭu-k-kiḷi,* பெ. (n.) ஒருவகை வெட்டுக்கிளி; grasshopper, Attilabus, as bran-brown.

ம. தவிட்டுக்கிளி

[தவிடு + கிளி]



தவிட்டுக்குஞ்சு *taviṭṭu-k-kuñju,* பெ. (n.) மீன் பூச்சியினங்களின் இளமை (வின்.); young of frog of fish, larva of insects.

மறுவ. மீன்பொடி

[தவிடு + குஞ்சு]

தவிட்டுக்கூழ் *taviṭṭu-k-kūḻ,* பெ. (n.) தவிட்டால் ஆக்கிய கூழ்; bran porridge (செ.அக.).

[தவிடு + கூழ்]

தவிட்டுக்கொய்யா *taviṭṭu-k-koyyā,* பெ. (n.) மரவகை (மலை); hill guava, s. tr., Rhodomyrtus tomentosa.

[தவிடு + கொய்யா]

தவிட்டுச்செடி *taviṭṭu-c-ceḍi,* பெ. (n.) தவிட்டுக் கொய்யா (யாழ்.அக.) பார்க்க; see *taviṭṭu-k-koyyā.*

[தவிடு + செடி]

தவிட்டுச்சோளம் *taviṭṭu-c-cōḷam,* பெ. (n.) சோளவகை (விவசா.3.); a kind of maize.

[தவிடு + சோளம்]

தவிட்டுண்ணி *taviṭṭuṇṇi,* பெ. (n.) 1. ஆட்டு உண்ணிவகை (வின்.); small sheep tick. 2 புதர்களில் வசிக்கும் உண்ணி; ticks frequenting woody places. 3. சிறுஉண்ணி; small tick.

[தவிடு + உண்ணி]

தவிட்டுநிறம் *taviṭṭu-niṟam,* பெ. (n.) தவிடு போன்ற மங்கல்நிறம்; brown, dun colour.

ம. தவிட்டுநிறம்

[தவிடு + நிறம்]

தவிட்டுப்பழம் *taviṭṭu-p-paḻam,* பெ. (n.) 1. சிறுநெல்லி; otaheite gooseberry. 2. தவிட்டுக் கொய்யா (மலை.) பார்க்க; see *taviṭṭu-k-koyyā.*

மறுவ. மலைநெல்லி

[தவிடு + பழம்]

தவிட்டுப்பாற்சொற்றி *taviṭṭu-p-pāṟ-šoṟṟi,* பெ. (n.) ஒருவகைப் பூடு; a plant, Ruellia.

[தவிடு + பாற்சொற்றி]

தவிட்டுப்பிட்டு *taviṭṭu-p-piṭṭu,* பெ. (n.) ஒருவகைப் பண்ணிகாரம் (வின்.); fried ball made of bran.

ம. தவிட்டுப்பிட்டு

[தவிடு + பிட்டு]

தவிட்டுப்பில்லை *taviṭṭu-p-pillai,* பெ. (n.) வெண்ணிறமும் தவிட்டு நிறமும் கலந்திருக்கப் பெற்ற ஆ; cow, partly white and partly brown coloured.

மறுவ. பில்லைக்காளை

[தவிடு + பில்லை. புல்லை → பில்லை = மங்கிய மஞ்சள்நிறம், முதற்கண் வண்ணத்தைக் குறிக்கப் பயன்பட்ட தவிடு, பில்லை போன்ற சொற்கள், அந்நிறம் கொண்ட ஆவினையுங் குறித்து வழங்கின]

தவிட்டுப்பு *taviṭṭuppu,* பெ. (n.) தவிட்டுமேனி பார்க்க; see *taviṭṭu-mēṉi.*

[தவிடு + உப்பு]

தவிட்டுப்புறா *taviṭṭu-p-puṟā,* பெ. (n.) தவிட்டு நிறமுள்ள சிறுபுறாவகை (பதார்த்த 909); little brown dove, Turtur cambayensis.

ம. தவிட்டுப்ராவு

[தவிடு + புறா. பருந்து, பலாப்பழம் போன்ற மேலுதடும் கீழுதடும் ஒட்டிப் பிறக்கும் எழுத்துகள், ப்ராந்து, ப்லாப்பழம் என்று தமிழ் மக்களால் பலுக்கப்படும். மேற்பல் வரிசையும் கீழுதடும் ஒட்டிவரும் வகரமும் பகரமும் போன்று இரண்டு உதடும் ஒட்டிவரும் மகரம் ஆகாமை அறிக]



தவிட்டுப்பேன் *taviṭṭu-p-pēṉ,* பெ. (n.) சிறுபேன் வகை (வின்.); a kind of small louse.

[தவிடு + பேன்]

தவிட்டுப்பொட்டு *taviṭṭu-p-poṭṭu,* பெ. (n.) 1. கழி பட்ட தவிடு; refuse of bran. 2. ஆடைகளின் பூச்சியரிப்பு (வின்.); moth-eaten places in cloths.

[தவிடு + பொட்டு]

தவிட்டுமச்சி *taviṭṭu-macci,* பெ. (n.) செடிவகை (விவசா. 6); a plant.

[தவிடு + ஊமச்சி → தவிட்டுமச்சி]

தவிட்டுமயிர் *taviṭṭu-mayir,* பெ. (n.) 1. செம்பட்டமயிர்; brown hair. 2. முதன் முதலில் முளைக்கும் இறகு; first down of birds.

[தவிடு + மயிர்]

தவிட்டுமாக்களி *taviṭṭu-mā-k-kaḷi,* பெ. (n.) தவிட்டுக்களி; bran pap.

[தவிடு + மா + களி]

தவிட்டுமுருங்கை *taviṭṭu-muruṅgai,* பெ. (n.) முருங்கைவகை *(நாஞ்.);* a species of horse - radish tree.

[தவிடு + முருங்கை]

தவிட்டுமேனி *taviṭṭu-mēṉi,* பெ. (n.) சவட்டுப்பு *(யாழ்.அக.);* carbonate of soda.

மறுவ. கரிக்காடியுப்பு, கரியகை

[தவிடு + மேனி.]

தவிட்டுவிலை *taviṭṭu-vilai,* பெ. (n.) மிகக் குறைவான விலை *(யாழ்.அக.);* low, nominal price.

மறுவ. மலிவுவிலை, அடிமாட்டுவிலை

[தவிடு + விலை]

தவிட்டை[1] *taviṭṭai,* பெ. (n.) தவிட்டான் *(யாழ்.அக.)* பார்க்க; see *taviṭṭāṉ.*

[தவிட்டு → தவிட்டை]

தவிட்டை[2] *taviṭṭai,* பெ. (n.) தவுட்டை பார்க்க; see *tavuṭṭai (சா.அக.).*

[தவுட்டை → தவிட்டை]

தவிட்டைப்புறா *taviṭṭai-p-puṟā,* பெ. (n.) தவிட்டுப்புறா *(யாழ்.அக.)* பார்க்க; see *taviṭṭu-p-puṟā.*

[தவிட்டுப்புறா → தவிட்டைப் புறா]

தவிடச்சு *taviḍaccū,* பெ. (n.) மஞ்சட்பூ பூக்கும் செஞ்சடைச்சிக் கொடி; yellow-flowered climbing Indian linden.

[தவிடு + அச்சு → தவிடச்சு.]

தவிடாதிகம் *taviḍādigam,* பெ. (n.) கொய்யா (உருளன் பழம்); guava.

[தவிடு + ஆதிகம் → தவிடாதிகம்.]

தவிடிலை *taviḍilai,* பெ. (n.) செடிவகை *(க);* oblong leaved corymbose Indian linden, l.sh., Grewia columnaris.

[தவிடு + இலை → தவிட்டிலை → தவிடிலை.]

தவிடு *taviḍu,* பெ. (n.) 1. நெல் முதலியவற்றைக் குத்தி அரிசி முதலியன எடுத்தபின், உமியொழியக் கழிந்தபகுதி; bran. "நெல்லினுக்குத் தவிடுமிக ளனாதியாயும்" *(சிசி.116).* 2. பொடி; minute particle. "தவிடுபடு தொகுதி யென" *(உத்தரகா. சுந்திருவர். 50).* 3. தவுட்டைச் செடி; felted lance-leaved Indian linden, m. sh., Grewia hirsuta.

[தவு → தவிடு. தவு = குறைதல், குன்றுதல்.]

தவிடுபொடியா-தல் *taviḍu-poḍi-yā-,* 6 செ.குவி. (v.i.) பொடிப்பொடியாதல்; to be broken into minute pieces. 2. நிலைகுலைதல்; to be ruined beyond recovery. ஆட்சியைக் கைப்பற்ற முயன்ற தலைவரின் எண்ணம் தவிடு பொடியானது *(உ.வ.).*

[தவிடு + பொடியா-.]

தவிப்பில்லாக்குருவி *tavippillā-k-kuruvi,* பெ. (n.) தரையில்லாக்குருவி (புதுவை); swallow.

[தவிப்பு + இல்லா + குருவி]

தவிப்பு *tavippu,* பெ. (n.) 1. வருந்துகை; anxiety, distress for a thing, languishing, as for a thing. 'நோன்பின் றவிப்பு" *(சேதுபு. சேதுச. 50).* 2. வேட்கை; thirst. "நிரப்புறு தவிப்பினை யொழித்திட" *(அரிச். பு. விவாக. 107).*

[தவி → தவிப்பு]

தவிர்[1]**-தல்** *tavir-,* 4 செ.குவி. (v.i.) 1. விலகுதல் *(பிங்.);* to abstain, refrain. 2. இல்லாமற்போதல்; to cease, become extinct. அவன் வேலை தவிர்ந்தது. *(உ.வ.).* 3. தங்கிவருதல்; to stay, abide. "இடைச்சுர மருங்கிற் றவிர்த லில்லை" *(தொல். பொருள். 194).* 4. தணிதல்; to subside, abate. அவன் சினந் தணிந்தது (உ.வ.).

[தவி → தவிர்-.]

தவிர்[2]**-தல்** *tavir-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. பிரிதல் *(பிங்.);* to leave, separate from, forsake. 2. நீக்குதல் *(பிங்.);* to shun, avoid, omit, renounce. 3. ஒழிதல்; to give up, cease from. "தவிரா வீகை" *(புறநா. 3:5).*

[தவி → தவிர்-.]

தவிர்[3]**-த்தல்** *tavir-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. நீக்குதல்; to put away, remove, dispel, chase away, expel, exclude. "அச்சந் தவிர்த்த சேவகன்" *(திருவாச. 3:98).* 2. நிறுத்திவிடுதல்; to discontinue. 3. தடுத்தல்; to check, hinder, interrupt, prevent, frustrate. 'தாயர் தெருவிற்

றவிர்ப்ப" (கலித். 84, 15). 4. அடக்குதல்; to control, restrain. "தம்பகைப் புலன்களைத் தவிர்க்கும்" (கம்பரா.நகர. 6).

[தவி → தவிர்-.]

தவிர்ச்சி *tavircci*, பெ. (n.) 1. தங்குகை; abiding, staying. "களவினுட் டவிர்ச்சி வரைவி னீட்டம்" (இறை. 32). 2. இடையீடு; interruption, cessation, break. "களவினுட் டவிர்ச்சி கிழவோற் கில்லை" (இறை. 33).

[தவிர் → தவிர்ச்சி]

தவிர்த்துவினைசெயல் *tavirttu-viṉai-šcyal*, பெ. (n.) ஐவகைக் கரணங்களுள் பகைவ ரெய்யும் அம்பினைத்தடுத்து, அவர் மேல் அம்பு எய்யுஞ்செயல்; warding off hostile arrows and shooting arrows in return, one of pañja - kiruttiyam. "தொடையும்.... தவிர்த்து வினை செயலும் என ஐவினையாம்" (சீவக. 1676, உரை).

[தவிர்த்து + வினைசெயல்]

தவிர்ந்த *tavirnda*, இடை. (conj.) நீங்கலாக; தவிர; except. வீடு தவிர்ந்தி ஏனைய சொத்துகள் (உ.வ.).

[தவிர் → தவிர்ந்த]

தவிர[1] *tavira*, இடை. (conj.) நீங்கலாக, ஒழிய; except. அது ஒன்றுதவிர எல்லாம் உண்டு (உ.வ.).

[தவிர் → தவிர]

தவிர[2] *tavira*, இடை. (conj.) ஒழிய; unless. நீ வந்தால் தவிர நடவாது (உ.வ.). மழை பெய்ததே தவிர வெப்பம் குறையவில்லை (உ.வ.).

[தவிர் → தவிர]

தவிரவும் *tavиravum*, இடை. (conj.) மேலும்; further, moreover. அந்த மருந்து நோயைக் குறைக்கவும் இல்லை, தவிரவும் பக்கவிளைவு களையும், ஏற்படுத்தியுள்ளது.

[தவிர → தவிரவும்]

தவில் *tavil*, பெ. (n.) மேளவகை; a kind of two headed drum. "செந்தவில் சங்குடனே" (திருப்பு. 550).

[தவில் எனும் சொல் தபல் என்னும் உருதுச்சொல்லிலிருந்து வந்ததாகச் சென்னை அகரமுதலி கருதுகிறது. தபலா என்ற ஒரு பக்கத் தோற்கருவியையே அது சுட்டும். தவில் என்பது இருபக்கத் தோற் கருவியைச் சுட்டும் தமிழ்ச் சொல்லே.]



தவிலை *tavilai*, பெ. (n.) தவலை (யாழ்.அக.); one type of brass vessel.

[தவலை → தவிலை]

தவிவு *tavivu*, பெ. (n.) இடையீடு; obstruction "தவிவில் சீர்" (திவ். திருவாய். 3. 4:4).

[தவிர் → தவிவு]

தவீசம் *tavīšam*, பெ. (n.) தவிசம் பார்க்க; see *tavišam*.

[தவிசம் → தவீசம்]

தவு-தல் *tavu-*, 4 செ.குவி. (v.i.) 1. குன்றுதல்; to shrink; to be reduced; to be ruined. "எஞ்ஞான்றுந் தவாஅப் பிறப்பீனும் வித்து" (குறள், 361). 2. சாதல்; to die.

க. தவு.

[தபு → தவு-.]

தவுக்கார் *tavukkār*, பெ. (n.) 1. சுண்ணச்சாந்து (யாழ்.அக.); pounded lime. 2. எழுதக வளைவு (வின்.); curves of a cornice. 3. மதிற்செங்கலின் இடைவெளி (வின்.); interstices between the bricks of a wall.

[தவள் = வெண்மை. தவள் → தவர் → தவுர் → தவுர்க்கார்]

தவுக்கார்பண்(ணு)-தல் *tavukkār-paṇ(ṇu)-*, 5 செ.குன்றாவி. (v.t.) மட்டிக்காரை பூசித் தேய்த்தல் (இ.வ.); to plaster roughly.

[தவுக்கார் + பண்(ணு)-.]

தவுக்கை *tavukkai*, பெ. (n.) தட்டுவகை (S.I.I. ii, 15, வரிவு); a kind of plate.

க. தபகு.

[தவு → தவுக்கை]

தவுகஞ்சம் *tavugañjam,* பெ. (n.) தாமரைமணி; lotus bead.

[தவுகம் → தவுகஞ்சம்]

தவுசயம் *tavušayam,* பெ. (n.) தவுசலம் பார்க்க; see *tavušalam* (செ.அக.).

[தவுசலம் → தவுசயம்]

தவுசலம் *tavušalam,* பெ. (n.) முருங்கை (மலை.) மரம்; horse-radish tree.

[தவுசயம் → தவுசலம்]

தவுசிலம் *tavušilam,* பெ. (n.) 1. தண்டங்கிழங்கு; a tuber. 2. நிலப்பனை; ground-palm.

[தவுசலம் → தவுசிலம்]

தவுசெலம் *tavušelam,* பெ. (n.) தவுசலம் (யாழ்.அக.) பார்க்க; see *tavušalam.*

[தவுசலம் → தவுசெலம்]

தவுட்டை[1] *tavuttai,* பெ. (n.) செடிவகை (வின்.); felted lance-leaved - Indian linden, m.sh;, Grewia hirsuta.

தவுட்டை[2] *tavuttai,* பெ. (n.) 1. தவுட்டுமரம்; bran plant. 2. நாய்த்தவிட்டுச் செடி; dog bran plant. 3. ஐங்கணைக்கள்ளி; a kind of milkys shrub of the Euphorbia genus (சா.அக.).

தவுடி *tavuḍi,* பெ. (n.) ஆடமரம்; nilgiri elm Celtis tetrandra (சா.அக.).

தவுடு[1] *tavuḍu,* பெ. (n.) 1. குதிரைப்பாய்ச்சல்; running, galloping. 2. படையெடுப்பு; invasion, incursion, military expedition.

[தாவு → தவு → தவுடு. தாவு = குதிரைப் பாய்ச்சல்]

தவுடு[2] *tavuḍu,* பெ. (n.) தவிடு, பார்க்க; see *taviḍu.*

[தவிடு → தவுடு]

தவுடு[3] *tavuḍu,* பெ. (n.) தவடை (இ.வ.) பார்க்க; see *tavaḍai* (செ.அக.).

[தவடை → தவுடு]

தவுடை *tavuḍai,* பெ. (n.) தவடை (இவ.) பார்க்க; see *tavaḍai* (செ.அக.).

[தவடை → தவுடை]

தவுதபடம் *tavuda-paḍam,* பெ. (n.) வெண்டுகில் (வேதா.சூ. 43, உரை); white cloth.

மறுவ. தவுதம்

தவுதம் *tavudam,* பெ. (n.) தவுதபடம் (வேதா. சூ. 43) பார்க்க; see *tavuda-paḍam.*

[தவு → தவுதம்.]

தவுதாயப்படல் *tavutāya-p-paḍal,* பெ. (n.) தபுதாரநிலை பார்க்க; see *tabudāra-nilai* (சா.அக.).

தவுரிதகம் *tavuridagam,* பெ. (n.) குதிரை நடையுள் ஒன்று; trotting pace of a horse.

[தவுரி = விரைவு. விரைவான குதிரை நடை. தவுரி + தகம் → தவுரிகம்]

தவுல் *tavul,* பெ. (n.) தவில் (கொ.வ.) பார்க்க; see *tavil.*

[தவில் → தவுல்]

தவுவறுத்துத்தை-த்தல் *tavu-v-aruttu-t-tai-,* 4 செ.குன்றாவி. (v.t.) துளைசெய்து தைத்தல்; to perfore and stitch. (சா.அக.)

[தவுவறுத்து + தை-.]

தவை *tavai,* பெ. (n.) முருங்கை விதை; seed of Erythrina indica (சா.அக.).

[தவு → தவை. தவு = முருங்கை வகை.]

தழங்கல் *talaṅgal,* பெ. (n.) 1. பேரொலி; roaring. 2. யாழ்நரம்போசை; sound of a lute (செ.அக.).

மறுவ. ஆரவாரம்

[துள் → தள் → தழ → தழங்கு + அல் - தழங்கல் = அசைதல், அதிரல், அதிர்வினால் உண்டாகும் ஒலி; யாழ் நரம்பினின்று எழும் இன்னொலி, கடுஞ் சினத்தாலுருவாகும் பேரொலி(மு.தா.234)]

தழங்கு-தல் *talaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) முழங்குதல்; to sound, roar, resound. "தழுங்குகுரன் முரசமொடு" (அகநா. 24).

[துள்→ தள்→ தழ→ தழங்கு-. (மு.தா. 234)]

தழங்குரல் *talaṅgural,* பெ. (n.) ஒலிக்குமோசை; rattling sound, as of a drum. "தழங்குரன் முரசிற் சாற்றி" (சீவக. 378).

மறுவ. முழங்கோசை

[தழங்கு + குரல். தழங்கு = முரசம், முரசிலெழும் பேரொலி.]

தழம் *taḻam,* பெ. (n.) நெய்மம், எண்ணெய் (யாழ்.அக.); ointment medicated oil.

[தையிலம் → தலம் → தளம் → தழம்]

தழல்[1](லு)-தல் *taḻal(lu)-,* 5 செ.கு.வி. (v.i.) 1. அழலுதல்; to glow, to be very hot; to burn. "தழன்றெரி குண்டம்" (திருவிளை. நாக. 6). 2. ஒளி விடுதல்; to shine. "தழலுந் தாமரையானொடு" (தேவா. 1215:27).

[தள → தழ → தழல்(லு)-. ஒருகா: உள் → அள் → அழல். அழல்(லு)- மிகுதியாகக் காய்தல், கனலுதல், கனலும், எரிகுண்டம்.]

தழல்[2] *taḻal,* பெ. (n.) 1. நெருப்பு (பிங்.); fire. 2. தணல்; live coals of fire, embers. 3. நளி (கார்த்திகை) (திவா.); the third star of 27. 4. கேட்டை (திவா.); the l8th star of 27. 5. நஞ்சு; poison. "தழலுமி ழரவம்" (தேவா. 232:7). 6. கொடுவேலி (மலை.) (தைலவ. தைல. 72) பார்க்க; ceylon leadwort, see *koḍuvēli.* 7. கிளிகடி கருவி; a mechanism for scaring away parrots. "தழலுந் தட்டையும்" (குறிஞ்சிப். 43). 8. கவண் (குறிஞ்சிப். 43, உரை) (திவா.); sling.

[தள் → தள → தழ → தழல். (வ.வ. 169). ஒருகா. உள் → அள → அழல் → தழல்.]

தழல்விழுங்கி *taḻal-viḻuṅgi,* பெ. (n.) தணல் விழுங்கி (வின்.), நெருப்புக்கோழி; ostrich.

[தழல் + விழுங்கி. ஒருகா. அழல் விழுங்கி → தழல்விழுங்கி.]

தழலகலல் *taḻalagalal,* பெ. (n.) அழற்சி நீங்குதல்; subsiding inflammation.

[தழல் + அகலல்]

தழலல் *taḻalal,* பெ. (n.) 1. அழலல்; being inflammed. 2. சூடாயிருத்தல்; being very hot. 3. காந்தல்; glowing as body in fever.

[உள் → அள் → அழல் → தழல். தழல் = தீ, நெருப்பு, சூடு, தீப்போல் உடலில் உண்டாகும் சுரம், மிகு காய்ச்சலால் உடம்பிலேற்படும் காந்தல்.]

தழலாடி *taḻal-āḍi,* பெ. (n.) சிவன் (தீயோடு ஆடுபவன்); Śivaṉ, as dancing with fire. 'சடையானே தழலாடி" (திவாச. 39: 2).

மறுவ. அழலாடி, அனலாடி

[தழல் + ஆடி. ஆடு → ஆடி 'இ' வினை முதலீறு]

தழலாடிவீதி *taḻal-āḍi-vīdi,* பெ. (n.) நெற்றி; forehead. "தழலாடி வீதிவட்ட மொளி" (திருப்பு. 320).

மறுவ. அழலாடிவீதி, அனலாடிவீதி, தீயாடித் திருவீதி

[தழலாடி + வீதி]

தழலி *taḻali,* பெ. (n.) நெருப்பு (பிங்.); fire. "தழலியென்பா னூக்கமோ டொருவ னின்றான்" (சேதுபு. சுத்துரு. 58).

மறுவ. அழலி

[தள் → தழ → தழல் → தழலி (வ.மொ. 2. 169).]

தழற்கல் *taḻaṟ-kal,* பெ. (n.) சுக்கான்கல் (யாழ்.அக.); kunkar, lime-stone.

[தழல் + கல்]

தழற்கொடி *taḻaṟ-koḍi,* பெ. (n.) 1. கொடுவேலி; ceylon leadwort. 2. பெரிய தழற்காய்க் கொடி; buffalo cowitch.

[தழல் + கொடி]

தழற்சி *taḻaṟci,* பெ. (n.) 1. அழலுகை (வின்.); heat, glow, burning. 2. வேக்காடு; inflammation. 3. கொதிப்பு; intense heat.

மறுவ. அழற்சி

[தள் → தழ → தழல் → தழற்சி. ஒருகா. அழல் → தழல். தழல் = மிகுவெப்பம். வெப்பத்தினால் விளையும் வேக்காடு.]

தழற்சொல் *taḻaṟ-šol,* பெ. (n.) அச்சத்தைத் தோற்றுவிக்கும் கொடுஞ்சொல் (தழலைப் போன்ற சொல்); threat, warning, as fiery words. "தண்ணிய சிறிய வெய்ய தழற்சொலாற் சாற்று கின்றான்" (சீவக. 747).

மறுவ. தீச்சொல், அழற்சொல், சுடுசொல்

[தழல் + சொல்]

தழற்பூமி *taḻaṟ-būmi,* பெ. (n.) உவர்மண் (சங்.அக.); brackish soil.

[தழல் + பூமி]

தழனாள் *talaṉāḷ,* பெ. (n.) நளிநாள், விளக்கணி நாள் (திவா.) (விளக்கேற்றி வணங்கும் நாள்); the third star Kārttigai as having Agni as the presiding deity.

மறுவ. தீபத்திருநாள்

[தழல் + நாள்]

தழாத்தொடர் *taḻā-t-toḍar,* பெ. (n.) ஒரு சொல் அடுத்துவருஞ் சொல்லை, நேரே தழுவாது அமையுந்தொடர் (நன். 153, உரை); phrase in which a word does not qualify or govern the word immediately following it, opp. to taḻuvu-toḍar.

[தழு(வு) + ஆ + தொடர். 'ஆ' எ.ம. இடைநிலை]

தழால் *taḻāl,* பெ. (n.) தழுவுகை; embrace, union. "தழாஅல் வேண்டும்" (தொல். பொருள். 644). "சுற்றம் தழால்" (திருக். 35 அதி.).

[தழு(வு) + ஆல்]

தழிச்சு-தல் *taḻiccu-,* 5 செகுவி. (v.i.) 1. தழுவுதல்; to embrace, include. 2. புகுதல்; to penetrate,as an arrow. "பொருகணை தழிச்சிய புண்டீர் மார்பின்" (தொல். பொருள். 63, உரை).

[துள் → தள் → தழ் → தழி → தழிச்சு-.]

தழிஞ்சி *taḻiñji,* பெ. (n.) 1. போரில் படைக் கலங்களால் தாக்குண்டு, கேடுற்ற தன் படையாளரை முகமன்கூறியும், பொருள் கொடுத்தும், அரசன் தழுவிக்கோடலைக் கூறும் புறத்துறை; theme describing the honour and presents offered by the king to the soldiers maimed in battle. "அழிபடைதட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ" (தொல். பொருள். 63). 2. ஒரு வீரன் தனக்குத் தோற்றோடுவோர்மேற் படையெடாத மறப்பண்பினைக் கூறும் புறத்துறை (பு. வெ. 3, 20); theme describing the valour of a warrior who does not pursue and destroy a routed adversary in full retreat. 3. பகைவர்படை, தம்எல்லையிற் புகாதபடி அரியவழியைக் காத்தலைக் கூறும் புறத் துறை (பு. வெ. 4, 3); (purap) theme describing the guarding of a narrow passage through which an enemy might enter.

[தழு → தழுவு → தழிஞ்சி (தமி. வ. 267).]

தழீஇந்தழீஇமெனல் *taḻiin-taḻiim-eṉal,* பெ. (n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. of rattling, as of a drum. "தழீஇந்தழீஇந் தண்ணம் படும்" (நாலடி, 6).

[தழீஇம் + தழீஇம் + எனல்.]

தழு[1]-த்தல் *taḻu-,* 4 செகுவி. (v.i.) தழுதழு-த்தல், பார்க்க; see taḻu-taḻu-. "குரல் தழுத்தொழிந் தேன்" (திவ். பெரியதி. 1. 1: 5).

[துள் → தள் → தழு-]

தழு[2] *taḻu,* பெ. (n.) தழுவுகை; embracing. 'தழுக்கொள் பாவம்" (தேவா. 156:4).

[தள் → தழு.]

தழுக்கு-தல் *taḻukku-,* 5 செ.கு.வி. (v.i.) செழிப்புறுதல்; to flourish, prosper. "தழுக்கிய நாளிற் றருமமுஞ் செய்யீர்" (திருமந். 254).

மறுவ. தழைத்தல்

ம. தழுக்குக

[தள் → தழு → தழுக்கு-]

தழுக்கூமத்தை *taḻu-k-kūmattai,* பெ. (n.) கொடியூமத்தை; creeper dahtura.

[தழுக்கு + ஊமத்தை.]

தழுதணை[1] *taḻu-taṇai,* பெ. (n.) கற்பாசி (புதுவை); lichen.

தழுதணை[2] *taḻu-taṇai,* பெ. (n.) 1. படர்தாமரை (யாழ்.அக.); ring-worm. 2. தோலுரியும் படர்தேமல்; a skin disease, in which the epidermis peels off. 3. எச்சிற்றழும்பு; a contagious skin disease caused by the excreta of reptiles or lizard.

ம. தழுதணம்

தழுதவப்பூடு *taḻutava-p-pūḍu,* பெ. (n.) ஒருதலைப் பூடு; garlic with only one clover or bulb.

மறுவ. ஒருதலைப்பூண்டு

[தழுதவம் + பூடு. தழுதவப்பூடு = ஒற்றைத் தலைவலிக்கு கைகண்ட மருந்து. வயிற்றில் மிகுவளியினால் ஏற்படுந்தொல்லை யையும், நெஞ்சாங்குலையையும், பேணிக் காக்கும் இயல் புடைத்து. பேறுகாலமான

பெண்களுக்கு, இப்பூண்டுக்குழம்பு நலம் பயக்கும்.]

தழுதவான் *taḻudavāṉ*, பெ. (n.) வெள்ளாடு; goat.

தழுதழு-த்தல் *taḻu-taḻu-*, 4 செ.கு.வி. (v.i.) நாக்குழறுதல்; to falter or stammer from ecstatic joy, love or other emotion. "தழுதழுத்த வசனத்தன்" (ஞானவா. கசன். 19). குழந்தை இறந்ததைக் கூறவந்த தாயின் குரல் தழுதழுத்தது (உ.வ.).

[தழு + தழு-.]

தழுதாழை *taḻu-tāḻai*, பெ. (n.) வளிமடக்கி (வாதமடக்கி); medicine for gastric trouble (செ.அக.).

மறுவ. வளியடக்கி

[தழு + தாழை → தழுதாழை = வளியடக்கி (வாதமடக்கி) என்றழைக்கப்பெறும். இம் மூலிகை வேலிகளில் சிறுசிறு மரங்களாக வளர்க்கப்பெறும். உடலிலேற் படும் அனைத்து வளிப்பிடிப்புகளுக்கும் தழுதாழை இலைச்சாறுக்கு நீர் (கியாழம்) மிகவும் சிறந்தது. ஆறாப்புண், தோல் நோய், வீக்கம், படை போன்றவற்றிற்கு, இம் மரத்தின் இலையை அரைத்து மேல் பூச்சு மருந்தாக இடுவர்.]

தழுதாளி *taḻu-tāḷi*, பெ. (n.) தழுதாழை (பதார்த்த 537) பார்க்க; see *taḻu-tāḻai*.

[தழுதாழி → தழுதாளி.]

தழுநெட்டி *taḻu-neṭṭi*, பெ. (n.) உப்பு; salt.

தழும் *taḻum*, பெ. (n.) பூசுநெய்மம் (தைலம்); an ointment.

[தழம் → தழும்]

தழும்பன் *taḻumbaṉ*, பெ. (n.) முற்காலத்துத் தமிழகத்தில் விளங்கிய வள்ளல்களில் கொடைமையிற் சிறந்த ஒரு சிற்றரசன்; an ancient chief of the Tamil land, noted for his liberality. 'வாய்மொழித் தழும்ப னூணூரன்ன' (புறநா. 348).

[தழும்பு → தழும்பல்]

தழும்பாதல் *taḻumbādal*, பெ. (n.) காயம் அல்லது புண், புரைகளினால் உடம்பில் தழும்பு உண்டாதல்; the formation of a scar or cicatrix on the skin left by a healed wound - Cicatrization.

[தழும்பு + இடு-.]

தழும்பிடு-தல் *taḻumbiḍu-*, 20 செ.கு.வி. (v.i.) புண்ணாறி வடுவாதல்; to leave a scar, as a sore when healed.

மறுவ. தழும்பு படு-தல்

[தழும்பு + இடு-.]

தழும்பு¹-தல் *taḻumbu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. தழும்புண்டாதல்; to be scarred, bruised, marked. "தழும்பு மென்னா" (உபதேசகா. சிறப்புப். 6). 2. பழகியிருத்தல்; to become practised, addicted. "களவிற்றழும்பிய கள்வனுடைய கையகத்தாயின்" (சிலப். 16:152: உரை).

ம. தழம்பிக்குக

[துள் → தழு → தழுவு → தழும்பு-.]

தழும்பு² *taḻumbu*, பெ. (n.) 1. வடு; scar, cicatrice, bruise, weal. "தோளினு முளவினுந் தழும்பு" (கம்பரா. இலங்கை கே. 50). 2. குறி; mark, impression, dent made in the skin. 3. சிதைவு (வின்.); injury, blemish. 4. குற்றம் (வின்); stigma, defect in character.

ம. தழம்பு; க., தெ. சட்டு; கோத. தள்ம்

[துள் → தழு → தழும்பு]

தழும்பு³ *taḻumbu*, பெ. (n.) 1. நாத்தழும்பு; a scar on the tongue. 2. மறு; wart. 3. அம்மைத் தழும்பு; scar of small pox. 4. எச்சிற்றழும்பு; a contagious skin disease caused by the excreta of reptiles of lizard.

மறுவ. காயவடு

[தழுவு → தழும்பு]

தழும்புவலி *taḻumbu-vali,* பெ. (n.) **ஒருவகைக் கட்டிநோய்;** painful keloid, a variety of hard tumour.

[தழும்பு + வலி]

தழுவணி *taḻu-v-aṇi,* பெ. (n.) **குரவைக்கூத்து;** dancing with clasped hands. "ஆயமொடு தழுவணி யயர்ந்து" *(குறுந்தொ. 294).*

[தழு → தழுவணி]

தழுவணை *taḻu-v-aṇai,* பெ. (n.) *1.* **பக்கத்தில் அணைத்துக் கொள்ளும் பஞ்சணை** (வின்.); side bolster, cushion. *2.* **திண்டு** *(யாழ்.அக.);* cushion for reclining. *3.* **கடலட்டை** *(யாழ்.அக.);* sea-leech. *(செ.அக.)*

[தழுவு + அணை]

தழுவல்[1] *taḻuval,* பெ. (n.) **கையில் எடுக்கக் கூடிய நெல்லரித் தொகுதி** (இ.வ.); a handfull of ears of grain.

மறுவ. கைப்பிடிஅரிதாள்

பட. தப்பு

[தழு → தழுவல்]

தழுவல்[2] *taḻuval,* பெ.(n.) **தழுவி உருவாக்கப் படுவது;** adaptation. தழுவல் இலக்கியம் (இக்வ).

[தழு → தழுவல். கதை அல்லது பாட்டு முதனூலை அடிப்படையாகக் கொண்டு, உருவாக்குகை.]

தழுவாவட்டை *taḻuvā-v-aṭṭai,* பெ. (n.) **கடலட்டை** *(வின்.);* sea-leech.

[தழுவா + அட்டை]

தழுவிய *taḻuvia,* பெ.எ. (adj.) **முழுவதும்;** breadth and length. நாடு தழுவிய போராட்டம் நடைபெறுமா? *(இக்வ.).*

[தழு → தழுவிய]

தழுவு[1]**-தல்** *taḻuvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* **அணைத்தல்;** to clasp, embrace, hug, entwine. "மகன்மெய் யாக்கையை மார்புறத் தழீஇ" *(மணிமே. 6:139).* *2.* **மேற்கொள்ளுதல்;** to adopt, as an opinion, course of life; to keep, observe, as a command. "பணிமுறை தழுவுந் தன்மையார்" *(கம்பரா. ஊர்தே. 50).* *3.* **அணைத்தா தரித்தல்;** to treat kindly. "குடிதழீஇ" *(குறள், 544).* *4.* **நட்பாக்குதல்;** to make friendship. "உலகந் தழீஇய தொட்பம்" *(குறள், 425).* *5.* **சூழ்தல்;** to surround. "தண்பணை தழீஇய" *(பெரும்பாண். 242).* *6.* **உள்ளடக்குதல்;** to compress; to contain; to keep within oneself. "அணங்குசா லுயர்நிலை தழீஇ" *(திருமுரு. 289).* *7.* **பூசுதல்;** to besmear rub on. "சாந்தங் கொண்டு நலமலிய வாகந் தழீஇ" *(பதினொ. திருக்கைலா. 15).* *8.* **பொருந்துதல்;** to mix with, join. "தமிழ்தழிய சாயலவர்" *(சீவக. 2026).* *9.* **புணர்தல்;** to copulate.

ம. தழுகுக; க. தழ்கெய்சு, தக்கெய்சு; து. தர்கொணுனி; துட. தெர்க்விள்; குட. தமப்; கோத. தப்; பட. தப்பு.

[(துள்) → தழு → தழுவு-. தழுவுதல் = உறுதல். தழுவுதலெனப்படுவது யாதெனின் அன்பின் மிகுதியாற் கலந்தணைத்தலாகும்.]

தழுவு[2] *taḻuvu,* பெ. (n.) *1.* **அணைப்பு;** embracing, clasping. "அவன் தழுவுக்குப் பிடிபடவில்லை". *2.* **இரு கையாலும் அணைக்கும் அளவு;** armful. ஒருதழுவு வைக்கோல்.

[துள் → தழு → தழுவு = அன்பு செய்பவர் அன்புசெயப்பட்டாரைத் தழுவுகை. இருகை கோர்த்தெடுக்கும் தாள் அல்லது வைக்கோளின் அளவு.]

தழுவுதொடர் *taḻuvu-toḍar,* பெ. (n.) **ஒரு சொல் மற்றொரு சொல்லை நேரே தழுவி நிற்குந் தொடர்** *(நன். 152, உரை);* phrase in which a word qualifies the word immediately following it, opp. to taḻā-t-toḍar.

[தழுவு + தொடர்]

தழூஉ *taḻūvu,* பெ. (n.) *1.* **அணைக்கை;** embracing, uniting. "தண்டா ரகலந் தழூஉப்புணையா நீ நல்கி" *(பு.வெ. 12, இருபாற். 4).* *2.* **மகளிராடுங் குரவைக்கூத்து;** women's dance with clasped hands. "துணங்கையந் தழூஉவின்" *(மதுரைக். 329).*

[தழு → தழூ → தழூஉ]

தழை[1]**-தல்** *taḻai-,* 4 செ.குவி. (v.i.) *1.* **தளிர்த்தல்;** to sprout, shoot forth. *2.* **செழித்தல்;** to thrive, grow luxuriant, as plants. "தழைந்த சந்தனச்

சோலை" (கம்பரா. சித்திர. 9). 3. தாழ்தல்; to hang down; to bow down. "தழைந்தகாதும்" (சேதுபு. கடவுள்வாழ். 8).

ம. தலெக்க; தெ. தளிர்சு

[தள் → தழு → தழை (தமி. இல. வ. முன். பக். 52)]

தழை²-த்தல் *taḻai-*, 4 செ.கு.வி. (v.i.) 1. **செழித்தல்;** to flourish, thrive, grow luxuriantly, as plants. 2. **பூரித்தல்;** to over-flow with joy. "நோக்கித் தழைத்து" (திருவாச. 27:7). 3. **மிகுதல்;** to be abundant, as a flood; to multiply. "மைத்தழையா நின்ற மாமிடற் றம்பலவன் கழற்கே" (திருக்கோ. 102). 4. **வளர்தல்;** to grow, prosper, as a family, people, state. "மெய்தழை கற்பை" (திருவிளை. வளைய. 15). நட்பு தழைக்க விட்டுக் கொடுக்க வேண்டும் (இக்வ.).

ம. தழப்க்குக; தெ. தளிர்சு

[தள் → தழு → தழை. தழைத்தல் - வளர்த்தல், செழிதல், அறுகுபோல் படர்ந்து தழைத்தல், ஆல்போல் குடும்பமும் குலமும் வேரூன்றித் தழைத்தல், செழித்து ஓங்குதல்.]

தழை³-த்தல் *taḻai-*, 4 செகுன்றாவி. (v.t.) **சீட்டாட்டத்தில் எண்ணிக்கையிற் சேராத சீட்டுகளை, இறக்குதல்;** to put down cards other than honours in a game of cards.

[தள் → தழ் → தழை-. (தமி.இல.வ.முன். பக்.52)]

தழை³ *taḻai*, பெ. (n.) 1. **தழைகை;** sprouting. "தாளிணைக டழைகொண்ட வன்பினொடு" (அரிச். பு. பாயி. 3). 2. **தளிர்;** sprout, shoot. 3. **இலை** (திவா.); leaf, foliage. 4. **இலையோடு கூடிய சிறுகொம்பு;** spray, twig, bough with leaves. 5. **மயிற்றோகை;** peacock's tail. "தழைகோலி நின்றாலும்" (திருக்கோ. 347). 6. **பீலிக்குடை** (பிங்.); fan; bunch of peacock's feathers, used as an ornamental fan. "தழைகளுந் தொங்கலுந் ததும்பி" (திவ். பெரியாழ். 3:4:1). 7. **தழையுடை** (புறநா. 116, உரை) பார்க்க; see *taḻai-y-uḍai*. 8. **ஒருவகை மாலை;** a kind of garland. "தழையுங் கண்ணியுந் தண்ணறு மாலையும்" (சீவக. 1338). 9. **பச்சிலை;** gamboge. 10. **சீட்டாட்டத்தில் எண்ணிக்கையிற் சேர்க்கப் படாத சீட்டு;** cards other than honours in a game of cards.

ம. தழ; க. தளி, தழெ; தெ. தலரு.

[தள் → தழ் → தழு - தழை (தவ. 63)]

தழைக்கண்ணி *taḻai-k-kaṇṇi*, பெ. (n.) **இலையாலாகிய மாலை;** garland of gamboge flowers. "இலையால் தொடுக்கப்பட்ட தழைக் கண்ணியையும்" (புறநா. 54, உரை).

மறுவ. குழைக்கண்ணி

[தழை + கண்ணி]

தழைக்கள்ளி *taḻai-k-kaḷḷi*, பெ. (n.) **இலைக் கள்ளி;** leaf spurge - Eupnorbia nierifolia.

[தழை + கள்ளி]



தழைக்கை *taḻaikkai*, பெ. (n.) 1. **தளிர்க்கை;** flourishing. 2. **தழைப்பு** பார்க்க; see *taḻaippu*.

[தழை → தழைக்கை]

தழைக்கோரை *taḻai-k-kōrai*, பெ. (n.) **ஒருவகைக் கோரை;** a kind of sedge grass.

[தழை + கோரை]

தழைச்சத்து *taḻai-c-cattu*, பெ. (n.) 1. **இலை தழைச்சாறு;** juice from leaves. 2. **உப்புக் காற்று;** nitrogen.

[தழை + சத்து]

தழைத்தமொழி *taḻaitta-moḻi*, பெ. (n.) **கனிவான பண்பட்ட இன்சொல்;** polite word.

[தழைத்த + மொழி - தழைத்தமொழி. அகனமர்ந்து முகனமர்ந்து, எஞ்ஞான்றும் கனிவாகக் கூறும், இன்சொல்.]

தழைத்தவயிறு *taḻaitta-vayiṟu,* பெ. (n.) *அழகான வயிறு;* a round abdomen.

[தழைத்த + வயிறு]

தழைத்தானை *taḻai-t-tāṉai,* பெ. (n.) இலையாற் செய்யப்பட்ட மேலாடை *(பெரியபு. ஆனாய. 17);* upper cloth made of leaves.

[தழை + தானை]

தழைத்துகில் *taḻai-t-tugil,* பெ. (n.) தழையுடை *பார்க்க;* see *talaiyuḍai.*

[தழை + துகில்]

தழைதாம்பு *taḻai-tāmbu,* பெ. (n.) தழையும் சிறு கொம்பும் *(இ.வ.);* leaves and twigs.

[தழை + தாம்பு]

தழைந்த *taḻainda,* பெ. எ. (adj.) பணிவோடு; மெதுவான; politely; softly *(கிரி.அக.).*

[தழை → தழைந்த = கனிவாக, பணிவாக, மெதுவாக. ஒருகா. தழைத்த → தழைந்த]

தழைநாகம் *taḻai-nāgam,* பெ. (n.) ஒருவகை இலைப்பாம்பு; foliage snake *(செ.அக.).*

[தழை + நாகம். தழை = இலை]

தழைநோய் *taḻai-nōy,* பெ. (n.) தாளடிப் பயிர்கட்கு ஏற்படும் நோய்; grossy sboot.

[தழை + நோய் = நெல், கரும்பு, வாழை முதலான பயிர்கட்கு தழை (இலைகுருத்து) யில் தோன்றும் நோய்.]

தழைப்பு *taḻaippu,* பெ. (n.) செழிக்கை, வளர்கை; flourishing, thriving.

[தள் → தழு → தழை → தழைப்பு. (தவ63)]

தழைய *taḻaiya,* வி.எ. (adv.) *1.* தரையைத் தொடும் அளவில்; low so as to be touching the ground. சேலையைத் தழையக் கட்டிக் கொண்டிருந்தாள். *2.* இறுக்கமில்லாமல்; தொய்வாக; loose. குளித்தபின் கூந்தலைத் தழையக் கட்டிக் கொண்டாள்.

[தாழ் → தழை → தழைய. ஒருகா. தாழ → தழைய.]

தழையணி *taḻai-y-aṇi,* பெ. (n.) தழையுடை பார்க்க; see *taḻai-y-uḍai* "தழையணி மருங்குன் மகளிர்" *(குறுந். 125).*

[தழை + அணி]

தழையிடுவார் *taḻai-y-iḍuvār,* பெ. (n.) திருத்துழாய் முதலிய பச்சிலைத் திருப்பணி செய்வார்; those who provide flowers and leaves for the temple. "கோவணவர்... பாடுவார் தழையிடுவார் என்று அஞ்சு கொத்திலே" *(கொயிலொ. 44).*

[தழு → தழை + இடுவார். திருக்கோயில் வளாகத்திலுள்ள, திருநந்தவனத்தில் பணிபுரிவார்.]

தழையுடை *taḻai-y-uḍai,* பெ. (n.) தழையாலான மகளிருடை; garment of strung leaves.

மறுவ. இலையாடை, தழையணி, தழை துகில், தழையாடை

[தழை + உடை = தழையுடை. தழை = இலை.]

தழையுரம் *taḻai-y-uram,* பெ. (n.) அடியுரமாக இடப்பெறும் மரங்களின் தழை; green manure.

[தழை + உரம் = தழையுரம். பயிர்கள் செழித்து விளைவதற்குத் தேவையான இயற்கையுரம்.]

தழைவாரி *taḻaivāri,* பெ. (n.) ஒருவன் கையிற் சீட்டுக் குவிதலால் அவன் தோல்வியைக் குறிக்குஞ் சீட்டாட்ட வகை (இ.வ.); a card game where an accumulation of cards in one's hands signifies one's defeat.

[தழை + வாரி]

தழைவு *taḻaivu,* பெ. (n.) *1.* தளிர்க்கை; sprouting, shooting, germinating. *2.* செழிப்பு; luxuriance of growth. *3.* குழை *(வின்.);* leaves, foliage. *4.* வளமை; plumpness, sleekness. *5.* மிகுதி; increase, abundance. "தழைவு படக் கொலைவினையினை யுட்கொடு" *(இரகு. நகரப். 16).*

[தழை → தழைவு. 'வு' = தொ.பெ.ஈறு]

தழைவுகொடு¯த்தல் *taḻaivu-koḍu-,* 4 செ.குவி. (v.i.) உடம்பு பருமனாதல்; to become plump, as the body.

[தழைவு + கொடு¯.]

தள்¹¯தல் (தட்டல்) *taḷ-,* 4 செ.குன்றாவி. (v.i.) *1.* தடுத்தல்; to kinder, obstruct, stop. "புள்ளிடை

தட்ப" (புறநா. 124). 2. நீர் முதலியவற்றைத் தளைத்தல்; to confine, as water in a tank; to dam up. "தட்டோரம்ம விவட் டட்டோரே தள்ளாதோரி வட்டள்ளா தோரே" (புறநா. 18).

க. தள்

[துள் → தள்-.]

தள்[2] *taḷ*, பெ. (n.) 1. தள்ளு,[1] பார்க்க; see *taḷḷu*,[1]. 'ஒரு தள் தள்ளினான்' (நெல்லை).

ம. தள்ளுக, க. தள்ளு

[உல் → துள் → தள்.]

தள்வம் *taḷvam*, பெ. (n.) தளுவம் (இ.வ.) பார்க்க; see *taḷuvam*.

தள்ளம்பாறு-தல் *taḷḷambāṟu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. தள்ளாடுதல் (யாழ்ப்.); to reel, stagger. "நடக்கப்புகுவது தள்ளம்பாறுவதான நடையாலே" (திவ். பெருமாள். 7.6). 2. அசைதல் (யாழ்ப்.); to totter, as a house about to fall, to sway, as a tree. 3. அலைதல் (யாழ்ப்.); to rock or roll, as a boat. 4. பெருங்கலக்கத்தில் இருத்தல் (யாழ்ப்.); to be in perturbation, as a family on the death of its head or on the verge of ruin. 5. தருக்கத்தில் தோல்வியடைதல் (யாழ்ப்.); to be baffled in argument. 6. தத்தளித்தல் (யாழ்.அக.); to struggle, as in water.

[துள் → தள் → தள்ளம் + பாறு-.]

தள்ளமாறு-தல் *taḷḷamāṟu-*, 5 செ.கு.வி. (v.i.) தள்ளம்பாறு-தல் (யாழ்ப்.) பார்க்க; see *taḷḷambāṟu-*.

[துள் → தள் → தள்ளம் + ஆறு-.]

தள்ளல் *taḷḷal*, பெ. (n.) பொய் (சூடா.); lie.

[பொள் → துள் → தள் → தள்ளல். பொள் → பொல் = உள்ளீடு அற்றது; உண்மையற்றது; பொய்மையானது. ஒருகா. துள் → தள் → தள்ளல்.]

தள்ளவாரம் *taḷḷavāram*, பெ. (n.) தள்ளாவாரம் பார்க்க; see *taḷḷāvāram*.

தள்ளாட்டம் *taḷ-ḷ-āṭṭam*, பெ. (n.) 1. அசைவு; staggering, reeling, rocking. 2. தடுமாற்றம்; wavering, fluctuation. 3. சோர்வு; faltering as from old age.

ம. தள்ளாட்டம்

[துள் → தள் + ஆட்டம்.]

தள்ளாடி *taḷḷāḍi*, பெ. (n.) தளர்ந்தநடை; faltering walk.

[தள்ளாடு → தள்ளாடி.]

தள்ளாடு-தல் *taḷ-ḷ-āḍu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. தளர்ச்சியாய் நடத்தல்; to move with faltering steps, as an aged person. "தாளிணை தளர்ந்து தள்ளாட" (பாரத. கிருட்டிண. 238). 2. தடுமாறுதல்; to stagger, reel, as a drunkard. 3. ஆடுதல்; to rock, as a ship, vacillate, sway, as a tree in a storm. "உலகுலையத் தள்ளாடிய வடமேருவின்" (கம்பரா. முதற்போ. 177). 4. மன மலைதல்; to waver, fluctuate, as the mind. "சிந்தையுந் தள்ளாடி" (சிவரக. அபுத்திபுர். 12).

ம. தள்ளாட்டம்; பட. தள்ளாடு

[துள் → தள் + ஆடு-.]

தள்ளாதகாலம் *taḷḷāda-kālam*, பெ. (n.) முதுமைக் காலம்; time of infirmity, old age.

மறுவ. கிழப்பருவம்

[தள்ளாத + காலம். தள்ளாத = முடியாத.]

தள்ளாதவன் *taḷḷādavaṉ*, பெ. (n.) வலு வில்லாதவன் (இ.வ.); infirm person.

[தள்ளாத = இயலாத. தள்ளாத + அன்: "அன்" ஆண்பாலீறு]

தள்ளாமை *taḷḷāmai*, பெ. (n.) 1. தளர்ச்சி (அ.வ.); inability, impotence, infirmity through old age. 2. இல்லாமை (யாழ். அக.); poverty.

[தள் + ஆ + மை. 'ஆ' எ.ம. இடைநிலை]

தள்ளாவாரம் *taḷḷā-vāram*, பெ. (n.) சோம்பல் (பிங்.); laziness.

தள்ளிச்சி *taḷḷicci*, பெ. (n.) பூநீறு (யாழ்.அக.); a white-coloured earthy matter containing a large proportion of carbonate of soda from which soda is prepared.

தள்ளி *taḷḷi*, கு.வி.எ. (adv.) 1. விலகி; aside. 2. தொலைவில் (தூரத்தில்); away. தள்ளி நில். தள்ளிச் செல் (இக்.வ.).

[தள்ளு → தள்ளி]

தள்ளிப்போ-தல் *taḷḷi-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) பின்னால்போதல்; காலந்தாழ்த்தல்; to get put

off; delayed. *அவள் திருமணம் ஏனோ தள்ளிப் போய்க்கொண்டேயிருக்கிறது (உ.வ.).*

[(தள்ளு) → தள்ளி + போ-.]

தள்ளிப்போடு-தல் *taḷḷi-p-pōḍu-, 19* செ.குவி. (v.t.) **குறிப்பிட்ட காலத்தில் செய்ய வேண்டியதைச் செய்யாமல் காலந் தாழ்த்துதல்;** to postpone things to be done immediatly. *விரைந்து முடிவு எடு, தள்ளிப் போட்டுக் கொண்டே போகாதே (இக்.வ.).*

ம. தள்ளியிடுக

[(தள்ளு) → தள்ளி + போடு-.]

தள்ளிவிடு[1]-தல் *taḷḷi-viḍu-, 18* செ.குன்றாவி. (v.t.) *1.* **பொறுப்பு முதலியவற்றை விலக்குதல்** *(புதுவை);* to evade, as responsibility. *தான் பார்க்கவேண்டிய கோப்புகளை, அடுத்தவருக்குத் தள்ளிவிடுதல் நன்றன்று (உ.வ.).* *2.* **உரியவிலை வாராவிடினும், குறைந்தவிலை கேட்பாருக்குப் பொருள்களை விற்றுவிடுதல்;** to sell to lower price and push the products out. *ஆண்டு முடிவையொட்டிப் பொருள்களை வந்த விலைக்குத் தள்ளிவிட்டார்கள் (உ.வ.).*

ம. தள்ளிவிடுக

[(தள்ளு) → தள்ளி + விடு-.]

தள்ளிவிடு[2]-தல் *taḷḷi-viḍu-, 18* செ.குன்றாவி. (v.t.) **விலக்கிவிடுதல்;** to reject, dismiss.

[(தள்ளு) → தள்ளி + விடு-.]

தள்ளிவெட்டி *taḷḷi-veṭṭi,* பெ. (n.) **மதிற்பொறி வகை** *(சிலப். 15:216, உரை);* a military engine for defence.

[(தள்ளு) → தள்ளி + வெட்டி.]

தள்ளிவை-த்தல் *taḷḷi-vai-, 4* செகுன்றாவி. (v.t.) *1.* **தள்ளிப்போடுதல்;** to postpone. *கடும் தண்ணீர் பஞ்சம் காரணமாக பள்ளித் தேர்வுகளை தள்ளி வைத்து விட்டனர். (இக்.வ.).* *2.* **இடம்விட்டு வைத்தல்;** to remove a little further off, shift. பொத்தகத்தைத் தள்ளிவை (உவ.). *3.* **நாளொற்றி வைத்தல்;** to adjourn, as a case. *விசாரணை நாளைத் தள்ளிவைத் திருக்கிறார்கள் (உ.வ.).* *4.* **ஒழுக்கக்கேடு முதலியவற்றால் சாதிக் கூட்டங்களுக்குப் புறம்பாக்குதல்;** to caste off, exclude from society, excommunicate. *ஒழுக்கக் கேட்டால் அவளைத் தள்ளிவைத்தார்கள் (உ.வ.).* *5.* **வேலையிலிருந்து விலக்கிவைத்தல்;** to suspend from office. *வேலையிலிருந்து விலக்கி வைத்தார்கள் (உ.வ.).* *6.* **விலக்கிவிடுதல்** (இ.வ.); to abandon, as a wife.

[(தள்ளு) → தள்ளி + வை-.]

தள்ளு[1]-தல் *taḷḷu-, 5* செகுவி. (v.i.) *1.* **விலகுதல்;** to be removed. *"உறுநோய்கள் தள்ளிப்போக" (தேவா.).* *2.* **தவறுதல்;** to be lost, to fail. *"கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை" (குறள், 290).* *3.* **குன்றுதல்;** to shrink, diminish. *"தள்ளா விளையுளும்" (குறள், 731.).* *4.* **மறப்பாற் சோர்தல்;** to be unconscious; to be forgetful. *"தள்ளியும் வாயிற் பொய்கூறார்" (நாலடி, 157).* *5.* **தடுமாறுதல்;** to stagger, reel, stumble. *'தள்ளித் தளர்நடையிட்டு" (திவ். பெரியாழ். 2,10:6).* *6.* **வலியுடைத்தாதல்;** to be able; to be capable of. *அவன் அது செய்யத் தள்ளவில்லை (உ.வ.).* *7.* **வெளியேறுதல்;** to emerge, come out, protrude. *வாயில் நுரைதள்ளுகிறது (உ.வ.).*

தள்ளு[2]-தல் *taḷḷu-, 5* செ.குன்றாவி. (v.t.) *1.* **முன் செல்லுமாறு தாக்குதல்;** to push, force forward, shove away. *2.* **புறம்பாக்குதல்;** to expel, to cast off, excommunicate. *சாதியினின்று தள்ளப்பட்டான் (உ.வ.).* *3.* **கைவிடுதல்;** to forsake, abandon, relinquish, renounce. *"சுவாமி என்னைத் தள்ளாதிரும்"* (வின்.). *4.* **ஏற்றுக் கொள்ளா திருத்தல்;** to reject, disapprove. *"தள்ளியுரை செய்யா முன்னர்" (திருவாலவா. 57, 22).* *5.* **விலக்குதல்;** to refute, confute. *சொன்ன காரணங்களில் ஏராளமானவற்றைத் தள்ளி விட்டான் (உ.வ.).* *6.* **பாராமுகமாயிருத்தல் ஒதுக்குதல்;** to neglect. *"தள்ளாத கேண்மை" (தணிகைப்பு. களவு.499).* *7.* **வழக்கைத் தள்ளுபடி செய்தல், முடிவு செய்தல்;** to dismiss, as a suit. *8.* **முறை மன்றம் வழக்கை ஏற்க மறுத்தல்;** to refuse to admit, as a plaint. *9.* **வரி முதலியன தள்ளுபடி செய்தல்;** to discharge from obligation, exempt, remit. *10.* **கழித்தல்;** to deduct, subtract. *வட்டித் தொகையைத் தள்ளிப்பார் (உ.வ.).* *11.* **அமுக்குதல்;** to press down. *"மென்பூத் தள்ளத் தம்மிடைக ணோவ" (கம்பரா. உலாவி. 4).* *12.* **வெட்டுதல்;** to sever, cut off. *"என் தலையைத் தள்ளத்தகும்"*

(பதினொ. திருத்தொண்.14). 13. கொல்லுதல்; to kill. "சம்பரப்பேர்த் தானவனைத் தள்ளி" (கம்பரா. கிளை. 63). 14. மறத்தல்; to forget. "தள்ளியுஞ் செல்பவோ . . . அருளின் மறவ ரதர்" (திணைமாலை. 84). 15. புத்தகவிதழ் திருப்புதல்; to turn over, turn back, as the leaves of a book. 16. காலங்கழித்தல்; to pass, as one's days. காலந் தள்ளுகிறான் (உ.வ.). 17. தோணி செலுத்துதல் (யாழ்ப்.); to launch, row, sail, as a vessel. 18. தூண்டுதல்; to incite, stimulate. "காண்டு மென் றறிவுதள்ளி" (கம்பரா. சம்பா. 54).

ம. தள்ளுக; க., பட., தள், தள்ளு; தெ. தலகு, தல்கு, தலுகு; து. தல்லுணி, தள்ளுனி; கோத. தள்; துட. தொள்

[துள் → தள் → தள்ளு- (மு.தா. 54.)]

தள்ளு[2] *ta*l*l*u*, பெ. (n.) 1. அகற்றுகை; pushing, rejecting. 2. கணக்கிற்கழிவு; deduction, discount. 3. நீக்குகை; dismissal, discharge, banishment, divorce. 4. கைவிடுகை; abandonment, renunciation, relinquishment.

[துள் → தள் → தள்ளு-.]

தள்ளுண்டவன் *ta*l*l*un*d*avan*, பெ. (n.) விலக்கப்பட்டவன்; rejected person, out- caste, reprobate.

[தள் → தள்ளு + உண்டவன்]

தள்ளுதற்சீட்டு *ta*l*l*utar*-cī*t*t*u*, பெ. (n.) மணவிலக்குத் தாள் (வின்.); bill of divorcement.

[தள்ளுதல் + சீட்டு]

தள்ளுநூக்குப்படு-தல் *ta*l*l*u-nūkku-p-pa*d*u-*, 20 செ.குவி. (v.i.) இழுபறிப்படுதல் (யாழ்.அக.); to be pushed this way and that.

[தள்ளு + நூக்கு + படு-.]

தள்ளுப்புள்ளு *ta*l*l*u-p-pu*l*l*u*, பெ. (n.) இழுபறி; scuffle, pushing and pulling.

மறுவ. தள்ளுமுள்ளு, தள்ளுமெள்ளு

[தள்ளு + புள்ளு]

தள்ளுபடி *ta*l*l*u-pa*d*i*, பெ. (n.) 1. தள்ளப் பட்டது; that which is rejected, dismissed, discarded, abandoned, cancelled, refused. 2. கணக்கிற் கழிக்கப்பட்டது; deduction, discount, allowance. 3. விலக்கு; exception; exemption. 'கூட்டுறவுக் கடைகளில் விழாக் காலங்களில் 20 விழுக்காடு தள்ளுபடியில் விற்கிறார்கள். (இக்.வ.). இட்டலி, தோசை, வடை எதுவும் அவருக்குத் தள்ளுபடி இல்லை (இ.வ.).

[தள்ளு + படி]

தள்ளுபடிசெய்-தல் *ta*l*l*uba*d*i-šey-*, 1 செ.குன்றாவி. (v.t.) 1. புறந்தள்ளல் (நிராகரித்தல்); to reject. தன்னைப் பணி நீக்கம் செய்ததை எதிர்த்து அந்த அதிகாரி கொடுத்த வழக்கு உயர்நீதி மன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது (இக்.கா.). 2. நீக்கஞ்செய்தல் (விலக்குதல்); to write off.

[தள்ளுபடி + செய்-.]

தள்ளுபடியாகமம் *ta*l*l*uba*d*i-y-āgamam*, பெ. (n.) விவிலிய நூற்பகுதி (கிறித்.); apocryphal books.

[தள்ளுபடி + ஆகமம்]

தள்ளுமட்டம் *ta*l*l*u-ma*t*t*am*, பெ. (n.) யானையின் இளங்குட்டி (வின்.) (பெரிய யானைகளால் தள்ளி நடைபயிற்றப் பெறுவது); young elephant, as having to be pushed forword and guided by the old ones.

[தள்ளு + மட்டம்.]

தள்ளுமுள்ளு *ta*l*l*u-mu*l*l*u*, பெ. (n.) தள்ளுப் புள்ளு (இ.வ.) பார்க்க; see *ta*l*l*u-p-pu*l*l*u*.

[தள்ளு + முள்ளு.]

தள்ளுமெள்ளு *ta*l*l*u-me*l*l*u*, பெ. (n.) தள்ளுப்புள்ளு (வின்.) பார்க்க; see *ta*l*l*u -p-pu*l*l*u*.

[தள்ளு + மெள்ளு.]

தள்ளுவண்டி *ta*l*l*u-va*n*d*i*, பெ.(n.) 1. கையால் தள்ளிச் செலுத்தும் சிறுவண்டி; wheel barrow, perambulator. தள்ளுவண்டியில் காய்கறி விற்றுக் கொண்டு வந்தான் (இக்.வ.). நகரங்களில் குழந்தைகளுக்கான தள்ளுவண்டி வாங்கலாம் (உ.வ.). 2. சிறுகுழந்தை நடந்து பழக ஆதரவாக உள்ள, சிறுவண்டி; small cart.

மறுவ. நடைவண்டி

[தள்ளு + வண்டி]

தள்ளுறு-தல் *taḷ-ḷ-uṟu-*, 20 செ.கு.வி. (v.i.) *1.* **தள்ளப்படுதல்;** to be rejected, removed. *2.* **வருந்துதல்;** to be in distress. "உள்ளந் தள்ளுற லொழிந்து" *(கம்பரா. மாயாசீ. 34).*

ம. தள்ளூரம்

[தள்ளு + உறு-.]

தள்ளை *taḷḷai,* பெ. (n.) தாய் *(தொல்.சொல். 400, உரை);* mother.

ம. தள்ள; தெ. தல்லி

[தள் → தள்ளை (வ.மொ.வ.175)]

தளகருத்தம் *taḷakaruttam,* பெ. (n.) **படைத் தலைமை;** office of commander. "மைசூரான் வாசல் தளகர்த்தம் கம்பணவுடை யார்" *(மதுரைத் தடுப். மதுரைத்தல. பக்.2).*

[தள் → தளம் + கருத்தம் → தளகருத்தம். தளம் படைக்குழுமம் உள்ள இடம்]

தளகருத்தன் *taḷa-karuttaṉ,* பெ. (n.) **படைத் தலைவன்;** captain, general, marshal, commander-in-chief. "காலமுந் தன்பலமு மெண்ணியிகல் வென்றிடக் கருதுவோன் றளகர்த்த னாம்" *(திருவேங். சத. 8).*

[தளம் + கருத்தன்]

தளகருத்தா *taḷa-karuttā,* பெ. (n.) **தளகருத்தன்** பார்க்க; see *taḷakaruttaṉ* (செ.அக.).

[தளம் + கருத்தா]

தளசிங்கம் *taḷa-śiṅgam,* பெ. (n.) **பெருவீரன் (போர்க்களத்திற் சிங்கம் போன்றவன்);** a valiant soldier, as a lion in battle. "தளசிங்க மன்னநும் வீரம்" *(பிரயோத. 24, 28).*

[தளம் + சிங்கம். போர்க்களத்தில் அரிமா நோக்குடன் சுற்றியுள்ள, பகைவர்களை அழிப்பவன்]

தளத்தி *taḷatti,* பெ. (n.) **தளர்ச்சி;** depressed exhausted.

[தள் → தள → தளத்தி (மு.தா.309)]

தளதள-த்தல் *taḷa-taḷa-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* **விரிவடைதல், பருத்தல்;** to plump, full, sleek, as the body. *2.* **ஒளிவிழுதல்;** to be brilliant, transparent. "பசுநரம்பு தளதளப்ப" *(குற்றா. தல. தருமசாமி. 34). 3.* **நெகிழ்தல்;** to become loose, as a cloth worn upon the person. அரை வேட்டி தளதளத்து விட்டது (உ.வ.).

ம. தளதள

[துள் → தள் → தள → தளதள- (திரு.தமி.மர. 155)]

விரிந்த பொருள் தளருந்தன்மைத்து. பரந்த ஒளி குறைதலும் இயல்பேயாம். 'தளதள' - ஆடையின் நெகிழுந்தன்மை. தளதளத்தல் - ஆடைநெகிழ்தல்

தளதளப்பு *taḷa-taḷappu,* பெ. (n.) *1.* **விரிவாகுகை (புஷ்டி.), கொழுக்கை;** being plump or full, as the face. *2.* **காந்தி, ஒளிர்வு;** brilliance. உடல் தளதளவென்று வளர்ந்துவிட்டாள் (உ.வ.). *3.* **வீக்கம்** (யாழ்.அக.); swelling.

[துள் → தள் → தள → தளதளப்பு. (தமி.இல.வ.முன். 32)]

ஒருகா. பளபளப்பு தளதளப்பு. பளீரென்று மின்னல் வெட்டியது என்னும் வழக்காலறிக. மிகுதிக் கொழுப்பாலும், அறிவின் முதிர்ச்சியாலும் முகமும் உடலும் பளபளப்பது இயல்பென்றறிக.

தளதளெனல் *taḷataḷeṉal,* பெ. (n.) *1.* **ஒளி வீசுதற் குறிப்பு;** being brilliant. *2.* **விரிவாதல்குறிப்பு;** being plump. *3.* **இளகுதற்குறிப்பு;** melting, as gold. "தளதளவென் றிளகி" *(அருட்பா, vi, அமையங்கூற. 5). 4.* **ஒலிக்குறிப்பு;** bubbling, as boiling water. சோறு தளதளவென்று கொதிக்கிறது (உ.வ.).

[துள → தள → தளதள + எனல் (திரு. தமி. மர. 155)]

தளப்படி *taḷa-p-paḍi,* பெ. (n.) மனவுலைவு *(யாழ்ப்.);* agitation of mind, wavering, anxiety.

[தளம் + படி]

தளப்பம்[1] *taḷappam,* பெ. (n.) *1.* தளப்படி பார்க்க; see *taḷappaḍi.* "தளப்பந்தீருமிறே இவர்க்கு" *(ஈடு, 6:10:1). 2.* காதணிவகை; an ear - ornament. "தக்கையிட்ட காதிற் றளப்பமிட்டு" *(விறலிவிடு. 184).*

[தளம்பம் → தளப்பம்]

தளப்பம்[2] *taḷappam,* பெ. (n.) தாளிப்பனை *(வின்.);* South Indian talipot-palm.

[தாள → தள → தளப்பம்]

தளப்பற்று *taḷa-p-paṟṟu,* பெ. (n.) *1.* திப்பலிப் பனை *(மலை);* jaggery-palm. *2.* விருது குடையாக எடுக்கும் தாளிப்பனையோலை *(வின்.);* leaf of the talipot-ōalai, used as an umbrella or a badge of honour.

[தள → தள + பற்று]

தளப்பற்றுக்காரன் *taḷa-p-paṟṟu-k-kāran,* பெ. (n.) ஒலை பிடித்தெழுதுவோன் *(யாழ். அக);* writer on palm leaf.

[தளப்பற்று + காரன் = "காரன்" உடைமைப் பெயரீறு.]

தளப்பற்றுமீன் *taḷa-p-paṟṟu-mīn,* பெ. (n.) கடல் மீன்வகை *(யாழ்.அக.);* a kind of sea - fish.

[தளப்பற்று + மீன்]

தளப்பு *taḷappu,* பெ. (n.) கேடு; injury, evil influence. "தளப்பிலா முகூர்த்தம் வல்லோன்" *(பாரத. முகூர்த். 2).*

[தளம்பு → தளப்பு]

தளபஞ்சி *taḷa-pañji,* பெ. (n.) நெற்றியில் வெள்ளைப் புள்ளியையும், வெண்மை யல்லாத வேறு ஒரே நிறத்தினையுமுடைய குதிரை *(சுக்கிர நீதி, 317);* horse that, except for a white spot in the forehead, is of a single colour other than white.

தளபதி *taḷa-padi,* பெ. (n.) தளகருத்தன் *(யாழ்.அக.)* பார்க்க; see *taḷakaruttan.*

[தளம்[1] + பதி]

தளபாடம்[1] *taḷa-pāḍam,* பெ. (n.) தளவாடம் பார்க்க; see *taḷavāḍam (செ.அக.).*

[தளம் + பாடம்]

தளபாடம்[2] *taḷa-pāḍam,* பெ. (n.) பாடம் முழுமையும் நன்கு அறிந்திருத்தல்; that which is at one's finger's ends, as a lesson.

[தளம் + பாடம்]

தளபாடம்[3] *taḷa-pāḍam,* பெ. (n.) போர்ப்படை; army. "திருவடிராச்சியத்துக்கு மன்னரையும் தளபாடமும் அனுப்பியருளி" *(S.I.I.vii, 21).*

[தள் → தளம் – படைக்குழும வீடு. தளம் + பாடம்]

தளம்[1] *taḷam,* பெ. (n.) *1.* பருமன்; thickness, as of a board, heaviness. "தளமாய்ச் சமநிலத்துத் தண்காற்று நான்கும்" *(சீவக. 719, உரை). 2.* வெண்சாந்து *(பிங்.);* white sandal paste. *3.* செஞ்சாந்து *(பிங்.);* red sandal paste.

தெ. தளமு

[தள் → தளம்]

தளம்[2] *taḷam,* பெ. (n.) *1.* செங்கல், கருங்கல், சுதைமா பாவிய தரை; floor or pavement , as of brick, stone or cement. *2.* மொட்டைமாடி *(அக. நி.);* terrace roof, upper open space room or balcony. *3.* தட்டு; loft, storey, deck of a ship. *4.* மேடை *(சூடா.);* platform, mound. *5.* அடுக்குமாடிகளில் முதல் தளம் இரண்டாம் தளம் என்றமைந்த குடியிருப்புகள்; various floors in residential flats or any building or tower.

ம. தளம்; க. தள; தெ. தளமு

[தள் → தளம். த. தளம் → வ. தல]

தளம்[3] *taḷam,* பெ. (n.) *1.* இலை *(சூடா.);* leaf. *2.* பூவிதழ் *(சூடா.);* petal. *3.* முல்லை; jasmine. "தளவள முகைகொள் பல்லாட் சீவகன் றழுவி நின்றால்" *(சீவக. 751). 4.* போர்ப்படை; army. "எதிர்த்து வெட்டுந் தளமோ" *(தாயு. பராபர. 283). 5.* கூட்டம் *(பிங்.);* multitude of men or beasts. *6.* சாணை பிடியாத கெம்பு; unpolished ruby. "தளம் பத்துமாக மாணிக்கம்" *(S.I. I. ii, 81).*

ம. தளம்; க. தள; தெ. தளமு

[தள் → தளம்]

தளம்[4] *taḷam,* பெ. (n.) *சாடி (பிங்.);* jar, water-pot.

தளம்[5] *taḷam,* பெ. (n.) 1. *அடிப்படை;* basis; foundation. "நாராயணாதி சப்தங்களிலே விவக்ஷிதமான ஸம்பந்தத்தை சித்தாந்தத்துக்குத் தளமாக்கி" (ரஹஸ்ய. 166). 2. *அடி; அடிபரப்பு;* base, lower-part. 3. *சுண்ணாம்பு (இவ.);* chunnam

[தள் → தளம் = அடியிடம், அடிபரப்பு]

[த. தளம் → வ. தல. இச் சொற்கு வடவர் காட்டும் 'ஸ்த்ரு' என்னும் மூலம் பொருந்தாமை காண்க. ஸ்த்ரு = சிதறு. 'சிதறு' என்னும் தென்சொல்லே, 'strew' என்னும், ஆங்கிலச்சொற்கும், 'ஸ்த்ரு' என்னும் வடசொற்கும் மூலமாகத் தெரிகின்றது (வ.வ. பகுதி, 2, பக்.6)]

தளம்பாறை *taḷam-pāṟai,* பெ. (n.) ஒரு விரல நீளமும், நீலநிறமுமுள்ள கடல்மீன் வகை; sea - fish, bluish, attaining 1 in. in length, Caranx malabaricus.

[தளம் + பாறை.]



தளம்பு[1]**-தல்** *taḷambu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. *ததும்புதல்;* to wabble, flap, fluctuate, as water in a moving vessel. 2. *இருபுறமும் மாறிச் சாய்ந்தாடுதல் (யாழ்ப்.);* to be unsteady, as a floating pot; to sway, as a spinning top; to totter, stagger with the weight of a load; to shake, as the top of a car when drawn: to move, as drops of water on a leaf; to be shaky, as a load. 3. *மனமலைதல்;* to fluctuate, waver, hesitate, vacillate. "தளம்பு நெஞ்சுடைய" (திருவாலவா, 38:49). 4. *பழக்கமுறுதல்* (நான்மணி. 12, உரை); to get accustomed. 5. *முட்டுப்படுதல் (வின்.);* to be in straits for a livelihood.

[தளும்பு → தளம்பு (மு.தா. 68)]

தளம்பு[2] *taḷambu,* பெ. (n.) 1. *மதகு (வின்.);* flood-gate, sluice. 2. *சேறுகுத்தி;* an instrument for working in mud. "செறுவிற் றளம்பு தடிந்திட்ட" (புறநா. 61:3).

தளமெடு-த்தல் *taḷam-eḍu-,* 4 செ.குவி. (v.i.) 1. *படையெடுத்தல் (யாழ்.அக.);* to invade. 2. *சண்டை தொடங்குதல்;* to begin to quarrel. "கள்ளி தளமெடுத்தாள்" (விறலிவிடு).

[தளம் + எடு-.]

தளர்[1]**-தல்** *taḷar-,* 17 செ.குவி. (v.i.) 1. *சோர்தல்;* to droop, faint, grow weary, enfeebled, infirm or decrepit. "தளர்ந்தே னெம்பிரா னென்னைத் தாங்கிக் கொள்ளே" (திருவாச. 6, 1). 2. *நெகிழ்தல்;* to grow slack, become relaxed, as a tie or grasp. 3. *உடற்கட்டுக் குலைதல்;* to become flappy from age. இரண்டு மாதமாகப் படுத்தப் படுக்கையாய்க் கிடந்ததில் மிகவும் தளர்ந்து போனார் (இக்வ.). "தாழாத் தளராத் தலைநடுங்கா" (நாலடி, 14). 4. *மனங்கலங்குதல்;* to suffer in mind, to be troubled at heart. to lose one's presence of mind. இந்த முறையும் தேர்வில் தேறவில்லை என்றதும் தளர்ந்து போனான் (இக்.வ.). 5. *உயிரொடுங்குதல்;* to lose one's vitality. "தகைபாடவலாய் தளர்கோ தளர்கோ" (சீவக. 1379). 6. *இறத்தல்;* to die. 7. *நுடங்குதல்;* to be flexible, tender. "தண்டாக் காதற் றளரிய றலைவன்" (பு.வெ. 9, 45, கொளு). 8. *சோம்புதல் (வின்.);* to be remiss, to be indifferent in duty, to grow careless, to degenerate. 9. *தவறுதல்;* to go astray. "நெறியிற் றளர்வார் தமநெஞ் சுருகி" (சீவக. 1190).

ம. தளருக; க. தளர்; தெ. தலநம; து. தளம்பன், தளமள; காத. தளர்; குட. தளெ; மா. தள் க்வெரொ

[துள் → (தள்) → தளர் (மு.தா.309) தொளதொளத்தற் கருத்தினின்று முகிழ்த்த சொல்லாகும்: தொளதொளத் தலாவது, ஒன்று இன்னொன்றுள், இறுகப் பொருந்தாதவாறு தளர்ந்திருத்தலாகும். ஒருகா. தொள → தொளர் → தளர் → தளர்- (வே.க. 288)]

தளர்[2] *taḷar,* பெ. (n.) தளர்ச்சி (வின்.); slackening.

[தள் → தளர்]

தளர்ச்சி *taḷarcci,* பெ. (n.) 1. நெகிழ்ச்சி (தைலவ. தைல. 128); slackness, looseness, flexibility. 2. களைப்பு, சோர்வு; weakness, in firmity, decrepitude, faintness, langour, depression of spirits. 3. சோம்பல் (சங்.அக.); remiss. 4. ஏழ்மை (சங்.அக.); poverty.

ம. தளர்ச்ச

[துள் → (தள்) → தளர் → தளர்ச்சி]

தளர்த்தி *taḷartti,* பெ. (n.) தளர்ச்சி பார்க்க; see *taḷarcci.*

[தள் → தள → தளத்தி.]

தளர்த்து-தல் *taḷarttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நெகிழ்த்துதல்; to loosen (செ.அக.).

ம. தளர்த்துக

[தள் → தளர் → தளர்ந்து → தளர்த்து-.]

தளர்ந்துகொடு-த்தல் *taḷarndu-koḍu-,* 4 செகுவி. (v.i.) இணங்குதல் (யாழ்ப்.); to yield.

[தள் → தளர் → தளர்ந்து + கொடு-.]

தளர்நடை *taḷar-naḍai,* பெ. (n.) முதலில் குழந்தைகள் தடுமாறி நடக்கும் நடை; tottering walk, wobbling, as of a child. "தளர்நடை தாங்காக் கிளர்பூட் புதல்வரை" (மணிமே. 3:141).

[தளர் + நடை : தட்டுத்தடுமாறி நடக்குஞ் சிறாஅர் நடை.]

தளர்பாடம் *taḷar-pāḍam,* பெ. (n.) தளபாடம்[2] (யாழ்.அக.) பார்க்க; see *taḷa-pāḍam*[2].

[தளர் + பாடம்]

தளர்வு *taḷarvu,* பெ. (n.) 1. நெகிழ்கை, இளைப்பாறுகை; growing slack, relaxing. 2. தடுமாறுகை; staggering. 3. சோர்வு; faintness, weakness; depression of spirits. "தளர்வெய்திக் கிடப்பேனை" (திருவாச. 31:2). 4. வருத்தம்; sorrow. "தளர்வுறுமித் தாய்" (பெரியபு. மனுநீதி. 31).

ம. தளர்வ்வு

[தள் → தளர் → தளர்வு.]

தளவட்டம் *taḷa-vaṭṭam,* பெ. (n.) பூவிதழ்ச் சுற்று; corolla.

[தளம் + வட்டம்]

தளவடாம் *taḷa-vaḍām,* பெ. (n.) அரிசி கஞ்சியாலாகிய மெல்லிய வடாகம்; thin rice -cake.

மறுவ. இலைவடகம்

[தளம் + வாடு. வாடு → வாடகம் → வடகம் → வடாம்]

தளவம் *taḷavam,* பெ. (n.) 1. செம்முல்லை; golden jasmine. "முல்லையொடு தளவமல ருதிர" (ஐங்குறு. 422). 2. முல்லை (மலை); Arabian jasmine.

ம. தளபம்

[தள் → தளவு → தளவம் (மு. தா. 154)]

தளவரிசை *taḷa-varišai,* பெ. (n.) 1. கற்பரப்பு; flooring pavement. 2. எழுதகம் (யாழ்ப்.); lower moulding.

மறுவ. தளவியை, தளவிசை

[தளம் + வரிசை]

தளவாடம் *taḷa-vāḍam,* பெ. (n.) வேலை செய்தற்கு வேண்டிய கருவி முதலியன; tools, materials, requities tackle, furniture.

ம. தளவாடம்

[தள(ம்) + வாடம்]

தளவாய் *taḷa-vāy,* பெ. (n.) படைத்தலைவன்; military commander, minister of war. "ஒன்னலரை வென்று வருகின்ற தளவாய்" (திருவேங். சத.89).

க. தளவாய்; தெ. தளவாயி

[தளம்[1] + வாய்]

தளவான் *taḷavāṉ,* பெ. (n.) தளவாய்; military commander. "வெற்பது தளவான்" (இரகு. நகர. 13);

[தளவாய் → தளவான்]

தளவிசை *taḷa-višai,* பெ. (n.) தளவரிசை; flooring pavement. "அடையவளைஞ்சான் தளவிசை படுப்பித்தார்" (S.I.I. i, 84).

[தளம் + விசை. வரிசை → விசை]

தளவியை *taḷaviyai,* பெ. (n.) தளவிசை (யாழ்.அக.) பார்க்க; see *taḷa-viśai.*

[தளம் + வியை. விசை → வியை]

தளவு[1] *taḷavu,* பெ. (n.) யானையின் வாய் (பிங்.); elephant's mouth.

[துள் → தள → தளவு]

தளவு[2] *taḷavu,* பெ. (n.) *1.* செம்முல்லை; golden jasmine. "பனப்பூந் தளவொடு முல்லை பறித்து" *(கலித். 108, 42). 2.* முல்லை; arabian jasmine. *3.* ஊசிமல்லிகை (பிங்.); eared jasmine.

[தள → தளவு.]

தளா *taḷā,* பெ. (n.) தளவு[2] பார்க்க; see *taḷavu*[2]. 'யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும்" *(தொல். எழுத். 229).*

[தள் → தள → தளா.]

தளாபம் *taḷābam,* பெ. (n.) மணிக்கற்களுள் ஒன்று *(சுக்கிர நீதி, 186);* a kind of gem.

[தளா → தளாபம்.]

தளி[1]**-த்தல்** *taḷi-,* 4 செ.குவி. (v.i.) துளித்தல்; to drip, as rain. "நுண்மழை தளித்தென" *(ஐங்குறு. 328).*

[துளிர் → தளி-.]

தளி[2]**-த்தல்** *taḷi-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1.* பூசுதல்; to smear, as sandal. "ஆரியாக வஞ்சாந்தந் தளித்தபின்" *(சீவக. 129). 2.* தெளித்தல் (நாஞ்.); to sprinkle.

க. தளி, ம. தளிக்குக; க. தளி, தளிடு; து. தலிபுனி; கோத. தெய்ள்; குட. தளி; கோண். தெக்கானா; குரு. தென்னா

[தெளி → தளி-.]

தளி[2] *taḷi,* பெ. (n.) *1.* நீர்த்துளி; drop of water, rain drop. "தளிபொழி தளிரன்ன" *(கலித். 13). 2.* தலைப்பெயன் மழை (பிங்.); first shower of rain. "தளிபெருகுந் தண்சினைய பொழில்" *(பரிபா. 8,91). 3.* முகில்; cloud. "தளியிற் சிறந்தனை" *(கலித். 50, 16). 4.* குளிர் (இலக்.அக.); coolness.

[தெளி → தளி.]

தளி[3]**-தல்** *taḷi-,* 4 செ.குன்றாவி. (v.t.) தெளிதல்; to comprehend clearly. "ஆதிப்பிரானைத் தளிந்த வர்க்கல்லது தாங்க வொண்ணாதே" *(திருமந். 527).*

[தெளி → தளி.]

தளி[4] *taḷi,* பெ. (n.) *1.* கோயில்; temple, sacred shrine. "காமர்சாலை தளிநிறுமின்" *(சீவக. 306). 2.* இடம்; place, room. "அடிசிற் றளிய னெய்வார்ந்து" *(சீவக. 2579).*

ம., க. தளி

த. தளி → Skt. sthalī

[தள் → தளி.]

தளி[5] *taḷi,* பெ. (n.) *1.* விளக்குத்தகழி; oil-vessel of a lamp. *2.* விளக்குத்தண்டு (வின்.); lamp - stand (செ.அக.).

ம. தளி

[தகழி → தழி → தளி.]

தளிகை[1] *taḷigai,* பெ. (n.) *1.* உண்கலம்; eating-plate, platter. "தளிகை பஞ்வன்மாதேவி என்னுந் திருநாமமுடையது" (S.I.I. ii, 211). *2.* சமையல்; cooking. வீட்டில் இன்னும் தளிகையாக வில்லை (vaiṣṇ). *3.* கடவுளுக்குப் படைத்த குறிப்பிட்ட அளவுசோறு (I.M.P.S.A. 148); a certain quantity of boiled rice offered to idols in temples. *4.* கூழ்க்கட்டி (யாழ்.அக.); solidified rice porridge.

ம. தளிக; க. தளிகெ; தெ. தலிக, தளிக, தளிய, தளிகெ; கோத. தலியா; துட. தரக

[தள் → தளி → தளிகை.]

தளிகை[2] *taḷigai,* பெ. (n.) நூல்தாங்கி; book stand. "பொன்னின் றளிகை மிசைவைத்து" *(திருவிளை. திருமுகம். 24).*

[தளி → தளிகை.]

தளிகைச்சிறப்பு *taḷigai-c-ciṟappu,* பெ. (n.) கடவுளுக்குப் படைக்கும் சோறு முதலியன (S.I.I. IV. 103); food offering.

[தளிகை + சிறப்பு]

தளிகைசமர்ப்பி-த்தல் *taḷigai-samarppi-,* 4 செ.குன்றாவி. (v.t.) தளிகைபோடு-தல் பார்க்க; see *taḷigai-pōḍu-.*

[தளிகை + சமர்ப்பி-.]

தளிகைபோடு-தல் *taḷigai-pōḍu-,* 20 செ.குவி. (v.i.) *1.* கடவுளுக்குப் படைத்தல் பொருட்டு, சோறு முதலியவற்றைக் கொணர்ந்து வைத்தல்; to take boiled rice, etc., for offering

to idols. 2. கடவுட்குச் சோறு முதலியவற்றைப் படைத்தல்; to offer boiled rice to idols. 3. தளிகைவிடு பார்க்க; see *taḷigai-viḍu.*

[தளி → தளிகை + போடு-.]

தளிகைவடாம் *taḷigai-vaḍām,* பெ. (n.) அரிசிக்கஞ்சியாலாகிய மெல்லிய வடாகம்; thin rice-cake (செ.அக.).

[தளிகை + வடாம்]

தளிகைவிடு-தல் *taḷigai-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.i.) கோயிலில் தேங்காய்ச்சோறு, புளிச்சோறு, தயிர்ச்சோறு முதலிய தாளித்த சோற்று வகையைக் கலந்துஇடுதல்; to offer flavoured rice to idols in temples.

[தளிகை + விடு-.]

தளிச்சேரி *taḷi-c-cēri,* பெ. (n.) கோயில் திருத்தொண்டு புரியும் மகளிர் இருக்கும் தெரு; street of the dancing - girl's attached to a temple. "தெற்குத் தளிச்சேரித் தென்சிறகு" *(S.I.I. ii, 261).*

[தளி + சேரி. தளி எனில் கோயில் : கோயிலில் திருத்தொண்டு செய்த ஆடல் மகளிர் வாழ்வதற்காக, அமைத்தவிடம்]

தளிச்சேரிப்பெண்டுகள் *taḷi-c-cēri-p-peṇḍugaḷ,* பெ. (n.) கோயில் திருத்தொண்டு செய்யும் மகளிர்; dancing-girls attached to a temple. "தளிச்சேரிப் பெண்டுகளுக்கும்" (S.I.I.ii, 261).

[தளிச்சேரி + பெண்டுகள்]

தளிசை *taḷišai,* பெ. (n.) கூழ்க்கட்டி; solidified rice porridge.

[தளிகை → தளிசை.]

தளிப்பெண்டுகள் *taḷi-p-peṇḍu-gaḷ,* பெ. (n.) தளிச்சேரிப் பெண்டுகள்; dancing-girls. "தளிப் பெண்டுகள் தெருவினடுவேபோய்" *(சிலப். 16:103: உரை).*

[தளி + பெண்டுகள்]

தளிமம்[1] *taḷimam,* பெ. (n.) 1. படுக்கை (பிங்.); bed, sleeping place. 2. மெத்தை (பிங்.); mattress, cushion. 3. வீடுகட்டும் இடம் (வின்.); house - site. 4. திண்ணை (யாழ்.அக.); pial. 5. வாள் (யாழ்.அக.); sword.

[தளி → தளிமம்]

தளிமம்[2] *taḷimam,* பெ. (n.) அழகு (பிங்.); beauty, loveliness.

தளியாலாடு *taḷiyā-lāḍu,* பெ. (n.) ஒருவகைப் பண்ணிகாரம்; a kind of flour-cake ball.

[தளியல் + ஆடு.]

தளியிலார் *taḷiyilār,* பெ. (n.) தளிச்சேரிப் பெண்டுகள் (சிலப். 22: 142: அரும்) பார்க்க; see *taḷi-c-cēri-p-peṇḍugaḷ.*

[தளி + இலார்.]

தளியிலாள் *taḷiyilāḷ,* பெ. (n.) கோயில் தொண்டு செய்யும் ஆடல்மகள்; dancing-girl, attached to a temple. "ஆலவாய்ச் சொக்கருக்குத் தட்டடெடுக்குந் தளியிலாள்" *(விறலிவிடு. 151).*

[தளி + இலாள்]

தளிர்[1]**-த்தல்** *taḷir-,* 4 செ.குன்றாவி. (v.i.) 1. துளிர்த்தல் (சூடா.); to shoot forth, to sprout. 2. தழைத்தல்; to put forth leaves. "மாரியால் வற்றிநின்ற சந்தனந் தளிர்த்ததே போல்" *(சீவக. 545).* 3. செழித்தல்; to flourish, prosper. 4. மகிழ்தல்; to rejoice. "தையலாள்வரக் கண்டனனா மெனத் தளிர்ப்பான்" *(கம்பரா. தானைகாண். 28).*

[துளிர் → தளிர் → தளிர்-. துளிர்த்தற் கருத்தினின்று முகிழ்த்தற் கருத்து தோன்றும்: துளிர்த்த கொழுந்து, தடிந்தெழினி தான் நல்கியக்கால் தளிர்க்கும், தளிர்த்தமரம் மேன்மேலுந் தளிர்த்தலையே, இவ் வேரடி விளக்குகின்ற தென்றறிக.]

தளிர்[2] *taḷir,* பெ. (n.) முளைக்கும் காலத்துள்ள இலை; sprout, tender shoot, bud. "தளிரே தோடே" *(தொல். பொருள். 642).*

[துளிர் → தளிர்]

தளிர்ப்பு *taḷirppu,* பெ. (n.) 1. துளிர்க்கை; sprouting. 2. மனவெழுச்சி; enthusiasm, rejoicing. "உண்டு போரென் றுளந்தளிர்ப் பெய்துவார்" *(கந்தபு. வீரபத். 39).*

[துளிர்ப்பு → தளிர்ப்பு]

தளிரியல் *taḷir-iyal,* பெ. (n.) (தளிர்போலும் இயல்புடையாள்) பெண் (பிங்.); damsel, tender as a sprout. "தளிரிய லோதலோடும்" *(சீவக. 1147).*

[தளிர் + இயல்]

தளிவடகம் *taḷi-vaḍagam,* பெ. (n.) இலை போலும் மெல்லிய சோற்று வடகம்; thin rice-cake.

[தளிர் → தளி = இலை. தளி + வடகம். ஒருகா. தளிகை + வடகம்]

தளிவம் *taḷivam,* பெ. (n.) தகடு; flat piece, as of gold. "காஞ்சனத் தளிவம் வாய்க்கிட்டு" *(சீவக. 2303).*

[தளி → தளிவம்.]

தளுக்கு[1]-தல் *taḷukku-,* 5 செ.குன்றாவி. (v.i.) *1.* **பூசுதல்;** to smear, rub in. "சாந்து கொண்டு தளுக்கு நிலத்திடை" *(விநாயகபு. 39, 14). 2.* **துலக்குதல்** (வின்.); to scour, polish, as furniture; to smooth, as an earthen floor.

தெ. தளுகு.

[துள் → தள் → தளு → தளுக்கு-. ஒருகா. தெளி → தளி → தளு → தளுக்கு-.]

தளுக்கு[2]-தல் *taḷukku-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* **சொலித்தல், மிளிர்தல்;** to be bright, to glitter. *2.* **ஒளிர்தல்;** to shine.

தெ. தளுகு.

[துள் → தள் → தளு → தளுக்கு-.]

தளுக்கு[3] *taḷukku,* பெ. (n.) *1.* **மினுக்கு;** shining, glittering, splendour, brightness. அவளுடைய தளுக்குப் பேச்சும் குலுக்கு நடையும் யாருக்கும் பிடிக்காது *(இக்.வ.). 2.* **ஆரவாரப் பகட்டு;** showiness, ostentation. *3.* **மூக்கணி;** nose jewel small ornament like a tack worn in the upper helix. *4.* **மினுக்கு;** liveliness vivacity, brightness. *5.* **சூழ்ச்சித்திறன்; தந்திரம்** (இவ.); artfulness. *6.* **காக்காய்ப்பொன்;** mica.

க. தளகு; தெ. தளுகு

[துளு → தளு → தளுக்கு. ஒருகா. துலக்கு → தலக்கு → தலுக்கு → தளுக்கு-.]

தளுக்குணி *taḷukkuṇi,* பெ. (n.) *1.* **வெட்கமில்லாதவன்** (யாழ்.அக.); person wanting in sensibility. *2.* **ஏமாற்றுபவன்** (இவ.); a deceitful person.

[தளுக்கு + உணி → தளுக்குணி = சூடு, சொரணயற்று ஏமாற்றுவதையே பிழைப்பாகவுடையவன்]

தளுகன் *taḷugaṉ,* பெ. (n.) பொய்யன் (வின்.); deceit ful fellow, liar.

[உல் → உள் → துள் → தள் → தளுகு + அன். 'அன்' ஆண்பாலீறு. ஒருகா. புளுகன் → தளுகன்]

தளுகு *taḷugu,* பெ. (n.) **புளுகு** (வின்.); fraud, lie.

க. தளுகு

[துள் → தள் → தளுகு. ஒநோ. அழுகு → புழுகு. 'கு' சொல்லாக்க ஈறு.]

தளுகை *taḷugai,* பெ. (n.) **தளிகை**[1],*1.* (இ.வ.) பார்க்க; see *taḷigai[1], 1.*

[தளுகு → தளுகை.]

தளுதாழை *taḷutāḻai,* பெ. (n.) *1.* **வளியடக்கி** (மலை); medicine for gastric troubles. *2.* **தழுதாழை** பார்க்க; see *taḻu-tāḻai.*

[தழுதாழை → தளுதாழை-.]

தளும்பு[1]-தல் *taḷumpu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* **கலம் அசைவதால் நீர் சிறிதுதுள்ளுதல்;** to wabble, flap, fluctuate, as water in a moving vessel. நிறைகுட நீர்தளும்ப லில் *(பழ.). 2.* **பழக்க முறுதல்** (நான்மணி. 12, உரை); to get accustomed. *4.* **முட்டுப்படுதல்** (வின்.); to be strive for a livelihood. *5.* **இருபுறமும் மாறிச் சாய்ந்தாடுதல்** (யாழ்ப்.); to be unsteady, as a floating pot, to sway as a spinning top.

[துளும்பு → தளும்பு → தளும்பு-. (தமி. இல. வ. முன் 52)]

தளும்பு[2]-தல் *taḷumbu-,* 5 செ.கு.வி. (v.i.) **உள்ளம் கலங்குதல்;** to be perturbed, to be distressed. "அநுகூல ஜனமானது தளும்பிற்று என்கிறான்" *(திவ். பெரியாழ். 3:7:5, வ்யா. பக்713).*

[துள் → தள் → தளு → தளும்பு → தளும்பு-. (மு.தா.329). ஒருகா. துளும்பு → தளும்பு → தளும்பு-. (மு.தா.68).]

தளுவம் *taḷuvam,* பெ. (n.) **கைத்துண்டு;** small piece of cloth, towel. "ஸ்ரீபாதத்தைத் தளுவத்தாலொற்றி" *(குரு பரம். 572).*

[துள் → துளு → துளுவம் → தளுவம் = துணிக்கப்பட்ட கைத்துணி.]

தளை[1]-தல் *taḷai-*, 4 செ.குன்றாவி. (v.t.) **பிணித்தல்;** to fasten, bind, chain. *"மோகமெனும் பாசத்தான் மிகத்தளைந்து" (குற்றா. தல. தருமசாமி. 74).* 2. **தடுத்தல்;** to prevent.

[தள் → தளை → தளை-. (மு.தா.101)]

தளை[2]-த்தல் *taḷai-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **கட்டுதல்;** to tie, bind, fasten, entangle. 'தளைக்கின்ற மாயக்குடும்பப் பெருந்துயர்" *(அருட்பா, i, திருவருள். 315).* 2. **அடக்குதல்** *(யாழ்ப்.);* to confine, restrain, limit.

[தள் → தளை → தளை-. (மு.தா.68)]

தளை[3]-த்தல் *taḷai-*, 4 செ.கு.வி. (v.i.) **கொதித்தல்;** to boil, bubble. சாதந் தளைக்கிறது *(இ.வ.).*

[தள் → தளை → தளை-. (மு.தா.68)]

தளை[4] *taḷai*, பெ. (n.) 1. **கட்டு;** tie, fastening, bandage. "அற்புத்தளையு மவிழ்ந்தன" *(நாலடி, 12).* 2. **கயிறு;** cord, rope. "நிறைத்தளை விட்டீர்த் தலின்" *(திருவிளை. மாபாத. 6).* 3. **விலங்கு;** fetters, shackles. "தாடளை யிடுமின்" *(திருவாச. 3:143).* 4. **பிறப்பிற்குக் காரணமான (ஆதன்) ஆன்மவுறவு;** bondage of the soul, causing birth. 5. **மலர்முறுக்கு;** closed condition, as of an unblown flower. "புதுவது தளைவிட்ட தாதுகுழ் தாமரை" *(கலித். 69).* 6. **சிறை;** imprisonment. 7. **தொடர்பு** *(சூடா.);* relationship, friendship, bond of union. 8. **காற்சிலம்பு** *(பிங்.);* anklet. 9. **ஆண்மக்கண் மயிர்** *(பிங்.);* hair of the males. 10. **வயல்;** paddy field, as divided into plots. "களைகட்டவர் தளைவிட்டெறி" *(கம்பரா. கங்கை 5).* 11. **உடையாருத்தி ஒகம்** *(யாழ்ப்.);* office of uḍaiyār in certain districts. 12. **அறுவகைச் செய்யுளுறுப்புகளில் ஒரு சீரின் ஈற்றசைக்கும், அதனையடுத்துவருஞ் சீரின் முதலைசக்கும் உள்ள தொடர்பு** *(காரிகை, உறுப். 5, உரை);* metrical connection of the last syllable of any foot with the first of the succeeding, one of the six šeyyuḷ-uṟuppu, divided into four classes, viz., āširiya-t-taḷai, veṇḍaḷai, kali-t-taḷai, vañji-t-taḷai.

ம. தள; க. தளெ

[தள் → தளை (மு.தா. 101)]

தளைக்காணம் *taḷai-k-kāṇam*, பெ. (n.) **வரி வகை** *(கல்வெட்டு);* a kind of tax.

ம. தளக்காணம்

[தளை + காணம்]

தளைதள்-தல் (தளைதட்டல்) *taḷai-taḷ-*, 5 செ.கு.வி. (v.i.) **வேறு தளை விரவியதனால், எடுத்துக்கொண்ட செய்யுளின் தளை மாறுபடுதல்;** to fail or be defective in the taḷai connection of a verse. "வேற்றுத்தளை தட்டுக் குறள்வெண்பாவிற் சிதைந்து" *(யாப். செய். 6, உரை).*

[தள் → தளை → தளை-.]

தளைந்துவிடு-தல் *taḷaindu-viḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) **விலங்குகளின் முன்காலைக் கட்டி, மேய்ச்சலுக்கு விடுதல்;** to tie together the forefeet of an animal and let it out to graze.

[தள் → தளை → தளைந்து + விடு-. முன்காலைக் கட்டி விடுவதால், குறிப்பிட்ட சுற்றளவில் மட்டுமே, மேயும். கட்டாமல் விட்டால், கண்ணில்பட்ட தெல்லாம் மேயும். இன்றளவும், சிற்றூர்ப் புறத்தே அவரவர்க்குரிய புல் சம வெளியில், இக் காட்சியைக் காணலாம்]

தளைநார் *taḷai-nār*, பெ. (n.) **பனையேறுவோர் காலில் மாட்டிக்கொள்ளுங் கயிறு** *(யாழ்ப்.);* foot-brace for a palm tree - climber.

[தளை + நார்]



தளைப்படு-தல் *taḷai-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) **தளைபடு-.** பார்க்க; see *taḷai-paḍu-*.

[தளை + படு-.]

தளைபடு-தல் *taḷai-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. சிறையாதல் (பிங்.); to be imprisoned, taken captive. 2. கட்டுப்படுதல்; to be bound, confined, restrained.

[தளை + படு-.]

தளைபோடு-தல் *taḷai-pōḍu-*, 19 செ.குன்றாவி. (v.t.) குறுக்காக வரப்பிடுதல் (இ.வ.); to put up ridge, as in a field.

மறுவ. தடைபோடுதல் - கைவிலங்கு மாட்டுதல்

[தளை + போடு-]

தளையம் *taḷaiyam*, பெ. (n.) விலங்கு; bonds, fetters. "இளையவர் நெஞ்சத் தளையம்" (திருப்பு. 303).

[தள் → தளை → தளையம்]

தளையல் *taḷaiyal*, பெ. (n.) 1. கட்டுகை; binding, tying. 2. மறியற்படுத்துகை (யாழ்.அக.); confining, restraining.

[தள் → தளை → தளையல்]

தளையவிழ்-தல் *taḷai-y-aviḻ-*, 2 செ.கு.வி. (v.i.) 1. பிணிப்பு அல்லது கட்டுநீங்குதல்; to be unbound, released from restraint. 2. மலர் கட்டவிழ்தல்; to blossom, as a flower. "தளையவிழ் கோதை" (சீவக. 651).

[தளை + அவிழ்-.]

தளையன் *taḷaiyaṉ*, பெ. (n.) மறவர், குயவர் சான்றார் இனத்த்வர்தம் தலைவன் (யாழ்ப்.); headman of certain castes, viz., Maṟavar, Kuyavar, Šāṉṟār.

[தல் → தலை → தளை + அன். 'அன்' ஆண்பாலீறு.]

தளையாள் *taḷai-y-āḷ*, பெ. (n.) அடிமை; bondman, slave. "தனக்கொன்றும் பயனின்றித் தளையா ளென்றான்" (நீலகேசி, 185).

[தளை + ஆள்]

தளையாளர் *taḷai-y-āḷar*, பெ. (n.) கால்கள், (சங்கிலி) தொடரியாற் பிணைக்கப்பட்டவர்; those who are fettered in chains, prisoners. "தளையாளர் தாழ்ப்பாளர்" (ஏலாதி. 56).

[தளை + ஆளர். தளை = கட்டு]

தளையிடு-தல் *taḷai-y-iḍu-*, 18 செகுன்றாவி. (v.t.) பிணித்தல்; to enchain, fetter. "வினைத் தடையாற் றளையிட்டு" (தாயு. பாயப்புலி, 55).

[தளை + இடு-.]

தளைவார் *taḷai-vār*, பெ. (n.) 1. விலங்கின் கால்களைக்கட்டும்வார்; leather thong binding the feet of an animal. 2. தளைநார்; மர மேறுவோர் காலில் பிணித்துக் கொள்ளும் கயிறு; foot-brace for the tree climbers (செ.அக.).

மறுவ. கால்நார்

தளைவை-த்தல் *taḷai-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) உடையார் வேலை கொடுத்தல் (யாழ்ப்.); to invest with the office of Uḍaiyār.

[தளை + வை-.]

தற்கரன் *taṟkaraṉ*, பெ. (n.) திருடன்; thief, robber. "கோசந்தன்னைத் தற்கரன் சாத்தியந்தன்" (சிவதரு. சுவர்க்க நரகசே. 30).

[தன் + கரன்]

தற்கரிசனம் *taṟ-karišaṉam*, பெ. (n.) தன்னலம் (வின்.); self-interest.

[தன் + கரிசனம்]

தற்கா[1]-த்தல் *taṟ-kā-*, 4 செ.கு.வி. (v.i.) தன்னைத் தான்காத்தல்; to take care of oneself, protect oneself. "தற்காத்துத் தற்கொண்டாற் பேணி" (குறள், 56).

[தன் + கா-.]

தற்கா[2]-த்தல் *taṟ-kā-*, 4 செ.குன்றாவி. (v.t.) பாதுகாத்தல்; to preserve, protect. "நீயென்னைத் தற்காத்தருள்" (இராமநா. உயுத். 14).

[தன் + கா-.]

தற்காத்தற்கடுதாசி *taṟ-kāttaṟ-kaḍudāši*, பெ. (n.) அறிவிப்பு மடல் (யாழ்.அக.); letter of information.

[தற்காத்தல் + கடுதாசி = கடந்த காலத்தின் பழுதற்ற திறத்தையும், எதிர்காலத்தின் சிறப்பையும், நிலைப்படுத்துவது நிகழ் காலமேயாகும். நிகழ்காலத்தின் செயற் பாடுகளே, வரையும் மடல்களே, எதிர் காலத்தை வளப்படுத்துவதாக, அமைய

வேண்டும். நிகழ்காலத்தே, ஒருவர் ஆற்றும் பணி, பேசும்பேச்சு, எழுதும் எழுத்து சென்றகாலத்தின் திறத்திற்கும், எதிர்காலச் சிறப்பிற்கும் ஊறு விளைவிக்காவண்ணம் உரையும் மடலே தற்காத்தற் கடுதாசி யெனலாம்]

தற்காப்பு *tar-kāppu,* பெ. (n.) தன்னைக் காத்துக் கொள்ளுகை; self - protection.

[தன் + காப்பு : எக்காலத்தும், எந்நிலையிலும், ஒருவர் தம்மைப் பேணிக்காத்தற்கு மேற்கொள்ளும் செயற்பாடே, தற்காப்பு எனப்படும்.]

தற்காலக்கோள்நிலை *tarkāla-k-kōḷ-nilai,* பெ. (n.) குறித்த காலத்துள்ள கோள்களின் நிலை; planetary positions at a given time.

[தற்காலம் + கோள்நிலை]

தற்காலசுத்தபுடம் *tarkāla-šutta-puḍam,* பெ. (n.) குறித்த காலத்தில் உள்ள நிலநடு கோட்டுக் கோள்நிலை (வின்.); true or geocentric longitude of a planet at a given time.

[தற்காலம் + சுத்தம் + புடம்.]

தற்காலம் *tar-kālam,* பெ. (n.) 1. நிகழ்காலம்; present time. "தற்காலமதை நோவனோ" *(தாயு. புரிபூரண. 7).* 2. குறித்தகாலம் (இவ.); exact or precise time of an action or occurrence.

மறுவ. நடப்புக்காலம், நிகழ்காலம்

[தன் + காலம்]

தற்காலமத்திமம் *tarkāla-mattimam,* பெ. (n.) அழிக்கவியலாத நடுநிலைக்கோள் நிலை; mean longitude at a given time.

[தற்காலம் + மத்திமம்]

தற்காலலவணம் *tarkāla-lavaṇam,* பெ. (n.) கல்லுப்பு; sea-salt.

தற்காலி[1]-த்தல் *tarkāli-,* 4 செ.குவி. (v.i.) குறித்த காலத்திற்கான கணக்கீட்டுப் புள்ளிகளைத் திருத்துதல் (வின்.); to correct the data of calculation for a given time.

[தற்காலம் → தற்காலி-.]

தற்காலி[2]-த்தல் *tarkāli-,* 4 செ.குவி. (v.i.) அவ்வப் பொழுது புடம் வைத்தல்; to calcine as much quantity of medicine as urgently required for the time being.

[தற்காலம் → தற்காலி]

தற்காலிகம் *tarkāligam,* பெ. (n.) காலவரை யறைக்குட்பட்டது; temporary.

மறுவ. குறுங்காலிகம்

[தன் + கால் + இகம். 'இகம்' – சொல்லாக்க ஈறு]

தற்காலிகமாக *tarkāligam-āga,* வி.எ. (adv.) இப்போதைக்கு; for the time being.

[தன் + கால் + இகம் + ஆக]

தற்காவல் *tar-kāval,* பெ. (n.) 1. தன்னைக் காத்துக் கொள்ளல்; self protection. 2. கற்பு நிலை; chastity.

[தன் + காவல்]

தற்கி-த்தல் *tarki-,* 4 செகுன்றாவி. (v.t.) தருக்கம் செய்தல் (வின்.); to logic, to dispute (செ.அக.).

[தருக்கி → தற்கி]

தற்கித்துக்கேள்-தல் (தற்கித்துக்கேட்டல்) *tarkittu-k-kēḷ-,* 4 செகுன்றாவி. (v.t.) குறுக்குக் கேள்வி கேட்டல் (யாழ்ப்.); to cross - examine.

[த. தருக்கம் → வ. தருக்க → தற்க + இத்து + கேள்-. த. தருக்கித்தல் → தற்கித்தல் த. தருக்கித்து + கேட்டல் → வ. தற்கித்துக் கேட்டல். சொற்போரினிடையே, சிந்தனையைத் தூண்டும் வண்ணம், வினவுதல்.]

தற்கிழமை *tar-kiḻamai,* பெ. (n.) ஒரு பொருளுக்கும் அதன் உறுப்புக்கள், திறன்கள், செயல்கள், முதலியவற்றிற்கும் உள்ளது போலப் பிரியாதிருக்கும் தொடர்பு (நன்.300.); inseparable relation, as of an object with its parts, qualities, actions, etc. opp. to piriḍin,-kiḻamai.

[தன் + கிழமை]

தற்கு *tarku,* பெ. (n.) செருக்கு; pride, haughtiness. "தற்கினான் மடிந்தார்" *(பாரத. கீசக. 103).*

[தருக்கு → தற்கு]

தற்குணம் *taṟ-kuṇam,* பெ. (n.) *1. சிறப்புப் பண்பு* (வின்.); peculiarity, special attribute or quality. *2. ஒரு பொருளின் பண்பினை, மற்றொரு பொருள் பற்றுதலைக் கூறும் அணி* (மாறனலங். 134); figure of speech in which an object is described as taking over the quality of another object.

தற்குறி *taṟkuṟi,* பெ. (n.) *1. எழுதத்தெரியாதவன், தன் கையெழுத்தாக இடும், இடதுகைப் பெருவிரல் அடையாளம்;* signature - mark of an illiterate person. *2. எழுதப்படிக்கத் தெரியாதவன்;* illiterate person. அவன் ஓர் தற்குறி (உ.வ.).

மறுவ. கைநாட்டுப் பேர்வழி

[தன் + குறி.]

தற்குறிப்பு *taṟ-kuṟippu,* பெ. (n.) *1. தற்குறிப் பேற்றம் பார்க்க;* see *taṟkuṟi-p-pēṟṟam. 2.* தற்குறி (வின்.) *இடதுகைப்பெருவிரல் அடையாளம்;* impression of left thumb of uneducated people in place of signature.

[தன் + குறிப்பு]

தற்குறிப்பேற்றம் *taṟ-kuṟi-p-pēṟṟam,* பெ. (n.) *பொருளிடத்து இயல்பாக நிகழுந்தன்மையை யொழித்துக் கவிஞன் தன் கருத்தை ஏற்றிச் சொல்லும் அணி* (தண்டி. 55); a figure of speech in which the qualities and functions of an object are ascribed to another object entirely different in nature.

[தன் குறிப்பு + ஏற்றம்]

தற்குறிமாட்டெறி[1]-தல் *taṟkuṟi-māṭṭeṟi-,* 2 செ.கு.வி. (v.i.) *கல்வியில்லாதவன் கையெழுத்துக்கு மாறாகத், தன் அடையாளக்குறி இடுதல்;* to affix signature-mark, as an illiterate person. "கண்டராதித்தப் பல்லவதரையன் தற்குறிமாட்டெறிந்தேன்" (S. I. I. V, 105).

[தன்குறி + மாட்டு + எறி-.]

தற்குறிமாட்டெறி[2]-தல் *taṟ-kuṟi-māṭ-ṭeṟi-,* 2 செ.கு.வி. (v.i.) *பெயரெழுதத் தெரியாதவன் கைக்கீறல், இது என்று எழுதிச் சாட்சி போடுதல்;* to witness the execution of a document by an illiterate person stating that the mark is that of the executant. "கூத்தன் தற்குறிக்கு தற்குறிமாட் டெறிந்தேன் திருவேங்கட முடையான்" (S.I. I. V, 152).

[தன்குறி + மாட்டு + எறி-. கைநாட்டுப் பேர்வழியின் கைக்குறியை, உறுதிப் படுத்தும், கையொப்பம்]

தற்குறைச்சல் *taṟ-kuṟaiccal,* பெ. (n.) *1. குறைவு;* self-abasement. *2. தேய்வு;* diminution in size, reduction.

[தன் + குறைச்சல்]

தற்கூற்று *taṟ-kūṟṟu,* பெ. (n.) *ஆசிரியரோ, கதை மாந்தரோ தானே கூறுவது போன்றது;* first person narrative, by the author or by the character.

[தன் + கூற்று]

தற்கெலம் *taṟ-kelam,* பெ. (n.) *வறுமை* (அகநி.); poverty.

தற்கேடர் *taṟ-kēḍar,* பெ. (n.) *அறியாது தமக்கே கேடுவிளைப்பவர்;* persons who ruin themselves unknowingly. "தலைகெடுத்தோர் தற்கேடர்தாம்" (திருவருட். அருளது நிலை. 7).

[தன் + கேடர்]

தற்கொண்டான் *taṟ-koṇḍāṉ,* பெ. (n.) *கணவன்;* husband. "தற்கொண்டாற் பேணி" (குறள், 56).

[தன் + கொண்டான்]

தற்கொலை *taṟ-kolai,* பெ. (n.) *தன்னுயிரைத் தானே மாய்த்துக் கொள்ளுகை;* suicide.

[தன் + கொலை]

தற்கோலம் *taṟ-kōlam,* பெ. (n.) *தம்பூலத்துடன் உட்கொள்ளும் வால்மிளகு;* cubebs chewed with betel. "தற்கோல மென்ற களிவாயை" (மறைசை. 56).

[தன் + கோலம்]

தற்சங்கை *taṟ-caṅgai,* பெ. (n.) *தன்னிடத்துள்ள பற்று;* self-love. "கருமங் குலத்திறம் தற்சங்கை விட்டு" (மருதூரந். 48).

[தன் + சங்கை]

தற்சணம் *taṟ-caṇam,* கு.வி.எ. (adv.) உடனே (யாழ்.அக.); at once.

[தன் + கணம் → க்ஷணம். சணம்.]

தற்சமம் *taṟ-camam,* பெ. (n.) ஒலி மாறுபாடின்றித் தமிழில் வழங்கும், ஆரியச்சொல்; loan - words from Šanskrit occurring in Tamil without any change in sound. 'தற்பவந் தற்சமமே பெரும்பான்மையுஞ் சாற்றினமே" (பி.வி.2).

[தன் + சமம்.]

தற்சமயம்[1] *taṟ-camayam,* பெ. (n.) 1. குறித்த வேளை (வின்.); particular juncture, exact moment required. 2. உற்றவேளை (சங்.அக.); best opportunity, favourable juncture.

தற்சமயம்[2] *taṟ-camayam,* கு.வி.எ. (adv.) இப்பொழுது (இ.வ.); at present. (செ.அக.)

[தன் + சமயம்.]

தற்சனி *taṟ-caṉi,* பெ. (n.) சுட்டுவிரல்; forefinger. "சிறுவிர றன்னி னின்றுந் தற்சனியளவும்" (காசிக. சிவச. அக்கினி. 22).

[தன் + சனி]

தற்சாட்சி *taṟ-cāṭci,* பெ. (n.) 1. தற்சான்று; self-evidence. 2. பரமாதன் (ஆன்மா); universal soul.

மறுவ. மனச்சான்று

[தன் + சாட்சி]

தற்சாய்வு *taṟ-cāyvu,* பெ. (n.) அகவயம்; subjectivity.

மறுவ. தன்னிலை

[தன் + சாய்வு]

தற்சார்பு *taṟ-cārbu,* பெ. (n.) தன் வலிமையில் நிற்கும் நிலை; self-reliance.

[தன் + சார்பு]

தற்சிவம் *taṟ-šivam,* பெ. (n.) முழுமுதற்கடவுள் (வின்); Absolute Being, as self-existent.

[தன் + சிவம்]

தற்சிறப்புப்பாயிரம் *taṟ-ciṟappu-p-pāyiram,* பெ. (n.) தெய்வவணக்கமும் செயப்படுபொருளுமுரைத்து ஆசிரியர் நூன்முகப்பிற் கூறும் பாயிரம் (காரிகை, 1, உரை); author's own introduction consisting of verses of invocation and verses containing a statement of the subject - matter of his work.

[தன் + சிறப்பு + பாயிரம்]

தற்சுட்டு *taṟ-cuṭṭu,* பெ. (n.) தன்னைச் சுட்டுகை; reference to one's self. "தற்சுட்டளபொழி" (நன். 95).

[தன் + சுட்டு]

தற்சுட்டுப்பெயர் *taṟ-cuṭṭu-p-peyar,* பெ. (n.) தன்னைச் சுட்டும் பெயர்; reflexive pronouns.

[தன்சுட்டு + தற்சுட்டுப்பெயர். முதற்கண் சுட்டுப் பெயராயிருந்து, காலப் போக்கில் தற்சுட்டுப் பெயராய் மாறிய, தான், தாம் என்னும் படர்க்கை வடிவங்கள் இத் தன்மைத்து எனலாம். அவன் அவள் முதலிய ஐம்பாற் சுட்டுப் பெயர்கள் தோன்றிய பின்பு, சேய்மைச் சுட்டடியினின்று கிளைத்த தான், தாம் என்னும் வடிவங்கள், தற்சுட்டுப் பெயர்களாய் மாறின]

தற்செய்-தல் *taṟ-cey-,* 1 செ.கு.வி. (v.i.) 1. தானே நடைபெறுதல் (யாழ்ப்.); to occur in natural course; to prosper by providence. 2. நிறைவாக நல்குதல்; to be advantageous, profitable. "வாணிபம் அவனுக்குத் தற்செய்யவில்லை" (யாழ்ப்.). 3. தன்னை வலிமையாக்குதல்; to make one's position strong. "வகையறிந்து தற்செய்து தற்காப்ப" (குறள், 878).

[தன் + செய்-.]

தற்செய்கை *taṟ-ceygai,* பெ. (n.) 1. தன்னைச் செப்பமுடையவனாக்குகை; being self-made; self-culture. "தற்செய்கை சிறந்தன்று" (முது. காஞ். 9). 2. தனதுசெயல்; one's own action. 'தற்செய்கையின்றிப் பிறராற் செய்யப்படும் பொருளை" (நன். 399, மயிலை.).

[தன் + செய்கை]

தற்செயல்விடுப்பு *taṟ-ceyal-viḍuppu,* பெ. (n.) எதிர்பாராத சூழலில் எடுக்கப்படும் விடுப்பு; casual leave.

மறுவ. நேர்ச்சிவிடுப்பு

[தற்செயல் + விடுப்பு.]

தற்செயலாய் *taṟ-ceyal-āy,* கு.வி.எ. (adv.) எதிர்பாராமல் (இ.வ.); by chance or accident, providentially.

[தன் + செயல் + ஆய்.]

தற்செருக்கு *taṟ-cerukku,* பெ. (n.) தன் முனைப்பு; self-conceit. "துடக்க மிலாதவன் தற்செருக்கு" (இன். நாற். 41).

[தன் + செருக்கு]

தற்செல்வம் *taṟ-celvam,* பெ. (n.) 1. சொந்தப் பொருள் (வின்.); one's own property. 2. வலிமை; strength, power, force.

[தன் + செல்வம்]

தற்சோதனை *taṟ-cōdaṉai,* பெ. (n.) தன்னைத் தான் ஆராய்ந்து கொள்ளல் (வின்.); self-examination.

[தன் + சோதனை]

தற்பகக்கபம் *taṟpaga-k-kabam,* பெ. (n.) ஐவகைக் கோழைகளிலொன்று (கபங்களி லொன்று); one of the five varieties of phlegm.

தற்பகம் *taṟ-pagam,* பெ. (n.) 1. தற்பகக்கபம் பார்க்க; see *taṟpaga-k-kabam.* 2. தலையிலுள்ள கொப்புளங்கள்; vesicles in the head.

தற்பகன் *taṟpagaṉ,* பெ.(n.) காமவேள், மன்மதன் (யாழ்.அக.); indian cupid (செ.அக.).

தற்பகீடம் *taṟpa-kīḍam,* பெ. (n.) மூட்டைப் பூச்சி, முகட்டுப்பூச்சி (படுக்கையிற் பற்றுவது) (யாழ்.அக.); bug, as infesting beds.

தற்பணம்[1] *taṟ-paṇam,* பெ. (n.) கண்ணாடி; mirror. "தற்பணந்தா னெப்படியோ தானே விளங்கு மப்படியே" (ஞானவா. ஞானவிண். 28).

தற்பணம்[2] *taṟ-paṇam,* பெ. (n.) 1. யானை முதுகு; elephant's back. 2. முதுகெலும்பு; back - bone.

தற்பதம் *taṟ-padam,* பெ. (n.) 1. முதல் உருவத்தின் இயல்பு (பிரமசொரூபம்); nature of the Supreme Being. "தற்பதத்தைத் தெளியுமட்டும்" (ஞானவா. முமுட். 4). 2. 'தத்' என்னும் சொல் (சி.போ.பா. 9, 3, பக்.393); the secret word 'tat'.

[தன் + பதம்]

தற்பதி *taṟ-padi,* பெ. (n.) பாக்குமரம் (மலை); areca - palm. m.tr., Areca catechu.

தற்பதிதாளம் *taṟpadi-tāḷam,* பெ. (n.) தற்பதி பார்க்க; see *taṟpadi.*

தற்பம்[1] *taṟpam,* பெ. (n.) 1. முனைப்பு; pride, arrogance. "திராத் தற்பத்தைத் துடைத்த" (கம்பரா. கும்ப. 27). 2. தூரிசு (யாழ்.அக.); sin. 3. ஏய்ப்பு (சங்.அக.); deceit. 4. மான்மணத்தி (கத்தூரி) (தைலவ.தைல.); musk.

தற்பம்[2] *taṟpam,* பெ. (n.) 1. துயிலிடம் (பிங்.); bed, sleeping place. 2. மெத்தை (வின்.); mattress, cushion. 3. மனைவி (வின்.); wife. 4. மேனிலை (சது.); upper - room.

தற்பயம் *taṟ-payam,* பெ. (n.) கறுப்புச்சீந்தில்; a black variety of moon creeper.

தற்பயற்பதெத்தம் *taṟ-payaṟpadettam,* பெ. (n.) வாழைமரம்; plantain tree.

தற்பரஞ்சுலவணம் *taṟ-parañjulavaṇam,* பெ. (n.) வண்ணார்காரத்திலிருந்து பிரித் தெடுக்கப்பட்ட சவுட்டுப்பு; salt extracted from fullers earth.

[தற்பரம் + சுலவணம்]

தற்பரம் *taṟ-paṟam,* பெ. (n.) 1. தற்பரன் பார்க்க; see *taṟ-paraṉ.* "தற்பரமு மல்லை தனி" (சி.போ. 3:1:1). 2. மேம்பட்டது; that which is highest. "தற்பரம் பொருளே" (திருவிசை. திருமாளி. 1, 3).

[தன் + பரம் → தற்பரம் = அனைத்து நிலையிலும் மேம்பட்ட இறை.]

தற்பரவுப்பு *taṟ-para-v-uppu,* பெ. (n.) பாறை யுப்பு பனியுறைவதால் ஏற்படும் உப்பு; natural salt found on mountain and rocks.

[தன் + பரவுப்பு = பாறையில் பரந்து உறைந்து காணப்படும் உப்பு]

தற்பரன்[1] *taṟ-paraṉ,* பெ. (n.) 1. பரம்பொருள்; Supreme Being. "தணித்தலு மளித்தலுந் தடிந்தோன் றற்பரன்" (ஞானா. 48, 20).

[தன் + பரன் → தற்பரன் = எல்லா வற்றிலும் மேலான பரம்பொருள்]

தற்பரன்[2] *taṟ-paraṉ,* பெ. (n.) வெள்ளைநஞ்சு; white arsenic.

தற்பரை *taṟ-parai,* பெ. (n.) 1. உமையவள் (சூடா.); Umai. 2. ஒரு நொடியில் அறுபதி லொரு பகுதி; the sixteenth part of a second. 3. ஒரு மாத்திரையளவின் முப்பதிலொரு பகுதி

(வின்.); the 30th part of a māttirai. 4. ஆதன் தன்னைப் பதியாகக் கருதும் அறிவம் (உண்மைநெறி. 4, உரை); the knowledge of the soul identifying itself with God.

தற்பலம் *tar̠-palam,* பெ. (n.) வெள்ளாம்பல் (மலை); white Indian water - lily.

தற்பவம் *tar̠-pavam,* பெ. (n.) 1. தமிழில் திரிந்து வழங்கும் வடசொல்; loan-words from Šanskrit occurring in Tamil̠ with altered forms. "தற்பவந் தற்சமமே பெரும்பான்மையுஞ் சாற்றினமே" (பிவி2). 2. யாதொரு காரணத்தால் யாதொன்று இறக்கப்பட்டது, அது மீட்டும் அப்பொருள் கரணியமாகப் பிறந்ததெனக் கூறும் அணி (மாறனலங், 202); a figure of speech in which an object which has been lost by a certain cause is described as having been restored by the same cause.

தற்பாடி *tar̠-pāḍi,* பெ. (n.) வானம்பாடி (சூடா.); Indian sky lark (செ.அக.).

[தன் + பாடி. தானே பாடிக் கொண்டிருக்கும் புள்]



தற்பி-த்தல் *tar̠-pi-,* 4 செகுன்றாவி. (v.t.) நீத்தார் நிகழ்வு; to offer water to the manes.

[திருப்பித்தல் → தற்பித்தல்]

தற்பிரியன் *tar̠-piriyan̠,* பெ. (n.) தன்னைப் பெருமையாகப் பேசிக்கொள்பவன் (இ.வ.); one who is given to self - adulation.

[தன் + பிரியன்]

தற்பின் *tar̠-pin̠,* பெ. (n.) தம்பி (நிகண்டு.); younger brother.

[தன் + பின்]

தற்பு[1] *tar̠pu,* பெ. (n.) உள்ளநிலைமை; real nature. "தற்பென்னைத் தானறியா னேலும்" (திவ். இயற். நான்முக77).

தற்பு[2] *tar̠pu,* பெ. (n.) முனைப்பு; arrogance. "ஆற்றாமையாலே தற்பற்றிருக்கிற வராகையாலே" (ஈடு. 9:9, ப்ர).

தற்புகழ்ச்சி *tar̠-pugal̠cci,* பெ. (n.) தன்னைத் தான் புகழ்ந்துகொள்கை; self-praise, self-complacency (செ.அக.).

[தன் + புகழ்ச்சி]

தற்புணர்ச்சி *tar̠-puṇarcci,* பெ. (n.) கைமுட்டி (வின்.); onanism.

[தன் + புணர்ச்சி]

தற்புருடசமாசம் *tar̠puruḍa-šamāšam,* பெ. (n.) வேற்றுமைத்தொகை (வீரசோ. தொகை. 2, உரை); a compound in which the first member stands in case-relation to the second.

தற்புருடம் *tar̠-puruḍam,* பெ. (n.) சிவனாரின் ஐந்துமுகத்துள், கிழக்கு நோக்கியிருப்பது (சைவச. பொது. 334); a face of Šivan̠ which is turned eastward, one of five faces of Šivan̠. (செ.அக.)

தற்புருடன் *tar̠-puruḍan̠,* பெ. (n.) தற்புருட சமாசம் பார்க்க; see *tar̠-puruḍa-šamāšam.* "தற்புருடன் பலநெற் கன்மதாரயம்" (வீரசோ. தொகை. 2).

தற்பெருமை *tar̠-perumai,* பெ. (n.) 1. தன்னை, தற்காத்தோரைக்குறித்துப் பெருமை கொள்வது; boasting (of oneself or one own people). 2. தற்புகழ்ச்சி; self-praise.

[தன் + பெருமை]

தற்பொருட்டுப்பொருள் *tar̠-poruṭṭu-p-poruḷ,* பெ. (n.) வினைப்பயன் கருத்தாவைச் சார்தலாகிய பொருள்; reflexive meaning. "கொள் என்பது தற்பொருட்டுப் பொருட்கண் வந்த விகுதி" (சி.போ. பா. 1,1,பக். 56).

தற்பொழிவு *tar̠-pol̠ivu,* பெ. (n.) தன்னலம் (வின்.); self-interest.

[தன் + பொழிவு]

தற்பொழுது *taṟ-poḻudu,* வி.எ. (adv.) இந்த நேரத்தில்; at present now.

[தன் + பொழுது]

தற்போதம் *taṟ-pōdam,* பெ. (n.) *1.* தன்னையுங் கடவுளையு மறியும் அறிவு *(வின்.);* self-knowledge, knowledge of the soul and deity. *2.* இயற்கையிலேயுள்ள முற்றுணர்வு *(வின்.);* intuitive knowledge, inherent and eternal knowledge, as possessed by the deity. *3.* தன் முனைப்பு; self-conceit, arrogance. "தற்போதம் முனையாதவாறு பரிகரித்து" *(சி.போபா. 12, 1. பக். 432). 4.* தன்னினைவு (இவ.); consciousness.

[தன் + போதம்]

தற்போதைக்கு *taṟ-pōdaikku,* வி.எ. (adv.) இந்தச் சமயத்திற்கு, குறுங்காலிகமாக; for the time being. தற்போதைக்கு இந்தப்பணம் போதும் *(உ.வ.).*

தற்றெரிசனிகள் *taṟ-ṟerisaṉigaḷ,* பெ. (n.) தன்னை முற்றும் அறிந்த பெரியார் (நெஞ்சுவிடு. உரை, பக்.14); self-realised sages.

[தன் + தெரிசனிகள்]

தறக்கதி *taṟa-k-kadi,* பெ. (n.) அத்தி *(சங்.அக.);* fig.

தறடி *taṟaḍi,* பெ. (n.) சத்திசாரனை; spreading log weed.

தறடிகம் *taṟaḍigam,* பெ. (n.) மாதுளை *(சங்.அக.);* pomegranate.

தறதற-த்தல் *taṟa-taṟa-,* 4 செ.குவி. (v.i.) தறதற என்று ஒலித்தல் *(யாழ்.அக.);* to make the sound taṟa-taṟa.

தறதறெனல் *taṟa-taṟeṉal,* பெ. (n.) வயிற்றுப் போக்கு, காற்றுப்பிரிகையால் ஏற்படும் ஒலிக் குறிப்பு *(யாழ்.அக.);* onom. expr. signifying the sound caused by the discharge of watery stools, breaking gas, boiling, etc.

[தறதற + எனல்]

தறளி *taṟaḷi,* பெ. (n.) *1.* வெண்ணிறமும், ஒன்பது விரலம் (அங்குலம்) நீளமுள்ள, கடல்மீன் வகை; sea - fish, silvery, attaining 9 inches in length, Opisthopterus tartoor. *2.* செம்பு நிறமுங் கருநீலநிறமான வரியுங்கொண்ட கடல்மீன் வகை; sea-fish, light bronze with dark bluish band, Raconda russelliana.

தறாசன் *taṟāšaṉ,* பெ. (n.) கொட்டைப் பாக்கு; areca nut.

தறி[1]-த்தல் *taṟi-,* 4 செகுன்றாவி. (v.t.) *1.* துணித்தல் வெட்டுதல்; to lop, chop off, cut off, cut down. "கையைத் தறித்தான்" *(திருவாச. 14:7). 2.* கட்டவிழ்த்தல்; to untie, unfasten. "பூட்டினைத் தறித்துவிட்டு" *(விநாயகபு. 51, 17). 3.* கெடுத்தல்; to frustrate, ruin. காரியத்தை முளையிலே தறிக்க வேண்டும். *4.* பிரித்தல்; to separate. "இருவரையும் தறித்துவிட வேண்டும்". *5.* கூலம் புடைத்தல் *(யாழ்ப்.);* to sift by a winnowing fan.

ம. தறிக்க; க. தறி

தறி[2]-தல் *taṟi-,* 4 செ.குவி. (v.i.) அறுபடுதல்; to be cut off, broken. "வாலுங் காலுந் தறிந்து" *(இராமநா. உயுத். 27.).*

தறி[3] *taṟi,* பெ. (n.) *1.* வெட்டுகை; cutting down, chopping off. *2.* நடுதறி; wooden post, stake. "தறிசெறி களிறு மஞ்சேன்" *(திருவாச. 35:8). 3.* தூண்; pillar, column. "கனகனெற்றுந் தறியிடை" *(கந்தபு. வள்ளி. 15). 4.* முளைக்கோல்; peg. "கொடுந்தறிச் சிலம்பி வானூல் வலந்தன தூங்க" *(நெடுநல். 58). 5.* நெய்வதற்குரிய தறி; weaver's loom. *6.* பறையடிக்கும் குறுந்தடி; stick for beating the drum. "கொட்டுபறை கொட்டுதறி" *(சிவரக.கணபதிவந். 20). 7.* கோடரி வகை (இ.வ.); a kind of axe. *8.* பொத்தான் கொக்கி (இ.வ.); button - hook clasp of thread or metal.

க., ம. தறி

தறிக்கடமை *taṟi-k-kaḍamai,* பெ. (n.) நெசவுத் தறிகட்கு இட்ட வரி (R.T); tax on looms.

ம. தறிக்கடம

[தறி + கடமை]

தறிக்கால் *taṟi-k-kāḷ,* பெ. (n.) *1.* கொடிக்காற் கால்வாய் *(வின்.);* artificial channel in a betel garden. *2.* கோள்நிலைக் கணிப்பில், ஒவ்வோர் ஓரை (இராசி)யையும், நான்கு காலாகப் பகுத்து, இந்த இந்தக் காலுக்கு, இந்த இந்தக்

கோள் (கிரகம்) உரியது என்று, பயன் சொல்லுதற்கு உதவும் உறுப்பு *(சூடா. உள். 101);* an element in astrological calculation to devide every star into four parts and to ascribe the correct for cast.

[தறி + கால்.]

தறிக்கிடங்கு *tari-k-kiḍaṅgu,* பெ. (n.) நெசவுத் தறியின் கீழுள்ள பள்ளம் *(யாழ்அக.);* weaver's loom-pit.

[தறி + கிடங்கு]

தறிக்கிடை *tari-k-kiḍai,* பெ. (n.) நெசவுத் தறியில் புதிய பாவைப் பிணைப்பதற்காக அச்சில் சுற்றியிருக்கும் மிகுதிநூல் (இ.வ.); thrum in a weaver's loom, fringe of threads in a loom.

[தறி + கிடை]

தறிகிடங்கு *tari-kiḍaṅgu,* பெ. (n.) கரும்பின் ஆலைக்கிடங்கு *(யாழ்அக.);* place where juice is expressed from sugarcane.

[தறி + கிடங்கு]

தறிகுற்றி *tari-kuṟṟi,* பெ. (n.) வயலுக்கு எருவாக விடும் தழைகளைத் தறிக்க, நாட்டும் கருவி *(நாஞ்.);* a log of wood planted to identify the area over which green manure is chopped.

தறிகெட்டு *tari-geṭṭu,* வி.எ. (adv.) கட்டுப்பாடும் ஒழுங்குமில்லாத; uncontrollable; indiscipline. கோயில்யானை தறிகெட்டு ஓடியது (இக். வ.).

[தறி + கெட்டு]

தறிகை[1] *tari-gai,* பெ. (n.) *1.* வெட்டப்படுகை *(வின்.);* being cut down. *2.* கட்டுத்தறி *(வின்.);* stake, post.

[தறி' → தறிகை.]

தறிகை[2] *tari-gai,* பெ. (n.) *1.* கோடரி; a kind of axe. *"மழு வென்றது வாய்ச்சியை; தறிகையுமாம்" (புறநா, 206, உரை). 2.* உளி *(சூடா.);* chisel.

ம. தறிக

[தறி ² → தறிகை.]

தறிச்சன் *tari-c-caṉ,* பெ. (n.) எருக்கு *(சங்அக.);* madar.

தறிதலை *tari-dalai,* பெ. (n.) அடங்காதவன் *(இ.வ.);* impudent, unruly person.

மறுவ. தறுதலை,. முரடன்

[தறுதலை → தறிதலை]

தறிதளை *tari-taḷai,* பெ. (n.) தறிக்கடமை (T.A.S. IV, 91) பார்க்க; see *tari-k-kaḍamai.*

மறுவ. தறிக்காசு, தறிப்பாட்டம்.

[தறி + தளை]

தறிப்புடவை *tari-p-puḍavai,* பெ. (n.) *1.* பழைய நெசவுவரி; tax on looms. *"தறிப் புடவையும் வேலிக்காசும்" (S.I.I. iii, 115). 2.* தறியில் நெய்த புடவை; saree woven in a loom.

ம. தறிப்புடவ

[தறி + புடவை]

தறிபடுகு *tari-paḍugu,* பெ. (n.) தறியின் நெட்டிழை (C.G.); warp of a loom.

தெ. படுகு

[தறி + படுகு]

தறிபோடு-தல் *tari-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) நெசவுத்தறியில் நெய்ய ஏற்பாடு செய்தல் *(வின்.);* to arrange to weave cloth in a loom.

[தறி + போடு-.]

தறிமரம் *tari-maram,* பெ. (n.) நெசவுத்தறியில் ஆடை சுருட்டும் மரம் (இ.வ.); web beam, wooden revolving bar round which the woven cloth is wound.

ம. தறிமரம்

[தறி + மரம்]



தறியடி-த்தல் *taṟi-y-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) **கைத்தறியை இயக்கித் துணியை நெயவு செய்தல்;** to weave the handloom.

[தறி + அடி-.]

தறியறை-தல் *taṟi-y-aṟai-,* 2 செ.கு.வி. (v.i.) **முளையறைந்து நாட்டுதல்** (இ.வ.); to drive down stakes.

[தறி + அறை-.]

தறியாணி *taṟi-y-āṇi,* பெ. (n.) **வெட்டிரும்பு** (வின்.); small chisel for cutting iron.

[தறி + ஆணி]

தறியிறை *taṟi-y-iṟai,* பெ. (n.) **தறிக்கடமை** பார்க்க; see *taṟi-k-kaḍamai.* "தறியிறை தட்டார் பாட்டம்" (கல்.).

மறுவ. தறிக்காசு; தறிப்பாட்டம்

[தறி + இறை. ஆடை நெய்வோர் அல்லது, துன்னற்காரர் இறுக்கும் இறை]

தறிவலை *taṟi-valai,* பெ. (n.) **நடுதறியுடையதாய், மான்பிடிக்க உதவும் வலை;** a kind of net for trapping deer. "தறிவலை மானிற்பட்டார்" (சீவக. 2768).

[தறி + வலை]

தறிவாய் *taṟi-vāy,* பெ. (n.) **வெட்டுவாய்** (யாழ்.அக.); lopped side; cut edge.

[தறி + வாய்]

தறிவிலைவில்-தல் (தறிவிலைவிற்றல்) *taṟi-vilai* - vil-, 14 செ.கு.வி. (v.i.) *1.* **பனைச்சட்டம் விற்றல்** (யாழ்ப்.); to sell palmyra timber. *2.* **நெய்த துணிகளை, கூடுதல் விலை சேர்க்காமல், அடக்கவிலையிலேயே விற்றல்;** to sell the clothes at the cost price from the loom.

[தறிவிலை + வில்-.]

தறு-தல் *taṟu-,* 4 செ.குன்றாவி. (v.i.) *1.* **இறுக உடுத்துதல்;** to wear tightly, as a cloth. "தெய்வ மடிதற்றுத் தான்முந் துறும்" (குறள், 1023). *2.* **கட்டுதல்;** to fasten. "தற்றுறு பூமுடி தாழ" (கந்தபு. நகர்பு. 68).

ம. தறுக.

[தள் → தற → தறு-.]

தறுக்கணி-த்தல் *taṟu-k-kaṇi-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* **பழங் கன்றிப்போதல்;** to be hard, as fruits not naturally matured or knots in fruits caused by injury. *2.* **புண்காய்த்துப் போதல்;** to become hard, as some boils or the flesh after a blow. *3.* **உணவுப் பொருளிறுகுதல்;** to grow hard, as vegetables in curry by defective cooking. *4.* **நிலைத்தல்;** to continue, to stay, as in a place.

[தள் → தறு + கண் → தறுக்கணி-.]

தறுகட்பம் *taṟu-gaṭpam,* பெ. (n.) **தறுகண், அஞ்சாமை, வீரம்;** fearlessness, bravery. "தறுகட்ப மில்லார்பின் சென்று நிலை" (அறநெறி. 102).

[தள் → தறு + கண் → தறுகட்பம்]

தறுகண் *taṟu-gaṉ,* பெ. (n.) *1.* **கொடுமை;** cruelty, hard-heartedness. "தறுகட் டகையரிமா" (பு.வெ. 7,20). *2.* **அஞ்சாமையாகிய வீரம்;** valour, bravery, fearlessness. "கல்வி தறுகண் ணிசைமை கொடையென" (தொல். பொருள். 257). *3.* **கொல்லுகை;** slaughtering. "தறுகட் பூட்கை" (சிறுபாண். 141).

மறுவ. தறுகண்மை, தறுகட்பம்

[தறு → தறுகண்]

தறுகண்ணன் *taṟu-kaṇṇaṉ,* பெ. (n.) *1.* **வன்கண்மையுள்ளவன்;** cruel, hard - hearted person. "எரியுமிழ் தறுகணர்" (கம்பரா. அதிகாயன். 138). (வின்.); *2.* **வீரன்;** soldier, hero. "தான்படை திண்டாத் தறுகண்ணன்" (பு.வெ.3,20).

தறுகண்மை *taṟu-kaṇmai,* பெ. (n.) **தறுகண்** (பு.வெ.3,20, கொளு.) பார்க்க; see *taṟu-gaṉ.*

[தறுகண் → தறுகண்மை "மை" பண்புப் பெயர் விகுதி]

தறுகணாட்டி *taṟugaṇ-āṭṭi,* பெ. (n.) **தறுகணி** பார்க்க; see *taṟu-gaṇi.*

[தறுகண் + ஆட்டி. "ஆட்டி" பெண்பாலீறு. ஒ.நோ. திருவாட்டி, பெருமாட்டி, மணவாட்டி, சீமாட்டி]

தறுகணாளன் *taṟu-kaṇ-āḷaṉ,* பெ. (n.) **தறுகண்ணன்** பார்க்க; see *taṟu-gaṇṇaṉ.* "தறுகணாளர் கண்டனர்" (கம்பரா. நாகபாச. 174). "தானைத் தறுகணாளர்" (திவா.).

[தறுகண் + ஆளன். "ஆளன்" ஆண்பாலீறு ஒ.நோ. மணவாளன், பேராளன், திருவாளன்]

தறுகணி *taṟu-gaṇi*, பெ. (n.) **வன்கண்மையுள்ளவள்;** cruel, hard-hearted woman. 'தமரினுள்ளவள்போற் சார்ந்த தறுகணி" *(விநாயகபு. 80, 92).*

மறுவ. தறுகணாட்டி

[தறுகண் → தறுகணி. "இ" பெண்பாலீறு]

தறுகு-தல் *taṟugu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. **தடைப்படுதல்;** to be hindered, checked. "அப்பாற்றறுகி" *(பணவிடு. 242).* 2. **தவறுதல்** (வின்.); to be frustrated; to fail. 3. **திக்கிப் பேசுதல்;** to stammer in speaking. "அவன் தறுகித் தறுகிப் பேசுகிறான்." 4. **காலந் தாழ்த்துதல்;** to linger, loiter. "தறுகி நின்றா னென்மேற் றயவால்" *(விறலிவிடு.).*

[தறு → தறுகு-.]

தறுகுறும்பன் *taṟu-guṟumbaṉ*, பெ. (n.) 1. **முரடன்;** rough, rude, uncivil person, rustic. 2. **கெட்டவன்;** wicked fellow; miscreant.

[தறுகுறும்பு → தறுகுறும்பன். "அன்" ஆண்பாலீறு]

தறுகுறும்பு *taṟu-guṟumbu*, பெ. (n.) 1. **முருட்டுத் தன்மை;** roughness of disposition, rusticity. 2. **தீம்பு;** mischief.

ம. தறுகுறும்பு

[தறு + குறும்பு]

தறுசு *taṟušu*, பெ. (n.) **இழைக்குளிர்த்தி** (யாழ்.அக.); fine texture of cloth.

[தறு → தறுசு]

தறுதம்பு *taṟudambu*, பெ. (n.) **பழைய வரிவகை** (S.I.I. V, 374); an ancient tax.

[தறு + தம்பு → தறுதம்பு]

தறுதலை *taṟu-dalai*, பெ.(n.) **தறிதலை** பார்க்க; see *taṟi-dalai*. "தாயில்லாத பிள்ளை தறுதலை" *(சங். அக.).*

ம. தறுதல

[தறி' → தறு + தலை = தறுதலை]

தறுதலையன் *taṟu-talaiyaṉ*, பெ. (n.) தறிதலை (வின்.) பார்க்க; see *taṟi-dalai*.

மறுவ. வெட்கமில்லாதவன், அடங்காதவன், நாணமற்றவன், முரடன்

ம. தறுதலக்காரன்

[தறு + தலை → தறுதலையன். "அன்" ஆண் பாலீறு. எவர்க்குமடங்காது, இடம், பொருள், ஏவலெனும், இம் மூன்றனுள், ஒன்றிலும் நிலைகொள்ளாது தன், மனம்போன போக்கில், நாணேதுமின்றிப் பணியாற்றும் முரடன்]

தறுதும்பன் *taṟu-tumbaṉ*, பெ. (n.) தறிதலை (வின்.) பார்க்க; see *taṟi-dalai*.

[தறு + தும்பன். முரட்டுத்தனம் நிறைந்து திகழும் நாட்டுப்புறத்தான்.]

தறுதும்பு *taṟu-dumbu*, பெ. (n.) தறுகுறும்பு (யாழ்.அக.) பார்க்க; see *taṟu-guṟumbu*.

[தறு + தும்பு]

தறும்படி-த்தல் *taṟumpaḍi-*, 4 செ.குவி. (v.i.) **கால்வாயில் நீரைப் பிரித்தற்கு, அணையிடுதல்** (வின்.); to build a dam for diverting water in a canal.

[தறும்பு + அடி-.]

தறும்பன் *taṟumbaṉ*, பெ. (n.) **தன்முனைப்பாளன்** (நீலகேசி, 282, உரை); proud person.

மறுவ. இறுமாப்புக்காரன், செருக்குமிக்கவன், தன்மதியாளன், வீம்புப்பேர்வழி, தறுக்காளி

[தறு → தறும்பு → தறும்பன். நான், எனதென்னும், இறுமாப்புடன் செயலாற்று பவன்; எப் பணியினையும் அகந்தையுடன் ஆற்றுபவன்]

தறும்பு *taṟumbu*, பெ. (n.) 1. **ஒருவழியாய்ச் செல்லும்நீரை வேறுவழியிற் செலுத்தக் கட்டும் அணை** (வின்.); dam to stop a stream and turn it in a different direction. 2. **முளை** (இ.வ.); peg.

க. தறும்பு.

[தறு → தறும்பு]

தறுவாய் *taṟu-vāy,* பெ.(n.) *1.* உற்றநேரம், வாய்ப்பு, தக்கவேளை; occasion, particular juncture, rare opportunity. *2.* அரசியல் திருப்பு மையம்; crisis. *3.* பருவம்; stage, as in life. "தன்னை யறியுந் தறுவாயான்" *(காளத். உலா, 290).*

தெ. தருவாய; க. தறுவாய்

மறுவ. உற்றகாலம், உரியநேரம், ஏற்ற பொழுது; தக்கபருவம், தக்ககாலம்; தக்கநேரம்

[தறு + வாய் → தறுவாய் = தக்கநேரம்]

தறுவி[1] *taṟuvi,* பெ. (n.) தரு; ladle (செ.அக.)

தறுவி[2] *taṟuvi,* பெ. (n.) மருந்து பூசுகருவி; an instrument for applying medicine.

தறுவு-தல் *taṟuvu-,* 5 செ.கு.வி. (v.i.) குறைதல் *(யாழ்.அக.);* to diminish.

[தறு → தறுவு-.]

தறுளுறுதி *taṟuḷuṟudi,* பெ. (n.) நிலவேம்பு; ground-neem.

தறுனல் *taṟuṉal,* பெ. (n.) கப்பற்பாயின் மேற் கட்டையைக் கட்டுங்கயிறு; vang, rope to steady the peak of a gaff.

[தறை → தறு → தறுனல்.]

தறை[1]**-தல்** *taṟai-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1.* ஆணியை அடித்து இறுக்குதல் *(யாழ்ப்.);* to beat down flat; to hammer, as the head of a nail or the end of a bolt after fixing on the nut; to rivet. *2.* ஆணியால் தைத்தல் (இ.வ.); to fasten two beams or rafters together by hàmmering in spikes. *3.* குற்றப்படுத்துதல் *(யாழ்ப்.);* to make an accusation, commonly false.

[தட்டு → தடை → தறை-.]

தறை[2]**-தல்** *taṟai-,* 4 செ.கு.வி. (v.i.) தட்டையாதல்; to become flat; to be flattened. "தீரத் தறைந்த தலையும்" *(கலித். 65).*

[தட்டு → (தடை) → தறை (மு.தா. 121)]

தறை[3] *taṟai,* பெ. (n.) தரை[3] பார்க்க; see *tarai*[3] land, ground. "பிள்ளைகள் தறையிற் கிறிடில்" *(கம்பரா. சிறப். 10).*

[தரை[3] → தறை]

தறைமலர் *taṟai-malar,* பெ. (n.) ஆணியின் மரை *(வின்.);* nut of a bolt.

[தரை → தறை + மலர். ஆணியின் தலைப் பகுதி]

தறையடி-த்தல் *taṟai-y-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) நிலத்தில் அசையாமல் இருத்துதல்; to be nailed down, fixed to a place. "தறையடித்தது போற் நீராத் தகையவித்திசைகடாங்குங் கறையடிக்கு" *(கம்பரா. வாலிவ. 143.).*

[தறை + அடி-.]

தறையாணி *taṟai-y-āṇi,* பெ. (n.) ஆணிவகை *(வின்.);* a kind of spike.

[தறை + ஆணி]

தன் *taṉ,* பெ. (n.) தான் என்னும் படர்க்கைப் பகரப்பெயர், வேற்றுமையுருபை ஏற்கு மிடத்துப்பெறுந் திரிபு; oblique case-form of the pronoun tāṉ.

[தான் → தன்]

தன்கடையே *taṉ-kaḍai-yē,* கு.வி.எ. (adv.) தன்னடைவே; of itself, of its own accord, voluntarily. "அதைத் தன்கடையே அறுந்துவிழச் செய்வாரோ" *(குருபரம். 62).*

[தன் + கடையே]

தன்காரியக்குட்டி *taṉ-kāriya-k-kuṭṭi,* பெ. (n.) தன் செயலிலேயே கண்ணாயிருப்பவன் *(நாஞ்.);* extremely selfish person.

மறுவ. தன்காரியப் புலி, தன்பாடாளன்

[தன் + காரியம் + குட்டி]

தன்காரியப்புலி *taṉ-kāriya-p-puli,* பெ. (n.) தன் செயலிலேயே ஈடுபட்டவன் *(வின்.);* extremely selfish person.

[தன்காரியம் + புலி]

தன்காரியம் *taṉ-kāriyam,* பெ. (n.) தன் சொந்தச் செயல் *(வின்.);* one's own pursuit, self-interest.

மறுவ. தன்ஈடுபாடு, தன்தொழில்

[தன் + காரியம்]

தன்காலம் *taṉ-kālam,* பெ. (n.) *1.* உரியகாலம் *(யாழ்.அக.);* proper season or time. *2.* கள்

மிகுதியாகக் கிடைக்கும் காலம் (நெல்லை); period when toddy is available in plenty.

மறுவ. தக்கநேரம், தக்கபருவம்

[தன் + காலம்]

தன்கு *tangu,* பெ. (n.) மகிழ்ச்சி (இலக்.அக.); hilarity, mirth.

[தனகு → தன்கு]

தன்குலம்வெட்டி *taṉ-kulam-veṭṭi,* பெ. (n.) (தன் குலத்தை அழிப்பது) கோடாரிக்காம்பு (வின்.); handle of an axe, as destroying its own family.

[தன்குலம் + வெட்டி, தன் இனம் அழியத் தானே கரணியமாக விருப்பவன்.]

தன்குறியிடுதல் *taṉ-kuṟi-iḍudal,* பெ. (n.) தானே குறியிட்டாளுதலாகிய உத்திவகை (மாறனலங். பாயி. 25); coining technical names, a utti.

[தன்குறி + இடுதல்]

தன்குறிவழக்கமிகவெடுத்துரைத்தல் *taṉ-kuṟi-vaḻakkamiga-v-eḍutturaittal,* பெ. (n.) முப்பத்திரண்டுத்திகளில், தான் உண்டாக்கிய குறியீட்டைத் தன்நூலில் மிகுதியும், எடுத்தாளும் தந்திர உத்தி (நன். 14); author's constant use of technical terms and phrases coined by himself, one of 32 utti.

[தன்குறி + வழக்கம் + மிக + எடுத்துரைத்தல்]

தன்கொண்டி *taṉ-koṇḍi,* பெ. (n.) தன்கருத்து, தன்விருப்பம் (வின்.); self will.

மறுவ. தன்னீட்டம்., தன் ஈடுபாடு, விடாப் பிடி

[தன் + கொண்டி. ஒருவன் தான் கொண்ட கொள்கையினையோ அல்லது உளங் கொண்ட கருத்தினையோ, விடாப் பிடியாக மேற்கொள்ளல்]

தன்கைக்கொலை *taṉkai-k-kolai,* பெ. (n.) தற்கொலை பார்க்க; see *taṟ-kolai.*

[தன் + கை + கொலை]

தன்கோட்கூறல் *taṉ-kōṭ-kūṟal,* பெ. (n.) முன்னூலாசிரியர் கூறியவாறு கூறாது தன்கோட்பாட்டாற் கூறுகை (மாறனலங். பாயி. 25); enunciating new doctrines professed by oneself.

[தன்கோள் + கூறல்]

தன்சோதனை *taṉ-śōdaṉai,* பெ. (n.) தன்தேர்வு; self examination.

[தன் + சோதனை]

தன்தரை(தன்றரை) *taṉ-tarai,* பெ. (n.) 1. வெறுந்தரை; bare-ground. கோட்டையைத் தன்தரையாக இடித்து விட்டார்கள் (உ.வ.). 2. போடு மண்ணின்றி இயற்கையான தரை (நெல்லை); natural earth-surface.

[தன் + தரை. இயல்பான வெறுந்தரை]

தன்தரையாக்கு-தல் (தன்றரையாக்கு-தல்) *taṉ-tarai-y-ākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) தரை மட்டமாக இடித்தல்; to raze to the ground, demolish completely, as a building. கட்டடத்தைத் தன் தரையாக்கி விட்டார்கள் (உ.வ.).

[தன்தரை + ஆக்கு]

தன்தரையில்நில்-தல்(தன்றரையினிற்றல்) *taṉ-taraiyil-nil-,* 14 செ.குவி. (v.i.) வறுமைப் படுதல் (வெறுந்தரையில் நிற்றல்); lit., to stand on bare ground, to suffer from dire want; to be destitute.

[தன்தரையில் + நில்-.]

தன்படியே *taṉ-paḍi-y-ē,* கு.வி.எ. (adv.) 1. தானாகவே; of its own accord. 2. தன் விருப்பப்படி; according to one's own in clination. அவன் தன்படியே திரிகிறான் (உ.வ.).

[தன் + படியே]

தன்படுவன் *taṉ-paḍuvaṉ,* பெ. (n.) தானாக உண்டாம் விளையுப்பு (யாழ்ப்.); naturally formed salt.

மறுவ. இயற்கையுப்பு

[தன் + படுவன்]

தன்பாசனம் *taṉ-pāšaṉam,* பெ. (n.) தானாகப் பாயும் நீர்ப்பாய்ச்சல்; direct flow of water without baling.

மறுவ. முதல்மடைப் பாசனம், தலைவாய்க்கால் பாசனம்

[தன் + பாசனம்]

தன்பாசனம் : ஆற்றுப்படுகையிலோ அல்லது தலைவாய்க்காலில் உள்ள, தலை மதகுப்படுகையிலோ, இயற்கையாக அமைந்துள்ள, பாசனநிலம்.

தன்பாட்டில் *tan̲-pāṭṭil*, கு.வி.எ. (adv.) 1. **தானாகவே;** of its own accord. காரியம் தன்பாட்டிலே நடக்கிறது. 2. **பிறர்செயலில் தலையிடாமல்;** without interfering with others. தன்பாட்டிலே போகிறான் *(உ.வ.).*

[தன் + பாட்டில்]

தன்பாடு *tan̲-pāḍu*, பெ. (n.) **தன்செயல்;** one's own business. அவன் தன்பாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் *(உ.வ.).* தன்பாடே பெரும்பாடாக இருக்கும்போது அவன் யாருக்கு உதவ முடியும்? *(உ.வ.).*

க. தன்பாடு

மறுவ. தன்காரியப்புலி, தன்காரியக்குட்டி

[தன் + பாடு = தனது சொந்தப்பணி]

தன்பாலிருத்தல் *tan̲-pāl-iruttal*, பெ. (n.) **சிவபதம் நான்கனுள் ஒன்றாகிய அண்மையியம்** *(பிங்.);* being near to Šivam, one of four Šivapadam.

[தம்பால் + இருத்தல்]

தன்பிடி *tan̲-piḍi*, பெ. (n.) **தன்கொள்கை** (வின்.); one's own doctrine or opinion.

மறுவ. கொள்கைப்பிடிப்பு

[தன் + பிடி]

தன்பேறு *tan̲-pēṟu*, பெ. (n.) **தன்னீட்டம்;** one's own benefit, self-interest. "தன்பேறாக உபகரிக்கை" *(ஈடு 2. 3:4).*

மறுவ. தன்வரும்படி

[தன் + பேறு. தன் சொந்த வரும்படி ஒன்றிலேயே, தன்னார்வத்துடன் கண்ணுங் கருத்துமாயிருக்கை.]

தன்பொருட்டனுமானம் *tan̲-poruṭ-ṭan̲umān̲am*, பெ. (n.) **தன்பொருட்டனு மிதிக்குக் காரணமாயுள்ளது** (தருக்கசங். நீலகண். 97) ; the minor term in tan̲poruṭṭan̲umidi.

[தன்பொருட்டு + அனுமானம்]

தன்பொருட்டனுமிதி *tan̲-poruṭṭan̲u-midi*, பெ. (n.) **கருத்தளவையால் தானேநேரில் பார்த்துக் கொள்ளும் பொறிக்காட்சி** *(தருக்கசங். நீலகண். 97);* inference from one's own perception, opp. to piṟarporuṭṭan̲umidi.

[தன்பொருட்டு + அனுமிதி]

தன்பொறுப்பு *tan̲-poṟuppu*, பெ. (n.) **தன்னதாக ஏற்றுக் கொள்ளும் கடமை** (வின்.); personal responsibility.

[தன் + பொறுப்பு]

தன்மணம் *tan̲-maṇam*, பெ. (n.) திப்பிலி வேர்; root of long-pepper.

[தன் + மணம்]

தன்மணி *tan̲-maṇi*, பெ. (n.) **அற எண்ணம் உள்ளவன்** (வின்.); charitable person, benevolent person.

[தன் + மணி]

தன்மயமாக்கு-தல் *tan̲-mayam-ākku-*, 5 செ. குன்றாவி. (v.t.) **பிறரை தன் வயப்படுத்துதல்;** to transform others to one's states in structure, quality etc., as a changes of the worn into a wasp. "தன்மயமாக்கிய சத்தியச்சோதி" *(அருட்பா. vi, ஆனந்தக் களிப்பு, 2, 27).*

[தன்வயம் → தன்மயம் + ஆக்கு-.]

தன்மலைக்கரசி *tan̲-malai-karaši*, பெ. (n.) **(சாலக் கிராமம்) தெய்வத் தன்மையுள்ள கல்;** a kind of holy stone of gold colour. தன் மலைக்கரசி திருமாலிய அன்பர்களால், போற்றிப் பூசனை செய்யப்படும், தெய்வத்தன்மை வாய்ந்த பொன்னிறக் கல்.

[தன் + மலைக்கரசி.]

தன்மவனிதம் *tan̲ma-van̲idam*, பெ. (n.) **இணைவிழைச்சு (மேக)நோய் நீக்கும் மூலிகை;** a plant capable of curing radially all kinds of venereal disease.

தன்மவைபாதம் *tan̲mavai-pādam*, பெ. (n.) **அவுரி;** indigo-plant.

தன்மன் *tan̲man̲*, பெ. (n.) **தன்மணம் பார்க்க;** see *tan̲-maṇam.*

தன்மனை *taṉ-maṉai,* பெ. (n.) ஓர் எண் *(கணக்கதி);* a number.

தன்மாத்திரம் *taṉmāttiram,* பெ. (n.) தனக்குள்ள குணம் வேறுபடாமை; that in which its own peculiar property resides without change.

தன்மாத்திரை *taṉ-māttirai,* பெ. (n.) *1.* பூதங்கள், தொடக்க நிலையில் உலகம் உருவாகக் கரணியமான நுண்மங்கள்; the subtle form of primordial elements. *2.* ஐம்பூதம் ஐம்பொறியாக மாறுகை; the five elements being resolved into rudimentary elements of the five senses viz., šuvai, oḷi, ūṟu, ōšai, nāṟṟam. *3.* ஐம்பொறிகளின் மூலம்; the five principles or perceptions or grounds of knowledge by means of senses. *4.* புலனுணர்ச்சி; sensibles.

[தன் + மாத்திரை]

தன்மானம் *taṉ-māṉam,* பெ. (n.) தன்மதிப்பு; self-respect; self-dignity. தன் மானத்தை இழந்து ஊழியம், பார்ப்பதா? *(உ.வ.).*

[தன் + மானம்]

தன்மானி *taṉ-māṉi,* பெ. (n.) வறுமை; poverty, misery.

தன்முனைப்பு *taṉ-muṉaippu,* பெ. (n.) 'தான்' என்னும் உணர்வு, செருக்கு; ego.

மறுவ. ஆணவம்

[தான் → தன் + முனைப்பு]

தன்மூப்பானவன் *taṉ-mūppāṉavaṉ,* பெ. (n.) *1.* இறுமாப்புள்ள இளைஞன்; a presumptuous, arrogant youth; and upstart. *2.* தன் விருப்பப்படி நடப்பவன்; one who acts on his own wish.

[தன்மூப்பு + ஆனவன்]

தானே பெரியன் என்னும் செருக்கில், தகாத் துணிவுடன், தன் மனம்போன போக்கில், நடப்பவன்.

தன்மூப்பு *taṉ-mūppu,* பெ. (n.) *1.* இறுமாப்பு; youthful arrogance, presumption, self-will, self-assertion. *2.* தன் விருப்பம்; state of having one's own way. தன் மூப்பாய் நடக்கிறவன் *(இ.வ.).*

மறுவ. தன் விருப்பு

[தன் + மூப்பு]

தன்மூப்புச்செலுத்து-தல் *taṉ-mūppu-c-celuttu-* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* பொறுப்பேற்றுக் கொண்டு நடத்தல்; to act on one's own responsibility. *2.* மேலான்மை செலுத்துதல் *(நெல்லை);* to lord it over.

[தன்மூப்பு + செலுத்து-.]

தன்மூலம் *taṉ-mūlam,* பெ. (n.) *1.* திப்பிலிக் கட்டை *(தைலவ. தைல.);* stem of long-pepper. *2.* திப்பிலி வேர்; root of long-pepper.

தன்மேம்பாட்டுரை *taṉ-mēmpāṭṭurai,* பெ. (n.) தற்புகழ்ச்சியணி; figure of speech in which a person praises himself. "தான்றற் புகழ்வது தன்மேம் பாட்டுரை" *(தண்டி. 70).*

[தன் + மேம்பாடு + உரை.]

தன்மை[1] *taṉmai,* பெ. (n.) *1.* இயல்பு; nature, essence, property, inherent or abstract quality. இலக்கியத் தன்மை நிறைந்த நூல் *(உ.வ.).* மனிதத் தன்மையே இல்லாதவன் *(உ.வ.).* "தவ்வென்னுந் தன்மை யிழந்து" *(குறள், 1144).* *2.* சிறப்பியல்பு, பண்பு *(பிங்.);* character. *3.* நிலைமை; state, condition, position, circumstances. "வருதற் கொத்த தன்மை" *(கம்பரா. சூர்ப்ப. 42).* *4.* முறை *(வின்.);* manner, method, kind, description, order. *5.* பெருமை *(பிங்.);* greatness. *6.* ஆற்றல் *(நன்.பாயி.மயிலை.);* power. *7.* நன்மை *(பிங்.);* goodness. *8.* அழகு *(சூடா.);* beauty. *9.* மெய்ம்மை; fact, truth, realisation.

தன்மை[2] *taṉmai,* பெ. (n.) மூவிடங்களுள் தன்னைக் குறிக்கும் இடம்; denoting the first person one of among the mūviḍam. "பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே" *(தொல்.சொல். 204).*

[தன்மை = பேசுபவர், கேட்பவர், பேசப்படுபவர் ஆகிய மூன்று இடங்களுள் பேசுபவரைக் குறிப்பது. ஏ என்பது உயர்ச்சி குறித்தலால், இயல்பாக மாந்தனுக்குள்ள நான் என்னும் செருக்கு அல்லது தன்னலம் பற்றி, அதை அடியாகக் கொண்டு தன்மைப்பெயர்கள் தோன்றியிருக்கலாம் (த.வ. 134).]

தன்மைநவிற்சி *taṉmai-naviṟci,* பெ. (n.) பொருள் முதலியவற்றை இயற்கையில்

உள்ளவாறே கூறும் அணி (அணியி. 93); figure of speech which consists in describing an object as it is.

[தன்மை + நவிற்சி]

தன்மைமிகுத்துரை *tanmai-migutturai,* பெ. (n.) ஒரு பொருளின் இயல்பை மிகுத்துக் கூறுகை; exaggration of the nature of an object. "தொகையே தொடர்ச்சி தன்மைமிகுத்துரை" (மணிமே. 30, 192).

[தன்மை + மிகுத்துரை]

தன்மையெழுத்து *tanmai-y-eluttu,* பெ. (n.) எழுத்துவகை (யாப்.வி. 536); a kind of letter.

[தன்மை + எழுத்து]

தன்வசப்படுத்து-தல் *tan-vaša-p-paḍuttu,* 5 செகுன்றாவி. (v.t.) தன்கைப்படுத்துதல்; to bring under one's control; to appropriate.

மறுவ. தனதாக்குதல்

[தன் + வசப்படுத்து-. வயப்படுத்து → வசப்படுத்து]

தன்வயத்தனாதல் *tan-vayattan-ādal,* பெ. (n.) சிவனெண்குணத்துள், ஈடுபாடு கொள்ளும் தன்மை (குறள். 9, உரை); being self-dependent, one of eight qualities of Šivan.

தன்வயம் *tan-vayam,* பெ. (n.) தன்வயத் தனாதல் (சூடா.) பார்க்க; see *tan-vayattan-ādal.*

தன்வயாதம் *tan-vayādam,* பெ. (n.) சிறுகாஞ்சொறி (மலை.); small climbing nettle.

தன்வழி *tan-vali,* பெ. (n.) 1. தன்மரபு (வின்.); one's parentage, ancestry, family. 2. தன் விருப்பம்; one's own will and pleasure.

[தன் + வழி]

தன்வினை *tan-vinai,* பெ. (n.) 1. தனதுசெயல்; one's action. 2. ஊழ்; fate. தன்வினை தன்னைச் சுடும் (வின்.). 3. இயற்றுதற் கருத்தாவின் வினையை உணர்த்துஞ் சொல் (புறநா. 59, உரை); verb denoting the direct action of an agent, opp. to pira-vinai.

[தன் + வினை]

தன்வேதனைக்காட்சி *tan-vēdanai-k-kāṭci,* பெ. (n.) தன்னையறியாமல் வரும் இன்பத் துன்பங்களை ஆதனறிவால் அறிகை; self-perception of pleasure and pain brought about by self-reliance etc., "அருந்தின்பத் துன்ப முள்ளத் தறிவினுக் கராகமாதி தருந்தன் வேதனையாங் காட்சி" (சி.சி.அளவை. 7).

[தன்வேதனை + காட்சி]

தன்னக்கட்டு-தல் *tanna-k-kaṭṭu-,* 5 செ.குவி. (v.i.) தன்னைக்கட்டு பார்க்க; see *tannai-k-kaṭṭu-*

[தன்னை + கட்டு-.]

தன்னகத்தே *tannagattē,* வி.எ. (adv.) தன்னுள்ளே; within [itself]. கணிப் பொறியானது பல மின்னணு நுட்பங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது (இக்.வ.).

[தன் + அகத்தே]

தன்னடக்கம் *tan-n-aḍakkam,* பெ. (n.) 1. தன்னை ஒறுக்கை; self-restraint, self-denial, self-possession. 2. அமைதி; modesty, in regard to learning, wealth, etc., இவ்வளவு பெரிய அறிவியல் வல்லுநராக இருந்தும் எவ்வளவு தன்னடக்கத்துடன் பேசுகிறார் (உ.வ.).

[தன் + அடக்கம்]

தன்னடிச்சோதி *tan-n-aḍi-c-cōdi,* பெ. (n.) பரமபதம் (பரமனது திருவடியின் ஒளி); final bliss, as the radiance of the feet of God. "ஆழ்வார்கள் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளின பின்பு" (குரு. பரம். 165).

[தன் + அடி + சோதி]

தன்னடையே *tan-n-aḍai-y-ē,* கு.வி.எ. (adv.) தானாகவே; of its own accord. "தன்னடையே விட்டுப்போம்" (ஈடு. 1: 2: 9).

[தன் + அடைவே → அடையே]

தன்னணி *tannaṇi,* பெ. (n.) வேங்கைமரம்; kino-tree.

தன்னந்தனி[1] *tannan-tani,* கு.வி.எ. (adv.) முற்றுந் தனிமையாய்; quite alone, in absolute solitude. "தன்னந்தனிநின் றழுகின்றவத் தையல்" (பாரத. திரௌ. 82). இவ்வளவு பெரிய வீட்டில் எப்படித் தன்னந்தனியாக இருக்கிறீர்கள் (இக்.வ.).

[தன் + அம் + தனி]

தன்னந்தனி²-த்தல் *tannan-dani-*, 4 செ.கு.வி. (v.i.) *முழுதுந்தனிமையாதல்;* to be absolutely alone. "தன்னந்தனித்த மருந்து" *(அருட்பா, vi, ஆனந்தக்களிப்பு 1, 28).*

[தன்னம் + தனி-.]

தன்னந்தனியாக *tannan-dani-y-āga*, கு.வி.எ. (adv.) *தனித்து;* all alone. இரவு நேரத்தில் தன்னந்தனியாக நடந்தே வந்திருக்கிறான் *(உ.வ.).*

மறுவ. ஒண்டியாக

[தன்னம் + தனி + ஆக.]

தன்னம்¹ *tannam*, பெ. (n.) *சிறுமை* (திவா.); minuteness. "தன்னஞ்சிறிதே துயின்று" *(சீவக. 2028).*

தன்னம்² *tannam*, பெ. (n.) *1. ஆவின்கன்று* (பிங்.); calf. *2. மான்கன்று;* fawn. *3. மரக்கன்று;* sapling. "இளமாழைத் தன்னந் திகழ் சாரல்" *(திருப்போ. சன்னிதி. பிள்ளைத். தாற்ப. 7).*

[தம் → தன் + அம் → தன்னம். தம்மைப் பற்றியே எண்ணுகை.]

தன்னம்பிக்கை *tannambikkai*, பெ. (n.) *தன் மீதுள்ள நம்பிக்கை;* self-confidence (in oneself); assurance. எங்கு சென்றாலும் பிழைத்துக் கொள்ள முடியும் என்ற தன்னம்பிக்கை, ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு *(உ.வ.).* வெற்றி தன்னம்பிக்கை அளிக்கிறது *(உ.வ.).*

[தன் + நம்பிக்கை]

தன்னமுரி *tanna-muri*, பெ. (n.) *தன்சிறுநீர்;* one's urine.

[தன் + அமுரி]

தன்னமை¹ *tan-n-amai*, பெ. (n.) *1. நட்பு;* friendship, amity. *2. இணக்கம்;* connection.

[தன் + அமை]

தன்னமை² *tan-n-amai*, பெ. (n.) *சுற்றத்தார்;* neighbour's relations. "தன்னமை பகையுஞ் சரி அயலத்தார் உறவுஞ்சரி" *(நெல்லை).*

[தன் + அமை. தனக்கு அமைந்த உறவினர்]

தன்னயம் *tannayam*, பெ. (n.) *தன்நலம்;* self-interest.

[தன் + நயம். நயம் = நலம்]

தன்னரசு *tan-n-arašu*, பெ. (n.) *1. தன்னாட்சி அரசு;* self-government, independent kingdom. *2. குற்றம்;* state of anarchy, one of eight nāṭṭu-k-kuṟṟam. "இது தன்னரசு நாடாய்" *(ஈடு. 1: 2: 9).*

[தன் + அரசு]

தன்னரசுநாடு¹ *tan-n-arašu-nāḍu*, பெ. (n.) *தன்னாட்சி நடத்தும் நாடு* (ஈடு. 4, 9, ப்ர.); state or country where anarchy prevails.

[தன்னரசு + நாடு]

தன்னரசுநாடு² *tan-n-arašu-nāḍu*, பெ. (n.) *ஒருவன் தன் விருப்பப்படி ஆளும் நாடு;* despotic state. "இராவணாகாரமாகி ... தன்னரசு நாடு செய்திருக்கும்" *(தாயு. மௌன. 9).*

[தன்னரசு + நாடு = தனது விருப்படி ஆட்சி நடாத்தும் நாடு; கொடுங்கோலரசாகவும் சில நேரத்தில் அமையும்]

தன்னரசுபற்று *tan-n-arašu-paṟṟu*, பெ. (n.) தன்னரசுநாடு (யாழ்அக.) பார்க்க; see *tannarašu-nāḍu.*

[தன்னரசு + பற்று]

தன்னலம் *tannalam*, பெ. (n.) *தனக்கேற்ற நன்மைகளை மட்டும் பேணுகை;* selfishness. தன்னலமற்ற தொண்டு மனப்பான்மை உடையவர்களே, பொதுவாழ்வில் ஈடுபட வேண்டும் *(உ.வ.).*

[தன் + நலம்]

தன்னவன் *tannavan*, பெ. (n.) *தன்னைச் சேர்ந்தவன்* (வின்.); friend, relative, associate.

க. தன்னவன்.

[தன் + அவன் → தன்னவன் = தன்னைச் சார்ந்தவன், உற்றார், உறவினர்.]

தன்னறிவு *tan-n-aṟivu*, பெ. (n.) *1. சொந்த அறிவு;* consciousness, self-knowledge, one's own knowledge. *2. மயக்கமற்ற அறிவு;* sobriety, self-possession. குடிகாரனுக்குத் தன்னறிவில்லை *(உ.வ.).*

[தன் + அறிவு]

தன்னறிவிழ-த்தல் *tannaṟiviḻa-*, 3 செ.கு.வி. (v.i.) *அறிவழிதல்;* to loose consciousness.

[தன்னறிவு + இழ-.]

தன்னனுபவம் *tannanubavam,* பெ. (n.) தன் பட்டறிவு; self-experience.

[தன் + அனுபவம்]

தன்னனுமானம் *tan-n-anumānam,* பெ. (n.) 1. தன் பொருட்டாளும் கருதுகோள் (சி. சி. அளவை. 4) தன்பொருட்டனுமானம் பார்க்க; see *tan-poruṭṭanumānam.* 2. தனது கருதுகை; one's presumption.

[தன் + அனுமானம்]

தன்னாசிக்கருப்பன் *tannāśi-k-karuppan,* பெ. (n.) ஒரு ஊரகத் தெய்வம் (கொங்கு); one village deity (செ.அக.).

மறுவ. சன்னாசிக்கருப்பு

[தன்னாசி + கருப்பன். ஊரகக் கருப்பனார் கோயில்களில் பெயரெழுதி வைத்த துறவியின் படிவம்.]

தன்னாட்சி *tann-āṭci,* பெ. (n.) தன்னாளுகைக் குரிய உரிமை; autonomy; self-governance. தன்னாட்சிக் கல்லூரி (இக்.வ.). தன்னாட்சி கோரும் மாநிலங்கள் (இக்.வ.).

[தன் + ஆட்சி]

தன்னாண்டு *tan-n-āṇḍu,* பெ. (n.) நடப்பாண்டு (நாஞ்.); current year, as dist. fr. talai-y-āṇḍu.

[தன் + ஆண்டு]

தன்னாரவண்ணம் *tan-n-āra-vaṇṇam,* கு.வி.எ. (adv.) ஒருவரது உள்ளப்போக்கின்படி; at one's will and pleasure, as one wills. "புஷ்பமும் விந்தமுங் குந்தமுந் தன்னாரவண்ணமாக் கட்டினார்" (இராமநா. பாலகா. 22) (செ.அக.).

[தன் + ஆர் + வண்ணம்]

தன்னாரவாரம் *tan-n-āra-vāram,* கு.வி.எ. (adv.) தன்னாரவண்ணம் (வின்.) பார்க்க; see *tan-nāra-vaṇṇam.*

[தன் + ஆரவாரம்]

தன்னிகரற்ற *tannigararra,* பெ.எ. (adj.) ஈடிணையற்ற; matchless, peerless. தன்னிகரற்ற தலைவர். தன்னிகரற்ற இலக்கியப் படைப்பு. (உ.வ.).

[தன்னிகர் + அற்ற. ஒப்பாரும், மிக்காரும் இல்லாத]

தன்னிச்சை *tan-n-iccai,* பெ. (n.) 1. தன்விருப்பம்; one's own wish, self-will. மகனுடைய தன்னிச்சையான போக்கை தந்தையால் புரிந்து கொள்ள முடியவில்லை. (இக்.வ.). 2. விடுதலை; freedom, liberation from slavery.

[தன் + இச்சை]

தன்னிச்சையாய் *tan-n-iccai-y-āy,* கு.வி.எ. (adv.) 1. தன்மூப்பாய் (இ.வ.); autocratic. 2. தற்செயலாய்; by chance (உ.வ.). அதிகாரிகளைக் கலந்து ஆராய்ந்து தன்னிச்சையாக எடுத்த முடிவு (இக்.வ.).

[தன் + இச்சை + ஆய்]

தன்னிழல்காய்ஞ்சி *tannilal-kāyñji,* பெ. (n.) சாயாமலை; a tree which does not cast its shadow.

[தன்னிழல் + காய்ஞ்சி]

தன்னிழல்காத்தான் *tannilal-kāttān,* பெ. (n.) தன்னிழல் பார்க்க; see *tannilal.*

[தன்னிழல் + காத்தான்]

தன்னியம் *tanniyam,* பெ. (n.) தாய்ப்பால் (தைலவ.தைல.); mother's milk.

[தன் + இயம். தன்னியம் = ஈடு இணையற்ற நலம்தரும்இனிமையான பால். தாய்மைப் பரிவுடன் அன்னைதரும், அன்புப்பால்]

தன்னியல்பு *tan-n-iyalbu,* பெ. (n.) சிறப்புக் குணம்; peculiar quality, distinguishing feature or characteristic. "அவ்வப்பொருள்கட்டுக் கூறும் தன்னியல்பு பொதுவியல்பு மாத்திரையின் முரணுதலால்" (சி. இ. அளவை. 4).

[தன் + இயல்பு]

தன்னியன் *tanni-y-an,* பெ. (n.) 1. செல்வமுடை யோன்; wealthy person. 2. நற்பேறு கொண்டவன்; fortunate man (செ.அக.).

தன்னியாசி *tanniyāśi,* பெ. (n.) இசைப்பண் (பரத. இராக. 56); a specific melody-type.

தெ. தன்யாசி.

தன்னிலை *tannilai,* பெ. (n.) 1. இயல்பு நிலை; one's proper position, nature or state. 2. நடு நிலை நிற்கை; equilibrium or natural state.

[தன் + நிலை]

தன்னிறம்[1] *tannițam*, பெ. (n.) காவிக்கல்நிறம் (வின்.); colour or red ochre (செ.அக.).

[தன் + நிறம்]

தன்னிறம்[2] *tannițam*, பெ. (n.) இயல்புநிலை; natural state.

[தன் + நிறம்]

தன்னிறமாக்கி[1] *tanniram-ākki*, பெ. (n.) பொன் (யாழ்.அக.); gold.

[தன்னிறம் + ஆக்கி]

தன்னிறமாக்கி[2] *tanniram-ākki*, பெ. (n.) குளவி (வின்.) பார்க்க; see *kuḷavi*; a kind of hornet .

[தன்னிறம் + ஆக்கி]

தன்னிறைவு *tanniraivu*, பெ. (n.) 1. தன்னிலேயே நிறைவு பெறும் நிலை; self-sufficiency. எல்லாத்துறைகளிலும் நாட்டைத் தன்னிறைவு பெறச் செய்வதே அரசின் நோக்கம் (இக்.வ.). 2. கிடைத்தது போதும் என்ற வகையில் அடையும் பொந்திகை; contentment. எவ்வளவு பணம் கிடைத்தாலும், அவர் தன்னிறைவு அடைவதே இல்லை.

மறுவ. பொந்திகை

[தன் + நிறைவு]

தன்னினமுடித்தல் *tan-n-inamudittal*, பெ. (n.) ஒன்றைச் சொல்லுமிடத்து விரிவுறாமை வேண்டி, அதற்கினமாகிய மற்றொன்றையும் அதனோடு கூட்டி முடித்தலாகிய உத்தி (தொல் சொல். 27, சேனா); a mode of concise statement which, by implication, covers related points, one of 32 utti.

[தன்னினம் + முடித்தல்]

தன்னினி *tannini*, பெ. (n.) வேங்கை (மலை.) பார்க்க; see *vēṅgai*; East Indian kino.

தன்னீங்கல் *tanniṅgal*, பெ. (n.) 1. தடையற்ற நிலை; liberty. 2. உரிமை கொண்டாடுகை; independence. 3. தொடர்பில்லாமை; unconnected.

[தன் + நீங்கல்]

தன்னு-தல் *tannu-*, 5 செகுன்றாவி. (v.t.) 1. சிறிது சிறிதாக எடுத்தல் (வின்.); to take little by little, as from a heap; to unload a vessel a little at a time. 2. தோணியை மெல்லத் தள்ளுதல் (வின்.); to move a vessel by degrees. 3. பொருந்துதல்; to approach. "நம்பனையே தன்ன வலஞ்செய்து கொளும்" (பதினொ. விநா. திரு. 3).

[தன் → தன்னு-.]

தன்னுட்கேந்திரம் *tannuṭ-kēndiram-*, பெ. (n.) மஞ்சள் நிறமுள்ள மாணிக்கக் கல்; cinnamon stone.

மறுவ. தகமணி

தன்னுண்மை *tannuṇmai*, பெ. (n.) இயற்கைத் தன்மை; the real distinctive characteristic.

[தன் + உண்மை]

தன்னுணர்ச்சி *tan-n-uṇarcci*, பெ. (n.) 1. தன்னறிவு; self-consciousness. 2. நினைவு; memory, recollection. குடிகாரன் தன்னுணர்ச்சி யின்றி, உளறுவதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது (உ.வ.).

[தன் + உணர்ச்சி]

தன்னுணர்வு *tan-n-ūṇarvu*, பெ. (n.) தன்னுணர்ச்சி பார்க்க; see *tan-n-uṇarcci*.

[தன்னு + உணர்வு]

தன்னுதோணி *tannu-tōṇi*, பெ. (n.) சிறிய படகு (யாழ்.அக.); small boat.

[தன்னு + தோணி]

தன்னுவத்தை *tannu-vattai*, பெ. (n.) தன்னுதோணி (யாழ்.அக.) பார்க்க; see *tannu-tōṇi*.

தன்னுறுதொழில் *tan-n-uru-toḻil*, பெ. (n.) மன்னன் கட்டளையை எதிர்பாராதே, அவன் வீரர் பகைவரின் ஆனிரைகவர்தலைக் கூறும் வெட்சித்திணைப்பகுதி (பு.வெ. 1,2); theme describing the capture of enemy's cows by king's soldiers without his express command, dist. fr. mannuru-toḻil.

[தன்னுறு + தொழில்]

தன்னூட்டி *tan-n-ūṭṭi*, பெ. (n.) தாய்ப்பாலைத் தடையின்றி உண்டுவளர்ந்த சேங்கன்று; calf reared on its mother's milk. "சேங்கன்றுள்ளன வெல்லாந் தன்னூட்டியாக விட்டு" (திருக்கோ. 136, உரை).

[தன் + ஊட்டி]

தன்னெடுப்பு *tan-n-eḍuppu*, பெ. (n.) 1. இறுமாப்பு; arrogance, self-will. 2. புகழ்ச்சி விருப்பால், தான்கொள்ளும் விடாமுயற்சி; determined perseverance made for the sake of reputation.

[தன் + எடுப்பு]

தன்னேத்திரம் *tannettiram*, பெ. (n.) தகமணி (கோமேதகம்); sardonyx.

தன்னேற்றம் *tan-n-ēṟṟam*, பெ. (n.) 1. தன்னைச் சேர்ந்த இனத்தார்; one's party. "தாமோதரன் செட்டிக்குத் தன்னேற்றம் ஆள் பதினொருவர்க்கு" (S.I.I. ii. 277). 2. சிறப்பாய் அமைந்த பெருமை; peculiar merit or greatness. "பிரபன்னனுக்கு விஹித விஷயநிவ்ருத்தி தன்னேற்றம்" (அஷ்டாதச. ஸ்ரீவசன. 101).

[தன் + ஏற்றம்]

தன்னை *tannai*, பெ. (n.) 1. தலைவன்; lord, chief. "தன்னை தலைமலைந்த . . . கண்ணி" (பு.வெ. 1,13). 2. தமையன்; elder brother. "தன்னைமார் தந்த கொழுமீன்" (ஐந். ஐம். 47). 3. தமக்கை (திவா.); elder sister. 4. தாய்; mother.

[தன் + ஐ]

தன்னைக்கட்டு[1]-தல் *tannai-k-kaṭṭu-*, 5 செ.குவி. (v.i.) 1. போதியதாதல்; to be just enough to make both ends meet, as one's income. வரும்படி தன்னைக் கட்டிக் கொள்ளுகிறது (இ.வ.). 2. மந்திரத்தால் தன்னைக் காத்தல் (வின்.); to protect oneself with magical incantations.

தன்னக்கட்டுதல் ஐகாரக்குறுக்கமாயும் வழங்கும்.

[தன்னை + கட்டு-.]

தன்னைக்கட்டு[2]-தல் *tannai-k-kaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. குறை நிரப்பிச் சரிப் படுத்துதல் (இ.வ.); to manage economically. "தன்னைக் கட்டிக் காரியங்களைப் பார்க்கிறான்". 3. நிலைமையை எதிர்நின்று சீர்ப்படுத்தல்; to manage, as a situation. 4. வயப்படுத்தல்; to bring round a person. 5. ஒருவன் செயற்குச் சம்மதித்தல்; to justify one's actions. "எப்போதும் அவனைத் தன்னைக்கட்டிப் பேசுகிறான்" (இ.வ.). 6. மனதைக் கட்டுப்படுத்துதல்; to concentrate of mind.

[தன்னை + கட்டு-.]

தன்னைத்தானறிதல் *tannai-t-tāṉari-*, 2 செ.குவி. (v.i.) தன்னைச்சிந்தித்துணர்தல்; to think and self realize (சா.அக.).

[தன்னை + தான் + அறி-.]

தன்னைப்பற்றுதல் *tannai-p-paṟṟudal*, பெ. (n.) தன்னைப்பற்றுதலென்னுங் குற்றம்; fallacy of self-dependence.

[தன்னை + பற்றுதல்]

தன்னையறி-தல் *tannai-y-ari-*, 2 செ.குவி. (v.i.) 1. தனது உண்மைத்தன்மையை உணர்தல்; to know oneself "தன்னை யறிந்தின்பமுற வெண்ணிலாவே" (அருட்பா.). 2. இளம்பெண் பூப்பெய்தல் (யாழ்.அக.); to attain puberty.

[தன்னை + அறி-.]

தன்னைமற-த்தல் *tannai-maṟa-*, 3 செ.குவி. (v.i.) 1. மூர்ச்சையினால் மெய்ம்மறத்தல்; to forget oneself from fatigue. 2. ஓகம் (யோகம்) அல்லது ஊழ்கம் (தியானம்) முதலியவற்றால் தன்னிலை மறத்தல்; to state of insensibility to ones surroundings to be rupt into visions (சா.அக.).

[தன்னை + மற-.]

தன்னைமறு-த்தல் *tannai-maṟu-*, 4 செகுன்றாவி. (v.t.) இன்பத்துன்பங்களை மறுத்தல்; to indulge in one's own appetites.

[தன்னை + மறு-.]

தன்னைவேட்டல் *tannai-vēṭṭal*, பெ. (n.) 1. தலைவனுடன் வீரன் தன்னுயிர் மாய்தலைக் கூறும் புறத்துறை (பு. வெ. 7, 26); (puṟap.) theme of a warrior slaying himself on the death of his king. 2. இறந்த கணவனுடலைப் போர்க் களத்தில், அவன் மனைவி தேடுதலைக் கூறும்

புறத்துறை (பு.வெ. 7,2); (purap.) theme of a wife seeking the dead body of her husband on the field of battle.

[தன்னை + வேட்டல்]

தன்னொடியையபின்மைநீக்கியவிசேடணம் *tan nodiyai-pinmai-nīkkiya-visēdaṇam,* பெ. (n.) இனப் பொருத்தம் காணப்பட்ட பண்பு குறித்த பெயரடைச்சொல். விசேடியம், வேறு பல பொருளிலும் செல்லுதலைத் தடுக்காது, செஞ்ஞாயிறு என்பதில், செம்மை என்பது போல, அஃது இருப்பதென்பதைத் தெரிவிக்க வரும் சிறப்படை (நன். 284, விருத்.); (gram.26) co-ordinative epithet.

தன்னொழுக்கம் *tan-n-olukkam,* பெ. (n.) தன்னிலைக்குத் தக்க நடை (வின்.); conduct suitable to one's age, rank, caste or religion.

[தன் + ஒழுக்கம்]

தன்னோர் *tannōr,* பெ. (n.) தன்னைச் சார்ந்தவர்; one's kith and kin, relatives or dependents. "மன்னகுமரன் றன்னோர் சூழ" (பெருங். இலா. வாண. 4, 106).

[தன்னார் → தன்னோர் (ஒ.நோ) இன்னார் → இன்னோர். ஆர் → ஓர் – பலர்பாலீறு.]

தனக்கட்டி *tana-k-katti,* பெ. (n.) முலைக்கட்டி; abscess in the breast of a female.

[தனம் + கட்டி]

தனக்கட்டு *tana-k-kattu,* பெ. (n.) பெருஞ் செல்வம்; immense riches. "புறப்பட்டா னொருப்பட்டான் றனக்கட்டோடும்" (திருவாலவா. 62, 5).

[தனம் + கட்டு. "கட்டு" சொல்லாக்க விகுதி. ஒ. நோ.: கீழ்க்கட்டு சமையற்கட்டு.]

தனக்காரர் *tana-k-kārar,* பெ. (n.) யானைப் பாகர் குடியினரான ஒரு இனத்தார் (யாழ்ப்.); a caste whose ancestors are said to have been elephant-drivers (செ.அக.).

[தனம் + காரர். 'காரர்" உடைமைப் பெயரீறு. ஒ. நோ.: வீட்டுக்காரர், தோட்டக்காரர்.]

தனக்கு *tanakku,* பெ. (n.) அழிஞ்சில்; alangium.

தனகரன்[1] *tana-garan,* பெ. (n.) கள்வன் (யாழ். அக.); robber.

[தனம் + கரன்]

தனகரன்[2] *tana-garan,* பெ. (n.) 1. பெருஞ் செல்வன்; Kubēran. 2. உரிமையுள்ளவன் (யாழ். அக.); one who enjoys utmost freedom; one who is his own master (செ.அக.).

[தனம் + கரன். தனம் = தனத்தை யுடையவன்; பெருஞ்செல்வத்திற்குரியவன். காரன் → கரன் = இடைக்குறை]

தனகன்னியன் *tana-kanniyan,* பெ. (n.) காய்ப்பாகல்; a medicinal plant.

தனகாதபூடு *tana-kāda-pūdu,* பெ. (n.) மருளூமத்தை; burr-weed.

தனகு[1] *tanagu,* பெ. (n.) உள்ளக்களிப்பு (சூடா.); mirth, jollity.

[தான் + நகு = தனகு]

தனகு[2] *tanagu,* பெ. (n.) வாதுமைப்பிசின்; gum of almond tree.

தனகு[2]**-தல்** *tanagu-,* 5 செ.குவி. (v.i.) 1. சரசஞ் செய்தல் (வின்.) ; to dally, take improper liberties. 2. உள்ளங்களித்தல்; to be jolly, mirthful, merry. "தனகிய மனைவியும்" (திருப்பு. 166). 3. சண்டை செய்தல் (வின்.); ஊடல்; to pick a quarrel, to be out of humour (செ.அக.).

தனசயிதம் *tanašayitam,* பெ. (n.) மஞ்சள் சதைப்பற்று; a yellow albuminoid substance Elastin.

தனசாரம் *tana-sāram,* பெ. (n.) முலைப்பால்; mother's milk. "தனசாரம் பருகும்" (திருப்பு. 493) (செ.அக.).

தனசூலை *tanašulai,* பெ. (n.) முலையிலேற் படும் குத்தல் நோய்; acute pain in the ma.

தனஞ்சயகாரம் *tanañšayagāram,* பெ. (n.) தனஞ்செயகாரம் பார்க்க; see *tanañšcyagāram*

தனஞ்சயன் *tanañsayan,* பெ. (n.) 1. அருச்சுனன்; Arjunan. "தட்டுடைப் பொலிந்த திண்டேர் தனசயன்போல வேறி" (சீவக. 767). 2. நெருப்பு

(பிங்.); fire. 3. பத்துவகைக் காற்றுகளுள், உயிர் நீங்கிய உடலையும் விடாது சிறிதுநேரம் பற்றிநின்று பின் வெளியேறும் காற்று; the vital air of the body which leaves it some time after it becomes lifeless, one of tašavāyu. "தனஞ்சயன் பிராணன் போனபின்னும் உடம்பை விடாதேநின்று..... உச்சந்தலையில்...... வெடித்துப் போமென் றறிக" (சிலப். 3, 26, உரை.) (செ.அக.).

தனஞ்செயகாரம் *tanañšeya-gāram,* பெ. (n.) படிக்காரம்; Alum (செ.அக.).

தனத்தளர்ச்சி *tana-t-taḷarcci,* பெ. (n.) 1. முலையின் தளர்ச்சி; relaxtion fo mamva. 2. தனத்தனியம் பார்க்க; see *tanattaniyam.*

தனத்தனியம் *tanattaniyam,* பெ. (n.) கொத்தமல்லி; coriander.

தனத்தாபம் *tanattābam,* பெ. (n.) முலையழற்சி; inflammation of the breast.

தனத்தி *tanatti,* பெ. (n.) வைப்பரிதாரம் (முகப்பூச்சு); prepared orpiment.

தனத்தோர் *tanattōr,* பெ. (n.) வாணிகர் (வைசியர்) (உரிநி.) (பொருள் ஈட்டுதற்குரியவர்); merchant caste, as enjoined to amass wealth.

[தனத்தார் → தனத்தோர்]

தனதன் *tanadan,* பெ. (n.) 1. பெருஞ்செல்வன் குபேரன் (திவா.); Kubēran. 2. ஈகையாளன் (வின்.); liberal person.

[தனம் + த் + அன்]

தனதாக்கு-தல் *tanadākku-,* 5 செ.குவி. (v.i.) தனக்குரிமையாக்குதல்; தம்முடைய தாக்குதல்; to obtain for oneself. அறிவியல் கருத்துக்களைத் தமிழ் தனதாகக் கொள்ள வேண்டும். ஆளுங்கட்சியில் செல்வாக்குப் படைத்தோர், புறம்போக்கு நிலங்களைத் தனதாக்கி கொள்வர் (இக்.வ.).

[தனது + ஆக்கு-.]

தனதாள் *tanatāḷ,* பெ. (n.) 1. சொந்த வேலைக்காரன் (நெல்லை); one's own permanent servant. 2. உடந்தையாயிருக்கும் ஆள் (இக். வ.); associate, mate.

[தனது + ஆள்]

தனதானியம் *tana-tāniyam,* பெ. (n.) பொன்னும் விளைபொருள்களும்; gold and grains (செ.அக.).

[தனம் + தானியம்]

தனது *tanadu,* பெ. (n.) 1. உரிமை; that which is one's own. "தனதாகத் தான்கொடான்" (நாலடி. 278). 2. நட்புரிமை; friendship, amity, intimacy. "தனது பாராட்டுகினுந் தடிவார் தெவ்வர்" (குற்றா. தல. நாட்டுச். 15).

தெ. தனது, ம. தனது.

[தன் + அது]

தனதுபண்ணு-தல் *tanadu-paṇṇu-,* 5 செ. குன்றாவி. (v.t.) தன்வயப்படுத்திக் கொள்ளுதல்; to win over; to obtain favour of. "பாடகனையுந் தனது பண்ணிக்கொள்" (விறலி விடு. 288).

[தனது + பண்ணு-,]

தனதுபற்று *tanadu-paṟṟu,* பெ. (n.) சொந்தப் பணப்பற்று; debit in personal account (செ.அக.).

[தனது + பற்று]

தனதுருவம் *tana-duruvam,* பெ. (n.) பின்னர்ச் சென்ற நாட்களைக் கூட்டிக் கணக்கிடப் பெறும், மூலக்கோள் நிலை (வின்.); (Astron.) Epoch longitude of a planet or its apsis which is to be added in calculations.

[தன் + துருவம்]

தனந்தயன் *tanandayan,* பெ. (n.) பாலுண்குழவி; sucking child. "மாதா மகவுக்குவந்த வியாதி நிமித்தம் மருந்து தின்னக் கண்டது தனந்தயனுக் கொழிய வேறில்லை" (சித். மரபுகண். 19)(செ.அக.).

தனப்பணம் *tana-p-paṇam,* பெ. (n.) வரிவகை (S. I. I. vii, 384); a tax.

[தனம் + பணம் = செல்வர் செலுத்தும் வரி]

தனப்பால் *tana-p-pāl,* பெ. (n.) 1. முலைப்பால்; breast milk. 2. கலப்பில்லாப் பால் ; unadulterated cow's milk.

[தனம் + பால்]

தனப்பால்வாங்கி *tanappāl-vāṅgi,* பெ. (n.) *முலைப்பால் பீச்சும்கருவி;* an apparatus for drawing milk from the mammary gland.

தனப்பிளவை *taṉa-p-piḷavai,* பெ. (n.) *முலைப் புற்று, முலைப்பிளவைப்புண்;* cancer of the breast.

[தனம் + பிளவை]

தனபதி *taṉa-padi,* பெ. (n.) குபேரன்; God of wealth. "தோழன் தனபதி" *(திருவிசை. கரு. பதி. 8, 6)* (செ.அக.).

[தனம் + பதி]

தனபதித்துவம் *taṉapadi-t-tuvam,* பெ. (n.) 1. செல்வநிலை; opulent condition. 2. ஈகைத் தன்மை, வள்ளன்மை; beneficence, liberality (செ.அக.).

[தனபதி + தத்துவம்]

தனபாரம் *taṉa-bāram,* பெ. (n.) கொங்கைச் சுமை; breast-weight, well-developed breast. "அதிபார தனபார வதிருப மலர்மானை யனையாய்" *(அரிச். பு. விவாக. 218)* (செ.அக.).

[தனம் + பாரம்]

தனபோகம் *taṉa-bōgam,* பெ. (n.) மெய்யுறு புணர்ச்சி, கலவி (வின்.); coition.

[தனம் + போகம்]

தனம்[1] *taṉam,* பெ. (n.) பண்புணர்த்தற்குப் பெயரின்பின் வரும் இடைச்சொல்; affix added to many nouns giving them an abstract meaning. "வள்ளற்றனமும் வகுத்தனன் கூறி" *(பெருங். நரவாண. 8, 6). குழந்தைத்தனம், சுயமைத்தனம்.*

தனம்[2] *taṉam,* பெ. (n.) 1. செல்வம் (வின்.); wealth, substance, property. *அவரிடம் தனம் இருக்கிறது. ஆனால் தானம் செய்யமாட்டார் (உ.வ.).* 2. பொன் (பிங்.); gold. 3. முத்திரை (பிங்.); seal. 4. வாரை (உத்திரம்) (அகநி.); beam across roofing. 5. கூட்டற் கணக்கு (வின்.); (Arith) addition.

[தம் → தன் + அம் → தனம் = தனக்கே உரிய செல்வம். தமிழ்மொழியில் தனக்கே சொந்தமான செல்வம் என்ற பொருள்தரும். 'தம்' என்னும் வேரடி, சொந்தம். உடைமை, உரிமைப்பொருள்களைக் குறிக்கும் என்பார் தேவநேயர். ஆனால் வட மொழியில் உள்ள 'தன்' என்னும் வேரடி தன்முனைப்பு, ஆணவத்தைக் குறித்து வழங்குவதாக, மா.வி.அக. கூறும். தனம் என்பது தென்சொல்லேயாகும்.]

தனம்[3] *taṉam,* பெ. (n.) முலை; woman's breast. "அரும் பெருந் தனத்தை வேட்டாண் டினவளை... விற்பான் வந்தோன்" *(திருவாலவா. 23, 15).*

[தம் → தன் + அம் → தனம். பெண்களுக்கே சொந்தமான தனம். உடலமைப்பில் மகளிர்தம் உடைமையாக தனம் அமைந்துள்ளது. தனம் பெண்களுக்கே உரிய செவ்ம். இங்குள்ள 'ஏ'காரம் தேற்றேகரமாகும்.]

தனம்[4] *taṉam,* பெ. (n.) ஆவின்கன்று (பிங்.); calf.

தனம்[5] *tanam,* பெ. (n.) சந்தனம் (பிங்.); sandal.

தனம்[6] *taṉam,* பெ. (n.) துன்பம் (அக.நி); affliction.

தனம்[7] *taṉam,* பெ. (n.) தன்மை; nature, property. "நேசத்துக்குரிய தனம்" *(புதுவை)* (செ.அக.).

தனமதம் *taṉa-madam,* பெ. (n.) பணச்செருக்கு (இ.வ.); pride of wealth (செ.அக.).

[தனம் + மதம்]

தனமில்லாக்கன்னி *taṉa-millā-k-kaṉṉi,* பெ. (n.) சிறியாணங்கை; small polygala (சா.அக.).

தனமின்சாரம் *taṉa-miṉšāram,* பெ. (n.) ஏகுமின்; negative electricity.

தனமின்மை *taṉa-miṉmai,* பெ. (n.) முலை யெழாமை; undeveloped breasts.

தனமுத்துமாதர் *taṉa-muttu-mādar,* பெ. (n.) தனமுதிர்க்கோரை பார்க்க; see *taṉa-mudir-k-kōrai.*

தனமுதிர்க்கோரை *taṉa-mudir-k-korai,* பெ. (n.) கஞ்சாங்கோரை; white basil.

தனமூலம் *taṉa-mūlam,* பெ. (n.) **முதல்; கையிருப்புப்பணம்** (புதுவை); capital.

[தனம் + மூலம்]

தனயன் *taṉa-yaṉ,* பெ. (n.) **மகன்;** son. "தானுந் தேருமே யாயின னிராவணன் றனயன்" *(கம்பரா. பிரமாத். 59)* (செ.அக.).

தனயன் - ஐகாரக் குறுக்கம்

தம் + ஐயன் = தமையன் - ஐகாரக் குறுக்கம் ஆகாமல் ஒலிக்கிறது

[தன் + ஐயன்]

தனரேகை *taṉa-rēgai,* பெ. (n.) **செல்வத்தைக் குறிப்பிடும் கைவரி** (வின்.); (palmistry) lines in the palm indicating wealth.

[தனம் + ரேகை]



தனவந்தன் *taṉa-vandaṉ,* பெ. (n.) **செல்வர்;** rich person (செ.அக.).

மறுவ. பெருஞ்செல்வன்.

[தனம் + வந்தன்]

தனவனா *taṉa-vaṉā,* பெ. (n.) **ஆச்சா** (மலை.) (சால்) **மரம்;** sal-tree shorea robusta. நாதசுரத் திலுள்ள சீவாணி(ளி) செய்ய உதவும் மரம்.

தனவான் *taṉa-vāṉ,* பெ. (n.) *1.* **செல்வன்;** wealthy man. "நெடிய தனவானாத லரிது" *(அறப். சத. 1).* *2.* **கொடியரசு** peepul-creeper.

மறுவ. பெருஞ்செல்வன்.

[தனம் + வ் + ஆன்]

தனவை *taṉa-vai,* பெ. (n.) **தனவையாதம்** (மலை.) **சிறுகாஞ்சொறி** (மலை.); small climbing nettle.

தனவைசியர் *taṉa-vaišiyar,* பெ. (n.) **மூவகை வணிகருள் பொன்வணிகர்** (பிங்.); traders, merchants, one of three vaišiyar (செ.அக.).

மறுவ. தனவந்தர்.

[தனம் + வைசியர்]

தனவையாதம் *taṉavai-y-ādam,* பெ. (n.) **சிறுகாஞ்சொறி** (மலை.) பார்க்க; small climbing rettle; see ciṟukāñjoṟi.

தனன் *taṉaṉ,* பெ. (n.) **வைசியர் பட்டப்பெயர்;** title of the vaišya caste. "சருமன் வருமன் றனன்றாசன் சார்த்திவழங்கு மியற்பெயர்கள்" *(திருவானைக். கோச்செங். 69)* (செ.அக.).

[தனம் + அன்]

தனாசி *taṉāši,* பெ. (n.) **ஒரு பண்** (பிங்.); anelody. "புணரிசைத் தனாசிபாடும் பூவையர்" *(சேதுபு. திருநாட். 90).*

தனாதிபன் *taṉādibaṉ,* பெ. (n.) **செல்வன்** (வின்.); rich man (செ.அக.).

மறுவ. பெருஞ்செல்வன், தனவந்தன்

[தனம் + அதிபன் = தனாதிபன் = பெருஞ் செல்வத்திற்குரியவன் = தலைவன்]

தனார்ச்சனம் *taṉār-c-caṉam,* பெ. (n.) **பொருள் சம்பாதிக்கை** (வின்.); acquistion of wealth.

[தனம் + Skt. அர்ச்சனம்]

தனிஊசல் *taṉi-ūšal,* பெ. (n.) **ஊசல்** (கிரி.அக.) பார்க்க; see *ūšal.*

தனி[1] *taṉi,* பெ. (n.) *1.* **ஒற்றை;** singleness. "தனிக்கலக் கம்பளச்செட்டி" *(மணிமே. 29, 6).* *2.* **தனிமை;** seclusion, solitude. "தனியுந் தானுமத் தையலு மாயினான்" *(கம்பரா. மிதிலைக். 139).* *3.* **ஒப்பின்மை;** uniqueness, matchlessness. "செவ்வேலெந் தனிவள்ளலே" *(திருக்கோ. 376).* *4.* **உரிமை;** independence. தனி வாழ்க்கை (உ.வ.) *5.* **கலப்பின்மை;** purity, genuineness. தனிப்பால் (உ.வ.). *6.* **உதவியின்மை;** helplessness, loneliness, condition of being forsaken or forlorn. "தமியேன் றனிநீக்குந் தனித்துணையே" *(திருவாச. 6, 38).* *7.* **சீட்டாட்டத்தில் ஒருவனே எல்லாச் சீட்டையும் பிடிக்கை;** single handed winning of all the cards in card-game (செ.அக.).

ம. தனி

[தான் → தன் → தனி]

தனி²-த்தல் *tani-,* 4 செகுவி. (v.i.) *1.* ஒன்றியாதல் *(வின்.);* to be alone, single, solitary. *கூட்டத்திலிருந்து தனித்துப்போய்விட்டான். (உ.வ.).* நாட்டில் கல்வியறிவு வளரவில்லையென்றால் நாம் முன்னேற்றப்பாதையில் தனித்து விட நேரிடும். *(இக்.வ.). 2.* **தனிமையாதல்;** to be separate, detached from company. "தனித்தேயொழிய" *(கலித். 114). 3.* **நிகரற்றிருத்தல்;** to have no equal or match. *4.* **உதவியற்றிருத்தல்** *(வின்.);* to be deserted, forsaken, helpless, as by the departure or death of friends.

[தான் → தன் → தனி²]

தனி³ *tani,* பெ. (n.) **தேர்நெம்புந் தடி;** lever beam for starting a temple-car. "தனியோட்டுக் கிளப்பி" *(ஈடு. 3: 10: 2: அரும்.).*

[தடி → தனி]

தனிக்கட்டை *tani-k-kaṭṭai,* பெ. (n.) **தனியாக வாழ்பவர்;** one who is single ; loner *(கிரி.அக.).*

[தனி + கட்டை → தனிக்கட்டை. பெற்றோருடன் இணைந்து ஒன்றி வாழாமல், திருமணமும் செய்து கொள்ளாமல், இருப்பவர்.]

தனிக்கடவுள் *tani-k-kaḍavuḷ,* பெ. (n.) **ஒப்புயர்வற்ற இறைவன்** *(வின்.);* the Absolute Being, the One without a second.

[தனி¹ + கடவுள் = ஒப்பாரும் மிக்காருமில்லா, தனிப்பெருந்தலைவனான இறைவன். உள்ளெமெனுங் கோயிலில், ஆதனிடம் எஞ்ஞான்றும் ஒன்றித் திகழ்பவன்; ஒன்றி இருந்து நினைப்பவர் தம் மனத்தைக் கோயிலாகக்கொண்டு, உறையுந் தனிக்கடவுள்]

தனிக்காசச்சுக்கான் *tani-k-kāša-c-cukkāṉ,* பெ. (n.) **கருஞ்சுக்கான்;** black lime-stone.

தனிக்காட்டுராசா *tani-k-kāṭṭu-rāšā,* பெ. (n.) *1.* **காட்டுத்தலைவன்** *(வின்.);* sole ruler in a jungle. *2.* **கட்டுக்கு அடங்காதவன்;** one who submits to no rule or order. அவன் தனிக்காட்டு ராசா, எங்கே வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் போவான். *(உ.வ.).*

[தனி + காடு + ராசா = அரைசர் → ராசர் → ராசா]

தனிக்காப்பு *tani-k-kāppu,* பெ. (n.) **ஒற்றைப் பாவாலாகிய காப்பு** *(வின்.);* vocation in a single verse.

[தனி + காப்பு]

தனிக்காவல் tani-k-kāval, பெ. (n.) **தனியனாக இருக்கும்படி அடைக்குஞ் சிறை;** solitary confinement.

[தனி + காவல்]

தனிக்குடி *tani-k-kuḍi,* பெ. (n.) *1.* **வேறாகப் பிரிந்து வாழுங்குடும்பம்;** divided family. இப்போது மகன் தனிக்குடியாயிருக்கிறான் *(உ.வ.). 2.* **பல சாதியார் வாழும் ஊரில், தனித்துள்ள ஒரு சாதிக்குடும்பம்** *(வின்.);* single family of a caste living among others. *3.* **முழுவீட்டையும் வாடகைக்கு அமர்த்திக்கொண்ட குடி;** sole tenant, sole tenancy.

[தனி + குடி]

தனிக்குடித்தனம் *tani-k-kuḍitanam,* பெ. (n.) **தனிவீட்டில் வாழும் குடித்தனம்;** living apart after marriage. மகனுக்குத் திருமணமானதும் தனிக்குடித்தனம் வைத்துவிட்டோம் *(இக்.வ.).* பிள்ளைகள் இப்போதெல்லாம் தனிக்குடித்தனம் சென்று, பணஞ்சேர்ப்பதில் குறியாகவுள்ளனர் *(உ.வ.).*

தனிக்குடை *tani-k-kuḍai,* பெ. (n.) தனியரசாட்சி (தனியாகக் கொண்ட குடை); lit., sole umbrella, Absolute Sovereignty.

மறுவ. தனிமுடி; தனியரசு

[தனி + குடை]

தனிக்கை *tanikkai,* பெ. (n.) **கணக்குத் தணிக்கை;** audit, investigation.

[கணிக்கை → தணிக்கை → தனிக்கை]

தனிக்கோல் *tani-k-kōl,* பெ. (n.) **தனிஆட்சி;** sole, absolute sovereignty. "ஏழுலகுந் தனிக்கோல் செல்ல" *(திவ். திருவாய். 4. 5: 1).*

மறுவ. தனிமுடி, தனிக்குடை, தனியரசு

[தனி + கோல்]

தனிகம் *tanigam,* பெ. (n.) **தனிகா** (மலை.), **கொத்துமல்லி;** coriander-seed.

[தனியம் → தனிகம்]

தனிகன் *taṉigaṉ,* பெ. (n.) செல்வன் (இ.வ.); richman.

[தனியன் → தனிகன்.]

தனிகா *taṉiga,* பெ. (n.) தனிகம் பார்க்க; see *taṉigam.*

[தனி → தனிகா. ஒருகா: தனியா → தனிகா.]

தனிகை *taṉigai,* பெ. (n.) 1. இளம்பெண்; girl, young woman. 2. கற்புடையவள்; chaste woman.

[கன்னிகை → கனிகை → தனிகை.]

தனிச்சி taṉicci, பெ. (n.) கணவனைப் பிரிந்து தனித்திருப்பவள்; a woman separated from her husband. "காரென்செய்யாது தனிச்சியையே" (இலக். வி. 558, உதா.).

மறுவ. தனியள்

[தன் + இச்சி - தனிச்சி. "இ" பெண்பால் ஒருமையீறு கொண்ட கொழுநனைப் பிரிந்து தன்னந்தனிமையில் வாழ்பவள்.]

தனிச்சித்தம் *taṉi-c-cittam,* பெ. (n.) ஒன்றுபட்ட மனம்; concentrated mind. "தனிச்சித்தம் வைத்த றேற்றாம்" (சீவக. 2939).

[தனி + சித்தம்]

தனிச்சீர் *taṉi-c-cīr,* பெ. (n.) நேரிசைவெண்பா, கலிவெண்பாக்களின் இரண்டாமடியிறுதியில், எதுகை பெற்று வரும் சீர்; detached foot at the end of the second line of nēr-iśai-veṇpā and kali-veṇpā, rhyming with the initial foot of the first two lines.

[தனி + சீர்]

தனிச்செய்கை *taṉi-c-ceygai,* பெ. (n.) பிறருடன் சேராது தானேசெய்யும் வேளாண்மை அல்லது தொழில்; single-handed cultivation of land, not jointly with others. "தென்னாட்டுக் கோனாயின சடையன் தனிச்செய்கை" (T.A.S. i, 7).

[தனி + செய்கை = தனிச்செய்கை. கூட்டு வேளாண்மை யாற்றாது தாமே தனித்திருந்து, செய்யினைப் பண்படுத்தி உழவுசெய்கை]

தனிச்சொல்[1] *taṉi-c-col,* பெ. (n.) கலிப்பா முதலியவற்றில், 'ஆங்கு' என்பது போலத் தனித்துவருஞ்சொல் (தொல். பொருள். 447, உரை.); detached word like āṅgu in kali-verse.

[தனி + சொல்]

தனிச்சொல்[2] *taṉi-c-col,* பெ. (n.) தனிச்சீர் (யாப். வி 60, உரை); (Pros.) detached foot at the beginning or end of a line of verse.

[தனி + சொல்]

தனிசர் *taṉiśar,* பெ. (n.) 1. கடன் வாங்கினோர்; debtors. 2. குறும்பரசர் (ஈடு, 5: 9: 7: ஜீ) (கடன்காரர்); petty chiefs, as always in debt to the overload.

[தனிசு → தனிசர்]

தனிசு *taṉiśu,* பெ. (n.) கடன்; debt. "பெரும் பொருட் டனிசுமின்றே........ போக்குவல்" (திருவாலவா. 27, 83).

[தனி → தனிசு.]

தனிசுதீட்டு *taṉiśu-tīṭṭu,* பெ. (n.) கடன் ஆவணம்; bond; document evidencing debt. முதல்மாளாதே பொலிசையிட்டுப் போருகிற தனிசு தீட்டும்" (ரஹஸ்ய, 462).

மறுவ. கடனுறுதிச் சீட்டு.

[தனிசு + தீட்டு. தனி → தனிசு + சீட்டு → தீட்டு → தனிசுதீட்டு.]

தனிட்டை *taṉiṭṭai,* பெ. (n.) 23-ஆவது விண்மீன்; அவிட்டம் (வின்.); the 23-rd star.

தனித்தகுடி *taṉitta-kuḍi,* பெ. (n.) துணையற்ற குடும்பம் (வின்.); destitute, forlorn or helpless family.

[தனித்த + குடி. தனித்து → தனித்த = ஆறுதலும் தேறுதலுமில்லாத் தனித்த நிலை. திக்குத் தெரியாதும், ஆறுதல் சொல்லுதற்கு ஆள் இன்றியும், ஆதரவு தருவார் ஒருவரின்றித் துன்பத்தில் உழலும் தனிக்குடி. குடி = குடும்பம்]

தனித்தடை *taṉi-t-taḍai,* பெ. (n.) ஆண்மக்கள் பாராதபடி பெண்கள் செல்வதற்குச் செய்யும் திட்டம்; special arrangement for ladies to go

from one place to another without being seen by men. "தம்பரிசனங்கள் சூழத் தனித்தடை யோடுஞ் சென்று" *(பெரியபு. திருஞான: 647).*

[தனி + தடை]

தனித்தநிலை *tanitta-nilai,* பெ. (n.) 1. ஒகநிலை; yogic posture. 2. தனிமையிலிருக்கை; solitariness.

மறுவ. தனிநிலை

[தனி → தனித்த + நிலை.]

தனித்தமிழ் *tani-t-tamil,* பெ. (n.) பிறமொழிக் கலப்பில்லாத் தூயதமிழ்; the language of Tamil free of its borrowings.

மறுவ. செந்தமிழ்

[தனி + தமிழ்.]

தனித்தன்மை *tani-t-tanmai,* பெ. (n.) சிறப்பான தன்மை; remarkable quality; special feature. பிறநாட்டுச் செல்வாக்கால், சில நாடுகள் தங்கள் பண்பாட்டுத் தனித்தன்மைகளை இழந்து விடுகின்றன. *(இக்.வ.).* சரிசமமாகப் பழகுவதே அவருடையத் தனித்தன்மை *(உ.வ.).*

மறுவ. தனித்துவம்

[தனி + தன்மை.]

தனித்தன்மைப்பன்மை *tani-t-tanmai-p-panmai,* பெ. (n.) தன்னொருவனையே குறிக்கும் தன்மைப்பன்மை (நன். 332, விருத்.); honorific first person plural.

[தனி + தன்மை + பன்மை]

தனித்தனி *tani-t-tani,* பெ. (n.) ஒவ்வொன்றாய் அல்லது ஒவ்வொருவராய்; individually, separately, each one, singly.

[தனி + தனி]

தனித்தனியாக *tani-t-tani-y-āga,* பெ. (n.) ஒவ்வொன்றாய்; part by part. தொலைக்காட்சிப் பெட்டியைப் பழுதுபார்க்கிறேன் என்று, இப்படித் தனித்தனியாகக் கழற்றிப் போட்டு விட்டாயே? *(இக்.வ.)*

[தனி + தனி + ஆக.]

தனித்தாட்டன் *tani-t-tāṭṭan,* பெ. (n.) தலைமைக் குரங்கு *(யாழ்ப்.);* big monkey that leads a solitary life or leads the drove.

[தனி + தாட்டன்]

தனித்தாள் *tani-t-tāḷ,* பெ. (n.) 1. ஒன்றியாள்; single man or woman, as a bachelor, a widow. 2. உதவியற்ற ஆள்; helpless, forlorn person.

[தனித்த + ஆள்]

தனித்தி *tanitti,* பெ. (n.) தனியாக விடப் பட்டவள்; a lonely woman forsaken or left helpless. "மிக்க துன்பமுறாநின்ற தனித்தியேன் கண்முன்பே" *(சிலப். 18, 44, உரை).*

[தனி + த் + தி = உற்றுழி உதவி ஓம்புதற்கு ஆள் இன்றித் தனியே யுள்ள பெண். 'த்' சாரியை.]

தனித்திரு-த்தல் *tanittiru-,* 4 செ.குன்றாவி. (v.t.) துணையின்றி தனிமையிலிருத்தல்; to get into isolation. "தனித்திரு" *(அருட்பா.).*

[தனித்து + இரு-.]

தனித்து *tanittu,* பெ. (n.) 1. தனியாக; alone. 2. வேறுபட்ட முறையில்; in a conspicous way; distinctly.

மறுவ. தனியாக.

[தனி + தனித்து]

தனித்துருமம் *tani-t-turumam,* பெ. (n.) மூங்கில் *(சங்.அக.);* bamboo.

[தனி + துருமம்]

தனித்துவம் *tanittuvam,* பெ. (n.) தனித்தன்மை; வேறுபடுத்திக் காட்டும் தன்மை ; individuality. சுருக்கமாகவும் இயல்பாகவும் எழுதுவது, அந்த எழுத்தாளரின் தனித்துவம் *(இக்.வ.).*

[தனித்து + அம் → தனித்துவம். பிறரிடம் அல்லது பிறவற்றிடமிருந்து, வேறுபடுத்திக் காட்டும் தனித்தன்மை. "அம்" பெருமைப் பொருள் பின்னொட்டு.]

தனித்தேட்டம் *tani-t-tēṭṭam,* பெ. (n.) சொந்த வருவாய் (வின்.); self-income.

[தனி + தேட்டம் = தனியொருவராயிருந்து, துணையின்றித் தேடுந் தேட்டம்]

தனித்தேர்வர் *tani-t-tērvar,* பெ. (n.) தனிப்பட்ட முறையில் தேர்வு எழுதுபவர்; private candidate.

[தனி + தேர்வர். தனித்தேர்வர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து படிக்காமல், எழுதும் தேர்வு]

தனிதம் *tanidam,* பெ. (n.) முழக்கம்; roaring sound, especially thunder. "*தனிதமுற் றெழுமுருமின்*" *(பாரத. சஞ். 13).*

[தனித்து → தனிது + அம். 'அம்' பெருமைப்பெயரொட்டு.]

தனிதர் *tanidar,* பெ. (n.) தனிமையானவர்; persons in solitude. "*தனிதராய்த் தவங்கள் செய்தார்*" *(குற்றா. தல. 16, 16).*

[தனித்தர் → தனிதர். ஒ.நோ. மனித்தம்→ மனிதம்]

தனிநகர் *tani-nagar,* பெ. (n.) பெருநகரம் ; large town. "*புவி கொண்டாடுந் தனிநகர் வளமையீதால்*" *(பெரியபு. எறிபத். 4).*

[தனி + நகர்]

தனிநபர் *tani-nabar,* பெ. (n.) தனிமனிதன் *பார்க்க;* see *tani-manidan.* ஒரு தனிநபருக்காகச் சட்டத்தை மாற்றி எழுத முடியாது *(உ.வ.).*

[தனி + நபர்]

தனிநிரூபவர்த்தனை *tani-nirūba-varttanai,* பெ. (n.) எழுத்துக்கூலி; clerical charges or fees. "*தனிநிரூபவர்த்தனையைத் தாரு மென்றும்*" *(சரவண. பணவிடு. 101).*

[தனி + நிரூபம் + Skt. வர்த்தனை]

தனிநிலை *tani-nilai,* பெ. (n.) 1. தனித்த நிலை; solitariness. "*பனிமதி நுதலியை . . . தனிநிலை கண்டு*" *(திருக்கோ. 40, கொளு).* 2. ஆய்தம் *(நன். 60);* (Gram.) the letter ஃ. 3. ஒருசெய்யுளால் வரும் சிற்றிலக்கியம் *(இலக். வி. 768, உரை);* a poem of one stanza.

[தனி + நிலை]

தனிநிலைப்பெயர் *tani-nilai-p-peyar,* பெ. (n.) கூட்டத்தில் சுட்டப்படும் தனிப்பட்ட பொருளின் பெயர்; proper noun.

[தனிநிலை + பெயர். (எ.கா.) காய், ஆடு, தமிழன்]

தனிநிலையொரியல் *tani-nilai-y-oriyal,* பெ. (n.) தாளவேறுபாடுகளுள் ஒன்று *(சிலப். 3: 16: உரை. பக். 91) (இசை);* a time-measure.

[தனிநிலை + ஒரியல்]

தனிநெல் *tani-nel,* பெ. (n.) செவிட்டில் 360-ல் ஒரு பகுதியாகிய அளவு *(கணக்கதி. 35, உரை.);* single grain of paddy, 360 of which make up a ševiḍu.

[தனி + நெல்]

தனிப்பட்ட *tani-p-paṭṭa,* பெ.எ. (adj.) 1. சொந்த; personal. ஆராய்ச்சி என்பது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டது *(உ.வ.).* 2. பிரிக்கப்பட்டுக் குறிப்பிடப்படுகிற; individual. தனிப்பட்ட ஒருவரின் கருத்தைச் சமுதாயத்தின் கருத்தாகக் கொள்ள முடியாது.

[தனி + தனிப்பட்ட. மொத்தமாகவன்றித் தனியாக, இனம்பிரித்துச் சுட்டுதலைக் குறிக்குஞ் சொல்லென்றறிக]

தனிப்பட்டு[1] *tani-p-paṭṭu,* பெ. (n.) தூயபட்டு *(வின்.);* pure silk.

மறுவ. அசல்பட்டு.

[தனி + பட்டு]

தனிப்பட்டு[2] *tani-p-paṭṭu,* பெ. (n.) கழுத்தணியின் ஒற்றைச்சரம் *(வின்.);* one of the strands of a necklace.

[தனி + பட்டு]

தனிப்படர்மிகுதி *tani-p-paḍar-migudi,* பெ. (n.) தனிமையில் நினைத்துப் புலம்புந் தலைவியின் நிலை *(குறள், 120, அதி.);* the state of anguish of the beloved, when parted from her lover.

[தனி + படர் + மிகுதி]

தனிப்பட *tani-p-paḍa,* வி.எ. (adv.) 1. தானே; in a personal way as a special gesture. 2. சொந்தமாக; of one's own; by oneself. அழைப்பிதழோடு தனிப்பட ஒரு கடிதமும் எழுதியிருந்தார் *(உ.வ.).*

[தனி → தனிப்பட]

தனிப்படு-தல் *tani-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) பிரிந்து ஒன்றியாதல்; to be solitary, lonely; to be alone without company. "இவனந்தோ தனிப்பட்டான்" *(கம்பரா. கும்பகருண. 324).*

[தனி + படு-]

தனிப்படை *tani-p-paḍai,* பெ. (n.) தலைவனைத் தானே தெரிந்துகொண்டு, மன்னன் கீழ்ப் போர்செய்யும் படை *(சுக்கிரநீதி, 303);* army-division with its own elected general, fighting under the royal banner.

[தனி + படை]

தனிப்பன்றி *tani-p-panri,* பெ. (n.) தனியே திரியும் கொடிய காட்டுப்பன்றி (வின்.); solitary boar which is more ferocious and dangerous than others.

[தனி + பன்றி]

தனிப்பாட்டு *tani-p-pāṭṭu,* பெ. (n.) தனிப்பாடல் *பார்க்க;* see *tani-p-pāḍal.*

[தனி + பாட்டு]

தனிப்பாடல் *tani-p-pāḍal,* பெ. (n.) விடுகவி; stray, occasional stanza. தன்னளவில் நிறைவுள்ள செய்யுள்.

[தனி + பாடல்]

தனிப்பாடு *tani-p-pāḍu,* பெ. (n.) *1.* தனிமை; loneliness, solitude. *2.* முழுப்பொறுப்பு; sole, undivided responsibility.

[தனி + பாடு]

தனிப்பால் *tani-p-pāl,* பெ. (n.) கலப்பற்ற பால்; pure, unadulterated milk.

[தனி + பால்]

தனிப்பு *tani-p-pu,* பெ. (n.) தனிமை *பார்க்க;* see *tanimai.*

[தனி + ப் + பு. 'ப்' = சாரியை. 'பு' = சொல்லாக்க ஈறு. ஒ.நோ. கணிப்பு.]

தனிப்புடம் *tani-p-puḍam,* பெ. (n.) திரிதரவில்லாவிருக்கை ஒன்பதனுள் ஒன்று *(சிலப். 8: 25: உரை);* a posture in sitting, one of nine tiritara-villā-v-irukkai.

[தனி + புடம்]

தனிப்புரம் *tani-p-puram,* பெ. (n.) அரண்மனை *(யாழ். அக.);* palace.

[தனி + புரம்]

தனிப்புறம் *tani-p-puṟam,* பெ. (n.) ஒதுங்கின இடம் (வின்.); solitary place or state.

[தனி + புறம்]

தனிப்பூடு *tani-p-pūḍu,* பெ. (n.) உள்ளி முதலியவை *(வின்.);* onion or other bulbous root.

[தனி + பூடு]

தனிப்பெரும்பான்மை *tani-p-perumpāṉmai,* பெ. (n.) முழுப்பெரும்பான்மை; absolute majority. தனிப்பெருமான்மையுடன் ஆட்சியைப் பிடிக்கும் கட்சியே மக்களவைக்கு நல்லாட்சி வழங்கும் *(இக்.வ.).*

மறுவ. அறுதிப்பெரும்பான்மை

[தனி + பெரும்பான்மை]

தனிப்பெற *tani-p-peṟa,* கு.வி.எ. (adv.) தனிமையாக; separately, distinctly. 'தனக்கென்று தனிப்பெற எடுத்துக் கொண்டான்' *(வின்.).*

[தனி + பெற]

தனிப்போர் *tani-p-pōr,* பெ. (n.) *1.* ஒன்றியாக எதிர்க்கை; single combat. *2.* கூடுதல் வரவு முழுதும், ஒருவன் வசப்படுத்துகை; monopoly of all the profits by one individual. *3. சீட்டாட்டத்தில் ஒருவனே எல்லாச் சீட்டையும் பிடிக்கை;* the winning of all the cards by a player in a card-game.

[தனி + போர்]

தனிமகவு *tani-magavu,* பெ. (n.) பட்டத்துப் பிள்ளை *(யாழ். அக.);* crown prince.

[தனி + மகவு]

தனிமம் *tanimam,* பெ. (n.) ஒருதன்மை கொண்ட அணுக்களாலான பொருள்; element.

[தமி → தனி + அம் → தனிமம்]

தனிமனிதன் *tani-maniḍan,* பெ. (n.) மக்களில் ஒருவர்; one among the person. ஒவ்வொரு தனி மனிதனும் பயன்பெறும் வகையில், சட்டத்தை மாற்றி எழுத வேண்டும் *(இக்.வ.).*

மறுவ. தனியொருவன், தனியன், துணையிலி, ஆதரவற்றவன்.

[தனி + மனிதன்]

தனிமுடி *tani-muḍi*, பெ. (n.) தன்னாட்சி; sole, undisputed sovereignty. "தனிமுடி கவித்தாளு மரசினும்" (தேவா. 455: 10).

[தனி + முடி]

தனிமுதல் *tani-mudal*, பெ. (n.) 1. கடவுள்; God, as the one without a second, the Absolute Being. 2. தனி வாணிகம் (வின்.); trading alone with one's own capital. 3. கூட்டுவாணிபத்தில், ஒவ்வொரு கூட்டாளியும் இட்ட, விடுமுதல் (வின்.); individual capital of the partners in a company.

[தனி + முதல்]

தனிமூலி *tani-mūli*, பெ. (n.) நூறாண்டு முதிர்ந்த வேப்பமரத்தின் அடிப்பகுதி; bark of margosa tree of 100 years old.

[தனி + மூலி]

தனிமை *tanimai*, பெ. (n.) 1. ஒன்றியாயிருக்குந் தன்மை; singleness, solitude. இயற்கையெழிலில் மூழ்கும் பாவலர்க்குத் தனிமை இன்றியமையாதது (உ.வ.). 2. ஒதுக்கம் (வின்.); seclusion, retirement. தனிமையான சூழ்நிலை (இக்.வ.). 3. ஒப்பின்மை; incomparableness, matchlessness. "தனிமைத் தலைமை" (சீவக. 1609). 4. உதவியற்றநிலை; forlorn condition, helplessness. "தமியனேன் றனிமை தீர்த்தே" (திருவாச. 12:3).

ம. தனிம

[தமி → தனி + மை = "மை" பண்புப்பெயர் விகுதி. ஒ. நோ.: பொறுமை, அருமை, தலைமை, அடிமை]

தனிமைப்படு[1]-தல் *tanimai-p-paḍu-*, 20 செ.குவி. (v.i.) ஒதுக்கப்படுதல்; to be isolated, வன்முறையை மேற்கொண்டதால், அந்தக்கட்சி தனிமைப்பட்டு விட்டது (இக்.வ.).

[தனிமை + படு-.]

தனிமைப்படுத்து-தல் *tanimai-p-paḍu-*, 5 செ.குன்றாவி. (v.t.) பிரித்து ஒதுக்குதல்; to isolate. பிரிவினைச் சக்திகளைத் தனிமைப்படுத்த, அரசியல் நடவடிக்கையே சிறந்தது (இக்.வ.). மக்களிடமிருந்தோ அல்லது ஒரு குழுவிலிருந்தோ, ஒருவரை எவ்விதச் செயலும் செய்யவொட்டாது தனிமைப்படுத்தி வைத்தல்.

[தனிமை + படுத்து-.]

தனிமைப்பாடு *tanimai-p-pāḍu*, பெ. (n.) 1. ஒன்றியானநிலை; state of seclusion. 2. உதவியற்றநிலை; helplessness. "அமரிடைத் தனிமைப்பாடு புகுந்துளது" (கம்பரா. மாயாசனக. 74).

[தனிமை + பாடு]

தனிமையாற்றல் *tanimai-y-āṟṟal*, பெ. (n.) எட்டுவகை வணிகர் குணங்களுள், வாணிபத்தின் பொருட்டுக் குடும்பத்தினின்று பிரிந்துநிற்றலைப் பொறுத்திருக்கை (திவா.); suffering separation from family, one of the eight virtues of merdrant-caste.

[தனிமை + ஆற்றல்]

தனமெனம் *tana-menam*, பெ. (n.) திப்பிலி மூலம்; root of long-pepper.

தனிமொழி *tani-moḻi*, பெ. (n.) 1. தொகைப் படாது தனித்துநிற்கும் சொல்; simple, uncompounded word, dist. fr. toḍar-moḻi. "சொற்றான் இரண்டுவகைப்படும், தனிமொழியுந் தொடர்மொழியுமென" (தொல். சொல். 1, சேனா.) 2. பிறமொழியினின்று உண்டாகாத மொழி; language not derived from any other language.

[தமி → தனி + மொழி → தனிமொழி. தமிழர்தம் வீட்டில் பிறந்த மொழி; தொன்றுதொட்டு ஒவ்வொரு தமிழனாலும், பேசி வளர்க்கப்பட்ட மொழி. தன்னேரில்லாத் தமிழ்மொழி, அனைத்து நிலைகளிலும், தனிச்சிறப்பு மிக்க உயர்தனிச் செம்மொழி யாகும். எம்மொழியினின்றும் தோன்றாத இயன் மொழி. உலகில் தலைசிறந்து திகழும் எட்டுமொழிக்குடும்பங்களுள் திரவிட மொழிக்குடும்பம் மிகவுந் தொன்மை யானது. பேரறிஞர் எக்கேல் கூற்றுப்படி கி.மு. 50,000இல் குமரிக் கண்டத்தில் முகிழ்த்த, தொன்முது மொழியே தமிழாகும். தமிழின் தனித் தன்மை பற்றியும், தன்னேரில்லாத் தனிச் சிறப்புப் பற்றியும், பின்வரும் தண்டியலங்கார உரைமேற்கோள் பாடலால் அறியலாம்

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் ஆங்கவற்றுள்

*பின்னேர் தனியாழி வெங்கதிரோன்
றேனையது
தன்னேரில்லாத தமிழ்"*

இத் தகு பேராளமான தனிச்சிறப்புகள் பல பெற்ற, ஒண்தீந்தமிழே, திரவிடத்திற்குத் தாய்; ஞாலத்தின் முதன்மொழி. ஆரியம் செய்யுள்வழக்கில் செழிக்கக் கரணியமாக விருந்த மூலமுதன்மொழி. அதுவே என்றுமுள நந்தமிழ்மொழி. தனி மொழியாய்த் திகழும், தமிழ்மொழியின் பத்துவகைச் சிறப்புக் கூறுகளை செந்தமிழ்வேழம், மொழிமீட்பர், பின்வருமாறு, வகைப்படுத்துகிறார்.

1. *தமிழ் குமரிநாட்டில் தோன்றியமை.*
2. *பழந்தமிழ் திராவிடமொழிகட்குத் தாயாயிருத்தல்*
3. *ஆரிய மொழிகளாகக் கருதப்படும் வடநாட்டு மொழிகளின் அடிப்படை, தமிழாயிருத்தல்.*
4. *மேலையாரிய மொழிகளிலும், அடிப்படைச் சொற்கள் பல தமிழாயிருத்தல்.*
5. *இருமுது குரவரைக் குறிக்கும், அம்மை அப்பன் என்னும் தமிழ்சொற்கள், திரிந்தும், திரியாதும் உலகமொழிகளில் வழங்குதல்.*
6. *எல்லாமொழிக் குடும்பங்களிலும், ஒன்று இரண்டேனும், தமிழ்ச் சொல்லிருத்தல்.*
7. *ஆரியமொழிகளிலுள்ள சுட்டுச் சொற்கள் எல்லாம், தமிழ்ச் சுட் டெழுத்துக்களின்றே தோன்றியிருத்தல். தமிழ்ச்சுடடுப் பெயர்கள், முதுபழங் கூறுகளைப் போற்றி வைத்திருக்கும் பாங்கு.*
8. *தமிழ் இலக்கண அமைதி பல மொழிகளில் காணப்பெறுதல்.*
9. *பலமொழிகட்கு அல்லது மொழிக் குடும்பங்கட்குச் சிறப்பாகச் சொல்லப் படும், இலக்கண அமைதிகளின் மூலநிலை, தமிழில் இருத்தல்.*
10. *கி.மு. 1200க்கு முன் இயற்றப்பட்ட ஆரியவேதத்தில், நூற்றுக்கணக்கான தென் சொற்கள் காணப்பெறுதல்.*

(எ.கா.) தா, முத்து

தமிழ் என்னும் பொருண்மையினின்று தான், திராவிடம் என்ற சொல்லே தோன்றியுள்ளது. தமிழ் → தமிழம் → த்ரமிளம் → த்ரவிடம் → திரவிடம் → திராவிடம் என்பார், மொழிஞாயிறு.

தன்னிகரற்ற தமிழ்மொழியின் தனிச் சிறப்புப் பற்றிப் பேசுங்கால்,

''ஒரு செல்வத்தாய் வீட்டினின்று ஒருவகைப்பட்ட பலபொருள்களுள், ஒவ்வொன்றை, ஒவ்வொரு புதல்வியும் எடுத்துச் செல்வது போல், தமிழிலுள்ள, ஒரு பொருட் பல சொற்களுள் ஒவ்வொன்றை, ஒவ்வொரு திசை மொழியும் கையாண்டுள்ளது'' என்று கூறுகின்றார்.

தொன்முதுமொழியாம் நம் செந்தமிழ் மொழியினின்று, கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதலே, தெலுங்கு முதலான திராவிட மொழிகள் பிரியத் தொடங்கின என்று, 'ஆந்திர திராவிட பாஷா' என்ற நூலில், குமாரிலபட்டர் கூறுகிறார். பேரா. சுந்தரம் பிள்ளை அவர்கள், இந்நிலையினைப் பாடுங்கால்,

*"கன்னடமுங் களிதெலுங்குங் கவின்
மலையாளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல
வாயிடினும்
ஆரியம்போல்உலகவழக் கழிந்தொழிந்து
சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே."*

என்று வியந்து போற்றுகின்றார். இஃது உயர்வு நவிற்சியன்று. உண்மைநவிற்சி என்று உணர்க.

யாவரும் மறுக்கவியலாத் தமிழ்ச் சொற்களின், கட்டமைப்பும், இயன் மொழிச்சிறப்பும் பற்றிப் பாவாணர் கூறுங்கால்,

"தமிழ் இயன்மொழி யாதலாலும், பொது மக்கள் அமைத்த வழக்குமொழியாத லாலும், அதன் அனைத்துச்சொற்களும் கரணியக் குறிகளாகவே அமைகின்றன.

வடமொழி திரிமொழியாதலாலும், புலமக்கள் அமைத்த, செயற்கை நூன்மொழியாதலாலும், அதில் இடுகுறிப் பெயர்கள் பல அமைந்துள்ளன" (த.வ. 238). என்று கூறுகின்றார்.

பொறுப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே வளர்ந்த, நம் தெய்வத்தமிழ் மொழி, எஞ்ஞான்றும், எந்நிலையிலும், மூவாமொழி நலங்கெழுமிய சொற் கட்டமைப்புடன் திகழ்கிறது. பிறமொழி களினின்று பிறவாப்பெருமையுடன் தனிமொழியாய் தனித்து (தமித்து) நின்றிலங்குகிறது.

கி.மு. 7ஆம் நூற்றாண்டு முதல், வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்துள், கடன் கொண்டு தழைக்காத, தன்னிகரற்ற சொல் வளத்துடன் திகழ்கிறது. திரவிட மொழிகள் தமிழினின்று பிரியுங்கால், பல சொற்களைத் தம்முடன் கொண்டு சென்றுள்ளன. மாந்தரினத்தின் முதற் பெற்றோர் மொழியிலிருந்து வழிவழி வந்தவையே, தமிழ் திராவிடச் சொற்களென்பார் கால்டுவெலார். இவர் மேலும் கூறுங்கால், திரவிடச் சொல் வடிவங்களும், வேர்களும் இந்து திரவிட மொழியின் ஒரு பகுதியே என்பார். இக்கூற்று, தமிழ் 'தனிமொழி' என்பதற்குக் கால்டுவெலார் தரும் நற்சான்று எனலாம்.

உயர்வான் உயர்மதிக் கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழே ஞாலச்செம்மொழிகளுள், நனிசிறந்த தொன்முது மொழியாகும். இறுதியாக குறிக்கத்தக்க தனிச்சிறப்பு வருமாறு:

தமிழ்மொழியில், மூவிடப் பகரப்பெயர்கள் திரிந்தும், திரியாமலும் உலகமொழிகள் அனைத்திலும், பரவலாகக் காணப் படுகின்றன. எண்ணுப் பெயர்களையும், வேற்றுமையுருபுகளையும், வினையீறு களையும்விட, தமிழிலுள்ள தன்மை முன்னிலை ஒருமைப் பெயர்கள், மிகுந்த நிலைப்புத்திறனுடன், திகழ்கின்றன.

பல்லூழிக் கடப்பிலும், மிகச் சிறிதே திரியுந்தன்மையில் அமைந்துள்ளன. (தவ. 25). இன்னோரன்ன ஈடில்லாத் தனித்தன்மை களாற்றான், தமிழ்மொழியைத் தனிமொழி என்று செ.ப.க. அகரமுதலி குறித்தது என்றறிக.]

தனியடியார் *tani-y-aḍiyār*, பெ. (n.) தனித்தனி திருவுருவமாக எண்ணப்படும் அறுபத்துமூவரான நாயன்மார்; the sixty-three canonized Šaiva šaints regarded individually, dist. fr. togai-y-aḍiyār.

[தனி + அடியார்]

தனியரசாட்சி *tani-y-arasāṭci*, பெ. (n.) தனியாட்சி (வின்.); sole sovereignty.

[தனி + அரசு + ஆட்சி]

தனியன் *taniyan*, பெ. (n.) *1.* ஒன்றியாள்; single man as bachelor. *2.* ஒன்றியான–வன்–து; single person, animal or thing. "தாயுமிலி தந்தையிலி தான்றனியன்" (திருவாச. 12:3). *3.* இனத்தினின்றும் பிரிந்தமையால், கடுஞ்சினங்கொண்ட விலங்கு; wild beast detached from the herd and thus rendered ferocious. *4.* ஒரு நூலை அல்லது ஆக்கியோனைப் புகழ்ந்துகூறும் தனிச் செய்யுள் (திவ்.); stray verse in praise of an author or a work.

[தனி + அன்]

தனியா *taniyā*, பெ. (n.) கொத்தமல்லி (மலை.); coriander.

தெ. தனியாலு.

தனியார் *taniyār*, பெ. (n.) தனிப்பட்டவர், தனிப்பட்டவருக்குச் சொந்தமானது; private ownership. தனியார் ஊர்திகள் மட்டும் உள்ளே அனுமதிக்கப்படும் (இக்.வ.). மருத்துவம் செய்வதற்கு அரசு மருத்துவமனையில் சேராமல், தனியார் மருத்துவமனையில் சேர்ந்துள்ளார் (இக்.வ.).

[தனி + ஆர் = தனியார். "ஆர்" படர்க்கை ஈறு]

தனியான் *taniyān*, பெ. (n.) தனியன்; single person as bachelor.

[தனியன் → தனியான்.]

தனியுடைமை *tani-y-udaimai,* பெ. (n.) தனியாரின் சொத்துரிமை; right of holding private property. *தனியுடைமைச் சமுதாயத்தில் ஏழ்மையைத் தவிர்க்க இயலாது (இக்.வ.).*

[தனி + உடைமை]

தனியுப்பு *tani-y-uppu,* பெ. (n.) 1. சிறுநீருப்பு (மூ. அ); salt of urine. 2. அமுரிச்செடி; a plant.

[தனி + உப்பு]

தனியூர் *tani-y-ūr,* பெ. (n.) பெருநகர் (S. I. I. ii, 125); large town. "*தனியூராங் கருவூரில்*" *(பெரியபு. புகழ்ச்சோழ. 11).*

[தனி + ஊர்]

தனியெழுத்து *tani-y-eluttu,* பெ. (n.) கூட்டெழுத்துகள் போலன்றித் தனித்தனி பிரிந்து தோன்றும்படி, எழுதும் எழுத்து (வின்.); letters written separately without being mixed with others. dist. fr. kūṭṭeluttu.

[தனி + எழுத்து]

தமிழில் வருடம், மாதம், நாள், போன்ற கூட்டெழுத்துகள் வழக்கில் இருந்தன. இருபதாம் நூற்றாண்டில் அவை வழக்கொழிந்தன.

தனியே *taniyē,* கு.வி.எ. (adv.) யாருமில்லாச் சூழலில்; all alone; privately. *குழந்தையைத் தனியே விட்டு விட்டு எங்கே சென்றாய் (உ.வ.).*

தனில் *tanil,* பெ. (n.) கள்; toddy.

தனிவட்டி *tani-vaṭṭi,* பெ. (n.) 1. நெடுவட்டி (கணி.) கூட்டுவட்டிக்கு மாறானது; as against compound interest. 2. கொடுத்த பணத்திற்கு ஆண்டுதோறும் கணக்கிடப்படும் வட்டி; simple interest.

[தனி + வட்டி]

தனிவல்லி *tani-valli,* பெ. (n.) குப்பைமேனி; rubbish plant, a herb.

மறுவ. தனிவலிப்பெருமாள்

[தனி + வல்லி → தனிவல்லி. வல்லி = கொடி.]

தனிவலி *tani-vali,* பெ. (n.) மகப்பேற்று வலி; labour pain.

[தனி + வலி]

தனிவலிப்பெருமாள் *tani-vali-p-peru-māḷ,* பெ. (n.) தனிவல்லி பார்க்க; see *tani-valli.*

[தனிவலி + பெருமாள்]

தனிவழி *tani-vaḻi,* பெ. (n.) துணையற்ற வழி; lonely way. "*தனிவழி போயினா ளென்னுஞ் சொல்*" *(திவ். நாய்ச். 12:3).*

[தனி + வழி]

தனிவீடு *tani-vīḍu,* பெ. (n.) 1. பக்கத்தில் வேறு வீடு இல்லாத, ஒற்றைவீடு; solitary house. 2. ஒற்றைக்குடித்தனமுள்ள வீடு (இ.வ.); house occupied by only one tenant. 3. ஒரே சதுரமாயுள்ள வீடு (வின்.); house with only one square. 4. துறக்கம் (வின்.); final bliss.

[தனி + வீடு]



தனிவெள்ளி *tani-veḷḷi,* பெ. (n.) 1. கலப்பற்ற தூயவெள்ளி ; pure or unalloyed silver. 2. தனிப்பட நிற்கும் விண்மீன் (வின்.) ; lonely star.

[தனி + வெள்ளி]

தனு[1] *tanu,* பெ. (n.) 1. உடல்; body. "*தனுவொடுந் துறக்க மெய்த்*" *(கம்பரா. மிதி. 108).* 2. சிறுமை (பிங்.); smallness, minutenss, delicateness, subtleness.

[தன் + உ → தனு = தன்னுடைய உடல்]

தனு[2] *tanu,* பெ. (n.) அசுரர்க்குத் தாயான காசிபர் மனைவி; wife of kāśyapar and mother of the Asurar. "*தானவரே முதலோரைத் தனுப் பயந்தாள்*" *(கம்பரா. சடாயுகாண். 26).*

தனு[3] *tanu,* பெ. (n.) 1. வில்; bow. "*தண்டு தனுவாள் பணிலநேமி*" *(கலிங். 226).* 2. தனுராசி (சிலப். 17, பக். 453); sagittarius in the zodiac. 3. மார்கழித்திங்கள்; the month of mārgaḻi.

4. நான்குசாண் கொண்ட நீட்டலளவை ; a linear measure = 4 *சாண்,* as the length of a bow. *"கரமோர் நான்கு தங்குது றனு" (கந்தபு. அண்டகோ. 6). (249 அங்குல நீளம்).*

[தன் + உ → தனு. தனு = உடல். உடல் போன்று வில், வளைந்து நிமிருந்தன்மை யால், வளைந்த 'வில்' தனு எனப்பட்டது.]

தனு[4] *tanu,* பெ. (n.) 1. எருத்தின் அதிரொலி *(முக்காரம்);* bellowing of a bull. 2. ஊன்றிப் பேசுகை; stress of voice, accent, emphasis in speaking *(செஅக.).*

தனுக்காஞ்சி *tanu-k-kāñci,* பெ. (n.) செவ்வழி யாழ்த்திறங்களுள் ஒன்று *(பிங்.);* a secondary melody-type of the mullai class.

[தனி + காஞ்சி]

தனுக்கோடி *tanu-k-kōḍi,* பெ. (n.) இராமேசுவரம் தீவின் இறுதிமுனை; the tip of Rāmēšwaram Island. *"தனுக்கோடி காத்தவனே ரகுநாத தளசிங்கமே" (செந்தமிழ். vi, தளசிங்கமாலை).*

[தனு + கோடி]

தனுசன் *tanušan,* பெ. (n.) மகன் *(வின்.);* son.

தனுசாத்திரம் *tanu-šāttiram,* பெ. (n.) வில் வித்தை; the art of archery *(செஅக.).*

[தனு + சாத்திரம்]

தனுசாரி *tanu-šāri,* பெ. (n.) 1. இந்திரன்; Indra. 2. திருமால்; Viṣṇu *(செஅக.).*

[தனு + சாரி]

தனுசு *tanušu,* பெ. (n.) வில்; bow.

[தனு → தனுசு]

தனுசை *tanušai,* பெ. (n.) மகள் *(யாழ்.அக.);* daughter.

[தனுசு → தனுசை.]

தனுத்தம்பம் *tanu-t-tampam,* பெ. (n.) ஊதை நோய் வகை; tetanus *(செ.அக.).*

[தனு + தம்பம்]

தனுத்திரம் *tanuttiram,* பெ. (n.) கவசம் *(வின்.);* coat of milk.

[தனு + திறம் → திரம். உடலுக்குத் திறமை மிகுதற்கு அணிந்து கொள்வது]

தனுத்துருமம் *tanu-t-turumam,* பெ. (n.) (வில்லுக்குதவும் மரம்) மூங்கில் *(மலை.);* bamboo, as material for a bow.

[தனு + தருமம்]

தனுத்துவசம் *tanu-t-tuvašam,* பெ. (n.) தனுத்துவசை பார்க்க; see *tanu-t-tuvašai.*

[தனு + துவசம்]

தனுத்துவசை *tanu-t-tuvašai,* பெ. (n.) அருநெல்லி *(மூ. அ.);* otaheite goosberry .

[தனு + துவசை]

தனுநபம் *tanunapam,* பெ. (n.) வெண்ணெய் *(யாழ். அக.);* butter.

தனுப்பச்சை *tanu-p-paccai,* பெ. (n.) பச்சைக்கல் வகை *(யாழ். அக.);* a kind of green stone.

[தனு + பச்சை]

தனுமணி *tanu-maṇi,* பெ. (n.) ஒரு போரில் ஆயிரவரைக்கொன்ற வீரர் வில்லிற் கட்டும் மணி ; a small bell tied to the bow of a warrior to indicate that he has slain 1000 men in a battle. *"சயமுறு வீரரங்கைத் தனுமணி யொலியினாலும்" (திருவாலவா. 44, 43).*

[தனு + மணி]

தனுமேகசாய்கை *tanu-mēga-šāygai,* பெ. (n.) நீலக்கல் *(யாழ். அக.);* blue-stone.

[தனு + மேகம் + சாய்கை]

தனுர்மாசம் *tanur-māšam,* பெ. (n.) சிலை (மார்கழி) மாதம்; month of Mārgaḻi = December - January.

தனுர்வாதம் tanur-vādam, பெ. (n.) தசைவற்பு (இசிவு, வளிநோய் வகை) *(சீவரட். 365);* tetanus.

[தனு + வாதம்]

தனுர்வாயு *tanur-vāyu,* பெ. (n.) காற்றுப் பிடிப்பு நோய் (தனுர்வளி, கசிவு நோய் வகை); tetanus.

[தனுர் + வாயு]

தனுர்வித்தை *tanur-vittai,* பெ. (n.) விற்பயிற்சி முறை; science of archery.

[தனுர் + வித்தை]

தனுர்வேதம் *tanur-vēdam,* பெ. (n.) நால்வகை துணை வேதங்களுள் ஒன்றாகிய வில்வித்தை; science of archery, one of four upa-vēdam *(செ.அக.).*

[தனுர் + வேதம்]

தனுவைப்புநஞ்சு *tanu-vaippu-nañju,* பெ. (n.) சரகண்ட வைப்பு நஞ்சு; a mineral poison.

[தனு + வைப்புநஞ்சு]

தனுரசம் *tanu-rašam,* பெ. (n.) (உடலின் ரசம்) வியர்வை *(வின்.);* perspiration, as the sap of the body.

தனுரத்தினம் *tanu-rattinam,* பெ. (n.) சூடாலைக்கல் *(யாழ்.அக.);* a kind of stone.

[தனு + இரத்தினம்]

தனுராகம் *tanu-rāgam,* பெ. (n.) மாணிக்க வகை *(யாழ். அக.);* a kind of ruby.

[தனு + ராகம்]

தனுருகம் *tanu-rugam,* பெ. (n.) தலைமுடி *(யாழ். அக.);* hair.

தனுரேகை *tanu-rēgai,* பெ. (n.) வில்வடிவான கைவரி; curved lines in the palm like a bow.

[தனு + இரேகை]

தனுவாரம் *tanu-vāram,* பெ. (n.) போர்க்கவசம் *(யாழ். அக.);* coat of mail.

[தன் + உ = தனு; வாார் + அம் = வாரம். தனு + வாரம்]

தனுவிரணம் *tanu-v-iranam,* பெ. (n.) சினைப்பு *(வின்.)* முகப்பரு; pimple.

[தனு + இரணம்]

தனுவிருக்கம் *tanu-virukkam,* பெ. (n.) ஆச்சா *(மலை.);* sal tree.

தனுவேதம் *tanu-vēdam,* பெ. (n.) தனுர்வேதம், வில்வித்தை; art of archery. "தனுவேதம் பணி செய்ய" *(கம்பரா. குலமுறை. 23).*

[தனு + வேதம்]

தனுவேதி *tanu-vēdi,* பெ. (n.) வில்லாளி ; skilled archer. "களத்தூடு விழவென்ற தனுவேதியும்" *(பாரத. பன். 92).*

[தனு + வேதி]

தனுவேர் *tanu-vēr,* பெ. (n.) குதிரைச்சுழிவகை *(தஞ். சர., iii, 117);* a curl mark on the body hair in horses.

[தனு + வேர்]

தனேசன் *tanēšan,* பெ. (n.) குபேரன் *(வின்.);* Kubēra.

[தனு + ஈசன்]

தனை *tanai,* பெ. (n.) அளவு குறிக்கப் பிறசொல்லின் பின்வரும் ஒரு சொல்; a particle denoting quantity and time-limit, as ittanai, irukkundanai. "இத்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய்" *(திருவாச. 7:3).*

ம. தன.

[தனு → தனை. இத்தனை, எத்தனை, இருக்குந்தனை, செல்லுந்தனை போன்றவாறு.]

தனையள் *tan-aiyal,* பெ. (n.) தனையை, மகள்; daughter. "மிகுவலியொடுந் தனைய டோன்றும்" *(கம்பரா. தாடகை. 29).*

[தன் + ஐயள்]

தனையன் *tan-aiyan,* பெ. (n.) (தனயன்) மகன்; son. "நேமியான் றனையனும்" *(கம்பரா. பள்ளி. 39).*

[தன் + ஐயன்]

தனையை *tan-aiyai,* பெ. (n.) மகள்; daughter. "தவ்வையாமெனக் கிடந்தனள் கைகயன் றனையை" *(கம்பரா. மந்தரை. 88).*

[தன் + ஐயை]

தா

தா[1] *tā*, 'த்' என்ற மெய்யும் ஆ என்ற உயிரும் சேர்ந்த, உயிர்மெய்யெழுத்து; the consonant of த் and ஆ (செ.அக.).

[த் + ஆ = தா]

தா[2] *tā*, ஒலிப்பிலா வல்லினப் பல் வெடிப் பொலியான ஏழாவது நெடில்; the seventh consonant being the voiceless dental stop.

[மேல் அண்ணத்தின் நுனியை நாக்கு அழுத்திவரும் ஒலியும், பிறகு உடனேயே, வாய் அங்காந்து தொடர்ந்து ஒலித்தலால் வரும் ஒலியும் சேர்ந்து பிறப்பதால், தகரவாகார உயிர்மெய் உண்டாகிறது. இதனைத் தொல்காப்பியர் பிறப்பியலில், "அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின் நாநுனி பரந்து மெய்யுற வொற்றத் தாமினிது பிறக்குந் தகாரம் நகாரம்" என்று கூறுகிறார். (தொல். எழுத். 93.).]

தகரஆகாரம் வரி வடிவ வளர்ச்சி: கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் விசயநகர காலம் வரை: இதன் வடிவம் 'த்'கர உயிர்மெய் எழுத்திற்கு நேர்ந்த முறையிலேயே அமையும்.

1. அசோகன் குகையெழுத்தில் காணப்படும் தமிழிக்கல்வெட்டில் (கி.மு. 3)
2. கி.மு. 3 முதல் கி.பி. முதல் நூற்றாண்டு வரை குகைக் கல்வெட்டுகளில் 
3. கி.பி.5ஆம் நூற்றாண்டில், செங்கம் வட்டத்துச் சோமாசிமாறன் தமிழ் வெட்டெழுத்து (வட்டெழுத்து)க் கல்வெட்டில்
4. கி.பி. 7ஆம் நூற்றாண்டில், பல்லவ மகேந்திரவருமன் - வல்லம் கல்வெட்டில், இரு வரிவடிவ அமைப்புகள் காணப்படுகின்றன.
5. கி.பி. 8ஆம் நூற்றாண்டில் 2ஆம் பல்லவ பரமேச்சுவரவருமனின் திருவதிகைக் கல்வெட்டில்...
6. கி.பி. 9 முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை, தஞ்சை இராசராசன் கல்வெட்டில்...
7. திருவாலங்காடு இராசேந்திர சோழன் காலம் முதல், மூன்றாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டுகள் வரை
8. விசயநகர மன்னர் காலத்தில், அதாவது கி.பி.14ஆம் நூற்றாண்டு முதல் இக் காலம் வரை,

தா[3]**-தல் (தருதல்)** *tā-*, *13 செகுன்றாவி.* (v.t.) *1.* **ஒப்போனுக்குக் கொடுத்தல்** *(தொல். சொல். 446);* to give, as to equals. *2.* **ஈந்தருளுதல்;** to grant, bestow. *3.* **அறிவுறுத்துதல்;** to instruct. "நாதனாரருள் பெறு நந்தி தந்திட" *(கந்தபு. அவையடக். 8).* **4. பரிமாறுதல்;** to serve. "இன்சோறு தருநர்" *(மதுரைக். 535).* **5. அடைவித்தல்;** to cause to get. "பொருபடை தருஉங் கொற்றமும்" *(புறநா. 35: 25).* **6. படைத்தல்;** to create, form, construct. "தருமதேவதை . . . தருதலாற் றருமதீர்த்தம்" *(சேதுபு. சக்கர. 14).* **7. மகப் பெறுதல்;** to beget, generate, procreate. "புயங்கமெலாஞ் சுதையென்னு மாது தந்தாள்" *(கம்பரா. சடாயுகாண். 28).* **8. நூல் முதலியன இயற்றுதல்;** to produce, compose. "சடையன் வெண்ணெய் நல்லூர் வயிற் றந்ததே" *(கம்பரா. சிறப்புப். 11).* **9. உணர்த்துதல்;** to denote; express. "இறந்தகாலந் தருந்தொழி லிடைநிலை" *(நன்.142).* ***10.* சம்பாதித்தல், பொருள் தேடுதல்;** to acquire, gather. "தாளினாற் றந்த விழுநிதியும்" *(திரிகடு. 47).* ***11.* கைப்பற்றுதல்;** to capture. "ஆரெயில் பலதந்து" *(புறநா. 6:14).* **12. அழைத்தல்;** to call, summon. "மற்றவட் டருகவீங்கென" *(சிலப். வழக்குரை. 45).* **13. மரம் முதலியன பயன் கொடுத்தல்** (வின்.); to yield, bring forth, as trees. ***16.* ஒரு துணைவினை;** an auxiliary added to verbs. "வண்டாய்த் திரிதருங் காலத்து" *(நாலடி, 284).*

ம. தா, தருக, தரிக; க. தா, தர், தார்; தெ. தெச்சு (கொண்டு வருதல்); து. தர்பாபுனி, தர்புடுன்னி; பட. தா; கோத. தார்; குரு. தனனெ; துட. தோர்; குட. தர், தா; இரு. தர்கெ; கோண். தததானா; கூ. தப, தா; குவி. தாசலி, தனை; கொலா, கொ-த, கொ-தர்; பிரா. கதரின்; க. தினிங்க்; Gk. dictomi; L. do.

[தன் → (தர்) → தரு → தா → த. தரு = தருகிறான், தருவான், தருகை, தரவு. தா →

தானம். தருதல் = மகப்பெறுதல். மரஞ்செடிகள் பயன்தருதல். தந்தவள் = தாய். (வ.வ.9).]

பழந்தமிழ் திராவிடத்திற்குத் தாய் என்னும் முன்மையையும், ஆரியத்திற்கு மூலமென்னும் உண்மையையும், உணர்த்துஞ் சொல்லாகத் 'தா' என்னும் முந்துதமிழ்ச்சொல் விளங்குகிறது. தன்னிலையில் ஒத்த தன்மையனுக்குத் தருதலென்னுஞ் சிறப்புப் பொருளினையே, 'பழந்தமிழ் வடிவமான 'தா' குறிக்கும் என்பார் மொழிஞாயிறு. தொல்காப்பியரும், இக் கருத்திற்கு அரணமைக்கும் பான்மையில், 'தா' என் கிளவி ஒப்போன் கூற்றே" (தொல். சொல். 929) என்று மொழிகின்றார்.

பொது சிறப்பு – பொருட்பாகுபாடு

"இலவயமாகக் கொடுத்தல்" என்னும் பொதுப் பொருளில், வடமொழியில் தா (da) என்றும், இலத்தீன், துடவம் முதலான மொழிகளில் 'தோ' (do) என்றும், வழங்குகின்றது.

தருதல், ஈதல், கொடுத்தல் எனும் வினை பற்றித் தொல்காப்பியர் கூறுங்கால்,

"ஈதா கொடு எனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைய"

அவற்றுள்,

"ஈயென்கிளவி இழிந்தோன் கூற்றே
தாஎன் கிளவி ஒப்போன் கூற்றே
கொடுஎன் கிளவி உயர்ந்தோன் கூற்றே"
(தொல். சொல். 929-930)

என்று மொழிகின்றார்.

பொது சிறப்புப் பொருட்பாகுபாடு பற்றி மொழிஞாயிறு:–

புதுப்பெருக்கு நீரைக் குறிக்கும் 'வெள்ளம்' என்னும் சொல், தன் சிறப்புப்பொருளை யிழந்து, 'நீர்' என்னும் பொதுப்பொருளில் மலையாளத்திலும், விடைசொல்லுதலைக் குறிக்கும், 'செப்பு' என்னுஞ்சொல், தன் சிறப்புப்பொருளையிழந்து, 'சொல்லுதல்' என்னும் பொதுப்பொருளில் தெலுங்கிலும், வழங்குவது போன்றே, ஒத்தோனுக்குக் கொடுத்தலைக் குறிக்கும். 'தா' என்னுஞ் சொல்லுந் தன் சிறப்புப்பொருளை யிழந்து, கொடுத்தலென்னும் பொதுப்பொருளில் ஆரியமொழிகளில், வழங்குகின்றதென்றறிக.

'தா' என்பது தமிழின் தலைமைத்தன்மை நாட்டும் தமிழ்ச்சொல்:–

தன்னோரில்லாத் தமிழின், 'தலைமைத் தன்மையை நிலைநிறுத்தும் சொற்களுள், 'தா' என்பதும் ஒன்றாகும். தொன்றுதொட்டு இருவகை வழக்கிலும் வழங்கிவருதலும், அடிப்படையைச் சேர்ந்த எளிய சொல்லாய் இருத்தலும், சிறப்புப்பொருள் கொண்டு ஏனையிரு தூய தென்சொற்களுடன் தொடர்புடைமையும், 'தா' என்பது தமிழ்ச் சொல்லே என்பதற்குத் தக்க சான்றுகளாம்.

தரவு, தருகை, தரகு, தத்தம், தானம் ஆகிய சொற்களெல்லாம் 'தா', என்னும் முதனிலை யினின்று திரிந்தவையே. இறுதியிரண்டும் வடமொழியில் வழங்குவதனாலேயே வடசொற்போல் தோன்றுகின்றன.

இனி 'தா' என்னும் வினைச்சொல் படர்க்கை இடத்தில் வாராதென்று விலக்கப்பட்டு இருப்பதும், அது தமிழ்ச்சொல்லே யென்பதை உணர்த்தும்.

அவற்றுள்,

"தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீரிடத்தே"

இப் பொருள் வரம்பு ஏனைமொழிகளில் இல்லை.

தா[4] *tā-*, பெ. (n.) *1.* **வலிமை;** strength, might. "தாவே வலியும் வருத்தமு மாகும்" *(தொல். சொல். 344).* **2. துன்பம், நோவு, பேரிடர்;** pain, distress, affliction. "தாவிடுமி னென்றான்" *(சீவக. 749).* **3. கேடு, வீழ்ச்சி, அழிவு** (தொல்.சொல். 344, உரை); decay, destruction. **4. பாய்கை, தாக்குகை, குதிக்கை;** attacking, rushing, jumping. "கருங்கட் டாக்கலை" *(தொல். சொல். 344, உரை).* **5. பகை** (சூடா.); hostility. **6. குற்றம்;** fault, blemish. "தாவில் வெண்கவிகை" *(கம்பரா. கோலங்காண். 1).* **7. குறை;** defect, deficiency. "தாவரும் பக்க மெண்ணிரு கோடியின் தலைவன்" *(கம்பரா. இலங்கைக் கள், 40).*

தா[5] *tā-*, 1. **பிள்ளையைத் தந்தவன் (அப்பன்);** father. **2. தாதா, தாதை (தாத்தா);** grand father.

தெ., க. தாத.

[த. தா → வ. தா (da.) (இ.வே.) = தருபவன். தன் → தரு → தார் → தா (வ.வ. 174). ஒ.நோ.: வள் → வரு → வார் → வா.

'தா' என்பது, பெரும்பாலும் தந்தையையே குறிக்கும். பிள்ளை பெறுவதில், தாய் தந்தையர் இருவர் வினையுங் கலந்திருப்பதால், அவ் விருவருக்கும், 'தா' என்பது பொதுப்பெயராம். தா + தா →

தாத்தா. தந்தையின் தந்தையாகிய பாட்டன்.

ஈன்றாளுக்கு ஆய், தாய், (தம் + ஆய்) முதலிய தனிப்பெயர்கள் வழங்குவதாலும், பிள்ளையைத் தோற்றுவிப்பவன் தந்தையே யாதலாலும், 'தா' என்பது சிறப்பாகத் தந்தையையே, குறிக்குமென்க (வ.வ.174)]

தா[6] *tā-*, பெ. (n.) *1.* அத்தி; fig. *2.* தாண்டுகை; jumping. *3.* நரிவால்; jackal's tail. *4.* மார்பு; breast. *5.* கருப்பை; the womb. *6.* இடுப்பு; hips. *7.* வலி; pain. *8.* கொடியன்; cruel person.

க., ம. தா

தாஅவண்ணம் *tā a-vaṇṇam*, பெ. (n.) இடையிட்டு வரும் எதுகையுடைய சந்தம் (தொல். பொருள். 527); rhythm effected by making the third or the fourth foot rhyme with the first.

[தா(வு) + வண்ணம். தாஅ – அளபெடை]

தாஅனாட்டித்தனாஅதுநிறுப்பு *tāaṉāṭṭi-t-taṉāadu-niṟuppu*, பெ. (n.) எழுவகை மதங்களுள் தானாக ஒன்றனைக் கூறி, அதனை நிலைநிறுத்துகை (நன். 11); laying down a proposition and establishing it by evidence, one of seven madam. q.v.

[தான் + நாட்டி + தனது + நிறுப்பு, தான் → தன் என்றும், தனது → தனாஅது என்றும் யாப்பிசை நோக்கி அளபெடுத்தது. தான் நாட்டி = தன் கொள்கையைத் தானே உறுதிப்படுத்தி கொள்ளுதல். தனாது நிறுத்தல் = தான் நன்கு தெளிவுபடுத்திக் கொண்ட கொள்கைகளை அல்லது கருத்தைக் கற்றோர் முன், நிலைநாட்டுதல்]

தாக்கடைப்பன் *tākkaḍaippaṉ*, பெ. (n.) மாட்டுநோய் வகை (மாட்டுவா. 75); a cattle-disease.

[தாக்கு + அடைப்பன்]

தாக்கணங்கு[1] *tākkaṇaṅgu*, பெ. (n.) *1.* காம நோயை உண்டாக்கி வருத்துந் தெய்வம்; a goddess who smites men with love. "தாக்கணங்கு தானைக்கொண் டன்ன துடைத்து" (குறள், 1082). *2.* திருமகள்; Thirumagaḷ. "தாக்கணங் குறையுந் தடந்தாமரை" (சீவக. 871).

[தாக்கு + அணங்கு]

தாக்கணங்கு[2] *tākkaṇaṅgu*, பெ. (n.) மலைமகளின் படை வீராங்கனைகளான பெண் பூதங்களுள் ஒரு வகை; a class of female goblins attendant on Malaimagaḷ, dist. fr. nōkkaṇaṅgu. "நோக்கணங்கிற்கு எதிராயது" (அருணா. பு. இடப்பாகம். 10).

[தாக்கு + அணங்கு]

தாக்கணி[1]-த்தல் *tākkaṇi-*, 4 செ.குன்றாவி. (v.t.) செய்முறைகளுடன் மெய்பித்தல், எண்பித்தல்; to demonstrate, prove by evidence. "அதைத் தாக்கணிப்பேன்" (வின்.).

[தாக்கு + அணி-.]

தாக்கந்தம் *tākkandam*, பெ. (n.) துவரை வகையுளொன்று (அணு மூலுதுவரை); a kind of dholl (சா.அக.).

தாக்கம்[1] *tākkam*, பெ. (n.) *1.* அடிக்கை, தாக்கு, மோதுகை, முட்டுகை (இ.வ.); attack, assault, hit. *2.* எதிர்தாக்குகை (வின்.); reaction, counter-action. *3.* வேகம், ஆற்றல், வலிமை, உடலுறுதி (வின்.); force; strength; power, as of blow, medicine or fire; momentum. *4.* கனத்திருக்கை (யாழ்.அக.); onerousness, heaviness. *5.* வீக்கம் (யாழ்.அக.); swelling. *6.* மிக்கிருக்கை (வின்.); preponderance. *7.* ஒன்றன் விளைவு; influence of things in other places. சாதிச் சண்டையின் தாக்கம் தேர்தலில் எதிரொலிக்கும். மேல்நாட்டுப் பண்பாட்டின் தாக்கத்தைத் தலைவர் பேச்சில் காணமுடிகிறது (இக்.வ.).

[தாக்கு → தாக்கம்.]

தாக்கம்[2] *tākkam*, குவி.எ. (adv.) முதற் கொண்டு; from, onward. நாளைத் தாக்கம் (இ.வ.).

[தாக்கு → தாக்கம்]

தாக்கம்[3] *tākkam*, பெ. (n.) எரிக்கை (சங்.அக.); burning.

[தாக்கு → தாக்கம்]

தாக்கமாயிரு-த்தல் *tākkam-āy-iru-,* 3 செ.கு.வி. (v.i.) **புண், கட்டி முதலியன குத்துதல்** (வின்.); to throb with pain, as a boil.

[தாக்கம் + ஆய் + இரு-.]

தாக்கர் *tākkar,* பெ. (n.) **ஒரு முனிவர்;** a saint.

அயன் என்பவனின் புதல்வனாகிய துந்து என்பவனுக்குப் பிரமகத்தி நீங்குவதற்கு அருள் புரிந்தவர்.

தாக்கல்[1] *tākkal,* பெ. (n.) *1.* **அடித்து அழிக்கை, பாய்ந்து மோதுகை;** striking, attacking, charging. "பொருதகர் தாக்கற்குப் பேருந் தகைத்து" *(குறள், 486). 2.* **எதிர்க்கை** (சூடா.); opposing.

[தாக்கு → தாக்கல்]

தாக்கல்[2] *tākkal,* பெ. (n.) *1.* **பதிகை;** (W.G.) registration, entry. *2.* **தகவல்** (C.G.); giving of a notice; reference. *3.* **சொந்தப்படுத்துகை** (C.G.); taking possession, occupancy. *4.* **செய்தி;** information, news, intimation. அவன் போனது தொடர்பாக ஒரு தாக்கலும் கிடைக்கவில்லை. *5.* **தொடர்பு;** connection. இவனுக்கும் அவனுக்கும் தாக்கல் இல்லை (இ. வ.).

[தாக்கு → தாக்கல்]

தாக்கல்[3] *tākkal,* பெ. (n.) *1.* **மூட்டல்;** administering drugs repeatedly. *2.* **கொடுத்தல்** (மருந்து தாக்கல்); applying, imposing. சுருக்குத் தாக்கல். *3.* **எதிர்த்தல்;** resisting, attacking. *4.* **பாய்தல்;** circulating as blood (சா.அக.).

[தரு → தா → தாக்கல்.]

தாக்கல்செய்[1]**-தல்** *tākkal- šey-,* 1 செ.குன்றாவி. (v.t.) *1.* **வரவுசெலவுத் திட்டம் முதலியவற்றை ஒப்படைத்தல்;** to table, to submit. வரவு செலவு கணக்கு இன்று தாக்கல் செய்யப்படும் (இக்.வ.). *2.* **எடுத்தெழுதுதல்;** to transfer the entries to the ledger. நேற்றைய கணக்குகளைத் தாக்கல் செய்து விட்டீர்களா? (இக்.வ.).

[தாக்கு + செய்-.]

தாக்கல்செய்[2]**-தல்** *tākkal-šey-,* 1 செ.குன்றாவி. (v.t.) **நீதிமன்றத்தில் பதிவாகும்படி ஆவணங்களைக் கொடுத்தல்;** to file as documents, etc. in court.

[தாக்கல் + செய்-.]

தாக்கல்போக்கல் *tākkal-pōkkal,* பெ. (n.) **தகவலற்றதன்மை;** no information. தாக்கல் போக்கலில்லை (இ.வ.).

[தாக்கல் + போக்கல்.]

தாக்கலில்லாதபேச்சு *tākkal-illāda-pēccu,* பெ. (n.) **பொருத்தமற்ற பேச்சு** (வின்.); unsubstantiated or inconsistent statement.

[தாக்கல் + இல்லாத + பேச்சு → தாக்கலில்லாத பேச்சு = அடிப்படையற்ற, பொருளற்ற பேச்சு.]

தாக்கற்று *tākkaṟṟu,* கு.வி.எ. (adv.) **தன் விருப்பமாக** (வின்.); independently.

[தாக்கு + அறு]

தாக்காட்டு[1]**-தல்** *tā-k-kāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* **தந்திரமாய் ஈர்த்தல்** (இ.வ.); to allure, as an animal by offering food. *2.* **வேடிக்கைக் காட்டுதல் (பராக்குக் காட்டுதல்)** (இ.வ.); to divert or engage the attention of, as a child. *3.* **நாட்கடத்தி ஏமாற்றுதல்** (இ.வ.); to deceive by putting off from day today, tantalize.

[தா + காட்டு-.]

தாக்காட்டு[2]**-தல்** *tā-k-kāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) **உதவி செய்தல்** (யாழ்ப்.); to render help, afford relief.

[தரு → தா + காட்டு-. தரு → தா = தக்க காலத்தே உரிய முறையில் உதவுதல்.]

தாக்கி *tākki,* பெ. (n.) **சான்று (சாட்சி)** (T.A.S.); witness.

[தரு → தா → தாக்கி]

தாக்கு[1]**-தல்** *tākku-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* **மோதுதல்;** to come in contact, collide, strike against, as a vessel on a rock. கப்பல் பாறையில் தாக்கியது. *2.* **உறைத்தல்;** to affect, as one's interest or health. நோய் உடலிலே தாக்கியது. *3.* **கடுமையாதல்;** to be severe, harsh, as in reproof. *4.* **பழிவாங்குதல்;** to take revenge. 'பழைய சினமெல்லாம வைத்துத் தாக்கினான்' (வின்.). *5.* **தலையிட்டுக்கொள்ளுதல்** (வின்.); to interfere. *6.* **பலித்தல்** (வின்.); to involve, as consequences. *7.* **பெருகுதல்;** to increase.

"அருளானந்தந் தாக்கவும்" (தாயு. ஆக்குவை, 1). 8. சுமையாதல்; to fall heavily, as charges, expenses; to press heavily, as a burden, as responsibility. 9. அதைத்தல் (வின்.); to react, rebound. 10. நெளித்துப்போதல் (வின்.); to hobble, limp.

தாக்கு²-தல் *tākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. எதிர்த்தல்; to attack, assault. "ஒருத்தலோ டாய்பொறி யுழுவை தாக்கிய" (கலித்.46). கத்தி அரிவாளோடு வந்த கும்பல் அவரைச் சூழ்ந்து தாக்கியது (இக்.வ.). 2. அடித்தல்; to strike, beat, dash. 3. வெட்டுதல்; to cut, cut off. "அருஞ்சமம் ததையத் தாக்கி" (புறநா.126). 4. முட்டுதல்; to butt. மாடு கொம்பால் தாக்கிற்று (உ.வ.). 5. பாய்ந்துமோதுதல்; to pounce or dart upon, attack, charge. "பொருதகர் தாக்கற்குப் பேருந்தகைத்து" (குறள், 486). எதிரிப் படையினர் குண்டுவீசி எல்லைப் பகுதியைத் தாக்கினர் (இக்.வ.). 6. தீண்டுதல்; to touch, strike, come in contact with, as heat; to burst on the sight, as lightning; to beat against; to penetrate, as a sting. "மருந்து தன்னைத் தாக்குதன் முன்னே" (கம்பரா. வேலேற்று: 42). கிணற்றில் விழுந்தவர் நச்சுக் காற்றால் மயக்கமுற்றார் (இக்.வ.). நெற்பயிரைச் சுருட்டை நோய் தாக்கியது (இக்.வ.). 7. பற்றி யிருத்தல்; to rest upon, depend on, lean against. 8. சரிக்கட்டுதல்; to adjust or settle, as accounts; to increase the profits of an article; to make up for losses. 9. பெருக்குதல்; (arith.) to multiply. "வட்டத்தரை கொண்டு விட்டத் தரை தாக்கின் சட்டெனத் தோன்றுங் குமிழி" (கணக்.). "நின்றதோ ரேழிற் றாக்கி நேர்பட வெட்டுக்கீந்தால்" (சோதிட விடுகவி: சங். அக.). 10. குடித்தல்; to consume, drink. கள்ளை நிறையத் தாக்கி விட்டான் (உ.வ.).

ம. தாக்குக; க. தாகு, தாகு, தாங்கு; தெ தாகு; து. தாகுனி; தாகுனி; பிரா. தக்; பட. தாக்கு.

[தாங்கு → தாக்கு]

தாக்கு³ *tākku-,* பெ. (n.) 1. எதிர்க்கை, அடிக்கை; attack, assault. 2. மோதுகை, நொறுக்குகை, முரண்படுகை, சண்டையிடுகை; beat, dash, blow, clash. 3. போர் (சூடா); fight. 4. படை; army-forces. "தாக்கர்தாக் கரந்தையுற" (மாறானலங். 440). 5. எதிரெழுகை (வின்.); reaction, rebound. 6. வேகம்; impetus, force, momentum. 7. பாதிக்கை, மனங்கலங்குகை; affecting, as one's mind. 8. மிகுசுமை; heavy weight, heaviness. "தாக்குரலடி கொள்யானை" (பாரத. திரௌபதி: 14). 9. பருமன்; robustness, stoutness, corpulency. தாக்கிலே அவன் தாழ்ச்சியில்லை (உ.வ.). 10. செய்கை, வேண்டுகை (சாதனை) (வின்.); application. 11. குறுந்தடி; drum-stick. "தாக்கிற் றாக்குறும் பறையும்" (கம்பரா. நாட்டு, 57). 12. பெருக்கல்; multiplication. 13. வயற்பகுதி; plot of land, rice field. 14. இடம்; place. பள்ளத்தாக்கு. 15. நிலவறை (வின்.); vault, cellar. 16. நெருக்கி முன்னேறுகை; offensive game.

க. தாகு

[தாங்கு → தாக்கு-.]

தாக்கு⁴ *tākku,* பெ. (n.) 1. பற்று; attachment. "தாக்கற் றென்றில்" (ஞானவா. பிரக: 35). 2. ஆணை; order, command. "முறைதப்புமேல் வைத்தகல்வது தாக்கெனா" (குற்றா. தல: மந்த: 98).

[தாங்கு → தாக்கு]

தாக்குண்ணு-தல் *tākkuṇṇu-,* 13 செ.குன்றாவி. (v.t.) 1. தாக்கு-தல் பார்க்க; see *tākku-*. 2. இசிவு முதலியவை தாக்குதல்; to attack of apoplexy small pox, etc., 3. தீமூட்டுதல்; to heat.

[தாக்கு + உண்ணு-]

தாக்குநாடி *tākku-nāḍi,* பெ. (n.) விட்டுவிட்டு எழும்பும் நாடி; jerking pulse (சா.அக.).

[தாக்கு + நாடி]

தாக்குப்பிடி-த்தல் *tākku-p-piḍi-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. தாங்கி நிலைத்தல்; to withstand. பனிச்சரிவில் மாட்டிக் கொண்டவர்கள் கையில் உணவுப்பொருள் இருந்ததால், பத்துமணி நேரம் தாக்குப்பிடித்தனர். 2. நிலைமைக்குத் தக்கவாறு ஈடுகொடுத்தல்; to brave. எதிர் அணியின் மின்னல் வேகத் தாக்குதலை, நம் அணியினர் தாக்குப்பிடித்து விளையாடினர். 3. பெருந்துன்பத் திற்கிடையில் விடாப்பிடியாக எடுத்துக் கொண்ட வேலையை முடித்தல்; to succeed. in one's aim with inadequate means. தந்தையார் மறைந்தபோதும் விடாப்பிடியாகக் குறைபட்ட வீட்டைக் கட்டி முடித்தார் (உ.வ.).

[தாக்கு + பிடி-. மரபுவினையான இக் கூட்டுச்சொல் செ.ப. கழக அகரமுதலியில் குறிக்கப்படவில்லை (செ.ப.சீ. 4).]

தாக்குபொறுத்தவன் *tākku-poruttavan*, பெ. (n.) *1.* உடல் வலிமையுள்ளவன்; robust person, as able to carry a load. *2.* குடித்தனக்காரன்; man of a large family. *3.* செலவு தாங்கக் கூடியவன்; person able to afford expenses *(சா.அக.).*

[தாக்கு + பொறுத்தவன்]

தாக்குவேலை *tākku-vēlai*, பெ. (n.) கட்டடத்திலுள்ள வளைவு வேலை (நாஞ்.); arch-work.

[தாக்கு + வேலை]

தாக்குறு-தல் *tākkuru-*, 5 செ.குன்றாவி. (v.t.) காணுதல்; to meet. "எற் றாக்குறு தலின்" *(மலைபடு. 66).*

[தாக்கு + உறு-.]

தாக்கோல் *tākkōl*, பெ. (n.) தாழ்க்கோல் பார்க்க; see *tāl-k-kōl* (செ.அக.).

ம. தாக்கோல், தாக்கோலு; கோத. தாகோல் (பூட்டு); து. தார்கொலு, தர்கோலு, தர்கொலு

[தாழ → தாழ் + கோல்]

தாகக்கினி *tāga-k-kini*, பெ. (n.) முட்பலாசு; Indian coral tree *(சா.அக.).*

[தரு → தா → தாகம் + Skt. அக்கினி]

தாகசமனம் *tāga-šamanam*, பெ. (n.) தாகத்தைத் தணித்தல்; to quench thirst *(சா.அக.).*

[தாகம் + சமனம்]

தாகசமனி *tāga-šamani*, பெ. (n.) கிராம்பு; clove *(சா.அக.).*

[தாகம் + சமனி]

தாகசனி *tāka-šani*, பெ. (n.) சருக்கரை; sugar *(சா.அக.).*

[தரு → தா → தாகம் + அசனி → தாகசனி]

தாகசாந்தி *tāga-šāndi*, பெ. (n.) *1.* நீர் வேட்கையைத் தணிக்கை; quenching or allaying thirst. *2.* மது அருந்துகை (இக்வ.); to drink. *3.* கிராம்பு; clove.

[தா → தாவம் → தாகம் + சாந்தி - தாகசாந்தி = தாகம், நீர் வேட்கை. சாந்தி = அமைதிப்படுத்துகை.]

தாகசுரம் *tāga-šuram*, பெ. (n.) நீர் வேட்கையை உண்டுபண்ணும் காய்ச்சல் வகை (யாழ்.அக.); a kind of fever attended with thirst. *2.* காமவேட்கைச் சுரம்; fever due to love passion.

[தாவம் → தாகம் + சுரம் → தாகசுரம். அளவுக்கு அதிகமான நீர் வேட்கையினால் ஏற்படுஞ் சுரம். ஒரே நேரத்தில், உடல் வேட்கையையும், நீர்வேட்கையையும் உருவாக்கும் சுரம்.]

தாகசுரவினாசி *tāga-šura-vināši*, பெ. (n.) கிராம்பு; clove *(சா.அக.).*

தாகத்தைப்போக்கி *tāgattai-p-pōkki*, பெ. (n.) புனம்புளி; wild tamarind *(சா.அக.).*

மறுவ. கொறுக்கைப் புளி

[தாகம் + அத்து + ஐ + போக்கி → தாகத்தைப்போக்கி.]

தாகத்தையடக்கி *tāgattai-y-aḍakki*, பெ. (n.) தாகத்தைப்போக்கி பார்க்க; see *tāgattai-p-pōkki.*

[தாகத்தை + அடக்கி]

தாகந்தணி-த்தல் *tāgan-tani-*, 4 செ.குவி. (v.i.) நீர்வேட்கை நீக்குதல்; to quench thirst *(சா.அக.).*

[தாகம் + தணி-.]

தாகநாசனி *tāga-nāšani*, பெ. (n.) *1.* பெருங்காஞ்சொறி; large nettle. *2.* நாறு கரந்தை; fetid basil. *3.* விளா; wood-apple *(செ.அக.).*

[தாகம் + நாசனி]

தாகப்படு-தல் *tāga-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) ஆசைப்படுதல்; to be desired. "தாகப்படும் பொருளி னும்" *(சைவல். சந். 118).*

[தாகம் + படு-.]

தாகபித்தசமனி *tāga-pitta-šamani*, பெ. (n.) பேய்ப்புடோல்; wild snake gourd *(சா.அக.).*

[தாகம் + பித்தம் + சமனி.]

தாகபித்தசுரசம் *tāga-pitta-šurašam*, பெ. (n.) மருளூமத்தை; a kind of detura.

[தாகம் + பித்தம் + அரசம் → தாகபித்தசுரசம்.]

தாகபித்தசுரம் *tāga-pitta-šuram,* பெ. (n.) நீர் வேட்கையை உண்டாக்கும் பித்தசுரம்; a kind of bilious fever causing thirst (சா.அக.).

[தாகம் + பித்தம் + சுரம்.]

தாகபித்தம் *tāga-pittam,* பெ. (n.) நீர் வேட்கையையுண்டாக்கும் பித்தம்; biliousness causing thirst.

[தாகம் + பித்தம்]

தாகபித்தநோய் *tāga-pitta-nōy,* பெ. (n.) ஒரு வகை பித்தநோய்; a kind of bilious disease (சா.அக.).

[தாகம் + பித்தம் + நோய்]

இந் நோய் அடிவயிறுதுடித்தல், உடல் முழுதும் வெப்பம் வீசல், குளிர்வு, புளிப்புப் பொருள்கள் மேல் ஆசை, கண்டத்தில் வியர்வை, பிடரி, அடிநா இவைகளை இழுத்துக் கொள்வது போன்ற தன்மைகளைக் காட்டும் என்று, சா.அக. கூறும்.

தாகப்புளி *tāga-p-puḷi,* பெ. (n.) *1.* விடாய் தணிக்கும் புளித்த நீர்; acid drink to quench thirst. *2.* தவனப்புளி (வின்.); acid preparation for quenching thirst.

[தாகம் + புளி]

தாகபூர்வகசுரம் *tāga-pūrvaga-šuram,* பெ. (n.) *1.* தாககரம் பார்க்க; see *tāga-šuram. 2.* மிகுவெப்பம், எரிச்சலினால் ஏற்பட்ட சுரம்; fever caused by the combined effects of all humour and heat.

[தாகம் + பூர்வகம் + சுரம்.]

தாகபூர்வசன்னிபாதசுரம் *tāga-pūrva-šanni-pāda-šuram,* பெ. (n.) இசிவு சுரம்; typhus fever.

[தாகபூர்வம் + சன்னிபாதம் + சுரம்.]

தாகம் *tāgam,* பெ. (n.) *1.* உயிர்த்துன்பம் பன்னிரண்டனுள் ஒன்றாகிய நீர்வேட்கை; thirst, one of 12 uyir-vēdanai. "தண்டே னூட்டித் தாகந் தணிப்பவும்" (பெருங். உஞ்சைக். 52:59). *2.* ஆசை; eagerness, desire. "தாகம்புகுந் தண்மித் தாள்கடொழும்" (தேவா. 410: 5). *3.* காமம்; lust. *4.* உணவு; food. *5.* எருது; bullock. *6.* எரிவு; burning. *7.* தூண்; pillar. *8.* ஆதன் அடையும் துன்பம்; one among soul agony. *9.* உட்காங்கை; internal heat. *10.* பதினெண் உடற்குற்றத்து ளொன்று; one of the 18 imperfections in the body. *11.* சித்திரமூலம்; leadwort.

[தவு → தவி → தவம் = வெப்பம், வெப்ப மிகுதி, பசிதாகம் முதலியவற்றால், உடலை வாட்டும் துறவினை அல்லது இறைவேண்டல் வினை. தவு → தவி → தாவம். தவித்தல் = வெப்பமாக்குதல். நீர் வேட்கையுண்டாக்குதல், தவிக்கிறது என்பது வழக்கு. ஒன்றைப் பெறப் பெருவேட்கை கொள்ளுதல். தவி → தாவம் → தாகம் (வே.வ.7)]

உடம்பில் பாயும் சோற்றுக்குழம்பின் நீர்த் தன்மை குறைவுபடுவதாலும், கவலை, உழைப்பு, மனம் நடுக்குறுகை போன்றவற்றாலும் தாகம் ஏற்படும். மிகு பித்தத்தினாலும் தாகமுண்டாகும். காரம், உப்பு போன்றவற்றை உணவில் மிகுதியாகப் பயன்படுத்துவதினாலும் தாகம் ஏற்படும். உடலுறுப்புகள் சிலவற்றில் நீர்மங்குன்றி, வறட்சியாவதாலும் தாகம் ஏற்படும். பதினெண் உடற்குற்றங்களுள் இதுவும் ஒன்றெனச் சா.அக.வும், செ.அக.வும், கூறும்.

தாகமடக்கி *tāgam-aḍakki,* பெ. (n.) *1.* புளியாரை; sour-sorrel. *2.* நீர் வேட்கையைப் போக்கும் மருந்து; that which allays thirst-Refrigerent (சா.அக.).

மறுவ. புளிச்சக்கிரை

[தாவம் → தாகம் + அடக்கி]

தாகமாயிரு-த்தல் *tāgamāy-iru,* 4 செ.குவி. (v.i.) நீர் வேட்கையில் இருத்தல்; to be thirst. தாகமிருக்கிறது இரக்கமில்லை (பழ.).

[தாகம் + ஆய் + இரு-.]

தாகமாருதம் *tāga-mārudam,* பெ. (n.) தாகத்தைப்போக்கி பார்க்க; see *tāgattai-p-pōkki* (சா.அக.).

[தாகம் + மாருதம்]

தாகமிழுத்தல் *tāgam-iḻuttal,* பெ. (n.) தாகமெடுத்தல் பார்க்க; see *tāgam-eḍuttal* (செ.அக.).

[தாகம் + இழுத்தல்]

தாகமின்மை *tāgam-iṉmai,* பெ. (n.) நீர் வேட்கையில்லாமை; absence of thirst - Adipsia (சா. அக.).

[தாகம் + இன்மை]

தாகமெடுத்தல் *tāgam-eḍuttal*, பெ. (n.) நீரில் விருப்பங்கொள்ளுகை; becoming thirsty (செ.அக.).

[தாகம் + எடுத்தல்]

தாகரூட்சை *tāgarūṭcai*, பெ. (n.) தாகத்தால் ஏற்படும் நாவறட்சி; dryness due to thirst.

தாகரோகம் *tāgarōgam*, பெ. (n.) தாகபித்த நோய் பார்க்க; see *tāga-pitta-nōy*.

[தாகம் + Skt. ரோகம்]

தாகனம் *tāganam*, பெ. (n.) புண்ணுக்கு மருந்து; a caustic application (சா.அக.).

தாகனாசனி *tāga-nāšani*, பெ. (n.) சருக்கரைக் கொம்மட்டி; sweet water melon (சா.அக.).

[தாகம் + நாசனி]

தாகாரவியாள் *tāgāraviyāḷ*, பெ. (n.) நிழல் விழா மரம்; a tree that does not cast its shadow (சா.அக.).

தாகி-த்தல் *tāgi-*, 4 செ.கு.வி. (v.i.) நீர்வேட்கை யுண்டாதல்; to be thirsty (செ. அக.).

[தாவி → தாகி-.]

தாகிந்தம் *tāgindam*, பெ. (n.) சுரபுன்னை; fragrant poon (சா. அக.).

[தா → தாகி → தாகிந்தம்.]

தாகியத்துவம் *tāgiyattuvam*, பெ. (n.) எரியுந் தன்மை; capability of burning, combustibility (சா.அக.).

[தா → தாகி + Skt. அத்துவம்.]

தாகோன்மத்தம் *tāgōnmattam*, பெ. (n.) குடி இல்லாமையால் ஏற்படும் வெறி; uncontrollable desire for spirituous liquor, a morbid craving for alcoholic stimulants (சா.அக.).

[தாகவுன்மத்தம் → தாகோன்மத்தம்]

தாங்கமுடியாமை *tāṅga-muḍiyāmai*, பெ. (n.) பொறுக்க முடியாமை; unbearableness as pain in diseases (சா.அக.).

[தாங்கு → தாங்க + முடியாமை]

தாங்கல்[1] *tāṅgal*, பெ. (n.) 1. தாங்குகை (அருநி.); supporting. 2. துன்பம்; grievance. 3. மனக்குறை, வருந்துகை, இரங்குகை, உள்ளம் புண்ணாகுகை (அருநி.); displeasure, regret, umbrage. 4. சகிப்பு; enduring, bearing. "தாங்கல் செல்ல நீளாகுலம்" (கந்தபு. பானுகோப. 40). 5. காலத் தாழ்ச்சி; delaying. 6. தயக்கம்; hesitation. "வீட்டில் வரத் தாங்கலேன்" (விறலிவிடு.). 7. தூக்குகை; lifting, raising. 8. நீர்நிலை (பிங்.); tank. 9. பாசனத்துக்குப் பயன்படும் இயற்கை யேரி; (C.G.) small tank from which water is irrigated for paddy fields. 10. கோயிலை நோக்கி நிற்கையில், இடப்புறத்தே நற்சகுனமாகப் பல்லி கொட்டுகை; propitious chirping of a lizard to the left of a person facing a temple. 11. நிலம் (இலக்.அக.); earth. மழை நீரை வரவேற்றுத் தங்க வைக்கும் சிற்றேரி தாங்கல் எனப்பட்டது (செ.அக.).

[தாங்கு + அல். 'அல்' ஈற்றுத் தொழிற் பெயர்.]

தாங்கல்[2] *tāṅgal*, பெ. (n.) உட்கிடைச் சிற்றூர் (இ.வ.); hamlet appurtenant to a village.

[தங்கல் → தாங்கல்.]

தாங்கல்[3] *tāṅgal*, பெ. (n.) 1. பொறுத்தல்; enduring. 2. வலியைத்தாங்கல்; bearing pain (சா.அக.).

[தாங்கு → தாங்கல்]

தாங்கள் *tāṅgaḷ*, ப.பெ. (pron.) மரியாதை குறிக்கும் முன்னிலைப் பன்மைச்சொல்; you, honorific plural. தாங்கள் எப்போது வந்தீர்கள் (உ.வ.).

ம. தாங்கள், தாங்ஙள்; க. தாபு; பட. தங்க

[ஆம் → தாம் + கள் → தாங்கள். படர்க்கைப் பெயரின் வேற்றுமையடி யினின்று கிளைத்த வேரடியாகும். அஃதாவது, 'ஆ' என்னும் சேய்மைச் சுட்டடியாகிய 'ஆம்' என்ற படர்க்கைச் சுட்டுப்பெயரின் பன்மை வடிவமாகும். ஐம்பாற்சுட்டுப் பெயர்கள் தோன்றிய பின்பு, 'தாம்' என்பது தற்சுட்டுப் பெயராய் மாறியது (த.வ. 135).]

தாங்கற்சக்தி *tāṅgaṟ-šakti*, பெ. (n.) 1. பொறுக்கும் வல்லமை; power of endurance or tolerance to a drug. 2. ஏற்பட்ட வல்லமை; acquiring tolerance (சா.அக.).

[தாங்கு → Skt. சக்தி]

தாங்கான்மட்டை *tāṅgāṉ-maṭṭai*, பெ. (n.) நெசவுத்தறியின் உறுப்புவகை (யாழ்.அக.); part of a weaver's loom.

[தாங்கு + ஆன் + மட்டை]

தாங்கி[1] *tāṅgi*, பெ. (n.) 1. அடிப்படையானது; support, prop, defence. சுமைதாங்கி (உ.வ.). 2. தாங்குபவன்; one who supports. "குடி தாங்கியைச் சென்று கூடியபின்" (பெருந்தொ. 1153). 3. பூண் (திவா.); ferrule. 4. கிம்புரி (பிங்.); golden ferrule put on the tip of an elephant's tusk. 5. அணிகளின் கடைப்பூட்டு (யாழ்.அக.); fastening clasp of an ornament.

[தாங்கு → தாங்கி]

தாங்கி[2] *tāṅgi*, பெ. (n.) மலைதாங்கி (மூ.அ.); sickle-leaf.

[தாங்கு → தாங்கி]

தாங்கி[3] *tāṅgi*, பெ. (n.) 1. பனிதாங்கி; that which bears the drops of dew. 2. பனிதாங்கிப்பூடு பார்க்க; see *paṉi-tāṅgi-p-pūḍu*. 3. பூநீறு; flowering ashes. 4. மலைதாங்கி; wound plant - Sida carpinifolia. 5. கோபுரந்தாங்கி; tower plant, Justicia echioides. 6. கருப்பிணி; a pregnant women. 7. தாங்குகை; one that supports. 8. பூண்டின் இறுதிமொழி; plant's second term indicating place of growth. 9. கருப்பைத்தாங்கி; an instrument introduced into the vagina to bear up the womb - Pessary. 10. குடற்தாங்கி; truss used for supporting the bowels.

[தாங்கு → தாங்கி]

தாங்கித்தடுக்கிடு-தல் *tāṅgi-t-taḍukkiḍu-*, 20 செ.குவி. (v.i.) மிகுந்த உதவிசெய்தல் (இவ.); to treat with undue politeness, as effusively welcoming a person and spreading a mat for him to sit on. தாங்கிப் பார்த்தால் தளைமேல் ஏறுகிறான் (பழ.).

[தாங்கி + தடுக்கிடு-.]

தாங்கிநட[1]**-த்தல்** *tāṅgi-naḍa-*, 3 செ.குவி. (v.i.) நொண்டிநடத்தல்; to walk limpingly, hobble.

[தாங்கி + நட-.]

தாங்கிநட[2]**-த்தல்** *tāṅgi-naḍa-*, 3 செ.குவி. (v.t.) 1. உதவிசெய்து கொண்டிருத்தல் (இ.வ.); to be lending support. 2. பொறுத்துக் கொண்டு நடத்தல்; to walk by bearing the pain.

[தாங்கி + நட-.]

தாங்கித்தாங்கிநட-த்தல் *tāṅgi-t-tāṅgi-naḍa-*, 3 செ.குவி. (v.i.) நொண்டிநொண்டி நடத்தல்; to hobble upon one leg (சா.அக.).

[தாங்கு + தாங்கி + நட-.]

தாங்கிப்பேசு-தல் *tāṅgi-p-pēśu-*, 5 செ. குன்றாவி. (v. t.) 1. பரிந்துபேசுதல் (இவ.); to plead f o r
2. ஒத்துக்கொள்ளுதல் (இக்.வ.); to second.

[தாங்கி + பேசு-.]

தாங்கு[1]**-தல்** *tāṅgu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. உதவுதல், சார்தல், பற்றுதல்; to uphold, bear up, support. "எம்பிரா னென்னத் தாங்கிக் கொள்ளே" (திருவாச. 6:1). 2. புரத்தல்; to protect, guard. "தண்கடல் வரைப்பிற் றாங்குநர்ப் பெறாது" (பெரும்பாண். 18). 3. இளைப்பாற்றுதல்; to give shelter, rest, "நீவரிற் றாங்கு மாணிழல்" (கலித்.20). 4. பொறுத்துக்கொள்ளுதல்; to endure. தந்தை மறைவைத் தாங்கமுடியவில்லை (உ.வ.). 5. சுமத்தல்; to bear. "அகழ்வாரைத் தாங்கு நிலம் போல" (குறள், 151). 6. ஏற்றுக்கொள்ளுதல்; to receive. "அடி . . . கைசென்று தாங்குங் கடிது" (நன்னெறி, 31). 7. அணிதல்; to assume, wear, as crown.... "தமால மாலையு மாய்ந்து, தாங்கினார்" (சீவக. 2681). 8. மனத்திற் கொள்ளுதல்; to learn, understand, to bear in mind. "பலகலைகள் தாங்கினார்" (தேவா. 518: 7). 9. அன்பாய்நடத்துதல்; to care for, treat tenderly, show great kindness. தாங்கத் தாங்கத் தலையிலேறு கிறான் (உ.வ.). 10. சிறப்புச்செய்தல்; to esteem, respect. அவன் பெரியோரைத் தாங்கி நடத்து கிறான் (உ.வ.). 11. அழுத்துதல் (வின்.); to press heavily. 12. உடையதாதல்; to maintain, possess, as a disposition. "இவனுக்காகத் தாங்கிய வனப்பும்" (பெரியபு. காரைக்கா. 49). 13. பொறுத்தல், இசைவளித்தல் (வின்.); to tolerate, suffer, permit. 14. பயிற்சி மேற்கொள்ளுதல்; to practise. "தாங்கா நல்லறம்" (மணிமே. 28:126). 15. காலந்தாழ்த்துதல்; to delay. "தாங்காது . . . புல்லி" (அகநா. 66:13). 16. நிறுத்துதல்; to stop. "வலவன் தாங்கவும் நில்லாது கழிந்த தேர்" (குறுந். 311). 17. தடுத்தல்; to hinder, prevent, resist, ward

off. "வருதார் தாங்கி யமர்மிகல் யாவது" (புறநா. 62). 18. பிடித்துக் கொள்ளுதல்; to hold, catch. "சரிந்தபூந் துகில்க டாங்கார்" (கம்பரா. உலாவி. 2). 19. எதிர்த்தல்; to oppose, attack. "பெரும்பகை தாங்கு மாற்றலானும்" (தொல். பொருள். 76). 20. தள்ளுதல்; to row, ploe, as boat. அவன் தோணியைத் தாங்குகிறான் (இக்வ.). 21. தட்டுதல் (வின்.); to hit against, strike, graze, as a boil. 22. குதிரை முதலியவற்றின் வேகத்தை அடக்கிச் செலுத்துதல்; to drive with restraint, as horses. "களிறு பரந்தியலக் கடுமா தாங்க" (பதிற்றுப் 49). 23. கெஞ்சுதல்; to solicit, cringe. எவ்வளவோ தாங்கியும் அவன் கேட்கவில்லை (உ.வ.).

ம. தாங்ஙுக; க. தாங்கு; தெ. தாளு; து. தாங்குனி; குட. தாங்க; கோத. தாங்க்; துட. தொக்; பட. தாங்கு; பிரா. தோனிங்க்

[தாங்கு + தல். 'தல்' ஈற்று தொழிற்பெயர்]

தாங்கு²-தல் *tāṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. சுமையாதல்; to be heavy. வண்டி ஒரு பக்கந் தாங்குகிறது. (உ.வ.). 2. நொண்டுதல்; to limp, hobble. தாங்கித் தாங்கி நடக்கிறான் (உ.வ.). 3. பேச்சுத் தடைப்படுதல்; to halt in speaking. அவன் தாங்கித் தாங்கிப் பேசுகிறான். 4. போதியதாதல்; to suffice. எவ்வளவு பேர் வந்தாலும் இடந் தாங்கும். 5. மாறுபடுதல்; to be opposed, controverted. "தாங்கருங் கேள்வியவர்" (ஆசாரக். 51). 6. கூடியதாதல்; to be possible; to afford, as an expense. அவனுக்குச் சாப்பாடு கொடுத்துக் தாங்காது. 7. வருந்துதல்; to be distressed. "தனிக்குழவி யெனக்கலங்கித் தாங்கித் தேடி" (திருவிளை. விருத்தகுமார. 29). 8. அணைத்தல்; to hug. 9. காத்தல்; to wait.

க. தாங்கு; ம. தாங்ஙு

[தா → தாங்கு-.]

தாங்கு³ *tāṅgu*, பெ. (n.) 1. தாங்குகை (யாழ்ப்.); bearing, supporting. தாங்குகிற ஆள் உண்டு தளர்ச்சி உண்டு (பழ.). 2. அடிப்படை; support. சமயத்தில் நல்ல தாங்கலாக இருந்தான் (இ.வ.). 3. ஈட்டிக்காம்பு (யாழ்அக.); staff of a pike.

[தா → தாங்கு-.]

தாங்குகட்டை *tāṅgu-kaṭṭai*, பெ. (n.) தாங்கி நடக்கப்பயன்படுத்தும் கோல்; crutches.

ம. தாங்ஙுதடி

[தாங்கு + கட்டை]

தாங்குகோல் *tāṅgu-kōl*, பெ. (n.) 1. தோணியை ஊன்றித் தள்ளுங்கோல் (இ.வ.); punt pole. 2. உதவி; support. அவனுக்கிவன் தாங்குகோல் (உ.வ.).

[தாங்கு + கோல்]

தாங்குசுவர் *tāṅgu-šuvar*, பெ. (n.) 1. முட்டுச் சுவர் (இ.வ.); buttress wall.

[தாங்கு + சுவர்]



தாங்குநன் *tāṅgunaṉ*, பெ. (n.) காப்பாற்று வோன்; saviour, protector. "தண்கடல் வரைப்பிற் றாங்குநர்ப் பெறாது" (பெரும்பாண். 18).

[தா → தாங்குநன்]

தாச்சா *tāccā*, பெ. (n.) கொடிமுந்திரிகை; grapes.

[தரு → தா → தாச்சா. நிலந்தரும் கொடி முந்திரி. தருதற் கருத்தே இச்சொல்லிற்கு அடிப்படையாகும்.]

தாச்சி[1] *tācci,* பெ. (n.) 1. தாய்ச்சி பார்க்க; see *tāycci.* 2. விளையாட்டில் ஒவ்வொரு பிரிவிலுமுள்ள தலைவன் (வின்.); leader of a side, in games, captain.

[தாய்ச்சி → தாச்சி. ஒ.நோ. ஆய்ச்சி → ஆச்சி.]

தாச்சி[2] *tācci,* பெ. (v.) சோனைப்புல் (மலை.); guinea grass.

[தரு → தா → தாச்சி]

தாச்சிக்கொள்(ளு)-தல் *tācci-k-koḷ-,* 5 செ.கு.வி. (v.i) படுத்துக்கொள்ளுதல்; to lie down (செ.அக.).

மறுவ. தாச்சுக்கொள்; குழந்தைகளைக் கொஞ்சும் போது பயன்படுத்தும் சொல். சாய்ந்து கொள் → தாச்சிக்கொள். தகரமும், சகரமும் இடம்மாறிக் கொண்டன.

[தாச்சி + கொள்-.]

தாச்சீலை *tā-c-cīlai,* பெ. (n.) தாய்ச்சீலை (இ.வ.); foreflap.

[தாய்ச்சீலை → தாச்சீலை]

தாச்சுக்கொள்(ளு)-தல் *tāccu-k-koḷ-.,* 13 செ.கு.வி. (v.i.) தாச்சிக்கொள்(ளு)-தல் பார்க்க; see *tācci-k-koḷ-* (செ.அக.).

[தாச்சி → தாச்சு. + கொள்(ளு)-]

தாச்சுகா *tā-c-cugā,* பெ. (n.) கொன்னை; common cassia (சா.அக.).

[தா → தாச்சுகா]

தாச்சுரம் *tā-c-curam,* பெ. (n.) தாபச்சுரம் பார்க்க; see *tāba-c-šuram* (சா.அக.).

[தாகம் - எரிவு, சூடு. தாகம் → தாபம். தாபசுரம் → தாச்சுரம்]

தாசகமாசகம் *tāšaga-māšagam,* பெ. (n.) பசப்புகை (இ.வ.); coaxing.

தாசகாமியம் *tāšakāmiyam,* பெ. (n.) ஆண் குறி முன்தோல் நோய்; a disease of skin of the prepuce (சா.அக.).

மறுவ. மாணிநுதி

தாசசின்னி *tāša-šinni,* பெ. (n.) ஒரு சாவாமூவா மூலிகை; an unknown rejuvenating drug (சா.அக.).

[தரு → தா → தாசம் + சின்னி. இது வேதைக்குதவும் என்று சா.அக. கூறும்]

தாசடி-த்தல் *tāšaḍi-,* 4 செ.கு.வி. (v.i.) நாழிகைச் சேகண்டியடித்தல் (இ.வ.); to beat the gong indicating time.

[தாயம் → தாசம் → தாசன் + அடி-. தாசம் = பரம்பரையுரிமை குறித்து மேற்கொள்ளும் பணி.]

தாசத்துவம் *tāšattuvam,* பெ. (n.) அடிமைத் தன்மை; servitude, bondage, slavery (செ.அக.).

[தாயத்துவம் → தாசத்துவம் (ஒ.நோ.) நேயம் → நேசம்]

தாசநந்தினி *tāša-nandiṉi,* பெ. (n.) வியாசனின் தாய் சத்தியவதி; šattiyavadi, mother of Viyāšaṉ (இரு.நூற்.அக.).

தாசநம்பி *taša-nambi,* பெ. (n.) சாத்தானி வகுப்பினரின் பட்டப்பெயர் (வின்.); title of the šattāṉi caste.

தாசநெறி *tāša-neṟi,* பெ. (n.) தொண்டுநெறி; slavery path; service mind.

[தாயம் → தாசம் + நெறி]

தாசபாசம் *tāša-pāšam,* பெ. (n.) அரிவாள்மனைப் பூண்டு பார்க்க; see *arivāḷ-maṉai-p-pūṇḍu* (சா.அக.).

[இது கண் நோய்களுக்கு மருந்தாகும் என்று, சா.அக. கூறும்.]

தாசபுத்தம் *tāša-puttam,* பெ. (n.) ஏழிலைப் புன்னை; seven leaved milky plant (சா.அக.).

[தரு → தா → தாசபுத்தம்]

தாசபுரம் *tāša-puram,* பெ. (n.) தாசபூரம் பார்க்க; see *tāša-pūram* (சா.அக.).

தாசபூரம் *tāša-pūram,* பெ. (n.) ஒரு வகைப் புல்; a kind of grass (சா.அக.).

[தரு → தா → தாசபூரம்]

தாசம் *tāšam,* பெ. (n.) முல்லை; fragrant jasmine (சா.அக.).

[தரு → தா → தாசம்]

தாசமார்க்கம் *tāša-markkam,* பெ. (n.) தாசநெறி பார்க்க; see *tāša-neṟi* (செ.அக.).

[தாயம் → தாசம் + மார்க்கம். மார்க்கம் = வழி. Skt. Mārga]

தாசர் *tāšar,* பெ. (n.) தாசன்¹ பார்க்க; see *tāšan¹*.
[தாயர் → தாசர்]

தாசரி *tāšari,* பெ. (n.) அந்தணனல்லாத மாலியத்தொண்டர்; தாதன்; E.T.ii,112; vaiṣṇava non-brahmin mendicant.
க., தெ. தாசரி
[தாயர் → தாசர் → தாசரி.]

தாசரிப்பறவை *tāšari-p-paṟavai,* பெ. (n.) நாமப் பறவை; scimitar bird, stripped bird-Pomatorhrinus horsifician *(சா.அக.).*
[தாசரி + பறவை]



தாசரிப்பாம்பு¹ *tāšari-p-pāmpu,* பெ. (n.) *1.* தலையிலும், கழுத்திலும் வெண்மையான வரிகளையுடைய சிவப்புப்பாம்பு; a hermit snake. It is a red snake marked with white streaks in head and neck like the forehead marks of dasari a vaiṣṇava hermit. *2.* மலைப்பாம்பு; rock snake. *3.* நெடிய வெண்கோடுள்ள பெரும் பாம்பு வகை; hermit snake, large rock snake, as having an upright white streak like the forehead mark of a tāšari *(செ.அக.).*
[தாசரி + பாம்பு]



தாசரிபந்தம் *tāšari-pandam,* பெ. (n.) திருவரங்கத்தில் கடவுள் பறப்பாட்டின்போது எடுத்துச் செல்லும், பெரிய தீவட்டி; big torch used in Thiruvarangam temple *(செ.அக.).*
[தாசரி + பந்தம்.]

தாசவிருட்சம் *tāša-viruṭcam,* பெ. (n.) வெண் கடம்பு; seaside Indian-oak.
[தாசம் + Skt. விருட்சம்]

தாசன்¹ *tāšaṉ,* பெ. (n.) *1.* ஊழியக்காரன்; servant. "தாசர் தாசியர்" *(விநாயகபு. 53, 57). 2.* அடிமை *(சூடா.);* slave. *3.* பத்தன்; devotee. *4.* அந்தணர் அல்லாதாருக்கான பொதுப்பெயர்; title of non-bhrahmin castes. "தருமன் வருமன் றனன் றாசன்" *(திருவானைக். கோச். 69). 5.* மாலியரின் வணக்கச்சொல்; a term used in salutation among vaiṣṇavas. "அடியேன் றாசனென்றி றைஞ்சி" *(பிரபோத. 11,11).*
[தாயம் → தாயர் → தாசன். தாயம் = உரிமை. உரிமையுடன் வழிவழித் தொண்டு புரிபவராக அமைக்கப்பட்டவர் தாயர். இற்றைக்கும், ஈரேழ் பிறவிக்கும் இறைவனை உள்ளத்தில் தாங்கித் தொண்டருக்குத் தொண்டு செய்பவனே தாசன் என்றறிக.]

தாசன்² *tāšaṉ,* பெ. (n.) வலைஞன்; fishmer man. "தாசர்தங் குலத்துக்கு" *(பாரத. குரு. 91).*

தாசனாச்சங்கிலி *tāšaṉā-c-caṅgili,* பெ. (n.) சுக்கான் திருப்புஞ்சங்கிலி; tiller chain *(செ.அக.).*
[தாசனம் + சங்கிலி]

தாசனாப்பொடி *tāšaṉā-p-poḍi,* பெ. (n.) பெரும்பாலும் வயதுமுதிர்ந்த மகளிர் பயன் படுத்துவதும், பல்லில் கறுப்புக் கரையை உண்டாக்குவதுமான, ஒருவகைப் பற்பொடி; a kind of dentifrice for blackening teeth, generally used by elderly women.
[தாசனம் + பொடி]

தாசாமசாலா *tāšā-mašālā,* பெ. (n.) உற்சாகம் அடையும் பொருட்டுக் குதிரைக்குக் கொடுக்கும் மருந்து வகை *(அசுவசா. 136);* a medicinal preparation to instil spirit in horses.
[தாசா + மசாலா]

தாசான்பூ *tāšānpū,* பெ. (n.) தாசரிப்பூ; shoe-flower *(சா.அக.).*

தாசானபூ *tāšānapū*, பெ. (n.) தாசான்பூ பார்க்க; see *tāšān-pū* (சா. அக.).

தாசி[1] *tāšī*, பெ. (n.) *1.* தோழி; maid servant. "மங்கலத் தாசியர் தங்கல னொலிப்ப" (சிலப். 6: 125). *2.* கோயில் சார்ந்த ஆடல்மகள்; dancing-girl devoted to temple service. *3.* விலைமகள்; a prostitute; harlot, whore. *4.* அடிமைப்பெண் (சது); female slave. *5.* பரணி பார்க்க (பிங்.); see *paraṇi;* the second star. *6.* மருதோன்றி (மலை); western ghats blue nail-dye.

[தாசன் (ஆண்பால்) → தாசி (பெண்பால்)]

தாசி[2] *tāšī*, பெ. (n.) *1.* துரிசி; blue vitriol-copper sulphate. *2.* நீலசெம்முள்ளி அல்லது ஊதா முள்ளி; large with sky blue flowers. western ghats blue nail dye - Barleria montana. *3.* தொழுபஃறி; a star planet. *4.* கழுதை; ass (சா.அக.).

தாசிக்கல் *tāši-k-kal*, பெ. (n.) காகச்சிலை; black load stone (சா.அக.).

[தாசி + கல்]

தாசிகம் *tāšigām*, பெ. (n.) அடிமைத்தனம்; slavery (pond.).

[தாசி → தாசிகம்]

தாசிகா *tāšikā*, பெ. (n.) கொடிமாதுளை; pomegranate creeper.

[தாசி → தாசிகா]

தாசிகி *tāšikī*, பெ. (n.) தாசிகை பார்க்க; see *tāšigai* (சா.அக.).

தாசிகை *tāšigai*, பெ. (n.) *1.* தாழிநாள்; the day of paraṇi star. *2.* முகில்நிறப்பூவுள்ள மருதோன்றி மரம்; a kind of tree that has the cloud colour flower (இரு.நூற்.பே.).

தாசிதம் *tāšidam*, பெ. (n.) அழிகை; ruined (இரு.நூற்.பே.).

தாசிபுத்திரன் *tāši-puttiran*, பெ. (n.) நாகமணல்; zinc-ore (சா.அக.).

தாசிமலைக்கல் *tāšimalai-k-kal*, பெ. (n.) சாலக்கிராமம்; a fossil with impression of ammonities having mystic virtues. It is supposed to convert into copper colour (சா.அக.).

தாசிமாந்தப்பூடு *tāši-mānda-p-pūḍu*, பெ. (n.) பெருமருந்து வகை; a kind of herbal medicine.

தாசியப்பிருந்தம் *tāšiya-p-pirundam*, பெ. (n.) ஆவினம்; herd of cow (இரு.நூற்.பே.).

தாசிரிகுப்பம் *tāširi-kuppam*, பெ. (n.) செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Cheṅgalpaṭ Dt. (ஊர் பெ.அக.).

[தாசிரி + குப்பம்]

தாசிரிகுன்னத்தூர் *tāširi-kunnattūr*, பெ. (n.) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; a village in Kāñjipuram Dt.

ஊர் என்பது மக்கள் வாழும் இடத்திற்குப் பொதுப்படையாக வழங்கப்படுவது. இயற்கை அமைப்பையொட்டியதாகவும், அமையும் தன்மைத்து. மலையை, இயற்கைப்பெயராகக் கொண்டு வழங்குகிறது. ஆரியர் வருகைக்குப் பின், இந் நிலை மாறி, இனத்தின் பெயராலும் வழங்குவதைக் காணலாம் (ஊர் பெ.அக.).

தாசிரெட்டிகண்டிகை *tāširetti-kaṇḍigai*, பெ. (n.) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Kāñjipuram Dt.

ஒரு பகுதியிலிருந்து பிரிந்து காணப்படும் ஊர், கண்டிகை எனப்படும். தனி மனிதனின் பெயரில் அமைந்தவையே கண்டிகை (ஊர் பெ. அக.).

[கண்டம் → கண்டிகை]

தாசில்பண்ணு-தல் *tāšil-paṇṇu-*, 5 செ.குன்றாவி (v.t.) ஆட்சி செலுத்துதல்; to hold the reins of. ஆசை இருக்கிறது தாசில் பண்ண, நல்வினை (அதிர்ஷ்டம்) வேண்டாமா?

[தாசில் + பண்ணு-.]

தாசினாப்பொடி *tāšinā-p-poḍi*, பெ. (n.) தாசனாப் பொடி (இ.வ.) பார்க்க; see *tāšanā-p-poḍi.*

[தாசனாப்பொடி → தாசினாப்பொடி]

தாசினை *tāšinai*, பெ. (n.) கொம்பு; horn.

தாசு *tāšu*, பெ. (n.) *1.* நாழிகைச் சேகண்டி (வின்.); gong to strike the hour. *2.* இரண்டரை நாழிகை கொண்ட ஒரு மணி நேரம் (வின்.); an hour. *3.* சூதாடு கருவி (சது.); die.

u. tās.

தாசுவம் *tāšuvam*, பெ. (n.) கொடை (யாழ்.அக.); gift.

தாசுவன் *tāšuvaṉ*, பெ. (n.) கொடையாளன்; donator (இரு.நூற்.பே.).

தாசூரன் *tāšūraṉ*, பெ. (n.) ஒரு முனிவன்; a šaint.

தாசேகரம் *tāšēgaram*, பெ. (n.) ஒட்டகம்; camel.

தாசேயன் *tāšēyaṉ*, பெ. (n.) பணியாள்; servant (இரு.நூற்.பே.).

தாசேரகம் *tāšēragam*, பெ. (n.) தாசேகரம் பார்க்க; see *tašē-garam*.

தாசேரம் *tāšēram*, பெ. (n.) தாசேரகம் (சூடா.) பார்க்க; see *tašēragam*.

தாசேரன் *tāšēraṉ*, பெ. (n.) தாசேயன் பார்க்க; see *tāšēyaṉ* (இரு.நூற்.பே).

தாசோகம்[1] *tāšōgam*, பெ. (n.) *1.* 'நான் உனக்கு அடிமை' என்று பொருள்படும் வணக்க முணர்த்துந் தொடர்; a term of homage meaning, 'I am your slave'. "இங்குத் தாசோகமென்றே யினிதுபா வித்தவாற் றால்" (*பிரபோத. 45, 13*). *2.* வீரசைவர்களின் மாகேசுர பூசை (இ.வ.); feeding of vīrāšaivar devotees.

[தாயன் → தாசன் = அடிமை. தாசசோகம் → தாசோகம். 'ச' இடைக்குறை]

தாசோகம்[2] *tā-šōgam*, பெ. (n.) *1.* தாசேரம் பார்க்க; see *tāšēram*. *2.* வலியையும், துன்பத்தையும் உண்டாக்கும் களைப்பு; faintness causing pain and grief (சா.அக.).

[தா + சோகம்]

தாட்கட்டி *tāṭ-kaṭṭi*, பெ. (n.) பொன்னுக்கு வீங்கி (இ.வ.); mumps.

[தாள் + கட்டி]

தாட்கம் *tāṭkam*, பெ. (n.) கொடிமுந்திரிகை (மூ.அ.); grapes.

தாட்கவசம் *tāṭ-kavašam*, பெ. (n.) செருப்பு; sandals, slipper. "தாட்கவசத் தாற்கின்று" (*பதார்த்த. 1457*).

[தாள் + கவசம்]

தாட்கிட்டிசன்னி *tāṭ-kiṭṭi-šaṉṉi*, பெ. (n.) பற்கிட்டும் நோய் (இ.வ.); tetanus.

[தாள் + கிட்டி + சன்னி]

தாட்குற்றி *tāṭ-kuṟṟi*, பெ. (n.) செந்தாளி; red convolvulus (இரு.நூற்.பே.).

[தாள் + குற்று → குற்றி]

தாட்கூட்டு *tāṭ-kūṭṭu*, பெ. (n.) மகளிர் கையணி வகை; a kind of wristlet worn by women. "மகளிர் கையிலிட்ட தாட்கூட்டாகிய நீலக் கடைச்செறி" (*கலித். 43: உரை 1*).

[தாள் + கூட்டு]

தாட்கோரை *tāṭ-kōrai*, பெ. (n.) கோரைப்புல் வகை (வின்.); a kind of sedge.

[தாள் + கோரை]

தாட்கோல் *tāṭ-kōl*, பெ. (n.) *1.* தாழ்ப்பாள்; bolt, bar, latch. "இரட்டைத் தாட்கோலைப் போடு" (*அருட்பா, 4, கீர்த்தனை. பக்.811*). *2.* திறவுகோல் (இ.வ.); key.

ம. தாக்கோல்

[தாழ் + கோல்]

தாட்சி[1] *tāṭci*, பெ. (n.) *1.* இழிவு; degradation, disgrace. "தாட்சியிங் கிதனின்மேற் றருவ தென்னினி" (*கம்பரா. யுத். மந்தி. 11*). *2.* காலத் தாழ்வு; dilatoriness, tardiness. "தாட்சி யெய்தா துஞற்றுதல் கருமம்" (*பிரபோத. 5:39*).

[தாழ் → தாழ்ச்சி → தாட்சி]

தாட்சி[2] *tāṭci*, பெ. (n.) தாழ்ந்துபணிகை; humility. "அஞ்சொலார் மேற் றாட்சியும்" (*மேருமந். 419*).

[தாழ்ச்சி → தாட்சி]

தாட்சி[3] *tāṭci*, பெ. (n.) *1.* சிற்றீஞ்சு; small date, dwarf date palm. *2.* திராட்சை; dried sweet grapes.

தாட்சியிலது *tāṭciyiladu*, பெ. (n.) கள்ளிக் கொழுந்து; tender leaf of milk hedge plant (சா.அக.).

தாட்டயன் *tāṭṭayaṉ*, பெ. (n.) தாட்டன் பார்க்க; see *tāṭṭaṉ*.

[தாட்டன் → தாட்டயன்]

தாட்டன் *tāṭṭaṉ,* பெ. (n.) *1.* ஒருவனை இகழ்ச்சி தோன்றக் குறிக்கும் சொல் *(வின்.);* a disrespectful term meaning a certain person, a fellow. *2.* **பெருமைக்காரன்** *(யாழ்ப்.);* self-important person. *3.* **கயவன்;** rogue. 'தாட்டன் வந்துவிட்டான்' *(தஞ்சை.). 4.* **தலைமை ஆண்குரங்கு** (இவ.); leading male monkey.

[தாழ் → தாட்டன்]

தாட்டாந்தம் *tāṭṭāndam,* பெ. (n.) தாட்டாந்திகம் பார்க்க; see *tāṭṭāndigam.*

[தாட்டாந்திகம் → தாட்டாந்தம்]

தாட்டாந்திகம் *tāṭṭāndigam,* பெ. (n.) **உவமேயம்;** that which is illustrated by an example or simile. "தரு திருட்டாந்தமுந் தாட்டாந்திகமும்" *(சங்கற்ப. 11: அடி: 35).*

தாட்டான் *tāṭṭāṉ,* பெ. (n.) *1.* **தலைவன்;** chief, master. *2.* **கணவன்;** husband.

[தாடு → தாட்டான்]

தாட்டானை *tāṭṭāṉai,* பெ. (n.) **கிழக்குரங்கு;** monkey worn out with age. "இந்த நரைத் தாட்டானை வந்து" *(விறலிவிடு 890).*

தாட்டி *tāṭṭi,* கு.வி.எ. (adv.) **தடவை;** times. 'நாலுதாட்டி வந்தான்' (வின்.).

தாட்டி[2] tāṭṭi, பெ. (n.) *1.* **திறமை;** cleverness, skill. *2.* **உறுதி** *(வின்.);* bravery, courage. *3.* **தடையின்மை;** fluency, as in speaking or reading. வாசிப்பதில் தாட்டியுள்ளவ *(உ.வ.). 4.* **பெருமிதம்;** ostentation; majesty. அவன் தாட்டியுள்ளவன் *(இ.வ.). 5.* **முகவரி;** spacious ness. அங்கே இடந் தாட்டியாயிருக்கிறது *(இ.வ.). 6.* **கெட்டிக்காரி** *(வின்.);* clever woman. *7.* **ஆண்மைத்தன்மை வாய்ந்தவள்** *(யாழ்ப்.);* masculine woman. *8.* **வைப்பாட்டி;** concubine. "குடவற்குந் தாட்டிக்குங் கொத்திட்டு மாய்வதல்லால்" *(தனிப்பா. I. 87:171).*

தாட்டி[3] *tāṭṭi,* பெ. (n.) **பனை;** palmyra tree *(சா.அக.).*

தாட்டிகம் *tāṭṭigam,* பெ. (n.) *1.* **வலிமை;** strength. "தாட்டிகமுடன் வெகுபோட்டி" *(இராமநா. உயு. 16). 2.* **குறும்புத்தனம்;** mischievousness.

தாட்டிகன் *tāṭṭigaṉ,* பெ. (n.) *1.* **உரவோன், வலிமையானவன்;** powerful, strong man. "மயிறனிற் புக்கேறு தாட்டிகன்" *(திருப்பு. 911). 2.* **கொடியவன்;** mischieveous man. அவன் பெரிய தாட்டிகன் *(உ. வ.).*

தாட்டிதோப்பு *tāṭṭi-tōppu,* பெ. (n.) **செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்;** a village in Chengalpet district.

தாட்டிமை *tāṭṭimai,* பெ. (n.). **மேன்மை;** eminence. "தாட்டிமைக்கு நாட்டிலென்னைக் காட்டியுமுண்டோ" *(குருகூர்ப்: 96).*

தாட்டியம் *tāṭṭiyam,* பெ. (n.) **காரெள்;** black gingelly seed *(சா.அக.).*

தாட்டிலை *tāṭṭilai,* பெ. (n.). **அகலமான முழு வாழையிலை** (இவ.); full and large-sized leaf of a plantain.

[தாட்டு → தாட்டிலை.]

தாட்டு[1]**-தல்** *tāṭṭu-,* 5 செ.கு.வி. (v.t.) *1.* **காலங் கடத்துதல்;** to cause delay. 'பணங்கொடுக்காமல் தாட்டுகிறான்' *(இ.வ.). 2.* **நீக்குதல்** *(வின்.);* to remove. *3.* **மறுத்தல்** *(வின்.);* to confute.

[தாழ்த்து → தாட்டு-.]

தாட்டு[2]**-தல்** *tāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **வீழ்த்துதல்** *(வின்.);* to throw down.

[தாழ்த்து → தாட்டு-.]

தாட்டு[3] *tāṭṭu,* பெ. (n.) **ஆடைவகை;** a kind of cloth. 'அரியலூர் தாட்டு' *(இ.வ.).*

[தாட்டு → தட்டு.]

தாட்டுப்பண்ணு-தல் *tāṭṭu-p-paṇṇu-,* 5 செ.கு.வி. (v.i.) **காலநீட்டிப்பு செய்தல்;** to delay. பணங்கொடுக்காமல் தாட்டுப் பண்ணுகிறான் *(இ.வ.).*

[தாட்டு + பண்ணு-.]

தாட்டுப்பத்திரி *tāṭṭu-p-pattiri,* பெ. (n.) **சேலைவகை** (இ.வ); a kind of saree.

[தாட்டு → தாட்டுபத்திரி]

தாட்டுப்பூட்டெனல் *tāṭṭu-p-pūṭṭeṉal,* பெ. (n.) *1.* **வெகுளிக்குறிப்பு;** expr. of being angry. தாட்டுப்பூட்டென்று குதிக்கிறான் *(உ.வ.).*

2. ஆரவாரக் குறிப்பு; expr. of being pompous. 'தாட்டுப்பூட்டென்று நடக்கிறான்'.

[தாட்டு + பூட்டு + எனல்]

தாட்டுப்போட்டு *tāṭṭu-p-pōṭṭu*, பெ. (n.) குழப்பம் (யாழ்.அக.); confusion, perplexity.

[தாட்டு + போட்டு]

தாட்டுமேட்டு *tāṭṭu-mēṭṭu*, பெ. (n.) தாட்டுப்போட்டு (யாழ். அக.) பார்க்க; see *tāṭṭu-p-pōṭṭu*.

[தாட்டு + மேட்டு]

தாட்டையன் *tāṭṭaiyaṉ*, பெ. (n.) தாட்டயன் (நெல்லை.) பார்க்க; see *tāṭṭayaṉ*.

[தாட்டயன் → தாட்டையன்]

தாட்டோட்டக்காரன் *tāṭṭōṭṭa-k-kāraṉ*, பெ. (n.) புரட்டன்; ஏமாற்றுபவன்; cheat, deceiver, fraudulent person. தாட்டோட்டக்காரனுக்குத் தயிருஞ் சோறும் (பழ.).

தெ. தாடோடுகாடு

[தாட்டு + ஓட்டு + காரன். காரன் = உரிமைப் பெயரீறு]

தாட்டோட்டம் *tāṭṭōṭṭam*, பெ. (n.) 1. புரட்டு; fraud, deception, knavish, trick. 2. குழப்பம் (யாழ்.அக.); confusion, perplexity. 3. காலத் தாழ்வு (தஞ்.); delay.

மறுவ. தாட்டோட்டு, தாட்டோட்டுப்பேரம்.

க. தடவட; தெ. தாடோடு

தாட்டோட்டு *tāṭṭōṭṭu*, பெ. (n.) தாட்டோட்டம் பார்க்க; see *tāṭṭōṭṭam*.

[தாட்டோட்டம் → தாட்டோட்டு]

தாட்டோட்டுபேரம் *tāṭṭōṭṭu-pēram*, பெ. (n.) தாட்டோட்டம் பார்க்க; see *tāṭṭōṭṭam*.

[தாட்டோட்டம் → தாட்டோட்டு + பேரம்]

தாட்படை *tāṭpaḍai*, பெ. (n.) கோழி; gallinaceous fowl (சா. அக.).

[தாள் + படை]

தாட்பாட்கட்டை *tāṭpāṭ-kaṭṭai*, பெ. (n.) தாழ்பாளிட உதவுங்கட்டை; bar of wood, used as bolt.

[தாழ்ப்பாள் + கட்டை = நிலைக் கதவினின்று சற்று, தாழ்ந்தநிலையில் கதவினைத் திறக்கவியலாதவாறு, குறுக்கு வால் அமைக்கப்பட்ட கட்டை]



தாட்பாட்கட்டைமரம் *tāṭpāṭ-kaṭṭai-maram*, பெ. (n.) தாழ்ப்பாள் செல்லுதற்குரிய மரக்கொண்டி (வின்.); catch of wood to receive a bolt.

[தாழ்ப்பாள் + கட்டை + மரம்.]

தாட்பாள் *tāṭpāḷ*, பெ. (n.) 1. தாழ்ப்பாள்; bolt, bar, latch. 2. எலிப்பொறியின் தாள் (வின்.); door of a rat trap.

[தாழ்ப்பாள் → தாட்பாள்]

தாட்புழு *tāṭ-puḻu*, பெ. (n.) நெற்பயிரிற் காணும் நோய்வகை (நீலகேசி, 366, உரை); a disease affecting paddy.

[தாள் + புழு]

தாட்பூட்டு *tāṭ-pūṭṭu*, பெ. (n.) 1. மோவாய்ச் சந்து; joint of the lower jaw. 2. நேர்த்திக் கடனாக இரு கன்னங்களையும், கம்பியால் இணைத்துக் கொள்ளும் வாய்ப்பூட்டு; metal pin run through the cheeks in fulfilment of a vow. 3. கன்றுகளுக்கு இடும் வாய்ப்பூட்டு (இ.வ.); muzzle put over a calf's head.

[தாள் + பூட்டு]

தாட்பூட்டுவிலகல் *tāṭ-pūṭṭu-vilagal*, பெ. (n.) மோவாயெலும்புப் பிசகு (இ.வ.); dislocation of the lower jaw.

[தாள் + பூட்டு + விலகல்.]

தாட்போர் *tāṭ-pōr*, பெ. (n.) தலையடியான நெற்றாள் (C.G.); cornstack that has been threshed by hand but not yet trodden by cattle.

[தாள் + போர்]

தாடஅரசூர் *tāḍa-arašūr,* பெ. (n.) செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; a village in Cheṅgalpet district.

தாடகத்தி *tāḍagatti,* பெ. (n.) குங்கும செய் நஞ்சு; a prepared arsenic *(சா.அக.).*

தாடகம் *tāḍagam,* பெ. (n.) *1.* நீர்முள்ளி *(மலை.);* white long-flowered nail-dye. *2.* வீழி; a straggling shrub with simple oblong leaves and greenish flowers *(செ.அக.).*

தாடகை *tāḍagai,* பெ. (n.) இராமனாற் கொல்லப் பெற்ற ஓர் அரக்கர் குலமகள்; a female arakkar slain by Rāma. "தாடகைவதைப் படலம்" *(கம்பரா.).*

விசுவாமித்திரர் வேள்விக்காக அழைத்துச் சென்ற இராமனால் கொல்லப்பட்டவள், சமணரின் வேள்வி எதிர்ப்புக் கொள்கைப் பெண்மணி.

தாடகைத்தனம் *tāḍagai-t-tanam,* பெ. (n.) *1.* கொடுமை; cruelty, heartlessness. *2.* பெண்களின் நிறையின்மை *(வின்.);* immodesty in a woman.

[தாடகை + தனம்]

தாடங்கம் *tāḍaṅgam,* பெ. (n.) பெண்கள் காதிலணியும் தோடு *(சூடா.);* woman's ear-ornament.

[தாளங்கம் → தாடங்கம்]

தாடபத்திரம் *tāḍa-pattiram,* பெ. (n.) ஓலையாலான காதணி *(சங்.அக.);* ōlai ear-ornament.

[தாளபத்திரம் → தாடபத்திரம்]

தாடம் *tāḍam,* பெ. (n.) அடிக்கை; beating. "தாடவுடுக்கையன்" *(தேவா. 699: 10).*

[தாள் + அம் → தாடம்]

தாடலி *taḍali,* பெ. (n.) பாதிரி; trumpet flower tree *(சா.அக.).*

தாடவியம் *tāḍaviyam,* பெ. (n.) கும்பச்சுரை; bottle gourd *(சா.அக.).*

தாடளங்கோவில் *tāḍaḷaṅkōvil,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில், பொறையாறு வட்டத்திலுள்ள ஓர் ஊர்; a village in Poṟaiyāṟu taluk in Tañjore district.

கோவிலை நடுவணாகவும் சிறப்பாகவும் கொண்டிருந்தமையால், இப் பெயர் பெற்றது.

தாடனக்கை *tāḍaṉa-k-kai,* பெ. (n.) வலக்கை யிளம்பிறையாகவும், இடக்கை பதாகை யாகவும், மார்பிற்கு நேரே எட்டு விரலுயர்த்திப் பிடிக்கும் நடனமுத்திரை *(பரத. பாவ. 49);* (Nāṭya.) a kind of gesticulation with the right hand in *iḷam-piṟai* pose and the left hand in paṭāgai *pose,* both being held at eight fingers, distance from the chest.

[தாடனம் + கை]

தாடனம் *tāḍaṉam,* பெ. (n.) *1.* தட்டுகை; patting, tapping. "தாடன மெண்வகையாகும்" *(கொக்கோ.). 2.* அடிக்கை; beating. *3.* தாடனக்கை பார்க்க; see *tāḍaṉa-k-kai.*

தாடனம்பண்ணல் *tāḍaṉam-paṇṇal,* பெ. (n.) *1.* மெல்லெனக்குத்தல், துருவுதல்; massaging. *2.* மார்பினிடமாகக் கைகுவித்துத் தட்டுகை; a process of massaging *(சா.அக.).*

[தாடனம் + பண்ணல்]

தாடாண்மை *tāḍāṇmai,* பெ. (n.) சலிப்பற்ற ஊக்கம் *(யாழ்ப்.);* energy, indefatigable application and perseverance.

[தாளாண்மை → தாடாண்மை]

தாடாளன் *tāḍāḷaṉ,* பெ. (n.) *1.* மேன்மை யுள்ளவன்; great person. "தாடாளன் றாளடைவீர்" *(திவ். பெரியதி. 3. 4:1). 2.* பெரு முயற்சியுள்ளவன் *(வின்.);* person of great energy and application.

[தாடு + ஆளன். ஆளன் = உடைமைப் பெயரீறு]

தாடாற்றி *tāḍāṟṟi,* பெ. (n.) மட்டுப்படுத்துகை, அமைதிப்படுத்துகை *(யாழ்ப்.);* mitigation, relaxation of intensity or severity, quieting, appeasing .

[தாடு + ஆற்றி → தாடாற்றி]

தாடி[1] *tāḍi,* பெ. (n.) *1.* முகத்தின் தாழ்பகுதி; chin. "சுருளிடு தாடி" *(சிலப். 27:181). 2.* முகவாயில் வரும்

முடி; beard. "மருப்பிற் றிரிந்து மறிந்துவீழ் தாடி" (கலித். 15). 3. ஆ முதலியவற்றின் அலை தாடி; dewlap. "பேருடற் றழைந்த தாடி" (திருவாலவா: 36, 24). 4. சேவற் கழுத்தில் தொங்கும் சதை (வின்.); hanging excrescence under a cock's neck. தாடிக்குப் பூச்சூடலாமா? (பழ.).

த. தாடி → Skt. ḍāḍikā (ḍh.)

[தாழ் → தாழி → தாடி. தாடி = மோவாய். தாடிமயிர் = மோவாய் மயிர். முதற்கண் மோவாயினைக் குறித்த, இச் சொல் பின்பு மோவாய் மயிரினையுங் குறித்து வழங்கியது. தாழ்தல் = தாழ்ந்திருத்தல், தொங்குதல். தாழி → தாடி. தாழ்வாய் = மோவாய் (பிங்.) அடுத்த நிலையில் சேவல், ஆடு போன்றவற்றின் தொங்குசதையைக் குறித்ததென்றறிக.]



தாடி[2] tāḍi, பெ. (n.) 1. வாளின்பிடி; hilt, as of a sword. "புனைகதிர் மருப்புத் தாடி மோதிரஞ் செறித்து" (சீவக. 2279). 2. சத்திசாரணை; trianthima.

தாடி[3]-த்தல் tāḍi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. அடித்தல்; to beat. 2. கொட்டுதல்; to beat a drum. "தாடித் தெழுந்த தமருக வோசை" (திருமந். 2317).

தாடி[4] tāḍi, பெ. (n.) தட்டுகை; tapping, patting. "ஆக தாடி யிடுவார்கள்" (திருப்பு: 363).

தாடி[5] tāḍi, பெ. (n.) 1. தாட்டி, திறமை; skill. 2. விரலுறை; close. "கலையிரு மருப்பிற் கோடிக்காதள வோடுந்தாடி" (திருவிளை. மாபாத. 22). 3. கொம்மட்டிக்கொடி; bitter melon-creeper.

தாடிக்காரன் tāḍi-k-kāraṉ, பெ. (n.) தாடியும் மீசையும் வளர்த்துள்ளவன்; one who wears a beard.

ம. தாடிக்காரன்

[தாடி + காரன்]

தாடிச்சி tāḍicci, பெ. (n.) கூத்தாடும் இனப் பெண் (இ.வ.); woman of the actor caste.

[கூத்தாடிச்சி → தாடிச்சி.]

தாடிதபதம் tāḍida-padam, பெ. (n.) வலதுகாற் படத்தின் நுனியை இடதுகாற் பக்கத்தில் ஊன்றி நிற்கும் நிலை (பரத. பாவ: 85); a posture of standing on the left leg with the tip of the right foot touching it.

தாடிமக்கனி tāḍima-k-kaṉi, பெ. (n.) மாதுளை; pomegranate fruit.

தாடிமஞ்சம் tāḍi-mañjam, பெ. (n.) 1. சத்திக் கொடி (பிங்.); a kind of creeper. 2. கொம்மட்டிக் கொடி; bitter melon creeper.

தாடிமஞ்சள் tāḍi-mañjaḷ, பெ. (n.) சருகு மஞ்சள்; a kind of turmeric (சா. அக.).

தாடிமப்பிரியம் tāḍima-p-piriyam, பெ. (n.) (மாதுளம்பழத்தை மிக விரும்பும்) கிளி (யாழ்.அக.); parrot, as fond of pomegranates.

[தாடிமம் + பிரியம்]

தாடிமபத்திரகம் tāḍima-pattiragam, பெ. (n.) செம்மரம்; coromandel red wood (சா.அக.).

தாடிமபுட்பம் tāḍima-puṭpam, பெ. (n.) மாதுளம்பூ; pomegranate flower (சா.அக.).

[தாடிமம் + புட்பம்]

தாடிமம் tāḍimam, பெ. (n.) 1. தாதுமாதுளை (பிங்.); pomegranate. 2. சிற்றேலம் (மலை.); cardomam-plant.

தாடிமயிர் tāḍi-mayir, பெ. (n.) மோவாய் மயிர்; beard.

[தாடி + மயிர்]

தாடிமாதுளை tāḍi-māduḷai, பெ. (n.) மாதுளை; pomegranate (சா.அக.).

[தாடி + மாதுளை]

தாடிமாதா *tāḍi-mādā,* பெ. (n.) மாவிலங்கம்; liṅgam tree (சா.அக.).

[தாடி + மாதா]

தாடியிடு-தல் *tāḍi-iḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) தாக்குதல்; to attack. "அருட்சேனை தாடியிடுஞ் சொக்கநாதா" (சொக்க. வெண். 45).

[தாடி + இடு-.]

தாடிரி *tāḍiri,* பெ. (n.) கண்டங்கத்தரி (சங்.அக.); a medicinal herb.

தாடு *tāḍu,* பெ. (n.) 1. வலிமை; strength. "தாடுடைய தருமனார்" (தேவா. 17:9). 2. தலைமை (அக.நி.); leadership.

[தடு → தாடு]

தாடை[1] *tāḍai,* பெ. (n.) 1. முகத்தாழ்வுப் பகுதி, கன்னம்; cheeks, chaps. "தாடையிலோ ரடிபோட" (இராமநா. உயு. 58). 2. தாடை யெலும்பு; jaw-bone. 3. மோவாய் (யாழ்.அக.); chin.

க., பட. தாடெ; ம. தாட

[தாழ் + த் + ஐ → தாடை = முகத்தில் தாழ்ந்தமைந்த சினை.]

தாடை[2] *tāḍai,* பெ. (n.) வெண்ணாங்கு; creamy leaved lance wood.

தாடை[3] *tāḍai,* பெ. (n.) 1. ஆசை (விருப்பம்); desire. 2. பெரும்பல்; molar teeth (செ.அக.).

தாடைக்கால் *tāḍai-k-kāl,* பெ. (n.) கன்னக்கீல் (இ.வ.); articulation of the lower jaw.

[தாடை + கால்]

தாடைகிட்டு-தல் *tāḍai-kiṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தாளிறுத்தல்; to lock jaw (சா.அக.).

[தாடை + கிட்டு-.]

தாடைச்சன்னி *tāḍai-c-caṉṉi,* பெ. (n.) இழுப்புநோய் வகை (இ.வ.); tetanus, lock-jaw.

[தாடை + சன்னி]

தாடைச்சிரங்கு *tāḍai-c-ciraṅgu,* பெ. (n.) தாடையில் தோன்றும் சிரங்கு; impetigo pustular eczema cheek (சா.அக.).

[தாடை + சிரங்கு]

தாடையில்போடு-தல் *tāḍaiyil-pōḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) தாடையில் அடித்தல்; to slap on the cheek (சா. அக.).

[தாடை + இல் + போடு-.]

தாடையெலும்பு *tāḍai-y-elumbu,* பெ. (n.) கன்னத்தின் கீழெலும்பு (வின்.); jaw-bone, Maxilla.

ம. தாடியெலும்பு

[தாடை + எலும்பு]

தாடைவீக்கம் *tāḍai-vīkkam,* பெ. (n.) 1. காதின் கீழ்ப்புறம் தாடையிற் காணும் வீக்கம்; ordinary swelling on the sides of the jaw. 2. பொன்னுக்கு வீங்கி; swelling of the paroted gland and sometimes of the other salivary glands - Mumps (சா.அக.).

[தாடை + வீக்கம்]

தாண் *tāṉ,* பெ. (n.) குழம்பிலுள்ள காய் (இ.வ.); vegetable in curry (செ.அக.).

தாண்டகச்சதுரர் *tāṇḍaga-c-cadurar,* பெ. (n.) திருநாவுக்கரசு நாயனார் (பெரியபு. குங். 32); Tirunāvukkarašu-nāyaṉār.

மறுவ. தாண்டகவேந்தர்

[தாண்டு → தாண்டகம் + சதுர் → சதுரர் தாண்டகச்சதுரர்]

தாண்டகச்சந்தம் *tāṇḍaga-c-cantam,* பெ. (n.) 1. தாண்டகவடி மிக்குச் சந்தவடி குறைந்து வருஞ் செய்யுள். கட்டளைக்கலித்துறை நேர்முதலாக 16 எழுத்துக்களும், நிரை முதலாக 17 எழுத்துக்களும் கொண்டு வரும் என்பது போல, நேர்முதலாக 24 எழுத்துக்களும், நிரைமுதலாக 25 எழுத்துக்களும் கொண்டு வரும் செய்யுளைத் தாண்டகம் என்று கூறுவர் (யாப். வி. 95:456); a stanza in which lines of *tāṇḍagam* measure preponderate over lines of *šanḍam* measure. 2. சந்தவடியுந் தாண்டக வடியும் விரவி யோசை கொண்டு வருஞ் செய்யுள் (யாப்.வி. 95: 455); a stanza containing both šanda-v-aḍi and tāṇḍaga-v-aḍi (செ.அக.).

[தாண்டகம் + சந்தம். 25 எழுத்துக்கள் கொண்டு வரும் செய்யுள்]

"ஊனாகி உயிராகி யதனுள் நின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே யென்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாரும் கொன்றையனே நின்றியூராய்
திருவானைக் காவிலுறைசிவனே ஞானம்
ஆனாய் உன்பொற்பாதம் அடையப்
பெற்றால் அல்ல கண்டம் கொண்டு
அடியேன் என் செய்கேனே".
(திருநாவுக்கரசர். தேவா: 123: 2.)

தாண்டகம் *tāṇḍagam*, பெ. (n.) *1.* **இருபத்தாறு எழுத்தின் மிக்க அடியான்வரும் அளவழித் தாண்டகம், அளவியற்றாண்டகம் என்ற இருபகுப்பினையுடைய பாக்கள்** *(யாப். வி: 95: 447);* a stanza each line of which consists of more than 26 syllables, of two kinds, viz., aḷavaḻi-t-tāṇḍagam and aḷaviyaṟṟāṇḍagam. *2.* **அறுசீராலேனும் எண்சீராலேனும் இயன்ற ஒத்த நான்கடி கொண்ட செய்யுள் களுடையதும், கடவுளரைப் புகழ்வதுமான இலக்கியவகை** *(பன்னிருபா. 305);* a poem in praise of deities made up of quatrains of equal length, each line containing either six or eight šir.

[தாண்டு → தாண்டகம் = 24 எழுத்து ஆகிய அளவைத் தாண்டிச் செல்லும் அடிகளைக் கொண்ட செய்யுள் (மு.தா. 52)]

தாண்டகவடி *tāṇḍaga-v-aḍi*, பெ. (n.) **இருபத்தாறுக்கு மேற்பட்ட எழுத்துகளால் இயன்ற அடி** *(யாப். வி: 95:256);* a metrical line of more than 26 letters.

[தாண்டகம் + அடி. 26 எழுத்துகளுக்கு மேல் வரும் அளவழித்தாண்டகப் பாடல்]

மிறைபடுமிவ் வுடல்வாழ்வை மெய்யென்
றெண்ணி வினையிலே கிடந்தழுந்தி
வியல்வேல்நெஞ்சே
குறைவுடையார் மனத்து ளான் குமரன்தாதை
கூத்தாடுங் குணமுடையான் கெலைவேற்
கையான்
அறைகழலுந் திருவடியுமேற் சிலம்பு மார்ப்ப
அவனிதலம் பெயரவரு நட்டம் நின்ற
நிறைவுடையா னிடமாம் நெய்த்தானமென்று
நினையுமா நினைந்தக்கா லுய்யலாமே
(திருநாவுக்கரசர், தேவா: 114: 6)

தாண்டகவேந்தர் *tāṇḍaga-vēndar*, பெ. (n.) **அப்பர், சிவனியக்குரவர் நால்வரில் ஒருவர்;** Appar, one among four Šaiva šaints.

மறுவ. திருநாவுக்கரசர், வாகீசர், தாண்டகச்சதுரர்.

[தாண்டகம் + வேந்தர். தாண்டகம் என்ற பாவினத்தில், அளவழித்தாண்டகம், அளவியற்றாண்டகம் முதலான பலவகைத் தாண்டகப் பாக்களைப் பாடியவர்]

கி.பி. 7-ஆம் நூற்றாண்டில், தொண்டு நெறியில் வாழ்ந்த அப்பர் பெருமானார், இறைவனையும், ஈடில்லா அவனது புகழையும் இறைவனுக்கும் ஆதனுக்கும், எஞ்ஞான்றும் தொடர்ந்து வரும் உறவினையும் பலவகைத் தாண்டகப் பாக்களின் வாயிலாக, எடுத்துக்காட்டுகிறார். அவர் அருளிய தாண்டகப் பாக்களின் தனிச்சிறப்பால், தாண்டகச்சதுர், தாண்டக வேந்தர் முதலான சிறப்புப் பெயர்களால் குறிக்கப் பெறுகிறார்.

தாண்டகப் பாக்களின் வகைகள் வருமாறு:

1. அடைவுத் திருத்தாண்டகம்

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான்
சேரும் பெருங்கோயில் எழுபதினோ
டெட்டும் மற்றுங்,
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக்
கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே
(திருநாவுக்கரசு சுவாமிகள், தேவாரம், 520:5)

2. அடையாளத் திருத்தாண்டகம்

ஏறேறி யேழுலகும் உழிதர்வானே
இமையவர்கள் தொழுதேத்த இருக்கின்றானே
பாறேறு படுதலையிற் பலிகொள் வானே
படவரவந்த தடமார்பிற் பயில்வித்தானே
நீரேறு செழும்பவளக் குன்றொப்பானே
நெற்றிமேல் ஒற்றைக்கண் நிறைவித் தானே
ஆறேறு சடைமுடிமேற் பிறைவைத்தானே
அவனாகில் அதிகைவீ ரட்டனாமே
(திருநாவுக்கரசர், தேவா: 57: 9).

3. அளவியற்றாண்டகம்

பேசப்பொருளலாப் பிறவி தன்னைப் பெரிதென்றுன் சிறுமனத்தால்வேண்டியீண்டு
வாசக்குழல்மடார் போகமென்னும்
வலைப்பட்டு வீழாதே வருக நெஞ்சே
தூசக்கரியுரித்தான் தூநீறாடித் துதைந்திலங்கு நூல்மார்பன் தொடரகில்லா
நீசர்க்கரியவன் நெய்த் தானமென்று
நினையுமா நினைந்தக்கா லுய்யலாமே

(திருநாவுக்கரசர், தேவா: 114: 7).

4. அளவழித் தாண்டகம்

பொருந்தாத உடலகத்திற் புக்க ஆவி போமா றறிந்தறிந்தே புலைவாழ் வுன்னி
இருந்தாங் கிடர்ப்படநீ வேண்டா நெஞ்சே
இமையவர் தம் பெருமானன் றுமையா ளஞ்சக்
கருந்தாள் மதகரியை வெருவச் சீறுங் கண்ணு தலன்கண் டமராடிக் கருதார்வேள்வி
நிரந்தரமா இனிதுறை நெய்த் தானமென்று
நினையுமா நினைந்தக்கா லுய்யளாமே

(திருநாவுக்கரசர் 114: 9).

5. ஏழைத்திருத்தாண்டகம்

முந்தியுலகம் படைத்தான் தன்னை
மூவா முதலாய மூர்த்தி தன்னைச்
சந்தவெண் திங்கள் அணிந்தான் தன்னைத் தவநெறிகள் சாதிக்க வல்லான் தன்னைச்
சிந்தையில் தீர்வினையைத் தேனைப் பாலைச் செழுங்கெடில வீரட்டம் மேவினானை
எந்தை பெருமானை ஈசன் தன்னை ஏழையேன் நான்பண்டு இகழ்ந்த வாறே

(திருநாவுக்கரசர் 393: 3)

6. காப்புத் திருத்தாண்டகம்

செழுநீர்ப் புனற் கெடில வீரட்டமுந் திரிபுராந் தகந் தென்னார் தேவீச்சரம்
கொழுநீர் புடைசுழிக்குங் கோட்டுக்காவுங் குடமூக்குங் கோகரணங்கோலக்காவும்
பழிநீர்மை யில்லாப் பனங்காட் டூரும் பனையூர் பயற்றூர் பராய்த்துறையும்
கழுநீர் மதுவிரியுங் காளிங்கமுங் கணபதீச் சரத்தார்தங் காப்புக்களே

(திருநாவுக்கரசர், தேவா: 402: 5)

7. தனித்திருத்தாண்டகம்

அப்பன்நீ அம்மைநீ ஐயனும் நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ ஒருகுலமுஞ் சுற்றமும் ஒரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய்நீ துணையாய் என்நெஞ்சந் துறப்பிப்பாய் நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும் நீ இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே

(திருநாவுக்கரசர், தேவா: 525: 1)

8. நின்ற திருத்தாண்டகம்

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியுங் காற்றுமாகி,
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமாயட்ட மூர்த்தி ஆகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும் பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகித்
நெருநலையாய் இன்றாகி நாளையாகி நிமிர்புண் சடையடிகள் நின்றவாறே

(திருநாவுக்கரசர், தேவா: 523: 1)

9. திருவடித் திருத்தாண்டகம்

அணியனவுஞ் சேயனவும் அல்லாவடி அடியார்கட் காரமுத மாயவடி
பணிபவர்க்குப் பாங்காக வல்லவடி பற்றற்றார் பற்றும்பவள வடி
மணியடி பொன்னடி மாண்பாமடி மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லவடி
தணிபாடு தண்கெடில நாடன்னடி
தகைசார் வீரட்டத் தலைவன்னடி

(திருநாவுக்கரசர், தேவா: 401: 9)

10. போற்றித் திருத்தாண்டகம்

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி பாவிப்பார் பாவமறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ் சொல் லானாய் போற்றி என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

(திருநாவுக்கரசர், தேவா: 466: 7)

11. மறுமாற்றத் திருத்தாண்டகம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்திலடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ
மல்லோம் இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன்நற் சங்கவெண்குழையோர் காதிற்
சோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்கொய்ம்
மலர்ச்சே வடியினையே குறுகினோமே

(திருநாவுக்கரசர், தேவா: 532: 1)

12. வினாவிடைத் திருத்தாண்டகம்

பண்ணார்ந்த வீணை பயின்ற துண்டோ
பாரிடங்கள் பலசூழப் போந்த துண்டோ
உண்ணா வருநஞ்ச முண்ட துண்டோ
ஊழித்தீயின்ன ஒளிதா னுண்டோ
கண்ணார் கழல்காலற் செற்ற துண்டோ
காமனையுங் கண்ணழலாற் காய்ந்த துண்டோ
எண்ணார் திரிபுரங்க ளெய்ததுண்டோ
எவ்வகையெம் பிரானாரைக் கண்ட வாறே

(திருநாவுக்கரசர், தேவா: 531: 4)

13. திருத்தலக் கோவைத் திருத்தாண்டகம்

தில்லைச்சிற் றம்பலமுஞ் செம்பொன் பள்ளி
தேவன்குடி சிராப்பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளிகோவல்
வீரட்டங் கோகணங் கோடி காவும்
முல்லைப் புறவம் முருகன் பூண்டி முளையூர்
பாழையாறை சத்தி முற்றங்
கல்லில் திகழ்சீரார் காளத்தியுங் கயிலாய
நாதனையே காணலாமே.

தேவாரத்தில் பாடப்பெற்ற திருத்தலங்களைக் குறிக்கும் பாடல்

(திருநாவுக்கரசர், தேவா: 517: 1)

தாண்டமண்டலம் *tāṇḍa-maṇḍalam,* பெ. (n.) கடல்; sea.

"தாண்ட மண்டலம் ஏலேலோ
தவிட்டு மண்டலம் ஏலேலோ"

(நாட்டார் பாடல்)

[தாண்டம் + மண்டலம்]

தாண்டல் *tāṇḍal,* பெ. (n.) உயிர்போகும் தறுவாயிலிருந்து விடுபடுகை; passion over a critical period.

[தாண்டு → தாண்டல்]

தாண்டவத்தாள் *tāṇḍa-vattāḷ,* பெ. (n.) ஏமமணல்; gold mixed with sand-Gold ore.

தாண்டவதாலிகன் *tāṇḍava-tāligaṉ,* பெ. (n.) நந்திதேவன்; the God Nandi.

தாண்டவபிரியன் *tāṇḍava-piriyaṉ,* பெ. (n.) சிவன்; the God Šivaṉ.

[தாண்டவம் + பிரியன். அனைத்து (ஆன்மா) ஆதனிடத்தும், பேரன்பு பூண்டு திருநட்டம் பயில்பவன்]

தாண்டவம்[1] *tāṇḍavam,* பெ. (n.) 1. தாவுகை (பிங்.); leaping, jumping. 2. செலுத்துகை (பிங்.); driving.

[தாண்டு → தாண்டவம்.]

தாண்டவம்[2] *tāṇḍavam,* பெ. (n.) கூத்துவகை (திவா.); a kind of dance.

ம. தாண்டவம்

த. தாண்டவம் → Skt. tāṇḍava

[தாண்டு → தாண்டவம்.]

தாண்டவமாடு-தல் *tāṇḍavam-āḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. தலைவிரித்தாடுதல்; to show up, be rampant. 'நாட்டில் பஞ்சம் தாண்டவமாடும்போது, இப்படிப்பட்ட ஆடம்பர விழாக்கள் அவசியம் தானா?' (இக்வ.) 2. பெருமளவில் வெளிப்படுதல்; be seen in excess. 'செய்தியைக் கேட்டவுடன் அவன் முகத்தில் உற்சாகம் தாண்டவமாடியது' (இக்வ.).

[தாண்டவம் + ஆடு-.]

தாண்டவமாலை *tāṇḍava-mālai,* பெ. (n.) 19ஆம் நூற்றாண்டில் அப்பாவையன் எழுதிய சிற்றிலக்கியம்; a literature written by Appāvaiyaṉ in 19th century.

[தாண்டவம் + மாலை]

தாண்டவமூர்த்தி *tāṇḍava-mūrtti,* பெ. (n.) (தாண்டவமாடும் மூர்த்தி) நடராசர்; Naṭarājar, as Šivam in his dancing attitude.

[தாண்டவம் + மூர்த்தி. திருநட்டம் பயிலும் ஆடவல்லான். ஆடவல்லானின் திருநட்டம், இவ்வுலகம் தோன்றிய காலந்தொட்டு, ஒவ்வொரு ஆதனின்,

(உள்ளத்தே நிகழ்வது. இத் திருநட்டம் ஆதன் (ஆன்மா) உய்வடைதற்பொருட்டே இறைவனால் நிகழ்த்தப் பெறுவதாகும்]

தாண்டவராயசுவாமிகள் *tāṇḍavarāya-śuvāmigaḷ*, பெ. (n.) வேதாந்த நூலான கைவல்லிய நவநீத மியற்றிய ஆசிரியர்; author of Kaivalliya-navanīdam, a treatise on Vēdāntam.

தாண்டவராயர் *tāṇḍava-rāyar*, பெ. (n.) புலவர்; poet.

திருமயிலைக் கோவைப் பாடியவர்.

தாண்டவராயன் *tāṇḍava-rāyaṉ*, பெ. (n.) தாண்டவப்பிரியன் பார்க்க; see *tāṇḍava-p-piriyaṉ*.

[தாண்டவம் + அரையன் → ராயன்]

தாண்டவன் *tāṇḍavaṉ*, பெ. (n.) தாண்டவ மூர்த்தி (சங்.அக.) பார்க்க; see *tāṇḍava-mūrtti*.

மறுவ. ஆடவல்லான்

[தாண்டு → தாண்டவன்]

தாண்டவன்குளம் *tāṇḍavaṉ-kuḷam*, பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில் பொறையாறு வட்டத்திலுள்ள ஊர்; a village in Poṟaiyāṟu taluk in Tañjāvūr district.

தாண்டவவளிநோய் *tāṇḍava-vaḷi-nōy*, பெ. (n.) ஓர் வகை நடுக்குக் காற்றுப்பிடிப்பு; chores-stvitus dance (சா.அக.).

[தாண்டவம் + வளிநோய்]

தாண்டா[1] *tāṇḍā*, பெ. (n.) மகளிர் தலைப் பின்னலில் அணியும் மாலை (இ.வ.); a flower garland worn on braided hair by woman.

மரா. தாண்டா.

தாண்டா[2] *tāṇḍā*, பெ. (n.) சிற்றேலம்; small cardamom (சா.அக.).

தாண்டி *tāṇḍi*, பெ. (n.) 1. ஆடற்கலை நூல் (யாழ்.அக.); treatise on dancing. 2. குடும்பக் கட்டிலிருந்து விலகியவன்; one who has overcome the wordly temptations.

[தாண்டு → தாண்டி.]

தாண்டிக்கரையேறு-தல் *tāṇḍi-k-karai-y-ēṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) துன்பத்திலிருந்து வெளி வருதல்; to overcome difficulties. பற்று விட்டவரே உலகவாழ்க்கைக் கடலைத் தாண்டிக் கரையேறுவர் (உ.வ.).

[தாண்டி + கரை + ஏறு-.]

தாண்டிமண்டலம்போடு-தல் *tāṇḍi-maṇḍalam-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) சினத்தோடு மேற்பாய்தல் (யாழ்ப்.); to spring or run at a person in rage, as a ferocious animal.

[தாண்டு + மண்டலம் + போடு-.]

தாண்டு[1]**-தல்** *tāṇḍu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. குதித்தாடுதல் (பிங்.); to dance, skip, jump. 2. செருக்கடைதல் (இ.வ.); to be arrogant. 3. மிதமிஞ்சிப் பேசுதல் (இ.வ.); to transgress limits in talking.

க. தாண்டு; ம. தாண்டுக.

[தாவு → தாண்டு. தாண்டுதல் = ஓரிடத் தினின்று மற்றோரிடத்திற்கு, கடந்து செல்லுதல்.]

தாண்டு[2]**-தல்** *tāṇḍu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கடத்தல் (பிங்.); to leap across, jump over, cross, step over. தாய் எட்டடி தாண்டினால் குட்டி பதினாறடி தாண்டும் (பழ.). 2. செலுத்துதல் (பிங்.); to drive. 3. மேற்படுதல்; to surpass, outdo, excel. 'தேர்வில் எல்லாரையும் தாண்டிவிட்டான்' (உ.வ.).

ம. தாண்டுக; க. தாடு, தாண்டு, தாண்டு; தெ. தாடு; து. தாண்டுனி; கொலா. தாட்; கோத. தாட்; துட. தோட்; பட. தாண்டு.

[தூண்டு → தாண்டு-.]

தாண்டு[3]**-தல்** *tāṇḍu-*, 5 செ.குன்றாவி. (v.t.) இக்கட்டிலிருந்து காத்தல்; to pass over a critical period (சா.அக.).

[தூண்டு → தாண்டு-.]

தாண்டு[4] *tāṇḍu-*, பெ. (n.) நடனக்கலை; dancing.

[தாவு → தாண்டு]

தாண்டு[5] *tāṇḍu-*, பெ. (n.) 1. குதி; leap, jump. 'ஒரு தாண்டுத் தாண்டினான்' (உ.வ.). 2. வெற்றி (யாழ்.அக.); victory, success. 3. அகங்கரிப்பு;

airs, self-conceit. 'வெகுதாண்டுத் தாண்டுகிறான்' (உ.வ.). 4. சுற்றிப்போட்ட பின், வீதியில் எறியப்பட்ட மிளகாய் முதலியவற்றைத் தாண்டுதலால், உண்டாவதாகக் கருதப்படும் கால்நோய் வகை (இ.வ.); a disease characterised by abnormal swelling in the legs, supposed to be caused by treading or crossing over the chillies, etc. waved round persons to avert the effects of evil eye and thrown in the streets.

[தூண்டு → தாண்டு.]

தாண்டுகாலி *tāṇḍu-kāli,* பெ. (n.) கண்டபடி திரிபவ-ன்-ள்; immoral person, as straying from virtue. "தவவினை தனைவிடு தாண்டு காலியை" (திருப்பு. 772).

[தாண்டு + காலி]

தாண்டுகாற்போடு-தல் *tāṇḍu-kār-pōḍu-,* 20 செ.குவி. (v.i.) 1. ஒரு வேலையுஞ் செய்யாமல் திரிதல்; to loaf about without doing any work. 2. ஆற்றலுக்கு மிஞ்சிய வேலையை மேற் கொள்ளுதல்; to undertake a work beyond one's capacity. 3. நூலில் இங்கொரு பக்கம் அங்கொரு பக்கமாகப் படித்தல்; to skip through a book.

[தாண்டு + கால் + போடு-.]

தாண்டுகோல் *tāṇḍu-kōl,* பெ. (n.) கிட்டிப் புள்ளில் அடிக்குங்கோல் (சென்னை); the stick used for striking in the game of tipcat.

[தாண்டு + கோல்]

தாண்டுவெட்டி *tāṇḍu-veṭṭi,* பெ. (n.) ஆடு மாடுகள் புகாதபடி வழியில் நடப்பட்ட கவைக்கால் (இ.வ.); forked post, used as a stile.

[தாண்டு + வெட்டி]



தாண்முதல் *tāṇ-mudal,* பெ. (n.). தாளடி; base of the foot. "தாண்முதலே நங்கட்குச் சார்வு" (திவ். இயற். 3: 99).

[தாள் + முதல்]

தாண்முளை *tāṇ-muḷai,* பெ. (n.) மகன்; son. "கோமான் றாண்முளை" (சூளா. மந்திர: 91).

மறுவ. கான்முளை

[தாள் + முளை]

தாணக்காய் *tāṇa-k-kāy,* பெ. (n.) நெல்லிப் பருப்பு; seed of indian gooseberry (சா.அக.).

தாணச்சி *tāṇacci,* பெ. (n.) எவட்சாரம்; nitrate of potash (சா.அக.).

தாணா *tāṇā,* பெ. (n.) 1. குதிரைக்குக் கொடுக்கும் அவித்த கொள்ளு; boiled gram for feeding a horse. 2. சிற்றுணவு (C.G.); light refreshment.

[தரு → தா → தாண் → தாணா.]

தாணி[1]-த்தல் *taṇi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. பதித்தல்; to fasten, affix, enchase, as gem. "அரக்கும் உட்படத் தாணித்த சிவப்புச் சிலையும்" (S.I.I.ii, 206). 2. மண் முதலியவற்றைக் கெட்டிப்படுத்துல் (வின்.); to ram down, make firm, as earth round a tree; to hammer down. 3. துப்பாக்கி கெட்டித்தல் (வின்.); to load, as a gun. 4. உறுதிப்படுத்துதல் (யாழ்.அக.); to confirm, strengthen. 5. விரைவிற் கடைதல் (வின்.); to ply hard, as in churning.

[தாள் → தாண் → தாணி-.]

தாணி[1]-த்தல் *taṇi-,* 4 செ.கு.வி. (v.t.) 1. திறமையாய் பொய்குற்றமேற்றுதல் (வின்.); to impute crime falsely and skilfully. 2. இழையோட்டுதல் (நெல்லை.); to baste, tack.

[தாள் → தாண் → தாணி-.]

தாணி[2] *taṇi,* பெ. (n.) 1. தான்றி (பதார்த்த. 978); belleric myrobalan. 2. பூண்டுவகை (பதார்த்த. 279); klotzsch's croton klotzschianus.

ம. தாணி, தான்னி; க. தானி; தெ. தாண்ட்ர; து. தாண்டி

[தான்றி → தாணி]

தாணிக்காய் *tāṇikkāy,* பெ. (n.) தாணி[2]-1 பார்க்க; see *tāṇi-1* (சா.அக.).

[தான்றி → தாணி + காய்]

தாணிகசன்னி *tāṇiga-śaṉṉi,* பெ. (n.) புணர்ச்சியினால் உண்டாகும் ஒரு வகை இசிவு; apoplexy arising from sexual intercourse (சா.அக.).

[தாணிகம் + சன்னி]

தாணிகம் *tāṇigam,* பெ. (n.) பெண்குறி; female genital (சா.அக.).

தாணிப்பூண்டு *tāṇi-p-pūṇḍu,* பெ. (n.) ஒரு வகை மருந்துச் செடி; a kind of medicinal plant.

[தாணி + பூண்டு]

இதனை அரைத்து வதக்கி புற்றுநோயின் புண்ணில் கட்டினால், நோய் வேகமாக நோய் குணமாகும் என்று சா.அக. கூறும்.

தாணு *tāṇu,* பெ. (n.) 1. நிலைபேறு (சூடா.); firmness, stability. 2. செடிகொடிகள்; category of the immoveables. "தாணுவோ டூர்வவெல்லாம்" (கம்பரா. மிதி: 117). 3. மலை (பிங்.); mountain. 4. தூண் (பிங்.); pillar. "உயர்ந்தோர்க்குத் தாணுமன்" (பு.வெ.4:20). 5. குற்றி; post. "தருமநீ டுருவத் தாணு தாணுவே யெனவிருந்தான்" (திருவாலவா. 28:43). 6. சிவன் (பிங்.); Śivaṉ. 7. பற்றுக்கோடு; prop, support. 8. செவ்வழி யாழ்த்திற வகை (பிங்.); a secondary melody type of the *cevvaḻi* class (musi.).

[தூண் → தாண் + உ → தாணு – 'உ'கரம் சாரியை. எஞ்ஞான்றும் நிலைத்திருப்பது. ஒருகா. தன் → தார் → தாண் + உ. நிலைபேற்றினைத் தருவது. உறுதியானது. மாறாத் தன்மையது. ஆதன் உய்யும் பொருட்டு, பேராவியற்கைப் பெரு வாழ்வைத் தரும் இறைவன், தாணு எனப்பட்டான்]

தாணுபரி *tāṇupari,* பெ. (n.) அமுக்கிரா; wintercherry (சா.அக.).

தாணையக்காரன் *tāṇaiya-k-kāraṉ,* பெ. (n.) மன்னரின் மாவட்டப் பகராள்; bailiff's man.

மறுவ. தாணயச்சேவகன்

[தாணையம் + காரன்.]

தாணையம் *tāṇaiyam,* பெ. (n.) 1. கோட்டைக் குள்ளிருக்கும் சேனை; garrison. 2. பாளையம்; military camp. 3. மந்தை (இ.வ.); flock, herd.

[தாணை + அம் → தாணையம். தாணை = குழுமுகை, திரளுகை. குழுமியுள்ள படை. 'அம்' – சொல்லாக்க ஈறு]

தாணையம்போடு-தல் *tāṇaiyam-pōḍu-,* 20 செ.குவி. (v.t.) 1. பாளையமிறங்குதல்; to camp. 2. உறவினர் பலர், ஒரு வீட்டில் பல நாட் கூடியிருத்தல்; to tarry, overstay, as guests in one's house. 3. தாளமிட்டு பாடுதல்; to sing with the music.

[தாணை + அம் + போடு-. தாணை = குழுமுகை, கூட்டமாய்ச் சேருகை. தாணையம் போடுதல் = ஒன்றுசேர்தல். ஓரிடத்தில் திரளுதல்]

தாத்தா *tātta,* பெ. (n.) 1. தந்தையின் தந்தையாகிய பாட்டன்; grand-father. 2. வயது முதிர்ந்தவன்; aged man.

தெ. க. தாத்த; வ. தாத்த.

[தா + தா= தாத்தா → தந்தையைத் தந்தவன்]

தாத்தாரி *tāttāri,* பெ. (n.) நெல்லி (மலை.); emblic myrobalan.

[தாத்திரி → தாத்தாரி]

தாத்தி *tātti,* பெ. (n.) ஆத்தி மரவகை (மூ.அ.); common mountain ebony.

[தாதகி → தாத்தி.]

தாத்திரகம் *tāttiragam,* பெ. (n.) சுக்கு; dry ginger (சா.அக.).

தாத்திரம் *tāttiram,* பெ. (n.) 1. கோடரி (சது.); axe. 2. கூன்வாள் (யாழ்.அக.); bill-hook.

தாத்திரி[1] *tāttiri,* பெ. (n.) 1. தாய் (யாழ்.அக.); mother. 2. நிலம் (பிங்.); earth. 3. நெல்லி (தைலவ. தைல); emblic myrobalan.

தாத்திரி[2] *tāttiri,* பெ. (n.) 1. ஆடுதின்னாப் பாலை (மலை.); worm-killer. 2. நெல்லி வற்றல்; dried goose-berry. 3. ஆயாள்; nurse. 4. மருத்துவச்சி; midwife (சா.அக.).

[தாதரி → தாத்திரி]

தாத்திரிபத்திரம் *tāttiri-pattiram,* பெ. (n.) தாளிசஇலை; leaf of east indian plum.

தாத்திரிபலம் *tāttiri-palam,* பெ. (n.) நெல்லிக்கனி; gooseberry (சா.அக.).

[தாத்திரி + பலம்]

தாத்திரிபலை *tāttiri-palai,* பெ. (n.) தாத்திரி பலம் பார்க்க; see *tāttiri-palam* (சா.அக.).

[தாத்திரி + பலம் → பலை]

தாத்திரிபுட்பிகம் *tāttiri-puṭpigam,* பெ. (n.) தாதுபுட்பிகம் பார்க்க; see *tādu-puṭpigam* (சா.அக.).

[தாத்திரி + Skt. புட்பி + இகம்]

தாத்திரியம் *tāttiriyam,* பெ. (n.) **வறுமை** (யாழ்ப்.); poverty.

[தாத்திரி → தாத்திரியம்]

தாத்திருவாதம் *tāttiru-vādam,* பெ. (n.) *1.* **ஏய்ப்பு;** cheating, fraud, trick. *2.* **பொய்;** lie (செ.அக.).

தாத்து[1]-தல் *tāttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* **கொழித்தல்** (யாழ்ப்.); to winnow. *2.* **இழிந்ததை உயர்ந்ததற்கு மாற்றுதல்;** to shift off bad articles for good. 'அவன் தாத்திப் போட்டான்' (யாழ்ப்.). *3.* **செலவழித்தல்** (தஞ்சை.); to spend. *4.* **ஒளித்து வைத்தல்** (யாழ்ப்.); to conceal, as stolen bullocks.

[தாற்று → தாத்து-.]

தாத்துவன் *tāttuvaṉ,* பெ. (n.) **தாதா[2]** (யாழ்.அக.) பார்க்க; see *tātā[2]*.

தாத்துவாசம் *tāttuvāšam,* பெ. (n.) **மிளகு** (மலை.); pepper.

[தாத்து + வாசம்]

தாத்துவிகம் *tāttuvigam,* பெ. (n.) **தத்துவம் தொடர்புடையது;** that which is connected with tattuvam. "தாத்துவிக சகல" (சி.சி. 1.30, ஞானப்.)

[தத்துவிகம் → தாத்துவிகம்]

தாதக்கூத்து *tāta-k-kūttu,* பெ. (n.) **தாதர்கள் ஆடும் ஆடல்;** dancing by tāšari men (செ.அக.).

[தாதர் + கூத்து]

தாதகமஞ்சள் *tādaga-mañjaḷ,* பெ. (n.) **மஞ்சட்கல்;** a yellow stone.

தாதகி *tādagi,* பெ. (n.) *1.* **ஆத்தி;** common mountain ebony. "தாதகிப்பூவுங் கட்டியு மிட்டு" (மணிமே. 27: 264). *2.* **தாது புட்பிகம்;** downy grislea-wood fordia flori bunda. *3.* **பேய்க் கொம்மட்டி;** bitter apple (சா.அக.).

[தா + து → தாது]

தாதச்சி *tādacci,* பெ. (n.) **தவப்பெண்** (யாழ்.அக.); a female ascetic.

[தாதன் → தாதச்சி]

தாதட்பனை *tādaṭpaṉai,* பெ. (n.) **தாதப்பனை** பார்க்க; see *tāda-p-paṉai* (சா.அக.).

மறுவ. சவ்வரிசிமரம், காமமரம்

தாதணிவளையம் *tādaṇi-vaḷaiyam,* பெ. (n.) **விரலணிவகை;** a kind of finger-ring. "தலை விரற் சுற்றுந் தாதணிவளையம்" (பெருங். இலாவாண. 19:180).

[தாது + அணி + வளையம்.]

தாதப்பனை *tāda-p-paṉai,* பெ. (n.) **காம மரம்;** common Indian fern palm.

ம. துடப்பந

[தாது + பனை]

தாதநம் *tādanam,* பெ. (n.) **கரிக்குருவி;** king crow (சா.அக.).

தாதம்[1] *tādam,* பெ. (n.) **சாதிலிங்கம்;** vermilion (சா.அக.).

தாதம்[2] *tādam,* பெ. (n.) *1.* **கொடை** (யாழ்.அக.); gift. *2.* **அசைபவை;** movable things.

தாதரி *tādari,* பெ. (n.) **ஆடுதின்னாப் பாலை** (சங்.அக.); worm-killer plant.

[தாத்திரி → தாதரி]

தாதலம் *tādalam,* பெ. (n.) **நோய்;** disease (சா.அக.).

தாதவைபத்திரம் *tādavai-pattiram,* பெ. (n.) **உலர்ந்த பேரீச்சம்பழம்;** dried date fruit (சா.அக.).

[தாதவை + பத்திரம்]

தாதற்ற *tādaṟṟa,* பெ. அ. (adj.) **ஆண்மையில்லாத;** without potent power (சா.அக.).

[தாது + அற்ற]

தாதன்[1] *tādaṉ,* பெ. (n.) *1.* **அடியவன்** (பிங்.); slave, devotee. *2.* **தாசரி;** Vaiṣṇava religious mendicant of other than Brahmins (செ.அக.).

[தாயம் → தாசன் → தாதன். தாதன் = வழிவழியாகத் தொண்டு செய்பவன். உரிமையுடையவன், மண்ணின் மைந்தன், ஊழியம் புரிவதற்கென்று முதலாளிகளால் தொன்றுதொட்டு தாழ்த்தி வைக்கப் பட்டவன்]

தாதன்[2] *tādaṉ,* பெ. (n.) தாதா[2] *(யாழ்.அக.)* பார்க்க; see *tādā.*

[தா + தன் → தாதன்]

தாதனம் *tādaṉam,* பெ. (n.) தாதானம்[2] பார்க்க; see *tātāṉam*[2] *(சா.அக.).*

தாதா[1] *tādā,* பெ. (n.) *1.* தந்தை; father. *"தாதாவெனிற் கல்விதானகலும்" (தனிப்பா, 2, 283, 677). 2.* தாத்தா; grandfather. *3.* பெரியோன் *(மாறனலங். 140:541);* great man.

[தா + தா → தாதா]

தாதா[2] *tādā,* பெ. (n.) கொடையாளன்; liberal donor. *"ஞானதாதாவு நீ" (தாயு. சச்சிதா. 10).*

[தா + தா – கொடையாளன். தம்மிடமுள்ள பொருளைத் தருபவன். "தாதா" என்பது தருதற் கருத்தினின்று முகிழ்த்த சொல்லாகும். தற்பொழுது, வன்முறையிற் பொருளீட்டி சிறிதே தானம் தரும் கொடையாளரையுங் குறித்து வழங்குவ தறிக]

தாதா[3] *tādā,* பெ. (n.). நான்முகன் *(பிங்.);* Brahman.

தாதானம்[1] *tādāṉam,* பெ. (n.) மருக்காரை; common emetic nut *(சா.அக.).*

தாதானம்[2] *tādāṉam,* பெ. (n.) கரிக்குருவி *(சங்.அக.);* king crow.



தாதி[1] *tādi,* பெ. (n.) *1.* வேலைக்காரி *(பிங்.);* maid-servant. *2.* விலைமகள்; harlot. *"சௌரேச்சரத் தாதியை நயப்பான்" (உபதேசகா. சிவத்துரோ. 200).* "தாதி தூதோ தீது" *(காளமேகம் பாட்டு). 3.* தாழி நாண்மீன் *(பரணி);* Baraṇi star.

[தா + த் + இ → தாதி. இகரம் பெண்பால் விகுதி. முதலாளிக்குக் கேட்கும் பொருளைத் தருபவள் தாதி. விலைமகள் துய்ப்பவருக்கு இன்பந் தருபவள்]

தாதி[2] *tādi,* பெ. (n.) *1.* வெங்காயம்; onion. *2.* செவிலித்தாய் *(பிங்.);* foster-mother, nurse.

Pkt. dhādi.

தாதிகடை *tādi-kaḍai,* பெ. (n.) அவல்; flaked rice *(சா.அக.).*

[தாதி + கடை]

தாதிகனம் *tādi-kaṉam,* பெ. (n.) *1.* கட்டித் தயிர்; thickened curd. *2.* உறைந்த பால்; coagulated milk. *3.* கருப்பூரத்தைலம்; turpentine. *4.* குங்குலிய மரத்தின் பால்; resin of Indian dammer tree *(சா.அக.).*

[தாதி + கனம்]

தாதிசாரக்கனி *tādi-šāra-k-kaṉi,* பெ. (n.) சிறுகீரை; gig's greens *(சா.அக.).*

[தாதிசாரம் + கனி]

தாதிமுகம் *tādi-mugam,* பெ. (n.) ஓர் பாம்பு; a kind of snake *(சா.அக.).*

[தாதி + முகம்]

தாதிரி[1] *tādiri,* பெ. (n.) கொடையாளி *(யாழ்.அக.);* donor.

[தள் → தார் → தா → தாதி → தாதிரி. தாதிரி = தருதற்கருத்துச் சொல். 'தா' என்னும் வேரடியினின்று கிளைத்தது. தம்மிடம் உள்ள பொருளை வறியவர்களுக்கு வாரி வழங்கும் கொடைஞன்]

தாதிரி[2] *tādiri,* பெ. (n.) விற்பாட்டிற் போட்டியிட்டுப்பாடுகை *(நாஞ்.);* singing contest in *viṟpāṭṭu.*

[தரு → தா → தாதிரி. இசையினைத் தருபவன்]

தாதிற்றூள் *tādiṟṟūḷ,* பெ. (n.) மகரந்தப் பொடி *(சூடா.);* pollen.

[தாதின்தூள் → தாதிற்றூள்]

தாதின்றூள் *tādiṉ-ṟūḷ,* பெ. (n.) தாதிற்றூள் பார்க்க; see *tādiṟṟūḷ.*

தாது[1] *tādu,* பெ. (n.) 1. கனிமங்களாகிய இயற்கைப் பொருள்; mineral, fossil; any natural product from a mine. 2. பொன் முதலிய மாழைகள் (உலோகங்கள்) (பிங்.); metals. 3. காவிக்கல் (சூடா.); red ochre. 4. பூதம் (சூடா.) பார்க்க; see *pūdam;* the five elements of nature. 5. ஊதபித்த சிலேட்டுமங்கள்; the three humours of the body, viz., *vādam, pittam, šilēṭṭumam.* 6. நாடி; pulse. "பிணிகளைத் தாதுக்களா லறியலாம்" (குமரே. சத: 38). 7. வெண்ணீர் (பிங்.); seman, sperm. "சுரத தாது வீழ்ந்த துரோண கும்பந் தன்னில்" (பாரத. வாரணா: 32). 8. நீறு (மதுரைக். 399: உரை); powder, dust. 9. பூந்தாது; pollen. "தாதுண் வண்டினம்" (மணிமே. 4: 20). 10. பூவினிதழ் (பிங்.); petal of flowers. 11. மலர்; blossom. "கள்வாய தாதொடு வண்டிமிரும்" (பு.வெ.12, இருபாற். 3). 12. தேன்; honey. "தாதுசேர் கழுநீர்" (சிலப். 13, 119). 13. வினைப்பகுதி; (gram) verbal root. "தாதின்வழு" (அஷ்டப். திருவேங்கடத்தந். காப்பு). 14. ஆண்டு அறுபதனுள் பத்தாவது; the 10th year of the jupiter cycle. 15. மெலிவு; thin.

[தா + து → தாது. நிலம் தன்னடியிலிருந்து பொருள்களைத் தருவதை அடிப் படையாகக் குறித்தலால், இச் சொல்லும் தருதல் கருத்தின் பாற்பட்டதென்றறிக. கேட்டதும், கொண்டுவந்து, பொருள்தரும் ஏவலரையும், குறித்து வழங்கியது]

தாது[2] *tādu,* பெ. (n.) அடிமை; slavery, servitude. "வாணியத் தாதற்குத் தாதானதுந் தொண்டை மண்டலமே" (தொண்டை. சத.45).

தாது[3] *tādu,* பெ. (n.) நாதுமாதுளை (மூ.அ.) பார்க்க; see *tādu-māṭuḷai.*

தாது[4] *tādu,* பெ. (n.) கேள்வி; hearing. 'இங்கே தாதுமில்லை பிராதுமில்லை' (சென்னை).

தாது[5] *tādu,* பெ. (n.) 1. நரம்பு; nerve, artery and vein. 2. பிறவி செய்நஞ்சு; native arsenic as distinguished from prepared arsenic. 3. மூலம்; root or fundamental principle. 4. சேர்க்கைக் கூறு; constituent part. 5. மூலப்பொருள்; elementary or primitive matter. 6. அறிவியல் தாது; scientific element (சா. அக.).

[தரு → தா + து.]

தாதுக்கினம் *tādu-k-kiṉam,* பெ. (n.) புளித்தக் கஞ்சி; sour gruel (சா.அக.).

[தாது + இனம் → தாதுக்கினம்]

தாதுக்குறைவு *tādu-k-kuṟaivu,* பெ. (n.) 1. தாதுச் சத்துக்குறைவு; scantinees of seminal secretion - coligospermia. 2. ஆண்மையின்மை; loss of vital power. 3. விந்தூற லின்மை; absence of semen (சா. அக.).

[தாது + குறைவு]

தாதுகட்டு *tādu-kaṭṭu,* பெ. (n.) பேய்ப் பீர்க்கு; wild bitter gourd (சா.அக.).

தாதுகட்டு-தல் *tādu-kaṭṭu-,* 5 செ.குவி. (v.i.) 1. வெண்ணீரடக்குதல்; to control and prevent seminal discharge. 2. வெண்ணீர் (விந்து) கட்டியாதல்; to thick of semen.

[தாது + கட்டு-.]

தாதுகதம் *tādu-kadam,* பெ. (n.) தாதுகதசுரம்; constitutional fever or fever which is influenced or connected with the dhatus of the body or fever due to the vitiation on any one of the dhatus of the body (சா. அக.).

தாதுகந்தம் *tādu-gandam,* பெ. (n.) கந்தகம் (சங். அக.); sulphur .

தாதுகம் *tādugam,* பெ. (n.) மஞ்சட்கடம்பு; yellow cadambam.

தாதுகலித்தல் *tādu-kalittal,* பெ. (n.) தாதுகலிதம் பார்க்க; see *tādu-kalidam.*

தாதுகலிதம் *tādu-galidam,* பெ. (n.) வெண்ணீரிழப்பு (யாழ்.அக.); involuntary seminal discharge.

[தாது + கலிதம்]

தாதுகளையோன் *tādu-kaḷaiyōṉ,* பெ. (n.) வெள்ளைக் கல்; one of the gems-Topaz (சா. அக.).

தாதுகன் *tādugaṉ,* பெ. (n.) மாழைகளை அழிப்பவன்; that which destroys metals as sulphur (சா. அக.).

தாதுகாசீசம் *tādu-gācīšam,* பெ. (n.) 1. இரும்புத் துரு; red sulphate of iron. 2. அன்ன பேதி; green vitriol (சா.அக.).

[தாது + காசீசம்]

தாதுகி *tādugi,* பெ. (n.) செங்கல்; brick (சா. அக.).

தாதுகெடு-தல் *tādu-keḍu-,* 18 செகுன்றாவி. (v.t.) வெண்ணீர் (விந்து வீணாதல்); to loss of semen.

[தாது + கெடு-.]

காணடா விந்துகெட்டால் மனுச னல்ல காரிகையார் தங்களுக்குப் புருசனல்ல வீணடா தேகமோ கெட்டுப் போச்சு வெறும் வாயை மெல்லாதே மின்னா ராசை பூணடா வென்றாலும் பூணப் போமோ புத்தியினால் மூன்று வகைத் தீயைப் போக்கு (அகசூ.).

தாதுகெந்தம் *tādu-kendam,* பெ. (n.) கெந்தகமண்; sulphur ore (சா.அக.).

தாதுகோதனம் *tādu-kōdaṉam,* பெ. (n.) ஈயம்; lead (சா.அக.).

[தாது + கோதனம்]

தாதுச்சயம் *tādu-c-cayam,* பெ. (n.) *1.* எலும்புருக்கி; consumption. *2.* முக்குற்றச் சிதைவு (திரிதோஷவீனம்); waste of the humours (சா.அக.).

[தாது + சயம்]

தாதுச்சயகாசம் *tādu-c-cayakāšam,* பெ. (n.). எலும்பரிப்புடன் கூடிய இருமல்; consumptive cough (சா.அக.).

[தாது + சாயம்]

தாதுசம்பவம் *tādu-šambavam,* பெ. (n.) தாதுசோதனம் பார்க்க; see *tādu-šōdaṉam* (சா.அக.).

[தாது + சம்பவம்]

தாதுசாமியம் *tādu-šāmiyam,* பெ. (n.) முக்குற்றச் சமநிலை; equalibrium of the three humours- wind, bile and phlegm - if the body as they should be in the proportion of 4:2:l (சா.அக.).

[தாது + சாமியம்]

தாதுசாரம் *tādu-šāram,* பெ. (n.). மாழைச் சத்து; quintessence of a mineral (சா.அக.).

[தாது + சாரம்]

தாதுசீவநீர் *tādu-šīvanīr,* பெ. (n.) தேன், நெய், வெண்காரம் மூன்றையும் சம அளவு அரைத்த கலவை; a paste made of honey, ghee and borax in equal parts (சா.அக.).

[தாது + சீவநீர்]

இது பற்பங்களை ஆய்வு செய்யப் பயன்படும்.

தாதுசூசலன் *tādu-šūšalaṉ,* பெ. (n.) மாழையின் குணநலன்கள் அறிந்தவன்; தேர்ந்தவன்; one skilled in metals - Metallurgists (சா.அக.).

[தாது + சூசலன்]

தாதுசூரணம் *tādu-šūraṇam,* பெ. (n.) மாழைப் பொடி; mineral powder (சா.அக.).

[தாது + சூரணம்]

தாதுசேகரம்[1] *tādu-sēgaram,* பெ. (n.) துரிசு (யாழ். அக.); blue vitriol.

[தாது + சேகரம்]

தாதுசேகரம்[2] *tādu-sēgaram,* பெ. (n.) அன்னக் கழிசல்; green vitriol, chief a minerals (சா. அக.).

[தாது + சேகரம்]

தாதுடைவு *tāduḍaivu,* பெ. (n.) *1.* வெண்ணீர் (விந்து) இழப்பு (இ.வ.); involuntary seminal discharge. *2.* வெண்ணீர் நீர்த்துப்போகை (இ.வ.); wateriness of semen.

தாதுத்தழைப்பு *tādu-t-taḻaippu,* பெ. (n.) வெண்ணீராக்கம் (விந்தாக்கம்); increased secretion of semen (சா. அக.).

[தாது + தழைப்பு]

தாதுத்திராவகம் *tādu-t-tirāvagam,* பெ. (n.) மாழைகளைக் கரைக்கும் மருந்து நீர்; acid dissolving metals (சா. அக.).

[தாது + Skt. திராவகம்]

தாதுநட்டம் *tādu-naṭṭam,* பெ. (n.) வெண்ணீர்ச் (விந்து) சிதைவு (வின்.); involuntary seminal discharge.

[தாது + நட்டம்]

தாதுநடை *tādu-naḍai,* பெ. (n.). நாடி நடை; beating of the pulse - Pulsation (சா. அக.).

[தாது + நடை]

தாதுநிட்பன்னம் *tādu-niṭpannam,* பெ. (n.) *வினையடியாகத் தோன்றியது (பி. வி. 7, உரை);* that which is derived from a verbal root.

தாதுப்பொருள்[1] *tādu-p-poruḷ,* பெ. (n.) பவழம், முத்து, வயிரம் முதலிய இயற்கைப் பொருள்கள்; the natural products such as coral, pearl, diamond, etc., *(சா. அக.).*

[தாது + பொருள்]

தாதுப்பொருள்[2] *tādu-p-poruḷ,* பெ. (n.) சித்த மருத்துவத்தில் பயன்படுத்தும் படிக்காரம், உப்பு போன்ற பொருள்கள்; minerals used in siddha medicine.

[தாது + பொருள்]

தாதுப்பொருள் நூல் *tādu-p-poruḷ-nūl,* பெ. (n.) *1.* வேதியியல் நூல்; alchemical science book. *2.* இயற்பியல் நூல்; physics book *(சா.அக.).*

[தாது + பொருள் + நூல்]

தாதுபந்தினி *tādu-pandiṉi,* பெ. (n.) நாகிசிங்கி; an unknown aphrodisiac plants *(சா.அக.).*

[தாது + பந்தினி]

இதனை பொழுதிற்கு முந்திப் பிடுங்கத் தும்மல் உண்டாகும் என்று, சா.அக. கூறும்.

தாதுபம் *tādubam,* பெ. (n.) *1.* உடம்பின் 7 வகை தாதுக்களில் ஒன்றாகிய அன்னச்சாறு; one of the seven dhatus of the body-chyle. *2.* முதன்மைச்சாறு; elementary juice *(சா.அக.).*

[தாது → தாதுபம்]

தாதுபரீட்சை *tādu-parīṭcai,* பெ. (n.) நோயறியுமாறு நாடி பார்க்கை; examining the pulse for diagnosing a disease. *"தாது பரீட்சைவரு காலதேசத்தொடு சரீரலட்சண மறந்து" (அறப். சத. 51).*

[தாது + Skt. பரீட்சை]

தாதுபரீட்சைநூல் *tādu-parīṭcai-nūl,* பெ. (n.) பூமியிலிலுள்ள தாதுப் பொருட்களைப் பற்றிச் சொல்லும் நூல்; the science which treats of minerals - Mineralogy *(சா.அக.).*

[தாது + பரீட்சை + நூல்]

தாதுபலக்குறைவு *tādu-pala-k-kuṟaivu,* பெ. (n.) இணைவிழைச்சிற்குரிய திறன் குறைகை; want of virile power sufficient for sexual intercourse.

[தாதுபலம் + குறைவு]

தாதுபலம் *tādu-palam,* பெ. (n.). விளை சுண்ணாம்பு; chalk, a mineral lime stone *(சா.அக.).*

[தாது + பலம்]

தாதுபலவீனம் *tādu-palavīṉam,* பெ. (n.) வெண்ணீர் உயிரணு குறைகை (இ.வ.); loss of virility.

[தாது + பலவீனம்]

தாதுபற்பம் *tādu-paṟpam,* பெ. (n.). பொன், வெள்ளி, செம்பு முதலிய மாழைகளைப் புடமிட்டெடுத்த வெள்ளைத்தூள்; white powder derived by calcination of metals as gold, silver, copper, etc., *(சா.அக.).*

[தாது + பற்பம்]

தாதுபாகம் *tādu-pāgam,* பெ. (n.) தூக்கம் பிடியாமை, மாரடைப்பு, உடம்புவலி, மலக்கட்டு முதலிய தீய குணங்கள்; morbid symptoms as sleeplessness, constipation, breast pang, bodily pain etc.; liquefaction of tissue, retrogressive tissue *(சா. அக.).*

[தாது + பாகம்.]

தாதுபார்-த்தல் *tādu-pār-,* 4 செ.குன்றாவி. (v.i.) நாடி பார்த்தல்; to feel the pulse *(செ.அக.).*

[தாது + பார்-.]

தாதுபிராது *tādu-pirādu,* பெ. (n.) அறிகுறி; sign, indication *(செ.அக.).*

[தாது + பிராது]

தாதுபுட்டிசரக்கு *tādu-puṭṭi-carakku,* பெ. (n.) வெள்ளைக் கற்கண்டு, சாதிக்காய், கிராம்பு, சாதிபத்திரி, வால்மிளகு, அபினி, நீர்முள்ளி விரை, பேரீச்சம் பழம், சாலாம் பிசின், கருவாப்பட்டை, வெங்காயவிதை, செம் முள்ளங்கி விதை, பேரரத்தை முதலியன; white sugar candy, nut meg, cloves, mace, cubels, opium seeds of Hygrophila spinosa, dry

dates, resin of Indian dammer cinnamon bark, onion seeds, etc. are all aphrodisiac *(சா.அக.).*

[தாது + புட்டி + சரக்கு]

Skt. புஷ்டி → த. புட்டி

தாதுபுட்டிசூரணம் *tādu-puṭṭi-šūraṇam,* பெ. (n.) நிலப்பனங்கிழங்கு வேண்டிய அளவு கொண்டு, மேல்தோல் சீவி இடித்து, வத்திர காயம் செய்து, சமஎடை சருக்கரை சேர்த்து, நாளும் திரிகடிப் பிரமாணம் கொள்ள, சொறி சிரங்கு போகும். தாது மிகுந்து வெண்ணீர் ஊறும்; this powder is aphrodisiac contains root of ground palm - Curculigo orchioides and sugar. it cures itch *(சா.அக.).*

[தாது + புட்டி + சூரணம்]

Skt. puṣṭi, த. புட்டி

தாதுபுட்டிமருந்து *tādu-puṭṭi-marundu,* பெ. (n.) *1.* வெண்ணீர் (விந்து) ஊறுவதற்காகக் கொடுக்கும் மருந்து; medicine for increasing the secretion of semen in the system. *2.* புணர்ச்சியில் ஆசையை உண்டாக்கும் மருந்து; a proprictory aphrodisiac remedy for promoting the sexual instinct - Virisanol *(சா.அக.).*

[தாது + புட்டி + மருந்து]

Skt. puṣṭi → த. புட்டி

தாதுபுட்டிமூலி *tādu-puṭṭi-mūli,* பெ. (n.) அமுக்கிராக் கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, பூமி சர்க்கரைக் கிழங்கு, வெள்ளை வெங்காயம் முதலியன; root of withiaina somnifere, root of curculig orchioides, tuber of merma are nario and white onion are all aphrodisiac *(சா.அக.).*

[தாது + புட்டி + மூலி. ஆண்மைக் குறைபாடுடையவர்க்கு இயற்கை தரும் மருந்து]



தாதுபுட்டிஇளகியம் *tādu-puṭṭi-ilagiyam,* பெ. (n.) வெண்ணீரை (விந்தை) மிகச் செய்யும் கலவை; aphrodisiac in action *(சா.அக.).*

[தாது + புட்டி + இளகியம்]

தாதுபுட்பிகம் *tādu-puṭpikam,* பெ. (n.). தாதகிப்பூ; flower of downy grislea. so called from its red flowers. Grislea tomentosa alias wood fordin floribunda (flower of) *(சா.அக.).*

[தாது + புட்பிகம்]

தாதுபுண் *tādu-puṇ,* பெ. (n.) வெண்ணீர் குழாயில் ஏற்படும் புண்; ulceration of spermatic vessels *(சா. அக.).*

[தாது + புண்]

தாதுபேசல் *tādu-pēšal,* பெ. (n.) நாடி துடித்தல்; beating of the pulse - pulsation *(சா. அக.).*

[தாது + பேசல்]

தாதுமரணம் *tādu-maraṇam,* பெ. (n.) *1.* மாழைக்கட்டு; consolidation of metals. *2.* ஓர் மருந்து; name of a medicine *(சா.அக.).*

[தாது + மரணம்]

தாதுமலம் *tādu-malam,* பெ. (n.) உடம்பினின்று கழியும் மலம், வியர்வை, கோழை முதலியன; impure excretion from the body such as fecies, sweat, phlegm, etc.*2.* ஈயம்; lead as the most impure of metals *(சா.அக.).*

[தாது + மலம்]

தாதுமற்று *tādu-maṟṟu,* பெ. (n.) சர்க்கரை வேம்பு; sweet margosa *(சா.அக.).*

[தாது + மற்று]

தாதுமாசிகம் *tādu-māšigam,* பெ. (n.) கந்தகம் சேர்ந்த ஒரு வகை இரும்பு மண்; sulphur of iron *(சா. அக.).*

[தாது + மாசிகம்]

தாதுமாதளை *tādu-mādaḷai,* பெ. (n.) தாது மாதுளை (மூ. அ.) பார்க்க; see *tadu-māduḷai.*

[தாது + மாதுளை → மாதளை → தாதுமாதளை]

தாதுமாதுளை[1] *tādu-mādulai,* பெ. (n.) *1.* *பூ மாதுளை;* pomegranate bearing only flowers but no fruit. *2.* *இனிப்புக் கொடிமாதுளை;* sweet pomegranate *(சா.அக.).*

[தாது + மாதுளை]

தாதுமாரிணி *tādu-mārini,* பெ. (n.) *வெங்காரம்* *(சங். அக.);* borax.

தாதுமாரின் *tādu-mārin,* பெ. (n.) *1.* *மாழைகளைக் கரைத்தல்;* dissolving metals. *2.* *கந்தகம்;* sulphur *(சா.அக.).*

[தாது + மார் + இன்]

தாதுமான் *tādu-mān,* பெ. (n.) *344 உச்சிகளையும் 44 மேனிலைக் கட்டுகளையு முடைய கோயில்* *(சுக்கிரநீதி. 230);* temple with 344 towers and 44 storeys *(செ.அக.).*

தாதுமுரிதம் *tādu-muridam,* பெ. (n.) *கொடி எலுமிச்சை;* lemon creeper - Citrus medica limonum *(சா.அக.).*

[தாது + முரிதம்]

தாதுமுறை *tādu-murai,* பெ. (n.) *உடம்பினில் நாடிக்குரிய இடங்களான கை, மார்பு, முதலிய பத்து இடங்களில் ஆய்வு செய்யும் முறைமை;* the method of examining the centres of pulsation as detailed in the following stanza. 'தாதுமுறை கேள்' - திருமூலர் *(சா.அக.).*

[தாது + முறை]

தாதுமூலசீவன் *tādu-mūla-sīvan,* பெ. (n.) *1.* குறிகூறுவோர் நினைத்தது கூறுதற்கு எடுத்த மூவகை இயற்கைப் பொருள்கள் (வின்.); three divisions of nature, comprising minerals, vegetables and animals on which a soothsayer bases his divination. *2.* குறிச் சொல்லுவதற்காக மேழம் முதலாக உள்ள ஓரைகளை முறையே பிரிக்கை (சூடா. உள். 311).; a division of the zodiacal signs.

தாதுமெலி-தல் *tādu-meli-,* 2 செ.குன்றாவி. (v.t.) *தாதுமெலிவு;* emaciation *(சா.அக.).*

[தாது + மெலி-.]

தாதுராகம் *tādu-rāgam,* பெ. (n.) *காவிக்கல்* *(கம்பரா. வரைக்காட். 44);* red ochre.

தாதுராசகம் *tādu-rāšagam,* பெ. (n.) *வெண்ணீர் (விந்து)* *(யாழ்.அக);* semen.

தாதுநோய் *tādu-nōy,* பெ. (n.) *வெண்ணீர்ச் (விந்து) சிதைவு* *(வின்.);* scanty flow or morbid state of the semen.

தாதுரோகம் *tādu-rōgam,* பெ. (n.) *வெண்ணீர் (விந்து)ப் பற்றிய நோய், வெள்ளை, வெட்டை முதலியன;* diseases relating to semen such as spermatorrhoea - Gonorhoea etc., *(சா.அக.).*

[தாது + Skt. *ரோகம்]*

தாதுவத்தினை *tādu-vattinai,* பெ. (n.) *தாமரைக்கிழங்கு;* lotus root *(சா. அக.).*

[தாது + வத்தினை]

தாதுவர்க்கம் *tādu-varkkam,* பெ. (n.) *தாது வகை;* mineral kingdom *(சா. அக.).*

[தாது + Skt. *வர்க்கம்]*

தாதுவர்த்தகம் *tādu-varttakam,* பெ. (n.) *மலம் முதலிய கழிவுப் பொருள்களை மிகுதிப் படுத்துதல்;* promoting the animal secretions *(சா. அக.).*

[தாது + Skt. *வர்த்தகம்]*

தாதுவர்த்தனி *tādu-varttani,* பெ. (n.) *மேள கருத்தாக்களுளொன்று* *(சங். சந்);* a primary rāga.

[தாது + Skt. *வர்த்தனி]*

தாதுவருக்க நூல் *tādu-varukka-nūl,* பெ. (n.) *மாழைகளைப் பற்றிக் கூறும் நூல்;* a treatise on mineralogy *(செ. அக.).*

[தாது + வருக்கம் + நூல்]

தாதுவல்லபம் *tādu-vallabam,* பெ. (n.) *தாது மாரிணி* *(யாழ்.அக.)* பார்க்க; see *tādu-mārini.*

[தாது + வல்லபம்]

தாதுவலு-த்தல் *tādu-valu-,* செ.குன்றாவி. (v.t.). *வெண்ணீரில் (விந்து) உயிரணு கூடுதல்;* to thicken or strengthen semen *(சா. அக.).*

[தாது + வலு-.]

தாதுவழுதலை *tādu-valudalai,* பெ. (n.) வழுதலை; brinjal plant (சா. அக.).

[தாது + வழுதலை]

தாதுவழுத்து-தல் *tādu-valuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நாடி ஒடுங்குதல்; to sink of the pulse (சா. அக.).

[தாது + வழுத்து-.]

தாதுவாதம்[1] *tādu-vādam,* பெ. (n.) 1. அறுபத்து நாலு கலையுள் நாடியியல் பறிகை; knowledge of the pulse, one of arupattu-nālu-kalai. 2. மாழைச்சோதனை (வின்.); mineralogy.

[தாது + வாதம்]

தாதுவாதம்[2] *tādu-vādam,* பெ. (n.) தாத்திருவாதம் (வின்.) பார்க்க; see *tāttiru-vādam.*

தாதுவாதம்[3] *tādu-vādam,* பெ. (n.) நாடிஅறிவு; knowledge of the pulse (சா. அக.).

[தாது + வாதம்]

தாதுவாதி *tādu-vādi,* பெ. (n.) மாழைகளைச் ஆய்ந்து அறிபவன் (வின்.); assayer of metals.

[தாது + வாதி]

தாதுவாரினி *tādu-vārini,* பெ. (n.). சேவகனார் கிழங்கு அல்லது கார்த்திகைக் கிழங்கு; plough root (சா.அக.).

[தாது + வாரினி]

தாதுவிகற்பம் *tādu-vigarpam,* பெ. (n.) ஒரே தாதுப்பொருள் 2, 3 போன்ற பல தன்மைகளோடு அமைந்ததாய்க் காணப்படல்; the fact of certain elements existing in two or more conditions with different physical properties as carbon existing in the form of coal, charcoal, plumbago, diamond, etc., (சா. அக.).

[தாது + விகற்பம்]

தாதுவிடம் *tādu-vidam,* பெ. (n.) செய்நஞ்சு அதாவது தாம்பிரம், பித்தளை, வீரம் முதலியவைகளின் நஞ்சு; mineral poison as of copper, lead, corrosive sublimate etc., (சா. அக.).

[தாது + விடம்]
Skt. viṣam → த. விடம்

தாதுவிடமம் *tādu-vidamam,* பெ. (n.) தாதுவின் கோளாறு; disarrangement or disturbance of the equalibrium of humours in the body (சா. அக.).

[தாது + விடமம்]
Skt. viṣamam → த. விடமம்

தாதுவிரசம் *tādu-viraśam,* பெ. (n.) 1. குருதி; blood. 2. வெண்ணீர் (விந்து); semen. 3. மாழைகளின் சத்து; metallic essence (சா.அக.).

மறுவ. மாழைச்சாறு
[தாது + Skt. ரசம்]

தாதுவிருத்தி *tādu-virutti,* பெ. (n.) தாதுவிளைவு; increase of secretion of semen (சா.அக.).

[தாது + Skt. விருத்தி.]

தாதுவிருத்திமூலி *tādu-virutti-mūli,* பெ. (n.) உடம்பில் வெண்ணீரை (விந்துவை) அதிகப்படுத்தும் மருந்து மூலிகைகள்; herbs and other substances capable of increasing semen in the body (சா. அக.).

[தாது + விருத்தி + மூலி]

சிவப்பு முள்ளங்கி, முள்ளங்கிக் கிழங்கு, வெங்காயம், பேரீச்சங்காய், வாதுமைப் பருப்பு, சாலாமிசிரி, தண்ணீர்விட்டான் கிழங்கு, கசகசா, வெள்ளாட்டுப்பால், பசும்பால், நெய் இவைகளால் அணியமாவது என்று, சா.அக. கூறும்.

தாதுவிருத்தினி *tādu-viruttini,* பெ. (n.) (வெண்ணீரை) விந்துவை, அதிகப்படுத்திக் காமத்தை மூட்டும் மருந்து; aphrodisiac (சா. அக.).

[தாது + விருத்தினி.]

தாதுவிழுதல் *tādu-viludal,* பெ. (n.) 1. நாடி யொடுங்குகை; sinking of the pulse. 2. மன வலிமை குன்றுகை; being discouraged (செ. அக.).

[தாது + விழுதல்]

தாதுவிளக்கம் *tādu-vilakkam,* பெ. (n.) நாடி நடையைப் பற்றி விளக்கமாகச் சொல்லும் நூல்; the book that treats about pulse (சா. அக.).

[தாது + விளக்கம்]

தாதுவிளைவு *tādu-viḷaivu,* பெ. (n.) வெண்ணீர் (விந்து) அதிகரிக்கை; increasing of semen (சா. அக.).

[தாது + விளைவு]

தாதுவின்உபதாது *tāduvin̲-upa-tādu,* பெ. (n.) ஏழு வகைத் தாதுக்களுக்குப் பதிலாக பயன்படுத்தும் பொருள்கள்; things used instead of seven variety of tādukkaḷ.

அவை பொன்னுக்கு - சுவர்ணமாட்சிகம், வெள்ளிக்குத் தாரமாட்சிகம், தாம்பிரத்திற்குத் துத்தம், வங்கத்திற்கு கங்கோஷ்டம், ஜாதசம்- கற்கபரிநாகம் - சிந்தூரம், மாழை - கிட்டக்கல்) என்று, சா.அக. கூறும்.

தாதுவைரி *tādu-vairi,* பெ. (n.) 1. கந்தகம்; sulphur. 2. கடுக்காய்; gall-nut. 3. ஏலம்; cardamom (செ.அக.).

தாதெரு *tāderu,* பெ. (n.) தாதெருமன்றம் பார்க்க; see *tāderu-man̲r̲am.* "தாதெரு மறுகின் மூதூராங்கண்" (அகநா. 105).

தாதெருமன்றம் *tāderu-man̲r̲am,* பெ. (n.) இடையர் குரவை முதலியன நிகழ்த்துதற் கிடமானதும், ஆவினம் சூழ்ந்ததுமான மரத்து அடியிலுள்ள பொதுவிடம்; shady space at the foot of a tree used for dance, etc., by cowherds, as a place scattered with cow-dung. "தாதெருமன்றத் தயர்வர் தழூஉ" (கலித். 103, 61).

[தாதெரு + மன்றம்]

தாதெழுத்து *tādeḻuttu,* பெ. (n.) எழுத்துவகை (யாப். வி. 536); (gram.). a kind of letter.

[தாது + எழுத்து]

தாதை[1] *tādai,* பெ. (n.) நான்முகன்; Brahman̲. "வல்லே யேகிய தாதை" (கந்தபு. பிரமயாக. 6).

தாதை[2] *tādai,* பெ. (n.) 1. தந்தை (பிங்.); father. "நல்வேலன் றாதை" (திருவாச. 9: 3). 2. பாட்டன் (சது.); grand-father.

[தாதா → தாதை]

தாதை[3] *tādai,* பெ. (n.) பேய்க்கொம்மட்டி; colocynthis.

தாதைதன்றாதை *tādai-tan̲r̲ādai,* பெ. (n.). பாட்டன் (பிங்.); grand-father.

[தாது + தன்தாதை]

தாதைதாதை *tātai-tādai,* பெ. (n.) தாதை தன்றாதை (பிங்.); பாட்டன் (சது.); grandfather.

[தாதைதன்றாதை → தாதைதாதை]

தாதோட்டம் *tādōṭṭam,* பெ. (n.) நாடியோட்டம்; pulsation (சா. அக.).

[தாது + ஓட்டம்.]

தாதோடு-தல் *tādōḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நாடிநடத்தல்; to beat of the pulse-pulsating (சா.அக.).

[தாது + ஓடு-.]

தாந்தகாரி *tāndagāri,* பெ. (n.) காற்றடக்கி; wind killer (சா.அக.).

தாந்தன் *tāndan̲,* பெ. (n.). ஐம்பொறிகளையும் வென்றவன்; one who has subdued his senses. "தாந்தனுறையுளெனுந் தண்பொருநையின் வடபால்" (மாறனலங். 125, உரை, 213).

[தாம் + தன் = தாந்தன். முதற்கண் தன்னைக் கட்டுப்படுத்துகை]

தாந்தனம் *tāndan̲am,* பெ. (n.) காற்று (யாழ்.அக.); wind.

தாந்தாமெனல் *tāndām-en̲al,* பெ. (n.) மத்தளமடிக்கும் ஒலிக்குறிப்பு; onom. expr. of drumming sound. "தாந்தாமென்றிரங்குந் தண்ணுமைகளும்" (சீவக. 292).

[தாம் + தாம் + எனல்]

தாந்தி *tāndi,* பெ. (n.) மனவடக்கம்; self-restraint. "தழைத்த நற்சாந்தி தாந்தியே பெருக்கும்" (வேதாரணி. மேன்மைச். 2).

[தம் → தாம் + தி → தாந்தி]

தாந்திமம் *tāndimam,* பெ. (n.) ஐம்புலன் அழிப்பு; destroyed his senses (சா.அக.).

[தம் → தாம் + தி → தாந்தி → தாந்திமம். ஆதன் இறையுடன் ஒன்றுதற்குத் தடையாகவுள்ள தமது, ஐம்புலன் உணர்வுகளை அழிக்கை.]

தாந்திரம் *tāndiram,* பெ. (n.) 1. ஆகமம் தொடர்பானது; that which pertains to the tantras. "தாந்திர விதியென் றாட்டுந் தண்புனல்" (சீகாளத். பு. கண்ணப்ப. 110). 2. தந்திரம்; cunning, artfulness.

[தன் + திறம் → தந்திரம் → தாந்திரம்.]

தாந்திரி *tāndiri,* பெ. (n.) தாத்திரி பார்க்க; see *tāttiri* (சா. அக.).

[தந்திரி → தாந்திரி.]

தாந்திரிகசன்னி *tāndiriga-šanni,* பெ. (n.) குழந்தைக்கு ஏற்படும் ஒரு வகை நோய்; a disease occur to a child.

[தாந்திரிகம் + சன்னி]

இந் நோயால் குழந்தை பால் குடிக்காது. காய்ச்சல் கண்டு, தலைசுற்றி மயக்க முறும் என்று சா.அக. கூறும்.

தாந்திரிகசுரம் *tāndiriga-šuram,* பெ. (n.) ஒரு வகை சுரம்; a kind of fever.

[தாந்திரிகம் + சுரம்]

இச் சுரத்தால் உடல்வலி, வலிமைகுறைவு, நாடிகுறைவு அல்லது நாடி விரைவு, உளறல் போன்றவைக் காணப்படும் என்று, சா.அக. கூறும்.

தாந்திரிகம்[1] *tāndirigam,* பெ. (n.) *1.* தாந்திரிக சன்னி பார்க்க; see *tāndiriga-šanni. 2.* உடல் காய்ந்து, வாய் உளறி, வாந்தி, நீர்வேட்கை கண்டு, உண்ணாக்கு வறண்டு, வயிறு கழிந்து, 25 நாளில் தோன்றும், ஒரு வகைக் குளிர் நோய்; a kind of typhus fever characterised by rise of temperature, raving or talking irrationally, vomitting thirst, parchedness, at the root of the tongue, purging and other prominent symptoms the incubation period is twenty five days. *3.* தாந்திரிக நூல்; the doctrines of tāntric science written by grantham. i.e., Šanskrit of Dravidian characters. *4.* மருத்துவ நூல்; a medical science.

[தந்திரி → தாந்திரி → தாந்திரிகம்]

தாந்திரிகன் *tāntirigan,* பெ. (n.) ஆகமநூல் வல்லோன்; one versed in the Tantra works.

[தந்திரம் → தாந்திரம் → தாந்திரி → தாந்திரிகன்]

தாந்தீமெனல் *tāntīm-enal,* பெ. (n.) *1.* இசை யொலிக் குறிப்பு; onom. expr. of music sound. "தாஅந்தீமெனத் தண்ணிசை முரல" (பெருங். வத்தவ. 3, 75). *2.* கண்டபடி செலவிடற் குறிப்பு; expr. of extravagance.

[தாம் + தீம் + எனல்.]

தாந்துநாகம் *tāndu-nāgam,* பெ. (n.) சுறா; shark (சா.அக.).

[தாந்து + நாகம்]

தாந்துவீகன் *tāndu-vīgan,* பெ. (n.) தையற்காரன் (நிகண்டு.); tailor.

[தாந்துவிகன் → தாந்துவீகன்]

தாந்தோமெனல் *tāntōm-enal,* பெ. (n.) *1.* இசையொலிக் குறிப்பு; onom. expr. of music sound (செ.அக.).

[தாம் + தோம் + எனல்]

தாநம் *tānam,* பெ. (n.) யானைச்செருக்கு; periodic heat of animals or rut especially of an elephant (சா.அக.).

தாநகம் *tānagam,* பெ. (n.) கொத்தமல்லி; coriander (சா. அக.).

தாநாகம் *tānāgam,* பெ. (n.) தாநகம் பார்க்க; see *tānagam* (சா.அக.).

தாநை *tānai,* பெ. (n.) *1.* ஆடை; dress. "குஞ்சியழகுங் கொடுந்தாநைக் கோட்டழகும்" (நாலடி. கல்வி. க.). *2.* படைக்கலன்; weapons. *3.* காலாட்படை; infantry. "அலவுதாநை தொடர்தரவேட்டஞ் செய்" (அரிச்ச. வேட்ட.க.) *4.* படை; army.

[தானை → தாநை.]

தாநைமாலை *tānai-mālai,* பெ. (n.) அகவல் ஓசையிற் பிறழாது, உயர்ந்த அரசர்க்குரிய ஆசிரியப்பாவால், முன்னரெடுத்துச் செல்லுங் தொழுப்படையைச் சொல்லும், ஓர் இலக்கியம்; a kind of literature. "ஆசறவுணர்ந்த வரசர் பாவாற்றூசிப் படையைச் சொல்வதுதாநை மாலையாகும்" (இலக்கண விளக்கம்)(தமி சொ. அக).

[தாநை + மாலை]

தாப்படியரிசி *tā-p-paḍi-y-ariši,* பெ. (n.) வரி வகை (S.I.I. i, 91); an ancient tax.

[தாள் + படி + அரிசி.]

தாப்பணிவார் *tāppaṇivār,* பெ. (n.) *1.* கலணைக் கச்சை; saddle girth. *2.* கசை; scourge, whip (செ.அக.).

[தாம்பணிவார் → தாப்பணிவார்]

தாப்பானை[1] *tāppāṉai,* பெ. (n.) *புதிதாகப் பிடிபட்ட யானையைப் பழக்கப் பயன்படுத்தப் படும், பழகிய யானை* (இ.வ.); a tame elephant engaged in breaking a newly caught elephant.

தாப்பானை[2] *tāppāṉai,* பெ. (n.) நல்ல நாளில் முதற்கதிர்களை எடுத்து வைத்தற்குரிய பெரியபானை (இ.வ.); a big pot used for preserving the first sheaves on an auspicious day.

[தாய்ப்பாணை → தாப்பாணை]

தாப்பிசை *tāppišai,* பெ. (n.) செய்யுளின் இடையிலுள்ள மொழி, முன்னும் பின்னுஞ் சென்று கூடும் பொருள்கோள் (நன். 416); a mode of constructing a word in the middle of a verse both with what precedes and what follows it, one of eight poruḷ-kōḷ.

[தாம்பு + இசை - தாம்பிசை → தாப்பிசை (வ.வ.8)]

தாப்பு *tāppu,* பெ. (n.) *1.* குறித்தநேரம் (யாழ்ப்.); expected moment, appointed time, wished-for occasion. *2.* ஏந்து (இ.வ.); convenience.

ம. தாப்பு, க. தாபு, துட. தொப்

U. tās

தாப்புக்கொள்(ளு)-தல் *tāppu-k-koḷ(ḷu)-, 7* செ. குன்றாவி. (v.t.) நல்லசமயம் நோக்குதல் (யாழ்ப்.); to lurk and wait for ; to watch, as for an opportunity

[தாப்பு + கொள்-.]

தாப்புலி *tāppuli,* பெ. (n.) *1.* வலிமிக்க புலி; tiger of great strength. "தாப்புலியொப்பத் தலைக் கொண்டான்" (பு.வெ. 2:10). *2.* ஒரு வகைப் பழைய பா (செங்கோன்றரைச் செலவு); an ancient metre.

[தாப்பு + புலி]

தாபக்காய்ச்சல் *tāba-k-kāyccal,* பெ. (n.) உடல் முழுதும் எரிச்சல் காணும் ஒரு வகைக் காய்ச்சல்; a kind of fever in which burning sensation is the prominent symptom (சா. அக.).

[தவி → தவிப்பு = தாகம். தபு + அம் - தபம் → தாபம் + காய்ச்சல். ஒருகா. தகம் = எரிவு, சூடு, வெப்பம். தகம் → தபம் → தாபம்]

தாபக்கினி *tābakkiṉi,* பெ. (n.) *1.* காட்டுத் தீ; a great burning fire. *2.* நீர் வேட்கையை உண்டாக்கும் வெப்பம்; excess of heat in the system causing thirst. *3.* காமத் துன்பத்தினா லுண்டாகும் உடற்கொதிப்பு; bodily heat experienced from love passion (சா.அக).

[தாகம் → தாபம் + Skt. அக்கினி]

தாபகன் *tābagaṉ,* பெ. (n.) நிலைநிறுத்தியவன்; establisher, founder (செ.அக.).

தாபகரி *tābagari,* பெ. (n.) ஒரு வகை இனிப்பு பருப்புக் குழம்பு; a kind of soup of pulse and grain fried with ghee and turmeric and afterwards boiled with salt and sugar (சா.அக.).

தாபச்சுரம் *tāba-c-curam,* பெ. (n.). மிகக் காய்கின்ற காய்ச்சல் (சீவரட்.); burning fever (செ.அக.).

[தாபம் + சுரம்]

தாபசத்தருவு *tābaca-t-taruvu,* பெ. (n.)தவசு மரம் பார்க்க; see *tavasu-maram* (சா.அக.).

தாபசப்பிரியை *tābaca-p-piriyai,* பெ. (n.) *1.* கொடி முந்திரிகை; vine grape. *2.* காட்டுமா; hermit's tree (சா.அக.).

தாபசம் *tābacam,* பெ. (n.) *1.* மரவகை; a kind of tree. *2.* கொக்கு; stork (சா.அக.).

தாபசன் *tābacaṉ,* பெ. (n.) துறவி; hermit, ascetic (செ.அக.).

[தவசி → தவசன் → தாபசன்]

தாபசாதரு *tābašādaru,* பெ. (n.) நாட்டு வாதுமை; country almond (சா.அக.).

தாபசி[1] *tābaši,* பெ. (n.) தாபசன் பார்க்க; see *tābašaṉ.*

[தபசி → தாபசி]

தாபசி[2] *tābaši,* பெ. (n.) ஆயா; entire leaved elm.

தாபசுரம் *tāba-šuram,* பெ. (n.) தாபச்சுரம் (இவ.) பார்க்க; see *tāpa-c-curam.*

தாபசுரமாத்திரை *tāba-šura-māttirai,* பெ. (n.) தூய்மையாக்கப்பட்ட வாளம் விடை 8, சாதிலிங்கம் விடை 5, அரிதாரம் விடை 3, வெண்காரம் விடை 6, கடுகுரோகிணி விடை 7, மனோசிலை, நாபி, வகைக்கு விடை 1 இவைகளை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து, குன்றியளவு செய்து உலர்த்திய மாத்திரை; இஞ்சிச் சாற்றில் தரப்படுவது; a fever pill containing vermilion, yellow arsenic sulphide, borax, red arsenic sulphide, aconite, black hellebore. all round with the juice of lime fruit and made into pills of the size of jeweller's bead, one pill is given with ginger juice for remittent fever *(சா.அக.).*

[தாபசுரம் + மாத்திரை = பலவகை அரிய மூலிகையினாற் செய்யப்பட்ட இம் மாத்திரை, உடம்பிலுண்டாகும் 64 வகைச் சுரங்களையும் குறிப்பாக, நச்சம் சுர மனைத்தையும் அகற்றும் என்று, சா.அக. கூறும்]

தாபசோபம் *tābašōbam,* பெ. (n.) மிகுதுன்பம்; extreme anguish, distress. "ஆறுமோ தாபசோபம்" *(தாயு. வம்பகேனன். 7).*

[தாகம் → தாபம் + Skt. சோபம்]

தாபத்திரயம் *tābattirayam,* பெ. (n.) 1. காம வேட்கை, கோபவெம்மை, மனவேகம் முதலியன மூன்று வகை வெம்மைகள்; the three kinds of strong emotions or excitements divided according to their sources viz. sexual passion, anger and agitation of mind. 2. மூவகைத் துன்பம்; the three kinds of afflictions from *(சா.அக.).*

[தாகம் → தாபம் + Skt. திரயம்]

தாபதக்கோலம் *tābada-k-kōlam,* பெ. (n.) தவவேடம்; ascetic's guise. "தாபதக்கோலந் தாங்கின மென்பது" *(மணிமே. 18:23).*

[தவக்கோலம் → தபக்கோலம் → தாபதக் கோலம்]

தாபதநிலை *tābada-nilai,* பெ. (n.) (புறப்.) காதலனையிழந்த மனைவி தவம்புரிந் தொழுகிய நிலைமையைத் தெரிவிக்கும் புறத்துறை *(தொல். பொருள். 79);* a theme describing the vows of austerity observed by a widowed woman.

[தாபதம் + நிலை]

தாபதப்பக்கம் *tābada-p-pakkam,* பெ. (n.) (புறப்.) நீராடல், நிலக்கிடைகோடல், தோலு உடுத்தல், எரியோம்பல், ஊரடையாமை, சடைபுனைதல், காட்டிலுணவு, கடவுட் பூசை என்று தாபதர்க்குரிய எண்வகை ஒழுக்கங்களைக் கூறும் புறத்துறை; theme describing the eight occupations of an ascetic, viz., nīr-āḍal, nila-k-kiḍai-kōḍal, tōl-uḍuttal, eri-y-oōmbal, ūr-aṭai-yāmai, caḍai-puṉaital, kāṭṭil-uṇavu, kaḍavuṭ-pūcai. "நாலிரு வழக்கிற்றாபதப் பக்கமும்" *(தொல். பொருள். 74).*

[தாபதம் + பக்கம்]

தாபதப்பள்ளி *tābada-p-paḷḷi,* பெ. (n.) துறவிகள் தங்குமிடம்; residence of ascetic, hermit. "தண்டாரணியத்துத் தாபதப்பள்ளி" *(சீவக. 337).*

[தவம் → தபம் → தாபம். தாபதம் + பள்ளி]

தாபதம் *tābadam,* பெ. (n.) முனிவர் வாழிடம் (திவா.); abode of an ascetic; hermitage. "தாபதமதன்கண் பண்டைவான் பகை தீர்ந்து" *(சேதுபு. நைமிச. 13).*

[தாவதம் → தாபதம்]

தாபதவாகை *tābada-vāgai,* பெ. (n.) (புறப்.) தவவேடத்தர் புண்ணியத்தைத் தழுவி யொழுகும், நடையைக் கூறும் புறத்துறை *(பு.வெ. 8, 14);* theme describing the holy life of an ascetic.

[தாவதம் → தாபதம் + வாகை]

தாபதவேடம் *tābadavēḍam,* பெ. (n.) தவக் கோலம்; appearance of an ascetic hermit. "தையலோர் பங்கினர் தாபதவேடத்தர்" *(திருவாச. 17, 9).*

[தாபதம் + வேடம்]

தாபதன் *tābadaṉ,* பெ. (n.). 1. முனிவன் (பிங்.); ascetic, person practising penance. "தாபதர்கள்

சிலையெடுத்துத் திரியுமிது சிறிதன்றோ" (கம்பரா. சூர்ப்பணகை. 101). 2. சமணமுனிவன் (பிங்.); jain ascetic.

[தாபதம் → தாபதன்]

தாபதி *tābati,* பெ. (n.) செம்பு; copper (சா.அக.).

தாபதிவிருட்சம் *tābadi-virutcam,* பெ. (n.). இங்குணம்; an unknown tree (சா.அக.).

தாபந்தம் *tābandam,* பெ. (n.) துன்பம் (இ.வ.); distress, calamity.

தாபந்திரியம் *tābandiriyam,* பெ. (n.) தாவந்தம் (இ.வ.); துன்பம்; distress, calamity.

தாபநமனி *tābanamaṉi,* பெ. (n.) 1. இணைத்தல்; pining. 2. வருந்துதல்; grieving (சா.அக.).

தாபபதம் *tāba-padam,* பெ. (n.). வெப்ப அளவு; the thermal condition of the degree of heat of the body temperature (சா.அக.).

தாபம்[1] *tābam,* பெ. (n.). 1. வெப்பம் (சூடா.); heat, burning. 2. ஐந்து வகை போர்களில் ஒன்றான முத்திராதாரணம்; branding the shoulders with the marks of conch and discus of viṣṇu, one of pañca-camskāram. 3. தாகம்; thirst. "மாண்கணம் . . . தாபநீங்கா தசைந்தன" (திருவாச. 3, 82). 4. துன்பம் (உரிரு.); sorrow, distress, anguish. "தாபஞ்செய் குற்றம்" (அருட்பா, 1, நெஞ்சறி. 201).

[தவி → தவிப்பு = தாகம். தவி → தப் (இ.வ.). தவி + தபு + அம் → தபம் → தாபம். 'அம்' சாரியை. மிகுவெப்பத்தால் தவிக்கை. ஒருகா. தகம் = சூடு, வெப்பம். தகம் → தபம் → தாபம்]

தாபம்[2] *tābam,* பெ. (n.) காடு (வின்.); jungle, forest.

தாபம்[3] *tābam,* பெ. (n.) 1. உடம்பின் சூடு; bodily heat. 2. மிக்கவெரிச்சல்; intense burning sensation as in an intoxicated person. 3. காட்டுத் தீ; a great burning. 4. துயர்; grief. 5. இரக்கம்; sympathy (சா.அக.).

[தகம் → தபம் → தாபம். 'தகம் = எரிவு, சூடு, வெப்பம்.]

தாபமாயிரு-த்தல் *tābamāyiru-,* 4 செ.குன்றாவி. (v.t.) வெப்பத்தினால் துன்பப்படுதல்; to suffer pain from heat (சா.அக.).

[தாகம் → தாபம் + ஆய் + இரு-.]

தாபமாரி *tāba-māri,* பெ. (n.) தாபமாறி (சங்.அக.) பார்க்க; see *tāba-māṟi.*

[தாகமாறி → தாபமாரி.]

தாபமாற்றி *tāba-māṟṟi,* பெ. (n.) 1. நீர் வேட்கையை நீக்கும் பொருள்; any substance allaying thirst. 2. உடம்பின் எரிச்சலை யடக்கும் மருந்து; any medicine or application tending to soothe the burning sensation of the body-emollient. 3. உடம்பினழற்சியைப் போக்கும் மருந்து; any soothing or oily medicine or application allaying irritation of inflammed surface (சா.அக.).

[தாகம் + ஆற்றி → தாபமாற்றி.]

தாபமாறி *tābamāṟi,* பெ. (n.) தான்றி (மலை) பார்க்க; see *tāṉṟi.*

தாபமானி *tābamāṉi,* பெ. (n.) தட்பவெப்பங் களின் அளவு காட்டுங்கருவி; thermometer.

தாபரமுப்பு *tābara-muppu,* பெ. (n.) 1. சிந்துப்பு; sindu salt. 2. உப்பு பார்க்க; see *uppu* (சா.அக.).

[தாபரம் + உப்பு.]

தாபரவம் *tābaravam,* பெ. (n.) கருடன் கொடி, பெருமருந்துக் கொடி; Indian birth wort.

தாபரவியாபகம் *tābara-viyābagam,* பெ. (n.) உடல்வெப்பம் பரவி நிற்கும் தன்மை; diffusion of temperature (சா.அக.).

[தாபரம் + Skt. வியாபகம்]

தாபரன் *tābaraṉ,* பெ. (n.) எல்லாவற்றிற்கும் அடிப்படையாய் உள்ளவன் (அகநி.); the deity, as the substainer of all things.

[தார் → தா + பரன் → தாபரன். அனைத்திற்கும் ஆதாரமாகவிருந்து இவ் வுலகை இயக்குபவன்]

தாபரி[1]**-த்தல்** *tābari-,* 4 செ.கு.வி. (v.i.) நிலைபெற்றிருத்தல்; to lodge, abide obtain shelter. "உன்றன்வீடு தாபரித்த வன்பர்" (திருப்பு. 731).

[தா + பரி-.]

தாபரி²-த்தல் *tābari-,* 4 செ.குன்றாவி (v.t.) *பாதுகாத்தல் (யாழ்.அக.);* to protect, shelter, maintain.

[தா + பரி-.]

தாபவாகினி *tābavāgiṉi,* பெ. (n.) *(கல்விவி)* வெப்பத்தைப் பரப்பும் கருவி; conductor of heat.

[தாபம் + வாகினி.]

தாபனச்சடம் *tābaṉa-c-caḍam,* பெ. (n.) *1.* புனுகுப்பூனை; civat cat. *2.* சேரான் கொட்டை; marking nut - Semicarpus anacardium. *3.* முன்னை; indian head-ache tree - Premna spinosa *(சா. அக.).*

[தாபனம் + சடம்.]

தாபனம் *tābaṉam,* பெ. (n.) *1.* அழற்சி; inflammation. *2.* எரிச்சல்; burning. *3.* வெப்பம்; heat. *4.* நோயுண்டாக்கல்; causing pain or distress *(சா. அக.).*

[தார் → தா → தாபன் + அம் – தாபனம்.]

தாபனமுத்திரை *tābaṉa-muttirai,* பெ. (n.) எழுந்தருள வேண்டுமென்பதைப் பூசையிற் குறிப்பிக்குமாறு, கையைக் குப்புற விரித்துக் காட்டுங் குறி; a hand pose with all the fingers stretched and the palm facing down, used in worship. "தாபனஞ் செய்வது தாபன முத்திரை" *(செந். 10, 425).*

[தாபனம் + முத்திரை.]

தாபனன் *tābaṉaṉ,* பெ. (n.) கதிரவன் *(பிங்.);* Sun.

[தபன் → தாபன் + அன் → தாபனன். தகதகவென்று தகிப்பவன் தபனன். தகம் = எரிவு, சூடு, வெப்பம். ஒருகா. தகனன் → தபனன் → தாபனன்.]

தாபாக்கினி *tābākkiṉi,* பெ. (n.) *1.* தாபக்கினி பார்க்க; see *tāpakkiṉi. 2.* வெப்பம்; heat. *3.* நீர்வேட்கையையுண்டாக்கும் வெப்பம்; heat creating thirst.

[தவம் → தபம் → தாபம். தவாக்கினி → தபாக்கினி → தாபாக்கினி..]

தாபிசு *tābiśu,* பெ. (n.) நோயில்லாமல் தசைக் கரைதல்; wasting of flesh without apparent disease *(சா. அக.).*

[தவி → தபி → தாபி → தாபிசு. உட்சூட்டில் தசை கரைகை.]

தாபிஞ்சம் *tābiñjam,* பெ. (n.) *1.* ஆமணக்கு விதை; castor seed. *2.* பச்சிலை மரம்; Mysore gamboge. *3.* எரிச்சல் உண்டாக்குங் குணம்; burning nature *(சா. அக.).*

[தாபிசம் → தாபிஞ்சம். ஒ.நோ. ஊசல் → ஊஞ்சல்.]

தாபிதக்குறி *tābida-k-kuṟi,* பெ. (n.) தாபித சுரத்தின் அடையாளம்; symptoms of typhoid fever *(சா. அக.).*

[தாபிதம் + குறி.]

தாபிதகுணம் *tābida-kuṇam,* பெ. (n.) *1.* வெப்பம் அல்லது அழற்சியை உண்டாக்கும் குணம்; quality of causing heat or inflammation. *2.* எரிச்சல் உண்டாக்குங் குணம்; burning nature *(சா. அக.).*

[தபம் → தாபம். தாபம் =எரிவு, வெப்பம், சூடு. தாபதம் → தாபிதம் + குணம் → தாபிதகுணம் = மிகுவெப்பத்தினால் உண்டாகும் எரிச்சல். அதிகச் சூட்டினால் உடம்பிலேற்படும் அழற்சி.]

தாபிதநோய் *tābida-nōy,* பெ. (n.) அழற்சியை உண்டாக்கும் நோய்கள்; inflammation diseases.

[தாபிதம் + நோய்..]

இது 56 வகைப்படும்.

1. நாடித்தாபிதம்; inflammation of an artery.
2. மூட்டுத்தாபிதம்; inflammation of a joint.
3. இலங்கமலர் தாபிதம்; inflammation of the glans penis.
4. கண்ணிரப்பைத் தாபிதம்; inflammation of the eye lids.
5. மூச்சுக்குழல் தாபிதம்; inflammation of the bronchial tubs.
6. கடைக்கண்தாபிதம்; inflammation of the canthius.

7. நெஞ்சாங்குலைத் தாபிதம்; inflammation of the heart.
8. அடிவயிற்றுத்தாபிதம்; inflammation of the abdomen.
9. கண்ணறைத்தாபிதம்; inflammation of the cellular tissues.
10. சிறுமூளைத் தாபிதம்; inflammation of the cerebellum.
11. முருந்துத்தாபிதம்; inflammation of the cartilage.
12. உண்ணாக்குத் தாபிதம்; inflammation of the uvula.
13. சுமரித்தாபிதம்; inflammation of the clitoris.
14. மலக்குடற்தாபிதம்; inflammation of the colon.
15. மூத்திரப்பைத் தாபிதம்; inflammation of the bladder.
16. கழுத்துக் கோளத்தாபிதம்; inflammation of the glands of the neck.
17. தோல்தாபிதம்; inflammation of the skin.
18. பிடுக்கு விதைத்தாபிதம்; inflammation of the testicles.
19. இருதயச்சவ்வுத் தாபிதம்; inflammation of the endocardium.
20. இரைப்பைத்தாபிதம்; inflammation of the stomach.
21. பிட்டத்தாபிதம்; inflammation of the buttock.
22. தாடைத்தாபிதம்; inflammation of the jaw.
23. கல்லீரற்றாபிதம்; inflammation of the liver.
24. கருப்பைத்தாபிதம்; inflammation of the uterous.
25. விழித்தாபிதம்; inflammation of the cornea.
26. மண்ணீரற்றாபிதம்; inflammation of the spleen.
27. முலைக்காம்புத்தாபிதம்; inflammation of the nipple.
28. முலைத்தாபிதம்; inflammation of the breast.
29. தசைத்தாபிதம்; inflammation of the muscle; myostitis.
30. குண்டிக்காய்த் தாபிதம்; inflammation of the kidney - Nephritis.
31. பல்லுத்தாபிதம்; inflammation of the tooth.
32. தோள்தாபிதம்; inflammation of the shoulder.
33. தொப்புள்தாபிதம்; inflammation of navel.
34. கண்தாபிதம்; inflammation of the eye.
35. விதைத்தாபிதம்; inflammation of the testis.
36. இடுப்புத்தாபிதம்; inflammation of the boins.
37. எலும்புத்தாபிதம்; inflammation of the bone.
38. செவித்தாபிதம்; inflammation of the ear.
39. மேற்பரடுதாபிதம்; inflammation of the palate.
40. கணையதாபிதம்; inflammation of the pancreas.
41. வயிறுறைத்தாபிதம்; inflammation of the peritoneum.
42. நாளத்தாபிதம்; inflammation of the vein.
43. விதானத்தாபிதம்; inflammation of the diaphragm.
44. பரிபுப்புசத்தாபிதம்; inflammation of the pleura.
45. புப்புசத்தாபிதம்; inflammation of the lungs.
46. மலவாய்த்தாபிதம்; inflammation of the rectum.
47. தரிசியத்தாபிதம்; inflammation of the retian.
48. மூக்குத்தாபிதம்; inflammation of the nose.
49. வெண்ணீர் (விந்து)க் குழாய்த்தாபிதம்; inflammation of the vas deferens.
50. வாய்த்தாபிதம்; inflammation of the mouth.
51. தாபிதம்; inflammation of the thyroid body.
52. செவிப்பறைத்தாபிதம்; inflammation of the eardrum.
53. மூத்திரத்தாரைத்தாபிதம்; inflammation of the urethra.
54. உண்ணாக்குத்தாபிதம்; inflammation of the uvula.
55. அல்குற்றாபிதம்; inflammation of the vagina.
56. கடிதடத்தாபிதம்; inflammation of the vulva.

தாபிதம்[1] *tāpidam,* பெ. (n.) *1. நிலைநிறுத்தப் பட்டது;* that which is established, instituted. "இமயத் தணங்கையுந் தாபிதஞ் செய்தே" *(பிரமோத். 18, 12).* 2. தாபனம்[1, 3] பார்க்க; see *tābaṉam* (செ.அக.).

[தாபம் → தாபிதம்]

தாபிதம்[2] tāpidam, பெ. (n.) சூடு *(வின்.);* heat, fervour.

[தவி → தபு + அம் → தபம். → தாபம் → தாபிதம். ஒருகா. தாவிதம் → தாபிதம். வெப்பத்தினால் ஏற்படும் அழற்சி, மிகுவெப்பத்தினாலேற்படும் காய்ச்சல். மிகுவெப்பத்தினால் உடம்பின் பலபகுதிகளிலேற்படும். அழற்சி வீக்கம். உடம்பின் அனைத்துப்பகுதி நோய்கட்கும், மிகுவெப்பமே மூலமென்றறிக]

தாபிதம்[3] *tāpidam,* பெ. (n.) உடம்பின் எப் பகுதியிலாவது சூடுண்டாகி, சிவந்து வலியுடன் உண்டாகும் வீக்கம்; any part of the body or its internal organs marked by heat, redness and pain with swelling.

[தாபம் → தாபிதம். இத் தாபித நோயின் விளைவால், உடம்பில் உள்ள நுண்ணிய அரத்தக் குழல்கள் பழுதடையும். இதனால், உடம்பில் ஏதாவதொரு பகுதியில் மிகுசூட்டுடன் கூடிய வீக்கமேற் படும். இதனாலேற்படும் அழற்சியே தாபிதம் என்று, சா.அக. கூறும்.]

பதினைந்து வகை தாபிதம் வருமாறு:

1. *மீயதியழற்சி;* one in which the process is active.
2. *இணைக்குந்தாபிதம்;* one promoting the union of cut surfaces.
3. *சளித்தாபிதம்;* one marked by discharge of mucous.
4. *இழுக்குத்தாபிதம்;* inflammation of long duration.
5. *பரவியதாபிதம்;* one that is spread over a large area.
6. *ஒழுக்குத்தாபிதம்;* one in which promient exudation is present.
7. *வலித்தாபிதம்;* one attended with great irritation.
8. *சூலைத்தாபிதம்;* that which is due to gout.
9. *ஊதைத்தாபிதம்;* one due to exposure to chillness.
10. *ஊனொழுக்குத் தாபிதம்;* one that produces an exudation of serum.
11. *தனித்தாபிதம்;* one which is withoutpus or other products.
12. *நச்சுத்தாபிதம்;* that which is caused by poison.
13. *காயத்தாபிதம்;* one that is caused by injury.
14. *சீழ்கொள்தாபிதம்;* one which is characterised by the formation of pus.
15. *அழுகற்றாபிதம்;* one that is followed by decomposition or rottenness inflammation.

தாபியாக்கணம் *tāpiyākkaṇam,* பெ. (n.) *காட்டுத்துளசி;* wild basil *(சா. அக.).*

தாபிலிகை *tāpiligai,* பெ. (n.) *இலைக்கள்ளி;* leaf spurge *(சா. அக.).*

தாபினிமுத்திரை *tāpiṉi-muttirai,* பெ. (n.) தாபனமுத்திரை (சங்.அக.) பார்க்க ; see *tābaṉa-muttirai.*

[தாபினி + முத்திரை.]

தாம்[1] *tām,* ப.பெ. (pron.) *1. அவர்கள்;* they. "தாரமார் புத்திரரார் தாம் தாமாரே" *(தேவா. 523:10).* தாம் சொன்னதை உறுதி செய்தனர். **2. மரியாதை குறிக்கும் முன்னிலைச் சொல்;** you, a term of respect. "தாமென்ன சொன்னீர்கள்?" **3. முதல் வேற்றுமையில் பன்மைப்பெயரைச் சார்ந்து வரும் சாரியை;** particle suffixed to plural nouns of any person in the nominative case for emphasis. "அவர்தாம் வந்தார்".

[தம் → தாம் = தாம் என்பது படர்க்கைப் பன்மையைக் குறிக்கும் உருபேற்ற வடிவமாகும். "ஆ" என்னும் சேய்மைச் சுட்டடியினின்று பிறந்துள்ள, தான், தாம் என்னும் படர்க்கைப்பெயர்கள், 'அவன்', 'அவள்' முதலிய ஐம்பாற்சுட்டுப் பெயர்கள் தோன்றியபின், தற்சுட்டுப் பெயர்களாய் (Reflexive Pronouns) மாறிவிட்டன (த.வ. 135)]

தாம்[2] *tām,* இடை (part.) அசைநிலை (நன். 441); an expletive, as in வருவர்தாம்.

[தம் → தாம்.]

தாம்[3] *tām,* பெ. (n.) தாகம்; thirst. "கடுந்தாம் பதிபு" (கலித். 12, 5).

[தாகம் → தாம். "க" இடைக்குறை.]

தாம்பணி *tāmbaṇi,* பெ. (n.) மாடுகளை வரிசையாகப் பிணைக்கும் நீண்டகயிறு (இ.வ.); tether, halter.

[தாம்பு + அணி = தாம்பணி. தாம்பு = கயிறு. சூடடிக்கும்போது, மாடுகளை வரிசையாகப் பிணைக்கும் கயிறு: ஏர் உழவின்போது, நுகத்தடி நுனிப்பகுதியினை எருதுடன் இணைக்கும் கயிறு]

தாம்பம் *tāmbam,* பெ. (n.) ஓர் கடல் மீன்; a sea fish (சா.அக.).

தாம்பரம் *tāmbaram,* பெ. (n.) தாமிரம் (பதார்த்த. 1170) பார்க்க; see *tāmiram.*

[தும்பரம் → தம்பரம் → தாம்பரம்]

தாம்பன்கோலா *tāmbaṉ-kōlā,* பெ. (n.) ஓர் கோலா மீன் வகை; a kind of fish.

[தாம்பன் + கோலா.]

தாம்பாலம் *tāmbālam,* பெ. (n.) ஒரு வகைச் சணல்; a kind of hemp (சா.அக.).

தாம்பாளம் *tāmbāḷam,* பெ. (n.) ஒருவகைத் தட்டு; salver of a large size. "தளிகை காளாஞ்சி தாம்பாளம்" (பிரபோத. 11:31).

தெ. தாம்பாலாமு; க. தாம்பால

[தாம்பாலம் → தாம்பாளம்.]

தாம்பிகம் *tāmpigam,* பெ. (n.) இடம்பம் (இ.வ.); ostentation.

தாம்பிகன் *tāmpigaṉ,* பெ. (n.) மூட மருத்துவன்; quack, empiric (சா.அக.).

தாம்பிகவைத்தியம் *tāmpiga-vaittiyam,* பெ. (n.) மூடமருத்துவம்; quackery (சா.அக.).

தாம்பிஞ்சம் *tāmpiñjam,* பெ. (n.) 1. ஆமணக்கு; castor plant. 2. பச்சிலை மரம்; acheen leaf. pogoste monpatchouli alias Origanum indicum (சா.அக.).

தாம்பியம் *tāmbiyam,* பெ. (n.) பீச்சுங்குழல்; syringe, piston (சா.அக.).

தாம்பிரக்களங்கு *tāmpira-k-kaḷaṅgu,* பெ. (n.) செம்பு துட்டுக்கு வேளைச்சாறு விட்டு அரைத்து, அரிதாரத்தைப் பூசி, அதையே கவசம் செய்து, வெள்ளீயத் தகட்டைச்சுற்றி சீலைமண் செய்து, புடமிட்டெடுத்த வெண் பொடி; yellow orpiment is ground with the juice of cleome pentaphylla and smeared thickly all over a purified copper coin or plate and then it is covered by tin foils. Then it is sealed with earth smeared cloths, dried and submitted to puttam (heat) a white powder will obtained (சா. அக.).

[தாமிரம் + களங்கு]

தாம்பிரக்குருசெயநீர் *tāmbira-k-kuru- seyanīr,* பெ. (n.) புளியம் புறிணியைச் சாம்பலாக்கி, பிறகு நீரிலிட்டு தெளிவிறுத்து, அதைக் காய்ச்சி உப்பெடுத்து நவச்சாரக் கட்டிக்குக் கவசம்செய்து, புடமிட்ட பற்பத்தை பனியில்வைத்து உண்டான செயநீர்; salt extracted from the ash of tamarind bark is smeared over a limp of salammoniac and calcined. This calcined powder is exposed to dew and a pungent liquid is obtained and this is called tāmbira-kuru-šeyanīr (சா. அக.).

[தாம்பிரக்குரு + செயநீர்.]

தாம்பிரகம் *tāmbiragam,* பெ. (n.) செம்பு; copper (சா. அக.).

[தாம்பிரம் → தாம்பிரகம்]

தாம்பிரகருப்பம் *tāmbira-karuppam,* பெ. (n.) துரிசு; blue vitriol-copper sulphate (சா. அக.).

[தாம்பிரம் + கருப்பம்.]

தாம்பிரகாரன் *tāmbira-kāraṉ,* பெ. (n.) செம்பு கொட்டி (யாழ்.அக.); coppersmith.

[தாம்பிரம் + காரன். 'காரன்' உடைமைப் பெயரீறு.]

தாம்பிரகூடம் *tāmbira-kūdam,* பெ. (n.) 1. செம்பு மலை; copper mountain. 2. புகையிலை; tobacco - nicotiana tobaccum *(சா. அக.).*

[தாம்பிரம் + கூடம்.]

தாம்பிரக்கோல் *tāmbira-k-kōl,* பெ. (n.) கண் நோய்களுக்கு மருந்திடச் செம்பால் செய்த, நீள் கம்பி; a long copper rod made by copper to apply medicine for eyes *(சா. அக.).*

[தாம்பிரம் + கோல்]

தாம்பிரசங்கம் *tāmbiraśaṅkam,* பெ. (n.) இரும்பு; iron *(சா. அக.).*

[தாம்பிரம் + சங்கம்]

தாம்பிரசத்துமூலி *tāmbira-śattu-mūli,* பெ. (n.) செம்புசத்துமூலி பார்க்க; see *sembuśattu- mūli (சா. அக.).*

[தாம்பரம் + சத்து + மூலி]

தாம்பிரசத்துரு *tāmbira-śatturu,* பெ. (n.) சாலாங்க செய்நஞ்சு; a kind of arsenic *(சா. அக.).*

[தாம்பிரம் + சத்துரு.]

தாம்பிரசபை *tāmbira-śabai,* பெ. (n.) (தாமிரத்தால் வேய்ந்த அரங்கம்) தாமிரசபை பார்க்க; see *tāmira-sabai.*

[தாம்பிரம் + சபை]

தாம்பிரசவ்வு *tāmbira-śavvu,* பெ. (n.) கருவுருவைக் கவர்ந்துள்ள 7 சவ்வில், 4வது சவ்வு; the fourth of the seven membranes with which an embryo is covered *(சா. அக.).*

[தாம்பிரம் + சவ்வு]

தாம்பிரசிந்தூரம் *tāmbira-śindūram,* பெ. (n.) செம்பைக் கொண்டு அணியமாக்கப்படும் ஒரு சிவப்புப்பொடி; calcined red oxide of copper *(சா. அக.).*

இது, செம்பின் களிம்பு நீக்கி, தூய்மை செய்து, பிறகு மருந்து மூலிகைகளைச் சேர்த்துப் புடமிட்டெடுப்பது. இதனால் குட்டம் முதலிய தோல்நோய்கள் அகன்று உடல் பொன்னிறமாகும் என்று, சா.அக. கூறும்.

[தாம்பிரம் + சிந்தூரம்]

தாம்பிரசிலாசத்து *tāmbira-śilāsattu,* பெ. (n.) நீலநிற செம்புக்கலவை மருந்து; a blue colour copper medicine *(சா.அக.).*

[தாம்பிரம் + சிலாசத்து]

தாம்பிரசுத்தி *tāmbira-śutti,* பெ. (n.) 1. செம்பின் களிம்பை நீக்குவது; removing the verdigris from copper. 2. புடமிடுவதற்கு முன் மருத்துவ முறைப்படி மருந்து மூலிகைகளைக் கொண்டு செய்யும் தூய்மை; cleaning or purifying copper before calcining it. 3. வேதியியல் முறையில் செம்பினின்று களிம்பை நீக்குவது; removing the verdigris from copper by alchemical process *(சா.அக.).*

[தாம்பிரம் + சுத்தி]

தாம்பிரசூடம் *tāmbira-śūḍam,* பெ. (n.) 1. சேவல் (யாழ்.அக.); cock. 2. நடுவிரலுஞ் சுட்டு விரலும் பெருவிரலும், தம்மில் நுனியொத்துக் கூடி வளைந்து, சிறுவிரலும் அணிவிரலும் முடங்கி நிமிரும், இணையா வினைக்கை வகை (சிலப். 3: 18, உரை); (Nāṭya) a gesture with one hand in which the thumb, the forefinger and the middle finger are joined and the other two fingers are held slightly bent, one of 33 iṇaiyāviṉaikkai *(செ. அக.).*

[தாம்பிரம் + சூடம்]



தாம்பிரப்பச்சை *tāmbira-p-paccai,* பெ. (n.) செம்பின் பச்சை நிறமான களிம்புள்ள, ஓர் வகைத்தாது; a mineral resembling the verdigris of copper *(சா. அக.).*

[தாம்பிரம் + பச்சை.]

தாம்பிரபத்திரம் *tāmbira-pattiram,* பெ. (n.) செப்புப்பட்டயம் *(யாழ்.அக.);* copper-plate grant.

[தாம்பிரம் + பத்திரம்]

தாம்பிரபற்பம் *tāmbira-paṟpam,* பெ. (n.) தாமிரப்பொடி பார்க்க; see *tamira-p-poḍi (சா.அக.).*

[தாம்பிரம் + பற்பம்]

தாம்பிரபன்னி *tāmbira-paṉṉi,* பெ. (n.) தாமிரபருணி[1] (பதார்த்த. 25) பார்க்க; see *tamira-paruṇi*[1].

[தாம்பிரம் + பன்னி.]

தாம்பிரபிரியம் *tāmbira-piriyam,* பெ. (n.) செருப்படை; a medicinal prostate plant *(சா. அக.).*

[தாம்பிரம் + பிரியம்]

தாம்பிரபுட்பி *tāmbira-puṭpi,* பெ. (n.) 1. மந்தாரை; variegated mountain ebony. 2. கழற்கொடி; bonduc creeper Guilandina bonducella alias Caesalpinia bonducella *(சா. அக.).*

[தாம்பிரம் + புட்பி]

தாம்பிரம் *tāmbiram,* பெ. (n.) செம்பு; copper. தாமிரம் பார்க்க; see *tāmiram (சா.அக.).*

ம. தாம்ர

[தும்பரம் = சிவப்பு. துமர் → தமர் = சிவப்பு. தமர் → தமரம் → தாமரம் → தாம்பிரம். செங்காவி வண்ணத்தில் உள்ள கலப்பு மாழை.]

தாம்பிரமண் *tāmbira-maṇ,* பெ. (n.) 1. தாமிர மண் பார்க்க; see *tāmira-maṇ.* 2. செம்மண்; red earth. 3. செங்காவி; red ochre *(சா.அக.).*

[தாம்பிரம் + மண். தாமிரத்தைப் போன்ற செந்நிறமுடையது]

தாம்பிரமலை *tāmbira-malai,* பெ. (n.) செம்பு மலை; copper - mountain *(சா.அக.).*

[தாம்பிரம் + மலை]

தாம்பிரமூலி *tāmbira-mūli,* பெ. (n.) 1. பெருங் காஞ்சொறி; scorpion leaf. 2. செம்பு அடங்கிய மூலிகைகள்; plants containing copper *(சா.அக.).*

[தாம்பிரம் + மூலி]

தாம்பிரவண்ணமன் *tāmbira-vaṇṇa-maṉ,* பெ. (n.) செம்புமணல்; sand mixed copper *(சா.அக.).*

[தாம்பிரவண்ணம் + மன்]

தாம்பிரவயச்சத்துமூலி *tāmbira-vaya-c-cattumūli,* பெ. (n.) 1. சிறுகீரை, அழவணை; Amaranthus campestris. 2. நிலச்சருக்கரை; ipomea digitata Henna. 3. கருந்துளசி; ocimum sanctum (rigrum) *(சா.அக.).*

தாம்பிரவருணி *tāmbira-varuṇi,* பெ. (n.) தாமிரபருணி (இவ.) பார்க்க; see *tāmira-paruṇi.*

தாம்பிரவல்லி *tāmbira-valli,* பெ. (n.) 1. இனிப்புக்கோவை; a kind of sweet caper unidentified. 2. மஞ்சிட்டி; copper creeper. 3. தண்ணீர்விட்டான் கிழங்கு; tuberous root of Asparagus *(சா. அக.).*

[தாம்பிரம் + வல்லி]

தாம்பிரவன்னி *tāmbira-vaṉṉi,* பெ. (n.) தாமிரபருணி[1] பார்க்க; see *tamira-paruṇi (செ. அக.).*

தாம்பிரவேதை *tāmbira-vēdai,* பெ. (n.) நாகம்; zinc *(சா. அக.).*

[தாம்பிரம் + வேதை]

தாம்பிராட்சம் *tāmbirāṭcam,* பெ. (n.) குயில்; Indian cuckoo *(சா. அக.).*

தாம்பிராட்சன் *tāmbirāṭcaṉ,* பெ. (n.) தாம்பிராட்சம் பார்க்க; see *tāmbirāṭcam.*

[தாம்பிராட்சம் → தாம்பிராட்சன்.]

தாம்பிரை *tāmbirai,* பெ. (n.) தாமரை; lotus. "சிவந்தன தாம்பிரைச் செங்கண்" *(கம்பரா. வருண. 7).*

[தாமரை → தாம்பிரை.]

தாம்பு[1] *tāmbu,* பெ. (n.) 1. *கயிறு (பிங்.);* rope. 2. *தாமணிக்கயிறு;* rope to tie cattle, tether. "கன்றெல்லாந் தாம்பிற் பிணித்து" *(கலித். 111).* 3. *ஊஞ்சல் (நன். 411, சங்கரநமச்);* swing.

க. தாவு

[தடம் → தடம்பு → தாம்பு.]

தாம்பு[2] *tāmbu,* பெ. (n.) அணைக்கட்டில் நீர் செல்லுதற்கென விட்ட வழி (நாஞ்.); vent-way in a dam.

[தூம்பு → தாம்பு]

தாம்புக்கயிறு *tāmbu-k-kayiṟu,* பெ. (n.) *வடம்;* big-rope.

[தாம்பு[1] + கயிறு]

தாம்புந்தோண்டியுமா-தல் *tāmbun-tōṇḍi-y-um-ā-,* 6 செ.கு.வி. (v. i.) இறைக்கும் கயிறும் குடமும் போன்று, மிக ஒற்றுமையாதல் *(இ. வ.);* lit., to be like drawing rope and pitcher; to be familiar, intimate, hand and glove with.

[தாம்பு + உம் + தோண்டியுமா-.]

தாம்புந்தோண்டியுமாயிழு-த்தல் *tāmbun-toṇḍi-y-um-āy-iḻu-,* 4 செ.கு.வி. (v. i.) *மூச்சுத் திணறுதல் (தஞ்சை.);* to struggle to come out, as breath.

[தாம்புந்தோண்டியுமாய் + இழு-.]

தாம்புலோவல்லி *tāmbulō-valli,* பெ. (n.) *மஞ்சாடிமரம் (மலை.);* red-wood.

தாம்பூரக்கட்டி *tāmpūra-k-kaṭṭi,* பெ. (n.) 1. *செம்புக்கட்டி;* lump of copper. 2. *தாம்பூரச் சிகை பார்க்க;* see *tampūra-c-cigai.*

[தாம்பூரம் + கட்டி]

தாம்பூரக்களங்கு *tāmbūra-k-kaḷaṅgu,* பெ. (n.) *தாம்பிரக்களங்கு பார்க்க;* see *tāmbira-k-kaḷaṅgu (சா. அக.).*

செம்புதுட்டுக்கு அரிதாரத்தை வேளைச்சாறு விட்டு, இரண்டுதடவை துட்டுக்குத் தடவி உலர்த்திப் பிறகு, வெள்ளீயத் தகட்டைச் சுற்றிக் கவசம்செய்து, சீலைமண் செய்து, புடமிட்டு எடுத்த களங்கு என்று, சாஅக. கூறும்.

தாம்பூரகி *tāmbūragi,* பெ. (n.) *வாழை;* plantain tree *(சாஅக.).*

தாம்பூரச்சிகை *tāmbūra-c-cigai,* பெ. (n.) ஒன்பான் மாழையை வேறுபடச் செய்யும், ஓர் அரிய மூலிகை; an unknown or a rare drug capable of acting chemically on nine metals in gernal *(சா. அக.).*

[தாம்பூரம் + சிகை]

தாம்பூரபற்பம் *tāmbūra-paṟpam,* பெ. (n.) *தாமிரபற்பம் பார்க்க;* see *tāmira-paṟbam (சா. அக.).*

[தாம்பூரம் + பற்பம்.]

தாம்பூரமல்லி *tāmbūra-malli,* பெ. (n.) *மஞ்சிட்டி;* copper creeper - Rubia *(சாஅக.).*

[தாம்பூரம் + மல்லி.]

தாம்பூரம் *tāmbūram,* பெ. (n.) *தாமிரம் பார்க்க;* see *tāmiram (சாஅக.).*

தாம்பூரவல்லம் *tāmbūra-vallam,* பெ. (n.) *வாழை (மலை);* plantain tree, musa.

[தாம்பூலம் + வல்லம்]

தாம்பூரி *tāmbūri,* பெ. (n.) *கொடிநாவல்;* jammoon-creeper *(சாஅக.).*

தாம்பூலக்கமலம் *tāmbūla-k-kamalam,* பெ. (n.) *தாம்பூலக்கன்னி பார்க்க;* see *tāmpūla-k-kaṉṉi (சாஅக.).*

[தாம்பூலம் + கமலம்.]

தாம்பூலக்கன்னி *tāmbūla-k-kaṉṉi,* பெ. (n.) *வெற்றிலை;* betel leaf.

[தாம்பூலம் + கன்னி]

தாம்பூலங்கொடு-த்தல் *tāmbūlaṅ-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. *வெற்றிலை பாக்களித்து வரவேற்பு செய்தல்;* to offer betel, as a courtesy. 2. *வெற்றிலை பாக்களித்துக் கூட்டங் கலைத்தல்;* to give betel, as a signal for the dispersion or dismissal of a company. 3. *வேலையினின்றும் நீங்க இசைவு தருதல்;* to dispense with one's services.

[தாம்பூலம் + கொடு-.]

தாம்பூலசருவணம் *tāmbūla-šaruvaṇam,* பெ. (n.) மணவிழா முடிவில் மணமக்கள் முதன் முதலில் தாம்பூலம் போட்டுக் கொள்ளும் நிகழ்வு; finishing ceremony of a marriage, when betel leaf is first chewing the bridegroom and bride.

[தாம்பூலம் + சருவணம்]

தாம்பூலதாரணம் *tāmbūla-tāraṇam,* பெ. (n.) வெற்றிலை பாக்குப் போடுகை; chewing betel and areca. "தாம்பூல தாரண மிலாததே வருபூர்ண சந்த்ரனிகர் முகசூனியம்" (அறப். சதா. 34).

[தாம்பூலம் + தாரணம்]

தாம்பூலபலம் *tāmbūla-palam,* பெ. (n.) 1. பாக்கு; arecanut. 2. வெற்றிலை; betel leaf (சா.அக.).

[தாம்பூலம் + பலம்]

தாம்பூலம் *tāmbūlam,* பெ. (n.) வெற்றிலைப் பாக்கு; betal leaves and areca nuts. "தக்கிணை தாம்பூலத் தோடளித்து (சேதுபு. சேதுபல. 91).

[தம்பலம் → தாம்பூலம்.]

தாம்பூலம்பிடி-த்தல் *tāmbūlam-piḍi-,* 4 செ. கு. வி. (v. i.) தீயஎண்ணத்துடன் கெடுதி செய்யப் பார்த்தல்; to resolve upon covertly doing one an injury or ruining one. 2. தாம்பூலங்கொடு பார்க்க; see *tambūla-ṅ-koḍu.*

[தாம்பூலம் + பிடி-]

தாம்பூலம்வை-த்தல் *tāmpūlam-vai-,* 4 செ.கு.வி. (v.i.) திருமணத்திற்கும், பிற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும், ஒவ்வொருவர் வீட்டிற்கும் சென்று வெற்றிலைபாக்கு வைத்து அழைத்தல்; to invite to a wedding by the distribution of betel. 2. கமுக்கச் செய்திகளை வெளியாக்குதல்; to give publicity to a confidential matter.

[தாம்பூலம் + வை-.]

தாம்பூலமாதா *tāmbūla-mādā,* பெ. (n.) தாம்பூலக்கன்னி பார்க்க; see *tāmbūla-k-kanni* (சா. அக.).

தாம்பூலமாற்று-தல் *tāmbūla-māṟṟu-,* 5 செ.கு.வி. (v. i.) திருமணம் உறுதி செய்தல்; to settle a marriage proposal by exchanging betel-nuts.

[தாம்பூலம் + மாற்று-.]

தாம்பூலவதனி *tāmbūla-vadaṉi,* பெ. (n.) 1. பாக்கு; arecanut. 2. சுண்ணாம்பு; slaked lime (சா. அக.).

தாம்பூலவல்லி *tāmbūla-valli,* பெ. (n.) வெற்றிலைக்கொடி (சூடா); betel pepper.

[தாம்பூலம் + வல்லி]

தாம்பூலவல்லிகா *tāmbūla-valligā,* பெ. (n.) கருங்கொடி; black creeper (சா.அக.).

தாம்பூலவாககன் *tāmbūla-vāgagaṉ,* பெ. (n.) அடைப்பைக்காரன்; வெற்றிலை பாக்கு மடித்துக் கொடுக்கும் பணியாள் (யாழ்.அக.); valet employed to give betel and areca for chewing.

[தாம்பூலம் + வாககன்]

தாம்பூலி *tāmbūli,* பெ. (n.) 1. தாம்பூல வல்லி பார்க்க; see *tāmbūla-valli.* 2. கொடித்துத்தி; mallow creeper.

தாம்பூலிக்கொடி *tāmbūli-k-koḍi,* பெ. (n.) வெற்றிலைக்கொடி; betel vine (சா.அக.).

[தாம்பூலி + கொடி]

தாம்பூலிகன் *tāmbūligaṉ,* பெ. (n.) வெற்றிலை வணிகன் (யாழ்.அக.); betel dealer.

[தாம்பூலி + அன் → தாம்பூலிகன்]

தாம்பூலோவல்லி *tāmbūlō-valli,* பெ. (n.) மஞ்சாடி, ஆனைக் குன்றிமணி; adananthera pavonina (சா.அக.).

தாம்போகி *tām-bōgi,* பெ. (n.) 1. ஆற்றின் குறுக்கணையில் தடையின்றி நீர் ஓடுவதற்கு உள்ள பகுதி; open vent in a masonry dam across a stream or river. 2. ஏரியில் மிகைநீர் செல்லும் கலிங்கல்; surplus water of a lake. 3. மழைநீர் வழிந்து செல்லும் வகையில் ஓடையின் குறுக்காகச் செல்லும் சாலையின் கட்டுமானப் பகுதி; cause way in a road at the stream portion.

[தாம்பு + போகு → தாம்போகி]

தாமக்கிரந்தி *tāma-k-kirandi*, பெ. (n.) கரந்துரைதற் காலத்தில் நகுலன் வைத்துக் கொண்ட பெயர்; name assumed by Nagulan when he lived in cognito. "கிளைபடுபுரவி புரந்திடுந் தாமக்கிரந்தியாம் பெயர்புனை நகுலற்கு" *(பாரத. நாடுக. 26)*

தாமசி *tāmaci*, பெ. (n.) நோயுண்டாக்கும் பேய்; a damon causing diseases *(சா.அக.)*.

தாமணி[1] *tāmaṇi*, பெ. (n.) மாடுகளைக் கட்ட உதவும் கவையுள்ள தாம்புக்கயிறு; long line of rope with halters attached for fastening cattle. *2.* மாடு, கன்றுகளின் கழுத்திற் கட்டியிருக்கும் தும்பு; headstall of a halter. "கன்றுகளைக் கட்டின தாமணியை யுடைய நெடிய தாம்புகள்" *(பெரும்பாண். 244 உரை)*. *3.* கயிறு (சூடா.); rope, string. *4.* கப்பற்பாயின் பின்பக்கத்துக் கயிறு; sheet in boat tackle.

[தாம்பு + அணி → தாம்பணி → தாமணி]

தாமணி[2] *tāmaṇi*, பெ. (n.) வலம்புரிக்காய்; tursted horn *(சா.அக.)*.

தாமணிச்சுழி *tāmaṇi-c-cuḻi*, பெ. (n.) மாடுகளின் முதுகுத்தண்டின், இருபக்கத்து முள்ள சுழிகள் *(அபி.சிந். 787)*; curly marks of cattle on the two sides of the spinal column.

[தாமணி + சுழி]

தாமணிப்பினையல் *tāmaṇi-p-piṉaiyal*, பெ. (n.) சூட்டடிக் கதிர்களைக் கடாவிட்டுழக்குவதற்கு 5 அல்லது 7 மாடுகளை, ஒரு கயிற்றில் இணைக்கும் பிணைப்பு (இ. வ.); yoking of five or seven bulls in a long rope for threshing corn.

[தாமணி + பிணையல்]

தாமத்தர் *tāmattar*, பெ. (n.) திருக்குறளின் உரையாசிரியர்களுள் ஒருவர்; a commentator of Thirukkuraḷ. "தருமர் மணக்குடவர் தாமத்தர்" *(தொண்டை. சத. 40, மேற்கோள்)*.

தாமதப்பல்லி *tāmada-p-palli*, பெ. (n.) தொட்டகாரியம் விரையில் முடியாது என்பதைக் குறிக்கும் பல்லிச்சொல் (வின்.); chirping of lizard believed to indicate delay, obstruction or misfortune.

[தாமதம் + பல்லி]

தாமநிதி *tāmanidi*, பெ. (n.) கதிரவன் *(யாழ்.அக.)*; Sun as the treasure of light.

தாமநூல் *tāma-nūl*, பெ. (n.) ஆயுள்வேதம்; medical sciences. "தாம நூலொரு மருத்துவன் றருதிர்" *(உபதேசகா. சிவத்துரோ. 330)*.

தாமப்பல்கண்ணனார் *tāma-p-pal-kaṇṇaṉār*, பெ. (n.) கழகக் காலப் புலவர்; Saṅgam poet. *(இவர் புறநா. 43வது பாடல் பாடியுள்ளார்)*.

தாமம்[1] *tāmam*, பெ. (n.) *1.* கயிறு (பிங்.); rope, cord, string. *2.* தாமணி; line to tie cattle. *3.* பூமாலை (பிங்.); wreath, flower garland, chaplet, especially worn on shoulders; "வண்டிமிருந் தாம வரைமார்ப" *(பு.வெ. 12, இருபாற். 3)*. *4.* வடம் (பிங்.); necklace of beads; string, as of pearls. "முத்துத் தாம முறையொடு நாற்றுமின்" *(மணிமே. 1: 49)*. *5.* பெண்களின் இடுப்பில் பூணும் அணி; 16 அல்லது 18 கோர்வையுள்ளது (வின்.); woman's waist ornament of 16 or 18 strings of beads. *6.* ஒழுங்கு; row, line; "தடமலர்த் தாம மாலை" *(சீவக. 1358)*. *7.* பூ (பிங்.); flower. *8.* முடியின் ஐந்து உறுப்புகளுள் ஒன்று (திவா.); an ornamental part of a crown, one of the five muḍi-y-uruppu. *9.* கொன்றை (பிங்.); senna.

[தமம் → தாமம்]

தாமம்[2] *tāmam*, பெ. (n.) யானை (சூடா.); elephant.

தாமம்[3] *tāmam*, பெ. (n.) *1.* இடம் (அக.நி.); position, place. *2.* துறக்கம்; final bliss. "விண்முழுது மெதிர்வரத் தன்றாம மேவி" *(திவ்.பெருமாள். 10: 10)*. *3.* நகரம் (பிங்.); city. *4.* மருதநிலத்தூர் (சூடா.); town in agricultural tract. *5.* போர்க்களம் (சூடா.); battle-field. *6.* மலை (சூடா.); mountain. *7.* ஒளி; lustre brilliancy, light. *8.* புகழ் (வின்.); fame, celebrity. *9.* சந்தனம் (சூடா.); sandal. *10.* உடல் (வின்.); body. *11.* பிறப்பு (வின்.); birth.

[தள் → தார் → தா → தாமம்]

தாமரக்குப்பம் *tāmara-k-kuppam*, பெ. (n.) தாமரைக்குப்பம் பார்க்க; see *tāmarai-k-kuppam.*

[தாமரை → தாமரம் + குப்பம்]

தாமரங்காய் *tāmaraṅ-gāy*, பெ. (n.) ஈரல் குலை; the liver, as resembling the pericarp of lotus.

[தாமரை + காய். தாமரையின் காயைப் போன்றது]

தாமரங்கோட்டை *tāmaraṅ-kōṭṭai* பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள ஓர் ஊர்; a village in Paṭṭukōṭṭai taluk in Tañjore Dt.

கோட்டை என்ற சொல், ஈறாக வரும் ஊர்கள் தஞ்சை மாவட்டத்தில் 40 இருக்கின்றன. உண்மையிலேயே கோட்டை இருந்த ஊரும் இருந்துள்ளது. கோட்டை இல்லாமலேயே இப்படியும் வழங்கப்பெறுகிறது.

[தாமரை + கோட்டை]

தாமரசம் *tāmarašam*, பெ. (n.) 1. செந்தாமரை *(மலை.)*; red lotus. 2. பொன் *(யாழ்.அக.)*; gold. 3. செம்பு *(யாழ்.அக.)*; copper.

தாமரப்பாக்கம் *tāmara-p-pākkam*, பெ. (n.) செங்கை மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; a village in Cheṅgalput district.

பாக்கம் என்ற பொதுக்கூறு அடிப்படையில், பல ஊர்கள் இருக்கின்றன. இவை செடி, கொடியின் அடிப்படையிலேயே வழங்கப் படுகிறது.

[தாமரை + பக்கம் → தாமரைப்பாக்கம்]

தாமரம் *tāmaram*, பெ. (n.) 1. நீர்; water. 2. நெய்; ghee.

[தரு → தா → தாமரம்]

தாமருபுட்பி *tāmaruputpi*, பெ. (n.) பாதிரி; trumpet flower tree *(சா.அக.)*.

தாமரை *tāmarai*, பெ. (n.) 1. கொடிவகை; lotus. "தாமரைக் கண்ணான் உலகு" *(குறள், 1103)*. 2. தாமரை மலரின் இதழ்களை ஒப்ப நிறுத்தப்பட்ட காலாட்படை அமைப்பு; array of an army arranged in the form of a lotus flower. 4. ஒரு பேரெண் *(தொல். எழுத்து. 393, உரை)*. கோடி கோடி; a large number. (1,00,00,00,00,00,00,000). 5. புலி *(அகநி.)*; tiger. 6. எச்சிற்றழும்பு (இ. வ.); ring-worm.

ம. தாமர; க. தாமரை, தாவரை; தெ. தாமர, தம்மி; து. தாமரெ, தாவரெ; குட. தாவுரை, தாவரெ; குவி. தம்பரி; பர். தாமர்

மறுவ. திருமாலுந்தி, எல்லி, மரை, முளரி, முண்டகம், தண்டுத்துளைத்தாசி

[தும் = செம். தும் → தும்பு → துப்பு = சிவப்பு, பவழம், அரக்கு. தும்பு → தும்பரம் = சிவப்பு, சிவப்பான அத்திப்பழம். தும் → (துமர்) → துவர் = சிவப்பு, பவழம், காவி, துவரை, துவர்ப்பு (காசுக்கட்டி). துவர்த்தல் = சிவத்தல், துவர்ப்புச் சுவையாதல். துவர் → துவரை = செம்பயறு, செப்புக்கோட்டை நகர். துவர் → துகிர் = பவழம். துமர் → தமர் → தாமரம் = செம்பு. தாமரம் தாமரை (வ.வ.8) ஒருகா. துமர் → தமர் → தமரை → தாமரை]

தாமரை நீரில் விளையும். இதன் இலைக் காம்பை விட, பூவின் காம்பு நீளமும் சதைப் பற்றுமிக்கது. தாமரையின் அடிப்பாகம் மிகுதியான இழைகளுடன் கூடியது. கொட்டைக்குள் ஒன்று அல்லது இரண்டு விதைகள் அமைந்திருக்கும். தாமரைப்பூ, பெரிதாகவும், சிவப்பு, நீலம், வெள்ளை வண்ணத்தில் காணப்படும். ஆண்டுதோறும் தாமரைப்பூ, பூக்கும். அகலமான தாமரை யிலை, உணவு உண்பதற்குப் பயன்படும். தாமரைமலரில் வெண்மையை விடச் சிவப்புப்பூ மணத்துடன் திகழும். தாமரை விதைகள் பட்டாணியைவிட இருமடங்கு பருமனாயும், கடினமாயு மிருக்கும். தாமரைத் தண்டு, பூக்காம்பு முதலானவை, தண்ணீரின் மேற்பகுதியில் காணப்படும்.

தாமரைப்பூவினைப் புலவர், பெண்களின் முகத்துடன் ஒப்பிட்டுப் பாடும் மரபு, கழககால இலக்கியம் முதல் இன்று வரை காணப்படுகிறது.

"தாமரை பூத்த முகத்தினிலே முகத்தாமரை
தோன்ற முகிழ்கிடுவாள்"

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடுவார்.

மருந்துவக்குணம்: தாமரைப்பூக்கள், விதைகள், கிழங்குகள் அனைத்தும் மருத்துவக்குணம் கொண்டவை. சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் மருந்தாகப் பயன்படுபவை. தாமரைக் காம்புகள் துவர்ப்பும், குளிர்ச்சியும் உள்ளவை. தாமரைத்தண்டு, இலை, பால் முதலானவை, சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவர்தம் வயிற்றுப்போக்கிற்கும் மருந்தாகும்.

தாமரைத்தண்டில் குளிர்பருகம் செய்து கோடையில் பருகினால், உடற்சூடு குறையும். தாமரைவிதைகள் அதிகமாகச் சிறுநீரை வெளியேற்றும். உடற்சூட்டைத் தணிக்கும். மிகுசுரம் வந்தவர், தாமரையிலையைப் பரப்பிப்படுத்தால் சுரம்குறையும். தாமரைத் தண்டும், இலைப்பாலும், செரியாமையைப் போக்கும் குணமுடையவை. தாமரைவேரை அரைத்துத் தோல்நோய்க்கு மேற்பூச்சிடலாம். தாமரை இலையும் கிழங்கும் உணவிற்கு உகந்தது. பொரித்தும், கூட்டு செய்தும், அனைவரும் உண்ணலாம்.

தாமரை வகைகள்

1. வெள்ளைத் தாமரை
2. சிவப்புத் தாமரை
3. நீலத் தாமரை
4. ஓரினத் தாமரை
5. மலைத் தாமரை
6. ஆகாசத் தாமரை
7. வட்டத் தாமரை
8. கற்றாமரை
9. நிலத் தாமரை
10. கடற்றாமரை
11. குளிர்தாமரை
12. அல்லித்தாமரை
13. மேட்டுத்தாமரை
14. முழுகுதாமரை
15. கிருட்டிணத்தாமரை
16. அந்தரத்தாமரை
17. அல்லித் தாமரை
18. மஞ்சள்தாமரை
19. ஈரிலைத்தாமரை
20. மூவிலைத்தாமரை

என்று சா.அக. கூறும்.

தாமரைக்கண்ணன் *tāmarai-k-kaṇṇaṉ,* பெ. (n.) **தாமரைக்கண்ணான்** பார்க்க; see *tāmarai-k-kaṇṇāṉ.* "தாமரைக்கண்ண னென் னெஞ்சி னூடே" *(திவ். திருவாய். 7. 3:1).*

ம. தாமரக்கண்ணன்

[தாமரை + கண்ணன்]

தாமரைக்கண்ணான் *tāmarai-k-kaṇṇāṉ,* பெ. (n.) **தாமரை போன்ற கண்களை உடையவன், திருமால்;** Thirumāl as lotus eyed. "தாமரைக் கண்ணா னுலகு" *(குறள், 1103).*

க. தாவரெ கண்ண

[தாமரை + கண்ணான்]

தாமரைக்கண்ணி *tāmarai-k-kaṇṇi,* பெ. (n.) **அவுரி;** indigo plant *(சா.அக.).*

தாமரைக்கல் *tāmarai-k-kal,* பெ. (n.) **கடலடியிற் கிடைக்கும் தாமரைப் பூ வடிவுடைய கல். இது எளிதில் உடையுந் தன்மையுள்ளது** *(நெல்லை);* a kind of stone in sea.

[தாமரை + கல்]

தாமரைக்காடை *tāmarai-k-kāḍai,* பெ. (n.) **ஒரு மருந்துப் பொருள்;** a medicinal drug *(சா.அக.).*

[தாமரை + காடை]

தாமரைக்காய் *tāmarai-k-kāy,* பெ. (n.) 1. **தாமரையின் கொட்டை;** pericarp of the lotus.

மறுவ. தாமரங்காய்

[தாமரை + காய்]

தாமரைக்கிழங்கு *tāmarai-k-kiḻaṅgu,* பெ. (n.) **தாமரையின் கிழங்கு;** balbous root of lotus *(சா.அக.).*

ம. தாமரக்கிழங்ஙு

[தாமரை + கிழங்கு]

இதனை உண்பதால், கண்ணுக்கு ஒளியும், குளிர்ச்சியும் கிடைக்கும். அன்றியும், தவளைச் சொறி, வயிற்றுக்கடுப்பு அகலும்.

தாமரைக்குப்பம் *tāmarai-k-kuppam,* பெ. (n.) **செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்;** a village in Cheṅgalput District.

[தாமரை + கும்பல் → குப்பல் → குப்பம்]

தாமரைக்கொட்டை[1] *tāmarai-k-koṭṭai,* பெ. (n.) **மகளிர் தலையணி வகை** *(இ. வ.);* a head ornament worn by women.

[தாமரை + கொட்டை]

தலையணி. தாமரைக் கொட்டை வடிவானது.

தாமரைக்கொட்டை[2] *tāmarai-k-koṭṭai,* பெ. (n.) **தாமரை விதைகளடங்கிய கொட்டை;** nut of the lotus containing seeds *(சா.அக.).*

[தாமரை + கொட்டை]

தாமரைச்சத்துரு *tāmarai-c-catturu,* பெ. (n.) பிறவி வைப்புநஞ்சு (மூ.அக.); a mineral poison.

[தாமரை + சத்துரு]

தாமரைச்சிறகி *tāmarai-c-ciragi,* பெ. (n.) நீர்வாழ் பறவை (வின்.); a kind of teal in fresh water lotus-tanks.

[தாமரை + சிறகி]

தாமரைச்சுருள் *tāmarai-c-curuḷ,* பெ. (n.) தாமரைவளையம் பார்க்க; see *tāmarai vaḷaiyam* (சா. அக.).

[தாமரை + சுருள்]

தாமரைச்செயல்பொற்பூ *tāmarai-c-ceyal-poṟpū,* பெ. (n.) தாமரை மலரின் வடிவமாகப் பொன்னல் செய்யப்பட்ட பூ; a kind of gold ornament like lotus flower. "ஸ்ரீ ராஜராஜ தேவர் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உடையார்க்குக் குடுத்த தாமரைச் செயல் பொற்பூ ஒன்று".

[தாமரை + செயல் + பொற்பூ = இது பொன்னணிகளுள் ஒன்று]

தாமரைச்செல்வி *tāmarai-c-celvi,* பெ. (n.) திருமகள்; Thirumagaḷ (Lakṣhmi).

[தாமரை + செல்வி = தாமரையில் உறைபவள்]

தாமரைச்சேயவள் *tāmarai-c-cēyavaḷ,* பெ. (n.) தாமரைச்செல்வி பார்க்க; see *tāmarai-c-celvi.*

[தாமரை + சேயவள்]

தாமரைத்தண்டு *tāmarai-t-taṇḍu,* பெ. (n.) தாமரைப்பூவின் அடிப்பாகம்; the stem or stalk of lotus (சா.அக.).

[தாமரை + தண்டு]

இதன் சாறு இதய நோய்களைப் போக்கும் என்று, சா.அக. கூறும்.

தாமரைத்தாது *tāmarai-t-tādu,* பெ. (n.) தாமரையின் பூந்தாது; pollen of the lotus flower (சா. அக.).

[தாமரை + தாது]

தாமரைநண்பன் *tāmarai-naṇban,* பெ. (n.) கதிரவன் (வின்.); Sun, as the friend of lotus.

[தாமரை + நண்பன்]

கதிரவன் வரும் காலைவேளையில் தாமரைப் பூ மலர்வதால், இப் பெயர் பெற்றது.

தாமரைநாதன் *tāmarai-nādan,* பெ. (n.) கதிரவன் (சிவப்.பிர.வெங்கையுலா. 40); Sun, as the lord of lotus.

[தாமரை + நாதன்]

கதிரவன் தோன்றியதும் மலர்வதால், தாமரையின் தலைவன் எனப்படுகிறது.

தாமரைநாயகன் *tāmarai-nāyagan,* பெ. (n.) தாமரைநாதன் பார்க்க; see *tamarai-nādan.* "சகட சக்கரத் தாமரை நாயகன்" (கந்தபு.காப்பு. 1).

[தாமரை + நாயகன்]

தாமரைநாளம் *tāmarai-nāḷam,* பெ. (n.) தாமரைத்தண்டு; stem of the lotus (சா.அக.).

[தாமரை + நாளம்]

தாமரைநூல் *tāmarai-nūl,* பெ. (n.) தாமரைத் தண்டின் நூல்; lotus fibre.

ம. தாமர நூல்; க. தாவரெ நூல்

[தாமரை + நூல்]

தாமரைநோய் *tāmarai-nōy,* பெ. (n.) உடம்பின் மேல்படரும் செம்படைகள்; a kind of ringworm marked by red patches (சா.அக.).

[தாமரை + நோய் = இதனால் உடம்பு தளரும்.]

தாமரைப்பருப்பு *tāmarai-p-paruppu,* பெ. (n.) தாமரைவித்தின் பருப்பு; the inner kernel of shelled seeds of lotus (சா.அக.).

மறுவ. தாமரைக் கொட்டை

[தாமரை + பருப்பு]

தாமரைப்பாசினி *tāmarai-p-paśiṉi,* பெ. (n.) அரிதாரம் (சங்.அக.); yellow orpiment.

[தாமரை + பாசினி]

தாமரைப்பீடிகை *tāmarai-p-pīḍigai,* பெ. (n.) புத்தரது திருவடிப்பீடம்; a raised stone-slab with lotus-petals carved on the sides and Buddha's feet on the top. "சுடரொளி விரிந்த தாமரைப் பீடிகை" (மணிமே. 3: 60).

[தாமரை + பீடிகை]

தாமரைப்புலம் *tāmarai-p-pulam,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; a village in Tañjore Dt.

[தாமரை + புலம்]

பயிரிகளின் பெயரில் ஊர் அமைதல், காணப் படுகிறது. தாமரை அதிகம் உடையதானால், இப் பெயர் பெற்றது.

தாமரைப்பூ *tāmarai-p-pū,* பெ. (n.) *1.* **தாமரைத் தண்டில் பூத்த இளஞ்சிவப்பு வண்ண இதழ்கள் கொண்ட மலர்;** lotus flower. *2.* **தண்ணீரைக் குறிப்பதற்காகப் பயன்படும் மலர்;** flower to represent water. *(சி.சி. 2, 68, மறைஞா.).* *3.* **வெண்டாமரை;** white lotus. *4.* **அல்லித்தாமரை;** red indian water-lily.

ம. தாமரப்பூ; க. தாவரெபூ

[தாமரை + பூ]



தாமரைப்பூந்தேன் *tāmarai-p-pūntēn,* பெ. (n.) **தாமரைப் பூவிலுள்ள தேன்;** honey from the lotus flower *(சா. அக.).*

[தாமரைப்பூ + தேன் → தாமரைப் பூந்தேன், கண்ணிலேற்படும் நோய்கட்கு, கைகண்ட மருந்து என்று, சா.அக. கூறும்]

தாமரைப்பொகுட்டு *tāmarai-p-poguṭṭu,* பெ. (n.) **தாமரைப் பூவினுள்ளிருக்குங் கொட்டை;** the pericarpium or seed vessel.

[தாமரை + பொகுட்டு]

தாமரைமணி *tāmarai-maṇi,* பெ. (n.) *1.* **தாமரை விதை** (மலை); lotus-seed. *2.* **தாமரை மணியாலாகிய மாலை;** a rosary of lotus-seeds. 'துளசி தாமரைமணி தோண்மேல்" *(பிபோத. 11: 11).*

[தாமரை + மணி]

தாமரைமுகை *tāmarai-mugai,* பெ. (n.) *1.* **மலராத தாமரைமொட்டு;** lotus-bud. *2.* **கொடிஞ்சி;** an ornamental stall in the form of a lotus-bud. "தேரில் வளைந்த தாமரை முகையினைக் கையாலே பிடித்து" *(கலித். 85, உரை).*

மறுவ. தாமரைமொட்டு

[தாமரை + முகை]

தாமரைமுள் *tāmarai-muḷ,* பெ. (n.) *1.* **தாமரைக் கொடியில் உள்ள கருக்கு;** thorns in the lotus stalk. *2.* **நாய் முள்ளைப் போன்ற ஒரு வகைத் தோல்நோய்;** a kind of skin disease attended with eruptions *(சா.அக.).*

[தாமரை + முள்]

தாமரைமொட்டு *tāmarai-moṭṭu,* பெ. (n.) *1.* **தாமரை மலருவதற்கு முன்னுள்ள நிலை;** lotus-bud. *2.* **நெஞ்சாங்குலை (இதயம்);** heart. "தாமரை மொட்டென்னு முள்ளிகறுத்துக் கொண் டுண்ணிரே" *(கலிங். 566, புதுப்.).* *3.* **மாலியர்களின் நெற்றிக்குறியுள் ஒரு வகை;** one caste mark on the forhead of Vaiṣṇavites.

[தாமரை + மொட்டு]

தாமரையாசனன் *tāmarai-y-āšaṉaṉ,* பெ. (n.) **தாமரைமலரில் அமர்ந்துள்ளதாகக் கருதப்படும் படைப்புக் கடவுள்** (யாழ்.அக.); Brahmaṉ, as seated on lotus *(செ.அக.).*

[தாமரை + ஆசனன்]

தாமரையாசனி *tāmarai-y-āšaṉi,* பெ. (n.) **அரிதாரம்** (யாழ்.அக.); yellow orpiment.

[தாமரை + ஆசினி]

தாமரையால் *tāmarai-y-āl,* பெ. (n.) **அரிதாரம்** *(வின்.);* yellow sulphide of arsenic.

தாமரையாள் *tāmarai-y-āḷ,* பெ. (n.) *1.* **அலைமகள் (இலக்குமி);** Lakṣmi, as seated on lotus. "தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கு முணர்வு" *(திவ்.இயற்.முதற். 67).* *2.* **கொங்கு நாட்டுப்புறக் காவியமான பொன்னர்சங்கர் கதையில் பொன்னர் சங்கரின் தாயார்;** mother of Poṉṉar Šaṅkar, the heros of the balad of Koṅgu country. *2.* **ஓர் மஞ்சள் செய்நஞ்சு;** yellow sulphide of arsenic *(சா. அக.).*

[தாமரை + ஆள்]

தாமரையான் *tāmaraiyāṉ*, பெ. (n.) நான்முகன்; a God nāṉmugaṉ.

[தாமரை + ஆன்]

தாமரையிலை *tāmarai-y-ilai*, பெ. (n.) ஒருசார் மாலியர் அணியும் தாமரையிலை போன்ற நெற்றிக்குறி; a Vaiṣṇava cast-mark, as resembling a lotus leaf.

[தாமரை + இலை]

தாமரையிலைக்கோழி *tāmarai-y-ilai-k-kōḻi*, பெ. (n.) இலைக்கோழி வகைகளுள் ஒன்று; bronze-winged jacana.

[தாமரை + இலை + கோழி. (பெரும்பாலும்) தாமரையிலை மேல் இருப்பது]



தாமரைவளையம் *tāmarai-vaḷaiyam*, பெ. (n.) தாமரைத்தண்டு; lotus stalk. "வார்செய் தண்டாமரை வளையம்" *(சீவக. 1671).*

ம. தாமரவாசிணி, க. தாவரெமனையள்

[தாமரை + வளையம்]

தாமரைவற்றல் *tāmarai-vaṟṟal*, பெ. (n.) வற்றலாகச் செய்த தாமரைக்கிழங்கு; dried root of the lotus used for food.

[தாமரை + வற்றல்]

தாமரைவாசி[1] *tāmarai-vāśi*, பெ. (n.) தாமரையாள்–1 (யாழ்.அக.) பார்க்க; see *tāmariyaḷ-1.*

[தாமரை + வாசி]

தாமரைவாசி[2] *tāmaraivāśi*, பெ. (n.) மனோசிலை; red arsenic sulphuretted arsenic *(சா.அக.).*

[தாமரை + வாசி]

தாமரைவாசினி *tāmarai-vāśiṉi*, பெ. (n.) தாமரைவாசி பார்க்க; see *tāmarai-vāśi* *(சா.அக.).*

[தாமரை + வாசினி]

தாமரைவிதை *tāmarai-vidai*, பெ. (n.) தாமரையின் விதை; seed of lotus *(சா. அக.).*

[தாமரை + விதை]

[இதனால் வெண்ணீர் (விந்து) அதிகரிக்கும்]

தாமலகம் *tāmalagam*, பெ. (n.) 1. கீழ்க்காய் நெல்லி; Indian annual phyllanthus. 2. பனங்குருத்து; the head of palmyra palm. 3. கொடி நெல்லி; creeper embelica.

[தாமர் → தாமல் + அகம்]

தாமலகி *tāmalagi*, பெ. (n.) தாமலகம் பார்க்க; see *tāmalagam* *(சா.அக.).*

[தாமலகம் → தாமலகி]

தாமலகிதளம் *tāmalagitaḷam*, பெ. (n.) தாளிபத்திரி பார்க்க (மூ.அ.); see *tāḷipattiri.*

[தாமல் + அகி + தளம்]

தாமலபத்திரி *tāmala-pattiri*, பெ. (n.) தமாலபத்திரி பார்க்க; see *tamāla-pattiri* *(சா.அக.).*

[தாமலம் + பத்திரி]

தாமலம் *tāmalam*, பெ. (n.) இலை; leaf *(சா.அக.).*

[தாமல் + அம்]

தாமலைக்காய் *tāmalai-k-kāy*, பெ. (n.) நெல்லிக்காய்; Indian gooseberry - Emblica officinalis *(சா. அக.).*

[தாமலை + காய்]

தாமளை[1] *tāmaḷai*, பெ. (n.) புன்னைவகை; mast-wood.

[தாமலை → தாமளை]

தாமன்[1] *tāmaṉ*, பெ. (n.) கதிரவன்; sun. "தாமன் மேல்வரவர" *(பாரத. முதற்போர். 42).*

[தாம் + அன் → தாமன்]

தாமன்[2] *tāmaṉ,* பெ. (n.) சாரைப்பாம்பு; snake (சா.அக.).

தாமனி[1] *tāmaṉi,* பெ. (n.) மாடுகளைக் கட்டப் பயன்படும் கலையுள்ள தாம்புக்கயிறு; long line of rope with halters attached for fastening cattle.

[தாமணி → தாமனி]

தாமனி[2] *tāmaṉi,* பெ. (n.) நரம்பு; nerve, vein (சா.அக.).

[தமனி → தாமனி]

தாமாங்கயிறு *tāmāṅ-kayiṟu,* பெ. (n.) தோணிப்பாயின் பின் பக்கத்துக் கீழ்ப்பகுதிக் கயிறு; lower back rope of a thoney.

[தாமான் + கயிறு]

மரக்கலத்தின் வேகத்தைக் கூட்டவும், குறைத்து மெதுவாய்ச் செலுத்தவும், பயன்படும் கயிறு.

தாமாசாகி *tāmāsāgi,* பெ. (n.) 1. கடனிறுக்க வழியற்றவனுடைய சொத்துகளைக் கடன் காரருக்குச் சமமாகப் பகிர்கை; the equitable division of the effects of an insolvent amongst his creditors. 2. ஊர் வேலைக்காக விடப்பட்ட குமுகாய நிலங்களை யெடுத்துக் கொண்டு அரசு கொடுக்கும் திங்கட்கூலி; a money allowance paid to monigars and karṇams in lieu of service iṉāms resumed.

[தாம் + சாகி - தாமசாகி. தாமாகத் தரவியலாதவனிடம் உள்ள சொத்துகளைச் சமமாகப் பகிர்கை]

தாமாசெங்கமலம் *tāmā-seṅgamalam,* பெ. (n.) செங்கழுநீர்; red indian water lily.

[தாமா + செங்கமலம்]

தாமாம் *tāmām,* பெ. (n.) 1. தாமிரம்; copper. 2. நெய்; ghee. 3. தாமரை; lotus flower. 4. கார்முகில் செய்நஞ்சு; a kind of prepared arsenic (சா.அக.).

[தாமம் + தாமாம்]

தாமாவிருவர் *tāmā-v-iruvar,* பெ. (n.) பரித்தேவர்கள்; asvins, the twin gods, as born of a mare. "தாமா விருவருந் தருமனு மடங்கலும்" (பரிபா. 3,8) (செ. அக.).

[தாவு + மா + இருவர்]

தாமான் *tāmāṉ,* பெ. (n.) கப்பற் பின் பக்கத்துக் கயிறு; lower back rope of a dhoney sail, back clew line (செ.அக.).

[தாமம் + ஆன் → தாமான்]

தாமான்பாள் *tāmāṉ-pāḷ,* பெ. (n.) கப்பற் கயிறு; ship rope; sheet [naut].

தாமான்புறம் *tāmāṉ-puṟam,* பெ. (n.) மரக்கலத்தின் வலது பக்கம்; the right side of a thoney (முகவை. மீனவ).

[தாமான் + புறம்]

தாமானிலேவா-தல் *tāmāṉilēvā-,* 6 செ.கு.வி. (v.i.) காற்றுப்போக்கிற் கப்பலோட்டுதல்; to let a vessel drive before the wind.

[தாமானில் + ஏவு + ஆ-]

தாமி *tāmi,* பெ. (n.) மஞ்சள்; turmeric (செ.அக.).

[தாம் + இ → தாமி]

தாமிகி *tāmigi,* பெ. (n.) கொடிநாரத்தை; a kind of orange (சா.அக.).

[தாமி → தாமிகி]

தாமிச்சிரம் *tāmi-c-ciram,* பெ. (n.) 1. பேரிருள்; profound, darkness (இலக்.அக.). 2. நிரைய வகை; a hell. 3. பொய்த்தோற்றம் (இலிங்க4. படை1); illusion.

[தாம் + இச்சு + இரம் → தாமிச்சிரம்]

தாமிஞ்சம் *tāmiñjam,* பெ. (n.) ஆமணக்கு; castor plant (சா.அக.).

தாமிரக்களிம்பு *tāmira-k-kaḷimbu,* பெ. (n.) செங்கல்பச்சை; verdigris of copper (சா.அக.).

[தாமிரம் + களிம்பு]

தாமிரகண்டகம் *tāmira-kaṇḍagam,* பெ. (n.) சிவப்புமுள்; red thorn (சா.அக.).

தாமிரகம்[1] *tāmiragam,* பெ. (n.) 1. செஞ்சந்தனம்; red sandal. 2. ஆனைக்குன்றி; a big variety of Crab's eye (சா.அக.).

[தாமிரம் + அகம்]

தாமிரகம்[2] *tāmiragam,* பெ. (n.) குன்றி; red jeweller's bead - Abrus precatorus (சா.அக.).

[தாமிரம் + அகம்]

தாமிரகருணி *tāmira-karuṇi,* பெ. (n.) மேற்றிசைப் பெண் யானை; female elephant of the west (செ.அக.).

தாமிரகிருமி *tāmirakirumi,* பெ. (n.) இந்திர கோபப்பூச்சி; lady's fly-searlet moth (சா.அக.).

ம. தாம்ரக்ருமி

[தாமிரம் + கிருமி]

தாமிரகூடம் *tāmira-kūḍam,* பெ. (n.) ஒரு வகைப் புகையிலை; a kind of tobacco (சா.அக.).

ம. தாம்ரகூடம்

[தாமிரம் + கூடம்]

தாமிரச்சிகை *tāmira-c-šigai,* பெ. (n.) தாம்பூரப்பூச்சிகை பார்க்க; see *tāmbūra-c-cigai* (சா.அக.).

[தாமிரம் + சிகை]

தாமிரச்சுண்ணம் *tāmira-c-cuṉṉam,* பெ. (n.) தாமிரசிந்தூரம் பார்க்க; see *tāmira-šindūram* (செ.அக.).

[தாமிரம் + சுண்ணம்]

தாமிரசபை *tāmira-šabai,* பெ. (n.) சிவபெருமானின் ஐவகை அம்பலங்களுள் ஒன்றானதும் செப்பேடு வேயப்பட்டதுமான தாமிர சபை; copper roofed hall, one of the five Ambal's of Lord Šivaṉ.

[தாமிரம் + சபை த. அவை → Skt. சபை]

தாமிரசாசனம் *tāmirašāšaṉam,* பெ. (n.) தாமிரப்பட்டயம் பார்க்க; see *tāmira-p-paṭṭayam* (செ.அக.).

[தாமிரம் + சாசனம்]

தாமிரசிகி[1] *tāmirašigi,* பெ. (n.) கோழி; fowl (சா.அக.).

தாமிரசிகி[2] *tāmirašigi,* பெ. (n.) செந்நிறக் கொண்டையுள்ள சேவல்; cock, as having red crest (செ. அக.).

தாமிரசிந்தூரம் *tāmira-šindūram,* பெ. (n.) செம்பைக் கொண்டு செய்த சிந்தூரம் (யாழ்.அக.); calcinated red powder of copper.

[தாமிரம் + சிந்தூரம்]

தாமிரசூடன் *tāmira-šūḍaṉ,* பெ. (n.) ஒரு வகை முதற்பொருள் (தாது); a crystallised mineral known as garnet (சா.அக.).

தாமிரசூடி *tāmira-šūḍi,* பெ. (n.) 1. சிவப்பு கொண்டையையுடைய பறவை; red crested bird. 2. சேவல்; cock (சா.அக.).

ம. தாம்ரசூடம்



தாமிரநோவு *tāmira-nōvu,* பெ. (n.) நிலக் கடலைச் செடியின் இலைகளை மஞ்சணிற மாக்கும் நோய் வகை; a disease of ground-nut plants which makes the leaves turn yellow (செ.அக.).

[தாமிரம் + நோவு]

தாமிரப்பட்டம் *tāmira-p-paṭṭam,* பெ. (n.) செப்பேடு; copper-plate grant.

ம. தாம்ரபட்டம்

[தாமிரம் + பட்டம்]

தாமிரப்பட்டயம் *tāmira-p-paṭṭayam,* பெ. (n.) கொடை பற்றிய செய்திகளைக் குறிக்கும் செப்புப்பட்டயம்; copper plate which has the inscription about the grants etc.

[தாமிரம் + பட்டயம்]

தாமிரப்பொடி *tāmira-p-poḍi,* பெ. (n.) செம்பைத் தூய்மை செய்து, புடமிட்டெடுத்த

பொடித்துகள்; copper oxide obtained by the process of purification and calcination.

[தாமிரம் + பொடி]

தாமிரபரணி *tāmira-paraṇi*, பெ. (n.) செம்புத் தகடு; copper-leaf (சா.அக.).

[தாமிரம் + பரணி]

தாமிரபருணி[1] *tāmira-paruṇi*, பெ. (n.) திருநெல்வேலி மாவட்டத்தில் ஓடும் முதன்மையான ஆறு; chief river of Tirunelvēli Dt (செ.அக.).

ம. தாம்ரபர்ண்ணி

தாமிரபருணி[2] *tāmira-paruṇi*, பெ. (n.) தாமிரகருணி பார்க்க (சது.); see *tamira-karuṇi*.

தாமிரபல்லவம் *tāmira-pallavam*, பெ. (n.) *1.* அசோக மரம்; a sacred asoka tree. *2.* வாழை; plantain (w).

ம. தாம்ரபல்லவம்

[தாமிரம் + பல்லவம்]

தாமிரபல்லியம் *tāmira-palliyam*, பெ. (n.) தாமிரபல்லவம் பார்க்க; see *tāmira-pallavam* (சா.அக.).

[தாமிரபல்லவம் → தாமிரபல்லியம்]

தாமிரபலகம் *tāmira-palagam*, பெ. (n.) கொள்ளு; horse-gram (சா.அக.).

[தாமிரம் → தாமிரபலகம்]

தாமிரபலம் *tāmira-palam*, பெ. (n.) அழிஞ்சல்; red fruited alangium (சா.அக.).

[தாமிரம் + பலம்]

தாமிரபற்பம் *tāmira-parpam*, பெ. (n.) செம்பினாலான பொடி; calcinated white powder of copper (செ. அக.).

தாமிரபீசம் *tāmirapīsam*, பெ. (n.) தாமிரபலகம் பார்க்க; see *tāmira-palagam*.

[தாமிரம் + பீசம்]

தாமிரபுட்பகம் *tāmira-puṭpagam*, பெ. (n.) செந்தாமரை; variegated mountain ebony (சா.அக.).

[தாமிரம் + புட்பகம்]

தாமிரபுட்பம் *tāmira-puṭpam*, பெ. (n.) *1.* தாதகிப்பூ; dowmy grislea. *2.* நேர்ப்பிசின்; ground champak (சா.அக.).

[தாமிரம் + புட்பம்]

தாமிரபுள்ளி *tāmira-puḷḷi*, பெ. (n.) சிவந்த புள்ளிகள் வாய்ந்த ஒரு வகைக்குட்டம்; a kind of leprosy with large red spots (சா.அக.).

[தாமிரம் + புள்ளி]

தாமிரம்[1] *tāmiram*, பெ. (n.) செம்பு (பிங்.); copper.

ம. தாம்ரம

[துமர் → தமர் = சிவப்பு: சிவப்புக் கலந்த காவி. துவர் → துவரை = செம்புக் கோட்டை நகர்.

துமர் → தமர் → தாமரம் → தாமிரம் = செங்காவி வண்ணத்தில் உள்ள கலப்பு மாழை (உலோகம்). இம் மாழையினைச் செம்பு என்றும் அழைப்பர். இச் செம்பினைக் காற்றுப்படும்படி வைத்தால் களிம்பேறும். இச் சிவப்பு மாழையினைத் தகடாகத் தட்டலாம். கம்பியாக இழுக்கலாம். நமது நாட்டில் பரவலாக நெல்லூர், செய்ப்பூர், திருவாங்கூர் போன்ற இடங்களில் இம் மாழை மிகுதியாகக் கிடைக்கிறது.

இக் கலப்புமாழை, நிலத்தில் தனியாகவும், எரியுப்பு, வைப்புநஞ்சு, இரும்பு முதலியவற்றோடு கலந்தும், காணப்படும். இச் செம்புடன் வெள்ளீயத்தைச் சேர்த்தால், வெண்கலம் கிடைக்கும். இம் மாழையை உரியமுறையிற் கலந்து பித்தளை, தம்பாக்கு ஆகியவற்றை உருவாக்குவர்.

இச் செம்போடு பொன்னைக் கலந்து, பழுப்புப்பொன் செய்வர். செம்பு ஏனங்கள் சமையலுக்கு உதவாது. ஏனெனில் உப்பு, புளி முதலியவை சேருங்காலத்தில், செம்பிற் களிம்பேறி நச்சுத்தன்மை பெறும்.

இச் செம்பினின்று களிம்பெடுத்துப் பொன்னாக்க முறையில் தங்கத்தைச் செய்யலாம். நிலத்தினின்று அகழ்ந் தெடுக்கும் இக் கலப்புச்செம்பில்

பொன்னின் விழுக்காடு மிகுதியாய் இருந்தால், பொன்னாக்க முறைப்படி வெள்ளிசேர்த்து உருக்கி, சொக்கத்தங்கம் செய்யலாம். சித்த மருத்துவத்திற்கும், இம் மாழை தாமிரச்சுண்ண வடிவிற் பயன்படும் என்று, சா.அக. கூறும்..]

தாமிரம்[2] *tāmiram,* பெ. (n.) *மந்தாரை;* variegated mountain ebony. *(சா.அக.).*

[தாமரம் → தாமிரம்]

தாமிரமண் *tāmira-maṇ,* பெ. (n.) *செம்பை துப்புரவு செய்து புடமிட்டெடுத்த, பொடித் துகள்;* copper oxide obtained by processes purification and calcination *(சா.அக.).*

[தாமிரம் + மண்]

தாமிரமாரணம் *tāmira-māraṇam,* பெ. (n.) *இயற்பியல்படி செம்பை அதன் தன்மையிலிருந்து மாற்றி, மருந்திற்கு பயன்படுத்துதல்;* decomposition of copper and its application as a remedy.

[தாமிரம் + மாரணம்]

தாமிரமிருகம் *tāmira-mirugam,* பெ. (n.) *சிவப்பு மான்;* red deer *(சா.அக.).*

[தாமிரம் + மிருகம்]

தாமிரமுகம் *tāmira-mugam,* பெ. (n.) 1. *சிவந்த முகம்;* copper faced. 2. *சிவந்தநிறம்;* red complexion *(சா.அக.).*

க. தாம்ரமுகி

[தாமிரம் + முகம்]

தாமிரமூலம் *tāmira-mūlam,* பெ. (n.) 1. *சிவந்த வேர்;* red-root. 2. *சிவப்புக்கிழங்கு;* red bulbous root. 3. *மஞ்சிட்டி;* copper creeper. 4. *சுண்டி;* a sensitive plant *(சா.அக.).*

[தாமிரம் + மூலம்]

தாமிரமெழுகு *tāmira-meḻugu,* பெ. (n.) *செம்பு மெழுகு;* copper wax *(சா.அக.).*

[தாமிரம் + மெழுகு]

தாமிரவர்ணம் *tāmira-varṇam,* பெ. (n.) 1. *சிவப்புச்செடி வகை (போஸ்தகாய்ச்செடி);* copper rose - Papaver rhocas. 2. *எள்ளுப்பூ;* flower of sesamum *(சா.அக.).*

[தாமிரம் + வண்ணம் → Skt. varṇa]

தாமிரவருணம் *tāmira-varuṇam,* பெ. (n.) *செந்நிறம்;* copper colour *(செ.அக.).*

[தாமிரம் + வருணம்]

தாமிரவல்லி *tāmira-valli,* பெ. (n.) *மஞ்சிட்டி;* copper creeper *(சா.அக.).*

[தாமிரம் + வல்லி]

தாமிரா *tāmirā,* பெ. (n.) *வேங்கைமரம்;* Indian kino tree *(சா.அக.).*

தாமிராட்சம் *tāmirāṭcam,* பெ. (n.) 1. *குயில்;* Indian cuckoo. 2. *ஒரு வகைப் பாம்பு;* a kind of snake *(சா.அக.).*

தாமிரிகை *tāmirigai,* பெ. (n.) 1. *குன்றிக்கொடி;* crabs eye, m.cl. Abrus precatorius. 2. *குன்றிச் செடியின் சிவப்புவிதை;* the red seed of Crabs eye *(செ.அக.).*

தாமிரை *tāmirai,* பெ. (n.) *தாமிரம் (சங்.அக.) பார்க்க;* see *tāmiram.*

[தாமிரம் → தாமிரை]

தாமிரேசுவரம் *tāmirēsuvaram,* பெ. (n.) *ஆயுள்வேத செம்புமருந்துடன் இதளியம் (இரசம்), வெண்காரம், இரும்பு, கந்தகம், திப்பிலி, வேப்பம்பூ இவைகளைச் சேர்த்து, திரிகடுகையும் கூட்டி அணியம் செய்யும் மருந்து;* an ayurvedic medicine prepared by mixing purified copper, mercury, borax, iron, sulphur, long-pepper flowers of margosa and the three myrobalams and prescribed for skin diseases and a cooling regimen is necessary *(சா.அக.).*

தாமிலம் *tāmilam,* பெ. (n.) *கோதுமை;* wheat *(சா.அக.).*

[தாமிரம் → தாமிலம்]

தாமுகவாக்கி *tāmuga-vākki,* பெ. (n.) *மனோசிலை;* red arsenic *(சா.அக.).*

[தாம் + முகம் + ஆக்கி → தாமுகவாக்கி. மிகு நச்சுத்தன்மையினால், முதற்கண் ஏற்படும் முகவாட்டம்]

தாமை *tāmai,* பெ. (n.) *தாம்புக்கயிறு (யாழ்.அக.);* tethering rope for fastening cattle.

[தாமம் → தாமை]

தாமோதரம் *tāmōdaram,* பெ. (n.) பிடரி; rope of the neck. "தாமோதரத்திற் கைகொடுத்துத் தள்ளினான்"

திருமாலின் பேர்களிலொன்றான தாமோதரன் என்ற பெயரைச் சொல்லிப் பெயரிடும் இடம்.

தாமோதரப்பிள்ளை சி.வை. *tāmōdara-p-piḷḷai c.vai,* பெ. (n.) நூலாசிரியர்; writer (தமி.புல.அக.).

வீரசோழியம் போன்ற பல நூல்களை புதுப்பித்துள்ளார். சைவ மகத்துவம் என்னும் நூலை எழுதியுள்ளார்

தாமோதரன் *tāmōdaraṉ,* பெ. (n.) 1. ஆமை; tortoise, turtle. 2. திருமால்; Thirumāl.

[தாமம் + உதரம் → உதரன் → தாமோதரன்]

தாமோதரனார் *tāmōdaraṉār,* பெ. (n.) சங்கப் புலவர்; šaṅgam poet (தமி.புல.அக.).

[குறுந்தொகையில் 92, 195வது பாடல்கள் பாடியுள்ளார்]

தாய்[1] *tāy,* பெ. (n.) 1. அன்னை; mother. "தாய்த் தாய்க்கொண் டேகுமளித்திவ் வுலகு" (நாலடி. 15). "பெற்ற தாய்தனை மகமறந் தாலும் பிள்ளையைப் பெறுந் தாய் மறந்தாலும்" (அருட்பா.). தாயைப் பார்த்து மகளைக் கொள் (பழ.); தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை (பழ.); தாயில்லாத பிள்ளை தறிதலை (பழ.). 2. ஐவகைத் தாயருள் ஒருத்தி; (பிங்.); any one of ai-vagai-t-tāyar. 3. தாய்போல் கருதப்படும் அரசன்மனைவி, ஆசிரியர்மனைவி, அண்ணன் மனைவி, மகட்கொடுத்தவள் இவர்களுள் ஒருத்தி; one of arašaṉ-tēvi, kuruviṉ-tēvi, aṇṇaṉ-tēvi, makaṭ-koḍuttavaḷ, who hold the rank of mother.

ம., பட. தாய்; க. தாய், தாயி, தாயெ; தெ. தாயி; து. தாயி; துட. தோய்; குட. தாயி (பாட்டி); கோண். பாயொ, யாயாள்; கூ. அய், அயாலி, அச; குவி. ஈய்; நா. அய்ம; கொலா. அய்; பர். அயன் (பெண்), இய ; தட. ஆய், ஆயன்; மா. அய்ய (என்தாய்); பிரா. தாய்; Ass., Ori., Sind., Mar., Guj. āyī; Beng. āyi.

1. பாராட்டுத்தாய்; women amusing children.
2. தாலாட்டுத்தாய்; women making the child sleep.
3. ஊட்டுத்தாய்; foster-mother.
4. முலைத்தாய்; wet-nurse.
5. கைத்தாய்; nursery-maid.
6. செவிலித்தாய்; woman attending on children.
7. ஈன்ற தாய்; mother of a child.

[த(ம்) + ஆய். தன் → தரு → தார் → தா → தாய். ஒருகா: தம் + ஆய் = தாய். பிள்ளை நிலையில், புகுந்தகுடிக்கு மகவினைத் தருபவள் தாய்.]

தாய்[2] *tāy,* பெ. (n.) 1. காந்தம்; magnet. 2. தங்கம்; gold. 3. நீராகாரம்; cold rice water. 4. தாயைப் போல் வளர்க்கும் பொருள்; any substance tending to promote health and growth like a mother nursing a child. 5. முதற்றரம்; first rate. 6. முதன்மை; first. 7. தாய்சரக்கு பார்க்க; see *tāy-šarakku* (சா.அக.).

[த(ம்) + ஆய்]

தாய்க்கஞ்சி *tāy-k-kañji,* பெ. (n.) சிவனார் வேம்பு; Šivaṉ's neem - Indigofera Asphalathoides (சா.அக.).

[தாய் + கஞ்சி]

தாய்க்கட்டு[1] *tāy-k-kaṭṭu,* பெ. (n.) தாய்க்கட்டு மனை பார்க்க; see *tāy-k-kaṭṭu-maṉai.* "மண்டபம், கூடம், தாய்க்கட்டு, அடுக்களை என்றாற் போலும்" (மதுரைக். 357, உரை) (செ.அக.).

ம. தாய்க்கொட்டு

[தாய் + கட்டு]

தாய்க்கட்டு[2] *tāy-k-kaṭṭu,* பெ. (n.) 1. வீட்டின் நடுப்பகுதி; centre part of house. 2. ஒரே சதுரமாயுள்ள வீடு; square house (பொ.வழ.).

[தாய் + கட்டு]



தாய்க்கட்டுமனை *tāy-k-kaṭṭu-maṉai,* பெ. (n.) வீட்டின் நடுப்பகுதி; central portion of an indian house (செ.அக.).

[தாய் + கட்டு + மனை]

தாய்க்கடுக்கன் *tāy-k-kaḍukkaṉ,* பெ. (n.) காதணிவகை; a kind of ear-ornament (W).

[தாய் + கடுக்கன்]



தாய்க்கண்[1] *tāy-k-kaṇ,* பெ. (n.) *1.* தேங்காயின் முக்கண்களில் மேலேயுள்ள கண்; topmost of the three eyes of the coconut. *2.* பருங்கண்; large eye (சா.அக.).

[தாய் + கண்]

தாய்க்கம்பு *tāy-k-kambu,* பெ. (n.) கிட்டி யடிக்கும் கோல்; larger stick in the game of tipcat (W.).

[தாய் + கம்பு]

தாய்க்கரும்பு *tāy-k-karumbu,* பெ. (n.) விதையாக நட்ட முதற்கரும்பு (வின்.); parent sugar-cane stem.

[தாய் + கரும்பு]

தாய்க்கறையான் *tāy-k-kaṟaiyāṉ,* பெ. (n.) ஒவ்வொரு கூடுகளிலுங் காணப்படுவதும், மற்றக் கறையான்களை உண்டுபண்ணுவது மாகிய பெண் கறையான்; queen ant, found in every nest of termites regarded as procreative of the whole (செ.அக.).

[தாய் + கறையான்]

தாய்க்காணி *tāy-k-kāṇi,* பெ. (n.) முதல் நிலை நிலம்; land of the best quality (செ.அக.).

மறுவ. முதல்தர செய்

[தாய் + காணி]

தாய்க்கால்[1] *tāy-k-kāl,* பெ. (n.) கட்டடத்தின் பக்கம் சார்ந்த முதன்மையான சுவர்; main wale of a building.

[தாய் + கால்]

தாய்க்கால்[2] *tāy-k-kāl,* பெ. (n.) தாய்வழி பார்க்க; see *tāy-vaḻi* (செ.அக.).

[தாய் + கால்]

தாய்க்கால்வழி *tāy-k-kālvaḻi,* பெ. (n.) தாய் வழி உறவுமுறைத் தொடர்பு; maternal side or line (W.). அந்தப் பெண் தாய்க்கால் வழியில் வந்தவளாயிற்றே (உ.வ.).

[தாய் + கால்வழி]

தாய்க்கிராமம் *tāy-k-kirāmam,* பெ. (n.) பல சிற்றூர்களுள், முதன்மையான ஊர்; principal village in a group of hamlets (W.).

மறுவ. தலைக்கிராமம்

[தாய் + கிராமம். குழுமமாகவுள்ள சிற்றூர்களுள், கல்வி, மருத்துவம், தூய்மை, தொழில் முதலான அனைத்து நிலைகளிலும் ஏனைய ஊர்கட்கு எடுத்துக் காட்டாகத் திகழும் முதனிலை ஊர்]

தாய்க்கிழங்கு *tāy-k-kiḻaṅgu,* பெ. (n.) முதற்கிழங்கு; the principal tuber (செ.அக.).

மறுவ. மூலக்கிழங்கு, அடிக்கிழங்கு, விதைக்கிழங்கு

[தாய் + கிழங்கு]

தாய்க்கிழவி *tāy-k-kiḻavi,* பெ. (n.) விலைமகளின் தாய்; mother or foster-mother of a dancing-girl.

ம. தாய்க்கிழவி

[தாய் + கிழவி]

தாய்க்கீழ்ப்பிள்ளை *tāy-k-kīḻ-p-piḷḷai,* பெ. (n.) எட்டிக்கன்று (சங்.அக.); young plant of nux vomica tree.

[தாய் + கீழ் + பிள்ளை]

தாய்க்குலம் *tāy-k-kulam,* பெ. (n.) பெண் இனத்தவர்; women as a community.

தாய்க்குலமருந்து *tāy-k-kula-marundu,* பெ. (n.) எல்லா நோயையும் போக்கும் அரிய மூலிகை; a rare herbal medicine to cure all diseases (சா.அக.).

தாய்க்கொல்சலம் *tāy-k-kol-šalam,* பெ. (n.) *வாழையடி நீர்;* the juice of plantain corm (சா.அக.).

[தாய் + கொல் + சலம்]

தாய்க்கொல்லி *tāy-k-kolli,* பெ. (n.) தாயைக்கொல்லி பார்க்க; see *tāyai-k-kolli* (சா. அக.).

[தாய் + கொல்லி]

தாய்க்கொல்லிக்கிழங்கு *tāy-k-kolli-k-kiḻaṅgu,* பெ. (n.) *வாழைக்கிழங்கு;* plantain corm (சா.அக.).

[தாய் + கொல்லி + கிழங்கு.]

தாய்ச்சங்கம் *tāy-c-caṅgam,* பெ. (n.) *முதலவை, மூலஅவை;* parent society dist. fr. kiḻai-c-caṅgam (செ.அக.).

[தாய் + சங்கம்]

தாய்ச்சரக்கு *tāy-c-carakku,* பெ. (n.) 1. *நீற்று செய்யவேண்டி, பயன்படுத்தும் பொருள்;* drug used for preparing calcined medicine. 2. *மாற்று மருந்து;* alternative medicine (சா.அக.).

[தாய் + சரக்கு]

தாய்ச்சி *tāycci,* பெ. (n.) 1. *தாய்ப்பால் கொடுப்பவள்;* wet-nurse. 2. *மூலம்;* origin, moving spirit. "இந்த வழக்குக்குத் தாய்ச்சி இவன் தான்". 3. *சூலி;* pregnant woman (J). 4. *விளையாட்டில் தலைமையாள்;* leader of a party in a game. 5. *விளையாட்டில் தொட வேண்டுமிடம்;* appointed place to be touched in a game.

மறுவ. பிள்ளைத்தாய்ச்சி

[தாய் → தாய்ச்சி]

தாய்ச்சித்தம்பலம் *tāy-c-cittambalam,* பெ. (n.) *குழந்தைகளாடும் ஒரு வகை விளையாட்டு;* child's game of finding out a small stick hidden in a ridge of sand, child's play in which the calyx leaves of the banana are split and the string, like pieces are pulled against one another, when a sound is produced delightful to children (செ.அக.).

[தாய் + சித்தம்பலம்]

தாய்ச்சின்னம் *tāy-c-cinnam,* பெ. (n.) *தாயின் அடையாளம்;* mother's mark (சா.அக.).

[தாய் + சின்னம்]

தாய்ச்சீட்டு *tāy-c-cīṭṭu,* பெ. (n.) *மூல ஆவணம்* (யாழ்அக.); original document.

[தாய் + சீட்டு]

தாய்ச்சீலை *tāy-c-cīlai,* பெ. (n.) *கோவணம்* (இ.வ.); forelap, covering for the privities. தாய்ச்சீலைக்குச் சாண் துணியில்லை, தலைக்கு மேலே சரிகைமேற்கட்டு (பழ.).

[தாய் + சீலை]

தாய்ச்சுவர் *tāy-c-cuvar,* பெ. (n.) *தொடர்ந்து கட்டப்பட்ட வீடுகளில் ஒரு வீட்டின் எல்லையாயமைந்து அதற்கேயுரிய முதன்மைச்சுவர்;* main wall of a house (செ.அக.).

[தாய் + சுவர்]

தாய்ச்சோட்டை *tāy-c-cōṭṭai,* பெ. (n.) *தாய் மீது குழந்தைக் கொள்ளும் அவா;* longing of a child for its mother (செ.அக.).

[தாய் + சோட்டை]

தாய்சேய்நலவிடுதி *tāy-sēy-nala-viḍudi,* பெ. (n.) *கருஉயிர்ப்பு பார்க்க, ஏற்படுத்திய தாய்சேய் நல மருத்துவமனை;* maternity and child care hospital.

[தாய் + சேய் + நலவிடுதி]

தாய்சேர்த்தல் *tāy-cērttal,* பெ. (n.) *தங்கம் கட்டுதல்;* adding gold (சா.அக.).

[தாய் + சேர்த்தல். அணிகலனைப் பாதுகாக்கத் தங்கம் சேர்த்தல் போன்று, அனைத்து நிலைகளிலும், அனைவரையும், காப்பவள் தாய்]

தாய்தந்தை *tāy-tandai,* பெ. (n.) *பெற்றோர்;* parents (செ.அக.).

க. தாய்தந்தெகள், தாயிதந்தை

[தாய் + தந்தை]

தாய்தலைத்தென்றல் *tāy-talai-t-tenṟal,* பெ. (n.) *நேராக அடிக்கும் முதற்தென்றல்;* first

southerly wind blowing straight from its source. "பலவிடங்களிலே காலிட்டு வாராதே தாய்தலைத் தென்றாலா யிருக்கை" *(ஈடு. 5:9:5)* *(செ.அக.).*

[தாய் + தலை + தென்றல்]

தாய்நாடு *tāy-nāḍu,* பெ. (n.) பிறந்தநாடு; mother country, native land.

[தாய் + நாடு]

தாய்ப்பத்திரம் *tāy-p-pattiram,* பெ. (n.) நிலம், சொத்து, கட்டடம் முதலியவற்றின் உரிமை குறித்து முதன் முதலாக எழுதப்படும் ஆவணம்; first title deed.

[தாய் + பத்திரம்]

தாய்ப்பாட்டன் *tāy-p-pāṭṭaṉ,* பெ. (n.) தாயைப்பெற்ற தகப்பன்; maternal grand father *(செ.அக.).*

[தாய் + பாட்டன்]

தாய்ப்பாத்தி *tāy-p-pātti,* பெ. (n.) முதன்மையான (முக்கியமான) உப்புப் பாத்தி; chief or principal bed in a salt-pan C.G.

மறுவ. தலைப்பாத்தி, முதற்பாத்தி

[தாய் + பாத்தி. உப்பு நீரினைப் பாய்ச்சி வடிகட்டுங்கால் கசடகற்றி, முதன்மையான உப்பினைத் தேக்கும் முதற்பாத்தி]

தாய்ப்பால் *tāy-p-pāl,* பெ. (n.) குழந்தைக்குத் தாயினிடமிருந்து கிடைக்கும் முலைப்பால்; milk getting from mothers breast to a child *(செ.அக.).*

குழந்தைகட்குத் தாய்ப்பால் தருவது, அதன் வளர்ச்சிக்கும், நோய்எதிர்ப்புத்தன்மை பெறுவதற்கும் மிகவும் இன்றியமையாதது (உவ.).

[தாய் + பால்]

தாய்ப்பாலூட்டல் *tāy-p-pālūṭṭal,* பெ. (n.) தாய்முலையின் பாலைக் குழந்தைக்கு ஊட்டல்; maternal nursing *(சா.அக.).*

[தாய் + பால் + ஊட்டல்]

தாய்ப்பானை *tāy-p-pāṉai,* பெ. (n.) நல்ல நாளில் முதற்கதிர்களை எடுத்துவைத்தற்குரிய பெரியபானை; a big pot used for preserving the first sheaves on an auspicious day..

[தாய் + பானை]

தாய்ப்பிள்ளை *tāy-piḷḷai,* பெ. (n.) உறவின-ன்-ள் (நெல்லை.); relative.

தாய்பெற்றமேனி *tāy-peṟṟa-mēṉi,* பெ. (n.) அம்மணம் (நிருவாணம்); nakedness *(சா.அக.).*

[தாய் + பெற்ற + மேனி]

தாய்மனை *tāy-maṉai,* பெ. (n.) தாய்க்கட்டு மனை பார்க்க; see *tāy-k-kaṭṭu-maṉai* தாய் மனைக்கு வந்தது பிள்ளைக்கும் *(பழ.).*

[தாய் + மனை]

தாய்மாமன் *tāy-māmaṉ,* பெ. (n.) தாயுடன் பிறந்தவன்; maternal uncle *(செ.அக.).*

[தாய் + மாமன்]

தாய்மாமன்மகன் *tāy-māmaṉ-magaṉ,* பெ. (n.) தாயுடன் பிறந்தவனின் ஆண்குழந்தை; male child born to a mother's brother *(செ.அக.).*

[தாய் + மாமன் + மகன்]

தாய்மாமன்மகள் *tāy-māmaṉ-magaḷ,* பெ. (n.) தாயுடன் பிறந்தவனின் மகள்; female child of a mother's brother *(சா.அக.).*

[தாய் + மாமன் + மகள்]

தாய்முதல் *tāy-mudal,* பெ. (n.) மூலநிதி; original capital *(செ.அக.).*

மறுவ. தலைமுதல், தலைநிதி

ம. தாய்முதல்

[தாய் + முதல். அருகுபோல் தழைத்து ஆல்போல் வேரூன்றி, பல்கிப்பெருகி வளவாழ்வு வாழ்வதற்கு மூலமாயுள்ள, முதல்நிதி.]

தாய்மை *tāymai*, பெ. (n.) தாயாந்தன்மை; mother hood, motherliness. "தாய்மையுந் தவமும் வாய்மையு நோக்கி" *(பெருங். உஞ்சைக். 46, 120).*

[தாய் + மை]

தாய்மொழி *tāy-moli*, பெ. (n.) பிறந்ததி லிருந்து பேசும்மொழி; mother tongue. "அவர் தமிழ்நாட்டில் வாழினும் தாய்மொழியாக மலையாளத்தைக் கொண்டவர்."

[தாய் + மொழி]

தாய்வழி *tāy-vaḷi*, பெ. (n.) உறவுமுறையில் தாயின் தொடர்பு; maternal side or line *(செ.அக.).*

ம. தாய்வழி; க. தாவழி

[தாய் + வழி]

தாய்வாய்க்கால் *tāy-vāy-k-kāl*, பெ. (n.) கிளைக்கால்கள் பிரியும் தலைவாய்க்கால்; chief channel from which branch channels emerge W.G. *(செ.அக.).*

மறுவ. முதல்வாய்க்கால், தலைவாய்க்கால்

[தாய் + வாய்க்கால்]

தாய்வாழை *tāy-vālai*, பெ. (n.) தார் விட்ட வாழை; original plantain tree which has born fruit *(சா. அக.).*

[தாய் + வாழை. முதற்கண் குலையீனும் வாழையில், பல கன்றுகள் கிளைப்பது போல், அனைத்து மாந்தஉறவுகள் கிளைப்பதற்கும், செழித்து நிலைப் பதற்கும், மூலமரமாயிருப்பவள் தாய்]

தாய்வேர் *tāy-vēr*, பெ. (n.) ஆணிவேர்; main root, taproot (E.G.).

ம. தாய்வேரு; க. தாய்பேரு

[தாய் + வேர்]

தாயக்கட்டம் *tāya-k-kaṭṭam*, பெ. (n.) தாய விளையாட்டு ஆடுதற்குப் பயன்படும் சதுரக் கட்டம்; squares for playing dice *(செ.அக.).*

[தாயம் + கட்டம்]

தாயக்கட்டை *tāya-k-kaṭṭai*, பெ. (n.) சூதாட்டத்தில் உருட்டுங் கவறு *(யாழ்ப்.)*; dice.

[தாயம் + கட்டை]

தாயகம் *tāyagam*, பெ. (n.) 1. அடைக்கலம்; support, shelter, place of refuge. "இதுவன்றித் தாயகம் வேறில்லை யில்லை" *(தாயு. ஆகார. 11).* 2. பிறந்தகம்; birth place.

[தாய் + அகம்]

தாயங்கூறு-தல் *tāyaṅgūṟu-*, 5 செகுவி. (v.i.) சூதாட்ட வட்டங் கூறுதல்; to call out the required number in throwing dice. *(சீவக. 927: உரை).*

[தாயம் + கூறு-.]

தாயசத்து *tāya-šattu*, பெ. (n.) காச்சுமீரிலுள்ள ஒரு வகை மரம் (பித்த ரோகிணி); small Kashmiri tree.

தாயத்தவர் *tāya-tt-avar*, பெ. (n.) பங்காளிகள்; agnates. "தாயத்தவருந் தமதாயி போழ்தே கொடாஅர்" *(நாலடி, 278).*

[தாயம் + அத்து + அவர்]

தாயத்து tāyattu, பெ. (n.) மறைமொழித் தகடு; amulet, talisman *(செ.அக.).*

தாயத்துகட்டல் *tāyattu-kaṭṭal*, பெ. (n.) மறை மொழித் தகடு கட்டுதல்; tying an amulet with a thread on the neck or the arm *(சா.அக.).*

[தாயத்து + கட்டல்]



தாயதருமம் *tāya-tarumam,* பெ. (n.) தாய பாகம் கூறும்நூல்; law of inheritance, rule of partition (R.F.).

[தாயம் + தருமம்]

தாயப்பதி *tāya-p-pati,* பெ. (n.) தனக்கு உரிமையாகக் கிடைத்துள்ள வாழிடம் அல்லது ஊர்; city or town got by inheritance. "தாயப்பதிகள் தலைச்சிறந் தெங்கெங்கும்' (திவ். திருவாய். 8: 6: 9).

[தாயம் + பதி]

தாயபனுவல் *tāya-paṉuval,* பெ. (n.) இடையிடையே, இலக்கணங்கள் கலந்து வரும் இலக்கிய வகை; a poem intermixed with definitions. "சின்மென்மொழியாற் றாய பனுவலோடு" (தொல். பொருள். 547).

[தாவு + பனுவல் → தாவு பனுவல் → தாய பனுவல்]

தாயபாகம் *tāya-pāgam,* பெ. (n.) 1. அரத்த உறவினர் தம்முள் பிரித்துக்கொள்ளும் உரிமைப் பங்கு; division of an estate among heirs. 2. சீமுதவாகனர் இயற்றிய பாகப் பிரிவினைப் பற்றிய நூல்; a treatise on the Hindu law of inheritance by jimudavāgaṉar. 3. பன்னிரண்டாம் நூற்றாண்டில் விஞ்ஞானேசுவரர் இயற்றிய மிதாஷரத்தில் தாயவுரிமையைப் பற்றிக் கூறும் பகுதி; chapter on the law of inheritance in the Mitākṣara off Vijñāṉēšvarar (12th C.R.F.).

[தாயம் + பாகம்]

தாயம் *tāyam,* பெ. (n.) 1. பிரிவினைக்குரிய தந்தைவழிப் பொருள்; patrimony, inheritance, wealth of an ancestor capable of inheritance and partition (R.F.). 2. தந்தைவழிச் சுற்றம்; paternal relationship (யாழ்அக.). 3. கவறு cubical pieces in dice-play (யாழ்அக.). 4. கவறுருட்ட விழும் வட்டம்; a fall of the dice. "முற்பட இடுகின்ற தாயம்" (கலித். 136, உரை.). 5. பங்கு; share (யாழ்அக.). 6. கவறுருட்ட விழும் ஒன்று என்னும் எண்; number one in the game of dice. 7. கொடை; gift, donation (யாழ்.அக.). 8. நல்வாய்ப்பு; good opportunity. 9. துன்பம்; affliction, distress (யாழ்.அக.). 10. தாக்காட்டு (வின்.); delay, stop. 11. குழந்தை விளையாட்டு வகை; a child's game played with seeds or shells on the ground. 12. மேன்மை; excellence, superiority. "தாயமாம்பதுமினிக்கு" (கொக்கோ. 1, 28).

[தரு → தார் → தா → தாய் + அம். தாயம் = உரிமை. தாயின் புகுந்த குடி, அறுகு போல் பல்லாற்றானும் கிளைத்து, ஆல் போல் தழைத்து, வேரூன்றுதற்பொருட்டுப் பெற்றுத்தரும் பிள்ளை; அப் பிள்ளை பெறும் உரிமை. அவ் வுரிமையினால் கிடைக்குந் தந்தைவழிப் பொருள் எனப் பல்வேறு நிலைகளில் தாயம் என்னும் சொல் வழங்குவதறிக]

ம. தாயம்

தாயமாட்டு *tāyam-āṭṭu,* பெ. (n.) காலத்தாழ்வு; tardiness (நெல்லை.).

[தாயமாடு → தாயமாட்டு]

தாயமாடு-தல் *tāy-māḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கவறாடுதல்; to play dice. 2. கட்ட மாடுதல்; to play the child's game of tāyam. 3. காலந் தாழ்த்துதல்; to be tardy (நெல்லை.).

ம. தாயாடுக

[தாயம் + ஆடு-.]

தாயவலந்தீர்த்தான் *tāy-avalantīrttāṉ,* பெ. (n.) பருந்து; kite.

[தாய் + Skt. அவலம் + தீர்த்தான்.]

தாயவிதைப்பு *tāya-vidaippu,* பெ. (n.) உரிய காலத்தில் விதைக்கை; seasonable sowing (J.).

[தாயம் + விதைப்பு]

தாயனார் *tāyaṉār,* பெ. (n.) அரிவாட்டாய நாயனார் (பெரியபு. அரிவாட். 5); a canonized Šaiva saint.

தாயாதி *tāyādi,* பெ. (n.) ஒரேகொடிவழியில் பிறந்த உரிமைப்பங்காளி; agnate (செ.அக.).

[தாய(ம்) + ஆதி]

தாயாதித்தனம் *tāyādi-t-taṉam,* பெ. (n.) 1. பங்காளிகள் தம்முள் காட்டுவது போன்ற ஏமாற்றுச்செயல்; deception, fraud, as practised among relations in regard to heriditary property. 2. பொறாமை; jealousy. (loc.).

[தாயாதி + தனம்]

தாயாதிப்பட்டம் *tāyādi-p-paṭṭam,* பெ. (n.) *மகன் முறையில் வாராமல், பரம்பரையில் மூத்தோர் முறையே அடையும் உரிமைப் (ஜமீன்) பட்டம்*; rule of succession in a zamin by which the senior member succeeds in preference to the sons of the last male holder (R.F.).

[தாயாதி + பட்டம்]

தாயார் *tāyār,* பெ. (n.) *1. அன்னை;* mother. "பயந்த தாயாரு மிறந்ததற்பின்" *(பெரியபு. திருநாவுக். 29).* *2. திருமகள்;* Lakṣmi, as mother. "தாயார் சந்நதி" *(மாலியம்.).*

ம. தாயார்

[தாய் + ஆர்]

தாயான் *tāyān,* பெ. (n.) *ஒன்பது என்னும் குழூஉக்குறி;* nine, a slang term *(யாழ்.அக.).*

[தாய் + ஆன்]

தாயான்புலு *tāyān-pulu,* பெ. (n.) *தொண்ணூறு என்னும் குழூஉக் குறி;* ninety, a slang term (செ.அக.).

[தாயான் + புலு]

தாயி[1] *tāyi,* பெ. (n.) *தாய்ச்சி;* wet-nurse *(Loc).*

[தாய் + இ-.]

தாயி[2] *tāyi,* பெ. (n.) *வழக்காளி;* claimant, plaintiff *(Loc)* *(செ.அக.).*

தாயித்திரம் *tāyittiram,* பெ. (n.) *எள்;* gingelly seed - Sesamum indicum *(சா.அக.).*

தாயுமானவர் *tāyumāṉavar,* பெ. (n.) *1. திருச்சிராப்பள்ளிச் சிவபெருமான்;* Šivan, as worshipped in the temple at Tiruccirāppaḷḷi. *2. தாயுமானவர் பாடல் என வழங்கும் நூற்றொகுதியை இயற்றியவரும், 18–ஆம் நூற்றாண்டிலிருந்தவருமான, ஒரு சைவப் பெரியார்;* Šaiva devotee and poet author of Tāyumāṉavar-pāḍal 18th c.

[தாய் + உம் + ஆனவர்]

தாயுமானார் *tāyumānār,* பெ. (n.) தாயுமானவர் பார்க்க; see *tāyumāṉavar* *(செ.அக.).*

[தாயும் + ஆனார்]

தாயேடு *tāyēḍu,* பெ. (n.) *மூலஏடு;* original ōla book *(செ.அக.).*

மறுவ. தலையேடு, முதலேடு

[தாய் + ஏடு]

தாயைக்கொல்லி[1] *tāyai-k-kolli,* பெ. (n.) *1. பெருந்தீயன்;* villain wretch, as his mother's murderer. "தன் தாயைக் கொலை செய்தவன்" *2. ஈன்றதும் நசித்துப்போகிற வாழை முதலியன;* plantain or other tree that perishes after yielding (W.). *3. மரம்செடிகளில் ஒட்டி வளரும் பூடுவகை;* mistletoe.

[தாய் + ஐ + கொல்லி]

தாயைக்கொல்லி[2] *tāyai-k-kolli,* பெ. (n.) *1. புல்லுருவி;* a parasitic plant. *2. தேள் கொடுக்கியிலை;* scorpion sting leaf-heliotropium indicum. *3. வாழை;* plantain tree. *4. கோடைக் கிழங்கு;* a kind of root dugout in summer. *5. சிற்றரத்தை;* lesser galangal.

[தாயை + கொல்லி]

தாயைக்கொன்றான் *tāyai-k-koṉṟāṉ,* பெ. (n.) தாயைக்கொல்லி[2] பார்க்க; see *tāyai-k-kolli*[2] (மலை.).

[தாய் + ஐ + கொன்றான்]

தாயைக்கொன்றான்சாறு *tāyai-k-koṉṟāṉ-šāṟu,* பெ. (n.) *வாழைச்சாறு;* the juice of plantain corn or stem *(சா.அக.).*

[தாயைக்கொன்றான் + சாறு]

தாயோலை *tāyōlai,* பெ. (n.) *1. மூலஆவணம்;* original ōlai document (Loc.). *2.* தாயேடு பார்க்க; see *tāyēḍu* (J.).

மறுவ. முதலோலை, தலையோலை

[தாய் + ஓலை]

தார்[1] *tār,* பெ. (n.) *1. மாலை;* garland, wreath, chaplet *(பிங்.).* *2. பூ;* flower, blossom *(பிங்.).* *3. பூவரும்பு;* flower-bud. "கடை திறக்குந்தார் கண்ட வண்டும்" *(வெங்கைக்கோ. 65).* *4. பூங்கொத்து;* cluster of flowers. "தாரார் கரந்தை மலைந்து" *(பு.வெ. 2,1).* *5. கிண்கிணி மாலை;* string of bells for a horse. 'பாய்மா வரும் பொற்றா ரரவத்தாலே' *(சீவக. 1819).*

6. சங்கிலி; chain (சங்.அக.). 7. கிளியின் கழுத்து வரை; neck-stripes of parrots. 'செந்தார்ப் பசுங்கிளியார் (சீவக. 1036). 8. கொடிப்படை; van of an army. "தாரொடு பொலிந்த . . . மூத்த புரிசை (மலைபடு. 227). 9. படை; troops (சூடா.) "தாரொடுங்கல் செல்லா" (கம்பரா. மந்தரை. 13). 10. ஒழுங்கு; orderliness. "தாரருந் தகைப்பின்" (பதிற்றுப். 64: 7). 11. கயிறு; cord. "அருளெனு நலத்தார் பூட்டி" (பதினொ. பட்டணத். கோயினா. 16). 13. பிடர்மயிர்; mane. "தாரணியெருத்தின் அரிமான்" (பதிற்றுப். 12,4). 14. தோற்கருவி வகை; a kind of drum. "பம்மைதார் முரசம்" (கம்பரா. பிரமாத். 5). 15. ஏரி உள் வாயிலுள்ள புன்செய்; land inside a tank, used for dry cultivation. எனக்கு அந்த தாரைக் காட்டினான். (உ.வ.). 16. சூழ்ச்சி; trick, tactical move. "ஒரு கால் வருதார் தாங்கி" (புறநா. 80).

ம. தாரு

[தள் → தரு → தார். தருதற்கருத்து வேர். தள் என்னும் வினை தருதற்பொருளில் 'தரு' எனத் திரிந்து பின்பு, எதிர்மறையில் "தள்" எனத் திரிந்தது. 'யகரமெய்யீறாகத் திரியாத ளகரமெய்யீற்று, இயற்சொற்கள் எல்லாம் பொதுவாக 'ரு'கர வீற்றுச் சொற்களாகத் திரிகின்றன. (எ-டு.) கள் → கரு → கார் (கருமை). கள் → கரு → கண் என்னுந் திரிபு போன்றதே, தள் → தரு → தார் என்பதும். ஒ.நோ. வள் → வரு → வார். முழுத்திரிபு நிலையிலும், தருதல் வினையை ஒத்துள்ளது கண்டுகொள்க.]

தார்[2] *tār,* பெ. (n.) உடைமையைக் குறிக்கும் ஒரு சொல்; a termination indicating owner. "வாரிசு தார்".

தார்[3] *tār,* பெ. (n.) கீலெண்ணெய்; liquid or wood tar (Loc.).

தார்[4] *tār,* பெ. (n.) 1. வீடு; house. 2. கற்பூரத் தைலம்; turpentine. 3. தாளிப்பனை; talipot (சா.அக.).

தார்[5] *tār,* பெ. (n.) ஒரு வகை மரத்தை எரித்துக் கரியுண்டாக்கிப் பிறகு, அந்நிலக்கரியினின்று குழித்தைல முறையாக வடிக்கும் ஒரு நீர்மம்; tar pix liquid (சா.அக.).

[தா → தரு → தார்]

பனை, சவுக்கு, தாழை முதலான மரங்களை எரித்துக் கரியாக்கி, அந் நிலக்கரியினின்று வடிக்கப்படும் நீர்மம்; இது கறுப்பாயும், பளபளப்பாயும், மணமுள்ளதாகவும், இருக்குந்தன்மைத்து. நெருப்பிலிட உருகும். தாரினைக் காய்ச்சி ஆவி பிடிப்பதினால் குளிர், இருமல், சளி முதலானவை அகலும். தாரில் எடுக்கப்படும் களிம்பினால், சொறிசிரங்கு, தொழுநோய், அரிப்பு முதலானவை தீரும். தாரினின்று எடுக்கப்படும் நீர்மம், காய்கறி நீர்மம், மாழைநீர்மம் என இருவகைப்படும். கருப்பூரத் தைலத்துடன் வாதுமை எண்ணெய், தார்நீர்மங் கலந்து தோல் நோய்க்குத் தடவுவர். இது மரங்களில் மீது பூசிப் பாதுகாக்கவும் பயன்படுமென்று சா.அக. கூறும்.

தார்எண்ணெய் *tār-ennęy,* பெ. (n.) இது நிலக்கரியைத் தூய்மை (சுத்திகரிப்பு) செய்யும் முறையில் உண்டாகும் எண்ணெய் (கட்டட.); oil extracted from coal.

[தார் + எண்ணெய்]

தார்க்கணி-த்தல் *tār-k-kaṇi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. சான்றுடன் காட்டல்; to demonstrate prove by evidence (W.). 2. தடுத்துச் சொல்லுதல்; to interrupt, object. 3. தார்க்காட்டு-தல் பார்க்க; see *tār-k-kāṭṭu-.* (இ.வ.).

[தார் + கணி-.]

தார்க்கப்பரை *tār-k-kapparai,* பெ. (n.) நெசவுக்கருவியில் தார்க்குச்சுகள் அணியமாக்கி வைத்திருக்கும் செப்புச்சட்டி; copper pot in which bobbins are kept ready for use. (இ.வ.).

[தார் + கப்பரை]

தார்க்கம்பு *tār-k-kambu,* பெ. (n.) தார்க்குச்சு[2] பார்க்க; see *tār-k-kuccu*[2] (Tinn) (செ.அக.).

[தார் + கம்பு]

தார்க்களிம்பு *tār-k-kaḷimbu,* பெ. (n.) உடம்பின் மேல்பூசும் கீலினாலான மருந்து; ointment of tar (C.E.M.).

[தார் + களிம்பு]

தார்க்காட்டு-தல் *tār-k-kāṭṭu-,* வி. (v.) 1. போக்குக் காட்டுதல் (சென்னை.); to give excuses, evade

by diverting attention or by misleading. *2. தவிர்க்கப்படுதல்;* to postpone, delay *(இ.வ.).*

[தார் + காட்டு-.]

தார்க்காணி-த்தல் *tāṟ-k-kāṇi-,* 4 செ. குன்றாவி. (v.t.) *தார்க்கணி-த்தல் பார்க்க;* see *tār-k-kaṇi-. (இ.வ.).*

[தார் + காணி-.]

தார்க்கிகன் *tār-k-kigaṉ,* பெ. (n.) *அளவை நூல்வல்லோன்;* logician, sophist *(செ.அக.).*

[தார் + இகன்]

தார்க்கியன் *tārkkiyaṉ,* பெ. (n.) *கருடன்;* the sacred kite. *"கத்துருவினைத் தெரிபு தார்க்கியன் கனன்றே" (சேதுபு. கத்துரு. 86).*

[தார் + இயன்]

தார்க்குச்சு[1] *tār-k-kuccu,* பெ. (n.) *நெய்வதற்கு உண்டைநூல் சுற்றிய சிறு நாணல் கொறுக்கை முதலியவற்றின் குற்றி;* bobbin *(செ.அக.).*

[தார் + குச்சு]



தார்க்குச்சு[2] *tār-k-kuccu,* பெ. (n.) *நுனியில் இருப்புமுள் பதிக்கப்பட்ட மாடோட்டுங் கழி;* goad *(செ.அக.).*

[தார் + குச்சு]

தார்க்குழல் *tār-k-kuḻal,* பெ. (n.) *தார்க்குச்சு பார்க்க;* see *tār-k-kuccu (இ.வ.).*

[தார் + குழல்]

தார்க்கெண்டை *tār-k-keṇḍai,* பெ. (n.) *தார்க்குச்சு[1] பார்க்க;* see *tār-k-kuccu[1] (செ. அக.).*

[தார் + கெண்டை]

தார்குடிகள் *tār-kuḍigaḷ,* பெ. (n.) *அடிப்படைக் குடிகள்;* substantial tenants.

[தார் + குடிகள்]

தார்சடாந்திகம் *tārśaḍāndigam,* பெ. (n.) *தாட்டாந்திகம் பார்க்க;* see *tāṭṭāndigam. "திருஷ்டாந்தித்திற் சொன்னதைத் தாஷ்டாந்திகத் திலேயும் காட்டுகிறாள் (ஈடு, 6. 1:1:அரும்.) (செ.அக.).*

தார்சிங்கு *tārśiṅgu,* பெ. (n.) *மிருதாரசிங்கு;* impure oxide of lead-litherage *(சா. அக.).*

தார்சீனி *tārśīṉi,* பெ. (n.) *கிராம்புப்பட்டை;* ceylon cinnamum *(சா. அக.).*

[தார் + சீனி]

தார்ட்டியம் *tārṭṭiyam,* பெ. (n.) *வலிமை;* strength. *உறுதிப்பாடு;* firmness *"காய தார்ட்டியமும்" (கோயிலொ 29).*

[தரு → தார் → தார்ட்டியம்.]

தார்த்தயிலம் *tār-t-tayilam,* பெ. (n.) *1. தாரினின்று வடிக்கும் தைலம்;* ointment of tartar. *2. தார் எண்ணெய்;* oil of tar - Creosote.

[தார் + தயிலம். இயற்கையாக விளையும் மரக்கரியினின்று, வடிக்குந் தயிலம்.]

தார்தாராய் *tārtārāy,* பெ. (n.) *துண்டு, துண்டாக;* in pieces, in shreds *(இ.வ.) (செ.அக.).*

[தார் + தார் + ஆய்]

தார்நிலை *tār-nilai,* பெ. (n.) *1. பகைவரால் சூழப்பட்ட தம்வேந்தை, பகைவரிடமிருந்துக் காப்பாற்ற, படைத்தலைவர் முதலியோர் வேற்றிடத்தில் போரிடுதலைக் குறிக்கும் புறத்துறை;* theme describing the attach of captains and commanders in rescuing their king when he is surrounded by enemies. *"வேன்மிகு வேந்தனை மொய்த்தவழி யொருவன் தான் மீண்டெறிந்த தார்நிலை" (தொல்.பொருள். 72). 2. அரசனிடம் வீரன் ஒருவன், பகைவரது தூசிப்படையைத் தான் ஒருவனே அழிப்பேன் எனத் தன் தறுகண்மை கூறும், புறத்துறை;* theme describing the boast of a warrior to his king about his ability to destroy the enemy's front. *(பு.வெ. 7:8).*

[தார் + நிலை]

தார்நூல் *tār-nūl,* பெ. (n.) *உண்டை நெய்வதற்குச் செம்மை செய்யப்பட்ட நூல்;* cotton thread prepared for bobbins (Loc.).

[தார் + நூல்]

தார்ப்பாய்ச்சல் *tār-p-pāyccal,* பெ. (n.) *மூலைக் கச்சம்;* a mode of wearing cloth round the loins in the fashion of the divided skirt. (Loc.).

[தாறு → தார் + பாய்ச்சல்]

தார்பாய்ச்சு-தல் *tār-p-pāyccu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *மூலைக்கச்சங்கட்டுதல்;* to wear a cloth in the mode of the divided skirt.

[தார் + பாய்ச்சு-.]

தார்ப்பாய் *tār-p-pāy,* பெ. (n.) *தார்பூசப்பட்ட கோணி;* tarpalin.

[தார் + பாய்]

தார்ப்பிட்டம் *tār-p-piṭṭam,* பெ. (n.) *மரமஞ்சள்;* tree turmeric *(சா. அக.).*

[தார் + பிட்டம்]

தார்பிடம் *tār-p-piḍam,* பெ. (n.) *மரமஞ்சள் என்னும் கொடி வகை;* tree turmeric *(சங் அக.).*

[தார் + பிடம்]

தார்பீடம் *tārpīḍam,* பெ. (n.) *தார்வடிக்கும் இடம்;* the furnace from which tar is distilled and extracted *(சா. அக.).*

[தார் + பீடம்]

தார்ப்பூ *tār-p-pū,* பெ. (n.) *அரசர்க்குரிய அடையாளப்பூ* (தொல்.பொருள். 626, உரை); the flower adopted by a king as his symbol.

[தார் + பூ]

தார்மணி *tār-maṇi,* பெ. (n.) *குதிரையின் கழுத்திலிடுங் கிண்கிணி மாலை;* collar of tinkler's for horse's neck.

[தார் + மணி]

தார்மபத்தனம் *tārma-pattaṉam,* பெ. (n.) *மிளகு;* black-pepper *(மூ.அ.).*

தார்மரம் *tār-maram,* பெ. (n.) *மரவகை;* scotch pine.

[தார் + மரம்]

தார்மதாடம் *tārma-dāḍam,* பெ. (n.) *தச்சன் குருவி;* wood pecker *(சா. அக.).*

[தார் + மதாடம்]

தார்முகவுப்பு *tārmuga-v-uppu,* பெ. (n.) *சவுட்டுப்பு;* a mixture of saline materials such as carbonates sulphates chlorides *(சா. அக.).*

[தார் + முகம் + உப்பு. இதளியத்தை நீர்க்கச் செய்யும் உப்பு]

தார்வகம் *tārvagam,* பெ. (n.) *தார்வம் பார்க்க;* see *tārvam* *(சா. அக.).*

[தார் + அகம்]

தார்வம் *tārvam,* பெ. (n.) *காட்டு மஞ்சளினின்று அணியமாக்கப்பெறும் ஒரு வகை அஞ்சனம்;* a collyrium prepared from wild turmeric.

[தார் + அம்]

தார்வாதாடம் *tār-vādāḍam,* பெ. (n.) *தார்மதாடம் பார்க்க;* see *tārma-dāḍam* *(சா. அக.).*

தார்விகம் *tārvigam,* பெ. (n.) *குட்டிப்பிலா;* demon tree *(சா. அக.).*

தார்விதவிருத்தி *tār-vidavirutti,* பெ. (n.) *மர மஞ்சளைச் சதுரக்கள்ளி, எருக்கம்பாலில் அரைத்துத் துணியில் தடவி மிகச்செய்து, மூலத்திற்கு இடும் மருந்து;* medicine for piles *(சா. அக.).*

தாரக்கம் *tārakkam,* பெ. (n.) *தாரகம்*[2] பார்க்க; see *tāragam*[2] *(செ. அக.).*

தாரகசித்து *tāraga-šittu,* பெ. (n.) *குமாரக் கடவுள்;* Lord Murugan.

[தாரகம் + சித்து. அருள் தரும் முருகன்.]

தாரகத்தண்ணீர் *tāraga-t-taṇṇīr,* பெ. (n.) *இறப்பு நிகழும் நிலையில் கொடுக்கும் சிறப்பு நீர்;* water given at the movement of death *(சா. அக.).*

[தாரகம் + தண்ணீர்]

தாரகதம் *tāragadam,* பெ. (n.) *நீர்க்கடம்பு;* water codambam - Stephegyne parviflora alias Nanchlea purpurea *(சா.அக.).*

தாரகத்தான் *tāragattāṉ,* பெ. (n.) *பன்றிக் கொம்பு;* hog's horn *(சா.அக.).*

தாரகத்திகரம் *tāraga-t-tigaram,* பெ. (n.) *ஈயம்;* tin or white lead *(சா.அக.).*

தாரகதம்பம் *tāra-gadambam,* பெ. (n.) *கடம்பம்;* codambam tree *(சா.அக.).*

தாரகநீர் *tāraga-nīr,* பெ. (n.) 1. *மாழைநீர்;* basic water. 2. *கண்ணீர்;* tears *(சா.அக.).*

[தாரகம் + நீர்]

தாரகபத்தியம் *tāraga-pattiyam,* பெ. (n.) சோற்றினை மறுவுலைப் பாய்ச்சிக் கஞ்சியாக நோயாளிகட்குக் கொடுத்தல்; liquid form of rice divided by boiling rice twice.

மறுவ. புனற்பாகம்

[தாரகம் + பத்தியம்]

தாரகப்பிரமம் *tāraga-p-piramam,* பெ. (n.) அனைத்திற்கும் மேலான ஓங்கார வடிவம்; the mystic syllable Ōm, as symbolic of the Supreme Being. "ஆசில் தாரகப்பிரமமா மதன்பயன் ஆய்ந்தான்" *(கந்தபு. அயனைச்சிறைபுரி. 11).*

[தரு → தார் + அகம் → தாரகம் + பிரமம். அனைத்தும் 'ஓம்' (ங்)காரத்திற்குள் அடக்கம். அ + உ + ம → ஓம். ஓம் என்னும் ஓங்கார ஒலியினில், இறைவன் தரும் திருவருள் இலங்குகின்றது. இதுவே அனைத்திற்கும் ஆதாரம். அ = இறைவன், உ = திருவருள். இவ்வுலகம் உய்யும் பொருட்டு இறைவன் தந்த திருவருள் மந்திரமே ஓங்காரம். சிவனியத்தாரும், மாலியத்தாரும், தத்தம் இறைவனது திருப்பெயரை யொலிக்குங்கால், ஓங்கார ஒலியினை, மூலமந்திரத்துடன் முன்னடையாகச் சேர்த்து ஒலிப்பது மரபாகும்.

(எ–டு) ஓம் நமச்சிவாய
ஓம் நமோ நாராயணாய]

தாரகம்[1] *tāragam,* பெ. (n.) 1. கடப்பதற்கு உதவுவது; that which serves to cross or overcome. "தாரகமா மத்தன் றாள்" *(சி.போ.பா. 22.).* 2. ஓம்; Ōm, the mystic incantation, the monosyllable. "மெய்த்தொளிர் தாரகம் விள்ளுவதாகும்" *(தணிகைப்பு. அகத்தி. 10.).* 3. விண்மீன் (வின்.); star. 4. உச்சவிசை (வின்.); highest voice, high key or note.

[தரு → தரம் → தாரம் + அகம் → தாரகம். ஒருகா. தார் + அகம் → தாரகம். ஓங்கார மூலமந்திரம், பொருத்திய குரம்பைதனில் பொய்நடை செலுத்தி வாழும் மாந்தரின், உலகத்துயரை யொழிக்கும் அடிப்படை ஆதாரமாகும். 'ஓம்' எனும் ஒலி தரும் மன நிறைவை அல்லது உள்ளவொடுக்கத்தை, 'தரு' என்னும் வேரடி குறித்து வழங்கிய தென்றறிக. 'ஓம்' எனும் ஒலியே ஏழிசைக்கும் ஆதாரம். மானிடர்க்கு, மனப் பொந்திகையைத் தருவதே, ஏழிசையின் அடிப்படைப் பண்பாகும்.]

தாரகம்[2] *tāragam,* பெ. (n.) 1. ஆதாரம்; that which protects or supports; receptacle; vehicle, means; refuge. "எனக்கு நினனரு டாரகம்" *(தாயு. மௌன. 6.).* 2. பத்தியவுணவு (இ.வ.); sustenance, light food, diet for convalescents.

[தரு → தார் + அகம் → தாரகம்.]

தாரகற்காய்ந்தாள் *tāragaṟ-kāyntāḷ,* பெ. (n.) தாரகன் என்னும் வலிமையுள்ள அரக்கனைக் கொன்ற காளி (சூடா.); Kāḷi, as the slayer of the arakkaṉ Tāragaṉ.

[தாரகன் + காய்ந்தாள்.]

தாரகற்செற்றதையல் *tāragaṟ-šeṟṟa-taiyal,* பெ. (n.) தாரகற்காய்ந்தாள் பார்க்க; see *tāragaṟ-kāyntāḷ.*

[தாரகன் + செற்றதையல்.]

தாரகற்செற்றோன் *tāragaṟ-šeṟṟōṉ,* பெ. (n.) தாரகனைக் கொன்ற முருகக்கடவுள்; Murugaṉ, the God, as the slayer of Tāragaṉ.

[தாரகன் + செற்றோன்]

தாரகன்[1] *tāragaṉ,* பெ. (n.) உலக வாழ்விற்கு ஆதாரமான இறைவன்; God the protector and the origin of all life.

[தரு → தரம் → தாரம் + அகம். தாரகம் → தாரகன். தரம் → தாரம் = மூலம் வரும்வழி. உலகவாழ்வை நடாத்துதற்கு ஆதாரமான உடம்பைத் தந்தவன் இறைவன். இஃதும், தருதல் என்னும் வேரடி யினின்று கிளைத்த சொல்லென்றறிக. மாந்தனை, நல்வழிப்படுத்தும் அனைத்துச் சமயங்களின் கொண்முடிபும், இதுவே யாகும்.]

தாரகன்[2] *tāragaṉ,* பெ. (n.) கடப்பிப்போன்; one who helps in crossing or overcoming. "தாரகன் தன்னைச் சாதத் தடங்கடற் றளர்வார் தம்மை" *(சீவதரு. பாவ. 8).*

[தாரகம் → தாரகன். வாழ்க்கைக் கடலைக் கடக்க, அனைத்து மாந்தருக்கும், தோணியாகத் திகழ்பவன்.]

தாரகாகணம் *tāragā-kaṇam,* பெ. (n.) விண்மீன் கூட்டம்; star cluster. "அநேக தாரகாகணமா நவமணி" *(பாரத. சிறப்புப். 4.).*

[தாரகம் + கணம்.]

தாரகாதேசம் *tāragā-tēšam,* பெ. (n.) விண்மீன் மண்டலம்; starry heavens. "தாரகா தேசந்தன்னில்" *(சீவதரு. சிவதருமம. 19).*

[தாரகம் + தேயம் → தேசம்.]

தாரகாபதி *tāragā-pati,* பெ. (n.) விண்மீன் மண்டலத் தலைவனான நிலவன்; Moon, as lord of the stars. "தாரகாபதி புதல்வன்" *(பாரத. குருகுல.).*

[தாரகபதி → தாரகாபதி.]

தாரகாரி[1] *tāragāri,* பெ. (n.) தாரகற் செற்றோன் *பார்க்க;* see *tāragaṟ-šeṟṟōṉ.* 'தாரகாரியுஞ் சளுக்கியர் வேந்தனும்' *(பிங்.).*

தாரகாரி[2] *tāragāri,* பெ. (n.) காளி *(சூடா.);* Kāḷi.

தாரகி *tāragi,* பெ. (n.) கள்; toddy *(சா.அக.).*

[தார் + அகு + இ → அகி→ தாரகி]

தாரகை[1] *tāragai,* பெ. (n.) கண்மணி; apple of the eye *(யாழ்.அக.).*

[தார் + அகை → தாரகை. பிறர் வடிவம் தருந்தன்மைத்து]

தாரகை[2] *tāragai,* பெ. (n.) நிலம்; earth. "வானவர்தாந் தானவர் தாந் தாரகைதான்".

[தார் → அகை → தாரகை = நிலம் = ஒருவிதையிடின் பல்கிப் பெருகி, பலன் தருவது]

தாரகைக்கோவை *tāragai-k-kōvai,* பெ. (n.) ஏகாவலி என்னும் அணிகலம்; a kind of necklace. "தாரகைக் கோவையுஞ் சந்தின் குழம்பும்" *(சிலப். 13:19).*

[தாரகை + கோவை]

தாரகைமாலை *tāragai-mālai,* பெ. (n.) கற்பு நெறி கூறும் நூல்வகை; a kind of širrilakkiyam, that says virtue *(இலக். வி: 867).*

[தாரகை + மாலை = கற்புடை மகளிர்க்கு உள்ள இயற்கைக் குணங்களைக் கூறுவது]

தாரசாரம் *tārā-šāram,* பெ. (n.) நூற்றெட்டு சிற்றிலக்கியங்களுள் ஒன்று *(சங்.அக.);* an upaniṣad, one of 108.

தாரணநட்சத்திரம் *tāraṇa-naṭcattiram,* பெ. (n.) குருகு (மூலம்), கவ்வை (ஆயில்யம்), தழல் (கேட்டை), யாழ் (திருவாதிரை) என்னும் விண்மீன்கள் *(விதான. பஞ்சாங். 20. உரை);* the asterisms mūlam, āyilyam, kēṭṭai, tiruvādirai *(செ.அக.).*

த. விண்மீன்; Skt. naṭcattra *(நட்சத்திரம்)*

[தாரணம் + நட்சத்திரம்]

தாரணம் *tāraṇam,* பெ. (n.) *1.* ஒரு வகை மூலிகைச் செடி; a kind of medicinal plant. *2.* உறுதி; stability.

[தரு → தார் + அணம்]



தாரணவோகம் *tāraṇa-v-ōgam,* பெ. (n.) ஒருமுக நோக்குடைய ஆழ்நிலை ஊழ்கம்; deep devotion.

[தாரணம் + ஓகம்]

தாரணாவாற்றல் *tāraṇā-v-āṟṟal,* பெ. (n.) ஆழ்நிலை ஓகத்தினால் உள்ளந்தரும் ஆற்றல்; power of concentration.

[தாரணம் + ஆற்றல் = உள்ளத்திற்கு உறுதியையும், உடலுக்கு ஆற்றலும் நல்கும் ஓகம்.]

தாரணி[1] *tāraṇi,* பெ. (n.) *1.* உடம்பில் காரியரத்தம் செல்ல வேண்டிச், சவ்விலும் எலும்பின் கண்ணறைப் பகுதியிலும்,

கருப்பைச்சுவரிலும் ஓடும் குழலான வெளிகள்; veins with very small bore or hair like tubes passing in bodies of porous structure as membranes bony cells, and walls of the uterus. *2. விலங்குகளின் உடம்பிலுண்டாகும் உட்டுளைகள்;* a cavity in animal bodies. *3. மருந்துப் பூச்சியினால் கட்டி பழுத்து உடைதல்;* brusting or opening of an abscess by medicinal application *(சா.அக.).*

[தார் + அணி → தாரணி. குருதியைக் குழலில் கொடுக்கும் வரிசையாய் அமைந்த கருப்பைச் சுவர்க் குழாய்கள் → தாரகி. அணி = வரிசை]

தாரணி[2] *tāraṇi,* பெ. (n.) மலை; mountain. "எழுதாரணிதிகழ் தோளண் ணலே" *(மருதூ. 45).*

[தரு → தார் + அணி → தாரணி - அனைத்து வளங்களையும் மாந்தருக்குத் தருவது மலை]

தாரணி[3] *tāraṇi,* பெ. (n.) கூற்றுவன்; Yama<u>n</u>. "தாரணியெனத் தனது தண்டுகொடு" *(பாரத. மணிமான் 42).*

[தார் + அணி → தாரணி = கூற்றுவன் உடலில் உயிரைப் பிரித்து, இயற்கைக்குத் தருபவன்]

தாரணி[4]**-த்தல்** *tāraṇi-,* 4 செ. குன்றாவி. (v.t.) அணிதல்; to bear. "வானநீரினாற் றாரணித் தங்கொரு மலையிற் றாங்கினான்" *(கம்பரா. அயோமுகி. 93).*

[தார் + அணி-.]

தாரணீ *tāraṇī,* பெ. (n.) வலியைப் போக்கக் கூறும் மறைமொழி; a mystical verse or charm used as a kind of prayer to reduce pain *(சா.அக.).*

[தரு → தார் → தாரணி → தாரணீ]

தாரணை[1] *tāraṇai,* பெ. (n.) *1. அணிகை;* wearing, investing, bearing, upholding, sustaining. *2. நினைவில்வைக்கை;* recollection, retaining in the memory. *3. உறுதி;* firmness, steadiness, stability. *4. மனதை ஒருவழி நிறுத்துதலான எட்டுவகை தவ நிலையில் ஒன்று;* concentrated attention, one of eṇ-vagai-yōgam - q.v. *5. ஒழுங்கு;* construction, arrangement, order, system, principles, established order of things, natural or artificial. *6. ஒகத்தில் ஒன்பது வகைப்பட்ட மனநிலைகள்;* nine forms of meditation practised by Saiva yōgis.

[தார் + அணி → அணை = முறையாகத் தருவதை அணிகை]

தாரணை[2] *tāraṇai,* பெ. (n.) *1. விழுக்காடு;* rate. *2. நெல் முதலிய பண்டங்களின் விலை;* price as of paddy.

க. தாரணெ; தெ. தாரன்

[தார் + அணை. இயற்கை தரும், பொருள்களை அணைத்து எண்களால் எண்ணிக் கணக்கிடுகை]

தாரணை[3] *tāraṇai,* பெ. (n.) *1. மருந்து தடவுவதினால் கட்டியுடைகை;* bursting of abscess by medicinal application. *2. நினைவை ஒருவழிப்படுத்தல்;* concentration of mind *(சா.அக.).*

இது எட்டுவகை ஓகங்களில் ஒன்று. இதயம், கண்டம், உந்தி, நெற்றி இவற்றில் ஒன்றில் சிந்தை வைத்தல். சிவமுனிவர்கள் 9 வகையாகப் பிரித்துள்ளனர்.

தாரணை வகை:-

1. நியமதாரணை; name of meditation.
2. மான்யதாரணை; worship of supreme being who is unlimited and without form.
3. பேததாரணை; change meditation.
4. சதுரங்கதாரணை; for member meditation.
5. சத்ததாரணை; word meditation.
6. மந்திரதாரணை; spell meditation.
7. வ(ஸ்)துதாரணை; mental perception of Brahmam.
8. வச்சிரதாரணை; worship of Śiva<u>n</u> only in the liṅgam rejecting the lower passions which represent Brahma<u>n</u> and Viṣṇu.
9. சித்திரதாரணை; meditation when approaching assimilation to the deity by gaining a knowledge of the 26 properties of the body, the soul and the Supreme Being often the soul arrives at pure

spiritual knowledge and is emerged in the deity *(சா.அக.).*

[தார் + அணை → தாரணை. நலம் தரும் மருந்து கட்டியில் அணைவதால், கட்டி உடைபடுகை. நல்லெண்ணம் மனத்தில் அணைவதால், உள்ளம் ஒருமுகப்படுகை]

தாரணை[4] *tāraṇai,* பெ. (n.) உள்ளந்தரும் உறுதி; firmness *(சா.அக.).*

[தரு → தார் + அணை]

தாரணைசெய்-தல் *tāraṇai-šey,* 1 செ.குன்றாவி. (v.t.) 1. வத்தி செய்து பிறப்புறுப்பு அல்லது எருவாயிலில் விடுதல்; to insert or introduce a lint or medicinal wick into the vagina, or the anus. 2. ஐம்புலன் அடக்குதல்; to control the five senses. 3. வளியை அடக்குதல்; to suppress the respiration *(சா.அக.).*

[தாரணை + செய்-.]

தாரத்தில்காரம் *tārattil-kāram,* பெ. (n.) நாயுருவி; Indian burr *(சா.அக.).*

தாரத்தில்தயங்கும்சோதி *tārattil-tayaṅgum-šōti,* பெ. (n.) கௌரி செய்நஞ்சு; prepared arsenic *(சா.அக.).*

தாரத்தைக்கருகப்பண்ணி *tārattai-k-karuga-p-paṇṇi,* பெ. (n.) காகச் செய்நஞ்சு; a kind of arsenic *(சா.அக.).*

தாரதசெய்நீர் *tārada-šeynīr,* பெ. (n.) வழலையுப்பு, செயநீர்; a strong alkaline or pungent fluid obtained by exposing the salt prepared from the fuller's earth or human skull to the night dew *(சா.அக.).*

தாரதண்டுலம் *tāratanḍulam,* பெ. (n.) வெண்சோளம் *(சங்.அக.);* white maize.

[தாரம் + தண்டுலம்]

தாரதம் *tāradam,* பெ. (n.) 1. இதளியம்; mercury. 2. சிந்தூரம்; red powder. 3. கடல்; sea *(சா.அக.).*

தாரதம்மியம் *tāra-dammiyam,* பெ. (n.) ஏற்றத் தாழ்வு; difference, contrast, disparity, comparative, value. 'மற்றை மூவர் தார தம்மியமுஞ் சொல்வோன்' *(கைவல். தத். 94).*

[தரம் → தாரம். தாரம் = ஏற்றம். தம் + இயம் → தம்மியம் = தாழ்வு.]

தாரதன்மியம் *tāratanmiyam,* பெ. (n.) ஒப்பு வேறுபாடு; similarity and difference *(சா.அக.).*

[தாரதம்மியம் → தாரதன்மியம். ம் → ன் - திரிபு]

தாரநாதம் *tāra-nādam,* பெ. (n.) பேரொலி *(யாழ்.அக.);* loud uproar.

[தாரம் - ஏற்றம், உயர்வு. தாரம் + நாதம்]

தாரப்பிரம் *tāra-p-piram,* பெ. (n.) எரியணம்; camphor *(சா.அக.).*

[தார் + அப்பிரம் → தாரப்பிரம்]

தாரபணியம் *tāra-paṇiyam,* பெ. (n.) கெட்ட ஆவிகளைக் கட்டும் மந்திரம்; the name of a magic spell against evil spirits *(சா.அக.).*

[தாரம் + பணியம் → தாரபணியம் = தீய ஆவியைப் பணிய வைக்கை]

தாரபரிக்கிரகம் *tāra-pari-k-kiragam,* பெ. (n.) திருமணம் *(யாழ்.அக.);* wedding.

தாரபீடம் *tāra-pīḍam,* பெ. (n.) மரமஞ்சள் *(சங்.அக.);* tree turmeric.

[தாரம் + பீடு + அம்]

தாரம்[1] *tāram,* பெ. (n.) 1. அரும்பண்டம்; rare valuable articles or things. "கடற்பஃறாரத்த நாடு கிழவோயே" *(புறநா. 30).* 2. பச்சைப்பாம்பின் நஞ்சு *(வின்.);* venom of the whip-snake. 3. எல்லை; confines, limit. "பழித்தாரமாம்" *(ஆசாரக். 92).* 4. சாதிலிங்கம்; vermilion.

[தன் → தரு → தார் → தாரம் - தன் என்னும் வினை தருதற்பொருளில் 'தரு' எனத்திரிந்தது, அதன்பின், எதிர்மறை வினையில், 'தார்' அல்லது 'தா' என்றும், (தாரான் → தரான்) ஏவல் வினையில், 'தா' என்றும், இறந்தகால வினையில் (தந்தான்) என்றும், திரிந்துள்ளது. தாரம் என்னும் சொல், தார் என்னும் திரிபடியாகப் பிறந்தது. கடல்தரும் பலபொருள் "கடற் பஃறாரம்" (புறம். 30).]

தாரம்[2] *tāram,* பெ. (n.) 1. பண்வகை *(திவா.);* the seventh note of the gamut, one of seven išai.

2. **எடுத்தலோசை;** highest musical pitch. *"மந்திர மத்திமை தாரமிவை மூன்றில்" (கல்லா. 21: 50). 3.* **யாழினோர் நரம்பு** *(பிங்.);* one of the seven strings of the lute. *4.* **ஒரு பண்;** a musical mode. *"பாடுகின்ற பண்தாரமே" (தேவா. 582:3). 5.* **மூல மந்திரம் (பிரணவம்);** the mystic syllable Ōm. *"தாரத்தினுள்ளே தயங்கிய" (திருமந். 1405). 6.* **வெள்ளி** *(பிங்.);* silver. *7.* **தரா என்னும் மாழை;** copper alloy. *8.* **வெண்கலம்** *(அக.நி.);* bell-metal. *9.* **இதளியம்** *(வின்.);* mercury, quick silver. *10.* **பார்வை** *(சூடா.);* eye-sight. *11.* **விண்மீன்** *(யாழ்.அக.);* star. *12.* **முத்து** *(யாழ்.அக.);* pearl.

தாரம்[3] *tāram,* பெ. (n.) நா *(பிங்.);* tongue.

[ஞால் → நால் → தால் → தாலம் → தாரம்]

தாரம்[4] *tāram,* பெ. (n.) *1.* **மனைவி;** wife. *"தபுதார நிலை" (தொல். பொருள் 79). 2.* **மணந்தநிலை;** married state. *"தாரத்துக்குட்பட்டவன்" (வின்.). 3.* **ஆடவைஒரை (மிதுன ராசி)** *(சங்.அக.);* gemini.

[தரு → தார் + அம் → தாரம் = முதற்கண் ஆடவர்க்குத் தரப்பட்டவள் மனைவி என்றறிக]

தாரம்[5] *tāram,* பெ. (n.) **தெய்வமரங்களுள் ஒன்றாகிய மந்தாரம்** *(சிலப். 15, 157, உரை.);* a celestial tree.

[தரு → தார் + அம் → தாரம்]

தாரம்[6] *tāram,* பெ. (n.) **தேவதாரு மரவகை** *(தைலவ. தைல.);* red cedar.

[தரு → தாரு → தாரம்]

தாரம்[7] *tāram,* பெ. (n.) *1.* **சிற்றரத்தை வகை;** lesser galangal. *2.* **கடாரநாரத்தைச் சாறு;** juice of seville orange.

[தாரு → தாரம்]

தாரம்[8] *tāram,* பெ. (n.) **கயிறு;** cord, rope. *"பொருவில் சற்பத்தியாந் தாரம் பூண்டு" (பிரபுலிங். இட்டலிவ். 20).*

தெ. தாரமு

தாரம்[9] *tāram,* பெ. (n.) **முகப்பூச்சு (அரிதாரம்);** yellow orpiment, yellow sulphide of arsenic *(மூ.அ.).*

தாரம்[10] *tāram,* பெ. (n.) நீர் *(யாழ். அக.);* water.

தாரமங்கலம் *tāra-mangalam,* பெ. (n.) **சேலம் மாவட்டத்தில் ஓர் ஊர்;** a village in Salem district.

இவ் வூரிலுள்ள கைலாயநாதர் கோவிலின் சிற்பச்சிறப்பு, உலகப்புகழ் பெற்றது. இவ் வூரிலுள்ள, இளமீசுரர் கோயில் சிறு பசுமை நிறமுள்ள சுக்கான் பாறையால் முழுவதும் கட்டப்பட்டுள்ளது.

தாரமாக்கு-தல் *tāram-ākku-,* 5 செ.கு.வி. (v.i.) **வெள்ளியாக்குதல்;** to convert into silver *(சா.அக.).*

[தாரம் + ஆக்கு-.]

தாரமாட்சிகம் *tāra-māṭcigam,* பெ. (n.). **துணைத்தாது ஏழனுள் ஒன்று** *(சங்.அக.);* a inferior mineral.

தாரர் *tārar,* இடை (part.) *1.* **ஒன்றை யுடையவர், வைத்திருப்பவர், செய்பவர் முதலிய பொருள்களைத் தரும் வகையில் பெயர்ச் சொற்களோடு இணைக்கப்படும் ஈறு;** a suffix added to nouns to indicate the possessor, holder, doer, etc. (குத்தகைதாரர்), பங்குதாரர் *(உ.வ.).*

[தரு → தார்]

தாரவம் *tāravam,* பெ. (n.) **கொடிமுந்திரி;** grapes *(சா.அக.).*

தாரவித்தை *tāra-vittai,* பெ. (n.) **ஒரு ஆயுள்வேதநூல்;** an ayurvedic work *(சா.அக.).*

[தரு → தார் → தாரம் + வித்தை – முன்னோர் மருத்துவம் பற்றி ஆய்ந்து தந்த நூல்]

தாரவெழுத்து *tāra-v-eḻuttu,* பெ. (n.) **ஏழாவது இசையாகிய தாரத்தைக் குறிக்கும் 'ஒள' என்ற எழுத்து** *(திவா.);* the letter 'au' representing the seventh note of the gamut.

[தாரம் + எழுத்து]

தாரன் *tāraṉ,* இடை. (part.) உடையவனைக் குறிக்குஞ்சொல்; a termination indicating male owner. வாரிசுதாரன்.

[தரு → தார் + அன் → 'தன்' ஆண்பால் விகுதி]

தாரா[1] *tārā,* பெ. (n.) *1.* குள்ளவாத்து; a kind of duck. *2.* குருகு, நாரை; heron. *3.* வாத்து நடை; walking as of a duck. *4.* துரா; king of herbs. *5.* வேக்காலி; conocarpus latifolia. *6.* ஓம்; mystic monosyllable 'Ōm'.

தாரா வகைகள்:-

1. காட்டுத்தாரா; wild duck
2. பெருந்தாரா; large duck or goose.
3. மணல்தாரா; sand duck
4. ஆண்டித்தாரா; mendican duck
5. கண்ணாடித்தாரா; class duck
6. பாம்புத்தாரா; snake

(சா. அக.)

[தரை → தாரா = தரையின் கண்ணே சிறகுகள் தாழ்ந்துபடும் வண்ணம் நடந்து செல்லும், குள்ள வாத்து. (ஒ.நோ.) சரி → சராசரி]

தாரா[2] *tārā,* பெ. (n.) விண்மீன் (திவா.); star planet.

[தரு → தார் → தாரா. கோள்களைக் காட்டிலும் மிக்கொளி தருவன (ஒ.நோ.) மாலை → மாலா. நிலவு → நிலா]

தாரா[3] *tārā,* பெ. (n.) *1.* நீரொழுக்கு; continuous flow of water. *2.* தாராநத்தம்; current, stream.

தாராக்கிரணம் *tārā-k-kiraṇam,* பெ. (n.) கோள், விண்மீன் முதலியன, நிலவு முதலியவற்றால் மறைக்கப்படுகை; occultation, eclipse of a planet or star by the moon, or of a satellite by its primary.

தாராக்குஞ்சு *tārā-k-kuñju,* பெ. (n.) வாத்துக் குஞ்சு; duckling (சா.அக.).

[தாரா + குஞ்சு]

தாராகடம்பம் *tārā-kaḍambam,* பெ. (n.) மஞ்சட்கடம்பு; caḍambam tree (சா.அக.).

தாராகாணம் *tārā-kāṇam,* பெ. (n.) விண்மீன் கூட்டம்; constellation. "தரித்திருந்தேனாகவே தாராகணப்போர்" (திவ். இயற். நான்மு. 63).

தாராகிருகம் tāra-kirugam, பெ. (n.) நீர்த் தாரையாற் குளிர்ச்சி தரும்படி அமைத்த மாளிகை; summer house kept cool by sprays of water. "சார முனிவன் வனமெனவே தாராகிருகஞ் சமைத்தார்கள்" (செவ்வந்திப்பு. சுரவா: 139).

[தரு → தார் + ஆ + Skt. கிருகம்]

தாராங்கம் *tārāṅgam,* பெ. (n.) வாள் (யாழ்.அக.); sword.

[தார் + அங்கம். அரசனால் வீரனுக்கு நெடுமொழி கூறித் தரப்பட்ட வாள்]

தாராங்கு *tārāṅgu,* பெ. (n.) மழைத்துளி (யாழ்.அக.); rain-drop.

[தாரம் + அங்கு]

தாராங்குரம் *tārāṅguram,* பெ. (n.) ஆலங்கட்டி (சங்.அக.); hailstone.

[தாரம் + அங்கு + உரம். மழை நீர்த் துளிகள் உரம் வாய்ந்த பனிக்கட்டியாக மாறி விழுகை]

தாராசந்தானம் *tārā-šandāṉam,* பெ. (n.). நீரொழுக்குப் போல் நீங்காது வரும் தொடர்ச்சி (மணிமே. 30: 38: உரை.); uninterrupted succession or continuity, as of water in a stream.

[தாரம் + சந்து + ஆனம். ஒ.நோ. ஃ + ஆனம் = அஃகோனம்]

தாராசரகம் *tārā-šaragam,* பெ. (n.) பெருமழை; heavy rain (சா.அக.).

[தரு → தார் → தாரா + சரகு + அம்]

தாராசரம் *tārā-šaram,* பெ. (n.) பெருமழை; heavy-rain.

தாராசுரம் *tārā-šuram,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில், கும்பகோணம் வட்டத்திலுள்ள ஒரு ஊர் (ஊர். பெ. அக.); a village in Kumbakōṇam taluk in Tañjore district.

[இராசராசேச்சுரம் → தாராசுரம்.]

தாராட்டு[1]**-தல்** *tārāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தாலாட்டு; to lull or sooth a child. 'பச்சைத் தேரை தாராட்டும் பண்ணை' (கம்பரா. நாட்டு. 13).

ம. தாராட்டுக

[தாலாட்டு → தாராட்டு-.]

தாராட்டு[2] *tārāṭṭu* பெ. (n.) தாலாட்டுப் பாடல்கள்; cradle songs, lullabies.

[தாலாட்டு → தாராட்டு]

தாராடம் *tārāḍam* பெ. (n.) தாராபுள் பார்க்க; see *tārāpuḷ*.

தாராதத்தம் *tārā-tattam* பெ. (n.) திருமணத்தில் பெண்ணை நீர் ஊற்றி உரிமையை விட்டுக் கொடுக்கை (வின்.); giving a girl in marriage, the act being solemnised by the pouring of water.

[தாரா + தத்தம்]

தாராதரம் *tārā-taram*, பெ. (n.) முகில்; cloud. 'தாராதர மந்தச் சாதகம்' (குலோத். கோ. 109).

[தாரா + தரம்]

தாராதாரம் *tārā-tāram*, பெ. (n.) தாராதரம் பார்க்க; see *tārā-taram* (செ.அக.).

தாராதிபதி *tārāti-pati*, பெ. (n.) நிலவு; moon.

[தாராதி + பதி]

தாராதீனன் *tārā-dīṉaṉ*, பெ. (n.) மனைவிக்கு அடங்கி நடப்போன்; one who obeys his wife.

[தாரம் + தீனன் → தாராதீனன்]

தாராநோய் *tārā-nōy*, பெ. (n.) ஆவின் நோய்களிலொன்று; one of the diseases of the cow (சா.அக.).

[தாரா + நோய். இதன் பால் பல நோய்களுக்குக் காரணமாக அமையும்]

தாராப்பாசி *tārā-p-pāśi*, பெ. (n.) ஒரு வகைப் பாசி; duck weed (சா.அக.).

[தாரா + பாசி]

தாராப்பூடு *tārā-p-pūḍu*, பெ. (n.) நாரத்தை; bitter orange (சா.அக.).

[தாரா + பூடு]

தாராபதம் *tārā-padam*, பெ. (n.) வானம் (வின்.); sky.

[தாரா + பதம்]

தாராபதி *tārā-padi*, பெ. (n.) 1. நிலா (விண்மீன்களின் தலைவன்) (சூடா.); moon, as the lord of the stars. 2. தாரையின் கணவன் வியாழன் (சங்.அக.); Jupiter, as husband of tārai.

[தரு → தார் → தாரா + பதி]

தாராபந்தி *tārā-pandi*, பெ. (n.) விண்மீன்களின் வரிசை; row of stars. "தாராபந்திபோ னாளுமொளி வீசும் பலமணிகள்" (பாரத இராச. 4).

[தாரா + பந்தி. பந்தி = வரிசை.]

தாராபலம் *tārā-palam*, பெ. (n.) விண்மீனின் வலிமை (பஞ்சாங்க.); influence of the stars.

[தாரா + பலம்]

தாராபாகம் *tārā-pāgam* பெ. (n.) ஒரு வகை பதப்பாடு; peculiar process (சா. அக.).

மறுவ. சிறப்புப் பக்குவம்

[தாரம் + பாகம்.]

தாராபுட்பம் *tārāpuṭpam*, பெ. (n.) மல்லிகை; jasmine (சா.அக.).

[தாரம் + Skt. புட்பம்.]

தாராபுள் *tārā-puḷ*, பெ. (n.) 1. சாதகப்புள்; sky lark. 2. விசும்பு; cloud (சா. அக.).

[தரு → தாரம் + புள்.]

தாராபூடணம் *tārā-pūḍaṇam*, பெ. (n.) விண்மீன்களால் அழகூட்டப்பட்ட இரவு (யாழ். அக.); night as decorated by the stars.

[தாரம் + பூடு + அணம்.]

தாராமண்டலம் *tārā-maṇḍalam*, பெ. (n.) விண்மீன் மண்டலம்; the starry heavens.

[தாரம் + மண்டலம்.]

தாராமுட்டி *tārā-muṭṭi*, பெ. (n.) பேராமுட்டி; fragrant pavonia (சா. அக.).

தாராமூக்கன் *tārā-mūkkaṉ* பெ. (n.) நச்சுப்பாம்பு வகை (யாழ். அக.); poisonous tree snake.

மறுவ. கொம்பேரி மூக்கன்

[தாரம் + மூக்கன்]

தாராய் *tārāy* பெ. (n.) திராய், தாராயிலை (பதார்த்த. 580); carpet weed.

[தரை → தார் + ஆய் - தாராய்]

தாராயணம் *tārāyaṇam* பெ. (n.) அரசமரம்; peepul tree (சா. அக.).

தாராவணி *tārā-v-aṇi*, பெ. (n.) காற்று (யாழ். அக.); wind, air.

தாராளக்காரன் *tārāḷa-k-kāraṉ* பெ. (n.) கொடையாளி; liberal, free-handed person (செ. அக.).

[தார் + ஆளம் + காரன் = நிறைவாகத்தருபவன்]

தாராளம் *tārāḷam,* பெ. (n.) 1. மிகை ஈகைத் தன்மை; generosity, liberality, magnanimity 'தாராளமாய்க் கொடுக்கிறான்' (உ.வ.). 2. விரிவு; roominess, spaciousness, amplitude. 'தாராளமான வழி' (இக்.வ.). 3. நிறைவு; plenty, copiousness, sufficiency, completeness. தாராளமாய் விளைந்தது. 4. வெளிப்படை; frankness, candour, openness, freedom. அவரிடம் தாராளமாய்ச் சொல்லலாம். 5. திறமை; fluency, readiness in speech or utterance, proficiency, skilful execution in singing or playing on an instrument. 'தாராளமாய் வாசிக்கிறான்'. 6. உறுதி, திட்பம்; confidence, boldness. "தாராளமாய் நிற்க நிர்ச்சிந்தை காட்டி" (தாயு. சுகவாரி: 8).

[தள் → தரு → தார் + ஆளம் → தாராளம். "ஆளம்" சொல்லாக்க ஈறு. ஒ.நோ. பேராளம்; தள் என்னும் வினை தருதற் பொருளில், தரு எனத்திரிந்து, மிகுதியாகத் தருதல் என்ற நிலையில், "தார்" என்றாகிறது. "ய" கர மெய்யீறாகத் திரியாத "ள"கர மெய்யீற்று இயற்சொற் களெல்லாம் பொதுவாக ருகரவீற்றவாகத் திரிகின்றன. (எ.கா.) கள் → கரு → கார்; வள் → வரு → வார். ஈங்கு தார் = மிகுதி, நிறைவு, முழுமை, திறமை போன்ற பொருண்மையில், பயின்று வருவதறிக]

தாரி¹-த்தல் *tāri-,* 4 செ.கு.வி. (v.i.). பொறுத்தல்; to bear, endure. "மற்றது தாரித்திருத்த றகுதி" (நாலடி, 72). 2. உடைத்தாதல்; to possess. "தாரித் திட்டதன் றறுகண்மைக் குணங்களின்" (சூளா. சீயவதை. 150).

[தார் + இ → தாரி-.]

தாரி² *tāri,* பெ. (n.) 1. வழி; way,. path, road. "இதுதான் உந் தாரிய தன்று" (கம்பரா. இரணிய: 148). 2. முறைமை; right mode. "தாரியிற் காட்டித் தருஞ்சாதாரி" (கல்லா. 42, 31). 3. விலைவாசி; exchange, barter. 4. அரிதாரம்; yellow orpiment.

க., ம. தாரி

[அதர் → தார் → தாரி]

தாரி³ *tāri,* பெ. (n.) வண்டு முதலியவற்றின் ஒலி; humming, as of bees. "வண்டின் றாரியும்" (கல்லா. 21 : 45).

[தார் + இ.]

தாரி⁴ tāri, இடை. (part.) தரிப்பவன் என்னும் பொருள்படும் விகுதிவகை; a termination forming agent. 'வேடதாரி, உடைமைதாரி, சாகசதாரி'.

[தார் + இ.]

தாரிகம் *tārigam,* பெ. (n.) தீர்வை (யாழ். அக); duty, tax.

[தரு → தார் + இகம்.]

தாரிகாதானம் *tārigā-tāṉam,* பெ. (n.) கன்னிகாதானம் (யாழ். அக); giving away a daugher in marriage.

[தரு → தார் → தாரி → தாரிகா + தானம்.]

தாரிகை *tārigai,* பெ. (n.) பனஞ்சாறு; sweet toddy.

[தரு → தார் + கை → தாரிகை. ஒ.நோ. மல்லிகை - தூரிகை.]

தாரிணி *tāriṇi,* பெ. (n.) 1. நிலம்; earth. "தாரிணி பொதிந்த கீர்த்தி" (இரகு. யாகப்: 34). 2. இலவமரம் (இலக். அக.); silk cotton tree. 3. பட்டுப்பருத்தி; silk cotton.

[தரு → தார் → தாரிணி]

தாரிதம் *tāridam,* பெ. (n.) 1. குதிரைநடை; horse gait. 2. பிழைத்தல்; living.

[தார் + இதம்.]

தாரிப்பு¹ *tārippu,* பெ. (n.) உதவி; support. 'ஓர் தாரிப்பின்றி' (பெரியபு. இளையான்: 9).

[தரு → தார் → தாரிப்பு]

தாரிபாரி¹ *tāri-pāri,* பெ. (n.) 1. நல்வழி அறிந்தவன் (வின்.); one who knows a good way. 2. முழுதும் அறிந்தவர் (வின்.); a well-informed person. 3. இயல்பு (யாழ். அக.); nature.

[தாரி + பாரி]

தாரிபாரி² *tāri-pāri,* பெ. (n.) தரம்; relative merit. "தாரிபாரிகள் தெரிந்து சகல சம்மானஞ் செய்யும்" (கனம். கிருஷ்ணையர், 117).

[தாரி + பாரி]

தாரிமூலி *tārimūli,* பெ. (n.) பெண்பூப்பு; the menstrual blood of a young girl.

தாரியோடகம் *tāri-y-ōḍagam,* பெ. (n.) செங்கத்தாரி பார்க்க; see *śeṅgattāri.*

தாரிராட்டினம் *tāri-rāṭṭinam,* பெ. (n.) தார்நூல் சுற்றும் பொறி (நெசவு.); reeling machine.

[தார் + இராட்டினம்]

தாரின்வாழ்நன் *tār-iṉ-vāḻnaṉ,* பெ. (n.) தார்நூலால் வாழ்க்கை நடத்தும் நெசவுத் தொழிலாளி; weaver, as living by bobbin. "தாரின் வாழ்நரும்" (பெருங். வத்தவ. 2: 48).

[தார் + இன் + வாழ்நன்.]

தாரு *tāru,* பெ. (n.) 1. மரம் (சூடா.); tree. "மாதாருவன்ன சிலை" (கந்தபு. தாரக: 71). 2. மரக் கிளை (பிங்.); branch of a tree. 3. தேவதாரு (தைலவ. தைல.); red-cedar. 4. மரத்துண்டு; piece of timber, wood. "கொல்லிப் பாவையினிற் றாருவமைத்த வல்லிப்பாவை" (இரகு. குசன். 26). 5. கோயிலைப் பிரித்துப் புதுப்பிக்கும்போது கற்சிலைக்குப் பதிலாக வைத்த கட்டை உருவம் (இ.வ.); temporary wooden image set up in place of the stone image when the temple is renovated.

[தரு → தாரு.]

தாருகசித்து *tāruga-šittu,* பெ. (n.) குமரன்; lord of Murugaṉ.

[தாருகம் + சித்து.]

தாருகண்ணி *tārugaṇṇi,* பெ. (n.) வெள்ளைக் காக்கணம்; white mussell creeper (சா.அக.).

[தாருகம் + கண்ணி]

தாருகதலி *tāru-gadali,* பெ. (n.) காட்டுவாழை (மலை.); wild plantain.

[தார் → தாரு + கதலி]

தாருகம் *tārugam,* பெ. (n.) தாருகாவனம் (வின்.); forest where ascetic lived (செ. அக.).

[தரு → தாரு → தாருகம்]

தாருகவனம் *tāruga-vaṉam,* பெ. (n.) தாருகாவனம் பார்க்க; see *tārugā-vaṉam.* "தாருகவன முனித்தலைவோர்" (சிவரக. தேவியுடன்: 1).

[தாருகம் + வனம்.]

தாருகற்செற்றாள் *tārugaṟ-šeṟṟāḷ,* பெ. (n.) தாரகனைக் கொன்ற காளி (திவா.); Kāli, as destroyer of Dārukaṉ.

[தாருகன் + செற்றாள்]

தாருகன் *tārugaṉ,* பெ. (n.) 1. கண்ணனின் தேரோட்டி; charioteer of Lord Krishnaṉ. 2. காளியாற் கொல்லப்பட்ட ஓர் அசுரன்; an ašura slain by Kāḷi (செ. அக.).

[தார் + உகன் → தாருகன்.]

தாருகாக்கியம் *tāru-kākkiyam,* பெ. (n.) மஞ்சள் அவரை; yellow bean (சா. அக.).

தாருகாவனம் *tārugā-vaṉam,* பெ. (n.) முனிவர்கள் வாழ்ந்த காடு; a forest famous as the abode of ascetics (செ. அக.).

[தாருகா + வனம்.]

தாருசம் *tārušam,* பெ. (n.) தேவதாரு (மலை.); red cedar.

[தரு → தாரு → தாருசம்]

தாருசினி *tāruciṉi,* பெ. (n.) இலவங்கப் பட்டை; cinnamon bark (சா. அக.).

தாருட்டியம் *tāruṭṭiyam,* பெ. (n.) வலிமை கொடுக்கும் பொருள்; drug that gives strength (சா. அக.).

[தரு → தாரு → தாருட்டியம்]

தாருண்ணியம் *tāruṇṇiyam,* பெ. (n.) இளம் பருவம்; youth, juvenility (சா. அக.).

[தரு → தாரு → தாருண்ணியம்]

தாருணம் *tāruṇam,* பெ. (n.) 1. அச்சம்; timidity. 2. பயம்; fear, dread. 3. கொடுமை; horror (சா. அக.).

[தரு → தருணம் → தாருணம்]

தாருணரோகம் *tāruṇa-rōgam,* பெ. (n.) ஒருவகைத் தலைநோய்; a kind of head disease (சா. அக.).

[தாருணம் + Skt.ரோகம்]

தலையில் மயிர்க்கொட்டி, சொர சொரத்து, சுண்டுதிர்ந்து மிகுதியான தூக்கத்தை உண்டாக்கும். இதற்குப் பாலும் கசகசாவும் அரைத்துத் தடவக் குணமாகும் என்பது பழைய மருத்துவக் குறிப்பு.

தாருணாகி *tāruṇāgi,* பெ. (n.) மயிலிக்கீரை; a kind of greens (சா. அக.).

தாருணி *tāruṇi,* பெ. (n.) நத்தைச்சூரி (மலை.); bristly button weed.

தாருணியபிடிகம் *tāruṇiya-piḍigam,* பெ. (n.) முகப்பரு; pimple (சா. அக.).

தாருணீகம் *tāruṇīgam,* பெ. (n.) *மரவீழி, விழுதிமரம்;* Cleome fruticosa *(சா. அக.).*

தாருபாத்திரம் *tāruma-pāttiram,* பெ. (n.) *மர பாத்திரம்;* wooden vessel.

தாருமபித்தம் *tāruma-pittam,* பெ. (n.) *மிளகு;* pepper *(சா. அக.).*

தாருலவணம் *tāru-lavaṇam,* பெ. (n.) *1. மரவுப்பு;* salt of tartar. *2. சாம்பலுப்பு;* potash, salt of warm-wood. *3. வாழையுப்பு;* salt of plantain leaf *(சா. அக.).*

தாருவனம் *tāru-vaṉam,* பெ. (n.) *தாருகாவனம் பார்க்க;* see *tāruga-vaṉam.* "சிறைவண்டறையுந் தாருவனத் தெய்வ முனிவர்" *(திருவிளை. வளையல்: 2).*

[தரு → தாரு + வனம்]

தாருனகம் *tāruṉagam,* பெ. (n.) *தலையில் வரும் ஒரு வகைக் குருநோய்;* tiny vesicolour of scalp *(சா. அக.).*

தாரை[1] *tārai,* பெ. (n.) *1. ஒழுங்கு;* straight. *2. கண்மணி (பிங்.);* apple of the eye. "இருதாரை நெடுந் தடங்கண்" *(பாரத. அருச்சுனன்றவ. 38). 3. கண் (திவா.);* eye. "தாரை நெருப்புக" *(கம்பரா. சடாயுவுயிர். 103). 4. ஐந்து மகளிரில் ஒருவராகிய வியாழன் மனைவி;* tārā, wife of Jupiter, one of pañja-kaṉṉiyar. "இளநிலா நகைத் தாரையை விடுக்கிலன்" *(காசிக. 15, 17). 5. வாலியின் மனைவி;* Tārā, wife of Vāli. "தாரையென் றமிழ்திற் றோன்றிய வேயிடைத் தோளினாள்" *(கம்பரா. வாலிவதை. 13). 5. விண்மீன் (பிங்.);* star.

[தார் → தாரை]

தாரை[2] *tārai,* பெ. (n.) *1. வரிசை;* row, range, line, series. *2. கோடு;* stripe, streak. *3. ஒழுங்கு;* order, arrangement, regularity. "நெறித்தாரை செல்லாத நிருதர்" *(கம்பரா. சூர்ப்: 137). 4. வழி (திவா.);* way, path. "வீரர்போகத் தாரை பெற்றிலர்" *(உத்தரரா. வரையெ. 17). 5. அடிச்சுவடு (பிங்.);* foot-track. *6. நேரே ஓடுகை (பிங்.);* running in a straight line. *7. குதிரைவேகம்;* pace of a horse. "ஐந்துதாரையினுந் தூண்டி" *(திருவாலவா. 39: 35). 8. நீரொழுக்கு;* stream, as of water. "நெடுந் தாரை கண்பனிப்ப" *(திருவாச. 7: 15). 9. பெரு மழை (பிங்.);* downpour of rain. *10. மாட்டின் எருவாய்ப் பகுதி;* region adjoining anus of bulls and cows. *11. விரைவு (திவா.);* speed. *12. நா (சூடா.);* tongue. *13. போர்க்கருவி மடல்;* blade of a weapon. "தாரைகொள் முக்கவைச் சுடர்வேல்" *(கல்லா. 86: 34). 14. கூர்மை (பிங்.);* sharpness. *15. சக்கரப்படை;* discus weapon. *16. வயிரக் குணங்களில் ஒன்று (சிலப். 14: 180, உரை);* a quality of the diamond. *17. ஆடையின் விலக்கிழை (இ.வ.);* thread bareness.

[தார் → தாரை.]

தாரை[3] *tārai,* பெ. (n.) *1. நீண்ட ஊதுங்குழல்;* long brass trumpet. "தாரை போரெனப் பொங்கின" *(கம்பரா. கடிமண்: 41). 2. ஒரு வகைச் சின்னம் (வின்.);* long reed instrument. *3. நீர்வீசுங்கருவி;* water-squirt. "தாழ்புனற் றாரையும்" *(பெருங். உஞ்சைக். 38: 105).*

[தார் → தாரை]



தாரை[4] *tārai,* பெ. (n.) *கவுரி செய்நஞ்சு;* a kind of yellow arsenic *(சா. அக.).*

[தார் → தாரை]

தாரைக்கால் *tārai-k-kāl,* பெ. (n.) செங்குத்தானதும், தாரை போன்றதும், பிரம்பு போன்றதுமான *தூண்;* a kind of column.

[தாரை + கால்]



தாரைக்கியன் *tārai-k-kiyaṉ,* பெ. (n.) கருடன்; brahminy kite (சா. அக.).

[தாரை + இயன்]

தாரைகவணி *tārai-kavaṇi,* பெ. (n.) கோடுள்ள துகில்வகை (வின்.); a fine variety of striped muslin.

[தாரை + கவணி]

தாரைசின்னி *tārai-šiṉṉi,* பெ. (n.) கவுரி செய்நஞ்சு; a kind of prepared arsenic (சா. அக.).

[தாரை + சின்னி]

தாரைத்தாள்வட்டில் *tārai-t-tāḷ-vaṭṭil,* பெ. (n.) ஏனவகை (S.I.I.ii, 5); a kind of vessel.

[தாரை + தாள் + வட்டில்.]

தாரைப்பட்டு *tārai--p-paṭṭu,* பெ. (n.) கோடுகள் அமைந்த பட்டுவகை (வின்.); striped silk.

[தாரை + பட்டு]

தாரைமழுங்கல் *tārai-maḻuṅgal,* பெ. (n.) வயிரக் குற்றங்களுள் ஒன்று (சிலப். 14: 180: உரை.); a flaw in the diamond.

[தாரை + மழுங்கல்]

தாரைவார்-த்தல் *tārai-vār-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. நீர்வார்த்துத் தத்தம் பண்ணுதல்; to make gifts by pouring water on the right hand of the donee. "தாரைவா ரெனக் கௌசிகன் சாற்றிட" (அரிச். பு. சூழ்வி: 79). 2. தொலைத்து விடுதல்; to lose, as property. அவன் தன் சொத்துக்களைத் தாரை வார்த்து விட்டான்.

[தாரை + வார்-.]

தாரைவிடல் *tārai-viḍal,* பெ. (n.) 1. சிறுநீர் கழித்தல்; urinating. 2. கண்ணில் மருந்து நீரை விட்டுக் கொண்டேயிருத்தல்; putting eye drips continuously (சா. அக.).

[தாரை + விடல்]

தாரோட்டம் *tār-ōṭṭam,* பெ. (n.) காய்ச்சாத ஆவின் பால்; raw milk.

[தார் + ஓட்டம்]

தால் *tāl,* பெ. (n.) 1. நா; tongue. "பச்சைத் தாலரவாட்டீ" (திருவாச. 38:4). 2. தாலாட்டு (யாழ். அக.); குழந்தைகளுக்கான உறக்கப்பாட்டு; songs to lull a child. 3. தாலப்பருவம் பார்க்க; see *tāla-p-paruvam.* "செங்கீரைதால் சப்பாணி" (இலக். வி. 806).

[ஞால் → தால் = தொங்கும் நா.]

தால்நாட்டம் *tāl-nāṭṭam,* பெ. (n.) வெண் கடுகு; white-mustard (சா. அக.).

[தால் + நாட்டம்.]

தாலகம் *tālagam,* பெ. (n.) நிலப்பனை; ground-palm.

தாலகி *tālagi,* பெ. (n.) கள்; toddy.

தாலங்கன் *tālaṅgaṉ,* பெ. (n.) 1. பனை எழுதிய கொடியுடையோன்; one who has palmyra-banner. 2. பலராமன்; Balarāmaṉ, brother of lord Kriṣṇaṉ.

[தால் + அங்கன்]

தாலநற்கட்டி *tāla-naṟkaṭṭi,* பெ. (n.) பனங்கட்டி; palmyra jaggery (சா. அக.).

[தாலம் + நன்மை + கட்டி.]

தாலப்பட்டோலை *tāla-p-paṭṭōlai,* பெ. (n.) அரசோ, ஊர் அவையோ முடிபு செய்த ஆணை ஓலை; government order. "மகேந்திர மங்கலத்து சபையோம் விற்றுக்கொடுத்த நிலவிலையா வணம் தாலப்பட்டோலை எழுதின சேந்த மங்கலமுடையான்" (கல்வெட்டு அறிக்கை எண் 159 - 1895).

[தாலம் + பட்டு + ஓலை.]

தாலப்பருவம் *tāla-p-paruvam,* பெ. (n.) பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் தலைவனைத் தாலாட்டுதலைக் கூறும் பகுதி; portion dealing with the cradle-songs of the hero, one of ten sections of piḷḷai-t-tamiḻ (செ. அக.).

[தால் + பருவம் = தாலப்பருவம்]

தாலப்பாக்கு *tāla-p-pākku,* பெ. (n.) திருமண நாள்களில் காலையும் மாலையும் பூசை செய்தபின் மணமகனுக்கு (ஓதியிடும்) தாம்பூலம்; betel and areca nut given by the father of the bride to the bridgroom every morning and evening after he performs in marriage.

[தாலம் + பாக்கு]

தாலபத்திரம் *tāla-pattiram,* பெ. (n.) 1. பனை ஓலை; palm-leaf. 2. காதிலணியும் சுருளோலை (வின்.); palm-leaf used as an ear-ornament.

[தாலம் + பத்திரம்.]

தாலபத்திரி *tāla-pattiri,* பெ. (n.) மரமஞ்சள் (மலை.); tree turmeric.

தாலபாடாணம் *tāla-pāḍāṇam,* பெ. (n.) தாலம்பபாடாணம் பார்க்க; see *tālamba-pāḍāṇam* (சா.அக.).

[தாலம்பம் + பாடாணம் → தாலபாடாணம்]

தாலபுராணம் *tāla-purāṇam,* பெ. (n.) 18ஆம் நூற்றாண்டில் காசிநாதப்புலவரால் இயற்றப் பட்ட நூல்; book written by Kāśināda-p-pulavar in 18th century.

[தளம் → தலம் → தாலம் + புராணம்.]

தாலபோதம் *tāla-pōdam,* பெ. (n.) ஆவாரைச் செடி; tanner's cassia (செ. அக.).

[தாலம் + போதம்]

தாலபோதிதம் *tāla-pōdidam,* பெ. (n.) கோழியவரை; fowl bean (சா. அக.).

[தாலம் + போதிகம்.]

தாலம்[1] *tālam,* பெ. (n.) 1. பனை (பிங்.); palmyra-palm. "தாலமுயர் கொடியினன்" (பாரத. குரு: 141). 2. கூந்தற்கமுகு (பிங்.); a kind of areca-palm. 3. கூந்தற்பனை (மலை.); talipot-palm. 4. மடலேறுதலுக்காகக் குதிரை வடிவில் புனையும் உரு (அகப்); palmyra leaf-stalk shaped like a horse. "தாலத் திவர்க" (வெங்கைக்கோ. 110). 5. தேன்; honey.

[தாள் → தால் + அம் – தாலம். 'அம்' சாரியை]

தாலம்[2] *tālam,* பெ. (n.) 1. நிலம்; earth. "தால முறைமையிற் பரிந்து காத்தான்" (திருவாலவா. 36:1). 2. உலகம்; world. "தாலம் பதினாலும்" (அரிச். பு. நாட்: 9).

[ஞாலம் → தாலம்]

தாலம்[3] *tālam,* பெ. (n.) 1. நா (பிங்.); tongue. 2. அகங்கை; palm of the hand. 3. தாம்பாளம்; round plate (சா. அக.).

[ஞால் → தால் + அம்]

தாலம்[4] *tālam,* பெ. (n.) 1. உண்கலம்; eating plate, porringer, usually of metal. "பெருந்தோடாலம் பூசன் மேவா" (புறநா. 120). 2. தட்டம்; salver. "தாலப்பாக்கு" (செ. அக.).

தாலம்[5] *tālam,* பெ. (n.) முறவடிவிலுள்ள யானைக் காது (திவா.); elephant's ear, as shaped like a plate (செ. அக.).

[தாழ் → தால் + அம்]

தாலம்பபாடாணம் *tālamba-pāḍāṇam,* பெ. (n.) ஒருவகைப் பிறவி செய்நஞ்சு; a kind of native arsenic (சா. அக.).

தாலமாதிதம் *tālamādidam,* பெ. (n.) கோதுமை; wheat (சா. அக.).

[தாலம் → தாலமாதிதம்.]

தாலமூலி *tāla-mūli,* பெ. (n.) நிலப்பனை (மலை.); ground-palm a plant common in sandy places.

[தாலம் + மூலி]

தாலமேழுடையோன் *tālam-ēḻuḍaiyōṉ,* பெ. (n.) தீயரசன்; king of fire.

தாலயம் *tālayam,* பெ. (n.) ஆமை; tortoise.

[தால் + அயம். ஒரு தலையும் நான்கு கால்களும், தொங்குந் தன்மையுடன் அமைந்த உயிரி]

தாலவச்சிரம் *tālava-c-ciram,* பெ. (n.) மலை நாரத்தை; mountain orange (சா. அக.).

தாலவ்வியம் *tāl-avviyam,* பெ. (n.) இடை அண்ணத்தில் இடைநாவின் முயற்சியாற் பிறக்கும் எழுத்து; palatal.

[தாலம் + அவ்வியம் → தாலவ்வியம். மேலெழுந்து ஒலிக்கும் எழுத்து.]

தாலவட்டம்[1] *tāla-vaṭṭam,* பெ. (n.) *1.* விசிறி *(யாழ். அக);* fan. *2.* யானைச்செவி *(வின்.);* elephant's ear. *3.* யானை வால் *(திவா.) (சீவக. 2154, உரை);* elephant's tail.

[தாலம் + வட்டம்]

தாலவட்டம்[2] *tāla-vaṭṭam,* பெ. (n.) நிலம் *(வின்.);* earth.

[தாலம் + வட்டம்]

தாலவம் *tālavam,* பெ. (n.) ஒருவகை நஞ்சு; a kind of poison.

தாலவா *tālavā,* பெ. (n.) சிறுவழுதலை; species of small brinjal with indian brinjal *(சா. அக.).*

தாலவிருந்தம்[1] *tāla-virundam,* பெ. (n.) விசிறி *(பிங்.);* large-fan.

[தாலம் + விருந்தம்]

தாலவிருந்தம்[1] *tāla-viruntam,* பெ. (n.) பழமுண்ணிப் பாலை; edible paulay *(சா. அக.).*

[தாலம் + விருந்தம்]

தாலாட்டு[1]**-தல்** *tālāṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) குழந்தைகளைத் தொட்டிலிலிட்டு உறங்கச் செய்யப் பாட்டுப்பாடுதல்; to rock a child in a cradle with lullabies. *"அஞ்சனவண்ணனை யாய்ச்சி தாலாட்டிய செஞ்சொல்" (திவ். பெரியாழ். 1:3:10).*

ம. தாலாட்டுக

[தால் + அம் → தாலாட்டு-.]

தாலாட்டு[1] *tālāṭṭu,* பெ. (n.) *1.* குழந்தைகளைத் தொட்டிலிலிட்டு உறங்கச்செய்யப் பாட்டுப் பாடுகை; lulling a child to sleep with songs. *"தாலாட்டு நலம்பல பாராட்டினார்" (பெரியபு. திருஞா. 44.).* 2. தாலேலோ என்று முடியும் ஒருவகை இசைப்பாட்டு; lullaby, usually ending with tālēlō. *3.* தாலாட்டுதற்கு ஏற்றதாய்ச் சிற்றிலக்கியத் தலைவனுடைய சிறந்த செய்கைகளைத் தெரிவிக்கும், பல கண்ணிகளை உடையதொரு நூல்; a lullaby poem dealing with the exploits of a hero.

E. lull, scand; Sw. lulla; Ger. lallen; Gr. laleo; L. lullaby.

[தால் + அம் → தாலம் → ஆட்டு → தாலாட்டு. (சு.வி. 98)]

தாலாப்பு *tālāppu,* பெ. (n.) குளம் *(வின்.);* tank.

[தாழாப்பு → தாலாப்பு = தாழ்வாக அமைந்த குளம்]

தாலாலம் *tālālam,* பெ. (n.) பழிமொழி *(யாழ்.அக);* scandal, aspersion, calumny.

[தால் + ஆலம்]

தாலி[1] *tāli,* பெ. (n.) திருமணத்தின்போது மணமகள் கழுத்தில், மணமகன் மூன்று முடிச்சுப் போட்டு இணைக்கும் மஞ்சள் சரட்டில் தொங்கும், பொன்னணி; golden ornament tied in yellow thread tied int he neck of bride by bridegroom druing solomnisation of marriage. *"தாலி.... நல்லார் கழுத்தணிந்து" (சீவக. 2697).*

க., தெ., ம. தாலி

"திருமாலையில் தாலி நாற்பத்தொன்றும்" (S.I.I. 23-46).

நால் → நாலி → தாலி = இவ்வேரடி, தொங்குதற் கருத்தினை அடிப்படையாகக் கொண்டது. இப் பொருண்மை பொதிந்த வழக்கே, இலக்கியத்திலும் மாந்தர்தம் வாழ்வியலிலும், வழக்கூன்றியுள்ள பான்மையினை மொழி ஞாயிறு, வடமொழி வரலாறு எனும் நூலில், பின்வருமாறு கூறுகின்றார்.

சிறுவர் கழுத்தில் தொங்கிய ஐம்படைத் தாலியும், வெள்ளாட்டுக் கழுத்தில் தொங்கும் ஊன்மணியும்போல, மணமகள் கழுத்தில் தொங்கும் மங்கலவணி. pendant என்னும் ஆங்கிலச் சொல்லையும் நோக்குக. வடமொழியாளர் பனை ஓலையென்றும், காதணியென்றும் பொருள் கூறுவர். மேலும் தாலி கட்டும் வழக்கம் தமிழரதே *(வ.மொ.வ. 336).*



தாலி[2] *tāli,* பெ. (n.) *1. கீழ்க்காய் நெல்லி;* niruri plant - Phylanthus niruri. *2. பாலக்கறை;* gowry *(சா. அக.).*

[தாழ் → தால் → தாலி.]

தாலி[3] *tāli,* பெ. (n.) *மட்கலம்;* earthern vessel. *"ஆரமுற் றாலி யொன்று தனையவன் பாணி நல்கி" (சேதுபு. சாத்தி. 38).*

[தாழி → தாலி]

தாலி[4] *tāli,* பெ. (n.) பனை *(திவ். பெரியாழ். 2: 6: 1, வ்யா. பக். 361);* palmyra-palm.

[தாளி → தாலி]

தாலிக்கட்டு *tāli-k-kaṭṭu,* பெ. (n.) திருமணம் *(இ.வ.);* marriage, as tying the tāli.

[தாலி + கட்டு]

தாலிக்கயிறு *tāli-k-kayiṟu,* பெ. (n.) தாலி கோத்துள்ள கயிறு *(உ.வ.);* twisted thread on which is hung the tāli.

[தாலி + கயிறு]

தாலிக்காரி *tāli-k-kāri,* பெ. (n.) திருமணமான பெண்; married woman, as wearing a tāli.

[தாலி + காரி; 'காரி' - உடைமைப் பெயரீறு. ஒ.நோ: வீட்டுக்காரி, பூக்காரி.]

தாலிக்கொடி *tāli-k-koḍi,* பெ. (n.) தாலி கோர்ப்பதற்கான பொற்சரடு *(உ.வ.);* braided gold string on which is hung the tāli.

[தாலி + கொடி]

தாலிக்கொழுந்து[1] *tāli-k-koḻundu,* பெ. (n.) ஆமைத்தாலி *(திவ். பெரியாழ். 2: 6: 1: வ்யா.);* turtle-shaped tāli.

[தாலி + கொழுந்து]

தாலிக்கொழுந்து[2] *tāli-k-koḻundu,* பெ. (n.) பனை வெண்குருத்தால் இயன்ற அணிகலன்; an ornament made of tender leaves of palm-tree. *"தாலிக் கொழுந்தைத் தடங்கழுத்திற் பூண்டு" (திவ். பெரியாழ். 2: 6: 1).*

[தால் → தாலி + கொழுந்து]

தாலிக்கோவை *tāli-k-kōvai,* பெ. (n.) தாலியுருவோடு கோப்பதற்கான, பல்வகை உருக்கள் *(வின்.);* string of beads to which the wedding badge is attached.

[தாலி + கோர்வை → கோவை]

தாலிகட்டு-தல் tāli-kaṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) மணம்புரிதல்; to marry, as tying tāli. *"தாலிகட்டையிலே தொடுத்து நடுக்கட்டையிலே கிடத்துமட்டும்" (தனிப்பா. 195: 10).*

[தாலி + கட்டு-.]

தாலிகட்டுக்கலியாணம் *tāli-kaṭṭu-k-kaliyāṇam,* பெ. (n.) உண்மையிற் கணவனாகாது, ஒப்புக்காக ஒருத்திக்கு ஒருவன் தாலி கட்டும் ஒரு வகை விழா *(இ.வ.);* a nominal marrage in which a tāli is tied round the neck of a girl, but the person tying is not entitled to the rights of a husband.

[தாலி + கட்டு + கலியாணம்]

தாலிச்சரடு *tāli-c-caraḍu,* பெ. (n.) தாலிக்கொடி பார்க்க; see *tāli-k-koḍi (செ. அக.).*

[தாலி + சரடு]

தாலித்துக்கம் *tāli-t-tukkam,* பெ. (n.) கணவன் இறந்ததாலுண்டாந் துயரம் *(இ.வ.);* mourning observed by a woman on her widowhood.

[தாலி + துக்கம்]

தாலிப்பிச்சை *tāli-p-piccai,* பெ. (n.) வாழ்வரசியாய் ஒருத்தி வாழும்படி, அவளது கணவனுயிரைப் பாதுகாக்கை; saving the life of a woman's husband, as enabling her to wear tāli.

[தாலி + பிச்சை]

தாலிப்பெட்டி *tāli-p-peṭṭi,* பெ. (n.) தாலி வைக்கும் பொன்னத்துப் பெட்டி *(யாழ். அக.);* the basket in which the wedding badge is kept.

[தாலி + பெட்டி]

தாலிப்பொட்டு *tāli-p-poṭṭu,* பெ. (n.) வட்டமாகச் செய்த தாலியுரு; disc-shaped tāli (செ. அக.).

[தாலி + பொட்டு]

தாலிப்பொருத்தம் *tāli-p-poruttam,* பெ. (n.) திருமணப் பொருத்தங்களுள் ஒன்று; a kaliyāṇa-p-poruttam (செ. அக.).

[தாலி + பொருத்தம்]

தாலிபெருக்கிக்கட்டுகை *tāli-perukki-k-kaṭṭugai,* பெ. (n.) 1. திருமணக்காலத்தில் கட்டப்பட்ட தாலியுடன், மணிகளைக் கோக்கும் விழா; stringing additional jewels on the tāli after marriage. 2. தாலியைப் பழைய நூலிலிருந்து வேறொரு சரட்டிற் கோக்கை (இ.வ); renewing the tāli thread.

[தாலி + பெருக்கி + கட்டுகை]

தாலிபெருகுதல் *tāli-p-perugudal,* பெ. (n.) தாலிச்சரடு அற்றிறுகை; breaking of the tāli-c-caraḍu, a euphemistic expression.

[தாலி + பெருகுதல். சுடுகாட்டை, நன்காடு என்று வழங்கும் மங்கலவழக்குப் போன்று, தாலிஅறுதலைக் குறிக்கத் 'தாலி பெருகுதல்' என்ற வழக்கை மங்கல வழக்காகக் கொண்டனர், என்றறிக]

தாலிமங்கலம் *tāli-maṅgalam,* பெ. (n.) காஞ்சிபுர மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; a village in Kāñjipuram district.

மங்கலம் என்னும்சொல் தொல்காப்பியர் காலம் முதலே, தூய்மை என்னும் பொருளில் வழங்கி வருகிறது. பின், பார்ப்பனர் வசிக்கும் இடத்திற்கு வழங்கப்பட்டதையும் காண முடிகிறது. ஊர்களிலுள்ள, சிறுதெய்வங்களின் பெயருடன் 'மங்கலம்' சேர்த்து வழங்கப்படுகிறது. (ஊர். பெ. அக.).

[தாலி + மங்கலம்]

தாலிமணிவடம்[1] tāli-maṇi-vaḍam, பெ. (n.) தாலியோடு மணிகள் சேர்ந்த தாலிக்கொடி; string of beads to which the tāli is attached. "தாலிமணிவடம் ஒன்று). *(S.I.I. ii, 171).*

[தாலி + மணி + வடம்.]

தாலிமணிவடம்[2] *tāli-maṇi-vaḍam,* பெ. (n.) மணிகள் வைத்திழைக்கப்பட்ட மங்கல மாலை; garland made of gems.

"உமா பரமேசுவரியார்க்குக் குடுத்தன தாலி மணிவடம் ஒன்று, பொன் கழஞ்சேய் முக்காலே நாலுமஞ் சாடியும் குன்றி" *(S.I.I. II. ii, 46).*

[தாலி + மணி + வடம்]

தாலியம் *tāliyam,* பெ. (n.) பாதிரி (மலை.); trumpet flower tree - Stareospermum chelonoides. 2. கீழ்க்காய் நெல்லி; Niruri plant.

[தால் + இயம்]

தாலியமாறு tāliyamāṟu, பெ. (n.) கப்பலின் முக ஒப்பனை; figure-head.

[தாலி + அம் + மாறு.]

தாலியறு[1]**-த்தல்** *tāli-y-aṟu-,* 4 செ.குவி. (v.i.). கைம்பெண்ணாதல் (விதவையாதல்); to become a widow, as having the tāli taken off.

[தாலி + அறு-.]

தாலியறு[2]**-த்தல்** *tāli-y-aṟu-,* 4 செ.குன்றாவி. (v.t.) துன்பத்துக்குள்ளாதல்; to harass, cause trouble. அவனைத் தாலி யறுத்துவிட்டான் (உ.வ.)

[தாலி + அறு-.]

தாலியறுத்தவள் *tāli-y-aṟuttavaḷ,* பெ. (n.) கைம்பெண் (உ.வ); widow, as one those tāli has been taken off.

[தாலி + அறுத்தவள்]

தாலியாற்புதம் *tāliyāṟpudam,* பெ. (n.) அரத்தக் கெடுதியால் அண்ணத்தில் ஏற்படும் தசை வளர்ச்சி; a fleshy growth in the palate due to vitiate blood painful tumour of the palate (சா. அக.).

[தாலி + ஆல் + புதம். புது + அம் - புதம் = புதியதாய் வளர்ந்த தசை]

தாலியுரு *tāli-y-uru,* பெ. (n.) 1. தாலியோடு கோக்கப்படும் பலவகை உருக்கள்; beads of different forms attached to the tāli. 2. தாலியுள்ள வடம்; necklace containing the tāli (செ. அக.).

[தாலி + உரு]



தாலியைம்படை *tāli-y-aimpaḍai,* பெ. (n.) ஐம்படைத்தாலி பார்க்க; see *aimpaḍaittāli;* a child's necket. "தாலியைம்படை தழுவுமார்பிடை" (கம்பரா. நாடு. 58).

[தாலி + ஐந்து + படை]



தாலிவற்று-தல் *tāli-vaṟṟu-,* 5 செ.குவி. (v.i.) கைம்பெண்ணாகுகை (இ.வ.); to become widow, as making the tāli disappear, a euphemism (செ. அக.).

[தாலி + வற்று-.]

தாலிவாங்கு-தல் *tāli-vāṅgu-,* 5 செ.குவி. (v.i.) கணவனிறந்தபின் மனைவியின் தாலியை நீக்குதல்; to remove the tāli of a woman on the death of her husband.

[தாலி + வாங்கு-.]

தாலிவாங்குநேரம் *tāli-vāṅgu-nēram,* பெ. (n.) கணவனிறந்தபின் தாலியை வாங்கும் நேரமாகிய நள்ளிரவு (இ.வ.); midnight as the time for removing the tāli of a woman on the death of her husband.

[தாலி + வாங்கும் +□நேரம்]

தாலு *tālu,* பெ. (n.) 1. நாக்கு; tongue. 2. அண்ணம்; palate. 3. மூக்கறையின் பிற்பகுதி; the posterior portion of the nose (சா.அக.).

[நால் → தால் → தாலு]

தாலுகண்டகம் *tālu-kaṇḍagam,* பெ. (n.) குழந்தைகட்கு தாடையில் உண்டாகும் ஒரு வகை நோய்; a disease which form in the posterior portion of the nose to the children (சா. அக.).

[தாலு + கண்டகம்]

தாலுகண்டரோகம் *tālu-kaṇḍa-rōgam,* பெ. (n.) தாலுகண்டநோய் பார்க்க; see *tālu-kaṇḍa-nōy* (சா. அக.).

[தாலுகண்டம் + ரோகம் → Skt. rōgā]

தாலுகண்டநோய் tālu-kaṇḍa-nōy, பெ. (n.) தாலுகண்டகம் பார்க்க; see tālu-kaṇḍagam (சா. அக.).

[தாலு + கண்டம் + நோய்.]

தாலுகண்ணி tālu-kaṇṇi, பெ. (n.) வெள்ளைக்காக்கணம் (மலை.) பார்க்க; see veḷḷaikkākkaṇam; white flowered mussel-shell creeper (செ.அக.).

[தாலு + கண்ணி.]

தாலுகத்தம்மை *tālugattammai,* பெ. (n.) காட்டுமுள்ளி; wild nail-dye.

தாலுகன்னி *tālu-ganni,* பெ. (n.). தாலுகண்ணி பார்க்க; see *tālukaṇṇi.*

தாலுகி *tālugi,* பெ. (n.) அண்ணத்தின் இரு அரத்தக்குழாய்; the two arteries of the palate.

[நால் → தால் → தாலு → தாலுகி.]

தாலுகை *tālugai,* பெ. (n.) மேனாபல்லக்கு (யாழ். அக.); a kind of palanquin.

தாலுசலபிரசோழம் *tālu-šala-pira-šōḻam,* பெ. (n.) தாலுநீர்வறட்சி பார்க்க; see *tālu-nīr-varaṭci* (சா. அக.).

தாலுசிகுவம் *tālu-šiguvam,* பெ. (n.) முதலை (யாழ். அக.); crocodile.

தாலுசீவம் *tālu-šīvam,* பெ. (n.) 1. உண்ணாக்கு; uvula. 2. முதலை; crocodile (சா. அக.).

[தாலு + சீவம்]

தாலுசீவிகம் *tālu-šīvigam,* பெ. (n.) உண்ணாக்கு; uvula (சா. அக.).

[தாலு + சீவிகம்]

தாலுசோசம் *tālu-šōšam,* பெ. (n.) தாலுவேக்காடு பார்க்க; see *tālu-vēkkāḍu* (சா.அக.).

[தாலு + சோசம்]

தாலுசோபம் *tālu-šōbam,* பெ. (n.) அண்ணாக்கு வீக்கம்; swelling of the palate (சா.அக.).

[தாலு + சோபம்]

தாலுநீர்வறட்சி tālu-nīr-vaṟaṭci, பெ. (n.) தொண்டையிலும் அண்ணாக்கிலும் காணும் வறட்சி; morbid dryness of palate and throat (சா.அக.).

[தாலுநீர் + வறட்சி.]

தாலுபாகம் *tālu-pāgam,* பெ. (n.) உண்ணாக்குக் கட்டி; abscess in the palate marked by inflammation and suppuration (சா.அக.).

[தாலு + பாகம்]

தாலுபாகரோகம் *tālu-pāga-rōgam,* பெ. (n.) தாலுபாகநோய் பார்க்க; see *tālu-pāga-nōy* (சா.அக.).

[தாலு + பாகம் + ரோகம்]

தாலுபாகநோய் *tālu-pāga-nōy,* பெ. (n.) அண்ணாக்கில் சீழ்கொண்டு குத்தல் உண்டாக்கும் ஓர் நோய்; suppuration of the palate attended with pinprick sensation (சா.அக.).

[தாலு + பாகம் + நோய்]

தாலுபாதம் *tālu-pādam,* பெ. (n.) உண்ணாக்கு விழுதல் பார்க்க; see *uṇṇākku-viḻudal* (சா.அக.).

[நாலு → தாலு + பாதம்]

தாலுபிடகம் *tālu-piḍagam,* பெ. (n.) குழந்தைக்குக் காணும் ஓர் உண்ணாக்கு நோய்; a disease of the palate of children (சா. அக.).

[தாலு + பிடகம்]

தாலுபீடகம் tālu-pīḍagam, பெ. (n.) குழந்தைகட்குக் காணும் உண்ணாக்கு நோய்; a disease of the palate of children (சா. அக.).

[தாலு + பீடகம்]

தாலுபுப்புடம் *tālu-puppuḍam,* பெ. (n.) உண்ணாக்கு வீக்கம்; an indolent swelling or painless tumour of the palate of the shape and size of a jujubee (சா. அக.).

[தாலு + புடம்]

தாலுப்பொதுச்செலவு *tālu-p-podu-c-celavu,* பெ. (n.) பொது இடத்தில் அறம் செய்தல் முதலிய செயல்களுக்காகும் செலவு *(சரவண. பணவிடு. 149);* general expenditure of a public institution (செ. அக.).

[தாலு + பொது + செலவு]

தாலுமூலம் *tālu-mūlam,* பெ. (n.) 1. உமிழ்நீர்க் கோளம்; salivary gland. 2. உண்ணாக்கின் அடி; root of the palate (சா. அக.)

[தாலு + மூலம்].

தாலுவறட்சி *tālu-vaṟaṭci,* பெ. (n.). உண்ணாக்குக் காய்ந்து போதல்; drying of the palate (சா. அக.).

[தாலு + வறட்சி]

தாலுவறட்சி மிகுதியாகப் பேசுவதால் உண்டாகும்.

தாலுவிசோடணம் *tālu-visōḍaṇam,* பெ. (n.). தாலுவறட்சி பார்க்க; see *tālu-vaṟaṭci* (சா. அக.).

தாலுவித்திரதி *tāluvittiradi,* பெ. (n.). உண்ணாக்கு வீக்கம்; swelling of the palate (சா.அக.).

தாலுவேக்காடு *tālu-vēkkāḍu,* பெ. (n.). உண்ணாக்கு வேக்காடு; inflammation of the palate marked by repeated damage and severe bursting pain (சா.அக.).

[தாலு + வேக்காடு]

தாலுறுத்து-தல் *tāluṟuttu-,* 15 செ.கு.வி. (v.i.). தாலாட்டுதல்; to sing lullaby. "ஆந்தையுங் கூகையு மணிதா லுறுத்த" *(கல்லா. 87:21).*

[தால் + உறுத்து-.]

தாலூரம்[1] *tālūram,* பெ. (n.) 1. நீர்ச்சுழல்; whirlpool, eddy. 2. சுழல்காற்று; whirlwind (செ.அக.).

தாலூரம்[2] *tālūram,* பெ. (n.) குங்கிலியவகை; bastard sal (செ.அக.).

தாவகம் *tāvagam,* பெ. (n.) காட்டுத்தீ; forest fire. "தீவகம் புக்குத் தாவகங் கடுப்ப" *(பெருங். இலாவாண. 20, 6).*

தாவங்கட்டை *tāvaṅgaṭṭai,* பெ. (n.) முகவாய்; chin.

[தாவம் + கட்டை]

தாவசி *tāvaśi,* பெ. (n.) தவசி பார்க்க; see *tavaśi.*

தாவட்டம் tāvaṭṭam, பெ. (n.) 1. சிற்பநூல் முப்பத்திரண்டனுள் ஒன்று (இருசமய. உலக வழக்கப். 2); a treatise on architecture, one of 32 ciṟpanūl. 2. ஒரு வகைக் கருங்கல் (வின்.); a kind of black stone.

[தா + வட்டம்]

தாவடம்[1] *tāvaḍam,* பெ. (n.) 1. அக்கமணி (உருத்திராக்கம்) மாலை; sacred elaeocarpus beads. 'கழுத்திலே தாவடம் மனத்திலே அவசடம்' 2. கழுத்திலணியும் மாலை (இ.வ.); necklace. 3. பூணூலை மாலையாக அணியும் முறை; a mode of wearing the sacred thread round the neck like a garland (செ. அக.)

தெ. தாவடமு

[தாழ் + வடம் → தாவடம்]

தாவடம்[2] *tāvaḍam,* பெ. (n.) தாவளம்[1] பார்க்க; see *tāvaḷam*[1].

[தாழ்வு + இடம்]

தாவடி[1] *tāvaḍi,* பெ. (n.) 1. பயணம் (யாழ்.அக.); journey. 2. போர் (யாழ். அக.); battle, fight, skirmish. 3. தண்டுகால் (தஞ்.); stride.

ம. தாவர (பயணம்); தெ. தாடி (படை எடுத்தல்)

[தாவு + அடி]

தாவடி[2] *tāvaḍi,* பெ. (n.) வேகமான நடை; speed walk. "சக்கரக் கோட்டத்தில் புறத் தளவு மேவருந் தானைத் தாவடி செலுத்தி" *(வீரராசேந்திரன் - மெய்க்கீர்த்தி).*

[தாவு + அடி]

தாவடித்தோணி *tāvaḍi-t-tōṇi,* பெ. (n.) கரை வரையிற் சென்று பகைக்கப்பலை அழிக்கும் தோணி (வின்.); boat going near the shore to cut out the vessels of an enemy.

[தாவடி + தோணி]

தாவடிபோ-தல் *tāvaḍi-pō-,* 8 செ.கு.வி. (v.i.). படையெடுத்தல்; to make an expedition. "அரசர் ஆயிரவர் மக்களொடு தாவடி போயினார்" *(நன். 51, மயிலை.).*

[தாவடி + போ-.]

தாவடியிடு-தல் *tāvaḍi-y-iḍu-,* 8 செ.குன்றாவி. (v.t.) தாவியடியிட்டளத்தல்; to measure by striding "இரண்டாமடி தன்னிலே தாவடியிட்டானால்" *(திவ். பெரியாழ். 2: 10: 7).*

[தாவடி + இடு-.]

தாவணி[1] *tāvaṇi,* பெ. (n.) கண்டங்கத்தரி (மலை.) பார்க்க; see *kaṇḍaṅkattari;* dwarf wild brinjal).



தாவணி[2] *tāvaṇi,* பெ. (n.) 1. கண்டங்கத்திரி; prickly night shade - Solanum jacquini. 2. நாகபாலை; sweet smelling harefoot - Uraria lagopoides. 3. முள்வெள்ளரி; thorny cucumber (சா. அக.).

தாவணி[3] *tāvaṇi,* பெ. (n.) 1. பல மாடுகளைக் கட்டும் தும்புகள் பிணைத்த கயிறு (வின்.);

a long rope to tie cattle in a row. *2. மாட்டுச் சந்தை (இ.வ.);* cattle - fair. *3. மாட்டைக் கூட்டமாகக் கட்டுமிடம் (சங். அக.);* cattle-shed.

[தாம்பணி → தாவணி.]

தாவணி[4] *tāvaṇi,* பெ. (n.) *1. சிறுபெண்கள் சட்டைமேல் அணியும் மேலாடை;* a piece of cloth worn generally by girls over their petticoats. *2. பிணத்தின் மேல் இடுந்துணியிலிருந்து, சுற்றத்தார் நினைவாகக் கொள்ளும் சிறுதுண்டு (கிறித்.);* pieces from the shroud kept as relic of the deceased. *3. குதிரையின் மேலாடை (இ.வ.);* saddle cloth.

[தாவு + அணி → தாவணி.]

தாவணியடி-த்தல் *tāvaṇi-y-aḍi-,* 4 செகுவி. (v.i.). தாவளம்போடு-தல் (இவ) பார்க்க; see *tāvaḷam-pōḍu-.*

[தாவணி + அடி-]

தாவதன் *tāvadaṉ,* பெ. (n.). தாபதன் பார்க்க; see *tābadaṉ.* "தாவதர்க்கினிய காய் கிழங்குகனி தந்து" *(சேதுபு. பாவநாச. 19).*

[தாபதன் → தாவதன்]

தாவந்தம் *tāvandam,* பெ. (n.) *1. வறுமை (இ.வ.);* poverty. *2. துன்பம்;* distress *(செ. அக.).*

தெ. தாவந்தமு

தாவம்[1] *tāvam,* பெ. (n.) *1. காட்டுத்தீ (பிங்.);* forest-fire. *2. காடு (பிங்.);* forest. *3. தீ (தைலவ. தைல.);* fire. *4. மரப்புழு (திவா.);* wood-worm.

தாவம்[2] *tāvam,* பெ. (n.) *1. வெப்பம்;* heat. *2. துன்பம்;* distress. "தன்மனங் கொண்டவ டாவ முற்றி" *(பெருங். உஞ்சைப். 36, 311).*

[தாபம் → தாவம்]

தாவயம் *tāvayam,* பெ. (n.) மலை முருங்கை; mountain drumstick *(சா. அக.).*

தாவரி[1]**-த்தல்** tāvari-, 4 செகுவி. (v.i.) தங்குதல்; to lodge, abide, obtain, shelter.

தாவரி[2]**-த்தல்** tāvari-, 4 செகுன்றாவி. (v.t.) *பாதுகாத்தல்;* to protect, shelter, maintain, preserve *(செ. அக.).*

[தாவு + அரி- = தீமை கண்ட ஞான்று விரைந்து தாவிச்சென்று அழித்தல்.]

தாவல்[1] *tāval,* பெ. (n.) *1. தாண்டுகை (சூடா.);* leaping, crossing. *2. பரப்பு (பிங்.);* wideness, expanse.

[தாவு → தாவல்]

தாவல்[2] *tāval,* பெ. (n.) *வருத்தம்;* distress. "தாவலுய்யுமோ" *(பதிற்றுப். 41, 17).*

[தாவு[2] *→ தாவல்]*

தாவல்[3] tāval, பெ. (n.) *தாவுதல்;* spreading as creepers climbing over adjacent plant *(சா. அக.).*

தாவழக்கட்டு *tāvaḻ-a-k-kaṭṭu,* பெ. (n.) *கால்நடைகளின் கழுத்தையும் முன் காலையும் பிணிக்குங் கயிறு (யாழ்ப்.);* rope for tying the neck of cattle to the foreleg.

[தாழ் + வடம் → தாவடம் → தாவழம் + கட்டு]



தாவள-த்தல் *tāvaḷa-,* 3 செ.குன்றாவி. (v.t.) அடியால் தாவியளத்தல்; to measure by striding. "தாவளந் துலகமுற்றும்" (திவ். பெரியதி. 4: 6: 1).

தாவளக்காரர் *tāvaḷa-k-kārar,* பெ. (n.) பல்வேறு நாட்டு வணிகர்; traders from distant parts. 2. பொதிமாட்டுக்காரர்; those who keep oxen for carrying burdens (செ. அக.).

[தாவளம் + காரர்]

தாவளம் *tāvaḷam,* பெ. (n.) 1. தங்குமிடம்; lodging, place of residence. "மன்னர்க் கெல்லாந் தாவளஞ் சமைந்ததென்ன" (உத்தரரா. அசுவமேத. 23). 2. மருதநிலத்தூர் (பிங்.); town or city of marutam tract. 3. பற்றுக்கோடு; support, prop. "தளர்ந்தார் தாவளம் என்கிறது" (ஈடு. 6: 1: 2) (சா. அக.).

ம. தாவளம்; தெ. தாவலமு, தாவு

[தாழ்வளம் → தாவளம்]

தாவளம்போடு-தல் *tāvaḷam-pōḍu-,* 20 செகுவி. (v.i.) ஒருவன் வீட்டில் தங்கி விடுதல் (இ.வ.); to quarter oneself unnecessarily in another's house (செ. அக.).

[தாவளம் + போடு-.]

தாவளி[1] *tāvaḷi,* பெ. (n.) 1. கம்பளம்; woolen cloth, blanket. "மடிதாவளி" (உ.வ.). 2. கண்டங் கத்திரி; prickly night shade - Solanum jacquini (செ. அக.).

தாவளி[2] *tāvaḷi,* பெ. (n.). தாவளியம் (இ.வ.) பார்க்க; see *tāvaḷiyam.*

தாவளி[3] *tāvaḷi,* பெ. (n.). தாவணி[1] (சங்.அக.) பார்க்க; see *tāvaṇi*[1].

தாவளியம் *tāvaḷiyam,* பெ. (n.) வெண்மை (உ.வ.); whiteness.

தாவளை *tāvaḷai,* பெ. (n.) 1. நோய் தணிந்திருக்குகை; improvement in health. 2. ஒன்றைவிட மேலாயிருக்கை; being preferable or more tolerable, as in comparison (செ. அக.).

[தா → தாழ்வு + இல்லை → தாவழை → தாவளை]

தாவளையம் *tāvaḷaiyam,* பெ. (n.) குதி; jump. "காளியன் சீறும்படி தாவளையத்திலே வாலைப் பற்றி இழுத்து" (திவ். பெரியாழ்.: 2: 10: 3: வ்யா. பக். 490: 1).

[தாவம் + வளையம்]

தாவனம்[1] *tāvaṉam,* பெ. (n.) தூய்மை செய்கை; purifying, cleansing as the teeth. 'தந்த தாவனம்' (வின்.).

தாவனம்[2] *tāvaṉam,* பெ. (n.) ஏற்படுத்துதல்; establishing. "கந்தமாதனத்திலே தாவனஞ் செய் முக்கண்மூர்த்தி தன்னை" (சேதுபு. இராமதா: 2).

தாவனி *tāvaṉi,* பெ. (n.) மருந்துநீர்; lotion (சா. அக.).

தாவா[1] *tāvā,* பெ. (n.) வெண்கருங்காலி அல்லது வெக்காலி; white sandara (சா. அக.).

[தரு → தார் → தாவா = இயற்கை தந்த மரம்]

தாவா[2] *tāvā,* பெ. (n.) பிணக்கு, தகராறு; dispute.

நதிநீர்ப் பங்கிட்டுத் தாவாவைத் தீர்க்க நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது.

[தா → தாவா]

தாவாக்கினி *tāvā-k-kiṉi,* பெ. (n.) சிறு கல்லூரி; an unknown plant said to consolidate sea salt (சா. அக.).

தாவாரங்காதிபாதம் *tāvāraṅgādi-pādam,* பெ. (n.) பூண்டுகளின் அமைப்பு திரிபு முதலியவற்றைப் பற்றிய நூல்; the science which deals with structure and the phenomena of plants (சா. அக.).

தாவாசற்பீடம் *tāvāšaṟ-pīḍam,* பெ. (n.) பெண்ணின் பிறப்புறுப்பு; woman's genital organ (சா. அக.).

தாவானலம் *tāvāṉalam,* பெ. (n.) காட்டுத்தீ; wild fire (சா. அக.).

மறுவ. கொடுந்தீ

தாவி-த்தல் *tāvi-,* 4 செ.குன்றாவி. (v.t.) நிலை நிறுத்தல்; to establish. "சிவத்திடைத் தாவிக்கு மந்திரந் தாமறியாரே" (திருமந்: 1842).

[தரு → தா → தாவி-.]

தாவிப்பேசு-தல் *tāvi-p-pēsu-*, 5 செ.குவி. (v.i.) *சினம் முதலியவற்றால் தடுமாற்றத்துடன் பேசுதல் (வின்.);* to speak in an incoherent manner, as in wrath.

[தாவி + பேசு-.]

தாவிலை *tāvilai*, பெ. (n.) **தாவளை** *பார்க்க;* see tāvaḷai. உடம்பு இப்போது தாவிலை (இ.வ.).

[தாழ்வில்லை → தாழ்விலை → தாவிலை.]

தாவிளை *tāviḷai*, பெ. (n.) **தாவளை** (இ.வ.) *பார்க்க;* see *tāvaḷai.*

தாவு[1]-தல் *tāvu-*, 5 செ.குவி. (v.i.) *1.* **குதித்தல்;** to jump up, leap, to skip over. "கலைதாய வுயர்சிமையத்து" *(மதுரைக். 332). 2.* **பரத்தல்;** to spread. "மலர்தாய பொழினண்ணி" *(கலித். 35). 3.* **தழைத்தல்;** to be luxuriant. "தாயதோன்றி" *(பரிபா. 11, 21). 4.* **பறத்தல்;** to fly. "விண்ணிற் மேற்றாவும் புள்ளும்" *(பெரியபு. திருநா. 305). 5.* **சாய்தல்** (வின்.); to move towards. *6.* **ஊடு செல்லுதல்;** to radiate, as heat. 'சூடு தாவுகிறது'. *7.* செருக்குதல்; to be proud, haughty. அவன் மிகவும் தாவுகிறான் *(உ.வ.).*

[துவல் = விரைவு, துவலுதல் = விரைதல் துவவு → தூவு → தாவு-.]

தாவு[2]-தல் *tāvu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *1.* **தாண்டுதல்;** to leap over, cross. "கடல்தாவு படலம்" *(கம்பரா.) 2.* **பாய்ந்து எதிர்த்தல்** (வின்.); to spring upon, attack, prey upon. *3.* **கடத்தல்;** to pace out a distance. "உலகளந்தான் றாஅயது" *(குறள், 610).*

[தா → தாவு-.]

தாவு[3]-தல் *tāvu-*, 5 செ.குவி. (v.i.) *1.* **கெடுதல்;** to perish, decay, usually used in negative forms. "தாவாத வின்பம்" *(சீவக. கடவுள். 1). 2.* **ஒழிதல்;** to be removed; to disappear. "இருவகைத் தாவா துறுப்பிற் றங்க" *(ஞான. 7:5).*

த. தாவு; Skt. dhāv *(வ.மொ.வ. 176) (இ.வே.)*

[(தூவு →) தாவு-.]

தாவு[4] *tāvu*, பெ. (n.) *1.* **பாய்கை;** jumping, leaping. "ஒரு தாவுத் தாவினான்" *2.* **செலவு** *(பிங்.);* moving, going. *3.* **குதிரை நடைவகை** (வின்.); galloping, a pace of horse. *4.* **எதிர்ப்பு** *(வின்.);* hostility, hostile attack. *5.* **வலிமை;** strength, valour, power. "வேலை செய்து அவனுக்குத் தாவு தீர்ந்துவிட்டது" *(உ.வ.) (செ. அக.).*

[தா → தாவு]

தாவு[5] *tāvu*, பெ. (n.) *1.* கேடு; ruin. "தாவில் விளக்கந்தரும்" *(குறள், 853) (செ.அக.). 2.* **உறைவிடம்** (வின்.); resting place, lodging, shelter. *3.* **கப்பல்களின் ஒதுக்கிடம்** *(வின்.);* harbour. *4.* **பற்றுக்கோடு** *(வின்.);* support. *5.* **பள்ளம்** *(இ.வ.);* valley, depression. *6.* வலி; pain. *7.* வருத்தம்; distress.

தெ., க. தேவு

[தாழ்வு → தாவு-.]

தாவுரி *tāvuri*, பெ. (n.) *விடையோரை;* one among the twelve in the zodiac (இரு.நூற்.பே.).

தாவுவண்ணம் *tāvu-vaṇṇam*, பெ. (n.). **தாஅவண்ணம்** பார்க்க; a kind of rhythm. "தாவுவண்ணமாவது இடையிட்டுவந்த எதுகைத்தாவது" *(வீரசோ. யாப். 36).*

[தாவு + வண்ணம்]

தாழ்[1]-தல் *tāḻ-*, 2 செ.குவி. (v.i.) *1.* **கீழே தாழ்தல்;** to fall low; to be lowered, as a balance. "வலிதன்றே தாமுந் துலைக்கு" *(நீதிநெறி. 17). 2.* **கூரை தணிந்திருத்தல்;** to be low, as a roof. *3.* **மேலிருந்து விழுதல்;** to flow down, descend. "பொங்கருவி தாழும் புனல்வரை" *(நாலடி, 231). 4.* **சாய்தல்;** to decline, as the sun. வெயில் தாழ வா. *5.* **அமிழ்தல்;** to sink in water. "இன்னலங்

கடலுட் டாழ்ந்து" (உபதேசகா. சிவத்துரோ. 106). 6. நிலைகெடுதல்; to sink in circumstances, in repute, to diminish in splendour or power, to decrease, decay, degenerate, deteriorate. "அந்தரத் தகிலகோடி தாழாம னிலைநிற்க வில்லையோ" (தாயு. பரிபூரண. 9). 7. மனங் குலைதல்; to despond; to be dejected. "தாழ்ந்த மனந்தனைத் தெளிவித்து" (பிரமோத். 13, 61). 8. காலந்தாழ்த்தல்; to delay, to be behindhand, indolent. "தாழாது போவா மெனவுரைப்பின்" (நாலடி, 342). 9. தோற்றல்; to prove inferior, to fail in comparison, competition or battle. அவன் போரில் பகைவனுக்குத் தாழ்ந்து விட்டான் (உ.வ.). 10. தங்குதல்; to stay, rest, stop, halt. "மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார்" (சிலப். 17: படர்க்கை). 11. நீண்டுதொங்குதல்; to hang down, to be suspended, as the arms, as locks of hair. "தாழ்ந்த கைகளும்" (கம்பரா. மிதிலை. 56). 12. பதிதல் (வின்.); to be inlaid, as gold; to set in, as colours; to abide in, as lustre in a gem. 13. ஆழ்ந்திருத்தல்; to be deep. "தாழ்வடுப்புண்" (பு.வெ: 10, சிறப்பிற். 11). 14. ஈடுபடுதல்; to be engrossed in an object or pursuit. "இராப்பக னைந்திவ டாழ்கின்றதே" (பதினொ. பொன்வண். 38). 15. தழைத்தல்; to sprout. "பொதும்பர் தானாறத் தாழ்ந்தவிடம்" (திணைமாலை. 29). 16. வளைதல்; to bend, droop, to be bowed down. "தாழ்குர லேனல்" (பு.வெ: 12: பெண்பாற்: 16). 17. மெல்லோசையாதல்; to become low or subdued, as a sound. "தாழ் தீங்குழலும்" (மணிமே. 2:21). 18. அழிதல்; to be ruined. "தாழுங் காலத்துந் தாழ்வில" (கம்பரா. மராமர: 1).

க. தாழ்; ம. தாழுக; தெ. தாழு.

[தள் → தாள் → தாழ்-.]

தாழ்[2]-தல் *tāḻ-*, 2 செகுன்றாவி. (v.t.) 1. வணங்குதல் (பிங்.); to bow, to worship. 2. விரும்புதல்; to desire, to be eager for. "தண்டாமரை யவ டாழுந் தகையன" (சீவக. 523).

[தாள் → தாழ்-.]

தாழ்[3]-த்தல் *tāḻ-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. தாழச் செய்தல்; to bow down, let down, to deepen, depress. "நின்றலையைத்தாழ்த் திருகை கூப்பு" (திவ். இயற். பெரியதிருவந். 84). 2. தாழ்மைப் படுத்துதல்; to degrade. "இன்றிவட்டாழ்த்து" (பெருங். வந்தவ. 5: 45).

தாழ்[4]-த்தல் *tāḻ-*, 4 செ.கு.வி. (v.i.) 1. காலந் தாழ்தல்; to wait, stay, delay. "தாழ்த்திடாமல் மின்னிடை வெந்நீத் தம்மின்" (சேதுபு. சங்கர. 71). 2. மந்தமாயிருத்தல் (சூடா.); to be slow, dull.

தாழ்[5] *tāḻ*, பெ. (n.) 1. தாழக்கோல்; bolt, bar, latch. "தம்மதி றாழ்வீழ்த் திருக்குமே" (பு.வெ. 10. 5). 2. மதகுகளையடைக்கும் மரப்பலகை (நாஞ்.); spear shutter. 3. விரல் அணிவகை; a kind of finger-ring. "சிறுதாழ் செறித்த மெல்விரல்" (நற். 120). 4. வணக்கம்; worship, homage. "தாழுவந்து தழூஉ மொழியர்" (புறநா. 360: 3). 5. நீளம் (யாழ். அக.); length.

ம. தாழு; க. தாழ்; தெ. தாளமு (திறவுகோல்); து. தார்கொலு, தார்கோலு; கோத. தாகோல்; துட. தொர்த்; குட. தாளி

[துல் → தல் → தள் → தாழ்]

தாழ்[6] *tāḻ*, பெ. (n.) 1. சுவர்ப்புறத்து நீண்ட தாங்குகல் (யாழ்.அக.); blocks in a wall to support beams. 2. மகளிர் சட்டையை முடிக்கும் இடம்; the fastening end of a bodice.

[தா → தாழ்]



தாழ்[7] *tāḻ*, பெ. (n.) 1. முயற்சி; effort. 2. தாள்; foot (வடமலை நிகண்டு).

[தள் → தாள் → தாழ்.]

தாழ்க்கி *tāḻkki*, பெ. (n.) சான்று (T.A.S. iii. 31); witness.

தாழ்க்கோல் *tāḻ-k-kōl*, பெ. (n.) தாழக்கோல் பார்க்க; see *tāḻa-k-kōl* (செ.அக.).

க. தாளுகோல்

[தாழ் + கோல்]

தாழ்குழல் *tāḻ-kuḻal,* பெ. (n.) தாழ்ந்த கூந்தலையுடைய பெண்; woman, as having flowing locks. "பல்லவத்தின் சந்தமடிய வடியான் மருட்டிய தாழ்குழலே" *(காரிகை. பாயி: 1).*

[தாழ் + குழல்]

தாழ்கோ-த்தல் *tāḻ-kō-,* 4 செ.கு.வி. (v.i.) தாழிடுதல்; to bolt a door. "ஒளித்தறை தாழ்கோத் துள்ளகத் திரீஇ" *(மணிமே. 4:88).*

[தாழ் + கோ-.]

தாழ்ச்சி *tāḻcci,* பெ. (n.) *1.* தாழ்கை; bending. *2.* ஆழம்; depth. *3.* வணக்கம்; humility, submissiveness. *4.* கீழ்மை; inferiority, meanness, baseness, vileness. "மடவார் தாழ்ச்சியை மதியாது" *(திவ். திருவாய். 2: 10:2). 5.* குறைவு; deficiency, want, scarcity, arrears. *6.* சீர்கேடு; deterioration, degradation; loss; decay of wealth, power, etc. *7.* ஈடுபடுகை; being engrossed. "தாழ்ச்சிமற் றெங்குந் தவிர்ந்து" *(திவ். திருவாய். 3:2:4). 8.* காலநீட்டிப்பு; delay, procrastination. "தாழ்ச்சியுட் டங்குத நீது" *(குறள், 671). 9.* மானக்கேடு; dishonour, discredit, disgrace. *10.* ஏலாமை *(வின்.);* incompetency, inadequacy.

ம. தாழ்ச

[துள் → தள் → தழு → தாழ் → தாழ்ச்சி. தாழ்ச்சி = பழித்தற் கருத்தினின்று கிளைத்த சொல்லாகும். பழித்தலாவது, மதிப்பால் இறக்குதல். ஒருவரைப் பழித்தலென்பது மேலிருந்து கீழும், மேட்டிலிருந்து பள்ளத்திற்கு இறக்குதல் போன்றதாம்]

தாழ்சடை *tāḻ-šaḍai,* பெ. (n.) நீண்ட சடை; long pigtail.

[தாழ் + சடை]

தாழ்சடைக்கடவுள் *tāḻ-šaḍai-k-kaḍavuḷ,* பெ. (n.) தாலாங்கன் பார்க்க; see *tālāṅgaṉ.*

[தாழ் + சடை + கடவுள்.]

தாழ்சீலை *tāḻ-šīlai,* பெ. (n.) கோவணம்; covering for the privities *(செ.அக.).*

[தாழ் + சீலை]



தாழ்த்தப்பட்டஇனம் *tāḻtta-p-paṭṭa-iṉam,* பெ.அ. (adj.) கல்விக்கும், பொருளியல் முன்னேற்றத்துக்கும் சலுகை தருவதற்காக அரசால் அறிவிக்கப்பட்ட இனம்; communities identified by the government as needing special attention because of their economic and social backwardness.

[தாழ் → தாழ்த்தப்பட்ட + இனம்.]

தாழ்த்தி[1] *tāḻtti,* பெ. (n.) *1.* கீழாயிருக்கை (உவ.); lowness in rank, inferiority. *2.* மானக்குறைவு *(வின்.);* dishonour *(செ. அக.).*

[தாழ் → தாழ்த்தி]

தாழ்த்தி[2] *tāḻtti,* பெ. (n.) குறிப்பிட்டதோர் கடற்பரப்பில் ஆழத்தைக் கணக்கிட அல்லது அறிந்து கொள்ள ஏதுவாகும் இரும்புக் குண்டு (முகவை. மீனவ.); iron ball used to measure the depth of sea at a particular area.

[ஆழ் → தாழ் → தாழ்த்தி]

தாழ்த்திப்புடை-த்தல் *tāḻtti-p-puḍai-,* 4 செ. குன்றாவி. (v.t.) முறத்தில் தவசத்தைக் கொழிக்கையில், தவசத்தை வெலெறிந்து முறத்தைத் தாழ்த்தி வாங்குதல்; to receive the winnowing grains by keeping the fan in a lower condition while winnowing.

[தாழ → தாழ்த்தி + புடை.]

தாழ்த்து-தல் *tāḻttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* தாழச்செய்தல்; to bring low, lower, let down, deepen. *2.* குறைத்தல்; to reduce, deminish. "விலையைத் தாழ்த்தி விற்கிறான்" *(யாழ். அக).*

3. கீழ்ப்படுத்துதல்; to keep under control, compel obedience. *'அவனை ஏறவிடாது தாழ்த்தி வைத்துக் கொள்'. 4. மானக்கேடு செய்தல்;* to degrade, disgrace. *5. காலத்தாழ்வு செய்தல்;* to delay, waste time. *6. தங்கச்செய்தல்;* to make a person or object stay. "வானவர்க டாம்வாழ்வான் மனநின்பால் தாழ்த்துவதும்" *(திருவாச. 5:16). 7. விதைத்தல் (யாழ்ப்.);* to implant, plant, as seeds. *8. புதைத்தல் (வின்);* to set, to burry, inter, sink. *9. நீரில்அமிழ்த்துதல் (வின்);* to immerse, submerge *(செ. அக.).*

ம. தாழ்த்துக

[ஒருகா. ஆழ் → தாழ் → தாழ்த்து-.]

தாழ்த்து *tāḻttu,* பெ. (n.) தாயித்து (இ.வ.); amulet, charm *(செ.அக.).*

[தாயித்து → தாழ்த்து]

தாழ்ந்தஅகவை *tāḻnda-agavai,* பெ. (n.) *1. குறைந்த அகவை (இ.வ.);* tender age. *2. முதிர்ந்த பருவம் (வின்.);* declining age.

[தாழ்ந்த + அகவை]

தாழ்ந்தகுணம் *tāḻnda-guṇam,* பெ. (n.) *1. இழிதகைமை;* base character. *2. அமைதி;* calm temper; modesty *(செ. அக.).*

[தாழ்ந்த + குணம்]

தாழ்ந்தசாதி *tāḻnda-sādi,* பெ. (n.) கீழ்த்தர சாதி (இ.வ.); low-caste.

[தாழ்ந்த + சாதி]

தாழ்ந்தபலன் *tāḻnda-palaṉ,* பெ. (n.) குறைந்த வருவாய் (வின்.); slight or low profit.

[தாழ்ந்த + பலன்]

தாழ்ந்தபூமி *tāḻnda-pūmi,* பெ. (n.) *1. பள்ளமான நிலம் (வின்.);* low land. *2. உரமில்லா நிலம், வளமில்லா நிலம் (உ.வ.);* soil of poor quality.

[தாழ்ந்த + பூமி]

தாழ்ந்தவயசு *tāḻnda-vayašu,* பெ. (n.). தாழ்ந்தஅகவை பார்க்க; see *tāḻnda-agavai.*

[தாழ்ந்த + வயசு]

Skt. vyas

தாழ்ந்தார் *tāḻndār,* பெ. (n.) *1. பணிவுள்ளவர்;* humble persons. "தாழ்ந்தா ருயர்வ ரென்றும்" *(பிரபுலிங். மாயை. 14). 2. இழிந்தோர்;* low, mean persons *(செ. அக.).*

[தாழ் → தாழ்ந்தார்.]

தாழ்ந்துகொடு-த்தல் *tāḻndu-koḍu-,* 4 செ.குவி. (v.i.) *இணங்கிப்போதல்;* to yield; to be accommodating; to be affable *(செ.அக.).*

[தாழ்ந்து + கொடு-.]

தாழ்ந்துபடு-தல் *tāḻndu-paḍu-,* 20 செ.குவி. (v.i.) ஓரிடத்தே சேர்ந்து தங்குதல்; to stay together. "அண்ணலிரலை . . . பிணைதழீஇத் தண்ணறல் பருகித் தாழ்ந்து பட்டனவே" *(அகநா. 23).*

[தாழ்ந்து + படு-.]

தாழ்ந்துபோ-தல் *tāḻndu-pō-,* 8 செ.குவி. (v.i.) *1. ஒப்புமையிற் குறைதல்;* to fail in comparison, to be inferior. *2. இழிந்த நிலையடைதல்;* to degenerate, as in morals, character or social position. "உயர்குலத்தவனும் அவன் செய்கையால் தாழ்ந்துபோவான்" *3. தாழ்ந்துகொடு-த்தல் பார்க்க;* see *tāḻndu-koḍu-.* வேலைமுடியும் வரை தாழ்ந்துபோ *(உ.வ.).*

[தாழ்ந்து + போ-.]

தாழ்ந்தொழி-தல் *tāḻndoḻi-,* 4 செ.குவி. (v.i.) நோய்குறைந்து குணப்படல்; to disappear of the disease *(சா. அக.).*

[தாழ்ந்து + ஒழி-.]

தாழ்ப்பம் *tāḻppam,* பெ. (n.) ஆழம் (யாழ்ப்.); depth, as of water.

[தாழ் → தாழ்ப்பம்]

தாழ்ப்பாட்கட்டை[1] *tāḻppāṭ-kaṭṭai,* பெ. (n.). *1. கதவைச் செறிக்கும் சிறு மரக்கட்டை;* small wooden bolt. *2. கதவை மூடப் பயன்படுத்தும் குறுக்குமரம்;* bar of wood placed across a door, cross bar.

[தாழ்ப்பாள் + கட்டை]

தாழ்ப்பாட்கட்டை[2] *tāḻppāṭ-kaṭṭai,* பெ. (n.) *3. அறிவற்றவ-ன்-ள் (இ.வ.);* blockhead.

[தாழ்ப்பாள் + கட்டை]

தாழ்ப்பாள் *tāḻppāḷ,* பெ. (n.) கதவு செறிக்குந் தாழ்; bolt, bar, latch (செ. அக.).

க. தாபாலு

[தாழ் + பாள்]

தாழ்ப்பாளர் *tāḻppāḷar,* பெ. (n.) உரிய காலத்தை எதிர்பார்த்திருப்பவர்; one who bides one's time. "தலையாளர் தாழ்ப்பாளர்" (ஏலாதி, 56).

[தாழ்ப்பு + ஆளர்]

தாழ்ப்பு *tāḻppu,* பெ. (n.) 1. இறக்குகை; lowering. 2. புதைக்கை (வின்.); burying, inserting, planting. 3. நீரில்அமிழ்த்துகை (வின்.); immersion. 4. காலத்தாழ்வு; delay.

[தள் → தழு → தாழ் → தாழ்ப்பு = காலந்தாழ்த்தல். தாழ்வாயிருக்கை. தாழ்வாயுள்ள நீரில் அமிழ்த்துகை. தாழ்வாயுள்ள கிணற்றுப் பள்ளத்தில் உறையினை இறக்குகை.]

தாழ்பீலி *tāḻ-pīli,* பெ. (n.) சிறுசின்னம்; small reed instrument. "இணையில வெழுந்த தாழ்பீலி யெங்கணும்" (சீவக. 2222).

[தாழ் + பீலி]

தாழ்புயல் *tāḻ-puyal,* பெ. (n.) காலிறங்கின முகில்; raining cloud. "தாழ்புயல் வெள்ளந் தருமரோ" (பு.வெ. 9:10).

[தாழ் + புயல்]

தாழ்மை *tāḻmai,* பெ. (n.) 1. பணிவு (பிங்.); humility. 2. கீழ்மை (பிங்.); inferiority, as in rank; lowliness of mind. 'நாம் வீழ்ந்துகிடக்கும் தாழ்மையிலிருந்து விடுபடும் வழி என்ன?' (இக்வ.). 3. இழிவு (பிங்.); degradation, baseness. 4. வறுமை; poverty. 5. காலத்தாழ்ப்பு (சங்.அக.); delay.

ம. தாழ்ம, தாண்ம; க. தாளிமெ; தெ. தாளமி; து. தாள்மே

[தாழ் → தாழ்மை. தாழ்மை = வறுமை. வறுமையினால் வந்த கீழ்மை. பணிவு.]

தாழ்வடம் *tāḻvaḍam,* பெ. (n.) 1. கழுத்தணி; necklace of pearls or beads. 'தாவி றாழ்வடம் தயங்கு' (சீவக. 2426). 2. அக்கமணிமாலை (உருத்திராக்கமாலை); string of rudrākṣa beads. "மார்பின் மீதிலே தாழ்வடங்கள் மனதிலே கரவடமாம்" (தண்டலை. சத. 29).

ம. தாழ்வடம்; க. தாவட; தெ. தாவடமு

[தாழ் + வடம்]

தாழ்வயிறு *tāḻ-vayiṟu,* பெ. (n.) 1. சரிந்த வயிறு; protruding abdomen. 2. தாழ்ந்த வயிறு; relaxed abdomen. 3. கருவுயிர்ப்பின் ஓர் அறிகுறி; symptom of approaching delivery in which the abdomen is relaxed (செ. அக.).

[தாழ் + வயிறு]

தாழ்வர் *tāḻ-var,* பெ. (n.) தாழ்வரை பார்க்க; see *tāḻ-varai*. "வரைத்தாழ்வர் கண்டு" (சூளா. சீய. 155).

[தாழ் + வர். வரை → வர்.]

தாழ்வரி *tāḻvari,* பெ. (n.) கோழிக்கீரை; a kind of greens (சா. அக.).

[தாழ் + வரி]

தாழ்வரை *tāḻ-varai,* பெ. (n.) மலையடிவாரம்; foot of a mountain. "ஏனலெங் காவ லித்தாழ்வரையே" (திருக்கோ. 130).

ம. தாழ்வர; க. தாழ்வர்

[தாழ் + வரை]

தாழ்வறை *tāḻ-v-aṟai,* பெ. (n.) நிலவறை (இ.வ.); vault, underground cellar.

ம. தாழ்வற; க. தாழ்வரி; து. தக்கு

[தாழ் + அறை]

தாழ்வாய் *tāḻvāy,* பெ. (n.) 1. மோவாய் (பிங்.); chin. 2. மோவாய் எலும்பு; bone fo the chin.

[தாழ் + வாய்]

தாழ்வாய்க்கட்டை *tāḻvāy-k-kaṭṭai,* பெ. (n.). தாழ்வாய் பார்க்க; see *tāḻ-vāy*.

[தாழ்வாய் + கட்டை]

தாழ்வாரம் *tāḻvāram,* பெ. (n.) 1. தாழ்ந்த இறப்பு (வின்.); sloping roof. 2. வீட்டைச்சாரப் புறத்தே சாய்வாக இறக்கப்பட்ட இடம்; leanto, pent-house. வந்தவர் தாழ்வாரத்தில் அமர்ந்தார் (உ.வ.).

ம. தாழ்வார, தாழ்வர; க. தாழ்வார; தெ. தாள்வாரமு

[தாழ் + வாரம்]

தாழ்விசைஇணைப்புத்திறம் *tāḻvišai iṇaipputtiṟam,* பெ. (n.) மிகக்குறைந்தளவு முன்னோக்கு இயக்க வேகம் உடையதாக இயங்கு உறுப்புகளை அமைத்தல்; fixing low gear.

[தாழ் + விசை + இணைப்பு + திறம்.]

தாழ்வு *tāḻvu,* பெ. (n.) 1. பள்ளம் (உரி.நி.); depth, as a pit. 2. குறுமை; shortness. "தாழ்வினொச்சி" (அகநா. 23). 3. மானக்கேடு, இழிவு; degradation. 4. குற்றம்; fault, defect. "தாழ்விலூக்கமொடு" (பு.வெ. 10: 5: கொளு). 5. தொங்கல் (வின்.); hanging, pendant. 6. வறுமை; poverty. "நன்றிக்கட் டங்கியான் றாழ்வு" (குறள், 117). 7. அடிவாரம்; foot, as of a mountain. "வெள்ளி மால்வரைத் தாழ்வதில்" (சீவக. 1771). 8. தங்குமிடம்; resting place, abode. "தன்குடங்கை நீரேற்றான் றாழ்வு" (திவ். இயற். 3:62). 9. அடக்கம்; self-control, modesty. "தாழ்வின்றிக் கொன்னே வெகுளி பெருக்கலும்" (திரிகடு. 38). 10. துன்பம்; distress. "என் றாழ்வுகெடத் தேற்றாய்" (திருவிளை. பழியஞ்சி. 32). 11. வணக்கம்; prostration in worship. "தாழ்வுற் றிடுவோ ருமைசங்கரனை" (கந்தபு. தெய்வ: 220).

ம. தாழ்வு

[துன் → தன் → தழ் → தாழ் → தாழ்வு. தாழ்வு → ஏழ்மை. தாழ்மை → தாழ்மையினால் விளைந்த வறுமை, வறுமை தந்த துன்பம்.]

தாழ்வுகூரை *tāḻvu-kūrai,* பெ. (n.) சாய்வான கூரை (c.e.m.); sloping roof.

[தாழ்வு + கூரை]



தாழ்வுணர்ச்சி *tāḻ-v-uṇarcci,* பெ. (n.) மற்றவர்களை விடத் தான் தாழ்ந்தவன் என்ற எண்ணம்; தன்னைப் பற்றிய குறைந்த மதிப்பு; inferiority complex. கூச்சமும் தாழ்வுணர்ச்சியும் அவரைத் துன்புறுத்தின. (இக்.வ.).

[தாழ் → தாழ்வு + உணர்ச்சி]

தாழ்வுமனப்பான்மை *tāḻvu-maṉappāṉmai,* பெ. (n.) தாழ்வுணர்ச்சி பார்க்க; see *tāḻ-v-uṇarcci.*

[தாழ்வு + மனப்பான்மை]

தாழ்வுறுவரி *tāḻvuṟu-vari,* பெ. (n.) அடுத்துள்ள அச்செழுத்தினைவிடத் தாழ்வாக உள்ள அச்செழுத்து; low in line.

[தாழ்வுறு + வரி]

தாழ *tāḻa,* குவி.எ. (adv.) கீழே; downward, below. வேட்டியைத் தாழக்கட்டியிருந்தார். (இ.வ.).

[தாழ் → தாழ]

தாழக்கூட்டுக்கம்பி *tāḻa-k-kūṭṭu-k-kambi,* பெ. (n.) அணிகலன் வகை; an ornament (செ.அக.).

[தாழ் + கூட்டு + கம்பி]

தாழக்கோயில் *tāḻa-k-kōyil,* பெ. (n.) குன்றின் மேலமைந்த கோயிலின் படியாக அக்குன்றின் அடிவாரத்தில், கட்டப்பட்ட கோயில்; the temple built at the foot of a hill and which is a part of the temple, built at the top of that hill.

[தாழ் + கோயில்]

தாழக்கோல் *tāḻa-k-kōl,* பெ. (n.) 1. தாழ்ப்பாள்; bar, bolt. "வன்னிலைக் கதவநூக்கித் தாழக்கோல் வலித்து" (திருவிளை. அங்கம். 8). 2. திறவுகோல் (தொல். எழுத். 384, உரை); key.



ம. தாழக்கோல், தாக்கோல், தாக்கோலு; து. தார்கொலு, தர்கோலு, தர்கொலு; கோது. தாகோய் (பூட்டு).

[தாழ் + கோல்]

தாழங்கடமான் *tāḻaṅkaḍamāṉ,* பெ. (n.) கடலடிப்பரப்பில் மேயும் முட்களில்லாத மீன்; a kind of fish.

[தாழ் → தாழம் + கடமான்.]

தாழங்காய் *tāḻaṅ-gāy,* பெ. (n.) 1. தாழைக் காய்; screw-pine fruit. 2. பயனற்றவ-ன்-ள்; worthless person, as the useless fruit of the screw-pine (செ.அக.).

[தாழை + காய்]

தாழங்காயெண்ணெய் *tāḻaṅgāy-eṇṇey,* பெ. (n.) தாழையின் காயிலிருந்து அணியமாக்கப் படும் ஒரு வகை மருந்தெண்ணெய்; a medicinal bathing oil prepared from the fruits of screw pine tree, pandanas (சா.அக.).

[தாழங்காய் + எண்ணெய்]

இவ் வெண்ணெய் உட்காய்ச்சல், கைகால் முடக்கு, கண்ணெரிவு, மூலம், இருமல், கைகால் எரிச்சல் ஆகியவற்றைப் போக்கும்.

தாழங்காலா *tāḻaṅkālā,* பெ. (n.) நான்கடி நீளம் வளரும் நீல நிறமுள்ள கடல் மீன் வகை; screw-pine roeball, purplish - black, attaining 4ft. in length (செ. அக.).

[தாழை + காலா]



தாழங்கீளி *tāḻaṅ-gīḷi,* பெ. (n.) ஆறங்குல நீளம் வளரக் கூடியதும் வெண்மை நிறமுடையது மான கடல் மீன் வகை; a marine fish, silvery, attaining, 6 in. in length (செ.அக.).

[தாழை + கீளி]

தாழங்குடை *tāḻaṅ-kuḍai,* பெ. (n.) தாழை யோலையாற் செய்த குடை; umbrella made of screw-pine leaves.

[தாழை + அம் + குடை]



தாழங்குப்பம் *tāḻaṅkuppam,* பெ. (n.) கடற்றுரை; sea-shore village (செங்கை. மீனவ.).

[தாழை + அம் + குப்பம் = கடற்கரையில் அமைந்துள்ள மீனவர் வாழிடம்]

தாழங்கோலா *tāḻaṅ-kōlā,* பெ. (n.) மஞ்சட் காலா மீன்; a kind of fish.

[தாழை + அம் + கோலா]

தாழஞ்சங்கு *tāḻañ-šaṅgu,* பெ. (n.) 1. வாயகன்ற சங்கு (வின்.); conch having a wide mouth. 2. இளங்குழந்தைகளுக்குப் பால் புகட்டும் ஒருவகைச் சங்கு; a conch used as spoon in feeding children (செ.அக.).

[தாழை + அம் + சங்கு]

தாழஞ்சேரி *tāḻañ-cēri,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறை வட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Mayilāḍuturai taluk in Tañjore district.

[தாழ் + சேரி. சேர் → சேரி → தாழஞ்சேரி சேர்ந்திருக்கும் வாழ்மனைகளைக் கொண்ட விடம். பார்ப்பனச்சேரி என்றாற்போன்று, முன்னர்ப் பொதுவாக வழங்கப்பட்ட தாயினும், இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் வாழிடத்தை குறித்ததென்க.]

தாழநில்-தல் (தாழநிற்றல்) *tā]a-nil-,* 14 செ.கு.வி. (v.i.) **தணிந்து கொள்ளுதல்;** to condescend. "ஸர்வாதிகன்தானே தாழநிற்குமன்று நிவாரக ரில்லை" *(ஈடு. 1: 3: ப்ர.).*

[தாழ் + நில்-.]

தாழம் *tāḻam,* பெ. (n.) 1. **ஓசை முதலியவற்றின் தாழ்வு;** lowness, as of the pitch of a tune. "தாழம்பட்ட ஓசை யாற்றி" *(கலித். 128, உரை).* 2. **அமைதி;** calmness. "தாழங் குறித்துக் கரைசெய்யுந் தரங்கவேலை" *(பாரத. பதினேழாம். 80).* 3. **காலத்தாழ்வு;** delay. "தாழமீங் கொழிக வென்றான்" *(சூளா. கல்யா. 146).*

[தாழ் → தாழம்]

தாழம்படு-தல் *tāḻam-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) **ஓசை தாழ்ந்து வருதல்;** to be subdued in tone; to be lowered, as the pitch. "தாழம்பட்ட ஓசை யல்லாதனவும்" *(தொல். பொருள். 444, உரை.).*

[தாழ் → தாழம் + படு-.]

தாழம்பாய் *tāḻam-pāy,* பெ. (n.) **தாழை ஓலையால் முடைந்த பாய்** *(பதார்த்த. 1465);* mat made of the screw-pine leaves.

[தாழை + அம் + பாய்]

தாழம்பூ *tāḻam-pū,* பெ. (n.) 1. **தாழையின் மலர்;** screw-pine flower. 2. **தாழம்பூ மடல் வடிவமாகச் செய்யப்பட்ட மகளிர் தலையணி;** woman's hair ornament in the shape of the bract of the screw-pine. தாழம்பூ மணத்திற்குப் வருமாம் *(உ.வ.).*

ம. தாழம்பூ, தாழம்பூவு; க. தாழெகூவு, தாழம்பூவு

[தாழை + அம் + பூ]

தாழம்பூச்சேலை *tāḻam-pū-c-cēlai,* பெ. (n.) **புடைவை வகை;** a kind of saree.

[தாழை + பூ + சேலை]

தாழம்வாளை *tāḻam-vāḷai,* பெ. (n.) **தாழம் பூவண்ணமுடைய வாளைமீன்** *(தஞ்சை. மீனவ.);* screw-pine flower coloured fish.

[தாழை + அம் + வாளை]

தாழமட்டை *tāḻa-maṭṭai,* பெ. (n.) **தாழைச் செடியின் தண்டுப் பகுதி;** the stalk of a screw-pine flower.

[தாழை + அம் + மட்டை]

தாழவலை *tāḻa-valai,* பெ. (n.) **ஒரு வகை வலை;** bottom net.

[தாழ்வலை → தாழவலை (இ.வ.)]

தாழவேடு *tāḻa-vēḍu,* பெ. (n.) **காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்;** a village in Kāñjipuram district *(ஊர்.பெ.அக.).*

[தாழமேடு → தாழவேடு]

தாழறை *tāḻaṟai,* பெ. (n.) **சிறியஅறை;** small room, nook *(செ.அக.).*

[தாழ் + அறை]

தாழன்காலா *tāḻaṉkālā,* பெ. (n.) **தாழங்காலா** பார்க்க; see *tāḻaṅgālā* *(சா.அக.).*

[தாழன் + காலா. தாழை மலரின் வண்ணம் (மஞ்சள்) போலிருக்கும் மீன்.]

தாழாமை *tāḻāmai,* பெ. (n.) **இறுமாப்பு;** arrogance, pride *(ஊர். பெ. அக.).*

[தாழ் + ஆ + ஆமை]

தாழி[1] *tāḻi,* பெ. (n.) 1. **இரண்டாவது விண்மீன் (பரணி);** the second nakṣatra. 2. **கடல்** *(அகநி.);* sea.

[நால் → நாலி → தாழி]

தாழி[2] *tāḻi,* பெ. (n.) 1. **வாயகன்ற சட்டி;** large pan, pot or vessel with a wide mouth. "வன்மத்திட வுடைந்து தாழியைப் பாவு தயிர்போற் றளர்ந்தேன்" *(திருவாச. 24: 6).* 2. **சாடி** *(சூடா.);* jar. 3. **இறந்தோரை அடக்கஞ் செய்துவைக்கும் பாண்டம்;** burial urn. "தாழியிற் கவிப்போர்" *(மணிமே. 6: 67).* முதுமக்கள் தாழி.

ம. தாழி

[தகழி = அகல், (வாயகன்ற) உண்கலம். தகழி → தாழி]

தாழி[3] *tāḻi,* பெ. (n.) *1. அரிதாரம்;* yellow orpiment. *2. சிவதை;* Indian jalap. *3. திருமால் உலகம் (தக்கயாகப். 376, உரை);* Vaigundam, Viṣṇu's heaven. *4. முகப்பூச்சு;* yellow orpiment. *5. குடம்;* cauldron. *6. சாடி;* jar.

தாழிக்குவளை *tāḻi-k-kuvaḷai,* பெ. (n.). *தாழியிற் பெய்துவைத்த குவளை;* blue nelumbo reared in a pot. *"தாழிக்குவளை சூழ்செங் கழுநீர்" (சிலப். 5: 192)* (செ. அக.).

[தாழி + குவளை]

தாழிகை *tāḻigai,* பெ. (n.) *ஒரு வகைப்பா;* a kind of song *(இரு.நூற்.பே.).*

தாழிசை *tāḻisai,* பெ. (n.) பாவினங்களுள் ஒன்று *(தொல். பொருள். 447);* a sub-division in each of the four kinds of verse.

[தாழ் → தாழிசை]

தாழிடு-தல் *tāḻ-iḍu-,* 18 செகுவி. (v.i.) *தாழ்ப்பாள் மூலமாக அடைத்தல்;* to latch. அறைக்குள் வேகமாகப் போய்த் தாழிட்டுக் கொண்டாள். *(உவ.)*

[தாழ் → இடு-.]

தாழிதளம் *tāḻi-taḷam,* பெ. (n.) வாரினபனை யோலையேடு *(தஞ். சா: 3, 86);* leaf of palmyra palm, trimmed for writing *(செ.அக.).*

[தாழி + தளம்]

தாழிப்பானை *tāḻi-p-pāṉai,* பெ. (n.) *வாயகன்ற பெரியபானை;* large-mouthed earthen pot *(செ.அக.).*

[தாழி + பானை]

தாழிவயிறு *tāḻi-vayiṟu,* பெ. (n.) *பருத்த வயிறு;* pot belly. ஊசித் தொண்டை யுந் தாழி வயிறும் *(இ.வ.).*

[தாழி + வயிறு]

தாழிவில்லை *tāḻi-villai,* பெ. (n.) *மகளிர் தலையணிவகை;* a kind of hair-ornament. "வரதப்ப னொரு தாழிவில்லை போட்டான்" *(விறலிவிடு.).*

[தாழி + வில்லை]

தாழிவிளக்கு *tāḻi-viḷakku,* பெ. (n.) *குடவிளக்கு;* a kind of lamp; light. *"தாழி விளக்கு மாகாணிக்கு ஆடு ஐஞ்சறை" (S.I.I. V. 645).*

[தாழி + விளக்கு = வட்டத்தட்டின் நடுவே அமைந்த மண்ணாலான விளக்கு]

தாழினி *tāḻiṉi* பெ. (n.) *நத்தைச்சூரி;* oyster knife, bristly button weed - Spermacoci pispido *(சா.அக.).*

தாழுகை *tāḻugai,* பெ. (n.) *தாழ்-தல் பார்க்க;* see *tāḻ-.* (இரு.நூற்.பே.).

[தாழ் → தாழ்கை → தாழுகை-.]

தாழு-தல் *tāḻu-,* பெ. (n.) *தாழ்-தல்;* low (இரு. நூற்.பே.).

[தாழ் → தாழு-.]

தாழை *tāḻai,* பெ. (n.) *1. செடிவகை;* fragrant screw-pine. "*கமழுந் தாழைக் கானலம் பெருந்துறை" (பதிற்றுப். 55).* *2. தென்னை;* coconut tree. "குலையிறங்கிய கோட்டாழை" *(புறநா. 17).* *3. தெங்கம்பாளை;* spathe of the coconut tree. *"தாழை தளவ முட்டாட் டாமரை" (குறிஞ்சிப். 80).*

மறுவ. முண்டக முசலி

ம. தாழம், தாத்; **க.** தாழெ

[தழை → தாழை = தழைத்துப் படர்வது]

தாழை வகைகள்

1. பெருந்தாழை
2. அன்னாசி
3. தழுதாழை
4. தென்னை
5. தேங்காய்
6. செந்தாழை

7. வெண்டாழை
8. பரங்கித்தாழை
9. பெருந்தாழை
10. பேய்த்தாழை
11. கற்றாழை
12. அன்னத்தாழை
13. கடற்றாழை
14. மஞ்சட்டாழை
15. சிறுதாழை
16. முயற்றாழை
17. இரசதாழை
18. சாம்பயோன் தாழை
19. ஆனைக் கற்றாழை

வெளிர்மஞ்சள் நிறமுள்ள தாழைமலர் சிவபூசைக்குப் பயன்படாது. தாழை இலையினைப் பச்சையாகவும், வேகவைத்தும் உண்ணலாம். தாழம்பூவுடன், காசுக்கட்டி சேர்த்து, நறுமணத் தயிலம் வடித்து தாம்பூலத்துடன் அருந்துவர். தாழம் பழத்தையும், தாழைச்சோற்றினையும் வறுமைக் காலத்தே உணவாகக் கொள்ளும் வழக்கமுண்டு. நறுமணமிக்க தாழம்பூவிற்கு பசியை அதிகரிக்குங் குணமுண்டு. தாழம்பூ எண்ணெய் சொறி, சிரங்கு, தோல்நோய் போன்றவற்றைப் போக்கும். தாழம்பூச் சாறு ஆண்மையை அதிகரிக்கும். உடம்பு அழற்சி, கோழை, இருமல் போன்ற நோய்கட்கு தாழம்பழ இளகியம் கைகண்ட மருந்து என்று, சா.அக கூறும்.

தாழைக்கோரை *tāḻai-k-kōrai,* பெ. (n.) கோரை வகை *(சங்.அக.);* a kind of sedge.

[தாழை + கோரை]

தாழைக்கோழி *tāḻai-k-kōḻi,* பெ. (n.) நீரில் நீந்தும் போது வாத்துப் போலவும் நிலத்தில் இருக்கும்போது காளான் கோழி போலவும் காணப்படும் ஒரு வகைப் பறவை; common moorhen.



[தாழை + கோழி. கரையோரத்துத் தாழைப் புதர்களில் இருப்பது]

தாழைச்சோறு *tāḻai-c-cōṟu,* பெ. (n.) தாழை மரத்திலுள்ள சதைப்பற்று; pith of the tāḻai plant.

[தாழை + சோறு. தாழைச்சோறு பெண்கள் மாதவிடாய்த் தடையை நீக்கும் மருத்துவக் குணமுடையது.]

தாழைநாகம் *tāḻai-nāgam,* பெ. (n.) தாழைச் செடியில் மறைந்து கிடக்கும் நாகப்பாம்பு; an extremely venomous kind of cobra found in screw-pine *(சா. அக.).*

[தாழை + நாகம்]

தாழைநார் *tāḻai-nār,* பெ. (n.) தாழையினின்று கிழிக்கப்படும் நார்; fibre taken from the screw-pine *(செ.அக.).*

[தாழை + நார்]

தாழைப்பாம்பு *tāḻai-p-pāmbu,* பெ. (n.) தாழம்பூ வண்ணத்திற் காணப்படும் நச்சுத் தன்மையுடைய பாம்பு; a kind of snake *(தஞ்சை. மீனவ.).*

[தாழை + பாம்பு]

தாழைமடல் *tāḻai-maḍal,* பெ. (n.) தாழைப் பூவிலுள்ள இதழ்; petal in the tāḻai flower *(சா. அக.).*

[தாழை + மடல்]

தாழைமுலை *tāḻai-mulai,* பெ. (n.) தாழங்காய்; screw-pine fruit *(செ.அக.).*

[தாழை + முலை]

தாழையடிப்பாடு *tāḻayaḍi-p-pāḍu,* பெ. (n.) மீன்பிடிபாட்டிடம் *(முகவை. மீனவ.);* fishing spot.

[தாழை + அடிப்பாடு]

தாழையுப்பு *tāḻai-y-uppu,* பெ. (n.) தாழைச் செடியை எரிப்பதினாலுண்டாகும்

சாம்பலினின்று எடுக்கும் உப்பு; alkaline salt extracted from the ash derived by burning the plant screw-pine (சா.அக.).

[தாழை + உப்பு]

தாழைவிழுது *tāḻai-viḻudu,* பெ. (n.) தாழை வேர்; aerial roots of the screw-pine (செ.அக.).

[தாழை + விழுது]

தாழொலி *tāḻ-oli,* பெ. (n.) தாழ்ந்த ஒலி; feeble voice (சா.அக.).

[தாழ் + ஒலி]

தாள்[1] *tāḷ,* பெ. (n.) 1. கால்; foot. "எண் குணத்தான் றாளை" (குறள். 9). 2. மர முதலியவற்றின் அடிப்பகுதி; foot of a tree or mountain. "விரிதாள கயிலாய மலையே" (தேவா. 1156:1), தாள் உண்ட நீரைத் தலையாலே தரும் தென்னை (பழ.). 3. பூ முதலியவற்றின் அடித்தண்டு; stem, pedicle, stalk. "தாணெடுங் குவளை" (சீவக. 2802). 4. வைக்கோல் (பிங்.); straw. 5. விளக்குத்தண்டு (வின்.); lampstand, candle-stick. 6. முயற்சி; energy, effort, perseverance, application. "தாளிற்றந்து" (புறநா. 18). 7. படி; stairs. "குண்டுகண் கழிய குறுந்தாண் ஞாயில்" (பதிற்றுப். 71: 12). 8. தொடக்கம் (ஆதி) (சூடா.); origin, commencement, beginning. 9. சட்டைக்கயிறு; tying string of a jacket. "தாளுண்ட கச்சிற் றகையுண்ட" (கம்பரா. பூக்கொய். 14). 10. விற்குதை (வின்.); ends of a bow. 11. வால்மீன் சிறப்பு (விசேடம்); a comet. "குளமீனொடுந் தாட் புகையினும்" (புறநா. 395). 12. ஒற்றைத்தாள் (காகிதம்); sheet of paper. 13. தாழ்ப்பாள்; bolt, bar, latch. "தம்மதி றாந்திறப்பர் தாள்" (பு.வெ. 9: 24). தாள் இட்டவன் தாள் திறக்க வேண்டும் (பழ.). 14. கொய்யாக்கொட்டை; wooden catch turning on a central screw that fastens a pair of shutters. 15. மூட்டுவாயின் ஊடுருவச் செறிக்கும் கடையாணி; pin that holds a tenon in a mortise. "தாளுடைக் கடிகை நுழைநுதி நெடுவேல்" (அக. நா: 35). 16. திறவுகோல்; key. "இன்பப் புதாத் திறக்குந் தாளுடைய மூர்த்தி" (சீவக. 1549).

தெ., க. தாழ், ம. தாள்

[துள் → தள் → தாள் (மு.தா. 212). நெல், புல் முதலிய பயிர்களின் அடி. அடி யென்னுஞ்சொல் முதலாவது பருத்தது என்னும் பொருளில் மரவடியையே குறித்தது. எல்லாப் பொருள்களின் அடிப்பாகத்தையும் குறிக்க வழங்கிய பின், அது தன் சிறப்புப்பொருளை இழந்தது.]

தாள்[2] *tāḷ,* பெ. (n.) 1. தாடை; jaws. "தாள் கிட்டிக் கொண்டது". 2. கண்டம் (இ.வ.); adam's apple. 3. அருவி; waterfall. 4. அலகு; measurement. 5. முதன்மை; first. 6. ஒட்டு; stick. 7. தேர்வுத் தாள்; examination paper. "தமிழ் முதல் தாளில் அவன் நிறைய மதிப்பெண்கள் பெற்றிருந்தான் (சா.அக.).

தாள்கழுவல் *tāḷ-kaḻuval,* பெ. (n.) காலடியைத் தூய்மைப்படுத்துதல்; cleaning the feets (சா.அக.).

[தாள் + கழுவல்]

தாள்கிட்டும்சன்னி *tāḷ-kiṭṭum-šaṉṉi,* பெ. (n.) தாளிறுத்தும் ஒருவகை இழுப்புநோய்; lockjaw, tetanus (சா.அக.).

[தாள் + கிட்டும் + சன்னி]

தாள்கிட்டுமிசிவு *tāḷ-kiṭṭum-išivu,* பெ. (n.) தாள்கிட்டும்சன்னி பார்க்க; see *tāḷ-kiṭṭum-šaṉṉi.*

[தாள் + கிட்டும் + இசிவு]

தாள்கிட்டல் *tāḷ-kiṭṭal,* பெ. (n.) தாளிறுத்தல் பார்க்க; see *tāḷiṟuttal.*

[தாள் + கிட்டல்]

தாள்கிட்டி *tāḷ-kiṭṭi,* பெ. (n.). தாளிறுப்பு பார்க்க; see *tāḷiṟuppu* (சா.அக.).

[தாள் + கிட்டி]

தாள்சின்னி *tāḷ-šiṉṉi,* பெ. (n.). தாள்கிட்டும் சன்னி பார்க்க; see *tāḷ-kiṭṭum-šaṉṉi* (சா.அக.).

[தாள் + சின்னி]

தாள்செறி *tāḷ-šeṟi,* பெ. (n.) கைவிரலணி; finger ring. "வாங்குவில் வயிரத்து மரகதத் தாள் செறி" (சிலப். 6, 97).

[தாள் + செறி]

தாள்துமி-த்தல் *tāḷ-tumi-*, 4 செகுன்றாவி. (v.t.) நெல்லின் தாளை அறுத்தல்; to cut stalk of paddy (ஊர்.பெ.அக.).

[தாள் + துமி-.]

தாள்பிடிப்பு *tāḷ-piḍippu*, பெ. (n.) 1. முழங்கால் பிடிப்பு; contraction of the muscles of the leg. 2. தாடைப் பிடிப்பு; lock jaw.

[தாள் + பிடிப்பு]

தாள்போர் *tāḷ-pōr*, பெ. (n.) தாட்போர் (இ.வ.) பார்க்க; see *tāṭpōr.*

[தாள் + போர்]

தாள்மடங்கல் *tāḷ-maḍaṅgal*, பெ. (n.) சம்பா அறுவடை முடிவு (W.G. 506); close of the wet-crop harvest.

[தாள் + மடங்கல்]

தாள்வரை *tāḷ-varai*, பெ. (n.) மலையடி வாரம்; fort of a mountain. "உயர்ந்த தாள்வரைப் புறத்து" (திருவாலவா. 44, 36).

[தள் → தாள் + வரை]

தாள்வினை *tāḷ-viṉai*, பெ. (n.) ஆர்வம், சுறுசுறுப்பு (உற்சாகம்) (பிங்.); zeal, fervour.

[தள் → தாள் + வினை]

தாள *tāḷa*, வி.எ. (adv.) தாங்க, பொறுக்க; bearable. துக்கம் தாள முடியாமல் அழுது விட்டான் (இக்.வ.).

தாளகக்கட்டு *tāḷaga-k-kaṭṭu*, பெ. (n.) தாளகத்தை நெருப்பிற்கு ஓடாதபடி சித்த நூல்களிற் சொல்லிய முறைப்படி கட்டுதல்; consolidating orpiment as per process contemplated in siddhar's science (சா.அக.).

[தாள் + அகம் + கட்டு]

தாளகக்கருப்பு *tāḷaka-k-karuppu*, பெ. (n.) தூய்மைப்படுத்தப்பட்ட தாளகத்தோடு வெடியுப்புச் சுண்ணத்தைச் சேர்த்து, வெண் தாமரைப் பூவிதழ்ச் சாற்றில் அரைத்துச் சீலைசெய்து புடமிட்டெடுத்த கருப்புத்தூள்; purified orpiment and calcified potassium nitrate are ground with the juice of white lotus and subjected to fire as per rules. it's colour is black (சா.அக.).

[தாள் + அகம் + கருப்பு]

தாளக்கட்டு *tāḷa-k-kaṭṭu*, பெ. (n.) இசை ஒத்து அமைகை; harmonious effect of drum-beat, as in a musical concert (செ.அக.).

[தாளம் + கட்டு]

தாளக்கம் *tāḷakkam*, பெ. (n.) தாளகம் (யாழ்.அக.) பார்க்க; see *tāḷagam.*

[தாளகம் → தாளக்கம்]

தாளகச்சுண்ணம் *tāḷaga-c-cuṇṇam*, பெ. (n.) சுண்ணாம்புத்துகள் கொண்ட தூய்மைப் படுத்தப்பட்ட பூச்சுப்பசை; calcified orpiment which has the properties of calcium (சா.அக.).

[தாள் + அகம் + சுண்ணம்]

தாளகச்செந்தூரி *tāḷaga-c-cendūri*, பெ. (n.) தாளகத்தைச் செந்தூரமாக்கும் பூண்டு; an unknown drug said to be a red variety of lizard plant capable of reducing orpiment into a red oxide (சா.அக.).

மறுவ. செம்பல்

[தாள் + அகம் + செந்தூரி]

தாளகசுத்தி[1] *tāḷaga-šutti*, பெ. (n.) மஞ்சட் பூச்சுப் பசை; orpiment (சா.அக.).

[தாள் + அகம் + சுத்தி]

இது சுண்ணாம்புக்குள் வைத்துக் கழுதைச் சிறுநீர் விட்டு, 7 தடவை தாளித் தெடுத்து, அன்னநீர், கொள்ளுக்கியாழம், தயிர், காடிநீர், அகத்திக்கீரை, விதைத் தைலம் இவைகள் கூட்டி, 2 சாமம் சுண்டக்கருக்கி யெடுத்துப் பிறகு, சத்திசாட்டரணை வேர், குக்கில் போன்றவற்றை முருங்கையிலை, சாற்றில் அரைத்துக் கவசம்செய்து லகுபுடம் போட்டு எடுத்தால், மஞ்சட்பூச்சுப் பசை கிடைக்கும்.

தாளகசுத்தி[2] *tāḷaga-šutti*, பெ. (n.) தாளகத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து குடுவையில் போட்டு, மேல் மூடும் ஓட்டிற்கு, 2 துளை போட்டுக் கரிநெருப்பின் மீது வைத்து விசிறுகையில், முதலில் கருப்புப்புகை வரும். பிறகு சிவப்புப்புகை வரும்போது எடுத்துக் கொள்ளல் தாளக சுத்தி ஆகும்; purification of orpiment as per process of mentioned here (சா.அக.).

[தாள் + அகம் + சுத்தி]

தாளகத்தின்மஞ்சள்போக்கி *tāḷagattiṉ-mañjaḷ-pōkki*, பெ. (n.) திலகமரம்; an unknown tree probably peacock gingelly - Vitex alata (சா.அக.).

[தாளகம் + அத்து + இன் + மஞ்சள் + போக்கி.]

தாளகத்தைப்பற்பமாக்கி *tāḷagattai-p-paṟpam-ākki*, பெ. (n.) வனமிரட்டி; a kind of soma plant (சா.அக.).

தாளகநீறு *tāḷaga-nīṟu*, பெ. (n.) தாளகபற்பம்; calcinated white powder of yellow sulphide or arsenic (சா.அக.).

[தாளகம் + நீறு]

தாளகபசுபம் *tāḷaga-bašupam*, பெ. (n.) தாளக பற்பம் பார்க்க; see *tāḷagapaṟpam* (சா.அக.).

தாளகபற்பம் *tāḷaga-paṟbam*, பெ. (n.) தாளகத்தை நீற்றிச் செய்த மருந்துப்பொடி; calcined white powder of yellow sulphide of arsenic (சா.அக.).

[தாளகம் + பற்பம்]

தாளகம் 1 பலம் கல் சுண்ணாம்பு தண்ணீரில் போட்டுத் தெளிந்தபிறகு, நீரையிறுத்து, அந்த நீரிலேயே தாளகத்தை 7 நாள் அரைத்து, பில்லை செய்து, ஒரு கலசத்தில் சுண்ணாம்பு நீரை நிறைய வைத்து வேறொரு கலசத்தில் சுண்ணாம்பு நீரை அழுத்தமாய் வைத்து மூடி, 7 சீலை கவசம் செய்து, 10 விரட்டியில் புடம் போட்டு எடுக்க பற்பமாகும். தேனில் தர வேண்டும். புளி, நல்லெண்ணெய், கடுகு ஆகாது

தாளகப்புகை *tāḷaga-p-pugai*, பெ. (n.). ஒரு வகை அரிதாரம்; a kind of orpiment (சா. அக.).

[தாளகம் + புகை]

இது இருமலைப் போக்க உதவும்.

தாளகம்[1] *tāḷagam*, பெ. (n.) 1. அரிதாரம்; orpiment. 2. பொன்னரிதாரம்; yellow orpiment. 3. மேல்தாள் (ஈர வெங்காயத் தாள்); pedicle as of onion. 4. அடிப்பாகம்; stem. 5. தகட்டரி தாரம்; arsenic in their flat pieces (சா.அக.).

தாளகம்[2] *tāḷagam*, பெ. (n.) அரிதாரம் (பதார்த்த. 1153); orpiment, or yellow tersulphide sulphide.

[தாள் → தாளகம்]

தாளகமெழுகு *tāḷaga-meḻugu*, பெ. (n.) ஒரு வகை மெழுகு; a kind of wax substance by the process mentioned here (சா. அக.).

[தாளகம் + மெழுகு]

தாளகக் கட்டியை வேங்கைச் செயநீரில் 3 சாமம் அரைத்து வழித்து எடுக்க மெழுகாகும். இதனை தாம்பூரத்தில் 300 - 1 கொடுத்து 9 - மாற்று வெள்ளியாகும். இம் மருந்தை வெற்றிலைச் சாற்றில் மூன்று நாள் (பச்சைப் பயறளவு) இரு வேளையாக குடிக்க காசம், மனநோய், வலிப்பு வகை, ஊதை, வளிநோய் போகும் என சா. அக. விளக்கமாகக் கூறும்.

தாளககேசுவரம் *tāḷagēšuvaram*, பெ. (n.). ஓர் மருந்து தைலம்; the name of a medicinal unguent.

தாளங்கட்டு-தல் *tāḷaṅ-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) தாளவோசை நிரம்பும்படி கட்டடம் அமைதல்; to be effective acoustically, as a building. இந்த இடம் தாளங் கட்டுகிறது (உ.வ.).

[தாளம் + கட்டு-,]

தாளசமுத்திரம் *tāḷa-šamuttiram*, பெ. (n.) பரத சூடாமணி என்ற அரசன் இயற்றிய தாள வகையைக் கூறும் பழைய நூல் (சிலப். முகவுரை); a treatise on tāḷa by king Parata-šūḍāmaṇi.

[தாளம் + சமுத்திரம்]

தாளசாதி *tāḷa-šādi*, பெ. (n.) துதிப்பாடல்களில் அமைந்த குறில்களின் அளவு; the number of short vowels occurring in a musical composition (செ.அக.).

[தாளம் + சாதி]

தாளஞ்சொல்(லு)-தல் *tāḷañ-sol-*, 13 செ.கு.வி. (v.i.) 1. பாட்டுக்கேற்பச் சுரம் பாடுதல்; to sing the musical notes appropriate to a tune or composition. 2. கூத்தியற் சுரக்கட்டுப் பாடுதல்; to sing the musical notes to accompany dancing.

[தாளம் + சொல்-.]

தாளடி *tāḷ-aḍi*, பெ. (n.). 1. கதிர்த்தாள்; stubble. 2. முதலடி மகசூல் அறுத்தபின் நடக்கும் வேளாண்மை; second cultivation. 3. சாகுபடிக் காலம்; cultivation season; stubble ploughing

season. 4. இருபூ நிலம் (நாஞ்); double - crop land. 5. களத்திற் கதிரை இரண்டாா முறை அடிக்கை (இ.வ.); second beat of sheaves in threshing. தாளடியைக் கூலியாகக் கொடுங்கள் (இக்.வ.).

ம. தாளடி

[தாள் + அடி]

தாளடிகருநிலத்தில் *tāḷaḍi-karu-nilattil*, கு.வி.எ. (adv.). வேளாண்காலத்தில் (C.G.); at the cultivation season (செ.அக.).

[தாளடி + கரு + நிலத்தில்]

தாளடிநடவு *tāḷaḍi-naḍavu*, பெ. (n.). முதற் போகம் அறுவடையானதும் வயலை உழுது நடுகை (தஞ்.); cultivation after ploughing the stubble of the first crop.

[தாளடி + நடவு]

தாளடிப்போர் *tāḷaḍi-p-pōr*, பெ. (n.) தாட்போர் (தஞ்.) பார்க்க; see *tāṭ-pōr*.

[தாளடி + போர்]

தாளபத்திரம் *tāḷa-pattiram*, பெ. (n.) தாளிப் பனை; tali-pot (சா.அக.).

தாளம்[1] *tāḷam*, பெ. (n.) 1. பாடுகையிற் காலத்தை அறுதியிடும் அளவு; time measure. "இத்தாளங்களின் வழிவரும் . . . எழு தூக்குக்களும்" (சிலப். 3: 16: உரை). 2. கைத்தாளக் கருவி; a small cymbal for keeping time in music. "அடிகளார் தங்கையிற் றாள மிருந்த வாறு" (திருவாச. 17, 8). 3. தாளத்திற் கிசையக் கூறும் அசைகள் (வின்.); syllables sung in tune with drum-beats. தாளமும் பாட்டும் ஒத்து வரவில்லை (இக்.வ). 4. பனை; palmyra-palm. 5. கூந்தற்பனை வகை; jaggery-palm. 6. அரிதாரம்; yellow orpiment. 7. தாளிசபத்திரி (சங்.அக.) பார்க்க; see *taḷiša-pattiri*.

[தாள் → தாளம்]

தாளம்[2] *tāḷam*, பெ. (n.) 1. தாழை பார்க்க; see *tāḻai*. 2. பனங்கொட்டை; palmyra nut (சா.அக.).

தாளம்பிடித்-தல் *tāḷam-piḍi-*, 4 செ.குவி. (v.i.) தாளம்போடு-தல்[1] பார்க்க; see *tālam-pōḍu-*[1] (செ.அக.).

[தாளம் + பிடி-.]

தாளம்போடு-தல் *tāḷam-pōḍu-*, 20 செ.குவி. (v.i.). 1. தாளமடித்தல்; to keep time, as with the hands or cymbals. "கைத்தாளம் போடு" (பணவிடு. 183). 2. வறுமையால் துன்புறுதல்; to suffer from want. அவன் சாப்பாட்டுக்கின்றித் தாளம் போடுகிறான் (உ.வ.). 3. விடாது கெஞ்சுதல் (இ.வ.); to persist in an improper request, to importune.

[தாளம் + போடு-.]

தாளம்மை *tāḷ-ammai*, பெ. (n.). பொன்னுக்கு வீங்கி (இ.வ.); mumps.

[தாள் + அம்மை]

தாளமானம் *tāḷa-māṉam*, பெ. (n.) தாளவளவு; time measured by tāḷam. "இனித் தாளமானத் திடையே நின்றொலிக்கும்" (மலைபடு. 9, உரை).

[தாளம் + மானம்]

தாளமுத்திரை *tāḷa-muttirai*, பெ. (n.) இடது உள்ளங்கையில் வலதுகை விரலால் தட்டும் முத்திரை வகை (செந். x, 424); a gesticulation in worship in which the left palm is tapped with the right finger.

[தாளம் + முத்திரை]

தாளமுறி *tāḷa-muṟi*, பெ. (n.) பனைஓலை ஆவணம்; document written on palm'ōlai'. "கோயில் பண்டாரத்துக்கு உடலாக பதினேழாவது தாளமுறி முதல் கைக் கொண்டு முதலிட்டுக் கொள்ளவும்" (S.I.I.xii. 206).

மறுவ. தாலமுறி

[தாளம் + முறி]

தாளமூலிகம் *tāḷa-mūligam*, பெ. (n.) நிலப் பனை; ground palm (சா.அக.).

[தாளம் + மூலிகம்]

தாளயந்திரம் *tāḷa-yandiram,* பெ. (n.) ஒரு அறுவைக் கருவி; a surgical instrument, a pair of small pincers *(சா.அக.).*

[தாள(ம்) + (இ)யந்திரம்]

தாளவகையோத்து *tāḷa-vagai-y-ōttu,* பெ. (n.) தாளத்தைப் பற்றிக் கூறும் ஒரு பழைய நூல் *(சிலப். 3, 26, உரை.);* a treatise on time-measure.

[தாளவகை + ஒத்து]

தாளவாத்தியம் *tāḷa-vāttiyam,* பெ. (n.) தட்டி வாசிக்கும் தோல்கருவி; percussion instrument *(கிரி.அக.).*

[தாள(ம்) + வாத்தியம்]



தாளவிலாசம் *tāḷa-vilāšam,* பெ. (n.) பனை; palmyra *(சா.அக.).*

[தாளம் + விலாசம்]

தாளவொரியல் *tāḷa-v-or-iyal,* பெ. (n.) தாள வகைகளுள் (விகற்பங்களுள்) ஒன்று *(சிலப். 3: 16, உரை.);* a variety of tāḷam.

[தாளம் + ஓரியல்]

தாளவொற்று *tāḷa-v-oṟṟu,* பெ. (n.) சதி *(பிங்.);* agreement of time.

[தாளம் + ஒற்று]

தாளவோத்து *tāḷa-v-ōttu,* பெ. (n.) நூற்றெட்டு வகைத் தாளங்களை விளக்கும் ஒரு பழைய நூல்; an ancient treatise on tāḷam describing 108 kinds of tāḷas.

[தாளம் + ஓத்து]

தாளன் *tāḷaṉ,* பெ. (n.) பயனற்றவன் *(வின்.);* good-for-nothing fellow.

[தாள் → தாளன்]

தாளா *tāḷā,* பெ. (n.) கட்டுமரத்தைச் செலுத்த நீரைத்துழாவும் பலகை *(இ.வ.);* paddle for catamaran.

[தாள் → தாளா]

தாளாத *tāḷāta,* பெ.எ. (adj.) தாங்க முடியாத; unbearable. தாளாத துன்பம் *(உ.வ.).*

[தாள் → தாளா]

தாளாண்மை *tāḷ-āṇmai,* பெ. (n.) *1.* ஊக்கம் *(சூடா.);* energy, spirit. *2.* விடாமுயற்சி; perseverance, application, diligence. "தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே" *(குறள். 613).*

[தாள் + ஆண்மை]

தாளாரி *tāḷāri,* பெ. (n.) குங்கிலிய வகை (L.); bastard sal.

தாளாளன் *tāḷ-āḷaṉ,* பெ. (n.) *1.* ஊக்க முள்ளவன்; person of enterprise, application. "தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்" *(திரிகடு. 12). 2.* வாணிகன் (வைசியர்) (பிங்.); vaišya. *3.* தாளாளர்; correspondent.

[தாள் + ஆளன்]

தாளாற்றி *tāḷāṟṟi,* பெ. (n.) முயற்சி; confidence "தாளாற்றித் தந்த பொருளெல்லாம்" *(குறள். 212).*

[தாள் + ஆற்றி → தாளாற்றி]

தாளாறி *tāḷāṟi,* பெ. (n.) காலாறி; bastard saul - Shorea tatura *(சாஅக).*

தாளி[1]-த்தல் *tāḷi-,* 4 செ. குன்றாவி. (v.t.) *1.* கடுகு உளுத்தம்பருப்பு முதலியவற்றை நெய்யில் வறுத்துக் குழம்பு முதலியவற்றிற்கு நறுமண முண்டாக இடுதல்; to season and flavour curry, etc., with spices fried in ghee or oil. "பட்ட நறையாற் றாளித்து" *(பெரியபு. சிறுத். 66). 2.* மருந்தைச் சுவைப்படுத்துதல் *(வின்.);* to flavour medicine, as with ghee, oil. *3.* கண்டித்தல்; to scold soundly. அவனை நன்றாய்த் தாளித்து விட்டான். *4.* சுண்ணாம்பு குழைத்தல் *(இ.வ.);* to macerate lime. *5.* புனைந்துரைத்தல் *(உ.வ.);* to exaggerate.

க. தாலிசு; தெ. தாலிஞ்சு.

[தள் → தாள் → தாளி-.]

தாளி[2]-த்தல் *tāḷi-*, 4 செ.குவி. (v.i.) *1. தற்புகழ்ச்சி (சுருவங்) கொள்ளுதல்;* to boast ஏன் அதிகமாய்த் தாளிக்கிறாய் (இ.வ.). *2. தன் தகுதிக்கு மீறி ஆரவாரமாய் வாழ்தல்;* to live beyond one's means with pretentious extravagance.

க. தாளிசு; தெ. தாலின்சு

[தாள் → தாளி-.]

தாளி[3] *tāḷi*, பெ. (n.) *மண்ணாற் செய்த விளக்கின் அகல் (உ.வ.);* earthen lamp - bowl.

[துள் → தள் → தாளி.]

தாளி[4] *tāḷi*, பெ. (n.) *திருகுதாளி;* laul danah, twisted taḷi creeper (சா.அக).

இது 31 வகைப்படும் அவையாவன:

1. தாளி; a winding plant.
2. கம்பந்தாளி; convolvulus bicolour
3. காட்டுத்தாளி; false kaladana.
4. குறுகுத்தாளி; common creamy, white bindweed.
5. சிறு தாளி; hairy leaved creamy, white bindweed.
6. செந்தாளி; convolvulus purpurcas.
7. தேவதாளி; snake luffa.
8. நறுந்தாளி;
9. நாகதாளி; prickly pear plant.
10. நுழைதாளி; Chinese laurel.
11. பெருந்தாளி; convolvulus maximus.
12. திருகுதாளி; laul danah.
13. பூத்தாளி; white tanak.
14. வெண்டாளி; white catamaran tree.
15. நஞ்சுத்தாளி; sore eye plant.
16. காக்கைத்தாளி; Ceylon ebony.
17. கருந்தாளி; black palmwood.
18. உத்தமதாளி; hedge cotton.
19. மலைக்குறுந்தாளி; wound plant.
20. பஞ்சந்தாளி; honey bush.
21. பன்றித்தாளி; betel nut laurel.
22. பட்டைத்தாளி; raw laurel.
23. பிரபந்தாளி;
24. கோடைத்தாளி;
25. வெள்ளைப்பூத்தாளி; country traganth.
26. திருத்தாளி; cleodendron phelomoides.
27. மரவெட்டித்தாளி; betel nut laurel.
28. மலைத்தாளி; convolvulus maximus.
29. பெரும்பன்தாளி; ganapathy tree.
30. அட்டைத்தாளி; false fern tree.
31. வெள்ளைத்தாளி; wenlandia notoniana.

[தாள் + இ]

தாளி[5] *tāḷi*, பெ. (n.) *1. பனை (சூடா.);* palmyra-palm. *2. கூந்தற்பனை வகை (பிங்.);* talipot-palm. *3. மருந்துச் செடிவகை (திவா.);* a medicinal plant. *4. பனை (அனுடம்) என்னும் 17ஆம் விண்மீன்;* the 17th nakṣatra.

தாளி[6] *tāḷi*, பெ. (n.) *மரவகை;* a species ray-laurel (செ.அக.).

தாளி[7] *tāḷi*, பெ. (n.) *1. அறுகம் புல்வகை (பாரதவெண். 161, உரை);* a kind of harialli grass, used in benediction. *2. கிழங்கின் முதல் (இ.வ.);* primary tubes.

தாளி[8] *tāḷi*, பெ. (n.) *1. தாளிப்பனை;* talipot. *2. ஓர் புல்;* a kind of grass. *3. கொடிவகை;* hedge bind-weed, a running plant of several species. "தாளித்தண்பவர் நாளா மேயும்" (குறுந். 104). *4. பனைமரம்;* palmyra tree. *5. தாழி அல்லது மிடா;* a wide mouthed earthen vessel. *6. சிவதை;* turpeth root. *7. திருகுதாளி;* laldanah. *8. பூவசம்;* ray laurel. *9. தாளிக்கொடி;* hedge bind-weed. *10. கண்டித்தல்;* to scold soundly. "அவனை நன்றாய்த் தாளித்து விட்டான்".

[தாள் → தாளி]

தாளிக்கம் *tāḷikkam*, பெ. (n.) *1. தழைப்பு;* prosperity. *2. திடன்;* stability, firmness (செ.அக.).

[தாளி → தாளிக்கம்]

தாளிக்காதசுண்ணம் *tāḷikkāda-šuṇṇam*, பெ. (n.) *1. சுண்ணாம்புக்கல்;* lime stone. *2. சுட்ட சுண்ணாம்பு;* quick lime (சா.அக.).

[தாளிக்காத + சுண்ணம்]

தாளிக்கீரை *tāḷi-k-kīrai*, பெ. (n.) *தாளிச் செடியின் கீரை;* green leaves of hedge bind-weed (சா.அக.).

[தாளி + கீரை]

தாளிக்கை[1] *tāḷikkai,* பெ. (n.) கறிக்குக் கடுகு முதலியவற்றை மணம் உண்டாகும்படி யிடுகை; seasoning and flavouring curry.

[தாளி → தாளிக்கை]

தாளிக்கை[2] *tāḷikkai,* பெ. (n.) உயர்ந்த விலை; high price or value. தாளிக்கையுள்ள நகை (உ.வ.).

[தாளி → தாளிக்கை]

தாளிக்கொடி *tāḷi-k-koḍi,* பெ. (n.) திருகுதாளி; laul danah (சா.அக.).

[தாளி + கொடி]

தாளிகம்[1] *tāḷigam,* பெ. (n.) உள்ளங்கை; palm of the hand (சா.அக.).

[தாள் → தாளிகம்]

தாளிகம்[2] *tāḷigam,* பெ. (n.) திருமகள் கொடி; white lotus (சா.அக.).

[தாள் → தாளிகம்]

தாளிசபத்திரி[1] *tāḷiša-pattiri,* பெ. (n.) *1.* ஓர் மருந்திலை; a medicine leaf (இரு.நூற்.அக.). *2.* சிவபத்திரி; a tree which has equal hight (சா.அக.).

[இதன் பூக்கள் சிறியன. பச்சை நிறம் கொண்டன. காய்கள் தட்டையாகவும் 5 அல்லது 6 மூலைகளாகவும் இருக்கும். காய்கள் நீலநிறம் கொண்டவை. மிக்க நறுமணம் கொண்ட இலைகள்,. வயிற்றுக் கோளாறு, காசம், வலிக்குறைவு போன்றவற்றைப் போக்கும் இதன் பட்டைக்கருக்கு தொண்டைக்கம்மலை நீக்கும் என்று சா.அக. விளக்கம் தருகிறது.]

தாளிசபத்திரி[2] *tāḷiša-pattiri,* பெ. (n.) *1.* பெரிய கிராம்புப் பட்டை; cassia cinnamon-Cinnamomum macroearpum. *2.* காட்டுக் கருவா; wild cinnamon. *3.* தாளிசம் பார்க்க; see *tāḷišam* (சா.அக.).

தாளிசபத்திரிசூரணம் *tāḷiša-pattiri-šūraṇam,* பெ. (n.) தாளிசபத்திரி இலையை இடித்து எடுத்த தூள்; a kind of medicinal powder (சா.அக.).

மறுவ. தாளிசாதி சூரணம்

[தாளிசபத்திரி + சூரணம்]

தாளிசம் *tāḷišam,* பெ. (n.) சிறு மரவகை (பதார்த்த. 1006); Indian plum.

தாளிசை *tāḷišai,* பெ. (n.) தாளிசம் பார்க்க; see *tāḷišam* (சா.அக.).

[தாளிசம் → தாளிசை]

தாளித்தகறி *tāḷi-t-takaṟi,* பெ. (n.) கடுகு, நல்லெண்ணெய் முதலியவைகளைக் கூட்டித் தாளித்துச் சமைத்த கறி; mustard etc. fried gingelly oil is added to curries to give greater flavour (சா.அக.).

[தாளித்த + கறி]

தாளித்தநெய் *tāḷitta-ney,* பெ. (n.) நெடுங்காலம் இருத்தற்கு வேண்டிக் காய்ச்சி வைத்திருக்கும் நெய் (யாழ்ப்.); ghee mixed with spices and boiled with a view to preserve it.

[தாளித்த + நெய்]

தாளித்துக்கொட்டு-தல் *tāḷittu-k-koṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* தாளி[1] பார்க்க; see *tāḷi*[1] (செ.அக.).

[தாளித்து + கொட்டு-.]

தாளிதம்செய்-தல் *tāḷidam-šey-,* செ.குன்றாவி. (v.t.) தாளி[1]-த்தல் பார்க்க; see *tāḷi*[1]-. (சா.அக.).

[தாளிதம் + செய்-.]

தாளிநோய் *tāḷi-nōy,* பெ. (n.) ஒரு வகை மாட்டு நோய்; a kind of cattle disease (செ.அக.).

தாளிப்பருத்தி *tāḷi-p-paruttí,* பெ. (n.) *1.* காட்டுப்பருத்தி; herbaceous cotton. *2.* ஒரு வகைக் கடற்கரைப் பருத்தி; sea-coast rose mallow (சா.அக.).

ம. தாளிப்பருத்தி

[தாளி + பருத்தி]

தாளிப்பனை[1] *tāḷi-p-paṉai,* பெ. (n.). கூந்தற் பனை வகை; South Indian talipot - palm.

மறுவ. கோடைப்பனை, கூந்தற்பனை, குடைப்பனை.

ம. தாளிப்பனை

[தாளி + பனை]



தாளிப்பனை[2] *tāḷi-p-paṉai,* பெ. (n.) **பூங்கொத்து;** flower bunch.

[தாளி + பனை]

தாளிப்பு *tāḷippu,* பெ. (n.) *தாளிக்கை*[1] *பார்க்க;* see *tāḷikkai.*

[தாள் → தாளி → தாளிப்பு]

தாளிம்பம் *tāḷimbam,* பெ. (n.) **நுதலணி வகை;** ornament worn on forehead. "தாளிம்பத் தாமநுதல் சேர்த்தி" *(பதினொ. திருக்கை. உலா, 121).* "ஏழொன்றாக அடுத்து விளக்கின தாளிம்பம்" *(S.I.I.ii. 145.).*

தாளிமாதுளை *tāḷimāduḷai,* பெ. (n.) **பூ மாதுளை;** a variety of pomegranate *(சா.அக.).*

[தாளி + மாதுளை]

தாளியடி-த்தல் *tāḷi-y-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) **நெருங்கி முளைத்த பயிர்களை விலக்குதற்கும், வருத்தமின்றிக் களை பிடுங்குதற்குமாகக் கீழ் நோக்கியுள்ள கூரிய பல முனைகளையுடைய பலகையால், உழுது பண்படுத்துதல்** (புறநா. 120, குறிப்பு) ; to draw a harrow over a field to allow of easy weeding.

[தாள் + அடி-.]

தாளியம் *tāḷiyam,* பெ. (n.) **வில்வயிலை;** leaf of bael tree *(சா.அக.).*

தாளிரசம் *tāḷirašam,* பெ. (n.) **தாளிவெல்லம்** *பார்க்க;* see *tāḷi-vellam.*

தாளிலாம் *tāḷilām,* பெ. (n.) *1.* **பச்சை;** greens. *2.* **பச்சிலை;** mysore gamboge *(சா.அக.).*

தாளிவெல்லம் *tāḷi-vellam,* பெ. (n.) **பனை வெல்லம்;** jaggery made of palmyra juice *(சா.அக.).*

[தாளி + வெல்லம்]

தாளிறுப்பு *tāḷiṟuppu,* பெ. (n.) **தாள்பிடிப்பு;** lock jaw, as a sign of tetanus *(சா.அக.).*

[தாள் + இறுப்பு. பாதங்களைப் பிடித்துக் இழுத்துக் கொள்ளும் நோய்.]

தாளினி *tāḷiṉi,* பெ. (n.) *1.* **நிலவாகை** *பார்க்க;* see *nila-vāgai.* *2.* **சிவதை** *பார்க்க;* see *šivadai* *(செ.அக.).*

தாளீச்சு *tāḷīccu,* பெ. (n.) **தாளிசம்** *பார்க்க;* see *tāḷišam* *(சா.அக.).*

[தாளிசம் → தாளீசம் → தாளீச்சு]

தாளீசம் *tāḷīšam,* பெ. (n.). **தாளிசம்** (தைலவ. தைல. 135) *பார்க்க;* see *tāḷišam* *(செ.அக.).*

[தாளிசம் → தாளீசம்]

தாளு[1]**-தல்** *tāḷu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **பொறுத்தல்;** to bear, suffer, tolerate. இந்தத் தொல்லையால் அவர் மனந் தாளவில்லை *(உ.வ.).*

தெ., க. தாளு; து. தாளுனி

[தாள் → தாளு-.]

தாளு[2]**-தல்** *tāḷu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* **விலை பெறுதல்;** to be worth. இது அந்த விலை தாளுமா? (இ.வ.) *2.* **இயலுதல்;** to be possible, practicable. தாளும் தாளாது என்று சொல்.

[தாள் → தாளு-.]

தாளு *tāḷu,* பெ. (n.) **தாள்** *பார்க்க;* see *tāḷ* *(சா. க.).*

[தாள் → தாளு]

தாளுருவி *tāḷ-uruvi,* பெ. (n.) **ஒரு வகைக் காதணி** (பெரும். பாண். 161. உரை.); small ear ornament.

[தாள் + உருவி]

தாளெழுத்து *tāḷ-eḻuttu,* பெ. (n.) **முதலெழுத்து** (பேரகத். 8); primary letter.

[தாள் + எழுத்து]

தாளேசம் *tāḷēšam*, பெ. (n.) கொன்னை; cassia tree (சா.அக.).

தாற்கரியம் *tāṟ-kariyam*, பெ. (n.) களவு (யாழ்.அக.); stealing.

தாற்பருவம் *tāṟ-paruvam*, பெ. (n.) பிள்ளைத் தமிழ்ச் சிற்றிலக்கியத்தில் பாட்டுடைத் தலைவனை எட்டாம் மாதத்தில் தாலாட்டுவதாகக் கூறும் பகுதி; a section of pillai-t-tamiḻ, which describes the hero being lulled to sleep with cradle songs when eight months old.

[தால் + பருவம்]

தாற்று[1]-தல் *tāṟṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கொழித்தல் (இ.வ.); to sift, winnow in a particular manner and separate large particles from small. 2. தரித்தல் (யாழ்.அக.); to bear.

தாற்று[2] *tāṟṟu-*, பெ. (n.) கொழிப்பு; winnowing sifting (செ.அக.).

தாற்றுக்கதிர் *tāṟṟu-k-kadir*, பெ. (n.) கொத்துக்கதிர் (யாழ்.அக.); clustered ears of grain.

[தாறு1 + கதிர்]

தாற்றுக்கூடை *tāṟṟu-k-kūḍai*, பெ. (n.) ஒரு வகைக் கூடை (வின்.); a kind of basket.

[தாறு + கூடை]

தாற்றுக்கோல் *tāṟṟu-k-kōl*, பெ. (n.) 1. இருப்பு முட்கோல் (ஏரெழு. 13, தலைப்பு); ox goad. 2. யானைத் துறட்டி (அங்குசம்); elephant goad.

[தாறு[5] + கோல்]



தாற்றுப்பூ *tāṟṟu-p-pū*, பெ. (n.) கொத்துப் பூ (யாழ். அக.); bunch of flowers.

[தாறு[1] + பூ]

தாறு[1] *tāṟu*, பெ. (n.) 1. வாழை முதலியவற்றின் குலை (பிங்.); bunch, cluster, as of plantains, dates, areca-nuts. "உழிஞ்சிற் றாறுசினை விளைந்த நெற்றம்" (அகநா. 151). தாறுபுறப்பட்டுத் தாய்வாழையைக் கெடுத்தாப் போல (பழ.).

க. தாறு

தாறு[2] *tāṟu*, பெ. (n.) உண்டை நூல் சுற்றுங் கருவி (யாழ். அக.); weaver's bobbin, reel.

தாறு[3] *tāṟu*, பெ. (n.) பின்கச்சக் கட்டு; putting on a cloth in the fashion of the divided skirt.

தாறு[4] *tāṟu*, இடை (part.) வரையில்; until. "இன்னு தாறுந் திரிகின்றதே" (திவ். இயற். திருவிருத். 46).

தாறு[5] *tāṟu*, பெ. (n.). 1. முட்கோல்; ox goad, sharp - pointed stick for driving oxen. "தாறு பாய் புரவி" (பாரத. நிரை. 94). 2. யானைத்துறட்டி (அங்குசம்);; elephant goad. "தாறடு களிற்றின்"

(குறிஞ்சிப். 150). 3. தாற்றுக் கோலிலுள்ள இருப்பூசி; sharp iron-piece at the end of a goad. "தாறுசேர் கோலும்" (கந்தபு. சிங்கமு. 299). 4. விற்குதை (சூடா.); ends of a bow, notch.

[தார் → தாறு]

தாறு[6] *tāṟu*, பெ. (n.) 1. அளவு; measurement. 2. அம்பின் அடிப்பாகம்; base part of arrow. 3. பாக்கு மரம்; areca-nut tree. 4. கைவரைவு; lines on the palm. "நிழலு மடித்தாறு மானோம்" (திவ். பெரியதிருவந். 31).

[தார் → தாறு]

தாறுக்கண்டு *tāṟu-k-kaṇḍu*, பெ. (n.) 1. தறி நாடா (வின்.); weaver's shuttle. 2. உருண்டை நூற்கண்டு (இ.வ.); weaver's bobbin, reel.

[தாறு + கண்டு]



தாறுகன்னி *tāṟukaṉṉi*, பெ. (n.) வெள்ளைக் காக்கணம் (வின்.) பார்க்க; white flowered mussel - shell creeper.

[தாலுகண்ணி → தாறுகன்னி]

தாறுகாட்டு-தல் *tāṟu-kāṭṭu-*, 5 செகுன்றாவி. (v.t.) தார்க்காட்டு-தல் பார்க்க; see *tār-k-kāṭṭu-* (செ.அக.).

[தாறு + காட்டு-.]

தாறுசுற்று-தல் *tāṟu-cuṟṟu-* , 5 செ.கு.வி. (v.i.) உண்டை நூல் சுற்றுதல்; to wind yarn on a bobbin or reel (செ.அக.).

[தாறு + சுற்று-.]

தாறுதாறாய்க்கிழி-த்தல் *tāṟu-tāṟāy-k-kiḻi-* 4 செ.குன்றாவி. (v.t.). சிறு துண்டுகளாகக் கிழித்தல் (வின்.); to tear to shreds.

[தாறு + தாறாய்க் + கிழி-]

தாறுபாய்ச்சிக்கட்டு-தல் *tāṟu-pāycci-k-kaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.). மூலைக்கச்சங் கட்டுதல் ; to put on one's cloth in the fashion of the divided shirt (செ.அக.).

[தாறு + பாய்த்து + கட்டு]

தாறுமாறாக *tāṟumāṟāga-*, வி.எ. (adj.) 1. முறையற்ற; disorder. 2. தரக்குறைவாக; improper..

[தாறுமாறு + ஆக.]

தாறுமாறாய்ப்பேசு-தல் *tāṟu-māṟāy-p-pēśu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. முன்பின் மாறுபடப் பேசுதல்; to speak incoherently or inconsistently. 2. பிதற்றுதல்; to talk nonsense, speak absurdities. 3. திட்டுதல்; to abuse, use insulting language (செ. அக.).

[தாறுமாறு + ஆய் + பேசு-.]

தாறுமாறு *tāṟumāṟu-*, பெ. (n.). 1. குழப்பம்; confusion, disorder. 2. எதிரிடை; perverseness, contrariety. 3. நன்னடத்தையற்றவன்; impropriety; transgression, as in speech or conduct. தாறுமாறும் தக்கடவித்தையும் (பழ.). தாறுமாறான நடத்தையுள்ளவன் (இ.வ.). 4. மதிப்புரவுக் குறைவு; insolence, discourtesy. அவரைத் தாறுமாறாக நடத்தினான் (உ.வ.).

ம. மாறுமாறு; தெ. தாருமாறு; க. தாறுமாறு.

[தாறு + மாறு. எதுகை நோக்கி வந்த மரபிணைமொழி]

தாறுவி *tāṟuvi*, பெ. (n.) மரமஞ்சள்; tree turmeric.

தான்[1] *tāṉ*, ப. பெ. (pron.) 1. படர்க்கை யொருமைப் பெயர்; he, she or it, a reflexive pronoun. "தன்னைத் தலையாகச் செய்வானுந் தான்" (நாலடி, 248). 2. ஒருவன்; oneself. தானாகப் படித்தவன். தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் (பழ.)

ம., க., கோது. தான்; தெ., து. தானு; துட. தோன்; குட. தானி; கோண். தானா; கூ. தானு; குவி. தானூ, தானுநு; குரு. தான்; மா. தான், தனி; பிரா. தேன்; பட. தா.

[தன் → தான் = படர்க்கை யொருமையைக் குறிக்கும் தான் என்னும்

சுட்டுப்பெயரின் முந்தைய வடிவம் "ஆன்" என்பதாகும். இது "ஆ" என்னுஞ் சேய்மைச் சுட்டடியினின்று முகிழ்த்தது. 'தான்' என்பது கிரேக்க மொழியில் வழங்கும் "ஆட்டோ என்னும் தற்சுட்டுப்பெயரினை ஒத்தது" (த.வ. 135)]

தான்[2] *tāṉ*, இடை (part.) *1.* தேற்றச்சொல்; a word used as intensive. "உனைத் தான் நோக்கி நிற்கும்" *(வெங்கைக்கோ. 41).* நீங்கள்தானே வீட்டுக்காரர்? *(இக்.வ.). 2.* அசைச்சொல்; expletive affixed to any noun or pronoun and declined instead of it. "தாந்தான் கின்று நின்றசைமொழி" *(நன். 441).*

தான்[3] *tāṉ*, இடை. conj., அதுவன்றி, இஃது ஒன்று என்று பொருள்படுவதோர் இடைச் சொல் *(திருக்கோ. 382, உரை);* besides.

தான்[4] *tāṉ*, பெ. (n.) *1.* நிலப்பனங்கிழங்கு; ground palm. *2.* பிணம்; dead body, corpse *(சா.அக.).*

தான்குறியிடுதல் *tāṉ-kuṟi-y-iḍudal*, பெ. (n.) உத்தி முப்பத்திரண்டனுள், உலகத்து வழங்குதலின்றித் தன்னூலுள்ளே வேறு குறியிட்டு, ஆளுதலாகிய உத்திவகை *(தொல். பொருள். 666);* following one's own terminology in one's work, one of 32 utti *(செ.அக.).*

[தான் + குறியிடுதல்]

தான்தோன்றித்தனம் *tāṉ-tōṉṟittaṉam*, பெ. (n.) தன் விருப்பம்போல் செயல்படுகை; free-wheeling.

[தான்தோன்றி + தனம். தனம் = சொல்லாக்க ஈறு.]

தான்றி[1] *tāṉṟi*, பெ. (n.) எல்லை; substance limit, period, duration. "ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்தும்" *(திருவாச. 4: 15).*

தெ. தநருபு –

தான்றி[2] *tāṉṟi*, பெ. (n.). *1.* மரவகை; belleric myrobalan. "பொரியரைத் தான்றி" *(நைடத கலிநீ. 13). 2.* திரிபலையுள் ஒன்று *(திவா.)*; fruit of belleric myrobalan, one of tiripalai.



தான்றி[3] *tāṉṟi*, பெ. (n.). மறுதோன்றி *(தைலவ. தைல. 135, 61);* a plant.

[மறுதோன்றி → தான்றி]

தான்றிக்காய் *tāṉṟi-k-kāy*, பெ. (n.) ஓர் மருந்துக்காய்; a medicine thing *(இரு நூற். பே.).*

ம. தான்னிக்காய்

[தான்றி + காய்]

தான்றோன்றி *tāṉṟōṉṟi*, பெ. (n.) *1.* தானாகத் தோன்றியது; that which is self-existent. "அவனுக்கு அது தான்றோன்றி" *(ஈடு. 4: 5: 3). 2.* கடவுள்; God. *3.* அகம்பாவமுடையவன்; self-conceited person. *4.* நிறைவாளன் *(சுதந்திரன்);* self-sufficient person. "ஸ்ரீய: பதி யாய்த் தான்றோன்றி யாயிருப்பார்" *(ஈடு. 1: 4: 7).*

[தான் + தோன்றி]

தானகணக்கு *tāṉa-k-kaṇakku*, பெ. (n.) கோயிற்பணிகளில் ஒன்று *(நாஞ்.);* a petty office in temples.

[தானம் + கணக்கு]

தானக்காரர் *tāṉa-k-kārar*, பெ. (n.) கோயிற் சொத்துக்களை மேற்பார்வையிடுபவர் *(நாஞ்.)*; manager of temple properties.

தானகம்[1] *tāṉagam*, பெ. (n.) ஒரு வகை கூத்து; a kind of dance. "கரகரணந் தானகமே சுத்தசாரி" *(திருவிளை. கான்மா. 8).*

தானகம்[2] *tāṉagam*, பெ. (n.) கொத்துமல்லி; coriander *(சா.அக.).*

தானங்கண் *tāṉaṅkaṇ*, பெ. (n.) இதளியம்; mercury *(சா. அக.).*

தானநிலை *tāṉa-nilai*, பெ. (n.) இசைக் கூறுபாடு; modulation of the voice in singing. "வலிவும் மெலிவும் சமனும் என்ற இசைக் கூறுபாடுகள்" (சிலப். 3: 93, உரை).

தானப்புழு[1] *tāṉa-p-puḻu*, பெ. (n.) திமிர்ப்பூச்சி (M.L.); pin worms.

[தானம் + புழு]

தானப்புழு[2] *tāṉa-p-puḻu*, பெ. (n.) மலக் குடலில் உண்டாகும் புழு; intestinal worm, tape-worm (சா.அக.).

[தானம் + புழு]

தானப்பூச்சி *tāṉa-p-pūcci*, பெ. (n.) குடலில் உண்டாகும் கீரைப் பூச்சி; thread worm in the intestines - Oxyuris vermiculeris (சா.அக.).

தானம்[1] *tāṉam*, பெ. (n.) 1. அடித்தல்; beating. 2. இடம்; place. 3. ஈகை; gift, charity. 4. துண்டித்தல்; cutting. 5. மேலுலகம்; heaven. 6. தேன்; honey. 7. நீராட்டுதல்; bathing. 8. வலி; valour. 9. யானைக்கொழுப்பு; rut (இரு.நூ.அக.).

தானம்[2] *tāṉam*, பெ. (n.) 1. நன்கொடை; gift, incharity, donation, grant, as a meritorious deed. கண்தானம் (இக்.வ.). 2. புத்தசமயக் கொள்கை பத்தினுள் ஒன்றான ஈகை (பிங்.); liberality, munifence, bounty, one of tasa-pāramidai. 3. நால்வகை அறங்களுள் ஒன்றான கொடை (சீவக. 747, உரை.); gifts as a political expedient, one of the four aṟam. 4. சைன சமயக்கொள்கையுள் அடக்கம், நால்வகை அறச் செயல்; Jaina charitable assistance, of four kinds, viz., uṇavu-k-koḍai, aḍaikkala-tāṉam, kalvi-k-koḍai, maruttava-k-koḍai. 5. இல்லறம் (திருநூற். 17, உரை); house holder's life. 6. வேள்விக்கொடை (பிங்.); sacrifice, as requiring, offerings.

[தள் → தர் → தரு → தா → தானம். தருகைக்கருத்து வேரின்று கிளைத்த சொல்லாகும். பழந்தமிழ் திரவிடத்திற்குத் தாயும், ஆரியத்திற்கும் மூலமுமாம் என்னும் உண்மையைக் காட்டும் 'தா' என்னும் வேர்மூலத்தினின்று தானம் என்ற சொல் பிறந்தது. தா → தானம். "தாஎன் கிளவி ஒப்போன் கூற்றே" (தொல். 928). ஒத்தோனுக்குக் கொடுத்தலே தானம் என்னுஞ் சொல்லின் முன்மைப் பொருளாகும். காலப்போக்கில் கொடுத்தல்' என்னும் பொதுப்பொருளில், மக்களிடையே இச் சொல், வழக்கூன்றி விட்டது]

தானயாழ் *tāṉa-yāḻ*, பெ. (n.) யாழ் வகையுளொன்று (பெருங். உஞ்சைக் 35, 5); a kind of yāḻ.

[தான + யாழ். தானயாழ். இன்னிசை தரும் தந்திகளை உடைய யாழ். ஐம்புலனுள் செவிக்கு இன்பந்தருவது யாழ். வள்ளுவர், "குழல் இனிது யாழ் இனிது என்ப" (குறள், 66) என்று யாழ்பற்றிக் குறித்துள்ளமை காண்க]

தானரூபி *tāṉarūbi*, பெ. (n.) பண்வகைகளுளொன்று (சங்.சந். 57); a primary rāga.

[தா → தானம் → Skt. rūbi (ரூபி) - இசையைத் தருபவன்]

தானவண்ணம் *tāṉa-vaṇṇam*, பெ. (n.) இசைப்பாட்டு வகை (வின்.); a kind of musical composition.

[தானம் + வண்ணம்]

தானவர்[1] *tāṉavar*, பெ. (n.) 1. தனு என்பவனின் வழிமுறையினர், அசுரர்; Ašuras, a class of demons, as descendants of Dāṉu. "வானவருந் தானவரும் பொன்னார் திருவடி தாமறியார்" (திருவாச. 13, 17). 2. கொடையாளர்; donors.

தானவள் *tāṉavaḷ*, பெ. (n.) அரக்கர் மகளிர்; an Ašura woman. "தானவள் குமதிப் பெயராள்" (கம்பரா. தாடகை 61).

தானறிசுட்டு *tāṉ-aṟi-šuṭṭu*, பெ. (n.) தன்னையே அறிவிக்குஞ் சுட்டு; demonstrative noun. "ஆலான அத்தினுடைய என்று விபக்தியான போது, தானறி சுட்டாய் அதுக்கு, ஹேது வானதொன்றைக் காட்டுமிறே" (திவ். பெரியாழ். 2, 6, 6, வியா. பக். 37, 3).

[தான் + அறி + சுட்டு]

தானாக *tāṉ-āga*, கு.வி.எ. (adv.) *1.* **தனியாக**; of or by oneself. *மருந்து சாப்பிடாமல் நோய்த் தானாகத் திருமா? (இக்.வ.). 2.* **தன் விருப்பமாக**; of one's own accord, spontaneously, voluntarily. "தானாக நினையானேல்" *(திவ். பெரியதி. 3:6:4).*

தெ. தான; ம. தானெ.

[தான் + ஆக.]

தானாகம் *tāṉāgam*, பெ. (n.) **தானிகம்**² பார்க்க *(சங்.அக.);* see *tāṉigam*².

தானாகுதல் *tāṉāgu*, வி. (v.) **தானாயாதல்**; self rearch.

[தான் + ஆகுதல்]

தானா-தல் *tāṉ-ā-* , செ.கு.வி. (v.i.) *1.* **உரிமை யுள்ளவனாதல்** *(சுதந்திரனாதல்);* to become self-dependent, independent, as the deity. *2.* **ஒற்றுமையாதல்** *(பிங்.);* to become assimilated, united.

[தன் → தான் + ஆ-.]

தானாபதி *tāṉāpadi*, பெ. (n.) **வேதியியல் கலப்பு**; a chemical compound *(சா. அக.).*

தானாயாறுகை *tāṉāyāṟugai*, பெ. (n.) **தானாகவே மருந்தில்லாமல் ஆறுதல்**; the healing power of nature without the aid of drugs - vis medicatrix nature *(சா.அக.).*

[தானாய் + ஆறுகை]

தானானதன்மை *tāṉ-āṉa-taṉmai*, பெ. (n.) **பொதுமையற்றுத் தனக்கெனவுரிய குணம்**; one's peculiar or distinguishing characteristic. "பாணயி வத்திலே சிறிது கொத்தை யுண்டானாலும் தானான தன்மை போகாதே" *(ஈடு. 6:1:1).*

[தான் + ஆன + தன்மை]

தானி *tāṉi*, பெ. (n.) **மூன்று சக்கரங்களை யுடையதும் இயந்திரப் பொறியாலியங்குவது மான பயணிகள் ஊர்தி**; auto-riksha.

[தான் + இ → தானி]

தானாக இயங்குவது. முன்னர் கையால் இழுத்துச் செல்வதும், காலால் சவட்டிச் செல்வதுமாகவிருந்த நிலைக்கு மாறாகக் கல்லெண்ணையால், இயங்குவது. அதாவது



தானாக இயங்குவது என்னும் அடிப் படையில், தானி எனப்பட்டது. இக் கலைச் சொல் ஆங்கிலத்திலுள்ள ஆட்டோ (auto) என்னும் சொல்லின், நேர்பொருளைத் தழுவியதென்றறிக

தானிகம் *tāṉigam*, பெ. (n.) **கொத்தமல்லி** *(மலை.);* coriander.

தானிகர் *tāṉigar*, பெ. (n.) **தானிகன்** பார்க்க; see *tāṉigaṉ*.

தானிகன் *tāṉigaṉ*, பெ. (n.) **பூசாரி**; priest of village deity *(இரு. நூற். பே.).*

தானிகை *tāṉigai*, பெ. (n.) **தானிகம்** பார்க்க; see *tāṉigam* *(செ. அக.).*

[தானிகம் → தானிகை]

தானிப்பு *tāṉippu*, பெ. (n.) **பதிக்கை**; enchasing *(இரு. நூற். பே.).*

தானியக்கோட்டகம் *tāṉiya-k-kōṭṭagam*, பெ. (n.) **தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் வட்டத்திலுள்ள ஓர் ஊர்**; a village in Vēdāraṇaym taluk in Tañjore Dt.

[தானியம் + கோட்டகம்]

கோட்டகம் எனில் ஆழ்நீர்நிலைப்பகுதி இவ்வூர் நீர்நிலையால் சூழப்பட்டிருந்ததால், இப் பெயர் வந்திருக்கலாம்.

தானியங்கி *tāṉiyaṅgi*, பெ.அ. (adj.) **மனிதனால் தொடர்ந்து இயக்கப்படாமல் தானாக இயங்கக் கூடிய**; automatic. "தானியங்கிப் பால் நிலையம்". தானியங்கிக் கதவு *(இக்.வ.).*

[தான் + இயங்கி]

தானியாகுபெயர் *tāṉi-y-āgu-peyar,* பெ. (n.) தானியின் பெயர் தானத்துக்கு ஆவது (நன். 290, உரை) எ-டு. கழல் நொந்தது; figure of speech, in which an object is put for the place it occupies, as கழல் நொந்தது (செ.அக.).

[தானி + ஆகுபெயர்]

தானெடுத்துமொழிதல் *tāṉ-eḍuttu-moḻidal,* பெ. (n.) உத்தி முப்பத்திரண்டனுள் முன்னோர் கூற்றை எடுத்தாளு தலாகிய உத்தி (நன். 14) ; citation from ancient authors, one of 32 utti.

[தானெடுத்து + மொழிதல்.]

தானை *tāṉai,* பெ. (n.) 1. படை; army. "கடந்தடு தானை" (புறநா. 110). 2. படைக்கலப் பொது (பிங்.); weapon in general. 3. ஆடை; cloth. "கொடுந்தானைக் கோட்டழகும்" (நாலடி, 131). 4. கரந்துவரலெழினி; stage curtain. "தானையை விட்டிட் டொல்கி" (சீவக. 675). 5. முசுண்டி என்னும் படைக்கலம் (பிங்.); a kind of sledge - hammer, a weapon.

[தார் → தான் → தானை]

தானைத்தலைவன் *tāṉai-t-talaivaṉ,* பெ. (n.) படைத்தலைவன்; captain. "தானைத் தலைவன் இல்லாமல் படை இயங்குமா?" (உ.வ.).

[தானை + தலைவன்]

தானைத்திருப்பட்டிகை *tāṉai-t-tiru-p-paṭṭigai,* பெ. (n.) அரையாடையின் மேல் அணியும் அணிகலன் வகை (S.I.I. ii, 237); gridle worn by a God or an idol (செ.அக.).

[தானை + திரு + பட்டிகை]

தானைத்தூக்கம் *tāṉai-t-tūkkam,* பெ. (n.). திருப்பட்டிகையணியின் உறுப்பினுள் ஒன்று (S.I.I. ii, 210); a pendent in tiruppaṭṭigai.

[தானை + தூக்கம்]

தானைநிலை *tāṉai-nilai,* பெ. (n.) 1. பகைவர் அஞ்சுதற்குரிய (பதாதியின்) நிலைமை கூறும் புறத்துறை (தொல். பொருள். 72); theme describing the heroic stand of infantry holding the enemies in awe. 2. இருதிற படையும் புகழும்படி பொருதவீரனது திறலைக் கூறும் புறத்துறை (பு. வெ. 7: 22); theme of the warrior, whose valour compels the admiration of the contending armies in battle (செ.அக.).

[தானை + நிலை]

தானைமறம் *tāṉai-maṟam,* பெ. (n.) 1. வீரனொருவன், பொரவெதிர்ந்த இருவகைச் படையும் பொருது மடியாமை, பரிகரித்த ஆற்றலின் உயர்ச்சி கூறும், புறத்துறை (பு. வெ. 7: 3); theme of the warrior who appears between the armies in battle and saves them from further destruction by bringing them to terms. 2. உயிர்க்கேடுகட்கு அஞ்சாது, பூசலுக்கு முற்படும் வேந்தனது சிறப்புகளைக் கூறும், புறத்துறை (பு. வெ. 7: 4); theme describing the heroism of a king who regardless of consequences rushes forward at the call of battle. 3. படையின் தறுகண்மையைப் புகழ்ந்து, பகைவரின் கேட்டிற்கு இரங்குதலைக் கூறும் புறத்துறை (பு.வெ. 7:5); theme of compassion for foes because they have to meet a valiant army.

[தானை + மறம்]

தானைமாலை *tāṉai-mālai,* பெ. (n.) ஆசிரியப் பாவால் அரசரது கொடிப்படையைப் பாடும் சிற்றிலக்கிய வகை (இலக்.வி.869); martial poem describing the van of an army in aširiya-p-pā.

[தானை + மாலை]

தானையம் *tāṉaiyam,* பெ. (n.) கால்நடைகளின் மந்தை; herd of cattle. ஆட்டுத்தானையம்.

[தானை + அம் → தானையம்]

தானைவைப்பு *tāṉai-vaippu,* பெ. (n.) பாசறை; encampment. "வலஞ் செய்தார் தானை வைப்பை" (கம்பரா. விபீடண: 152).

[தானை + வைப்பு]

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

நான்காம் மடலம் - இரண்டாம் பாகம்

தி - தூ

Vol. IV - Part - II

பு.ஏ. இராமையா இ.ஆ.ப.
அரசு செயலாளர்.
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை

தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு

2004

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

தி

தி *ti*, தமிழ் நெடுங்கணக்கில் 'த்' என்ற மெய்யும் 'இ' என்ற உயிரும் சேர்ந்துருவான உயிர்மெய் யெழுத்து; the compound of 't' and 'i'.

[த் + இ = தி]

தி² *ti*, பெ. (n.) ஒரு பெண்பாலீறு ஒருத்தி, குறத்தி என்பன போல வரும்; a feminine suffix.

திக்கங்கம் *tikkaṅgam*, பெ. (n.) திக்குபாலகர் குறி; signs of the tutelary deities of the eight quarters. 'கழுதை யானையேகு காகந் திக்கங்கம்' (சூடா. 12, 81).

[Skt. அங்கம்; திக்கு=திசை; திக்கு + அங்கம்]

திக்கசம் *tik-kašam*, பெ. (n.) திக்கயம் பார்க்க; see *tikkayam*.

[கயம் = கசம்; திக்கு + கசம்]

திக்கடைப்பு *tikkaḍaippu*, பெ. (n.) நில விற்பனை ஆவணங்களிற் குறிக்கப்படும் நான்கெல்லை; boundaries of land as mentioned in sale-deed.

[திக்கு + அடைப்பு]

திக்கம் *tikkam*, பெ. (n.) மழகளிறு; young elephant (யாழ்.அக.).

திக்கயம் *tik-kayam*, பெ. (n.) திசையானை; elephant's guarding the eight quarters.

[திக்கு + கயம்]

திக்கரன் *tikkaraṉ*, பெ. (n.) இளைஞன்; youth.

திக்கரி-த்தல் *tikkari-*, செ.குன்றாவி. (v.t.) தவிர்த்தொதுக்குதல் (நிராகரித்தல்); to shum, to treat with contempt. "சினத்துப் பொறு பொருப்பை ... திக்கரித்து" (திருப்பு. 427).

திக்கரி *tikkari*, பெ. (n.) 1. குமரி; girl. 2. கற்றாழை; aloe (சா.அக.).



திக்கற்றவன் *tikkaṟṟavaṉ* பெ. (n.) ஏதிலி, போக்கிலி; forlorn, detitude or forsaken person. திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை (பழ.)

[திக்கு + அற்றவன்]

திக்காதிக்கு *tikkā-tikku* கு.வி.எ. (adv.) பல திசைகளிலும்; in various directions here and there.

திக்காமல்லி *tikkāmalli* பெ. (n.) 1. பிசின்மர வகை; dikmali gum-plant. 2. கும்பை¹ பார்க்க; see *kumbai*.

திக்காரம் *tikkāram* பெ. (n.) 1. புறக்கணிப்பு (நிந்தனை); contempt disregard (அலக்.அக.). 2. ஒட்டாரம்; inveterate hatred.

திக்காலுக்கு *tikkālukku* பெ. (n.) திக்காதிக்கு பார்க்க; see *tikkātikku*. திக்காலுக்கு ஒருவன் ஓடினான் (வ. வ.).

திக்காலுக்குத்திக்கால் *tikkālukku-t-tikkāl* பெ. (n.) திக்காதிக்கு பார்க்க; see *tikkātikku.*

[திக்கால் = திசை]

திக்கானை *tikkāṉai* பெ. (n.) திக்கயம் பார்க்க; see *tikkayam.*

[திக்கு + யானை]

திக்கிடு-தல் *tikkiḍu-* செகுவி. (v.i.) திடுக்கிடு-பார்க்க; see *tiḍukkiḍu-.*

திக்கித்திணறு-தல் *tikki-t-tiṇaṟu-,* செகுவி. (v.i.) *1.* சிக்கலில் மாட்டி கொண்டு இன்னலுறுதல்; struggle. *2.* சொற்களில் தடுமாற்றம்; stammer out.

[திக்கி + திணறு-.]

திக்கிப்பேசு-தல் *tikki-p-pēśu-,* செகுவி. (v.i.) கொன்னல்; art of stammering.

[திக்கி + பேசு-.]

திக்கியானை *tikkiyāṉai* பெ. (n.) திக்கயம் பார்க்க; see *tikkayam.*

[திக்கு + யானை]

திக்கிராந்தம் *tikkirāntam* பெ. (n.) கூத்து வகை; a kind of dance. "ஏற்ற திக்கிராந்த மாதியா" *(திருவிளை. கான்மா. 12).*

திக்கு[1]-தல் *tikku-,* செகுவி. (v.i.) *1.* சொற்கள் தடைபடத் தெற்றிப் பேசுதல்; to stutter, stammer. *2.* சொல் குழறுதல்; to err or hesitate as in recitation reading etc. "என்மானுரை உரைக்கத்திக்கும்" *(தனிப்பா. 396, 46).*

திக்கு[2] *tikku* பெ. (n.) தெற்றிப் பேசும் பேச்சு; stuttering, halting in speech. திக்குவாய்ப் பையன் *(வ.வ.).*

திக்கு[3] *tikku* பெ. (n.) *1.* வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என்ற நாற்றிசையும் அவற்றின் கோணத் திசைகளும்; cordinal and intermediate points, eight quarters *(பிங்.). 2.* புகலிடம்; protection, shelter, aid, asylum, refuge. "மற்றொரு திக்கிலர்" *(உபதேசகா. சிவராம. 42). 3.* வாய்ப்பு (சமயம்); season, opportunity. "திக்கு நோக்கிய தீவினைப் பயனென" *(கம்பரா. நகர்நீ. 215). 4.* எட்டு; eight in number.

[திக்கு = திசை]

திக்கு[4] *tikku* பெ. (n.) *1.* சித்திரமூலம் என்னும் கொடி; leadwort, climber *(மலை.). 2.* கொடுவேர்; leadwort.

திக்கு[1]க்கட்டுதல் *tikku-k-kaṭṭu-* செகுவி. (v.i.) மந்திரத்தால் எண் திசையைக் கட்டுதல்; to fortify one against danger from any quarter by invoking the aid of the tutelary dieties of the eight quarters.

[திக்கு + கட்டு]

திக்கு[2]க்கட்டு *tikku-k-kaṭṭu-* பெ. (n.) பாது காப்பிற்காக எண்திசைத் தேவதைகளை மந்திரத்தாற் கட்டுப்படுத்தி நிறுத்துகை; fortifying oneself on all sides by incantations invoking the protection of the tutelary dieties of the eight quarters.

[திக்கு + கட்டு]

திக்குக்கெடு-தல் *tikku-k-keḍu-,* செகுவி. (v.i.) *1.* வழியறியாது மயங்குதல்; tobe at a loss to know the right direction. *2.* கதியற்றுப் போதல்; to become helpless, destitute.

[திக்கு + கெடு]

திக்குசக்கரம் *tikku-śakkaram,* பெ. (n.) திசையறி கருவி; mariner's compass.

[திக்கு + சக்கரம்]

திக்குத்திக்கெனல் *tikku-t-tikkeṉal,* பெ. (n.) *1.* அச்சத்தால் நெஞ்சடித்தற் குறிப்பு; onom. expr of throbbing or beating of the heart through fear. "பாம்பாட்டி - பாம்பைப் பிடிக்கும்வரை மனம் திக்குத்திக்கென்று அடித்துக் கொண்டது" *2.* எதிர்பார்ப்பில் நெஞ்சடித்தற் குறிப்பு; onom. expr of throbbing or beating of the heart through anxiety. *2.* தாளக்குறிப்பு; onom. expr of marking time, as in dance. "திக்குத்திக்கென்று குதித்தான்."

[திக்கு + திக்கு + எனல்]

திக்குப்பந்தனம் *tikku-p-pandanam,* பெ. (n.) திக்குக்கட்டு பார்க்க; see *tikku-k-kattu.*

திக்குப்பல்லி *tikku-p-palli,* பெ. (n.) பல்லிச் சொல்; chirping of a lizard.

[திசை = திக்கு + பல்லி]

பல்லியின் ஓசை நன்மை தீமையின் அறிவிப்பு என்பது தமிழ் மக்களின் நீண்ட கால நம்பிக்கை. அந்த ஒலிகேட்கும் திசையைக் கொண்டு தான் நினைத்த செயல் நன்மையாய் முடியுமா, தீதாய் முடியுமா என்று கணிப்பர்.

திக்குப்பலி *tikku-p-pali,* பெ. (n.) திசைத் தேவதைக்கட்கு கொடுக்குங் காவு; offering to the tutelory deities of the quarters, as in a temple.

[திக்கு + பலி]

திக்குப்பாலர் *tikku-p-pālar,* பெ. (n.) திசை தேவர்கள்; tutelory deities.

[திக்கு + பாலர்]

திக்குப்பேச்சு *tikku-p-pēccu,* பெ. (n.) தெற்றிப் பேசும் பேச்சு; stammering speech, stuttur.

[திக்கு + பேச்சு]

திக்குமாறாட்டம் *tikku-mārāttam,* பெ. (n.) திசைத் தடுமாற்றம்; confusion, concerning the directions.

[திக்கு + மாறாட்டம்]

திக்குமுக்கடை-தல் *tikku-mukkadai-,* செ.கு.வி. (v.i.) திக்குமுக்காடு- பார்க்க; see *tikku-mukkādu-.*

[திக்கு + முக்கு + அடைதல்]

திக்குமுக்கல் *tikku-mukkal,* பெ. (n.) திக்குமுக்கு பார்க்க; see *tikku-mukku.*

[திக்கு + முக்கு]

திக்குமுக்காடு-தல் *tikku-mukkādu-,* செ.கு.வி. (v.i.) *1.* மூச்சுவிட முடியாமல் முட்டுப்படுதல்; to be choked, stiffed, smothered, strangled. "தீப் பிடித்துக் கொண்ட வீட்டில் சிக்கியவருக்கு மூச்சுத் திக்குமுக்காடியது" *2.* மகிழ்ச்சியில் ஏற்படும் திளைப்பு; happiness.

[திக்கு + முக்காடு]

திக்குமுக்கு *tikku-mukku,* பெ. (n.) மூச்சு முட்டுகை; choking, suffocation, strangulation.

திக்குவாசம் *tikku-vācam,* பெ. (n.) புனுகு; civet; it is so called on account of its smell prevailing on all sides surroundings (சா.அக.).

திக்குவாய் *tikku-vāy,* பெ. (n.) *1.* திக்கிப்பேசும் முறை; stammering. "திக்குவாயைத் திருத்திக் கொள்ளப் புதுமுறைகள்".

[திக்கு + வாய்]

திக்குவாயன் *tikku-vāyan,* பெ. (n.) தெற்றிப் பேசுபவன்; stammerer, stutturer. திக்குவாயன் அடித்தான் (வ.வ.).

[திக்கு + வாயன்]

திக்குவிசயம் *tikku-višayam,* பெ. (n.) தற் பெருமை தோன்ற எல்லாத்திசையிலும் அரசர்கள் சென்று வெல்லுகை; conquest of all the quarters undertaken by kings in ancient times to establish their supremacy.

[திக்கு + வாயன்]

திக்குறிக்கெனல் *tikkurikkenal,* பெ. (n.) *1.* அச்சக் குறிப்பு; condition of mind indicating fear. *2.* நெஞ்சு அடித்தல்; throbbing of the heart through fear.

திக்குறு *tikkuru,* பெ. (n.) *1.* மரவகை; east indian satin wood. *2.* சிறு பெண்குழந்தை; a little girl, pariah.

திக்கெல்லை *tikkellai,* பெ. (n.) திக்கடைப்பு பார்க்க; see *tikkadaippu.*

[திக்கு + எல்லை]

திக்கென்றது *tikkendradu,* எ. (adj.) திடீரென உண்டாகும் அச்சம்; get a fright. "தொலைவரி என்றதும் அவன் மனம் திக்கென்றது", "கடன் காரனைப் பார்த்ததும் மனம் திக்கென்று அடித்துக் கொண்டது"

[திக்கு + என்றது]

திகச்சம் *tikaccam,* பெ. (n.) திகசம் பார்க்க; see *tikašam.*

திகசம் *tikašam,* பெ. (n.) ஓமம்; bishop's weed.

திகட்டல் *tikaṭṭal,* செ.கு.வி. (v.i.) தெவிட்டல்; satiate.

திகணா *tikaṇā,* பெ. (n.) கொடுவேரி; white flowered lead word.

திகத்துரை *tikatturai,* பெ. (n.) பெருந்துளசி; the large variety of holy basil.

திகந்தம் *tikantam,* பெ. (n.) திசையின் முடிவு; farthest extremity of any of the quarters. (கந்தபு. வச்சிரவாருவ. 33). 2. சேனைக் கிழங்கு; elephant yam.

திகந்தராளம் *tikantarāḷam,* பெ. (n.) விண்; sky.

திகம்பரம் *tikambaram,* பெ. (n.) 1. பிறந்த மேனி நிலை (அம்மணம்); nakedness (செ.அக). 2. இருள்; darkness.

[திக்கு + அம்பரம்[4]]

திகம்பரவாதி *tikambara-vāti,* பெ. (n.) சமணருள் ஒரு பிரிவினன்; follower of a particular jain sect.

திகம்பரன் *tikambaraṉ,* பெ. (n.) 1. ஆடையணியாத் துறவி naked mendicant "கோல மாறாடிக் கூறுந் திகம்பரராகி" (மச்சபு. இரணிய. வர. 9). 2. சமண முனி; jain sage. (சூடா). 3. அருகன்; arhat (திவா.). 4. சிவன்; Śivaṉ. 'திகம்பர னணங்கோர் பாகத் தெய்வநாயகன் (அருதி. 2). 5. ஆடையணியாதவன்; rude person. 6. கதியற்றவன்; destitute person (இ.வ.).

திகம்பரி *tikambari,* பெ. (n.) மலைமகள் (பார்வதி); Pārvati. "கங்காளி திகம்பரிக்கு" (மறைசை. 17).

திகம்பரன் = சிவன்
திகம்பரன் மனைவி = திகம்பரி.

திகர் *tikar,* பெ. (n.) வேறு; another, different.

திகரடி *tikaraḍi,* பெ. (n.) 1. மூச்சடைப்பு; suffocation, difficulty of breathing. 2. சோர்வு; exhaustion, fatique (செ.அக.).

திகரம் *tikaram,* பெ. (n.) 1. சோர்வு; weariness, exhaustion. 2. ஈளை; shortness of breath, asthma. 3. அவா; desire (யாழ்.அக.). 4. இளைப்பு; fatigue.

திகரியாசத்தம் *tikariyācattam,* பெ. (n.) கோரோசனை; bezoar (சா.அக.).

திகலைச்சாறு *tikalai-c-cāṟu,* பெ. (n.) எலுமிச்சஞ்சாறு; juice of lime fruit.

[திகலை + சாறு]

திகழ்ச்சாறு *tikaḻ-c-cāṟu,* பெ. (n.) திகலைச்சாறு பார்க்க; see *tikalai-c-cāṟu.*

[திகழ் + சாறு]

திகழ்[1]-தல் *tikaḻ-,* செ.கு.வி. (v.i.) 1. விளங்குதல்; to shine as diamonds, to glitter as stars; to be brilliant. "மீன்றிகழ் விசும்பின்" (புறநா. 25). 2. சிறப்புமிகுதல்; to be eminent; to excel. 'மொய் திகழ் வேலோன்' (பு.வெ. 6, 25, கொளு).

திகழ்[2]-தல் *tikaḻ-,* செ.குன்றாவி. (v.t.) உள்ளடக்கிக் கொள்ளுதல்; to contain, hold. "ஒண்குழை திகழு மொளி கெழு திருமுகம்" (மதுரைக். 448).

திகழ்[3] *tigaḻ,* பெ. (n.) திகழ்வு பார்க்க; see *tikaḻvu.*

திகழ்ச்சி *tigaḻcci,* பெ. (n.) திகழ்வு பார்க்க; see *tikaḻvu.*

[திகழ் → திகழ்ச்சி]

திகழ்த்து-தல் *tikaḻttu-,* செ.குன்றாவி. (v.t.) 1. தெளிவாக விளக்குதல்; to explain clearly, make clear. "பொருளை பொரு சொல்லாற் றிகழ்த்துதற்கு" (சிவப். பிரபஞ். சிவஞான. தாலாட்டு. 63). 2. விளக்கங்காட்டுதல்; to slow

clearly. "விரிந்த பட மோவியங்கள் பல திகழ்த்தி" *(வேதா. சூ. 61).* 3. அழகுறுத்துதல்; to beautify, adorn.

திகழ்வு *tikaḻvu,* பெ. (n.) 1. பேரொளி; brightness, lustre, splendour. "திகழ்வு கண்டு வந்து கோயிற்பு" *(பதஞ்ச. 88).* 2. பொலிவுடன் இருத்தல்; glow with lustre. வானில் திகழும் நிலவு; பரந்த நெற்றியில் சந்தனப் பொட்டுத் திகழ வந்தார் *(உ.வ.).*

[திகழ் → திகழ்வு]

திகனாதி *tikanādi,* பெ. (n.) கொடுவேர்; white flowered lead-word.

திகளர் *tikaḷar,* பெ. (n.) கருநாடகத்தார் தமிழருக்கு வழங்கும் பெயர்; the appellation by which the karnāṭakās style the Tamilians. (இ.வ.).

திகாந்தம் *tikāntam,* பெ. (n.) திகந்தம் பார்க்க; see *tikantam.* 'திகாந்தத்தளவு நடாத்துங் கீர்த்தி' *(நன். விருத். உரைப் பாயிரம்).*

திகாந்தரம் *tikāntaram,* பெ. (n.) திகந்தம் பார்க்க; see *tikantam.*

திகாரி *tikāri,* பெ. (n.) திகிரி பார்க்க; see *tikiri.*

திகிர்[1] *tikir,* பெ. (n.) காவு கொடுக்கும் சடங்கில் பயன் படுத்துங் கயிறு; cord used in sacrificial ceremonies.

[திகில் → திகிர்]

திகிர்[2] *tikir,* பெ. (n.) நடுக்கம்; fright, terror, alarm.

[திகில் → திகிர்]

திகிரடி[1] *tikiraḍi,* பெ. (n.) திகரடி பார்க்க; see *tikaraṭi.*

[திகிர் + அடி]

திகிரடி[2]**-த்தல்** *tikiraḍi-,* பெ. (n.) காவு கொடுக்கும் பூசகனுக்குக் குறியாகக் கயிற்றை அசைத்தல்; to shake the tikir as a signal to the sacrifice.

[திகில் → திகிர் + அடி]

திகிரி[1] *tikiri,* பெ. (n.) 1. மூங்கில்; bamboo. 2. மலை; mountain.

திகிரி[2] *tikiri,* பெ. (n.) திகர் பார்க்க; see *tikar.*

[திகில் → திகிரி]

திகிரி[3] *tikiri,* பெ. (n.) 1. வட்ட வடிவம் (பிங்.); circle, circular form. 2. உருளை; cylindrical. "ஒரு தனித் திகிரி உரவோன்" *(சிலப். 4,2).* 3. வேட்கோத்திகிரி (குயவன் சக்கரம்); potters wheel. "அத்திகிரி பசித்த பச்சை மண்ணெ னலாகும்" *(காஞ்சிப்பு, திருநகர, ப.76).* 4. சக்கரப்படை; the discus weapon. "காலநேமி மேலேவிய திகிரிபோல்" *(கம்பரா. சித்திர, 40).* 5. அரசாணை; royal authority. "தீதின்று உருள்க நீ ஏந்திய திகிரி" *(மணி. 22, 16).* 6. தேர்; cart. "திகிரி ஊர் வோன்" *(ஞான. 7,17).* 7. வண்டி; cart. 8. ஞாயிறு; sun. "விரைசெலற் றிகிரி" *(அகநா. 53).*

திகிரிக்கல் *tikiri-k-kal,* பெ. (n.) 1. சக்கரவாள மலை; a mythical range of mountains. 2. ஆட்டுக்கல்; grinding stone, rubbing stone. 3. கோரோசனை; bezoar. 4. முடவாட்டுக்கல்; sheep's bezoar.

[திகிரி + கல்]



திகிரிக்கிரி *tikiri-k-kiri,* பெ. (n.) திகிரிமலை பார்க்க; see *tikiri-malai.*

[திகிரி + கிரி]

திகிரிகாவலன் *tikiri-kāvalaṉ,* பெ. (n.) கோரோசனை; bezoar.

[திகிரி + காவலன்]

திகிரிகை *tikirikai,* பெ. (n.) 1. சக்கரம்; wheel, circle. 2. குயவன் சக்கரம்; potter's wheel.

[திகிரி → கை]

திகிரிப்புள் *tikiri-p-puḷ,* பெ. (n.) இரவில் இணை பிரிந்து வருந்துவதாகக் கூறும் பறவை வகை (சக்கரவாகம்); cakra bird, the couples of which are believed to be separated and to mourn during night, noted for conugal fidelity. "திகழுந்திகிரிப் புள்ளுக்குயம்" (திருப்போ.சந். அலங்கா. 31).

[திகிரி + புள்]



திகிரிமன்னவர் *tikiri-mannavar,* பெ. (n.) அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுச்சன், புரூரவா, கார்த்தவீரியன் என்னும் புகழ்மிகு வேந்தர்கள் அறுவர்; the six famours emperors, viz., Ariccantran, Naḷan, Mucukundan, Purukuccan, Purūravā, Kārtta Viriyan (சூடா.).

திகிரியான் *tikiriyāṉ,* பெ. (n.) சக்கரத்தைக் கையிற் கொண்டுள்ள திருமால்; Viṣṇu, as holding a discus. 'தொல்கதிர்த் திகிரியாற் பரவுதும்' (கலித். 104, 77).

திகில் *tikil,* பெ. (n.) 1. அச்சம்; fright. திகில் காட்சிகள் நிறைந்த திரைப்படம் (உ.வ.). 2. திடீர் அச்சம்; sudden fear. 3. பேரச்சம்; panic.

திகில்படு-தல் *tikil-paḍu-,* செ.கு.வி. (v.i.) பேரச்சங்கொள்ளுதல்; to start with sudden fear; to be struck with fear.

[திகில் + படு]

திகில்பிடித்தல் *tikil-piḍittal,* பெ. (n.) பேரச்சம் கொள்ளுகை; being taken with sudden fright.

[திகில் + பிடி]

திகிலடி *tikilaḍi,* பெ. (n.) திகில் பார்க்க; see *tikil.*

[திகில் + அடி]

திகிலெனல் *tikileṉal,* பெ. (n.) திடுக்கிடுதற் குறிப்பு; expr. signifying unexpected terror. 'எரியுந் தூமமுந் திகிலென ... மூண்டெழுந்தவே' (அரிச்பு. விவா. 82).

[திகில் + எனல்]

திகுதிகெனல் *tiku-tikeṉal* பெ. (n.) 1. நெருப்புப் பற்றியெரியுங் குறிப்பு; expr. signifying rapid kindling of fire. ஊர் தீப்பற்றிக் கொண்டு திகுதிகென எரிகிறது (உ.வ.). 2. புண்ணெரிச்சற் குறிப்பு; smarting of a sore. 'காலிலுள்ள புண் திகுதிகென எரிகிறது' (உ.வ.) 3. சினக்குறிப்பு; expr. of getting excited with anger. 'அச்செய்தியைக் கேட்டதும் அவருக்குத் திகுதிகெனச் சினமேற் பட்டது'. 4. விரைவுக் குறிப்பு; expr. signigying coming on in rapid succession. கூட்டைக் கலைத்தவுடன் தேனீக்கள் திகுதிகென வந்து மொய்த்துக் கொண்டன (உ.வ.). 5. நீரொலிக் குறிப்பு; expr. signifying bubbling of water. 6. அச்சக்குறிப்பு; expr. signifying trembling with fear. வீட்டினுள் நுழைந்துவிட்ட பாம்பை விரட்டும்வரை மனம் திகுதிகென்று அடித்துக் கொண்டிருந்தது (உ.வ.). 7. வயிற்றில் பசியால் உண்டாகும் எரிச்சல் உணர்வுக் குறிப்பு; burning sensation of hunger felt in the stomach. 'காலையிலிருந்து வயிறு திகுதிகென எரிகிறது'.

[திக்கு + திக்கு + எனல்]

திகேமுசினிவேல் *tikēmuśiṉivēl* பெ. (n.) சிறுபாம்புக் கடிநஞ்சிற்கு மிளகுடன் அரைத்துக் கொடுக்கும் ஒரு மூலிகை வேர். இதனை திகேமுழனிவேர் என்றும் வழங்குவர்; root of a plant given as a paste along with pepper for the poisonous bite of a small kind of reptile (சா.அக.).

திகை[1]-த்தல் *tikai-* செ.கு.வி. (v.i.) 1. மயங்குதல்; to be taken aback, confused, perplexed, be wildered. "இருளிற் றிகைத்த கரி" (தேவா. 1156, 5). 2. நிலை மறத்தல்; அசத்தல் (பிரமித்தல்) (கொ.வ.); to be astonished, amazed. 3. அடங்குதல்; to subside. "தென்காறிகைப்ப வடகால் வளர" (கல்லா. 93, 7). 4. சோர்தல்; to be exhausted. 'வேலை செய்து மிகவும் திகைத்து விட்டான்.'

[திசை → திகை]

திகை²-தல் *tikai-* செ.குன்றாவி. (v.i.) *1.* முடிவுறுதல்; to complete, to come to an end. "மாதந் திகைந்த சூலி" (நெல்லை.) *2.* தீர்மானமாதல்; to be settled. அதன் விலை இன்னும் திகையவில்லை (உ.வ.).

[திசை → திகை]

திகை³ *tikai* பெ. (n.) நிலைத்தடுமாறுகை; திகைப்பு (பிரமிப்பு); amazement.

[திக்கு → திசை → திகை]

திகை⁴ *tikai* பெ. (n.) *1.* ஈளை; asthma (இ.வ.). *2.* தேமல்; spreading spots on the skin induced by hot humours (பிங்.).

திகை⁵ *tikai* பெ. (n.) திசை; cardinal points. "திகை யெலாந் தொழச் செல்வாய்" (தேவா. 308, 1).

திகைப்பு *tikaippu* பெ. (n.) *1.* திகை³ பார்க்க; see *tikai*. *2.* மனமயக்கம்; perplexity.

[திகை → திகைப்பு]

திகைப்பூச்சி *tikaippūcci* பெ. (n.) மனக் கலக்கத்தை உண்டுபண்ணும் இப்பூச்சி, பாதை வழியில் ஒரு விரல் நுழையும் குழியில் வாழும். இதை வெளிவரச் செய்ய, நண்டு கால் பூச்சியின் காலில் நூலைக் கட்டி, குழியில் விட்டால், திகைப்பூச்சி அப்பூச்சியைப் பிடித்துக் கொள்ளும். குழிக்குள் உடனே ஓசை கேட்கும். உடனே விடுத்த கயிற்றை மேலே இழுத்தால் வரும் பூச்சி உடல் பச்சையாகவும், தலை வெள்ளையாகவும் நான்கு கால்கள் கறுப்பாகவுமிருக்கும். இதுவே திகைப்பூச்சி, இதன் வியப்பான குணத்தையும், தன்மையையும் கருதி மந்திரத் தொழிலுக்கும், ஊதை தொழிலுக்கும் பயன்படுத்துவர்; an insect induce perplexity when treaded upon by passers can be identified with a body of green colour, head portion white, legs four of black or dark complexion.

[திகை + பூச்சி]

திகைப்பூடு *tikai-p-pūḍu* பெ. (n.) மிதித்தவர்களை மயங்கச் செய்யும் பூண்டு; a plant that bewilders persons trampling on it. "திகைப்பூடு மிதித்தாற் போல" (சடு.).

[திகை + பூடு]

திகைப்பூண்டு *tikai-p-pūṇḍu* பெ. (n.) திகைப்பூடு பார்க்க; see *tikai-p-pūḍu*.

[திகை + பூண்டு]

திகைமூலச்சுண்ணம் *tikai-mūla-c-cuṇṇam* பெ. (n.) குடற்சுண்ணம்; an alkaline compound prepared from the naval cord of infants as per process laid down in Tamil siddhar's medicine.

[திகை + மூலம் + சுண்ணம்]

திங்கட்கண்ணியன் *tiṅkaṭ-kaṇṇiyaṉ*, பெ. (n.) திங்களைத் தலையில் அணிந்துள்ள சிவன்; Šivaṉ, as having moon on his head. "புதுத் திங்கட் கண்ணியான் பொற்பூண் ஞான்றன்ன" (கலித். 150, 17).

திங்கட்காசு *tiṅkaṭ-kāšu*, பெ. (n.) மாதந் தோறும் தண்டி வந்த ஒரு பழைய வரி; an ancient tax. "இலை வாணியப் பாட்டமுஞ் திங்கட்காசும்" (T.A.S. i, 165).

[திங்கள் + காசு]

திங்கட்கிழமை *tiṅkaṭ-kiḻamai*, பெ. (n.) கிழமையின் (வாரத்தின்) இரண்டாம் நாளான திங்கள்; Monday, the second day of the week.

[திங்கள் + கிழமை]

திங்கட்குடையோன் *tiṅkaṭ-kuḍaiyōṉ*, பெ. (n.) நிலவைக் குடையாகக் கொண்ட காமவேள்; the Hindu god of love, as having the moon for his umbrella (சூடா.).

[திங்கள் + குடையோன்]

திங்கட்குலன் *tiṅkaṭ-kulaṉ*, பெ. (n.) திங்கட் குலத்தவனாகிய பாண்டியன்; Pāṇḍiyaṉ as belonging to the lunar race. "திங்கட் குலனறியச் செப்புங்கள்" (தனிப்பா. 1, 178, 4).

[திங்கள் + குலன்]

திங்கட்குழவி *tiṅkaṭ-kuḻavi*, பெ. (n.) பிறை நிலா; the crescent. "திங்கட்குழவி வருக" (கலித். 80, 18).

[திங்கள் + குழவி]



திங்கட்சோறு *tiṅkaṭ-cōṟu*, பெ. (n.) பிறை நிலா; the crescent. "திங்கட்குழவி வருக" (கலித். 80, 18.).

[திங்கள் + குழவி]

திங்கண்மணி *tiṅgaṇmaṇi*, பெ. (n.) மதிக்காந்தக் கல்; moon stone. "நீர்தங்கு திங்கண்மணி நீணிலந் தன்னுளோங்கி" (சீவக. 1960).

திங்கண்முக்குடையான் *tiṅkaṉ-mukkuḍaiyāṉ*, பெ. (n.) அருகன்; arhat. "முக்குடையான் திருமாநகர்" (சீவக. 139.).

திங்கணாள் *tiṅkaṇāḷ*, பெ. (n.) ஐந்தாம் நாண்மீனாகிய மாழ்கு (மிருகசீரிடம்); the fifth naksatra, mirugasiridam.

[திங்கள் + நாள்; திங்களை உரிமைத் தெய்வமாகக் கொண்ட நாள்]

திங்கள் *tiṅgaḷ*, பெ. (n.) 1. மதி; moon. 'பன்மீனாப் பட்டிங்கள் போலவும்' (புறநா. 13). 2. மாதம்; month, lunar month. 'திங்கள் நாள்முந்து கிளதன்ன (சொல். எழுத். 286). 3. திங்கட்கிழமை பார்க்க; see *tiṅgaṭ-kiḻamai*. 4. பன்னிரண்டு என்னும் எண்; the number twelve (தைலவ. தைல.).

திங்கள்நெய் *tiṅgaḷ-ney*, பெ. (n.) வரிவகை; a tax (S.I.I.V. 365).

திங்கள்மூலி *tiṅgaḷmūli*, பெ. (n.) ஓராண்டு மூலி; சித்தர்கள் பசியெடுக்காதிருக்க வேண்டி உட்கொள்ளும் மூலிகை; herbaceous plant taken by siddhars to keep them off from hunger, for about a year (சா.அக.).

திங்கள்மோகம் *tiṅgaḷ-mēgam*, பெ. (n.) வரிவகை; a tax (S.I.I.V. 365).

திங்களாறுகாடி *tiṅgaḷāṟukāḍi*, பெ. (n.) ஆறு திங்களுக்குரிய காடி; six months old vinegar.

திங்களூர் *tiṅgalūr*, பெ. (n.) தஞ்சை மாவட்டம் புகைவண்டி நிலையத்திலிருந்து 10 கல் தொலைவிலுள்ளது. நாவுக்கரசரால் பாடப் பெற்ற சிவப்பதி. இப்பதி விடந்தீர்ந்த திருப்பதி. அப்பூதியடிகளின் மகன் பாம்பு தீண்டி இறந்தபின் அவனை இவ்வூர் சிவனைப் பதிகம்பாடி உயிர்ப்பித்தார்; a village, 10 miles distance from railway station in tañcai district

திங்ஙு *tiññu*, பெ. (n.) வினைமுற்று ஈறுகள்; terminations of the finite verbs. 'திங்ஙுப் படலம்' (பி.வி.).

திஙந்தம் *tiñantam*, பெ. (n.) வினைமுற்று; finite verbs. 'வினையெலாந் திஙந்தம்' (பி.வி. 42).

திசமிதன் *tiśamitaṉ*, பெ. (n.) மனத்தை அடக்கியவன்; one who has subdued his mind (யாழ்.அக.).

திசமுருங்கை *tiśamuruṅgai*, பெ. (n.) காட்டு முருங்கை; oval leaved indigo.

திசாதிசை *tiśātiśai*, பெ. (n.) வேறுபட்ட திசைகள்; different directions.

திசாமிதம் *tiśāmitam*, பெ. (n.) மூன்று இலைகளைக் கொண்ட முன்னை; three leaved fire brand teak.

திசாமுகம் *tiśāmugam*, பெ. (n.) திசை² பார்க்க; see *tiśai* (கம்பரா.அகலிகை. 14.)

திசாயம் *tiśāyam*, பெ. (n.) குங்கிலியம்; bdellium (யாழ்.அக.).

திசாலம் *tiśālam*, பெ. (n.) பொழுது; time (யாழ்.அக.).

திசி *tiśi*, பெ. (n.) திசை²·¹ பார்க்க; see *tiśai* (யாழ்.அக.).

திசிலன் *tiśilaṉ*, பெ. (n.) அரக்கன் (இராக்கதன்); raksasa. 2. திங்கள்; moon.

திசு *tiśu*, பெ. (n.) உயிரிழைமம் (அல்லது) உடலுறுப்புகளின் ஆக்கமூலப் பொருள்; the substance of which the organs of the body are composed.

திசை¹-த்தல் *tišai-*, செ.குன்றாவி. (v.i.) திகை பார்க்க; see *tikai*. "இவன் சிந்தை துழாய்த் திசைக்கின் றதே" (திவ்.திருவாய். 4, 6, 1).

[திகை → திசை]

திசை² *tišai*, பெ. (n.) 1. திக்கு; cardinal points, region, quarter, direction. 'வளிதிரிதரு திசையும்' (புறநா. 30). 2. அதிகாரத்துக்குட்பட்ட இடம்; prinicipality, jurisdiction, dominion. 3. ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு; word used as inflexional suffix of the seventh case (நன். 301, மயிலை).

[திக்கு → திகை → திசை]

திசை³ *ticai*, பெ. (n.) தசை⁴ பார்க்க (கொ.வ.); see tacai.

[திக்கு → திசை]

திசைக்கல் *ticai-k-kal*, பெ. (n.) எல்லைக்கல்; boundary stone (கொ.வ.).

[திசை² + கல்]

திசைக்காரம் *tišai-k-kāram*, பெ. (n.) ஒரு குருமருந்து; a king of medicined.

[திசை + காரம்]

திசைக்குடோரி *tišai-k-kuḍōri*, பெ. (n.) ஊதை நோய்க்கு (வாதத்திற்கு)ப் பயன்படுத்தும் ஒரு மருந்து; a general medicine used for paralysis.

திசைக்கெருடன் *tišai-k-keruḍaṉ*, பெ. (n.) காட்டுக்கொடி; binding creeper.

திசைகட்டு-தல் *tišai-kaṭṭu-*, செ.கு.வி. (v.i.) திக்குக்கட்டு-. பார்க்க; see *tikku-k-kaṭṭu-*.

[திசை + கட்டு]

திசைக்காவல் *ticai-k-kāval*, பெ. (n.) நாட்டின் அமைதியைக் காப்போன்; watch-man, whose chief duty is to keep the peace fof a country. 2. திசை காவல் வரி; watch-fee levied by a poligar for wider gaurdianship than village level.

[திசை + காவல்]

திசைச்சொல் *tišai-c-col*, பெ. (n.) செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரு நிலத்தினின்றும் தமிழில் வந்து வழங்கும் சொல் (தொல்.சொல். 397); word borrowed by Tamil from the twelve countries bordering the ancient Tamil land.

[திசை + சொல்]

திசை-த்தல் *ticai-*, செ.கு.வி. (v.i.) திகை¹- பார்க்க; see *tikai-*. "இவள் சிந்தை துழாய்த் திசைக்கின்றதே" (திவ். திருவாய். 4, 6, 1).

திசைத்தொனி *tišai-t-toṉi*, பெ. (n.) ஒலி வகையில் பலதிசைகளிலிருந்து வருவதுபோல் அமைந்த ஒலிப்புயமைப்பு முறை. இந்த முறையில் உண்டாகும் ஒலிப்பில் ஆழமும் அழுத்தமும் செழுமையும் ஏற்படுகிறது; stereophonic.

[திசை + தொனி]

திசைதப்பு-தல் *tišai-tappu-*, செ.கு.வி. (v.i.) வழி தவறுதல்; to miss the road, lose one's way, as a vessel.

[திசை + தப்பு-]

திசைநா *tišainā*, பெ. (n.) கொடுவேலி; Ceylon leadwort (மலை).

[திசை + நா]

திசைநாடி *tišai-nāḍi*, பெ. (n.) எட்டு வகை நாடி; the eight kinds of arteries in the system.

[திசை + நாடி]

திசைநாதம் *tišaināṯam*, பெ. (n.) எட்டுப் பக்கங்களிலிருந்தும் வரும் ஒலி; sound from the eight sides.

[திசை + நாதம்]

திசைநாற்கோணம் *tišaināṟ-kōṇam*, பெ. (n.) கோணதிக்குகள்; the four intermediate directions (பிங்.).

[திசை + நாற்கோணம்]

திசைப்பாலர் *tišai-p-pālar*, பெ. (n.) திக்குப் பாலகர் பார்க்க; see *tikku-p-pālakar*.

[திசை + பாலர்]

திசைப்பு *tišaippu*, பெ. (n.) திகைப்பு பார்க்க; see *tigaippu*. "திசைப்புறுத லுறுஞ் சிவர்க்கு" (வேசு.110).

[திசை → திசைப்பு]

திசைப்புரட்டன் *tišai-p-puraṭṭaṉ*, பெ. (n.) பெரும்பொய்யன்; consummate cheat, liar.

[திசை + புரட்டன்; புரட்டன் - புரட்டுபவன். திசைகளைப் புரட்டுபவன்- திசைகளையே மாற்றிச் சொல்லும் வல்லமையுள்ள பொய்யன்]

திசைபரி *tišaipari*, பெ. (n.) குளம்பி (காப்பி)க் கொட்டை; coffee seeds.

திசைபிலம் *tišai-pilam*, பெ. (n.) மருக்காரை பார்க்க; see *maru-k-kārai*.

திசைபோ-தல் *tišai-pō-*, செ.கு.வி. (v.i.) எங்கும் பரவியிருத்தல்; to spread far and wide. "இசையாற் றிசை போயதுண்டே" *(சீவக. 31)*.

திசைப்போக்கிரி *tišai-p-pōkkiri*, பெ. (n.) பேர் பெற்ற போக்கிரி (இ.வ.); consummate villain, notorious rogue.

திசைமயக்கு *tišai-mayakku*, பெ. (n.) திக்குத் தடுமாறுதல், திசை மாறுதல்; direction confusion.

திசைமாற்று *tišai-māṟṟu*, பெ. (n.) எட்டு மாற்றுப் பொன்; gold of eight matru.

[திசை + மாற்று]

திசைமானி *tišai-māṉi*, பெ. (n.) எப்போதும் வடக்குத் திசையையே காட்டும் முள்ளை உடைய கருவி; compass.

[திசை + மானி]

திசைமுகன் *tišai-mugaṉ*, பெ. (n.) நான்முகன்; brahma, as having four faces. "கமலத் திருமலரின். . . திசை முகனைத் தந்தாய்" *(திவ். இயற். 2, 37)*.

திசைமுகக்குளிகை *tišai-muka-k-kuḷigai*, பெ. (n.) காய்ச்சல் வயிற்றோட்டத்திற்காகக் கொடுக்கும் மாத்திரை; a pill given to cure fever and purging.

[திசை + முகம் + குளிகை]

திசைமூலம் *tišai-mūlam*, பெ. (n.) சிற்றாமுட்டி; ceylon sticky mallow.

[திசை + மூலம்]

திசைமொழி *tišai-moḻi*, பெ. (n.) திசைச்சொல் பார்க்க; see *tišai-c-col* (யாழ்.அக.).

[திசை + மொழி]

திசையண்டம் *tišai-y-aṇḍam*, பெ. (n.) எட்டு வகை முட்டை; eight kinds of birds or birds eggs (சா.அக.).

[திசை = எட்டு; திசை + அண்டம்]

திசையடுத்தல் *tišai-y-aḍuttal*, பெ. (n.) திசையடித்தல் பார்க்க; see *tišai-y-aḍittal*.

[திசை + அடுத்தல்]

திசையடித்தல் *tišai-y-aṭittal*, பெ. (n.) நல்வாய்ப் புறுகை; being in fortunate circumstances (கொ.வ.).

[திசை + அடித்தல்]

திசையறிகருவி *tišai-y-aṟi-karuvi*, பெ. (n.) திக்குகளைக் காட்டுங் கருவி; mariner's compass.

[திசை + அறி + கருவி]



திசையறிபுகைக்கூண்டு *tišai-yaṟi-pukai-k-kūṇḍu*, பெ. (n.) காற்று வீசும் திசையையும் வேகத்தையும் கண்டறிவதற்காக மேலே பறக்கவிடப்படும் சிறுபுகைக்கூண்டு; pilot balloon.

[திசை + அறி + புகை + கூண்டு]

திசையுடையவர்[1] *tišai-y-uḍaiyavar*, பெ. (n.) நாட்டுப்பற்றாளர்; nationalist.

[திசை + உடையவர்]

திசையுடையவர்[2] *tišai-y-uḍaiyavar*, பெ. (n.) மாவட்ட அதிகாரி (யாழ்.அக.); district officer.

[திசை= அதிகாரத்திற்குட்பட்ட இடம்; திசை + உடையவர்]

திசைவளி *tišai-vaḷi,* பெ. (n.) எட்டு வகையான காற்று; the eight kinds of air or wind in the system.

[திசை = எட்டு; திசை + வளி]

திசைவாய்வு *tišai-vāyvu,* பெ. (n.) திசைவளி பார்க்க; see *tišai-vaḷi.*

[திசை + வாய்வு]

திசைவேகம் *tišai-vēgam,* பெ. (n.) கடக்கும் தொலைவை நேரத்தால் வகுத்து ஒரு நொடிக்கு அல்லது ஒரு நிமையத்துக்கு இவ்வளவு அடி என்று கூறுதல் (இயற்.) ஒரு பொருள் செல்லும் நேரக் கூறுபாடு; measurement of speed.

[திசை + வேகம்]

திசைவிளைவுநெம்புகோல் *tišai-viḷaivu-nembukōl,* பெ. (n.) தூரத்திலுள்ளப் பொருள்களைப் பற்றி எடுப்பதற்குரிய பல்திசை வளைவுகளை உடைய நெம்புகோல் அமைப்பு; lazy tongs.

[திசை + விளைவு + நெம்பு + கோல்]

திட்கு-தல் *tiṭgu-,* செ.கு.வி. (v.i.) மனங்குலைதல் (பிங்); to get troubled in mind. "திட்காதே விண்ணப்பஞ் செய்" (பதினொ. கைலை. பா. 77).

[திக்கு → திட்கு; திக்கு = தடுமாறுதல், குலைதல், மனங்குலைதல்]

திட்டக்குழு *tiṭṭa-k-kuḻu,* பெ. (n.) அரசு மேற்கொள்ள வேண்டிய குமுகப் பொருளியல் வளர்ச்சித் திட்டங்களை வகுத்துக் கொடுக்கக் கூடிய வல்லுநர்கள் அடங்கிய குழு; a body of experts to advise the government in developmental policies and schemes, planning commission.

திட்டங்கட்டு-தல் *tiṭṭaṅ-kaṭṭu-,* செ.குன்றாவி. (v.t.) *1.* திட்டம்பார்[3] பார்க்க; see *tiṭṭam-pār-.* *2.* திட்டம்பண்ணு[2] பார்க்க; see *tiṭṭam-paṇṇu-.*

[திட்டம் + கட்டு-]

திட்டஞ்செய்-தல் *tiṭṭañ-cey-,* செ.கு.வி. (v.i.) *1.* கட்டளையிடுதல்; to bid, order, direct. *2.* ஏற்பாடு செய்தல்; to settle, arrange. "'நடப்பித்து வாருங்கோள் என்று திட்டஞ் செய்து" (குரு. பரம். 476). *3.* நிலத்தைப் பண்படுத்துதல்; to prepare the soil for the cultivation. மஞ்சள் பயிரிட மேட்டு வயலைத் திட்டஞ்செய் (உவ.).

[திட்டம் + செய்-]

திட்டப்பற்று *tiṭṭa-p-paṟṟu,* பெ. (n.) திட்டத்துக் குட்பட்ட செலவு (சரவண. பணவிடு. 81); expenditure with in the estimate.

[திட்டம் + பற்று; பற்று = கடன், செலவு]

திட்டப்பட்டம் *tiṭṭa-p-paṭṭam,* பெ. (n.) திட்ட வட்டம் (யாழ்அக.) பார்க்க; see *tiṭṭa-vaṭṭam.*

[திட்டம் + பட்டம்; பட்டம் → வட்டம்]

திட்டப்படுத்து-தல் *tiṭṭa-p-paḍuttu-,* செகுன்றாவி. (v.t.) உறுதிப்படுத்துதல்; confirm. எட்டுமணிக்கு மேல் அவர் வரமாட்டார் என்பதைத் திட்டப்படுத்திக் கொண்டேன்.

திட்டம் *tiṭṭam,* பெ. (n.) *1.* உறுதி; certainty, explicitness. "திட்டமாப் பரகதி சேரவேண்டில்" (செவ்வந்தி. பு. பிரமதேவ. 25). *2.* நிலைப்பாடு; permanence. "மயிலைக் கட்டிட்டங் கொண்டார்" (தேவா. 1118, 1). *3.* செவ்வை; equitablaness, correctness, justness, exactness. *4.* ஏற்பாடு; arrangement, adjustment. "அவர்தந் திராணிக்கு தக்க திட்டஞ் செய்வதுவும்" (பணவிடு. 26). *4.* முழுமை (வின்.); completeness. *6.* கட்டளை; rule, canon, standard. *7.* மதிப்பு; estimate, guess, conjecture. "கலியாணஞ் செய்யத் திட்டம் யாது?" *8.* கட்டளையளவு; rate, allowance, determined quantity. "கோயிலில் தினத் திட்டம்". *9.* அரசிறை மதிப்பு, செலவு மதிப்பு, விளையுள் மதிப்பு முதலியன; estimated aggregate of the revenue of a village for the year from investigation of separate holdin; scheme of expenditure, memorandam from of the extent which is extended to cultivate. *10.* தொல்வரவான இலவய நிலங்களை உரிமையினின்று நீக்குகை (G.Tn.D.i, 3ll); a deduction of fixed extent of tax free land as inam. *11.* அளவு; measure, quantity. *12.* வேரு மளவு; degree. *13.* வரைவு; drawing.

[திட்டு → திட்டம்]

திட்டம்² *tittam*, பெ. (n.) 1. நிலப்படம்; map.

[திட்டு → திட்டம்]

திட்டம்பண்ணு-தல் *tittam-pannu-*, செ.குன்றாவி. (v.t.) 1. அணியம் செய்தல்; to arrange, settle. 2. ஏற்படுத்துதல் (நியமித்தல்); to establish, appoint. 3. மதிப்பிடுதல்; to form an estimate of. 4. சரிப்படுத்துதல்; to mend, adjust, correct. 5. ஆணையிடுதல்; to command, commission. 6. செலவிடுதல்; to dispose of.

[திட்டம் + பண்ணு-; பண்ணு = செய்]

திட்டம்பார்-த்தல் *tittam-pār-*, செ.குன்றாவி. (v.t.) 1. முயலுதல் (வின்.); to try. 2. கருதுதல் (வின்); to guess, estimate, conjecture. 3. அன்று விற்ற தொகையையும் கணக்கையும் சரிபார்த்தல் (இ.வ.); to verify the sale account of the date.

[திட்டம் + பார்-.]

திட்டமிடு-தல் *tittam-idu-*, செ.குன்றாவி. (v.t.) முன்னேற்பாடு செய்தல்; consider and arrange before hand.

[திட்டம் + இடு-.]

திட்டவட்டம் *titta-vattam*, பெ. (n.) 1. செவ்வை; accuracy, precision, exactness, strictness. 2. ஏற்பாடு; arrangement, establishment, settlement. 3. வரையறை; restriant.

[திட்டம் + வட்டம்]

திட்டனம் *tittanam*, பெ. (n.) 1. இலுப்பை (மலை.) பார்க்க; South Indian matua. 2. இலுப்பை மரம்; long leaved bassia.

திட்டறுகு *tittarugu*, பெ. (n.) வெள்ளறுகு; white doop gram.

[திட்டு + அறுகு]

திட்டா *tittā*, பெ. (n.) திட்டறுகு பார்க்க; see *tittaragu*.

[திட்டு → திட்டா]

திட்டாணி *tittāni*, பெ. (n.) மரத்தைச் சுற்றி அமைந்துள்ள மேடை (வின்.); turfing around the shady tree, used as a seat. "சத்திரச் சாலையு மொத்த திட்டாணியும்" (இராமநா. சுந். 4).

[திட்டு → திட்டாணி]



திட்டாந்தப்பேச்சு *tittānta-p-peccu*, பெ. (n.) 1. இசைவான சொல் (வின்.); positive declaration, decisive language. 2. கற்பனையாகச் சொல்லும் பேச்சு (இ.வ.); false or fabricated version. அவன் திட்டாந்தப் பேச்சில் கெட்டிக்காரன் (உ.வ.), இச்சிக்கலில் தலைவர் பேசியது திட்டாந்தப் பேச்சாயிருந்தது (உ.வ.).

Skt. andam

[திட்டம் + அந்தம் + பேச்சு; திட்டம் = வரையறை; அந்தம் = இறுதி]

திட்டாந்தப்போலி *tittānta-p-pōli*, பெ. (n.) இயைபில்லாத எடுத்துக்காட்டு; a fallacious illustration. "பக்கப் போலியு மேதுப் போலியுந் திட்டாந்தப் போலியுமாம்" (மணி. 29. 146).

[திட்டாந்தம் + போலி]

திட்டாந்தம்¹ *tittāntam*, பெ. (n.) எடுத்துக்காட்டு; example. "பக்க மேதுத் திட்டாந்த முபநயம்' (மணி. 29. 57).

[திட்டம் + அந்தம்]

திட்டாந்தம்² *tittāntam*, பெ. (n.) உறுதி; accuracy. "திட்டாந்தமான பேச்சு" (வின்.).

[திட்டம் + அந்தம்]

திட்டி¹ *titti*, பெ. (n.) தினை பார்க்க; see *tinai* (சா.அக.).

[திட்டு → திட்டி]

திட்டி² *titti*, பெ. (n.) 1. தினை; millet. 2. இலுப்பை; bassia.

திட்டி[3] *tiṭṭi,* பெ. (n.) மேடு (இலக்.அக.); raised ground.

[திட்டு → திட்டி]

திட்டி[4] *tiṭṭi,* பெ. (n.) துவட்டா என்ற தேவதச்சன் (யாழ்.அக.); the celestial architect.

திட்டி[5] *tiṭṭi,* பெ. (n.) மஞ்சிட்டி பார்க்க; see *mañjiṭṭi.*

[திட்டு → திட்டி]

திட்டிக்கருக்கு-தல் *tiṭṭi-k-karukku-,* செ.குன்றாவி. (v.t.) கடுமையாகப் பழித்தல் (வின்.); to scold, abuse violently.

[திட்டு + கருக்கு-.]

திட்டிக்கல் *tiṭṭi-k-kal,* பெ. (n.) அஞ்சனக்கல் (வின்.); sulphide of antimony, jet.

[திட்டி → கல்]

திட்டிக்கிடாய் *tiṭṭi-k-kiḍāy,* பெ. (n.) நிலக்கிழார் (சமீன்தார்) ஊரைச்சுற்றிப் பார்க்க வரும் போது ஊரார் கையுறையாகச் (காணிக்கையாக) செலுத்தும் ஆடு; a goat presented to a zamindar by the villagers when he visits their village.

[திட்டி + கிடாய்]

திட்டிச்சீலை *tiṭṭi-c-cīlai,* பெ. (n.) வேந்தர் முன்பு இட்டு வணங்க பயன்படும் சிறு பட்டுச்சீலை; small silk cloth spread near the feet of a chief while prostrating before him as a mark of homage.

[திட்டி + சேலை]

திட்டிணம் *tiṭṭiṇam,* பெ. (n.) திட்டனம் பார்க்க; see *tiṭṭaṉam.*

[திட்டி → திட்டிணம்]

திட்டி-த்தல் *tiṭṭi-,* செ.குன்றாவி. (v.t.) கற்பித்துக் கூறுதல்; to create, fabricate. திட்டித்துப் போடுவாயோ? (வின்.).

[திட்டு → திட்டி]

திட்டிப்படுதல் *tiṭṭipaḍutal,* செ.கு.வி. (v.i.) கண்ணூறுபடுதல்; being affected by evil eyes.

[திட்டி + படுதல்]

திட்டிப்பொட்டு *tiṭṭi-p-poṭṭu,* பெ. (n.) கண்ணூறு கழிதற் பொருட்டு மையா லேனும் சாந்தாலேனும் கன்னத்திலிடும் பொட்டு; mark on the cheeks with collyrium or black pigment called sāndu, made to avert the evil eye.

திட்டிமணி *tiṭṭi-maṇi,* பெ. (n.) திட்டிக்கல் பார்க்க; see *tiṭṭi-k-kal.*

[திட்டி + மணி]

திட்டிவந்தனை *tiṭṭi-vandaṉai,* பெ. (n.) கண்ணூறு போக்கத் தீபவழிபாடு செய்கை (இ.வ.); homage by waving lights before great persons or images to avert the evil eye.

[திட்டி + வந்தனை]

திட்டிவாசல் *tiṭṭi-vāšal,* பெ. (n.) பெரிய கதவுகளை மூடியபின் உட்செல்லுதற்கு அமைக்கப்படும் சிறிய நுழைவாயில்; wicket, small door or gate with in the compass of a larger one. "ஆனையேறியுந் திட்டிவாசலில் நுழைவானேன்" (இராமநா. அயோத். 22).

[திட்டி + வாசல்]



திட்டிவிடம் *tiṭṭi-viḍam,* பெ. (n.) பார்வையால் நஞ்சூட்டிக் கொல்வதாகக் கருதப்படும் பாம்பு; a poisonous serpent whose look is considered fatal. "திட்டிவிடமுணச் செல்லுயிர் போவுழி" (மணி. 11, 100).

[திட்டி + விடம்]

திட்டிவிதை *tiṭṭi-vidai,* பெ. (n.) ஒரு வகை மருந்து விதை (வின்.); a medicinal seed.

திட்டு[1] *tiṭṭu,* பெ. (n.) *1.* **மேட்டு நிலம்;** rising ground, bank, elevation. *2.* **சிறுகுன்று** *(வின்.);* hillock. *3.* **ஆற்றிடைக்குறை** *(உ.வ);* sand bank, ait in a river. "புளினத் திட்டிற் கண்ணகன் வாரிக் கடல்பூத்த" *(கம்பரா.வானர. 8). 4.* **யானைகளைப் பிரித்துவைப்பதற்குக் கட்டப்பட்ட இடைச் சுவர்** *(யாழ்.அக.);* wall separating elephant stables. *5.* **வயலிலுள்ள களை முதலியவற்றின் கொத்து;** patch, bunch, as of weeds in a field. *6.* **100 எண் கொண்ட குதிரை, காலாள் முதலிய வற்றின் தொகை;** batch, unit of number as of 100 horses, soldiers. 'ஒரு திட்டுக் குதிரை'.

ம., க. திட்டு

[திண்டு → திட்டு (வ.மொ.வ.)]

திட்டு[2]**-தல்** *tiṭṭu-* செ.குன்றாவி. (v.t.) *1.* **பழித்தல்;** to abuse, revile. *2.* **இகழ்தல்** *(யாழ்ப்.);* to curse, utter imprecations.

க., ம. திட்டு

[திண்டு → திட்டு]

திட்டு[3] *tiṭṭu,* பெ. (n.) **வசை;** reviling, scolding, vulgar abuse. "பித்த னென்ற திட்டுக்கு" *(அருட்பா. 1, திருவருள். 156).*

[திண்டு → திட்டு]

திட்டுக்கேள்-தல் *tiṭṭu-k-kēḷ-* செ.கு.வி. (v.i.) **பிறரால் பழிக்கப்படுதல்;** to be abused, cursed.

க., ம. திட்டு

[திட்டு + கேள்-.]

திட்டுமுட்டு[1] *tiṭṭu-muṭṭu,* பெ. (n.) **எதிர் பழித்தல்** (எதிர்நிந்தனை) *(யாழ்ப்.);* mutual abuse.

[திட்டு → திட்டுமுட்டு]

திட்டுமுட்டு[2] *tiṭṭu-muṭṭu,* பெ. (n.) *1.* **நெஞ்சடைப்பு;** choking, suffocation, obstruction in the chest, difficulty of breathing. *2.* **குழந்தைகட்கு வயிற்று வீக்கத்தோடு வரும் நோய்வகை;** disease in children attended with swelling of the abdomen.

[திக்குமுக்கு + திட்டுமுட்டு]

திட்டை[1] *tiṭṭai,* பெ. (n.) *1.* **திட்டு**[1] பார்க்க; see *tiṭṭu*. "மணற்றிட்டை சேர்ந்தான்" *(சீவக. 514). 2.* **திண்ணை** *(திவா.);* raised floor. *3.* **உரல்** *(பிங்.);* mortar for pounding. *4.* **கண்;** eye.

[திட்டு → திட்டை]

திட்டை[2] *tiṭṭai,* பெ. (n.) *1.* **வெள்ளெருக்கு** *(மலை.);* white madar. *2.* **வெள்ளறுகு;** white doop grass.

[திட்டு → திட்டை]

திட்டையிடு-தல் *tiṭṭai-iḍu-* செ.கு.வி. (v.i.) *1.* **பல்லீறு தடித்தல்;** to swell, as the gums in the teething. *2.* **புண்ணில் தசை வளர்தல்** *(யாழ்.அக.);* to become closed, as a wound.

[திட்டு → திட்டை + இடு-.]

திட்டையுரல் *tiṭṭai-y-ural,* பெ. (n.) **அடியாழமற்ற உரல்** *(யாழ்ப்.);* shallow mortar.

[திட்டை = மேடு, ஆழமற்றது; திட்டை + உரல்]



திட்பம் *tiṭpam,* பெ. (n.) *1.* **சொற்பொருள்களின் உறுதி;** solidity, soundness. "திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்" *(நன். 18). 2.* **வலிமை;** strength. "உருத்திட்ப முறாக்காலை" *(காஞ்சிப்பு. திருநாட். 97). 3.* **மனவுறுதி;** firmness of mind. "வினைதிட்ப மென்ப தொருவன்" *(குறள். 661). 4.* **உறுதி** *(வின்);* certainty, clear knowledge. *5.* **காலநுட்பம்** *(பிங்.);* moment, minute portion of time.

[திண்மை → திட்பம்]

திட்பவளிமண்டலம் *tiṭpa-vaḷi-maṇḍalam,* பெ. (n.) **வானூர்தியின் செயல்முறையை ஒப்பீடு செய்வதற்குப் பயன்படும் வளி மண்டலம்;** standard atmosphere.

[திட்பம் + வளி + மண்டலம்]

திடஉணவு *tiḍa-uṇavu,* பெ. (n.) **நீர்மமாக இல்லாமல் மென்று சாப்பிடக் கூடியதாக இருக்கும் இட்டலி, சோறு போன்ற உணவு;** solid food.

திடஉராய்வு *tiḍa-urāyvu,* பெ. (n.) ஒரு திடப்பொருள் மற்றொரு திடப்பொருளின் மேலே குறுக்காக நகரும்போது உண்டாகும் உராய்வு; solid friction.

[திடம் + உராய்வு]

திடகாத்திரசாலி *tiḍa-kāttiraśāli,* பெ. (n.) வலிமை உடையவன்; a man who is vitally strong.

[தில் – திள் – திண் – திடம்]

திடகாத்திரம் *tiḍa-kāttiram,* பெ. (n.) கட்டுள்ள உடம்பு; well-built body.

திடங்கொள்(ளு)-தல் *tiḍaṅkoḷ-,* செ.கு.வி. (v.i.) உள்ளுரமடைதல்; bravery.

[திண் → திடம். திண் = வலிமை]

திடச்சான்று *tiḍa-c-cāṉṟu,* பெ. (n.) உண்மை கூறும் சான்று (வின்.); positive testimony.

[திடம் + சான்று]

திடச்செய்தி *tiḍa-c-ceydi,* பெ. (n.) உண்மை யான செய்தி (இ.வ.); certain information, true information.

[திடம் + செய்தி]

திடசாலி *tiḍa-cāli,* பெ. (n.) உடல்வலிமை உள்ளவன்; strong well-built person. "தாண்டுபரி தூண்டு திடசாலி" (*தனிப்பா. 1, 362, 100*).

[திடம் + சாலி]

திடஞ்சொல்(லு)-தல் *tiḍañcol-,* செ.கு.வி. (v.i.) உறுதி சொல்லுதல், தேற்றப்படுத்தல்; acto of encourageing.

[திடம் + சொல்-.]

திடத்தாங்கி *tiḍa-t-tāṅgi,* பெ. (n.) ஒரே துண்டான கெட்டியான தாங்கி; திடத் தாங்கிகள் பொருத்தப்படும் உறுப்புகளில் திடத் தாங்கிகளை அழுத்திப் பொருத்தியதும் அது 'இருசு உருளை' எனப்படும்; solid bearing.

[திடம் + தாங்கி]

திடத்து-தல் *tiḍattu-,* செ.குன்றாவி. (v.t.) திடப்படுத்து (யாழ்.அக.) பார்க்க; see *tiḍa-p-paḍuttu-.*

திடத்துவம் *tiḍattuvam,* பெ. (n.) வலிமை (யாழ்.அக.); strength.

திடப்படுத்துதல்[1] *tiḍa-p-paḍuttutal,* பெ. (n.) கிறித்தவச் சமயத்தைச் சார்ந்தவர் என்று உறுதி செய்கை; the rite of confirmation in the church.

[திடம் + படுத்துதல்]

திடப்படுத்து-தல்[2] *tiḍa-p-paḍuttu-,* செ.குன்றாவி. (v.t.) 1. வலுப்படுத்துதல்; to invigorate, strengthen. 2. உறுதிப்படுத்துதல்; to rectify, sanction, corroborate (செ.அக.).

[திடம் + படுத்து]

திடப்பொருள் *tiḍa-p-poruḷ,* பெ. (n.) கெட்டியான பொருள்; body (or) substance which is solid, not a liquid (or) gas.

[திடம் + பொருள்]

திடபரம் *tiḍa-param,* பெ. (n.) திடவரம் (பின்.) பார்க்க; see *tiḍavaram.*

திடம் *tiḍam,* பெ. (n.) 1. வலிமை; strength, vigour, power. "பிச்சையெடுக்கவோ திடமில்லை" (*அருட்பா. 6, அபயங்கூ. பக். 737, 1*). 2. உறுதி; firmness. 3. கலங்கா நிலை; courage, boldness, intrepidity. "பொறைதிட ஞானம்" (*காசிக. தீர்த்.7*). 4. மனவுறுதி; certainty, assurance, positiveness. "வார்த்தை திடம்படக் கேட்டு" (*தேவா. 17, 4*). 5. உண்மை; truth. "உயர்கதி பெறுவது திடனே" (*தேவா. 61, 7. 2*). 6. நிலை தவறாமை; steadiness, inflexibility. "திடவிசும் பெரிவளி" (*திவ். திருவாய். 1. 1.7*).

[திட்டம் → திடம்]

திடமனம் *tiḍa-maṉam,* பெ. (n.) 1. உறுதியான மனம்; firm mind (செ.அக.). 2. அலைபாயாத மனம்; unagitated mind, unweaving mind.

[திடம் + மனம்]

திடமை *tiḍamai,* பெ. (n.) வெள்ளெருக்கு; white madar.

[திடம் → திடமை]

திடர்[1] *tiḍar,* பெ. (n.) 1. திட்டு[1] (பிங்.) பார்க்க; see *tiṭṭu*. "திடர்விளங்கு கரைப்பொன்னி" (*திவ்.*

பெருமாள். 1. 11). 2. தீவு; island. 3. குப்பைமேடு *(பிங்.);* rubbish heap. 4. புடைப்பு *(வின்.);* prominence, protuberance.

[திடல் → திடர்]

திடர்ச்சுண்டி *tiḍar-c-cuṇḍi,* பெ. (n.) வறட்சுண்டி, ஆடுதின்னாப்பாலை; floating sensitive plant *(சா.அக.).*

[திடர் + சுண்டி]

திடரிடு-தல் *tiḍariḍu-,* 20 செ.கு.வி. (v.i.) மேடாதல்; pile; heap.

[திடர் + இடு-]

திடல் *tiḍal* பெ. (n.) 1. திடர்[1] பார்க்க; see *tiḍar[1].* "'திடலிடைச் செய்த கோயில்" *(தேவா. 893. 3).* 2. வெளியிடம்; openspace. "திடலடங்கச் செழுங்கழனி" *(தேவா. 562, 3).*

[திடர் → திடல்]

திடல்கால் *tiḍal-kāl* பெ. (n.) திடற் புன்செய் (இ.வ.) பார்க்க; see *tiḍaṟ-puṉ-cey.*

[திடர் + கால்]

திடவரம் *tiḍa-varam,* பெ. (n.) திடம்[2, 4] (பின்.) பார்க்க; see *tiḍam[2,4].*

[திடம் + வாரம்]

திடற்புன்செய் *tiḍaṟ-puṉ-cey,* பெ. (n.) நன்செய் நடுவே புன்செய் பயிராகும் மேட்டுநிலம்; dry land on a high level in the midst of a wet-land area.

[திடல் + புன்செய்]

திடறு *tiḍaṟu* பெ. (n.) திடர் *(சூடா.);* mound.

[திடர் → திடறு]

திடாரி *tiḍāri,* பெ. (n.) வலுவுள்ளவன் *(யாழ்ப்.);* bold, spirited person.

தெ. திடமரி

[திடர் → திடாரி]

திடாரிக்கப்படு-தல் *tiḍārikka-p-paḍu-,* செ.கு.வி. (v.i.) வலியுறுதல் *(வின்);* to gain strength.

[திடாரிக்கம் + படுதல்]

திடாரிக்கம் *tiḍarikkam,* பெ. (n.) மனத்திடம் *(யாழ்.அக);* courage, boldness, vigour of mind.

[திடாரி → திடாரிக்கம்]

திடின்பொதினெனல் *tiḍiṉ-podiṉ-eṉal,* பெ. (n.) ஓர் ஒலிக்குறிப்பு *(யாழ்.அக.);* an onom. expression.

திடிமம் *tiḍimam,* பெ. (n.) பறை வகை; a kind of drum. "சீர்முடிவம் பேதிடிம மொலியார் தக்கை" *(இலஞ்சிமுருகனுரை. 127).*

திடீரச்சம் *tiḍīr-raccam* பெ. (n.) கலக்கம்; consternation.

[திடீர் + அச்சம்]

திடீரெனல் *tiḍīr-eṉal,* பெ. (n.) 1. விரைவு எதிர்பாராத நிலை இவற்றை உணர்த்தற் குறிப்பு; expr. signifying suddenness, unexpectedness. "திடீரென வந்தான்" 2. பொருள் விழும்போது உண்டாம் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying sound of falling, etc. 'திடீரென்று விழுந்தது'.

[திடீர் + எனல்]

திடுக்கம்[1] *tiḍukkam,* பெ. (n.) திடுக்கு பார்க்க; see *tiḍukku.* "திடுக்க மெய்தின ரோடினர்" *(உபதேச. சிவத். துரோ. 140).*

[திடுக்கு → திடுக்கம்]

திடுக்கம்[2] *tiḍukkam,* பெ. (n.) நோய்வகை; a disease. "குறைப்பிணி திடுக்கம்" *(கடம்ப.பு. இலீலா. 125).*

[திடுக்கு → திடுக்கம்]

திடுக்காட்டம் *tiḍukkāṭṭam,* பெ. (n.) திடுக்கு *(வின்.)* பார்க்க; see *tiḍukku.*

[திடுக்கு + ஆட்டம்]

திடுக்கிடு[1]-தல் *tiḍukkiḍu-,* செ.கு.வி. (v.i.) 1. அச்சமுறுதல்; to be startled, alarmed, frightened. "திடுக்கிட வுற்றணுகி" *(அரிச். பு. வேட்டஞ். 69).* 2. நடுக்கமுறுதல்; to be shocked, to shudder, to start with fear or surprise; to start in sleep from nervous or muscular affection.

[திடுக்கு + இடுதல்]

திடுக்கிடு[2] *tiḍu-k-kiḍu,* பெ. (n.) திடுக்கு *(யாழ்ப்.)* பார்க்க; see *tiḍukku.*

[திடுக்கு + இடு]

திடுக்கு *tiḍukku,* பெ. (n.) அச்சம்; sudden fear, shudder from fright, terror. "திடுக்கற வெனைத் தான் வளர்த்திட" (அருட்பா. 5, மாயாவின. 1).

[திக்கு → திடுக்கு]

திடுக்குத்திடுக்கெனல் *tiḍukku-t-tiḍukkeṉal,* பெ. (n.) 1. அச்சம் சோர்வுகளால் அடிக்கடி நடுங்கற் குறிப்பு; expr. signifying starting repeatedly through fear or weak nerves. 2. அச்சத்தால் நெஞ்சடித்தற் குறிப்பு; onom. expr. signifying beating, throbbing, palpitating of the heart through fear.

[திடுக்கு + திடுக்கு + எனல்]

திடுக்கூரானமருந்து *tiḍukkūrāṉa-maruntu,* பெ. (n.) நோயை விரைவில் கண்டிக்கக் கூடியதும் நோயின் மிகு நிலையில் மாத்திரம் பயன்படுத்தற்குரியதுமான மருந்து (வின்.); a very strong medicine, speedy in effect and used only in desperate cases.

[திடுக்கு + ஊரான + மருந்து]

திடுக்கூறு *tiḍukkūṟu,* பெ. (n.) விரைவு; suddenness.

[திடுக்கு + உறு → ஊறு]

திடுக்கெனல் *tiḍukkeṉal,* பெ. (n.) திடீரெனல் பார்க்க; see *tiḍireṉal.* "திடுக்கென விங்கெழுந் திருப்ப" (அருட்பா. 6, திரு. அருட்பிர. 1).

[திடுக்கு + எனல்]

திடுதிடு-த்தல் *tiḍu-tiḍu-,* செ.கு.வி. (v.i.) 1. இடைவிடாது ஒலித்தல்; to make a reiterated noise, as by nasty stelps, to rumbe, as a carriage; to thump constantly. 2. நெஞ்சு துடித்தல் (யாழ்ப்.); to beat, throb palpitate, as the heart through fear.

திடுதிடெனல் *tiḍu-tiḍeṉal,* பெ. (n.) 1. திடுக்குத் திடுக்கெனல் (சூடா.) பார்க்க; see *tiḍukku-tiḍukkeṉal.* 2. விரைவுக்குறிப்பு; expr. signifying speed.

[திடு + திடு + எனல்]

திடுதிப்பெனல் *tiḍu-tippeṉal,* பெ. (n.) திடீரெனல்[1] பார்க்க; see *tiḍireṉal.*

[திடுதிப்பு + எனல்]

திடும் *tiḍum,* பெ. (n.) ஒரு பறை (வின்); a kind of kettle-drum.

தெ. துடுமு

திடுமடி *tiḍum-aḍi,* பெ. (n.) பறை சாற்று (வின்); beating of the drum.

[திடும் + அடி]

திடுமல் *tiḍumal,* பெ. (n.) பெண்ணின் அடங்காத்தன்மை (யாழ்ப்); termagancy, noisy boldness in a woman.

திடுமலி *tiḍumali,* பெ. (n.) அடங்காதவள்; termagant.

[திடுமல் + இ]

திடுமனடி-த்தல் *tiḍumaṉaḍi-* செ.கு.வி. (v.i.) திண்மைக் குணங்காட்டல்; showing sound knowledge.

[திடுமன் + அடி]

திடுமெனல்[1] *tiḍum-e-al,* பெ. (n.) பறை முதலியவற்றின் ஒலிக்குறிப்பு (வின்); onom. expr. signifying the sound of a drum.

[திடும் + எனல்]

திடுமெனல்[2] *tiḍum-eṉal,* பெ. (n.) திடீரெனல்[1] பார்க்க; see *tiḍireṉal.*

[திடும் + எனல்]

திண் *tiṇ,* பெ. (n.) வல்லமை; strength.

[தில் → திள் → திண் (வ.மொ.வ.)]

திண்கல் *tiṇ-kal,* பெ. (n.) சுக்கான்கல் (வின்.); lime stone.

[திண் + கல்]

திண்டகம் *tiṇḍagam,* பெ. (n.) கிலுகிலுப்பை (மலை.); laburnum-leaved rattle wort.



திண்டசம் *tiṇḍašam,* பெ. (n.) *1.* *கிலுகிலுப்பை;* rattle wort. *2.* *வேங்கைமரம்;* kino tree.

திண்டன் *tiṇḍaṉ,* பெ. (n.) *தடியன் (உவ.);* stout, thick set man.

[திண்டு → திண்டன்]

திண்டாட்டம் *tiṇḍaṭṭam,* பெ. (n.) *1.* *அலைக் கழிவு;* restless wandering. *2.* *மனக்கலக்கம்;* difficulty, trouble, misery, mental agony. "கொண்டாட்டம் போய்த் திண்டாட்டம் ஆயிற்று".

[திண்டு + ஆட்டம்]

திண்டாட்டு *tiṇḍāṭṭu,* பெ. (n.) *திண்டாட்டம் (யாழ்.அக.) பார்க்க;* see *tiṇḍāṭṭam.*

[திண்டு + ஆட்டு]

திண்டாடு-தல் *tiṇḍāḍu-,* செ.கு.வி. (v.i.) *1.* *அலைக்கழிதல்;* to wander about restlessly. *2.* *மனங்கலங்கித் தடுமாறுதல்;* to suffer trouble, mental agony. "சிலர் பயமுந்தத் திண்டாடித் திசையறியா மறுகினர்" *(கம்பரா. சுட்ச. 39).*

தெ. திண்டு படு

[திண்டு + ஆடு]

திண்டி[1] *tiṇḍi,* பெ. (n.) *1.* *பருமன்;* size, bulk. "திண்டி வயிற்றுச் சிறுகட் பூதம்" *(தேவா. 1225, 7).* *2.* *யானை (அகநி.);* elephant. *3.* *தடித்தவள்;* stout woman. *4.* *அரசு பார்க்க;* pipal. *5.* *பசலை (மூ.அ.);* Indian purslane. *6.* *அரசமரம்;* peepul tree.

[திண்டு → திண்டி (வ.மொ.வ.)]

திண்டி[2] *tiṇḍi,* பெ. (n.) *தம்பட்டம் (சூடா.);* a kind of drum.

[திண்டு → திண்டி]

திண்டி[3] *tiṇḍi,* பெ. (n.) *1.* *உணவு;* food, eatables. திண்டிக்கு அவசரம் *(இ.வ.).* *2.* *தின்பண்டம்;* edibles, sweets and savouries.

தெ., க. திண்டி

[திண்டு → திண்டி]

திண்டிபோத்து *tiṇḍi-p-pōttu,* பெ. (n.) *உண்டு கொழுத்துத் திரிபவன் (இவ.) (உண்டு கொழுத்த கடா);* well fed ox or bullock, glutton.

க. திண்டிபோத.

[திண்டி + போத்து]

திண்டிமகவி *tiṇḍimakavi,* பெ. (n.) *திண்டி முழக்கிக் கொண்டு சமராடும் புலவன் (திருச்செந். பிள். அப்பா. 2);* poet who enters on a literary contest, beating his drum.

திண்டிமம் *tiṇḍimam,* பெ. (n.) *ஒரு வகைப் பறை (பிங்.);* a kind of drum. "பெருங் கவிப் புலமைக்கு நீ சொன்னபடி திண்டிமங் கொட்ட" *(திருச்செந். பிள். சப்பா. 2).*

திண்டியம் *tiṇḍiyam,* பெ. (n.) *செம்பயிரவப் பூண்டு பார்க்க;* unarmed orange nail dye. *(மருதோன்றி).* *2.* *சீனப்பூ;* china mindie.

[திண்டு → திண்டியம்]

திண்டிறல் *tiṇḍiṟal,* பெ. (n.) *மிகுவலி;* great valour. "தொண்டை மன்னவன் றிண்டிற லொருவற்கு" *(திவ். பெரியதி. 5, 7, 9).*

திண்டு *tiṇḍu,* பெ. (n.) *1.* *அரைவட்டமான பஞ்சணை;* semi-circular cusion. "திண்டருகு போட்டான்" *(விறலிவிடு. 476).* *2.* *முட்டாகக் கட்டிய சிறுசுவர் (இ.வ.);* any small construction of brick built as a support. *3.* *பருமன்;* stoutness, thickness.

ம. திண்டு; தெ. திண்டு (diṇḍu.).

[திண்டி → திண்டு]

திண்டுக்கட்டை *tiṇḍu-k-kaṭṭai,* பெ. (n.) *1.* *பயனற்ற தடியன் (பருத்த கட்டை)* (Lit., thick block of wood)*;* a worthless bulky person.

[திண்டு + கட்டை]

திண்டுக்குமுண்டு *tiṇḍukku-muṇḍu,* பெ. (n.) *திண்டுமுண்டு (இ.வ.) பார்க்க;* see *tiṇḍu-muṇḍu.*

திண்டுசார்ந்தான் *tiṇḍu-šārndāṉ,* பெ. (n.) *நாட்டுக் கூட்டத்தில் திண்டிற் சாய்ந்து கொண்டு உட்காரும் வலிமை பெற்ற கைகோளர் தலைவன்* (E.T. iii, 36)*;* a kaikōla chief having the privilege of sitting at council - meetings reclining on a cushion.

[திண்டு + சார்ந்தான்]

திண்டுமுண்டாடு-தல் *tiṇḍu-muṇḍāḍu-*, செ.குன்றாவி. (v.i.) *1. மூச்சுக் கட்டுதல்;* to be choked, stifled, strangled. *2. துன்பத்திற்கு உள்ளாதல்;* to be in great distress; to be caught in inextricable difficulties.

[திண்டு + முண்டு + ஆடு-.]

திண்டுமுண்டு *tiṇḍu-muṇḍu*, பெ. (n.) எதிரிடைப் பேச்சு; contradiction; contracitory speech; retort; tit for tat. *"காலன் றிண்டு முண்டோதி" (தனிப்பா. 1, 403, 23).*

[திண்டு + முண்டு]

திண்டுவரி *tiṇḍuvari*, பெ. (n.) காலத்தின் திண்டைச் சுற்றிப் பாதுகாப்பிற்காக இடும் பெருந்தூண் தொகுதி (க.க.); starling.

[திண்டு + வரி]

திண்டிராவிச்சி *tiṇḍirāvicci*, பெ. (n.) செப்புச் சதுரக்கள்ளி; a red variety of milk hedge.

திண்டேல் *tiṇḍēl*, பெ. (n.) கப்பலைக் கண்காணிப்பவன்; boat swain.

திண்ணக்கம் *tiṇṇakkam*, பெ. (n.) நெஞ்சுரம் (இ.வ.); heartlessness, wilfulness, hardihood.

[திண்மை → திண்ணக்கம்]

திண்ணகம் *tiṇṇagam*, பெ. (n.) *1.* செம்மறி ஆட்டுக்கடா (சூடா.); ram. *2.* துருவாட்டுக் கடா (யாழ். அக.); ram of the turuvāṭṭu variety. *3.* தட்டார் மெருகிடுங் கருவி வகை (யாழ். அக.); goldsmith's polishing tool. *"திண்ணகத்தாற் செய்யுந் தொழில்களை வல்ல பணித்தட்டார்" (சிலப். 6, 136, உரை).*

[திண் → திண்ணகம்]



திண்ணம் *tiṇṇam*, பெ. (n.) *1.* உறுதி (நிச்சயம்); certainty. *"பரகதி திண்ண நண்ணுவர்" (தேவா. 1111, 10). 2.* வலிமை; vigour, strength, solidity, robustness, power. *3.* இறுக்கம்; tightness. *"திண்ண மாத்தொளிர் செவ்விளநீர்" (கம்பரா. எழுச்சி. 50). 4.* பொய்ம்மை (ஆங்.); falsehood.

[திண்மை → திண்ணம்]

திண்ணறிவு *tiṉ-ṉ-aṟivu*, பெ. (n.) தெளிந்த எண்ணம்; sound knowledge, spiritual wisdom. *"தடுமாற்றந் தீர்ப்பேம்யா மென்றுணருந் திண்ணறி வாளரை" (நாலடி. 27).*

திண்ணன் *tiṇṇaṉ*, பெ. (n.) *1.* வலியன்; strong, robust, powerful man. *2.* கண்ணப்ப நாயனார்க்கு அவர் பெற்றோரிட்ட பெயர்; the name given to kaṇṇappa-nāyaṉār by his parents. *"உரிமைப் பேருந்திண்ணனென் றியம்பு மென்ன" (பெரியபு. கண்ண. 17).*

[திண்மை → திண்ணன்]

திண்ணனவு *tiṇṇaṉavu*, பெ. (n.) *1.* உறுதி (நிச்சயம்); certainty. *"விடார்கண்டீர் வைகுந்தத் திண்ணனவே" (திவ். திருவாய். 2,1,10). 2.* திண்ணக்கம்; heartlessness, hardhood. *"உன் திண்ணனவு அஞ்சத்தக்கது" (திருக்கோ. 343, உரை).*

[திண்மை → திண்ணனவு]

திண்ணி *tiṇṇi*, பெ. (n.) தின்னி பார்க்க; see *tiṉṉi*.

திண்ணிமாடன் *tiṇṇi-māḍaṉ*, பெ. (n.) தின்னிமாடன் பார்க்க; see *tiṉṉi-māḍaṉ*.

திண்ணிமை *tiṇṇimai*, பெ. (n.) மனவுறுதி; firmness of mind. *"திண்ணிமையோடு மெல்லச் சார்ந்தநின்" (திருவாலவா. 29, 17).*

[திண்மை → திண்ணிமை]

திண்ணிழல்உருப்படிவம் *tiṇṇiḻal-uru-p-paḍivam*, பெ. (n.) இது ஒரு நுண்பதிவுப் படம். இதிலிருந்து ஓர் உருவத்தின் எந்தப் பகுதியையும் சுற்றியுள்ள திரையை வெட்டி எடுக்கலாம் (அச்சு); outlined halftone.

[திண்மை + நிழல் + உரு + படிவம்]

திண்ணியன் *tiṇṇiyaṉ*, பெ. (n.) 1. மன வலிமையுள்ளவன்; man of courage, strong-willed person. 'திண்ணிய ராகப் பெரின்" (குறள் 666). 2. வலியவன் (சூடா.); strong, robust, powerful man. 3. தடிப்பும் வல்லமையும் உள்ளோன்; a stout strong person.

[திண்மை → திண்ணியன்]

திண்ணெனல்[1] *tiṇṇeṉal*, பெ. (n.) நரம்பிசைக் கருவிகளில் எழும் ஒலிக்குறிப்பு (வின்.); onom. expr. of the vibrating sound of a stringed musical instrument.

[திண்மை → திண்ணெனல்]

திண்ணெனல்[2] *tiṇṇeṉal*, பெ. (n.) உறுதியா யிருத்தற்குறிப்பு; expr. of being firm, hardy or strong. "திண்ணென் றிறைவனற் சிறப்போ டொன்றி" (மேருமந். 570).

[திண்மை → திண்ணெனல்]

திண்ணெனவு *tiṇṇeṉavu*, பெ. (n.) திண்ணனவு பார்க்க; see *tiṉ-ṉ-ṉavu*. "மூக்கரிந்து மன்னிய திண்ணெனவும்" (திவ். இயற். பெரியதரும. 146).

திண்ணை *tiṇṇai*, பெ. (n.) 1. வீட்டின் வேதிகை; pial, a raised platform or veranda in a house. "ஆய்மணிப் பவளத் திண்ணை" (சீவக. 1126). 2. மேடு; mound. "தேனயாம் பூம்பொழிற் றிண்ணை" (சீவக. 1822).

தெ. தின்னெ; க. திண்ணெ; ம. திண்ண.

[திள் → திண்ட → திண்ணை]

திண்ணைக்குந்து *tiṇṇai-k-kundu*, பெ. (n.) 1. திண்ணையோரம்; edge of the tiṇṇai. 2. குந்து திண்ணை பார்க்க; see *kundu-tiṇṇai;* a small pial.

[திண்ணை + குந்து]

திண்ணைக்குறடு *tiṇṇai-k-kuṟaḍu*, பெ. (n.) 1. திண்ணையையொட்டியுள்ள படி (வின்.); a kind of step outside a veranda. 2. பெரிய திண்ணையை ஒட்டிக் கீழேக் கட்டப்பட்ட சிறு திண்ணை (இவ.); a small pial of low land adjoining a large pial.

[திண்ணை + குறடு]



திண்ணைப்பள்ளிக்கூடம் *tiṇṇai-p-paḷḷi-k-kūḍam*, பெ. (n.) வீட்டின் முன் பகுதியாகிய திண்ணையில் நடத்தும் பள்ளிக்கூடம்; pial-school.

[திண்ணை + பள்ளிக்கூடம்]

திண்படு-தல் *tiṇ-paḍu-*, செ.கு.வி. (v.i.) வலி பெறுதல் (யாழ்.அக.); to be strengthned.

[திண்-மை → திண்படு-.]

திண்பொறு-த்தல் *tiṇ-poṟu-*, செ.குவி (v.i.) சுமை தாங்குதல் (யாழ்.அக.); to be able to bear a burden. 2. தாக்குப் பொறுத்தல்; suffering the attack as of diseases. 3. வலி பொறுத்தல் (சகித்தல்); to endure pain.

[திண்(மை) → திண்பொறு-.]

திண்மசகிடல் *tiṇmaśakiḍal*, செ.குன்றாவி. (v.t.) எண்ணெய்ப் பூரிதமாகிய அடைபஞ்சுடன் இணைத்து மசகிடும் முறை; pad lubrication.

[திண் + மசகு + இடல்]

திண்மம் *tiṇmam*, பெ. (n.) திடவடிவம்; solidity.

[திண் → திண்மம்]

திண்மை *tiṇmai*, பெ. (n.) 1. வலிமை; strength, power, robustness. "சால்பென்னுந் திண்மை யுண் டாகப்பெறின்" (குறள். 988). 2. உறுதி; hardness, compactness, firmness. "மண்ணிற் றிண்மை வைத்தோன்" (திருவாச. 3, 26). 3. மெய்ம்மை (சங்க.அக.); truth, reality, certainity. 4. கலங்கா நிலைமை; steadiness, constancy. "கற்பென்னுந் திண்மை யுண்டாகப் பெறின்" (குறள். 54). 5. பருமன்; heaviness, bulkiness. 6. பொருளின் அணுக்கள் ஒன்றோடொன்று நெருங்கிச்

சேர்ந்திருக்குந் தன்மை; closness in constituent parts, density, close union of parts.

[திண்ணம் → திணம் → திண்மை (வ.மொ.வ.)]

K. tinpu

திண்மைக்கவர்ச்சி *tinmai-k-kavarcci,* பெ. (n.) ஒன்று மற்றொன்றை இழுக்கத்தக்க ஆற்றல் (யாழ்.அக.); power of attraction, gravitational force. 2. வலிமையோடு கூடிய கவர்ச்சி; mighty or potent attraction.

[திண்மை + கவர்ச்சி]

திணம் *tiṇam,* பெ. (n.) திண்மை' பார்க்க; see tinmail. "திணமணி மாடத் திருவிடைக் கழியில்" (திருவிசை. சேந். திருவிடை. 5).

[திண்மை → திணம் (வ.மொ.வ.)]

திணர்'-தல் *tiṇar-,* செ.கு.வி. (v.i.) சோர்தல்; to get exhausted. "உணர்ந்தவ ருணர்ச்சியா னுழைந்தே திணர்ந்தனராகி" (அருட்பா, 4, பதிநிச். பக். 751-2).

[திணம் → திணர்]

திணர்²-தல் *tiṇar-,* செ.கு.வி. (v.i.) 1. கனமாகப் படிந்திருத்தல்; to form a thick layer. "திணர்த்த வண்டல் கண்மேல்" (திவ். திருவாய். 6,1,5). 2. நெருக்கமாதல்; to be crowded, dense, close. "வண்டு திணர்த்த வயல்" (திவ். திருப்பள்ளி. தனியன்.).

[திணம் → திணர்]

திணர்³ *tiṇar,* பெ. (n.) செறிவு; denseness, thickness, as of a cloud. "திணரார்மேக மெனக் களிறு சேருந் திருவேங் கடத்தானே" (திவ். திருவாய். 6, 105).

[திணம் → திணர்]

திணறு-தல் *tiṇaṟu-,* செகு.வி. (v.i.) மூச்சுத் தடுமாறுதல்; to be choked, stifled, suffocated.

[திணர் → திணறு (வ.மொ.வ.)]

திணி'-தல் *tiṇi-,* செ.கு.வி. (v.i.) 1. செறிதல்; to be crowded, dense, close. "மண்டிணிந்த நிலனும்" (புறநா.2). 2. இறுகுதல்; to become solid, compact, firm.

[திண் → திணி]

திணி²-த்தல் *tiṇi-,* செ.கு.வி. (v.i.) 1. செறிய உட்புகுத்துதல்; to cram, stuff. "பூமிபாரங்க ளுண்ணுஞ் சோற்றினை வாங்கிப் புல்லைத் திணிமினே" (திவவ். பெரியாழ். 4,4,5). 2. பதித்தல் to enchase, set "பொன்றிணி மணிமானட் பொலிவன பல" (கம்பரா. வனம்பு.3). 3. நெருக்கி வருத்துதல் (இவ.); to nagat, worry persistently. 4. இடைச் சேர்த்தல்; to insert. 5. அதிகமாக உண்பித்தல்; giving excess of food. 6. அடைத்தல்; plugging. 7. துறத்தல்; thristing, stuffing in.

[திள் → திணி → திணி-தல் (வ.மொ.வ.)]

திணி³ *tiṇi-,* பெ. (n.) 1. திட்பம்; solidity, strength, firmness. "பலர்புகழ் திணிதோள்" (திருமுரு. 152). 2. செறிவு; denseness. "இருளின்றிணி வண்ணம்" (திவ். திருவாய். 2,1,8). 3. மண்ணுலகு (அகநி.); earth.

[திள் → திணி]

திணிகம் *tiṇigam,* பெ. (n.) போர் (வின்.); battle

[திண் → திணிகம்]

திணிநிலை *tiṇi-nilai,* பெ. (n.) சேனையின் செறிந்த நிலை; phalanx, dense formation of an army. "திணி நிலையலற".

[திணி + நிலை]

திணிப்பிலவு *tiṇi-p-pilavu,* பெ. (n.) ஈரப்பலா; monkey jack.

[திணி + பலவு → பிலவு]

திணிப்பு *tiṇippu,* பெ. (n.) வலிமை; strength force. "திணிப்புற வரற்றின சினைக்கரிய மாரி" (இரகு. தேனு. 9).

[திணிம்பு → திணிப்பு]

திணிம்பு *tiṇimpu,* பெ. (n.) செறிவு; denseness. "இருளின் கருந்திணிம்பை" (திவ. இயற். திருவிருத். 72).

க. திணிநபு (tiṇinapu)

[திணிப்பு → திணிம்பு]

திணிமூங்கில் *tiṇimūṅgil,* பெ. (n.) கெட்டி மூங்கில் (அகநா. 27, உரை); solid hard bamboo.

[திணி + மூங்கில்]

திணியன் *tiṇiyaṉ,* பெ. (n.) *1.* **பயனற்றுப் பருத்த-வன்-து** *(யாழ்.);* fat, indolent man; clumsy beast or thing. *2.* **உள்ளீடற்ற மரம் மூங்கில் முதலியன** *(இவ.);* tree or cane slightly hollow.

[திண்(மை) → திணியன்]

திணிவு *tiṇivu,* பெ. (n.) *1.* **வன்மை;** hardness. *2.* **நெருக்கம்;** denseness.

[திணி → திணிவு]

திணுக்கம் *tiṇukkam,* பெ. (n.) *1.* **செறிவு;** closeness, compactness. *2.* **கட்டி;** thick consistency, solidity. "திணுக்கமாய்க் காய்ச்சிக் கொடு" *(வின்.).*

[திணுங்கு → திணுக்கம்]

திணுங்கு-தல் *tiṇuṅgu-,* செ.கு.வி (v.i.) *1.* **செறிதல்;** to become close, thich, dense, crowded. "திணுங்கின விருள்" *(திவ்.திருவாய். 2, 1, 7, பன்னீ.).* *2.* **உறைதல்;** to congeal solidity. "நெய் திணுங்கினாற்போல" *(திவ்.திருமாலை 2, வ்யா. பக்.15).*

[திண்மை → திணுங்கு-.]

திணை *tiṇai,* பெ. (n.) *1.* **நிலம்** *(பூமி) (பிங்.);* earth, land. *2.* **இடம்** *(பிங்.);* place, region, situation, site. *3.* **வீடு;** house. "திணைபிரி புதல்வர்" *(பரிபா. 16, 7).* *4.* **குலம்;** tribe caste, race, family "உயர்திணை யூமன்" *(குறுந். 224).* *5.* **ஒழுக்கம்;** conduct, custom. "அவன் றொஃறிணை மூதூர்" *(மலைபடு. 401).* *6.* **தமிழ் நூல்களிற் கூறப்படும் அகமும் புறமுமாகிய ஒழுக்கம்.** "ஐந்திணை நெறியளாவி" *(கம்பரா. சூர்ப்பணகை 1);* convetional rules of conduct laid down in the Tamil works, of two classes, viz., aka-t-tinai and puṟa-t-tiṇai. *7.* **உயர்திணை யஃறிணைகளாகிய பகுப்புகள்;** class, as of names of two kinds, viz. uyartiṇai and akṟiṇai. "ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே" *(தொல்.சொல். 1).* *8.* **அகத்திணை;** an idea in the mind. *9.* **புறத்திணை;** an external object of perception. *10.* **ஐந்திணை;** the five sorts.

[திண் → (திண்ணை) → திணை (வே.சொ.க)]

திணைக்களம் *tiṇai-k-kaḷam,* பெ. (n.) **துறை;** department. "புரவுவரித் திணைக் களத்து வரிப்பொத்தக நாயகன்" *(S.I.I. ii, 412).*

[திணை + களம்]

திணைகள் *tiṇaigaḷ,* பெ. (n.) **மக்கள்;** people. "கணக்கருந் திணைகளும்" *(பெருங். வத்தவ. 2, 45).*

[திணை + கள்]

திணைநிலைப்பெயர் *tiṇai-nilai-p-peyar,* பெ. (n.) *1.* **குலமுறையைக் குறிக்கும் பெயர்;** noun denoting class or caste. "பல்லோர்க் குறித்த திணை நிலைப்பெயரே" *(தொல்.சொல். 167).* *3.* **ஐந்திணைத் தலைமக்கட்கு வழங்கும் பெயர்;** name of the chieftains of aintinaṇai. "ஆனா வகைய திணை நிலைப் பெயரே" *(தொல். பொ. 22).*

[திணை + நிலைப்பெயர்]

திணைநிலைவரி *tiṇai-nilai-vari,* பெ. (n.) **ஐந்திணைச் செய்திகளை காமக்குறிப்புத் தோன்றப் பாடும் பாவகை** *(சிலப். 10, கட்டுரை);* a kind of erotic composition dealing with the incidents and events peculiar to aintiṇai.

[திணை + நிலைவரி]

திணைப்பாட்டு *tiṇai-p-pāṭṭu,* பெ. (n.) **எடுத்த திணைக்குரிய தொழிலைப் பொதுப் படக்கூறும் பாடல்** *(இலக்.வி. 603, உரை);* a poem dealing in general terms with a particular tiṇai *(செ.அக.).*

[திணை + பாட்டு]

திணைப்பெயர் *tiṇai-p-peyar,* பெ. (n.) **ஐந்திணையில் வாழும் மக்கட்கு வழங்கும் பெயர்** *(தொல். பொ.21);* names of the peoples occuying aintiṇai.

[திணை + பெயர்]

திணைமயக்கம் *tiṇai-mayakkam,* பெ. (n.) *1.* **ஒரு நிலத்துக்கு உரிய காலம், உரிய பொருள், கருப்பொருள்கள் மற்ற நிலத்துக்குரிய அப்பொருளுடன் கலந்து வரப் பாடலமைக்கை;** to compose poems with the hormonies blending of the features of one tinai with those of another. *2.* **அகம் புறம் என்ற**

திணைகள் ஒன்றோடொன்று மயங்கி வருகை; blending of akattiṇai and puṟattiṇai.

[திணை + மயக்கம்]

திணைமயக்கு *tiṇai-mayakku,* பெ. (n.) திணையமயக்கம் பார்க்க; see *tiṇai-mayakkam* "அகத் திணையின்கட் கைக்கிளை வருதல் திணை மயக்காம் பிறவெனின்" *(திருக்கோ. 4, உரை).*

[திணை + மயக்கு]

திணைமாலைநூற்றம்பது *tiṇai-mālai-nūṟṟambadu,* பெ. (n.) பதினெண்கீழ்க் கணக்கினுளொன்றும் கணிமேதாவியார் இயற்றியதும் 150 செய்யுளில் ஐந்திணை யொழுக்கங்களைக் கூறுவதுமான நூல்; an ancient love poem of 150 stanzeas by kaṇi-mētāviyār. one of padiṉen-kil-k-kaṇakku.

திணைமொழியைம்பது *tiṇai-moḻiy-aimbadu,* பெ. (n.) பதினெண் கீழ்க்கணக்கினு ளொன்றும் கண்ணஞ் சேந்தனாரியற்றியதும் 50 செய்யுட்களில் ஐந்திணையொழுக்கங் களைக் கூறுவதுமான நூல்; an ancient love poem of 50 stanzas by kaṇṇaṉ-cēndaṉār one of padiṉeṇ-kiḻ-k-kaṇakku.

திணைவழு *tiṇai-vaḻu,* பெ. (n.) ஒரு திணைச் சொல்லை மற்றொரு திணைப் பொருளிற் சொல்லுவதாகிய வழுவகை (தொல். சொல். 11, சேனா); incorrect use of a noun in a tiṇai which to it does not belong.

[திணை + வழு]

திணைவழுவமைதி *tiṇai-vaḻu-v-amaidi,* பெ. (n.) மரபு பற்றி ஆன்றோரால் அமைத்துக் கொள்ளப்பட்ட திணைவழு (தொல்.சொல். 57, சேனா.); tinai-vaḻu sanctioned by usage.

[திணை + வழுவமைதி]

தித்தகம் *tittagam,* பெ. (n.) 1. மலைவேம்பு (மலை) பார்க்க; see *malai-vēmbu;* persian lilac. 2. துருக்க வேம்பு; Persian lilac. 3. நில வேம்பு; ground neem. 4. காரப் புகையிலை; smoking tobacco. 5. கண்ணுக்கிடுமோர் மூலிகை (பித ரோகினி); an unknown plant useful in eye disease.

தித்தகாருட்டி *tittakāruṭṭi,* பெ. (n.) சிறுவழு தலை; wild Indian brinjal.

தித்தக்கிருதம் *tittak-kirudam,* பெ. (n.) கசப்பு மருந்து நெய்; medicinal ghee with bitter taste being prepared with bitter herbs.

தித்தசம் *tittašam,* பெ. (n.) பேய்ப்புடல்; wild snake gourd.

தித்ததண்டுலம் *titta-tanḍulam,* பெ. (n.) திப்பிலி; long pepper.

தித்ததுத்தம் *titta-tuttam,* பெ. (n.) மரத்தின் கசப்புப் பால்; bitter milky sap of the tree.

தித்ததும்பி *titta-tumbi,* பெ. (n.) கசப்புக் கொடி; bitter gourd cralber.

தித்தசாரம் *titta-šāram,* பெ. (n.) மாவிலங்கம்; lingam tree. 2. கருப்புக் காசுக் கட்டி; black cateche.

தித்தபரி *titta-pari,* பெ. (n.) 1. ஒரு வகை வெள்ளரி; a kind of cucumber. 2. கொம்மட்டி; 3. ஒரு வகையுப்பு; a kind of salt.

தித்தபருவன் *titta-paruvaṉ,* பெ. (n.) 1. சீந்தில்; moon creeper. 2. முயற்புல்; hare grass. 3. குன்றி; liquorice.

தித்தபலை *titta-palai,* பெ. (n.) கசப்புக்காய்; bitter fruit.

தித்தபீசம் *titta-pīšam,* பெ. (n.) பேய்ச்சுரை; a kind of gourd.

தித்தம்[1] *tittam,* பெ. (n.) 1. நெருப்பு; fire. 2. கட்டுக் கதை; fable.

தித்தம்[2] *tittam,* பெ. (n.) 1. கசப்பு (பிங்.); bitterness. 2. தித்தகம் (மலை) பார்க்க; see *tittagam.* 3. நிலவேம்பு (வின்.) பார்க்க; see *nila-vēmbu.* 4. எண்ணெய்; oil. 5. மணம்; fragrance. 6. நிலவேம்பு; ground neem. 7. மலைவேம்பு; persian lilac. 8. வெள்ளைக் கிலுகிலுப்பை; white rattle wort. 9. புனல் முருங்கை; three learned indigo. 10. சின்ன முள்ளங்கி; small radish. 11. காரம்; purngancy. 12. வெப்பாலை; desontery rosebay.

தித்தம்[3] *tittam,* பெ. (n.) ஒளி; effulgence. "தித்த தவர்" *(மேருமந். 1097).*

தித்தன் *tittaṉ,* பெ. (n.) ஒரு பழைய சோழவரசன்; an ancient Chola king. "மாவண் டித்தன்" (புறா. 352).

தித்தாவெனல் *tittā-v-v-eṉal,* பெ. (n.) நடனத்தில் வழங்கும் தாளக் குறிப்பு; expr. of time-measure.

தித்தி[1]-த்தல் *titti-,* செகுவி. (n.) இனித்தல்; onom to be sweet, savoury delicious, pleasing. "திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித் திருக்குமோ" (திவ். நாய்ச். 7,1).

[தீந்தி → திந்தி → தித்தி (வே.சொ.க.)]

தித்தி[2] *titti,* பெ. (n.) 1. தித்திப்பு; sweetness. "தித்திப்பனங்கட்டி" (வின்.). 2. சிறுதீனி (யாழ்ப்.); light food. 3. பேரீந்து (வின்.); date palm. 4. இன்பம் (அகநி.); pleasure. 5. தேமல்; yellow spreading spots on the body. "கோதை யூரலந் தித்தி" (பதிற்றுப் 52, 17). 6. குரா (யாழ்.அக.) பார்க்க; common bottle - flower. 7. சிற்றுண்டி; lunch on.

க. ; sihi

[திந்தி → தித்தி]

தித்தி[3] *titti,* பெ. (n.) 1. தாளச்சதி; two syllables sung to a tune, signifying time measure. "தித்தி யறுத்தும்" (திருப்பு. 417). 2. குரங்கு (அகநி.); monkey. 3. ஓர் பனை; a kind of palm tree.

தித்தி[4] *titti,* பெ. (n.) 1. துருத்தி; bellows. "வாயுவேற்றித் தித்திவாய் செம்மில்" (யசோதர. 4, 12). 2. தோற்பை (இவ.); leather bag. 3. ஒரு வகை இசைக் கருவி; a kind of flute or pipe. "தித்தி சிறு முகவீணை" (சுற்றா. தல. தருமசாமி. 54).

[துருத்தி → துத்தி → தித்தி (வ.மொ.வ.10)]



தித்தி[5] *titti,* பெ. (n.) வேள்விக்குண்டம் (வின்.); a sacrificial pit.

தித்திக்கப்பேசு-தல் *tittikka-p-pēšu-,* செகுவி. (v.i.) முகமனாகக் கூறுதல்; to flatterr, coax or wheedle with sweetwrods. "தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்" (திருவாச. 7,3).

[தித்தி + பேசு]

தித்திக்காரன் *titti-k-kāraṉ,* பெ. (n.) துருத்தி என்னும் இசைக்கருவியை ஊதுபவன்; a piper. "கூடுதித்திக்காரனையும்" (விறலிவிடு. 288).

[தித்தி + காரன்]

தித்திக்கும்வேம்பு *tittikkum-vēmbu,* பெ. (n.) சருக்கரை வேம்பு (பதார்த்த. 230); a kind of neem.

[தித்தி + வேம்பு]

தித்திகம் *tittigam,* பெ. (n.) 1. பேய்ப்புடோல் பார்க்க; wild snake gourd. 2. அரத்தை; galangal. 3. பேய்க் கொம்மட்டி; bitter water melon. 4. கசப்பு மணம் வாய்ந்தது; anything having bitter flaver.

தித்திகா *tittikā,* பெ. (n.) கண்டங்கத்திரி; prickly night shade.

தித்திசாகம் *titti-šāgam,* பெ. (n.) மாவிலிங்கு (மலை) பார்க்க; see *māviliṅgu;* round berried cuspidate-leaved lingam tree.

தித்திப்பனங்கட்டி *titti-p-paṉaṅgaṭṭi,* பெ. (n.) ஈச்சவெல்லம் (வின்.); jaggery of the date palm.

[தித்தி + பனங்கட்டி]

தித்திப்பு *tittipu,* பெ. (n.) 1. இனிப்பு; sweetness. "தித்திக்குமோர் தித்திப் பெலாங்கூட்டி யுண்டாலும் (அருட்பா, 3, நடரா. 10). 2. இனிப்புள்ள பண்டம்; any sweet eatable. 3. பூண்டின் முதற் பெயர்; plants first term. 4. தித்திப்பு நாரத்தை; sweet nārattai.

[தித்தி + பு]

தெ. தீபு

தித்திப்புக்கொடிமுந்திரி *tittippu-k-koḍi muntiri,* பெ. (n.) இனிப்புக் கொடிமுந்திரி; sweet grapes as opposed sour grapes.

[தித்திப்பு + கொடிமுந்திரி]

தித்திப்புக்கோவை *tittippu-k-kōvai,* பெ. (n.) இனிப்புக் கோவை. இது இதளியத்தைக் கட்டும்; sweet caper lehneria umbellate/. It is capable of binding or consolidating mercury.

[தித்திப்பு + கோவை]

தித்திப்புச்சுரிஞ்சான் *tittippu-curiñcāṉ,* பெ. (n.) இனிப்புச் சுரிஞ்சான்; sweet barbary dollocolchicum. It is opposed to brilter curiñcāṉ.

[தித்திப்பு + சுரிஞ்சான்]

தித்திப்புச்சோளம் *tittippu-c-cōḷam,* பெ. (n.) இனிப்புச் சோளம்; sugar millet sweet corn.

[தித்திப்பு + சோளம்]

தித்திப்புநாரத்தை *tittippu-nārattai,* பெ. (n.) இதுவே சாத்துக்குடி; sathukoḍi.

[தித்திப்பு + நாரத்தை]

தித்திப்புநாவல் *tittippu-nāval,* பெ. (n.) சீனி நாரத்தை; sweet gulgul. *2.* சம்பு நாவல்; இனிப்பு நாவற் பழம்; sweet jamoon.

[தித்திப்பு + நாவல்]

தித்திப்புநீர்நோய் *tittippu-nīr-nōy,* பெ. (n.) நீரிழிவு நோய்; diabetes.

[தித்திப்பு + நீர்நாய்]

தித்திப்புப்பண்டம் *tittippu-p-paṇḍam,* பெ. (n.) இனிப்புணவுப் பொருள் (வின்.); sweetmeat. *2.* தித்திப்புப் பண்ணியம்; confection. *3.* சர்க்கரைப் பாகில் போட்டெடுத்த பண்டம்; that which is preserved by means of sugar or syrup.

[தித்திப்பு + பண்டம்]

தித்திப்புப்பாலை *tittippu-p-pāḷai,* பெ. (n.) நல்ல பாலை; sweet palay. இனிப்பு மாதுளை; sweet pomegranate.

[தித்திப்பு + பாலை]

தித்திப்புப்புளி *tittippu-puḷi,* பெ. (n.) இனிப்புப் புளியம்பழம்; tamarind that is sweet.

[தித்திப்பு + புளி]

தித்திப்பெலுமிச்சை *titti-p-pelumiccai,* பெ. (n.) எலுமிச்சை வகை; sweet lime.

[தித்திப்பு + எலுமிச்சை]

தித்திப்புப்பேதி *tittippu-p-pēti,* பெ. (n.) உலர்கொடிமுந்திரி கற்கண்டு சேர்ந்த மலநீக்கி மருந்து; puragative containing dried graphes and sugar candy.

[தித்திப்பு + பேதி]

தித்திப்புமா *titti-p-pumā,* பெ. (n.) இனிப்பு மாங்காய்; graft mango.

[தித்திப்பு + மா]

தித்திப்புமுந்திரி *tittippu-muntiri,* பெ. (n.) இனிப்புக் கொட்டை முந்திரிகை; sweet grapes with seeds.

[தித்திப்பு + முந்திரி]

தித்திப்புவாதுமை *tittippu-vādumai,* பெ. (n.) இனிப்பு வாதுமைக் கொட்டை; sweet almond.

[தித்திப்பு + வாதுமை]

தித்திமுளை *tittimuḷai,* பெ. (n.) இரட்டைத் தித்திப் பனங்கட்டி (யாழ்ப.); double cake of palm jaggery.

[தித்திப்பு + முளை]

தித்தியம் *tittiyam,* பெ. (n.) தித்தி[5] பார்க்க; see titti[5]. "அழலெழு தித்திய மருத்தயாமை" (அகநா. 361). *2.* அரத்தை; galangal (சங்.அக.).

தித்திரம் *tittiram,* பெ. (n.) அரத்தை (மலை) பார்க்க; see *arattai;* galangal.

தித்திரகம் *tittirakam,* பெ. (n.) சிற்றரத்தை; small galangal.

தித்திரி *tittiri,* பெ. (n.) *1.* கவுதாரி; Indian partridge. *2.* மீன் கொத்தி வகை; a kind of king fisher. *3.* சிக்கிலிக் குருவி; king fihser. *4.* நாணல்; reed.

தித்திரிப்பு *tittirippu,* பெ. (n.) புனை சுருட்டு; hoax, humbug, cheating, delusion. "செய்யுங்கபடு மகாதித்திரிப்பு மாகாசப் பொய்யுங் கலந்து புகட்டினாள்" (விறலிவிடு. 168).

தித்திரிபலை *tittiri-palai,* பெ. (n.) நேர்வாளம்; purging nut.

தித்திரியை *tittiriyai,* பெ. (n.) பெண் கவுதாரி; femal patridge (சா.அக.).

தித்திரு *tittiru,* பெ. (n.) *1.* நாணல் (மலை) பார்க்க; see *nāṉal;* a large and coarse grass. *2.* கம்பம்புல்; ponccum grass.

தித்திருச்சி *tittirucci,* பெ. (n.) தித்திரு (வின்.) பார்க்க; see *tittiru.*

தித்திவி-த்தல் *tittivi-,* செ.குன்றாவி. (v.t.) வாங்கிய கடன் முதலியவற்றைத் தீர்த்தல்; to repay, as loans. "வாங்கி பொன் தித்திவிக்கும் வல்லமையும்" *(தெய்வக். விறலிவிடு. 81).*

தித்தீபம் *tittīpam,* பெ. (n.) பேரரத்தை; large golangal.

தித்து¹-தல் *tittu-,* செ.குன்றாவி (v.t.) திருத்துதல்; to correct, rectify a mistake. "தெள்ளமிர்த மூட்டி யுரைதித்தி வளர்த்தெடுத் தோர்" *(கூளப்ப. 8). 2.* எழுத்துக் கற்க வரிவடிவின்மேற் பல முறையெழுதிப் பழகுதல் (இ.வ.); to practise hand writting by tracing over a written copy.

T. K., diddu

[திருத்து → தித்து-தல்]

தித்து² *tittu,* பெ. (n.) தித்துப்பாடு பார்க்க; see *tittu-p-pāḍu.*

தித்துப்பாடு *tittu-p-pāḍu,* பெ. (n.) திருத்தம் (கொ.வ.); correction, alteration.

K. diddupāḍu

[தித்திப்பு + படு]

தித்துருணி *titturuṇi,* பெ. (n.) துளசி; holy basil.

தித்துவெட்டு *tittu-veṯṯu,* பெ. (n.) தித்துப்பாடு (இ.வ.) பார்க்க; see *tittu-p-pāḍu* (இ.வ.).

[தித்து + வெட்டு]

தித்தேகி *tittēgi,* பெ. (n.) பற்படகம் (சங்அக.) பார்க்க; fever plant.

தித்தை *tittai,* பெ. (n.) வேம்பு; neem tree.

திதம்¹ *tidam,* பெ. (n.) நிலை; fixedness, steadiness, stability. "திதமாய் நிற்குமிடம் மாயை" *(ஞானவா. இட்சு. 29).*

திதம்² *tidam,* பெ. (n.) தித்தம்¹ (யாழ்.அக.) பார்க்க; see *tittam¹.*

திதலை¹ *tidalai,* பெ. (n.) *1.* தேமல்; yellow spots on the skin, considered beautiful in women. "பொன்னுரை கடுக்கும் திதலையர்" *(திருமுரு. 145). 2.* ஈன்ற பெண்களுக் குள்ள வெளுப்பு நிறம்; pale complexion of women after confiement. "ஈன்றவ டிதலைபோல்" *(கலித். 32).*

திதலை² *tidalai,* பெ. (n.) பொற்பிதிர்வு; golden streak. "திதலைத் திருவாசிச் சேவை" *(சொக்க. உலா. 63).*

திதளம் *tidaḷam,* பெ. (n.) மாமரம் (மலை); a mango.

திதன் *tidaṉ,* பெ. (n.) *1.* மனவுறுதியுடையவன்; one who is firm in mind. "திதனாயெவரு மறியாத பொருளைத் தெரிந்து கொண்டு" *(பகவத் கீதை, 2, 31). 2.* திடமானது (பகவத் கீதை, ப.27); that which is firm.

திதனி *tidaṉi,* பெ. (n.) திதலை¹ பார்க்க; see *tidalai.* "ஆகத்தா யெழிற் றிதனி" *(கலித். 14).*

திதி-த்தல் *tidi,* செ.கு.வி (v.i.) தித்தி பார்க்க; see *titi.*

திதை-தல் *tidai,* செகு.வி. (v.i.) பரவுதல்; to spread. "திதையுந் தாது தேனுஞ் ஞிமிறும்" *(தேவா. 395, 5).*

திந்தி tindi, பெ. (n.) இனிப்பு; sweetness.

திந்திகத்திரிப்பழம் *tindi-kattiri-p-paḻam,* பெ. (n.) இனிப்புச் சுவையுடைய கத்திரிப்பழம்; a kind of fruit.

திந்திடம் *tindiḍam,* பெ. (n.) *1.* புளி (மலை) பார்க்க; see *puḷi. 2.* புளியமரம்; tamarind tree. *3.* இனிப்புப் புளியமரம்; sweet tamarind.

திந்திடிகை *tindigai,* பெ. (n.) திந்திடம் பார்க்க; see *tindiḍigam.*

திந்திடீகம் *tindiḍigam,* பெ. (n.) புளி (சூடா.) பார்க்க; see *puḷi.*

தித்திப்பிச்சி *titti-p-picci,* பெ. (n.) நாணல்; reed.

திந்திருணி *tindiruṇi,* பெ. (n.) *1.* புளி (திவா. பார்க்க; tamarind. *2.* புளியமரம்; tamarind tree. *3.* புளியாரை; sour sorrel.

திந்திருணிக்குழம்பு *tindiruṇi-k-kuḻambu,* பெ. (n.) புளிக்குழம்பு; sauce of tamarind fruit.

திந்து *tindu,* பெ. (n.) 1. கருங்காலி; ebony. 2. எட்டி; nukuomica. 3. திந்திகம் பார்க்க.

திநாரம் *tinäram,* பெ. (n.) பொன்னகை வகை; a gold coin. "நூறு திநாரந் தண்டப் படுவது" (T.A.S. ii, 13).

திப்பம் *tippam,* பெ. (n.) திப்பிலி (சங்அக.) பார்க்க; see *tippali.*

திப்பலி *tippali,* பெ. (n.) மருந்துக்கொடி வகை (பதார்த்த. 954); long pepper.

திப்பலிக்கட்டை *tippali-k-kaṭṭai,* பெ. (n.) கண்டதிப்பலி (வின்.); long pepper vine, used for medicinal purpose.

[திப்பலி + கட்டை]

திப்பலிக்கொச்சிக்காய் *tippali-k-kocci-k-käy,* பெ. (n.) ஒரு வகைச் சிறுமிளகாய் (யாழ்அக.); a kind of small chillies.

[திப்பலி + கொச்சிக்காய்]

திப்பலியரிசி *tippali-y-arici,* பெ. (n.) திப்பலிக்காய் (வின்.); long pepper.

[திப்பலி + அரிசி]

திப்பாயம் *tippäyam,* பெ. (n.) ஓமம்; Bishop's weed.

திப்பி[1] *tippi,* பெ. (n.) 1. வாயகன்ற சிறு மண் சட்டி; shallow earthen vessel with a wide mouth. 2. கொட்டங்காய்ச்சியகப்பை; piece of a coconut shell, used as a ladle.

T. cippa.



திப்பி[2] *tippi,* பெ. (n.) 1. கோது; dregs, refuse of anything from which the juice has been squeezed out. 2. வடிகட்டியபின் அடியிற் தங்கி நிற்கும் வண்டல்; sediment at the bottom of an oil pot.

T. pippi.

திப்பி[3] *tippi,* பெ. (n.) பன்னிரண்டு மலங்கள்; 12 kinds of refuses and excretions (சாஅக.).

திப்பிச்சோறு *tippi-c-cōṟu,* பெ. (n.) சாரத்தைப் பிழிந்தெடுத்த சோறு; refuse of boiled rice from which the juice or essence in squeezed out.

[திப்பி + சோறு]

திப்பிதை-த்தல் *tippi-dai-,* செகுன்றாவி. (v.i.) திரும்பித் தையலிடுதல் (இவ.); to stich back.

திப்பியகம் *tippiyagam,* பெ. (n.) ஓமம்; bishop's weed.

திப்பியம் *tippiyam,* பெ. (n.) 1. தெய்வத் தன்மையுடைய பொருள்; that -which is divine, sacred. "தெய்வங் கொல்லோ, திப்பியங் கொல்லோ" (மணி. 18, 84). 2. துறக்கம் (சுவர்க்கம்); heaven. "செய்கை யடங்குத றிப்பியமாம்" (திரிகடு. 43). 3. வியக்கத்தக்கது; that which is admirable. "பிச்சைப் பாத்திரங் கையினேந்தியது திப்பியம்" (மணி. 15, 70). 4. சிறந்தது (உவ.); that which is excellent. 5. ஒருவகை நெல்; a kind of paddy. "செந்தசாலி திப்பிய மென் றிவையகத் தறியுந்தண்கழனி" (தேவா. 700, 7).

திப்பியம் *tippiyam,* பெ. (n.) ஓமம் (மலை.); bishop's weed (செஅக.).

திப்பியன் *tippiyan,* பெ. (n.) தெய்வத் தன்மையுடையோன்; a divine person. "ஒப்பிறத்துவ மொருவிய திப்பியன்" (ஞானா. 48, 6).

திப்பிரமை *tippiramai,* பெ. (n.) 1. திசை தடுமாற்றம்; confusion regarding direction. 2. மனக்குழப்பம்; be wilderment, perplexity.

திப்பிருத்தை *tippiruttai,* பெ. (n.) கடற் காந்தள்; madagascan mangrow (சாஅக.).

திப்பிலாட்டம் *tippilāṭṭam,* பெ. (n.) திப்பிலியாட்டம்' பார்க்க; see *tippiliyāṭṭam*'.

திப்பிலி tippili, பெ. (n.) 1. திப்பலி பார்க்க; see *tippali.* "தீந்தேன் றிப்பிலி தேய்த்து" (சீவக. 2703) 2. திப்பிலிப்பனை பார்க்க; see *tippili-panai.*

திப்பிலிக்கட்டை *tippi-k-kaṭṭai,* பெ. (n.) கண்டத்திப்பிலி; root of long pepper.

[திப்பிலி + கட்டை]

திப்பிலிக்கள் *tippili-k-kaḷ,* பெ. (n.) மேற்கு மலைத் தொடர்ச்சியிலுள்ள முதுவரென்னுஞ் சாதியாரால் ஒருவகைப் பனையிலிருந்து இறக்கப்படுங் கள்; toddy extracted from a wild palm on the western ghats by the muthuvar tribe.

[திப்பிலி + கள்]

திப்பிலிக்கொச்சிக்காய் *tippili-k-kocci-k-kāy,* பெ. (n.) சிறுமிளகுக்காய்; small pepper fruit.

திப்பிலிக்கொடி *tippili-k-koḍi,* பெ. (n.) அரிசித் திப்பிலி; common long pepper.

[திப்பிலி + கொடி]

திப்பிலிக்கொம்மட்டி *tippili-k-kommaṭṭi,* பெ. (n.) பேய்க் கொம்மட்டி; devil on bitter water don.

[திப்பிலி + கொம்மட்டி]

திப்பிலிசுத்தி *tippili-cutti,* பெ. (n.) திப்பிலியைப் பழச்சாற்றில் ஊற வைத்து எடுத்தல்; purification a long pepper by soaking it in fruit juice.

திப்பிலித்தவயம் *tippili-tavayam,* பெ. (n.) 1. அரிசித்திப்பிலி; common long peper. 2. ஆனைத்திப்பிலி; elephant long pepper.

[திப்பிலி + தவயம்]

திப்பிலிநாரி *tippili-nari,* பெ. (n.) பூச்சிப் பகை (கிருமிச் சத்துரு)ச் செடி; a plant smelling of long pepper said to be vermifage.

திப்பிலிநாவல் *tippili-nāval,* பெ. (n.) அவந்தி நாவல்; Indian mulberry.

[திப்பிலி + நாவல்]

திப்பிலிப்பனை *tippili-p-paṉai,* பெ. (n.) பனைவகை; jaggery palm. ஈழப்பனை; wine palm of Srilanka.

[திப்பிலி + பனை]

திப்பிலியத்தி *tippiliy-aṭṭi,* பெ. (n.) ஆனைத் திப்பிலி; elephant long pepper.

திப்பிலியரிசி *tippili-aricci,* பெ. (n.) அரிசித் திப்பிலி பார்க்க; see *arici-t-tippilil.*

[திப்பிலி + அரிசி]

திப்பிலியாட்டம் *tippili-y-āṭṭam,* பெ. (n.) 1. பிறனைக் கிள்ளியும் அலைத்தும் ஆடும் விளையாட்டு வகை; a kind of play in which one teases, pinches, pulls the ears of another. 2. புதுமையான கேள்வி; puzzles, riddles. 3. பித்தலாட்டம்; deception, fraud.

[திப்பிலி + ஆட்டம்]

திப்பிலிவேர் *tippili-vēr,* பெ. (n.) கண்டத் திப்பிலி; bengal long pepper.

[திப்பிலி + வேர்]

திப்பை *tippai,* பெ. (n.) 1. மேடு (சினேந். 368, உரை); mound, elevated ground. 2. பருத்தது; that which is bulky (செ.அக.).

திபதிச்சம் *tipadiccam,* பெ. (n.) வாலுழுவை (மலை); black oil tree.

திபதை *tipadai,* பெ. (n.) இரண்டடிக் கண்ணி (இராமநா. பாலகா. 2); distich, couplet.

திபசு *tipacu,* பெ. (n.) வேங்கை மரம்; kino tree.

தி.பி. *t-pi,* பெ. (n.) திருவள்ளுருக்குப் பின்; திருவள்ளுவர்ஆண்டு பார்க்க; see *tiruvaḷḷuvar-āṇḍu.*

திம் *tim,* பெ. (n.) திக்கு (யாழ்.அக.); direction.

திம்பு *timbu,* பெ. (n.) செங்கத்தாரி; false peacon acor tree.

திம்மக்குரங்கு *timma-k-kuraṅgu,* பெ. (n.) திம்மன் (வின்.) பார்க்க; see *timman.* 2. ஒருவகை மாந்தக்குரங்கு; a man like monkey. 3. வாலில்லாக் குரங்கு; tail less monkey.

[திம்மன் + குரங்கு]

திம்மலி *timmali,* பெ. (n.) உடல் பருத்தவள் (யாழ்ப்); stout, strong woman.

திம்மன் *timman,* பெ. (n.) ஆண் குரங்கு வகை (வின்.); male of a species of monkey.

தெ. திம்மடு; க. திம்மன்.

திம்மை[1] *timmai,* பெ. (n.) *1.* பருமன் (இவ.); bulk, size. *2.* பொன்னிழை முதலியவற்றின் பந்து; ball, skein as gold thread. "சரிகைத் திம்மை" (வின்.)

தெ. திம்மெ.

திம்மை[2] *timmai,* பெ. (n.) திப்பிரமை (வின்.); insensibility.

திமி *timi,* பெ. (n.) பெருமீன் (திவா.); an aquatic animal of enormous size.

திமிகோடம் *timi-kōḍam,* பெ. (n.) கடல் (யாழ்.அக.); Sea.

திமிங்கிலகிலம் *timiṅgila-gilam,* பெ. (n.) திமிங்கிலத்தை விழுங்கக் கூடிய பெருமீன்; an aquatic animal believed to be large enough to swallow a timiṅgilam. "தேசமுநூலுஞ் சொல்லுந் திமிங்கில கிலங்களோடும்" (கம்பரா. கடவுறாலு. 38).

திமிங்கிலம் timi-ṅ-gilam, பெ. (n.) *1.* திமியை விழுங்கக்கூடிய பெருமீன் (சூடா.); an aquatic animal believed to be large enough to swallow a timi. *2.* பெருமீன் வகை; whale cetaceac (செ.அக.).

[திமி → திமிங்கிலம்]



திமிசடி-த்தல் *timisaḍi-,* செ.கு.வி. (v.i.) இளகிய தரையைத் திமிசுக்கட்டையால் கெட்டிப் படுத்துதல்; to ram, beat-loose earth to solidity.

[திமிசு + அடித்தல்]

திமிசம் *timišam,* பெ. (n.) திமிசு[1] பார்க்க (வின்); see *timišu.*

திமிசு[1] *timišu,* பெ. (n.) *1.* வேங்கை; East Indian kino. "சாரலந் திமிசிடைச் சாந்தனத் தழைவயின்" (சீவக. 1901). *2.* வச்சிரவேங்கை; Andamans red wood.

திமிசு[2] *timišu,* பெ. (n.) இளகிய தரையை கெட்டிக்கும் கட்டை; rammer.

திமிசுக்கட்டை *timišu-k-kaṭṭai,* பெ. (n.) திமிசு[2] பார்க்க; see *timišu*[2].



திமிசுசெய்-தல் *timišu-cey-,* செ.கு.வி. (v.i.) திமிசடி பார்க்க; see *timišadi.*

திமிசுபோடு-தல் *timišu-pōḍu-,* செ.குன்றாவி. (v.i.) திமிசடி பார்க்க; see *timišaḍi.*

திமிதகுமுதம் *timida-kumudam,* பெ. (n.) *1.* இரைச்சல்; noise, stir, bustle. *2.* மகிழ்ச்சி; joy, mirth joviality. *3.* மிகுதி; abundance, plenty. *4.* ஊதாரித்தனம்; extravagance.

திமிதகூதளம் *timita-kūtalam,* பெ. (n.) சிவப்பு ஆதலை அதாவது செவ்வாமணக்கு; a red variety of castor plant.

திமிதம்[1] *timidam,* பெ. (n.) *1.* பேரொலி; noise, bustle. *2.* குதித்தாடுகை; dancing. "கூத்தரிற் றிமிதமிட்டு" (கம்பரா. சேது. ப. 42).

[திமி → திமிதம்]

திமிதம்[2] *timidam,* பெ. (n.) ஈரம் (யாழ்.அக.); dampness.

திமிதம்[3] *timidam,* பெ. (n.) உறுதி (யாழ்.அக.); stability.

திமிதம்போடு-தல் *timidam-pōḍu-,* செகுவி. (v.i.) திமிதமிடு-தல் (யாழ்.அக.) பார்க்க; see *timidamiḍu-*.

[திமிதம் + போடு-.]

திமிதமிடு-தல் *timidam-iḍu-,* செகுவி. (v.i.) களித்தல் (வின்.); to be merry, jovial, jolly noisy.

[திமிதம் + இடுதல்]

திமிதிமி *timi-dimi,* பெ. (n.) *1.* தாளங் குறிக்குஞ்சொல் (வின்.); syllable sung to keep time in dancing. *2.* திமிங்கிலம்; whale.

T. dimidimi

திமிதிமி[2] *timi-dimi,* பெ. (n.) திமிங்கிலம் (வின்.) பார்க்க; see *timiṅgalam.*

திமிதிமியெனல் *timi-dimi-y-eṉal,* பெ. (n.) *1.* தாளக்குறிப்பு; keeping time in dancing or music. *2.* கூட்டத்தொலிக்குறிப்பு; bustle of agreat crowed. *3.* விரைவுக்குறிப்பு; repeated sounds in rapid succession.

திமிநெய் *timi-ney,* பெ. (n.) திமிங்கிலநெய் பார்க்க; see *timiṅkila-ney.*

திமிர்[1]**-தல்** *timir-,* செகுன்றாவி. (v.i.) *1.* பூசுதல்; to smear, as sandal peste. "சாந்தந்திமிர்வோர்" *(மணி. 19, 86). 2.* தடவுதல்; to rub. "ஈர்ங்கை விற்புறந் திமிரி" *(புறநா. 258). 3.* அப்புதல்; to apply to, as a flower to the skin. "பொரிப்பூம் புன்கின் முறிதிமிர் பொழுதே" *(ஐங்குறு. 347). 4.* வாரியிறைத்தல்; to throw or scatter, as on one'sbody. "கையிடை வைத்தது மெய்யிடைத் திமிரும்" *(நற். 360).* செகுவி. (v.i.); *1.* ஒலித்தல் (சூடா.); to sound, resound. *2.* வளர்தல் (வின்.); to grow, increase, become more intense M.timiruka. *3.* நடுக்கமடைதல்; to tremble, shake. "நிலைதளாந் துடலந் திமிர்ந்து வேர் வரும்பி" *(திருவிளை. நாக. 19).*

திமிர்[2]**-த்தல்** *timir-,* செகுவி. (v.i.) *1.* தடவுதல்; to rub, besmear. "வறுவலுக்கு மிளகாயப் பொடி திமிர்த்து வைக்க வேண்டும்" *2.* தீர்மானித்தல்; to determine. "அணைத்தபோதை பர்சத்தாலே திமிர்த்துச் சொல்லுகிறார்" *(ஈடு. 2.6.2). 3.* அடித்தல்; to beat. "கூழையங் குறுநரியுடையோர் திமிர்ப்ப" *(கல்லா. 89, 19). 4.* குலுக்குதல்; to shake. திமிர்த்தி வைத்தான். *5.* அருவருத்தல் (யாழ்.); to loathe, as food.

திமிர்[3] *timir-,* பெ. (n.) *1.* மரத்துப்போகை; numbness. தெ. திமிரி, ம. திமிர். *2.* குளிராலுண்டாம் விறைப்பு; stiffness from cold. *3.* சோம்பல் (வின்.); dullness, sluggishness of the system from idleness. *4.* திமிர்வாதம் பார்க்க; *5.* அறிவுடல்களின் சோர்வு; partial suspension of the bodly and mental powers, from consternation, from taking an anaesthetic, anaesthesia. *6.* உடற்கொழுப்பு; obesity. *7.* மனக்கொழுப்பு (உவ.); hautuer,wantonness. தெ. திமிரு. *8.* மதம்; sexual excitment. *9.* மயக்கம்; dizziness. *10.* வலியின்மை; absence of pain.

திமிர்[4]**-த்தல்** *timir-,* செகுன்றாவி. (v.i.) *1.* கால் முதலியன மரத்தல்; to be numbed, as a limb; to be paralysed. *2.* கொழுத்துத்தடித்தல்; to grow stout from obesity. *3.* பித்துப்பிடித்தல்; to be stupefied, dumb-founded.

திமிர்கொண்டாடு-தல் *timir-koṇḍāḍu,* செகுவி. (v.i.) தொந்தரவு செய்தல் (வின்.); to be employed in mischief.

[திமிர் + கொண்டாடு-]

திமிர்கொள்ளல் *timir-koḷḷal,* பெ. (n.) உணர்ச்சியுறல்; being deprived of sensation becoming senseless and motionless. *2.* மதங் கொள்ளல்; becoming sexually excited.

[திமிர் + கொள்ளல்]

திமிர்க்கிரந்தி *timir-k-kiranti,* பெ. (n.) உணர்ச்சியுறச் செய்யும் ஒரு வகைக் கிரந்திப் புண்; sore or ulcertation attended with numbness or less of feeling of pain.

[திமிர் + கிரந்தி]

திமிர்க்குட்டம் *timir-k-kuṭṭam,* பெ. (n.) கை கால்களில் சுரணையற்றுக் காணும் ஒரு வகைக் குட்ட நோய்; leprosy attended with loss of sensation anesthelic leprosy.

[திமிர் + குட்டம்]

திமிர்ச்சி timircci, பெ. (n.) திமிர்ப்பு பார்க்க; timirppu. 2. திமிராயிருத்தல்; the state of remaining benumbed.

[திமிர் → திமிர்ச்சி]

திமிர்த்திரு-த்தல் *timirttiru-*, செ.குன்றாவி. (v.i.) திமிராகவிருத்தல்; toremaing benumbed.

[திமிர்த்து + இரு-.]

திமிர்த்துப்போ-தல் *timirttu-p-po-*, பெ. (n.) அதிகமாக ஊதை கொள்ளல்; to get affected with too much of vayu in the system.

[திமிர்த்து + போ-.]

திமிர்த்துவை-த்தல் *timirttu-vai-*, செ.குன்றாவி. (v.i.) குலுக்கி அளவை நிறைத்தல் (வின்.); to shake and fill a measure.

திமிர்தம் *timirdam*, பெ. (n.) பேரொலி (சது.); sound, great noise. "திமிர்தமிடு கடலதென" (திருப்பு. 180). 2. எச்சில்; spit. 3. ஒலி; sound.

திமிர்தல் *timirdal*, பெ. (n.) 1. பூசுதல்; smearing. 2. வளர்தல்; becoming more intense (சா.அக.).

திமிர்நஞ்சு *timir-nañcu*, பெ. (n.) எலும்புகளி னின்று எடுக்கும் ஒரு வகை நஞ்சு; இது தீப்பற்றி எரியும்; a poisonous element highly inflammable obtained from bones phosphorous.

[திமிர் + நஞ்சு]

திமிர்நோய் *timir-nōy*, பெ. (n.) தொடு உணர்வற்றிருக்கும் ஒரு வகை நோய்; loss of feeling or sensation.

[திமிர் + நோய்]

திமிர்ப்படலம் *timir-p-paḍalam*, பெ. (n.) கருவிழியின் சவ்வைப் பற்றிய ஒருவகை நோய்; a disease of the films over the pupil marked by thin growth of flesh.

[திமிர் + படலம்]

திமிர்படு-த்தல் timir-p-paḍu-, பெ. (n.) 1. உணர்ச்சியறும்படிச் செய்தல்; to put under the influence of anesthetics. 2. உதவாமற் போகும்படி செய்தல்; reducing to a helpless state - paralysing.

[திமிர் + படு-.]

திமிர்ப்படுத்துகை timir-p-paduttugai, பெ. (n.) 1. நோவில்லாமற் செய்தல்; production of insensibility to pain. 2. பயன்படாதபடி செய்தல்; the act of rendering useless by destroying the power of action.

[திமிர் + படுத்துகை]

திமிர்பிடித்தல் *timir-p-piḍittal*, பெ. (n.) திமிரெடுத்தல் பார்க்க; see *timireḍuttal*.

[திமிர் + பிடித்தல்]

திமிர்ப்பித்தம் *timir-p-pittam*, பெ. (n.) உடம்பு முழுமையும் திமிர்த்து, கனத்து, மயக்கமும் வாந்தியும் உண்டாக்கும் ஒரு வகை நோய்; a kind of biliausness marked by drowsiness, malaise, giddiness followed by vomitting.

[திமிர் + பித்தம்]

திமிர்ப்பு *timirppu*, பெ. (n.) திமிர்ச்சி; insensibility to pain.

[திமிர் → திமிர்ப்பு]

திமிர்ப்புழு *timir-p-pulu*, பெ. (n.) 1. மலக் குடலில் இருக்கும் புழு; worms in the intestines. 2. கருக் கொள்ளாமற் செய்யுந்தன்மை யுள்ள ஒரு வகைப் புழு; some kind of worm which prevents conceiving.

[திமிர் + புழு]

திமிர்ப்பூச்சி *timir-p-pūcci*, பெ. (n.) வயிற்றுச் சிறுபுழு (வின்.); small thread worm.

[திமிர் + பூச்சி]

திமிர்ப்பிடி-த்தல் *timir-piḍi-*, செ.குன்றாவி. (v.i.) 1. மரத்தல்; to become numb. 2. கொழுத்தல்; to become corpulent, as the body. 3. செருக் குறுதல்; to become haughty.

[திமிர் + பிடி-.]

திமிர்முறித்தல் *timir-murittal*, பெ. (n.) திமிர் விடுதல்; the act of stretching and yawning.

[திமிர் + முறித்தல்]

திமிர்முறுக்கு *timir-murukku*, பெ. (n.) ஊதையினால் உடம்பிற்கேற்படும் ஒரு நிலைமை; a condition of the body in which one in prompted by acts stretching and yawning

especially when the system is charged with vayu or vatham.

[திமிர் + முறுக்கு]

திமிர்மொய்த்தல் *timir-moyttal,* பெ. (n.) விரைப்புக் கொள்ளுதல்; growing stiff, stiffening.

[திமிர் + மொய்த்தல்]

திமிர்வரி *timir-vari,* பெ. (n.) தண்டவரி; punitive tax.

[திமிர் + வரி]

திமிர்வளி *timirvaḷi,* பெ. (n.) 1. பக்க ஊதை; palsy, paralysis. 2. ஊதை(வாதம்)நோய்; rheumatism, neuritis. (தைலவ. தைல. 9).

[திமிர் + வளி]

திமிர்வாதக்கரப்பான் *timir-vāda-k-karappāṉ,* பெ. (n.) குழந்தைகளுக்குத் தலை கனத்து, தொண்டை எரிந்து திமிருண்டாகி, உடம்பின் வலுவைக் குறைத்து, அதனால் மேல் மூச்செறிந்து, கடுமையாகக் காணும் ஒரு வகைக் கரப்பான்; a congenital disease in children characterised by heaviness of head, burning sensation in the throat, rigidity of muscles, weakness, hard breating and other symptoms of severity.

[திமிர் + வாதக்கரப்பான்]

திமிர்வாதக்காரன் timirvādakkāraṉ, பெ. (n.) பாரிச ஊதை கொண்டோன்; a paralytic man, one struck with paralysis or palsy.

[திமிர் + வாதக்காரன்]

திமிர்வாயு *timir-vāyu,* பெ. (n.) திமிர்வளி பார்க்க; see *timir-vaḷi.*

திமிர்விடு-தல் *timir-viḍu-,* செ.கு.வி. (v.i.) சோம்பல் முறித்தல்; to stretch and yawn from sleepiness.

[திமிர் + விடு-.]

திமிரக்கடவி *timira-k-kaḍavi,* பெ. (n.) சீந்தில்; moon creeper.

திமிரகத்துந்தீரன் *timiragattutīraṉ,* பெ. (n.) செவ்வியம்; root of black pepper.

திமிரகரி *timirakari,* பெ. (n.) கண் திமிரத்தைப் போக்கக்கூடிய பூடு. அதாவது ஆவாரை; tarrers cassia which is capable of curing opthalmia or country sore eye.

திமிரகாசம் *timira-kāsam,* பெ. (n.) கண் நோய் வகை; darkness of the eye, gutta serena producing an affection of the optic nerves.

திமிரத்தல் *timirattal,* செ.கு.வி. (v.i.) அதிகமாக வளி கொள்ளல்; being affected with too much of vayu in the system. 2. திமிர் அடைதல்; growing benumbed.

திமிரதம் *timiradam,* பெ. (n.) கண் மறைப்பு; partial sight.

திமிரநயனம் *timiranayaṉam,* பெ. (n.) அரைக் குருடு; partial blindness of the eye.

திமிரபேதம் *timirapētam,* பெ. (n.) 1. வெள் ளெழுத்து; short sight. 2. மாலைக்கண்; night blindness. 3, மந்தாரத் திமிரம்; dullness of sight. 4. வறட்சித் திமிரம்; dryness of eyes. 5. நீர்த்திமிரம். 6. கோழை (சிலேட்டுமம)த் திமிரம். 7. மேகத்திமிரம், 8. விழிவிழுங்கி வெள்ளி (சுக்கிரன்); different varieties of the timiram. they are as stated above.

திமிரம் *timiram,* பெ. (n.) 1. இருள்; darkness, obsecurity, gloom. "விலகியது திமிரம்" (கம்பரா. மூலம். 161). 2. இரவு; night (பிங்.). 3. கருநிறம்; blackness, dark colour. "திமிர மாவுடற் குங்குமச் சேதகந் திமிர" (கம்பரா. வரைஞ். 56). 4. நிரையம் (நரகம்) (அக.நி.); hell. 5. திமிரகாசம் (வின்) பார்க்க; 6. ஒரு வகைக் கண்ணோய்; an eye disease. 7. விழிக் கண்கூடு; blindness without any visible defect due to diseases.

திமிரம் *timiram,* பெ. (n.) மாயை; māyā. "திமிரக் கொடும் பிணியாற் றேகமெரி வானேனே" (கதிரை மலை. காதல். 5).

திமிரன் *timiraṉ,* பெ. (n.) மந்தன்; dull, slow, inactive person or beast.

[திமிர் + அன்]

திமிராகரன் *timirākaraṉ,* பெ. (n.) அறிவிலி (இருளுக்கு இருப்பிடமானவன்); fool, idiot, as

being a mine of darkness and delusion. "ஒருகாலு நினையாத திமிராகரனை வாவென்று" (திருப்பு. 189).

திமிராயிரு-த்தல் *timirāy-iru-*, செகு.வி. (v.i.) உணர்ச்சியற்று இருத்தல்; being deprived of feeling or affected with palsy.

[திமிராய் + இரு-.]

திமிராரி timirari, பெ. (n.) கதிரவன் (இருளின் பகைவன்) (சூடா.); sun, as the foe of darkness.

திமிராளி timirāḷi, பெ. (n.) 1. பக்க ஊதைக் (வாத)காரன்; paralytic patient. 2. சோம்பேறி; sluggish person.

[திமிர் + ஆள்]

திமிரேறல் timirēṟal, செ.கு.வி. (v.i.) திமிர் கொள்ளல்; being affected by palsy.

திமிரித்து வாலையிடு-தல் *timirittu-vālai-iḍu*, பெ. (n.) மருந்திட்டுத் தேய்த்தல்; to apply ointment and rubbing well on the body (சா.அக.).

திமிரியாடி *timiriyāḍi*, பெ. (n.) கழுத்து; neck.

திமிரூதை *timirūdai*, பெ. (n.) 1. உடல் மரத்துப் போவதால் உண்டாகும் நோய் வகை; a kind of spasm proceeding from numbness. 2. உடற் கொழுப்பால் ஏற்படும் மந்தஅறிவு; mental sluggishness accompanying corpulence. 3. திமிர்வளி பார்க்க (உவ.); see *timirvaḷi*.

திமிரெடு-த்தல் *timireḍu-*, செ.கு.வி. (v.i.) 1. திமிர்வளி கொள்ளல்; being affected by palsy. 2. உணர்ச்சியறல்; becoming insensible and motionless (சா.அக.).

திமில்[1] *timil*, பெ. (n.) 1. மீன் படகு; catamaran, small boat. "திண்டிமில் வன்பரதவர்" (புறநா. 24). 2. மரக்கலம் (யாழ்ப்.); vessel, ship. 3. எருத்தின் முரிப்பு; hump, as of a bullock. "திமிலுடைச்சே" (உடதேசகா. சிவபுண்ணிய. 144). 4. வேங்கை (மலை); East Indian kino.

திமில்[2] *timil*, பெ. (n.) திமிலம்[1] பார்க்க; see *timilam*. "திமிலிடுகின்ற தொல் சேடிமாருடன்" (கந்தபு. உமைவரு. 20).

திமில்வாழ்நர் *timil-vāḻnar*, பெ. (n.). செம்படவர் (படகுக்காரர்); fisherman as boatman. "திமில் வாழ்நர் சீறூர்க்கே" (சிலப். 7, 11, கயலெழுதி).

[திமில் + வாழ்நர்]

திமிலம்[1] *timilam*, பெ. (n.). பேரொலி; great-noise, tumult. "திமிலநான் மறைசேர் திருப் பெருந்துறையில்" (திருவாச. 29, 4).

திமிலம்[2] *timilam*, பெ. (n.) 1. பெருமீன் வகை (பிங்.); a kind of big fish. 2. யானைமீன்; a sea fish of gigantic size usually considered to be capable of devouring elephants.



திமிலர் *timilar*, பெ. (n.). 1. நெய்தனில மாக்கள்; fishermen, inhabitants of the maritime tract. "பாய்திமிலர் வலையோடு மீன்வாரீ" (தேவா. 532, 2).

[திமில் → திமிலர்]

திமிலி timili, பெ. (n.) 1. உடல் தடித்தவள் (இவ.); stout, corpulant woman. 2. வேங்கை மரம்; East Indian kino tree.

திமிலிடு-தல் *timil-iḍu-*, செ.கு.வி. (v.i.) மிக ஒலித்தல் (யாழ்ப்); to make a great noise; to clamour, roar.

[திமில் → இடுதல்]

திமிலை[1] *timilai*, பெ. (n.) 1. ஒரு வகைப் பறை (சிலப். 3, 27, உரை); a kind of drum. 2. திருக்கை பார்க்க; see *tirukkai*, electrical ray. 3. மங்கற் சிவப்பு நிறமுள்ளதும் 10 விரல நீளம் வளர்வதுமான கடல் மீன்வகை; sea fish, dull reddish olive, attaining 10 in. in length (செ.அக.).

[திமில் → திமிலை]

திமிலை² *timilai,* பெ. (n.) ஒரு மீன். மூக்குத் துளையையொட்டிக் கண் அமைந்துள்ள இம்மீனின் உடலமைப்பு சுறாவைப் போன்றது. கையினின்றும் எளிதில் வழுக்குத் தன்மையது (தஞ்சை. மீன்.); a fish which eyes are situated near its nosbilly and rosembles shark by its structure. It slips easily from hand.

திமிலைத்திருக்கை *timilai-t-tirukkai,* பெ. (n.) திமிலை ஒத்த முகமுடைய திருக்கை மீன்; a kind of ray-fish.

[திமிலை → திருக்கை]



திமிலைப்பாம்பு *timilai-p-pāmpu,* பெ. (n.) திமிலைப் போன்ற தோற்றத்தில் காணப்படும் நச்சுத்தன்மையுள்ள கடற்பாம்பு (தஞ்சைமீன்.); a kind of sea snake.

[திமிலை + பாம்பு]

திமிலோகப்படு-தல் *timilōga-p-paḍu-,* பெ. (n.) தடபுடலாயிருத்தல்; to be perf ormed with great eclat.

திமிறல் *timiṟal,* பெ. (n.) திமிறிடு-தல் பார்க்க; see *timiridu-.*

[திமிர் + அல்]

திமிறிடு-தல் *timiriḍu-,* 1. தேய்த்தல்; rubbing. 2. பறித்தல்; plucking. 3. வளர்த்தல்; growing.

திமிறியடி-த்தல் *timiṟi-y-aḍi-,* செ.கு.வி. (v.i.) 1. ஒருவன் பிடிப்பினின்றும் விடுவித்துக் கொள்ளுதல்; to wrench onesef from another's grip. 2. எதிர்த்துப்பேசுதல்; to contradict or oppose with vehemence. 3. குளிர்காற்றால் நடுக்க மிகுதல்; to be violent as the quaking due to ague.

[திமிறி + அடி-]

திமிறு-தல் *timiṟu-,* செகுன்றாவி. (v.t.) 1. வலிந்து தன்னைப் பிறரிடமிருந்து விடுவித்தல்; to wriggle out of another's grip. 2. நீண்டு வளருதல்; to grow tall and big. "ஆள் இப்போது திமிறிப் போய்விட்டான்" 3. மா முதலியன சிந்துதல் (யாழ்ப்.); to be scattered, spilled, as flour in pounding.

[திமிர் → திமிறு]

தி.மு. *t.mu.,* பெ. (n.) திருவள்ளுவராண்டு பார்க்க; see *tiruvaḷḷuvarāṇḍu.*

திமுதிமுவெனல் *timu-timu-v-eṉal,* பெ. (n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. of repeated thumping or beating sound (செ.அக.).

திமை-த்தல் *timai-,* செ.குன்றாவி. (v.t.) கிளப்புதல் (சது.); to raise up, lift, as stones.

தியக்கடி *tiyakkaḍi,* பெ. (n.) சோர்வு (வின்.); faintness, exhaustion.

[தியங்கடி → தியக்கடி]

தியக்கம் *tiyakkam,* பெ. (n.) 1. சோர்வு; faintness, exhausinion, drooping, as from hunger or heat தியக்கமற வின்பசுகஞ் சேர்வதென்றோ (தாயு. பெற்றவட். 5). 2. மயக்கம் (வின்.); swoon, loss of the senses syncope. 3. அறிவுக்கலக்கம் (உ.வ.); bewilderment, delusion. 4. மனக்குழப்பம் (வின்.); meloncholy, dejection, pensiveness.

[தியங்கு + அம்]

தியக்கு¹ *tiyakku,* பெ. (n.) தியக்கம் (சது) பார்க்க; see *tiyakkam.*

தியக்கு²-தல் *tiyakku-,* செ.குன்றாவி. (v.t.) மயங்கச் செய்தல்; to cause confusion, to conf ound. "சிறியனேனை நீர்தியக்குத வழகோ" (அருட்பா. 2. நாடகவின். 10).

தியக்கோன் *tiyakkōṉ,* பெ. (n.) பூசைப் (பரிசாரகன்); deacon (செ.அக.).

தியக்கோனாடை *tiyakkōṉ-āḍai,* பெ. (n.) *கிறித்தவத்துறவியரின் குப்பாய வகை;* wide-sleeved coat of bishops, etc., surplice.

தியங்கு-தல் *tiyaṅgu-,* செ.கு.வி. (v.i.) *1. சோர்தல்;* to faint, droop, languish. *2. மனக் கலக்கமுறுதல்;* to be dejected, pensive, sad. "அசுரேசர் வாசல்கள் சென்று நின்று தியங்கியே" *(சிவரக. தேவியுடன்-11). 3. அறிவு மயங்குதல்;* to be confounded, deluded.

தியங்குவிழல் *tiyaṅku-viḻal,* செகு.வி.. (v.i.) *மூர்ச்சையாதல்;* fainting *(சா.அக.).*

தியசம் *tiyašam,* பெ. (n.) *மரஞ்சன் (மலை);* tree turmeric *(செ.அக.).*

தியதி *tiyadi,* பெ. (n.) *தேதி;* date. "கற்கடக ஞாயிற்று அஞ்சாந்திய தியும்" *(TAS i, 252).*

M. tiyyadi.

தியந்தி *tiyandi,* பெ. (n.) *திராய் (மலை) பார்க்க;* see *tirāy.*

தியம்பகன் *tiyampagaṉ,* பெ. (n.) *திரயம்பகன் பார்க்க;* see *tirayampagaṉ.* "தியம்பகன் திரிசூலத்தன்ன கையன்" *(தேவா. 30, 8).*

தியரடி *tiyaradi,* பெ. (n.) *தியக்கடி (மலை) பார்க்க;* see *tiyakkaḍi.*

தியாக்கர் *tiyākkar,* பெ. (n.) *தியக்கோன் பார்க்க;* see *tiyakkōn (செ.அக.).*

தியாகப்பள்ளு *tiyāga-p-paḷḷu,* பெ. (n.) *திருவாரூர்ப்பள்ளு பார்க்க;* see *tiruvārūr-p-paḷḷu (செ.அக.).*

[தியாகர் + பள்ளு]

தியைபி *tiyaibi,* பெ. (n.) *திப்பிலி;* long pepper.

திரக்காரவஞ்சி *tirakkāravañci,* பெ. (n.) *சிறு களா;* bengal current.

திரக்கிரணி *tirakkiraṇi,* பெ. (n.) *பிரண்டை (மலை.);* square stalked wild grape.

திரக்கு[1]-தல் *tirakku-,* செ.கு.வி. (v.i.) *சுருங்குதல்;* to be crumpled; to shrivel, wrinkle. "திரக்குவிரற் கழுதுக்கு" *(பதினொ. பொன்வண். 75).*

திரக்கு[2]-தல் *tirakku-,* செ.குன்றாவி. (v.t); *தேடுதல்;* to search; to enquire "ஊரெங்கும் திரக்கியும் கள்ளப்பயல் அகப்பட வில்லை" *(நாஞ்.)*

ம. திரக்குக

[திரங்கு → திரக்கு]

திரக்கு[2] *tirakku,* பெ. (n.) *கூட்டம்;* crowed. "திருவிழாத் திரக்கில் தவறின குழந்தையைக் காண முடியாது" *(நாஞ்.)*

திரகதாரு *tiraka-tāru,* பெ. (n.) *நிலப்பனை;* ground palm.

திரகம் *tiragam,* பெ. (n.) *திரக்கம் (மலை) பார்க்க;* see *tirakkam.*

திரகமூலகம் *tiragamūlagam,* பெ. (n.) *திரகமூலம் (வின்) பார்க்க;* see *tiraga-mūlam.*

திரகமூலம் *tiragamūlam,* பெ. (n.) *முடக் கொற்றான் (மலை) பார்க்க;* see *muḍakkoṟṟāṉ.*

திரகலூமம் *tiragalūmam,* பெ. (n.) *வேதாரு (மலை.);* red cedar. *2. செம்புளிச்சை;* Indian or red sorrel.

திரகவூர்தி *tiraga-vūrti,* பெ. (n.) *காட்டுப் பலா;* wild jack.

திரங்கம்[1] *tiraṅgam,* பெ. (n.) *1. மிளகு (மலை) பார்க்க;* see black pepper. *2. காட்டு மிளகாய்;* wild chilli.

[திரங்கு → திரங்கம்]

திரங்கம்[2] *tiraṅgam,* பெ. (n.) *நகரம் (யாழ்.அக.);* town, city.

M. tirakku

[திரங்கு → திரங்கம்]

திரங்கல் *tiraṅgal,* பெ. (n.) *1. சுருங்குகை;* being shrivelled, wrinkling, crumpling. "திரங்கன் முகுவன்" *(தேவா. 1155, 3). 2. திரங்கம்1 (சூடா) பார்க்க; 3. முத்துக்குற்றவகை;* a flaw in pearls. "சுப்பிரமும் திரங்கலும் உடையன உட்பட்ட முத்து ஒன்பதினால் *(S.I.I.ii, 78). 4. அகவை மிகுதியால் தோல் சுருக்கமடைதல்;* shrinking of the skin through old age. *5. மிளகு;* black pepper.

[திரங்கு → திரங்கல்]

திரங்கலம் *tirangalam,* பெ. (n.) திரங்கம்1 (மலை) பார்க்க; see *toramga.*

திரங்கன்முகவன் *tirangan-mugavan,* பெ. (n.) குரங்கு (சுருங்கின முகத்தோன்); monkey as having puckered face. "திரங்கன் முகவன் சேர்காவும் பொழிலும்" (தேவா. 1155, 3).

[திரங்கன் + முகம்]

திரங்கு-தல் *tirangu-,* செ.குவி. (v.i.) 1. வற்றிச் சுருங்குதல்; to be wrinkled, crumpled. "தெங்கின் மடல்போற் றிரங்கி" (மணி. 20, 53). 2. உலர்தல்; to dry up, as dead leaves. "திரங்கு மரனாரிற் பொலியச் சூடி" (மலைபடு. 431). 3. சுருளுதல்; to be folded in, as the fingers of a closed hand; to be curled up, as the hair. "திரங்கு செஞ்சடை கட்டிய செய்வினைக்கு" (கம்பரா. காட்சி. 25). 4. தளர்தல்; to faint, droop. "மடமா னம்பிணை மறியொடு திரங்கு" (ஐங்குறு. 326).

திரட்கோரை *tirat-korai,* பெ. (n.) பஞ்சாய்க் கோரை (பிங்.); a kind of sedge, cyperus rotundus tuberoscus. 2. கச்சற்கோரை; bitte sedge gram. 3. கஞ்சாங்கோரை; persian tooly or white basil

[திரள் + கோரை]

திரட்சி *tiratci,* பெ. (n.) 1. உருண்டை வடிவம்; globularity, rotundity. 2. கூட்டம்; multitude, assemblage. "திரட்சி விரும்பக் கையாலே பாத்திரத் தையிருத்திய" (பு.வெ. 3, 5, உரை). 3. முத்து (உரி.நி.); pearl.

[தில் → திர் → திரள் → திரட்சி (வே.சொ.க. பக். 262).]

திரட்டடைப்பன் *tirattataippan,* பெ. (n.) மாட்டு நோய் வகை (மாட்டுவரி. 3); a kind of cattle disease.

[திரட்டு + அடைப்பன்]

திரட்டல் *tirattal,* பெ. (n.) திரட்டு-தல் பார்க்க; see *tirattu-.*

[திரள் → திரட்டல்]

திரட்டிக்கோவை *tiratti-k-kovai,* பெ. (n.) கோவைக்கொடி; Indian caper (சா.அக.).

[திரட்டு + கோவை]

திரட்டியீரல்முட்டி *tiratti-y-iral-mutti,* பெ. (n.) மாட்டுநோய் வகை (மாட்டுவா. 92); a kind of cattle disease.

[திரட்டு + ஈரல் + முட்டி]

திரட்டு[1]-தல் *tirattu-,* செ.குன்றாவி. (v.i.) 1. உருண்டையாக்குதல்; a make round lumps or balls, as of boiled rice, towork into round masses as pills; tomake round or conical, as a turner with lathe. "விளங்காய் திரட்டினா ரில்லை" (நாடி, 103) (M. tirattuka). 2. ஒன்று கூட்டுதல்; to collect, as taxes; to bring together, muster, gather as men, troops. "படை திரட்டினார்கள்" 3. கலத்தல்; to mix. "திருமுலைப் பாலினோடு ஞானமுந் திரட்டி" (திருவிளை. பாண்டியன். புரந்20). 4. குவித்தல்; to heap up, as grrain; to amass, as wealth. 5. தொகுத்தல்; to compile from various authors, incorporate, embody. 6. சுருக்குதல்; to state succinctly. 7. கட்டுதல்; to construct, as dikes in rice fields "வரம்பு திரட்டுகிறார்கள்" (இவ.).

[திரள் → திரட்டுதல்]

திரட்டு[2] *tirattu-,* பெ. (n.) 1. திரட்டுகை; gathering, accumulation. 2. தொகை நூல்; compilation. "பெருந்திரட்டு, குறுந்திரட்டு" 3. கண்டக் காய்ச்சிய மருந்து; a medicine which has been strengthened by the evaporation of its nonactive parts.

[திரள் → திரட்டு]

திரட்டு[3] *tirattu-,* பெ. (n.) (இருது) பெண் பூப்பெய்தல் (யாழ்.அக.); puberty of girls.

திரட்டுக்கலியாணம் *tirattu-k-kaliyanam,* பெ. (n.) மகளிர் பூப்பெய்தல் விழா; the subsequent inter course which makes a marriage legally valid.

[திரட்டு + கலியாணம்]

திரட்டுப்பால் *tirattu-p-pal,* பெ. (n.) சர்க்கரை யிட்டு இறுகக் காய்ச்சின பால்; milk thickened by boiling with sugar. "திரட்டுப் பால் குமட்டுதோ" (இராமநா. அரண்9). 2. ஒரு வகைப் பண்ணிகாரம்; a kind of sweet preparation.

[திரட்டு + பால்]

திரட்டோசை *tiraṭṭōsai*, பெ. (n.) உரப்பலோசை (பிங்.); bustle.

[திரட்டு + ஓசை]

திரடம் *tiraḍam*, பெ. (n.) வெண்ணொச்சி (சங்.அக.); five-leaved chaste tree.

திரடு *tiraḍu*, பெ. (n.) மேடு (நெல்லை); high or elevated ground.

[திரள் → திரடு]

திரண் *tiraṇ*, பெ. (n.) திரணம் பார்க்க; see *tiraṇam*. "திரணுறு செழுகை போல்" (சிவதரு. சனை மரண. 88).

திரண்டகல் *tiraṇḍa-kal*, பெ. (n.) *1.* உருளைக் கல் (வின்.); cylindrical stone-roller. *2.* குண்டுக் கல் (பிங். 4, 54.); globular stone.

[திரள் + கல்]

திரண்டகழுத்து *tiraṇḍa-kaḻuttu*, பெ. (n.) உருண்டையாகவும் அழகாகவும்முள்ள கழுத்து; round beautiful neck.

[திரள் + கழுத்து]

திரண்டகூட்டம் *tiraṇḍa-kūṭṭam*, பெ. (n.) மக்கள் கூட்டம்; crowd of people.

[திரள் + கூட்டம்]

திரண்டகூடு *tiraṇḍa-kūḍu*, பெ. (n.) இழைப் புளிக்கூடு (யாழ்ப்.); frame of a smoothing plane.

[திரள் + கூடு]



திரண்டகொடிச்சி[1] *tiraṇḍa-koḍicci*, பெ. (n.) புற்றாம் பழம் அதாவது கரையான் (புற்று) கூடு; the nest of the white ants.

[திரள் + கொடிச்சி]

திரண்டகொடிச்சி[2] *tiraṇḍa-koḍicci*, பெ. (n.) மாழை மண்வகை (வின்.); a kind of ore.

[திரள் + கொடிச்சி]

திரண்டபால் *tiraṇḍa-pāl*, பெ. (n.) *1.* திரட்டுப் பால் பார்க்க; see *tiraṭṭu-p-pāl*. *2.* திரைந்த பால்; concentrated milk.

[திரள் + பால்]

திரண்டபெண் *tiraṇḍa-peṇ*, பெ. (n.) பருவமடைந்தவள்; matured girl.

[திரள் + பெண்]

திரண்டமுகம் *tiraṇḍa-mugam*, பெ. (n.) உருண்டையான முகம்; round face.

[திரள் + முகம்]

திரண்டமுலை *tiraṇḍa-mulai*, பெ. (n.) செழுமையான மார்பகம்; well developed breast.

[திரள் + முலை]

திரண்டமூலம் *tiraṇḍa-mūlam*, பெ. (n.) *1.* உருண்டையான கிழங்கு; bullous root. *2.* முளை மூலம்; external piles.

[திரள் + மூலம்]

திரண்டவடிவு *tiraṇḍa-vaḍivu*, பெ. (n.) உருண்டை வடிவு; round shape or figure.

[திரள் + வடிவு]

திரண்டவலகு *tiraṇḍa-v-alagu*, பெ. (n.) மட்டலகு (இ.வ.); blade of jack-plane.

[திரள் + அலகு]

திரண்டவீக்கம் *tiraṇḍa-vīkkam*, பெ. (n.) ஒரு பக்கத்திற்காணும் வீக்கம்; swelling in one part of the body.

[திரள் + வீக்கம்]

திரணகடம் *tiraṇakaḍam*, பெ. (n.) ஒரு கடல் நண்டு; a kind of sea crab.

திரணகேது *tiraṇa-kētu*, பெ. (n.) மூங்கிலரிசி; bamboo seed.

திரணச்சி *tiraṇacci*, பெ. (n.) எரியுப்பு (வின்.); an alkaline salt.

திரணச்சோதி *tiraṇa-c-cōti*, பெ. (n.) 1. நச்சுப் புல்; poisonous grass. 2. சிவப்பு நாணற் புல்; a red variety of sacred or sacrificial grass.

திரணசாரம் *tiraṇacāram*, பெ. (n.) பூவன் வாழை; true banana.

திரணசீதம் *tiraṇa-sītam*, பெ. (n.) 1. நறுமணப் புல்; fragrant grass. 2. மல்லிகை; jasmine. 3. தாழை; fragrant screw pine.

திரணசோணிதம் *tiraṇa-sōṇitam*, பெ. (n.) புல் அரத்தம்; grass blood.

திரணசோத்தமம் *tiraṇa-sōttamam*, பெ. (n.) பெரிய சாமை; large shaumay panīcum freementaceum.

திரணசௌண்டிகம் *tiraṇa-sowṇḍigam*, பெ. (n.) ஒரு நாயுருவி; a kind of achyranthus.

திரணத்தான்யம் *tiraṇa-t-tāṉyam*, பெ. (n.) காட்டரிசி; wild rice, paddy.

திரணத்துவம் *tiraṇa-t-tuvam*, பெ. (n.) மூங்கிற்குருத்து; bamboo shoot.

திரணதூமாக்கினி *tiraṇa-tūmākkiṉi*, பெ. (n.) தொல்காப்பியரது இயற்பெயர் (தொல். பாயி. நச். உரை); the proper name of tol-kāppiyar.

திரணி *tiraṇi*, பெ. (n.) 1. புளியங்கொடி; climbing brachypterum. 2. கொடிப் பூண்டு; long creeper.

திரணை[1] *tiraṇai*, பெ. (n.) 1. உருண்டை; ball, anything globular. 2. மாலைவகை; a kind of garland. "இரட்டிய திரணையோடு" (சிலப். 22, 43). 3. கட்டட எழுதக வேலை (வின்.); chaplet, cornice, coping. 4. வைக்கோற் புரிக்கற்றை (வின்.); load on a bullock's back. 5. திண்ணை (நெல்லை); pial. 6. கம்பி; wire, rod. 7. தக்காளி; tomato.

[திரளை → திரணை]

திரணை[2] *tiraṇai*, பெ. (n.) எழுதக வேலைக் குதவுங் கொத்துக் கரண்டி (இ.வ.); mason's trowel for cornice work.

[திரளை → திரணை (வே.சொல்.க. பக். 262).]

திரணைக்கம்பி *tiraṇai-k-kambi*, பெ. (n.) இருப்புக்கம்பி (C.E.M.); cylindrical metal rod.

[திரணை + கம்பி]

திரணைச்செடி *tiraṇai-c-ceḍi*, பெ. (n.) பாவட்டை; Indian pavetta.

[திரணை + செடி]

திரணைத்தாழ்ப்பாள் *tiraṇai-t-tāḻppāḷ*, பெ. (n.) தாழ்ப்பாள் வகை (C.E.M.); round bold.

[திரணை + தாழ்ப்பாள்]

திரணைமேடு *tiraṇai-mēḍu*, பெ. (n.) சுவரின் மேலிடம் (C.E.M.); coping.

[திரணை + மேடு]

திரணையரம் *tiraṇai-y-aram*, பெ. (n.) உருண்டையான அரவகை; round file.

[திரணை + அரம்]

திரணையிழைப்புளி *tiraṇai-y-iḻai-p-puḷi*, பெ. (n.) இழைப்புளிக் கருவி வகை (C.E.M.); moulding plane.

[திரணை + இழைப்புளி]

திரணைவேலை *tiraṇai-vēlai*, பெ. (n.) கட்டட எழுதகவேலை (C.G.); cordon work, cornice-work.

[திரணை + வேலை]

திரந்தி *tiranti*, பெ. (n.) வால் திருக்கை; a sea shark fish which has a black tail.

திரந்திகம் *tirantigam*, பெ. (n.) திப்பிலி (மலை.); long pepper.

திரபருட்சி *tira-paruṭci*, பெ. (n.) சிற்றீஞ்சு; small date tree.

திரபுட்பம் *tira-puṭpam*, பெ. (n.) துத்தநாகம்; zinc.

திரம் *tiram*, பெ. (n.) 1. தகரைச் செடி; ringworm plant. 2. உறுதி; firmness. 3. வலி; strength. 4. உரம்; hardnss. 5. மலை; mountain. 6. நிலைவரம்; everlasting state. 7. நிலம் (பூமி); earth.

[தில் → திர் → திரம் (வ.மொ.வ.).]

திரமம் *tiramam,* பெ. (n.) 1. பழைய கிரேக்க நாணய வகை (T.A.S. iv. 30); an ancient greek coin, used in India. 2. சாதிலிங்கம்; cinnabar.

திரல் *tiral,* பெ. (n.) காட்டாமணக்கு (மலை.); physic nut.

திரலடி *tiraladi,* பெ. (n.) ஏலம் (மலை.); cardomam plant.

திரவியம் *tiraviyam,* பெ. (n.) செல்வம்; wealth. 'என் திரவியமே! கண்ணுறங்கு' (உ.வ.).

திரவாதி *tiravādi,* பெ. (n.) காட்டாமணக்கு (வின்.); physic nut.

திரள்[1](ளு)-தல் *tiral-,* செ.கு.வி. (v.i.) 1. உருண்டையாதல்; to become round, globular. "திங்கரும் பீன்ற திரள்கா லுளையலரி" (நாலடி. 199). 2. மிகக்கூடுதல்; to assemble, congregate, to collect in large numbers. "சனம் திரளுகிறது" 3. மிகுதல்; to accumulate, to abound "அவலு மிசையு நீர்த்திரள் பீண்டி" (மதுரை. 240). 4. இறுகுதல்; to become dense; to grow thick. 'பால் திரண்டு விட்டது'. 5. வீங்குதல்; to form, as a tumour, a pustule; to swell up, bulge out. 'புண்கட்டி திரண்டிருக்கிறது' (வின்.) 6. பருத்தல் (வின்); to mature, as fruits; to grow to full size, as beasts, tubers.

ம. திரளுக

[துல் → தில் → திர் → திரள்(ளு)- (வே.சொல்.க. பக். 262).]

திரள்[2] *tiral,* பெ. (n.) 1. உருண்டை; ball, round mass, globe. "தேசப்பளிங்கின்றிரளே" (திருவாசக. 4, 103). ம. திரள. 2. கூட்டம்; crowd, assembly, multitude, flock, herd, shoal, aggregation. "ஏனத்திரள் வந்திழியுஞ் சாரல்" (தேவா. 353, 1). 3. குலை (வின்.); cluster, clump, tuft. 4. படை (யாழ்.அக.); army. 5. மிகுதி; abundance. 6. இயக்கம் நான்கனுள் விரைந்த செலவினை யுடைய பாடல் (சிலப். 3, 6, உரை); song with quick movement, one of four iyakkam.

[துல் → தில் → திர் → திரள்]

திரள்[3](ளு)-தல் *tiral-,* செ.கு.வி. (v.i.) பெண் பருவமெய்தல்; to arrive at puberty.

ம. திரளுக

[திரள் → திரள்(ளு)-தல்]

திரள்கோரை *tiral-korai,* பெ. (n.) கஞ்சாங் கோரை வகை (மலை.); white basil.

[திரள் + கோரை]

திரள்மணிவடம் *tiral-mani-vadam,* பெ. (n.) கழுத்தணிவகை; a kind of necklace. "திரள் மணிவடம் ஒன்று" (S.I.I. ii, 143).

[திரள் + மணிவடம்]

திரள *tirala,* கு.வி.எ. (adv.) முழுதும்; entirely. "திரள ஒப்பில்லையாகில் ஒருவகை யாலேதான் ஒப்புண்டோ" (ஈடு. 1, 1, 2).

திரளாரம் *tiralāram,* பெ. (n.) நிலப்பனை (மலை.); ground palm.

திரளி *tirali,* பெ. (n.) 1. மீன்வகை (யாழ்ப்.); perch, marine, gerres (செ.அக.) 2. தேளி மீன்; scorpion fish. 3. கராம்பூ; cloves.



திரளுதல் *tiralutal,* பெ. (n.) 1. உருட்சியாதல்; 2. பூப்பெய்தல்; attaining puberty.

[திரள் → திரளுதல்]

திரளை *tiralai,* பெ. (n.) 1. சோற்றுக்கட்டி; a solid round object, as a ball of rice. "சோறுதண் டயிரி னாற்றிரளை மிடற்றிடை நெருக்குவார்" (திவ். பெரியதி. 2, 1, 7). 2. நூலின் உருண்டை (வின்.); skein of thread. 3. கூட்டம் (இ.வ.); assemblage.

[திரள் → திரளை]

திரா *tirā,* பெ. (n.) 1. பவள மல்லிகை (மலை); night jasmine. 2. மெழுகு கட்டி வார்க்கும் ஒரு வகைக் கலப்பு மாழை; an alloy cast or moulds perhaps pinch beck. 3. பவள மல்லிகை மரம்;

coral jasmine tree. 4. கண்பூ; cataract of the eye.

திராக்கவுப்பு *tirākka-v-uppu,* பெ. (n.) ஒரு வகை உப்பு; cream of tartar.

திராகம் *tirāgam,* பெ. (n.) உயர எறிந்து பிடிக்கை (யாழ்.அக.); throwing up and catching.

திராங்கு *tirāṅgu,* பெ. (n.) தாழ்ப்பாள் (W.); latch.

திராசம் *tirāsam,* பெ. (n.) மாணிக்கக் குற்றங்களுள் ஒன்று (S.I.I.ii, 78); a flaw in rubies.

திராசனம் *tirāsanam,* பெ. (n.) அசையா விருக்கை (சி.சி. 10, 5, சிவாக்.); study, firmsitting posture.

திராசனிமுத்திரை *tirāsani-muttirai,* பெ. (n.) கை முத்திரை வகை (செந்10, 425); a hand pose.

திராசிரவம் *tirā-ciravam,* பெ. (n.) பேராமல்லி; onge tubed arabia jasmine.

திராசு[1] *tirāsu,* பெ. (n.) துலாக்கோல்; balance.

திராசு[2] *tirāsu,* பெ. (n.) திராசுக்கயிறு பார்க்க; see *tirāsu-k-kayiṟu.*

திராசுக்கயிறு *tirāsu-k-kayiṟu,* பெ. (n.) குதிரை வண்டியைப் பூட்டுங் கயிறு; each of the two side straps or chains by which horse draws vehicle.

[திராசு + கயிறு]



திராட்டிலேவிடு-தல் *tirāṭṭilē-viḍu-,* செ.குன்றாவி. (v.t.) தின்டாடவிடுதல்; to leave in the lunch. அவன் கடன் தருவான் என்று காரியத்தில் இறங்கினேன், இப்படித் திராட்டிலேவிட்டு விட்டானே' (உ.வ.).

திராடம் *tirāḍam,* பெ. (n.) பாலை யாழ்த்திறத்து ஒன்று (பிங்.); a secondary melody type of the pālai class.

திராணி *tirāṇi,* பெ. (n.) வலிமை; strength. உழைக்கத் திராணி வேண்டும் (உ.வ.).

திராமரம் *tirā-maram,* பெ. (n.) பவள மல்லிகை மரம் (வின்); coral jasmine tree.

திராய் *tirāy,* பெ. (n.) கீரை வகை; a profuesly branching prostrate herbs.

திராய்க்கம்பம் *tirāi-k-kambam,* பெ. (n.) விட்டம் (உத்தரம்); beam, long squared piece of wood.

[திராய் + கம்பம்]

திரி[1]**-தல்** *tiri-,* செ.குவி. (v.i.) 1. அலைதல்; to walk about, wander. "வண்டாய்த் திரிதருங் காலத்து" (நாலடி, 284). 2. சுழலுதல்; to turn, whirl. "வலந்திரியாப் பொங்கி" (பு.வெ. 9: 12). 3. திருகுறுதல்; to be twisted, convolved. "திரிந்து மறிந்துவீழ் தாடி" (கலித். 15). 4. சலித்தல்; to move. "நாராசத் திரிவிற் கொள்ளத்தருவது காந்தம்" (மணிமே. 27, 55; 6). 5. போதல்; to proceed (பிங்). 7. வேறுபடுதல்; to change, vary. "நாஅல் வேத நெறிதிரியினும்" (புறநா. 2). 8. எழுத்து மாறுதல்; to be substituted, as a letter by another. "தோன்ற றிரிதல் கெடுதல்" (நன். 154). 9. கெடுதல் (திவா.); to perish. 10. பால் தன்மை கெடுதல்; to change in quality, to become sour. 11. மயங்குதல்; to be confused. "திரிந்தயர்ந்தகன் றோடி" (பரிபா. 3; 54).

திரி[2]**-தல்** *tiri-,* செ.குன்றாவி. (v.t.) கைவிடுதல்; to leave, to abandon. "இனந்திரி யேறுபோல" (சீவக. 2720).

திரி[3]**-த்தல்** *tiri-,* செ.குன்றாவி. (v.t.) 1. அலையச் செய்தல்; to cause to wander. "கொடிப்புள் திரித்தால்" (திவ். பெரியதி 1, 10; 2). 2. சுழற்றுதல்; to turn, whirl. "எஃகு வலந்திரிப்ப" (திருமுரு. 111). 3. முறுக்குதல்; twist. 4. திரும்பச் செய்தல்; to

cause to return. "சென்று சென்றழியுமாவி திரிக்குமால்" (கம்பரா. மாயாசனக. 23). 5. வேறுபடுத்துதல்; to change, alter, vary. 'அறிவு திரித்து' (மணிமே. 23; 39). 6. மாவரைத்தல்; to grind as flour. 7. பலதிறப்படுத்துதல்; to diversity. 8. மொழிபெயர்த்தல்; to translate. 9. சேதித்தல்; to break, cut, smash. "அவனுருவு திரித்திட்டோன்" (பரிபா. 5;35). 10. எழுத்துகளை ஒற்றுமைப்பட அமைத்தல்; to repeat words and syllables in different meaning.

திரி[4] *tiri*, பெ. (n.) 1. முறுக்குகை; twisting. "திரிபுர நரம்பின்" (பட்டினப். 254). 2. விளக்குத்திரி; roll or twist of cloth or thread for a wick. "நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரி கொளீஇ" (முல்லை. 48.). 3. தீப்பந்தம்; torch of twisted cloth. "திரியெடுத்தாடுகிறான்" (உ.வ.). 4. வெடிக் குழாயின் திரி; candle. 5. மெழுகுத்திரி; candle. 6. புண்ணுக்கிடும் திரி; lint. 7. வெள்ளைப்பூடு; Garlic (தைலவ. தைல. 91). 8. காதுக்கிடும் திரி; small roll of cloth put into the pierce bore of child, widening the aperture.

திரிக்குழாய் *tiri-k-kulay*, பெ. (n.) தீப்பந்தத்திற்கு எண்ணெய் வார்க்குங் கருவி; oil can with a long nattow spout for feeding a torch (பதிற்றுப். 47, உரை).

[திரி + குழாய்]

திரிகடுகம் *tiri-kaḍukam*, பெ. (n.) 1. சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூவகை மருந்துச் சரக்குகள் (திவா.); medicinal stuffs, numbering three, viz. cukku, milaku, tippili. 2. பதினெண்கீழ்க் கணக்கினுள் ஒன்றும் நல்லாதனாரால் 100 செய்யுட்களில் இயற்றப்பெற்றதும் ஒவ்வொரு செய்யுளிலும் மூன்று செய்திகளை உணர்த்துவதுமான ஓர் அறநூல்; an ancient didactic work by Nallātaṉār, mentioning three points in each of the 100 stanzas, one of padiṉ-eṇ-kīl-kaṇakku, q.v.

திரிகடுகு *tiri-kaḍuku*, பெ. (n.) திரிகடுகம் பார்க்க (பதார்த்த. 959); see *tiri-kaḍugam*.

[திரி + கடுகு]

திரிகண் *tiri-kaṇ*, பெ. (n.) மூங்கில் (பிங்.); bamboo.

[திரி + கண்]

திரிகல் *tirikal*, பெ. (n.) எந்திரம்; handmill "திரிகலொப்புடைத்தாய... தொண்டகம்" (கல்லா. 24:13).

[திரி + கல்]

திரிகூடராசப்பகவிராயர் *tirikūḍa-rāsappa-kavirāyar*, பெ. (n.) 18ஆம் நூற்றாண்டில் குற்றாலத் தலபுராணம், குற்றாலக் குறவஞ்சி முதலிய நூல்கள் இயற்றிய புலவர்; the author of Kurrāla-t-taḷa-purāṇam, kurrāla-k-kuṟavañji and other poems, 18th C.

[திரிகூடம் + இராசப்பகவிராயர்]

திரிகை[1] *tirikai*, பெ. (n.) 1. அலைகை; roaming. 2. இயந்திரம்; handmill. 3. குயவன்சக்கரம்; potter's wheel. "குயவர் திரிகையென" (கம்பரா. மூலபல. 165). 4. இடக்கை மேளம்; musical instrument. 5. நாட்டிய கூத்துவகை (சிலப். பக். 81); a particular gesture in dance.

[திரி + கை]

திரிகை[2] *tirikai*, பெ. (n.) முந்திரிக்கொட்டை; cashew nut.

திரிகைக்கல் *tirikai-k-kal*, பெ. (n.) திரிகல் பார்க்க; see *tirikal*.

[திரிகை + கல்]

திரிகைக்கோல் *tirikai-k-kōl*, பெ. (n.) குயவன் சக்கரம் சுழற்ற பயன்படுத்தும் கோல்; the stick used in turning the potter's wheel.

[திரிகை + கோல்]

திரிகோணப்பாலை *tiri-kōṇa-p-pālai*, பெ. (n.) பாலைப்பண் வகை (சிலப். 17; 18, பக். 453); one of the four modes of the ancient Tamil music.

[திரிகோணம் + பாலை]

திரிசங்கு *tiri-caṅku*, பெ. (n.) கதிரவக் குலத்துத் தோன்றிய அயோத்தி வேந்தனும் மாந்த உடலுடன் விசுவாமித்திர முனிவரால் துறக்கத்திற்கு (சுவர்க்கம்) விடுக்கப் பெற்றவனுமான அரசன்; a prince of oudh the solar line, who was bodily elevated to a new

heaven by the sage Visvāmitra. "மீதுபோந் திரிசங்கை" (கந்தபு. ஆற்றுப். 22).

திரிசங்குநிலை *tiri-caṅku-nilai,* பெ. (n.) இருபக்க வாய்ப்பையும் இழந்து இடையில் மாட்டிகொண்ட நிலை; இரண்டுங்கெட்டான் நிலை; the state of being left in the middle having lost both options, the situation of falling between two stools.

திரிசடை *tiri-caḍai,* பெ. (n.) இலங்கையில் சீதைக்குத் துணையாயிருந்து உதவியவள் (கம்பரா. காட்சி. 31.); the daughter of vibhīsanā and companion of sīta during her capitivity in Lanka.

திரிசொல் *tirišōl,* பெ. (n.) செய்யுளில் மட்டும் வழங்குதற்குரிய தமிழ்ச் சொல் (தொல். சொல். 399); Indigenous Tamil word used only in literary works.

[திரி + சொல்]

திரிஞ்சான் *tiriñjāṉ,* பெ. (n.) கறையான் (இ.வ.); termites.

திரிஞ்சில் *tiriñjil,* பெ. (n.) வெளவால்; bat.

[துரிஞ்சில் → திரிஞ்சில்]

திரிடி *tiriḍi,* பெ. (n.) 1. கரும்புக்கணு; the juice of sugarcane. 2. கள்ளி; spurge in general Euphoribic genus.

திரிதடம் *tiritaḍam,* பெ. (n.) உட்காதிலிருக்கும் வளைவுள்ள மூன்று குழல்கள்; the three semicircular canals or ear vessels, the three long canals of the labrinth.

திரிதரவில்லாவிருக்கை *tiridaravillā-virukkai,* பெ. (n.) தாமரைமுகம் போன்ற ஒன்பது வகைப் பிரிவுடைய சலியாத் தன்மையுள்ள இருக்கை வகை (சிலப். 8, 25, உரை); posture of the motionless kind, of which nine are mentioned in the science of painting viz., padumugam etc.

[திரிதரவு + இல்லா + இருக்கை]

திரிதரவுள்ளவிருக்கை *tiridaravuḷḷa-virukkai,* பெ. (n.) சலிக்கும் தன்மையுள்ள இருக்கை வகை (சிலப். 8, 25, உரை); posture of the moving kind, mentioned in the science of painting, one of two irukkai.

[திரிதரவு + உள்ள + இருக்கை]

திரித்தல் *tirittal,* செ.குன்றாவி. (v.t.) துணியைக் கயிறுபோல் உருட்டல்; rolling up a piece of cloth - linen in the shape of a wick.

திரிதல் *tirital,* பெ. (n.) 1. மூவகை மாற்றங்களுள் (விகாரங்களுள்) ஒரெழுத்து மற்றொன்றாக மாறுவது (நன். 154); change of one letter into another, one of three vikāram. 2. ஒன்றை மற்றொன்றாகக் கருதுகை; mistaking one object for another. "சுட்டல் திரிதல் கவர்கோடல்" (மணி. 27, 22). 3. சுழலல்; whirling. 4. உலாவல்; trolling about.

[திரி → திரிதல்]

திரிதலை *tiritalai,* பெ. (n.) பூடுவகை (யாழ்.அக.); a kind of shrub (செ.அக.).

திரிதி *tiriti,* பெ. (n.) பெண்காமக்களை; the ovarian secretion of woman.

[திரி → திரிதி]

திரிதிரிப்பொம்மை *tiritiri-p-pommai,* பெ. (n.) மணற்குவியலில் திரிபோன்ற பொருளை மறைத்தும் எடுத்தும் விளையாடும் குழந்தை விளையாட்டு வகை (வின்.); a children's game in which an object such as a wick is hidden in sand and is required to be found out.

[திரி + திரி + பொம்மை]

திரிதிவேர் *tiriti-vēr,* பெ. (n.) ஏலம்; cardamom.

திரிதூளி *tiri-tūḷi,* பெ. (n.) சின்னாபின்னம் (யாழ்ப்.); pell mell; medley.

[திரி + தூளி]

திரிப்பு[1] *tirippu,* பெ. (n.) 1. மதகரிவேம்பு பார்க்க; see madakari-vēmbu; red cedar of the nilgiri planters. 2. முறுக்கு; twist.

[திரி → திரிப்பு]

திரிப்பு[2] *tirippu,* பெ. (n.) கோயில் முதலிய அறநிலையங்களுக்கு நிலவரியினின்று கொடுக்கப்படும் பகுதி (நாஞ்.); portion of land revenue assigned to a temple or a charitable institution.

[திரி → திரிப்பு]

திரிப்பழம் *tiri-p-paḻam,* பெ. (n.) நன்றாக எரியும் திரி (இ.வ.); burning wick.

[திரி + பழம்]

திரிபடைந்தபால் *tiripaḍainta-pāl,* பெ. (n.) புளிப்படைந்த பால்; a milk naturally clotted in souring.

[திரிபு + அடைந்த + பால்]

திரிபதை *tiripatai,* பெ. (n.) இசைப்பா வகை (சிலப். 6, 35, உரை); a kind of song (செ.அக.).

திரிபந்தாதி *tiripandādi,* பெ. (n.) முதலெழுத்து மட்டுந்திரிய இரண்டு முதலிய பல வெழுத்துகள் ஒன்றிப் பொருள்வேறு படவரும் செய்யுளா லாகிய ஈறு தொடங்கி (அந்தாதி) இலக்கியம்; an andādi poem of tiripu stanzas.

[திரிபு + அந்தாதி]

திரிபலம் *tiripalam,* பெ. (n.) திரிபலை (தைலவ. தைல. 43) பார்க்க; see *tiripalai.*

திரிபலை *tiripalai,* பெ. (n.) கடு, தான்றி, நெல்லியாகிய முக்காய்களின் கூட்டம் (திவா.); fruits of the three myrobalams, viz., kaḍu, dānri, nelli.

திரிபலையேனாதி *tiripalai-y-eṉādi,* பெ. (n.) திரிபலை முதலியவற்றாற் செய்த ஒருவகை இளகியம் (இலேகியம்) (வின்.); an electuary compounded of tiri-palai and other ingredients.

[திரிபலை + ஏனாதி]

திரிபழுகம் *tiripaḻugam,* பெ. (n.) பால், நெய், தேன்களால் ஆகிய கூட்டுப் பண்டம் (வின்.); a preparation made of milk, ghee and honey.

திரிபன்றி *tiripaṉṟi,* பெ. (n.) திறமையைச் ஆய்வு செய்வதற்குப் பன்றி வடிவாய் அமைக்கப் பட்ட சுழலும் இலக்கு வகை; whirling target in the shape of a boar, used to test the skill of an archer. "திருமக ளவட்குப் பாலா னருந்திரி பன்றி யெய்தி வருமக னாரும்" (சீவக. 277).

[திரி + பன்றி]

திரிபாதி *tiripādi,* பெ. (n.) சிறுபுள்ளடி (மலை) பார்க்க; see *siṟupuḷḷaḍi;* scabrous ovate unifoliate tick-trefoil.

திரிபாலைத்திறம் *tiripālai-t-tiṟam,* பெ. (n.) பாலைப்பண் வகை (பு.வெ.ஒழிவு. 15, உரை); melodies of the pālai class.

திரிபு *tiripu,* பெ. (n.) 1. வேறுபாடு; change, alteration. "குறிதிரி பறியா வறிவனை" (கலித். 39, 46). 2. தோன்றல், திரிதல், கெடுதல் என்ற புணர்ச்சி வேறுபாடு (தொல். எழுத். 109, உரை); change in sandhi, as tōnral, tiridal, keḍutal. 3. முதலெழுத்தொழிய இரண்டு முதலான எழுத்துகள் அடிதோறும் ஒத்திருக்கையிற் பொருள் வேறுபடப்பாடும் செய்யுள்; stanza whose initial letters excepting the first are identical in each line, opp. to yamagam. 4. தகரம்; tin.

[திரி → திரிபு]

திரிபுக்காட்சி *tiripu-k-kāṭci,* பெ. (n.) 1. ஒன்றனை மற்றொன்றாக மாறியுணர்கை; optical illusion, erroneous apprehension of objects of sense, as mistaking a post for a thief (செ.அக.). 2. பொய்க்காட்சி; unreal vision presented to the bodily or mental eye (சா.அக.). 3. திரியக் காண்டல் அதாவது ஒன்றை வேறொன்றாக காணுதல்; logic.

[திரிபு + காட்சி]

திரிபுடை *tiripuḍai,* பெ. (n.) எழுவகைத் தாளத்துளொன்று (பரத. தாள. 22); a variety of time-measure, represented thus, one of cattatāḷam.

திரிபுரத்தான் *tiripurattāṉ,* பெ. (n.) குப்பைமேனி பார்க்க; see *kuppai-mēṉi;* Indian acalypha.



திரிபுரத்தைத்தீயிட்டோன் *tiripurattai-t-tīyiṭṭōṉ,* பெ. (n.) கரிசிலாங்கண்ணி; eucalypse plant.

திரிபுரமல்லிகை *tiripuramalligai,* பெ. (n.) மல்லிகை வகை (யாழ்.அக.); arabian jasmine.

[திரிபுரம் + மல்லிகை]

திரிபுவனத்திலகம் *tiripuvaṉa-t-tilagam,* பெ. (n.) ஒரு பழைய கணித நூல் (கணக்கதி. 5, உரை); an ancient mathematical treatise.

திரிபுவனம் *tiripuvaṉam,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில் உள்ள சிவன் கோயில் கொண்ட ஓரூர்; a siva shrine in Tanjore district. "சோமா திரிபுவனத் தோன்றலே" (தமிழ்நா. 47).

திரிமண்டலச்சிலந்தி *tirimaṇḍala-c-cilandi,* பெ. (n.) நஞ்சுடைய சிலந்தி வகை (சீவரட். 354); a kind of poisonous spider.

[திரிமண்டலம் + சிலந்தி]

திரிமணை *tirimaṇai,* பெ. (n.) புரிமணை (யாழ்ப்.); plaited ring of straw or fibre for setting a pot on.

[திரி + மணை]



திரிமரம் *tirimaram,* பெ. (n.) தவசமரைக்குந் திரிகை; wooden mill for grinding grain. "களிற்றுத் தாள் புரையுந் திரிமரப் பந்தர்". (பெரும்பாண். 187).

[திரி + மரம்]

திரியங்கூடம் *tiriyaṅ-kūḍam,* பெ. (n.) ஓர் அஞ்சனம்; a kind of collyrium.

[திரியம் + கூடம்]

திரியன் *tiriyaṉ,* பெ. (n.) கடுக்காய்; gall nut.

திரியாமை *tiriyāmai,* பெ. (n.) 1. இரவு; night. 2. நீலக்கல்; blue stone.

திரியலூட்டல் *tiriyalūṭṭal,* பெ. (n.) திரியாகச் செய்த சீலையை மருந்தில் தோய்த்து எடுத்தல்; to smear or dip the gauze in medicine in order to apply it.

[திரியல் + ஊட்டல்]

திரியூசி *tiriyūsi,* பெ. (n.) அறுவை மருத்துவம் செய்யும்போது பயன்படுத்தும் ஊசி; needle used at the time of surgery.

[திரி + ஊசி]

திரிய *tiriya,* கு.வி.எ. (adv.) திரும்ப; again. "திரியப் பிரலியம் வர" (ஈடு, 8, 1, 5).

தெ. திரிகி, க. திருகி, ம. திரிய.

[திரி → திரிய]

திரியக்கதி *tiriya-k-kadi,* பெ. (n.) விலங்குகதி பார்க்க; see *vilaṅgu-kadi;* the animal stage in transmigration.

[திரிய + கதி]

திரியக்காண்டல் *tiriya-k-kāṇḍal,* பெ. (n.) ஐயக்காட்சி; Indistinct perception.

[திரிய + காண்டல்]

திரியக்கு[1] *tiriyakku,* பெ. (n.) 1. அகப்பை; laddle. 2. குறுக்ககப்பை; a kind of laddle. 3. விலங்கு; beast and birds (சிசி. 2, 58, சிவாக்.).

திரியக்கு[2] *tiriyakku,* பெ. (n.) 1. புணர்ச்சி வகை; posture of entercounter. 2. ஒரு வகை முத்தமிடல்; a kind of kissing - bent kiss.

திரியங்குலி *tiriyaṅkuli,* பெ. (n.) வயற்பயறு; field gram.

திரியஞ்சணம் *tiriyañjaṇam,* பெ. (n.) ஓர் அஞ்சணம்; a kind of collyrium.

திரியட்டும் *tiriyaṭṭum,* கு.வி.எ. (adv.). திரிய பார்க்க; see *tiriya.* "திரியட்டும் ஸம்ஸாரி களோடே இருக்கையன்றியே" (ஈடு, 2, 3, 10).

திரியணுகம் *tiriyaṇugam,* பெ. (n.) நுண்மை; minute (திவ். பெரியதி. 1, 2, 3, வ்யா, பக். 65).

திரியம் *tiriyam,* பெ. (n.) செவ்வள்ளி (மலை.) பார்க்க; purpleyam. 2. செவ்வள்ளி கொடி; red sweet potato creeper.

திரியமுகம் *tiriyamugam,* பெ. (n.) அடிவானம் நோக்கிய பார்வை; a concentrated look of the horizon.

திரியவிடு-தல் *tiriya-viḍu-,* செ.குன்றாவி. (v.t.) சொத்து முதலியவற்றைப் பிறர் பேரால் மாற்றுதல்; to transfer, as one's property. "உன் க்ஷேத்திரத்தையும் என் பேரிலே திரிய விட்டுவை என்னும்" (ஈடு. 4, 9, 6).

திரியவும் *tiriyavum,* குவிஎ. (adv.) திரிய பார்க்க; see *tiriya.* "ஐந்தலையொடு திரியவும் வந்து" (பாரத. பதினேழாம். 226).

திரியன் *tiriyan,* பெ. (n.) கடுக்காய்; gall-nut.

திரியாபுரம் *tiriyā-puram,* பெ. (n.) குறும்பு (யாழ்.அக.); mischief.

[திரியாவிரம் → திரியாபுரம்]

திரியாமை *tiriyāmai,* பெ. (n.) 1. இரவு; night. 2. எமுனை; The Jamuna. 3. நீலக்கல்; a kind of black stone.

[திரி → திரியாமை]

திரியிடு-தல் *tiri-y-iḍu-,* செ.கு.வி. (v.i.) காது வளர்க்கத் துணித் திரி இட்டு வைத்தல்; to insert a roll of cloth in the perforation of the ear to enlarge it. "திரிபாட்டுச் சொல்லுகேன் மெய்யே" (திவ். பெரியாழ். 2, 3, 8).

[திரி + இடுதல்]

திரியிலூட்டல் *tiriyil-ūṭṭal,* பெ. (n.) திரியாகச் செய்த சீலையை மருந்தில் தோய்த்து எடுத்தல்; to smear or dipute gauze in medicine in order to apply it.

திரியெடுத்தாடு-தல் *tiri-y-eḍuttāḍu-,* செ.கு.வி. (v.i.) திருவிழாக்காலங்களில் நேர்த்திக் கடன் பொருட்டுத் தீப்பந்தம் பிடித்தாடுதல்; to dance with a burning torch on festive occasion in fulfilment of a vow.

[திரி + எடுத்து + ஆடுதல்]

திரியேற்று-தல் *tiri-yēṟṟu-,* செ.கு.வி. (v.i.) 1. புண் முதலியவற்றிற் காரச்சீலையிடுதல்; to introduce a set on into an issue or abscess. 2. திரியிடு பார்க்க; see *tiriyiḍu.*

[திரி + ஏற்று]

திரியோடல் *tiri-y-ōḍal,* பெ. (n.) கொடி முறுக்கு விழுகை (வின்.); forming of a kink or twist in a rope.

[திரி + ஓடல்]

திரில் *tiril,* பெ. (n.) குயவன் சக்கரம் (இ.வ.); potter's wheel.

[திரி → திரில்]



திரிவசியம் *tirivaciyam,* பெ. (n.) 1. பெண் வசியம்; the facinating drug or prepared medicine for enchanting women. 2. மூன்று வகை வசியங்கள்: ஆண் வசியம், பெண் வசியம், உலகவசியம்; three kind of Philte with which male, female and the public are attracted.

திரிவட்டம் *tirivaṭṭam,* பெ. (n.) திருகுவட்டம் (யாழ்.அக.) பார்க்க; see *tirugu-vaṭṭam.*

[திரி + வட்டம்]

திரிவடம் *tirivaḍam,* பெ. (n.) திருகுவட்டம் (யாழ்.அக.) பார்க்க; see *tirugu-vaṭṭam.*

[திரி + வடம்]

திரிவடைந்தபால் *tirivaḍainta-pāl,* பெ. (n.). திரிந்தபால் பார்க்க; see *tirinta-pāl* (சா.அக.).

திரிவாசம் *tirivāsam,* பெ. (n.) 1. ஒக்கரி (மலை) பார்க்க; see *okkari;* kakri-melon. 2. கக்கரக்காய்; cucumber.

திரிவாய் *tirivāy,* பெ. (n.) வெடிகுண்டில் திரி வைக்கும் இடம் (யாழ்அக); touch hole of a gun.

திரிவாலி *tirivāli,* பெ. (n.) *1.* மூன்று மடிப்பு அல்லது வெடிப்பு; the three folds or incisions. *2.* பெண்களின் கொப்பூழ் மேற்காணும் மூன்று மடிப்புகள்; the three folds over a woman's navel regarded as a beauty. *3.* குதம்; the genus.

திரிவிச்சுதா *tiriviccutā,* பெ. (n.) மூக்கறட்டை; spreading hog weed.

திரிவிருத்தி *tirivirutti,* பெ. (n.) *1.* கடுக்காய் வகை (பதார்த்த. 969); species of chebulic myrobalan. *2.* மொந்தன் என்னும் ஒரு வகைக் கடுக்காய்; a variety of gall-nut.

திரிவிருதம் *tirivirutam,* பெ. (n.) சிவதை; turbit root.

திரிவு *tirivu,* பெ. (n.) *1.* வேறுபாடு; change, alteration, variation. "திரி வின்றித் துஞ்சே மெனமொழிதி" (பு.வெ. 12, 15). *2.* தவறுகை; failure. "திரிவின்றி விண்ணில் வுலகம் விளக்கும் வளைவு" (பு. வெ. 8, 20). *3.* கேடு; ruin. "மறந்திரி வில்லா மன்பெருஞ் சூட்சி" (பு.வெ. 9, 33, கொளு). *4.* திரிவுக்காட்சி பார்க்க; see *tirivu-k-kāṭci.* "ஐயமேதிரிவே யென்னு மவையற" (விநாயகபு. 2, 46). *5.* அசைவு; motion. "நாராசத்திரிவிற் கொள்ளத்தகுவது காந்தம்" (மணி. 27, 55). *6.* சரியல்லாததால் திரும்பத்தரப்பட்டது (நாஞ்.); that which is returned as bad, as a coin.

[திரி → திரிவு]

திரிவுக்காட்சி *tirivu-k-kāṭci,* பெ. (n.) திரிபுக் காட்சி பார்க்க; see *tiribu-k-kāṭci.*

[திரிவு + காட்சி]

திரு[1] *tiru,* பெ. (n.) *1.* திருமகள்; lakṣmī, the Goddess of wealth and prosperity. "திருவுக்குந் திருவாகிய செல்வா" (திவ். பெரியதி. 7, 7, 1). *2.* செல்வம்; wealth, riches, affluence. "சீறிற் சிறுகுந் திரு" (குறள். 568). *3.* சிறப்பு (சூடா.); distinction, eminence. *4.* அழகு; beauty. *5.* காந்தி; brilliance. "திரு என்று காந்தி" (சடு. 3, 5,10). *6.* பொலிவு (திருக்கோ. 114); fertility. *7.* பாக்கியம்; blessing, fortune. "நன்றறிவாரிற் கயவா திருவுடையர்" (குறள். 1072). *8.* தெய்வத் தன்மை; holiness; sacredness. "திருச்சிற்றம் பலம், திருவரங்கம்". *9.* நல்வினை; good karma. "சோர்ந்தெழு நங்கைமாரே திருநங்கைமார்கள்" (சீவக. 2552). *10.* கணியங் கூறுவோன்; astrologer. "திரு ஒருவனுக்கும் கிழாள் இரண்டுக்கும்" (S.I.I.II.157). *11.* மாங்கலியம்; wedding badge. *12.* பழைய தலையணி வகை; an ancient head-ornament. "செந்திருவிற் கேற்கத் திருவும் பிறையுமிட்டு" (கூளப்ப. 140). *13.* மகளிர் கொங்கைமேல் தோன்றும் வீற்றுத் தெய்வம்; a deity supposed to be seated on women's breasts.

[திர் → திரு (வ.மொ.வ.)]

திரு[2] *tiru,* பெ. (n.) *1.* திருநீறு; holy ashes. *2.* திருகுதல்; turning as, trusted spurge. *3.* ஒரு வகை உப்பு; a kind of prepared salt. *4.* அழகு; beauty. *5.* பூண்டின் முதற்பெயர்; plants first term to denote its sacredness as திருவாத்தி, திருத்துழாய். *6.* அரசு; peepal tree.

[திர் → திரு. திரு = செல்வம், பொலிவு, நற்பேறு (வ.மொ.வ.)]

திருக்கடன்மல்லை *tiru-k-kaḍaṉ-mallai,* பெ. (n.) மாமல்லபுரம் (S.I.I.,i,68); Mamallapuram.

[திரு + கடல் + மல்லை]

திருக்கடைக்காப்பு *tiru-k-kaḍai-k-kāppu,* பெ. (n.) தேவாரம் முதலியவற்றின் பதிகத்தில் பாடியோர் பெயரும் படிப்போர் பயனும் பயனுங் கூறும் இறுதிச் செய்யுள்; last benedictory stanza in a patigam of the sacred hymns containing the name of the author. "திருப்பதிகம் நிறைவித்துத் திருக்கடைக் காப்புச் சாத்தி" (பெரியபு. திருஞான. 80).

[திருக்கடை + காப்பு]

திருக்கடைக்காப்புச்சாத்து-தல் *tiru-k-kaḍai-k-kāppu-c-cāttu-,* செ.குன்றாவி. (v.i.) பதிகத்தி னிறுதியில் திருக்கடைக் காப்புச் செய்யுள் கூறுதல் (பெரியபு. திருஞான. 80); to close a poem with tiru-k-kaḍai-k-kāppu.

[திருக்கடைக்காப்பு + சாத்துதல்]

திருக்கண் *tiru-k-kaṇ,* பெ. (n.) *1.* அருட் பார்வை; the divine eye. *2.* திருவிழா புறப்பாட்டிற்கு இறைவன் எழுந்தருளும் மண்டகப் படி; halting place for the idol in a festive procession.

[திரு + கண்]

திருக்கண்சாத்து¹-தல் *tiru-k-kaṇ-šāttu-,* செ.கு.வி. (v.i.) இறைவன் தெருவுலாவில் தேங்காய் பழம் முதலியன படைத்தல் (நாஞ்.); to make offerings of coconut, plantain fruits, etc., when a temple deity is taken out in procession during a festival.

[திரு + கண் + சாத்து]

திருக்கண்சாத்து²-தல் *tiru-k-kaṇ-cāttu-,* செ.கு.வி. (v.i.) *1.* அருணோக்கம் வைத்தல்; to bestow a look of grace, as a deity. *2.* மண்டகப் படிக்கு எழுந்தருளப் பண்ணுதல்; to carry a deity to a halting place during procession. *3.* பார்வையிடுதல்; to look into, inspect.

[திரு + கண் + சாத்துதல்]

திருக்கண்டவாளி *tiru-k-kaṇḍa-vāḷi,* பெ. (n.) கழுத்தணிகை (S.I.I.iii, 476); a kind of necklace.

[திரு + கண்டம் + வாலி]

திருக்கண்ணப்பதேவர்திருமறம் *tiru-k-kaṇṇappa-dēvar-tirumaṟam,* பெ. (n.) கண்ணப்ப நாயனார் மீது கல்லாடதேவ நாயனார் இயற்றிய நூல் (பதினொ.); a poem kaṇṇappa-nāyaṉār by kallāḍa-dēva-nāyaṉar.

திருக்கண்ணமுதம் *tiru-k-kaṇṇamudam,* பெ. (n.) இனிப்பு நீர்ம உணவு (பாயசம்) (இவ.); sweet milk pudding.

[திரு + கன்னல் + அமுதம்]

திருக்கண்ணமுது *tiru-k-kaṇṇamudu,* பெ. (n.) இனிப்பு நீர்ம உணவு (பாயசம்) (இ.வ.); sweet milk pudding.

[திரு + கன்னல் + அமுது]

திருக்கண்ணாமடை *tiru-k-kaṇṇāmaḍai,* பெ. (n.) அரிசி சர்க்கரை வாழைப் பழங்களால் ஆக்கப்பட்ட ஒரு வகை இனிய உணவு; a sweet preparation with rice, ghee, sugar and plantain fruit. "திருக்கண்ணாமடைக்கு அரிசி இரு நாழியும்." *(S.I.I.iii, 188).*

[திரு + கண்ணல் + ஆம் + மடை]

திருக்கண்ணோக்கு *tiru-k-kaṇṇōkku,* பெ. (n.) கடவுளை மண்டபப்படிக்கு எழுந்தருளச் செய்கை (S.I.I.V. 109); taking a temple deity to a maṇḍapam.

[திரு + கண் + நோக்கு]

திருக்கண்மலர் *tiru-k-kaṇ-malar,* பெ. (n.) கடவுள் திருமேனியில் சூட்டும் மலர் போன்ற கண்ணுரு (S.I.I.ii.340); metalic eyes for an idol. "திருக்கண் மலர் இரண்டு".

[திரு + கண் + மலர்]

திருக்கண்டவாளி *tiru-k-kaṇḍa-vāḷi,* பெ. (n.) கழுத்தணி வகை; a kind of necklace.

[திரு + கண்டம் + ஆளி]

திருக்கணாமரம் *tiru-k-kaṇāmaram,* பெ. (n.) திரிகோணமலையில் வளரும் மரம்; trincomala tree.

[திரு + கணா + மரம்]

திருக்கம் *tirukkam,* பெ. (n.) வஞ்சகம்; crookedness, dis-honesty. "சிந்தையுற் றிருக்க மின்மை" *(கம்பரா. திருவடி. 76).*

[திருகு → திருக்கம்]

திருக்கம்பி *tiru-k-kambi,* பெ. (n.) காதுக்கம்பி; a kind of ear-ring. "திருக்கம்பியொன்று பொன் முக்காலே மஞ்சாடியுங் குன்றி" *(S.I.I.ii.157).*

[திரு + கம்பி]

திருக்கரணம் *tiru-k-karanam,* பெ. (n.) பாம்பு (யாழ்.அக.); snake.

திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி *tirukkaruvai-p-padiṟṟu-p-pattandādi,* பெ. (n.) அதிவீரராம பாண்டியனால் கரிவலம்வந்த நல்லூர்ச் சிவபிரான்மேல் பாடப்பட்ட பதிற்றுப்பத்து ஈறு தொடங்கி நூல்; andādi poem in 100 stanzas in ten different metres, each ten being in one metre, on the śivan shrine in karivalam-vanda-nallūr by Adivīra-rāma-pāṇḍiyaṉ.

[திருக்கருவை + பதிற்றுப்பத்து + அந்தாதி]

திருக்கருவைக்கலித்துறையந்தாதி *tiru-k-karuvai-k-kalitturai-y-andādi*, பெ. (n.) அதிவீர ராம பாண்டியனால் கரிவலம்வந்த நல்லூர்ச் சிவபிரான்மேல் நூறு கலித்துறையிற் பாடப் பட்ட ஈறு தொடங்கி நூல்; andādi poem in 100 kalitturai stanzas on the śivan shrine in karivalam-vanda-nallūr by Adivīra-rāma-pāṇḍiyan.

[திருக்கருவை + கலித்துறை + அந்தாதி]

திருக்கருவைவெண்பாவந்தாதி *tiru-k-karuvai-veṇpā-v-andādi*, பெ. (n.) அதிவீரராம பாண்டியனால் கரிவலம்வந்த நல்லூர்ச் சிவபிரான்மேல் நூறு வெண்பாவிற் பாடப் பட்ட ஈறு தொடங்கி நூல்; andādi poem in 100 stanzas in veṇpā metre on the śivan shrine in karivalam-vanda-nallūr by Adivīra-rāma-pāṇḍiyan.

[திருக்கருவை + வெண்பா + அந்தாதி]

திருக்கலசமுடி-த்தல் *tiru-k-kalasa-muḍi-*, செ.குன்றாவி. (v.t.) குடமுழுக்குச் செய்தல்; to consecrate a newly-built temple. "பணி செய்விச்சு திருக்கலச முடிச்சருளிய" *(T.A.S.i. 290).*

[திரு + கலசம் + முடி]

திருக்கலியாணம் *tiru-k-kaliyāṇam*, பெ. (n.) கோயிற்றிருமண விழா; marriage festival of god and a goddess in a temple. மதுரை அங்கயற்கண்ணி திருக்கலியாணம்.

[திரு + கலியாணம்]

திருக்கள்ளி *tiru-k-kaḷḷi*, பெ. (n.) திருகுகள்ளி பார்க்க; see *tirugu-kaḷḷi*.

[திரு + கள்ளி]

திருக்களிற்றுப்படி *tiru-k-kaḷiṟṟu-p-paḍi*, பெ. (n.) தில்லைக் கூத்தப்பெருமான் கோயிலின் யானை யுருவமைந்த படி; door-step with sculptured elephants at the Nataraja shrine of Chidambaram. "சென்று தாழ்ந் தெழுந்தான் றிருக்களிற் றுப்படி மருங்கு" *(பெரியபு. தடுத்தாட் 105).*

[திரு + களிறு + படி]

திருக்களிற்றுப்படியார் *tiru-kaḷiṟṟu-p-paḍiyār*, பெ. (n.) திருக்கடவூர் உய்ய வந்த தேவ நாயனார் இயற்றியதும் திருக்களிற்றுப்படியில் வைக்கப்பெற்று அக்களிற்றால் எடுத்துக் கொடுக்கப்பட்டதும் மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள் ஒன்றுமாகிய சிவசமய நூல்; a siva siddhanta treatise by Tirukkaṭavur uyyavanta-teva-nayanar, traditionally believed to have been placed on the tiru-k-kaḷiṟṟu-p-paḍi of Chidambaram shrine by the author and returned to him by the sculptured elephants, one of 14 mey-kaṇṭa-cāttiram.

[திரு + களிறு + படி + ஆர்]

திருக்கற்றளி *tiru-k-kaṟṟaḷi*, பெ. (n.) கருங் கல்லால் அமைக்கப்பட்ட கோயில்; stone temple. "திருக்கற்றளி தேவர்க்கு" *(S.I.I.i, 113)*

[திரு + கல் + தளி]

திருக்காட்சி *tiru-k-kāṭci*, பெ. (n.) இறைமைத் தன்மை; state of being divine.

[திரு + காட்சி]

திருக்காப்பிடு-தல் *tiru-k-kāppiḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) கோயிற்கதவு மூடுதல்; to close the door of a temple.

[திருக்காப்பு + இடு-.]

திருக்காப்பு *tiru-k-kāppu*, பெ. (n.) 1. தெய்வக் காவல்; divine protection. "உன் சேவடி செவ்வித் திருக்காப்பு" *(திவ்.பெரியாழ். திருப்பல்.)*. 2. கோயிற் கதவு; door of a temple. 3. திரு முறைகளைக் கயிற்றால் கட்டி வைக்கை (காழிக் கல்வெட்டு. 41); 4. அந்திரட்சை; ceremonies performed in the evening for protecting a child from the evil eye. "திருக்காப்பு நானுன்னைச் சாத்த" *(திவ்.பெரியாழ். 2,8,9).*

[திரு + காப்பு]

திருக்காப்புச்சாத்து-தல் *tiru-k-kāppu-c-cāttu*, 5 செ.குன்றாவி. (v.t.) திருக்காப்பிடு பார்க்க; see *tiru-k-kāppiḍu-*.

திருக்காப்புச்சேர்த்து-தல் *tiru-k-kāppu-c-cērttu-* 5 செ.குன்றாவி. (v.t.) திருக்காப்பிடு பார்க்க; see *tiru-k-kāppiḍu-*.

திருக்காப்புநீக்கு-தல் *tiru-k-kāppu-nīkku-*, 5 செ.குன்றாவி. (v.t.) கோயிற் கதவைத் திறத்தல்

(திவ்.திருப்பா. 18, 172, அரும்.); to open the door of a temple.

[திரு + காப்பு + நீக்கு-.]

திருக்கார்த்திகை *tiru-k-kārttigai*, பெ. (n.) நளி (கார்த்திகை)த் திங்கள் ஆரல் (கார்த்திகை) விண்மீன் நாளில் விளக்கேற்றிக் கொண்டாடும் திருவிழா; a festival celebrated in the month of Kārttikai on the day when the moon is in conjunction with Pleiades.

[திரு + கார்த்திகை]

திருக்காவேரி *tiru-k-kāvēri*, பெ. (n.) இறைவழி பாட்டு நீர்ச்செம்பு (மாலியவ.); a vessel used for keeping water for worship.

[திரு + காவேரி]



திருக்காளத்திப்புராணம் *tiru-k-kāḷatti-p-purāṇam*, பெ. (n.) திருக்காளத்தியின் சிறப்பு குறித்து 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆனந்தக் கூத்தர் பாடிய தமிழ்த் தொன்மம்; a Purana in Tamil on the Šivan shrine at Sri Kāḷahasṭi by Ānanda-k-kūttar, 16th century.

[திரு + காளத்தி + புராணம்]

திருக்கானப்பேர் *tiru-k-kāṉa-p-pēr*, பெ. (n.) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள காளையார் கோயில் என்ற சிவத்தலம்; Kāḷaiyār kōyil, as Šiva shrine in Ramnad district.

[திரு + கானப்பேர்]

திருக்கிடு-தல் *tiru-k-kiḍu-*, 8 செ.குன்றாவி. (v.t.) நீளமுறுக்கிடுதல்; to twist, as a long rope. "இருடிருக்கிட்டு" (சீவக. 164).

[திருகு + இடு-.]

திருக்கு[1]-தல் *tirukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. முறுக்குதல்; to twist. 2. ஒருவனைத் தூண்டி விடுதல்; to set on, screw up.

திருக்கு[2] *tirukku*, பெ. (n.) இன்னல்; difficulty. "ஏத்திருக்கும் கெடுமென்பதை யெண்ணா" (கம்பரா. திருவவதாரப். 123).

திருக்கு[3] *tirukku*, பெ. (n.) 1. முறுக்கு; twist. 2. முடக்கம்; bend, curve. "மதிற்றிருக்கால் . . . திருமுடங்க லென்றார்" (திருவாலவா. 47:14). 3. அணித்திருகு; tiny screw in jewels. 4. ஒருவகைத் துகில் (சிலப். 14: 108. உரை); a garment. 5. மாறுபாடு; perverseness. "பெருந் திருக்குளத்துளான்" (திருவாலவா. 16. 34). 6. வஞ்சனை; fraud, deceit.

[திருகு → திருக்கு]

திருக்குக்காட்டாளி *tirukku-k-kāṭṭāḷi*, பெ. (n.) வஞ்சகன்; cheat, deceiver.

[திருக்கு + காட்டாளி]

திருக்குகம் *tirukkugam*, பெ. (n.) 1. முற்றம்; courtyard. 2. புடைவை; saree.

திருக்குகை *tiru-k-kukai*, பெ. (n.) துறவிகள் வாழிடம் (I.M.P.Tj. 1083); monastery.

[திரு + குகை]

திருக்குடந்தை *tiru-k-kuḍandai*, பெ. (n.) கும்பகோணம்; Kumbakonam. "திருக்குடந்தை யேரார் கோலந் திகழக் கிடந்தால்" (திவ். திருவாய். 5: 8).

[திரு + குடந்தை]

திருக்குதம்பை *tiru-k-kutambai*, பெ. (n.) காதணி வகை (S.I.I.ii, 156); a kind of ear-rings.

[திரு + குதம்பை]

திருக்குருகை *tiru-k-kurugai*, பெ. (n.) சட கோபர் பிறந்த இடமான ஆழ்வார் திருநகரி; the birth place of šaint šaḍakōpar, now called Āḻvār-tiru-nakari.

[திரு + குருகை]

திருக்குருகைப்பிரான்பிள்ளான் *tiru-k-kurukai-p-pirāṉ-piḷḷāṉ*, பெ. (n.) இராமானுசர் மாணவருள் ஒருவரும், திருவாய் மொழியின்

முதல் ஆறாயிரப்படியியற்றியவருமான ஆசிரியர்; a disciple of Ramanujacarya and the author of Ārāyirappaḍi, the first commentary on tiruvāy-moḻi.

[திருக்குருகை + பிரான்பிள்ளான்]

திருக்குருகைப்பெருமாட்கவிராயர் *tiru-k-kurukai-p-perumāṭ-kavirāyar*, பெ. (n.) மாறனலங்காரம், மாறனகப்பொருள், திருக்குருகாமான்மியம் முதலிய நூல்கள் இயற்றிய வரும் 16ஆம் நூற்றாண்டினரும் ஆழ்வார் திருநகரியூரினருமாகிய ஆசிரியர்; a native of Alvar-tiru-nakari and the author of Maran-alankaran, maran-alapporul, tiru-k-kurukamamiyam and other works, 16th century.

[திருக்குருகை + பெருமான் + கவிராயர்]

திருக்குவலிப்பன் *tirukku-valippaṉ*, பெ. (n.) மாட்டுநோய் வகை (மாட்டுவா. 147); a kind of cattle disease.

[திருகு + வலிப்பன்]

திருக்குளம் *tiru-k-kuḷam*, பெ. (n.) கோயிலைச் சார்ந்த தடாகம்; sacred tank of a temple.

[திரு + குளம்]

திருக்குற்றாலம் *tiru-k-kuṟṟālam*, பெ. (n.) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சிவன் கோயில்; a Šivan shrine in the Tinnevelly district.

[திரு + குற்றாலம்]

திருக்குறனுண்பொருண்மாலை *tiru-k-kuraṇuṇ-poruṇ-mālai*, பெ. (n.) திருக்குறள் பரிமேலழகருரைக்கு ஆழ்வார் திருநகரித் திருமேனி. இரத்தின கவிராயர் எழுதிய குறிப்புரை; critical notes on Parimel-alagar's commentary on Tiru-k-kural by Tiru-mēṉi. Irattiṉa-kavirāyar of Āḻvār-tiru-nakari.

[திருக்குறள் + நுண்மை + பொருள் + மாலை]

திருக்குறள் *tiru-k-kuraḷ*, பெ. (n.) பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்றும், அதிகாரத்துக்குப் பத்துக் குறள் வெண்பா கொண்ட 133 அதிகாரங்களில் அறம், பொருள், இன்பங்களைப் பற்றிக் கூறுவதும் திருவள்ளுவர் இயற்றியதுமான நூல்; the sacred kural, a classic work treating of virtue, wealth and love in 133 chapters of ten distichs each, by tiru-valluvar, one of patiṉeṉ-kīḻ-k-kaṇakku.

[திரு + குறள்]

திருவள்ளுவர், வள்ளுவம், முப்பால், அறம், அறநூல், திருவள்ளுவப் பயன் என்பனவும், தமிழ் மறை, பொதுமறை என்பனவும் திருக் குறளின் சிறப்புப் பெயர்களாக வழங்கப்பெற்று வருகின்றன.

மொழி, இனம், சமயம், நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மக்கட்குலம் முழுவதும் கடைப்பிடிக்கத்தக்க உயரிய ஒழுகலாறுகளை வகுத்துரைப்பதால் திருக்குறள் உலகப் பொதுமறையாகப் போற்றப்படுகிறது. சமயம், அரசியல் முதலான சார்புகள் ஏதுமின்றி உலகமொழிகளில் அதிக எண்ணிக்கையில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் நூல் திருக்குறளேயாகும்.

திருக்குறிப்பு *tiru-k-kuṟippu*, பெ. (n.) திருவுள்ளக் கருத்து; will, as of God or great person. "திருக்குறிப் பன்னதாயிற் செப்புவல்" (சீவக. 1853).

[திரு + குறிப்பு]

திருக்குறிப்புத்தொண்டநாயனார் *tiru-k-kuṟippu-t-toṇḍa-nāyaṉar*, பெ. (n.) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் (பெரியபு.); a canonized Saiva saint, one of 63.

[திருக்குறிப்பு + தொண்டநாயனார்]

திருக்குறுங்கைநம்பிசம்பா *tiru-k-kuṟuṅgai-nambi-šambā*, பெ. (n.) சம்பா நெல்வகை; a kind of šampā paddy. "தென்னரங்கன் சம்பா திருக்குறுங்கை நம்பி சம்பா" (நெல்விடு. 183).

[திருக்குறுங்கை + நம்பி + சம்பா]

திருக்குறுந்தாண்டகம் *tiru-k-kuṟuntāṇḍagam*, பெ. (n.) திருமங்கையாழ்வார் இயற்றியதும் நாலாயிரப்பனுவலில் அடங்கியதுமான பனுவல்; a poem in Nālayira-p-pirapantam by Tirumaṅgai-y-āḻvār. 2. அறுசீர்த் தாண்டகங் களாகிய தேவாரப் பதிகங்கள்; Tevaram decads in tan-takam notre of six cirs.

[திரு + குறு + தாண்டகம்]

திருக்கூட்டம் *tiru-k-kūṭṭam,* பெ. (n.) *அடியார் குழாம்;* fraternity of devotees. "நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெரும் பேறு" *(காஞ்சிப்பு. கடவு. 16).*

[திரு + கூட்டம்]

திருக்கூத்து *tiru-k-kūttu,* பெ. (n.) *1.* சிவன் நடனம்; sacred dance of Šivan. "திருக்கூத்தை மேவின இறைவனுக்கு" *(பு.வெ. 9, 48, உரை).* *2.* இறைவன் திருவிளையாட்டு; devine sport.

[திரு + கூத்து]

திருக்கூவப்புராணம் *tiru-k-kūva-p-purāṇam,* பெ. (n.) சிவப்பிரகாச முனிவர் இயற்றியதும் திருக்கூவத்தலப் பெருமைக் கூறுவதுமான தொன்மம்; a purana on Tirukkuva.n by Šivappirakasa munivar.

[திரு + கூவம் + புராணம்]

திருக்கை[1] *tirukkai,* பெ. (n.) *1.* முட்கள் அடர்ந்து நீண்ட கூரிய வாலையுடையதும், தட்டையானதும் சுறாமீன் இனத்தைச் சேர்ந்ததுமான கடல்மீன் வகை; sting ray fish. *2.* செம்பழுப்பு நிறமும் 18 விரலம் (அங்குலம்) வளர்வதுமான மீன்; electrical ray, reddish brown, attaining 18in. in length, Nareine timilei *(செ.அக.).*



சாம்பசிவம் பிள்ளை அகரமுதலி கூறும் இந்தியாவில் காணப்படும் திருக்கை வகைகள்

1. சப்பைத் திருக்கை; banded teriky - Myliobatis niewhofli alias M. batoidei.
2. இராசாத்திருக்கை; rajah teriky - Raja fasciate.
3. தப்புக்கூளி; small drum teriky - Myliobatis plgios tomata.
4. கூளித்திருக்கை; Eagle ray or whip ray - Myliogbatis acquila.
5. கருவால்திருக்கை; black tail teriky Aeldobatis nari alias Ac. flagellum.
6. முள்ளந்திருக்கை; sting ray - Urogymmis asperrimus alias Anacanthus asperrimus.
7. மட்டத்திருக்கை; flat teriky - Rhinoptera adspersa.
8. குருவித்திருக்கை; Sparrow headed teriky- Rhinoptera batoidei.
9. பெருந்திருக்கை; large teriky - Pteroplatea microura.
10. தப்பகுட்டித்திருக்கை; small tabour teriky - Dasiyatis microura.
11. ஆடுவாலான் திருக்கை; shark teriky Trygon sephen.
12. கோணத்திருக்கை; tiger teriky - Trygon Uarnak.
13. சீமைத்திருக்கை; English ray Pastnachus Uarnak.
14. துருக்கத்திருக்கை; Mahomedan thorn back - Trygon ellioti.
15. ஆடாத்திருக்கை; mossy thorn back.
16. ஒட்டைத்திருக்கை; lean ray.
17. கருந்திருக்கை; black ray.
18. கொட்டத்திருக்கை; strong toothed ray.
19. செந்திருக்கை; red thorn back.
20. பஞ்சாடித்திருக்கை; leaping teriky.
21. புள்ளித்திருக்கை; spotted teriky.
22. மணல்திருக்கை; sand ray.
23. கல்திருக்கை; stone backed ray.
24. செம்மந்திருக்கை
25. கோட்டுவாய்த்திருக்கை
26. மலைத்திருக்கை
27. அழுக்குத்திருக்கை
28. பாயும்சாலைத்திருக்கை
29. ஆட்டுவால் திருக்கை; sheep tailed ray.
30. வெள்ளை நண்டுத்திருக்கை
31. சீவாளித் திருக்கை
32. தில்லைத் திருக்கை
33. வரி நண்டுத் திருக்கை
34. பேய்க்கால் நண்டுத் திருக்கை
35. பால் திருக்கை; white ray.

திருக்கைஅளவுமானி *tirukkai-y-aḷavumāṇi,* பெ. (n.) ஓர் வானூர்தித் திருக்கையின்

கோணம் எவ்வளவு என்று அளந்து கூறும் கருவி (அறி.களஞ்); yaw meter.

[திருக்கை + அளவுமானி]

திருக்கைக்காறை *tiru-k-kai-k-kāṟai,* பெ. (n.) இறைத் திருமேனிகளுக்குச் சூட்டும் கையணி வகை (S.I.I. ii. 144); a kind of armlet worn on idols.

[திரு + கை + காறை]

திருக்கைக்கோட்டி *tiru-k-kai-k-kōṭṭi,* பெ. (n.) 1. திருமுறை பாடுதற்குரிய கோயில் மண்டபம் (I.M.P.Tj. 855); sacred hall in Temples where the sacred hymns are sung. 2. திருக்கைக் கோட்டியோதுவார் (கல்.) பார்க்க; *tiru-k-kai-kōṭṭi-y-ōduvār.*

[திருக்கை + கோட்டி]

திருக்கைக்கோட்டியோதுவார் *tirukkai-k-kōṭṭi-y-ōtuvār,* பெ. (n.) கோயிலில் திருமுறைப் பாடல் பாடுவோர் (I.M.P.Tj. 1113); reciters of the sacred hymns in temple.

[திருக்கை + கோட்டி + ஓதுவார்]

திருக்கைச்சிரா *tirukkai-c-cirā,* பெ. (n.) திருக்கை மீனின் செதில் (மீனவ.); scale of the tirukkai fish which is used to prepare soup.

[திருக்கை + சிரா]

திருக்கைச்சிறப்பு *tiru-k-kai-c-ciṟappu,* பெ. (n.). ஏனாதிப் பட்டத்திற்கு அறிகுறியாய் அளிக்கும் விரற்செறி (மோதிரம்); signet-ring given as badge of the title ēṉādi.

[திருக்கை + சிறப்பு]

திருக்கைத்தலம் *tiru-k-kai-t-talam,* பெ. (n.) கைத்தலமூலம் கடவுள் திருமேனியை எழுந்தருளப் பண்ணுகை (இவ.); the procession in which an idol is carried on hand.

[திருக்கை + தலம்]

கடவுட்டிருமேனியைக் கையில் சுமந்து கொண்டு வீதியுலா செல்லுகை.

திருக்கைத்தோல் *tirukkai-t-tōl,* பெ. (n.) மெருகிடுதற்குதவும் திருக்கை மீனின் தோல் (வின்); ray skin, used in polishing.

[திருக்கை + தோல்]

திருக்கைத்திமிரம் *tirukkai-t-timiram,* பெ. (n.) பாய்மர வகையுள் ஒன்று (மீனவ.); a kind of mast.

[திருக்கை + திமிரம்]

திருக்கைப்புலியன் *tirukkai-p-puliyaṉ,* பெ. (n.) மீன்வகை; a kind of fish. "திருக்கைப் புலியன் திருக்கையாரல்" (பறாளை. பள்ளு. 16).

[திருக்கை + புலியன்]

திருக்கையாரல் *tirukkai-y-āral,* பெ. (n.) மீன் வகை; a kind of fish. "திருக்கைப் புலியன் திருக்கையாரல்" (பறாளை. பள்ளு. 16).

[திருக்கை + ஆரல்]

திருக்கைவலை *tirukkai-valai,* பெ. (n.) திருக்கை மீன் பிடிப்பதற்குரிய பருங்கண் வலை (நெல்லை மீனவ.); net which has large hole to catch shark fish.

[திருக்கை + வலை]

திருக்கைவலைவள்ளம் *tirukkai-valai-vaḷḷam,* பெ. (n.) திருக்கை வலை வலைத்தற்கெனக் கடல்மேற்செலுத்தப்படும் மரக்கலம் (நெல்லை மீனவ.); ship sailed in the sea to throw net for the shark.

[திருக்கை + வலை + வள்ளம்]

திருக்கைவழக்கம்[1] *tirukkai-vaḻakkam,* பெ. (n.) தெய்வத்திற்குப் படையல் செய்ததை வழங்குகை (கல்.); distribution to worshippers of offerings in a temple on special occasions. 2. வேளாளத் தலைவர்களின் கொடையைச் சிறப்பித்துக் கூறும் ஒரு நூல்; a poem on the liberality of the Vēḷāla chiefs.

[திரு + கை + வழக்கம்]

திருக்கைவழக்கம்[2] *tirukkai-vaḻakkam,* பெ. (n.) நாள்தோறும் கோயிலில் நடக்கும் பூசைக்கு வழங்கும் நாட்படி (S.I.I.V. 504); fixed allowance for the daily routine services in a temple.

[திரு + கை + வழக்கம்]

திருக்கைவால் *tirukkai-vāl,* பெ. (n.) திருக்கை மீனின் வாலாகிய சாட்டை (வின்.); a tail of ray-fish, used as whip.

[திருக்கை + வால்]

திருக்கைவெட்டியான் *tirukkai-veṭṭiyāṉ,* பெ. (n.) *மீன்வகை;* a kind of fish. "சீருந் திருக்கை வெட்டியான்" *(பறாளை. பள்ளு. 16).*

[திருக்கை + வெட்டியான்]

திருக்கொசகம் *tiru-k-košagam,* பெ. (n.) *அணிவகை (S.I.I.vi.14);* an ornament.

திருக்கொட்டாரம் *tiru-k-koṭṭāram,* பெ. (n.). கோயிலில் பொருள்கள் வைக்கும் அறை *(கோயிலொ. 62);* store room; store-house in a temple.

[திரு + கொட்டாரம்]

திருக்கொடித்தட்டு *tiru-k-koḍi-t-taṭṭu,* பெ. (n.) கோயிற் கொடிமரம் *(குருபரம். 283);* flag-staff in a temple.

[திரு + கொடி + தட்டு]

திருக்கொடுக்கு *tiru-k-koḍukku,* பெ. (n.) *அணிவகை (S.I.I.vi.14);* an ornament.

[திரு + கொடுக்கு]

திருக்கொள்கை *tiru-k-koḷgai,* பெ. (n.) *அணிவகை (S.I.I.vi.14);* an ornament.

திருக்கொற்றவாய்தல் *tiru-k-koṟṟa-vāy-dal,* பெ. (n.) *அரண்மனை;* palace. 'எப்பேர்ப்பட்ட திருக்கொற்றவாய்தலாற் போந்த குடிமை' (S.I.I.VII. 40).

[திரு + கொற்றம் + வாய்தல்]

திருக்கோட்டியூர்நம்பி *tiru-k-kōṭṭiyūr-nambi,* பெ. (n.) இராமநாதபுரம் மாவட்டம் திருக்கோட்டியூரினரும் இராமாநுசரின் ஆசானுமான மாலிய ஆசான்; the guru of Rāmānujācārya, native of Tirukkōṭṭiyūr in Ramnad district *(செ.அக.).*

[திருக்கோட்டியூர் + நம்பி]

திருக்கோணமரம் *tiru-k-kōṇa-maram,* பெ. (n.) *மரவகை;* Trincomali wood.

திருக்கோணமலை *tiru-k-kōṇa-malai,* பெ. (n.) திரிகோணமலை *பார்க்க;* see *trigōṇa-malai.*

திருக்கோமண்டலம் *tiru-k-kō-maṇḍalam,* பெ. (n.) திருமஞ்சனத்தில் பெருமாளுக்குத் திருமுடியில் சுற்ற வேண்டிய மலர்ச்சரம் *(சம.சொ.அக.);* garland.

[திரு + கோ + மண்டலம்]

திருக்கோலம் *tiru-k-kōlam,* பெ. (n.) *1.* திருமேனிக்குச் செய்யும் ஒப்பனை; decoration of the idol. *2.* நின்றதிருக்கோலம் கிடந்த திருக்கோலம் இருந்த திருக்கோலம் என மூவகையாகத் திருமால் திருவுருவ நிலை; posture of the idol, especially in Viṣṇu temples, of three varieties, viz., niṉṟa-tiru-k-kōlam, kiḍanda-tiru-k-kōlam, irunda-tiru-k-kōlam *(செ.அக.).*

[திரு + கோலம்]

திருக்கோவை *tiru-k-kōvai,* பெ. (n.) இறைத் திருமேனியின் முன் வரிசையாக நின்று திருமறை, வழிபாட்டுச் செய்யுள் முதலியன பாடும் கூட்டம்; row of people chanting the sacred hymns in the presence of an idol. "திருக்கோவைக்குப் பின்னே கைகட்டிக் கொண்டு பின்னடி ஸேவிக்கிறதும்" *(கோயிலோ. 88).*

[திரு + கோவை]

திருக்கோவையார் *tiru-k-kōvaiyār,* பெ. (n.) திருச்சிற்றம்பலக்கோவை *பார்க்க;* see *tiru-c-ciṟṟambala-k-kōvai.*

[திரு + கோவையார்]

திருகணி *tirukaṇi,* பெ. (n.) *1.* திருகாணி-2 *பார்க்க;* see *tirukāṇi*-2. *2.* சங்கின் சுழி; spiral formation of a conch.

க., ம. திருகணி

[திருகு + அணி]

திருகணை *tirukaṇai,* பெ. (n.) புரிமணை *(யாழ்ப்.);* plaited ring of straw or rattan for setting a pot on.

[திரு + கணை]

திருகம்[1] *tirugam,* பெ. (n.) சாதிக்காய்மரம் *(மலை.);* true nutmeg.

திருகம்[2] *tirugam,* பெ. (n.) துளை *(யாழ்.அக.);* hole.

[திருகு → திருகம்]

திருகரிவாள்மணை *tirukarivāḷ-maṇai,* பெ. (n.) திருகுமணை *பார்க்க;* see *tirugu-maṇai.*

[திருகு + அரிவாள்மணை]

திருகல் *tirugal,* பெ. (n.) *1.* முறுக்கு; twist, as of a horn; contortion. *2.* மாறுபடுகை; crooked

ness. "திருகலையுடைய விந்தச் செகத்துளோர்" *(கம்பரா. திருவவ. 33)*. 3. திருகல்முறுகல் பார்க்க; see *tirugal-murugal*. 4. ஆணை மீறுகை (பிங்.); infringement of a rule. 5. முறுகுகை (சிலப். 12: 1); severity. 6. மாணிக்கக் குற்றவகை (கல்லா. 47; திருவாலவா. 25: 14); a flaw in ruby.

[திருகு → திருகல்]

திருகல்முறுகல் *tirugal-murugal*, பெ. (n.) 1. கோணல்; crookedness, crumpled condition. 2. மனக்கோணல்; perverseness. 3. இடர்ப்பாடுள்ள சொற்றொடர்; involved construction of a sentence (செ.அக.).

[திருகல் + முறுகல்]

திருகலி *tirukali*, பெ. (n.) நுனிவளைந்த பனை முதலியன (யாழ்ப்.); palmyra or coconut tree crooked near the top.

[திருகல் → திருகலி]

திருகாணி *tirukāṇi*, பெ. (n.) 1. அணியின் திருகுமரை; screw in ornaments. 'திருகாணிக்கு வலுவும் பழஞ்சாணிக்கு புழுவும் உண்டு' *(பழ.)* 2. பெண்கள் காதிலும் மூக்கிலும் அணியும் ஓரணிவகை; small ornament like a tack, worn by girls and women in the upper helix of the ear or in the nostril. 3. பிளவுப்பட்டதைப் போன்ற தலைப்பகுதியையும் மரையோடு கூடிய கீழ்ப்பகுதியையும் கொண்டதும் திருகி உள்ளே செலுத்தக் கூடியதுமாகிய ஆணி; screw.

க. திருகாணி

[திருகு + ஆணி]



திருகாணிக்குழாய் *tirukāṇi-k-kuḻāy*, பெ. (n.) அணிகளின் கரை; exterior screw, in ornaments (செ.அக.).

[திருகாணி + குழாய்]

திருகாணியச்சு *tirukāṇi-y-accu*, பெ. (n.) திருகாணி செய்யும் அச்சு (C.E.M.); screw die.

[திருகாணி + அச்சு]

திருகு[1]-தல் *tirugu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. முறுக்குதல்; to twist, turn, wring. "யாக்கையைத் திசைமுகன் படைசென்று திருக" *(கம்பரா. பாசப். 58)*. 2. பின்னுதல்; to braid, as hair. "திருகுகுழ லுமைநங்கை" *(தேவா. 657, 3)*. 3. பறித்தல் (வின்.); to pluck, snatch, wrest away.

தெ. திருகு; க. திருகு

[துல் → தில் → திர் → திரு → திருகு → திருகு-தல்]

திருகு[2]-தல் *tirugu-*, 5 செகுவி. (v.i.) 1. முறுகுதல்; to be intense, severe. "பரிதி சினந்திருகிய கடுந்திறல்வேனில்" *(பெரும்பாண். 3)*. 2. மாறு படுதல்; to be crooked. "திருகு சிந்தையைத் தீர்த்து" *(தேவா. 338, 2)*.

திருகு[3] *tirugu*, பெ. (n.) 1. முறுக்கு; twist, wrench. "ஒரு திருகு திருகினான்". 2. கோணல்; bend, curve. 3. சுரி; screw, swivel. 4. அணியின் திருகுமரை; thread of a screw. 5. மாறுபாடு; crookedness of mind. 6. ஏமாற்றுப்பேச்சு; prevarication. "திருகு சொன்னால்" *(இராமநா. கிஷ்கி. 16)*. 7. குற்றம் (வின்.); fault. "சிந்தைத் திருகோட்டும்" *(சி.சி. பாயி. 1)*

[துல் → தில் → திர் → திரு → திருகு].

திருகுஇடைத்தொலையளவு *tirugu-iḍai-t-tolai-y-aḷavu*, பெ. (n.) ஒரு திருகின் இழையில் ஒரு புள்ளியிலிருந்து அடுத்த சுற்றின் நேரிணையான புள்ளி வரையிலான தொலைவின் அளவு; இதனைத் திருகின் ஒரு சுழற்சிக்கான முன்னேற்ற அளவு என்றுங் கூறலாம் (அறி.களஞ்.); pitch of a screw.

[திருகு + இடை + தொலை + அளவு]

திருகுகம்மல் *tirugu-kammal*, பெ. (n.) மகளிரணியும் திருகோடு கூடிய காதணி

வகை; a kind of ear-ornament for women fastened with a screw (செ.அக.).

[திருகு + கம்மல்]

திருகுகள்ளி *tirugu-kaḷḷi,* பெ. (n.) 1. கொம்புக் கள்ளி (பதார்த்த. 120); milk-hedge. 2. கள்ளி வகை; twisted square spurge.

[திருகு + கள்ளி]

திருகுகொம்பன் *tirugu-kombaṉ,* பெ. (n.) வளைந்த கொம்புடைய விலங்கு வகை; beast having twisted or crumpled horns (செ.அக.).

[திருகுகொம்பு → திருகுகொம்பன்]

திருகுகொம்பு *tirugu-kombu,* பெ. (n.) விலங்கின் முறுக்குண்ட கொம்பு (வின்.); twisted or crumpled horn.

[திருகு + கொம்பு]



திருகுகோல் *tirugu-kōl,* பெ. (n.) வண்டிச்சக்கர இருசினைத் தூக்குவதற்கான திருகுநிலை உதைகோலமைவுப் பொறி (அறி. களஞ்); screw jack.

[திருகு + கோல்]



திருகுசக்கரம் *tirugu-šakkaram,* பெ. (n.) குயவன் பானை வனையப்பயன்படும்

சக்கரம்; a whirling table machine exhibiting the effect of centripetal and centrifugal forces used by pottern.

[திருகு + சக்கரம்]

திருகுசாமந்திப்பூ *tirugu-šāmandi-p-pū,* பெ. (n.) பெண்கள் தலையிலணியும் திருகுப் பூ வகை (இ.வ.); chrysanthemum-shaped ornament, worn by girls on their heads.

[திருகு + சாமந்தி + பூ]

திருகுசுருள் *tirugu-šuruḷ,* பெ. (n.) திருகு சுருளாகச் செல்கிற சுருள் வட்டவளைவு (அறி. களஞ்); spiral.

[திருகு + சுருள்]

திருகுசொல்லி *tirugu-šolli,* பெ. (n.) கபடமாய்ப் பேசுபவள் (வின்.); a prevaricating woman.

[திருகு + சொல்லி]

திருகுதாழை *tirugu-tāḻai,* பெ. (n.) வாதமடக்கி மூலிகை; worn-killer.

[திருகு + தாழை]

திருகுதாளம் *tirugu-dāḷam,* பெ. (n.) மாறுபட்ட பேச்சு, புரட்டு (நெல்லை); artifice trick, chicanery. இந்த வேலையில் உன் திருகுதாளம் எல்லாம் நடக்காது.

[திருகு + தாளம்]

திருகுதாளி *tirugu-dāḷi,* பெ. (n.) புரட்டன் (யாழ்.அக.); cheat, trickish person.

[திருகு + தாளி]

திருகுபுரி *tirugu-puri*, பெ. (n.) திருகாணிச் சுரையின் உட்சுற்றுத் திருகுபுரி(அறி.களஞ்.); screw threads.

[திருகு + புரி]

திருகுப்பூ *tirugu-p-pū*, பெ. (n.) செவந்தி வடிவிலான மகளிர் தலையணி வகை; girl's hair-ornament in the shape of a chry santhemum.

தெ. திருகுடுபுவ்வு; க. திருபு

[திருகு + பூ]

திருகுபலை *tirugu-palai*, பெ. (n.) வலம்புரிக் காய் (தைலவ. தைல. 104); fruit of the East Indian screw tree.

[திருகு + பலை]

திருகுபனைமுகிழ் *tirugu-paṉai-mugiḻ*, பெ. (n.) பனை மடல் (யாழ்ப்.); the whole upper integurment of a palmyra fruit.

[திருகு + பனை முகிழ்]

திருகுமணை *tirugu-maṇai*, பெ. (n.) தேங்காய் துருவும் மணை; coconut-scraper.

க. துருவுமனை

[திருகு + மணை]



திருகுமரம் *tirugu-maram*, பெ. (n.) 1. கோணல் மரம்; twisted or crooked tree. 2. வழித்தடையான சுழல்மரம் (இ.வ.); turnstile.

[திருகு + மரம்]

திருகுமரை *tirugu-marai*, பெ. (n.) 1. திருகு முதலியவற்றின் சுரிந்தவரை; thread of a screw. 2. திருகாணி; screw, as in ornaments. 3. திருகாணியின் தலை (இவ.); nut for securing bolt.

[திருகு + மரை]

திருகுமுகம் *tirugu-mugam*, பெ. (n.) 1. பாரா முகம் (வின்.); indifference as indicated by averted face. 2. ஒருபக்கம் திரும்பிய அழகற்ற முகம்; face contorted to one side with an averse or unfavarable countenence. 3. நோயினின்று தெளிவடையலாமெனக் காட்டு முகம்; face showing a favourable crisis with reference to sickness.

[திருகு + முகம்]

திருகுமூலம் *tirugu-mūlam*, பெ. (n.) முடக் கொற்றான்; balloon vine.



திருகுவட்டம் *tirugu-vaṭṭam*, பெ. (n.) நூல் சுற்றுங் கருவி வகை (வின்.); small wedge-shaped reel with a handle for winding yarn.

[திருகு + வட்டம்]



திருகுவரிக்கடைசல்எந்திரம் *tirugu-vari-k-kadaišal-y-andiram*, பெ. (n.) திருகாணி

வரிகளை வெட்டுவதற்கேற்ற கடைசல் எந்திரம் (அறிவி.களஞ்); screw cutting lathe.

[திருகு + வரி + கடைசல் + இயந்திரம்]

திருகுவாதம் *tirugu-vādam,* பெ. (n.) முதுகும் விலாவும் திருகித் தெரிந்திடும் ஒருவகை முடக்குநோய்; a variety of rheumatism.

[திருகு + வாதம். வ. வாதம்]

திருகுவானூர்தி *tirugu-vāṉūrdi,* பெ. (n.) தும்பியம்; helicopter.

[திருகு + வான் + ஊர்தி]

திருகுவிட்டமானி *tirugu-viṭṭamāṉi,* பெ. (n.) திருகு அமைப்புடைய வட்டமானி (அறிவி. களஞ்); screw adjusting calyser.

[திருகு + விட்டம் + மானி]

இதில் நுட்பமான சீரமைப்புக் கேற்ற வில் சுருள் அமைந்த திருகாணி அமைப்புள்ளது

திருகுவில்லை *tirugu-villai,* பெ. (n.) திருகுப்பூ (உவ.) பார்க்க; see *tirugu-p-pu.*

[திருகு + வில்லை]

திருகுவெட்டித்தகடு *tirugu-veṭṭi-t-tagaḍu,* பெ. (n.) திருகுபுரிகளை வெட்டுதற்கான துளைகளையுடைய எஃகுத் தகடு (அறிவி. களஞ்); screw plate.

[திருகு + வெட்டு + தகடு]

திருகுளி *tiruguḷi,* பெ. (n.) *1.* உளி வகை; carpenter's plane. *2.* திருப்புளி; turnscrew, screwdriver. *3.* திருகூசி பார்க்க; see *tiru-kūši.*

[திருகு + உளி]



திருகூசி *tiru-kūši,* பெ. (n.) *1.* ஓலையில் துளையிடுங் கருவி வகை; drill to bore holes in an ola book. *2.* கிணற்றுத் துலாவின் குறுக்கேயிடும் அச்சுக்கட்டை; cross-beam in a well-sweep.

[திருகு + ஊசி]

திருகையத்தான் *tirugaiyattāṉ,* பெ. (n.) சிவனார் வேம்பு; Shiva's neem.

திருங்கற்று *tiruṅgaṟṟu,* பெ. (n.) கப்பலின் முன்பக்கத்திலுள்ள பாய்மரம் (M.Navi.80). fore-mast.

திருங்கற்றுக்காவிச்சவாய் *tiruṅgaṟṟu-k-kāvi-c-cavāy,* பெ. (n.) திருங்கற்றுக் காவிமரத்தில் கட்டப்பட்ட கயிறு (M.Navi. 83); fore-top-mast stay.

திருங்கற்றுக்காவிச்சேர்சவாய் *tiruṅ-gaṟṟu-k-kāvi-c-cēr-šavāy,* பெ. (n.) திருங்கற்றுக் காவி மரத்தின் கயிறுகளிற் கட்டப்படும் பாய் (M.navi. 83); fore-top-mast stay-sail.

[திருங்காற்று + காவி + சேர்சவாய்]

திருங்கற்றுக்காவிப்பறுவான் *tiruṅgaṟṟu-k-kāvi-p-paṟuvāṉ,* பெ. (n.) திருங்கற்றுமரத்தின் பகுதியாகிய காவிமரத்தின் குறுக்கே போடப் பட்டிருக்கும் மரச்சட்டம் (M.navi. 8l); fore-top-yard.

[திருங்கற்று + காவி + பறுவான்]

திருங்கற்றுக்காவிமரம் *tiruṅgaṟṟu-k-kāvi-maram,* பெ. (n.) திருங்கற்று மரத்தின் அடிக்கட்டைக்கு மேலுள்ள பகுதி (M.navi. 8l); fare-top-mast.

[திருங்கற்று + காவி + மரம்]

திருங்கற்றுச்சவர்மரம் *tiruṅgaṟṟu-c-cavar-maram,* பெ. (n.) திருங்கற்று மரத்திலுள்ள காவிமரத்துக்கு அடுத்து மேலுள்ள பகுதி (M.Navi. 8l); fore-top-gallanet mast.

[திருங்கற்று + சவர் + மரம்]

திருங்கற்றுப்பறுவான் *tiruṅgaṟṟu-p-paṟuvāṉ,* பெ. (n.) திருங்கற்று மரத்துக்குக் குறுக்கே

இடப்பட்டிருக்கும் மரச்சட்டம் (M.Navi. 81); fore-yard.

[திருங்கற்று + பறுவான்]

திருச்சந்தம் *tiru-c-candam,* பெ. (n.) அணி வகை (S.I.I. iv, 81); an ornament.

[திரு + சந்தம்]

திருச்சந்தவிருத்தம் *tiru-c-canda-viruttam,* பெ. (n.) திருமழிசையாழ்வார் இயற்றியதும் நாலாயிரப் பனுவலுள் அடங்கியதுமான நூல்; a poem in Nālāyira-p-pira-pandam by Tirumaḻišai-y-āḻvār.

[திரு + சந்தம் + விருத்தம்]

திருச்சபை *tiru-c-cabai,* பெ. (n.) *1.* தில்லையில் (சிதம்பரத்தில்) உள்ள ஆடவல்லான் அவை; the sacred shrine of Ādavallān at Chidambram. *2.* கிறித்தவர் கூடித் தொழுமிடம்; church, assemblage or congregation of Christians, select society of believers.

[திரு + சபை]

திருச்சரி *tiru-c-cari,* பெ. (n.) அணிவகை (M.E.R. 720 of 1916); an ornament.

[திரு + சரி]

திருச்சலை[1] *tiru-c-calai,* பெ. (n.) கபிலப் பொடி (L.); kamela dye.

திருச்சலை[2] *tiru-c-calai,* பெ. (n.) குரங்கு மஞ்சணாறி; monkey face rouge-mallotus phillipinensis (சா.அக.).

திருச்சாந்தாடல் *tiru-c-cāndāḍal,* பெ. (n.) கோயிலில் தெய்வத்திருமேனிக்கிடும் சந்தனக் காப்பு (I.m.p.cg. 1000) besmearing an idol with sandal paste.

[திரு + சாந்து + ஆடல்]

திருச்சாயல் *tiru-c-cāyal,* பெ. (n.) தெய்வப் படிவம் (கிறித்துவம்); divine image, the likeness of God.

[திரு + சாயல்]

திருச்சித்தம் *tiru-c-cittam,* பெ. (n.) திருவுள்ளம்; divine will, will of great men. தேவரீர் திருச்சித்தப்படியே நடக்கிறேன்.

[திரு + சித்தம்]

திருச்சிராப்பள்ளி *tiru-c-cirā-p-paḷḷi,* பெ. (n.) திரிச்சிராப்பள்ளி; Trichinopoly.

திருச்சிற்றம்பலக்கோவை *tiru-c-ciṟṟambala-k-kōvai,* பெ. (n.) மாணிக்கவாசகர் இயற்றியதும் திருச்சிற்றம்பலத்தைப் பற்றியதுமான அகப்பொருட்கோவை; a kōvai poem on Chidambaram by Māṇikkavāšakar.

[திரு + சிற்றம்பலம் + கோவை]

திருச்சிற்றம்பலம் *tiru-c-ciṟṟambalam,* பெ. (n.) *1.* தில்லையிலுள்ள பொன்னம்பலம்; the sacred shrine of Ādavallān at Chidambaram. *2.* தேவாரம் முதலியவை பாடுவதற்கு முன்னரும் கடிதம் முதலியவை எழுதுவதற்கு முன்னரும் சிவனியர்கள் வழங்கும் ஒரு வணக்கச் சொல்; an invocatory expression of Saivaites used when reciting Tēvāram hymns or writing letter, document, etc.

[திரு + சிற்றம்பலம்]

திருச்சிற்று *tiru-c-ciṟṟu,* பெ. (n.) கோயில் பெருக்குபவள் (இ.வ.); sweeper-woman of a temple.

[திரு + சிற்று]

திருச்சின்னம் *tiru-c-ciṉṉam,* பெ. (n.) தெய்வம், அரசன் முதலானாரின் முன்பு இசைக்கும் ஊது குழலுள்ள இசைக்கருவி; a kind of trumpet, usually blown in pairs before a detiy, king. etc.

[திரு + சின்னம்]

திருச்சீரலைவாய் *tiru-c-cīr-alaivāy,* பெ. (n.) திருச்செந்தூர் (திருமுருகு. 125) பார்க்க; see *tiru-c-cendūr.*

[திரு + சீர் + அலைவாய்]

திருச்சுண்ணம் *tiru-c-cuṇṇam,* பெ. (n.) திருமண் பார்க்க; see *tirumaṉ.*

[திரு + சுண்ணம்]

திருச்சுற்றாலயம் *tiru-c-cuṟṟālayam,* பெ. (n.) கோயிலின் சுற்றுப் பகுதியிலுள்ள தெய்வங்களின் கோயில்; I.M.P.Tj. 450 temples of minor deities in temple enclosure.

[திரு + சுற்று + ஆலயம்]

திருச்சுற்றாலை *tiru-c-cuṟṟālai,* பெ. (n.) 1. திருச்சுற்றாலயம் பார்க்க; see *tiru-c-cuṟṟālayam.* "மஹாதேவர் ஸ்ரீகோயிலுக்குந் திருச்சுற்றாலைக்கும்" (S.I.I.iii,23.). 2. திருச்சுற்று மாளிகை பார்க்க; see *tiru-c-cuṟṟu-māligai.*

[திரு + சுற்றாலை]

திருச்சுற்று *tiru-c-cuṟṟu,* பெ. (n.) கோயிலைச். சுற்றியுள்ள பகுதி; temple enclosure. "சேனை முதலியார் திருச்சுற்றான ராஜமகேந்திரன் திருவீதியில்" (கோயிலொ. 13).

[திரு + சுற்று]

திருச்சுற்றுமண்டபம் *tiru-c-cuṟṟu-maṇḍapam,* பெ. (n.) திருசுற்றுமாளிகை பார்க்க; see *tiru-cuṟṟu-māḷigai.* "திருச்சுற்று மண்டபத்துக் கோயிற் கருமமாராயாவிருந்து" (S.I.I.iii, 137).

[திரு + சுற்று + மண்டபம்]

திருச்சுற்றுமாடம் *tiru-c-cuṟṟu-māḍam,* பெ. (n.) திருச்சுற்று மாளிகை; a maṇḍabam like enclosure round the shrine in a temple. "இக்கோயில் திருச்சுற்று மாடம் எடுக்க" (S.I.I.v, 326).

[திரு + சுற்று + மாடம்]

திருச்சுற்றுமாளிகை *tiru-c-cuṟṟu-māḷigai,* பெ. (n.) கோயில் திருச்சுற்று மதிலின் உட்புறம் தொடர்ந்தாற் போல் கட்டப்பெறும் நெடு மண்டபம்; porches surrounding the inner shrine of a temple; maṇḍabam enclosing a temple. "ராஜராஜதேவர் திருவாய்மொழிந்தருள இத்திருச்சுற்று மாளிகை எடுப்பித்தான்" (S.I.I.iii, 139).

[திரு + சுற்று + மாளிகை]

திருச்சூரணம் *tiru-c-cūraṇam,* பெ. (n.) மஞ்சள் தூள்; turmeric powder (சா.அக.).

[திரு + சூரணம்]

திருச்சூலக்கல் *tiru-c-cūla-k-kal,* பெ. (n.) சிவன் கோயிலுக்குரிய தேவதான நிலங்களின் எல்லைகளில் நாட்டப்பெறும் முத்தலைச் சூலம் பொறித்த எல்லைக்கல்; demarcation stones with trident mart, for the lands belonging to Śiva temples. "நான்கெல்லையும் திருச்சூலக்கல்லு நாட்டிக் கொள்க" (S.I.I.ii, 247). "இந்நிலத்தில் நாற்பாலெல்லையிலும் திருச்சூலக் கல்லுநாட்டி" (தெகல்.தொ. 12, பகு. I, கல். 142).

மறுவ. திரிச்சூலக்கல்

[திரு + சூலம் + கல்]

திருச்சூலத்தாபரம் *tiru-c-cūla-t-tābaram,* பெ. (n.) திருச்சூலக்கல் பார்க்க; see *tiri-c-cūlakkal.* "இறையிலி திருநாமத்துக் காணியாகத் தந்தோம். இப்படிக்கு நாற்பாற்கெல்லைக்கும் திருச்சூலதாபரமும் பண்ணி கல்லிலும் வெட்டிக் கொள்க" (முதற்குலோத்துங்கன், கி.பி. 1078, தெ. கல். தொ. 7, கல். 780).

திருச்சூலி *tiru-c-cūli,* பெ. (n.) கற்றாழை; aloe (சா.அக.).

திருச்செங்கோடு *tiru-c-ceṅgōḍu,* பெ. (n.) நாமக்கல் மாவட்டத்திலுள்ள ஊர்; the small town in Namakkal district.

[திரு + செங்கோடு]

கோடு என்பது மலையைக் குறிக்கும். இப்பகுதியிலுள்ள மலை சிவப்பு நிறம் வாய்ந்ததாக விளங்குவதால் செங்கோடு எனப்பெயர் பெற்றது. இம்மலையைச் சுற்றி உள்ள ஊர், மலையின் பெயரால் இப் பெயர்ப் பெற்றது. மதுரையைத் தீக்கிரை யாக்கிய பின் இரவும் பகலும் 14 நாட்கள் நடந்து சென்று "நெடுவேல் குன்றம் அடி வைத்தேறிப் பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழ்" தங்கியபோது அவள் (கண்ணகி) உயிர் பிரிந்தது என்று சிலப்பதிகாரம் கூறும் நெடுவேல் குன்றம் என்பது திருச்செங்கோடே என அரும்பத உரையாசிரியர் கூறுவார். இங்குச் சோழர் கால வெட்டுக்கள் கிடைத்துள்ளன. ஞானசம்பந்தர் இத்தலத்தை "சீருறும் அந்தணர்வாழ் கொடி மாடச் செங்குன்றூர் நின்ற" எனப் பாடியுள்ளார் (தமி. ஊர். பெ. அக.).

திருச்செந்தில் *tiru-c-cendil,* பெ. (n.). திருச்செந்தூர் பார்க்க; see *tiru-c-cendūr.*

[திரு + செந்தில்]

திருச்செந்தில்சந்தவிருத்தம் *tiru-c-cendil-canda-viruttam,* பெ. (n.) ஆறுமுக நாவலரால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a minor literature written by Āṟumuga-nāvalar in 19th century.

[திரு + செந்தில் + சந்தம் + விருத்தம்]

திருச்செந்தூர் *tiru-c-cendūr,* பெ. (n.). **திருநெல்வேலி மாவட்டத்துள்ளதும் முருகக் கடவுள் அறுபடை வீடுகள் எனப்படு பவற்றுள் ஒன்றுமான இடம்;** Tiru-c-cendūr, a Skanda shrine in Tinnelvelly district, one of six-paḍai-vīḍu.

செம்பொருளான முருகப்பெருமான் கோயில் கொண்டதால் செந்தில் எனப் பெயர் பெற்று, நாளடைவில் 'இல்' நீங்கி ஊர் என மாறி இருக்கின்றது. இதற்கு அலைவாய் படை வீடு என்ற பெயர்களும் உண்டு. இவ்வூரை "வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்" எனப் புறநானூறு குறிக்கின்றது. "சீரார் குமரரோ - என் கண்ணே திருச்செந்தூர் வேலவரோ" என்று நாட்டுப் புறப் பாடல் இவ்வூரைக் குறிக்கும். "சிக்கலில் வேல்வாங்கிச் செந்தூரில் சூரசம்மாரம் என்னும் பழமொழி சிக்கலில் முருகன் வேல் வாங்கியதையும் திருச்செந்தூரில் அவ்வேலால் அசுரனை அழித்ததையும் குறிக்கும் *(தமி. ஊர். பெ. அக.).*

[திரு + செந்தில் + ஊர் → திருச்செந்தூர்]

திருச்செந்தூர்நொண்டிநாடகம் *tiru-c-cendūr-noṇḍi-nāḍagam,* பெ. (n.) **மாரிமுத்துப் பிள்ளை என்பவரால் 18ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம்** (சிற்.அக.); a minor literature written by Mārimuttu piḷḷai in 18th century.

[திருச்செந்தூர் + நொண்டி + நாடகம்]

திருச்செந்நடை *tiru-c-cennaḍai,* பெ. (n.) **கோயிலின் நடப்புச் செலவு** (S.I.I.iii, 335); current expenses of a temple.

[திரு + செம்மை + நடை]

திருச்செந்நெல்நடை *tiru-c-cennel-naḍai,* பெ. (n.) **கோயில் அமுது படித்தரம்;** provision of campā paddy for making offering in a temple (செ.அக.).

[திரு + செந்நெல் + நடை]

திருச்செம்பொன்கோவில் *tiru-c-cempoṉ-kōvil,* பெ. (n.) **நாகை மாவட்டம் சீர்காழி வட்டத்திலுள்ள ஊர்;** the small town in Nāgai district. கோயிலின் சிறப்பால் இப்பெயர் வழங்குகின்றதென்பர். இவ்வூர் மாலியத் திருத்தலமாக விளங்குகின்றது.

திருச்செவிசாத்து-தல் *tiru-c-cevi-šāttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **கேட்டருளுதல்;** to be pleased to hear (செ.அக.).

[திரு + செவி + சாத்து-.]

திருச்சேய்ஞலூர் *tiru-c-cey-ñalūr,* பெ. (n.) **தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஊர்;** a village in Tanjavure district. சேய் என்னும் பெயரையுடைய முருகன் இவ்வூரில் தங்கி சிவலிங்கத்தை வழிபட்டதால் இவ்வூர் சேய் ஞலூர் என ஆயிற்று என்பர்.

திருச்சேறை *tiru-c-cēṟai,* பெ. (n.) **தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர். மாலியத் திருப்பதியாகவும் சிவதலமாகவும் விளங்கு கின்றது;** district. இவ்வூரில் இறைவன் கோபுரம், தாயார், நீர் என ஐந்து சாரங்களும் ஒரு சேர அமைந்திருப்பதால் இப்பெயர் பெற்றது. "சிறப்பர் சேறையும் செந்நெறியான் கழல்" என நாவுக்கரசர் இத்தலத்தைப் பற்றிப் பாடியுள்ளார் *(தமி. ஊர். பெ. அக.).*

[திரு + சேறை]

திருச்சோற்றுத்துறை *tiru-c-cōṟṟu-t-tuṟai,* பெ. (n.) **தஞ்சை மாவட்டத்திலுள்ள சிவதலம்;** the village in Tanjavure district. *1.* இவ்வூர் நீர்வள, நிலவள காரணமாகச் சேற்றுத்துறை என பெயர்ப் பெற்றுப் பின் சோற்றுத்துறை என ஆகியிருக்கலாம். 2. சிவனடியார் ஒருவர் பசியால் வாடுவதைக் கண்ட சிவபெருமான் எடுக்கக் குறையாத சோற்றுக்கலம் ஒன்றை தந்தருளி யிருப்பதால் சோற்றுத்துறை எனப் பெயர்ப் பெற்றது என்பர். சுந்தரர் இவ்வூரை,

"சிறந்தார் சுற்றந் திருவென் றின்ன
துறந்தார் சேருஞ் சோற்றுத்துறையே"

எனப் பாடியுள்ளார் *(தமி. ஊர். பெ. அக.).*

[திரு + சோறு + துறை]

திருசிமாந்தம் *tirušimāndam,* பெ. (n.). **வெண்பாதிரி;** trumpet tree bearing white flowers (சா.அக.).

திருசூலை *tirušūlai,* பெ. (n.) **சிவனார் வேம்பு;** Šiva's neem (சா.அக.).

திருசோபம் *tiru-šōbam,* பெ. (n.) **வெண்டாமரை** (மலை.); white lotus.

திருஞ்சூலி *tiruñjūli,* பெ. (n.) கற்றாழை; aloe (சா.அக.).

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் *tiru-ñāṉa-šambanda-mūrtti-nāyaṉār,* பெ. (n.) நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவரும் தேவாரத்தின் ஒரு பகுதி இயற்றியவரும் 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவருமான சமயாசாரியர் (பெரியபு.); a canonized šaiva saint author of a section of the Tevāram, 7th c. one of 63.

திருஞானசம்பந்தர்பதிகம் *tiru-ñāṉa-šambantar-patigam,* பெ. (n.) இராமசுப்பிரமணியம் செட்டியாரால் 20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது (சிற்.அக.); a minor literature written by Rāmasuppira maniyam Mudaliyār in 20th century.

[திருஞானசம்பந்தர் + பதிகம்]

திருஞானப்புறம் *tiruñāṉa-p-puṟam,* பெ. (n.) தேவாரம் முதலிய திருப்பாட்டுப் பாடுவதற்கு வழங்கப்படும் மானியம்; land bestowed for the recitation of sacred hymns.

[திரு + ஞானம் + புறம்]

திருஞானம் *tiru-ñāṉam,* பெ. (n.) 1. சிவனறிவு, மெய்யறிவு (சிவஞானம்); knowledge or perception of Šiva-ñāṉam. "முகின் முலைத் திருஞானம் பொழிந்த பான்மணம்" (சம்பந். பிள்.). 2. பாலில்வெந்த அக்காரவடிசில்; food cooked in milk and sweetened with sugar. "நெறியருச் சித்துத் திருஞானமுள் நீரடைக்காயும் படைத்து" (ஞானதீக்ஷ. 4). 3. கோயில் திருமேனி முன்பு பாடும் திருப்பாட்டு (S.I.I.V.146); sacred hymns sung before the chief deity in a temple.

[திரு + ஞானம். வ. ஞானம்]

திருஞானம்பெற்றபிள்ளையார் *tiru-ñāṉam-peṟṟa-piḷḷaiyār,* பெ. (n.) திருஞான சம்பந்த நாயனார் (M.E.R. 208 of 1924); saint Jñāṉašambandha.

[திருஞானம் + பெற்ற + பிள்ளையார்]

திருட்டவுத்தி *tiruṭṭa-vutti,* பெ. (n.) சீமையகத்தி; ringworm shrub (சா.அக.).

திருட்டாட்டம் *tiruṭṭāṭṭam,* பெ. (n.) திருட்டு (உவ.); theft.

[திருட்டு + ஆட்டம்]

திருட்டியானை *tiruṭṭi-yāṉai,* பெ. (n.) தன் கூட்டத்தினின்று தனித்த முரட்டுக் காட்டியானை (இ.வ.); rogue elephant living in isolation from a herd.

[திருடு + யானை]

திருட்டு *tiruṭṭu,* பெ. (n.) 1. தனக்குச் சொந்தம் இல்லாத ஒன்றை உரியோர் அறியாதபடி எடுக்கும் முறையற்ற செய்கை, களவு (திவா.); theft, robbery. திருட்டு வாய்த்தால் திருடப் படாதா? (பழ.). இலக்கியத் திருட்டு. 2. கரவு (வஞ்சகம்); fraud, deception.

திருட்டுக்கவி *tiruṭṭu-k-kavi,* பெ. (n.) 1. கள்ளக் கவி (சோரக்கவி); plagiarized poem. "திருட்டுக் கவிப் புலவரை" (தமிழ்நா. 221). 2. பிறர்கவியைத் திருடிப் பாடுபவன்; a poet who plagiarizes .

[திருட்டு + கவி]

திருட்டுச்சாவான் *tiruṭṭu-c-cāvāṉ,* பெ. (n.) கள்ளப்போக்கிலி; thievish rogue. ஆக்க மாட்டாத அழுகல்நாரிக்குத் தேடமாட்டாத திருட்டுச் சாவான்.

[திருட்டு + சாவான்]

திருட்டுச்சுரம் *tiruṭṭu-c-curam,* பெ. (n.). வெளிக்காட்டாது உள்ளாகக் காயும் காய்ச்சல்; internal fever without external symptom of heat.

திருட்டுடைமை *tiruṭṭuḍaimai,* பெ. (n.) திருட்டுச் சொத்து; stolen property.

[திருட்டு + உடைமை]

திருட்டுத்தனம் *tiruṭṭu-t-taṉam,* பெ. (n.) 1. கள்ளம்; thieving, stealthiness. 2. நேர்மையின்மை; dishonesty. 3. வலக்காரம் (தந்திரம்); craftiness.

[திருட்டு + தனம்]

திருட்டுப்பிள்ளை *tiruṭṭu-p-piḷḷai,* பெ. (n.). கூடாவொழுக்கத்தால் பிறந்த பிள்ளை (இவ.); natural child.

[திருட்டு + பிள்ளை]

திருட்டுப்போ-தல் *tiruṭṭu-p-pō-,* 8 செகுவி. (v.i.) *களவுபோதல்;* to be stolen. வீட்டுக்கு வெளியில் இருந்த மிதிவண்டி திருட்டுப் போயிருக்கிறது.

[திருட்டு + போ-]

திருட்டுமட்டை *tiruṭṭu-maṭṭai,* பெ. (n.) *திருட்டுப் பயல்;* thievish fellow *(செ.அக.).*

[திருட்டு + மட்டை]

திருட்டுவழி *tiruṭṭu-vaḻi,* பெ. (n.) *கள்ள வழி;* secret or falseway.

[திருட்டு + வழி]

திருட்டுவாசல் *tiruṭṭu-vāšal,* பெ. (n.) *கமுக்க வழி;* sally port, secret gate *(செ.அக.).*

[திருட்டு + வாசல்]

திருடக்காண்டம் *tiruḍa-k-kāṇḍam,* பெ. (n.). *மூங்கில்;* bamboo *(சா.அக.).*

திருடக்கிரந்தி *tiruḍa-k-kirandi,* பெ. (n.). *மூங்கில் (மலை.);* bamboo *(செ.அக.).*

திருடதை *tiruḍatai,* பெ. (n.) *1. வலு;* strength. *2. மர வயிரம்;* heart-wood. *3. மிகுதி;* abundance *(சா.அக.).*

திருடபலம் *tiruḍa-palam,* பெ. (n.) *1. கொட்டைப் பாக்கு வகை;* a kind of areca nut. *2. தேங்காய்;* coconut *(செ.அக.).*

திருடமம் *tiruḍamam,* பெ. (n.) *தென்னை;* coconut tree *(சா.அக.).*

திருடமூலம் *tiruḍa-mūlam,* பெ. (n.) *1. தேங்காய்;* coconut. *2. விடத்தேர்;* sore eye plant *(சா.அக.).*

திருடழம் *tiruḍaḻam,* பெ. (n.) *திருடமூலம் (மலை.) பார்க்க;* see *tiruḍa-mūlam.*

திருடகாந்தம் *tiruḍa-kāntam,* பெ. (n.). *மூங்கில்;* bamboo.

திருடன் *tiruḍaṉ,* பெ. (n.) *1. திருட்டுத் தொழில் செய்பவன்; கள்வன் (பிங்.);* male thief. *2. வலக்காரன் (தந்திரக்காரன்);* sly, artful fellow. திருடனைத் தேள் கொட்டியது போல, திருடனுக்குத் திருட்டுப் புத்திப் போகாது *(பழ.).*

[திருடு → திருடன்]

திருடாட்டபதி *tiruḍāṭṭa-pati,* பெ. (n.). *சிறுபுள்ளடி;* scarbrous ovate, unifoliate tick trefoil *(சா.அக.).*

திருடி *tiruḍi,* பெ. (n.) *1. திருடுபவள்;* female thief. திருடிக்குத் தெய்வமில்லை, சம்சாரிக்கு ஆணையில்லை *(பழ.). 2. கள்ளி (மூ.அ.);* spurge.

[திருடு → திருடி]

திருடு[1]-தல் *tiruḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *களவாடுதல்;* to steal, rob, pilfer. பணத்தைத் திருடும்போது கையும் களவுமாகப் பிடிபட்டான் *(செ.அக.).*

திருடு[2] *tiruḍu,* பெ. (n.) *களவு;* theft, robbery. பக்கத்து வீட்டில் திருடு நடந்தது தெரியாமல் தூங்கினான்; திருடத் தெரிந்தால் தெற்றுமாற்றுந் தெரிய வேண்டும் *(பழ.).*

திருணகம் *tiruṇagam,* பெ. (n.) *வாளுறை;* sheath of a sword *(செ.அக.).*

திருணகேது *tiruṇa-k-kēdu,* பெ. (n.) *மூங்கில் (மலை.);* bamboo.

திருணசாரை *tiruṇa-šārai,* பெ. (n.) *வாழை (மலை.) பார்க்க;* plantain tree.

திருணசூனியம் *tiruṇa-šūṉiyam,* பெ. (n.) *தாழை (மலை);* fragrant screw-pine.

திருணராகவம் *tiruṇarāgavam,* பெ. (n.) *1. சுக்கு நாறிப்புல்;* ginger grass. *2. ஒரு மரம்;* an unknown tree *(சா.அக.).*

திருணா *tiruṇā,* பெ. (n.) *குரா (L.);* common bottle flower *(செ.அக.).*

திருத்தக்கதேவர் *tiru-t-takka-tēvar,* பெ. (n.) *9ஆம் நூற்றாண்டினரும் சீவகசிந்தாமணி ஆசிரியருமான சமணர்;* the Jaina, author of Šīvaga-šindāmaṇi, prob. 9th c. *(செ.அக.).*

திருத்தக்காரன் *tirutta-k-kāraṉ,* பெ. (n.) *1. நேர்மையானவன்;* correct, upright, moral person. *2. தெளிவாய்ப் பேசுபவன்;* one who speaks clearly and neatly *(செ.அக.).*

[திருத்து → திருத்தக்காரன்]

திருத்தகு-தல் *tiru-t-tagu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. தூய்மை பொருந்துதல்; to be sacred. "திருத்தகு மறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்" *(திருவாச. 3:16).* 2. அழகு தகுதல்; to adorn, add beauty. "செல்வமொ டெல்லாந் திருத்தக்கான்" *(சீவக. 1635).*

[திரு + தகு-]

திருத்தகுமாமுனி *tiruttagu-mā-muṉi,* பெ. (n.) திருத்தக்கதேவர் பார்க்க; see *tiru-t-takka-tēvar.* "திருத்தகுமாமுனி செய் சிந்தாமணியும்" *(பெருந்தொ. 1551).*

திருத்தண்கா *tiru-t-taṇkā,* பெ. (n.) காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மாலியத்தலம்; a village in Kañjipuram district.

குளிர்ந்த சோலைகள் நிறைந்த பகுதியில் இவ்வூர் தோன்றியதால் இப்பெயர் பெற்றது. இதனை திருமங்கையாழ்வார் "விளக் கொளியை மரகதத்தைத் திருத்தண்காவில் வெஃகாவில் திருமாலைப் பாடக்கேட்டு" என இப்பதியைப் பாடியுள்ளார் *(தமி.ஊர்.பெ. அக.).*

திருத்தண்கால் *tiru-t-taṇkāl,* பெ. (n.) தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Tūttu-k-kuḍi district.

1. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் தண்காலப்பன். இச்சிறப்பினால் இவ்வூர் இப்பெயர் பெற்றது.

2. தண்கால் என்பது நீர்வளம் நிறைந்த பகுதியையும், சோலைகளையும், பொழில் களையும் குறிக்கும். இவ்வளமை காரணமாகவும் இப்பெயர் பெற்றது. திருமங்கையாழ்வார் இப்பதியை "சிறுகுரலுக் குடலுருகிச் சிந்தித்து ஆங்கே தண்காலும் தண்குடந்தை நகரும் பாடித் தண்கோவலூர் பாடியாடக் கேட்டு" எனப் பாடியுள்ளார் *(தமி. ஊர். பெ. அக.).*

திருத்தண்டலைநீணெறி *tiru-t-taṇḍalai-nīṇeṟi,* பெ. (n.) தஞ்சை மாவட்டம் திருத்துறைப் பூண்டிக்கு வடக்கே உள்ள ஊர்; the small town in Tanjavure district.

தண்டலை என்ற சொல் சோலையைக் குறிக்கும். இங்கு எழுந்தருளி யுள்ள இறைவன் நீணெறிநாதர், கோயில்கள் சூழ்ந்த பகுதியில் கோயில் கொண்டு உள்ளமையால், இப்பகுதி யிலுள்ள ஊர் தண்டலை நீணெறி என்று பெயர் பெற்றது. சம்பந்தரால் பாடப்பெற்ற தலம் *(தமி. ஊர். பெ.அக.).*

[திரு + தண்டலை + நீணெறி]

திருத்தணி *tiru-t-taṇi,* பெ. (n.) தொண்டை நாட்டு முருகக்கடவுள் கோயில் உள்ள தலங்களுள் ஒன்று; tiruttaṇi, a Skanda shrine in Toṇḍai-nāḍu.

திருத்தணிகைநூற்பாஅலங்கல் *tiru-t-taṇigai-nūṟpā-alaṅgal,* பெ. (n.) ஆறுமுகம் என்பவரால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a minor literature written by Āṟumugam in 19th century.

திருத்தணிகைப்பதிகம் *tiru-t-taṇigai-p-padigam,* பெ. (n.) இராமானுசம் பிள்ளையால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a minor literature written by Ramānujam piḷḷai in 19th century.

[திருத்தணிகை + பதிகம்]

திருத்தணிகைவிருத்தம் *tiru-t-taṇigai-viruttam,* பெ. (n.) சுப்பிரமணியத் தம்பிரானால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a minor literature written by Suppiramaṇiya-t-tambirāṉ in 19th century.

[திருத்தணிகை + பதிகம்]

திருத்தணிமுருகன்காவடிப்பதம் *tiruttaṇi-murugaṉ-kāvaḍi-p-padam,* பெ. (n.) இராமநாதப் பிள்ளையாரால் 19-20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a minor literature written by Ramanāda piḷḷaiyār in 19-20th century.

[திருத்தணி + முருகன் + காவடிப் பதம்]

திருத்தம் *tiruttam,* பெ. (n.) 1. எழுதபட்டவற்றில் அல்லது அச்சிடப்பட்டவற்றில் உள்ள தவறுகளை நீக்கி ஒழுங்குபடுத்தித் தரும் முறை, பிழை திருத்துகை; correction. 2. கட்டடம் முதலியவற்றைச் செப்பம்

செய்கை; repair; improvement as of a building. 3. சட்டம் தீர்மானம் முதலியவற்றில் செய்யப்படும் மாற்றம்; amendment, as of law, proposal, etc. வருமானவரிச் சட்டத்தில் சில மாற்றங்கள் செய்ய வேண்டும். 4. ஒழுங்கு; orderliness, regularity. 5. செப்பம்; evenness, smoothness. 6. திட்டம்; exactness, precision (செ.அக.).

[திருத்து → திருத்தம்]

திருத்தல் *tiruttal*, பெ. (n.) 1. திருத்தம்; correction, as of writing. 2. நெல்வயல் (இ.வ.); paddy field.

[திருத்து → திருத்தல்]

திருத்தற்குறிப்பு *tiruttaṟ-kuṟippu*, பெ. (n.) திருத்தங்கள் கொண்ட குறிப்பு (C.G.); memo or note of corrections.

திருத்தன் *tiruttaṉ*, பெ. (n.) 1. தூய்மையானவன்; holy person. 2. கடவுள்; God, as holy. "திருத்தன் சேவடியை" (தேவா. 376, 4).

[திருத்து → திருத்தன்]

திருத்தாண்டகம் *tiru-t-tāṇḍagam*, பெ. (n.). திருநாவுக்கரசரால் 7ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் தேவாரத்தில் ஒரு பகுதி; a book written by Tirunāvukarašar in 6th century (சிற்.அக.).

[திரு + தாண்டகம்]

திருத்தாலாட்டு *tiru-t-tālāṭṭu*, பெ. (n.) அச்சுதானந்த அடிகளால் 20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a minor literature written by Accutānanta aḍikaḷ in 20th century.

[திரு + தாலாட்டு]

திருத்தில் *tiruttil*, பெ. (n.) திருத்தம் செய்யப்பட்ட நிலம்; cultivated land. "இத்தேவர் ஊரான சோதியம் பாக்கத்து ஊரின் மேலை புதுத்திருத்தில் அரையும்", "புது திருத்தில் அரை - புதிதாகத் திருத்தம் செய்யப்பட்ட நிலத்தில் அரைமாவும்" (தெ.கல்.தொ.3:1, கல்.11).

[திருத்து → திருத்தில்]

திருத்து¹-தல் *tiruttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. பேச்சு, எழுத்து ஆகியவற்றில் உள்ள தவறுகளை நீக்கிச் சரி செய்தல், செவ்வி தாக்குதல்; to correct, rectify, reform. "கொடிது கடிந்து கோறிருத்தி" (புறநா. 17). 2. சீர்ப்படுத்துதல் (வின்.); to mend, repair, refit. 3. மேன்மைப் படுத்துதல்; to improve, elevate. "துளங்குடி திருத்திய ... வென்றியும்" (பதிற்றுப். 37:7). 4. செம்மையாகச் செய்தல்; perform excellently. "மூவர்காரியமுந் திருத்தும்" (திவ். பெரியாழ். 4. 4:1). 5. செம்மைபெற அணிதல்; to deck oneself properly in; to dress sprucely. "பட்டாடை சாத்திப் பணிமேகலை திருத்தி" (பிரபோத 27:19). 6. நன்கமைத்தல்; to arrange properly. "பரிசு விளங்கப் பரிகலமுந் திருத்தி" (பெரியபு. சிறுத்தொண். 73). 7. வயல் பண்படுத்துதல்; to prepare and make a land suitable for cultivation. "பூமிவெளி காணத்திருத்தி" (தாயு. ஆனந்தமான. 6). 8. மெருகிடுதல் (வின்.); to scour and polish. 9. ஆடைதுவைத்தல்; to clean clothes. 10. மேற்பார்த்தல்; to supervise. "கிராமகாரியந் திருத்தும் பெருமக்கள்" (S.I.I.iii. 21). 11. இலை காய் முதலியன நறுக்குதல்; to prepare vegetables, plantain-leaves, etc. by cutting them to size. 12. அழைத்தல்; to call, summon. "திருத்தாய் செம்போத்தே" (திவ். பெரியதி. 10:10: 1). 13. உறவாக்குதல்; to make friends, effect reconciliation. "ஒன்னார் தந்நிலை திருத்திய காதலர்" (பு.வெ. 10, முல்லைப். 3, கொளு).

திருத்து² *tiruttu*, பெ. (n.) 1. நன்செய்நிலம்; cultivated wet land. "வயல்பிச்சைப் பிள்ளை திருத்தெல்லாம்" (குற்றா. குற. 11:2). 2. காடு திருத்தி வேளாண்மைக்குக் கொண்டு வரப்பட்ட நிலம்; reclaimed land. "மன்றச்சநம்பி திருத்துக்குத் தெற்கில்" (S.I.I.iv. 14).

திருத்துழாய் *tiru-t-tuḻāy*, பெ. (n.) துளசி; sacred basil (செ.அக.).

[திரு + துழாய்]

திருத்துறையூர் *tiru-t-tuṟaiyūr*, பெ. (n.) கடலூர் மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Cuddalore district. ஆறுகளில் மக்கள் இறங்கி நீரைப் பயன்படுத்து வதற்குரிய இடம் "துறை" எனப்படும். அதுபோல மக்கள் இறையருளைப் பெற உதவும் இடமும் துறை எனப்பட்டதால்

இவ்வூர் துறையூர் எனப்பெயர் பெற்றது. பாடல் பெற்ற தலமாதலால் திரு என்னும் அடை பெற்றது. சுந்தரர் இத்தலத்தை "கரும்பார் மொழிக்கன் னியராடும் துறையூர்" எனப் பாடியுள்ளார் (தமி. ஊர். பெ. அக.).

[திரு + துறை + ஊர்]

திருத்தெள்ளேணம் *tiru-t-teḷḷēṇam,* பெ. (n.) தெள்ளேண விளையாட்டில் மகளிர் கூற்றாகப் பாடப்பட்ட திருவாசகப் பகுதி; a poem in Tiruvāšagam, which purports to be sung by girls playing at teḷḷēṇam (செ.அக.).

[திரு + தெள்ளேணம்]

திருத்தென்குடித்திட்டை *tiru-t-tenkuḍi-t-tiṭṭai,* பெ. (n.) தஞ்சாவூருக்கு வடகிழக்கே ஆறு கல் (மைல்) தொலைவிலுள்ள ஊர்; a village in Tanjore district. வெட்டாற்றுக்கும், வெண்ணாற்றுக்கும் இடையில் திட்டான பகுதியிலிருப்பதால் இவ்வூர் திட்டை எனப் பெயர் பெற்றது (சிற.பெ.அக.).

[திரு + தென்குடி + திட்டை]

திருத்தேர் *tiru-t-tēr,* பெ. (n.) இறைவன் திருமேனியினை எழுந்தருளச் செய்து வீதியில் வலமாக இழுத்துவரும் மரச் சித்திரத் தேர்; car. தில்லை ஆடவல்லான் திருக்கோயிலில் 12ஆம் நூற்றாண்டு இத்தேர் திருவிழா நிகழ்ந்ததெனக் கல்வெட்டுக் கூறுகின்றது. "நாயகர் திருத்தேர் எழுந்தருளும் போது திருப்புறக் குடையில்" (தெ. கல். தொ. 12. கல். 245).

[திரு + தேர்]

திருத்தொண்டத்தொகை *tiru-t-toṇḍa-t-togai,* பெ. (n.) அறுபத்து மூவர் நாயன்மார் பெயர்களையும் தொகையடியார்களையும் தொகுத்துச் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய தேவாரத் திருப்பதிகம்; a poem of 10 stanzas in Tēvāram of Sundaramūrtti nāyaṉār dealing with 63 šaiva saints and dogai-y-aḍiyār. "சொற்றமெய்த் திருத்தொண்டத் தொகை யென" (பெரியபு. மலை. 38).

[திருத்தொண்டர் + தொகை]

திருத்தொண்டர் *tiru-t-toṇḍar,* பெ. (n.). இறைவனடியார்; devotees of God.

[திரு + தொண்டர்]

திருத்தொண்டர்திருவந்தாதி *tiru-t-toṇḍar-tiruvandādi,* பெ. (n.) நாயன்மார் அறுபத்து மூவரும் தொகையடியாருமாகிய பெரியார் பேரில் நம்பியாண்டார் நம்பிகள் பாடிய ஒரு சிற்றிலக்கியம் (பதினொ.); a poem on the 63 Šaiva saints and dogai-y-aḍiyār by Nambiyāṇḍār-nambi.

[திருத்தொண்டர் + திருவந்தாதி]

திருத்தொண்டர்புராணம் *tiru-t-toṇḍar-purāṇam,* பெ. (n.) பெரியபுராணம்; Periya-purāṇam. "திருத்தொண்டர் புராணமென்பாம்" (பெரியபு. பாயி. 10).

[திருத்தொண்டர் + Skt. புராணம்]

திருத்தொண்டு *tiru-t-toṇḍu,* பெ. (n.) கடவுளடியார்க்குச் செய்யும் பணிவிடை; services rendered to God or His devotees. "திருத்தொண்டு பரவுவாம்" (பெரியபு. திருஞான. 1).

[திரு + தொண்டு]

திருத்தோணோக்கம் *tiru-t-tōṇōkkam,* பெ. (n.) தோணோக்கம் என்ற விளையாட்டில் மகளிர் கூற்றாகப் பாடப்பட்டதும் 14 பாடல்கள் கொண்டதுமான திருவாசகப் பகுதி; a poem of 14 stanzas in Tiruvāšagam which purports to be sung by girls playing at tōṇōkkam (செ.அக.).

[திரு + தோள் + நோக்கம்]

திருத்தோப்பு *tiru-t-tōppu,* பெ. (n.) கோயிலுக் குரிய பூந்தோட்டம் (S.I.I.V. 89); flower-garden attached to a temple.

[திரு + தோப்பு]

திருதம் *tirudam,* பெ. (n.) தாளவகை; a fast-moving time - measure (செ.அக.).

திருதராட்டிரன் *tiruda-rāṭṭiraṉ,* பெ. (n.) பாண்டுவின் தமையனும் கௌரவர் தந்தையுமாகிய அரசன் (சூடா.); paṇḍu's brother and father of the Kauravas.

திருதாளி *tirudāḷi,* பெ. (n.) தழுதாழை; creeping screw-pine (சா.அக.).

திருந்தகைமை *tirundagaimai,* பெ. (n.) மேன்மை (யாழ்ப்.); superiority, excellence.

[திருந்து + தகைமை]

திருந்தலர் *tiruntalar,* பெ. (n.) திருந்தார் (பிங்.) பார்க்க; see *tirundār.*

[திருந்து + அல் + அர்]

திருந்தனம் *tiruntanam,* பெ. (n.) பெருந்துளசி; large holy basil (சா.அக.).

திருந்தார் *tirundār,* பெ. (n.) பகைவர்; foes, enemies. "திருந்தார் தெம்முனை" (பு.வெ. 3:23, கொளு).

[திருந்து + ஆ + ர்]

திருந்திழை *tirundiḻai,* பெ. (n.) அழகிய அணிகலன் அணிந்த பெண்; woman as adorned with jewels. "திருந்திழை கணவ" (பதிற்றுப். 24:11).

[திருந்து + இழை]

திருந்தினர் *tirundinar,* பெ. (n.) ஒழுக்க முள்ளவர்; upright persons, persons of good character. "திருந்தினர் விட்டார் திருவி ரைகம்" (திருமந். 2339).

[திருந்து → திருந்தினர்]

திருந்து-தல் *tirundu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* செவ்விதாதல்; to be correct, perfect. "திருந்து வேதமும்" (திவ். திருவாய். 6. 5: 8). **2.** சீர்ப்படுதல்; to be amended, improved, reformed, as a person, to be settled, as hand-writing, to be trained, as the tongue of a child. அவன் இப்போது திருந்திவிட்டான். *3.* புதிதாக்கப் படுதல் (வின்.); to be repaired, renovated. *4.* பண்படுத்தப்படுதல் (உவ.); to be improved, as land, soil, situation. *5.* பயிற்சி மிகுதல் (வின்.); to be disciplined, as the mind; to be educated, cultivated, experienced, proficient. *6.* தொழில் முற்றுதல்; to be finished artistically. "திருந்தெயிற் குடபால்" (மணிமே. 6:22). **7.** அழகு பெறுதல்; to be beautiful elegant. "திருந்து சேவடி பணிந்தனன்" (தணிகைப்பு. சீபரி. 451). *8.* மேன்மையாதல்; to be worthy, honourable. "திருந்திய தியாதது செய்து தீர்தும்" (கம்பரா. சம்பாதி. 5).

க. திந்து

திருநகர் *tiru-nagar,* பெ. (n.) செல்வநகரம்; wealthy, prosperous city. "செறிகழலவன் றிருநகர் புகுதர" (திருக்கோ. 350, கொளு).

[திரு + நகர்]

திருநட்டக்கணப்பெருமக்கள் *tiru-naṭṭa-k-kaṇa-p-perumakkaḷ,* பெ. (n.) கோயில் அதிகாரிகளுள் ஒரு பகுதியினர் (S.I.I.vii, 378); a class of temple authorities.

[திரு + நட்டக்கணம் + பெருமக்கள்]

திருநட்டி *tiru-naṭṭi,* பெ. (n.) கள்ளி; milk hedge plant (சா.அக.).

திருநடனம் *tiru-naḍanam,* பெ. (n.). திருக்கூத்து-1 பார்க்க; see *tiru-k-kūttu-l.*

[திரு + நடனம்]

திருநடனமாலை *tiru-naḍana-mālai,* பெ. (n.). தண்டபாணி அடிகளால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a minor literature written by Taṇḍapāṇi šuvāmigaḷ in 19th c.

[திரு + நடனமாலை]

திருநடைமாளிகை *tiru-naḍai-māḷigai,* பெ. (n.) கோயில் திருச்சுற்று (I.M.P.Tj.1237); the procession-path round a shrine.

[திரு + நடைமாளிகை]

திருநணா *tirunaṇā,* பெ. (n.) இந்நாளில் பவானி என்றழைக்கப்படும் ஊர் ஈரோடு புகைவண்டி நிலையத்திற்க வடக்கே ஒன்பது நாழிகை வழித் தொலைவிலுள்ளது; a village in Erode.

> வழிபடுவோர்க்குத் தீமைகள் நண்ணாத ஊராகையால் நண்ணாவூர் கடை குறைந்து நணா என்று நின்றது (சிற. பெ. அக.).

திருநந்தவனம் *tiru-nandavanam,* பெ. (n.) கோயிலின் பூந்தோட்டம் (S.I.I.i, 135); flower garden of a temple.

[திரு + நந்தவனம்]

திருநந்தாவிளக்கு *tiru-nandā-viḷakku,* பெ. (n.) கடவுள் திருமுன் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்குந் திருவிளக்கு; perpetual lamp before the chief idol in a temple. "திருநந்தா விளக்கு . . . சந்திரா தித்தவரையுஞ் செல்லும் படிக்கு" (*S.I.I. i, 79*).

[திரு + நந்தாவிளக்கு]



திருநமனிகை *tiru-namaṉigai,* பெ. (n.) கோயில் திருமேனிக்குச் செய்யும் திருமுழுக்கு (அபிசேடச் சடங்கு) (S.I.I.ii, 71); ceremonial bath of the deity in a temple.

[திரு + நமனிகை]

திருநயனந்துயில்(லு)-தல் *tiru-nayaṉan-tuyil-,* 13 செ.குவி. (v.i.) கடவுளர் முதலியோர் துயில் கொள்ளுதல்; to sleep, as a deity. "திருநயனந் துயில்வோய்" (*அஷ்டப். திரு. வரங். கலம். 1*).

[திரு + நயனம் + துயில்-.]

திருநயனம் *tiru-nayaṉam,* பெ. (n.) கோயில் திருமேனிக்குச் சாத்துந் திருக்கண்மலர் (S.I.I.ii, 409); eye made of silver or gold for a deity.

[திரு + நயனம்]

திருநல்லியாண்டு *tiru-nalli-yāṇḍu,* பெ. (n.) நல்லாட்சி ஆண்டு; prosperous, regnal year. "ஸ்ரீ கரிகாலசோழதேவர்க்கு . . . திரு நல்லியாண்டு 2-ஆவது" (*S.I.I.v, 84*).

[திரு + நல்லியாண்டு. நல்ல + யாண்டு - நல்லியாண்டு]

திருநலியாண்டு *tiru-nali-yāṇḍu,* பெ. (n.) திருநல்லியாண்டு (S.I.I.v, 83) பார்க்க; see *tiru-nalli-yāṇḍu.*

[திரு + நலியாண்டு]

திருநள்ளாறு *tiru-naḷḷāṟu,* பெ. (n.) திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டத்தில் தக்களூர் என்னும் ஊருக்கருகில் உள்ள ஊர்; the small town in Thiruvārūr district.

1. அரிசிலாற்றுக்கும், வாஞ்ச ஆற்றுக்கும் நடுவே இந்த ஊர் அமைந்திருப்பதால் நள்ளாறு எனப் பெயர் பெற்றதாகக் கூறுவர்.

2. நளன் வழிபட்டுப் பேறு பெற்றதால் இப் பெயர்பெற்றது என்றும் கூறுவர். சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர் (தமி. ஊர். பெ. அக.).

[திரு + நள்ளாறு]

திருநா *tiru-nā,* பெ. (n.) பாவட்டை; common bottle-flower.

திருநாட்டுக்கெழுந்தருள்(ளு)-தல் *tiru-nāṭṭu-k-keḻundaruḷ-,* 5 செ.குவி. (v.i.) திருநாடணி செய்தல்; to die. "எம்பெருமானார் திரு நாட்டுக் கெழுந்தருளுகிறபோது" (*ரஹஸ்ய. 560*).

[திரு + நாட்டுக்கு + எழுந்தருள்(ளு)-.]

திருநாடலங்கரி-த்தல் *tiru-nāḍalaṅgari-,* 4 செ.கு.வி. (v.i.) நன்னிலையடைதல் (மாலுலகத்தை அணி செய்தல்); lit. to adorn Vaikuṇḍam, to die, used euphemistically of a great person.

[திருநாடு + அலங்கரி-.]

திருநாடு *tiru-nāḍu,* பெ. (n.) மாலுலகம்; Viṣṇu's heaven. "தெளிவிசும்பு திருநாடாத் தீவினையேன் மனத்துறையும்" (*திவ். திருவாய். 9. 7:5*).

[திரு + நாடு]

திருநாப்பழம் *tiru-nā-p-paḻam,* பெ. (n.) திருநா பார்க்க. see *tirunā.*

[திரு + நாப்பழம்]

திருநாமக்கத்திரி *tirunāma-k-kattiri,* பெ. (n.) விரியன் பாம்பு வகை (வின்.); russell's Viper, vipera russelli.

[திரு + நாமம் + கத்திரி]

திருநாமக்காணி *tiru-nāma-k-kāṇi,* பெ. (n.) திருநாமத்துக்காணி பார்க்க; see *tirunāmattu-k-kāṇi.*

[திரு + நாமக்காணி]

திருநாமக்கிழவர் *tiru-nāma-k-kiḻavar,* பெ. (n.) ஊர்ப் பெருமகனார்; குடவோலை வழியே பெயர் சொல்லப்பட்டு ஊர்ச் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மை யுடையவர்; a person. "ஊற்றுக் காட்டு பூசாலி வாமணனுக்கு இவ்வூரைச் சேரி திருநாமக் கிழவர்களோம் ஒட்டிக் குடுத்த பரிசாவது" *(கம்பவர்மபல்லவன், கி.பி. 884, தெ. கல். தொ. 8, கல். 168).* "இவ்வூரைச் சேரித்திரு நாமக்கிழவர் களோம்" *(தெ. கல். தொ. 12. புகு. 1. கல். 168).*

[திரு + நாம + கிழவர்]

திருநாமச்செடி *tiru-nāma-c-ceḍi,* பெ. (n.) செடி வகை *(L.);* Indian worm-wood.

[திரு + நாமம் + செடி.]

திருநாமத்துக்காணி *tiru-nāmattu-k-kāṇi,* பெ. (n.) கோயில் நிலம்; land assigned to a deity, as bearing his name; temple land. "நாயனார் திருநாமத்துக்காணியு மாறி" *(S.I.I.i, 118).*

[திரு + நாமம் + காணி]

திருநாமத்துத்தி *tiru-nāma-t-tutti,* பெ. (n.) துத்திச் செடி வகை; lobed, leaved Mysore mallow.

[திரு + நாமம் + துத்தி]

திருநாமப்பாலை *tiru-nāma-p-pālai,* பெ. (n.) ஒருவகைப் பூடு *(யாழ்ப்.);* oval-leaved China root.

[திரு + நாமம் + பாலை]

திருநாரணம்பிழை-த்தல் *tiru-nāraṇam-piḻai-,* 4 செ.குன்றாவி. (v.i.) திருமாலின் மேற் செய்த ஆணையை மீறுதல்; to break an oath taken in the name of God Viṣṇu. "திருநாரணம் பிழைத்த தண்டம்படுவதாக ஒட்டினோம்" *(S.I.I.vii. 265).*

[திரு + நாரணம் + பிழை-.]

திருநாரையூர் *tiru-nāraiyūr,* பெ. (n.) கடலூர் (தென்னார்க்காடு) மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in South Arcot district.

[திரு + நாரையூர்]

1. இங்குள்ள நீர்நிலைகள், நிலவளம் மிகுந்த பகுதிகளில் நாரைகள் மிகுந்து வாழ்ந்திருக்கின்றன. இதன் காரணமாக இப்பெயர் பெற்றது. நாவுக்கரசர், சம்பந்தரரால் பாடல் பெற்ற தலம். 2. நாரை வழிபட்டுப் பேறு பெற்ற தலமாதலாலும் இப்பெயர் பெற்றது. 3. நம்பியாண்டார் நம்பிகள் இவ்வூரில் எழுந்தருளியுள்ள பிள்ளையார் மீது பாடிய திருவிரட்டை மணிமாலை" 11ஆம் திருமுறையாகும். "செங்கழு நீர்கட்குந் திருநாரையூர்ச் சிவன் செய் கொங்கெழு தாரைங் கரத்தகோ".

திருநாவுக்கரசுநாயனார் *tiru-nāvu-k-karaśu-nāyaṉār,* பெ. (n.) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவரும் தேவாரத்தின் ஒரு பகுதி பாடியவரும் 7ஆம் நூற்றாண்டினருமான சிவனடியார்; a canonized Śaiva saint, one of the 63 Nāyaṉmārs, who wrote a part of Tēvāram in 7th century.

[திரு + நாவுக்கரசு நாயனார்]

திருநாள் *tirunāḷ,* பெ. (n.) 1. திருவிழா; day of festival, as a sacred day. "திருநாள் படைநாள் கடிநாள்" *(பெருங். இலாவாண. 2:32).* திருநாளுக்குப் போகிறாயா என்றால் ஆம் ஆம்; திரும்பி வருகிறாயா என்றால் உம் உம் *(பழ.).* திருநாளும் முடிந்தது எடுபிடியும் கழிந்தது *(பழ.).* 2. பிறந்த நாள் (நாஞ்.); birthday, as of a king.

தெ. திருநால்ல

[திரு + நாள்]

திருநாள்தேவை *tirunāḷ-tēvai,* பெ. (n.) திருவிழாச் செலவு (S.I.I.iv. 122); expenses of a festival.

[திருநாள் + தேவை]

திருநாளைப்போவார்நாயனார் *tiru-nāḷai-p-pōvār-nāyaṉār,* பெ. (n.) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவரான நந்தனார் எனப்படுஞ் சிவனடியார்; a canonized Śaiva saint, commonly known as Nandaṉār, one of the 63 Nāyaṉmārs.

[திரு + நாளைப்போவார் + நாயனார்]

திருநிலைக்கால் *tiru-nilai-k-kāl,* பெ. (n.). தலைமைக் கோபுரத்தை (இராய கோபுரத்தை)த் தாங்கி நிற்கும் முதன்மையான தூண் (இவ.); chief pillar supporting the irāya-kōpuram.

[திரு + நிலை + கால்]

திருநிலைமகளிர் *tiru-nilai-magaḷir,* பெ. (n.) **மணமான பெண்கள்;** married women. "தேன்றோய் கோதைத் திருநிலை மகளிர்" (பெருங். உஞ்சைக். 54:6).

[திரு + நிலை + மகளிர்]

திருநிறஞ்செய்-தல் *tiru-niṟaiñ-šey-,* 1 செ.குன்றாவி. (v.t.) கோயில் திருமேனிக்குப் பொன் மெருகிடுதல் (M.E.R. 16 of 1932-3); to gild the image of the deity.

[திரு + நிறம் + செய்-.]

திருநீர்மலை *tiru-nīr-malai,* பெ. (n.) சென்னை மாநகரத்தில் பல்லாவரம் புகைவண்டி நிலையத்திலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ள ஊர்; the small town in Chennai district. காண்டபவளம் என்ற பெயரும் இதற்குண்டு; திருமங்கை ஆழ்வார் தலந்தோறும் சென்று பெருமாளை வழிபட்டு வந்தபொழுது, இந்த ஊரிலுள்ள மலை மீது எம்பெருமான் எழுந்தருளினார். அப்பொழுது மலையைச் சுற்றி நீர் நிறைந்திருந்தது. ஆகவே அவர் அப்பதிக்கு சற்றுத் தொலைவிலுள்ள மந்திரிகிரியில் தங்கிப் பெருமானைத் தொழுதார். பின்னர் நீர் வடிந்தது. பின் கோயிலுக்குள் சென்று பெருமானை வணங்கியதால் இவ்வூர் திருநீர் மலை ஆயிற்று. திருமங்கையாழ்வார் இப்பதியை "நீண்டான்குற ளாகிநி மிர்ந்தவனுக் கிடம்மாமலை யாவது - நீர்மலையே" எனப் பாடியுள்ளார் (தமி. ஊர். பெ.).

[திருநீர் + மலை]

திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் *tiru-nīlakaṇḍa-yāḻ-p-pāṇa-nāyaṉār,* பெ. (n.). நாயன்மார் அறுபத்து மூவருள் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் காலத்தில் வாழ்ந்த சிவனடியார் (பெரியபு.); a canonized šaiva saint, contemporary of Tiru-ñāṉa-sampanda-mūrtti-nāyaṉār, one of the 63.

[திரு + நீலகண்டம் + யாழ் + பாணர் + நாயனார்]

திருநீலகண்டன் *tiru-nīla-kaṇḍaṉ,* பெ. (n.) *1.* **சிவன்;** God Šivaṉ. *2.* **கொடியவன்;** wicked man. *3.* **பூரான்வகை;** a large kind of centipede.

[திரு + நீலம் + கண்டன்]

திருநீலநக்கநாயனார் *tiru-nīla-nakka-nāyaṉār,* பெ. (n.) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவரான சிவனடியார் (பெரியபு.); a canonized Šaiva saint, one of 63.

[திரு + நீலநக்கன் + நாயனார்]

திருநீற்றுக்காப்பு *tiruniṟṟu-k-kāppu,* பெ. (n.) **பெரியோரால் ஒருவரின் நெற்றியில் இடப்படும் திருநீறு;** sacred ashes rubbed on one's forehead by a great person, as a charm.

[திருநீறு + காப்பு]

திருநீற்றுக்கோயில் *tiruniṟṟu-k-kōyil,* பெ. (n.) **திருநீற்றுப்பை;** bag for sacred ashes.

[திருநீறு + கோயில்]

திருநீற்றுநானம் *tiru-nīṟṟu-nāṉam,* பெ. (n.) **திருநீற்றால் குளிப்பாட்டல்;** purification with sacred ashes. "திருநீற்று நானஞ் சொலப்படுமால்" (திருக்காளத். பு. 26:29).

[திருநீறு + நானம். Skt. snanam]

திருநீற்றுப்பச்சை *tiru-nīṟṟu-p-paccai,* பெ. (n.) **மணமுள்ள மருந்துச் செடிவகை;** sweet basil.

[திருநீறு + பச்சை]

திருநீற்றுப்பத்திரி[1] *tiru-nīṟṟu-p-pattiri,* பெ. (n.). **தாலியுருக்களுள் ஒன்று;** a pendant in the tāli cord. "தாலிச்சரட்டிலே திருநீற்றுப் பத்திரி யேனும் அலரிப்பூவேனும் அணிந்தவர்கள்" (எங்களூர். 24).

[திருநீறு + பத்திரி]

திருநீற்றுப்பத்திரி[2] *tiru-nīṟṟu-p-pattiri,* பெ. (n.) திருநீற்றுப்பச்சை பார்க்க; see *tiru-nīṟṟu-p-paccai.*

[திருநீறு + பத்திரி]

திருநீற்றுப்பந்தர் *tiru-nīṟṟu-p-pandar,* பெ. (n.). திருவாரூரில் ஆரூரான் புறப்பாட்டின் போது மேலே பிடிக்கும் நடைப்பந்தல் (தஞ்சை.); canopy held over the image of Tyāgarāja at Tiruvārūr, during a procession.

[திருநீறு + பந்தர்]

திருநீற்றுப்பழம் *tirunīṟṟu-p-paḻam,* பெ. (n.) திருநீற்று உருண்டை *(வின்.);* balls of sacred ashes.

[திருநீறு + பழம்]

திருநீற்றுமடல் *tirunīṟṟu-maḍal,* பெ. (n.) திருநீறு வைக்குங் கலம்; a vessel for keeping sacred ashes.

[திருநீறு + மடல்]

சிவசின்னங்களுள் ஒன்று

திருநீறு *tiru-nīṟu,* பெ. (n.) தெய்வத் தன்மை கொண்ட சாம்பல்; sacred ashes, used for šaivaite mark. "எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறும்" *(தேவா. 816, 3).* திருநீற்றிலே ஒட்டாதது கழற்சிக்காய் *(பழ.).*

[திரு + நீறு]

திருநுந்தாவிளக்கு *tirunundā-viḷakku,* பெ. (n.) திருநந்தாவிளக்கு பார்க்க; see *tiru-nandā-viḷakku.*

[திரு + நந்தாவிளக்கு]

திருநூற்றந்தாதி *tiru-nūṟṟandādi,* பெ. (n.) அருகக்கடவுண்மேல் அவிரோதி யாழ்வார் இயற்றிய ஓர் அந்தாதி நூல்; an andādi poem on Arhat by Avirōdi-y-āḻvār *(செ.அக.).*

[திரு + நூற்றந்தாதி]

திருநெடுந்தாண்டகம் *tiru-neḍun-dāṇḍagam,* பெ. (n.) 1. நாலாயிரத் தெய்வப் பனுவலில் திருமங்கை மன்னன் இயற்றிய ஒரு பகுதி; a poem in Nālāyira-p-pirapantam, by Tirumaṅgai-y-āḻvār. 2. எண்சீர்த் தாண்டகத் தாலாகிய தேவாரப் பாடல்கள்; Tēvāram decades in tāṇḍagam metre of eight cīr.

[திரு + நெடும் + தாண்டகம்]

திருநெல்வேலிஅம்பலவாணக்கவிராயர் *tiru-nelvēli-ambalavāṇa-k-kavirāyar,* பெ. (n.) முத்துக்குமாரக் கவிராயர் என்பவருடைய புதல்வர்; இவர் திருவாவடுதுறை அம்பல வாண தேசிகர் மீது வண்ணம், இரட்டைமணி மாலை ஆகிய நூல்களைப் பாடியவர் *(பிற்காலபுல.);* an auhtor of Iraṭṭaimaṇimalai written by Ambalavana-k-kavirayar.

திருநெல்வேலிசென்னா *tiru-nelvēli-šeṉṉā,* பெ. (n.) நிலாவிரை; Tirunelvēli senna - cassia angustifolia *(சா.அக.).*

திருநெல்வேலித்தலபுராணம் *tirunelvēli-t-talapurāṇam,* பெ. (n.) நெல்லையப்பப் பிள்ளை 19ஆம் நூற்றாண்டில் எழுதிய சிற்றிலக்கியம் *(சிற்.அக.);* the minor literature written by Nellaiyappar in l9th Century.

[திருநெல்வேலி + தலபுராணம்]

திருநெற்றித்திரணை *tiru-neṟṟi-t-tiraṇai,* பெ. (n.) கடவுள் திருமேனியின் நெற்றியிற் சாத்தும் அணிவகை *(S.I.I.iii, 474);* an ornament for the forehead of a deity.

[திரு + நெற்றி + திரணை]

திருநெற்றிமாலை *tiru-neṟṟi-mālai,* பெ. (n.) கோயில் திருமேனியின் நெற்றியில் அணியும் மாலை *(வின்.);* garland for the forehead of an idol.

[திரு + நெற்றி + மாலை]

திருநெறித்தமிழ் *tiruneṟi-t-tamiḻ,* பெ. (n.) தேவாரம் *(தஞ்சா128);* the Tēvāram hymns.

[திரு + நெறி + தமிழ்]

திருநேத்திரசிந்தாமணி *tiru-nēttira-sindāmaṇi,* பெ. (n.) கண் நோய்கள் 96 வகையும், அவைகளின் பெயர் குணம் முதலான விளத்தங்களையும் பற்றி கூறும் ஒரு ஆயுர் வேத மருத்துவ நூல்; an Āyurvēdic science dealing about the 96 kinds of diseases of the eyes thier names qualities etc. *(சா.அக.).*

திருநொந்தாவிளக்கு *tiru-nondā-viḷakku,* பெ. (n.) திருநந்தாவிளக்கு பார்க்க; see *tiru-nandā-viḷakku.*

திருநோக்கம் *tiru-nōkkam,* பெ. (n.) திருநோக்கு பார்க்க; see *tiru-nōkku.*

[திரு + நோக்கம்]

திருநோக்கு *tiru-nōkku,* பெ. (n.) கடவுள், குரு முதலாயினாரது அருட்பார்வை; gracious look of a deity; auspicious look of a guru in the administration of tīṭcai *(செ.அக.).*

[திரு + நோக்கு]

திருப்பட்டம்[1] *tiru-p-paṭṭam,* பெ. (n.) திருமுடி *(S.I.I.ii. 9);* sacred diadem.

[திரு + பட்டம்]

திருப்பட்டம்[2] *tiru-p-paṭṭam,* பெ. (n.) **நெற்றியில் அணிவிக்கும் பொற்பட்டை. இதனை வீரபட்டம் என்றும் கூறுவர்;** thin plate of metal (gold) worn on the forehead, as an ornamental badge of distinction. "திராசராச தேவர் குடுத்த பொன்னின் திருப்பட்டம் ஒன்று" *(தெ. கல். தொ. 2. கல். 1).*

[திரு + பட்டம்]

திருப்பட்டிகை *tiru-p-paṭṭigai,* பெ. (n.) **மேகலை போன்ற ஒருவகை அணிகலன்;** a kind of ornament. "திருப்பூட்டிகை நாணும், அரசி மாணிக்கமும், படுகண்ணுங் கள்ளீப் பூவுங் கிண்கிணி பேரும், நாணும்" *(தெ. கல். தொ. 2, கல். 93).*

[திரு + பட்டிகை]

மேகலை வகையான இவ்வகைக் கச்சையணியை, இராசராசர் தாம் எழுந்தருளுவித்த தேவிக்கு (உமாபரமேசுவரி யார்க்கு) செய்தளித்தார்.

திருப்படி *tiru-p-paḍi,* பெ. (n.) **கோயிலின் வாயிற்படி** (நாஞ்.); step at the entrance of a temple.

[திரு + படி]

திருப்படிக்கம் *tiru-p-paḍikkam,* பெ. (n.) 1. **இறை வழிபாட்டிற்குப் பயன்படும் ஏனங்கள்;** a large vessel to receive the water used in worshipping an idol. 2. **திருவடிக்கம்** *பார்க்க;* see *tiruvaḍikkam.*

[திரு + படிக்கம்]

திருப்படிமாற்று *tiru-p-paḍi-māṟṟu,* பெ. (n.) **கோயில் திருமேனிகளை வழிபடுவதற்காக வழங்கப்படும் அரிசி முதலிய பண்டம்;** articles of offering of a deity. "செய்யி லுகுத்த திருப்படிமாற்ற தனையைய விதுவமுது செய்யென்று" *(திருக்களிற்றுப். 19).*

[திரு + படிமாற்று]

திருப்படிமாறு-தல் *tiru-p-paḍi-māṟu-,* 5 செகுவி. (v.i.) **இறைத்திருமேனிக்கு வழிபாட்டுப் பொருள் அமைத்தல்;** to provide for the offerings to a deity. "விண்ணக ராழ்வார்க்குத் திருப்படி மாற அள்ளிட்டு" *(கல்).*

[திரு + படிமாறு-]

திருப்படையெழுச்சி *tiru-p-paḍai-y-eḻucci,* பெ. (n.) **மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகத்தின் ஒரு பகுதி;** a part of Tiruvāšagam written by Māṇikka-vāšagar.

[திரு + படையெழுச்சி]

திருப்படைவீடு *tiru-p-paḍai-vīḍu,* பெ. (n.) **கடவுள் கோயில் கொண்டுள்ள தலம்** (T.A.S.); place sacred to a deity.

[திரு + படை + வீடு]

திருப்பண்ணிகாரப்புறம் *tiru-p-paṇṇi-kāra-p-puṟam,* பெ. (n.) **இறைவனுக்கு அமுது படைக்க வருவாயாக வைத்த நிலம்** (தெகல்.தொ. 12, பகுதி. 1. கல். 160)**;** temple land.

திருப்பணி[1] *tiru-p-paṇi,* பெ. (n.) 1. **கோயிற் பணி** *(S.I.I.i.126);* service in a temple. 2. **கோயில் கட்டுதல், புதுப்பித்தல்களாகிய வேலை;** work of a temple-building, repairing, etc. திருப்பணி செய்யக் கருத்திருந்தால், கருப்படியின் பேரிலே விருப்பிருக்கும் *(பழ.).* 3. **நெற்களத்தில் திருப்பணிக்காகப் பெறப்படும் கோயில் வருமானம்** *(G.Tn. D. I. 313);* temple-income derived from harvest field.

[திரு + பணி]

திருப்பணி[2]**-த்தல்** *tiru-p-paṇi-,* 4 செகுவி. (v.i.) **யானையை நிற்கப் பண்ணுதல்** *(யாழ்.அக.);* to make an elephant stand.

திருப்பணிமாலை *tiru-p-paṇi-mālai,* பெ. (n.) **கோயிற்றிருப்பணி விளக்கங் கூறும் நூல்;** poem which describes the tiru-p-paṇi of a temple.

[திருப்பணி + மாலை]

திருப்பணிமாற்று *tiruppaṇi-māṟṟu,* பெ. (n.) **கோயில் மராமத்து;** repairs in temple.

[திரு + பணிமாற்று]

திருப்பணிமுட்டு tiruppaṇi-muṭṭu, பெ. (n.) திருப்பணிப் பொருள்கள் (வின்.); materials for building a temple; temple utensils, implements, vessels.

[திருப்பணி + முட்டு]

திருப்பதி *tiruppadi,* பெ. (n.) 1. இறைவன் கோயில் கொண்ட திருத்தலம்; any sacred shrine. திருப்பதிக்குப் போனாலும் துடுப்பு ஒருகாசு (பழ.), திருப்பதிச் சொட்டு படிப்படியாக எரித்தது (பழ.). 2. திருவேங்கடம் என்னும் மாலியத் தலம்; Tiruppadi, a Thirumāl shrine திருப்பதியில் மொட்டைத் தாதனைக் கண்டாயா? (பழ.).

[திரு + பதி]

திருப்பதிக்கல் *tiruppadi-k-kal,* பெ. (n.) 1. திருவேங்கடத்திற்கருகில் கிடைக்கும் கரும்பச்சை நிறமுடைய ஒருவகைச் சாணைக் கல்; inferior species of hone-stone of a dark-green colour, novaculite, found near Tiruppadi (செ.அக). 2. முகமழிப்போர் பயன்படுத்தும் சாணைக்கல்; stone used by barbars for sharpening razors.

[திருப்பதி + கல்]

திருப்பதிகம் *tiruppadigam,* பெ. (n.) 1. பெரும் பாலும் பத்து அல்லது பதினோரு செய்யுட்கள் கொண்டதாய்த் தேவாரத் துள்ளது போல இறைவனைப் புகழ்ந் துரைக்கும் பாடற்றொகை; poem generally containing 10 or 11 stanzas in praise of a deity, as in Tēvāram. 2. புத்தரின் அருமை பெருமைகளைப் பாராட்டும் ஒரு நூல் (சி.சி. பர. சௌத். 2, ஞானப்.); a poem in praise of Buddha.

[திரு + பதிகம்]

திருப்பதியக்காணி *tiru-p-patiya-k-kāṇi,* பெ. (n.) சிவன் கோயில்களில் திருப்பதிகமெனும் தேவாரப் பாடல்களை நாளும் பாடுதற்கு அமர்த்தப் பெற்றவர் பெறுவதற்குரியதாக விடப்படும் இறையிலி நிலம்; tax free land. "இக்கோயில் திருப்பதியக் காணி இவங் கைக்கொண்டு இவன் இட்டாரே திருப்பதியம் பாடவும்" (தெ. கல். தொ. 17. கல். 453).

[திரு + பதிகம் + காணி]

திருப்பதியம் *tiru-p-padiyam,* பெ. (n.) திருப்பதிகம் பார்க்க; see *tiru-p-padigam.* "திருப்பதியம் பாடுவாருள்ளிட்ட பலபணி செய்வார்க்கு" (S.I.I.iii, 94).

[திரு + பதியம்]

திருப்பம் *tiruppam,* பெ. (n.) 1. திரும்புகை; turning, averting. "வடபத்திரசாயி முகத் திருப்பங்கொண்டு" (குருபரம். 77). 2. திரும்பு கோடி; turning, as in a street, crossway. 3. பணப்பரிமாற்றம்; money-dealing. 4. சமையலறை (நெல்லை); kitchen. 5. பொய்முடி (சவரி) (இவ.); false hair.

[திரும்பு → திருப்பம்]

திருப்பரங்குன்றம் *tirup-p-araṅ-kuṉṟam,* பெ. (n.) முருகக்கடவுளின் அறுபடை வீடு என்பவற்றுள் ஒன்றும், மதுரைக்குத் தென் மேற்கில் உள்ளதுமான குன்று (திருமுரு.); a hill south-west of Madura, sacred to Murugan, one of six paṭai-vīḍu.

> இக்குன்று சிவக்கொழுந்து (லிங்க) வடிவில் காட்சி தருகின்றது. பரன் எனும் சொல் சிவனைக் குறிப்பதால் இக்குன்று பரன்குன்று ஆகி பரங்குன்று ஆயிற்று. இதனைச் சார்ந்த ஊராதலால் திரு என்னும் அடையுடன் "திருப்பரங்குன்றம்" ஆயிற்று.
>
> "சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல் சினமிகு முருகன் தண்பரங்குன்றத்து"

என இவ்வூரை அகநானூறு குறிக்கின்றது.

[திரு + பரன் + குன்றம்]

திருப்பரம் *tiru-p-param,* பெ. (n.) சோறு; cooked rice (சா.அக.).

திருப்பராய்த்துறை *tiru-p-parāy-t-tuṟai,* பெ. (n.) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Tiruccirāppaḷḷi district. முந்தைய காலத்தில் இப்பகுதியில் பராய் மரங்கள் நிறைந்து இருந்ததால் பராய்த்துறை எனப்பட்டுப் பின் திரு அடை பெற்றது. நாவுக்கரசர் இவ்வூரை

"சிட்டனார்தென் பராய்த்துறைச் செல்வனார்" எனப் பாடி உள்ளார்.

[திரு + பராய்த்துறை]

திருப்பரிச்சட்டம்வாட்டும்வண்ணத்தான் *tiruppari-c-cattam-vāttum-vannattān,* பெ. (n.) இறைவன் திருமேனிக்கு அணிவிக்கும் ஆடையினைத் தூய்மை செய்து உலர்த்தும் வண்ணான்; a washerman.

இவர்கள் "திருப்பரி சட்டங் கழுவுவார்" எனறுக் கூறப்பெறுவர். 'திருப்பரிச் சட்டம் வாட்டும் வண்ணத்தானுக்கு நெல் குறுணி" (தெ. கல். தொ. 7: கல். 485. புதுக்கல். 90).

[திரு + பரிச்சட்டம் + வாட்டும் + வண்ணத்தான்]

திருப்பரிவட்டம் *tiru-p-pari-vattam,* பெ. (n.) 1. இறைவர் திருமேனிக்கு அணிவிக்கும் ஆடை; a small piece of cloth for dressing an idol. 2. கோயிலில் (மரியாதைக்காகப்) பெரியோர் தலையிற் சுற்றப்படும் கடவுளின் ஆடை; temple cloth tied on the head of a person by the priest, as a mark of honour (செ.அக.).

[திரு + பரிவட்டம்]

திருப்பருத்திக்குன்றம் *tiru-p-parutti-k-kunram,* பெ. (n.) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Kañjipuram district.

இது ஒரு சமணத் திருப்பதி. 1. இப்பகுதியில் குன்றம் ஒன்று விளங்குகின்றது. இதனைச் சார்ந்து, பருத்தி வயல்கள் நிறைந்து இருந்தமையால் பருத்திக் குன்றம் எனப் பெயர் பெற்றது என்பர். 2. பரிதி என்பது கதிரவனைக் குறிக்கும் சொல். பரிதிக் குன்றம் என்பதே நாளடைவில் பருத்திக் குன்றம் ஆயிற்று என்பர். 3. முன்பு செம்பொன்குன்றம் என்று வழங்கப்பட்டு பொற்குன்றமாகி நாளடைவில் பருத்திக் குன்றமாயிற்று என்பாரும் உளர். கல்வெட்டுகளில் இனக் காஞ்சி (சமண காஞ்சி) என்று குறிக்கப்பட்டு உள்ளது. திரு + பரிதி + குன்றம் = திருப்பரிதி குன்றம். திரு + பொற் + குன்றம் = திருப்பொற் குன்றம் → திருப்பருத்திக் குன்றம்.

[திரு + பருத்தி + குன்றம்]

திருப்பல்லாண்டு *tiru-p-pallāndu,* பெ. (n.) 1. சிவனைப் புகழ்ந்து சேந்தனார் பாடிய சிற்றிலக்கியம்; a poem in the ninth tiru-murai by Šēndanār in praise of Šiva. 2. நாலாயிரத் தெய்வப் பனுவலுள் பெரியாழ்வார் பாடிய ஒரு பகுதி; a poem in Nālāyira-t-tivya-p-pirapandam.

[திரு + பல்லாண்டு]

திருப்பலிகொட்டு-தல் *tiru-p-pali-kottu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கோயிலில் வழிபாடு நிகழும்பொழுது செகண்டி காளம் முதலிய இசைக் கருவிகளை இசைத்தல்; to sound as a musical instrument at temple. "இத்தேவர்க்குத் திருப்பணி மூன்று தேச காலமும் செகண்டிகை உட்பட ஐஞ்சான் கொண்டு திருப்பலி கொட்டுவதற்கு வைத்த நிலம். இவ்வூரில் உவச்சர்க்குரியது" (தெகல். தொ.).

[திருப்பலி + கொட்டு]

திருப்பவித்திரமாலை *tiru-p-pavittira-mālai,* பெ. (n.) கோயில் திருமேனிக்குச் சார்த்தி மாலியர் அணியும் பட்டு முடிச்சு மாலை; sacred garland of silk-knots worn by Vaisnavar after first being worn by the idol.

[திரு + பவித்திரமாலை]

திருப்பள்ளித்தாமம் *tiru-p-palli-t-tāmam,* பெ. (n.) கோயில் சிலைகளுக்குச் சூட்டும் மாலை; garland for an idol. 'திருப்பள்ளித் தாமத் திருநந்தவனஞ் செய்யவும்' (S.I.I.iii. 211).

[திரு + பள்ளி + தாமம்]

திருப்பள்ளித்தொங்கல் *tiru-p-palli-t-tongal,* பெ. (n.). திருப்பள்ளித்தாமம் பார்க்க; see *tiruppalli-t-tāmam.*

[திரு + பள்ளி + தொங்கல்]

திருப்பள்ளித்தொங்கல்மகுடம் *tiru-p-palli-t-tongal-magudam,* பெ. (n.) முகப்பில் பொன் காசுத் தொங்கல்களால் அணிசெய்யப்பட்ட திருமுடி போன்ற வடிவிலமைந்த மகுடம். முதல் இராசராசன் தஞ்சை பெருவுடையாருக்கு அளித்த சின்னங்களுள் சிறந்த வேலைப்பாடு அமைந்த விருதுச் சின்னம் இம்மகுடங்களே யாகும். அடுத்து விளக்கின மொட்டும், பறளையும் உள்பட திருப்பள்ளித் தொங்கல்

மகுடங்கள் பொன் நூற்று நாள்பத்து ஒன்பதின் கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியுங் குன்றி (தெ. கல். தொ. 2, கல். 1).

[திருப்பள்ளி + தொங்கல் + மகுடம்]

திருப்பள்ளிபடுத்து-தல் *tiru-p-paḷḷi-paḍuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **துறவியை அடக்கஞ் செய்தல்;** to bury an ascetic. "சரம கைங்கிரியங் களைச் செய்வித்துத் திருப்பள்ளி படுத்தி" *(குருபரம். 184).*

[திரு + பள்ளிபடுத்து-.]

திருப்பள்ளியறை *tiru-p-paḷḷi-y-aṟai,* பெ. (n.) **இறைத் திருமேனி இரவிற் பள்ளிக்கு எழுந்தருளும் அறை;** bed chamber of a deity.

[திருப்பள்ளி + அறை]

திருப்பள்ளியுணர்த்து-தல் *tiru-p-paḷḷi-y-uṇarttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **வைகறையிற் றுயிலெழுமாறு இறைவனைப் பாடுதல்;** to sing aubade and request a deity to wake-up early in the morning.

[திரு + பள்ளி + உணர்த்து-.]

திருப்பள்ளியெழுச்சி *tiru-p-paḷḷi-y-eḻucci,* பெ. (n.) **கடவுளைத் துயிலெழுப்பும் பாடல்கள் அமைந்த சிற்றிலக்கியம்** (திவ்.); poem sung for waking up the deity in a temple.

[திரு + பள்ளியெழுச்சி]

சிற்றிலக்கிய வகையுள் ஒன்று; மாணிக்க வாசகராலும், தொண்டரடிப் பொடியாழ் வாராலும், இராமலிங்க அடிகலாலும் எழுதப்பட்டது *(சிற்.அக.).*

திருப்பளிக்கம் *tiru-p-paḷikkam,* பெ. (n.) திருப்படிக்கம் பார்க்க; see ***tiru-p-paḍikkam.***

திருப்பன் *tiruppaṉ,* பெ. (n.) திருப்பம் பார்க்க (நாஞ்.); see ***tiruppam.***

[திருப்பம் → திருப்பன்]

திருப்பறையறைவு *tiruppaṟai-y-aṟaivu,* பெ. (n.) **திருக்கோயில்களில் நிகழும் நிகழ்ச்சிகளை நாளும் பறையறைவித்து ஊரவர்க்கு அறியச் செய்யும் செய்கை;** to publish the temple rows by boat of drum.

ஸ்ரீராஜராஜீஸ்வரம் உடையார் ஆட்டைப் பெரிய திருவிழாவுக்குத் திருக்கொடி யேற்று நான்று திருப்பறை யறைவு கேட்பிக்கும் கடிகையார். *(தெ.கல். தொ.2. கல். 1).*

[திரு + பறை + அறைவு]

திருப்பனந்தாள் *tiru-p-paṉandāḷ,* பெ. (n.) **தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டத்திலுள்ள ஊர்;** the small town in Tanjavure district.

பண்டைக் காலத்தில் இப்பகுதியில் பனை மரங்கள் நிறைந்திருந்தமை யாலும், கோயில் மரம் பனை மரமாதலாலும், ஞான சம்பந்தரால் பாடல் பெற்ற தலமாத லாலும் திரு எனும் அடை பெற்று இப்பெயர் பெற்றது. "பிரித்தவன் செஞ்சடைமே னிறை பேரொலி வெள்ளத்தன்னைத் தரித்த வனூர் பனந்தாட்டிருத்தாடகை யீச்சரமே" எனச் சம்பந்தர் பாடியுள்ளார்.

[திரு + பனம் + தாள்]

திருப்பனையூர் *tiru-p-paṉaiyūr,* பெ. (n.) **திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஊர்;** the village in Thiruvarūr district.

பண்டைக் காலத்தில் பனை மரங்கள் மிகுந்திருந்தமையால் பனையூர் ஆகி ஞானசம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்ற தலமாதலாலும் திரு எனும் அடைபெற்று இப்பெயர் பெற்று திருப்பனையூர் எனப் பெயர்பெற்றது. "சிலரென் றுமிருந் தடிபேணப் பலரும் பரவும் பனையூரே" எனச் சம்பந்தர் இத்தலத்தைப் போற்றியுள்ளார்.

[திரு + பனை + ஊர்]

திருப்பாசூர் *tiru-p-pāšūr,* பெ. (n.) **செங்கல்பட்டு மாவட்டம் திருவள்ளூர் வட்டத்திலுள்ள ஊர்;** the village in Chengai district.

பாசு என்னும் சொல் மூங்கிலைக் குறிக்கும் மூங்கிலடியில் இறைவன் தோன்றியதால் இப்பெயர் பெற்று சம்பந்தர் நாவுக்கரசரால் பாடல் பெற்றதால் திரு எனும் அடை பெற்று திருப்பாசூர் எனப் பெயர் பெற்றது. கல்வெட்டில் இவ்வூர், "தொண்டை மண்டலத்து ஈக்காடு தோட்டத்துக் காக்கலூர் நாட்டுத் திருப்பாசூர்" எனக் குறிக்கப்பட்டுள்ளது.

[திரு + பாசு + ஊர்]

திருப்பாட்டு *tiru-p-pāṭṭu,* பெ. (n.) 1. கடவுளைப் பற்றிப் பெரியோர் பாடிய பாடல் (பாசுரம்); hymns or songs of a saint in praise of a deity. இவ்விரண்டு திருப்பாட்டுத் தலைமகள் கூற்றாதலே பொருத்தம் *(திருக்கோ. 86 உரை).* 2. தேவாரம் (தொல்.பொருள் 461. நச்.); Tēvāram.

[திரு + பாட்டு]

திருப்பாண்டிக்கொடுமுடி *tiru-p-pāṇḍi-k-koḍumuḍi,* பெ. (n.) பெரியார் மாவட்டத்தில் உள்ள ஊர்; the village in Periyar district.

பண்டைக் காலத்தில் இவ்வூர் கறையூர் என வழங்கியது. இங்குள்ள கோயில் திருப்பாண்டிக் கொடுமுடி. நாளடைவில் கறையூர் மறைந்து, கொடுமுடி என்னும் கோயில் பெயரே ஊருக்கும் வழங்கலாயிற்று. மூவரால் பாடல் பெற்ற ஊர். 'கொம்பின் மேற்குயில் கூவ மாமயில் ஆடு பாண்டிக் கொடு முடி" எனச் சுந்தரர் இத்தலத்தைப் பாடுகின்றார்.

[திரு + பாண்டி + கொடு + முடி]

திருப்பாணாழ்வார் *tiru-p-pāṇāḻvār,* பெ. (n.) ஆழ்வார் பதின்மருள் ஒருவரும் நாலாயிரத் தெய்வபனுவலுள் அமலனாதிப் பிரான் என்ற பகுதியைப் பாடியவருமான திருமாலடியார்; a canonized Vaiṣṇava saint, author of Amalanādi-pirāṉ in Nalāyira-t-tivviya-p-pirapandam, one of ten āḻvārs (செ.அக.).

திருப்பாவாடை *tiru-p-pāvāḍai,* பெ. (n.). ஆடைமேல் கோயில் திருமேனிகளுக்குப் படைக்கும் சோற்றுக் குவியல் (கோயிற்பு. திருவி. 24. உரை.) (I.m.p. S.A. 59); heap of boiled rice spread on a cloth, as offering to an idol.

[திரு + பாவாடை]

திருப்பாவாடைப்புறம் *tiruppāvāḍai-p-puṟam,* பெ. (n.) தில்லை அம்பல பெருமானுக்கு சுறவக்கொடித் (தைப்பூச)த் திருநாளில் இட்டுப்படைக்குஞ் சிறப்பான அமுது படையலுக்குத் திருப்பாவாடை என்று பெயர். இதற்குத் தானமாக அளிக்கப்பட்ட நிலம் திருப்பாவாடைப் புறம்; tax free land.

[திரு + பாவாடை + புறம்]

திருப்பாவை *tiru-p-pāvai,* பெ. (n.) நாலாயிரத் தெய்வப் பனுவலுள் ஆண்டாள் பாடிய பகுதி (திவ். திருப்பா. தனியன்); a poem in Nalāyira-t-teiva-p-paṉuval by Āṇḍāḷ.

[திரு + பாவை]

திருப்பாற்கடல் *tiru-p-pāṟ-kaḍal,* பெ. (n.) திருமால் பள்ளி கொண்டருளும் பாற்கடல்; the ocean of milk, where Thirumāl sleeps.

[திரு + பாற்கடல்]

திருப்பி[1] *tiruppi,* பெ. (n.) திருப்புணி பார்க்க; see *tiru-p-puḷi.*

[திருப்பு → திருப்பி]

திருப்பி[2] *tiruppi,* பெ. (n.) 1. வட்டத்திருப்பி (பாலவா. 896); worm-killer.

திருப்பு-தல் *tiruppu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. திரும்பச் செய்தல்; to cause to return to send back. அக்கூட்டத்தைத் திருப்பினான். 2. இருக்கும் அல்லது செல்லும் திசையிலிருந்து மாற்றுதல்; to turn, deflect, cause to turn in a different direction. சுயவர் குணமட்டுந் திருப்ப வசமோ (குமரே. சத. 39). 3. முறுக்குதல்; to twist, wring, distort, as a limb. அவன் கையைத் திருப்பினான். 4. மொழிபெயர்த்தல்; to translate, render into another language. திருக்குறளைப் பல மொழிகளில் திருப்பியிருக்கிறார்கள். 5. பாடத்தை மறுமுறை ஓதுதல் அல்லது ஓதுவித்தல்; to revise, as a lesson. இரண்டாம் முறையாகப் பாடத்தைத் திருப்புகிறார். 6. கவிழ்த்தல்; to turn upside down, invert. 7. மணிப்பொறிக்குத் திருகு கொடுத்தல்; to wind up a clock or watch. கடிகாரத்தைத் திருப்பினான் (இ.வ.). 8. மீட்டல்; to redeem, as a mortgage. ஒற்றியைத் திருப்பினான். 9. திருப்பிக் கொடுத்தல்; to give back, return, restore. சரக்கைத் திருப்பிவிட்டான். 10. விதிர்த்தல்; to shake, revolve. "திருப்புறு சூலத்தினோன்" (திருக்கோ. 315). 11. நோய் முதலியன தணித்தல்; to cure a disease; to avert a calamity by magic. 'கொடிய பல விட நோய்களியாவு ... கொடுத்துத் திருப்பி விடலாம்' (குமரே. சத. 39). 12. செய்வினையைத் திரும்பச் செலுத்துதல்; to send back an evil spirit

against one who sent it, by counter magic. *13. ஏட்டின் பக்கத்தைத் தள்ளுதல்;* to turn over, as the leaves of a book, ஆடை திருத்தி நின்றாள் அவன் ஆயிரம் ஏடு திருப்புகின்றான்'. *(பாரதிதாசன்).*

[திரும்பு → திருப்பு]

திருப்பு² *tiruppu,* பெ. (n.) *1. தடவை;* turn. *2.* ஒருமுறை போய் வருகை; trip.

க. திருகு

[திரும்பு → திருப்பு]

திருப்புகலூர் *tiru-p-pukalūr,* பெ. (n.) திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டத்திலுள்ள ஊர்; a village in Thiruvārūr district, Nannilam taluk.

[திரும்பு → திருப்பு]

புகல் என்னும் சொல் விருப்பம், இருப்பிடம், அடைக்கலம் எனப் பல பொருள்படும். மக்கள் இப்பகுதியில் விரும்பிவந்து வாழ்ந்ததால் இப்பெயர் பெற்றது. மேலும், இது திருநாவுக்கரசு நாயனார் முத்திபெற்ற திருத்தலம்.

[திரு + புகல் + ஊர்]

திருப்புகழ் *tiru-p-pukal,* பெ. (n.) *1. தெய்வப் புகழ்ச்சியான பாடல்;* songs in praise of a deity. "தொண்டர் தங்கள் குழாங்குழுமித் திருப்புகழ்கள் பலவும்பாடி" *(திவ். பெருமாள். 1:9). 2. அருணகிரியார் முருகப் பெருமான் மீது பாடிய சந்தப்பாடல்களாலான நூல்;* a poem in various šandam verses in praise of Lord Murugan by Aruṇa-kiri-nādar.

[திரு + புகழ்]

திருப்புகழ்ப்பதிகம் *tiru-p-pukal-p-padigam,* பெ. (n.) *தண்டபாணி அடிகளால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.);* the minor literature written by Daṇḍapāṇi-Aḍigaḷ in 19th century.

[திருப்புகழ் + பதிகம்]

திருப்புகழ்பஞ்சரத்தினம் *tiru-p-pukal pañjarattiṉam,* பெ. (n.) *அருணகிரிநாதரால் 15ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.);* the minor literature written by Aruṇa-kiri-nādar in 15th century.

[திருப்புகழ் + பஞ்சரத்தினம்]

திருப்புகழ்விலாசம் *tiru-p-pugal-vilāšam,* பெ. (n.) *இராமலிங்க அடிகள் 19ஆம் நூற்றாண்டில் எழுதிய சிற்றிலக்கியம் (சிற்.அக.);* the minor literature written by Rāmaliṅga-Aḍigaḷ in 19th century..

[திருப்புகழ் + விலாசம்]

திருப்புகை *tiru-p-pugai,* பெ. (n.) *புகை போடப் பயன்படும் ஏனம் (தூபக்கால்) (இ.வ.);* vessel for burning incense. "திருப்புகைக்குக் குங்கிலியம் காசு அரைக்கு நெல்லு இருகலம்" *(தெ. கல். தொ. 5. கல். 677).*

[திரு + புகை]

சோழர் காலத்தில் திருக்கோயில்களில் இறைவனுக்கு வழிப்பாட்டின்போது இடும் சந்தனம், அகில், குங்கிலியத் துகள்களிலிருந்து கிளம்பும் நறும்புகையே 'திருப்புகை' எனப்பட்டது. அதற்குப் பயன்பட்ட ஏனமும் திருப்புகை எனப்பட்டது.

திருப்புட்குழி *tiru-p-puṭ-kuḷi,* பெ. (n.) *காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளவூர்;* the village in Kañjeepuram district. திருமால் எழுந்தருளியுள்ள திருப்பதி.

[திரு + புள் + குழி]

1. புள்ளைக் குழியிலிட்டு மூடியது போல இறைவன் சேவை சாதிப்பதால் புட்குழி என ஆயிற்று என்பர்.

2. புள் என்பது சடாயு. பாடல் பெற்ற தலம் ஆதலால் திருப்புட்குழி ஆயிற்று என்பர். திருமங்கை ஆழ்வார் இப்பதியை "புலங்கெழு பொருநீர்ப் புட்குழிபாடும் போதுமே நீர்மலைக் கென்னும்" என்று பாடுகின்றார் *(தமி.ஊர்.பெ.).*

திருப்புடைமருதூர் *tiru-p-puṭai-marudūr,* பெ. (n.) *நெல்லை மாவட்டம் அம்பா சமுத்திரம் வட்டத்தில் உள்ள ஊர்;* the village in Nellai district.

[திரு + புடை + மருதூர்]

பண்டைக்காலத்தில் இப்பகுதியில் மருத மரங்கள் நிறைந்திருந்த தாகவும், அவற்றில் ஒன்றில் ஒரு புடை காணப் பட்டதாகவும், அதனுள் சிவலிங்கம் காட்சி அளித்ததாகவும், அதனால் இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர் *(தமி. ஊர். பெ.).*

திருப்புமுனை *tiru-p-pu-muṉai,* பெ. (n.) குறிப்பிடத் தகுந்த மாற்றத்தை ஏற்படுத்துவது; turning point. அகரமுதலி தமிழ் வளர்ச்சிக்கு ஒரு திருப்பு முனையாக அமையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

[திருப்பு + முனை]

திருப்புல்லாணி *tiruppullāṇi,* பெ. (n.) இராமநாதபுரத்துக்கருகிலுள்ள ஒரு மாலிய தலம்; a Thirumāl shrine near Rāmanādapuram district.

1. புல்லாரணிய முனிவர் வழிபட்டுப் பேர் பெற்ற தலமாதலால் இப்பெயர் பெற்றது என்பர்.

2. இராமபிரான் இலங்கைக்குச் செல்ல கடல் கடக்க ஏழுநாட்கள் வருணனை வேண்டித் தவம் கிடந்தார். அப்பொழுது தருப்பைப் புல்லையே தலையணையாகக் கொண்டதால் இப்பகுதி புல்லணை ஆகிப் பின் புல்லாணி ஆயிற்று என்பர்.

"தணரில் ஆவி தளரும் என அன்பு தந்தான் இடம்
புணரியோதம் பணிலம் மணியுந்து புல்லாணியே'

எனத் திருமங்கையாழ்வார் பாடுவார்.

[திரு + புல்வாணி]

திருபுல்லாணிநொண்டிநாடகம் *tirupullaṇi noṇḍi-nāḍagam,* பெ. (n.) வீரராகவர் 19ஆம் நூற்றாண்டில் எழுதிய சிற்றிலக்கியம் (சிற்.அக.); a minor literature written by Virarāgavar.

[திருபுல்லாணி + நொண்டி + நாடகம்]

திருபுல்லாணியுப்பு *tiru-p-pullāṇi-uppu,* பெ. (n.) இராமநாதபுரத்தைச் சேர்ந்த திருபுல்லாணி யென்னும் ஊரின் குளத்தில் இருந்து எடுக்கப்படும் பாறையுப்பு/இதற்குக் கல்லுப்பு என்றும் பெயர் (இராமத்தேவர் வைத்திய சிந்தாமணி. 700); rocksalt dugout from the bed or bottom of the tank at Tiruppuḷḷāṇi, a town in Ramanathapuram district. That salt is known as kalluppu.

[திருப்புல்லணை→ திருப்புல்வாணி + உப்பு]

திருப்புலம்பல் *tiru-p-pulambal,* பெ. (n.) மாணிக்கவாசகரால் 9ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); the minor literature written by Māṇikka-vāšagar in 9th century.

[திரு + புலம்பல்]

திருப்புவாரம் *tiruppu-vāram,* பெ. (n.) கோயில் முதலிய அறநிலையங்களுக்கு நில வரியிலிருந்து கொடுக்கப்படும் பகுதி (நாஞ்.); portion of land revenue assigned to a temple or a charitable institution.

[திருப்பு + வாரம்]

திருப்புள்ளம்பூதங்குடி *tiru-p-puḷḷam-pūdaṅguḍi,* பெ. (n.) தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டத்திலுள்ள ஊர்; the village in Tanjavure district.

இராமன் சடாயுவைத் தகனம் செய்து அப் புள்ளரசனைப் பூதங்கள் விளியும் நாளும் போக்கிலா உலகம் புகச் செய்த பதி இதுவாதல் பற்றிப் புள்ளம் பூதங்குடி எனப் பெயர்பெற்றது என்பர். திருமங்கையாழ்வார் இப்பதியைப் "பொறிகொள் சிறைவன் டிசைபாடும் புள்ளம் பூதங்குடி தானே உயர்வாகப் பேசுவார்" எனப்பாடுகின்றார் (தமி.பெ.அக.).

திருப்புளி *tiru-p-puḷi,* பெ. (n.) திருகாணியின் தலைப்பகுதியில் பொருத்தித் திருக ஏந்தாகவுடைய, சற்றுக் கூரான பட்டை முனையும் கைப்பிடியும் உடைய கருவி; screw-driver.

[திரு + புளி]

திருப்புற்குடலை *tiru-p-puṟkuḍalai,* பெ. (n.). திருப்புற்கூடை பார்க்க; see *tiru-p-puṟ-kūḍai.*

திருப்புற்கூடை *tiru-p-puṟ-kūḍai,* பெ. (n.) மாலியர் (வைணவர்களின்) மடியாடை முதலியன வைக்கும் ஓலைப் பெட்டி (குருபரம். 490); ōla basket used by orthodox Vaiṣṇavas for carrying the cloth, etc., to be worn after bath.

[திரு + புற்கூடை]

திருப்புறக்குடை *tiru-p-puṟa-k-kuḍai,* பெ. (n.). **இறைவனுக்குப் பின்புறமாகப் பிடிக்கும் குடை;** parasol held over a deity from behind. பொன் கொடு செய்த திருப்புறக் குடையொன்று *(S.I.I.ii. 34).*

[திரு + புறக்குடை]



திருப்புறவார்பனங்காட்டூர் *tiru-p-puṟavār paṉaṅgāṭṭūr,* பெ. (n.) **தென்னார்காடு மாவட்டத்தில் உள்ள ஊர்;** the village in South Arcot district.

பனை மரங்கள் நிறைந்த காட்டுப் பகுதியில் இந்த ஊர் தோன்றியதால் பனங்காட்டூர் எனப் பெயர் பெற்றது. சிபி மன்னன் தன் ஒப்பற்ற தியாகத்தின் மூலம் புறாவிற்கு அடைக்கலம் தந்ததால் இறைவன் காட்சி கொடுத்தார். இதனால் திருப்புறாவார் பனங்காட்டூர் எனப் பெயர் பெற்றது என்பர். இப்பதியைப் "பாணில் யாழ்முரலும் புறவார் பனங்காட்டூர்" என ஞான சம்பந்தர் பாடியுள்ளார்.

திருப்புன்கூர்த்தலபுராணம் *tiru-p-puṉ-kūr-t-tala-purāṇam,* பெ. (n.) **கனகசபைக் கவிராயரால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்ட தொன்மம்** (சிற்அக.); A puranam written by Kaṉagašabai in 19th century.

[திருப்புன்கூர் + தலப்புராணம்]

திருப்புனவாயில் *tiru-p-puṉa-vāyil,* பெ. (n.). **இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டத்தில் உள்ள ஊர்;** a village in Ramanada puram district.

நீர் வளம் காரணமாக புனல்வாயில் என்றமைந்து பின் புனவாயில் ஆயிற்று. சுந்தரரால் பாடப்பெற்ற தலம். சுந்தரர் இத்தலத்தை,

"பத்தர் தாம்பலர் பாடிநின் றாடும் பழம்பதி
பொத்திலாந் தைகள் பாட்டறாப் புனவாயிலே"

எனப் பாடியுள்ளார்.

[திரு + புனல் + வாயில்]

திருப்பூட்டு-தல் *tiru-p-pūṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.i.) **மணமகள் கழுத்தில் தாலி கட்டுதல்;** to tie the tāli round the neck of a bride. நுஞ் சுற்றத்தார் முன்னம் நீ திருப்பூட்டியது *(தஞ்சைவா. 359, உரை.).*

[திரு + பூட்டு-.]

திருப்பூட்டு[2] *tiru-p-pūṭṭu,* பெ. (n.) 1. **மண மகளுக்குத் தாலி கட்டுகை;** tying the wedding badge round the neck of a bride. 2. **தாலி;** wedding badge.

[திரு + பூட்டு]

திருப்பூவல்லி *tiru-p-pū-valli,* பெ. (n.) **மகளிர் பூக்கொய்தலைப் பற்றிக் கூறும் திருவாசகப் பகுதி;** a poem of Tiruvāšagam purporting to be sung by girls collecting flowers.

[திரு + பூ + அல்லி]

திருப்பூவணத்தீர்த்தவகுப்பு *tiru-p-pūvaṇa-t-tīrtta-vaguppu,* பெ. (n.) **சாமிப் புலவர் அவர்களால் 17ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்ட சிற்றிலக்கியம்;** a literature composed by Šami pulavar in 17th century.

இவர் திருப்பூவணமூர்த்தி வகுப்பு என்னும் மற்றொரு சிற்றிலக்கியத்தையும் எழுதியுள்ளார் (சிற்அக.).

[திரு + பூவண + தீர்த்தம் + வகுப்பு]

திருப்பூவணம் *tiru-p-pūvaṇam,* பெ. (n.) **சிவகங்கை வட்டத்தில் உள்ள ஊர்;** a village in Šivagaṅgai district.

மூவர் தேவாரம் பெற்ற பதி; இங்குப் பூக்கள் அக்காலத்தில் நிறையப் பூத்திருக்க வேண்டும். ஆதலால் பூவணம் எனப் பெயர் பெற்று இருக்கலாம். தேவாரத்திலும், கல்வெட்டிலும் திருப்பூவணம் என்றே குறிப்பிடப் பட்டுள்ளது.

"பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும் பொழில்திகழும் பூவணத்தெம்

புனிதனார்க்கே" என நாவுக்கரசர் இத் தலத்தைப் பற்றிப் பாடியுள்ளார்.

[திரு + பூவணம்]

திருப்பூவணவண்ணம் *tiru-p-pūvaṇa-vaṇṇam,* பெ. (n.) கந்தசாமி புலவர் அவர்களால் 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature written by Kandaswami pulavar in 17th century.

[திரு + பூவணவண்ணம்]

திருபெண்ணாகடம் *tiru-peṇṇākaḍam,* பெ. (n.) தென்னார்காடு மாவட்டத்தில் உள்ள ஊர்; a small town in South Arcot district. இவ்வூர்; தேவகன்னியரும், தேவ ஆவும் (காமதேனுவும்) வெள்ளை யானையும் வழிபட்ட ஊர் என்றும். பெண் (தேவகன்னியர்), ஆ (காமதேனு), கடம் (வெள்ளையானை) மூன்றும் சேர்ந்து வழிபட்ட தலம் அப்பெயர் பெற்றதென்றும் கூறுவர். அப்பெயர் கல்வெட்டில் இவ்வூர், வடகரை இராசாதிராச வளநாட்டு மேற்காநாட்டுப் பிரமதேயமான முடி கொண்ட சோழ சதுர்வேதி மங்கலம் என குறிக்கப்பட்டுள்ளது.

[திரு + பெண் + ஆ + கடம்]

திருபெருந்துறை *tiru-p-peru-n-duṟai,* பெ. (n.) மாணிக்கவாசகர் அறிவொளி பெற்றதும் தஞ்சை மாவட்டத்தில் உள்ளதுமான ஒரு சிவத்தலம்; a Śiva shrine in Tanjavure district, the place of spiritual enlightenment of Māṇikkavāšagar.

[திரு + பெருந்துறை]

திருப்பேரெயில் *tiru-p-pēreyil,* பெ. (n.) நெல்லை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Nellai district.

[திரு + பேர் + எயில் = திருபேரெயில்]

எயில் என்பது கோட்டையைக் குறிக்கும் சொல். அக்காலத்தில் இங்குக் கோட்டை இருந்திருக்க வேண்டும். இதைச் சுற்றி எழுந்த ஊர் பேரெயிலாயிற்று. மாலியத் திருப்பதியாகவும், சிவத்தலமாகவும் விளங்கு கின்றது. நாவுக்கரசரால் பாடல் பெற்றது. நம்மாழ்வார் இப்பதியை,

"போலச் செந்நெற்கள் கவரி வீசும்
கூடுபுனல் திருப்பேரெ யிற்கே"

என்று பாடியுள்ளார்.

திருப்பேரைத்திருப்பணிமாலை *tiru-p-pērai-t-tiru-p-paṇimālai,* பெ. (n.) இரத்தினக்கவிராயர் 17ஆம் நூற்றாண்டில் எழுதிய சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature written by Rattiṉa-k-kavirāyar.

[திருப்பேரை + திருப்பணிமாலை]

திருப்பொற்பூ *tiru-p-poṟpū,* பெ. (n.) பொன்னாலும், மணி (இரத்தினங்)களாலும் தாமரைப்பூ போன்றும், செவ்வந்திப்பூ போன்றும் அழகாகச் செய்யப்பெறும் பொற்பூ (தெ.கல்.தொ. 2:2, கல். 39); a kind of golden flower.

[திரு + பொன் + பூ]

திருப்பொறி *tiru-p-poṟi,* பெ. (n.) வேந்தர் முதலியோருக்குரிய உடலியலிலக்கணம்; auspicious mark as of sovereignity. அரைசு வீற்றிருக்குந் திருப் பொறியுண்டு (சிலப். 30: 175).

[திரு + பொறி]

திருப்போரூர் *tiru-p-pōrūr,* பெ. (n.) செங்கல்பட்டு வட்டத்திலுள்ள ஊர்; a small town in Chengalpet taluk.

போர் காரணமாக இவ்வூர் போரூர் என வந்திருக்கலாம். முருகப்பெருமான் சூரபதுமனை விண்ணில் சென்று போர் புரிந்தது இவ்வூர் என்பது தொன்ம வரலாறு. கல்வெட்டில் இவ்வூர் போரியூர் என்று குறிக்கப்பட்டு உள்ளது (தமி. ஊர். பெ. அக.).

[திரு + போர் + ஊர்]

திருப்போரூர்அட்டகம் *tiru-p-pōrūr-aṭṭagam,* பெ. (n.) சர்க்கரையார் என்பவரால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); the literature written by Šarkkaraiyār in 19th century.

[திருப்போரூர் + அட்டகம்]

திருப்போரூர்ஆறுமுகக்கடவுள்துதி *tiru-p-pōrūr-āṟumuga-k-kaḍavuḷ-tuti,* பெ. (n.) சி. சுப்பிரமணிய பாரதியாரால் 19-20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); the minor literature written by Subramaniya Parathiyar in 19-20th century.

[திருப்போரூர் + ஆறுமுகக்கடவுள் + துதி]

திருப்போரூர்ஆறுமுகன்குறுங்கழிநெடில் விருத்தம் *tiru-p-pōrūr-ārumugaṉ-kuṟuṅ-kaḻineḍil-viruttam,* பெ. (n.) *சிதம்பர என்னும் புலவரால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்ட சிற்றிலக்கியம் (சிற்அக.);* the minor literature written by chidambara samigal in 19th century.

திருப்போரூர்கிள்ளைவிடுதூது *tiru-p-pōrūr-kiḷḷai-viḍu-tūtu,* பெ. (n.) *கந்தசாமி முதலியாரால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்அக.);* the literature written by Kandasami in 19th century.

[திருப்போரூர் + கிள்ளை + விடுதூது]

திருப்போரூர்சிகையறுத்தான்வண்ணம் *tiru-p-pōrūr-šigaiyaṟuttāṉ-vaṇṇam,* பெ. (n.) *இராமசாமிக் கவிராயரால் 20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற். அக.);* the literature written by Rāmasāmi kavirāyar in 20th century.

திருப்போரூர்தோத்திரமாலை *tiru-p-pōrūr-tōttira-mālai,* பெ. (n.) *முருகேசன் என்னும் அட்டியாரால் 19-20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.);* the literature written by Murukēšaṉ in 19-20th century.

[திருப்போரூர் + தோத்திரமாலை]

திருப்போரூர்வழிநடைப்பாசுரம் *tiru-p-pōrūr-vaḻinaḍai-p-pāšuram,* பெ. (n.) *சி. பொன்னுசாமி அட்டியாரால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்அக.).*

திருப்போனகம் *tiru-p-pōṉagam,* பெ. (n.) *கடவுளுக்குப் படைத்த அமுது* (S.I.I.ii.82); offerings of boiled rice to a deity.

[திரு + போனகம்]

திருபரணி *tiruparaṇi,* பெ. (n.) *களாவிழுதி; என்னும் சிறு குறிஞ்சா (சா.அக.);* Indian ipecacuanda.

திருபலை *tirupalai,* பெ. (n.) *கொடிவகை (யாழ். அக.);* a kind of climber.

திருபுடா *tirupuḍā,* பெ. (n.) *ஏலம்;* cardamom.

திருபுரை *tirupurai,* பெ. (n.) *சாரணை;* one styled trianthema.

திரும்ப *tirumba,* கு.வி.எ. (adv.) *திரும்பவும் பார்க்க,* see *tirumbavum.* "திரும்ப வா" *(உ.வ.).*

திரும்பத்திரும்ப *tirumba-t-tirumba,* பெ. (n.). *அடிக்கடி (சா.அக.);* again and again, often, times.

திரும்பவும் *tirumbavum,* பெ. (n.) *மேலும்;* further more, moreover, again.

திரும்பாக்கடி *tirumbā-k-kaḍi,* பெ. (n.) *நல்லப் பாம்பு;* cobra.

திரும்பிகம் *tirumbigam,* பெ. (n.) *பாதிரி;* trumpet flower tree.

திரும்பு[1]-தல் *tirumbu-,* 5 செ.கு.வி. (v.i.) *1. புறப்பட்ட இடத்திற்கோ பழைய நிலைக்கோ வருதல் அல்லது மீளுதல்;* to turn, turn back, return. *2. மாறுதல்;* to be changed as the mind. *3. விலகுதல்;* to be averted, as an evil; to abate as a disease. *4. கதிரவன் சாய்தல்;* to decline as the Sun. *5. வளைதல்;* to turn, as an angle; to bend as a road or river; to be refracted, as light.

க. திருகு; ம. திரும்புக

திரும்பு[2] *tirumbu,* பெ. (n.) *பாம்பு;* snake.

திரும்புகால் *tirumbu-kāl,* பெ. (n.) *மீளுங் காலம் (இ.வ.);* time of return.

[திரும்பு + கால்]

திரும்புமுகமாயிரு-த்தல் *tirumbu-mugamāy-iru-,* 3 செ.கு.வி. (v.i.) *நலப்பட்டு வருதல்;* taking a favourable turn said of diseases and chiefly of small pox and allied diseases.

[திரும்பு + முகமாய் + இரு-]

திருமகண்மைந்தன் *tiru-magaṇ-maindaṉ,* பெ. (n.) *திருமகளின் மகனான காமவேள் (பிங்.);* kāma as the son of Lakṣmi.

[திருமகள் + மைந்தன்]

திருமகள் *tirumagaḷ*, பெ. (n.) செல்வத்திற்கான கடவுள் (இலக்குமி); Lakshmi. "புல்லலேற்ற திருமகளும்" (கம்பரா. உருக்காட்டு. 58).

[திரு + மகள்]

திருமகள்கொழுநன் *tiru-magaḷ-koḻunaṉ*, பெ. (n.) திருமகளின் கணவனாகிய திருமால்; Thirumāl, as the husband of Thirumagaḷ.

[திருமகள் + கொழுநன்]

திருமகன் *tiru-magaṉ*, பெ. (n.) 1. திருமகண் மைந்தன் பார்க்க; see *tiru-magaṇ-maindaṉ*. 2. திருமகள்கொழுநன் பார்க்க; see *tiru-magaḷ-koḻunaṉ*. 3. செல்வமகன்; darling son or prince. "திருமகனெழுந்து போகி" (சீவக. 2094).

[திரு + மகன்]

திருமகுடம் *tiru-maguḍam*, பெ. (n.) திருமேனிகளின் தலையில் அணியப்படும் திருமுடி (கிரீடம்); crown.

[திரு + மகுடம்]

திருமங்கலம் *tiru-maṅgalam*, பெ. (n.) மதுரை மாவட்டத்தில் உள்ள ஊர்; a small town in Madurai district. இவ்வூர் மண் வளத்தாலும், மட்கலத் தொழில் காரணமாகவும் இப்பெயர் பெற்று இருக்கலாம் என அறிஞர் சோமலெ கூறுவார் (தமி. ஊர். பெ. அக.).

[திரு + மண் + கலம் → திருமட்கலம் → திருமங்கலம்]

திருமங்கலியம் *tiru-maṅgaliyam*, பெ. (n.). திருமங்கிலியம் பார்க்க; see *tirumaṅgiliyam*.

திருமங்கிலியம் *tiru-maṅgiliyam*, பெ. (n.). தாலி; wedding badge. "பெண்கள் திருமங்கிலியத்திலிடும்" (இராமநா. பாலகா. 20).

[திரு + மங்கிலியம்]

திருமங்கைநகர் *tiru-maṅgai-nagar*, பெ. (n.). திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஊர்; the village in Nellai district.

இன்று பாளையங்கோட்டை என்று வழங்குகின்றது. நின்றசீர் நெடுமாறனாகிய பாண்டிய மன்னர் திருநெல்வேலிக்கு வருகை தந்தபோது அவருடைய தேவி மங்கையர்கரசியாரைப் மகளிர் பலரும் திரளாக வந்து வரவேற்ற ஊர் இவ்விடமாதலால் திருமங்கை ஊர் என்று பெயர்பெற்றது. பாளையன் என்னும் பெயருடைய கன்னடியன் மங்கை நகரில் தன் பெயரால் ஒரு கோட்டையைக் கட்டியதால் பாளையங்கோட்டையாக மாறித் திருமங்கை நகர் என்னும் பெயர் அடியோடு அழிந்து விட்டது எனச் சிறப்புப் பெயர் அகராதி கூறுகிறது.

[திரு + மங்கை + நகர்]

திருமங்கைமன்னன் *tiru-maṅgai-maṉṉaṉ*, பெ. (n.) திருமங்கையாழ்வார் பார்க்க; see *tirumaṅgai-āḻvār*.

[திரு + மங்கை + மன்னன்]

திருமங்கையாழ்வார் *tiru-maṅgai-y-āḻvār*, பெ. (n.) ஆழ்வார் பன்னிருவருளொருவரும் நாலாயிரத் தெய்வப் பனுவலுள் பெரிய திருமொழி முதலியன பாடியவருமாகிய திருமாலடியார்; a canonized Vaiṣṇava saint author of Periya-tirumoḻi and other works in nālāyira-t-teiva-p-paṉuval, one of ten āḻvārs.

திருமஞ்சனக்கவி *tiru-mañjaṉa-k-kavi*, பெ. (n.) கோயில் திருமேனிகளின் திருமுழுக்காட்டுக் காலங்களிற் பாடப்படும் பாட்டு (கோயிலொ. 68); verse recited while bathing a deity.

திருமஞ்சனக்காவேரி *tiru-mañjaṉa-k-kāvēri*, பெ. (n.) திருவரங்கத்துத் திருமாலைத் திருமுழுக்குச் செய்வதற்கு நீரெடுக்கும் காவேரியின் கிளை ஆறு; a branch of the Kāvēri from which water is carried for bathing the deity at Sriraṅgam.

[திரு + மஞ்சனம் + காவேரி]

திருமஞ்சனசாலை *tiru-mañjaṉa-šālai*, பெ. (n.) கடவுளர், அரசர் முதலியோர் திருமுழுக்காடுமிடம்; bathing place of a deity, king etc. கோயிலினுள்ளால் திருமஞ்சன சாலையில் எழுந்தருளியிருந்து (S.I.I.iii. 35).

[திரு + மஞ்சனம் + சாலை]

திருமஞ்சனப்பட்டை *tiru-mañjaṉa-p-paṭṭai*, பெ. (n.) வெள்ளிலோத்திரம்; lodhra-bark.

திருமஞ்சனப்புறம் *tiru-mañjaṉa-p-puṟam*, பெ. (n.) கோயில் திருமேனிகளுக்குத்

திருமுழுக் காட்டு செய்யும் திருமஞ்சன நீரில் செண்பக மொட்டு, ஏலம், விலாமிச்சை வேர் ஆகியவற்றை இட்டுக் கொண்டு வருபவனுக்கு வருவாயாகக் கோயில் நிலத்திலொரு பகுதியை இறையிலியாகக் கொடுக்கும் இடம்; tax-free land. "இந்நிலம் அரைமாவும், திருமஞ்சனப் புறமாக நனாங்கள் விட்டமையால். இதுக்குத் திருமஞ்சனம் எடுக்கும் திருமேனிக்கு ஜீவனத்துக்கு வேண்டுவது இன்னாயனார் திருநாமத்துக் காணி விளை நிலத்திலேவிட்டு" *(தெகல்.தொ. 5, கல். 649).*

[திரு + மஞ்சனம் + புறம்]

திருமஞ்சனம்[1] *tiru-mañjaṉam,* பெ. (n.) *1.* திருமுழுக்கு. குறிப்பிட்ட இடத்திலிருந்து நீரைக் கொண்டுவந்து மந்திரம் சொல்லி வழிபாட்டிற்கான திருமேனியை (விக்கிரகத்தை) நீராட்டுகை; bath of an idol or a king. "திருமஞ்சனத்துக்கு . . . ஸ்தபந திரவியங்கள் வேண்டுவனவும்" *(S.I.I.iii, 187).* 2. கோயில் வழிபாட்டின் போது திருமேனியினை நீராடுவதற்காக எடுத்து வரப்பெறும் தூயநீர்; holy water for the bath of an idol or a king. 'திருமஞ்சனமுங் கொண்ர்ந்து' *(பெரியபு. சேரமா. 9).*

[திரு + மஞ்சனம்]

திருமஞ்சனமாட்டு-தல் *tiru-mañjaṉam-āṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) திருமுழுக்காட்டுகை, குறிப்பிட்ட இடத்திலிருந்து நீரைக்கொண்டு வந்து மந்திரம் சொல்லி வழிபாட்டிற்கான திருமேனியை (விக்கிரகத்தை) நீராட்டுகை; to bath of an idol *(செ.அக.).*

[திரு + மஞ்சனம் + ஆட்டு-.]

திருமஞ்சனவேதிகை *tiru-mañjaṉa-vēdigai,* பெ. (n.) திருமுழுக்காட்டும் இடத்திற்கு இறைத் திருமேனியை எழுந்தருளச் செய்யும் அடிமணை; a pedestal on which an idol in placed while being bathed.

[திரு + மஞ்சனம் + வேதிகை.]

திருமடந்தை *tiru-maḍandai,* பெ. (n.) திருமகள்; Lakshmi. "திருமடந்தை மண் மடந்தை இருபாலும் திகழ" *(திவ். பெரியதி. 3. 10:1).*

[திரு + மடந்தை]

திருமடம் *tiru-maḍam,* பெ. (n.) குருவின் மாளிகை; abode of a priest. "மண்ணுறுந் திருமடமெனு மித்தரை மருவி" *(உபதேசகா. சிவபுரா. 55).*

[திரு + மடம்]

திருமடவளாகம் *tiru-maḍa-vaḷāgam,* பெ. (n.) கோயிலைச் சுற்றியுள்ள இடம்; premises surrounding a temple *(செ.அக.).*

[திரு + மடவளாகம்]

திருமடைப்பள்ளி *tirumaḍai-p-paḷḷi,* பெ. (n.). சமையலறை; temple kitchen.

[திரு + மடை + பள்ளி]

திருமடைவிளாகம் *tiru-maḍai-viḷāgam,* பெ. (n.) திருமடவளாகம் (S.I.I. i, 119) பார்க்க; see *tiru-maḍai-vaḷāgam.*

[திரு + மடை + விளாகம்]

திருமண் *tirumaṇ,* பெ. (n.) *1.* மாலியர் நெற்றியில் குறியிடு (திருநாமந்தரித்)தற்குரிய வெள்ளிய மண்கட்டி; white earth used by Vaiṣṇavas in marking their fore-heads. *2.* திருமாலடியார் நெற்றியில் இட்டுக் கொள்ளும் குறி; Vaiṣṇava religious mark. "திருமந்திரமில்லை சங்காழியில்லை திருமணில்லை" *(அஷ்டப். திருவேங்கடத்தந். 99).*

[திரு + மண்]

திருமண்காப்பு *tirumaṇ-kāppu,* பெ. (n.) திருமண், 2 பார்க்க; see *tiru-maṇ,2.*

[திருமண் + காப்பு]

திருமண்டலம் *tiru-maṇḍalam,* பெ. (n.) துருவமண்டலம் (யாழ்.அக.); polar region.

[திரு + மண்டலம்]

திருமண்பெட்டி *tiru-maṇ-peṭṭi,* பெ. (n.) திருமண் முதலியன வைக்குஞ் சிறுபெட்டி; small basket for keeping the white earth and saffron used in religious marks *(செ.அக.).*

[திருமண் + பெட்டி]

திருமணம் *tiru-maṇam,* பெ. (n.) ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாகும் நிகழ்ச்சி

அல்லது சடங்கு செய்யும் விழா; marriage. திருமண வழைப்பு மடல்.

[திரு + மணம்]

திருமணம்பரிமாறு-தல் *tiru-maṇam-parimāṟu*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. தாளித்தல் (மாலியர் வழக்கு); to season curry with fried spices. 2. பொய் கலந்து பேசுதல் (இ.வ.); to speak with falsehood.

[திருமணம் + பரிமாறு-.]

திருமணிகுயிற்றுநர் *tiru-maṇi-kuyiṟṟunar*, பெ. (n.) முத்துக்கோப்போர்; pearl - stringers, bead - workers. "திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொடு" (சிலப். 5:46).

[திருமணி + குயிற்றுநர்]

திருமணுத்தானம் *tiru-maṇu-t-tāṉam*, பெ. (n.) நீராடிய பின் செய்யும் கொடை; gift by person made after his bath. "மண்ணுநீ ராட்டின் திருமணுத்தான மரபுளிக் கழிந்தபின்" (பெருங். இலாவாண. 5:122).

[திரு + மண் + தானம்]

திருமதி *tiru-madi*, பெ. (n.) மதிப்புத் தரும் வகையில் திருமணமான பெண்ணின் பெயருக்கு முன்னால் இடப்படும் அடைமொழி; a title for a married woman; Mrs.

[திரு + மத் (Skt.) - மதி (tail)]

திருமதில் *tiru-madil*, பெ. (n.) கோயிலின் சுற்றுமதில் (I.M.P.S.A. 362); compound wall of a temple.

[திரு + மதில்]

திருமதுரம் *tiru-maduram*, பெ. (n.) பழம், நெய், சருக்கரை முதலியவற்றைச் சேர்த்துச் செய்யப்படும் படையல் பொருள் (நாஞ்.); a kind of sweet offering in temples.

[திரு + மதுரம்]

திருமந்திரக்கொடி *tiru-mandira-k-koḍi*, பெ. (n.) கொடிச் சீலை (S.I.I. vii, 439); flag on the flag - staff.

[திரு + மந்திரம் + கொடி]

திருமந்திரஞ்சொல்(லு)-தல் *tiru-mandirañ-jol-* 13 செ.குன்றாவி. (v.t.) அறிவுரை கூறுதல் (உபதேசஞ் செய்தல்); to impart religious instruction. குருவுக்குத் திருமந்திரஞ் சொல்லேன்.

[திரு + மந்திரம் + சொல்லு-.]

திருமந்திரபோனகம் *tiru-mandira-pōṉagam*, பெ. (n.) கடவுட்குப் படைக்கும் படையல்; food - offering to a deity. "சிறுகாலைச் சந்தி திருமந்திர போனகத்துக்கு அமுது செய்தருள" (S.I.I.vii,281).

[திரு + மந்திரம் + போனகம்]

திருமந்திரபோனப்புறம் *tiru-mandira-pōṉa-puṟam*, பெ. (n.) கோயில் படையல் செலவுக்கு விடப்பட்ட (நிவேதனத்துக்கு விடப்பட்ட) மானியம் (S.I.I. iv, 194); endowment of land for providing food, offerings to the deity in a temple.

[திருமந்திரபோனகம் + புறம்]

திருமந்திரம் *tiru-mandiram*, பெ. (n.) 1. சிவன், திருமால் இவர்களுக்குரிய ஐந்தெழுத்து, எட்டெழுத்து மந்திரங்கள்; mystic formula sacred to Siva and Viṣṇu, viz., pañjākṣaram and aṣṭākṣaram. "திருமந்திரமில்லை சங்காழியில்லை" (அஷ்டப். திருவேங்கடத்தந். 99). 2. திருமூலநாயனார் செய்த ஒரு சிவனியத் திருமுறை; a treatise on Šaiva-Šiddhanda philosophy by Tirumūla-nāyaṉār. 3. கோயில் (கல்.); temple.

[திரு + மந்திரம்]

திருமந்திரவோலை *tiru-mandira-v-ōlai*, பெ. (n.) அரசவை ஆள்வினை (நிர்வாக) அதிகாரி (இராச காரியஸ்தன்); king's ministerial officer. "திருமந்திரவோலை யுதாரவிடங்க விழுப்பரையர் (S.I.I. ii, 306).

[திரு + மந்திரம் + ஓலை]

திருமந்திரவோலைநாயகம் *tiru-mandira-v-ōlai-nāyagam*, பெ. (n.) அரசன் ஆணையைத் திருமந்திர ஓலை என்னும் அதிகாரி எழுதியபின் அதை அரசன் ஆணையோடு ஒப்பிட்டுப்பார்த்து இசைவு வழங்கும் அதிகாரி; chief ministerial oficer of a king.

"திருமந்திரவோலை நாயகம் அச்சுதன் இராசராசனான தொண்டை மானும் (S.I.I. iii, 35).

[திரு + மந்திரம் + ஓலை + நாயகம்]

திருமயிலாடி *tiru-mayilāḍi,* பெ. (n.) நாகை மாவட்டம் சீர்காழி வட்டத்தில் உள்ள ஊர்; the village in Tanjavure district.

[திரு + மயிலாடி]

அம்பிகை மயில் உருவங்கொண்டு இத்தலத்தில் வழிபட்டதால் இப் பெயர் ஏற்பட்டது (தமி. ஊர். பெ.).

திருமரம் *tiru-maram,* பெ. (n.) அரச மரம் (சூடா.); pipal.

[திரு + மரம்]

திருமருதந்துறை *tiru-marudan-durai,* பெ. (n.) திருமருதமுன்றுறை (பரிபா. 11:30) பார்க்க; see *tiru-maruda-muṉṟurai.*

[திரு + மருதம் + துறை]

திருமருதந்துறைக்கா *tiru-marudan-turai-k-kā,* பெ. (n.) மதுரையில் வையைக் கரையிலிருந்த ஒரு பூஞ்சோலை; an ancient pleasure grove on the banks of the Vaigai at Madurai. "திருமருதந்துறைக் காவே போலுங் காக்களினும் விளையாடி" (தொல்.பொருள். 199, உரை.).

[திரு + மருதம் + துறை + கா]

திருமருதமுன்றுறை *tiru-maru-muṉṟurai,* பெ. (n.) மதுரையில் வையையாற்றுத்துறை; a bathing ghat of the Vaigai at Madurai. "திசைதிசை தேனார்க்குந் திருமருத முன்னுறை" (கலித். 26).

[திருமருதம் + முன்றுறை]

திருமல் *tirumal,* பெ. (n.) கடுக்காய் தோன்றிக்காய், நெல்லிக்காய்; the three myrobalams - Gall nut, belleric myrobalan and Indian gooseberry.

திருமலர் *tiru-malar,* பெ. (n.) தாமரைமலர் (பிங்.); lotus. "திருமலரிருந்த முதியவன்போல" (கல்லா. 71).

[திரு + மலர்]

திருமலை *tirumalai,* பெ. (n.) 1. தெய்வத் தன்மையுடைய மலை; sacred mountain. "தீ விளையாட நின்றே விளையாடி திருமலைக்கே" (திருக்கோ. 133). 2. கயிலை; hill at Tirupati, sacred to Viṣṇu. "திருமலைச்சருக்கம் (பெரியபு.). 3. திருமாலுக் குரிய திருவேங்கடம்; Tirumāl's hill, tiruvēṅgaḍam. "சினவேங்கை பார்க்கும் திருமலையே" (திவ். இயற். 3, 7, 5).

[திரு + மலை. திருமலை – திருவடிப்புண்]

வடார்க்காடு மாவட்டம் போளூர் வட்டத்தில் ஓர் ஊரும், நெல்லைக் கட்டபொம்மன் மாவட்டத்தில் திருக்குற்றால மலைச்சாரலில் 6 கி.மீ. தொலைவில் ஓர் ஊரும் திருமலை என்னும் பெயரில் உள்ளன. போளூர் வட்டத்திலுள்ள திருமலை என்னும் ஊர் சமணத் திருப்பதியாக விளங்குகின்றது, நெல்லை வட்டத்திலுள்ள ஊர் முருகன் எழுந் தருளியுள்ள ஊர். இம்மலையில் சிறப்புப் பற்றி இப்பெயர் வந்திருக்கலாம் (தமி. ஊர். பெ.).

திருமலைசுப்பிரமணியர்தோத்திரம் *tirumalai-šubramaṇiyar-tōttiram,* பெ. (n.) நெல்லையப்பர் அவர்களால் 19–20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற். அக.); a literature written by Nellaiyappar in 19-20th century..

[திருமலை + சுப்பிரமணியர் + தோத்திரம்]

திருமலைதரிசனப்பத்து *tirumalai-tarišaṉa-p-pattu,* பெ. (n.) முனிசாமி முதலியாரால் 20ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம்; (சிற். அக.); the literature written by Munisami Pillai in 19-20th century.

[திருமலை + தரிசனப்பத்து]

திருமலைநாயக்கர் *tirumalai-nāyakkar,* பெ. (n.) கி. பி. 1623 முதல் 1659 வரை மதுரையை அரசாண்ட நாயக்க அரசர்; a Nāyak ruler of Madurai, A.D., 1623-59 (மதுரைத்திருப்.).

திருமலைநொண்டிநாடகம் *tirumalai-noṇḍi nāḍagam,* பெ. (n.) மன்னர் பெருமாள் புலவரால் 18ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற். அக.); the play composed by Maṉṉar Perumal pulavar in 18th century.

[திருமலை + நொண்டி + நாடகம்]

திருமலைப்பதிகம் *tirumalai-p-padigam,* பெ. (n.) 1. திருக்குருகூர் ஞானசித்த சுவாமிகளால் 18–19ம் நூற்றாண்டில்

எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற். அக.); the minor literature written by Tiru-k-kurugūr-ñāṉašitta-šuvāmigaḷ in 18-19th century. 2. மு. ஐயாச்சாமி முதலியார் அவர்களால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); the minor literature written by Mu. Iyā-c-cāmi mudaliyār in 19th century. 3. ஏகாங்குச் சுவாமிகளால் 20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); the minor literature written by Ēgaṅgu-c-šuvāmigaḷ in 20th century.

[திருமலை + பதிகம்]

திருமலையாழ்வார் *tirumalai-y-āḻvār*, பெ. (n.) திருமலை, 3 பார்க்க; see *tirumalai-3* (செ.அக.).

[திருமலை + ஆழ்வார்]

திருமழபாடி *tirumaḻa-pāḍi*, பெ. (n.) தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டத்திலுள்ள ஊர்; a village in Thanjāvūr district.

[திரு + மழவர் + பாடி]

போரில் சிறந்து விளங்கிய படை வீரர்கள் மழவர் நிறைந்த பகுதி மழவர் பாடி எனப் பெற்றுப் பின் மழபாடியாகித் திரு எனும் அடை பெற்றது. கல்வெட்டில் இவ்வூர் மழுவாடி எனக் குறிக்கப்பட்டுள்ளது. மூவர் பாடல் பெற்ற தலம்.

"மன்னேமாமணியே மழபாடியுள்
மாணிக்கமே"

என்று சுந்தரர் இத்தலத்து இறைவனைப் பாடுகின்றார் (தமி. ஊர். பெ.).

திருமழிசையாழ்வார் *tiru-maḻišai-y-āḻvār*, பெ. (n.) ஆழ்வார்களுள் பதின்மருள் ஒருவரும் நாலாயிரத் தெய்வப்பனுவலுள் திருச்சந்த விருத்தம், நான்முகன்றிருவந்தாதி என்ற பகுதிகளைப் பாடியவருமாகிய திருமால் அடியார்; a canonized Vaishnava saint author of Tiruccanda-viruttam and Nāṉmugaṉ-tiruvandādi, one of ten āḻvārs (செ.அக.).

[திருமழிசை + ஆழ்வார்]

திருமறுமார்பன் *tiru-maṟu-mārbaṉ*, பெ. (n.) 1. மார்பில் அழகிய மறுவையுடையவனாகிய திருமால்; Tirumāl, as having a mole on his chest. "திருமறுமார்பன்போற் றிறல்சான்ற காரியம்" (கலித். 104, 10). 2. அருகன்; Arhat (சூடா.).

[திரு + மறு + மார்பன்]

திருமறைக்காடு *tirumaṟai-k-kāḍu*, பெ. (n.) இந்நாளில் வேதாரணியம் என்றழைக்கப் படும் இவ்வூர் நாகை மாவட்டத்திலுள்ளது; the village in Nagapattinam district.

[திரு + மறை + காடு]

மான்கள் மிகுந்திருந்தமை பற்றி மரைக்காடு என்றழைக்கப்பட்ட இவ்வூரை, மரை என்பதனை மறை என பிறழவுணர்ந்து அதை வடமொழியில் வேதம் என மொழிபெயர்த்து வேதாரண்யம் என ஆக்கிவிட்டனர்.

திருமனசு *tiru-maṉašu*, பெ. (n.) படர்க்கை முன்னிலையராகிய பெரியோர்கட்கு வழங்கு மொரு மதிப்புரவுச்சொல் (நாஞ்.); His, Her or your highness, a term of respect.

[திரு + மனசு. மனம் → மனசு]

திருமாடம்பு *tiru-māḍambu*, பெ. (n.) திருவிதாங்கூர் அரசரதம் புதல்வர்களின் பூணூல் கலியாணம் (நாஞ்.); Upanayanam ceremony of the princes of Travancore.

திருமாமகள் *tiru-mā-magaḷ*, பெ. (n.) திருமகள்; Lakṣmi. "திருமாமகள் புல்ல நாளும்" (சீவக. 30).

[திரு + மாமகள்]

திருமாணிக்குழி *tirumāṇi-k-kuḻi*, பெ. (n.) தென்னார்க்காடு மாவட்டம் கடலூர் வட்டத்திலுள்ள ஊர்; a village in Cuddalore district.

[திரு + மாணிக்குழி]

மாணி என்பது பிரமச்சாரியைக் குறிக்கும். வாமனர் மாவலியிடம் மண் பெற்றார். திருமால் வாமணராக தோற்றரவு நிகழ்த்திய (அவதரித்த) போது இத்தலத்தில் வழிபட்டதாகக் கூறுவர். எனவே மாணிக்குழி எனப் பெயர் பெற்றுப் பாடல் பெற்ற தலமாதலால் 'திருமாணிக்குழி' ஆயிற்று. கல்வெட்டுக்களில் இவ்வூர்ப் பெயர் விருதராச பயங்கர வளநாட்டு மேற்காநாட்டு உதவித் திருமாணிக்குழி என்று குறிக்கப்பட்டுள்ளது (தமி. ஊர். பெ.).

திருமாந்துறை *tirumānturai*, பெ. (n.) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tiruchirappalli district.

[திரு + மா+ துறை]

பண்டைக்காலத்தில் இப்பகுதியில் மாந்தோப்புகள் நிறைந்திருந்ததாலும் கோயில் மரமாக மாமரம் விளங்குவதாலும் மாந்துறை எனப்பெயர் பெற்றுள்ளது. ஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலம் (தமி. ஊர். பெ.).

திருமாமணிமண்டபம் *tiru-māmaṇi-maṇḍabam*, பெ. (n.) (பரமபதத்துள்ள திருவோலக்க மண்டபம்) (மாலுலகத் திலுள்ள) இறைவன் எழுந்தருளும் மண்டபம்; Tirumāl's presence chamber in His heaven (ஈடு. 10, 9, 11.).

[திரு + மாமணி + மண்டபம்]

திருமால் *tiru-māl*, பெ. (n.) 1. மாலவன்; Tirumāl; "திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே" (சிலப். ஆய்ச்சி. படர்க்கை. 1). 2. வேந்தன்; king. "தேர் முழங்கு தானைத் திருமாலின் முன்றறுப்பான்" (சீவக. 2981).

[திரு + மால்]

திருமால்கரந்தை *tirumāl-karandai*, பெ. (n.) திருமால்காந்தி பார்க்க; see *tirumal-kāndi* (சா.அக.).

திருமால்காந்தி *tirumāl-kāndi*, பெ. (n.) விட்டுணு காந்தி என்னும் செடி; Tirumāl's plant (சா.அக.).

திருமால்குன்றம் *tirumāl-kuṉṟam*, பெ. (n.) அழகர் மலை; Aḻagar hill. "திருமால் குன்றத்துச் செல்குவி ராயின்" (சிலப். 11, 91) (செ.அக.).

[திருமால் + குன்றம்]

திருமால்கொப்பூழ் *tirumāl-koppūḻ*, பெ. (n.) மாலவனின் கொப்பூழிலிருந்து உண்டான தாகக் கருதப்படும் தாமரை (பிங்.); lotus as arising from the navel of Tirumāl.

[திருமால் + கொப்பூழ்]

திருமால்கொம்பர் *tirumāl-kombar*, பெ. (n.) திருமால்கொப்பூழ் பார்க்க; see *tirumāl-koppūḻ*.

[திருமால் + கொம்பர்]

திருமால்கோலம் *tirumāl-kōlam*, பெ. (n.) காலக்கிராமம்; white see (சா.அக.).

[திருமால் + கோலம்]

திருமால்தோற்றரவு *tirumāl-tōṟṟaravu*, பெ. (n.) 1. மீன் (மத்ஸ்யம்), ஆமை (கூர்மம்), பன்றி (வராகம்), நரஅரி (நரசிங்கம்), வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கிருட்டிணன், கற்கி என்னும் திருமாலின் பத்துத் தோன்றல்கள்; the ten avatars of Viṣṇu, viz., Matsyam, Kūrmam, Varāgam, Narasiṅgam, Vamanan, parasuraman, Raman, Balarāman, Kriṣṇaṉ, Karki. 2. சனகன், சனந்தனன், சனாதனன், சனற்குமாரன், நரநாராயணன், கபிலன், இடபன், நாரதன், அயக்கிரீவன், தத்தாத்திரேயன், மோகினி, வேள்வியின் பதி, வியாதன், தன்வந்தரி, புத்தன் என்னும் பதினைந்து குணத்தோன்றல்கள் (அம்சாவதாரங்கள்); secondary incarnations of Viṣṇu, being 15 viz, Saṉagaṉ, Sanandaṉaṉ, Sanaṟkumāraṉ, Naranārāyaṇaṉ, Kabilaṉ, Iḍabaṉ, Nāradaṉ, Ayakkirīvaṉ, Tattāttirēyaṉ, Mohiṉi, Vēlviyiṉ padi, Viyādaṉ, Taṉvandiri, Buttaṉ.

[திருமால் + கோலம்]

திருமால்நிலை *tirumāl-nilai*, பெ. (n.) ஐவகைத் திருமால் வடிவங்கள் (பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை); manifestations of Tirumāl in five forms viz., param, viyugam, vibavam, antaryāmittuvam. (அஷ்டாதச. தத்வத். 3, 4, 1) (செ.அக.).

திருமால்புதல்வன் *tirumāl-pudalvaṉ*, பெ. (n.) 1. மாலவனின் மகனான காமன்; kāmā as the son of Tirumāl. 2. நான்முகன்; Brahmā (செ.அக.).

[திருமால் + புதல்வன்]

திருமால்மூலிகை *tirumāl-mūligai*, பெ. (n.) துளசி; holy basil.

[திருமால் + மூலிகை]

திருமால்வடிவம் *tirumāl-vaḍivam*, பெ. (n.) திருமால்நிலை பார்க்க; see *tirumāl-nilai* (செ.அக.).

[திருமால் + வடிவம்]

திருமாலவதாரம் *tirumāl-avadāram,* பெ. (n.) திருமால்தோற்றரவு பார்க்க; see *tirumāl-torraravu* (செ.அக.).

[திருமால் + அவதாரம்]

திருமாலாயுதம் *tirumāl-āyutam,* பெ. (n.) மாலவனின் ஐம்படைகள்; Tirumāl's weapons being five.

[திருமால் + ஆயுதம்]

ஐம்படைகளாவன: சங்கு, சக்கரம், தண்டு, வில், வாள்.

திருமாலிகம் *tirumāligam,* பெ. (n.) காட்டு முருங்கை; wild Indian horse radish (சா.அக.).

திருமாலிருஞ்சோலை *tirumāl-iruñ-cōlai,* பெ. (n.) மதுரை மாவட்டத்திலுள்ள அழகர் மலை என்னும் மாலியவூர் (வைணவத்தலம்); Tirumāl's shrine Alagarmalai in Madurai.

[திருமால் + இருஞ்சோலை]

திருமாலின்கண்ணன் *tirumālin-kaṇṇan,* பெ. (n.) கரிசலாங்கண்ணி; eucalyptus plant (சா.அக.).



திருமாலின்தேவி *tirumālin-dēvi,* பெ. (n.) அரிதாரம்; orpiment (சா.அக.).

திருமாலுந்தி *tirumāl-undi,* பெ. (n.) திருமால் கொப்பூழ் பார்க்க; see *tirumāl-koppūḻ.*

[திருமால் + உந்தி]

திருமாலை[1] *tirumālai,* பெ. (n.) 1. தெய்வத்திற்குத் தொடுக்கும் பூமாலை; garland for an idol. 2. தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்ததும் நாலாயிரத்தெய்வப்பனுவலுட் சேர்ந்ததுமான ஒரு சிற்றிலக்கியம்; a poem in Nalāyira-t-teyva-p-paṉuval by Toṇḍaraḍi-p-poḍi-āḻvar.

திருமாலை[2] *tirumālai,* பெ. (n.) மணிகள் வைத்திழைக்கப்பெற்ற நெடிய மணி மாலை; a long chain made up of gems (கல்.வெ.அக.).

[திரு + மாலை]

திருமாலைகட்டி *tirumālai-kaṭṭi,* பெ. (n.) கோயில்மாலை தொடுப்போன்; maker of garland for idols.

[திரு + மாலை + கட்டி]

திருமாலைவடை *tirumālai-vaḍai,* பெ. (n.) 1. மாலை வேளையில் இறைவனுக்குப் படைக்கப்படும் வடைத் திருப்பணியாரம்; cakes of black gram offered in the evening in temples. 2. திருமேனிக்குச் சார்த்தப்படும் வடைமாலைக்கான வடை; cakes of black-gram garland for idol.

[திரு + மாலை + வடை]

திருமாளிகை *tiru-māḷigai,* பெ. (n.) 1. திருமாளிகைப்பத்தி பார்க்க; see *tirumāḷigai-p-patti.* "செம்பொனம்பலஞ்சூழ் திரு மாளிகையும்" (S.I.I. iii. 183). 2. பெரியோர் வாழும் இல்லம்; house of respectable person.

[திரு + மாளிகை]

திருமாளிகைக்கூறு *tiru-māḷigai-k-kūṟu,* பெ. (n.) கோயில் சுற்றுப்பகுதிகளில் அமைக்கப் படும், தெய்வங்கட்குரிய பூசகர்கட்குக் கோயில் ஆள்வினையாளர்கள் (நிர்வாகத்தினர்), பிரித்து அளிக்கும் பங்கு; a share given to the priests of demigods of a temple. "அருளுடையான் கோயிலுக்குச் சமுதாயத் திருமாளிகைக் கூறுதில்லையம் பலப்பல்லவ ராயனும்" (தெ. கல்.தொ. 4. கல் 222).

[திரு + மாளிகை + கூறு]

திருமாளிகைச்சுற்று *tiru-māḷigai-c-cuṟṟu,* பெ. (n.) திருச்சுற்றுமாளிகை பார்க்க; see *tiru-c-cuṟṟu-māḷigai.*

[திரு + மாளிகை + சுற்று]

திருமாளிகைத்தேவர் *tiru-māḷigai-t-tēvar,* பெ. (n.) திருவிசைப்பாவின் ஒரு பகுதியை

இயற்றிய ஆசிரியர்; the author of a section of Tiruvišaippā (செ.அக.).

[திரு + மாளிகை + தேவர்]

திருமாளிகைப்பத்தி *tiru-māḷigai-p-patti,* பெ. (n.) கோயில் திருமதிலையொட்டி உட்புறத்து அமைந்துள்ள கட்டடவரிசை; series of buildings along side the compound wall of a temple.

[திரு + மாளிகை + பத்தி]

திருமாளிகைப்பிள்ளையார் *tiru-māḷigai-p-piḷḷaiyār,* பெ. (n.) சண்டீசர் (கல்.); saṇḍēšā, Šivan's seneschal.

[திரு + மாளிகை + பிள்ளையார்]

திருமாற்பேறு *tirumāṟ-pēṟu,* பெ. (n.) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Kāñjipuram district.

[திருமால் + பேறு]

இத்தலத்தில் சிவபெருமான் திருமாலுக்குச் சக்கரப்படை அருளினார். திருமால் வழிபட்டுப் பேறு பெற்ற தலமாதலால் திருமாற்பேறு என்று பெயர் பெற்றுள்ளது என்பர்.

கல்வெட்டில் "இந்த ஊர்ப்பெயர் செயங் கொண்ட சோழமண்டலத்திலுள்ள காமக் கோட்டத்தின் பகுதியான வல்லநாட்டிலுள்ள திருமாற்பேறு" என்று குறிக்கப்பட்டுள்ளது (தமி. ஊர். பெ.).

திருமு[1]-தல் *tirumu-,* 5 செ.குவி. (v.i.) திரும்புதல்; to turn, return, go back. "ஓடித் திருமி" (கம்பரா. மாரீச. 136).

[திரு → திருமு]

திருமு[2]-தல் *tirumu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நன்றாகத் தேய்த்தல்; to rub hard. "விளக்கைச் சாம்பலால் திருமு" (நாஞ்.).

திருமுக்காணம் *tiru-mukkāṇam,* பெ. (n.) திருமுகக்காணம் பார்க்க; see *tiru-muga-k-kāṇam* (S.I.I. ii 509).

[திருமுகக்காணம் → திருமுக்காணம்]

திருமுக்கால் *tiru-mukkāl,* பெ. (n.) இசைப் பாட்டு வகை (தேவா.); a kind of song.

[திரு + முக்கால்]

திருமுகக்கணக்கு *tirumuga-k-kaṇakku,* பெ. (n.) திருவிதாங்கூர் அரண்மனையிலுள்ள கணக்குப் பதவி (நாஞ்.); an accountant's post in the Travancore palace.

[திருமுகம் + கணக்கு]

திருமுகக்காணம் *tiru-muga-k-kāṇam,* பெ. (n.) பழைய வரி வகை; an ancient tax (S.I.I.ii 521).

[திருமுகம் + காணம். காணம் = பொன், பொருள்]

திருமுகத்துறை *tiru-muga-t-tuṟai,* பெ. (n.) காவிரி கடலுடன் கலக்கும் துறை (சிலப். 10, 33, உரை.); mouth of Cauvery river.

[திருமுகம் + துறை]

திருமுகத்தேவை[1] *tiru-muga-t-tēvai,* பெ. (n.) அரண்மனைகளிற் செய்யும் வேலை; personal services in a temple or palace. "திருமுகத்தேவை செய்யுமிடத்து" (S.I.I.vi. 27).

[திரு + முகம் + தேவை]

திருமுகத்தேவை[2] *tiru-muga-t-tēvai,* பெ. (n.) அரசு வழி உரிமை பெற்ற சிற்றூரரையோ, ஊரையோ, கண்காணித்துக் குற்றவாளி களைச் சிறைபிடிக்கும் உரிமை; the right of government to imprisonment the accused in village or city. "திருமுகத் தேவைக்கு ஆளாய் வந்தது - பெருங்குடிகள் பேரால் கடமைக்கு வெள்ளாழரைச் சிறைபிடித்தல் இவர்கள் அகங்களில் ஒடுக்குதல் செய்யக் கடவ தல்லாதாகவும்" (தெ. கல். தொ. 6. கல். 48-50).

[திரு + முகம் + தேவை]

திருமுகப்பாசுரம் *tiru muga-p-pāšuram,* பெ. (n.) திருமுகமுதற்செய்யுள் பார்க்க; see *tirumuga-mudaṟ-c-ceyyuḷ.*

[திருமுகம் + பாசுரம்]

திருமுகம்[1] *tiru-mugam,* பெ. (n.) அரசன் ஓலை வழி இடும் கட்டளை; order of the king through ōlā documents. திரு. இராசராசதேவர்க்கு யாண்டு இருபத்தொன்றாவது நாட்டோருக்குத் திருமுகம் வர நாட்டோரும் திருமுகம் கண்டு எதிரெழுந்து சென்றுதொழுது வாங்கித் தலை மேல் வைத்துப் பிடிசூழ்ந்து பிடாகை எல்லை தெரித்து -

அறவோலை செய்த நிலம் *(பெரிய லெய்டன் செப்பேடுகள்) (கல். வெ. அக.).*

[திரு + முகம்]

திருமுகம்[2] *tirumugam*, பெ. (n.) 1. பெரியோரின் கடிதம்; letter form a great person. "உலகு தொழு நிறைஞ்சுந் திருமுகம் போக்குந் செவ்வியளாகி" *(சிலப். 8, 53).* 2. அரசனது ஆவணம்; royal order. "திருமுகம் மறுத்துப் போனவர்க்கு எத்தைச் சொல்லுவது *(ஈடு. 1, 4, 4).* 3. தெய்வத்திருமுன் *(வின்.)*; divine presence.

திருமுகமருளு-தல் *tirumukam-aruḷu-*, செ.குன்றாவி. (v.i.) அரசன் ஓலை வழிக் கட்டளையிடுதல்; to order of the king through ōlā documents. "அந்நிலத்திற்குக் கல்நாட்டுச் சிவலேகை செய்து கொள்க என்று சபை திருமுக மருளிச் செய்த திருமுகப்படி" *(திருப்பாற் கடல் கல்வெட்டு)*

[திருமுகம் + அருளு-.]

திருமுகமண்டலம் *tiru-muga-maṇḍalam*, பெ. (n.) கோயின்மூர்த்தி அல்லது பெரியோரின் ஒளிவட்டம் (முகமுன்); hallowed face of idols or great men *(செ.அக.).*

[திருமுகம் + மண்டலம்]

திருமுகமுதற்செய்யுள் *tirumuga-mudaṟ-ceyyuḷ*, பெ. (n.) பதினோராந் திருமுறையில் மதுரைச் சொக்கநாதக் கடவுள் இயற்றியதாகக் கருதப்படும் முதற் செய்யுள்; the first poem in padinōrān-tiru-muṟai, believed to have been composed by the god at Madura *(செ.அக.).*

[திருமுகம் + முதல் + செய்யுள்]

திருமுகத்தானம் *tiru-muga-t-tāṉam*, பெ. (n.) வேந்தரால் நேரில் அமர்த்தப்படும் மதிப்புறு பதவி *(நாஞ்.)*; a post of honour to which appointment is directly made by a king.

[திருமுகம் + தானம்]

திருமுட்டு *tiru-muṭṭu*, பெ. (n.) பூசைத்தட்டு முதலியன; plates and vessels used in worship. "இலங்கு நற்றிருமுட்டிவை முதலிய வீந்தார்" *(வேதாரணி. மேன்மை. 52).*

[திரு + முட்டு]

திருமுடி *tiru-muḍi*, பெ. (n.) 1. கோயில் திருமேனியின் (மூர்த்தியின்) தலைப்பகுதி; head of the chief idol in a temple. 2. திருநாமம் 3 பார்க்க; see *tiru- nāmam 3.* "நாரணன் கடிமைத் திருமுடியா யிரர்க்கு" *(அரிசமய பரகா. 28).* 3. வேட்டுவர் அல்லது கைக்கோளருக்குள் கொத்துவேலை செய்வோர்; caste of brick layer's among vēṭṭuvar or kaikkolar *(S.I.I.vii, 35).*

[திரு + முடி]

திருமுடிக்கலசம் *tiru-muḍi-k-kalašam*, பெ. (n.) திருமுழுக்குச் சடங்கு வகை; a kind of anointing ceremony *(நாஞ்.).*

[திருமுடி + கலசம்]

திருமுடிச்சாத்து *tiru-muḍi-c-cāttu*, பெ. (n.) தலைப்பாகை; turban. "சட்டை சாத்தித் திருமுடிச் சாத்துஞ் சாத்தி" *(திருவாலவா. 16, 19).*

[திருமுடி + சாத்து]

திருமுடிச்சேவகர் *tiru-muḍi-c-cēvagar*, பெ. (n.) ஐயனார்; Aiyaṉār *(செ.அக.).*

[திருமுடி + சேவகர்]

திருமுடித்திலகம் *tiru-muḍi-t-tilagam*, பெ. (n.) திருமுடியிற் சூட்டு மணி; jewel for the head. "திருமுடித் திலகங் கொண்டார்" *(சீவக. 787).*

[திருமுடி + திலகம்]

திருமுடியடைவு *tiru-muḍi-y-aḍaivu*, பெ. (n.) கொடிவழி, சரவடி, கால்வழி; pedigree. "பெரிய திருமுடியடைவு".

[திரு + முடியடைவு]

திருமுடியோன் *tiru-muḍiyōṉ*, பெ. (n.) வேந்தன்; king. "தீதிலன்கொ திருமுடியோ னென்றான்" *(கம்பரா. பள்ளி. 2).*

[திரு + முடியோன்]

திருமுத்து *tiru-muttu*, பெ. (n.) வேந்தன் முதலிய பெரியோர்களது பல்; tooth of a king or a great person, a term of respect *(செ. அக.).*

[திரு + முத்து]

திருமுருகர்பதிகம் *tirumurugar-padigam*, பெ. (n.) பூபாலப்பிள்ளை அவர்களால்

19-20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம்; the literature written by Pūpālappiḷḷai of 19-20th century *(சிற்அக.)*.

[திருமுருகர் + பதிகம்]

திருமுருகன்பூண்டி *tirumurugaṉ-pūṇḍi* பெ. (n.) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Coimbatore district.

[திரு + முருகன் + பூண்டி.]

முருகப்பெருமான் சிவபெருமானை வேண்டிப் பேறு பெற்ற தலமாதலால் முருகன்பூண்டி என்று பெயர் பெற்றுள்ளது என்பர். சுந்தரரால் பாடல் பெற்ற தலமாதலால் திருமுருகன் பூண்டி என்றழைக்கப்படுகின்றது. மாதவி மரங்கள் நிறைந்திருந்தமையால் மாதவிவனம் என்ற பெயரும் உண்டு.

திருமுருகன்பூண்டித்தலபுராணம் *tirumurugaṉ pūṇḍi-t-talapurāṇam* பெ. (n.) வாசுதேவ முதலியார் என்பவரால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற *சிற்றிலக்கியம்;* the literature composed by Vāsudēva-mudaliyār.

[திருமுருகன்பூண்டி + தலபுராணம்]

திருமுருகாற்றுப்படை *tiru-murukāṟṟu-p-paḍai* பெ. (n.) முருகக்கடவுளைப் பற்றி நக்கீரர் இயற்றியதும் பத்துப்பாட்டினுள் ஒன்றும் பன்னிரு திருமுறைகளுள் பதினோராந் திருமுறை நூல்களுள் ஒன்றுமான சிற்றிலக்கியம் ஆகிய கழக நூல்; a sangam literature in pattu-p-pāṭṭu composed by Nakkīrar in honour of Lord Murugaṉ *(செஅக.)*.

[திருமுருகன் + ஆற்றுப்படை]

திருமுல்லைவாயில்மாசிலாமணிஈசர்பதிகம்[1] *tirumullai-vāyil-māśilāmaṇi īsar-padigam,* பெ. (n.) தாச்சி அருணாச்சலம் அவர்களால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் *(சிற்அக.)*; a minor literature written by tacci-aruṇāccala-mudaliyār in 19th century.

[திருமுல்லைவாயில் + மாசிலாமணி + பதிகம்]

திருமுல்லைவாயில்மாசிலாமணிஈசர்பதிகம்[2] *tirumullai-vāyil-māšilāmaṇi-īšar-padigam,* பெ. (n.) பூவை கல்யாண சுந்தரர் அவர்களால் 19-20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் *(சிற்அக.)*; a minor literature written by Pūvai-kalyāṇa-sundarār of 19-20th century.

[திருமுல்லைவாயில் + மாசிலாமணி + பதிகம்]

திருமுழுக்கு *tiru-muḻukku* பெ. (n.) 1. இறைத் திருமேனி அல்லது அரசரின் குளியல்; bath of an idol or a king. 2. சிலை (மார்கழி) மாதத்தில் மலைமகள் நோன்பிருந்து மகளிர் முழுகும் நீராட்டு; bath taken by woman after fasting in honour of Pārvadi in the month of Markaḻi *(செ. அக.)*.

[திரு + முழுக்கு]

திருமுளைப்பாலிகை *tiru-muḷai-p-pāligai* பெ. (n.) மணவிழா முதலிய சிறப்பு நாள்களில் தவசங்களை முளைவிட்டு வளர்க்கப் பெறும் மண்பாலிகை; pots of sprouting seeds kept on important occasions like marriage. "திருமுளைப்பாலிகை முப்பத்தானுக்கு" *(S. I. I. iii, 187)* (செஅக.).

[திரு + முளை + பாலிகை]

திருமுற்றத்தார் *tiru-muṟṟattār* பெ. (n.) கோயிற் பணி செய்வோர்; temple-servants. "அதைக் கவனித்த அருச்சகருந் திருமுற்றத் தாரும்" *(குருபரம். 77)*

[திருமுற்றம் + ஆர்].

திருமுற்றம் *tiru-muṟṟam* பெ. (n.) 1. இறைவன் திருமுன்; court-yard in front of the chief idol of a temple. அணியரங்கன் றிருமுற்றத்தடியார் *(திவ். பெருமாள். 1, 10)*. 2. குதிரை வையாளி வீதி; open square for equestrian excercises race-course, hippodrome *(குடா.)*.

[திரு + முற்றம்]

திருமுறை *tirumuṟai* பெ. (n.) தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராந்திருமறை, பெரிய புராணம் எனும் சிவநெறி நூல்கள்; Tamil Šaiva scriptures, 12 in number, viz., Tēvāram, Tiru-vāšagam, Tiru-v-išaippā, Tiru-p-pallāṇḍu, Tiru-mantiram, patinōrān-tirumuṟai, Periya-purāṇam *(செஅக.)*.

[திரு + முறை]

திருமுறைகண்டசோழன் *tirumuṟai-kaṇḍa-cōḻaṉ* பெ. (n.) தேவாரமாகிய திருமுறைகளைக் கண்டு வெளிப்படுத்திய சோழன்; a Chola king, who was the discoverer of Tēvāram (செ.அக.).

[திருமுறை + கண்ட + சோழன்]

திருமுறைகண்டபுராணம் *tirumuṟai-kaṇḍa-purāṇam* பெ. (n.) தேவாரம் முதன்முதற் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றினைக் குறித்து உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய தொன்மம்; a poem by Umā-padi-civāccāriyar describing the discovery of Tēvāram (செ. அக.).

[திரு + முறை + கண்ட + புராணம்]

திருமுறைத்தேவாரச்செல்வன் *tirumuṟai-t-tēvāra-c-celvaṉ,* பெ. (n.) திருமறைகளாக வகுக்கப்பட்ட தேவாரத் திருப்பதிகங்களை அருளிச்செய்த திருஞானசம்பந்தர்; Gñāṉa-sambandar, as composer of the tēvāram which included as tirumuṟais.

"திருக்கழுமல நாட்டு திருக்கழு மலத்து (சீர்காழி) உடையார் திருத்தோணி சுரமுடைய நாயனார் திருக்கோயிலின் வடக்கில் திருமடை வளாகத்து திருமுறைத் தேவாரச் செல்வன் திருமடத்து" *(தெ. கல். தொ. 8. கல். 205).*

[திரு + முறை + தேவாரம் + செல்வன்]

திருமுறைமண்டபம் *tiru-muṟai-maṇḍabam,* பெ. (n.) திருமறைகளை ஓதுங் கோயின் மண்டபம்; temple-hall where the tirumurai is recited. "எந்தை கோயிலும் திருமுறை மண்டபமெடுத்து" *(உபதேசகா. சிவபுரா. 48).*

[திருமுறை + மண்டபம்]

திருமுன்[1] *tiru-muṉ,* பெ. (n.) திருமுன்பு பார்க்க; see *tirumuṉbu.* "விழுந்தவர் திருமுன் சென்று" *(திருவாலவா. 27, 28).*

[திரு + முன்]

திருமுன்[2] *tiru-muṉ,* குவி.எ. (adv.) திருமுன்னர் பார்க்க; see *tirumuṉṉar.*

[திரு + முன்]

திருமுன்காட்சி *tiru-mun-kāṭci,* பெ. (n.) வரிவகை (S.I.I.iv.122); a tax.

[திருமுன் + காட்சி]

திருமுன்பு *tiru-muṉbu,* பெ. (n.) இறைமுன்பு; divine presence, royal presence, presence of a great person (செ.அக.).

[திரு + முன்பு]

திருமுன்னர் *tiru-muṉṉar,* கு.வி.எ. (adv.) முன்னிலையில்; in the august presence. "மன்னன் றிருமுன்னர் வைத்தலுமே" *(நள. சுயம்வர. 26).*

[திரு + முன்னர்]

திருமுனைப்பாடிநாடு *tiru-muṉai-p-pāḍi-nāḍu,* பெ. (n.) திருக்கோவலூரைச் சார்ந்துள்ள நடு நாடு; the country surrounding Tirukkōvalūr "திருமுனைப்பாடி நாட்டுப் பாண்டையூர் மங்கலங்கிழான்" *(S. I. I. i 101)* (செ.அக.).

[திரு + முனைப்பாடிநாடு]

திருமூப்பு *tiru-mūppu,* பெ. (n.) மூப்பினால் எய்தும் அரச பதவி; king-ship, as attained by right of seniority. "விசாகந் திருநாள் திருமூப்பு ஏற்றார்" *(நாஞ்.).*

[திரு + மூப்பு]

திருமூர்த்தி *tiru-mūrtti,* பெ. (n.) ஆயுர்வேத முறைப்படி செய்த ஒரு வகைச் செந்தூரம்; a red oxide perhaps with three ingredients prepared as per process of Ayurveda (சா.அக.).

திருமூர்த்திபற்பம் *tiru-mūrtti-paṟpam,* பெ. (n.) சித்தமுறைப்படி வீரம், பூரம், இளங்கம் ஆதியாகப் புடமிட்டெடுத்த வேதைக்குதவும் பற்பம்; in Siddhar's medicine a white oxide calcined prepared with the aid of corrosive sublimate, sub choloride of mercurry and vermilion as chief ingredients which is useful in alchemy.

[திருமூர்த்தி + பற்பம்]

திருமூலட்டானம் *tiru-mūlaṭṭāṉam,* பெ. (n.) திருவாரூர்ச் சிவதலம்; the sacred shrine of Tiruvārūr. "திருவாரூரிற்றிரு மூலட்டானத் தெஞ்செல்வன்றானே" *(தேவா. 725, 4).*

திருமூலநாயனார் *tiru-mūla-nāyaṉār,* பெ. (n.) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவரும்

திருமந்திரம் இயற்றியவருமாகிய சிவத்துறவி; a canonized Saiva saint, author of Thirumandiram, one of 63 Nāyanmārs (பெரியபு.).

[திருமூலம் + நாயனார்]

திருமூலநாயனார்குருமுறை *tiru-mūla-nāyanār-kurumurai,* பெ. (n.) 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருமூலர் இயற்றிய முறை எனும் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்த நூல் (சிற். அக.); a minor literature book written by tirumūlar in 5th century.

[திருமூலம் + நாயனார் + குருமுறை]

திருமூலர் *tiru-mūlar,* பெ. (n.) திருமூலநாயனார் பார்க்க; see *tirumūla-nāyanār.* 'திருமூலர் சொல்லும் ஒரு வாசக மென் றுணர்" (நல்வழி 40).

[திரு + மூலர்]

திருமூலர்அகவல் *tiru-mūlar-agaval,* பெ. (n.) மாணிக்கவாசகர் என்பவரால் 18ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற சிற்றிலக்கியம் (சிற். இல. அக.); a minor literature written by Māṇikka-vāšagar in 18th century.

[திருமூலர் + அகவல்]

திருமூலவர்க்கம் *tiru-mūla-varkkam,* பெ. (n.) சடை, புலித்தோல் முதலிய சின்னங் களுடன் மலையில் வாழும் திருமூலர் மரபைச் சேர்ந்த சித்தர்கள்; Siddhars living on the mountain tops with their symbolic vestures as entangled lock hair, tiger's skin etc., and who claim to be members of Tirumūlar's school of thought (சா. அக).

[திருமூலர் + வர்க்கம்]

திருமெய்காப்பு *tiru-mey-kāppu,* பெ. (n.) கோயில் காப்போன் (S.I.I.ii, 328); temple watchman.

[திரு + மெய் + காப்பு]

திருமெய்ப்பூச்சு *tiru-mey-p-pūccu* பெ. (n.) கோயின் திருமேனி (மூர்த்தி)களின் மேற் பூசும் பூச்சு; anointing of an idol (S.I.I. iii, 94).

[திருமெய் + பூச்சு]

திருமெய்ப்பூச்சுச்சந்தனம் *tiru-mey-p-pūccu-c-cantanam,* பெ. (n.) திருமேனிகட்குச் சிறப்புத் திருநாளில் அணிவிக்கும் சந்தனம்; sandal paste anointed to idol on special occasion. "திருமெய்பூச்சுச் சந்தனஞ் ஸ்ரீ கண்டத்து ஓராண்டைக்குக் காசு அரையும்" (தெ. கல். தொ. 5, கவி பு 24) (கல். வெ. அக.).

[திரு + மெய் + பூசு + சந்தனம்]

திருமெழுக்கு *tiru-meḻukku,* பெ. (n.) 1. கோயிலிடத்தை மெழுகுகை; cleansing the temple floor with cow-dung dissoved in water. "திருமெழுக்குஞ் சாத்தி" (சி. சி. 8, 19). 2. சாணம்; cow-dung (இ.வ.).

[திரு + மெழுக்கு]

திருமெழுக்குப்புறம் *tiru-meḻukku-p-puṟam,* பெ. (n.) கோயிற் பகுதிகளையும், திருமுற்றத்தினையும் நாளும் தண்ணீர் தெளித்தும் சாணமிட்டும் மெழுகுவார்க்கு அளிக்கப்பெறும் இறையிலி நிலம்; tax free land given to people who cleanse the temple and smear the temple floors with cowdung dissolved in water. "திருமெழுக்கு இடுவாளொருத்திக்கு நெல்லு நாழி உரியும்" (தெ. கல். தொ. 5, கல் 578).

[திரு + மெழுகு + புறம்]

திருமெழுகு[1]-தல் *tiru-meḻugu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கோயிலிடத்தைச் சாணத்தால் மெழுகித் தூய்மை செய்தல்; to cleanse the temple - floor (செ. அக.).

[திரு + மெழுகு-.]

திருமெழுகு[2] *tiru-meḻugu,* பெ. (n.) திரு மெழுக்கு பார்க்க; see *tiru-meḻukku* (செ.அக.).

[திரு + மெழுகு]

திருமேற்கட்டி *tiru-mēṟ-kaṭṭi,* பெ. (n.) கோயில் திருமேனி (மூர்த்தி) எழுந்தருளியிருக்கு மிடத்துக் கட்டப்படும் மேற்கட்டி; canopy over an idol in a temple (S I I ii 76).

[திரு + மேல் + கட்டி]

திருமேற்பூச்சு *tiru-mēṟ-pūccu,* பெ. (n.) 1. களபம்; sandal perfume (தத்துவப். 66, உரை) 2. திருமெய்ப்பூச்சு பார்க்க; see *tiru-mey-p-puccu* (யாழ்.அக.).

[திருமேல் + பூச்சு]

திருமேனி *tiru-mēṉi*, பெ. (n.) 1. இறையுரு; idol. "எழுந்தருளியிருக்கும் செப்புத் திருமேனிகள்" *(S.I.I.ii. 134).* 2. கடவுள், முனிவர் முதலியோரது உடல் (திவ்விய சரீரம்); sacred person of a deity. "அங்கமலத்திலை போலுந் திருமேனி யடிகளுக்கே" *(திவ். திருவாய், 9, 7, 3).* 3. பெண்களின் காதணி (வின்.); women's ornament. 4. குப்பைமேனி (சங்.அக.); Indian acalypha.

[திரு + மேனி]

திருமேனிக்கடுக்கன் *tiru-mēṉi-k-kaḍukkaṉ*, பெ. (n.) கைம்பெண்கள் அணியும் காதணி வகை; an ear-ornament worn by widows (யாழ்.அக.).

[திருமேனி + கடுக்கன்]

திருமேனிக்கீடு *tiru-mēṉi-k-kīḍu*, பெ. (n.) கவசம்; coat of mail. "நற்றிருமேனிக்கீடு நவையற விட்டு" *(திருவாலவா. 28, 90).*

[திருமேனி + இடு]

திருமேனிகண்டன் *tirumēṉi-kaṇḍaṉ*, பெ. (n.) திருமேனி பார்க்க; see *tirumēṉi* (சா.அக.).

[திருமேனி + கண்டன்]

திருமேனிகள் *tiru-mēṉigaḷ*, பெ. (n.) திருநீறு அணிந்துத் திருத்தொண்டு செய்யும் சிவனடி யார்கள், நந்தவனக்குடிகள்; Šaiva devotees. "நந்தவனம் செய்யும் திருமேனிக்கு" *(தெ. கல். தொ. 8. கல். 194).*

[திரு + மேனிகள்]

திருமேனிகாவல் *tiru-mēṉi-kāval*, பெ. (n.) கோயிற் காவல்; temple guard. "திருமேனி காவல் காணியாட்சி" *(I.M.P.N.A. 227).*

[திருமேனி + காவல்]

திருமேனிச்சாறு *tirumēṉi-c-cāṟu*, பெ. (n.) குப்பைமேனிச்சாறு; juice of rubbish plant (சா.அக.).

[திருமேனி + சாறு]

திருமேனிபத்திரி *tirumēṉi-pattiri*, பெ. (n.) குப்பைமேனியிலை; leaf of rubbish plant (சா.அக.).

[திருமேனி + பத்திரி]

திருமேனிப்புழு *tirumēṉi-p-puḻu*, பெ. (n.) ஒருவகைக் குடற்புழு; a kind of intestinal worm.

[திருமேனி + புழு]

திருமேனியழகி[1] *tirumēṉi-y-aḻagi*, பெ. (n.) திருமேனிபத்திரி பார்க்க; see *tirumeṉi-pattiri* (சா.அக.).

[திருமேனி + அழகி]

திருமேனியழகி[2] *tiru-mēṉi-y-aḻagi*, பெ. (n.) திருமேனி 4 (மலை.) பார்க்க; see *tiru-mēṉi 4.*

[திருமேனி + அழகி]

திருமை *tirumai*, பெ. (n.) அழகு; beauty. "திருமை பெற்ற தொரு தேரினை நல்கி" *(கந்தபு. முதனாட். பானு. 35).*

திருமொழி *tiru-moḻi*, பெ. (n.) 1. சான்றோர் சொல்; word or utterance of great persons. "ஒரு மூன்றவித்தோன் . . . திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா" *(சிலப். 10, 195).* 2. நாலாயிரத் தெய்வப் பனுவலுள் உள்ள ஒரு பகுதி; a portion of Nālāyira-t-teyva-p-paṉuval (வைணவ). 3. தோன்றியம் (ஆகமம்); agamas. "அறவோன் றிருமொழி" *(சிலப். 10, 12).* 4. அறம் (சிலப். 10, 12. அரும்.); dharma.

[திரு + மொழி]

திருமோகூர் *tirumōgūr*, பெ. (n.) மதுரை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Madurai district.

> தேவர்களும், அசுரர்களும் பாற் கடலைக் கடைந்த பொழுது கிடைத்த அமுதத்தைத், திருமால் அசுரர்களிடம் இருந்து, மோகினித் தோற்றரவு எடுத்து மயக்கிப் பெற்று, தேவர்களுக்குக் கொடுத்தார். மோகினி தோற்றரவு எடுத்தப்பகுதியாதலால் மோகனூர் எனப்பட்டு பின் மோகூர் என்று குறுகியது என்பர். திருமங்கை யாழ்வாராலும், நம்மாழ் வாராலும் பாடப் பெற்ற தலம். "தாளத் தாமரைத் தடமணி வயல்திரு மோகூர்" என்பது நம்மாழ்வார் பாசுரங்களில் ஒன்று *(தமி. ஊர். பெ.).*

திருரசம் *tiru-rašam*, பெ. (n.) கலப்பற்ற இதளியம் (பாதரசம்); purified mercury, un adultered mercury.

[திரு + ரசம்]

திருவக்கரை *tiruva-k-karai,* பெ. (n.) தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள சிவத் தலம்; a Siva shrine in South Arcot district.

"கோராசராசகேசரி வந்மற்கு யாண்டு 16வது கண்டராதித்த தேவர் நம்பிராட்டியார் திரு உத்தமச் சோழரைத் திருவயிறு வாய்த்த உடைய பிராட்டியார் செம்பியன் மாதேவியார் எடுப்பித்தருளின திருவக்கரை திருக்கற்றளி சிவலோகம் *(தெ. கல். தொ. 17. கல். 222).*

இக்கோயிலைச் செம்பியன் மாதேவியார் கி.பி. 1001ல் - 'சிவலோகம்' என்ற பெயரால் கற்றளியாகக் கட்டியுள்ளார்.

திருவக்கிரம் *tiruva-k-kiram,* பெ. (n.) படையல்; offerings to the deity in the temple. "திருவயிந்திர புரத்தாழ்வானுக்குத் திருநாட் களில் எழுந்தருளவும் இக்கோயிலில் நித்தம் பத்துக்கலம் திருவக்கிரம் உண்ணக் கடவதாகவும்" *(முதற் குலோத்துங்கன் - கி. பி. 1092, தெ. கல். தொ. 7. கல். 760).*

[திரு + அக்கிரம்]

திருவகுப்பு *tiruvaguppu,* பெ. (n.) அருணகிரி நாதரால் 15ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வகுப்பு என்னும் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்த நூல் (சிற்அக.); a minor literature written by Aruṇagirinādar in 15th century.

[திரு + வகுப்பு]

திருவங்கமாலை *tiruvaṅgamālai,* பெ. (n.) 7ஆம் நூற்றாண்டில் திருநாவுக்கரசரால் எழுதப் பட்ட சிற்றிலக்கிய வகையிலான தேவாரப் பகுதி (சிற்அக.); a minor literature written by Tirunāvukkarasar of 6th century.

திருவஞ்சகம் *tiru-vañjakam,* பெ. (n.) சிவனார் வேம்பு; Sivaṉ's neem.

திருவட்டபிசின் *tiruvaṭṭa-pišiṉ,* பெ. (n.) விளாம்பிசின்; gum of wood-apple (சா.அக).

திருவட்டம் *tiru-vaṭṭam,* பெ. (n.) திருகுவட்டம் பார்க்க; see *tiruku-vaṭṭam* (யாழ்.அக.).

திருவட்டமணி *tiru-v-aṭṭamaṇi,* பெ. (n.) திருவட்டமணிவடம் பார்க்க; see *tiru-vaṭṭa-maṇi-vaḍam* (S. I. I. iii, 474).

[திரு + வட்டம் + மணி]

திருவட்டமணிவடம் *tiru-vaṭṭa-maṇi-vaḍam,* பெ. (n.) கழுத்தணி வகை; a kind of necklace (S.I.I.iii, 474).

[திரு + வட்டம் + மணிவடம்]

திருவட்டி *tiru-v-aṭṭi,* பெ. (n.) திருகுகள்ளி,1 பார்க்க; see *tirugu-kaḷḷi.*

திருவடி[1] *tiru-v-aḍi,* பெ. (n.) 1. திருப்பாதம் (சீவடி); sacred feet, as of a deity, saint, etc., "திருவடி யென்றலைமேல் வைத்தார்" *(தேவா. 415, 1).* 2. இறையுரு; the deity. "திருவடிதன் னாமம்" *(திவ். இயற். நான்மு. 68).* 3. துறவி, முனிவர்; ascetic, saint, sage. "படராத் திருவடி" *(T.A.S. ii 139).* 4. மாலவனின் திருவடியாயுள்ள அனுமன்; Hanumān, regarded as the feet of Viṣṇu. "உவமையாளுந் திருவடி யென்னுந் தன்மை யாவர்க்குந் தெரிய நின்றான்" *(கம்பரா. மகேந். 26).* 5. மாலவனின் திருவடியான கலுழன் (கருடன்); Garuda, regarded as the feet of Viṣṇu. "திருவடி யொருவனுமாயிருந்தது" *(ஈடு. 1.4.6).* 6. திரு விதாங்கூர் அரசர்; title of the kings of Travancore. "இராமன் கோதை வர்மத் திருவடி" *(T.A.S. i 290).*

[திரு + அடி]

திருவடி[2] *tiru-vaḍi,* பெ. (n.) நோவில்லாத புண் (யாழ்ப்.); indolent sore.

[திரு + வடி + வடு → வடி]

திருவடி[3] *tiru-vaḍi,* பெ. (n.) கோமாளிக் கூத்து (யாழ்ப்.); tricks of a buffoon (செ.அக.).

[திருகு → திரு + அடி]

திருவடி[4] *tiru-v-aḍi,* பெ. (n.) ஆறாதகலும் புண், சா (மரண)ப்புண்; a chroni culcer or in curable ulcer which may ultimately cause death. 2. ஒரு வகைக் கள்ளி; a spurge in general (சா.அக.).

திருவடிக்கம் *tiru-vaḍikkam,* பெ. (n.) மாலவன் கோயிலிற் படிக்கத்தினின்று எடுத்து வழங்கும் நீர் (தீர்த்தம்); water used in the worship of an idol and distributed of worshippers (வைணவ).

[திருபடிக்கம் → திருவடிக்கம்]

திருவடிக்காறை *tiru-v-aḍi-k-kāṟai,* பெ. (n.) காலணி வகை (S.I.I.ii, 144); anklet of an idol.

[திருவடி + காறை]

காறை என்பது கை, கால், கழுத்து ஆகிய உறுப்புகளிலும் மணிக் கற்களாலும், முத்துகளாலும், செய்யப்பட்டுக் கைக்காறை, அடிக்காறை, பட்டைக் காறை என்ற பெயர் பெற்றதை தஞ்சைக் கோயில் கல்வெட்டு உணர்த்துகின்றது.

"திருக்கைக்காறை ஒன்று பொன் அறு கழஞ்சே கால்" *(கல். வெ. அக.).*

திருவடிகள்தேவதானம் *tiruvaḍikaḷ-tēvadāṉam,* பெ. (n.) திருமால் கோயிலுக்குரிய இறையிலி நிலங்கள்; tax free land of Tirumāl temple. "மஹாதேவர் தேவதானங்களும், திருவடிகள் தேவதானங்களும்" *(முதல் இராசராசன், கிபி. 1014, தெகல்.தொ. 2. கல்பு).* சிவனிய, மாலியக் கோயில் இறையிலி நிலங்களுக்கான பொதுச்சொல்.

[திருவடிகள் + தேவதானம்]

திருவடிசநிலம் *tiru-vaḍiša-nilam,* பெ. (n.) பச்சைப் பாம்பு; green snake. whip snake *(சா.அக.).*

திருவடிசம்பந்தம் *tiru-v-aḍi-šampandam,* பெ. (n.) தொண்டன் (சீடனாந்) தொடர்பு *(வைணவ.)*; discipleship.

[திருவடி + சம்பந்தம்]

திருவடித்தலம் *tiru-v-aḍi-t-talam,* பெ. (n.) திருவடிநிலை பார்க்க; see *tiru-v-aḍi-nilai* "செம்மையின் றிருவடித் தலந் தந்தீசென வெம்மையு நல்குவ விரண்டு நல்கினான்" *(கம்பரா. கிளைகண்டு. 135).*

[திருவடி + தலம்]

திருவடிதீட்சை *tiru-v-aḍi-t-tiṭcai,* பெ. (n.) மாணாக்கன் (சீடன்) தலையில் குரு தன் பாதத்தை வைத்து அருள் புரியுந் தீக்கை வகை; a mode of religious initiation in which a guru places his feet on the head of his disciple *(செ.அக.).*

[திருவடி + தீட்சை]

திருவடிதேசம் *tiru-v-aḍi-tēšam,* பெ. (n.) திருவிதாங்கூர்ச் சீமை; a Travancore state. "திருவடிதேசமொரு செங்கோல் செலுத்தும்" *(பணவிடு. 29).*

[திருவடி + தேசம்]

திருவடிதொழு-தல் *tiru-v-aḍi-toḻu-,* 1 செ.குன்றாவி. (v.t.) கடவுள் முதலியோரை வணங்குதல்; to worship a deity or a holy person. "திவ்ய தேசங்களெங்குந் திருவடி தொழுதுரை" *(குருபரம். 168).*

[திருவடி + தொழு-.]

திருவடிநிலை *tiru-v-aḍi-nilai,* பெ. (n.) கடவுளர் முதலியோர் பாதுகை; sandals of an idol or a great person. "திருவடி நிலை . . . பிறவித் துன்பத்தைக் கெடுக்கும்" *(சிலப். 11, 137, உரை).* 2. இறையுருவின் பீடம் (S.I.I. iii. 142); pedestal for an idol.

[திருவடி + நிலை]

திருவடிப்பந்தம் *tiru-v-aḍi-p-pandam,* பெ. (n.) கோயில் திருமேனி (மூர்த்தி)யின் புறப்பாட்டில் முன்பாகப் பிடித்துச் செல்லும் தீப்பந்தம் *(வைணவ.)*; a torch carried before an idol in procession.

[திருவடி + பந்தம்]

திருவடிப்பாதுகை *tiru-v-aḍi-p-pādugai,* பெ. (n.) திருவடிநிலை பார்க்க; see *tiru-v-aḍi-nilai* *(செ.அக.).*

[திருவடி + பாதுகை]

திருவடிப்புண் *tiruvaḍi-p-puṇ,* பெ. (n.) திருவடி,4 பார்க்க; see *tiru-v-aḍi,4* *(சா.அக.).*

[திருவடி + புண்]

திருவடிபிடிப்பான் *tiru-v-aḍi-piḍippāṉ,* பெ. (n.) கோயிலருச்சகன் *(சிலப். 30, 52, அரும்.)*; temple priest. "பூபால சுந்தர விண்ணகர், எம்பெருமாள் கோயில் திருவடி பிடிக்கும் காஸ்யப்ன் திருகிருட்ணபட்ட நின்ற நம்பி" *(தெ. கல். தொ. 8, கல் 340).*

[திருவடி + பிடிப்பான்]

திருவடிமார் *tiru-v-aḍi-mār,* பெ. (n.) அரசர், பார்ப்பன அதிகாரிகள், திருமடத்துத் தலைவர்கள், கோயில் பூசாரி முதலாயினோருக்கு வழங்கிய பழைய

சிறப்புப் பெயர்; ancient honorific tittle of rulers of countries, brahmin officers, heads of mutts and officiating priests in temples (T. A. S. ii 141).

[திருவடி + மார்]

திருவடிராச்சியம் *tiruvaḍi-rācciyam,* பெ. (n.) திருவடிதேசம் பார்க்க; see *tiruvaḍi-tēšam*.

[திருவடி + இராச்சியம்]

திருவடையாளம் *tiru-v-aḍaiyāḷam,* பெ. (n.) சிவசமயத்திற்குரிய திருநீறு முதலிய பொருள்கள்; holy ashes and rudrākṣa beads as the peculiar emblems of Saiva religion (சங்.அக.).

[திரு + அடையாளம்]

திருவண்டுதுறை *tiruvaṇḍu-tuṟai,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில் உள்ள இராச மன்னர் குடிக்குக் கிழக்கே உள்ள ஒரு தேவாரம் பெற்ற சிவப்பதி; a village in Tanjavore district.

பிருங்கி முனிவர் இறைவனை மட்டும் வணங்க, அவரைப் பிரியாத அம்மையாரை வணங்க மனமின்றி வண்டுரு கொண்டு, அவர்களுக்கிடையே ஊடுருவிச் சென்று வழிபட்ட தலம் என்பர் (சிற. பெ. அக.).

[திரு + வண்டு + துறை]

திருவண்ணாமலை *tiru-v-aṇṇāmālai,* பெ. (n.) திருவண்ணாமலை மாவட்டத் தலைநகர்; capital of Thiruvaṇṇāmalai district.

[திரு + அண்ணாமலை]

ஐம்பூதத் தலிங்களுள் நெருப்புக்குரிய திருக்கோயில் அரியும் அயனும் தம்மில் யார் உயர்ந்தவர்கள் எனத் தம் பேதைமையால் போரிட்டுக் கொண்ட பொழுது சிவபெருமான் அவர் செருக்கடக்கி பேரொளிப் பிழம்பாய்த் தோன்றியருளிய மலையே அண்ணாமலை. சிவனே உயர்ந்தவர். அவரே இப்பகுதியில் மலையாகக் காட்சி தந்ததால் இப்பெயர் பெற்று இம்மலையைச் சேர்ந்த பகுதிக்கு இப்பெயர் வந்தது.

இம்மலையின் சிறப்பினை விளக்கும் முறையில் பழமொழிகள் பலதோன்றி யுள்ளன.

சோணாசலத்தில் சிறந்த தலமுமில்லை
சோமவாரத்தில் சிறந்த விரதமுமில்லை (பழ.).
அண்ணா மலையாரின் அருள் உண்டானால்
மன்னாார் சாமியைக் கேட்பானேன் (பழ.).

என்ற பழமொழிகள் இம்மலைச் சிறப்பை உணர்த்தும் (தமி. ஊர். பெ.).

திருவண்பரிசாரம் *tiruvaṇpariśāram,* பெ. (n.) திருவிதாங்கூர்ச் சீமையிலுள்ளதும், நம்மாழ்வாரின் தாயார் பிறந்த இடமுமான திருப்பதிசாரம் என்னும் திருமால்தலம் (திவ். திருவாய்.); Tiruppadi-cāram a Viṣṇu shrine in Travancore and the birth place of Nammāḻvār's mothers.

திருவணுக்கன்றிருவாயில் *tiru-v-aṇukkaṉ-ṟiru-vāyil,* பெ. (n.) கருவறையை அடுத்துள்ள வாயில்; door of the inner shrine of a temple. "அங்கணெய்திய திருவணுக்கன்றிருவாயிலின்" (பெரியபு. வெள்ளானை. 41).

[திருவணுக்கன் + திருவாயில்]

திருவணை *tiru-v-aṇai,* பெ. (n.) பாலம் (சேது); Adam's bridge between Ramesvaram and Ceylon. "திருவணைக்கும் . . . உதயகிரி அதமனகிரிகளுக்கும் மத்யத்தில்" (குருபரம். 194).

[திரு + அணை]

திருவணைக்கரை *tiru-v-aṇai-k-karai,* பெ. (n.) இராமேசுவரத்திற்குத் தென்கிழக்காக நீண்ட தரைமுனையிலுள்ள புகழ்பெற்ற ஊர்; the promontory in the South-east of Rāmēsvaram and the bay enclosed thereby, being one of the most sacred places in India (அகநா. 70. உரை).

[திரு + அணை + கரை]

திருவத்தவர் *tiruvattavar,* பெ. (n.) அருளாளர்கள் (பாக்கியவான்கள்); blessed, fortunate persons. "நல்லொழுக்கங் காக்குந் திருவத்தவர்" (நாலடி. 157).

திருவதாங்கோடு *tiruvadāṅkōḍu,* பெ. (n.) சுறாமீன்; shark, a sea fish (சா.அக.).

திருவதாங்கோட்டுநெய் *tiruvadāṅkōṭṭu-ney,* பெ. (n.) மாலைக் கண் நோய்க்கு மருந்தாகப் பயன்படுவதும் சிறப்பான மருத்துவ குணங்களைக் கொண்டது எனக்கருதப் படுவதுமான சுறாமீன் ஈரலிலிருந்து வடிக்கும் நெய்; oil extracted from the liver of shark which cures night blindness as considered it has peculiar virtues in medicine.

[திருவதாங்கோடு + நெய்]

திருவதிகை[1] *tiruvadigai,* பெ. (n.) விழுப்புரம் – மயிலாடுதுறை வழியில் பண்ருட்டி அருகில் கெடில ஆற்று வடகரையில் உள்ள ஊர்; a of village Māyavaram Taluk in Tañjāvūr district.

[திரு + அதிகை]

மற்றைய சிவப் பதிகளைவிடப் பெருமையில் அதிகமுடைய பதியாகையால் திருவதிகை என்று பெயர் பெற்றது. திருநாவுக்கரசருடைய தமக்கையார் திருத்தொண்டு செய்தபதி; நாவுக்கரசர் சூலைநோய் தீர்த்த பதி. இந்நோய் தீர்த்தக் கிணறு ஒன்றும் இங்கே உள்ளது.

"சித்த வடமும் அதிகைச் சேணுயர் வீரட்டஞ் சூழ்ந்து தத்துங் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்" *(சிற. பெ. அக.).*

திருவதிகை[2] *tiru-v-adigai,* பெ. (n.) அதிகை பார்க்க; see *adigai* (செ.அக.).

[திரு + அதிகை]

திருவந்திகாப்பு *tiru-v-andi-k-kāppu,* பெ. (n.) திருவிழாப் புறப்பாடுகளின் முடிவிற் கண்ணூறு போகச் செய்யும் சடங்கு; ceremonial rites for averting the evil eye at the close of daily worship or festival in a temple. "திருமலை யிலெழுந்தருளி யிருக்கிற வனுக்குத் திருவந்திக்காப்பு ஸமர்ப்பிகைக் காக *(திவ். இயற். 4, 43, வியா).*

[திரு + அந்தி + காப்பு]

திருவம்பலம் *tiru-v-ambalam,* பெ. (n.) சிற்றம்பலம் (சிதம்பரம்); Chidambaram. "திருவும் பெரும் புகழுந்தருந் திருவம்பலந் திருவம்பலம்" *(திருவாலவா. கடவு. 3).*

[திரு + அம்பலம்]

திருவமால் *tiruva-māl,* பெ. (n.) மாயோன்; Tirumāl. "திருவமாற் கிளையாள்" *(சிலப். 12, நாகநாறு).*

[திருமால் → திருவமால்]

திருவமுது *tiru-v-amudu,* பெ. (n.) படைக்கப் பட்ட உணவு (நிவேதன உணவு); boiled rice offered to an idol or a great person. "திருவமுதுக்கு வைத்த காசு பத்தும்" *(S.I.I.i. 98).*

[திரு + அமுது]

திருவயந்தீசுவரமுடையநாயனார்கோயில் *tiruvayantīšuvaram-uḍaiya-nāyaṉār-kōyil,* பெ. (n.) காஞ்சி மாவட்டத்திலே உள்ள வல்லம் என்னுஞ் சிற்றூர் குன்றின் மேற் பாறையில் அமைந்திருக்கும் கோயில்; a temple in Kānjeepuram district.

மகேந்திரவர்மன் கீழ்ச் சிற்றரசனாக இருந்து அரசாண்ட வயந்தப் பிரியன் என்பவன் இக்கோயிலை நிறுவியதால் இப்பெயர் பெற்றது *(சிற. பெ. அக.).*

திருவரங்கத்தமுதனார் *tiru-v-araṅga-t-t-amudaṉār,* பெ. (n.) இராமனுசாசாரியாரின் காலத்தவரும், இராமானுச நூற்றந்தந்தாதியை இயற்றியவருமான பெரியார் (திவ்.); author of Ramanuca-nūṟṟandādi a contemorary of Ramanuja.

[திருவரங்கத்து + அமுதனார்]

திருவரங்கத்துப்பதிகம் *tiruvaraṅgattu-p-paḍigam,* பெ. (n.) மு. ஐயாச்சாமி முதலியார் அவர்களால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature composed by Aiyāccāmi Mudaliyār of 19th century.

[திரு + அரங்கம் + பதிகம்]

திருவரங்கம்[1] *tiru-v-araṅgam,* பெ. (n.) காவிரிக் கரையிலுள்ள மாலிய (வைணவ)த் தலம்; a Thirumal shrine in the banks of Cāuvēry.

[திரு + வரங்கம்]

திருவரங்கம்[2] *tiruvaraṅgam,* பெ. (n.) திருச்சிராப்பள்ளிக்கருகில் திருவரங்கன் கோவில் உள்ள ஊர்; the village near Trichirappalli where a Thirumāl shrine situated.

[திரு + அரங்கம்]

இவ்வூர் இப்பெயர் பெற்றது. பன்னிராழ் வார்களுள் மதுரகவி ஆழ்வார் தவிர மற்ற பதினாரேர் ஆழ்வார்களும் இப்பதியைப் பாடியுள்ளனர். ஆண்டாள் இப்பதியை

"எழிலுடைய அம்மைனையீர் என்னரங்கத்
தின்னமுதர்
குழலகர் வாயழகர் கண்ணழகர் . . ."

எனப் பாடுவார்.

திருவரங்கன் *tiru-v-arangan*, பெ. (n.) சம்பா நெல்வகை *(குருகூர்ப். 58)*; a kind of cambā paddy.

[திரு + அரங்கன்]

திருவரங்கு *tiru-v-arangu*, பெ. (n.) கோயிலிலுள்ள முதன்மை மண்டபம் *(S. I. I. ii, 69)*; the sacred hall in a temple.

[திரு + அரங்கு]

திருவரசிலி *tiruvarašili*, பெ. (n.) புதுச்சேரிக்கு வடகிழக்கில் பத்துக்கல் தொலைவிலுள்ள ஊர்; a village, 10 k.m. away from Puduccēri.

[திரு + அரசிலி]

இன்றைய பெயர் ஒழிந்தியாப்பட்டு. அரச மரத்தை இருப்பிடமாகக்கொண்டு தங்கியதால் இப்பெயர் பெற்றது (சிறபெஅக).

திருவருட்டுறை *tiru-v-aruṭṭuṟai*, பெ. (n.) திருவெண்ணெய் நல்லூரிலுள்ள சிவன் கோயில்; The Siva shrine at Tiru-veṇṇay-nallūr. "திருவருட்டுறையே புக்கார்" *(பெரியபு. திருத்தாட். 65)*.

[திருவருள் + துறை]

திருவருட்பயன் *tiru-v-aruṭpayan*, பெ. (n.) மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள் ஒன்றும் உமாபதியரால் இயற்றப்பட்டது மாகிய சிவனியக் கொண்முடிபு *(சைவ சித்தாந்த)* நூல்; a text book of Saiva Siddhanda philosophy by Umapadiyar, one of 14 mey-kaṇḍa-cāttiram *(செ.அக.)*.

[திருவருள் + பயன்]

திருவருட்பா *tiru-v-aruṭpā*, பெ. (n.) கி. பி. 19ஆம் நூற்றாண்டில் இராமலிங்க அடிகளார் இயற்றிய வழிபாட்டு நூல்; a collection of devotional poems by Irāmalinga Aḍigaḷār, 19th c *(செ.அக.)*.

[திரு + அருள் + பா]

திருவருட்பிரகாசவள்ளலார்நாமாவளி *tiru-varuṭ-pirakāša-vaḷḷalār-nāmāvaḷi*, பெ. (n.) கந்தசாமிப்பிள்ளையால் 19-20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் *(சிற்.அக.)*; a literature composed by Kandasāmi-p-pillai of 19-20th century A.D.

[திருவருட் பிரகாச வள்ளலார் + நாமாவளி]

திருவருள் *tiru-v-aruḷ*, பெ. (n.) கடவுள் அருள்; divine grace. 'திருவருள் மூழ்கி' *(திவ். திருவாய். 8, 9, 6)*.

[திரு + அருள்]

திருவல்லிக்கேணி *tiru-v-alli-k-kēṇi*, பெ. (n.) சென்னையிலுள்ள திருமால் தலம் *(திவ். பெரியதி. 2, 3, 1)*; an ancient Thirumāl shrine in Chennai *(செ.அக.)*.

[திரு + அல்லி + கேணி]

கேணி என்பது குளத்தைக் குறிக்கும். அல்லி மலர்கள் படர்ந்துள்ள குளம் இப்பகுதியில் விளங்குவதால் அல்லிக்கேணி என்று பெயர் பெற்றது. அதனைச் சார்ந்த ஊரும் இப்பெயர் பெற்றது. திருமங்கை யாழ்வார் இப்பகுதியை,

"சிற்றனை பணியால் முடிதுறந்தானைத்
திருவல்லிக்கேணிகண் டேனே"

என்று பாடியுள்ளார் (தமி. ஊர். பெ.).

திருவல்லிக்கேணிவேதவல்லித்தாயார் திருப்பதிகம் *tiruvalli-k-kēṇi-vēdavalli-t-tāyār-tiru-p-padigam*, பெ. (n.) சி. இராமானுசப் பாவலர் அவர்களால் 20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் *(சிற்.அக.)*; a minor literature composed by Ramānuša-p-pāvalar of 20th century.

[திருவல்லிக்கேணி + வேதவல்லித் தாயார் + திருப்பதிகம்]

திருவலகிடு-தல் *tiru-v-alagiḍu-*, 17 செகுன்றாவி. (v.t.) கோயிலைப் பெருக்கித் தூய்மை செய்தல்; to sweep and clean a temple *(செ.அக.)*.

[திரு + அலகிடு-.]

திருவலகு *tiru-v-alagu*, பெ. (n.) கோயில் பெருக்குந் துடைப்பம்; broom used in temples. "அலகைத் திருவலகென்றும்" *(திருக்கோ. 1, உரை)* *(செ.அக.)*.

[திரு + அலகு]

திருவலகுசேர்-த்தல் *tiru-v-alagu-cēr-,* 4 செ.குன்றாவி. (v.t.) திருவலகிடு-தல் பார்க்க; see *tiru-v-alagiḍu-.*

[திரு + அலகு + சேர்-]

திருவலஞ்சுழி *tiru-valañjuḻi,* பெ. (n.) **தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டத்திலுள்ள ஊர்;** a village in Tanjavur district.

[திரு + வலம் + சுழி]

காவிரியாறு இப்பகுதியை வலமாகச் சுழித்துச் செல்வதால் இப்பகுதியில் தோன்றிய ஊர் வலஞ்சுழி என்று பெயர் பெற்றுள்ளது. நாவுக்கரசர் ஞான சம்பந்தரால் பாடல் பெற்ற தலம் *(தமி. ஊர். பெ.).*

திருவலஞ்சுழிமும்மணிக்கோவை *tiru-valañjuḻi-mummaṇi-k-kōvai,* பெ. (n.) **8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நக்கீர தேவநாயனார் எழுதிய சிற்றிலக்கியம்** *(சிற்.அக.);* a literature composed by Nakkīra-dēva-nāyanār of 8th century.

[திருவலஞ்சுழி + மும்மணிக்கோவை]

திருவலம்புரம் *tiruvalampuram,* பெ. (n.) **சோழவள நாட்டிலுள்ள தேவாரம் பெற்ற சிவத்திருப்பதி;** a village in Cōla country.

[திரு + வலம் + புரம்]

திருமால் சிவபிரானை வழிபட்டு வலம்புரிச் சங்கைப் பெற்ற படியால் இப்பெயர் பெற்றது என்பர். நாவுக்கரசருக்குச் சிவபிரான் வலிந் தழைத்துக் காட்சி கொடுத்த இடம் *(சிற.பெ.அக.).*

திருவலர் *tiruvalar,* பெ. (n.) **சேலம் மாவட்டத்து வேடர் பிரிவினர்** (E. T. vii, 332); a class of vēdar in Salem District *(செ.அக.).*

திருவழுந்தூர் *tiru-vaḻundūr,* பெ. (n.) **தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திற்கும் மயிலாடுதுறைக்கும் இடையே உள்ள ஊர் சிறந்த சிவத்தலமாகவும், மாலிய (வைணவ)த் தலமாகவும் உள்ளது;** a village in Tanjavur district.

[தேர் + அழுந்து + ஊர் – தேரழுந்தூர் → திருவழுந்தூர்]

"தவறான தீர்ப்பு வழங்கிய அரசன் உபரிசுவசு என்னும் அரசனின் தேர், வானவீதியில் உருண்டோடும் தன்மையுடையதால், நிலத்தில் அழுந்தட்டும் என முனிவர்கள் சாபம் கொடுக்க இப்பகுதியில் அழுந்தியது. தேரழுந்தூர் என்பதே திருவழுந்தூர் ஆயிற்று" என்பர்.

2. நீர்வளம், நிலவளம் மிகுந்து, அழுத்தமான செல்வம் (திரு) நிலை பெற்றிருப்பதால் திருவழுந்தூர் ஆயிற்று என்பர்.

கம்பன் பிறந்த ஊர்

"சோழநாட்டுத் திருவழுந்தூர் உவச்சன் கம்பன்" என இராமாயணச் சிறப்புப் பாயிரத்தில் வருகின்றது. கல்வெட்டில் இவ்வூர்.

"செயங்கொண்ட சோழ வளநாட்டுத் திருவழுந்தூர் என்று குறிக்கப்பட்டுள்ளது.

திருவழுவூர் *tiru-vaḻvūr,* பெ. (n.) **சிவன் கோயில் கொண்ட அட்ட வீரட்டங்களுள் தஞ்சை மாவட்டத்துச் சிவத்தலம்;** a Siva shrine in Tanjore District, one of aṭṭa-viraṭṭam, q.v. *(செ.அக.).*

திருவள்ளுவப்பயன் *tiru-vaḷḷuva-p-payaṉ,* பெ. (n.) திருக்குறள் *(தொல். பொ. 76, உரை);* Tiruk-kuṟal *(செ.அக.).*

[திருவள்ளுவம் + பயன்]

திருவள்ளுவமாலை *tiru-vaḷḷuva-mālai,* பெ. (n.) **திருக்குறளைப் புகழ்ந்து கழகப் புலவர்கள் பாடியனவாகக் கருதப்படும் செய்யுட்களமைந்த நூல்;** verses in praise of the Tirukkuṟal attributed to Sangam poets *(செ.அக.).*

[திருவள்ளுவம் + மாலை]

திருவள்ளுவர்[1] *tiru-vaḷḷuvar,* பெ. (n.) 1. **திருக்குறளாசிரியர்;** the author of the kuṟal. "திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோடு" *(வள்ளுவமா. 1).* 2. **திருக்குறள்;** the kuṟal. "தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார் மூன்றினுடத" *(இலக். கொத். 1) (செ.அக.).*

திருவள்ளுவர்[2] *tiru-vaḷḷuvar,* பெ. (n.) **ஞானவெட்டியான் என்னும் நூலை இயற்றிய ஆசிரியர்;** the author of Nanavettiyan. (இவர் திருவள்ளுவர் பெயர் தாங்கிய பிற்காலப் புலவர்)

திருவள்ளுவர்கோயில் *tiru-vaḷḷuvar-koil,* பெ. (n.) **திருவள்ளுவர் எழுந்தருளியிருக்கும் கோயில்;** the temple of Tiruvaḷḷuvar.

சென்னை மயிலாப்பூரில் அமைந்திருப்பதும், திருவுண்ணாழிசையில் மூலவராகத் திருவள்ளுவர் திருவுருவம் எழுந்தருளச் செய்யப்பெற்றிருப்பதும், அம்மன் பெயர் வாசுகி என்றிருப்பதும், இருப்பை மரத்தைக் கோயில் மரமாகக் கொண்டதும், திருவள்ளுவரைப் பற்றி வழங்கப்பெற்றுவரும் கதியின் அடிப்படையில் பிற்காலத்தில் எழுப்பப் பெற்றிருக்கலாம் எனக் கருதப்படுவதுமான கோயில்.

திருவள்ளுவர்திருநாள் *tiru-vaḷḷuvar-tirunāḷ*, பெ. (n.) திருவள்ளுவரைச் சிறப்பிக்கும் முறையில் ஆண்டுதோறும் சுறவ (தை) மாதம் இரண்டாவது நாள் (மாட்டுப் பொங்கல் நாள்) திருவள்ளுவர் திருநாளாகத் தமிழ் நாட்டில் அறிவிக்கப்பட்டுக் கொண்டாடப் படுகிறது; the festival of Tiruvaḷḷuvar.

[திருவள்ளுவர் + திருநாள்]

திருவள்ளுவராண்டு *tiru-vaḷḷuvarāṇḍu*, பெ. (n.) திருவள்ளுவர் பெயரால் வழங்கப் பெற்றுவரும் ஆண்டு திருவள்ளுவர் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு என்பதும் அடிப் படையில், கிறித்துப் பிறப்பு ஆண்டொடு முப்பத்தோராண்டு கூட்டின் திருவள்ளுவர் ஆண்டாகும்; tiruvalluvar year.

விக்கிரம சகம், சாலிவாகன சகம் என வடபுல மன்னர்கள் பெயரால் வழங்கப் பெற்று, பிரபவ முலான அறுபது ஆண்டுச் சுழற்சி முறை கொண்டு ஆண்டுமானம் தமிழாண்டு என்று வழங்கப்பெற்றாலும், அதன் பொருந்தாமையும் பெரும்பயனின்மை யும் கருதித் திருவள்ளுவர் பெயரால் தொடராண்டுமானம் வகுக்கப்பட்டுள்ளது.

தவத்திரு மறைமலையடிகளார் தலைமை யில் ஒருங்கு குழுமிய தமிழறிஞர் பெருமக்க ளால் முடிவு செய்யப்பட்ட திருவள்ளுவர் தொடராண்டே தமிழாண்டாகத் தமிழகம் கடைப்பிடித்து வருகிறது.

திருவள்ளுவர் ஆண்டுமுறையில் ஆண்டுத் தொடக்கம் சுறவ (தை) மாதம் ஆகும்; இறுதிமாதம் சிலை (மார்கழி)

கிறித்துப் பிறப்புக்கு முன் – பின் எனென்பன கி.மு – கி.பி. என்று வழங்கப்பெறுவது போலத் திருவள்ளுவருக்கு முன் பின் என்பனவும் தி.மு. – தி.பி. என வழங்கப் பெறுகிறது.

[திருவள்ளுவர் + ஆண்டு]

திருவள்ளூர் *tiru-vaḷḷūr*, பெ. (n.) திருவள்ளூர் மாவட்டத்தி தலைநகர்; head quarter of Thiruvaḷḷūr.

கிழஅந்தணர் வடிவம் கொண்ட பெருமாள் சாலிகோத்திர முனிவரிடம் அமுது செய்தருளிய பின் படுத்துறங்க எவ்வுள்? எனக் கேட்டார். இப்பகுதியில் இந்நிகழ்ச்சி நடந்ததால் இவ்வூர் எவ்வுள்ளூர் ஆகி திருவள்ளூர் ஆயிற்று என்பர். இது ஒரு மாலிய திருப்பதி. திருமங்கையாழ்வார், திருமழிசை ஆழ்வார் ஆகியோரால் பாடல் பெற்ற தலம் *(தமி. ஊர். பெ.)*.

[திரு + எவ்வளூர்]

திருவற்கள்ளி *tiruvaṟkaḷḷi*, பெ. (n.) முரித்தற் கள்ளி; triangular spurge *(சா.அக.)*.

[திருவல் + கள்ளி]

திருவறம் *tiru-v-aṟam*, பெ. (n.) சமய வறம்; sacred duties prescribed by a religion 'திருவறமெய்யுறுதல்" *(சித்தம்/மணி. 10,85)*.

[திரு + அறம்]

திருவறையணிநல்லூர் *tiru-vaṟaiyaṇi-nallūr*, பெ. (n.) திருக்கோவிலூர்ப் புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே உள்ள ஊர்; a village near Tiru-k-kōvilūr.

[திருஅறை + அணி + நல்லூர்]

அறை – சிறுபாறை. சிறுசிறு கற்பாறைகள் கொண்ட மலைப்பகுதியாதலால் அறையணி நல்லூர் எனப்பட்டது; திரு என்னும் அடைமொழி பெற்ற சிவத்தலம்.

திருவன்[1] *tiruvaṉ*, பெ. (n.) *1.* வளத்தான்; wealthy person, blessed person. *2.* திருமால்; Tirumāl (Viṣṇu). சிங்கமாய்க் கீண்ட திருவன் *(திவ். இயற். 2, 84)* (செ.அக.).

[திரு + அன்]

திருவன்[2] *tiruvaṉ*, பெ. (n.) *1.* பகடிசெய்வோன் (விகடக்காரன்); buffon, jester of a king. *2.* புரட்டன்; rogue. *3.* ஆறு விரல நீளம் வளர்வதும் சாம்பல் நிறமுடையதுமான மீன்வகை; grey mullett, attaining 6 in, in length (செ.அக.).

திருவன்கோலா *tiruvaṉ-kōlā*, பெ. (n.) கொழுத்த மூரல்; half beak (செ.அக.).

திருவனந்தல் *tiru-v-aṉandal*, பெ. (n.) கடவுளின் திருப்பள்ளியெழுச்சிப் பூசனை; morning ceremony when the god is awakened from sleep, aubade (செ.அக.).

[திரு + அனந்தல்]

திருவனந்தற்கட்டளை *tiru-v-aṉandaṟ-kaṭṭaḷai*, பெ. (n.) கோயிலிற் காலை வழி பாட்டிற்கு விடப்பட்ட இறையிலி; endowment for the morning oblations in a temple (செ.அக.).

[திருவனந்தல் + கட்டளை]

திருவனந்தாழ்வான் *tiru-v-aṉandāḻvāṉ*, பெ. (n.) தொன்மக் கதையின்படி ஆயிரம் தலைகளைக் கொண்டதும் நிலபுலத்தைத் தாங்குவதும் திருமால் படுத்திருக்கும் படத்தினைக் கொண்டதுமான பாம்பு; a mythological thousand headed serphent who supports the earth on his hoods and on whom Tirumāl reclines.

[திரு + அனந்தன் + ஆழ்வான்]

திருவனுக்கவாசல் *tiru-vaṉukka-vāšal*, பெ. (n.) கோயில் கருவறை வாயில் (பொ.வழ); door of sanctum sanctorum.

[திரு + அனுக்கம் + வாசல்]

திருவாக்கினிப்பூடு *tiru-vākkiṉi-p-pūḍu*, பெ. (n.) கொட்டைக் கரந்தை; Indian globe-thistle.

திருவாக்கு *tiru-vākku*, பெ. (n.) தெய்வம் பெரியோர்களின் வாய்மொழி; sacred word, utterance or order, as of a deity. guru, king. திருவாக்குக்கு எதிர்வாக்குண்டோ?

[திரு + வாக்கு]

திருவாங்கோட்டுமின்னல் *tiru-vāṅgōṭṭu-miṉṉal*, பெ. (n.) பழைய காசு (நாணய) வகை (பணவிடு. 137); an ancient coin, as from Travancore.

[திருவாங்கோடு + மின்னல்]

திருவாசகம் *tiru-vāšagam*, பெ. (n.) மாணிக்கவாசகர் (வாதவூரடிகள்) அருளிய வழிபாட்டு நூல்; the celebrated poem in praise of Sivaṉ by Māṇikka-vāšagar. வாதவூ ரெங்கோன் றிருவாசக மென்னும்தேன் (திருவாச. நூற்சிறப்பு) (செ.அக.).

[திரு + வாசகம்]

சிவனியத் திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாந் திருமுறையாக விளங்குவது இந்நூல். திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக் கும் உருகார்" என்னும் பழமொழி இதன் சிறப்பைக் காட்டும்.

திருவாசல் *tiru-vāšal*, பெ. (n.) *1.* கோயிற் கருவறை (சந்நிதி) வாயில்; gate or door way of a temple directly in front of the chief idol. திருவாசல் காக்கும் முதலிகளும். *2.* திருமால் கோயிலில் வடபுறமுள்ள துறக்க (சொர்க்க) வாசல்; gate of heaven, usually an the north side of a Viṣṇu temple. *3.* வழிச்செல்வோர் தங்குதற்கு அமைந்த இடம்; rest house built from religion motives. *4.* ஊர் ஆள்வி என (நிருவாக) அலுவலரின் அலுவலகம்; village munsiff's office (செ.அக.).

[திரு + வாசல்]

திருவாசி *tiru-vāši*, பெ. (n.) திருவாசிகை பார்க்க; see *tiru-vāšigai.*

திருவாசிகை *tiru-vāšigai*, பெ. (n.) *1.* தெய்வத் திருமேனிக்கு மேல் அமைக்கும் அணிகல வளையம் முதலியன; ornamental arch over the head of an idol, ornamental orch under which anything sacred is carried. "பகர்திருவாசிகை பதிப்பில் பீடம்" (கோயிற்பு. திருவிழா, 28). *2.* ஒரு வகை மாலை; a kind of garland.

[திரு + வாசிகை]

திருவாசிரியம் *tiru-vāširiyam*, பெ. (n.) நம்மாழ்வார் அருளியதொரு நூல் (திவ்.); a poem by Nammāḻvār.

[திரு + ஆசிரியர்]

திருவாட்சி *tiru-vāṭci*, பெ. (n.) திருவாசி பார்க்க; see *tiru-vāši.*

திருவாட்டாறு *tiru-vāṭṭāṟu*, பெ. (n.) கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம்

வட்டத்திலுள்ள ஊர்; the village in Kanniyākumari district.

[திரு + வட்டம் + ஆறு - திருவட்டாறு → திருவாட்டாறு]

1. இவ்வூரில் ஆறு வளைந்து வட்டமாக ஓடுவதால் ஆறு வாட்டாறு என்று பெயர் பெற்றது.

2. முப்புறங்களிலும் ஆறு சூழ இப்பகுதி அமைந்துள்ளதால் இப்பெயர் பெற்றது. புறநானூற்றில் 396ம் பாடலில் வாட்டாற் றெழினியாதன் என்பான் பாடப்பட்டுள்ளான்.

"வானேற வழிதந்த வாட்டாற்றான் பணிவகையே"

என நம்மாழ்வார் இப்பதியைப் பாடியுள்ளார் *(தமி. ஊர். பெ.)*.

திருவாட்டி *tiru-v-āṭṭi*, பெ. (n.) 1. செல்வநங்கை; lady of wealth and position. கயிலைக்கட் பயிலுந் திருவாட்டியை *(திருக்கோ. 294, உரை)*. 2. மணமானவர் என்பதை உணர்த்தும் மகளிர்க்கான அடைமொழி; (செ. அக.).

[திரு + ஆட்டி. ஆள் + தி - ஆட்டி]

திருவாடானை *tiru-vāḍāṉai*, பெ. (n.) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Ramanāda puram district.

[திரு + ஆடு + யானை]

வருணனின் மகனுக்கு துருவாச முனிவர் ஆட்டுத்தலையும், யானை உடலும் ஆகுக் என சபித்தார். அவ்வுருவுடன் இத்தலத்தில் அவன் வழிபட்டுப் பேறு பெற்றதால் இப்பெயர் பெற்றது என்பர். ஞான சம்பந்தரால் பாடல் பெற்ற தலம் *(தமி. ஊர். பெ.)*.

திருவாடானைஆதிரத்தினேசுவரர்பதகம் *tiru-vāḍāṉai-ātirattinēšuvarar-padagam*, பெ. (n.) இராம. அருணாசலம் செட்டியார் அவர்களால் 20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்அக.); the minor literature written by Aruṇāšalam Cheṭṭiyār in 20th century.

[திருவாடானை + ஆதிரத்தினேசுவரர் + பதிகம்]

திருவாடுதண்டு *tiru-v-āḍu-tanḍu*, பெ. (n.) 1. கோயில் ஊர்திக் காவுதண்டு; poles of temple vehicles. 2. பல்லக்கு வகை; a kind of palanquin. "சேமத் திருவாச தண்டினுமேற் செல்ல" *(பூவண. உலா. 64. 89)*.

[திருவாடு + தண்டு]

திருவாண்டெழுத்திடு-தல் *tiru-v-āṇḍeḻut-t-tiḍu-*, 20 செ.குவி. (v.i.) அரசன் முடிசூடிய காலந்தொடங்கி ஆண்டு (வருட)க்கணக் கிட்டெழுதுதல்; to date an event from the time of a king's accession (செ.அக.).

[திரு + ஆண்டு + எழுத்து + இடு-.]

திருவாணல் *tiru-v-āṇal*, பெ. (n.) உடம்பின் கொழுப்பு; body fat (சா.அக.).

திருவாணை *tiru-v-āṇai*, பெ. (n.) அரசாணை; royal order. "திருவாணைக்குந் திருவோலைக்கும் உரியவண்ணம்" *(S. I. I. iii, 102)*.

[திரு + ஆணை]

திருவாத்தி *tiru-v-ātti*, பெ. (n.) ஆத்தி; holy mountain ebony. "கடிசேர் திருவாத்தியி னீழல்" *(பெரியபு. சிறுத். 46)*.

[திரு + ஆத்தி]

திருவாதவூர் *tiru-vāda-vūr*, பெ. (n.) மதுரை மாவட்டத்திலுள்ளதும் மாணிக்கவாசகர் பிறந்தவிடமுமான இடம்; the birth place of Maṇikka-vāšagar in Madurai District. "திருவாதவூர் மகிழ் செழுமறை முனிவர்" *(திருக்கோ. 1, உரை)*.

1. அக்காலத்தில் இப்பகுதியில் அடிக்கடி வாதங்கள் புரிந்ததால் இப்பெயர் பெற்றது என்பர்.

2. வாயு வழிபட்டுப் பேறு பெற்ற தலம் என்பதால் வாதவூராயிற்று என்றும் தொன்மம் கூறுகின்றது (தமி. ஊர். பெ.).

திருவாதவூரர்புராணம் *tiru-vādavūrar-purāṇam*, பெ. (n.) மாணிக்கவாசகர் வரலாறு பற்றிக் கடவுண்மா முனிவர் இயற்றிய தொன்ம நூல்; a poem on the life and history of Māṇikkavāšagar by Kadavuṇmā munivar. (செ.அக.)

[திருவாதவூரர் + புராணம்]

திருவாதி *tiruvādi,* பெ. (n.) *1. பழம் புளி;* old tamarind. *2. ஆண்டு சென்ற புளி;* tamarind preserved for over a year. *3. ஆதனை;* purging nut *(சா.அக.).*

திருவாதிரை *tiruvādirai,* பெ. (n.) *1. ஆறாவது விண்மீன் (பிங்.);* the 6th viṇmīṉ, part of orion. *2. யாழ் விண்மீன் நாளில் அம்பலவாணரின் அருட்காட்சி;* a festival in the month of Markali *3. திருமணத்திற்கு முன்பு யாழ் விண்மீன் தோற்ற நாளன்று கன்னிப் பெண்ணை நீராட்டி ஒப்பனை செய்யுங் சடங்கு;* a special ceremony observed on the day of āruttira - tarišaṉam, before a girl's marriage when she is given a bath and decorated *(செ.அக.).*

[திரு + ஆதிரை]

திருவாதிரைக்களி *tiru-v-ādirai-k-kaḷi,* பெ. (n.) *திருவாதிரைத் திருநாளில் அரிசி வெல்லம் தேங்காய் முதலியவற்றாற் செய்யப்படும் ஒருவகை இனிய சிற்றுண்டி;* a savoury dish of rice, jaggery and other ingredients specially prepared for the Tiruvādirai festival *(செ.அக.).*

[திருவாதிரை + களி]

திருவாதிரைநாச்சியார் *tiru-vādirai-nācciyār,* பெ. (n.) *மலைமகள் (பார்வதிதேவி);* Pārvadi *(செ.அக.).*

திருவாதிரைமூலி *tiru-vādirai-mūli,* பெ. (n.) *சிற்றாமணக்கு;* small seeded casteor oil plant *(சா.அக.).*

திருவாப்பனூர் *tiruvā-p-paṉūr,* பெ. (n.) *மதுரை மாவட்டத்திலுள்ள ஊர்;* the village in Madurai district.

> சோழாந்தகன் என்னும் பாண்டிய மன்னனுக்கு, இறைவன் ஆப்பினிடத்துத் தோன்றிக் காட்சி அளித்ததால் இப்பகுதி கோயில் ஆப்புடையார் கோயில் ஆயிற்று. கோயிலுள்ள ஊர் சம்பந்தரால் பாடல்பெற்ற தலமாதலால் திருவாப்பனூர் ஆயிற்று *(தமி. ஊர். பெ.)*

திருவாம்பல் *tiru-v-āmbal,* பெ. (n.) *கீழ்க்காய் நெல்லி;* Indian phyllanthus *(சா.அக.).*

திருவாமணை *tiruvā-maṇai,* பெ. (n.) *தேங்காய் துருவுங் கருவி;* coconut. scraper *(செ.அக.).*

[துருவு → திருவு + மணை → திருவா மணை]



திருவாமாத்தூர்அழகியநாதர்பஞ்சரத்தினம் *tiruvāmāttūr-aḻagiyanadar-pañjarattiṉam,* பெ. (n.) *மனோன்மணி அம்மையாரால் 19-20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.);* the literature written by Maṉōṉmaṇi-y-ammaiyār in 19-20th century.

[திருவாமாத்தூர் + அழகிய நாதர் + பஞ்ச ரத்தினம்]

திருவாமாத்தூர்த்தலபுராணம் *tiruvāmāttūr-t-tala-purāṇam,* பெ. (n.) *இச்சிற்றிலக்கியம் தண்டபாணி அடிகளால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது (சிற்.அக.);* the literature written by Dhaṇḍapāṇi šwamigaḷ in 19th century.

[திருவாமாத்தூர் + தலபுராணம்]

திருவாய்க்கேள்வி *tiruvāy-k-kēḷvi,* பெ. (n.) *1. அரசாணை;* royal order. "அருமொழி விழுப்பரயர் எழுத்தினாற் புகுந்த திருவாய்க் கேள்விப்படி" *(S.I.I. iii, 135).* *2. அரச உசாவல்;* investigation by a king. "உலகம் வாழும் பரிசு திருவாய்க்கோள்வி செய்த கதை" *(திருவாரூர். 181).*

[திருவாய் + கேள்வி]

திருவாய்ப்பாடி *tiru-vāy-p-pāḍi,* பெ. (n.) *கண்ணன் இளமையில் வாழ்ந்து வந்த ஆயர் குலம்;* the village where krishna spent his youth. "திருவாய்ப் பாடியிற் பெண்பிள்ளைகள் ... அனுப விக்கப் பெற்றவர்கள்" *(திவ். திருவாய். வ்யா. அவ.).*

[திரு + ஆய்ப்பாடி]

திருவாய்மலர்-தல் *tiru-vāy-malar-*, 2 செகுன்றாவி. (v.t.) மதிப்புமிக்கவர், பெரியோர் பேசுதல்; to utter, declare, speak, used in reference to great person (செ.அக.).

[திருவாய் + மலர்-.]

திருவாய்மொழி *tiru-vāy-moḻi*, பெ. (n.) நம்மாழ்வார் அருளிச் செய்த தொகை நூல்; திருநாலாயிரப் பனுவற் பகுதி; a poem of 1000 stanza by Nammalvar (செ.அக.).

[திரு + வாய்மொழி]

திருவாய்மொழிநூற்றந்தாதி *tiru-vāy-moḻi-nūṟṟandādi*, பெ. (n.) திருவாய்மொழியின் ஒவ்வொரு பதிகக் கருத்தையும் ஒவ்வொரு வெண்பாவிற்குச் சுருக்க அந்தாதியாக மணவாள முனிகள் இயற்றிய சிற்றிலக்கிய நூல்; a compendium of Tiru-vāymoḻi which gives the purport of each decade in a single veṇba by Maṇavāḷa-muṉigaḷ (செ.அக.).

[திருவாய்மொழி + நூற்றந்தாதி]

திருவார்த்தைவாட்டம் *tiru-vārttai-vāṭṭam*, பெ. (n.) நெருஞ்சில்; caltropes (சா.அக.).

திருவாரூர் *tiru-vārūr*, பெ. (n.) மாவட்டத் தலைமையகம்; district head quarters of the Thiruvarur district.

[திரு + ஆர் + ஊர்]

ஐம்பூதத் தலங்களுள் மண்ணுக்குரிய திருக்கோயில்

1. ஆர் என்பது ஆத்திமரத்தைக் குறிக்கும். இப்பகுதியில் இம்மரங்கள் நிறைத்திருந்ததால் ஆரூர் ஆகி, பாடல் பெற்ற தலமாதலால் திருவாரூர் ஆயிற்று.

2. ஆர் என்பது தங்குதல் என்ற பொருள் பட (திரு) செல்வம் தங்கும் ஊர் என்பதால் திருவாரூர் ஆயிற்று.

3. திருமகள் இத்தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்றதால் திருவாரூர் ஆயிற்று.

கல்வெட்டில் இவ்வூர்ப்பெயர் திருவாரூர் என்றே குறிக்கப்படுகின்றது.

திருவாரூர்த் தேர் புகழ்பெற்று விளங்குவது. "திருவாரூர்த் தேரழகு திருவிடைமருதூர் தெருவழகு" என்னும் பழமொழி இவ்வூர்த் தேரழகைக் காட்டும். நால்வராலும் பாடப் பெற்ற திருத்தலம்.

திருவாரூர்த்தியாகேசர்பதிகம் *tiru-vārūr-t-tiyākēšar-padigam*, பெ. (n.) இராம. அருணாசலம் அவர்களால் 20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); the literature written by Arunachalam in 20th century.

திருவாரூர்த்தியாகராசதேசிகர் *tiru-v-ārūr-t-tiyagarāša-dēšigar*, பெ. (n.) அன்பர் போற்றிக்கவி வெண்பா என்னும் நூலைச் செய்தவர்; author of Aṉbar-pōṟṟi-k-kavi-venba.

திருவாரூர்த்தியாகராசர்லீலை *tiru-vārūr-tiyāgarāšar-līlai*, பெ. (n.) 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதிய சிற்றிலக்கியம் (சிற்.அக.); a book wirtten by Mīṉāṭci-šundaram-pillai in 19th century.

திருவாரூர்நான்மணிமாலை *tiru-v-ārūr-nāṉmaṇimālai*, பெ. (n.) திருவாரூர்ச் சிவபெருமான் மீது குமரகுருபரர் இயற்றிய சிற்றிலக்கிய நூல்; a poem in praise of Siva at Tiruvārūr, by Kumara-kuruparar (செ.அக.).

திருவாரூர்ப்பள்ளு *tiru-v-ārūr-p-paḷḷu*, பெ. (n.) சிவபெருமான்மேல் ஞானப்பிரகாசர் பாடிய சிற்றிலக்கியம் (செ.அக.); a pallu-p-pirapantam on Siva at Tiruvārur by Ñāṉa-p-pirakāšar.

[திருவாரூர் + பள்ளு]

திருவாரூர்ப்பன்மணிமாலை *tiru-v-ārūr-p-paṇmaṇi-mālai*, பெ. (n.) திருவாரூர்ச் சிவபெருமான் மீது வைத்தியநாதர் இயற்றிய சிற்றிலக்கியம்; a poem praise of Šiva at Tiruvārūr by Vaittiyanāda dēšigar.

திருவாரூர்ப்பிறந்தார் *tiru-v-ārūr-p-piṟandār*, பெ. (n.) தொகையடியாருள் ஒரு சாரராகிய திருவாரூரிற் பிறந்தவர்கள்(தேவா. 733, 10); those who are born at Tiruvārūr one class of tokai-y-aḍiyār.

திருவாரூர்மும்மணிக்கோவை *tiru-v-ārūr-mummaṇi-k-kōvai*, பெ. (n.) பதினோராந்

திருமுறையுளடங்கியதும் சேரமான் பெருமாள் நாயனாரருளிச் செய்ததுமான வழி பாட்டு நூல்; a poem in padinōran - tirumurai by Cēramān perumāḷ-nāyanār (செ.அக.).

திருவாலங்காடு *tiruvālaṅgāḍu*, பெ. (n.) காரைக்காலம்மையார் முத்தி பெற்றதும் மணியம்பலம் விளங்குவதுமான ஊர்; the village in Chengalpaṭṭu district.

[திரு + ஆலங்காடு]

அக்காலத்தில் இங்கு ஆலமரங்கள் நிறைந்திருந்திமையால் ஆலங்காடு என்றும் பெயர் பெற்றது. சுந்தரரும் நாவுக்கரசரும் பாடிய தலமாகையால் திரு அடைபெற்று திருவாலங்காடாயிற்று. காரைக்காலம்மை யார் தலையால் நடந்து சென்று திருக்கூத்து கண்டு இன்புற்ற இடமும் இதுவே.

"அட்டமே பாயநின் றாடும் எங்கள்
அப்பன் இடந்தரு ஆலங்காடே"

என்று காரைக்காலம்மையார் பாடியுள்ளார்.

"வடகரை மணவிற் கோட்டத்து மேல் மாலை பழையனூர் நாட்டுத் திருவாலங்காடு" என்பது கல்வெட்டுப் பெயர். (தமி. ஊர். பெ.).

திருவாலத்தட்டி *tiru-v-āla-t-taṭṭi*, பெ. (n.) கோயில் விளக்குத் தட்டு வகை (புதுகல். 300); a kind of plate used for waving lights in temple service.

[திரு + ஆலம் + தட்டி]

திருவாலமூலி *tiru-v-āla-mūli*, பெ. (n.) செவ்வாமணக்கு; a red variety of castor oil plant (சா.அக.).

திருவாலவாய் *tiru-v-āla-vāy*, பெ. (n.) (பாம்பினாற் சூழப்பெற்ற) மதுரை; Madura, as encircled by a serpent. "திருவாலவாயர னிற்கவே" (தேவா. 858, 1).

[திரு + ஆலவாய்]

திருவாலவாய்ச்சொக்கலிங்கப்பதிகம் *tiru-v-ālavāy-c-cokkaliṅga-p-paḍigam*, பெ. (n.) காரைக்கால் அம்மையாரால் 5ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature composed by Kārai-k-kāl-ammaiyār.

[திருவாலவாய் + சொக்கலிங்கம் + பதிகம்]

திருவாலவாயுடையார்திருவிளையாடற் புராணம் *tiru-v-ālavāyauḍaiyār-tiru-viḷai-y-āḍaṟ-purāṇam*, பெ. (n.) பெரும்பற்றுப் புலியூர் நம்பியால் இயற்றப்பட்டதும் மதுரைச் சிவபெருமானின் 64 விளையாடல்களைக் கூறுவதுமான தொன்ம நூல்; a purāṇa on the 64 sports of Šiva at Madurai by Perumpaṟṟup-puliyūr-nambi (செ.அக.)

திருவாலி *tiru-v-āli*, பெ. (n.) புரட்டன் (வின்.); rogue, knave (செ.அக.).

திருவாலிப்பூடு *tiru-vāli-p-pūḍu*, பெ. (n.) 1. கணைப்பூடு; an unknown plant. 2. திருவால மூலி பார்க்க; see *tiru-v-āla-mūli* (சா.அக.).

திருவாலியமுதனார் *tiru-v-ali-y-amudaṉār*, பெ. (n.) திருவிசைப்பாவில் அடங்கிய சிற்றிலக்கியமொன்றின் ஆசிரியர் (திருவிசைப் பா.); the author of a portion of Tiru-v-išai-p-pā.

திருவாவடுதுறைஇராமலிங்கத்தம்பிரான் *tiru-v-avaḍuturai-irāmaliṅga-t-tambirāṉ*, பெ. (n.) வாட்போக்குப் புராணத்தில் ஒரு பகுதியைச் செய்யுளாகப் பாடியவர்; composer of a portion of vāṭ-pōkku-p-purāṇam.

[திருவாவடுதுறை + இராமலிங்கத் தம்பிரான்]

திருவாவடுதுறைச்சுப்பிரமணியத்தம்பிரான் *tiru-v-āvaḍuturai-c-cubbiramaṇiya-t-tambirāṉ*, பெ. (n.) தொண்டை நாட்டு ஆயலூர் முருகன் மீது பிள்ளைத்தமிழ் பாடியவர்; composer of the Piḷḷai-t-tamiḻ literature on Tonḍai-nāṭṭu-āyalūr-murugaṉ.

திருவாவடுதுறைநமச்சிவாயத்தம்பிரான் *tiru-v-āvaḍuturai-namaccivāya-t-tambirāṉ*, பெ. (n.) திருக்களிற்றுப் பாடியாருக்கும், இருபாவிருபஃதிற்கும் வினா வெண்பாவிற்கும், கொடிக்கவிக்கும் உரை செய்தவர். (பிற்கா.புல.); commentator of tirukaḷiṟṟu-p-pāḍiyār, irubāvirubakdu and viṉā-veṇbā.

திருவாவினன்குடி *tiru-v-āviṉaṉ-kuḍi*, பெ. (n.) மதுரை மாவட்டத்தைச் சார்ந்ததும் முருகக் கடவுள் படைவீடுகளுள் ஒன்று எனப்படுவது மாகிய பழனியென்னும் தலம் (திருமுரு.);

Paḻaṉi a skanda shrine in Madurai district, one of six paḍai vīḍu (செஅக.).

[திரு + ஆவி + நன்குடி]

திருவாழி *tiru-v-āḻi*, பெ. (n.) *1.* **திருமாலின் படைக்கலம்;** discus of Viṣṇu. "திருவாழிசங்கு திருவாழி வாழி" *(அஷ்டத். திருவிரங்கத்து.1).* *2.* **கணையாழி;** signet-ring. "திருமுகத்தையும் திருவாழியையும் தந்தருளென்று கூற" *(சீவக. 1032, 2உரை.).*

[திரு + ஆழி]

திருவாழிக்கல் *tiru-v-āḻi-k-kal*, பெ. (n.) **சக்கர முத்திரையிட்ப்பட்ட கல்;** boundary stone with the seal of discus. "கொற்றமங்கலத்து எல்லை ஆசறுதியினிட்ட திருவாழிக்கல்லுக்குக் கிழக்கும்" *(S.I.I,i, 89).*

[திருவாழி + கல்]

திருவாழித்தண்டு *tiru-v-āḻi-t-taṇḍu*, பெ. (n.) **கோயில் ஊர்திகளின் காவுதண்டு** (யாழ்.அக.); poles attached to the temple vehicles for carrying them.

[திருவாழி + தண்டு]

திருவாளர் *tiru-v-āḷar*, பெ. (n.) **ஒருவர் பெயர்க்கு முன்னால் வழங்கப் பெறும் மதிப்புரவுச் சொல்;** title prefixed to a man's name (செஅக.).

[திரு + ஆளர்]

திருவாளன் *tiru-v-āḷaṉ*, பெ. (n.) **திருவன்** பார்க்க; see *tiruvaṉ*. *2.* **திருமால்;** Tirumāl (Viṣṇu). "ஒலிதிரைநீர்ப் பௌவங் கொண்ட திருவாளன்" *(திவ். பெரியதி. 5,5).*

திருவாறாட்டு *tiru-v-āṟāṭṭu*, பெ. (n.) **ஆறாட்டு;** bathing of in idol. "வியனமடந் திருவாறாட்டு" *(குற்றா. தல. வட வருவி. 37).*

[திரு + ஆறு + ஆட்டு. ஆடு → ஆட்டு]

திருவாறாடல் *tiru-v-āṟāḍal*, பெ. (n.) திருவாறாட்டுப் பார்க்க; *see tiru-v-āṟāṭṭu.* "திறுவாறாட லாதியந் தீர்த்தவேலை" *(திருக்காதை பு. 7, 34)* (செஅக.).

[திருவாறு + ஆடல். ஆடு → ஆடல்]

திருவான்மியூர் *tiruvāṉmiyūr*, பெ. (n.) **காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஊர்;** a village in Kāñjee puram district.

[திரு + வால்மீகி + ஊர்]

வான்மீகி முனிவர் தென்றிசை வந்து வன்னிமரத்தடியில் சிவபூசை செய்து தவமியற்றியதால் இப்பகுதியிலுள்ள இவ்வூர் வான்மீகியூர் ஆயிற்று என்பர். ஞான சம்பந்தரும், நாவுக்கரசரும் பாடிய தலம். *(தமி. ஊர். பெ.)*

திருவானிலை *tiru-v-āṉilai*, பெ. (n.) **கருவூர் சிவன்கோயில்;** Šivaṉ shrine at Karūr. "இந்நாட்டுக் கருவூர்த் திருவானிலை மகாதேவர்க்கு" *(S.I.I. iii, 35).*

திருவானைக்கா *tiru-v-āṉaikkā*, பெ. (n.) **திருச்சிக்கு அண்மையிலுள்ள புகழ்பெற்ற சிவன்கோயில்;** a famous Šivaṉ shrine near Trichy. ஐம்பூதத்தலங்களுள் நீருக்குரிய ஊர் (செஅக.).

திருவானைக்காப்பதிகம் *tiruvāṉai-k-kāp padigam*, பெ. (n.) **தண்டபாணி அடிகளால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம்** (சிற்அக.); a literature written by Dhaṇḍapāṇi-Aḍigal in 19th century.

[திருவானைக்கா + பதிகம்]

திருவானைக்காயமகஅந்தாதி *tiru-v-āṉaikka yamaga-andādi*, பெ. (n.) **தண்டபாணி அடிகளால் 19ஆம் நூற். எழுதப்பட்டது;** a literature written by Dhaṇḍapāṇi-Aḍigal in 19th century.

திருவானைக்காவல் *tiru-v-āṉai-k-kāval*, பெ. (n.) **திருவானைக்கா** பார்க்க; see *tiru-v-āṉai-k-kā* (செஅக.).

திருவானைக்காவுலா *tiru-v-āṉai-k-kā-v-ulā*, பெ. (n.) **காளமேகப் புலவர் இயற்றிய உலா;** a poem written by Kaḷamēgam (செஅக.).

[திருவானைக்கா + உலா]

திருவி *tiru-vi*, பெ. (n.) **செல்வம் உடையவள்;** wealthy lady. "பெருந்திருவி யார் மகள்கொல்" *(சீவக. 1968).*

[திரு + இ]

திருவிசை *tiru-v-išai,* பெ. (n.) திருவிசைப்பா பார்க்க; see *tiru-v-išai-p-pā.* "சங்கத் தமிழமுதம் மண்டுந் திருவிசையு மந்திரமும்" *(சொக்க.உலா, 36).*

[திரு + இசை]

திருவிசைப்பா *tiru-v-išai-p-pā,* பெ. (n.) சிவனடியார் ஒன்பத்தின்மரால் அருளிச் செய்யப்பட்டனவும் ஒன்தாம் திருமுறையிற் சேர்ந்ததுமான சிவனிய வழிபாட்டு நூல்; a collection of poems by nine saiva saints.

[திரு + இசைப்பா]

திருவிட்டிக்கண்ணி *tiru-v-iṭṭi-k-kaṇṇi,* பெ. (n.) வளி (வாயு) விளங்கம்; small elliptic-cuspidate-leaved wind-berry *(L.).*

திருவிடு *tiru-v-iḍu,* பெ. (n.) அறக்கொடை ஆவணம்; deed of endowment. "திருவிடு இட்டுக்கொடுத் தமைக்கு" *(S.I.I. VII, 46.).*

[திரு + இடு]

திருவிடைக்கழிமுருகர்பதிகம் *tiru-v-iḍai-k-kaḻi-murugar-padigam,* பெ. (n.) சேந்தனார் என்பவரால் 10-11ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature composed by Sēndaṉār of 10-11th century.

திருவிடைப்பற்று *tiru-viḍai-p-paṟṟu,* பெ. (n.) கோயில் நிலம்; temple land. "திருவிடைப்பற்று குவளை கழலச் சேரியான திருவெண்ணாவல் நல்லூர்" *(திவ்.பெரியதி. 1,1,2, வ்யா, ப. 24).*

[திரு + இடை + பற்று]

திருவிடைமருதூர்நொண்டிநாடகம் *tiru-v-iḍai-marutūr-noṇḍi-nāḍagam,* பெ. (n.) அனந்த பாரதி என்னும் புலவரால் 18ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம்; a literature composed by Ananda Barathi of 19th century.

[திருவிடை மருதூர் + நொண்டி + நாடகம்]

திருவிடைமருதூர்பள்ளு *tiru-viḍai-marudūr paḷḷu,* பெ. (n.) வெளிமங்கை பாகக் கவிராயரால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்ட சிற்றிலக்கியம்; a literature composed by Veṟimaṅgai-bāga-k-kavirāyar of 19th century.

[திருவிடைமருதூர் + பள்ளு]

திருவிடையாட்டம் *tiru-v-iḍaiāṭṭam,* பெ. (n.)
1. கோயில் இறையிலி (தேவதான மானியம்); temple endowment. "திருவிடை யாட்டமாக இறையிழிச்சிக் கொடுத்தோம்" *(S.I.I. i, 69).*
2. திருவிளை (Inre.); temple business.

திருவிண்ணகர் *tiru-viṇṇagar,* பெ. (n.) தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டத்திலுள்ள ஊர்; a village in Tanjavur district.

[திரு + விண் + நகர்]

விண்டு (விஷ்ணு) நகர் விண்ணகர் ஆயிற்று. மாளிகையைக் குறிக்கும் நகர் என்னுஞ் சொல் ஈங்குக் கோயிலைக் குறித்தது. விண்ணகர் - திருமாள் கோயில். நம்மாழ்வார் இப்பதியை 'மின்னிப்பொன் மதில் சூழ்திரு விண்ணகர் சேர்ந்த அப்பன்" என்று பாடுகின்றார்.

திருவிருக்குக்குறள் *tiru-virukku-k-kuṟaḷ,* பெ. (n.) ஓரடி இருசீராக நாலடியான் வருஞ் செய்யுள் வகை (தேவா. 1238); a kind of metre.

[திரு + இருக்கு + குறள்]

திருவிருந்து *tiru-virundu,* பெ. (n.) நல்விருந்து; sacred feast commemorating the lords supper.
2. நல்லருள்; holy communion (செ.அக.).

[திரு + விருந்து]

திருவிருப்பு *tiru-viruppu,* பெ. (n.) கோயில் அமைந்த இடம்; temple premises temple site. "இந்நாயனார் திருவிப்புக்கு வடபாற்செல்லை" *(S.I.I. i, 119).*

[திரு + இருப்பு]

திருவிரையாக்கலி *tiru-viraiyā-k-kali,* பெ. (n.) **சிவனின் ஆணையைக் குறிக்குஞ் சொல்;** the sacred oath on God Sivan. "சிந்தையாற்றா நினைவார் திருவிரையாக்கலி யென்று" *(பெரியபு. கோட்டி, 4) (S.I.I. vii, 398).*

[திரு + விரை + ஆ + கலி]

திருவில் *tiru-vil,* பெ. (n.) (அழகிய வில்) **வானவில்;** rainbow, beautiful. "திருவிலட்டுத் திகழ்தரு மேனியன்" *(சிலப். 15, 156).*

[திரு + வில்]

திருவில்லிபுத்தூர் *tiru-villiputtūr,* பெ. (n.) **காமராசர் வட்டம் திருவில்லிபுத்தூர் வட்டத்திலுள்ள ஊர்: தமிழக அரசின் அரசுச் சின்னமாக இவ்வூர்க்கோபுரம் விளங்கு கின்றது; ஆண்டாள் பிறந்த ஊர்;**

தமிழ்நாட்டிலுள்ள உயரமான கோபுரங்களுள் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்க முன் கட்டப்பட்ட இக்கோயிலிலுள்ள பூந்தோட்டத்தில் ஆண்டாளைத் துழாய்ச் செடியின் நிழலில் பெரியாழ்வார் குழந்தையாகக் கண்டெடுத் ததாக வரலாறு

[திரு + வில்லி + புத்தூர்]

1. வில்லி என்னும் வேடரால் இந்த ஊர் உருவாக்கப்பட்டதால் இப்பெயர் பெற்ற தென்பர்

2. செண்பகக் காடாக இருந்த இப்பகுதியை மல்லி என்னும் வேடப் பெண்ணரசி ஆண்டு வந்தாள், அதனால் மல்லி நாடு என்ற பெயர் இதற்கு உண்டு என்று கூறுவர்.

3. வில்லியர் என்னும் மரபினர் இப்பகுதியில் மிகுதியாக வாழ்ந்ததால் இப்பெயர் பெற்றது என்பது அறிஞர் கருத்து

கல்வெட்டில் இவ்வூர்ப்பெயர் மல்லிப்புத்தூர் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

திருவிலான் *tiru-vilāṉ,* பெ. (n.) **நல்லூழ் இல்லாதவன்** (பாக்கிய மற்றவன்); god forsaken person. "உருவிலான் பெருமையை யுளங் கொளாத வத்திருவிலார்" *(தேவா. 345, 2).*

[திரு + இல் + ஆன்]

திருவிலி *tiru-vili,* பெ. (n.) 1. **ஏழை;** unfortunate or poor person. "இருபதுகரம் தலையீரைந் தென்னுமத் திருவிலிக்கு" *(கம்பரா. உபிடணை. 39).* 2. **கைம்பெண்** *(அக.நி.);* widow, as having lost her sacred thread.

[திரு + இலி]

திருவிலை *tiru-vilai,* பெ. (n.) **கீரிப்பூடு;** Indian snake wort *(சா.அக.).*

திருவிழா *tiru-viḻā,* பெ. (n.) **கோயிலில் நிகழ்த்தும் விழா;** festival in a temple. "திருவிழாச் சுருக்கம்" *(கோயிற்பு.).*

[திரு + விழா]

திருவிழாப்புறம் *tiru-viḻā-p-puṟam,* பெ. (n.) **திருவிழாவிற்கென விடப்பட்ட இறையிலி நிலம்;** endowments for temple festivals. "திருவிழாப் புறமாக அட்டிக் கொடுத்தன" *(T.A.S. i, 7).*

[திருவிழா + புறம்]

திருவிளக்கம்மை *tiru-viḷakkammai,* பெ. (n.) **திருவிளக்குநாச்சியார்** பார்க்க; see *tiru-viḷakku-nācciyār.*

திருவிளக்கு *tiru-viḷakku,* பெ. (n.) 1. **கோயிற்றிரு விளக்கு;** light burnt in the presence of a deity. திருவிளக்கு இல்லா வீடுபோல *(பழ.).* "தீத் திருவிளக்கிட்டு" *(சி.சி.8, 19).* 2. **மங்கள விளக்கு;** lighted lamp in a house, regarded as auspicious. "உதவுவாய்த் தன்முனைத் திருவிளக்கு வைத்தார்" *(பிரபுலிங். சூனிய சிங்காதனத். 14).*

[திரு + விளக்கு]

திருவிளக்குடையார் *tiru-viḷakkuḍaiyār,* பெ. (n.) **கோயிலில் விளக்கேற்றுவோர்;** lamp lighters in a temple. "திருவிளக்குடை யார்கள் குழாய் பன்னிரண்டுக் கெண்ணெய் முந்நாழியும்" *(S.I.I.iii, 188).*

[திருவிளக்கு + உடையார்]

திருவிளக்குநகரத்தார் *tiru-viḷakku-nagarattār,* பெ. (n.) **எண்ணெய் பிண்டரத்து பட்டப் பெயர் வகை** (E.T. vii, 36); a litle of the Vaniyar caste.

[திருவிளக்கு + நகரத்தார்]

திருவிளக்குநாச்சியார் *tiru-viḷakku-nācciyār,* பெ. (n.) 1. **விளக்குத் தேவதை;** lamp in a house, regarded as a deity. 2. **கையில் விளக்கை**

யேந்திய சிலை; metallic image holding a lamp in its hand.

[திருவிளக்கு + நாச்சியார்]



திருவிளம் *tiru-viḷam,* பெ. (n.) *1.* திராய்; Indian cickweed. *2.* சிவதை; true jalap (செ.அக.).

திருவிளையாட்டு *tiru-viḷai-y-āṭṭu,* பெ. (n.) திருவிளையாடல் பார்க்க; see *tiru-viḷaiyāḍal.*

திருவிளையாடல் *tiru-viḷai-y-āḍal,* பெ. (n.) *1.* தெய்வ விளையாட்டு; sacred sports of a deity. *2.* திருவிளையாடற்புராணம் பார்க்க; see *tiru-viḷaiyāḍaṟ-purāṇam.* *3.* சிற்றின்ப விளையாட்டு; amorous acts.

[திரு + விளையாடல்]

திருவிளையாடல்சரணமஞ்சரி *tiru-vilaiyāḍal šaraṇa-mañjari,* பெ. (n.) பள்ளத்தூர் முருகப்பர் அவர்களால் 20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம்; a minor literature written by Paḷḷattūr-murugappar of 20th century (சிற்.அக.).

திருவிளையாடற்புராணம் *tiru-viḷai-y-āḍaṟ purāṇam,* பெ. (n.) சிவபெருமானின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைக் குறித்துப் பரஞ்சோதி முனிவர் பாடிய தொன்மம்; a purana on the 64 sports of Siva at Madura by Parañjōdi muṉivar.

[திருவிளையாடல் + புராணம்]

திருவினாள் *tiruviṉāḷ,* பெ. (n.) திருமகள் (இலக்குமி); Lakṣhmi. "போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்" *(சிலப். 1,26).*

திருவிடையூர்த்தலபுராணம் *tiru-vidaiyur-t-tala-purāṇam,* பெ. (n.) அசலாம்பிகை அம்மையார் எழுதிய இச்சிற்றிலக்கியம் 20ஆம் நூற்றண்டைச் சேர்ந்தது (சிற்.அக.); a minor literature written by Asalāmbigai-ammaiyār of 20th century.

[திருவிடையூர் + தலபுராணம்]

திருவிற்சுப்பிரமணியர்பதிகம் *tiru-viṟ šubbiramaṇiyar-padigam,* பெ. (n.) உடுப்பிட்டி குமாரசாமி முதலியார் அவர்களால் 18-19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a minor literature written by Uḍu-p-piṭṭi-kumārasami of 19-20th century.

திருவினை *tiru-viṉai,* பெ. (n.) நல்வினை; good karma. "திருவினை யாண்பாலாக" *(உபதேசகா. பஞ்சாக். 58).* (செ.அக.).

திருவினைக்கால் *tiru-viṉai-k-kāl,* பெ. (n.) கத்திரிக்கோல்; scissors (சா.அக.).

திருவீங்கோய்நாதர்பதிகம் *tiru-vīṅgōy-nadar-padigam,* பெ. (n.) சொக்கலிங்கம் செட்டியார் அவர்களால் 20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a minor literature written by Sokkaliṅga-chettiyār of 20th century.

திருவீதிநாயகர் *tiru-vīdi-nāyagar,* பெ. (n.) திருவிழாவின்போது வீதி வழியே உலாவரும் திருமேனி; deity of a temple intended for carrying out in procession during festivals. "ராஜாக்கள் தம்பிரான் திருவீதிநாயகர் திருப்பவனி எழுந்தருளும்போது" *(S.I.I. viii, 21).*

[திரு + வீதி + நாயகர்]

திருவீதிப்பந்தம் *tiru-vīdi-p-pandam,* பெ. (n.) தெய்வ ஊர்வலத்தில் பயன்படுத்தும் தீவட்டி வகை; a kind of torch for procession in temple festivals (S.I.I. viii, 21).

[திரு + வீதி + பந்தம்]

திருவீதியலங்கரி-த்தல் *tiru-vīti-y-alaṅgari-,* 4 செ.குவி. (v.i.) கோயிற்றிருவுரு புறப்பாடாக வருதல்; to go out in procession, as a deity

gracing the streets by his presence. பெருமான் திருவீதி யலங்கரிக்கிறார்.

[திருவீதி + அலங்கரி]

திருவுக்கரியதேவி *tiruvu-k-kariya-tēvi,* பெ. (n.) தாளகம்; orpiment (சா.அக.).

திருவுசாத்தானதோத்திரம் *tiruvu-šāttāṉa-tōttiram,* பெ. (n.) அழகிய சிற்றம்பல தேசிகரால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட, சிற்றிலக்கியம் (சிற்.அக.); a minor literature written by Aḻagiya-siṟṟambala-tēšigar of 19th century.

[திருவுசாத்தான + தோத்திரம்]

திருவுடம்பு *tiru-v-uḍambu,* பெ. (n.) 1. நல்லுடல்; kindly beautifuly body. "திருவுடம்பலச நோற்கின்றான்" (கம்பரா. சூர்ப்ப. 18). 2. திருமேனி; idol. "திருப்பள்ளியறை நாச்சியார் முதலாகவுள்ள திருவுடம்புகளும்" (T.A.S. i, 91).

[திரு + உடம்பு]

திருவுண்ணாழி *tiru-v-uṇṇāḻi,* பெ. (n.) திருவுண்ணாழிகை (Inse.) பார்க்க; see *tiru-v-uṇṇāḻigai.*

திருவுண்ணாழிகை *tiru-v-uṇṇāḻigai,* பெ. (n.) திருக்கோயில் கருவறை; inner most sanctuary of a temple. "திருவுண்ணாழிகை யுடையார் வசமே நாள்தோறும் அளக்கக்கடவேம்" (S.I.I. i, 143).

[திரு + உண்ணாழிகை]

திருவுத்திரகோசமங்கைப்பதிகம் *tiru-v-uttirakōša-maṅgai-p-padigam,* பெ. (n.) பூ. ஆறுமுகம்பிள்ளை அவர்களால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature composed by Āṟumugam-piḷḷai of 19th century.

[திரு + உத்திரகோசமங்கை + பதிகம்]

திருவுதரமாலை *tiru-v-udara-mālai,* பெ. (n.) கோயில் திருமேனியின் இடையில் அணியும் அணிகலன் வகை (S.I.I.vii, 209); ornament for the waist of a deity.

[திரு + உதரம் + மாலை]

திருவுந்தியார் *tiru-v-undiyār,* பெ. (n.) மெய்கண்ட சாத்திரம் பதினான்கினுள் ஒன்றும் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார் இயற்றியதுமாகிய சைவசித்தாந்த நூல்; a text book of the saiva siddhanda philosophy Tiruviyalor Uyyavandaleva nāyaṉār (செ.அக.).

[திரு + உந்தியார்]

திருவுலகள-த்தல் *tiru-v-ula-kaḷa-,* 3 செ.கு.வி. (v.i.) நிலத்தையளந்து கணக்கிடுதல்; to survey or measure land. "திருவுலகளந்தபடி நலம் எழுமா" (S.I.I. vii, 309).

[திரு + உலக + அள-.]

திருவுலாச்செய்-தல் *tiru-v-ulā-c-cey-,* 1 செ.கு.வி. (v.i.) வலம் வருதல் (இ.வ.); to go out in procession, as a deity in a temple.

[திரு + உலா + செய்-.]

திருவுலாப்புறஞ்செய்-தல் *tiru-v-ulā-p-puṟañ-cey-,* 1 செ.கு.வி. (v.i.) திருவுலாச்செய்-தல் பார்க்க; see *tiru-v-ulā-c-cey.*

[திரு + உலா + புறம் + செய்-.]

திருவுலாப்புறம் *tiru-v-ulā-p-puṟam,* பெ. (n.) திருக்கயிலாய ஞானவுலா; tiru-k-kailāya-ñāṉa-v-ulā, a poem by Cēramāṉ-perumāḷ. "சேராகாவலர் பரிவுடன் கேட்டித்த திருவுலாப் புறம்" (பெரியபு. வெள். 48).

[திரு + உலா + புறம்]

திருவுரு *tiru-v-uru,* பெ. (n.) நல்லுடல் (திவ்ய சரீரம்); divine form; divine presence. "அருளாயுன் றிருவுருவே" (திவ். திருவாய். 5,10,7). 2. திருமேனி; idol Image. "காரணங் கற்பனை கடந்த கருணை திருவுருவாகி" (கோயிற்பு. பாயி. 2).

[திரு + உரு]

திருவுழுத்து *tiru-v-uḻuttu,* பெ. (n.) அணிவகை; an ornament. "இரட்டை திருவுழுத்து ஓரணையினால்" (S.I. I. ii, 16).

[திரு + உருட்டு - திருவுருட்டு - திருவுழுத்து]

திருவுள்ளக்கலக்கம் *tiru-v-uḷḷa-k-kalakkam,* பெ. (n.) பெரியோர் மனவேறுபாடு; displeasure of great persons (செ.அக.).

[திரு + உள்ளம் + கலக்கம்]

திருவுள்ளக்கேடு *tiru-v-uḷḷa-k-kēḍu,* பெ. (n.) திருவுள்ளக்கலக்கம் பார்க்க; see *tiru-v-uḷḷa-k-kalakkam.*

[திரு + உள்ளம் + கேடு]

திருவுள்ளம் *tiru-v-uḷḷam,* பெ. (n.) அரசன், குரு முதலிய பெரியோரது உள்ளக் கருத்து; will or pleasure of God , king, guru or other-great person (செ.அக.).

[திரு + உள்ளம்]

திருவுளக்குறிப்பு *tiru-v-uḷa-k-kuṟippu,* பெ. (n.) திருவுள்ளம் (சி.லோ. பா. 2, பக். 318) பார்க்க; see *tiru-v-uḷḷam.*

[திரு + உள்ளக்குறிப்பு]

திருவுளச்சீட்டு *tiru-v-uḷa-c-cīṭṭu,* பெ. (n.) குலுக்கிப் போட்டெடுத்தல் முதலிய வகையால் தெய்வச் சித்தமறியுஞ் சீட்டு; lot cast or drawn, believed to the disclose the divine will (செ.அக.).

[திருவுளம் + சீட்டு]

திருவுளச்செயல் *tiru-v-uḷa-c-ceyal,* பெ. (n.) தெய்வச் செயல் (வின்.); God's will, providence, providential occurrence (செ.அக.).

[திருவுளம் + செயல்]

திருவுளத்தடை-த்தல் *tiru-v-uḷa-t-taḍai-,* 5 செ.குன்றாவி. (v.t.) மனத்திங்கொண்டரு ளுதல் (சிலப். 13, 88, அரும்); to keep in mind; to intend said of a deity or a great person (செ.அக.).

[திருவுளம் + தடை]

திருவுளப்பாங்கு *tiru-v-uḷa-p-pāṅgu,* பெ. (n.) திருவுள்ளம் பார்க்க; see *tiru-v-uḷḷam.* "எவ்வகை நின் திருவுளப் பாங்கிருப்ப தெளியேனளவில்" (அருட்பா. vi. குருதரிசனம். 4) (செ. அக.).

[திருவுளம் + பாங்கு]

திருவுளம் *tiru-v-uḷam,* பெ. (n.) திருவுள்ளம் பார்க்க; see *tiru-v-uḷḷam.* "திருவுளமெனின் மற்றென் சேனையு முடனே" (கம்பரா. கங்கை. 67).

[திரு + உளம்]

திருவுளம்பற்று-தல் *tiru-v-uḷam-paṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. ஏற்றுக் கொள்ளுதல்; to accept graciously. 2. திருவுள்ளத்தடை (சிலப். 13, 97, உரை) பார்க்க; see *tiru-v-uḷḷa-t-taḍai.* 3. கேட்க மனங்கொள்ளுதல் (சீவக. 430, உரை); to be pleased to hear. 4. உட்கருத்துக் கொள்ளுதல்; to consider to tent. 5. பணிந்து சொல்லுதல் (ர); to be pleased to speak; as a deity, to speak (செ.அக.).

[திருவுளம் + பற்று-.]

திருவுளம்வை-த்தல் *tiru-v-uḷam-vai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. அருளுதல்; to bestow, vouchsafe, grace, as a deity or guru. 2. விருப்பங்கொள்ளுதல்; to conceive desire, said of a great person (செ.அக.).

[திருவுளம் + வை-.]

திருவுளமடு-த்தல் *tiru-v-uḷam-aḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) எண்ணுதல்; to intend, consider. "அரசர் திருவினை முகப்பதொரு திருவுளமடுத் தருளியே" (கலிங். 236, புதுப்.).

[திருவுளம் + மடு-.]

திருவுளமறிய *tiru-v-uḷam-aṟiya,* வி.எ. (adv.) கடவுளறிய; calling God to witness, before God. திருவுள மறியச் சொல்லுகிறேன். (செ. அக.)

[திருவுளம் + அறிய]

திருவுறந்தைகாந்திமதியம்மைபிள்ளைத்தமிழ் *tiru-v-uṟandai-kāndimadi-y-ammai-piḷḷai-t-tamiḻ,* பெ. (n.) மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature authored by Mēnāṭci-sundaram-piḷḷai of 19th century.

திருவுறுப்பு *tiru-v-uṟuppu,* பெ. (n.) மகளிர் நெற்றியிலணியும் அணி (பிங்.); a gold ornament worn by women on the fore head (செ.அக.).

[திரு + உறுப்பு]

திருவுறை *tiru-v-uṟai,* பெ. (n.) கோயில்; temple. "கரியோன் திருவுறை" *(கல்லா.)*

[திரு + உறை]

திருவூசல் *tiru-v-ūsal,* பெ. (n.) கோயில் திருமேனிகள் (மூர்த்திகள்) எழுந்தருளியிருந்து ஆடும் ஊசல்; swing for the temple-idols. "திருவூசற் றிருநாமம்" *(ரஷ்டப் பீரங்க நாயக. 33)*

[திரு + ஊசல்]

திருவூரகவரதராசப்பெருமாள்பஞ்சரத்தினம் *tiru-v-ūraga-varadarāsa-p-perumāḷ-pañjarattiṉam,* பெ. (n.) நாதமுனிப்பிள்ளை என்பரால் 20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற். அக.); a literature authored by Nādamuṉi-p-piḷḷai of 20th century.

[திருவூரக + வரதராசப் பெருமாள் + பஞ்சரத்தினம்]

திருவூறல் *tiru-v-ūṟal,* பெ. (n.) 1. ஊற்றுநீர் (கோயிலொ. 64); spring water. 2. வெயிற் காலத்திலே ஆற்றிடைக் குறையில் நடத்துந் திருவிழா; temple festival held in an islet of a river during summer (செ.அக.).

[திரு + ஊறல்]

திருவூறல்திருநாள் *tiru-v-ūṟal-tirunāḷ,* பெ. (n.) ஊற்றுப் பறித்து அதில் முதலில் ஒரு கட்டையைப் போட்டு, அருகில் யானையை நிறுத்தி நடத்தும் திருவிழா (சம.செ.அக.);

[திருவூறல் + திருநாள்]

திருவெஃகா *tiru-veḵkā,* பெ. (n.) காஞ்சிபுரத்தில் உள்ள பழைய திருமால் கோயில்; an ancient Tirumāl shrine in Kāñjipuram (S.I.I. iii.41).

திருவெஞ்சமாக்கூடல் *tiru-v-eñjamā-k-kūḍal,* பெ. (n.) கரூர் மாவட்டத்திலுள்ள ஊர் (தமி.ஊர்.பெ.); a village in Karūr district.

[திரு + வெஞ்சமர் + கூடல்]

1. குடவனாறும், நங்காஞ்சியாறும் இப் பகுதியில் கூடுவதால் கூடல் எனப்பட்டது. வெஞ்சமன் என்னும் வேட்டுவ அரசன் இப்பகுதியை ஆண்டமையால் வெஞ்சமன் கூடல் ஆகி நாளடைவில் வெஞ்சமாக் கூடல் ஆயிற்று.

2. சேரமான் வஞ்சன் என்னும் அரசன் இப்பகுதியை ஆண்டதால் வெஞ்சமாக் கூடல் என்று பெயர் பெற்றது என்பர். (திரு + வஞ்சன் + கூடல்) சுந்தரரால் பாடல்பெற்ற தலம்.

திருவெண்காட்டுநங்கை *tiru-veṇ-kāṭṭu-naṅgai,* பெ. (n.) சிறுத்தொண்ட நாயனாரின் தேவியார் (S.I.I. ii, 173); wife of Ciṟu-t-toṇḍar (செ.அக.).

திருவெண்காடர் *tiru-v-eṇkāḍar,* பெ. (n.) பட்டினத்தார்; the sage Paṭṭiṉattār.

[திரு + வெண்காடர்]

திருவெண்காடு *tiru-v-eṇkāḍu,* பெ. (n.) நாகை மாவட்டம், சீர்காழி வட்டத்திலுள்ள ஊர்; a village in Nāgai district.

[திரு + வெண்மை + காடு]

சிறந்த சிவத்தலமாகும், பட்டினத்தடிகள் மெய்கண்ட தேவர் ஆகியோர் பிறந்த ஊர்

'பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே"
(அப். திரு. மு.)

வெண்மை நிறம் வாய்ந்த நிலம் வெண்காடு ஆயிற்று. பாடல்பெற்ற தலமாதலால் திருவெண்காடு ஆயிற்று. நால்வர் பாடல் பெற்ற தலம். (தமி. ஊர். பெ.).

திருவெண்ணாழி *tiru-v-eṇṇāḻi,* பெ. (n.) திருவுண்ணாழிகை பார்க்க; see *tiru-v-uṇṇāḻigai* *(கோயிலொ.1).*

[திருவுண்ணாழிகை → திருவெண்ணாழி]

திருவெம்பாவை *tiru-vem-pāvai,* பெ. (n.) சிலை (மார்கழி)த் திங்களில் ஓதப்படும் திருவாசகப் பகுதி; a poem in Tiruvašagam, specially recited in the month of Mārkaḻi.

திருவெண்ணெய்நல்லூர் *tiru-v-eṇṇey-nallūr,* பெ. (n.) கடலூர் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டத்தில் உள்ள ஊர்; a village in Cudalore district.

[திரு + வெண்ணெய் + நல்லூர்]

இப்பகுதியில் உமாதேவியார் வெண் ணெயினால் ஒரு கோட்டைக் கட்டி

அதனிடையே கிளியை வளர்த்துத் தவம் புரிந்த காரணத்தால் இப்பெயர் பெற்றது. சுந்தரர் பாடல்பெற்ற தலம்.

"வைத்தாய் பெண்ணைத் தென்பால்
வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனெனலாமே"

என்று பாடுவார். (தமி. ஊர். பெ.).

திருவெழுச்சி *tiru-v-eḷucci,* பெ. (n.) *திருவிழா;* temple festival. *"எந்தைபிரான் றிருவெழுச்சி யின்ப மெய்த" (கோயிற்பு. திருவிழா. 25).*

[திரு + எழுச்சி]

திருவெழுத்து *tiru-v-eḷuttu,* பெ. (n.) 1. *அரசன் கையெழுத்து;* king's handwriting or signature. *"ஏட்டின்மேற் றீட்டித் திருவெழுத்திட்டு" (சீவக. 2110).* 2. *கொச்சி திருவிதங்கூர் அரசர்களின் கட்டளை;* writ or warrant of the kings of Cochin and Travancore. 3. *ஐந்தெழுத்து;* sacred mantra of five letters. *"இது திருவெழுத்தி னீடே" (சிவப்பிர. 10, 13).*

[திரு + எழுத்து]

திருவெழுத்துவிளம்பரம் *tiru-v-eḷuttu-viḷambaram,* பெ. (n.) *திருவிதாங்கூர் அரசு விளம்பரம்;* royal prodamation issued by the kings of Travancore (R.F.).

[திரு + எழுத்து + விளம்பரம்]

திருவெள்ளக்குளம் *tiru-v-eḷḷa-k-kuḷam,* பெ. (n.) *நாகை மாவட்டம் சீர்காழி வட்டத்தில் உள்ள ஊர்;* a village in Nagai district.

[திரு + வெள்ள + குளம்]

இப்பகுதியிலுள்ள நீர் (தீர்த்த) வெள்ளக் குளம் என்று போற்றப்படும். இதன் பெயரால் வெள்ளக்குளம் என இவ்வூர் வழங்கப் படுகின்றது. திருமங்கையாழ்வார் இப்பதியைத்

"திண்ணார் மதில்சூழ் திருவெள்ளக் குளத்துள்
அண்ணா அடியேன் இடரைக் களையாயே"

என்று பாடியுள்ளார் (தமி. ஊர். பெ.).

திருவெள்ளறை *tiru-v-eḷḷaṟai,* பெ. (n.) *திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஊர்;* a village in Tiruchirā-p-paḷḷi district.

[திரு + வெண்மை + அறை]

திருவெள்ளறை அறை என்பது பாறை என்று பொருள்படும். இக்கோயில் 100 அடி உயரமுள்ள வெண்மையான குன்றின்மீது அமைந்திருப்பால் வெள்ளறை என்று வழங்கப் பெறுகின்றது. பெரியாழ்வார் இப்பகுதியை

"மன்றில்நில் லேல்அந்திப் போது
மதில்திரு வெள்ளறை நின்றாய்"

என்று பாடியுள்ளார். (தமி. ஊர்.பெ.).

திருவெள்ளியங்குடி tiru-v-eḷḷiaṅkuḍi, பெ. (n.) *தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்;* a village in Tanjāvur district.

[திரு + வெள்ளி + குடி]

திருமங்கை யாழ்வாரால் பாடப்பெற்ற தலம். பார்க்கவபுரி என்றும் வேறுபெயர் இவ்வூருக் குண்டு.

திருவேகம்பம் *tiru-v-ēgambam,* பெ. (n.) *காஞ்சியிலுள்ள சிவன் கோயில் ஏகம்பம்* (தேவா.); the chief saiva shrine in Kānjipuram (சா.அக.).

[திரு + ஏகம்பம்]

திருவேங்கடநாதர் *tiru-vēṅgaḍa-nādar,* பெ. (n.) *12ஆம் நூற்றாண்டினரும் மாதையூரினரும் வைத்தியநாத தேசிகரைக் கொண்டு இலக்கண விளக்கம் இயற்றுவித்தவரும் நாயக்க அரசர்களின் நிகராளியாயிருந்தவருமாகிய ஒரு பிராமணர்;* a Brahmin governor under the Nayak kings, native of Madai, patron of Vaittiyanada dēsigar who wrote Ilakkaṇa-viḷakkam in 17th century.

திருவேங்கடநாதன்வண்டுவிடுதூது *tiru-v-eṅgaḍa-nāḍaṉ-vaṇḍu-viḍu-tūdu,* பெ. (n.) *அமிர்தசுந்தரநாதம்பிள்ளை என்பவரால் 19-20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது* (சிற்.அக.); a literature written by Amirda-sundaranādam-piḷḷai in 19-20th century.

[திருவேங்கடநாதன் + வண்டுவிடு +தூது]

திருவேங்கடம் *tiru-vēṅgaḍam,* பெ. (n.) *திருப்பதியென வழங்குந் தலம்;* Tirupati. *"மண்ணளந்த சீரான் றிருவேங்கடம்" (திவ். இயற். முதற். 76).*

[திரு + வேங்கடம்]

திருவேங்கடமுடையான்பஞ்சரத்தினம் *tiru-vēṅgaḍa-muḍaiyāṉ-pañjarattiṉam*, பெ. (n.) வீரராகவ முதலியாரால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature written by Virarāgava-mudaliyār 19th century.

[திருவேங்கடமுடையான் + பஞ்சரத்தினம்]

திருவேங்கடவருக்கமாலை *tiru-vēṅgaḍa varukka-mālai*, பெ. (n.) வேங்கடசலதாசர் இயற்றிய சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature written by Vēṅgaḍasaladāsar.

திருவேடகம் *tiru-vēḍagam*, பெ. (n.) மதுரை மாவட்டத்தில் சோழவந்தான் சாலையில் உள்ள ஊர்; a village in Madurai district.

சமணர்களுடன் திருஞானசம்பந்தர் செய்த சொற்போரில், சம்பந்தர் எழுதிய ஏடு நீரை எதிர்த்துச் செல்ல, சமணர்கள் எழுதிய ஏடு ஆற்றோடு அடித்துச் செல்லப்பட்டு மறைந்தது. ஞான சம்பந்தர் வன்னியும் மத்தமும் எனத் தொடங்கும் பதிகம் பாடிய வுடன் அவ்வேடு அப்படியே நின்று விட்ட தால் ஏடு நின்ற இடம் ஏடகம் எனப்பட்டது. அப்பகுதிலமைந்த ஊரும் திருவேடகம் என்றழைக்கப்பட்டது. இங்குள்ள கோயிலி லுள்ள இலிங்கம் சம்பந்தரால் வழிபாடு செய்யப்பட்ட தென்பர். 'மன்னிய மறையவர் வழிபட வடியவர் இன்னிசை பாடலரேடகத் தொருவனே என்று இப்பகுதியைச் சம்பந்தர் பாடி யுள்ளார். (தமி. ஊர். பெ).

[திரு + ஏடகம்]

திருவேடம் *tiru-vēḍam*, பெ. (n.) திருநீறு, அக்கமணி (உருத்திராக்கம்) முதலிய சிவக் கோலம்; sacred dress and emblems of Šiva and his devotees, as sacred ashes, beads etc. 2. சிவனடியார்; Šaiva devotee. "திருவேடங் கண்டால்" (சி.சி. 8,19). 3. சிவ மடங்களிலுள்ள துறவிகள் அணியும் காதணிவகை (வின்.); ear-rings worn by the Saivite ascetics in mutts.

[திரு + வேடம்]

திருவேரகநான்மணிமாலை *tiru-v-ēraga nāṉmaṇi-mālai*, பெ. (n.) 20ஆம் நூற்றாண்டில் சுப்பராயபிள்ளை எழுதிய சிற்றிலக்கியம்; a literature composed by Subbarāya-piḷḷai.

[திருவேரக + நான்மணிமாலை]

திருவேரகப்பதிகம் *tiru-vēraga-p-padigam*, பெ. (n.) மணிவாசகசரணாயலய அடிகளால் 19-20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature written by Maṇivāšaga-saraṇāyalaya-aḍigal of 19-20th century.

திருவேரகம் *tiru-vēragam*, பெ. (n.) முருகக் கடவுள் கோயில் கொண்ட ஆறுபடை வீடுகளுள் ஒன்று எனப்படுவது (திருமுரு.); a skanda shire, one of six paḍai-vīḍu, Murugan.

குடந்தை அருகில் உள்ள சாமிமலையே திருவேரகம் என்று கூறப்படுகின்றது.

திருவேரகவருக்கமாலை *tiru-vēraga-varukka -mālai*, பெ. (n.) வே. இராமநாதன் செட்டியார் 20ஆம் நூற்றாண்டில் எழுதிய "வருக்கமாலை" என்னும் சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature written by Rāmanāda-ceṭṭiyār of 20th century.

திருவேள்-தல் (திருவேட்டல்) *tiruvēḷ-*, 16 செ.கு.வி. (v.i.) திருமணம் புரிதல்; to marry. "தென்னவர் கோன் மகனாரைத் திருவேட்டு" (பெரியபு. சேரமான். 92).

[திரு + வேள்-.]

திருவை *tiruvai*, பெ. (n.) 1. திரிவை பார்க்க; a mode of learning of rote. 2. அரைகல் இயந்திரம்; crinding machine (செ.அக.).

[திரி → திரிவை]

திருவைகுண்டம் *tiru-vaiguṇḍam*, பெ. (n.) நெல்லை மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Tirunelvēli district.

[திரு + வை குண்டம்]

திருமாலின் தலைமை இடம் வைகுண்டம் - இறைவனின் தலைமை இடம் கயிலாயம். இவ்விரண்டு இடங்களின் சிறப்புகள் இவ்வூரில் விளங்குவதால் இவ்வூர் திருவை குண்டம் என்றழைக்கப்படுகிறது.

திருவைசாதம் *tiruvai-šadam*, பெ. (n.) நள்ளிரவில் கடவுளுக்கென்று வழங்கும் சோற்றுத் திரள்; offering of food to a deity at midnight at the close of the daily worship.

திருவையாற்றுச்சக்கரம் *tiru-vai-y-āṟṟu-c-cakkaram,* பெ. (n.) காசு வகை (பணவிடு. 145); a kind of coin.

[திரு + ஐயாறு + சக்கரம்]

திருவையாறு *tiruvai-y-āṟu,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Tanjavūr district.

[திரு + ஐயாறு]

இப்பகுதியில் வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி, கொள்ளிடம் ஆகிய ஐந்து ஆறுகள் பாய்ந்து வளம் பெருக்குவதால் இந்த ஊர் ஐயாறு என்று பெயர் பெற்று, மூவராலும் பாடல் பெற்ற தலமாதலால் திரு அடைபெற்றுத் திருவையாறு ஆயிற்று.

[திரு + ஐ + ஆறு - திருவையாறு]

கல்வெட்டில் இந்த ஊர்ப்பெயர் "இராசேந்திர சிங்கவளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாறு என்று வழங்கப்படுகின்றது. ஆங்கிலேயர் காலத்தில் இவ்வூர் திருவாதி என வழங்கியது.

திருவொற்றாடை *tiru-v-oṟṟāḍai,* பெ. (n.) திருமஞ்சனம் செய்ததும் ஆண்டவன் திருமேனியில் திருக்குளியலுக்குப் பின் ஒற்றியெடுக்கப்படும் நல்லாடை; cloth for wiping the body of an idol after bathing. "திருவொற்றாடை சாத்தி" (குற்றா. தல. சிவபூ. 432).

[திரு + ஒற்று + ஆடை]

திருவொற்றியூர் *tiru-v-oṟṟiyūr,* பெ. (n.) செங்கல்பட்டு மாவட்டம் சைதாப்பேட்டை வட்டத்தில் உள்ள ஊர்; a village in Cengalpaṭṭu district. சுந்தரர் சங்கிலியாரை மணம் புரிந்த இடம்.

[திரு + ஒற்றியூர்]

1. திருவொற்றீசர் என்னும் பெயருமுடைய இறைவன் இப்பகுதியில் கோயில் கொண்டிருப்பதால் திருவொற்றியூர் என்று பெயர் பெற்றுள்ளது.

2. ஊழியை மேல்வரவொட்டாது தடுத்தமையால் ஒற்றியூர் ஆயிற்று என்றும் கூறுவர்.

தமிழ்நாட்டிலுள்ள மிகத் தொன்மையான ஊர் என்பதால் ஆதிபுரி என்ற பெயரும் உண்டு. (தமி. ஊர். பெ.)

திருவொற்றியூர்ப்பதிகம் *tiru-v-oṟṟiyūr padigam,* பெ. (n.) தண்டபாணி அடிகளால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature composed by Daṇḍapāṇi-Adigaḷ of 19th century.

[திருவொற்றியூர் + பதிகம்]

திருவொற்றியூர்வடிவுடையம்மன்ஆசிரிய விருத்தம் *tiru-v-oṟṟiyūr-vaḍivuḍai-y-ammaṉ āširiya-viruttam,* பெ. (n.) சுப்பிரமணிய சுவாமிகளால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature authored by Subiramaṇiya-swamigal of 19th century.

திருவொற்றியூர்வடிவுடையம்மை நவரத்தினம் *tiru-v-oṟṟiyūr-vaḍivuḍai-y-ammai-navarattiṉam,* பெ. (n.) கருப்பையாப் பாவலர் என்பவரால் 19-20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature authored by Karuppaiyā-p-pāvalar of 19-20th century.

[திருவொற்றியூர் + வடிவுடையம்மை + நவரத்தினம்]

திருவோட்டுக்காய் *tiru-v-ōṭṭu-k-kāy,* பெ. (n.) திருவோட்டுக்காக உதவும் மரம்; west Indian clabash.

[திருவோடு + காய்]

திருவோடு *tiru-v-ōḍu,* பெ. (n.) இரந்துண்பார் கலம் (பெரியபு. வசன. திருநீலகண்ட.59); shell of coco-de-mer, used as begging bowl by religious mendicants (செ.அக.).

[திரு + ஓடு]

திருவோணம் *tiru-v-ōṇam,* பெ. (n.) இருபத்திரண்டாவது நாண்மீன் (நட்சத்திரம்); the 22nd naksatra constellation of Aquila in makara-raši (செ.அக.).

[திரு + ஓணம்]

திருவோத்தூர் *tiru-v-ōttūr,* பெ. (n.) காஞ்சி மாவட்டம் செய்யாறு வட்டத்திலுள்ள ஊர்; a village in Kāñjipuram district.

இவ்வூரில் இறைவன் தேவர்களுக்கும், முனிவர்க்ளுக்கும் வேதத்தின் பொருளை அருளிச் செய்த இடமாதலால் இப்பெயர் பெற்றது. ஞானசம்பந்தரால் ஆண்பனை பெண்பனையாக மாறிய தலம். (தமிழ்ஊர்.பெ)

[திரு + ஓது + ஊர் – திருவோத்தூர்]

திருவோலக்கம் *tiru-v-ōlakkam,* பெ. (n.) 1. **அத்தாணியிருப்பு;** durbar, presence - chamber. 2. **தெய்வ இருப்பு (தெய்வ சன்னிதானம்);** the presence of a deity. "திருவோலக்கஞ் சேவிக்க" *(திருவாச. 21, 6).* 3. திருமுன் இருக்கும் குழு (சன்னிதி கோஷ்டி); assembly of devotees in rows before a deity. "அப்போதே திருவோலக்கத்தி னின்றும் எழுந்தருளி" *(குருபரம். 213).*

[திரு + ஓலக்கம்]

திருவோலை *tiru-v-ōlai,* பெ. (n.) **திருமுகம்;** royal letter (S.I.I. ii, 182) *(செ.அக.).*

[திரு + ஓலை]

திரேந்தி *tirēndi,* பெ. (n.) திராய் *(மலை);* Indian chickweed.

திரை-தல் *tirai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. **அகவை (வயது) முதிர்வால் தோல் திரங்குதல்;** to become wrinkled, as skin by age. "தோறிரை செம்முக வெங்க ணோக்கின்" *(சீவக. 431).* 2. **சுருங்குதல்;** to be wrinkled, creased, as cloth, as a flag in the wind. ஆடை திரைந்து விட்டது. 3. **அலை எழுதல்** *(வின்.);* to roll as waves; to heave up, as the sea; to break in ripples. 4. **மிதந்தாடுதல்;** to float in water, as a vessel. "கார்த்தரங்கம் திரை தோணி" *(திருக்கோ. 187).* 5. **திரிதல்;** to coagulate, form into clots, as milk. பால் திரைந்துவிட்டது. 6. **திரளுதல்;** to be drifted by the wind into heaps as seaweed; to gather, bees round a flower. "சில்லம் போதின்மேற் றிரைந் தேறுலாம்" *(சீவக. 413).* 7. **ஆடைநூல் இழை விலகுதல்;** to be threadbare. 8. **மெதுவாதல்** *(வின்.);* to become smooth, as an earthen vessel turned by a potter.

திரை²-த்தல் *tirai-,* செ.கு.வி. (v.i.) 1. **அலையெழுதல்;** to roll or rise as waves. "திரைத்தெழுந்து ... வீழ்வ தேய்க்கு மறிகடலே" *(கம்பரா. கடல்காண். 9).* 2. திரை¹,1 பார்க்க; see *tirai¹,1* *(செ.அக.).*

திரை³-த்தல் *tirai-,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. **சுருங்குதல்** *(வின்.);* to gather up, contract, close, as the mouth of a seck. 2. **தன்னுளடக்குதல்;** to cover, contain. "நிலந்திரைக்குங் கடற்றானை" *(புறநா. 97).* 3. **ஆடை கொய்தல்;** to plait the ends of a cloth, as in dressing. "கலிங்கந் தாண்மேற் திரைத் துடுத்து" *(சூளா. கல்யா. 16).* 4. **ஒதுக்குதல்;** to tuck up, as one's cloth; to cause to gather, as moss or scum on the water. "நீரிற் சீலையைத் திரைத்துக் கொண்டான்". 5. **அணைத்தல்;** to hug, strain. "மாயக் குழவி யெடுத்து மடித்திரைத்து" *(சிலப். 9, 27).*

[திரை → திரைத்தல்]

திரை⁴ *tirai,* பெ. (n.) 1. **உடற்றோலின் சுருங்கல்;** wrinkle, as in the skin through age. "நரைதிரையொன் றில்லாத நான்முகனே" *(கம்பரா. சூர்ப்ப. 124).* 2. **திரைச் சீலை;** curtain, as rolled up. "உருவுதிரையாகப் பொருமுக வெழினியும்" *(சிலப். 3, 109, உரை).* 3. **அலை;** wave, billow, ripple. "தெண்கடலழுவத்துத் திரை நீக்கா வெழுதரூஉம்" *(கலித். 121).* 4. **ஆறு;** river, brook. "திரையுலா முடியினர்" *(தேவா. 912, 7).* 5. **கடல்;** sea. "திரைவள ரிப்பி" *(சீவக. 2645).* 6. **ஏழென்னுங் குழூஉக்குறி;** seven, a slang term. 7. **வெற்றிலைச் சுருள்;** roll of betel leaves. 8. **வெற்றிலை;** betel. "இளிந்தகாய் கமழ்திரை வாசம்" *(சீவக. 1479).* 9. **வைக்கோற் புரி** *(வின்.);* roll of twisted straw. 10. **பஞ்சுச் சுருள்** *(வின்.);* roll of cotton prepared for spinning.

திரை⁵ *tirai,* பெ. (n.) **நிலம்** *(அக.நி.);* earth.

க. திரெ

திரை-த்தல் *tirai-,* 11 செ.கு.வி. (v.i.) **படுத்தல்;** to lie, as in bed. "திரைப்ப மெல்லணை செய்வ விழுத்தலம்" *(நீலகேசி. 251).*

திரைக்காசு *tirai-k-kāšu,* பெ. (n.) **பழைய வரிவகை** (I.M.p. cg. 1065); an ancient tax.

[திரை + காசு]

திரைக்கடற்பாசி *tirai-k-kaḍaṟpāśi,* பெ. (n.) கடற்பாசி; sea weed (சாஅக.)

[திரை + கடல் + பாசி]

திரைச்சீலை *tirai-c-cīlai,* பெ. (n.) இடுதிரை; curtain cloth; veil; cloth of a tent (செஅக.).

[திரை + சீலை]

திரைசல் *tiraiśal,* பெ. (n.) குயவன் மட்பாண்டத்தை மழமழப்புச் செய்யப் பயன்படுத்தும் சிறுசீலை; small cloth used by potter in giving polish to mud pots (செஅக.).

[திரை + சல்]

திரைத்தவிர்-தல் *tirai-t-tavir-,* 4 செ.குவி (v.i) விட்டுவிட்டொளிர்தல்; to dazzle, twinkle "தரைத்தவிர் பண்மான்" (தண்கைப்பு. அகத். 20).

[திரை + அவிர்]

திரைத்துப்பாடு-தல் *tirai-t-tu-p-pāḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) திரும்பத் திரும்ப நீட்டிப் பாடுதல்; to sing elaborately with frequent repetitions. "திரைத்துப்பாடி திரிதருஞ் செல்வரே" (தேவா. 168, 6).

திரைந்துபோ-தல் *tiraindu-pō-,* 8 செ.குவி. (v.i.) 1. உரசுதல் முதலியவற்றால் தோல் அழிந்து போதல்; to be abraded. 2. திரை¹-5 பார்க்க; see *tirai¹-5.*

திரைநுரை tirainurai, பெ.(n.) கடல்நுரை; sea froth, cullte fesh bone.

[திரை + நுரை]

திரைப்பு *tiraippu,* பெ. (n.) 1. சுருங்குகை; wrinkling. 2. அலையெழுகை; rolling, ripling. 3. திரையால் மறைந்த இடம்; place screened by a curtian. "திரைப்பில் வதுவைபு மீங்கே யயர்ப" (கலித். 115, 19).

[திரை + பு]

திரைப்புழு *tirai-p-puḻu,* பெ. (n.) குழந்தைகளை இளைக்கச் செய்யும் குடற்பூச்சி; round worm found in the small intestines especially in childeren causing progressive emaciation (சாஅக.).

[திரை + புழு]

திரைபோக்கி *tirai-pōkki,* பெ. (n.) மிளகு; black pepper (சாஅக.).

[திரை + போக்கி]

திரைமடக்கு *tirai-maḍakku,* பெ. (n.) அலை மறிந்து விழுகை (நாஞ்.); rolling of waves. நீந்துகிறவர்கள் திரைமடக்கில் அகப்படக் கூடாது (செஅக.).

[திரை + மடக்கு]

திரையல்¹ *tiraiyal,* பெ. (n.) 1. சுருங்குகை; wrinkling. 2. வெற்றிலை (சூடா.); betel. 3. வெற்றிலைச் சுருள்; roll of betel prepared for chewing. "திரையலோ டடைக்கா யீத்த" (சிலப். 16, 55).

[திரை + அல்]

திரையல்² *tiraiyal,* பெ. (n.) திரையன் பார்க்க; see *tiraiyaṉ.* "சேரல் என்றது . . . . திரையல் இளவல் என்றாற்போல்வதோர் லகர வீற்றுப் பெயர்ச்சொல்" (சிலப். பதி. 1, 2, உரை) (செஅக.)

[திரையன் → திரையல்]

திரையரங்கம் *tirai-y-araṅgam,* பெ. (n.) திரைப்படக்காட்சிகள் நடத்துதற்கேற்ற இடம்; theatre (பொ.வழி).

[திரை + அரங்கம்]

திரையன் *tiraiyaṉ,* பெ. (n.) 1. நெய்தனிலத் தலைவன் (அக. நி.); ruler for chief in a maritince tract. 2. கடல்வழியாக வந்து தொண்டை நாட்டை ஆண்டதாகக் கருதும் பழைய அரச வகுப்பினர்; an ancient chief of Toṇḍai nāḍu, who was believed to have come from across the sea. "வென்வேற்றிரையன் வேங்கட நெடுவரை" (அகநா. 85).

[திரை + அன்]

திரையில்லான் *tirai-y-illāṉ,* பெ. (n.) கரிசலங் கண்ணி; eclypse plant (சாஅக.)

[திரை + இல்லான்]

திரையுறி *tirai-y-uṟi,* பெ. (n.) 1. பெரிய உறி; net work of rope for keeping big pots suspended. 2. பின்னல் உறி; ptaited network of rope. திண்ணக் கலத்தில் திரையுறி மேலவைத்தே வெண்ணெய் விழுங்கி (திவ். பெரியாழ். 2, 5, 3).

[திரை + உறி]



திரைவிழு-தல் *tirai-viḻu-*, 2 செ.கு.வி. (v.i.) தோல் சுருக்கு விழுதல்; to become wrinkled, as skin by age.

[திரை + விழு-.]

திரைவு *tiraivu-*, பெ. (n.) 1. தோல் சுருங்குகை; wrinkling, as by age. 2. அலையெழுகை; rolling as of waves.

[திரை + விழு-.]

தில் *til*, இடை. (part.) விழைவு, காலம், ஒழியிசை என்னும் பொருள்களில் வரும் ஓரிடைச்சொல் (தொல். சொல். 255); expletive signifying a desire, time or a suggestion (செ.அக.).

தில்ல *tilla*, இடை (part.) தில் பார்க்க; see *til*. "தீயேன் றில்லா மலைகிழ வோற்கே" (ஐங்குறு. 204)

தில்லகம் *tillagam*, பெ. (n.) விளா (தைலவ. தைல. 74); wood apple (செ.அக.).

தில்லம்[1] *tillam*, பெ. (n.) காடு (சூடா.); forest, jungle. தில்லமும் பலதேசமுங் கடந்து (சேதுபு. மங்கல. 73). (செ. அக.)

தில்லம்[2] *tillam*, பெ. (n.) தில்லை மரத்தின் விதை; பாம்பு, பூச்சி ஆகியவற்றின் கடிக்கும் குட்டத்திற்கும் மருந்தாகப் பயன்படுவது; seed of Tigers milk tree cures insect and snake bites, leprosy etc. (சா.அக.).

தில்லாயம் *tillāyam*, பெ. (n.) புரட்டு; deception. "தில்லாய்க் கட்டுமொழி செப்புகிறாய்" (பஞ்ச. திருமுருக. 1220).

தில்லி *tilli*, பெ. (n.) மிகச்சிறிய நிலப் பகுதி; a very small plot of land. ஒரு தில்லிமட்டும் நீர்பாயவில்லை.

தில்லியம்[1] *tilliyam*, பெ. (n.) நல்லெண்ணெய் (தைலவ. தைல.); gingili oil (செ.அக.).

தில்லியம்[2] *tilliyam*, பெ. (n.) புதிதாகத் திருத்தப்பட்ட விளை புலம் (பிங்.); land newly brought under cultivation.

தில்லியம்பில்லியம் *tilliyam-pilliam*, பெ. (n.) தில்லுமுல்லு பார்க்க; see *tillu-mullu*. அவன் தில்லியம் பில்லியம் திரியாவரக்காரன் (பழ.).

தில்லுப்பில்லு *tillu-p-pillu*, பெ. (n.) தில்லுமுல்லு பார்க்க; see *tillu-mullu* (செ.அக.).

தில்லும்பில்லும் *tilllum- pillum*, பெ. (n.) தில்லுமுல்லு பார்க்க; see *tillu-mullu*. தில்லும் பில்லும் திருவாதிரை (பழ.).

தில்லுமல்லு *tillu-mallu*, பெ. (n.) தில்லுமுல்லு பார்க்க; see *tillu-mullu* (செ.அக.).

தில்லுமுல்லு *tillu-mullu*, பெ. (n.) பொய் புரட்டு; deceit, trick, deceiful words. ties. "தில்லுமுல்லு பேசி" (இராமநா. ஆரணி. 8).

தில்லெரி *tilleri*, பெ. (n.) படைக்கலக் கொட்டில்; artillery (செ.அக.).

தில்லேலம் *tillēlam*, பெ. (n.) தில்லேல என்று முடியும் பாட்டுவகை; a kind of song ending in tillēla (செ.அக.).

தில்லை[1] *tillai*, பெ. (n.) 1. மரவகை; blinding tree. "தில்லையன்ன புல்லென் கடையோடு" (புறநா. 252). 2. தில்லை மரவகை; mountain slender tiger's milk. 3. சிற்றம்பலம் (சிதம்பரம்); town of Chidambaram. "தில்லைநகர்புக்குச் சிற்றம்பலமன்னும் . . . விடையானை" (திருவாச. 8,5). 4. தில்லைநாயகம் பார்க்க; see tillai-nāyagam.

தில்லை[2] *tillai*, பெ. (n.) தில் (தொல்.சொல். 397, சேனா) பார்க்க; see *til*.

தில்லைக்கட்டி *tillai-k-katti*, பெ. (n.) ஒருவகைச் சம்பா நெல்; a kind of campā paddy (செ.அக.).

[தில்லை + கட்டி]

தில்லைக்கட்டை *tillai-k-kaṭṭai,* பெ. (n.) செம்பாளை நெல்; G.Tp.D..i. 132; cempālai paddy.

தில்லைச்சிலேடைவெண்பா *tillai-c-cilēḍai venbā,* பெ. (n.) 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கந்தசாமிக் கவிராயர் எழுதிய சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature authored by Kandasāmi-k-kavirayer of 19th century A.D.

தில்லைத்திருச்சித்திரகூடம் *tillai-tiru-c-cittira-kūḍam,* பெ. (n.) சிதம்பரத்திலுள்ள திருமால் கோயில் (திவ். பெரியதி. 3, 3, 1); the Tirumāl shrine at Chidambaram (செ.அக.).

தில்லைத்திருப்புகழ் *tillai-t-tiru-p-pugal,* பெ. (n.) தண்டபாணி அடிகளால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலக்கியம் (சிற்.அக.); a literature authored by Daṇḍapāṉi-Aḍigal.

[தில்லை + திருப்புகழ்]

தில்லைநண்டு *tillai-nanḍu,* பெ. (n.) தில்லை மரத்தடியில் காணப்படும் ஒருவகைக் கரிய நண்டு; a black lobster; as found under the tillai tree (செ.அக.).

தில்லைநாயகம் *tillai-nāyagam,* பெ. (n.) சம்பா நெல்; a variety of campā paddy (செ.அக.).

[தில்லை + நாயகம்]

தில்லைநாயகன் *tillai-nāyagaṉ,* பெ. (n.) சிதம்பரத்திலுள்ள சிவன் (வின்.); Sivaṉ, the lord of Chidambaram.

[தில்லை + நாயகன்]

தில்லைநெல் *tillai-nel,* பெ. (n.) தில்லை நாயகம் பார்க்க; see *tillai-nāyagam* (செ.அக.).

[தில்லை + நெல்]

தில்லைமூவாயிரவர் *tillai-mū-v-āyiravar,* பெ. (n.) தில்லைவாழந்தனர் பார்க்க; see *tillai-vālandaṉar.*

[தில்லை + மூவாயிரவர்]

தில்லையம்பலம் *tillai-y-ambalam,* பெ. (n.) சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலம் (கனக); the shrine of Nadarāja at chidambarm. "தில்லையம்பலத்தே யாடுகின்ற சிலம்பாடல்" (திருவாச. 11,20).

[தில்லை + அம்பலம்]

தில்லையெண்ணெய் *tillai-y-eṉṉey,* பெ. (n.) தில்லைமரப்பட்டையினின்று எடுக்கும் எண்ணெய் (வின்.); black oil from the green park of the tillai tree.

[தில்லை + எண்ணெய்]

தில்லைவனம் *tillai-vaṉam,* பெ. (n.) சிதம்பரம்; Chidambaram, as formerly a tillai grove. "தில்லைவனத் தண்டாதிப னாமமதே துணையா" (கோயிற்பு. வியாக்கர. 10).

[தில்லை + வனம்]

தில்லைவாழந்தணர் *tillai-val-andaṉar,* பெ. (n.) தொகையடியார்களுள் ஒருசாரரான சிதம்பரத்திற்குரிய அந்தணர் (தேவா. 736, 1); the class of officiating brahmins at the Chidambaram temple, one class of tōkai-y-adiyār.

[தில்லைவாழ் + அந்தணர்]

தில்லைவிடங்கன்நொண்டிநாடகம் *tillai-viḍaṅgaṉ-noṇḍi-nāḍagam,* பெ. (n.) மாரி முத்துப்பிள்ளை என்பவரல் 18ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிற்றிலக்கியம் (சிற்.அக.); a literature authored by Māri-muttu-p-piḷḷai of 18th century A.D.

[தில்லை விடங்கன் + நொண்டி நாடகம்]

திலகம் *tilagam,* பெ. (n.) 1. நெற்றிப்பொட்டு; tilka, a small circular mark on forehead. "திலகந் தொடும் . . . திருநுதல்" (நற். 62). 2. சிறந்தது; that which is excellent, eminent; any chrished clofect. "திலக நீண்முடித் தோடு" (சீவக. 246). 3. மஞ்சாடி மரம்; barbadoes pride. "மரவமும் நாகமுந் திலக மருதமும்" (சிலப். 13, 152). 4. திலதகக்கலித்துறை (இல.அக.) பார்க்க; see *tilataga-k-kali-t-tuṟai* (செ.அக.).

திலகவதிஅம்மைதுதி *tilagavati-ammai-tudi,* பெ. (n.) ஞானியாரடிகளால் 19-20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது (சிற்.அக); a literature authored by Ñāniyāraḍigaḷ

[திலகவதி + அம்மை + துதி]

திலகவதியார் *tilagavatiyār,* பெ. (n.) திருநாவுக்கரசரின் தமக்கையார் (பெரியபு. திருநாவுக். 17); the elder sister of Tiru-návukaracar.

திலம் *tilam,* பெ. (n.) மஞ்சாடி (பிங்.); barbadoes pride.

திலு *tilu,* பெ. (n.) மூன்றினைக் குறிக்க வழங்கும் குழூஉக் குறி (யாழ்.அக.); three a slang term.

திலுப்புலு *tilu-p-pulu,* பெ. (n.) முப்பதைக் பெண்ணைக் குறிக்கும் குழூஉக்குறி; thirty; a slang term.

[திலு → திலுப்புலு]

திலோத்தமை *tilōttamai,* பெ. (n.) தெய்வ மகளிருளொருத்தி; a celestial nymph. "செருப்பனைத் தாங்கித் திருலோத்தமை சொல்". (கம்பரா. நித்னை. 2).

திவண்டல் *tivaṇḍal,* செ.குவி. (v.i.) துவளல்; staggering, relaxing (சா.அக.).

திவம்[1] *tivam,* பெ. (n.) 1. மேலுலகம் (பரமபதம்); heaven. "தவத்திலும் பசுநிரை மேய்ப்புவத்தி" (தவ்.திருவாய். 10,3,10). 2. வான் (யாழ்.அக.); sky.

திவம்[2] *tivam,* பெ. (n.) திவா பார்க்க (சங்.அக.); see *tivā.*

திவரம் *tivaram,* பெ. (n.) நாடு (சது.); country or rural tract.

திவலை *tivalai,* பெ. (n.) 1. சிதறுந்துளி (பிங்.); small drop; spray. "தெள்ளமுத முதவாமற் றிவலை காட்டி" (தாயு.பெற்றவட். 8). 2. மழைத் துளி (பிங்.); rain drop. 3. மழை (பிங்); rain.

[துவலை → திவலை]

திவவு *tivavu,* பெ. (n.) 1. யாழ்த்தண்டிலுள்ள நரம்புக் கட்டு; bands of catgut in a yāl. "செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்" (திருமுருகு. 140). 2. மலைமேலோரம் படிக்கட்டு (வின்.); slip cut on the sides of a mountain.

திவள்(ளு)[1]**-தல்** *tivaḷ-,* 2 செ.கு.வி. (v.i.) 1. துவளுதல்; to stagger, bend, as when unable to support a weight; to be supple or yielding. "திவளவன்னங்க டிருநன்ட காட்டுவ" (கம்பராபம்பை. 18). 2. வாடுதல்; to fade, wither. "அனங்க னெய்யக் குழைந்ததார் திவண்ட தன்றே" (சீவக. 2062). 3. கிடந்தசைதல்; to move, as on the ground; to swing. "குண்டலமும் . . . மணித் தொத்து நிலந்திவள" (சீவக. 3022). 4. விளங்குதல்; to shine. "திவளும் வெண் மதிபோல்" (திவ்.பெரியதி. 2, 7,1). 5. நீர்நிலை முதலிய வற்றிலே திளைத்தல்; to sport, as in water. "தன்மதந் திவண்ட வண்டு" (சீவக. 2313).

திவள்(ளு)[2]**-தல்** *tivaḷ-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தொடுதல் (பிங்.); to touch. 2. தீண்டி இன்புறுத்தல்; to gladden by touch. "திவண்டன . . . பூந்தழையே" (திருக்கோ. 200, உரை).

திவறு-தல் *tivaṟu-,* 5 செ.கு.வி. (v.i.) சாதல் (சூடா.); to die.

[தவறு → திவறு-.]

திவா *tivā,* பெ. (n.) 1. பகல் (பிங்.); day-time. "திவாவி னந்தமாகிய மாலையே" (பிரமோத். 6, 2). 2. நாள் (திவா.); day. "நீ தகைமைகொண்ட திவாத்தினில்" (இரகு. அயனு. 14). 3. திவி[2] பார்க்க; see *tivi*[2].

திவாகரம் *tivāgaram,* பெ. (n.) அம்பர்ச் சேந்தன் வள்ளன்மையால் திவாகரமுனிவரியற்றியதும் இப்போது வழங்கும் தமிழ் நிகண்டுகளில் மிகப் பழமையானதுமான நிகண்டு; the earliest of the extent Tamil glossaries, composed under the patronage of Ambar-c-cēndan by Tivākara-muṇivar.

திவாகரன் *tivāgaraṉ,* பெ. (n.) 1. திவாகர நிகண்டின் ஆசிரியர்; the author of Tivākaram. 2. ஞாயிறு (சூரியன்); sun. "திவாகரனே யன்ன பேரோளி வாணன்" (தஞ்சைவா. 119).

திளுப்பு *tiḷuppu,* பெ. (n.) கப்பலறைகட்கு ஏற உதவும் படி; cabin steps (செ.அக.).

திளை[1]**-த்தல்** *tiḷai-,* 11 செ.கு.வி. (v.i.) 1. நெருங்குதல் (சூடா.); to be close, crowded. "பன்மயிர் திளைத்திடில்" (காசிக. மகளிர். 8). 2. நிறைதல் (சூடா.); to be full; to abound, as water in a river. 3. அசைதல்; to swing to and fro; to move. 'தாமம் புறந்திளைப்ப' (பு.வெ. 1, 21). 4. விளையாடுதல்; to play. disport. 'எகினந்

துணையொடு திளைக்கும்' (அகநா. 34, 13). 5. முழுகுதல்; to dive, to sport in water. திளைக்குந் தீர்த்த மறாத' (தேவா. 533, 2). 6. இடைவிடாதொழுகுதல்; to flow, fall unceasingly. "தேனு மமிழ்துந் திளைத்தாங்கு" (சீவக. 519). 7. தொழிலில் இடைவிடாது பயிலுதல்; to practise constantly. "மட்டு வாக்கலிற்றிளைத் தவர்" (சீவக. 50). 8. மகிழ்தல்; to rejoice. 'மடந்தையர் சிந்தை திளைப்பன வாகாதே' (திருவாச. 49, 8). 9. பொருதல்; to fight. "ஈரெண்மர் திளைத்து வீழ்ந்தார்" (சீவக. 3076).

[துளை → திளை → திளை-. (வே.க. 275)]

திளை[2]-த்தல் *tiḷai-*, 8 செ.குன்றாவி. (v.t.) **துய்த்தல்;** to experience, enjoy, copulate with, "கன்னி நாரரையைத் திளைத்தலின்" (சீவக. 50).

திளை[3]-த்தல் *tiḷai-*, 8 செ.குன்றாவி. (v.t.) **கொதிக்கக் காய்ச்சுதல்** (நாஞ்.); to boil.

திளை[4]-த்தல் *tiḷai-*, 8 செ.குன்றாவி. (v.t.) **துளைத்தல்** (சூடா.); perforate, bore.

[துளை → திளை]

திற்றி *tiṟṟi*, பெ. (n.) 1. **கடித்துத் தின்னற்குரிய உணவு** (பிங்.); eatables that must be masticated before being swallowed. 2. **இறைச்சி;** meat. "எறிக திற்றி" (பதிற்றுப். 18, 2).

[தின் → தின்றி → திற்றி]

திற[1]-த்தல் *tiṟa-*, 12 செ.குன்றாவி. (v.t.) 1. **கதவு முதலியவற்றின் காப்பு நீக்குதல்;** to open, as a door, one's eyes. "துயில்கூர் நயனக் கடை திறவா மடவீர் கடைதிறமின்" (கலிங். 29). 2. **வழி முதலியவற்றின் அடைப்பு நீக்குதல்;** to lay open; to make an opening, avenue or passage, as in a wall. "பாதையைத் திறந்துவிட்டார்கள்". 3. **வெளிப்படுத்துதல்;** to divulge, disclose, unveil, reveal, as a secret. 'அவன் குட்டைத் திறந்துவிட்டான்'. 4. **தாள், பூட்டு முதலிய வற்றைத் திறத்தல்;** to unlock, unbar, unbolt. 5. **துளைத்தல்;** to make a breach; to bore. 'இளநீரின் கண்ணைத் திறந்தான்". 6. **பிளத்தல்;** to cut open. 'திறந்தன புண்களெல்லாம்' (கம்பரா. மாயாசனக. 56). 7. **நூல் முதலியவற்றை விரித்தல்;** to open as a book.

திற[2]-த்தல் *tiṟa-*, செ.குவி. (v.i.) **பிளவுபடுதல்;** to split open; to form a gap passage or breach. 'தடியடியால் தலை திறந்தது' (செ. அக.).

திறக்க *tiṟakka*, வி.எ. (adv.) **திறமையாக** (நாஞ்.); ability.

[திறம் → திறக்க]

திறக்கு[1]-தல் *tiṟakku-*, 5 செ.குவி. (v.i.) **மீதுறல்** (யாழ். அக.); to be increased.

திறக்கு[2] *tiṟakku*, பெ. (n.) **செயல்;** one's concerns, affairs. 'அவன் திறக்கிலே போகக்கூடாது' (செ.அக.).

திறங்கெட்டவன் *tiṟaṅ-keṭṭavaṉ*, பெ. (n.) 1. **வலியற்றவன்;** weak person. 2. **பயனிலி;** incompetent, incapable man (செ.அக.).

[திறம் + கெட்டவன்]

திறத்தகை *tiṟattagai*, பெ. (n.) **திறந்தவன்** (வின்.) பார்க்க; see *tirantavaṉ*.

[திறம் → திறத்தகை]

திறத்தவன்[1] *tiṟattavaṉ*, பெ. (n.) **செல்வ நிலையிலுள்ளவன்;** opulent, thriving, prosperous man (செ.அக.).

[திறம் + அத்து + அவன்]

திறத்தவன்[2] *tiṟattavaṉ*, பெ. (n.) 1. **வலியற்றவன்;** stout, strong person. 2. **திறனறிவன் (சமர்த்தன்);** clever, able person (செ.அக.).

[திறம் + அத்து + அவன்]

திறத்தாம்பட்டி *tiṟattāmpaṭṭi*, பெ. (n.) **கதவில்லாத வீட்டின் அறை** (முகவை. வழ.) (கட்டிட.); room which has no doors.

திறத்தார் *tiṟattār*, பெ. (n.) **ஒரு பகுதியார், பக்கத்தார்;** people of one side. "தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று காய்த்திய" (சிலப். வஞ்சின. 55).

திறத்தி *tiṟatti*, பெ. (n.) **மருத்துவச்சி;** mid-wife (செ. அக.).

[திறம் + அத்து + இ]

திறத்திறம் *tirattiram,* பெ. (n.) நான்கு சுரமுள்ள பண்வகை *(சிலப். 13, 106, உரை);* secondary melody type, quadratanic.

திறந்தமனம் *tiranta-manam,* பெ. (n.) வெளிப்படையான மனம்; open heart *(செ.அக.).*

[திற → திறந்த + மனம்]

திறந்தவெளி *tiranta-veli,* பெ. (n.) வெளியான இடம்; open place, plain *(செ.அக.).*

[திற → திறந்த + வெளி]

திறந்தவெளிக்கூர்துளைஇணைப்பு *tirandaveli-k-kūrtulai-inaippu,* பெ. (n.) நீள் விசிப் பலகைகளில் நடுக்கால்களைப் பொருத்தப் பயன்படும் இணைப்பு வகை; a joint in long bench. *(தச்சு).*

[திறந்தவெளி + கூர்துளை + இணைப்பு]

திறந்தவெளிப்பருந்துவால்இணைப்பு *tirantaveli-p-paruntuvāl-inaippu,* பெ. (n.) மேசைகளில் நடுக்கால்களின் இணைப்பு; a joint in table. *(தச். பொறி.).*

[திறந்தவெளி + பருந்துவால் + இணைப்பு]

திறந்தறை *tirantarai,* பெ. (n.) *1.* காவலற்ற இடம் *(யாழ். அக.);* open, unguarded place. *2.* விளைவற்ற நிலம்; barren country. *3.* மந்திரத்தை வெளியிடுவோன்; one who divulges; secrets; leaky person *(செ.அக.).*

திறந்துகாட்டு-தல் *tirantu-kāttu-,* 5 செகுன்றாவி. (v.t.) *1.* வெளிப்படையாக்குதல்; to lay open, divulge, disclose fully, as one's mind. *2.* தெளிவாக விளக்குதல்; to explain fully, illustrate clearly *(செ.அக.).*

[திறந்து + காட்டு-.]

திறந்துபேசு-தல் *tirantu-pēcu-,* 5 செ.குன்றாவி. (v.t.) மனத்தை விட்டுச் சொல்லுதல்; to speak, frankly or openly *(செ.அக.).*

[திறந்து + பேசு-.]

திறப்படு-தல் *tira-p-padu-,* 20 செ.கு.வி. (v.i.) கூறுபடுதல்; to be formed into divisions; to be arrayed; to be classified. 'வந்தடை பிணிசெய் காலாட் டிறப்படப் பண்ணி' *(சீவக. 3075).*

திறப்படு²-தல் *tira-p-padu-,* 20 செ.கு.வி. (v.i.) சீர்ப்படுதல்; to improve, as soil, health, strength, knowledge; to be prosperous. "வாழ்க்கை திறம்பட" *(ஞானா. பாயி. 5, 10).*

[திறம் + படு]

திறப்பண் *tira-p-pan,* பெ. (n.) குறைந்த நரம்புள்ள பண்; secondary melody types. "திறப்பண் பாடுகின்ற ஏல்வை" *(சிலப். 8. 43, அரும்.).*

[திறம் + பண்]

திறப்பணம் *tira-p-panam,* பெ. (n.) துரப்பணம்; timlet *(செ.அக.).*

[துரப்பணம் → திறப்பணம்]

திறப்பாடு *tira-p-pādu,* பெ. (n.) கூறுபாடு; necessary equipment, as discretion, strength of mind, etc.

[திறம் + பாடு]

திறப்பாடு² tira-p-padu, பெ. (n.) *1.* சீர்ப்படுகை; Improving, strengthening, enriching. *2.* திறமை; strength, ability. "வேலினையுடையான் திறப்பாட்டை நோக்கி" *(பு.வெ. 4, 16, கொளு, உரை).*

[திறம் + பாடு]

திறப்பி¹-தல் *tirappi-,* 11 செ.குன்றாவி. (v.t.) உறுதிப்படுதல்; to make firm, harder, consolidate *(செ.அக.).*

திறப்பு *tirappu,* பெ. (n.) *1.* வெளியிடம்; open, unfortified place. *2.* திறவுகோல்; key. *3.* பிளப்பு; cleft, opening. "மண் டிறப்பெய்த வீழ்ந்தான்" *(கம்பரா. கும்பக. 195).*

திறப்பு² *tirappu,* பெ. (n.) அரசுத் தீர்வை நிலம்; assessed lands *(செ.அக.).*

திறபடு-தல் *tira-padu-,* 20 செ.கு.வி. (v.i.) *1.* திறக்கப்படுதல்; to be opened. *2.* வெளியாதல்; to be disclosed, revealed.

[திற + படு-.]

திறம்¹ *tiram,* பெ. (n.) *1.* கூறுபாடு; constituents, component parts, necessary elements. "நிற்றிஞ் சிறக்க" *(புறநா. 6). 2.* வகை; kind, class, sort.

"முத்திற வுணர்வால்" (தண்கைப்பு. நந்தியு. 120). 3. சார்பு; party, side. "ஒருதிற மொல்காத நேர்கோல்" (கலித். 42). 4. ஐந்து சுரமுள்ள இசை (சிலப். 4, 106, உரை); a secondary melody type, pentatonic. 5. பாதி (தைலவ. தைல); half. 6. வழி; way, path, manner. "அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்" (பொருந. 230). 7. வரலாறு; history. "ஆபுத்திரன்றிறம்" (மணிமே. 12: 27). 8. குலம்; family. "கருங்கண்ணி திறத்து வேறாக் கட்டுரை பயிற்றுகின்றான்" (சீவக. 548). 9. சுற்றம்; relatives. "புனைகடி மாலைமாதர் திறத்திது மொழிந்து விட்டார்" (சீவக. 2071). 10. உடம்பு; body. "உயிர்திறம் பெயர்ப்பான்போல்" (கலித். 100). 11. புனைவு; garb, costume. "தவத்திறம் பூண்டு தருமங் கேட்டு" (மணிமே. பதி. 93). 12. கோட்பாடு; doctrine. "சமயக்கணக்கர் தந்திறங் கேட்டதும்" (மணிமே. பதி. 88).. 13. இயல்பு; quality, state, nature. "உன்றிற மறிந்தேன்" (மணிமே. 4: 96). 14. செயற்பாடு (விஷயம்); matter, affair. "பதைக்கின்ற மாதின்றி றத் தறி யேன் செயற்பாலதுவே" (திவ். இயற். திருவிருத். 34). 15. செய்தி; news, information. "அந்திறங் கேட்ட தோழி" (காஞ்சிப்பு. வாணீச. 27). 16. வழிமுறை (பிங்.); means, method. "உய்திற மில்லை" (கம்பரா. திருவவ. 17). 18. நற்பேறு (பாக்கியம்); opulence, wealth, fortune. "திருவுறப் பயந்தன டிறங்கொள் கோசலை (கம்பரா. திருவவ. 104). 19. மிகுதி; fullness, plenteousness. திறமாகக் கொடுத்தான். 20. கூட்டம்; multitude, crowd. "திறங்களாகி யெங்குஞ் செய்களூடுழல் புள்ளினங்காள்" (திவ். திருவாய். 6, 1,3). 21. ஆடு 80, பசு80, எருமை 80, கூடின கூட்டம் (கணக்கதி. 19); a herd of 80 sheep, 80 cows and 80 buffaloes. 22. மருத்துவத் தொழில் (வின்.); mitwifery.

[துற → திற → திறம் (வே.க. 279)]

திறம்[2] *tiram*, பெ. (n.) 1. நிலைபேறு (பிங்.); firmness, stability. 2. வலிமை; strength, power. "திறமிருக்கும் புயத்தில்" (அரிச்.பு.நகர. 15). 3. திறமை; ability, cleverness, dexterity. 4. மேன்மை; goodness, excellence. "சோதி திறம்பாடி" (திருவாச. 7, 14). 5. கற்பு; chastity. "தீதிலா வடமீனின் றிறமிவ டிறமென்னும்" (சிலப்.மங்கல 27). 6. ஒழுக்கம்; moral conduct; established order. "திறத்துளி வாழ்து மென்பார்" (ஆசாரக். 89). 7. நேர்மை; uprightness. "திறத்துழியன்றி வஞ்சித் தெய்துதல்" (கம்பரா. மாரீச. 206).

திறம்பு[1]**-தல்** *tirambu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. மாறுபடுதல்; to change; to be over-turned; to be sub-verted. "நியாயமே திறம்பினும்' (கம்பரா. மந்தரை. 66). 2. நரம்பு முதலியன பிறழ்தல்; to sprain.

திறம்பு[2]**-தல்** *tirambu-*, 5 செ.குன்றாவி. (v.t.); தவறுதல்; to swerve from , from deviate.

திறமாய் *tiram-āy*, வி.எ. (adv.) உறுதியாய்; certainly. திறமாய் முப்பது கோட்டை நெல் விளையும்.

[திறம் + ஆய்]

திறமை[1] *tiramai*, பெ. (n.) நற்பேறு (வின்.); good fortune, wealth.

திறமை[2] *tiramai*, பெ. (n.) 1. அறிவுத்திறம்; ability, cleverness. "உண்ணமைப் பெருக்கமாந் திறமை காட்டிய" (திருவாச. 42, 7). 2. வலிமை; strength, vigour, power. 3. துணிவு; bravery, courage, manliners. 4. மேன்மை (வின்.); goodness, excellence.

[திறம் + மை]

திறமைக்காரன் *tiramai-k-kāran*, பெ. (n.) பணக்காரன் (வின்.); wealthy person.

[திறமை + காரன்]

திறமைசாலி *tiramai-cāli*, பெ. (n.) ஆற்றல் பொருந்தியவன்; able man.

[திறமை + சாலி]

திறல் *tiral*, பெ. (n.) 1. வலி; strength, vigour. "துன்னருந் திறல்" (புறநா. 3, 8). 2. துணிவு; bravery, courage, valour. 3. வெற்றி; victory. "திறல் வேந்தன் புகழ்" (பு.வெ. 9, 31, கொளு). 4. ஒளி; lustre, as of precious stones. "திறல்விடு திருமணி யிலங்கு மார்பின்" (பதிற்றுப். 463). 5. போர் (யாழ்.அக.); battle; war. 6. பகை (யாழ்.அக.); hostility, enmity.

க. திருளு

[திறம் → திறல்]

திறலோன் *tiralōṉ*, பெ. (n.) *1.* பதினைந் தாண்டுள்ளவன்; a male person aged fifteen years. "திறலோன் யாண்டே பதினைந் தாகும்" *(பன்னிருபா. 230). 2.* திறவோன்[2] பார்க்க; see *tiṟavōṉ*. "திறலோனகலஞ் செருவின் முந்நாள் புண்படப் போழ்ந்த பிரான்" *(திவ்.பெரியதி, 2, 9, 6).*

[திறல் → திறலோன்]

திறவது *tiṟavadu*, பெ. (n.) *1.* செவ்விது; that which is proper; that which is complete. "திறவதி னாடி" *(தொல்.பொருள். 521). 2.* உறுதியானது; that which is certain, permanent. "திறவதிற் றீர்ந்த பொருள்" *(திரிகடு. 72).*

[திறம் → திறவது]

திறவறி-தல் *tiṟa-v-aṟi-*, 2 செ.குவி. (v.i.) *1.* வழி வகையறிதல்; to know ways and means. *2.* மந்தணத்தை வெளியிடுந் தகுதியறிதல் *(வின்.)*; to know how to disclose secret things. *3.* பட்டறிவெய்தல் *(வின்.)*; to be experienced.

[திறவு + அறி-.]

திறவன் *tiṟavaṉ*, பெ. (n.) திறத்தவன்; வகையறிந்தவன்; உடையன்; skilled person.

திறவாளி *tiṟavāḷi*, பெ. (n.) திறவான் *(யாழ்.அக.)* பார்க்க; see *tiṟavāṉ*.

[திறம் → திறவாளி]

திறவான் *tiṟavāṉ*, பெ. (n.) திறமுடையான் *(யாழ்.அக.)*; ableman.

[திறம் → திறவான்]

திறவிது *tiṟavidu*, பெ. (n.) திறவது பார்க்க; see *tiṟavadu*. "திறவிதின் மொழிவாம்" *(சீவக. 124).*

[திறம் → திறவிது]

திறவு *tiṟavu*, பெ. (n.) *1.* திறக்கை *(சது.)*; opening unveiling. *2.* வாயில்; gate-way. *3.* வழி; way. *4.* வெளியிடம்; open space. "திறவிலே கண்ட காட்சியே" *(திவாசக. 37, 6). 5.* காரணம்; reason, cause. "அதுதனை நேருந் திறவியாது" *(ஞானவா. மாவலி. 28). 6.* உளவு; spying.

[திற → திறவு]

திறவுக்கோல் *tiṟavu-k-kōl*, பெ. (n.) திறவுகோல் பார்க்க; see *tiṟavu-kōl*. "திறக்கும் பெருந் திறவுக்கோலும்" *(அருட்பா, 6, திருவருட்போ. 2).* 'திறந்த கதவுக்குத் திறவுகோல் தேடுவான் ஏன்?' *(பழ.).*

[திறவு + கோல்]

திறவுகுச்சி *tiṟavu-kucci*, பெ. (n.) திறவுகோல் பார்க்க; see *tiṟavukōl*.

[திறவு + குச்சி]

திறவுகோல் *tiṟavu-kōl*, பெ. (n.) பூட்டைத் திறக்க உதவுங்கருவி; key.

[திறவு + கோல்]

திறவோன்[1] *tiṟavōṉ*, பெ. (n.) மெய்யறிவு உள்ளவன்; person of discernment or discrimination. "திறவோர் காட்சியிற் றெளிந்தனம்" *(புறநா. 192).*

[திறம் → திறவோன்]

திறவோன்[2] *tiṟavōṉ*, பெ. (n.) வலிமை யுடையவன்; person of strength or capacity.

[திறம் → திறவோன்]

திறன் tiṟaṉ, பெ. (n.) திறம்[1] பார்க்க; see *tiṟam*[1]. "திறனறிந்தேதிலா ரிற்கட் குருடனாய்" *(நாலடி, 158).*

[திறம் → திறன்]

திறனில்யாழ் *tiṟaṉ-il-yāḻ*, பெ. (n.) நெய்தல் யாழ்த் திறத்தொன்று *(சூடா.)*; an ancient secondary melody type of maritime tract.

[திறன் + இல் + யாழ்]

திறாணி *tiṟāṇi*, பெ. (n.) திறமை; ability.

[திறன் → திறனி → திறானி → திறாணி]

திறவிச்சதா *tiṟavicadā*, பெ. (n.) மூக்கிரட்டை *(மலை.)*; pointed leaved hoyweed.

திறுதட்டம் *tiṟutaṭṭam*, பெ. (n.) திறுதிட்டம் பார்க்க; see *tiṟutiṭṭam*.

திறுதிட்டம் *tiṟutiṭṭam*, பெ. (n.) நேர்நிற்கை; straightness; steepness; perpendicular position, erectness, as of a person stunned by surprise *(செ.அக.).*

[நிறுதிட்டம் → திறுதிட்டம்]

திருதிரு-க்கல் *tiru-tiru-*, 11 செ.கு.வி. (v.i.) அஞ்சிவிழித்தல் *(யாழ்.அக.)*; to stare, look wild, as one in fear.

திருதிறெனல் *tiru-tirenal*, பெ. (n.) **அச்சத்தோடு நோக்கற் குறிப்பு**; expr. of staring, looking wild with fear.

[திரு + திரு + எனல்]

திறை *tirai*, பெ. (n.) **கப்பம்**; tribute. "திறைசுமந்து நிற்குந் தெவ்வர் போல" *(சிலப். 25: 50)*.

திறையள-த்தல் *tirai-y-ala-*, 3 செ.குன்றாவி. (v.i.) **கப்பங்கட்டுதல்**; to pay tribute. "தீர்ந்து வணங்கித் திறையளப்ப" *(பு.வெ. 10, 3)*.

[திறை + அள-]

தின்(னு)-தல் *tin-*, 13 செ.குன்றாவி (v.t.) 1. **உண்ணுதல்**; to eat, feed. "இரும்பே ரொக்கலொடு தின்மென" *(புறநா. 150)*. 2. **மெல்லுதல்**; to chew. "உண்ணுஞ் சோறும் பருகுநீருந் தின்னும் வெற்றிலையும்" *(திவ். திருவாய். 6, 7)*. 3. **கடித்தல்**; to bite, gnash, as one's teeth. "தின்று வாயை விழிவழித் தீயுக" *(கம்பரா. ஒற்றுக். 45)*. 4. **அரித்தல்**; to eat away as white ants to consume, corrode, மரத்தைக் கறையான் தின்றுவிட்டது. 5. **வருத்துதல்**; to afflict, distress. "பிணிதன்னைத் தின்னுங்காள்" *(திரிகடு. 88)*. 6. **அழித்தல்**; to destroy, ruin. 7. **அராவுதல்**; to file. "அரந்தின்ற கூர்வேல்" *(கம்பரா. சம்புமா. 6)*. 8. **வெட்டுதல்**; to cut. "கோணந் தின்ற வடுவாழ் முகத்த" *(மதுரைக். 597)*. 9. **அரித்தல்**; to cause irritating sensation, as in the skin. "தின்றுவவிடஞ் சொறிந்தாற் போல" *(திவ். திருவாய். 4, 8,9), பன்னீ.)* 10. **பெறுதல்**; to undergo, receive. "கானகம் போய்க்குமை தின்பார்கள்" *(திவ். திருவாய். 4, 112)*.

தின்பண்டநல்கல் *tinpanda-nalkal*, பெ. (n.) முப்பதிரண்டறங்களுள் வழிச் செல்வோருக்கு உணவிடும் அறச்செயல் *(பிங்.)*; providing food for travllers, regarded as an act of charity, one of muppattirandaram.

[தின்பண்டம் + நல்கல்]

தின்பண்டம் *tin-pandam*, பெ. (n.) 1. **உணவுப் பொருள்**; eatables. 2. **பணியாரம்**; sweetmeat, confection.

தெ. தின்பண்டமு

[தின் + பண்டம்]

தின்பீர்க்கு *tinpirkku*, பெ. (n.) **உண்பதற்குரிய பீர்க்கு**; edible duffa as distinguished from பேய்ப்பீர்க்கு *(சா.அக.)*.

[தின் + பீர்க்கு]

தின்புடலை *tin-pudalai*, பெ. (n.) **தின்னத் தகுந்த புடலை, கறிப்புடலை**; vegetable gourd distinct from பேய்ப்புடலை bitter gourd *(சா.அக.)*.

[தின் + புடலை]

தின்மை *tinmai*, பெ. (n.) 1. **தீமை**; evil, misfortune. "தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே" *(கம்பரா. தனியன்.)*. 2. **சாவு**; death. "நன்மை தின்மைகளுக்கு இரட்டைச் சங்கும்" *(தெ.க.தொ. 3 கல். 47)*. 3. **தீயசெயல்**; evil deed. "அடியவர் நன்மைதின்மை யறிபவன்" *(திருவாலவா. 35, 11)*.

தின்றி *tinri*, பெ. (n.) **தின்பண்டம் பார்க்க** *(திவா.)*; see *tin-pandam*.

[தின் → தின்றி]

தின்றிப்போத்தன் *tinri-p-pōttan*, பெ. (n.) **அளவிறந்து உண்போன்**; one who indulges to excess in eating *(சா.அக.)*.

[தின்றி + போத்து → போத்தன்]

தின்றிப்போத்து *tinri-p-pōttu*, பெ. (n.) **மிகுதியாக உண்பவன்**; loc. glutton.

[தின்றி + போத்து]

தின்றுப்பார்-த்தல் *tinru-p-pār-*, 4 செ.குன்றாவி (v.t.) **உருசித்தல்**; tasting *(சா.அக.)*.

[தின் → தின்று + பார்-]

தின்றுருட்டி *tinrutti*, பெ. (n.) **தின்றழிப்போன்**; extravagent fellow, spendthrift, prodigal.

[தின்று + உருட்டி]

தின்னாக்காய் *tinnākkāy,* பெ. (n.) பேய்ப் புடலை; wild snake gourd. *2.* பேய்ப் பீர்க்கு; bitter luffa *(சா.அக.).*

[தின் + ஆ + காய். 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தின்னாத்தீனி *tinnāttīni,* பெ. (n.) *1.* இழிந்த உணவு; unferior food. *2.* உண்ணத் தகாத உணவு; food unfit for eating. *(சா.அக.).*

[தின் + ஆ + தீனி. 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தின்னாச்சாதி *tinnā-c-cāti,* பெ. (n.) உடனுண்ணுதற்குத் தகுதியற்ற தாழ்ந்த சாதி; low castes with whose members commensality is prohibited *(செ.அக.).*

[தின் + சு + சாதி.]

தின்னி *tinni,* பெ. (n.) தின்னிமாடன் பார்க்க; see *tinnimādan. 2.* கண்டவிடங்களி லெல்லாந் தின்போன்; one who eats indiscriminately in all places *(செ.அக.).*

[தின் + இ]

தின்னிமாடன் *tinni-mādan,* பெ. (n.) அளவிறந்துண்போன்; glutton *(செ.அக.).*

தினவு *tinavu,* பெ. (n.) சொறி *(சூடா.);* itching sensation; eczema, scaly eruptions; psoriasis. "சொறிந்து தீர்வுறு தினவினர்" *(கம்பரா. மூலபல. 10).*

தினவுச்சிரங்கு *tinavu-c-ciranku,* பெ. (n.) நமைச்சலேடு கூடிய சிரங்கு; pruritis *(சா.அக.)/*

[தினவு + சிரங்கு]

தினவுண்டாக்கு-தல் *tinavundākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) நமைச்சல் எடுக்கும்படி செய்தல்; to cause itching sensation *(சா.அக.).*

[தினவு + உண்டாக்கல்]

தினவுண்டாக்கி *tinavundākki,* பெ. (n.) கள்ளு கள்ளென நமைச்சலுண்டாக்கும் பூண்டு; any sort of plant, causing prickly sensational *(சா.அக.).*

[தினவு + உண்டாக்கி]

தினவுதின்னல் *tinavu-tinnal,* செ.குன்றாவி (v.t.) சொறிதல்; itching *(சா.அக.).*

[தினவு + தின்னல்]

தினை *tinai,* பெ. (n.) *1.* சிறு தவச வகை; Indian millet, cereal, "தினைக்காலுள் யாய்விட்டகன்று மேய்க்கிற்பதோ" *(கலித். 108: 33).* 'தினை விதைத்தவன் தினை யறுப்பான், வினை விதைத்தவன் வினை யறுப்பான்' *(பழ.). 2.* தினைவகை; wild bermuda grass. *3.* சாமை *(அக.நி.);* little millet. *4.* ஒருவகைப் புல்; paddy field grass. *5.* மிகச் சிறிய அளவு; a very small measure, as a grain of millet, a trifle. "தினைத்துணை நன்றி செயினும்" *(குறள், 104).*

[துல் (→ தில்) → தின்→ தினை (மு.தா. 129)]

தினைக்குருவி *tinai-k-kuruvi,* பெ. (n.) சிறு குருவி வகை; black headed munia *(செ.அக.).*

[தினை + குருவி]



தினைச்சாமை *tinai-c-cāmai,* பெ. (n.) தினை[3] பார்க்க; see *tinai.*

[தினை + சாமை]

தினைத்துணை *tinai-tunai,* பெ. (n.) தினை-5 பார்க்க; see *tinai 5.*

[தினை + துணை]

தினைப்பிண்டி *tinai-p-pindi,* பெ. (n.) தினை மா; millet flour; millet meal *(சா.அக.).*

[தினை + பிண்டி]

தினைப்புல் *tinai-p-pul,* பெ. (n.) *1.* தினை இனத்தைச் சேர்ந்த ஒருவகைப்புல்; a kind of

grass of the species of millet. *2.* தினை வைக்கோல்; millet grass *(சா.அக.).*

[தினை + புல்]

தினைப்புனம் *tiṉai-p-puṉam,* பெ. (n.) தினைவிளையும் புலம்; millet field.

[தினை + புனம்]

தினைப்பொரி *tiṉai-p-pori,* பெ. (n.) தினையை வறுத்த பொரி; parched millet *(சா.அக.).*

[தினை + பொரி]

தினையரிசி *tiṉai-y-ariśi,* பெ. (n.) தினையின் அரிசி *(பதார்த்த. 831);* husked millet.

[தினை + அரிசி]

தினையளவு *tiṉai-y-aḷavu,* பெ. (n.) மிகச்சிறிய அளவு; very small quantity, as much as a grain of millet. "தங் காதலரோடு தினையளவும் ஊடுதல் செய்யாமை" *(குறள், 1252, உரை).*

[தினை + அளவு]

தீ[1] *tī,* பெ. (n.) 'த்' என்ற மெய்யெழுத்தும் 'ஈ' என்ற உயிரெழுத்தும் கூடிய கூட்டெழுத்து; the syllable formed by adding the long vowel 'i' to the consonent 't'.

[த் + ஈ]

தீ[2]**-தல்** *tī-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* எரிந்து போதல்; to be burnt. "சிறைதீந்த பருந்து" *(கல்லா. 7). 2.* பயிர் முதலியன கருகுதல்; to be withered or blighted, an growing crops in times of drought. *3.* சோறு முதலியன காந்துதல்; to be charred or burnt, as food in cooking. *4.* சீற்றங் கொள்ளுதல்; to be hot with anger; to be inflammed. *5.* அழிதல்; to perish; to be ruined. 'வினையாவுந் தீவதுசெய்யும்' *(இரகு. அயனுதய. 32).*

க. தீ.

[தேய்தல் = உரசுதல். தே → தீ. தீதல் = எரிதல், கருகுதல் (வ.வ.17)]

தீ[3]**-தல்** *tī-,* 11 செ.குன்றாவி. (v.t.) *1.* காந்த வைத்தல்; to allow food to be charred in cooking; to burn. *2.* காயச் செய்தல்; to dry up water, as the sun; to cause humours to be absorbed in the body by means of external application; to boil and dry fish so that it may keep. *3.* பயிர் முதலியன கருகச் செய்தல்; to cause to wither, an growing crops. *4.* சுடுதல் *(வின்.);* to scar, cauterise.

தீ[4] *tī,* பெ (n.) *1.* நெருப்பு; fire. "வளித்தலைஇய தீயும்" *(புறநா.2). 2.* விளக்கு; lamp. "தீத்துரி இயற்று" *(குறள். 929). 3.* வேள்வித்தீ; sacrificial fire. 'தீத்திறம் புரிந்தோன்' *(சிலப். 11,57). 4.* செரிமானச் சூடு; digesiny heat. *5.* சினம்; anger. "மன்னர்தீ யீண்டு தங்கிளையோடு மெரித்திடும்" *(சீவக. 250). 6.* தீமை; evil. "தீப்பால தான்பிறர்கட் செய்யற்க' *(குறள், 206). 7.* நஞ்சு; poison. "வேகவெந் தீ நாகம்" *(மணி. 20,98). 8.* நிரயம் (நரகம்); hell. "அழுக்காறு..... தீயுழி யுய்த்து விடும்" *(குறள். 168).*

ம., க. தீ

[தேய்தல் = உரசுதல். தே → தீ = நெருப்பு, விளக்கு, சினம், தீமை, எரியகம் (நரகம்) (வ.வ. 16).]

தீ[5] tī, பெ. (n.) அறிவு (ஞானம்); knowledge, understanding. "தீதாவசவரிமலர் செல்வா" (சுந்தரந். 31).

தீக்கஞ்சி *tī-k-kañci*, பெ. (n.) ஆரத்திச் சூடம்; camphor, as fearing fire (செ.அக.).

[தீ + கு - தீக்கு + அஞ்சி. நெருப்புக்கு அஞ்சுவது, அதாவது உடனே பற்றிக் கொள்வது.]

தீக்கட்டை *tī-k-kaṭṭai*, பெ. (n.) எரிகட்டை; firewood.

[தீ + கட்டை.]

தீக்கடவுள் *tī-k-kaḍavuḷ*, பெ. (n.) நெருப்புக் கடவுள் (திவா.); fire-God. "தீக்கடவு டந்த வரத்தை" (நள. கலிநீங்5).

[தீ + கடவுள்]

தீக்கடன் *tī-k-kaḍaṉ*, பெ. (n.) 1. இறுதிச் சடங்கு; duty of performing the cremation ceremony, as of a son to his parents. "தீக்கடன் செய்திட்டாரே" (இரகு. இந்து. 63). 2. தீச்செயல்; worst deed. (செ.அக.).

[தீ + கடன்]

தீக்கடை-தல் *tī-k-kaḍai-*, செ.கு.வி. (v.i.) கடைந்து நெருப்பு உண்டாக்குவது; to produce fire by fire drill. "தீக்கடைந்து வைத்தேன்" (பெரியபு. விண்ணம். 415).

[தீ + கடை-.]

தீக்கடைகோல் *tikkaḍai-kōl*, பெ. (n.) கடைந்து நெருப்புண்டாக்க உதவும் அரசு அல்லது வன்னிமரத்தின் சிறுகட்டை; fire-drill, piece of wood for producing fire by friction. "தீக்கடை கோலாலே....... கையாலே கடைந்து கொண்ட" (பெரும்பாண். 1172, உரை.)



மறுவ. நெலிகோல்

[தீ + கடைகோல்]

தீக்கடுகால்வன் *tī-k-kaḍukālvaṉ*, பெ. (n.) நெருப்பைப் போன்ற கொடிய நோய்; disease of firely poison (சா.அக.).

[தீ + கடுகால்வன்]

தீக்கண் *tī-k-kaṇ*, பெ. (n.) சினம் கொண்ட கண்; fire-eye.

[தீ + கணம்]

தீக்கணம் *tī-k-kaṇam*, பெ. (n.) செய்யுண் முதற் சீராக அமைக்கத் தகாததும் நிரை நேர் நிரையென வருவதுமாகிய செய்யுட்கணம் (திவா.); metrical foot of nirai-nēr-nirai considered inauspicious at the commencement of a poem.

[தீ + கணம்]

தீக்கணமூலி tīkkaṇamūli, பெ. (n.) கொப்புளத்தையெழுப்பு மூலி; any drug or drugs capable of raising blisters, blistering agents such as mustard seed, lead wort etc. (சா.அக.)

[தீக்கணம் + மூலி. கடுகு, சித்தரமூலம் முதலியன கொப்புளத்தை உண்டாக்க வல்லன.]

தீக்கணாக்கனி *tīkkaṇākkaṉi*, பெ. (n.) 1. கொடிய நெருப்பு; a great fire. 2. தோலைச் சிவக்கச் செய்து கொடிய எரிச்சலை உண்டாக்கும் நோய்; disease marked by redenning of the skin and great burning sensation as burns, erythema, crysipalas, herpes etc; 3. கொடிய நஞ்சு; virulent poison (சா.அக.).

[தீக்கணம் + அக்கினி.]

தீக்கதி tīkkadi, பெ. (n.) 1. நிரயம் (நரகம்); hell, as a world of evil. "தினையேனுந் தீக்குழிக்கட் செல்லார்" (திவ்.இயற். 1). 2. தீயூழ் (கொடிய விதி); evil fate (செ.அக.).

[தீ + கதி]

தீக்கதிக்கும்பச்சை *tīkadikkum-paccai,* பெ. (n.) நாகப்பச்சை (வின்.); a variety of green stone.

தீக்கதிகரும்பச்சை *tīkadikarum-paccai,* பெ. (n.) தீக்கதிக்கும்பச்சை (யாழ்அக.) பார்க்க; see *tīkadikkum-paccai.*

[தீ + கதி + கருமை + பச்சை]

தீக்கதிர் *tī-k-kadir,* பெ. (n.) 1. உலையாணிக் கோல் (வின்); blacksmith's poker. 2. தீச்சுடர்; flame.

[தீ + கதிர்]

தீக்கரண்டி *tī-k-karaṇḍi,* பெ. (n.) தீயெடுக்குங்க கருவி (வின்.); small ladle for taking the charcoal.

[தீ + கரண்டி]



தீக்கருந்தேன் *tīkaruntēṉ,* பெ. (n.) கொம்புத் தேன்; honey collected on branches of tree. 'இன்சுவைத்தேன்'. (சா.அக.).

[தீம் + கருந்தேன்]

தீக்கரும்பு *tī-k-karumbu,* பெ. (n.) விறகு; fire wood. "எருமுட்டையுந் தீக்ரும்பையும்... அடுக்குவதற்கு" (மதி.க., ii. 91).

[தீ + கரும்பு]

தீக்கருமம் *tī-k-karumam,* பெ. (n.) 1. தீயசெயல்; evil deed. 2. தீக்கடன் பார்க்க; see *tī-k-kaḍaṉ.* 3. தீத்திறச்செயல்; fire sacrifice. 'நவையி நீக்கமம் யாவும்" (கூர்மபு. அனுக்கிர. 25).

[தீ + கருமம்]

தீக்கரை *tī-k-karai,* பெ. (n.) முண்முருங்கை (மலை.); common coral tree.

[தீ + கரை]

தீக்கல் *tī-k-kal,* பெ. (n.) 1. தீத்தட்டிக்கல்; strike a light, flint stone. 2. இரும்புச் சாரமுள்ள கல்; iron pyritest. (செ.அக.).

ம. தீக்கல்லு

[தீ + கல்]

தீக்கலம் *tī-k-kalam,* பெ. (n.) 1. தீச்சட்டி பார்க்க; see *tī-c-caṭṭi.* 2. ஈமப் பள்ளி; funeral pure. "தீக்கலந் திருத்திச் செல்வனை வெய்திஏேற்றினார்" (கம்பரா. பள்ளி. 130).

[தீ + கலம்]

தீக்களி *tī-k-kaḷi,* பெ. (n.) மிக்க சூட்டைப் பொறுக்கக்கூடிய களிமண்; a kind of clay cpable of sustaining intense heat - fire clay (சா.அக.).

[தீ + களி]

தீக்கறி *tī-k-kaṟi,* பெ. (n.) சுண்டற் கறி; madr.; a warmed up dish of the remnants of the day's curry.

[தீ + கறி]

தீக்கனா *tī-k-kaṉā,* பெ. (n.) தீமை விளைக்கும் கனவு; ominous dream, dream of coming evil. "இடருற்ற தீக்கனா...... நினைந்தாள்" (சிலப. 19.72).

[தீ + கனா]

தீக்காப்புச்சட்டை *tī-k-kāppu-c-caṭṭai,* பெ. (n.) தீத்தடுப்புச் சட்டை; fire-proof shirt.

[தீ + காப்பு + சட்டை]

தீக்காய்-தல் *tī-k-kāy-,* செ.குவி. (v.i.) குளிர் காய்தல்; to warm oneself at the fire. "அகலா தணுகா துதீக்காய்வார் போல்க" (குறள், 691).

[தீ + காய்தல்]

தீக்காரியம் *tī-k-kāriyam,* பெ. (n.) வேள்வி; பொல்லாங்கு; calamity.

[தீ + காரியம்]

தீக்கால் *tī-k-kāl,* பெ. (n.) கொள்ளிவாய்ப் பிசாசு; a meteor flirting about in the right over marshy ground foslish fire (சா.அக).

[தீ + கால்]

தீக்காலம் *tī-k-kālam*, பெ. (n.) கேடு விளைக்குங் காலம்; evil times *(செ.அக.)*.

[தீ + காலம்]

தீக்காலி *tī-k-kāli*, பெ. (n.) *1.* தன்வரவால் குடிகேடு விளைப்பவளாகக் கருதப்படுபவள்; woman believed to bring misfortune to a family by her arrival. *2.* ஓர் அசுரன் *(பெரியபு. திருக்குறிப்பு. 30)*; an asura.

[தீ + காலி]

தீக்காற்று *tī-k-kāṟṟu*, பெ. (n.) நெருப்புக் காற்று *(வின்.)*; scorching wind.

[தீ + காற்று]

தீக்கி-த்தல் *tīkki-*, 11 செ.கு.வி. (v.i.) சூளுரைத்தல்; to take a vow. "பின்னதன் வழியே யொழுகினர் தீக்கித்து" *(திருக்காளத்.பு. 29, 23)*.

தீக்கு-தல் *tīkku-*, செ.குன்றாவி. (v.t.) தீயும்படி செய்தல்; scorching *(சா.அக.)*.

தீக்குச்சி *tīkkucci*, பெ. (n.) *1.* தேய்த்தால் தீயுண்டாக்கும் மருந்தை நுனியிற் கொண்ட குச்சி; match. *2.* தீங்கு விளைப்போன்; mishcief maker. *3.* காவலர்; police constable.

[தீ + குற்றி → தீக்குச்சி]



தீக்குச்சு *tīkkuccu*, பெ. (n.) தீக்குச்சி பார்க்க; see *tī-k-kucci*.

[தீ + குச்சி → குச்சு]

தீக்குடர்க்கல் *tīkkuḍarkkal*, பெ. (n.) பித்தக் குடல் ஊதை; a disease of the intestine *(சா.அக.)*.

தீக்கடுக்கை *tikkaḍukkai*, பெ. (n.) வெடிகுண்டு; shell, bomb *(செ.அக.)*.

[தீ + குடுக்கை]

தீக்குண்டம் *tī-k-kuṇḍam*, பெ. (n.) வேள்வித் தீ வளர்க்கும் ஓம குண்டம்; sacrificial pit *(செ.அக.)*.

[தீ + குண்டம்]



தீக்குண்டம்[3] *tī-k-kuṇḍam*, செ.குன்றாவி. (v.t.) நோக்கம் தொடு உணர்வு, அறிவுரை முதலியவற்றால் குரு அருள்புரிதல் (குருதீட்சை செய்வித்தல்) *(வின்.)*; to impart spiritual illimination to a disiple by look touch or teaching, as in religious initiation by a guru.

தீக்குணம்[1] *tī-k-kuṇam*, பெ. (n.) *1.* தீயபண்பு; evil nature or disposition vice. *2.* வெப்பம்; heat as the quality of fire. "தீக்குண மோரைந்து" *(சிலப். 3, 26, உரை, பக்.103)*.

[தீ + குணம்]

தீக்குணம்[2] *tī-k-kuṇam*, பெ. (n.) பசி, சோம்பு, மைதுனம், காட்சி, நீர், வேட்கையென இவை தீக்குணம் அடிசிலம்பு (3:26).

தீக்குணர் *tī-k-kuṇar*, பெ. (n.) *1.* தீவினைஞர்; wicked, evil persons. *2.* கீழ்மக்கள் *(சூடா.)*; base, vulger person.

[தீக்குணம் → தீக்குணர்]

தீக்குதி-த்தல் *tī-k-kuti-*, செ.கு.வி. (v.i.) *1.* தீக்குளி-த்தல் பார்க்க; see *tī-k-kuḷi-*. *2.* தீக்குழிபாய்-தல் பார்க்க; see *tī-k-kuḻipay-*.

[தீ + குதி-]

தீக்குருவி *tī-k-kuruvi*, பெ. (n.) தீக்கோழி பார்க்க; see *tī-k-kōḻi*.

[தீ + குருவி]

தீக்குவெறுங்குகை *tikkuverungugai*, பெ. (n.) *சவர்க்காரம் (யாழ்அக.);* detergent soap.

தீக்குழி *tī-k-kuḻi*, பெ. (n.) வேள்விசெய்தற் பொருட்டேனும் உயிர்விடற் பொருட்டேனும் இறங்குவதற்கு அமைக்கப்படும் நெருப்புக் குண்டம்; pit with live charcoals for persons to walk on or to throw themselves into in self-immolation. *(செ.அக.).* "தீக்குழி வலித்தியாந் தீரினுந் தீந்தும்" *(பெருங். மகத. 25, 138).*

[தீ + குழி]

தீக்குழிபாய்-தல் *tī-k-kuḻi-pāy*, செ.குன்றாவி. (v.i.) வேண்டுதலின் பொருட்டு தீக்குழியில் இறங்கி நடத்தல்; to walk on burning charcoals in a pit, as in fulfilment of a vow.

[தீக்குழி + பாய்-.]

தீக்குளி-த்தல் *tī-k-kuḷi-*, செ.கு.வி. (v.i.) உடம்பில் தீயிட்டுக் கொள்ளுதல்; to plunge into flames, as in an ordeal. இந்தி ஒழிக, தமிழ்வாழ்க வென்று முழக்கமிட்டுக் கொண்டே அரங்கநாதன் தீக்குளித்தார் *(உ.வ.).*

[தீ + குளி-.]

தீக்குறி *tī-k-kuṟi*, பெ. (n.) தீநிமித்தம்; bad sign or symptom, unpropitious omen.

[தீ + குறி]

தீக்கூர்மை *tī-k-kūrmai*, பெ. (n.) *1.* இந்துப்பு; rock salt. *2.* *திலசாரம்;* salt extracted from sesame seed.

[தீ + கூர்மை]

தீக்கையோன் *tikkaiyōṉ*, பெ. (n.) அரன்; Lord Sivaṉ.

[தீ + கையோன்]

தீக்கோட்டான் *tikkōṭṭāṉ*, பெ. (n.) ஒரு காயகற்ப மூலிகை; a herbal used for rejuvenation. *(சா.அக.).*

[தீ + கோட்டான்]

தீக்கொள்ளி *tī-k-koḷḷi*, பெ. (n.) *1.* கொள்ளிக் கட்டை; fire wood. *2.* தீக்கொளுத்தி பார்க்க; see *tī-k-koḷutti*.

[தீ + கொள்ளி]

தீக்கொளுத்தி *tī-k-koḷutti*, பெ. (n.) *1.* நெருப்பிடுவோன்; incendiary. *2.* கலகமூட்டு வோன்; one who stirs up quarrels.

[தீ + கொளுத்தி]

தீக்கோழி *tī-k-kōḻi*, பெ. (n.) நெருப்புக் கோழி; ostrich.

[தீ + கோழி]



தீக்கோள்[1] *tī-k-kōḷ*, பெ. (n.) கேடு குறிக்கும் கோள்; malignant planet.

[தீ + கோள்]

தீக்கோள்[2] *tī-k-kōḷ*, பெ. (n.) கூரைவீடு முதலியவற்றில் மந்தணமாகத் தீப்பற்ற வைக்கை (இ.வ.); arson, incendiarism.

[தீ + கோள்]

தீகுறு-தல் *tīguṟu-*, பெ. (n.) தீயினால் அழிதல்; to be destroyed by fire. "அகிலந் தீகற் றிடர்ப்பட" *(இரகு.யாகப். 89).*

[தீ + உறு - தீக்குறு → தீகுறு-.]

தீங்கனி *tīṅ-kaṉi*, பெ. (n.) இனிய பழம்; delicious fruit. "தீங்கனி நாவல்" *(மணி. 9,10).*

[தீம் + கனி - தீம்கனி → தீங்கனி]

தீங்கு *tīṅgu*, பெ. (n.) *1.* தீமை (பிங்.); evil, injury, harm; crime. "தீங்கு செய்தன்னமே" *(அகநா. 112).* *2.* துன்பம்; misfortune, calamity, distress. "தீங்கணைந்தோ ரல்லுந் தேறாய்" *(திருக்கோ. 179).* *3.* குற்றம் (பிங்.); fault, defect, blemish.

[தீ → தீமை → தீயின் தன்மை. தீ → தீங்கு]

தீச்சகுனம் *tī-c-cagunam,* பெ. (n.) தீக்குறி *(சங்.அக.);* evil omen.

[தீ + சகுனம்]

தீச்சகுனப்பறவை *ticcaguna-p-paravai,* பெ. (n.) *சாக்குருவி;* bird, foreboding one's approaching dealt by its peculiar cry.

[தீ + சகுனப்பறவை]



தீச்சட்டி *tī-c-catti,* பெ. (n.) *1. கணப்புச் சட்டி;* fire pan, chating dish. *2.* வேண்டுதலாக எடுக்கும் *தீச்சட்டி;* fire pet carried in fulfilment of a vow.

[தீ + சட்டி]



தீச்சடம் *tī-c-cadam,* பெ. (n.) சிறுநீர் *(சங்.அக.);* urine.

[தீ + சடம்]

தீச்சலம் *tī-c-calam,* பெ. (n.) கடல் நுரை *(சா.அக.);* see froth *(மீன்பிடி. தொ.சொல்.).*

[தீ + சலம்]

தீச்சனகம் *tī-c-canagam,* பெ. (n.) இருப்பை *(சங்.அக.);* South Indian mahua.

[தீ + சனகம்]

தீச்சனம் *tī-c-canam,* பெ. (n.) மிளகு *(மலை.);* pepper.

[தீ + சனம்]

தீச்சார்பு *tī-c-cārbu,* பெ. (n.) *1.* தீயோருடனாய *தொடர்பு;* association with the wicked. *2.* தீய *குணம்;* vicious propensity evil tendencies.

[தீ + சார்பு]

தீச்சுட்டகாந்தல் *tī-c-cutta-kāntal,* பெ. (n.) நெருப்பினால் நேர்ந்த *அழற்சி;* burning sensation due to fire-burns.

[தீ + சுட்டகாந்தல்]

தீச்சுட்டபுண் *tī-c-cutta-p-puṇ,* பெ. (n.) தீயினால் *நேர்ந்தபுண்;* ulcer caused by fire-burns. *(சா.அக.).*

[தீ + சுட்டபுண்]

தீச்சுடர் *tī-c-cudar,* பெ. (n.) *1. நெருப்புச் சுடர்;* flame. "தீச்சுடர் நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்" *(நீதிநெறி. 19).* *2.* வெடியுப்பு *(மூ.அ.);* saltpetre.

[தீ + சுடர்]

தீச்சுரண்டி *tī-c-curaṇḍi,* பெ. (n.) நெருப்பைச் சுரண்டி எடுக்கப் பயன்படுத்தும் ஒரு *கருவி;* an inrom grating used as a scrapper for removing fire from a furnace *(சா.அக.).*

[தீ + சுரண்டி]

தீச்சுரம் *tī-c-curam,* பெ. (n.) *1. பித்தக் காய்ச்சல்;* biblious ferver. *2.* மிகுதியான *காய்ச்சல்;* burning fever *(சா.அக.).*

[தீ + சுரம்]

தீச்சொல் *tī-c-col,* பெ. (n.) *பழிச்சொல்;* slander, evil word. "தாங்கல் கடனாகுந் தலைசாய்க்கவரு தீச்சொல்" *(சீவக. 498).*

[தீ + சொல்]

தீசல் *tīšal,* பெ. (n.) *1.* சமையலிற் *கருகியது;* that which is overcooked or burnt. *2.* தீய *குணத்தினன்;* bad-tempered person.

[தீயல் → தீசல்]

தீசற்றனம் *tīšaṟṟanam,* பெ. (n.) *1. தீக்குணம்;* wickedness. *2.* *தாராளமின்மை;* illiberal nature.

[தீசல் + தனம்]

தீஞ்சுபோ-தல் *tīñcu-pō-*, செ.கு.வி. (v.i.) தீ² பார்க்க; see *tī*; flame.

[தீய்ந்து + போ → தீஞ்சுபோ-.]

தீஞ்சுவை *tīñcuvai*, பெ. (n.) சுவைக்கத் தித்திப்பானது; நற்சுவை; sweet to taste (சா.அக.).

[தீம் + சுவை]

தீஞ்சேற்றுக்கடிகை *tīñ-cēṟṟu-kaḍikai*, பெ. (n.) கண்ட சருக்கரைத்தேறு; sugar candy. "அமிர்தியன் றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும்" (மதுரைக். 532).

[தீம் + சேற்றுக்கடிகை]

தீஞ்சேறு *tīñ-cēṟu*, பெ. (n.) இனிய பாகு; molasses, treack, syrup. "கரையுறு கரும்பின் றீஞ்சேற் றியாணர்" (பதிற்றுப். 75,6).

[தீம் + சேறு]

தீஞ்சொல் *tīñcol*, பெ. (n.) இன்மொழி; sweet words. "இளிகொண்ட தீஞ்சொல்" (பு.வெ. 1, 15).

[தீம் + சொல்]

தீட்டக்கல் *tīṭṭa-k-kal*, பெ. (n.) 1. சாணைக்கல்; white stone. 2. மாக்கல்; marble stone (சா.அக.).

தீட்டக்காரி *tīṭṭa-k-kāri*, பெ. (n.) தீட்டுக்காரி பார்க்க; see *tīṭṭu-k-kāri*.

[தீட்டுக்காரி → தீட்டக்காரி]

தீட்டடங்கல் *tīṭṭaḍaṅkal*, பெ. (n.) மாதவிடாய் நின்றுபோகை; menopause, failure of menstrual discharge, amenorrhcea (செ.அக.).

[தீட்டு + அடங்கல்]

தீட்டணசாரம் *tīṭṭaṇa-šāram*, பெ. (n.) இலுப்பை (மலை.); South Indian mahua.

தீட்டணம் *tīṭṭaṇam*, பெ. (n.) கஞ்சாங்கோரை (மலை.); white basil.

[தீட்டு + அணம்]

தீட்டம் *tīṭṭam*, பெ. (n.) 1. தீட்டு1 பார்க்க; see *tīṭṭu*. 2. மலம், பீ; faeces.

[தீட்டு + அம் - தீட்டம்]

தீட்டரிசி *tīṭṭarici*, பெ. (n.) தவிடு நீக்கிய அரிசி; cleansed, polished rice (செ.அக.).

[தீட்டு + அரிசி]

தீட்டல் *tīṭṭal*, செ.குன்றாவி. (v.t.) 1. தடவுதல்; to massage. "செம்புனல் வந்தங் கடிவருட" (தேவா. 112, 5). 2. கோதுதல்; to smooth as the hair. (கழக.த.அக.). 3. அரிசியைத் தவிடு போகக் குற்றுதல்; to remove bran and polish as rice by pounding.

தீட்டலரிசி *tīṭṭalariši*, பெ. (n.) தீட்டரிசி பார்க்க; see *tīṭṭariši*.

[தீட்டல் + அரிசி]

தீட்டா-தல் *tīṭṭā-*, செ.கு.வி. (v.i.) 1. தூய்மை யின்மை அடைதல்; to be defiled, polluted. 2. மாத விடாயாதல்; to be in one's periods, as a woman (செ.அக.).

[தீட்டு + ஆதல்]

தீட்டிப்பார்-த்தல் *tīṭṭi-p-pār-*, செ.குன்றாவி. (v.tr.) கல்வி முதலியவற்றைச் ஆய்வு செய்தல்; to test, as one's learning by question (செ.அக.).

தீட்டு¹-தல் *tīṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கூராக்குதல்; to whet, as a weapon; to sharpen or rub lenies on a board. "தீட்டு மிலைவலி வேலண்ணலே" (வெங்கைக்கோ. 232). 2. துலக்குதல்; to purify, polish. 3. அரிசி குத்திச் தூய்மை செய்தல்; to remove bran and polish, as rice by pounding. 4. பூசுதல்; to rub; smear, anoint. "தீட்டினார் நறுஞ் சாந்தமும்" (சூளா. தூது. 41). 5. கோதுதல்; to smooth, as the hair. "கூந்த றீட்டி" (புறநா. 62). 6. எழுதுதல் (பிங்.); to write inscribe. "தொண்டையுந் தீட்டி" (திருக்கோ. 79). 7. சித்திரித்தல்; to paint, draw pictures. "உருவமெய்த் தோன்றத் தீட்டிரும் பலகையிற் றிருத்தி" (பெருங். உஞ்சைச். 33, 112). 8. சொல்லுதல்; to express. "தெவ்வ ரம்பனைய சொல் தீட்டினான்" (கம்பரா. நகர்நீங். 1677). 9. அடித்தல்; to belabour, thrash. அவனை நன்றாய்த் தீட்டினான் (செ.அக.).

தீட்டு²-தல் *tīṭṭu-*, செ.குன்றாவி. (v.t.) சாத்துதல்; to wear. "எழின்முடி தீட்டினானே" (சீவக. 2641).

[தீண்டு → தீட்டு-.]

தீட்டு³ *tīṭṭu*, பெ. (n.) 1. கூராக்குகை; whetting, "தீட்டமை கூர்வாள்" (பெருங். உஞ்சைச் 42, 22).

2. சீட்டு; ola note, slip. "கையெழுத்திட்ட தீட்ட தன்றோ" (மதுரை. பதிற். 67). 3. பூச்சு; plastering. "தீட்டார் மதில்" (திருவாசக. 8,6). 4. அடி; blow, stroke, cut. அவனை நல்ல தீட்டுத் தீட்டினான். 5. தூய்மை; cleaning, polishing. இந்த அரிசிக்குத் தீட்டுப் போதாது (செ.அக.).

[தீண்டு → தீட்டு]

தீட்டு[4] *tittu*, பெ. (n.) 1. தீண்டுகை; touching. "ஒட்டுத் தீட்டுக் கலப்பினிர்" (சி.சி.பா. ஆசிவக. 8). 2. மகப்பேறு, சாவு முதலியவற்றால் உண்டாவதாகக் கருதப்படும் கெடுதல்; defilement, pollution, as from catanvin child birth, death of a relation. "பல தீட்டுக்கு முழுக்கொன்று" (இராமநா. உயுத். 113). 3. மாதவிடாய்; woman's monthly course (செ.அக.).

தீட்டுக்கல் *tittu-k-kal*, பெ. (n.) சாணைக்கல்; whet-stone, hone.

[தீட்டு + கல்]



தீட்டுக்கவி *tittu-k-kavi*, பெ. (n.) சீட்டுக்கவி; epistle in verse. "அந்தத் தீட்டுக்கவி காட்டுக்கெறிந்த நிலவாகிப்போம்" (தமிழ்நா. 255).

[சீட்டுக்கவி → தீட்டுக்கவி]

தீட்டுக்கழித்தல் *tittu-k-kalittal*, பெ. (n.) இறப்பு, மாதவிடாய் பிள்ளைப் பேறு காலங்களில் ஏற்படும் தூய்மைக்கேட்டைத் தலைமுழுக்கு, வீட்டைத் துப்புரவுபடுத்துதல், முதலிய முறையால் தூய்மையாக்குதல்; removing the pollution caused by child birth, death, puberty etc., ceremonically by bathing, cleaning, etc. (சா.அக.).

[தீட்டு + கழித்தல்.]

தீட்டுக்காரி *tittu-k-kāri*, பெ. (n.) 1. மாதவிடாய் கொண்டவள்; a woman in her periods. 2. தொற்றுள்ளவள்; a woman in pollution.

[தீட்டு + காரி]

தீட்டுக்குற்றி *tittu-k-kurri*, பெ. (n.) கருவி தீட்டுந் தடி (யாழ்.அக.); wood used as whetting-rod.

[தீட்டு + குற்றி]



தீட்டுக்குறி *tittu-k-kurri*, பெ. (n.) ஓலைச்சீட்டு வகை (T.A.S. V. 208.); ōla chit, note.

[தீட்டு + குறி]

தீட்டுக்கோல் *tittu-k-kōl*, பெ. (n.) எழுதுகோல்; brush used in painting (செ.அக.).

[தீட்டு + கோல்]



தீட்டுத்தடி *tittu-t-tadi*, பெ. (n.) தீட்டுக்குற்றி (யாழ்.அக.) பார்க்க; see *tittu-k-kurri*.

[தீட்டு + தடி]

தீட்டுத்தொடக்கு *tittu-t-todakku*, பெ. (n.) தீட்டு 3,2 பார்க்க; see *tittu 3, 2.*

[தீட்டு + தொடக்கு]

தீட்டுப்பலகை *tīṭṭu-p-palagai,* பெ. (n.) கத்தி முதலியன தீட்டும் பலகை; a board of plap for sharpening drive or other instruments (செ.அக.).

[தீட்டு + பலகை]

தீட்டுமரம் *tīṭṭu-maram,* பெ. (n.) தீட்டுப்பலகை பார்க்க; see *tīṭṭu-p-palagai.*

[தீட்டு + மரம்]

தீட்டுமனை *tīṭṭu-maṉai,* பெ. (n.) நாட்டு ஓடுகள் வளைவாக உருவாக்கப் பயன்படும் மரப் பலகை (செங்.வழ.); a wooden piece used for bending the earthern roof.

[தீட்டு + மனை]

தீட்டுலக்கை *tīṭṭulakkai,* பெ. (n.) அரிசிதீட்ட உதவும் உலக்கை வகை; pestle used for cleaning rice (செ.அக.).

[தீட்டு + உலக்கை]

தீட்டுவீடு *tīṭṭu-vīḍu,* பெ. (n.) பிள்ளைப் பிறப்பால் அல்லது இறப்பால் தூய்மை யிழந்த வருத்தந் தோய்ந்த வீடு; house considered polluted from child birth-death (சா.அக.).

[தீட்டு + வீடு]

தீட்டொழிவு *tīṭṭoḻivu,* பெ. (n.) மாதவிடாய் நின்று போகை; the stopping of the menses entiely, the change of life menopause.

[தீட்டு + ஒழிவு]

தீட்பானவன் *tīṭpāṉavaṉ,* பெ. (n.) இழிஞன் (ய); low degraded peoen; one who has disgraced himself.

[தீட்பு + ஆனவன்]

தீட்பு *tīṭpu,* பெ. (n.) *1.* இழிவு (யாழ்.அக.); bascres, degradation; inferiority. *2.* ஒழுக்கத்தில் உண்டான வடு; stizma an one's character (செ.அக.).

[தீண்டு → தீட்பு]

தீண்டமாழ்கி *tīṇḍa-māḻgi,* பெ. (n.) தொட்டால் வாடி (நீலகேசி, 365 உரை); a sensitive plant.



[தீண்ட + மாழ்கி]

தீண்டல்[1] *tīṇḍal,* பெ. (n.) தீட்டு, 3 பார்க்க; see *tīṭṭu* (செ.அக.).

[தீண்டு → தீண்டல்]

தீண்டல்[2] *tīṇḍal,* பெ. (n.) வயல்; field. "பிரமராயன் தீண்டலில்" (S.I.I. vii, 3).

[தீண்டு → தீண்டல்]

தீண்டலதிகம் *tīṇdal-adigam,* பெ. (n.) பெரும்பாடு என்னும் நோய்; excessive flow of the monthly courses, menorrhagia.

[தீண்டல் + அதிகம்]

தீண்டாதபொழுது *tīṇḍāta-poḻudu,* பெ. (n.) மகளிர் மாதவிடாய்க் காலம் (நேமிநா. 10, உரை); the period of mensus, when pollution is observed.

[தீண்டாத + பொழுது]

தீண்டாநெருப்பு *tīṇḍā-neruppu,* பெ. (n.) கற்புக்கரசி; woman of unapproachable chastity தொடுதற்கரிய நெருப்புப் போல் தன் ஒழுக்கத்தில் மேம்பட்டு இருத்தலால் இவ்வாறு குறிக்கப் பட்டாள்.

[தீண்டு + ஆ + நெருப்பு]

தீண்டியம் *tīṇḍiyam,* பெ. (n.) பவளக்குறிஞ்சி (மலை.); small oval acute-leaved crape myrtle..

தீண்டு-தல் *tīṇḍu-,* 5 செகுவி. (v.t.) *1.* தொடுதல்; to touch, feel, come in contact with. "எங்கோலந் தீண்ட லினி" (பு.வெ. 9, 50). *2.* தீட்டுப்படுத்துதல்; to pollute by contact; to defile, contaminate by

touching. 3. பாம்பு முதலியன அடித்தல்; to infuse poison, envenom, as a snake by biting. "பதுமையைப் பாம்பு தீண்டிற் றென்றலும்" (சீவக. 1273). 4. பற்றுதல்; to catch, seize, hold of "தீப்பிணி தீண்ட லரிது" (குறள். 227). 5. அடித்தல்; to beat. "கொம்பின் வீயுகத் தீண்டி" (அகநா. 21).

தீத்தகம் *tittagam,* பெ. (n.) பொன் (யாழ்.அக.); gold.

தீத்தட்டி *ti-tatti,* பெ. (n.) தீத்தட்டிக்கல் (யாழ்.அக.) பார்க்க; see *ti-tatti-k-kal.*

[தீ + தட்டி]

தீத்தட்டிக்கல் *ti-t-tatti-k-kal,* பெ. (n.) சிக்கி முக்கிக்கல் (சங்.அக.); strike-a-light, flint stone.

[தீத்தட்டி + கல்]

தீத்தட்டிக்குடுக்கை *ti-t-tatti-k-kudukkai,* பெ. (n.) தீத்தட்டிக்கல் (யாழ்.அக.) பார்க்க; see *ti-tatti-k-kal.*

[தீத்தட்டி + குடுக்கை]

தீத்தட்டிவளையம் *ti-t-tatti-valaiyam,* பெ. (n.) சிக்கிமுக்கி தட்டும் இரும்பு வளையம் (யாழ்.அக.); a bund piece of iron used with strike-a-light.

[தீத்தட்டி + வளையம்]

தீத்தந்திடும்புண் *ti-t-tantidum-pun,* பெ. (n.) நெருப்புச்சுட்ட புண்; ulcer caused by fire; burns (சா.அக.).

[தீ + தந்திடும் + புண்]

தீத்தரசம் *tittarasam,* பெ. (n.) நாங்கூழ் வகை (யாழ்.அக.); a kind of earth worm.

தீத்தருகோல் *tittaru-kol,* பெ. (n.) தீக்கடை கோல் (சூடா.) பார்க்க; see *tikkadai-kol.*

[தீ + தருகோல்]

தீத்தலோகம் *titta-logam,* பெ. (n.) 1. வெண் கலம்; bell-metal. 2. நிறம்; colour. 3. மாந்தளிர்க் கல்; a kind of green stone (செ.அக.).

தீத்தா *titta,* பெ. (n.) வட்டத் திருப்பி (மலை.); kidney-leaved practeale moon-seed.

தீத்தாங்கம் *tittangam,* பெ. (n.) மயில் (யாழ்.அக.); peacock.

தீத்தாங்கி *tittangi,* பெ. (n.) 1. வாயில் நிலைமேல் படுத்தமைக்கப்பட்ட தீத்தடுக்கும் பலகை; fire fender, masonary projection to protect a door way from fire. 2. அடுப்பிலிருந்து எழும் தீயானது மேற்கூரையிற் சென்று தாக்காத படியும், விறகு முதலியன வைத்துக் கொள்ள உதவும் படியும் அடுப்பின்மீது சற்றொப்ப 5 அடி உயரத்தில், அமைக்கப்பட்டுள்ள பரண்; a mantelpiece or mantelshelf intended mainly for preventing the sparks shot off from the oven from reaching the roof and also for preserving cut fuel and other thing that require to be kept warm.

[தீ + தாங்கி]

தீத்தி *titti,* பெ. (n.) 1. ஒளி; brightness; 2. அழகு; beauty. 3. வெண்கலம்; bell-metal (செ.அக.).

தீத்தியம் *tittiyam,* பெ. (n.) அரத்தை (மலை); galangal.

தீத்திரள் *tittiral,* பெ. (n.) ஊழித் தீ (பிங்.); conflagration at the end of a karpam.

தீத்திறம் *ti-t-tiram,* பெ. (n.) 1. கொலை முதலிய தீச்செயல்; murder, heinous deed. "தீத்திறம் புரிந்தோன் செய்துயர் நீங்க" (சிலப். 115, 71). 2. தீவளர் செய்பாடு; fire sacrifice. "தீத்திறம் புரிந்தோன் செப்பக் கேட்டு" (சிலப். 11, 57).

[தீ + திறம்]

தீத்தீண்டல் *ti-t-tindal,* பெ. (n.) மணச்சடங்கு வகை; a marriage ceremony (செ.அக.).

[தீ + தீண்டல்]

தீத்தெய்வம் *ti-t-teyvam,* பெ. (n.) தீக்கடவுள் (சூடா.) பார்க்க; see *ti-k-kadavul.*

[தீ + தெய்வம்]

தீத்தொழில் *tit-t-tolil,* பெ. (n.) 1. தீச்செயல்; evil deed, sinful deed. "தீத்தொழிலே கன்றி" (நாலடி. 551). 2. தீவளர் செய்கை; fire sacrifice. "மறைவல்லார்கள் தீத்தொழில் பயிலும்" (திவ். பெரியதி. 4, 5, 3).

[தீ + தொழில்]

தீதி *titi,* பெ. (n.) வேட்கை (யாழ்.அக.); thirst.

தீது *tītu*, பெ. (n.) *1.* தீமை; evil, vice. "நன்றிது தீதென" (திருவாச. 49, 2). *2.* குற்றம்; fault, blemish, defeat. "தீதுதீர் நியமத்து" (திருமுரு. 70). *3.* தீச்செயல்; sinful deed. "உள்ளத்தா லுள்ளலுந் தீதே" (குறள். 282). *4.* துன்பம்; suffering, distress. "தீதுண்டோ மன்னு முயிர்க்கு" (குறள். 190). *5.* இடையூறு; difficulty, hindrance. "தீதின் றுருள்கநீ யேந்திய திகிரி" (மணி. 22, 16). *6.* சாவு; death. "நின்மகன் றீதி னீங்கினான்" (சிவக. 32). *7.* கேடு; ruin. "அன்ல் கனற்றத் தீதுறும் பஞ்சியின் உபதேசகா" (சிவவிரத. 160). *8.* உடம்பு (சிலப். 19, 66, உரை); body.

[தீமை → தீது]

தீதை *tītai*, பெ. (n.) *1.* இளைஞை; girl. *2.* அறிவு; intelligence (செ.அக.).

தீந்தமிழ் *tīn-tamil*, பெ. (n.) இனிய தமிழ்; sweet elegant Tamil. "தீந்தமிழ் வேந்த னரிகேசரி" (இறை. 3, பக்.47).

[தீம் + தமிழ்]

தீந்தா *tīntā*, பெ. (n.) எழுதற்குரிய மசி; Ink.

தீந்தாக்கூடு *tīntā-k-kūḍu*, பெ. (n.) மசிக்கூடு; ink bottle (செ.அக.).

[தீந்தா + கூடு]

தீந்தாச்சரக்கு *tīntā-c-carakku*, பெ. (n.) அன்னபேதி (புதுவை.); green vitriol.

[தீந்தா + சரக்கு]

தீந்துபோ-தல் *tīntu-pō-*, செ.குன்றாவி (v.t.) கரிந்து போதல்; seething over the fire (சா.அக.).

[தீர்ந்து + போதல் - தீர்ந்துபோதல் → தீந்துபோ-]

தீந்தொடை *tīn-toḍai*, பெ. (n.) யாழ் நரம்பு; strike of a lute. "தீந்தொடை மகரவீணை" (சீவக. 608). *2.* யாழ்; lute. "தீந்தொடையின் சுவை" (சீவக. 1328). *3.* தேனடை; beehive. "தீந்தொடைத் தேனினம்" (பெருங். வத்தவ. 3, 80).

[தீம் + தொடை]

தீநட்பு *tī-naṭpu*, பெ. (n.) தீயாரொடுளதாகிய நட்பு (குறள். அதி, 32); evil association.

[தீ + நட்பு]

தீநா[1] *tīnā*, பெ. (n.) *1.* கப்பல் திசை தப்பாமலிருத்தற்காகப் பனைகளைக் காலாக நாட்டி அதன்மீதே மண்ணிட்டு எரிக்கும் விளக்கு (சிலப். 6, 143, உரை); a large lamp lighted on an earthen vessel and mouted on palmyra trunks, used in ancient days as a signal for mariners. *2.* கப்பலிலாவது கரையிலாவது கப்பலோட்டிகளுக்கு எச்சரிக்கை யடையாளமாக எரிக்கப்படும் தீப்பந்தம் (வின்.); lighted torch kept either on ships or on shore, as a signal (செ.அக.).

[தீ + நா]

தீநாக்கு *tī-nākku*, பெ. (n.) *1.* தீயின் நாக்கு; flame, as the tongue of fire. *2.* கருநாக்கு; tinn. evil tongue (செ.அக.).

[தீ + நாக்கு]

தீநாய் *tīnāy*, பெ. (n.) இடுகாட்டில் திரியும் நாய்; dog that frequents the burning ground. "தீநா யுடையக் கவ்வி" (மணி. 6, 114).

[தீ + நாய்]

தீநாற்றம் *tī-nāṟṟam*, பெ. (n.) முடை; bad smell (கழ.தமி.அக).

தீநிமித்தம் *tīnimittam*, பெ. (n.) தீக்குறி; evil omen (செ.அக.).

[தீ + நிமித்தம்]

தீநிறம் *tīniṟam*, பெ. (n.) துளிர்க்கல்; dark red stone (சா.அக.)

[தீ + நிறம்]

தீநீர் *tī-nīr*, பெ. (n.) *1.* நன்னீர்; sweet, pure water. "சுனைகொ டீநீர் சோற்றுலைக் கூட்டும்" (அகநா. 169). *2.* மருந்துக்குதவும் வடிநீர்; medicated, filtered water. *3.* இனிய இளநீர்; sweet liquid of the tender coconut. "தாழைத் தீநீரோடு" (புறநா. 24).

[தீம் + நீர்]

தீநுரை *tī-nurai*, பெ. (n.) கடல்நுரை (யாழ்.அக.); cuttle bane.

[தீ + நுரை]

தீப்பசி *ti-p-paši*, பெ. (n.) **கொடும்பசி;** pinching hunger. "தீப்பசி மாக்கட்குச் செழுஞ்சோ றீத்து" (*மணி. 18, 117*).

[தீ + பசி]

தீப்படு-தல் *ti-p-padu-*, செ.கு.வி. (v.i.) 1. **நெருப்புப் பற்றுதல்;** to catch fire. 2. **இறத்தல்;** to die, a term used in reference to kings. தீப்பட்டுப்போன மாமன்னர்!.

தெ. தீப்படுக

[தீ + படு-]

தீப்படை *ti-p-padai*, பெ. (n.) **தீக்கடவுளின் அம்பு;** missile of the fire-god. "தீப்படைப் பினை மாற்றிக் கந்தபு" (*மூன்றாநாட்பானு. யுத். 93*).

[தீ + படை]

தீப்பந்தங்கோயில் *ti-p-pandan-köyil*, பெ. (n.) **உடன்கட்டையேறிய தொட்டிய மகளிர் பொருட்டு எடுக்கப்பட்ட மண்டபம்;** tone erected in honour of tottia widows who have performed sati (*செ.அக.*).

[தீ + பந்தங்கோவில்]

தீப்பள்ளயம் *ti-p-pallayam*, பெ. (n.) **அம்மன் கோயில் திருவிழாவில் ஆண்டுதோறும் பூக்குழியிறங்கும் நிகழ்ச்சி** (செந்., 10,24); the annual festival of walking on a fire-pit the presense of Tiraupadi-y-amman.

[தீ + பள்ளயம்]

தீப்பற்று-தல் *ti-p-parru-*, செ.கு.வி. (v.i.) **நெருப்புப் பற்றுதல்;** to catch fire, as a house. வீடு தீப்பற்றியது.

[தீ + பற்று-]

தீப்பறக்கத்தேய்-த்தல் *ti-p-parakka-t-tēy-*, செ.குன்றாவி. (v.t.) **உடம்பில் சூடு உண்டாகும்படி தேய்த்தல்;** body with oil as to cause heat on the body (*சா.அக.*).

[தீ + பறக்கத்தேய்-]

தீப்பற-த்தல் *ti-p-para*, செ.கு.வி. (v.i.) 1. **பரபரப்பாய் நடத்தல்;** to proses in full vigour. 2. **கடுமையாதல்;** to be oppressive as the rule of a martinet.

[தீ + பற-]

தீப்பறவை *ti-p-paravai*, பெ. (n.) **நெருப்புக் கோழி;** ostrich (*செ.அக.*).

[தீ + பறவை]

தீப்பாய்-தல் *ti-p-pāy-*, செ.கு.வி. (v.i.) **தீயிற் பாய்தல்;** to pluge into flarres, as a wife on the funeral pure of her husband. "பெருங் கோப் பெண்டு தீப்பாய்வாள்" (*புறநா.246*).

[தீ + பாய்-]

தீப்பால் *ti-p-pāl*, பெ. (n.) **தீவினைகள்;** signful deed (*கோ.தமி.அக.*).

தீப்பி *tippi*, பெ. (n.) **நெருப்பு** (*யாழ்.அக.*); fire.

தீப்பிடி-த்தல் *ti-p-pidi-*, செ.கு.வி, (v.i.) **தீப்பற்று பார்க்க;** see *ti-p-parru*.

[தீ + பிடி-]

தீப்பிணி *ti-p-pini*, பெ. (n.) 1. **கொடிய நோய்;** malignant disease. "பசியென்னுந் தீப்பிணி" (*குறள். 227*). 2. **காய்ச்சல்;** fever. "தென்னட லுற்ற தீப்பிணி" (*தேவா. 858, 11*).

[தீ + பிணி]

தீப்பியம் *tippiyam*, பெ. (n.) 1. **ஓமம்** (*மலை*); bishop's weed. 2. **தீச்சுடர்** (*யாழ்.அக.*); flame.

தீப்பிரகாசி *tippirakāši*, பெ. (n.) **குங்கிலியம்** (*மலை.*); Australian dammer.

தீப்பிரம் *tippiram*, பெ. (n.) **வெளிச்சம்** (*யாழ்.அக.*); brilliance.

தீப்பிரயகம் *tippirayakam*, பெ. (n.) **தீப்பியம் பார்க்க;** see *tippiyam*.

தீப்பு *tippu*, பெ. (n.) **தீயாற் கருக்குகை** (*சங்.அக.*); seorching, blackening by fire.

[தீ → தீப்பு]

தீப்புட்பம் *ti-p-putpam*, பெ. (n.) **சண்பகப்பூ** (*சங்.அக.*); champak flower.

[தீ + புட்பம்]

தீப்புண் *ti-p-pun*, பெ. (n.) **தீயாற் சுட்ட புண்** (*சங்.அக.*); burn; scald. தீப்புண் ஆறும், வாய்ப்புண் ஆறாது.

[தீ + புண்]

தீப்புண்களிம்பு *tī-p-puṇ-kaḷimbu*, பெ. (n.) சுற்சுண்ணாம்பு தெளிந்த நீரும் தேங்காய் எண்ணெயும் சரி எடை எடுத்துக் குலுக்கித் துணியில் நனைத்துப் புண்ணுக்குப் போடும் மருந்து; an oinment or emulsion made of lime water calcium hydroxide and coconut oil in equal parts. This can be applied to burns or scalds *(சா.அக.)*.

[தீ + புண் + களிம்பு]

தீப்புத்தோளார் *tī-p-pu-t-tōḷār*, பெ. (n.) உறுப்பாற் பெயர் பெற்ற கழகக் காலப் புலவர்; a poet who lived in sangam age.

குறுந்தொகையின் முதற் பாடல் இவர் எழுதியதேயாகும்.

தீப்பூச்சி *tī-p-pūcci*, பெ. (n.) மின்மினிப்பூச்சி; fire-fly.

[தீ + பூச்சி]

தீப்பூடு *tippūḍu*, பெ. (n.) 1. நீர்மேல் நெருப்பு; fire on water blishtering ammonia. 2. புல்லுருவி; stone melting plant. 3. கொப்புளம் எழுப்பும் பூடு; any plant the paste of which when applied causes blister cantharids. *(சா.அக.)*

[தீ + பூடு]

தீப்பெட்டி *tippeṭṭi*, பெ. (n.) தீக்குச்சியடைத்த பெட்டி; match box *(செ.அக.)*.

ம. தீப்பெட்டி

[தீ + பெட்டி]

தீப்பொறி *tippoṟi*, பெ. (n.) அனற் பொறி; spark of fire. "தீப்பொறி யொன்றால்" *(சீவரக. அபுத்திபூருவ. 4)*.

ம. தீப்பொறி

[தீ + பொறி]

தீப்போக்கு *tippōkku-cempoṉ*, பெ. (n.) புடமிடப்பட்ட தூய பொன்; pure refined gold.

[தீ + போக்கு]

தீப்போடு-தல் *tippōḍu-*, செ.குன்றாவி. (v.t.); நெருப்பிற் சுடுதல்; to burn.

[தீ + போடு-]

தீப்போடுதல் *tī-p-pōḍudal*, பெ. (n.) 1. கொடுஞ் செயல் புரிதல்; to do cruel cets. 2. சினத்தல்; to be angry.

[தீ + போடுதல்]

தீபம் *tīpam*, பெ. (n.) தீவு (பிங்.) பார்க்க; see *tīvu*. "ஆறுந் தீபமு மடையா விடனும் பெருங்" *(நரவாண. 4, 78)*.

[தீ → தீபம்]

தீபு *tīpu*, பெ. (n.) தீவு பார்க்க; see *tīvu*. "ஏழ்தீபாலடங்காத புகழ்வீர" *(பாரத. இராச. 15)*.

தீம் *tīm*, பெ. (n.) 1. இனிமை; pleasantness, sweetness. "திங்கதிர்த் தோற்றமென்னவே" *(சீவக. 2415)*. 2. அமுது; nectar. வி.உ. (adj.) இனிய; sweet. "நெடுநலுந் தீம்பல மொழிந்த" *(அகநா. 239)*.

[தேம் → தீம் (வே.க. 161)]

தீம்பண்டம் *tīm-paṇḍam*, இனிய தின்பண்டம்; sweets, eatables.

[தீம் + பண்டம்]

தீம்பன் *tīmbaṉ*, பெ. (n.) 1. கெட்டவன்; wicked man. "தீம்பரை நல்லவராக்கி" *(தமிழ்நா. 236)*. 2. கீழ்மகன் (சூடா.); base fellow.

[தீம்பு → தீம்பன்]

தீம்பி *tīmpi*, பெ. (n.) தீயவள்; wicked woman.

[தீம்பு → தீம்பி]

தீம்பு[1] *tīmpu*, பெ. (n.) 1. குறும்பு; wickedness; mischief. "பிள்ளைகளும் நானுமாய்த் தீம்பு செய்து திரிகிற விடத்தில்" *(ஈடு. 5, 6, 6)*. 2. கேடு; evil. "உன்றலை தனக்குத் தீம்புவரும்" *(அருட்பா. 6, தான்பெற்ற. 17)*.

[தீம்பு → தீம்பு]

தீம்பு[2] *tīmpū*, பெ. (n.) 1. ஒருவகை மரம்; a tree. "தீம்பூமரக் கருப்பூரச் சோலை" *(சீவக. 1497)*. 2. மணப் பொருட்களுளொன்று *(சீவக. 838, உரை)*; a fragrant substance.

[தீம் + பூ]

தீம்புகை *tīmpukai*, பெ. (n.) நறும்புகை; sweet smell.

[தீம் + புகை]

தீம்புழல் *tīmpuḻal*, பெ. (n.) 1. இனிய பணியாரம்; sweet pastry. "தீம்புழல் வல்சி" *(மதுரைக். 395).* 2. இருப்பைப்பூ; mahua flower. "தீம்புழ லுணீஇயக் கருங் கோட்டிருப்பையூரும் பெருங் கை யெண்கின்" *(அகநா. 17).*

[தீம் + புழல்]

தீம்புளி *tīmpuḷi*, பெ. (n.) கருப்புக்கட்டி கூட்டிப் பொரித்த புளி; tamarind cured with jaggery. "இருங் கழிச் செறுவிற் றீம்புளி வெள்ளுப்பு" *(மதுரைக். 318).*

[தீம் + புளி]

தீமகம் *tīmagam*, பெ. (n.) எதிரி இறக்க வேண்டிச் செய்யும் வேள்வி (ஆபிசாரயாகம்); a kind of sacrificial rite for comparing the death of an enemy. "முனிவர் ... தீமகத்தைச் செய்தார்" *(கந்த. ததீசி. 99).*

[தீ + மகம்]

தீமடு-த்தல் *tī-maḍu*, செ.குன்றாவி. (v.i.) 1. நெருப்பு மூட்டுதல்; to kindle fire. "கொலைஞ ருலையேற்றித் தீ மடுப்ப" *(நாலடி. 331).* 2. நெருப்பிலிடுதல்; to throw into the fire.

[தீ + மடு-]

தீமலம் *tīmalam*, பெ. (n.) கரி (யாழ்.அக); coal.

[தீ + மலம்]

தீமானம் *tīmāṉam*, பெ. (n.) மானக்கேடு; disgrace, dishonour. "தம்பிமார் தீமானஞ் செய்ததனாற் றீங் குண்டோ" *(பாரதவெண். உத்தி 121).*

தீமிதி *tī-midi*, பெ. (n.) வேண்டுதலின் பொருட்டுத் தழல் பரப்பிய நெருப்புக் குழியில் நடக்கை; walking on a fire-pit, performed in fulfilment of a vow.

[தீ + மிதி]

தீமுகம் *tīmukam*, பெ. (n.) உலை முகம்; fire face.

[தீ + முகம்]

தீமுரன்பச்சை *tīmuraṉ-paccai*, பெ. (n.) சந்தனவகை (சிலப். 14, 108, உரை); a kind of sandal wood.

தீமுறி *tī-muṟi*, பெ. (n.) நச்சுப் பொருள்; phosperous.

[தீ + முறி]

தீமுறுகல் *tīmuṟugal*, பெ. (n.) வைப்புச் செய்நஞ்சு; a prepared arsenic.

[தீ + முறுகல்]

தீமுறை *tīmuṟai*, பெ. (n.) தீயிற் செய்யுமொரு வகைச் சடங்கு; fire-sacrifice. "நான்மறை மரபிற் றீமுறை யொருபால்" *(சிலப். 5, 175).*

[தீ + முறை]

தீமூட்டு[1]-தல் *tī-mūṭṭu-*, செ.கு.வி. (v.i.) 1. தீயுண்டாக்குதல்; to kindle fire. 2. கலக மூட்டுதல்; to stir upa quarrel.

[தீ + மூட்டு-]

தீமூட்டு[2] *tī-mūṭṭu*, பெ. (n.) தீமூட்டுதற்குரிய பொருள்; lighting material. "யாஅத்து . . . கோதுடைத் தாரல் . . . தீமூட் டாகும்" *(அகநா. 257).*

[தீ + மூட்டு]

தீமேனியான் *tīmēṉiyāṉ*, பெ. (n.) சிவன்; Šivaṉ, as having the hue of fire. "தீமேனியானுக்கே சென்றூதாய்க் கோத்தும்பீ" *(திவாச. 10, 20).*

[தீ + மேனியான்]

தீமை *tīmai*, பெ. (n.) 1. குறும்பு (சேட்டை); mischief. "நிச்சலுந் தீமைகள் செய்வாய்" *(திவ். பெரியாழ். 2, 7, 3).* 2. குற்றம்; fault, guilt. "பெரியார்கட் டீமை கருநரைமேற் சூடேபோற் றோன்றும்" *(நாலடி. 186).* 3. கொடுமை; cruelty, injury. "நீ மெய்கண்ட தீமை காணின்" *(புறநா 10).* 4. தீய செயல்; sinful deed. "தீமை புரிந்தொழுகுவார்" *(குறள். 143).* 5. நன்றல்லா

நிகழ்வு; inauspicious occasions, as of death. அவன் நன்மை தீமைகளுக்கு வருவதில்லை.

[தீ → தீமை]

தீமைத்தீவு *tīmai-t-tīvu*, பெ. (n.) அந்தமான்; Andaman islands, as the place for criminals (செ.அக.).

[தீமை + தீவு]

தீமொழி *tī-moḻi*, பெ. (n.) *1.* நன்றல்லாத சொல்; evil word. *2.* சாவம் (சங்.); curse.

[தீ + மொழி]

தீய்[1]-தல் *tīy-*, 4 செ.கு.வி. (v.i.) *1.* தீ பார்க்க; see *tī*. *2.* பயனற்றுப் போதல்; . மின்கலம் தீய்ந்து விட்டது

[தீ → தீய்-.]

தீய்[2]-த்தல் *tīy-*, 4 செ.குன்றாவி. (v.t.) தீ[3] பார்க்க; see *tī*. "கொதித்திமை தீய்த்தொளிர் செங்கண்" (கூர்மபு. அட்டமூர். 3).

[தீ → தீய் → தீய்-த்தல்]

தீய்வு *tīyvu*, பெ. (n.) பயிர் கரிந்து போகை; blighting of crops.

[தீய் → தீய்வு]

தீய *tīya*, பெஅ. (adj.) *1.* தீமையான; evil, wicked, sinful. *2.* போலியான; fallacious. "தீய பக்கமுந் தீயவேதுவும்" (மணிமே. 29:143).

[தீ → தீய]

தீயகம் *tīyakam*, பெ. (n.) நிரயம் (நரகம்); hell, as a place of fire.

[தீ + அகம்]

தீயணைப்புநிலையம் *tīyaṇaippu-nilaiyam*, பெ. (n.) தீயணைப்பு நிறுவனம்; fire-station.

[தீயணைப்பு + நிலையம்]

தீயணைப்புவண்டி *tīyaṇaippu-vāṇḍi*, பெ. (n.) தியணைப்புச்சீருந்து; fire-van.

[தியணைப்பு + சீருந்து]

தீயணைப்புவீரர் *tīyanaippu-vīrar*, பெ. (n.) தியணைப்பாளர்; fire-man.

[தியணைப்பு + வீரர்]

தீயது *tīyadu*, பெ. (n.) *1.* இனியது; that which is delicious. *2.* மரக்கறி; vegetarian food.

[தீம் + அது]

தீயபக்கம் *tīya-pakkam*, பெ. (n.) பக்கப் போலி; ellacious minor term. "தீயபக்கமுந் தீயவேதுவும்" (மணிமே. 29, 143).

[தீய + பக்கம்]

தீயபுட்பம் *tīya-puṭpam*, பெ. (n.) சண்பகம் (மலை.); champak.

[தீய + புட்பம்]

தீயம் *tīyam*, பெ. (n.) இனிப்பு (யாழ்.அக.); sweetness, deliciouness.

[தீம் → தீயம்]

தீயர் *tīyar*, பெ. (n.) *1.* ஒரு மலையாளச் சாதியினர்; a caste in malabar. *2.* தீயோர்; wicked person.

தீயல் *tīyal*, பெ. (n.) *1.* சமையலிற் கருகினது; that which is burnt in cooking, or over-cooked. *2.* பொரிக்கறி; a thick dry curry. *3.* குழம்பு வகை; a kind of sauce.

[தீய் → தீயல்]

தீயல்வழி-த்தல் *tīyal-vaḻi-*, செ.கு.வி. (v.i.) *1.* வறுமை அல்லது கஞ்சத்தால் சட்டி சுரண்டிக் காந்தலுணவைத் தின்னுதல்; to scrape off and eat the burnt part of that which adheres to the pot, either from meanness or poverty.

[தீயல் + வழி-.]

தீயவு *tīyavu*, பெ. (n.) தீயல் பார்க்க; see **tīyal**.

[தீ → தீயவு]

தீயவேது *tīya-v-ētu*, பெ. (n.) ஏதுப்போலி; a fallacious middle-term. 'தீயபக்கமுந் தீயவேதுவும்' (மணி. 29, 143).

[தீ → தீயவேது]

தீயவை[1] *tīyavai*, பெ. (n.) *1.* தீச்செயல்; evil deeds, sin. 'ஒருவமின் றீயவை' (நாலடி, 36). *2.* துன்பம்; tribulation, suffering. 'எழுபிறப்புந் தீயவை தீண்டா' (குறள், 62).

[தீமை → தீயவை]

தீயவை² *tiyavai*, பெ. (n.) தீயோர் கூடிய சபை; Assembly of the wicked. *(யாப். வி. 96, பக். 515).*

[தீ + அவை]

தீயழல் *ti-y-aḻal*, பெ. (n.) தீப்பிழம்பு; flame. *'தீயழதுவைப்பு' (பரிபா, 5, 3).*

[தீ + அழல்]

தீயளி *tiyaḷi*, பெ. (n.) பசுங்காய்; green fruit. (திவா.).

[தீய் + அளி]

தீயறம் *ti-y-aṟam*, பெ. (n.) பொல்லாங்கு; evil *(யாழ். அக.).*

[தீ + அறம்]

தீயாக்கீரை *tiya-k-kirai*, பெ. (n.) பொன்னாங்கண்ணி; small aquatic plant (மணி.).

[தீ + ஆ + கீரை → தீயாக்கீரை]

தீயாடி *ti-y-āṭi*, பெ. (n.) ஈமத்தீயில் ஆடும் சிவன்; Siva, as dancing in the midst of burning funeral pyres. *'தீயாடி சிற்றம்பல மனையாள்' (திருக்கோ. 374).*

[தீ + ஆடு → தீயாடு]

தீயார் *tiyar*, பெ. (n.) தீயோர் பார்க்க; see *tiyōr*. *'தீயாரைக் காண்பதுவுந் தீதே' (மூதுரை).*

[தீமை → தீயார்]

தீயாறுடையான் *tiyāṟuṭaiyāṉ*, பெ. (n.) தீயவழியில் நடப்பவன்; Immoral man (w.,.

[தீ + ஆறு + உடையான்]

தீயின்வயிரம் *tiyin-vayiram*, பெ. (n.) மீன்வயிற்றில் உள்ள மணப்பொருள்; Ambek gris.

[தீ + இன் + வயிரம்]

தீயினம் *ti-y-iṉam*, பெ. (n.) தீயோர் கூட்டம்; evil society. 'சான்றாண்மை தியினஞ் சேரக் கெடும்'

[தீமை → தீ + இனம்]

தீயுண்புள் *ti-y-uṇ-puḷ*, பெ. (n.) நெருப்புக்கோழி; ostrich.

[தீ + உண் + புள்]

தீயெச்சம் *ti-y-eccam*, பெ. (n.) அவிக்கப்படாத நெருப்பின் மிச்சம்; remains of fire left unquenched. *'தீயெச்சம் போலத் தெறும்' (குறள், 674).*

[தீ + எச்சம்]

தீயொழுக்கம் *ti-y-oḻukkam*, பெ. (n.) கெட்ட நடத்தை; evil conduct. *'தீயொழுக்க மென்று மிடும்பை தரும்' (குறள், 138).*

[தீமை + ஒழுக்கம்]

தீயோம்பு-தல் *ti-y-ōmbu-*, செ.கு.வி. (v.i.) தீ வளர்த்தல்; to tend the sacred fiare. *'தீயோம்பு கைம் மறையோர்' (திவ். பெரியதி. 7, 9, 7).*

[தீ + ஓம்பு-]

தீயோர் *tiyōr*, பெ. (n.) *1.* கொடியோர்; wicked persons. *2.* கீழ்மக்கள்; vulgar persons *(பிங்.).* *3.* வேடர்; hunters *(w.).*

[தீமை → தீயோர்]

தீர்¹-தல் *tir-*, 4 செகுவி. (v.i.) *1.* உள்ளதொழிதல்; to end, expire. *2.* முற்றுப் பெறுதல்; to be completed. 'வேலை தீர்ந்துவிட்டது' *3.* நீங்குதல்; to leave, to separate. 'திருவினைத்தீராமை யார்க்குங் கயிறு' *(குறள், 482).* *4.* போதல்; to go (பிங்.). *5.* இல்லையாதல்; to be absent 'பாய்ந்தூதிப் படர் தீர்ந்து' (கலித். 66). *6.* அழிதல்; to die 'சென்று தீர்வன வெனைப் பல கோடியுஞ் சிந்தி' (கம்பரா. முதற்போர். 238). *7.* கழிதல்; to pass, to be spent. *'சில தினங்க பீர்ந்துழி' (கம்பரா. திருவவ. 43.).* *8.* செலவாய்ப்போதல்; to be exhausted 'கைப்பணமெல்லாம் தீர்ந்தது'. *9.* உரிமையாதல்; to belong absolutely. 'திருமகட்கே தீர்ந்தவாறென் கொல்' (திவ். இயற். 1, 42). *10.* நிச்சயித்தல்; to determined, decided. 'தீர்ந்த வடியவர் தம்மை' (திவ். திருவாய், 3, 5, 11). *11.* தீர்மானமாதல்; to be settled 'வழக்குத் தீர்ந்துவிட்டது'. *12.* பட்டறிவு; experience 'தீர்ந்த கணக்கன்'. *13.* நீளமாதல்; extended (சூடா.). *14.* முதிர்தல்; to become ripe. செகுன்றாவி. (v.t.) *1.* விடுதல்; to leave 'தீர்தலுந் தீர்த்தலும் விடற்பொருட்டாகும்' *(தொல். சொல், 318).* *2.* சாணையிடுதல்; to polish, clean (வின்.). *3.* வகுத்தல்; to divide. 'மூன்றுபேருக்கு ஒன்றைத் தீரு'. *4.* விள்ளுதல்; to solve. *5.* வரிபோடுதல்;

as tax, to assess. *6. சாயமிடுதல்;* to dye, umbue with colour. *(வின்.). 7. துணைவினை;* an auxiliary verb. 'தாமரைக் கண்கட் கற்றுத் தீர்ந்தும்' *(திவ். திருவாய். 7, 3, 3).*

தீர்²-த்தல் *tir-*, 11 செ.குன்றாவி. (v.i.) *1. விடுதல்;* to leave, quit. 'தீர்தலுந் விடற் பொருட் டாகும்' *(தொல். சொல். 318). 2. முடித்தல்;* to finish, complete. 'அவன் விசையந் தீர்த்தானெ அவந்தாடினர்' *(கம்பரா. முதற்போர். 178). 3. அழித்தல்;* to destroy. 'ஒரு பகலே தீர்ப்பான் படை தொடுப்போன்' *(கம்பரா. நீடும், 149). 4. கொல்லுதல்;* to kill. *5. நன்றாகப் புடைத்தல்;* to beat severely. *6. போக்குதல்;* to remove, cure. 'கருங்கா லொட்டகத் தல்குபசி தீர்க்கும்' *(அகநா. 245). 7. கடன் முதலியன ஒழித்தல்;* to clear off, pay off, as debt. *8. ஒருவன்தான் திருமணஞ் செய்து கொண்டவளை விலக்கி விடுதல்;* to divorce. *9. வழக்கு முதலியன தீர்மானித்தல்;* to settle, decide, as dispute.

தீர்கடை *tir-katai*, பெ. (n.) *1. தேர்ந்தவன்;* skilful, expert. 'நண்பனங்கே வந்த தாலறத் தீர்ந்தவனே' *(மருதூரந். 2). 2. துறந்தவன்;* one who has renounced the world *(யாழ். அக.). 3. ஒழிவுநேரம்;* leisure. 'எனக்கு இப்போது தீர்கடையில்லை'.

[தீர் + கடை]

தீர்ந்தவன் *tirntavan*, பெ. (n.) *1. தேர்ந்தவன்;* skilful, expert. 'நண்பனங்கே வந்த தாலறத் தீர்ந்தவனே' *(மருதூரந். 2). 2. துறந்தவன்;* one who has renounced the world. *(யாழ். அக.).*

[தீர் → தீர்ந்தவன்]

தீர்ப்பான் *tirppān*, பெ. (n.) *மருத்துவன்;* Physician. 'உற்றவன் நீர்ப்பான் மருந்துழைச் செல்வான்' *(குறள் 950).*

[தீர் → தீர்ப்பான்]

தீர்ப்பு *tirppu*, பெ. (n.) *1. தீர்மானம்;* settlement, conclusion. *2. முடிவு;* completion, finality. 'தீர்ப்பான பேச்சு' (வின்.). *3. வழக்கின் தீர்ப்பு;* judgement, decree. 'அந்த வழக்கில் தீர்ப்புச் சொல்லியாயிற்று' *4. தண்டனை;* sentence. 'அவனுக்குப் பத்து வருடம் தீர்ப்பாயிற்று'. *5.. உறுதியுடைமை;* determination, resolution. *(வின்.) 6. நீக்கிவிடுதல்;* removal, clearance. *7. கழுவாய்;* antidote, atonement.

[தீர் → தீர்ப்பு]

தீர்ப்புக்கட்டு-தல் *tirppu-k-kattu*, பெ. (n.) *1. முடிவை உறுதிசெய்தல்;* to make a decision. *2. விருப்பங்கொள்ளுதல்;* to form an opinion or judgement. *(வின்). 3. வரவு-செலவுக் கணக்கு முடிவு கட்டுதல்;* to prepare a balance sheet, to draw up a profit and loss account.

[தீர்ப்பு + கட்டுதல்]

தீர்பு *tirpu*, பெ. (n.) *தீர்கை;* finishing. 'பாடின் மாயையாற் றீர்புரைப்பீர்' *(சேதுபு. இலக்கும. 13).*

[தீர் → தீர்பு]

தீர்மானம் *tirmānam*, பெ. (n.) *1. தீர்ப்பு பார்க்க;* see *tirppu*. *2. இசையில் தானமுடிவு கொடுக்கை;* flourish of drum at the close of a tālam. *3. முழுமை;* absoluteness. *4. சுண்ணாம்பு மட்டிப் பூச்சின் மேல் வெள்ளையால் மெருகிடுகை;* polishing with well macerated lime. *5. முட்டுச்சுவர்;* buttress wall.

[தீர் → தீர்மானம்]

தீர்மானி-த்தல் *tirmāni-*, செ.குன்றாவி. (v.t.) *1. உறுதிசெய்தல்;* to determine. *2. முடித்தல்;* finish, settle. *3. தாளந்தீர்த்தல்;* to bring a tālam performance to a close.

[தீர்மானம் → தீர்மானி-த்தல்]

தீர்வு *tirvu*, பெ. (n.) *1. தீர்வை பார்க்க;* see *tirvai*. *2. தீர்மானம் பார்க்க;* see *tirmānam*. *3. நீக்குகை;* removal. 'தீர்விலா நண்பு வேண்டி' *(சீவக. 1755). 4. கைம்மாறு;* expiation. 'இவளிந்தை செய்வாய்க் கிலை தீர்வ' *(பிரபுலிங். கைலாச. 40). 5. கழுவாய்;* remedy. 'நோய் தந்தவனே நுவறீர்வுமெனா' *(கம்பரா. இரணி. 113).*

[தீர் → தீர்வு]

தீர்வை *tirvai*, பெ. (n.) *1. முடிவு;* conclusion, result, end. 'தீர்வையிற் சாக்காடுமின்றிச் சிறந்தார் கொல்லோ' *(பிரபோத. 13, 9). 2. உறுதி;* certainty. 'ஒன்றையே யடைகுவ ரிதுதீர்வை' *(கைவல். சந். 45). 3. கைம்மாறு;* expiation. 'சிந்தையாகுல மிதற்குத் தீர்வையன்று' *(திருவாலவா - 46, 8).*

4. தப்பும்வழி; escape. 5. தணியெழுத்து; divine, fate. (வின்.). 6. நீதித்தீர்ப்பு; Judgement. 7. திருமணஞ்செய்து கொண்டவளை விலக்கி விடுவதற்குரிய செலவுத் தொகை; divorce fee. 8. வரி; duty, tax, toll. 9. கணக்கு; sums. 'உபாத்தியாயர் இன்று எத்தனை தீர்வை போட்டார்?' 10. கீரிப்பிள்ளை; mongoose. (மலைபடு. 584). 11. ஈமச்சடங்கு; funeral rites. (வின்.).

[தீர் → தீர்வை]

தீர்வைக்கம்மி *tīrvai-k-kammi,* பெ. (n.) நன்செய் நிலத்தில் புன்செய்ச் சாகுபாடி செய்தற்கு ஏற்படுத்திய வரிக்குறைவு; remission granted on irrigable lands where dry crop is cultivated.

[தீர்வை + கம்மி]

தீர்வைச்சரக்கு *tīrvai-c-carakku,* பெ. (n.) சுங்கவரி இடுவதற்குரிய பொருள்; dutiable goods.

[தீர்வை + சரக்கு]

தீர்வைசோறு *tīrvai-cōṟu,* பெ. (n.) நள்ளிரவில் இறைவனுக்கு சமைத்து படைக்கும் சோறு; rice-offering in a temple made at midnight.

[தீர்வை + சோறு]

தீர்வைத்துறை *tīrvai-t-tuṟai,* பெ. (n.) செயற்றிறம் வாய்ந்த மதிப்பு (இவ.); influence.

[சாள் → சாய் → சாய்கால் (வேக.233.)]

தீர்வைதிட்டம் *tīrvai-tiṭṭam,* பெ. (n.) திட்டமான வரியேற்பாடு; rate of assessment.

[தீர்வை + திட்டம்]

தீர்வைதீர்-தல் *tīrvai-tīr-,* செ.கு.வி. (v.i.) 1. பண்டங்கட்கு வரிவிதித்தல்; to levy duty on goods. (வின்.) 2. பண்டங்கட்குச் சுங்கவரி யிறுத்தல்; to pay duty on goods.

[தீர்வை + தீர்-தல்]

தீர்வையிடு-தல் *tīrvai-y-iḍu-,* செகுன்றாவி. (v.t.) 1. தீர்மானித்தல்; to settle, decide. 'தீராக் கருவழக்கைத் தீர்வையிட்டு' (தாயு. பைங்கிளி. 29). 2. முடிவுசெய்தல்; to end.

[தீர்வை + இடு-தல்]

தீர்வையெடு-த்தல் *tīrvai-y-eḍu-,* செகுவி. (v.i.) 1. வரி வாங்குதல்; to levy or collect duty. 2. தீர்ப்பு நகலெடுத்தல்; to obtain copy of a decree from court.

[தீர்வை + எடு-த்தல்]

தீர்வைவிழுதல் *tīrvai-viḻutal,* பெ. (n.) வழக்குத் தீர்ப்புச் செய்கை; passing of judgement or decree.

[தீர்வை + விழுதல்]

தீர *tīra,* வி.எ. (adv.) 1. முற்ற; entirely, perfectly. 'தலைப்பட்டார் தீரத் துறந்தார்' (குறள், 348). 2. மிக; exceedingly. 'மக்களிற் றீரக் குறியானைக் குறளன் என்றும்' (யாப். வி. 23, ப. 99).

[தீர் → தீர]

தீரக்கழிய *tīra-k-kaḻiya,* வி.எ. (adv.) மிகவதிகமாய்; excessively, to the utmost. 'தீரக் கழிய அபராதம் பண்ணின பின்பு' (ஈடு. 1, 1, 5).

[தீர் → தீர → தீரக்கழிய]

தீரன் *tīraṉ,* பெ. (n.) மனதிடமுள்ளவன்; bravem valiant person. 'திரரென்றமார் செப்பி' (கம்பரா. இந்திரசித். 30.

[தீர் → தீர → தீரன்]

தீராந்தி *tīrānti,* பெ. (n.) விட்டம்; beam of a building.

தீராநோய் *tīrā-nōy,* பெ. (n.) தீர்க்க இயலாத நோய்; incurable disease. 'தீராநோய் செய்தா னெனவுரைத்தாள்' (திவ். இயற். இறிய. ம. 52).

[தீர் + ஆ + நோய்]

தீராமாற்று *tīrā-māṟṟu,* பெ. (n.) ஈடில்லா செயல்; that which cannot be relieved or cured. 'பெண்களைத் தீராமாற்றாக நெஞ்சாரல் பண்ணுங் கிருஷ்ணன்' (திவ். திருப்பா. 12, வ்யா, 133).

[தீர் + ஆ + மாற்று]

தீராமை *tīrāmai,* பெ. (n.) 1. கொடுமை; cruelty. 2. கடுந்துரோகம்; heinous crime. 3. பேரநீதி; great injustice. 4. பொய்க்குற்றச்சாட்டு; false occusation. 5. வன்மத்தாற் சொல்லும் கோள்; malicious slander. 6. ஆற்றாமை; Inability to endure.

[தீர் + ஆ + மை]

தீராவழக்கு *tīrā-vaḻakku,* பெ. (n.) எளிதில் முடிவுறாத வழக்கு; intricate law suit, dispute which cannot be easily settled.

[தீர் + ஆ + வழக்கு]

தீராவினா *tīrā-viṉā,* பெ. (n.) இறுக்கமுடியாத கேள்வி; an insoluble problem.

[தீர் + ஆ + வினா]

தீவட்டி *tī-vaṭṭi,* பெ. (n.) 1. தீப்பந்தம்; flambeall, torch. "இருளறு தீவட்டிக ளென்னில முன்செல்ல' *(பணவிடு. 76).* 2. தீவட்டியான் பார்க்க; see *tīvaṭṭiyāṉ.*

[தீ → தீவட்டி]

தீவட்டிக்கள்ளன் *tīvaṭṭi-k-kaḷḷaṉ,* பெ. (n.) தீவட்டியைப் பிடித்துக்கொண்டு கொள்ளை யடிப்போன்; a dacoit who commits robbery with the help of torch light.

[தீவட்டி + கள்ளன்]

தீவட்டிக்காரன் *tīvaṭṭi-k-kāraṉ,* பெ. (n.) 1. தீவட்டி பிடிப்போன்; torch-bearer. 2. தீவட்டிக்கள்ளன்; see *tīvaṭṭi-k-kaḷḷaṉ.*

[தீவட்டி + காரன்]

தீவட்டிக்கொள்ளை *tīvaṭṭi-k-koḷḷai,* பெ. (n.) 1. தீவட்டியைப் பிடித்துக்கொண்டு செய்யும் கொள்ளை; a torch-light dacoity. 2. அநீதியான இலாபம்; unjust, exorbitant gain.

[தீவட்டி + கொள்ளை]

தீவட்டிக்கொள்ளையடி-த்தல் *tīvaṭṭi-k-koḷḷai-y-aṭi-,* செ.கு.வி. (v.i.) 1. தீவட்டியைப் பிடித்துக்கொண்டு கொள்ளையிடுதல்; to commit dacoity with the help of torch-light. 2. அநீதியாய் பொருள் திரட்டுதல்; to mass money by illegal means.

[தீவட்டிக்கொள்ளை + அடி-]

தீவட்டித்தடியன் *tīvaṭṭi-t-taḍiyaṉ,* பெ. (n.) பயனற்ற அறிவிலி; senseless, worthless fellow.

[தீவட்டி + தடியன்]

தீவண்ணன் *tī-vaṇṇaṉ,* பெ. (n.) சிவன் (அக்கினி நிறத்தோன்); Siva, as fire-coloured. "தீவண்ணர் திறமொரு காற் பேசாராகில்" *(தேவா. 1230, 6).*

[தீ + வண்ணன்]

தீவத்தி *tīvatti,* பெ. (n.) தீவட்டி பார்க்க; see *tīvaṭṭi.*

[தீ + வத்தி → வட்டி]

தீவலஞ்செய்-தல் *tīvalañ-cey-,* செ.கு.வி. (v.i.) திருமண விழாவில் தீச்சடங்கு செய்தல்; to circumambulate fire, as in a marriage ceremony. "தீவலஞ்செய்வது காண் பார்கணோன் பென்னை" *(சிலப். 1, 53).*

[தீவலம் + செய்-]

தீவளர்-த்தல் *tī-valar-,* செ.கு.வி. (v.i.) 1. நோன்புத் தீ வளர்த்தல்; to tend the sacred fire. 2. உடன்கட்டையேறல் முதலியவற்றிற்கு தீ வளர்த்தல்; to light a fire, as in sattee.

[தீ + வளர்-]

தீவறை *tī-vaṟai,* பெ. (n.) பெருநெருப்பு எரிக்குங் குழியடுப்பு; hole dug in the ground for fire.

[தீ + அறை]

தீவனம் *tīvaṉam,* பெ. (n.) 1. கால்நடைகளின் உணவு; food fpr animals, foder, as straw for cattle. 2. பசி; appetite.

தீவிய *tīviya,* பெ.எ. (adj.) இனிமை; sweetness. 'செவ்விய தீவிய சொல்லி' *(கலித். 19).*

[தீம் → தீவிய]

தீவிழித்தல் *tī-viḻi-,* செ.கு.வி. (n.) கோபத்துடன் பார்த்தல்; to look with fire-red eyes, as in anger. 'தீவிழித்து மேற்சென்ற வேழம்' *(சீவக. 783)*

[தீ + விழி]

தீவினை *tī-viṉai,* பெ. (n.) 1. கொடுஞ்செயல்; sinful deed. (சூடா.) 2. பாவம்; sin. 'தீவினை யென்னுஞ் செருக்கு' *(குறள். 201).* 3. தீக்குளித்தல்; fire sacrifice. 'செந்தீவினை மறைவாணனுக் கொருவன்' *(கம்பரா. இராவணன் வதை, 52).*

[தீமை + வினை → தீவினை]

தீவு[1] *tīvu,* பெ. (n.) 1. நான்கு பக்கமும் நீர் சூழ்ந்த நிலம்; island. 'பொலம்படு தீவிற்கு' *(பெருங். நரவாண, 1, 2, 3).* 2. தூரத்துநாடு; distant country. *(யாழ்.அக.).*

தீவு[2] *tīvu,* பெ. (n.) இனிமை; sweetness (யாழ்அக.).

[தீம் → தீவு]

தீவுக்குருவி *tīvu-k-kuruvi,* பெ. (n.) வெளிநாட்டுப் பறவை; foreign bird.

[தீவு + குருவி]

தீவுச்சரக்கு *tīvu-c-carakku,* பெ. (n.) வெளிநாட்டுச் சரக்கு; foreign articles.

[தீவு + சரக்கு]

தீவுதல் *tīvutal,* பெ. (n.) இனிமை; pleasantness. (வே.க. 161).

[தீம் → தீவுதல்]

தீவுபற்று *tīvu-paṟṟu,* பெ. (n.) தீவுப்புறம் (யாழ்அக.); nighbouring lands.

[தீவு + பற்று]

தீவேள்-தல் (தீவேட்டல்) *tī-vēḷ-,* செ.குன்றாவி. (v.t.) வேள்வி செய்தல்; to perform vēdic sacrifice. 'செந்தீவேட்டு . . . புரிகடை புலர்த்துவோனே' (புறநா. 251. 2. மணம் புரிதல்; to marry. "பெண்டிருவை யுலகறியத் தீவேட்டான்" (திருவாச. 12, 13).

[தீ + வேள்-தல்]

தீவேள்வி *tī-vēḷvi,* பெ. (n.) தீ சாட்சியாகச் செய்யும் திருமணம் (திவா.); wedding as accompanied with fire-rite.

[தீ + வேள்வி]

தீழ்ப்பு *tīḻppu,* பெ. (n.) 1. தீட்டு; pollution. 2. கீழ்மை; inferiority.

தீற்றிப்போடு-தல் *tīṟṟi-p-pōḍu-,* செ.குவி. (n.) கமுக்கமாக அறிவுரை செய்தல்; to give advice in secret.

[தீற்று + போடு-]

தீற்று-தல் *tīṟṟu,* பெ. (n.) 1. ஊட்டுதல்; to feed by small mouthfals. "நென்மா வல்சி தீற்றி" (பெரும்பாண். 343). 2. சுண்ணமுதலியவற்றால் துவாரமடைத்தல்; to cover and fill up a hole orcreive with mortar or clay. 3. பூசுதல்; to smear. "வெண்மை தீற்றிய . . . மாளிகை" (கம்பரா. நகரப். 27). 4. கயிற்றின் முறுக்காற்றுதல்; to stiffen a cord with glue. 5. பல் துலக்குதல்; to clean the teeth.

[தின் → தீற்று]

தீற்றுக்கல் *tīṟṟu-k-kal,* பெ. (n.) மணியாசுக்கல்; mason's polishing stone.

[தீற்று + கல்]

தீற்றுப்பலகை *tīṟṟu-p-palakai,* பெ. (n.) மணியாசுப் பலகை (யாழ்.அக.); mason's plastering plane.

[தீற்று + பலகை]

தீன்[1] *tīṉ,* பெ. (n.) உணவு; food, victuals. "தீனுணாதன்" (கம்பரா. சேதுபந்தன. 28).

[தின் → தீன்]

தீனம் *tīṉam,* பெ. (n.) 1. வறுமை; poverty. "தீனமறவுண்டுடுத்து" (திவாலவா. 55,2).. 2. கொடுமை; cruelty, harshness. 3. நோய்; disease. 'தீனம் வந்தால் மானம் போகும்'.

[தின் → தீனம்]

தீனன்[1] *tīṉaṉ,* பெ. (n.) 1. வறியவன்; poorman. 'தீனரைத் தியக் கறுத்த திருவுடையார்' (தேவா. 477, 9). 2. இரப்போன்; beggar (சூடா.). 3. தீம்பன்; wicked person. (யாழ். அக.)

[தின் → தீனன் = தின்னுவதற்கு ஒன்றும் இல்லாதவன்]

தீனன்[2] *tīṉaṉ,* பெ. (n.) பெருந்தீனிக்காரன்; glutton. (யாழ். அக.)

[தின் → தீனன்]

தீனிப்பை *tīṉippai,* இரைப்பை; stomach.

[தீனி + பை]

து

து *tu,* த் என்னும் மெய்யும் உகர உயிரும் இணைந்த உயிர்மெய் எழுத்து; the compound of த் and உ.

[த் + உ]

து²-த்தல் *tu,* செ.குன்றா.வி. (v.t.) உண்ணுதல்; to eat, used generally in negative forms. "துவ்வளவா" (நன்157, உரை).

து³ *tu,* பெ. (n.) *1.* உணவு (இலக்.அக.); food. *2.* பட்டறிவு (யாழ்.அக.); experience. *3.* பிரிவு; separation.

[துய் → து (வே.க. 282)]

து⁴ *tu,* இடை (part.) *1.* சுட்டுப் பெயர் வினாப் பெயர்களில் ஒன்றன் பால் குறிக்கும் ஈறு; suffix added to the demonstrative and interrogative bases to form demonstrative neuter singular pronouns. *2.* தன்மையொருமை முற்றீறு (தொல்.சொல். 204); verbal termination denoting lst person singular, neuter as in varutu. *3.* ஒன்றன் பால் வினையீறு (தொல்.சொல். 8); verbal ending denoting 3rd person singular, neuter, as in வந்தது. *4.* பகுதிப் பொருளீறு (குறள். 637); an expletive added to basic forms, as in *kataittu.*

து⁵ *tu,* பெ. (n.) *1.* வலிமை; strength. 'கெடலருந்துப் பின்' (அகம். 108). *2.* திறமை; skill. 'ஆழ்கடலைக் கடைந்த துப்பனே' (திவ்.திருவாய். 4,7,5). *3.* நுகர்தல்; to smell.

துக்கடா *tukktā,* பெ. (n.) *1.* சிறுதுண்டு; piece, bit. *2.* உணவுக்கு உரிய பச்சடி முதலிய தொடுகறி; any relish. *3.* தன்மையற்றது; unimportant. துக்கடாப் பயல்களெல்லாம் இன்று நம்மை எதிர்த்துப் பேசுகிறார்கள் (உ.வ.).

துக்கடி *tukkaḍi,* பெ. (n.) நிலப் பகுதி; division of a district.

துக்காசிப்பயறு *tukkāśi-p-payaṟu,* பெ. (n.) சிறு துவரை; a small variety of dholl.

துக்காணி *tukkāṇi,* பெ. (n.) இரண்டு அல்லது நான்கு சல்லி மதிப்புக் கொண்ட சிறு செப்புக் காசு; a small copper coins = 2 or pies. "துக்காணிப் பொட்டுமிட்டு" (திருக்கூட்டச்சத.)

துக்கிணி *tukkiṇi,* பெ. (n.) துக்குணி பார்க்க; see tukkuṇi. "துக்குணி கிள்ளித்தா வம்மே" (குற்றா.குற. 62,4).

துக்கு¹ *tukku,* பெ. (n.) *1.* கீழ்மை; meanness. *2.* பயனின்மை; worthlessness. *3.* உதவாதவன் -து; useless person or thing.

துக்கு² *tukku,* பெ. (n.) துரு; rust.

துக்கு³ *tukku,* பெ. (n.) *1.* தோல்; skin. *2.* துவக்கு,3 பார்க்க; see *tuvakku.* *3.* உடல்; body. "ஏறுந் துக்கிற் றொக்க பரத்தா விடரெய்தி" (இரகு. அயனுத. 27).

துக்கு⁴ *tukku,* பெ. (n.) சுறுசுறுப்பு; quickness, activity. "துக்காய்ப் புகுந்து நின்றாட வேண்டும்" (பாடு. 70, வாழ்க்கைப்.).

[துடுக்கு → துக்கு]

துக்குடா *tukkuḍā,* பெ. (n.) துக்கடா பார்க்க; see *tukkaḍā.*

துக்குடி *tukkuṭi,* பெ. (n.) துக்கடி பார்க்க; see *tukkaṭi.*

துக்குணி *tukkuṇi,* பெ. (n.) சிறிதளவு (உ.வ.); very small quantity.

துக்குணிச்சித்தம் *tukkuṇi-c-cittam,* பெ. (n.) பொறுமையற்ற குணம்; short temper.

துக்குணித்துண்டு *tukkuṇi-t-tuṇḍu,* பெ. (n.) மிகவும் கொஞ்சம்; very small.

துக்குணிமருந்து *tukkuṇi-maruntu,* பெ. (n.) மிக்க சிறுவளவாகக் கொடுக்கப்படும் பற்பம், செந்தூரம், சுண்ணம் முதலியன; medicinal preparations as a metallic oxides red oxides and carbonates given in exceedingly small doses.

[துக்குணி + மருந்து]

துக்குப்பிடித்தவன் *tukku-p-piḍittavaṉ,* பெ. (n.) பயனற்றவன்; worthless fellow.

துக-த்தல் *tuka*, செ.கு.வி. (v.i.) கசத்தல் (இலஅக.); to be bitter.

துகம் *tugam*, பெ. (n.) 1. நிலத்தாக்கு; plot of land. 2. பங்கு; share, as in a partition or lottery. அந்தத் துகம் யாருக்கு விழுந்தது (உ.வ.).

துகள் *tugaḷ*, பெ. (n.) 1. தூசி, தூளி; dust, particle of dust. "இயங்கு தேர்வீதி யெழுதுகள் சேர்ந்து" (மணிமே. 4, 14). 2. பூந்தாது; pollen. "தாமரைத் தேனு மந்நுண்டுகளுஞ் சேறாம் பழனத் திருவெங்கை வாணர்" (வெங்கைக்கோ. 377). 3. குற்றம்; fault, moral defect. "துகளறுசீர் ... வேந்து" (பு.வெ. 7,1). 4. அணுத்துகள்; atomic particle.

[துகை → துகள் (வ.மொ.வ. 184)]

துகளறுபோதம் *tugaḷaṟu-pōdam*, பெ. (n.) சிற்றம்பல நாடிகளியற்றிய ஒரு சிவனியக் கொண் முடிபுநூல்; saiva siddhānta treatise in Tamil by Siṟṟambala nāḍigal.

துகளவிடி-த்தல் *tugaḷaviḍi-*, 18 செ.குன்றாவி. (v.t.) 1. தூளாக இடித்தல்; pulverising. 2. பொடியாய்ச் செய்தல்; trilurating. 3. சூரணம் செய்தல்; perparing a medicinal substance in the form of fine dust (சா.அக.மு.).

துகளிதம் *tukaḷidam*, பெ. (n.) துகள் பார்க்க; see *tukaḷ*.

[துகள் → துகளிதம்]

துகளிலி *tukaḷ-ili*, பெ. (n.) இறைவன் (இலஅக.); God, as immaculate (குற்றமற்றவன்).

[துகள் + இலி]

துகிடி *tukiḍi*, பெ. (n.) துக்கடி பார்க்க; see *tukkaḍi*.

துகிர் *tukir*, பெ. (n.) 1. பவளம்; red coral. "பொன்னுந் துகிரு முத்தும்" (புறநா. 218). 2. பவளக் கொடி; coral seaweed. "செந்துகிர் படருந் திரைக்கடல்" (கல்லா.முருக.வண.).

தெ., க., து. தொகரு

[துவர் → துகர் → துகிர்]

துகிர்த்தாளி *tukir-t-tāḷi*, பெ. (n.) பவள மல்லிகை (மலை.) பார்க்க; see *pavaḷa-malligai*.

[துகிர் + தாளி]

துகிரிகை *tukirigai*, பெ. (n.) 1. துகிலிகை பார்க்க; see *tukiligai* (அக.நி.). 2. சித்திரம் (யாழ்.அக.); picture. 3. சாந்து (யாழ்.அக.); sandal paste.

துகில் *tugil*, பெ. (n.) 1. நல்லாடை; fine cloth, rich attire. "பட்டுந் துகிலு முடுத்து" (நாலடி. 264). 2. துகிற்கொடி பார்க்க; see *tukiṟkoḍi*. 3. விருதுக் கொடி (பிங்.); ensign. 4. புடைவை; saree. "திரௌபதையின் துகிலைத் துச்சாதனன் உரியும் காட்சி".

[துகிர் → துகில் (தமிவ. 57)]

துகில்பீசம் *tugil-pīšam*, பெ. (n.) பருத்தி விதை; cotton seed.

[துகில் + பீசம்]

துகில்வலை *tugil-valai*, பெ. (n.) வலைவகை; a kind of net.

[துகில் + வலை]

துகிலி *tugili*, பெ. (n.) 1. பருத்தி இலை; cotton leaf. 2. விதை; testicle (சா.அக.).

[துகில் → துகிலி]

துகிலிகை[1] *tugiligai*, பெ. (n.) 1. எழுதுகோல்; painter's pencil. "சுவர்செய்தாங் கெழுதப்பட்ட துகிலிகைப் பாவை" (சீவக. 2542). 2. சித்திரம் (யாழ்.அக.); picture.

[துகில் → துகிலிகை (தமிவ. 57)]

துகிலிகை[2] *tugiligai*, பெ. (n.) துகிற்கொடி பார்க்க; see *tugiṟkoḍi*. "புரிசைமேற் புனைந்த வாணிலா நெடுந்துகிலிகை" (கந்தபு. திருநகர. 20).

துகிற்கிழி *tugiṟ-kiḻi*, பெ. (n.) உறை; cover. "துகிற்கிழி பொதிந்து" (சீவக. 164).

துகிற்கொடி *tugiṟ-koḍi*, பெ. (n.) ஆடையாலி யன்ற கொடி; banner, flag. "வெள்ளருவித்திரள் யாவையும் குழுவின் மாடத் துகிற் கொடி போன்றவை" (சீவக. 34).

துகின்மனை *tugiṉ-maṉai*, பெ. (n.) கூடாரம்; tent. "துகின் மனையுட் கொடு போகி" (சேதுபு.அகத். 40).

[துகில் + மனை]

துகின்முடி¹-த்தல் *tugin-mudi,* செ.கு.வி. (v.i.) *தலைப்பாகை கட்டுதல்;* to tie a turban on the head. *"துகின் முடித்துப் போர்த்த . . . பெருமூதாளர்" (முல்லைப். 53).*

[துகில் + முடி-.]

துகின்முடி² *tugin-mudi-,* பெ. (n.) *தலைப்பாகை;* head-dress. *"பைந்துகின்முடி யணிந்தவர்" (சீவக. 1558).*

[துகில் + முடி]



துகினூல் *tuginūl,* பெ. (n.) *வெண்ணூல்;* white thread. *"பல்கிழியும் பயினுந் துகினூலொடு" (சீவக. 235).*

[துகில் + நூல்]

துகு¹-தல் *tugu-,* செ.கு.வி. (v.i.) *தொகுதியாதல்;* to be gathered in a mass, as the hair. *"சலந்துக்க சென்னிச் சடையான் கண்டாய்" (தேவா. 844, 3).*

[தொகு → துகு-.]

துகு²-த்தல் *tugu-,* செ.குன்றாவி. (v.t.) *தொகுதியாக்குதல்;* to bring together, gather in a mass, as hair. *"அவிழ்ந்த புரிசடை துகுக்கும்" (திருவிசை. கருவு-7,3).*

[தொகு → துகு-.]

துகுதுகுவெனல் *tugu-tugu-v-venal,* பெ. (n.) *பெருங்கூட்டம் வருகையில் எழும் ஒலிக் குறிப்பு;* onom. expr. of the sound of the inflow of a big crowd.

[துகு + துகு + எனல்]

துகூலம் *tugūlam,* பெ. (n.) *1. வெண்பட்டு;* white silk. *2. நொய்ய புடைவை;* thin cloth.

[ஒருகா. துகில் → துகு → துகூலம்]

துகை¹-த்தல் *tugai,* செ.குன்றாவி. (v.t.) *1. மிதித்துழக்குதல்;* to tread down, trample on, bruise or destroy by treading. *"துன்றுகடி காவினை யடிக்கொடு துகைத்தான்" (கம்பரா. பொழிலிறுத். 8).* *2. இடித்தல்;* to pound in a mortar; to mash. *3. வருத்துதல்;* to vex. *"துன்பத்தாற் றுகைக்கப் பட்டார் துகைத்தவத் துன்பந் தாங்கி" (சீவக. 1392).*

[துவை → துகை. துகைத்தல் (வ.மொ.வ. 184)]

துகை²-த்தல் *tugai,* செ.கு.வி. (v.i.) *உலவுதல்;* to roam about; to walk. *"வாமனா றுகைக்கும் திருவாயில்" (மருதூரந். 12).*

துகைபலன் *tugai-palan,* பெ. (n.) *அறுவடை;* harvest. *"துகைபலனில் வாருமென்று சொல்ல" (சரவண. பணவிடு. 256).*

துகையல் *tugaiyal,* பெ. (n.) *தேங்காயுடன் காய்கறிகளை அரைத்துச் செய்யும் உணவு வகை;* a relish or mash of vegtables, coconuts, etc. *"தேங்காய்த் துகையல், புதினாத் துகையல், இஞ்சித் துகையல்" (பே.வ.).*

[துகை → துகையல்]

துங்கதை *tungatai,* பெ. (n.) *1. உயர்ச்சி;* height, elevation. *2. பெருமை;* dignity, greatness. *"துங்கதை தன்னொடு தண்ணெண் றெய்திற்றே" (கந்தபு. இரண்டாநாட். சூர. 225).*

துங்கநதி *tunga-nadi,* பெ. (n.) *1. மூளைநீர்;* serum of the brain. *2. குழந்தைகளைத் தாக்கும் ஒருவகை நோய்;* in the brain is a disease in the children.

துங்கநாசி *tunga-nāsi,* பெ. (n.) *நீண்ட மூக்கு;* long nose, erect nose.

துங்கநாபம் *tunganābam,* பெ. (n.) *நச்சுப் பூச்சி வகை;* a venomous insect.

துங்கபத்திரா *tunga-battirā,* பெ. (n.) *கிளி முருக்கு;* thorny coral tree.

மறுவ. கலியாண முருங்கை

துங்கபத்திரி *tunga-pattiri,* பெ. (n.) *துங்கபத்திரை பார்க்க;* see *tungapattirai.*

"துங்கபத்திரி நிம்பாவி தூயதண் பொருநை" *(திருவிளை. தலவி. 11).*

துங்கபத்திரை *tungapattirai,* பெ. (n.) ஓர் ஆறு; the river Tungabhadra. "துங்க பத்திரைச் செங்களத்திடை" *(கலிங். 89).*

துங்கம் *tungam,* பெ. (n.) *1.* உயர்ச்சி; height, devation. "துங்கமுகமாளிகை" *(திவ்.பெரியதி. 3,4,6). 2.* நுனி; tip edge. *3.* பெருமை *(பிங்.);* dignity, excellence. *4.* அகலம் *(பிங்.);* breadth. *5.* மலை; mountain. *5.* தூய்மை; purity. *6.* வெற்றி *(யாழ்.அக.);* victory.

[உங்கு → துங்கு → துங்கம் (வேக. 36)]

துங்கமுகம் *tunga-mugam,* பெ. (n.) *1.* தாமரைத் தண்டு; lotus stamina. *2.* இதளியம்; mercury.

துங்கரிகம் *tungarigam,* பெ. (n.) காவிக்கல்; red ochre.

துங்கரீமண்டம் *tungari-mandam,* பெ. (n.) சரக்கொன்றை; purging cassia.

துங்கன் *tungan,* பெ. (n.) உயர்ந்தோன்; eminent man. "அபிமான துங்கன் செல்வனைப் போல" *(திவ். திருப்பல். 11).*

துங்கி *tungi,* பெ. (n.) *1.* இரவு; night. *2.* நச்சுப் பூச்சி வகை; a venomous insect.

துங்கீசன் *tungīsan,* பெ. (n.) *1.* கதிரவன்; Sun. *2.* சிவன்; Šivan. *3.* திருமால்; Thirumāl. *4.* திங்கள்; Moon.

[துங்கன் + ஈசன்]

துச்சகம் *tuccagam,* பெ. (n.) மணக் குழம்பு வகை; a kind of fragrant paste *(யாழ்.அக.).*

துச்சத்துரு *tucca-t-turu,* பெ. (n.) ஆமணக்கு *(யாழ்.அக.);* castor-plant.

துச்சதாரு *tucca-tāru,* பெ. (n.) *1.* ஆமணக்கு; castor seed plant. *2.* குறிஞ்சான்; indian ipecacuanha.

துச்சதானியம் *tucca-tāniyam,* பெ. (n.) பதர்; chaff *(யாழ்.அக.).*

துச்சம்[1] *tuccam,* பெ. (n.) *1.* இழிவு; lowness, meanness, vileness. "வார்த்தையைத் துச்சமாக மதித்தானே" *(இராமநா. உயுத். 81). 2.* வெறுமை *(யாழ்.அக.);* emptiness. *3.* இன்மை; non-existence. "விண்ணின் மலரெனத் துச்சமே யெனவும்" *(வேதா.சூ. 59). 4.* பதர்; chaff. *5.* நிலையின்மை; instability. "உலகந் துச்சமென் றுணர்தல்" *(திருப்போ.சந். குறுங்கழி. (9) 8). 6.* பொய்; false hood *(யாழ்.அக.).*

துச்சம்[2] *tuccam,* பெ. (n.) *1.* கொம்மட்டி; water melon. *2.* பேய்க்கொம்மட்டி; bitter water melon.

துச்சளை *tuccalai,* பெ. (n.) துரியோதனன் உடன் பிறந்தாள்; sister of Duriyōdanan. "தோள்களிற் கழையை வென்ற துச்சளை" *(பாரதசம்பவ. 80).*

துச்சன் *tuccan,* பெ. (n.) இழிந்தவன் *(யாழ்.அக.);* mean, worthless fellow.

துச்சாதனன் *tuccātanan,* பெ. (n.) துரியோதனன் தம்பியருள் ஒருவன்; a brother of Duriyōdanan. "துரோபதையது துய்ய கூந்தலிலே கையை நீட்டிய துச்சாதனனுடைய" *(கலித்.101, உரை).*

துச்சாரம் *tuccāram,* பெ. (n.) மூங்கிலரிசி; bamboo seed.

துச்சி *tucci,* பெ. (n.) *1.* பட்டறிவு; experience. *2.* உண்ணுதல்; eating. *3.* தேர்வு; examination. *4.* பூநீறு; fuller's earth.

[துய் → துச்சி]

துச்சிதம் *tuccitam,* பெ. (n.) ஆமணக்கு; castor.

துச்சிப்பொறுப்பு *tucci-p-poruppu,* பெ. (n.) சிலை வங்கக் கல்; the principle ore of lead.

துச்சிமம் *tuccimam,* பெ. (n.) மயிற்கொன்றை; peacock flower tree.

துச்சிமை *tuccimai,* பெ. (n.) கீழ்மை; meanness, baseness.

[துச்சம் → துச்சிமை]

துச்சிரம் *tucciram,* பெ. (n.) நாயுருவி; Indian burn.

துச்சில்[1] *tuccil,* பெ. (n.) **ஒதுக்கிடம்;** place of retreat, shelter. "உடம்பினுட் துச்சிலிருந்த உயிர்க்கு" *(குறள். 340).*

துச்சில்[2] *tuccil,* பெ. (n.) **மயில் கொண்டை** *(அகநி.);* crest.

துச்சு *tuccu,* பெ. (n.) **இழிவு;** meanness, base deeds. "துச்சான செய்திடினும்" *(திருவிசை. வேணாட். 1).*

துசகம் *tušagam,* பெ. (n.) *1.* **மாதுளை** பார்க்க *(யாழ்.அக.);* see *mādulai. 2.* **கொம்மட்டி மாதுளை** பார்க்க; see *kommatti-mādulai* (மூ.அ)

துசங்கட்டு-தல் *tušaṅgattu-,* செ.கு.வி (v.i.) **காரியத்தில் முனைந்து நிற்றல்;** to engage eagerly in an enterprise as by hoisting a flag. கொடி கட்டுதல் "பத்தசனங்கள்ளக் காக்கத் துசங்கட்டி" *(குற்றா.குற. 91-1).*

[துசம் + கட்டு-.]

துசபரிசம் *tuša-parišam,* பெ. (n.) சிறுகாஞ்சொறி (தைலவ.தைல. 76) பார்க்க; see *širukāñjori.*



துசம்[1] *tušam,* பெ. (n.) **கொடி;** flag. "அடியார்க்கெலா மலகிலாவினை தீர்க்கத் துசங்கட்டு மப்பனே" *(தாயு.ஆசை. 7).*

துசம்[2] *tušam,* பெ. (n.) *1.* **உமி** *(யாழ்.அக.);* husk. *2.* **தவிடு;** bran.

துசம்[3] *tušam,* பெ. (n.) **குங்குலியம்;** bastard sal. *2.* **பல்;** tooth.

துசன் *tušan,* பெ. (n.) *1.* **அந்தணன்;** brahmin. *2.* **தகரம்;** tin.

துஞ்சர் *tuñjar,* பெ. (n.) **அசுரர்** *(யாழ்.அக.);* asuras.

துஞ்சரி-த்தல் *tuñjari-,* செ.கு.வி. (v.i.) **கண் விழித்தல்;** to wake up. "வஞ்சிக் கொம்பரிற் றுஞ்சரித் துளரி யொளிமயிர்கலாபம் பரப்பி" *(பெருங்.உஞ்சைக். 40, 118).*

துஞ்சல் *tuñjal,* பெ. (n.) *1.* **இறத்தல்;** dying. *2.* **தூங்கல்;** sleeping. *3.* **உறங்கல்;** dosing drowsing.

துஞ்சற *tuñjara,* எ.வி. (adv.) **முழுதும்;** entirely, wholly.

துஞ்சினார் *tuñjinār,* பெ. (n.) **செத்தார் என்று பொருள்படும் மங்கல வழக்குச் சொல்;** the dead, used elephemistically. "செத்தாரைத் துஞ்சினா ரென்றலும்" *(தொல்.சொல். 17, சேனா.).*

துஞ்சு[1]**-தல்** *tuñju-,* செ.கு.வி. (v.i.) *1.* **தூங்குதல்;** to sleep, slumber, doze. "நெருப்பினுட் டுஞ்சலு மாகும்" *(குறள். 1049). 2.* **தொழிலின்றியிருத்தல்;** to rest without work. "உலகு தொழிலுலந்து நாஞ்சி றுஞ்சி" *(அகநா. 14:1). 3.* **சோம்புதல்;** sluggish. "நீ துஞ்சாய் மாறே" *(புறநா. 22, 38). 4.* **சோர்தல்;** to droop. "பயிர் துஞ்சிப் போயிற்று" *5.* **இறத்தல்;** to die. "நிலமிசைத்துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப் பட்டாரல்லால்" *(நாலடி. 21). 6.* **வலியழிதல்;** to perish. "துஞ்சும் பிணியாயின தானே" *(தேவா. 494:4). 7.* **குறைதல்;** decrease. "பெருமலை துஞ்சாது வளஞ்சுரக் கெனவே" *(சிலப். குன்றக்குரவை). 8.* **தங்குதல்;** stay. "புலிதுஞ்சு வியன்புலத் தற்றே" *(புறநா. 54). 9.* **நிலைபெறுதல்** *(பிங்.);* to settle permanently, endure. "துஞ்சு நீணிதியது" *(சூளா.நாட். 1). 10.* **தொங்குதல்;** to hang. "துஞ்சுகுழல்" *(பு.வெ. 9, 35, உரை).*

ம. துஞ்சுக

[துஞ்ச → துஞ்சு-.]

துஞ்சு[2]**-தல்** *tuñju,* செ.கு.வி. (v.i.) **நெய் முதலியன கட்டியாக உறைதல்;** to become solidified, as ghee. "துஞ்சிய நெய்யும் காய்ந்த பாலும்" *(திவ்.பெரியாழ். 2,1,6, வ்யா, பக். 228).*

[துகில் → துகிலி]

துஞ்சு² *tuñju,* பெ. (n.) துஞ்சுகுழல் பார்க்க (கலித். 96); see *tuñjukuḻal.*

துஞ்சுகுழல் *tuñjukuḻal,* பெ. (n.) *அம்பால்களுள் பின்னித் தொங்கவிட்ட கூந்தல் வகை (பு.வெ. 9, 45, உரை);* woman's hair dressed by coiling and tying it up behind in a roll, one of aimpal of v.

[துஞ்சு + குழல்]

துஞ்சுநிலை *tuñju-nilai,* பெ. (n.) *கட்டில் (யாழ்.அக.);* cot, bed stead.

துஞ்சுமரம் *tuñjumaram,* பெ. (n.) *மதில்வாயிற் கணையமரம்;* wooden bar to fasten a door. "துஞ்சு மரக்குழாஅந்துவன்றி" *(பதிற்றுப். 16,3).* 2. *கழுக்கோல் (பதிற்றுப். 16, 3, உரை.);* impaling stake.

[துஞ்சு + மரம்]

துஞ்சுமன் *tuñjumaṉ,* பெ. (n.) *சோம்பலுள்ளவன்;* indolant person.

துஞ்சை *tuñjai,* பெ. (n.) *துஞ்சுகுழல் பார்க்க;* see *tuñju-kuḻal* "பனிச்சையையும் துஞ்சையையும் விரித்தும்" *(சீவக. 2437, உரை).*

[துஞ்சு → துஞ்சை]

துட்கு¹-தல் *tuṭku-,* செ.கு.வி. (v.i.) *அச்சங் கொள்ளுதல்;* to be alarmed, struck with fear or dismay. "கடற்றுட்கப் பொரும்வேலர்" *(திருப்பு. 423).*

[துட்கெனல் → துட்கு-.]

துட்கு² *tuṭku,* பெ. (n.) *அச்சம்;* fear, dismay. "துட்கோடுள மறுகும்படி" *(பாரத பதினாறாம் 65).*

துட்கெனல் *tuṭkeṉal,* பெ. (n.) *அச்சக்குறிப்பு;* expr. of sudden fear or dismay. "நெஞ்சு துட்கென்ன" *(சீவக. 2059).*

துட்டலி *tuṭṭali,* பெ. (n.) *செடிவகை (யாழ்.அக.);* plant.

துட்டவி *tuṭṭavi,* பெ. (n.) 1. *தொடரி;* prickly thron. 2. *ஒரு முட்செடி;* a thorny shrub. 3. *புலித்தடுக்கி;* tiger-stopper.

துட்டாப்பு *tuṭṭāppu,* பெ. (n.) 1. *செரிமான நோய்;* indigestion. 2. *சிட்டை மரத்திடையே கட்டிய பாரத்தை சுமக்கை;* carrying a load hung on a pole between two persons. 3. *சிட்டைமரம் பார்க்க;* see *šiṭṭai-maram.*

துட்டி¹ *tuṭṭi,* பெ. (n.) *மனநிறைவு;* satisfaction. "நல்ல துட்டியாற் சமாதி தன்னிற் றூங்கிய தூயோர்" *(சிவதரு. சிவபோ. 89).*

துட்டி² *tuṭṭi,* பெ. (n.) *பணிக்கு வாராமையின் பொருட்டு சம்பளம் பிடிக்கை;* deduction from the wages of a person made because of his absence from work. "அவன் சம்பளத்தில் ஒருநாள் துட்டிபோட்டான்" *(செட்டிநா.).*

துட்டிலம் *tuṭṭilam,* பெ. (n.) *இலுப்பை;* mahwah flower.

துட்டு *tuṭṭu,* பெ. (n.) 1. *2 அல்லது 4 தம்படி மதிப்புக் கொண்ட பணம்;* money of the value of 2 or 4 pies. 2. *பணம்;* money. "அவன் துட்டுள்ளவன்" 3. *தொன்மக் காலத்துக் காசு வகை;* an ancient copper coin.

[துள் → துட்டு (மு.தா. 141)]

துட்டுக்கட்டை *tuṭṭu-k-kaṭṭai,* பெ. (n.) *துட்டுத்தடி பார்க்க;* see *tuṭṭu-t-taṭi.*

துட்டுக்காரன் *tuṭṭu-k-kāraṉ,* பெ. (n.) *பணக்காரன்;* moneyed man.

துட்டுத்தடி *tuṭṭu-t-taḍi,* பெ. (n.) *குறுந்தடி (யாழ்.அக.);* short club.

[துட்டு + தடி (மு.தா. 141)]

துட்டுத்துக்காணி *tuṭṭu-t-tukkāṇi,* பெ. (n.) 1. *சில்லறைப் பணம்;* copper money, small change. 2. *பணம்;* money, wealth.

துட்டுமாந்தம் *tuttu-māndam,* பெ. (n.) குழந்தை நோய் வகை *(பாலவா. 315);* a disease of children.

[ஒருகா. துட்டு + மாந்தம்]

துட்டுவட்டி *tuttuvatti,* பெ. (n.) உரூபா ஒன்றுக்கு மாதம் ஒரு துட்டுமேனி வாங்கும் முறையல்லா வட்டி; interest at the rat of a tuttu per rupee per mensem, considered exorbitant.

[துட்டு + வட்டி]

துட்டுவம் *tuttuvam,* பெ. (n.) சிறுமை; little, insignificant.

துட்டெடை *tuttedai,* பெ. (n.) எண்ணெய் மருந்தெண்ணெய், மருந்து, நெய் இவைகளை உட்கொள்ளும் அளவு, அதாவது 4 பைசா எடை *(சா.அக.);* a quantity weighing 4 pies generally prescribed by vaidyans in case of liquid medicine, to be given internally as oil, medicated ghee or oil.

துடக்கம் *tudakkam,* பெ. (n.) தொடக்கம் பார்க்க; see *todakkam.*

க. தொடகுக; ம. துடக்கம்

[துடு → துடங்கு → துடக்கம்]

துடக்கறுப்பான் *tudakkaruppān,* பெ. (n.) *1.* பசுங்கொத்தான்; air creeper. *2.* முடக்கொற்றான்; palsy curet.

[துடக்கு + அறுப்பான்]

துடக்கு[1]-தல் *tudakku-,* செ.குன்றாவி. (v.t.) *1.* கட்டுதல்; to tie, bind. "நெடுங்கொடி யருவி யாம்ப லகலடை துடக்கி" *(அகநா. 96). 2.* அகப்படுத்துதல்; to entangle, inveigle. "தூண்டிலா விட்டுத் துடக்கி" *(கலித். 85). 3.* தொடர்ப்படுத்துதல்; to bring together. "குடரோடு துடக்கி முடக்கியிட" *(தேவா. 945:1).*

க. தொட

துடக்கு[2]-தல் *tudakku-,* செ.குன்றாவி. (v.t.) தொடக்குதல் *(யாழ்.அக.);* to begin.

க. தொடகு

[தொடக்கு → துடக்கு]

துடக்கு[3] *tudakku,* பெ. (n.) *1.* தன்னகப்படுத்துவது; that which entangles. "தூண்டிலிரையிற் றுடக்குள் ளுறுத்து" *(பெருங்உஞ்சைக். 35, 108). 2.* தொடர்பு; connection. துடக்குகள் தீர்த்துப் போட்டான். *3.* மகளிர் தீட்டு; menses in woman. *4.* மகப்பேற்றுத் தீட்டு; ceremonial impurity of child birth.

துடக்குக்காரன் *tudakku-k-kāran,* பெ. (n.) தீட்டுக்காரன்; person ceremonially unclean, as from a birth or death.

[துடக்கு + காரன்]

துடக்குவீடு *tudakku-vīdu,* பெ. (n.) குழந்தை பிறப்பு அல்லது இறப்பினால் தூய்மையற்ற வீடு; a house ceremonially unclean, as from child birth, death, etc.

[துடக்கு + வீடு]

துடகம் *tudagam,* பெ. (n.) தகரை; ring worm plant.

துடங்கணம் *tudankanam,* பெ. (n.) வெண்காரம்; borax *(சா.அக.).*

துடங்கு[1]-தல் *tudangu-,* செ.குன்றாவி. (v.t.) தொடங்கு; to begin.

ம. துடங்ஙுக

துடங்கு[2] *tudanku,* பெ. (n.) விலங்கு; shackles, stocks for confinement.

[துடக்கு → துடங்கு]

துடப்பம் *tudappam,* பெ. (n.) துடைப்பம்; broom.



துடப்பம்புல் *tuḍa-p-pam-pul,* பெ. (n.) துடைப்பப்புல் பார்க்க; see *tuṭaippa-p-pul.*

துடம் *tuḍam,* பெ. (n.) துடவு பார்க்க; see *tuṭavu.*

துடம்பகாரி *tuḍambakāri,* பெ. (n.) *சிறுதுவரை;* a small variety of dholl.

துடர்[1]-தல் *tuḍar,* செகுன்றாவி. (v.t.) *1. துடர்;* to follow one after another. "நெடுமரங்கள் சுற்றிச் சாம்புவன் கொல்ல" *(கம்பரா.நாகபா. 59).* *2.* தொடர் பார்க்க; see *toḍar.*

துடர்[2] *tuḍar,* பெ. (n.) *தொடரி;* chain *(அகநி).*

[துடு → துடர்]

துடர்க்கம் *tuḍarkkam,* பெ. (n.) *நரி வழுக்கை அல்லது பிரமி வழுக்கை;* Indian bramy.

துடர்ச்சி *tuḍarcci,* பெ. (n.) *சண்பகம்;* champauk tree.

துடராமுறி *tuḍar-ā-muṟi,* பெ. (n.) *விடுதலை ஆவணம்;* release deed *(யாழ்.அக.).*

துடரி *tuḍari,* பெ. (n.) *1. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஒரு மலை;* a hill in Tinnevelly district. "மாறன் றுடரிவண் பொழிலே" *(மாறனலங். 96, 159).* *2. சிறுவிலந்தை மரம்;* small jujube tree. "திம்புளிக் களாவொடு துடரி முனையின்" *(புறநா. 177).*

துடரிக்கொழுந்து *tuḍari-k-koḻuntu,* பெ. (n.) *இண்டங்கொழுந்து;* tender leaves of inddam.

துடவர் *tuḍavar,* பெ. (n.) *நீலப்பகுதி மலை இனத்தவர்;* todar of the Nilgiris.

துடவு *tuḍavu,* பெ. (n.) *ஓர் அளவு;* a liquid measure. "ஒரு துடவு நெயும்" *(T.A.S. ii, 86).*

[ஓ.நோ. துழவு → துடவு]

துடவை *tuḍavai,* பெ. (n.) *1. சோலை (சூடா.);* grove. *2. தோட்டம்;* garden. "தோன்றாத் துடவையி னிட்டன ணீங்க" *(மணிமே. 13,10).* *3. விளைநிலம்;* cultivated field. "ஆத்தொழு வோடை துடவையுங் கிணறும்" *(திவ்.பெரியாழ். 5,1,5).* *4. மயில்;* peacock.

[துடு → துடா]

துடி[1]-த்தல் *tuḍi,* செகுவி. (v.i.) *1. படபடவெனச் சலித்தல்;* to quiver, tremble. "வாய்திறந் தம்பவளந் துடிப்பப் பாடுமின்" *(திருவாச. 9,11).* *2. மனம் பதைத்தல்;* to be in a great flurry or agitation. "துணுக்கத்தாற் துடிக்கின் றாரும்" *(கம்பரா. நீர் விளையாட்டு. 11).* *3. பரபரத்தல்;* to be eager. "அவன் அங்கே போகத் துடிக்கிறான்". *4. பசி முதலியவற்றால் மிக வருந்துதல்;* to suffer acutely, as from the gnawings of hunger. "பசியால் துடிக்கிறான்". *5. துடுக்காதல்;* to be rude, roguish. *6. மின்னுதல்;* to shine, glitter.

[துடு → துடி → துடி- (மு.தா. 62)]

துடி[2] *tuḍi,* பெ. (n.) *1. சலிப்பு;* quivering. "ஒரு துடி துடித்தாள்". *2. வேகம்;* speed. "வித்தோங்கு பயிரைக் கிளைத்துவரு துடியினால் விளையு மென்றே யறியலாம்" *(அறப். சத. 31).* *3. அறிவுக் கூர்மை;* cleverness. *4. சுறுசுறுப்பு;* industry. "பையன் துடியா யிருக்கிறான்". *5. மேன்மை;* superiority. *6. வலி;* strength. *7. உடுக்கை என்னும் பறை வகை;* a small drum shaped like an hour-glass. *8. துடி கொட்டுபவன்;* drummer. "துடிப்பண் புரைத்தன்று" *(பு.வெ. 1,19, கொளு).* *9. உதடு;* lip *(அகநி).*

துடி[3] *tuḍi,* பெ. (n.) *1. அகில் வகை;* salt swamp tiger's milk. *2.* தூதுவளை (திவா.) பார்க்க; see *tūduḷai.* *3. கூதாளி (யாழ்.அக.);* convolvulus. *4. சங்கஞ்செடி (மலை.);* mistletoe berry thorn.

துடி[4] *tuḍi,* பெ. (n.) *1. கால நுட்பம்;* instant, minute. "துடியின் மாளா" *(இரகு. யாகப். 67).* *2. 4096 கணங்கொண்ட காலவகை;* one of the ten varieties of kalam v., which consists of 4096 kaṇam. *3. சிறுமை;* littleness. *4. மயிர்ச் சாந்து;* unguent for perfuming the hair of women. "துடித்தலைக் கருங்குழல்" *(சீவக. 194).*

துடி[5] *tuḍi,* பெ. (n.) *திரியணுகம்;* molecule, as made up of three atoms. "துடிகொள் நுண்ணிடை" *(திவ்.பெரியதி. 1,2-3, வ்யா).*

துடிக்கூத்து *tuḍi-k-kūttu,* பெ. (n.) *பதினொரு வகை ஆடல்களுள் பகைவரை அழித்தபின் முருகக் கடவுளும் எழுமகளிரும் துடி*

கொட்டியாடிய கூத்து (சிலப். 6,51) (பிங்.); a dance of victory performed to the accompaniment of drum-beat, by skanda and the yeḷu-makaḷir one of ll kuttu of v.

துடிகம் *tuḍigam,* பெ. (n.) **தும்பை** (மலை.) பார்க்க; see *tumbai.*

[துடு → துடிகம்]

துடிசாத்திரம் *tuḍi-šāttiram,* பெ. (n.) **துடிநூல்** (யாழ்.அக.) பார்க்க; see *tuṭi-nūl.*

[துடி + சாத்திரம்]

துடிதுடி-த்தல் *tuḍi-tuḍi,* செ.குவி. (v.i.) *1.* **மனம் பதைபதைத்தல்;** to be in a great flurry. *2.* **கடுகடுத்தல்;** to fret and fume. "எதிருறத் துடிதுடித் தெரிவிழித் துணை சிவத்து" (பிரபோத 26, 21).

துடிநாடி *tuḍināḍi,* பெ. (n.) **வேகமாய்ப் பதைத்தோடும் நாடி;** forcible beating of the pulse (சா.அக.).

[துடி + நாடி]

துடிநிலை *tuḍi-nilai,* பெ. (n.) **போர்க்களத்தே மறவரது வீரம்பெருகத் துடி கொட்டுதலைக் கூறும் புறத்துறை;** theme of arousing the coverage of warriors by beating the tuḍi drum. "மறங்கடைக் கூட்டிய துடிநிலை" (தொல்.பொ. 59). 2. **வழிவழியாய்த் துடிகொட்டி வருவோனது குணங்களைப் புகழும் புறத்துறை** (பு.வெ. 1,19); theme of praising the faithful services of a hereditary drummer.

[துடி → துடிநிலை]

துடிநூல் *tuḍi-nūl,* பெ. (n.) **உடலின் துடிப்புக்களினின்று அவற்றின் பயனான விளைவுகளைக் கூறும் நூல்** (யாழ்.அக.); treatise on the art of sooth saying from the quivering of different parts of the body.

[துடி + நூல்]

துடிநோய் *tuḍi-nōy,* பெ. (n.) **திடீரெனத் துடிக்கச் செய்தலினாலேற்படும் நோய்வகை;** sudden vital depression due to an injury of emotion which makes an untowerd impression upon the nervous system shock.

துடிப்பு[1] *tuḍippu,* பெ. (n.) *1.* **பரபரப்பு;** flurry, diligence. "துடிப்பே விஞ்சியிருக்கும்" (ஈடு. 8,4,10). *2.* **நடுக்கம்;** trembling. "தொண்டை வாயிற் றுடிப் பொன்று சொல்லவே" (கம்பரா. பூக்கொய். 38). *3.* **நாடியடிக்கை;** palpitation. "மார்பிடைத் துடிப்புண்டென்னா" (கம்பரா. நாகபாச. 223). *4.* **அகந்தை;** pride. "துடிப்பற்றுக் கேவலமாய் நிற்பதுபோல்" (ஒழுவி.பொது. 2). *5.* **சினம்;** anger. "பரவி யெல்லாம் படுத்தினான் றுடிப்புமாற" (கம்பரா. நிகும்பலை. 179). *6.* **பிரம்பு முதலியவற்றின் வீச்சு;** whirl, as of a whip. "சூரற் றுடிப்பினைத் திசை துழாவ" (இரகு. குறைகூ. 8).

[துடு → துடி → துடிப்பு (மு.தா. 62)]

துடிப்பு[2] *tuḍippu,* பெ. (n.) *1.* **விலை முதலியவற்றின் ஏற்றம்;** exorbitance as of price. "துடிப்பானதுமான விலையை ஏற்றுவார்கள்" (மதி. க. 173). *2.* **ஊற்றம்;** zeal. "சைவத் துடிப்புள்ளவர்" (மதி. க. 27).

துடிபித்தம் *tuḍipittam,* பெ. (n.) **உடம்பு துடித்தல், சண்டையிடல், மகளிரிடம் ஆசை கொள்ளல் முதலிய குணங்களை உண்டாக்கும் ஒரு வகைப்பித்தம்** (சா.அக.); a kind of bilious nature in men causing mischievous propensitus as tremor, inducing a desire to quarrel with others or promoting a carnal desire etc.

[துடி + பித்தம்]

துடிபேதி *tuḍibēti,* பெ. (n.) **கடுமையான வயிற்றுப் போக்கு;** drastic purgative.

[துடி + பேதி]

துடியடங்கவரை-த்தல் *tuḍiyaḍaṅga-varai-,* செ.குன்றாவி (v.t.) **உருவம் மாறும்படி அரைக்குதல்** (சா.அக.); grinding a thing so as to alter its shape or structure completely.

[துடி + அடங்க + அரை-.]

துடியடி *tuḍi-y-aḍi,* பெ. (n.) **துடி போன்ற காலுடைய யானைக் கன்று;** the young of an

elephant, as drum-footed. "கடிய துடியடி யினொடு மிடியி னதிர" (தேவா. 1157.4).

[துடி + அடி]

துடியன் *tuḍiyaṉ,* பெ. (n.) *1.* **துடிகொட்டுஞ் சாதியான்;** drummer who beats the tuḍi drum. "துடியன் பாணன் பறையன் கடம்பனென்று" (புறநா. 233,7). *2.* **சினமுள்ளவன்;** man of irritable temper. *4.* **சுறுசுறுப்புள்ளவன்;** busy person industrious person.

[துடி → துடியன்]

துடியாஞ்சி[1] *tuḍiyāñji,* பெ. (n.) **சங்கஞ்செடி** பார்க்க; see *šaṅgañjeḍi.*

துடியாஞ்சி[2] *tuḍiyāñji,* பெ. (n.) **இசங்கு;** mistle toe berry thorn (சா.அக.).

[துடி → துடிநிலை]

துடியாட்டம் *tuḍiyāṭṭam,* பெ. (n.) **கிறுகிறுப்பு;** giddiness.

துடியாடல் *tuḍi-y-āṭal,* பெ. (n.) **துடிக்கூத்து** பார்க்க; see *tuṭi-k-kūttu.*

துடியிகம் *tuḍiyikam,* பெ. (n.) **நவரை வாழை;** a variety of plantain.

துடியிடை *tuḍi-y-iḍai,* பெ. (n.) **உடுக்குப் போன்ற இடுப்புடையவளாகிய பெண்;** women, as having a waist slender like the middle of the tuti drum. "திறம்புவ தாய்விடிற் போலி துடியிடையே" (வீரசோ. யாப். 24).

துடிவாதம் *tuḍi-vādam,* பெ. (n.) **நரம்புத் துளைகளில் கெட்ட நீர் தங்குவதால் உடம்பில் பலவிடங்களில் துடிதுடித்து அடங்கி, உடம்பில் அனல் பறந்து ஒடுங்கும் ஒரு ஊதைநோய்** (சா.அக.); a kind of nervous disease more especially a functional disorder of the nervous system due to accumulation of moibid fluid in several parts of the body.

துடிவாயு *tuḍi-vāyu,* பெ. (n.) **காற்று அடிக்கடி உடம்பில் பரந்தோடி, நாள்தோறும் அதிகரித்து, பலவிடங்களில் துடிப் புண்டாக்கும் ஒரு வளி** (சா.அக.); a form of nervous disease due to the deranged humour vayu prevailing on several parts of the body.

துடினம் *tuḍiṉam,* பெ. (n.) **விரைவு;** haste.

துடுக்கன் *tuḍukkaṉ,* பெ. (n.) **துடுக்குக்காரன்** பார்க்க; see *tuḍukku-k-kāraṉ.*

துடுக்கு *tuḍukku,* பெ. (n.) *1.* **குறும்புத்தனம்;** insolence, surliness. "இந்தத் துடுக்கு நீர் செய்தீர்" (இராமநா. கிசு. 17). *2.* **சுறுசுறுப்பு;** activity, quickness. *3.* **குறும்புச் செயல்;** wicked act; mischief. "துன்மார்க்கர் . . . துடுக்கே செய்வர்" (தண்டலை. 52).

தெ., க. துடுக்கு

[துடு → துடுக்கு]

துடுக்குக்காரன் *tuḍukku-k-kāraṉ,* பெ. (n.) *1.* **செருக்குள்ளவன்;** insolent person. *2.* **கொடுமையாளன்;** wicked person; churl.

துடுக்கெனல் *tuḍu-k-keṉal,* பெ. (n.) *1.* **அச்சக் குறிப்பு;** expr. signifying fear. *2.* **சிந்தனை யற்றுப் பேசுங்குறிப்பு;** rashness in considerateness. "துடுக்கென்று பேசினான்".

[துடுக்கு + எனல்]

துடுப்பாற்றி *tuḍu-p-pāṟṟi,* பெ. (n.) **கடல்மீன் வகை;** a kind of sea-fish.



துடுப்பு *tuḍuppu,* பெ. (n.) *1.* **சட்டுவம்;** spatula. "இட்டார் தொடுகழலார் மூழை துடுப்பு" (பு.வெ. 6, 23). *2.* **அகப்பை;** ladle. "துடுப்பிற் றுழந்த வல்சி" (புறநா. 26, 10). *3.* **காந்தண்மடல் (அகப்பை போல்வது);** petal of kantal, as resembling a ladle. "பஃறுடுப் பெடுத்த வலங்கு குலைக்காந்தள்" (அகநா. 108) (மலைபடு. 336). *4.* **பூங்கொத்து** (யாழ்.அக.); bunch of flowers. *5.* **வலிதண்டு;** oar, paddle.

தெ. துடுப்பு; க. துடுப்பு; ம. துடுப்பு

[துள் → துளு → துளுப்பு → துடுப்பு (வே.க. 276)]

துடுப்புக்கீரை *tuḍuppu-k-kīrai,* பெ. (n.) **மருந்துச் செடிவகை;** a small medicinal plant.

[துடுப்பு + கீரை]

துடுப்புள்ளான் *tuḍu-p-puḷḷāṉ-,* பெ. (n.) **உள்ளான் வகை;** snipe with paddle bill.

[துடுப்பு + உள்ளான்]



துடும்பு-தல் *tuḍumpu-,* செ.கு.வி. (v.i.) 1. **ததும்புதல்;** to have and flow, as sea-water. "துடும்பல் வேலை துளங்கிய தில்லையால்" *(கம்பரா. சேதுபந்தன. 59).* 2. **கூடுதல்;** to combine, come together. "வன்னியு மந்தமுந் துடும்பல் செய் சடை" *(தேவா. 277, 6).*

[துளும்பு → துடும்பு-. (மு.தா. 6)]

துடுமெனல் *tuḍum-eṉal,* பெ. (n.) 1. **ஒலிக்குறிப்பு;** onom. expr. signifying roaring. 2. **நீரில் விழுதற்குறிப்பு;** jumping sound, as into water. "தீம்பழ நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்" *(ஐங்குறு. 61).*

க. துடும்

துடுமை *tuḍumai,* பெ. (n.) **தோற்கருவி வகை** *(சிலப். 3, வரி, உரை, பக். 104);* a kind of drum.

தெ. துடுமு; க. துடுபு

துடுவை *tuḍuvai,* பெ. (n.) **நெய்த்துடுப்பு;** wooden ladle for taking ghee. "துடுவையா னறுநெ யார்த்தி" *(திருவிளை. திருமணப் 184).*

[துளு → துடு → துடுவை (வே.க. 277)]

துடை[1]**-த்தல்** *tuḍai-t-tal,* பெ. (n.) 1. **தடவி நீக்குதல்;** to wipe. "வான் றுடைக்கும் வகைய போல" *(புறநா. 38).* 2. **பெருக்கித்தள்ளுதல்;** to sweep, brush. "தூளி . . . ஆர்ப்பது துடைப்பது போன்ற" *(கம்பரா. கும்பகருணன். 101).* 3. **துவட்டுதல்;** to dry by wiping, as wet hair. தலையை ஈரம் போகத் துடை 4. **ஒப்பமிடுதல்;** to polish. "நன் பொன் மணியுறீஇப் பேணித் துடைத்தன்ன" *(கலித். 117).* 5. **தீற்றுதல்;** to rub, apply. "சோரியை வாரியைத் துடைத்தார்" *(கம்பரா.அதிகாயன். 238).* 6. **நீக்குதல்;** to remove, dispel, to expel dismiss. "தன்கேளிர் துன்பந் துடைத்தூன்றுந் தூண்" *(குறள். 615).* 7. **அழித்தல்;** to ruin, destroy. "படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி" *(திருவாச. 4, 100).* 8. **கொல்லுதல்;** to hill. "துடைத்த காலன்றனை" *(ஞானவா. சுக்கி. 18).* 9. **கைவிடுதல்;** to relinguish, desert. 10. **காலியாக்குதல்;** to exhaust.

தெ. துருட்சு; க. தொடெ; ம. துடெக்க

துடை[2] *tuḍai,* பெ. (n.) 1. **தொடையென்னும் உறுப்பு;** thigh. 2. **சுவர்க்கட்டை;** block built into a wall to support a beam. 3. **சுவர்ப்புறத்து நீண்ட உத்திரம்;** beam projecting from a wall. 4. **விட்டம்;** long cross beam. 5. **அரசமரம்;** pipal tree. 6. **நச்சு மூங்கில்;** poison bamboo.

[துடு → துடை (வ.மொ.வ. 182)]



துடைக்கனம் *tuḍai-k-kaṉam,* பெ. (n.) **மூங்கில்;** bamboo.

துடைகாலன் *tuḍaikālaṉ,* பெ. (n.) **தன் குடும்பத்திற்குக் கேடு விளைவிக்கும் தீய குணாளன்;** a man whose ill-luck is believed to bring ruin to his family.

துடைகாலி *tuḍai-kāli*, பெ. (n.) தன் குடும்பத்திற்கே கேடு விளைவிக்கும் நலமிலாப்பெண்; a woman whose ill-luck is believed to bring ruin to her family.

துடைச்சவம் *tuḍai-c-cavam*, பெ. (n.) எருக்கு; madar plant.

துடைப்பக்கட்டை *tuḍaippa-k-kaṭṭai*, பெ. (n.) 1. துடைப்பம் பார்க்க; see *tuṭaippam.* 2. தேய்ந்த துடைப்பம்; worn-out broom.

துடைப்பப்புல் *tuḍaipa-p-pul*, பெ. (n.) புல் விளக்குமாறு; broom-grass.

துடைப்பம் *tuḍaippam*, பெ. (n.) விளக்குமாறு; broom, beson. "உரோமநீள் வால்க ளற்றன துடைப்ப மொத்தலின்" *(உத்தரரா.இலங்கையழி. 31).*

ம. துடப்பம்

[துடை → துடைப்பு → துடைப்பம் (வே.க. 277)]

துடைப்பமுள் *tuḍai-p-pa-muḷ*, பெ. (n.) துடப்பத்திலுள்ள முள்; the thorn like subtances in the broom grass *(சா.அக.).*

[துடைப்பம் + முள்]

துடைவாழை *tuḍai-vāḻai*, பெ. (n.) 1. தொடையில் உண்டாகும் கட்டிவகை; inflammed glands, abscess on the thigh near the groin. 2. அரையாப்புக்கட்டி; bubo.

[தொடை → துடை + வாழை]

துடைவி *tuḍaivi*, பெ. (n.) நாயுருவி; indian burr.

[துடை → துடைவி]

துடைவை *tuḍaivai*, பெ. (n.) 1. உழவு; cultivation. 2. கொல்லை, பூந்தோட்டம்; cultivation, backyard, flower garden.

[துடை → துடைவை]

துண்டக்காணிமேரை *tuṇḍa-k-kāṇi-mērai*, பெ. (n.) சிற்றூர்க் காணிகளையும் அவற்றின் விளைவையும் கணக்கிட்டுச் சிற்றூர் அலுவலர்களுக்குக் கொடுக்கப்படும் தவசச் சம்பளம்; fees in kind paid to the village officers calculated from the number of kani in a village and the average produce per kani M.N.A.D. I, 173.

துண்டகவரசு *tuṇḍagavarašu*, பெ. (n.) நச்சு மூங்கில்; poisonous bamboo.

[துடை → துடைவை]

துண்டகன் *tuṇḍagaṉ*, பெ. (n.) கபடன், வஞ்சகன்; trailor.

துண்டகேரி *tuṇḍakēri*, பெ. (n.) 1. பருத்தி; cotton. 2. கோவை; *kōvai.*

துண்டதுண்டம் *tuṇḍa-tuṇḍam*, பெ. (n.) சின்ன பின்னம்; very small pieces. "துண்ட துண்டங்கள் செய்தான்" *(கம்பரா.சடாயுவுயிர். 109).*

[துண்டம் + துண்டம்]

துண்டம்[1] *tuṇḍam*, பெ. (n.) 1. துண்டு; piece, slice. "மதித்துண்ட மேவுஞ் சுடர்த் தொல்சடை" *(தேவா. 79,3).* 2. சிறுதுணி; a small piece of cloth. 3. சிறுவாய்க்கால்; small canal. 4. பிரிவு; section, division. 5. சிறிய வயற்பகுதி; a small plot of field. 6. மீன் துண்டம்; a piece of fish-meat.

துண்டம்[2] *tuṇḍam*, பெ. (n.) 1. பறவை மூக்கு; beak, bill. "துண்டப்படையால்" *(கம்பரா. சடாயுவுயிர். 109).* 2. மூக்கு; nose. "தோன்றா நகையுடன் றுண்டமுஞ் சுட்டி" *(கல்லா. 63, 8).* 3. முகம் *(பிங்.);* face. 4. யானைத்துதிக்கை; elephant's trunk. 5. சாரைப்பாம்பு *(பிங்.);* rat snake. 6. வாளலகு (ஆயுதவலகு); blade, as of a sword.

துண்டமதி *tuṇḍamati*, பெ. (n.) பிறைத் திங்கள்; crescent. "துண்டமதி நுதலாளையும்" *(பதினொ. திருத்தொண். திருவந். 7).*

[துண்டம் + மதி]

துண்டமிழு-த்தல் *tuṇḍam-iḻu-*, செகுவி. (v.i.) தோட்டங்களிற் சிறு வாய்க்கால் அமைத்தல்; to make small channels in garden beds.

[துண்டம் + இழு-.]

துண்டரிக்கம் *tuṇḍarikkam*, பெ. (n.) 1. கொடுமை *(வின்.);* oppression. 2. தொந்தரவு *(வின்);* quarrelsomeness. 3. முகக்களை; bright

intelligent look. 4. கண்டிப்பு; sharpness, curtness, decisiveness, as in speech. 'அவன் துண்டரிக்கமாய்ப் பேசுகிறான்'.

தெ. துண்டரிக்கமு

துண்டரிகம் *tuṇḍarigam*, பெ. (n.) துண்டரிக்கம்[2] பார்க்க; see tuṇḍarikkam. "துண்டரிகப் பிள்ளைதனைச் சூழ்ந்து பிடித்து" (ஆதியூரவதானி).

துண்டன் *tuṇḍaṉ*, பெ. (n.) கொலைஞன்; murderer. 'துண்டனாகிய துட்பண்ணியன்' (சேதுபு. அக்கினி. 44).

துண்டாக்கினி *tuṇḍā-k-kiṉi*, பெ. (n.) நிலவுபோன்று காய் காய்க்கும் எருக்கஞ் செடி; madar plant.

துண்டாடு-தல் *tuṇḍaḍu-*, செ.குன்றாவி. (v.t.) துண்டு துண்டாக வெட்டுதல் (வின்.); to cut in pieces, as a board.

[துண்டு + ஆடு-]

துண்டாயம் *tuṇḍāyam*, பெ. (n.) 1. பொற் பணம்; gold fanam. 2. பொன்மணல்; gold sand.

[துண்டு + ஆயம்]

துண்டாலபித்தி *tuṇḍāla-pitti*, பெ. (n.) வெள்ளூமத்தை; white datura.

துண்டி[1]-த்தல் *tuṇḍi-*, 11 செ.குன்றாவி. (v.t.) 1. வெட்டுதல்; to cut, sever. "இருபதமு மழுவாற் றுண்டித்து" (சேதுபு. கடவு. 12). 2. கிழித்தல் (வின்.); to tear up. 3. பிரித்தல்; to divide, separate. 'அவனை அக்கூட்டத்தினின்று துண்டித்துவிட்டார்' 4. சுருக்கிப் பேசுதல்; to cut short one's words, speak in few words. 'அவன் துண்டித்துப் பேசுகிறான்' (வின்.). 5. மறுத்தல் (வின்.); to dispute, disprove. 6. கண்டித்தல்; to rebuke sharply.

[துண்டு → துண்டி → துண்டித்தல்]

துண்டி[2]-த்தல் *tuṇḍi-*, செ.கு.வி. (v.i.) 1. வெட்டுண்ணுதல்; to be cut off, detached, broken. 2. கடித்தபுண் வீங்குதல்; to swell, as the skin from a bite. 3. கண்டிப்பாதல்; to be strict. "துண்டித்துக் கேட்டான்".

துண்டி[3] *tuṇḍi*, பெ. (n.) 1. துண்டாய்க் கிடக்குந் தரிசு நிலம்; detached piece of high land left waste; waste land surrounded by fields. 2. கழி; small arm of the sea.

துண்டி[4] *tuṇḍi*, பெ. (n.) 1. கொப்பூழ்; navel. 2. பறவை மூக்கு; beak.

துண்டிகேசி *tuṇḍi-kēsi* பெ. (n.) 1. உண்ணாக்கின் கொப்புளம்; a large boil on the palate. 2. பெரிய கோவை; Indian caper.

துண்டிகை *tuṇḍigai*, பெ. (n.) துண்டி[3] பார்க்க (யாழ். அக.); see *tuṇḍi*.

துண்டித்துப்பிடி-த்தல் *tuṇḍittu-p-piḍi-* செ.குன்றாவி. (v.t) 1. பேசுவோனைத் தடைப்படுத்தி வினா எழுப்புதல்; to interrupt one's speech with questions. 2. நெருக்குதல்; to press, ply card.

[துண்டித்து + பிடித்தல்]

துண்டிப்பால் *tuṇḍi-p-pāl*, பெ. (n.) காட்டாமணக்குப் பால்; juice of physic nut plant.

துண்டிருசால் *tuṇḍirucāl*, பெ. (n.) பகுதி பகுதியாகப் பிரித்துச் செலுத்தும் வரி; part remittance, remittance made in instalments. 2. அதிக வரி; extra taxes.

[துண்டு + இருசால்]

துண்டில் *tuṇḍil*, பெ. (n.) மூங்கில் (அக.நி.); bamboo.

[துண்டு → துண்டில்]

துண்டிலம் *tuṇḍilam*, பெ. (n.) கக்கரிக்காய்; cucumber.

[துண்டு → துண்டிலம்]

துண்டீரபுரம் *tuṇḍīra-puram*, பெ. (n.) காஞ்சிபுரம்; conjeevaram, as the capital of Tuṇḍiram. "காஞ்சி துண்டீரபுரமெனப் புகல நின்றதுவே" (கந்தபு. திருநகரப். 73).

துண்டீரன் *tuṇḍīraṉ*, பெ. (n.) காஞ்சியில் ஆட்சிபுரிந்த அரசன்; an ancient king of canjeevaram. 'துண்டீரனும் . . . அரசுசெய் தளித்ததந் நகரம்' (கந்தபு. திருநகரப். 87).

துண்டு[1] *tuṇḍu*, பெ. (n.) ஆடை வகையுள் ஒன்று; a kind of towel.

[துள் → துண்டு (மு.தா. 141)]

துண்டு[2] *tuṇḍu*, பெ. (n.) *1.* கூறு; piece, bit, fragment, slice, scrap, morsel. *2.* பிரிவு; section, division strip. *3.* கையொப்பச்சீட்டு (யாழ்.அக.); receipt. *4.* சீட்டு; chit, billet, ticket, small note. *5.* சிறுதுணி; small piece of cloth; towel. *6.* இரண்டு பெரிய சிப்பமேனும் நான்கு சிறிய சிப்பமேனுங் கொண்ட புகையிலைக் கட்டு; bale of tobacco consisting of four small or two large cippam. *7.* 20 கவுளி கொண்ட வெற்றிலைக்கட்டு; a bale of betel leaves containing 20 kavuli. *8.* இழப்பு; loss, as in trade. *9.* துண்டுவாரம் பார்க்க; see *tuṇḍuvāram*. *10.* தனி; separateness. 'அந்த வேலை துண்டாய் நடக்கட்டும்.' *11.* எச்சம்; balance. 'துண்டுப் பணம்' (நாஞ்.).

[துண்டு → துண்டி]

துண்டுக்கத்தரி *tuṇḍu-k-kattari*, பெ. (n.) துண்டுக்கத்திரி பார்க்க (யாழ்.அக.); see *tuṇḍu-k-kattiri*.

[துண்டு + கத்தரி]

துண்டுக்காணி *tuṇḍu-k-kāṇi*, பெ. (n.) துண்டி[2, 3] பார்க்க (வின்.); see *tuṇḍi*.

[துண்டு + காணி]

துண்டுக்கத்திரி *tuṇḍu-k-kattiri*, பெ. (n.) ஒரு வகை நச்சுப்புழு (வின்.); a kind of venemous.

[துண்டு + கத்திரி]

துண்டுசேறு *tuṇḍu-ceṟu*, பெ. (n.) துண்டுதுண்டாய்க் கடலடிப் பரப்பிலுள்ள சேறு (செங். மீன்); pieces of bog land under the sea.

[துண்டு + சேறு]

துண்டுத்தடி *tuṇḍu-t-taḍi*, பெ. (n.) பெரிய மீன்களின் வேகத்தைக் குறைக்க ஆடுஞ் சிறுதடி (தஞ்சை.மீன்); a small rod, used to reduce the speed of the big size fishes.

[துண்டு + தடி]

துண்டுதுடக்கு *tuṇḍu-tuḍakku*, பெ. (n.) *1.* சிறுதுணுக்கு; small piece, fragment. *2.* தீண்டக்கூடா பொருள்; unclean object.

[துண்டு + துடக்கு]

துண்டுந்துணியுமாக *tuṇḍun-tuṇiyumāga*, வி.எ. (adv.) துண்டு துண்டாக; in jumps, in pieces, in cloths. 'அரத்தந் துண்டுந் துணியுமாகக் கிடக்கிறது'.

[துண்டு + துணியுமாக]

துண்டுப்பத்திரிகை *tuṇḍu-p-pattirikai*, பெ. (n.) தனிக்கடிதவாயிலாக வெளியிடப்படும் சிற்றிதழ்; leaflet.

[துண்டு + பத்திரிகை]

துண்டுப்புள்ளி *tuṇḍu-p-puḷḷi*, பெ. (n.) துண்டுவாரம் பார்க்க; see *tuṇḍuvāram*.

[துண்டு + புள்ளி]

துண்டுபடு-தல் *tuṇḍu-paḍu-*, செ.கு.வி. (v.i.) துண்டுவிழு-[2] பார்க்க; see *tuṇḍuviḻu-*.

[துண்டு + படு-]

துண்டுருட்டி *tuṇḍuruṭṭi*, பெ. (n.) *1.* அடிமரத்தின் உருண்டை வடிவம்; roundness of trunk. *2.* பெருவயிறு; large abdomen.

[துண்டு + உருட்டி]

துண்டுருட்டிக்காளை *tuṇḍuruṭṭi-k-kāḷai*, பெ. (n.) கொழுத்த காளை (வின்.); fat bull.

[தின்றுருட்டி + காளை → துண்டுருட்டிக் காளை]

துண்டுவலை *tuṇḍuvalai*, பெ. (n.) வலையின் ஒரு கூறு (செங்.மீன்.); part of a fish net.

[துண்டு + வலை]

துண்டுவாசிகூட்டு-தல் *tuṇḍu-vāsi-kūṭṭu-*, செ.கு.வி. (v.i.) தவசம் முதலியவற்றால் இழப்பிற்கு ஈடு பெறுதல் (வின்.); to make good a loss, especially to grain (செ.அக.).

[துண்டு + வாசிகூட்டு-]

துண்டுவாரம் *tuṇḍu-vāram*, பெ. (n.) மொத்த விளைவில் நிலவுடைமையாளர்க்குரிய பகுதி; mirasudar's share of the produce.

[துண்டு + வாரம்]

துண்டுவிழு-தல் *tuṇḍu-viḻu-,* செ.கு.வி. (v.i.) 1. வேண்டிய அளவுக்கு மேல் மிச்சப்பகுதி அமைதல்; to have a piece left over after a material has been cut into pieces or required length, as a cloth. "வேட்டி துண்டு விழுந்தது" 2. வேண்டிய அளவுக்குக் குறைபடுதல்; to be deficient. 'கொடுக்க வேண்டிய பணத்துக்கு பத்துரூபா துண்டு விழுகிறது.' 3. இழப்பாதல்; to end in loss, as trade.

[துண்டு + விழு-.]

துண்டுவெளியீடு *tuṇḍu-veḷiyīḍu,* பெ. (n.) அட்டைகளின்றி அல்லது கட்டுமானம் செய்யப்படாமல் தாளில் அச்சிடப்பட்ட ஒரு சிறு புத்தகம் (அச்சு.); pamphlet, handbill.

[துண்டு + வெளியீடு]

துண்டை *tuṇḍai,* பெ. (n.) துடுக்கானவன்; bold, rash person. 'துண்டையான பையல்'.

[துள் → துண் → துண்டு → துண்டை (மு.தா. 60)]

துண்ணிடு-தல் *tuṇṇiḍu-,* செ.கு.வி. (v.i.) அச்சத்தால் திடுக்கிடுதல் (யாழ். அக.); to start, as in fright.

[துண் → துண்ணிடு-.]

துண்ணூறு *tuṇṇūṟu,* பெ. (n.) திருநீறு பார்க்க; see *tirunīṟu.* 'துண்ணூற்று மடல்'.

துண்ணெனல் *tuṇṇeṉal,* பெ. (n.) 1. திடுக்கிடுதற் குறிப்பு; expr. signifying startling. "எயினர்கோன் துண்ணென்றான்" (கம்பரா. குகப். 28). 2. அச்சக்குறிப்பு; expr. signifying frightening. "ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி." (திருவாச. 19. 10). 3. விரைவுக் குறிப்பு; suddenness. "துண்ணென வென்னுள மன்னிய சோதி" (திருவாச. 497).

[துண் + எனல்]

துணங்கல் *tuṇaṅgal,* பெ. (n.) கூத்து (பிங்.); dance.

[துணங்கை → துணங்கல்]

துணங்கறல் *tuṇaṅgaṟal,* பெ. (n.) 1. இருள்; darkness. 2. திருவிழா; festival (செ. அக.).

துணங்கு *tuṇaṅgu,* பெ. (n.) இருள் (யாழ்.அக.); darkness.

துணங்கை *tuṇaṅgai,* பெ. (n.) 1. முடக்கிய இருகைகளையும் விலாப் புடைகளில் ஒற்றியடித்துக்கொண்டு அசைந்தாடும் ஒரு வகைக் கூத்து; a kind of dance in which the arms bent at the above are made to strike against the sides. "பிணந்தின் வாய டுணங்கை தூங்க" (திருமுரு. 56). 2. பேய் (சூடா.); devil. 3. திருவிழா (திவா.); festival. 4. யாழ் விண்மீன் (திருவாதிரை) (சூடா.); the sixth nakṣatra.

[துளங்கு → துணங்கு → துணங்கை]

துணதுண-த்தல் *tuṇa-tuṇa-,* 11 செ.கு.வி. (v.i.) இடைவிடாது பேசித் தொந்தரவு செய்தல்; to worry with ceaseless talk (கொ.வ.).

துணர்[1]-தல் *tuṇar-,* 4 செ.கு.வி. (v.i.) துணர்[3] பார்க்க; see tuṇar. "இருடுணூர்ந்தனைய குஞ்சியன்" (சூளா. குமார. 6).

[துண் → துணர் → துணர்தல்]

துணர்[2] *tuṇar,* பெ. (n.) 1. பூ; flower. "துணரினா லருச்சனை புரிந்தே" (பிரமோத். 18, 30). 2. பூங்கொத்து; bunch of flowers. "பொற்றுணர்த் தாமம்" (கல்லா. 10). 3. பூந்தாது (சூடா.); pollen of a flower. 4. குலை; bunch of fruits. "சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழம்" (ஐங்குறு. 214).

[துண் → துணர்]

துணர்[3]-த்தல் *tuṇar-,* 11 செ.கு.வி. (v.i.) கொத்துடையதாதல்; to cluster, as flowers. "துணர்த்த பூந்தொடையலான்" (கம்பரா. வேள்வி. 53).

[துண் → துணர் → துணர்த்தல்]

துணரி *tuṇari,* பெ. (n.) பூங்கொத்து; bunch of flowers. "துணரிஞாழல் நறும்போது நஞ்சூழ் குழற்பெய்து" (திவ். பெரியதி. 9, 3, 5).

[துணர் → துணரி]

துணவு[1] *tuṇavu,* பெ. (n.) விரைவு (வின்.); quickness celerity, suddenness.

[துண்ணெனல் → துணவு]

துணவு[2] *tuṇavu,* பெ. (n.) நுணா பார்க்க (வின்.); see *nuṇā.*

துணி[1]**-தல்** *tuṇi-,* செ.கு.வி. (v.i.) *1.* வெட்டுண்ணுதல்; to be sundered, cut, severed. "இருடுணிந் தன்ன குவவுமயிர்க் குருளை" (அகநா. 201). *2.* நீங்குதல்; to be removed. "இன்றே துணிந்ததென் வினைத் தொடர்பு" (கம்பரா. கையடை. 5). *3.* கிழிதல்; to be torn. "ஆடையுந் துணிந்த சீரையாக்கியே" (திருவாத. பு. மண்சும. 29). *4.* தெளிவாதல்; to become clear. "துணி நீர் மெல்லவல்" (மதுரைக். 283). *5.* துணிவு கொள்ளல்; to dare, venture. "அவன் இப்போது துணிந்து பேசுகிறான்".

[துள் → துண் → துணி-. (மு.தா. 158)]

துணி[2]**-தல்** *tuṇi-,* செ.குன்றாவி. (v.tr.) *1.* உறுதி செய்தல்; to resolve, determine, ascertain; to conclude. "அருஞ்சுரந் துணிந்து பிறளாயினள்" (அகநா. 35). *2.* தொடங்குதல்; to commence. "எண்ணித் துணிக கருமம்" (குறள். 467).

துணி-த்தல் *tuṇi-,* செ.குன்றாவி. (v.tr.) *1.* வெட்டுதல்; to cut, sever, cut off. "இலங்கைக் கோன் சிரமுங் கரமுந் துணித்து" (திவ். பெரியதி. 8, 6, 5).

[துள் → துண் → துணி-. (மு.தா. 141)]

துணி[3] *tuṇi,* பெ. (n.) *1.* துண்டம்; piece, slice, chop, fragment, bit, morsel. "வெளிற்றுப் பனந் துணியின்" (புறநா. 35). *2.* ஆடை (பிங்.); cloth for wear. "துணிச்சிதர்" (மணி. 11, 109). *3.* தொங்கல் (சூடா.); hanging, pendants, decorations, as of cloth. *4.* தேரிற் கட்டிய கொடி (சது.); flag of a car. *5.* ஒளி (பிங்.); light. *6.* மரவுரி (பிங்.); bark-cloth. *7.* உறுதி; ascertainment, determination.

[துள் → துண் → துணி-. (மு.தா. 141)]

துணிக்காகிதம் *tuṇi-k-kāgidam,* பெ. (n.) துணி போன்று இருக்கத்தக்க முறையில் உருவாக்கப் பெற்ற தாள் அல்லது அட்டை; linen finish, paper like cloth.

[துணி + காகிதம்]

துணிக்கை *tuṇikkai,* பெ. (n.) சிறுதுண்டு; small piece, slice.

[துணி → துணிக்கை (மு.தா. 141)]

துணிகரம் *tuṇikaram,* பெ. (n.) *1.* துணிவு; daring, boldness, self-confidence. *2.* துடுக்கு; venturesomeness, presumption, rashness, temerity.

[துணி → துணிகரம்]

துணிகரி-த்தல் *tuṇikari-,* 11 செ.கு.வி. (v.i.) துணிவு கொள்ளல் (வின்.); to be bold, daring, intrepid, to dare.

துணிச்சல் *tuṇiccal,* பெ. (n.) துணிகரம் பார்க்க; see *tuṇikaram* (செ. அக.).

[துணி → துணிச்சல்]

துணிசுட்டசாம்பல் *tuṇi-suṭṭa-sāmbal,* பெ. (n.) சீலைச்சாம்பல்; ashes of burnt cloth useful in medicine.

துணிசெய்-தல் *tuṇi-cey-,* செ.குன்றாவி. (v.tr.) வெட்டுதல்; to cut to pieces. "பிரமன் சிரமுந் துணிசெய்து" (தேவா. 103, 4).

[துணி + செய்-தல்]

துணிதாண்டு-தல் *tuṇi-tāṇḍu-,* செ.கு.வி. (v.i.) உறுதியாக உண்மை சொல்லுதல்; to take an oath by stepping over a cloth.

[துணி + தாண்டுதல்]

துணிந்தவன் *tuṇintavaṉ,* பெ. (n.) எதற்கும் அஞ்சாதவன்; dare devil.

துணிந்துமணியங்கட்டு-தல் *tuṇindu-maṇiyaṅ-kaṭṭu-,* செ.கு.வி. (v.i.) *1.* விடாப்பிடியாய் இருத்தல்; to persist in a foolish purpose, used in contempt. *2.* ஊக்கத்தோடு முயலுதல்; to persevere with energy.

[துணிந்துமணியம் + கட்டு-.]

துணிநிலா *tuṇinilā,* பெ. (n.) பிறைநிலா; crescent moon. 'துணிநிலா வணியினான்' (திருவாச. 35, 5).

[துணி + நிலா]

துணிப்பந்தம் *tuṇi-p-pantam,* பெ. (n.) கிழிச்சீலையாலாகிய தீப்பந்தம் (வின்.); a torch made of rags.

[துணி + பந்தம்]



துணிப்புத்தூக்கு *tuṇipu-t-tūkku,* பெ. (n.) எழுவகைத் தூக்குகளுள் ஒன்று (சிலப். 3, 16, உரை.); musical mode, one of seven tūkku.

துணிப்புழு *tuṇi-p-puḻu,* பெ. (n.) கம்பளிச் சால்வைகளில் கூடுகட்டும் புழுவகை (அபி.சிந். 907); a worm infesting woollen clothes.

துணிபு *tuṇipu,* பெ. (n.) 1. துணிவு பார்க்க; see tuṇipu. "துரும்பு பற்றிக் கடல் கடக்குந் துணிபே யன்றோ" (தாயு. கல்லாவின். 1). 2. கொள்கை; opinion, theory.

[துணி → துணிபு]

துணிபொருள் *tuṇi-poruḷ,* பெ. (n.) 1. உறுதி செய்த பொருள்; ascertained object. "குற்றியல்லன் மகன் எனத் துணிபொருள் மேலானும்" (தொல். சொல். 25 சேனா.). 2. மெய்ப் பொருள்; principle or doctrine conclusively, established. "துன்பமறுக்குந் துணிபொரு ளுணர்ந்தோர்" (மணிமே. 23, 136). 3. பரம் பொருள்; God as determined by scriptures. "மற்றைத் துறைகளில் முடிவுஞ் சொல்லுந் துணிபொருள்" (கம்பரா. வாலிவ. 132). 4. இயலுகை (சாத்தியம்) (மணிமே. 27.29, உரை); major term.

[துணி + பொருள்]

துணியல் *tuṇiyal,* பெ. (n.) துண்டு; small piece, as of flesh. "கொழுமீன் குறைஇய . . . துணியல்" (மதுரைக். 320).

[துணி → துணியல்]

துணியறை *tuṇiyaṟai,* பெ. (n.) துணையறை (அகநி.) பார்க்க; see tuṇaiyaṟai.

[துணி + அறை]

துணியில்சுருட்டல் *tuṇiyil-šuruṭṭal,* செ.கு.வி. (v.t.) மருந்தை வெள்ளைச் சீலையில் தடவி உருட்டித் திரிபோல் செய்தல்; rolling a piece of cloth smeared with the required medicine so as to form a wick.

[துணியில் + சுருட்டல்]

துணியிலூட்டல் *tuṇiyilūṭṭal,* செ.குன்றாவி (v.t.) மருந்தைத் துணியில் தடவுதல்; smearing medicine on a piece of cloth or lint.

[துணியில் + ஊட்டல்]

துணிவு *tuṇivu,* பெ. (n.) 1. ஆண்மை; confidence, boldness, daring, bravery. "தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்றும்" (குறள். 383). 2. மனத்திட்பம்; strength of mind. "செய்க துணிவாற்றி" (குறள். 669). 3. துணிச்சல்; presumption, temerity, audacity. 4. உறுதி; ascertainment, certainty. 5. தெளிந்த அறிவு; determination, decision. "நெச்சத்துத் துணிவில்லோரே" (புறநா. 214, 3). 6. முடிவு; conclusion. 7. கொள்கை; opinion founded on fasts, knowledge or evidence. 'நல்லறிவாளர் துணிவு' (ஆசாரக். 18). 8. நம்பிக்கை (யாழ்.அக.); belief, trust. 9. பகுதி; branch, department. "கலைகளின் துணிவும்" (மணி. 2, 29). 10. நோக்கம் (வி.); purpose, design, aim. 11. தாளம்; time-measure. "தூக்குந் துணிவும்" (மணிமே. 2, 19). 12. தனியிடை எதிர்ப்பட்ட தலைவியைத் தெய்வமகளோ மண்ணக மகளோ என்று ஐயுற்ற தலைவன் மண்ணக மகளேயென ஒருதலைத் துணிதலாகிய கைக்கிளை வகை; (akap.) theme in which the hero of a poem who meets the heroine for the first time in a lonely place and doubts that she must be a celestial nymph, resolves this doubts and finally realises that she is but a mortal. 13. துண்டம்; piece.

[துள் → துண் → துணி → துணிவு]

துணிவுரை *tuṇivurai*, பெ. (n.) அகவுரைப் பிரிவு பதினான்கில் ஒன்று; a kind of commandatary out fourteen.

[துணிவு + உரை]

துணிவுவமை *tuṇivuvamai*, பெ. (n.) உவமேயத்தை உவமானமாக முதலில் ஐயுற்றுப்பின் உவமேயமாகவே துணியும் அணிவகை (வீரசோ. அலங். 15, உரை); a simile in which the upamēyam is first mistaken for upamanam and then its real nature is ascertained.

[துணிவு + உவமை]

துணுக்கம் *tuṇukkam*, பெ. (n.) நடுக்கம்; trembling, palpitation of the heart through fear. "அறிவனுந் துணுக்கங் கொண்டான்" (கம்பரா. ஊர்தேடு. 57). 2. அச்சம்; fear. 3. உள்ளோசை (யாழ்.அக.); vibration. 4. நெஞ்சுபடபடப்பு; palpitation of the heart.

[துணுக்கு → துணுக்கம் (மு.தா. 64)]

துணுக்கிடு-தல் *tuṇu-k-kiḍu-*, செகுன்றாவி (v.t.) திடுக்கிடுதல்; to be started (செ.அக.).

[துண் → துணுக்கு → துணுக்கிடு-. (மு.தா. 64)]

துணுக்கு[1] *tuṇukku*, பெ. (n.) துணுக்கம் பார்க்க; see *tuṇukkam*.

[துண் → துணுக்கு]

துணுக்கு[2] *tuṇukku*, பெ. (n.) துணியல் பார்க்க; see *tuṇiyal* (செ.அக.).

[துண் → துணுக்கு]

துணுக்குக்கபம் *tuṇukku-k-kabam*, பெ. (n.) தடித்தும், கனமாயும், உறைந்தும், மங்கலாயும், சுண்ணாம்பு போல் வெளிவரும் சளி; thick heavy congealed mass of philegm in the digestive and respiratory passages discharged by caughing or vomitting (சா.அக.).

[துணுக்கு + கபம்]

துணுக்குண்ணி *tuṇu-k-kuṇṇi*, பெ. (n.) பொறுக்கித் தின்பவன்; miser, scrape-penny, as one who picks up and eats crumbs. "இந்தத் துணுக்குண்ணியோ கொடுப்பான் சொன்னம்". (விறலிவிடு. 851).

[துணுக்கு + உண்ணி]

துணுக்குறு-தல் *tuṇu-k-kuṟu-*, செ.குவி. (v.i.) அச்சமுறுதல்; to be startled, sturck with fear, shocked. "யாவருந் துணுக்குற் றேங்க" (கம்பரா. கும்ப. கருணை. 58).

[துணுக்கு + உறு-.]

துணுக்கெறி[1]**-தல்** *tuṇu-k-keṟi-*, செ.குவி. (v.i.) அச்சத்தால் துள்ளுதல்; to start with fear, as infants.

[துணுக்கு + எறி-.]

துணுக்கெறி[2]**-தல்** *tuṇu-k-keṟi-*, செ.குவி. (v.i.) குளிர்ச்சி மிகுதியால் சளி, தடித்து வெளிவரல்; discharge of soild phlegm due to excess of mucus in the system.

துணுக்குத்துணுக்கெனல் *tuṇukku-t-tuṇukkeṉal*, பெ. (n.) அஞ்சுதற் குறிப்பு; onom. expr. of being afraid. "நான் சென்று கிட்டுகை யாவதென" என்று துணுக்குத் துணுக்கென்னா நிற்பர்கள் பிரம்மாதிகள்" (திவ்.பெரியதி. 1,2,9, வ்யா.)

[துணுக்கு + எறி-.]

துணுக்கெனல் *tuṇukkeṉal*, பெ. (n.) அச்சக் குறிப்பு; expr. signifying fear. "துணுக்கென் றுள்ளஞ் சொற் றளர்ந்து" (பிரபுலிங். வசவண். 32).

[துணுக்கு + எனல்]

துணுக்கை *tuṇukkai*, பெ. (n.) துணியல் (யாழ்.அக.) பார்க்க; see *tuṇiyal*.

[துணுக்கு → துணுக்கை]

துணுங்கு-தல் *tuṇuṅgu-*, 5 செகுன்றாவி. & கு.வி. (v.t.) & (v.i.) வெருவுதல் (யாழ்.அக.); to fear.

[துண் → துணுங்கு]

துணை[1] *tuṇai*, பெ. (n.) 1. கூட்டு; association, company. 2. உதவி; help, assistance, aid, succor, support. "தங்குபே ரருளுந் தருமமுந் துணையா தம்பகைப் புலன்களைத் தவிர்க்கும்" (கம்பரா. நகரப். 6). 3. காப்பு; protection, guidance. கடவுள்

துணை. 4. கூட்டாயிருப்பவன்-வள்-து; partner, companion, amte. "நறுநுதலா ளன்மைத் துணை" (நாலடி. 381). 5. உதவிபுரிவோன்; escort, covoy, helpmate. "நானோர் துணை காணேன்" (திருவாச. 25, 10). 6. நட்பினன்-ள்; friend. "தந்துணைக் குரைத்து நிற்பார்" (சீவக. 465). 7. இரட்டை; pair, couple, brace. "துணைமீன் காட்சியின்" (கல்லா. 5, 27). 8. இரண்டு; two. "அந்தணன் பங்குவி னில்லத் துணைக் குப்பா லெய்த" (பரிபா. 11, 7-8). 9. கணவன்; husband. "தாழ்துணை துறந்தோர்" (சிலப். 4, 13). 10. மனைவி; wife, mate. "துணையொடு வதிந்த தாதுண் பறவை" (அகநா.4). 11. உடன்பிறப்பு; brother or sister "துணையின்றிச் சேற னன்றோ" (கம்பரா. கும்பக்கருண. 158). 12. ஒப்பு; comparison, similitude. "துணையற வறுத்துத் தூங்க நாற்றி" (திருமுரு. 237). 13. அளவு; measure; extent; degree; quantity; number. "விருந்தின் றுணைத்துணை" (குறள். 87). 14. புணர்ச்சி; conjugal union. "முந்நாளல்லது துணையின்று கழியாது" (தொல். பொ. 122). துணை போனாலும் பிணை போகாதே (பழ.).

ம. துண

[துண் → துணை (வே.க. 254)]

துணை[2] *tuṇai*, வி.எ. (adv.) வரை; until. "தங்கரும முற்றுந் துணை" (நாலடி. 231).

[துண் → துணை]

துணை[3] *tuṇai*, பெ. (n.) 1. படைக் கருவி; sharp end of an instrument or a weapon. 2. அம்பு; arrow.

[துண் → துணை]

துணை[4]**-தல்** *tuṇai-*, 4 செ.குன்றாவி. (v.t.) ஒத்தல்; to resemble, to be like. "நெய் பூசிய தொழின்மையே துணையும்" (காஞ்சிப்பு. திருக்கண். 19).

[துண் → துணை-.]

துணை[5]**-த்தல்** *tuṇai-*, 11 செ.குன்றாவி. (v.t.) 1. மாலை முதலியன கட்டுதல்; to string, or a garland. "தண்ணறுங் கழுநீர் துணைப்ப" (மதுரைக். 551). 2. ஒத்தல் (தொல்.பொ. 286, உரை); to resemble.

[துணை → துணைதல் → துணை-.]

துணைக்கருவி *tuṇai-k-karuvi*, பெ. (n.) 1. வழி வகை; means to an end, medium. 2. உதவிக் கருவி (நன். 287, விருத்.); implement, tool, instrument.

[துணை + கருவி]

துணைக்காரணம் *tuṇai-k-kāraṇam*, பெ. (n.) குடத்துக்குத் தண்டு சக்கரம்போலச் செயல் (காரிய) நிகழ்ச்சிக்கு உதவியாயிருக்கும் காரணம் (தொல்.சொல். 74, உரை); instrumental or secondary cause, as the potter's stick or wheel.

[துணை + காரணம்]

துணைக்குக்கி *tuṇai-k-kukki*, பெ. (n.) இரைப்பைக்கு அடுத்துத் தொடுத்திருக்கும் சிறுகுடலில் ஏறக்குறைய ஒரு அடி நீளமுள்ள ஒரு பகுதி; the first portion of the small intestine measuring about one foot long (சா.அக.).

[துணை + குக்கி]

துணைக்கோள் *tuṇai-k-kōl*, பெ. (n.) ஒரு கோளைச் சுற்றிச் சுழலும் சார்புக்கோள்; satellite.

[துணை + கோள்]

துணைச்சகோதரி *tuṇai-c-cakōtari*, பெ. (n.) கிறித்தவருள் துறவறம் பெறுவதற்குமுன் மாணவ நிலையிலுள்ளவள்; novitiate nun before ordination among christians (பாண்டி.).

[துணை + சகோதரி]

துணைச்சொல் *tunai-c-col*, பெ. (n.) ஒத்துரைக்குஞ் சொல் (வின்.); word or words in support of, or in seconding, previous speaker.

[துணை + சொல்]

துணைத்துறவி *tunai-t-turavi*, பெ. (n.) கிறித்தவருள் துறவு பெறுவதற்கு முன் மாணவ நிலையிலுள்ளவன் (பாண்டி.); lay disciple before ordination, among christians.

துணைப்படை *tuṇai-p-paḍai,* பெ. (n.) நட்பரசரதாய்த் தனக்கு உதவுஞ் சேனை (குறள். 762, உரை); forces of one's allies sent to one's aid. one of aru-vakai-p-paḍai, q.v.

[துணை + படை]

துணைப்பேறு *tuṇai-p-pēṟu,* பெ. (n.) உதவி பெறுகை; receiving aid.

[துணை + பேறு]

துணைப்பொருள் *tuṇai-p-poruḷ,* பெ. (n.) ஒப்புமை கூறப்படுவது; object of comparison. "அப்பொருளாகு முறழ் துணைப்பொருளே" (தொல். சொல். 16).

[துணை + பொருள்]

துணைபோ-தல் *tuṇai-pō-,* செ.கு.வி (v.i) ஒப்பாதல்; to be similar or equal; to match. 'அவனுக்கு இவன் துணைபோனவன்'.

[துணை + போ-.]

துணைமுத்தம் *tuṇai-muttam,* பெ. (n.) வடஞ் சேர்ந்த முத்து; stringed pearls. "துஞ்சாக் கதிர்கொ டுணைமுத்தந் தொழுதேன்" (சீவக. 351).

[துணை + முத்தம்]

துணைமூளை *tuṇai-mūḷai,* பெ. (n.) மூளையின் அரைக்கால் பங்காய் தலையின் பின்பக்கத்தில் கீழ்ப்பிடரியைப் பற்றிச் சிறிய பந்து வடிவமாக இருக்கும் சிறிய மூளை; that portion of the brain which is posterior to underlies the great cerebral mass-cerebellum.

துணைமை *tuṇaimai,* பெ. (n.) 1. பிரிவின்மை; union. "நல்லியாழ்த் துணைமையோ ரியல்பே" (தொல். பொ. 42). 2. ஆற்றல்; ability, power. "யாஅ ரொருவ ரொருவர்த முள்ளத்தைத் தேருந் துணைமை யுடையவர்" (நாலடி. 127). 3. உதவி; help. "துணைவரோடுந் துளபமா றுணைமை செய்ய" (சேதுபு. இலக்குமி. 25) (செ.அக.).

[துணை → துணைமை]

துணையரண் *tuṇai-y-araṇ,* பெ. (n.) வன்மைமிக்க சுற்றத்தாரானாகிய துணை (சுக்கிர நீதி. 300); strong and powerful kindred, considered a means or defence.

[துணை + அரண்]

துணையல் *tuṇaiyal,* பெ. (n.) பூமாலை; garland, wreath of flowers. "சாந்துங் கமழ்துணையலும்" (தேவா. 562, 2).

துணையறை *tuṇai-y-aṟai,* பெ. (n.) தோரணம் முதலியவற்றின் தொங்கல் (திவா.); ornamental hangings.

[துணையல் → துணையறை]

துணையாளன் *tuṇai-y-āḷaṉ,* பெ (n) உதவி புரிவோன்; helper. "துணையாளனே தொழும்பாள ரெய்ப்பினில் வைப்பனே" (திருவாச. 5, 98).

[துணை + ஆளன்]

துணையாளி *tuṇai-y-āḷi,* பெ (n) 1. மருத்துவனுக்கு இரண்டாவதாக, நோயாளிக்கு உதவி செய்யும் ஆள்; as assistant to the doctor treats the patient. 2. செவிலி; a female in hospital attending to wants of patients-nurse. 3. ஒரு காரியத்தில் சமமான பங்கெடுத்துக் கொள்பவன் (பாண்டி.); coadjutor.

[துணை + ஆளி]

துணையிரு-த்தல் *tuṇai-y-iru-,* செ.குன்றாவி. (v.t.) பருவமுற்றாள், மகப்பேறெய்தினாள், மணப்பெண் இவர்கட்குப் பேய் முதலியவற்றால் கேடு வராதபடி உதவியாயிருத்தல் (வின்.); to keep company with a girl who has attained the age of puberty or with a woman in childbirth or with the bride, protecting them from demon-attack.

[துணை + இரு-.]

துணைவஞ்சி *tuṇai-vañji,* பெ. (n.) பிறரை வெல்ல வேனுங் கொல்லவேனுந் துணிந்து நிற்கின்றானொருவனைச் சிலகூறி உடன்பாடு கூறும் புறத்துறை (புறநா. 45); theme describing the reconciliation of a warrior with his enemy whom he is determined to conquer or kill.

[துணை + வஞ்சி]

துணைவலி *tuṇai-vali,* பெ. (n.) நட்பரசரால் ஆகிய ஆற்றல் (குறள். 471); strength of a king derived from his allies.

[துணை + வலி]

துணைவன் *tuṇaivaṉ*, பெ. (n.) *1.* கணவன் *(பிங்.);* husband. *"துணைவரைத் தழுவினர்" (கம்பரா. மாரீசன் வதை. 121).* *2.* தோழன் *(சூடா.);* friend, companion. *3.* அமைச்சர் *(அகநி.);* minister. *4.* உதவி செய்வோன்; helper, assistant, convoy. "தோழா போற்றி துணைவா போற்றி" *(திருவாச. 4, 120).* *5.* உடன்பிறந்தான்; brother, cousin. "உரிமையறக் கவர்ந்த பெருந்துணைவன்" *(பாரத. கிருட்டிண. 14).*

[துணை → துணைவன்]

துணைவன்விழியாள் *tuṇaivaṉ-viḻiyāḷ*, பெ. (n.) மாலையில் மலரும் மல்லிகை; evening jasmine, garden jalap *(சா.அக.).*

[துணை → துணைவன்]

துணைவாரி *tuṇai-vari*, பெ. (n.) இரட்டைக் கதவு *(சிவக்.பிரபந்பக். 92);* folding doors.

துணைவன்விளையல் *tuṇaivaṉ-viḷiyāḷ*, பெ. (n.) பத்திராட்சி; evening jasmine *(சா.அக.).*

துணைவி *tuṇaivi*, பெ. (n.) மனைவி; wife, as a helpmate. "நீதுறவேல் ... நின் துணைவியையே" *(வெங்கைக். கோ. 318).* *2.* உடன்பிறந்தான்; sister. "தாயருந் துணைவிமாருந் தழுவினர்" *(குற்றா. தல. தக்கன்வே. 118).* *3.* பாங்கி; heroine's confidante, lady's maid.

[துணை → துணைவி]

துணைவினை *tuṇai-viṉai*, பெ. (n.) ஒரு வினைக்குத் துணையாக வரும் வினை; auxiliary verb, as iru in e̲lundirundā̲n̲.

[துணை + வினை]

துத்தகம் *tuttakam*, பெ. (n.) துத்தம்[2] *(யாழ்.அக.)* பார்க்க; see *tuttakam.*

துத்தகை *tuttakai*, பெ. (n.) நெருக்கல்; pressing together.

துத்தநாகபற்பம் *tutta-nāga-paṟpam*, பெ. (n.) துத்தநாகத்தை நீற்றிக் கொண்ட பற்பம்; flowers of zinc.

துத்தநாகம் *tuttanākam*, பெ. (n.) ஒரு மாழை *(பிங்.);* zinc.

துத்தநாகமணல் *tuttanāga-maṇal*, பெ. (n.) நாகமணல் *(வைஃமூ.);* sand containing lead.

[துத்தநாகம் + மணல்]

துத்தநாகவகை *tuttanāga-vakai*, பெ. (n.) மருந்து வகை *(யாழ்.அக.);* a medicine.

துத்தபேனம் *tutta-pēṉam*, பெ. (n.) பால்நுரை *(யாழ்.அக.);* milk foam.

துத்தம்[1] *tuttam*, பெ. (n.) *1.* இசை ஏழனுள் இரண்டாவது; the second note of the gamut, one of seven icai, q.v. "வண்டினந் துத்தநின்று பண்செயும்" *(தேவா. 488, 10).* *2.* சமனிசை *(பிங்.);* tenor. *3.* ஓமாலிகை வகை *(சீவக. 623, உரை);* a scent used in battin. *4.* நாய் *(சூடா.);* dog. *5.* நாய்ப்பாகல் *(மலை).* பார்க்க; see *nāy-p-pākal*, a kind osenna. *6.* நாணல் *(மலை.)* பார்க்க; see *nāṇal*, wild sugar-cane. *7.* நீர்முள்ளி *(மலை.)* பார்க்க; see *nīrmuḷḷi*, a herb growing in moist places.

துத்தம்[2] *tuttam*, பெ. (n.) *1.* வைப்பு நச்சுவகை *(சூடா.);* a prepared arsenic, vitriol, sulphate of zinc or copper. *2.* கண் மருந்தாக உதவுந் துரிசு *(தைலவ. தைல. 69);* tutty, blue or white vitriol used as collyrium.

துத்தம்[3] *tuttam*, பெ. (n.) பால் *(பிங்.);* milk. "துத்தமன்ன சொல்லியர்" *(இரகுநாட்டுப். 23).*

துத்தம்[4] *tuttam*, பெ. (n.) துந்தம் *(பிங்.)* பார்க்க; see *tuntam.*

துத்தமனா *tuttamaṉā*, பெ. (n.) முயற்புல் *(மலை.);* harialli grass.

துத்தரி *tuttari*, பெ. (n.) துத்தரிக்கொம்பு பார்க்க; see *tuttari-k-kombu.* "கொம்பு துத்தரி கொட்டு முறைமையன்" *(கம்பரா. கங்கைப். 30).*

துத்தரிக்கொம்பு *tuttari-k-kombu*, பெ. (n.) ஒருவகை ஊதுகொம்பு; a kind of bugle-horn. "துத்தரிக் கொம்புந் துடியும்" *(சீவக. 434, உரை).*

[துத்தரி + கொம்பு]



துத்தரிகம் *tuttarikam,* பெ. (n.) நெல்லிக்காய்; indian gooseberry (சா.அக.).

துத்தரிப்பு *tuttarippu,* பெ. (n.) அட்டிகைப் பதக்கத்தின் மேலுறுப்பு வகை; an upper part of patākkam in attikai.

துத்தல் *tuttal,* பெ. (n.) *1.* உண்ணுதல்; to eating. "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி" (குறள். 12). *2.* நுகர்தல்; to enjoy.

[துய் → வ. துத்தல் (வேக. 284)]

துத்தாஞ்சனம் *tuttāñjaṉam,* பெ. (n.) கண்மருந்து வகை; collyridum of vitriol.

[துத்தம் + அஞ்சனம்]

துத்தாத்தி *tuttātti,* பெ. (n.) பாற்கடல் (யாழ்.அக.); ocean of milk.

துத்தாரம் *tuttāram,* பெ. (n.) ஊமத்தை; datura (சா.அக.).

துத்தாரி *tuttāri,* பெ. (n.) *1.* ஊதுகுழல் வகை; long, straight pipe. *2.* ஆடைவகை (யாழ்.அக.); a kind of cloth.

தெ. துத்தார; க. துத்தாரி; ம. துத்தாரி

துத்தி[1] *tutti,* பெ. (n.) *1.* செடிவகை (சூடா.); wrinkled learned eveing mallow. *2.* பெருந்துத்தி பார்க்க; see *peruntutti,* country mallow. *3.* வட்டத் துத்தி பார்க்க; see *vaṭṭa-t-tutti,* narrow woolly stipuled lotus croton. *4.* பட்டுப்பூச்சி மரம்; white mulberry tree. *5.* முள்வெள்ளரி வகை; spiked bitter cucumber.



வகைகள்

1. பெருந்துத்தி - country mallow
2. பணியாரத் துத்தி - cake mallow
3. கருந்துத்தி - black mallow
4. கொடித்துத்தி - creeping mallow
5. அரசிலைத்துத்தி - peepul leaved eveming mallow
6. எலிச்செவித் துத்தி - rat's ear mallow
7. ஒட்டுத்துத்தி - burr mallow
8. இரட்டகத்துத்தி - double thread mallow
9. சீமைத்துத்தி - foreign mallow
10. சிறுதுத்தி - small mallow
11. சிறுசீமைத்துத்தி - small foreign mallow
12. காட்டுத்துத்தி - wild mallow
13. கண்டுதுத்தி - one leaved mallow
14. ஓரிலைத்துத்தி - one leaved mallow
15. செந்துத்தி - devil's cotton.
16. நாமத்துத்தி - namatutti
17. நிலத்துத்தி - ground mallow
18. பொட்டகத்துத்தி - double thread tutti
19. வயிற்றுத்துத்தி - field mallow
20. மஞ்சள் துத்தி - common yellow mallow
21. ஐயிதிழ்த்துத்தி - five capelled evening mallow
22. வட்டத்துத்தி - lotus croton
23. கல்துத்தி - stone mallow
24. மணித்துத்தி - vine leafed bendy
25. நல்லதுத்தி - common evening mallow
26. திருநாமத்துத்தி - lobe leaved mysore mallow
27. வேலித்துத்தி - hedge mallow
28. மலைத்துத்தி - mountain evening mallow
29. வெண்துத்தி - pure white darwin's mallow
30. நறுமணத்துத்தி - fragrant mallow
31. சிவப்புத்துத்தி - red mallow

துத்தி[2] *tutti,* பெ. (n.) பக்கவிசையாக ஊதும் ஒத்துக்கருவி; bass pipe.

துத்தி[3] *tutti,* பெ. (n.) *1.* மகப்பே றெய்தினா லுடம்பில் தோன்றும் வரித் தேமல் (பிங்.); streaky spots below the navel especially of a woman who has delivered. "புதல்வனை ஈன்றவளுடைய துத்தி போலே" (கலித். 32, 7, உரை). *2.* பாம்பின் படப்பொறி; spots on the hood of a cobra. "பைத்த பாம்பின் றுத்தி

யேய்ப்ப" (பொருந. 69). 3. யானை மத்தகப் புள்ளி (நிகண்டு); spots an elephant's forehead.

துத்தி[4] *tutti,* பெ. (n.) 1. திருமண்; sacred earth. 2. திருவடி நிலை; sacred sandal.

துத்திக்காரன் *tutti-k-kāraṉ,* பெ. (n.) ஒத்தூதுபவன்; bass-piper.

[துத்தி + காரன்]

துத்திக்கீரை *tutti-k-kīrai,* பெ. (n.) ஒருவகைக் கீரை; american binolious morning glory.

மறுவ. துத்திகம்

[துத்தி + கீரை]

துத்திநாகம் *tutti-nākam,* பெ. (n.) துத்தநாகம் (பதார்த்த. 1170) பார்க்க; see *tuttanākam* (செ.அக.).

[துத்தி + நாகம்]

துத்திநீர் *tutti-nīr,* பெ. (n.) சிறுநீர்; urine (சா.அக.).

துத்திப்பட்டு *tutti-p-paṭṭu,* பெ. (n.) துகில்வகை (எங்களூர், 168); a kind of fine cloth.

[துத்தி + பாட்டு]

துத்திப்பாலை *tutti-p-pālai,* பெ. (n.) தொந்தம்பாலை; blue dyeing rose bay (சா.அக.).

துத்திப்பூக்கிளாவர் *tutti-p-pūk-kilāvar,* பெ. (n.) மகளிர் காதணி வகை (இக்.); a woman's ear ornament.

துத்திப்பூமோதிரம் *tutti-p-pū-mōtiram,* பெ. (n.) துத்திப்பூ வடிவிலமைந்த விரலாழி; finger-ring desinged after the tutti flower.

[துத்தி + பூ + மோதிரம்]

துத்தியம் *tuttiyam,* பெ. (n.) புகழ்ச்சி; eulogy, praise, commendation. "பிரமனுந் துத்தியஞ் செய நின்றநற் சோதியே" (தேவா. 1218, 2).

துத்திரி *tuttiri,* பெ. (n.) 1. துத்தாரி பார்க்க; see *tuttāri* "கல்லல துத்திரி யேங்க" (கல்லா. 34, 10). 2. துத்திரி[2] பார்க்க; see *tuttiri.*

துத்தினை *tuttiṉai,* பெ. (n.) வட்டத்திருப்பி; Indian parara (சா.அக.).

துத்து[1] *tuttu,* பெ. (n.) 1. பொய்; lie. 2. தவறு; fault. 3. வஞ்சனை; deceit (செ.அக.).

[ஒருகா. தெ. துத்து → துத்து]

துத்து[2] *tuttu,* பி.பெ. (n.prob.) 1. சேண முதலியவற்றின் உள்ளிடும் கம்பளி ஆட்டுமயிர் முதலியன (வின்.); stuffing of wool or goat's hair in couches, saddles etc., 2. துத்துக்கம்பளி (யாழ்.அக.) பார்க்க; see *tuttu-k-kambaḷi.*

[ஒருகா. துறுத்து → துத்து]

துத்துக்கம்பளி *tuttu-k-kambaḷi,* பெ. (n.) கம்பளிப் போர்வை (வின்.); a kind of blanket.

[துத்து + கம்பளி]

துத்துக்கம்மல் *tuttu-k-kammal,* பெ. (n.) கம்மலணி வகை; an ear-ornament worn by women.

[துத்து + கம்மல்]

துத்துக்காரன் *tuttu-k-kāraṉ,* பெ. (n.) துத்தன் பார்க்க; see *tuttaṉ.*

[துத்து + காரன்]

துத்துக்கோல் *tuttu-k-kōl,* பெ. (n.) நெசவுப்பா தளராமல் நிற்றற்பொருட்டு நூற் பிணையல்களுக்கிடையில் நெய்வோர் செலுத்துங் கழி; rod used by weavers to press the weft compactly.

[துத்து + கோல்]

துத்துப்போடு-தல் *tuttu-p-pōḍu-,* செ.குன்றாவி (v.t.) கிணறு முதலியவற்றை மணல் முதலியவற்றால் மேவி விடுதல் (வின்.); to fill up, close.

[துத்து + போடு-.]

துத்துமாற்று *tuttu-māṟṟu,* பெ. (n.) 1. தந்திரம்; artifice, guile, chicanery. 2. எத்து; deceit. 3. பொல்லாங்கு; evil.

[துத்து + மாற்று]

துத்துரு *tutturu,* பெ. (n.) தாமரைப் பொகுட்டுப் போன்ற அணிவகை; an ornament like the

pericap of a lotus. "துத்துரு வொன்றில் தடவிக் கட்டின பளிங்கு ஒன்றும்" *(S.I.I.ii, 179).*

துத்துவாரெலும்பு *tuttuvārelumbu,* பெ. (n.) **பழுவெலும்பு;** collar bone.

[துத்துவார் + எலும்பு]

துத்தூரம் *tuttūram,* பெ. (n.) **ஊமத்தை** (மலை) பார்க்க; see *ūmattai* (செ.அக.)

துதகாரம் *tutakāram,* பெ. (n.) **துப்பும்போது எழும் ஒலி** (யாழ்.அக.); noise of spitting.

துதம் *tudam,* பெ. (n.) **துதி**[2] பார்க்க; see *tuti.* "வாயோரீ ரைஞ்ஞூறு துதங்க ளார்ந்த" *(திங். பெருமாள். 1,2).*

துதம்[2] *tutam,* பெ. (n.) **அசைவு** (வி.); motion, vibration, oscillation, agitation.

துதாமுதலாய் *tutā-mutal-āy,* வி.எ. (adv.) **முழுதும்;** wholly, entirely.

தெ. துதாமொதலுக

துதி[1] *tuti,* பெ. (n.) **நுனி;** point, sharp edge. "துதிவா யெஃகமொடு" *(புறநா. 253).*

[நுனி → நுதி → துதி (த.வ. 65)]

துதி[2] *tuti,* பெ. (n.) *1.* **துருத்தி;** bellows. "மயிர்த் துதி யலற வூதலின்" *(சீவக. 2530).* **2. உறை;** sheath, scabbard. "துதியவள் ளுகிர்" *(அகநா. 8).*

துதி[3] *tuti,* பெ. (n.) **தூதுளை** பார்க்க; see *tūtuḷai;* climbing brinjal.

துதிக்கரம் *tuti-k-karam,* பெ. (n.) **துதிக்கை** பார்க்க; see *tutikkai.* "தந்தியுந் துதிக்கரஞ் சலித்து நின்றது" *(செவ்வந்தி. 4, உரையூரழித் 92).*

[துதி + கரம்]

துதிக்கை *tuti-k-kai,* பெ. (n.) **தும்பிக்கை;** elephant's trunk. "துதிக்கையி னுதிக்கே கூழை வாரென்னும்" *(கலிங். 560).*

[நுனி → நுதி → துதி → துதிக்கை]

துதியம் *tutiyam,* பெ. (n.) **கசப்புப் புடலையின் உள்ளகம்** (வின்.); pulp of the bitter snake-gourd.

துதை[1]**-தல்** *tutai-,* 4 செ.குவி. (v.i.) *1.* **செறிதல்;** to be crowded, thick, close, intense. "தோடமை முழவின் றுதைகுரலாக" *(அகநா. 82).* **2. மிகுதல்;** to abound; to be copious, interse. *3.* **படிதல்;** to be steeped. "வெண்ணீறு துதைந்தெழு ... வயிரத் தொப்பனே" *(திருவாச. 29.6).*

[துற்று → துத்து → துது → துதை → துதை-. (வே.க. 261)]

துதை[2]**-த்தல்** *tutai,* 11 செ.குன்றாவி. (v.t.) **நெருக்குதல்** (யாழ்.அக.); to press together.

[துதை → துதை-.]

துதை[3] *tutai,* பெ. (n.) **நெருக்கம்** (வின்.); closeness, crowded state.

துந்தம் *tundam,* பெ. (n.) **வயிறு;** abdomen, belly.

துந்தமம் *tundamam,* பெ. (n.) **பறை வகை** (யாழ்.அக.); a drum.

[ஒருகா. துந்துபி → துந்தமம்]

துந்தி *tundi,* பெ. (n.) *1.* **கொப்பூழ்;** navel, umbilicus. "துந்தித் தலத்தெழு திசைமுகன்" *(திவ். திருவாய். 1, 3, 9).* **2. வயிறு** (தைலவ. தைல. 97); belly.

[உந்து → துந்து → துந்தி (வ.மொ.வ. 179)]

துந்திகன் *tundigaṉ,* பெ. (n.) **பெருவயிறுள்ளோன்** (யாழ்.அக.); one who has pot belly (செ.அக.).

[துந்தி → துந்திகன்]

துந்திநாமா *tundi-nāmā,* பெ. (n.) **ஒருவகைத் தம்புரு;** a kind of tampuru.

[துந்தி + நாமா]

துந்துபம் *tundupam,* பெ. (n.) கடுகு (சங்.அக.); mustard.

துந்துபி *tundubi,* பெ. (n.) *1.* **பேரிகை;** large kettle drum. "அந்தர மருங்கிற துந்துபி கறங்க" *(பெருங். கரவாண. 1, 150).* **2. வாச்சியப் பொது** (சூடா.); drum. *3.* **ஆண்டறுபதனுள் ஐம்பத்தாறாவது;** the 56th year of the jupiter cycle. *4.* **ஓர் அரக்கன்;** an asura. "துந்துபிப் பெயருடைச் சுடுசினத் தவுணன்" *(கம்பரா. துந்துபி. 1).*

துந்துபிவழங்குதல் *tundubi-vaḻaṅgu-,* செ.கு.வி. (v.i.) *மகிழ்ச்சியாயிருத்தல்;* to be happy or glad.

துந்துமாரம் *tundu-māram,* பெ. (n.) *1.* **புழு வகை;** a worm. *2.* **பூனை;** cat *(செ.அக.).*

துந்துமாரி *tundu-māri,* பெ. (n.) முதல் வள்ளல்கள் எழுவருளொருவன் *(சூடா.);* a chief noted for his liberality, one of seven mutal vaḷḷalkaḷ's.

துந்துமி[1] *tundumi,* பெ. (n.) *மழைத்துளி;* light rain, drizzle.

[தூம் (தூவும்) + துமி]

துந்துமி[2] *tundumi,* பெ. (n.) துந்துபி[1] பார்க்க; see *tuntubi.* "துந்துமி யொடு குடமுழா" *(தேவா. 919, 6).*

துந்துமியாட்டம் *tundumi-y-āṭṭam,* பெ. (n.) பேரொலி *(வின்.);* great noise, bustle, clamour.

[துந்துமி + ஆட்டம்]

துந்துருபாவை *tunduru-pāvai,* பெ. (n.) *துடிப்புள்ளவள்;* fidgety woman, busybody.

[ஒருகா. துருதுரு → துந்துரு + பாவை]

துந்துருமாலை *tundurumālai,* பெ. (n.) துந்துரு பாவை பார்க்க; see *tunturu-pāvai.*

[துந்துருபாவை → துந்துருமாலை]

துந்துளம் *tuntuḷam,* பெ. (n.) காரெலி *(சூடா.);* black rat.

துநீ *tunī,* பெ. (n.) *பறவை முட்டை;* bird's egg.

துப்பகம் *tuppagam,* பெ. (n.) துப்பம் பார்க்க *(அக.நி.);* see *tuppam.*

துப்பட்டி *tuppaṭṭi,* பெ. (n.) *1.* குளிருக்காகப் போர்த்திக் கொள்ளும் துணிப் போர்வை; a cearse cotton cloth used to cover oneself in cold weather. *2.* விழாக் காலங்களில் பரவமகளிர் போர்த்துக் கொள்ளும் போர்வை; veil, cloth used by parava women for covering themselves on public occasions. *3.* மேல்விரிப்பு; sheet, table-cloth, cotton blanket. "மேசைத் துப்பட்டி".

துப்பம் *tuppam,* பெ. (n.) *1.* **நெய்;** ghee. "தொறுப்பாடியோம் வைத்த துப்பமும் பாலும்" *(திவ்பெரியாழ். 2,1,6). 2.* **அரத்தம்** *(யாழ்.அக.);* blood.

[துப்பு → துப்பம் (மு.தா. 154)]

துப்பரவு *tupparavu,* பெ. (n.) துப்புரவு பார்க்க *(வின்.);* see *tuppuravu.*

துப்பல் *tuppal,* பெ. (n.) *1.* **உமிழ்நீர்;** saliva, spittle. *2.* **விளையாட்டில் பிள்ளைகள் தடை நிகழ்த்த வழங்குஞ்சொல்;** a word used in boy's game to indicate a short respite. "துப்பல் விட்டேன்" *(வின்.). 3.* **பயனற்றது;** that which is worthless.

ம. துப்பல்

[துப்பு → துப்பல்]

துப்பலிடு-தல் *tuppal-iḍu-,* செ.கு.வி. (v.i.) ஆணையிடுதல் *(யாழ்.அக.);* to swear.

[துப்பல் + இடுதல்]

துப்பற்களாசி *tuppaṟ-kaḷāśi,* பெ. (n.) துப்பற் களாஞ்சி (யாழ்.அக.) பார்க்க; see *tuppaṟ-kaḷāñji.*

[துப்பல் + களாசி]

துப்பற்காளாஞ்சி *tuppaṟ-kāḷāñji,* பெ. (n.) தம்பல முதலிய எச்சிலுமிழுங்கலம்; spittoon.

[துப்பல் + களாஞ்சி]

துப்பற்படிக்கம் *tuppaṟ-paḍikkam,* பெ. (n.) துப்பற்காளாஞ்சி பார்க்க; see *tuppaṟ-kāḷāñji.*

[துப்பல் + படிக்கம்]

துப்பற்றவன் *tuppaṟṟavaṉ,* பெ. (n.) *1.* **திறனிலி;** inefficient person. *2.* **வகையிலி;** helpless, destitute person.

[துப்பு + அற்றவன்]

துப்பறவடி-த்தல் *tuppaṟa-v-aḍi-,* செ.குன்றாவி. (v.t.) நன்றாகப் புடைத்தல்; to give a good thrashing beat soundly.

[துப்பற + அடி-.]

துப்பறி-தல் *tuppaṟi-,* செ.குன்றாவி. (v.t.) உளவறிதல்; to spy out, detect.

[துப்பு → துப்பறி-.]

துப்பன் *tuppaṉ,* பெ. (n.) **ஆற்றலுள்ளவன்;** mighty, powerful person. "துப்பனைத் துரங்கப்படச் சீறிய தோன்றலை" *(திவ்.பெரியதி. 7, 10, 6).*

[துப்பு → துப்பன்]

துப்பன்² *tuppaṉ,* பெ. (n.) **உளவாள்;** spy, secret agent, detective.

[துப்பு⁵ → துப்பன்]

துப்பா *tuppā,* பெ. (n.) **கொம்புத் தேன்;** honey collected on branches of trees *(சா.அக.).*

[துப்பு → துப்பா]

துப்பாக்கிமரம் *tuppākki-maram,* பெ. (n.) **மரவகை;** bastard cedar *(செ.அக.).*

(இதனை, உருத்திராக்க மரம்; musket tree எனச் சா.அக. கூறும்)

துப்பாக்கூட்டல் *tuppāk-kūṭṭal,* செ.குன்றாவி (v.t.) **தேனைச்சேர்த்தல்;** collecting honey *(சா.அக.).*

துப்பார் *tuppār,* பெ. (n.) **உண்பவர்;** consumers. "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி" *(குறள். 12).*

[து → துப்பார்]

துப்பாள் *tuppāḷ,* பெ. (n.) **உளவாள்;** spy.

[துப்பு → துப்பாள்]

துப்பிரசம் *tuppirašam,* பெ. (n.) கடுஞ்சுண்டி (வின்.) பார்க்க; see *kaḍuñjuṇḍi;* a sensitive tree.

துப்பிலார் *tuppilār,* பெ. (n.) **வறியவர்;** indigent persons. "துறந்தார் துறவாதார் துப்பிலார்" *(ஏலா. 30).*

[துப்பு + இல் + ஆர்]

துப்பினி *tuppiṉi,* பெ. (n.) **துப்புநீர்;** spittle. (நெல்லை)

[துப்புநீர் → துப்புனி]

துப்பு¹ *tuppu,* பெ. (n.) *1.* **வலி;** vigour, strength, valour. "கெடலருந் துப்பின்" *(அகநா. 105).* *2.* **அறிவு;** intelligence. *3.* **திறமை;** ability, dexterity. "ஆழ்கடலைக் கடைந்த துப்பவே" *(திவ்.திருவாய். 4,7,5).* *4.* **முயற்சி** (பிங்.); effort, activity. *5.* **முனைப்பு** (பிங்.); zeal. *6.* **பெருமை;** greatness, eminence. "துப்பழிந் துய்வது துறக்கந் துன்னவோ" *(கம்பரா. உருக்காட். 13).* *7.* **நன்மை;** good, benefit. "துப்பாய துப்பாக்கி" *(குறள். 12).* *8.* **பொலிவு** (பிங்.); beauty. *9.* **பற்றுக்கோடு;** support. "துன்பத்துட் டுப்பாயார் நட்பு" *(குறள். 12).* *10.* **துணை** (பிங்.); assitnce, help. *11.* **துணைக் கருவி** (சூடா.); means, instrument. "வேதினத் துப்பவும்" *(சிலப். 14, 116).* *12.* **படைக்கலப் பொது** (யாழ்.அக.); weapon. *13.* **தன்மை;** manner, fashion. "சுந்தரச் சுடரோர் மூன்றுந் தோற்றிய துப்பிற் றோற்ற" *(இரகு. திக்குவி. 43).*

துப்பு² *tuppu,* பெ. (n.) *1.* **நுகர்ச்சி;** enjoyment. "துப்புமிழ்ந் தலமருங் காமவல்லி" *(சீவக. 197).* *2.* **நுகர்பொருள்;** object of enjoyment. "வருபவர்க்குத் துப்பமைத்து நல்கும்" *(திருவாரூ. 450).* *3.* **உணவு;** food. "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி" *(குறள். 12).* *4.* **நெய்;** ghee. "உறைசெழு துப்பும் வாக்கி" *(சுந்தபு. வில்வல. வதை. 18).*

[து → துப்பு (வேக. 282)]

துப்பு³ *tuppu,* பெ. (n.) **தூய்மை** (பிங்); cleaness, purity. "துப்புடை மணலிற் றாகி" *(கம்பரா. எதிர்கோட். 2).*

[தூய் → துய் → துப்பு]

துப்பு⁴ *tuppu,* பெ. (n.) **பகை;** enmity. "துப்பி னெவ னாவர் மற்கொல்" *(குறள். 1165).*

[து → துப்பு]

துப்பு⁵ *tuppu,* பெ. (n.) *1.* **ஆராய்ச்சி;** investigation. *2.* **உளவு;** spying. *3.* **உளவடையாளம்;** sign, trace, evidence, as of crime.

க. து. துப்பு (tubbu)

துப்பு⁶ *tuppu,* பெ. (n.) **துரு;** rust.

தெ. துப்பு

துப்பு⁷ *tuppu,* பெ. (n.) *1.* **பவளம்;** red coral. "துப்புறழ் தொண்டைச் செவ்வாய்" *(சீவக. 550).* *2.* **அரக்கு** (பிங்.); gum lac. *3.* **சிவப்பு;** red, redness.

[தும்பு → துப்பு (தமி.வ. 56)]

துப்பு[1]-தல் *tuppu-,* 5 செ.குன்றாவி. (v.t.) உமிழ்தல்; to spit. "அந்த வார்த்தையைத் துப்பென்ற நிந்தையால்" *(இராமநா. ஆரணி. 8).*

ம. துப்புக

துப்பு[9] *tuppu,* பெ. (n.) உமிழ்நீர்; spittle.

ம. துப்பு

துப்புக்கூலி *tuppu-k-kūli,* பெ. (n.) உளவு கண்டுபிடித்தற்கு உதவுங்கூலி; wage of an informer or spy; remuneration of a detective.

[துப்பு[1] + கூலி]

துப்புக்கெட்டவன் *tuppu-k-keṭṭavaṉ,* பெ. (n.) 1. துப்பற்றவன் பார்க்க; see *tupparravan.* 2. அறிவற்றவன்; fool, stupid person. 3. அழுக்குப் பிடித்தவன்; dirty person.

[துப்பு + கெட்டவன்]

துப்புக்கெட்டவள் *tuppu-k-keṭṭavaḷ,* பெ. (n.) 1. திறனிலாள்; inefficent women. 2. ஏதிலி; helpless. துப்புக் கெட்டவளுக்கு இரட்டைப் பரியம் *(பழ.).*

[துப்பு + கெட்டவன்]

துப்புக்கேடு *tuppu-k-kēḍu,* பெ. (n.) சீர்கேடு (வின்.); degneration, ruin.

[துப்பு + கேடு]

துப்புண்ணி *tuppuṇṇi,* பெ. (n.) சீர்கெட்டவன் –ள் (யாழ்.அக.); person, as one whom everybody spits upon.

[துப்பு + உண்ணி (துப்புதற்குரியவன்)]

துப்புத்துரிசு *tuppu-t-turišu,* பெ. (n.) மாசுமறு; dust and dirt.

[துப்பு + துரிசு]

துப்புத்துருப்பிடி-த்தல் *tuppu-t-turu-p-piḍi-,* செ.குவி. (v.i.) 1. உளவு கண்டுபிடித்தல்; to spy, detect, trace. 2. தெளிவான புலனாய்வு செய்தல்; to investigate, enquire closely.

[துப்பு + துருவு + பிடி-.]

துப்புத்துருவிசாரி-த்தல் *tuppu-turu-višāri-,* செ.குன்றாவி. (v.t.) துப்புத்துருப்பிடி பார்க்க; see *tuppu-t-turu-p-piḍi.*

[துப்பு + துரு + விசாரி-.]

துப்புநீர் *tuppu-nīr,* செ.குன்றாவி. (v.t.) எச்சில் நீர்; spittle (நெல்லை).

[துப்பு + நீர்]

துப்புநெல்லி *tuppu-nelli,* பெ. (n.) உணவுக் குரிய நெல்லி; edible gooseberry used in food.

[துப்பு[2] + நெல்லி]

துப்புரவாக்கல் *tuppuravākkal,* செ.குன்றாவி (v.t.) தூய்மை செய்தல்; cleaning, purifying.

[துப்புரவு + ஆக்கல்]

துப்புரவாய் *tuppura-vāy,* வி.எ. (adv.) முழுதும்; wholly, entirely. "துப்புரவாய் அழிந்து விட்டது".

[துப்புரவு + ஆக → ஆய்]

துப்புரவு *tuppuravu,* பெ. (n.) 1. திறமை; ability, cleverness. "சர்வேசுவரனைக் கேள்வி கொள்ள வேண்டாதபடி துப்புரவுடையன" *(ஈடு. 1, 5,3).* 2. வேண்டற்பாடு; necessity. 3. மேன்மை; excellence. 4. அழகு (வின்.); beauty. 5. முறைமை (வி.); established custom, order, propriety of conduct.

[தூய் → து → துப்பு → துப்புரவு (மு.தா. 162)]

துப்புரவு[2] *tuppuravu,* பெ. (n.) 1. ஐம்பொறி நுகர்ச்சி; enjoyment or gratification of the senses. "நிலைமையினெஞ்சத்தான் றுப்புரவு" *(நாலடி. 87).* 2. நுகர்ச்சிப் பொருள்; objects of enjoyment. "துப்புரவில்லார் துவரத் துறவாமை" *(குறள். 1050).* 3. பட்டறிவு; experience. "சிவயோகத் துப்புரவுபெற்று" *(உபதேசகா. உருத்திராக். 179).*

[துப்பு[2] + உரவு]

துப்புரவு[3] *tuppuravu,* பெ. (n.) தூய்மை; purity, cleanliness. "துப்புரவொன்றில்லா வெற்றரையார்" *(தேவா. 577, 10).*

[துப்பு[7] + உரவு]

துப்புளி *tuppuḷi,* பெ. (n.) படைக்கலக் கொட்டில் (யாழ்.அக.); armoury.

[துப்பு + உள் + இ]

துப்பேறு-தல் *tuppēṟu-*, செ.கு.வி. (v.i.) துருவேறுதல்; to become rusty. "தண்ணீர் பட்டாலோ ரோல்டு கோல்டு துப்பேறிப் போகும்" (மதி.க. 111).

[துப்பு + ஏறு-.]

துபப்பரணி *tuba-p-paraṇi*, பெ. (n.) நேர்வாளம்; croton oil plant (சா.அக.).

தும்[1] *tum*, பெ. (n.) இறப்பெதிர் காலங்களைக் காட்டும் தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி (நன். 322); verbal ending, of the Ist person plural, denoting past or future tense, as in செய்தும்.

தும்[2] *tum*, பெ. (n.) தூசி; dust. "தும்பறக்க அடித்தான்" (வின்.).

தெ. தும்மு

தும்பகர் *tumbagar*, பெ. (n.) தும்பை பார்க்க (சீ.அ.); see *tumbai*.

தும்பகா *tumbagā*, பெ. (n.) தும்பை பார்க்க (வின்.); see *tumbai*.

தும்படைசி[1] *tumbaḍaiśi*, பெ. (n.) நெசவுத் தறி நாடாவிலோ ருறுப்பு (யாழ்.அக.); a part of shuttle having the weft-thread.

[தும்பு + அடைசி]

தும்படைசி[2] *tumbaḍaiśi*, பெ. (n.) அழுக்குப் போக்கும் கருவி (பாண்டி.); brush.

[தும்பு + அடைசு → அடைசி]

தும்பரம் *tumbaram*, பெ. (n.) அத்தி (அகநி.); country fig.

[தும்பு + தும்பரம் (வ.மொ.வ. 176)]

தும்பராசம் *tumbarāśam*, பெ. (n.) காட்டுக் கோதுமை; wild wheat (சா.அக.).

தும்பராட்டகம் *tumbarāṭṭagam*, பெ. (n.) 1. அரத்தை; galangal. 2. பேரரத்தை; greater galangal (சா.அக.).

தும்பல் *tumbal*, பெ. (n.) தும்மல் பார்க்க; see *tummal* (செ.அக.).

தும்பரிசி *tumbariśi*, பெ. (n.) வண்டரிசி; seed of an insect (சா.அக.).

தும்பல்கொடி *tumbal-koḍi*, பெ. (n.) கொடியைக் கிள்ளிச் சாறு முகர்ந்தால் தும்மல் வரும்; a creeper whose exudation causes sreezing when smelled.

[தும்மல் + கொடி - தும்பல்கொடி]

தும்பலுவான் *tumbaluvāṉ*, பெ. (n.) ஒருவகைப் பிசின் மரம்; forest mahogany (சா.அக.).

தும்பன் *tumbaṉ*, பெ. (n.) தீயவன்; wicked person.

[தும்பு → தும்பன்]

தும்பா *tumbā*, பெ. (n.) 1. சுரைக்குடுக்கைக் கலம்; hollowed gourd or rind of a gourd, used as a vessel. 2. உண்ணீருக்குரிய ஏனவகை; loc. a kind of drinking vessel.

[தும்பு → தும்பா. தும்பா → வ. தும்ப (வே.க. 281)]

தும்பாலை *tumbālai*, பெ. (n.) சுரை[4]; a bottle gourd.

[தும்பு → தும்பாலை (வே.க. 281)]

தும்பாவகம் *tumbāvagam*, பெ. (n.) குளம்பிக் கொட்டை; coffee seed (சா.அக.).

தும்பி[1] *tumbi*, பெ. (n.) 1. யானை; elephant. "தும்பியை யரிதொலைத் தென்ன" (கம்பரா. வாலிவதை. 51). 2. வண்டு (பிங்.); bee. "துவைத் தெழு தும்பி" (அகநா. 317). 3. ஆண்வண்டு (திவா.); male bee. 4. தட்டான் பூச்சி (வின்.); dragon fly.

ம. தும்பி; க. தும்பி; து. தும்பி.

தும்பி → வ. தும்பீ

[தும்பு → தும்பி (வே.க. 281)]



தும்பி[2] *tumbi*, பெ. (n.) 1. மீன்சாதிவகை; a genus of fish. 2. பதினொன்றரை விரலம் வரை வளரக் கூடியதும் செந்நிற முடையதுமாகிய கடல்மீன் வகை; a seafish, reddish, attaining 11½ in. in length. 3. காட்டத்தி (மலை.) பார்க்க; see *kāttatti;* gaub. 4. கருப்பு மரவகை (தைலவ. தைல. 48); black gaub. 5. அகந்தாளி வகை; ceylon ebony. 6. தும்பிலி பார்க்க; see *tumbili.* 7. கரும்பு (மலை); sugar-cane.

[தும்பு → தும்பி]

தும்பி[3] *tumbi*, பெ. (n.) சுரை பார்க்க (பிங்.); see *šurai;* calabomb. "கமுகுமாத் தும்பி" (சைவச. பொது. 277). 2. தும்பா[2] பார்க்க; see *tumbā.* 3. கொற்றான் (மலை.) பார்க்க; see *korrān;* parasitic leafless plant.

[தும்பு → தும்பி]

தும்பி[4] *tumbi*, பெ. (n.) தீயவள்; wicked woman.

தும்பன் ஆ.பா; தும்பி பெ.பா.

தும்பி[5] *tumbi*, பெ. (n.) நச்சுத்தன்மையுள்ள கூறிய முட்களையுடைய மீன் (மீன்பிடி.); a kind of fish which has poisonous thorns.

[தும்பு → தும்பி]

தும்பிக்காய் *tumbi-k-kāi*, பெ. (n.) பனிச்சைக் காய்; malabar mangosteen.

[தும்பி + காய்]

தும்பிக்கை *tumbi-k-kai*, பெ. (n.) யானைத் துதிக்கை; elephant's trunk. "தும்பிக்கையான் பாதந் தப்பாமற் சார்வார்" (மூதுரைக் காப்புச்.).

[தும்பி + கை]

தும்பிக்கைமாலை *tumbi-k-kai-mālai*, பெ. (n.) மாலை வகை; a kind of large garland (நாஞ்.).

[தும்பிக்கை + மாலை]

தும்பிச்சங்கை *tumbi-c-cangai*, பெ. (n.) தும்பிக்கை பார்க்க; see *tumbikkai.*

[தும்பி + சங்கை]

தும்பிச்சி[1] *tumbicci*, பெ. (n.) தும்பி[4] (வி.) பார்க்க; see *tumbi.*

தும்பிச்சி[2] *tumbicci*, பெ. (n.) பழைய காசு வகை (சரவண. பணவிடு. 56); old coin.

தும்பிச்சிக்கை *tumbi-c-cikkai*, பெ. (n.) தும்பிக்கை பார்க்க; see *tumbikkai.*

[தும்பிச்சி + கை]

தும்பிப்பதக்கம் *tumbi-p-patakkam*, பெ. (n.) வண்டின் வடிவாகச் செய்யப்பட்ட பதக்கம்; beetle shapped pendant of a necklace. "தும்பிப் பதக்கவிலை சொற்பமோ" (விறலிவிடு. 698).

[தும்பி + பதக்கம்]

தும்பிப்பாட்டு *tumbi-p-pāttu*, பெ. (n.) இறந்து பட்ட ஒரு பழைய நூல் (யாப்.வி.பக். 355); an ancient poem now lost.

[தும்பி + பாட்டு]

தும்பிபறத்தல் *tumbi-parattal*, பெ. (n.) மகளிர் விளையாட்டு வகை; a girl's game.

[தும்பி + பறத்தல்]

தும்பிமா *tumbi-mā*, பெ. (n.) வண்டு விழுந்த மாம்பழம்; mango fruit having beetles in its kernel (செ.அக.).

தும்பிமீன் *tumbi-mīn*, பெ. (n.) வெண்பழுப்பான எலும்புக் கம்பிகள் வாய்ந்த, உணவிற்கு ஏற்றதல்லாத அழகிய கடல்மீன் வகை; an ornamental sea-fish (சா.அக.).



தும்பிமுகன் *tumbi-mugan*, பெ. (n.) பிள்ளையார் (பேரின்பக்கீர்த். ப. 2); God pilliyar.

தும்பியம் *tumbiyam*, பெ. (n.) செங்குத்தாய் மேலெழும்பவும், கீழிறங்கவும்வல்ல தும்பியம் என்னும் வானூர்தி; helicopter.

[தும்பு + பறத்தல்]

தும்பியூது-தல் *tumbi-y-ūdu-*, செ.கு.வி. (v.i.) 1. வண்டு போல ஒலித்தல் (வின்.); to puzz, make a humming noise. 2. ஓசையோடு வலிந்து மூச்சுவாங்குதல் (வின்.); to breath with a shrill sound, as one senseless from a fall or blow. 3. எச்சில் வழலை நீர் முதலியவற்றை ஊதிக்குமிழியுண்டாக்குதல்; to blow bubbles from the mouth, as with spittle, soapy water etc.

[தும்பி + ஊது-]

தும்பிலி *tumbili*, பெ. (n.) 1. மரவகை; coromandel ebony 2. மைசூர் மரவகை; coromandal ebony of mysore. 3. ஓரடிக்கு மேல் வளரக் கூடியதும் கருஞ்சாம்பல் நிற முள்ளதுமான கடல்மீன் வகை; a sea-fish, brownish grey, attaining atleast 1 ft. in length. 4. நீர்வெட்டிமுத்து; fish poison tree (சா.அக.).

[தும்பி + தும்பிலி]

தும்பிலிக்காய் *tumbili-k-kāy*, பெ. (n.) 1. கருப்பு மரத்தின் காய்; fruit of black ebbony. 2. பனிச்சைக்காய்; malabar mangosteen (சா.அக.).

[தும்பிலி + காய்]

தும்பினி *tumbiṉi*, பெ. (n.) மின்மினிப் பூச்சி; glowworm, fire-fly.

தும்பு[1] *tumbu*, பெ. (n.) 1. குற்றம்; fault, blemish, defect. "தும்பறப் புத்திசேன சொல்லிது குரவற் கென்ன" (சீவக. 666). 2. நாகரிகமில்லாச் சொல்; uncivil, vulgar or slanderous language. "வம்புதும்பு பேசுபவன்".

[துன்பு → தும்பு.
ஒ.நோ. வன்பு → வம்பு.
வம்பு தும்பு என்பது மரபிணை மொழி (வே.க. 289)]

தும்பு[2] *tumbu*, பெ. (n.) 1. ஓரம்; border, fringe. 2. நரம்பு முதலியவற்றில் விழுஞ் சிம்பு; frayed ends, as of a gut. "கொடும்புரி மயிர்தும்பு முறுக்கிவை நான்கும்" (சீவக. 721, உரை). 3. நார்; fibre. 4. வரம்பு; propriety, relevancy. "தும்பில்லாமற் பேசுகிறான்". 5. கயிறு; rope, tether. "ஆர்த்த தும்பறுத்து விடுப்ப" (திருவாலவா. 33, 14). 6. நெடுஞ்சி (மலை) பார்க்க; see *neḍuñji*; cow thorn. 7. கரும்பு (மலை); sugar-cane. 8. வல்லம்பர், நாட்டுக் கோட்டைச் செட்டிமார் இவர்கள் பெண்டிர் அணியும் ஒருவகைத் தாலியுரு; small globular pendant suspended from the tāli of vallampar and Nāṭṭu-k-kōṭṭai chetti women. 9. தூசி; dust. "உள்ளெல்லாம் மிகவும் தும்பாக இருக்கிறது".

ம. தும்பு; தெ. தும்மு

[துல் → துள் → துண்பு → தும்பு (வே.க. 281)]

தும்பு[3]**-தல்** *tumbu-*, 5 செ.கு.வி. (v.i.) தும்மு (வின்.) பார்க்க; see *tummu*.

[துன்பு → தும்பு-,]

தும்புக்கட்டு *tumbu-k-kaṭṭu*, பெ. (n.) தேங்காய் நாராற் செய்த துடைப்பம்; sweeping brush made of coconut fibres.

[தும்பு[2] + கட்டு]

தும்புக்கயிறு *tumbu-k-kayiṟu*, பெ. (n.) 1. தென்னை பனை முதலியவற்றின் நாரால் திரிக்கப்பட்ட கயிறு; rope of coconut, palmyra or other fibres. 2. மாட்டுத் தும்பு; halter, tethering, rope. தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கிறதா? (பழ.).

[தும்பு + கயிறு]

தும்புதட்டு-தல் *tumbu-taṭṭu-*, செ.கு.வி. (v.i.) நையப்புடைத்தல்; to thrash.

[தும்பு + தட்டு-]

தும்புபிடுங்கு-தல் *tumbu-piḍuṅgu-*, செ.கு.வி. (v.i.) பிறர் குற்றத்தை எடுத்துக் கூறுதல் (வின்.); to accuse, taunt, nag.

[தும்பு + பிடுங்கு-]

தும்புபோடு-தல் *tumbu-pōḍu*, செ.குன்றாவி. (v.t.) 1. கயிறு திரித்தல்; to make a tether. 2. துருவியறிதல்; to probe, spy out.

[தும்பு + போடு-]

தும்புரு *tumburu*, பெ. (n.) 1. விண்ணக இசையாளனாகக் கருதப்படுபவன் ஒரு கந்தருவன்; a celestial musician. "தும்புரு நாதரர்

புகுந்தன ரிவரோ" (திவ்.திருப்பள்ளி. 8). 2. ஒரு வகை யாழ்; a kind of lute. "தும்புருக் கருவியுந் துன்னிநின் றசைப்ப" (கல்லா. 81).

தும்புலிப்பாகு *tumbili-p-pāku*, பெ. (n.) சருக்கரை; sugar (சா.அக.).

தும்புவெட்டு *tumbu-veṭṭu*, பெ. (n.) ஆடையின் ஓரத்தை கத்தரிக்கை; cutting the edge of a cloth.

[தும்பு + வெட்டு]

தும்பை *tumbai*, பெ. (n.) 1. மருந்தாகப் பயன்படும், சிறிய வெள்ளை நிறப் பூக்களையுடைய குத்துச் செடிவகை (பதார்த்த. 557); white dead nettle. 2. செடி வகை; bitter toombay, a common weed. 3. காசித்தும்பை பார்க்க; see *kāši-t-tumbai;* flower toombay. 4. செடிவகை; black gaub. 5. பெருவீரச் செயல்புரிவதன் அறிகுறியாக வீரர் போரிலணியும் அடையாளப்பூ; a garlands of flowers worn by warriors when engaged in battle, as a mark of their valour. "தொடியணிதோ ளாடவர் தும்பை புனைய" (புவெ.10,2). 6. தும்பைத் திணை (தொல்.பொ.70) பார்க்க; see *tumbai-t-tiṇai*. 7. போர் (பிங்.); battle. "தேவரை மேனாள் தும்பையின்றலை துரந்தது" (கம்பரா. பிரமா. 113). 8. கூட்டம் (வின்.); assembly, crowd.

தெ. தும்ப; க. தும்பை

[தும்பு → தும்பை (மு.தா. 160)]



தும்பை வகைகள்

1. காசித்தும்பை
2. கருந்தும்பை
3. கழுதைத்தும்பை
4. பீத்தும்பை
5. பேய்த்தும்பை
6. மலைத்தும்பை
7. கவிழ்தும்பை
8. பெருந்தும்பை
9. சிறுதும்பை
10. சன்னத்தும்பை
11. கசப்புத்தும்பை
12. கப்பாத்தும்பை
13. காட்டுத்தும்பை
14. செந்தும்பை
15. மஞ்சட்காசித்தும்பை
16. சிவப்புக்காசித்தும்பை
17. கறித்தும்பை

(சா.அக.)

தும்பை[2] *tumbai*, பெ. (n.) 1. வெற்றிலை (மலை.); betel leaf. 2. மீன் சாதி வகை (வின்.); a genus of fish.

தும்பை[3] *tumbai*, பெ. (n.) ஒருவகைத் தவசம்; a kind of grain. "தும்பையென்றும் வாய்வகுக்குஞ் சாமியென்றும்" (நெல்விடு. 170).

தும்பைத்திணை *tumbai-t-tiṇai*, பெ. (n.) பெருவீரச் செயல்காட்டிப் பகைவரோடு போர் செய்தலைக்கூறும் புறத்திணை வகை (தொல்.இளம்.); major theme of a king or warrior heroically fighing against his enemy.

[தும்பை + திணை]

தும்பைப்பாரை *tumbai-p-pārai*, பெ. (n.) தும்பை மீன் வகை (வின்.); the large tumbai fish.

[தும்பை + பாரை]



தும்பைமணி *tumbai-maṇi,* பெ. (n.) ஒருசார் மறவ மகளிர் அணியும் தாலி வகை; a kind of tāli worn by women of certain marava sub-caste *(செ.அக.).*

[தும்பை + மணி]

தும்பைமாலை *tumbaimālai,* பெ. (n.) தும்பை மாலையணிந்து பெரும்போர் புரிந்த வீரனைப் புகழ்ந்து கூறும் இலக்கிய வகை *(தொன்.வி. 283, உரை);* panegyric on a warrior who has fought valiantly against his enemy, wearing a tumbai garland.

[தும்பை + மாலை]

தும்பைமை *tumbai-mai,* பெ. (n.) மாலைக் கண்ணைக் குணப்படுத்த வேண்டி, கண்ணுக் கிடும் ஒருவகை மருந்துமை; an eye colloryium prepared out of leucas to cure night blindness *(சா.அக.).*

தும்பையரவம் *tumbai-y-aravam,* பெ. (n.) தன்சேனையை அரசன் தலையளி செய்தலைக் கூறும் புறத்துறை *(பு.வெ. 7,2);* theme describing a king distributing honours and rewards to his troops after a victory.

[தும்பை + அரவம்]

தும்பையன் *tumbaiyaṉ,* பெ. (n.) மீன் வகை; a kind of fish. "தகுவெள்ளாரல் தும்பையன்" *(பறாளை. பள்ளு, 16).*

[தும்பை → தும்பையன்]

தும்பையாடு *tumbaiyāḍu,* பெ. (n.) ஒரு வகை ஆடு; a kind of sheep *(சா.அக.).*

[தும்பை + ஆடு]

தும்மட்டி *tummaṭṭi,* பெ. (n.) *1.* வரிக்கொம்மட்டி; country cucumber, climber. *2.* சர்க்கரைக் கொம்மட்டி; sweet water-melon. *3.* பேய்க் கொம்மட்டி; bitter water-melon.

தும்மட்டிப்பட்டன் *tummaṭṭi-p-paṭṭaṉ,* பெ. (n.) ஏமாற்றுபவன்; swindler, cheat.

[தும்மட்டி + பட்டன்]

தும்மல் *tummal,* பெ. (n.) *1.* தும்முகை; sneezing. "குறிப்பின்றித் தும்மல்போற் றோன்றிவிடும்" *(குறள், 1253). 2.* மூச்சு *(பிங்.);* breath. தும்மலிலே போனாலும் தூற்றலிலே போகக் கூடாது *(பழ.).*

[தும்மு → தும்மல்]

தும்மல்நூல் *tummal-nūl,* பெ. (n.) தும்முவதால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கணக்கிட்டுப் பார்த்துச் சொல்லும் நூல்; that branch of science dealing with the art of divination of sneezing *(சா.அக.).*

[தும்பை + நூல்]

தும்மவிடு-தல் *tummaviḍu-,* செ.குன்றாவி. (v.t.) சிறிதேனும் வசதி கொடுத்தல்; to allow breathing-space.

தும்மற்காதல் *tummaṟ-kādal,* பெ. (n.) தும்மலைக் கொண்டு குறிகூறுகை; prediction from sneezing.

[தும்மல் + காதல்]

தும்மற்பூண்டு *tummaṟ-pūṇḍu,* பெ. (n.) காக்கை வலிப்புக்கு நசியமாகப் பயன்படும் ஒரு வகைப்பூண்டு; a stermitatory used as a snuff in the attack epilepsy *(சா.அக.).*

[தும்பை + பூண்டு]

தும்மிட்டி *tummiṭṭi,* பெ. (n.) *1.* சிறுகொம்மட்டி *(யாழ்.அக.);* a kind of small cucumber. *2.* பேரீந்து; cultivated date palm.

[தும்மட்டி → தும்மிட்டி]

தும்மு[1]-தல் *tummu-,* செ.கு.வி. (v.i.) *1.* சளி முதலியவற்றால் மூச்சுக்காற்றுத் தடைப்பட்டு வாய்மூக்கு வழிகளால் ஒலியுடன் வெளியேறுதல்; to sneeze. "ஊடியிருந்தேமாத் தும்மினார்" *(குறள். 1312). 2.* மூச்சுவிடுதல்; to breath.

தெ. தும்முட; ம. தும்புக

தும்மு[2]-தல் *tummu-,* செ.குன்றாவி. (v.t.) விடுதல்; to emit, letgo, leave.

தும்மு[3] *tummu-,* பெ. (n.) தும்மல் பார்க்க; see *tummal.* "தும்முச் செறுப்ப வழுதாள்" *(குறள். 1318).*

தும்மு[4] *tummu-,* பெ. (n.) கொதுகு *(சது.);* gnat.

தும்முட்டி *tummuṭṭi-*, பெ. (n.) *தும்மட்டி;* country cucumber.

துமனதாளி *tumaṉa-tāḷi*, பெ. (n.) **தாளிப்பனை;** talipot tree *(சா.அக.).*

துமானம் *tumāṉam*, பெ. (n.) **அணிகலன்கள் வைக்கும் கலம்;** jewel casket.

துமிதல்[1] *tumi-*, செ.குவி. (v.i.) *1.* **வெட்டுண்ணுதல்;** to be cut off severed. "அரவினருந்தலை துமிய" *(புறநா. 211).* **2. அழிதல்;** to perish, to be crushed. "பைம்பயிர் துமிய" *(அகநா. 254).*

துமிதல்[2] *tumi-*, செ.குன்றாவி. (v.t.) **விலக்குதல்;** to remove. "சுதைச் சிலம்பிமேல் விழவூதித் துமிந்தனன்" *(பெரியபு. திருநீலநக். 13).*

துமி[3]**-த்தல்** *tumi-*, 11 செ.குன்றாவி. (v.t.) *1.* **வெட்டுதல்** *(திவா.);* to cut off. "கொடுங்காற் புன்னைக் கோடு துமித் தியற்றிய" *(பெரும்பாண். 266).* **2. அறுத்தல்** (திவா.); to saw. "வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த" *(அகநா. 24).* *3.* **விலக்குதல்;** to keep off, obstruct. "தொடீஇய செல்வார்த் துமித்தெதிர் மண்டும்" *(கலித். 116, 5).*

[துமி → துமித்-.]

துமி[4] *tumi-*, பெ. (n.) **வெட்டு;** cut, severance. "கரந்துமி படுதலுங் கவன்று" *(கந்தபு. அசமுகிசோ. 2).*

துமி[5]**-தல்** *tumi-*, செ.குன்றாவி. (v.t.) **உமிழ்தல்;** to spit. "மிச்சிலைத் துமிந்து" *(காஞ்சிப். கழுவாய். 63).*

துமி[6]**-த்தல்** *tumi-*, செ.குவி. (v.i.) **துளித்தல்** *(வின்.);* to drizzle, sprinkle.

துமி[7] *tumi*, பெ. (n.) *1.* **மழைத்துளி;** rain drops. *2.* **தூறல்;** light, drizzling rain. *3.* **நீர்த்துளி;** drop of water; spray. "திரைகடற்றுமி தழூர்புக" *(கம்பரா. சேது. 42).*

துமிதம் *tumidam*, பெ. (n.) **மழைத்துளி** *(பிங்.);* rain drops.

துமிரம் *tumiram*, பெ. (n.) *1.* **கருமை;** black colour. *2.* **மிகுசிவப்பு;** deep red colour.

[துமி → துமிரம்]

துமிலம் *tumilam*, பெ. (n.) **பேராரவாரம்;** din, tumult. "துமிலமெழப் பறைகொட்டி" *(திவ்.பெரியாழ். 3,8,3).*

துமுலம் *tumulam*, பெ. (n.) **குழப்பம்** *(யாழ்.அக.);* confusion.

துய்[1]**-த்தல்** *tuy-*, 11 செ.குன்றாவி. (v.t.) *1.* **புலன்களால் நுகர்தல்;** to enjoy by means of the senses. "கொடுப்பதூஉத் துய்ப்பதூஉ மில்லார்க்கு" *(குறள். 1005).* **2. நுகர்தல்;** to experience, suffer, as the fruits of actions. "தொல்வினைப் பயன்றுய்ப்ப" *(கலித். 118).* *3.* **உண்ணுதல்;** to eat, feed. "புதுப்பூத் துய்த்த வாய" *(அகநா. 15).* **4. நூல் நூற்றல்;** to spin out.

[துள் → துய் → துய்த்தல் (வேக. 282)]

துய்[2] *tuy*, பெ. (n.) *1.* **உணவு;** food. "துய்தானுறும் வாயினை" *(கந்தபு. தாரக. 159).* **2. பஞ்சு;** cotton. "துய்த்தலை மந்தியை" *(புறநா. 158).* **3. பஞ்சின் நுனி** (குறிதல் 37, உரை); soft end of cotton thread. *4.* **கதிர், பூவிதழ் முதலியவற்றின் மெல்லிய பகுதி;** a soft part in the ears of corn, in the petals of flowers. "துய்த்தலை வாங்கிய .. குரல்" *(குறிஞ்சிப். 37).* **5. மென்மை;** softness. "துய்யறத் திரண்ட திண்கோல்" *(சீவக. 559).* **7. புளியம்பழத்தின் ஈர்க்கு;** fibre covering the tamarind pulp. "துய்த்தலைப் பழனின்" *(மலைபடு. 178).* **8. கூர்மை;** sharpness. "துய்யவை யங்கை வாங்கி" *(திருவாலவா. 38, 35).*

[துள் → துய்]

துய்த்தல் *tuyttal*, பெ. (n.) **நாடகச் சந்தி ஐந்தனுள் இறுதியானது** *(சிலப். 3, 13, உரை, பக். 83);* satisfactory end of the plot of a drama, one of five nāṭaka-canti.

துய்ப்பு *tuyppu*, பெ. (n.) **நுகர்ச்சி;** enjoyment. "துறக்கவேந்தன் றுய்ப்பிலன் கொல்லோ" *(மணிமே. 15, 46).*

[துள் → துய் → துய்ப்பு]

துய்ய *tuyya*, பெ. (n.) *1.* **கலப்பற்ற;** pure. "துய்யவெள்ளை". **2. தெய்வத் தன்மை பொருந்திய;** holy. "துய்யதேவர்" *(கம்பரா. பிரமாத்திர. 189).* **3. உறுதியான;** conclusive

certain. "துய்ய பொருளீதென் றுந்தீபற" (திருவுந்தி. 10).

[தூய் → துய் → துய்ய]

துய்யமல்லி *tuyya-malli*, பெ. (n.) நான்கு முதல் ஆறு மாதங்களில் விளையக்கூடிய சம்பா வகை; a white campā paddy which matures in four to six months.

[துய்ய + மல்லி]

துய்மை *tuymai*, பெ. (n.) தூய்மை, மென்மை; fuarlx, softness.

[துய் → தூய்மை]

துய்யபால் *tuyyapāl*, பெ. (n.) நீர் கலக்காத பால்; unadulterated milk or pure milk.

துய்யன் *tuyyaṉ*, பெ. (n.) 1. தூய்மையானவன்; holy, sacred person. 2. வெள்ளி மணல்; sand containing silver ore (w).

[தூய்மை → துய்யன்]

துய்யா *tuyyā*, பெ. (n.) 1. திரைகளின் ஓரத்தில் அமைக்கப்படும் அழகிய பின்னல் வகை; a kind of lace-braid stiched on to the border of curtains. 2. துய்யாப்பட்டை பார்க்க; see *tuyya-p-paṭṭai*. 3. நெசவுப்பின்னற் கயிறு; braidad cord.

[தூய்மை → துய்யா]

துய்யாப்பட்டை *tuyyā-p-paṭṭai*, பெ. (n.) போலிப் பொன்னிழை; imitation lace.

[தூய்யா + பட்டை]

துய்யாள் *tuyyāḷ*, பெ. (n.) 1. தூய்மையானவன்; pure, chaste woman. 2. நாமகள் (பிங்.); sarasvati.

துய்யான்குறு *tuyyāṉkuṟu*, பெ. (n.) மணல், வெள்ளி மணல்; silver ore (சா.அக.).

துய்யான்குறுமணல் *tuyyāṉ-kuṟumaṇal*, பெ. (n.) துய்யன்[2] பார்க்க; see *tuyyaṉ*[2] (சங்.அக.).

துய்யோன் *tuyyōṉ*, பெ. (n.) தூய்மை யுடையவன்; one who is virgin.

துய்யை *tuyyai*, பெ. (n.) சீக்காய்; soap nut (சா.அக.).

துயக்கம் *tuyyakkam*, பெ. (n.) சோர்வு; fatigue, loss of strength or courage.

[துயங்கு → துயக்கு → துயக்கம்]

துயக்கன் *tuyyakkan*, பெ. (n.) மனத்திரிவைச் செய்பவன்; one who causes distraction. "தூயன் துலக்கன் மயக்கன்" (திவ்.திருவாய். 1,9,6).

[துயக்கு → துயக்கன்]

துயக்கம் *tuyyakkam*, பெ. (n.) சோர்வு; fatigue, loss of strength or courage.

[துயங்கு → துயக்கம்]

துயக்குதல்[1] *tuyyakku-*, செ.குன்றாவி. (v.t.) 1. தளரச் செய்தல் (வின்.); to slacken, relax. 2. கட்டுதல்; to tie, fasten. "துயக்கு மவ்வினையின் கழிவும்" (தணிகைப்பு. நந்தியும். 110).

[துயங்கு → துயக்கு]

துயக்கு[2] *tuyyakku*, பெ. (n.) 1. சோர்வு; fatigue, loss of strength or courage. "துயக்கிலன் சுகேது" (கம்பரா. தாடகை. 26). 2. மனமயக்கம்; misconception, confusion. "துயக்கற வுணர்ந்து" (மணி. 27:19). 3. வருத்தம்; sorrow. "துயக்கறுத் தெனையாண்டு கொண்டு" (திருவாச. 30:7). 4. மனத்திரிவு; distraction. "இவையவன் துயக்கே" (திவ்.திருவாய். 1,3:9).

[துயங்கு → துயக்கு]

துயக்கு[3] *tuyyakku-*, பெ. (n.) 1. பந்தம்; bondage. "துயக்கறாத மயக்கிவை" (தேவா. 260:10). 2. ஆசை; desire. "தொண்டையங் கனிவாய்ச் சீதை துயக்கினா லென்னைச் சுட்டாய்" (கம்பரா. பொழிலிறுத். 40).

துயக்கு[4] *tuyakku*, பெ. (n.) 1. தளர்ச்சி; relaxation. 2. வலுக்குறைவு; valour (சா.அக.).

துயங்கு-தல் *tuyaṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) சோர்தல்; to be exausted, to faint. "இரணியன் துயங்கி நின்றான்" (வரத. பாகவத. நரசிங்க. 28).

துயம் *tuyam*, பெ. (n.) 1. இரண்டு; pair, couple. 2. திருமாலைத் தேவதையாகக் கொண்டதும், இரண்டு சொற்களுடையதுமான மந்திர வகை; a mantra of two sentences propitiating

Viṣṇu. "மாமென்று தொட்டுரைத்த சொல்லும் துயத்தி னரும்பொருளும்" *(பெருந்தொ. 1853).* 3. **கொடி** *(வின்.)*; banner, flag.

துயர்[1]-தல் *tuyar-,* செ.குவி. (v.i.) **வருந்துதல்;** to grieve, sorrow. "ஆனாது துயரு மென்கண்" *(அகநா. 195).*

துயர்[2] *tuyar,* பெ. (n.) 1. **துன்பம்;** sorrow, grief. "உலைப்பெய் தருவது போறுந்துயர்" *(நாலடி. 114).* 2. **அரசர்க்குரிய சூதாடு கருவி;** infirmities of kings, as playing at dice. "சூதுமுந்துறச் சொல்லிய மாத்துயர்" *(கம்பரா. மந்தரை. 12).*

துயர்[3]-தல் *tuyar-,* செ.குன்றாவி. (v.t.) **தொடர்தல்;** to follow, pursue.

துயர்நிலை *tuyar-nilai,* பெ. (n.) **துன்பநிலை;** state of being moody.

[துயர் + நிலை]

துயரடி *tuyar-adi,* பெ. (n.) 1. **சோர்வு;** fatigue, fainting. 2. **துன்பம்** *(யாழ்.அக.)*; grief.

[துயர் + அடி - துயரடி]

துயரம்[1] *tuyaram,* பெ. (n.) 1. **மனவருத்தம்;** sorrow. "தணிவருந் துயரஞ் செய்தான்" *(அகநா. 278).* 2. **துயரம், இன்னல்;** trouble. "நீ யிருக்கத் துயரமுண்டோ வெமக்கினியே" *(உத்தரரா. திருவோலக். 24)* 3. **இரக்கம்;** pity. அவனைப் பார்த்தால் மிகவும் துயரமாயிருக்கிறது *(உ.வ.).*

[துயர் → துயரம்]

துயரம்[2] *tuyaram,* பெ. (n.) **மழை** *(யாழ்.அக.)*; rain.

துயரி *tuyari,* பெ. (n.) **யாழ்நரம்பு;** lute-strings. "கோதை தொடுத்த துயரி" *(சீவக. 921).*

துயருறுவோன் *tuyar-uruvōṉ,* பெ. (n.) வறியவன் *(யாழ்.அக.)*; poverty-stricken.

[துயர் + உருவோன்]

துயல்(லு)-தல் *tuyal-,* செ.குவி. (v.i.) 1. **அசைதல்;** to sway, wave. "மணிமயில் . . . துயல்கழை நெடுங்கோட்டு" *(சிறுபாண். 263).* 2. **தொங்குதல்;** to hang. "துயன்முலைப் பேழ்வாய்ப் பேய்" *(பு.வெ. 4,18, கொளு).* 3. **பறத்தல்;** to fly. "மென் சிறுபறவை கண்டந் தொக்குறு கழனாக் கெண்டை கொண்டுவிண் டுயலா தன்றே" *(உபதேசகா., பஞ்சாக். 57).*

துயல்வரு-தல் *tuyal-varu,* செ.குவி. (v.i.) **துயல்[2]** பார்க்க; see *tuyal.* "துயல்வருஉ மாரம் போல" *(சிறுபாண். 2).*

[துயர் + உருவோன்]

துயவு *tuyavu,* பெ. (n.) **அறிவின்றிரிவு;** mental distraction. "துயவுற்றேம் யாமாக" *(தொல்.சொல். 368, சேனா).*

துயில்[1](லு)-தல் *tuyil,* செ.குவி. (v.i.) 1. **உறங்குதல்;** to sleep. "வரியரவி னணைத் துயின்று" *(திவ்.பெரியதி. 8,3,2).* 2. **தங்குதல்** (சீவக. 1504, உரை); stay. 3. **இறத்தல்;** to die. 4. **மறைதல்;** to set, as the sun. "ஒண்சுடர் துயின்றதாலென்னும்" *(திவ்.பெரியதி. 2,7:4).*

துயில்[2] *tuyil,* பெ. (n.) 1. **தூக்கம்;** to sleep. "மென்றோட் டுயிலின்" *(குறள். 1103).* 2. **கனவு;** dream. "துயில்போற் குறியா வரவு" *(திணைமாலை. 50).* 3. **இறப்பு;** death. "ஏந்தகலந் தொட்டான் பெருகத் துயில்" *(பு.வெ. 4, 18).* 4. **தங்குகை;** stay. "திருத்துயில் பெற்ற மார்பன்" *(சீவக. 1504).* 5. **புணர்ச்சி;** gohabitation. "நெஞ்சே மாப்ப வின்றுயி றுதுறந்து" *(மதுரைக். 575).* 6. **ஆடை** *(வின்.)*; cloth.

துயில்போ-தல் *tuyil-pō-,* செ.குவி. (v.i.) 1. **துயில்** பார்க்க; see *tuyil.* 2. **ஆறுதல்** *(யாழ்.அக.)*; to rest.

[துயில் + போ]

துயில்வு *tuyilvu,* பெ. (n.) **உறக்கம்** *(யாழ்.அக.)*; sleep.

[துயில் → துயில்வு]

துயிலார்[1]-தல் *tuyilār,* செ.குவி. (v.i.) **உறங்குதல்;** to sleep. "துயிலாரா தாங்கண் . . . முற்றிய வெந்நோய்" *(கலித். 146).*

துயிலார்[2] *tuyilār,* பெ. (n.) **தேவர்** (உறக்கமிலாதோர்) *(யாழ்.அக.)*; devas, as those who never sleep.

[துயில் → துயில்வு]

துயிலி[1] *tuyili,* பெ. (n.) கீரை வகை; the smallest Indian amaranth, Amarantus poly-gamus *(பதார்த். 601).*

துயிலி[2] *tuyili,* பெ. (n.) தஞ்சை மாவட்டம் துயிலி என்ற ஊரில் நெய்யப்படும் நல்லாடை வகை; a cloth of fine texture woven at a place called Tuyili in Tanjore district.

துயிலிடம் *tuyiliḍam,* பெ. (n.) 1. படுக்கும் இடம்; sleeping place. 2. மக்களின் படுக்கை (திவா.); contrivance to sleep on, as bed, couch, mat.

[துயில் + இடம்]

துயிலுணர்-தல் *tuyil-uṇar-,* செ.கு.வி. (v.i.) உளக்கம் நீங்குதல்; to awake, rise from sleep. "துயிலுணர்ந் திருந்தசோம சுந்தரக் கருணை வெள்ளம்" *(திருவிளை. நரிபரி. 17).*

[துயில் + உணர்-.]

துயிலெடு-த்தல் *tuyil-eḍu-,* செ.குன்றாவி. (v.t.) தூக்கத்தினின்று எழுப்புதல்; to awake up, arouse.

[துயில் + எடு-]

துயிலெடுப்பு[1]**-தல்** *tuyil-eḍuppu-,* செ.குன்றாவி. (v.t.) துயிலெடு பார்க்க; see *tuyil-eḍu.* "ஊர் துயிலெடுப்ப" *(மணிமே. 7:125).*

[துயில் + எடுப்பு-]

துயிலெடுப்பு[2] *tuyil-eḍuppu-,* பெ. (n.) தூக்கத்தினின்றெழுப்புகை; causing one to wake up.

[துயில் + எடுப்பு]

துயிலெடை *tuyil-eḍai-,* பெ. (n.) துயிலெழுப்புகை; waking one from sleep. "தூயோமாய் வந்தோந் துயிலெடை பாடுவான்" *(திவ்.திருப்பா. 16).*

[துயில் + எடை]

துயிலெடைநிலை *tuyil-eḍai-nilai,* பெ. (n.) பாசறைக்கண் துயிலும் வேந்தரைச் சூதர் அவர் புகழ் கூறித் துயிலெழுப்பல் கூறும் புறத்துறை; theme of Panegyrists waking a king who sleeps in Camp during an expedition. "தாவினல்லிசை கருதிய கிடந்தோர்க்குச் சூதரேத்திய துயிலெடை நிலையும்" *(தொல்.பொ. 91).* 2. அரசர் முதலியோரைத் துயிலெடுத்தல் பற்றிப் பாடப்படும் பாடல் (சது.); poem sung to awake a king or great person from sleep.

[துயிலெடை + நிலை]

துயிலெடைமாக்கள் *tuyil-eḍai-mākkaḷ,* பெ. (n.) அரசரைத் துயிலெழுப்பும் சூதர்; panegyrists whose duty is to wake up kings from sleep. "துயிலெடைமாக்க ளிசைகொ ளோசையின்" *(பெருங்.வத்தவ. 5, 81).*

[துயிலெடை + மாக்கள்]

துயிலெழு-தல் *tuyil-eḻu-,* செ.கு.வி. (v.i.) தூக்கம் கலைந்து எழுதல்; to awake from sleep. "சுப்பிரதீப மெழுந்தெனத் துயிலெழுந்தான்" *(இரகு.அயனெழுச். 139).*

[துயில் + எழு]

துயிலெழுமங்கலம் *tuyil-eḻu-maṅgalam,* பெ. (n.) பாணர் முதலியோர் அரசர் துயிலெழப் பாடும் மங்கலப் பாட்டு; panegyric sung to wake up a king from sleep. "விறலியும் பாணனும் நம் வேந்தற்குத் துயிலெழு மங்கலம் பாட வந்து நின்றார்" *(திருக்கோ. 375, உரை).*

[துயில் + எழு + மங்கலம்]

துயிலேல்-தல் (துயிலேற்றல்) *tuyil-ēl-,* செ.கு.வி. (v.i.) துயிலெழு-. பார்க்க; see *tuyileḻu.* "யாழு மேத் தொலியு மிறைவன் கேட்டுத் துயிலேற்றான்" *(சீவக. 2355).*

[துயில் + ஏல்-.]

துயிலொழி-தல் *tuyil-oḻi-,* செ.கு.வி. (v.i.) துயிலெழு-. பார்க்க; see *tuyileḻu.*

[துயில் + ஒழி-.]

துயிற்சி *tuyirci,* பெ. (n.) உறக்கம்; sleep. "சயக்கமி றுயிற்சிக் கும்பகருணனை" *(கம்பரா. ஊர்தேடு. 121).*

[துயில் → துயிற்சி]

துயிற்று-தல் *tuyiṟṟu-,* செ.குன்றாவி. (v.t.) 1. உறங்கச் செய்தல்; to put to sleep. "மன்னுயிரெல்லாந் துயிற்றி" *(குறள். 1168).*

2. தங்கப் பண்ணுதல்; to cause to stay, to retain. "துயிற் றியபல் கேள்வியினர்" *(சீவக. 2164).*

[துயில் → துயிற்று]

துயின்மடி-தல் *tuyiṉ-maḍi-,* செ.கு.வி. (v.i.) *உறங்குதல்;* to fall asleep. "கங்கு துயின்மடிந் தன்ன தூங்கிரு ளிறும்பின்" *(புறநா. 126:7).*

[துயில் → துயின்மடி-.]

துயினடை *tuyinaḍai,* பெ. (n.) *தூக்கத்திடையே எழுந்து செல்லச் செய்யும் நோய்;* somnambulism.

[துயில் + நடை]

துர[1]-த்தல் *tura-,* செகுன்றாவி. (v.t.) *1. ஒட்டிச் செலுத்துதல்;* to drive, as an elephant. "தோட்டியான் முன்பு துரந்து" *(புறநா. 14-4).* *2. எய்தல்;* to shoot, as an arrow, to propel. "சுடுசரந் துரக்கும்" *(கல்லா. 4).* 3. *போக்குதல்;* to disperse, scatter. 4. *தூண்டுதல்;* to direct, urge, encourage. "அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வறமுந் துரக்க நல்லரு டுரந்தனள்" *(கம்பரா. மந்தரை, 78).* 5. *அடித்தல்;* to beat. "மகடூஉப் பகடுபுறந் துரப்ப" *(பெரும்பாண். 58).* 6. *முடுக்கி உட்செலுத்துதல்;* to drive in, hammer down, as a nail. "துரப்பமை யாணி" *(பொருந. 10).* 7. *துளைத்தல்;* to tunnel, bore.

துர[2]-த்தல் *tura-,* செ.கு.வி. (v.i.) *1. முயலுதல்;* to be active, to make efforts. "அரும்பொருள் வேட்கையி னுள்ளந் துரப்ப" *(கலித். 18).* 2. *போதல் (பிங்.);* to go. 3. *வீசுதல்;* to blow, rage, as a tempest. "வளிதுரந்தக்கண்ணும்". 4. *எரிதல்;* to burn, as fire. "அங்கியு மவனெதிர் துரந்தான்" *(கந்தபு. மார்க்கண். 135).*

துரக்காரன் *tura-k-kāraṉ,* பெ. (n.) 1. *துரந்தரன்' பார்க்க;* see *turandaraṉ.* 2. *கோயிற்குரிய தீர்வைகளைத் தண்டல் செய்யும் பணியாளன்;* collector of revenues in repect of temple properties.

[துரம் + காரன்]

துரக்கு *tura-k-ku,* பெ. (n.) *ஐயப்பாடு;* misconception, doubt. "துரக்கற வுணர்ந்தனன்" *(உத்தரரா. வரையெடு. 77).*

துரட்டன் *turaṭṭaṉ,* பெ. (n.) *சிற்றின்பக்காரன்;* lascivious person.

[துறட்டு → துறட்டன்]

துரட்டு *turaṭṭu,* பெ. (n.) *துறட்டு பார்க்க;* see *tuṟaṭṭu.* "துரட்டிலே வந்து வலியச் சருவினோர்களை" *(தனிப்பா.)*

துரத்தல் *turattal,* பெ. (n.) *1. தொண்டைப் புகைச்சல்;* bronchitis. 2 *இருமல்;* cough.

துரத்திமரம் *turatti-maram,* பெ. (n.) 1. *ஆடு தொண்டை பார்க்க;* see *āḍu-toṇḍai.* 2 *நாக் குழிஞ்சான் பார்க்க;* see *nā-k-kuḻiñjāṉ.*

துரத்து-தல் *turattu,* செ.குன்றாவி. (v.t.) *1. வெருட்டியோட்டுதல்;* to drive away. 2 *அப்புறப்படுத்துதல்;* to remove, reject. "அகத்தைவிடத் துரத்தி னார்கள்" *(திருவிளை. விருத்த. 31).* 3. *திருடன் முதலியோரைப் பிடிக்கப் பின்தொடர்தல்;* to pursue, as a thief. 4. *வண்டிமாடு முதலியவற்றைத் தூண்டி விரைந்தோடச் செய்தல்;* to drive, cause to move fast, as bullocks. வண்டிமாட்டைத் துரத்து *(உ.வ.).*

[துர → துரத்து]

துரந்தரம் *turandaram,* பெ. (n.) 1. *பொதியெருது (யாழ்.அக.);* pack-bull. 2. *பொறுப்பு;* responsibility.

துரந்தரன் *turandaraṉ,* பெ. (n.) 1. *பொறுப்பு ஏற்போன்;* one who assumes a responsibility. 2 *வெற்றியாளன்;* conqueror, victor. "சத்துரு துரந்தரன் றன்முனை போல்" *(இறை. 23,172).* 3. *முயன்று நிற்போன்;* one actively and earnestly engaged in a pursuit. காரிய துரந்தரனா யிருக்கிறான் *(ய.).*

துரப்பணம் *turappaṇam,* பெ. (n.) *துளையிடுங் கருவி;* auger, drill, tool for boring holes.

[துர → துரப்பணம்]

துரப்பணவலகு *turappaṇa-v-alagu,* பெ. (n.) 1. *துளைக் கருவி;* drill-bit 2. *துரப்பணம் பார்க்க;* see tura-p-paṇam.

[துரப்பணம் + அலகு]

துயில்காணா *tuyilkāṇā,* பெ. (n.) நெட்டி; pith, cork *(சா.அக.).*

துயில்கூர்தல் *tuyilkūrdal,* பெ. (n.) உறங்கல்; sleep.

[துயில் + கூர்தல்]

துயிலிக்கீரை *tuyili-k-kīrai,* பெ. (n.) தொயிலிக் கீரை; a kind of greens *(சா.அக.).*

[துயிலி + கீரை]

[இக்கீரையினால் ஆமம், தவிட்டுச் சிரங்கு, புண், நீரிழிவு, வெள்ளை நீங்குமெனச் சா.அக. கூறும்]

துரப்புதல் *turappu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தேடுதல்; to seek. "எனதொரு வாய்க்கு நால்வாய்க்கு மிரையெங்கே துரப்புவேனே" *(தனிப்பா. 1, 183, 3).*

[துர → துரப்பு-.]

துரப்பு² *turappu,* பெ. (n.) 1. முடுக்குகை; driving, hammering. "துரப்பமை யாணி" *(பொருந. 10).* 2. விடுகை; discharging. 3. அகற்றுகை (வின்.); dispelling, chasing, scaring away. 4. மலையிற் குடையப்பட்ட பாதை (நாஞ்.); way or path inside the hill, tunnel.

[துர → துரப்பு (வேக. 278)]

துரப்பை *turappai,* பெ. (n.) துழாவித் தூர்க்கும் வாருகோல் (நாஞ்.); broom.

[துரப்பு → துரப்பை (வேக. 278)]

துரம்¹ *turam,* பெ. (n.) முற்காலத்து வழங்கிய வாச்சிய வகை; an ancient musical instrument. "சங்கமுந் துரமு முரசினோ டியம்ப" *(பெருங். வத்தவ. 1, 18).*

[துர → துரம் (மு.தா. 59)]

துரம்² *turam,* பெ. (n.) 1. சுமை (யாழ்.அக.); burden. 2. பொறுப்பு (யாழ்.அக.); charge, trust, responsibility. 3. கோயிற்குரிய வரி வாங்கும் அலுவலகம் (நாஞ்.); the department for collecting revenues in respect of temple-properties.

துரமி *turami,* பெ. (n.) தொடரி (மலை) பார்க்க; a species of buckthorn, thorny straggling shrub. 2. தூதுளை (மலை) பார்க்க; see *tūtuḷai;* climbing brinjal.

துரவு¹ *turavu,* பெ. (n.) 1. நீர்ப்பாசனத்துக்கு உதவும் பெருங்கிணறு; sultan well, large well for irrigation purposes. "துரவு கிணறு இழித்தப் பெறுவதாகவும்" *(S.I.I.ii, 509).* 2. மணற்கேணி; well made by excavating sand, unwalled well.

ம. துரவு; தெ. தொருவு (பெருங்கிணறு)

[துர → துரவு (வேக. 278, துப்புத்துரவு)]



துரவு² *turavu,* பெ. (n.) தூது (யாழ்.அக.); spying.

[துர → துரவு]

துரவுச்சட்டம் *turavu-c-caṭṭam,* பெ. (n.) கிணற்றின் சூறாவளிச் சட்டம் (யாழ்.அக.); round frame at the bottom of a well.

[துரவு + சட்டம்]

துரவுமுழுகு-தல் *turavu-muḻuku-,* செகுவி. (v.i.) சூறாவளிச் சட்டகத்தைக் கீழிறக்கிக் கிணறமைத்தல் (வின்.); to sink a well by gradually lowering a curb *(செ.அக.).*

[துரவு + முழுகு-,]

துரவுவாரகம் *turavu-vārakam,* பெ. (n.) கிணறு வெட்டக் கொடுக்கும் கடன்; loan for sinking a well *(செ.அக.).*

மறுவ. துரவு வாரகம்

[துரவு + வாரகம்]

துரா *turā,* பெ. (n.) *1. தரா;* mixed metal of copper and spelter. *2.* செடிவகை *(M.M. 686);* earth smoke. *3. திராய் பார்க்க* (M.M. 902); see *tirai.*

துராக்கழிச்சல் *turā-k-kaḻiccal,* பெ. (n.) *நீராய்க் கழியும் மலம்;* watery tool *(செ.அக.)*

[துரா + கழிச்சல்]

துராணம் *turāṇam,* பெ. (n.) **தும்பை** *(மலை.) பார்க்க;* see *tumbai;* white dead nettle *(செ.அக.).*

துராய்[1] *turāy,* பெ. (n.) அறுகம்புல்லால் திரித்த *பழுதை;* twisted quitch gross. *"துராஅய் துற்றிய துருவையம் புழுக்கின்" (பொருந. 103).*

துராய்[2] *turāy,* பெ. (n.) *முத்து முதலியவற்றால் அமைக்கப்பட்ட தலையணி வகை;* an ornament for the head made of pearls, etc. *"சொருக்கழகு முத்துத் துராயழகும்" (விறலிவிடு.) (செ.அக.).*

துராய்[3] *turāy,* பெ. (n.) *துரா*[2] *பார்க்க;* see *turā (செ.அக.).*

துராய்க்கட்டை *turāy-k-kaṭṭai,* பெ. (n.) *தராவெனு மாழையாலாய ஏனம்;* a metallic vessel *(செ.அக.).*

[துராய் + கட்டை]

துரால் *turāl,* பெ. (n.) *1.* செத்தை *(திவா.);* rubbish of dry leaves, grass, etc. *'அலகாலே துராலை வாருதல் கொண்ட மதுரையில்' (கலித். 96, உரை). 2.* **துயரம்** *(பிங்.);* affliction, distress, sorrow.

துரி[1] *turi,* பெ. (n.) *சுமை;* burden, weight. *"துரிபெறச் சரிபொழில்" (திருப்பு. 508).*

துரி[2] *turi,* பெ. (n.) *1.* எழுதுகோல்; painter's brush. *2. துரீ பார்க்க;* see *turī (செ.அக.).*

துரி[3]**-தல்** *turi-,* 4 செ.குன்றாவி. (v.t.) தேடுதல்; to search after. *"துரிய வல்லார்க்குத் துரிசில்லை" (திருமந். 2454).*

துரிசு *turišu,* பெ. (n.) *1.* **குற்றம்;** fault, crime. *'தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்' (தேவா. 549. 8). 2.* **துக்கம்;** affliction, sorrow, distress. *3.* **குறும்பு;** perversity. *"தொண்டே யுணக்கா யொழிந்தேன் றுரிசின்றி" (திவ். திருவாய். 9, 8, 6). 4.* மயிற்றுத்தம் பார்க்க *(பதார்த்த. 1115);* blue vitriol.

துரிசுக்குரு *turišu-k-kuru,* பெ. (n.) **வெடியுப்பு** *(சங்.அக.);* ammonium chloride.

[துரிசு + குரு]

துரிஞ்சன் *turiñjaṉ,* பெ. (n.) *கறையான்;* termites, white ants *(செ.அக.).*

[ஒருகா. திரிஞ்சான் → துரிஞ்சன்]

துரிஞ்சி[1] *turiñji,* பெ. (n.) *1.* சீக்கிரி *பார்க்க;* see *šikkiri;* black sirissa. *2.* **பேரெலுமிச்சை** *பார்க்க;* see *pērelumiccai;* citrus lemon *(செ.அக.).*

துரிஞ்சி[2] *turiñji,* பெ. (n.) *மரவகைகளுள் ஒன்று;* a kind of tree. *"மாட்டுக்கொட்டகை, குடிசை முதலிய அமைக்க இம்மரம் பயன்படும்" (பொ. வழ) (கட். தொ. வரி.).*

துரிஞ்சிநாரத்தை *turiñji-nārattai,* பெ. (n.) *துரிஞ்சி*[2] *பார்க்க;* see *turiñji (செ.அக.).*

[துரிஞ்சி + நாரத்தை]

துரிஞ்சிப்பீன் *turiñji-p-pīṉ,* பெ. (n.) **ஒரு முட்செடியின்மீது உறைந்திருக்கும் பனி இதனால் வயிற்றுக் கழிச்சல் ஏற்படும்;** solidified dew on a variety of a thorny shrub *(சா.அக.).*

[துரிஞ்சி + பீன்]

துரிஞ்சில் *turiñjil,* பெ. (n.) *1.* துரிஞ்சில் பார்க்க; see *turiñcil. 2.* சீக்கிரி *(பிங்.) பார்க்க; šikkiri;* black sirissa *(செ.அக.).*

[துருஞ்சில் → துரிஞ்சில்]

துரியம்[1] *turiyam,* பெ. (n.) *1.* **பொதியெருது** *(சூடா.);* pack-bullock. *2.* **சுமக்கை** *(வின்.);* bearing, carring.

துரியம்[2] *turiyam,* பெ. (n.) **விரைவு;** quickness. *"இதென்ன துரியம்" (தெய்வச். விறலிவிடு. 243).*

துரியன் *turiyaṉ,* பெ. (n.) *1.* மாசற்ற உயிர் *(வேதா. ஆ. 79);* soul in the highest state. *2.* **கடவுள்** *(சங்.அக.);* God *(செ.அக.).*

துரியோதனன் *turiyōtaṉaṉ,* பெ. (n.) *திரிதராட்டிரன் மக்களில் மூத்தவன்;* the eldest of the sons of Tirudaraṭṭiraṉ. "துரியோதனன் படை கெடும்படி வென்ற அருச்சுனனை" *(சீவக. 456, உரை).*

துரீ *turī,* பெ. (n.) *பாவாற்றி (வின்.);* brush or fibrous stick, useed to clean and separate the threads of the woof *(செ.அக.).*

துரீயபாகம் *turīyapākam,* பெ. (n.) *காற்பங்கு (யாழ்.அக.);* one-fourth *(செ.அக.).*

துரீயம் turīyam, பெ. (n.) *துரியம்*[1] *(யாழ்.அக.) பார்க்க;* see *turiyam.*

துரீலெனல் *turīleṉal,* பெ. (n.) *எதிர்பாராது விரைந்து வருதற் குறிப்பு;* expr. signifying suddenness. "துரீலென்று உள்ளே புகுந்தான்" *(செ.அக.).*

துரு[1] *turu,* பெ. (n.) *மரம் (உரி.நி.);* tree *(செ.அக.).*

துரு[2] *turu,* பெ. (n.) *1. இருப்புக் கறை;* rust. "வல்லிரும்பிற் றுருத்தான் வந்தே பிறந்தென்ன" *(குமரே. சத. 90). 2. களிம்பு (வின்.);* verdigric. *3. குற்றம்;* flaw. "துருவின் மாமணியாரம்" *(கம்பரா. உலா. 43). 4. செம்மறியாடு;* sheep. "ஆடு தலைத் துருவின்" *(நற். 169).*

துரு[3] *turu,* பெ. (n.) வேதம் முதலியன ஓதுஞ் சந்தவகை; recital of a vedic text etc., by a disciple following his preceptor's lead. "சாகையிலும் கற்பத்திலும் கணத்திலும் துருச்சொல்லி" (T.A.S. i, 8).

துருக்கத்தலை *turu-k-kattalai,* பெ. (n.) *கருநிறமுள்ள கடல்மீன்வகை;* sea fish, dark grey *(செ.அக.).*

[துரு + கற்றலை]



துருக்கப்பல் *turukka-p-pal,* பெ. (n.) ஒழுங்கில்லாது வெளி நீண்ட பல்; an extremely large tooth projecting beyond the lips *(சா.அக.).*

துருக்கம்[1] *turukkam,* பெ. (n.) *1. மான் மணத்தி (திவா.);* musk. *2. மத (கத்தூரி) மான் (திவா.);* musk deer. *3. குங்குமம் (திவா.) பார்க்க;* see *kuṅgumam;* saffron. *4. குங்குமமரம் (பிங்.);* arnotto.

துருக்கம்[2] *turukkam,* பெ. (n.) *1. செல்லுதற்குரிய இடம் (உரி.நி.);* inaccessible *2. மலையரண்;* mountain fortress, stronghold, fastness. "மாற்றுருக்க மிலாமையின்" *(இரகு. மாலையீ. 113). 3. குறிஞ்சி நிலம் (பிங்.);* hilly tract. *4. காடு (பிங்.);* forest, jungle. *5. ஒடுக்கமான வழி (யாழ்.அக.);* narrow path. *6. மதில் (பிங்.);* rampart.

துருக்கம்[3] *turukkam,* பெ. (n.) *குந்துருக்கம் பார்க்க (மலை.);* see *kunturukkam;* konkany resin.

[துரு → துருக்கம்]

துருக்கல் *turukkal,* பெ. (n.) *1. செம்புறைக்கல்;* iron ston, laterite. "துருக்கலோ கொடுங்கருங்கலோ" *(அருட்பா. vi. ஆற்றாமை, 3, 8). 2. இருப்புக் கிட்டம்;* iron dross *(யாழ்.அக.).*

[துரு → துருக்கல்]

துருக்கவேம்பு *turukka-vēmbu,* பெ. (n.) *மலைவேம்பு பார்க்க;* mountain neem.

[துருக்கம் + வேம்பு]

துருக்கற்றாழை *turukkaṟṟāḻai,* பெ. (n.) *கடற்கரை ஓரங்களில் விளையும் ஒரு வகைச் சிவப்புக் கற்றாழை;* rusty coloured aloe. It is found grown in the sea coast. but it is common in the western coast *(சா.அக.).*

[துரு + கற்றாழை]

துருசி *turuši,* பெ. (n.) *துருசு*[1] *பார்க்க;* see *turucu (செ. அக.).*

துருசிகுரு *turuši-kuru,* பெ. (n.) *வெடியுப்பு (யாழ்.அக.);* sal-ammoniac.

துருசு[1] *turušu*, பெ. (n.) *1.* **மயிற்றுத்தம்;** blue vitriol. *2.* **மாசு** *(வின்.)*; spot, dirt, blemish, stain, defect. *3.* **களிம்பு** *(யாழ்.அக.)*; rust.

துருசு[2] *turušu*, பெ. (n.) *1.* **விரைவு;** haste, speed. "துருசா வசப்படுத்தும்" *(விறலிவிடு). 2.* **ஆர்வ மிகுதி;** earnestness.

துருசுசெந்தூரம் *turušu-šentūram* பெ. (n.) **துருசைக் கொண்டு செய்யும் செந்தூரம்;** calcined red oxide of verdigris *(சா.அக.).*

[துருசு + செந்தூரம்]

துருசுச்செம்பு *turušu-c-cembu*, பெ. (n.) **துருசினின்று எடுக்கும் செம்பு இது தூய்மையான செம்பு என்று கருதப்படும்;** copper derived from verdigris. It is said to be pure copper. *(சா அக.).*

[துருசு + செம்பு]

துருசுமெழுகு *turušu-meḻugu* பெ. (n.) **அடி முடியோடு துருசையும் சேர்த்துச் செய்யும் ஒரு வகை மெழுகு;** a wax like preparation made with verdigris and the human skull as chief ingredients *(சா.அக.).*

துருஞ்சில் *turuñjil* பெ. (n.) **வவ்வால்** *(திவா.)*; bat *(செ.அக.).*

துருணன் *turuṇaṉ*, பெ. (n.) **சிவன்** *(கலிங்கபு. 41, 8)*; Šivaṉ *(செ.அக.).*

துருணி *turuṇi*, பெ. (n.) *1.* **தேள்;** scorpion *2.* **பெண்ணாமை** *(கழ. தமி. அக.).*

துருத்தி[1] *turutti*, பெ. (n.) *1.* **ஆற்றிடைக்குறை;** ait, islet in a river. "காடுங் காவும் கவின்பெறு துருத்தியும்" *(திருமுரு. 223). 2.* **கவறாட்டத்து வழங்கும் ஒரு குழூஉக்குறி;** a throw in the game of lice. 'துஞ்சவி னடமென்பர் துருத்தி யீதென்பர்' *(கந்தபு. கயமுகனுற். 167)* (செ அக.).

[துரு → துருத்தி]

துருத்தி[2] *turutti*, பெ. (n.) *1.* **தோல்** *(பிங்.)*; skin, leather. *2.* **உலையூதுகருவி;** bellows. "கொல்லன் விசைத்துவாங்கு துருத்தியின்" *(அகநா. 224). 3.* **தோற்பை;** leather bag or bottle for carrying water, leather bag. "துருத்தியாங் குரம்பை தன்னில்" *(தேவா. 953, 4). 4.* **நீர்வீசுங்கருவி;** a kind of leather squirt for sprinkling water. "மேகமென் றுருத்திகொண்டு" *(கம்பரா. மாரீச. 14). 5.* **முழுமையும் ஆட்டுத்தோலாலியன்ற காற்றுக் கருவி;** bass-pipe, made of the entire skin of a sheep or goat with two pipes, one to blow with the other to let out air. *6.* **ஒத்து;** a reed instrument. *7.* **வயிறு;** stomach *(செ.அக.).*

[துருத்து → துருத்தி]



துருத்திக்கழுத்து *turutti-k-kaḻuttu*, பெ. (n.) துருத்திக்குழாய் (வின்.) பார்க்க; see *turutti-k-kuḻay.*

[துருத்தி[2] + கழுத்து]

துருத்திக்குழற்பண்ணை *turutti-k-kuḻaṟ-paṇṇai*, பெ. (n.) துருத்திக்குழாய் (வின்.) பார்க்க; see *turutti-k-kuḻāy* (செ.அக.)

[துருத்தி + குழல் + பண்ணை]

துருத்திக்குழாய் *turutti-k-kuḻay*, பெ. (n.) **உலைமூக்கு** *(வின்.)*; nozil of bellows.

[துருத்தி + குழாய்]

துருத்திப்பாணம் *turutti-p-pāṇam*, பெ. (n.) **தோற்பையிலிட்டுக் கொளுத்தும் ஒரு வகை வெடி.** *(வின்.)*; leather bag filled with gun powder, used as a rocket.

மறுவ. துருத்திவாணம்

[துருத்தி + பாணம்]

துருத்திமூக்கு *turutti-mūkku*, பெ. (n.) துருத்திக்குழாய் (வின்.) பார்க்க; see *turutti-k-kuḻay.*

[துருத்தி + மூக்கு]

துருத்தியூது-தல் *turutti-y-ūdu-*, செ.கு.வி. (v.i.) 1. உலையூதுகருவியாற் காற்று எழுப்புதல்; to blow the bellows. 2. துருத்திவாச்சியம் ஊதுதல்; to play on a bass pipe. 3. ஒத்துப் பாடுதல்; to echo anothers words; to imitiate the words or opinion of a person obsequously.

[துருத்தி + ஊது-.]

துருத்து[1]-தல் *turuttu-*, 5 செ.கு.வி. (v.i.) வெளித் தோன்றுதல்; to bulge, protrude.

[துரு → துருத்து-]

துருத்து[2]-தல் *turuttu-*, செ.குன்றாவி. (v.t.) வெளித்தள்ளுதல்; to thrust out 'வயிறு துருத்திக் கொண்டிருக்கிறது'.

[துரு → துருத்து-.]

துருத்தூரம் *turuttūram*, பெ. (n.) ஊமத்தை (மலை.); datura.

துருதிவாதி *turudivādi*, பெ. (n.) நிம்பாலை யென்னும் மரம் (சங்.அக.); a tree.

துருதுரு-த்தல் *turuturu-*, 11 செ.கு.வி. (v.i.) 1. அமைதியின்றி இருத்தல்; to be fidgetty, restless; to make idle motions or gestures. "அவன் மிகவும் துருதுருத்தவன்" 2. துடித்தல்; to quiver, as the lips or tongue through desire to speak. 3. பரபரப்பு; to be in great haste.

[ஒருகா. துருதுரெனல் → துருதுரு-.]

துருதுருக்கைத்தனம் *turuturukkai-t-taṉam*, பெ. (n.) குறும்புத்தனம்; mischieviousness, rebellious conduct. "துருதுருக்கைத்தனம் அடித்துத் திரிந்த நீ" (ஈடு. 1, 3, 1).

[துருதுரு → துருதுருக்கைத்தனம்]

துருதுருப்பு *turuturuppu*, பெ. (n.) 1. அமைவின்மை; restlessness, impatience. 2. விரைவு; haste. 3. சுறுசுறுப்பு; active habit (செ.அக).

[துருதுரு → துருதுருப்பு]

துருதுருப்பை *turuturuppai*, பெ. (n.) அமைதி யற்றவன்; a fidgetly or restless person (செ.அக).

[துருதுரு → துருதுருப்பை]

துருதுருபாவை *turuturu-pāvai*, பெ. (n.) துந்துருபாவை; restless, fidgetty girl or woman (செ.அக).

[துருதுரு → துருதுருபாவை]

துருதுரும்பை *turuturumpai*, பெ. (n.) பிள்ளை விளையாட்டு வகை (யாழ்.அக.); a child's game.

[துருதுரு → துருதுரும்பை]

துருதுருவெனல் *turuturuveṉal*, பெ. (n.) துருதுரெனல் பார்க்க; see *turuturenal* (செ.அக).

துருதுரெனல் *turutureṉal*, பெ. (n.) அமைவின்மைக் குறிப்பு; expr. signifying restlessness, impatience, uneasiness, the state of being always in motion.

துருதை turutai, பெ. (n.) 1. தினவு; itching. 2. ஆசைப்பாடு; craving (செ.அக.).

துருந்து-தல் turuntu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. துளை பெரிதாக்குதல்; to enlarge, as a hole or cavity. 2. ஆராய்தல்; to explore, examine (செ.அக).

துருநகம் *turunagam*, பெ. (n.) 1. முள்; கூர்மை; நுண்மை; sharpness (கழ.தமி.அக).

துருநாமம் *turunāmam*, பெ. (n.) மூலநோய்; piles. "துக்கர் துருநாமர்" (சிறுபஞ். 76) (செ. அக.).

துருப்பணம் *turuppaṇam*, பெ. (n.) துரப்பணம் பார்க்க (வின்.); see *tura-p-paṇam* (செ.அக.).

துருப்படாதஉலோகம் *turu-p-paḍāda-ulōgam*, பெ. (n.) விலையுயர்ந்த, தூய மாழையைக் குறிக்கும் சொல், எளிதில் துருபபிடிக்காத மாழையையும் குறிக்கும்; noble metals (அறி. களஞ்.).

[துரு + படாத + உலோகம்]

துருபாதி *turupādi*, பெ. (n.) பாதம் வெளி திரும்பிய பெண்; female with feet turned outwards (சா.அக.).

துருப்பிடி-த்தல் *turu-p-piḍi-*, செ.கு.வி. (v.i.) இரும்பிற் கறை பற்றுதல்; to rust, gater rust. 'துருப்பிடியிருப்புத் துண்டுபோல்' (அருட்பா.

அவாவறுப்பு, 11) - செ.குன்றாவி. (v.t.) **குற்ற வடையாளம் கண்டுபிடித்தல்;** to detect, trace, search *(செ.அக.).*

[துரு + பிடி-.]

துருப்பிணைப்பு *turu-p-piṇaippu,* பெ. (n.) **கசிவைத் தடுப்பதற்கு அல்லது மிகுதியான அழுத்தத்தைத் தாங்குவதற்கு ஒரு வளி கரணியைப் பயன்படுத்திச் செய்யப்படும் பிணைப்பு;** rust joint *(அறி.களஞ்.).*

[துரு + பிணைப்பு]

துருப்புக்கூடு *turuppu-k-kūḍu,* பெ. (n.) *தூற்றாப்பொலி;* unwinnowed heap of grain. "துருப்புக்கூடாக அவ்வூரையன்றோ இவளு கந்தது" *(ஈடு. 6, 5, 1).*

[துருப்பு + கூடு]

துருபவருணி *turupavaruṇi,* பெ. (n.) *காட்டாமணக்கு (மலை.);* common physic nut *(செ.அக.).*

துரும்பன் *turumbaṉ,* பெ. (n.) *1.* **கீழோன்;** man of the lowest caste. *2.* **கீழோனுக்கு வெளுக்கும் வண்ணான்** *(யாழ்.அக.);* washerman of the low castes. *3.* **பயனிலி** *(தாயு. சுகவாரி. 7).* 'துரும்பனே னென்னிறும்' (செ.அக.).

[துரும்பு → துரும்பன்]

துரும்பாட்டம் *turumbaṭṭam,* பெ. (n.) **கீச்சுக்கீச்சுத் தாம்பாளம்** *(வின்.);* a children's game *(செ.அக.).*

[துரும்பு + ஆட்டம்]

துரும்பாய்ப்போ-தல் *turumbāi-p-pō-,* பெ. (n.) **இளைத்துப்போதல்;** emociated as in disease *(சா.அக.).*

துரும்பு *turumbu,* பெ. (n.) *1.* **கூளம்;** bits of straw. *2.* **சக்கை;** refuse stalles, as of sugar-cane. 'துரும்பெழுந்து வேங்கால்' *(நாலடி. 35).* *3.* **சிராக;** splinder. *4.* **கண்ணுக்கு மையிடுங் கருவி;** brush for paining eyes. 'கண்ணுக்கிட ஒரு துரும்பில்லாதபடி அழிந்து' *(ஈடு. 5, 6, 1).* *5.* **ஒரு வகுப்பு (1);** a caste.

[துரு → துரும்பு]

துரும்புகொடு-த்தல் *turumbu-koḍu-,* செ.குவி. (v.i.) **விலக்கி விடுதற் குறிப்பாகத் துரும்பை மனைவியிடம் கொடுத்தல்** *(வின்.);* to give a straw to a wife in token of divorce.

[துரும்பு + கொடு]

துரும்புடன் *turumbuḍaṉ,* பெ. (n.) **தூற்றாப் பொலி;** heap of grain which has not been winnowed *(செ.அக.).*

[துரும்பு + உடன்]

துரும்புமுறித்துப்போடு-தல் *turumbu-murittu-p-pōḍu-,* செ.குவி. (v.i.) *1.* **தடை உண்டாக்குதல்;** to create obstructions or obstacles. *2.* **பகை உண்டாக்குதல்;** to sow seeds of discord, as between friends.

[துரும்பு + முறித்து + போடு-.]

துரும்புவாங்கு-தல் *turumbu-vāṅgu-,* செ.குவி. (v.i.) **விலகவுடம்படுதற் குறிப்பாக மனைவி துரும்பைப் பெற்றுக் கொள்ளுதல்** *(வின்.);* to take a straw, as a wife consenting to be divorced.

[துரும்பு + வாங்கு-.]

துரும்பொன் *turumboṉ,* பெ. (n.) **இரும்பு;** iron *(சா.அக.).*

துருமசிரோட்டம் *turuma-sirōṭṭam,* பெ. (n.) **பனை** *(மலை.);* palmyra palm.

துருமநகம் *turumanagam,* பெ. (n.) **முள்** *(சங்.அக.);* thorn.

துருமம்[1] *turumam,* பெ. (n.) *1.* **மரம்** *(பிங்.);* tree. *2.* **சாப்பிரா** *(மலை.);* arnotto. *3.* **கற்பகத்தரு** *(யாழ். அக.);* celestial tree.

துருமம்[2] *turumam,* பெ. (n.) **பூண்டின் கடைப் பெயர்;** plants second term as

1. **கபித்துருமம்; அரத்தை;** Alipinia galanga.
2. **பூதத்துருமம்; பெரிய நறுவிலி;** large sebeston.
3. **வச்சிரத்துருமம்; திருகுக்கள்ளி;** twisted purge.
4. **போதித்துருமம்; அரசமரம்;** peepal tree.
5. **மாதத்துருமம்; மாங்காய்;** mango tree.
6. **இமத்துருமம்; மலை வேம்பு;** hill neem.

7. அப்பிரியத்துருமம்; வறட்பூவா; white poolah.

(சா. அக.).

துருமம்³ *turumam,* பெ. (n.) மனக்கலக்கம் (திவா); perturbation, perplexity of mind.

துருமரம் *turumaram,* பெ. (n.) துருமநகம் (யாழ்அக.) பார்க்க; see *turuma-nagam.*

துருமவருணி *turuma-varuṇi,* பெ. (n.) காட்டாமணக்கு (மூஅ); common physic nut.

துருமாரி *turumāri,* பெ. (n.) பானை (யாழ்அக.); elephant.

துருவகம் *turuvagam,* பெ. (n.) குற்றி (யாழ்அக.); stump.

துருவங்கட்டு-தல் *turuvaṅgaṭṭu-,* செகுவி. (v.i.) 1. கணக்கு நெறிமுறை உண்டாக்குதல்; a rule for any mathematical calculation. 2. உதவி தேடுதல்; to devise means or expedients.

[துருவம் + கட்டு-.]

துருவசக்கரம்¹ *turuva-cakkaram,* பெ. (n.) இரவு பகல்களை உண்டாக்குவதாகக் கருதப்படும் வானச் சக்கரம்; the wheel of Dhruva, turning the heavens and causing the motions. "மேருவின் புறஞ்சூழ்ந்தாடுந் துருவ சக்கரம்போல்" (திருவிளை. திருமணப். 161).

[துருவம் + சக்கரம்]

துருவசக்கரம்² *turuva-cakkaram,* பெ. (n.) உலகின் குளிர்ச்சி மண்டலங்களை வரையறுக்கும் சுற்று (ரேகை) வரிகை; polar circles. (M.Navi. 57)

[துருவம் + சக்கரம்]

துருவதாளம் *turuva-tāḷam,* பெ. (n.) 1. ஒன்பது தாளத்துளொன்று (திவா.); a variety of time measure. 2. சத்தத் தாளத்தொன்று (பரத.தாள. 18); a variety of time-measure represented thus 180, one of catta-tāḷam.

[துருவம் + தாளம்]

துருவபதம் *turupatam,* பெ. (n.) 1. துருவ மண்டலம்; region of the pole star, as attained by Duruva. "சந்திரசூரியர் முதலோர் பதங்கறுக்குத் துருவபதம்" (குற்றா. தல. திருக்குற்றா. 25). 2. 33 விரலவளவு கொண்ட குழி; a pit 34 in. deep. "துருவ பதமாகிய குழியை எட்டிற் கழிக்க" (சாவா. கிற். 21).

துருவம்¹ *turuvam,* பெ. (n.) 1. அசையா நிலை; Immutability, steadiness, firmness. 2. உறுதி (யாழ்அக.); certainity. 3. துருவ விண்மீன்; the pole of any great circle of the sphere. 4. அழியாத்தன்மை (யாழ்அக); eternity. 5. ஊழ்; fate. "பருவரல் வந்தது துருவம்" (ஞானா. 31, 3). 6. ஒடுக்கவழி; narrow path. 7. 34 விரல அளவுள்ள குழி; a pit 34 in. deep. 8. ஒப்பு; resemblance. "வலம்புரித் துருவங் கொண்ட சங்கு" (சீவக. 811).

துருவம்² *turuvam,* பிபெ. (n.prob.) மலைக் கோட்டை (வின்.); hill, fortress.

துருவமுனைப்பு turuva-munaippu, பெ. (n.) நிலவுலக முனைக்கோடிகளை நோக்கி முனைத்து நிற்கும் காந்தக்கல், காந்த ஊசி முதலியவற்றின் இயல்பு, மின்னூட்டு முனைக்கோடி இயல்பு (மின்.); polarity.

[துருவம் + முனைப்பு]

துருவயம் *turuvayam,* பெ. (n.) அளவு; measurement (கழ. தமி. அக.).

துருவல் *turuval,* பெ. (n.) 1. தேடுகை; searching. 2. தேங்காய் முதலியவற்றின் துருவுத் திரள்; scrapings, as of coconut-pulp. "நாளி கோப்பழச் செழுந்துருவல்" (திருவாத. பு. திருப்பெருந். 51). 3. துருவலகு பார்க்க; see *turuvalaku.* 4. கடைகை (பிங்.); churning. 5. துளைக்கை; boring, drilling.

[துருவு → துருவல்]

துருவல்மனை *turuval-maṇai,* பெ. (n.) துருவலகு பார்க்க; see *turuvalagu.*

[துருவல் + மனை]

துருவலகு *turuvalaku,* பெ. (n.) தேங்காய் துருவுங் கருவி; coconut-scraper consisting of a curved iron-piece set in a block of wood.

[துருவு + அலகு → துருவலகு]

துருவலகுக்குற்றி *turuvalaku-k-kurri,* பெ. (n.) துருவலகு பார்க்க;. see *turuvalaku* (நெல்லை.).

[துருவு + அலகு + குற்றி]

துருவற்கறி *turuvarkari,* பெ. (n.) காய்கறிகளைத் துருவிச் சமைத்த கறி; curry made of scraped vegetables (செ. அக.).

[துருவல் + கறி]

துருவாட்டி *turuvātti,* பெ. (n.) ஏலம் (மலை.); true cardamom.

துருவாடு *turuvādu,* பெ. (n.) செம்மறியாடு (திவா.); a kind of fleecy sheep.

[துரு → துருவாடு]

துருவாதி *turuvādi,* பெ. (n.) காட்டாமணக்கு (மலை.); common physic nut.

துருவு-தல் *turuvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தேடுதல்; to seek, enquire into, search out, trace, pursue. "கீழ்நீர் குளித்தானைத் தீத்துரீஇ யற்று" (குறள். 929). 2. தொளைத்தல்; to bore, drill, perforate. 3. தேங்காய் முதலியன கடைந்து சீவுதல்; to scrape, as the pulp of a coconut. 4. கடைதல் (பிங்.); to churn. 5. துன்புறுத்துதல்; to harass.

தெ. துருமு; க. துருவு

[துள் → துருவு-.]

துருவு[2] *turuvu,* பெ. (n.) 1. தேடுகை (சூடா.); earching. 2. துருவுகை; scooping. 3. துளை (வின்.); hole.

க. துருவு

துருவுகோல் *turuvu-kōl,* பெ. (n.) தேங்காய் முதலியன துருவுங் கருவி; scraping instrument.

[துருவு + கோல்]



துருவுபலகை *turuvu-palagai,* பெ. (n.) துருவலகு பார்க்க (வின்.); see *turuvalagu.*

தெ. துரும்பலக

[துருவு + பலகை]

துருவை *turuvai,* பெ. (n.) 1. செம்மறியாடு; a kind of fleecy sheep. "தகர்விரவு துருவை" (பலைபடு. 414). 2. ஆடு (திவா.); sheep.

துருளக்கம் *turuḷakkam,* பெ. (n.) 1. குந்துருக்கம் (மூ. அ.); Indian gum anime. 2. நறும்புகை (வின்.); frank incense.

துரேணிகை *turēṇikai,* பெ. (n.) ஆவிரை (மலை.); tanner's senna.

துரை[1] *turai,* பெ. (n.) 1. தலைவன்; chief, lord; master, ruler; gentle man, nobleman. 2. ஐரோப்பியன்; European. 'துரைகளோட சொக்கட்டான் போட்டால் தோற்றாலும் குட்டு, வென்றாலும் குட்டு' (பழ.).

தெ. தொர; க. தொரெ

[துர → துரை (மு. தா. 59)]

துரை[2] *turai,* பெ. (n.) 1. விரைவு; quickness, speed, haste. "பிறவித் துரைதுடைத்து" (சடகோபரந். 47). 2. மிகுதிப்பாடு; abundance, plenty, increase. "துரைமாண்டவா பாடித் தோணோக்க மாடாமோ" (திருவாச. 15, 14). (சிசி. 2, 32, சிவஞா.).

துரைச்சி *turaicci,* பெ. (n.) மாழை நிமிளை (மூஅ.); a kind of bismuth (செ. அக.).

துரைப்பெண் *turai-p-peṇ,* பெ. (n.) பெருமாட்டி; lady, noble woman. "தொழுது மதன் போற்றும் துரைப் பெண்" (அழகிய நம்பியுலா, 136).

[துரை + பெண்]

துரைபூபதி *turaipūpati,* பெ. (n.) மாணிக்கம்; a valuable ruby (சா. அக.).

[துரை + பூபதி]

துரைமகள் *durai-makaḷ,* பெ.(n.) தலைவி; miolress; lady, queen. "மதுரைத் துரைமகள்" (குமர. பிர. மீனா. பிள்ளை. 27).

[துரை + மகள்]

துரைமகன் *durai-makaṉ*, பெ. (n.) துரை[1] பார்க்க; see *turai*.

[துரை + மகன்]

துரைவாழை *duraivalai*, பெ. (n.) ஒரு வகை வாழை; dacca banana *(சா. அக.)*

துரோட்டி *turōṭṭi*, பி.பெ. (n.prob) *1.* அங்குசம் (W); elephant's hook. *2.* துறட்டுக்கோல் *(யாழ். அக.)*; garderierls crook.

துல்லம் *tullam*, பெ.(n.) பேரொலி *(சது.)*; Din, roar, great noise. *(செ. அக.)*

துல்லியக்கடைசல்இயந்திரம் *tulliyak kadaisal eyantiram*, பெ. (n.) துல்லியமான கடைசல் வேலைப் பாடுகளைச் செய்வதற்கேற்ற சிறிய மேசைக் கடைசல் இயந்திரம்; *(எந்.)* precesion lathe.

[துல்லியம் + கடைசல் + இயந்திரம்]

துல்லியசாணை *tulliya-caṉai*, பெ. (n.) இயந்திரக் கூறுகளின் நுண்ணிடை வேறு பாட்டளவு மிகவும் நெருக்கமாக இருக்கக் கூடிய இயந்திரச் சாணை; precesion grinding. *(அறி. களஞ்.)*

[துல்லியம் + சாணை]

துல்லியபானம் *tulliya-paṇam*, பெ. (n.) பலர் ஒன்று சேர்ந்துக் குடித்தல்; drinking all together. *(சா. அக.)*

துல்லியம் *tulliyam*, பெ. (n.) *1.* ஒப்பு; similitude, resemblance, equality. "அவனுக்கு இவன் துல்லியம்" *(தத்துவப். அளவை. 3, உரை)*. *2.* மிகச் சரியானது; accuracy, exactness. துல்லியமாய்ச் சொன்னான். *3.* ஒப்பக் கையெழுத்து; sign-manual. "அரசரின் துல்லியஞ் சார்த்தின தீட்டு" *(நாஞ்.)*.

[துல் → துல்லியம் (வே. க. 251)]

துல்லிமை *tullimai*, பெ. (n.) மேன்மை; superiority *(சா. அக.)*.

துலக்கம் *tulakkam*, பெ. (n.) *1.* வெளிச்சம்; lustre, brightness, splender. "துலக்க மெய்தினன் றோமில் களிப்பினே" *(கம்பரா. இராவணன் களங். 1)*. *2.* மெருகு (W.); polish, finish, gloss. *3.* தெளிவு; clearness, limpidness, transparency, neatness. 'துலக்கமான எழுத்து" (W.).

[துலக்கு → துலக்கம் (வே.க. 290).]

துலக்கினி *tulakkiṉi*, பெ. (n.) பிண்டவுப்பு செயநீர்; an alkaline fluid prepared from the salt extracted from a foetus by a secret process. *(சா. அக.)*.

துலக்கு[1]-தல் *tulakku-*, 5 செ. குன்றாவி. (v.t.) *1.* மெருகிடுதல்; to polish, burnish. *2.* ஒளிரச் செய்தல்; to cause, to shine, to illumine, enlighten. *3.* தூய்மை பண்ணுதல்; to clean, cleans. "கண்ணாடியை அடிக்கடி துலக்கினாற் பழுதன்றே" *(கைவல். சந். 48)*. *4.* வெளிப்படை யாக்குதல்; to explain; to clear up a thing; to expose, reveal. கமுக்கத்தைத் துலக்கிச் சொன்னான். *5.* தீட்டுதல் *(பிங்.)*; to whet, sharpen. 'துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும்' *(பழ.)*.

தெ. தொலகு

[துல் → துலங்கு → துலக்கு (வே.க. 161).]

துலக்கு[2] *tulakku*, பெ. (n.) மினுக்கு (W.); lustre, polish, gloss.

[துலங்கு → துலக்கு (வே.க. 290).]

துலங்கு[1]-தல் *tulaṅgu-*, 5 செ.குவி. (v.i.) *1.* ஒளிரச் செய்தல் *(சூடா.)*; to shine, glitter, to be bright. *2.* ஒப்பமிடப்படுதல்; to be polished, burnished, furbished. *3.* தெரியவருதல்; to be illustrious, conspicuous. *4.* தெளிவாதல்; to be clear, perspicuous. 'கலங்கிய வமுதம்" *(கல்லா. 5)*. *5.* சிறத்தல் (W.); to be excellent, splendid.

தெ. துலக்கின்சு; க. தொலகு

[துலங்கு → துலங்கு-, (வே.க. 290).]

துலங்கு[2]-தல் *tulaṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) *1.* தொங்கியசைதல்; to hang, swing. "துலங்குமான் மேலூர்தி" *(கலித். 13)*. *2.* கலங்குதல்; to be agitated, disturbed. "துலங்குகின்றே னடியேன்" *(திருவாச. 6, 28)*.

[துல் → துலங்கு-.]

துலங்கு[3]-தல் *tulaṅgu-*, செ.குவி. (v.i.) நிலை கெடுதல்; to be uprooted. "துலங்கலில் போகமூட்டி" *(தணிகைப்பு. நாட்டுப். 2)*.

[துளங்கு → துலங்கு-.]

துலங்கு[4] *tulaṅgu,* பெ. (n.) தொழுமரம் (J); stocks.

[துல் → துலங்கு]

துலத்தாது *tulattātu,* பெ. (n.) நிலப்பனை (சங். அக.); a plant common in sandy tracts.

துலம்[1] *tulam,* பெ. (n.) *1.* நீர்முள்ளி; a herb growing in most places *2.* கோரை; a kind of sedge.

[துல் → துலம் (வே. க. 251).]

துலம்[2] *tulam,* பெ. (n.) *1.* கனம் (யாழ். அக.); heaviness *2.* துலாநிறை (சது.); weight of a scale *3.* நிறைகோல் (யாழ். அக.); balance.

துலம்[3] *tulam,* பெ. (n.) துலவம் பார்க்க (சங். அக.); see *tulavam.*

துலவம் *tulavam,* பெ. (n.) பருத்தி (சது.); common cotton.

துலா *tulā,* பெ. (n.) *1.* நிறைகோல்; balance, steel-yard. *2.* ஏற்றமரம் (வின்.); well-sweep, picotah. *3.* வண்டியின் ஏர்க்கால் (வின்.); single shaft of a cart or carriage. *4.* துலாக்கட்டை, *1* பார்க்க; see *tulākkaṭṭai. 5.* துலாம், *6* பார்க்க; see tulām. "துலாஞ் செயிரறப் போதிகை கிடத்தி" *(கம்பரா. நகரப். 29). 6.* துலாவோரை (சூடா.); libra in the Zodiac.

[துல் → துலா (வே. க. 251).]

துலாக்கட்டை tulā-k-kattai, பெ.(n.) *1.* திராவி; joist in a terraced house. *2.* வண்டியச்சுக் கட்டை; cross-beam of a cart containing the axle.

[துலா + கட்டை]

துலாக்கடைக்கூரை *tulā-k-kaḍai-k-kūrai,* பெ. (n.) முக்கோண வடிவமான மரம் வைத்து இடப்பட்ட கூரை (கட்டட நாமா.); truss roof.

[துலா + கடை+ கூரை]

துலாக்கூலி *tulā-k-kūli,* பெ.(n.) வரி வகை (T.A.S. ii, 82.); a kind of tax.

துலாக்கொடி *tulā-k-koḍi,* பெ. (n.) ஏற்றம் இழுக்கும் கயிறு அல்லது கழை (J); rope or pole attached to a well-sweep.

[துலா + கொடி]

துலாக்கோல் *tulā-k-kōl,* பெ.(n.) நிறைகோல்; balance, steelyard. 'துலாக்கோல் லியல்பே தூக்குங் காலை" *(தொல். எழுத். சிறப்புப்பா. உரை).*

[துலா + கோல்]

துலாக்கோடி *tulā-k-kōḍi,* பெ. (n.) *1.* நிறைவகை; a weight. *2.* பத்துக்கோடி; ten crores. *3.* மகளிர் காலணிவகை; a foot-ornament of women.

[துலா + கோடி]

துலாத்தடம் *tulā-t-taḍam,* பெ.(n.) *1.* தராசுத் தட்டு; scale pan. *2.* தோணித் துடுப்பு; Oar.

துலாதரன் *tulātaraṉ,* பெ. (n.) கதிரவன் (யாழ். அக.); sun.

துலாதாரம் *tulātāram,* பெ. (n.) *1.* துலாக்கோல் பார்க்க; see *tulā-k-kōl. 2.* தராசுக் கயிறு; strings attaching scale-pans to the beam of a balance. (செ. அக.).

[துலா + தாரம்]

துலாந்து *tulāntu,* பெ.(n.) *1.* துலாக்கட்டை (W.); cross beam *2.* வீட்டிற் சாமான் வைக்க உதவும் ஒருவகைப் பரண் (J); bracket frame stuck to a wall for keeping things on. (செ. அக.)

[துலா → துலாந்து (வ.மொ.வ. 180).]

துலாப்பட்டை *tulā-p-paṭṭai,* பெ. (n.) பிளக்கப் பட்ட பனையின் அடிப்பகுதி; butt end of a split palmyra.

[துலா + பட்டை]

துலாப்படி *tulā-p-paḍi,* பெ. (n.) *1.* துலாக்கோல்; steelyard. *2.* தராசுப் படிக்கல்; large weight for a balance (செ. அக.).

ம. துலாப்படி

[துலா + படி]

துலாபி *tulābi,* பெ. (n.) ஓர் மீன்; a kind of fish (மீன். பி. தொ.பெ. அக.).

துலாம் *tulām,* பெ. (n.) *1.* நிறைகோல்; balance, steelyard, scales. "நாஞ்சிலுந் துலாமு மேந்திய கையினன்" *(சிலப். 22, 66). 2.* துலாராசி (பிங்.); libra in the zodiac. *3.* துலைத் திங்கள்; the

seventh month. *4. உத்தரக்கட்டை;* main beam in the roof of a house. *"செந்தினி மணித் துலாஞ் செறிந்த திண்சுவர்" (கம்பரா. நகரப். 30).* *5. துலாக் கட்டை;* joist. *6. தூண் மேலுள்ள போதிகையின் கீழ் வாழைப்பூ வடிவிலமைந்த ஒப்பனையுறுப்பு* (பெருங். உஞ்சைக். 37, 102, உரை); ornamental portion in the capital of a pillar, shaped like plantain flower. *7. ஏற்றமரம்;* well-sweep, picotah. *8. ஏறத்தாழ 100 பலம் எடையுள்ள ஒரு நிறை;* bazar weight = 1 bullock load = 100 palams, varying in different localities. *9. இருநூறு பலமுள்ள நிறை* (நான். பால. 145); a measure of weight = 200 palams. *10. 5 வீசை கொண்ட நிறை* (வேதா. சூ. 3, உரை); a measure of weight = 5 viss.

[துலா → துலாம்]

துலாம்பரம் *tulāmbaram,* பெ. (n.) *1. துலக்கம்;* clearness; brightness, as of a lamp, gem, etc. *துலாம்பரமாகத் தெரிகிறது. 2. வெளிப்படையாக;* publicity. துலாம்பரமான செயல்.

[துலா + அம்பரம்]

துலாமரம் *tulā-maram,* பெ. (n.) *ஏற்றமரம்;* well-sweep, picotah *(செ. அக.)*

[துலா + மரம்]

துலான் *tulāṉ,* பெ. (n.) *நிறைகோல்;* balance.

[துலாம் → துலான் (வ.மொ.வ. 180).]

துலி *tuli,* பெ. (n.) *பெண்ணாமை* *(சங். அக.);* female tortoise.

துலிபலை *tulipalai,* பெ. (n.) துலினி (யாழ். அக.) *பார்க்க;* see *tuliṉi.*

துலியாசனம் *tuliyācaṉam,* பெ. (n.) *செம் முருங்கை (மலை.);* red Indian laburnum.

துலினி *tuliṉi,* பெ. (n.) இலவு *(சங்.அக.);* silk-cotton tree.

துலுக்கன்மொட்டை *tulukkaṉ-moṭṭai,* பெ. (n.) *சதுரகிரி மலையின் நடுவில் இராம தேவர் வதிந்திருந்த பெருங்காடு;* the dense forest in the centre of saduragiri hill where yacob alias Rama devar was living *(சா. அக.).*

துலுக்கு¹-தல் *tulukku-,* 5 செ.கு.வி. (v.i.) *1. குலுக்குதல்;* to make affected gestures, as in walking. *"சிக்கங் கரஞ்சேர்த்து வாளா துலுக்கு கின்றீர்" (பதினொ. ஆளு. திருவந். 66). 2. செருக்கி நடத்தல்* (W); to affect a proud gait, carry oneself proudly.

துலுக்கு²-தல் *tulukku-,* செ.குன்றாவி. (v.t.) *அசைத்தல்;* to shake toss.

துலுக்கு³ *tulukku,* பெ. (n.) *அசைக்க* (W.); shaking or other gesticulation, especially of the head or body.

துலுக்குக்கற்றாழை *tulukku-k-kaṟṟālai,* பெ. (n.) *மக்கிக் கற்றாழை;* scarlet flowered aloe *(சா. அக.)*

துலுக்குச்செவ்வந்தி *tulukku-c-cevanti,* பெ.(n.) *துருக்கித் தேசத்துச் சாமந்தி;* Turkish chamomile. *(சா. அக.).*

துலுங்கு-தல் *tuluṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) *அசைதல்;* to shake, toss. *"இரண்டு பாடுந் துலுங்காப் புடைபெயரா" (திவ். பெரியாழ். 3, 6, 9).*

[ஒருகா. துளங்கு → துலுங்கு-]

துலுசீட்டு *tulu-cīṭṭu,* பெ. (n.) *1. நினைவுக் குறிப்புச் சீட்டு;* a chit containing any memorandum. *2. பயிரிடுங் குடிகள் பட்டா கிடைப்பதற்குமுன் பெற்றுக் கொள்ளும் சீட்டு;* memoranda given to ryots who take up lands for cultivation serving as voucher until a formal patta is granted *(செ.அக.).*

துலை¹-தல் *tulai-,* 4 செ.கு.வி. (v. i.) தொலை¹ *பார்க்க;* to perish.

[தொலை-தல் → துலை-தல்]

துலை²-த்தல் *tulai-,* 11 செ.கு.வி. (v.i.) தொலை² *பார்க்க;* see *tolai.*

[தொலை-த்தல் → துலை-த்தல்]

துலை³ *tulai,* பெ. (n.) *1. தொலைதூரம்;* distance. great distance. *2. தொலைதூரத்து நாடு;* distant region. *"வெகு துலைகள் சுற்றினு மமைந்தமடர் பான்றி வருமோ" (குமரேச. சத. 46).*

[தொலை → துலை]

துலை[4] *tulai,* பெ. (n.) *1.* நிறைகோல்; steelyard "ஞான மாத்துலை" (ஞானா. 31, 11). *2.* துலை யோரை; libra in the zodiac. "இடப மரிதுலை வான்கடகம்" (சிலப். 3, 123, உரை). *3.* ஒரு வகைக் கொடை; a kind of donation. "மருவுந் துலையாத யாமே வருகொடை" (சேதுபு. அனுமகுண். 8). *4.* 100 பலங்கொண்ட நிறை (தைலவ. தைல. 14); a measure of weight = 100 palams. *5.* நிறை; weight. *6.* ஒப்பு; resemblance; equality. "தோல்வி துலையல்லார் கண்ணுங் கொலில்" (குறள். 986). *7.* ஏற்றமரம் (அக.நி.); well-sweep, picotah. *8.* துலைக்கிடங்கு பார்க்க; see *tulai-k-kiḍaṅgu.* *4.* மடைமுகம் (யாழ். அக.); flood - gate *10.* தோட்டம் (அக. நி.); garden.

[தொலை → துலை]

துலைக்கட்டு *tulai-k-kaṭṭu,* பெ. (n.) துலைக் கிடங்கின்மேலுள்ள கட்டடம்; structure over tulai-k-kiḍaṅgu (செ. அக.)

துலைக்கிடங்கு *tulai-k-kiḍangu,* பெ. (n.) கிணற்றிலிருந்து இறைத்த தண்ணீர் தங்கும் இடம் (வின்.); a wide plot of ground where water baled from a well is stored.

[துலை + கிடங்கு]

துலைக்குழி *tulai-k-kuḻi,* பெ. (n.) துலைப் பள்ளம் பார்க்க; see *tulai-paḷḷam.*

[துலை + குழி]

துலைத்தாலம் *tulai-t-tālam,* பெ. (n.) துலைநா பார்க்க; see *tulai-nā.* "துலைத்தால மன்ன தனிநிலை" (கம்பரா. மந்தரை. 19).

[துலை + தாலம்]

துலைநா *tulai-nā,* பெ. (n.) தராசு முள்; pointer in a balance. (செ. அக.)

[துலை + நா]

துலைப்படு-த்தல் *tulai-p-paḍu-,* செ.குன்றாவி. (v.t.) அகலவகற்றுதல்; to send away. "தலைப் படுவேன் றுலைப்படுப்பான் தருக்கேன்மினே" (தேவா. 718, 4).

[துலை + படு-]

துலைப்பள்ளம் *tulai-p-paḷḷam,* பெ.(n.) ஏற்றச் சாலிலிருந்து நீர்கொட்டும் பள்ளம்; a pit where the baled water is discharged from a bucket. (செ. அக.)

[துலை + பள்ளம்]

துலைமாந்தம் *tulai-māntam,* பெ. (n.) மாந்த வகை (பாலவா. 298); a kind of convulsive.

[துலை + மாந்தம்]

துலைமுகம் *tulai-mukam,* பெ. (n.) துலைக்கிடங்கு பார்க்க (யாழ். அக.), see *tulai-k-kiḍaṅgu.*

[துலை + முகம்]

துலையேறு-தல் *tulai-y-ēṟu-,* செ.கு.வி. (v.i.) துலைத் தட்டுக் கொடைச் சடங்கில் துலைத் தட்டிலேறுதல்; to mount the scale-pan to perform tulai-t-taṭṭu-caḍaṅgu. "இரவியை யரவு தீண்டிற் பொற்றுலை யேறல் நன்காம்" (கூர்மபு. தானமுறை. 20).

[துலை + ஏறு-]

துலையோடு-தல் *tulai-y-ōḍu-,* செ.கு.வி. (v.i.) தண்ணீரிறைப்பதற்குத் துலாமரத்திலேறி மிதித்தல்; to pass up and down the pocotah in baling water.

[துலை + யோடு-]

துலைவாய் *tulai-vāy,* பெ.(n.) துலைக்கிடங்கு (யாழ். அக.) பார்க்க; see *tulai-k-kiḍaṅgu.*

[துலை + வாய்]

துலைவாய்க்குழி *tulai-vāy-k-kuḻi,* பெ. (n.) துலைப்பள்ளம் பார்க்க; see *tulai-p-paḷḷam.*

[துலைவாய் + குழி]

துவ்வல் *tuvval,* செகுன்றாவி. (v.t.) உண்ணல்; taking meal or food. (சா. அக.)

துவ்வாதவன் *tuvvātavaṉ,* பெ. (n.) poverty - stricken, indegent person. "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும்" (குறள். 42).

துவ்வாமை *tuvvāmay,* பெ. (n.) *1.* நுகராமை; non-eating, non-enjoyment. "துவ்வாமை வந்தக்கடை" (கலித். 22). *2.* வறுமை; poverty, indigence. "துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும்"

(குறள். 94). 3. வேண்டாமை *(அக. நி.);* absence of desire. 4. வெறுப்பு (W.); disgust, dislike.

[துவ்வு + ஆ + மைம 'ஆ' எதிர்மறை இடைநிலை]

துவ்வான் *tuvvāṉ,* பெ.(n.) துவ்வாதவன் (சிந்தாமணி நிகண்டு) பார்க்க; see *tuvvātavaṉ.*

[துவ்வு + ஆ + அன்]

துவ்வானம் *tuvvāṉam,* பெ. (n.) துவானம் பார்க்க; see *tuvāṉam.*

[துவ்வு + வானம்]

துவ்வு¹-தல் *tuvvu-,* செ.குவி. (v.i.) நுகர்தல் (திவா.); to eat, enjoy. "துவ்வாநறவின் சாயினத்தானே" *(பதிற்றுப். 60, 12).*

துவ்வு²-தல் *tuvvu-,* செ.குன்றாவி. (v.t.) 1. வலியுறுதல்; to be strong. "ஆன்ற துணையிலன் றான்றுவ்வான்" *(குறள். 862).* 2. பற்றுக்கோடு; support.

[து → துவ்வு-. (வே.க. 203)]

துவ்வு³ *tuvvu-,* பெ. (n.) 1. உணவு (யாழ். அக.); food. 2. ஐம்பொறி நுகர்ச்சி (சூடா.); gratification of the senses. 3. அனுபவம் (யாழ். அக.); enjoyment, experience.

[து → துவ்வு (வே.க. 283)]

துவ்வு⁴ *tuvvu,* பெ. (n.) இழிவு (சூடா.); debasement, meanness.

துவ்வுதல் *tuvvutal,* பெ. (n.) பற்றுக்கோடு (அக. நி.); support.

[து → துவ்வு → துவ்வுதல்]

துவ்வை *tuvvai,* பெ. (n.) 1. பருகுதற்குரியது; liquid food. 2. இறைச்சி; flesh, meat. 3. பிண்ணாக்கு; oil-cake. (செ. அக.)

[துவ்வு → துவ்வை (வே.க. 283)]

துவக்கம் *tuvakkam,* பெ. (n.) தொடக்கம்; beginning, commencement. (செ. அக.)

[துவக்கு → துவக்கம்]

துவக்கு¹-தல் *tuvakku-,* 5 செ.குன்றாவி. (Sv.tr.) தொடங்குதல்; to begin, enter upon, commence.

[துடக்கு → துவக்கு-.]

துவக்கு²-தல் *tuvakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கட்டுதல்; to tie, binds. "பிறவியாற் றுவக்குணா 200" *(கம்பரா. பிரமாத்திர. 184).* 2. ஈர்த்தல்; to engross the senses or affections; to fascinate; to bring under one's influence. "நடையழகாலே அவரைத் துவக்கி" *(ஈடு. 1, 4, 3).*

துவக்கு³-தல் *tuvakku-,*செ.கு.வி. (v.i.) கட்டுண்ணுதல்; to be tied, entanged. "வள்ளியர் கொடிமொட்டுத் துவக்கிப் பன்னிருகன் விழித்து" *(கல்லா. 82, 10).*

[துடக்கு → துவக்கு-.]

துவக்கு⁴ *tuvakku,* பெ. (n.) 1. கட்டு; tie. "தறியிற் றுவக்குறு சித்திவிநாயகன்" *(குமர . பிர. மீனாட். பிள்ளைத். 3).* 2. தொடரி (திவா); chain. 3. தொடர்பு; connection. "வினைத் துவக்குடை வீட்டருந் தளைநின்று மீள்வார்" *(கம்பரா. மீட்சிப். 102).* 4. பற்று (அக.நி.); attachment, love 5. செடி கொடிகளின் பிணக்கு (பிங்.); entanglement, tangle.

[துடக்கு → துவக்கு.]

துவக்கு⁵ *tuvakku,* பெ. (n.) 1. தோல் (பிங்.); skin. "துவக்குதிரம்" *(சிசி. 9, 4).* 2. உடல் (அகநி.); body. 3. தொடுபுலனுறுப்பு; sensory organ of touch. "நற்செவி துவக்குக் கண்ணா நாசியைந் தினையும்" *(சிசி. 2, 61).*

[துவ → துவக்கு (மு.தா. 93).]

துவக்குநோய் *tuvakku-nōy,* பெ. (n.) தோல் நோய்; skin disease. "தணியாத துவக்கு நோயன்" *(பாரத. திரௌபதி. 74).*

[துவக்கு + நோய்]

துவக்கூசி *tuva-k-kūsi,* பெ. (n.) தோல் தைக்கும் ஊசி (யாழ்.அக.); awl.

[துவக்கு + ஊசி]

துவங்கு-தல் *tuvaṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தொடங்குதல்; to commence, begin, enter upon.

[துடங்கு → துவங்கு-.]

துவங்கட்டு-தல் tuvaṅ-kaṭṭu-, செ.குவி. (v.i.) 1. வெற்றி முதலியன குறிப்பதற்குக் கொடியேற்றுதல்; to hoist, a flag, erct a

banner, as a challenge or as a sign of victory. *2. முயன்று நிற்றல்;* to set about a thing with the utmost zeal and energy, especially in a bad cause.

[துவசம் + கட்டு-.]

துவசமங்கையார் *tuvaša-maṅgaiyār,* பெ. (n.) **கள் விற்கும் பெண்கள்;** woman selling toddy "துவசமங்கயர் பாற் கள்ளும்" *(குற்றா. தல. மந்தமா 4).*

[துவசம் + மங்கையார்]

துவசர் *tuvašar,* பெ. (n.) **கள்விற்போர்** *(பிங்.);* toddy - sellers, dealers in spirituos liquours. "துவசரில்லிற் சோனகர் மனையில்" *(கம்பரா. ஊர்தேடு. 112).*

[துவசம் → துவசர்]

துவசல் *tuvašal,* பெ. (n.) **தொடர்பு;** connetion. அவர் துவசல் தீர்த்துக் கொண்டார்.

[ஒருகா. தோய்தல் → துவலல்]

துவட்சி *tuvatci,* பெ. (n.) *1.* **ஒசிவு;** flexibility. தொந்தனைத் துவட்சி நீங்கான் *(குற்றா.தல. கவுற்சன. 26).* *2.* **வாடுகை;** fading *(பரிபா. 6,64, உரை).*

[துவள் → துவட்சி]

துவட்டர் *tuvaṭṭar,* பெ. (n.) **சிற்பியர்** *(சூடா.);* artificers, smiths.

துவட்டல் *tuvaṭṭal,* பெ. (n.) **துவட்டு** பார்க்க; loc.

[துவட்டு → துவட்டல்]

துவட்டற்கறி *tuvaṭṭaṟ-kaṟi,* பெ. (n.) **கறிவகை;** a kind of curry.

[துவட்டல் + கறி]

துவட்டாநாள் *tuvaṭṭā-nāḷ,* பெ. (n.) **சித்திரை** பார்க்க *(குற்றா.தல.வானவர். 19);* the l4th nakṣatra.

துவட்டு[1]-தல் *tuvaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* **நீரைத் துடைத்தல்;** to wipe off, moisture, as after bathing. *2.* **கறி முதலியன துவட்டுதல்;** to boil or stew with a little water, as curry, meat, etc., *3.* **கறிப்பண்டங்களைத் தொட்டுக் கொள்ளுதல்;** to taste in small quantities, as pickles for giving relish to food. "துவட்டிக் கொண்டு சாப்பிட்டு விடலாம் *(வின்.).* *4.* **கசக்குதல்;** to crush, bress hard; to over work.

துவட்டு[2] *tuvaṭṭu,* பெ. (n.) *1.* **துவட்டுகை;** wiping off moisture. *2.* **கறிவகை;** a kind of curry. "குய்கமழ் கருனையுந் துவட்டும்" *(விநாயகபு. 39, 37).*

துவடர் *tuvaḍar,* பெ. (n.) **பகைவர்;** enemies. "பாப மதித்துவட ராக்கோமோ" *(காளத். உலா, 332)*

துவண்டை *tuvaṇḍai,* பெ. (n.) **துவர் நிறந் தோய்த்த புடவை** *(யாழ்.அக.);* cloth dyed in ochre.

துவணீர் *tuvaṇīr,* பெ. (n.) **பிறந்த குழந்தையின் மேற்கசியும் தூய்மையற்ற நீர்;** filth, slimy matter about a new-born infant.

துவத்தம் *tuvattam,* செ.குவி. (v.i.) **வீழ்தல்; வீழ்ச்சி.**

துவர்[1]-தல் *tuvar-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1.* **வகிர்தல்** *(பிங்.);* to divide, part as the hair in the middle. *2.* **புலர்த்துதல்;** to dry, wipe off moisture. "கூந்தல் பிழிவனந் துவரி" *(குறிஞ்சிப். 60).* *3.* **பூசுதல்;** to smear.

துவர்[2]-தல் *tuvar-,* 4 செ.குவி. (v.i.) *1.* **உலர்தல்;** to become dry. "கண்ணும் வாயுந் துவர்ந்து" *(திவ்.திருவாய். 8:5,2).* *2.* **தெளிதல்;** to be clear, distinct. *3.* **பிரிதல்** *(யாழ்.அக.);* to be part, divided. *4.* **முதிர்தல்** *(இலக்.அக.);* to be mature. *5.* **முழுதுமாதல்;** to be complete, whole. "துப்புரவில்லார் துவரத் துறவாமை" *(குறள், 1050).*

துவர்[3]-தல் *tuvar,* 4 செ.குவி. (v.i.) **ஆடுதல்** *(அகநி.);* to be flexible.

துவர்[4] *tuvar,* பெ. (n.) *1.* **விறகு** *(பிங்.);* fire-wood, as dry. "ஆரழல் துவர்புதித் தியற்றுமின்" *(பிரமோத். 20, 51).* *2.* **சருகிலை;** dry leaves. "முடிமிசை யேற்றிய துவர்கண்டு" *(பதினொ. திருக்கண்ணப். மறநக். 72).*

[தும் → துமர் → துவர் (மு.தா. 151)]

துவர்[5] *tuvar,* பெ. (n.) *1.* **துவர்ப்பு;** astringency. "துவர் மருவப் புளிப்பேற்றி" *(தைலவ.தைல.). 2.* **துவர்ப்புப் பொருள்;** astingent substances. *3.* **நாவல் அல்லது பூவந்தி, கடு, நெல்லி, தான்றி, ஆல், அரசு, அத்தி, இத்தி, முத்தக்காசு அல்லது கருங்காலி, மாந்தளிர் என்ற பத்துத் துவர்ப்பு மருந்துப் பொருள்;** medical astringents, numbering ten, viz., nāval or pūvanti, kaḍu, nelli, tāṉṟi, āl, aracu, atti, itti, mutta-k-kāsu or karuṅkāli, māntaḷir. "விரையொடு துவருஞ் சேர்த்தி" *(சீவக. 623) (சது.). 4.* **பகை** *(அக.நி.);* enmity, hatred, hostility. *5.* **பாக்கு;** areca-nut. "வாசமணத் துவர் வாய்க் கொள்வோரும்" *(பரிபா. 12,22). 6.* **துண்டு;** piece. "மஞ்சள் துவர்" *(நெல்லை.). 7.* **கோது;** refuse. "சீக்காய்த் துவர்". *8.* **செருக்கு;** pride. 'அவனுக்குப் பணத்துவர் அதிகம்'.

துவர்[6] *tuvar,* பெ. (n.) *1.* **பவளம்** *(திவா.);* coral. *2.* **சிவப்பு;** red colour, scarlet. "துவரிதழ்ச் செவ்வாய்" *(சிலப். 6, 26). 3.* **கல்லாடை;** red ochre. "துவருகின்ற வாடை யுடல் போர்த்து" *(தேவா. 608, 18). 4.* **துவரை** பார்க்க; see *tuvarai.* "துவர்ங் கோடு" *(தொல். எழுத். 363, உரை).*

[தும் → துமர் → துவர் (மொ.வ. 181)]

துவர்[7]**-த்தல்** *tuvar-, 11* செ.கு.வி. (v.i.) *துவர்ப்பாதல்;* to be astringent.

[துவர் – துவர்த்தல்]

துவர்[8]**-த்தல்** *tuvar-, 11* செ.கு.வி. (v.i.) **சிவத்தல்;** to be red. "துவர்த்த செவ்வாய்" *(கம்பரா. நீர்விளை. 13).*

[துவர் → துவர்த்தல் (வ.மொ.வ. 181)]

துவர்[9]**-த்தல்** *tuvar, 11* செ.குன்றாவி. (v.t.) **பூசுதல்** *(வின்.);* to smear.

[துவர் → துவர்-.]

துவர்க்கட்டி *tuvar-k-kaṭṭi,* பெ. (n.) **காசுக்கட்டி** பார்க்க; a compound of catechu and other spices.

மறுவ. காய்ச்சுக்கட்டி

[துவர் + கட்டி]

துவர்க்கண்டல் *tuvar-k-kaṇḍal,* பெ. (n.) *1.* **செந்தாழை** *(தைலவ.தைல);* red species of screw-pine. *2.* **பூக்கண்டல்;** caudel mangrove *(சா.அக.)*

[துவர் + கண்டல்]



துவர்க்காம்பு *tuvar-k-kāmbu,* பெ. (n.) **கத்தைக் காம்பு;** black catechu *(சா.அக.).*

துவர்க்காய் *tuvar-k-kāy,* பெ. (n.) **பாக்கு;** areca-nut as astringent. "துவர்க்காயொடு சுக்குதின்னும்" *(தேவா. 660, 10).*

[துவர் + காய்]

துவர்ச்சிகை *tuvar-c-cigai,* பெ. (n.) *1.* **கடுக்காய்ப் பிஞ்சு** *(மலை);* tender, immature gall-nuts. "தவாத துவர்ச் சிகை" *(பெருங். மகத. 17, 149). 2.* **கூவைமா** *(சங்.அக.);* arrowroot flour.

[துவர் + சிகை]

துவர்த்து-தல் *tuvarttu-, 5* செ.குன்றாவி. (v.t.) **ஈரந்துவட்டுதல்;** to wipe oft moisture.

ம. துவர்த்துக

[துவர் → துவர்த்து-.]

துவர்த்து[2] *tuvarttu,* பெ. (n.) **துவர்த்துமுண்டு** பார்க்க; loc.

துவர்த்துமுண்டு *tuvarttu-muṇḍu,* பெ. (n.) **ஈரந்துவட்டுந் துண்டு;** towel, as removing moisture.

[துவர்த்து + முண்டு]

துவர்நீர்[1] *tuvar-nīr,* பெ. (n.) **துவர்ப்பு நீர்;** astringent lotion.

[துவர் + நீர்]

துவர்ப்பசை *tuvar-p-pasai,* பெ. (n.) உட்பகை, மானம், மாயை பேராசை என்ற நான்கு; the four sins, viz, of anger conceit, intrigue and greed. "துவர்பசை நான்கிலாந்த" *(மேருமந். 1150).*

[துவர் + பசை]

துவர்ப்பிடி-த்தல் *tuvar-p-pidi,* செகுன்றாவி (v.t.) தடுத்திடுமாறு ஆடையைப் பிடித்தல்; to hold one by one's cloth and obstruct. "பற்றயர்தம்மை . . . துவர்ப்பிறத்து . . . . தடுத்துவா" *(திருவாலவா. 41, 10).*

[துவர் + பிடி-.]

துவர்ப்புமருந்து *tuvarppu-maruntu,* பெ. (n.) இரத்தப் பெருக்கை நிறுத்தும் துவர்ப்பான சரக்குகளைக் கொண்டு செய்யப்பட்ட மருந்து; astringent preparation having the quality of stopping bledding or restraining heremorhage.

[துவர்ப்பு + மருந்து]

துவர்ப்பூ *tuvar-p-pū,* பெ. (n.) வாடிச் சிவந்த பூ; withered flower. "தன்றலை தங்கிய துவர்ப்பூ வேற்றி" *(பதினொ. திருக்கண். மறம். நக். 61) (தமிவ. 57).*

[துவர் + பூ]

துவர்மண் *tuvarman,* பெ. (n.) 1. உவர்மண்; fuller's earth. 2. அடைமண்; alluvial soil. 3. துவர்ப்புமண்; astringent soil *(சா.அக.).*

[துவர் + மண்]

துவர்வலியுறுத்தி *tuvar-vali-y-urutti,* பெ. (n.) துவர்ப்புள்ள மருந்து; astringent tonic.

[துவர் + வலியுறுத்தி]

துவர[1] *tuvara,* பெ.அ. (adv.) முழுதும்; entirely. "துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே" *(தொல். எழுத். 310).* 2. மிக; exceedingly. "துய்க்க துவரப் பசித்து" *(குறள். 944).*

துவரங்கறி *tuvaraṅ-kari,* பெ. (n.) பருப்பு சேர்ந்த கறிவகை; preparations of curry mixed with dholl *(சா.அக.).*

[துவரை + கறி]

துவரங்காய் *tuvaraṅ-gāy,* பெ. (n.) 1. துவரைச் செடியின் காய்; green red gram. 2. மலைத் துவரங்காய்; green pod of hill of dholl *(சா.அக.).*

துவரஞ்செடிவண்டு *tuvarañjedi-vaṇḍu,* பெ. (n.) குருவண்டு; a beetle of the dholl plant *(சா.அக.).*

[துவரை + செடி + வண்டு]

துவரம்[1] *tuvaram,* பெ. (n.) துவட்டற்கறி பார்க்க; see *tuvaṭṭar-kari.*

[துவர் → துவரம் (முதா. 149)]

துவரம்[2] *tuvaram,* பெ. (n.) துவர்ப்பு *(பிங்.)* astringency.

[துவர் → துவரம்]

துவரம்பருப்பு *tuvaram-paruppu,* பெ. (n.) துவரையின் பருப்பு; the tentil or pea of the plant leytisus, dholl *(சா.அக.).*

[துவரம் + பருப்பு]

"தண்ணக் குறிஞ்சித் தலத்தாடகிப் பிளப்பை
வண்ணச் சுடரற்குள் வைத்தாங்கி யுண்ணற்
சுடிக்கும் பசுவினறு மாச்சியத் தொடுண்ணிற்
பிடிக்குப்பிடி சதையாம் பேசு" *(சா.அக.)*

துவரமரம் *tuvara-maram,* பெ. (n.) கதம்பம்; kāṭar; a species of roudelecia wort.

[துவர் → துவர + மரம்]

துவரலா *tuvaralā,* பெ. (n.) நந்தியாவட்டம்; indian rose bay *(சா.அக.).*

துவரன் *tuvaraṉ,* பெ. (n.) துவரம் (நெல்லை) பார்க்க; see *tuvaram.*

[துவரம் → துவரன்]

துவரன்சம்பா *tuvaraṉ-sambā,* பெ. (n.) நெல் வகை *(வின்.)*; a kind of paddy.

[துவரன் + சம்பா]

துவராடை *tuvar-āḍai,* பெ. (n.) கல்லாடை; salmon coloured cloth. "அந்துவ ராடைப் பொதுவனொடு" *(கலித். 102, 35).*

[துவர் + ஆடை]

துவராதினி *tuvar-ādiṉi,* பெ. (n.) பேராமுட்டி; fragrant sticky mallow *(சா.அக.).*

துவராபதி *tuvarāpati,* பெ. (n.) துவாரகை பார்க்க; see *tuvāragai.* "துவராபதிக் கென்னை யுய்த் திடுமின்" *(திவ். நாய்ச். 12, 9).*

[துவரை + பதி]

துவராவதி *tuvarāvati,* பெ. (n.) துவாரகை பார்க்க; see *tuvāragai.*

துவரி[1]**-த்தல்** *tuvari-,* 11 செ.குன்றாவி. (v.t.) செந்நிற மூட்டுதல்; to die with salman colour. "துவர்த்த வுடையவர்க்கும்" *(திவ்.பெரியதி. 5, 6, 8).*

[துவரி → துவரித்தல்]

துவரி[2] *tuvari,* பெ. (n.) 1. வடிநீர்; decoction. 2. துவரை; red gram *(சா.அக.).*

துவரிகம் *tuvarigam,* பெ. (n.) துவரை; red green *(சா.அக.).*

துவரிதழ் *tuvari-idal,* பெ. (n.) யானை *(அக.நி.);* elephant.

[துவர் + இதழ்]

துவருப்பு *tuvaruppu,* பெ. (n.) பூ நீறுப்பு; salt extracted from efflorescent salt collected on the soil of fuller's earth *(சா.அக.).*

[துவர் + உப்பு]

துவரெண்ணெய் *tuvarenney,* பெ. (n.) துவர்ப்புச் சரக்குகளினின்று வடிக்கும் எண்ணெய்; a medicinal oil extracted from astringent drugs *(சா.அக.).*

[துவர் + எண்ணெய்]

துவரை[1] *tuvarai,* பெ. (n.) 1. துவரஞ்செடி *(பதார்த்த. 834);* pigeon-pea, dhall. 2. கருந் துவரை; toposi ebony of bengal. 3. காட்டத்தி; gaub.

[துவர் → துவரை]

துவரை[2] *tuvarai,* பெ. (n.) துவாரகை பார்க்க; see *tuvāragai.* "உவரா வீகைத் துவரை யாண்டு" *(புறநா. 291).*

துவரைக்கோமான் *tuvarai-k-kōmān,* பெ. (n.) இடைச் சங்கப் புலவருள் ஒருவர் (இறை. 1, பக். 3); a poet of the middle sangam.

[துவரை + கோமான்]

துவரைச்சிவப்பிறுங்கு *tuvarai-c-civa-p-pirungu,* பெ. (n.) சோள வகை *(விவசா. 3);* a kind of maize of great millet.

[துவரை + சிவப்பு + இறுங்கு]

துவரைமல்லி *tuvarai-malli,* பெ. (n.) வெள்ளைக்கல் வகை; tourmaline.

மறுவ. கொழும்பு வைரம்

[துவரை + மல்லி]

துவல்[1] *tuval,* பெ. (n.) பூசைக்குப் பயன்படுத்தும் பூ; flowers offered in worship. "அடியாரிருந் துவல் . . . பரப்புவாய்" *(தேவா. 383, 2).* "செருப்படியாவன விருப்புறு துவலே" *(பதினொ. திருக்கண். மறம். 103).*

[தூவு → துவர்]

துவல்[2]**(லு)-தல்** *tuval-,* 3 செ.கு.வி. (v.i.) துளித்தல்; to drip, as water; to sprinkle; to drizzle.

[துவள் → துளி]

துவல்[3]**(லு)-தல்** *tuval,* 3 செ.கு.வி (v.i.) நிறைதல் *(வின்.);* to be full, thick.

[துவன்று → துவல்-.]

துவல்(லு)-தல் *tuval,* 3 செ.கு.வி. (v.i.) சாதல் *(வின்.);* to die.

[துவள் → துவல்(லு)தல்]

துவல்[5] *tuval,* பி.பெ. (n.prob.) விரைவு *(வின்.);* haste, celerity, rapidity, diligence.

[துன் → தும் → துமல் → துவல் (வே.க. 282)]

துவல்[6]**(லு)-தல்** *tuval,* 3 செ.கு.வி. (v.i.) விரைதல் *(வின்.);* to be quick, rapid, to move with celerity.

துவலம் *tuvalam,* பெ. (n.) 1. பவளம்; corel. 2. ஒரு செய்ந்நஞ்சு வகை; one of the 32 kinds of native arsenic.

[துவர் → துவல் → துவலம்]

துவலை *tuvalai,* பெ. (n.) கூட்டம்; crowd. "இருங்கழித் துவலை யொலியின்" *(ஐங்குறு. 163, அரும்.)*

[துவல் → துவலை]

துவலை *tuvalai,* பெ. (n.) நீர்த்திவலை; watery particile, drop, spray. "சிதுரலந் துவலை தூவலின்" (அகநா. 24). 2. மழைத்தூவல் (பிங்.); drizzle. "வடந்தை துவலை தூவ" (நற். 152).

தெ. துவர

[துவல்[1] → துவலை]

துவள்[1](ளு)-தல் *tuvaḷ(ḷu)-,* 2 செ.கு.வி. (v.i.) 1. ஒசிதல் (சூடா.); to be flexible, supple, as a tender tree. "பொலிவில துவள" (கம்பரா. பூக்கொய். 11). 2. தெளிதல் (சங்.அக); to bend, shrink, twist warp, as boards in the sun. 3. வாடுதல்; to fade, wither, as plants under scorching sun. "கண்ணார் தழையுந் துவளத் தருவனவோ" (திருக்கோ. 112). 4. கசங்குதல்; to become rumpled, as a new cloth. "புதிய ஆடை துவண்டு விட்டது". 5. துடித்தல்; to quiver, tremble. "பெருநீரறச் சிறுமீன் றுவண்டாங்கு" (திருவாச. 6, 26). 6. வருந்துதல்; to be distressed. "சோறு கூறை யின்றியே துவண்டு" (தேவா. 119, 3). 7. ஒழிதல்; to disappear. "வெஞ்சுரஞ் சென்ற தெல்லாம் . . . பூவணை மேலணையாமுன் றுவளுற்றதே" (திருக்கோ. 351). 8. அடர்தல்; to be dense, close. "தாழை துவளும் தரங்கநீர்ச் சேர்ப்பிற்றே" (திணைமாலை. 59). 9. இறுகுதல்; to be thick in consistancy, as milk. "பாலைத் துவளக் காய்ச்சினான்". 10. ஒட்டுதல்; to be sticky; to adhere, as oil. 11. புணர்தல்; to unite sexually. "துடியிடையார் கணவரொடு துவளும் போது" (அருணா. பு. திருக்கண். 14). 12. மெல்லிதா யிருத்தல் (சங்.அக.); to be thin.

[துவள் → துவளு-.]

துவள்[2](ளு)-தல் *tuvaḷ(ḷu)-,* செ.குன்றாவி. (v.t.) தொடுதல் (பிங்.); to touch.

துவள்[3] *tuvaḷ,* பெ. (n.) துவட்சி பார்க்க; see *tuvaṭci.* "நனியுருவத் தென்னோ துவள்கண்டீ" (பரிபா. 6, 64). 2. குற்றம்; fault, defect. "துவளின் மாயணி மாடமோங்கு துலைவில்லி மங்கலம்" (திவ். திருவாய். 6, 5, 1).

துவள்வு *tuvaḷvu,* பெ. (n.) துவட்சி பார்க்க; see *tuvaṭci.* "தோலாக்கரி வென்றதற்குந் துவள்விற்கும்" (திருக்கோ. 110).

[துவள் → துவள்வு]

துவளம் *tuvaḷam,* பெ. (n.) கிணற்றின் கைப்பிடிசுவர்; parapet wall of a well.

ஒ.நோ. தோவாளம்

துவளல் *tuvaḷal,* பெ. (n.) வளைவு; bending.

[துவள் → துவள்வு]

துவளவரைத்தல் *tuvaḷa-varai-,* செ.கு.வி. (v.i.) நெகிழவரைத்தல்; grinding till it becomes pulpy or pasty (சா.அக.).

[துவள + அரை-.]

துவளை *tuvaḷai,* பெ. (n.) வாட்டம்; melancholia, depression. "பேய் தொட்டு விட்டதாலே துவளையாம்" (பணவிடு. 299).

[துவள் → துவளை (மு.தா. 92)]

துவளை[2] *tuvaḷai,* பெ. (n.) 1. மேற்பூச்சு; anointing, rubbing. "காலிற் கையிற் றுவளை யிட்டு" (பாலவா. 157). 2. வேப்பெண்ணெய் முதலியவற்றில் தோய்த்திடும் ஒத்தடம்; fomentation, especially with margosa oil.

[ஒருகா. துவாலை → துவளை]

துவளைசெய்தல் *tuvaḷai-sey-,* செ.கு.வி. (v.i.) கண்ணிற்கு மருந்தெண்ணெய் மற்றும் கலிக்கம் பூசுதல்; smearing ointment or putting eye drops (சா.அக.).

துவளைபோடல் *tuvaḷai-pōḍal,* பெ. (n.) உடம்பின் மேல் சூடுண்டாகும்படி தேய்த்தல்; rubbing so as to create heat (சா.அக.).

துவற்று[1]-தல் *tuvaṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) தூவுதல்; to scatter drops, sprinkle. "தூஉ பின்ன துவலை துவற்றலின்" (மலைபடு. 363).

[துவறு → துவற்று → துவற்று-. (மு.தா. 57)]

துவற்று[2]-தல் *tuvaṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கெடுத்தல்; to destroy, ruin. "வல்வினை துவற்றன்மேலென" (தணிகைப்பு. வீராட். 4).

[துவல்[2] → துவற்று]

துவறல்[1] *tuvaṟal,* பெ. (n.) மழை தூவுகை (யாழ்.அக.); raining, drizzling, sprinkling.

[துவல் → துவறல்]

துவறல்[2] *tuvaṟal,* பெ. (n.) விரைவு *(சது.)* swiftness, haste.

[துவல் → துவறல்]

துவன் *tuvaṉ,* பெ. (n.) வட்டத்திருப்பி *(மலை)* பார்க்க; see *vaṭṭa-t-tiruppi.*

துவன்று[1]**-தல்** *tuvaṉṟu-,* செ.கு.வி. (v.i.) *1.* நிறைதல்; to fillup. "இளையரும் முதியருங் கிளையுடன் றுவன்றி" *(பெரும்பாண். 268). 2.* நெருங்குதல்; to be thick, close, crowded. "வானம் வெளியறத் துவன்றி" *(கம்பரா. நாகபா. 97). 3.* கூடிநிற்றல்; to be in company; to join. "ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி" *(தொல்பொ. 192). 4.* குவிதல்; to be heaped up. "அகன்கட் பாறைத் துவன்றி" *(மலைபடு. 276).* "துவன்று நிறைவாகும்" *(தொல். 815).*

[துவல் → துவன்று (வே.க. 252)]

துவன்று[2]**-தல்** *tuvaṉṟu-, 5* செ.கு.வி. (v.i.) சாதல் *(பிங்.);* to die.

[துவல் → துவன்று (வே.க. 252)]

துவன்று[3] *tuvaṉṟu,* பெ. (n.) நிறைவு *(தொல்.சொல். 332);* fullness.

[துவல் → துவன்று (வே.க. 252)]

துவனம் *tuvaṉam,* பெ. (n.) ஒலி; noise, sound. "துவனவில்லின்" *(கம்பரா. இராவணன் வதை. 27).*

துவனி *tuvaṉi,* பெ. (n.) ஒலி; sound, noise, clamour. "தூய வானவர் வேதத் துவனியே" (தேவா. *1031).*

துவனி-த்தல் *tuvaṉi, 11* செ.கு.வி. (v.i.) முழங்குதல்; to sound, resound. "துவனித்தவர் வெம்படை தூவுதலும்" *(பாரத. நிவாத. 70).*

[துவணி → துவனி-.]

துவனை *tuvaṉai,* பெ. (n.) ஓசை *(யாழ்.அக.);* noise.

[ஒருகா. துவனி → துவனை]

துவாரடை *tuvāraḍai,* பெ. (n.) மரக்கல வுறுப்பினுளொன்று; a contrivance in a boat. "மரக்கலமும் அதனகத்துச் சுக்கானும். துவாரடையும் பிறவும் அமைந்திருப்பினும்" *(சுச்சுர-நிச்சயம், 150).*

துவாளி-த்தல் *tuvāḷi-, 11* செ.கு.வி. (v.i.) புல்லாங்குழல்; flute.

துவானம் *tuvāṉam,* பெ. (n.) தூறல்; drizzling. மழைவிட்டும் தூவானம் விடவில்லை.

[தூவானம் → துவானம்]

துவாலை *tuvālai,* பெ. (n.) *1.* மகளிர் சூதகப் பெருக்கு; excessive menstruation. *2.* உடலிற் பூசும் பூச்சு (தைலவ. தைல. *2);* anointing the body. *3.* பூச்சு மருந்து *(வின்.);* liniment for medical anointing.

[துவலை → துவாலை (மு.தா. 57)]

துவாலைச்சிரங்கு *tuvālai-c-ciraṅgu,* பெ. (n) ஒருவகைச் சிரங்கு; napkin rash.

[துவாலை + சிரங்கு]

துவாலைசெய்தல் *tuvalai-šey,* மேற்பூசுதல் *(பாலவா. 294);* to anoint, smear.

[துவாலை + செய்-.]

துவாலையடித்தல் *tuvalai-y-aḍittal,* பெ. (n.) துவாலையிறைப்பு' பார்க்க; see *tuvālai-y-iṟaippu.*

[துவாலை + அடித்தல்]

துவாலையிடு-தல் *tuvālai-y-iḍu,* செ.கு.வி. (v.i.) துவாலைசெய்தல் பார்க்க; see *tuvālai-šey.* "அங்கமெலலந் துவாலையிடு" *(தலவ. தைல. 32).*

[துவாலை + இடு]

துவாலையிறைப்பு *tuvālai-y-iṟaippu,* பெ. (n.) *1.* சூதகப் பெருக்கு; menorrhagia. *2.* ஒரு நோய்; leucorrhoca.

துவாளி-த்தல் *tuvaḷi-, 11* செ.கு.வி. (v.i.) தவாளி பார்க்க; see *tavāḷi;* to groove, flute.

துவானம் *tuvāṉam,* பெ. (n.) தூறல்; drizzle. "மழை விட்டுந் தூவானம் விடவில்லை".

[தூவானம் → துவானம்]

துவிக்குத்துரு *tuvi-k-kutturu,* பெ. (n.) தண்ணீர் விட்டான் (சங்.அக.) பார்க்க; see *taṇṇīr-viṭṭāṉ;* climbing asparagus.

துவை[1]**-த்தல்** *tuvai-, 11* செ.கு.வி. (v.i.) *1.* யாழ் ஒலித்தல் *(திவா.);* to sound as a lute; to resound.

2. ஆரவாரித்தல் (திவா.); to make a great noise. 'காலுறு துவைப்பின்' (மலைபடு. 117). 3. புகழப்படுதல்; to be praised. "நின் வயிற்றுவைத்த தும்பை" (பதிற்றுப். 88, 23).

துவை[2]-த்தல் *tuvai-,* செ.குன்றாவி. (v.t.) 1. மிதித்துழக்குதல்; to tread down. "ஆம்பலங் குப்பையை . . . வாளைக டுவைப்ப" (கல்லா. 52, 29). 2. இடித்தல்; to beat, as moist or green things as clay in a mortar; to mash, pound. 3. ஆடை துவைத்தல்; to beat, as clothes in washing. 4. குற்றுதல்; to husk. 'நெல்லைத் துவைக்கிறாள்'. 5. கடைதல்; to churn. கருங்கடற்றுவையத் தோன்றி' (கம்பரா. கடிம. 81). 6. சேர்த்துவைத்தல்; to gather, together. "தன்னுயிர்க்கென் றெண்ணித் துவைத்த பொருளொடு" (ஆசாரக். 96). துவைத்துத் தோள்மேற்போட்டுக் கொண்டான் (பழ.).

[துவ → துவை → துவைத்தல் (மு.தா. 92)]

துவை[3] *tuvai,* பெ. (n.) 1. மிதிக்கை; treading, pounding. 2. இறைச்சி (சூடா.); flesh, meat. 3. ஒலி (சூடா.); sound, clamour. 4. பிண்ணாக்கு (சூடா.); oil cake. 5. புளிங்கறி (திவா.); acidulated curry. 6. ஆணம்; thick, liquid curry. "மறிக்கொழுன் றுவை" (ஞானா. 36, 14). 7. துவையல் பார்க்க; see *tuvaiyal.* 8. பருகும் உணவு வகை (பிங்.); drink. "அற்ற றுவையாக" (சீவக. 2620). 9. துளசி பார்க்க (மலை.); see *tuḷaši;* sacred basil.

துவை[4]-தல் *tuvai-,* 4 செ.கு.வி. (v.i.) மிதித்துழக்கப்படுதல்; to be trodden. "நெற்கதிர் இன்னும் துவைய வேண்டும்".

[தோய் → துவை]

துவை[5]-தல் *tuvai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. தோய்தல்; to be dipped, as a cloth in dye. 2. கஞ்சியிடுதல் (வின்.) ; to be moistened with starch. 3. உறைதல் (வின்.); to be curdled, as milk; to be clotted as blood. 4. படைக்கருவி துவைச்சலிடுதல்; to be tempered, as steel.

[துவ → துவை → துவைதல் (மு.தா. 92)]

துவை[6]-த்தல் *tuvai-,* 11 செ.குன்றாவி. (v.i.) 1. தோய்த்தல் (வின்.); to dip in, soak. 2. உறையச் செய்தல் (வின்.); to curdle, as milk by rennet. 3. படைக் கருவிகள் துவைச்சலிடுதல்; to temper, as steel.

துவைத்துப்பிழி-தல் *tuvaittu-p-piḻi-,* செ.குன்றாவி. (v.t.) 1. மூலிகைகளை இடித்துச் சாறு இறக்குதல்; to squeezing juice out of bruished herbs. 2. ஊதையினால் உடம்பில் அடிபட்ட வலிபோல் காணும் ஒரு நிலைமை; a condition of the body with pain all over experienced by patients subjected to rheumatic affections as if beaten with sticks.

துவையல்[1] *tuvaiyal,* பெ. (n.) 1. தொகையல் எனப்படும் உணவு; chutny, a kind of strong relish, made of a number of condiments and fruits as coconuts, onions, chillies. "துவைவாயினர்கள் சில்லோர்" (விநாயகபு. 80, 225). 2. ஆடை வெளுக்கை (வின்.); washing clothes.

[துவை → துவையல்]

துவையல்[2] *tuvaiyal,* பெ. (n.) உருக்கைத் துவைச்சலிடுகை; tempering of steel (செ.அக.).

[துவை → துவையல்]

துவைவரல் *tuvaivaral,* பெ. (n.) கலப்புக் கட்டோசை (பிங்.); din of many sounds.

[துவை/ + வரல்]

துழத்தல் *tuḻa-,* 11 செ.குன்றாவி. (v.t.) துழாவுதல்; to stir, as with a ladle. "துடுப்பிற றுழ்ந்த வல்சியின் இட்டுந்தொட்டுங் கவ்வியுந் துழந்தும்" (புறநா. 26, 188).

[துள் → துள → துழ - துழத்தல் (வே.க. 275)]

துழதி *tuḻati,* பெ. (n.) துன்பம்; sorrow, distress. "பிறவித் துழதி நீங்க" (திவ். திருவாய். 2, 7, 7).

[துழ → துழதி (வே.க. 276)]

துழவு-தல் *tuḻavu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. துழாவு பார்க்க; see *tuḻāvu.* "துழாவு வழையமை சாரல் கமழத் துழைஇ" (மலைபடு. 181). 2. சூழவருதல்; to pass through review in mind, cat about one. "மாதிரந் துழவுங் கவலை நெஞ்சத்து" (புறநா. 174).

துழவை *tuḻavai*, பெ. (n.) *1. துழாவிலிட்ட கூழ்;* porridge, as stirred with a ladle. *"அவை யாவரிசி யங்களித் துழவை" (பெரும்பாண். 275). 2. மூங்கிற் பற்றை;* split bamboo used as a rudder the steel a small boat.

[துழவு → துழவை (வே.க. 276)]

துழவைதொடு-த்தல் *tuḻavai-toḍu-*, செ.கு.வி. (v.i.) தெப்பஞ் செலுத்துதல் (வின்); to paddle a raft or boat.

[துழவை + தொடு-. (வே.க. 276)]

துழனி *tuḻaṉi*, பெ. (n.) *1. ஒலி;* sound, noise, chirping of flocks of birds. *"அருமறைத் துழனியும்" (தேவா. 316, 3).* **2. குறை குற்றம்;** carping criticism. 'அவன் ஓயாமல் துழனி பேசுவான்' (நெல்லை).

[துழ → துழனி (வே.க. 276)]

துழா-தல் *tuḻā-*, 5 செ.கு.வி. (v.i.) **துழாவுதலின் மறுவடிவம்;** dialect variation of tuḻavu. "பனிவாடை துழாகின்றதே" *(திவ். இயற். திருவிடுத். 35).*

துழாய் *tuḻāy*, பெ. (n.) **துளசி;** sacred basil. "கமழ்குருந் துழாஅ யலங்கற் செல்வன்" *(பதிற்றுப். 31, 8).*

[துவை → துவையல்]

துழாய்மௌலி *tuḻāy-mauli*, பெ. (n.) **துளசிமாலை முடியினனாகிய திருமால்** *(சூடா.); Viṣṇu, as crowned with a garland of* basil.

[துழாய் + மௌலி]

துழாய்வனம் *tuḻāy-vaṉam*, பெ. (n.) **துளசி** *(மலை.);* sacred basil.

[துழாய் + வனம்]

துழாவாரம் *tuḻā-vāram*, பெ. (n.) **வம்புப் பேச்சு;** malicious gossip, slander.

[துழவு + வாரம் → துழாவாரம்]

துழாவு¹-தல் *tuḻāvu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *1.* **கையாலளைதல்;** to stir with the hand. *2.* **கிளறுதல்;** to stir with the ladle; to turn over, as paddy spread in the sun. *3.* **தடவுதல்;** to feel, grope, search for with the hands out stretched. "துழாநெடுஞ் சூழிருளென்று" *(திவ். இயற். திரு. விருத். 36). 4.* **நாடுதல்;** to cast a searching look into, seek. "வானு நிலனுந் திரையுந் துழாவும்" *(கலித். 145, 43). 5.* **ஆராய்தல்;** to investigate, examine closely. *6.* **தண்டு வலித்தல்;** to paddle or row a boat. "துளிபடத் துழாவு திண்கோற் றுடும்பு" *(கம்பரா. குகப். 60.)* *7.* **வெட்டுதல்** *(பிங்.);* to cut.

[துழவு → துழாவு-]

துழாவு²-தல் *tuḻāvu-*, செ.கு.வி. (v.i.) *1.* **தடுமாறுதல்;** to be disturbed in mind; to be perplexed. "எண்ணந் துழாவுமிடத்து" *(திவ். இயற். திருவிருத். 28). 2.* **அளவளாவுதல்** *(பிங்.);* to talk endearingly.

[துழவு → துழாவு-]

துழை-தல் *tuḻai-*, 4 செ.குன்றாவி. (v.t.) **துடுப்பால் துழாவிச் செல்லுதல்** *(நாஞ்.);* to propel by oars.

[துழாவு → துழை → துழைதல் (வே.க. 276]

துள் *tuḷ*, பெ. (n.) **துள்ளு** பார்க்க; see *tuḷḷu*.

[துல் → துள் (வே.க. 253)]

துள்ளத்துடி-த்தல் *tuḷḷa-t-tuḍi-*, செ.கு.வி. (v.i.) **மிகுதுயரால் வருந்துதல்;** to suffer from extreme anguish (செ. அக.).

[துள்ளல் + துடி-த்தல்]

துள்ளம் *tuḷḷam*, பெ. (n.) **சிறுதுளி;** little drop of water. "கண்ணநீர்கள் துள்ளஞ் சோர" *(திவ். பெரியாழ். 5: 1, 7).*

துள்ளல் *tuḷḷal*, பெ. (n.) *1.* **துள்ளுகை;** frishing, leaping. "பேயும் பேயுந் துள்ள லுறுமென" *(கலி. 94). 2.* **கூத்து** (உரி. நி.); dance, dancing. *3.* **கூத்தன்;** dancer. "வானவர்க்குங் காண் பரிதாகிநின்ற துள்ளலை" *(தேவா. 489, 6). 4.* **ஆடு** *(சூடா.);* goat, sheep. *5.* **ஆட்டுநோய்வகை** (M.Em.D.245); a disease of sheep. *6.* **நீர்கொதுகு** *(பிங்);* a kind of gnat, water insect. *7.* **துள்ளலோசை** பார்க்க

(காரிகை. செய். 1); see *tuḷḷalōsai*. **8. சந்தத்தின் முடுகிசை;** lively or quick movement, in verse or singing.

[துல் → துள் → துளி → துள்ளல் (வே.க. 253)]

துள்ளலோசை *tuḷḷalōsai*, பெ. (n.) **கலிப் பாவுக்குரிய ஓசை** *(காரிகை. செய். 1, உரை);* rhytheming cadence peculiar to *kali* verse.

[துள்ளல் + ஓசை]

துள்ளற்செலவு *tuḷḷaṟ-celavu*, பெ. (n.) **யாழ் வாசிக்கும் முறையுளொன்று;** a mode of playing yāḻ. "குடகச் செலவுந் துள்ளற்செலவும்" *(சீவக. 657, வார.).*

[துள்ளல் + செலவு]

துள்ளாட்டம் *tuḷḷāṭṭam*, பெ. (n.) *1.* **களிப்பு;** sprightliness. *2.* **செருக்கு;** arrogance, haughtiness, assumption, overbearing airs.

[துள்ளு + ஆட்டம்]

துள்ளி *tuḷḷi*, பெ. (n.) துளி பார்க்க; see *tuḷi*. "வானத்தின் றுள்ளி. யல்லால்" *(மேருமந். 121).*

[துளி → துள்ளி]

துள்ளிசிவு *tuḷḷicivu*, பெ. (n.) **ஒரு வகை இசிவு நோய்;** a kind of disease accompanied with convulsion. "துள்ளிசிவு கொண்டே துணுக்குற்றுத் தான்பதைப்பார்" *(ஆதியூரவதானி).*

[துள்ளு + இசிவு]

துள்ளு[1]-தல் *tuḷḷu-*, 5 செ.கு.வி. (v. i.) *1.* **குதித்தல்;** to leap, frisk, spring up, jump up; to be restive. "துள்ளித் தூண் முட்டுமாங் கீழ்" *(நாலடி. 64).* 'துள்ளாதே துள்ளாதே ஆட்டுக்குட்டி, என் கையில் இருக்கிறது சூரிக்கத்தி' *(பழ.?).* **2. தாவிச் செல்லுதல்;** to trip along in a frolicsane manner. "துள்ளு மான்மறி போந்திய செங்கையின்" *(தேவா. 93, 5).* **3. செருக்குதல்;** to be haughty, arrogant. "துள்ளுகின்றார் கூட்ட முறேல்" *(அருட்பா. 1, நெஞ்சறி. 635).* **4. கவலையற்று வாணாள் கழித்தல்;** to lead a happy-go-lucky life. *5.* **பதைத்தல்;** to tremble, quiver. 'துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து' *(கலித். 4).* **6. மிகுதல்;** to be abundant. "அனையது கேட்டலோடு மறிஞர்கள் மகிழ்ச்சி துள்ள" *(திருவானைக். நைமி. 28).*

[துல் → துள் → துள்ளு]

துள்ளு[2] *tuḷḷu*, பெ. (n.) *1.* **குதிப்பு;** leap, jump, spring. 'ஒரு துள்ளுத் துள்ளினான்'. **2. செருக்கு;** arrogance. "துள்ளுவார் துள்ளடக்குந் தோன்றலே" *(அருட்பா, 2, அருட்டிறத். 7).*

[துல் → துள் → துள்ளு (வே.க. 253)]

துள்ளுக்காளை *tuḷḷu-k-kāḷai*, பெ. (n.) **அடங்காதவன்;** ungovernable person, as an untamed bullock. 'துள்ளுகிற மாடு பொதி சுமக்குமா?' *(பழ.).*

[துள்ளு + காளை]

துள்ளுக்குட்டி *tuḷḷu-k-kuṭṭi*, பெ. (n.) *1.* **இளங் கன்று;** calf; frolicsome young animal. **2. விளையாட்டுப் பையன்;** playful, lively boy.

[துள்ளு + குட்டி]

துள்ளுசீட்டு *tuḷḷu-cīṭṭu*, பெ. (n.) **அடைக்கலச் சீட்டு;** to letter giving assurance of safety or protection. "துள்ளுசீட் டொப்ப மெழுதும்" *(விறலிவிடு. 903).*

[துள்ளு + சீட்டு]

துள்ளுப்பூச்சி *tuḷḷu-p-pūcci*, பெ. (n.) **தவசங்களைக் கெடுக்கும் பயிர்ப்பூச்சி வகை;** a kind of hopping insect destructive to grain.

[துள்ளு + பூச்சி]

துள்ளுப்போடு-தல் *tuḷḷu-p-pōḍu-*, பெ. (n.) **மீனைத் திருப்புதற்காக அணைகட்டுதல்;** to put up a small bund in order to turn the fish into a fish-trap.

[துள்ளு + போடு-]

துள்ளுமறி *tuḷḷumaṟi*, பெ. (n.) **ஆட்டுக்குட்டி;** kid, lamb as frolicsone. 'துள்ளுமறியா மனது பலிகொடுத்தேன்' *(தாயு. கருணாகர. 8).*

[துள்ளு + மறி]

துள்ளுமா *tuḷḷumā*, பெ. (n.) **தேவதைகளுக்குப் படைக்கும் சருக்கரையோடு கலந்த மாவகை;** a preparation of flour offered to deities.

[தெள்ளு → துள்ளு + மா]

துள்ளொலி *tuḷḷoli*, பெ. (n.) **அலையெறியும் ஒலி;** noise of rippling water. 'துள்ளொலி வெள்ளத்தின்' *(தேவா.)*.

[துள்ளு + ஒலி]

துளக்கம்[1] *tuḷakkam*, பெ. (n.) *1.* **அசைவு;** shaking, waving, motion. *2.* **மனக்கலக்கம்;** agitation of mind. "துளக்கமிலாதவர் தூய மனத்தார்" *(நாலடி. 189)*. *3.* **அச்சம்;** fear, dread. *4.* **குறைகை;** dwindling.

[துளங்கு → துளக்கம்]

துளக்கம்[2] *tuḷakkam*, பெ. (n.) *1.* **ஒளி;** brightness, splendour, gloss, lustre. *2.* **விளக்கு என்னும் 15ஆவது நாண்மீன்** *(பிங்.)*; the 15th naksatra.

[துள் → துளகு → துளங்கு → துளக்கு → துளக்கம்]

துளக்கு[1]**-தல்** *tuḷakku-*, 5 செ.குன்றாவி (v.t.) *1.* **அசைத்தல்;** to move, shake, nod. "திருமுடி துளக்கி நோக்கி" *(சீவக. 1881)*. *2.* **வணங்குதல்;** to bow. "முனைவற்றொழுது முடிதுளக்கி" *(சீவக. 2357)*.

[துல் → துலர் → துளங்கு → துளக்கு-.]

துளக்கு[2] *tuḷakku*, பெ. (n.) *1.* **அசைவு;** shaking. "துளக்கிலா விளக்கை" *(தேவா. 13, 6)*. *2.* **வருத்தம்;** grief, sorrow. 'மாமயிலாடி நாடகந் துளக்குறுத் தனவே' *(சீவக. 1560)*.

[துளங்கு → துளக்கு]

துளக்கு[3]**-தல்** *tuḷakku-*, 5 செ.குன்றாவி (v.t.) **விளக்குதல்** *(யாழ். அக.)*; to polish.

ம. துளக்கு

[துலக்கு → துளக்கு-,]

துளங்கு[1]**-தல்** *tuḷaṅgu-*, 5 செ.கு.வி (v.i.) *1.* **அசைதல்;** to move, to sway from side to side, as an elephant, to shake. "துளங்கிமில் நல்லேற்றினம்" *(கலித். 106)*. *2.* **வருந்துதல்;** to be perturbed. "துளங்கா தாங்கவ ளுற்றதை யுரைத்தலும்" *(மணி. 22, 8)*. *3.* **நிலைகலங்குதல்;** to be uprooted. "கடிமரந் துளங்கிய காவும்" *(புறநா. 23)*. *4.* **தளர்தல்;** to droop. 'சுடுகணை மருதலோடுந் துளங்கினான்' *(கம்பரா. முதற்போ. 132)*. *5.* **ஒலித்தல்;** to sound. 'சிறு சதங்கை துளங்க வார்த்தார்' *(பிரபுலிங். மாயை. பூசை. 45)*.

[துல் → துலம் → துளம் → துளங்கு- (மு.தா. 147).]

துளங்கு[2]**-தல்** *tuḷaṅgu-*, 5 செ.கு.வி (v.i.) **ஒளிர்தல்;** to shine, to be bright, luminous, to radiate. "துளங்கு மிளம்பிறை யாளன்" *(தேவா. 88, 10)*.

[துலக்கு → துளங்கு-,]

துளங்கொளி *tuḷaṅkoḷi*, பெ. (n.) *1.* **மிக்க ஒளி** *(வின்.)*; dazzling, brightness. *2.* **சுழல் என்னும் 18ஆவது நாண்மீன்;** the 18th naksatra. "நங்கம்பனை துளங்கொளி புரட்டாதி" *(இலக். 27, 791)*.

[துளங்கு → துளங்கொளி (மு. தா. 147)]

துளசி *tuḷaci*, பெ. (n.) *1.* **திருத்துழாய்;** sacred basil. *2.* **குழிமிட்டான்;** rough basil *(செ. அக.)*. 'துளசிக்கு மணமும் முள்ளுக்குக் கூர்மையும் முளைக்கிற போதே தெரியும்' *(பழ.)*.

துளசிதீர்த்தம் *tuḷaci-tīrttam*, பெ. (n.) **திருமால் வழிபாட்டின் பின் அடியார்களுக்கு வழங்கும் திருத்துழாயும் தூநீரும்;** tulaci leaves and consecrated water presented as offering to the idol in a Viṣṇu temple and distributed to worshippers.

[துளசி + தீர்த்தம்]

துளசிமடம் *tuḷaci-maḍam*, பெ. (n.) **துளசி மாடம்** பார்க்க; see *tulaci-māḍam* (செ. அக.).

[துளசி + மடம்]

துளசிமணி *tuḷaci-maṇi*, பெ. (n.) **மாலிய அடியார் அணிந்து கொள்ளத் திருத்துழாய்க் கட்டையைக் கடைந்து உண்டாக்கிய மணி;** beads made up of tulaci, worn by vaisnava devotees *(செ. அக.)*.

[துளசி + மணி]

துளசிமாடம் *tuḷaci-māḍam*, பெ. (n.) **பூசிக்கப் படும் துளசிச் செடியைக் கொண்ட மேடை;** a raised construction on which a tulaci plant is set up for worship *(செ. அக.)*.



[துளசி + மாடம்]

துளசிமாலை *tuḷaci-mālai,* பெ. (n.) துளசி இலைக் கொத்து அல்லது துளசிமணியாற் செய்யப்பட்ட மாலை; garland of tulaci leaves or beads.

[துளசி + மாலை]

துளப்பு *tuḷappu,* பெ. (n.) வயிறு; belly. "பாழியிற் பிணங்களும் துளப்பெழப் படுத்தியே" (தக்கயாகப். 376).

துளபம் *tuḷapam,* பெ. (n.) துளசி பார்க்க; see *tuḷaci.* "துளபத் தொண்டாய தொல்சீர்" (திவ். திருமாலை. 45).

[துளவம் → துளபம் (வ.மொ.வ. 182)]

துளபமௌலியன் tuḷapa-mouliyan, பெ. (n.) துளசி மாலையை முடியிலணிந்த திருமால் (பிங்.); Tirumāl, as wearing a tulaci wreath.

[துளவம் + மௌலியன் → துளப மௌலியன்]

துளம்[1] *tuḷam,* பெ. (n.) மாதுளை; common pomegranate. "துளம்படு முறுவல் தோழியர்க் கருளாள்" (திவ். பெரியதி. 2, 7, 2).

[மாதுளம் → துளம்]

துளம்[2] *tuḷam,* பெ. (n.) மயிலிறகினடி; root of peacock's feather (திவ். பெரியதி. 2, 7, 2, வ்யா).

துளம்பிக்கிரி *tuḷampikkiri,* பெ. (n.) ஆதொண்டை (மலை.); thorny caper.

துளர்[1]**-தல்** *tuḷar-,* 4 செ.குன்றா.வி. (v.t.) நில முதலியவற்றைக் கொத்துதல்; to hoe. "கணவன் புனந்துளர்ந்து வித்தி" (குறுந். 214).

[துளம் → துளர்-தல் (வ.மொ.வழு. 41]

துளர்[2]**-தல்** *tuḷar-,* செ.கு.வி. (v.i.) மணம் முதலியன வீசுதல்; to spread, as fragrance. 'துளருஞ் சந்தனச் சோலைக ளுடலாம்.... குளிர் நாற்றமே' (சூளா. இரத. 5).

[துளம் → துளர்-தல் (வ.மொ.வழு. 41]

துளர்[3] *tuḷar,* பெ. (n.) பயிரின் களை; weeds. "தொடுப் பெறிந் துழுத துளர்படு துடவை" (பெரும்பாண். 201).

துளர்[4] *tuḷar,* பெ. (n.) களைகொட்டு (திவ். பெரியதி. 8, 7, 3); weeding hook.

துளவம்[1] *tuḷavam,* பெ. (n.) துளசி பார்க்க; see *tuḷaci.* "தொடையொத்த துளவமுங் கூடையும் பொலிந்து" (திவ். திருப்பள்ளி. 10).

[துள → துளவம் (வ.மொ.வ. 182).]

துளவன் *tuḷavan,* பெ. (n.) 1. திருமால்; Tirumāl. "துளவ துளவ வெனச் சொல்லுஞ்சொற் போச்சே" (அட்டப். பிள்ளைப்பெரு. சரித். பக். 6). 2. ஒரு வகைச் செய்ந்நஞ்சு (யாழ். அக.); a prepared arsenic.

[துளவு → துளவன்]

துளவி *tuḷavi,* பெ. (n.) திப்பிலி (மலை.); long pepper.

துளவு *tuḷavu,* பெ. (n.) துளசி பார்க்க (சூடா.); see *tuḷaci.* "கள்ளணி பசுந்துளவினவை" (பரிபா. 15, 84).

[துளம் → துளவு]

துளவை[1] *tuḷavai,* பெ. (n.) தொளை (யாழ். அக.); hole, orifice.

[துள் → துள → துளவை (வே. க. 274).]

துளவை[2] *tuḷavai,* பெ. (n.) துழவை பார்க்க; see *tuḻavai.*

[துள் → துள → துளவை]

துளாரி *tuḷari,* பெ. (n.) நெய்வோர் கருவியுளொன்று (யாழ். அக.); a weaver's instrument.

துளி[1]**-த்தல்** *tuḷi-,* 11 செ.கு.வி. (v.i.) 1. சொட்டுதல்; to drip, fall in drops, as rain, as tears, as honey;

to trickle down. "மதுவுந் துளிக்குஞ் சோலை" (தேவா. 395, 4). 2. மழை பெய்தல்; to rain. "மங்கு லற்கமொடு பொங்குடி துளிப்ப" (அகநா. 235).

[துள் → துளி → துளி-த்தல்]

துளி[2]-த்தல் *tuḷi-,* செ.குன்றா.வி (v.t.) துளியாய்த் தெளித்தல்; to sprinkle, let fall in drops.

[துள் → துளி → துளி-த்தல்]

துளி[3] *tuḷi,* பெ. (n.) 1. துளிக்கை (பிங்.); raining, dripping. 2. திவலை (பிங்); rain drop, globule of water. 3. மழை (பிங்.); rain. "துளியனுழந்த தோய்வருஞ் சிமைதொறும்" (பரிபா 7, 13). 4. சொட்டளவு; minim, drop, as a measure. "மருந்தில் எத்தனைத் துளி விட்டுக் கொடுக்க வேண்டும்" 5. சிறிதளவு; pinch 'அம்மருந்தில் துளி சொடு' 6. நஞ்சு; poison. "துளிமண்டி யுண்டு நிறம்வந்த கண்டன்' (தேவா. 36, 1).

[துள் → துள்ளி → துளி.]

துளி[4] *tuḷi,* பெ. (n.) பெண்ணாமை (பிங்.); female tortoise.

[துள்ளி → துளி]

துளிமழை *tuḷi-maḻai,* பெ. (n.) திவலையாய்ச் சொரியும் மழை; drizzling.

துளிர்[1]-த்தல் *tuḷir-,* 11 செ.கு.வி. (v.i.) 1. தளிர்த்தல்; to bud, sprout, shoot, put forth leaves. 2. செழித்தல்; to prosper, thrive.

தெ. தளிர்சு; க. தெளிர்; ம. துளிர்க்க

[துள் → துளிர் → துளிர்-த்தல்]

துளிர்[2] *tuḷir,* பெ. (n.) தளிர்; bud, sprout, young leaf, tender foliage. "நாறுநரந்தைத் துளிருங் கலவி" (தேவா. 403, 6).

துளிர்க்கெண்டை *tuḷir-k-keṇḍai,* பெ. (n.) பாற்கெண்டை; white mullet.

துளு *tuḷu,* பெ. (n.) துளுவம் பார்க்க; see tuḷuvam. "தோகைக் காவிற் றுளுநாட்டன்ன" (அகநா. 15).

[துள் → துளு]

துளுப்பிடு-தல் *tuḷuppiḍu-,* செ.குன்றாவி. (v.t.) கலக்குதல்; to stir up. "குன்றிற் கருங்கட றுளுப்பிட் டாங்கு" (சீவக. 1112) (செ. அக.).

[துள் → துளு → துளுப்பு - துளுப்பிடு-தல் (வே.க. 276).]

துளும்பு[1]-தல் *tuḷumpu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. அசைதல்; to shake, to be agitated. "வம்பிற் றுளும்புமுலை வாணெடுங்கண் மடவார்" (சீவக. 186). 2. ததும்பு-தல்; to brim over, overflow; to fill, as tears in the eyes. "துளும்பு கண்ணிருண் மூழ்கி" (திருவிளை. மாணிக்க துதி). 3. துள்ளுதல் (சூடா.); frisk. 4. திமிறுதல் (சூடா.); to struggle and qrench oneself away. 5. விளங்குதல்; to sparkle, glitter, shine. "உவாக்கண்மீ டேவரிற் றுளிம்பினார்" (சூளா. தூது. 73). 6. இளகுதல் (சீவக. 3063, உரை); to melt. 7. மேலெழுதல்; to rise up; to come to the surface. "நீர் துளும்ப" (சீவக. 1674). 8. வருந்துதல்; to be troubled. "உயர்சந்தனத் தொழுதிக் குன்றந் தளும்பச் சென்று" (சீவக. 3063). 9. மிகுதல்; to abound. "துளும்பு மேன்மையிற் பொலிந்தது தொண்டைநன் னாடு" (காஞ்சிப்பு. நாட்டுப். 35).

[துள் → துளும்பு → துளும்பு-. (மு.தா. 68)]

துளும்பு[2]-தல் *tuḷumpu-,* செ.கு.வி. (v.i.) ஒளிர்தல்; to shine, to irradiate. "மருளிநின்று துளும்புவே" (தக்கயாகப். 254).

[துள் → துளும்பு → துளும்பு-. (மு.தா. 68)]

துளுவம் *tuḷuvam,* பெ. (n.) 1. பண்டைய ஐம்பத்தாறு நாடுகளுள் கன்னட நாட்டிற்குத் தெற்கிலுள்ள நாடு; the tulu country on the west coast, south of kannada, one of 56 country. "சொங்கணந் துளுவங் குடகம்" (நன். 272, மயிலை). 2. பதினென் மொழிகளுள் துளுவத்தில் வழங்கும் மொழி (நன். 273, உரை); the Tuluva language, one of patiṉeṇmoḻi, q.v.

[துளு → துளுவம்]

துளுவவேளாளர் *tuḷuva-vēḷāḷar,* பெ. (n.) துளுவ நாட்டிலிருந்து வந்து தொண்டை மண்டலத்தில் குடியேறிய வேளாள வகையார்; a sub-division of vēḷāḷās of Toṇḍaimaṇḍalam who migrated from the Tulu country.

[துளுவம் + வேளாளர்]

துளுவன் *tuḷuvaṉ,* பெ. (n.) வாழைவகை; a kind of plantain. 'துளுவன்பழம்'.

துளை¹-தல் *tuḷai-,* 4 செ.கு.வி. (v. i.) *1.* நீரில் விளையாடுதல்; to dispart in water; to dive. "ஆனந்த வெள்ளத் துறையிலே படிந்து மூழ்கித் துளைந்து" *(தாயு. வர்பனேன். 2).* 2. அழுந்திக் கிடத்தல்; to be immersed. குடும்பக்கூத்துட் டுளைந்து' *(தாயு. சொல்லற்7).*

[துள் → துளை-.]

துளை²-த்தல் *tuḷai-,* 11 செ.குன்றாவி. (v.t.) *1.* துளையிடுதல்; to make hole, bore, drill, punch. *2.* ஊடுருவுதல்; to pierce, as with an arrow. *3.* வருத்துதல்; to torment, tease. "எப்பொழுதுமாக அவனைத் துளைக்கிறான்" *3.* செயற்பாடு உசாவுதல்; to demand particulars or details. செலவுக்கணக்கு அவனைத் துளைத்துக் கொண்டிருக்கிறது.

[துள் → துளை-. (வே.க. 279)]

துளை *tuḷai,* பெ. (n.) *1.* புழை (பிங்.); hole, orifice, aperture, perforation. "ஆடமைக் குயின்ற வவிர்துளை" *(அகநா. 82). 2.* உட்டொளை; hollow, as of a tube. *3.* மூங்கில் (பிங்.); bamboo. *4.* வாயில் (வின்.); gate way, passage. *5.* சுருட்சி; curl, as of hair. "துளையார் கருமென் குழலாய்ச்சியர்" *(திவ். பெரியதி. 3, 8, 8). 6.* வயிரக் குற்றங்களுளொன்று; a flaw in diamond. "துளைகறி விந்து... காகபாதம்" *(சிலப். 14, 180, உரை).*

ம. துள; தெ. தொள; க. தொள; து. தொளு
[துள் → துளை (வே.க 279)]

துளைக்கருவி *tuḷai-k-karuvi,* பெ. (n.) இசைக்குரிய கருவி ஐந்தனுள் உட்டொளையுள்ள வாச்சியம் (பிங்.); wind instrument, one of five *karuvi.*

[துளை + கருவி]



துளைக்கை *tuḷai-k-kai,* பெ. (n.) தும்பிக்கை *(யாழ். அக.);* elephant's trunk.

[துளை + கை]

துளைச்செவி *tuḷai-c-cevi,* பெ. (n.) *1.* உட் செவி; organ of hearing; internal ear. *2.* உட் செவியுள்ள விலங்கு; an animal with an internal ear only, one of the two great classes of animals according to the Hindus.

[துளை + செவி]

துளைநிறை *tuḷai-niṟai,* பெ. (n.) துளைப்பொன் பார்க்க; see *tuḷai-p-poṉ.* "பொன் துளைநிறை... முப்பத்து முக்கழஞ்சும்" *(S.I.I.I.140).*

[துளை + நிறை]

துளைநிறைசெம்பொன் *tuḷai-niṟai-cempoṉ,* பெ. (n.) துளைப்பொன் பார்க்க; see *tuḷai-p-poṉ.* "செம்பொன் பதின்கழஞ்சு" *(S.I.I.I.85).*

[துளை + நிறை + செம்பொன்]

துளைநிறைபொன் *tuḷai-niṟai-poṉ,* பெ. (n.) துளைப்பொன் பார்க்க; see *tuḷai-p-poṉ.* *(I.M.P.Cg. 200).*

[துளை + நிறை + பொன்]

துளைப்பு *tuḷaippu,* பெ. (n.) *1.* துளைக்கை; drilling, perforating. *2.* இடைவிடாத் தொந்தரவு; frequent molestation, ceaseless annoyance.

[துள் → துளை → துளைப்பு]

துளைப்பொன் *tuḷai-p-poṉ*, பெ. (n.) புடமிடப்பட்டு வழங்கும் மாற்றுயுர்ந்த தங்கம் *(I.M.P. Tj. 138) (பெருங். இலாவாண. 6, 63);* refined gold of superior quality.

[துளை + பொன்]

துளையம் *tuḷaiyam*, பெ. (n.) நீரில் **துளைகை;** disporting in water. "வெள்ளநீர்த் துளைய மாடி" *(குமர. பிர. முத்துக். பிள். 52).*

[துள் → துளை → துளையம் (வே.க. 275)]

துளையரியம் *tuḷai-y-ariyam*, பெ. (n.) **ஊதுகொம்பு** *(யாழ்.அக.);* trumpet horn.

[துளை + அரியம்]

துளைவண்டு *tuḷai-vaṇḍu*, பெ. (n.) **வண்டுவகை;** borer, a beetle.

[துளை + வண்டு]

துற்சம் *tuṟcam*, பெ. (n.) **கொம்மட்டி** *(மலை) பார்க்க;* bitter gourd.

துற்பரிசம் *tuṟ-parisam*, பெ. (n.) **சிறுகஞ்சொறி** *(மலை.);* small climbing nettle.

துற்றர் *tuṟṟar*, பெ. (n.) **உண்பவர்;** those who eat. "விரைந்தால முண்ணுந் துற்றரை" *(தேவா. 204, 9).*

[துன் → துற்று → துற்றர் (வே.க. 279)]

துற்றவை *tuṟṟavai*, பெ. (n.) **நுகர்பொருள்;** articles of enjoyment. "துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை" *(திருவாசக. 3, 147).*

[துன் → துற்று → துற்றர் (வே.க. 280)]

துற்றி *tuṟṟi*, பெ. (n.) **உண்பவை** *(திவா.);* eatables.

[துற்று → துற்றி (வே.க. 280)]

துற்று[1]-தல் *tuṟṟu*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. **உண்ணுதல்;** to eat. "கொடுவா யிரும்பின் கோளிரை துற்றி" *(அகநா. 36).* 2. **கவ்வுதல்;** to seize with mouth. "இகலன்வாய்த் துற்றிய தோற்றம்" *(களவழி. 28).* 3. **குற்றுதல்** *(பிங்.);* to pound. 4. **நெருங்குதல்;** to come near, advance closely, lie close. "மைம்மரு பூங்குழற் கற்றை துற்ற" *(தேவா. 83, 1).* "காளை சீறிற் றுற்றிவ னுளனோ வென்பார்" *(சீவக. 1110).* 5. **மேற்கொண்டு நடத்தல்;** undertake. "அரிது துற்றனையாற் பெரும" *(அகநா. 10).*

க. துத்து; தெ. துத்த

[துன் → துற்று → துற்றர் (வே.க. 219)]

துற்று[2] *tuṟṟu*, பெ. (n.) 1. **உணவு;** boiled rice, food. "பற்றின்று துற்றின்று" *(4 வெ. 10, 4).* 2. **கவளம்;** ball of boiled rice, as a mouhful. "முற்றுற்றுந் துற்றினை" *(நாலடி. 190).* 3. **கூட்டம்** *(பிங்.);* corwd, multitude.

[துறு → துற்று (வே.க. 261)]

துற[1]-த்தல் *tuṟa*, பெ. (n.) 1. **பற்றற்றுத் துறவு பூணுதல்;** to renounce wordly pleasures; to become an ascetic. "நல்லறிவாளர் குழவியிடத்தே துறந்தார்" *(நாலடி. 11).* 2. **கைவிடுதல்;** to leave, relinguish, forsake, quit, abandon, desert, reject, discard. "தாவறத் துறந்தாரை" *(கலித். 118).* "தம்மைத் துறக்குந் துணிவிலாதார்" *(நாலடி. 75).*

துற[1]-த்தல் *tuṟa*, குன்றாவி & செகுவி. (tr. intr.) **நீங்குதல்** *(சூடா.);* to neglect, dispense with, oimit. avoid. "புலவுப்பலி துறந்த கலவுக்குழி கடுமுடை" *(அகநா. 3).* துறக்கத் துறக்க ஆனந்தம் துறந்தபின்பு பேரின்பம் *(பழ.).*

[துர → துற → துறத்தல் (வே.க. 278)]

துறக்கநாடு *tuṟakka-nāḍu*, பெ. (n.) **துறக்கம்** *பார்க்க;* see *tuṟakkam*. "துறக்கநா டருகிற் கண்டான்" *(கம்பரா. கடறாவு. 2)*

[துறக்கம் + நாடு]

துறக்கம் *tuṟakkam*, பெ (n.) **மேலுலகு;** heaven. "தொல்வினைப் பயனறுப்பத் துறக்கம் வேட் டெழுந்தாற் போல" *(கலித். 118).*

[துர → துறக்கம் (மு.தா. 54)]

துறட்டி *tuṟaṭṭi*, பெ (n.) 1. **அங்குசம்;** iron crock, elephant goad. 2. **காய் முதலியன பறிக்குந் துறட்டுக்கோல்;** pole with an iron hook fixed at one end to pluck fruits and leaves. 3. **சிக்கு;** entanglement. 4. **துறட்டிச்செடி** *பார்க்க;* see *tuṟaṭṭi-c-ceḍi*.

[துறகு → துறட்டி]

ப. க. தொறடு; வ. த்ரோட்டி;

துறட்டி - வ. த்ரோட்டி, த்ரோத்ர (வ.மொ.வ. 182)

துறட்டிச்செடி *turaṭṭi-c-cedi,* பெ. (n.) செடிவகை; prickly climbing cock-spur.

[துறட்டி + செடி]

துறட்டிபோடு-தல் *turaṭṭi-pōḍu,* செ.குன்றாவி. (v.t.) *1.* மந்தணச் செயலறிதல்; loc; to draw out serets by quetioning to fish out. *2.* தன் வயப்படுத்த முயலுதல்; to contrive to bring under one's control.

[துறட்டி + போடு-.]

துறட்டிரும்பு *turaṭṭirumbu,* பெ. (n.) செடில்; iron hook for hook-swinging.

[துறடு → துறட்டு + இரும்பு]

துறட்டு *turaṭṭu,* பெ. (n.) *1.* முண்மரவகை; straight thorned linear-leaved coapershrub. *2.* சிறு மரவகை; silky backed round leaved caper tree. *3.* சிக்கல்; entanjglement, complication, as in a law suit. "துறட்டு வழக்கு". *4.* இடையூறு; danger. "ஆங்கோர் துறட்டுண் டதனையான் சொல்வேன்" *(விறலிவிடு. 150).*

[துறகு → துறட்டு]

துறட்டுக்கோல் *turaṭṭu-k-kōl,* பெ. (n.) துறட்டி[2] பார்க்க; see *turaṭṭi.*

[துறட்டு + கோல்]

துறட்டுப்பிடி *turaṭṭu-p-piḍi,* பெ. (n.) துறட்டு வாதம் பார்க்க; see *turaṭṭu-vādam.*

[துறட்டு + பிடி]

துறட்டுமுள் *turaṭṭu-muḷ,* பெ. (n.) *1.* செடில்; iron hook for hook-swinging. *2.* செடிவகை; downy bached ovate acute leaved caper shrub.

[துறடு → துறட்டு → துறட்டுமுள் (வே.க. 268)]

துறட்டுவாதம் *turaṭṭu-vādam,* பெ. (n.) ஒட்டாரம்; obstinacy.

[துறட்டு + வாதம்]

துறட்டை *turaṭṭai,* பெ. (n.) ஆறு விரல நீளமும் சாம்பற் பச்சை நிறமுமுள்ள கடல்மீன் வகை; sea fish, greyish green, attaining about 6 in. in length.

துறடு *turaḍu,* பெ. (n.) துறட்டி *1,2,3,* பார்க்க; see *turaṭṭi.*

க. தொறடு

துறந்தார் *turandār,* பெ. (n.) பற்றறுத்தார்; ascetics, recluses, as having renounces the pleasures of the world. "துறந்தார் பெருமை துணைக்கூறின்" *(குறள், 22).*

[துற → துறந்தார்]

துறந்தோர் *turantōr,* பெ. (n.) துறந்தார் பார்க்க; see *turandār.* "துறந்தோர் தம்முன் முறவி யெய்தவும்" *(சிலப். 27, 95).*

[துறந்தார் → துறந்தோர்]

துறப்பணக்கோல் *tura-p-paṇa-k-kōl,* பெ. (n.) துறப்பணம் பார்க்க; see *tura-p-paṇam.*

[துறப்பணம் + கோல்]

துறப்பணம் *tura-p-paṇam,* பெ. (n.) துரப்பணம் பார்க்க; see *tura-p-paṇam.*

துறப்பணவலகு *tura-p-paṇa-v-alagu,* பெ. (n.) துறப்பணக் கோலிலுள்ள ஊசி; drill-bit.

[துறப்பணம் + அலகு]

துறப்பு[1] *turappu,* பெ. (n.) *1.* பிரிவு; separation, parting. *2.* துறவு பார்க்க; "துறப்பெனுந் தெப்பமே துணைசெயாவிடின்" *(கம்பரா. அயோத். மந்திர. 21).* "துறப்பஞ்சிக் கலுழ்பவள்" *(கலித். 10).*

[துற → துறப்பு (வே.க. 278)]

துறப்பு[2] *turappu,* பெ. (n.) *1.* பூட்டு (பிங்.); lock. *2.* திறவுகோல் (யாழ்.அக.); key.

[துற → துறப்பு (வே.க. 279)]

துறம் *turam,* பெ. (n.) துறவு பார்க்க; see *turavu.* "துறங்காட்டியெல்லாம் விரித்தாற் போலும்" *(தேவா. 19, 3).*

துறவர் *turavar,* பெ. (n.) துறவி பார்க்க; see *turavi.*

[துறவு → துறவர்]

துறவறம் *tura-varam,* பெ. (n.) *1.* பற்றறுநிலை; ascetic life. opp. to illaram. *2.* துறவிகளுக்கு வகுக்கப்பட்டுள்ள நெறிமுறை; the duties

enjoined on ascetics. "துறவறவியல் குறள்". துறவறமும் இல்லறமும் மனத்திலே (பழ.).

துறவன் *turavaṉ*, பெ. (n.) துறவி (பாண்டி.); ascetic.

[துறவு → துறவன்]

துறவி[1] *turavi*, பெ. (n.) துறவு பார்க்க; see *turavu*. "துறந்தோர் தம்முன் துறவியெய்தவும்" (சிலப். 27, 95). துறவிக்கு வேந்தன் துரும்பு (பழ.).

[துற → துறவு → துறவி (மு.தா. 54)]

துறவு *turavu*, பெ. (n.) 1. மந்தணம்; private affainrs, secrets. "உறவுகொண்டவரவர் துறவு கண்டேன்" (சீதக். 41). 2. வாய்ப்பான நிலை; favaourable juncture. "சோடாய் மரத்திற் புறவிரண்டிருந்திடத் துறவுகண்டே வேடுவன்" (குமரே. சத 85). 3. வெளியிடம்; open ground.

[துற → துறவு (வே.க. 278)]

துறவை *turavai*, பெ. (n.) 1. வெளியிடம்; open ground, plain. 2. வெளிப்படையானது; that which is open.

[துற → துறவை]

துறவோர் *turavōr*, பெ. (n.) முனிவர்; ascetics; reluses. "துறவோர்க்கொன் றீகலான்" (நாலடி 273).

[துறவு → துறவோர்]

துறு-த்தல் *turu-*, 11 செ.குன்றாவி. (v.t.) 1. திணித்தல்; to cram as food into the mouth. "வாயிலே சீரையைத் துறத்து" (ஈடு. 9, 9, 1). 2. அமுக்குதல்; to otuft, press or corwd into a bag or box. 3. அமைத்தல்; to place, set up. "விளக்கும் துறத்தனர்" (வீநாயகபு. 3, 13) (செ.அக.).

ம. துறு; க. துறுகு; தெ. துறுகு

[துறு → துறுத்து (பிவி.) துறத்தல் (வே.க. 258)]

துறு[3] *turu*, பெ. (n.) 1. நெருக்கம் (திவா); thickness, closeness, crowdedness. 2. உண்ணுகை; eating. 3. செம்பூரான்கால் (சது.); ironstone, laterite.

துறுகல் *turu-kal*, பெ (n.) 1. பாறை; rock. "வேழ மிரும்பிணர்த் துறகற் பிடிசெத்துத் தழூஉம்" (ஐங்குறு. 239). 2. நீர்க் காலடைக்குங் கல் (சது); stone to close the outlet of a channel. 3. குன்று; hillock. "துறுக லேறி" (குங்குறு. 210).

[துல் → துறு → துறுகல் (வே.க. 253)]

துறுட்டி *turuṭṭi*, பெ. (n.) சிற்றேலம் (மலை.); true cardamam.

துறுதுறுத்தவன் *turu-turuttavaṉ*, பெ. (n.) வேண்டாவினை அல்லது குறும்பு செய்து கொண்டேயிருப்பவன்; mischieve boy.

[துறு → துறுதுறு → துறுதுவத்தவன் (மு.தா. 561)]

துறுதுறுவெனல் *turu-turu-v-eṉal*, பெ. (n.) துறுதுறுவெனல் பார்க்க; see *turu-turu-v-eṉal*.

துறுப்புக்கூடு *turuppu-k-kūḍu*, பெ. (n.) தூற்றாப் பொலி (திவ். அமலனாதி. அவ. பக். 14); unvinnowed heap of grain.

[துருப்பு → துறுப்பு + கூடு]

துறுபடை *turu-paḍai*, பெ. (n.) நெருங்கிய போர்ப்படை (சேனை) (வின்.);squadron, as in close array.

[துறு + படை]

துறும்பு-தல் *turumbu-*, 5 செ.குன்றாவி (v.t.) துறுமு பார்க்க; "கொன்றையு நாகமுந் துறும்பு செஞ்சடை" (தேவா. 370, 5).

[துறுமு → துறும்பு → துறும்புதல் (வே.க. 253)]

துறுமல் *turumal*, பெ. (n.) 1. நெருக்கம்; being close, closeness. 2. திரட்சி (திவா.); globularity; roundness.

[துறு → துறுமு → துறுமல் (மு.தா. 89)]

துறுமு[1]**-தல்** *turumu*, 5 செ.கு.வி. (v.i.) நெருங்குதல்; to be close, corwded. "நறுமலர் துறுமி" (பெருங்.இலாவாண. 15, 6).

[துறு → துறுமு (மு.தா. 89)]

துறுமு[2]**-தல்** *turumu-*, செ.குன்றாவி. (v.t.) திரட்டுதல் (வின்.); to make round.

[துல் → துறுமு → துறுமு-. (மு.தா. 89)]

துறுவல் *turuval*, பெ. (n.) 1. நெருங்குகை (திவா.); thronging, rowding. 2. உண்கை (பிங்.); eating.

3. நுகர்ச்சி; enjoyment of the senses, experience. "துறுவற்கெல்லை யாதெனில்" (ஞானா. 34, 6).

[துறு → துறுவல்]

துறை *tuṟai,* பி.பெ. (n.prob.) 1. இடம்; place, location, situation, space, position. "அத்துறை யமலனும்" (ஞானா. 48, 2). 2. வழி; way, path, as of virtue or justice. "துறை திறம்பாமற் காக்கத் தோன்றினான்" (கம்பரா. வாலி. 74.) (தொல்.பொ. 56, உரை). 3. பகுதி; branch, section, category. "வீர ராயவர் புரிவதாண்மைத் துறையென லாயிற் றன்றே" (கம்பரா. வாலி. 82). 4. வழி; method, means. "துறையறிந்து காரியம் நடத்துகிறான்". 5. கடற்றுறை; seaport, harbour, roadstead. "துறைவளர் நாட்டொடு" (சீவக. 1618). 6. கடல்; sea. "துறைமுற்றிய துலங்கிருக்கை" (மதுரைக். 85). 7. ஆறு (திவா.); river. 8. வண்ணானொலிக் குமிடம்; place where washermen wash clothes. துறைச் சொல்லிளுரவராடை கொண்டொலிக்கு நின் புலைத்தி" (கலித். 72, 12). 9. நீர்த்துறை; ghat, bathing shut. "தண்புனற் றுருத்தியுந் தாழ்பூந் துறைகளும்" (மணி. 1, 65). 10. அவைகூடுமிடம் (வின்.); place of meeing, rendezvous. 11. நூல்; branch of knowledge. "மற்றைத் துறைகளின் முடிவும்" (கம்பரா. வாலி. 132). 12. அகமும் புறமும் பற்றிய தமிழ்ப் பொருட்கூறு; subject or theme in akam and puram. "தீந்தமிழின் துறைவாய் நுழைந் தனையோ" (திருக்கோ. 20). 13. ஒழுங்கு; proper arrangement, codification. "வேதந் துறை செய்தான்" (குமரபிர.சிதமிப. செய். 13). 14. பாவினத்தொன்று; a minor variety of any of the purckasses o verse, one of three parinam. 15. பாட்டுவகை (பிங்.); a kind of singing. 16. வரலாறு; history. "துறையெனக் கியாதெனச் சொல்லு சொல்லென்றான்" (கம்பரா. மீட்சி. 255).

[துறு → துறை (வே.க. 253)]

துறைக்காவல் *tuṟai-k-kāval,* பெ. (n.) துறைமுக முதலியவற்றிற் காவல்; watch or guard of a port; excise officer; military guard.

[துறை + காவல்]

துறைக்குறை *tuṟai-k-kuṟai,* பெ. (n.) ஆற்றிடைக்குறை; fit. "வண்டுறைக்குறை சேர்ந்தான்" (பாரத. சம்பவ. 6).

[துறை + குறை]

துறைகாட்டு-தல் *tuṟai-k-kāṭṭu-,* செ.கு.வி. (v.i.) வழிகாட்டுதல்; to lead the way put one in the way.

[துறை + காட்டு-.]

துறைகாரர் *tuṟaikārar,* பெ. (n.) கோயிற்கணக்கு முதலிய அலுவலர்; agents, accountants and other servants of a temple.

[துறை + காரர்]

துறைகூட்டு-தல் *tuṟaikūṭṭu-,* செகுன்றாவி. (v.tr) துறை முழுக்கை நிறைவு செய்தல்; to finish lurai-muḻukku.

[துறை + கூட்டு-.]

துறைச்சாதம் *tuṟai-c-cādam-,* பெ. (n.) 1. திருவிழாக் காலங்களில் நீர்த்துறையிற் கூடியுண்ணும் விருந்து; food eaten in company at a spring or in a river-bed on festive occassion. 2. கோயிலில் ஏற்பட்ட கட்டளை யுணவு; rice for which provision is made in a temple.

துறைச்சுவடி *tuṟai-c-cuvaḍi,* பெ. (n.) நீர்த் துறைகளிலிருந்து படிக்கப்படும் தொன்ம ஏடு; a purāṇa explained at or near a bathing ghat. "துறைச்சுவடிகளிலே எழுதியிட்டு வைத்தும்" (ஈடு. 6, 10, 10.)

[துறை + சுவடி]

துறைத்தோணி *tuṟai-t-tōṇi,* பெ. (n.) கரை கடத்துந் தோணி; ferry boat.

[துறை + தோணி]

துறைப்பாட்டு *tuṟai-p-pāṭṭu,* பெ. (n.) அகப் பொருட் புறப்பொருட்டுறைகளைக் குறித்து வருஞ் செய்யுள் (இலக். வி. 603, உரை); verse illustrating the minor themes in akam and puṟam.

[துறை + பாட்டு]

துறைப்பேச்சு *tuṟai-p-pēccu,* பெ. (n.) 1. கொச்சைப் பேச்சு; vulgar dialect, provin cialism. 2. நாட்டுமொழி; vernacular.

[துறை + பேச்சு]

துறைப்பொங்கல் *turai-p-poṅgal,* பெ. (n.) வண்ணார் தங்கள் துறையில் நடத்தும் பொங்கற் பண்டிகை; poṅgal ceremony of washermen performed at the washing place.

[துறை + பொங்கல்]

துறைபடி-தல் *turai-paḍi,* பெ. (n.) நீர் நிலைகளில் நீராடுதல்; to bath in a river. "நெடுமா லடியேத்தத் தூவித் துறை படியப் போயினாள்" *(சிலப். 18, 5).*

[துறை + படி-.]

துறைபெய்-தல் *turai-pey-,* செ.குன்றாவி. (v.t.) நீராடுவித்தல் *(யாழ்.அக.);* to path a person.

[துறை + பெய்-.]

துறைபோ-தல் *turai-po-,* செ.குன்றாவி. (v.t.) *1.* ஒரு (கல்வி) துறையில் முழுத் தேர்ச்சி பெறுதல்; to get knowledge in a specific field. *2.* எடுத்த கருமத்தில் வெற்றி; to get finished in an attempted affair.

[துறு → துறை → துறைபோ (வே.க. 253).]

துறைமாறு-தல் *turai-māru,* செ.குன்றாவி. (v.t.) *1.* வழிதவறுதல்; to mistake the proper course. *2.* முன்பயின்றதனைவிட்டு வேறுதொழிலிற் புகுதல்; to change an occupation or employment.

[துறை + மாறு-.]

துறைமுகக்குத்தகை *turai-muga-k-kuttagai,* பெ. (n.) பரிசிற்காரர் குத்தகை; rent of a ferry.

[துறைமுகம் + குத்தகை]

துறைமுழுக்கு *turai-mulukku,* பெ. (n.) துலை மாதத்தில் பெண்கள் ஆற்றில் சடங்கு முறையாக நீராடுகை; ceremonial river-bath of women in the month of Aippaci.

[துறை + முழுக்கு]

துறைமுன்றில் *turai-munril,* பெ. (n.) வீட்டின் முற்றமாகிய இடம்; courtyard of a house. "தோழியர் சூழத் துறைமுன்றி லாடுங்கால்" *(ஐந்.ஐம்.37).*

[துறை + முன்றில்]

துறையர் *turaiyar,* பெ. (n.) கோவை, சேலம் மாவட்டங்களில் வாழும் உழவர்களான கன்னட சாதியார்; a kannarese cultivating caste in coimbatore and salem district.

துறையார் *turaiyār,* பெ. (n.) கோயில் வேலைக்காரர்; temple servants *(செ.அக.).*

துறைவன் *turaivan,* பெ. (n.) நெய்தனிலத் தலைவன்; chief of a maritime tract. "தண்ணந் துறைவன்" *(ஐங்குறு. 158).*

துறோட்டி *turōtti,* பெ. (n.) துறட்டி பார்க்க *(யாழ்.அக.);* see *turatti.*

துன் *tun,* பெ. (n.) வளை; hole, cavity. "எலித்துன்" *(செந். 4, 213).*

[துல் → துன் (வே.க. 275).]

துன்பு *tunbu,* பெ. (n.) துன்பம் பார்க்க; see *tunbam.* "துன்புறு பொழுதினும்" *(தொல். பொ. 184).*

[துல் → துன் → துன்பு]

துன்புறுத்து-தல் *tunburuttu-,* செ.குன்றாவி (v.t.) வருத்துதல்; to cause suffering; to afflict.

[துல் → துன் → துன்பு + உறுத்து-.]

துன்மி-த்தல் *tunmi-,* 11 செ.குவி. (v.i.) வருந்துதல் *(யாழ்.அக.);* to suffer.

[துன்பு → துன்மி-.]

துன்மை *tunmai,* பெ. (n.) தீமை *(யாழ்.அக.);* harm, evil.

துன்று-தல் *tunru-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* நெருங்குதல்; to be close, thick, crowded together. "துன்றுக்கு நறுங்குஞ்சி" *(கம்பரா. குகப். 28).* *2.* கிட்டுதல்; to get near, approximate. *3.* பொருத்துதல்; to get attached; to lie. "கொன்றை மதியமுங் கூவிள மத்தமுந் துன்றிய சென்னியர்" *(திருவாச. 17: 10).*

[துல் → துன் → துன்னு → துன்று-. (வே.க. 252)]

துன்றுநர் *tunrunar,* பெ. (n.) நண்பர் *(திவா.);* friends, as being near.

[துன்று → துன்றுநர்.]

துன்னகாரர் *tunna-kārar,* பெ. (n.) தையற்காரர்; tailors. "துன்ன காரருந் தோலின் றுன்னரும்" *(சிலப். 5:32).*

[துன்னம் → துன்னகாரர்]

துன்னநாயகர் *tunna-nāyakar,* பெ. (n.) துன்னகாரர் (யாழ்.அக.) பார்க்க; see *tunnakārar.*

துன்னபோத்து *tunnapōttu,* பெ. (n.) உழவெருமை (வின்.); plough-buffalo.

துன்னம்[1] *tunnam,* பெ. (n.) 1. தையல்; seam, sewing, needle work. "இழைவலந்த பஃறுன்னத்து" *(புறநா. 136).* 2. ஊசித்துளை (பிங்); eye of a needle.

துன்னம்[2] *tunnam,* பெ. (n.) ஒரு வகை மரம்; a kind of tree.

துன்னம்பெய்-தல் *tunnam-pey-,1* செ.குவி. (v.i.) தைத்தலைக் கொள்ளுதல்; to be stitched, sewed. "துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது வென்னேடி" *(திருவாச. 12:2).*

[துன்னம் + பெய்-.]

துன்னர் *tunnar,* பெ. (n.) 1. தையற்காரர் (பிங்.); tailors. 2. தோல்வினை மாக்கள் (யாழ்.அக.); cobblers.

[துன் → துன்னர் (வே.க. 252).]

துன்னல்[1] *tunnal,* பெ. (n.) தையல்; sewing. "துன்னற் சிதாஅர் துவர நீக்கி" *(பொருந. 81).*

[துன் → துன்னல். துன்னல் = துளை]

E. tunnel. "tunnel = 1. Artificial Subterranean passage through hill etc., or under river etc., Subterranean passage dug by burrowing animal; mining a pit or level open at one end; main flue of chimney" [M.E. 5 of tonel, tonnelle, dim of tonne TUN] எருதந்துறைச் சிற்றகர முதலி C.O.D.) *(வே.க. 274).*

துன்னல்[2] *tunnal,* பெ. (n.) 1. நெருங்குகை; close together. "யாவருந் துன்னல் போகிய துணிவினோனென" *(புறநா. 23, 14).* 2. சிறு திவலை; small drops of water.

[துன்னு → துன்னல்]

துன்னலர் *tunnalar,* பெ. (n.) பகைவர்; foes, enemies. "துன்னினர் துன்னல ரென்பது சொல்லார்" *(கம்பரா. வேள்வி. 28).*

[துன்னு + அல் + அர்]

துன்னவாயன் *tunnavāyan,* பெ. (n.) தையற் காரன்; tailor.

[துன்னம் + வாயன்]

துன்னவினைஞர் *tunna-vinaiñar,* பெ. (n.) தையற்காரர்; tailors. "தோலின் றுன்னருந் துன்ன வினைஞரும்" *(மணிமே. 28:39).*

[துன்னம் + வினைஞர்]

துன்னாதார் *tunnātār,* பெ. (n.) துன்னார் பார்க்க; see *tunnār.*

[துன்னு + ஆ + தார். 'ஆ' எதிர்மறை]

துன்னார் *tunnār,* பெ. (n.) பகைவர்; foes-enemies. "தொல்லமருட் டுன்னாரைச் செற்றும்" *(கம்பரா. சரபங்க. 26).*

[துன் → துன்னார் (வே.க. 252)]

துன்னியார் *tunniyār,* பெ. (n.) நண்பர்; friends, relations, adherents. "மன்னர் திருவுமகளி ரெழினலமுந் துன்னியார் துய்ப்பர்" *(நாலடி., 167).*

[துன் → துன்னியார் (வே.க. 252)]

துன்னினர் *tunninar,* பெ. (n.) துன்னியார் பார்க்க; see *tunniyār.* "துன்னினர் துன்னல ரென்பது சொல்லார்" *(கம்பரா. வேள்வி. 28).*

[துன் → துன்னினர்]

துன்னீர் *tunnīr,* பெ. (n.) எச்சில்; spittle.

துன்னு[1]**-தல்** *tunnu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. பொருந்துதல்; to be fitted, joined, attached. 2. செறிதல் (திவா.); to be thick, crowded, to press close. "துன்னிக் குழை கொண்டு தாழ்ந்த குளிர்மரமெல்லாம்" *(நாலடி., 167).*

துன்னு[2]**-தல்** *tunnu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. அணுகுதல் (திவா.); to approach, approximate, adhere to. "யாவருந் துன்னல் போகிய துணிவினோன்" *(புறநா. 23).* 2. மேவுதல்; to join, to undertake. "இன்னா ... துன்னாமை வேண்டும் பிறன்கட்செயல்" *(குறள், 316).* 3. செய்தல்; to do.

"எனைத் தொன்றுந் துன்னற்க தீவினைப்பால்" *(குறள், 209).* 4. **அடைதல்;** to gain, reach, attain. "துன்னருஞ்சீர்" *(நாலடி, 226).* 5. **உசாவுதல்;** to consider, take counsel. "தொடைவிடைதுன்னி" *(பு.வெ. 8:19, உரை).*

[துல் → துன்னு-. (வே.க. 252)]

துன்னு[3]-தல் *tuṉṉu-,* 5 செ.குன்றாவி. (v.i.) **தைத்தல்;** to sew, stitch. "நீயிங்குடுத்திய கந்தையைத் துன்னுவா ரிலையே பரஞ்சோதியே" *(அருட்பா, 1, காட்சிப் பெரு. 4).*

[துல் → துன்னு-. (வே.க. 252)]

துன்னு[4]-தல் *tuṉṉu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **உழுதல்** *(செந். 4, 213);* to plough.

துன்னு[5] *tuṉṉu,* பெ. (n.) 1. **முதுகு** *(அகநி.);* back. 2. **சதை** *(வின்.);* flesh. 3. **இறைச்சி** *(வின்.);* meat.

[துன் → துன்னு]

துன்னுநர் *tuṉṉunar,* பெ. (n.) **துன்னியார்** *(திவா)* பார்க்க; see *tuṉṉiyār.*

துன்னூசி *tuṉ-ṉ-ūsi,* பெ. (n.) **தையலூசி;** needle, shoemaker's awl. "கொற்சேரி நுண்டுளைத் துன்னூசி விற்பாரின்" *(ஐந்ஐம். 21).* "கொழுச் சென்ற வழித் தூன்னூசி சென்றாற்போல" *(தொல்.சி. பாயி. நச். உரை).*

[துன் → துன்னு → துன்னூசி]

துன்னெலி *tuṉṉeli,* பெ. (n.) **வளை தோண்டும் எலிவகை** *(செந். 4, 213);* mole.

[துல் → துன் + எலி. துன் = வளை (வே. க. 275)]

துனாவி *tuṉāvi,* பெ. (n.) **திப்பிலி** *(மலை.);* long pepper.

துனி[1]-த்தல் *tuṉi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. **வெறுத்தல்;** to loath, abhor. "துனித்துநீர் துளங்கல் வேண்டா" *(சீவக. 745).* 2. **கலாய்த்தல்;** to be angry at, displeased with. "முனியார் துனியார்" *(ஆசாரக். 70).* 3. **நெடிது புலத்தல்;** to be sulky, as in a love-quarrel. "நாணின்றி வரினெல்லா துனிப்பேன்யான்" *(கலித். 67:16).*

[துல் → துன் → துனி-. (மு.தா. 226)]

துனி[2] *tuṉi,* பெ. (n.) 1. **வெறுப்பு;** disgust, dissatisfaction, loathing. "இனியறிந்தேனது துனியாகுதலே" *(கலித். 14).* 2. **சினம்;** anger, displeasure. "நான் முகனையும் படைப்ப னீண் டெனாத் தொடங்கிய துனியுறு முனிவன் றோன்றினான்" *(கம்பரா. கையடை. 3).* 3. **புலவிநீட்டம்;** protracted sulk in a love quarrel. "துனியும் புலவியு மில்லாயின்" *(குறள், 1306).* 4. **பிரிவு;** separation, as from a lover. "துனிசெய்து நீடினும்" *(கலித். 10).* 5. **துன்பம்;** affliction, sorrow, distress. "இனிதுறு கிளவியுந் துனியுறு கிளவியும்" *(தொல். பொருள். 303).* 6. **நோய்** *(சூடா.);* disease. 7. **கரிசு;** sin. "துனியினி துகவே" *(ஞானா. 43:32).* 8. **குற்றம்;** flaw. "துனியறு செம்மணி" *(கம்பரா. மந்தரை. 32).* 9. **இடையூறு;** obstacle, hindrance, trouble. "துனியின்றி யுயிர்செல்ல" *(கம்பரா. குலமுறை. 14).* 10. **வறுமை;** poverty. "சீருடைச் செல்வர் சிறுதுனி" *(குறள், 1010).* 11. **அச்சம்** *(வின்.);* fear, dread.

[துல் → துன் → துனி (மு.தா. 226)]

துனி[3] *tuṉi,* பெ. (n.) **ஆறு** *(சூடா.);* river.

துனிப்பு *tuṉippu,* பெ. (n.) **வெறுப்பு;** aversion, disgust. "துனிப்புறு கிளவியால்" *(சீவக. 1020).*

[துனி → துனிப்பு]

துனை-தல் *tuṉai-,* 2 செ.குவி. (v.i.) **விரைதல்;** to hasten. "கோதைக்குத் துனைந்து சென்றுரைப்ப" *(சிலப். 8:114).*

[துல் → துன் → துனை-. (மு.தா. 60)]

துனைவு *tuṉaivu,* பெ. (n.) **விரைவு;** quickness, celerity, suddenness, speed. "கதழ்வுந் துனைவும் விரைவின் பொருள" *(தொல். சொ. 315).*

[துல் → துன் → துனை → துனைவு (மு.தா. 60)]

தூ

தூ[1] *tū*, பெ. (n.) **தகர மெய்யும் ஊகார உயிரும் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து;** the compound of 't' and 'ū'.

[த் + ஊ - தூ]

'தூ' எழுத்துத் தமிழில் பெரும்பான்மையாக வழங்குவதில்லையாதலால் கல்வெட்டுகளில் அரிதாகவே காணப்படுகிறது.

'தூ' என்பது தூய்மை, வெண்மை, வன்மை, பற்றுக்கோடு, பகை, தசை, தூவி என்ற பொருளில் பெயராயும், இகழ்ச்சிக் குறிப்புப் போல இடைச்சொல்லாயும் வரும்.

ஓரெழுத்தொரு மொழியிலன்றி ஈற்றில் இது வாராது. 'வந்தூது' என்பது போலப் புணர்ச்சியின் பயனாகத் தொடர் மொழியிலும் 'என்பதூஉம்' என்பது போல அளபெடை எழுந்த சொல்லிலும் அன்றி மொழியிடையில் வாராது. மொழிக்கு முதலில் வரும்போது தூ, தூகு, தூசு, தூவு, தூங்கு, தூறு, தூது, தூம்பு, தூவி, தூண்டு, தூணி, தூள் முதலியவற்றின் அடியாகப் பிறந்த சொற்களன்றிப் பிற சொற்கள் எல்லாம் பிறமொழிச் சொற்களாம். (தெ.பொ.மீ. கலைக்களஞ்சியம்)

தூ[2] *tū*, பெ. (n.) *1.* **தூய்மை;** purity, cleanliness. "தூமலர் துவன்றிய" *(மலைபடு. 51).* **2. தூயது** *(பிங்.);* that which is pure. *3.* **வெண்மை;** brightness, whiteness. "தூமதி வாக்கிய கிரணம்" *(காஞ்சிப்பு. நாட்டு. 96).*

[தூய் (தூய்மை) → தூ]

தூ[3] *tū*, பெ. (n.) **வலிமை;** strength. "தூவெதிர்ந்து பெறாஅத்தாவின் மள்ள ரொடு" *(பதிற்றுப். 81:34).* **2. பற்றுக் கோடு;** support, prop. "இனந் தூய்மை தூவா வரும்" *(குறள். 455).* **3.** பகை *(பிங்.);* hostility, enmity.

[து → தூ (வ.மொ.வர.)]

தூ[4] *tū*, பெ. (n.) *1.* **இறைச்சி** *(பிங்.);* meat. "நெய்கொணிணந்து நிறைய வமைத்திட்ட . . . அடிசில்" *(பு.வெ. 10, முல்லை. 8).* **2. தசை;** flesh.

[துய் → தூ. துய் = உணவு, மென்மை]

தூ[5] *tū*, இடை. (int.) **இழிவையும் அருவருப்பையும் வெளிப்படுத்தும் சொல்;** an exclamation expressing one's disapproval and disgust. *தூ! நீயும் ஒரு பிறவியா?*

தூ[6] *tū*, பெ. (n.) **பறவையினிறகு;** feather, plumage. "தூவிரிய மலருழக்கி" *(திவ். பெரியதி. 3, 6:1).*

[தூவி → தூ]

தூக்கக்கலக்கம் *tūkka-k-kalakkam*, பெ. (n.) **தூக்கத்திலிருந்து விடுபடாத அல்லது தூக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை;** state of being not fully awake. *தூக்கக் கலக்கத்தோடு கதவைத் திறந்தான்.*

[தூக்கம் + கலக்கம்]

தூக்கங்கொள்(ளு)-தல் *tūkkaṅgoḷ(ḷ)u-*, 13 செ.குன்றாவி. (v.i.) **தூங்குதல்;** to sleep; to get sleep.

[தூக்கம் + கொள்-.]

தூக்கங்கொள்ளாமை *tūkkaṅkoḷḷāmai*, பெ. (n.) **தூக்கம் பிடியாமை;** sleeplessness.

[தூக்கம் + கொள்ளாமை]

தூக்கணக்கயிறு *tūkkaṇa-k-kayiṟu*, பெ. (n.) **ஆழமான நீருள் முக்குளிப்பவனை முக்குளிக்குங் காலத்துக் கட்டியிழுக்குங் கயிறு;** rope that holds a diver while he is under water.

[தூக்கணம் + கயிறு]

தூக்கணங்குரீஇ *tūkkaṇaṅgurīi*, பெ. (n.) **தூக்கணங்குருவி பார்க்க;** see *tūkkaṇaṅ-guruvi*. "தூக்கணங் குரீஇ . . . பெண்ணைத் தொடுத்த கூடினும்" *(குறுந். 374).*

தூக்கணங்குருவி *tūkkaṇaṅ-guruvi*, பெ. (n.) **மெல்லிய நாரால் சிறுசிறு அறைகளைக் கொண்டதாகத் தொங்கும் கூட்டைக் கட்டும் சிறிய சாம்பல் நிறப் பறவை;** weaver bird, ploceus baya, as building hanging nests. *தூக்கணங்குருவி குரங்கிற்கு அறிவுரை புத்தி சொன்னது போல (பழ.).*

[தூக்கணம் + குருவி]



உயர்ந்த மரவுச்சியில் இலைகளால் கூடு கட்டி அதில் தங்கும் இயல்புடைய பறவை.

தூக்கணம் *tūkkaṇam*, பெ. (n.) 1. தொங்கட்டான், தொங்கல் (வின்.); pendant, anything suspended. 2. உறி (சங்.அக.); suspended network of rope for supporting a pot. 3. தூக்கணங்குருவி (ஆசாரக். 96, உரை) பார்க்க; see *tūkkaṇaṅ-guruvi*. 4. தூக்கணக்கயிறு (யாழ்.அக.) பார்க்க; see *tūkkaṇana-k-kayiṟu*.

[தூக்கு → தூக்கணம்]

தூக்கணாங்குருவி *tūkkaṇāṅ-guruvi*, பெ. (n.) தூக்கணங்குருவி பார்க்க; see *tūkkaṇaṅguruvi*.

[தூக்கணம் + குருவி]

தூக்கணான் *tūkkaṇāṉ*, பெ. (n.) தூக்கணங் குருவி பார்க்க; see *tūkkaṇaṅ-guruvi*. "தூக்கணான் குஞ்சு" (விறலிவிடு. 632).

[தூக்கணம் → தூக்கணான்]

தூக்கந்தெளி-தல் *tūkkandeḷi-*, 4 செ.குவி. (v.i.) தூக்கத்தினின்று விழித்தல்; waking from sleep.

[தூக்கம் + தெளி-.]

தூக்கநடையன் *tūkka-naḍaiyaṉ*, பெ. (n.) 1. தூங்கிக்கொண்டே நடப்போன்; a person who walks in his sleep; sleep walker. 2. தூக்கத்தில் எழுந்து நடப்பவன்; a night walker.

[தூக்கம் + நடையன்]

தூக்கம்[1] *tūkkam*, பெ. (n.) 1. மெய்மறந்து, மனத்தின் செயலற்று இறந்தவனைப் போல் கிடக்கச் செய்யும் ஒரு நிலைமை, உறக்கம்; sleep, drowsiness, sleeping. "பெண்ணென்றாற் றூக்கம் பிடியாது" (அருட்பா. I, விண்ணப்பக்கலி. 343). 2. அயர்வு (யாழ்.அக.); fatigue, weariness. 3. சோம்பு (யாழ்.அக.); laziness, lassitude, dullness. 4. வாட்டம்; drooping, as of plants. 5. முகச்சோர்வு; downcast, dejected countenance. 6. விலைபோகாமலிருக்கும் நிலை; lowness of price absence of demand; dullness of market. இந்தச் சரக்குகளுக்கு இப்போது தூக்கந்தான் (இ.வ.). 7. காற்று முதலியவற்றின் தணிவு; cessation; mitigation; abatement, as of wind; subsidence, as of fever. "ஆனித் தூக்கம்" (யாழ்.அக.). 8. கால நீட்டிக்கை; delay. "தூக்கங் கடிந்து செயல்" (குறள், 668). 9. அணிகலத் தொங்கல் (பிங்.); pendants in jewels. "பொன்னின் கொடித் தூக்கத்தில் தலையில் தைச்ச பூப்பதினாறு" (S.I.I.ii,5). 10. ஒருவகை மாலை; a kind of garland. "பூவும் பட்ட மாலையுந் தூக்கமு மலங்கரித்து" (பதினொ. கண்ணப்ப. மறம். நக்கீர. 53). 11. ஒப்பனைத் தொங்கல்; ornamental hanging. "தூக்கங்கள் . . . விளங்க" (சிவரக. சுகமுனி. 9). 12. நான்கு உருளைகொண்ட சட்டத்தின் மேல் நாட்டிய துலாத்திலிருந்து கையில் குழந்தையை யுடைய மாந்தனொருவனைத் தொங்கவிட்டுக் காளிகோயிலைச் சுற்றி மும்முறை இழுப்பிக்கும் சடங்கு (நாஞ்.); a vow by which a person with a child in his arms is suspended from a pole mounted on a four-wheeled contrivance and drawn thrice round a Kāli temple. 13. காதணி வகை (யாழ்.அக.); a kind of ear-ornament. 14. தூக்கணங்குருவி (அக.நி.) பார்க்க; see *tūkkaṇaṅ-guruvi*.

[தூங்கு → தூக்கம்]

தூக்கம்[2] *tūkkam*, பெ. (n.) 1. நிறுப்பு; weighing. "தூக்கம் ஒன்றுக்கு பண இடை பத்தக தூக்கம் இருபது" (S.I.I. ii, 339). 2. விலையேற்றம்; rise price. 3. உயரம் (உரிநி.); height.

[தூக்கு → தூக்கம் (மு.தா.)]

தூக்கம்பிடி-த்தல் *tūkkam-piḍi-*, 4 செ.குவி. (v.i.) உறக்கங் காணுதல்; to feel sleepy (சா.அக.).

[தூக்கம் + பிடி-.]

தூக்கம்விடு-தல் *tūkkam-viḍu-*, 20 செகுவி. (v.i.) *1.* தூக்கம் தெளிதல்; to wake from sleep. *2.* ஒப்பனைத் தொங்கல் கட்டுதல் (வின்.); to put up hanging or festoons; to make ornamental hanging-work in metal, in masonry, in carving etc.

[தூக்கம் + விடு-.]

தூக்கமயக்கம் *tūkka-mayakkam*, பெ. (n.) தூக்கத்திற்கு முன்பாக அடிக்கடி கொட்டாவி விட்டு, சோம்பல் கொள்ளும் நிலைமை; yawning frequently and feeling drowsy indicative of sleep-ocitation (சா.அக.).

[தூக்கம் + மயக்கம்]

தூக்கமருந்து *tūkka-marundu*, பெ. (n.) தூக்கத்தை உண்டாக்கும் மருந்து; medicine or drugs causing sleep.

[தூக்கம் + மருந்து]

தூக்கமில்லாமை *tūkkam-illāmai*, பெ. (n.) தூக்கம் வாரா நோய்; insomnia.

[தூக்கம் + இல்லாமை]

தூக்கமூட்டி *tūkka-mūṭṭi*, பெ. (n.) தூக்கம் வரும்படி செய்யும் மருந்து; any medicine or drug inducing sleep-Narcotic.

[தூக்கம் + ஊட்டி]

தூக்கமெழுப்பி *tūkkam-eḻuppi*, பெ. (n.) *1.* தூக்கத்தை உண்டாக்கும் மருந்து; drug which induces sleep - Narcotic. *2.* மூளையைத் தாக்காமலே தூக்கத்தை உண்டாக்குவது; hypnotic.

[தூக்கம் + எழுப்பி]

தூக்கல் *tūkkal*, பெ. (n.) *1.* விலை முதலிய வற்றின் ஏற்றம்; rise, increase, as in price. *2.* உயரம்; height. *3.* நிறுக்கை; weighing. *4.* தூக்குகை; lifting. *5.* நேராகத் தூக்குகை; carrying straight.

[தூக்கு → தூக்கல்]

தூக்கானந்தம் *tūkkāṉandam*, பெ. (n.) தாளமமைத்து இசையிற்பாடும் போது பெயரைப் பிளந்து கூறுதலாலும்குரலை உயர்த்திடுதல் தாழ்த்திடுதல் களாலும் தலைவன் பெயர் புலனாகாதவாறு அமைக்குங் குற்றம் (யாப். வி. 96, பக். 522); a defect in singing with accompaniment, in which the hero's name is made unintelligible by raising or lowering the voice, etc.

[தூக்கு + ஆனந்தம்]

தூக்கிக்கொடு-த்தல் *tūkki-k-koḍu-*, 4 செ.குவி. (v.i.) கேள்வி கேட்காமல், தயக்கம் இல்லாமல் கேட்டதை உடனடியாகத் தருதல்; gift away; give on a platter. யாரென்றுகூடப் பார்க்காமல் தூக்கிக் கொடுத்து விட்டான்.

[தூக்கி + கொடு-.]

தூக்கிட்டு *tūkkiṭṭu*, வி.எ. (adv.) தூக்குப் போட்டு; commit suicide by hanging. பெண்ணொருத்தி தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டாள்.

[தூக்கு + இட்டு]

தூக்கித்தூக்கிப்போடு-தல் *tūkki-t-tūkki-p-pōḍu-*, 20 செகுவி. (v.i.) *1.* மேடு பள்ளத்தில் வண்டி ஏறி இறங்கும்போது ஊர்ந்து செல்பவரை இருக்கையில் உட்காரவிடாமல் ஆட்டுதல்; jolt while travelling on a bad road. பேருந்தின் இறுதியில் உள்ள இருக்கையில் உட்காராதே; தூக்கித் தூக்கிப்போடும். *2.* குளிர்காய்ச்சலால் உடம்பு துள்ளி மேலெழுதல்; shiver severly due to fever. காய்ச்சல் அதிகமானதால் உடல் தூக்கித் தூக்கிப் போடுகிறது.

[தூக்கி + தூக்கி + போடு-.]

தூக்கிநிறுத்து-தல் *tūkki-niṟuttu-*, 5 செ.குவி. (v.i.) வணிகம், அரசியல், குடும்பம் முதலிவற்றில் சரிவு நிலையைத் தடுத்து ஒரு நிலைக்குக் கொண்டு வருதல்; bolster; baleout. நடந்து முடிந்த இடைத் தேர்தல் வெற்றிதான் ஆட்சியைத் தூக்கி நிறுத்தியது. 'தூக்கி நிறுத்தடா பிணக்காடாய் வெட்டுகிறேன்' (பழ.).

[தூக்கி + நிறுத்து-.]

தூக்கிப்பிடி¹-த்தல் *tūkki-p-piḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* எடுத்து நிறுத்துதல்; to uphold, set erect, as a person. *2.* நுணுகிக் குற்றங் காணுதல் (வின்.); to hunt out trival faults.

[தூக்கி + பிடி-.]

தூக்கிப்பிடி²-த்தல் *tūkki-p-piḍi-*, 4 செ.கு.வி. (v.i.) கஞ்சத்தனமாயிருத்தல் (உ.வ.); to be niggardly.

[தூக்கி + பிடி-.]

தூக்கிப்பிடி³-த்தல் *tūkki-p-piḍi-*, 4 செ.கு.வி. (v.i.) *1.* இழுத்துப்பிடித்தல்; stretching as nerves in spasmotic contraction. *2.* எழுப்பிப் பிடித்துக் கொள்ளுதல்; lifting and holding up as a sickman.

[தூக்கி + பிடி-.]

தூக்கிப்போடு-தல் *tūkki-p-pōḍu-*, 19 செ.குன்றாவி (v.t.) *1.* திடுக்கிடுமாறு செய்தல்; to startle, upset; to alarm. "அந்தச் செய்தியைக் கேட்டதும் அது என்னைத் தூக்கிப் போட்டது". *2.* வெளியில் எடுத்து விடுதல்; to take out, extract. "நீரில் விழுந்த அவனைத் தூக்கிப் போட்டான்" *3.* தூக்கு (மரண) தண்டனையாகத் தூக்கிலிட்டு விடுதல்; to execute by hanging. *4.* கோட்சொல்லிச் சண்டை மூட்டுதல்; to set persons by the ears.

[தூக்கி + போடு-.]

தூக்கியடி-த்தல் *tūkki-y-aḍi-*, 4 செ.குன்றாவி (v.t.) *1.* தான் மேம்பட்டுப் பிறனைப் பின்வாங்கச் செய்தல்; to get the better of, excel. அவன் எந்த நிலையிலும் இவரைத் தூக்கியடிக்கிறான். *2.* மற்போரில் அசட்டையாக (அலட்சியமாக) தோல்வியுறச் செய்தல்; to over throw with case in wrestling.

[தூக்கி + அடி-.]

தூக்கியெறி-தல் *tūkki-y-eṟi*, 3 செ.குன்றாவி (v.t.) *1.* விலக்குதல்; to refuse to accept. மக்கள் கிளர்ந்தெழுந்து ஆட்சியைத் தூக்கியெறிந்தனர். *2.* தூக்கியடி-. பார்க்க; see *tūkki-y-aḍi-*. *3.* அசட்டை பண்ணுதல்; to disregard, treat with insolvence or impertinence.

[தூக்கி + எறி-.]

தூக்கிரும்பு *tūkkirumbu*, பெ. (n.) இரும்புத் துறட்டி (வின்.); iron crook.

[தூக்கு + இரும்பு]

தூக்கில்போடு-தல் *tūkkil-pōḍu-*, 19 செ.கு.வி. (v.i.) தூக்கு (சுருக்கு)க் கயிற்றைக் கழுத்திலிறுக்கி இறக்கச் செய்தல்; hang to death. குற்றவாளியின் உயிர் பிரியும் வரை தூக்கில்போடத் தீர்ப்பாயிற்று.

[தூக்கில் + போடு-.]

தூக்கிலி *tūkkili*, பெ. (n.) ஆராய்ந்து பார்க்காதவன் (ஆலோசனையில்லாதவன்); thoughtless person. "தூக்கிலி தூற்றும் பழி" (கலித். 63).

[தூக்கு → தூக்கிலி]

தூக்கிலிடு-தல் *tūkkil-iḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) தூக்கில்போடு-தல் பார்க்க; see *tūkkil-pōḍu-*.

[தூக்கில் + இடு-.]



தூக்கிவிடு-தல் *tūkki-viḍu*, 18 செ.குன்றாவி. (v.t.) *1.* மேலுயர்த்துதல்; to lift up; to clevate. *2.* உதவிபுரிந்து காத்தல்; to save from danger or ruin, help in emergency. *3.* தூண்டிவிடுதல்; to stir up, instigate. *4.* தூக்கிலிடு பார்க்க; see *tūkkil-iḍu*.

[தூக்கு → தூக்கி + விடு-.]

தூக்கிவாரிப்போடு-தல் *tūkki-vāri-p-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) ஒரு நிகழ்வின் அல்லது செய்தியின் எதிர்பாராத கடுமையான தன்மையால் அதிர்ச்சி அடைதல்; be startled.

நண்பர் திடீரென்று இறந்ததும் தூக்கி வாரிப் போட்டது.

[தூக்கு + வாரிப்போடு-.]

தூக்கு[1]-தல் *tūkku-,* 5 செ.குன்றாவி. (v.t.) **உயர்த்துதல்;** to lift, lift up, raise, take up, hold up; to hoist, as a flag. "மூட்டுறு கவரி தூக்கி யன்ன" *(அகநா. 156).* மேசையைத் தூக்கி வை. 2. **நிறுத்துதல்;** to weigh, balance. "செம்பொன் தூக்கி" *(திருவிளை. மாணிக்க. 84).* 3. **ஆராய்ச்சி செய்தல்;** to consider, reflect, investigate. "துணைவலியுந் தூக்கிச் செயல்" *(குறள், 471).* 4. **ஒப்பு நோக்குதல்;** to compare. "அமரரோ டசுரர் போரைத் தூக்கினர் முனிவர்" *(கம்பரா. நாகபாச. 52).* 5. **மனத்திற் கொள்ளுதல்;** to have in view; to expect. "சிறியதோர் பயனைத் தூக்கித் தீயவர் செய்யுஞ் சூழ்ச்சி" *(கந்தபு. கயமுகனுற். 64).* 6. **தொங்க விடுதல்;** to hang suspend. "மறுகு விளக்குறுத்து மாலை தூக்கி" *(அகநா. 141).* 7. தூக்கிலிடு பார்க்க; see *tūkkil-iḍu.* "அக்குற்றவாளியைத் தூக்கினார்கள்". 8. **கை கொடுத்துதவுதல்;** to lift up, as one from a pit; to lend a helping hand. 9. **நங்கூரம் வலித்தல்** (வின்.); to weigh anchor. 10. **அசைத்தல்;** to shake, agitate, cause motion. "வாடை தூக்க வணங்கிய தாழை" *(கலித். 128).* 11. **தாங்கும் வலியிலதாகச் செய்தல்;** to take by storm; to overpower, as a strong sweet smell. வாசனை ஊரைத் தூக்குகிறது *(உ.வ.).* 12. **ஒற்றறுத்தல்** (பு.வெ. 7: 18); to set to time-measure.

[தாங்கு + தூக்கு]

தூக்கு[2] *tūkku,* பெ. (n.) 1. **தொங்கற் பொருள்;** pendant, anything suspended. "சல்லியுந் தூக்குமாக விட்ட முத்தமிழ் மாலை" *(சீவக. 1170, உரை).* 2. **உறி** (பிங்.); suspended net-work of rope supporting a pot. 3. **சுவடித் தூக்கு;** satchel, hanging frame for holding ola books. 4. **மாட்டற் கொக்கி;** hook or rope to suspend anything; cord for carrying a parcel. 5. தூக்குமரம் பார்க்க; see *tūkkumaram.* 6. **நிறைகோல்** (பிங்.); balance. 7. **துலையோரை;** libra in the zodiac. 8. தூக்குக்கோல் பார்க்க; see *tūkku-k-kōl.* 9. **எடை** (அக.நி.); weight. 10. **ஐம்பது பலம்;** a bazaar weight = 50 palams. 11. **100 பலம்** (பிங்.); standard weight = 1 tuḷām - 100 palams. 12. **கைத்தூக்குப் பண்டம்;** anything carried by hand, as in a basket. 13. **காத்தண்டு** (திவா.); yoke, piece of timber shaped to fit a persan's shoulders and support pail, etc., at each end. 14. **தூக்குமட்டப் பலகை;** wooden frame of a plumb line. 15. **தூக்கு நூல்** (வின்.); plumb line. 16. தூக்கணங்குருவி (அக.நி.) பார்க்க; see *tūkkaṇāṅguruvi.* 17. **உயர்ச்சி** (திவா.); height. 18. **ஏற்றம்;** rise, as in prices. விலை தூக்காயிருக்கிறது. 19. **செங்குத்து;** perpendicularity, steepness. "மடையிலிருந்து தண்ணீர் தூக்காகப் பாய்கிறது" *(தண்டி. 33).* 20 **ஒப்பு;** comparison, similitude. 21. **ஆராய்ச்சி** (சூடா. 11:9); deliberation, weighing in the mind, pondering. "தூக்கிலி தூற்றும் பழியெனை" *(கலித். 63).* 22. **செய்யுள்** (திவா.); poem. "மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினும்" *(நன்.53).* 23. **பாக்களைத் துணிந்து நிறுக்குஞ் செய்யுளுறுப்பு** (தொல்.பொருள். 313); a pause which helps in determining the metrical nature of a verse. 24. **கூத்து** (திவா.); dancing. 25. **இசை;** music. "பாணிநடை தூக்கு" *(பு.வெ. 12, வென்றிப். 17).* 26. **செந்தூக்கு, மதலைத் தூக்கு, துணிபுத் தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத் தூக்கு, கழாற்றூக்கு, நெடுந் தூக்கு என்று எழு வகைப்படும் தாளவகை** (சிலப், 14:150, உரை); a musical mode, of which there are seven kinds according to tāḷam, viz., sen-tūkku, matalai-t-tūkku, tuṇipu-t-tūkku, kōyiṟṟūkku; nivappu-t-tūkku, kaḻāṟṟūkku, nedundūkku. 27. **தாளத்தில் இரண்டு மாத்திரைக் காலம்** (சிலப். 3:16, உரை); a variety of time-measure consisting of two mātras, corresponding to kuru. 28. **ஆசிரியர்** (அக.நி.); guru.

[தாங்கு + தூக்கு]

தூக்கு[3] *tūkku,* பெ. (n.) **மேற்புறம் வளைவான பிடியுள்ள உருண்டை வடிவச் சிறு வாளி;** a vessel with an arch-shaped handle. தூக்கும் பணமும் கொடுங்கள், எண்ணெய் வாங்க.

[தாங்கு → தூக்கு]



தூக்குக்கயிறு *tūkku-k-kayiṟu,* பெ. (n.) கழுத்தை இறுக்கிக் கொல்லும் சுருக்குப் போடப்பட்ட கயிறு; rope with a sling; noose for hanging. தூக்குப் போடும்போது தூக்குக் கயிறு அறுந்து விட்டது.

[தூக்கு + கயிறு]

தூக்குக்குண்டு *tūkku-k-kuṇḍu,* பெ. (n.) நூற் குண்டு; plumb line.

[தூக்கு + குண்டு]



தூக்குக்கோல் *tūkku-k-kōl,* பெ. (n.) நிறுக்குந் துலைக் கோல் வகை (பிங்.); steelyard.

[தூக்கு + கோல்]



தூக்குங்கோல் *tūkkuṅ-gōl,* பெ. (n.) தூக்குக்கோல் பார்க்க; see *tūkku-k-kōl.*

[தூக்கு + கோல்]

தூக்குச்சட்டி *tūkku-c-caṭṭi,* பெ. (n.) குழம்பு முதலியன பகிர்ந்தளிக்கும் ஏன வகை; a kind of vessel with handle and tip for distributing sauce, etc.,

[தூக்கு + சட்டி]

தூக்குணி *tūkkuṇi,* பெ. (n.) 1. தூக்குண்டவன் (வின்.); malefactor who is hanged. 2. மான மற்றவன்; shameless person. "பண்பு நீதியறியாத தூக்குணிப் பள்ளன்" (பறாளை, பள்ளு). 3. தூக்குக்கு அஞ்சாதவன் (வின்.); one so vile and daring as not to fear hanging. 4. சாப்பாட்டுக்குத் தொங்குகிறவன் (வின்.); one who hangs about to get food.

[தூக்கு + உண் - தூக்குண் → தூக்குணி]

தூக்குத்தண்டனை *tūkku-t-taṇḍaṉai,* பெ. (n.) தூக்கிலிட்டுக் கொல்லுமாறு முறைமன்றம் வழங்கும் தண்டனை; sentence of death by hanging.

[தூக்கு + தண்டனை]

தூக்குத்தலரிசி *tū-k-kuttal-ariśi,* பெ. (n.) நன்றாகக் குத்தித் தூய்மை செய்த அரிசி (S.I.I. iv, 177); well-polished rice.

[தூ + குத்தல் + அரிசி]

தூக்குத்தூக்கி *tūkku-t-tūkki,* பெ. (n.) சுவடித் தூக்கைத் தூக்குபவன்; satchel-bearer.

[தூக்கு + தூக்கி]

தூக்குநாசி *tūkku-nāśi,* பெ. (n.) 1. கடல் மீன் வகை; a kind of sea fish. 2. பசிய நிறமுள்ளதும் 22 விரலம் வளர்வதுமான கடல் மீன் வகை; a kind of sea fish, greenish, attaining 22 in. in length.

[தூக்கு + நாசி]

தூக்குநூல் *tūkku-nūl,* பெ. (n.) சுவரின் ஒழுங்கறியும் நூற்கயிறு; plumb line.

[தூக்கு + நூல்]



தூக்குப்பரிசை *tūkku-p-parišai,* பெ. (n.) ஒரு கையால் தூக்கும் அளவு (யாழ். அக.); weight that can be lifted by a single-hand.

[தூக்கு + பரிசை]

தூக்குப்பாலம் *tūkku-p-pālam,* பெ. (n.) வழிவிடுவதற்காகப் பிரிந்து உயரே எழும்பிப் பின் இணையக்கூடிய பாலம்; draw bridge படகுக்கு வழி விடுவதற்காகத் தூக்குப்பாலம் தூக்கப்பட்டது.

[தூக்கு + பாலம்]



தூக்குப்போடு-தல் *tūkku-p-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) தூக்கில்போடு-தல் பார்க்க; see *tūkkil-pōḍu-*. 2. தூக்குக் கயிற்றில் தொங்குதல்; hang. அவமானம் தாங்காமல் தூக்குப்போட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

[தூக்கு + போடு-]

தூக்குபாலம் *tūkku-pālam,* பெ. (n.) தோணிகளாலியன்ற மிதவைப் பாலம் (வின்.); floating bridge, pamtoon bridge.

[தூக்கு + பாலம்]

தூக்குமரம் *tūkku-maram,* பெ. (n.) தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதற்காக அமைந்த மரம்; gallows.

ம. தூக்குமரம்

[தூக்கு + மரம்]

தூக்குமாலை *tūkku-mālai,* பெ. (n.) கோயில் ஊர்திகளில் தொங்கவிடுவதற்குரிய மாலை வகை; garlands hung in temple-vehicles, etc.

[தூக்கு + மாலை]

தூக்குமூக்குத்தி *tūkku-mūkkutti,* பெ. (n.) மூக்குத்தி வகை; a kind of nose-ornament. "தூக்குமூக்குத்தி தூங்காக் குமிழையு நின்மூக்குக் குவமை சொன்னால் முத்தமிழோர்க் கொவ்வாதே" (கூளப்ப.).

[தூக்கு + மூக்குத்தி]

தூக்குமேடை *tūkku-mēḍai,* பெ. (n.) தூக்குத் தண்டனை நிறைவேற்றும் இடம்; platform with gallows. நாட்டு விடுதலைக்காகப் பலர் தூக்குமேடை ஏறினர்.

[தூக்கு + மேடை]



தூக்குருண்டை *tūkkuruṇḍai,* பெ. (n.) தூக்குநூல் பார்க்க; see *tūkku-nūl.*

[தூக்கு + உருண்டை]

தூக்குவண்டி *tūkku-vaṇḍi,* பெ. (n.) வண்டி வகை (புதுவை.); a kind of carriage.

[தூக்கு + வண்டி]

தூக்குவாங்கு-தல் *tūkku-vāṅgu-,* 5 செகுன்றாவி. (v.t.) தூக்குப்போடு-தல் பார்க்க; see *tūkku-p-pōḍu-.*

[தூக்கு + வாங்கு-]

தூக்குவாளி *tūkku-vāḷi,* பெ. (n.) உணவு பொருள்களைப் பகிர்ந்தளிக்கப் பயன்படும் வாளி போன்ற அமைப்புடைய சிறிய ஏனம்; see *tūkku-vāḷi.*

[தூக்கு + வாளி]



தூக்குவிளக்கு *tūkku-viḷakku,* பெ. (n.) தொங்கு விளக்கு; hanging lamp.

ம. தூக்குவிளக்கு

[தூக்கு + விளக்கு]



தூகம் *tūgam,* பெ. (n.) புளிநரளை *(மலை.);* bristly trifoliate vine.

தூகு-தல் *tūgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) திருவலகிடுதல்; to sweep. "கோமானின் றிருக்கோயி றூகேன் மெழுகேன்" *(திருவாச. 5: 14).*

[தூய் → தூகு-.]

தூகை *tūgai,* பெ. (n.) பாளை; flower sheath or spatha of areca; coconut, etc. *(சா.அக.).*

தூங்கணங்குரீஇ *tūṅgaṇaṅ-gurīi,* பெ. (n.) தூக்கணங்குருவி பார்க்க; see *tūkkaṇaṅ-guruvi.* "ஓங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த தூங்கணங்குரீஇக் கூட்டுள சினையே" *(இறை. 9, உரை.).*

தூங்கணம் *tūṅgaṇam,* பெ. (n.) *1.* தொங்கல் *(சங்.அக.);* pandant, hanging. *2.* தூக்கணங்குருவி பார்க்க; see *tūkkaṇaṅguruvi.* "நந்தெறும்பு தூங்கணம்புள்" *(ஆசாரக். 97).*

[தூங்கு → தூங்கணம்.]

தூங்கணி *tūṅgaṇi,* பெ. (n.) தொங்கலணி வகை *(வின்.);* jewel formed of hanging globules of gold and precious stones.

[தூங்கு + அணி.]

தூங்கமளி *tūṅgamaḷi,* பெ. (n.) ஊஞ்சற் கட்டில்; swinging cot. "தோளி னாற்றிய தூங்கமளி" *(கம்பரா. ஊர்தேடு. 176).*

[தூங்கு + அமளி]

தூங்கமுட்டு *tūṅga-muṭṭu,* பெ. (n.) கோரைக் கிழங்கு வகை *(மலை.);* root of Cyperus juncifolius.

தெ. துநகமுட்டி

[தூங்கு + முட்டு]

தூங்கல் *tūṅgal,* பெ. (n.) *1.* தொங்கல்; pandant, hanging. *2.* தூக்கமயக்கம்; drowsiness, light sleep. "தூங்கலோங்கு நடை" *(முல்லைப். 53). 3.* சோம்பு; dullness. *4.* சோர்வு; depression. "தூங்கலி னுருவினைச் சொல்லின்" *(கம்பரா. சடாயுயிர். 27). 5.* உணவுக்குத் தொங்குவோன்; one who hangs about for food. *6.* யானை; elephant. *7.* துலை; balance. *8.* தாழ்கை; lowness. *9.* நெருங்குகை; closeness. *10.* கூத்து; dancing. "தூங்கலோசை தழைப்பன சாரலெங்கும்" *(இரகு. நாட்டுப். 50). 11.* வஞ்சியோசை; the slow measure of vañji metre *(காரிகை, செய். 1).*

[தூங்கு → தூங்கல்.]

தூங்கல்வண்ணம் *tūṅgal-vaṇṇam,* பெ. (n.) வஞ்சியோசை பயின்று வருஞ்சந்தம்; a rhythm effected by introducing vañji verse "தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்" *(தொல். பொருள். 542).*

[தூங்கல் + வண்ணம்]

தூங்கலன் *tūṅgalaṉ,* பெ. (n.) சோம்பன் *(யாழ்அக);* lazi man.

[தூங்கல் → தூங்கலன்]

தூங்கலாளி *tūṅgal-āḷi,* பெ. (n.) தூங்குமூஞ்சி *(யாழ்அக)* பார்க்க; see *tūṅgu-mūñji.*

[தூங்கல் + ஆளி]

தூங்கலோசை *tūṅgal-ōšai,* பெ. (n.) வஞ்சிப் பாவிற்குரிய ஓசை; rhythm peculiar to vañji verse "தூங்கலோசை வஞ்சியாகும்" *(தொல். பொருள். 396).*

[தூங்கல் + ஓசை.]

தூங்காமை *tūṅgāmai,* பெ. (n.) செயலில் சோர்வின்மை; vigilance. "தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்றும்" *(குறள், 383).*

[தூங்கு + ஆ - தூங்கா → தூங்காமை.]

தூங்காவிளக்கு *tūṅgā-viḷakku,* பெ. (n.) திருநந்தா விளக்கு *(வின்.);* perpetual lamp that is burning near an idol.

[தூங்கா + விளக்கு]

தூங்கானைமாடம் *tūṅgāṉai-māḍam,* பெ. (n.) விழுப்புரம் மாவட்டம் பெண்ணாகடத்தில் உள்ள சிவன் கோயில் *(தேவா. 937);* a Šiva shrine at Peṇṇākaḍam in Viḻupuram district.

தூங்கிசம் *tūṅgišam,* பெ. (n.) அழிவு; ruin. "அடைத்த கல்லைத் தூங்கிசமாக" *(இராமநா. கிட். 17).*

[தூங்கு → தூங்கிசம். தூங்கு = தூக்கத்தால் அல்லது சோம்பலால் ஏற்படும் அழிவு]

தூங்கிசை *tūṅgišai,* பெ. (n.) செய்யுட்குரிய நால்வகையோசையுள் ஒன்று; a kind of poetic rhythm, one of four išai.

[தூங்கு + இசை.]

தூங்கிசைச்செப்பல் *tūṅgišai-c-ceppal,* பெ. (n.) இயற்சீர் வெண்டளையான் மாமுன் நிரையும் விளமுன் நேருமாக வரும் வெண்பாவுக்குரிய ஓசை *(காரிகை, செய். 1, உரை);* a rhythm of veṇpā metre effected when nirai follows mā and nēr follows viḷam.

[தூங்கிசை + செப்பல்]

தூங்கிசைத்துள்ளல் *tūṅkišai-t-tuḷḷal,* பெ. (n.) கலிப்பாவுக்குரிய ஓசை வகை *(யாழ்அக.);* a rhythm of kali-p-pā metre.

[தூங்கிசை + துள்ளல்]

தூங்கிசையகவல் *tūṅkišai-y-agaval,* பெ. (n.) நிரையொன்றாசிரியத் தளையான் வரும் அகவற்பாவுக்குரிய ஓசை *(காரிகை, செய். 1, உரை);* a rhythm of akaval metre.

[தூங்கிசை + துள்ளல்]

தூங்கிவழி-தல் *tūṅgi-vaḻi-,* 2 செ.கு.வி. (v.i.) தூங்கிவிழு-தல் பார்க்க; see *tūṅgi-viḻu-.*

[தூங்கு → தூங்கி + வழி-.]

தூங்கிவிழு-தல் *tūṅgi-viḻu-,* 2 செ.கு.வி. (v.i.) *1.* தூக்க மயக்கத்தாற் சாய்ந்துவிழுதல்; to be unsteady through drowsiness. *2.* சுறுசுறுப் பின்றிச் சோம்பியிருத்தல்; to be lazy.

[தூங்கு → தூங்கி + விழு-.]

தூங்கு-தல் *tūṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* தொங்குதல்; to hang. "காமமு நாணு முயிர்காவாத் தூங்கும்" *(குறள், 1163). 2.* ஊஞ்சலாடுதல்; to swing. "வீழூசல் தூங்கப் பெறின்" *(கலித். 131). 3.* அசைதல்; to sway from side to side, as an elephant. "தூங்கு கையா னோங்கு நடைய" *(புறநா. 22). 4.* கூத்தாடுதல்; to dance. "அறற்குழற் பாணி தூங்கியவரொடு" *(சிறுபாண். 162). 5.* இடையறாது விழுதல்; to pour, rain. "வீழ்பனி தூங்க" *(திருக்கோ. 320). 6.* ஒலித்தல்; to sound. "தண்ணுமை தழுவித் தூங்க" *(கம்பரா. மிதிலை. 9). 7.* துயிலுதல்; to sleep, slumber. "சொரிந்த சோரிதன் வாய்வரத் தூங்குவான்" *(கம்பரா. கும்ப. 62).* தூங்கினவன் கடாக்குட்டி, விழித்திருந்தவன் ஊட்டுக் குட்டி *(பழ.). 8.* அசைவு தோன்றாது சுற்றுதல்; to spin, as a top. பம்பரம் தூங்குகின்றது. *9.* சாதல்; to die. "நாடுங்காற் றூங்குபவர்" *(திரிகடு. 19). 10.* வாடுதல்; to droop, as a plant. "துக்கத்துட்

டுங்கி" (நாலடி, 121). 11. மந்தமாதல்; to be sluggish. "சொன்ன வெல்லையி னூங்குமத் தூங்கிய மன்னன் வந்திலன்" (கம்பரா. கிட்கி. 1). 12. காலத்தாழ்வாதல்; to delay. "தூங்குக தூங்கிச் செயற்பால" (குறள். 672). 13. நிலையாகத் தங்குதல்; to tarry, remain. "கடப்பாட்டாள னுடைய பொருள்போலத் தூங்குதற்குரிய தன்று" (குறுந். 143). 14. செறிதல்; to be crowded, dense. 15. மிகுதல்; to abound. "களி மகிழ் தூங்கி" (காசிக. சத். 18). 16. மெத்தென நடத்தல்; to walk slowly. 17. அழுந்துதல்; to rest profoundly.

தூங்காதவன் நீங்காதவன்
தூங்காதவனுக்குச் சுகம் இல்லை
தூங்கினவன் கன்று கடாக்கன்று
தூங்கினவன் கன்று சேங்கன்று
தூங்குகிற நரிக்கு இரை கிடையாது
தூங்குகிற புலியைத் தட்டி எழுப்பினதுபோல
தூங்குகிற வரிக்காரனை எழுப்பிவிட்டால் போனஆண்டுத் தீர்வையும் கொடுத்துவிட்டுப் போவென்பான்
தூங்குகிறவனைத் தட்டி எழுப்பி அத்தாளம் இல்லை என்று சொன்னது போல. (பழ.)

தூங்குகட்டில் *tūṅgu-kaṭṭil*, பெ. (n.) தூங்கு மஞ்சம் பார்க்க; see *tūṅgu-mañjam*.

[தூங்கு + கட்டில்]



தூங்குதோள் *tūṅgu-tōḷ*, பெ. (n.) பாம்பின் சட்டை; slough of a serpent. "பாம்பின் றூங்குதோல் கடுக்குந் தூவெள்ளருவி" (குறுந். 235).

[தூங்கு + தோள்.]

தூங்குபாலம் *tūṅgu-pālam*, பெ. (n.) தூக்கு பாலம் பார்க்க (வின்.); see *tūkku-pālam*.

தூங்குமஞ்சம் *tūṅgu-mañjam*, பெ. (n.) தொங்கியாடுங் கட்டில்; swinging cot.

க. தூங்குமஞ்ச; ம. தூக்குமஞ்சம்

[தூங்கு + மஞ்சம்.]

தூங்குமூஞ்சி[1] *tūṅgu-mūñji*, பெ. (n.) மிகுதியாகத் தூங்குபவன், மந்தன்; dull, sleepy fellow.

[தூங்கு + மூஞ்சி]

தூங்குமூஞ்சி[2] *tūṅgu-mūñji*, பெ. (n.) 1. சீமை வாகை; rain tree, as closing its leaves at night. 2. கரிசலாங்கண்ணி; a plant found in moist places (M.M.91.).

[தூங்கு + மூஞ்சி]

தூங்குமூஞ்சிமரம் *tūṅgu-mūñji-maram*, பெ. (n.) மாலை நேரத்தில் கண் மூடித் தூங்குவது போலக் கிழ்நோக்கி மடியும் இலைகளைக் கொண்ட பெரிய மரம்; rain tree.

[தூங்குமூஞ்சி + மரம்]



தூங்கெயில் *tūṅgeyil*, பெ. (n.) சோழ மன்னனொருவனால் அழிக்கப்பட்ட வான் கோட்டை; an air-castle believed to have been destroyed by a Chola king. "தூங்கெயி லெறிந்த நின் னூங்கணோர் நினைப்பின்" (புறநா. 39).

[தூங்கு + எயில்]

தூங்கெலி *tūṅgeli*, பெ. (n.) எலி வகை (வின்.); a rat.

[தூங்கு + எலி]

கடிப்பதினால் தூக்கத்தையெழுப்பும் ஓர் வகை எலி.

தூசக்குடிஞை *tūša-k-kuḍiñai*, பெ. (n.) கூடாரம்; tent. "தூசக்குடிஞையுந் துலா மண்டபமும்" *(பெருங். இலாவாண. 12: 43).*

தூசகத்தறி *tūšaga-t-taṟi*, பெ. (n.) முற்காலத்து வழங்கிய வரி வகை (S.I.I.i, 91); an ancient tax.

தூசங்கொளல் *tūšaṅ-goḷal*, பெ. (n.) ஒருவன் பாடிய வெண்பாவின் ஈறு முதல் எழுத்துகளே ஈறும் முதலுமாக மற்றொரு வெண்பாப் பாடுவது *(யாப். வி. 96, பக். 502)*; composing a veṇpā with the same initial and final letters as those of a stanza composed by another.

தூசம் *tūšam*, பெ. (n.) யானைக் கழுத்திலிடுங் கயிறு; elephant's neck-band. "வேய்முதற் றூசங்கொண் டேறினான்" *(சீவக. 1602).*

[தூசு[4] → தூசம்]

தூசர்[1] *tūšar*, பெ. (n.) படைஞர்; troops. "இந்திரன் முதலோர் தூசர்" *(குற்றா. தல. தக்கன் வேள்விச். 125).*

[தூசு [3] → தூசர்]

தூசர்[2] *tūšar*, பெ. (n.) வண்ணார் (திவா.); washermen.

[தூசு [2] → தூசர்]

தூசரம் *tūšaram*, பெ. (n.) சாம்பல் நிறம் (யாழ். அக.); grey colour.

[தூசு [3] → தூசரம்]

தூசரன் *tūšaraṉ*, பெ. (n.) எண்ணெய் வாணிகன் (யாழ்.அக.); oil monger.

[தூசு [2] → தூசரன்.]

தூசறு-த்தல் *tūšaṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) அடியோடு அழித்தல் (சங்.அக.); to exterminate.

[தூசு [5] → தூசறு-.]

தூசி[1] *tūši*, பெ. (n.) 1. கொடிப்படை (திவா.); van of an army. "தூசியு மிரண்டுகையும்" *(கம்பரா. அதிகாயன் 211).* 2. குதிரை; horse. 3. போர்; battle "தூசியின் முதல் நாள்" (வின்.) 4. கூத்துத் தொழிலின் வேறுபாடு (வின்.); a kind of gesture in dancing. "வட்டணையுந் தூசியு மண்டலமும்" *(சீவக. 693, உரை).* 5. உச்சி; that which is top most. "மாமரத்தின் தூசிக் கொம்பில் ஏறி நின்றான்" *(இ.வ.).*

[தூசு [3] → தூசி]

தூசி[2] *tūši*, பெ. (n.) 1. சிறுமை; trifle. 2. புழுதி; dust. 3. காற்றில் பறந்து வரும் சிறு துகள்; small particle. கண்ணில் தூசி விழுந்துவிட்டதா?.

[தூசு → தூசி]

தூசிகம் *tūšigam*, பெ. (n.) புளியாரை; Indian sorrel.

தூசிகா *tūšigā*, பெ. (n.) சிமிட்டி; bitter apple (சா.அக.).

தூசிதாங்கி *tūši-tāṅgi*, பெ. (n.) 1. புழுதித்தடுப்பு; to keep of dust cover. 2. அழுக்குத் தடுப்பு துண்டுப் புடவை (யாழ்.அக.); apron.

[தூசி + தாங்கி.]

தூசிதும்பு *tūši-tumbu*, பெ. (n.) தூசியும் தூசி போன்ற பிறவும்; dust and the like. தண்ணீரில் தூசுதும்பு கிடக்கிறது, வடிகட்டு.

[தூசி + தும்பு]

தூசிப்படை *tūši-p-paḍai*, பெ. (n.) கொடிப்படை (சிலப். 26, 80, அரும்.); van of an army.

[தூசி + படை]

தூசியம் *tūšiyam*, பெ. (n.) கூடாரம் (யாழ்.அக.); tent.

[தூசு [2] → தூசியம்]

தூசு[1] *tūšu*, பெ. (n.) தூய்மை; cleanness. "தூசுதூ சாக்குவார் பாவை" *(தமிழ்நா. 69).*

[தூய்(மை) → தூசு]

தூசு[2] *tūšu*, பெ. (n.) 1. ஆடை; cloth. "தூசினா லங்கை நீவி" *(சீவக. 1302).* 2. பஞ்சு; cotton. "தீயினிற் றூசாகும்" *(திவ்.திருப்பா. 6).* 3. நெய்மீன் (சித்திரை) விண்மீன் (சூடா.); the 14th naksatra, part of virgo.

தூசு[3] *tūšu*, பெ. (n.) முன்னணிப்படை (பிங்.); van of an army. "வாலிசேய் தூசு செல்ல" (கம்பரா. திருமுடி. 4).

தூசு[4] *tūšu*, பெ. (n.) யானைக் கழுத்திலிடு கயிறு (பிங்.); elephant neck band.

தூசு[5] *tūšu*, பெ. (n.) தூசி[2] பார்க்க; see *tuši*. "அவன் ஒரு தூசுகூட விடவில்லை".

[தூள் → தூளி → தூசி → தூசு]

தூசுப்பு *tūšuppu*, பெ. (n.) தண்ணீர்விட்டான் (மூ.அ.); climbing asparagus.

தூசுப்பூ *tūšuppū*, பெ. (n.) தூசுப்பு பார்க்க; see *tūšuppu*.

தூட்கல் *tūṭ-kal*, பெ. (n.) பொடிக்கல் (யாழ்ப்.); small stones or bricks.

[தூள் + கல்]

தூட்டிகம் *tūṭṭigam*, பெ. (n.) தும்பை (மலை.); white dead nettle.

தூடியம் *tūḍiyam*, பெ. (n.) தூசியம் (இலக்.அக.) பார்க்க; see *tušiyam*.

தூண் *tūṇ*, பெ. (n.) 1. கட்டடம், பாலம் முதலியவற்றின் மேல்பகுதியைத் தாங்கி நிற்கும் செங்குத்தான அமைப்பு; pillar. "சிற்றி னற்றூண் பற்றி" (புறநா. 86). தூணில் சாயாதே. 2. பற்றுக் கோடு; mainstay, support. "துன்பந் துடைத் தூன்றுந் தூண்" (குறள், 615).

ம. தூண்

பல பொருள்கள் அல்லது கூறுகள் ஒன்றாகப் பொருந்தும்போது அல்லது சேரும்போது திரட்சியுண்டாவதால், பொருந்தற் கருத்தில் திரட்சிக் கருத்து தோன்றிற்று. "சேரே திரட்சி" (தொல். 316).

[துள் → துள் → தூண் = திரண்ட கம்பம் (வே. க. 253, 254)]

தூண்டாவிளக்கு *tūṇḍā-viḷakku*, பெ. (n.) 1. தூண்ட வேண்டாதபடி எப்பொழுதும் எரியும் நுந்தா விளக்கு; ever-burning lamp that needs no trimming. "தூண்டா விளக்கின் சுடரனையாய்" (திருவாச. 32:4). 2. பாம்பின் தலையில் உள்ளதாகக் கருதப்படும் மணி; lustrous gem on cobra's head, as an ever-burning lam. "தூண்டா விளக்கனையாய்" (திருக்கோ. 244).

[துண்டு + ஆ - துண்டா + விளக்கு]



தூண்டி *tūṇḍi*, பெ. (n.) 1. தானே சொல்லுகை (அக.நி.); untutored speech or talk. 2. தூண்டில் பார்க்க; see *tūṇḍil*.

[தூண்டு → தூண்டி]

தூண்டிக்காட்டு-தல் *tūṇḍi-k-kāṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. விளக்கம் தருதல்; to explain. 2. பிறன் செய்த குற்றத்தை அவனிடம் குத்திக் காட்டுதல்; to bring home one's faults; to upbraid. 3. தூண்டிக்கொடு பார்க்க; see *tūṇḍi-k-koḍu*.

[தூண்டி + காட்டு-]

தூண்டிக்கொடு-த்தல் *tūṇḍi-k-koḍu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. நினைவூட்டுதல்; to remind. 2. குறிப்பாக அறிவித்தல்; to hint, give the cue. 3. கோட் சொல்லுதல் (வின்.); to slander. 4. குற்றத்தை வெளியிடுதல் (வின்.); to expose one's crime.

[தூண்டி + கொடு-]

தூண்டித்துருப்பிடி-த்தல் *tūṇḍi-t-turu-p-piḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) நுணுகி ஆராய்ச்சி செய்தல்; to trace and pursue, make a close investigation into.

[தூண்டி + துருப்பிடி-]

தூண்டிப்பிடி-த்தல் *tūṇḍi-p-piḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) சிறுகுற்றத்தைப் பெரிதாக்குதல் (வின்.); to hold up or magnify little faults.

[தூண்டி + பிடி-]

தூண்டிமுள் *tūṇḍi-muḷ*, பெ. (n.) தூண்டில்முள் பார்க்க; see *tūṇḍil-muḷ*.

தூண்டிமூலி *tūṇḍi-mūli*, பெ. (n.) கவிழ்தும்பை; stooping tumbay (சா.அக.).

தூண்டில் *tūṇḍil*, பெ. (n.) 1. மீன்பிடிக்கப் பயன்படும், கொக்கி இணைக்கப்பட்ட கோல்; fishing tackle. "தூண்டிற் பொன் மீன் விழுங்கியற்று" (குறள். 931). 2. கொக்கி; hook. 3. வரிக்கூத்து வகை; a kind of masquerade-dance. "சூலந்தருநட்டந் தூண்டிலுடன்" (சிலப். 3, 73, உரை).

[தூண்டு → தூண்டி → தூண்டில்]

தூண்டிலில் அகப்பட்ட மீன் துள்ளி நத்தினால் விடுவீர்களா?
தூண்டிலைப் போட்டு வராலை இழு.
தூண்டில் நுனிமச்சத்துக்கு ஆசைப்பட்டு மீன் உயிரை இழப்பதுபோல.
தூண்டில்போட்ட வனுக்குத் தக்கைமேற் கண்.
தூண்டிற்காரனுக்கு மிதப்பு மேலே கண். (பழ.)

தூண்டில்போடு-தல் *tūṇḍil-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. தூண்டிலிடுதல்; to angle. 2. உளவறிதல்; to sound gently. 3. தன்வயப்படுத்துதல்; to entice, allure.

[தூண்டில் + போடு-.]

தூண்டில்மீன் *tūṇḍilmīṉ*, பெ. (n.) கடலின் அடி மட்டத்திலுள்ள மணலில் புதையுண்டு, தலை மேலே இடம் பெற்றிருக்கும் துடுப்பாரையை மட்டும் வெளிப்படுத்தும். இவ்வாரையின் நுனி, புழு அல்லது இறைச்சி போன்ற தோற்றமளிக்கும் புறவளர்ச்சியைத் தூண்டில் போன்று இயக்குவதால், சிறிய மீன்களை ஈர்த்து அவற்றை உட்கொள்ளுகின்றன. இதனால் தூண்டில் மீன் என்பதாயிற்று; a type of fish that hides beneath the sand and wave its fins like a worn and attract the smaller fisher and eat them.

[தூண்டில் + மீன்]

தூண்டில்முள் *tūṇḍil-muḷ*, பெ. (n.) தூண்டிற் கருவியின் முனையில் இரை கோக்கப்படும் இருப்புமுள்; fish-hook.

[தூண்டில் + முள்]



தூண்டில்முறித்தான்பாறு *tūṇḍil-muṟittāṉ-pāṟu*, பெ. (n.) கடலடிப் பாறையொன்றின் பெயர் (நெல்லை.); a rack beneath the sea.

[தூண்டில் + முறித்தான் + பாறு. பாறை → பாறு]

தூண்டில்வேட்டுவன் *tūṇḍil-vēṭṭuvaṉ*, பெ. (n.) மீன் பிடிப்போன்; fisherman, angler as a hunter with the angle. "தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது" (அகநா. 36).

[தூண்டில் + வேட்டுவன்]

தூண்டிவிடு-தல் *tūṇḍi-viḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) 1. விளக்கைத் தூண்டுதல்; to trim a lamp. 2. தூண்டிக்கொடு-. பார்க்க; see *tūṇḍi-k-koḍu-*

[தூண்டி + விடு-.]

தூண்டிற்காரன் *tūṇḍiṟkāraṉ*, பெ. (n.) மீன்பிடிப்போன் (வின்.); angler.

[தூண்டில் + காரன்]

தூண்டு[1]-தல் *tūṇḍu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. விளக்குத் தூண்டுதல்; to trim, as burning lamp. "தூண்டு சுடரனைய சோதி கண்டாய்" (தேவா. 843). 2. கிளப்பிவிடுதல்; to excite, stir up. 3. செலுத்துதல்; to spur, goad. "கடகரி புரவி தூண்டு மாலாழி யந்தேர்" (கம்பரா.கும்ப. 316). 4. அனுப்புதல்; to send. "சேனை முற்று மவன் றுணையாகத் தூண்டி" (பிரமோத். 7:58). 5. ஏவுதல்; to command. 6. நினைப்பூட்டுதல்; to remind. 7. குறுதல்; to pound, as with a pestle. 8. தள்ளுதல்; to push, force forward.

[துண் → தூண் → தூண்டு-.]

தூண்டு[2] *tūṇḍu,* பெ. (n.) கிளப்பிவிடுகை; exciting, rousing.

[தூண்டு¹ → தூண்டு²]

தூண்டுகுச்சி *tūṇḍu-kucci,* பெ. (n.) தூண்டுகோல் பார்க்க; see *tūṇṭu-kōl.*

[தூண்டு + குச்சி]

தூண்டுகோல் *tūṇḍu-kōl,* பெ. (n.) *1.* விளக்குத் திரி தூண்டும் ஈர்க்கு; stick for trimming a lamp or wick. "மதிவிளக்கினை யயர்வறத் தூண்டுகோல்" *(பிரபுலிங். துதி. 16)* *2.* ஏவி விடுவோன் *(யாழ்.அக.);* prime mover in an affair.

[தூண்டு + கோல்]

தூண்மரம் *tūṇmaram,* பெ. (n.) தூணாமரம் பார்க்க; see *tūṇāmaram.*

[தூண் + மரம்]

தூண்மாலை *tūṇ-mālai,* பெ. (n.) தூண்போலத் தொடுக்கப்படும் மாலை; garlands arranged column-like in decorating a temple etc.,

[தூண் + மாலை]

தூணம்[1] *tūṇam,* பெ. (n.) ஏனம் (பாத்திரம்) தூக்க இடும்கயிற்றுச் சுருக்கு; cord with a loop or rings to carry a pot. "கரகத்துக்குத் தூணம் போட்டான்" *(யாழ்.அக.).*

[தூக்கணம் → தூணம்]

தூணம்[2] *tūṇam,* பெ. (n.) *1.* பெரும் தூண்; pillar. "பசும்பொற் றூணத்து" *(மணிமே. 1:48).* *2.* பற்றுக் கோடு *(அருநி.);* prop, support.

[தூண் + அம் - தூணம். 'அம்' பருமைப்பொருள் பின்னொட்டு]

எ-டு மதி → மதியம், நிலை → நிலையம்

வ. ஸ்தூணா

தூணம்[3] *tūṇam,* பெ. (n.) பகை *(அக.நி.);* antipathy.

தூணம்[4] *tūṇam,* பெ. (n.) அம்புக்கூடு *(யாழ்.அக.);* quiver.

[துள் → தூள் → தூளம் → தூணம் (வ.மொ.வ.)]

தூணாமரம் *tūṇā-maram,* பெ. (n.) நீண்ட மரவகை; Indian mahogany.

தூணி[1] *tūṇi,* பெ. (n.) அம்புக் கூடு; quiver. "தூணி . . . ஒடுங்கிய வம்பின்" *(பதிற்று. 45, 1-2).*

வ. தூண

[தூணம் → தூணி (வே.க.)]

தூணி[2] *tūṇi,* பெ. (n.) நான்கு மரக் காலளவு; a mesure of capacity = 4 marakkal. "கருங் கொள்ளுஞ் செங்கொள்ளுந் தூணி பதக்கென்று" *(நாலடி, 387).*

வ. ஸ்தூண

[துள் → துண் → தூண் → தூணி (வே.க.)]

தூணி[3]**-த்தல்** *tūṇi-,* 4 செ.கு.வி. (v.i.) பருத்தல்; to grow stout, big.

[தூண் → தூணி]

தூணிக்கடம்பு *tūṇi-k-kaḍambu,* பெ. (n.) வெண் கடம்பு; write cadamba.

தூணிகர் *tūṇikar,* பெ. (n.) பொன் வாணிகர் *(நிகண்டு);* the caste of merchants.

தூணியங்கம் *tūṇiyaṅgam,* பெ. (n.) அத்திப்பிசின் *(மூ.அ.);* gum of the cluster fig.

ம. துணியாங்கம்

தூணிறுத்துதல் *tūṇiṟu-t-tudal,* பெ. (n.) நாட்கால் நாட்டுகை (E.T. vi, 133); ceremony of setting up on an auspicious day the first post for the construction of a marriage pavilion or pandal.

[தூண் + நிறுத்துதல்]

தூணீரம் *tūṇīram,* பெ. (n.) அம்புக்கூடு *(யாழ்.அக.);* quiver.

[தூணி → தூணீரம்]

தூணு *tūṇu,* பெ. (n.) சந்தன வேம்பு; sandal neem.

தூத்தியம் *tūttiyam,* பெ. (n.) தூதன் செயல் அல்லது மொழி *(சங்.அக.);* an ambassador's mission.

[தூது → தூத்தியம்]

தூதகம் *tūdagam*, பெ. (n.) துரிசு (சங்.அக.); sulphate.

தூதம் *tūdam*, பெ. (n.) 1. அசைவு; motion. 2. பழிப்பு; abuse.

தூதர்[1] *tūdar*, பெ. (n.) ஓர் இனத்தார்; a caste.

தூதர்[2] *tūdar*, பெ. (n.) ஒரு நாட்டின் நிகராளி (பிரதிநிதி)யாக மற்றொரு நாட்டிற்கு அனுப்பப்பட்ட அரசு உயர் அதிகாரி; ambassador; emissary.

[தூது → தூதர்]

தூதரகம் *tūdaragam*, பெ. (n.) மற்றொரு நாட்டின் தலைநகரில் தூதுவரின் தலைமையில் இயங்கும் அலுவலகம்; embassy. பிரஞ்சு தூதரகம். 2. முதன்மையான நகரங்களில் பண்பாடு மற்றும் பொருளியல் நடவடிக்கைகளைக் கவனிக்கும் வகையில் இயங்கும் கிளை அலுவலகம்; consulate. சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நூலகம் உள்ளது.

[தூதுர் + அகம்]

தூதளை *tūdaḷai*, பெ. (n.) தூதுளை (மூ.அ.) பார்க்க; see *tūduḷai*.

தூதன் *tūdaṉ*, பெ. (n.) 1. செய்தியறிவிப்பவன்; messenger. "வாலிதன்மக னவன்தன் றூதன் வந்தனென்" (கம்பரா. பிணிவீட்டு. 82). 2. அரசுத் தூதன்; ambassador. "நன்றுகொ லென்ன லோடும் நாயகன் றூதனக் காண்" (கம்பரா. பிணி வீட்டு. 85). 3. ஏவலாளன்; servant. "வெய்ய காலன் மாதூதர் மனங்களிக்க" (பாரத. கிருட்டிண. 10). 4. ஒற்றன்; spy, secret agent. 5. அறிவன் (புதன்) (பிங்.); Mercury.

தூதனம் *tūdaṉam*, பெ. (n.) மூங்கில் (மலை.); bamboo.

தூதாடு-தல் *tūdāḍu-*, 5 செ.கு.வி. (v.i.) தூதாகப் போதல்; to act as a messenger. "நாடிநின் றூதாடித் துறைச் செல்லாள்" (கலித். 72).

[தூது + ஆடு-]

தூதாயி *tūdāyi*, பெ. (n.) கிரிப் பூண்டுவகை (சங்.அக.); a plant.

தூதாள் *tūdāḷ*, பெ. (n.) தூதன் பார்க்க; see *tūdaṉ*. "வன்றொண்டர் நடத்தவொரு தூதாளாகி" (சிவப்பிரபந். சிவஞா. பிள். வாரானை. 3).

தூதி *tūdi*, பெ. (n.) 1. தூது செல்பவள்; a female messenger. "யான்விட வந்தவென் றூதி யோடே" (திவ்.பெருமாள். 6:4). 2. பாம்பின் நச்சுப் பல் நான்கனுள் ஒன்று (சங்.அக.); one of the four poisonous fangs of a cobra.

தூதிகை *tūdigai*, பெ. (n.) தூதி-1 (சங்.அக.) பார்க்க; see *tūdi*.

தூதிடையாடல் *tūdiḍai-y-āḍal*, பெ. (n.) மாலைக் காலத்துத் தலைவியுற்ற துன்ப நோக்கித் தோழி தலைவனிடம் தூதாக நடந்ததைக் கூறும் புறத்துறை (பு.வெ.12, இருபாற். 3); theme describing a confidant's love-embassy on behalf of her mistress.

[தூது + இடை + ஆடல்]

தூதிற்பிரிவு *tūdiṟ-pirivu*, பெ. (n.) அரசனின் தூதுவனாகத் தலைவன் தலைவியை விட்டுப் பிரியும் பிரிவு; separation of a hero from his beloved when he goes on a mission for his king. "ஓதற்பிரிவுந் தூதிற் பிரிவும் அந்தணர் முதலிய மூவரிடத்தன" (தொல்.பொருள். 26, உரை).

[தூது → தூதில் + பிரிவு]

தூது[1] *tūdu*, பெ. (n.) கூழாங்கல்; small pebble. "தூ துணம் புறவெனத் துதைந்தநின் னெழி னலம்" (கலித். 56:16).

[து → தூது]

தூது[2] *tūtu*, பெ. (n.) 1. அரச தூதர் தன்மை (குறள். 69, அ.தி); embassy. 2. தூதுமொழி; purport of an embassy. "தூதுரைப்பாண் பண்பு" (குறள். 681). 3. தூது செல்வோன்; ambassador. "தக்க தறிவதாந் தூது" (குறள். 686). 4. செய்தி; message. "தொட்டுவிடுத் தேனவனைத் தூதுபிற சொல்லி" (சீவக. 1876). 5. காமக் கூட்டத்துக் காதலரை இணக்குஞ்செயல்; negotiation in love-intrigues. "தூதுசெய் கண்கள் கொண் டொன்று பேசி" (திவ்.திருவாய். 9.9:9). 6. பாணன் முதலிய உயர்திணைப் பொருளையேனும் கிள்ளை

முதலிய அஃறிணைப் பொருளையேனும் ஊடனீக்கும் வாயிலாகக் காதலர்பால் விடுத்தலைக் கலிவெண்பாவாற் கூறும் இலக்கியம் (இலக்.வி. 874); a kind of poem in Kali-veṇbā which purports to be a message of love sent through a companion, a bird, etc., to effect a reconciliation. 7. தூது அனுப்பும் முறையில் இயற்றப்பட்ட ஒரு சிற்றிலக்கிய வகை; a genre in which one sends message.

வ. தூத

[துது → தூது (வ.மொ.வ.)]

தூது என்பது ஒருவர் கருத்தை மற்றொருவருக்குத் தெரிவிக்க இடையே ஒருவரை அனுப்புவதாகும். பகைவரிடையிலும், நண்பரிடையிலும், தலைவன் தலைவியரிடையிலும் தூது செல்வது வழக்கம். இவ்வாறு தூதனுப்பும் செய்தி புறத்திணை நூல்களிலும் அகத்திணை நூல்களிலும் காணப்படுகின்றது. தொல்காப்பியம் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல் 23ஆம் நூற்பாவில் "தூது முனிவின்மை" என்பதற்குப் பேராசிரியர் "புள்ளும் மேகமும் போல்வன கண்டு சொல்லுமின் அவர்க்கென்று பன் முறையானும் சொல்லுதல்" என்று விளக்கம் தருகின்றார்.

பிற்காலத்தில் 'விருந்து' என்னும் இலக்கண முறையில் 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகத் தூது என்பதும் ஒரு சிறு நூலாக அமைந்தது. இலக்கண விளக்கப் பாட்டியலிலும், பிரபந்தத் திரட்டு என்னும் நூலிலும் தூது என்பதற்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

'கலிவெண்பாவினால் உயர் திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும் சந்தியின் விடுத்தல்' என்று இலக்கண விளக்கம் (நூற். 874) கூறுகிறது. பிரபந்தத் திரட்டு 'அன்னம், மயில், கிளி, முகில், பூவை, தோழி, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு என்னும் பத்தையும் தனித்தனியே விளித்துக் கூறி, மாலை கொண்டுவா என்று அனுப்புதல் தூது' என்று கூறும். இரத்தினச் சுருக்கமும் இப்பத்துப் பொருள்களையும் தூதாக அனுப்புவது மரபு என்கிறது.

இங்குக் கூறப்பெறாத பணம், தமிழ், மான், தாமரை (வனசம்), சவ்வாது, நெல், புகையிலை, விறலிவிடு தூதுகளும் தனித்தனி நூல்களாக வந்துள்ளன. தூது விடுப்பது ஆணாகவோ பெண்ணாகவே இருக்கலாம். எனினும் கிடைக்கும் நூல்கள் பெரும்பாலும் தலைவனிடத்துத் தலைவி விடுத்த தூதுகளாகவே உள்ளன (கலைக் களஞ்சியம்).

தூது[3] *tūdu*, பெ. (n.) தூதுவளை பார்க்க; see *tūdu-vaḷai*. "தூதெனை விளங்குஞ் செவ்வாய்த் தோகையர்" *(இரகு. யாகப். 14)*.

தூதுக்குழு *tūdu-k-kuḻu*, பெ. (n.) அரசியல், பொருளியல், பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் அரசின் சார்பில் மற்றொரு நாட்டிற்குச் செல்லும் குழு; delegation of politicians, economists, artistes visiting other countries on behalf of the government.

[தூது + குழு]

தூதுகறியுருண்டை *tūdu-kaṟi-y-uruṇḍai*, பெ. (n.) பொரித்த குழம்பில் இடும் உளுத்தமா உருண்டை (இ.வ.); ball of kneaded black-gram flour, used in sauce.

[தூது + கறி + உருண்டை]

தூதுணம் *tūduṇam*, பெ. (n.) 1. கூழாங்கல்லை உண்ணும் புறா வகை (திவா.); a dove that eats pebbles. 2. தூக்கணங்குருவி (அக.நி.); weaver bird.

[தூதுண் → தூதுணம்]

தூதுணம்புறவு *tūtuṇam-puṟavu*, பெ. (n.) தூதுணம் பார்க்க; see *tūduṇam*. "தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கும்" *(பட்டினப். 58)*.

[தூதுணம் + புறவு]

தூதுணி *tūduṇi*, பெ. (n.) தூதுணம் (சங்.அக.) பார்க்க; see *tūduṇam*.

[தூதுணம் → தூதுணி]

தூதுணை *tūduṇai*, பெ. (n.) தூதுவளை பார்க்க; see *tūdu-vaḷai*.

[தூது + துணை]

தூதுவளை *tūdu-vaḷai*, பெ. (n.) முள்ளுள்ள இலைகளைக் கொண்ட கொடிவகை (மலை.); climbing brinjal.

மறுவ. கூதளம்

[தூது + வளை]



தூதுவன் *tūduvaṉ*, பெ. (n.) *1.* தூதன்; messenger. "தாமே தூதுவ ராதலு முரித்தே" (தொல்.பொருள். 119). *2.* காம வாயிலோன்; messenger in love-intrigues. "தூதுவனொருவன் றன்னை யிவ் வழிவிரைவிற் றூண்டி" (கம்பரா. அங்கதன். 2). *3.* அறிவன் (புதன்); the planet, Mercury.

[தூது → தூதுவன்]

தூதுவென்றி *tūdu-veṉṟi*, பெ. (n.) தூதுவன் தனது செயலாண்மை வெற்றியைக் குறித்துக் கூறும் புறத்துறை (மாறனல. 84, உரை, ப96); a theme describing the success of an embassy.

[தூது + வென்றி]

தூதுளம் *tūduḷam*, பெ. (n.) தூதுவளை (பிங்.) பார்க்க; see *tūdu-vaḷai.*

[தூதுவளை → தூதுளம்]

தூதுளை *tūduḷai*, பெ. (n.) தூதுவளை பார்க்க; see *tūdu-vaḷai.*

தூதூவெனல் *tūdū-v-eṉal*, பெ. (n.) உமிழ்தற் குறிப்பு; onom. expr. of the sound of spitting.

தூதை[1] *tūdai*, பெ. (n.) மண் முதலியவற்றால் செய்த சிறுகலம்; small vessel made of earth etc. *2.* விளையாட்டுச் சிறுமரப் பானை; toy utensils of wood. *3.* ஓர் சிறிய அளவு; a small measure of capacity.

தெ. துத்த; ம. தூத

தூதை[2] *tūdai*, பெ. (n.) சிறு சம்மட்டி (யாழ்.அக.); a small hammer.

தூதை[3] *tūdai*, பெ. (n.) *1.* சிற்றாமுட்டி; Ceylon sticky mallow. *2.* பாலை; iron wood tree (சா.அக.).

தூதைகூலம் *tūdai-kūlam*, பெ. (n.) பஞ்சு பன்னும் வில்; cotton-pricker.

தூந்துதுருப்பிடி-த்தல் *tūndu-turu-p-piḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) தூண்டித்துருப்பிடி (வின்.) பார்க்க; see *tūṇḍi-t-turu-p-piḍi.*

தூப்பஞ்செய்-தல் *tūppā-ñ-sey-*, 1 செ.கு.வி. (v.i.) தூய்மை செய்தல்; to clean. "கண்டவர் காட்சியைத் தூப்பஞ்செய்துடன்" (மேருமந். 1271).

[தூ → தூப்பம் + செய்-]

தூப்பா *tūppā*, பெ. (n.) தூப்பாக்குழி பார்க்க; see *tūppā-k-kuḻi.*

தூப்பாக்குழி *tūppā-k-kuḻi*, பெ. (n.) சாக்கடை; gutter.

[தூப்பா + குழி]

தூம் *tūm*, பெ. (n.) *1.* முகத்தலளவை வகை; a dry measure of capacity. (எ-டு.) குப்பத்தூம், தேவதூம் (வின்.). *2.* ஒருநிறை; bazaar weight= about 6 lbs. 4 oz-avoir.

தெ. தூமு

[தூம்பு → தூம் (வே.க. 282)]

தூம்பல் *tūmbal*, பெ. (n.) *1.* ஒரு வகைக் கொடி; calabash, climber. *2.* சுரை; bottle-gourd.

[தூம்பு → தூம்பல்]

தூம்பா[1] *tūmbā*, பெ. (n.) பாடை; bier.

[தூம்பு[2] → தூம்பா]

தூம்பா[2] *tūmbā*, பெ. (n.) தும்பை (சங். அக.) பார்க்க; see *tumbai.*

தூம்பாமடை *tūṉbā-maḍai*, பெ. (n.) தூம்புவாய் (நெல்லை.) பார்க்க; see *tumbu-vāi.*

[தூம்பு → தூம்பா + மடை]

தூம்பிரம் *tūmbiram*, பெ. (n.) கருஞ்சிவப்பு (வின்.); purple, dark red.

தூம்பு[1] *tūmbu*, பெ. (n.) *1.* உட்டுளை; tubularity. "தூம்புடைத் தடக்கை" (புறநா. 19). *2.* உட்டுளைப் பொருள் (பிங்); tube. *3.* மதகு; sluice. *4.* மதகின் உட்டுளை (அகநி.); vent in a sluice. *5.* வாய்க் கால் (பிங்.); channel for irrigation. *6.* தூம்பு

வாய் பார்க்க; see tūmbu-vāy. "சுருங்கைத் தூம்பின்மனை" (மணிமே. 28:5). 7. மூங்கில் (திவா.); bamboo. 8. மூங்கிற்குழாய்; bamboo tube. "தூம்பின் கண்ணிட மிளிர" (மலைபடு. 533). 10. மரக்கால் (பிங்.); a measure of capacity for grain. 11. நீர்ப்பத்தர் (திவா.); leathern bucket for baling water. 12. மனை வாயில் (பிங்.); gateway, doorway. 13. பாதை (யாழ்.அக.); path, way. 14. இடுக்கு வழி; narrow or difficult path, defile, pass. 15. ஈயம் (வின்.); lead. 16. பாலம் முதலியவற்றில் அமைக்கப்படும் நீர் செல்வதற்கான சுதை (சிமிட்டி)க் குழாய்; drain pipe. கழிவுநீர் தூம்புவழியே சென்றுவிடும்.

தெ. தூமு; க., ம. தூம்பு; L. tubus; E. tube

[தும்பு → தூம்பு]



தூம்புக்கை *tūmbu-k-kai,* பெ. (n.) தும்பிக்கை பார்க்க; see *tumbi-k-kai.*

[தூம்பு + கை]

தூம்புவாய் *tūmbu-vāy,* பெ. (n.) சாய்கடை (திவா.); drain, gutter.

[தூம்பு + வாய்]

தூம்பை *tūmbai,* பெ. (n.) தூம்பா[1] பார்க்க; see *tūmba.*

தூமணி *tūmaṇi,* பெ. (n.) முத்து; pearl. "தூமணித் தோள் வளை" (சிலப். 6:90).

[தூய்(மை) + மணி]

தூமை[1] *tūmai,* பெ. (n.) மகளிர் பூப்புநீர்; catamenia. "பாவர் தூமையர்கள் கோளர்" (திருப்பு. 363).

[தூவாமை → தூமை]

தூமை[2] *tūmai,* பெ. (n.) 1. வெண்மை; whiteness. 2. தூய்மை பார்க்க; see *tūymai.*

[தூய் → தூமை]

தூமைச்சீலை *tūmai-c-cīlai,* பெ. (n.) ஓர் வசைச் சொல்; a term of abuse meaning cloth worn during menses.

[தூமை + சீலை]

தூய்தன்மை *tūydaṉmai,* பெ. (n.) 1. தூய்மையின்மை; impurity as of body. 2. தீட்டு; pollution. "சொன்ன மறை மந்திரத்தாற் றூய் தன்மை கடிந்ததற்பின்" (சீகாளத். பு. கண்ண. 138).

[தூய்து + அன்மை]

தூய்து *tūydu,* பெ. (n.) தூய்மையானது; that which is pure, clear.

[தூய்(மை) → தூய்து]

தூய்நெறி *tūy-neṟi,* பெ. (n.) நன்னெறி; spiritual path. "தூய்நெறியே சேரும்வண்ணம்" (திருவாச. 51:4).

[தூய் + நெறி]

தூய்மை[1] *tūymai,* பெ. (n.) 1. துப்புரவு, அழுக்கு இல்லா நிலைமை; purity, cleanness. "புறந்தூய்மை நீரானமையும்" (குறள், 298). 2. மெய்ம்மை (அக.நி.); truth. 3. நன்மை; good. "காறூய்மை யில்லாக் கலிமாவும்" (திரிகடு. 46). 4. வீடுபேறு; salvation. "தூஉய்மையென்ப தவாவின்மை" (குறள், 364).

ம. தூம

தூய்மை[2] *tūymai,* பெ. (n.) வெண்மை; whiteness. "தூய்மை காட்டும்" (பெருங்.உஞ்சைக். 32:59).

[தூ → தூய்மை]

தூய்வெள்ளை *tūy-veḷḷai,* பெ. (n.) தூய்மையான வெள்ளை (யாழ்.அக.); pure white.

[தூய் + வெள்ளை]

தூய்மைக்கேடு *tūymai-k-kēḍu,* பெ. (n.) கழிவுகள் காற்று, நீர் முதலியவற்றில்

சேர்வதால் மூச்சுவிடுதற்கோ பயன் படுத்துவதற்கோ ஏற்றதாக இல்லாமல் போகும் நிலை; pollution. தொழிற் சாலையிலிருந்து வெளியேறும் கழிவுகளால் காற்றும், ஆற்று நீரும் தூய்மைக்கேடு அடைகின்றன.

[தூய்மை + கேடு]

தூய *tūya*, பெ.எ. (adj.) **தூய்மையான;** clean, pure, holy. "தூயமேனி" *(திருவாச. 2: 112).*

[தூய் → தூய]

தூயம் *tūyam*, பெ. (n.) **தூய்மை** பார்க்க; see *tūymai*. "தற்கண்ட தூயமும்" *(திருமந். 2451).*

[தூய் → தூயம்]

தூயவன் *tūyavaṉ*, பெ. (n.) *1.* **தூய்மையானவன்;** pure and holy man. "தீயவாச் சேர்தல் செய்தார் தூயவரல்லர்" *(கம்பரா. சடாயுவுயிர் 54).* *2.* **திருமால்** (உரி.நி.); Viṣṇu.

[தூய் + தூயவன்]

தூயன் *tūyaṉ*, பெ. (n.) **தூயவன்** பார்க்க; see *tūyavaṉ*. "தூயன் றுயக்கன் மயக்கன்" *(திவ். திருவாய். 1:9:6).*

[தூய் → தூயன்]

தூயாள் *tūyāḷ*, பெ. (n.) *1.* **தூய்மையானவள்;** spotless, pure woman. *2.* **கலைமகள்** (யாழ்.அக.); Sarasvadi. "வரைபயந்த தூயாடன் றிருப்பாகன்" *(பெரியபு. தடுத்தாட். 199).*

[தூய் → தூயாள்]

தூர்[1](ரு)-தல் *tūr-*, 2 செ.கு.வி. (v.i.) *1.* **நிரம்புதல்;** to be filled up. "இருடூர்பு புலம்பூர" *(கலித். 120).* *2.* **அடைபடுதல்;** to be closed. "துளைவாய் தூர்ந்த துரப்பமை யாணி" *(பொருந. 10).* *3.* **அழிதல்;** to be extinguished, to perish. "தூர்ந்தொழியும் பொய்பிறந்த போழ்தே" *(நான்மணி. 76).* *4.* **மறைதல்;** to disappear. "வள்ளி நடந்த வழி தூர்ந்திடாது" *(வெங்கைக்கோ. 345).* *5.* **நெருங்குதல்;** to come to close quarters "இருவரும் ஒதுங்கியுந் தூர்ந்தும் பொருதலின்" *(தொல். பொருள். 68, உரை, பக். 219).*

[துரு → தூர் (வேக.)]

தூர்[2]-த்தல் *tūr-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* **அடைத்தல்;** to fill up, close up, as a well. "கடறூர்த்தன் மலையகழ்தல்" *(சீவக. 2165).* *2.* **மறைத்தல்;** to hide, cover. "விண்ணவர் விசும்பு தூர்த்தான்" *(கம்பரா. கைகேயி. 74).* *3.* **உட் செலுத்துதல்;** to insert. "பழுக்கும் பழத்தைத் தூர்த்து" *(தைலவ. தைல. 134).* *4.* **மிகப் பொழிதல்;** to pour forth in showers as arrows "தூர்க்கின்ற மலர்மாரி தொடரப்போய்" *(கம்பரா. இராவணன் வதை. 199).*

[துரு → தூர் → தூர்-. (வே.க.288)]

தூர்[3]-த்தல் *tūr-*, 4 செ.குன்றாவி. (v.t.) **பெருக்கித் தூய்மைசெய்தல்;** to sweep. "சினக ராலயந் தூர்ப்பது திருமெழுக்கிடுதல்" *(உபதேசகா. சிவபுண்ணிய. 50).*

ம. தூல்குக

தூர்[4] *tūr*, பெ. (n.) *1.* **வேர்** (பிங்.); root. *2.* **அடிப் பகுதி;** bottom. "தூரிற்றின் றன்ன தகைத்தரோ" *(நாலடி., 138).* *3.* **அடிமரம்** (இ.வ.); stump of a tree. *4.* **பனையின் வேர்ப்பற்றுள்ள அடிப்பகுதி;** root like formation about the stump of palmyras. "வேர் தூர்மடல் குருகு பறியா நீளிரும்பனை" *(பரிபா. 2:42).* *5.* **பனைவடலி முதலியன** (இ.வ.); tree, especially young palmyras and coconuts. *6.* **கிணற்றில் தேங்கிய வண்டல் முதலிய கசடுகள்;** rubbish at the bottom of a well. "கிணற்றைத் தூர்வார வேண்டும்." *7.* **சேறு;** dregs, mud. "தூரிடை யுறங்கு மாமை" *(கம்பரா. நாட்டு. 6).* *8.* **ஏனத்தின் (பாத்திரத்தின்) அடிப்பகுதி** (நெல்லை); bottom of a vessel.

[துரு → தூர் (வே.க. 288)]

தூர்[5] *tūr*, பெ. (n.) **பழிச்சொல்;** calumny. "கவலைத்தூர் கொல்லுங் கதிர் காமம்" *(கதிரைமலை காதல் - 10).*

[தூரு → தூர்]

தூர்கட்டு-தல் *tūr-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) *1.* **மரஞ்செடி முதலியன அடி பருத்தெழுதல்;** to grow with a big stump, as a young tree. *2.* **கொத்தாய் முளைத்தெழுதல்;** to grow in clusters. நெற்பயிர் தூற்கட்டியெழுந்தது.

[தூர் + கட்டு-]

தூர்த்தம் *tūrttam,* பெ. (n.) *1.* அரவடித்தூள் *(யாழ்.அக.);* iron filings. *2.* ஊமத்தை; trumpet flower night shade.

[தூர் → தூர்த்தம்]

தூர்வகம் *tūrvagam,* பெ. (n.) *1.* பொதியெருது; pack bullock. *2.* சுமக்கை; bearing, carrying.

தூர்வம் *tūrvam,* பெ. (n.) கொப்பூழ் *(சங்.அக.);* navel.

தூர்வாரி *tūr-vāri,* பெ. (n.) கிணறுகளில் தூரெடுப்பவன்; cleaner of wells.

[தூர் + வாரி.]

தூர்வாரு-தல் *tūr-vāru-,* 5 செ.கு.வி. (v.i.) கிணற்று வண்டல்களை வாரி எடுத்தல்; to clean out, as a well.

[தூர்[1] + வாரு-.]

தூர்வு *tūrvu,* பெ. (n.) கிணறு முதலியன சேற்றால் அடைபடுகை; filling up, closing up, as of a well with rubbish.

[தூர்[1] → தூர்வு]

தூர்வை[1] *tūrvai,* பெ. (n.) *1.* கிணற்றடை தூர்; accumulation of rubbish in a well. "தானே வந்தாலுந் தூர்வை யெடுக்கவொண்ணாது" *(திவ். இயற். திருவிருத். 12, வியா, 85). 2.* கொத்தப்பட்ட மண் *(வின்.);* loosened earth, from digging or ploughing. *3.* செத்தை *(வின்.);* straws, dry leaves, etc. *4.* கிணற்றைச் சார்ந்த நிலம் *(யாழ்ப்.);* ground adjacent to a well.

[தூர்[1] → தூர்வை]

தூர்வை[2] *tūrvai,* பெ. (n.) அறுகம்புல்; quitch grass. "தூவெள்ளிரிசியுந் தூர்வைக் காடும்" *(திருவிளை. உக்கிர. 23).*

[தூர் → தூர்வை]

தூர்வைக்காரன் *tūrvai-k-kāraṉ,* பெ. (n.) *1.* கிணறு சார்ந்த நிலத்துக்கு உரியவன்; sole proprietor of the soil about a well. *2.* தூர்வாரி பார்க்க; see *tūrvāri.*

[தூர்வை + காரன்]

தூர்வைசெய்-தல் *tūrvai-šey-,* 1 செ.குன்றாவி. (v.t.) நிலத்தைக் கொத்தித்திருத்துதல்; to digup, earth, to plough. "வேரற வகழ்ந்து போக்கித் தூர்வை செய்து" *(பதினொ. திருவிடை.மும். 10).*

[தூர்வை + செய்-.]

தூர்வைத்தைலம் *tūrvai-t-tailam,* பெ. (n.) அறுகம்புல் எண்ணெய் *(தைலவ. தைல. 132);* medicinal oil prepared from quitch grass.

[தூர்வை + தைலம்]

தூர்வைப்படுத்து-தல் *tūrvai-p-paṭuttu-,* 4 செ.குன்றாவி. (v.t.) தூர்வைசெய் பார்க்க; see *tūrvai-šey.*

[தூர்வை + படுத்து-.]

தூர்னா *tūrṉa,* பெ. (n.) அறுகு *(மூ.அ.);* quitch grass.

[தூர்வை → தூர்னா]

தூர *tūra,* வி.எ. (adv.) விலக; afar, away, off. "தூற்றாதே தூரவிடல்" *(நாலடி, 75).* தூர இருந்தால் சேர உறவு *(பழ.).*

தூரக்காரி *tūra-k-kāri,* பெ. (n.) மாதவிடாய் கொண்டு விட்டுக்கு விலக்காய் உள்ள பெண்; woman in her periods, as one that stays outside her house.

[தூரம் + காரி]

தூரகமனம் *tūra-kamaṉam,* பெ. (n.) நெடுந்தொலைவு நடைச் செலவு; long journey. "தூரகமனமுங்கலைகளின் ஒன்றாதலின்" *(சீவக. 1219, உரை).*

தூரகாரி *tūra-kāri,* பெ. (n.) எதிர்கால விளைவறிந்து செய்வோன்; far sighted man of action. "தூரகாரி யாதலால் . . . அமரர் வாழ்த்தினர்" *(பாரத. பதினான். 32).*

[தூரம் + காரி]

தூரச்சூலை *tūra-c-cūlai,* பெ. (n.) தூரசூலை பார்க்க; see *tūra-šūlai.*

[தூரம் + சூலை]

தூரசூலை *tūra-šūlai,* பெ. (n.) *பூப்புச் (சூதகச்) சூலை நோய் (சிவரட். 124);* dysmenorrhea.

[தூரம் + சூலை]

தூரணம் *tūraṇam,* பெ. (n.) விரைவு *(யாழ்.அக.);* quickness, haste.

[தூரம் → தூரணம்]

தூரத்தம் *tūrattam,* பெ. (n.) **ஊமத்தை;** Indian datura.

தூரத்தார் *tūrattār,* பெ. (n.) *1.* **தூரத்து உறவு;** distant relation. *2.* **வெளிநாட்டில் வாழ்வோர்;** persons living at a distance or in a far-off country.

[தூரம் → தூரத்தார்]

தூரதரிசி *tūra-tarišī,* பெ. (n.) *1.* **பருந்து;** vulture. *2.* **பண்டிதன்;** pandit. *3.* **தொலை நோக்குப் பார்வையன்;** far-sighted man.

தூரதை *tūradai,* பெ. (n.) **தூரம்** *(யாழ்.அக.);* distance.

[தூரம் → தூரதை]

தூரந்தொலை *tūran-tolai,* பெ. (n.) **மிக்க தூரம்;** great distance.

[தூரம் + தொலை]

தூரப்பயணம் *tūra-p-payaṇam,* பெ. (n.) **வெளிநாட்டு செலவு;** long journey; journey to a distant place.

[தூரம் + பயணம்]

தூரப்பார்வை *tūra-p-pārvai,* பெ. (n.) **தொலைப் பார்வை;** distant sight, hyperopia.

[தூரம் + பார்வை]

தூரப்பார்வைமட்டு *tūra-p-pārvai-maṭṭu,* பெ. (n.) **கிட்டப் பார்வையாகிய கண்ணின் குற்றம்;** nearsightedness, myopia.

[தூரம் + பார்வைமட்டு]

தூரப்பந்து *tūra-pandu,* பெ. (n.) **நெருக்க மில்லாத உறவினன்;** a distant relation.

[தூரம் + பந்து]

தூரம்[1] *tūram,* பெ. (n.) *1.* **சேய்மை** *(பிங்.);* remoteness, distance. "தூரம் போயின" *(கம்பரா. இராவணன் வதை, 240). 2.* **தூரச்சுற்றம்** (வின்.); remote relationship. *3.* **வேறுபாடு** *(யாழ்.அக.);* difference. *4.* **புறம்பு** *(யாழ்.அக.);* outside. *5.* **மகளிர் தீட்டு** (சூதகம்); menstruation.

தூரத்துப் பச்சை கண்ணுக்கு அழகு
தூரத்துப்பச்சை பார்வைக்கு இச்சை
தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்கு உதவாது
தூரத்துப் பார்வைக்கு மலை மழமழப்பு;
கிட்டப்போனால் கல்லும் கரடும். *(பழ.)*

தூரம்[2] *tūram,* பெ. (n.) *1.* **ஊமத்தை** *(மூ.அ.);* tumpet flower nightshade. *2.* **சிறுமரவகை;** purple datura.

தூரம்[3] *tūram,* பெ. (n.) **ஓர் இசைக்கருவி** *(யாழ்.அக.);* a musical instrument.

தூரமம் *tūramam,* பெ. (n.) **தேள் கொடுக்கி;** scorpion sting plant *(சா.அக.).*

தூரமானவெண்ணம் *tūramāṉa-v-eṇṇam,* பெ. (n.) *1.* **மேன்மையான கருத்து;** aspiring thoughts. *2.* **கவலை;** anxious thoughts. *3.* **கவனமின்மை;** absence of mind. *4.* **உலகப் பற்று நீங்கிய கருத்து;** thoughts abstracted from the world.

[தூரம் + ஆனவெண்ணம்]

தூரமூலம் *tūra-mūlam,* பெ. (n.) **மூஞ்சிப்புல்;** girdle grass *(சா.அக.).*

தூரல் *tūral,* பெ. (n.) *1.* **நிறைகை** *(யாழ்.அக.);* filling up. *2.* **துன்பம்** *(சது.);* affliction.

[தூர் → தூரல்]

தூரவலி *tūra-vali,* பெ. (n.) **தீட்டு (சூதக) நோய் வகை;** pain during menstruation.

[தூரம் → வலி]

தூரவுறவு *tūra-v-uṟavu,* பெ. (n.) **விலகிய உறவு முறை;** distant relation.

[தூரம் + உறவு]

தூரவை *tūravai,* பெ. (n.) **அறுகு;** harialli grass *(சா.அக.).*

தூரன் *tūraṉ*, பெ. (n.) முயற் புல்; here grass (சா.அக.).

தூராகி *tūrāki*, பெ. (n.) எலிக்காது என்னுஞ் செடி (தைலவ. தைல. 125); a plant.

தூராகு *tūrāgu*, பெ. (n.) எலிச்செவிக் கள்ளி; rat's ear spurge (சா.அக.).

தூராடிகத்தலை *tūrāṭi-kattalai*, பெ. (n.) கடல் மீன் வகை; sea-fish, dark grey.

தூராதிதூரம் *tūrādi-tūram*, பெ. (n.) மிக்க தூரம்; very great distance. "தூராதி தூரஞ் சொல்லத் தொலை யாது" (ஔவை. கு. ஞானம்பிரி, 7).

[தூரம் + ஆதி + தூரம்]

தூராதூரம் *tūrātūram*, பெ. (n.) 1. வெவ்வேறு தூரம்; various distances. 2. நெடுந்தொலைவு; very great distance.

தூரால் *tūrāl*, பெ. (n.) புதர் (புதுவை); bush.

[தூர் → தூரால்]

தூரி[1] *tūri*, பெ. (n.) 1. பலகறை (வின்.); small shell, cowry. 2. சிறுதூம்பு; small outlet for irrigation. 3. தூரிவலை பார்க்க; see *tūrivalai*.

[தூர் → தூரி]

தூரி[2] *tūri*, பெ. (n.) எருது (வின்.); ox.

தூரி[3] *tūri*, பெ. (n.) ஊசல் (பிங்.); swing.

தூரி[4] *tūri*, பெ. (n.) தூரிகை (யாழ்.அக.) பார்க்க; see *tūrigai*.

தூரி[5] *tūri*, பெ. (n.) தூரியம்,3 பார்க்க; see *tūriyam,3*. "போர்ப்பணவந் தூரி" (கம்பராபிரமாத்திர. 5).

தூரிகை *tūrigai*, பெ. (n.) ஓவியம் தீட்ட, பெயர்ப்பலகை எழுதப் பயன்படும் எழுதுகோல்; விலங்கின் மயிர் ஒரு முனையில் செருகப்பட்ட நீண்ட குச்சி; painting reed or pencil, painter's brush. "கையா லெடுத்தது தூரிகை யேயன்று காரிகையே" (வெங்கைக்கோ. 108).

[தூர் → தூரி → தூரிகை (வ.மொ.வ.)]



தூரிது *tūridu*, பெ. (n.) சேய்மையானது; that which is far off or distant. "மிக்க தூரிதன்று பாண்டியனது செல்வமிக்க ஊர்" (சிலப். 13:133, உரை).

[தூரம் → தூரிது]

தூரிமுள்ளு *tūri-muḷḷu*, பெ. (n.) நரியிலந்தை; jackal bair (சா.அக.).

தூரிய *tūriya*, வி.எ. (adv.) தூரமான; far off, distant. "இல்லிடத்தினின்றுந் தூரிய இடத்தில்" (கலித். 110, உரை).

[தூரம் → தூரிய]

தூரியகண்டம் *tūriya-kaṇḍam*, பெ. (n.) ஓர் இசைக் கருவி (யாழ்.அக.); a musical instrument.

[தூரியம் + கண்டம்]

தூரியம்[1] *tūriyam*, பெ. (n.) 1. இசைக்கருவி; musical instrument. "அந்தி விழவிற் றூரியங் கறங்க" (மதுரைக். 460). 2. மங்கலப்பறை (பிங்.); drum beaten on festive of joyful occasions. 3. முரசு (பிங்.); a large drum.

தூரியம்[2] *tūriyam*, பெ. (n.) தூரிகை (சூடா.) பார்க்க; see *tūrigai*.

தூரியம்[3] *tūriyam*, பெ. (n.) ஒரு வகைத் துகில் (பிங்.); a kind of fine cloth.

தூரியம்[4] *tūriyam*, பெ. (n.) பொதியெருது (பிங்.); pack bullock.

தூரியம்[5] *tūriyam*, பெ. (n.) 1. கைவேல் (வின்.); javelin, dart. 2. எறிபடைப்பொது (அக.நி.); missile.

தூரியம்[6] *tūriyam,* பெ. (n.) 1. ஈயம்; lead. 2. நஞ்சு; poison.

தூரியன் *tūriyaṉ,* பெ. (n.) தூரத்துள்ளவன்; one who is far off or at a distance. "தூரியனாஞ் சிவன் தோன்றும்" *(சி.சி. 8:28).*

[தாரம் → தூரியன்]

தூரியாங்கம் *tūriyāṅgam,* பெ. (n.) பலவகை இசைக்கருவிகளையும் கொடுக்கும் தெய்வமரவகை (கற்பகதரு) (தக்கயாகப். 757, குறிப்பு); a Kalpaga tree which yields every kind of musical instrument that is wished for.

[தூரியம் → தூரியாங்கம்]

தூரிவலை *tūri-valai,* பெ. (n.) குப்பா எனும் பையுள்ள மீன்கள் வந்து விழும் வீசுவலை; a big fishing net.

[தூர் → தூரி + வலை (வே.க. 288)]

தூரு[1]**-தல்** *tūru,* 5 செ.குவி. (v.i.) 1. மலங்கழித்தல் (நாஞ்.); to go to stool.

* ம. தூருக

தூரு[2] *tūru,* பெ. (n.) தூர் பார்க்க; see tūr. "தூருகனத்தோடே . . . பாசனஞ் செய்" *(தைலவ.பாயி. 15).*

தூரேத்தி *tūretti,* பெ. (n.) கம்பந்திராய்ச் செடி (மலை.); a kind of wild chickweed.

தூரோணம் *tūrōṇam,* பெ. (n.) கவிழ்த்தும்பைச் செடி (மலை.); small purslane.

தூலக்கட்டை *tūla-k-kaṭṭai,* பெ. (n.) துலாக்கட்டை பார்க்க; see *tulā-k-kaṭṭai.* பத்துத் தூலக்கட்டை வீடு.

[துலாக்கட்டை → தூலக்கட்டை]

தூலக்கடை *tūla-k-kaḍai,* பெ. (n.) தூலக் கட்டை பார்க்க; see *tūla-k-kaṭṭai.*

தூலகம் *tūlagam,* பெ. (n.) பருத்தி (மலை.); common cotton.

[தூலம் → தூலகம் (மு.தா. 160)]

தூலசர்க்கரை[1] *tūla-šarkkarai,* பெ. (n.) உப்பு (சங்.அக.); salt.

தூலசர்க்கரை[2] *tūla-šarkkarai,* பெ. (n.) தூலசருக்கரை (சங்.அக.) பார்க்க; see *tūla-šarukkarai.*

தூலசருக்கரை *tūla-šarukkarai,* பெ. (n.) பருத்தி விதை (மூ.அ.); cotton seed.

தூலபலம் *tūla-palam,* பெ. (n.) எருக்கு; madar plant (சா.அக.).

தூலபிசு *tūla-pišu,* பெ. (n.) பஞ்சு (மூ.அ.); cotton.

தூலம்[1] *tūlam,* பெ. (n.) 1. பஞ்சு (சூடா.); cotton. 2. கோரை (மூ.அ.); a sedge. 3. பருத்திச் செடி; Indian cotton plant. 4. இலவு (மலை.) பார்க்க; see *ilavu.*

[தூல் → தூலம் (மு.தா. 160)]

தூலம்[2] *tūlam,* பெ. (n.) நீர்முள்ளி (மலை.); white long-flowered nail dye.

தூலம்[3] *tūlam,* பெ. (n.) நஞ்சு (யாழ்.அக.); poison.

தூலி *tūli,* பெ. (n.) தூலிகை பார்க்க; see *tūligai.*

தூலிகை *tūlikai,* பெ. (n.) 1. எழுதுகோல் (சூடா.); pointing reed or pencil. 2. அன்னத்தினிறகு (நிகண்டு.); swan's feather. 3. மெத்தை (யாழ்.அக.); cushion. 4. விளக்குத்திரி (யாழ்.அக.); wick.

தூலினி *tūliṉi,* பெ. (n.) சிவப்புநிற பூக்களைக் கொண்ட இலவு (மலை.); red-flowered silk cotton.

[துல் → தூல் → தூலினி (மு.தா. 160)]

தூலை *tūlai,* பெ. (n.) பருத்தி (சங்.அக.); cotton.

[தூல் → தூலை]

தூவத்தி *tūvatti,* பெ. (n.) வாள் (பிங்.); sword.

தூவரன் *tūvaraṉ,* பெ. (n.) அண்ணகன் (யாழ்.அக.); eunuch.

தூவல்[1] *tūval,* பெ. (n.) 1. தூவுகை (சூடா.); sprinkling, spilling, drizzling. 2. துவலை; little drops of water, rain drops. "தூவற் கலித்த தேம்பாய் புன்னை" *(புறநா. 24).* 3. மழை; rain, drizzle. "தூவற் கலித்த புதுமுகை" *(மலைபடு. 146).* 4. இறகு; feather. "சொக்கின் றூவலும்" *(தேவா.*

216, 4). 5. அம்பினிறகு (யாழ்.அக.); feather of an arrow. 6. எழுதுமிறகு (யாழ்ப்.); quill-pen. 7. சித்திரக் கோல் (யாழ்ப்.); painter's brush of cat's or squirrel's hair. 8. தளிர் (யாழ்.அக.); sprout, shoot. 9. எழுதுகோல்; pen.

[தூவு → தூவல்]

தூவல்[2] *tūval*, பெ. (n.) கறி வகை (இ.வ.); a kind of vegetable curry.

[தூவு → தூவல்]

தூவல்ராகி *tūvar-rāgi*, பெ. (n.) தூவலாரியம் (G.Sm.D. I, i, 218) பார்க்க; see *tūval-āriyam*.

[தூவல் + ராகி]

தூவலாரியம் *tūval-ā-riyam*, பெ. (n.) இராகி வகை (G.Sm.D. I, i, 218); ragi grwon under irrigation.

[தூவல் + ஆரியம்]

தூவழி *tū-vaḻi*, பெ. (n.) பண் வகை; a secondary melody type. "தும்பி வண்டொடு தூவழி யாழ்செய" (சீவக. 854).

[தூய்(மை) + வழி]

தூவற்பிளவு *tūvaṟ-piḷavu*, பெ. (n.) எழுதிறகின் முனைப் பிளவு (வின்.); slit of a quill-pen.

[தூவல் + பிளவு]

தூவனாதி *tūvaṉādi*, பெ. (n.) ஆடாதோடை; Malabar winter cherry (சா.அக.).

தூவாத *tūvāda*, பெ. (n.) வேண்டாதவை; that which is unpalatable or undersirable. "தூவாத நீக்கி" (குறள். 685). 2. தூய்மையில்லாத; polluted.

[தூ → தூவாத]

தூவானம் *tūvāṉam*, பெ. (n.) 1. காற்று அடித்துக் கொண்டுவரும் மழைத்துளிகள், சிதறல், சிதறுமழை; drizzle, rain driven in or scattered about in fine drops by stroing wind. மழைவிட்டுந் தூவானம் விடவில்லை (பழ.). 2. அருவி வீழிடம் (பிங்.); place where a cascade falls, as the place of spray.

[தூவு + வானம்]

தூவி *tūvi*, பெ. (n.) 1. பறவையிறகு; feather or down of birds. "மறுவி றூவிச் சிறுகருங்காக்கை" (ஐங்குறு. 139). 2. மயிற்றோகை (பிங்.); peacock's tail. 3. அன்னத்தினிறகு (பிங்.); swan's down. "ஆய்தூவி யனமெய்" (கலித். 56). 4. அன்னப் பறவை; swan. "தூவிகணிற் குஞ் சாலிவளைக்குஞ் சோலை சிறக்கும்" (திருப்பு. 588). 5. எழுதுகோல் (அருநி.); quill-pen. 6. மீன்சிறகு; fin of a fish.

[தூவல் → தூவி]

தூவிப்பொன் *tūvi-p-poṉ*, பெ. (n.) பொன்னின் ஒருவகை,கிளிச்சிறை; a kind of gold. "தூவிப்பொன் மாடமூதூர்" (சீவக. 1756).

[தூவி + பொன்]

தூவியள-த்தல் *tūvi-y-aḷa-*, 4 செ.குன்றாவி (v.t.) இலேசாகப் பெய்தளத்தல்; to put grain loosely into a measure, as in measuring flour.

[தூவு + அளத்தல்]

தூவிவிடு-தல் *tūvi-viḍu-*, 4 செ.குன்றாவி (v.t.) 1. கறிப்பொடி தூவுதல்; to strew curry-powder. 2. செய்தி பரப்புதல்; to spread a rumour.

[தூவி + விடு-]

தூவினம் *tūviṉam*, பெ. (n.) மிளகு (சா.அக.); black pepper.

தூவு[1]**-தல்** *tūvu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. தெளித்தல்; to sprinkle, strew. "நன்னீர் தூய்" (திவ். திருவாய். 1. 6:1). 2. இறைத்தல்; to scatter, spread out, as grain for fowls. 3. மிகச் சொரிதல்; to shower forth, as arrows. "வெங்கணை தூவி" (சீவக. 453). 4. அளக்கும் போது இலேசாகமேற் பெய்தல்; to put loosely in a measure, as flour while measuring.

தூவியளக்கிறான். 5. பூத்தூவி வழிபடுதல்; to strew or offer flowers in worship. "தீபமொடு தூபமலர் தூவி" (தேவா. 542, 3). 6. ஒழிதல்; to rest, cease. "கைதூவே னென்னும் பெருமையின்" (குறள், 1021) (சீவக. 2917, உரை.)

தூவு²-தல் *tūvu-*, 5 செ.கு.வி (v.i.) மழை பெய்தல் (வின்.); to rain.

தூவு³ *tūvu*, பெ. (n.) ஊண் (அருநி.); flesh, meat.

[தூ → தூவு]

தூவுகை *tūvugai*, பெ. (n.) பொடி தூவுகை; the act of sprinkling as with a powder (சா.அக.).

[தூவு → தூவுகை]

தூவுரை *tū-v-urai*, பெ. (n.) நல்லுரை; sage counsel. "தூவுரை கேட்டுத் துணிந்திவ ணிருந்தது" (மணிமே. 28:136).

[தூய்(மை) + உரை]

தூவெள்ளறுவை *tū-veḷḷaṟuvai*, பெ. (n.) அழுக்கிலா வெண்ணிற ஆடை; pure, white cloth. "தூவெள் ளறுவைக் கண்மாசுபோல" (குறள். 1051, உரை).

[தூய்(மை) + வெள்ளறுவை]

தூவெளி *tūveḷi*, பெ. (n.) அருள்வெளி (ஞானவெளி); mystic sphere of pure intelligence. "சோதியைமாத்தூ வெளியை" (தாயு. பொருள்.வ. 18).

[தூய்(மை) + வெளி]

தூவையர் *tūvaiyar*, பெ. (n.) இறைச்சி யுண்டோர்; flesh eaters. "தூவையர்கள் சோகைமுகநீலர்" (திருப்பு. 363).

[தூவு → தூவையார்]

தூள் *tūḷ*, பெ. (n.) 1. எந்தக் கடினமான பொருளையும் உலக்கை அல்லது குழவி கொண்டு இடித்தோ அல்லது அரைத்தோ எடுத்த பொடி, துகள் (பிங்.); dust, powder, particle. 2. மருந்துப்பொடி; medicinal powder. 3. கறிப்பொடி (வின்.); curry powder. 4. மூக்குப் பொடி; snuff. 5. பூந்தாது; pollen. "தூளெழுந் தாமரை யலர்" (செவ்வந்தி. பு, அகத்திய. 34). 6. திருநீறு; the sacred ashes. "திரு நுண்டூ ளள்ளிச் சாத்தும்" (சேதுபு. கடவுள்வா. 8). 7. சிறியவை; anything small collectively, as fish, stones, roots etc. 8. சிறுமுத்து (வின்.); lowest class of pearls, as very small.

தூள்கிளப்பு-தல் *tūḷ-kiḷappu-*, 5 செ.கு.வி. (v.i.) திறமை முதலியவை சிறப்பாக வெளிப் படுகிற வகையில் ஒன்றைச் செய்தல் அல்லது நிகழ்த்துதல்; to extremely well. மட்டைப் பந்தாட்டத்தில் அவர் தூள் கிளப்பிவிட்டார்.

[தூள் + கிளப்பு-.]

தூள்படு-தல் *tūḷ-paḍu-*, 20 செ.கு.வி (v.i.) 1. முனைப்பாக செயற்படுதல்; to be expedited with great eclat. செயல் தூள்படுகிறது. 2. அமளியுடன் நிகழ்தல்; to be in a commotion. குழந்தையைக் காணாமல் வீடு தூள்பட்டது.

[தூள் + படு-.]

தூள்படுத்து¹-தல் *tūḷ-paḍuttu-*, 5 செ.குன்றாவி (v.t.) 1. தூளாக்குதல்; to pulverise, reduce to powder. 2. முற்றும் அழித்தல்; to destroy utterly. "எனதுமிடி தூள்படுத்தி" (திருப்பு. 1042).

[தூள் + படுத்து-.]

தூள்படுத்து²-தல் *tūḷ-paḍuttu-*, 5 செ.கு.வி (v.i.) புரளி (அட்டகாசம்) பண்ணுதல் (உவ); to make a show of great strength or ability.

[தூள் + படுத்து-.]

தூள்பற-த்தல் *tūḷ-paṟa-*, 3 செ.கு.வி (v.i.) பலரும் அறியும்படி அதிகாரம் வெளிப்படுதல் அல்லது பணம் செலவழித்தல்; to be loudly displayed. வீட்டில் மூத்த மருமகள் அதிகாரம் தூள் பறக்கிறது.

[தூள் + பற-.]

தூள்மீன் *tūḷ-mīṉ*, பெ (n.) பொடி மீன் (யாழ்ப்.); small fish.

[தூள் + மீன்]

தூள்விறகு *tūḷ-viṟagu*, பெ. (n.) பொடி விறகு (யாழ்ப்.); fire-wood of small size.

[தூள் + விறகு]

தூளம் *tūḷam*, பெ. (n.) தூளனம்,1 பார்க்க; see *tūḷaṉam*,1.

தூளனம் *tūḷaṉam*, பெ. (n.) திருநீற்றை நீரிற் குழையாது பூசுகை; besmearing one's body with the dry sacred ahses. "நீறு தூளனஞ்

செய்திடின்" (சிவரக. சிவதன்மா. 23). 2. தூள் (வின்.); dust.

[தூள் → தூளனம்]

தூளா-தல் *tūḷā-*, 6 செ.கு.வி. (v.i.) 1. தானே பொடியாதல்; falling into pieces. 2. அரைப்பதினால் பொடியாதல்; becoming reduced to powder by grinding or pounding (சா.அக.).

[தூள் + ஆ-.]

தூளாக்கு-தல் *tūḷākku-*, 5 செ.குன்றாவி. (v.t.) பொடி செய்தல்; pulverising, reducing to dust.

[தூள் + ஆக்கு-.]

தூளி[1]-த்தல் *tūḷi-*, 4 செ.கு.வி. (v.i.) பருத்தல் (வின்.); to grow stout, bulky.

[தூள் → தூளி-.]

தூளி[2]-த்தல் *tūḷi-*, 4 செ.குன்றாவி. (v.t.) திருநீற்றை உடல்முழுவதும் பூசுதல் (சங்.அக.); to besmear one's body with the dry sacred ashes.

[தூள் → தூளி]

தூளி[3] *tūḷi*, பெ. (n.) 1. புழுதி; dust. "ஏத்துவார் களுழக்கிய பாததூளி படுதலாலிவ் வுலகம் பாக்கியஞ் செய்ததே" (திவ். பெரியாழ். 4.4:6). 2. பூந்தாது; pollen.

[தூள் → தூளி]

தூளி[4] *tūḷi*, பெ. (n.) குதிரை (அக.நி.); horse.

[தூள் → தூளி]

தூளி[5] *tūḷi*, பெ. (n.) ஆர்ப்பு; noise, tumult.

[தூள் → தூளி]

தூளி[6] *tūḷi*, பெ. (n.) குழந்தையைத் தூங்கவைக்க நீண்ட துணியின் இரு முனையையும் கட்டி ஒன்றில் தொங்கவிட்டிருக்கும் அமைப்பு; ஏணை; cradle made with a long piece of cloth.



தூளிகுச்சம் *tūḷi-kuccam*, பெ. (n.) கதம்பப் பொடி (சங்.அக.); fragrant powder.

[தூளி + குச்சம்]

தூளிச்சி *tūḷicci*, பெ. (n.) தூளாகச் செய்யும் மருந்து அல்லது மூலிகை; any medicine or drug capable of reducing any substance into a fine powder as by action of acid.

[தூளி → தூளிச்சி]

தூளிசாலம் *tūḷi-šālam*, பெ. (n.) அருகக் கடவுளது கோயில் முதல்மதில் (மேருமந். 60, உரை); the first compound-wall of a temple of Arhat.

தூளித்துவசம் *tūḷi-t-tuvašam*, பெ. (n.) 1. கதம்பப் பொடி; a fragrant powder used in bath. 2. மணமேற்றியபொடி; any scented powder. 3. காற்று; air (சா.அக.).

[தூளி + துவசம்]

தூளித்துவசன் *tūḷi-t-tuvašaṉ*, பெ. (n.) காற்று (யாழ்.அக.); wind.

[தூளி + துவசன்]

தூளிதம் *tūḷi-dam*, பெ. (n.) 1. திருநீறு (வின்.); the sacred ashes. 2. பொடியானது; dust, that which is reduced to powder.

[தூளி → தூளிதம்]

தூளிமட்டம் *tūḷi-maṭṭam*, பெ. (n.) தரைமட்டம் (யாழ்.அக.); ground-level.

[தூளி + மட்டம்]

தூற்றல் *tūṟṟal*, பெ. (n.) தூறல் பார்க்க; see *tūṟal*.

ம. தூற்றல்

[தூற்று → தூற்றல்]

தூற்றலுந்தும்மலுமாய் *tūṟṟalun-tummalumāy*, வி.எ. (adv.) தூறலுந்தும்மலுமாய் பார்க்க; see *tūṟalun-tummalu-māy*.

தூற்றாப்பொலி *tūṟṟā-p-poli*, பெ. (n.) தூற்றாத நெற்குவியல்; grain-heap which has not been winnowed. "தூற்றாப்பொலி ஆலையிற்

பாகுகாய்கின்ற புகையாற் பரக்கப்பட்டு" (*சிலப். 10: 151, உரை*).

[தூற்று + ஆ + பொலி]

தூற்றாரி *tūṟṟāri*, பெ. (n.) ஊதாரி (வின்.); prodigal, squanderer.

[தூற்று + ஆளி - தூற்றாளி → தூற்றாரி]

தூற்றி *tūṟṟi*, பெ. (n.) 1. புறங்கூறுவோன்; talebearer. தூற்றித் திரியேல் (*பழ.*). தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும் (*பழ.*). 2. பெருக்குவோன்; sweeper.

[தூற்று → தூற்றி-]

தூற்றிக்கொள்(ளு)-தல் *tūṟṟi-k-koḷ-*, 16 செ.குன்றாவி. (v.tr.) தெரிந்து கொள்ளுதல்; to sift and select. "தூற்றிக் கொளப் பட்டார்" (*சீவக. 2164*).

[தூற்று → தூற்றி + கொள்-.]

தூற்று[1]-தல் *tūṟṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. சிதறுதல்; to scatter, disperse, spread or strew. "தென்ற றூற்றுங் குறுந்திவலை" (*கம்பரா. கடல்காண். 5*). 2. தூசிபோமாறு நெல்லைத் தூவுதல்; to winnow. "கால்வரத் தூற்றி . . . உயர்ந்திட்ட நெற்றிரளின்" (*சேதுபு. திருநாட். 74*). 3. புழுதி முதலிய இறைத்தல்; to throw up, as dust in the air. "புழுதியைத் தூற்றாதே". 5. பரப்புதல்; to spread. "அரும்பொதி வாசஞ் சிறுகாற் செல்வன் மறுகிற் றூற்ற" (சிலப். 4:18). 6. பலருமறியப் பழிகூறுதல்; to publish abroad evil reports; to defame, slander. "துன்னியார் குற்றமுந் தூற்று மியல்பினார்" (*குறள், 188*). 7. அறிவித்தல்; to make known. "வாரமு நாளுந் தூற்றி" (*கம்பரா. திருமுடி. 25*). 8. வீண்செலவு செய்தல்; to squander, lavish, waste.

[துவற்று → தூற்று-. (முதா. 57)]

தூற்று[2] *tūṟṟu*, பெ. (n.) 1. பொலி தூற்றுகை; winnowing, clearing chaff from grain. 2. ஒருவரைப் பேச்சாலோ எழுத்தாலோ பழிக்கை, பழிப்பு; slandering, spreading a slanderous report.

தூற்றுக்காடு *tūṟṟu-k-kāḍu*, பெ. (n.) சிறுதூறு (வின்.); low jungle, thicket (*செ.அக.*).

[தூற்று + காடு]

தூற்றுக்குடியான்சுழி *tūṟṟu-k-kuḍiyāṉ-suḻi*, பெ. (n.) பழைய காசு வகை (*பணவிடு. 133*); an ancient coin.

தூற்றுக்கூடை *tūṟṟu-k-kūḍai*, பெ. (n.) 1. பொலி தூற்றுவதற்கு உதவுந் தட்டுக் கூடை (வின்.); winnowing basket. 2. பொலி தூற்றுதற்கு உதவும் முறம்; winnowing fan.

[தூற்று + கூடை]



தூற்றுகூடை *tūṟṟu-kūḍai*, பெ. (n.) தூற்றுக் கூடை பார்க்க; see *tūṟṟu-k-kūḍai*.

[தூற்று + கூடை]

தூற்றுமுறம் *tūṟṟu-muṟam*, பெ. (n.) நெற்பொலி தூற்றுதற்கு உதவும் முறம்; winnowing fan.

[தூற்று + முறம்]



தூற்றுமைக்கொற்றான் *tūṟṟumai-koṟṟāṉ*, பெ. (n.) கொற்றான் வகை (மூ.அ.); green thread -like leafless creeper.

தூற்றுவாய் *tūṟṟu-vāy*, பெ. (n.) பொலி தூற்றும் போது அடிக்கும் பின்காற்றுப் பக்கம் (வின்.); windward side in winnowing.

[தூற்று + வாய்]

தூற்றுவாயக்கொற்றான் *tūṟṟu-vāya-k-koṟṟāṉ*, பெ. (n.) தூற்றுமைக்கொற்றான் பார்க்க (யாழ்அக.); see *tūṟṟumai-k-koṟṟāṉ*.

தூறல்[1] *tūṟal*, பெ. (n.) *1.* சிறு மழை (பிங்.); rain. *2.* மழைத்துளி; drop of rain.

[தூறு → தூறல். வேகமாகவோ வலுவாகவோ இல்லாமல் தொடர்ச்சியாகச் சிறுசிறு துளிகளாக விழுகிற மழை.]

தூறல்[2] *tūṟal*, பெ. (n.) பழிச்சொல்; slander, abuse.

[தூறு → தூறல்]

தூறலுந்தும்மலுமாய் *tūṟalun-tummalum-āy*, வி.எ. (adv.) சாரலுஞ் சிறுபெயலுமாக; in drizzle or gentle rain. மழை தூறலுந் தும்மலுமாய் இருக்கிறது (இவ.).

[தூறல் + உம் + தும்மல் + உம் + ஆய்.]

தூறவம் *tūṟavam*, பெ. (n.) நாவல் (மலை.); common black plum.

தூறன் *tūṟaṉ*, பெ. (n.) *1.* குடிக்குப் பழிப்பாயுள்ளவன்; one who is a disgrace to his family. *2.* தீயோன்; libertine, debauchee. *3.* அவதூறு சொல்பவன் (சங்.அக.); slanderer.

[தூறு → தூறன்]

தூறாக்கு-தல் *tūṟākku-*, 5 செகுன்றாவி. (v.t.) பழித்தல் (வின்.); to defame, cast aspersion on one's character.

[தூறு + ஆக்கு-.]

தூறாய்ப்போ[1]**-தல்** *tūṟāy-p-pō-*, 8 செ.குவி. (v.i.) செய்தி பரவுதல் (வின்.); to be rumoured abroad.

[தூறு + ஆய் + போ-.]

தூறாய்ப்போ[2]**-தல்** *tūṟāy-p-pō-*, 8 செ.குவி. (v.i.) தலைமயிர் எண்ணெய்ப் பசையற்றுப் போதல் (இவ.); to be come free from any trace of oil, as hair.

[தூறு + ஆய் + போ-.]

தூறியமயிர் *tūṟiya-mayir*, பெ. (n.) வாராமற் கிடக்கும் தலைமயிர் (வின்.); rough, shaggy, unkempt hair.

[தூறு + மயிர் - தூறிய மயிர்]

தூறு[1]**-தல்** *tūṟu-*, 5 செ.குவி. (v.i.) *1.* மழைத்துளி விழுதல்; to drizzle. *2.* செய்தி பரத்தல் (வின்.); to spread as news. *3.* கிளைத்தல் (வின்.); to sprout forth, branch forth, become bushy. *4.* சடை பற்றுதல் (வின்.); to become shaggy and rough.

[துவறு → தூறு-.]

தூறு[2]**-தல்** *tūṟu-*, 5 செ.குன்றாவி (v.t.); பழித்தல் (இவ.); to traduce, slander.

[துவறு → தூறு-.]

தூறு[3] *tūṟu-*, பெ. (n.) *1.* புதர்; bushes, shrubbery, thick underwood. "தூற்றில் வாழ்முயல்" *(பெரியபு. திருக்குறிப். 77).* *2.* குவியல்; heap. "எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்" *(குறள். 435).* *3.* குறுங்காடு; low jungle. ஆறுகொண்டது பாதி, தூறு கொண்டது பாதி. *4.* சுடுகாடு; burning ground. "தூறன்றி யாடரங் கில்லையோ" *(தேவா. 1241, 2).* *5.* திராய் (மலை.); Indian chickweed. *6.* மஞ்சள் (மலை.); country turmeric. *7.* தென்னை, பனை முதலியவற்றின் வேரொட்டிய அடி; bottom root of coconut tree, palmyra tree, etc.

[துள் → துறு → தூறு (மு.தா. 233.)]

தூறு[4] *tūṟu*, பெ. (n.) *1.* பழிச்சொல்; calumny, slander, ill report. "மாதர் தூறுதூவத் துயர்க்கின்றேன்" *(அருட்பா. புராண, விரகு. 15).*

2. தீங்கு; evil. "தூறியற்றிடுந் துட் பண்ணியன்" (சேதுபு. அக்கி. 69).

[துவறு → தூறு (மு.தா.57)]

தூறுகி *tūṟugi*, பெ. (n.) கருப்புக் கடுக்காய் (சா. அக.); black gallnut.

தூறுகுணம் *tūṟukuṇam*, பெ. (n.) கடம்பு (மலை.); common Indian oak.

தூறுகுணாதியம் *tūṟukuṇādiyam*, பெ. (n.) வெள்ளைக் கடுக்காய் (சா.அக.); white myrobalan of cuddapah.

தூறுட்டி *tūṟuṭṭi*, பெ. (n.) சிற்றேலம் (மலை.); true cardamom.

தூறுதம் *tūṟudam*, பெ. (n.) மஞ்சட்கடுக்காய்; yellow myrobalan - yellow gallnut (சா.அக.).

தூறுதலை *tūṟu-talai*, பெ. (n.) சிலும்பலான மயிர்த்தலை (வின்.); rough, shaggy head.

[தூறு + தலை.]

தூறுதலைச்சி *tūṟu-talaicci*, பெ. (n.) 1. மயிர்க் கூச்செறிந்தவள்; a woman whose hair is on end, especially when excited or otherwise affected nervously. 2. பறட்டைத் தலைச்சி; a woman having bushy hair. (சா. அக.).

[தூறு + தலைச்சி.]

தூறுதலையன் *tūṟu-talaiyaṉ*, பெ. (n.) 1. பரட்டைத் தலையன் (சங்.அக.); person with shaggy hair. 2. பிராய் (மலை.); paper tree.

[தூறு + தலையன்.]

தூறுதவம் *tūṟu-davam*, பெ. (n.) மரவள்ளிக் கிழங்கு; tapioca plant (சா.அக.)

தூறுமாறு *tūṟu-māṟu*, பெ. (n.) தீநெறி; bad conduct, vicious life.

[தாறுமாறு → தூறுமாறு.]

தூறுமீன் *tūṟu-mīṉ*, பெ. (n.) மீன்வகை (பெரியமாட். 101.); a kind of fish.

[தூறு + மீன்.]

தூறுவாதி *tūṟuvādi*, பெ. (n.) தீம்பாலை யென்னும் மரம் (சங்.அக.); a tree.

தூறுவாயன் *tūṟu-vāyaṉ*, பெ. (n.) பழி கூறுவோன்; slanderer

[தூறு + வாயன்.]

தூன்மரம் *tūṉ-maram*, பெ. (n.) சந்தனவேம்பு (சங்.அக.); sandal neem.

மறுவ. தூணுமரம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

நான்காம் மடலம் - மூன்றாம் பாகம்

தெ - தௌ

Vol. IV - Part - III

பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை

தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு

2004

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

நான்காம் மடலம் - மூன்றாம் பாகம்

தெ - தெள

Vol. IV - Part - III

பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை

தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மேற்பார்வையாளர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு

2004

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்கக வெளியீடு - 12

முதற் பதிப்பு : 2004

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. IV, Part - III

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு

விலை : உருபா 300/-

குறியீட்டெண் : **Colon No. P.J1-J, 314" K.M4**

வெளியிட்டோர் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி-48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை - 600 040

அச்சீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி
சென்னை - 600 113

நூல் கிடைக்குமிடம் : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி
சென்னை - 600 113

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி-48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை - 600 040

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

Vol. IV - Part - III

நான்காம் மடலம் - மூன்றாம் பாகம்

(தெ முதல் தௌ வரை)

பதிப்புக் குழு

திரு. **பு.ஏ. இராமையா** இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை

திரு. **தா. சந்திரசேகரன்** இ.ஆ.ப.,
அரசு சிறப்புச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை
மற்றும்
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மேற்பார்வையாளர்

முனைவர் **சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

கூர்ந்தாய்வாளர்

புலவர் **த. சரவணத் தமிழன்**

தொகுப்பாளர்கள்

திரு. **முத்து. பிச்சை**
முனைவர் **மு. கண்ணன்** (பகுதிப்பொறுப்பாளர்)
முனைவர் **பா. வெற்றிச்செல்வன்**
முனைவர் **ச. செந்திலாண்டவன்**
முனைவர் **இரா.கு. ஆல்துரை**
திரு. **கா. இளமுருகு**
திரு. **ச.கி. கணேசன்** (ஓவியர்)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

ஜெ ஜெயலலிதா
முதலமைச்சா

வாய்மையே வெல்லும்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009.

22.12.2004

அணிந்துரை

'ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம் ஒவ்வொன்றும் உன் முன்னேற்றம்' என்னும் வைர வரியில் தமிழின் முன்னேற்றமே தமிழர் முன்னேற்றம் என்பதை எடுத்துக் காட்டினார் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்.

பாவேந்தர் பணித்தபடி, ஒல்லும் வகையில் எல்லாம் அந்த ஒண்டமிழை வளர்க்க உற்ற பணி புரியும் நற்றமிழ் அரசே தமிழ் நாடு அரசு.

காலத்தை வென்று நிற்கும் நம் கன்னித் தமிழை இந்திய அரசின் ஆட்சி மொழியாக ஆக்குவதற்கும், உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழியின் ஒப்பற்ற இலக்கியமாகவும், உலக சிந்தனையின் உச்சமாகவும் விளங்கும் திருக்குறளைத் தேசிய இலக்கியமாக ஆக்குவதற்கும், இடையறா முயற்சிகளை எடுத்து வருகிறது எனது அரசு. அனைத்து மாணவரும் தமிழைப் பயில வேண்டும் என்பதற்காக மழலையர் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை அறிவியல் தமிழைக் கற்பிக்க ஏற்பாடு செய்ததும் எனது அரசே.

வளர்ந்து வரும் அறிவியலுக்கு ஈடு கொடுக்கும் வகையிலும், இலக்கண இலக்கிய மரபுகளைப் பேணிக் காக்கும் முறையிலும் மொழியின் சொல்வளத்தை அறிந்து கொள்வதும், பெருக்குவதும் இன்றியமையாததாகும். இப் பயன்பாட்டு நோக்கில் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி' (A comprehensive Etymological Dictionary of Tamil Language) நூல்களை உருவாக்கும் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது. இப் பணியின் தனித் தன்மை கருதி, பன்மொழிப் புலமையும், ஆய்வு நுட்பமும், தமிழ்ப் புலமையும், ஒருங்கே அமையப் பெற்றிருந்த மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களை இயக்குநராகக் கொண்டு இத் திட்டம் தொடங்கப்பட்டது. பைந்தமிழ் அறிஞர் பாவாணர் அவர்கள் 'தனித் தமிழ் இயக்கம்' கண்ட மறைத்திரு மறைமலை அடிகளார் வழியில் தமிழ் ஆய்ந்து தமிழே உலக முதன்மொழி என்பதை உலகுக்கு உணர்த்தியவர் ஆவார்.

அவர் தொடங்கி வைத்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம், அருந்தமிழின் வளர்ச்சிக்கு அடிப்படையான தலையாய பணிகளில் ஒன்றாகும் என்பதைக் கருத்திற் கொண்டு எனது அரசு இத் திட்டத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. இத் திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 6 பகுதிகள் மட்டுமே முடிக்கப்பட்டிருந்தன. இவற்றில் 'அ' முதல் 'ஔ' வரையிலான எழுத்துக்களில் அமையும் சொற்கள் பற்றிய விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. தற்பொழுது 'ச' வரிசையில் மூன்று பகுதிகளும் 'த' வரிசையில் மூன்று பகுதிகளும் ஆக மேலும் 6 பகுதிகள் முடிக்கப்பட்டு வெளியிடப் பெறுவதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழோடு இந்த யுகத்தின் நான்காவது தமிழாகிய 'அறிவியல் தமிழ்' வளர, அறிவியலைத் தமிழில் கூறுவதற்கான சொற்களைக் கண்டறிய வேண்டியது இன்றியமையாததாகும். அதற்காக ஏற்கெனவே தமிழில் உள்ள சொல்வளத்தை அறியவும், புழக்கத்தில் இல்லாத சொற்களைப் புதுப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும், புதிய சொற்களை உருவாக்கவும், சொற்களின் வேர்களை ஆராய்ந்து புதியன படைக்கவும் இன்றைய தமிழ் வளர்ச்சியின் உடனடித் தேவையை நிறைவு செய்வதாக செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி நூல் மடலங்கள் அமைகின்றன.

இம் மடலங்கள் தமிழின் அழிவிலாச் சொத்தாக விளங்கும் என்பது உறுதி.

இப் பகுதிகள் வெளிவர அயராது உழைத்த அறிஞர் பெருமக்களையும், அலுவலர்களையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

வாழ்க தமிழ்!
வளர்க தமிழ்ப் பணி!

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
டாக்டர் செல்வி ஜெ ஜெயலலிதா

கன்னிமாரா (மாநில (பொது) நூ
அலுவலகம்
30 ஆக 20



மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

சி.வி. சண்முகம்
கல்வி மற்றும்
வணிக வரித்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

அணிந்துரை

"ஒரு மொழிக்குட்பட்ட சொற்களை ஆராயும் சொல்லாராய்ச்சியும் பல மொழிகளை ஒப்பு நோக்கும் மொழியாராய்ச்சியும் மேனாட்டாரிடமிருந்து நாம் அறிந்தவை.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே **(தொல்.சொல்.எச்.1)**

என்று தொல்காப்பியர் காலத்திலேயே சொல்லாராய்ச்சியும் மொழியாராய்ச்சியும் ஓரளவு தமிழ்நாட்டிலிருந்ததேனும் விரிவான முறையிலும், நெறிப்பட்ட வகையிலும் சொன்னூலும் (Etymology), மொழிநூலும் (Philology) நாம் பெற்றது மேலையரிடமிருந்தே". இது, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் தம் சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் என்ற நூலைச் சேலத்திலிருந்து 1948-இல் வெளியிட்டபோது, அந்நூலில் அவரே எழுதிய முகவுரை. ஆகப் பல்லாண்டுகளாகச் சொல்லாராய்ச்சியிலேயே தம்மை ஆட்படுத்திக் கொண்டு, நுணுகி நுணுகித் துருவித் துருவிப் பார்த்ததன் தெள்ளிய வெளிப்பாடுதான் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி. அதன் வாயிலாகத் தமிழின் சொல்வளத்தை நாம் அறிகின்றோம். அத்துடன் நில்லாது தொன்றுதொட்டு இன்று வரையுமுள்ள பண்பாடு, நாகரிகம், வரலாறு ஆகியவற்றையும் அறிய முடிகிறது.

தமிழ் பிறமொழியின் கலப்பில்லாமல் தனித்தியங்கும் ஆற்றலுடைய தன்னிகரில்லா மொழி என்று உலக மொழியறிஞர்களெல்லாம் ஒப்புக் கொள்கின்றனர். செந்தமிழின் நீண்ட நெடிய சொல்வள வரலாற்றில் சொல்லும் பொருளும் பெருகியுமுள்ளன; அருகியுமுள்ளன! வழக்கிழந்த சொற்களை மீட்பதற்கும், அனைத்துச் சொற்களையும் காப்பதற்கும் அகரமுதலிகள் இன்று வழிவகுக்கின்றன.

இலக்கியச் சொல்லாட்சிகள் முதலாக இன்றைய பேச்சு வழக்குச் சொல்லாட்சிகள் ஈறாக அனைத்தையும் உள்ளடக்கிச் சொற்களின் வடிவம், பொருள், பிறப்பு போன்றவை பற்றிய தேவையான செய்திகளுடன் விளக்கமுற உரைப்பவையாக இருப்பவையே செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் மடலங்கள்.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூற்றாண்டு விழா கண்ட நம் **புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்களின் சீரிய தலைமையில் அமைந்த அரசு, அவரின் தனித்தமிழ்ப் பற்றினைப் பேணிக் காத்திடவும், அவர் காட்டிய நெறிமுறைகளின்படி அகரமுதலி மடலங்கள் வெளிவரவும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்று இந்தியாவிலேயே தலைசிறந்த முதன்மை மாநிலமாக மாற்றிடச் சூளுரைத்துச் செயற்பட்டு வரும் **புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்களின் சீரிய வழிகாட்டுதல்படி தமிழக அரசு முனைந்து பீடுநடை போடுகின்றது.

'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் எஞ்சிய பகுதிகள் யாவும் நான்காண்டுக்கால வரம்பெல்லைக்குள் வெளிக்கொணரப்படும்' எனச் சட்டப்பேரவையில் அறிவித்தபடி 'ச'கர மடலத்தின் 3 பகுதிகளும், 'த'கர மடலத்தின் 3 பகுதிகளும் இப்போது ஒருசேர வெளிவருவது, மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். முன் எப்போதும் இல்லாதவாறு 6 பகுதிகள் ஒருசேர முடிக்கப்பெற்று வெளியிடப்பெறுவது அருஞ்சாதனையே! அதற்கு முதற்காரணம் நம் **புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா** அவர்களே என்பது மறுக்க முடியாத உண்மை. 6 பகுதிகள் சீரிய முறையில் வெளிவர அரும்பங்காற்றிய தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திரு. பு.ஏ. இராமையா இ.ஆ.ப., அவர்களுக்கும், அகரமுதலித் திட்டப் பொறுப்பு இயக்குநர் திரு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப., அவர்களுக்கும், அகரமுதலி மேற்பார்வையாளர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், கூர்ந்தாய்வுப் புலமையாளர்களுக்கும் மற்றும் அகரமுதலித் தொகுப்பாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுகள். இதேபோல மற்றப் பகுதிகளையும் விரைந்து முடித்து வெளியிடத் தொடர்ந்து பாடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

31.8.04

சென்னை

சி.வி. சண்முகம்
கல்வி மற்றும்
வணிக வரித்துறை அமைச்சர்

பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்

தமிழ் வளர்ச்சி-பண்பாடு
(ம) அறநிலையத்துறை
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

அணிந்துரை

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முன்தோன்றி மூத்த குடி" (பு.வெ.மாலை)

என்று தமிழ்க்குடி பாராட்டப்பெறும். அவ்வகையில் எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந்தமிழணங்கின் சீரிளமைத்திறம் வியந்து தம்முடைய வாழ்நாள் பணியாகச் சொல்லாராய்ச்சியை மேற்கொண்டவர் மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள்.

முதல் மாந்தன் தோன்றிய இடம் குமரி; உலக முதன் மொழி தமிழ். என்ற கோட்பாட்டில் திளைத்து, அக்கோட்பாட்டின் அடிப்படையில் தம் ஆராய்ச்சியை அமைத்து முதன்மொழியாகிய தமிழின் சொற்பிறப்பாய்வைத் துருவித்துருவியாய்ந்து மிகத் துல்லியமாக வேர் விளக்கம் கண்டவர் பாவாணரே.

இப்பெருமகனாரைப் போலத் தனித்தமிழ் ஆய்வுக் கருத்துகளை இதுவரை எந்தவோர் அறிஞரும் வழங்கிடவில்லை; பெருஞ்சித்திரனார் கூறுவதைப்போலத் "தமிழ்த் துறைக்கு அவர் தொண்டு புதியது; தமிழர்க்கு அவர் கருத்துகள் மயக்கறுப்பன; மேனாட்டார்க்கு அவர் நூல்கள் வியப்பளிப்பன; அவர் எடுத்துக் கொண்ட முயற்சி அரியது. தொல்காப்பியர் காலத்திற்குப் பின் தமிழ் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும் ஒட்டுமொத்த முயற்சிக்குப் பாவாணர் என்றே பெயரிடலாம்". இவ்வுரைக்கு ஏதும் மறுப்புரையுண்டோ?

"கதிர்தரு ஒளியென மொழிதரு மலையே!
முதிர்முகி லெனவே வேர்பொழி விளைவே
தமிழ்ச்சுட ரணிதலைப் பாவா ணர்தான்
தமிழ்மகள் பெறுதவப் பேரறிவாளன்!

வேர்ச்சொல் லாய்வின் வித்தகன்! மொழியின்
போர்ப்படைத் தலைவன்! புலமைப் புதையல்!
தலைவ! நீதரும் ஒளியே பாதை
விலைமதிப் பில்லா வெற்றியைத் தருமே!"

என்றொரு பாவலர் பாடியதற்கேற்பப் பாவாணர் பெரும்புகழ் பெற்ற அமுதப்படையல்!

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி 12 மடலங்களில் 31 தொகுதிகளாக வெளியிடத் திட்டமிடப்பட்டதாகும். கடந்த 28 ஆண்டுகளில் 6 தொகுதிகள் மட்டுமே வெளிவந்துள்ள நிலையில், சுணக்கமுற்றிருந்த அகரமுதலித் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதுத்தெம்பு ஊட்டியதன்விளைவாய், எஞ்சிய 25 தொகுதிகளை நான்காண்டுக் கால வரம்பெல்லைக்குள் வெளிக்கொணரப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. அதன் வெளிப்பாடே இப்போது 'ச' மற்றும் 'த' மடலங்களின் 6 தொகுதிகள் ஒருசேர வெளிவருகின்றன. இது ஓர் அரும்பெருஞ் செயல் என்றால் மிகையாகாது.

இத்தொகுதிகளில் காட்டப்பெறும் தமிழ்ச் சொற்களின் விரிவும் விளக்கமும் நம்மை வியப்பிலாழ்த்துகின்றன. எடுத்துக்காட்டிற்கு ஒன்றிரண்டினைக் குறிப்பிட விரும்புகிறேன்.

'ச'கர மடலத்தின் முதற்பகுதியில் (ச, சா) வரும் **'சக்கரம்'** என்ற சொல்லிற்கு 27 வகையான பொருள் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாது இலக்கிய மேற்கோள்களும் வேர் விளக்கமும் அருமையாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

சருக்கு - சருக்கரம் - சக்கரம் (வே.க. 239)

அதேபோல் **'சத்தம்'** என்ற சொல்லுக்கான விளக்கமும் அருமை.

சாத்து = பண்டங்களைக் கொண்டு விற்கும் வணிகர் கூட்டம். சாத்துவண்டிக்குக் கொடுக்கும் கூலி சாத்தம் எனப்பட்டது. வண்டிச்சாத்தம் = வண்டிக்கூலி. சாத்தம் - **சத்தம்** ஆயிற்று.

அடுத்து, இரண்டாவது தொகுதியில் (சி-சூ), 'சிலை' என்ற சொல்லிற்குக் காட்டப்பட்டுள்ள விளக்கம் அழகுற அமைந்துள்ளது. 'சீரகம்' என்ற சொல்லிற்குப் பொருள் - வேர் விளக்கம் - விரிவுப் பொருள் காட்டியிருப்பது திகைக்க வைக்கிறது.

சீர் - சீரம் - சீரகம்

உலகில் முதன்முதலாகச் சிறந்த முறையில் சமையல் தொழில் தொடங்கியதும் அதற்குச் சீரகத்தைப் பயன்படுத்தியதும் தமிழகமே! என்பதற்குச் சான்றுகள் பல உள.

"சிறுபிள்ளை இல்லா வீடும், சீரகம் இல்லாத கறியும் செவ்வையாயிரா" என்பது தொன்று தொட்டுவரும் பழமொழி.

சீரகக்கோரை, சீரகச்சம்பா, சீரகவள்ளி என்பன ஒப்புமை பற்றிப் பெயர்பெற்ற நிலைத் திணை வகைகள். பொன்னளவையிற் சீரகம் என்பது ஓர் அளவு.

5 கடுகு = 1 சீரகம்; 5 சீரகம் = 1 நெல்

"அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுதலாகி
உளவெனப் பட்ட வொன்பதிற்றெழுத்தே
அவைதாம்
கசதப வென்றா நமவ வென்றா
அகர உகரமோ டவையென மொழிப" (தொல்.எழுத். 170)

என்னும் தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பா உரையில் கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை என்று இளம்பூரணரும், 'கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை, இவை நிறை' என்று நச்சினார்க்கினியரும் கூறியிருத்தலையும் நோக்குக.

செரி - செரியகம் - சீரகம்

என்றுமாம். வடவர் மூலம் காட்டும் வகை. ஜீரக - ஜீரண; ஜரு - ஜீரண, ஜரூ - கிழமாக்கு, கட்டுக்குலை, கரை, செரிக்கச் செய். ஜரூ என்பது கிழ என்னும் தென்சொற்றிரிபே (வ. மொ. வ.153).

அடுத்து, மூன்றாம் தொகுதியில் (செ - சௌ) 'செம்பியன்' என்ற சொல்லின் பொருள் விளக்கம் சிறப்புடையதாயிருக்கின்றது. அதைப்போலச் 'செஞ்சம்' என்ற சொல்லுக்கு அளிக்கப்பட்டுள்ள பொருள் விளக்கமும் சிறப்பாயுள்ளது. செஞ்சு - செம்மை, செவ்வை, நிறைவு, செஞ்சு - செஞ்சம்.

அடுத்து, 'த்'கர மடலத்தின் முதற் தொகுதியில் (த, தா) 'தமிழ்' என்ற சொல்லுக்குக் காட்டப்பெற்றிருக்கும் விளக்கம் விரிவானதாகவும் பொருத்தமானதாகவும் நுட்பமானதாகவும் அமைந்துள்ளது. அதைப்போலத் 'தா' என்னும் சொல்லுக்கும் அருமையான விரிவான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது, 'தா' என்ற சொல் தந்தை என்பதனையும் குறிக்கும் என்று நிறுவியிருப்பது ஆராய்ச்சியாளரின் சான்றாண்மையைக் காட்டுகிறது.

அதே மடலத்தின் இரண்டாவது தொகுதியில் (தி-தூ) 'திறம்' என்ற சொல்லுக்கும், 'துடி' என்ற சொல்லுக்கும் தரப்பட்டுள்ள விளக்கங்கள் பயனுடையவையாகும்.

மூன்றாவது தொகுதியில் (தெ-தௌ), 'தெரு' என்னும் சொல்லின்கீழ், முடுக்கு சிறுசந்து; சந்து தெருவின் கிளை; தெரு சிறுவீதி; மறுகு போக்குவரத்து மிகுந்த பெருந்தெரு அல்லது வீதி; ஆவணம் கடைத்தெரு; அகலுள் அகன்ற மறுகு; சாலை பெருவழி; சந்தி மூன்று தெருக்கள் கூடுமிடம்; சதுக்கம் நான்கு தெருக்கள் கூடுமிடம் என்ற வகையில் பதிவு செய்துள்ளமை பாராட்டுக் குரியதாகும்.

அடுத்து, 'தொல்காப்பியர் காலம்' என்னும் தலைப்பின்கீழ்க் காட்டப்பட்டுள்ள சான்றுகள் ஆய்வாளர்களுக்கு மிக்கப்பயனுடையனவாகும். இந்த ஆறு தொகுதிகளிலும் தேவையான சொற்களுக்குப் பொருத்தமான பட விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருப்பதும் அழகுக்கு அழகு சேர்ப்பதாயுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டப்பணிகள் விரைந்து நடைபெற பலவகையிலும் பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களுக்கும், **மாண்புமிகு கல்வி அமைச்சர்** அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு அறிவித்தவண்ணம் 6 தொகுதிகளை ஒருசேர அணியமாக்கி வெளியிடும் பணியைச் சிரமேற்கொண்டு செவ்விய முறையில் வெளிவர அரும்பணியாற்றிய தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அரசு சிறப்புச் செயலாளரும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் **திட்டப்பொறுப்பு இயக்குநருமான திரு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும், அகரமுதலி மேற்பார்வையாளராகச் செயற்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், அகரமுதலித் திட்டப் பணியாளர்கள் மற்றும் கூர்ந்தாய்வுப் புலமையாளர்களுக்கும் எனது மனமுவந்த பாராட்டுகள். பாராட்டுகளைப் படிக்கற்களாகக் கொண்டு தொடர்ந்து நன்கு உழைத்து எஞ்சிய தொகுதிகள் அனைத்தையும் அரசு விரும்பிய வண்ணம் வெளிக்கொணர வேண்டுமென விழைகிறேன்.

சென்னை — **பு.ஏ. இராமையா**

23-10-2003 — **அரசு செயலாளர்**

தா. சந்திரசேகரன், இ.ஆ.ப.
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
சென்னை - 600 008

பதிப்புரை

தமிழிலக்கியம் தென்னிந்திய மொழிகளின் இலக்கியக் காலத்தைக் காட்டிலும் பழைமையானது; வடபுல இலக்கியக் காலத்தோடு பொருந்தி நிற்பது; உலகத்தின் மிகப் பழைமையான இலக்கியங்களோடு ஒப்ப வைத்து நோக்கும் தன்மை சான்றது என்றாலும் அஃது எவ்வளவுக் காலப் பழைமையுடையதென்பது இதுகாறும் உணரப்படாமலேயே யுள்ளது. இக்காலப் பழைமையைக் காட்டுவதற்குரிய வரலாற்றுச் சான்றுகள் எதுவும் கிடைப்பதில்லை. தொல்பொருள் சான்றுகளும் கல்வெட்டுச் சான்றுகளும் தமிழின் பழைமையை ஈராயிரமாண்டுகள் வரை எடுத்துச் செல்கின்றன. அதற்குமேல் செந்தமிழின் தொல் பழைமையை இலக்கியச் சான்று கொண்டே அறியவியலும்; இன்னும் சிறப்பாகச் சொல்லப்புகின் 'மொழி' வழியாகவே அறியவொண்ணும்.

இத்தன்மையைத் தெற்றெனவும், தெளிவாகவும் அறிந்திருந்த மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் சொல்லாராய்ச்சி மூலமாகவே தமிழின் பழைமையை விளக்கினார். மொழியாராய்ச்சி அதிலும் குறிப்பாகச்சொல்லாராய்ச்சிதான் தமிழின் தொன்மையான நிலையைக் காட்டுவதற்கு சிறந்த சான்றாகத் திகழ்கிறது. ஆகையால் சொல்லாராய்ச்சியை மொழி அகழ்வாராய்ச்சி என்று குறித்தார்.

இன்று கிடைக்கும் கழக இலக்கியங்களெல்லாம் இரண்டாயிரமாண்டுகளுக்குமேல் பழைமையானது என்றும், பழந்தமிழின் பண்பாட்டுப் பதிவாம் தொல்காப்பியம் ஈராயிரத்தைந் நூறாண்டிற்கு மேல் பழைமையானதென்றும் அறிஞர்கள் குறித்துள்ளனர். இவ்விலக்கியங்கள் யாவும் தொடக்க நிலையினதான இலக்கியங்களாக இல்லை. இவை நன்கு வளர்ந்தநிலை இலக்கியங்களாகவே இருக்கின்றன. அவ்வாறாயின் இவற்றிற்கு முன் பெருந்தொகையினவான இலக்கிய இலக்கணங்கள் இம்மொழியில் இருந்திருக்க வேண்டும்.

அவற்றின் படிநிலை வளர்ச்சியாகத்தான் கொள்ள வேண்டும். இன்று கிடைக்கும் இலக்கிய இலக்கணங்களின் காலத்திற்கு முன்பு பன்னெடுங்காலமாக இலக்கிய இலக்கணங்கள் இருந்திருக்க வேண்டும். அதற்குமுன் பல நூறு ஆண்டுகள் தமிழ் வெறும் பேச்சு மொழியாக இருந்திருக்க வேண்டும். அந்தப் பழங்காலத்துத் தமிழின் இயல்பான நிலையை அறிவதற்குப் பெருமளவில் உதவுவது பாவாணர் காட்டும் சுட்டடிக் கொள்கை வழியிலான வேர்ச்சொற்களேயாகும்.

வண்ணனை மொழியியலடிப்படையில் வேர் காண்பது சொல்லின் பகுதிவரைதான் செல்லமுடியும். அதற்குமேல் வேர்மூலம் காண்பதற்குத் தேவநேயரின் சுட்டடிக் கொள்கையால் மாத்திரமே இயலும்.

தெய்வம் என்னும் சொல்லைத் தெய் + அம் என்ற அளவில் பிரிக்கலாம். இதற்குமேல் வேர் சொல்வதற்கு வண்ணனை மொழியியலில் வழியில்லை. ஆனால் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், தெய்வம் என்னும் சொல் 'தீ' என்னும் சொல்லிலிருந்து பிறந்தது என்று காட்டி,

தீதல்	=	எரிதல், கருகுதல்
தீத்தல்	=	எரித்தல், கருக்குதல்
தீ → தீய் → தீய்தல்	=	தீதல், தீத்தல் = தீய்த்தல்
தீ → தீவு → தீவம்	=	விளக்கு

இனி,

தேய் → தீய் → தீ என்றுமாம்.

தேய் → தேயு = நெருப்பு (பிங்.)

தேய் → தேய்வு → தேவு = 1. தெய்வம் (பிங்.) 2. தெய்வத் தன்மை.

தேவு → தேவன் = கடவுள், அரசன், கணவன், தலைவன்.

தேவி = தெய்வ மகள், அரசி, தலைவி.

தேய்வு → தெய்வு → தெய்வம் என்று விளக்குவார்.

பண்டையுலகில் நெருப்பே தெய்வமாகவும் தெய்வ வடிவங்களாகவுங் கொள்ளப் பெற்றதென்று பழங்காலத்துப் பண்பாட்டு நிலையைச் சுட்டி அதற்குச்

சுள் → சுர் → சுரம் → சுரன் = தேவன்

என்பதைச் சான்றாகக் காட்டுவார்.

குறிஞ்சி மக்கள் முருகனைச் 'சேயோன்' (சிவந்தவன்) என்றது நெருப்பு வடிவம் பற்றியே.

GK. theos, L. deus என்று ஒப்புநோக்கு காட்டிச் செல்வார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி தெய்வம் என்னுஞ் சொல் 'தைவ' என்னுஞ் சொல்லிலிருந்து வந்ததென எளிதாய் மூலங்காட்டி விட்டது.

திராவிட மொழிகளான மலையாளம் (தெய்வம், தெய்யம்), தெலுங்கு (தேவுடு), கன்னடம் (தேவரு) போன்ற மொழிகளில் இச்சொல் நன்கு வழக்கூன்றியுள்ளது. இச்சொல்லினடியாய்ப் பிறந்த கூட்டுச் சொற்களும் வழக்காற்றிலுள்ளன. தமிழில் பெருவழக்காய்ப் புழங்குமிச் சொல், தன் இன மொழிகளில் பரவலாய்க் காணுமிச்சொல் வடமொழிச் சொல்லான 'தைவ' என்பதனின்று வந்ததெனக் கூறின் எங்ஙனம் ஒப்பமுடியும். பாவாணர் ஆய்வு நெறியின்படி தமிழ் ஒரு இயன்மொழியாய் இருப்பதால் தமிழில் தான் இவ்வாறாக நுணுகி வேர் காண்பது இயலும்.

தமிழ் பல வளங்களிலும் தனித்தன்மையுடையது. இத்தனித் தன்மைகளைப் பல சான்றோர்கள் தம் நுண்மாண் நுழைபுலத்தால் கண்டறிந்தியம்பியுள்ளனர். இவை அனைத்திலும் தனித்தன்மையுடையதாய்த் தேவநேயரின் ஆய்வு திகழ்கின்றது. தம் வாணாள் முழுமையும் மொழித் திறத்தின் முட்டறுக்கும் பெரும் பணியிலீடுபட்டிருந்த மொழிஞாயிறு பாவாணர் தமிழ் திராவிடத்திற்குத் தாயாயிருக்குந் தன்மையையும், ஆரியத்திற்கு மூலமாயிருக்குந் தன்மையையும் விளக்கிக்காட்டி ஞாலமுதன்மொழி தமிழே என நிறுவிச் சென்றார்.

பழைமைக்குப் பழைமையாய் மட்டுமின்றிப் புதுமைக்கும் புதுமையாய் விளங்கும் பொலிவு செந்தமிழின் தனித் தன்மையாகும். பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு தாக்குதல்களுக்குள்ளான போதிலும் இன்றளவும் இளமை குன்றாமலிருப்பது நந்தமிழின் நனி சிறந்த தனித்தன்மையாகும். ஆகையால் தமிழ்மொழியின் சிறப்புகளை ஆராய்வோர் அதன் இன்றைய நிலையையும் ஆராய வேண்டிய கட்டாயத்திற்குள்ளாவது தவிர்க்கவியலாததாகும். இன்றைய வழக்கில் பல சொற்கள் மருவி வந்துள்ளன; பல சொற்கள் தம் வடிவுசிதையா மூலத்தோடு வழக்கிலுள்ளன. அவையனைத்தையும் உள்ளடக்கி ஆய்வு செய்வதே பாவாணரின் ஆய்வு நோக்கமாகும்.

தமிழின் தனித்தன்மையை ஆய்வு செய்வதற்கென்றே இறைவன் என்னைப் படைத்தா னென்று பறைசாற்றிக் கூறிய இப்பெருந்தகையின் பெயருக்குரிய வேர் விளக்கத்தைத் தேவநேயர் என்னும் உருப்படியிற் காணலாம்.

அப்பெருந்தகை வடித்தளித்த வழித் தடத்தில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் அடுத்தடுத்த பகுதிகள் அணி வகுத்து வருகின்றன. அந்த வரிசையில் தெ முதல் தௌ வரையிலான இப்பகுதி வெளி வருவதற்குத் துணையாய் நின்றோர் பலர். அகரமுதலித் திட்டம் சிறப்பாகச் செயற்படவும், 6 தொகுதிகள் ஒருசேர வெளிவரவும் முழுமுதற் காரணமாய் விளங்கும் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களுக்கும் அப்பெருந்தகையின் தானைத் தளபதியாய் நின்றியங்கி வழி நடாத்திச் செல்லும் **மாண்புமிகு கல்வியமைச்சர் செ. செம்மலை** அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அகரமுதலித் திட்டத்திற்குப் பலவகையிலும் அறிவார்ந்த அறிவுரைகள் வழங்கிப் பணிகளை முடுக்கிவிட்ட எம்துறையின் **செயலர் திருமிகு பு.ஏ. இராமையா** இ.ஆ.ப., அவர்களுக்கும் அகரமுதலி மேற்பார்வையாளராகச் செயற்பட்டு ஒத்துழைப்பு நல்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், கூர்ந்தாய்வுப் புலமையாளர்களான முனைவர் ந. அரணமுறுவல் மற்றும் புலவர் இறைக்குருவனார் ஆகியோர்க்கும் அயராதுழைத்த அகரமுதலித் திட்டத் தொகுப்பாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை **தா. சந்திரசேகரன்**

15-10-2003

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

நான்காம் மடலம் - மூன்றாம் பாகம்

தெ - தௌ

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

தெ

தெ *te*, 'த்' என்ற மெய்யெழுத்தும் 'எ' என்ற உயிரெழுத்தும் கூடிய கூட்டெழுத்து; the syllable formed by adding the short vowel 'e' to the consonant 't'.

[த் + எ – தெ]

தெக்கணம்[1] *tekkaṇam*, பெ. (n.) *1.* தெற்கு; south. "தெக்கண மலையகச் செழுஞ்சே றாடி" *(சிலப். 14:81). 2.* வலப்பக்கம் (சூடா.); right side.

ம. தெண்ண

[தக்கு + அணம் → தக்கணம். தக்கு = தாழ்வு. தக்கணம் → தெக்கணம்]

த. தக்கணம் → Skt. dakṣina

தெக்கணம்[2] *tekkaṇam*, பெ. (n.) இந்தியாவில் விந்தியத்தின் தென்பகுதி; southern part of India. "தெக்கணமும் அதிற் சிறந்த திராவிடநல் திருநாடும்" *(மனோன். வாழ்.)*

[தக்கணம் → தெக்கணம்]



தெக்கணாம்பட்டி *tekkaṇām-paṭṭi*, பெ. (n.) தெக்கணாமட்டி பார்க்க; see *tekkaṇā-maṭṭi*.

தெக்கணாமட்டி *tekkaṇā-maṭṭi*, பெ. (n.) *1.* மூடன்; simpleton, fool. *2.* சோம்பேறி; lazy fellow.

[தெக்கணம் + மட்டி. தக்கு = தாழ்வு, தக்கணம் → தெக்கணம். மட்டி = மடையன், மூடன்]

தெக்கணாமுட்டி *tekkaṇā-muṭṭi*, பெ. (n.) தெக்கணாமட்டி பார்க்க; see *tekkaṇā-maṭṭi*.

[தெக்கணாமட்டி → தெக்கணாமுட்டி]

தெக்கம்பாக்கு *tekkam-pākku*, பெ. (n.) இளம்பிஞ்சைப் பக்குவம் செய்த பாக்கு; seasoned areca-nut.

[தெக்கம் + பாக்கு. தக்கு – தாழ்வு, இளமை. தக்கு → தக்கம் → தெக்கம்]

தெக்கித்திநோய் *tekkitti-nōy*, பெ. (n.) தெற்கத்தி நோய் பார்க்க; see *teṟkatti-nōy*.

[தெற்கத்திநோய் → தெக்கித்திநோய் (கொ.வ.)]

தெக்கு[1]**-தல்** *tekku-*, 5 செ.குன்றாவி. (v.t.) *1.* கொள்ளுதல்; to receive, take. "தெக்குநீர்த் திரைகள் மோதும்" *(தேவா. 839, 2). 2.* கொழித்தல்; to winnow. தெக்கிய மாவைத் தின்னலாம் (உ.வ.).

ம. தெக்குக; க. தெகெ, தெகு; தெ. திடியு, திடுசு; து. தெகுனி; கொலா. திப்; நா. திவ்வ

[தக்கு → தெக்கு. தக்கு → வளைதல், தாழ்தல்]

தெக்கு[2] *tekku-*, பெ. (n.) தெற்கு (பிங்.); south. "சலவரைத் தெக்கா நெறியே போக்குவிக்குஞ் செல்வன்" *(திவ்.பெரியாழ். 4, 2, 3).*

ம. தெக்கு; க. தெங்க, தெங்கன், தெங்கு; து. தெனுகாயி, தென்காயி; குட. தெக்கி

[தெற்கு → தெக்கு]

தெகட்டாதமூலி *tegaṭṭāda-mūli,* பெ. (n.) *பிரமியிலை;* leaf of hissop plant; diabetis plant *(சா.அக.).*

[தெகட்டாத + மூலி. திகட்டு → தெகட்டு]

தெகிட்டு *tegiṭṭu,* பெ. (n.) *1.* தெவிட்டுகை; surfeit. *2. கக்கலுணர்வு (வின்.);* vomitting sensation.

ம. தெகிட்டு

[திகட்டு → தெகட்டு → தெகிட்டு]

தெகிடி *tegiḍi,* பெ. (n.) *1.* சூது விளையாட்டு வகை; a game in gambling. *2.* புரட்டு; fraud, deception.

[நெகிழி → நெகிடி → தெகிடி]

தெகிழ்-தல் *tegil-, 3* செ.கு.வி. (v.i.) *1.* விளங்குதல்; to be manifest; to shine. "தெகிழ்ந்த மாதவத் தேசினான்" *(விநாயகபு. 59:29).* 2. வாய்விடுதல்; to blossom, open, as the mouth. "தேங்கயத் தணிமலர் தெகிழ்ந்த நாற்றமும்" *(சீவக. 1440).* 3. நிறைதல் (திவா.); to be full. "துணர் தெகிழ்ந்துக்க நனையுள்" *(மாறனலங். 261, உதா. 651).*

[திகழ் → தெகிழ்]

தெகிள்[1] *tegiḷ,* பெ. (n.) புனலிக் கொடி; hog creeper *(சா.அக.).*

மறுவ. கொடிப்புன்கு

தெகிள்[2] *tegiḷ,* பெ. (n.) மென்மை; soft.

[நெகிள் → தெகிள்]

தெகிள்உளி *tegiḷ-uḷi,* பெ. (n.) மென்மையான குழைவு உளி; chisel which is soft.

[தெகிள் + உளி]



தெகுட்டல் *teguṭṭal,* பெ. (n.) *மரத்தில் தோன்றும் குறைபாடு;* defect appears in the tree.

தெகுட்டி *teguṭṭi,* பெ. (n.) தேட்கொடுக்கி; scorpion sting plant *(சா.அக.).*

[தேள்கொடுக்கி → தேகொடுக்கி. தேகொடுக்கி → தெகுட்டி (கொ.வ.)]

தெகுட்டிகை *teguṭṭigai,* பெ. (n.) தெகுட்டி பார்க்க; see *teguṭṭi (சா.அக.).*

[தெகுட்டி → தெகுட்டிகை]

தெகுட்டு-தல் *teguṭṭu-, 5* செ.கு.வி. (v.i.) தெவிட்டுதல்; to cloy, glut. *"மாளாமையாலுந் தெகுட்டாமையாலும்" (ஈடு. 6,7, ஜீ).*

[தெவிட்டு → தெகுட்டு-]

தெகுடாடு-தல் *tegudāḍu-, 5* செ.கு.வி. (v.i.) *திண்டாடுதல்;* to struggle or strive hard. *"தெகுடாடா நிற்கிற என்னாலே" (திவ். திருவாய். 7, 9, 10, இருபத்து நாலாயிரப்படி).*

[தெகிடி → தெகுடி → தெகுடு. தெகுடு + ஆடு]

தெகுப்பூச்சி *tegu-p-pūcci,* பெ. (n.) தெள்ளுப் பூச்சி; small wingless jumping insect feeding on human and other blood, flea *(சா.அக.).*

[தெகு + பூச்சி]

தெகுள்-தல் (தெகுடல்) *tekuḷ-, 12* செ.கு.வி. (v.i.) *1.* நிறைதல் *(பிங்.);* to be full. *2.* பெருகுதல் *(யாழ்.அக.);* to increase, overflow.

[திகழ் → தெகுள்]

தெகுளம் *teguḷam,* பெ. (n.) *1.* நிறைவு; fullness. *2.* பெருக்கம்; abundance *(சா.அக.).*

[தெகுள் → தெகுளம்]

தெகுளவம் *teguḷavam,* பெ. (n.) மருதுமேற் புல்லுருவி; a parasite grown on murdah tree *(சா.அக.).*

தெங்கங்காய் *teṅgaṅ-gāy,* பெ. (n.) தேங்காய்; coconut. "தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்" (யாப்.வி. 95, பக்.372).

ம. தெக்கன்காய், தெங்ஙன்காய்; பட. தெங்கெ

[தென் → தென்கு → தெங்கு. தெங்கு + அம் + காய்]

தெங்கணம் *teṅgaṇam*, பெ. (n.) ஒரு நாடு; a country.

[தக்கணம் → தங்கணம் → தெங்கணம்]

தெங்கநாடு *teṅga-nāḍu*, பெ. (n.) கடல் கொண்ட தமிழ்நிலப்பகுதியுள் ஒன்று; an ancient province in the Tamil land, said to have been submerged by the sea. "ஏழ்தெங்க நாடும்" *(சிலப். 8: 1, உரை).*

[தெங்கு + நாடு]

தெங்கம் *teṅgam*, பெ. (n.) தெங்கு[1],1 பார்க்க; see *teṅgu*[1],1. "தெங்கங்களூ நெடும் பெண்ணையும் பழம்வீழ் மணற் படப்பை" *(தேவா. 846, 3).*

[தெங்கு → தெங்கம்]

தெங்கம்பழம் *teṅgam-paḻam*, பெ. (n.) தென்னை நெற்று; mature coconut. "நாய்பெற்ற தெங்கம்பழம்" *(பழ.).*

[தெங்கு + பழம்]

தெங்கிட்டம் *teṅgiṭṭam*, பெ. (n.) தெகுட்டி பார்க்க; see *teguṭṭi*.

[தேள்கொடுக்கி → தேங்கொடுக்கி → தெகுட்டி. தெகுட்டி → தெங்குட்டி → தெங்கிட்டி. தெங்கிட்டி → தெங்கிட்டம்]

தெங்கிதம் *teṅgidam*, பெ. (n.) தெகுட்டி பார்க்க; see *teguṭṭi* *(சா.அக.).*

தெங்கின்எண்ணெய் *teṅgiṉ-eṇṇey*, பெ. (n.) தேங்காயெண்ணெய் பார்க்க; see *teṅgā-y-eṇṇey* *(சா.அக.).*

[தெங்கு + இன் + எண்ணெய். 'இன்' வேற்றுமையுருபு]

தெங்கின்கற்கண்டு *teṅgiṉ-kaṟkaṇḍu*, பெ. (n.) தென்னஞ் சாற்றினின்று காய்ச்சி இறக்கும் கற்கண்டு; sugar candy prepared from the sweet sap or juice of coconut tree.

[தெங்கு + இன் + கற்கண்டு]

தெங்கின்குருத்து *teṅgiṉ-kuruttu*, பெ. (n.) தென்னையின் குருத்து; tender leaves or shoot of coconut palm *(சா.அக.).*

[தெங்கு + இன் + குருத்து]

தெங்கின்மது *teṅgiṉ-madu*, பெ. (n.) தென்னங் கள் பார்க்க; see *teṉṉaṅ-kaḷ* *(சா.அக.)*

[தெங்கு + இன் + மது]

தெங்கின்வெல்லம் *teṅgiṉ-vellam*, பெ. (n.) தென்னஞ் சாற்றினின்று காய்ச்சி உண்டாக்கும் வெல்லம்; jaggery prepared from the juice or sap of coconut palm *(சா.அக.).*

[தெங்கு + இன் + வெல்லம். 'இன்' வேற்றுமையுருபு]

தெங்கு[1] *teṅgu*, பெ. (n.) 1. தென்னை; coconut-palm. "தெங்கி னிளநீ ருதிர்க்கும் வளமிகு நன்னாடு" *(புறநா. 29).* தேன் வார்த்து வளர்த்தாலும் காஞ்சிரம் தெங்காகுமோ *(பழ.).* 2. போர்ச் சேவலின் தன்மை குறிக்கும் குழூஉக் குறியுளொன்று; quality of a fighting cock, a slang term. "தெங்குக்குத் தெங்கு வெல்லுமெனக் கோழிகளின் நிறமறிந்து விடுதல்" *(பு.வெ. 12, வென்றிப். 6, உரை).*

ம. தெங்ஙு; க., து. தெங்கு; குட. தெங்கிமர; பட. தெங்கெ மொர

[தில் → தெல் → தென். தென் → தென்னை = பெரும்பாலும் கோணி வளரும் மரம். தென் → தென்கு → தெங்கு (வே.க. 144)]

தெங்கு[2] *teṅgu*, பெ. (n.) தித்திப்பு; sweetness.

[தீம் → தெம் + கு - தெம்கு → தெங்கு]

தெங்கூர் *teṅgūr*, பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; a village in Tanjavur Dt. "வித்தன் றாழ் பொழில் றெங்கூர் வெள்ளியம் குன்றமர்ந்தாரே" *(தேவா. 229-2).* ஞான சம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் பாடல் பெற்ற ஊர். இவ்வூரை மர அடிப் படையிலான ஊர் என்று இரா.பி. சேதுப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

[தெங்கு + ஊர்]

தெங்கெண்ணெய் *teṅgeṇṇey*, பெ. (n.) தேங்காயெண்ணெய் பார்க்க; see *teṅgā-y-eṇṇai* *(சா.அக.).*

பட. தெங்கெண்ணெ

[தெங்கு + எண்ணெய்]

தெச்சி *tecci,* பெ. (n.) தெட்சி பார்க்க; see *teṭci.*
ம. தெச்சி
[தெட்சி → தெச்சி]

தெசலம் *tešalam,* பெ. (n.) தெசவம் பார்க்க; see *tešavam.*
[தெசவம் → தெசலம்]

தெசவம் *tešavam,* பெ. (n.) மாமரம் (மலை.); mango tree.

தெசனி *tešaṉi,* பெ. (n.) 1. மஞ்சள்; country turmeric. 2. பெருங்குரும்பை; browstring hemp.

தெசி-த்தல் *teši-,* 4 செ.குன்றாவி. (v.t.) கைவிடுதல்; to abandon. "சிகை நூறெசித்துச் செபங்கள் பண்ணி" (பாடு. 71, சந்நியாசம், 1).
[தெளி → தெசி]

தெட்சி *teṭci,* பெ. (n.) வெட்சி; scarlet ixora.
[தெள் + சி - தெள்சி → தெட்சி]

தெட்ட *teṭṭa,* பெஎ. (adj.) 1. முற்றிய; ripe, mellow. "தெட்டபழஞ் சிதைந்து" (திவ். பெரியதி. 3,4,8). 2. தெளிவான; clear, plain. "மால்கரி தெட்ட மதப்பசை கட்டின" (கம்பரா. சரபங்க.8).

தெட்டங்காசச்செடி *teṭṭaṅ-kāša-c-ceḍi,* பெ. (n.) ஒட்டுப்புல்; sticking grass (சா.அக.).
மறுவ. நடந்தாரைத் தொடர்ந்தான்

தெட்டத்தெளிய *teṭṭa-t-teḷiya,* வி.அ. (adv.) தெள்ளத்தெளிவாக; plainly, obviously (யாழ்ப்.).

தெட்டத்தெளிவு *teṭṭa-t-teḷivu,* பெ. (n.) மிகத்தெளிவு; plainly, obviously (சா.அக.).
[தெள்ளத் தெளிவு → தெட்டத் தெளிவு]

தெட்டத்தெறி-த்தல் *teṭṭa-t-teṟi-,* 4 செ.குவி. (v.i.) இரண்டாய் முறிதல்; to break asunder snap in twain.
[தெட்ட + தெறி-]

தெட்டத்தெறிப்பான் *teṭṭa-t-teṟippāṉ,* பெ. (n.) ஒரு வசைச் சொல்; a term of abuse.
[தெட்டத்தெறி → தெட்டத்தெறிப்பான்]

தெட்டரசர் *teṭṭarasar,* பெ. (n.) வெல்லப்பட்ட மன்னர்; vanquished kings. "பூம்புயத்துத் தெட்டரச கூட்டந் திறைகொணா வீற்றிருந்தான்" (பாரத. வெண். 209).
[தெட்டு + அரசர்]

தெட்டல் *teṭṭal,* பெ. (n.) 1. கொள்ளையிடல் (யாழ்.அக.); misappropriation. 2. ஏமாற்றுகை; trick, fraud, deception.
[தெட்டு → தெட்டல்]

தெட்டவர் *teṭṭavar,* பெ. (n.) தெளிந்தவர்; clear sighted persons, men of unclouded vision. "பரமஞானம் போய்த் தெட்டவ ரல்லரேல்" (கம்பரா. மந்திர. 20).

தெட்டி[1] *teṭṭi,* பெ. (n.) வஞ்சிப்பவள்-ன்; deceitful person. "அணைமீதிற்றுயில் பொழுதே தெட்டிக ளவரேவற் செய்து" (திருப்பு. 777). தெட்டிப் பறிப்பாரை எட்டிப் பறிப்பான் (பழ.). 2. யானை (அக.நி.); elephant.

தெட்டி[2] *teṭṭi,* பெ. (n.) வணிகன் (அக.நி.); merchant.
[செட்டி → தெட்டி]

தெட்டு[1]**-தல்** *teṭṭu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. வஞ்சித்தல்; to deceive, cheat, defraud, swindle. "தெட்டிப் பொருள் பறித்த பாவம்" (பணவிடு. 340). 2. பறித்தல்; snatch.

தெட்டு[2] *teṭṭu,* பெ. (n.) 1. வஞ்சனை; deception, cheating. "தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலே" (தாயுமலைவளர். 2). 2. பறிக்கை (யாழ்.அக.); snatching by force.

தெட்டு[3]**-தல்** *teṭṭu-,* 5 செ.குவி. (v.i.) நிறைதல்; to be sufficient.
[தெள் → தெட்டு]

தெட்டு[4] *teṭṭu,* பெ. (n.) யானைக் கணையம் (வின்.); wooden partition between two elephants to prevent their fighting.

தெட்டுண்(ணு)-தல் *teṭṭuṇ-,* 13 செ.குன்றாவி. (v.t.) கவர்ந்துண்ணப்படுதல்; to be satched and devoured. "தெட்டுண்டபோன் முழுத் திங்களென் றேக்கறும் . . . செம்பாம்பு" (குமர. பிர. முத்துக். பிள்ளை. 54).
[தெட்டு + உண்ணு-.]

தெட்பம் *tetpam,* பெ. (n.) 1. தெளிவு (யாழ்.அக.); clearness. 2. மூதறிவு (திவா.); ripe wisdom. 3. முதிர்ச்சி (பிங்.); maturity, ripeness. 4. மனத்தேற்றம்; presence of mind, courage. "சயந்த னங்க ணிருந்தனன் றெட்ப மெய்தி (கந்தபு. இந்திரன்கரந். 32).

[தெள் → தெண் → தெட்பு → தெட்பம்]

தெடாரி *tedāri,* பெ. (n.) கிணைப்பறை; a drum of tabor of the agricultural tract. "தெடாரித் தெண்கண் டெளிர்ப்ப வொற்றி" (புறநா. 368).

[தடாரி → தெடாரி]

தெண் *ten,* பெ. (n.) தெளிவு; clarity.

[தெள் → தெண்]

தெண்டக்குற்றம் *tenda-k-kurram,* பெ. (n.) தெண்டந்தீர்வை பார்க்க; see *tendan-tirvai* (தெ.க.தொ. 335).

[தெண்டம் + குற்றம். தண்டம் → தெண்டம் (கொ.வ.)]

தெண்டகை *tendagai,* பெ. (n.) 1. நெருக்கிடை; pressure, urgency. 2. தேவை; necessity.

[தெள் → தெண்டு → தெண்டகை]

தெண்டகைக்குத்தேவை *tendagaikku-t-tēvai,* பெ. (n.) வேண்டாவெறுப்பு (வின்.); un willingness.

[தெண்டகைக்கு + தேவை]

தெண்டந்தீர்வை *tendan-tirvai,* பெ. (n.) ஒறுப்பாக விதிக்கும் வரி; penal tax. "தெண்டந் தீர்வை கொடுத்தபின்" (கட்டபொம்மு. ப.28).

[தெண்டம் + தீர்வை. தண்டு → தண்டம் → தெண்டம்]

தெண்டம் *tendam,* பெ. (n.) தண்டம்; punishment, penalty. "தெண்டங் கொள்ளா வறப்பய னருத்துவாரின்" (இரகு. ஆற்று. 13).

ம. தெண்டம்; Skt. danda

[தண்டு → தண்டம் → தெண்டம் (கொ.வ.)]

தெண்டல்தெரிசல் *tendal-terišal,* பெ. (n.) தெளிவு இல்லாமை; not clear. "தெண்டல் தெரிசலாகக் கிடக்கிறது (நெல்லை).

[தெண்டல் + தெரிசல்]

தெண்டன் *tendan,* பெ. (n.) தண்டன்; obeisance. "எதிர்தெண்டனாக விழுந்தெழுந்து" (சேக்கிழார் பு. 429).

[தண்டன் → தெண்டன் (கொ.வ.)]

தெண்டனிடு-தல் *tendan-idu-,* 18 செ.குன்றாவி. (v.t.) தண்டனிடுதல்; to do homage by prostration. "அடியேன் றெண்டனிட்ட விண்ணப்பம்" (தனிப்பா. i, 401, 19).

ம. தெண்டனிடுக

[தெண்டன் + இடு-. தண்டன் → தெண்டன் (கொ.வ.)]



தெண்டனை *tendanai,* பெ. (n.) தண்டனை; punishment.

[தண்டனை → தெண்டனை (கொ.வ.)]

தெண்டாயுதம் *tendāyudam,* பெ. (n.) கதுவாழை; fissured plantain (சா.அக.).

[தண்டு → தெண்டு + ஆயுதம்]

தெண்டி[1]-த்தல் *tendi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஒறுத்தல்; to chastise, punish. "தெலுங்கப்ப நாரணன் றெண்டிக்க" (தனிப்பா. i, 83, 165). 2. வற்புறுத்துதல்; to insist, press.

ம. தெண்டிக்குக

[தண்டி → தெண்டி]

தெண்டி[2]-த்தல் *tendi-,* 4 செ.குவி (v.i.) வருந்தி முயலுதல் (யாழ்.அக.); to make efforts, take pains.

[தண்டி → தெண்டி]

தெண்டி[3] *tendi,* பெ. (n.) *இரப்பாளி (இ.வ.);* beggar.

ம. தெண்டி

[தண்டு → தெண்டு. தெண்டு → தெண்டி]

தெண்டிக்கரைசல் *tendi-k-karaišal,* பெ. (n.) தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் கரையையொட்டிய நீரோட்டம் *(மீனவ.);* current runs from the south to north direction and near the bank.

[தெண்டி + கரைசல்]

தெண்டிதெம்மாஒள்ளி *tendi-temmā-olli,* பெ. (n.) தென்மேற்காய்ச் செல்லும் நீரோட்டம் *(மீனவ.);* current which runs through south west direction.

[தென் + தி - தென்தி → தென்றி → தெண்டி.

தெண்டி + தெம்மா + ஒள்ளி. தெண்டி - தெற்கு.

தெற்கு + மேற்கு - தென்மேற்கு → தெம்மாக்கு → தெம்மா.

தெம்மா - மோனை நோக்கி வந்த எதிரிடை மரபிணை மொழி.

நல்லி → நள்ளி → ஒள்ளி.

நல்லி - நீரோடை]

தெண்டிமேமுறி *tendi-mēmuri,* பெ. (n.) தென்கிழக்காய்ச் செல்லும் கடல் நீரோட்டம் *(மீனவ.);* current runs through south east direction.

[தெண்டி → மேமுறி]

தெண்டில் *tendil,* பெ. (n.) ஓணான் *(இ.வ.);* blood sucker.



மறுவ. அணைத்தான்

ம. தெண்டல்; க. தொண்டெ ; தெ. தொண்ட; கொண். டொண்டொ

[தெண்டு[1] → தெண்டில் (தலையை அடிக்கடி மேற் கிளப்பும் ஓணான்) (மு.தா. 73)]

தெண்டிரை *tendirai,* பெ. (n.) *கடல் (பிங்.);* sea. "தெண்டிரை எழினி காட்ட தேம்பிழி மகரயாழின்" *(கம்பரா.)*

[தெள் → தெண் + திரை.

திரை = அலை, அலை பாயும் கடல்]

தெண்டிவெள்ளம் *tendi-vellam,* பெ. (n.) தெற்கிலிருந்து வடக்குமுகமாகச் செல்லும் கடல் நீரோட்டம் *(மீனவ.);* current which runs from south to north direction.

[தென்றிசை வெள்ளம் → தெண்டிசை வெள்ளம் → தெண்டி வெள்ளம்]

தெண்டு[1]**-தல்** *tendu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* கிளப்புதல்; to raise up; to move with a lever. *2.* மிண்டுதல் *(யாழ்.அக.);* to attack, assail.

[துள் → தெள். தெள் + து → தெண்டு]

தெண்டு[2]**-தல்** *tendu-,* 5 செ.கு.வி. (v.i) நரம்பு வலித்தல் *(யாழ்.அக.);* to affect the joints, limbs, as cramp.

[திமிண்டு → நெண்டு → தெண்டு]

தெண்டு[3]**-தல்** *tendu-,* 5 செ.குன்றாவி. (v.t.) இரத்தல் *(இ.வ.);* to beg.

ம. தெண்டுக

[தண்டு → தெண்டு]

தெண்டு[4] *tendu,* பெ. (n.) *1.* கோல்; staff, club, cudgel. *2.* கற்றை; dense, mass. "குளிர்சடைத் தெண்டும்" *(திருவிசைப். கருவூ. 3, 7).*

[தண்டு → தெண்டு]

தெண்டு[5] *tendu,* பெ. (n.) தெண்டில் பார்க்க; see *tendil.*

[தெண்டில் → தெண்டு]

தெண்டு[6] *tendu,* பெ. (n.) வேண்டுகோள்; request.

[தண்டு → தெண்டு]

தெண்டு[7] *teṇḍu,* பெ. (n.) *மனத்தைத் துளைக்கும் ஐயம்;* suspicion which agitate one's mind.

[தென் → தெண்டு]

தெண்டுக்கி *teṇḍukki,* பெ. (n.) *கல்லாட்டன்;* celycine *(சா.அக.).*

தெண்டுச்சலாகை *teṇḍu-c-calāgai,* பெ. (n.) *சித்தர்களின் அறுவை மருத்துவத்திற்குப் பயன்படும் 26 கருவிகளிலொன்று;* a blunt probe one of the 26 surgical instruments or appliances contemplated in Siddhars science *(சா.அக.).*

[தெண்டு + சலாகை]

தெண்டுதடி *teṇḍu-taḍi,* பெ. (n.) *சுமைமிகுந்த பொருள்களை மேலே கிளப்புங் கம்பி (வின்.);* lever.

[தெண்டு[4] + தடி]

தெண்டுபூக்கொடி *teṇḍu-pū-k-koḍi,* பெ. (n.) *கொட்டைக் கரந்தை;* Indian globe thistle *(சா.அக.).*

[தெண்டு + பூ + கொடி]

தெண்டை *teṇḍai,* பெ. (n.) தெண்டகை *பார்க்க;* see *teṇḍagai* *(செ.அக.).*

[தெண்டகை → தெண்டை]

தெண்டைக்குத்தேவை *teṇḍaikku-t-tēvai,* பெ. (n.) தெண்டகைக்குத்தேவை (வின்.) *பார்க்க;* see *teṇḍagaikku-t-tēvai.*

[தெண்டகைக்குத் தேவை → தெண்டைக்குத் தேவை]

தெண்ணர் *teṇṇar,* பெ. (n.) *அறிவிலிகள்;* senseless or dense persons, fools. "தேசனைப் புகழார்சிலர் தெண்ணர்கள்" *(தேவா. 1207,1).*

[தென் → தெண் → தெண்ணு → தெண்ணர்]

தெண்ணீர் *teṇṇīr,* பெ. (n.) *தெளிந்த நீர்;* clear water flowing from sediment water free from noxious substances *(சா.அக.).*

ம. தெண்ணீர்

[தென் + நீர்]

தெண்மை *teṇmai,* பெ. (n.) *1.* தெளிவு (குறுந். *96);* clearness, lucidity, transparency. *2. அறிவின்தெளிவு;* clearness of intellect. "தெண்மையுடையார்" *(பு.வெ. 8, 12, உரை).*

[தென் + மை - தெண்மை]

தெத்தபடம் *tetta-paḍam,* பெ. (n.) *எரிபட்ட துணி;* burnt cloth. "தெத்த படமானேனடி தீயிரும்பினீரானேன்" *(பட்டினத்துப். பக். 244).*

[தீய்த்த - தெத்த + படம் (கொ.வ.)]

தெத்தம்[1] *tettam,* பெ. (n.) *தத்தம் (கொ.வ.) பார்க்க;* see *tattam.*

[தத்தம் → தெத்தம்]

தெத்தம்[2] *tettam,* பெ. (n.) *ஞாயிறு இருக்கும் விண்மீனிற்கு முந்திய விண்மீன்;* the naksatra previous to that where the sun is *(செ.அக.).*

தெத்தாபகாரம் *tettāpakāram,* பெ. (n.) *தானங் கொடுத்ததைக் கவர்கை;* taking back a gift once made, revocation of a gift.

[தெறு → தெற்று → தெற்றா → தெத்தா + அபகாரம்]

தெத்தாபகாரி *tettāpakāri,* பெ. (n.) *தானஞ் செய்த பொருளைக் கவர்வோன்;* one who takes back his gift. "தெத்தாபகாரிகளாகிய கொடிய பாவிகளொடு" *(சித். மரபுகண். பக்.17).*

[தெத்தாபகாரம் → தெத்தாபகாரி]

தெத்து[1]**-தல்** *tettu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *தெற்று-தல் பார்க்க;* see *teṟṟu-.* "தடிகொடு தெத்தி" *(திருப்பு. 602)*

[தெற்று → தெத்து
ஒ.நோ.: கற்று → கத்து; பற்று → பத்து]

தெத்து²-தல் *tettu-*, 5 செ.கு.வி. (v.i.) திக்குதல்; to stammer (சா.அக.)

[தெற்று → தெத்து-.]

தெத்து³ *tettu*, பெ. (n.) 1. வேலி; hedge of bamboo or thorns. 2. மூலை; corner.

[தெற்று² → தெத்து-.]

தெத்து⁴ *tettu*, பெ. (n.) தத்துப்பிள்ளை; adopted son. "இனிதுறு தெத்துமைந்தன்" (காசிக. சிவ. அக். 15).

[தத்து → தெத்து]

தெத்து⁵ *tettu*, பெ. (n.) ஏமாற்று (இ.வ.); deception.

[தெற்று³ → தெத்து]

தெத்து⁶ *tettu*, பெ. (n.) பருமல்; yard-arm in a vessal or dhoney.

தெத்துப்பல் *tettu-p-pal*, பெ. (n.) ஒன்றின் மேலோன்று வளர்ந்து இடறும்படிச் செய்யும் பல்; teeth arising from other teeth irregularly thus affecting the speech (சா.அக.).

[தெற்று + பல்,
தெற்று → தெத்து. தெத்துப்பல் = இடறிய பல்]

தெத்துமாற்றிப்போடு-தல் *tettu-māṟṟi-p-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) ஏறுவாசி வைத்துச் சுவர் கட்டுதல்; to break joint in building walls.

[தெத்து + மாற்று + போடு-.]

தெத்துமாற்று *tettu-māṟṟu*, பெ. (n.) வஞ்சகம்; tricks; lies; chicanery. தெத்துமாற்று தெசை மாற்றில் கெட்டிக்காரன் (பழ.).

[தெத்து + மாற்று]

தெத்துவாய் *tettu-vāy*, பெ. (n.) திக்கிப் பேசும் வாய்; stammering mouth (சா.அக.).

மறுவ. திக்குவாய்

[தெற்று → தெத்து. தெத்து + வாய்]

தெத்துவாயன் *tettu-vāyaṉ*, பெ. (n.) திக்கு வாயன்; stammerer.

[தெத்து + வாயன்.
தெற்று → தெத்து]

தெத்துவாளி *tettu-vāḷi*, பெ. (n.) ஏமாற்றுக் காரன்; cheat. "அவன் சரியான தெத்துவாளி; கடன் வாங்கினால் திருப்பித் தரமாட்டான் (நெல்லை).

[தெற்று⁵ → தெத்து + ஆளி]

தெத்தேயெனல் *tettē-y-eṉal*, பெ. (n.) ஓர் ஒலிக் குறிப்பு; onom. expr. of singing. "தெத்தேயென முரன்று" (தேவா. 747, 1).

[தெத்தே + எனல்]

தெந்தன *tendaṉa*, பெ. (n.) தெந்தனா பார்க்க; see *tentaṉā*.

தெந்தனம்¹ *tendaṉam*, பெ. (n.) கவலையற்ற தன்மை; carelessness. "தெந்தனவென்றே திரிந்ததுண்டேயோ" (அருட்பா. vi, பிள்ளைப் பெரு. 98).

ம. தெந்தனம்

[தெந்தனவெனல் → தெந்தனம்]

தெந்தனம்² *tendaṉam*, பெ. (n.) 1 சோம்பல்; laziness. 2. தாழ்ச்சி; delay "கருணை பொழிய இன்னந் தெந்தனமா" (கனம் கிருஷ்ணையர், 65).

தெந்தனமடி-த்தல் *tendaṉam-aḍi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. வீணே திரிதல்; to loaf, loiter about. 2. வேலையை உழப்புதல் (இவ.); to shirk work.

[தெந்தனம் + அடி-.]

தெந்தனவெனல் *tendaṉa-v-eṉal*, பெ. (n.) தெந்தனம் பார்க்க; see *tendaṉam*.

தெந்தனா *tendaṉā*, பெ. (n.) தாளச் சொற்கட்டு (சங்அக.); set syllables used in marking time in music.

தெத்துக்கி *tettukki*, பெ. (n.) வெள்ளைப்புனை; cuspidate-leaved calycine croton (சா.அக.).

தெப்பக்கட்டை *teppa-k-kaṭṭai*, பெ. (n.) 1. வண்டியச்சுக்கோத்த மரம் (இ.வ.); wooden shaft over the axle of a cart. 2. மிதவை; raft, logs of a raft. 3. கிணற்றடியில் வைத்துக் கட்டும் மரச்சட்டம் (இ.வ.); protecting wooden frame at the bottom of a well. 4. ஏற்றமரத்தில் நீர்ச்சாலைக் கட்டவுதவும் மரக்கட்டை; wooden piece for attaching a bucket to a picotah.

[தெப்பம் + கட்டை]

தெப்பக்குளம் *teppa-k-kuḷam,* பெ. (n.) *தெப்பத் திருவிழா நடைபெறும் தடாகம்;* tank attached to a temple in which the deity is floated on rafts during festival. *"தெப்பக் குளங் கட்டித் தேர்மண்டபங் கட்டி" (குற்றா.குற. 91, 4).*

ம. தெப்பக்குளம்

[தெப்பம் + குளம். தெப்பம் = மிதவை]

தெப்பத்திருநாள் *teppa-t-tiru-nāḷ,* பெ. (n.) *தெப்பத்திருவிழா பார்க்க;* see *teppa-t-tiruviḻā.*

[தெப்பம் + திரு + நாள்]

தெப்பத்திருவிழா *teppa-t-tiruviḻā,* பெ. (n.) *தடாகத்திற்கோயிற்றிருமேனியைத் திருக்குளத்தின் மீது எழுந்தருளப் பண்ணிக் கொண்டாடும் திருவிழா;* floating festival in which a deity of a temple is taken on rafts in a tank.

[தெப்பம் + திருவிழா]



தெப்பம்[1] *teppam,* பெ. (n.) *மிதவை (திவா.);* raft, float.

ம. தெப்பம்; க., து., பட. தெப்ப; தெ. தேப, தெப்ப; Mar. tāphā, tarāphā; Pkt. tappa; Skt. tarpa, talpa.

தெப்பம்[2] *teppam,* பெ. (n.) *தணக்கு பார்க்க;* see *taṉaku (சா.அக.).*

தெப்பமரம் *teppa-maram,* பெ. (n.) *நுணா என்னுங் கொடி;* small ach root *(சா.அக.).*

தெப்பல் *teppal,* பெ. (n.) *தெப்பம்*[1] *பார்க்க;* see *teppam*[1].

[தெப்பம் → தெப்பல்]

தெப்பலகரு *teppala-karu,* பெ. (n.) *வெள்ளைக் கருக்கட்டை;* a white species eagle wood. *(சா.அக.).*

தெப்பலங்கெட்டவன் *teppalaṅ-keṭṭavaṉ,* பெ. (n.) *உடல்நலிந்தோன் (இ.வ.);* weak-bodied person.

[துப்பு + பலம் + கெட்டவன். துப்பலங் கெட்டவன் → தெப்பலங்கெட்டவன்]

தெப்பை *teppai,* பெ. (n.) *தெப்பம் பார்க்க;* see *teppam.*

[தெப்பம்' → தெப்பை]

தெம்பல் *tembal,* பெ. (n.) *மழையால் வயல் இறுகுகை;* hardening of ploughed land after heavy rain.

தெம்பாங்கு *tem-pāṅgu,* பெ. (n.) *1. ஒருவகைச் சந்தனம் (சங்.அக.);* a kind of sandal paste. *2. தெம்மாங்கு பார்க்க;* see *temmāṅgu.*

[தென் + பாங்கு → தென்பாங்கு → தெம்பாங்கு]

தெம்பு *tempu,* பெ. (n.) *1. உடல் வலிமை;* physical strength. *தெம்பு கெட்ட பயலிடம் தும்பைக் கொடுக்காதே (பழ.). 2. துணிபு;* daring, bravery. *"தெம்பை நானெற்று காண்பேனோ" (இராமநா. உயுத். 81). தெம்பிருந்தால் மோதிப்பார் (உ.வ.). 3. செருக்கு (அகங்காரம்);* arrogance, pride. *"சொம்புந் தெம்புங் குடியென வளர்தரு கொடியவர்" (திருப்பு. 609). 4. சுறுசுறுப்பு;* energy, enthusiasm. *"அந்த வேலையைச் செய்ய எனக்குத் தெம்பாயிருக்கிறது".*

[எம்பு → தெம்பு]

தெம்புறம் *tempuṟam,* பெ. (n.) *தென்புறம் பார்க்க;* see *teṉ-puṟam (சா.அக.).*

[தென் + புறம் = தென்புறம் → தெம்புறம் (கொ.வ.)]

தெம்மாங்கு *temmāṅgu,* பெ. (n.) *தென்னாட்டில் நாட்டுப்புறத்தார் பாடும் இசைப் பாட்டுவகை (கொ.வ.);* a kind of ditty peculiar to the rustics of Southern India.

[தென்பாங்கு → தெம்மாங்கு]

தெம்மாடி *temmāḍi,* பெ. (n.) *ஒன்றுக்கு முதவாதவன் (உ.வ.);* senceless person, fool,

incompetent person. "தெம்மாடித்தனமா இருக்காதே" (மதுரை.)

ம. தெம்மாடி; தெ. திம்மரி, திம்மடு

தெம்மாண்டி *temmāṇḍi*, பெ. (n.) தெம்மாடி பார்க்க; see *temmāḍi.*

[தெம்மாடி → தெம்மாண்டி]

தெம்முனை *tem-muṉai*, பெ. (n.) போர்க்களம்; the front line of battle; battle field. "தொலையாக் கற்பநின் றெம்முனை யானே" (பதிற்றுப். 80. 17).

[தெவ் + முனை.
தெவ் = பகை. தெவ் + முனை - தெவ்முனை → தெம்முனை]

தெம்மேலு *temmēlu*, பெ. (n.) தென்மேற்கு (மீனவ.); south west.

[தென் → தெம் + மேல். மேல் → மேலு]

தெய்[1] *tey*, பெ. (n.) கொலை (பிங்.); killing.

[தேய் → தெய்]

தெய்[2] *tey*, பெ. (n.) தெய்வம் (பிங்.); the deity.

[தேய் → தெய்]

தெய்தெய் *tey-tey*, பெ. (n.) தாளக் குறிப்பு; set syllables used for marking time in singing and dancing.

[தைதை → தெய்தெய்]

தெய்தெய்யெனல் *tey-tey-y-eṉal*, பெ. (n.) 1. சினத்தால் ஆடுதற் குறிப்பு (கொ.வ.); expr. of dancing in rage. தெய்தெய்யென்று குதிக்கிறான். 2. மாடுகளைச் செலுத்தும் ஒலிக்குறிப்பு; onom. expr. of driving bullocks (செ.அக.).

[தெய் + தெய் + எனல்]

தெய்ய *teyya*, பெ. (n.) தெய்யோ பார்க்க; see *teyyō.* "சொல்லினித் தெய்ய யாந்தெயு மாறே" (அகநா. 220).

தெய்யோ *teyyō*, பெ. (n.) ஓர் அசைநிலை; poetic expletive. "வாரா ராயின் வாழேந் தெய்யோ" (ஐங்குறு. 239).

[தெய் → தெய்யோ]

தெய்வஆவி *teyva-āvi*, பெ. (n.) தூய ஆவி; holy spirit.

[தெய்வம் + ஆவி]

தெய்வஏனம் *teyva-ēṉam*, பெ. (n.) அருட்டன்மையுடைய ஏனம்; divine vessel or bowl, believed to become full with food whenever needed.

[தெய்வம் + ஏனம்]

தெய்வக்கட்டாடி *teyva-k-kaṭṭāḍi*, பெ. (n.) தெய்வங்கொண்டாடி பார்க்க; see *teyvaṅ-koṇḍāḍi.*

[தெய்வம் + கட்டாடி]

தெய்வக்கண்ணோர் *teyva-k-kaṇṇōr*, பெ. (n.) மெய்யறிவுடையவர்; persons having perfect spiritual knowledge. "ஓஞுத் தெய்வக் கண்ணோ ருணர்குவர்" (மணிமே. 27:146).

[தெய்வம் + கண்ணோர்]

தெய்வக்கணம் *teyva-k-kaṇam*, பெ. (n.) தேவக் கூட்டம்; celestial host. "மன்பெருந் தெய்வ கணங்களி னுள்ளேன்" (மணிமே. 21:120). 2. தேவக்கணம் பார்க்க; see *tēva-k-kaṇam.*

[தெய்வம் + கணம்]

தெய்வக்கம்மியன் *teyva-k-kammiyaṉ*, பெ. (n.) தேவத்தச்சன்; celestial architect. "முழுவதும் வல்ல தெய்வக்கம்மியர் தம்மால்" (திருவாலவா. 26,11).

ம. தெய்வக்கம்மியன்

[தெய்வம் + கம்மியன்]

தெய்வக்கரி *teyva-k-kari*, பெ. (n.) இறையைச் சான்றாய்க் கொள்ளுகை; God as witness.

[தெய்வம் + கரி. கரி பார்க்க]

தெய்வக்கல் *teyva-k-kal*, பெ. (n.) தெய்வவுரு அமைத்தற்குரிய சிலை; stone used for making idols. "இமைய மால்வரைத் தெய்வக் கல்லும்" (மணிமே. 26:89).

[தெய்வம் + கல்]

தெய்வக்கலா *teyva-k-kalā*, பெ. (n.) அரிசந்தனம்; red sandal wood (சா.அக.).

தெய்வக்களை *teyva-k-kaḷai*, பெ. (n.) தெய்வீக ஒளிவீசும் அழகு (சோபை); devine radiance, as of the countenances of saints.

[தெய்வம் + களை]

தெய்வக்கற்பனை *teyva-k-karpaṉai,* பெ. (n.) தெய்வக் கட்டளை; divine order or injunction, especially as uttered by an oracle. 2. விதி (உ.வ.); fate.

[தெய்வம் + கற்பனை]

தெய்வக்காப்பு *teyva-k-kāppu,* பெ. (n.) பாட்டுடைத் தலைவனைத் தெய்வங் காக்க வென்று கூறும் பிள்ளைத்தமிழ்ப் பகுதி (திவா.); a section in pillai-t-tamil in which gods are invoked to protect the hero of the poem.

[தெய்வம் + காப்பு]

தெய்வக்கிளவி *teyva-k-kiḷavi,* பெ. (n.) 1. தெய்வீகப் பேச்சு; divine speech. "திப்பிய முறைக்குந் தெய்வக் கிளவியின்" (மணிமே. 7:97). 2. வடமொழி; Sanskrit, as the language of the gods. "தெய்வக் கிளவியிற் றெய்வங் கூறும்" (மணிமே. 21:46) (செ.அக.).

[தெய்வம் + கிளவி]

உலக வழக்கற்றதும் அரைச்செயற்கைக் கலவை மொழியுமான வடமொழியைத் தெய்வக் கிளவி என செ.அக. குறித்திருப்பது ஆரியக் குறும்பு.

தெய்வக்குஞ்சரி *teyva-k-kuñjari,* பெ. (n.) தெய்வயானை பார்க்க; see *teyva-yāṉai.*

[தெய்வம் + குஞ்சரி]

தெய்வக்குற்றம் *teyva-k-kuṟṟam,* பெ. (n.) நேர்த்திக் கடனை நிறைவேற்றாமையால் அல்லது வழிபாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றாமையால் தெய்வங்கட்குண்டாகுஞ் சினம் (உ.வ.); divine displeasure as due to non-performance of enjoined rites.

[தெய்வம் + குற்றம்]

தெய்வக்குறை *teyva-k-kuṟai,* பெ. (n.) தெய்வக் குற்றம் பார்க்க; see *teyva-k-kuṟṟam.*

[தெய்வம் + குறை]

தெய்வங்கொண்டாடி *teyvaṅ-koṇḍāḍi,* பெ. (n.) தெய்வம் பேய் முதலியவற்றால் உணர்வேற்றப் பட்டு ஆடுபவர் (நாஞ்.); a person possessed by a deity, evil spirit etc.

[தெய்வம் + கொண்டு + ஆடி]

தெய்வங்கொள்கை *teyvaṅ-koḷkai,* பெ. (n.) கடவுள் உண்டென்னுங் கொள்கை; theistic belief. "குலனருந் தெய்வங் கொள்கை" (நன்பாயி. 26).

[தெய்வம் + கொள்கை]

தெய்வச்சகாயம் *teyva-c-cagāyam,* பெ. (n.) தெய்வத்துணை பார்க்க; see *teyva-t-tuṇai.*

[தெய்வம் + சகாயம்]

தெய்வச்சங்கற்பம் *teyva-c-caṅgaṟpam,* பெ. (n.) நேர்ந்துகொள்(ளு)-தல் பார்க்க; see *nērndu-koḷ(ḷu)-.*

தெய்வச்சாட்சி *teyva-c-cāṭci,* பெ. (n.) தெய்வக்கரி பார்க்க; see *teyva-k-kari.*

[தெய்வம் + சாட்சி]

Skt. sākṣin → த. சாட்சி

தெய்வச்சாட்சியாய் *teyva-c-cāṭci-y-āy,* பெ.எ. (adv.) உறுதி கூறும்போது வழங்குவதும் கடவுள் சாட்சியாக என்று பொருள் படுவதுமாகிய தொடர்; a term of swearing, meaning before God, with God to witness.

[தெய்வம் + சாட்சியாய்]

தெய்வச்சாயல் *teyva-c-cāyal,* பெ. (n.) தெய்வக்களை பார்க்க; see *teyva-k-kaḷai.*

[தெய்வம் + சாயல்]

தெய்வச்சித்தம் *teyva-c-cittam,* பெ. (n.) நேர்ந்துகொள்(ளு)-தல் பார்க்க; see *nērndukoḷ(ḷu)-.*

[தெய்வம் + சித்தம்]

தெய்வச்சிந்தனை *teyva-c-cindaṉai,* பெ. (n.) இறையூழ்கம்; divine meditation, contemplation of the deity.

[தெய்வம் + சிந்தனை]

தெய்வச்சிலையார் *teyva-c-cilaiyār,* பெ. (n.) தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு உரை எழுதியவர்களுள் ஒருவர்; a commentator on solladikāram of Tolkāppiyam.

தெய்வச்சிலையான் *teyva-c-cilaiyāṉ,* பெ. (n.) திருப்புல்லாணியிற் கோயில் கொண்டுள்ள திருமால்; Viṣṇu as worshipped at Tiruppullāṇi "தெய்வச் சிலையாற் கென் சிந்தைநோய் செப்புமினே" (திவ். பெரியதி. 2, 4, 3).

தெய்வச்சுரபி *teyva-c-curabi,* பெ. (n.) காமதேனு (சங்.அக.) celestial cow.

[தெய்வம் + சுரபி]

தெய்வச்செயல் *teyva-c-ceyal,* பெ. (n.) 1. தெய்வத்தின் செய்கை; providential occurrence, act of God. "துரந்தான் றெய்வச் செயலன்ன கணையை" (கம்பரா. அதிகாய. 194). 2. தற்செயல்; chance. தெய்வச் செயல் இருந்தால் செத்தவனும் எழும்புவான் (பழ.).

[தெய்வம் + செயல்]

தெய்வச்சோதனை *teyva-c-cōdaṉai,* பெ. (n.) கடவுளின் நோட்டம்; trial of a person by God, subjecting him to suffering or hard treatment (செ.அக.).

[தெய்வம் + சோதனை]

Skt. šodhana → த. சோதனை

தெய்வஞ்செப்பு-தல் *teyvañ-ceppu-,* 7 செ.கு.வி. (v.i.) துணைவேண்டிக் கடவுளை வழிபடுதல்; to invoke the aid of the God. "பகை பெருமையிற் றெய்வஞ் செப்ப" (பதிற்றுப். 82, 1).

[தெய்வம் + செப்பு]

தெய்வஞானம் *teyva-ñāṉam,* பெ. (n.) தெய்வத்தைப் பற்றிய அறிவு; spiritual knowledge. "தெய்வ ஞானந் திறப்படக் காட்டி" (பெருங். இலாவாண. 11, 134).

[தெய்வம் + ஞானம்]

Skt. jñāna → த. ஞானம்

தெய்வத்தச்சன் *teyva-t-taccaṉ,* பெ. (n.) தெய்வக்கம்மியன்; the celestical architect. "தெய்வத்தச்சனைப் புகழ்துமோ" (கம்பரா. ஊர்தேடு. 18).

[தெய்வம் + தச்சன்]

தெய்வத்தரு *teyva-t-taru,* பெ. (n.) 1. வானுலக மரம்; celestial tree. "தெய்வத்தரு வளரும் பொழிற்புறவம்" (தேவா. 145, 2). 2. தேவதாரு பார்க்க; see tēvatāru.

[தெய்வம் + தரு]

தெய்வத்தலம் *teyva-t-talam,* பெ. (n.) கோயில் (இ.வ.); temple.

[தெய்வம் + தலம்]

தெய்வத்தன்மை *teyva-t-taṉmai,* பெ. (n.) கடவுளின் இயல்பு; divine nature, godliness.

[தெய்வம் + தன்மை]

தெய்வத்தானம் *teyva-t-tāṉam,* பெ. (n.) கோயில்; temple. "தெய்வத் தானமோ டவ்வழி யொழிய" (பெருங். உஞ்சைக். 43, 177).

[தெய்வம் + தானம்]

தெய்வத்தீர்வை *teyva-t-tīrvai,* பெ. (n.) தெய்வத்தின் தீர்ப்பு (யாழ்.அக.); divine judgment.

[தெய்வம் + தீர்வை]

தெய்வத்துணை *teyva-t-tuṇai,* பெ. (n.) கடவுளின் துணை; God's help.

[தெய்வம் + துணை]

தெய்வத்துந்துமி *teyva-t-tundumi,* பெ. (n.) தேவலோக முரசு; celestial drum. "சங்குந் தெய்வ துந்துமியுந் தழங்க" (பிரபுலிங். விமலை. 32).

தெய்வத்துவம் *teyva-t-tuvam,* பெ. (n.) கடவுட்டன்மை (யாழ்.அக.); godhood, godliness.

தெய்வத்துவனி *teyva-t-tuvaṉi,* பெ. (n.) (சமணம்) தேவர் அருகற்குச் செய்யுஞ் சிறப்புகளுளொன்று; shouts of praise to Arhat by the celestials. "சுடர்மண்டலஞ் சுரதுந்துபி தெய்வத்துவனி" (திருநூற். 80).

[தெய்வம் + துவனி. துல் → தொல் → தொனி → துவனி = ஓசை, ஒலி, இசை முழக்கம்]

தெய்வதம் *teyvadam,* பெ. (n.) 1. தெய்வம்; deity, divinity. "ஆங்கத் தெய்வதம் வாராதோ வென" (மணிமே. 9:70) 2. ஆண்டு (பிங்.); year.

தெய்வதயானை *teyvada-yāṉai,* பெ. (n.) தெய்வயானை பார்க்க; see teyva-yāṉai. "தெய்வதயானை கேள்" (கந்தபு. தெய்வயா. 171).

[தெய்வம் + யானை]

தெய்வதை *teyvadai,* பெ. (n.) தேவதை பார்க்க; see tēvadai. "திருவாக்குந் தெய்வதையும் . . . தேற்ற வழிபாடு செய்வதே" (சிறுபஞ். 43).

தெய்வநதி *teyva-nadi,* பெ. (n.) கங்கை (பிங்.); the Ganges, as the sacred river.

[தெய்வம் + நதி]

தெய்வநானம் *teyva-nānam,* பெ. (n.) (சைவம்) வெயிலெறிக்கும்போது பெய்யும் மழையில் கிழக்கு நோக்கி ஏழடி சென்றுமீளுகை (தத்துவப். 4), உரை); walking seven steps in an easterly direction in the rain while the sun shines.

[தெய்வம் + நானம்]

தெய்வநிந்தை *teyva-nindai,* பெ. (n.) கடவுளைப் பழிக்கை; humilate God's grace.

ம. தைவநிந்த

[தெய்வம் + நிந்தை]

தெய்வநியமம் *teyva-niyamam,* பெ. (n.) 1. கடவுளாணை; divine decree; judgment of heaven. 2. தற்செயல்; providential occurrence (செ.அக.).

[தெய்வம் + நியமம்]

தெய்வப்பகை *teyva-p-pagai,* பெ. (n.) குழந்தைகளை வருத்துகின்ற தீய கோள்கள்; the evil planet believed to affect babies. "செல்லும் மன்னோ சீவகன் றெய்வப் பகை வென்றே" (சீவக. 364)

[தெய்வம் + பகை]

தெய்வப்பசு *teyva-p-pašu,* பெ. (n.) காமதேனு (பிங்.); celestial cow.

[தெய்வம் + பசு]

Skt. pasu → த. பசு

தெய்வப்படை *teyva-p-paḍai,* பெ. (n.) தெய்வப் படைக்கலம் (திவ்விய அஸ்திரம்); divine weapon. "தெய்வப் படையும் சினமுந் திறனும்" (கம்பரா. அதிகாயன். 50).

[தெய்வம் + படை]

தெய்வப்பத்தி *teyva-p-patti,* பெ. (n.) கடவுளிடம் பத்திமை; devotion of god.

அத்திக்காய், கோரைக்காய், தேத்தன்காய், ஐவிரலிக்காய், வெள்ளைக் கத்திரிக்காய், சோற்றுக்காந்தல் கற்றாழை ஆகியவற்றைப் புசிப்பவர்களுக்குத் தெய்வபக்தி கிடையாது (சா.அக.).

[தெய்வம் + பத்தி]

தெய்வப்பயம் *teyva-p-payam,* பெ. (n.) தெய்வவச்சம் பார்க்க; see *teyva-vaccam.*

[தெய்வம் + பயம்]

Skt. bhaya → த. பயம்

தெய்வப்பலகை *teyva-p-palagai,* பெ. (n.) தகுதியுள்ள புலவர்கட்கு மட்டும் இடங் கொடுக்கக் கூடியதாய்ச் சிவபிரானாற் கழகத்தார்க்கு அருளப்பெற்ற பலகை; the miraculous seat of sangam poets. "வாங்கருந் தெய்வப் பலகையைச் சங்க மண்ட பத்திடை நடுவிட்டு" (திருவாலவா. 15, 4).

[தெய்வம் + பலகை]

தெய்வப்பாடல் *teyva-p-pāḍal,* பெ. (n.) 1. தேவர் பாடும் பாடல்; songs of the gods. 2. தெய்வத்தைப் பற்றிய பாடல்; songs in praise of the gods, as at the opening of a dance. "நன்மையுண்டாகவும் தீமைநீங்கவும் வேண்டித் தெய்வப் பாடல் . . . பாட" (சிலப். 3:135, உரை). 3. அருட்பாடல்; inspired song or hymn.

[தெய்வம் + பாடல்]

தெய்வப்பாத்திரம் *teyva-p-pāttiram,* பெ. (n.) தெய்வஏனம் பார்க்க; see *teyva-ēnam.* "தெய்வப் பாத்திரஞ் செவ்விதின் வாங்கி" (மணிமே. 21:151).

[தெய்வம் + பாத்திரம்]

தெய்வப்பாவை *teyva-p-pāvai,* பெ. (n.) கொல்லி மலையில் தேவரால் நிறுவப்பட்ட நோக்குவோரைத் தன்வயப்படுத்தும் தெய்வப் படிமை; a woman - shaped statue in the Kolli mount, believed to have been made by demons. "சிலைத் தொழிற் சிறுநுதற் றெய்வப் பாவைபோல்" (சீவக.687).

[தெய்வம் + பாவை]

தெய்வப்பிரமம் *teyva-p-piramam,* பெ. (n.) தெய்வத்தன்மையுடைய நான்முகன் (பிரம) வீணை; the divine lute of Brahmā. "தெய்வப் பிரமஞ் செய்குவோரும்" (பரிபா. 19, 40).

தெய்வப்பிறப்பு *teyva-p-piṟappu,* பெ. (n.) தெய்வப்பிறவி பார்க்க; see *teyva-p-piṟavi.*

[தெய்வம் + பிறப்பு]

தெய்வப்பிறவி *teyva-p-piṟavi,* பெ. (n.) இறைகூறு கொண்ட பிறப்பு; godly being.

[தெய்வம் + பிறவி]

தெய்வப்புணர்ச்சி *teyva-p-puṇarcci,* பெ. (n.) தலைவனும் தலைவியும் இயல்பினாற் கூடும் முதற்கூட்டம்; union of lovers brought about by destiny. "தெய்வப் புணர்ச்சி செய்ம றுணிந்தது" (திருக்கோ. 7, கொளு.).

மறுவ. இயற்கைப் புணர்ச்சி

[தெய்வம் + புணர்ச்சி]

தெய்வப்புலமை *teyva-p-pulamai,* பெ. (n.) இறைத்தன்மை வாய்ந்த புலமை; poetic gift, as divinely inspired. "தெய்வப் புலமை யருந்திறல் வள்ளுவன்" (குறள், சிறப்புப் பாயிரம்).

[தெய்வம் + புலமை]

தெய்வப்புலவன் *teyva-p-pulavaṉ,* பெ. (n.) 1. இறைத்தன்மை வாய்ந்த கவிஞன்; giftted poet, as divinely inspired. தெய்வப் புலவனுக்கு நா உணரும், சித்திர ஓடாவிக்குக் கை உணரும் (பழ.). 2. திருவள்ளுவர்; Thiruvalluvar. தெய்வப் புலவன் திருவள்ளுவனுரைத்த மெய் வைத்த சொல் லொன்றும் மேவாமே... (நெஞ்சுவிடு தூது).

[தெய்வப் புலமை → தெய்வப் புலவர்]

தெய்வப்புள் *teyva-p-puḷ,* பெ. (n.) கருடன்; garuda, as the celestial bird. "தெய்வப் புள்ளேறி வருவான் சித்திர கூடத்துள்ளானே" (திவ். பெரியதி. 3, 3, 6).

[தெய்வம் + புள்]

தெய்வப்பெண் *teyva-p-peṇ,* பெ. (n.) தேவ நங்கை (திவா.); celestial nymph. "தெய்வப் பெண் ணேத்திசைப்ப" (திருவாச. 19, 6).

[தெய்வம் + பெண்]

தெய்வப்பெண்டிர் *teyva-p-peṇḍir,* பெ. (n.) தெய்வ நங்கை (திவா.); celestial nymph. "சிறுகாஞ்சொறி நன்னாரி தெய்வப் பெண்டீருடனாக" (சாஅக.).

[தெய்வம் + பெண்டிர்]

தெய்வப்பெயர்த்தொகுதி *teyva-p-peyar-t-togudi,* பெ. (n.) அகராதியில் ஒரு பகுதி; a part of dictionary.

[தெய்வப்பெயர் + தொகுதி]

தெய்வப்பக்தி *teyva-pakti,* பெ. (n.) தெய்வப்பத்தி பார்க்க; see *teyva-p-patti.*

[தெய்வம் + பக்தி]

த. பத்தி → Skt. bhakti

தெய்வம் *teyvam,* பெ. (n.) 1. கடவுள் (சூடா.); God, deity. "தெய்வ முணாவே" (தொல். பொருள். 18). 2. தெய்வத்தன்மை; divine nature. "தெய்வமே கமழு மேனி" (சீவக. 1718). 3. தெய்வத் தன்மையுள்ளது; that which is divine. "தெய்வத்தாற் கூறாயோ" (திணைமாலை. 90). 4. ஊழ்; fate, destiny. "தெய்வத்தா லாகா தெனினும்" (குறள். 619). 5. தெய்வமணம் பார்க்க; see *teyva-maṇam.* 6. தெய்வாதனம் பார்க்க; see *teyvādaṉam.* "குஞ்சித வராகந் தெய்வம்" (தத்துவப். 108). 7. ஆண்டு (தைலவ. தைல); year. 8. மணம் (பல்பொருட் சூளா.); fragrance. 9. புதுமை (பல்பொருட் சூளா.); newness.

ம. தெய்வம், தேவன், தைவம், தெய்யம்; க. தேவ

[தோய் → தேய்.
தேய்தல் = உரசுதல். தேய்த்தல் (பி.வி.)
தேய் → தேய்வை = உரசும் சந்தனக் கட்டை
தேய் → தே → தீ = நெருப்பு.
தேய் → தேயு (வ.)

தீயானது முதற்காலத்தில் தெய்வமாக வணங்கப்பட்டதினால் தீயின் பெயரினின்று தெய்வத்தைக் குறிக்கும் பெயர்கள் திரிந்தன.

சுள் → சுர் → சுரம் → சுரன் = தேவன்

தேய் → தே = தெய்வம், தலைவன்.

தே → தேவு → தேவன்.

தேய் → (தெய்) → தெவ்வு → தெய்வம் (முதா. 205)]

இனி, இருளும் பொறுக்கொணாத துன்பமாகி, தீயகம் என்னும் எரிநரகிற்கு இருளுலகம் என்றொரு பெயரும் ஏற்பட்டிருப்பதால், கதிரவ வடிவிற் பகலிருளையும் விளக்கு வடிவில் இரவிருளையும் போக்கும் தீயும் கண்ணிற்கு இன்றியமையாத ஒளியைத் தருவதுடன், உடம்பிற்கும் உணவிற்கும் வேண்டிய வெம்மையையும் உதவுகின்றது பற்றி, தெய்வம் எனப் போற்றத்தக்க பூதமுந் தீயேயாகி, தெய்வம் என்னும் பெயரும் தீயின் பெயரின்றே தோன்றியுள்ளது (செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 53, பக். 164).

தெய்வமணம் *teyva-maṇam,* பெ. (n.) 1. *இறை மணம்;* divine fragrance. 2. *தெய்வப் புணர்ச்சி பார்க்க;* see *teyva-p-puṇarcci.* 3. *வேள்வி செய்வோன் வேட்பிக்கின்றாருள் ஒருவற்குத் தன் பெண்ணைத் தீ முன்னர்க் காணிக்கையாகக் கொடுப்பது;* a form of marriage in which the sacrificer gives away his daughter to an officiating priest before the sacrificial fire, as the latter's fee. "*தெய்வ மணத்தார் திறம்*" (*தொல். பொருள். 92, உரை*).

[*தெய்வம் + மணம்*]

தெய்வமணி *teyva-maṇi,* பெ. (n.) 1. *சிந்தாமணி* (*பிங்.*); celestial wishing gem. 2. *பொன்னாக்கி* (*பரிசவேதி*); philosopher's stone. "*தீண்டளவில் வேதிகை செய் தெய்வமணி கொல்லோ*" (*கம்பரா. உருக்காட்டு. 68*). 3. *குதிரைக்கழுத்திலுள்ள நற்சுழி* (*அசுவசா. 14*); auspicious curl on a horse's neck. 4. *நற்சுழியுள்ள குதிரைவகை;* horse with a lucky curl. "*கழுத்தில் வலஞ் சுழித்திருந்தால் . . . தெய்வமணியென விசைப்பர்*" (*திருவிளை. நரிபரி. 111*).

[*தெய்வம் + மணி*]

தெய்வமந்திரி *teyva-mandiri,* பெ. (n.) *தெய்வவமைச்சன் பார்க்க;* see *teyva-v-amaiccaṉ.*

[*தெய்வம் + மந்திரி*]

தெய்வமயக்கம் *teyva-mayakkam,* பெ. (n.) *தெய்வமேறிய மருள் நிலை;* inspiration of obsession by a spirit. "*தெய்வமயக்கத்தாற் கூறினாள்*" (*சிலப். 12: 51, உரை*).

[*தெய்வம் + மயக்கம்*]

தெய்வமயக்கு *teyva-mayakku,* பெ. (n.) *தெய்வத்தாலேற்பட்ட மன மயக்கம்;* trance induced by a deity. "*ஆங்குநிற் கொணர்ந்த வருந்தெய்வ மயக்கம்*" (*மணிமே. 21:109*).

[*தெய்வம் + மயக்கு*]

தெய்வமரம் *teyva-maram,* பெ. (n.) *விண்ணுலக மரம்;* celestial tree.

[*தெய்வம் + மரம்*]

தெய்வமாடம் *teyva-māḍam,* பெ. (n.) *தெய்வத்தானம் பார்க்க;* see *teyva-t-tāṉam.* "*தெய்வ மாடமுந் தேர்நிலைக் கொட்டிலும்*" (*பெருங். இலாவாண. 7, 143*).

[*தெய்வம் + மாடம்*]

தெய்வமாடு-தல் *teyvam-āḍu-,* 5 செ.கு.வி. (v.i.) *தெய்வத்தன்மையுறுதல்* (*கொ.வ.*); to be possessed or inspired by a spirit.

[*தெய்வம் + ஆடு-*]

தெய்வமானுடம் *teyva-māṉuḍam,* பெ. (n.) *தெய்வத்தன்மை பொருந்திய மாந்த நிலை;* semi-divine nature. "*யான் அவளைத் தெய்வமானுட மென்றறிந்து*" (*திருக்கோ. 251. உரை*).

[*தெய்வம் + மானுடம்*]

தெய்வமுறு-தல் *teyvam-uṟu-,* 20 செ.கு.வி. (v.i.). 1. *தெய்வ உணர்வு மேலிடல்;* to become possessed by a spirit. "*சாலினி தெய்வமுற்று*" (*சிலப். 12:8*). 2. *தெய்வத்தன்மையுறுதல்* (*சிலப். 19:26. அரும்.*); to gain godhood.

[*தெய்வம் + உறு-*]

தெய்வமுனி *teyva-muṉi,* பெ. (n.) *நாரதர் போன்ற தேவ முனி;* celestial sage as Nāradar.

[*தெய்வம் + முனி*]

தெய்வமேறு-தல் *teyvam-ēṟu-,* 5 செ.கு.வி. (v.i.) *தெய்வ உணர்வு மேலுறுதல்;* to be possessed by a spirit.

[*தெய்வம் + ஏறு-*]

தெய்வயாகம் *teyva-yāgam,* பெ. (n.) *தெய்வவேள்வி பார்க்க;* see *teyva-vēḷvi.*

[*தெய்வம் + யாகம்*]

தெய்வயானை *teyva-yāṉai,* பெ. (n.) 1. *இந்திரனின் யானை; தேவயானை;* Indira's elephant. 2. *குமரக்கடவுள் தேவியருள் ஒருத்தி* (*பிங்.*); a wife of Lord Murugan. "*குமரற் கிந்திரன் றருந் தெய்வ யானையே*" (*கந்தபு. தெய்வயா. 52*).

[*தெய்வம் + யானை*]

தெய்வயானைகாந்தன் *teyva-yāṉai-kāndaṉ,* பெ. (n.) *முருகக்கடவுள்* (*சூடா.*); Kandaṉ, as the Lord of Teyvayāṉai.

[*தெய்வம் + யானை + காந்தன்*]

தெய்வயானைதண்ணீர்வாங்கு-தல் *teyva-yāṉai-taṇṇīr-vāṅgu-*, 11 செ.கு.வி. (v.i.) கிட்டதட்ட 1000 அடிப்பரப்புள்ள நீர் கொந்தளித்து அதில் சிக்கும் கலங்களுக்கு இடர் உண்டாகும் வகையில் வாடைக் காலத்தில் கடலின்மேல் குறிப்பிட்ட இடத்தில் கருத்த மேகங்கள் திரண்டு விழுதுகளைப் போலக் கோடு கோடாகத் தொடுதல்; to rain in a particular place on the surface of the sea with cluster of murkey sky, during winter season, which effects a tumultuous surface at about 1000 feet breadth and it goes to the level of causing damage to ships.

தெய்வலோகம் *teyva-lōgam*, பெ. (n.) தெய்வவுலகம் பார்க்க; see *teyva-v-ulagam*. "தெய்வலோகத்தின் படித்தாய்ச் செல்வத்துடனே அவதரித்தது" *(பு. வெ. 9. 17. உரை).*

[தெய்வம் + லோகம்]

த. உலகம் → Skt. lōga → த. லோகம்

தெய்வவச்சம் *teyva-vaccam*, பெ. (n.) கடவுளாணைக்கு அஞ்சுகை; fear of God.

[தெய்வம் + அச்சம்]

தெய்வவணக்கம் *teyva-vaṇakkam*, பெ. (n.) 1. கடவுளை வணங்குகை; worship of God. 2. நூன்முதலிற் கூறப்படும் கடவுள் வாழ்த்து; invocation of a deity at the beginning of a treatise. "தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளும்" *(காரிகை. பாயி. 1. உரை).*

[தெய்வம் + வணக்கம்]

தெய்வவமைச்சன் *teyva-vamaiccaṉ*, பெ. (n.) தேவர்களுக்கு அமைச்சனான வியாழன்; Jupiter, as counsellor of the gods.

[தெய்வம் + அமைச்சன்]

தெய்வவாக்கு *teyva-vākku*, பெ. (n.) 1. கடவுள் திருமொழி; word of God, divine utterance. 2. உருவிலிச் சொல் (அசரீரி); voice or utterance of an invisible speaker.

[தெய்வம் + வாக்கு]

தெய்வவாழ்த்து *teyva-vāḻttu*, பெ. (n.) தெய்வவணக்கம் பார்க்க; see *teyva-vaṇakkam*.

[தெய்வம் + வாழ்த்து]

தெய்வவிசுவாசம் *teyva-visuvāsam*, பெ. (n.) 1. கடவுளிடம் நம்பிக்கை; faith in God. 2. நம்பும் மதம்; theistic belief. 3. கடவுளிடத்துக் காட்டுவதுபோற் காட்டும் நம்பிக்கை; reverence and faith, as in God.

[தெய்வம் + விசுவாசம்]

தெய்வவியப்பு *teyva-viyappu*, பெ. (n.) வியப்புகள் மூன்றனுள் ஒன்று *(சிலப். 10:167, உரை)*; pre-eminence resulting from divinity, one of three adisayam.

[தெய்வம் + வியப்பு]

தெய்வவிரதன் *teyva-viradaṉ*, பெ. (n.) சிறப்பு நோன்பு கொண்ட வீடுமன்; Bhīṣmaṉ, as one who took a divine vow.

[தெய்வம் + விரதன்]

தெய்வவீடு *teyva-vīḍu*, பெ. (n.) வானூர்தி; celestial vehicle. "திக்குற நினைப்பினிற் செல்லுந் தெய்வ வீடு" *(கம்பரா. நகரப். 32).*

[தெய்வம் + வீடு]

தெய்வவுத்தி *teyva-vutti*, பெ. (n.) தலைக் கோலம்; woman's head ornament. "தெய்வ வுத்தியோடு வலம்புரி வயின்வைத்து" *(திருமுரு. 23).*

[தெய்வம் + உத்தி]

தெய்வவுலகம் *teyva-vulagam*, பெ. (n.) வானுலகம்; the celestial world, heaven.

[தெய்வம் + உலகம்]

தெய்வவேள்வி *teyva-vēḷvi*, பெ. (n.) தேவருக்காக ஓமம் வளர்த்துச் செய்யும் வேள்வி; sacrifice to deities.

[தெய்வம் + வேள்வி]

தெய்வாதனம் *teyvādaṉam*, பெ. (n.) ஒரு கால் மடித்து ஒரு கால் ஊன்றியிருக்கும் இருக்கை வகை; a kind of yogic posture in which one leg is bent and the other leg is planted erect.

தெய்வாதீனம் *teyvādīnam*, பெ. (n.) *1.* தெய்வச் செயல்; divine providence. *2.* தற்செயல் (உ.வ.); chance.

தெய்வாவி *teyvāvi*, பெ. (n.) (கிறித்.) தூய ஆவி; holy ghost.

[தெய்வம் + ஆவி]

தெய்வானை *teyvānai*, பெ. (n.) தெய்வயானை பார்க்க; see *teyva-yānai*.

[தெய்வம் + யானை]

தெய்விகம் *teyvigam*, பெ. (n.) *1.* கடவுள் தன்மையுள்ளது; that which is divine. *2.* கடவுட்செயல்; divine act or injunction. *3.* ஒன்பது பனை உயரமுள்ள ஓர் அளவு (சுக்கிர நீதி. 232); a lineal measure of nine talam. *4.* தற்செயல்; chance. "சேனைக ளிளைப்பறத் தெய்விகந்தனில் வந்த" (பாரத. பதினான்காம். 68). *5.* மேன்மை; transcendence, magnificence, super-eminance.

[தெய்வ(ம்) + இகம்]

தெய்விகாதிசயம் *teyvigādišayam*, பெ. (n.) தெய்வவியப்பு பார்க்க; see *teyva-viyappu*.

தெய்வீகம் *teyvīgam*, பெ. (n.) தெய்விகம் பார்க்க; see *teyvigam*. "தெய்வீகமாக நீர்தாமித் திசையில் வந்தது" (சிவரக. சிவடுண்டிவன. 44).

[தெய்விகம் → தெய்வீகம்]

தெய்வீகமா-தல் *teyvīgam-ā-*, 7 செ.குவி. (v.i.) இறத்தல்; to die as attaining the divine state (திருப்பணி. மதுரைத்தல. 5).

[தெய்வீகம் + ஆ-]

தெய்வீகவுலா *teyvīga-v-ulā*, பெ. (n.) இரட்டையர் இயற்றிய ஏகாம்பரநாதர் உலா; a poem by Irattaiyar in praise of Sivan at Kanjipuram.

[தெய்வீகம் + உலா]

தெய்வை *teyvai*, பெ. (n.) குழம்பு (அக.நி.); mixture of thick consistency.

[தேய்வை → தெய்வை]

தெயிலுப்பு *teyiluppu*, பெ. (n.) தெல்லுப்பு பார்க்க; see *telluppu* (சா.அக.).

தெரவாங்கனை *teravāṅganai*, பெ. (n.) மீன் வகை; a kind of fish.



தெராட்டு[1] *terāṭṭu*, பெ. (n.) விரைவாகச் செல்லுதல்; going speed. 'வண்டி தெராட்டுலே போகுது' (நெல்லை.).

தெராட்டு[2] *terāṭṭu*, பெ. (n.) தனியாய் விடுவது, களைகணின்றி விடுவது; abandon, leaving, helpless. 'தெராட்டல விட்டு விட்டான்' (நெல்லை.).

தெரி[1]**-த்தல்** *teri-*, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* வெளிப்படுத்துதல்; to make evident, bring to view. "தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே" (கம்பரா. சிறப். 6). *2.* சொல்லுதல் (திவா.); to tell, declare, inform. *3.* குறிப்பிட்டு விளக்குதல்; to explain specifically. "தெரிந்து மொழி கிளவி" (தொல். சொல். 56). *4.* எழுதுதல் (பிங்.); to write, inscribe. *5.* கொழித்தல் (யாழ்.அக.); to sift. *6.* தெரிந்தெடுத்தல்; to choose, select. "தெரித்த கணையாற் றிரிபுர மூன்றுஞ் செந்தீயின் மூழ்கவே (தேவா. 10. 7). *7.* பங்கிடுதல் (யாழ். அக.); to partition, divide. *8.* காலங்கழித்தல்; to pass, as a certain period of time.

தெரி[2]**-த்தல்** *teri-*, 4 செ.குவி. (v.i.) மாறுபடுதல் (யாழ்.அக.); to be perverse.

தெரி[3]**-தல்** *teri-*, 4 செ.குவி. (v.i.) ஆராய்ந்து வரையறை செய்தல்; எல்லை தெரித்தல்; to determine the border. "எல்லை தெரித்த பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லும், கள்ளியும் நாட்டி" (பெரிய லெய்டன் செப்பேடுகள்).

தெரி[4]**-த்தல்** *teri-*, 4 செ.குன்றாவி. (v.t.) அகலல்; to get rid of as diseases (சா.அக.).

தெரி[5]**-தல்** *teri-*, 4 செ.குவி. (v.i.) *1.* தோன்றுதல்; to be seen, to become evident. "அந்த விண்மீன்

கண்ணுக்குநன்கு தெரிகின்றது". 2. விளக்கமாதல்; to be understood, intelligible, clear. "தன்னா ணிகழ்ந்த தன்மை தானே தெரியச் சொன்னாள்" (கம்பரா. நகர்நீ. 37). 3. காணும் ஆற்றலைப் பெற்றிருத்தல்; to possess the power of sight. "அவனுக்குக் கண் தெரிகின்றது". 4. மனமறிதல்; to be conscious, as of one's guilt. 'தெரிந்து செய்த பாவம்'.

ம. தெரியுக; க. திளி; தெ. தெலியு; து. தெரியுனி; குட. திரி; கோத. தெய்ர்; துட. திர்ய; கூ. திரி

தெரி⁶-தல் *teri-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஆராய்தல்; to investigate, test, ascertain, enquire. "திறந் தெரிந்து தேறப்படும்" (குறள், 501). 2. அறிதல்; to know, understand. "எல்லாந் தெரியக் கேட்குநர் யார்?" (பரிபா. 12, 38). 3. தெரிந் தெடுத்தல்; to select, choose. "புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே" (கலித். 7). 4. கேட்டு அறிதல்; to learn through listening. "தெரிதல் நினைதலெண்ணலாகத் திருமாலுக்கு" (திவ். திருவாய். 6, 9, 11). 5. அரித்தெடுத்தல் (திவா.); to sift (செ.அக.).

தெரிக்கல் *teri-k-kal*, பெ. (n.) விளக்கி (விவரித்து)ச் சொல்லுகை; narration in detail. "சைவத் திறத்தினைத் தெரிக்கலுற்றாம்" (சிசி. பாயி. 2).

[தெரி → தெரிக்கல்]

தெரிகடை *teri-kaḍai*, பெ. (n.) 1. கழிவு; refuse. 2. தள்ளுபடி; that which is rejected as waste matter (சா.அக.).

[தெரி + கடை]

தெரிகவி *terikavi*, பெ. (n.) தெரிந்தெடுக்கப் பட்ட செய்யுள் திரட்டு; a poetic selection, anthology.

[தெரி + கவி]

தெரிகவிச்செய்யுள் *terikavi-c-ceyyuḷ*, பெ. (n.) பல நூல்களினின்று பொறுக்கி எடுக்கப் பட்ட செய்யுள்களின் தொகுதி; anthology of poems.

[தெரி + கவி + செய்யுள்]

தெரிகாரம் *teri-kāram*, பெ. (n.) பொரி காரம்; borax (சா.அக.).

[தெரி + காரம்]

தெரிசொல் *teri-šol*, பெ. (n.) 1. ஆணை, உண்மை (சத்தியம்) (அக.நி.); order, truth, promise. 2. தெரிந்த கரணியம் (சது.); cause, discovered, or alleged. 3. அருஞ்சொல் விளக்கம்; glossary (w).

[தெரி + சொல்]

தெரிதரல் *teridaral*, பெ. (n.) 1. அறிதல்; under stand. 2. தோற்றுதல்; to appear.

[தெரி → தெரிதரல்]

தெரிதருதேற்றவுவமை *teritaru-tēṟṟa-v-uvamai*, பெ. (n.) ஐயுற்றதினைத் தெரிந்து துணிவதாகிய அணி வகை; a kind of rhetoric.

[தெரிதரு + தேற்றவுவமை]

(எ-டு)

நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு.

இக்குறளில், கல்லாதா ரிடத்திற் பொருந்திய செல்வம், கற்றாரிடத்தில் பொருந்திய வறுமையினும் துன்பஞ் செய்வதாம், என்புழி, கல்லார் மாட்டுச் செல்வத்திற்குக் கற்றார் மாட்டு வறுமை உவமை கூறத்தக்கதன்று என்பது தெளிந்து கூறப்படுதலின் இது தெரிதருதேற்ற உவமையாம்.

"தாமரை நாண்மலருந் தண்மதியால் வீறழியும்
காமர் மதியுங் கரைவிரவும் - ஆமிதனால்
பொன்னை மயக்கும் புனை சுணங்கி னார்முகமே
என்னை மயக்கு மிது"

இதுவு மஃதே.

தெரிந்தவன் *terindavaṉ*, பெ. (n.) அறிவுடை யோன்; a man of knowledge and learning.

[தெரி + த் + த் + அ + அன்]

தெரிந்துசெயல்வகை *terindu-šeyal-vagai*, பெ. (n.) மன்னன் தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யுந் திறம் (குறள், 47, அதிகாரம்); the king's duty of acting after due deliberation.

[தெரிந்து + செயல் + வகை]

தெரிந்துணர்ச்சி *terinduṇarcci*, பெ. (n.). அறிந்துணரும் உணர்வு; judgment, discretion, wisdom. "மெய்யுறுவதாகா தென்னுந் தெரிந் துணர்ச்சி யுண்டாயின்" (இறை. 2, 31).

[தெரிந்து + உணர்ச்சி]

தெரிந்துணர்வு *terindunarvu,* பெ. (n.) தெரிந்துணர்ச்சி பார்க்க; see *terindunarcci.* "தெரிந்துணர்வொன்றின்மையால்" (திவ். இயற். பெரியதிருவந். 82).

[தெரிந்து + உணர்வு]

தெரிந்துதெளிதல் *terindu-teli-dal,* பெ. (n.) அமைச்சர் முதலாயினாரைப் பல்வகையானும், ஆராய்ந்து தெளிகை (குறள், 5ஆம் அதி.); to select, by a king of ministers, after careful, consideration of their qualification.

[தெரிந்து + தெளி-தல்]

தெரிந்துவினையாடுதல் *terindu-vinai-y-ādudal* பெ. (n.) தெளியப்பட்ட அமைச்சர் முதலாயினாரை, அவர் செய்யவல்ல, வினைகளை அறிந்து அவற்றின் கண்ணே ஆளுந் திறம் (குறள், 52ஆம் அதி.); employment of ministers and other agents in suitable duties.

[தெரிந்து + வினையாடுதல்]

தெரிநிலை *teri-nilai,* பெ. (n.) 1. தெளிவுபட அறிவிக்கும் நிலை (நன். 423); the state of clear indication. 2. ஆராய்ந்து அறியும் நிலை; the state of being investigated. "தெரிநிலைக் கிளவி" (தொல். சொல். 256, சேனா.). 3. தெரிநிலை வினை பார்க்க; see *terinilai-vinai.* 4. எல்லா விரலும் விரிந்து வளைந்து நிற்கும் இணையா வினைக்கை வகை (சிலப். 3, 18, உரை); a gesture with one hand in which all the fingers are stretched and slightly bent.

[தெரி + நிலை]

தெரிநிலைக்கை *terinilai-k-kai,* பெ. (n.) தெரிநிலை,4 (சிலப். 3:18 உரை) பார்க்க; see *terinilai,4.*

[தெரி + நிலை + கை]

தெரிநிலையும்மை *terinilai-y-ummai,* பெ. (n.) தெளிவாகத் தெரிந்ததால் கூறும் உம்மை; declaration of a conviction as in ஆணுமன்று, பெண்ணுமன்று. தெரிதற் பொருட்கண் வருதலிற் றெரிநிலை யும்மை (தொல். சொல். 255, சேனா.).

[தெரிநிலை + உம்மை]

தெரிநிலைவினை *terinilai-vinai,* பெ. (n.) காலத்தை வெளிப்படையாகத் தோற்றுவிக்கும் வினை (நன். 320, உரை); verbs explicity denoting tense by a tense-sign, opp. to kurippu-vinai.

[தெரிநிலை + வினை]

தெரிநிலைவினைப்பெயரெச்சம் *terinilaivinai-p-peyareccam,* பெ. (n.) செயலும் காலமும் விளக்கிப் பெயரை அவாவி நிற்பது; verbal noun which acts as an adjective.

[தெரிநிலைவினை + பெயரெச்சம்]

தெரிநிலைவினைமுற்று *terinilai-vinaimurru,* பெ. (n.) செயல், காலம், இடம் எனும் மூன்றனையும் விளக்கி முற்றுப்பெற்று நிற்பது; a verb which gives complete meaning.

[தெரிநிலை + வினைமுற்று]

'வந்தாய்' எனும் சொல், வருதலாகிய செயலையும் இறந்த காலத்தையும் முன்னிலை இடத்தையும் காட்டி முற்றுப்பெற்றுள்ளது.

தெரிநிலைவினையெச்சம் *terinilai-vinai-y-eccam,* பெ. (n.) செயல், காலம் இரண்டை மட்டும் காட்டி, வினை எஞ்சி நிற்பது; a verbal clause which shows only, the tense, and the deed.

[தெரிநிலை + வினையெச்சம்]

வந்து என்னும் சொல் வருதலாகிய செயலும் இறந்த காலமும் அமையப்பெற்று வினையை அவாவி நிற்கிறது.

தெரிப்பான் *terippān,* பெ. (n.) வயிறு வீங்கி நீர் கழியச் செய்யும் ஆட்டு நோய் வகை; a disease peculiar to sheep in which the abdomen gets swollen, and there is watery discharge from the bowls.

[தெரி → தெரிப்பான்]

தெரிப்பு *terippu,* பெ. (n.) 1. அறிவிப்பு; informing, acquainting, communicating. 2. ஆராய்வு (யாழ்.அக.); investigation. 3. சொல்லுகை (வின்.); saying, mentioning. 4. சீட்டு; note of hand. 5. கொழிப்பு; sifting with a fan. 6. பிரிப்பு (யாழ்.அக.); dividing. 7. கொக்கான் விளையாட்டில் கற்களைத்

தெரிந்தெடுக்கை (யாழ்ப்.); selecting stones in the kokkān play. 9. கொழிக்கப்பட்டவை; things sifted, assorted or chosen. 10. எழுதுகை (சூடா.); writing, inscription.

[தெரி → தெரிப்பு]

தெரிபடு-தல் *teri-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. தெரிந்தெடுக்கப்படுதல்; to be selected. 2. தோன்றுதல்; to appear.

[தெரி + படு-.]

தெரிபொருள்[1] *teri-poruḷ,* பெ. (n.) அறிபவனாகிய ஆதன்; soul, as the agent of cognition. "தெரிபொரு டேரின்" (பரிபா. 2, 26).

[தெரி + பொருள்]

தெரிபொருள்[2] *teri-poruḷ,* பெ. (n.) 1. தேர்ந்த பொருள்; elected meaning. 2. தேட்டம்; thrived property.

[தெரி + பொருள்]

தெரிமா *terimā,* பெ. (n.) 1. இரைக்காக அலையும் விலங்கு; any animal that roams about in search of prey. 2. அரிமா; lion (சா.அக.).

[தெரி + மா]

தெரிமானனப்புள் *terimāṉaṉa-p-puḷ,* பெ. (n.) ஆந்தை; owl (சா.அக.).

தெரிமுத்தம் *teri-muttam,* பெ. (n.) இதளியம்; mercury (சா.அக.).

[தெரி + முத்தம்]

தெரித்தால் முத்தைப்போல் எங்கும் பரவிக் கிடப்பதால் இப்பெயர் வந்தது போலும்.

தெரியசிங்கி *teriya-siṅgi,* பெ. (n.) பருந்து; kite, heron (சா.அக.).



தெரியத்தெரி-தல் *teriya-t-teri-,* 2 செ.குன்றாவி. (v.t.) தெளிவாயறிதல்; to understand clearly. "தெரியத் தெரியுந் தெரிவிலாதானை" (நாலடி. 247).

[தெரிய + தெரி-.]

தெரியப்படுத்து-தல் *teriya-p-paḍuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) அறிவித்தல்; to explain, to submit, to make known, or reveal. 'அவன் தன் முதலாளியிடத்தில் தெரியப்படுத்தினான்'.

[தெரிய + படுத்து-.]

தெரியல் *teriyal,* பெ. (n.) 1. தெரிந்து கொள்ளுகை; selection. "தேங்கமழ் தெரியற் றீம்பூந்தா ரவன்" (சீவக. 2253). 2. பூமாலை; flower garland. "புனைவினைப் பொலிந்த பொலனறுந் தெரியல்" (புறநா. 29).

[தெரி → தெரியல்]

தெரியலர் *teriyalar,* பெ. (n.) 1. அறிவில்லார் (யாழ்.அக.); the ignorant, the unenlightened, the uninformed. 2. பகைவர்; enemies. "தெரியலர் வந்து வணங்கித் திறையிடுஞ் சீர்மதுரை" (திருவாலவா. பக். 320, பயகர 11).

[தெரி + அல் + அர்]

தெரியவுணர்-தல் *teriya-v-uṇar-,* 2 செ.குன்றாவி. (v.t.) தெளியவறிதல்; to understand clearly. "தேறித் தெரியவுணர்ந்" (பரிபா. 6, 92).

[தெரிய + உணர்-.]

தெரியாத்தன்மை *teriyā-t-taṉmai,* பெ. (n.) தெரியாத்தனம் பார்க்க; see *teriyā-t-taṉam.*

[தெரி + ஆ + தன்மை. 'ஆ' எதிர் மறை இடைநிலை]

தெரியாத்தனம் *teriyā-t-taṉam,* பெ. (n.) அறியாமை (கொ.வ.); ignorance.

[தெரி + ஆ + தனம். 'ஆ' எதிர் மறை இடைநிலை]

தெரியாநிலைவினை *teriyānilai-viṉai,* பெ. (n.) குறிப்புவினை (சங்.அக.) பார்க்க; see *kuṟippu-viṉai.*

[தெரி + ஆ + நிலை + வினை]

தெரியாப்புத்தி *teriyā-p-putti,* பெ. (n.) தெரியாத்தனம் பார்க்க; see *teriyā-t-taṉam.*

[தெரி + ஆ + புத்தி. 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தெரியிழை *teriyiḻai,* பெ. (n.) 1. தேர்ந்த அணிகலன்; choiced ornament. 2. பெண்; woman, as wearing choice ornaments. தெரியிழை வந்தாள்.

[தெரி + இழை]

தெரியுமோர் *teriyumōr,* பெ. (n.) தெரிவோர்; those who know, or understand, learned men. "நேரீற் றியற்சீர் நிலைக்குரீத்தன்றே தெரியு மோர்க்கே" (தொல். பொருள். 337).

[தெரியும் + ஓர்]

தெரிவி-த்தல் *terivi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. அறிவித்தல்; to explain, point out, show, teach. 2. வெளிப்படுத்துதல்; to bring to light, manifest, reveal, display.

[தெரி + வி. 'வி' பிறவினை ஈறு]

தெரிவிடு-தல் *teriviḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. தெரிந்தெடுத்தல்; to choose, select, cull. 2. ஆராய்தல்; to examine.

[தெரிவு + இடு-.]

தெரிவில்புகழ்ச்சி *terivil-pugaḻcci,* பெ. (n.) ஒன்றைப் பழித்தற்கு வேறொன்றைப் புகழும் அணி (வீரசோ. அலங். 32); figure of speech in which one is praised by way of slighting another.

[தெரிவு + இல் + புகழ்ச்சி]

எ-டு

பிறர்செல்வங் கண்டாற் பெரியோர் மகிழ்வுஞ்
சிறியோர் பொறாத திறமு - மறிவுறீஇச்
செங்கமல மெய்மலர்ந்த தேங் குமுத மேபசந்த
பொங்கொளியோன் வீறெய்தும் போது

தெரிவினை *teri-viṉai,* பெ. (n.) தெரிநிலை வினை பார்க்க; see *terinilai-viṉai.*

[தெரி + வினை]

தெரிவெடு-த்தல் *teri-v-eḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) கடலில் வீசிய வலையில் மிதப்புக் கட்டிய மேற்பாகத்தையும், கல் கட்டப்பட்ட கீழ்பாகத்தையும் பிரித்து எடுத்தல் (மீனவ.); to separate the upper part of the net which is tied with the buoy and the lower part, which is tied with the stone.

[தெரிவு + எடு-.]

தெரிவை[1] *terivai,* பெ. (n.) 1. 25 முதல் 31 வரையான அகவைக்குட்பட்ட பெண் (திவா.); a woman between the age of 25 and 31 years. 2. 31 முதல் 40 வரையிலான அகவைக்குட்பட்ட பெண்; any woman between the age of 31 and 40 years. 2. பெண்; woman. "தெரிவை மார்க்கொரு கட்டளையெனச் செய்த திருவே" (கம்பரா. சித்திர. 33).

ம. தெரிவ; க. தரளெ (பெண்); தெ. தெரவ

தெரிவை[2] *terivai,* பெ. (n.) கன்னி ஓரை (பிங்.); virgo in the zodiac.

தெரு *teru,* பெ. (n.) 1. வீதி (திவா.); street. "வாரல் வாழிய ரையவெந் தெருவே" (குறுந். 139). 2. வழி; highway, public road. "தெருவும் மாமறுகலின் மயக்குற்றன" (புறநா. 345).

ம. தெரு; தெ. தெருவு

முடுக்கு சிறு சந்து; சந்து தெருவின் கிளை; தெரு சிறு வீதி; மறுகு போக்குவரத்து மிகுந்த பெருந்தெரு அல்லது வீதி; ஆவணம் கடைத்தெரு; அகலுள் அகன்ற மறுகு; சாலை பெருவழி (road).

சந்தி மூன்று தெருக்கள் கூடுமிடம்; சதுக்கம் நான்கு தெருக்கள் கூடுமிடம் (சொல். 50).

தெருக்கதவு *teru-k-kadavu,* பெ. (n.) தெருப் பக்கத்திலமைந்த கதவு; street door.

[தெரு + கதவு]

தெருக்கந்தம் *teru-k-kandam,* பெ. (n.) குங்கிலியம்; Indian lammder resin (சா. அக.).

தெருக்காட்சிகொடு-த்தல் *teru-k-kāṭci-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) கமுக்கமாக வைத்திருக்க வேண்டியதை விளம்பரப்படுத்தல்; to publish what should be kept secret (செ.அக.).

[தெரு + காட்சி + கொடு-.]

தெருக்கால் *teru-k-kāl,* பெ. (n.) வீட்டருகில் பரவர் நடும் முழுத்தக்கால்; post planted near a marriage-house in the first night of a wedding ceremony.

[தெரு + கால்]

தெருக்காவல் *teru-k-kāval,* பெ. (n.) தெருவிற் செய்யும் காவல்; patrol of streets.

[தெரு + காவல்]

தெருக்குத்து *teru-k-kuttu,* பெ. (n.) தெருவுக்கு நேராக அமைந்திருக்கும் வீடு; considered inauspicious portion of a house, being opposite to a street. "*அந்த வீடு தெருக்குத்தாக உள்ளது*" (*உ.வ.*).

[தெரு + குத்து]

இத்தகைய வீடுகள் செழிப்படையா என்பது நம்பிக்கை.

தெருக்குத்துவா *teru-k-kuttuvā,* பெ. (n.) *1.* குத்துவா மீன்வகை; a herring, golden, glossed with purple. *2.* நீலநிறமுள்ள கடல்மீன் வகை; a herring bluish.

தெருக்குத்துவீடு *teru-k-kuttu-vīdu,* பெ. (n.) தெருக்குத்து பார்க்க; see *teru-k-kuttu.*

[தெருக்குத்து + வீடு]



தெருக்கூத்து *teru-k-kūttu,* பெ. (n.) *1.* தெரு வெளியில் நடக்கும் நாடகம்; dramatic performance or dance in a street. *2.* எல்லோராலும் நகைக்கத்தக்கது; that which is a public disgrace.

[தெரு + கூத்து]



தெருக்கோலம் *teru-k-kōlam,* பெ. (n.) தெருப் பக்கத்துள்ள தரையில் இடுங்கோலம் (நாஞ்.); decoration on the side of the floor facing a street.

[தெரு + கோலம்]

தெருச்சண்டை *teru-c-caṇḍai,* பெ. (n.) ஒன்றுக்கும் உதவாதவற்றுக்கு முரண்பட்டுத் தெருவில் செய்யும் தகராறு; quarrel at street due to insignificant matter. தெருச்சண்டை கண்ணுக்கு இன்பம் (*பழ.*).

[தெரு + சண்டை]

தெருட்சி *teruṭci,* பெ. (n.) *1.* அறிவு (பிங்.); knowledge, wisdom, understanding. *2.* தெளிவு; clearness. "தெருட்சி சேரவைத் திசைமுகன் சபித்த நாள்" (*சேதுபு. விதூம. 71*). *3.* முதற்பூப்பு; attaining puberty.

[தெருள் → தெருட்சி]

தெருட்டல் *teruṭṭal,* பெ. (n.) யாழ் நரம்பை உருட்டும் இசைக்கரண வகை; rubbing the lute-string to test the tone. "சீருடனுருட்ட றெருட்டல்" (*சிலப். 7. கட்டுரை.*).

[தெருட்டு + அல். 'அல்' தொ.பெ. ஈறு]

தெருட்டிக்கலியாணம் *teruṭṭi-k-kaliyāṇam,* பெ. (n.) தெருட்டுக்கலியாணம் பார்க்க; see *teruṭṭu-k-kaliyāṇam.*

[தெருட்டி + கலியாணம்]

தெருட்டு[1]**-தல்** *teruṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* அறிவுறுத்துதல்; to inform, make known. '*தலைமகள் உடன்போகியவழித் தெருட்டு வார்க்குச் செவிலித்தாய் சொல்லியது*' (*ஐங்குறு. 380. உரை*). *2.* மனம் தெளியச் செய்தல்; to convince, persuade, enlighten the mind. *3.* ஊடல் தீர்த்தல்; to pacify, make up a love-quarrel. "தெருட்டவுந் தெருளா தூடலொடு துயில்வோர்" (*மணிமே. 7:52*). *4.* வற்புறுத்துதல்; to confirm, assure. *5.* இசை பார்க்க யாழ் நரம்பை அழுந்தத் தீண்டித் திருகிவிடுதல்; to rub and test the tone of a lute string. "திருந்து நரம்பை யுறத்தொட்டுத் திருகிவிட றெருட்டல்" (*கூர்மபு. கண். 140*).

[தெருள் → தெருட்டு-.]

தெருட்டு[2] *teruṭṭu,* பெ. (n.) 1. அறிவிப்பு; informing, convincing. 2. தேற்றுகை; consoling, pacifying. 3. பூப்பெய்துதல்; attaining puberty, as of a girl.

[திரள் → தெருள் → தெருட்டு]

தெருட்டுக்கலியாணம் *teruṭṭu-k-kaliyāṇam,* பெ. (n.) 1. குழந்தைத் திருமணப் பெண்ணின் மணநிறைவு (இருதுசாந்தி): consummation after a child-wife attains puberty. 2. திருமணம் செய்தற்குரிய பருவத்திற் செய்யும் சடங்கு; ceremony at the time of a girl's becoming marriageable.

[திரள் → திரட்டு → தெருட்டு + கலியாணம். திரள் = சமைதல், பருவ மெய்துதல்]

தெருண்டபெண் *teruṇḍa-peṇ,* பெ. (n.) சமைந்த பெண்; a girl who has attained puberty (சா.அக.).

[திரண்ட + பெண்.
திரண்டபெண் → தெருண்ட பெண்]

தெருண்டமேலவர் *teruṇḍa-mēlavar,* பெ. (n.) அறிவிற் சிறந்தவர்கள்; wise people.

[தெருண்ட + மேலவர்]

தெருணை *teruṇai,* பெ. (n.) மரவகை; potato plum of Mysore.

தெருத்திண்ணை *teru-t-tiṇṇai,* பெ. (n.) வாயிற் புறத்துள்ள திண்ணை; pial facing street.

[தெரு + திண்ணை]

தெருப்பங்காளி *teru-p-paṅgāḷi,* பெ. (n.) ஒரே தெருவில் வாழ்வோன்; one who lives in the same street.

[தெரு + பங்காளி]

தெருப்பள்ளிக்கூடம் *teru-p-paḷḷi-k-kūḍam,* பெ. (n.) வாயிற்றிண்ணையில் அமைந்துள்ள பள்ளிக்கூடம்; pial-school.

மறுவ. திண்ணைப் பள்ளிக்கூடம்

[தெரு + பள்ளி + கூடம்]

தெருப்பாய்ச்சல் *teru-p-pāyccal,* பெ. (n.) தெருக்குத்து பார்க்க; see *teru-k-kuttu.*

[தெரு + பாய்ச்சல்]

தெருப்பிள்ளை *teru-p-piḷḷai,* பெ. (n.) ஒரு தெருவிற் பெரியவராய் உள்ளவர் (இ.வ.); the most wealthy and influential man of a street.

[தெரு + பிள்ளை]

தெருமரல் *teru-maral,* பெ. (n.) 1. மனச்சுழற்சி; giddiness, confusion, perplexity, distress. "அலமர றெருமர லாயிரண்டுஞ் சுழற்சி" (தொல். சொல். 311). 2. அச்சம்; fear.

[தெருமரு → தெருமரல்]

தெருமரு-தல் *teru-maru-,* 12 செ.கு.வி. (v.i.) மனஞ் சுழலுதல்; to be unnerved, to sink under distress, to be confused in mind. "வளைமுன் கை பற்றி நலியத் தெருமந்திட்டு" (கலித். 51).

தெருமறிச்சான் *teru-maṟiccāṉ,* பெ. (n.) திருவிழாக் காலங்களில் தீண்டாக்குலத்தினர் வாராதபடி தெருவையடைத்து வைக்குந் தட்டி (நாஞ்.); 'tattis' placed across a street preventing the untouchables from entering during a festival.

[தெரு + மறிச்சான்]

தெருவம் *teruvam,* பெ. (n.) தெரு பார்க்க; see *teru.* "உருவச் செங்கொடி தெருவத்துப் பரப்பி" (பெருங். உஞ்சைக். 38. 351).

[தெரு → தெருவம்]

தெருவாக்கு-தல் *teruvākku-,* 8 செ.குன்றாவி. (v.t.) வீணாக்குதல்; to make it useless. 'எல்லாத்தையும் தெருவாக்கிட்டான்' (நெல்லை.).

[தெரு + ஆக்கு-.]

வீணானவற்றைத் தெருவிற்குப் போடும் தன்மையினால் வீணாக்குதல் தெருவாக்குதல் எனக் குறிப்பதற்கு அடிப்படையாயிற்று

தெருவாசல் *teru-vāšal,* பெ. (n.) வெளிவாசல்; door or gate of house, opening into a street, dist. fr. uḷ-vāšal.

[தெரு + வாசல்]

தெருவிசு *teruvišu,* பெ. (n.) 1. திறமையுடையது; that which is strong. 2. நல்வடிவு; healthy, formation of body, shapeliness. 'குழந்தைக்கு இன்னும் தெருவிசு ஏற்படவில்லை'.

[திறவிது → தெருவிது → தெருவிசு]

ஒ.நோ. நறுவிது - நறுவிசு

தெருவில்விடு-தல் *teruvil-vidu-,* 20 செ.கு.வி. (v.i.) *ஏதிலியாய் விடுதல்; களைகணின்றி விடுதல்;* abandon, helpless.

[தெருவில் + விடு-.]

தெருவிலழகி *teru-vil-alagi,* பெ. (n.) *குப்பைமேனி;* plant adoring rubbish heap *(சா.அக.).*

[தெருவில் + அழகி (மருத்துவக் குழூஉக் குறி)]

தெருவு *teruvu,* பெ. (n.) தெரு *பார்க்க;* see *teru.* "தேடுகின்றிலை தெருவுதோ றலறிலை" *(திருவாச. 5. 31).*

[தெரு → தெருவு]

தெருவுப்பாடு *teruvu-pādu,* பெ. (n.) *வீட்டின் முன்புறம்;* front portion of a house facing a street.

[தெருவு + பாடு]

தெருள்[1](ளு)-தல் *terul(lu)-,* 16 செ.கு.வி. (v.i.) *1. உணர்வுறுதல்;* to know, to gain true knowledge. "தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின் அருளாதான் செய்யும் அறம்" *(குறள், 249). 2.* *தெளிதல்;* to perceive, ascertain, understand clearly. "தெருண்ட வறிவினர்" *(நாலடி. 301). 3.* *பூப் பெய்துதல்;* to arrive at puberty as a girl. *4. புகழடைதல்;* to be renowned. *5. விளங்குதல்;* to be clear lucid. "வளமலை நாடனைத் தெருள . . . நீ யொன்று பாடித்தை" *(கலித். 43).*

தெருள்[2] *terul,* பெ. (n.) *1. திரளல்;* maturing. *2. தெளிவு;* intellectual clearness *(சா.அக.).*

[திரள் → தெருள்]

தெருள்வு *terulvu,* பெ. (n.) தெருள் *பார்க்க;* see *terul.*

[தெருள் → தெருள்வு]

தெருளல் *terulal,* பெ. (n.) *1. திரளல்;* attaining puberty. *2. தெளிவடைதல்;* having mature knowledge. *3. தெளிவு;* good understanding. தெருளாமனதுக்கு இருளே இல்லை *(பழ.). 4. திரண்டு வருதல்;* coming together as butter while churning the curd *(சா.அக.).*

[திரளல் → தெருளல்]

தெருளான் *terulān,* பெ. (n.) *அறிவிலி (அகநி.);* fool.

[தெருள் + ஆ + அன். 'ஆ' எதிர்மறை. இடைநிலை]

தெருளுடைமை *terul-udaimai,* பெ. (n.) *அறிவுடைமை;* possessing clear knowledge acuteness of discernment *(சா.அக.).*

[தெருள் + உடைமை]

தெல்[1] *tel,* பெ. (n.) தெல்லு *பார்க்க;* see *tellu* *(செ.அக.).*

தெல்[2] *tel,* பெ. (n.) *அஞ்சல்;* post.

தெல்[3] *tel,* பெ. (n.) தெல்லாட்டு *பார்க்க;* see *tellāttu.*

தெல்லடி[1]-த்தல் *tel-l-adi-,* 4 செ.கு.வி. (v.i.) *தெல் விளையாடுதல்;* to play at the game of tel.

[தெல்[1] + அடி-.]

தெல்லடி[2]-த்தல் *tel-l-adi-,* 4 செ.குன்றாவி. (v.t.) *வஞ்சனை செய்தல்;* the practice fraud. "தெல்லடித்துப் புலவரெனத் திரியலாமே" *(தமிழ்நா. 230).*

[தெல் + அடி-.]

தெல்லாட்டம் *tellāttam,* பெ. (n.) *1.* தெல்லு *பார்க்க;* see *tellu. 2. வஞ்சனை;* fraud, trick, deception.

[தெருள் + ஆட்டம் - தெருளாட்டம் → தெல்லாட்டம்]

தெல்லாட்டு *tellāttu,* பெ. (n.) *விளையாட்டு வகை;* a kind of play.

[சில் → தெல் + ஆட்டு]

கோலியும் தெல்லும் கருவி வகையாலன்றி ஆட்டு வகையால் ஏறத்தாழ ஒன்றே. கோலிக்குப் பதிலாய்த் தெல்லுக்காயைப் பயன்படுத்துவதே தெல்லாட்டு. ஆயினும், கருவி வேறுபாட்டிற்குத் தக்கபடி தெறிக்கும் வகையும் வேறுபட்டதாம். இடக்கைச் சுட்டுவிரற்கும் பெருவிரற்கும் இடையில் இடுக்குவது இருகருவிக்கும் பொதுவெனினும், வலக்கைச் சுட்டுவிரலால் தெறிப்பது கோலிக்கும், வலக்கை நடுவிரலால் தெறிப்பது தெல்லிற்கும் சிறப்பாம். சிலர் வலக்கை மோதிர விரலைத் தெல்லிற்குப் பயன்

படுத்துவர். கோலியைத் தெறிக்கும்போது வலக்கை யகங்கை முன்னோக்கி நிற்கும்; தெல்லைத் தெறிக்கும்போது அது மேனோக்கி நிற்கும்.

தெல்லி *telli,* பெ. (n.) *1. மீன்பிடித்து இடுவதற்கான சிறுகூடை;* angler's basket. *2. சிறுவயல்;* a small field.

தெல்லு *tellu,* பெ. (n.) *1.* தெல்லுக்காய்; the disc-like seed of a plant, used in a game. "தெல்லுக்கரகங் கோங்கரும்பு (உவமான சங்கிரகம், 11). *2.* விளையாட்டு வகை; a game with a small disc-like seed of a plant. *3.* வழிச்செல்லும் ஒரு நிலையில், பல்லக்குத் தூக்குபவர்கள் தோள் மாற்றும் அஞ்சலிடம் (யாழ்.அக.); stage in a journey by palanquin; place of changing palanquin-bearers. *4.* நெடும் பாத்தி; oblong plots bounded by small ridge of a field. *5.* ஒரு வகைக்கொடி; a climber. *6.* நெடுங்கிடங்கு (யாழ்.அக.); long pit.

[தெல் → தெல்லு]

தெல்லுக்கட்டு-தல் *tellu-k-kattu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* இழுபறிப்படுதல்; to be pushed this way and that, to be distracted. *2.* பாத்தி கட்டுதல்; to put up ridges, as in a field.

[தெல்லு + கட்டு-]

தெல்லுக்காய் *tellu-k-kāy,* பெ. (n.) தெல் மரத்தின் காய்; the seed of 'tel' tree. தெல்லுக்காய் தெறித்தல் பாண்டி நாட்டு விளையாட்டு.

[தெல்லு + காய்]

தெல்லுக்காரர்[1] *tellu-k-kārar,* பெ. (n.) மாற்றுச் சிவிகையாளர் (யாழ்ப்.); relay of bearers for a palanquin.

[தெல்லு + காரர்]

தெல்லுக்காரர்[2] *tellu-k-kārar,* பெ. (n.) அஞ்சற்காரர்; postman.

[தெல்லு + காரர்]

தெல்லுக்கொடி *tellu-k-kodi,* பெ. (n.) தெல்லு பார்க்க; see *tellu* (சா.அக.).

[தெல்லு + கொடி]

தெல்லுப்பு *telluppu,* பெ. (n.) வளையலுப்பு; white medicinal salt.

தெல்லோட்டு *tellōttu,* பெ. (n.) ஓய்வில்லாத அலைக்கழிப்பு; continual teasing, pressing or harassing.

[தெல் + ஓட்டு]

தெலிங்கம் *telingam,* பெ. (n.) தெலுங்கம் பார்க்க; see *telungam.* "தெலிங்கங் கலிங்கம் வங்கம்" (நன். 272, மயிலை).

[தெனுகு → தெலுகு → தெலுங்கு → தெலிங்கம்]

தெலுகு *telugu,* பெ. (n.) தெலுங்கம் பார்க்க; see *telungam* (செ.அக.).

[தெனுகு → தெலுகு]

தெலுங்கம் *telungam,* பெ. (n.) *1.* தெலுங்கு நாடு; Telugu country. *2.* தமிழியக் குடும்ப மொழிகளுள் ஒன்றான தெலுங்கு மொழி; one of the Dravidian language, the Telugu language.

[தெலுங்கு + அம்]

தெலுங்கன் *telungan,* பெ. (n.) தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவன்; Telugu man. "திகைத்து நின்றேந் தெலுங்கரேம்" (கலிங். 456).

[தெலுங்கு + அன்]

தெலுங்கு *telungu,* பெ. (n.) ஆந்திரநாட்டு மொழி; language of Andra Pradesh. கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் (மனோன்மணீயம்).

மறுவ. வடுகு, ஆந்திரம்

[தெனுகு → தெலுகு → தெலுங்கு]

தென்னிந்தியாவில், கிழக்கே கடற்கரையொட்டிப் பழவேற்காட்டிலிருந்து சிக்காக்கோல் வரைக்கும், மேற்கே மராட்டிய மைசூர்ச் சீமைகளின் கீழெல்லை வரைக்கும், 'கொடுக்கப்பட்ட கோட்டங்கள்' (ceded districts) கர்நூல், ஐதாராபாத்துச் சீமையின் பெரும்பகுதி நாகபுர நாட்டின் ஒரு பகுதி கோண்டுவனம் ஆகிய இடங்களில் பெரும்பாலும் தாய்மொழியாகப் பேசப்படுவது தெலுங்கு.

தெலுங்கிற்கு வடுகு, ஆந்திரம் என்னும் பெயர்களுண்டு. தெலுங்கு என்பது தெலுங்கராலேயே இடப்பட்டது; வடுகு

என்பது தமிழாராலும், ஆந்திரம் என்பது ஆயராலும் இடப்பட்டன.

தெலுங்கு தமிழ்நாட்டிற்கு வடக்கில் வழங்குவதால் வடுகு எனப்பட்டது. தெலுங்கு என்பதன் பண்டை வடிவம் திரிலிங்கம்.

தெலுங்கு என்னும் பெயர் தெலிங்க, தைலிங்க, தெலுகு, தெனுங்கு, தெனுகு என்னும் வடிவங்களிலும் தெலுங்கர்க்குள் வழங்கி வருகின்றது. இவற்றுள் தெனுகு என்னும் வடிவத்தைச் சிறந்ததாகக் கொண்டு அதற்குத் 'தேன் போன்றது' என்னும் பொருள் கற்பிப்பது தெலுங்குப் பண்டிதர் வழக்கம் (தி.தா. 81-82).

தெலுங்குக்கட்டு *telungu-k-kaṭṭu,* பெ. (n.) **மாம்பழக் கட்டு என்னும் புடைவையணியும் வகை;** mambaḻa-k-kaṭṭu, a mode of wearing the saree.

[தெலுங்கு + கட்டு]



தெலுங்குச்சிற்றாடை *telungu-c-ciṟṟāḍai,* பெ. (n.) தெலுங்குக்கட்டு பார்க்க; see *telungu-k-kaṭṭu.*

[தெலுங்கு + சிற்றாடை]

தெலுங்குச்செட்டி *telungu-c-ceṭṭi,* பெ. (n.) *1.* **தெலுங்கு மொழி பேசும் செட்டி இனம்;** telugu caste. *2.* **சலுப்பன்;** a trading caste speaking Telugu.

[தெலுங்கு + செட்டி]

தெவ்[1] *tev,* பெ. (n.) *1.* **பகை;** enmity, hostility. *2.* போர் (சூடா.); war, battle, fight. *3.* **பகைவன்;** opposing power, enemy. "தெவ்வடு சிலையினாய்" *(கம்பரா.பள்ளியடை. 59).*

தெவ்[2] *tev,* பெ. (n.) **கொள்ளுகை** *(பிங்.);* seizing, taking.

தெவ்வம் *tevvam,* பெ. (n.) **பகைவர்;** enemy. "திறை வழங்காத் தெவ்வம் பணியச் சென்றாலும்" *(திருக்கோ. 304).*

[தெவ் + அம் = தெவ்வம்]

தெவ்வர் *tevvar,* பெ. (n.) **பகைவர்;** enemy, foe. என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் *(குறள், 771).*

[தெவ் + அர் = தெவ்வர்]

தெவ்வர்முனைப்பதி *tevvar-muṉaippadi,* பெ. (n.) **பாசறை** *(சூடா.);* camp of an invading hostile army.

[தெவ்வர் + முனைப்பதி]

தெவ்வலை *tevvalai,* பெ. (n.) **240 அடி தொலைவு பரவக்கூடியதும் 20 பேரால் இழுக்கப்படுவதுமான வலைவகை** *(இவ.);* drag net that spreads to a distance of about 80 yards, requiring for its use 20 men, who gradually form a semi-circle and then capture fish.

[தெவ்வு + அலை]

தெவ்வன் *tevvaṉ,* பெ. (n.) **பகைவன்;** foe, enemy. "தெளிதல் செல்லாத் தெவ்வன்" *(பெருங். மகத. 14, 28).*

[தெவ்[1] + அன். 'அன்' - ஆண்பாலீறு]

தெவ்வினை *tev-viṉai,* பெ. (n.) **போர்** *(யாழ்.அக.);* war, battle.

[தெவ்[1] + வினை]

தெவ்வு[1]-தல் *tevvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* **கொள்ளுதல்** *(பிங்.);* to get, take, obtain. "நீர் தெவ்வுநிரைத் தொழுவர்" *(மதுரைக். 89).* *2.* **கவர்தல்;** to seize, grasp, steal. "கடவுளரைத் தெவ்வினீரேற் பொருந்தவவர் தமைக் கொடுமின்" *(விநாயகபு. 80, 131).* *3.* **நிறைத்தல்;** to fill. "பாடற்பயத்தாற் கிளர்செவி தெவி" *(பரிபா. 11, 69).* *4.* **மன்றாடிக்கேட்டல்;** to beg hard, importune. "அந்தச் செயலுக்குத் தெவ்வுகிறான்" *(தஞ்சை.).*

[தெவு → தெவ்வு]

தெவ்வு[2] *tevvu,* பெ. (n.) தெவ்[1] பார்க்க; see *tev[1].* "தெவ்வுப் பகையாகும்" *(தொல். உரி. 48).*

ம. தெவ்வு

[தெவ் → தெவ்வு]

தெவ்வு[3] *tevvu,* பெ. (n.) தெவ்[2] பார்க்க; see *tev.*

தெவ்வு[4] *tevvu,* பெ. (n.) நிலா; moon.

தெவ்வூன்றி *tevvūnri,* பெ. (n.) கருங்கோள்; moon ascending node.

[தெவ்வு + ஊன்றி]

தெவ்வேந்தர் *tev-vēndar,* பெ. (n.) பகையரசர்; enemy king. "செங்கோல னெங்கோன் கொடுந்தொழிலாற் றெவ்வேந்தர்" (வீரசோ. 157, உரை).

தெவம் *tevam,* பெ. (n.) மாமரம் (மூ.அக); mango tree.

தெவிட்டல் *tevittal,* பெ. (n.) உமிழப்பட்டது; that which is spit or vomitted. "வால் வெண் டெவிட்டல்" (அகநா. 224).

[தெவிட்டு → தெவிட்டல்]

தெவிட்டாதவமிழ்தரசம் *tevittāda-amilda-rasam,* பெ. (n.) சத்தியுப்பு பார்க்க; see *satti-uppu.*

தெவிட்டு[1]**-தல்** *tevittu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தேக்கிடுதல்; to be sated or satiated fully. தெவிட்டாக்கனி பிள்ளை, தெவிட்டாப் பருகம் தண்ணீர் (பழ.).

[திகட்டு → தெவிட்டு]

தெவிட்டு[2]**-தல்** *tevittu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. தேக்கிடுதல்; to be sated, glutted as the stomach, to be cloyed. "தெவிட்டி விடுகிறேனோ" (ஈடு. 2, 6, 5). 2. அசையிடுதல்; to chew the cud. "வன்கலை தெவிட்டும்" (புறநா. 161). 3. உமிழ்தல்; to spit. 4. நினைத்தல்; to think. 5. வாயா லெடுத்தல் (வாந்தித்தல்); to vomit, loathe. 6. திரளுதல்; to gather in a crowd. "மான்கண மரமுதற் றெவிட்ட" (குறிஞ்சிப். 217). 7. தங்குதல் (திவா.); to abide, stay, remain. 8. ஒலித்தல்; to make noise. "வரிநுணல் கறங்கத் தேரை தெவிட்ட" (ஐங்குறு. 468). 9. நிறைதல் (சூடா.); to become full. "செஞ்சுடர் வெள்ளந் திசை தெவிட்ட" (திருவாச. 3, 77).

க. தேகட்டு

தெவு *tevu,* பெ. (n.) கொள்ளுகை; taking, receiving. "தெவுக் கொளற் பொருட்டே" (தொல்.சொல். உரி. 47).

[தெவ்வு → தெவு]

தெவுட்டு-தல் *tevuttu-,* 5 செ.கு.வி. (v.i.) தெவிட்டு-தல் பார்க்க; see *tevittu-.*

[தெவிட்டு → தெவுட்டு]

தெவுள்(ளு)-தல் *tevul(lu)-,* 2 செ.கு.வி. (v.i.) 1. நிறைதல் (அக.நி.); to become full, filled. 2. திரளுதல்; to overflow, increase.

தெழ்கு *telgu,* பெ. (n.) இடையிலணியும் அணிகலன் வகை; a kind of waist-ornament. "இடை விரவிக் கோத்த வெழிற் றெழ்கி னோடும்" (திவ்.பெரியாழ். 1, 32).

தெ. தேகா

[தெழி[4] → தெழ்கு]

தெழி[1]**-த்தல்** *teli-,* 4 செ.குன்றாவி. (v.t.) மிதித் துழக்குதல்; to thresh. "நெற்போர் தெழிக்கும் பகட்டிளங் காளை" (நன். 101. உரை.).

தெழி[2]**-த்தல்** *teli-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. அதட்டுதல்; to drive or control by shouting; to bluster, utter threats. "பகடு தெழி தெள்விளி" (அகநா. 17). 2. முழக்குதல்; to sound forth, cause to sound, as a drum. "செங்கண்மா றெழிக்கப் பட்ட வலம்புரி" (சீவக. 811). 3. அடக்குதல்; to subdue, suppress. "பஞ்சேந்தியக் குஞ்சரமுந் தெழித்தேன்" (பதினொ. பொன்வண். 23). 4. பிரித்தல்; to separate. "ஒய்யெனத் தெழித்தாங்கு" (சிலப். 15:48, உரை). 5. வருந்துதல்; to trouble, distress. "உலகு தெழித்துழலு மாக்கள் கோமான்" (தேவா. 133, 8).

தெழி[3]**-த்தல்** *teli-,* 4 செ.கு.வி. (v.i.) ஒலித்தல்; to sound, resound, roar. "தெழிக்கும் புறங் காட்டிடை" (தேவா. 462, 4).

தெழி[4] *teli,* பெ. (n.) ஒலி; sound, noise. "வெண்ணெய்த் தெழிகேட்கும்" (கலித். 108:35).

தெழித்தல் *telittal,* பெ. (n.) ஆரவாரம்; uproar, tumult.

தெழிப்பு *telippu,* பெ. (n.) ஆரவாரம்; sound, noise, bluster, noisy rage. "இடித்தவான் தெழிப்பினால்" (கம்பரா. கும்பகர்ண. 279).

தெள்[1] *tel,* பெ. (n.) தெள்ளுப்பூச்சி; a jumping insect, flea.

தெள்[2]**-தல் (தெட்டல்)** *tel-,* 9 செ.கு.வி. (v.i.) தெளிதல்; to become clear, clear-minded.

தெள்கு¹-தல் *teḷgu-*, 5 செ.கு.வி. (v.i.) *1.* தெளிவாதல் *(யாழ்ப்.)*; to become clear. *2.* தேங்குதல்; to be overcrowded, overfull. *"திரைநீர்த் தெள்கி" (திவ்.பெரியதி. 3,4,7).*

[தெள்ளு → தெள்கு]

தெள்கு² *teḷgu*, பெ. (n.) தெள்¹ பார்க்க; see *teḷ*. *சிறிய தெள்கு துள்ளிக் குடைவார்க்குப் பறவை கற்பிப்பதென (அரிச்.பு. பாயி. 12).*

[தெள் → தெள்கு]

தெள்விளி *teḷ-viḷi*, பெ. (n.) *1.* தெளிந்தவோசை; clear sound or tone. *"கோவலராம் பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற" (குறிஞ்சிப். 222).* *2.* தெளிந்த சொல்; clear, distinct utterance or word. *"வள்ளுயிர்த் தெள்விளி யிடையிடை பயிற்றி" (குறிஞ்சிப். 100).* *3.* கூவி வெருட்டும் ஓசை; ringing shout, as in scaring birds. *"கிள்ளைத் தெள்விளி யிடையிடை பயிற்றி" (அகநா. 28).* *4.* இசைப் பாட்டு; musical song. *"நரம்புரி தெள்விளி நான்மறை நெறியவர்" (சீவக. 661).*

[தெள் + விளி]

தெள்ளச்சி *teḷḷacci*, பெ. (n.) *1.* பூநீறு *(வின்.)*; a medicinal powder. *2.* உவர் மண்; fullers earth. *(இ.வ.) (செ. அக.).*

[தெள்ளு → தெள்ளச்சி]

தெள்ளத்தெளி-தல் *teḷḷa-t-teḷi-*, 3 செ.கு.வி. (v.i.) நன்றாய்த் தெளிதல்; to be free completely from obscurity.

[தெள்ள + தெளி]

தெள்ளி¹ *teḷḷi*, பெ. (n.) வெயிலில் காய்ந்த ஒரு கூடையளவுக் கருவாடு *(மீனவ.)*; basket full of dry-fish.

[தெள் → தெள்ளி]

தெள்ளி² *teḷḷi*, பெ. (n.) யானை *(அக.நி.)*; elephant.

தெள்ளிச்சி *teḷḷicci*, பெ. (n.) தெள்ளச்சி பார்க்க; see *teḷḷacci*.

[தெள்ளச்சி → தெள்ளிச்சி]

தெள்ளிப்போடு-தல் *teḷḷi-p-pōḍu-*, 19 செ.குன்றாவி. (v.t.) *1.* கொழித்துப் போடுதல்; to separate large from small pieces as with a fan. *2.* மருந்துப் பொடியைச் சன்னத் தூளாகவே பிரித்துப் போடல்; to separate the fine powdered portion of medicine from the crushed portion *(சா. அக.).*

பட. தெள்ளு

[தெள்ளி + போடு-.]

தெள்ளிமை *teḷḷimai*, பெ. (n.) *1.* தெளிவு; clearness, obviousness, perspicuity. *2.* அறிவு நுட்பம்; intelligence, sagacity, penetration, cleverness. *சொன்னதென்ன தெள்ளிமைபோ (விறலிவிடு.)*

[தெளிமை → தெள்ளிமை]

தெள்ளிய *teḷḷiya*, வி.எ. (adv.) தெளிவான; clearly.

[தெள் → தெள்ளிய]

தெள்ளியசிங்கப்பெருமாள் *teḷḷiya-śiṅga-p-perumāḷ*, பெ. (n.) சென்னை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலில் எழுந்தருளியுள்ள இறைவன்; God in Chennai, Tiruvalli-k-kēṇi Parthasarathy temple.

[தெள்ளிய + சிங்கம் + பெருமாள்]

இத்திருக்கோயிலைத் துளசிங்கப் பெருமாள் கோயில் என்றழைப்பது கொச்சை வழக்கு.

தெள்ளியர் *teḷḷiyar*, பெ. (n.) தெளிந்த அறிவினர்; the learned, the wise, as persons of clear understanding. *"திருவேறு தெள்ளிய ராதலும் வேறு" (குறள், 374).*

[தெள் → தெள்ளியர்]

தெள்ளு¹-தல் *teḷḷu-*, 5 செ.கு.வி. (v.i.) *1.* தெளிவாதல்; to be clear, lucid, pure, refined as language; to shine clearly; to gleam. *"தெள்ளுங் கழலுக்கே" (திருவாச. 10, 19).* *2.* அறிவு முதிர்தல்; to be mature in knowledge or experience.

[தெள் → தெள்ளு]

தெள்ளு²-தல் *teḷḷu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *1.* ஆராய்தல்; to examine, sift. *"தெள்ளியறிந்த விடத்து மறியாராம்" (நாலடி, 380).* *2.* கொழித்தல்; to sift, as grain. *எள்ளைத் தெள்ளி உண்.* *3.* புடைத்தல்; to sift gently in a winnowing fan. *இடித்த சோளத்தைத் தெள்ளிக் கொடு.* *4.* அலைகொழித்தல்; to waft, as the sea; to

cast upon the shore. "கரி மருப்புத் தெள்ளி நறைந் திசை திசை பாயும்" (திருக்கோ. 128).

[தெள் → தெள்ளு]

தெள்ளு[3] *tellu*, பெ. (n.) தெள்[1] பார்க்க; see *tel* (சா.அக.).

[தெல்லு → தெள்ளு]

தெள்ளுக்கடி *tellu-k-kadi*, பெ. (n.) தெள்ளுப் பூச்சிக் கடி; flea bite (சா.அக.).

[தெள்ளு + கடி]

தெள்ளுக்காய் *tellu-k-kāy*, பெ. (n.) பெருந் தெள்ளுக்காய்; scimitar pod (சா.அக.).

[தெள்ளு + காய்]

தெள்ளுக்காய்ச்செடி *tellu-k-kāy-c-cedi*, பெ. (n.) பெரிய தெள்ளுக்காய்ச் செடி; negro bean co-witch (சா.அக.).

இது இரண்டாண்டிற்கொருமுறை முளைக்கும் பூடு; இலைகள் அகன்ற வடிவு. காம்பு நீளம், காய் வளைவு, முக முகப்பாயிருக்கும், ஒரே விதை. குண்டிக்காய் வடிவம். பூக்கள் பெரிதாயும் ஊதா நிறமாயிருக்கும். விதையைத் தின்னலாம்.

[தெள்ளு + காய் + செடி]

தெள்ளுதமிழ் *tellu-tamil*, பெ. (n.) செந்தமிழ்; pure Tamil.

[தெள் → தெள்ளு + தமிழ்]

தெள்ளுப்பு *telluppu*, பெ. (n.) வளையலுப்பு; white medicinal salt.

[தெள் + உப்பு]

தெள்ளுப்பூச்சி *tellu-p-pūcci*, பெ. (n.) தெள்[1] பார்க்க; see *tel*.

[தெள்ளு + பூச்சி]



தெள்ளுள்ளி *telluḷḷi*, பெ. (n.) வெள்ளுள்ளி; garlic (சா.அக.).

[வெண்மை + உள்ளி – வெள்ளுள்ளி → தெள்ளுள்ளி]

பூண்டு வெண்மையாயிருத்தலாலும், உள்ளி வகையைச் சார்ந்ததாதலாலும் இவ்வாறு அழைக்கப்பட்டுப் பின் திரிந்திருக்கலாம்.

தெள்ளேணம் *tellēṇam*, பெ. (n.) கை கொட்டிப் பாடியாடும் மகளிர் விளையாட்டு வகை; a girls' play accompained by singing and clapping of hands. "நாம் தெள்ளேணங் கொட்டாமோ" (திருவாச. 11.1).

தெளி[1]**-தல்** *teli-*, 3 செ.குன்றாவி. (v.i.) *1.* கசடு நீக்கித் தெளிவுறல்; to clear from a sediment. *2.* நோயினின்று குணமடைதல்; to recover from illness. *3.* மூர்ச்சை தெளிதல்; to regain consciousness. *4.* ஒன்றையே சிந்தித்தல்; to ponder, ruminate on only one thing. *5.* துளைத்தல்; to pierce, perforate. *6.* தானே அறிதல்; to know or experience one self.

ம. தெளியுக; க. திளி; தெ. தெலி; து. தெலியுனி

தெளி[2]**-தல்** *teli-*, 3 செ.குவி. (v.i.) *1.* தெளிவாதல்; to become clear, limpid, transparent, as water by the settling of sediment. *2.* அமைதியுறுதல்; to become serene, as the mind. "தெளியா நோக்க முள்ளினை" (அகநா. 33). *3.* ஒளிர்தல்; to be bright, as the countenance. *4.* வெண்மையாதல்; to become white, as cloths by washing. *5.* ஒழிதல்; to clear away, disappear, as famine, as an epidemic. 'வற்கடந் தெளிந்தது'. *6.* ஐயநீங்குதல்; to clear up, as doubt; to become evident, obvious, as the meaning of a passage. பேராசிரியரின் விளக்கம் கேட்டபின் தெளிந்தது. *7.* முடிவுக்கு வருதல்; to come to a conclusion. *8.* குணப்படுதல்; to be cured, as disease. "நோய் தெளிந்துவிட்டது". *9.* செழித்தல்; to grow stout, fat, sleek, as persons or animals; to thrive, as vegetation. 'ஆள் இப்போது தெளிந்திருக்கிறான்'. *10.* மேல்வரும்படி காணுதல்; to turn out, as clear profit; to accrue, as gain; to be a clear gain after allowing for all expenses.

தெளி[3]**-தல்** *teli-*, 2 செ.குன்றாவி. (v.t.) *1.* ஆராய்தல்; to consider, investigate. *2.* அறிதல்; to know, understand, perceive,

experience. "பிரியலேந் தெளிமே" (குறுந். 273). 3. நம்புதல்; to trust, confide in. "தெளியாதான் கூரையுட் பல்காலுஞ் சேறலும்" (திரிகடு. 11). 4. துளைத்தல் (வின்.); to pierce, perforate.

[தெள் → தெளி]

ஆராய்ச்சியால் ஐயம் நீங்கித் தெளிவு பிறக்கும். அதன்பின் தெளியப்பட்டதன் மீது நம்பிக்கையுண்டாகும். அதனால் ஒரு வினை முயற்சிக்கு உறுதியான தீர்மானஞ் செய்யப் பெறும்.

தெளி[4]-த்தல் *teḷi-*, 2 செ.குன்றாவி. (v.t.) 1. துப்புரவாக்குதல்; to clear, free, as from turbid or feculent matter; to clarify, refine, clean. 2. தெளிவித்தல்; to make known, affirm clearly, cause to believe. "தெளித்தசொற் றேறியார்க் குண்டோ தவறு" (குறள், 1154). 3. ஊடலுணர்த்துதல்; to pacify, make up, as a love-quarrel. "பரிந்தோட் குறுகி யிரத்தலுந் தெளித்தலும்" (தொல். பொருள். 41). 4. வெளிப்படுத்துதல்; to make, manifest, reveal. 5. உறுதி செய்தல் (யாழ். அக.); to determine. 6. தூவுதல்; to strew scatter, sprinkle, as water. "நறுவிரை தெளித்த நாறிணர்மாலை" (அகநா. 126). 7. விதைத்தல்; to sow, as seed. 8. கொழித்தல் (வின்.); to cast up in sifting, as sand, as pearls. 9. புடைத்தல் (வின்.); to winnow, separate large from small particles by a fan. 10. சாறுவடித்தல்; to extract the essence. "திருக் கொண் மாங்கனி தெளித்த தேறலின்" (சீவக. 2402). 11. உருக்கியோட வைத்தல்; to melt, as in refining gold. "தெளித்த செம்பொற் சுண்ணம்" (சீவக. 1956). 12. நீக்குதல்; to dispel, as fear, sorrow, delirium.

[துளித்தல் = துளி விழுதல் (தன்வினை); துளிகளைச் சிந்துதல், தெளித்தல், தெறித்தல், இறைத்தல், சிந்துதல் (பிற வினை.). துளி → தெளி. தெளித்தல் = துளி துளியாய்ச் சிந்துதல், மலர், அரிசி முதலியவற்றைச் சிற்றளவாய்த் தூவுதல் (மு.தா. 52)]

தெளி[5]-த்தல் *teḷi-*, 3 செ.கு.வி. (v.i.) சூளுறுதல்; to take an oath. "தீதிலேமென்று தெளிப்பவும்" (கலித். 81, 33).

தெளி[6] *teḷi*, பெ. (n.) 1. தெளிவு; clearness. "தெளி கொண்ட வெங்கள்" (பு.வெ. 1. 15). 2. சாறு; juice, essence. "கரும்பின் தெளி" (தேவா. 280). 3. ஒளி; light. "தெளிவளர் வான்சிலை" (திருக்கோ. 16, உரை).

தெளி[7] *teḷi*, பெ. (n.) விதைப்பு; sowing, as of seeds in a field. "நடவுக்குத் தெளி நாலத் தொன்று" (தஞ்சை.).



தெளி[8] *teḷi*, பெ. (n.) புல்லூரி; a parasitic plant (சா. அக.).

தெளிச்சல் *teḷiccal*, பெ. (n.) உடலின் பூரிப்பு; healthy appearance, plumpness. 'வேலையான பிறகு அவனுக்கு உடலில் தெளிச்சல் காணுகிறது' (நாஞ்.).

[தெளி → தெளிச்சல்]

தெளிஞன் *teḷiñaṉ*, பெ. (n.) அறிஞன் (வின்.); learned, wise man, sage (செ.அக.).

[தெளி → தெளிஞன்]

தெளித்துவார்-த்தல் *teḷittu-vār-*, 4 செ.குன்றாவி. (v.t.) தெளிந்ததை ஒன்றினின்று மற்றொன்றில் ஊற்றுதல்; to pour off gently from one vessel to another, to decant (சா. அக.).

[தெளித்து + வார்-]

தெளிதேன் *teḷitēṉ*, பெ. (n.) தூயதேன்; pure honey. "பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்" (ஔவையார்).

தெளிந்தகுரல் *teḷinda-kural*, பெ. (n.) அடைப்பில்லாத குரலொலி; clear voice (சா. அக.).

[தெளி + குரல்]

தெளிந்தநீர் *telinda-nīr,* பெ. (n.) 1. முட்டை நீர்; albumen. 2. மழைநீர்; rain water. 3. தெளி நீர்; clear water. 4. பனிக்குடத்து நீர்; amniotic fluid (சா. அக.).

[தெளி + நீர்]

தெளிந்தபுத்தி *telinda-putti,* பெ. (n.) தெளிந்தவறிவு பார்க்க; see *telinda-v-arivu.*

[தெளிந்த + புத்தி]

Skt. buddhi → த. புத்தி

தெளிந்தவலை *telinda-valai,* பெ. (n.) பெரும் வலைக் கண்களுடைய மீன்பிடி வலை; a fishing net with large holes.

தெளிந்தவறிவு *telinda-v-arivu,* பெ. (n.) பகுத்தறிவு, நுண்ணறிவு; mature understanding, clear intellect, discernment, profound wisdom.

[தெளிந்த + அறிவு]

தெளிந்துகொடு-த்தல் *telindu-kodu-,* 4 செ.கு.வி. (v.i.) சூளுரைத்தலால் ஐயம் நீக்குதல்; to remove doubt, as by an oath.

[தெளிந்து + கொடு-]

தெளிந்துவரு-தல் *telindu-varu-,* 3 செ.கு.வி. (v.i.) 1. நோய் குணமடைதல்; to progress from illness showing improvment. 2. நீர் தெளிவாகுதல்; to become clear as water. 3. மயக்கந்தெளிதல்; to recover gradually from giddiness (சா.அக.).

[தெளிந்து + வரு-]

தெளிநீர்[1] *teli-nīr,* பெ. (n.) 1. தெளிவடைந்த நீர்; cleared liquid or water. 2. தூயநீர்; pure water. 3. பனி நீர்; dew water. 4. வாலை நீர்; distilled water (சா. அக.).

[தெளி + நீர்]

தெளிநீர்[2] *teli-nīr,* பெ. (n.) ஒரு பண்டத்தைக் கரைத்துத் தெளிய வைத்து வடித்த நீர்; clear solution.

[தெளி + நீர்]

தெளிப்பு *telippu,* பெ. (n.) 1. தூய்மை செய்கை; clearing, clarification, refinement, purification. 2. கொழிக்கை; separating grains on a winnowing fan. 3. வடிக்கை; straining off; decanting. 4. தூவுகை; sprinkling, scattering, strewing. 5. விதைப்பு; sowing of seeds.

[தெளி → தெளிப்பு]

தெளிப்புத்திரவம் *telippu-t-tiravam,* பெ. (n.) தெளிப்புநீர்மம் பார்க்க; see *telippu-nīrmam.*

[தெளிப்பு + திரவம்]

Skt. drava → த. திரவம்

தெளிப்புநீர்ப்பாசனம் *telippu-nīr-p-pāšanam,* பெ. (n.) குழாய் மூலம் வரும் நீரைப் பீய்ச்சி அடிக்கும் கருவி மூலம் சிதறச் செய்து பயிரின் அடிப்பகுதி நனையும்படிச் செய்யும் பாசனமுறை; sprinkling irrigation.



தெளிப்புநீர்மம் *telippu-nīrmam,* பெ. (n.) எண்ணெய்கள், துப்புரவு நீர்மங்கள், வண்ணங்கள் உட்பட மெருகேற்றுவதற்குப் பயன்படும் நீர்மப்பொருள்கள்; spraying liquid.

[தெளிப்பு + நீர்மம்]

தெளிமணி *teli-mani,* பெ. (n.) தூமணி (யாழ்.அக.); a gem of purest ray.

[தெளி + மணி]

தெளிய *teliya,* வி.எ. (adv.) தெளிவாக; clearly, distinctly, evidently, obviously.

[தெளி + தெளிய]

தெளியக்கடை-தல் *teliya-k-kadai-,* 2 செ.குன்றாவி. (v.t.) சிக்கனமாயிருத்தல்; to thrift.

[தெளிய + கடை-]

தெளியக்காண்-த(ட)ல் *teliya-k-kān-,* 3 செ.குன்றாவி. (v.t.) 1. விளக்கமாய்ப் பார்த்தல்;

to see distinctly and clearly. *2. ஐயமற அறிதல்;* to know or understand without any doubt. *3. முற்றுமுணர்தல்;* to have complete knowledge of a thing. *4. அறிவு தெளிவானதால் காணும் காட்சி;* to have divine vision through intellectual advancement *(சா.அக.).*

[தெளிய + காண்]

தெளியவயம் *teḷiyavayam,* பெ. (n.) *அனைத்துக் கரைப்பான் (சர்வத் திராவகம்);* universal solvent *(சா.அக.).*

தெளிவாஞ்சேறு *teḷivāñjēṟu,* பெ. (n.) *கடலடிச் சேற்றில் ஒரு வகை;* kind of mud lie under the sea *(மீனவ.).*

தெளிவி-த்தல் *teḷivi-,* 4 செ.குன்றாவி. (v.t.) *1. அறிவித்தல்;* to announce. *2. தெரியப் பண்ணுதல்;* to make one to understand. *3. விளக்குதல்;* to explain.

[தெளி → தெளிவி. 'வி' பிறவினையீறு]

தெளிவு *teḷivu,* பெ. (n.) *வலையின் கண்கள் சுருங்கி விடாமல் விரிந்து இருத்தல்;* eye of the net in a expand condition.

தெளியவை-த்தல் *teḷiya-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) *தெளியும்படி அசையாமலிருக்கச் செய்தல்;* to set or allow to settle without disturbing, to become free from dregs by their sinking to the bottom. *2. ஐயம் தெளியும்படிச் செய்தல்;* to change from a disturbed or troubled condition of mind to one of tranquility by clearing all doubts *(சா.அக.).*

[தெளிய + வை-.]

தெளியாநோக்கம் *teḷiyā-nōkkam,* பெ. (n.) *வெருவின பார்வை;* timid look. "மழைக்கண் டெளியா நோக்க முள்ளினை" *(அகநா. 33).*

[தெளி + ஆ + நோக்கம். 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தெளியாப்பிணி *teḷiyā-p-piṇi,* பெ. (n.) *தீராத நோய்;* incurable disease *(செ.அக.).*

[தெளி + ஆ + பிணி. 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தெளிர்[1]-தல் *teḷir-,* 2 செ.கு.வி. (v.i.) *ஒளி பெறுதல்;* to shine, sparkle. "வண்ணந் தெளிர" *(பரிபா. 10, 55).*

தெளிர்[2]-த்தல் *teḷir-,* 2 செ.கு.வி. (v.i.) *1. ஒலித்தல்;* to sound, articulate. "இலங்குவளை தெளிர்ப்ப வலவை னாட்டி" *(ஐங்குறு. 197).* *2. செழித்தல்;* to be fertile. "வறந்த ஞாலந் தெளிர்ப்ப வீசி" *(ஐங்குறு.452).* *3. மகிழ்ச்சியுறுதல்;* to be happy. "சேயிழை தெளிர்ப்பக் கவைஇ" *(அகநா. 51).*

தெளிர்[3] *teḷir,* பெ. (n.) *யாழின் உள்ளோசை (திவா.);* vibrating sound of a lute.

தெளிர்தல்[4] *teḷir-,* பெ. (n.) *1. பேசுவதால் எழும்பும் ஒலி;* sound raised by speaking. *2. பொருந்துதல்;* become fit.

தெளிரல் *teḷiral,* பெ. (n.) *எடுத்தலோசை (பிங்.);* loud sound, high pitch.

தெளிவருடம் *teḷi-varuḍam,* பெ. (n.) *இலவங்கப் பத்திரி;* leaf of wild cinnamon or cinnamon leaf *(சா.அக.).*

தெளிவாக்கு-தல் *teḷivākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) *தூயதாக்குதல்;* to purify from feculant matter, to clarify, to make clear.

[தெளிவு + ஆக்கு-.]

தெளிவாள் *teḷivāḷ,* பெ. (n.) *கூர்வாள்;* sharp sword. "இவ் வவிவேகத்தை யறுக்கைக்குத் தெளிவாளாயிருப்பது ஏற்றச் சுருக்கமறத் தன்ன ளவிலுண்டான தெளிவு" *(ரஹஸ்ய. 602).*

[தெளி + வாள்]

தெளிவி-த்தல் *teḷivi-,* 4 செ.குன்றாவி. (v.t.) *அமைதி(சாந்த)ப்படுத்துதல்;* to calm down. "பகவானோடு எதிரம்பு கோத்த உருத்திரனை ப்ரஹ்மா தெளிவித்து விலக்க" *(ரஹஸ்ய. 609).*

தெளிவில்புகழ்ச்சி *teḷivil-pugaḻcci,* பெ. (n.) *பழிப்பது போல் புகழ்வதாகிய அணி;* a figure of speech, in which there is apparent censure, but veiled praise. "பழிமொழி மொழிந்து பல்புகழ் விளக்குதல் தெளிவில் புகழ்ச்சி யென்மனார் புலவர்" *(வீரசோ. அலங். 14, உரை).*

[தெளிவு' + இல் + புகழ்ச்சி]

தெளிவிறு-த்தல் *teḷiviṟu-, 4. செ. குன்றாவி.* (v.t.) *1. தெளிந்த நீரை வண்டலினின்று வடித்துக் கொள்ளுதல்;* to filter or separate clear water from the sediment. *2. பொருள் கரைந்த நீரைக் கரையாத ஏனத்தினின்றுப் பிரித்தல்;* to separate the solution from the precipitate. *3. பூண்டெரித்த சாம்பலைத் தண்ணீரிலிட்டுக் கரைத்துப் பின் கரைந்திருக்கும் காரவுப்பை வண்டலினின்று வடித்து வாங்கல்;* to extract alkaline salts, such as potash, soda, etc. from the ashes, derived by burning plants; to separate soluble from the insoluble matter and drawing off the solution - lixivriation. *4. கரையாத பொருளைப் பொடி செய்து தண்ணீரிலிட்டு வைத்திருந்து அடியில் நின்றது போக எஞ்சியதைக் கலங்காமற் இறுத்துக் கொள்ளல்;* to purify by wasting or cleansing as ores by diffusing insoluable powder in water and allowing the heavy part to settle and the decanting the supernatant fluid *(சா.அக.).*

[தெளிவு + இறு]

தெளிவு[1] *teḷivu, பெ.* (n.) *1. துலக்கம்;* clarity, transparency, limpidness. *2. ஒளி;* bright, brilliance, as of a gem, pearl etc. *3. பொருள் வெளிப்படப் புலப்படுதலாகிய செய்யுட் குணம்;* perspicuity, clearness, as a merit of poetic composition. *"தெளிவெனப்படுவது பொருள் புலப்பாடே" (தண்டி. 16). 4. உடற் செழிப்பு (கொ.வ.);* plumpness, sleekness. *5. சாறு;* juice, essence. *"கரும்பின் றெளிவே" (திருவாச. 5, 55). 6. பதநீர் (கோவை.);* sweet toddy. *7. கஞ்சித்தெளிவு பார்க்க;* see *kañji-t-teḷivu; 8. அறிவு (பிங்.);* knowledge, wisdom. *"வலிதாயந் தேனியன்ற நறுமாமலர் கொண்டு நின்றேத்தத் தெளிவாமே" (தேவா. 1114, 6). 9. நனவு (திவா.);* conscious, waking state. *10. மனத்தெளிவு (திவா.);* clarity of mental vision. *11. ஆராய்ந்து கொண்ட முடிவு;* conclusion, decision reached after full deliberation. *"தெளிவிலதனைத் தொடங்கார்" (குறள். 464). 12. நம்பிக்கை;* confidence. *"தெளிவிலார் நட்பிற் பகை நன்று" (நாலடி. 219). 13. மனவமைதி;* placidity, tranquillity, serenity of mind. *14. நற்காட்சி;* clear vision of truth. *"அறத்துளார்க்கெல்லா மினியாராத விதுதெளிவே" (சீவக. 2876). 15. உளக் குறிப்பு (பிங்.);* thought, meaning, intention. *16. நீக்கம் (வின்.);* clearing, passing away, as of clouds, darkness, fear, sleep, etc. *17. செலவு போக உள்ள மேல்வரும்படி (வின்.);* net profit, profit or gain after deducting expenses and waste. *18. ஏது;* evidence, proof. *"தக்க தெளிவில்லாததால் வழக்கு தள்ளுபடி யாயிற்று" (நாஞ்.)*

ம. தெளிவு; க. திளிவு; தெ. தெலுபு, தெலிவி; து. திருவளிகெ.

தெளிவு[2] *teḷivu, பெ.* (n.) *1. தேர்ந்த அறிவு;* mature knowledge. *2. துணிவு;* fearlessness, intrepedity. *3. தூய்மை;* clearness, perspicuity. *4. தெளிந்த நீர்ப்பகுதி;* clear portion of liquid as distinguished from precipitated portion *(சா.அக.).*

[தெளி → தெளிவு]

தெளிவு[3] *teḷivu, பெ.* (n.) *பாடற்பயன்வகை (சிலப். 3;16. உரை);* one of pāḍarpayaṉ *(செ.அக.).*

தெளிவு[4] *teḷivu, பெ.* (n.) *பதநீர்; புளிப்பேறாத படி சுண்ணாம்பிட்ட கலயத்துள்ளிறக்கிய இனிப்புக் கள்;* sweet toddy drawn in a pot lined with lime to prevent fermentation.

[தெல் → தெள் → தெளி → தெளிவு]

தெளிவுகொடு[1]-த்தல் *teḷivu-koḍu-, 4 செ.குவி.* (v.i.) *1. நோயினின்று குணப்படும் குறியைக் காட்டல்;* to exhibit improvement in health by showing symptoms of recovery as from disease. *2. சாவுக்கு முன் முகத்தில் ஒருவகை ஒளி (பிரகாசம்) காணப்படுதல்;* to be seen a kind of brightness in face even before the death.

[தெளிவு + கொடு-.]

தெளிவுகொடு[2]-த்தல் *teḷivu-koḍu-, 4 செ.குவி.* (v.i.) *உணர்வு வரப்பண்ணுதல்;* to make one's consciousness.

[தெளிவு + கொடு-.]

தெளிவுசூடு *teḷivu-śūḍu, பெ.* (n.) *தேறுசூடு பார்க்க;* see *tēṟu-śūḍu.*

[தெளிவு + சூடு]

தெளிவுத்தண்ணீர் *teḷivu-t-taṇṇīr,* பெ. (n.) *கடலில் நீர் அலையின்றியிருத்தல்;* clear water in sea.

> *அப்பொழுது முத்துக் குளிக்கக் கடலில் இறங்கமாட்டார்கள். காரணம் திருக்கை, சுறா போன்றவை மக்களைக் கடித்துத் துன்பம் விளைவிக்கும். (மீனவ.)*

[தெளிவு + தண்ணீர்]

தெளிவுப்பருவை *teḷivu-p-paruvai,* பெ. (n.) **தெளிந்த நீர்ப்பரப்பில் மேயும் மீன் கூட்டம்** *(மீனவ.);* fishes which swim in the clear water.

[தெளிவு + பருவை]

தெளிவுமீன் *teḷivu-mīṉ,* பெ. (n.) **தெளிந்த நீர்ப்பரப்பில் மேயும் மீன்;** fish which swims in the clear water.

[தெளிவு + மீன்]

தெளிவுவாங்கு-தல் *teḷivu-vāṅgu-,* 5 செ.குன்றாவி. (v.i.) **தெளிவிறு-த்தல்** *பார்க்க;* see *teḷiviṟu-* *(சா.அக.).*

[தெளிவு + வாங்கு-.]

தெளிவுரை *teḷivurai,* பெ. (n.) *1.* **தெளிவான பேச்சு;** clear speech. *2.* **பாட்டுக்கெழுதும் உரை வகையுளொன்று;** a kind of commentary for poem.

[தெளிவு + உரை]

தெளிவுறை *teḷivuṟai,* பெ. (n.) *1.* **நோயைக் குணமாக்கும் மருந்து;** medicines tending to cure disease, curative. *2.* **அறிவை வளர்க்கும் மருந்து;** medicine improving the intellect as phosphates, etc. or clearness of understanding *(சா.அக.).*

[தெளிவு + உரை]

தெளிவெண்ணெய்[1] *teḷiveṇṇai,* பெ. (n.) *1.* **கசடு நீக்கிய எண்ணெய்;** oil free from sediment. *2.* **தூய எண்ணெய்;** pure clear oil. *3.* **நறுவேப்பெண்ணெய்;** a kind of dark margosa oil. *4.* **நெய்;** ghee *(சா.அக.).*

[தெளிவு + எண்ணெய்]

தெளிவெண்ணெய்[2] *teḷiveṇṇai,* பெ. (n.) **தூய வெண்ணெய்;** pure butter.

[தெளிவு + வெண்ணெய்]

தெளு *teḷu,* பெ. (n.) *கஞ்சித்தெளிவு;* water strained from rice after it is well cooked.

[தெளிவு → தெளுவு → தெளு]

தெளுவு *teḷuvu,* பெ. (n.) **தெளிவு** *பார்க்க;* see *teḷivu* *(செ.அக.).*

[தெளிவு → தெளுவு]

தெற்கத்தி *teṟkatti,* பெ.எ. (adj.) **தெற்கிலுள்ள;** south, southern. "*தெற்கத்திப் பேச்சு*" *(உ.வ.).* *தெற்கத்திக் குருவியை வடக்கத்திக் குருவி தெற்றி அழைத்ததாம் சீகம்பழம் தின்ன (பழ.).*

ம. தெக்கே

[தெற்கு → தெற்கத்தி]

தெற்கத்திக்கணை *teṟkatti-k-kaṇai,* பெ. (n.) **குழந்தைநோய் வகை;** bronchitis, broncho-pneumonia, whooping cough, infantile convulsions.

[தெற்கு → தெற்கத்தி + கணை]

தெற்கத்திக்காற்று *teṟkatti-k-kāṟṟu,* பெ. (n.) **தென்றல்** *பார்க்க;* see *teṉṟal* *(செ.அக.).*

ம. தெக்கன்காற்று

[தெற்குகாற்று → தெற்கத்திக்காற்று]

தெற்கத்திநோய் *teṟkatti-nōy,* பெ. (n.) **தெற்கத்திக்கணை** *பார்க்க;* see *teṟkatti-k-kaṇai.*

[தெற்கு → தெற்கத்தி + நோய்]

தெற்கத்திப்பேச்சு *teṟkatti-p-pēccu,* பெ. (n.) *1.* **தென்றேயத்திலுள்ளார் வழங்கும் மொழி;** southern dialect. *2.* **தென்றேயத்திலுள்ளவர்களுக்குரிய பேச்சுமுறை;** intonation peculiar to the southerns.

[தெற்கு → தெற்கத்தி + பேச்சு]

தெற்கத்தியான்[1] *teṟkattiyāṉ,* பெ. (n.) *1.* **தென்னாட்டான்;** person belonging to South India. *2.* **தென்பகுதிக்காரன்;** southerner.

ம. தெக்கன் (தெற்கு)

[தெற்கு - தெற்கத்தி + ஆன்]

தெற்கத்தியான்[2] *teṟkattiyāṉ,* பெ. (n.) **தென் திசையினின்று வரவழைக்கப்பட்ட மாடுகள்;** cows brought from the southern side.

[தெற்கு - தெற்கத்தி + ஆன்]

தெற்கித்தி *teṟkitti*, வி. (adj.) தெற்கத்தி பார்க்க; see *teṟkatti*.

[தெற்கத்தி → தெற்கித்தி]

தெற்கு *teṟku*, பெ. (n.) தென்றிசை (திவா.); south.

ம. தெக்கு; க. தெங்க, தெங்கல், தெங்கு; து. தெனுகாயி, தென்காயி, தெங்காயி; குட. தெக்கி

[தென் + கு - தெற்கு]

தெற்குத்தி *teṟkutti*, பெ. (n.) தெற்கத்தி பார்க்க; see *teṟkatti*.

[தெற்கத்தி → தெற்குத்தி (இ.வ.)]

தெற்குப்பார்த்தவீடு *teṟku-p-pārtta-vīḍu*, பெ. (n.) தெரு வாசல் தெற்குப் பக்கமாக அமைந்த வீடு; house built with its main gate on the southern side.

[தெற்கு + பார்த்த + வீடு]

தெற்குமுகமாய்ப்போ-தல் *teṟku-mugam-āy-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.). இறத்தல் (வின்.); to die (செ.அக.).

தெற்குப் பகுதி கடற்கோளுக்கு ஆட்பட்டதால் இது இறந்தவர்களுக்கு உரிய திசையாகக் கருதப்படுகிறது.

தெற்குவாசல் *teṟku-vāsal*, பெ. (n.) 1. தென் திசையிலமைந்த வாயில்; door in south side. 2. தென் திசையில் வாசலமைந்த வீடு; house facing south side.

[தெற்கு + வாசல்]

தெற்கோட்டம் *teṟkōṭṭam*, பெ. (n.) கருக்கொண்ட மேகத்தின் தென்திசை நோக்கிய ஓட்டம்; southern passage of the rain clouds.

[தெற்கு + ஓட்டம்]

தெற்பை *teṟpai*, பெ. (n.) தருப்பை (யாழ்.அக.) பார்க்க; see *taruppai*.

[தருப்பை → தெற்பை]

தெற்றல்[1] *teṟṟal*, பெ. (n.) மாறுபாடு உடையவன்; perverse person. "தெற்றலாகிய தென்னிலங்கைக் கிறைவன்" (தேவா. 680, 8).

[தெள் → தெற்று → தெற்றல்]

தெற்றல்[2] *teṟṟal*, பெ. (n.) அறிவில் தெளியவன்; clear sighted person. "இணைமரு திற்றுவீழ் நடைகற்ற தெற்றல்" (திவ். பெரியதி. 11, 4, 9).

தெற்றி[1] *teṟṟi*, பெ. (n.) 1. திண்ணை; raised verandah. "இலங்குவளை மகளிர் தெற்றியாடும்" (புறநா. 53). 2. மாடம் (பிங்.); mansion, palace. 3. மேட்டிடம்; elevated ground, mound. "புற்றுந் தெற்றியும் சாடும்" (தெ.க. தொ. iii, 410). 4. தெற்றியம்பலம் (நிகண்டு) பார்க்க; see *teṟṟi-y-ambalam*.



தெற்றி[2] *teṟṟi*, பெ. (n.) மரவகை; a tree. "தெற்றியுலறினும் வயலை வாடினும்" (அகநா. 259).

தெற்றி[3] *teṟṟi*, பெ. (n.) பழிபளகு விளைப்பவன்; one who brings ruin or disgrace. "தெற்றியுமாய் நின்றான் றெரிந்து" (பாரதவெண். 193).

[தெற்று → தெற்றி]

தெற்றிக்கால் *teṟṟi-k-kāl*, பெ. (n.) தெற்றுக்கால் (இ.வ.) பார்க்க; see *teṟṟu-k-kāl*.

[தெற்றுக்கால் → தெற்றிக்கால்]

தெற்றிக்காளை *teṟṟi-k-kāḷai*, பெ. (n.) பின்னங்கால் முட்டியிடும் காளை; knack kneed bull. "தெற்றிக்காளை கழுத்தால் நெரிக்கச் சிதைந்து போன" (பறாளை. பள்ளு).

[தெற்றி + காளை]

தெற்றியம்பலம் *teṟṟi-y-ambalam*, பெ. (n.) மேட்டிடமாக அமைந்த சித்திரக்கூடம் (பிங்.); raised hall in a place or temple.

[தெற்றி + அம்பலம்]

தெற்றியிலக்கை *teṟṟi-y-ilakkai*, பெ. (n.) ஊர்ப் பொதுவிலொரு பகுதியை மேட்டிடமாகச்

செய்து பயன்படுத்துவோர் செலுத்தும் வரி; tax paid by the people, who use the common elevated land in the village.

[தெற்றி + இலக்கை]

தெற்றிவீழ்த்து-தல் *teṟṟi-vīḻttu-*, 5 *செ.குன்றாவி.* (v.t.) *தட்டி விழச் செய்தல் (வின்.);* to trip, cause to stumble.

[தெற்றி + வீழ்த்து-.]

தெற்று[1]-தல் *teṟṟu-*, 5 *செ.கு.வி.* (v.i.) *1.* **இடறுதல்;** to stumble. "தெற்றுகாலின ரோடினர்" *(உபதேசகா. சிவவிரத. 139.)* *2.* **தடைப்படுதல்;** to be obstructed, hindered. "இல்வாழ்க்கை யென்னு மியல்புடை வான்சகடஞ் செல்லாது தெற்றிற்று நின்று *(அறநெறி. 158, பக். 39)* (யாழ். அக.). *3.* **மாறுபடுதல்** *(சூடா.);* to be perverse, obstinate. *4.* **பிழை செய்தல்;** to mistake, commit a fault, do wrong. "தெற்றினார் புரங்கள் செற்றார்" *(பெரியபு. திருநீலகண்ட. 3).* *5.* **முறுக்கிக் கொள்ளுதல்;** to become intertwined. "தெற்றுகொடி முல்லையொடு" *(தேவா. 622, 6).* *6.* **இகலுதல்;** to quarrel. 'சுமவாது மருட்டி யெங்குந் தெற்றிய விவனையோமுன் றெரிப்ப தின்று' *(திருவாலவா. 30, 23).* *7.* **வாய் கொன்னுதல்;** to stammer in speaking, stutter. *8.* **செறிதல்;** to throng, to be dense, crowded. "கற்றவர் தெற்றிவர" *(திவ். பெரியாழ். 1, 5, 8).*

ம. தெற்றுக; க. தெத்து; தெ. தொற்றுபடு.

[தெள் → தென் → தெற்று]

தெற்று[2]-தல் *teṟṟu-*, 5 *செ.குன்றாவி.* (v.t.) *1.* **மோதுதல்;** to beat, strike. "தெற்று வெண்டிரைச் சரையு" *(உபதேசகா. சிவநாம. 135).* *2.* **அலைத்தல்;** to disturb, shake. "தேரரக்கன் மால்வரையைத் தெற்றியெடுக்க" *(தேவா. 46, 8).* *3.* **தடுத்தல்;** to obstruct, hinder. "பிணப் பெருங் குன்றந் தெற்றி" *(கம்பரா. சம்புமாலி. 19).* *4.* **மாற்றுதல்;** to change. "இது சந்திரன் தொழிலைத் தெற்றினமையால் தெற்றுருவகம்" *(வீரசோ. அலங். 18, உரை).* *5.* **பல்லைக்கடித்தல்;** to gnash, grind, as the teeth. "தெற்றின ரெயிறுகள்" *(கம்பரா. கரன். 104).* *6.* **பின்னுதல்;** to braid, plait entwine, weave. "குடம்பைநூ றெற்றி" *(கல்லா. கணபதிதுதி).* *7.* **தொடுத்தல்;** to bring up, tie together. "ஆம்பும் கட்டத் தகத்தோடு தெற்றிய தாமம்" *(பெருங். வத்தவ. 7, 20).* *8.* **இறுக்குதல்** *(யாழ். அக.);* to tighten.

[தெள் → தென் → தெற்று]

தெற்று[3] *teṟṟu*, *பெ.* (n.) *1.* *பின்னுகை;* entwining. *2.* *இடறுகை;* tripping. *3.* *வேலியடைப்பு (யாழ். அக.);* hedge of thorns protecting a passage. *4.* *செறிவு;* denseness. "தெற்றார் சடை முடியான்" *(திருவாச. 34, 5).* *5.* *மாறுபாடு (பிங்.);* perversity. *6.* *தவறு (நாஞ்.);* mistake, wrong.

ம. தெற்று; க. தட்டு; தெ. தொட்டு; து. தண்டுணி

தெற்று[4] *teṟṟu*, *பெ.* (n.) *தேற்றம் (வின்.);* certainty, ascertainment, assurance, persuasion, confidence.

[தேற்று → தெற்று]

தெற்றுக்கால் *teṟṟu-k-kāl*, *பெ.* (n.) *1.* **முட்டிக் கால்;** knocking knee. *2.* **முட்டிக் காலுள்ளவன்-ள்-து;** knock-kneed person or animal.

[தெற்று[2] + கால்]

தெற்றுக்காலன் *teṟṟu-k-kālaṉ*, *பெ.* (n.) **முட்டிக்காலுள்ளவன்-து;** knock-kneed person or animal.

[தெற்றுக்கால் → தெற்றுக்காலன்]



தெற்றுருவகம் *teṟṟuruvagam*, *பெ.* (n.) **அணியிலக்கண வகை;** a kind of rhetoric. *எஞ்சிய பண்பி வினையினு மொழிதொழில் செஞ்சொலாற் கிளப்பது தெற்றுரு வகமே (வீரசோ. பக். 234).*

எ-டு.

"தாமரையைக் குவியாது நாட்குமுத
மலர்த்தாது
நிமை செயும் என்னுயிர்க்குன் றிருமுகமாந்
திங்களே"

இச்செய்யுளில் நிலவின் தொழிலைத் தெற்றினமையால் தெற்றுருவகம்.

[தெற்று + உருவகம்]

தெற்றுப்பல் *teṟṟu-p-pal*, பெ. (n.) 1. **ஒன்றோ டொன்று பின்னியிருக்கும் பல்;** snagged tooth. 2. **மிகையான பல்;** supernumerary tooth.

[தெற்று + பல்]

தெற்றுப்பல்லன் *teṟṟu-p-pallaṉ*, பெ. (n.) **பின்னற் பல்லுள்ளவன்;** a person with snagged teeth.

[தெற்று + பல்லன்]

தெற்றுப்பல்லி[1] *teṟṟu-p-palli*, பெ. (n.) **பின்னற் பல்லுள்ளவள்;** a woman with snagged teeth.

[தெற்று + பல்லி]

தெற்றுப்பல்லி[2] *teṟṟu-p-palli*, பெ. (n.) **தீச்சொல்லுடையவள்;** a woman of evil tongue (செ.அக.).

[தெற்று + பல்லி. தெற்று = கோணல், நேர்மைக்கு மாறானது]

தெற்றுமாற்று *teṟṟu-māṟṟu*, பெ. (n.) **ஏமாற்று** (வின்.); tricks, shifts, deception.

தெற்றுரை *teṟṟurai*, பெ. (n.) **மாறுபடுமொழி;** inconsistent speech. "தெற்றுரை செய்து தியக்கமுற்று" *(பிரபோதசந். 11, 19).*

[தெற்று + உரை]

தெற்றுவமை *teṟṟuvamai*, பெ. (n.) **அணியிலக்கண வகை;** a kind of rhetoric. பொருள்போ லமைந்த பொருவிது வென்னு மரபொடு தெற்றி வருவது தெற்றே *(வீரசோ. பக்.224).*

எ-டு. நின்முகம்போல மலர்ந்த தாவிந்த
மன்னமே பாரா யது.
- இதில் தெற்ற உவமித்தலால் தெற்றுவமை

தெற்றுவாசல் *teṟṟu-vāšal*, பெ. (n.) **திட்டி வாசல்;** wicket. "பல தெற்றுவாசல்களையுடைய அரிய கோபுர வாயிலை ஐயுறாமற் புகுவீர்" *(மலைபடு. 490, உரை).*

[தெற்று + வாசல்]



தெற்றுவாய் *teṟṟu-vāy*, பெ. (n.) **திக்குவாய்;** stammering.

[தெற்று + வாய்]

தெற்றென்(னு)-தல் *teṟṟeṉ(ṉu)-*, 5 செ.குன்றாவி. (v.t.) **தெளிதல்;** to discern, conclude. "தெற்றென்க மன்னவன்கண்" *(குறள், 581).*

தெற்றென *teṟṟeṉa*, கு.வி.எ. (adv.) 1. **விரைவாக;** speedily, hastily. "தெற்றெனச் செலவுகடைக் கூட்டுதிராயின்" *(பொருந. 174).* 2. **உடனே;** forthwith, immediately. "அகல்யா றகழ்ந்தக்காற் றெற்றெனத் தண்ணீர் படும்" *(நாலடி., 150).* 3. **தெளிவாக;** clearly. "யானுந் தெற்றென உணரேன்" *(அகநா. 58).*

ம. தெற்றன, தெற்றென

[தெற்று + என]

தெற்றெனவு *teṟṟeṉavu*, பெ. (n.) 1. **தெளிவு;** certainty, clearness. "தெற்றென வில்லார் தொழில்" *(திரிகடு. 54).* 2. **வெட்கமின்மை;** immodesty. "சோற்றை முன்னிருந்து முற்றத்தான் துற்றிய தெற்றெனவும்" *(திவ். இயற். பெரியதிரு. 141).*

[தெற்று + எனவு]

தெறக்கோலா *teṟa-k-kōlā*, பெ. (n.) **உருட்டாய் உள்ள ஒரு கடல் மீன்;** fish in a round form (மீனவ.).



உருவ அமைப்பில் சாலா போலும் காணப்படும்.

தெறஞ்சுபோ-தல் *teṟañju-pō-*, 8 செ.கு.வி. (v.i.) **திரைந்து** (திரிந்து) **போதல்;** to coagulate, form into clots, as milk. *'பால் தெறஞ்சு போயிடுச்சு' (நெல்லை).*

[திரிந்து → திரைந்து → தெறைந்து → தெறஞ்சு. ஒ. நோ.: கரைந்து → கரைஞ்சு]

தெறல் *teṟal*, பெ. (n.) 1. **அழிக்கை;** ruining. "வலியுந் தெறலு மளியு முடையோய்" *(புறநா. 2).* 2. **சினத்தல்;** being angry. "தெறலருங் கடுந்துப்பின்" *(மதுரைக். 32).* 3. **வெம்மை;** heat. "தீயுனுட் டெறனீ" *(பரிபா. 3. 63).* 4. **வருந்துகை;** affliction. "தேடறு நலத்தபுன லாசைதெற லுற்றார்" *(கம்பரா. கடிமண. 2).*

[தெறு → தெறல்]

தெறி¹-த்தல் *teṟi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. **தாக்கப்பட்டு வெளிப்படுதல்;** to strike and fly off. "மன்னவன் வாய்முதற் றெறித்தது மணியே" *(சிலப். 20: 72).* 2. **பிதுங்குதல்;** to start, as eyes. "கண் தெறித்துப் போகிறது" 3. **பொறி அல்லது துளியாய்ச் சிதறுதல்;** to be sprinkled, as drops or particles of water; to splash up, as spray; to fly off, as sparks. "கண்பனி நெகிழ்நூன் முத்தின் முகிழ்முலைத் தெறிப்ப" *(அகநா. 289).* 4. **முறிதல்;** to break. 5. **அறுதல்;** to burst asunder, snap in twain, as a rope. 6. **குலைதல்;** to be scattered, as an army. "மாப்படை தெறித்துச் சிந்த" *(கம்பரா. மூலபல. 134).* 7. **துள்ளுதல்;** to spring, leap, hop, as a stag. "தாவுபு தெறிக்கு மான்மேல்" *(புறநா. 259).* 8. **பிளத்தல்;** to split. "தெறித்தன செறிசுடர்க் கவசம்" *(கம்பரா. கிங்கர. 32).* 9. **முற்றுதல்;** to be complete, full. "தெறிப்ப விளைந்த தீங்கந்தாரம்" *(புறநா. 258).* 10. **வேறுபடுதல்;** to be broken off, as friendship, to become disunited. 11. **நீங்குதல்;** to be removed, cured, as a disease. "பிணி தெறித்துப் போயிற்று" *(வின்.).* 12. **தவறுதல்;** to fail, end unsuccessfully. "செயல் தெறித்துப் போயிற்று" 13. **குறும்பு பண்ணுதல்;** to be mischievous. "அவன் மிகவும் தெறித்தவன்". 14. **செருக்குத் திமிராயிருத்தல்;** to be proud. 15. **நரம்பு துடித்து நோவுண்டாதல்;** to give the throbbing pain.

[தெறு → தெறி]

தெறி²-த்தல் *teṟi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **விரலாற் சுண்டுதல்;** to shoot with the finger and thumb. 2. **விரலால் உந்துதல்;** to twang, as a bow-string with the finger and thumb; to thrum, as the strings of a lute. *'சிலையை நாண் டெறித்தான்' (கம்பரா. தேரேறு. 29).* 3. **உடைத்தல்;** to break, cut. *'பூட்டைத் தெறித்தான்'.*

தெறி³-த்தல் *teṟi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. **தெறிக்குதல்;** to break suddenly or to snap off. 2. **விண் என வலித்தல்;** to throb pain as of boils. 3. **கண் தெறிக்குதல்;** to grow blind by dazzling. 4. **எட்ட விழுதல்;** to spirt as drops of particles of water *(சா.அக.).*

தெறி⁴ *teṟi*, பெ. (n.) 1. **சிதறுகை** *(சங்.அக.);* spattering, splashing, scattering. 2. **அணி, குப்பாயம் முதலியவற்றின் கடைப்பூட்டு** *(யாழ்.அக.);* clasp, as of an ornament. 3. **குறும்புப் பேச்சு;** mischievous talk. "எப்போதும் அவன் தெறி பேசுகிறான்" *(நாஞ்.) (செ.அக.).*

[தெளி → தெறி]

தெறி⁴ *teṟi*, பெ. (n.) **தேள்;** scorpion *(சா.அக.).*

தெறிக்கடி-த்தல் *teṟi-k-kaḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. **சிதறவடித்தல்;** to scatter, disperse. 2. **எதிரி அடங்கும்படி பேசுதல்;** to confound, puzzle, as in controversy *(செ.அக.).*

[தெறி → தெறிக்க + அடி-.]

தெறிக்கப்பேசு-தல் *teṟikka-p-pēsu-*, 5 செ.குன்றா.வி. (v.t.) **பொறுமையின்றி கடுத்துப் பேசுதல்** *(கொ.வ.);* to speak, rashly and inconsiderately *(செ.அக.).*

[தெறிக்க + பேசு-.]

தெறிகெடு-தல் *teṟi-keḍu-*, 11 செ.கு.வி. (v.i.) **நிலைகுலைதல்;** to be routed, scattered. "தெறிகெட வோடுதல் கண்டு" *(சேதுபு. சுந்தமா. 39).*

[தெறி + கெடு-.]

தெறிச்சமீன் *terićca-mīṉ*, பெ. (n.) 1. விரைவாக நீந்திச் செல்லும் மீன்; fish that swims fast in the water. 2. பெரிய மீன்; big fish.

[தெறி → தெறித்த → தெறிச்ச + மீன்]

தெறிச்சவெள்ளம் *terićca-veḷḷam*, பெ. (n.) நீரோட்டமில்லாத கடல்; currentless sea (மீனவ.)

[தெறிச்ச + வெள்ளம்]

தெறிசிங்கி[1] *teṟi-siṅgi*, பெ. (n.) மாந்தரின் மீது தெளித்தால் பட்ட இடம் புண்ணாகும் ஒரு வகைக் கூட்டு மருந்து (நாஞ்.); a mixture whose drops cause swelling in the body (செ.அக.).

[தெளி → தெறி + சிங்கி]

தெறிசிங்கி[2] *teṟi-śiṅgi*, பெ. (n.) அகத்தியர் பெருநூலிற் சொல்லியுள்ள ஒரு வகைச் சிங்கி வித்தை; a magic performance or an art in jugglery described in perunūl of Agattiyaṉ (சா.அக.).

தெறிசோறு *teṟi-cōṟu*, பெ. (n.) உண் கலத்தினின்று சிதறிவிழுஞ் சோற்றுப் பருக்கை; spoon drift.

[தெறி + சோறு]

தெறித்தவள் *teṟittavaḷ*, பெ. (n.) குடும்பத்தினின்று வெளியேறி விலைமகளானவள்; an unchaste woman who has deserted her home and become a prostitute.

[தெளி → தெறி. தெறி → தெறித்தவள்]

தெறித்தவன் *teṟittavaṉ*, பெ. (n.) 1. செறுக்குள்ளவன்; headstrong, proud man. 2. கொடியவன் (வின்.); cruel man.

[தெறு → தெறி → தெறித்தவன்]

தெறித்தளத்தல் *teṟitaḷattal*, பெ. (n.) ஒன்றைத் தட்டுதலால் உண்டாம் ஒலியின் தன்மையினைக் கூர்ந்து செவியில் அளக்கை (தொல். எழுத்து 7, உரை.); measurement by determining the quality of the sound by the ear. 2. கூர்ந்து (நிதானித்து) அளக்கை (இ.வ.); careful measuring.

[தெறித்து + அளத்தல்]

தெறித்துநடை *teṟittu-naḍai*, பெ. (n.) துள்ளு நடை; hopping gait. "தெறித்து நடை மாபிற்றன் மறிக்குநிழ லாகி" (குறுந். 213).

[தெறித்து + நடை. தெறி → தெறித்து]

தெறித்துப்போ-தல் *teṟittu-p-pō-*, 11 செ.கு.வி. (v.i.) 1. குடும்பத்தைவிட்டு விலகி விலை மகளாதல் (சென்னை); to desert one's home and become a prostitude. 2. பிணி தீர்தல்; to be cured. 'பிணி தெறித்துப் போயிற்று' 3. ஒளியாற் கண் கூசி மழுங்குதல் (இ.வ.); to be dazzled by excess of light. இயங்கியின் முகப்புவிளக்கு வெளிச்சத்தினால் கண் தெறித்துப் போயிற்று (உ.வ.) மின்னல் வெளிச்சத்தினால் கண் தெறித்துப் போயிற்று (உ.வ.).

[தெறி → தெறித்து + போ-.]

தெறிதலை *teṟi-talai*, பெ. (n.) தறிதலை (இ.வ.); அடங்காதவன்; swollen-headed person.

[தறிதலை → தெறிதலை]

தெறிநடை *teṟi-naḍai*, பெ. (n.) தெறித்துநடை பார்க்க; see *teṟittu-naḍai*. "தெறிநடை மரைக் கண மிரிய" (அகநா. 224).

[தெறி + நடை]

தெறிப்படங்கு[1]**-தல்** *teṟi-p-paḍaṅgu-*, 9 செ.கு.வி. (v.i.) வெடியுப்பு, உப்பு முதலியவற்றைக் சுட்டும் போது படபட வென்று தெறிக்கும் குணம் அடங்குதல்; to be over the busting noises of salts, nitre, etc., which were produced while they are heated (சா.அக.).

[தெறிப்பு + அடங்கு]

தெறிப்படங்கு[2]**-தல்** *teṟi-p-paḍaṅgu-*, 9 செ.கு.வி. (v.i.) செறுக்கு அடங்குதல்; to control presumptous conduct தேர்தலில் தோற்றபின் அவர் தெறிப்படங்கின்று (உ.வ.).

[தெறிப்பு[1] + அடங்கு-.]

தெறிப்பான் *teṟippāṉ*, பெ. (n.) தலை சிதறத்தக்கவன் என்று பொருள்படுமோர் வசை மொழி (உ.வ.); a curse meaning that the person cursed deserves to have his head blown to pieces.

[தெறிப்பு → தெறிப்பான்]

தெறிப்பு[1] *terippu*, பெ. (n.) செறுக்கு மேலிட்ட ஒழுக்கம்; presumptuous conduct.

தெறிப்பு[2] *terippu*, பெ (n.) கடைப் பூட்டு (வின்); button, clasp of thread or metal.

ம. தெறிப்பு

[தெறி → தெறிப்பு]

தெறிப்பு[3] *terippu*, பெ. (n.) தெறித்துப் போதல்; break caused abruptly (சா.அக.)

[தெற்று → தெறி → தெறிப்பு]

தெறிப்பு[4] *terippu*, பெ (n.) அதிர் வெடி; rocket.

[தெறி → தெறிப்பு]

தெறிப்புநாடி *terippu-nāḍi*, பெ. (n.) 1. துள்ளு நாடி; swift abrupt pulse. 2. பின்னுக்கு உதைத்தோடும் நாடி; rebounding pulse (சா.அக.).

[தெறிப்பு[1] + நாடி]

தெறிப்புமசகு *terippu-maśagu*, பெ. (n.) மசகுப் பொருள்களை வாரித் தெறித்து மசகிடும் முறை; splash lubrication.

[தெறிப்பு + மசகு]

தெறிபட்டவள் *teri-paṭṭavaḷ*, பெ. (n.) தெறித்தவள் பார்க்க; see *terittavaḷ*.

[தெறித்தவள் → தெறிபட்டவள்]

தெறிபடு-தல் *teri-paḍu*, 20 செ.கு.வி. (v.i.) 1. சிதறுண்ணுதல்; to be scattered, as cattle. 2. அலைந்துலைதல்; to be tossed about, as a vessel at sea. 3. தோற்றோடுதல்; to be discomfited, routed, as an army. 4. கலங்குதல்; to be puzzled, confounded. 5. திக்கறுதல் (வின்.); to be desolate, forsaken. 6. தவறுதல்; to fail, come to naught. 'செயல் தெறிபட்டது'.

[தெறி + படு-]

தெறிபதம் *teri-padam*, பெ. (n.) நெய்மம் காய்ச்சுகையில் எண்ணெய் வெடிபடும் நிலை; spirtling stage of medicinal oil when boiling.

[தெறி + பதம்]

தெறிமுற்று-தல் *teri-muṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) முழுதும் பழுத்தல் (இ.வ.); to become fully ripe.

[தெறிக்க + முற்று-]

தெறிவாதம் *teri-vādam*, பெ. (n.) நோய் வகை; a disease.

தெறிவில் *teri-vil*, பெ. (n.) சுண்டு வில்; a small bow for shooting pellets. "சுரிகையுந் தெரிவில்லுஞ் செண்டுகோலும்" (திவ். பெரியாழ். 3, 4, 3)

ம. தெறிவில்லு

[தெறி' + வில்]



தெறு[1]**-தல்** *teṟu-*, 6 செ.குன்றாவி. (v.t.) 1. சுடுதல்; to burn, scorch. "நீங்கிற் றெறூஉம்" (குறள், 1104). 2. தண்டஞ்செய்தல்; to punish. "கொடியோர்த் தெறுதலும்" (புறநா. 29). 3. அழித்தல்; to destroy. "பெரிதாய பகை வென்று பேணாரைத் தெறுதலும்" (கலித். 11). 4. கொல்லுதல் (பிங்.); to kill. "முள்ளெரி னெய்தெற விழுக்கிய" (மலைபடு. 301). 5. வருத்துதல்; to trouble, plague. "செம்முக மாத்தெறு கட்டழிய" (திருக்கோ. 313). 6. நெரித்தல் (திவா.); to crush, bruise. 7. காய்ச்சுதல்; to boil down. "கரும்பினைத் தெற்ற கட்டியின்" (காசிக. இல்ல.3). 8. சினத்தல்; to be angry at or with. "தெறலருங் கடுந்துப்பின்" (மதுரைக். 32.). 9. கொட்டுதல்; to sting, as a wasp. "கடிதாகத் தெறுதலை யுடைய மிக்க குளவியினம் (பதிற்றுப். 71, உரை). 10. மிகுத்தல் (பிங்); to increase.

தெறு[2]**-தல்** *teṟu-*, 6 செ.கு.வி (v.i.) 1. தங்குதல்; to tarry. 2. நீங்குதல்; to leave, forsake. "பொய்ம்மை தெறுவது" (திருநூற். 13).

தெறு[3]**-த்தல்** *teṟu-*, 11 செ.குன்றாவி. (v.t.) 1. நெரித்தல் (பிங்.); to crush, bruise.

2. குவித்தல்; to heap. "விருந்தின் மன்ன ரருங்கலந் தெறுப்ப" (அகநா. 54)

ம. தெறுக்குக (சுருட்டுதல், பின்னுதல்)

தெறு[4] *teru*, பெ (n.) 1. சுடுகை; burning, scorching. "தீத்தெறுவிற் கவின்வாடி" (பட்டினப். 10). 2. சினம்; anger. "தெறுவர விருபாற் படுக்குநின் வாள்வாய்" (புறநா. 50). 3. அச்சம்; fear. "தெறுவர வென்னாகு வள்கொல்" (அகநா. 73). 4. துன்பம்; distress. "தெறுவர வீங்கினம் வருபவோ" (குறுந். 336).

தெறுக்கால் *teru-k-kāl*, பெ. (n.) 1. தேள் (திவா.); scorpion 2. நளிஓரை (சூடா); scorpio in the zodiac

[தெறு + கால்]

தெறுகுவர் *teruguvar*, பெ. (n.) அழிப்பவர்; one who destroys.

[தெறு' → தெறுகுவர்]

தெறுநர் *terunar*, பெ. (n.) 1. பகைவர் (பிங்.); foes, enemies 2. கொலையாளர் (யாழ்அக.); murderers.

[தெறு' → தெறுநர்]

தெறுப்பதம் *teru-p-padam*, பெ. (n.) தெறுக்கால் பார்க்க; see *teru-k-kāl*. "தெறுப்பதங் கழீஇ செறிந்தெழு நரகிடை" (உபதேசகா. சிவத்துரோ. 229).

[தெறு + பதம்]

தெறுபொருள் *teru-porul*, பெ. (n.) திறைப் பொருள்; indemnity, tribute. "உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொருள்" (குறள், 756).

[தெறு ' + பொருள்]

தெறுவர் *teruvar*, பெ. (n.) பகைவர்; foes, enemies. "தெறுவர் பேருயி ருண்ணு மாதோ" (புறநா. 307).

[தெறு → தெறுவர்]

தெறுவி *teruvi*, பெ. (n.) அகப்பை; ladle. "தெறுவியாலன்றி" (காசிக. இல்லற. 29).

[தெறு → தெறுவி]

தெறுவு *teruvu*, பெ. (n.) சுடுகை; burning.

[தெறு[3] → தெறுவு]

தெறுழ் *terul*, பெ. (n.) 1. காட்டுக்கொடி வகை; a creeper. "தெறுழ்வீ பூப்ப" (புறநா. 119). 2. புளிமா பார்க்க (புறநா 119, உரை); see *pulimā*.

[தெறு → தெறுழ்]

தென் *ten*, பெ (n.) 1. தென்னை (சூடா.) பார்க்க; see *tennai*. 2. தெற்கு (பிங்.); south, southern region. தென்திசை. 3. அழகு (பிங்.); beauty. "மதனன்றன் தென்னீருருவமழிய" (தேவா. 1155, 4). 4. கற்பு (சூடா); chastity. 5. இசை (பிங்.); harmony, music. 6. இசைப்பாட்டு (பிங்.); song. 7. இனிமை; sweetness. "தென்னிசை பாடும் பாணன்" (திருவாலவா. 56, 7). 8. வலப்பக்கம்; right side. "இடக்கால் தென்றொடைமே லொன்றச் செறி" (சைவச. பொது. 273).

ம., க., தெ. தென்

[தில் → தெல் → தென். தென்னுதல் = கோணுதல், சாய்தல். தென் = தென்னை மரம் இயற்கையாக வளர்ந்த தென்றிசை. குமரிக் கண்டத்தில் ஏழ்தெங்க நாடியிருந்தமையையும், தென் கண்டத்திலும் அதனையடுத்த தீவுகளிலும் இன்றும் தென்னை செழித்து வளர்தலையும் நோக்குக (வே.க. 144, 145)]

தென்கடல் *ten-kadal*, பெ. (n.) 1. கோடியக் கரையையொட்டித் தென்பக்கமாய் உள்ள கடல்; sea near the Kōḍiyakkarai. 2. குமரிக் கடல்; Cape Comerin sea; Kanniya-k-kumari sea.

[தென் + கடல்]

தென்கயிலாயம் *ten-kayilāyam*, பெ. (n.) கைலாயத்தை ஒத்ததும் தென்தேயத்தில் உள்ளதுமான தில்லை (சிதம்பரம்) திருக்காளத்தி, திருவையாறு போன்ற சிவன் கோயில்; Sivan shrines of the south, as Tillai, Chidambaram, Tirukkalatti, Tiruvaiyaru, etc.

[தென் + கயிலாயம்]

Skt. kailas → த. கயிலாயம்

தென்கயிலை *ten-kayilai*, பெ. (n.) தென் கயிலாயம் பார்க்க; see *ten-kailāyam*. "தென்கயிலைக்குப் போவன்" (சீகாளத். பு. தென்கை. 9)

[தென் + கயிலை]

தென்கரைநாடு *tenkarainādu,* பெ. (n.). காவிரிக்குத் தென்கரையாகச் சோழ மண்டலத்துள் அமைந்த நாடு; country situated in chola maṇḍalam, which is south of cauvery. "தென்கரை நித்த விநோத வளநாடு" *(கரந்தைச் செப்பேடுகள்).*

[தென் + கரை + நாடு]

தென்கலை *ten-kalai,* பெ. (n.) *1.* தமிழ்; the Tamil literature and art, as belonging to the south. "வடகலை தென்கலை வடுகு கன்னடம்" *(கம்பரா. பாயி).* 2. தென்கலையார் பார்க்க; see *ten-kalaiyār.* 3. தென்கலைத்திருமண் பார்க்க; see *tenkalai-t-tiruman.*

தென்கலைத்திருமண் *tenkalai-t-tiruman,* பெ. (n.) தென்கலை மாலியர் இடும் திருமண்; the mark worn on the forehead by the ten-kalai-māliyar.

[தென்கலை + திரு + மண்]



தென்கலைநாமம் *tenkalai-nāmam,* பெ. (n.). தென்கலைத்திருமண் பார்க்க; see *tenkalai-t-tiruman.*

[தென்கலை + நாமம். ராமம் → நாமம்]

தென்கலையார் *ten-kalaiyār,* பெ. (n.) தென்கலைத் திருமண் இடும் மாலியப் பிரிவினர்; the vaiṇava sect wearing ten-kalai-t-tiruman.

[தென் + கலையார்]

தென்கலைராமம் *ten-kalai-rāmam,* பெ. (n.) தென்கலைத்திருமண் பார்க்க; see *tenkalai-t-tiruman.*

[தென்கலை + ராமம்]

தென்காசி *tenkāśi,* பெ. (n.). குற்றாலத்திற்கு அருகில் சிற்றாற்றங்கரையில் உள்ளதும், பிற்காலப் பாண்டியரது தலைநகராய் இருந்ததுமான நகரம்; a Śivan shrine, on the river Ciṟṟāṟu, north-east of Kuṟṟālam in Tirunelveli district, capital of the later Pāṇḍyas.

[தென் + காசி]

தென்காசிவழக்கு *tenkāśi-valakku,* பெ. (n.) இரு திறத்தார்க்கும் நடுவுகூறி எளிதில் வழக்குத் தீர்க்குமுறை (நெல்லை.); rough and ready settlement of a dispute by striking a mean.

[தென்காசி + வழக்கு]

தென்காசியாசாரம் *ten-kāśi-y-āśāram,* பெ. (n.) தென்காசிவிருந்தோம்பல் பார்க்க; see *tenkāśi-virundōmbal.* தென்காசி ஆசாரம் திருநெல்வேலி உபசாரம் *(பழ.).*

[தென்காசி + ஆசாரம்]

Skt. ācāra → த. ஆசாரம்

தென்காசிவிருந்தோம்பல் *tenkāśi-virundōmbal,* பெ. (n.) உள்ளன்பில்லாத விருந்தோம்பல் (நெல்லை); insincere and hollow courteousness.

தென்கால் *tenkāl,* பெ. (n.) தென்காற்று பார்க்க; see *tenkāṟṟu.*

[தென் + கால்; கால் = காற்று]

தென்காற்று *tenkāṟṟu,* பெ. (n.) தென்றல்; balmy breeze, as blowing from the south.

ம. தென்னிகாற்று

[தென் + காற்று]

தென்கிழக்கு *ten-kilakku,* பெ. (n.) தென்கீழ்த் திசை; south east.

ம. தெக்குகிழக்கு

[தென் + கிழக்கு]

தென்கீழ்த்திசை *ten-kīl-t-tiśai,* பெ. (n.) தென்கிழக்கு பார்க்க; see *ten-kilakku.*

[தென் + கீழ் + திசை]

தென்கீழ்த்திசைப்பாலன் *ten-kīl-t-tiśai-p-pālan,* பெ. (n.) தென்கீழ்த்திசையிறை பார்க்க; see *ten-kīl-t-tiśai-y-iṟai.*

[தென் + கீழ் + திசை + பாலன்]

தென்கீழ்த்திசையிறை *ten-kīḻ-t-tišai-y-iṟai,* பெ. (n.) தென்கிழ்த் திசையின் தலைவனாகிய தீத் தெய்வம் (சூடா.); Agni, as regent of the south-east.

[தென் + கீழ் + திசை + இறை]

தென்கீழ்த்திசையோன் *teṉkīḻ-t-tišaiyōṉ,* பெ. (n.) தென்கீழ்த்திசையிறை பார்க்க; see *teṉkīḻ-t-tišai-y-iṟai.* "தென்கீழ்த்திசையோனாக்கிய தனிமுதற் றிருமாமதுரை" (கல்லா. 31,10).

[தென் + கீழ் + திசையோன்]

தென்குரங்காடுதுறை *teṉkuraṅgāḍuturai,* பெ. (n.) காவிரியின் தென்கரையிலுள்ள பாடல் பெற்ற சிவன் கோயில்; a Šivaṉ place; on the south bank of the Cauvery.

[தென் + குரங்காடுதுறை]

இதுவே இன்று கபிஸ்தலம் என்றழைக்கப் படுகிறது.

தென்கோடு *teṉ-kōḍu,* பெ. (n.) பிறைநிலவின் தென்முனை; Southern cusp of the moon. "வடகோ டுயர்ந்தென்ன தென்கோடு தாழ்ந் தென்ன வான்பிறைக்கே" (பட்டினத். பொது. 1).

[தென் + கோடு]

தென்சார் *teṉ-šār,* பெ. (n.) தென்பக்கம்; south side.

[தென் + சார்]

தென்சிதம்பரம் *teṉ-šidambaram,* பெ. (n.) சிவ வழிபாட்டுக்குரிய முதன்மையான இடங்களுள் ஒன்று; an important Šivaṉ temple, one among many (இரு.நூற்.தமி.).

[தென் + சிதம்பரம்]

சிற்றம்பலம் → சிதம்பரம்

தென்படு-தல் *teṉ-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. புலப்படுதல்; to meet, appear, strike one's eyes. அது என் கண்ணிலே தென்பட்டது. 2. பயிற்சியடைதல்; to be versed, experienced. "அதிலே நன்றாய்த் தென்பட்டவன்" (இ.வ.).

தென்பரதம் *teṉ-paradam,* பெ. (n.) ஒன்பது கண்டங்களுள் ஒன்று (நவகண்டங்களுள் ஒன்று); a continent, one of navakaṇḍam.

[தென் + பரதம்]

தென்பல்லி *teṉ-palli,* பெ. (n.) புல்லகம் என்ற தலையணியின் உறுப்பிரண்டனுளொன்று; one of the two sections of the ornament pullakam. "தென்பல்லி வடபல்லி என்னும் இவையும் . . . ஒன்றான தலைக் கோலத்தை" (சிலப். 6:107, உரை).

[தென் + பல்லி]



தென்பாண்டி *teṉ-pāṇḍi,* பெ. (n.) தென்பாண்டி நாடு பார்க்க; see *teṉpāṇḍi-nāḍu.* "தென்பாண்டி குட்டங் குடங்கற்கா" (நன். 273, உரை). 2. பாண்டிய நாடு; the Pāṇḍiya country, as being in the south. "தென்பாண்டி நாடே தெளி" (திருவாச. 19,2).

ம. தென்பாண்டி

[தென் + பாண்டி]

தென்பாண்டிநாடு *teṉ-pāṇḍināḍu,* பெ. (n.) நாஞ்சில் நாடாகக் கருதப்படும் பாண்டி நாட்டுத் தென்பகுதி (நன். 273, உரை); the Southern Pāṇḍya country identified with Nāñjil-nāḍu.

[தென் + பாண்டி + நாடு]

தென்பார் *teṉ-pār,* பெ. (n.) 1. தென்னாடு; South India. "தென்பாராளு மறிவிற் குறுமுனி" (தமிழ்நா. 239). 2. பாண்டி நாடு; the Pāṇḍya country, as the southern part of the earth. "தென்பார் வைகுவோர் தவமோ" (திருவிளை. உக்கிர பாண்டியன். 20).

[தென் + பார்]

தென்பாரதம் *teṉ-pāradam,* பெ. (n.) தென்பரதம் பார்க்க (யாழ்.அக.); see *teṉ-paradam.*

[தென் + பாரதம்]

Skt. bhārata → த. பாரதம்

தென்பாரிசம் *teṉ-pārišam,* பெ. (n.) தெற்குச் சிறகம்; south wing.

[தென் + பாரிசம்]

தென்பால் *teṉ-pāl,* பெ. (n.) தெற்குப் பாகம்; the southern part.

ம. தென்பால்

[தென் + பால்]

தென்பாலி *teṉ-pāli,* பெ. (n.) குமரிக் கண்டப் பகுதிகளொன்று; an ancient division of the Tamil land. "தென்பாலி முகத்துக்கு வடவெல்லையாகிய பஃறுளி" *(சிலப். 8,:1, உரை).*

[தென் + பாலி]

தென்பாற்பரதம் *teṉ-pāṟ-paradam,* பெ. (n.) ஒன்பது கண்டங்களுள் ஒன்று; a continent, one of nav-kaṇḍam.

[தென் + பால் + பரதம்]

தென்பு *teṉbu,* பெ. (n.) தெம்பு பார்க்க; see *tembu.*

தெ. தென்பு

[தெம்பு → தென்பு]

தென்புலக்கோன் *teṉ-pula-k-kōṉ,* பெ. (n.) கூற்றுவன்; Yamaṉ, as the lord of the south. "தென்புலக்கோன் பொறி யொற்றி" *(திவ். பெரியாழ். 5,2,2).*

[தென்புலம் + கோன்]

தென்புலத்தார் *teṉ-pulattār,* பெ. (n.) தென்றிசையில் வாழ்ந்து மறைந்த முன்னோர்; the manes, as living in the south. "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல்தலை" *(குறள், 43).* 2. தென்புலர் பார்க்க; see *teṉ-pular.* "தென்புலத் தார்க் கென்னுக் கடைவுடையேன் யான்" *(திவ். இராமானுச. தனியன்).*

[தென் + புலத்தார்]

தென்புலத்தார்வேள்வி *teṉ-pulattār-vēḷvi,* பெ. (n.) 1. ஐவகை வேள்வியு ளொன்றாய் நாள்தோறும் தென்றிசையிலுள்ளார் (பிதிரர்); பொருட்டுச் செய்யும் நீத்தார் கடன்; one of ai-vagai vēḷvi; daily offering of libations to the manes.

[தென + புலத்தார் + வேள்வி]

தென்புலம் *teṉ-pulam,* பெ. (n.) 1. தென்றேயம்; the southern country. "தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்ப" *(நெடுநல். 52).* 2. தென்றிசையிலுள்ளவருலகம்; region of the manes. "தென்புல வாழ்நர்க்கு" *(புறநா. 9).* 3. கூற்றுவனுலகு; the abode of the God of death, world of Yamaṉ. "தென்புலக் கோன் பொறி யொற்றி" *(திவ். பெரியாழ். 5, 22).* 4. தமிழகத்தின் தெற்கிலிருந்த பாண்டி நாடு; Pāṇḍya country. "தென்புலங் காவலி னொரீஇ" *(புறநா. 7).*

ம. தென்புலம், தெக்கன்புரி

[தென் + புலம்]

தென்புலர் *teṉ-pular,* பெ. (n.) காலதூதர்; Yamaṉ's messengers. "தென்புலர்க் கென்னைச் சேர்கொடான்" *(திவ். பெரியதி. 7,3,3,).*

[தென்புலம் → தென்புலர்]

தென்மச்சேறு *teṉma-c-cēṟu,* பெ. (n.) கடலடிச் சேற்று வகையுள் ஒன்று; kind of mud, which deposit beneath of the sea.

[தென்மம் + சேறு]

தென்மதுரை *teṉmadurai,* பெ. (n.) 1. தலைச் சங்கமிருந்து கடல் கொள்ளப்பட்ட நகரம் *(சிலப். 8:1, உரை);* Southern Madurai the reputed city where the first Sangam met, supposed to have been submerged by the sea. 2. தென் பாலுள்ள மதுரை; Madurai dist. fr. Vada Madurai.

[தென் + மதுரை. மதி → மதிரை → மதுரை = மதிக்குலத்தவனான பாண்டியன் முதல் தலைநகர் (தென் மதுரை), கண்ணன் ஆண்ட வடமதுரை, அப்பெயர் பெற்ற கடைக்கழகப் பாண்டியர் தலைநகர் (வைகை மதுரை) (வ.வ. 52)]

தென்மலை *teṉ-malai,* பெ. (n.) பொதிய மலை; Mount Podiyam, believed to be the residence of Agattiyar. opp. to vaḍamalai. "தென்மலையிருந்த சீர்சான் முனிவரன்" *(பு.வெ. சிறப்புப்பாயிரம்).*

[தென் + மலை]

தென்மாடு *teṉ-māḍu,* பெ. (n.) தென் பக்கம்; south side. "கோயிலில் அர்த்த மண்டபத்தில்

தென்மாட்டில் வாசலில் மேற்கடைய உத்திரத்திலும்" *(தெ.க.தொ. 5, கல். 588).*

[தென் + மாடு. மாடு = பக்கம். "மாடு" பார்க்க]

தென்முனி *ten-muni,* பெ. (n.) *அகத்தியன்;* Agattiyan, as residing in the south. "தென்றிசை வைகென்று தென்முனிக்குக் கயிலையின்முன் புகன்ற ஞான்று" *(கடம்பபு.இலீலா.18).*

மறுவ. குடமுனி

ம. தென்முனி

[தென் + முனி]

தென்முனை *ten-munai,* பெ. (n.) தென்கோடி முனை *(இ.வ.);* the South pole.

[தென் + முனை]

தென்மேற்கு *ten-mēṟku,* பெ. (n.) *தெற்கைச் சார்ந்த மேற்றிசை;* south-west.

ம. தெக்கு படிஞ்ஞாறு

[தென் + மேற்கு. மேல் - மேற்கு]

தென்மேற்றிசைப்பாலன் *ten-mēṟṟisai-p-pālan,* பெ. (n.) *தென்மேற்குத் திசையின் தலைவன் (நிருதி) (பிங்.);* Niruti, regent of the south-west.

[தென் + மேல் + திசை + பாலன்]

தென்மொழி *ten-moḻi,* பெ. (n.) *1.* தென்னாட்டில் பேசப்படும் *மொழி;* South Indian language. *2.* *தமிழ்;* Tamil, as the speech of the South. "வடமொழி தென்மொழி" *(கம்பரா. பாயி.).*

ம. தென்மொழி

[தென் + மொழி. தென்குமரிக்கண்டத்தில் தோன்றிய தமிழ் மொழி]

தமிழ் என்பது தமிழை மட்டும் குறிக்குமென்றும் 'திரவிடம்' என்பது தமிழினின்று திரிந்த பிறமொழிகளையே குறிக்குமென்றும்; 'தென்மொழி' என்பது அவ்விரண்டையும் குறிக்குமென்றும் வேறு பாடறிந்து கொள்க. (தென்மொழி. ஆகத்து 1959)

தமிழும் திரவிடமும் சேர்ந்தது தமிழியம். தமிழல்லாத தமிழின மொழிகளே திரவிடம். தமிழ் ஆரியத்துணை வேண்டாத இயன் மொழியென்றும், திரவிடம் அதை வேண்டும் திரிமொழியென்றும் வேறுபாடறிக. தமிழும் திரவிட மொழிகளிலுள்ள தமிழ்க் கூறும் சேர்ந்ததே தென்மொழி (வண்.மொ. வழு.1).

தென்வரை *ten-varai,* பெ. (n.) தென்மலை பார்க்க; see *ten-malai.* "தென்வரைச் சாந்துமூழ்கி" *(சீவக. 2081).*

[தென் + வரை]

தென்றமிழ் *tenṟamiḻ,* பெ. (n.) *தமிழ்மொழி;* Tamil, as the language of the south. "என்றுமுள தென்றமி ழியம்பியிசை கொண்டான்" *(கம்பரா. அகத்திய. 47).*

[தென் + தமிழ்]

தென்றல் *tenṟal,* பெ. (n.) *1.* *தென்காற்று;* south wind, balmy breeze from the south. "வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்" *(சிலப். 2:24).* *2.* கோடைத் தென்காற்று (இவ.); south-west monsoon in June - September. தென்றல் முற்றிப் பெருங் காற்றாகும் *(பழ.).*

ம. தென்றல்

[தென் → தென்றல்]

தென்றல்வருமலை *tenṟal-varumalai,* பெ. (n.) தென்மலை (பிங்.) பார்க்க; see *ten-malai* (செ.அக.).

[தென்றல் + வருமலை]

தென்றலை *tenṟalai,* பெ. (n.) *தெற்கு;* south. தென்றலையில் தேவநேயனார் வீடு (இ.வ.).

[தென் + தலை]

தென்றற்கோன் *tenṟaṟ-kōn,* பெ. (n.) *பாண்டியவரசன்;* Pāṇḍya king as the lord of tenṟal. "தென்றற்கோன் செவிமடுத்தார்" *(திருவிளை.மெய்க்கா. 12).*

[தென்றல் + கோன்]

பொதிகை மலைக்கு அரசனாதலால் அங்கிருந்து வீசும் தென்றலுக்கும் அரசன் என்பதால் இப்பெயர் பெற்றான்

தென்றற்றேரோன் *tenṟaṟṟērōn,* பெ. (n.) *காமன்* (பின்.); Kāman, as having the south wind for his chariot.

[தென்றல் + தேரோன்]

காமவிருப்பை மிகுவிக்கும் தென்றலைத் தேராகக் கொண்டிருப்பதால் காமனுக்கு இப்பெயரமைந்தது.

தென்றி *teṉṟi,* பெ. (n.) *1.* தெற்கு; south. "தென்றிக் கயிலையிலே" *(காளத். உலா, 9). 2.* தென்றல் பார்க்க; see *teṉṟal.* "தென்றியா யசைந்து" *(கந்தபு. திருவவ.11).*

[தென் – தென்றி]

தென்றிசைக்கிழவன் *teṉṟišai-k-kiḻavaṉ,* பெ. (n.) தென்றிசைமுதல்வன் பார்க்க; *teṉṟišai-mudalvaṉ.*

[தென் + திசை + கிழவன்]

தென்றிசைக்கோன் *teṉṟišai-k-kōṉ,* பெ. (n.) தென்றிசைமுதல்வன் பார்க்க; *teṉṟišai-mudalvaṉ.*

[தென் + திசை + கோன்]

தென்றிசைப்பாலன் *teṉṟišai-p-pālaṉ,* பெ. (n.) தென்றிசைமுதல்வன் பார்க்க; see *teṉṟišai-mudalvaṉ.*

[தென் + திசை + பாலன்]

தென்றிசைமுதல்வன் *teṉṟišai-mudalvaṉ,* பெ. (n.) தென்திசையின் தலைவனான கூற்றுவன் (திவா.); Yamaṉ as regent of the south.

ம. தென்னல்; க. தெம்பரல், தென்காலி, தம்பெலர்; தெ. தெம்மா (காற்று)

மூழ்கிப்போன குமரிக்கண்டம் தென்றிசையிலிருந்ததாலும் தென்புலத்தார் என்பது நீத்தாரைக் குறிப்பதாலும், தென் திசைக்கு உரிய தலைவனாக, கூற்றுவன் கருதப் பட்டான்.

[தென் + திசை + முதல்வன்]

தென்றிசையங்கி *teṉṟisai-y-aṅgi,* பெ. (n.) உயிர்களைக்கொன்று கடவுளுக்கு உணவளிக்கும் வேள்வித் தீ; one of the three sacred fires of vedic sacrifice.

[தென் + திசை + அங்கி]

தென்று-தல் *teṉṟu-, 5* செ.குவி. (v.i.) *1.* சிதறுதல்; to be scattered, split to pieces. "ஆயிரந்தோளுந் திருச்சக்கரமதனாற் றென்றித் திசை திசைவீழ" *(திவ்.பெரியாழ். 5,3,9). 2.* இனம்பிரிதல்; to stray away, as from a group. "தென்றியிருளிற் றிகைத்த கரி" *(தேவா. 1156, 5).*

ம. தென்னுக

[தெறி → தெற்று → தென்று]

தென்னகர் *teṉ-ṉagar,* பெ. (n.) கூற்றுவன் நகரம் (தெற்கிலுள்ளது); Yamaṉ capital, as being in the south. "தென்னகர்க்கிறை சென்றனன்" *(உபதேசகா. சிவபுண். 227).*

ம. தென்னகர்

[தென் + நகர்]

தென்னங்கட்டை[1] *teṉṉaṅgaṭṭai,* பெ. (n.) பனங்கட்டை போன்று தென்னை மரத்திலிருந்து அறுத்து எடுக்கப்பட்ட கட்டை; log of wood obtained by cutting, coconut tree.

[தென்னை + கட்டை]

இவை கைமரங்களாகப் பயன்படுத்தப் படுகின்றன.

தென்னங்கட்டை[2] *teṉṉaṅgaṭṭai,* பெ. (n.) தேய்ந்த தென்னம் விளக்குமாறு; wornout broom of coconut leaf fibre.

[தென்னை + கட்டை. கட்டை = தேய்ந்தது, குட்டையானது]

தென்னங்கருப்பநீர் *teṉṉaṅ-karuppa-nīr,* பெ. (n.) தென்னையின் பதநீர் (வின்.); sweet coconut-toddy.

[தென்னை + கருப்ப நீர்]

தென்னங்கள் *teṉṉaṅ-kaḷ,* பெ. (n.) தென்னம் பாளையிலிருந்து வடிக்குங் கள்; coconut toddy.

ம. தெங்ஙின் கள்ளு

[தென்னை + கள்]

தென்னங்கன்று *teṉṉaṅ-kaṉṟu,* பெ. (n.) தென்னம்பிள்ளை பார்க்க; see *teṉṉam-piḷḷai.*

[தென்னை + கன்று]

தென்னங்காடி *teṉṉaṅ-gāḍi,* பெ. (n.) தென்னங் கள்ளைப் புளிக்க வைத்து அதனின்று வடிக்கப்படும் சாறு; coconut vinigar (சா.அக.).

[தென்னை + காடி]

நெல்லுமியைப் பயன்படுத்தி விரைந்து புளிக்க வைக்கலாம். இக்காடி ஊறுகாய்க் குதவும். தாகத்தைத் தணிக்கும்.

தென்னங்காய் *tennaṅ-gāy,* பெ. (n.) தேங்காய்; coconut fruit.

ம. தெங்ஙன்

[தென்னை + காய்]

தென்னங்கிடுகு *tennaṅ-kiḍugu,* பெ. (n.) தென்னங் கீற்றால் முடைந்த தட்டி; screen made of braided coconut leaf.

[தென்னை + கிடுகு]

தென்னங்கிளி *tennaṅ-kiḷi,* பெ. (n.) பெரும்பாலும் தென்னையில் வாழும் கிளி வகை; rose-ringed parakeet as nesting the coconut tree.

[தென்னை + கிளி]

தென்னங்கீலகம் *tennaṅ-kīlagam,* பெ. (n.) மேகநாத மூலி; unknown drug (சா.அக.).

தென்னங்கீற்று *tennaṅ-kīṟṟu,* பெ. (n.) தென்னை மட்டையின் ஓலையைமிடைந்த கீற்று; split coconut leaf.

[தென்னை + கீற்று]



தென்னங்குருகு *tennaṅ-kurugu,* பெ. (n.) தென்னையின் உள்ளீடு; heart of the coconut tree.

[தென்னை + குருகு]

தென்னங்குருத்து *tennaṅ-kuruttu,* பெ. (n.) தென்னை மரத்துத் தளிர்; tender terminal bud on the top of the coconut tree-coconut cabbage (சா.அக.).

[தென்னை + குருத்து]

இது சமையலுக்கு உதவும். எனினும் மரத்தை யழிக்காமல் இதைப் பறிக்க வியலாது.

தென்னங்குரும்பி *tennaṅ-krumbi,* பெ. (n.) இளநீர்பிடியாத காய்; very immature coconut.

[தென்னை + குரும்பி]

தென்னங்குரும்பை *tennaṅ-kurumbai,* பெ. (n.) 1. தென்னை மரத்தில் முதன்முதலாக விடும் இளங்காய்; the germ or the first setting of the young coconut. 2. பக்குவப்படாத தேங்காய்; immature coconut. தென்னங் குரும்பை திருக்குரும்பை பன்னாளை டெயெல்லாம் ஒரு மரத்துக்காய் (பழ.) (சா.அக.).

[தென்னை + குரும்பை]

தென்னங்கூந்தல் *tennaṅ-kūndal,* பெ. (n.) தேங்காயைச் சுற்றி அமைந்த நார்; fibre around the coconut.

[தென்னை + கூந்தல்]

தென்னங்கெளுத்தி *tennaṅ-keḷutti,* பெ. (n.) சுவையுள்ள ஒரு வகை மீன் (மீனவ.); a kind of tasty fish.



தென்னங்கொட்டு *tennaṅ-koṭṭu,* பெ. (n.) தென்னைத் தூறு; stump of a coconut tree.

[தென்னை + கொட்டு]

தென்னங்கோம்பை *tennaṅ-kōmbai,* பெ. (n.) 1. இரு கூறாக்கி உள்ளீடு எடுக்கப்பெற்ற தேங்காய் (இ.வ.); split coconut with its kernel taken out. 2. தென்னங்கோழை பார்க்க; see *tennaṅ-kōḻai.*

[தென்னை + கோம்பை]

தென்னங்கோழை *tennaṅ-kōḻai,* பெ. (n.) தேங்காய்க் குடுவை; coconut with the milk and kernal taken out.

[தென்னை + கோழை]

தென்னஞ்சருக்கரை *tennañ-carukkarai,* பெ (n.) தென்னங் கற்கண்டு; coconut jaggery the brown sugar obtained from the pure sweet toddy

[தென்னை + சருக்கரை. சருக்கு → சருக்கரம் → சருக்கரை]

தென்னஞ்சாம்பல் *tennañ-cāmbal,* பெ (n.) தென்னையோலையை எரித்த சாம்பல்; the ashes of the burnt leaves of coconut tree (சா.அக.)

[தென்னை + சாம்பல்]

இது மிகவும் காரமானது, மருந்திற்குப் பயன்படும்

தென்னஞ்சாலை *tennañ-cālai,* பெ. (n.) இரு பக்கத்திலும் தென்னைமரம் உள்ள சாலை; a road having rows of coconut trees on either side.

[தென்னை + சாலை]



தென்னஞ்சேகு *tennañ-jēgu,* பெ. (n.) தென்னையின் மரப்பாகம்; the porcupine wood of commerce

[தென்னை + சேகு]

தென்னந்தும்பு *tennan-tumbu,* பெ. (n.) தென்னை நாரில் திரித்த கயிறு; rope made by the coconut husk.

[தென்னை + தும்பு]

தென்னந்தெளியலாக *tennanteḷiyalāga,* பெ (n.) அங்கங்கே ஒவ்வொன்றாக; sporadically.

[தென்னம் + தெளியலாக]

தென்னம்பஞ்சு *tennam-pañju,* பெ (n.) தென்னைமட்டையின் அடிப்புறத்திலிருக்கும் பஞ்சுபோன்ற மெல்லிய பொருள்; soft, downy substance on the outside of the lower part of the coconut leaves

[தென்னை + பஞ்சு]

தென்னம்பழம் *tennampaḻam,* பெ. (n.) தேங்காய் நெற்று; ripe coconut (S.I.I.V, 93).

[தென்னை + பழம்]

தென்னம்பன்னாடை *tennam-pannāḍai,* பெ (n.) தென்னை மட்டைக்கும், மரத்திற்கும் இடையே மட்டை பிரியுமிடத்தில் காணப்படும் வலை போன்ற பொருள்; a coarse net-like fibrous matting found at the trunk where the foot stalks branch out.

[தென்னை + பன்னாடை]

தென்னம்பால் *tennam-pāl,* பெ. (n.) தென்னங்கள் பார்க்க; see *tennañ-kaḷ* (சா.அக.).

[தென்னை + பால்]

தென்னம்பாளை *tennam-pāḷai,* பெ. (n.) *1.* தென்னம்பூ உள்ளடங்கிய உறை; coconut flower with the integument covering it. *2.* தென்னம்பூவினுறை; integument or spathe of the blossom, which covers it until it expands.

[தென்னை + பாளை]

தென்னம்பிசின் *tennam-piśin,* பெ. (n.) தென்னை மரத்துப் பிசின்; coconut gum.

[தென்னை + பிசின்]

இது சிறிதளவே காணப்படும், பயனற்றது.

தென்னம்பிள்ளை *tennam-piḷḷai,* பெ. (n.) தென்னங்கன்று; coconut sapling.

[தென்னை + பிள்ளை]



தென்னம்பூ *teṉṉam-pū*, பெ (n.) தென்னை மரத்தின் பாளைப்பூ; flowers of coconut tree (சா.அக.)

[தென்னை + பூ]

தென்னம்பூநீர் *teṉṉam-pū-nīr*, பெ (n.) தென்னம்பூவின் சாறு; juice extracted from coconut flower (சா.அக.)

[தென்னை + பூ + நீர்]

தென்னம்பொருப்பு *teṉṉam-poruppu*, பெ (n.) பொதியமலை; Mount Podiyam as the southern mountain. "தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளும்" (புறநா. 33)

[தென் + அம் + பொருப்பு]

தென்னம்மாறு *teṉṉam-māṟu*, பெ (n.) தென்னைவிளக்குமாறு பார்க்க; see *teṉṉai-viḷakkumāṟu*

தென்னம்வெல்லம் *teṉṉam-vellam*, பெ (n.) தென்னஞ் சருக்கரையைக் கட்டியாகத் திரட்டிய வெல்லம்; coconut jaggery (சா.அக.)

[தென்னை + வெல்லம்]

தென்னம்வேர் *teṉṉam-vēr*, பெ (n.) நார்த் தன்மையுடைய தென்னையின் வேர்; the long fibrous roots of coconut tree.

[தென்னை + வேர்]

மருத்துவப் பண்புடையது

தென்னமட்டை *teṉṉa-maṭṭai*, பெ (n.) தென்னைமட்டை பார்க்க; see *teṉṉai-maṭṭai*.

[தென்னைமட்டை → தென்னமட்டை]

தென்னமரம் *teṉṉa-maram*, பெ (n.) தென்னை பார்க்க; see *teṉṉai*. தென்னமரத்திலே தேள்கொட்டப் பனை மரத்திலே நெறி கட்டினது போல (பழ.)

[தென்னை + மரம்]

தென்னர்[1] *teṉṉar*, பெ (n.) தெற்கு; south. "அதற்குத் தென்னர் மன்று மம்பல மொன்றுண்டு" (கோயிற்பு. பதஞ். 71)

[தென் + அர். 'அர்' சொல்லாக்க ஈறு]

தென்னர்[2] *teṉṉar*, பெ (n.) 1. தென்னாட்டவர்; people of southern country. "தென்னர்பிரான் கழுநீற் றரிவான் (பதினொ. திருத்தொண். 44) 2. பாண்டிய வரசர்; the Pāṇḍiyaṉ kings. "தேவர் கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே" (சிலப். 17. பக். 29)

[தென் + அர். 'அர்' பலர்பாலீறு]

தென்னர் *teṉṉar*, பெ (n.) பகைவர் (யாழ்.அக.); foes

ம. தென்னர்

[தெறுநர் → தென்னர்]

தென்னர்நிலம் *teṉṉar-nilam*, பெ (n.) 1. பகைவர் நாடு; enemy's country. 2. போர்க்களம்; battle field

[தென்னர் + நிலம்]

தென்னரங்கன்சம்பா *teṉṉaraṅgaṉ-śambā*, பெ (n.) சம்பா நெல்வகை; a kind of camba paddy. "தென்னரங்கன் சம்பா திருக்குறுங்கை நம்பிசம்பா" (நெல்விடு. 183)

[தென் + அரங்கன் + சம்பா]

தென்னல் *teṉṉal*, பெ (n.) தென்றல் பார்க்க; see *teṉṟal*

ம. தென்னல்

[தென்றல் → தென்னல் (கொ.வ.)]

தென்னவன் *teṉṉavaṉ*, பெ (n.) 1. தென் புலத்தையாண்ட பாண்டியன்; Paṇḍiyaṉ, as ruling in the south. "வாய்வாள் தென்னவன் றொல்லிசை நட்ட குடியொடு" (கலித். 104. 6) 2. இராவணன்; Rāvaṇaṉ. "தென்னவன் மலையெடுக்க" (தேவா. 1051. 10) 3. கூற்றுவன்; Kūṟṟuvaṉ (மதுரைக். 20, உரை)

ம. தென்னவன்

தென்னவன்பிரமராயன் *teṉṉavaṉ-pirama-rāyaṉ*, பெ (n.) மாணிக்கவாசகர் அமைச்சராயிருந்த பொழுது பாண்டியன் கொடுத்த பட்டப்பெயர்; tittle conferred by the Pāṇḍiya king on Māṇikkavaśagar while he was minister. "தென்னவனோனை தென்னவன் பிரமராயனே காண்க" (திருவாலவா. 27. 61) (செ.அக.)

[தென்னவன் + பிரமராயன்]

தென்னவிளக்குமாறு *tenna-vilakkumāru*, பெ. (n.) தென்னைவிளக்குமாறு பார்க்க; see *tennai-vilakkumāru*.

[தென்னை + விளக்குமாறு]

தென்னவெல்லம் *tenna-vellam*, பெ. (n.) தென்னம்வெல்லம் பார்க்க; see *tennam-vellam*.

[தென்னை + வெல்லம்]

தென்னவெனல் *tenna-v-enal*, பெ. (n.) இசைக் குறிப்பு; a syllable sung in tunes. "தென்னவென்னு மிசைவளர்த்து" *(சிலப். 8: 41, அரும்.)*.

[தென்னா + எனல்]

தென்னன் *tennan*, பெ. (n.) தென்னவன் பார்க்க; see *tennavan*. "தென்னன் வாழ்க வாழ்கவென்று" *(சிலப். 29, கந்துகவரி)*.

[தென் → தென்னன்]

தென்னா *tennā*, பெ. (n.) இசையொலிக் குறிப்புச் சொல்; onom. expr. in musical note.

தென்னாடு *ten-nādu*, பெ. (n.) இந்தியாவின் தென்பகுதி; South India. தென்னாடுடைய சிவனே போற்றி *(தேவா.)*.

[தென் + நாடு]

தென்னாதெனாவெனல் *tennā-tenā-v-enal*, பெ. (n.) தாளச் சொற்செட்டு; syllables used in humming tunes or singing. "தென்னா தெனாவென்று வண்டுமுரல் திருவேங்கடத் தென்னானை" *(திவ். திருவாய். 3, 9, 1). (சிலப். 3: 26), உரை, பக்.105)*.

[தென்னா + தெனா + எனல்]

தென்னிப்பார்-தல் *tenni-p-pār-*, 4 செ.குன்றாவி (v.t.) வலையின் அப்போதைய நிலையை எண்ணிப் பார்த்தல் *(மீனவ.)*; to watch the prevailing condition of a net.

தென்னி *tenni*, பெ. (n.) வாழை *(மூஅ.)*; plantain *(செஅக.)*.

[தென் → தென்னி]

தென்னிலம் *tennilam*, பெ. (n.) போர்க்களம்; battle-field.

[தென்னர் + நிலம் = தென்னர்நிலம். தென்னர்நிலம் → தென்னிலம்]

தென்னிலை *ten-nilai*, பெ. (n.) தென்னோலை; coconut leaves. "தென்னிலையின் பகுதியென" *(திருக்காளத். 4, 2, 11)*.

[தென்(னை) + இலை]

தென்னீர்க்கு *tennīrkku*, பெ. (n.) தெங்கு ஓலையின் ஈர்க்கு *(வின்.)*; rib of the coconut leaf.

[தென்னை + ஈர்க்கு]

தென்னு[1]-தல் *tennu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. வளைதல்; to bent. 2. நெம்புதல்; to lift, as with a lever. 3. கிளம்புதல்; to rise.

தென்னுரை *ten-n-urai*, பெ. (n.) தென்மொழி பார்க்க; see *ten-moli*. "அன்ன நடையார் . . . மடலூரரார் என்பதோர் வாசகமுந் தென்னுரையிற் கேட்டறிவ துண்டு" *(திவ்.பெரியதிரும. 391)* *(செஅக.)*.

[தென் + உரை]

தென்னுலகு *ten-n-ulagu*, பெ. (n.) தென்றிசை யுலகம்; the world of the manes. "தென்னுலகிற் புகுந்தனையோ" *(திருவிளை. வன்னியுங் கிணறும். 21)*.

[தென் + உலகு]

தென்னை *tennai*, பெ. (n.) தெங்கு *(பிங்.)*; coconut-palm.

ம. தென்ன

[தென் → தென்னை]



தென்னை வகை

1. பச்சைத் தென்னை, பச்சிளநீர்; green coconut tree.

தென்னை



தேமா

CPL600913



தேற்றாமரம்



தொட்டாற் சுருங்கி

2. சிவப்புத் தென்னை, செவ்விளநீர்; red coconut tree.

3. ஈழத்துத் தென்னை; Ceylon coconut tree.

4. கொங்குத் தென்னை; congoo coconut.

5. கொட்டைக் காய்ச்சித் தென்னை; coconut with small nuts but with thick kernels.

6. ஆயிரங் காய்ச்சித் தென்னை; many small fruited coconut tree.

7. கடல் தெங்கு; double coconut of Maldives.

8. அடுக்கிளநீர்த் தென்னை.

9. கெவுளி பாத்திரத்தென்னை; yellow coconut tree.

10. பெருந் தென்னை.

11. நக்கவாரத் தென்னை; Nicobar dwarf yellow coconut tree.

600913

12. தேளித் தென்னை.

13. பார்ப்பாரத் தென்னை; brahmin coconut or coramandal coconut *(சா.அக.)*.

தென்னைநீர் *teṉṉai-nīr,* பெ. (n.) இளநீர்; water of tender coconut.

[தென்னை + நீர்]

494.811321 SEN.A-3

தென்னைமட்டை *teṉṉai-maṭṭai,* பெ. (n.) 1. தென்னையோலையின் நடுவிலுள்ள மட்டை; coconut leaf stalk. 2. தேங்காயின் கூந்தல்; coconut husk.

[தென்னை + மட்டை]



தென்னைமரம் *teṉṉai-maram,* பெ. (n.) தென்னை பார்க்க; see *teṉṉai.* தென்னை மரத்தில் ஏண்டா ஏறினாய், கன்றுக் குட்டிக்குப் புல்பிடுங்க, தென்னை மரத்தில் புல் ஏதடா? அதுதான் கீழே இறங்குகிறேன் என்றானாம் *(பழ.).* தென்னை மரத்திற்குத் தண்ணீர் வார்த்தால் தலையாலே தரும் *(பழ.).*

ம. தென்னமரம்

[தென்னை + மரம்]

தென்னையோலை *teṉṉai-y-ōlai,* பெ. (n.) தென்னைமட்டையின் ஓலை; the leaf of the coconut palm.

ம. தெங்ஙோல

[தென்னை + ஓலை]

தென்னைவட்டு *teṉṉai-vaṭṭu,* பெ. (n.) தென்னை வெல்லத்தைப் பலவடிவாகத் திரட்டிய கட்டி; calles of cocoanut jaggery *(சா.அக.)*

[தென்னை + வட்டு]

தென்னைவிளக்குமாறு *teṉṉai-viḷakkumāṟu,* பெ. (n.) தென்னையோலையின் ஈர்க்குகளாலான துடைப்பம்; broom made of palm leaf fibre.

[தென்னை + விளக்குமாறு]

தென்னைவெல்லம் *teṉṉai-vellam,* பெ. (n.) தென்னம்வெல்லம் பார்க்க; see *teṉṉam-vellam.*

[தென்னை + வெல்லம்]

தென்னோகலம் *teṉṉō-kalam,* பெ. (n.) கருநாவல்; black jamoon *(சா.அக.).*

தென்னோலை *teṉṉōlai,* பெ. (n.) தென்னையோலை பார்க்க; see *teṉṉai-ōlai.*

[தென்னை + ஓலை]

தெனாது *teṉādu,* பெ. (n.) 1. தெற்குள்ளது; that which is in the south. "தெனாஅ துருகெழுகுமரி" *(புறநா. 6).* 2. தெற்கு; south. "வடாதுந் தெனாதும் பாராசர் வகுத்த நேமி" *(பாரத. பதின்மூன்றாம். 50).*

[தென் + அது. அது → ஆது]

தே

தே[1] *tē,* த் என்ற மெய்யெழுத்தும் ஏ என்ற உயிரெழுத்தும் சேர்ந்த கூட்டெழுத்து; the syllable formed by adding the long vowel *'ē'* to the consonant *'t'.*

[த் + ஏ]

தே[2] *tē,* பெ. (n.) கொள்ளுகை *(பிங்.);* acquiring.

[தெவ்வு → தே]

தே[3] *tē,* பெ. (n.) *1.* தெய்வம் *(பிங்.);* the deity. "தேபூசை செய்யுஞ் சித்திரசாலை" *(சிவரக. நைமிச. 20). 2.* தலைவன் *(இலக்.அக.);* chief, lord.

ம. தே

[தேய்தல் = உரசுதல். தேய் → தே = (உரசிப் பற்றும்) நெருப்பு, (நெருப்பாகிய) தெய்வம், (தெய்வம் போன்ற) தலைவன் (வ.வ. 16)]

தே[5] *tē,* பெ. (n.) மாடு துரத்தும் ஒலிக்குறிப்பு; onom. expr. of driving cattle.

தேக்கந்தீவு *tēkkan-tīvu,* பெ. (n.) ஏழுதீவுகளு ளொன்று; an annular continent named after the tree called tēkku, one of ēlu-tīvu *(செ.அக.).*

[தேக்கு → தேக்கம் + தீவு]

தேக்கம்[1] *tēkkam,* பெ. (n.) *1.* தேங்குகை; being brimful. *2.* நிறைவு *(வின்.);* fullness, satiety. *3.* நீரோட்டத்தின் தடை; obstruction of the flow of water.

[தேங்கு → தேக்கு → தேக்கம்]

தேக்கம்[2] *tēkkam,* பெ. (n.) ஏப்பம்; eructation. "அக்னி தன்னிறம் பெற்றுத் தேக்கமிட்டபடி" *(திவ்.திருநெடுந். 200, வியா. பக். 155).*

ம. தேக்கம்; க. தேகு, தேகு; தெ. தேகு, தேஞ்சு, தேவு; து. தேரு; கோத. தேக்ள்; துட. தோக்; குட. தேகிலி; பட. தேகு; கோண். தேர்; கூ. தேபக்; கொலா. டேர்க் (கக்கல்)

[தேங்குதல் = உயர்தல், மிகுதல். தேங்கு → தேக்கு → தேக்கம் (மு.தா. 73)]

தேக்கம்[3] *tēkkam,* பெ. (n.) மனக்கலக்கம்; perturbation

[தயக்கம் → தியக்கம் → தேக்கம். தயக்கம் = செய்வதறியாது நிற்கும் நிலை]

தேக்கம்[4] *tēkkam,* பெ. (n.) *1.* தடை; obstruction. தேக்கமொன்று மிலன் *(திவ்.பெரியாழ். 2,9,3). 2.* அச்சம்; fear *(திவ்.பெரியாழ். 2,9,3, வியா.ப. 457).*

[தேங்கு → தேக்கம்]

தேக்கர் *tēkkar,* பெ. (n.) மிகுதி; abundance. "மான்மதத் தேக்கரும்" *(கம்பரா. எதிர்கொள். 13).*

தேக்கரண்டி *tē-k-karaṇḍi,* பெ. (n.) 60 துளி கொள்ளளவு கொண்ட சிறுகரண்டி; a small spoon holding 60 drops of liquid; tea spoon.

[தே + கரண்டி]

தேக்கல் *tēkkal,* பெ. (n.) செம்பாறை; gravel rock, gravel stone *(சா.அக.).*

தேக்கிடு-தல் *tēkkiḍu-,* 4 செ.கு.வி. (v.i.) *1.* உணவின் மிகுதியால் அதில் வெறுப்பு நிலையடைதல்; to be satiated, as a person with rich food. *2.* ஏப்பமிடுதல்; to belch, eructate. "நெருப்புத் தின்றுதேக்கிடுகின்றது" *(கம்பரா. இலங்கையெரி. 46). 3.* நீர் முதலியன உள் நிரம்பி வெளிவருதல்; to brim over. "அமுத மயிர்க்கா றோறுந் தேக்கிடச் செய்தனன்" *(திருவாச. 3, 171).*

[ஏ → தே → தேக்கு + இடு-.]

தேக்கிவருவி *tēkki-varuvi,* பெ. (n.) தொழு நோய், குட்டம்; leprosy *(சா.அக.).*

தேக்கிவி *tēkkivi,* பெ. (n.) மொகசி மரம்; mootchy tree *(சா.அக.).*

தேக்கு[1]**-தல்** *tēkku-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1.* நீர் முதலியவற்றை ஓரிடந் தேங்கக் கட்டுதல்; to stop the flow, as of water; to dam up. "செவ்வழி நீரொடுங் குருதி தேக்கினான்" *(கம்பரா. கும்பகருண. 99). 2.* நிரம்பப் பருகுதல்; to drink to the full. "நிறைமத்த மதுவைத் தேக்கி" *(கம்பரா. அதிகாய. 215). 3.* தடை பண்ணுதல் *(சங்.அக.);* to obstruct.

[தேங்கு → தேக்கு-.]

தேக்கு[2]**-தல்** *tēkku-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* நிறைதல்; to be full, copious, abundant, replete. "தேக்கிய

தேனுடன்" (கல்லா. 1). 2. ஏப்பம் விடுதல்; to belch. "ஆலமுண் டமுதேமிகத் தேக்குவர்" (தேவா. 529, 3). 3. தெவிட்டுதல்; to be sated, glutted, cloyed, satiated. "நாய்கழு கொருநாள் கூடியுண்டு தேக்கு விருந்தா முடலை" (தாயு. எந்நாட். யாக்கை. 3).

[தேங்குதல் - உயர்தல், மிகுதல். தேங்கு → தேக்கு. தேக்குதல் = அடிவயிற்றிலுள்ள காற்றை எழுப்புதல், ஏப்பம் விடுதல். ஏப்பம் என்னும் சொல்லும் ஒலிக் குறிப்பொடு எழுச்சி குறித்த ஏகாரங் கலந்ததே (மு.தா. 73)]

தேக்கு³ *tēkku,* பெ. (n.) 1. தெவிட்டு (அக.நி.); fullness; repletion, satiety. 2. ஏப்பம்; belching, eructation. "தேக்கின் தூய்மை" (குறள், 942, உரை).

[தேங்கு → தேக்கு]

தேக்கு⁴ *tēkku,* பெ. (n.) தேக்குமரம்; teak wood tree.

ம. தேக்கு; க. தேகு, தேக, தேங்கு; தெ. டேகு, தேகு; கோண். டேகா, தேகர; கொலா. தேக், டெக்; பர். டேரிக்மெரி (தேக்கு மரம்)

[தேங்குதல் = உயர்தல், மிகுதல். தேங்கு → தேக்கு. உயர்ந்த அல்லது உயர்வான மரம் (மு.தா. 73)]



தேக்கு வகை

1. பெருந்தேக்கு - large variety of teak tree.
2. வெண்தேக்கு - white teak.
3. குமிழ்த் தேக்கு - cashmere tree.
4. கற்றேக்கு - patana oak.
5. சிறுதேக்கு - cleodendron serratum.
6. பூந்தேக்கு - flower teak.
7. சொறிதேக்கு - cori teak
8. மெழுகுத் தேக்கு - wax teak
9 சோலை வெண்தேக்கு - looking glass plant of southern ghats.
10. கொழுக்கட்டைத் தேக்கு (அல்) கொள்ளிக் கட்டைத் தேக்கு - firebrand teak.
11. நாய்த் தேக்கு - dog teak.
12. பலந்தேக்கு - godaveri sebestan.
13. பூனைத் தேக்கு - rosy flowered batavian teak.
14. உவாத்தேக்கு - sand peper tree.
15. வத்தேக்கு - strong teak.
16. மஞ்சள் தேக்கு (அ) மஞ்சக்கடம்பு - saffron teak.

தேக்கு⁵ *tēkku,* பெ. (n.) 1. கமுகு; areca nut. 2. சண்பகம்; champauk tree (சா.அக.).

தேக்கு⁶ *tēkku,* பெ. (n.) இனிப்பு; sweetness (சா.அக.).

[தீம் → தேம் → தேம்கு → தேக்கு]

தேக்குடிச்சி *tēt-kuḍicci,* பெ. (n.) கருவண்டு; a black bee.

[தேன் + குடிச்சி. தேங்குடிச்சி → தேக்குடிச்சி]



தேக்கெறி¹-தல் *tēkkeṟi-,* 3 செ.கு.வி. (v.i.) 1. தெவிட்டுதல்; to be satiated; to be surfeited, cloyed. 2. ஏப்பமிடுதல்; to belch. "தேக்கெறிந்து

வருதலிற் றீம்புனல்" (கம்பரா. பாலகா. ஆற்றுப். 10). 3. *நிறைதல்;* to be full, brimful; to swell, as the ocean.

[தேக்கு² + எறி-.]

தேக்கெறி²-தல் *tēkkeṟi-,* 2 செகுன்றாவி. (v.t.) *நிரம்பவுண்ணுதல்;* to eat to the full. "செயற்றலைநின் றுழப்பவர்க டேக்கெறிவர்" *(தணிகைப்பு. நாட். 130).*

[தேக்கு + எறி-.]

தேக்கொக்கு *tēk-kokku,* பெ. (n.) *தேமா;* sweet mango.

[தே + கொக்கு. கொக்கு = மாமரம்]

தேகிகை *tēkikai,* பெ. (n.) *ஒரு புழு;* a worm.

தேங்கண்ணி *tēṅkaṇṇi,* பெ. (n.) *காட்சிக்கு அழகிய கண்களை உடைய கடல் மீன்;* sea-fish which has beautiful eyes.

[தேம் + கண்ணி]

தேங்கமுகந்தளத்தல் *tēṅga-mugantaḷatal,* பெ. (n.) *படி முதலியவற்றால் அளக்கும் அளவுவகை* (தொல்.எழுத்து. 2, உரை); measuring grain, etc., with a standard measure.

[தேங்கு + முகந்து + அளத்தல்]



தேங்கல் *tēṅgal,* பெ. (n.) 1. *நிறைதல்;* full. 2. *அச்சக் குறிப்பு;* gesture of fear. 3. *மிகுதல்;* overwhelm. 4. *குலைதல்;* collapse.

[தேங்கு + அல். 'அல்' தொழிற்பெயரீறு.]

தேங்கனி¹ *tēṅgaṉi,* பெ. (n.) *தேங்காய்;* coconut. "தேங்கனியுங் கொண்டு வந்து சீராக வைத்தாராம்" *(கோவ.க. 65).*

[தெங்கு + கனி → தெங்குகனி → தேங்கனி. தேங்காய் பார்க்க]

தேங்கனி² *tēṅgaṉi,* பெ. (n.) *சுவை நிறைந்த பழவகை;* sweet fruit.

[தேம் + கனி. தேம் = இனிமை]

தேங்காய்¹ *tēṅgāy,* பெ. (n.) *தென்னை மரத்தின் காய்;* fruit of coconut tree. *தேங்காய் தின்னவன் இருக்கக் கோம்பை சூப்பினவன் தெண்டம் இறுக்கிறதா? (பழ.).*

ம. தேங்ங, தெங்ஙங்காயி; க. தெங்கின காயி, தெங்காயி; தெ. டெங்காய, தெங்காய; குட. தெங்கெ; கோத. தெங்காய்; துட. தொக்; பட. தெங்கெ

[தென்னை + காய் → தென்னங்காய் → தெங்கங்காய் → தேங்காய்]

மேற்பக்கம் ஓடால் மூடப்பட்டிருக்கும். உட்பக்கம் வெண்ணிறமான சதையும், நீருமிருக்கும். முற்றின தேங்காயில் சதைப்பற்று மிகுந்து நீர் குறைந்தும், இளந்தேங்காயில் சதைப்பற்று குறைந்து நீர் மிகுந்துமிருக்கும். தேங்காயை உலர்த்திக் கொப்பரையாக்கி, அதைச் செக்கிலிட்டு ஆட்டித் தேங்காயெண்ணெய் எடுப்பர் (சா.அக.).

தேங்காய் வகை

1. குருவித் தேங்காய் - இதுவே நெல்லி.
2. குறுந்தேங்காய் - சமுத்திராப் பழம்.
3. கொட்டைத் தேங்காய் - matured coconut.
4. கொப்பரைத் தேங்காய் - dried coconut.
5. சிறுதேங்காய் - fully riped though small.
6. இளநீர்த் தேங்காய் - tender coconut.
7. தேளித் தேங்காய் - a kind of red coconut.

தேங்காய்² *tēṉ-gāy,* பெ. (n.) *இனிய காய்;* sweet fruit. தேங்காய் நெல்லியும் *(பெருங். உஞ்சைக். 52, 43).*

[தீம் → தேம் + காய். தீம் = இனிமை]

தேங்காய்க்கண் *tēṅgāy-k-kaṇ,* பெ. (n.) *தேங்காயின் மேலிடத்துள்ள முக்கண்;* the three eyes of the coconut.

ம. தேங்ஙாக்கண்ணு

[தேங்காய் + கண்]

தேங்காய்க்கண்திற-த்தல் *tēṅgāy-k-kaṇ-tiṟa-,* 4 செ.குவி. (v.i.) *தேங்காய்க்குள் மருந்தைப்*

புகட்டுவதற்காக அதன் கண்ணைத் துளைத்தல்; to make a hole through one of three eyelets on the top of the shell in order to insert medicine or other drugs into it after clearing the water contained it.

[தேங்காய் + கண் + திற-.]

தேங்காய்க்கணு *tĕṅgāy-k-kaṇu*, பெ. (n.) தேங்காயோட்டின் நரம்பு; joints of the three sections of a coconut shell.

[தேங்காய் + கணு]

தேங்காய்க்கயர் *tĕṅgāy-k-kayar*, பெ. (n.) *1.* தேங்காய் உச்சியின் மெல்லோடு (யாழ்ப்.); soft or spongy crown of the coconut. *2.* தேங்காயோட்டோடு பற்றியிருக்கும் பருப்பின் தோல்; lowest part of the coconut kernal sticking to the shell (செ.அக.).

[தேங்காய் + கயர்]

தேங்காய்க்கயில் *tĕṅgāy-k-kayil*, பெ. (n.) பாதித் தேங்காய்; half of a coconut.

மறுவ. தேங்காய் மூலி, தேங்காய் மூடி

[தேங்காய் + கயில்]



தேங்காய்க்கன்னமுது *tĕṅgāy-k-kaṉṉamudu*, பெ. (n.) தேங்காய்க்கன்னலமுது பார்க்க; see *tĕṅgāy-k-kaṉṉalamudu*.

[தேங்காய்க்கன்னலமுது → தேங்காய்க் கன்னமுது]

தேங்காய்க்கன்னலமுது *tĕṅgāy-k-kaṉṉal-amudu*, பெ. (n.) தேங்காய்ப்பாலைச் சேர்த்துச் செய்த கன்னலமுது; a sweet preparation with coconut pulp.

[தேங்காய் + கன்னலமுது]

தேங்காய்க்கீரை *tĕṅgāy-k-kīrai*, பெ. (n.) தேங்காய்ப்பூக்கீரை பார்க்க; see *tĕṅgāy-p-pū-k-kīrai*.

[தேங்காய் + கீரை]

தேங்காய்க்கீற்று *tĕṅgāy-kīṟṟu*, பெ. (n.) தேங்காய்ப் பத்தை; cocoanut kernal sliced into several pieces.

மறுவ. தேங்காய்ப் பத்தை, தேங்காய்ச் சில், தேங்காய்த் துண்டு, தேங்காய் வகிர், தேங்காய்ப்பல்

[தேங்காய் + கீற்று]

தேங்காய்க்குடுக்கை *tĕṅgāy-k-kuḍukkai*, பெ. (n.) தேங்காயோட்டினாற் செய்த குப்பி; a round empty shell of coconut made to serve as a bottle to preserve anything (சா.அக.).

ம. தேங்ஙாக்குடுக்க

[தேங்காய் + குடுக்கை]

தேங்காய்க்குடுமி *tĕṅgāy-kuḍumi*, பெ. (n.) உரித்த தேங்காயில் விடப்பட்ட உச்சிநார்க் கற்றை; tuft of fibres on the crown of the coconut.

[தேங்காய் + குடுமி]



தேங்காய்க்குருப்பு *tĕṅgāy-k-kuruppu*, பெ. (n.) தேங்காய்ப்பூ பார்க்க; see *tĕṅgāy-p-pū*.

[தேங்காய் + குருப்பு]

தேங்காய்க்குரும்பை *tĕṅgāy-k-kurumbai*, பெ. (n.) முதிராத் தேங்காய்; immature coconut perhaps not fertilised (சா.அக.).

[தேங்காய் + குரும்பை]

தேங்காய்க்கூடு *tēṅgāy-k-kūḍu,* பெ. (n.) தேங்காய்கள் இட்டுவைத்திருக்கும் சிறு கொட்டகை (நாஞ்.); a shed where coconuts are stored.

ம. தேங்ஙக்கூடு

[தேங்காய் + கூடு]

தேங்காய்க்கொப்பரை *tēṅgāy-k-kopparai,* பெ. (n.) உலர்ந்த தேங்காய்; dried kernal of coconut (சா.அக.).

[தேங்காய் + கொப்பரை]

தேங்காய்க்கோம்பை *tēṅgāy-k-kōmbai,* பெ. (n.) தென்னங்கோம்பை பார்க்க; see *teṉṉaṅkōmbai.*

[தேங்காய் + கோம்பை]

தேங்காய்கட்டியடி-த்தல் *tēṅgāy-kaṭṭi-y-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) தொந்தரவு செய்தல்; to give trouble, to vex, worry.

[தேங்காய் + கட்டி + அடி-.]

தேங்காய்ச்சதை *tēṅgāi-c-cadai,* பெ. (n.) தேங்காயினுட் சதைப்பற்று; kernal of coconut (சா.அக.).

[தேங்காய் + சதை]

தேங்காய்ச்சிண்டு *tēṅgāy-c-ciṇḍu,* பெ. (n.) தேங்காய்க்குடுமி பார்க்க; see *tēṅgāy-k-kuḍumi.*

[தேங்காய் + சிண்டு]

தேங்காய்ச்சிரட்டை *tēṅgāy-c-ciraṭṭai,* பெ. (n.) கொட்டங்கச்சி; half of a coconut shell.

ம. சிரட்ட; க. கரட; குட. செரடெ; பட. கரட்டலு

[தேங்காய் + சிரட்டை]

தேங்காய்ச்சில் *tēṅgāy-c-cil,* பெ. (n.) *1.* தேங்காய்ப் பருப்பின் கூறு; a piece of coconut albumen with or without the shell. *2.* கொட்டங் கச்சிக் கூறு; a piece of coconut shell.

[தேங்காய் + சில்]

தேங்காய்ச்சுடு-தல் *tēṅgāy-c-cuḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) தேங்காயைக் கண் வழியாகத் துளைத்து வெல்லம், கடலை, அரிசி, வறுத்த எள் முதலானவற்றை உள்ளே நிறைத்தடைத்து நிலத்தில் புதைத்து அவ்விடத்தில் தீமூட்டி வேகவைத்தல்; to cook the coconut by kiln method, with some edibles.

[தேங்காய் + சுடு]

தேங்காய்ச்சொட்டு *tēṅgāy-c-coṭṭu,* பெ. (n.) தேங்காய்ப் பருப்பின் துண்டு (வின்.); slice or thin piece of coconut albumen.

[தேங்காய் + சொட்டு]

தேங்காய்த்தட்டு *tēṅgāy-t-taṭṭu,* பெ. (n.) கப்பலின் பின்பக்கத்து மேற்றட்டு; poop deck.

[தேங்காய் + தட்டு]

தேங்காய்த்தண்ணீர் *tēṅgāi-t-taṇṇīr,* பெ. (n.) *1.* இளநீர்; the sweet astringent fluid of tender coconut. *2.* முற்றிய தேங்காயின் தண்ணீர்; sweet water of the riped coconut (சா.அக.).

[தேங்காய் + தண்ணீர்]

தேங்காய்த்தலையன் *tēṅgāy-t-talaiyaṉ,* பெ. (n.) தேங்காயைப் போன்ற தலையுடையோன்; one having a big head like coconut (சா.அக.).

[தேங்காய் + தலையன்]

தேங்காய்த்திருகல் *tēṅgāy-t-tirugal,* பெ. (n.) தேங்காய்த்துருவல் பார்க்க; see *tēṅgay-t-turuval* (சா.அக.).

[தேங்காய் + திருகல்]

தேங்காய்த்திருகி *tēṅgāy-t-tirugi,* பெ. (n.) தேங்காய்த்துருவி பார்க்க; see *tēṅgāy-t-turuvi.*

[தேங்காய் + திருகி]

தேங்காய்த்துண்டு *tēṅgāy-t-tuṇḍu,* பெ. (n.) தேங்காய்க்கீற்று பார்க்க; see *tēṅgāy-k-kīṟṟu.*

[தேங்காய் + துண்டு]

தேங்காய்த்தும்பு *tēṅgāy-t-tumbu,* பெ. (n.) தேங்காய் நார்க் கயிறு (யாழ்ப்.); thread made by fibres of the coconut-husk.

[தேங்காய் + தும்பு]

தேங்காய்த்துருவல் *tēṅgāy-t-turuval,* பெ. (n.) தேங்காய்ப் பருப்பின் துருவிய பூ; coconut scrapings (சா.அக.).

[தேங்காய் + துருவல்]

தேங்காய்த்துருவி *tēṅgāy-t-turuvi,* பெ. (n.) தேங்காய்ப் பருப்பைத் துருவுங் கருவி; coconut scraper.

[தேங்காய் + துருவி]



தேங்காய்த்துருவுமனை *tēṅgāy-t-turuvu-maṉai,* பெ. (n.) தேங்காய்த்துருவி பார்க்க; see *tēṅgāy-t-turuvi.*

[தேங்காய் + துருவும் + மனை]

தேங்காய்த்துவையல் *tēṅgāy-t-tuvaiyal,* பெ. (n.) தேங்காய்ப் பருப்பும் மசாலையும் கலந்தரைக்கப்படும் தொடுகறி வகை; chutny, as side dish, made of coconut kernal and spices.

[தேங்காய் + துவையல்]

தேங்காய்நெய் *tēṅgāy-ney,* பெ. (n.) தேங்காய்ப் பாலினின்று காய்ச்சியெடுக்கப்படும் எண்ணெய்; a kind of fragrant oil prepared from coconut juice.

தேங்காயெண்ணெய் வேறு; தேங்காய்நெய் வேறு

ம. தேங்ஙாநெய்

[தேங்காய் + நெய்]

தேங்காய்நெற்று *tēṅgāy-neṟṟu,* பெ. (n.) முதிர்ந்த தேங்காய்; matured and dried coconut useful for rising seedlings (சாஅக.).

[தேங்காய் + நெற்று]



தேங்காய்ப்பத்தை *tēṅgāy-p-pattai,* பெ. (n.) தேங்காய்க்கீற்று பார்க்க; see *tēṅgāy-k-kīṟṟu.*

[தேங்காய் + பத்தை]

தேங்காய்ப்பருப்பு *tēṅgāy-p-paruppu,* பெ. (n.) தேங்காயின் உட்சதைப்பற்று; coconut kernal (சாஅக.).

[தேங்காய் + பருப்பு]

தேங்காய்ப்பல் *tēṅgāy-p-pal,* பெ. (n.) தேங்காய்க்கீற்று பார்க்க; see *tēṅgāy-k-kīṟṟu*

ம. தேங்ஙாப்பல்

[தேங்காய் + பல்]

தேங்காய்ப்பாயசம் *tēṅgāy-p-pāyašam,* பெ. (n.) தேங்காய்க்கன்னலமுது பார்க்க; see *tēṅgāy-k-kaṉṉal-amudu.*

[தேங்காய் + பாயசம்]

தேங்காய்ப்பாரை[1] *tēṅgāy-p-pārai,* பெ. (n.) தேங்காய் மட்டை உரிக்க உதவும் கருவி; an iron-piece fixed in a stone for husking coconut.



தேங்காய்ப்பாரை[2] *tĕṅgāy-p-pārai,* பெ. (n.) எட்டுவிரல நீளம் வளரக்கூடியதும் நீலப்பச்சை நிறமுடையதுமான கள்ளப் பாறை மீன் (மீனவ); horse-mackerel, bluish green, attaining 8 inch in length.

[தேங்காய் + பாரை]

தேங்காய்ப்பால் *tĕṅgāy-p-pāl,* பெ. (n.) 1. தேங்காய்த் துருவலினின்று பிழிந்த பால்; coconut juice pressed from the scraped kernal. ஆப்பத்தைத் தேங்காய்ப் பாலில் சேர்த்துண்டால் அருமையான சுவை. 2. தேங்காய்த் துருவலினின்று பிழிந்து சருக்கரையிட்டுச் சமைக்கப்படும் பருகம்; a sweet preparation of coconut juice.

ம. தேங்ஙாப்பால்

[தேங்காய் + பால்]

தேங்காய்ப்பாலவியல் *tĕṅgāy-p-pāl-aviyal,* பெ. (n.) தேங்காய்ப்பாலோடு பல கறிகள் ஒன்று சேர்த்துச் சமைத்த கறிவகை (யாழ்ப்.); a vegetable curry cooked with coconut juice.

மறுவ. சொதி (நெல்லை)

[தேங்காய் + பால் + அவியல்]

தேங்காய்ப்பாறை[1] *tĕṅgāy-p-pāṟai,* பெ. (n.) கடல் பாறை மீனின் வகை; a kind of sea fish of the caranx genus (சா.அக.).

[தேங்காய் + பாறை]

தேங்காய்ப்பாறை[2] *tĕṅgāy-p-pāṟai,* பெ. (n.) தேங்காய்ப்பூவைக் கொண்டு செய்யப்படும் தின்பண்டம்; a toffee made by coconut.

[தேங்காய் + பாறை]

தேங்காய்ப்பிண்ணாக்கு *tĕṅgāy-p-piṇṇākku,* பெ. (n.) தேங்காயினின்றும் எண்ணெய் எடுத்த பிறகு எஞ்சிய சக்கை; the resdue or refuse or oil cake left after extracting the oil from the kernal by a mill (சா.அக.).

இது கோழி, புறா, பன்றி போன்றவற்றுக்கு உணவாகவும், தென்னைக்கு எருவாகவும் பயன்படும்.

ம. தேங்ஙாப்பிண்ணாக்கு

[தேங்காய் + பிண்ணாக்கு]

தேங்காய்ப்புரிக்கயிறு *tĕṅgāy-p-puri-k-kaiṟu,* பெ (n.) தென்னம் நாரினாலான கயிறு; thread made of coconut fibre.

[தேங்காய் + புரி + கயிறு]

தேங்காய்ப்பூ *tĕṅgāy-p-pū,* பெ. (n.) 1. தேங்காய் முளை; the white solid albumen sprouting inside the coconut. 2. தேங்காய்த்துருவல் பார்க்க; see *tĕṅgāy-t-turuval* (சா.அக.).

[தேங்காய் + பூ]

தேங்காய்ப்பூக்கீரை *tĕṅgāy-p-pū-kīrai,* பெ. (n.) தேங்காய்த் துருவல் போலுள்ள பூவைக் கொண்ட கீரைவகை; a kind of brown spinach, the flowers of which resemble scraped coconut.

[தேங்காய் + பூ + கீரை]

தேங்காய்ப்பூடு *tĕṅgāy-p-pūḍu,* பெ. (n.) அரிசிப்பூடு எனும் செடி; a plant.

[தேங்காய் + பூடு]

தேங்காய்ப்பூத்துண்டு *tĕṅgāy-p-pū-t-tuṇḍu,* பெ. (n.) தேங்காய்த் துருவல் போல் மெத்தென்று நெய்த பருத்தித் துண்டு; turkey towel. பேச்சாளர்களுக்குத் தேங்காய்ப்பூத் துண்டு போர்த்தினேன் (உ.வ.).

தேங்காய்ப்பூநாறி *tĕṅgāy-p-pū-nāṟi,* பெ. (n.) தேங்காய்ப்பூக்கீரை (யாழ்.அக.) பார்க்க; see *tĕṅgāy-p-pū-k-kīrai.*

[தேங்காய் + பூ + நாறி]

தேங்காய்ப்பூவறை *tĕṅgāy-p-pūvaṟai,* பெ. (n.) பால் பிழியப்பட்ட தேங்காய்த் துருவலாற் செய்யப்படும் கறிவகை; a kind of curry prepared from coconut-scrappings whose juice has been pressed out.

[தேங்காய் + பூவறை]

தேங்காய்மட்டை *tĕṅgāy-maṭṭai,* பெ. (n.) தேங்காயின் மேலிருக்கும் நார்ப்பாகம் – கதம்பை; coconut fibre and husk (சா.அக.).

[தேங்காய் + மட்டை]

தென்னை மட்டை வேறு; தேங்காய் மட்டை வேறு.

தேங்காய்மணி *tēṅgāy-maṇi,* பெ. (n.) 1. தேங்காய் முளை (வெ); seed of a coconut. 2. தேங்காய்க் கொப்பரை; kernal of coconut.

[தேங்காய் + மணி]

தேங்காய்மந்திரி-த்தல் *tēṅgāy-mandiri-,* 4 செகுவி. (v.i.) தேங்காயோது-தல் பார்க்க; see *tēṅgāy-ōdu-.*

[தேங்காய் + மந்திரி]

தேங்காய்மரம் *tēṅgāy-maram,* பெ. (n.) தென்னைமரம் பார்க்க; see *tennai-maram.* தேங்காய் மரத்தில் தேள்கொட்ட மாங்காய் மரத்தில் நெரி ஏறியதாம் (பழ.).

க. தெங்கின மர; பட. தெங்கெமொர

[தேங்காய் + மரம்]

தேங்காய்முகரி *tēṅgāy-mugari,* பெ. (n.) தேங்காய்க் கண்களின் இடைப்பாகம்; the portion in the coconut - shell between its two closed eyes, deemed the hardest part.

[தேங்காய் + முகரி]

தேங்காய்முகிழ் *tēṅgāy-mugil,* பெ. (n.) தேங்காயின் மடல் (வின்.); the integument of coconut.

[தேங்காய் + முகிழ்]

தேங்காய்முளை *tēṅgāy-muḷai,* பெ. (n.) தேங்காய்ப் பருப்பின் முளைப்பகுதி; the almond like substance (சா.அக.).

[தேங்காய் + முளை]

இது முற்றும்போது உட்பக்கம் முழுவதையும் கவர்ந்துகொள்ளும்.

தேங்காய்முறி *tēṅgāy-muṟi,* பெ. (n.) தேங்காய் மூடி பார்க்க; see *tēṅgāy-mūḍi.*

மறுவ. தேங்காய் மூளி, தேங்காய் மூடி

[தேங்காய் + முறி]

தேங்காய்மூடி *tēṅgāy-mūḍi,* பெ. (n.) உடைத்த தேங்காயின் பாதி; half of a coconut (சா.அக.)

[தேங்காய் + மூடி. முறி → முடி → மூடி]

தேங்காய்மூரி *tēṅgāy-mūri,* பெ. (n.) தேங்காயின் நரம்பு; the three nerves of a coconut.

[தேங்காய் + மூரி]

தேங்காய்மொத்தி *tēṅgāy-motti,* பெ. (n.) மாட்டின் முன்னங்காலின் இடையிலுள்ள தசைத் திரட்சி (யாழ்.அக)); lump of flush in the middle of the forelegs of cattle or buffaloes (செ.அக.).

[தேங்காய் + மொத்தி]



தேங்காய்வகிர் *tēṅgāy-vagir,* பெ. (n.) தேங்காய்க்கீற்று பார்க்க; see *tēṅgāy-k-kīṟṟu* (சா.அக.).

[தேங்காய் + வகிர்]

தேங்காய்வழுக்கை *tēṅgāy-vaḻukkai,* பெ. (n.) தேங்காயின் முற்றாத உள்ளீடு; soft kernal or albumen of an immature coconut.

[தேங்காய் + வழுக்கை]

தேங்காய்வெட்டி *tēṅgāy-veṭṭi,* பெ. (n.) தேங்காய் மட்டை உரிக்குங் கருவி; instrument for husking coconut.

[தேங்காய் + வெட்டி]

தேங்காய்வெண்ணெய் *tēṅgāy-veṇṇey,* பெ. (n.) தேங்காய்நெய் பார்க்க; see *tēṅgāy-ney* (நாஞ்.) (செ.அக.).

[தேங்காய் + வெண்ணெய்]

தேங்காயடி *tēṅgāy-aḍi,* பெ. (n.) எதிரியின் தேங்காயைத் தன் தேங்காயில் உடைத்தவனே வென்றவனென்று கருதப்படும் விளையாட்டு வகை (யாழ்.அக.); a game in which a person breaking the coconut of his antagonist with his own, is declared the winner.

[தேங்காய் + அடி]

தேங்காயெண்ணெய் *tēṅgāy-eṇṇey,* பெ. (n.) தேங்காயின் எண்ணெய்; coconut oil (சா.அக.).

ம. தேங்ஙாணி; பட. தெங்கெண்ணெ

[தேங்காய் + எண்ணெய்]

தேங்காய்க் கொப்பரையைச் செக்கிலிட்டு ஆட்டக் கிடைப்பது. வெளிர்மஞ்சள் நிறமுடையதாயும் மணமுடையதாயும் நெய் போன்றுமிருக்கும். குளிரில் உறையுந் தன்மையுடைத்து. நாட்படவிருந்தால் கெட்டுப் போகும். மருந்துக்குதவும் மயிர்ப் பூச்செண்ணெயாயும், சமையலெண்ணெ யாயும் பயன்படும்.

தேங்காயெண்ணெய்ச்சவ்வு *tēṅgāy-eṇṇai-c-cavvu,* பெ. (n.) சவுக்காரக் கட்டி; soap (சா.அக.).

[தேங்காய் + எண்ணெய் + சவ்வு]

தேங்காயெறி-தல் *tēṅgāy-eṟi-,* 3 செ.கு.வி. (v.i.) இறைத்திருமேனியின் முன் சிதறு தேங்கா யுடைத்தல் (நாஞ்.); to dash coconuts and break, as offering to an idol.

[தேங்காய் + எறி]

தேங்காயோடு *tēṅgāy-ōḍu,* பெ. (n.) கொட்டாங்கச்சி; coconut shell (சா.அக.).

[தேங்காய் + ஓடு]

தேங்காயோது-தல் *tēṅgāy-ōdu-,* 5 செ.கு.வி. (v.i.) தேங்காயில் ஆற்றல் உண்டாகும்படி மந்திரித்தல் (வின்.); to confer magical virtues on coconut by incantations.

[தேங்காய் + ஓது]

தேங்கிட்டி *tēṅgiṭṭi,* பெ. (n.) தேள் கொடுக்கிப் பச்சிலை; a kind of medicinal plant (சா.அக.).

தேங்கு[1]-தல் *tēṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நிறைதல்; to fill, become full, rise to the brim. "மதுவது தேங்கு கும்பம்" (திருப்பு. 501). 2. தங்குதல்; to stay, stagnate. "தேங்கு கங்கைத் திருமுடிச் செங்கணான்" (கம்பரா. காட்சி. 21). 3. மிகுதல் (வின்.); to be crowded, abundant, copious.

[தெண்டுதல் = நெம்புதல், மேற்கிளப்புதல். தெண்டு → தெங்கு → தேங்கு. தேங்குதல் = உயர்தல், மிகுதல்]

தேங்கு[2]-தல் *tēṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மனங்கலங்குதல் (பிங்.); to be puzzled; to be in trepidation. "நீர் . . . தேங்க வேண்டாவிறே" (ஈடு. 9,7,9). 2. கால நீட்டித்தல்; to delay, tarry. "தேங்காதிருவோ நேரிறைஞ்ச" (பெரியபு. திருநா. 267). 3. கெடுதல்; to perish; to be ruined. "தேங்காத மள்ளர்" (சீவக. 16).

தேங்கு[3]-தல் *tēṅgu,* 5 செ.கு.வி. (v.i.) அஞ்சுதல்; to be afraid. "நாம் இத்தைச் செய்யும்படியென் என்று தேங்குதல் அல்பமுமுடைய வனல்லன்" (திவ்.பெரியாழ். 2,9,3, வியா, பக். 45).

[தியங்கு → தேங்கு]

தேங்கு[4] *tēṅgu,* பெ. (n.) தெங்கு; coconut.

[தெங்கு → தேங்கு]

தேங்குதண்ணீர் *tēṅgu-taṇṇīr,* பெ. (n.) தேங்கி நிற்கும் தண்ணீர்; stagnant water (சா.அக.).

[தேங்கு + தண்ணீர்]

தேங்குழல் *tēṅguḻal,* பெ. (n.) பணியார வகை; a kind of vermicular confection made of rice paste. "பொரி தேங்குழ லப்பம்" (தனிப்பா. 2, 75, 189).

ம. தேங்குழல்

[தேன் + குழல்]

தேங்குழலுரல் *tēṅguḻal-ural,* பெ. (n.) தேங்குழற் செப்பு பார்க்க; see *tēṅguḻaṟ-ceppu.*

[தேன் + குழல் + உரல்]

தேங்குழலுழக்கு *tēṅguḻal-uḻakku,* பெ. (n.) தேங்குழற்செப்பு பார்க்க; see *tēṅguḻaṟ-ceppu.*

[தேங்குழல் + உழக்கு]

தேங்குழற்செப்பு *tēṅguḻaṟ-ceppu,* பெ. (n.) தேங்குழல் பிழியுங் கருவி; cylindrical utensil for preparing tēṅguḻal.

மறுவ. தேங்குழல் அச்சு

[தேன் + குழல் + செப்பு]



தேங்கைச்சுட்டுப்புகைத்துவிடு-தல் *tēngai-c-cuttu-p-pugaittu-vidu-*, 20 செ.கு.வி. (v.i.) தேங்காயைச் சுட்டு புகைகாட்டுதல்; exposing to the fumes of burnt coconut (சா.அக.).

தேசக்காவல்[1] *tēša-k-kāval*, பெ. (n.) தாய் நாட்டைக் காவல் புரிகை; guarding the mother-land.

[தேசம் + காவல்]

தேசக்காவல்[2] *tēša-k-kāval*, பெ. (n.) கொள்ளையரால் துன்பம் நேராதபடி இறையிலி நிலமளித்து நாட்டைக் காவல் புரியச் செய்யும் பழைய முறை; the ancient system of guarding a tract of country against marauders and compensating the person or persons employed for the purpose by grants of land rent free or by various fees or allowances (R.F.).

[தேசம் + காவல்]

தேசகாலம் *tēšakālam*, பெ. (n.) குறிப்பிட்ட வேளை; பொழுது, சந்தி எனும் காலம்; particular time, day, evening and dusk (கல்.வெ.).

தேசத்தலைவர் *tēša-t-talaivar*, பெ. (n.) நாடு முழுதும் செல்வாக்குள்ள தலைவர்; national leader.

[தேசம் + தலைவர்]

தேசத்துரோகம் *tēša-t-turōgam*, பெ. (n.) தேசவஞ்சனை பார்க்க; see *tēša-vañjanai*.

[தேசம் + துரோகம்]

Skt. dhuroha → த. துரோகம்

தேசத்தொண்டன் *tēša-t-tondan*, பெ. (n.) தேசப்பற்றாளன் பார்க்க; see *tēša-p-parrālan*.

[தேசம் + தொண்டன். தொண்டு - தொண்டன்]

தேசத்தொண்டு *tēša-t-tondu*, பெ. (n.) நாட்டு நலனை முன்னிறுத்திச் செய்யும் ஊழியம்; patriotrict service. விடுதலைப் போரில் தேசத் தொண்டே முன்னிறுத்தப்பட்டது.

[தேசம் + தொண்டு]

தேசதருமம் *tēša-tarumam*, பெ. (n.) தேசப்பழமை பார்க்க; *tēša-p-palamai*.

[தேசம் + தருமம்]

தேசப்படம் *tēša-p-padam*, பெ. (n.) நாட்டின் அரசியல், நில அமைப்பைக் காட்டும் படம்; map (of a country).

[தேசம் + படம்]

தேசப்பண் *tēša-p-pan*, பெ. (n.) தேசியப்பண் பார்க்க; *tēšiya-p-pan*.

மறுவ. நாட்டுப்பண்

[தேசம் + பண்]

தேசப்பழமை *tēša-p-palamai*, பெ. (n.) நாட்டு வழக்கம் (யாழ்ப்.); ancient or established customs or usages of a country.

[தேசம் + பழமை]

தேசப்பற்றாளி *tēša-p-parrāli*, பெ. (n.) தாய் நாட்டின் மீது மிகுந்த பற்றுடையவன்; patriotic person. விடுதலைப் போரிலீடுபட்ட தேசப்பற்றாளிகள் தனிமைச் சிறையிலடைக்கப் பட்டனர் (உ.வ.).

[தேசம் + பற்றாளி]

தேசப்பற்று *tēša-p-parru*, பெ. (n.) ஒருவர் தம் நாட்டு நலனிலும் வளர்ச்சியிலும் கடமையுணர்வோடிருக்கும் ஈடுபாடு; patriotism; love for one's country.

[தேசம் + பற்று]

தேசபக்தன் *tēša-paktan*, பெ. (n.) தேசப்பற்றாளி பார்க்க; *tēša-p-parrāli*.

[தேசம் + பக்தன். பத்தன் → பக்தன்]

த. பத்தன் → Skt. bakta

தேசபக்தி *tēša-bakti*, பெ. (n.) தேசப்பற்று பார்க்க; *tēša-p-parru*.

[தேசம் + பக்தி. பத்தி → பக்தி]

த. பத்தி → Skt. bakti

தேசபண்டாரி *tēšapandāri*, பெ. (n.) தெள்ளாறு எறிந்த நந்திவர்மனுடைய சிறப்புப் பெயர்களில் ஒன்று; name of Tellāru erinda Nandivarman.

[தேசம் + பண்டாரி]

தேசம் *tēšam*, பெ. (n.) 1. இடம்; place. காலதேச மறிந்து நடத்த வேண்டும். தேசங்கள்தோறும் மொழி (பாஷை)கள் வேறு (பழ.). 2. நாடு; country, province, territory, land, district.

தேசமெல்லாம் புகழ்ந்தாடுங் கச்சி (திருவாச. 9,4). தேசத்து நன்மை தீமை அரசர்க்கு இல்லையா? (பழ.) 3. நாவலந் தீவில் அமைந்த 56 தேசங்கள்; countries of ancient India, 56 in number.

ம. தேசம்

[துகு → திகு → திகை = முடிவு, எல்லை. திகைதல் = முடிதல், தீர்தல், தீர்மானமாதல், 'மாதம் திகைந்த சூலி', 'அதன் விலை இன்னும் திகையவில்லை' என்பது தென்னாட்டு வழக்கு. திகை → திசை = முடிவு, எல்லை, பக்கம். திசை → (தேசு) → தேசம்]

திசை, தேசம் என்னும் சொற்கள் பக்கம் என்னும் பொருளில் வருதலை 'அந்தத் திசைக்கே போக மாட்டேன்' என்னும் தமிழ் வழக்காலும், 'ஏகதேசம்' என்னும் வடமொழி வழக்காலும் அறியலாம். ஏகதேசம் = ஒரு பக்கம், ஒரு பகுதி. தேசம் என்னும் சொல் முதலாவது எல்லையைக் குறித்து, பின்பு ஓர் எல்லையில் அல்லது பக்கத்தில் உள்ள நாட்டைக் குறித்தது.

ஒ.நோ.: சீமை = எல்லை, நாடு (மு.தா. 97)

த. தேசம் → skt. dēśa

56 தேசங்களாவன

அங்கம், அவந்தி, ஆந்திரம், ஆலயம், இடங்கணம், இலாடம், உகந்தரம், ஒட்டம், கடாரம், கருசம், கலிங்கம், கன்னடம், காசுமீரம், காந்தாரம், காம்போகம், கிராதம், குகுரம், குரு, குளிந்தம், கூர்ச்சரம், கேகயம், கேரளம், கொங்கணம், கோசலம், கௌடம், சவ்வீரம், சாதகம், சாலவம், சிங்களம், சிந்து, சீனம், சூரசேனம், சேரி, சோழம், சோனகம், திராவிடம், திரிகர்த்தம், துளுவம், நிடதம், நேபாளம், பப்பரம், பாஞ்சாலம், பாண்டியம், பாரசீகம், புளிந்தம், போடம், மகதம், மச்சம், மத்திரம், மராடம், மலையாளம், மாளவம், வங்கம், வங்காளம், விதர்ப்பம், விராடம்.

தேசவழமை *tēśa-vaḻamai,* பெ. (n.) தேசப்பழமை பார்க்க; see *tēśa-p-paḻamai.*

[தேசம் + வழமை]

தேசாட்சரி *tēśāṭcari,* பெ. (n.) ஓர் பண்; kind of node.

தேசாதி *tēśadi,* பெ. (n.) கவரையர் குலத்தலைவன் (வின்.); chief of the Kavaraiyar caste.

தேசாதேசம் *tēśatēśam,* பெ. (n.) பற்பல நாடு; various countries.

[தேசம் + தேசம்]

தேசி *tēśi,* பெ. (n.) அழகி; beautiful women. "தேசியைச் சிறையில் வைத்தான்" (கம்பரா. அங்கத. 4).

[உல் → துல் → துள் → தொள் → தோள் → தோய் → தேய் → தேசு → தேசி]

தேசிகப்பாடு *tēśiga-p-pāḍu,* பெ. (n.) நாட்டில் நிகழும் வழக்கப்படி, வெளிநாடுகளில் இருந்து வருவோர்க்குத் திருக்கோயில்களில் ஒரு வேளை உணவு அளிக்கச் செய்யும் ஏற்பாடு; custom of supplying one time food for those who come from foreign countries. "விண்ணகோவரையர் வைத்த தானம் நிசதி நாநாழி அரிசி தேசிகப்பாடு கொடுப்போ மானோம்" (தெ.க.தொ. 12, 1, 42).

தேசியக்கொடி *tēśia-k-koḍi,* பெ. (n.) ஒரு நாட்டுக்குரிய அடையாளக்கொடி; national flag. மூவண்ணக் கொடியாகிய நமது தேசியக் கொடியைக் காலை ஆறு மணியிலிருந்து மாலை ஆறுமணி வரை மட்டுமே பறக்கவிட வேண்டும்.

[தேசம் → தேசியம் + கொடி]

தேசியகீதம் *tēśiya-kīdam,* பெ. (n.) தேசியப் பண் பார்க்க; see *tēśiya-p-paṇ.*

[தேசம் → தேசியம் + கீதம்]

தேசியச்சின்னம் *tēśiya-c-cinnam,* பெ. (n.) நாட்டை அடையாளப்படுத்தற்குக் கையாளப் படும் கொடி, பண் முதலியன; national flag, national anthem etc., to mark as an emblem of a country

[தேசம் → தேசியம் + சின்னம்]

தேசியத்தலைவர் *tēśiya-t-talaivar,* பெ. (n.) தேசத்தலைவர் பார்க்க; see *tēśa-t-talaivar.*

[தேசம் → தேசியம் + தலைவர்]

தேசியப்பண் *tēśiya-p-paṇ,* பெ. (n.) நாட்டுப் பற்றை வெளிப்படுத்துவதும், நாட்டுச் சின்னமாக விளங்குவதுமாகிய பாடல்;

தேசியக்கொடி - பறவை
விலங்கு - மலர் - சின்னம்

தேசியக் கொடி



தேசிய மலர்

தேசிய விலங்கு

தேசியப் பறவை

தேசியச் சின்னம்

சென்னை-600 008

national anthem. விழாமுடிவில் தேசியப்பண் இசைக்கப்பட்டது.

மறுவ. நாட்டுப்பண்

[தேசம் → தேசியம் + பண்]

தேசியப்பறவை *tēśiya-p-paṟavai,* பெ. (n.) ஒரு நாட்டுக்குரியதாக அறிவிக்கப்படும் பறவை; national bird. மயில் நமது நாட்டின் தேசியப் பறவை.

[தேசம் → தேசியம் + பறவை]

தேசியம் *tēśiyam,* பெ. (n.) 1. நாட்டின் முழுமையையும் ஒற்றுமையையும் நோக்கமாகவுடைய போக்கு; nationalism. முன்னைப் பிரிவினைக்காரர்கள் இன்று தேசியம் பேசுகின்றனர். 2. ஓர் இனமக்கள் தங்கள் தனித்துவத்தை வலியுறுத்தி அரசியலில் தனியுரிமைகோரும் போக்கு; nationalism advocated by ethnic groups. 3. நாடு முழுவதற்கும் உரியது அல்லது நாடு முழுவதையும் சார்ந்தது; that which belongs to the nation. தேசியக்கொடி, தேசியப்பண்.

[தேசம் → தேசியம்]

தேசியமலர் *tēśiya-malar,* பெ. (n.) ஒரு நாட்டிற்குரியதாக அறிவிக்கப்படும் பூ; national flower. தாமரைப்பூ நமது நாட்டின் தேசிய மலர்.

[தேசம் → தேசியம் + மலர்]

தேசியமாணவர்ப்படை *tēśiya-māṇavar-p-paḍai,* பெ. (n.) படைப்பயிற்சி பெறும் மாணவ இளைஞர் படை; national cadet corps (NCC).

[தேசியம் + மாணவர் + படை]

தேசியவியக்கம் *tēśiya-v-iyakkam,* பெ. (n.) நாட்டின் நலன் கருதி இயங்கும் இயக்கம்; national movement. மொழிவளர்ச்சிக்குத் தேசியவியக்கம் தேவை.

[தேசம் → தேசியம் + இயக்கம்]

தேசியவிலங்கு *tēśiya-vilaṅgu,* பெ. (n.) ஒரு நாட்டுக்குரியதாக அறிவிக்கப்படும் விலங்கு; national animal. புலி நமது நாட்டின் தேசிய விலங்கு.

[தேசம் → தேசியம் + விலங்கு]

தேசு *tēśu,* பெ. (n.) 1. ஒளி; bright. 2. பொன்; gold. 3. அழகு; beauty. "திருமா மணிவண்ணன் தேசு" (திவ். இயற். 3:9). 4. புகழ்; fame. "நும்முடைத் திருவுந் தேசும்" (சீவக. 771). 5. அறிவு (ஞானம்); knowledge. "தேசுறு முண்பார்க் கென்றே தேறு" (சைவச. பொது. 561). 6. பெருமை; proud. "வலிச்சினமு மானமுந் தேசும்" (பு.வெ. 2:4). 7. வீரியம் (வின்.); energy.

த. தேசு; வ. தேஜஸ்

[தேய் → தேயு → தேசு]

தேசுகொள் *tēśukoḷ,* பெ.எ. (adj.) புகழாகிய ஒளியைக் கொண்டுள்ள; live so gloriously with fame. "செழியரைத் தேசுகொள் ஸ்ரீ கோராஜ கேஸரிவர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு" (தெ.க.தொ. 3:1, 4).

[தேசு + கொள்]

தேட்கடி *tēṭ-kaḍi,* பெ. (n.) தேட்கொட்டு பார்க்க; see *tēṭ-koṭṭu.*

[தேள் + கடி]

தேட்கடை[1] *tēṭ-kaḍai,* பெ. (n.) 1. குருகு விண்மீன் (மூலம்) (பிங்.); 19th nakṣatra. 2. பூடு வகை (மூ.அ.); a medicinal plant.

[தேள் + கடை]

தேட்கடைப்பூண் *tēṭ-kaḍai-p-pūṇ,* பெ. (n.) தேட்கொடுக்கி பார்க்க; see *tēṭ-koḍukki* (சா.அக.).

தேட்குமச்சி *tēṭ-kumacci,* பெ. (n.) தேக்குடிச்சி பார்க்க; see *tēk-kuḍicci* (தமி.சொ.அக.).

தேட்கெண்டை *tēṭ-keṇḍai,* பெ. (n.) ஐந்து விரல நீளம் வளரும் கடல்மீன் வகை (யாழ்.அக.); sea-fish, olive, attaining 5 inch in length.

[தேள் + கெண்டை]

தேட்கொட்டான் *tēṭ-koṭṭāṉ,* பெ. (n.) பனையிலையிலுள்ளதும் தீண்டினால் தேள்நஞ்சுபோற் கடுப்பை உண்டாக்குவது மான பூச்சிவகை (இ.வ); a green insect whose touch produces the same sensation as scorpion - sting found on palmyra leaves.

[தேள் + கொட்டான்]

தேட்கொட்டு *tēṭ-koṭṭu,* பெ. (n.) கொடுக்கு முனையால் தேள் குத்துகை; stinging of a scorpion thrust of a scorpion's sting.

[தேள் + கொட்டு]

தேட்கொடுக்கி *tēṭ-koḍukki,* பெ. (n.) *1.* சிறு செடி வகை (பதார்த்த. 263); turnsole. *2.* செடி வகை; tiger's claw.

[தேள் + கொடுக்கி]

தேட்கொடுக்கு *tēṭ-koḍukku,* பெ. (n.) தேளின் வாலிலுள்ள கொடுக்கு; scorpion sting.

[தேள் + கொடுக்கு]

தேட்டக்காரன் *tēṭṭa-k-kāraṉ,* பெ. (n.) *1.* வருவாயுள்ளவன்; person who has amassed riches. *2.* திருடன்; thief, pick pocket.

[தேட்டம் + காரன்]

தேட்டம் *tēṭṭam,* பெ. (n.) *1.* ஈட்டுகை; acquiring, earning, accumulation. *2.* துருவிக் கொள்ளுகை; seeking, search, pursuit. *3.* திரட்டப்பட்ட பொருள்; acquisition; that which is earned or hoarded. "தேட்டற்ற தேட்டமே" (தாயு.தேசோ.5). *4.* கவலை; anxiety, solicitude. 'அவனுக்குப் பிள்ளைமேல் வெகு தேட்டம்'. *5.* விருப்பம்; earnest desire, appetite, longing. "தேட்டந்தான் வாளெயிற்றிற் றின்னவோ" (கம்பரா. சூர்ப். 121).

ம. தேட்டம்

[தேடு → தேட்டு → தேட்டம்]

தேட்டாக்கூறு *tēṭṭā-k-kūṟu,* பெ. (n.) தேடாக்கூறு பார்க்க; see *tēḍā-k-kūṟu.*

[தேடு + ஆ + கூறு]

தேட்டாண்மை[1] *tēṭṭāṇmai,* பெ. (n.) ஈட்டம்; earning, as of wealth. "தேட்டாண்மை செய்வாய்" (அருட்பா. 1, நெஞ்சறி. 377).

[தேடு → தேட்டு + ஆண்மை. ஆள் + மை – ஆண்மை]

தேட்டாமரம் *tēṭṭāmaram,* பெ. (n.) மர வகைகளுள் ஒன்று; a kind of tree.

கூரைக்கை, தூண்கள் இவற்றிற்குப் பயன்படும் மரம்.

தேட்டாளன்[1] *tēṭṭāḷaṉ,* பெ. (n.) வருவாயுள்ளவன்; thriving, wealthy person. "தேட்டாளன் காயற்றுறை சீதக்காதி" (தனிப்பா. 238, 8). *2.* புதல்வன் (இ.வ.); son.

[தேட்டு + ஆளன்]

தேட்டாளன்[2] *tēṭṭāḷaṉ,* பெ. (n.) உழைப்பாளி; labour.

ம. தேட்டாளன் (வேடன்)

[தேட்டு + ஆளன்]

தேட்டாறு *tēṭṭāṟu,* பெ. (n.) கால்நடை நோய் வகை; a disease of cattle.

தேட்டு *tēṭṭu,* பெ. (n.) *1.* விருப்பம்; earnest desire. "தேட்டறுஞ் சிந்தை திகைப்பறும்" (திருமந். 2745). *2.* வருவாய் ஈட்டுகை; earning. "தேட்டற்ற தேட்டமே" (தாயு. தேசோ. 5). *3.* துருவிக் கொள்ளுகை; seeking. "தேட்டருந் திறற் றேனினை" (திவ். பெருமாள். 2). *4.* சாப்பாடு முதலியவற்றின் நிறைவு (சம்பிரமம்); richness, as of dinner. *5.* பேணுகை (வின்.); supporting.

[தேடு → தேட்டு]

தேட்டூண் *tēṭṭūṇ,* பெ. (n.) வருமானம் (சம்பாத்தியம்); earnings. "தேட்டூணு மெங்கள் குடியிருப்பும் . . . எல்லாம் போச்சுது" (தெய்வச். விறலிவிடு. 499).

[தேடு + ஊண்]

தேட்டை[1] *tēṭṭai,* பெ. (n.) தேட்டம் பார்க்க; see *tēṭṭam.*

தேட்டை[2] *tēṭṭai,* பெ. (n.) தெளிந்த மோர்; clear butter milk (சா.அக.).

தேட்டை[3] *tēṭṭai,* பெ. (n.) *1.* தெளிவு; clearness, transparancy. *2.* தெளிந்த நீர் (வின்.); clear water. *3.* உயர்ந்தது; that which is superior. அதற்கு இது தேட்டை (இ.வ.)

தேட்படை *tēṭ-paḍai,* பெ. (n.) கொம்பரக்கு; stic lac (சா.அக.).

தேடாக்கூறு *tēḍā-k-kūṟu,* பெ. (n.) பேணாமை (யாழ்ப்.); lack of support, neglected condition.

[தேடு + ஆ + கூறு. 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தேடாத்தேட்டம் *tēḍā-t-tēṭṭam,* பெ. (n.) பெருமுயற்சி அல்லது தீயவழியா லீட்டிய பொருள் (வின்.); acquisition by unparalleled labour or by unworthy and unjust means.

[தேடு + ஆ + தேட்டம். 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தேடி *tēḍi,* பெ. (n.) அதிவிடயம்; atis. "தேடித் தீந்தேன் றிப்பிலி" (சீவக. 2703).

தேடித்தின்(னு)-தல் *tēḍi-t-tiṉṉu-,* 14 செ.குன்றாவி. (v.t.) 1. அற்றை நாளீட்டிய பொருளான் வாழ்வு நடத்தல் (இ.வ.); to live from hand to mouth. 2. பரத்தமையாய் வாழ்தல் (வின்.); to live by whoredom.

மறுவ. அன்றாடங்காய்ச்சி

[தேடு → தேடி + தின்.]

தேடிப்பிடி-த்தல் *tēḍi-p-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கண்டுபிடித்தல்; to search. 2. கள்ளக் கணவனைப் பெறுதல்; to procure a paramour.

ம. தேடிப்பிடிக்குக

[தேடி + பிடி-.]

தேடியதேட்டம் *tēḍiya-tēṭṭam,* பெ. (n.) தாமே ஈட்டிய செல்வம் (யாழ்ப்.); self acquired property.

[தேடு → தேடி + தேட்டம்]

தேடியாடித்திரி-தல் *tēḍi-y-āḍi-t-tiri-,* 3 செ.கு.வி. (v.i.) தேடியோடித்திரி-தல், பார்க்க; see *tēḍi-y-ōḍi-tiri-.* (செ.அக.).

[தேடி + ஆடி + திரி-.]

தேடியோடித்திரி-தல் *tēḍi-y-ōḍi-t-tiri-,* 3 செ.கு.வி. (v.i.) பெருமுயற்சி செய்தல்; to make great efforts.

[தேடி + ஓடி + திரி-.]

தேடிவை-த்தல் *tēḍi-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) பொருள் சேர்த்து வைத்தல்; to earn and lay up.

[தேடி + வை-.]

தேடு¹-தல் *tēḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. துருவி நாடுதல்; to seek, search for, enquire after. "தேடினே னாடிக்கண்டேன்" (தேவா. 1189, 3). தேடித் தின்றவர் தெய்வத்தோ டொத்தவர் (பழ.). 2. ஈட்டுதல்; to acquire, earn, procure. "பாடுபட்டுத் தேடி" (நல்வழி, 22). தேடிய மூலிகை காலில் தட்டினாற்போல (பழ.). 3. பேணல்; to take care of, cherish, foster, provide for. அவனை ஒருவருந் தேடுவாரில்லை (உ.வ.). தேடுவார் அற்றபிணம் தெருவோடு (பழ.).

ம. தேடுக; குட. தெட்; துட. தொட்க்

[தோண்டு → தேண்டு → தேடு.

ஒ.நோ.: நோண்டு → நேண்டு → நேடு. நேடுதல் - தோண்டுதல் - தோண்டிப் பார்த்தாற் போல் தேடுதல். தேடிப்பார்த்தல் (வே.க. 287)]

தேடு²-தல் *tēḍu-,* 5 செ.கு.வி. (v.i.) முயலல்; to seek, try, as to do a thing. "கோயிலுக்கு எழுந்தருளத் தேட" (குருபரம். 511). தேடிப் புதைத்துத் தெருவில் இருக்கிறதா? (பழ.).

தேடு³ *tēḍu,* பெ. (n.) மீன்வகை; a fish. தேட்டுத் துண்டம் (நாஞ்.).

ம. தேடு

தேடுகூலி *tēḍu-kūli,* பெ. (n.) ஆவணம் முதலியவற்றைத் துருவிக் கண்டெடுத்தற் குரிய கூலி; search fee, paid for searching a document in a record office (செ.அக.).

[தேடு + கூலி]

தேண்டு-தல் *tēṇḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தேடு-1 பார்க்க; see *tēḍu-1.* "தேண்டிநேர் கண்டேன் வாழி" (கம்பரா. உருக்காட்டு. 77).

[தேடு → தேண்டு-.]

தேண்மண்டலி *tēṇ-maṇḍali,* பெ. (n.) தேள் மண்டலி பார்க்க; see *teḷ-maṇḍali* (சா.அக.).

[தேள் → தேண் + மண்டலி]

தேணிறம் *tēṇiṟam,* பெ. (n.) மாந்தளிர்க் கல் (யாழ்.அக.); a kind of green stone.

மறுவ. கற்காவி

[தேள் + நிறம்]

தேத்தடை *tē-t-t-aḍai,* பெ. (n.) தேத்திறால் பார்க்க; see *tē-t-t-iṟāl.* "தேத்தடைத் திரள் கிழிந் தசும்பறா வரை" (தணிகைப்பு. நாட்டு. 14).

[தேம் + அத்து + அடை]

தேத்தா *tēttā,* பெ. (n.) ஒரு வகை மரம் (யாழ்ப்.); a kind of tree.

தேத்தாலடி-த்தல் *tēttālaḍi-,* 4 செ.குன்றாவி. (v.i.) பலவிடத்தும் மலிவாக விற்றல்; to be available everywhere at a nominal price. கத்தரிக்காய் தெருவெல்லாந் தேத்தா லடிக்கிறது. (நாஞ்.)

ம. தேத்தலடிக்குக

தேத்தான் *tēṭṭāṉ,* பெ. (n.) 1. தேத்தான் கொட்டை பார்க்க; see *tēttāṉ-koṭṭai.* 2. கழற்சிக்காய்; molucca bean (சா.அக.).

தேத்தான்கொட்டை *tēttāṉ-koṭṭai,* பெ. (n.) மருந்துக்குப் பயன்படும் தேற்றா மரத்தின் கொட்டை; seed of the water clearing tree (சா.அக.).

[தேத்தான் + கொட்டை. தேற்றான் → தேத்தான்]

தேத்தி *tētti,* பெ. (n.) தேத்தான்கொட்டை பார்க்க; see *tēttāṉ-koṭṭai* (சா.அக.).

தேத்தியன் *tēttiyaṉ,* பெ. (n.) தேத்தான் பார்க்க; see *tēttāṉ* (சா.அக.).

தேத்திறால் *tē-t-t-iṟāl,* பெ. (n.) தேனிறால் (தொல்.எழுத்து. 344, உரை); honeycomb.

[தேன் → தேம் → தேத் + இறால்]

தேத்துக்காலி *tēttu-k-kāli,* பெ. (n.) அடங்காதவள்-ன்; vagabond, loafer.

[தேம்² + காலி → தேத்துக்காலி]

தேத்துலை *tē-t-tulai,* பெ. (n.) பாறை மீன்; kind of fish called 'pāṟai'.

தேத்துவாளை *tēttu-vāḷai,* பெ. (n.) வாளை மீன் வகையுள் ஒன்று; kind of fish in 'vāḷai' species.

[தேம் → தேத்து + வாளை]

தேத்தெலே *tēttelē,* பெ. (n.) ஒரு மீன் வகை (மீனவ.); a kind of fish.

தேதாவெனல் *tētā-v-eṉal,* பெ. (n.) இசைக் குறிப்பு; onom. expr. of humming the syllables தே, தா in a tune. "தேதாவென வண்டொடு தேன் வரிசெய்ய" (சீவக. 1066).

[தேதா + எனல்]

தேது *tēdu,* பெ. (n.) தேசு பார்க்க; see *tešu.* "தேதெரி பாங்கையி லேந்தி" (தேவா. 892, 4).

தெ. தேசு

தேதேயெனல் *tētē-y-eṉal,* பெ. (n.) இசை குறிப்பு; onom. expr. of humming the syllables தே, தே in a tune. "அஞ்சிறைவண்டு தண்டேன் பருகித் தேதேயெனுந் தில்லையோன்" (திருக்கோ. 82).

[தேதே + எனல்]

தேந்தம் *tēndam,* பெ. (n.) குதிரைச்சுழி வகை; a mark in horses. "பிறப்புவகை வளருந்தேந் தம்" (தஞ்.சர. iii, 117).

தேந்தலை *tēn-dalai,* பெ. (n.) 1. செத்தை பார்க்க; see *šettai.* 2. தேங்குழல் (தஞ்சை.) பார்க்க; see *tēṅguḷal.*

தேந்தேமெனல் *tēn-tēm-eṉal,* பெ. (n.) இசைக்குறிப்பு; onom. expr. of the sound of a drum. "தேந்தேமென்னு மணிமுழவமும்" (சீவக. 292).

[தேம் + தேம் + எனல்]

தேநவரை *tē-navarai,* பெ. (n.) ஐந்துவிரல நீளம் வரை வளரும் நவரை மீன் வகை; red-mullet, chestnut, attaining 5 inch in length.

[தேம்' + நவரை]

தேநீர் *tēnīr,* பெ. (n.) தேனில் நீரைக் கலந்து குடிக்குமொரு பருகம்; a drink of honey mixed water.

[தேன் + நீர்]

தேப்பானை *tē-p-pāṉai,* பெ. (n.) தேன் பெய்த பானை; pot containing honey (நன்.213. மயிலை).

[தேன் + பானை - தேன்பானை → தேம்பானை → தேப்பானை]

தேப்புல் *tēppul,* பெ. (n.) தேயிலைப் புல் அல்லது சுன்னாரிப்புல்; tea-grass.

[தே + புல்]

தேப்பெருமாள் *tē-p-perumāḷ*, பெ. (n.) *காஞ்சிபுரத்திற் கோயில் கொண்டுள்ள திருமால்;* 'Tirumāl', as worshipped at Kanjipuram.

[தே² + பெருமாள்]

தேப்பை *tēppai*, பெ. (n.) *தெப்பம்;* raft. 'பிறவிநீர்க் கடலை நீந்துநற் றேப்பையாம்" (மேருமந். 1201).

தேபூசை *tē-pūšai*, பெ. (n.) *கடவுள் பூசை;* worship, reverent homage paid to god. *தேபூசைமேற் கவனந் தீர்ந்துவிட்டேன் (விறலிவிடு).*

[தே + பூசை]

தேம்¹ *tēm*, பெ. (n.) *1. இனிமை;* sweetness; pleasantness. "தேங்கொள் சுண்ணம்" *(சீவக. 12).* 2. *மணம் (பிங்.);* fragrance, odour. "தேங்கமழ் கோதை" *(பு.வெ.12,7).* 3. தேன்; honey; "தேம்படு நல்வரை நாட" *(நாலடி. 239).* 4. தேனீ; honey bee. "தேம்பாய் கடாத்தொடு" *(பதிற்றுப். 53:17).* 5. *கள் (சூடா.);* toddy. 6. *மதம்;* must of an elephant "தேம்படு கவுள... யானை" *(முல்லைப். 31).* 7. *நெய்;* oil. "தேங்கலந்து மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்" *(குறிஞ்சிப். 111).* 8. தேமம் (இ.வ.) பார்க்க; see *tēmam*.

ம. தேம்

[தேன் → தேம்.

ஒ.நோ. மேன்பாடு → மேம்பாடு]

தேம்² *tēm*, பெ. (n.) 1. *இடம் (திவா.);* place. 2. *தேயம் (சூடா.);* land, country. "தெவ்வர் தேஎத்து" *(புறநா. 6).* 3. திக்கு; direction, quarter; "அவன் மறை தேஎ நோக்கி" *(அகநா. 48).* 4. ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு (நன். 302); a word used as locative case-suffix.

[தேயம் → தேம்]

தேம்³ *tēm*, பெ. (n.) *ஈரம் (யாழ்.அக.);* wetness.

தேம்ப *tēmba*, வி.எ. (adv.) *புலர;* to dawn.

தேம்பல்¹ *tēmbal*, பெ. (n.) 1. *வாட்டம் (பிங்.);* fading, being faded. 2. குறைந்த நிலை; reduced or diminished state. "தேம்ப லிளமதியஞ் சூடிய சென்னியான்" *(தேவா. 1017, 3).* 3. வருத்தம் (உ.வ.); difficulty. 4. *பழம்பூ (பிங்.);* faded flower. 5. *விம்மியழுகை;* heaving sob. *அவன் தேம்பலை நிறுத்து.*

[தேம்பு → தேம்பல்]

தேம்பல்² *tēmbal*, பெ. (n.) *தேமல் பார்க்க;* see tēmal.

[தேமல் → தேம்பல்]

தேம்பா *tēmbā*, பெ.எ. (adj.) 1. *குறையாத;* not decrease. 2. *அழியாத;* not ruined. 3. *தேயாத;* not wane. 4. *சுருங்காத;* not shrink. தேம்பாவணி *வீரமாமுனிவரால் இயற்றப்பட்டது.*

தேம்பாரை *tēmbārai*, பெ. (n.) *சேரான் கொட்டை;* marking nut *(சா.அக.).*

தேம்பாவணி *tēm-bā-v-aṇi*, பெ. (n.) *கிறித்துவின் தந்தை சூசையின் வரலாற்றைப் பற்றி வீரமாமுனிவர் 1726ஆம் ஆண்டில் பாடியதொரு தமிழ்ப் பாவியம்;* an epic poem on the life of Joseph, the father of Christ, by Beschi @ Viramāmunivar, written in 1726 A.D.

[தேம் + பா + அணி. தேம்பா + அணி எனலுமாம்]

தேம்பாறை *tēmbāṟai*, பெ. (n.) *சேங்கொட்டை;* marking nut.

தேம்பிப்போ-தல் *tēmbi-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) *உலர்ந்து போதல்;* become dry.

[தேம்பல் → தேம்பு → தேம்பி + போ-.]

தேம்பியழு-தல் *tēmbi-aḻu-*, 1 செ.கு.வி. (v.i.) *விம்மியழுதல்;* to sob violently *(சா.அக.).*

[தேம்பி + அழு-.]

தேம்பு-தல் *tēmbu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *வாடுதல்;* to fade; wither, droop; to be tired; to faint. "கொழும்பதிய குடிதேம்பிச் செழுங்கேளிர் நிழல்சேர" *(மதுரைக். 167).* 2. *மெலிதல்;* to grow thin; to be emaciated. "ஆனாச் சிறுமைய ளிவளுந் தேம்பும்" *(குறிஞ்சிப். 26).* 3. *விம்மியழுதல்;* to sob violently. "விழிநீர் மல்கவே நின்று தேம்பு மன்னே" *(வெங்கைக்கோ. 329).* 4. *வருந்துதல்;* to be in trouble; to suffer. "அவாவினாற் றேம்புவார்" *(கலித். 97).* 5. *அழிதல்;* to perish. "ஊடியார் நலந்தேம்ப" *(கலித். 68).* 6. *ஆண்டழிக்க உரியதாதல்;* to be fit for enjoyment. "தேம்பூண் சுவைத்து" *(திவ். இயற். பெரியதிருவ. 14).*

ம. தேம்புக

[தேம் + பு]

தேமணி *tēmaṇi,* பெ. (n.) தெய்வமணி-3 பார்க்க; see *teyvamaṇi-3.*

[தே + மணி]

தேமம் *tēmam,* பெ. (n.) ஈரம்; dampness (சா.அக.).

[தேம்³ → தேமம்]

தேமல் *tēmal,* பெ. (n.) 1. சுணங்கு; whitening of the skin with epithelial debris; yellow spreading spots about the breasts of women. 2. வெள்ளை நோய்; ringworm. 3. தோலைப்பற்றி வரும் நோய்வகை; fish-skin, a disease.

ம. தேமல்

[தேம்பு → தேமல்]

வகைகள்

1. அழுக்குத் தேமல்
2. அழகுத் தேமல்
3. பொங்கு தேமல்
4. மங்கு தேமல்
5. எச்சிற்றழும்பு (உத்கோட ரோகம்)

தேமல்படர்-தல் *tēmal-paḍar-,* 2 செ.கு.வி. (v.i.) உடம்பின்மேல் தேமல் உண்டாதல்; spreading of the yellow spots on the body (சா.அக.).

[தேமல் + படர்-.]

தேமல்முகம் *tēmal-mugam,* பெ. (n.) தேமல் படர்ந்த முகம்; freckle face (சா.அக.).

[தேமல் + முகம்]

தேமனம்¹ *tēmaṉam,* பெ. (n.) புளிப்பு; sourness (சா.அக.).

தேமனம்² *tēmaṉam,* பெ. (n.) துன்பம்; distress.

தேமா¹ *tēmā,* பெ. (n.) மாமர வகை; a kind of mango tree producing very sweet fruits.

ம. தேன்மாவு, தேனன்

[தேம் + மா]

தேமா² *tēmā,* பெ. (n.) நேர் நேர் என்ற சீரைக் குறிக்கும் வாய்பாடு (காரிகை, உறுப். 4); the technical term for the metrical foot of nēr-nēr.

[தே + மா]

தேமாங்கனி *tē-māṅgaṉi,* பெ. (n.) நேர், நேர், நிரை என்ற சீரைக் குறிக்கும் வாய்பாடு (காரிகை, உறுப். 4); a technical term for the metrical foot, of nēr-nēr-nirai.

[தே + மா+ கனி]

தேமாங்காய்¹ *tē-māṅ-gāy,* பெ. (n.) நேர், நேர், நேர் என்ற சீரைக் குறிக்கும் வாய்பாடு (காரிகை, உறுப்.4); a technical term for the metrical foot of nēr-nēr-nēr.

[தே + மா+ காய்]

தேமாங்காய்² *tē-māṅ-gāy,* பெ. (n.) தேமாவின் காய்; sweet mango.

ம. தேன்மாங்ங

[தே + மாங்காய்]

தேமாந்தண்ணிழல் *tē-mā-n-taṇ-ṇiḻal* பெ. (n.) நேர் நேர் நேர் நிரை என்ற சீரைக் குறிக்கும் வாய்பாடு (காரிகை, உறுப்பு. 5); a technical term for the metrical foot of nēr-nēr-nēr-nirai.

[தே + மா+ தண் + நிழல்]

தேமாந்தண்பூ *tē-mā-n-taṇ-pū,* பெ. (n.) நேர் நேர் நேர் நேர் என்ற சீரைக் குறிக்கும் வாய்பாடு (காரிகை, உறுப். 5); a technical term for the metrical foot nēr-nēr-nēr-nēr.

[தே + மா+ தண் + பூ]

தேமாநறுநிழல் *tē-mā-naṟu-niḻal,* பெ. (n.) நேர் நேர் நிரை நிரை என்ற சீரைக் குறிக்கும் வாய்பாடு (காரிகை, உறுப். 5); a technical term for the metrical foot nēr-nēr-nirai-nirai.

[தே + மா + நறு + நிழல்]

தேமாநறும்பூ *tē-mā-naṟumpū,* பெ. (n.) நேர் நேர் நிரை நேர் என்ற சீரைக் குறிக்கும் வாய்பாடு (காரிகை, உறுப்.5); a technical term for the metrical foot of nēr-nēr-nirai-nēr.

[தே + மா+ நறும் + பூ]

தேய்¹-தல் *tēy-,* 2 செ.கு.வி. (v.i.) 1. உரைசுதல்; to wear away by friction; to be rubbed. 2. குறைதல்; to lessen, decrease, wane, as the moon; to waste away, as the oil in a burning lamp; to become exhausted. "தொடர்புந் தேயுமே

நின்வயி னானே" (குறுந். 42). தேய்ந்தாலும் சந்தனக்கட்டை மணம் போகாது (பழ.). 3. மெலிதல்; to be emaciated; to grow thin, as a child. "சிவனேநின்று தேய்கின்றேன்" (திருவாச. 32, 8). 4. வலிகுன்றுதல்; to become weakened. "அரம்பொருத பொன்போலத் தேயுமே" (குறள், 888). 5. கழிதல்; to lapse, pass, wear away, as time. 6. அழிதல்; to be effaced, erased, obliterated by rubbing; to be destroyed. "தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்" (கலித். 103). 7. சாதல்; to die. "எம்பியோ தேய்ந்தான்" (கம்பரா. பாசப். 5).

ம. தேயுது; க. தேய்; தெ. தேயு; து. தேயுனி; பட. தேயி; குட., கோத. தேய்

தேய்²-த்தல் *tēy-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. உரைசச் செய்தல்; to rub, rub away, waste by rubbing. "மாநாகங் கொண்டாற் கொப்புளாம் விரலிற் றேய்த்தால்" (சீவக. 1288). 2. குறைத்தல்; to reduce. "அழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை" (குறள், 555). 3. அழித்தல்; to kill, destroy. "செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை" (திருமுருகு. 5). 4. துலக்குதல்; to scour, scrub, polish by rubbing, as a wall, as a vessel; to clean, as teeth. பாத்திரத்தைத் தேய்த்து வைத்தாள் (உ.வ.). காலையில் படுக்கையினின்று எழுந்தவுடனும் இரவில் படுக்கச் செல்லும் முன்பும் பல் தேய்த்தல் நலம். 5. துடைத்தல்; to efface, erase, obliterate by rubbing. எழுத்தைத் தேய்த்து விட்டான். 6. செதுக்குதல்; to pare, shave, cut, as a gem. "மணியிற் றேய்த்த வள்ளமும்" (கம்பரா. வரைக். 40). 7. எண்ணெய் முதலிய அழுந்தப் பூசுதல்; to rub in, as oil, ointment or liniment. காரிக்கிழமை தோறும் எண்ணெய்த் தேய்த்துக்குளிப்பது அவர் வழக்கம்.

ம. தேய்க்குக

தேய்க்கல் *tēy-k-kal*, பெ. (n.) 1. தேக்கல் பார்க்க; see *tēkkal*. 2. தேய்க்குதல்; rubbing (சா.அக.).

தேய்கடை *tēy-kaḍai*, பெ. (n.) 1. தேய்ந்தது; that which is worn out, as an implement. 2. வளர்ச்சியற்றது; that which is stunted in growth.

[தேய்வு → தேய்வடை → தேய்கடை]

தேய்கடைப்பணம் *tēy-kaḍai-p-paṇam*, பெ. (n.) வழங்கித் தேய்ந்த காசு; coin worn out by use.

[தேய்கடை + பணம்]

தேய்கடைப்பிள்ளை *tēy-kaḍai-p-piḷḷai*, பெ. (n.) 1. வளர்ச்சியில்லாத குழந்தை; child of stunted growth or dwarfish in size. 2. மெலிவடைந்த குழந்தை; an emaciated child.

மறுவ. சவலைக் குழந்தை

[தேய்கடை + பிள்ளை]

தேய்கல் *tēy-kal*, பெ. (n.) உரைகல்; touch-stone (W).

ம. தேப்புகல்லு; தே. தேங்கல்லு

[தேய் + கல்]

தேய்ச்சுமாய்ச்சுப்போடு-தல் *tēyccu-māyccu-p-pōḍu-*, 19 செ.குன்றாவி. (v.t.) 1. பொருள் முதலியவற்றைச் சிறுகச் சிறுகச் செலவிட்டு வீணாக்குதல்; to waste gradually or little by little. 2. கடன் கொடுத்தவனுக்குப் பொந்திகை (திருப்தி)யில்லாமல் சிறிது சிறிதாகக் கொடுத்துக் கழித்தல்; to pay; as a debt, in such small sums as not to satisfy the creditor. 3. அழுத்தமின்றிச் செய்தல்; to do superficially, as a work. 4. அமுக்கிவிடுதல்; to hush up, as a crime.

[தேய்ச்சு + மாய்ச்சு + போடு-.]

தேய்த்துக்குளி¹ *tēyttu-k-kuḷi*, பெ. (n.) எண்ணெய்க் குளியல் (நாஞ்.); oil bath.

ம. தேச்சுகுளி

[தேய் → தேய்த்து + குளி]

தேய்த்துக்குளி²-த்தல் *tēy-t-tu-k-kuḷi-*, 4 செ.குன்றாவி. (v.t.) உடலைத் தேய்த்துக் குளித்தல்; to rub of body (சா.அக.).

ம. தேச்சுகுளிக்குக

[தேய் → தேய்த்து + குளி-.]

தேய்த்துக்கொள்ளு-தல் *tēyttu-k-koḷḷu-*, 7 செ.குன்றாவி. (v.t.) 1. எண்ணெய்யை உடம்பிற் தேய்த்துக் கொள்ளல்; rub or smearing of oil on the body. 2. இரு பெண்டிர் தம்முடன் ஏற்படுத்திக் கொள்ளும் கலவி; to have an

unnatural or immoral practice between women consisting in mutual friction of their genitals (சாஅக.).

[தேய்த்து + கொள்-.]

தேய்த்துப்புரட்டு-தல் *teyttu-p-puraṭṭu-,* 8 செ.குன்றாவி. (v.t.) நெய்மமிட்டுக் கழுவுதல் (யாழ்ப்.); to rub an ointment to wash oneself, as in bathing.

[தேய்த்து + புரட்டு-.]

தேய்த்துவிடு-தல் *teyttu-viḍu-,* 18 செகுன்றாவி. (v.t.) 1. அழுக்கைத் தேய்த்து நீக்குதல்; to rub the dust. 2. உப்பைத் தளம் வைத்து வாரும் முறையில் முதலில் படிந்த உப்பை அளத்தோடு தேய்த்துவிடுதல்; to rub the salt, which in deposited first in the salt pan when scoop the salt from the floor (மீனவ.).

[தேய்த்து + விடு-.]

தேய்தவளை *tēy-tavaḷai,* பெ. (n.) தேரை பார்க்க; see *tērai* (சாஅக.).

[தேய்(ந்த) + தவளை]

(தவளை போன்று சிறிய உருவமுடையதால் இப்பெயர் பெற்றிருக்கலாம்)

தேய்ந்தபல் *tēynta-pal,* பெ. (n.) குறைந்த பல்; worn out tooth (சாஅக.).

[தேய்ந்த + பல்]

தேய்ந்துமாய்ந்துபோ-தல் *tēyndu-māyndu-pō,* 8 செ.குவி. (v.i.) கவலையால் உடல் மெலிவுறுதல்; to become emaciated with care; to pine.

[தேய்ந்து + மாய்ந்து + போ-.]

தேய்ப்புக்கட்டை *tēyppu-k-kaṭṭai,* பெ. (n.) சாந்து பூசித் தேய்ப்பதற்குப் பயன்படும், மரப்பலகையாலோ, தகரத்தாலோ ஆன கருவி; an instrument made of wood or tin to rub, after plaster the mortar.

[தேய்ப்பு + கட்டை]

தேய்ப்புக்கரணை *tēyppu-k-karaṇai,* பெ. (n.) பூச்சு வேலைகளில் பயன்படும் கரணை; small trowel used to plaster the mortar (கட்டட).

ஒருகா. (கரண்டி → கரணை)

[தேய்ப்பு + கரணை]

தேய்ப்புக்கல் *tēyppu-k-kal,* பெ. (n.) பூச்சு மண்ணைச் சுவரில் பூசித் தேய்க்கப் பயன்படும் கல்; stone used for smearing the sand on the walls (கட்டட).

[தேய்ப்பு + கல்]

தேய்ப்புணி *tēy-p-puṇi,* பெ. (n.) செட்டுள்ளவன் (வின்.); thrifty person (செஅக.).

[தேய்² → தேய்ப்பு + உணி]

தேய்ப்புத்தாள் *tēyppu-t-tāḷ,* பெ. (n.) உப்புத்தாள் (நாஞ்.); sand paper.

ம. தேப்புதாள்

[தேய்ப்பு + தாள்]

தேய்ப்புப்பலகை *tēyppu-p-palagai,* பெ. (n.) சாணை பிடிக்கும் பலகை (இவ.); whetstone.

ம. தேப்புபலக

[தேய் → தேய்ப்பு + பலகை]

தேய்ப்புமட்டப்பலகை *tēyppu-maṭṭap-palagai,* பெ. (n.) மணியாசுப் பலகை; mason's smoothing plane.

[தேய் + மட்டம் + பலகை]



தேய்ப்பூணி *tēy-p-pūṇi,* பெ. (n.) தேய்ப்புணி (வின்.) பார்க்க; see *tēy-p-puṇi.*

[தேய்ப்புணி → தேய்ப்பூணி]

தேய்பிறை *tēy-piṟai,* பெ. (n.) 1. குறைமதி; waning moon. "தேய்பிறையும் போல்" (திவ்.திருவாய். 8,8,10). 2. கரும் (கிருட்டிண)ப் பக்கம்; dark fortnight.

ம. தேய்பிற, தேவற

[தேய்¹ + பிறை]

தேய்பிறையிரும்பு *tēy-piṟai-y-irumbu*, பெ. (n.) *அரிவாள்;* sickle, as a crescent-shaped iron instrument. "தேய்பிறை யிரும்பு தம்வலக்கை சேர்த்தினார்" *(சீவக. 55).*

[தேய் + பிறை + இரும்பு]



தேய்மானக்காரன் *tēymāṉa-k-kāraṉ*, பெ. (n.) *பிறர் செலவிற் வாழ்க்கை நடத்தும் இவறன்;* parasite, sponge-cake.

[தேய்மானம் + காரன்]

தேய்மானம் *tēy-māṉam*, பெ. (n.) *1.* **தேய்வு;** loss by wear and tear. *2.* **பொன்னை உரைத்தலால் உண்டாம் குறைவு;** loss sustained in testing gold by rubbing on a touch-stone. அந்த நகையில் தேய்மானம் மிகுதி (உ.வ.). *3.* **சிக்கனம்;** frugality, parsimony. *4.* **சோம்பல்;** laziness.

ம. தேமானம்; க., தெ. தேமான

[தேய் + மானம்]

தேய்வாங்கு *tēy-vāṅgu*, பெ. (n.) **தேவாங்கு** பார்க்க; see *tēvaṅgu* (சா.அக.).

[தேவாங்கு → தேய்வாங்கு]

தேய்வு *tēyvu*, பெ. (n.) *1.* **குறைபாடு;** wearing away, lessening, abrasion, diminution, wasting. *2.* **கழிவு;** disgrace, degradation. "தோற்றோர் தேய்வும்" *(தொல்.பொருள்.63). 3.* **மெலிவு;** emaciation. "பிரிவினாற் றேய்ந்த தேய்வு" *(கம்பரா. முதற்போ. 108). 4.* **அழிவு;** decay, decline, downfall. "அரக்கர்தம் வருக்கந் தேய்வின்று நிரம்பியதென" *(கம்பரா. கடிமண. 75). 5.* **தேய்மானம்** பார்க்க; see *tēymāṉam*. *6.* **பல் தேய்வு;** erosion of teeth.

[தேய் + தேய்வு]

தேய்வுக்கட்டை *tēyvu-k-kaṭṭai*, பெ. (n.) தேய்ந்த சந்தனக் கட்டை (இ.வ.); a piece of sandalwood worn out by trituration.

[தேய்வு + கட்டை]

தேய்வை *tēyvai*, பெ. (n.) **சந்தனக் குழம்பு;** fragrant unguent from sandalwood, formed by trituration. "நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை" *(திருமுருகு. 33).*

[தேய் → தேய்வு → தேய்வை]

தேயம்[1] *tēyam*, பெ. (n.) தேசு பார்க்க; see *tēśu*. "அரனம்பலம் போற்றேயத்ததாய்" (திருக்கோ. 39).

தேயம்[2] *tēyam*, பெ. (n.) **பொருள்;** wealth. "தீரரா மவரே தேயத் தியாகஞ்செய் சீவன் முத்தர்" *(ஞானவா. புண். 18).*

தேயம்[3] *tēyam*, பெ. (n.) *1.* **நாடு;** country, land, district. "வரம்பிலா வுருவத்தா னெத்தேயத்தான்" *(கம்பரா. மகரக்கண். 28). 2.* **இடம்;** place, location, room.

[திகைதல் - முடிதல், திகை - முடிவு, எல்லை, திசை. திகை → திசை → தேசம்]

வடமொழியில் திசா என்னும் சொற்குத் 'திச்' என்பதை மூலமாகக் காட்டுவர். திச் - காட்டு Gk. deiknumi (to show).

இந்தியில் திக்கா என்னுஞ் சொல் காட்டுதலைக் குறிக்கின்றது. நோக்கு - தேக்கு (த.வி.) - திக்கா (பி.வி.) இதற்கு மூலமான சூரசேனிச் சொல் கிரேக்க நாடு சென்று வேதமொழிக்கு வந்திருக்கலாம். வடமொழியிலுள்ள திக் என்னும் வடிவே திச் என்றும் திரிந்திருக்கலாம். அங்ஙனமாயின், தென் சொல்லும் வடசொல்லும் வெவ்வேறு வழியில் தோன்றினவாகும் (தி.ம. 745).

தேயம்[4] *tēyam*, பெ. (n.) **ஒகத்திற்குகந்தது;** which is worthy of meditation, as god. "அறிவோர் தேயமாவது யார்க்குமெட்டாதது" *(கந்தபு. அவைபுகு. 126).*

தேயம்[5] *tēyam*, பெ. (n.) **களவு** (சூடா.); theft.

[ஏய் → ஏய்ப்பு = ஏமாற்றுகை. ஏய் → ஏயம் = தள்ளத்தக்கது. ஏயம் → தேயம்]

த. தேயம் → Skt. stēya

தேயவியற்கை *tēya-v-iyaṟkai*, பெ. (n.) **நாட்டு வழக்கம்;** customs, usages and manners of a

country. "உணர்வு மிகுதியானும் தேயவியற்கை யானும் அறியப்படுதலானும்" (குறள், பரிமே. உரைப்பா.).

[தேயம் + இயற்கை]

தேயன்[1] *tēyaṉ*, பெ. (n.) **ஊழ்கம் செய்யப்** படுவோன் (சங்அக.); one who is meditated upon.

தேயன்[2] *tēyaṉ*, பெ. (n.) **திருடுபவன்;** thief. "இரும்பினைச் செம்பினைத் தேயனும்" (சிவதரு. பாவ. 94).

[தேயம் → தேயன்]

தேயனம் *tēyaṉam*, பெ. (n.) **ஒளி;** lustre, brilliance. "தேயனநாடராகித் தேவர்கடேவர் போலும்" (தேவா. 838, 2).

தேயாமண்டிலம் *tēyā-maṇḍilam*, பெ. (n.) **தேய்ந்து குறையாத கதிரவன் மண்டிலம்;** disc of the sun, as never waning. தேயா மண்டிலங் காணுமாறு (பரிபா. 17:32).

[தேய் + ஆ+ மண்டிலம். ஆ எதிர்மறை இடைநிலை]

தேயாமணி *tēyā-maṇi*, பெ. (n.) **வயிரம்;** diamond so called from its notabilites hardness (சாஅக.).

[தேய் + ஆ + மணி]

தேயாமதி *tēyā-madi*, பெ. (n.) **முழுநிலவு;** full moon. "தேயாமதி போல்" (மணிமே. 27:137).

[தேய் + ஆ + மதி. 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தேயிலைக்கரண்டி *tēyilai-k-karaṇḍi*, பெ. (n.) **தேக்கரண்டி** பார்க்க; see *tē-k-karaṇḍi.*

[தேயிலை + கரண்டி]

தேயு[1] *tēyu*, பெ. (n.) *1.* **நெருப்பு;** fire. *2.* **நெருப்பினால் உடம்பிலேற்படும் செயல்கள்;** the five actions of fire in the human system. *3.* **பசி;** hunger. *4.* **சோர்வு;** faintness. *5.* **அச்சம்;** fear. *6.* **தூக்கம்;** sleep. *7.* **கேள்வி;** hearing.

[தேய் → தேயு]

தேயு[2] *tēyu*, பெ. (n.) **மயக்கம்** (பிங்.); bewilderment.

[தேய் → தேயு]

தேயுடலி *tēyuḍali*, பெ. (n.) **தேவாங்கு** பார்க்க; see *tēvāṅgu.*

[தேய்[1] + உடலி]

தேயுலிங்கம் *tēyu-liṅgam*, பெ. (n.) **ஐந்து இலிங்கங்களுள் தழல் வடிவினதாய்த் திருவண்ணாமலையிலுள்ள சிவலிங்கம்;** the lingam at Tiruvaṇṇāmalai believed to be constituted of the fire-element, one of five lingam.

[தேயு[1] + லிங்கம். இலிங்கம் → லிங்கம். தேயு - தீ]

தேயுவின்கணம் *tēyuviṉkaṇam*, பெ. (n.) **தீக்கணம்** பார்க்க; see *tikkaṇam.*

[தேயு + இன் + கணம். இன் இடைநிலை]

தேயுவின்கூறு *tēyuviṉkūṟu*, பெ. (n.) **புறநிலைக் கருவி பதினொன்றனுள் தீயின் கூறான உணவு, தூக்கம், அச்சம், புணர்ச்சி, சோம்பல் என்பவை** (சைவ.); categories which partake of the nature of the fire element, five in number, viz. uṇavu, tūkkam, accam, puṇarcci, cōmbal, one of 11 divisions of puṟa-nilai-k-karuvi.

[தேயு + இன் + கூறு. இன் இடைநிலை]

தேயுறை *tēyuṟai*, பெ. (n.) **தேய்க்கும் மருந்து;** a medicine applied by rubbing.

[தேய் + உறை]

தேர்[1]**-தல்** *tēr*, 4 செ.குன்றாவி. (v.t.) *1.* **ஆராய்தல்** (பிங்.); to examine, investigate inquire into. "தேர்ந்துசெய்வஃதே முறை" (குறள், 541). *2.* **அறிதல்;** to understand, know. "தேர்ந்தனன் முருகன் வாய்மை" (கந்தபு. மூவாயிர.81). *3.* **சிந்தித்தல்;** to consider, deliberate, ponder well. *4.* **தெரிந்தெடுத்தல்;** to elect. *5.* **தேடுதல்;** to seek. "சிறுவெண் காக்கை நீத்து நீரிருங்கழி யிரைதேர்ந்துண்டு" (ஐங்குறு. 162). *6.* **உறுதி செய்தல்;** to ascertain, form a conclusion. "பேதைபாகனே பரமெனத் தேர்ந்துணர் பெரிய" (திருவிளை. புராணவா. 8).*7.* **கொள்ளுதல்** (பிங்.); to acquire, obtain. *8.* **ஐயுறுதல்** (குறள், 144, உரை); to doubt, question.

தேர்[2]**-தல்** *tēr-*, செ.கு.வி. (v.i.); **பயிற்சியடைதல்;** to be well versed, proficient in. நூல்களிற் றேர்ந்த புலமை.

ம. தேருக

தேர்³-த்தல் *tēr-, 11* செ.கு.வி. (v.i.) *கலத்தல்;* to mingle, combine. "குழம்பும் . . . சுண்ணமும் விரையுந் தேர்த்தரோ . . . அளறுபட்டது" (சூளா. சுயம். 130).

தேர்³ *tēr,* பெ. (n.) *1. உருளி, தேர் (இரதம்);* car, chariot. "கடலோடா கால்வ னெடுந்தேர்" (குறள், 496). தேரோடு போச்சுது திருநாள் தாயோடு போச்சுது பிறந்தகம் (பழ.). *2.* கொல்லாவண்டி பார்க்க; see *kollā-vaṇḍi*. *3.* சிறுதேர்; boy's small car. "புதல்வனைத் தேர்வழங்கு தெருவிற் றமியோற் கண்டே" (அகநா. 16). *4.* உருள் (உரோகிணி) விண்மீன் (சூடா.); the 4th naksatra. *5.* கானல்; mirage. "யானை விலங்குதேர்க் கோடு நெடுமலை" (கலித். 24). *6.* பாடை; funeral fier.

ம., தெ. தேரு, தேர்; க., து., பட. தேரு

tēr, chariot. comp. Mongol t'ereg, chariot (C.G.D.F.L 620)

[தேங்குதல் = உயர்தல், மிகுதல். தேங்கு → தேக்கு = உயர்ந்த அல்லது உயர்வான மரம், தேக்கு → தே → தேர் = உயரமான ஊர்தி]

தேர்⁴ *tēr,* பெ. (n.) தேரர் பார்க்க; see *tērar* "அலவை சொல்லுவார் தேரமணாதர்கள்" (தேவா. 95, 10).

தேர்⁵ *tēr,* பெ. (n.) வலை கொள்ளுதற்குரிய முக்கோண வடிவுடைய மூங்கிலாலான சுழலுங் கருவி (மீனவ.); a rotating instrument in a conical shape to catch the net.

மறுவ. கதிர்

தேர்க்கடம்பு *tēr-k-kaḍambu,* பெ. (n.) கொழுஞ்சி மரம்; common country orange (சா.அக.).

தேர்க்கவி *tēr-k-kavi,* பெ. (n.) *1.* சித்திரப் பாவகை; variety of cittira-k-kavi which is fitted into a fanciful diagram representing a temple chariot.

[தேர் + கவி]

தேர்க்கள்ளி *tēr-k-kaḷḷi,* பெ. (n.) தாமரை வடிவிலான பூவையுடைய சீமைக்கள்ளி; a kind of foreign spurge known as Madagascar spurges (சா.அக.).

[தேர் + கள்ளி]

தேர்க்காசு *tēr-k-kāšu,* பெ. (n.) தேர்விழாவன்று குழந்தைகட்கு அன்பொடு கொடுக்கும் சில்லறைக் காசு; coin given as present to children on the day of car festival.

[தேர் + காசு]

தேர்க்கால்¹ *tēr-k-kāl,* பெ. (n.) தேர்ச்சக்கரம்; wheel of a chariot.

தேர்க்கால்² *tēr-k-kāl,* பெ. (n.) குயவன் சக்கரம்; potter's wheel. 'வேட்கோச் சிறாஅர் தேர்க்கால் வைத்த பசுமண்" (புறநா. 32).

[தேர் + கால்]



தேர்க்குடம் *tēr-k-kuḍam,* பெ. (n.) *1.* தேரின் சக்கரக்குடம்; hub of a chariot-wheel. *2.* தேரின் ஒப்பனைத் தூண்; brass knobs in the form of inverted pots, as ornaments to a chariot.

[தேர் + குடம்]

தேர்க்குழிசி *tēr-k-kuḻiši,* பெ. (n.) தேர்க்குடம் பார்க்க; see *tēr-k-kuḍam*. "ஆரமே யமைந்த தேர்க்குழிசி யாயினார்" (சீவக. 790).

[தேர் + குழிசி]

தேர்க்குறடு *tēr-k-kuṟaḍu,* பெ. (n.) தேர்க்குடம் பார்க்க; see *tēr-k-kuḍam*. "பல ஆருந் தைத்து நிறைந்த தேர்க்குறடு" (சீவக. 790, உரை).

[தேர் + குறடு]

தேர்க்கூம்பு *tēr-k-kūmbu,* பெ. (n.) *1.* தேர்க்கொடிஞ்சி பார்க்க; see *tēr-k-kodiñji*. *2.* தேரின் உச்சி; finial of a chariot.

தேர்க்கொடி *tēr-k-koḍi,* பெ. (n.) தேரிற்கட்டிய பதாகை; flag hoisted at the top of a chariot.

[தேர் + கொடி]

தேர்க்கொடிஞ்சி *tēr-k-koḍiñji*, பெ. (n.) 1. கொடிஞ்சி பார்க்க; see *koḍiñji*. "நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி நின்றோன்" (புறநா. 77). 2. தேரின் நுகக்காலை இணைக்கும் அடிமரம்; the wooden frame to which the yoke of a chariot is fixed. "புரவிபூண்ட பொன்னுகக் கொடிஞ்சி" (பெருங்.உஞ்சைக். 48,15). 3. தேர்க்கூம்பு,2 பார்க்க; see *tēr-k-kūmbu*.

[தேர் + கொடிஞ்சி]

தேர்க்கொடுங்கை *tēr-k-koḍuṅgai*, பெ. (n.) தேரின் வெளிப்பக்கத்தின் மேல் வளைவு; curved cornice or projections of a chariot.

[தேர் + கொடுங்கை]

தேர்க்கொத்தர் *tēr-k-kottar*, பெ. (n.) தேர் இழுக்கிறவர்கள்; one who drag temple car (இருநூ.).

[தேர் + கொத்தர்]

தேர்க்கொற்றன் *tēr-k-koṟṟaṉ*, பெ. (n.) தேரோட்டுவோன் (இ.வ.); charioteer.

[தேர் + கொற்றன்]

தேர்கடை *tērkaḍai*, பெ. (n.) தீர்மானம்; decision (இருநூ.).

[தேர் + கடை]

தேர்ச்சக்கரம் *tēr-c-cakkaram*, பெ. (n.) தேர் உருளை; wheel of a chariot.

[தேர் + சக்கரம்]



தேர்ச்சார்பலகை *tēr-c-cār-palagai*, பெ. (n.) தேர்த்தட்டு (வின்.) பார்க்க; see *tēr-t-taṭṭu*.

[தேர் + சார் + பலகை]

தேர்ச்சி *tērcci*, பெ. (n.) 1. ஆராய்ச்சி; examination, investigation. 2. கல்வி; learning. 3. தெளிவு; discernment; ascertainment. 4. கலந்தாய்வு (பிங்.); deliberation, council. 5. பயிற்சி; experience. 6. தேர்வில் தேறுகை; success in examination.

ம. தேர்ச்சி

[தேர் + சி = தேர்ச்சி. சி - சொல்லாக்க ஈறு]

தேர்ச்சித்துணைவர் *tērcci-t-tuṇaivar*, பெ. (n.) 1. மந்திரத் தலைவர் (பிங்.); Ministers of State, King's counsellors, Statesmen. "தூநான் மறையோருடன் றேர்ச்சித் துணைவர் தொடர" (சேதுபு. அனும. 14). 2. நட்பாளர் (பிங்.); friends.

[தேர்ச்சி + துணைவர்]

தேர்ச்சில் *tēr-c-cil*, பெ. (n.) தேர்க்கால் பார்க்க; see *tēr-k-kāl*.

[தேர் + சில்]

தேர்ச்சிவரி *tērcci-vari*, பெ. (n.) உறவு முறையார்க்குத் தன் துயரங்களைத் தெரிவிக்கும் கூத்து வகை; a dramatic action in which a person expresses in detail all his sufferings to his relatives. "கிளைகட்குத் தன்னுறு துயரந் தேர்ந்து தேர்ந்துரைத்த தேர்ச்சிவரி" (சிலப். 8:103-4).

[தேர்ச்சி + வரி]

தேர்ச்சினை *tēr-c-ciṉai*, பெ. (n.) கொடிஞ்சி பார்க்க (கலித். 85:18); see *koḍiñji*.

[தேர் + சினை]

தேர்ச்சீலை *tēr-c-cīlai*, பெ. (n.) 1. தேரை ஒப்பனை செய்தற்கெனக் கட்டுஞ் சீலை; bright coloured cloths with which a chariot is ornamented. 2. பாடைச் சீலை; the cloth decorating the biar (செ.அக.).

[தேர் + சீலை]

தேர்ச்சேனை *tēr-c-cēṉai*, பெ. (n.) நால்வகைப்படையுள் ஒன்றான தேர்ப்படை; one among four army.

[தேர் + சேனை]

தேர்த்தட்டு *tēr-t-taṭṭu,* பெ. (n.) *தேரின் உட்பரப்பு;* central seating space of a chariot. *"அழிந்த தேர்த்தட்டினின்று" (கம்பரா. இந்திரசித். 39).*

ம. தேர்த்தட்டு

[தேர் + தட்டு]

தேர்த்தடம் *tēr-t-taḍam,* பெ. (n.) *தேர்ச்சுவடு;* print of the car in the sand on its way.

[தேர் + தடம்]

தேர்த்தானை *tēr-t-tāṉai,* பெ. (n.) *தேர்ப்படை;* chariot division of an army. "திறல் விளங்கு தேர்த்தானை" *(புவெ. 48).*

[தேர் + தானை]

தேர்த்திருநாள் *tēr-t-tiru-nāḷ,* பெ. (n.) *கோயிற் றேர்த் திருவிழா;* car festival.

[தேர் + திரு + நாள்]

தேர்த்துகள் *tēr-t-tugaḷ,* பெ. (n.) 1. தேர்ச் செலவால் எழுந்தூளி; dust rising from a chariot in motion. 2. எட்டுக் கதிரெழு துகள் கொண்டதோர் அளவு *(வின்.);* minute measure of length = 4 atoms of dust in a sunbeam = 8 kadireḻu tugaḷ.

[தேர் + துகள்]

தேர்த்தொழில் *tēr-t-toḻil,* பெ. (n.) தேர் நடாத்தும் கலை; art of charioteering. "மற்றொழிலுந் தேர்த் தொழிலும் வாரணத்தின் றொழிலும்" *(சீவக. 1795).*

[தேர் + தொழில்]

தேர்தல் *tērtal,* பெ. (n.) அவைகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கை; election. *சட்டமன்றத் தேர்தல் கலவரத்தில் முடிந்தது*

[தேர் → தேர்தல்]

தேர்ந்தவன் *tērndavaṉ,* பெ. (n.) திறமையானவன்; skilled person in certain matter. தேர்ந்தவன் *என்பது கூர்ந்து அறிவதனால் (பழ.).*

[தேர் → தேர்ந்த + அவன்]

தேர்ந்துசெயல் *tērndu-šeyal,* பெ. (n.) *வாய்க்கும் திறன் நாடிச் செய்கை;* fruitful attempt. "தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒருதலையாச் சொல்லலும் வல்லதமைச்சு" *(குறள், 634).*

[தேர்' → தேர்ந்து + செயல்]

தேர்நிலை *tēr-nilai,* பெ. (n.) *தேர்முட்டி பார்க்க (கொ.வ.);* see *tēr-muṭṭi.*

[தேர் + நிலை]

தேர்ப்பந்தர் *tēr-p-pandar,* பெ. (n.) தேர்போலும் *பந்தல்;* pandal.

[தேர் + பந்தர். பந்தல் → பந்தர். ல → ர போலி]

தேர்ப்பாகன் *tēr-p-pāgaṉ,* பெ. (n.) 1. தேரோட்டி *(சிலப். 5, 55, அரும்.);* charioteer. 2. அறிவன் *(புதன்) (பிங்.);* the planet mercury.

ம. தேர்ப்பாகன்

[தேர் + பாகன்]

தேர்ப்பார் *tēr-p-pār,* பெ. (n.) தேர்த்தட்டு *(சூடா.) பார்க்க;* see *tēr-t-taṭṭu.*

[தேர் + பார்]

தேர்மண்டபம் *tēr-maṇḍapam,* பெ. (n.) தேர் நிறுத்துமிடம்; the stand of a temple car. "தெப்பக்குளங் கட்டி தேர்மண்டபங் கட்டி" *(குற்றா.குற. 91:4).*

[தேர் + மண்டபம்]

தேர்மரச்சுற்று *tēr-mara-c-cuṟṟu,* பெ. (n.) தேர்த்தட்டைச் சுற்றி அமைக்கப்பட்ட பலகை *(பிங்.);* boards round the body of a chariot.

[தேர் + மரம் + சுற்று]

தேர்மறம் *tēr-maṟam,* பெ. (n.) அரசனது போர்த் தேரின் சிறப்பினைக் கூறும் புறத்துறை *(பு.வெ. 7,10);* theme eulogising a king's war-chariot.

[தேர் + மறம்]

தேர்முட்டி *tērmuṭṭi,* பெ. (n.) கோயில் திருத்தேர் தங்கி நிற்குமிடம் *(கொ.வ.);* the stand of a



temple car. "தேர்முட்டி கிட்டே இருக்கின்ற சந்தையில் வாங்கினேன்" *(மதுரை.)*.

[தேர் + முட்டி]

தேர்முல்லை *tēr-mullai,* பெ. (n.) பகைவரை வென்று மீண்ட தன் தலைவனது தேர் வரவறிந்து தலைவி மகிழ்ந்து கூறும் புறத்துறை *(பு.வெ.10, முல்லைப். 3)*; theme of the return of a hero in his chariot after subduing his enemies, sung in joy by his lady-love.

[தேர் + முல்லை]

தேர்மூடு *tēr-mūḍu,* பெ. (n.) தேர்நிலை *(நாஞ்.)*; chariot stand.

[தேர் + மூடு]

தேர்மொட்டு *tēr-moṭṭu,* பெ. (n.) 1. தேர்க்கூம்பு பார்க்க; see *tēr-k-kūmbu.* 2. பூவரச மரத்தின் முதிர்ந்த மொட்டு *(நாஞ்.)*; mature bud of portia.

[தேர் + மொட்டு]

தேர்வட்டை *tēr-vaṭṭai,* பெ. (n.) தேர்க்கால் *(சிலப். 14: 165)* பார்க்க; see *tēr-k-kāl.*

ம. தேர்வட்டு

[தேர் + வட்டை]

தேர்வடம் *tēr-vaḍam,* பெ. (n.) தேரிழுத்தற்குரிய பெரிய கயிறு; cable, thick rope for drawing a car. "மணலையு மேவுதேர்வட மாக்கலாம்" *(அருட்பா. 6, வயித்திய. 4)*.

[தேர் + வடம்]

தேர்வண்மலையன் *tērvaṇ-malaiyaṉ,* பெ. (n.) வடவண்ணக்கன் பெருஞ்சாத்தனாரால் புறநானூற்றிலே பாடப்பெற்றவன்; supposed to be a king sung by Vadavaṇṇakkaṉ Peruñjāttaṉār *(தமி.சொ.அக.)*.

[தேர்வண் + மலையன்]

தேர்வண்மை *tēr-vaṇmai,* பெ. (n.) புலவர் முதலியோர்க்கு அரசர் அளிக்குந் தேர்க் கொடை; gift of chariots made by kings to poets. "தேர்வண்பாரி" *(புறநா. 118)*.

[தேர் + வண்மை]

தேர்வலவன் *tēr-valavaṉ,* பெ. (n.) தேர்ப்பாகன்; charioteer. "திண்டேர் வலவ கடவெனக் கடைஇ" *(அகநா. 74)*.

[தேர் + வலவன்]

தேர்வலான் *tēr-valāṉ,* பெ. (n.) தேர்வலவன் பார்க்க; see *tēr-valavaṉ.* "தேர்வலான் செப்புவான்" *(கம்பரா. தைல. 20)*.

[தேர் + வலான்]

தேர்வாசம் *tēr-vāśam,* பெ. (n.) அரசு; pipal tree *(சா.அக.)*.

தேர்வாணம் *tēr-vāṇam,* பெ. (n.) வாணவகை; a kind of rocket.

[தேர் + வாணம்]

தேர்வாணைக்குழு *tērvāṇai-k-kuḻu,* பெ. (n.) அரசுப்பணிக்குத் தக்கவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்புடைய, அரசால் அமர்த்தம் பெற்ற உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு; public service commission (to select employees for government service).

[தேர்வாணையம் + குழு]

தேர்வாணையம் *tērvāṇaiyam,* பெ. (n.) தேர்வாணைக்குழு பார்க்க; see *tērvāṇai-k-kuḻu.*

[தேர்வு + ஆணையம்]

தேர்வுநிலை *tērvu-nilai,* பெ. (n.) 1. அரசுப் பணியில், குறிப்பிட்ட ஆண்டுகள் பணியாற்றியவருக்கு, அதே பணியிடத்தில் தரும் உயர்நிலை; selection grade. பத்தாண்டு பணிபுரிந்த தமிழக அரசு ஊழியர்களுக்குத் தேர்வு நிலை வழங்கப்படும். 2. வருமான அடிப்படையில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கும் உயர்நிலை; selection grade to local bodies on the basis of higher revenue raised. சேலம் மாவட்டத்திலுள்ள ஆறகழூர் ஊராட்சியைத் தேர்வுநிலை ஊராட்சியாக இந்த நிதியாண்டில் அரசு அறிவித்தது.

[தேர்வு + நிலை]

தேர்விருந்து *tēr-virundu,* பெ. (n.) தேர்த் திருநாளன்று ஒருவன் தன் மாப்பிள்ளைக்குச் செய்யும் விருந்து *(இ.வ.)*; feast given by a person to his son-in-law on the day of car festival in the local temple.

[தேர் + விருந்து]

தேர்விளக்கு *tēr-viḷakku,* பெ. (n.) தேர்போல ஒப்பனை செய்யப்பெற்ற அடுக்கு விளக்கு *(இ.வ.)*; light arranged in the form of a chariot.

[தேர் + விளக்கு]

தேர்வீதி *tēr-vīdi,* பெ. (n.) தேரோடுந் தெரு; main street through which the car of an idol or a king passes. "தேர்வீதி யெழுதுகள் சேர்ந்து" (மணிமே. 4:14).

ம. தேர்வீதி; க. தேர்பீதி

[தேர் + வீதி]

தேர்வு *tērvu,* பெ. (n.) 1. ஆராய்ச்சி; examination, search. 2. பயிற்சி; thorough acquaintance, proficiency, practice, experience; the discerning faculty. 3. சுவை; beauty; sweetness, as of expression. "தக்கார்வாய்த் தேன்கலந்த தேற்றச்சொற் றேர்வு" (நாலடி. 259). 4. தெரிந் தெடுக்கை (இ.வ.); election, as to a council.

[தேர் → தேர்வு]

தேர்வென்றி *tērvenri,* பெ. (n.) தன்றேரைச் செலுத்திப் பகைவர் தேர்களை அழிக்கும் வீரனது செயலைச் சிறப்பிக்கும் புறத்துறை (பு.வெ.12, ஒழிபு. 14); theme describing the valorous deeds of a warrior who rides his chariot and destroys his enemies' chariots.

[தேர் + வென்றி]

தேரகத்தி *tēragatti,* பெ. (n.) தரகதி மரம்; large brahma's baniyan rough leaf fig (சா.அக.).

[தேர் + அகத்தி]

தேரகம்[1] *tēragam,* பெ. (n.) செவ்வந்தி; red fig (சா.அக.).

[தேர் → தேரகம்]

தேரகம்[2] *tēragam,* பெ. (n.) வெண்ணிறமுள்ள சிறு கடல்மீன் வகை; whitebait, silvery.

தேரகன் *tēragan,* பெ. (n.) தேர்ப்பாகன் (சது.) பார்க்க; see *tēr-p-pāgan.*

[தேர் + அகன்]

தேரடி *tēradi,* பெ. (n.) 1. தேர்முட்டி பார்க்க; see *tēr-mutti.* 2. தேர்ச்சக்கரம்; wheel, as the support of the car. 3. திருமாலின் சக்கரப்படை; discus weapon of Tirumāl. "தேரடிக்கூர், வெம் படையாற் காப்பதூஉம்" (இலக்.வி. 679, உரை).

[தேர் + அடி]

தேரடிச்சம்பாவனை *tēradi-c-campāvanai,* பெ. (n.) தேரடிப்பணம் பார்க்க; see *tēradi-p-panam.*

தேரடிப்பணம் *tēradi-p-panam,* பெ. (n.) 1. தேர்த் திருவிழாவன்று மாப்பிள்ளைக்குச் செய்யும் பரிசளிப்பு; present given by a person to his son-in-law on the day of car-festival. 2. தேர்த் திருவிழாவன்று தேர்த்தச்சன் தேர்க்கொற்றன் முதலியோர்க்கு வழங்கும் பரிசில்; present given on the day of car festival to the architect who finished the chariot and its driver.

[தேரடி + பணம்]

தேரணை *tēranai,* பெ. (n.) இன்புறத்தான்; black honey thorn (சா.அக.).

தேரர் *tērar,* பெ. (n.) புத்தத் துறவி (பிட்சு); buddha bhiksus. "தேர ரமணரை" (தேவா. 139, 11).

தேரல் *tēral,* பெ. (n.) 1. தேன்; honey. 2. தேறுகை; recovery from illness (சா.அக.).

[தேர் → தேரல்]

தேரலர் *tēralar,* பெ. (n.) பகைவர்; foes, enemies.

[தேர் + அல் + அர்]

தேரழுந்தூர் *tēraluntūr,* பெ. (n.) சோழ நாட்டில் உள்ள தேவாரப் பாடல் பெற்ற சிவன் கோயில்; a place in chōla nādu which is in Tēvāram.

[தேர் + அழுந்தூர்]

"திருவழுந்தூர்" எனவும் வழங்கப்படும். இது கம்பர் பிறந்தவூர் என்பர்.

தேரறேர் *tērarēr,* பெ. (n.) கானல் நீர்; mirage, as of a phantom car. "மடமான். . . தேரறேர்க் கோடல்" (கலித். 13,4).

[தேர் + அல் + தேர். 'அல்' எதிர்மறை வினை இடைநிலை]

தேரன் *tēran,* பெ. (n.) தேரையர் பார்க்க; see *tēraiyar* (சா.அக.).

தேரனார் *tēranār,* பெ. (n.) தேரையர் (அபி.சிந்.) பார்க்க; see *tēraiyar.*

[தேரையர் → தேரனார்]

தேராங்கிணி *térāṅgiṇi,* பெ. (n.) தேராங்குணி பார்க்க; see *tērāṅguṇi.*

தேராங்குணி *tērāṅguṇi,* பெ. (n.) *8* விரல நீளம் வளர்வதும் வெண்மை நிறமுடையதுமான கடல்மீன் வகை; whitebait, silvery, attaining 8 inch in length.

தேராணி *tēr-āṇi,* பெ. (n.) தேரின் அச்சாணி; linchpin of a chariot.

[தேர் + ஆணி]

தேராச்செய்கை *tērā-c-ceygai,* பெ. (n.) ஆய்ந்துபாராத செயல்; incognizant activity. தேராச்செய்கை தீராத் துன்பம் (பழ.).

[தேர் + ஆ + செய்கை. 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தேராத்தாழை *tērāt-tāḻai,* பெ. (n.) கூத்தன் குதம்பை; a kind of screw pine (சா.அக.).

தேராதுதெளிதல் *tērādu-teḷidal,* பெ. (n.) ஆராயாது ஒன்றை மற்றொன்றாக உறுதி செய்கை; mistaking one object for another without investigation, as a post for a man. "தேராது தெளிதல் செண்டு வெளியில் ஓராது தறியை மகனென வுணர்தல்" (மணிமே. 27:67).

[தேர் + ஆ + து + தெளி-. 'ஆ' எதிர்மறை இடைநிலை. 'து' வினையெச்ச விகுதி]

தேரார் *tērār,* பெ. (n.) *1.* அறிவிலி; the ignorant. *2.* கீழ்மக்கள் (திவா.); the low, the base. *3.* பகைவர்; foes, enemies.

[தேர் + ஆர்]

தேராவைக்காத்தான் *tērāvai-k-kāttāṉ,* பெ. (n.) உடல் அமைப்பில், சூடை மீன்போலும் காணக்கூடும் ஒரு கடல் மீன் (மீனவ.); a fish which resembles sūḍai mīṉ.

தேராள் *tērāḷ,* பெ. (n.) *1.* தேர்வீரன்; chariot warrior. *2.* தேர் இழுத்தற்கு அனுப்பும் ஆட்கள்; persons who are by custom, sent by the mirasdar, to drag temple cars.

ம. தேராறி, தேராள்

[தேர் + ஆள்]

தேரி *tēri,* பெ. (n.) *1.* மணற்குன்று; sand hill. *2.* மணற்றரை (நெல்லை.); sandy tract.

ம. தேரி; க. தெவரி (மேட்டு நிலம்); பட. தெவரு (வரப்பு)

[தேர் = உயரமான ஊர்தி. தேர் → தேரி]

தேரிடக்கியம் *tēr-iḍakkiyam,* பெ. (n.) தேர்க்கொடி பார்க்க; see *tēr-k-koḍi.*

[தேர் + இடக்கியம்]

தேரிலைச்சி *tērilai-c-ci,* பெ. (n.) சத்தி சாரணை; diffuse hoyweed (சா.அக.).

தேரூமச்சி *tēr-ūmacci,* பெ. (n.) தேர் போன்ற மேலோட்டையுடைய சிறு நத்தை வகை; a kind of snail, as haiving a turbinate shell.

[தேர் + ஊமச்சி]



தேரூர்சுவடு *tērūr-šuvaḍu,* பெ. (n.) தேர் ஊர்ந்து சென்ற அடையாளம்; the track of a car. "தேனார் பொழுதிற் றிருந்தா தேநீ சிந்தைகொண் டேடவே றாரிற் போனார் தேரூர்சுவடு புதையல் வாழி" (வீரசோ. 136, உரை).

[தேர் + ஊர் + சுவடு]

தேரூர்ந்தசித்தியான் *tērūrnta-šittiyāṉ,* பெ. (n.) *1.* சவர்க்காரம்; fuller's earth. *2.* சவர்க்காரக் கட்டி; soap prepared from fuller's earth mixed with other ingredients (சா.அக.).

தேரூழியம் *tēr-ūḻiyam,* பெ. (n.) கோயிற்றேரை இழுப்பதற்கு ஊர்வாரியாக ஆள்களைத் திரட்டி அனுப்பும் ஊழியம்; service where by each village is required to provide a fixed quota of men to drag the great temple cars.

[தேர் + ஊழியம்]

தேரெழுத்தாணி *tēr-eḻuttāṇi,* பெ. (n.) தேருருவான கொண்டையுள்ள எழுத்தாணி வகை (வின்.); style having a turbinate head.

[தேர் + எழுத்து + ஆணி]

தேரை *tērai,* பெ. (n.) 1. தவளை (பிங்.); frog. "அவ்வழித் தேரை தினப்பட லோம்பு" (கலித். 147, 32). தேரைகள் பாம்பைத் திரண்டு வளைத்தாற் போல (பழ.). 2. தவளை வகை; Indian toad. "தேரையார் தெங்கிளநீ ருண்ணார் பழிசுமப்பர்" (தமிழ்நா. 74). தேரை மோந்த தேங்காய் போல (பழ.). 3. தூண்டிலிலுணவு; fish bait. "தூண்டிலி னுட் பொதிந்த தேரையும்" (திரிகடு. 24). 4. தேங்காய் நோய் வகை (சீவக. 1024, உரை); coconut blight. 5. கல்லில் ஓடுங் கோட்டுக் குற்றம்; a defect of stone consisting of a granular line. "தேரை சிம்புள் சிலம்பி" (தத்துவப். 109).

ம. தேர



தேரைக்கணம் *tērai-k-kaṇam,* பெ. (n.) குழந்தைகளுக்கேற்படும் ஒருவகைக் கணை நோய்; a congenital disease in children (சா.அக.).

[தேரை + கணம்]

தேரைக்கால்கை *tērai-k-kāl-kai,* பெ. (n.) தேரை தீண்டலினால் குச்சியைப் போல் இளைத்துப் போன கால் வகைகள்; kind of legs of children, emaciated through disease (சா.அக.).

[தேரை + கால் + கை]

தேரைக்குண்டி *tērai-k-kuṇḍi,* பெ. (n.) 1. நோயினால் இளைத்த பிட்டம்; buttocks losing its roundity from disease. 2. சரத் தொட்டி; flat buttocks (சா.அக.).

தேரைக்குற்றம் *tērai-k-kuṟṟam,* பெ. (n.) உடம்புலர்ந்து, வற்றி, வெளுத்து, கண் பொடித்து, கை கால் வற்றி, மேல் மூச்சு வாங்கி, நெரிகுரல் பட்டுத் தேரையைப் போலச் சுருங்கிக் குழந்தையைக் கொல்லும் ஒரு நோய்; a fatal disease in childhood said to be due to trammission of infection caused by the Indian toad falling and secreting its urine on them (சா.அக.).

[தேரை + குற்றம்]

தேரைகுடி-த்தல் *tērai-kuḍi-,* 4 செ.கு.வி. (v.i.) தேங்காயின் உள்ளீடு கெடுதல் (யாழ்ப்.); to be blighted and eaten up, as coconuts.

[தேரை + குடி-.]

தேரைச்சூரணம் *tērai-c-cūraṇam,* பெ. (n.) தேரையை உலர்த்தி அரைக்கும் பொடி; a fine powder prepared from the Indian toad (சா.அக.).

[தேரை + சூரணம்]

மருத்துவக் குணமுடையது.

தேரைத்தேங்காய் *tērai-t-tēṅgāy,* பெ. (n.) தேரைநோய் விழுந்த தேங்காய்; blighted coconuts.

[தேரை + தேங்காய்]

"தேரையார் தெங்கிளநீ ருண்ணார் பழி சுமப்பர்" தேரைக்கும் இந்நோய்க்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாவிட்டாலும், தேரையின் பெயரே அந்நோய்க்குச் சூட்டப்பட்டது. செய்யாத் தவற்றுக்கு ஒருவர் பழி சுமப்பதற்கு இதனை உவமையாகக் கூறுவர்.

தேரைத்தோசம் *tērai-t-tōśam,* பெ. (n.) தேரைக்குற்றம் பார்க்க; see *tērai-k-kuṟṟam.*

[தேரை + தோசம்]

தேரைபாய்-தல் *tērai-pāy-,* 3 செ.கு.வி. (v.i.) தேரை தீண்டலினால் உடம்பிளைத்தல்; to emaciate of the body especially in children arising from the malgin and baleful influence of Indan-toad (சா.அக.).

[தேரை + பாய்-.]

தேரைபாய்தல் *tērai-pāydal,* பெ. (n.) 1. பிறக்கும் குழந்தை இளைக்கும்படி கருப்பிணி மீது தேரைவிழுகை; leaping of a toad on a pregnant woman belived to cause wasting disease in the child. 2. உடல் மெலிவாகை; becoming emaciated about the buttocks.

[தேரை + பாய்-.]

தேரைபோ-தல் *tērai-pō-,* 8 செ.கு.வி. (v.i.) தேங்காயை உள்ளீடற்றதாக்கும் நோய் பற்றுதல்; to be blighted and eaten up, as coconut. "தேரைபோயிற்று என்றாற் போல்வதொரு நோய் என்க" (சீவக. 1024, உரை).

[தேரை + போ-.]

தேரைமுகந்தகாய் *tērai-muganda-kāy,* பெ. (n.) தேரை நோயுற்ற தேங்காய்; blighted or withered coconut, coconut with no kernal inside (சாஅக.).

[தேரை + முகந்த + காய்]

தேரைமேய்-தல் *tērai-mēy-,* 3 செ.கு.வி. (v.i.) தேரைக்குடி-த்தல் (இவ.) பார்க்க; see *tērai-k-kuḍi-.*

[தேரை + மேய்-.]

தேரைமோ-த்தல் *tērai-mō-,* 3 செ.கு.வி. (v.i.) தேரைகுடி-த்தல் (வின்.) பார்க்க; see *tērai-kuḍi.*

[தேரை + மோத்தல்]

தேரையர் *tēraiyar,* பெ. (n.) தமிழ் மருத்துவ நூல்கள் பல இயற்றிய சித்தர்; a saint who composed many medical treatises in Tamil verse.

[தேரை + அர்]

அகத்தியரிடம் தமிழ் மருத்துவம் கற்றுக் கொண்ட மாணாக்கருள் ஒருவர் என்பர்.

தேரையாதனம் *tērai-y-ādaṉam,* பெ. (n.) கவிழ்ந்திருந்து கைகள் இரண்டு விலாவிலும் கால்கள் இரண்டு பிட்டத்திலும் சேரும்படி முடக்கிக் கிடக்கும் ஓகிருக்கை (தத்துவப். 109, உரை); a yogic posture of lying down frog - like, with arms touching the sides and the feet drawn up touching the hips.

[தேரை + ஆதனம்]



தேரைவிழு-தல் *tērai-viḻu-,* 3 செ.கு.வி. (v.i.) தேரைபோ-தல் பார்க்க; see *tērai-pō-.*

[தேரை + விழு-.]

தேரைவிழுந்தகல் *tērai-viḻunda-kal,* பெ. (n.) குறையுடைய கல்; defective stone.

[தேரை + விழுந்த + கல்]

தேரைவிழுந்தபிள்ளை *tērai-viḻunda-piḷḷai,* பெ. (n.) தேரை தீண்டலினால் இளைத்த குழந்தை; an emaciated child which is affected by the baleful influence of the Indian toad (சாஅக.).

[தேரை + விழுந்த + பிள்ளை]

தேரோட்டம் *tērōṭṭam,* பெ. (n.) தேர்த்திருநாள்; car festival.

ம. தேரோட்டம்

[தேர் + ஓட்டம்]

தேரோட்டி *tērōṭṭi,* பெ. (n.) அச்சாணி (யாழ்அக.); axle pin.

[தேர் + ஓட்டி]

தேரோட்டு[1] *tērōṭṭu,* பெ. (n.) தேரோட்டம் பார்க்க; see *tērōṭṭam.*

[தேர் + ஓட்டு]

தேரோட்டு[2]**-தல்** *tērōṭṭu-,* 8 செ.கு.வி. (v.i.) குடித்தனம் பண்ணுதல் (யாழ்ப்.); to leading domestic life (மீனவ.).

[தேர் + ஓட்டு-.]

தேரோடும்வீதி *tēr-ōḍum-vīdi,* பெ. (n.) தேர்வீதி பார்க்க; see *tēr-vīdi.*

[தேர் + ஓடும் + வீதி]

தேரோர் *tērōr,* பெ. (n.) 1. தேர்வீரர்; chariot warriors. 2. தேரேறிவந்து ஏர்க்களத்தையும் போர்க்களத்தையும் இசைக்கருவிகளுடன் பாடியாடும் புலவர் (தொல்.பொருள். 76); a class of minstrels who go on chariots and with drum accompaniment sing the praises of the cultivators at the threshing-floor or of the warriors on the battle field.

[தேர் + ஓர்]

தேரோன் *tērōn,* பெ. (n.) ஞாயிறு; the sun, as having a chariot. "தேரோன் மலைமறைய" (திணைமாலை. 112).

[தேர் + ஓன்]

தேலிக்கை *tēlikkai,* பெ. (n.) எளிது; superficiality, slightness, lightness. "வழக்கைத் தேலிக்கையாய் விட்டு விட்டான்" (யாழ்.அக.).

தேலு-தல் *tēlu-,* 5 செ.குவி. (v.i.) 1. தப்புதல்; to get rid of; to escape danger as a ship. 2. தேறு-தல் பார்க்க; see *tēṟu-.* ஆள் தேலுதலரிது.

தெ. தேலு

[தேறு → தேலு]

தேவக்கிரகம்[1] *tēva-k-kiragam,* பெ. (n.) அமைதிப் பித்துநிலையையுண்டாக்கும் பேய்; a class of demon causing harmless madness.

தேவக்கிரகம்[2] *tēva-k-kiragam,* பெ. (n.) தேவர்களின் இருப்பிடம்; place where devar abide.

[தேவர் + கிரகம்]

தேவக்கிரியை *tēva-k-kiriyai,* பெ. (n.) 1. தெய்வச் செயல் (வின்.); act of God, providence. 2. ஓரிசை (பரத. இராக. 56); a specific melody type.

[தேவ + கிரியை]

தேவகங்கை *tēvagaṅgai,* பெ. (n.) வான வெளியிலிருந்து வருவதாகக் கருதப்படும் கங்கை ஆறு; Ganga believed to come from the sky.

[தேவ + கங்கை]

தேவகண்ணி *tēva-kaṇṇi,* பெ. (n.) மலை வேம்பு; chittagong wood.

[தேவ + கண்ணி]

தேவகணம் *tēvakaṇam,* பெ. (n.) 1. கணம் பார்க்க; see *kaṇam.* 2. இரலை, மாழ்கு, கழை, கொடிறு, கைம்மீன், விளக்கு, பனை, முக்கோல், தொழுபஃறி முதலான ஒன்பது விண்மீன்கள்; the nine naksatras viz., aśuvini, mirugacīridam, puṉarpūsam, pūsam, attam, śuvāti, anuṭam, tiruvōṇam, irēvadi, as belonging to the dēva-class.

[தேவ(ர்) + கணம்]

தேவகணிகை *tēva-kaṇigai,* பெ. (n.) தேவதாசி பார்க்க; see *tēvadāśi.* "தேவகணிகையர்கள் கூத்தர்" (காஞ்சிப்பு. தலவி. 25).

[தேவ + கணிகை]

தேவகணிகையர் *tēva-kaṇigaiyar,* பெ. (n.) தேவதாசி பார்க்க; see *tēva-dāśi.*

[தேவ + கணிகையர்]

தேவகதி *tēva-gadi,* பெ. (n.) உயிர்கடக்கும் பிறப்பு நிலைகளுளொன்று (சீவக. 2800, தலைப்பு); the order of divine beings, one of four kati.

[தேவர் + கதி]

தேவப் பிறப்பு (தேவகதி) மக்கட் பிறப்பு (மக்கட்கதி) விலங்குப் பிறப்பு (விலங்குகதி), நரகர் பிறப்பு (நரககதி) என்பன நால்வகைப் பிறப்புகள்.

தேவகதியெழுத்து *tēva-gadi-y-eḻuttu,* பெ. (n.) செய்யுண் முதலில் வருதற்குரியனவும், நன்மை பயப்பனவுமாகிய அ, இ, உ, எ, க, ச, ட, த, ப என்ற எழுத்துகள் (வெண்பாப். முதன் மொழி. 18, உரை); auspicious letters at the commencement of a poem.

[தேவகதி + எழுத்து]

தேவகந்தம் *tēva-gandam,* பெ. (n.) 1. குங்கிலியம் (மலை.); Indian bdellium. 2. நெய்ச் சட்டி (தைலவ. தைல. 32); purple Indian water-lily.

[தேவ + கந்தம்]

தேவகந்தர் *tēva-gandar,* பெ. (n.) செங்கழுநீர்; a kind of red water lily (சா.அக.).

[தேவ(ர்) + கந்தம்]

தேவகந்துலி *tēva-ganduli,* பெ. (n.) தேவகந்தூறு பார்க்க; see *tēvagandūru* (சா.அக.).

தேவகந்தூறு *tēvagandūṟu*, பெ. (n.) செங்கழுநீர் (மலை); a kind of purple Indian water lily.

[தேவ + கந்தூறு]

தேவகம் *tēva-gam*, பெ. (n.) தெய்வீகமானது (யாழ்.அக.); that which is divine.

[தெய்விகம் → தேவகம்]

தேவகருமம்நவகருமம் *tēva-karumam-nava-karumam*, பெ. (n.) கோயிலில் நிகழ்த்தப்படும் வழிபாட்டுப் பணியும், கோயிலைப் புதுப்பித்தல், இடிபாடுகளைச் சீர்செய்தல் ஆகிய திருப்பணிகளும்; temple service done for adoration, and to reconstruct the damage part of the temple building.

[தேவ கருமம் + நவகருமம்]

இதற்கு இறையிலி நிலம் அளிக்கப் பெறுவது வழக்கு.

தேவகன் *tēvagaṉ*, பெ. (n.) கண்ண (கிருட்டிண)னுடைய பாட்டன், தேவகியின் தந்தை; grand father of Kannan, father of Dēvagi.

[தேவன் → தேவகன்]

தேவகன்மி *tēvakanmi*, பெ. (n.) கோயிலில் இறை (சுவாமி) பணி பார்ப்போன்; a temple official, as priest, a manager etc., "தேவகன்மிகள் இவை தலைகண்ட முதற் கொண்டு" (தெ.க.தொ. 5:92).

[தேவ + கன்மி]

தேவகன்னி[1] *tēva-kaṉṉi*, பெ. (n.) 1. வாழை; plantain tree. 2. மதகிரி வேம்பு; Indian mahogany.

[தெய்வ → தேவ + கன்னி]

தேவகன்னி[2] *tēva-kaṉṉi*, பெ. (n.) தேவலோகத்து அரம்பை; Ramba who dances in the tēvar court-yard.

[தேவ + கன்னி]

தேவகன்னிகைமரம் *tēvakaṉṉigaimaram*, பெ. (n.) கட்டடத்திற்குப் பயன்படும் கோங்கு வகை மரம்; common caung used in building construction.

[தேவர் + கன்னிகை + மரம்]

தேவகா *tēvagā*, பெ. (n.) தேவர்களது பூங்கா; garden of Dēvar.

[தேவர் + கா]

தேவகாஞ்சனம் *tēva-kāñjaṉam*, பெ. (n.) தேவதாரு; decany desdarn Indian cedar tree (சா.அக.).

தேவகாட்டம் *tēvakāṭṭam*, பெ. (n.) தேவதாரு (சங்.அக.) பார்க்க; see *tēvatāru*.

[தேவ + காட்டம்]

தேவகாதம் *tēva-kādam*, பெ. (n.) மலைக்குகை; rock cave.

தேவகாந்தாரி *tēvagāndāri*, பெ. (n.) ஒருவகைப் பண்; a melody type.

தேவகானம் *tēva-gāṉam*, பெ. (n.) தேவர்கள் பாடும் இசை; celestial music. "சோழன் வாசலிலே தேவகானம் பாடுவா ளொருத்தியும்" (குருபரம். 126).

[தேவ + கானம்]

தேவகி *tēvagi*, பெ. (n.) கண்ணனின் தாய்; mother of Kannaṉ. "தெய்வத் தேவகி புலம்பிய புலம்பல்" (திவ். பெருமாள். 7, 11).

தேவகிரி *tēvagiri*, பெ. (n.) 1. முருகக் கடவுட்குரிய இமய மலைப்பகுதி; a mountain sacred to Murugaṉ in the Himalayas. "தேவகிரிப்படலம் (கந்தபு.). 2. துகில் வகை (சிலப். 14, 108, உரை); a kind of cloth.

[தேவர் + கிரி]

Skt. giri → த. கிரி

தேவகுசுமம் *tēvakusumam*, பெ. (n.) கிராம்பு (யாழ்.அக.); cloves.

தேவகுஞ்சரி *tēvakuñjari*, பெ. (n.) தெய்வ யானை பார்க்க; see *teyva-yāṉai*. "தேவ குஞ்சரிபாகா நமோநம" (திருப்பு. 94).

[தேவர் + குஞ்சரி]

தேவகுடிமை[1] *tēva-kuḍimai*, பெ. (n.) பழைய வரி வகை; an ancient tax.

[தேவர் + குடிமை]

தேவகுடிமை[2] *tēva-kuḍimai*, பெ. (n.) கோயிலுக்குரிய நிலத்தில், குடியிருப்பதோடு,

கோயிற் பணிகளைப் பார்த்து வரும் குடிகள்; people who live in the temple land and do temple service.

[தேவர் + குடிமை]

தேவகுண்டம் *tēva-gunḍam*, பெ. (n.) தானாயுண்டான ஊற்று (யாழ்அக.); natural spring, as God - made (செஅக.).

[தேவர் + குண்டம்]

தேவகுமாரன் *tēva-kumāran*, பெ. (n.) இயேசு; Christ, as the son of God.

[தேவர் + குமாரன்]

தேவகுரு[1] *tēva-guru*, பெ. (n.) வியாழன் (பிங்.); Brhaspati, as priest of the celestials.

[தேவர் + குரு]

தேவகுரு[2] *tēva-guru*, பெ. (n.) தேவகுருவம் பார்க்க; see *tēva-guruvam*.

தேவகுருவம் *tēva-guruvam*, பெ. (n.) வினை நிலங்கள் ஆறனுள் ஒன்று (பிங்); a region of bliss where the fruits of good karma are enjoyed one of six pōka-pūmi.

[தேவர் + குருவம்]

தேவகுலம் *tēva-kulam*, பெ. (n.) கோயில்; temple. "தேவகுலமுந் தெற்றியும் பள்ளியும்" (மணிமே. 26:72).

[தேவர் + குலம்]

தேவகெந்தம் *tēva-kentam*, பெ. (n.) தேவகந்தம் (யாழ்அக.) பார்க்க; see *teva-kantam*.

[தேவகந்தம் → தேவகெந்தம்]

தேவகோட்டம்[1] *tēva-kōṭṭam*, பெ. (n.) தேவகுலம் பார்க்க; see *tēva-kulam*. "தேவகுலம் மன்றாகச் செய்யப்பட்ட தேவ கோட்டத்தை" (திருக்கோ. 129).

[தேவர் + கோட்டம்]

தேவகோட்டம்[2] *tēva-kōṭṭam*, பெ. (n.) கோயில் கருவறைப் புறச்சுவரில் இறைத்திரு மேனிகளை வைப்பதற்கான மாடங்கள்; niche in the outside of the temple sanctum to keep the iodls.

[தேவர் + கோட்டம்]

தேவகோடி *tēva-kōḍi*, பெ. (n.) ஒரு பேரெண்; a very large number. "தேவகோடி கார்மலி கடலங் காலாள்" (சீவக. 2219).

[தேவ(ர்) + கோடி]

தேவச்சந்தம் *tēva-c-candam*, பெ. (n.) நூறு சரமுள்ள முத்தாரம் (யாழ்அக.); a garland of hundred strings of pearls (செஅக.).

[தேவர் + சந்தம்]

தேவசங்கு *tēva-šaṅgu*, பெ. (n.) சங்கப் பணம்; a treasure of Gubera.

[தேவ + சங்கு]

தேவசத்துவம் *tēva-šattuvam*, பெ. (n.) மகளிர்க்குரிய மெய்ப்பாடுகள் பத்தனுள் தேவத் தொடர்பான குணம் (கொக்கோ.); the divine element in the make up of a woman, one of pattu cattuvam.

[தேவர் + சத்துவம்]

தேவசபை *tēva-šabai*, பெ. (n.) இந்திரன் அவை; Indiran's audience-hall.

[தேவ(ர்) + சபை]

தேவசமுகம் *tēva-šamugam*, பெ. (n.) தேவசன்னிதி பார்க்க; see *tēva-šannidi*.

[தேவ(ர்) + சமுகம்]

தேவசன்னிதானம் *tēva-šannidānam*, பெ. (n.) தேவசன்னிதி பார்க்க; see *tēva-šannidi*.

[தேவர் + சன்னிதானம்]

தேவசன்னிதி *tēva-šannidi*, பெ. (n.)
1. தெய்வத்தின் திருமுன்பு; divine presence.
2. கோயில்; temple.

[தேவர் + சன்னிதி]

தேவசாட்சியாய் *tēva-šāṭciyāy*, கு.வி.எ. (adv.) உண்மையாய்; truly, as having God for witness.

[தெய்வம் → தேவம் + சாட்சியாய்]

தேவசிகிச்சை *tēva-šigiccai*, பெ. (n.) மூன்று மருத்துவ முறைகளுள், இதளிய கந்தக நஞ்சுகளால் நோய்கட்குச் செய்யும் நீக்கவினை (பரிகாரம்) (பதார்த்த. 1202); treatment of diseases by the use of mercury,

sulphur and arsenic, considered to be of divine origin, one of three methods.

[தேவர் + சிகிச்சை]

தேவசித்தன் *tēva-šittan*, பெ. (n.) கமலமுனி; name of a sage of Kamalamuni (சா.அக.).

[தேவ + சித்தன்]

தேவசிந்தனை *tēva-šindanai*, பெ. (n.) தெய்வத்தை நினைத்துச் செய்யும் ஊழ்கம்; religious meditation.

[தேவர் + சிந்தனை]

தேவசிருட்டை *tēva-širuttai*, பெ. (n.) மது; any sweet drink beverage (சா.அக.).

தேவசுத்தி *tēva-šutti*, பெ. (n.) ஐந்துவகை மாசு நீக்குதலில், தெய்வத்தை இருக்கையில் அமர்த்தி, உடையை உடுத்துத் திருமஞ்சனம் ஆட்டி ஒப்பனை செய்து, நறும்புகை, விளக்குகளால் தூய்மை செய்தல்; purification of a deity, which consists in placing its image on a seat, bathing it, adorning it with garments, ornaments, etc, one of pañja-cutti.

[தெய்வம் + சுத்தி]

தேவசுமம் *tēva-šumam*, பெ. (n.) கிராம்பு; cloves.

தேவசேகரம் *tēva-šēgaram*, பெ. (n.) தவனம்; southern wood.

தேவசேவை *tēva-šēvai*, பெ. (n.) தெய்வத்திற்குச் செய்யும் தொண்டு; service in a temple (செ.அக.).

[தேவர் + சேவை]

தேவசேனாபதி *tēva-šēnābadi*, பெ. (n.) முருகக் கடவுள்; Murugan as the commander of the celestial host.

[தேவர் + சேனாபதி]

தேவசேனை *tēva-sēnai*, பெ. (n.) 1. இந்திரன் மகள்; daughter of Indiran. 2. தேவக் கூட்டம்; celestials.

[தேவர் + சேனை]

தேவடி[1] *tēvadi*, பெ. (n.) அரண்மனை; palace.

தேவடி[2] *tēvadi*, பெ. (n.) தேவரடியார் பார்க்க; see *tēvar-adiyār.*

[தேவரடி → தேவடி]

தேவடிச்சி *tēvadicci*, பெ. (n.) தேவரடியார் பார்க்க; see *tevar-adiyār.*

ம. தேவடிச்சி

[தேவடி(யாள்) → தேவடிச்சி]

தேவடிமை *tēvadimai*, பெ. (n.) கணிகையர்; dancing girl, as a servant of God (Pudu. insc. 930). 2. வேலைக்காரி; servant maid. (I.M.P.N.A. 202)

[தேவ + அடிமை]

தேவடியாள் *tēvadiyāḷ*, பெ. (n.) தேவரடியார் பார்க்க; see *tēvar-adiyār.* தேவடியாள் இருந்து ஆத்தாள் செத்தால் கொட்டு முழக்கும், தேவடியாள் செத்தால் ஒன்றுமில்லை.

[தேவரடியார் → தேவடியாள்]

தேவடியான் *tēvadiyān*, பெ. (n.) சிவனியப் பார்ப்பனன்; siva brahmin. "காளி தேவடியான் இரண்டாயிரத்து நாநூற்று வரேம்" (தெ.க.தொ. 3:1. கல். 10).

ம. தேவடியான் (கூட்டிக் கொடுப்பவன்)

[தேவர் + அடியான்]

தேவடை *tēvadai*, பெ. (n.) எழுத்தழிந்த காசு; coin with face worn out. அந்தக் காசு தேவடை.

[தேய் → தேய்வடை → தேவடை]

தேவத்துவம் *tēvattuvam*, பெ. (n.) தேவ தன்மை; heavenliness (இருநூ.).

[தேவம் → தேவத்துவம்]

தேவதச்சன் *tēva-taccan*, பெ. (n.) தேவகம்மியன்; Viccuvakarmā.

[தேவர் + தச்சன்]

தேவதத்தம் *tēvatattam*, பெ. (n.) 1. கோயிலுக்குச் செய்யும் நன்கொடை (கோயிலுபயம்); that which is given to a temple. 2. அருச்சுனனுக்கு இந்திரன் கொடுத்த சங்கு (யாழ்.அக.); Arjunās conch, as given by Indiran.

[தேவ + தத்தம்]

தேவதத்தன் *tēvatattaṉ*, பெ. (n.) 1. எவனை யேனுமொருவனைக் குறிக்குஞ் சொல்; a word used to denote an imaginary person. *"தேவதத்தன் தானாகப் போகலாமென்றால்" (யாப்.வி. 3, பக்.37).* 2. கொட்டாவியை உண்டு பண்ணும் வளி (பிங்.); the vital air of the body which produces yawning

தேவதத்தாக்கிரசன் *tēva-tattākkirašaṉ*, பெ. (n.) புத்தன்; Lord Buddhaṉ.

தேவதத்துவம் *tēva-tattuvam*, பெ. (n.) தெய்வ அன்பு; god's love (இருநூ.).

[தேவ(ர்) + தத்துவம்]

தேவதரு *tēvataru*, பெ. (n.) 1. தெய்வ மரம்; one of the celestial trees. *"அருள்பழுத் தொழுகு தேவதருவே" (தாயு. பரிபூரணா, 1).* 2. தேவதாரம் (மலை) பார்க்க; see *tēvatāram*. 3. செம்புளிச்சை; red hemp bendy. 4. மந்தாரம்; mountain eboy.

[தெய்வம் + தரு = தேய்வத்தரு → தேவதரு]

தேவதாகாரம் *tēvatāgāram*, பெ. (n.) கோயில் (யாழ்.அக.); temple.

தேவதாசன் *tēvadāšaṉ*, பெ. (n.) 1. தெய்வத் தொண்டன்; devotee, servant of god. 2. அரிச்சந்திரன் மகன்; the son of Harichandran.

[தேவர் + தாசன்]

தேவதாசி *tēvadāši*, பெ. (n.) 1. கோயிற் பணி விடை புரியுங்கணிகை; dancing girl, dedicated to the service of a God. 2. தேவலோகத்து நாட்டிய அரம்பையர்; celestial dancing-girls.

தேவதாடம் *tēvatāḍam*, பெ. (n.) 1. கருங்கோள் (இராகு); the moon's ascending node. 2. தீ; fire (செ.அக.).

தேவதாமரை *tēvatāmarai*, பெ. (n.) தாமரைச் செல்வம் (பதுமநிதி); patuma-nidi, a treasure of Kubera.

[தேவர் + தாமரை]

தேவதாயம் *tēvatāyam*, பெ. (n.) கோயிற்கு நிலம் வழங்கல் முதலிய நற்செயல்கள்; lands other endowments to a temple (R.F.). *"தேவதாயங்கள் வேதியர் செய்கள்மேற் கோவினா லிறைகூட்டி" (குற்றா. தல. கவுற்சன. 62).*

[தேவ + தாயம்]

தேவதாயனம் *tēvatāyaṉam*, பெ. (n.) கோயில்; temple (இருநூ.).

தேவதாயோக்கியம் *tēvatā-y-ōkkiyam*, பெ. (n.) கடவுளர்க்குரியது; that which is worthy of Gods themselves.

தேவதாரம் *tēvatāram*, பெ. (n.) 1. தேவதாரு 1,2 பார்க்க; see *tēvatāru*. *"தேவதாரத்துஞ் சந்தினும் பூட்டின சிலமா" (கம்பரா. வரைக். 1).* 2. மதகரி வேம்பு; common bastard cedar.

தேவதாரன் *tēvatāraṉ*, பெ. (n.) தேவதாரம் பார்க்க; see *tēva-dāram* (சா.அக.).

தேவதாரி[1] *tēvatāri*, பெ. (n.) தேவதாரு 1,2 பார்க்க; see *tēva-tāru*.

தேவதாரி[2] *tēva-tāri*, பெ. (n.) இமயமலைச் சாரலில் வளரும் மருந்தாகும் இயல்புடைய மரம்; Indian cedar a medicinal tree (சா.அக.).

தேவதாரு *tēvatāru*, பெ. (n.) 1. வண்டுகொல்லி; deodar cedar. 2. மரவகை; red cedar. 3. நெட்டிலிங்கம் பார்க்க; see *neṭṭiliṅgam*.

தேவதாளி[1] *tēvatāḷi*, பெ. (n.) 1. ஊமத்தை; datura. 2. பூசணி; pumpkin.

தேவதாளி[2] *tēvatāḷi*, பெ. (n.) 1. பெரும்பண் வகை (பிங்.); a specific melody type. 2. ஆனை மலையிலுள்ள மரவகை; langsat of the Āṉaimalai hills in Coimbatore (m.tr.). 3. நுரைப் பீர்க்கு பார்க்க; see *nurai-p-pīrkku*.

தேவதாளிதைலம் *tēvatāḷi-tailam*, பெ. (n.) ஒருவகை மருந்தெண்ணெய்; a kind of medicinal oil (சா.அக.).

தேவதானபிரமதேயம் *tēvatāṉa-pirama-tēyam*, பெ. (n.) கோயில் வழிபாட்டிற்கென்று உரிமை செய்யப்பட்ட தேவப்பார்ப்பனர்கட்கும், கோயிலுக்கும் அமைந்த செலவினங்கட்கு உரியதாக அளிக்கப்பெறும் இறையிலி நிலம்; land given to temples for the brahmins, and for the temple expenses.

தேவதானம் *tēvatāṉam,* பெ. (n.) கோயிற்கு விடப்பட்ட இறையிலி நிலம்; endowment of tax-free land to a temple. "நன்றிகொ டேவதான நல்கி" (திருவாலவா. 48, 22).

ம. தேவதானம்

[தேவ + தானம்]

தேவதானியம் *tēva-tāṉiyam,* பெ. (n.) சிறுங்கி அல்லது தித்திப்புச் சோளம்; sweet cholam (சா.அக.).

[தேவ + தானியம்]

வ. தானியம் → த. தவசம்

தேவதீபம் *tēvatīpam,* பெ. (n.) 1. கண் (யாழ்அக.); eye. 2. தெய்வீக ஒளி; divine light.

[தேவ + தீபம்]

தேவதீர்த்தம் *tēva-tīrttam,* பெ. (n.) தெய்வங்களை மனங்குளிரச் செய்வதற்காக உள்ளங்கையிலே நீரை ஊற்றி, அது விரல்களின் வழியாக நிலத்தை அடையச் செய்யும் ஐவகைத் தூய நீருள் (தீர்த்தம்) ஒன்று (சைவச.பொது.66); water poured from the palm of the hand, through the finger tips on the ground, to propitate devar one of pañca-tirttam.

[தேவ + தீர்த்தம்]

தேவதுந்துபி *tēva-tundubi,* பெ. (n.) ஓர் இசைக் கருவி; drums of the Gods. "தேவதுந்துபி தேவர்கட் கோகையுய்த் துரைப்பான்" (சீவக. 2367) (செ.அக.).

[தேவ + துந்துபி]

தேவதூதன் *tēva-dūdaṉ,* பெ. (n.) 1. தெய்வச் செய்தி கொணர்வோன்; divine messenger. 2. தூதனாகிய தேவன் (கிறித்.); Holy Angel (செ.அக.).

[தேவர் + தூதன்]

தேவதூபம் *tēva-dūbam,* பெ. (n.) வெள்ளைக் குங்கிலியம் பார்க்க (தைலவ.தைல.); see veḷḷai-k-kuṅgiliyam.

[தேவர் + தூபம்]

தேவதேவன் *tēva-dēvaṉ,* பெ. (n.) பரம்பொருள்; the supreme being. "நீயே தவத் தேவதேவனும்" (திவ். இயற். நான்மு.20).

[தேவர் + தேவன்]

தேவதேவு *tēva-dēvu,* பெ. (n.) தேவதேவன் பார்க்க; see tēva-tēvaṉ. "தேவதே வுபதேசித்த சித்தியை" (திருவிளை. அட்டமா. 29).

தேவதை *tēvadai,* பெ. (n.) 1. தெய்வம்; deity, god. 2. பேய் (யாழ்அக.); evil spirit.

ம. தேவத

தேவதைக்குற்றம் *tēvadai-k-kuṟṟam,* பெ. (n.) ஊர்த் தேவதைகளின் சினத்தினால் ஏற்படும் கோளாறுகள்; diseases due to malignant influence of demon and monsters (சா.அக.).

[தேவதை + குற்றம்]

தேவதைக்குறை *tēvatai-k-kuṟai,* பெ. (n.) சிறுதெய்வக்குறையால் உண்டாகும் நோய் (வின்.); disease due to possession by an evil spirit (செ.அக.).

[தேவதை + குறை]

தேவதைத்தொடர்ச்சி *tēvadai-t-toḍarcci,* பெ. (n.) சிறு தேவதையின் பீடிப்பு (வின்.); possession or obsession by a demon.

[தேவதை + தொடர்ச்சி]

தேவந்தி *tēvandi,* பெ. (n.) சிலப்பதிகாரக் கண்ணகியின் தோழி; friend of Kaṇṇagi in Cilappati-karam.

தேவநகர் *tēva-nagar,* பெ. (n.) 1. கோயில்; temple. 2. துறக்கம்; city of the Gods.

[தேவர் + நகர். நகுதல் = விளங்குதல். நகு → நகர் = விளங்கும் மாளிகை, மாளிகையுள்ள பேரூர்]

தேவநற்கருணை *tēvanaṟ-karuṇai,* பெ. (n.) கிறித்தவரின் சடங்கு; a ceremony of Christianity.

[தேவ + நற்கருணை]

தேவநாகரம் *tēva-nāgaram,* பெ. (n.) தேவநாகரி பார்க்க; see tēva-nāgari. "நந்திநாகரந் தேவநாகர முதலாய எழுத்துக்களை" (சிவதரு. சிவஞானதான. 32, உரை).

[தேவ + நாகரம்]

தேவநாகரி *tēva-nāgari,* பெ. (n.) வடநாட்டில் உண்டாகி வழங்கும் ஆரிய மொழியின்

வடிவெழுத்து; North Indian Sanskrit script (செ.அக.).

[தேவ + நாகரி]

தேவநாயகன் *tēva-nāyagaṉ*, பெ. (n.) தேவர்கள் தலைவன்; the Lord of celestials.

ம. தேவநாயகன்

[தேவ + நாயகன்]

தேவநாழியோடொக்கும்உழக்கு *tēva-nāḻiyōḍokkum-uḻakku*, பெ. (n.) திருச்சோற்றுத் துறை சிவன்கோயிலில் நெய் அளப்பதற் கிருந்த அளவை; measurement use to measure the ghee in Sivan temple in Tiruccōṟṟuttuṟai. "நிசதி உழக்கு நெய் - தேநாழியோ டொக்கும் உழக்கினால் அட்டுவேன்" (தெக.தொ. 5, கல். 619).

[தேவ + நாழி + ஓடு + ஒக்கும் + உழக்கு]

தேவநிகாயம் *tēva-nigāyam*, பெ. (n.) வீடுபேறு; salvation.

[தேவ(ர்) + நிகாயம்]

தேவநிணல் *tēva-niṇal*, பெ. (n.) நாவல்; jamboo tree (சா.அக.).

தேவநிந்தகன் *tēva-nindagaṉ*, பெ. (n.) தெய்வத்தைத் தூற்றுபவன் (யாழ்.அக.); blasphemer.

[(தெய்வம்) தேவ + நிந்தகன்]

தேவநிலம் *tēvanilam*, பெ. (n.) தேவதைகளுக் கென்று விடப்பட்ட ஆறிலொரு மனைப் பகுதி (வின்.); portion of a house-site allotted to several deities, being one-sixth of a square plot (செ.அக.).

[தேவ(ர்) + நிலம்]

தேவநிறம் *tēvaniṟam*, பெ. (n.) 1. சீந்தில்; moon creeper. 2. பொன்னிறம்; golden colour (சா.அக.).

[தேவ(ர்) + நிறம்]

தேவநீதி *tēvanīdi*, பெ. (n.) தெய்வத் தண்டனை (யாழ்.அக.); divine punishment.

[தேவ(ர்) + நீதி]

தேவநேயன்[1] *tēvanēyaṉ*, பெ. (n.) இறைவன் மேல் அன்பு கொண்டோன் (கிறித்.); Jesus.

[தேவன் + நேயன்]

தேவநேயன்[2] *tēvanēyaṉ*, பெ. (n.) வடமொழிப் பிணிப்பினின்று தமிழைக் காக்கப் பிறப்பு எடுத்ததாகக் கூறியவரும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுப்பது தம் வாழ்நாள் பணியென்று கொண்டவரும் மாந்தன் பிறந்தகம் குமரிக் கண்டமே என்று நிறுவியவரும் தமிழ் திரவிடத்திற்குத் தாய் ஆரியத்திற்கு மூலம், ஞால முதன் மொழி என்னும் முப்பெரும் முடிவுகளை நிறுவத் தம் வாழ்நாள் முழுமையும் ஆய்வு மேற் கொண்டவருமான இருபதாம் நூற்றாண்டின் தனித்தமிழ்ப் பேரறிஞர்; purist Tamil scholar of 20th century, who devoted his life time to establish the purity and the antiquity of Tamil, who considered his birth is for the same cause, who considered compilation of the etymological dictionary of Tamil language as his life time mission, who asserted Kumari continent was the birth place of human race, Tamil is the mother of Dravidian languages, Tamil has roots of Aryan languages, and Tamil is the primary classical language of the world.

[தேவன் + நேயன்]



தேவன்:

தேய் - தேய்தல் = உரசுதல்

தேய் - தீய் - தீ = நெருப்பு, விளக்கு, நரகம்.

தீ - தீமை = தீயின் தன்மை. தீ - தீய = கொடிய.

தீய்தல் = எரிந்து போதல், கருகுதல், பற்றிப் போதல்.

தீதல் = தீய்தல்.

ஏகாரம் ஈகாரமாய்த் திரிதலை, தேன் - தேம் - தீம் என்னும் திரிபிலும் கண்டு கொள்க.

தேய் - தேயு (சமற்கிருதம்) = நெருப்பு

இத் 'தேய்' அடியினின்றே தெய்வப் பெயர் தோன்றிற்று.

தேய் - தேய்வு - தேவு - தேவன்.

தேய்வு - தெய்வு - தெய்வம்.

தேவு - தே = தெய்வம், தலைவன்

பால் வரை தெய்வம் வினையே பூதம் (தொல். 341) தெய்வம் உணாவே மாமரம் புட்பறை (தொல். 964) தெய்வம் அஞ்சல் புரையறத் தெளிதல் (தொல். 1218) வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப (தொல். 1367). யகர வொற்றுள்ள தெய்வப்பெயரே பெரும் பான்மையாகவும், தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே (தொல்.1395) என வகர வொற்றுள்ள பின்னை வடிவு அருகியும், இதுபோதுள்ள தமிழ் நூல்களுள் முந்தியதாகிய தொல்காப்பியத்துள் வருதல் காண்க.

சமற்கிருதம் - deva, daiva

இலத்தீன் - dues = god

கிரேக்கம் (Greek) - theos = god

'தேவ' என்னும் சொற்குச் சமற்கிருதத்திற் காட்டப்படும் div (to be bright) di, dip (to shine) என்னும் வேர்ச்சொற்கள் முதற் பொருளன்றி வழிப்பொருளே கொண்டுள்ளமையின் பொருந்தாமை காண்க.

பின்வரும் சித்திய (scythian) ஆரியச் சொற்கள், 'தீ' (நெருப்பு) என்னும் தமிழ்ச் சொற்கு இனமானவை எனக் கால்டுவெல் கண்காணியார் காட்டுவார்.

சித்தியம்:

சாமாயிதே (samoiede) - tu, tui, ti, ty

மஞ்சு (Manchu) - tua

அங்கேரியம் (Hungarian) - tuz

ஒசுத்தியக்கு (Ostiak) - tut

துங்கசு (Tungus) - togo

இலசுக்கியம் (Lesghian) - tze, zi, zie

ஆரியம்:

கேலிக்கம் (Gaelic) - teire

வேலிசு (Welsh) - tan

பாரசீகம் (Persian) - tigh.

நேயன்

நள் - நண் - நண்பு - நட்பு

நள்ளுதல் = அடைதல், பொருந்துதல், நட்புக் கொள்ளுதல், செறிதல்

நள்ளார் = பகைவர்.

நள்ளி = உறவு (சூடா.)

நள்ளிருள் = செறிந்தவிருள் (திருக்கோ 156, சிலப். 15:105)

நள்ளுநர் = நண்பர் (திவா.).

நள் - நளி. நளிதல் = செறிதல்.

நள் - நெள் - நெய் = ஒட்டும் நீர்மப் பொருள் (oil, ghee), கருப்புக் கட்டிச்சாந்து.

நெய்தல் = இணைத்தல், நூலை இணைத்து ஆடையாகச் செய்தல்.

நெய் = குருதி, நெய்த்தோர் (நெய்த்துவர்?) = குருதி. அகரம் எகரமாதலை, பரு - பெரு, சத்தான் - செத்தான் என்னும் திரிபுகளிற் காண்க.

ளகர மெய்யீறு யகர மெய்யீறாவதை, கொள் - கொய், தொள் - தொய், பொள் - பொய் முதலிய திரிபுகளிற் காண்க.

நெய் - (நெய்ஞ்சு) - நெஞ்சு - நெஞ்சம் = விலாவெலும்புகள் இணைக்கப்பட்ட இடம் அல்லது அன்பிற்கிடமாகக் கருதப்படும் நெஞ்சாங்குலை (heart) உள்ள இடம்.

நெய் - நேய் - நேயம் = அன்பு.

ஈரம் பசை முதலிய சொற்கள் ஒட்டும் பொருளையும் அன்பையும் குறித்தல் காண்க. அன்பு, இருவரை அல்லது பலரை இணைப்பது.

நேய் - நே = அன்பு. நேயம் - நேசம்

ய - ச, ஒ.நோ: நெயவு - நெசவு

நேசம் - நேசி. நேசித்தல் = அன்பு கடாத்தல், விரும்புதல். 'நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவார்' (தாயுமானவர்) நேயம் - நேயன். நேசம் - நேசன்.

நேயம் என்னும் தென்சொல் வடநாட்டுத் திரவிடத்தில் வழங்கி, பின்னர்ப் பிராகிருதத்திலும் தொடர்ந்து, இறுதியில் சமற்கிருதத்திற் புகுந்து 'ஸ்நேஹ' என்று வழங்குகின்றது. இவ்வரலாற்றை அறியாதார், பேரன் பாட்டனைப் பெற்றான் என்பது போல், ஸ்நேஹ (சமற்.) - நேயம் (பிராகிருதம்) - நேயம் (தமிழ்) எனத் தலைகீழாய்த் திரிப்பர். இங்ஙனமே சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியிலும் உண்மைக்கு மாறாகக் காட்டப்பட்டுள்ளது. பகுத்தறிவும் நடுவு நிலைமையுமுள்ள அறிஞர் உண்மை கண்டுகொள்வாராக. நேயம் வடசொல்லாயின் 'நெய்' என்பதும் அதன் அடிவேரான 'நள்'

என்பதும் வட சொல்லாதல் வேண்டும். அங்ஙன மாகாமை வெள்ளிடை மலைபோல் தெள்ளிதே.

வடமொழி ஆயிரக்கணக்கான தென் சொற்களைக் கடன் கொண்டிருப்பதால், மொழிநூல் முறைப்படி நடுவு நிலையாய் ஆராய்ந்து உண்மை காண வேண்டுமேயன்றி, வடமொழி தேவமொழியாதலால் பிற மொழியினின்று கடன் கொள்ளாதென்னும் கருநாடகக் குருட்டுக் கொள்கையை அடிப் படையாகக் கொண்டு, தூய தென் சொற்களையும் வடசொல்லென வலிப்பது, அறிவாராய்ச்சி மிக்க இக்காலத்திற் கேற்காதென வடமொழிவாணர் திடமாக அறிவாராக; ஆராய்ச்சியில்லாத தமிழ்ப் பேராசிரியரும் வடமொழியிலுள்ள சொல்லெல்லாம் வடசொல்லெனக் கருதும் பேதைமையை விட்டுய்வாராக. மயிர் எனும் தொன்சொல் ச்மச்ரு (smrsru) எனச் சகரம் முற்கொண்டு வழங்குவது போன்றே, நேயம் என்னும் தென்சொல்லும் 'ஸ்நேஹ' என ஸகரம் முற்கொண்டு சமற்கிருதத்தில் வழங்கு கின்றதென அறிக. (தென்மொழி. நவ. 1959).

தேவப்பசு *tēva-p-pašu*, பெ. (n.) காமதேனு (யாழ்.அக.); the celestial cow.

[தேவ(ர்) + பசு]

Skt. pašu → த. பசு

தேவப்பிரணவம் *tēva-p-piranavam*, பெ. (n.) தேவபாணி பார்க்க; see *tēva-pāṇi*. "தேவப்பிரணவமெனும் வடமொழியை" (பன்னிருபா. 207).

[தேவ(ர்) + பிரணவம்]

தேவப்பிறங்கி *tēva-p-piṟangi*, பெ. (n.) நாகமல்லி; snake jasmine (சா.அக.).

தேவப்புள் *tēvappuḷ*, பெ. (n.) எகினம் (அன்னம்); swan, as a divine bird.

[தேவ + புள்]

தேவபட்சி *tēva-patci*, பெ. (n.) ஆள்காட்டிப் பறவை; red wattled lapwing sand piper (சா.அக.).

[தேவ(ர்) + பட்சி]

Skt. pakṣi → த. பட்சி

தேவபதம் *tēvapadam*, பெ. (n.) 1. விண்; heaven, firmament. 2. அரசக் குழுகாயம்; royal presence.

[தேவ + பதம்]

தேவபதி *tēva-pati*, பெ. (n.) தேவர்கோன் (யாழ்.அக.) பார்க்க; see *tēvar-kōṉ*.

ம. தேவபதி

[தேவ(ர்) + பதி]

Skt. pati → த. பதி

தேவபவனம் *tēva-pavaṉam*, பெ. (n.) 1. அரசமரம்; pipal tree. 2. கோயில்; temple. 3. வீடுபேறு; heaven (சா.அக.).

ம. தேவபவனம்

[தேவ(ர்) + பவனம்]

Skt. bhavana → த. பவனம்

தேவபாடை *tēva-pāḍai*, பெ. (n.) வடமொழி; Sanskrit, as the language of the Gods. "தேவபாடையினிக்கதை செய்தவர்" (கம்பரா. சிறப்புப். 7).

[தேவ(ர்) + பாடை]

Skt. bhāsha → த. பாடை

மொழி இயற்கையாய் உருவானதுமன்று; கடவுளால் படைக்கப்பட்டதுமன்று; மக்களால் உருவாக்கப்பட்டதே. அவ்வாறிருக்க ஒரு மொழியைத் தேவமொழி என்பது ஏமாற்று வேலை யென்றறிக.

தேவபாணி *tēva-pāṇi*, பெ. (n.) தேவரைப் புகழ்ந்து கூறும் பாட்டுவகை; songs in praise of Gods. "செந்துறை வெண்டுறை தேவபாணி யிரண்டும்" (சிலப். 6:35, உரை).

[தேவ(ர்) + பாணி]

தேவபூசை *tēva-pūšai*, பெ. (n.) இல்லத்தில் நடைபெறும் இறைவழிபாடு; daily worship in a house.

ம. தேவபூச

[தேவ(ர்) + பூசை. பூசுதல் = கழுவுதல். பூசு → பூசை = தெய்வப் படிமையை நீராட்டிச் செய்யும் வழிபாடு]

தேவபூசைப்பூ *teva-pūšai-p-pū*, பெ. (n.) செங்கழுநீர்ப்பூ; red Indian water lily (சா.அக.).

[தேவ(ர்) + பூசை + பூ]

தேவபூதரு *teva-pūtaru*, பெ. (n.) கருவண்டு; black beetle (சா.அக.).

தேவபூதி *teva-pūdi*, பெ. (n.) 1. தில்லை மரம்; tigers spurge. 2. கங்கை; Ganga.

தேவபூமி *teva-pūmi*, பெ. (n.) துறக்கம் (யாழ்.அக.); the world of the celestials.

ம. தேவபூமி

[தேவ(ர்) + பூமி]

தேவபோகமுறைமை *teva-pōga-muṟaimai*, பெ. (n.) கோயில் தெய்வங்களுக்குரிய வழிபாட்டுச் செலவினங்களுக்குத் தேவதான வருவாயினைக் கொண்டு நாளும் நிகழ்த்துவிக்கும் வழிபாட்டு முறைகள்; arrangement done to do temple worship expenses by the income of the temple.

[தேவபோக + முறைமை]

தேவம்[1] *tēvam*, பெ. (n.) தெய்வம் (இவ.) பார்க்க; see *teyvam*.

தேவம்[2] *tēvam*, பெ. (n.) 1. அனிச்சை பார்க்க; see *aniccai*. 2. குழிநாவல் பார்க்க; see *kuḻināval*. 3. மாமரம்; mango.

தேவமஞ்சரம் *tēvamañjaram*, பெ. (n.) கண்ண (கிருட்டிண)னின் அணிகலன்; ornaments of Lord Kannan (இருநூ.).

[தேவ(ர்) + மஞ்சரம்]

தேவமணி *tēvamaṇi*, பெ. (n.) 1. கண்ண (கிருட்டிண)னின் அணிகலன்களுள் ஒன்றான அகன்மணி; pearls one among Kannan's ornaments. 2. சிவன்; Lord Sivan. 3. குதிரைச் சுழியினொன்று; curved and circular marks on the body of the horse (இருநூ.).

ம. தேவமணி

[தேவ(ர்) + மணி]

தேவமந்திரி *tēvamandiri*, பெ. (n.) வியாழன் (பிங்.) இந்திரனின் அமைச்சர்; Brhaspati, as Indiran's minister.

ம. தேவமந்த்ரி

[தேவ(ர்) + மந்திரி]

தேவமருத்துவர் *tēva-maruttuvar*, பெ. (n.) தேவர்களுக்கு மருத்துவராகிய (அசுவினி) தேவதைகள்; Asvins, the twin physicans of the celestial region.

[தேவ(ர்) + மருத்துவர்]

தேவமருத்துவன் *tēva-maruttuvaṉ*, பெ. (n.) திருப்பாற்கடலைக் கடையும்போது தோன்றிய மருத்துவன்; the physican of the celestial world said to have been born who the ocean of milk churned by Rakshas and Devars (சா.அக.).

[தேவ(ர்) + மருத்துவன்]

தேவமனோகரி *tēva-manōgari*, பெ. (n.) பண் வகை (பரதராக.பக். 103); a specific melody type.

[தேவ(ர்) + மனோகரி]

தேவமாசம் *tēva-māšam*, பெ. (n.) தேவமாதம் பார்க்க; see *tēva-mādam*.

[தேவ(ர்) + மாசம். மாதம் → மாசம்]

தேவமாதம் *tēva-madam*, பெ. (n.) கருவுற்ற எட்டாந் திங்கள்; eighth month; after conception.

[தேவ(ர்) + மாதம்]

தேவமாதா *tēva-mādā*, பெ. (n.) தேவர்களின் அன்னை (அதிதி); Atiti, the mother of the Gods. 2. மேரி என்னும் கன்னி; (R.C.) virgin Mary.

ம. தேவமாதா (வு)

[தேவ + மாதா]

தேவமாதி *tēvamādi*, பெ. (n.) நாகப்படக் கற்றாழை; a kind of aloe perhaps the one resembling snake's hood (சா.அக.).

தேவமாமரம் *tēva-māmaram*, பெ. (n.) 1. தேவமரம் பார்க்க; see *tēva-maram*. 2. குளிர் நாவல்; superior jamoon tree (சா.அக.).

[தேவ(ர்) + மாமரம்]

தேவமானம் *tēva-māṉam*, பெ. (n.) தேவர்க்குரிய காலவளவு; divine standard of time.

[தேவ(ர்) + மானம். மா → மானம் = அளவீடு, அளவு, அளவை, மதிப்பு]

தேவமுத்திரை *tēva-muttirai*, பெ. (n.) காசுமீரப் படிகம்; cusmera crystal or cusmere stone (சா.அக.).

[தேவ + முத்திரை]

தேவமூடம் *tēva-mūḍam,* பெ. (n.) தேவர்கள் தம்மைக் காப்பாற்றுவார் என்று மயங்கல்; believing Gods will protect, an illusionary idea.

[தேவ + மூடம். முட்டு → முட்டாள். முட்டு → முட்டன் → மூடன். மூடன் → மூடம்]

தேவமேரையாய் *tēva-mēraiyāy,* வி.எ. (adv.) அழகாக, நன்றாக; divinely.

[தேவ + மேரை + ஆய்]

தேவயஞ்ஞம் *tēva-yaññam,* பெ. (n.) கடவுள் வேள்வி; sacrifice to deity.

[தேவ(ர்) + யஞ்ஞம்]

Skt. yajña → த. யஞ்ஞம்

தேவயாத்திரை *tēvayāttirai,* பெ. (n.) நற்பேறு கிடைக்க செய்யும் பயணம்; pilgrimage to sacred places. "தேவயாத்திரை தீர்த்தயாத்திரை செய் சிவநேசர்" *(தணிகைப்பு. அகத்திய. 502).* 2. கோயில் தெய்வத்தின் புறப்பாடு; procession of the chief idol of a temple.

ம. தேபயாத்ர

[தேவ(ர்) + யாத்திரை]

தேவயானம்[1] *tēvayāṉam,* பெ. (n.) 1. கடவுளர் ஊர்தி; chariot or vehicle of a God. 2. அர்ச்சில் முதலிய தேவதைகளைக் கடந்து வீடு பேறடையச் செல்லும் வழி; way to the supreme heaven which is open only to the brahma-vit, and on which one has to pass by arccis and other deities.

ம. தேவபானம்

[தேவ(ர்) + யானம்]

தேவயானம்[2] *tēvayāṉam,* பெ. (n.) மூக்கின் வழியாய் வலது பக்கத்தில் ஓடும் மூச்சு; air passing through the right nostril *(சா.அக.).*

தேவயானை *tēvayāṉai,* பெ. (n.) 1. ஐராவதம் பார்க்க; see *airāvadam.* 2. தெய்வயானை; a wife of Lord Murugan.

[தேவ + யானை]

தேவயுகம் *tēvayugam,* பெ. (n.) 12000 தெய்வ வாண்டு கொண்ட காலவளவு *(சங்.அக.);* period consisting of 12000 divine years.

ம. தேவயுகம்

[தேவ + யுகம்]

தேவர் *tēvar,* பெ. (n.) 1. கடவுளர்; deities, objects of worship. "தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே" *(தொல்.பொருள். 450).* 2. உயர்ந்தோரைக் குறிக்குஞ் சொல்; a term of respect for persons, of high station. 3. திருவள்ளுவர்; Tiruvaḷḷuvar. "ஒன்னா ரழுத கண்ணீரு மனைத்து என்றார் தேவரும்" *(சீவக. 1891, உரை).* 4. சீவகசிந்தாமணி என்னும் பாவியத்தின் ஆசிரியரும், 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவருமான திருத்தக்கத் தேவர் என்னும் சமண முனிவர்; Tiruttakka-t-tēvar, the Jaina author of sīvaga-cintāmaṇi. "தேவர்அதனை அபரகாத்திர மென்றார்" *(சீவக. 806, உரை).* 5. அரசர், துறவியர் முதலியோரது, பெயர்ப்பின் வழங்கும் சிறப்புப் பெயர்; a word appended to the names of kings, ascetics, etc. "இராசராசதேவர், திருத்தக்கதேவர்". 6. தேவரீர் பார்க்க; see *tēvarīr.* "தேவர் திருவடிகளிலே" *(ஈடு, 2,3,4).* 7. மறவர் சாதியினரின் பட்டப்பெயர்; title of marava caste. 8. நால்வகைத் தேவதை வகையார்; celestial of four classes.

[தேவ(ம்) → தேவர்]

தேவர்க்காடல் *tēvar-k-kāḍal,* பெ. (n.) தெய்வமேறி ஆடுதல் (ஆவேசம்) (வின்.); temporary possession by a spirit.

[தேவர்க்கு + ஆடல்]

தேவர்கடன் *tēvar-kaḍaṉ,* பெ. (n.) தெய்வ வேள்வி பார்க்க; see *teyva-vēḷvi (சா.அக.).*

[தேவர் + கடன்]

தேவர்கன்மி *tēvar-kaṉmi,* பெ. (n.) தேவகன்மி பார்க்க; see *tēva-kaṉmi.* "திருவானிலை மாதேவர் கோயிலில் தேவர் கன்மிக்கும்" *(தெக.தொ. 3:43).*

[தேவர் + கன்மி]

தேவர்குலம் *tēvar-kulam,* பெ. (n.) தேவகுலம் பார்க்க; see *tēva-kulam.* "தேவர் குலத்தை வலங்கொண்டு" *(இறை. 1, பாயி. பக்.3).*

[தேவர் + குலம்]

தேவர்கோ *tēvarkō,* பெ. (n.) தேவர்கோன் பார்க்க; see *tēvarkōṉ.* "தேவர் கோ வறியாத தேவதேவன்" *(திருவாச. 5, 30).*

[தேவர் + கோ]

தேவர்கோன்[1] *tēvarkōn*, பெ. (n.) தேவர்களுக்கு *அரசனான இந்திரன்;* Indiran, the lord of the celestials. "தேவர்கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பினவே" *(சிலப். 17, பக்.447).*

[தேவர் + கோன்]

தேவர்கோன்[2] *tēvarkōn*, பெ. (n.) *குளிர் நாவல்;* superior jamoon tree *(சா.அக.).*

தேவர்ணன் *tēvarṇaṉ*, பெ (n.) தேன் நிறத்தில் *சிறுநீர் கழிவதாகிய வெள்ளை நோய்;* honey coloured urine one of the 18 varieties of veneral diseases *(சா.அக.).*

தேவர்நாடு *tēvar-nāḍu*, பெ. (n.) *துறக்கம் (மணிமே. 14:42);* Indiran's heaven.

[தேவர் + நாடு]

தேவர்பகைவர் *tēvar-pagaivar*, பெ. (n.) *அசுரர் (பிங்.);* asuras, as enemies of the Gods.

[தேவர் + பகைவர்]

தேவர்மந்தணம் *tēvar-mandaṇam*, பெ. (n.) *தேவர்கட்கு மட்டும் தெரிந்த பூடகம்;* profound secret, known only to Gods.

[தேவர் + மந்தணம்]

தேவர்வசம் *tēvar-vaśam*, பெ. (n.) தேவர்வாசம் *பார்க்க;* see *tēvar-vāśam.*

[தேவர் + வசம்]

தேவர்வாசம் *tēvar-vāśam*, பெ. (n.) *அரச மரம்;* pipal, as the abode of the gods *(சா.அக.).*

[தேவர் + வாசம்]

இம்மரத்தில் தேவர்கள் வசிப்பதாக நம்பிக்கை.

தேவரகசியம் *tēva-ragaśiyam*, பெ. (n.) தேவர்மந்தணம் *பார்க்க;* see *tēvar-mandaṇam.*

[தேவர் + ரகசியம்]

Skt. rahasya → த. ரகசியம்

தேவரகண்டன் *tēvarakaṇḍaṉ*, பெ. (n.) *திருவாரூர்ச் சிவபெருமான்;* Śivaṉ, as worshipped at Tiruvārūr. "தேவரகண்டப் பெருமாள் தியாகப் பெருமாள்" *(திருவாரூ. 25).*

தேவரங்கம் *tēvaraṅgam*, பெ. (n.) *பணிப் புடைவை (யாழ்.அக.);* cloth worn by women while engaged in household work.

தேவரடியார் *tēvar-aḍiyār*, பெ. (n.) *தளிப் பெண்டிர்;* temple dancing girls. "தேவரடியார்க்கும் உவச்சர்க்கும் *(தெக.தொ.3:47).*

ம. தேவடிச்சி

[தேவர் + அடியார்]

தேவரநீதி *tēvaranīdi*, பெ. (n.) *கணவன் இறந்த பின், குல வளர்ச்சி கருதி அளியரை (மைத்துனரை)க் கூடி மகப்பெறும் பண்டை வடவர் வழக்கம்;* the practice of north Indian's which a childless widow is permitted to have sexual union with the borther of her deceased husband for the sake of raising up seed to the deceased. "ஈண்டு தேவர நீதியிற் கொழுந்தி யரெழின் மகப்பெற நின்னால் வேண்டுமால்" *(பாரத.சம்பவ. 4).*

[தேவரன் + நீதி]

தேவரம்பை *tēvarambai*, பெ. (n.) 1. *தேவ உலகத்து மகளிருளொருத்தி;* a celestial damsel. 2. *தெய்வப் பெண்;* damsels in svarga.

[தேவ + அரம்பை. அர் → அரம் = அச்சம், துன்பம். அரமகள் = துன்புறுத்தும் தெய்வப்பெண். அர் → அரம் → அரம்பை]

தேவரன் *tēvaraṉ*, பெ. (n.) *கணவனுடன் பிறந்தான்;* husband's brother. "ஈண்டு தேவரநீதியிற் கொழுந்திய ரெழின் மகப்பெற நின்னால் வேண்டுமால்" *(பாரத. சம்பவ. 4).*

தேவராசசுவாமிகள் *tēvarāśa-śwamigaḷ*, பெ. (n.) *19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இவர் கந்தர் சட்டிக் கவசம், சக்திக் கவசம் போன்ற நூல்களை எழுதியுள்ளார்;* a poet, author of kandar-saṭṭi-k-kavacam, sakthi-k-kavasam, in 19th century.

தேவராசப்பிள்ளை *tēvarāśa-p-piḷḷai*, பெ. (n.) *19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்;* a poet lived in the 19th century.

இவர் குசேலோபாக்கியானம், சூத சங்கிதை, பஞ்சாக்கர தேசிகர் பஞ்சரத்னம், பஞ்சாக்கர தேசிகர் பதிகம், சேடமலை மாலை, தணிகாசல மாலை எனும் சிற்றிலக்கியங்களை எழுதியுள்ளார்.

தேவராசன் *tēvarāšaṉ*, பெ. (n.) தேவர்கோன் பார்க்க; see *tēvar-kōṉ*.

[தேவ(ர்) + ராசன்]

த. அரசன் → Skt. ராசன்

தேவராசியம் *tēvarāśiyam*, பெ. (n.) தேவர்மந்தணம் பார்க்க; see *tēvar-mandaṇam*.

[தேவ + ராசியம்]

Skt. rahasya → ரகசியம் → ராசியம்

தேவராட்டி *tēvarāṭṭi*, பெ. (n.) தெய்வம் ஏறி அருள் கொண்டு குறி சொல்பவள்; a woman divinely inspired and possessed of oracular powers. "தலைமரபின் வழிவந்த தேவராட்டி தனையழைமின்" (பெரியபு. கண்ண. 47).

[தேவர் + ஆட்டி]

தேவராண்டு *tēvar-āṇḍu*, பெ. (n.) தேவர்க்குரியதும் 365 மாந்த ஆண்டுகளைக் கொண்டதுமான ஆண்டு; year of the Gods = 365 years of mortals.

[தேவர் + ஆண்டு]

தேவராயன்சம்பா *tēvarāyaṉ-cambā*, பெ. (n.) சம்பா நெல்வகை (இவ.); a kind of campā paddy.

[தேவராயன் + சம்பா]

தேவராலயம் *tēvar-ālayam*, பெ. (n.) தேவர்களின் இருப்பிடமான மாமலை மேரு (பிங்.); mount Meru as the abode of the Gods.

[தேவர் + ஆலயம்]

தேவராளன் *tēvarāḷaṉ*, பெ. (n.) தெய்வமருள் கொண்டு குறி சொல்பவன்; a man divinely inspired and possessed of oracular powers. "களித்தனன் றேவராளன்" (சீகாளத். பு. கண்ணப். 57).

[தேவர் + ஆளன்]

தேவரான் *tēvarāṉ*, பெ. (n.) காமதேனு; celestial cow. "இன்ன தேவரான் கொடுப்ப" (திருவிளை. நான் மாட. 20).

[தேவர் + ஆன்]

தேவரிடைச்சான்றார் *tēvar-iḍai-c-cāṉṟār*, பெ. (n.) இடையர்; cow herd caste. "இவ்வூர் தேவரிடைச் சான்றோர் கோயில்கட்குரிய திருவிளக்கு நிவந்தமாக வைக்கப்பெறும் ஆடுகளைக் கைக்கொண்டு நிவந்தப்படி நாளும் கோயிலில் நெய்யளாள் வரும் இடையர் குலமக்கள். (தெ.க.தொ. 19, 119).

மறுவ. மன்றாடிகள்

தேவரீர் *tēvarīr*, பெ. (n.) பெரியோரை முன்னிலைப்படுத்துஞ் சொல்; you, yours, a term of respect. "தேவரீர் திருவடிகளைத் திக்குநோக்கித் தண்டம் பண்ணினேன்" (சிலப். 13: 87, உரை). தேவரீர் சித்தம் என் பாக்கியம் (பழ.).

[தேவர் → தேவரீர்]

தேவருணவு *tēvar-uṇavu*, பெ. (n.) அமுதம்; nectar, ambrosia, as the food of Gods.

[தேவர் + உணவு]

தேவருணன் *tēvaruṇaṉ*, பெ. (n.) துரிஞ்சில்; bat (சா.அக.).

மறுவ. துரிஞ்சி

தேவரூண் *tēvar-ūṇ*, பெ. (n.) தேவருணவு பார்க்க; see *tevar-uṇavu*.

[தேவர் + ஊண்]

தேவரூர் *tēvar-ūr*, பெ. (n.) பொன்னாங்காணி (தைலவ.தைல. 109) பார்க்க; see *poṉṉāṅgāṇi*.

தேவரொட்டாதி *tēvar-oṭṭādi*, பெ. (n.) எட்டி மரம்; nuxvomica tree (சா.அக.).

தேவலகன் *tēvalagaṉ*, பெ. (n.) கோயிற் பூசகன் (யாழ்.அக.); temple priest.

தேவலன் *tēvalaṉ*, பெ. (n.) 1. தேவரன் பார்க்க; see *tēvaraṉ*. 2. ஒழுக்க வழியில் நடப்பவன்; virtuous man. 3. பார்ப்பனன்; brahmin.

தேவலாம் *tēvalām*, பெ. (n.) தேவலை[1] பார்க்க; see *tēvalai*.

[தேவலை - தேவலாம்]

தேவலை[1] *tēvalai*, பெ. (n.) 1. ஏதுவான நிலை; better condition, as in health. இப்போது அவனுக்கு உடம்பு தேவலை. 2. சிறப்பானது; that which is preferable. அதைவிட இது தேவலை.

[தாழ்வு + இல்லை → தாவில்லை → தேவலை (கொ.வ.)]

தேவலை[2] *tēvalai,* பெ. (n.) பெரிய வலையின் நீள அகலத்தைச் சீர்படுத்தும் வலை (தஞ்சை.மீனவ.); a net which corrects the breath of the big net.

தேவலோகம் *tēvalōgam,* பெ. (n.) தேவர்நாடு பார்க்க; see *tēvar-nādu.*

[தேவன் + உலகம்]

தேவவசனம் *tēva-vašanam,* பெ. (n.) கடவுள் திருமொழி (chr.); word of God.

தேவவசீகரம் *tēva-vasīgaram,* பெ. (n.) படையல் ஊனும், மதுவும் இயேசுவின் அரத்தமாக மாறுமெனக் கொண்டு செய்யும் வழிபாடு (R.C.); transubstantiation at Eucharist.

தேவவரசி *tēva-v-araši,* பெ. (n.) இந்திராணி; Indirāṇi (இருநூ.).

தேவவரசு *tēva-v-arašu,* பெ. (n.) கொடியரசு; wild peepul tree (சாஅக.).

தேவவருடம் *tēva-varudam,* பெ. (n.) தேவராண்டு பார்க்க; see *tēvar-āndu* (இருநூ.).

[தேவர் + வருடம்]

த. ஆண்டு → Skt. வருஷம், த. வருடம்

தேவவல்லபம் *tēva-vallabam,* பெ. (n.) சுரபுன்னை; long leaved gamboge.

தேவவிரதன் *tēva-viratan,* பெ. (n.) தெய்வவிரதன் பார்க்க; see *teyva-viratan.*

தேவவிருட்சம் *tēva-virutcam,* பெ. (n.) தேவதரு பார்க்க; see *tēvadaru.*

தேவவைத்தியம் *tēva-vaittiyam,* பெ. (n.) இதளியக் கந்தக முறையில் செய்யும் மருத்துவம்; the superior method of treating disease with the aid of compounds of mercury sulphur arsenic (சாஅக.).

தேவவைத்தியர் *tēva-vaittiyar,* பெ. (n.) தெய்வ உலகத்து மருத்துவரான அசுவினி தேவர் முதலானோர்; physician of the celestial aswini kumar, danvanthari, bagharam etc. (சாஅக.).

தேவவைத்தியன் *tēva-vaittiyan,* பெ. (n.) தேவ மருத்துவன் பார்க்க; see *tēva-maruttuvan* (சாஅக.).

[தேவர் + வைத்தியன்]

தேவளம் *tēvaḷam,* பெ. (n.) கோயில்; temple.

[தே + வளம்]

தேவன் *tēvan,* பெ. (n.) 1. கடவுள்; god. "தேருங்காற் றேவ னொருவனே" (திவ். இயற். நான்மு. 2). 2. அருகன் (பிங்.); Arhat. 3. அரசன்; king. "தேவா நின்கழல் சேவிக்க வந்தனன்" (கம்பரா. கங்கை. 39). 4. கொழுந்தன் (யாழ்அக.); husband's brother. 5. மறவர், கள்ளர், அகம் படியார்க்கு வழங்கும்பட்டப் பெயர்; a title of maravar, kaḷḷar and akambadiyar. 6. ஈட்டிக் காரன் (யாழ்அக.); lancer. 7. பரிசைக்காரன் (யாழ்.அக.); shield-bearer. 8. மடையன் (யாழ்அக.); fool, idiot.

ம. தேவன்

[தேய் → தேயு = நெருப்பு. தேய் → தேய்வு → தேவு = தெய்வம், தெய்வத் தன்மை. தேவு → தேவன் = கடவுள், அரசன், கணவன், தலைவன் (வ.வ. 17)]

த. தேவன் → Skt. dēva

தேவன்திருவரன்குளமுடையான் *tēvan tiruvaran-kulamudaiyān,* பெ. (n.) 13ஆம் நூற் கல்வெட்டால் அறியப்பெறும் புலவர்; a poet known in the 13th century inscription.

பாண்டி மண்டலத்தில் பொன்னமராவதி முதலிய நாடுகளில் வாழும் பெருவீரர்களாகிய மறமாணிக்கர்கள் மேல் தேவர் திருவரன் குளமுடையான் எனும் புலவர் "பேர் வஞ்சி" எனும் நூலொன்று பாடியதாகக் குறிப்பு காணப்படுகின்றது.

தேவனம் *tēvanam,* பெ. (n.) 1. தாமரை (மலை.); lotus. 2. சூதாட்டம்; gambling.

தேவனுலகம் *tēvanulagam,* பெ. (n.) துறக்கம்; svarga, Indira's heaven.

[தேவன் + உலகம்]

தேவா *tēvā,* பெ. (n.) பெரும் குரும்பை; lowstring hemp (சாஅக.).

தேவாங்கசெட்டி *tēvānga-cetti,* பெ. (n.) நெசவுச் சாதிப்பிரிவினருள் ஒருவகையார்; a caste of weavers.

[தேவாங்கம் + செட்டி. எட்டி → செட்டி]

தெய்வப் படிமைக்கு (தெய்வ அங்கத்திற்கு)ச் சாத்தப்படும் ஆடையை நெய்யும் வகுப்பினர்.

தேவாங்கம் *tēvāṅgam,* பெ. (n.) பட்டுச்சேலை (வின்.); silk-cloth.

தேவாங்கு[1] *tēvāṅgu,* பெ. (n.) வேலைப் பாடமைந்த துகில் வகை (பிங்.) (சிலப். 14, 105), உரை); embroidered cloth of superior quality.

தேவாங்கு[2] *tēvāṅgu,* பெ. (n.) உடலிளைத்துத் தோன்றும் ஒருவகை விலங்கு; lemur, the Indian sloth, loris gracilis, considered to be very thinly built. தின்கிறதைத் தின்றும் தேவாங்கு போலிருக்கிறான் (பழ.)

ம. தேவாங்கு; தெ. தேவாங்கு

[தேய் → தேய்வு + அங்கம் = தேய்வங்கம் → தேவங்கம் → தேவாங்கம் → தேவாங்கு]

தேவாசனம்[1] *tēvāšaṉam,* பெ. (n.) ஒகிருக்கை வகை (யாழ்.அக.); a kind of yogic posture.

தேவாசனம்[2] *tēvāšaṉam,* பெ. (n.) கோள் ஒன்பான் நிலைகள்; nine statues of the satelites.

தேவாசிரியன்[1] *tēvāširiyaṉ,* பெ. (n.) திருக்கோயில்களில் மன்னர், அமைச்சர் முதலியோர் தனியாக வழிபாடு செய்வதற் கென அமைந்த மண்டபம்; a square or rectangular hall with a flat roof supported by pillars, which is made for the king and his ministers to worship separately.

தேவாசிரியன்[2] *tēvāširiyaṉ,* பெ. (n.) திருவாரூரிலுள்ள ஆயிரக்கால் மண்டபம்; the hall of thousand pillars in Tiruvārūr. "உள்ளது தேவாசிரிய னென்னுந் திருக்காவணம்" (பெரியபு. திருக்கூட். 2).

தேவாசிரியன்கால் *tēvāširiyaṉ-kāl,* பெ. (n.) தேவாசிரியன் என்ற பெயரால் விளங்கிய மரக்கால்; a measurement in the name of Devāsiriyaṉ.

[தேவாசிரியன் + கால்]

இம்மரக்கால் திருமுதுகுன்றமுடைய நாயனார் கோயிலிலும் இருந்ததனைக் கல்வெட்டொன்று உணர்த்துகின்றது. "உடையார் திருமுது குன்றமுடைய நாயநாற்கு - வைத்த திருநுந்தா விளக்கு ஒன்றுக்கு தேவாசிரியன் காலால் அளக்கும் நெய்" (தெ.க.தொ. 144).

தேவாசிரியன்திருக்காவணம் *tēvāširiyaṉ tiru-k-kāvaṇam,* பெ. (n.) திருவாரூர் கோயிலில் உள்ள கருங்கல் திருப்பணியாக அமைந்த பெருமண்டபத்தின் சிறப்புப் பெயர்; name of the granite hall in the Tiruvārur temple. "தேவாசிரியன் எனுந் திருக்காவணம்" (பெரியபு. திருக்கூட். 2)

[தேவாசிரியன் + திரு + காவணம். காவணம் = கல்மண்டபம்]

தேவாசிரியன்நாழி *tēvāširiyaṉ-nāḻi,* பெ. (n.) திருமுதுகுன்றம், திருவெண்ணெய்நல்லூர் ஆகிய கோயில்களில் நெய் அளக்கப் பயன்படுத்தப்பட்ட நாழிக்கமைந்த பெயர்; name for the measure of capacity to measure the ghee in Tirumudukuṉṟam, and Tiruveṇṇai nallūr temple.

[தேவாசிரியன் + நாழி]

தேவாசீவன் *tēvā-šīvaṉ,* பெ. (n.) கோயிற் பூசகன் (யாழ்.அக.); temple priest.

தேவாசுரம் *tēvāšuram,* பெ. (n.) தேவர்க்கும் அசுரர்க்கும் நடந்த போர்; war between Dēvar and Asurar. "நீ யன்றே ... தேவாசுரம் பொருதாய்" (திவ். இயற். 368).

[தேவ(ம்) + அசுரம்]

தேவாண்டு *tēvāṇḍu,* பெ. (n.) தேவராண்டு பார்க்க; see *tēvar-āṇḍu* (செ.அக.).

[தேவ + ஆண்டு]

தேவாத்திரம் *tēvāttiram,* பெ. (n.) தேவர்களால் கொடுக்கப்பட்ட அம்பு; arrow given by the deities (இருநூ.).

[தேவ + அத்திரம்]

Skt. அஸ்திரம் → த. அத்திரம்

தேவாத்துமா *tēvāttumā,* பெ. (n.) அரசமரம்; pipal tree (சா.அக.).

தேவாதி *tēvādi,* பெ. (n.) தேவாதிதேவன் பார்க்க; see *tēvāti-tēvaṉ.*

தேவாதிதேவன் *tēvādi-tēvaṉ,* பெ. (n.) முதற்கடவுள்; the God of Gods. "எனைப் பலருந் தேவாதிதேவனெனப்படுவான்" (திவ். இயற். 2, 28).

தேவாதீனம் *tēvātīṉam,* பெ. (n.) தெய்வத்திற்கு உரியது; belonging of God *(இருநூ.).*

தேவாபீட்டை *tēvā-pīṭṭai,* பெ. (n.) வெற்றிலை; betel as a cherished object of the Gods.

தேவாமணி *tēvāmaṇi,* பெ. (n.) மணிக்குடல்; resentery small intestines.

தேவாமிருதம் *tēvāmiṟudam,* பெ. (n.) *1.* தேவருணவாகிய அமுதம்; ambrosia, the food of the immortals. *2.* சுழுமுனையமுதம்; the ambrosia like the fluid secreted by pineal gland and pituitary body in the cerelval region *(சாஅக.).*

[தேவ + அமிழ்தம் → அமிர்தம்]

த. அமிழ்தம் → Skt. amrude

தேவாமுதம் *tēvāmudam,* பெ. (n.) தேவருணவு; ambrosia, food of the immortals.

[தேவர் + அமிழ்தம் → அமுதம்]

தேவாயதனம் *tēvāyataṉam,* பெ. (n.) தேவாலயம் பார்க்க; see *tēvālayam.*

தேவாயுதம் *tēvāyudam,* பெ. (n.) வானவில் *(யாழ்.அக.);* rain-bow.

[தேவர் + ஆயுதம்]

தேவார்ப்பணம் *tēvār-p-paṇam,* பெ. (n.) தெய்வத்துக்குப் படைத்த பொருள்; offering made to the Gods.

[தெய்வம் → தேவம் + அர்ப்பணம்]

தேவாரஅகத்தியர் *tēvāra-agattiyar,* பெ. (n.) பொதியமலையிலுள்ள பாபநாசத்தில் தங்கியிருந்த பிற்கால முனிவர்; a poet lived in the Podigai mountain.

[தேவாரம் + அகத்தியர்]

இவர் மூவர் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள் 796இல் இருந்து 25 பதிகங்களைத் திரட்டியமைத்தார். அது "அகத்தியர் தேவாரத் திரட்டு" என்று வழங்கப் பெறுகின்றது.

தேவாரத்துக்குத்திருப்பதியம்விண்ணப்பம் *tēvārattukku-t-tiruppadiyam-viṇṇappam,* பெ. (n.) சிவன் திருமேனிகளின் திரு முன் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் பாடப்பட்ட திருப்பதிகங்களைப் பாடுதல்; sing Tēvāram written by Appar, Sundarar and Sambandar in front of Sivaṉ idols.

தேவாரத்துச்சுற்றுக்கல்லூரி *tēvārattu-c-cuṟṟu-k-kallūri,* பெ. (n.) தெய்வச் சிலைகள் மாடங்களில் அமைக்கப்பட்டு விளங்கும் திருச்சுற்றாக அமைந்த கல் மண்டபம்; stone hall where the idols are kept in the niche. "முடி கொண்ட சோழன் திருமாளிகையால் வடபக்கத்துத் தேவாரத்துச் சுற்றுக் கல்லூரியில் தானஞ் செய்தருளா இருந்து" *(முதல் இராசேந்திர சோழன், தெ.க.தொ 2:1, கல். 20).*

தேவாரத்துவாசல் *tēvārattu-vāsal,* பெ. (n.) திருக்கோயில்களில் தேவாரத் திருப்பதி கங்களை வைத்து வழிபாடு செய்யுமிடம்; place where the books of Tēvāram are kept and worshipped in the temple. "இக்கோயில் தேவாரத்து வாசலில் எழுந்தருளியிருந்து" *(தெ.க.தொ. 23, கல். 313).*

[தேவாரம் + அத்து + வாசல். அத்து = சாரியை]

தேவாரத்தேவர் *tēvāra-t-tēvar,* பெ. (n.) ஆதன்மை (ஆன்மார்த்த) வழிபாட்டுக்குரிய உருவச் சிலைகளும் பிற கருவிகளும்; idols and other objects worshipped by an idividual in private *(செ.அக.).*

பெரிய பெருமாளுக்குத் தேவாரத் தேவராக எழுந்தருளுவித்த தேவர் பாதாதி கேசாந்தம் ஐவிரலே இரண்டு தோரை உசரத்து நாலு ஸ்ரீ ஹஸ்தமும் உடையாராகக் கனமாகப் பித்தளையில் எழுந்தருளுவித்த சந்திரசேகரர் திருமேனி ஒன்று பெரிய பெருமாள் - முதல் இராசராசன் (தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டு) (தெ.க.தொ. 2:2, கல். 38).

தேவாரப்பெட்டி *tēvāra-p-peṭṭy,* பெ. (n.) அரசர் புறப்பாட்டில் முன்பாகக் கொண்டு செல்வதும் வழிபாட்டிற்குரிய சிலைகள் முதலியவற்றை வைத்திருப்பதுமாகிய பெட்டி *(நாஞ்);* box containing idols and other objects of worship carried in front of a royal procession *(செ.அக.).*

தேவாரம்[1] *tēvāram,* பெ. (n.) *1.* வழிபாடு; worship. "உயர்தவ மூவாயிரவர்க டாவா

மறையொடு தேவாரக் கைப்பற்றிய பணிமுற்ற" (கோயிற்பு. திருவிழா. 27). 2. வீட்டில் வைத்து வணங்கப்படும் கடவுள்; deity worshipped privately in a house. "உம்முடைய தேவாரமோ" (ஈடு. 6,8,10).

ம. தேவாரம்

தேவாரம்[2] *tēvāram,* பெ. (n.) சிவனைப் போற்றி அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்ற நாயன்மார் மூவரால் அருளிச் செய்யப்பெற்ற பதிகங்கள் கொண்டதும் தமிழ்மறை என்று கொண்டாடப்படுவதுமான சிவநெறித் திருமுறை; a collection of devotional songs in honour of Sivan, composed by Appar, Cambandar and Cundarar, otherwise known as Tamil marai (I.M.P.Tj.1012). "பேசுவது தேவாரமேயலால் வாய்க்கெளிய பேய்க் கிரந்தங்கள் பேசோம்" (தமிழ்நா. 231).

ம. தேவாரம்

தேவாரம் என்பது, இறைவனைப் பற்றிய இசைப்பாடல் என்று பொருள்படும். தே = தேவன். வாரம் = சொல்லொழுக்கமும் இசையொழுக்கமும் உள்ள பாடல்.

தேவாரம் பொதுவான கீர்த்தனை போலாது செந்தமிழ்ப் பாவும் பாவினமுமாக இருப்பது நோக்கத்தக்கது. தனியர் மட்டுமன்றி அவையோரும் சேர்ந்து பாடக் கூடியனவாகவும் எவரும் இன்புறும் இனிய இசையொடு கூடியனவாகவும் தேவாரப் பாடல்கள் அமைந்திருப்பது மிகப் போற்றத் தக்கதாகும் (த.இ.வ. 75).

தேவாராதனை *tēvārādaṉai,* பெ. (n.) கடவுள் வழிபாடு; worship, divine service (செ.அக.).

[தேவர் + ஆராதனை]

தேவாலயம் *tēvālayam,* பெ. (n.) 1. கடவுளர்க் குரிய கோயில்; temple, place of worship, church, sacred shrine, as Gods house. 2. மேரு மலை (யாழ்.அக.); mount Meru.

[தேவர் + ஆலயம்]

இக்காலத்து இச்சொல் பெரும்பாலும் கிறித்தவக் கோவிலைக் குறித்து நின்றது.

தேவாவாசம் *tēvāvāsam,* பெ. (n.) 1. கோயில்; temple. 2. அரசமரம்; pipal tree.

தேவான்னம் *tēvāṉṉam,* பெ. (n.) திருப்படையல் அமுது; boiled rice offered to a deity.

[தேவன் + அன்னம்]

தேவி[1] *tēvi,* பெ. (n.) 1. தெய்வமகள் (பிங்.); Goddess. 2. உமையம்மை (சூடா.); Goddess Umaiyammai. 3. காளிதேவி (சூடா); Goddess Kāli. 4. மூதேவி (m.m.208); Goddess of Misfortune. 5. பெரியம்மை (m.m.268); Goddess of smallpox. 6. மனைவி; wife. "மன்னவ னாருயிர் மாபெருந் தேவியே" (சீவக. 1403). 7. தலைவி; queen, princess, lady, a term of respect. "சித்திர தேவிப்பட்டந் திருமக னல்கினானே" (சீவக. 256).

ம. தேவி

[தேவன் (ஆண்பால்) → தேவி (பெண்பால்)]

தேவி[2] *tēvi,* பெ. (n.) 1. வாலை, சத்தியின் சிறு பெண் உருவம்; one of the form of Pārvati, ie a young girl. 2. கற்புடைப் பெண்; the first of the four classes of woman divided according to lust. 3. சீதேவியார் செங்கழுநீர்; a species of red India waterlily. 4. கற்பூர வல்லி; thick leaved lavender. 5. தேவதாரு பார்க்க; see *tēvatāru.* 6. குண்டலினி; serpent's power in the sacral region of the human body. 7. ஒருவகைப் புல்; a kind of cyprus grass. 8. ஒருவகைக் கடுக்காய்; a kind of gallnut (சா.அக.).

தேவிக்குமுத்திரை *tēvikku-muttirai,* பெ. (n.) தேவிமுத்திரை பார்க்க; see *tēvi-muttirai* (சா.அக.).

தேவிகந்தம் *tēvikandam,* பெ. (n.) கந்தகம்; sulphur (சா.அக.).

தேவிகம் *tēvigam,* பெ. (n.) பூம்பாதிரி; yellow flowered fragrant trumpet flower (சா.அக.).

தேவிகல்பம் *tēvikalpam,* பெ. (n.) சிவ பெருமான் சொல்ல, மலைமகள் எழுதியதாகக் கருதப்படும் ஓர் ஆயுர்வேத நூல்; a discourse on ayurvedic science as delivered by God Sivaṉ to his concert Pārvati which she has gifted (சா.அக.).

தேவிகை[1] *tēvigai,* பெ. (n.) ஓராறு; a river (இருநூ.).

தேவிகை[2] *tēvigai,* பெ. (n.) ஊமத்தைச் செடி வகை; trumpet flower nightshade.

தேவிகோட்டம் *tēvi-kōṭṭam,* பெ. (n.) காளி கோயில்; temple of Kāḷi.

[தேவி + கோட்டம்]

தேவிசாரணை *tēvi-šāraṇai,* பெ. (n.) சத்தி சாரணை; spreading haywood (சா.அக.).

தேவிநாதம் *tēvinādam,* பெ. (n.) 1. காந்தத்தினின்று எடுக்கும் ஈயம்; lead extract from magnet alchemically. 2. பூச்சு (அரிதாரம்); orpiment. 3. கருங்காக்கைப்பொன் (கிருட்டிண அப்பிரகம்); black mica (சா.அக.).

தேவிமுத்திரை *tēvimuttirai,* பெ. (n.) காசுமீரப் படிகம்; crystal stone of cashmare, a mineral (சா.அக.).

தேவிமூலம் *tēvi-mūlam,* பெ. (n.) சிறுபீளை பார்க்க; see *siṟupīlai* (சா.அக.).

தேவிமை *tēvimai,* பெ. (n.) நாயகியாந் தன்மை; wifehood. "இவ்வுலக மூன்றுக்குந் தேவிமை தகுவார் பலருளர்" (திவ்.திருவாய். 6, 2, 6).

தேவியச்சம் *tēviyaccam,* பெ. (n.) கௌரியச்சம் பார்க்க; see *gawri-y-accam* (சா.அக.).

தேவியர் *tēviyar,* பெ. (n.) தேவி பார்க்க; see *dēvi.*

[தேவி → தேவியர்]

தேவியர்குழாமும்பாவையர்ஈட்டமும் *tēviyar kuḻamum-pāvaiyar-īṭṭamum,* பெ. (n.) அரசனின் மனைவியர் கூட்டமும், காமக் கிழத்தியர் கூட்டமும்; gang of king's wives, and his concubines. 'ஒப்பில் சத்தியவ்வை சாங்கப்பையென் றிவர் முதல் தேவியர் குழாமும், பாவையர் ஈட்டமுமிணையெனப் பிறவு முனைவயிற் கொண்டு (விசயராசேந்திரன் மெய்க்கீர்த்தி)

தேவியார்[1] *tēviyār,* பெ. (n.) தேவி பார்க்க; see *dēvi.*

[தேவி → தேவியர் → தேவியார். 'ஆர்' - பலர்பால் ஈறு]

தேவியார்[2] *tēviyār,* பெ. (n.) அரசனின் உரிமை மனைவியர்; அரசியர்; legal wives of the king. "பிரிதிவி கங்கரையர் தேவி அரிகண்டன் மகள் நங்கை மானி" (தெ.க.தொ. 8, கல். 12).

[தேவி + ஆர்]

தேவியுரம் *tēviyuram,* பெ. (n.) கந்தகம்; sulphur (சா.அக.).

தேவிரு *tēviru,* பெ. (n.) 1. கொழுந்தன்; husband's younger brother. 2. முந்திய கணவன்; former husband (இருநா.).

தேவில் *tēvil,* பெ. (n.) தேவாலயம் பார்க்க; see *tēvālayam.* "கருவுடைத் தேவில்கள் எல்லாம்" (திவ்.திருவாய். 4, 4, 8).

[தே → தேவு + இல்]

தேவிவிந்து *tēvivindu,* பெ. (n.) கந்தகம்; sulphur (சா.அக.).

தேவு *tēvu,* பெ. (n.) 1. தெய்வம் (பிங்.); deity. "நரகரைத் தேவு செய்வானும்" (தேவா. 696, 2). 2. தெய்வத்தன்மை; godhead. "அயன்றிருமால் செல்வமு மொன்றோ வென்னச் செய்யுந்தேவே" (சி.சி. காப்பு. ஞானப், உரை).

[தேய் → தேயு = நெருப்பு. தேய் → தேய்வு → தேவு = தெய்வம், தெய்வத்தன்மை (வ.வ. 17)]

தேவுளி *tēvuḷi,* பெ. (n.) தேய்ந்த சிறிய உளி; chisel which is reduced much.

[தேய் → தேவு → தேவு + உளி = தேவுளி]

தேவுறை *tēvuṟai,* பெ. (n.) தேவர்கள் மருந்து; medicine used by tevar (சா.அக.).

தேவேக்கியம் *tēvēkkiyam,* பெ. (n.) ஓமம் (யாழ்.அக.); bishop's weed.

தேவேசியம் *tēvēšiyam,* பெ. (n.) வியாழன் (யாழ்.அக.); jupiter.

தேவேத்தனம் *tēvē-t-taṉam,* பெ. (n.) தெய்வச் செயல்; act of God providence.

தேவேந்திரப்பொங்கல் *tēvendira-p-poṅgal,* பெ. (n.) நெல்வகை; a kind of paddy.

தேவேந்திரமாமுனி *tēvēndira-mā-muṉi,* பெ. (n.) சிவசம்போதனை இயற்றிய சைன வாசிரியர்; a jaina ascetic, author of civacampōtaṉai (செ.அக.).

தேள் வகைகள்



தேவேந்திரன் *tēvēndiran,* பெ. (n.) தேவர்களுக்கு அரசன்; Indiran, the God of the celestials. "சிரபுரந் தேவேந்திரனூர்" (தேவா. 142,2) (செ.அக.).

தேவேந்திரன்தங்கம் *tēvēntiran-taṅgam,* பெ. (n.) தேவேந்திரனின் இருக்கையில் அமையப் பெற்ற 1008 மாற்றுப் பொன்; refined gold of 1008 matur or equivalent 2304 carats of pure gold (சா.அக.).

[தேவேந்திரன் + தங்கம்]

தேவை[1] *tēvai,* பெ. (n.) செயல்; affairs, business. "ஏவித் தேவைகொள்ளுதல்" (ஈடு. 8, 3, பிர) "தங்கள் தேவைகளுஞ் செய்யாதே" (சோழுவமி. 65). 2. வற்புறுத்தல்; compelling need or necessity. "ஒரு தேவையிட்டிறே சொல்லிற்று" (ஈடு. 6, 10, 10). 3. விருப்பம்; desire. "தேவையுனக் கின்னதென்று செப்பாய்" (தாயு. பராபர. 247). 4. முடுக்கம் (யாழ்.அக.); haste. 5. அடிமைத் தனம்; slavery, bondage. "நீயுமுன் றேவைக் குரியைகாண்" (திவ்.பெரியாழ். 1,4,8). 6. மகட் கொடுத்தவர் திருமணத்தின் பின் மணமகனை அழைத்துச் செய்யும் முதல் விருந்து (இ.வ.); first wedding feast held in the parent's house of a bride.

தேவை[2] *tēvai,* பெ. (n.) இராமேசுவரம் பார்க்க; see *rāmēsuvaram.* "ஒரு தேவை வந்து பலதேவர் தாழு மிலக்குமணர் தண் புனலும்" (தேவை. 19)(செ.அக.).

தேவை[3] *tēvai,* பெ. (n.) கொள்ளுகை; getting.

[தெவு → தேவு → தேவை]

தேள் *tēḷ,* பெ. (n.) கொடுக்காற் கொட்டி வருத்தும் ஒருயிரி; scorpion. "தேட்கடுப்பன்ன நாட்படுதேறல்" (புறநா. 192, 16). தேளுக்குக் கொடுக்கிலே நஞ்சு, தேவடியாளுக்கு உடம்பிலே நஞ்சு, உனக்கோ உடம்பெல்லாம் நஞ்சு (பழ.), தேளுக்கு மணியம் கொடுத்தால் நாழிகைக்கு முந்நூறு முறை கொட்டும். (பழ.). 2. நளி ஓரை (பிங்.) (சிலப். 3,123, உரை); scorpio in the zodiac (சா.அக.).

ம. தேள், தேரை; க. சேழ், தேழ்; தெ. தேலு; து. சேளு, தேளு; குட. தேளி; மா. தேலெ; பிரா. தேள்க்

[துள் → (தெள்) தேள் = குத்தும் நச்சுயிரி வகை (மு.தா. 130)]



வகை

1. கருந்தேள்
2. செந்தேள்
3. பார்ப்பாரத்தேள்
4. சிறு தேள்
5. அரசத் தேள்
6. உச்சிலிங்கத் தேள்
7. வாதத் தேள்
8. பித்தத் தேள்
9. சிலேட்டுமத் தேள்
10. மண்டலித் தேள்

தேள்கடி *tēḷ-kaḍi,* பெ. (n.) தேள் கொட்டு; the sting of scorpio (சா.அக.).

[தேள் + கடி]

தேள்கல் *tēḷkal,* பெ. (n.) ஒரு வகை நச்சுக்கல்; scropion stone on mineral bezoar (சா.அக.).

தேள்கெண்டை *tēḷ-keṇḍai,* பெ. (n.) ஒருவகைக் கெண்டை மீன்; scorpio goby.

[தேள் + கெண்டை]



தேள்கெளுத்தி *tēl-kelutti,* பெ. (n.) தேள் போலுந் தோற்றமுடைய கெளுத்தி மீன்; fish resembles scorpion in structure.

[தேள் + கெளுத்தி]

தேள்கொட்டு-தல் *tēl-kottu-,* 15 செ.குன்றாவி. (v.t.) தேள் கடித்தல்; the stinging of a scorpion (சா.அக.).

[தேள் + கொட்டு-.]

தேள்கொடுக்கி *tēl-kodukki,* பெ. (n.) ஒருவகைப் பச்சிலை; devils claw tigers claw, scorpion sting martynia diandro, a bushy plant of 3-4 ft. high with large coarse leaves.

[தேள் + கொடுக்கி]

தேள்கொடுக்கு *tēl-kodukku,* பெ. (n.) தேள் முள்; sting of a scorpion (சா.அக.).

[தேள் + கொடுக்கு]



தேள்கொடுக்குஇணைப்பு *tēl-kodukku-inaippu,* பெ. (n.) கட்டட வேலைகளில் விட்டம் (கிராதி), சாத்து, அலகு இவை சேதமடையாமல் பொருத்துவதற்குப் பயன்படும் இணைப்பு; joint used in the building construction.

[தேள் + கொடுக்கு + இணைப்பு]

தேள்தண்டட்டி *tēl-tantatti,* பெ. (n.) புறக் காதில் உருக்குமணியணிக்கு மேலிடத்தில் மகளிரணியும் காதணி வகை; a kind of ear-ring, worn by women above the urukkumani (செ.அக.).

[தேள் + தண்டட்டி]

தேள்மண்டலி *tēl-mandali,* பெ. (n.) மிக நஞ்சுள்ள தேள்; a scorpion with a very poisonous sting (சா.அக.).

தேள்மீன் *tēlmīn,* பெ. (n.) விசிறி போல் விரிந்து காணப்படுவதோர் மீன்; fish which has fern like wings.

[தேள் + மீன்]

தேள் போன்று நச்சுதன்மையுடைய மீன் (மீனவ.) இது மெல்ல நீந்தும். சிவப்பும், பழுப்பும் கலந்த இம்மீனை உண்ணவியலாது.



தேளக்கனம் *tēlakkanam,* பெ. (n.) தேளைக் கனம் பார்க்க; see *tēlaikanam* (செ.அக.).

தேளப்பாறை *tēla-p-pārai,* பெ. (n.) தேளைப் போன்ற தோற்றமுடைய பாறை மீன்; pārai fish which resemble scorpion in structure.

[தேள் + பாறை]

தேளி[1] *tēli,* பெ. (n.) தேள் போன்று கவ்வு முறுப்புக் கொண்டதும் ஓர் அடிக்குமேல் வளர்வதும் ஈயவெண்மை நிறமுடையதுமான நச்சு மீன் வகை; scorpion fish, leaden, attaining more than one ft. in length, poisonous and having rippers like a scorpion. "அயிரையுந் தேளியு மாராலுங் கொத்தியே" (குற்றா. குற. 91, அனுபல்).

தேளி[2] *tēli,* பெ. (n.) *1.* திரளி மீன்; a short flat headed eel. *2.* கிழாத்தி; a fresh-water shark of cal fish family. *3.* தேட் கெண்டை; scorpion gobi. *4.* தேள்; scorpion (சா.அக.).

ம. தேள் மத்ச்யம்

[தேள் → தேளி = தேள் போற் கொட்டும் மீன் (முதா. 120)]

தேளி[3] *tēḷi,* பெ. (n.) தேளித் தேங்காய்; a kind of red coconut (சா.அக.).

ம. தேளி

தேளிலை *tēḷilai,* பெ. (n.) காஞ்சொறி; scorpion leaf (சா.அக.).

தேளீ *tēḷi,* பெ. (n.) எரிவண்டு; blistering fly (சா.அக.).

[தேள் + ஈ]

தேள் கொட்டியதைப் போன்ற எரிச்சல் உண்டாக்குவதால் இப்பெயர்

தேளுக்கொட்டி *tēḷu-k-koṭṭi,* பெ. (n.) தேட்கொடுக்கி; scorpion sting (சா.அக.).

[தேள் + கொட்டி]

தேளேறு *tēḷēṟu,* பெ. (n.) தேட்கொட்டு; sting of a scorpian. "வேலேறுபடத் தேளேறு மாய்ந்தாற்போல" (இறை. 2, பக். 39).

தேளை *tēḷai,* பெ. (n.) நெஞ்சத் துடிப்பு (நாஞ்.); palpitation of heart.

ம. தேள (இதயம்)

தேளைக்கனம் *tēḷai-k-kaṉam,* பெ. (n.) நெஞ்சுரப்பு (நாஞ்.); hardihood.

[தேளை + கனம்]

தேற்காலி *tēṟkāli,* பெ. (n.) தேறுவம் பார்க்க; see *tēṟuvam* (சா.அக.).

தேற்றம்[1] *tēṟṟam,* பெ. (n.) 1. உறுதி; certainty; assurance; determination. "தேற்றம் வினாவே" (தொல்.சொல். 259). 2. தெளிவு; clearness. "தேற்றச்சொற் றேர்வு" (நாலடி, 259). 3. மனங்கலங்காமை; presence of mind. "தேற்ற மவா வின்மை" (குறள், 513). 4. ஆறுதல்; comfort, consolation. 5. சூளுறவு; oath. "தீராத் தேற்றம்" (தொல்.பொருள். 102). 6. செழிப்பு; thriving, luxuriant growth. "தேற்றமான பயிர்".

[தேறு → தேற்றம்]

தேற்றம்[2] *tēṟṟam,* பெ. (n.) கோட்பாடு; theory. பித்தகோரசு தேற்றம்

தேற்றமானவன் *tēṟṟamāṉavaṉ,* பெ. (n.) 1. துணிவுடையோன்; courageous person. 2. உடம்பு தேறினவன்; invalid picking up strength; convalescent.

[தேற்றம் + ஆனவன்]

தேற்றரவாளன் *tēṟṟaravāḷaṉ,* பெ. (n.) தேற்றரவாளி (யாழ்அக.) பார்க்க; see *tēṟṟaravāḷi* (செ.அக.).

[தேற்றரவாளி → தேற்றரவாளன்]

தேற்றரவாளி *tēṟṟaravāḷi,* பெ. (n.) 1. திடமுடையவன் (யாழ்அக.); strong person. 2. ஆறுதல் சொல்வோன் (வின்.); comforter, consoler, encourager. 3. தூய நல்லாவி; the Holy Spirit (chr.).

தேற்றரவு *tēṟṟaravu,* பெ. (n.) தேற்றம் பார்க்க; see *tēṟṟam.*

தேற்றல் *tēṟṟal,* பெ. (n.) 1. தெளிவடையச் செய்தல்; effecting a cure in ones ailment. 2. மெலிந்த உடம்பைத் தெளியும்படிச் செய்தல்; feeding or supplying with nutriment to promote growth especially in an emaciated patient, nourishing the patient (சா.அக.).

[தேறுதல் → தேற்றுதல் → தேற்றல்]

தேற்றன் *tēṟṟaṉ,* பெ. (n.) உண்மையறி வுள்ளவன்; a person of true knowledge. "தேற்றனே தேற்றத் தெளிவே" (திருவாச. 1, 82).

தேற்றன்மை *tēṟṟaṉmai,* பெ. (n.) தெளிவு; certainty, clearness. "என்ன லதிலளென் றன்னதோர் தேற்றன்மைதானோ" (திவ். பெரியதி. 10, 9,9).

[தேற்றல் + மை]

தேற்றா *tēṟṟā,* பெ. (n.) தேற்றாமரம் அதாவது தேத்தான் கொட்டை மரம்; clearing nut tree. "தேற்றாவினுடைய விதையைக் கொண்டு கலத்தே மெல்லத்தேற்றக் கலங்கிய நீரிற் சிதைவு தெளியுமாறு போல" (கலித். 142, உரை.)

தேற்றாங்கொட்டை *tēṟṟāṅkoṭṭai,* பெ. (n.) கலங்கனீரைத் தெளியச் செய்யும் தேற்றாவிதை; clearing nut, used for clearing turbid water.

[தேற்றான் + கொட்டை]

தேற்றாங்கொட்டைஇளகியம் *tē<u>rr</u>āṅ-koṭṭai-iḷagiyam,* பெ. (n.) தேற்றான் கொட்டையில் செய்த மருந்து; a medicine prepared with clearing nut.

[தேற்றான்கொட்டை + இளகியம்]

தேற்றாம்பொடி *tē<u>rr</u>āmpoḍi,* பெ. (n.) தேற்றாங் கொட்டையிற் செய்த மருந்துப் பொடி; medicinal powders of tērrāṅ-koṭṭai.

[தேற்றாம் + பொடி]

தேற்றார் *tē<u>rr</u>ār,* பெ. (n.) 1. அறிவிலி; the ignorant. 2. பகைவர்; foes, enemies.

[தேற்று + ஆ + அர். 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தேற்றாவொழுக்கம் *tē<u>rr</u>ā-v-o<u>l</u>ukkam,* பெ. (n.) ஐயுறத்தக்க தீயொழுக்கம்; doubtful, shady conduct. "தேற்றா வொழுக்க மொருவன்க ணுண்டாயின்" (நாலடி, 75).

[தேற்று + ஆ + ஒழுக்கம்]

தேற்றான்மரம் *tē<u>rr</u>ā<u>n</u>-maram,* பெ. (n.) தேற்றா (தைலவ.தைல.) பார்க்க; see *tē<u>rr</u>ā.*

ம. தேற்றாமரம்

[தேற்றா + மரம்]

தேற்றான்விதை *tē<u>rr</u>ā<u>n</u>-vidai,* பெ. (n.) தேத்தான்கொட்டை பார்க்க; see *tēttā<u>n</u>-koṭṭai* (சா.அக.).

ம. தேற்றான்கொட்ட

[தேற்றான் + விதை]

தேற்று[1]-தல் *tē<u>rr</u>u-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தெளிவித்தல்; to make clear, convince, assure, relieve from doubt. "தையால் தேறெனத் தேற்றி" (கலித். 144). 2. தெளிந்தறிதல்; to know, understand. "இரத்தலும் ஈதலே போலும் கரத்தல் கனவிலுந் தேற்றாதார் மாட்டு" (குறள், 1054). 3. சூளுறுதல்; to swear, take an oath. "தேரோடுந் தேற்றிய பாகன்" (கலித். 71). 4. தேற்றாவிதையால் நீர்தெளியச் செய்தல்; to clear, clarify, as with tē<u>rr</u>ā-ṅ-koṭṭai. "தேற்றுவித்தாற் புனல் தேற்றுநர்போல்" (அஷ்டப். அழகர்கலம், 85). 5. தூய்மை செய்தல்; to refine. 6. ஆற்றுதல்; to comfort, console. 7. வலுவுண்டாக்குதல்; to communicate strength; to nourish, cherish, invigorate. 8. துணிவேற்றுதல் (இவ.); to encourage, hearten. 9. குணமாக்குதல்; to cure, give relief.

ம. தேற்றுக

[தெள் → தெரி → தேர் → தேறு = தெளிவு. தேறுதல் = தெளிதல். தேறு → தேற்று (மு.தா. 145)]

தேற்று[2] *tē<u>rr</u>u-,* பெ. (n.) 1. தெளிவிக்கை; making clear. 2. தெளிவு; becoming clear. "செஞ்சொற் பொருளின் றேற்றறிந் தேனே" (சிவப். பிரபந். நால்வர். 28). 3. தேற்றா (பிங்.); cleaning-nut tree. "தேற்றின் வித்திற் கலிங்குநீர் தெளிவ தென்ன" (ஞானவா. தாமவியா. 3).

[தெள் → தெரி → தேறு → தேற்று (மு.தா. 145)]

தேற்றுகம் *tē<u>rr</u>ugam,* பெ. (n.) இலவு; silk cotton (சா.அக.).

தேற்றுமருந்து *tē<u>rr</u>u-marundu,* பெ. (n.) உடம்பை வலுப்படுத்தும் மருந்து; any in vigorating specific-tonic (சா.அக.).

[தேற்றும் + மருந்து]

தேற்றுமாடு *tē<u>rr</u>u-māḍu,* பெ. (n.) உணவு முதலியவற்றால் உடலைத் தேற்றி விற்கும் மாடு (இ.வ.); bull or cow fattened or soiled for sale.

[தேற்றும் + மாடு]

தேற்றேகாரம் *tē<u>rr</u>ē-kāram,* பெ. (n.) உறுதிப்பாட்டினையுணர்த்துமேகாரம் (குறள், 261, உரை); the particle 'ē' expressing emphasis or certainty.

[தேற்றம் + ஏகாரம்]

தேற *tē<u>r</u>a,* வி.எ. (adv.) கடைபோக; thoroughly. தேற உசாவ வேண்டும்.

[தேறு → தேற]

தேறகம் *tē<u>r</u>agam,* பெ. (n.) தேரகம் பார்க்க; see *tēragam.*

[தேரகம் → தேறகம்]

தேறம் *tē<u>r</u>am,* பெ. (n.) மிகுதியாயிருப்பது; that which exceeds. ஒரு கல் தொலைவுக்குத் தேறமாயிருக்கும் (செ.அக.).

[தேற்றம் → தேறம்]

தேறல் *tēṟal,* பெ. (n.) *1.* தெளிவு *(பிங்.);* clearness. *2.* தெளிந்த கள்; pure, clarified toddy. "தேக்கட் டேறல்" *(புறநா. 115). 3.* தேன்; honey. "மலர்த்தேற லூறலின்" (தேவா. 94, 3). *4.* சாறு; clarified juice. "ஆனெயைக் கரும்பினின் றேறலை" *(திருவாச. 5: 38)* (செ.அக.).

ம. தேறல்; க. தேட, தேடெ; தெ. தேட; து. தேடு

[தேறு → தேறல்]

தேறலர் *tēṟalar,* பெ. (n.) தேறார் பார்க்க; see *tēṟār.*

[தேறு + அல் + அர். 'அல்' எதிர்மறை இடைநிலை]

தேறலார் *tēṟalār,* பெ. (n.) தேறார் பார்க்க; see *tēṟār.* "தேறலார் தமைத் தேறலும்" *(பாரத. சூது. 72).*

[தேறு + அல் + ஆர். 'அல்' எதிர்மறை இடைநிலை]

தேறாங்குனி *tēṟāṅguṉi,* பெ. (n.) பெரிய நெத்திலி மீன்; anchovy fish.

தேறார் *tēṟār,* பெ. (n.) *1.* பகைவர்; enemies. *2.* அறியாதார்; ignorant person.

[தேறு + ஆ + ஆர் → தேறார். 'ஆ' எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது]

தேறினகட்டை *tēṟiṉakaṭṭai,* பெ. (n.) தேறினவன் பார்க்க; see *tēṟiṉavaṉ.*

[தேறு → தேறின + கட்டை]

தேறினகாய் *tēṟiṉakāy,* பெ. (n.) முற்றின காய்; mature green fruit.

[தேறு → தேறின + காய்]

தேறினர் *tēṟiṉar,* பெ. (n.) ஆராய்ந்து கொண்ட நண்பர்; tested or tried friends. "தேறினர்த் தேறலாமையும்" *(பாரத. சூது. 72).*

[தேறு → தேறினர்]

தேறினவன் *tēṟiṉavaṉ,* பெ. (n.) *1.* பட்டறிவு மிக்கவன்; person of experience. *2.* கலை முதலியவற்றில் தேர்ச்சி பெற்றவன்; one well versed in an art; an adept.

[தேறு → தேறினவன்]

தேறு¹-தல் *tēṟu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* தெளிதல்; to be accepted as true. "ஒற்றுஒற்று உணராமை ஆள்க உடன்மூவர் சொற்றொக்க தேறப்படும்" *(குறள், 589). 2.* நீர் தெளிதல்; to be clarified, made clear, as water. "தேறுநீர் சடைக்கரந்து" *(கலித். கடவுள் வாழ்.). 3.* மயக்கந் தெளிதல்; to be strenghtened; to be recover from swooning, from intoxication or from drooping. *4.* முதிர்தல்; to be thorough, accomplished, mature, as the mind, to reach perfection. "தேறின அறிவு" (வின்.). *5.* செழித்தல்; to thrive, improve, flourish, as vegetation. "தேறின பயிர்" (வின்.). *6.* ஆறுதல்; to be comforted, consoled, solaced, soothed. *7.* துணிவு கொள்ளுதல்; to cheerup, take courage. *8.* தேர்ச்சியடைதல்; to be successful in examination. தேர்வில் தேறினான். *9.* சொல் நிறைவேறுதல் (பலித்தல்); to prove; to result, amount to, as profit; to turn out. அந்த வணிகத்தில் இவ்வளவு வரும்படி தேறும். *10.* சோறு முதலியன விறைத்தல் (வின்.); to become stiff, hard, as boiled rice, fruits. *11.* தங்குதல் (வின்.); to stay, abide.

ம. தேறுக; க. தேட, தேடெ; தெ. தேறு; து. தேரு; கோத. தேர்

தேறு²-தல் *tēṟu-,* 5 செகுன்றாவி. (v.t.) *1.* நம்புதல்; to trust, confide in, believe. "தேற்றாது செய்வார்களைத் தேறுதல் செவ்வி தன்றால்" *(கம்பரா. வாலிவ. 33). 2.* துணிதல்; to decide. "தேறுவ தரிது" *(கம்பரா. மாயாசீதை. 89). 3.* கூடுதல்; to unite with, arrive at. "தேறினும் தேறாவிடினும் அழிவின்கட் டேறான் பகாஅன் விடல்" *(குறள், 876).*

தெ. தேறு

தேறு³ *tēṟu,* பெ. (n.) *1.* தெளிவு; clearness. *2.* உறுதி (சூடா.); certainty. *3.* தேற்றா பார்க்க; see *tēṟṟā.* "மடிந்த தேறு பொடிந்தவேல்" *(கலிங். 65). 4.* தேற்றாங்கொட்டை பார்க்க; see *tēṟṟāṅ-goṭṭai.* "தேறுபடு சின்னீர் போல" *(மணிமே. 23:142).*

[தென் → தெரி → தேர் → தேறு = தெளிவு. தேறுதல் = தெளிதல். தேறு - நீரைத் தெளிவிக்கும் தேற்றாங்கொட்டை (மு.தா. 145)]

தேறு[4] *tēṟu-,* பெ. (n.) கொட்டுகை; sting, as of a wasp. "கடுந்தே றுறுகிளை" (பதிற்றுப். 71:6).

[தெறு → தேறு]

தேறு[5] *tēṟu,* பெ. (n.) துண்டு; piece. "கண்ட சருக்கரைத் தேற்றையும்" (மதுரைக். 532, உரை).

[தெறி → தேறி → தேறு]

தேறுகடை *tēṟu-kaḍai,* பெ. (n.) தீர்மானம் (வின்.); decision, settlement. அவன் அவ்வாறு தேறுகடை பண்ணினான் (உ.வ.).

தெ. தேருகட; க. தேருகடெ

[தேறு + கடை]

தேறுசூடு *tēṟu-šūḍu,* பெ. (n.) *1.* மாடு முதலியன தேறுவதற்காகச் சூடிடுகை; branding cattle to promote their fattening. *2.* ஆடுமாடுகட்கு இடுஞ் சூடு; brand on cattle.

[தேறு + சூடு]

தேறுதலை *tēṟu-talai,* பெ. (n.) *1.* துணிவு; courage, encouragement. *2.* ஆறுதல்; comfort. "தேறுதலைச் சொல்வார் சிலரில்லை" (தனிப்பா.).

தேறுதி *tēṟudi,* பெ. (n.) தேற்றாமரம் பார்க்க; see *tēṟṟā-maram* (சா.அக.).

தேறுநர் *tēṟunar,* பெ. (n.) *1.* கற்றோர் (வின்.); the learned. *2.* நம்பத்தக்கவர் (வின்.); trustworthy persons. *3.* சேர்ந்தோர் (யாழ்.அக.); relatives.

[தேறு → தேறுநர்]

தேறுமுகம் *tēṟu-mugam,* பெ. (n.) பற்றுக்கோடு; support, comfort. "தேறுமுகமின்றித் திரிந்தேமையாள" (கந்தபு. தேவர்கள்போற். 4).

[தேறு + முகம்]

தேறுவம் *tēṟuvam,* பெ. (n.) பூனைக்காலி; cowiter plant (சா.அக.).

தேறுவான் *tēṟuvāṉ,* பெ. (n.) சித்தரில் தேறியவர்; an expert scholar a chief amongst the Siddhars (சா.அக.).

[தேறு → தேறுவான்]

தேறை *tēṟai,* பெ. (n.) மீன்வகை (யாழ்.அக.); a kind of fish.

தேன் *tēṉ,* பெ. (n.) *1.* மது; honey. "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி வாலெயிறு ஊறியநீர்" (குறள், 1121). தேன் உள்ள இடத்தில் ஈ மொய்க்கும் (பழ.). *2.* கள் (சூடா.); toddy. *3.* இனிமை; sweetness. "தேனுறை தமிழும்" (கல்லா. 9). தேனே போலும் செந்தமிழ்க் கல்வி (பழ.). *4.* இனிப்புச் சாறு; sweet juice. "ஆலைவாய்க் கரும்பின் றேனும்" (கம்பரா. நாட். 9). *5.* மணம் (சூடா.); fragrance, odour. "அகிற்புகையளைந்து தேனளாய்ப் பஞ்சுடை யமளிமேற் பள்ளி யேற்பவன்" (சூளா. குமர. 17). *6.* வண்டு வகை (திவா.); a kind of beetle or bee. *7.* பெண்வண்டு (சூடா.); a female beetle or bee. "தேனொ டினவண்டுமு பூந்தெரியலாய்" (உபதேசகா. சூராதி. 4). *8.* தேனிறால்; honey-comb. "தீந்தே னெடுப்பி" (ஐங்குறு. 272).

ம., கோத. தேன்; க. தேனு, சேனு; தெ. தேனெ; து. தீய; குட. தேனி; துட. தோன்; கொலா., நா. தேனெ; பர். தீன்நெய்; கட. தீன், தீனு; மா. தெனி; பிரா. க னேன்; பட. சேனு

Pkt. tiṇiša

[தெல் → தென் → தேன்]

தேன் என்னும் சொல்லின் வேர்ப்பொருள் தெளிவு (தெளிந்தது) என்பதே.

தேன் என்னும் சொல் தெளிவு என்னும் வேர்ப்பொருள் கொண்ட தென்சொல் லென்றும்; அது முறையே தேம் → தீம் → தீவு எனத் திரியுமென்றும்; தீ என்னும் பகுதி இரட்டிக்குமிடத்துத் தித்தி என மருவிப் புணருமென்றும்; தமிழ்ச் சொற்களைத் தமிழடிப்படையாகவே ஆய்தல் வேண்டு மென்றும்; பண்டைத் தனித்தமிழ் நூல்களும் பல்லாயிரக்கணக்கான தென்சொற்களும் மறைந்து, இன்றுள்ள இலக்கண நூல்களும் விளங்காதவிடத்து, மொழித் திறத்தின் முட்டறுப்பது மொழிநூலேயென்றும்; கள், மது என்னும் சொற்கள் மயக்குவது என்பதை வேர்ப்பொருளாகக் கொண்ட தென் சொற்களென்றும்; தமிழே திரவிடமாகத் திரிந்துள்ளதென்றும்; வடமொழியில் வழங்குந் துணையானே ஒரு சொல் வடசொல்லாகிவிடாதென்றும்; தெற்றெனத் தெரிந்து கொள்க (குயில், 25.8.1959).

வகைகள்

1. கொம்புத் தேன்
2. கொசுத்தேன்
3. பாகுத் தேன்
4. கதண்டுத் தேன்

5. மலைத் தேன்.
6. மரப்பொந்துத்தேன்
7. புற்றுத் தேன்
8. மனைத் தேன்
9. இறால் தேன்
10. குறிஞ்சித் தேன்
11. சிறுதேன்
12. பெருந்தேன் *(சா.அக.)*

தேன்கட்டை *tēṉkaṭṭai,* பெ. (n.) யானை நெரிஞ்சில்; elephant caltrope *(சா.அக.).*

தேன்கடல் *tēṉ-kaḍal,* பெ. (n.) கட்கடல்; sea of toddy.

[தேன் + கடல்]

தேன்கதலி *tēṉ-kadali,* பெ. (n.) வாழை வகை *(மூ.அ.);* a kind of plantain.

ம. தேன்கதளி

[தேன் + கதலி]

தேன்கல் *tēṉkal,* பெ. (n.) திருமணி (கோமேதகம்); cinnamon stone.

[தேன் + கல். தேன் போலும் வெளிர் மஞ்சள் நிறமுடைய கல்மணி]

தேன்களிம்பு *tēṉ-kaḷimbu,* பெ. (n.) தேன்மெழுகு; bees-wax.

[தேன் + களிம்பு]

தேன்கற்கண்டு *tēṉ-kaṟkaṇḍu,* பெ. (n.) இறுகிய தேன்கட்டி *(பதார்த்த. 190);* crystalline honey-sugar.

[தேன் + கல் + கண்டு]

தேன்கற்பம் *tēṉ-kaṟpam,* பெ. (n.) தேனை மண்ணில் புதைத்து வைத்துக் கட்டியான வுடன் எடுத்து முறைப்படிக் கொள்ளும் காயமருந்து; honey crystallised by keeping it burried under the earth and then taken but for use in rejuvenating medicine *(சா.அக.).*

[தேன் + கற்பம்]

தேன்காய் *tēṉ-kāy,* பெ. (n.) 1. தேன்பச்சை பார்க்க; see *tēṉ-paccai.* 2. தேன்பூச்சிக்காய் பார்க்க; see *tēṉpūcci-k-kāy (சா.அக.).*

[தேன் + காய்]

தேன்குடுக்கை *tēṉ-kuḍukkai,* பெ. (n.) தேன் அடைத்துவைத்திருக்கும் மூங்கிற்கூடு; bamboo container for storing honey.

[தேன் + குடுக்கை]



தேன்குழல் *tēṉ-kuḻal,* பெ. (n.) உளுத்தமா, அரிசிமாவினால் முறுக்குப் போலச் செய்யப்படும் சிற்றுண்டி வகை; a preparation made out of the flours of black gram and rice in the proportion of 1:4 and ghee. "தேன் குழலுக்காரி வடையிலட்டுகம்" *(விநாயகபு. 39, 39).*

ம. தேன்குழல்

[தேன் + குழல்]

தேன்குழாய்[1] *tēṉ-kuḻāy,* பெ. (n.) தேன்குழல் *(மூ.அ.)* பார்க்க; *tēṉ-kuḻal.*

[தேன் + குழாய்]

தேன்குழாய்[2] *tēṉ-kuḻāy,* பெ. (n.) தேனீ கட்டும் மெழுகினால் செய்த கூண்டு; bee-hive made of wax *(சா.அக.).*

[தேன் + குழாய்]

தேன்கூட்டுக்கட்டு *tēṉ-kūṭṭu-k-kaṭṭu,* பெ. (n.) தேன்கூடு போன்று இடைவெளி விட்டு



4 ½ விரல அகலத்தில் சுற்றுச் சுவராக அமையும் கட்டுமானம்; place built like a bee hive, learning 4½ inches in breath in the circular wall; honey-comb wall.

[தேன் + கூடு + கட்டு]

தேன்கூடு *tēṉ-kūḍu*, பெ. (n.) 1. தேனிறால்; honey comb. 2. தேன்கூட்டின் உள்ளறை (வின்); cells in a bee-hive. 3. தேனீத் தங்கும் கூடு (வின்.); bee-hive.

ம. தேன்கூடு; க. சேணுகூடு

[தேன் + கூடு]

தேன்சிட்டு *tēṉ-ciṭṭu*, பெ. (n.) தேன்நிறமுள்ள சிட்டுக்குருவி; a sparrow of the colour of honey (சா.அக.).

[தேன் + சிட்டு]



தேன்சுவைமருந்து *tēṉ-šuvai-marundu*, பெ. (n.) தேனைப் போலச் சுவையுடைய மருந்து; any medicine which has the consistence and sweetness as honey (சா.அக.).

[தேன் + சுவை + மருந்து]

தேன்சேரான் *tēṉšērāṉ*, பெ. (n.) சேங்கொட்டை வகை; glabrous marking nut.

தேன்தட்டு *tēṉ-taṭṭu*, பெ. (n.) தேனடை; honey comb (சேரநா.).

ம. தேன்தட்டு

[தேன் + தட்டு]

தேன்தொடை *tēṉ-toḍai*, பெ. (n.) தேன்தோடம் பழம் பார்க்க; see *tēṉ-tōḍam-palam*.

[தேன் + தொடை]

தேன்தோடம்பழம் *tēṉ-tōḍam-palam*, பெ. (n.) தித்திப்புக் கிச்சிலி; sweet orange (சா.அக.).

[தேன் + தோடம் + பழம்]

தேன்தோடை *tēṉ-tōḍai*, பெ. (n.) தேன்றோடை பார்க்க; see *tēṉṟōḍai*.

தேன்பச்சை *tēṉ-paccai*, பெ. (n.) அக்கமணி (உருத்திராக்க) மரம்; honey fruit tree (சா.அக.).

[தேன் + பச்சை]

தேன்பதமாய்க்காய்ச்சு-தல் *tēṉ-padamāi-k-kāiccu-*, 5 செ.குன்றாவி. (v.t.) தேனைப் போல் சிவந்த பாகுபதமாய்க் காய்ச்சுதல்; boiling a liquid till it attains the colour and the consistency of honey (சா.அக.).

[தேன் + பதம் + ஆய் + காய்ச்சு-.]

தேன்பயில்பொதும்பு *tēṉ-payil-podumbu*, பெ. (n.) தேன் கூடுகள் நிறைந்த வளமான சோலை; grove where bee-hives are found in large amount. "மீன் பயில் பள்ளமும் தேன் பயில் பொதும்பும்" (பெரிய லெய்டன் செப்பேடுகள்)

[தேன் + பயில் + பொதும்பு]

தேன்பருந்து *tēṉ-parundu*, பெ. (n.) பருந்து வகை; crested honey buzzard (செ.அக.).

[தேன் + பருந்து]

தேன்பலா *tēṉ-palā*, பெ. (n.) தேனொழுகும் பலாப்பழம்; honey dripping common jack fruit (சா.அக.).

[தேன் + பலா]

தேன்பாகு *tēṉ-pāgu*, பெ. (n.) தேனைப் போன்ற வெல்லப்பாகு அதாவது வைப்புத் தேன்; an artificial honey like syrup prepared from sugar or jaggery (சா.அக.).

[தேன் + பாகு]

தேன்பாசி *tēṉ-pāsi*, பெ. (n.) கடற்பாசி; sea weed (சா.அக.).

[தேன் + பாசி]

தேன்பிராக்கு *tēṉ-pirākku*, பெ. (n.) சேரான் கொட்டை; marking nut (சா.அக.).

தேன் பருந்து

தேன்சிட்டு

தோல் குருவி

தோட்டக்கள்ளன்

தேன்பூ *tēṉ-pū,* பெ. (n.) தீன்பூ பார்க்க; see *tīṉ-pū* (சா.அக.).

ம. தேன்பு

[தேன் + பூ]

தேன்பூச்சிக்காய் *tēṉ-pūcci-k-kāy,* பெ. (n.) தூண் மரத்தின் காய்; fruit of white cedar tree (சா.அக.).

தேன்பூச்சிமரம் *tēṉ-pūcci-maram,* பெ. (n.) ஆயா பார்க்க; see *āyā.*

தேன்மண்டலம் *tēṉ-maṇḍalam,* பெ. (n.) கொண்டலாந்தி மரம்; a tree (சா.அக.).

தேன்மரம் *tēṉ-maram,* பெ. (n.) நுணாமரம் (இங்.வை) பார்க்க; see *nuṇā-maram* (செ.அக.).

[தேன் + மரம்]

தேன்மிருதிகம் *tēṉ-mirudigam,* பெ. (n.) சாறாயம்; honey coloured liquior or spirit-brandy.

[தேன் + மிருதிகம்]

தேன்மெழுகு *tēṉ-meḻugu,* பெ. (n.) தேனடையிலுள்ள மெழுகு; bees-wax.

ம. தேன்மெழுகு

[தேன் + மெழுகு]

தேன்மொழி *tēṉ-moḻi,* பெ. (n.) 1. தேன் போன்ற இனிமையான பேச்சு; words as sweet as honey. தென்மொழி தேன்மொழி. 2. இனிய மொழியை உடையவள்; a woman of sweet words.

ம. தேன்மொழி

[தேன் + மொழி]

தேன்வதை *tēṉ-vadai,* பெ. (n.) தேன்கூடு (யாழ்ப்.); honey comb.

[தேன் + வதை. பதி = பதிவாயிருக்கும் இடம், வீடு, ஊர், நகர். பதி → வதி → வசி → வாசம். பதி → வதி → வதை]

தேன்வளையல் *tēṉ-vaḷaiyal,* பெ. (n.) பூநீறு; efflorescent salt found in the soil of fuller's-earth (சா.அக.).

தேன்றாடு *tēṉ-ṟāḍu,* பெ. (n.) தேனிறால் (நாஞ்.) பார்க்க; see *tēṉiṟāl.*

தேன்றோடம் *tēṉṟōḍam,* பெ. (n.) தித்திப் பெலுமிச்சை; sweet lime (செ.அக.).

[தேன் + தோடம்]

தேன்றோடை *tēṉṟōḍai,* பெ. (n.) கிச்சிலி வகை; mandarin orange (செ.அக.).

தேனகக்குடிச்சி *tēṉaga-k-kuḍicci,* பெ. (n.) கதண்டுக்கல்; stone in the head of wild beetle (சா.அக.).

புதையலைக் கண்டுபிடிக்கும் மந்திரத்தில் இதைப் பயன்படுத்துவர்.

தேனகம் *tēṉagam,* பெ. (n.) 1. மராமரம்; common soul. 2. ஒருவகைக் கடம்பு; white Indian oak (சா.அக.).

தேனஞ்சு *tēṉañju,* பெ. (n.) ஐயமுதம் (பஞ்சாமிர்தம்); mixture of five delicious substances. "தேனஞ்சாடிய தெங்கிள நீரொடு" (தேவா. 1020, 10).

[தேன் + (ஐந்து) → அஞ்சு]

தேனடை *tēṉ-aḍai,* பெ. (n.) தேனிறால் பார்க்க; see *tēṉ-iṟāl.*

ம. தேனட, தேன்தட்டு, க. சேனகுட்டி

[தேன் + அடை]

தேனத்தி *tēṉ-atti,* பெ. (n.) சீமையத்தி; common cultivated fig (செ.அக.).

[தேன் + அத்தி]

இம்மரத்தின் பழத்திலிருந்து தேன் போன்ற நீர்மம் எடுக்கப்படுவதால் இப்பெயர் பெற்றது.

தேனம் *tēṉam,* பெ. (n.) கடல் (யாழ்.அக.); ocean (செ.அக.).

தேனம்பாறை *tēṉam-pāṟai,* பெ. (n.) ஒருவகை மீன்; a kind of fish.

குறிப்பிட்டதொரு மீன் அதன் உரு அல்லது வளர்ச்சி நிலைக்கேற்ப வெவ்வேறு பெயர் பெறும். கொம்புப் பாறை, சேங்கடாப் பாறை, செம்பாறை என வெவ்வேறு பெயர் பெறும் இம்மீன்.

தேனருவி *tēṉaruvi,* பெ. (n.) குற்றால மலையின் மேலருவி (குற்றா. குற. 52); the highest of the three sacred water falls at Kuṟṟālam.

[தேன் + அருவி]

தேனலை *tēṉalai,* பெ. (n.) மரக்கலத்தைக் கடற்பரப்பிலுதைத்துச் செலுத்துதற்கேது வான கடலலை (மீனவ.); tides which helps the boat to go easily.

[தேன் + அலை. தேன் = இனிமை, தேன் அலை = இனிமையாக அல்லது எளிமையாக (மரக்கலத்தை)ச் செலுத்த உதவும் அலை]

தேனவரை *tēṉavarai,* பெ. (n.) தேநவரை பார்க்க; see *tēnavarai.*

[தேன் + நவரை. தேம் → தேன்]

தேனழி-த்தல் *tēṉaḻi-,* 4 செ.குன்றாவி. (v.t.) தேன் கூட்டைக் கலைத்துத் தேன் கொள்ளுதல்; to take honey from a bee-hive, driving away the bees. 'தேனிழைத்த என்றதனானே தேனழிக்க வருவாராலும்' (அகநா. 18, உரை).

[தேன் + அழி-.]

தேனன் *tēṉaṉ,* பெ. (n.) திருடன் (சூடா.); thief, robber.

[ஏய் → ஏய்ப்பு = ஏமாற்றுகை. ஏய் → ஏயம் = தள்ளத்தக்கது. ஏயம் → தேயம் = களவு. தேய → தேயன் → தேனன்]

த. தேனன் → Skt. stēna

தேயம்[6] பார்க்க

தேனாயி *tēṉāyi,* பெ. (n.) தேனீக்கள் போலுஞ் சேமிக்கும் பழக்கமுடையவர் (தஞ்சை.மீனவ.); people who saves money like bees.

தேனார்மொழியம்மை *tēṉār-moḻiyammai,* பெ. (n.) திருக்குடந்தைக்காரோணத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியின் பெயர்; names of Goddess abode in Tirukkuḍandai temple.

தேனி[1]-த்தல் *tēṉi,* 4 செ.கு.வி. (v.i.) 1. இனித்தல்; to be sweet. 2. மகிழ்தல்; to be happy. "கேசவன்பேரிட்டு நீங்க டேனித்திருமினோ" (திவ்.பெரியாழ். 4. 6:1).

[துல் → (தெல்) → தென் = (தெளிவு, கள்) இனிமை. தென் → தேன் = தெளிவு, கள், மது. தேன் → தேம் → தீம் → தீவு = இனிமை. தேன் → தேனி. தேனித்தல் = இனித்தல் (மு.தா. 145)]

தேனி[2] *tēṉi,* பெ. (n.) ஒரு மாவட்டத் தலைநகர்; district head-quarter.

வையையாற்றின் துணையாறான தேனியாற்றின் கரையில் உள்ளதால் இப்பெயர் பெற்றது.

தேனி[3] *tēṉi,* பெ (n.) 1. கடுரோகிணி (மலை.); black hellebore. 2. கொத்துமல்லி; corriander (சா.அக.).

தேனிகா *tēṉigā,* பெ. (n.) தேனீ பார்க்க; see *tēṉī* (சா.அக.).

தேனிகை *tēṉigai,* பெ. (n.) கொத்துமல்லி; corriander.

[தேனி[3] → தேனிகை]

தேனிட்டகலவை *tēṉiṭṭa-kalavai,* பெ. (n.) பல மருந்துகள் சேர்ந்த கலப்பு மருந்தைத் தேனில் கூட்டிவைக்கை; mixture of different medicines with purified honey (சா.அக.).

[தேன் + இட்ட + கலவை]

தேனிரும்பு *tēṉ-irumbu,* பெ. (n.) உயர்ந்த இரும்பு; superior iron.

[தேன் + இரும்பு]

தேனிலையான் *tēṉilaiyāṉ,* பெ. (n.) தேனீ (யாழ்.அக.) பார்க்க; see *tēṉī.*

[தேன் + நிலை + ஆன்]

தேனிலிட்டமருந்து *tēṉiliṭṭa-marundu,* பெ. (n.) தேனிலிட்டு வைத்த இஞ்சி முதலியன; medicines or any drug preserved in honey as greenginger (சா.அக.).

[தேனில் + இட்ட + மருந்து]

தேனிலுண்ணல் *tēṉiluṇṇal,* பெ. (n.) நல்ல தேனில் மருந்தைக் குழைத்து உட்கொள்ளுகை; taking medicine steped in purified honey in the proportion of 1:8 (சா.அக.).

[தேனில் + உண்ணல். 'அல்' தொ.பெ.ஈறு.]

தேனீக்கள்



மலைத் தேனீ

கொசுத்தேனீ

வீட்டுத் தேனீ

சிறுதேனீ



கொம்புத் தேனீ

தேனிவாதுமை *tēṉi-vādumai,* பெ. (n.) தித்திப்பு வாதுமை; sweet almond *(சா.அக.).*

தேனிழை-த்தல் *tēṉi-iḻai-,* 4 செ.கு.வி. (v.i.) தேன்கூடு கட்டுதல்; to construct a bee-hive. "தேனிழைத்த கோடுயர் நெடுவரை" *(அகநா. 18).*

[தேன் + இழை-.]

தேனிறக்கு-தல் *tēṉ-iṟakku-,* 5 செ.கு.வி. (v.i.) தேனழி-த்தல் பார்க்க; see *tēṉ-aḻi-.*

[தேன் + இறக்கு-.]

தேனிறம் *tēṉiṟam,* பெ. (n.) மாந்துளிர்க்கல்; red ochre *(சா.அக.).*

மறுவ. கற்காவி

[தேன் + நிறம்]

தேனிறாட்டு *tēṉiṟāṭṭu,* பெ. (n.) தேனிறால் பார்க்க; see *tēṉ-iṟāl.*

தேனிறால் *tēṉ-iṟāl,* பெ. (n.) தேனைச் சேர்த்து வைக்க மெழுகால் தேனீக்கள் செய்யும் கூடு; honey - comb. "நறும்பழம் ... பெருந்தேனிறாஅல் சிறு நாடன்" *(ஐங்குறு. 214).*

[தேன் + இறால்]



தேனீ *tēṉī,* பெ. (n.) தேன் தொகுக்கும் ஈ; honey bee. "மலைநாட வுய்த் திட்டுந் தேனீக்கரி" *(நாலடி. 10).* 2. தேன் கூட்டும் வண்டு; honey bee.

ம. தேநீச்ச; க. சேனு நொணே; கோண். தேனெ, பர். தீனி; குரு. தீந்; மா. தெனி

[தேன் + ஈ = தேனீ]

வகைகள்

1. வீட்டுத் தேனீ
2. சிறு தேனீ
3. மலைத் தேனீ
4. கொசுத் தேனீ
5. கொம்புத் தேனீ

தேனீக்குடிக்கீரனார் *tēṉī-k-kuḍi-k-kīraṉār,* பெ (n.) கடைக்கழகப் புலவர்களுள் ஒருவர்; a poet, one among last Šangam *(இருநூ.).*

[தேனீக்குடி + கீரனார்]

தேனீக்கூடு *tēṉī-k-kūḍu,* பெ. (n.) தேன் வண்டுக் கூடு; honey bag; bee hives *(சா.அக.).*

ம. தேனீச்சக்கூடு

[தேன் + ஈ + கூடு = தேனீக்கூடு]

தேனீயிரைப்பை *tēṉī-y-iraippai,* பெ. (n.) தேனீக்கூடு பார்க்க; see *tēṉī-k-kūḍu (சா.அக.).*

[தேனி + இரைப்பை]

தேனு *tēṉu,* பெ. (n.) களவு (சூடா.); robbery (செ.அக.).

தேனுகம்[1] *tēṉugam,* பெ. (n.) பெண் யானை (யாழ்.அக.); female elephant.

தேனுகம்[2] *tēṉugam,* பெ. (n.) 1. மிளகு நங்கை; pepper mangay. 2. கொத்துமல்லி; coriander (சா.அக.).

தேனுகன் *tēṉugaṉ,* பெ. (n.) கண்ணனால் கொல்லப்பட்ட ஓர் அசுரன்; an Asura slain by Kannan. "தேனுகன் பிலம்பன் காளியனென்னும்" *(திவ். பெரியாழ். 3,6,4).*

தேனுகாரி *tēṉugāri,* பெ. (n.) கண்ணன்; Kannan, as the foe of Dhenuka.

தேனுண்ணி *tēṉ-uṇṇi,* பெ. (n.) தேனைக் குடிக்கும் பறவை; honey eater *(சா.அக.).*

[தேன் + உண்ணி]

தேனுமுத்திரை *tēṉu-muttirai,* பெ. (n.) கை முத்திரை; a hand pose. "தேனு முத்திரையுங் காட்டி" *(வாயுசங்.சிவவோம. 7).*

தேனுறிஞ்சி *tēṉ-uṟiñji,* பெ. (n.) தேனை உறிஞ்சும் ஒரு வகைப் பறவை; honey sucker (சா.அக.).

[தேன் + உறிஞ்சி]



தேனூறு-தல் *tēṉūṟu-*, *5 செ.கு.வி.* (v.i.) **இனிமையாதல்;** to be honey sweet. "என்னுள்ளந் தேனூறி யெப்பொழுதுந் தித்திக்குமே" *(திவ்.பெரிதி. 7:4:5).*

[தேன் + ஊறு-.]

தேனெய் *tēṉey*, பெ. (n.) **தேன்;** honey. *"தேனெய்யொடு கிழங்குமாறி யோர்" (பொருந. 216) (செ.அக.).*

[தேன் + நெய்]

தேனெறும்பு *tēṉ-eṟumbu*, பெ. (n.) *1.* **பெரிய எறும்பு வகை;** a large emmet, as found of sweet things. *2.* **நஞ்சுள்ள எறும்பு வகை;** a small poisonous ant.

ம. தேனுறும்பு

[தேன் + எறும்பு]

தேனோடைப்பழம் *tēṉōḍai-p-paḻam*, பெ. (n.) *நாகரப்பழம் பார்க்க;* see *nāgara-p-paḻam* *(சா.அக.).*

தை

தை[1] *tai,* பெ. (n.) த் என்ற மெய்யும் ஐ என்ற உயிரும் சேர்ந்த கூட்டெழுத்து; the syllable formed by adding the dipthong 'ai' to the consonant 't'.

தை[2]**-த்தல்** *tai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. தையலிடுதல் (சூடா.); to sew, stitch. 2. ஆணி முதலியன அடித்தல்; to nail, fasten beams with nails, spikes or pegs; to pin. "படத்திற்கு ஆணி தைத்தாயிற்றா". 3. இலை முதலியன குத்தியிணைத்தல்; to plait or stitch, as leaves into plate. 4. பொருத்துதல்; to join. "பலகை தைத்து" (பாரத. கிருட்டிண. 102.). 5. முள் முதலியன ஊடுருவுதல்; to pierce penetrate, prick, as a thorn, an arrow. "மேனி தைத்த வேள்சரங்கள்" (கம்பரா. உலாவியல். 15). 6. மாலை தொடுத்தல்; to tie, weave, as a wreath. "தொடலை தைஇய மடவரன் மகளே" (ஐங்குறு. 361). 7. கோத்தல்; to string, as beads. "அவிரிழை முத்தந் தைஇய மின்னுமிழ் பிலங்க" (பதிற்றுப். 39, 15). 8. ஒப்பனை செய்தல்; to adorn, decorate. தைஇய மகளிர் (கலித். 27:19). 9. உருவாக்குதல்; to make, create. "வல்லவன் தைஇய பாவைகொல்" (கலித். 56). 10. பதித்தல்; to set, enchase. "திகழொளி முத்தங் கரும்பாகத் தைஇ" (கலித். 80:4). 11. இடுதல்; to place, put, as a mark on the forehead. "திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்" (திருமுருகு. 24). 12. உடுத்துதல்; to wear, put on "ஏர்தழை தைஇ" (கலித். 125:12). 13. சித்திரித்தல்; to paint. "அணிவரி தைஇயும்" (கலித். 76:2). 14. சூழ்தல்; to surround, cover, encircle. "சீர்மிகு முத்தந் தைஇய நார்முடி" (பதிற்றுப். 39:16). 15. வலைபின்னுதல் (வின்.); to make a net. 16. அடைத்தல் (யாழ்அக.); to close, shut.

[துள் – (தள்) → (தய்) + தை. தைத்தல் = துணி, பலகை முதலியவற்றை இணைத்தல்]

தை[3]**-த்தல்** *tai-,* 11 செகுவி (v.i.) 1. உள்நுழைதல்; to enter, dart. "அவ்வழித் தைத்தது பூதம்" (கம்பரா. திருவவ. 88). 2. மனத்திலுறைத்தல்; to pierce the mind; to rankle; to cause pain. "அவன் சொன்ன சொல் என் மனத்திற் றைத்தது"

[துள் – (தள்) → (தய்) + தை.]

தை[4] *tai,* பெ. (n.) 1. ஒப்பனை; decoration, embellishment. "தைபுனை மாது" (திகண்டு.). 2. தையல் (தைலவ. தைல.); sewing.

தை[5] *tai,* பெ. (n.) ஒரு தாளக்குறிப்பு (அரு.நி.); onom. expr. of beating time.

தை[6] *tai,* பெ. (n.) 1. தமிழாண்டின் தொடக்க மாதம்; first month of Tamil era. 2. திருவள்ளுவராண்டின் தொடக்க மாதம் (இக்வ.); first month of Thiruvalluvar era.

புனர்பூசம், பூசம் என்னும் விண்மீன் பெயர்கள் புனர்தை, தை என்றிருத்தல் வேண்டும் என்றும் வரிசையில் அவை முன்பின்னாக இடம் மாறியுள்ளன என்றும் கணியர் இ.மு. சுப்பிரமணியனார் கூறுகிறார். புனர்தை என்பதிலுள்ள தையே மாதப் பெயராக விளங்குகின்றது.

மாதங்கள் பற்றிய காலக் கணக்கீடு தமிழருடையதே. மாதங்களைப் பற்றி அறியுமுன் அவற்றிற்கு அடிப்படையான சிலவற்றைத் தெரிந்து கொள்ளுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

வானப் பெருவெளியில் கோள்களும் விண்மீன்களும் ஒரு நீள்வட்டப்பாதையில் முறையாகச் சுழன்று கொண்டிருக்கின்றன. விண்மீன்கள் எண்ணற்றனவாயினும், அவை இருபத்தேழு குழுக்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன. பொதுவாக ஒரு விண்மீன் என்று நாம் கருதுவது அல்லது குறிப்பிடுவது உண்மையில் ஒரு விண்மீன் குழுவேயாகும்.

இருபத்தேழு நாண்மீன்களும் அவற்றின் தோற்றத்தைக் கொண்டு ஒப்புமையாற் பெயர் பெற்றிருக்கின்றன. குதிரை போன்று காட்சியளிப்பது புரவி என்றும், அடுப்புப் போன்றே தோற்றமுடையது அடுப்பு என்றும் இவ்வாறே பிறவும் பெயர் பெற்றன. புரவி அஸ்வதி என்றும் அடுப்பு பரணி என்றும் வடசொல் வழக்குப் பெற்றுள்ளன. பிறவும் இத்தகையன.

வானவெளியில் கிழக்கு மேற்காக அமைந்த நீள்வட்ட மண்டிலம் முந்நூற்றறுபது சிறுபிரிவுகளாகவும், முப்பது பாகைகள் கொண்ட பன்னிரு பெரும் பிரிவுகளாகவும்

பகுக்கப்பட்டுள்ளன. இவையே ஓரைகள் எனப்படுகின்றன.

இப்பன்னிரு ஓரைகளிலும் இருபத்தேழு விண்மீன்களும் அடங்கியுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் இரண்டேகால் விண்மீன்கள் இடம்பெறுகின்றன. ஓரைகள் கோள்வீடுகள் என்று குறிப்பிடப்படுகின்றன. கோள்வீடு - இராசி.

கதிரவன் வானமண்டிலத்தைச் சுற்றிவரும் கால அளவைப் பன்னிரண்டு பிரிவாக்கி யுள்ளமையால் அவை ஒவ்வொன்றிலும் கதிரவன் இடம்பெறுவது நோக்கிப் பன்னிரு மாதங்கள் பகுக்கப்பட்டன.

கதிரவன் ஒவ்வொரு ஓரையிலும் இடம் பெறும் கால அளவே ஒரு மாதம் ஆகும். இம்மாதங்கள் தனித்தனிச் சில நாழிகை ஏறத்தாழ இருபத்தொன்பது முதல் முப்பத்திரண்டு நாட்கள் வரையுள்ள கால அளவாம். இந்த அளவு எக்காலத்தும் ஒரே நிலையாக இருக்கும்.

ஆகவே ஓரைகளின் பெயர்களையொட்டியே மாதங்களின் பெயர்களும் அமைந்தன.

கதிரவனும் நீள்வட்டப்பாதையும் நிலையானவை. நிலவுலகம் கதிரவனைச் சுற்றி வரும்போது கதிரவனை நோக்கி அதன் பின்புறம் மறையும் ஓரையை நாம் அம்மாதமாகக் குறிக்கின்றோம்.

ஓரைகள் அவற்றின் தோற்றத்தைப் பொறுத்து ஒப்புமை வகையில் பெயர் பெற்றிருக்கின்றன. ஆடு, காளை, இருவர், நண்டு, அரிமா, கன்னி, நிறைகோல், தேள், வில், சுறா, குடம், மீன் ஆகியவற்றினைப் போன்று வடிவ அமைப்புடைமையால் ஓரைகள் முறையே மேழம், விடை, ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலாம், நளி, சிலை, சுறவம், கும்பம், மீனம் என்று பெயர் பெற்றன.

இப்பன்னிரு ஓரைகளும் மாதத்திற்கு ஒன்றாகக் கதிரவன்பின் மறைந்து கால வேறுபாட்டைக் காட்டுகின்றன.

அன்றாடம் காலையில் கதிரவன் தோன்றுவதற்கு முன்னும், மாலையில் கதிரவன் மறைந்த பின்னும் முதன்முதலில் வானில் தோன்றும் விண்மீன் கூட்டமே அன்று பகலில் கதிரவன் பின்னால் மறைந்த விண்மீன் கூட்டமாகும். இதைக் கொண்டே அம்மாதத்தின் பெயர் அமைகிறது.

மகரம் என்பது சுறாமீனைக் குறிக்கும் வடசொல். சுறாவின் வடிவில் விளங்கும் ஓரை சுறவம். இதுவே வடமொழியில் மகரராசி எனப்படுகிறது.

குத்தல் உணர்ச்சியைக் குறிக்கும் 'சுள்' என்னும் வேர்ச்சொல், சுல் - சுர் - சுரி எனத் திரிந்து அவ்வுணர்ச்சிப் பொருள் அடிப் படையில் சுரி, சூரி, சுணை, சுளுக்கி முதலான பல்வேறு சொற்களைத் தோற்று விக்கிறது. சுறுக்கென்று குத்துவது போற் கடிக்கும் எறும்பு சுள்ளான்.

கூரிய செதிலால் வெட்டுங் கடல் மீன் சுறா. சுறா - சுறவு. சுறவு + அம் = சுறவம். 'அம்' பெருமைப் பெயர் பின்னொட்டு. சுறவவோரையில் (மகர ராசியில்) கதிரவன் தோன்றும் நாள் என்னும் பொருளிலேயே அம்மாத முதல் நாள் (பொங்கல்) மகர சங்கராந்தி எனப்படுகிறது.

இச்சுறவ மாதவே தமிழாண்டின் தொடக்கம்.

நாள் என்பது இயல்பாகக் கதிரவன் தோற்றத்தையே தொடக்கமாகக் கொண்டுள்ளது.

கிழமை (வாரம்) என்பதும் கதிரவனிலிருந்தே தொடங்குகின்றது. கிழமையின் முதல் நாள் ஞாயிற்றுக்கிழமையே.

மாதத்தின் தொடக்கமும் கதிரவனையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. கதிரவன் ஓரைக்குள் தங்கிச் செல்லும் காலமே மாதம். ஆதலால் மாதத் தொடக்கம் என்பது கதிரவன் ஓரைக்குள் புகுங்காலமேயாகும். ஆகவே கதிரவனை அடிப்படையாகக் கொண்டே மாதம் தொடங்குகிறது என்பது தெளியப் படும்.

எனவே, ஆண்டின் தொடக்கமும் கதிரவனின் இயக்கத்தை ஒட்டியதாக இருத்தலே இயற்கை நெறியும் தமிழ் மரபுமாம்.

கதிரவன் இயக்கம் என்பது கடக (ஆடி) மாதம் முதல்நாள் தொடங்கி தெற்கு நோக்கிச் செல்லும் தென்செலவும் (தட்சணாயணம்), சுறவம் முதல்நாள் தொடங்கி வடக்கு நோக்கிச் செல்லும் வட செலவும் (உத்திராயணம்) என இருவகைப் படும்.

தமிழ்நாட்டு மக்கள் தாமிருக்கும் தென் திசையிலிருந்து வடசெலவு தொடங்குதலால் அச்சுறவ முதல்நாளையே கதிரவனைப் போற்றியும், பொங்கலிட்டு மகிழ்ந்தும் புதுநாளாகக் கொண்டாடியும் வருகின்றனர்.

எனவே, தமிழாண்டுத் தொடக்கம் என்பது சுறவ முதல்நாளே என்பது ஐயுறவின்றித் தெளியப்படும்.

ஞாயிறு என்னுஞ்சொல் இப்போது கிழமைப் பெயர்களுள் ஒன்றாக வழங்கப்படுவது போல் பழங்காலத்தில் மாதத்தைக் குறிக்கும் பெயராக வழங்கப்பெற்றுள்ளது. கல்வெட்டுகள் பலவற்றில் மேழம், விடை முதலிய ஓரைப் பெயரான் அமைந்த சிறப்புப் பெயரும் ஞாயிறு என்னும் பொதுப் பெயரும் தாங்கிய மாதப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. மடங்கல் (ஆவணி) மாதம் 'சிம்மஞாயிறு' என்றும், கும்பம் (மாசி) மாதம் 'கும்ப ஞாயிறு' என்றும், சிலை (மார்கழி) மாதம் 'தனுர் ஞாயிறு' என்றும் குறிக்கப் பெற்றுள்ளன (தெ.க.தொ. 3-29, 32, 36).

கோமாறன் சடையற்கு யாண்டு நாலாவதற்கு எதிர் ஒன்பதாவது விருச்சிக ஞாயிற்றுத் திங்கட்கிழமை (தெ.க.தொ. 14:12).

சோழன் தலைகொண்ட கோவீரபாண்டிய தேவர்க்கு யாண்டு பன்னிரண்டாவது இவ்வாண்டு மிதுன ஞாயிற்று (தெ.க.தொ. 14:95) என வருதல் காண்க.

(திருக்குறள் மணி புலவர் இறைக்குருவனார் இயற்றிய திருவள்ளுவராண்டு அல்லது தமிழ் ஆண்டு எனும் நூலிலிருந்து இச்செய்தி தொகுக்கப்பட்டது.)

தை[7] *tai,* பெ. (n.) 1. **ஒரு திங்கள்;** the Tamil month, January - February. "தைஇத் திங்கட் டண்ணிய தரினும்" *(குறுந். 196).* 2. **சுறவ** (மகர) **ஓரை;** capricorn in the zodiac. 3. **கொடிறு** (பூசம்) (சூடா.); the 8th naksatra *(செ.அக.).*

ம. தை

தை[8] *tai,* பெ. (n.) **மரக்கன்று;** young plant or tree. தைத்தெங்கு *(நாஞ்.).*

ம. தை, தய்யு; க. தெயி; தெ. தேக; து. தெ

தை[9] *tai,* பெ. (n.) **தைவேளை** (மு.அ.) பார்க்க; *tai-vēḷai.*

தைக்குரக்கன் *tai-k-kurakkaṉ,* பெ. (n.) **சுறவத் திங்கள் பயிரைக் காக்கை** *(யாழ்ப்.);* watching of the crop raised in January.

[தை + குரக்கன்]

தைச்சங்கிரமம் *tai-c-caṅkiramam,* பெ. (n.) தைப்பொங்கல் பார்க்க; see *tai-p-poṅgal.*

[தை + சங்கிரமம்]

தைச்சங்கிராந்தி *tai-c-caṅkirāndi,* பெ. (n.) **சுறவ** (மகர) **ஓரையில் ஞாயிறு செல்லும் சுறவத் திங்களின் முதல் நாள்;** the entrance of the sun into capricorn.

[தை + சங்கிராந்தி]

தைசதம் *taiśadam,* பெ. (n.) **ஒளித் தொடர்பானது** *(சி.சி. 258, சிவாக்.);* that which is related to light. 2. **வலிமை** *(யாழ்.அக.);* vigour, strength. 3. **அரக்கக் குணம் மேலிட்ட செருக்கு;** sāṅkhya ahamkāra in which reyōguṇa is dominant. "மனமது தைசதத்தின் வந்து" *(சி.சி. 2, 60).* 4. நெய் *(சங்.அக.);* ghee.

தைத்தமுத்து *taitta-muttu,* பெ. (n.) **அணி கலன்களில், ஒப்பனையாகக் கற்கள் பதிப்பது போல் முத்துகளைப் பொற்கம்பியால், அமைப்பிடங்களில் வைத்துப் பொருத்தித் தைத்த முத்து;** string, beads in the ornaments where it required such beads are called taitta muttu. "கோத்த முத்து வட்டமும், அனுவட்டமும் - தைத்த முத்து சக்கத்தும், சப்பத்தியும் ஒப்பு முத்தும், குறுமுத்தும் *(தெ.க.தொ. 2.2, கல்.)*

தைத்தேயர் *taittēyar,* பெ. (n.) **அரக்கர்;** giant.

தைதம் *taitam,* பெ. (n.) **விரல்நுனி** *(யாழ்.அக.);* tip of the finger.

தைந்நீராடல் *tai-n-nīrādal,* பெ. (n.) **சுறவத் திங்களில் கன்னிப் பெண்களின் நீராடற் சடங்கு;** ceremonial ablution of maidens in the lunar month of tai. இன்ன பண்பினின் றைந் நீராடல் *(பரிபா. 11:134).*

[தை + நீர் + ஆடல்]

தைப்பான் *taippāṉ,* பெ. (n.) 1. **ஊசி;** needle. 2. **துன்னகாரன்;** tailor *(செ.அக.).*

[தை → தைப்பான்]

தைப்பிறப்பு *tai-p-piṟappu,* பெ. (n.) **தைப் பொங்கல்** பார்க்க; see *tai-p-poṅgal.*

[தை + பிறப்பு]

தைப்புமுத்து *taippu-muttu,* பெ (n.) முத்து வகை; a kind of pearls (S.I.I. ii, 34).

[தைப்பு + முத்து]

தைப்பூ *tai-p-pū,* பெ. (n.) உவர்ப்பு; the efflorescent salt found on the fuller's soil (சா.அக.).

தைப்பூசம் *tai-p-pūsam,* பெ. (n.) சுறவத் திங்களின் முழுநிலவோடு கூடிய கொடிற்றுத் திருவிழா; the full moon in the month of tai, a day of festival.

[தை + பூசம்]

தைப்பை *tai-p-pai,* பெ. (n.) சட்டை (அக.நி.); coat, jacket, as sewn.

[தை + பை]

தைப்பொங்கல் *tai-p-poṅgal,* பெ. (n.) சுறவ மாதப்பிறப்பன்று பொங்கலிட்டுக் கொண்டாடப்படும் தமிழர் திருவிழா; Tamizhar festival on the first day of tai, celebrated with poṅgal.

[தைஃ + பொங்கல்]



தையல் *taiyal,* பெ. (n.) 1. தைப்பு; sewing, stitching. 2. தையல்வேலை; needle work, embroidery. 3. ஒப்பனைத் துணி (இ.வ.); lace. 4. புனையப்படுவது (திருக்கோ. 60, கொளு.); that which is adorned, decorated. 5. கட்டழகு; symmeterical beauty or gracefulness. 6. பெண்; woman; "தையா றம்பலந் தின்றியோ" (கலித். 65, 13). தையலும் இல்லான் மையலும் இல்லான் (பழ.). 7. முகில்; cloud. "தானே மழைபொழி தையலுமாய் நிற்கும்" (திருமந். 10).

[தைஃ → தையல்]

தையல்பாகன் *taiyal-pāgan̲,* பெ. (n.) சிவன்; Sivan̲ as having Parvadi on his left. "தையல் பாகனுஞ் சதுமுகக் கடவுளுங் கூடி" (கம்பரா. அகலிகை. 19).

[தையல் + பாகன்]

தையல்போடு-தல் *taiyal-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) தைத்தல்; suturing (சா.அக.).

[தையல் + போடு]

தையலூசி *taiyalūsi,* பெ. (n.) துன்னூசி; sewing needle.

[தையல் + ஊசி. உள் → உளி → உசி → ஊசி]

தையற்காரக்குருவி *taiyar̲kāra-k-kuruvi,* பெ. (n.) ஒருவகைக் குருவி; a kind of sparrow.

[தையற்காரன் + குருவி]



தையற்காரன் *taiyar̲kāran̲,* பெ. (n.) 1. தைப்போன்; tailor. 2. பின்னல் வேலை செய்வோன் (வின்.); knitter.

ம. தையல்காரன்

[தையல் + காரன்]

தையற்பெட்டி *taiyar̲-peṭṭi,* பெ. (n.) தையற் கருவி அடங்கியபெட்டி (வின்.); work-basket, box containing articles for needle work (செ.அக.).

[தையல் + பெட்டி]

தையறம் *tai-y-ar̲am,* பெ. (n.) சுறவத் திங்களில் உண்டாகும் வறட்சி (யாழ்.அக.); drought in the month of tai (செ.அக.).

[தைஃ + அறம்]



தையல் குருவி

தையான் *taiyāṉ,* பெ. (n.) தையற்காரன்; tailor (செ.அக.).

[தை → தையலன் → தையான்]

தையெனல் *tai-y-eṉal,* பெ. (n.) இசைக்குறிப்பு; onom. expr. musical sound. "தையெனக் கோவலர் தனிக்குழ லிசை கேட்டு" (கலித். 118:13).

[தை[5] + எனல்]

தைலவருக்கச்சுருக்கம் *taila-varukka-c-curukkam,* பெ. (n.) நெய்ம வகையிற் கண்ட ஐந்துவகை நெய்மங்களையுஞ் செய்யும் முறையைப் பற்றிச் சுருக்கமாகக் கூறும், தேரையார் செய்த தமிழ் மருத்துவ நூல்; a scientific treatise compiled in Tamil by the reputed physician Teraiyēr in which the process of preparing the five kinds of medicated oils, their uses, dietic, rules and their vertues are given.

[தைலவருக்கம் + சுருக்கம்]

தைலா *tailā,* பெ. (n.) மரப்பெட்டி; wooden box.

தைவரல்[1] *taivaral,* பெ. (n.) வருடுகை; a shampoing softly pressing and stroking the limbs with hands.

தைவரல்[2] *taivaral,* பெ. (n.) கலைத்தொழில் எட்டனுள் குரலோசையேற்றுகை; harmonising with the key-note, one of eight kalai-t-toḻil.

[தை[5] + வரல்]

தைவா-தல் (தைவருதல்) *taivā-,* 6 செ.கு.வி. (v.i.) 1. வருடுதல்; to shampoo. "சீறடி கல்லா விளையர் மெல்லத் தைவர (சிறுபாண். 33). 2. தொட்டுச் சீர்ப்படுத்தல்; to touch, adjust. "ஊழுணி தைவரல் (தொல்.பொருள். 262). 3. தடவி வருதல்; to spread, extend, pervade "விசும்பு தைவரு வளியும்" (புறநா. 2) 4. மாசு நீக்குதல்; to wipe off, clean by dusting "தைவரு நவமணிச் சயிலம்" (பாரத. வாரணா. 4). 5. குரலோசை ஏற்றுதல் (சீவக. 65, உரை); to harmonise with the key-note.

[தை + வா]

தைவிளை *tai-viḷai,* பெ. (n.) தைவேளை[1] பார்க்க; see *tai-vēḷai* (சா.அக.).

[தைவேளை → தைவிளை]

தைவேளை[1] *tai-vēḷai,* பெ. (n.) 1. வளி பிடிப்பு; rheumatism. 2. பொன்னாங்கண்ணி; sessible plant. 3. தயிர்; curd. 4. பொருத்தம்; fitting (சா.அக.).

[தை + வேளை]

தைவேளை[2] *tai-vēḷai,* பெ. (n.) வேளைச் செடி; five leaved eleoma (சா.அக.).

ம. தைவேள

[தை + வேளை]

தொ

தொ *to,* த் என்ற மெய்யும் ஒ என்ற உயிரும் கூடிய கூட்டெழுத்து; the compound of 't' and 'o'.

[த் + ஒ]

தொக்கசிவரி *tokka-śivari,* பெ. (n.) வலது கால்; right leg (சா.அக.).

தொக்கட்டி *tokkaṭṭi,* பெ. (n.) தொக்கடி (வின்.) பார்க்க; see *tokkaḍi.*

[தொக்கடி → தொக்கட்டி]

தொக்கடதைலம் *tokkaḍa-tailam,* பெ. (n.) ஐந்தெண்ணெயோடு தில்லைப் பால், முருங்கைப்பட்டை, காட்டு வாகைப்பட்டை, மாவிலிங்கம்பட்டை, பெருங்காயம், இந்துப்பு, வெள்ளைப்பூண்டு, வசம்பு ஆகிய எட்டுச் சரக்குகளையும் பொடித்துப் போட்டுக் காய்ச்சும் நெய்மம் ; a name for the medicated oil prepared by boiling the mixture of the five oils. viz. Indian beech, castor, gingelly, margosa and poon with the following eight drugs the tiger's milk, powders of the barkes of moringa or drum stick tree, common sirisa and lingam tree and the paste of asofoetida rock salt and garlic and sweet flag (சா. அக).

தொக்கடம்[1] *tokkaḍam,* பெ. (n.). 1. மிதித்துத் துவைக்கை; pressing, pounding, treading down. 2. தொக்கடி[1] பார்க்க; see *tokkaḍi.*

தொக்கடம்[2] *tokkaḍam,* பெ. (n.). ஊதைநோய் கொண்டவர்களுக்கு உடம்பில் நெய்மத்தைப் பூசிக் கையால் அழுத்தியும் மேலேறி மிதித்தும் இதத்தை உண்டாக்குமோர்வகை மருத்துவ முறை; treatment by massage chiefly consisting in rubbing with medicated oil all over the body or the affected part of a person attacked with rheumatism neuralgia or other nervous affections then pressing and treading with the hands (சா. அக).

தொக்கடம்போடு-தல் *tokkaḍam-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. உடம்பு பிடித்தல்; to massage or press the limbs for relief. 2. கசக்கிச் சாறு பிழிதல்; to crush and extract juice, as from leaves; to express

[தொக்கடம் + போடு]

தொக்கடவு *tokkaḍavu,* பெ (n.) குறுக்குவழி (யாழ்.அக.); short cut

[தொக்கடை - தொக்கடவு]

தொக்கடி[1] *tokkaḍi,* பெ. (n.) 1. மரத்திற் பழுங்களைப் பொதிந்து வைக்கும் ஓலை மறைவு; a kind of ōla covering to protect fruits on the tree. 2. பழம் வைக்கும் சிறு கூடை; a small ōla-basket for fruits.

தொக்கடி[2] *tokkaḍi,* பெ. (n.) காவற்குடிசை; a small hut for watchers in a field.



தொக்கடை *tokkaḍai,* பெ. (n.) வறுமை (யாழ்ப்); poverty.

தெ. தொக்கட

தொக்கணம்[1] *tokkaṇam,* பெ. (n.) கையினால் குத்தி உடம்பைப் பிடிப்பது; a process consisting in stricking with fist and then pressing the body or its part of a person suffering from some oilment massage (சா. அக).

[தொக்கடம்[2] → தொக்கணம்]

தொக்கணம்[2] *tokkaṇam,* பெ. (n.) தொக்கடம்[1] (பதார்த்த. 1484) பார்க்க; see *tokkaḍam* (செ.அக).

[தொக்கடம்[1] → தொக்கணம்]

தொக்கம்[1] *tokkam,* பெ. (n.) செரிக்காமல் வயிற்றிற் சிக்கிக் கொள்ளும் பொருள் (வின்); undigested matter adhering to the bowls.

[தொங்கு → தொக்கு → தொக்கம்]

தொக்கம்[2] *tokkam,* பெ. (n.) *1. வயிற்றுச் சிக்கல்;* any hindrance to the passage of the contents of the stomach. *2.* குழந்தைகள் மண் சாம்பல் முதலியவற்றை உட்கொள்வதால் உண்டாகும் குடற்சிக்கல், வயிற்றுப்பிசம், வயிற்றுப் போக்கு முதலியவற்றையுண்டாக்கும் ஒரு வகை நோய்; a disease in children marked by distension of stomach, diarrhoea etc., due to the hindrance to the passage of the intestinal contents and by their swallowing or eating whatever they come across with as mud, ash etc., *(சா.அக).*

[தொங்கு → தொக்கு → தொக்கம். எலும்பு முதலியன செறியாமற்றொங்கிக் கொள்ளுதல்]

தொக்கம்[3] *tokkam,* பெ. (n.) *வழக்கு;* law-suit தொக்கக்காரன் *(யாழ். அக.).*

தொக்கயம் *tokkayam,* பெ. (n.) *கொடி;* flag. தொக்கயங்க டொக்கெனவே சூறையிட்டு *(மான்விடு. 96).*

தொக்கார் *tokkār,* பெ. (n.) *1. கூட்டத்தார்;* assembly, company *(w). 2. தோழர் (யாழ். அக.);* friends, adherents.

[தொக்கு[5] *→ தொக்கார்]*

தொக்கி *tokki,* பெ. (n.) *கடற்பச்சை (மலை.) பார்க்க;* see *kaḍarpaccai.*

தொக்கிடம் *tokkiḍam,* பெ. (n.). எண்ணெய் தேய்க்கை *(யாழ்.அக.);* inunction.

[தொக்கடம் → தொக்கிடம்]

தொக்கிந்திரியக்காட்சி *tokkintiriya-k-kāṭci,* பெ. (n.) ஓர் அளவை; இது தொடுதலால் அறிவது; a measurement understood by touch, contact as with objects of sense.

[தொக்கிந்திரியம் + காட்சி]

தொக்கிநில்-தல் *tokkinil-,* 14 செ.கு.வி. (v.i.) (பேச்சில்; எழுத்தில் அல்லது முகக்குறியில் நேரடியாக வெளிப்படுத்தப்படாத கேள்வி, பொருள், உணர்வு போன்றவை) மறைந்து நிற்றல்; to implicit. யார் நீ என்ற வினா கதவைத் திறந்தவரின் முகத்தில் தொக்கி நின்றது. எங்கு போயிருந்தாய் என்றஅவருடைய வினாவில் சினம் தொக்கி நின்றது.

[தொக்கு → தொக்கி + நில்]

தொக்கு[1] *tokku,* பெ. (n.) *1. பொருட்டின்மை (அற்பம்);* small matter, trifle. அது தொக்காய்ப் போகாது *(வின்.) 2. எளிமை;* ease. சொத்துகளைத் தொக்கிலே அடித்துக் கொண்டு போனான். *3. இளப்பமானவன்;* butt of ridicule. அவன்தான் எல்லார்க்குந் தொக்கு *(இ.வ.). 4. நேர்மை;* attractiveness, neatness. "வரித்தோற் கச்சை தொக்காக வரிந்திறுக்கி" *(குற்றா. குற. 29).*

தொக்கு[2] *tokku,* பெ (n.) துவையல் வகை *(இவ.);* chutney, a kind of strong relish. மாங்காய்த் தொக்கு, தக்காளித் தொக்கு.

தொக்கு[3] *tokku,* பெ. (n.). தொடுவுணர்ச்சியறிவு; the sense of touch. "வாயுவிற் றொக்கு மூறெனும் விகாரமும்" *(மணிமே. 27: 215). 2. உடம்புத் தோல் (சூடா.);* skin, cuticle, surface of the body. "அரிணத் தொக்கு" *(பாரத. இராச. 105). 3. மரப்பட்டை (தைலவ.தைல.);* bark of a tree. *4. கனியின் தோல்;* rind. "தொக்குக் கழிந்த சுளைபோலே" *(ஈடு. 10, 7, 5). 5. ஆடை;* cloth, raiment. *6. பற்று;* stake, material concern. அக்குத் தொக்கில்லாதவன் *(செ.அக).*

ம. தொக்கு

தொக்கு[4] *tokku,* பெ. (n.) ஐம்புலன்களில் ஒன்றான மெய்; one of the five sense organs, skin *(சா.அக).*

மறுவ. துவக்கு

தொக்கு[5] *tokku,* பெ. (n.) நட்பு; friendship.

தொக்குசை *tokkusai,* பெ. (n.) *கல்லு பயிற்றங் கொடி;* creeper of stone pulse *(சா.அக).*

தொக்குத்தொக்கெனல் *tokku-t-tokkeṉal,* பெ. (n.) *1. ஈரடுக்கொலிக் குறிப்பு (யாழ்.அக.);* onom. expr. of creaking noise, as of shoes. *2.* தள்ளாடற் குறிப்பு; expr. of rocking unsteady motion, as of a corpulent person in walking. தொக்குத்தொக்கென்று நடக்கிறான்.

[தொக்கு + தொக்கு + எனல்]

தொக்குதகம் *tokkudagam,* பெ. (n.) நிணநீர்; lymph (சா.அக.).

தொக்குநில்-தல் (தொக்குநிற்றல்) *tokku-nil-,* 14 செ.குவி. (v.i.) வெளிப்படாது நிற்றல் (குறள், 141, உரை); to be understood, as a particle (செ.அக.).

[தொக்கு + நில்-.]

தொக்கை[1] *tokkai,* பெ. (n.) கம்பளத்தாருள் ஒரு வகையான்; a subject of kambaḷattār.

தொக்கை[2] *tokkai,* பெ. (n.) பருமன், தடிமன் (யாழ்ப்.); fat. ஆள் தொக்கையாயிருப்பான் (உ.வ.).

தொக்கைக்குன்றி[1] *tokkai-k-kuṉṟi,* பெ. (n.) அறுவடையில் இழப்பு; loss or waste in cultivation (S.I.I.v, 499).

[தொக்கை + குன்றி]

தொக்கைக்குன்றி[2] *tokkai-k-kuṉṟi,* பெ. (n.) நிலங்களுக்கு இடும் பசுந்தாள் சாணம் ஆகியவற்றைச் சேர்க்கும் பொது இடத்துக்கு ஊரவையார் பெறும் வரி; tax collected by the village committee, for the place, where the fertilizers are prepared.

தொகக்காரன் *toga-k-kāraṉ,* பெ. (n.) மதிப்பிடுவோன் (வின்.); one who estimates.

[தொகை + காரன். தொகை → தொக (கொ.வ.)]

தொகம்பார்-த்தல் *togam-pār-,* 4 செ.குன்றாவி. (v.t.) மதிப்பிடுதல் (வின்.); to estimate, value, as the produce of a field.

[தொகம் + பார்-.]

தொகம் *togam,* பெ. (n.) மதிப்பு (வின்.); estimate, total.

தொகாநிலை *togā-nilai,* பெ. (n.). தொகாநிலைத் தொடர் (நன். 152, உரை) பார்க்க; see *togānilai-t-toḍar.*

[தொகு + ஆ + நிலை. 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தொகாநிலைத்தொடர் *togā-nilai-t-toḍar,* பெ. (n.). முற்றுத்தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத்தொடர், எழுவாய்த் தொடர், விளித்தொடர், வேற்றுமைத்தொடர், இடைத்தொடர், உரித்தொடர், அடுக்குத் தொடர் என்ற ஒன்பது வகைத்தாய் இடையில் வேற்றுமையுருபு முதலியன தொக்கு நில்லாமலும் ஒருமொழித்தன்மைப் படாமலுமுள்ள தொடர்சொற்கள் (நன். 152, உரை); a phrase, clause or sentence of two words, as a combination of words having no ellipsis between them of nine kinds.

[தொகு + ஆ + நிலை + தொடர். 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தொகு[1]**-தல்** *togu-,* 4 செ. கு. வி. (v.i.). 1. கூடுதல்; to assemble, collect, accumulate. "பலர் தொகுபுரைக்கும்" (மணிமே. 2:35). 2. ஒன்றாதல்; to form, as a whole or lump; to aggregate. 3. அடுக்கி வருதல்; to appear repeatedly. "உம்மை தொக்கவெனாவென் கிளவியும்" (தொல். சொல். 291). 4. மொத்தமாதல் ; to be summed up, totalled; to aggregate. 5. நெருங்குதல் (யாழ்.அக.); to be compact, crowded. 6. மறைதல்; to be elided, as a particle in the combination of words. "மெய்யுருபு தொகாஅ விறுதியான" (தொல். சொல். 105). 7. சுருங்குதல்; to be contracted. "தொகுபீலி கோலினர்" (கம்பரா. வனம்பு. 4). 8. ஒடுங்குதல்; to merge. "அசுத்த தத்துவங்க டொகும் முதலில்" (கோயிற்பு. இரணியவன்ம. 2). 9. குட்டையாதல்; to be shortened. "தொகுசரணந் தண்பார் தாங்க" (கோயிற்பு. நடராச. 29). 10 வீணாதல்; to be of no avail; to fail of its purpose. "தொடர் நீப்பிற் றொகுமிவ ணலம் (கலித். 286).

ம. தொகுக

தொகு[2]**-தல்** *togu-,* 4 செ. கு. வி. (v.i.). 1. ஒத்தல்; to conform, agree. "உடன் மூவர் சொற்றொக்க" (குறள், 589). 2. உள்ளடங்குதல்; to be included. "தோன்றன் மலர்மணம் போற்றொக்கு (சி. போ. 7,3).

தொகு[3]**-த்தல்** *togu-,* 4 செகுவி. (v.i.) 1. திரட்டிக் கூட்டுதல்; to cause to assemble; to bring together; to gather. "புத்தகமே சாலத் தொகுத்தும்" (நாலடி, 318). 2. எண் கூட்டுதல்; to sum up; to total, to add, "இரண்டொடுந் தொகைஇ" (தொல். சொல். 112). 3. சொல்லின் முதலிடை இறுதியில் எழுத்துகளை நீக்குதல்; to omit, elide, as a letter or letters in the beginning, middle or end

of a word. "தொகுக்கும்வழித் தொகுத்தலும்" (தொல். சொல். 403). 4. ஈட்டுதல் (யாழ்அக.); to earn. 5. செய்தல்; to do, make. "விருந்து துனைந்து தொகுத்தனள்" (காஞ்சிப்பு. திருநகரேற். 26). 6. சுருக்குதல்; to abridge, summarise. "தொகுத்துக் கூறல்" (தொல்.பொருள். 666).

ம. தொகுக

தொகு⁴-த்தல் *togu-*, 4 செ.குன்றாவி. (v.t.) மதிப்பிடுதல் (யாழ்அக.); to estimate, value.

தொகுத்தமொழியின்வகுத்தனகோடல் *togutta-moliyin-vaguttana-kōdal,* பெ (n.). சொல்லின்முடிவிலப்பொருள்முடித்தல் (மாறனலங் 25) பார்க்க; see *sollin-mudivilāp-porul-mudittal.* 2. பலவாக வகை செய்து கூறியதனை ஒரு சொல்லால் தொகுத்துக் கூறும் உத்தி (தொல். பொருள். 666); the literary device of stating by a general term what is described in detail under various heads.

தொகுத்தல் *toguttal,* பெ. (n.) 1. நூல் யாப்பு நான்கனுள் விரிந்த நூலைச் சுருக்கிக் கூறுவது (தொல். பொருள். 652); synopsis, one of four nūl yāppu. 2. சொல் அல்லது அசை கெடுதலாகிய செய்யுள் வேறுபாடு; elision of a syllable or syllables in words for the sake of metre. "தொகுக்கும் வழித் தொகுத்தலும்" (தொல். சொல். 403).

தொகுத்துக்கூறல் *toguttu-k-kūral,* பெ. (n.). முப்பத்திரண்டு உத்திகளுள் நூற் செய்தியை ஓரிடத்தே சுருக்கிக் கூறுவது (தொல். பொருள். 666); summarising, abridgement, one of 32 utti. q.v.

[தொகுத்து + கூறல்]

தொகுத்துச்சுட்டல் *tokkuttu-c-cuttal,* பெ. (n.). தொகுத்துக்கூறல் (நன். 14) பார்க்க; see *toguttu-k-kūral.*

[தொகுத்து + சுட்டல்]

தொகுத்துரை *togu-t-turai,* பெ. (n.) பொழிப்புரை (நன். 21); free rendering of the text (செஅக.).

[தொகுத்து + உரை]

தொகுதி¹ *togudi,* பெ. (n.) 1. கூட்டம்; assembly, collection, aggregation. "வினையின் றொகுதி யொறுத்தெனை யாண்டுகொள்" (திருவாச. 6, 6). 2. வரிசை; series, class, as of persons or things. "வாம்பரித் தொகுதி" (கந்தபு. வச்சிர. 56). 3. சவை (பிங்.); society. 4. சேர்க்கை; company, association. "வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்" (தொல். சொல். 33 தெய்வச். உரை.). 5. குலம்; genus. 6. பொத்தகப் பகுதி; volume, as of a journal. இது பத்தாவது தொகுதி. 7. மந்தை; flock, herd, swarm. 8. பகுதி; section, as of a book. "மக்கட்பெயர்த் தொகுதி (சூடா.). 9. உருபு முதலியவற்றின் மறைவு; elision. "தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்" (தொல். எழுத்து. 132, உரை). 10. மொத்தவெண்; aggregate, total. "உம்மை யெண்ணு மெனவெ னென்னுந், தம்வயிற் றொகுதி கடப்பாடிலவே" (தொல். சொல். 289).

[தொகு → தொகுதி]

தொகுதி² *togudi,* பெ. (n.) மக்களின் படி நிகராளிகளாகச் சட்ட மன்றம் நாடாளு மன்றம் ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கை உள்ள மக்கள் வாழும் நாட்டுப் பகுதி; an electoral division of voters; constitutency. வரும் சட்டமன்றத் தேர்தலில் அனைத்துத் தொகுதிகளும் தம் கட்சி போட்டியிடுமெனத் தலைவர் அறிவித்தார்.

[தொகு → தொகுதி]

தொகுதி³ *togudi,* பெ. (n.) கீழ் வாயிலக்கத்தில் கோட்டுக்குக் மேல் உள்ள எண்; numerator. 3/4 என்பதில் 3 தொகுதி.

[தொகு → தொகுதி]

தொகுதிப்பெயர் *togudi-p-peyar,* பெ. (n.) 1. குழுவைக் குறிக்கும் பெயர்; noun of multitude, collective noun. 2. குழூஉக்குறிப் பெயர் (யாழ்அக.); slang, cant, conventional name. 3. மொத்தவெண்; aggrigate, total. "பன்னிருகையு மென்புழியும் தொகுதிப்பெயர் வினையொடு தொடராது கையென்பதனோ டொட்டி நிற்றலின்" (தொல். சொல். 33, சேனா.).

[தொகுதி + பெயர்]

தொகுதியெண் *toguti-y-en,* பெ. (n.) மேல் வாயிலக்கம்; numerator.

[தொகுதி + எண்]

தொகுதியொருமை *togudi-y-orumai*, பெ (n.). குலத்தினை (சாதி) உணர்த்துதற்கு வரும் ஒருமை; singular noun denoting a genus, class or group. "அதன் பொருள் என்பது தொகுதி யொருமை யாதலின்" (நன். 297, உரை). எறும்புப் புற்று, பாம்புப் பண்ணை

[தொகுதி + ஒருமை]

தொகுநிலைத்தொடர்மொழி *togu-nilai-t-todar-moli*, பெ. (n.) வேற்றுமையுருபு முதலியன நடுவே தொக்கு நிற்கச் சொற்கள் தொடர்ந்து வருவது; a phrase, clause or sentence of two words having ellipsis between them.

[தொகுநிலை + தொடர்மொழி]

தொகுப்பு[1] *toguppu*, பெ. (n.) 1. தொகை (வின்.); sum, total. 2. எல்லை; boundary. 3. கூட்டம்; multitude, crowd. "தொகுப்புறு சிறுவர்" (அருட்பா, பிள்ளைப் பெரு. 32).

[தொகு → தொகுப்பு]

தொகுப்பு[2] *toguppu*, பெ. (n.) 1. ஒன்றாகத் தொகுக்கப்பட்டது அல்லது மொத்தமாகச் சேர்க்கப்பட்டது; தொகுதி; collection, compilation. பாவாணருடைய தொகுப்பில் பல அரிய நூல்களுள்ளன.

தொகுப்பூதியப்பணியாளர் *togupputiya-p-paniyalar*, பெ. (n.) ஒட்டுமொத்தச் சம்பளத்தில் பணியாற்றும் பணியாளர்; person appointed in consolidated pay.

[தொகுப்பூதியம் + பணியாளர்]

தொகுப்பூதியம் *togupputiyam*, பெ. (n.) அரசுப் பணியில் சில வகைப் பணியாளருக்கு அடிப்படைச் சம்பளமோ அகவிலைப் படியோ இல்லாமல் மொத்தமாக வழங்கப் படும் மாதச் சம்பளம்; consolidated pay without the distinction of basic pay, allowance, etc. in govt. services.

[தொகுப்பு+ ஊதியம்]

தொகுபு *togubu*, வி.எ. (adv.) கூடி; combine.

[தொகுப்பு → தொகுபு]

தொகுரு *toguru*, பெ (n.) துவர்ப்பு; astringence.

[துவர் → துகர் → துகரு → தொகரு → தொகுரு (கொ.வ.)]

துவர்ப்பு பார்க்க: see *tuvarppu.*

தொகை *togai*, பெ. (n.) 1. கூட்டம்; assembly, collection. "உன்னடியவர் தொகை நடுவே" (திருவாச. 44. 1). 2. சேர்க்கை; association. "உயர்திணைத் தொகைவயின்" (தொல். சொல். 90, இளம்.). 3. விலங்கு முதலியவற்றின் திரள்; flock, herd, swarm, school. "புள்ளின் றொகையொப்ப" (பு. வெ. 6, 20) 4. கொத்து; bunch. "தொகைப்பிச்சம்" (கம்பரா. எதிர்கோட். 7) 5. மொத்தம்; sum, amount, total. 6. பணம்; property, stock, money. 7. எண்; number. "ஏயினாகிய வெண்ணி னிறுதியும், யாவயின் வரினுந் தொகையின் றியலா" (தொல். சொல். 292). 8. கணக்கு; calculation, account, measure. "தொகையி லன்பினால்" (கம்பரா. கிளைகண்டு. 102). 9. கூட்டல்; addition. 10. தொகுத்துக் கூறுகை (நன். 50); summary, epitome, substance of a narrative, abstract of a subject. 11. தொகைச்சூத்திரம் பார்க்க; see *togai-c-cuttiram*. 12. உருபு முதலியன மறைகை; omission, as of an inflectional sign in combination of words. "ஈற்றுநின் றியலுந் தொகைவயிற் பிரிந்தே" (தொல். சொல். 78, இளம்பூ.) 13. வேற்றுமைத்தொகை, வினைத் தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்று அறுவகையாய் ஒரு சொன்னீர்மைப் பட்ட தொடர்ச்சொல்; compound word of six kinds. "எல்லாத் தொகையு மொருசொன் னடைய" (தொல். சொல். 420). 14. ஆசிரியம் (திவா.); a class of verse. 15. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் நூல்கள்; ancient anthologies, numbering eight. அது தொகைகளினுங் கீழ்க்கணக்கினும் இம்முறை மயங்கிவரக் கோத்தவாறு காண்க. (தொல். பொருள். 5, உரை). 16. ஐம்புலன்களின் கூட்டத்தாலாகிய ஆதன் (மணிமே. 30:192); the

individual soul, as a product of aim-pulaṉ. *17. புலவர் கழகம்;* academy. "மதுரைத் தொகை யாக்கினானும்" (தேவா. 1179,11). 18. கலந்திருப்பதை இனம் இனமாகப் பிரித்தெடுக்கை (வின்.); assortment.

[துல் → துள் → தொள் → தொழு = மாட்டு மந்தை. தொழு → தொகு. ழ - க, போலித் திரிபு.

ஒ.நோ. மழவு → மகவு. முழை → முகை. தொகு → தொகுப்பு = கூட்டம், தொகை. தொகு → தொகை (வே.க. 127-130)]

ஐந்தும் அடக்கடக் கென்பர் அறிவிலார்
ஐந்தும் அடக்குதற் கமரரும் அங்கிலை
ஐந்தும் அடக்கிடில் அசேதனமாம் என்றிட்டு
ஐந்து மடக்கி யமர்ந்திருந் தாரே (திருமந்.)

தொகைக்காரன் *togai-k-kāraṉ,* பெ. (n.) செல்வன்; moneyed man; rich man.

[தொகை + காரன்]

தொகைக்குடிநீர் *togai-k-kuḍinīr,* பெ. (n.) சரக்குகளின் தொகையைக் கொண்டு பெயரிடப்பட்ட கருக்கு வகை ; a name given to decoction according to the prescribed number of drugs.

[தொகை + குடிநீர்]

தொகைக்குறிப்புச்சொல் *togai-k-kuṟippu-c-col,* பெ. (n.) குறிப்பினால் தொகை கொண்ட பொருளை உணர்த்தும் எண்ணுப்பெயர் (நன். 269); numeral noun suggesting the intended object by contest.

[தொகை + குறிப்பு + சொல்]

தொகைகட்டு[1]-தல் *togai-kaṭṭu-,* 5 செகுவி. (v.i.) 1. மொத்தமிடுதல்; to sum up; to make out the total; to cast up. 2. கணக்கு முடிவு செய்து பணம் கொடுத்தல்; to deliver up; to make over, as money; to pay, as into the treasury; to make a final payment (W).

[தொகை + கட்டு-.]

தொகைகட்டு[2]-தல் *togai-kaṭṭu-,* 5 செகுன்றாவி (v.t.) முடித்தல் (w); to finish, conclude, bring to an end.

[தொகை + கட்டு-.]

தொகைகாட்டு-தல் *togai-kāṭṭu,* 5 செ.கு.வி. (v.i.) 1. கணக்கு ஒப்புவித்தல்; to give a written account. 2. கணக்கை மிகுதியாகக் காட்டுதல்; to make a sum appear large, to magnify.

[தொகை + காட்டு-.]

தொகைச்சூத்திரம் *togai-c-cūttiram,* பெ. (n.) குறிப்பிட்ட செய்தியின் பகுப்பை எண்ணிட்டுக் காட்டும் நூற்பா (நன். 20); sutra enumerating the classification of a topic.

[தொகை + சூத்திரம்]

Skt. sūtra → த. சூத்திரம்

தொகைதை-த்தல் *togai-tai-,* 4 செ.கு.வி. (v.i.) கணக்கு முடித்தல் (இ.வ.); to cast up; to close an account.

[தொகை + தை-.]

தொகைநிலை *togai-nilai,* பெ. (n.) 1. திரளாக நிற்கை; assembling, forming a class. 2. சுருங்கி நிற்கை (வின்.); contraction. 3. தொகைநிலைத் தொடர் (நன். 361) பார்க்க; see *togainilai-t-toḍar.* 4. வென்ற வேந்தன் தன் படைகட்குச் சிறப்புச் செய்யுமாறு அதனை ஒருங்கு தொகுக்கும் உழிஞைத் துறை (தொல். பொருள். 68); theme of a victorious king bringing his armies together to honour them. 5. போரில் இருதிறத்தாரும் ஒருங்கொழிந்ததைக் கூறும் புறத்துறை (பு. வெ. 7, 28); theme of the contending kings destroying each other on the battle field. 6. பகைவேந்தரெல்லாம் ஒருங்கு பணிதலைக் கூறும் புறத்துறை (பு. வெ. 6, 32); theme of the simultaneous surrender of hostile kings at the feet of a victorious king. 7. தொகைநிலைச் செய்யுள் பார்க்க; see *togai-nilai-c-ceyyuḷ.*

[தொகை + நிலை. தொகு → தொகை]

தொகைநிலைச்செய்யுள் *togai-nilai-c-ceyyuḷ,* பெ. (n.) ஒருவராலேனும் பலராலேனும் பாடப்பட்டனவாய்ப் பொருள் இடம் காலம் தொழில் என்பன பற்றியும் பாட்டு அளவு என்பன பற்றியும் ஒருங்கு திரட்டப்பட்ட செய்யுள் நூல் (தண்டி.4); anthology of poems collected on certain definite principles opp. to toḍar-nilai-c-ceyyuḷ.

[தொகை + நிலை + செய்யுள்]

ஒருவராலுரைக்கப்பட்டது - திருக்குறள்
பலரால் தொகுக்கப்பட்டது -
அகநானூறென்னும் நெடுந்தொகை
பொருளாற் றொகுத்தது - புறநானூறு
இடத்தாற் றொகுத்தது - களவழி நாற்பது
காலத்தாற் றொகுத்தது - கார் நாற்பது
தொழிலாற் றொகுத்தது - ஐந்திணை
பாட்டாற் றொகுத்தது - கலித்தொகை,
அளவாற் றொகுத்தது - குறுந்தொகை

தொகைநிலைத்தொடர் *togai-nilai-todar,* பெ. (n.) தொகை,13 *(நன். 362, உரை)* பார்க்க; see *togai,13.*

[தொகை + நிலை + தொடர்]

தொகைநிலையுருவகம் *togai-nilai-y-uruvagam,* பெ. (n.) **தொகையுருவகம்** *(யாழ்.அக.)* பார்க்க; see *togai-y-uruvagam.*

[தொகை + நிலை + உருவகம்]

தொகைநூல் *togai-nūl,* பெ. (n.) **தொகை நிலைச்செய்யுள்** பார்க்க; see *togai-nilai-c-ceyyuḷ.*

[தொகை + நூல்]

தொகைப்படுத்து[1]-தல் *togai-p-paḍuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. மொத்தமிடுதல் *(உ.வ.);* to sum up. 2. பிரித்துக்காட்டுதல் *(வின்.);* to reduce under various heads.

[தொகை + படுத்து-.]

தொகைப்படுத்து[2]-தல் *togai-p-paḍuttu-,* 5 செ.கு.வி. (v.i) பெரும் பொருள் திரட்டுதல் *(வின்.);* to make a large sum, amass wealth.

[தொகை + படுத்து-.]

தொகைப்பிசகு *togai-p-piśagu,* பெ. (n.) 1. *கணக்குத் தவறு;* error in reckoning an account. 2. *தவறு;* mistake, blunder.

[தொகை + பிசகு]

தொகைப்பொருள் *togai-p-poruḷ,* பெ. (n.) 1. *பிண்டப் பொருள்;* gist, summary. "இச்சூத்திரத்து அதிகரணங்காற் போந்த தொகைப் பொருளாவது" *(சி. போ. பா. 1, 3, பக். 53, சுவாமிநா.).* 2. தொகைநிலைத் தொடரின் பொருள் *(நன். 370);* meaning of a compound word.

[தொகை + பொருள்]

தொகைபூட்டு-தல் *togai-pūṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. *கணக்குச் சரிக்கட்டுதல்;* to balance accounts; to strike a balance. 2. *கணக்கு மொத்தங் கட்டுதல்;* to make out the grand total of an account.

[தொகை + பூட்டு-.]

தொகைமொழி *togai-moḻi,* பெ. (n.) பொருளணி வகை; a figure of speech. நெஞ்சினிற் பொருளை நிரப்ப வேறொரு செஞ்சொலிற் காட்டுந் திறமே தொகைமொழி *(வீரசோ. 151, உரை.).*

எ-டு.

வேட்டொழிவ தல்லால் விளைஞர் விளைவயலுட்
டோட்ட கடைஞர் சுடுநந்து - மோட்டாமை
வன்புறத்து மீதுடைக்கும் வச்சத் திளங்கோவை
யின்புறுத்த வல்லாமோ யாம்.

[தொகை + மொழி]

தொகைமோசம் *togai-mōśam,* பெ. (n.) 1. தொகைப்பிசகு பார்க்க; see *togai-p-piśagu.* 2. பொருளிழப்பு; loss of money.

[தொகை + மோசம்]

Skt. mōṣa → த. மோசம்

தொகையகராதி *togai-y-agarādi,* பெ. (n.) 1. *சதுரகராதியுள் தொகையுடைப் பொருளைக் காட்டும் பகுதி;* a section of Caduragarādi being a catalogue of the categories of different branches of knowledge. 2. *எண்ணுப் பெயர் சார்ந்த தொகைச் சொற்களின் பொருள் விளக்கும் அகரமுதலி;* a dictionary of numerical terms.

[தொகை + அகராதி]

தொகையடியார் *togai-y-aḍiyār,* பெ. (n.) *சிவனடியார்களுள் ஒன்பது பிரிவினராயுள்ள கூட்டவடியார்;* the nine group of Saiva saints.

[தொகை + அடியார்]

சிவனடியார்களின் ஒன்பது பிரிவுகளாவன:

தில்லைவாழ் அந்தணர், பொய்யடிமை யில்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்

பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலுமடிச்சார்ந்தார்.

தொகையல்[1] *togaiyal*, பெ. (n.) **துவையல்** *(உ.வ.)*; chutney, a kind of strong relish.

[துவையல் → தொவையல் (கொ.வ.)]

தொகையல்[2] *togaiyal*, பெ. (n.) **தொவச்சல்** பார்க்க; see *tovaccal*.

தொகையாக்கு-தல் *togai-y-ākku-*, 8 செ.குன்றாவி. (v.t.) **தொகைப்படுத்து-தல்** *(யாழ்அக.)* பார்க்க; see *togai-p-paḍuttu-*.

[தொகு → தொகை. தொகை + ஆக்கு-.]

தொகையிறக்கு-தல் *togai-y-iṟakku-*, 6 செ.குன்றாவி. (v.t.) *1.* **தொகைப்படுத்து-தல்** *(யாழ்அக.)* பார்க்க; see *togai-p-paḍuttu-*. *2.* **சிறிது சிறிதாகக் கொடுத்துக் கடனைக் குறைத்தல்**; to lessen one's liability gradually, as by paying in instalments.

[தொகு → தொகை. தொகை + இறக்கு-.]

தொகையுருவகம் *togai-y-uruvagam*, பெ. (n.) **ஆகிய என்ற உருபு தொக்குவரும் உருவகம்**; abbreviated metaphor, in which the word of correlation is understood. *மிக்கவுவமை விரியா துரையிற் றொக்கு நிற்பது தொகையுரு வகமே (வீரசோ. 159, உரை.).*

[தொக்கு → தொகு → தொகை. தொகை + உருவகம்]

(எ-டு)

அங்கை மலரு மடித்தளிருங் கண்வண்டும்
கொங்கை முகிழுங் குழற்காரும் தங்கியதோர்
மாதர்க் கொடியுளதா னண்பா! வதற்கெழுந்த
காதற் குளதோ கரை

தொகையுவமம் *togai-y-uvamam*, பெ. (n.) **பொதுத்தன்மை வெளிப்பட்டு வாராமல் ஆராய்ந்துணரும்படி மறைந்து நிற்கும் உவமை** *(தண்டி. 30)*; a simile where the point of comparison is not brought out, but is implied, opp. to viri-y-uvamam.

[தொக்கு → தொகு → தொகை. தொகை + உவமம்]

(எ-டு)

தாமரை வாண்முகத்துத் தண்டரளம்
போன்முறுவல்
காமரு வேய்புரைதோட் காரிகையீர்!
தேமருவும்
பூங்குழலின் வாசப் பொறைசுமந்து
நேர்ந்ததோ
பாங்குழலுந் தென்றற் பரிசு

தொகையேற்று-தல் *togai-y-ēṟṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) *1.* **சிறுகச் சிறுகக் கொடுத்துக் கடனேற்றுதல்**; to increase the debt by frequently lending small sums. *2.* **எண் கூட்டுதல்**; to add up figures. *3.* **கணக்குப் பதிதல்**; to post up accounts.

[தொகை + ஏற்று-.]

தொகைவிரி *togai-viri*, பெ. (n.) **நூல்யாப்பு நான்கனுள் விரித்துக் கூறியதனைத் தொகுத்தும் தொகுத்துக் கூறியதனை விரித்தும் கூறும் முறை** *(நன். 50)*; the method adopted in writing a treatise by summarising the facts elaborately treated by others and elaborating the facts briefly treated by them, one of four nūl-yāppu.

[தொகு → தொகை. தொகை + விரி]

தொகைவிரியுருவகம் *togai-viri-y-uruvagam*, பெ. (n.) **ஆகிய, ஆக என்னும் உருவக உருபுச் சொற்கள் தொக்கும் விரிந்தும் நிற்பது** *(தண்டி. 37)*; metaphor in which the words of correlation are understood or marked.

எ-டு

வையந் தகளியாக வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று

தொங்கட்டம் *toṅgaṭṭam*, பெ. (n.) *1.* **உடம்பின் ஓர் உறுப்பில் தொங்கும் பாகம், நஞ்சுக் கொடி முதலியன**; that which is attached to or hanging in an organ as umbilical cord etc. *2.* **குடற்றொங்கட்டம்**; measentary.

[தொங்கு → தொங்கட்டம்]

தொங்கட்டான் *toṅgaṭṭāṉ,* பெ. (n.) *1.* **தொங்கலாயுள்ள அணிவகை** (j); any ornament that hangs; a pendant. *2.* **உடையைத் தளர்வாகக் கட்டுகை;** a mode of tying cloth loosely. *3.* **கடிகார எடை;** pendulam of a clock.

[தொங்கு → தொங்கட்டம் → தொங்கட்டான்]

தொங்கணி *toṅgaṇi,* பெ. (n.) **தொங்கலணி** *(வின்.);* pendent ornament.

[தொங்கு + அணி]

தொங்கல் *toṅgal,* பெ. (n.) *1.* **தொங்குகை;** hanging. "தொங்கல்வார் குழல்" *(சீவக. 661)* *2.* **தொங்கற்பொருள்** (திருக்கோ.34, உரை); anything pendent, hangings. *3.* **அணிகலத் தொங்கல்** *(திவா.);* pendent part of an ornament. *4.* **காதணிவகை** *(யாழ்.அக.);* an ear-ornament. *5.* **தொங்கவிட்டுள்ள ஆடை முந்தி** *(வின்.);* outer end of woman's cloth either hanging or brought round the neck ; end of a man's cloth thrown over the shoulder. *6.* **அணியழகுப் பதாகைகள், தோரணங்கள்;** decorative hangings, as of cloth; festoons. "தொங்கலும் குடையும்" *(கம்பரா. எழுச்சி. 78).* *7.* **பருத்த பூமாலை;** thick garland. "தோமரமாகத் தொங்கல் சிந்துபு மயங்கினாரே" *(சீவக. 2656).* *8.* **ஐம்பாற் கூந்தலுள் ஒருவகை** *(பிங்.);* a mode of dressing woman's hair, one of aim-pāl. *9.* **ஆண்மக்களின் மயிர்** *(திவா.);* man's hair. *10.* **மயிற்றோகை** *(திவா.);* tail of a pea-cock. *11.* **மயிற்குஞ்சம்** *(பிங்.);* pea-cock's feathers, as arranged for a fan or a parasol. *12.* **வெண் குடை** *(திவா.);* white umbrella, as an emblem of royalty. "மாமதி தொங்கலாக" *(திருப்பு. 871).* *13.* **சேறாடி குடை சாமரம் முதலிய விருது;** insignia of royalty. "கொற்றக் குடையும் வடிவுடைய தொங்கலுஞ் சூழ" *(ஆதியுலா. 57).* *14.* **பிணத்தை நீராட்டக் கொண்டு வரும் நீர்க்குடங்களின் மீது பிடிக்கப்படும் துணி;** cloth spread above the water-pots while carrying water to wash a corpse. "சின்னமுதத் தொங்கல் வந்திட" *(சி. சி. 2. 95).* *15.* **வயிற்றுத் தங்கல்;** any undigested matter sticking to the bowels. *16.* **விழக்கூடிய நிலையில் ஒட்டிநிற்கை** *(யாழ்ப்.);* anything sticking and hanging ready to fall. *17.* **முனை;** projection, cape, headland. *18.* **மூலை;** street corner, end of a street, extremity. "தொங்கலுக்குத் தொங்கல் *(வின்.).* *19.* **பெண்களின் மேலாக்குச் சீலை** *(யாழ்.அக.);* cloth worn as upper garment by women. *20.* **முந்துகை** *(யாழ்.அக.);* going in advance. *21.* **அணிகலன்களின் கடைப்பூட்டு** *(யாழ்.அக.);* clasp of an ornament. *22.* **குறை;** shortage. முப்பது உருவா தொங்கல். *23.* **களை கணின்மை (ஆதரவின்மை);** helplessness. அவர்பாடு தொங்கல் தான் *(உ.வ).* *24.* **ஒன்றைப் பற்றியிருக்குந் தன்மை;** dependence.

ம. தொங்கல்; க. தொங்கல்; து. தொங்கெ, தொங்கெலு; பட. தொங்கலு

[தொங்கு → தொங்கல். 'அல்' தொ.பெ.ஈறு.]

தொங்கல்கழிச்சல் *toṅgal-kaḻiccal,* பெ. (n.). **குழந்தைகளுக்குண்டாகும் ஒருவகைக் கழிச்சல் நோய்;** a kind of diarhea in childhood *(சா. அக.).*

[தொங்கல் + கழிச்சல்]

தொங்கல்போடு-தல் *toṅgal-pōḍu-,* 20 செ.குன்றாவி. (v.t.) **மேலாக்கிடுதல்;** to wear a cloth as upper garment.

[தொங்கல் + போடு-.]

தொங்கல்விட்டம் *toṅgal-viṭṭam,* பெ. (n.) **ஒப்பனைக் குஞ்சம்** *(இவ.);* decorative hangings.

[தொங்கல் + விட்டம்]

தொங்கல்விடு[1]-தல் *toṅgal-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) **தொங்கல்போடு-தல் பார்க்க;** see *toṅgal-pōḍu-.*

[தொங்கல் + விடு-.]

தொங்கல்விடு²-தல் *tongal-viḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) *கருப்பை, பிடுக்கு, பெண்முலை முதலியன தளர்ந்து கீழ் நோக்குதல்;* getting loose and hanging downwards as womb, scrotum, female breast etc., *(சா.அக).*

தொங்கல்விழு-தல் *tongal-viḻu-*, 3 செகுன்றாவி. (v.t.) *குறைவாதல்;* to be short. *முப்பது உருவா தொங்கல் விழுந்திருக்கிறது.*

[தொங்கல் + விழு-.]

தொங்கும் பொருளுக்கும் நிலத்திற்கும் இடையீடிருப்பது போல் வரவிற்கும் செலவிற்கும் இடையீடிருத்தல் (மு.தா. 60).

தொங்கலுக்குப்பார்-த்தல் *tongalukku-p-pār-*, 4 செ.குன்றாவி. (v.t.) *மந்திரத்தால் வயிற்றுத் தங்கலை நீக்க முயலுதல்;* to try to remove extraneous matter sticking in the bowels by magic.

தொங்கன் *tongaṉ*, பெ. (n.) *கள்ளன்;* robber, thief.

ம. தொங்஫ன்; தெ. தொங்க, டொங்க; நா., கொலா. டொங்க; பர். டொங்கல; கோண். தொங்க; கொண். டொஙரி; குவி. தொங்க

[தொங்கு → தொங்கி → தொங்கன்]

தொங்காரப்பாய்ச்சல் *tongāra-p-pāyccal*, பெ. (n.) *குதிரை முதலியவற்றின் ஓட்டம்* (w.); gallop, as of a horse.

[தொங்கு → தொங்கி + பாய்ச்சல் = தொங்கிப் பாய்ச்சல் → தொங்காரப் பாய்ச்சல்]

தொங்காரம் *tongāram*, பெ. (n.) *ஏளனம்;* contempt. உனக்கு என்னைப் பார்த்தால் தொங்காரமாக விருக்கிறதா?

ம. தொங்காரம்

தொங்கான் *tongāṉ*, பெ. (n.) *சில்லறை யணிகலன்கள்;* small, miscellaneous ornaments. "வங்கானுந் தொங்கானும் மாட்டிக் கிளுகிளுத்து" *(ஆதியூரவதானி).*

[தொங்கு → தொங்கன் → தொங்கான்]

தொங்கி¹ *tongi*, பெ. (n.) *தொங்குங்கல் அதாவது ஆட்டுக்கல்;* a kind of stone pestle *(சா. அக).*

[தொங்கு → தொங்கி]

தொங்கி² *tongi*, பெ. (n.) *கள்ளி (யாழ்.அக.);* thieving woman.

[தொங்கன் (ஆ.பா.) → தொங்கி (பெ.பா.)]

தொங்கிப்பாய்-தல் *tongi-p-pāy-*, 3 செ.கு.வி. (v.i.) *குதித்தோடுதல்;* to jump, to gallap, to skip.

[தொங்கி + பாய்-.]

தொங்கிப்பூ *tongi-p-pū*, பெ. (n.) *கொடி சம்பங்கி (இ.வ.) பார்க்க;* see *kodi-sambangi.*

[தொங்கு → தொங்கி + பூ]

தொங்கிப்போ-தல் *tongi-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) 1. *வைத்ததுக் காணாமற் போதல்;* to be lodged and lost, as a thing thrown. 2. *பொருளிழத்தல்;* to be in another's possession, to be mis-appropriated, as a deposit. 3. *வழியிற் களைத்துத் தங்கல்;* to tarry in the road from fatigue. 4. *சாதல்;* to die. 5. *ஓடிப்போதல்;* to run away.

[தொங்கி + போ-.]

தொங்கிவிடு-தல் *tongi-viḍu-*, 20 செ.கு.வி. (v.i.) *தொங்கிப்போ-தல், பார்க்க;* see *tongi-p-pō-*. அவன் தொங்கிவிட்டான் *(நெல்லை).*

[தொங்கி + விடு-.]

தொங்கு-தல் *tongu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. *நாலுதல்;* to hang, to be suspended, to hang down. *வறுமை தாளாது தொங்கிவிட்டான் (உ.வ.).* 2. *நிலைத்து நிற்றல்;* to continue remain long in possession, as another's property; to be permanent. "தொங்காது போலேயிருந்தது" *(ஈடு. 2, 3, 2).* 3. *இருத்தல்;* to stay, abide. "ஆசைப் பட்டார் பக்கல் . . . தொங்கானாயிற்று" *(ஈடு. 7,7,4).* 4. *அண்டிக்கிடத்தல்;* to be dependent, servile. "தொங்கிநீயென்றுஞ் சோற்றுத் துறையர்க்கு . . . பணிசெய்" *(தேவா. 393,6).* அவனிடந் தொங்கிக் கொண்டிருக்கிறான். தொங்குவது குட்டிச் சுவர்,

களாக் காண்பது மச்சு மாளிகை (பழ.) 5. துணிவாதல் (ஈடு. 7, 55, 11); to be effective, strong. 6. உண்டது வயிற்றில் தங்குதல்; to stay in the bowels, as anything eaten. "நாய்க் குடலுக்கு நறுநெய் தொங்காதாப் போல" (ஈடு.). 7. கிடைத்தல்; to be obtained, to come into possession. "கால்பாதி தொங்காதோ வென்று சுழல்வாரும்" (பணவிடு. 290). 8. குதித்தல்; to leap, to skip, as a child; to gallop. "குதிரை தொங்கிப் பாய்கிறது" (வின்.). 9. சாதல் (யாழ்ப்.); to die. 10. முடிவு பெறாது தாமதித்திருத்தல் (கொ.வ.); to be in suspense. தமிழ்வழிக் கல்வி பற்றிய வழக்கு உச்சமுறைமன்றில் தொங்கலாயுள்ளது. 11. உதவி யற்றிருத்தல்; to be helpless. 'ஆள் தொங்குகிறான்' (உ.வ.).

ம. தொங்குக; க., தெ., பட. தொங்கு; குட. துங்க்; கோத. தொங்க்; துட. தங்க்

[ஞாலு → நாலு → தாலு → தொலு → தொங்கு (அடி ஒன்றிட்படாமல் வானத்து நிற்றல்; ஒன்றைப் பற்றிக் கொண்டு தொங்குதல் போல ஒருவனை நெருங்கி வேண்டல்)]

தொங்குகயிறு *tongu-kayiṟu,* பெ. (n.). வள்ளத்திற்கும் கடலில் இறக்கிய வலைக்கும் இடையில் தொங்கும் கயிறு; hanging twine.

[தொங்கு + கயிறு]

தொங்குகாது *tongu-kādu,* பெ. (n.) வடிந்த காது (உ.வ.); hanging ears, stretched ears.

[தொங்கு + காது]

தொங்குகிழவன் *tongu-kiḻavaṉ,* பெ. (n.) தொண்டு கிழவன்; decrepit, old man.

மறுவ. வங்கிழவன்

[தொங்கு + கிழவன்]

தொங்குங்கல் *tonguṅ-kal,* பெ. (n.). ஆட்டுக்கல் (யாழ்.அக.); grinding mill-stone.

[தொங்கும் + கல்]



தொங்குசட்டம் *tongu-šaṭṭam,* பெ. (n.) கூரைவாய்ப் பட்டையில் வைக்கும் பலகை (இ. வ.); eave board, barge board.

[தொங்கு + சட்டம்]

தொங்குதொப்பூழ் *tongu-toppūḻ,* பெ. (n.) மாட்டுக்குற்ற வகை (மாட்டுவா. 17); a defect of cows and oxen.

[தொங்கு + தொப்பூழ்]

தொங்குந்தோட்டம் *tongun-tōṭṭam,* பெ. (n.) உலக வியப்புகள் எட்டனுளொன்றான, பாபிலோன் நகரத்தமைந்துள்ள தோட்டம்; hanging garden of Babylon one of the eight wonders of the world.

[தொங்கும் + தோட்டம்]

தொங்குநார் *tongu-nār,* பெ. (n.) எலும்பின் பாகத்தைக் கவர்ந்துள்ள சவ்வு மடிப்பு; any peritoneal or other fold that serves to hold any small bone. 2. கண்ணின் பாவை மேற் கவர்ந்துள்ள மடிப்பு; the suspensory ligament of the eye lens.

[தொங்கும் + நார்]

தொங்குநாரை *tongu-nārai,* பெ. (n.) மாட்டுக் குற்றவகை (மாட்டுவா. 17); a defect of cows and oxen.

[தொங்கும் + நாரை]

தொங்குபறிவு *tongu-paṟivu,* பெ. (n.). ஒட்டியு மொட்டாமலு மிருக்கை; hanging just ready

to fall or slip off. 2. விலக வழிபார்க்கை; being ready or waiting for a pretext to leave.

[தொங்கு + பறிவு]

தொங்குபாலம் *tongu-pālam,* பெ. (n.) இரு நீண்ட கம்பிகளுக்கிடையே பிணைக்கப் பட்டிருக்கும், இடையில் தூண்களில்லாத இருப்புப் பாலம் (கட்டட நாமா-11); suspension bridge.

[தொங்கு + பாலம்]



தொங்குபுழுதி *tongu-puḷudi,* பெ. (n.) வயலில் இறுகாது இளகி நிற்கும் புழுதி (இ.வ.); loose mud, as in fields immediately after ploughing.

மறுவ ஈளைக்கழனி, ஈளைப்புலம்

[தொங்கு + புழுதி]

தொங்குபுளுகன் *tongu-puḷugaṉ,* பெ. (n.) செருக்கிக் குதித்து நடக்கும் வீண் பெருமைக் காரன் (வின்.); vain person who walks with a springling gait.

[தொங்கும் + புளுகன்]

தொங்குபெட்டி *tongu-petti,* பெ. (n.) வில் வண்டியின் பின்பக்கம் அமைக்கப்படும்



பெட்டி (இ.வ.); a box at the rear of a spring cart.

[தொங்கு + பெட்டி]

தொங்குபொறி *tongu-poṟi,* பெ. (n.). தொங்குபறிவு பார்க்க; see *tongu-paṟivu.*

[தொங்குபறிவு → தொங்கு பொறிவு → தொங்குபொறி]

தொங்குபொறிவு *tongu-poṟivu,* பெ. (n.) தொங்குபறிவு (யாழ்.) பார்க்க; see *tongu-paṟivu.*

தொங்கும்தோட்டம் *tongum-tōttam,* பெ. (n.) தொங்குந்தோட்டம் பார்க்க; see *tongun-tōttam.*

[தொங்கும் + தோட்டம்]

தொங்குமார் *tongu-mār,* பெ. (n.) தளர்ந்து கீழ் நோக்கு முலை; sagging bust (சா.அக.).

[தொங்கு + மார்]

தொசுக்கு *tośukku,* பெ. (n.). 1. தகாப்புணர்ச்சி; illicit connection, as concubinage. 2. மிச்சம்; remainder, what is left unfinished. நீ எதையுந் தொசுக் கில்லாமற் செய்யமாட்டாய்.

[தொடு → தொடுக்கு → தொசுக்கு. (முதா.86)]

தொட்ட *totta,* பெ. (n.) பெரிய; big.

க., பட. தொட்ட

[தொழு → தொடு → தொட்ட]

தொட்டக்கால்வாடி *totta-k-kāl-vādi,* பெ. (n.) தொட்டாற்சுருங்கி பார்க்க; see *tottāṟ-śurungi* (சா.அக).

[தொட்டக்கால் + வாடி]

தொட்டகுறை *totta-kuṟai,* பெ. (n.) முற் பிறவியில் தொடங்கிவிட்ட வினைக்குறை; karma or action commenced in a previous birth and left unfinished, opp. to vitta-kuṟai.

[தொடு → தொட்ட + குறை]

தொட்டடி *tottadi,* பெ. (n.) செய்யுளின் முதலடி; the opening or first line of a poem, dist. fr. vittadi. விட்டடி தொட்டடி அவனுக்குத் தெரியாது (வின்.).

[தொடு + அடி]

தொட்டது *tottadu,* பெ. (n.). செருப்பு; shoes.

[தொடு → தொட்டது]

தொட்டப்பன் *tottappan,* பெ. (n.) (கிறித்.) அறிவுத் தந்தை (யாழ்ப்.); god father.

க. தொட்டப்ப

[தொட்ட + அப்பன்]

தொட்டபூடு *totta-pūdu,* பெ. (n.) ஆனை நெருஞ்சில்; elephant calt rods (சா.அக).

[தொட்ட + பூடு]

தொட்டம் *tottam,* பெ. (n.) சிறு நிலம் (யாழ்ப்.); small piece of ground.

[தொடு → தொட்டு → தொட்டம்]

தொட்டல்[1] *tottal,* பெ. (n.) 1. கட்டுகை (திவா.); tying, binding. 2. உண்ணுகை (சூடா.); eating. 3. தோண்டுகை (திவா.); digging. 4. தீண்டுகை; touching.

[தொடு → தொட்டு → தொட்டல்]

தொட்டல்[2] *tottal,* பெ. (n.) பெருங்குறிஞ்சி; medium white silky backed cone head.

தொட்டவிரல்தறித்தான் *totta-viral-tarittān,* பெ. (n.) பெருங்குறிஞ்சா பார்க்க; see *peruṅ-kuriñjā.*

[தொட்டவிரல் + தறித்தான்]

தொட்டாச்சி *tottācci,* பெ. (n.) அறிவுத்தாய் (வின்.); god mother.

[தொட்ட + ஆய்ச்சி]

தொட்டாட்டுமணியம் *tottāttu-maṇiyam,* பெ. (n.) குற்றேவல் (யாழ்ப்.); minor domastic duties.

மறுவ. புழுக்கு வேலை.

[தொடு → தொட்டு + ஆட்டு + மணியம்]

தொட்டாட்டுவேலை *tottāttu-vēlai,* பெ. (n.) தொட்டாட்டுமணியம் பார்க்க; see *tottāttu-maṇiyam.*

தொட்டாப்பு[1] *tottāppu,* பெ. (n.) சிட்டைமரம் (யாழ்ப்.) பார்க்க; see *sittai-maram.*

தொட்டாப்பு[2] *tottāppu,* பெ. (n.) வலையின் துண்டம்; piece of net.

தொட்டாய்ச்சி *tottāycci,* பெ. (n.) தொட்டாச்சி (யாழ்.) பார்க்க; see *tottācci.*

[தொட்டாய்ச்சி → தொட்டாச்சி]

தொட்டால்வாடி *tottāl-vādi,* பெ. (n.) 1. தொட்டாற்சுருங்கி பார்க்க; see *tottār-suruṅgi.* 2. சுண்டிவகை (M.M. 531); a species of sensitive plant.

[தொட்டால் + வாடி]

தொட்டால்வேசி *tottāl-vēsi,* பெ. (n.) சிமிட்டி பார்க்க; see *cimitti* (சா.அக).

தொட்டாற்சிணுங்கி *tottār-ciṇuṅgi,* பெ. (n.) தொட்டாற்சுருங்கி (இ.வ.) பார்க்க; see *tottār-suruṅgi.*

தொட்டாற்சுருங்கி[1] *tottār-śuruṅgi,* பெ. (n.) தொட்டால் தன் இலைகளைச் சுருக்கிக் கொள்ளும் தன்மையுடைய சிறு இலைகளைக் கொண்ட மருந்துக்குதவும் செடி; sensitive plant (சா.அக).

[தொட்டால் + சுருங்கி. சுருங்கு → சுருங்கி]



தொட்டாற்சுருங்கி[2] *tottār-curuṅgi,* பெ. (n.) தொட்டவுடன் கூச்ச முண்டாக்கும் உடம்பின் பாகம் அல்லது இடம்; body marked by abnormal sensibility (சா.அக).

[தொட்டால் + சுருங்கி]

தொட்டாற்சொறியன் *tottār-coriyan,* பெ. (n.). காஞ்சொறி; scorpion leaf (சா. அக).

[தொட்டால் + சொறியன்]

இவ்விலை உடலின் மீது பட்டவுடன் அரிப்புண்டாவதால் இப்பெயர் பெற்றது.

தொட்டான் *tottāṉ,* பெ. (n.) உப்பளத்தில் தெப்பத்திற்கும் பாத்திக்கும் இடையில் உள்ள நீர்த்தேக்கம்; stagnant water in between the tank division and the salt-pan *(மீனவ.).*

தொட்டி[1] *totti,* பெ. (n.) 1. நீர்த்தொட்டி (w); water-trough, tub, cistern, reservoir. 'துற்றுவ துற்றுந் துணையிதழ் வாய்த் தொட்டி" *(பரிபா. 20, 51).* 2. அழி (வின்.); manger, crib. 3. குப்பைத் தொட்டி; refuse bin. 4. தொட்டிக்கட்டு பார்க்க; see *totti-k-kattu.* 5. அம்பாரி; howdah. "தொட்டியுடன் பொரு சமர் முனை சீறிய தும்பிகள்" *(பாரத. பதினாறாம். 51).* 6. கள் (அக.நி.); toddy. 7. வைப்பு நஞ்சு வகை (சங்.அக.); a prepared arsenic.

ம., க., தெ., து., பட. தொட்டி

[தொடு → தொட்டி]

தொட்டி வகைகள்

1. இரும்பு தொட்டி - iron trough.
2. செப்புத் தொட்டி - copper trough.
3. கற்றொட்டி - stone trough.
4. மரத்தொட்டி - wooden trough.

தொட்டி[2] *totti,* பெ. (n.) 1. தொட்டாற்சொறியன் பார்க்க; see *tottāṟ-coṟiyaṉ.* 2. குறுந்தொட்டி; rose coloured sticky mallow. 3. தொட்டிப் பாடாணம் பார்க்க; see *totti-p-pāḍāṇam.*

தொட்டி[3] *totti,* பெ. (n.) 1. வேலியடைப்பு (வின்.); fence, yard, pound. 2. மரம் விறகு விற்குமிடம்; enclosure for selling timber, firewood. விறகுத் தொட்டி. 3. முத்துச்சிப்பி விற்குமிடம் (யாழ்ப்.); enclosure for selling oysters at the pearl fishery. 4. சிற்றூர்; small village. "ஊரெல்லாம் பட்டி தொட்டி" *(தனிப்பா. 142, 37).*

ம., க. தொட்டி; தெ. தொட்டி; து. துட்டி; குவி., கொண். டொடி

தொட்டி[4] *totti,* பெ. (n.) ஒறுப்பு; fine, punishment. தொட்டிப்பணம் (வின்.).

தொட்டி[5] *totti,* பெ. (n.) இறைச்சிக்காக ஆடு மாடுகளை வெட்டுமிடம்; slaughter house.

தொட்டி[6] *totti,* பெ. (n.) தொட்டில்[1] பார்க்க; see *tottil.*

தொட்டி[7] *totti,* பெ. (n.) வேலிதாண்டும் கால்நடைகளை ஒறுப்புக்காக அடைக்கும் இடம்; cattle pound.

தொட்டிக்கட்டு *totti-k-kattu,* பெ. (n.) வீட்டமைப்பில் நடுவில் திறந்த வெளியுடைய சதுரக்கட்டு; open quandrangular section in the centre of a house. ஒரு வீட்டில் அடுக்கடுக்காய் மூன்று தொட்டிக்கட்டுகள் அமைக்கப்படாது *(சர்வா. சிற். 47)* (செ.அக.).

தொட்டிக்கட்டுவீடு *totti-k-kattu-vīdu,* பெ. (n.) நாற்புறமும் தாழ்வாரமும் இடையில் முற்றமும் அமைந்த வீடு; house with an open quandrangular section in the centre *(கட்டட).*

[தொட்டி + கட்டு + வீடு]



தொட்டிக்கலவடை *totti-k-kala-vadai,* பெ. (n.) நீர்த்தொட்டியின் அடிமனை (வின்.); foot of a laver.

[தொட்டி + கலவடை]

தொட்டிக்கால் *totti-k-kāl,* பெ. (n.) 1. உள் வளைந்த கால் அல்லது படப்புக்கால்; bandy legged. 2. முட்டிக் கால் தட்டி; knock knee *(சா.அக.).*

மறுவ. கவட்டைக்கால்.

[தொட்டி + கால்]

தொட்டிக்காளவாய் *totti-k-kālavāy,* பெ. (n.). தரையிலேயே சதுரமாகவோ, வட்டமாகவோ சுவர் அமைத்து அதன் ஒரு பக்கம் காற்றைச் செலுத்தும் வழியுடைய காளவாய்; kiln made in the floor with walls in the circular or square form, and make way the blow wind in one side.

[தொட்டி + காளவாய்]

தொட்டிச்சி *totticci,* பெ. (n.) தொட்டியக் குலப்பெண்; a woman of tottiyar caste.

[தொட்டியன் (ஆ.பா.) → தொட்டிச்சி (பெ.பா.)]

தொட்டிச்செம்பு *totti-c-cembu,* பெ. (n.) தொட்டி நஞ்சினின்று எடுத்த செம்பு; copper extracted from totty padanam (சா. அக.).

[தொட்டி + செம்பு]

தொட்டித்தொகை *totti-t-togai,* பெ. (n.) இரும்புத் தொட்டி, செம்புத்தொட்டி நஞ்சு; the two kinds of prepared arsenics containing iron and copper respectively as ingredients (சா.அக.).

[தொட்டி + தொகை]

தொட்டிப்பணம் *totti-p-paṇam,* பெ. (n.) வேலைக்காரர்க்கிடும் தண்டத் தொகை (வின்.); fine for default of workmen.

[தொட்டி + பணம்]

தொட்டிப்பனை *totti-p-paṉai,* பெ. (n.) மலைப்பனை; hill palmyra so called probably of its trunk being used as a tub (சா.அக.).

[தொட்டி + பனை]

இம்மரத்தின் பகுதியைக் குடைந்து தொட்டி போல் பயன்படுத்தியமையால் இப்பெயர் அமைந்தது.

தொட்டிப்பாகிதம் *totti-p-pāgidam,* பெ. (n.) சிவப்பு நெல்லி; a red variety of Indian goose berry (சா.அக.).

தொட்டிப்பாடம் *totti-p-pāḍam,* பெ. (n.) பெரிய மீன்களிலுள்ள குடலை நீக்கித் தூய்மை செய்து உப்பிட்டு, நான்கு அல்லது ஐந்து நாட்கள் தொட்டியிலிட்டுப் பின்பு பாடஞ் செய்தல் (மீனவ.); cure the fish by removing its intestine, and then soak it in the salt for five days, and then make it suitable for cooking.

[தொட்டி + பாடம் → பக்குவம்]

தொட்டிப்பாடாணசுத்தி *totti-p-pāḍāṇa-śutti,* பெ. (n.) தொட்டி நஞ்சைத் துண்டு துண்டாய் நறுக்கிக் கிளிகட்டி நெல்லில் அவித்து எடுத்துக் கொள்ளுதல்; cut the totti pāḍāṇam into small pieces and bundle them in a piece of white cloth and keep it in the middle of paddy contained in an earthern pot which is then boiled and taking it out as soon as the husk of the paddy brakes (சா.அக.).

தொட்டிப்பாடாணம் *totti-p-pāḍāṇam,* பெ. (n.) இதளியமும், கந்தகமும் கூட்டிப் பாண்டத்தில் சமைத்தது; a kind of arsenic prepared by mixing mercury and sulphur to form a chemical compound by a process mentioned in Tamil medicine. 2. அயத்தொட்டிப்பாடாணம் பார்க்க; see *aya-t-totti-p-pāḍāṇam.* 3. செம்புத் தொட்டிப்பாடாணம் பார்க்க; see *śembu-t-totti-p-pāḍāṇam* (சா.அக.).

தொட்டிப்பாலம் *totti-p-pālam,* பெ. (n.) மேட்டு நிலத்துள் நீர் பாயுமாறு கட்டப்படும் ஒருவகைப் பாலம் (நாஞ்.); a kind of aqueduct, as trough-like.

[தொட்டி + பாலம்]

தொட்டிப்பூட்டு *totti-p-pūttu,* பெ. (n.) தைக்கும் பூட்டுவகை (தஞ்சை.); a kind of padlock.

[தொட்டி + பூட்டு]



தொட்டிமயமூலி *totti-maya-mūli,* பெ. (n.) நோம்புவாலி; unknown plant (சா.அக.).

[தொட்டி + மயமூலி]

தொட்டிமுற்றம் *totti-muṟṟam,* பெ. (n.) வீட்டிலுள்ளாகத் தொட்டி போல் அமைந்துள்ள முற்றம் (இ.வ.); inner yard of a house.

[தொட்டி + முற்றம்]



தொட்டிமை *tottimai,* பெ. (n.) *1.* ஒற்றுமை (சூடா.); uniformity, unison. "தொட்டிமை யுடைய வீணை" (சீவக. 2047). *2.* அழகு; beauty. "தொட்டிமை கலந்த தூசு" (பெருங். உஞ்சைக். 50, 8).

[துள் → தொள் → தொடு → தொட்டி → தொட்டிமை (மு.தா. 196)]

தொட்டியக்கரு[1] *tottiya-k-karu,* பெ. (n.) கெடுதல் சூழியத்தில் பயன்கொள்ளுங் கரு (யாழ்.அக.); articles used in witchcraft.

[தொட்டி → தொட்டிய + கரு]

தொட்டியக்கரு[2] *tottiya-k-karu,* பெ. (n.) தொட்டி வித்தையிற் சொல்லிய உகிர், மயிர், பிண்டம், தலை, மண்டையோடு முதலிய கரு; the essential parts or material parts multilated from the human body such as nails hair foetus or embryo skull etc., required in the performance of magic by a class of people known as tottas (கம்பளத்தார்) (சா.அக.).

[தொட்டி → தொட்டிய + கரு]

தொட்டியச்சி *tottiyacci,* பெ. (n.) தொட்டிச்சி (வின்) பார்க்க; see *totticci.*

[தொட்டிச்சி → தொட்டியச்சி]

தொட்டியச்செம்பு *tottiya-c-cembu,* பெ. (n.) தொட்டிச்செம்பு பார்க்க; see *totti-c-cembu* (சா.அக.).

[தொட்டிச்செம்பு → தொட்டியச்செம்பு]

தொட்டியம்[1] *tottiyam,* பெ. (n.) மதுரை மாவட்டத்தின் மேற்குப் பகுதி (Nels); a country identified with the western portion of Madurai District. *2.* ஒரு மொழி (யாழ்.அக.); a language. *3.* கெடுதல் சூழியக் கலை (வின்.); witchcraft and legerdemain.

தொட்டியம்[2] *tottiyam,* பெ. (n.) கெடுதல் செய்யும் சூழியம், தன் வயப்படுத்தல், குறி முதலிய கலைகளைக் கற்றுப் பழகிய கம்பளத்தார்; a treatise on mantric science or magic containing the art of witchcraft sorcary necromancy, love philter etc., (சா.அக.).

தொட்டியக் கலையைக் கற்றதனால் இச்சாதியருக்கு இப்பெயர் அமைந்தது போலும்.

தொட்டியர் *tottiyar,* பெ. (n.) ஒரு குலத்தினர்; people of totti caste.

தொட்டியலை *totti-y-alai,* பெ. (n.) ஒரு மீன்பிடி வலை; kind of fishing net (மீனவ.).

[தொட்டிவலை → தொட்டியலை]

தொட்டியவித்தை *tottiya-vittai,* பெ. (n.) தொட்டியச் சாதியார் செய்யும் கெடுதல் சூழியம், கருவேலை முதலிய கலை முறைகள்; the various performances in sorcary witch craft etc., done by the class of people known as tottiyas. தொட்டியப் பேய் சுடுகாடு மட்டும் (பழ.).

[தொட்டிய(ர்) + வித்தை. விச்சை → வித்தை. ஒ.நோ. அச்சன் – அத்தன்]

தொட்டியன் *tottiyan,* பெ. (n.) ஆந்திர நாட்டில் உழவுத் தொழில் செய்துவந்து மதுரை நாட்டில் நாயக்கன் என்ற பெயர் கொண்டு வாழுமொரு குலத்தான் (E.T.); person of a Telugu caste of cultivators, settled in the western part of the Madurai District, who assume the tittle Nāyakkan.

தொட்டில்[1] *tottil,* பெ. (n.) குழந்தைகளைப் படுக்க வைத்து ஆட்டற்குரிய மஞ்சம் அல்லது தூளி; cradle, swinging cot for an infant. "கிடக்கிற் றொட்டில் கிழிய உதைத்திடும்" (திவ். பெரியாழ். 1,1, 9). தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் (பழ.), தொட்டிலும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளுவான் (பழ.).

மறுவ. ஏணை

ம., க., து. தொட்டில்; தெ., தொட்டிலா.



தொட்டில்[2] *tottil,* பெ. (n.). தொட்டி[1] (யாழ்ப்.) பார்க்க; see *totti.*

[தொட்டி → தொட்டில்]

தொட்டில்ஏற்றம் *tottil-ērram,* பெ. (n.) உழவுத் தொழிலில் கால்வாயிலிருந்து மேட்டுப் பகுதிக்கு ஏற்றத்தின் உதவியால் நீர் பாய்ச்சும் முறை; methods of irrigation in cultivation by spring water from the channel to the ridge with the help of picottah.

[தொட்டில்[2] + ஏற்றம்]



தொட்டில்குழந்தைத்திட்டம் *tottil-kulandai-t-tittam,* பெ. (n.) தொட்டிற்குழந்தைத்திட்டம் பார்க்க; see *tottir-kulandai-t-tittam.*

[தொட்டில் + குழந்தை + திட்டம்]

தொட்டில்பத்தை *tottil-pattai,* பெ. (n.) வண்டியின் முன் பகுதியில் ஏர்க்காலைத் தொடுமாறு பொருத்தப்பட்டுள்ள மூங்கில் பத்தைகள்; bamboo rod, joined in front of the cart, to louch the plough.

மறுவ. சப்பைக்கழி

[தொட்டில்[2] + பத்தை]



தொட்டில்முண்டு *tottil-mundu,* பெ. (n.) தொட்டிற்சீலை பார்க்க; see *tottir-silai.*

[தொட்டில்[1] + முண்டு. முண்டு = சீலை]

தொட்டில்ராட்டி *tottil-ratti,* பெ. (n.) மேல் கீழாகச் சுற்றும் இராட்டின விளையாட்டு வகை; a kind of merry-go-round.

[தொட்டில் + ராட்டு]



தொட்டிலிடு-தல் *tottil-idu,* 18 செ.குன்றாவி. (v. t.) முதன்முறையாகக் குழந்தையைத் தொட்டிலில் ஏற்றுவித்தல்; to cradle for the first time, as a child.

[தொட்டில்[2] + இடு-]

தொட்டிவயிறு *totti-vayiru,* பெ. (n.) விலாப் புடைத்த வயிறு; belly like that of animals paunch belly (சா.அக.).

[தொட்டி + வயிறு]

தொட்டிவலை *totti-valai,* பெ. (n.) மீன் பிடி வலை வகையுள் ஒன்று; a kind of fishing net (மீனவ.).

[தொட்டி + வலை]

தொட்டிவீடு *toṭṭi-vīḍu*, பெ. (n.) தொட்டிக் கட்டுள்ள வீடு (நாஞ்.); a house with toṭṭ-k-kaṭṭu.

[தொட்டி + வீடு]

தொட்டிற்குழந்தைத்திட்டம் *toṭṭiṟ-kuḻandai-t-tiṭṭam*, பெ. (n.) அல்வழியிற் பிறந்த குழந்தைகளையும், விருப்பின்றிப் பிறந்த பெண் குழந்தைகளையும் காக்கும் தமிழ் நாட்டரசின் திட்டம்; cradle baby scheme of the state Government of Tamilnadu, India which takes care of illegitimate children and unwanted female children.

[தொட்டில் + குழந்தை + திட்டம்]

தொட்டிற்சீலை *toṭṭiṟ-cīlai*, பெ. (n.) குழந்தைத் தொட்டிலுக்குரிய துணிவகை; a kind of cloth used for cradle.

மறுவ. ஏணை சீலை.

[தொட்டி + சீலை]

தொட்டு[1] *toṭṭu*, இடை. (part.) 1. குறித்து; touching, concerning, in reference to. அவனைத் தொட்டு எனக்கு ஆக வேண்டியது ஒன்று மில்லை. 2. தொடங்கி; beginning with, from, since, thenceforward. "பெருஞ்செல்வந் தோன்றியக் காற்றொட்டு" (நாலடி. 2).

[தொடு → தொட்டு]

தொட்டு[2] *toṭṭu*, பெ. (n.) பூண்டு; plant (சா.அக.).

தொட்டுக்காட்டு-தல் *toṭṭu-k-kāṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.). ஒன்றைச் செய்து காட்டுதல்; to lead the way, show practically how a thing must be done. "தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வாராது" (பழ.).

[தொட்டு + காட்டு-.]

தொட்டுக்கூட்டுக்கறி *toṭṭu-k-kuṭṭu-kaṟi*, பெ. (n.) பச்சடி முதலிய நீருணவு (நாஞ்.); a kind of liquid relish.

[தொட்டு + கூட்டு+ கறி]

தொட்டுக்கொண்டுபோ-தல் *toṭṭu-k-koṇḍu-pō-* 8 செ.குன்றாவி. (v.t.). 1. ஒன்றைச் சுமப்பதாகத் தோன்றப் பண்ணுதல்; to pretend to carry a load with others, by just touching it. 2. பாடையைப் பிடித்துக் கொண்டு செல்லுதல் (இ.வ.); to walk touching the bier; as near relations in a funeral procession. 3. இறுதிச் சடங்கில் துணிமூலையைப் பிடித்தல்; to bear a pall at a funeral.

[தொட்டு + கொண்டு + போ-.]

தொட்டுக்கொள்(ளு)-தல் *toṭṭu-k-koḷ-*, 7 செ.குன்றாவி. (v.t.). 1. எட்டிப் பிடித்தல்; to touch; to catch. "தொட்டுக் கொள் தொட்டுக் கொள் என்ன வேண்டும் படி" (ஈடு. 1,1,1). 2. உணவுக்குத் துணையாக ஊறுகாய் முதலியவற்றைச் சிறிது உட்கொள்ளுதல்; to take small bites, as at pickles. தொட்டுக் கொள்ள ஊறுகாய் வேண்டும். (உ.வ.).

[தொட்டு + கொள்-.]

தொட்டுச்சாப்பிடுமுறவு *toṭṭu-c-cāppiḍum-uṟavu*, பெ. (n.) (மாலியம்) ஒருவர் தொட்ட உணவை மற்றொருவர் உண்ணும்படி மகளிருக்குள் அமைந்த நெருங்கியதோருறவு; close relationship of women making it permissible for them to take food at one another's house.

[தொட்டு + சாப்பிடும் + உறவு]

தொட்டுத்தின்(னு)-தல் *toṭṭu-tiṉ-*, 14 செ.கு.வி. (v.i.) கீழ் வகுப்பைச் சார்ந்தோர் சமைத்த உணவை, உடன் இருந்து உண்ணுதல்; to take food at the house of a low caste person. தொட்டுத் தின்றும் பட்டினியா?

[தொட்டு + தின்]

தொட்டுத்தெளித்-தல் *toṭṭu-t-teḷi*, 4 செ.குன்றாவி. (v.t.) தொட்டுத்தெறி-த்தல் பார்க்க; see *toṭṭu-t-teṟi-*.

[தொட்டு + தெளி-.]

தொட்டுத்தெறி-த்தல் *toṭṭu-t-teṟi-*, 4 செ.குன்றாவி. (v.t.) ஆலாத்தி நீரை மணமக்கள் மேல் தெளித்தல்; to sprinkle a coloured liquid, as on a newly married couple. 2. சிறுமையாய்க் கொடுத்தல்; to give sparingly. தொட்டுத் தெறிக்காதவன்.

[தொட்டு + தெறி-.]

தொட்டுத்தொட்டு *toṭṭu-t-toṭṭu*, வி.எ. (adv.) சிறுகச் சிறுக (இ.வ.); little by little. "தொட்டுத் தொட்டு நூறு உருவா செலவாயிற்று".

தொட்டுப்பார்-த்தல் *tottu-p-pār-*, 4 செ.குன்றாவி. (v.t.) *கையாற் தொடல்;* feeling by touch as in fever *(சா. அக.).*

[தொட்டு + பார்-.]

தொட்டுப்பிடி[1]-த்தல் *tottu-p-pidi-*, 4 செ.குன்றாவி. (v.t.) *பேறு காலத்தில் பக்கத்திலிருந்து உதவி செய்தல் (நாஞ்.);* to act as midwife in childbirth.

[தொட்டு + பிடி-.]

தொட்டுப்பிடி[2]-த்தல் *tottu-p-pidi-*, 4 செ.குன்றாவி. (v.t.) *சிறுவர் விளையாட்டு வகை;* a kind of childerns game.

[தொட்டு + பிடி-.]

தொட்டுப்போடு-தல் *tottu-p-pōdu-*, 20 செ.குன்றாவி. (v.t.) *மருந்தெண்ணெயைப் புண், காயம் முதலியவற்றுக்கிடுதல்;* basmearing or applying medicated oils or ointments to wounds, sores etc., *(சா.அக.).*

தொட்பம் *totpam*, பெ. (n.) *திறம் (அக.நி.);* cleverness skill.

[ஒட்பம் → தொட்பம்]

தொடக்கப்பள்ளி *todakka-p-palli*, பெ. (n.) *ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை உள்ள பள்ளிக்கூடம்;* primary school, elementary school. *ஆறகழூரிலுள்ள தொடக்கப் பள்ளியில் ஆயிரம் பேர் படிக்கின்றனர்.*

[தொடக்கம் + பள்ளி]

தொடக்கம் *todakkam*, பெ. (n.) 1. *தோற்றம்;* origin. 2. *ஆதி (திவா.);* beginning, commence ment. *"ஊரது உண்டது என்றற் றொடக்கத்தன" (நன். 242. மயிலை.).* 3. *முயற்சி (வின்.);* means for an attempt. 4. *செல்வம் (யாழ்.அக.);* wealth. 5. *வகுப்பு, குலம் (யாழ்.அக.);* class.

[தொடு → தொடங்கு → தொடக்கம் (மு.தா. 86)]

தொடக்கறை *todakkarai*, பெ. (n.) *உடல்;* human body. *"மும்மல பாண்டத் தொடக் கறையை" (தாயு. பாயப்புலி. 18).*

[தொடக்கு[3] + அறை-.]

தொடக்கிழுப்பு *todakkiluppu*, பெ. (n.) *தொடக்குவலிப்பு பார்க்க;* see *todakku-valippu (சா.அக.).*

[தொடக்கு + இழுப்பு]

தொடக்கினி *todakkini*, பெ. (n.) *கருவு;* foetus in the womb *(சா.அக.).*

[தொடக்கு → தொடக்கினி]

தொடக்கு[1]-தல் *todakku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. *கட்டுதல்;* to tie. *'நினைத் துன்பத்தாற் றொடக்கினேன்' (சீவக. 579).* 2. *அகப்படுத்துதல்;* to catch hold of ensnare. *"விளை பொருள் மங்கையர் முகத்தினும் . . . சொல்லினுந் தொடக்கும்" (கல்லா. 62, 28).* 3. *அணிதல்;* to wear, put on. *'பாதுகை திருவடி தொடக்கி" (விநாயகபு. 80, 278).* 4. *பொருத்துதல்;* to make to agree.

க. தொடகு; தெ. தொடகு

தொடக்கு[2]-தல் *todakku-*, 5 செ.குன்றாவி. (v.t.) *சிக்கிக் கொள்ளுதல்;* to get entangled, obstructed. *"சங்கந்துங்க விலைக்கதலிப் புதன் மீது தொடக்கி" (பெரியபு. ஆனாய. 4).*

க. தொடகு

தொடக்கு[3]-தல் *todakku-*, 5 செ.குன்றாவி. (v.t.) *தொடங்குதல்;* to begin.

[தொடங்கு → தொடக்கு]

தொடக்கு[4] *todakku*, பெ. (n.) 1. *கட்டு;* tying, binding, entanglement.*"படைச்சொற் பாசத் தொடக்குள் ளூறீஇ" (பெருங். மகத. 2, 13).* 2. *பிணைப்பு;* bondage. *"தொடக் கெலா மறுத்தநற் சோதீ" (திருவாச. 37).* 3. *பற்று;* connection, attachment. *"தொடக்கறுத்தோர் சுற்றமே" (கம்பரா. சரபங். 27).* 4. *தீட்டு;* uncleanness, as of a woman in her periods or in childbirth. 5. *குஞ்சம்;* decorative hangings. *"தொடக்கொடு தூக்கி" (சீவக. 1343).* 6. *தொடக்கு வடிவு (வின்.) பார்க்க;* see *todakku-vadivu.*

ம. தொடக்கு

[தொடக்கு → தொடக்கு[3]]

தொடக்குப்பைத்தியம் *todakku-p-paittiyam,* பெ. (n.) மாதவிலக்குக் கோளாறினால் பெண்களுக்கு ஏற்படும் ஒருவித மன வெறிநோய்; a variety of insanity or mania as one of the concomitants of a hysteric condition (சா.அக.).

[தொடக்கு + பைத்தியம்]

தொடக்குபடு-தல் *todakku-padu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. தீட்டு படல்; being unclean through menses. 2. சாவு, பிள்ளைப்பேறு முதலியவற்றால் ஏற்படும் தீட்டு; ceremonial uncleanliness through death, child birth etc., (சா.அக.).

[தொடக்கு + படு-]

தொடக்குவடிவு *todakku-vadivu,* பெ. (n.) அணிகல வகை (வின்.); an ornament.

[தொடக்கு + வடிவு]

தொடங்கி *todangi,* இடை (part.) ஆதிமுதல்; from, ever since. "தொடங்கிப் பிறப்பின்னா தென்றுணரும் பேரறிவி னாரை" (நாலடி., 123).

தொடங்கிவை-த்தல் *todangi-vai-,* 8 செ.குன்றாவி. (v.t.) முதல் கட்டப் பணியை நடைபெறச் செய்தல்; to inaugurate. திட்டப் பணிகளை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

[தொடங்கி + வை]

தொடங்கு[1]-தல் *todangu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தோற்றுவித்தல்; to begin, commence, originate. "அலர் தொடங்கின்றாலூரே" (ஐங்குறு. 75). 2. முயலுதல்; to undertake, enter upon, engage in. 3. ஒத்தல்; to resemble "இருவர் நூற்கு மொருசிறை தொடங்கி" (நன்.8).

ம. தொடங்ஙுக; துடங்ஙுக; க. தொடங்கு; தெ. தெடகு, தொட்டு; து. தொடங்குனி; கூ. தோண்ட; மா. தெட்கெ

தொடங்கு[2] *todangu,* பெ. (n.) 1. காலணி; foot-wear. 2. விலங்கு; animal.

தொடர்[1]-தல் *todar-,* 3 செ.கு.வி. (v.i.) 1. இடையறாது வருதல்; to follow uninterruptedly; to continue in unbroken succession. "தொடர்ந்த குவளைத் தூநெறி யடைச்சி" (பதிற்றுப். 27, 2). 2. பிணைந்து நிற்றல்; to be linked. "தாடொறுந் தொடர்ந்த தழங்குபொற் கழலின்" (கம்பரா. திருத்தனை. 6). 3. அமைதல்; to form. "வாரண வுரித்தொகுதி நீவி தொடர" (கம்பரா. விராதன். 14). 4. மிகுதல்; to increase. "தம்முட்பகை தொடர்ந்து" (பரிபா. 7, 72). 5. நெருங்குதல்; to be close-knit. "வரைமலை யெல்லா நிறைந்து முறழ்ந்து நிமிர்ந்துந் தொடர்ந்தும்" (பரிபா. 19, 82).

க. தொடர்

[தொடு → தொடர்]

தொடர்[2]-தல் *todar-,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. பின் பற்றுதல்; to follow after, cling to, pursue. "அவரை. . . அரக்கியர் தொடர்குவர்" (கம்பரா. ஊர்தேடு.22). 2. ஊக்கத்தோடு மேற்கொள்ளுதல் (வின்.); to insist upon, persist in with energy, persevere in. 3. பயிற்சி செய்தல்; to practise, pursue, as study. "வடகலை தொடர்வார்" (கோயிற்பு. திருவிழா.32). 4. தேடுதல்; to seek out, find out, trace. "மறையிலீறுமுன் றொடரொணாத நீ" (திருவாச. 5, 95). 5. வழக்குக் கிழுத்தல்; to prosecute, sue. அந்தக் கடனுக்கு உன்னைத் தொடரப் போகிறேன் (யாழ்.அக.). 6. கட்டுதல் (திவா.); to connect, tie, bind. "சிறுமணி தொடர்ந்து" (நற். 220). 7. பற்றுதல்; to seize. 'யானுன்னைத் தானை தொடரவும்" (பு.வெ. 12, பெண்பாற். 18). 8. பெறுதல்; to get, obtain. "சாந்தினணி தொடர்ந்து" (பு.வெ. 12, பெண்பாற். 11). 9. வினவுதல்; question, enquire. 'தோடவிழ் தார் யானுந் தொடர" (பு. வெ. 11, பெண்பாற். 10). 10. தாக்குதல் (வின்.); to assail, attack. 11. நெருங்குதல்; to be near or close to. 12. தொங்கவிடுதல்; to hang. "மாலை தொடரி" (அகநா. 86).

தெ. தொடரு.

தொடர்[3] *todar,* பெ. (n.) 1. தொடர்கை; following, succession. 2. தொடரி (சங்கிலி); chain. "தொடர்ப்படு ஞமலியின்" (புறநா. 74). 3. விலங்கு; fetters. 'தொடர் சங்கிலிகை" (திவ். பெரியாழ். 1, 7, 1). 4. வரிசை (வின்.); series. 5. சொற்றொடர்; phrase; clause; sentense; compound-word. இறைக்குருவனார் தம் கட்டுரையில் கழக இலக்கியத் தொடர்களை மிகுதியாக எடுத்தாண்டுள்ளார். 6. நட்பு; friendship, love. "நல்லார் தொடர் கைவிடல்"

(குறள், 450). 7. உறவு (சூடா.); connection, relation. 8. கால்வழி; lineal succession. 9. பழைமை (யாழ்.அக.); long-standing connection. 10. பூமாலை (யாழ்.அக.); flower garland. 11. நூல் (யாழ்.அக.); thread. 12. பிசின் (யாழ்.அக.); gum, glue.

தொடர்[4] *todar*, பெ. (n.) 1. நாய்; dog. 2. கோவை; Indian caper. 3. குடற்றொடர்; that portion of the alimentary canal either above or below the region of intestines (சா.அக.).

தொடர்[5] *todar*, பெ. (n.) குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒருமுறை எனத் தொடர்ந்து வருவது; seriol. மாதிகையில் வந்த கட்டுரைத் தொடர் முடிந்துவிட்டது.

தொடர்[6] *todar*, பெ. (n.) வழக்குத் தொடுத்தல்; file a suit. எதிர்க்கட்சித் தலைவர் அமைச்சர் மீது இழப்பீட்டு வழக்குத் தொடர்ந்தார்.

தொடர்ஓட்டம் *todar-ōttam*, பெ. (n.) 1. ஓட்டத் தூரத்தின் நான்கில் ஒரு பகுதியை ஒருவர் கடந்த பிறகு தன் கையில் உள்ள கட்டையைத் தந்து மற்றவர் அந்த இடத்திலிருந்து ஓட்டத்தைத் தொடர்ந்து ஓடி நிறைவேற்றும் ஓட்டப் போட்டி; relay race. 4 x 4 மீட்டர் பெண்களுக்கான தொடர் ஓட்டம். 2. விளையாட்டுப் போட்டி, விழா முதலியன நடைபெறும் இடத்துக்கு ஒருவரைத் தொடர்ந்து ஒருவர் ஓடி ஒன்றைக் கொண்டு வருதல்; running in relays as in bringing the torch etc. சென்னையில் நடந்த பாவாணர் நூற்றாண்டு விழாவுக்கு அவர் பிறந்த ஊரான நெல்லையிலிருந்து ஒளிப்பந்தத்தைத் தொடர் ஓட்டமாகக் கொண்டு வந்தனர்.

[தொடர் + ஓட்டம்]

தொடர்கண்ணி *todar-kanni*, பெ. (n.). தொழுகண்ணி பார்க்க; see *tolu-kanni* (சா.அக.).

தொடர்கதை *todar-kadai*, பெ. (n.) வார, மாத இதழ்களில் பகுதி பகுதியாகத் தொடர்ந்து வெளியிடப்படும் நீண்ட கதை; serial in periodicals.

[தொடர் + கதை]

தொடர்குரு *todar-guru*, பெ. (n.) கொப்புளங்கள் நெருங்கத் தோன்றும் ஓர் அம்மை நோய்; confluent variola (சா.அக.).

[தொடர் + குரு. குரு - கொப்புளம்]

தொடர்கோவை *todar-kōvai*, பெ. (n.) 1. தொடரி (சங்கிலி); chain. 2. கட்டளை; commanding word. 3. தொடர்; connection. 4. நூல்; thread. 5. பஞ்சு; cotton thread. 6. பழைமை; ancient. 7. பிசின்; paste. 8. பூமாலை; garland. 9. மணம்; smell. 10. விலங்கு; animal.

[தொடர் + கோவை]

தொடர்ச்சி *todarcci*, பெ. (n.) 1. தொடர்கை; pursuit, following, continuance. 2. தொடர்பு; association, connection, touch. 'முந்தை யறிவின் றொடர்ச்சியினால்" (பெரியபு. சண்டே௪. 13). 3. உறவு முறை; relationship. 4. கொடிவழித் தொடர்பு; heriditary succession, lineal descent. 5. நட்பு; friendship, intimacy. 'தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும்" (திரிகடு. 1). 6. வரிசை; series, train, range, row, chain. "கருந்தேன் றொடர்ச்சியும்" (கல்லா. 26, 30). 7. பூங்கொத்து (பிங்.); cluster or bunch of flowers. 8. காரணிய கருமியப் பொருட்டு; chain of causes and effects. "தொடர்ச்சி . . . வித்து முளைதா னென்றிந் நிகழ்ச்சியிலவற்றை நெல்லென வழங்குதல்" (மணிமே. 30:200). 9. வழக்குத் தொடர்ச்சி (யாழ்.22); claim in a law-suit. 10. பேய்பிடிக்கை (வின்.); demoniacal possession. 11. தொடுசு (உவ.); illicit connection, concubinage. 12. முயற்சி (யாழ்.அக.); effort.

[தொடு → தொடர் → தொடர்ச்சி]

தொடர்ச்சிக்காரன் *todarcci-k-kāraṉ*, பெ. (n.). எடுத்துரைப்போன் (வாதி) (வின்.); claimant, prosecutor, plaintiff.

[தொடர்ச்சி + காரன். 'காரன்' பெயரீறு.]

தொடர்ச்சிப்பண்ணு-தல் *todarcci-p-pannu*, 15 செ.கு.வி. (v.i.) வழக்கிடுதல் (வின்.); to prosecute in law, file a suit.

[தொடர்ச்சி + பண்ணு-.]

தொடர்ச்சொல் *todar-c-col,* பெ. (n.) 1. தொடர் மொழி (வின்); compound word. 2. சொற்களின் தொடர் (யாழ்.அக.); phrase; clause; sentense.

[தொடர் + சொல்]

தொடர்சிரங்கு *todar-cirangu,* பெ. (n.) ஒன்றன் பின் ஒன்றாய்க் கிளைக்கும் சிரங்கு; itch rising one after the other (சா.அக.).

[தொடர் + சிரங்கு]

தொடர்சொல் *todar-col,* பெ. (n.) தொடர்ச் சொல் பார்க்க; see *todar-c-col.*

[தொடர் + சொல்]

ஒற்று மிகுந்தும் மிகாமலும் வரும் இயல்புடையது இச்சொல்

தொடர்சொற்புணர்த்தல் *todar-cor-punarttal,* பெ. (n.) உத்தி முப்பத்திரண்டனுள் ஒன்றற் கொன்று தொடர்புள்ள சொற்களைச் சேர்த்துக் கூறுவது (நன். 14); grouping related words, one of 32 utti.

[தொடர் + சொல் + புணர்]

தொடர்ந்தார் *todarndār,* பெ. (n.) நண்பர் (சூடா.); friends, companion.

[தொடு → தொடர் → தொடர்ந்தார்]

தொடர்ந்து *todarndu,* பெ. (n.) 1. இடை விடாமல்; continuously, without break. மூன்று நாட்களாகத் தொடர்ந்து காய்ச்சல். 2. அடுத்து, உடனே; following immediately, after. இடி மின்னலைத் தொடர்ந்து அடைமழை பெய்தது; கூட்டத்தைத் தொடர்ந்து விருந்து உண்டு.

[தொடர் → தொடர்ந்து]

தொடர்ந்தேற்றி *todarntērri,* பெ. (n.) 1. விடா முயற்சி (வின்.); perseverance, persistence. 2. தொடர்ச்சி (யாழ்.அக.); continuity.

[தொடர்ந்து + ஏற்றி]

தொடர்ந்தேற்றியாய்அரை-த்தல் *todarn-dērriyāy-arai-,* 4 செ.குன்றாவி. (v.t.) கை யோயாமல்அரை-த்தல் பார்க்க; see *kai-ōyāmal-arai-* (சா.அக.).

தொடர்நிலைச்செய்யுட்குறியணி *todar-nilai-c-ceyyut-kuri-y-ani,* பெ. (n.) வெல்ல வேண்டும் பொருளின் கரணியத்தை வெளிப்படையாகக் கூறும் அணிவகை (அணியி. 60); a figure of speech in which the cause that is to be inferred is plainly stated in words.

[தொடர்நிலை + செய்யுள் + குறி + அணி]

தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி *todar-nilai-c-ceyyut-porut-pērani,* பெ. (n.) தண்டத்தைத் தின்ற எலி அதிலேயுள்ள அப்பத்தையுந் தின்றிருப்பது பெறப்படுவது போல வெளிப்படையான செய்தியை யுணர்த்தும் அணிவகை (அணியி. 50); a figure of speech in which a statement leads to an inference by the application of taṇḍāpūbigā-niyāyam.

[தொடர்நிலைச்செய்யுள் + பொருட் பேறணி]

தொடர்நிலைச்செய்யுள் *todar-nilai-c-ceyyul,* பெ. (n.) ஒரு கதைமேல் நாற் பொருளும் வனப்பும் அமைய இயற்றப்படும் செய்யுணூல் (சீவக. 1, உரை); narrative poem, epic poem.

[தொடர்நிலை + செய்யுள்]

இது, பொருள் தொடர்நிலைச் செய்யுளும், சொற்றொடர் நிலைச் செய்யுளும் என இரு வகைத்து.

தொடர்ப்பாடு *todar-p-pādu,* பெ. (n.) 1. தொடர்ச்சி (யாழ்.அக.); continuity. 2. பற்று; connection, attachment. "மற்றுந் தொடர்ப் பாடெவன்கொல்" (குறள், 345). 3. காம நுகர்ச்சி; sexual enjoyment. உய்யு மேற்றொடர்ப் பாட்டினிங் கியாவையும் எய்தி னார்களு முய்யவென் றோதினான் (சீவக. 1426).

[தொடர் → தொடர்பாடு]

தொடர்ப்பூ *todar-p-pū,* பெ. (n.) விரிபூ (பிங்.); full-blown blossim.

[தொடர் + பூ]

தொடர்பற *todarpara,* பெ. (n.) முழுவதும்; entirely, without the least trace. "இப்புனத்துத் தினையுள்ளது இன்று தொடர்பறக் கொய்தற்றது" (திருக்கோ. 143. அவ).

[தொடர்பு + அற]

தொடர்பின்மையணி *todarpinmai-y-ani,* பெ. (n.) தொடர்பின்றி வினை நிகழ்ந்ததாகக்

கூறும் அணி (அணியி. 37); a figure of speech in which a fact is stated without any relevancy.

[தொடர்பு + இன்மை + அணி]

தொடர்பு[1] *todarbu*, பெ. (n.) 1. தொடர்ச்சி, 1, 2, 3, 4, 6, 8, பார்க்க; see *todarcci*. 2. நட்பு; attachment, friendship. 'அஞ்சுக கேள்போற் பகைவர் தொடர்பு" (குறள், 882). 3. பாட்டு (பிங்.); verse, poem. "ஏனோர் வளங்கெழு தொடர்பு போலும் மற்றைய பழமும்" (பிரபுலிங். ஆரோக. 36). 4. நெறி; முறைமை; rule, principle. "உயிரெலா . . . பிரிந்துபோந் தொடர்பு" (சேதுபு. கந்தமா. 82). 5. ஒட்டுகை (வின்.); stickiness.

[தொடு → தொடர் → தொடர்பு]

தொடர்பு[2] *todarpu*, பெ. (n.) 1. உடற்றொடர்பு; carnal intercourse. 2. உறவு; chemical affinity (சாஅக.).

[தொடு → தொடர் → தொடர்பு]

தொடர்புகொள்-தல் *todarbu-kol-*, 7 செ.குன்றாவி. (v.t.) 1. செய்திப் பரிமாற்றம் கொள்ள வழி ஏற்படுத்துதல்; get in touch with. மருத்துவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினேன் (உ.வ.). பேராசிரியரோடு மடல் வழியாகத் தொடர்பு கொண்டேன் (உ.வ.). இந்த வேலையில் சேர விருப்பம் உள்ளவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் (உ.வ.).

[தொடர்பு + கொள்]

தொடர்புநோய் *todarbu-nōy*, பெ. (n.). பிறப்பிலேயே வாய்த்த நோய்; hereditary disease (சாஅக.).

[தொடர்பு' + நோய்]

தொடர்புயர்வுநவிற்சி *todarpuyarvu-navirci*, பெ. (n.) தொடர்பில்லாதிருப்பத் தொடர்பையும் தொடர்பிருப்பத் தொடர் பின்மையையும் கூறும் உயர்வு நவிற்சியணி; a variety of hyperbole in which an imaginary connection is stated between two objects.

[தொடர்பு + உயர்வு நவிற்சி]

தொடர்முருந்து *todar-murundu*, பெ. (n.) மெதுவெலும்பு; loose cartilage (சாஅக.).

மறுவ. முருக்கெலும்பு

[தொடர் + முருந்து]

தொடர்முழுதுவமை *todar-mulutuvamai*, பெ. (n.) உவமானச் சொற்றொடரிலும், உவமேயச் சொற்றொடரிலும், பொதுத் தன்மையைத் தெரிவிக்குஞ் சொல் தனித்தனி வரும் அணி (அணியி. 17); a figure of speech in which the point of comparison is clearly stated both in the sentence containing the upamānam and in the sentence containing the upamēyam.

[தொடர் + முழுதும் + உவமை]

தொடர்முறி *todar-muri*, பெ. (n.) ஒருவர் மீது இனி வழக்குத் தொடர்வதில்லை என்று உறுதி செய்து எழுதிக் கொடுக்கும் ஆதரவுச் சீட்டு (W.G); a deed or promise in writing not to pursue a person further at law.

[தொடர் + முறி]

தொடர்மொழி *todar-moli*, பெ. (n.) 1. இரண்டெழுத்துக்கு மேற்பட்ட எழுத்து களைக் கொண்ட சொல்; a word of more than two letters. "இரண்டிறந் திசைக்குந் தொடர் மொழி யுளப்பட" (தொல்.எழுத்து. 45). 2. சொற்களால் ஆகுந்தொடர்; a phrase, clause or sentence made up of words. "தொடர் மொழி பலபொருளன" (நன். 260).

[தொடர் + மொழி]

தொடர்வட்டி *todar-vatti*, பெ. (n.) வட்டிக்கு வட்டி; compound interest.

[தொடர் + வட்டி]

தொடர்வண்டி *todar-vandi*, பெ. (n.) பல பெட்டிகளைக் கொண்ட வண்டித் தொடர்; train.

மறுவ. தொடரி

[தொடர் + வட்டி]



தொடர்வு *todarvu,* பெ. (n.) தொடர்ச்சி பார்க்க; see *todarcci.* "சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான்" *(திருவாச. 8, 20).*

தொடர்வைப்பு *todar-vaippu,* பெ. (n.) தொடர்வைப்புக்கணக்கு பார்க்க; see *todar-vaippu-k-kaṇakku.*

[தொடர் + வைப்பு]

தொடர்வைப்புக்கணக்கு *todar-vaippu-k-kaṇakku,* பெ. (n.) வங்கி, அஞ்சல் நிலையம் முதலியவற்றில் குறிப்பிட்ட ஆண்டுகள் வரைத் திங்கள்தோறும் தொடர்ந்து ஒரு தொகையைச் சேமித்து வட்டியோடு திரும்பப் பெறுதல்; recurring deposit in a bank or post office, etc.

[தொடர்வைப்பு + கணக்கு]

தொடரர் *todarar,* பெ. (n.) மேவினர் (அக.நி); dependents.

தொடரல் *todaral,* பெ. (n.) கடல் (அக.நி); sea.

[தொடு → தொடர் + அல் = தொடரல்]

தொடராமுறி *todarā-muṟi,* பெ. (n.) விடுதலையாவணம் (யாழ்.அக.); deed of renunciation or relinquishment. 2. தொடர்முறி பார்க்க; see *todar-muṟi.*

[தொடர் + ஆ + முறி. 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தொடரி[1] *todari,* பெ. (n.) 1. செடி வகை; a species of jujube. 2. முட்செடி வகை; a thorny straggling shurb. "கடுவுந் தான்றியுங் கொடுமுட் டொடரியும்" *(பெருங்.உஞ்சைக். 52, 38).* 3. புலித்தொடக்கி; tiger stopper.

[தொடு → தொடர் → தொடரி]

தொடரி[2] *todari,* பெ. (n.) தொடர்வண்டி பார்க்க; see *todar-vaṇḍi.*

ம. தொடரி, கூரி

தொடரி[3] *todari,* பெ. (n.) மாழை வளையத் தொடர்; chain.

[தொடல் → தொடர் → தொடரி (வேக. 257)]



தொடரிசைக்குறி *todar-isai-k-kuṟi,* பெ. (n.) சொல்லும் பொழுது இரண்டு மாத்திரைக் காலம் நிறுத்தும் பொருட்டு இடும் அரைப்புள்ளி (யாழ்ப்.); semi-colon.

[தொடர் + இசை + குறி]

தொடரிடு-தல் *todar-iḍu-,* 20 செ. குன்றாவி. (v.t.) இடைவிடாது செய்தல்; to work at continuously. "பாவிநான் தொடரிட்ட தொழில்க ளெல்லாம்" *(தாயு. மலைவளர். 4).*

[தொடர் + இடு-.]

தொடரியம் *todar-iyam,* பெ. (n.) பொருள் முற்றுப்பெறுமாறு எழுவாய், பயனிலை ஆகியவற்றைக் கொண்ட சொற்கூட்டு; set of words completed in itself, containing subject and predicate.

[தொடர் + இயம்]

வாக்கியம் என்பது வடசொல்

தொடரியல் *todariyal,* பெ. (n.) சொற்றொடர் அமைப்பின் விதிமுறைகளையும் சொற்றொடர்களுக்கிடையிலான உறவையும் விளக்கும் மொழியியற் பிரிவு; syntax.

[தொடர் + இயல்]

தொடரெழுத்து *todar-eḻuttu,* பெ. (n.) அவனடித் தான், வந்தடித்தான் என்னுமிடங்களில் னகரமும் தகரமும் போல் நிலைமொழி யீற்றையும் வருமொழி முதலையும் தழுவி நிற்கும் எழுத்து (யாழ்.அக.); the letter formed by the combination of the final consonant or the final shortened 'u' of a word and the initial

vowal of the succeeding word as ன in அவனடித்தான் and த in வந்தடித்தான்.

[தொடர் + எழுத்து]

தொடரொழுக்கு *todar-olukku,* பெ. (n.) தடையில்லாத ஒழுக்கு; uninterrupted or free flow of anything (சா.அக.).

[தொடர் + ஒழுக்கு]

தொடல் *todal,* பெ. (n.) தொடரி[3] பார்க்க; see *todari.*

[தொடு → தொடர் → தொடல்]

தொடலவம் *todalavam,* பெ. (n.) நெட்டி; pith (சா.அக.).

தொடலி *todali,* பெ. (n.) தொடரி[1] (யாழ்.அக.) பார்க்க; see *todari.*

[தொடு → தொடரி → தொடலி]

தொடலை *todalai,* பெ. (n.) 1. தொங்கவிடுகை; hanging, suspension. "தொடலை வாளர்" (மதுரைக். 636). 2. மாலை; garland. "தொடலைக் குறுந்தொடி" (குறள், 1135). 3. மகளிர் விளையாட்டுவகை (திவா.); a girls' game. 4. மணிக்கோவைகளால் தொடுக்கப்பட்ட மேகலை; jewelled girdle. "தொடலை யல்குற் றொடித்தோண் மகளிர்" (புறநா. 339).

[தொடு → தொடல் → தொடலை (வே.க. 251)]

தொடவல் *todaval,* பெ. (n.) மாலை (அக.நி.); garland.

[தொடு → தொடவு → தொடவல் (வே.க. 257)]

தொடாக்காஞ்சி *todā-k-kāñji,* பெ. (n.) போர்ப் புண்ணுற்ற தன் கணவனைப் பேய் தீண்டுதலை நீக்கிய மனைவி தானுந் தீண்டா திருத்தலைக் கூறும் புறத்துறை (பு.வெ. 4,19); a theme describing the devils being scared away by the ghastly wounds of a warrior lying in the battle field.

[தொடு + ஆ + காஞ்சி. 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தொடாச்சாதி *todā-c-cādi,* பெ. (n.) தீண்டாக் குலம்; untouchable caste. மறுவ. கீழ்ச்சாதி

[தொடு + ஆ + சாதி. 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தொடாப்பூ *todā-p-pū,* பெ. (n.) 1. விரிந்த பூ; blossomed flower. 2. பெண்குறி மலர்; கன்னிப்பூ; an organ of the female genital (சா.அக.).

[தொடு + ஆ + பூ. 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தொடி *todi,* பெ. (n.) 1. வளைவு; curve, bend. "தொடிவளைத் தோளும்" (சிலப். 10:128). 2. கைவளை (பிங்.); bracelet. "குறுந்தொடி கழித்தகைச் சாபம்பற்றி" (புறநா. 77). 3. தோள் வளை; armlet. "நீப்ப நீங்காது வரின்வரை யமைந்து . . . போக்கில் பொலந்தொடி" (நற். 136). 4. வீரவளை; armlet, wârrior's armlet. "வலிகெழு தடக்கை தொடியொடு சுடர்வர" (மதுரைக். 720). 5. பூண்; ring, ferrule, ornamental knob of an elephant's tusk. "தொடித்தலை விழுத்தண்டூன்றி" (புறநா. 243). 6. பாறைக் கிணறுகளில் படியாக உதவ வெட்டப்படும் சுற்றுவட்டம் (இ.வ.); circular projections in stone wells serving as steps. 7. பலம் என்னும் பண்டைய எடையளவு; a standard weight. "தொடிப்புழுதி கஃசா வுணக்கின்" (குறள், 103).



தொடிசு[1] *todišu,* பெ. (n.) கூத்திவைப்பு; illegitimate connections, concubinage.

[தொடு → தொடுசு → தொடிசு (மு.தா. 86)]

தொடிசு[2] *todisu,* பெ. (n.) 1. உடந்தை; support. 2. தொடர்வு; connection.

[தொடுசு → தொடிசு]

தொடித்தலைவிழுத்தண்டினார் *todi-t-talai-vilu-t-tandinār,* பெ. (n.) *புறநானூற்றில் 243ஆம் பாடலை இயற்றிய புலவர்;* an ancient poet, author of 243rd poem in pura-nānūru.

[தொடித்தலை விழுத்தண்டு → தொடிதலை விழுத்தண்டினார்]

தொடிமகள் *todi-magal,* பெ. (n.) விறலி பார்க்க; see *virali. "தொடிமகண் முரற்சிபோல்" (கலித். 36, 4).*

[தொடி + மகள்]

தொடியோள் *todi-yōl,* பெ. (n.) **பெண்;** woman.

[தொடி → தொடியோள்]

தொடியோள்பௌவம் *todi-yōl-pauvam,* பெ. (n.) *குமரியாறு;* the ancient river kumari.

[தொடியோள் + பௌவம்]

குமரியாற்றைக் கடல்கொண்டபின், அவ்விடத்துள்ள கடல் குமரிக்கடல் எனப்பட்டது. இப்போது அப்பக்கத்துள்ள நிலக்கோடி குமரிமுனையென்னப்படுகிறது.

கோவலன் காலத்தில் குமரியாறு இருந்தமை, மாடலன் என்னும் மறையோன் அதில் நீராடி விட்டுத் திரும்பும்போது, மதுரையில் கோவலனைக் கண்டதாகக் கூறும் சிலப்பதிகாரச் செய்தியால் அறியலாகும். கோவலன் இறந்து சில ஆண்டுகட்குப் பின், குமரியாற்றைக் கடல் கொண்டது. அதன்பின் சிலப்பதிகாரம் இயற்றப் பட்டதினால், 'தொடியோள் பௌவமும்" என்று தெற்கிற் கடலெல்லை கூறப்பட்டது.

'தொடியோள் பௌவம்' என்பதற்கு அடியார்க்கு நல்லார் கூறிய குறிப்புரையாவது:

"தொடியோள் - பெண்பாற் பெயராற் குமரியென்பதாயிற்று. ஆகவே, தென்பாற் கண்ணதோர் ஆற்றிற்குப் பெயராம். ஆனால், நெடியோன் குன்றமும் தொடியோள் நதியுமென்னாது பௌவமுமென்றது என்னையெனில், முதலூழியிறுதிக்கண், தென் மதுரையகத்துத் தலைச்சங்கத்து, அகத்தியனாரும் குமரவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனும் என்றிவருள்ளிட்ட, நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர், எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையுள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து, நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றி யாண்டு இரீஇயினார், காய்சின வழுதிமுதற் கடுங்கோனீறாயுள்ளார் எண்பத் தொன்பதின்மர்; அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியருள் ஒருவன், சயமா கீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீஇயினான். அக்காலத்து அவர்நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னும் ஆற்றிற்கும் குமரியென்னுமாற்றிற்கு மிடையே, எழுநூற்றுக்காவதவாறும், இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும், ஏழ்மதுரைநாடும், ஏழ்முன் பாலை நாடும், ஏழ்பின் பாலை நாடும், ஏழ்குன்ற நாடும், ஏழ்குணகாரை நாடும், ஏழ்குறும்பனைநாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்ல முதலிய பன்மலைநாடும், காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின் காறும், கடல்கொண்டொழி தலாற் குமரியாகிய பௌவமென்றாரென் றுணர்க. இஃது என்னை பெறுமாறெனின், 'வடிவேலெறிந்த . . . கொடுங்கடல் கொள்ள' என்பதனாலும், கணக்காயனார் மகனர் நக்கீரனாருரைத்த இறையனார் பொருளுரையானும், உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் முகவுரையானும் பிறவாற்றானும் பெறுதும்' என்பது.

இதில், பஃறுளியாற்றிற்கும் குமரிக்கும் இடையிலுள்ள சேய்மை 700 காவதம் என்று கூறப்பட்டுள்ளது. இப்போது ஒரு காவதம் பத்துமைல் என்றும் சொல்லப்படுகிறது. முற்காலத்தில் அது எத்துணைச் சேய்மையைக் குறித்ததோ தெரியவில்லை. இக்கால அளவுப்படி கொண்டாலும், தென்துருவத்திற்கும் குமரி முனைக்கும் இடையிலுள்ள சேய்மை ஏறத்தாழ 7000 மைல் என்பதைத் திணைப்படத்தினின்றும் அறியலாம். தென்துருவ அண்மையில் விக்றோரியா நாடு (Victoria Land) என்றொரு நிலப்பகுதியுமுள்ளது. அப்பகுதியும் குமரி முனையும் ஒருகால் இணைக்கப்பட்டு ஒரு நெடுநிலப் பரப்பாகவும் இருந்திருக்கலாம். ஆனாலும், தென்துருவ வரையில், தமிழ்நாடு இருந்திருக்க முடியாது. ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் ஆப்பிரிக்காவும் ஒருகாலத்தில் இணைக்கப்பட்டிருந்தனவென்று மேனாட்டுக் கலைஞர் கூறியிருப்பதினின்றும், இம்முக்கண்டங்களுக்கும் நிலைத்திணை,

பறவை, விலங்கு, மாந்தன்குலம், மொழி முதலியவற்றிலுள்ள பல ஒப்புமைகளினின்றும், தெற்கே 3000 கல்தொலைவுவரை தமிழர் வதிந்திருக்கலாமென்று தோன்றுகிறது.

குமரியாறு கடலில் அமிழ்ந்தது கடைக்கழகக் காலமாதலின், இடைக்கழக நூலாகிய தொல்காப்பியப் பாயிரத்திற் குமரியென்று குறிக்கப்பட்டது குமரியாறேயாகும். இது,

"தொல்காப்பியம் அதன் வழிநூலென்பதூஉம், அது தானும் பனம்பாரனார்,

"வடவேங்கடந் தென்குமரி" (பாயிரம்)

எனக் குமரியாற்றினை எல்லையாகக் கூறிப் பாயிரஞ் செய்தமையிற் ...... கடலகத்துப் பட்டுக் குமரியாறும் பனை நாட்டோடு கெடுவதற்கு முன்னையதென்பதூஉம்" என்று பேராசிரியர் கூறியதினின்றறியப்படும்.

ஆகவே, தெற்கில் கடலையெல்லையாகக் கூறும் நூல்களெல்லாம், குமரியமிழ்ந்ததற்குப் பிற்பட்டனவே யாகும்.

"வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு கரைபொருது
கிடந்த
நாட்டியல் வழக்கம் . . ."

எனத் தெற்குக் குமரியன்றிக் கடலெல்லை யாகிய காலத்துச் சிறு காக்கைபாடினியார் செய்தநூல்" என்று பேராசிரியர் கூறியதுங் காண்க (ஒ.மொ. 42-44).

தொடு[1] *toḍu*, பெ. (n.) **பழுவெலும்பு;** collar bone.

[தோள் → தொள் → தொடு]

தொடு[2]**-தல்** *toḍu-*, 17 செ.குன்றாவி. (v.t.) *1.* **தீண்டுதல்;** to touch, come in contact with feel or perceive by the touch. "தொடிற்சுடி னல்லது" *(குறள், 1159). 2.* **பிடித்தல்;** to handle, take hold of, use. "தொட்ட மூவிலைச் சூலந் துளக்குவார்" *(கந்தபு. வீரபத். 38).* 3. **பொருந்துதல்;** to be connected, united with or joined to. *4.* **அணிதல்;** to put on, as a ring, clothes. "சுறாவே றெழுதிய மோதிரந் தொட்டாள்" *(கலித். 84, 23).* 5. **தோண்டுதல்;** to dig, scoop out, excavate. "குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்" *(புறநா. 6).* குளம்தொட்டு வளம் பெருக்கி *(உ.வ.).* 6. **துளைத்தல்;** to pierce through. "உழலை மரத்தைப்போற் றொட்டன வேறு" *(கலித். 106).* 7. **தொடங்குதல்;** to begin. "அன்று தொட் டனங்கனே யாயினான்" *(கம்பரா. தாடக. 1).* 8. **செலுத்துதல்;** to discharge, as an arrow or other missile. "கடுங்கணைக டம்மைத் தொட்டனன்" *(கந்தபு.சூரபன்மன்வ. 191).* 9. **உண்ணுதல்** (சூடா.); to eat. *10.* **நினைத்தல்;** to think. "நின்பெருமுலை மூழ்க வென்னுளத் தினிற் றொடாமுன்" *(கல்லா. 52, 5).* 11. **இசைக் கருவி இசைத்தல்;** to play, as a musical instrument; to beat, as a drum. "கலித்த வியவ ரியந்தொட் டன்ன" *(மதுரைக். 304).* 12 **கட்டுதல்;** to fasten, insert. "கிண்கிணி களைந்தகா லொண்கழ றொட்டு" *(புறநா. 77).* 13. **அடித்தல்;** to strike, beat. "ததிமுகாதிகளை நான் தொட்டுத் தருகிறேன்" *(ஈடு. 3, 5 பிர.).* 14. **பிழிதல்;** to strain, squeeze out as juice. "நறவுந் தொடுமின்" *(புறநா. 262).* 15. **ஆணையிடுதல்;** to swear upon. "தொட்டு விடுத்தே னவனை" *(சீவக. 1876).* 16. **எடுத்தல்;** to take up, lift. "பதுமுகன் சிலை தொட்டானே" *(சீவக. 1862).* 17. **வெளுத்தல்;** to wash, as clothes. "இவற்றைத் தொட்டபடி" *(ஈடு. 10,5,6).* 18. **மகளிரொடு கூடுதல்** (இ.வ.); to have intercourse. *19.* **செருப்பணிதல்;** to wear, as shoes. "பாதஞ் சேரத்தொடு நீடுசெருப்பு" *(பெரியபு. கண்ணப்ப. 62).*

[தள் → தொள் → தொடு]

தொடுதல் (அல்லது முட்டுதல்) என்பது, உள்ளிருந்து தொடுதல் வெளியிருந்து தொடுதல் என இருவகைத்து. கருப்பைக் குள்ளிருந்து தாய் வயிற்றைக் குழவிமுட்டுதல் உள்ளிருந்து தொடுதல். தாய் வயிற்றினின்று பிறந்த உயிர்கள் தம்மை அடுத்தவற்றைத் தொடுவது வெளியிலிருந்து தொடுதல். மரத்துள்ளிலிருந்து துளிரும் நிலத் துள்ளிலிருந்து முளையும் முண்டி வருவது போல, தாய் வயிற்றினுள்ளிருந்து குழவியும் முண்டி வெளிவருவது அதற்குத் தோற்றம் (மு.தா. 154).

தொடு[2]**-தல்** *toḍu-*, செ.கு.வி. (v.i.) **உண்டாதல்;** to occur, happen, come into being. "பழிபாவமுந் தொடுமே" *(விநாயகபு. 77, 35).*

தொடு[3]**-த்தல்** *toḍu-*, 17 செ.குன்றாவி. (v.t.) *1.* **இயைத்தல்;** to connect, join. *2.* **விடாது புரிதல்;** to frame one after another or weave,

as an argument. "மாறுபடு தர்க்கந் தொடுக்க வறிவார்" (தாயு. ஆனந்தமான. 3). 3. கட்டுதல்; to bind, fasten, enchain, tie, continue, as a series. "சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்" (முல்லைப். 12). 4. பூட்டுதல்; to set, fix, as the arrow in a bow. 'தொடுத்தாங்க வம்பு" (சீவக. 2320). 5. எய்தல்; to discharge, shoot, as an arrow or other missile. "கணை தொடுக்குங் கொடியோன் போல்" (கலித். 120). 6. பூ முதலியன இணைத்தல்; to link together; to string, as beads. "மலராய்ந்து பூத்தொடுப்பாள்" (நாலடி, 393). 7. சேர்த்து வைத்தல்; to store, preserve. "காந்தட் டொடுத்த தேன் சோர" (கலித். 40). 8. வளைத்தல்; to surround, hem in, besiege. "தொடுத்துங் கொள்ளாதமையலென்" (புறநா. 164). 9. வளைத்துக் கைக் கொள்ளுதல்; to seize by surrounding. "தமதெனத் தொடுக்குவராயின்" (புறநா. 135). 10. தொடங்குதல் ; to commence. "மற்றிவற்றை நோற்பான் றொடுக்குறின்" (உபதேசகா. சிவவிரத. 410). 11. உண்டாக்குதல்; to create. "சங்கற்ப மொன்றிற் றொடுக்குந் தொடுத்தழிக்கும்" (தாயு.எங்குநிறை. 4). 12. மேற் கொள்ளுதல்; to undertake. "தொடுத்த கருமம் வழுவாது" (காசிக. கணபதி. 1).13. பாப் புனைதல்; to make, compose, as verses, poem. "ஆசறு கவி தொடுத்த" (சீகாளத்பு. நக்கீ. 131).14. அழுத்தமின்றி மேலெழ வைத்தல் (வின்.); to join slightly, as beads or threads: to work superficially: to put on negligently, as a garment or an ornament. 15. அணிதல்; to wear, as clothes. "குஞ்சியி னாள்கதிர் நெற் றொடுத்து" (கம்பரா. கங்கை. 32). 16. உரிமையின்றிப் புணர்தல்; to carry on a licentious intrigue. 17. கதைகட்டுதல் (உ.வ.); to fabricate, concoct a false story. 18. வழக்குத் தொடர்தல்; to pursue in law; to sue. "பெண்டீர் தொடுத்தாண் டவைப்போர் புகலும்" (திரிகடு. 71). 19. சொற் கூட்டுதல் (அக.நி.); to frame or build, as sentences. 20. வசை பெருக்குதல்; to shower abuses. 21. வகுத்தல்; to classify.

தொடு⁴-த்தல் *todu-*, செ.கு.வி. (v.i.) 1. வகுக்கப் படுதல் (திருக்கோ. 267); to be apportioned. 2. நெருங்கியிருத்தல்; to be close-packed, dense. "தொடுத்த மாதவிப் பந்தரின்" (கம்பரா. சித்திர. 23). 3. அறிமுகமாதல் (இ.வ.); to become known.

தொடு⁵ *todu-*, பெ. (n.) 1. மருத நிலம்; field, agricultural land. 2. தோட்டம்; garden. 3. ஏமாற்று; deceit, guile.

தொடுக்கம் *todukkam*, பெ. (n.) பொன் (பிங்.); gold

தொடுக்கு *todukku*, பெ. (n.) தொசுக்கு பார்க்க; see *tošukku*.

[தொடு → தொடுக்கு (மு.தா. 86)]

தொடுகடல் *todu-kadal*, பெ. (n.) கீழ்க்கடல்; eastern ocean. "குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்" (புறநா. 6).

[தொடு + கடல்]

தொடுகடி *todu-kadi*, பெ. (n.) மேற்கடி; bite.

தொடுகயிறு *todu-kayiru*, பெ. (n.) உழவுக் கயிறு; rope used in ploughing.

ம. தொடு கயறு

[தொடு + கயிறு]

தொடுகழல் *todu-kalal*, பெ. (n.) செருப்பு (அக.நி.); slippers.

[தொடு + கழல்]

தொடுகறி *todukari*, பெ. (n.) உணவுடன் சேர்த்துச் சாப்பிடுவதற்கான காய்கறி போன்ற உணவு பொருள்; dish prepared to go with courses of a meal. இரண்டு வகைத் தொடு கறியுடன் விருந்து ஏற்பாடு செய்துள்ளேன்.

[தொடு + கறி]

தொடுகிலும் *todugilum*, வி.அ. (adv.) ஒரு பொழுதும் (யாழ்ப்.); it all, in any wise.

தொடுகுறி *todukuri*, பெ. (n.) கிணறு வெட்டும் முன் அவ்விடத்தில் உள்ள நீரின் ஆழம், தன்மை அறிவதற்குப் பின்பற்றப்படும் வழக்கு; a measurement used to know the depth of the well before digging.

[தொடு + குறி]

உடம்பின் ஒரு பகுதியை நெற்றி, கை, கால், கண், காது, மூக்கு எனத்தொட்டு அதற்கு வகுக்கப்பட்ட நெறிகளின் மூலம் நீரியல்பு அறிதலாகும் (கட்டடட).

தொடுகை *todugai,* பெ. (n.) 1. தொடுதல்; touching. 2. பிடித்தல்; taking hold of (சா.அக.).

[தொடு → தொடுகை]

தொடுசு *todušu,* பெ. (n.) தொடிசு பார்க்க; see *todišu.*

தொடுசுவை *todu-švai,* பெ. (n.). உணவுடன் கொள்ளும் ஊறுகாய், துவையல் முதலியன; a relish to food condiment (சா.அக.).

[தொடு + சுவை]

தொடுத்து *toduttu,* இடை. (part.) முதல்; from, ever since. அன்று தொடுத்து.

[தொடு → தொடுத்து]

தொடுத்துவிடு-தல் *toduttu-vidu-,* 18 செ.குன்றாவி. (v.i.) 1. சேர்த்துக் கட்டுதல்; to fasten together; to take on. 2. நெறிதவறிச் சேர்த்தல் (வின்.); to unite persons irregularly in marriage. 3. நீக்குதல் (வின்.); to put out, as an apprentice. 4. ஒவ்வொன்றாய் அல்லது ஒவ்வொருவராய்ப் போம்படி செய்தல் (இ.வ.); to cause to go in single file.

[தொடுத்து + விடு-.]

தொடுத்துவை-த்தல் *toduttu-vai,* 4 செ.குவி. (v.i.) எளிதாக இணைத்தல்; to attach, fasten or stich lightly.

[தொடுத்து + வை-.]

தொடுதுணை *todu-tunai,* பெ. (வி.) உதவி; help.

[தொடு + துணை]

தொடுதோல் *todu-tōl,* பெ. (n.) செருப்பு; sandals, slippers (பட்டினப். 265).

மறுவ. காலணி

[தொடு + தோல்]

தொடுப்பி *toduppi,* பெ. (n.) புறங்கூறுவோன்; slanderer, tale-bearer.

[தொடு → தொடுப்பி]

தொடுப்பு[1] *toduppu,* பெ. (n.) பொருத்து; joint (சா.அக.).

[தொடு → தொடுப்பு]

தொடுப்பு[2] *toduppu,* பெ. (n.) 1. தொடர்பு; sexual relation, intercourse. 2. கள்ளக் கணவன்; paramour (சா.அக.).

[தொடு → தொடுப்பு]

[தொடுப்பாவது இருபொருட்குண்டான தொடர்பு. அது ஒன்றையொன்று தொட்டபின் நிகழ்வது (மு.தா. 86)]

தொடுப்பு[3] *toduppu,* பெ. (n.) 1. எய்கை; discharging. 2. தொடர்ந்திருக்கை; continuity. 3. கட்டுகை; fastening, changing, linking. 4. கட்டு; tie, bandage. 5. தொடரி (சங்கிலி) (யாழ்.அக.); chain. 6. விதைப்பு; sowing. "தொடுப்பினாயிரம் வித்தியது விளைய" (மதுரைக். 11). 7. கலப்பை (பிங்.); plough. 8. தந்திரம் (யாழ்அக.); stratagem. 9. வளைத்து உழுகை; ploughing in rounds. "தொடுப்பே ருழவர்" (சிலப். 29:230). 13. குறளை (திவா.); slander, aspersion. 11. தொடுசு; illicit connection. அவனுக்கும் அவளுக்கும் வெகு காலமாகத் தொடுப்புண்டு. 12. கூட்டுறவு (வின்.); close intimacy. 13. செய்கைத் தொடர்ச்சி; pursuit, prosecution. 14. காலணி (வின்.); sandals. 15. கள்ளக்கணவன் அல்லது கூத்தி; paramour, concubine. 16. கட்டுக்கதை (வின்.); fabrication, concoction. 17. மரக்கொம்பு; branch of a tree. 18. பழக்கம் (யாழ்அக.); practice. 19. தொடக்கம் (யாழ்அக.); commencement.

ம. தொடுப்பு

[தொடு → தொடுப்பு]

தொடுப்பு[4] *toduppu,* பெ. (n.) களவு; theft. "தொடுப்புண்டாய் வெண்ணெயை யென்று" (திவ். பெரியாழ். 2, 3, 9, வியா. பக். 297).

தொடுப்புக்கட்டு-தல் *toduppu-k-kattu-,* 12 செ.குன்றாவி. (v.t.) மனவுறுதியோடு பின்பற்றுதல்; to pursue with malice.

[தொடுப்பு + கட்டு-.]

தொடுப்புக்கத்தி *toduppu-k-katti,* பெ. (n.) பட்டாக்கத்தி (வின்.); a sword with an iron gard covering the arm upto the elbow.

[தொடுப்பு + கத்தி]

தொடுப்புக்காரன் *toduppu-k-kāraṉ,* பெ. (n.) *1. கள்ளக் கணவன்;* paramour. *2. நெருங்கிய நண்பன்;* intimate friend.

[தொடுப்பு + காரன்]

தொடுப்புரசம் *toduppu-rašam,* பெ. (n.) வேதையில் மாற்றுயரச் செய்யும் கொங்கணவர் பொன்னாக்கப் பாவியத்தில் சொல்லியுள்ள பொன்னின் தரமுயர்த்தும் பத்து வகை இதளியச் சத்துகளுள் ஒன்று; one of mercury preparations contemplated in Konganavar's work in Alchemy which is capable to increase the fineness of gold in transmutation of metals *(சா.அக.).*

தொடுப்பெலும்பு *toduppu-elumbu,* பெ. (n.) *பொருத்தெலும்பு;* bones of a joint.

[தொடுப்பு + எலும்பு]

தொடுபதம் *todu-padam,* பெ. (n.) சோறு (W); boiled rice.

[தொடு + பதம்]

தொடுபிடியாக *todu-pidi-y-āka,* வி.எ. (adv.) *1. இடைவிடாமல்;* continuously; in quick succession. *2. விரைவாக;* with all speed, expeditiously. வேலை தொடுபிடியாக நடக்கிறது.

[தொடு + பிடி + ஆக]

தொடுவழக்கு[1] *todu-vaḻakku,* பெ. (n.) தொடர்ந்து வரும் வழக்கு (W.G.); a long - pursued litigation. 2. விடாது பற்றிவரும் வழக்கம்; persistent habit. "திரும்புமோ தொடுவழக்காய்" *(தாயு. பரிபூ. 5).*

[தொடு + வழக்கு]

தொடுவழக்கு[2] *todu-vaḻakku,* பெ. (n.) கள்ள வழக்கு; litigation on false hood.

[தொடு + வழக்கு]

தொடுவாய் *todu-vāy,* பெ. (n.) *1. கூடுமிடம் (யாழ்ப்.);* confluence or junction, as of two rivers or of a river with the sea. *2. புறங்கூறுகை (அக.நி.);* slander, aspersion.

[தொடு + வாய்]

தொடுவான்[1] *todu-vāṉ,* பெ. (n.) பிணையடி மாடுகளைத் தொடுக்குங் கயிறு *(யாழ்ப்.);* rope attached to a pole with a swivel to which the inner yoke of oxen is tied, the others being tied ox to ox.

[தொடு → தொடுவான்]



தொடுவான்[2] *todu-vāṉ,* பெ. (n.) *அடிவானம்;* horizon, as the place where the heavens touch the earth.

[தொடு + வான். வான் = வானம்]

தொடுவான்கயிறு *toduvāṉ-kayiṟu,* பெ. (n.). தொடுவான்[1] (வின்.) பார்க்க; see *toduvāṉ.*

[தொடுவான் + கயிறு]

தொடுவானம் *todu-vāṉam,* பெ. (n.) தொடுவான்[2] பார்க்க; see *toduvāṉ.*

[தொடுவான் → தொடுவானம்]

தொடுவிண்டு *todu-viṇḍu,* பெ. (n.) தொடரி[1] பார்க்க; see *todari (சா. அக.).*

[தொடு + விண்டு]

தொடுவிலங்கு *todu-vilaṅgu,* பெ. (n.) இருவரைத் தளைக்கும் விலங்கு (யாழ்.அக.); fetters binding two persons to each other.

[தொடு + விலங்கு]



தொடுவு *toduvu*, பெ. (n.) 1. கொல்லை (சது.); paddock, in closed ground adjoining a house. 2. களவு; theft. "வெண்ணெய் தொடுவுண்ட" (திவ். திருவாய். 3, 5, 3. ஜீ).

[தொடு → தொடுவு. வீட்டைத் தொடர்ந்த கொல்லை (மு.தா. 86)]

தொடுவை[1] *toduvai*, பெ. (n.) 1. தொடுத்திருப்பது; which is joined or appended. 2. புதிய யானையைப் பயிற்றும் யானை; tame elephant to which a wild one is enchained for taming. 3. பாங்கன்; associate, crony. 4. வைப்புக் காதலர்; man and woman living in concubinage.

தொடுவை[2] *toduvai*, பெ. (n.) ஒன்றின் சேர்க்கை; anything or part appended something subsidiary hanging or attached (சா.அக.).

[தொடு → தொடுவை]

தொடுவைவள்ளம் *toduvai-vallam*, பெ. (n.) துணைச் சிறுபடகு (வின்.); boat attached to a dhoney.

[தொடுவை + வள்ளம்]

தொடை[1]**-த்தல்** *todai-*, 4 செ.குன்றாவி. (v.t.) துடை-த்தல் பார்க்க; see *tudai-*. "துன்பந் தொடைக்குந் துணைவன் காண்" (அருட்பா. 9, திருமு. நெஞ்சறி. 190).

[துடை → தொடை (கொ.வ.)]

தொடை[2] *todai*, பெ. (n.) 1. வீரரின் ஐம்பெருஞ் செய்கைகளுளொன்றாகிய அம்பெய்கை; discharging, shooting. "செந்தொடை பிழையா வன்க ணாடவர்" (புறநா. 3). (சீவக. 1676, உரை). 2. பின்னுகை; braiding, weaving. "தொடையுறு வற்கலை யாடை" (கம்பரா. முதற்போ. 109). 3. இடையறாமை; unbroken succession or continuity. "தொடையிழி யிறாலின் றேனும் (கம்பரா. நாட்டுப்.9). 4. கட்டுகை; fastening, tying. "தொடை மாண்ட கண்ணியன்" (கலித். 37). 5. எற்று; kicking, stroke. "ஒருதொடையான் வெல்வது கோழி" (நான்மணி. 54). 6. தொடர்ச்சி; series, train, succession. "தாபதர் தொடை மறை முழக்கும்" (கல்லா. 39, 10). 7. வடம்; string. "முத்துத் தொடை" (பரிபா. 6, 16). 8. சந்து; joints of the body. "வணங்கு தொடைப் பொலிந்த வலிகெழு நோன்றாள்" (புறநா. 78). 9. கொத்து; cluster, bunch. "தொடைமலர் வெறுக்கை யேந்தி" (சீவக. 2708). 10. பூமாலை (பிங்.); flower garland. 11. மலர் முறுக்கு; compactness of an unblown flower. "தொடையவிழ் தண்குவளை (பு.வெ.பொது. 1). 12. யாழ் நரம்பு; lute string. 13. வில்லின் நாண் (பிங்.); bowstring. "தொடையை நிரம்ப வாங்கி விடாத முன்பே" (சீவக. 2320). 14. அம்பு (சூடா.); arrow. 15. படிக்கட்டு; stairs, step. "குறுந்தொடை நெடும்படிக்கால்" (பட்டினப். 142). 16. கருத்து முரண்; question, criticism. "தொடைவிடை யூழாத் தொடைவிடை துன்னி" (பு.வெ. 8, 19). 17. தொடர்மொழி (அக.நி.) பார்க்க; see *todar-moli*. 18. தாறு; bunch of fruits. "பூமாண்ட தீந்தேன் றொடைகீறி" (சீவக. 31). 19. மதிற்சுற்று (திவா.); surrounding wall, bulwark, fortification. 20. சுவர்ப்புறத்து வைத்த உத்திரந் தாங்கு கட்டை (வின்.); block projecting from a wall to support a beam. 21. பாட்டு; stanza, verse. 22. மோனைத் தொடை, எதுகைத் தொடை, முரண் தொடை, இயைபுத் தொடை, அளபெடைத் தொடை என்ற ஐவகையான செய்யுள் தொடுக்கும் வகை (இலக்.வி. 723); mode of versification of five kinds viz, mōṉai-t-toḍai, edugai-t-toḍai, muraṉ-toḍai, iyaibu-t-toḍai, alapeḍai-t-toḍai. 23. தொடைக்கயிறு பார்க்க; see *todai-k-kayiru*. "எழுநுகத் தோடிணைப்பகடு தொடுத்த தொடை" (ஏரெழு. 10). 24. சட்டம்; law. "தொன்மனுநூற் றொடைமனுவாற் றொடைப்புண்டது" (பெரியபு. மனுநீதி. 37).

ம. துட; க., து., குட., பட. தொடெ; தெ. தொட; துட. த்வட்; குவி. துந்து (இடுப்பு); கொலா. துட் (இடுப்பு)

[தொடு → தொடை]

தொடை[3] *todai*, பெ. (n.) முத்து எடுக்கும்போது ஒரு குளிப்பில் கவர்ந்து வரும் சரக்கு (W.G.); the produce of a single diving, in pearl-fishery.

[தொடு → தொடை]

தொடை[4] *todai*, பெ. (n.) 1. மாந்தரின் இடுப்புக்கும் முழங்காலுக்கும் இடையே உள்ள பகுதி; of human beings thigh. 2. விலங்குகளில் பின்னங்கால்களின் மேல்

உள்ள சதைப்பற்று மிகுந்த பகுதி; of animals upper part of the hind legs, shank.

[தொடு → தொடை]



தொடைக்கயிறு *todai-k-kayiṟu,* பெ. (n.) கலப்பை நுகத்தொடு எருதை இணைக்கும் சிறுகயிறு (இ.வ.); small rope used in tying the plough-ox to the yoke.

[தொடு → தொடை + கயிறு]



தொடைக்கவுட்டி *todai-k-kavuṭṭi,* பெ. (n.) தொடைச்சந்து பார்க்க; see *todai-c-candu* (சா.அக.).

[தொடை + கவுட்டி]

தொடைகிள்ளு-தல் *todai-kiḷḷu-,* 6 செ.குன்றாவி. (v.t.) தொடைநிமிண்டு-தல் பார்க்க; *todai-nimiṇdu-.*

[தொடை + கிள்ளு-.]

தொடைகொள்(ளு)-தல் *todai-k-koḷ-,* 13 செ.குன்றாவி. (v.t.) கண்டறிதல்; to learn, understand. "வடிவிலே தொடைகொண்டே னென்கிறார்" (ஈடு. 2,5,5).

[தொடை + கொள்-.]

தொடைச்சந்து *todai-c-candu,* பெ. (n.) 1. கவட்டி; that part in the fold between the thigh and the scrotum. 2. துடைச்சந்து; the lowest part of the abdominal wall near its junction with the thigh. 3. தொடைநடு பார்க்க; see *todai-nadu* (சா.அக.).

[தொடை + சந்து]

தொடைச்சந்துநோய் *todai-c-candu-nōy,* பெ. (n.) கவட்டி நோய்; disease of the groin (சா.அக.).

[தொடை + சந்து + நோய்]

தொடைச்சந்துபொருத்து *todai-c-candu-poruttu,* பெ. (n.) இடுப்புப் பொருத்து; hip joint.

மறுவ. பந்துகிண்ண மூட்டு

[தொடை + சந்து + பொருத்து]

தொடைச்சந்துரோகம் *todai-c-candu-rōgam,* பெ. (n.) தொடைச்சந்துநோய் பார்க்க; see *todai-c-candu-nōy* (சா.அக.).

[தொடை + சந்து + ரோகம்]

Skt. rōga → த. ரோகம்

தொடைதட்டிவேளாளர் *todai-taṭṭi-vēḷāḷar,* பெ. (n.) பண்டிதர்; barbers, as honing their razors on the thigh, used in contempt (செ.அக.).

[தொடை + தட்டி + வேளாளர்]

தொடைதட்டு-தல் *todai-taṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) தொடையில் அடித்துக் கொண்டு வீர முரைத்தல்; to show one's bravery or defiance by striking the thigh. "குண்டோதரன் கண்டு கொண்டாற் றொடைதட்டிக் கொள்ளுவனே" (தனிப்பா. 1, 403, 23). 2. சண்டைக்கழைத்தல் (உ.வ.); to make a challenge to battle (செ.அக.).

[தொடை + தட்டு-.]

தொடைதட்டுதல் *todai-taṭṭudal,* பெ. (n.) பிணத்தினருகில் நீர்க் குடத்தை உடைத்தபின் தொடையைத் தட்டிக்கொண்டு சுற்றிவருஞ் சடங்கு; (brāh.) ceremony of tapping one's thigh and going round a corpse in funeral ceremonies (செ.அக.).

[தொடை + தட்டு-.]

தொடைநடு *todai-nadu,* பெ. (n.) இரு தொடைகளுக்கும் இடைப்பட்ட இடைவெளி; space between the thighs *(சா.அக.).*

[தொடை + நடு]

தொடைநடுங்கி *todai-nadungi,* பெ. (n.) மிக அஞ்சுபவன் (உ.வ.); extremely timid person, coward.

[தொடை + நடுங்கி]

தொடைநடுங்கு-தல் *todai-nadungu-,* செ.கு.வி. (v.i.) மிகவும் அஞ்சுதல்; feel timid. செயலாளருடன் பேச ஏன் தொடைநடுங்குகிறாய்?

[தொடை + நடுங்கு]

தொடைநரம்பு *todai-narambu,* பெ. (n.) தொடையின் பின்புறமுள்ள ஒரு பெரிய நரம்பு; a big nerve that passes down the back of the thigh *(சா.அக.).*

[தொடை + நரம்பு]

தொடைநரம்புவாதம் *todai-narambu-vādam,* பெ. (n.) குளிர்ச்சியான உணவுகளை மிகுதியாக உண்பதால் உண்டாகும் ஊதை நோய்; a painful affection of the large nerve passing down the back of the thigh due to consuming cooling substances, sedentary habit etc., *(சா.அக.).*

[தொடை + நரம்பு + வாதம்]

தொடைநாளம் *todai-nāḷam,* பெ. (n.) தொடையின் அரத்த நரம்பு (இங்.வை.); femoral vein.

[தொடை + நாளம்]

தொடைநிமிண்டு-தல் *todai-nimiṇḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தொடையைக் கிள்ளுதல்; to pinch the thigh, as a punishment. 2. தூண்டி விடுதல் (உ.வ.); to stimulate. 3. நினைவுபடுத்தல்; to call one's attention, remind, as by pinching.

[தொடை + நிமிண்டு-.]

தொடைநேர்ப்பேசி *todai-nēr-p-pēsi,* பெ. (n.) நீளப்போக்குள்ள தொடைச்சதை; straight muscle of the thigh *(சா.அக.).*

தொடைப்பற்று *todai-paṟṟu,* பெ. (n.) தொடையென்னுமுறுப்பு (உ.வ.); thigh.

[தொடை + பற்று]

தொடைப்பாடு *todai-p-pāḍu,* பெ. (n.) குடை காலணி; appendage, as sandals, etc.

[தொடு + பாடு]

தொடைமுரண் *todai-muraṇ,* பெ. (n.) முரண்டொடை; antithesis, in the first foot of a verse. "செம்மை பசுமை தொடை முரண்" *(சீவக. 2, உரை).*

[தொடை + முரண்]

தொடையகராதி *todai-y-agarāḍi,* பெ. (n.) சதுரகராதிப் பிரிவினுள் எதுகையாக வருவதற்குரிய சொற்களைக் கூறும் அகரமுதலி; a section of Catur-agarāti, being a dictionary of rhyming words.

[தொடை + அகராதி]

தொடையகற்றும்பேசி *todai-y-agaṟṟum-pēsi,* பெ. (n.) தொடையைக் கவர்ந்துள்ள நார்ப் பாகத்தை இறுகச் செய்யும் சதை; the muscle that tightens the fibrous sheath of the thigh *(சா.அக.).*

தொடையடிகூழை *todai-y-aḍi-kūḻai,* பெ. (n.) தொடை முட்டுக்குக் கீழ்வாராமல் மயிரின்றியிருக்கும் வாலையுடைமையாகிய மாட்டுக் குற்றவகை (மாட்டுவா. 18); a defect of cattle which consists in having a short hairless tail.

[தொடை + அடி + கூழை]

தொடையல்[1] *toḍaiyal,* பெ. (n.) 1. தொடர்ச்சி; succession, continuation. "நீள்விசித் தொடையல்" *(பொருந.18).* 2. கட்டுகை; fastening, tying, weaving. "தொடையலங் கோதை" *(சீவக.464).* 3. தோளணி மாலை (பிங்.); flower garland worn over shoulders. 4. வாசிகை (திவா.) பார்க்க; see *vāsigai.* 5. தேன்கூடு; honey comb. "நெய்ம்முதிர் தொடையல் கீறி" *(சீவக. 1198).*

[தொகு → தொடு → தொடை → தொடையல்]

தொடையல்[2] *todaiyal,* பெ. (n.) அழிவு; ruin, destruction. "பையன் தொட்டது தொடையல் தான்".

[தொடை → தொடையல்]

தொடையானந்தம் *todai-y-āṉandam,* பெ. (n.) அளபெடைத் தொடைப்பாட்டினுள் பாட்டுடைத் தலைவனது பெயர்சார்த்தி அளபெடுப்பத்தொடுக்கும் குற்றம் (யாப்.வி. 522); use of aḷapeḍai before or after the name of a hero in a poem, considered as a defect.

[தொடை + ஆனந்தம்]

தொடையெலும்பு *todai-y-elumbu,* பெ. (n.) தொடையிலுள்ள எலும்பு; thigh bone, femur.

[தொடை + எலும்பு]

தொடையெலும்புக்கவை *todai-y-elumbu-k-kavai,* பெ. (n.) தொடைச்சந்துபொருத்து பார்க்க; see *todai-c-candu-poruttu* (சா.அக.).

[தொடை + எலும்பு + கவை]

தொடைவாதம் *todai-vādam,* பெ. (n.) 1. தொடையில் ஏற்படும் ஊதை நோய்; painful affection of the muscles of the thigh. 2. அகவை முதிர்ச்சியால் தொடை நரம்பில் ஏற்படும் இழுப்பு நோய்; inflammation of the nerve of the thigh (சா.அக.).

[தொடை + வாதம்]

தொடைவாழை *todai-vālai,* பெ. (n.) 1. அடித் தொடையிற் புறப்படும் வெள்ளை நோய்; abscess in the thigh or near the groin. 2. வீக்கக்கால்; milk leg, white leg, swelled leg. 3. மருந்துச் செடிவகை (யாழ்ப்); a plant, used in curing tumour.

[தொடை + வாழை]

தொடைவில்லை *todai-villai,* பெ. (n.) சிறிய வட்டத் தலையணை; small round cushion (செ.அக.).

[தொடை + வில்லை]

தொண்டகம் *tondagam,* பெ. (n.) 1. குறிஞ்சி நிலப்பறை (திவா.); a small drum used in kuriñci tracts. "தொண்டகச் சிறுபறைப் பாணி" (நற்.104). 2. ஆகோட்பறை; drum beaten while capturing the enemy's cows. "தொண்ட கப்பறை துடியொ டார்த்தெழ" (சீவக. 418).

தொண்டகை *tondagai,* பெ. (n.) ஆதொண்டை; thorny or ceylon on caper (சா.அக.).

தொண்டச்சி *tondacci,* பெ. (n.) தொண்டி[4], பார்க்க; see *tondi*[4].

[தொண்டி → தொண்டித்தி → தொண்டிச்சி → தொண்டச்சி]

தொண்டத்தி *tondatti,* பெ. (n.) பெண்மை நலப்பாடு நோக்கி வகுத்த நால்வகைப் பெண்டிருள் ஒரு பிரிவு; one of the four classes of women classified accroding to lust (சா.அக.).

[தொண்டி → தொண்டித்தி → தொண்டத்தி]

தொண்டப்பறையன் *tonda-p-paraiyan,* பெ. (n.) வேளாண் முதலிய தொழில் செய்பவன்; a sub-division of the paraiya caste which includes domestic servants.

[தொண்டு + பறையன்]

தொண்டர்[1] *tondar,* பெ. (n.) 1. அடிமைகள்; slaves. 2. அடியார்; devotees, as slaves of God. "தொண்டர் குழாந் தொழுதேத்த வருள் செய்வானை" (தேவா. 228, 3). 3. உலகப் பற்றில் ஈடுபட்டவர்; persons who are slaves to worldly pleasures. "எம்மானை யடைகிலாத் தொளை யிலாச் செவித் தொண்டர்" (தேவா. 429, 3).

[துல் → துள் → தொள் → தொழு → தொழும்பு → தொண்டு → தொண்டர்]

தொண்டர்[2] *tondar,* பெ. (n.) ஒரு கட்சியிலோ பொதுநல அமைப்பிலோ ஊதியமில்லாமல் பணி செய்பவர்; worker in a party, volunteer in a service organization. தேர்தல் நேரத்தில் தொண்டர்கள் இல்லாவிட்டால் கட்சிக்கு வெற்றி வாய்ப்பே இல்லை (உ.வ.). தமிழியக்கத் தொண்டர்களைத் தளைப்படுத்தியது தகாது (உ.வ.).

[தொண்டு → தொண்டர்]

தொண்டர்சீர்பரவுவார் *tondar-cīr-paravuvār,* பெ. (n.) பெரிய புராணமியற்றிய ஆசிரியராம் சேக்கிழார்தம் பட்டப் பெயர்; the title given

to Cēkkiḻar, the author of Periyapuranam. "தொண்டர்சீர் பரவுவா ரெனப்பெயர் சுமத்தி" (சேக்கிழார்பு. 95).

[தொண்டர் + சீர் + பரவுவார்]

தொண்டரடிப்பொடி *toṇḍar-aḍi-p-poḍi*, பெ. (n.) ஆழ்வார் பதின்மரு ளொருவர் (திவ்திருமாலை. 45); a Vaisnava saint, as the dust lying on the feet of devotees, one of ten āḻvār.

[தொண்டர் + அடிப்பொடி]

தொண்டலக்குழி *toṇḍala-k-kuḻi*, பெ. (n.) இறைவைக் கூனைநீர் வால் வழியாக விழும் பள்ளம்; water pit where the drawing water from the well is poured.

[தொண்டலம்² + குழி (வே.க. 285)]



தொண்டலம்¹ *toṇḍalam*, பெ. (n.) 1. யானைத் துதிக்கை (சூடா.); elephant's trunk. "சூர்மக னுந்து தொண்டலம் பற்றி" (கந்தபு. அமரர்சி. 83). 2. கள் (திவா.); toddy (செ.அக.).

[துல் → துள் → தொள் → தொண் → தொண்டு → தொண்டலம்]

தொண்டலம்² *toṇḍalam*, பெ. (n.) கமலை இறைவையின் கூனைத் தோல்வால்; trunk of leather container which used for drawing water from well.

[தொள் → தொண்டு → தொண்டலம் (வே.க. 285)]

தொண்டன்¹ *toṇḍaṉ*, பெ. (n.) ஒரு மீன்; a kind of fish.

தொண்டன்² *toṇḍaṉ*, பெ. (n.) தொண்டர்² பார்க்க; see *toṇḍar*.

தொண்டாடு-தல் *toṇḍāḍu-*, 11 செ.கு.வி. (v.i.) பணி செய்தல்; to serve. தொண்டாடித் திரிவேனை (தேவா. 677, 5).

[தொண்டு + ஆடு-]

தொண்டான் *toṇḍāṉ*, பெ. (n.) தோலால் செய்யப்பட்டு கமலைச் சாலின் கீழ்ப்புறம் நீர் வெளியேறும் பகுதியில் கட்டப் பட்டிருப்பது; trunk of leather container which used for drawing water from well.



தொண்டான்கயிறு *toṇḍāṉ-kayiṟu*, பெ. (n.) தொண்டானுடன் இணைக்கப்பட்டு நுகத் தடியில் கட்டப்பட்ட கயிறு; coir used to tie with yoke and leather trunk in kamalai.

[தொண்டான் + கயிறு]



தொண்டான்குச்சி *toṇḍāṉ-kucci*, பெ. (n.) தொண்டானையும், தொண்டாங் கயிற்றையும் இணைக்கும் பகுதியில் உள்ள குச்சி; a stick

which connects trunk of leather container and rope.

[தொண்டான் + குச்சி]

தொண்டி[1] *toṇḍi,* பெ. (n.) *1.* இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ளதும் முன்பு சோழர்க்குரிய தாயிருந்ததுமானதொரு துறைமுகப் பட்டினம்; an ancient sea-port of the Cholas in Ramanatha puram district. "தொண்டியென்னும் பகுதியிலுள்ள அரசரால்" *(சிலப். 14:107, உரை).* 2. மலை நாட்டில் சேரர்க்குரிய பழையதொரு துறைமுகப்பட்டினம்; an ancient sea-port of the Cheras in Malabar. கட்டுவன் றொண்டியன்ன *(ஐங்குறு. 178).* 3. தொண்டிக்கள் (கூடா) பார்க்க; see *toṇḍi-k-kaḷ.*

தொண்டி[2] *toṇḍi,* பெ. (n.) *1.* துளை (இவ.); hole. *2.* தொண்டு[4] பார்க்க; see *toṇḍu*[4]. *3.* வேலிகளைத் தாண்டாதிருக்க மாட்டின் கழுத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்குங் கட்டை; block of wood suspended from the neck of an animal to prevent it from passing through hedges.

[தொண்டு → தொண்டி = துளை. ஒ.நோ. தொண்டை (throat) = தொளையுள்ளது (ஒ.மொ. 120)]



தொண்டி[3] *toṇḍi,* பெ. (n.) *1.* கலப்பைக் கிழங்கு; Malabar glory-lily. *2.* மரவகை; blood drop ordure tree. *3.* மதகரிவேம்பு பார்க்க; see *madakari-vembū.*

தொண்டி[4] *toṇḍi,* பெ. (n.) பரத்தை; dancing girl. "வேட்கைமது மொண்டு தருந் தொண்டியர்கள்" *(தாயு. எந்நாட். மாதரைப். 14).*

[தொண்டு → தொண்டி]

தொண்டி[5] *toṇḍi,* பெ. (n.) *கடற்கழி;* small arm of the sea.

தொண்டி[6] *toṇḍi,* பெ. (n.) தொண்டு செய்பவள் *(நாநார்த்த. 296);* maid-servant.

[தொண்டு → தொண்டி]

தொண்டி[6] *toṇḍi,* பெ. (n.) சிறுதோட்டம்; small garden.

[தொள் → தொண்டி (மு.தா. 156)]

தொண்டி[7] *toṇḍi,* பெ. (n.) திறை *(வரி) (மீனவ.);* tax.

தொண்டி[8] *toṇḍi,* பெ. (n.) களவுபோன பொருள் *(நாஞ்.);* stolen article.

தொண்டிக்கட்டை *toṇḍi-k-kaṭṭai,* பெ. (n.) வேலிகளைத் தாண்டாதிருக்க மாட்டின் கழுத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்குங் கட்டை; block of wood suspended from the neck of an animal to prevent it from passing through hedges.

[தொண்டி[2] *+ கட்டை]*

தொண்டிக்கள் *toṇḍi-k-kaḷ,* பெ. (n.) நெல்லாற் சமைத்த கள்; toddy made from paddy. "உண்டுந் தொண்டிக் களிதனை" *(சீவக. 1233).*

[தொண்டி + கள்]

தொண்டிச்சி *toṇḍicci,* பெ. (n.) தொண்டி[4] *(யாழ்.அக.)* பார்க்க; see *toṇḍi (செ.அக.).*

[தொண்டு → தொண்டி → தொண்டித்தி → தொண்டிச்சி]

தொண்டிப்பூடு *toṇḍi-p-pūḍu,* பெ. (n.) நத்தைச் சூரிச் சக்களத்தி; a plant skin to bristly button weed *(சா.அக.).*

[தொண்டி[4] *+ பூடு]*

தொண்டியோர் *toṇḍiyōr,* பெ. (n.) *1.* சோழ குலத்தோர்; the Cholas. "வங்க வீட்டத்துத் தொண்டியரோ ரிட்ட வகிலும்" *(சிலப். ஊர்காண். 107).* 2. சேரர்; the Cheras. "தொண்டியோர் பொருந" *(பதிற்றுப். 88).*

[தொண்டி → தொண்டியோர் (மு.தா. 156)]

தொண்டில் *toṇḍil,* பெ. (n.) யானைக் கை; trunk of elephant.

[தொள் → தொண்டு → தொண்டில்]

தொண்டிவாரம் *tondi-vāram,* பெ. (n.) பயிரிடுங் குடியானவனுக்குரிய விளைச்சற் பகுதி; cultivation share in the produce.

[தொண்டி + வாரம்]

தொண்டீச்சுரம் *tondī-c-curam,* பெ. (n.) ஈரோட்டிலுள்ள திருக்கோயில்; a temple in Erōdu.

தொண்டீரன் *tondīran,* பெ. (n.) தொண்டைமான் (M.M. 908) பார்க்க; see *tondaimān.*

[தொண்டைமான் → தொண்டீரன்]

தொண்டு[1] *tondu,* பெ. (n.) 1. அடிமைத்தனம் (பிங்.); slavery. 2. கடவுள் வழிபாடு (சூடா.); devotedness to a deity; devoted service. "தொண்டு பூண்டு" *(திவ்.திருமாலை. 5).* 3. அடிமையாள்; slave, devoted servant. "தொண்டாயிரவர் தொகுபவே" *(நாலடி., 224).* 4. ஒழுக்கங்கெட்டவன்-ள்; person of loose character. 5. கொண்டித்தொழு; cattle pound. 6. ஒரு வகை உள்ளான் (வின்.); a kind of snipe. 7. தேங்காய் பலா முதலியவற்றின் மேற்றொலி (நாஞ்.); husk, as of coconut. 8. பூடுவகை (யாழ்.அக.); a plant.

க. தொள்ட்டு; தெ. தொட்டி

[துல் → துள் → தொள் → தொழு → தொழும்பு → தொண்டு]

தொண்டு[2] *tondu,* பெ. (n.) பழைமை (திவா.); antiquity, old times, former times. "தொண்டு போல வெவ்வுலகமுந் தோன்றுதல் வேண்டும்" *(விநாயகபு. 82, 55).*

[தொல் → தொன் → தொண் → தொண்டு]

தொண்டு[3] *tondu,* பெ. (n.) ஒன்பது; nine. "தொண்டுபடு திவவின்" *(மலைபடு. 21).* "தொண்டு தலையிட்ட பத்துக்குறை யெழுநூற் றொன்பஃ தென்ப வுணர்ந்திசி னோரே" *(தொல்.பொருள். 413).*

[தொள் + து → தொண்டு]

ஒன்பதிற்கு முதலாவது வழங்கின பெயர் தொண்டு என்பது. தொண்டு + பத்து = தொண்பது - தொன்பது -ஒன்பது. தொண்பது முதலில் 90 என்னும் எண்ணைக் குறித்தது. அறுபது, எழுபது, எண்பது என்னும் பிற பத்தாம் இட எண்ணுப் பெயர்களுடன், தொன்பது என்பதை ஒப்பு நோக்குக (ஒ.மொ. 66).

ஒன்பது என்னும் பெயருக்கு, ஒன்று குறைந்த பத்து என்று பொருள் கூறுவது பொருந்தப் புகலல் என்னும் உத்திபற்றியது. இக்கூற்றிற்கு உருதுவிலும் இந்தியிலும் உள்ள, உன்னீஸ் (19), உன்தீஸ் (29), உன்சாலிஸ் (39), உன்சாஸ் (49), உன்சட் (59), உன்த்தர் (69), உன்யாசி (79) என்னும் எண்ணுப் பெயர்கள் ஒருகால் சான்றாகலாம். ஆனால், அங்கும், அப்பெயர்கள் ஒழுங்கற்ற முறையில மைந்தவையென்பதை, நவாசீ (89), நின்னாநபே (99) என்னும் பெயர்களாளறியலாம் (ஒ.மொ.68).

தொண்டு[4] *tondu,* பெ. (n.) 1. ஒடுக்கவழி; gap, narrow passage. 2. உருவு சுருக்கு (அகநி.); snare, noose. 3. வேலிகளைத் தாண்டாதிருக்க மாட்டின் கழுத்தில் கட்டித் தொங்கவிடப் பட்டிருக்குங் கட்டை; block of wood suspended from the neck of an animal to prevent it from passing through hedges.

ம. தொண்டு; க. தொண்டி

தொண்டு[5] *tondu,* பெ. (n.) தன்னலம் கருதாமல், எதையும் எதிர்பாராமல் ஒன்றின் நன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் செய்யும் பணி; service. நாட்டுப்புற மக்களுக்குத் தொண்டு செய்ய மருத்துவர்கள் முன்வர வேண்டும் *(உ.வ.).* பாவாணர் தமிழ்மொழி மீட்புக்குச் செய்த தொண்டு அளப்பரிதாகும் *(உ.வ.).*

[துல் → துள் → தொள் → தொழு → தொழும்பு → தொண்டு]

தொண்டுகிழவன் *tondu-kilavan,* பெ. (n.) முதிர்ந்த கிழவன்; ripe, old man. "தொண்டுகிழவ னிவனாரென" *(திருப்பு. 59).*

[தொண்டு + கிழவன்]

தொண்டுதுரவு *tondu-turavu,* பெ. (n.) 1. பணி விடை; service. 2. உளவு; movements, concerns, affairs of a person, as watched, by a theif or spy.

[தொண்டு + துரவு]

தொண்டுநிறுவனம் *tondu-niruvanam,* பெ. (n.) ஒன்றின் நன்மைக்காக அல்லது வளர்ச்சிக்காகப் பணியாற்றும் அமைப்பு; service organization or society, voluntary

agency. நாற்பது தொண்டு நிறுவனங்கள் கூட்டாக முயன்று இக்கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன.

[தொண்டு + நிறுவனம்]

தொண்டுப்பட்டி *tondu-p-patti,* பெ. (n.) மாட்டை அடைக்குங் கொண்டி (எங்களூர், 20); cattle pound.

[தொண்டு + பட்டி]

தொண்டுப்பணி *tondu-p-pani,* பெ. (n.) ஊழியம் (நாஞ்.); menial service.

[தொண்டு + பணி]

தொண்டூழியம் *tondūliyam,* பெ. (n.) தொண்டுப் பணி (நாஞ்.) பார்க்க; see *tondu-p-pani.*

[தொண்டு + ஊழியம்]

தொண்டை[1] *tondai,* பெ. (n.) 1. மிடறு (பிங்.); throat, gullet. 2. குரல்வளை; windpipe, larynx. தொண்டையிலே தூறு முளைக்க (பழ.) 3. குரல்; voice, singing voice. அவனுக்கு நல்ல தொண்டையுண்டு. 4. யானைத் துதிக்கை (பிங்.); elephant's trunk. "கருநாகத் தொண்டைக் கயமுனிக் கூட்டங்கள்" (திருப்போ.சந். அலங்கா. 18).

[தொன் → தொண் → தொண்டை = தொளையுள்ளது (ஒ.மொ. 119, 120)]

தொண்டை[2] *tondai,* பெ. (n.) 1. ஆதொண்டை (சூடா.) பார்க்க; see *ādondai.* 2. கோவை (பிங்.) பார்க்க; see *kōvai.* 3. சிறு கடல்மீன் வகை; sea fish, bluish green. 4. தொண்டை மண்டலம் பார்க்க; see *tondai-mandalam.* "ஆறோ டீரெட்டுத் தொண்டை" (அஷ்டப். நூற்றெட்டுத். தனியன். 6).

தொண்டைஅடைப்பான் *tondai-adaippān,* பெ. (n.) தொண்டையடைப்பான் பார்க்க; see *tondai-y-adaippān.*

தொண்டைக்கட்டி *tondai-k-katti,* பெ. (n.) 1. தொண்டையிலுண்டாகும் புண்கட்டி; swelling in the throat. 2. உண்ணாக்கு நோய்; tonsilitis.

[தொண்டை + கட்டி]

தொண்டைக்கட்டு *tondai-k-kattu,* பெ. (n.) 1. கரகரப்பால் தொண்டை அடைத்துக் கொள்ளுகை; hoarse throat. 2. உண்ணவும் பேசவும் முடியாதவாறு தொண்டை புண்படுகை (பதார்த்த. 24); sore-throat, pharyngitis. 3. தொண்டை நோய்வகை; inflammation of the larynx, laryngitis (செ.அக.).

[தொண்டை + கட்டு]

தொண்டைக்கதிர் *tondai-k-kadir,* பெ. (n.) கதிர் வெளிப்படுதற்குரிய பருவம் (இவ.); the stage of growing crop when it is ready to shoot forth ears (செ.அக.).

[தொண்டை + கதிர்]

தொண்டைக்கபம் *tondai-k-kabam,* பெ. (n.) கோழை, சளி; phlegm (சா.அக.).

[தொண்டை + கபம்]

தொண்டைக்கம்மல் *tondai-k-kammal,* பெ. (n.) 1. தொண்டையழற்சி; inflammation of the throat. 2. குரலடைப்பு; hoarseness. 3. குரல் கம்மல்; inflammation of the larynx a condition attended with dryness and soreness of the throat, hoareness cough etc. (சா.அக.).

[தொண்டை + கம்மல். கமறுதல் → கம்மல்]

தொண்டைக்கரகரப்பு *tondai-k-karakarappu,* பெ. (n.) தொண்டையறுப்பு; irritation of throat (சா.அக.).

[தொண்டை + கரகரப்பு]

தொண்டைக்கழலை *tondai-k-kalalai,* பெ. (n.) தொண்டைக்குள்ளாக இருக்கும் கேடயக் கோளம் பருத்து அதனால் கழுத்தின் முன்பாகம் கழலைக் கட்டியைப் போற் காணப்படும் வீக்கம்; enlargement of thyroid body causing a swelling in the front part of the neck (சா.அக.).

[தொண்டை + கழலை]

தொண்டைக்களகளப்பு *tondai-k-kalakalappu,* பெ. (n.) தொண்டைக்குள்ளிரைச்சல் பார்க்க; see *tondai-k-kul-iraiccal.*

[தொண்டை + களகளப்பு]

தொண்டைக்கனப்பு *tonḍai-k-kaṉappu,* பெ. (n.) தொண்டைக்கட்டு (இவ) பார்க்க; see *tonḍai-k-kaṭṭu* (செ.அக.).

[தொண்டை + கனப்பு]

தொண்டைக்கனைப்பு *tonḍai-k-kaṉaippu,* பெ. (n.) கனைத்தல்; braying like horse (சா.அக.).

[தொண்டை + கனைப்பு]

தொண்டைக்காறல் *tonḍai-k-kāṟal,* பெ. (n.) சளியை வெளிப்படுத்த கனைத்தல்; making harsh cry or sound to bring out phlegm, forcible expectration (சா.அக.).

[தொண்டை + காறல்]

தொண்டைக்குத்தல் *tonḍai-k-kuttal,* பெ. (n.) தொண்டைக்குத்து பார்க்க; see *tonḍai-k-kuttu* (சா.அக.).

[தொண்டை + குத்தல். குத்து → குத்தல்]

தொண்டைக்குத்து *tonḍai-k-kuttu,* பெ. (n.) 1. உண்ணாக்கு வளர்ச்சி; elongation of the uvula touching the throat. 2. தொண்டை வலி; shooting pain of the throat (சா.அக.).

[தொண்டை + குத்து]

தொண்டைக்குத்துக்குத்து-தல் *tonḍai-k-kuttu-k-kuttu-,* 5 செ.குவி. (v.i.) ஓயாமல் வாயாடுதல்; to argue unceasingly. உன்னோடு தொண்டைக் குத்துக்குத்த யாரால் முடியும்? (உ.வ.) செ.அக.).

[தொண்டை + குத்து + குத்து]

தொண்டைக்குழி *tonḍai-k-kuḻi,* பெ. (n.) தொண்டையின் அடிக்குழி; a depression at the base of the neck just above the sternum (சா.அக.).

[தொண்டை + குழி]

தொண்டைக்குள்ளிரைச்சல் *tonḍai-k-kuḷ-iraiccal,* பெ. (n.) குரட்டை விடுவதாலும் இருமலாலும் தொண்டைக்குள் ஏற்படும் வலி; throat pain.

[தொண்டைக்கு + உள் + இரைச்சல்]

தொண்டைக்குறுகுறுப்பு *tonḍai-k-kuṟukuṟuppu,* பெ. (n.) தொண்டைக்குள்ளிரைச்சல் பார்க்க; see *tonḍai-k-kuḷ-iraiccal.*

[தொண்டை + குறுகுறுப்பு]

தொண்டைக்கோளம் *tonḍai-k-kōḷam,* பெ. (n.) வாயின் அடிப்பாகத்தில் முன் தொண்டையின் இரு பக்கத்திலும் வாதுமைக் கொட்டையைப் போல் தடித்த சதைப்பற்று; a small almond shape mass of flesh between the pillars of the fauces on eihter side in the region of the pharynx. 2. தொண்டை அல்லது கழுத்திலிருக்கும் கோளங்கள்; glands in general of the throat or the neck. 3. கழுத்தின் நிணநீர்க் கோளம்; lymph glands of the neck. 4. கேடயக்கோளம்; thyroid gland (சா.அக.).

[தொண்டை + கோளம்]

தொண்டைகத்து-தல் *tonḍai-kattu-,* 5 செ.குவி. (v.i.) பெருங்குரலிடுதல் (யாழ்ப்.); to bawl (செ.அக.).

[தொண்டை + கத்து-.]

தொண்டைச்சங்கு *tonḍai-c-caṅgu,* பெ. (n.) குரல் வளை முருந்து; shield shaped cartilage of the larynx (சா.அக.).

[தொண்டை + சங்கு]

தொண்டைச்சளி *tonḍai-c-caḷi,* பெ. (n.) கோழை, சளி; phlegm (சா.அக.).

[தொண்டை + சளி]

தொண்டைச்சீதளக்கட்டி *tonḍai-c-cīdaḷa-k-kaṭṭi,* பெ. (n.) தொண்டைத்தூறு பார்க்க; see *tonḍai-t-tūṟu* (சா.அக.).

[தொண்டை + சீதளம் + கட்டி]

தொண்டைச்செவிடு *tonḍai-c-cevidu,* பெ. (n.) தொண்டையடைப்பினால் ஏற்படும் செவிடு; deafness due to obstruction in the throat arising from enlargement of some glands.

[தொண்டை + செவிடு]

தொண்டைத்தாபம் *tonḍai-t-tābam,* பெ. (n.) 1. தொண்டையழற்சி; inflammation of the throat and in its adjacent parts. 2. தொண்டைக் கோளவழற்சி; inflammation of tonsils (சா.அக.).

[தொண்டை + தாபம்]

தொண்டைத்திறப்பு *tonḍai-t-tiṟappu,* பெ. (n.) மிடறடைப்பு நீக்குகை; relief from the obstruction in the passage of the throat (சா.அக.).

[தொண்டை + திறப்பு]

தொண்டைத்தூறு *tondai-t-tūṟu,* பெ. (n.) தொண்டையில் ஏற்படும் சதை வளர்ச்சி; a disease of throat giving rise to vegetation or fleshy growth of papillae or false membrane (சா.அக.).

[தொண்டை + தூறு]

தொண்டைதிறத்தல் *tondai-tiṟattal,* பெ. (n.) 1. இசைக் குரல் இனிமைப்படுகை; clearing of the throat, becoming clear in tone, as in singing. 2. உரக்கக்கத்துகை; bawling out.

[தொண்டை + திறத்தல்]

தொண்டைநாடு *tondai-nāḍu,* பெ. (n.) தொண்டைமண்டலம் பார்க்க; see *tondai mandalam.* "பேண நீடிய முறையது பெருந் தொண்டை நாடு" (பெரியபு. திருக்குறிப்பு. 4) (செ.அக.).

[தொண்டை + நாடு]

தொண்டைநாளம் *tondai-nāḷam,* பெ. (n.) குரல்வளை; wind pipe, larynx.

[தொண்டை + நாளம்]

தொண்டைநெரி-த்தல் *tondai-neri-,* 4 செ.குவி. (v.i.) 1. மூச்சு விடாதபடி தொண்டையை அமுக்குதல்; to compress the throat so as to choke. 2. தொண்டை நெரியச் செய்தல்; crush the throat causing fracture (சா.அக.).

[தொண்டை + நெரி-.]

தொண்டைநோய் *tondai-nōy,* பெ. (n.) தொண்டை தொடர்பான குரல்வளை, காற்றுக் குழாய் முதலிய உறுப்புகளில் ஏற்படும் நோய்கள்; diseases in general of the throat organs such as larynx, trachkea, gullet etc. (சா.அக.).

[தொண்டை + நோய்]

தொண்டைநோவு *tondai-nōvu,* பெ. (n.) 1. தொண்டைக்கட்டு; sore throat, pharyngitis. 2. உள்நாக்கு நோய்; tansilitis.

[தொண்டை + நோவு]

தொண்டைப்பிடி *tondai-p-pidi,* பெ. (n.) 1. தொண்டையடைப்பு பார்க்க; see *tondai-y-adaippu.* 2. கடினமாய் நெருக்குகை; extreme pressure, as for paying a debt. கொடுத்த கடனுக்குத் தொண்டையைப் பிடிக்கிறான்.

[தொண்டை + பிடி]

தொண்டைப்புகைச்சல் *tondai-p-pugaiccal,* பெ. (n.) தொண்டை புகைந்திருமுகை; catarrh, bronchitis, laryngitis, irritation of the throat (செ.அக.).

[தொண்டை + புகைச்சல்]

தொண்டைப்புண் *tondai-p-puṇ,* பெ. (n.) தொண்டை உள்ளுறுப்புகளுக்கு ஏற்படும் வேக்காடு, புண், குருதிக்காயம் முதலியன; disease of the throat such as inflammation, soreness ulceration etc., of the internal parts as tonsils, larynx, pharynx, oesphagus etc known as tansilitis, larngitis,pharyngitis etc.

[தொண்டை + புண்]

தொண்டைப்புற்று *tondai-p-puṟṟu,* பெ. (n.) 1. தொண்டைக்குள் ஏற்படும் சிலந்தி, புண்கட்டி; cancer of the throat. 2. புற்றைப் போல் தொண்டைக்குள் ஏற்படும் சீழ் கூடிய சதை வளர்த்தி; growth of flesh inside the throat (சா.அக.).

[தொண்டை + புற்று]

தொண்டைப்பூச்சி *tondai-p-pūcci,* பெ. (n.) நெற் பயிரில் விழும் பூச்சி வகை; a paddy pest (செ.அக.).

[தொண்டை + பூச்சி]

தொண்டைமண்டலசதகம் *tondai-mandala-šadagam,* பெ. (n.) தொண்டை மண்டலத்தின் பெருமைகளைப் பற்றிப் படிக்காசுப் புலவர் இயற்றிய நூறகம் (சதகம்); poem of 100 stanzas an Tondaimandalam by Padikkāšu-p-pulavar (செ.அக.).

[தொண்டை + மண்டல + சதகம்]

தொண்டைமண்டலம் *tondai-mandalam,* பெ. (n.) காஞ்சியைத் தலைநகராகக் கொண்டதும் ஆர்க்காடு, செங்கற்பட்டு, நெல்லூர் மாவட்டங்களை உள்ளடக்கியது மான தமிழகப் பகுதி; an ancient division of the Tamil country, which included the districts

of Arcot, Ceṅgelpaṭṭu and Nellūre with Kāñjipuram as the capital.

[தொண்டை + மண்டலம்]

தொண்டைமண்டலவேளாளர் *toṇḍai-maṇḍala-vēḷāḷar,* பெ. (n.) *வேளாளப் பிரிவினர்;* a section of the vēḷāḷa caste.

[தொண்டை + மண்டலம் + வேளாளர்]

தொண்டைமணி *toṇḍai-maṇi,* பெ. (n.) *குரல்வளை;* adam's apple *(C.G.).*

[தொண்டை + மணி. முள் → (மள்) → மண் → மணி]

தொண்டைமாரி *toṇḍai-māri,* பெ. (n.) *தொண்டைக்கட்டி;* swelling in the throat, goitre.

[தொண்டை + மாரி]

தொண்டைமான் *toṇḍaimāṉ,* பெ. (n.) *1. தொண்டைமண்டல அரசன்;* ruler of Tondaimandalam. "தொண்டைமா னுழைச் சென்ற ஔவைக்கு" *(புறநா. 95, குறிப்பு.). 2. புதுக்கோட்டையரசர் பட்டப்பெயர்;* title of the Raja of Pudukkōṭṭai. *3. கள்ளர் மறவர் முதலிய சில குலத்தாரின் பட்டப்பெயர்;* title of certain castes, as kaḷḷar, maṟavar, piḷḷai, cēṇiyar.

[தொண்டைமகன் → தொண்டைமான்]

தொண்டைமான்இளந்திரையன் *toṇḍai-māṉ-iḷantiraiyaṉ,* பெ. (n.) *கிள்ளிவளவனுக்கும் பீலிவளைக்கும் மகனாகப் பிறந்து தொண்டை நாட்டை ஆண்டவன்;* a king who was the son of the Cōḷa king Kiḷḷivaḷavaṉ and Pilivaḷai, who ruled Toṇḍaināḍu.

[தொண்டைமான் + இந்திரையன்]

தொண்டைமுடிச்சு *toṇḍai-muḍiccu,* பெ. (n.) *குரல்வளைவெளியிற் காணப்படும் முருந்தினாலாக்கப்பட்ட பிதுக்கம்;* the prominence in front of the neck cause by the cartilages which enclose the larynx *(சா.அக.).*

[தொண்டை + முடிச்சு]

தொண்டையடைத்தல் *toṇḍai-aḍaittal,* பெ. (n.) *எவ்வகைக் காரணத்தினாலாவது தொண்டையில் பொதுப்பட உண்டாகும் அடைப்பு;* obstruction in general in the passage of the throat due to any cause. *2. தொண்டைச் சுருக்கத்தினால் மூச்சு விட முடியாமல் ஏற்படும் அடைப்பு;* a disease or symptom characterised by spasmodic suffocative attacks *(சா.அக.).*

[தொண்டை + அடைத்தல்]

தொண்டையடைப்பான் *toṇḍai-aḍaippāṉ,* பெ. (n.) *தொண்டை முழுவதும் வீங்கி விழுங்க முடியாமலும், உள்காற்று தொடர்பால் வாய், குரல்வளை முதலிய இடங்களில் அழற்சி கண்டு மூச்சு விட முடியாமலும் மிகுதியான காய்ச்சல் காய்ந்து கோழை, சளி கோளாறினால் ஏற்படும் ஒருவித அடைப்பான் நோய்;* a disease in which large swelling occurs along the whole throat so as to obstruct completely the passage of food solid or liquid. It is marked by suffocation and high fever on a result dangerous phlegom in the system. *2. ஆடு மாடுகளுக்கு உண்டாகும் அடைப்பான் நோய்;* inflammation of the throat in cattle. *3. குரலடைக்கும் ஒரு நோய்;* a maligrant sore throat *(சா.அக.).*

[தொண்டை + அடைப்பான்]

தொண்டையடைப்பு *toṇḍai-aḍaippu,* பெ. (n.) *தொண்டை நோய் வகை;* a throat disease. "ஆதியான் மடத்திற் றம்பல முமிழ்ந்தோ ரருந் தொண்டை யடைப்பு நோயாளர்" *(கடம்ப.பு. இலீலா. 132).*

[தொண்டை + அடைப்பு]

தொண்டையிடு-தல் *toṇḍai-y-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) *கூவுதல் (இ.வ.);* to bawl.

[தொண்டை + இடு-]

தொண்டையிளநீர்க்கட்டி *toṇḍai-y-iḷa-nīr-k-kaṭṭi,* பெ. (n.) *உள்நாக்கு நோவு;* tonsilitis *(செ.அக.).*

[தொண்டை + இளநீர் + கட்டி]

தொண்டையுடைதல் *toṇḍai-uḍaital,* பெ. (n.) *பருவத்தாற் குரல் மாறுகை (உ.வ);* breaking of voice, as at manhood.

[தொண்டை + உடைதல்]

தொண்டையைத்தீட்டு-தல் *tondaiyai-t-tīttu-*, 5 செ.கு.வி. (v.i.) தொண்டையிடு-தல் (நாஞ்.) பார்க்க; see *tondai-y-idu-*.

[தொண்டை + தீட்டு]

தொண்டையோர் *tondaiyōr*, பெ. (n.) தொண்டை மண்டலவரசர்; kings of Tondaimandalam. "கொண்டியுண்டித் தொண்டையோர் மருக" (பெரும்பாண். 454).

[தொண்டை → தொண்டையோர்]

தொண்டைவலி *tondai-vali*, பெ. (n.) தொண்டை நோவு; pain in the throat (சா.அக.).

[தொண்டை + வலி]

தொண்டைவலிப்பு *tondai-valippu*, பெ. (n.) தொண்டைக்குள் ஏற்படும் நரம்புச் சுருக்கம்; spasmodic contraction of the musles of the throat especially in a disease of the pharnyx (சா.அக.).

[தொண்டை + வலிப்பு]

தொண்டைவளர்ச்சி *tondai-valarcci*, பெ. (n.) தொண்டையினுட்சவ்வு பருத்துத் தொண்டையை அடைத்தல்; growth of the false membranes obstructing the throat as in diptheria (சா.அக.).

[தொண்டை + வளர்ச்சி]

தொண்டைவிடு-தல் *tondai-vidu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. தெளிவாய்க் குறிப்பிடுதல்; to let out the voice, as in singing; to utter clearly and loudly. 2. பெருங்குரலிடுதல்; to bawl, howl. "தொண்டை விடுவன வண்டம் வெடிபட" (திருவாலவா. 29, 3).

[தொண்டை + விடு-]

தொண்டைவீக்கம் *tondai-vīkkam*, பெ. (n.) தொண்டைவேகல் பார்க்க; see *tondai-vēgal*.

[தொண்டை + வீக்கம்]

தொண்டைவேகல் *tondai-vēgal*, பெ. (n.) தொண்டை வீங்குதலாகிய நோய்வகை; inflammation of the throat, quinsy, tonsilitis (செ.அக.).

[தொண்டை + வேகல்]

தொண்டைவை-த்தல் *tondai-vai-*, 4 செ.கு.வி. (v.i.) கூவுதல் (வின்.); to bawl.

[தொண்டை + வை-]

தொண்டொண்டொடெனல் *tondon-dodenal*, பெ. (n.) பறையினொலிக் குறிப்பு; onom. expr. of the sound of drumming. "தொண்டொண் டொடென்னும் பறை" (நாலடி, 25).

[தொண் + தொண் + எனல்]

தொண்ணா-த்தல் *tonnā-*, 6 செ.கு.வி. (v.i.) கெஞ்சி நிற்றல் (நெல்லை.); to cirnge. அவனிடம் போய் தொண்ணாந்து நிற்காதே.

தொண்ணூறு *tonnūru*, பெ. (n.) ஒருபத் தொழிய நின்ற நூறு; ninety.

ம. தொண்ணூறு

[தொண்டு + நூறு = தொண்ணூறு]

ஒன்பது + பஃது = தொண்ணூறு எனக் காட்டுகிறது தொல்காப்பிய நூற்பா (தொல். எழுத்து. 445). இம்முடிவு எவ்வகையிலும் பொருந்தாததொன்றாம். ஒன்பது என்னும் எண்ணுக்குப் பழம்பெயர் தொண்டு என்பது. "தொண்டு தலையிட்ட" (தொல். 1258) என்று ஆசிரியரும் "தொண்டுபடு திவவு" (மலைபடு. 21) என்று பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனாரும் கூறுதல் காண்க. தொண்டு என்னும் சொல் தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கற்றுப் போய்விட்டது. அவர் காலத்திற்கு முன் தொண்டு தொண்பது தொண்ணூறு தொள்ளாயிரம் என்பன முறையே 9, 90, 900, 9000 என்னும் எண்களைக் குறிக்கும் பெயர்களாயிருந்தன. தொண்டு என்னும் ஒன்றாமிடப் பெயர் வழக்கறவே, தொண்பது என்னும் பத்தாமிடப் பெயர் ஒன்றாமிடத்திற்கும் தொண்ணூறு என்னும் நூறாமிடப் பெயர் பத்தா மிடத்திற்கும், தொள்ளாயிரம் என்னும் ஆயிரத்தாமிடப் பெயர் நூறாமிடத்திற்கும் வழங்கவே 9000 என்னும் பெயரைச் சேர்க்க வேண்டியதாயிற்று, முதற் பத்து எண்ணுப் பெயர்களில் ஒன்பது என்பதைத் தவிர மற்றவையெல்லாம் ஒரு சொல்லா யிருப்பதையும், ஒன்பது என்பது இரு சொல்லாய்ப் பது (பத்து) என்று முடிவதையும், தொண்ணூறு என்பது நூறு என்றும் தொள்ளாயிரம் என்பது ஆயிரம் என்றும் முடிவதையும் நோக்குக. தொண்பது என்பதின் திரிபான ஒன்பது என்னும் சொல்லுக்குப் பொருந்தப் புகலும் முறை பற்றி ஒன்று குறைந்த பத்து என்று பொருள் கூறுவர் சிலர். அதுவே அதன் பொருளாயின் தொண்ணூறு தொள்ளாயிரம் என்பவற்

றிற்கும் அப்பொருள் ஏற்க வேண்டும். அங்ஙனம் ஏலாமையின் அது போலியுரை யென மறுக்க. ஆகவே தொண்டு + பத்து = தொண்பது; தொண்டு + நாறு = தொண்ணூறு; தொண்டு + ஆயிரம் = தொள்ளாயிரம் என்று புணர்ப்பதே முறையென்றும், தொண்டு என்னும் எண்ணுப் பெயர் வழக்கற்றதினால் அதன் மேலிடப் பெயர்கள் மூன்றும் ஒவ்வோ ரிடமாய்த் தாழ்ந்து வந்து வழங்கின என்றும் அறிந்து கொள்க. (பாவாணர், தொல். எழுத்து. 445, அடிக்குறிப்பு).

தொண்ணை *tonnai,* பெ. (n.) பெருந்தடி; stout stick or club.

[துள் → தொள் → தொண் → தொண்ணை (மு.தா. 208)]

தொண்ணைத்தடி *tonnai-t-tadi,* பெ. (n.) பெருந்தடி; stout stick or club.

[தொண்ணை + தடி]

தொண்ணை எனினும் தடி எனினுமொக்கும். தொண்ணைத்தடி யென்பது மீமிசை

தொண்மணி *tonmani,* பெ. (n.) முத்து, மாணிக்கம் போன்ற ஒன்பது வகையான மணிக்கற்கள்; the nine gems or precious stones.

[தொண்பது → தொண் - ஒன்பது. தொண் + மணி.]

தொணதொண-த்தல் *tona-tona-,* 4 செ.கு.வி. (v.i.) வெறுப்புண்டாம்படி அலப்பிப் பேசுதல் (இ.வ.); to vex with ceaseless talk. தொண தொணக்காமல் கொஞ்சநேரம் சும்மா யிரு (உ.வ.).

தொணதொணப்பு *tona-tonappu,* பெ. (n.) வெறுப்புண்டாம்படி அலப்பிப் பேசுகை; chattering, babbling. அம்மாவின் தொண தொணப்பு தாங்காமல் வீடு மாறிவிட்டோம்.

தொணலைக்கவலை *tonalai-k-kavalai,* பெ. (n.) கவலை மீனுள் ஒரு வகை; kind of fish in kavalai species.

[தொணலை + கவலை]

தொத்தல் *tottal,* பெ. (n.) 1. வலியற்றவன்-வள் -து; emaciated, weak person or animal. தொத்தல் மாடு. 2. பயனிலி, பதடி; useless person or thing. "ஆகாத தொத்தலுன் னூர்பேரென்ன" (ஆதியூரவதானி. 27).

தொத்தன் *tottan,* பெ. (n.) அடிமையாள் (வின்.); slave.

[தொத்து → தொத்தல் → தொத்தன்]

தொத்தாள் *tottāl,* பெ. (n.) 1. அடிமை (நிகண்டு); slave. 2. தொத்தா பார்க்க; see *tottā.*

[தொத்து → தொத்தாள்]

தொத்தி *totti,* பெ. (n.) 1. கொடி; creeper. 2. ஒருமரம்; an unknown tree (சா.அக.).

[தொற்றி → தொத்தி]

தொத்திப்பிடி-த்தல் *totti-p-pidi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஒட்டிக் கொள்ளுதல்; to cling to. 2. சார்பாகப் பற்றுதல்; to cleave to for support. 3. அடைக்கலம் புகுதல்; to take refuge with one; to seek one's friendship obsequiously. 4. கூட்டி விடுதல்; to bring, fetch, as a woman to her paramour.

[தொத்தி + பிடி]

தொத்தியேறு-தல் *totti-y-ēru,* 5 செ.கு.வி. (v.i.) 1. கைகால்களாற் பற்றியேறுதல்; to climb by clinging, as a horse. 2. தன்மேம்பாடு காட்டுதல் (வின்.); to assume authority or dominance, as climbing on others.

[தொத்தி + ஏறு-.]

தொத்து[1] *tottu,* பெ. (n.) 1. தொற்று பார்க்க; see *torru.* 2. பூங்கொத்து; bunch of flowers (சா.அக.).

[துல் (துற்று) → தொற்று → தொத்து (மு.தா. 156)]

தொத்து[2]**-தல்** *tottu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. தொத்தியேறு-தல் பார்க்க; see *totti-y-ēru-.* "நரருமினித் தொத்துவர்" (திருவாலவா. 29, 1). 2. ஒட்டுதல்; to cling, adhere. "உடுமீன் தொத்தப் பொலி கனகக்கிரி வெயில் சுற்றிய தொத்தான்" (கம்பரா. பிரமாத். 117). 3. தொங்குதல்; to hang. "செச்சைக் கண்டத் தொத்தூன் போல" (ஞான. பாயிர. 5, 12). 4. கூடுதல்; to be obtained. "சத்திபதிப்பிற் சம்பிர தாயந் தொத்துவதென்பது" (ஞான. 62, 9). 5. படர்தல்; to climb up, spread, as the vine.

[தொற்று → தொத்து]

தொத்து[3]**-தல்** *tottu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. பற்றுதல்; to hold, grasp, as a stick.

"கோற்றொத்து கூனனும்" (பதினொ. திருத்தொண். 48). 2. தொடர்தல்; to follow, pursue. "விருத்திரனைக் கொல்லத் தொத்திய பாவம்" (உத்தரரா. அசுவமே. 8). 3. நோயொட்டுதல்; to catch, as a disease; to infect.

[தொற்றி → தொத்து]

தொத்து[4] *tottu,* பெ. (n.) பூ முதலியவற்றின் கொத்து (திவா.); cluster, bunch, as of flowers. "தொத்தீன் மலர்ப்பொழிற் றில்லை" (திருக்கோ. 121). 2. திரள்; mass, bundle. "தொத்தொளி முத்துத்தாமம்" (சீவக. 2653). 3. தொடர்பு; connection. "தொத்தற விட்டிட" (திருமந். 2245). 4. பற்று; attachment. "சித்தந் தொத்தற" (ஞானவா. சரகு. 23). 5. சார்பு (பிங்.); dependance. 6. அடிமை (பிங்.); slave, dependant, menial. 7. பழைமையாய் வரும் நட்பு (திவா.); long-established intimacy. 8. வைப்பாட்டி (பல்பொருட் சூளா.); concubine. 9. தொற்று நோய்க்குணம்; contagion, infection. 10. சார்புப் பொருள்; anything attached to another as support.

[துல் (துற்று) → தொள்து → தொத்து (மு.தா. 156)]

தொத்துக்குட்டி *tottu-k-kutti,* பெ. (n.) உடன் பற்றித் திரிபவன் (இவ.); a dependent, satellite (செ.அக.).

[தொற்று → தொத்து + குட்டி]

தொத்துகாமாலை *tottu-kāmālai,* பெ. (n.) காமாலை நோய் வகை; a kind of jaundice (சா.அக.).

[தொற்று + காமாலை. தொற்று → தொத்து]

ஒ.நோ. பற்று → பத்து

தொத்துச்செடி *tottu-c-cedi,* பெ. (n.) 1. மண்ணில் படாமல் வெளியிற் காற்றுப்பட்டுக் கொண்டிருக்கும்படித் தொங்கி நிற்கும் வேர்களுள்ள செடி; plants the roots of which do not enter into the ground but hang in the air as air creeper. 2. தனக்கென ஊட்டமில்லாமலே ஒரு செடியின் வேரில் வளரும் மற்றொரு செடி; a plant growing on another plant but not deriving its nourishment from it. 3. புல்லுருவி; a plant which grows upon another plant and also feeds its juice.

[தொத்து + செடி. தொற்று → தொத்து]

தொத்துநோய் *tottu-nōy,* பெ. (n.) ஒட்டு நோய்; infection or contagious disease.

[தொற்று + நோய் → தொற்றுநோய் → தொத்து நோய்]

தொத்துப்பல் *tottu-p-pal,* பெ. (n.) தெற்றுப்பல் பார்க்க; see *teṟṟu-p-pal* (சா.அக.).

[தெற்று → தெத்து → தொத்து + பல்]

தொத்துவான் *tottu-vāṉ,* பெ. (n.) தொத்துநோய் பார்க்க; see *tottu-nōy.*

[தொற்று → தொத்து → தொத்துவான்]

தொத்துவேலை *tottu-vēlai,* பெ. (n.) 1. ஒட்டி வைத்து இணைக்கும் வேலைப்பாடு; joining work; welding. 2. சரியாக முடிக்காத வேலை; pieced and unsound work.

[தொற்று → தொத்து + வேலை]

தொத்துளிப்பாய் *tottuḷi-p-pāy,* பெ. (n.) பாய் வகை; mat made of rushes. "தொத்துளிப் பாயாலே வேய்ந்த" (பெரும்பாண். 50, உரை).

[தொத்துளி + பாய்]

தொத்தூன் *tottūṉ,* பெ. (n.) தொங்கு சதை; hanging flash, dewlap. "செச்சைக் கண்டத் தொத்தூன் போல" (ஞானா. பாயி. 5, 12).

[தொத்து + ஊன். தொற்று → தொத்து]

தொதல் *todal,* பெ. (n.) தித்திப்புப் பண்டவகை; a confection.

தொதவம் *todavam,* பெ. (n.) நீலமலையில் பேசப்படும் திருந்தாத தமிழிய (திராவிட)க் குடும்ப மொழிகளுளொன்று; one of the uncultivated languages of Dravidian family spoken at Nilgiris hills.

[தொழு → தொது → தொத → தொதவம்]

தொதவர் *todavar,* பெ. (n.) நீலமலையில் வாழ்பவரும் எருமை மந்தை ஓம்புதலை முதன்மையாகக் கொண்டவருமான மலைவாழ் வகுப்பினர்; todars of Nilgiris hills

the people who are having the buffalo rearing as prime occupation.

[தொழு → தொது → தொத → தொதவர்]

தொதி *todi,* பெ. (n.) பப்பரப்புளி பார்க்க; see *pappara-p-puli.*

[துது → தொது → தொதி]

தொந்தக்காரர் *tonda-k-kārar,* பெ. (n.) 1. உறவினர்; persons connected by ties of relationship; relations. 2. பழம்பகைவர்; inveterate foes.

[தொந்தம் + காரர்]

தொந்தகாமாலை *tonda-kāmālai,* பெ. (n.) 1. கருவில் ஏற்பட்ட காமாலை; congenital form of jaundice. 2. நாட்பட்ட காமாலை; haeniolytic jaundice of a chronic nature. 3. செயற்கையாய் உண்டான காமாலை; the acquire form of jaundice (சா.அக.).

[தொந்தம் + காமாலை]

தொந்தசலம் *tonda-šalam,* பெ. (n.) ஊதை, பித்தம், கோழை, சளி குறைபாட்டினால் உடம்பில் உண்டாகும் கெட்ட நீர்; morbid fluid in the system collected through the derangement of the three humours (சா.அக.).

தொந்தசுரம் *tonda-šuram,* பெ. (n.) நாட்பட்ட காய்ச்சல்; fever continuing from a long time (சா.அக.).

[தொந்து → தொந்தம் + சுரம். தொந்து = பழைமை]

தொந்தநோய் *tonda-nōy,* பெ. (n.) 1. பழைமையான நோய்; old disease. 2. நாட்பட்ட நோய்; long continued or chronic disease. 3. பிறப்பிலேயே வாய்த்த நோய்; hereditary disease. 4. சேர்க்கையால் உண்டான நோய்; venereal syphilitic or other urinary diseases (சா.அக.).

[தொந்தம் + நோய். தொத்து → தொந்து. தொந்தம். தொந்தம் = பழைமை]

தொந்தநோயர் *tonda-nōyar,* பெ. (n.) 1. பழைய நோயினால் தாக்குண்டவன்; one suffering from a chronic disease. 2. குடும்ப நோயில் தாக்குண்டவன்; one tained with the affliction of family or hereditary disease.

[தொந்தம் + நோயர்]

தொந்தப்படு-தல் *tonda-p-padu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. ஒட்டுநோய் பற்றுதல்; to cleave, as a chronic or hereditary disease. 2. உடலில் வளி தொடர்பானவை ஒன்றுடனொன்று பிணைந்திருத்தல்; to be disordered, deranged, brought into conflict, as the different humours of the body. 3. தொடர்புறுதல் (இ.வ.); to be connected (சா.அக.).

[தொந்தம் + படு]

தொந்தப்பழி *tonda-p-pali,* பெ. (n.) தலைமுறை தலைமுறையாகத் தொடரும் பகை; hatred, malice, perpetuated from generation to generation, vendetta. 2. தலைமுறை தலைமுறையாக நிற்கும் பழிப்பு; stigma or stain that will continue for generations.

[தொந்தம் + பழி]

தொந்தப்பாடு *tonda-p-pādu,* பெ. (n.) தொடர்பு (நாஞ்.); connection.

[தொந்தம் + பாடு]

தொந்தப்பாலை *tonda-p-pālai,* பெ. (n.) தொந்தம்பாலை பார்க்க; see *tondam-pālai.*

[தொந்தம்பாலை → தொந்தப்பாலை]

தொந்தம்[1] *tondam,* பெ. (n.) 1. இரட்டை; pair. 2. பழைமை; oldness. 3. நெருக்கம்; intimacy. 4. சேர்க்கை; addition, adherence. 5. பாலியற் தொடர்பு; sexual union. 6. கால்வழி; hereditary (சா.அக.).

[தொந்து → தொந்தம்]

தொந்தம்[2] *tondam,* பெ. (n.) எதிரெதிரான இரண்டு இணைகள்; pairs or couples of opposites as heat and cold, desire and aversion, light and darkness, weal and woe, wet and dry etc. (சா.அக.).

தொந்தம்[3] *tondam,* பெ. (n.) 1. தொடர்பு; connection. "தொல்லை வல்வினைத் தொந்தந்தா

னென்செயும்" (தேவா. 4,4). 2. பகை; hatred, animosity, malice. நரர்க்கும் வானரர்க்கு முண்டோ தொந்தம் (இராமநா. கிஷ். 8). 3. படைக்கல வகை; a kind of weapon. "சவளமும் தொந்தமும் விட்டேறும்" (தக்கயாகப். 559, உரை). 4. நெருங்கிய பழக்கம்; familiarity, close intimacy. 5. தொடுப்பு; improper intimacy. அவனுக்கும் அவளுக்குந் தொந்தமுண்டு.

தொந்தம்பாலை *tondam-pālai,* பெ. (n.) நிலப்பாலை; blue dying rosebay (சா.அக.).

தொந்தமயினம் *tonda-mayinam,* பெ. (n.) பச்சைக் கடலை; green bengal gram (சா.அக.).

தொந்தமலம் *tonda-malam,* பெ. (n.) பழைய மலம்; long retained stool (சா.அக.).

[தொந்தம் + மலம்]

தொந்தமிடு-தல் *tonda-midu-,* 20 செ.கு.வி. (v.i.) சேர்க்கையினால் சரக்குகளை உறவாக்கல்; to set up chemical combination by addition of drugs or agents (சா.அக.).

[தொந்தம் + இடு-]

தொந்தமுறு-தல் *tondam-uru-,* 20 செ.கு.வி. (v.i.) ஒன்றுபடுதல்; to unite. "தொந்தமுறச் சேர்குடிநீர்" (தைலவ.தைல. 135).

[தொந்தம் + உறு-]

தொந்தமேறு-தல் *tondam-ēru-,* 5 செ.கு.வி. (v.i.) சேர்க்கையினால் சரக்குகளின் உறவாக்கு தலை அதிகப்படுத்தல்; to increase of chemical affinity by addition of other agents in alchamy (சா.அக.).

[தொந்தம் + ஏறு]

தொந்தயுத்தம் *tonda-yuttam,* பெ. (n.) இருவர் தமக்குள் செய்யும் போர்; duel, hand to hand fight. "தொந்தயுத்த நின்று ஞற்றினார்" (சேதுபு. சீதைகுண்ட. 12).

[தொந்தம் + யுத்தம்]

Skt. yudda → த. யுத்தம்

தொந்தரவு *tondaravu,* பெ. (n.) துன்பம் (உ.வ.); trouble, vexation, difficulty. பொதுமக்களுக்கு எந்தத் தொந்தரவும் இல்லாமல் ஊர்வலம் நடத்தத் தமிழியக்கத் தொண்டர்கள் முடிவு செய்தனர்.

ம. தொந்தரம்; க. தொந்தரெ; தெ. தொந்தர

[துள் → (துய்) → துயர் → துயரம். துள் → தொள் → தொய் → தொய்யல் = துன்பம். தொய் → தொ → தொந்தரவு (மு.தா. 285)]

தொந்தரி-த்தல் *tondari-,* 4 செ.குன்றாவி. (v.t.) வருத்துதல்; to trouble, vex, annoy. ஏன் சும்மா வந்து தொந்தரிக்கிறாய்? (உ.வ.).

[தொந்தரை → தொந்தரி]

தொந்தரை *tondarai,* பெ. (n.) தொந்தரவு பார்க்க; see *tondaravu.* "ஆசாபாசத் தொந்தரை யிட்டவர்மேல் வீழ்வார்பால்" (திருப்பு. 623).

[தொய் → தொ → தொந்தரை]

தொந்தரோகம் *tonda-rōgam,* பெ. (n.) தொந்த நோய் பார்க்க; see *tonda-nōy* (சா.அக.).

[தொந்தம் + ரோகம்]

Skt. rōga → த. ரோகம்

தொந்தரோகி *tonda-rōgi,* பெ. (n.) தொந்த நோயர் பார்க்க; see *tonda-nōyar* (சா.அக.).

[தொந்தம் + ரோகி]

Skt. rōgin → த. ரோகி

தொந்தவழுக்கை *tonda-valukkai,* பெ. (n.) சரவடிசரவடியாக ஏற்பட்ட தலை வழுக்கை; hereditary baldness (சா.அக.).

[தொந்தம் + வழுக்கை]

தொந்தவாதம் *tonda-vādam,* பெ. (n.) ஒரு ஊதை மற்றொரு மாத்திரை ஊதையோடு கலந்திருத்தல்; vāta humour in combination with another measure of vātam (சா.அக.).

[தொந்தம் + வாதம்]

தொந்தவியாதி *tonda-viyādi,* பெ. (n.) தொந்தநோய் பார்க்க; see *tonda-nōy* (சா.அக.).

[தொந்தம் + வியாதி. தொந்தம் → பழைமை]

Skt. vyādhi → த. வியாதி

தொந்தவினை *tonda-viṉai,* பெ. (n.) முற்பிறப்பிற் செய்த இருவினைப் பயன் (வின்.); fruit of former actions, good or evil.

[தொந்தம் + வினை]

தொந்தனை *tondaṉai,* பெ. (n.) இணை விழைச்சு; sexual union. "பரத்தை மாதர் தொந்தனைத் துவட்சி நீங்கான்" (குற்றா.தல. கவுற்சன. 26).

தொந்தார்த்தம் *tondārttam,* பெ. (n.) 1. இரட்டைப் பொருள்; double entendre. அவன் தொந்தார்த்தத்தோடு பேசுகிறான்; 2. தொந்த வினை (வின்.) பார்க்க; see *tonda-viṉai.*

[தொந்தம் + அர்த்தம்]

Skt. artha → த. அர்த்தம்

தொந்தார்த்தனை *tondārttaṉai,* பெ. (n.) ஒருவர்க்கொருவர் கூறும் கடுஞ்சொல்; reciprocal abuse. 2. ஒருவர்க்கொருவரோ டுள்ள பகை; mutual hatred (செ.அக.).

தொந்தி[1]-த்தல் *tondi-,* 4 செ.குவி. (v.i.) ஊதை, பித்தம், கோழை, சளி நோய்கள் ஒன்றோ டொன்று முரணுதல்; to be in conflict, as the different humours of the body with one another, to be complicated as a disease. 2. பற்றுதல் (யாழ்.அக.); to adhere, clave, to be united, familiar with. 3. தாறுமாறாதல்; to become disorderly, to be spoiled.

தொந்தி[2]-த்தல் *tondi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கலத்தல்; to compound, as medicines, mix. சரி கூட்டி தொந்தித்து (பணவிடு. பக். 22). 2. தொடர்தல்; to be perpetuated, to continue, as the fruit of karma.

தொந்தி[3] *tondi,* பெ. (n.) 1. பெருவயிறு; large belly, abdomen. "தொந்திகொ டந்திபடும் பெருந்துறை" (திருவாலவா. 27, 36). 2. தசை மடிப்பு (வின்.); fold or callop of fat. 3. நோய்வகை; obesity, enteroptosis. 4. பரவ மகளிர்அணியுங்கைக்காப்பு; bracelet of parava women (செ.அக.).

ம. தொந்தி

தொந்தி[4] *tondi,* பெ. (n.) 1. வயிறு; belly. 2. கீழ்வயிறு; abdomen. 3. தொப்பை; pot belly.

4. தொந்தித்தல்; becoming complicated as disease (சா.அக.).

தொந்திக்கணபதி *tondi-k-kaṇapadi,* பெ. (n.) பெருவயிற்றுப் பிள்ளையார்; big-bellied Ganēsā (செ.அக.).

[தொந்தி + கணபதி]

தொந்திக்கெளுத்தி *tondi-keḷutti,* பெ. (n.) ஏரியிலும் குளங்களிலும் மேயும் மீன்; fish that roams in the lake and ponds.

[தொந்தி + கெளுத்தி]

இதன் அடிவயிறு பருத்துக் காணப்படும்.



தொந்தித்தரை-த்தல் *tondittu-arai,* 4 செ.குவி. (v.i.) இரண்டு சரக்குகளும் ஒன்றுபடக் கலந்த பிறகு அரைத்தல்; to grind after the drugs had chemically combined as in sulphur and mercury (சா.அக.).

[தொந்தித்து + அரை-.]

தொந்திதள்ளுதல் *tondi-taḷḷudal,* பெ. (n.) 1. பெருவயிறாகை (உ.வ.); becoming pot-bellied. 2. வளைந்து போகை; being curved or folded. பட்டம் தொந்தி தள்ளியிருக்கிறது (தஞ்சை.).

[தொந்தி + தள்ளு]

தொந்திப்பாதல் *tondi-p-pādal,* பெ. (n.) ஒன்றோடொன்று பின்னிக் கொள்ளல்; pulse becoming complicated by combined with one another (சா.அக.).

[தொந்திப்பு + ஆதல்]

தொந்திப்பு[1] *tondippu,* பெ. (n.) 1. நட்பு; union, friendship. 2. தீராப்பகை; perpetuation of hatred. 3. நோய்க் கலப்பு; complication of disease (செ.அக.).

தொந்திப்பு[2] *tondippu,* பெ. (n.) 1. நெருக்கம்; intimacy. 2. பழந்தொடர்பு; oldy relation. 3. ஒன்றோடொன்றின் தொடர்பு; relative connection, mutual connection (சா.அக.).

தொந்திப்பு[3] *tondippu,* பெ. (n.) 1. இரட்டிப்பு; double. 2. வேறுபாடு; difference.

தொந்திமணல் *tondi-maṇal,* பெ. (n.) புதை மணல் (இ.வ.); quicksand, bed of loose sand, readily swallowing animals (செ.அக.).

[தொந்தி + மணல்]

தொந்திவயிறு *tondi-vayiṟu,* பெ. (n.) தொப்பை வயிறு; pot belly (சா.அக.).

[தொந்தி + வயிறு]

தொந்திவிழு-தல் *tondi-viḻu-,* 3 செ.கு.வி. (v.i.) வயிறு பெருத்தல்; to get pot belly (சா.அக.).

[தொந்தி + விழு-.]

தொந்திவைத்தல் *tondi-vaittal,* பெ. (n.) 1. தொந்திதள்ளுதல் பார்க்க; see *tondi-taḷḷu-dal.* 2. செல்வனாகை; becoming prosperous (செ.அக.).

[தொந்தி + வைத்தல்]

தொந்துவநோய் *tonduva-nōy,* பெ. (n.) பல நோய்களின் கலப்பு; complicated diseases (சா.அக.).

[தொந்துவம் + நோய்]

தொந்துவம் *tonduvam,* பெ. (n.) கலப்பு; mixture, union (சா.அக.).

[தொந்து → தொந்துவம்]

தொந்தை *tondai,* பெ. (n.) தொந்தம்பாலை பார்க்க; see *tondam-pālai.*

தொந்தோமெனல் *tondōm-eṉal,* பெ. (n.) தாளவொலிக் குறிப்பு (சூடா. 12, 123); onom. expr. of beating time.

[தொம் + தோம் + எனல்]

தொப்பக்கடமான் *toppa-k-kaḍamāṉ,* பெ. (n.) வயிறு பருத்துக் காணப்படும் முட்களில்லாத தொரு கடல்மீன்; thornless sea fish which has large stomach.

[தொப்பை + கடமான்]

தொப்பக்கெடுத்தை *toppa-k-keḍuttai,* பெ. (n.) வயிறு பெருத்த கெடுத்தை என்னும் நச்சுத் தன்மையுள்ள கடல்மீன் (தஞ்சை. மீனவ.); poisonous sea fish, called keḍuttai.

[தொப்பை + கெடுத்தை]

தொப்பக்கெண்டை *toppa-k-keṇḍai,* பெ. (n.) வயிறு பெருத்த கெண்டை மீன் (தஞ்சை. மீனவ.); keṇḍai fish which has large belly.

[தொப்பை + கெண்டை]

தொப்பணம் *toppaṇam,* பெ. (n.) பிள்ளையார் வணக்கம் முதலியவற்றில் வலக்கையால் இடக்காதையும் இடக்கையால் வலக் காதையும் பிடித்து உட்கார்ந்தெழுந்திருக்கை; a form of obeisance to Ganēsā, in which the hands are crossed over each other, the fingers grasp the ear-lobes and the motions of sitting and standing are gone through alternately. "வளர்கை குழைபிடி தொப்பண குட்டொடு வனச பரிபுர பொற்பத வர்ச்சனை" (திருப்பு. விநாயகர்துதி, 5).

தொப்பணம்போடு-தல் *toppaṇam-pōḍu-,* 20 செ.கு.வி. (n.) பிள்ளையார் வணக்கம் போன்றவற்றில் இடக்கையால் வலக் காதையும் வலக்கையால் இடக்காதையும் பிடித்து உட்கார்ந்தெழுந்திருத்தல்; to form of obeisance to Ganēsā in which the hands are crossed over each other the fingers grasp the ear-lobes and motions of sitting and standing are gone through alternately.

[தொப்பணம் + போடு]

தொப்பளம் *toppaḷam,* பெ. (n.) பாதிவெந்த காய்கறி கொண்ட குழம்புவகை (இ.வ.); half boiled vegetable soup.

தெ. தப்பளமு

தொப்பற *toppaṟa,* வி.எ. (adv.) நன்றாய்; soundly, thoroughly. என்னைத் தொப்பற அடித்தார்கள் (இ.வ.).

தொப்பறை *toppāṟai,* பெ. (n.) எளியநிலை; miserable condition. தொப்பறைக் குடித்தனம் (தஞ்சை.).

தொப்பாரம்[1] *toppāram,* பெ. (n.) 1. துணியிற் கட்டித் தோள்மேற் கொண்டுபோகப்படும் பெருமூட்டை (யாழ்.அக.); a large bundle of things tied in a cloth, as carried over the shoulders; pack. 2. புற்கட்டு; a large truss of grass. 3. நெடுஞ்சப்பாத்து (யாழ்.அக.); a kind of spurge.

[தோள் + பாரம் → தோள்பாரம் → தோப்பாரம் → தொப்பாரம்]

தொப்பாரம்[2] *toppāram,* பெ. (n.) 1. சிறு கொப்புளம்; vessicle, pustule. 2. பெருங் குவியல்; big hoap, pile (சா.அக.).

தொப்பாரம்[3] *toppāram,* பெ. (n.) முகமூடி வகை; a kind of veil.

தெ. தொப்பாரமு

தொப்பாரம்[4] *toppāram,* பெ. (n.) மணிமுடி வகை; a kind of crown. "குற்றுடை வாளுங் கட்டிக் குலவு தொப்பாரங் கட்டி" (திருவாலவா. 4, 12).

தெ. தபாரமு

தொப்பாரம்[5] *toppāram,* பெ. (n.) பெரிய கட்டடம் (வின்.); large building.

தெ. சப்பாரமு

தொப்பி[1] *toppi,* பெ. (n.) கள்; toddy.

[தோப்பி → தொப்பி]

தொப்பி[2] *toppi,* பெ. (n.) முழவின் (மிருதங்கத்தின்) இடப்பக்கம்; left side of a mirudaṅgam.

தொப்பி[3] *toppi,* பெ. (n.) நெல்லி; Indian-gooseberry (சா.அக.).

தொப்பிக்கட்டை *toppi-k-kaṭṭai,* பெ. (n.) வைக்கோற்புரி சூட்டி நீரில் நடப்பட்ட மரம் (யாழ்ப்.); sticks or posts set up in shallow waters to indicate the course of the channel, as a hanging straw on the top to make them conspicuous.

[தொப்பி + கட்டை]

தொப்பிச்சாடி *toppi-c-cāḍy,* பெ. (n.) கள்சாடி; toddy jar (சா.அக.).

[தோப்பி → தொப்பி + சாடி]

தொப்பிமடல் *toppi-maḍal,* பெ. (n.) பாக்கு மரத்தின் பாளை (யாழ்ப்.); integument of the areca flower (சா.அக.).

[தொப்பி + மடல்]

தொப்புட்கழலை *topput-kaḻalai,* பெ. (n.) கொப்பூழிலேற்படுங் கழலை; tumour of the umbilics (சா.அக.).

[தொப்புள் + கழலை]

தொப்புட்குழி *topput-kuḻi,* பெ. (n.) தொப்புளின் பள்ளம்; naval depression (சா.அக.).

[தொப்புள் + குழி]

தொப்புட்கொடி *topput-koḍi,* பெ. (n.) கொப்பூழ்க்கொடி (உ.வ.); umbilical cord, navel string.

[தொப்புள் + கொடி]

தொப்புட்கொடியுறவு *topput-koḍi-y-uravu,* பெ. (n.) மொழிவழியான இனவுணர்வு; ethinical relationship through mother tongue. ஈழத்தவருக்கும் தமிழருக்கும் தொப்புள் கொடியுறவு உள்ளது.

[தொப்புள்கொடி + உறவு]

கருவில் வளரும் சேய்க்குத் தாயுடன் இணைக்கப்பட்டுள்ள தொப்புட் கொடி வழியே உணவு புகட்டப்படுவது போன்ற உருவகம்.

தொப்புத்திப்பெனல் *toppu-t-tippeṉal,* பெ. (n.) தொப்பெனல் பார்க்க; see *toppeṉal.*

[தொப்பு + திப்பு + எனல்]

தொப்புத்தொப்பெனல் *toppu-t-toppeṉal,* பெ. (n.) தொப்பெனல் பார்க்க; see *toppeṉal.*

தொப்புள் *toppuḷ,* பெ. (n.) கொப்பூழ்; navel (சாஅக.).

தொப்புள்கட்டி *toppuḷ-kaṭṭi,* பெ. (n.) கோழை, சளியினால் கொப்பூழின் கீழேனும், மேலேனும் கட்டியைப் போல் வீக்கத்தை யுண்டாக்கும் ஊதை நோய்; a kind of rheumatic abscess like swelling below the navel (சாஅக.).

[தொப்புள் + கட்டி]

தொப்புள்கடுப்பு *toppuḷ-kaḍuppu,* பெ. (n.) கொப்பூழ் அழற்சி; inflammation of the navel.

[தொப்புள் + கடுப்பு]

தொப்புள்கழலை *toppuḷ-kaḻalai,* பெ. (n.) கொப்பூழண்டை காணப்படும் கழலை அல்லது நீர்க்கட்டி; a watery tumour or cyst at the navel (சாஅக.).

தொப்புள்கொடி *toppuḷ-koḍi,* பெ. (n.) தாய்க்கும், கருவிலிருக்கும் குழந்தைக்கும் தொடர்புடையதாயிருக்கும் நஞ்சுக்கொடி; the navel string or umbilical cord (சாஅக.).

[தொப்புள் + கொடி]

தொப்புள்பிதுக்கம் *toppuḷ-pidukkam,* பெ. (n.) தொப்புள் புடைத்து வெளித்தள்ளல்; protrusion of navel tissue (சாஅக.).

[தொப்புள் + பிதுக்கம்]

தொப்புள்மந்திரம் *toppuḷ-mandiram,* பெ. (n.) (பிராமண) மணமக்களின் முதற் சேர்க்கைச் சடங்கிற் கூறும் மந்திரம்; a mantra uttered in the ceremony of consummation.

[தொப்புள் + மந்திரம்]

தொப்புள்வீக்கம் *toppuḷ-vīkkam,* பெ. (n.) கொப்பூழ் வீக்கம்; swelling of the umbilicus (சாஅக.).

[தொப்புள் + வீக்கம்]

தொப்புளறு-த்தல் *toppuḷ-aṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பிறந்த குழந்தையின் நஞ்சுக் கொடி அறுத்தல்; cutting off the umbilical card of a new born baby (சாஅக.).

[தொப்புள் + அறு]

தொப்புளான் *toppuḷāṉ,* பெ. (n.) பெரிய தொப்புளையுடையவன்; one having a large navel (சாஅக.).

[தொப்புள் + உளான்]

தொப்புளொழுக்கு *toppuḷ-oḻukku,* பெ. (n.) தொப்புளில் உண்டாகும் குருதியொழுக்கு; hemorrhage from the navel (சாஅக.).

[தொப்புள் + ஒழுக்கு]

தொப்பென்றுவிழு-தல் *toppeṉṟu-viḻu-,* 3 செ.கு.வி. (v.i.) நிலம் அல்லது நீருக்குள் சுமை கொண்டு விழுதல்; falling of a heavy body on the ground or into the water.

[தொப்பு + என்று + விழு-.]

தொப்பெனல் *toppeṉal,* பெ. (n.) 1. கீழ்விழுதற் குறிப்பு; falling with a thumbing noise. 2. அடிவிழுதற் குறிப்பு; sound of falling blow (செஅக.).

தொப்பை[1] *toppai,* பெ. (n.) 1. தொந்தி; paunch belly. 2. கொப்புளம்; boil. 3. கடல்மீன்; a sea fish. 4. திண்மையின்றிப் பருத்தது; that which has swelled without firmness or soft and weak. 5. பருத்துச் சரிந்த வயிறு; a relaxed condition of the abdominal walls in which they hangdown loose over the pubil by thier own weight (சாஅக.).

தெ. தொப்ப

[துல் → துள் → துண்பு → தும்பு → தொம்பு → தொம்பை → தொப்பை (வே.க. 282)]

தொப்பை[2] *toppai,* பெ. (n.) மத்தளத்தில் அடிக்கும் நடுவிடம் (இ.வ.); the central portion of the head of a drum.



தொப்பைக்கணபதி *toppai-k-kaṇapadi,* பெ. (n.) தொந்திக்கணபதி பார்க்க; see *tondi-k- kaṇapadi.*

[தொப்பை + கணபதி]

தொப்பைக்காரன் *toppai-k-kāraṉ,* பெ. (n.) பணக்காரன் (இ.வ.); wealthy person, as having a big paunch.

[தொப்பை + காரன்]

தொப்பைக்கூத்தாடி *toppai-k-kuttāḍi,* பெ. (n.). கோமாளி (இ.வ.); clown, as having a made-up pot-belly.

[தொப்பை + கூத்தாடி]

தொப்பைக்கெண்டைச்சாலா *toppai-k-keṇḍai-c-cālā,* பெ. (n.) வயிற்றின் அடிப்பகுதி பருத்துக்காணும் ஆற்று மீன் வகை (தஞ்சை. மீனவ.); river fish with a big lower part.

தொப்பைக்கெளுத்தி *toppai-k-keḷutti,* பெ. (n.) அடி வயிறு பெருத்த கெளுத்தி மீன் (செங்கை. மீனவ); keḷutti fish with a large size stomach.

[தொப்பை + கெளுத்தி]

தொப்பைச்சாலா *toppai-c-cālā,* பெ. (n.) உடல் பருத்துக் காணப்படும் ஒரு சாலாமீன்; sālā fish, which has big size body.

[தொப்பை + சாலா]

தொப்பைதள்ளு-தல் *toppai-taḷḷu-,* 15 செ.கு.வி. (v.i.) வயிறு பருத்துச் சரிதல்; hanging of the abdominal walls through relaxation (சா.அக.).

[தொப்பை + தள்ளு-]

தொப்பைமிளகாய் *toppai-milagāi,* பெ. (n.) குடை மிளகாய்; large plump chillies; bell pepper, capsicum (சா.அக.).

[தொப்பை + மிளகாய்]



தொப்பைமீன் *toppai-mīṉ,* பெ. (n.) ஒரு வகைக் கடல் மீன்; a sea fish (சா.அக.).

[தொப்பை + மீன்]

தொம்பக்கூத்தாடி *tompa-k-kūttāḍi,* பெ. (n.) தொம்பன் (இ.வ.) பார்க்க; see *tombaṉ.*

[தொம்பம் + கூத்தாடி]

தொம்பதம் *tompadam,* பெ. (n.) 'தத்வமஸி' என்னும் மறைத் தொடரில் 'த்வம்' எனுஞ் சொல் (திருப்பு 348); the word 'tvam' in the sacred sentence tat-tvam-asi "தொம்பத்துப் பண்புரைத்து" (திருப்பு. 348).

தொம்பம் *tombam,* பெ. (n.) கழைக்கூத்து (யாழ்.அக.); pole-dancing.



தொம்பரக்குடித்தனம் *tombara-k-kuḍittaṉam,* பெ. (n.) செலவாளிக்குடும்பம் (உ.வ.); domestic life of extravagance and waste, lack of domestic economy.

[தொம்பரம் + குடித்தனம்]

தொம்பரம்[1] *tombaram,* பெ. (n.) பலருக்குச் சமைத்த ஊண்; a mess prepared for many, an open table, as in a palace (W).

தெ. தொம்மரமு

தொம்பரம்[2] *tombaram,* பெ. (n.) சமையற் பானை; cooking pot. அந்த அரிசியைத் தொம்பரத்திற் போட்டுச் சமையல் செய்யுங்கள் (தமிழறி. 46).

தொம்பரம்[3] *tombaram,* பெ. (n.) தொப்பாரம்[5] பார்க்க; see *toppāram.*

தொம்பரவன் *tombaravaṉ,* பெ. (n.) தொம்பன் பார்க்க; see *tombaṉ.*

[தொம்பன் → தொம்பரவன்]

தொம்பக் கூத்தாடி





தொம்பை மாலை

கன்னிமாரா
சென்னை-60

தொம்பரை[1] *tombarai,* பெ. (n.) ஊர்சுற்றி (இ.வ.); a vagabond.

[தொம்பன் → தொம்பரை]

தொம்பரை[2] *tombarai,* பெ. (n.) நெற்குதிர்; granary. *தொம்பரைக டோறுமுன்னாட் டாழ்வின்றி வைத்திடு நெற் றான்யமதை (பஞ்ச. திருமுக. 193).*

[தொம்பறை → தொம்பரை]



தொம்பல் *tombal,* பெ. (n.) கலப்பையி லொட்டுஞ்சேறு (இ.வ.); the mud that sticks to the plough-share.

தொம்பறை *tombaṟai,* பெ. (n.) *1.* களஞ்சியம்; granary, barn. *2.* தொம்பை[1], *2* பார்க்க; see *tombai*[1]*,2. 3.* பெருவயிரன்; pot-bellied person, as resembling a grain basket.

தொம்பன் *tombaṉ,* பெ. (n.) கழைக்கூத்தன்; a person belonging to the tribe of tumblers, acrobats and bole-dancers. "தொம்பர் போலலாகு கொண்டு" *(இராமநா. உயுத். 88).*

க. தொம்பம்

தொம்பன்கூத்தாடி *tombaṉ-kūttāḍi,* பெ. (n.) தொம்பன் பார்க்க; see *tombaṉ.*

[தொம்பன் + கூத்தாடி]

தொம்பை[1] *tombai,* பெ. (n.) *1.* மூங்கிலாலான நெற்குதிர்; grain bin, high wicker-basket used as a receptacle for grain. "அவனைத் தொம்பை மேவுவித்து" *(பஞ்சதந். மித்திர. 183).* தொம்பைக் கூண்டிலே எலியைக் காவல் வைத்துக் கட்டினது போல *(பழ.). 2.* தொம்பை மாலை (இ.வ.) பார்க்க; see *tombai-mālai. 3.* இறைத்திருமேனி புறப்பாட்டின் போது முன் கொண்டு செல்லப்படும் பொருள்களுளொன்று (இ.வ.); a paraphernal article carried before an idol.

[துல் → துள் → துண்பு → தும்பு → தொம்பு → தொம்பை (வே.க. 282)]

தொம்பை[2] *tombai,* பெ. (n.) *1.* குந்தாணி; large mortar. *2.* பறை; large drum.

[தும்பு → தொம்பை (மு.தா. 277)]



தொம்பை[3] *tombai,* பெ. (n.) எருமைக்கு வரும் நோய்களுள் ஒன்று; a disease that affects the buffaloes.

தொம்பை[4] *tombai,* பெ. (n.) தேரில் தொங்க விடப்படும் துணிக்கூடு; festoons.



தொம்பைக்கூடு *tombai-k-kūḍu,* பெ. (n.) தொம்பை[1], *1* பார்க்க; see *tombai.* "பலதொம்பைக் கூட்டிற் சம்பா நெற்கட்டி வைக்கிறேன்" *(விறலிவிடு. 824).*

[தொம்பை + கூடு]

தொம்பைக்கூண்டு *tombai-k-kūṇḍu,* பெ. (n.) தொம்பை[1] பார்க்க; see *tombai.*

[தொம்பை + கூண்டு]

தொம்பைநாற்று *tombai-nāṟṟu,* பெ. (n.) அடிப்பாகம் பருத்து மண் இறுகலாகப் பிடித்துள்ள நெல் நாற்று; rice-plant with its root grown stout in hardened clay *(செ.அக.).*

மறுவ. தொளிம்பை

[தொம்பை + நாற்று. தொளி → தொளும்பை → தொம்பை. தொளி = சேறு]

தொம்பைபாய்-தல் *tombai-pāy-,* 1 செ.கு.வி. (v.i.) நெல் நாற்றின் வேர்ப்பாகம் பருத்து மண் இறுகலாகப் பிடித்திருத்தல் (நாஞ்.); to grow stout in root stuck in hardened clay, as rice-plant.

[தொம்பை + பாய்-.]

தொம்பைமாலை *tombai-mālai,* பெ. (n.) தேர் முதலியவற்றின் ஆடைத் தொங்கல் வகை; a kind of cylindrical cloth-ornament hung about a chariot or pandal.

[தொம்பை + மாலை]

தொம்மனை *tommaṉai,* பெ. (n.) தொம்பை[1] (வின்.) பார்க்க; see *tombai.*

[தொம்பை → தொம்மணை]

தொம்மெனல் *tom-m-eṉal,* பெ. (n.) ஒலிக் குறிப்பு; onom. expr. of drum-beat. "தொம்மென . . . குடமுழவெழு முழக்கம்" *(கோயிற்பு. நடராச.).*

[தொம் + எனல்]

தொம்மை *tommai,* பெ. (n.) 1. தொம்பை பார்க்க; see *tombai.* "வடமேற்கில் தானியத் தொம்மை யமைக்கவும்" *(சர்வா.சிற். 17).* 2. பருமன்; bulkiness, corpulence.

தொமலாடி *tomalāḍi,* பெ. (n.) எட்டி; nuxuomica strychnine *(சா. அக.).*

தொய்[1]-தல் *toy-,* 1 செ.கு.வி. (v.i.) 1. இளைத்தல்; to languish, pine, grow weak. 2. சோர்தல்; to be weary, fatigued; to fail in energy; to droop, faint, flag. "தொய்யுமான் போலத் துவக்குண்டேன்" *(விறலிவிடு. 407).* இத்தனை பேருக்கிடையில் நமக்கு எங்கே வேலை கிடைக்கப் போகிறது என்ற நினைப்பில் மனம் தொய்ந்தாள். 3. துவளுதல்; to become slack, to be loose, supple, yielding. "தொய்யு மரவணைக்குள்" *(திருப்பு. 1173).* நிறையத் துணிகள் தொங்குவதால் கொடி தொய்யத் தொடங்கி விட்டது. 4. வளைதல்; to bend through weakness or want of support. கட்டடம் தொய்கிறது. 5. வயிறு முதலியன வாடுதல் (வின்.); to sink in, as the belly through hunger or disease. உணவின்றி வயிறு தொய்கிறது. 6. கெடுதல்; to perish; to be ruined. "தொய்யா வெறுக்கைகொடு" *(பெரும்பாண் 434).* 7. பயன் குறைதல் (வின்.); to be past the prime, as trees; to be reduced in fruitlessness. 8. மூச்சுத் திணறுதல் (வின்.); to breathe short and hard, as while suffering from asthma. 9. வினை செய்தல்; to labour, do work. "தொய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்" *(புறநா. 214).*

[துல் → துள் → தொள் → தொய் (மு.தா. 281)]

தொய்[2]-தல் *toy-,* 1 செ.குன்றாவி. (v. t.) உழுதல்; to plough. "தொய்யாது வித்திய துளர்படு துடவை" *(மலைபடு. 122).*

[தொள் → தொளி = சேறு. தொள் → தொய்]

தொய்[3] *toy,* பெ. (n.) குற்றம்; fault, blemish, deficiency. "தொய்யறப் பெய்த . . . பவளச் செப்பும்" *(சீவக. 2474).*

தொய்தவம் *toydavam,* பெ. (n.) பரம்பை அல்லது வன்னி மரம்; Indian mesquit *(சா.அக.).*

தொய்படு-தல் *toy-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) நனைதல்; to be moistened, wet. "நும்மியந் தொய்படாமல்" *(மலைபடு. 365).*

[தொய் + படு-.]

தொய்யகம்[1] *toy-y-agam,* பெ. (n.) தலைக் கோலத்தின் ஓர் உறுப்பு; a part of a head ornament. "தொய்யகந் தாழ்ந்த கதுப்பு" *(கலித். 28). (சிலப். 6: 107).*

[தொய் → தொய்யகம்]

தொய்யகம்² *toy-y-agam,* பெ. (n.) தலைப் பாளை; the first flower sheath or spathe of palmyra, coconut or areca nut (சா.அக.).

தொய்யப்போடு-தல் *toyya-p-pōḍu-,* 20 செ.குன்றாவி. (v.t.) பயனோக்கிச் சிறிது காலந் தாழ்த்தல் (உ.வ.); to delay purposively. வேலையைத் தொய்யப் போட்டான் (உ.வ.) (செ.அக.).

[தோங்கப் போடுதல் → தொங்கப் போடுதல் → தொய்யப் போடுதல். தோங்கப்போடுதல் = நிறுத்தி வைத்தல்]

தொய்யல்¹ *toyyal,* பெ. (n.) 1. சோர்கை; fainting, languishing, despondency. "அறியாத் தொய்யற் சிந்தையாம் யாவரை யாதென்று துதிப்பேம்" (கம்பரா. ஊர்தே. 18). 2. துன்பம் (சூடா.); affliction. 3. சேறு (பிங்.); mud. 4. உழவு; ploughing.

[தொள்ளல் → தொய்யல்]

தொய்யல்² *toyyal,* பெ. (n.) களிப்பு (திவா.); delight, pleasure, gladness, joy.

தொய்யவாங்கு¹**-தல்** *toyya-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) மெல்ல மூச்சு வருதல்; to be very slow in breathing.

[தொய்ய + வாங்கு]

தொய்யவாங்கு²**-தல்** *toyya-vāṅgu,* 5 செ.குன்றாவி. (v.t.) நிலை தாழ்த்துதல்; to reduce a person by draining away his property.

[தொய்ய + வாங்கு-.]

தொய்யவிடு¹**-தல்** *toyya-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. கயிறு முதலானவற்றைத் தளர விடுதல்; to slacken, as a rope. 2. விலையேறுதற் பொருட்டு விற்பனைப் பொருளைக் கட்டி வைத்தல்; to hold back for a time with a view to raise the price, as merchandise. 3. நிறுத்தி வைத்தல்; to put off, delay.

[தொய்ய + விடு-.]

தொய்யவிடு²**-தல்** *toyya-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) இணங்குதல்; to be yielding.

தொய்யா *toyyā,* பெ. (n.) தொய்யாக்கீரை பார்க்க; see *toyyā-k-kīrai.*

தொய்யாக்கீரை *toyyā-k-kirai,* பெ. (n.) கீரை வகை; the smallest Indian amaranth, a weed of gardens and a wholesome potherb.

[தொய்யா + கீரை]

தொய்யாவுலகம் *toyyā-v-ulagam,* பெ. (n.) துறக்கம்; heaven, as the world where nobody need work. "தொய்யா வுலகத்து நுகர்ச்சி" (புறநா. 214, 9).

[தொய் + ஆ + உலகம்]

தொய்யில் *toyyil,* பெ. (n.) மகளிர் முலையிலும் தோளிலும் எழுதுங்கோலம்; decorative make-up, by sandal paste and fragrant paste on women's breast and shoulder. "சுணங்கணி மென்முலைமேற் றொய்யிலெ ழுதுகோ" (கலித். 111:14).

[தொய் → தொய்யில்]

தொய்வு¹ *toyvu,* பெ. (n.) 1. இளைப்பு; fatigue. 2. ஈளை; asthma. 3. மூச்சு முட்டல்; hard breathing (சா. அக.).

[தொய்வு = தடை படல்]

தொய்வு² *toyvu,* பெ. (n.) 1. கட்டின் தளர்ச்சி; laxity, looseness, as of a rope. துணிபோடும் கொடிக் கயிறு தொய்வடைந்து விட்டது. 2. சோர்வு; faintness. தமிழின, தமிழ்மொழியின் விடுதலைக்காகப் பாவலரேறு தம் இறுதி மூச்சுவரைத் தொய்வின்றிப் பாடுபட்டார் (உ.வ.).

வேலையில் தொய்வு ஆகி விட்டான். 3. மூச்சுத் திணறல் (யாழ்.அக.); difficulty of breathing.

தொரட்டி[1] *toratti*, பெ. (n.) இரும்பு முள்; iron crook.



தொரட்டி[2] *toratti*, பெ. (n.) தொரட்டி முட்செடி; Ceylon caper (சா.அக.).

[துரட்டி → தொரட்டி]

தொரட்டி[3] *toratti*, பெ. (n.) ஒரு மீன்; kind of fish.

தொரட்டிமுள்ளி *toratti-mulli*, பெ. (n.) வெள்ளைத் துரட்டி; raghota caper which is a curved thorny variety (சா.அக.).

[தொரட்டி + முள்ளி]

தொரம் *toram*, பெ. (n.) கட்டுமரத்தின் இரு விளிம்பாய் அமையுந்தடி (மரத்தடி) (நெல்லை. மீனவ.); wooden rod on both side of the raft.

தொரா *torā*, பெ. (n.) வீட்டின் பூந் தொட்டியில் வைத்துப் பயிராக்கக் கூடிய மூலிகை; it is the most important of pot herb in our houses and garden. இது மூலிகைக்கெல்லாம் அரசனாகக் கருதப்படும் (சா.அக.).

மறுவ. துரா, தரா.

தொல் *tol*, பெ.அ (adj.) 1. பழைய; old. 2. இயற்கையான; natural. தொல்லெழில் (கலித். 17, 5). 3. தொன்மையான; ancient. தொல்பழங் காலம்.

தொல்கதை *tol-kadai*, பெ. (n.) தொன்மம்; purāna. "சூதனோதியது மூவாறு தொல்கதை" (கந்தபு. அவையடக். 8). தொல்கதை பேசிக் காலத்தைக் கழிக்காதே. (இ.வ.).

[தொல் + கதை]

தொல்காப்பியச்சூத்திரவிருத்தி *tol-kāppiya-c-cūttirra-virutti*, பெ. (n.) தொல்காப்பியத்தின் முதல் நூற்பாவுக்குச் சிவஞான முனிவர் வரைந்த விரிவுரை (விருத்தியுரை); an elaborate commentary on the pāyiram and the first sutra of Tolkāppiyam by Civa-ñāṉa-muṉivar.

[தொல்காப்பியம் + சூத்திரம் + விருத்தி]

தொல்காப்பியத்தேவர் *tol-kāppiya-t-tēvar*, பெ. (n.) 13ஆம் நூற்றாண்டிலிருந்தவரும் திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் இயற்றிய வருமான ஆசிரியர் (தமிழ்நா. 30); a poet, author of Tiruppātiri-puliyūr-k-kalampagam.

[தொல்காப்பியம் + தேவர்]

தொல்காப்பியப்புலவர் *tol-kāppiya-p-pulavar*, பெ. (n.) தொல்காப்பியனார் பார்க்க; see *tolkāppiyaṉār*. தொல்காப்பியப்புலவர் தோன்ற விரித்துரைத்தார் பல்காய னார்பகுத்துப் பண்ணினார் (வீரசோ. 150, உரை).

தொல்காப்பியம் *tol-kāppiyam*, பெ. (n.) மிகப் பழையதும் தொல்காப்பியனார் இயற்றியது மான தமிழிலக்கண நூல்; the most ancient Tamil grammar extant, by Tolkāppiyaṉār.

[தொல் + காப்பியம்]

தொல்காப்பியம் இன்றுள்ள முதல் தொன்னூல் மட்டுமன்றி, பண்டைத் தமிழ் நாகரிகத்தையும் பண்பாட்டையும் தாங்கி நிற்கும் ஒருபெருந் தூணாகும். அஃதின்றேல், கடைக்கழகத்திற்கு முந்திய தமிழும் தமிழ் வரலாறும் அதனால் தமிழர் வரலாறும் அறவே இல்லாமற் போம்; தமிழன் உலகுள்ள வளவும் ஆரியனுக் கடிமையாகவே இருந்துழல்வான். குமரிநாட்டுத் தமிழன் தன் நுண்மாண் நுழைபுலத்தால் வகுத்த பொருளிலக்கணம், அதற்கு அச்சிறப்பைத் தந்துள்ளது (தவ.வ. 205).

தொல்காப்பியர் *tol-kāppiyar*, பெ. (n.) தொல்காப்பியனார் பார்க்க; see *tol-kāppiyaṉār*.

[தொல் + காப்பியர்]

தொல்காப்பியர்காலம் *tol-kāppiyar-kālam,* பெ (n.) தொல்காப்பியர் வாழ்ந்த காலம்; the age of Tolkappiyar.

[தொல்காப்பியர் + காலம்]

காலம் : தொல்காப்பிய அரங்கேற்றத்திற்குத் தலைமை தாங்கிய அதங்கோட்டாசானை "நான்மறை முற்றிய" என்றும், தொல்காப்பியரை "ஐந்திரம் நிறைந்த" என்றும், தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் இயற்றிய பனம்பாரனார் அடைகொடுத்துக் குறிப்பதனால் ஆரிய மறையை நாலாக வகுத்த வேதவியாசர் காலத்திற்கும், ஐந்திரத்திற்கும் பிற்பட்ட 'அட்டாத்யாயீ'யை இயற்றிய பாணினி காலத்திற்கும், தொல்காப்பியர் இடைப்பட்டவர் ஆவர். பாரதக் காலத்தினராகிய வேதவியாசர் காலம் கி.மு. 1000, பாணினி காலம் கி.மு. 5ஆம் நூற்றாண்டு.

தொல்காப்பியர் இடைக்கழகத்திற்கும் கடைக் கழகத்திற்கும் இடைப்பட்டவர். அகத்தியர்க்கு மிகப்பிற்பட்டவர். அவரை அகத்தியர் மாணவர் என்பது காலவழுவாகும். அகத்தியர் பாரதத்திற்கு முந்தியவர், தொல்காப்பியர் பிந்தியவர். இருவரும் இடைக்கழகத்திற்குப் பிற்பட்டவரே.

தொல்காப்பியர்க்குக் கழகத் தொடர் பின்மையினாலேயே அவர் நூல் அதங் கோட்டாசான் தலைமையில் அரங்கேற்றப் பெற்றது.

கடைக்கழகக்காலம் கி.மு. 5ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 4ஆம் நூற்றாண்டு வரை என்பது, பண்டைத் தமிழ்நாட்டு வரலாற்றாராய்ச்சி யாளர் பேரா. இராமச்சந்திர தீட்சிதர் முடிபு.

"விண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு"

(தொல். 1336)

என்று தொல்காப்பியர் தம்காலத் தமிழகத்தை வண்ணித்திருப்பதால், எள்ளளவும் எதிர்ப்பின்றி மூவேந்தரே முடியுடையோராய் முத்தமிழ் நாட்டையும் தம் முன்னோர் போல் அறம் பிழையாது ஆட்சி செய்துவந்த நற்காலம் தொல்காப்பியரதென்பது அறியப் படும்.

மூவேந்தரும் தம்முள்ளும் தம் குறுநில மன்னரொடும் அடிக்கடி நிகழ்த்திய போரால் அமைதியின்மை தமிழகத்தில் நிலவி யிருந்தமையே, கடைக்கழக இலக்கியம் அளிக்கும் காட்சியாகும். ஆதலால் தொல்காப்பியர் அத்தகைய காலத்திற்கு மிக முற்பட்டவர் என்பது தெளிவு.

"ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல"

(தொல். 510)

என்ற இலக்கண வரம்பு திருக்குறளிலும் கடைக்கழகச் செய்யுளிலும் மீறப்படுவதால், தொல்காப்பியர் காலம் கடைக்கழகத்திற்கு மிக முற்பட்டதாதல் வேண்டும்.

இனி, மேற்குறித்த 1336ஆம் நூற்பாவில் தொல்காப்பியர் "நாற்பெயரெல்லையகம்" என்றொரு தொடர்மொழியால் தமிழகத்தைக் குறித்திருப்பது உற்று நோக்கத்தக்கது. நால் வேறுபெயர் கொண்ட எல்லைக்குட்பட்ட நிலப்பரப்பு என்பது அத்தொடரின் பொருள்.

நால்வேறு பெயர்கொண்ட எல்லையாவன: வடக்கில் வடுகநாடும் தெற்கில் குமரியாறும் கிழக்கில் கீழைக்கடலும், மேற்கில் குட மலையும்.

முதற்காலத்தில் குடமலைக்குக் கீழ்ப்பட்ட கொங்குநாடே திருச்சிக் கருவூரைத் தலை நகராகக் கொண்ட சேர நாடாயிருந்தது.

"சேரர் கொங்கு வைகாவூர் நன்னாடதில்"

என்று அருணகிரிநாதர் பாடுதல் காண்க.

பிற்காலத்தில் கொங்குநாடு ஒரு நிலையான போர்க்களமாய் மாறியதாலும், தொல்காப்பியர் காலத்திற்குப்பின் மேலைக் கடற்கரை சற்று விரிவடைந்ததினாலும், சேரன் தன் அகநாட்டுத் தலைநகரையும் மேலைத் துறைநகராகிய வஞ்சிக்கு மாற்றி அதற்குக் கருவூர் என்றும் பெயரிட நேர்ந்தது.

மேலைக்கடற்கரையின் விரிவு பற்றியே, பரசுராமர் தம் தவ நிலையத்திற்கு இடம் வேண்டி, ஓர் அம்பெய்து மேலைக்கடலைப் பின்வாங்கச் செய்தார் என்ற கதையும் எழுந்தது.

'நாற்பெயரெல்லை' என்றது நாற்றிசை எல்லைகளையேயன்றி நால்வேறு மண்டலங்களையன்று. மேலும், பிற்காலத்துருவான மண்டலங்கள் நான்கல்ல, ஐந்தாகும். அவை, பாண்டி மண்டலம், சோழமண்டலம், சேரமண்டலம் அல்லது மலை மண்டலம், தொண்டைமண்டலம், கொங்கு மண்டலம் என்பனவாகும்.

சேரநாட்டார் கிழக்கிலிருந்து சென்றவர் என்பதற்கு, அவர் நாட்டமைப்பிற்கு நேர் முரணான கிழக்கு மேற்கு என்னும் சொற்களே போதிய சான்றாம்.

இதுகாறும் கூறியவற்றால், தொல்காப்பியர் காலம் கி.மு. 7ஆம் நூற்றாண்டென்று கொள்வதே மிகப்பொருத்தமாம் (ஒ.மொ. 82-84).

தொல்காப்பியன் *tol-kāppiyaṉ*, பெ. (n.) தொல்காப்பியனார் பார்க்க; see *tolkāppiyaṉār*. 'சீர்த்தித் தொல்காப்பியன் முதற் பன்னிரு புலவரும்" (பு.வெ.சிறப்புப்பா.).

[தொல்காப்பியம் → தொல்காப்பியன்]

தொல்காப்பியனார் *tol-kāppiyaṉār*, பெ. (n.) ***காப்பியக் குடியிற் பிறந்தவரும் அகத்தியனார் மாணாக்கரும் தொல்காப்பியமியற்றிய வருமாகிய ஆசிரியர்*** ; author of Tolkāppiam, reputed to be a disciple of Agattyar, as born in kappiya-k-kuḍi. *இடைச் சங்கமிருந்தார் அகத்தியனாருந் தொல்காப்பியனாரும் (இறை. 1, பக். 5).*

[தொல்காப்பியர் → தொல்காப்பியனார்]

தொல்காப்பியர் மதிப்புரவு கருதித் தொல்காப்பியனார் என்றழைக்கப்படுவது முண்டு.

தொல்காப்பியரின் இயற்பெயர் திரண தூமாக்கினியென்று சொல்லப்படுவதால், தொல்காப்பியர் என்னும் பெயர் சிறப்புப் பெயரேயாகும். இப்பெயருக்குப் பழைமையான காவிய மரபைச் சார்ந்தவரென்று பொருள் கூறப்படுகின்றது. தொல்காப்பியர் கவியென்ற முனிவரின் மரபினராயின், காவியர் அல்லது காப்பியர் என்றழைக்கப்படுதல் இயல்பே. ஆனால், பல்காப்பியர் என்று இன்னொரு புலவர் பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்தார். தொல்காப்பியர் என்னும் பெயருக்குப் பழைமையான காவிய மரபினர் என்னும் பொருள் பொருந்துமாயினும், பல்காப்பியர் என்னும் பெயருக்குப் பல காவிய மரபினர் என்று பொருள்கூறல் பொருந்தாது. ஆகவே, காப்பியர் என்னும் பெயருக்கு வேறொரு பொருளிருத்தல் வேண்டும்.

அகத்தியர் காலத்திற்கு முன், சிறிது காலம் தமிழ்நாட்டில் தமிழாராய்ச்சி குன்றி யிருந்தமை, சில சான்றுகளால் அறியக் கிடக்கின்றது. தொல்காப்பியப் பாயிரத்தில், 'முந்து' நூல் கண்டு என்று கூறியிருப்பதாலும், பிற சான்றுகளாலும், தொல்காப்பியர் அகத்தியர்க்குத் தெரியாத சில பழைய தமிழ் நூல்களைக் கண்டுபிடித்தாரென்றும், அதனால் தொல்காப்பியரெனப்பட்டார் என்றும் தெரிகின்றது. தொன்மையான காப்பியங்களையறிந்தவர் தொல்காப்பியர் என்றும், பல காப்பியங்களையறிந்தவர் பல்காப்பியர் என்றும் கூறப்பட்டனர். தொல்காப்பியர் இயற்றிய நூல் தொல்காப்பியம் என்றும், பல்காப்பியர் இயற்றிய நூல் பல்காப்பியம் என்றும் அதனதன் ஆசிரியராற் பெயர்பெற்றன (ஒ.மொ. 61).

தொல்காப்பியர் தம்மை ஆரியவேத அறிஞர் என்று காட்டிக் கொள்வதாலும், சில ஆரியக் கருத்துகளைப் புகுத்தியிருப்பதாலும், தமிழர் களவியலை ஆரியர் காந்தருவத்திற் கொப்பாகக் கூறியிருப்பதாலும் நான்மறை முற்றிய அதங்கோட்டாசான் தலைமையில் தம் நூலை அரங்கேற்றியதாலும் தொல்காப்பியத்திலுள்ள சில வழுக்களாலும் தொல்காப்பியர் ஆரியர் என்று துணியப்படும் (ஒ.மொ.62).

தொல்குணம் *tolguṇam*, பெ. (n.) ***பழமையாகிய பண்பு***; characteristic of antiquity. *எங்கோமா னெவ்வகைய னேந்திய தொல்குணத்தா லேனோரு மவ்வகைய ராமிவற்றி னால் (வீரசோ. 157, உரை).*

[தொல் + குணம்]

தொல்பதி *tolpadi*, பெ. (n.) ***பழைமையான ஊர்***; ancient city.

[தொல் + பதி]

தொல்பொருள் *tol-poruḷ*, பெ. (n.) ***பண்டைய மக்களின் பண்பாட்டைக் காட்டும் வகையில் கிடைக்கும் கட்டடப் பகுதிகள், கருவிகள், கலங்கள் போன்றவையும் அவற்றின் சிதைவும்***; archaeological value.

[தொல் + பொருள். தொல் - பழைய]

தொல்பொருள்துறை *tol-poruḷ-turai*, பெ. (n.) தொல்லியல்துறை பார்க்க; see *tolliyal-turai*.

[தொல்பொருள்துறை - தொல்லியல் துறை]

தொல்பொருளாராய்ச்சி *tol-poruḷ-ārāiccy,* பெ. (n.) பழம் பண்பாட்டினை வெளிப் படுத்தும் ஆய்வு; archaeology.

[தொல்பொருள் + ஆராய்ச்சி]

தொல்மரம் *tolmaram,* பெ. (n.) ஆலமரம்; banyan tree (சாஅக.).

தொல்லகம் *tollgam,* பெ. (n.) முன்னோர் வாழ்ந்த இடம்; place of birth of one's ancestors. ஆரியர்களின் தொல்லகம் தமிழ்நாடன்று; அவர்கள் வந்தேறிகளே.

தொல்லியல் *tolliyal,* பெ. (n.) தொல்லியல் துறை பார்க்க; see *tolliyal-tuṟai.*

[தொல்லியல்துறை – தொல்லியல்]

தொல்லியல்துறை *tolliyal-tuṟai,* பெ. (n.) பண்டைய மக்களின் பண்பாட்டுக் கூறுகளை ஆய்வு செய்யும் துறை; archeological department.

[தொல் + இயல் + துறை]

தொல்லுகம் *tollugam,* பெ. (n.) பாவட்டை; pavetta (செஅக.).

தொல்லெழில் *tol-l-eḻil,* பெ. (n.) இயற்கையழகு; natural beauty. "தொல்லெழி றொலைபிவள்" (கலித். 17:5).

[தொல் + எழில்]

தொல்லை[1] *tollai,* பெ. (n.) பழைமை; antiquity, ancientness. "தொல்லைக்க ணின்றார் தொடர்பு" (குறள், 806).

தெ. தொல்லி

[தொல் → தொல்லை (முதா. 274)]

தொல்லை[2] *tollai,* பெ. (n.) 1. துன்பம்; trouble, perplexity, difficulty. மனத்தொல்லை யொழிவது என்று? 2. செயல், வினை, வேலை (அகநி.); work. அவனுக்குப் பலதொல்லைகளிருக்கின்றன.

ம. தொல்ல

[துல் → துன் → துன்பு. துல் → தொல் → தொல்லை (முதா. 285)]

தொல்லையார் *tollaiyār,* பெ. (n.) தேவர்; celestials, as the ancients. "தொல்லையா ரமுதுண்ண" (தேவா. 35).

[தொல்லை → தொல்லையார்]

தொல்லைவையகம் *tollai-vaiyagam,* பெ. (n.) துறக்கம்; heaven, as the ancient world. "தொல்லைவையகத் தேறுதொண்டர்கள்" (தேவா. 66, 3).

[தொல்லை + வையகம்]

தொல்வரவு *tol-varavu,* பெ. (n.) பழைய குடிவரவு; birth in an ancient family. "தொல்வரவுந் தோலுங் கெடுக்கும்" (குறள், 1043).

[தொல் + வரவு]

தொல்வரைவு *tol-varaivu,* பெ. (n.) அடிப்பட்ட குடியொழுக்கம்; ancient custom, rule of conduct. "செய்யாரே தொல் வரைவிற் றீர்ந்ததொழில்" (ஆசாரக். 57).

[தொல் + வரைவு]

தொல்வினை *tol-viṉai,* பெ. (n.) பழவினை; karma. "தொல்வினைப் பயன்றுய்ப்ப" (கலித். 118:3).

[தொல் + வினை]

தொலகை *tolagai,* பெ. (n.) செம்பாதியாய்ப் பிளந்து எடுக்கப்பட்ட மூங்கிற் கழி (குமரி. மீனவ.); bamboo rod, attained by making into two halves.

மறுவ. பிளாச்சி

தொலி[1]**-த்தல்** *toli-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. உரித்தல்; to stip off, as rind, bark; to flay. "தொலி எடு". 2. உமி அல்லது தோடு போக உரித்தல் (இ.வ.); to husk, hull, pound. 3. புடைத்தல்; to beat severely. 'அவனைத் தொலித்துவிட்டார்கள்'.

தொலி[2] *toli,* பெ. (n.) 1. தோல்; skin, rind. "வெங்காயத் தொலி". 2. உமி; husk. நெல்லுத் தொலி

ம. தொலி

தொலி[3] *toli,* பெ. (n.) மேற்றோல்; the natural outer coating of an animal separated from the body. ஆட்டுத் தொலியை உரித்துக் கொடு (இவ.) (சாஅக.).

தொலியக்கரம்பை *toliya-k-karambai,* பெ. (n.) நத்தைச் சூரி (மலை.); bristly buttonweed.

[தொலி + ஆ + கரம்பை]

தொலியல் *toliyal,* பெ. (n.) உமி போக்கிய அரிசி (வின்.); husked rice.

மறுவ. கொழியல் அரிசி

[தொலி + அல். தொலி = தோல். தோல் அல்லாத அரிசி)]

தொலியாக்கலப்பை *toliyā-k-kalappai,* பெ. (n.) தொலியக்கரம்பை பார்க்க; see *toliya-k-karambai.*

[தொலி + ஆ + கலப்பை]

தொலுக்குநண்டு *tolukku-nandu,* பெ. (n.) ஒருவகைக் கடல் சிறு நண்டு (குமரி. மீனவ.); a small size sea crab.

தொலும்பு *tolumbu,* பெ. (n.) மாட்டின் மயிர் நிறத்தின் வகையைக் குறிக்க வழங்கும் தரகர் பேச்சுமொழி; a particular colour of cows (in broker's language).

தொலை[1]-தல் *tolai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. அழிதல்; to become extinct, perish, die. "தொலையாக் கற்ப" (பதிற்றுப். 43, 31). 2. முடிதல்; to be exhausted, terminated, expended, expiated, liquidated. 3. வழி முதலியன கழிதல்; to end, as a way or distance; to expire, as time. "தொலையாத கானங் கடந்த வந்நாள்" (அஷ்டப். திருவரங்கக். 16). 4. முற்றுதல்; to be over, finished. "எடுத்த வினை எப்போது தொலையும்"? 5. சோர்தல்; to be weary. "நாத்தொலைவில்லா யாயினும்" (மணிமே. 24:99). 6. தோற்றல்; to be defeated, outrivalled; to fail in comparison. "ஒருவனை யொருவ னடுதலுந் தொலைதலும்" (புறநா.76). 7. வருந்துதல்; to suffer. "சுடுதொழி லரக்கராற் றொலைந்து" (கம்பரா. திருவவ.). 8. காணாமற் போதல்; to be lost. 'பொத்தகந் தொலைந்தது'. 9. நீங்குதல்; to leave; to depart for good. "என்னைவிட்டுத் தொலைந்தான்".

[துல் → தொல் → தொலை]

தொலை[2]-த்தல் *tolai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. அழித்தல்; to destroy, kill, exterminate, as in battle. "விலங்கலன்ன போர்முதற் றொலைஇ" (மலைபடு. 461). 2. கழித்தல்; to spend, pass, as time. "துதித்து முழுநாட் டொலைப்போ ருளத்தான்" (சிவப். பிரபந். வெங்கையுலா. 285). 3. நீக்குதல்; to remove, wipe off. 4. முற்றுப் பெறச் செய்தல் (வின்.); to bring to an end, settle. 5. முடித்தல்; to finish. "தங்கடன் முறை தொலைத்து" (உபதேசகா. சிவவிரத. 311). 6. சிதைத்தல்; to spoil. 7. கெட்டுபோக்குதல்; to lose. அரும்பாடுபட்டுச் சேர்த்த நற்பெயரை இச்சிறு செயலால் தொலைத்தான். 8. தோற்பித்தல்; to discomfit surpass, rout. "ஏறுமலை தொலைத்தார்க்கு" (திருக்கோ. 113).

[துல் → தொல் → தொலை]

தொலை[3] *tolai,* பெ. (n.) 1. அழிவு; ruin. "தொலைமக்க டுன்பந் தீர்ப்பார்" (நாலடி. 205). 'உன்னைத் தொலைச்சுடுவேன்' 2. தொலைவு; distance, great distances. "அந்நிலை நெடுந் தொலைபோதி" (உபதேசகா. சிவநாம. 146). 3. அக்கரைச் சீமை; foreign country beyond the seas, as distant. "என் மகள் தொலைக்குப் போயிருக்கிறாள்" (செட். நா).

[துல் → தொல் → தொலை]

தொலை[4] *tolai,* பெ. (n.) ஒப்பு; resemblance, equality.

தொலைக்காட்சி *tolai-k-kātci,* பெ. (n.) ஒரு நிகழ்ச்சியையோ காட்சியையோ ஒளிப்பதிவு செய்து மின்காந்த அலைகளாக மாற்றி ஒளிபரப்பி அதைப்படமாகக் காணும் முறை; television.

[தொலை + காட்சி]

தொலைக்காட்சிநிலையம் *tolai-k-kātci-niliyam,* பெ. (n.) ஒரு நிகழ்ச்சியையோ காட்சியையோ ஒளிப்பதிவு செய்து மின்காந்த அலைகளாக மாற்றி ஒளிபரப்பும் நிலையம்; television station.

[தொலைக்காட்சி + நிலையம்]

தொலைக்காட்சிப்பெட்டி *tolai-k-kātci-p-petti,* பெ. (n.) தொலைக்காட்சி நிலையத்திலிருந்து ஒளிபரப்பப்படுவதை உள்வாங்கிக் காட்சிகளாக மாற்றிக்காட்டும் திரை முதலியவை உள்ள பெட்டி போன்ற கருவி; television set.



[தொலைக்காட்சி + பெட்டி]

தொலைகடல் *tolai-kaḍal,* பெ. (n.) சாக்கடல்; dead sea.

[தொலை + கடல்]

தொலைச்சு-தல் *tolaiccu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கொல்லுதல்; to kill, destroy. "முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை" (மலைபடு. 176). 2. முடித்தல்; to exhaust. "வெங்கட் டொலைச்சியு மமையார்" (புறநா. 29). 3. செலுத்துதல்; to pay, discharge as a debt. "நாளாதந்து நறவு நொடை தொலைச்சி" (பெரும்பாண். 141).

[தொலை → தொலைச்சு]

தொலைத்தொடர்பு *tolai-t-toḍarbu,* பெ. (n.) தொலைபேசி தொலைவரி முதலியன மூலம் ஓரிடத்திலிருந்து செய்திகளை அனுப்புதலும் பெறுதலுமான செயற்பாடு; tele-communication.

[தொலை + தொடர்பு]

தொலைதாரி *tolai-tāri,* பெ. (n.) பல்லிப்பூடு; lizard plant (சா.அக.).

தொலைதூரக்கல்வி *tolai-tūra-k-kalvi,* பெ. (n.) கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயிலாமலேயே கல்விப்பட்டம் பெறும் பல்கலைக்கழக அமைப்பு; distance education; correspondence education.

தொலைதூரக்கல்விமையம் *tolai-tūra-k-kalvi-maiyam,* பெ. (n.) அஞ்சல் வழியில் கல்வி கற்பிக்கும் மையம்; distance education directorate.

மறுவ. தொலைதூரக்கல்வி இயக்ககம், தொலைதூரக்கல்வி நிறுவனம்

[தொலைதூரக்கல்வி + மையம்]

தொலைதூரத்தொடர்பகம் *tolai-tūra-t-toḍarbagam,* பெ. (n.) தொலைபேசி மூலம் தொலைவிலுள்ள இடங்களை இணைக்கும் நிலையம்; trunk exchange.

[தொலைதூரம் + தொடர்பகம்]

தொலைதூரம் *tolai-tūram,* பெ. (n.) மிக்க தொலைவு (உ.வ.); great distance. "தொலைதூரப் பயணமோ?" (செ.அக.)

[தொலை + தூரம்]

Skt. dūra → த. தூரம்

தொலைந்துபோ-தல் *tolaindu-pō-,* 8 செ.கு.வி. (v.i.) 1. இறத்தல்; to die. 2. காணாமற் போதல்; to loss. பள்ளிக்குச் சென்றவன் வீடு திரும்பாமல் எங்கோ தொலைந்து போய்விட்டான்.

[தொலைந்து + போ-.]

தொலைநகல் *tolai-nagal,* பெ. (n.) தொலைப்பதிவு பார்க்க; see *tolai-p-pativu.*

[தொலை + நகல்]

தொலைநோக்கி *tolai-nōkki,* பெ. (n.) தொலைவில் உள்ள பொருள்களைத் தெளிவாகப் பார்ப்பதற்கேற்ற வகையில் ஆடிகள் பொருந்திய குழல் வடிவக் கருவி; binoculars, telescope.

[தொலை + நோக்கி]



தொலைநோக்கு *tolai-nōkku,* பெ. (n.) எதிர்காலத்தில் ஏற்படவேண்டிய நலனைக் கருத்தில் கொண்ட கணிப்பு; forsightedness. பொருளாதாரத் திட்டங்களைத் தொலை நோக்குடன் தீட்டுவதே அறிவுடைமை.

[தொலை + நோக்கு]

தொலைப்பதிவு *tolai-p-padivu,* பெ. (n.) தொலை எழுதி மூலம் அனுப்பப்படும் தந்தி முறைச் செய்தி; telex.

[தொலை + பதிவு]

தொலைபு *tolaipu,* பெ. (n.) அழிகை; perishing, destruction. "படைதொலைபறியா மைந்துமலி பெரும்புகழ்" *(பெரும்பாண். 398).*

[தொலை → தொலைபு]

தொலைபேசி *tolai-pēši,* பெ. (n.) பேச்சொலியை மின்னலையாகவும் மின்னலைகளைப் பேச்சொலியாகவும் மாற்றி கம்பிமூலம் அனுப்பித் தொலைவில் உள்ளவர்கள் தொடர்புகொண்டு பேசிக் கொள்வதற்குதவும் கருவி; telephone.

[தொலை + பேசி]

தொலைபேசிஇணைப்பகம் *tolai-pēši-iṇaippagam,* பெ. (n.) தொலைபேசித் தொடர்பகம் பார்க்க; see *tolai-pēši-t-todarbagam.*

[தொலைபேசி + இணைப்பகம்]

தொலைபேசிஇணைப்பு *tolai-pēši-iṇaippu,* பெ. (n.) தொலைபேசிக்கருவிக்கும் தொலைபேசித் தொடர்பகத்திற்கும் உண்டாக்கிக் கொள்ளும் இணைப்பு; telephone connection.

[தொலைபேசி + இணைப்பு]

தொலைபேசிக்கட்டணம் *tolai-pēši-k-kaṭṭaṇam,* பெ. (n.) தொலைபேசியைப் பயன்படுத்துவோரிடமிருந்து அரசு தண்டும் கட்டணம்; charges for telephone usages.

[தொலைபேசி + கட்டணம்]

தொலைபேசிக்கையேடு *tolai-pēši-k-kai-y-ēḍu,* பெ. (n.) தொலைபேசி பயன் படுத்தாளர்களின் பெயர் முகவரியை அகரநிரலில் பதிந்திருக்கும் கையேடு; telephone directory.

[தொலைபேசி + கையேடு]

தொலைபேசித்துறை *tolai-pēši-t-tuṟai,* பெ. (n.) தொலைபேசியைப் பேணும் துறை; telephone department.

[தொலைபேசி + துறை]

தொலைபேசித்தொடர்பகம் *tolai-pēši-t-todarbagam,* பெ. (n.) தொலைபேசிகளுக் கிடையே தேவைப்படுகிற இணைப்பை ஏற்படுத்தித் தருகிற நிலையம்; telephone exchange.

[தொலைபேசி + தொடர்பகம்]

தொலைபேசித்தொடர்பு *tolai-pēši-t-todarbu,* பெ. (n.) 1. தொலைபேசிஇணைப்பு பார்க்க; see *tolai-pēši-iṇaippu.* 2. தொலைபேசி வழியேத் தொடர்பு கொள்கை; communication through telephone.

[தொலைபேசி + தொடர்பு]

தொலைபேசிப்பட்டியல் *tolai-pēši-p-paṭṭiyal,* பெ. (n.) தொலைபேசியைப் பயன் படுத்தியதற்கான கட்டணத்தை நுகர்வோருக்கு அளிக்கும் பட்டியல்; telephone bill.

[தொலைபேசி + பட்டியல்]

தொலையாநோய் *tolaiyā-nōy,* பெ. (n.) 1. தீராத நோய்; an incurrable disease. 2. நாட்பட்ட நோய்; long continued disease. 3. எளிதில் மருத்துவத்துக்கு வயப்படாத நோய்; chronic disease not amenable to treatment *(சா. அக.).*

[தொலை + ஆ + நோய். 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தொலையெழுதி *tolai-y-eḻuti,* பெ. (n.) ஒரு முனையில் தட்டச்சு செய்து அனுப்பப்படும் செய்தியை மறுமுனையில் தானாகத் தட்டச்சுப் பதிவு செய்யும் மின் கருவி; teleprinter.

[தொலை + எழுதி]

தொலைவரி *tolai-vari,* பெ. (n.) மின்கம்பி வழியேயனுப்புஞ் செய்தி; telegram.

[தொலை + வரி]

தொலைவிலுணர்தல் *tolaivilunardal,* தொ.பெ. (vbl.n.) ஐம்புலத் தொடர்பின்றித் தொலைவிலிருப்பவர் உள்ளத்தை மன ஆற்றலால் இயக்குந்திறம்; telepathy.

[தொலைவில் + உணர்தல்]

தொலைவு *tolaivu,* பெ. (n.) 1. முடிவு; completion. "தொலைவில்லாச் சத்தமுஞ் சோதிடமும்" (நாலடி, 52). 2. அழிவு; end, extinction, destruction. "தொலைவிலார் புரமூன்றும்" (தேவா. 44, 8). 3. தோல்வி; defeat, failure. "தொலைவில் வெள்வேல் விடலையொடு" (அகநா. 7). 4. சோர்வு; fatigue, weariness. "நாத்தொலைவில்லா யாயினும்" (மணிமே. 24: 99). 5. குறைகை; dwindling, decrease. "தொலை விடத்துத் தொல்படைக் கல்லா லரிது" (குறள், 262). 6. சேய்மை நிலை (தூரம்); distance.

[தொலை - தொலைவு]

தொலைவெட்டு[1] *tolai-vettu,* பெ. (n.) தொலைவு (இ.வ.); great distance.

[தொலைவு + எட்டு]

தொலைவெட்டு[2] *tolai-vettu,* பெ. (n.) ஆழமான கடல் (முகவை. மீனவ.); deep sea.

[தொலை + வெட்டு]

தொழவகா *tolavagā,* பெ. (n.) பவளமல்லிகை; coral jasmine.

தொழி[1] *toli,* பெ. (n.) பழைய போக்கில் அணியம் செய்யப்படும் உப்பள முறையில் இருக்கும் தொட்டானின் மறுபெயர்; another name for tottān in old method of salt preparation (மீனவ.).

தொழி[2]**-த்தல்** *toli-,* 11 செ.கு.வி. (v.i.) 1. சினத்தல்; to be angry, enraged. "சிங்கம்போற் றொழித் தார்த்து" (சீவக. 2306). 2. ஒலித்தல்; to sound, tinkle. "தொழித்த ... கலனுஞ் சிந்தி" (சீவக. 2969).

தொழி[3]**-தல்** *toli-,* 3 செ.கு.வி. (v.i.) சிதறுதல்; to be split, scattered. "தொழிந்துமட்டொழுக" (சீவக. 2673).

தொழிமரம் *tolimaram,* பெ. (n.) சேற்றுக் காலாக உழுதநிலத்தைச் சமஞ் செய்யப் பயன்படுத்தும் பரம்புப் பலகை (நாஞ்.); board used to smoothened the ploughed surface of a wet land for cērru-k-kāl cultivation.

[தொளி = சேறு; தொளி → தொழி + மரம்]



தொழில் *tolil,* பெ. (n.) 1. செயல்; act, action, deed, work. "பிறிது தொழி லறியா வாகலின்" (புறநா. 14). 2. பணி; office, calling, profession. 3. ஏவல்; order, command. "தொன்றுமொழிந்து தொழில்கேட்ப" (மதுரைக். 72). 4. திறமை; workmanship. அவனிடம் தொழிலுண்டு. 5. உழவு, தொழில், வரைவு, வணிகம், விச்சை, சிற்பம் என்ற அறுவகைப் பட்ட செயல் (திவா.); occupations pertaining to karumapumi, six in numbers viz., ulavu, tolil, varaivu, vanigam, viccai, sirpam. 6. அருளிப்பாட்டுச் செயல்; three fold functions of god. "தோற்றுவித்தளித்துப் பின்னுந் துடைத்தரு டொழில்கள் மூன்றும்" (சி.சி.1, 33). 7. வினைச் சொல்; verb. "பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப" (தொல். எழுத்து. 132). 8. வேலை; occupation, work. 9. தந்திரம்; treachery, intrigue, cunning. நீ என்னிடத்தில் தொழில் பண்ணாதே. 10. பயன்படுத்தும் முறை; method of using. "அவற்றது தொழிலுந் தோன்றவே" (சீவக. 1217). 11. களவு (அகநி.); theft. 12. பெருமை (அக.நி.); greatness (செ.அக.).

ம. தொழில்

[துல் → துன் → தொள் → தொளில் → தொழில்]

உலகில் முதன்முதல் தோன்றிய விளைப்பு அல்லது உண்டாக்கத் தொழில், நிலத்தைத் தோண்டி அல்லது கொத்தி அல்லது உழுது வித்திய பயிர்த் தொழிலாதலின், தோண்டுதலைக் குறிக்கும் தொள் என்னும்

மூலத்தினின்று திரிந்த தொழில் என்னும் பெயர்ச்சொல், முதற்கண் உழவுத் தொழிலையும் பின்னர்ப் பிற தொழிற் பொதுவையும் குறித்தது.

E. till, to prepare and use soil for crops, tiller = plough man. tillage = ploughing (வேக. 289)]

தொழில்காரர் *tolil-kārar,* பெ. (n.) வினைத் திறமுடையார் (தஞ்சை.மீனவ.); one who is skilled in fishing.

[தொழில் + காரர்]

தொழில்செய்வோர் *tolil-šeyvōr,* பெ. (n.) கம்மியர் (பிங்.); artisans.

[தொழில் + செய்வோர்]

தொழில்துறை *tolil-turai,* பெ. (n.) 1. தொழில் தொடங்குதல், மேம்படுத்துதல் முதலியவற்றைப் பேணும் அரசுத்துறை; department of industry of Government. தொழில்துறையின் ஒத்திசைவுக்குப் பிறகே தொழில் தொடங்க வியலும். 2. தொழில் தொடர்புடையது; industiral sector. கடந்த ஐந்தாண்டுகளாக தமிழ்நாடு தொழில்துறையில் முதலிடத்திலுள்ளது.

[தொழில் + துறை]

தொழில்நிறுவனம் *tolil-niruvanam,* பெ. (n.) பேரளவில் முதலீடு செய்து தொழில்நடத்தும் நிறுவனம்; industrial concern. பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களின் கையோங்கியதால் உள்நாட்டுத் தொழில்கள் நசிந்தன.

[தொழில் + நிறுவனம்]

தொழில்நுட்பக்கல்லூரி *tolil-nutpa-k-kallūri,* பெ. (n.) பொறிகள் தொடர்புடைய தொழில்முறைக் கல்வியைப் பாடமாகக் கொண்டு தொழிற்பயிற்சி அளிக்கும் கல்லூரி; educational institution providing training in traders connected with machines and tools; polytechnic.

[தொழில்நுட்பம் + கல்லூரி]

தொழில்நுட்பக்கல்வி *tolil-nutpa-k-kalvi,* பெ. (n.) ஆக்கத்தில் நேரடியாகப் பயன்படுத்தக் கூடிய தொழில்பற்றிய அறிவையும் வழிமுறைகளையும் கற்பிக்கும் கல்வி முறை; technical education.

[தொழில்நுட்பம் + கல்வி]

தொழில்நுட்பக்கலைச்சொல் *tolil-nutpa-k-kalai-c-col,* பெ. (n.) அறிவியல்துறை போன்றவற்றில் வழங்கும் அயன் மொழிச் சொற்களைத் தாய்மொழியில் வடிவமைத்தல்; technical terms.

[தொழில்நுட்பம் + கலைச்சொல்]

தொழில்நுட்பம் *tolil-nutpam,* பெ. (n.) ஆக்கத்தில் பயன்படுத்தக்கூடிய தொழில் பற்றிய அறிவும் வழிமுறைகளும்; technology. மூலவளங்கள் இருந்தும் சில நாடுகள் தொழில் நுட்பத்தை அயல்நாடுகளிலிருந்து பெற வேண்டிய நிலையில் உள்ளன.

[தொழில் + நுட்பம்]

தொழில்நுட்பவணி *tolil-nutpa-v-ani,* பெ. (n.) தெரிந்து கொண்டு வேறுபடமொழியாது அரிதாக நோக்கியுணருந் தன்மையுடைய அணிகளிரண்டனுளொன்று; a kind of rhetoric.

[தொழில்நுட்பம் + அணி]

மற்றது குறிப்பு நுட்பவணி. இதனைத் தொழில் நுணுக்கமென்பார் வீரசோழிய மியற்றினார்.

எ-டு.

பாடல் பயிலும் பணிமொழி
தன்பணைத்தோள்
கூட லவாவாற் குறிப்புணர்த்தும் - ஆடவற்கு
மென்றீந் தொடையாழின் மெல்லவிர
தைவந்தாள்
இன்றீங் குறிஞ்சி யிசை.

குறிஞ்சிக்குக் காலம் இடையாம மாகலால், இடையாமத்திற் கூட்டம் நேர்ந்ததென கூறியது தொழில்நுட்பவணி.

தொழில்நுணுக்கம் *tolil-nunukkam,* பெ. (n.) தொழில்நுட்பம் பார்க்க; see *tolil-nutpam.*

[தொழில் + நுணுக்கம்]

தொழில்மயமாக்கு-தல் *tolil-mayam-ākku,* 5 செ.குன்றாவி. (v.t.) தொழில் வளர்ச்சி பெறச் செய்தல்; industrialize.

[தொழில்மயம் + ஆக்கு-.]

தொழில்மாறுதல் *tolil-mārudal,* பெ. (n.) 1. வேலை மாறுகை; changing one's profession or work. 2. வேலையினின்று நீக்கப்படுகை; dismissal.

[தொழில் + மாறுதல்]

தொழில்மானிபம் *tolil-mānibam,* பெ. (n.) தொழில்மானியம் பார்க்க; see *tolil-māniyam* (செ. அக.).

[தொழில் + மானிபம்]

தொழில்மானியம் *tolil-māniyam,* பெ. (n.) ஊழியக்காரருக்கு விடப்பட்ட வரியில்லா நிலம்; service inam, rent - free land assigned to village servants in lieu of their services.

[தொழில் + மானியம்]

தொழில்முடக்கம் *tolil-mudakkam,* பெ. (n.) தொழில் செய்ய மறுத்திருக்கை; strike (செ.அக.).

[தொழில் + முடக்கம்]

தொழில்முனைவோர் *tolil-munaivōr,* பெ. (n.) கைமுதல் போட்டு ஒரு தொழிலைத் தொடங்கத் திட்டமிடுபவர்; entrepreneurship.

[தொழில் + முனைவோர்]

தொழில்வரி *tolil-vari,* பெ. (n.) நகராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் எல்லைக்குள் தொழில் செய்வோரிடம் தண்டும் வரி; profession tax.

[தொழில் + வரி]

தொழிலாகுபெயர் *tolilāgu-peyar,* பெ. (n.) வற்றலென்பது போலத் தொழிலின் பெயர் அதனையுடைய பொருட்கு ஆவது (நன். 290); metonymy in which action is put for the agent (செ. அக.).

[தொழில் + ஆகு + பெயர்]

தொழிலாளன் *tolilālan,* பெ. (n.) தொழிலாளி 1, 2 பார்க்க; see *tolilāli* (செ.அக.).

[தொழில் + ஆளன்]

தொழிலாளி[1] *tolilāli,* பெ. (n.) 1. வேலைக்காரன்; labourer. 2. வினைத் திறனுள்ளவன்; a capable worker. 3. குடிமகன் அல்லது ஊர்ப்பிள்ளை; barber.

[தொழில் + ஆளி]

தொழிலாளி[2] *tolilāli,* பெ. (n.) 1. பொன்னாக்கம் செய்பவன்; an alchemist. 2. கருவாளி; a magician (சா.அக.).

[தொழில் + ஆளி]

தொழிலி *tolili,* பெ. (n.) தொழிலை உடையவள்; career women.

[தொழில் → தொழிலி]

தொழிலுவமம் *tolil-uvamam,* பெ. (n.) தொழிலைப் பொதுத்தன்மையாகக் கொண்ட உவமையணிவகை (தண்டி. 29); simile where the point of comparison is action (செ.அக.).

எ-டு.

"அரிமா வன்ன வணங்குடைத் துப்பிற்
றிருமா வளவன்"

"களிற்றிரை தெரீஇப் பார்வ லொதுக்கின்
ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல"

[தொழில் + உவமம்]

தொழிலுவமை *tolil-uvamai,* பெ. (n.) தொழிலுவமம் பார்க்க; see *tolil-uvamam* (செ.அக.).

[தொழில் + உவமை]

தொழிலெடு[1]**-த்தல்** *tolil-edu-,* 4 செ.குவி. (v.i.) 1. பணியேற்றல்; to obtain office, enter upon an occupation. 2. குறும்பு காட்டத் தொடங்குதல் (இ.வ.); to begin doing mischeif. பணியிற் சேர்ந்து ஆறு திங்கள் ஆவதற்குள் அவன் தொழிலெடுத்து விட்டான்.

[தொழில் + எடு-.]

தொழிலெடு[2]**-த்தல்** *tolil-edu-,* 4 செ.குன்றாவி. (v.t.) பணியினின்று விலக்குதல் (J.); to dismiss one from office.

[தொழில் + எடு-.]

தொழிலோர் *tolilōr,* பெ. (n.) தொழிலாளர்; artisans, labourers.

[தொழில் → தொழிலோர்]

தொழிற்கல்வி *tolir-kalvi,* பெ. (n.) தொழிலைப் பயிற்றுவிக்கும் கல்வி; professional education.

[தொழில் + கல்வி]

தொழிற்காய்ச்சல் *tolirkayccal,* பெ. (n.) தொழிலில் ஏற்பட்டுள்ள ஒருவரின் வளர்ச்சியைக் கண்டு அதே தொழில் செய்யும் மற்றொருவருக்கு ஏற்படும் பொறாமை; professional jealousy. "இவருக்கு எந்த மருத்துவமும் பயனளிக்காது. ஏனென்றால் இந்தத் தொழிற்காய்ச்சலுக்கு மருந்தே இல்லை".

[தொழில் + காய்ச்சல்]

தொழிற்குறிப்பு *tolir-kurippu,* பெ. (n.) வினைக்குறிப்பு பார்க்க; see *vinai-k-kurippu.* "பெயரே யேனைத் தொழிற்குறிப் பிரண்டினுள்ளும்" *(சேதுபு. திருநாட்டுப். 109).*

[தொழில் + குறிப்பு]

தொழிற்குறைவிசேடம் *tolir-kurai-visēdam,* பெ. (n.) தொழிற்குறைவிசேடவணி பார்க்க; see *tolir-kurai-viseda-v-ani.* "அது குணக்குறை விசேடமும், தொழிற்குறை விசேடமும் சாதிக்குறை விசேடமும் பொருட்குறை விசேடமும் உறுப்புக்குறை விசேடமும் என விகற்பிக்கப்படும்" *(வீரசோ. 171, உரை).*

[தொழில் + குறிப்பு]

தொழிற்குறைவிசேடவணி *tolir-kurai-visēda-v-ani,* பெ. (n.) அணியிலக்கண வகை; a kind of rhetoric.

ஏங்கா முகில்பொழியா நாளும் புனறேங்கும்
பூங்கா விரிநாடன் போர்மதமா-நீங்கா
வளைபட்ட தாளணிகண் மாறெதிர்ந்த தெவ்வர்
தளைப்பட்ட தாட்டா மரை

இச்செய்யுளில் சோழனுடைய யானைகள், போரணி பூண்ட மாத்திரத்தாலே, பகைவர் தோல்வியுற்று விலங்கிடப்பட்டனரென்பது கருத்து.

போரணி பூண்டு போய்ப் பகைவருடன் எதிர்த்துப் போர் செய்தாலாகிய தொழில்களில் போரணி அணிதல் மாத்திரமே கூறிக் குறைவுபாடு விளக்கி செயலில் உயர்வு தோன்றச் சொன்னமையால் இது தொழிற் குறை விசேடவணியாயிற்று. 'ஏங்கா முகில் பொழியா நாளும் புனல் தேங்கும்' என்றதிலும் இவ்வணியமைந்திருத்தல் காண்க. ஏங்கா - செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

தொழிற்கை *tolirkai,* பெ. (n.) கையால் மெய்ப்பாடு காட்டுகை *(சிலப். 3, 18, உரை);* hand-pose *(செ.அக.).*

[தொழில் + கை]

தொழிற்சாலை *tolir-śālai,* பெ. (n.) வினைக் களம்; workshop, place of business, office *(செ.அக.).*

[தொழில் + சாலை]

தொழிற்பகை *tolir-pagai,* பெ. (n.) தொழிற் போட்டியால் உண்டான பகை; professional revenge.

[தொழில் + பகை]

தொழிற்பட்டிகை *tolir-pattigai,* பெ. (n.) மகளிர் அரையிலணியும் ஒப்பனையோடு கூடிய பட்டிகை என்னும் அணி; ornament which woman wear in their waist.

[தொழில் + பட்டிகை. தொழில் = வேலைப்பாடு, ஒப்பனை]

தொழிற்படு-தல் *tolirpadu-,* 20 செ.குன்றாவி. (v.i.) *1.* செயற்படுதல்; to be formed, constructed, produced; to be operated upon. *2.* வேலையிற் புகுதல்; to engage in an office, enter upon a work.

[தொழில் + படு-.]

தொழிற்படுத்துஞ்சொல் *tolir-paduttuñcol,* பெ. (n.) ஏவல் வினை; verb denoting, command. "சொற்பொரு ளெல்லாந் தொழிற் படுத்துஞ் சொல்லானே உணர்தற்பாலன" *(சி.போ.பா. அவையடக். மீமாஞ். சுவாமிநா.)* *(செ.அக.).*

[தொழில் + படுத்தும் + சொல்]

தொழிற்பண்பு *tolir-panbu,* பெ. (n.) செய்கை குறிக்கும் பண்புச் சொல்; action, considered as a quality nadattal dist. fr. kuna-p-panbu. "பண்புகள் குணப்பண்புந் தொழிற் பண்பும் ஆகிய இரண்டனுள் அடங்குமாயினும்" *(நன். 442, விருத்.)*

[தொழில் + பண்பு]

தொழிற்பயில்வு *tolir-payilvu,* பெ. (n.) வினை மேன்மேலும் நிகழ்கை *(திவா.);* repeated action *(செ.அக.).*

[தொழில் + பயில்வு]

தொழிற்பாடு *tolir-pādu,* பெ. (n.) வேலை (யாழ்.அக.); labour.

[தொழில் → தொழிற்பாடு]

தொழிற்புரட்சி *tolir-puraṭci,* பெ. (n.) புதிய கருவிகளின் கண்டுபிடிப்பால் தொழில் துறையில் ஏற்பட்ட பெரும் மாற்றம்; industrial revolution.

[தொழில் + புரட்சி]

தொழிற்புலையர் *tolir-pulaiyar,* பெ. (n.) கீழ்ச்சாதியர் (கன்மசண்டாளர்); one who is considered an outcaste because of his base actions. "கொலைத் தொழிலினையுடையவராகிய மாக்கள் தொழிற்புலையராகுவர்" (குறள், 329, மணக்.).

[தொழில் + புலையர்]

தொழிற்பெயர் *tolir-peyar,* பெ. (n.) 1. வினைப் பெயர்; verbal noun. "ஞகாரை தொழிற்பெயர் முன்னர் அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்" (தொல்.எழுத்து.296). 2. வினையா லணையும் பெயர்; personal noun derived from a verbal root. "தொழிற்பெயராயி னேகாரம் வருதலும்" (தொல். சொல். 141).

[தொழில் + பெயர்]

தொழிற்பேட்டை *tolir-pēṭṭai,* பெ. (n.) குடியிருப்புப் பகுதியிலிருந்து விலகிப் பேரளவில் தொழிற்சாலைகள் அமைப்பதற்காக அரசு ஏற்படுத்தித் தந்திருக்கும் இடம்; cluster of industries in a place set aside by the government; industrial estate.

[தொழில் + பேட்டை]

தொழிற்றன்மை *tolirranmai,* பெ. (n.) தொழிலிலுள்ள பலவிதமான தன்மைகளை உள்ளவாறே அலங்கரித்துக் கூறுவதாகிய அணி வகை; a kind of rhetoric.

[தொழில் + தன்மை]

சூழ்ந்து முரன்றணவி வாசந் துதைந்தாடித்
தாழ்ந்து மதுநுகர்ந்து தாதருந்தும் -
வீழ்ந்தபெரும்
பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின்
பைங்கொன்றை
வாசத்தார் நீங்காத வண்டு.

இஃது இலக்கியத்திற் சிறுபான்மை; இலக்கணத்துள்ளே பயின்று வருவதெனக் கொள்க.

தொழிற்று *tolirru,* பெ. (n.) தொழிலை உடையது; that which has job.

[தொழில் + து → தொழில்து → தொழிற்று (குறிப்பு வினைமுற்று)]

தொழிற்றுறை *tolirrurai,* பெ. (n.) 1. வணிகம் (யாழ்.அக.); trade, business. 2. தொழிற்சாலை பார்க்க; see *tolir-cālai.*

[தொழில் + துறை]

தொழின்முதல் *tolin-mudal,* பெ. (n.) ஏவுதற் குரியோன்; directing agent. "ஏவற் கருத்தாவைத் தொழின்முத லென்றும்" (நன். 29, சங்கர.).

[தொழில் + முதல்]

தொழின்மொழி *tolin-moli,* பெ. (n.) வினைச்சொல் (வின்.); verb.

[தொழில் + மொழி]

தொழீஇ *tolii,* பெ. (n.) 1. தொழில் செய்பவள் (கலித். 103,40); working woman. 2. பணிப்பெண்; maid servant, female slave. "தொழீஇயுட னுண்ணார்" (சிறுபஞ். 38).

[தொழில் + இ]

தொழு[1]-தல் *tolu-,* 1 செ.குன்றாவி. (v.t.) வணங்குதல்; to worship, adore, pay homage to. "தொழுதகை யுள்ளும் படையொடுங்கும்" (குறள், 828).

க. துளில்; ம. துழுக

[துல் → துள் → தொள் → தொழு]

தொழு[2] *tolu,* பெ. (n.) 1. மாட்டுக்கொட்டில்; cattle stall, manger. "ஏறுதொழூஉப் புகுத்தனர்" (கலித். 101). 2. பட்டிமாடுகளை அடைக்குமிடம்; pound. 3. சிறு குற்றவாளிகளுக்குத் தண்டனையாகக் கால்களை மாட்டி வைக்கும் குட்டையென்னும் மரச்சட்டம்; stocks. 4. சிறைக்கூடம்;. prison. "வயிற்றிற் றொழுவைப் பிரித்து" (திவ். பெரியாழ். 5,2,3). 5. இல்வாழ்க்கை; married life. "தொழுவிற் றோன்றிய தோமறு கேவலக்கிழவன்" (சீவக. 856). 6. குட்ட நோய் வகை; a kind of leprosy. "துக்கத் தொழுநோ யெழுபவே" (நாலடி, 123). 7. தொழு பஃறி

(இரேவதி விண்மீன்) (பிங்.); rēvati natsatiram. **8.** கட் குடுவையிருக்கும் ஏணி; stand for toddy jars. "தொழுவிற் குடக்கணீ கொண்டுவா" (பு.வெ 1,4). **9.** உழலைமரம் (சூடா.); turnpike. **10.** காட்டு விலங்குகளை அடைக்குங் கூடு; cage for wild animals. "தொழுவினிற் புலியனான்" (கம்பரா. மூலபல. 181). **11.** நீர்நிலை (இலக்.அக.); tank, pond.

[துல் → துள் → தொள் → தொழு (வே.க. 258)]

தொழுக்கட்டை *tolu-k-kattai,* பெ. (n.) தொழு², 3 பார்க்க; see *tolu.*

[தொழு + கட்டை]

சிறுகுற்றவாளிகளுக்குத் தண்டனையாகக் கால்களை மாட்டி வைக்கும் குட்டை என்னும் மரச்சட்டம் (வே.க. 284).

தொழுக்கண்ணி¹ *tolu-k-kanni,* பெ. (n.) மருந்துப்பு; a quintessence salt useful in medicine (சா.அக.).

தொழுக்கண்ணி² *tolu-k-kanni,* பெ. (n.) தென்னிந்திய மலைகளின் மேல் முளைக்கும் மருந்துப்பூடு; a medical drug found on hills in South India (சா. அக.).

தொழுக்கண்ணிப்பால் *tolu-k-kanni-p-pāl,* பெ. (n.) ஒரே தாயின் முலைப்பால்; breast milk of a particular woman or of one and the same woman (சா.அக.).

[தொழுகண்ணி + பால்]

தொழுக்கல்லீர் *tolu-k-kallīr,* பெ. (n.) தொழமாட்டாதவர்; person who do not worship.

தொழுக்கன் *tolu-k-kan,* பெ. (n.) அடிமை; slave. "தொழுக்க னென்னை ஆள்வீர்" (அருட்பா. ii, திருமுரு. கொடிவிண். 7).

[தொழு → தொழுக்கன்]

தொழுக்கொட்டான் *tolu-k-kottān,* பெ. (n.) நான்கிலைப் பூவந்தி; four leaved soapnut (சா.அக.).

தொழுகள்ளன் *tolu-kallan,* பெ. (n.) பாசாங்கு செய்பவன்; fawning hypocrite.

[தொழு + கள்ளன்]

தொழுகு *tolugu,* பெ. (n.) மாட்டுத்தொழு (பிங்.); cattle-stall, manger.

[தொழு → தொழுகு (வே.க. 255)]

தொழுகுலத்தோர் *tolu-kulattōr,* பெ. (n.) பார்ப்பனர்; brahmins.

[தொழு + குலத்தோர். தொழு + குலம் = தொழுக்குலம் → தொழுகுலம். தொழு = மாட்டுக் கொட்டில். ஆரியர் ஆநிரை மேய்த்தலைத் தொழிலாகக் கொண்டமையின் ஆரியப்பார்ப்பனர் தொழுக் குலத்தோர் எனப்பட்டனர். அவரிடையே வழங்கும் கோத்திரம் (வமிசம்) என்னும் சொல் மாட்டுக் கொட்டில் என்றும், துஹித்ரி (மகள்) என்னும் சொல் பால்கறப்பவர் என்றும் பொருள்படுவது, ஆரியர் இந்தியாவிற்கு வந்தபோது முல்லை நாகரிகத்தினரே என்பதைக் காட்டும் (ஓ.மொ. 324)]

தொழுகுலம் *tolu-kulam,* பெ. (n.) **1.** பார்ப்பனர்; the brahmin castes. "தொழுகுலச் சிறுவன்" (திருவிளை. யானை. 32). **2.** குல தெய்வம்; family deity. "துலங்கு கின்றே னடியே னுடையாயென் றொழுகுலமே" (திருவாச. 6, 28). **3.** குலமாகத் தொழத்தக்கவர்; persons who make their family worthy of being worshipped. "எந்தொழுகுலந் தாங்களே" (திவ். திருவாய். 3, 7, 18).

[தொழும் + குலம்]

தொழுகுலர் *tolu-kular,* பெ. (n.) தொழு குலத்தோர் (பிங்.) பார்க்க; see *tolu-kulattōr.*

[தொழுகுலம் → தொழுகுலர்]

தொழுகை *tolugai,* பெ. (n.) **1.** வணங்குகை; worshipping, adoration. "தொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபால்" (திருவாச. 20, 4). **2.** தெய்வ விண்ணப்பம்; prayer.

[தொழு → தொழுகை]

தொழுகையாசிரியர் *tolugai-y-āsiriyar,* பெ. (n.) கோயிற்பூசை செய்வோர் (அருச்சகர்); archagars.

[தொழுகை + ஆசிரியர்]

தொழுத்தை¹ *toluttai,* பெ. (n.) **1.** அடிமைப் பெண்; slave-woman. "தொழுத்தை யோந் தனிமையும்" (திவ். திருவாய். 10, 3, 4).

2. கற்பில்லாதவள் (சூடா.); immoral woman. 3. பணிப்பெண்; maidservant. "தொழுத்தையாற் கூறப்படும்" (நாலடி, 326).

[தொழு → தொழுத்தை]

தொழுத்தை[2] *toluttai,* பெ. (n.) சொறிகளுள் மிகப் பெரியது; kind of skin disease which has itching sensation (மீனவ.).

தொழுதகு-தல் *tolutagu-,* 3 செ.கு.வி. (v.i.) 1. நன்கு மதித்தல்; to esteem, admire. "தொண்டையுங் கனியுமுத்துந் தொழுதக வணிந்து" (சீவக. 2076). 2. விரும்புதல்; to love, desire. "களிற்றொடாடித் தொழுதகக் கழிப்பர்" (சீவக. 2807).

[தொழு + தகு-.]

தொழுதகுதெய்வம் *tolutagu-teyvam,* பெ. (n.) அருந்ததி; Arundhati as worthy of worship. "தொழுதகு தெய்வ மன்னாள்" (சீவக. 1912).

[தொழுதகு + தெய்வம்]

தொழுதகை[1] *toluta-kai,* பெ. (n.) இருகை குவித்துக் கும்பிடுகை; worshipping, by folded hands. "தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார் அழுதகண் ணீரும் அனைத்து" (குறள், 828)

[தொழு → தொழுத + கை]

தொழுதகை[2] *toluta-kai,* பெ. (n.) தொழத்தக்க நிலையில் என்று பொருள்படும் சொல்; to esteem, admire. "கன்னெழில் வளருழியு ளெல்லா யாண்டுந் தொழுதகை விளங்கும் யாண்டே" (தெ. க. தொ. 3:1. பக். 7)

[தொழு + தகை]

இச்சொல் முதல் இராசராசன் மெய்க் கீர்த்தியில் இடம் பெற்றுள்ளது.

தொழுதகையீர் *toludagaīr,* பெ.எ (adv.) வணக்கத்திற்குரியீர்; his worshipped, a respective term.

[தொழுதகை → தொழுதகையீர்]

தொழுதனை *tolutanai,* பெ. (n.) தழுதணை பார்க்க; see *talutanai* (சா. அக.).

தொழுதி *toluti,* பெ. (n.) 1. கூட்டம்; multitude, crowd, herd. "இரும்பிடித் தொழுதியொடு" (புறநா. 44). 2. பறவைக் கூட்டம் (திவா.); flock of birds. 3. பறவையொலி (சூடா.); chirping of birds. 4. திரட்சி; denseness, fullness, as of a birds feather. "தொழுதிச் சிறகிற் றுயராற்றுவன" (சீவக. 1157).

[தொழு → தொழுதி (வே.க. 255)]

தொழுதுகொண்டிரு-த்தல் *tolutu-kondiru-,* 3 செ.கு.வி. (v.i.) கலந்துபோதல்; to get inextricably, mixed up. "கஞ்சியுஞ் சோறுந் தொழுது கொண்டிருக்கிறது".

[தொழுது + கொண்டு + இரு-.]

தொழுந்தகை *tolundagai,* பெ. (n.) தொழத்தக்கவ-ன்-ள்; a great personage, as worthing of reverence.

[தொழும் + தகை]

தொழுநோய் *tolu-nōy,* பெ. (n.) குட்ட நோய் வகை; a kind of leprosy. "அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்" (தேவா. 1231, 10).

[தொழு + நோய்]

தொழுநோயன் *tolu-nōyan,* பெ. (n.) குட்ட நோயன்; a leprosy.

[தொழு + நோயன்]

தொழுப்பிறப்பு *tolu-p-pirappu,* பெ. (n.) தன் தொழுவிலேயே பிறந்து வளர்ந்தமாடு (நாஞ்.); that which is born and bred on one's own farm, as an ox.

[தொழு + பிறப்பு]

தொழுப்பு *toluppu,* பெ. (n.) உழுதொழில் வளைப்பு (வின்.); winding furrows in ploughing (செ.அக.).

[தொடுப்பு → தொழுப்பு]

தொழும்பன் *tolumban,* பெ. (n.) 1. அடியவன்; slave. "உனக்கே தொழும்பன்" (தாயு. கருணாகர. 8). 2. இழிஞன்; base person. "ஈசனைப் பயில்கிலார் சிலர் பாவித் தொழும்பரே" (தேவா. 429, 2).

[தொழு → தொழும்பு → தொழும்பன்]

தொழும்பன்விரால் *tolumban-virāl,* பெ. (n.) ஆற்றுமீன் வகையுள் ஒன்று; kind of river fish.

[தொழும்பன் + விரால்]

தொழும்பாள் *tolumbāl*, பெ. (n.) தொழும்பன் பார்க்க; see *tolumban*. "தொழும்பாளாக வோலை கொடுக்குதுமே" (வெங்கைக்கோ. 332).

[தொழு → தொழும்பாள்]

தொழும்பாளன் *tolumbālan*, பெ. (n.) தொழும்பன் பார்க்க; see *tolumban*. "தொழும்பாள ரெய்ப்பினில் வைப்பனே" (திருவாச. 5, 98).

[தொழும்பு + ஆளன்]

தொழும்பி *tolumbi*, பெ. (n.) அடிமைப்பெண் (நன். 304. மயிலை); slave-woman.

[தொழு → தொழும்பி]

தொழும்பு *tolumbu*, பெ. (n.) 1. அடிமை (திவா.); slavery, servitude. 2. அடிமைத் தொழில்; servile work, drudgery. 3. அடிமையாள்; slave. "பலவாறே தொழும்பாகு மங்கு" (சி.போ. 1, 3). 4. கடவுளின் அருளிப்பாடு; devotion to the service of God. "தொழும்பாயார்க் களித்தால்" (திவ். திருவாய். 3, 1, 9).

[தொழு → தொழும்பு]

தொழுமகளிர் *tolu-magalir*, பெ. (n.) குற்றேவல் மகளிர்; maidservants. "சிறு தொழுமகளி ரஞ்சனம் பெய்யும்" (ஐங்குறு. 16).

[தொழு + மகளிர்]

தொழுமரம் *tolu-maram*, பெ. (n.) தொழுக் கட்டை (உ.வ.); stocks.

[தொழு + மரம்]

தொழுமறை *tolu-marai*, பெ. (n.) உடலெங்குஞ் சிறுவட்டங்கள் விழுவதாகிய மாட்டுக் குற்றவகை (மாட்டுவா. 19); a defect of cattle in which there are small round patches all over the body.

[தொழு + மறை]

தொழுமாடு[1] *tolu-mādu*, பெ. (n.) 1. சல்லிக்கட்டு மாடு; bull trained for the baiting sport. 2. சல்லிக்கட்டு (E.T. iii, 89); sport of bull-baiting (செ.அக.).

[தொழு + மாடு]



தொழுமாடு[2] *tolu-mādu*, பெ. (n.) பட்டி மாடு; straying cattle.

[தொழு + மாடு]

தொழுவம் *toluvam*, பெ. (n.) மாட்டுக் கொட்டில்; cattle stall, manger. "பல்லான் தொழுவத் துறுமணிக் குரலே" (குறுந். 190). தொழுவம் புகுந்த மாடு சாணியிடாமற் போமா (பழ.).

மறுவ. பட்டி, கட்டுத்தறி

ம. தொலுட்டு; தெ. தொர்ரு பட்டு; பட. தோ

[துள் → தொள் → தொழு → தொழுவு → தொழுவம்]

தொழுவர் *toluvar*, பெ. (n.) 1. தொழில் செய்வார்; servants. "நீர்த்தெவு நிரைத் தொழுவர்" (மதுரைக். 89). 2. உழவர்; agriculturists, plough men. "நெல்லரி தொழுவர்" (புறநா. 209).

[தொழுவன் → தொழுவர் (வே.க. 285)]

தொழுவறை *tolu-v-arai*, பெ. (n.) மாட்டுக் கொட்டில்; cattle-shed. "தொழுவறை வவ்விக் கன்றுடைப் பெருநிரை மன்றுநிறை தரூஉம்" (அகநா. 253).

[தொழு + அறை]

தொழுவன் *toluvan*, பெ. (n.) 1. பயிரிடுவோன்; cultivator, husbandman. 2. தொழிலாளி; a workman, artisan. தொழுவானெல்லாம் உழுவான் தலைக்கடையில் (பழ.).

மறுவ. உழவன், குடியானவன்

[தொழு → தொழுவன்]

தொழுவாடு *tolu-vādu,* பெ. (n.) 1. வழக்கம்; habit. இதே உனக்குத் தொழுவாடாய்ப் போச்சு. 2. இயற்கை; nature.

[தொழு + வாடு]

தொழுவில்மாட்டு-தல் *toluvil-māttu-,* 8 செகுன்றாவி. (v.t.) தொழுவிலடி-த்தல் பார்க்க; see *toluvil-adi-.*

[தொழு + இல் + மாட்டு-.]

தொழுவிலடி-த்தல் *toluvil-adi-,* 4 செகுன்றாவி. (v.t.) கட்டையிலடித்தல் (உ.வ.); to confine in the stocks, as a criminal.

[தொழுவில் + அடி-.]

தொழுக்கட்டை பார்க்க

தொழுவிளிப்பூசல் *tolu-vili-p-pūsal,* பெ. (n.) வழிபாட்டு முழக்கம்; loud shouts of praise. "துறவோரிறந்த தொழுவிளிப் பூசலும்" *(மணிமே. 6:75).*

[தொழு + விளி + பூசல்]

தொழுவு[1] *toluvu,* பெ. (n.) வணங்குகை; worshipping, adoration. 'கால்வாய்த் தொழுவு" *(ஆசாரக். 63).*

[தொழு → தொழுவு]

தொழுவு[2] *toluvu,* பெ. (n.) மாட்டுக்கொட்டில்; cattle stall.

[தொழு → தொழுவு]

தொழுவுரம் *tolu-v-uram,* பெ. (n.) ஆடுமாடு முதலியவற்றின் சாணம்; manure.

[தொழு + உரம்]

தொழுவை *toluvai,* பெ. (n.) மடு; deep place in a river or a channel.

[தொழு → தொழுவை]

தொழுனை[1] *tolunai,* பெ. (n.) குட்டநோய் வகை; a kind of leprosy. "ஊனுகு தொழு னையின்" *(ஞானா. 19, 6).*

தொழுனை[2] *tolunai,* பெ. (n.) யமுனை; the river Jumuna. "வார்புனற் றொழுனை வார்மண லகன்றுறை" *(அகநா. 59).*

தொள்(ளு)[1]**-தல்** *tol-,* 8 செகுன்றாவி. (v.t.) துளைத்தல்; to perforate, bore with an instrument. "செந்தீத் தொட்ட கருந்துளைக் குழலின்" *(பெரும்பாண். 129).*

[துல் → துள் → தொள்]

தொள்(ளு)[2]**-தல்** *tol-,* 8 செகுவி. (v.i) நெகிழ்தல் (வின்.); to become weak, infirm.

[துல் → துள் → தொள்]

தொள்கல் *tolkal,* பெ. (n.) துளைக்கை (பிங்.); perforating.

[துல் → துள் → தொள்கு → தொள்கல்]

தொள்கு *tolgu,* பெ. (n.) துளையுள்ள வலை; net for trapping. "தொள்கின்றலை யெய்திய மானென" *(கம்பரா. சடாயுவு. 130).* 2. தோண்டப் பட்ட சேறு; slush, mire. "யானை தொள் கொடுங் கிடந்த தென்ன" *(கம்பரா. வாலிவ. 73)* (இலக்.அக.). 3. பள்ளம் (வின்.); excavation, pit.

[துள் → தொள் → தொள்கு (வேக. 283)]

தொள்ளம் *tollam,* பெ. (n.) 1. தெப்பம் (திவா.); float, raft. "தேர்களூர் தொள்ள மாதிகளா" (விநாயகபு. 37, 33). 2. சேறு; mud, mire. "தொள்ளத்தின் வளைபாய்ந் தாழுங் கடலென" (இரகு. இலவணன். 15).

[துள் → தொள் → தொள்ளம்]

தொள்ளல் *tollal,* பெ. (n.) துளை (உ.வ.); hole (செ.அக.).

[துள் → தொள் → தொள்ளல்]

தொள்ளற்காது *tollar-kādu,* பெ. (n.) தொள்ளைக்காது பார்க்க; see *tollai-k-kādu* (சா.அக.).

[தொள்ளைக்காது → தொள்ளற்காது]

தொள்ளற்சரீரம் *tollar-carīram,* பெ. (n.) 1. பருத்த உடம்பு; flabby body. 2. மெலிந்த உடம்பு; weak body (சா.அக.).

[தொள்ளல் + சரீரம்]

Skt. sarīra → த. சரீரம்

தொள்ளாடி *tollādi,* பெ. (n.) 1. நலிந்தோன்; weak, infirm person or thing. 2. நெகிழ்ந்த உடல்வாகு கொண்டவன்-ள்-து; flaccid person or beast. 3. நலிவுறுகை; growing lax, as the muscles.

[தொள் → தொள்ளாடி]

தொள்ளாடு-தல் *tollādu-,* 6 செ.கு.வி. (v.i.) *1. வலி தளர்தல் (வின்.);* to become weak. *2. தள்ளாடுதல்;* to move with falterring steps, as an aged person.

[துள் → தொள் → தொள்ளாடு]

தொள்ளாயிரம் *tollāyiram,* பெ. (n.) ஒன்பது நூறு; nine hundred. "தொள்ளாயிரங் கடும்போர்க்கணை துரந்தான்" *(கம்பரா. நிகும்பலை. 124).*

ம. தொள்ளாயிரம்

[தொள் + ஆயிரம்]

தொண்ணூறு பார்க்க

தொள்ளாளி[1] *tollāli,* பெ. (n.) தொழிலாளி பார்க்க; see *tolilāli.*

[தொழிலாளி → தொள்ளாளி]

தொள்ளாளி[2] *tollāli,* பெ. (n.) மந்திரவாதி; witch man. மீன்பாடு குறைந்தால் இவனிடம் தாயத்து வாங்கிச் சடங்கு செய்வர் (மீனவ.).

தொள்ளி *tolli,* பெ. (n.) சேறு; mud, soft mire. "மைகுழைத்தன்ன தொள்ளியஞ் செறுவில்" *(கல்லா. 36, 1).*

[தொள் → தொள்ளி]

தொள்ளியடி-த்தல் *tolli-y-adi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. தொளியடி-த்தல் பார்க்க; see *toli-y-adi-.* 2. கெடுத்தல்; to damage, as one's reputation (செ.அக.).

[தொள்ளி + அடி]

தொள்ளை *tollai,* பெ. (n.) 1. துளை; hole. "தொள்ளைப் புலாற்பை" (திருப்பு. 289). 2. குழி; pit. "தொள்ளை மன்றத் தாங்கண்" *(புறநா. 333).* 3. துளையுடைப்பொருள் (யாழ். அக.); anything tubular. 4. மரக்கலம் (திவா.); sailing vessel. 5. குற்றம்; fault, defect. "தொள்ளை யுணர்வின் ளவர்கள் சொல்லின்" *(சீவக. 496).* 6. மரக்கால் (தைலவ. தைல. 135, 17); standard measure of capacity. 7. அறியாமை; ignorance. "தொள்ளை பூத்தலர்ந்த நெஞ்சிற் றக்கன்" *(கூர்மபு. தக்கன்வே. 6).*

ம. தொள்ள; க., பட. தொள்ளெ

[துல் → தொள் → தொள்ளை]

தொள்ளைக்காதர் *tollai-k-kādar,* பெ. (n.) ஊர்தோறும் திரிந்து பித்தளை ஏனம் விற்குமொரு குலத்தார் (இ.வ.); a caste of itinerant vendors of brasware from Tirunelvely and Palghat, as having pierced ear-lobes (செ.அக.).

[தொள்ளைக்காது → தொள்ளைக்காதர்]

தொள்ளைக்காது *tollai-k-kādu,* பெ. (n.) 1. பெருந்துளையுள்ள காது; ear with a big perforation in its lobe, opp. to ili-k-kādu. 2. அணி நீங்கிய தொளைக்காது; perforated ear left unadorned and empty.

[தொள்ளை + காது]

தொள்ளைக்காதுச்செட்டி *tollai-k-kādu-c-cetti,* பெ. (n.) கற்சட்டி வணிகர்; trader in stone-vessels.

[தொள்ளை + காது + செட்டி]

தொளத்தி *tolatti,* பெ. (n.) தளத்தி; loose-fitting.

[தொள் → தொள → தொளத்தி]

தொளதொள-த்தல் *tolatola-,* 4 செ.கு.வி. (v.i.) 1. துளையில் இறுக்கமாயில்லாமை, தளர்தல்; to be loose-fitting, lax. 2. இளகிப் போதல்; to be soft, as from over-ripeness, from moisture; to be thin, as pap. 3. உளறுதல்; to babble, rattle away. "அவன் தொளதொளக் கிறான்". 4. மன உறுதியற்று இருத்தல்; to waver, to be undecided.

[தொள் → தொளதொள]

தொள தொளத்தலாவது துளையின்கண் ஒன்று இன்னொன்றுள் இறுகப் பொருந்தாதவாறு இருத்தல்.

தொளதொளப்பு *tolatolappu,* பெ. (n.) நெகிழ்வு; slakness, looseness.

[தொளதொள → தொளதொளப்பு]

தொளதொளெனல் *tolatolenal,* பெ. (n.) 1. நெகிழ்வுக் குறிப்பு; expr. of being slack, loose. 2. உளறுதற் குறிப்பு; rattling talk. "தொளதொள வென்று பேசுகிறான்".

[தொளதொள + எனல்]

தொளாபாரம் *tolāpāram*, பெ. (n.) பழைய செயல் (இ.வ.); ancient thing or affair.

தொளாமணி *tolāmaṇi*, பெ. (n.) துளைக்காத முழு மணி; a pearl which is not pored.

[துள் → தொள் + ஆ + மணி. 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தொளி[1] *toli*, பெ. (n.) தொள்ளி பார்க்க; see *tolli*. உழாநுண்டொளி *(சிலப். 10. 120).*

[தொள் → தொள்ளி → தொளி]

தொளிகலக்கு-தல் *toli-kalakku-*, 8 செ.கு.வி. (v.i.) தொளியடி-த்தல் பார்க்க; see *toli-adi-*. (செ.அக.).

[தொளி + கலக்கு-.]

தொளிப்பருவம் *toli-p-paruvam*, பெ. (n.) தொளிவிரைப்பு பார்க்க; see *toli-viraippu* (செ.அக.).

[தொளி + பருவம்]

தொளியடி-த்தல் *toli-y-adi-*, 4 செ.கு.வி. & செ.குன்றாவி (v.i. & v.t.) வயலிற் சேறு கலக்குதல்; to plough a flooded field.

மறுவ. சேடையோட்டுதல்

[சேறு → சேடு]

தொளிவிச்சின்னம் *tolivi-c-cinnam*, பெ. (n.) குரற்கம்மல் பார்க்க; see *kurar-kammal* (சா.அக.).

தொளிவிரைப்பு *toli-viraippu*, பெ. (n.) வயலைச் சேறாக்கி விதைக்கை; sowing in the slush of a field, opp. to puluti-viraippu (செ.அக.).

[தொளி' + (விதைப்பு →) விரைப்பு]

தொளுக்கு[1]**-தல்** *tolukku-*, 8 செ.குன்றாவி. (v.t.) 1. தொடுத்தல்; to tie loosely. 2. தளரக் கட்டுதல்; to wear or attach loosely, as clothes.

தொளுக்கு[2] *tolukku*, பெ. (n.) ஊழற் சதை பிடித்தவன் (இ.வ.); flabby person.

தொளுக்குக்கொண்டை *tolukku-k-kondai*, பெ. (n.) அவிழ்ந்த மயிர்முடி (வின்.); loosened coil of a woman's hair.

[தொளுக்கு + கொண்டை]

தொளுத்தை *toluttai*, மீன் வகை; a kind of fish.

தொளை-த்தல் *tolai-*, 4. செ.குன்றாவி. (v.t.) 1. துளையிடுதல்; to perforate, bore. "மணித் தோளையுந் தொளைத்தான்" (கம்பரா. நிகும்பலை. 123). 2. தொந்தரவு செய்தல் (இ.வ.); to tease. 3. செய்தி தெரிதற் பொருட்டு ஆழம் பார்த்தல் (இ.வ.); to probe.

[துளை → தொளை]

தொளை[2] *tolai*, பெ. (n.) 1. மூங்கில்; bamboo. 2. ஓட்டை; opening, hole. "தொளை கொடாழ் தடக்கை" *(கம்பரா. சித்திர. 29).* 3. கண்; eye. 4. உட்டுளை; a cavity in a sore or an ulcers. 5. பெண்; woman.

[துளை → தொளை (வேக. 284)]

தொளைக்காது *tolai-k-kādu*, பெ. (n.) தொள்ளைக்காது பார்க்க; see *tollai-k-kādu* (சா.அக.).

[துளை → தொளை + காது]

தொற்பதம் *tor-padam*, பெ. (n.) தொம்பதம் பார்க்க; see *tompadam*. "தொற்பத மேவித் துரிசற்று" *(திருமந். 1421).*

தொற்றம்பு *torrampu*, பெ. (n.) ஊடுருவிச் செல்லாமல் உடம்பின் மேல்படும் அம்பு; arrow which causes only a surface wound. 'அது தன்னிலும் தொற்றம்பன்றிக்கே மறுபாடுருவத் தைப்பதுமாயிருந்தது' *(திவ். இயற். திருவிருத். 75, வியா. பக். 385).*

[தொற்று + அம்பு]

தொற்றி *torri*, பெ. (n.) 1. ஏறுகை; to climb. 2. ஒட்டு; combine. 3. தொற்றனேவல்; commanding word. 4. பற்று; grip. 5. பொருத்து; joint. 6. மூலைக்கையோடணைத்த மரம்; a piece of wood attached to the hip of roof.

தொற்று[1]**-தல்** *torru-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. தொடுத்தல்; to attach, tack. "அதன் கழுத்திலே காக்கைப் பொன்னைத் தொற்றி" *(ஈடு. 3, 1, 10).* 2. ஒட்டித்தொடர்தல்; to affect, as a contagious disease. தொற்றுநோய்

தொற்று²-தல் *torru-*, 7 செ.குவி. (v.i.) 1. படர்தல்; to spread, as a vine. "புரைதீர் தவந்தொற்று கொள்கொம் பெனுந் தெய்வமுனி" (உபதேசகா. சிவபுண்ணிய. 93). 2. கைகால்களால் பற்றியேறுதல்; to climb

தொற்று³-தல் *torru-*, 5 செ.குன்றாவி. (v.t.) பற்றியிருத்தல்; to be connected with. "இங்குக் கழிக்கிற அகங்காரம் ஸுக்ஷ்மசரீரம் விடுமளவும் இவனைத் தொற்றிக் கிடக்கும்" (ரஹஸ்ய. 959).

தொற்று⁴ *torru*, பெ. (n.) 1. தொடர்பு; connection. "கர்ப்பத்திலே தொற்றில்லாமை" (திவ்.திருப்பா. 5, வியா. 82). 2. நோயின் ஒட்டுத் தொடர்பு; contagion. 3. மூலைக்கையோடு அணைத்த மரம் (யாழ்.அக.); a piece of wood attached to the hip of a roof.

தொற்றுக்காய்ச்சல் *torru-k-kāiccal*, பெ. (n.) ஒட்டுக் காய்ச்சல்; contagious fever, epidemic fever. 2. மாரிக் காய்ச்சல்; plague pertilence (சா.அக.).

[தொத்து → தொற்று + காய்ச்சல்]

தொற்றுத்தொடிசு *torru-t-todisu*, பெ. (n.) சிறுபிழை (யாழ்.அக); triffling error.

[தொற்று + தொடிசு]

தொற்றுநோய் *torru-nōy*, பெ. (n.) 1. ஒருவரைத் தொடுவதினாலும் முடை நாற்றத்தை நுகர்வதாலும் ஒருவரிடமிருந்து மற்றொரு வருக்கு ஒட்டும் நோய்; disease communicated by mediate or immediate contact or by eflluvia from one person to another person - contagious disease. 2. பழைய நோய்; an old disease. 3. குட்டம்; leprosy.

[தொத்து → தொற்று + நோய்]

தொற்றுநோயாளி *torru-nōyāli*, பெ. (n.) ஒட்டுநோயுற்றவன்; one attacked of contagious disease (சா.அக.).

[தொத்து → தொற்று + நோயாளி]

தொற்றுப்பல் *torru-p-pal*, பெ. (n.) மிகுதியாகத் தோன்றும் பல் (திவ். பெரியாழ். 1.1., வியா. பக். 13); irregular, extra tooth.

[தொற்று + பல்]

தொற்றுரோகி *torru-rōgi*, பெ. (n.) தொற்று நோயாளி பார்க்க; see *torru-nōyāli* (செ.அக.).

[தொற்று + ரோகி]

Skt. rōgin → த. ரோகி

தொற்றுவியாதி *torru-viyādi*, பெ. (n.) தொற்றுநோய் பார்க்க; see *torru-nōy* (சா.அக.).

[தொற்று + வியாதி]

Skt. vyādhi → த. வியாதி

தொறட்டு *toraṭṭu*, பெ. (n.) துறட்டு பார்க்க; see *turaṭṭu*.

தொறு¹ *toru*, பெ. (n.) 1. ஆவின் கூட்டம்; herd of cows. "தொகைமலி தொறுவையாளுந் தோன்றல்" (சீவக. 474). 2. தொழு (பிங்.); cattle-stall. 3. இடைச்சாதி; shepherd caste. "நலத்தகு தொறுவினுள்ளேன்" (சீவக. 477). 4. கூட்டம் (பிங்.); crowd, multitude. "படைப்பெருந் தொறுவொடும் படர்ந்து" (கந்தபு. யுத்த. முதனாட். 15). 5. மிகுதி (யாழ்.அக.); plenty, abundance.

[தொழு → தொறு]

தொறு² *toru*, பெ. (n.) 1. அடிமையாள் (பிங்.); slave. 2. அடிமைத்தனம் (W.G.); slavery (செ.அக.).

[தொழு → தொறு]

தொறு³ *toru*, இடை. (part.) தான் புணர்ந்த மொழியின் பொருண்மையினைப் பலவாக்கி அடுத்தடுத்து ஆங்காங்கே என்பனபட நிற்கும் ஓரிடைச்சொல்; a distributive suffix of place, time. 'நவிறொறும் நூனயம் போலும்" (குறள், 783) (நன். 420, மயிலை).

தொறுத்தி *torutti*, பெ. (n.) இடைச்சி; shepherdess. "தொறுத்தியர் திகைத்து நின்றார்" (சீவக. 488).

[தொழு → தொறு → தொறுத்தி]

தொறுதொறுவெனல் *torutoru-v-enal*, பெ. (n.) 1. ஓயாது பேசுதல்; gossipping indulging in lengthy, discourse. 2. பயன்படாது பேசுதல்;

talking much and with little purpose. 'தொறுதொறுவென்று பேசாதே' (சா.அக.).

மறுவ. தொணதொண

[தொறு + தொறு + எனல்]

தொறுநிலை *toṟu-nilai,* பெ. (n.) 1. ஆக்கள் (பசுக்கள்) கட்டும் கொட்டம்; shed. "எம்மூர் எல்லாச்சேர தொறு நிலையும்" (S.I.I. vi. 167).

[தொறு + நிலை]

தொறுப்பட்டி *toṟu-p-paṭṭi,* பெ. (n.) ஆயிரம் மாடுகள் அடைக்கப்பெறும் அளவுள்ள நிலம், ஒரு தொறுப்பட்ட நிலம்; a measure of land, as sufficient for thousand cattle to fold. "பொத்தனம் கிழர்களும், தொறுப்பட்டி நிலம் குடுத்தார்கள்" (செங்கம் நடுகற்கள் - கல்வெட்டு).

[தொறு + பட்டி]

தொறுப்பு-தல் *toṟuppu-,* 5 செ.குன்றாவி. (v.t.) அலப்புதல்; to harass.

[தொணப்பு - தொறுப்பு]

தொறுப்போ-தல் *toṟu-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) ஆநிரை கவரப்படுதல்; to be captured in herds, as cattle. மாடு தொறுப் போகா நிற்க (செ.அக.).

[தொறு + போ]

தொறுவத்து *toṟuvattu,* பெ. (n.) நஞ்சுண்டான் பார்க்க; see *nañjuṇḍāṉ* (செ.அக.).

தொறுவன் *toṟuvaṉ,* பெ. (n.) இடையன் (திவா.); shepherd (செ.அக.).

[தொழுவன் → தொறுவன்]

தொறுவி *toṟuvi,* பெ. (n.) தொறுத்தி (சூடா.) பார்க்க; see *toṟutti* (செ. அக.).

தொறுவிடம் *toṟu-v-iḍam,* பெ. (n.) மாட்டுத் தொழு (பிங்.); cattle shed (செ. அக.).

[தொழு → தொறு + இடம்]

தொறுவிடுவித்துப்பட்டான் *toṟu-viḍuvittu-p-paṭṭāṉ,* பெ. (n.) பகைவரிடமிருந்து ஆநிரைகளைப் போரிட்டு மீட்டுக் கொண்டு வந்து தங்களூரில் இடுவித்த பின்னர் இறப்பவர் (செங்கம் நடுகற்கள் - கிபி. 7ஆம் நூற்றாண்டு); die after recovering the herd of cows seized by the enemy. இச்செயல் கரந்தைத் திணைக்குரியதாகும்.

[தொறு + விடுவித்து + பட்டான். படு → பட்டான்]

தொறுவிடுவித்துப்பட்டான்கல் *toṟu-viḍuvittu-p-paṭṭāṉ-kal,* பெ. (n.) தம்மூர் ஆநிரைகளைப் பகைவரிடமிருந்து மீட்டுப் போரில் இறந்தவன் நினைவாக நாட்டப்பட்டக் கல்; memorial stone of a deceased warrior, who died when he rescued the cattle seized by the enemy. (செங்கம் நடுகற்கள், கி.பி. 7ஆம் நூற்றாண்டு, கரந்தைத் திணை)

[தொறுவிடுவித்து + பட்டான் + கல்]

தொறுவு *toṟuvu,* பெ. (n.) 1. தொறு[1] பார்க்க; see *toṟu.* 2. செய்தொழில்; work, trade, craft, occupation (செ.அக.).

[தொறு → தொறுவு]

தொன்மரம் *toṉmaram,* பெ. (n.) ஆலமரம் (பிங்.); common banyan, as the ancient tree. "தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன" (சீவக. 498).

[தொல் + மரம்]

தொன்மை[1] *toṉmai,* பெ. (n.) 1. பழைமை (திவா.); oldness, antiquity. "தொன்மை யுடையார் தொடர்பு" (நாலடி., 216). 2. உரைவிரவிப் பழைமையாகிய கதை பொருளாகச் செய்யப்படுவது (தொல். பொருள். 549); narrative poem interspersed with prose, having for its subject an ancient story.

[தொல் → தொன்மை (வே.க. 274)]

தொன்மை[2] *toṉmai,* பெ. (n.) தன்மை (சங்கற்ப நிராகரணம்); nature. தொன்மை நாடி நன்மைவிடாதே (பழ.).

[தொல் → தொன்மை]

தொன்மைக்காட்சிஅனுமானம் *tonmai-k-kāṭci-aṉumāṉam*, பெ. (n.) ஓர் அளவை; a logic.

[தொன்மை + காட்சி + அனுமானம்]

அஃது ஒரு பூவைக்காணாமலே மணத்தால் இன்ன பூ என்று அறிவது.

தொன்மையோர் *toṉmaiyōr*, பெ. (n.) தொன்முதுரிமையர் (வின்.); ancients (செ.அக.).

[தொன்மை → தொன்மையோர்]

தொன்மொழி *toṉmoḻi*, பெ. (n.) 1. பழமொழி; proverb, maxim. "பொற்கிரிசேர் கருங்கொடியும் பொன்னிறமாமெனச் சொன்ன தொன்மொழியும்" (பதினொராம். பட்டின. திருக்கழு. 40). 2. பழைமையான மொழி; ancient language. "தோலென மொழிப தொன்மொழிப் புலவர்" (தொல். பொருள். 551). இன்று வழங்கும் தொன்மொழிகளுள் தமிழே மூத்தது (உ.வ.).

[தொல் + மொழி]

தொன்றி *toṉṟi*, பெ. (n.) தொண்டி பார்க்க; see *toṇḍi* (சா.அக.).

தொன்று *toṉṟu*, பெ. (n.) 1. பழைமை; oldness, antiquity. "தொன்றுமொழிந்து தொழில் கேட்ப" (மதுரைக். 72). 2. பழையது; that which is old, ancient. "தொன்றாகிப் புதிதாகி" (விநாயகபு. கட. 8). 3. ஊழ்; fate. "தொன்று சுண்ணத்திற் றோன்றிய வேறுபாடு" (சீவக. 903).

[தொல் → தொன்று]

தொன்றுதொட்டு *toṉṟu-toṭṭu*, கு.வி.எ. (adv.) பழங்காலம் முதல்; from of old, from time immemorial. "தொன்றுதொட்டனாதி வித்தி னிடத்தினில்" (சிசி2.10).

[தொன்று + தொட்டு]

தொன்றூயம் *toṉṟūyam*, பெ. (n.) பாலாட்டங் கொடி பார்க்க; see *pālāṭṭaṅ-koḍi* (சா. அக.).

தொன்னிலம் *toṉṉilam*, பெ. (n.) பண்டை நாடு; ancient country. தொன்னிலம் முழுதும் தோன்றிய கல்வி (பழ.).

தொன்னீர் *toṉṉīr*, பெ. (n.) கடல் (பிங்.); sea as ancient (செ.அக.).

[தொல் + நீர்]

தொன்னூல் *toṉṉūl*, பெ. (n.) 1. தொன்மம் (சூடா.); puranas. 2. தொன்னூல்விளக்கம் (வின்.) பார்க்க; see *toṉṉūl-viḷakkam* (செ.அக.).

[தொன்மை + நூல்]

தொன்னூல்விளக்கம் *toṉṉūl-viḷakkam*, பெ. (n.) வீரமாமுனிவர் செய்த தமிழ் இலக்கண நூல்; a Tamil grammar by Beschi @ Viramā-muṉivar (செ.அக.).

[தொன்னூல் + விளக்கம்]

தொன்னை *toṉṉai*, பெ. (n.) 1. இலைக்கலம்; a cup made of plantain or other leaf pinned up at the corners. "செவிக்கனகத் தொன்னையா லுண்டு" (சிவரக. சதானந்த. 2). "கைக்கே யிலைகொண்டு தொன்னையுங் கொண்டு" (தனிப்பா.). 2. எச்சிற் கல்லை போன்ற இழிந்தோன் (வின்.); mean wretch.

தெ., க. தொன்னெ

[துல் → துள் → துன் → தொன் → தொன்னை (வே.க. 274)]

E. tun = 1 large cask for wine, beer, etc, esp. formerly as measure of capacity (252 wine gallons) [brewer's fermenting - vat; OE. tunne, OHG = ON = tunna, F. Gaulish tunna]

தொன்னைக்காது *toṉṉai-k-kādu*, பெ. (n.) தொன்னை போல் மடங்கிய காது (உ.வ.); prominent ear slightly bent, as cup shaped (செ.அக.).

[தொன்னை + காது]

தொனப்பு-தல் *toṉa-p-pu-*, 5 செ.கு.வி. (v.i.) தொனுப்பு-தல் (இ.வ.) பார்க்க; see *toṉuppu-*, (செ.அக.).

தொனி[1] *toṉi*, பெ. (n.) 1. துளையிலிருந்து உண்டாகும் ஒலி (திவா.); sound, noise, intonation, twang, peal. "திசைப்புற வருந்தொனி

யெழுந்த பொழுதே" (கலிங்.382). 2. தொனியர்த்தம் பார்க்க; see *toṉi-y-arttam.*

தொனி²-த்தல் *toṉi-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ஒலித்தல்; to sound, to twang, to emit vocal or instrumental sound. "கோவியர் மழலை தொனித்த குழலிசைத் தோய்" (அழகர்கல. 1). 2. குறிப்புப் பொருள் தோன்றுதல்; to suggest itself, as a meaning.

த. தொனி; வ. த்வனி

[தொள் → தொல் → தொன் → தொனி (சு.வி. 35)]

தொனி³-த்தல் *toṉi-,* 5 செ.குன்றாவி. (v.t.) சொல்லுதல்; to say, tell. "அதன் றன்மை தொனித்துணர்த்துறின்" (உபதேசகா. சிவவிரத. 185).

தொனிசங்கு *toṉi-šaṅgu,* பெ. (n.) ஊதுசங்கு; conch use to blow.

[தொனி + சங்கு]

தொனிப்பொருள் *toṉi-p-poruḷ,* பெ. (n.) ஆற்றலால் அன்றிக் குறிப்பாலறியப்படும் பொருள்; suggested or implied meaning.

[தொனி + சங்கு]

தொனியர்த்தம் *toṉi-y-arttam,* பெ. (n.) தொனிப்பொருள் பார்க்க; see *toṉi-p-poruḷ.*

தொனுதொனு-த்தல் *toṉutoṉu-,* 4. செ.கு.வி. (v.i.) துணதுண-த்தல் (உ.வ.) பார்க்க; see *tuṇatuṇa-.*

[துணதுண-த்தல் → தொனுதொனு-த்தல்]

தொனுதொனுப்பு *toṉutoṉuppu,* பெ. (n.) 1. அலப்புகை (வின்.); babbling, idle gossip. 2. துன்புறுத்துகை; worrying (செ.அக.).

[துணதுணப்பு → தொனுதொனுப்பு]

தொனுப்பன் *toṉuppaṉ,* பெ. (n.) அலப்புவோன் (வின்.); babbler, vain talker (செ.அக.).

[தொனுப்பு → தொனுப்பன்]

தொனுப்பு-தல் *toṉuppu-,* 4 செ.கு.வி. (v.i.) அலப்புதல் (உ.வ.); to chatter, babble, blab (செ.அக.).

தோ

தோ[1] *tō,* த் என்ற மெய்யும் ஓ என்ற உயிரும் சேர்ந்த கூட்டெழுத்து; the compound of 't' and 'ō'.

[த் + ஓ]

தோ[2] *tō,* இடை (part.) நாயைக் கூப்பிடுமொலி; vocable used in calling a dog or other animals.

தோக்கியம் *tōkkiyam,* பெ. (n.) தோக்குமம் (யாழ்.அக.) பார்க்க; see *tōkkumam.*

தோக்கு[1] *tōkku,* பெ. (n.) பறவை சுடும் துமுக்கியில் கெட்டித்த சிறு மாழைக்குண்டு (நெல்லை); thick bullets used to shoot birds.

தோக்கு[2] *tōkku,* பெ. (n.) கைத்துமுக்கி; hand-gun.

[துமுக்கி → துமுக்கு → தோக்கு]

தோக்குமம் *tōkkumam,* பெ. (n.) *1.* காதுக் குறும்பி; ear wax. *2.* முகில்; cloud.

தோக்குளம் *tōkkuḷam,* பெ. (n.) பருத்திச் செடி வகை (மலை.); common cotton.

தோக்கை *tōkkai,* பெ. (n.) *1.* முன்றானை; front end of a cloth. "அடலெடுத்த வேற்கணார் தோக்கைபற்றி" *(திவ். பெரியதி. 4.4:3). 2.* கொய்சகம்; plaited folds of a woman's cloth. "தோக்கையந் துகிலினாடன்" *(சீவக. 2477). 3.* சீலை (அகநி.); cloth, garment. *4.* மேற்போர்வை (சது.); upper covering, scarf, cloak.

[தொகு → தோகு → தோகை → தோக்கை]

தோகடம் *tōgaḍam,* பெ. (n.) குழந்தைப் பருவம்; child hood *(சாஅக.).*

தோகதம் *tōkadam,* பெ. (n.) *1.* கருவுற்ற பெண்கள் சில உணவுப் பொருள்களின் மேல் கொள்ளும் ஆசை; morbid desire of a pregnant woman for particular objects. *2.* நெஞ்சு நோய்; disease of the heart. *3.* வெறுப்புணர்வு; neusea.

தோகாரை *tōkārai,* பெ. (n.) காரல் மீன் (மீனவ.); alactis indica.



தோகை *tōgai,* பெ. (n.) *1.* மயிற்பீலி (பிங்.); tail of a pea-cock. *2.* மயில்; pea-cock. "அன்னமுந் தோகையும்" *(சீவக. 346). 3.* பெண்; woman. "தோகை பாகற்கு" *(கம்பரா. திருவவ. 10).* தோகை அழகைத் தொட்டுப் பொட்டிட்டுக் கொள்ளலாம் *(பழ.). 4.* சிறகு (பிங்.); feather, plumage. *5.* விலங்கின் வால் (திவா.); tail of an animal. "தோகைமண் புடைக்குங் காய்புலி *(கல்லா. 6). 6.* ஆடை; cloth for wear, garment. பொன்னந் தோகையு மணியரிச் சிலம்பும் *(கல்லா. 41:14). 7.* முன்றானை (திவா.); front end of a cloth. *8.* கொய்சகம்; plaited folds of a woman's cloth. "தூசுலா நெடுந் தோகையி னல்லவர்" *(சீவக. 1320). 9.* நெல் கரும்பு வாழை முதலியவற்றின் தாள்; sheath, as of sugarcane, of a plantain stem. 'பரிய தோகையை யுடைய சிறிய தினை" *(புறநா. 168, உரை).* தோகைச் செந்நெல் *(பெருங். மகத. 2, 18). 10.* பெருங் கொடி (பிங்.); long flag, streamer, banner. *11.* தொங்கல் (வின்.); anything hanging down, as a flag, as woman's hair. *12.* பனங்கிழங்கின் வாற்றோல் (வின்.); hallow head of a palmyra root. *13.* ஆண் குறியின் நுனித்தோல்; foreskin, prepuce. *14.* பெண்மயிர் (யாழ்.அக.); women's hair. *15.* மீன் வகை; a kind of fish. "குளக்கன் றோகை பருந்துவாயன்" *(பறாளை. பள்ளு.15).*

[தொகு → தொகை → தோகை = தொங்கும் கரும்பு, சோளம் முதலியவற்றின் தாள், தொங்கும் மயிற்பீலி (மு.தா. 304)]

தோகைக்குழல் *tōgai-k-kulal,* பெ. (n.) முதியோர் கூந்தல்; virginian silk (சா.அக.).

[தோகை + குழல்]

தோகைநோய் *tōgai-nōy,* பெ. (n.) மாட்டு நோய் வகை; a disease of cattle.

[தோகை + நோய்]

ஒருகா. சோகை → தோகை

தோகைப்பகை *tōgai-p-pagai,* பெ. (n.) ஓந்தி (உரி.நி.); chameleon, as the enemy of pea-cock.

[தோகை + பகை. தோகை = மயில்]

தோகைப்பாகன் *tōgai-p-pāgan,* பெ. (n.) சிவ பெருமான்; Lord Sivan.

[தோகை + பாகன். தோகை = பெண்]

தோகைமஞ்ஞை *tōgai-maññai,* பெ. (n.) தோகைமயில் பார்க்க; see *tōgai-mayil* துணையில் தோகை மஞ்ஞை.

[தோகை + மஞ்ஞை]

மயில் → மஞ்ஞை

தோகைமயில் *tōgai-mayil,* பெ. (n.) ஆண் மயில்; male peacock. 'பேடுந் தோகைமயிலும் சேரவிருந்தன' (சீவக. 65, உரை).

[தோகை + மயில்]

தோகைமுகப்பூடணம் *tōgai-muga-p-pūḍaṇam,* பெ. (n.) மஞ்சள் (தைலவ.தைல.); turmeric, as used to beautify a woman's face.

[தோகை + முகம் + பூடணம். தோகை = பெண்]

தோசக்காய் *tōśa-k-kāy,* பெ. (n.) 1. வெள்ளரிக் காய்; common cucumber. 2. கக்கரிக்காய்; field cucumber (சா.அக.).

தோசி *tōśi,* பெ. (n.) நற்பேறு இல்லாதவன்-ள்; unclucky person. தோசிப் பெண்ணுக்கேற்ற சொறியாங் கொள்ளி மாப்பிள்ளை (பழ.).

தோசிக்கொக்கு *tōśi-k-kokku,* பெ. (n.) கொக்குவகை; green heron. 2. தோசி பார்க்க; see *tōśi.*

[தோசி + கொக்கு]



தோசை *tōśai,* பெ. (n.) அரிசிமாவில் செய்யும் ஒருவகைச் சிற்றுண்டி; rice-cake tiffin. "வடைசுகியன் றோசை வகைகள்" (விறலிவிடு.).

[தோய்த்து செய்வது தோசை. (தோய் → தோயை → தோசை)]

தோசைக்கல் *tōśai-k-kal,* பெ. (n.) அடுப்பில் வைத்துத் தோசை சுடுங் கலம்; griddle, pan for baking tōsai, usually of iron.

[தோசை + கல்]



தோசைக்காய் *tōśai-k-kāy,* பெ. (n.) வெள்ளரி வகை (இ.வ.); melon.

தோசைகுத்து-தல் *tośai-kuttu-,* 4 செ.குன்றாவி. (v.i.) தோசைவார்-த்தல் பார்க்க; see *tōśai vār-.*

[ஊற்று → ஊத்து (கொ.வ.) தோசை + குத்து (இ.வ.)]

தோசைச்சட்டுவம் *tōśai-c-caṭṭuvam,* பெ. (n.) தோசைத்திருப்பி பார்க்க; see *tōśai-t-tiruppi.*

தோசைச்சுடு-தல் *tōśai-c-cuḍu-,* 20 செ.குவி. (v.i.) தோசைவார்-த்தல் பார்க்க; see *tōśai-vār-.*

[தோசை + சுடு-.]

தோசைத்திருப்பி *tōšai-t-tiruppi,* பெ. (n.) கல்லில் வார்க்குந் தோசையைத் திருப்பிடவு மெடுக்கவும் உதவுங் கருவி; a kind of spit used to turn tošai from one side to another and remove it from the griddle.

மறுவ. தோசைச் சட்டுவம்

[தோசை + திருப்பி]



தோசைவார்-த்தல் *tōšai-vār-,* 4 செ.குன்றாவி. (v.i.) தோசை சுடுதல்; to bake rice-cakes.

[தோசை + வார்-.]

தோஞ்சல் *tōñjal,* பெ. (n.) குடலில் தொங்கும் ஒரு சவ்வு; a membraneous expansion which floats upon the intestines.

[தொங்கல் → தொஞ்சல் → தோஞ்சல்]

தோஞ்சை *tōñjai,* பெ. (n.) தோஞ்சல் பார்க்க; see *tōñjal* (சா.அக.).

[தோஞ்சல் → தோஞ்சை]

தோஞ்சைப்பெருங்குடல் *tōñjai-p-peruṅguḍal,* பெ. (n.) பெருங்குடல் நடுவிலிருக்கும் நரம்புக் கூட்டம்; net work of nerves in the middle of the colon.

[தோஞ்ஞை + பெருங்குடல்]

தோட்கட்டு *tōṭ-kaṭṭu,* பெ. (n.) 1. தோட்சந்தி; shoulder-joint. 'தோட்கட்டும் குடமுழாவை யொக்கும் தோள்களும் ஐராவதத்தின் கையை யொக்கும்' (சீவக. 1461, உரை). 2. தோள்; shoulder.

[தோள் + கட்டு]

தோட்காப்பு *tōṭ-kāppu,* பெ. (n.) தோள் வளை; armlet.

[தோள் + காப்பு]

தோட்கோப்பு *tōṭ-kōppu,* பெ. (n.) கட்டுச் சோறு; boiled rice tied up for a journey, as slung over the shoulder in walking. "தோட்கோப்புக் காலத்தாற் கொண்டு ய்ம்மின்" (நாலடி, 20).

[தோள் + கோப்பு]

தோட்சுமை *tōṭ-šumai,* பெ. (n.) 1. தோளிற் றாங்கப்படும் சுமை; burden carried on shoulder. 2. காவடி (யாழ்.அக.) பார்க்க; see *kāvaḍi.* 3. மூட்டை (இ.வ.); pack, bundle.

[தோள் + சுமை]

தோட்சேலை *tōṭ-šēlai,* பெ. (n.) தோள்சேலை பார்க்க; see *tōḷ-šēlai.*

தோட்சேலைப்போராட்டம் *tōṭ-šēlai-p-pōrāṭṭam,* பெ. (n.) தோள்சேலைப்போராட்டம் பார்க்க; see *tōḷ-šēlai-p-pōrāṭṭam.*

தோட்டக்கள்ளன் *tōṭṭa-k-kaḷḷaṉ,* பெ. (n.) தோட்டப்பயிரை அழிக்கும் பறவை வகை; a bird destructive to garden-plants.

[தோட்டம் + கள்ளன்]

தோட்டக்காரன் *tōṭṭa-k-kāraṉ,* பெ. (n.) 1. தோட்ட வேலை செய்பவன்; gardener, husbandman. தோட்டக்காரன் வாழ்வு காற்றடித்தால் போச்சு (பழ.). 2. தோட்டத்தின் சொந்தக்காரன்; proprietor of a garden. 3. தோட்டத்தின் காவற்காரன்; watchman of a garden.

[தோட்டம் + காரன். 'காரன்' – பெயரீறு]

தோட்டக்கால் *tōṭṭa-k-kāl,* பெ. (n.) கிணற்றுப் பாய்ச்சலுள்ள கொல்லை நிலம் (வின்.); garden lands watered by means of a well and rendered

fit for the growth of vegetables, tobacco, fruit-tree, crops of grain.

[தோட்டம் + கால்]

தோட்டக்கீரை *tōṭṭa-k-kīrai,* பெ. (n.) *அரைக்கீரை, சிறுகீரை, தண்டுக்கீரை முதலிய தோட்டத்திற் பயிராகும் கீரை வகைகள்;* garden greens or spinach cultivated in garden and fields especially those belonging to amaranthus family *(சாஅக.).*

[தோட்டம் + கீரை]

தோட்டக்குழி *tōṭṭa-k-kuḻi,* பெ. (n.) கொல்லைக் கொட்டாரத்தில் அவரை, புடலை போடும் குழி; pit at the backyard to sow, beans and snake guard.

[தோட்டம் + குழி]

தோட்டக்குடிசை *tōṭṭa-k-kuḍišai,* பெ. (n.) கொடிவீடு, வேனிற் கொட்டகை; summer-house.

[தோட்டம் + குடிசை]

தோட்டக்கூறு *tōṭṭa-k-kūṟu,* பெ. (n.) 1. *மரங்கள் வளர்ப்பதற்குத் தகுதியான நிலப்பகுதி;* land fit for growing trees. 2. *மா, பலா, வாழை முதலிய பயன்தரு மரங்கள் வளர்க்கப்பட்ட தோட்டத்தின் ஒரு பகுதி;* a part of a garden where, mango, jack and banana trees are grown *(கல்அக.).*

[தோட்டம் + கூறு]

தோட்டச்சம்பா *tōṭṭa-c-cambā,* பெ. (n.) *சம்பா நெல்வகை (இவ.);* a kind of reddish paddy *(செஅக.).*

[தோட்டம் + சம்பா]

தோட்டத்துமுட்பாறை *tōṭṭattu-muṭpāṟai,* பெ. (n.) *கடலடிப் பாறை ஒன்றின் பெயர்;* name of a rock beneath the sea. "நெட்டுக் குப்பத்தின் நேர் கிழக்கே 60 பாகத் தொலைவாய் காணத்தரும் கடலடிப் பாறை *(மீனவ.)*

தோட்டந்துரவு *tōṭṭanduravu,* பெ. (n.) தோட்டமும் பாசனத்துக்குதவும் பெருங் கிணறும்; land property and large well for irrigation purpose. *அவர் தோட்டந்துரவு உடையவர்.*

[தோட்டம் + துரவு]

தோட்டந்தூரம் *tōṭṭan-tūram,* பெ. (n.) செவிடு *(இவ.);* deafness.

[தோட்டம் + தூரம். தோடு → தோட்டம்]

Skt. dūr → *த. தூரம்*

தோட்டப்பயிர் *tōṭṭa-p-payir,* பெ. (n.) *காய்கறிப் பயிர்கள் (இவ.);* garden vegetables.

ம. தோட்டப்பயறு

[தோட்டம் + பயிர்]

தோட்டப்பாழானநிலம் *tōṭṭa-p-pāḻāṉa-nilam,* பெ. (n.) *பயன்தரும் மரங்களோடு இருந்து, பின்னர்ப் பாழாகி, வறிதாகக் கிடக்கும் நிலம்;* barren land where once trees grew flourisly. "இவ்வூர் மும்முடிச் சோழப் பெருந் தெருவில் வியாபாரி ஆச்செருமான், வயிரமேகன் தோட்டப் பாழான நிலத்தின் வடவருகேய்" *(முதல் இராசராசன் கல்வெட்டு, தெ.க.தொ. 3:1, கல். 15).*

[தோட்டம் + பாழான + நிலம்]

தோட்டப்பைரி *tōṭṭa-p-pairi,* பெ. (n.) *பைரிப்புள் வகை;* a peregrine falcon.

[தோட்டம் + பைரி]

தோட்டம் *tōṭṭam,* பெ. (n.) 1. *வளர்ப்புச் செடிகளின் தொகுதி;* garden, orchard, plantation. "வயலுந் தோட்டமும்" *(பெருங். உஞ்சைக். 39, 63).* 2. சோலை *(பிங்.);* grove. தோட்டம் நிலைத்தல்லவோ தென்னம்பிள்ளை வைக்கவேணும் *(பழ.).* 3. வீட்டுக் கொல்லை *(இவ.);* back yard, enclosure. தோட்டத்தில் பழமிருக்கத் தூரப்போவானேன் *(பழ.).*

ம. தோட்டம்; க. தோட, தோண்ட; தெ., பட., து., குட. தோட; கோத. தோட்டம்; துட. த்வோடம்; கூ. டுட; குவி. தொந்த; துட. தோண்ட

[துள் → தொள் → தோள் → தோண்டு → தோடு → தோட்டம்]

தோட்டல் *tōṭṭal,* பெ. (n.) 1. *துளைத்தல்;* to drill. "கேள்வியாற் றோட்கப் படாத செவி" *(குறள், 418).*

2. தோண்டுதல்; to dig. "தெவ்வேந்த ருடறோட்ட நெடுவேலாய்" (கம்பரா. குலமுறை. 8).

[தொள் → தோள் → தோட்டல்]

தோட்டவாரியம் *tōṭṭa-vāriyam*, பெ. (n.) தோட்டக் கண்காணிப்பு; supervision of gardern (T.A.S.ii, 78).

[தோட்டம் + வாரியம்]

தோட்டழுத்தமானமாடு *tōṭṭaḻuttamāṉa-māḍu*, பெ. (n.) மெல்லிய தோலையும் மினு மினுப்பான மயிரையும் கொண்ட அழகான மாடு (நெல்லை); cow which has silky skin and hair.

[தோல் + அழுத்தமான மாடு. அழுத்தம் = நயம். ஒ.நோ. அழுத்தமான சேலை = நயமான சேலை]

தோட்டா *tōṭṭā*, பெ. (n.) கோலா மீன் (நெல்லை. மீனவ.); garfish, garpike.

தோட்டி[1] *tōṭṭi*, பெ. (n.) 1. ஆணை; authority. "எருமையிருந் தோட்டி" (பரிபா. 8:36). 2. காவல்; watch, guard. "உடன்றோர் மன்னெயிறோட்டி வையா" (பதிற்றுப். 25:5). 3. கதவு; door. "நாடுடை நல்லெயிலணங் குடைத் தோட்டி" (மதுரைக். 693). 4. மனைவாயில் (பிங்.); gateway, gate. 5. சூழகழிருக்கை (சது.); town surrounded with a moat. 6. கட்டழகு (திவா.); exquisite beauty. "இம்பரினில்லாத் தோட்டியிரதியை" (விநாயகபு. 44:19). 7. செங்காந்தள் (மலை.); Malabar glory lily. 8. நெல்லி (மலை.); emblic myrobalan.

தோட்டி[2] *tōṭṭi*, பெ. (n.) 1. துறட்டி; elephant hook or goad. யானைமே லிருந்தோன் றோட்டிக் கயலொன் றீயாது" (மணிமே. 27:4). 2. கொக்கி (வின்.); hook, clasp. 3. பகைவரை வருத்த நிலத்துப் பதிக்கப்படும் கூரிய படைக்கலன்; sharp weapon planted in the ground to keep off enemies. 'தோட்டி முண் முதலியன பதித்த காவற்காடு' (தொல். பொருள்.65, உரை).

ம. தோட்டி; க. தோடி, லோடி; தெ. தோடி; து. தோண்டி; பர். டோடன்; குரு. டோடோ; த. தோட்டி; வ. த்ரோட்டி, த்ரோத்ர, தோத்ர

[துறடு → துறட்டி → தோட்டி]



தோட்டி[3] *tōṭṭi*, பெ. (n.) 1. வெட்டியான்; a menial servant of a village. 2. குப்பை முதலியன வாருவோன்; scavenger. தோட்டி போல் உழைத்துத் துரைபோல் சாப்பிட வேண்டும்.

[தொள் → தோள் → தோண்டு → தோண்டி → தோட்டி]

தோட்டி[4] *tōṭṭi*, பெ. (n.) ஏரி நீரை நிலங்களுக்குப் பங்கிட்டுத் தருபவர்; a village servant who, looks after the distribution of water for irrigation.

[தோண்டி → தோட்டி]

தோட்டிச்சி *tōṭṭicci*, பெ. (n.) தோட்டிப் பெண்; a woman of tōṭṭi-p-paṟaiyaṉ caste.

[தோட்டி (ஆ.பா.) – தோட்டிச்சி (பெ.பா.)]

தோட்டிச்சிமூக்குத்தி *tōṭṭicci-mūkkutti*, பெ. (n.) மலைகளா பார்க்க; see *malaikaḷā*.

[தோட்டிச்சி + மூக்குத்தி]

தோட்டிப்பறையன் *tōṭṭi-p-paṟaiyaṉ*, பெ. (n.) வெட்டியான்; a division of the paṟaiya caste who act on village scavengers or messengers.

[தோட்டி + பறையன்]

தோட்டிமை[1] *tōṭṭimai*, பெ. (n.) வெட்டியான் வேலை; occupation of a village messenger or scavenger.

[தோட்டி → தோட்டிமை]

தோட்டிமை[2] *tōṭṭimai*, பெ. (n.) ஒற்றுமை (சூடா.); symmetry, harmony.

[தோள் → தோளி → தோளிமை → தோட்டிமை]

தோட்டுக்கணவா *tōṭṭu-k-kaṇavā*, பெ. (n.) மீன் வகை; a kind of fish in kanavay species.

[தோட்டு + கணவா]



தோட்டுக்காது *tōṭṭu-k-kādu*, பெ. (n.) ஓலைச் சுருள் முதலியன இட்ட காது; ear-wearing tōḍu. 2. காதினடித்தண்டு; ear-lobe (செ.அக.).

[தோடு + காது]

தோட்டுச்சக்கரம் *tōṭṭu-c-cakkaram*, பெ. (n.) சக்கரவாணம்; wheel rocket.

[தோடு + சக்கரம்]

தோட்டுச்சிரங்கு *tōṭṭu-c-ciraṅgu*, பெ. (n.) கொப்புளச் சிரங்கு (யாழ்ப்.); itch with large scabby ulcers (செ.அக.).

[தோடு + சிரங்கு - தோட் சிரங்கு → தோட்டுச்சிரங்கு]

தோட்டுப்பாய் *tōṭṭu-p-pāy*, பெ. (n.) நெல் காயப்போடும் பெரிய பாய்; mat use to dry the paddy in the sun (நெல்லை.). தோட்டுப்பாய் முடைகிறவனுக்குத் தூங்கப் பாயில்லை (பழ.).

[தோடு + பாய். தோடு = ஓலை, இலை, கோரை. இதைத் தோட்டப்பாய் என்பது தஞ்சை வழக்கு]

தோட்டுப்புழுக்கொடியல் *tōṭṭiu-p-puḻu-k-koḍiyal*, பெ. (n.) பனங்கிழங்குப் புழுக்கல் (யாழ்ப்.); palmyra roots, boild, cut in thin slices and dried in the sun.

[தோடு + புழுக்கு + ஒடியல்]

தோட்பட்டி *tōṭ-paṭṭi*, பெ. (n.) உடையின் தோட்பாகம்; yoke of a garment, shoulder piece of a cloak (செ.அக.).

[தோள் + பட்டி]

தோட்பட்டை *tōṭpaṭṭai*, பெ. (n.) தோட்புறத் தெலும்பு; shoulder blade, scapula (செ.அக.).

[தோள் + பட்டை]



தோட்பலகை *tōṭ-palagai*, பெ. (n.) தோட்பட்டை (இவ.) பார்க்க; see *tōṭ-paṭṭai.*

[தோள் + பலகை]

தோட்புடைகொள்(ளு)-தல் *tōṭpuḍai-koḷ(ḷu)-*, 12 செ.கு.வி. (v.i.) எதிர்த்து நிற்றற் குறியாகத் தோள் தட்டுதல்; to strike the shoulder, as a combatant in challenging. "அல்லாக்காற் றோப்புடைக் கொள்ளா வெழும் (நாலடி., 312).

[தோள் + புடை + கொள்ளு-.]

தோட்புரவு *tōṭpuravu*, பெ. (n.) தோட்டமாக அமைந்த நிலத்திற்குரியதாக அரசு பெறும் வரி; tax collected by the government for the land fit to grow trees.

தோடகச்சிரங்கு *tōḍaga-c-ciraṅgu*, பெ. (n.) தோட்டுச்சிரங்கு (யாழ்.அக.) பார்க்க; see *tōṭṭu-c-ciraṅgu.*

[தோடகம் + சிரங்கு]

தோடகம் *tōḍagam*, பெ. (n.) 1. தாமரை (மலை); lotus. 2. கொப்புளம் (யாழ்.அக.); pustule, blister.

தோடங்காய் *tōḍaṅ-gāy*, பெ. (n.) தோடை மரத்தின் காய்; citrus fruit (செ.அக.).

[தோடை + காய்]

தோடஞ்சிரங்கு *tōḍañ-jiraṅgu,* பெ. (n.) தோட்டுச்சிரங்கு (யாழ்அக.) பார்க்க; see *toṭṭu-c-ciraṅgu* (செஅக.).

தோடயம் *tōḍayam,* பெ. (n.) நாடகத்தின் முன்மொழிப்பாட்டு; song at the beginning of a drama invoking the aid of the gods. "தோடயஞ் சொல்வேனே" (இராமநா. பாலகா. 1).

தோடர் *tōḍar,* பெ. (n.) தொதவர் பார்க்க; see *todavar.*

[தொழு → தொழுவர் → தொதுவர் → தோடர்]

தோடர்மால் *tōḍarmāl,* பெ. (n.) தொதவர் பார்க்க; see *todavar.*

தோடா *tōḍā,* பெ. (n.) 1. கையணி வகை; an armlet. 2. கல்வித் திறமைக்குப் பரிசிலாகப் பெறும் பொற்கங்கணம்; gold bracelet, as a reward of merit.

தோடாப்போடு-தல் *tōḍā-p-pōḍu-,* 20 செ.குன்றாவி. (v.t.) புலவர் முதலியவர்க்கு அவர் திறமையறிந்து பொற்கங்கணம் பூட்டுதல்; to present tōḍa, as to scholars in recognition of their merit (செஅக.).

[தோடா + போடு. தோடா = பொற்கங்கணம்]

தோடாழ்குளம் *tōḍāḻ-kuḷam,* பெ. (n.) கையைக் கூப்பி மூழ்கி நீர்நிலை காட்டுங்காலத்துக் கையமிழக் கூடிய ஆழமுள்ள குளம்; a tank deep enough to immerse a person standing with outstrecthed hands. "தோடாழ் குளத்த கோடுகாத் திருக்கும்" (பெரும்பாண். 273).

[தோடு + ஆழ் + குளம்]

தோடி *tōḍi,* பெ. (n.) ஒரு பண் (சிலப். 8: 35, உரை); a specific melody type.

தோடு[1] *tōḍu,* பெ. (n.) 1. ஓலை; palm leaf. 'வண்டோட்டுத் தெங்கின்' (பெரும்பாண். 353). 2. காதோலைச் சுருள் (வின்.); ōlā roll worn in the perforation of the ear. 3. காதணி; ear jewel. "வெள்ளி வெண்டோட்டு" (மணிமே. 3:118). 4. பூவிதழ்; flower petal. "தோடேறு மலர்க் கடுக்கை" (தேவா. 885, 4) 5. பூ; flower. "தோட்டார் கதுப்பினா டோள்" (குறள், 1105). 6. கதிர்த்தாள் (அகநா.13,18,உரை); sheath of grain. 7. பழத்தினோடு (வின்); shell of a fruit, as of a wood-apple. 8. தொகுதி (திவா.); collection, assemblage, crowd, cluster, bunch. "தோடு கொண்ட முரசுங் கிழிந்தன கண்ணே" (புறநா. 238). 9. கறிக்காக அரியப்பட்ட காயின் வட்டப் பகுதி (யாழ்ப்.); round slice of fruits used for curry. 10. வட்டத்திரணை (யாழ்ப்.); round moulding.

[தொள் → தோள் → தோடு]



தோடு[2] *tōḍu,* பெ. (n.) தாழை; fragrant screw pine.

[தொள் → தோள் → தோடு]

தோடு[3] *tōḍu,* பெ. (n.) 1. தோல்; skin. தோட்டை நீ பூணியோ (நீலகேசி, 273). 2. இலை (புறநா. 120); leaf.

[தொள் → தோள் → தோடு]

தோடுமொக்கு *tōḍu-mokku,* பெ. (n.) மராட்டிய மொக்கு; Marattiya buds (சாஅக.).

[தோடு + மொக்கு]

தோடுவாய்ப்பிலை *tōḍu-vāyppilai,* பெ. (n.) வள்ளைக் கொடிமாலை; leaf of creeping bindiweed (சாஅக.).

தோடை[1] *tōḍai,* பெ. (n.) முத்துக் குளியலில் ஒரு முழுக்கிற் கிடைக்கும் சிப்பிகள் (வின்.); produce of a single dive at a pearl-fishery.

தோடை[2] *tōḍai,* பெ. (n.) ஒரு மருந்துச் செடி, ஆடாதோடை (மூஅ.); Malabar nut tree.



தோடை[3] *tōḍai,* பெ. (n.) *1. கிச்சிலி வகை;* different kinds of citrus, as lemons, citrons, oranges.

தோடை[4] *tōḍai,* பெ. (n.) *சங்கு குளிப்பவர் களுக்குத் துணையாயிருப்பவர் (நெல்லை. மீனவ.);* one who helps the pearl-fishers.

தோடையம் *tōḍaiyam,* பெ. (n.) தோடயம் *பார்க்க;* see *tōḍayam.*

தோடையன் *tōḍaiyaṉ,* பெ. (n.) தோடை[2] *பார்க்க;* see *tōḍai.*

தோண்டல் *tōṇḍal,* பெ. (n.) *ஊற்று (திவ். பெரியாழ். 4-3-6);* spring.

[துல் → துள் → தொள் → தோள் → தோண் → தோண்டு]

தோண்டவம் *tōṇḍavam,* பெ. (n.) *பிச்சிப்பூ;* large flowered jasmine. spanish jasmine *(சா.அக.).*

தோண்டா *tōṇḍā,* பெ. (n.) *கரைவலையிற் கட்டப் பெறும் மிதப்புக் கட்டை (மீனவ.);* float of a fishing line, net, etc.

தோண்டான் *tōṇḍāṉ,* பெ. (n.) *ஓநாய் (சது.);* wolf.

தெ. தோடேலு



தோண்டி[1] *tōṇḍi,* பெ. (n.) *நீர் சேந்தும் கல வகை;* pot of earth or metal, used for drawing water *(செ.அக.). 2. சிறுகுடம்;* small pot

ம. தோண்டி

[துல் → துள் → தோள் → தோண்டு → தோண்டி]



தோண்டி[2] *tōṇḍi,* பெ. (n.) *1. சுண்டி வகை;* a species of sensitive plant. *2. கொட்டைக் கரந்தை (சங்.அக.);* globe thistle.

தோண்டி[3] *tōṇḍi,* பெ. (n.) *64 சேர் கொண்ட முகத்தலளவை (இவ.);* a liquid measure of 64 seers.

தோண்டிக்கூடை *tōṇḍi-k-kūḍai,* பெ. (n.) *வலைப்பு மீனை அள்ளுதற்குரிய கூடை (தஞ்சை.மீனவ.);* basket helps to scoop the fishes from the net.

[தோண்டி + கூடை]

தோண்டியும்கயிறும் *tōṇḍiyum-kayiṟum,* பெ. (n.) *ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருப்பவர்;* good support to each others like pot and the rope. *அவர்களிருவரும் தோண்டியும் கயிறும் ஆனவர்.*

[தோண்டியும் + கயிறும்]

நீர்முகக்கத் தோண்டியும் அதிற் கட்டுங் கயிறும் இணைந்திருத்தல் போல, ஒரு வினை நிகழ ஒருவருக்கொருவர் உறுதுணையா யிருப்போர்.

தோண்டு-தல் *tōṇḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *1. அகழ்தல்;* to dig, hollow, excavate. *2. குடைதல்;* to scoop out, bore. *3. முகத்தல்;* to draw or fetch water from a well. "நெடுங் கிணற்று வல்லூற்றுவரி தோண்டி" *(பெரும்பாண்.*

98). 4. செய்தியை உசாவியறிதல்; to drawout details of. ஏன் அச்செய்தியைத் தோண்டுகிறாய்? 5. பண்ட மிறக்குதல்; to unload, as a ship. "மிசைப்பரந் தோண்டாது புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்" (புறநா. 30).

ம. தோண்டுக; க., தெ. தோடு; து. தோடுணி; குட., கோத. தோட்; துட. த்விட்

[துல் → துள் → தோள் → தோண்டு]

தோண்டுச்சால் *tōṇḍu-c-cāl*, பெ. (n.) நாற்றங்காலில் தேங்கின நீரை வடிக்கத் தோண்டும் சிறுகால் (இவ.); a small channel to drain the excess water in a seed-bed.

[தோண்டு + சால்]



தோண்ணாரு *tōṇṇāru*, பெ. (n.) வழக்காடு; to dispute (நெல்லை).

தோண்மாற்று¹-தல் *tōṇ-māṟṟu-*, 5 செ. குன்றாவி. (v.t.) சுமையை ஒரு தோளினின்று மற்றொரு தோளுக்கு மாற்றிக் கொள்ளுதல்; to change from one shoulder to another shoulder, as a load.

[தோள் + மாற்று]

தோண்மாற்று²-தல் *tōṇ-māṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) மணப்பெண்ணும் மாப்பிள்ளையும், தத்தம் தாய் மாமன் தோளேறிக் கொண்டு மாலை மாற்றிக் கொள்ளும் மணவினை; to exchange garlands, as bridegroom and bride.

[தோள் + மாற்று-.]

தோண்முதல் *tōṇmudal*, பெ. (n.) தோண்மை பார்க்க; see *tōṇmai*. "மாண்முடி மன்னன் றோண்முதல் வினவி" (பெருங்.இலாவாண. 9, 30).

[தோள் + முதல்]

தோண்மேல் *tōṇmēl*, பெ. (n.) பிடரி (திவா.); nape of the neck.

[தோள் + மேல்]

தோண்மை *tōṇmai*, பெ. (n.) தோள்வலிமை; strength of one's arm. "தோண்மையா லமர் தொலைத்து" (பாரத. படை. 10).

[தோள் + வலிமை → தோண்மை]

தோணாமுகம் *tōṇāmugam*, பெ. (n.) அகழி சூழ்ந்ததும் 400 சிற்றூர்களுக்குத் தலைமையானதுமான நகரம் (பிங்.); a town surrounded with a moat, being the chief of 400 villages.

தோணி¹ *tōṇi*, பெ. (n.) 1. ஓடம்; boat, dhoney. "புனைகலம் பெய்த தோணி" (சீவக. 967). தோணிபோகும், துறை கிடக்கும் (பழ.). 2. கப்பல்; ship. "கடன்மண்டு தோணியில்" (புறநா. 299: 3). 3. மிதவை (பிங்.); float, raft, canoe. 4. நீர்த் தொட்டி; water trough. "தாழிகடோணி கடாரங்கள்" (அரிச்.பு. விவாக. 293).

ம. தோணி; க., து. தோணி; தெ. தோனி; கோண். தொங்கா; கட. தொன; த. தோணி; Pali. doṇi; Sinh. doṇa; Skt. drōṇi

[துல் → துள் → தொள் → தோள் → தோண் → தோணி. குடையப்பட்ட மரக்கலம், அதுபோற் பலகைகளாற் பொருத்திச் செய்த கலம் (தி.ம. 746)]



தோணி² *tōṇi*, பெ. (n.) 1. மதிலுறுப்பு (பிங்.); projections, bastons in a fortress wall. 2. அம்பு (திவா.); arrow. "தொண்டமதனைக் கொடு நிமிர்ந்த சில தோணி" (இரகு. திக்குவி. 103) 3. சேறு (சூடா.); mud, mire. 4. நீர் (அக.நி.); water. 5. சிறு வழுதுணைச் செடி வகை

(தைலவ.தைல.); Indian nightshade. 6. மருதோன்றி; fragrant nail dye.

தோணி[3] *tōṇi*, பெ. (n.) ஓட்டுக் கூரையின் மீது விழும் மழைநீர் வெளியே செல்ல அமைந்த அமைப்பு; slope made on the roof of the house likes for the rain water to drain.



தோணிக்கடமை *tōṇi-k-kaḍamai*, பெ. (n.) தோணிக்கு வாங்கும் வரி; a tax on boats (செ.அக.).

[தோணி + கடமை]

தோணிக்காரன் *tōṇi-k-kāraṉ*, பெ. (n.) படகோட்டி; boatman (செ.அக.).

ம. தோணிக்காரன்

[தோணி + காரன்]

தோணிக்குத்தகை *tōṇi-k-kuttagai*, பெ. (n.) தோணியைப் பயன்படுத்தற்கு மொத்தமாகப் பேசும் ஒப்பந்தம் (இ.வ.); contract for a whole tōṇi without reference to the number of trips or weight of cargo (செ.அக.).

[தோணி + குத்தகை]

தோணிகாவு-தல் *tōṇi-kāvu-*, 5 செ.கு.வி. (v.i.) மீன்பிடி தொழிலுக்குப் புறப்படும் பொழுது துண்டு தடிகளில் கயிற்றைக் கட்டி அதனூடே தோணி மரங்களைத் தூக்கிச் சென்று கரையோரம் வைத்தல்; to keep the small boat on the shore by tying it with the help of the rod tied with the rope while going for fishing.

[தோணி + காவு]

தோணித்துறை *tōṇi-t-tuṟai*, பெ. (n.) துறைமுகம் (இவ.); port, harbour (செ.அக.).

[தோணி + துறை]

தோணிதள்ளு-தல் *tōṇi-t-taḷḷu-*, 15 செ.கு.வி. (v.i.) ஓடத்தை நீரில்விடுதல் (வின்.); to launch a boat (செ.அக.).

[தோணி + தள்ளு-.]

தோணிதாங்கு-தல் *tōṇi-tāṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) படகைக் கழையாற்றள்ளுதல்; to punt a boat (செ.அக.).

[தோணி + தாங்கு-.]

தோணிப்பாலம் *tōṇi-pālam*, பெ. (n.) தோணி போல் அமைக்கப்படும் கற்பாலம் (இ.வ.); Irish bridge, as scooped like a boat.

[தோணி + பாலம்]

தோணிபுரம் *tōṇi-puram*, பெ. (n.) சீகாழி (தேவா.); Shiyali.

இவ்வூர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் பெயர் தோணியப்பர். திருஞான சம்பந்தர் திருவருள் பெற்ற இடம். ஊழிப் பெருவெள்ளத்தில் உலகப்பந்து நீரில் மூழ்கிய ஞான்று இவ்வூர் தோணியாக நின்றதாகவும் சிவனும் சிவையும் ஆண்டிருந்து அருள் புரிந்ததாகவும் தொன்மம் கூறும்.

தோணிமீன் *tōṇi-mīṉ*, பெ. (n.) தோணி வலைப்பிற் கிடைத்த மீன் (முகவை. மீனவ.); fish gained in boat fishing (மீனவ.).

[தோணி + மீன்]

தோணியப்பர் *tōṇi-appar*, பெ. (n.) சீகாழி சிவத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவர்; Šivaṉ worshipped at Šhiyali.

[தோணி + அப்பர்]

தோணிபுரம் பார்க்க

தோணியம் *tōṇiyam*, பெ. (n.) அம்பு; arrow.

தோணியுழுந்து *tōṇi-y-uḻundu*, பெ. (n.) கப்பல் வழியாய் இறக்குமதியாகும் உழுந்து (இ.வ.); imported black gram, as brought by boat.

[தோணி + உழுந்து, தோணி = கப்பல்]

தோணியோடு *tōṇi-y-ōḍu,* பெ. (n.) கூடல் வாயோடு (இவ.); gutter tiles.

[தோணி + ஓடு]

தோணிவயிறு *tōṇi-vayiṟu,* பெ. (n.) தோணியைப் போன்ற வயிறு; boat shaped abdomen (சா.அக.).

[தோணி + வயிறு]

தோணிவரி *tōṇi-vari,* பெ. (n.) தோணியின் தலத்திலிருந்து மேல்வரும் மரப்பலகை (நெல்லை. மீனவ.); wooden rod comes up from the bottom of a boat.

[தோணி + வரி]

தோணிவலைப்பு *tōṇi-valaippu,* பெ. (n.) பெரியவலை வலைப்பு (முகவை. மீனவ.); fishing with a big size net.

[தோணி + வலைப்பு]

தோணு-தல் *tōṇu-,* 5 செ.கு.வி. (v.i.) தோன்று-தல் பார்க்க: see *tōṉṟu-*. "வேதை தோணாமல்" (இராமநா. பாலகா. 1).

[தோன்று → தோணு (கொ.வ.)]

தோணை *tōṇai,* பெ. (n.) வெள்ளைத் தொழு நோய்; white leprosy, leucoderma.

[தோல்நோய் → தொழுநோய் → தோனோய் → தோணை]

தோணோக்கம் *tōṇōkkam,* பெ. (n.) மகளிர் விளையாட்டு வகை; a game played by girls "குழலினீர் தோணோக்க மாடாமோ" (திருவாச. 15,2). 2. காதினடித்தண்டு; ear-lobe.

[தோள் + நோக்கம். தோள் → தோண்]

தோத்தி *tōtti,* பெ. (n.) விளையாட்டில் தோற்றவர் (நெல்லை.); one who is defeated in a game.

மறுவ. தோற்றாங்கொள்ளி

[தோல்வி → தோல் → தோத்தி]

தோத்தை *tōttai,* பெ. (n.) சிறங்கையளவு; small quantity - as can be held in the hollow of the hand.

மறுவ. உள்ளங் கையளவு

க. தோதே; தெ. தோதெமு

தோதகத்தி[1] *tōdagatti,* பெ. (n.) 1. நூக்கமரம் அல்லது ஈட்டி மரம்; Indian rosewood. 2. புங்கு; Indian beech (சா.அக.).

தோதகத்தி[2] *tōdagatti,* பெ. (n.) 1. வஞ்சகி; deceitful woman. 2. கற்பொழுக்கமற்றவள் (யாழ்.அக); immodest woman (செ.அக.).

தோதகம் *tōdagam,* பெ. (n.) 1. வருத்தம்; vexation, pain. "தோதகமாக வெங்கும்" (சீவக. 463). 2. வஞ்சகம்; guilt, fraud, deceit. "தோதகத்துட னென்னையோ சகுனிதன் சூதினுக் கெதிரென்றான்" (பாரத. சூது. 6). 3. சாலவித்தை; sleight of hand, jugglery. "தோதகம் பலகாட்டி" (திருவாலவா. 17). 4. கற்பொழுக்கமின்மை; immodesty, lewdness (செ.அக.).

தோதகமாடு-தல் *tōdagam -āḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. இடையூறு பண்ணுதல்; to tease, annoy, bother. 2. ஒழுக்கமற்றிருத்தல்; to be immodest, as a woman (சா.அக.).

[தோதகம் + ஆடு-.]

தோதகன் *tōdagaṉ,* பெ. (n.) 1. ஒழுக்க மற்றவன்; quarrelsome, immodest person. 2. வஞ்சகன்; deceiver. 3. கடுகடுப்புள்ளவன்; unhappy, vexed person (செ.அக.).

தோதகி *tōdagi,* பெ. (n.) சவுட்டு மண்; fuller's earth (சா.அக.).

தோதம் *tōdam,* பெ. (n.) ஆவின் கன்று; cow calf (சா.அக.).

தோதவத்தி *tōdavatti,* பெ. (n.) தூய ஆடை; clean clothes. "தோதவத்தித் தூமறையோர்" (திவ். பெரியாழ். 4, 8,1).

தோதலி-த்தல் *tōdali-*, 4 செ.கு.வி. (v.i.) *முரணுதல்;* to be perverse. "மெத்த மெத்தத் தோதலித்துப் பேசுஞ் சுணைகெட்ட மூளி" *(பஞ்ச. திருமுக. 1509).*

தோதனா *tōdanā*, பெ. (n.) *சிறுகீரை;* field spinach *(சா.அக.).*

தோதானநேரம் *tōtāna-nēram*, பெ. (n.) *ஏந்தான நேரம்;* suitable time.

[ஏது → தோது]

தோதிகம் *tōdigam*, பெ. (n.) *பேராமுட்டி;* fragrant sticky *(சா.அக.).*

தோதிபேலா *tōdipēlā*, பெ. (n.) *செடி வகை (மலை);* pink-tinged white sticky mallow *(செ.அக.).*

தோது *tōdu*, பெ. (n.) *1. தொடர்பு;* connection. *நீ சொல்வதற்குமிதற்கும் என்ன தோது?* *2. பொருத்தம்;* affinity, suitability. *பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் தோதில்லை.* *3. ஒப்பு;* equality, similitude, paralled. *அவனுக்குத் தோது ஒருவருமில்லை.* *4. போட்டி;* rivalry, dispute. *அவனோடு உனக்கென்ன தோது?* *5. நலம் வாய்ப்பு;* convenience. *அவரைச் சந்திக்க எப்பொழுது தோதுபடும்.* *6. விழுக்காடு (வீதம்);* established rate. *தோதுப்படி கொடுப்பேன்.* *7. வழி வகை;* device, means. *அந்தச் செயல் முடிய ஒரு தோது சொல் (செ.அக.).*

க. தோது; தெ. தோது

[தொது → தோது]

தோதுவாது *tōtu-vādu*, பெ. (n.) *நேரங்காலம்;* time and opportunity. *அவரிடம் தோதுவாது பார்த்துப் பேசு (நெல்லை).*

[தோது + வாது]

தோப்பணம் *tōppaṇam*, பெ. (n.) *தொப்பணம் பார்க்க;* see *toppaṇam. (திருப்புகழ். தொகுதி. 1, பக். 4, கீழ்க்குறிப்பு).*

தோப்பாடி *tōppāḍi*, பெ. (n.) *கொடியவன் (வின்.);* wicked, base person *(செ.அக.).*

தெ. த்ரோபரி

தோப்பாண்டி *tōppāṇḍi*, பெ. (n.) *சிவன் கோயில், மலர்ச்சோலையிற் பணி செய்யும் இரவலன் (நாஞ்);* saiva devotee who waters the flower-garden of a temple *(சா.அக.).*

மறுவ. பண்டாரம்

[தோப்பு + ஆண்டி]

தோப்பாதாயம் *tōppādāyam*, பெ. (n.) *தோட்ட வருவாய்;* income from a grove of trees *(செ.அக.).*

[தோப்பு + ஆதாயம்]

தோப்பாமீன் *tōppāmīṉ*, பெ. (n.) *ஒரு வகைக் கடல் மீன்;* a sea fish (catta calta).

தோப்பி[1] *tōppi*, பெ. (n.) *1. நெல்லாற் சமைத்த கள்;* beer. "பாப்புக்கடுப்பன்ன தோப்பி பருகி" *(அகநா. 348)* *2. கள் (திவா.);* toddy.

தோப்பி[2] *tōppi*, பெ. (n.) *நெல்லி;* Indian gooseberry *(சா.அக.).*

தோப்பிக்கரணம் *tōppi-k-karaṇam*, பெ. (n.) *தொப்பணம் பார்க்க;* see *toppaṇam.*

தோப்பிக்கள் *tōppi-k-kaḷ*, பெ. (n.) *தோப்பி*[1] *பார்க்க;* see *tōppi.* "தோப்பிக்கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும் போக்கருங் கவலைய" *(அகநா. 35).*

[தோப்பி + கள்]

தோப்பு *tōppu*, பெ. (n.) *சோலை (பிங்.);* tope. *தனிமரம் தோப்பாகுமா (பழ.).*

ம. தோப்பு; க., தெ., து. தோபு

[தொகுப்பு → தோப்பு]

தோப்புக்கண்டம் *tōppu-k-kaṇḍam*, பெ. (n.) *தொப்பணம் பார்க்க;* see *toppaṇam (செ.அக.).*

[தோப்பிக்கரணம் → தோப்புக்கரணம் → தோப்புகண்டம் (கொ.வ.)]

தோப்புக்கரணம் *tōppu-k-karaṇam*, பெ. (n.) *தொப்பணம் பார்க்க;* see *toppaṇam.*

தோப்புக்கரணம்போடு[1]**-தல்** *tōppu-k-karaṇam-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) *பிறர் சொன்னபடியெல்லாம் நடத்தல்;* to be submissive *(செ.அக.).* *பொண்டாட்டி தோப்புக்கரணம் போடு என்றால் எண்ணிக் கொள் என்பான் (உ.வ.).*

தோப்புக்கரணம்போடு²-தல் *tōppu-k-karaṇam pōḍu-*, 20 செகுவி. (v.i.) தொப்பணம்போடு-தல் பார்க்க; see *toppaṇam-pōḍu-*.

மறுவ. உக்கி போடுதல்

தோப்புநெல்லி *tōppu-nelli*, பெ. (n.) தோப்பி² பார்க்க; see *tōppi* (சா.அக.).

[தோப்பு + நெல்லி]

தோப்புமரம் *tōppu-maram*, பெ. (n.) தோப்புகளில் கூட்டமாகவும், பல இன, தன் இன மரங்களுடன் வளரும் மரம்; tree which grows in the tope in single or in group with other kinds of trees.

[தோப்பு + மரம்]

தோப்புறா *tōppuṟā*, பெ. (n.) நிலவரி; land tax. தோப்புறா பணத்திற்கு அண்ணே நம்மை தொந்தரை செய் தொற்றைக் காலில் நிற்க வைப்பா னண்ணே. (நாட்.பா.)

தோப்புக்குடிகள் *tōppu-k-kuḍigaḷ*, பெ. (n.) வழிபாடு, திருப்படையல் ஆகியவற்றிற்குரிய காய்கள், பழங்கள் ஆகியவற்றைக் கோயிலார் விட்ட நிலத்திலேயே பயிர் செய்து, அங்கேயே குடியிருக்கும் கோயிற் பணியாளர்; people who live in the temple land, and render service by cultivating fruit trees to yield fruits for worship.

விக்கிரம சிங்கபுரத்து மேற் புறத்தில் செய்வித்த ஆளியார் திருத்தோப்பில், பலாக்காய், வாழைக்காய், பழங்கள் உள்ளிட்டவை திருமடைப் பள்ளி பண்டாரத்துக்கு முதலாக எடுக்கவும், தோப்புக் குடிகளாக ஐம்பது ஆள் முதல் கொள்ளவும்" (தெ.க.தொ.8.கல்52).

[தோப்பு + குடிகள்]

தோப்பை *tōppai*, பெ. (n.) தொங்குதசை; anything which is flabby, as a leather bag (செ.அக.). "விரல் தோப்பையாய்க் கழன்று போயிற்று"

[தோற்பை → தோப்பை]

தோப்பைமுலை *tōppai-mulai*, பெ. (n.) சரிந்த முலை; loose breast (சா.அக.).

[தோப்பை + முலை. தோப்பை = தொங்கும் தசை]

தோபனி *tōpaṉi*, பெ. (n.) 1. மிகுபனி; excess dew. 2. உறைந்த பனி; snow, ice.

மறுவ. மூடுபனி

[தோல் + பனி]

தோம் *tōm*, பெ. (n.) 1. குற்றம்; fault, defect, blemish. "தோமறு கடிஞையும்" (சிலப். 10; 98). 2. தீமை; moral evil, vice. 3. துன்பம்; trouble. "தீச்சொல்லிறுத்தனர் தோமும்" (கல்லா. 74:24) (செ.அக.).

தோம்பு¹ *tōmbu*, பெ. (n.) சிவப்பு; redness, red dye.

தோம்பு² *tōmbu*, பெ. (n.) ஊடும், பாவும் ஒரே நிறமுடைய வண்ண வேட்டி (லுங்கி); tartan with the same colour warp and the woof (உழ.நெ.க.சொ.).

தோம்பு³ *tōmbu*, பெ. (n.) நிலவிவரக் கணக்கு (வின்.); public register of lands.

தோம்புச்சீலை *tōmbu-c-cīlai*, பெ. (n.) சிவப்புச் சீலை; red cloth.

[தோம்பு + சீலை]

தோமக்காரன் *tōma-k-kāraṉ*, பெ. (n.) மாப்பிள்ளைத் தோழன் (தமி.சொ.); bridegroom's companion.

[தோமம் + காரன்]

தோமம் *tōmam*, பெ. (n.) தடித்த நாடி; selerosis.

தோமரம் *tōmaram*, பெ. (n.) 1. தண்டாயுதம்; large club. "தோமரவலத்தர்" (பதிற்றுப். 54, 14). 2. கைவேல் (பிங்.); lance, javelin, dart. 3. வாச்சியம் (அக.நி.); drum. 4. இருப்பு உலக்கை; iron pestle.

தோய்¹ *tōy*, பெ. (n.) உவமச் சொல்; similie word.

தோய்¹-தல் *tōy*, 3 செ.குவி. (v.i.) 1. முழுகுதல்; to bathe, commonly in cold water. "மங்கையர் தோய்தலால் (கம்பரா. நீர்விளை. 19). 2. நனைதல்; to become wet, soaked. "தோயுங் கதழ் குருதி" (பு.வெ. 4:16). 3. நிலத்துப் படிதல் (வின்.); to trial, as a long garment. 4. உறைதல்; to be curdled, as milk; to be thickened, clotted, coagulated, as blood. "தோயும் வெண்டயிர்" (கம்பரா. நாட்டுப். 28). 5. செறிதல்; to be dense, crowded. "தோய்ந்த

விசும் பென்னுந் தொன்னாட்டகம்" (சீவக. 290). 6. அகப்பட்டுக் கொள்ளுதல்; to commit oneself in speaking, used in the negative. அவன் தோயாமல் பேசுகிறான்.

ம. தோயுக; க. தோய், துய், தொய்யு, தொய், தோ; தெ. தோகு, தோகு; து. தொய்புனி, தொயிபுனி, தோயிபுனி; கோத. தோய்; துட. த்விய்

[தொய் → தோய்]

தோய்²-தல் *tōy-*, 2 செ.குன்றாவி. (v.t.) 1. பொருந்துதல்; to come in contact with, reach, touch. "தாடோய் தடக்கை" (புறநா. 14). 2. அணைதல்; to unite, embrace, copulate. "நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர்" (குறள், 917). 3. முகத்தல்; take in, as water. "கருங்கலந் தோய்விலாக் காமர் பூந்துறை" (சீவக. 97). 4. கலத்தல்; to mix, blend, mingle, associate with, keep company. "தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது" (கம்பரா. சரபங்.27). 5. நட்டல்; to be in friendship with. "தோய்ந்தாருட்டோய்ந்தா ரெனப்படுதல்" (திரிகடு. 81). 6. கிட்டுதல்; to approach. "விண்டோயு மிளை கடந்து" (புவெ. 6: 16). 7. ஒத்தல்; to resemble. விசும்புதோ யுள்ளமொடு (மலைபடு. 558). 8. துவைச்சலிடுதல்; to temper by dipping in water, as heated metal (சா.அக.).

க. தோ

தோய்³-த்தல் *tōy-*, 2 செ.குன்றாவி. (v.t.) 1. நனைத்தல்; to dip, soak. 2. துவைச்சலிடுதல்; to temper, as iron. "இரும்பைக் கருமகக் கம்மியன் றோய்த்த தண்புனல்" (கம்பரா. பம்பைப். 37). 3. உறையச் செய்தல்; to thicken, curdle. "தோய்த்த தண்டயிர்" (திவ். பெருமாள். 2,4). 4. சாய மேற்றுதல்; to dye, tinge, stain, imbue. 5. ஆடை துவைத்தல்; to wash, cleanse. துணி தோய்க்கிறான்.

ம. தோய்க்குக

[துவை → தோய்]

தோய்ச்சல் *tōyccal*, பெ. (n.) 1. உறைகை; curdling as milk. 2. இரும்பைத் துவைச்ச விடுகை; tempering heated metal.

[தோய் → தோய்ச்சல்]

தோய்தலை *tōy-talai*, பெ. (n.) பொடுதலை; creeping vervain (சா.அக.).

தோய்ந்தார் *tōyndār*, பெ. (n.) நட்பினர்; friends. "தோய்ந்தாருட் டோய்ந்தா ரெனப் படுதல்" (திரிகடு. 81).

[தோய் → தோய்ந்தார்]

தோய்ந்துபோ-தல் *tōyndu-pō-*, 8 செ.கு.வி. (v.i.) உறைந்து போகுதல்; to coagulate (சா.அக.).

[தோய்ந்து + போ-.]

தோய்ந்தூட்டு-தல் *tōyndūṭṭu-*, 12 செ.குன்றாவி. (v.t.) தண்ணீர் அல்லது எண்ணெயில் சுவறும்படி அடிக்கடி நனைத்தல்; to dip frequently in water juice or oil (சா.அக.).

[தோய்ந்து + ஊட்டு-.]

தோய்ப்பன் *tōyppaṉ*, பெ. (n.) ஒரு வகை இனிப்புப் பணியாரம்; a kind of sweet pastry ball (செ.அக.).

தோய்ப்பாடி *tōy-p-pāḍi*, பெ. (n.) தோப்பாடி பார்க்க; see *tō-p-paḍi*. "தோய்ப்பாடி கூனியும்" (இராமநா. அயோத். 4).

தெ. த்ரோபரி

[தோப்பாடி → தோய்ப்பாடி]

தோய்ப்பான் *tōyppāṉ*, பெ. (n.) பணியாரமா; mixed flour for making cakes (செ.அக.).

தோய்ப்பு *tōyppu*, பெ. (n.) தோய்ச்சல் பார்க்க; see *tōyccal* (செ.அக.).

[தோய் → தோய்ப்பு]

தோய்பனி *tōy-paṉi*, பெ. (n.) மிகுபனி; heavy dew(செ.அக.).

[தோய் + பனி. தோய் = செறிந்த]

தோய்பிழி *tōy-piḻi*, பெ. (n.) செறிந்த மது; rich wine.

[தோய் + பிழி. பிழி = சாறு, நறவு, கள்]

தோய்வு¹ *tōyvu*, பெ. (n.) 1. ஏற்றபடி கலத்தல்; mixing or combining in due proportions. 2. கலப்பு; mixture, the act of mixing. 3. எண்ணெய் தேய்த்துக் கொள்ளாது

குளித்தல்; ordinary bath without anoiting oil (சா.அக.).

[தோய் → தோய்வு]

தோய்வு² *tōyvu,* பெ. (n.) தோயல்; unite (கழ.தமி.அக.).

தோய்வுறு-த்தல் *tōyvuṟu-,* 4 செ.குன்றாவி. (v.t.) முழுமையான, ஒரே சீரான ஊடுபரவல் ஏற்படும் வரை எஃகை ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் வைத்திருத்தல்; to soake iron in a particular heat.

[தோய் → தோய்வுறு]

தோயக்கல-த்தல் *tōya-k-kala-,* 3 செ.குன்றாவி. (v.t.) நனையும்படி ஊற்றிக் கலத்தல்; to mix after fully wetting (சா.அக.).

[தோய்வு + கல-.]

தோயடம் *tōyaḍam,* பெ. (n.) சடாமாஞ்சி; Indian spilenand (சா.அக.)

தோயதி *tōyadi,* பெ. (n.) கடல்; sea (செ.அக.).

தோயப்பகை *tōya-p-pagai,* பெ. (n.) நீர் உடம்புக்கு ஒவ்வாமை; disagreeableness of water of a plce to one's health due to climate difference from the native one (சா.அக.).

தோயப்பண்ணு-தல் *tōya-p-paṇṇu-,* 12 செ.குன்றாவி. (v.t.) நீரில் மூழ்கும்படி செய்தல்; to immerse.

[தோய் + பண்ணு-.]

தோயப்பம் *tōyappam,* பெ. (n.) தோசை (வின்.); rice cake (செ.அக.).

[தோய் → தோயை + அப்பம்.]

தோயபாணம் *tōyapāṇam,* பெ. (n.) பொடுதலை (தைலவ. தைல.) பார்க்க; see *poḍutalai* (செ.அக.).

தோயம் *tōyam,* பெ. (n.) 1. நீர் (பிங்.); water. "தோய மெதிர்வழங்கு கொண்மூ" (பு.வெ. 8:28). 2. கடல் (பிங்.); sea. "தோயமுஞ் சுவறப் பொரும் வேலா" (திருப்பு. 101).

ம. தோய

[தொள் → தோள் → தோய் → தோயம். ஒ.நோ. புள் → பொள் → பொய் → பொய்கை (மு.தா. 268)]

த. தோயம் → Skt. tōyā

தோயல் *tōyal,* பெ. (n.) 1. இரும்பைக் காயச்சித் தோய்த்தல்; dipping of a heated red hot iron or instrument into water. 2. குளித்தல்; bathing commonly in cold water (சா.அக.).

[தோய் → தோயல்]

தோயல்வாய்த்தல் *tōyal-vāittal,* பெ. (n.) நேரம் வாய்க்கை (யாழ்ப்.); occuring of a good opportunity.

[தோயல் + வாய்த்தல்]

தோயாஞ்சுபத்திரம் *tōyañju-pattiram,* பெ. (n.) காட்டாத்தி; holy mountain (சா.அக.).

தோயாப்பூ *tōyā-p-pū,* பெ. (n.) அகவை யடைந்தும் பூப்படையாத பெண்; woman not attained puberty though aged enough.

[தோயா + பூ. 'தோயா' - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்]

தோயாப்பூப்பு *tōyā-p-pūppu,* பெ. (n.) பூப்படையாமை; not matured (சா.அக.).

[தோயா + பூப்பு. 'தோயா' ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்]

தோர்-த்தல் *tōr-,* 4 செ.கு.வி. (v.i) தோல் பார்க்க; see *tōl.* "தோராத தனிவீரன் தொழுத கோயில்" (தேசிகப் பிரபந்தம்).

ம. தோல்க; க. சோல்

[தோல் (தோல்வி) → தோர்]

தோர்த்தண்டன் *tōr-t-taṇḍaṉ,* பெ. (n.) திண்டோளன் (கொண்டல்விடு.); person strong in his arm (செ.அக.).

[தோர் + தண்டன்

தோள் → தோர்]

தோர்ப்பாடி *tōr-p-pāḍi,* பெ. (n.) தன்மான மற்றவன் (இ.வ.); a shameless loafer.

[தோப்பாடி → தோர்ப்பாடி]

தோர்மூலம் *tōr-mūlam,* பெ. (n.) அக்குள்; arm pit (சா.அக.).

[தோள் + மூலம்]

தோர்வி *tōrvi,* பெ. (n.) பின்னிடல்; flinch.

[தோல்வி → தோர்வி (கொ.வ.)]

தோர்வை *tōrvai,* பெ. (n.) தோல்வி (வின்.); defeat.

[தோல்வி → தோர்வை (கொ.வ.)]

தோரக்கால் *tōra-k-kāl,* பெ. (n.) வளைவைத் தாங்கும் தூண்; pillar bears the roof.

தோரணக்கந்து *tōraṇa-k-kandu,* பெ. (n.) தோரணகம்பம் பார்க்க; see *toraṇa-kambam.* "தோரணக் கந்தின் றாண் முதற் பொருந்தி" (பெருங்.உஞ்சைக். 47:6).

[தோரணம் + கந்து]

தோரணக்கல் *tōraṇa-k-kal,* பெ. (n.) நீராழமறியுங் கல் (வின்.); stone pillar erected in a large tank to show the depth of water (செ.அக.).

[தோரணம் + கல்]

தோரணக்கால் *tōraṇa-k-kāl,* பெ. (n.) 1. தோரணகம்பம் பார்க்க; see *tōraṇa-kambam.* 2. ஒப்பனைத் தொங்கல் கட்டுங்கால்; pole supporting ornamental arches of twigs or leaves. 3. திருவாசிக்கால்; pillar of the aureola over the idol. "தேவரையும் ... கவித்த தோரணக் காலிரண்டும்" (S.I.I.ii, 179).

[தோரணம் + கால்]

தோரணகம்பம் *tōraṇa-kambam,* பெ. (n.) கோயில் முதலியவற்றின் முன்வாயிலில் ஒப்பனை வளைவைத் தாங்கி நிற்கும் கம்பம்; posts at the entrance, as of a temple surmounted by an arch. "தோரண கம்பத்தெஞ் ஞான்றும் வீற்றிருக்கும் பெருமானை" (தணிகைப்பு. காப்பு.2). 2. தோரணக்கால்,2 பார்க்க; see *tōraṇa-k-kāl.*

[தோரணம் + கம்பம்]

தோரணகாணிக்கை *tōṟaṇa-kāṇikkai,* பெ. (n.) வீதிகளில் தோரணமிட்டு, ஒப்பனை செய்தற்கு, ஊரவையார் பெறும் வரி; tax collected by the village committee for festoons of leaves, and flowers suspended across streets and entrances.

[தோரணம் + காணிக்கை]

தோரணதீபம் *tōraṇa-tībam,* பெ. (n.) தோரணவிளக்கு பார்க்க; see *tōraṇa-viḷakku.*

தோரணப்பலகை *tōraṇa-p-palagai,* பெ. (n.) குத்துக் கல்லில் அல்லது குத்துக் காலில் பொருத்தப்பட்டிருக்கும் மரப்பலகை; a wooden rod attached to the, up right stand of a frame.

[தோரணம் + பலகை]

தோரணம்[1] *tōraṇam,* பெ. (n.) 1. தெருவிற் குறுக்காகக் கட்டும் ஒப்பனைத் தொங்கல்; festoons of leaves and flowers suspended across streets and entrances an auspicious occasions. "புரமெங்குந் தோரணநாட்டக் கனாக்கண்டேன்" (திவ். நாய்ச். 6:1). 2. ஒப்பனை வளைவுள்ள வாயில்; ornamented gateway surmounted with an arch. "தோரணத்தி னும்பரிருந்த தோர் நீதியானை" (கம்பரா. அட்ச. 21). 3. நீராட்டுமிடத்திற் கட்டும் வரம்பு; mound raised near a bathing place for a mark. 4. துலை தாங்கி; beam of a balance (செ.அக.).

ம. தோரணம்

[துருவு → தூர் → தோர் → தோரணம். தூர்தல் = புகுதல், துருவுதல், குறுக்காகச் செல்லுதல்]

தோரணம்[2] *tōṟaṇam,* பெ. (n.) 1. குரங்கு (பிங்.); monkey. 2. போக்குவரத்திற்குரிய வண்டி (யாழ்.அக.); conveyance (செ.அக.).

தோரணம்[3] *tōṟaṇam,* பெ. (n.) முன்காலை வைத்த சுவட்டிடத்தே பின்காலை வைத்து நடக்கும் யானை நடைத்தோரணை; gait of an elephant in which it places its hind foot in the track of its forefoot. "முன்ன ரூன்றிய காற்குறி தன்னிற் பின்னர்ப் பதமிடுவது தோரண மென்ப" (பன்னிருபா. 276).

தோரணரேகை *tōraṇa-rēgai,* பெ. (n.) தோரணவரிகை பார்க்க; see *tōraṇa-varigai.*

தோரணவரிகை *tōraṇa-varigai,* பெ. (n.) கையிற் காணப்படுவதொரு வரைவகை; a kind of mark in the palm (செ.அக.).

[தோரணம் + ரேகை]

தோரணவாசல் *tōraṇa-vāšal,* பெ. (n.) தோரணம்[1],2 பார்க்க; see *tōraṇam*[1]*-2.*

[தோரணம் + வாசல்]

தோரணவாயில் *tōraṇa-vāyil,* பெ. (n.) தோரணம்[1], 2 பார்க்க ; see *tōraṇam*[1],2. *"கொடித் தோன்றுந் தோரணவாயில் காப்பானே" (திவ். திருப்பா. 16).*

[தோரணம் + வாயில்]

தோரணவிளக்கு *tōraṇa-viḷakku,* பெ. (n.) தோரணமாகப் பந்தங்களைக் கட்டி திருவிழாக் காலங்களில் தூக்கிச் செல்லும் தீப்பந்தம்; rod carried overhead, supporting a row of lights to grace procession (செ.அக.).

[தோரணம் + விளக்கு]

தோரணவீதி *tōraṇa-vīdi,* பெ. (n.) தோரணங்களால் ஒப்பனை செய்யப்பட்ட தெரு; streets decorated with festoons. "தோரண வீதியுந் தோமறு கோட்டியும்" *(மணிமே. 1:43).*

[தோரணம் + வீதி]

தோரணன் *tōraṇaṉ,* பெ. (n.) யானைப் பாகன் (நாமதீப. 167); elephant's driver (செ.அக.).

தோரணி[1] *tōraṇi,* பெ. (n.) தோரணை (யாழ்.அக.) பார்க்க; see *tōraṇai.*

தோரணி[2] *tōraṇi,* பெ. (n.) ஓர் எடுத்துக்காட்டு வார்ப்பு; pattern.

[தூர் → தோர் → தோரணி. தூர்தல் - புகுதல்]

முன் மாதிரியாகக் கொண்டு ஒரே மாதிரியான பொருட்களை வார்ப்படம் மூலம் செய்வதற்கான படிவம்

தோரணிக்கம் *tōraṇikkam,* பெ. (n.) தோரணை பார்க்க; see *tōraṇai.*

தோரணிப்பட்டறை *tōraṇi-p-paṭṭaṟai,* பெ. (n.) வார்ப்படங்கள் உண்டாக்கப் பயன் படுத்துவதற்கான மரத்தோரணிகளை உருவாக்கும் பட்டறை; pattern shop.

[தோரணி + பட்டறை]

தோரணிவார்ப்படம் *tōraṇivār-p-paḍam,* பெ. (n.) வார்ப்படத் தொழிலில் பல்வேறு மாதிரிகளை அல்லது உருவரைகளை உண்டாக்கப் பயன்படும் வார்ப்படம்; pattern making.

[தோரணி + வார்ப்படம்]

தோரணை[1] *tōraṇai,* பெ. (n.) 1. துடித்தல்; palpitate. 2. நடை; style (கழ.அக.).

தோரணை[2] *tōraṇai,* பெ. (n.) முறை; order, arrangements, method, plan as of discourse. அவன் பேசுகின்ற தோரணையே சரியில்லை (உ.வ.).

[தோர் → தோரணை = கோவை, கோவையாகச் சொல்லும் முறை]

தோரம் *tōram,* பெ. (n.) இரண்டு கையும் பதாகையாக்கி அகம்புறமொன்றி முன் தாழ்ந்து நிற்கும் இணைக்கை வகை (சிலப். 3: 18, உரை); a gesture with both hands in their padāgai pose, in which they are stretched out and lowered a little in the front (செ.அக.).

தோரமல்லி *tōra-malli,* பெ. (n.) ஒருவகை மணி; tourmaline (திருவாலவா. 25, 22. அரும்.).

தோராமல்லி *tōrā-malli,* பெ. (n.) தோரமல்லி பார்க்க; see *tōra-malli.*

[தோரமல்லி → தோராமல்லி]

தோராயம் *tōrāyam,* பெ. (n.) ஏறத்தாழ; approximate, estimate, guess. தோராயமாக இந்த நகை எவ்வளவு இருக்கும் (உ.வ.).

தோராவல்லி *tōrā-valli,* பெ. (n.) தோரமல்லி பார்க்க; see *tōra-malli.* கனகதோராவல்லி' (திருவாலவா. 25, 22).

[தோரமல்லி → தோராமல்லி → தோராவல்லி]

தோராவழக்கு *tōrā-vaḻakku,* பெ. (n.) ஓயாத வழக்கு; endless wrangle. "தோரா வழக்கிட்டால் வகை வாராவழக் கிடுவேன்" *(தனிப்பா. 1, 271:11).*

[(தோல்வி) தோல் → தோர் + ஆ + வழக்கு. 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தோரி *tōri,* பெ. (n.) சோறு (அக.நி.); boiled rice.

தோரியம் *tōriyam,* பெ. (n.) 1. கூத்து; dancing. 2. இசைக்கருவி; musical instrument (செ.அக.).

தோரியமகள் *tōriya-magaḷ*, பெ. (n.) 1. ஆடி முதிர்ந்த பெண்; expert dancing girl. "தொன்னெறி யியற்கைத் . . . தோரிய மகளிரும்" *(சிலப். 3:134).* 2. பின்பாட்டுப் பாடுவோர்; playback singers. வாரம் பாடும் தோரிய மகளிரும் *(சிலப். 14:15).*

[தோரியம் + மகள்]

தோரை *tōrai*, பெ. (n.) 1. ஒருவகை மலைநெல்; a kind of paddy raised in hilly tracts. "கோட்டின் வித்திய குறுங்கதிர்த் தோரை" *(மதுரைக். 287).* 2. மூங்கிலரிசி (திவா.); bamboo seed, as resembling rice. 3. கைவரை (சூடா.); lines on the palm and the fingers of the hand. 4. மயிற்பீலி விசிறி; bunch of peacock's feathers, used as a fan. "கவரியினிரை தோரை" *(கோயிற்பு. திருவிழா. 29).* 5. அணிவடம்; strings of jewels. "பொற்றோரை மின்ன" *(சீவக. 2132).* 6. நான்கு விரற்கிடை அளவுள்ள நீட்டலளவை வகை; a standard linear measure, of four fingers, breath. இரண்டு தோரை உசரத்து . . . பத்மம் *(S.I.I.ii, 135).* 7. மங்கல நிறம்; pale reddish colour. 8. செங்காய் கொண்ட பனை வகை (யாழ்ப்.); a palmyra tree producing reddish fruit. 9. குருதி (வின்.); blood (செஅக.).

தெ. தோர

[துவர் → தோரை]

தோரையம் *tōraiyam*, பெ. (n.) புல்லாமணக்கு; creeping castor plant.

தோல்[1]**-தல் (தோற்றல்)** *tōl-*, 13 செ.கு.வி. (v.i.) 1. தோல்வியுறுதல்; to be defeated, discomfited, vanquished, as in battle, game, dispute etc., "தோற்பதறியார்" *(நாலடி. 313).* 2. ஒப்பிற்றாழ்தல்; to fail in comparison. "பரவலருங் கொடைக்கு . . நெடும்பண்பு தோற்ற . . : கற்பகமும்" *(கம்பரா. சடாயுகாண். 21).* 3. இணங்குதல்; to yield, flinch, give way voluntarily.

தோல்[2]**-தல் (தோற்றல்)** *tōl-*, 12 செகுன்றாவி. (v.t.) இழத்தல்; to lose. "தோற்றோமடநெஞ்ச மெம்பெருமான் நாரணற்கு" *(திவ். திருவாய். 2. 1:7).*

ம. தோல்க்குக; க. சோல், சோலு; து. தோல்புனி, சோபுனி, தோலுனி; குட., கோத. சோல்; துட. த்வில்; பட. சோலு

தோல்[3] *tōl*, பெ. (n.) 1. தோல்வி (பிங்.); defeat, discomfiture. 2. அல்லூழ் (வின்.); misfortune, ill-luck (செஅக.).

தோல்[4] *tōl*, பெ. (n.) 1. தோல்; skin, leather, hide. "தோற்பையு ணின்று" *(நாலடி., 26).* 2. புறணி; bark, rind, peel, scales or coats of onion and other bulbous roots. தோலிருக்கச் சுளைவிழுங்கி *(பழ.).* 3. விதையின் மேற்றோல்; pod, husk of seeds. 4. உடம்பு *(குறள், 1043, உரை);* body. 5. தோலினாலியன்ற கேடகம்; leathern buckler, shield. "தோலின் பெருக்கமும்" *(தொல்.பொருள். 67).* 6. துருத்தி; bellows. "மென்றோன் மிதியுலைக் கொல்லன்" *(பெரும்பாண். 206).* 7. சேணம், பக்கரை; saddle. "தோறுமிபு வைந்நுனைப் பகழி மூழ்கலின்" *(முல்லைப். 72).* 8. மூங்கில் (மலை); bamboo.

ம. தோல், தோலு; க. தோல், தொவன்; தெ., பட. தோலு; து. தோலிகெ; நா., கொலா., பர். தோல்; குட. தொலி; கோண். தோல்; குவி. தோலு, தோலூ

தோல்[4] *tōl*, பெ. (n.) 1. பழையதொரு பொருண்மேல் மெல்லென்ற சொல்லான் அறம் பொருளின்பம் வீடு என்ற விழுமிய பொருள் பயப்பச் செய்யப்படும் நூல்; poem narrating an ancient story and inculcating the purusarthas in a felicitous diction. "இழுமென் மொழியான் விழுமியது நுவலினும் பரந்த மொழியான் அடிநிமிர்ந்து ஒழுகினும் தோலென மொழிப தொன்மொழிப் புலவர்" *(தொல். பொருள். 551).* 2. அழகு (பிங்.); beauty. 3. யானை; elephant. "புரைத்தோல் வரைப்பின்" (மலைபடு. 88). 4. புகழ்; fame. "தொல்வரவுந் தோலுங் கெடுக்கும்" *(குறள், 1043).* 5. பேச்சு (சூடா.); speech, utterance.

[தொல் → தோல் = பழைமை, பழம் பொருள் பற்றிய நூல், பழைமையான புகழ் (மு.தா. 274)]

தோல்கச்சை *tōl-kaccai*, பெ. (n.) வார்ப்படத் தொழிலில் வார்ப்படங்களின் வலிமையை அதிகரிக்கவும், வார்ப்பட மணலில் கூர் முனைகளை நீக்கவும் பயன்படும் தோலினாலான பட்டை; leather filler.

[தோல் [4] *+ கச்சை]*

தோல்காய்ப்பு *tōl-kāyppu,* பெ. (n.) சதை காய்த்துக் கெட்டிப்படுதல்; any thickened or hardened part on the surface of the human body or animal (சாஅக.).

[தோல் + காய்ப்பு]

தோல்கீழ்ப்பீச்சி *tōl-kīḻ-p-pīcci,* பெ. (n.) உடம்புத் தோலின் கீழாகப் பீச்சுவதற்குப் பயன்படும் கருவி; a syringe for injecting substances beneath the skin (சாஅக.).

[தோல் + கீழ் + பீச்சி]

தோல்சிலிர்-த்தல் *tōl-śilir-,* 4 செ.கு.வி. (v.i.) நீண்ட நேரம் தண்ணீரிற் கிடப்பதால் உடம்பின் சதை சுருங்கி வெளுத்தல்; to erect of the papillae of the skin as from remaining in water for a long time (சாஅக.).

[தோல் + சிலிர்-.]

தோல்சீவல் *tōl-śīval,* பெ. (n.) மேற்றோல் கழித்தல்; scarpping of or removing the skin by rubbing (சாஅக.)

[தோல் + சீவல்]

தோல்சுத்தி *tōlśutti,* பெ. (n.) பதனிடப்படாத தோல் கொண்டையையுடைய கைச்சுத்தி; raw hide hammer.

[தோல் + சுத்தி]

மாழை உறுப்புகளில் இச்சுத்தியைப் பயன்படுத்தும் போது சிறல்கள் ஏற்படாமல் இருக்கும் (அறி.கலை.களஞ்).

தோல்தனம் *tōltaṉam,* பெ. (n.) அறிவுக் குறைவு (யாழ்ப்.); imprudence (செஅக.).

[தோல்[3] + தனம். தோல்வியுறுதற்குக் காரணமாதலால் அறிவுக்குறைவு தோல்தனம் எனப்பட்டது]

தோல்தீய்ச்சி *tōl-tīycci,* பெ. (n.) தோலைச் சுடுதல்; burning the skin with caustic (சாஅக.).

[தோல் + தீய்ச்சி]

தோல்நாய் *tōl-nāy,* பெ. (n.) வேட்டை நாய் வகை (யாழ்.அக.); hunting dog, greyhound (செஅக.).

[தோல் + நாய்]

தோல்நோய் *tōl-nōy,* பெ. (n.) 1. தோல் தொடர்பான நோய்; skin disease in general. 2. சொறி, சிரங்கு, புண், தேமல், படை, கொப்புளம், புற்று முதலிய நோய்கள்; pruritus itch, sore macula, ringworm boil, ulcer, cancer etc., 3. முறையற்ற உடலுறவு கொள்வதால் ஏற்படும் நோய்; skin affection arising from veneral and syphlitic causes (சாஅக.).

[தோல் + நோய்]

தோல்நோய்க்காரம் *tōl-nōy-k-kāram,* பெ. (n.) உணர்ச்சி உண்டாகும்படி தோல் நோயில் மேற்பூச்சாக தடவும் மருந்து; any stimulant application in skin diseases (செஅக.).

[தோல் + நோய் + காரம்]

தோல்பட்டினச்சுட்டான் *tōl-paṭṭiṉa-c-cuṭṭāṉ,* பெ. (n.) தோல் போலும் மெல்லியதாகக் காணப்படும் மீன் (தஞ்சை.மீனவ.); a fish which has a soft skin.

[தோல் + பட்டினச்சுட்டான்]

இம்மீனைப் பட்டினவர் சுட்டுத் தின்பர்.

தோல்பல்லிணை *tōlpalliṇai,* பெ. (n.) இறுக்கமாக அழுத்தப்பட்டுப் பதனிடப் படாத தோல் வட்டுக்களினாலான ஓசை எழுப்பாத பல்லிணை; rawhide gears. (அறி.கலை.களஞ்)

[தோல் + பல் + இணை]

தோல்பாரை *tōlpārai,* பெ. (n.) மீன் வகை; butter fish.

[தோல் + பாரை]

தோல்பாறை *tōlpāṟai,* பெ. (n.) ஒரு வகைப் பாறை மீன்; kind of pāṟai fish. உடம்பு சப்பையாகவும் தோல் கனமாகவும் இருக்கும்.

[தோல் + பாறை]



தோல்புரை-தல் *tōlpurai-,* 3 செ.குன்றாவி. (v.t.) *தோலால் தைத்தல்;* to sew or fasten with thongs *(செ.அக.).*

[தோல் + புரை-.]

தோல்புளி *tōl-puli,* பெ. (n.) *சதைக் குறைந்த புளி;* tamarind with very little pulp *(சா.அக.).*

[தோல் + புளி]

தோல்போக்கு-தல் *tōl-pōkku-,* 5 செ.குன்றாவி. (v.t.) *தோலுரி-த்தல் பார்க்க;* see *tōl-uri-* *(சா.அக.).*

[தோல் + போக்கு-.]

தோல்போலாகு-தல் *tōlpōl-āgu-,* 5 செ.கு.வி. (v.i.) *இளைத்தல்;* to emaciate *(சா.அக.).*

[தோல் + போல் + ஆகு-.]

தோல்மட்டம் *tōl-mattam,* பெ. (n.) *தோல் ஆழம்;* skin deep *(சா.அக.).*

[தோல் + மட்டம்]

தோல்மாடு[1] *tōl-mādu,* பெ. (n.) *சல்லிக்கட்டு மாடு;* baiting bull *(செ.அக.).*

[தோல் + மாடு]

தோல்மாடு[2] *tōlmādu,* பெ. (n.) *எலும்பும் தோலுமாய் இருக்கும் மாடு;* emaciated cattles.

மறுவ. தொத்தல் மாடு

[தோல் + மாடு]

தோல்முட்டை *tōl-muttai,* பெ. (n.) 1. *கருவில்லாத முட்டை;* empty shell of egg. 2. தோடு கடினமாதற்கு முன்பு இடப்பட்ட முட்டை (வின்.); egg laid before the shell is hard *(செ.அக.).*

ம. தோல்முட்ட; பட. தோலுமொட்டெ

[தோல் + முட்டை]

தோல்மூடு-தல் *tōl-mūdu-,* 5 செ.குவி. (v.i.) *பக்கு கட்டுதல்;* to form a coat of skin over a sore or healing as scab *(சா.அக.).*

[தோல் + மூடு-.]

தோல்மெருகு *tōl-merugu,* பெ. (n.) *தோல் பதனிடும் முறைகளுளொன்று;* ooze leather *(அறி.கலை.களஞ்.).*

[தோல் + மெருகு]

தோலுக்கு வெல்வெட்டு போன்ற மென்மையான தன்மை அளிப்பதற்கு இம்முறை பயன்படும்

தோல்மேலேறுதல் *tōl-mēlērudal,* பெ. (n.) *குழந்தை யாண் குறியின் நுனித்தோல் மேலேயேறிக் கீழிறங்காமற் போகும் நிலை;* paraphimosis, condition of the private part in male children in which the foreskin is permanantly retracted *(செ.அக.).*

[தோல் + மேல் + ஏறுதல்]

தோல்வழலுகை *tōlvalalugai,* பெ. (n.) *தோல் நோய் வகை;* abrasian, susperficial excriation with loss of substance in the form of small shreds *(செ.அக.).*

தோல்வறட்சி *tōlvaratci,* பெ. (n.) 1. *உடம்பின் தோல் பசையற்று உலருதல்;* abnormal dryness of the skin. 2. *சொறியால் மேற்றோல் சொரசொரத்து வறண்டு காணும் ஒரு நோய்;* a disease marked by roughness and dryness of the skin especially in icththyosis *(செ.அக.).*

[தோல் + வறட்சி]

தோல்வி *tōlvi,* பெ. (n.) *வெற்றியின்மை;* discomfiture, loss, defeat. *"சால்பிற்குக் கட்டளையாதெனில் தோல்வி துலையல்லார் கண்ணுங் கொளல்" (குறள், 986).*

ம. தோன்ம, தோல்ம, தோல்வி

[துல் → தொல் → தொலை. தொலைதல் = தளர்தல், தோற்றல். தொலை → தொலைவு = தோல்வி. தொல் → தோல் → தோல்வி (மு.தா. 286)]

தோல்வித்தானம் *tōlvi-t-tānam,* பெ. (n.) தோல்வியுறுதற் கேதுவாகிய நிலை *(தருக்கசங். 36, நீலகண். 215);* weak point in an argument or fault in a syllogism *(செ.அக.).*

[தோல்வி + தானம்]

தோல்வியாதி *tōl-viyādi,* பெ. (n.) தோல்நோய் *பார்க்க;* see *tōl-nōy (சா.அக.).*

[தோல் + வியாதி]

Skt. vyādi → த. வியாதி

தோல்விலாங்கு *tōl-vilāṅgu,* பெ. (n.) விலாங்கு மீன் வகையுள் ஒன்று; kind of eel fish (மீனவ.).

[தோல் + விலாங்கு]

தோல்வினைஞர் *tōl-viṉaiñar,* பெ. (n.) தோல் வினைமாக்கள் (பிங்.) பார்க்க; see *tōl-viṉai-mākkaḷ* (செ.அக.).

[தோல் + வினைஞர்]

தோல்வினைமாக்கள் *tōl-viṉai-mākkaḷ,* பெ. (n.) செம்மார்; workers in leather (செ.அக.).

[தோல் + வினை + மாக்கள்]

தோல்வீக்கம் *tōl-vīkkam,* பெ. (n.) ஆண்குறியின் நுனித்தோல் மடங்கு வதாலுண்டாகும் வீக்கம்; swelling of the penis due to paraphimsos (செ.அக.).

[தோல் + வீக்கம்]

தோல்வு *tōlvu,* பெ. (n.) தோல்வி (பிங்.) பார்க்க; see *tōlvi.* "சாலங்காயனைத் தோல்வினையேற்றி" (பெருங்நரவாண. 7, 103).

[தோல்வி → தோல்வு]

தோல்வேலைப்பாடு *tōl-vēlai-p-pāḍu,* பெ. (n.) கருவிகளைக் கொண்டு தோலில் செய்யப் படும் ஒப்பனை வேலைப்பாடு; leather craft.

[தோல் + வேலைப்பாடு]

தோல்வை-த்தல் *tōl-vai-,* 4 செ.குன்றாவி. (v.i.) ஆறின புண்ணில் புதுத்தோல் உண்டாதல் (யாழ்ப்.); to form a new skin as a healing sore.

ம. தோலுவய்க்குக

[தோல் + வை-.]

தோலடிப்பறவை *tōlaḍi-p-paṟavai,* பெ. (n.) தோலாலிணைக்கப்பட்ட காலுள்ள பறவை (இக்.வ.); web footed bird (செ.அக.)

[தோல் + அடி + பறவை]

தோலம் *tōlam,* பெ. (n.) 1. அசைவு; movement. 2. ஒரு நிறை; a scale.

தோலறச்சீவல் *tōlaṟa-c-cīval,* பெ. (n.) மேற்றோல் முழுவதும் நீங்கும்படி கத்தியால் சீவுதல்; removing the outer skin as in the purification of dry ginger or of a fruit with a knife (சா.அக.).

[தோல் + அற + சீவல்]

தோலன் *tōlaṉ,* பெ. (n.) எளியவன் (வின்.); mean, insignificant man (செ.அக.).

[தோல் → தோலன். தோல் = மேற்றோல், மெலிது, எளிது, எளியவன்]

தோலன்செம்மீன் *tōlaṉ-šemmīṉ,* பெ. (n.) தோல் போலும் மென்மையாக இருக்கும் ஒரு சிவந்த கடல் மீன் (தஞ்சை. மீனவ.); red fish which has soft skin.

[தோலன் + செம்மீன்]

தோலனம் *tōlaṉam,* பெ. (n.) நிறுக்கை (யாழ்.அக.); weighing (செ.அக.).

[துலை → தோல் → தோலம் → தோலனம்]

தோலா *tōlā,* பெ. (n.) 1. கொக்குமீன்; stork pipe-long nosed fish. 2. கோனாய்; Indian wolf. 3. வெட்டுக்கிளி; locust. 4. ஐந்து தோலா கொண்ட சிற்றாழாக்கு; small half ollock. 5. 150 குன்றிமணி எடை; weight 180 grams. 6. ஓர் உருபா எடை; one tola weight. 7. $3^{1}/_{3}$ வராகனெடை; weight consisting of $3^{1}/_{3}$ pagoda weight (சா.அக.).

தோலாசை *tōlāšai,* பெ. (n.) பெண் மேலிச்சை; desire or craving for woman (சா.அக.).

[தோல் + ஆசை. தோல் = மேற்றோல், அழகு, பெண்ணழகு]

தோலாட்டம் *tōl-āṭṭam,* பெ. (n.) பொருட்டின்மை (யாழ்.அக.); meanness (செ.அக.).

[தோல்[3] + ஆட்டம்]

தோல் = மேற்றோல், மெலிது, எளிது.

ஆட்டம் = உவமவுருபு எ-டு. மலையாட்டம் குவிந்திருக்கிறது.

அண் - அட்டு = நெருங்கியிருத்தல், ஒத்திருத்தல், ஒத்திருக்கும் தன்மை. அட்டு - ஆட்டு - ஆட்டம் = போன்றிருத்தல்

தோலாண்டி *tōlāṇḍi,* பெ. (n.) தோலன் (வின்.) பார்க்க; see *tōlaṉ* (செ.அக.).

[தோல் + ஆண்டி]

தோலாந்திரக்கிரியை *tōlāndira-k-kiriyai,* பெ. (n.) தோலாந்திரங்கட்டல் பார்க்க; see *tōlāndiraṅ-kaṭṭal* (சா.அக.).

தோலாந்திரங்கட்டல் *tōlāndiran-kattal,* பெ. (n.) *கிழிக்கட்டி எரித்தல்;* applying heat to the bundle, of medicine consisting of small flowers, flours, minute seeds, and other substances floating in water for the purpose of extracting the essence *(சாஅக.).*

தோலாந்துருத்தி *tōlānturutti,* பெ. (n.) ஒன்றுக்கும் உதவாமல் காற்றடைத்த தோல் பையாக மூச்சுவிட்டுக் கொண்டிருப்பவன்; useless people, who respire like a air balloon.

[தோலா(லான) + துருத்தி]

தோலாநாவினர் *tōlānāviṉar,* பெ. (n.) நாவன்மையுடையார்; orator, eloquent speaker, as tongue-doughty *(செஅக.).*

[தோல் + ஆ + நாவினர். தோல் + ஆ + தோல்வியுறாத நாவினர் = சொல்வளம் உடையவர். 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தோலாமை *tōlāmai,* பெ. (n.) ஈடழியாமை; keep the fitness.

[தோல் → தோலாமை]

தோலாமொழித்தேவர் *tōlā-moḻi-t-tēvar,* பெ. (n.) சூளாமணி இயற்றிய சமணவாசிரியர்; the jaina author of Cūlāmaṇi *(செஅக.).*

தோலாயந்திரம் *tōlāyandiram,* பெ. (n.) மருந்துகளின் சத்து இறங்கும்படி அவற்றை ஒரு துணியில் முடிந்து எரிக்கும் ஏனத்திற்குள் தொங்க விடும்படி அமைக்கப்பட்ட எந்திரம்; an apparatus employed for purposes of obtained the soluble consitutents of a drug by the descent or suspension of a solvent through it *(சாஅக.).*

தோலாயா *tōlāyā,* பெ. (n.) இலவு (மலை); red flowered silk cotton *(செஅக.).*

தோலாவழக்கு *tōlā-vaḻakku,* பெ. (n.) *முடிவுறாப் பேச்சு;* never-ending dispute *(செஅக.).*

மறுவ. தோரா வழக்கு, தீரா வழக்கு

[தோல் + ஆ + வழக்கு]

தோலாள் *tōlāḷ,* பெ. (n.) பயன்பாடிலாள் (வின்.); good-for nothing woman *(செஅக.).*

[தோல் - தோலாள். தோல் = மீந்தோல், உமி போன்று பயனற்றது. அதுபோல் பயனற்றவள். தோற்பை போல உள்ளீடற்றவள் எனினுமாம்]

தோலான் *tōlāṉ,* பெ. (n.) தோலன் (வி.) பார்க்க; see *tōlaṉ* *(செஅக.).*

[தோலன் → தோலான்]

தோலான்துருத்தி *tōlāṉturutti,* பெ. (n.) தோலாந்துருத்தி பார்க்க; see *tōlānturutti.*

தோலி[1] *tōli,* பெ. (n.) *1. பழத்தோல்;* rind, peel. *2. மீன்வகை;* a fresh water fish. *3.* தோலான் *(யாழ்அக.)* பார்க்க; see *tōlāṉ.*

[தோல் → தோலி]

தோலி[2] *tōli,* பெ. (n.) *1.* அரக்கு (வின்.); gum lac. *2. அவுரி;* indigo plant *(செஅக.).*

[தோல் → தோலி. தோல் = மீந்தோல், மூடுவது]

தோலிக்கருவாடு *tōli-karuvāḍu,* பெ. (n.) உலர்ந்த சிறுமீன்; dried silurus *(சாஅக.).*

தோலிகை[1] *tōligai,* பெ. (n.) *1. காது;* ear. *2.* ஒட்டிய விரல்கள்; finger united by webs or folds of skin.

தோலிகை[2] *tōligai,* பெ. (n.) *1.* ஊஞ்சல்; swing, cradle. *2. காது;* ear *(செஅக.).*

தோலியாய்ப்போ-தல் *tōliyāi-p-pō-,* 8 செ.குவி. (v.i.) *1.* தோல் போலாதல்; to be reduced to skin and bone. *2.* இளைத்தல்; to be emaciated *(சாஅக.).*

[தோல் → தோலி + ஆய் + போ-.]

தோலிலேயூட்டு-தல் *tōlilē-y-ūṭṭu-,* 12 செகுன்றாவி. (v.t.) *1.* தோலிற் சுத்தி வைத்தல்; to wrap in a skin as a process in absorption. *2.* தோலுக்குள் ஊசியால் குத்திப் புகும்படி செய்தல்; to inject in surgery introduction of medicine into the substance of skin, injection

intra dermic injection as opposed subcutaneous injection *(சாஅக.).*

[தோல் + இல் + ஊட்டு-.]

தோலின்றுன்னர் *tōlin-ṟunnar,* பெ. (n.) தோல்வேலை செய்வோர்; leather workers. "துன்னகாரருந் தோலின்றுன்னரும்" *(சிலப். 5:32).*

[தோல் + இன் + துன்னர். 'இன்' சாரியை துல் → துன் → துன்னர்]

தோலுண்ணி *tōluṇṇi,* பெ. (n.) ஒருவகை யுண்ணி; stiutich *(சாஅக.).*

[தோல் + உண்ணி]

தோலுனி *tōluṉi,* பெ. (n.) தோலன் *(யாழ்.அக.)* பார்க்க; see *tōlaṉ (செஅக.).*

தோலுந்துருத்தியுமாதல் *tōlun-turuttiyum-ādal,* பெ. (n.) சதையும் எலும்புமாதல்; being reduced to skin and bone said of an emaciated person *(சாஅக.).*

[தோலும் + துருத்தியும் + ஆதல்]

தோலுரி[1]-தல் *tōl-uri,* 3 செ.கு.வி. (v.i.) மேற்றோலுரிதல்; to exfolicate of the epidermis to peel off skin *(சாஅக.).*

ம. தோலுரியுக

[தோல் + உரி]

தோலுரி[2]-த்தல் *tōluri-,* 4 செ.குன்றாவி. (v.t.) மேற்றோலைப் போக்கல்; to peel off, as skin of fruits. *2.* உடம்பின் தோலையுரித்தல்; to flay as skin of body, escoriating. *3.* தோல் போக்கல்; to husk, as grains or pulse. to decoritcate. *4.* சட்டை கழற்றல்; to cast away the outer skin as snakes do *(சாஅக.).*

[தோல் + உரி-.]

தோலுரித்தோன் *tōlurittōṉ,* பெ. (n.) *1.* குப்பை மேனி; rubbish plant. *2.* கற்ப முறையால் சட்டை கழட்டியவன்; one who causes the wrinkled outer skin to shed or thrown off as in rejuvenation so as to look young *(சாஅக.).*

[தோல் + உரித்தோன்]

தோலுழிஞை *tōl-uḻiñjai,* பெ. (n.) கிடுகு படையைச் சிறப்பித்துக் கூறும் புறத்துறை *(பு.வெ. 6,12);* theme in praise of a shield *(செஅக.).*

[தோல்[3] + உழிஞை]

தோலுள் *tōluḷ,* பெ. (n.) *1.* உள் தோல்; inner skin. *2.* தோலுக்குள்; inside of the skin *(சாஅக.).*

[தோல் + உள்]

தோலொட்டு *tōloṭṭu,* பெ. (n.) வரி வகை; a tax *(செஅக.).*

தோலோதோல்[1] *tōlō-tōl,* இடை. (part.) உடம் படாமைக் குறிப்பு *(பஞ்சதந்.);* expr. signifying disagreement *(செஅக.).*

தோலோதோல்[2] *tōlō-tōl,* கு.வி.எ. (adv.) எவ்வகையிலும் *(வின்.);* afterall, howbeit.

தோவத்தி[1] *tōvatti,* பெ. (n.) ஆண்மக்களின் அரையாடை; a cloth worn arround the waist by men *(செஅக.).*

தெ. தோவதி

தோவத்தி[2] *tōvatti,* பெ. (n.) புடவை; saree.

தோவம் *tōvam,* பெ. (n.) ஒரு காலவளவு; a measure of time. "கணம்வளி யுயிர்ப்புத் தோவம்" *(மேருமந். 94).*

தோவனம் *tōvaṉam,* பெ. (n.) தோவாளம் பார்க்க; see *tōvāḷam.*

[தோவாளம் → தோவளம் → தோவனம்]

தோவாளம் *tōvāḷam,* பெ. (n.) கிணற்றைச் சுற்றி எழுப்பிய சுவர் *(நெல்லை.);* parapet wall of a well *(செஅக.).*

மறுவ. தோவனம்



தோவை *tōvai,* பெ. (n.) நெத்திலியைப் போல் ஒரு கடல் மீன் (தஞ்சை.மீனவ.); kind of sea fish like anchovy fish.

தோழ் *tōḻ,* பெ. (n.) மாட்டுக் கொட்டில்; cattle stall. 'ஊழிதொ றாவுந் தோழும் போன்று' (சீவக. 487).

மறுவ. தொழுவம்

[துல் → துள் → தொள் → தொழு → தோழ்]

தோழ்ப்பாடி *tōḻ-p-pāḍi,* பெ. (n.) தீயவன்; போக்கிலி (போக்கிரி); wiked person. "தூர்த்தத் தனம் பேசுந் தோழ்ப்பாடி வித்தையில்" (தெய்வச். விறலிவிடு. 476).

[தோல் → தோழ் + பாடி]

தோழப்பர்[1] *tōḻappar,* பெ. (n.) மிருதி (ஸ்மிருதி) நிபந்தனை என்னும் நூலின் ஆசிரியர்களுள் ஒருவர்; a writer on the smrtis.

தோழப்பர்[2] *tōḻappar,* பெ. (n.) நாய்; dog, an man's friend.

[தோழமை → தோழப்பர்]

தோழம்[1] *tōḻam,* பெ. (n.) மாட்டுத் தொழுவம்; cattle-stall. "தோழத்திடைப் புகுந்தாள்" (பிரமோத். 3, 14).

ம. தோழம்

[துள் → தொள் → தொழு → தொழுவம் → தோழம்]

தோழம்[2] *tōḻam,* பெ. (n.) 1. கடல்; sea. "முதிர்திரை யடிக்கும் பரிதியந் தோழம்" (கல்லா. 88, 23). 2. பேரெண்; a large number. "ஒரு தோழந் தேவர் விண்ணிற் பொலிய" (தேவா. 102, 7).

தெ. தோயமு

[தோயம் → தோழம்]

தோழம்[3] *tōḻam,* பெ. (n.) தோழமை பார்க்க; see *tōḻamai.*

[துள் → தொள் → தொழு → தொழுவம் → தோழம்]

த. தோழம் → Skt. tōṣa

தோழமை *tōḻamai,* பெ. (n.) நட்பு; friendship, companionship. "தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ" (கம்பரா. குகப். 15). தோழமையோடும் ஏழைமை பேசேல் (பழ.).

ம. தோழம

[துள் → தொள் → தொழு → தொழுவம் → தோழம் → தோழமை]

தோழர் *tōḻar,* பெ. (n.) 1. தோழன் பார்க்க; see *tōḻaṉ*. 2. அரசியல் இயக்கங்கள் சிலவற்றில் ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினரையோ, சார்பாளரையோ அழைக்கும் விளிச்சொல்; comrade, a calling word in certain political movements. நம் தோழர்கள் அனைவரும் வென்று விட்டனர்.

[தோழன் → தோழர். 'அர்' உயர்வுப் பன்மையீறு]

தோழன் *tōḻaṉ,* பெ. (n.) வினைவலபாங்கன், பாங்கன்; friend, companion, intimate acquaintance, camrade. "யானே தந்தை தோழன்" (புறநா. 201). தோழனாவது துலங்கிய கல்வி (பழ.).

ம. தோழன்; க., தெ. தோடு; து. தோழ; கொலா. தோரென் (தம்பி); நா. தோரென்; (உடன்பிறந்த); பர். தொளெய (உடன் பிறந்தவன்); கட. தோரென் (தம்பி); கோண். தொர் (உதவி); கூ. தோஞ்சு; குவி. தோனெசி

[துள் → தொள் → தொழு → தோழம் → தோழன்]

தோழா *tōḻā,* பெ. (n.) விளிச்சொல்; calling word.

[தோழன் → தோழா (விளி) (சு.வி. 35)]

தோழி[1] *tōḻi,* பெ. (n.) 1. பாங்கி; a lady's maid. "நல்லவென் றோழி" (திவ். நாய்ச். 10,10). 2. செவிலித் தாயின் மகள்; heroine confidante, being the daughter of her fostermother. "தோழிதானே செவிலிமகளே" (தொல். பொருள். 125). 3. மனைவி; wife. "பொற்றொடிப் பணைத்தோட் டோழியர்" (பெருங்.வத்தவ. 12,19). 4. பணிப்பெண் (இலக்.வி. 207, உரை); maidservant.

[தோழன் (ஆ.பா.) → தோழி (பெ.பா.)]

தோழி[2] *tōḻi,* பெ. (n.) அரக்கு (அக.நி.); gum lac.

[தோலி → தோழி]

தோழி[3] *tōḻi,* பெ. (n.) கற்பூரவல்லி; country borage (சா.அக.).

தோழிச்சி *tōḷicci*, பெ. (n.) தோழி 1,2,3 பார்க்க; see *tōḷi*, *1,2,3*. "தோழரெல்லாந் தோழிச்சியாக" (பெருங்மகத. 22, 39).

[தோழி → தோழிச்சி]

தோழிப்பொங்கல் *tōḷi-p-poṅgal*, பெ. (n.) (பிராமண) திருமணத்தின் நான்காம்நாள் அம்மானது செலவில் மணமகட்கு மட்டும் நடத்தப் படும் ஊர்வலம்; bride procession on the fourth day of marriage, conducted by her maternal uncle (செ.அக.).

[தோழி + பொங்கல்]

தோள்(ளு)[1]-தல் *tōḷḷu-*, 10 செ.குன்றாவி. (v.t.) 1. துளைத்தல்; to perforate bore through. "கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியாற் றோட்கப்படாத செவி" (குறள், 418). 2. தோண்டுதல்; to dig out, scoop. "தோணீர்க் கடலுள்" (சீவக. 2097). "தெவ்வேந்த ருடறோட்ட நெடு வேலாய் . . . கடறோட்டா ரெனின்" (கம்பரா. குலமுறை. 8). 3. நீக்குதல்; to remove. "கடிதோட்ட களவகத்தே" (திருக்கோ. 8).

க. தோடு

[துல் → துள் → தொள் → தோள்]

தோள்[2] *tōḷ*, பெ. (n.) துளை (அகநி.); perforation (செ.அக.).

[துல் → துள் → தொள் → தோள்]

தோள்[3] *tōḷ*, பெ. (n.) 1. கையின் திரண்ட மேற்பகுதி (புயம்); shoulder. "சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சி" (பெரும்பாண். 145). "தம்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப் புன்னலம் பாரிப்பார் தோள்" (குறள், 916). தோளிலமர்ந்து காதைக் கடிக்காதே (பழ.). 2. கை; arm. "தோளுற்றொரர் தெய்வந் துணையாய்" (சீவக. 10).

ம. தோளு; க. தோள், தோளு; து. தோளு; கோத. தோள்; துட. த்விள்பொதி (தோள்வளை); த. தோள்; Skt. tōs

[தொள் → தோள் (முதா. 208)]

தோள்காய்த்தல் *tōḷ-kāyttal*, பெ. (n.) . தோள் காய்ப்பு; shoulder becoming callous (சா.அக.).

[தோள் + காய்த்தல்]

தோள்கொட்டு-தல் *tōḷ-koṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) வீரத்தின் அடையாளமாய்த் தோளைத் தட்டுதல்; to clap one's shoulders, as in difiance. "தடுத்தானைத் தான்முனிந்து தன்றோள் கொட்டி" (தேவா. 689, 10).

[தோள் + கொட்டு-.]

தோள்கொடு-த்தல் *tōḷ-koḍu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. சுமையைத் தாங்குதல்; to take on one's shoulders, the as the pole of a palanquin. தாங்க முடியவில்லை, கொஞ்சம் தோள் கொடு (உ.வ.). 2. உதவி செய்தல்; to offer help in an emergency (செ.அக.).

[தோள் + கொடு-.]

தோள்சந்து *tōḷ-šandu*, பெ. (n.) அக்குள்; arm pit (சா.அக.).

[தோள் + சந்து]

தோள்சேர்-தல் *tōḷ-šēr-*, 3 செ.குன்றாவி. (v.t.) தழுவுதல்; to embrace (செ.அக.).

[தோள் + சேர்-.]

தோள்சேலை *tōḷ-šēlai*, பெ. (n.) மார்பை மறைக்கும் பகுதியையுடைய சேலை; a saree which has the portion that is drawn over the breast.

[தோள் + சேலை. சீரை → சீலை → சேலை]

தோள்சேலைப்போராட்டம் *tōḷ-šēlai-p-pōrāṭṭam*, பெ. (n.) பெண்கள் மாராப்பு சேலை உடுத்தும் உரிமைக்கோரி செய்த போராட்டம்; the struggle to have the right to wear the saree that is drawn over the breast.

[தோள்சேலை + போராட்டம்]

தோள்தட்டு[1]-தல் *tōḷ-taṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) தோள்கொட்டு-தல், பார்க்க; see *tōḷ-koṭṭu-*, (செ.அக.).

[தோள் + தட்டு-.]

தோள்தட்டு[2]-தல் *tōḷ-taṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) ஒருவரை ஊக்கப்படுத்துவதற்காகத் தோளில் தட்டிக் கொடுத்தல்; to pat one, on shoulder to encourage.

[தோள் + தட்டு]

தோள்தீண்டி *tōḷ-tīṇḍi*, பெ. (n.) நெருங்கி வருத்துவது; that which comes close and destroys, as touching one's shoulders. "மரணமன்றோ தோள்தீண்டியாக வந்து நிற்கிறது" (திவ்.திருமாலை, 6, வியா. பக். 34).

[தோள் + தீண்டி]

தோள்தூக்குதல் *tōḷ-tūkkūdal*, பெ. (n.) தோளெடுத்தல் பார்க்க; see *tōḷ-eḍuttal* (செ.அக.).

[தோள் + தூக்குதல்]

தோள்நாடி *tōḷ-nāḍi*, பெ. (n.) தோட் பக்கத்துள்ள தூய அரத்தக் குழாய்; subclavian artery (செ.அக.).

[தோள் + நாடி]

தோள்நாப்பை *tōḷnā-p-pai*, பெ. (n.) தோள்பை பார்க்க; see *tōḷ-pai*.

[தோள் + நாலு + பை]

தோளில் நாலும் (தொங்கும்) பை. இது வடபுல மொழிகளில் ஜோல்னாப்பை என வழங்குகிறது.

தோள்நாளம் *tōḷ-nāḷam*, பெ. (n.) தோட் பக்கத்துள்ள தூய்மையிலா அரத்தக் குழாய்; subclavian vein (செ.அக.).

[தோள் + நாளம்]

தோள்பட்டை *tōḷ-paṭṭai*, பெ. (n.) தோள் பலகை; shoulder blade (சா.அக.).

[தோள் + பட்டை]

தோள்படிகொள்(ளு)-தல் *tōḷ-paḍi-koḷ(ḷu)-*, 7 செ.குன்றாவி. (v.t.) ஒன்றைப் பற்றாகக் கொள்ளுதல்; to go a step further, proceed further. "கீழ்நின்ற நிலைமையமைத்து மேலே தோள்படி கொள்ளுகிறார்." (ஈடு. 1,1,1, பக்.2).

தோள்பை *tōḷ-pai*, பெ. (n.) தோளில் தொங்கவிடும்படி பட்டை வைத்துத் தைத்த பை; shoulder bag.

[தோள் + பை]

தோள்பொருத்து *tōḷ-poruttu*, பெ. (n.) தோள் மூட்டு; shoulder joint (சா.அக.).

[தோள் + பொருத்து]

தோள்பொருத்துவாதம் *tōḷ-poruttu-vādam*, பெ. (n.) தோள் வலி நோய்; inflammation of the shoulder joint (சா.அக.).

[தோல் + பொருத்து + வாதம்]

தோள்மாற்று-தல் *tōḷ-māṟṟu-*, 5 செ.குவி. (v.t.) 1. சுமையை ஒரு தோளின்று மற்றொரு தோளுக்கு மாற்றுதல்; to change one shoulder to another, as a load. 2. பிறன் சுமையைத் தான் தூக்கி உதவிபுரிதல்; to relieve another in bearing a load (செ.அக.).

[தோள் + மாற்று-]

தோள்மாறு-தல் *tōḷ-māṟu-*, 5 செ.குவி. (v.i.) மனம் வேறுபடுதல்; to change one's mind, as changing shoulders. "கிட்டினவாறே நீரே அதிலே தோள்மாறுகிறீர்" (திவ். திருமாலை, 2, வியா. 18).

[தோள் + மாறு-]

தோள்மூட்டு *tōḷ-mūṭṭu*, பெ. (n.) தோட் பொருத்து; shoulder joint (செ.அக.).

[தோள் + மூட்டு]

தோள்வந்தி *tōḷvandi*, பெ. (n.) தோள்வளை பார்க்க; see *tōḷ-vaḷai*. "அத்தோள்கடோறும் தோள்வந்தியை உடையராயிராநின்றார்" (திவ். பெரியதி. 9, 2,4, வியா.).

[தோள் + வந்தி. வங்கி → வந்தி. வங்கி = வளைந்தது]

தோள்வலி *tōḷ-vali*, பெ. (n.) தோள் வலிமை; strength or power of the arm. "இராமன் றோள்வலி கூறுவோர்க்கே" (கம்பரா. தனியன்). 2. தோள் நோவு; pain in the shoulder (செ.அக.).

[தோள் + வலி]

தோள்வளை *tōḷ-vaḷai*, பெ. (n.) தோளில் அணியும் வளைவகை; ring worn on the upper arm. "நெடுந்தோள் வளையுங் கடுங்கதிர்க் கடகமும்" (பெருங். இலாவாண. 5,114).

[தோள் + வளை]



தோள்வாதம் *tōḷ-vādam,* பெ. (n.) 1. தோள் வீங்கிக் கண்டம், பிடரி வலிப்புற்று கழுத்து நோகும் ஒருவகை நரம்பு நோய்; a kind of neuralgic pain of the shoulder's marked by swelling and pain in the neck and nape. 2. வளிக் குற்றத்தினால் (தோஷத்தினால்) தோள் மூட்டு பசையற வற்றல்; the vayu about the shoulder joint becomes excited dries up the kapa which substains the shoulder joint. 3. வளிக் கோளாறினால் தோள் மூட்டில் விறைப் புண்டாகி அசைக்க முடியாமற் செய்யும் ஒரு ஊதை; stiffness of the shoulder joint in which the excited vayu causes the contraction of the muscles of the shoulder. 4. தோள்பிடிப்பு; rheumatism of the shoulder (சாஅக.).

தோளணி *tōḷaṇi,* பெ. (n.) தோட்பக்கத்தில் அணியப்படும் அணிகலவகை; ornaments worn on the upper arm. "தோளணி தோடு சுடரிழை நித்திலம்" (பரிபா. 10, 115).

[தோள் + அணி]

தோளாச்செவியர் *tōḷā-c-ceviyar,* பெ. (n.) ஒரு வகைக் குலத்தினர்; a section of people (S.I.I.iii, 268).

[தோள் + ஆ + செவியர். 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தோளாமணி *tōḷā-maṇi,* பெ. (n.) துளையிடப் படாத மணி; uncut gem. "தோளா மணியே பிணையையே பலசொல்லி யென்னை" (திருக்கோ. 47)

[துல் → துள் → தொள். துல் - துளைத்தற் கருத்துவேர். தோள் + ஆ + மணி]

தோளி *tōḷi,* பெ. (n.) 1. நன்னீர் மீன்வகை; fresh-water fish. 2. நீலிச்செடி; common indigo. 3. அரக்கு (சங்அக.); lac (செஅக.).

[தோலி → தோளி]

தோளிற்கொள்(ளு)-தல் *tōḷiṟ-koḷ(ḷu)-,* 7 செ.குன்றாவி. (v.t.) மணந்து கொள்ளுதல்; to marry. "நின்கோதையை யார்கொலோ தோளிற் கொள்பவர்" (பிரபுலிங். மாயையினுற். 69).

[தோளில் + கொள்-.]

தோளுக்கினியான் *tōḷu-k-kiṉiyāṉ,* பெ. (n.) கோயிற் கடவுள்திருமேனியை எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய ஊர்தி வகை; a light frame for carrying in procession the idol of a temple, as easy for the shoulder (செஅக.).

[தோளுக்கு + இனியான்]

தோளு-தல் *tōḷu-,* 5 செ.குன்றாவி. (v.t.) துளைத்தல்; to perforate.

[துல் → துள் → தொள் → தோள் → தோளு]

தோளெடுத்தல் *tōḷ-eḍuttal,* பெ. (n.) மாலை மாற்றும் பொருட்டு மணமக்களை அவ்வவர் மாமன்மார் தோளிற்றூக்குகை; the ceremony in which bride and the bride-groom are carried upon the shoulder of their respective maternal uncles to enabled them to exchange garlands (செஅக.).

[தோள் + எடுத்தல்]

தோளோச்சல் *tōḷōccal,* பெ. (n.) தோளை எடுத்தல்; raise the shoulders.

[தோள் + ஓச்சல்]

தோற்கட்டடம் *tōṟ-kaṭṭaḍam,* பெ. (n.) பொத்தகத்திற்குத் தோலாற் செய்த மேற்கட்டு; leather binding for books (செஅக.).

[தோல் + கட்டடம். கட்டு → கட்டடம்]

தோற்கட்டு[1] *tōṟ-kaṭṭu,* பெ. (n.) முன்கைத் தோற்கவசம்; armour for the fore arm; usually of leather (செஅக.).

[தோள் + கட்டு]

தோற்கட்டு[2] *tōṟ-kaṭṭu,* பெ. (n.) வல்லமை; strength of the shoulder (சாஅக.).

[தோல் + கட்டு. கட்டு = இளமை, வலிமை, வல்லமை]

தோற்கடகு *tōṟ-kaḍagu,* பெ. (n.) தோற்கேடகம்; leather shield. "தான் அம்புபடில் தளராது பிறர்க்கு அரணமாகும் தோற்கடகு போன்ற பண்பு" (பதிற்றுப். 45, 16, உரை).

[தோள் + கடகு. கிடுகு → கடுகு → கடகு]

தோற்கடி-த்தல் *tōṟ-kaḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) தோல்வியுறச் செய்தல்; to defeat (செஅக.).

[தோல் → தோல்வி. தோற்க + அடி-.]

தோற்கருவி *tōṟ-karuvi*, பெ. (n.) ஐவகை இசைக் கருவிகளுள், தோலாற் செய்யப்பட்ட இசைக் கருவிவகை (சிலப். 3:27, உரை); musical instrument made of leather, as drum, tabor, one of five isai-k-karuvi (செஅக.).

[தோல் + கருவி]

ஐவகை இசைக் கருவிகள்

1. தோற்கருவி. 2. துளைக் கருவி. 3. நரம்புக் கருவி. 4. கஞ்சக் கருவி. 5. மிடற்றுக் கருவி.

தோற்கருவியாளர்[1] *tōṟ-karuvi-y-āḷar*, பெ. (n.) வாச்சியக்காரர் (பிங்.); drummers (செஅக.).

[தோல் + கருவி + ஆளர். ஆள்பவர் → ஆளர்]

தோற்கருவியாளர்[2] *tōṟ-k-karuvi-y-āḷar*, பெ. (n.) தோல் பொருட்களைச் செய்யும் தொழிலாளர்; one who mends and do leather works (கழ.தமி.அக.).

[தோல் + கருவியாளர்]

தோற்கவசம் *tōṟ-kavašam*, பெ. (n.) தோலாலான சட்டை (வின்.); leather jacket (செஅக.).

[தோல் + கவசம்]

தோற்காது *tōṟ-kādu*, பெ. (n.) தோற்செவி பார்க்க; see *tōṟcevi* (செஅக.).

[தோல் + காது]

தோற்காற்பறவை *tōṟ-kāṟ-paṟavai*, பெ. (n.) தோலடிப்பறவை பார்க்க; see *tōlaḍi-p-paṟavai* (செஅக.).

[தோல் + கால் + பறவை]

தோற்கிடங்கு *tōṟ-kiḍaṅgu*, பெ. (n.) தோல் பதனிடுமிடம்; tannery (செஅக.).

[தோல் + கிடங்கு. கிழ் → கிழ → கிட → கிடங்கு]

தோற்குடைச்சல் *tōṟ-kuḍaiccal*, பெ. (n.) தோள் வாதம் பார்க்க; see *tōḷ-vādam* (சாஅக.).

[தோல் + குடைச்சல்]

தோற்குல்லாய் *tōṟ-kullāy*, பெ. (n.) தோலாற் செய்த கவிப்பு வகை; a leather cap (செஅக.).

[தோல் + குல்லாய்]

தோற்கைத்தளம் *tōṟ-kai-t-taḷam*, பெ. (n.) முன்கையி லணியுந் தோற்கவசம் (சிலப். 14, 170, அரும்.); armour for the fore-arm, made of leather (செஅக.).

[தோல் + கை + தளம்]

தோற்கொதிப்பு *tōṟ-kodippu*, பெ. (n.) தோலுக் கடியிலுள்ள தசைக்கொதிப்பால் வரும் நோய் வகை; inflammation of the cellular tissue immediately beneath the skin (செஅக.).

[தோல் + கொதிப்பு]

தோற்கொம்பு *tōṟ-kombu*, பெ. (n.) 1. விலங்கின் கட்டுக்கொம்பு; movable horn fixed in the skin. 2. கொம்பு ஆடுதலாகிய மாட்டுக் குற்றவகை (மாட்டுவா. 16); a defect in cattle in which the horns are not firm (செஅக.).

ம. தோல்கொம்பு

[தோல் + கொம்பு]

தோற்சட்டையுரித்தோன் *tōṟ-caṭṭai-urittōṉ*, பெ. (n.) காயகற்பம் சாப்பிட்டு அதனால் திரை நீங்கி, அதாவது உடம்பிலுள்ள சுருங்கிய தோல் கழன்று காய சித்தியடைந்த சித்தர்களில் ஒருவன்; one of those Siddhars who rejuvenated their system and restored to youth by casting off the wrinkled skin on consuming the rejuvenation drug (சாஅக.).

[தோல் + சட்டை + உரித்தோன்]

தோற்சித்தை *tōṟ-cittai*, பெ. (n.) எண்ணெய் வைக்க உதவுந் தோற்பை வகை (யாழ்அக.); leathern bottle or vessel for oil.

[தோல் + சித்தை]

தோற்செருப்பு *tōṟ-ceruppu*, பெ. (n.) செருப்பு வகை; a kind of shoe. "தோற் செருப் பார்த்த பேரடியன்" (கம்பரா. கங்கை. 29).

[தோல் + செருப்பு]

தோற்செவி *tōṟ-cevi*, பெ. (n.) 1. புறச்செவி; auricle of the ear. "அந்தோற் செவியிலுண் மந்திரமாக" (பெருங். உஞ்சைக். 45, 47), (சீவக. 2718, உரை, அடிக்குறிப்பு). 2. புறச்செவியுள்ள விலங்குகள் (வின்.); creatures having external ears (செஅக.).

[தோல் + செவி]

தோற்பரம் *tōṟ-param,* பெ. (n.) தோற்கேடகம்; buckler, leathern shield. "போர் மயிர்க் கேடகம் புளகத் தோற்பரம்' (சீவக. 2218). 2. நெடுஞ் செருப்பு (வின்.); boots.

[தோல் + பரம்]

தோற்பலகை *tōṟ-palagai,* பெ. (n.) தோற்பரம் (பிங்.) பார்க்க; see *tōṟ-param* (செ.அக.).

[தோல் + பலகை]

தோற்பறை[1] *tōṟ-paṟai,* பெ. (n.) தோற்கருவி வகை; durm, a musical instrument.

[தோல் + பறை]

தோற்பறை[2] *tōṟ-paṟai,* பெ. (n.) 1. குதிரைக்குக் கொள் வைக்கும் பை; leather bag used in feeding horses. 2. நீரிறைக்கும் கருவி வகை; leather bucklet for drawing water.

ம. தோல்பற

[தோல் + பறை]

தோற்பனாட்டு *tōṟ-paṉāṭṭu,* பெ. (n.) பனம் பழத்தின் மெல்லிய உள்ளீடு; thin layer of the juicy substance of palmyra fruit (செ.அக.).

தோற்பாடி *tōṟpāḍi,* பெ. (n.) 1. விலை மாது (வின்.); strumpet. 2. இழிந்தோன்; mean, worthless, shameless person (செ.அக.).

[தோல் + பாடி]

தோற்பாய் *tōṟ-pāy,* பெ. (n.) தோலால் அமைந்த இருக்கை (தவிசு) (சூடா.); undressed skin used as a seat (செ.அக.).

[தோல் + பாய்]

தோற்பாறை *tōṟ-pāṟai,* பெ. (n.) 1. மூன்றடி நீளம் வளரும் கடல்மீன்வகை; sea-fish, attaining 3 feet in length, as having a thick-skin. 2. நீலங் கலந்த பச்சைநிறங் கொண்டதும் 18 விரலம் வளர்வதுமான கடல்மீன் வகை; sea-fish, greenish, shot with blue, attaining 18 inch in length (செ.அக.).

[தோல் + பாறை]

தோற்பாவை *tōṟ-pāvai,* பெ. (n.) 1. தோலாற் செய்து ஆட்டும் பாவை; leathern puppet marionette. "தோற்பாவைக் கூத்தும்" (சி.சி. 4, 24, நிரம்ப). 2. தோற்பாவைக்கூத்து (சிலப். 3, 12, உரை) பார்க்க; see *tōṟpāvai-k-kūttu.*

[தோல் + பாவை]

தோற்பாவைக்கூத்து *tōṟ-pāvai-k-kūttu,* பெ. (n.) தோற்பாவையைக் கொண்டு ஆட்டுங் கூத்து; show with leathern puppets. "தோற்பாவைக் கூத்துந் தொல்லைமரப் பாவை யியக்கமும்" (சி.சி. 4, 24).

[தோல் + பாவை + கூத்து]

தோற்பிரண்டல் *tōṟ-piranḍal,* பெ. (n.) தோல்மேலேறுதல் பார்க்க; see *tōl-mēl-ēṟudal.*

[தோல் + பிரள்தல். புரள் → பிரள்]

தோற்பு *tōṟpu,* பெ. (n.) தோல்வி; defeat, discomfiture, loss. "தோற்பு வெல்வது சொல்பவர் யார்" (உபதேசகா. சிவவிரத. 342).

தோற்புடை[1]**-த்தல்** *tōṟ-puḍai-,* 4 செ.குன்றாவி. (v.t.) மேற்றோல் போகும்படி முறத்தில் தேய்த்துப் புடைத்தல்; to winnow by fan (சா.அக.).

[தோல் + புடை-.]

தோற்புடை[2]**-த்தல்** *tōṟ-puḍai-,* 4 செ.குன்றாவி. (v.t.) தோள்கொட்டு-தல் பார்க்க; see *tōḷ-koṭṭu-*

[தோல் + புடை]

தோற்புரட்டல் *tōṟ-puraṭṭal,* பெ. (n.) தோல்மேலேறுதல் பார்க்க; see *tōl-mēl-ēṟudal.*

தோற்புரை *tōṟ-purai,* பெ. (n.) 1. தோலின் துளை; pores of the skin. 2. மேற்றோல்; cuticle. "தோற்புரை போமதன்றிக்கே பிராணனிலே தைப்பதுமாயிருந்தது" (ஈடு.அவ.ஜீ.). 3. சவ்வுள்ள உடலிடம் (யாழ்.அக.); membrance (செ.அக.).

[தோல் + புரை]

தோற்புலவு *tōṟ-pulavu,* பெ. (n.) ஒரு வகைப் பிலா மரம்; lance wood (சா.அக.).

[தோல் + புலவு. பிலா → புலா → புலாவு → புலவு]

தோற்புழு *tōṟ-puḻu,* பெ. (n.) சதையின் அடியிலுண்டாகும் கயிற்றைப் போன்ற புழு, நரம்புச் சிலந்தி; guinea worm (சா.அக.).

[தோல் + புழு]

தோற்பெட்டி *tōṟ-peṭṭi,* பெ. (n.) *1.* தோலாற் செய்த பேழை *(வின்.);* leather bag. *2.* சாதிக் காய் மரப்பெட்டி; dealwood case covered with thick brown paper *(செ.அக.).*

[தோல் + பெட்டி]

தோற்பை *tōṟ-pai,* பெ. (n.) *1.* தோலாற் செய்த பை; leathern bag. *2.* துளையுள்ள தோற் கவிப்பு *(குல்லா) (தைலவ.தைல.);* perforated leathern cap. *3.* உடம்பு; body. "தோற்பை யுணின்று தொழிலறச் செய்தூட்டுங் கூத்தன்" *(நாலடி, 26).*

[தோல் + பை]

தோற்றக்கவி *tōṟṟa-k-kavi,* பெ. (n.) நாடகத்திற் கட்டியங்காரன் பாடும் பாட்டு *(வின்.);* verse sung announcing the appearance of a person on the stage *(செ.அக.).*

[தோற்றம் + கவி]

தோற்றத்தரு *tōṟṟa-t-taru,* பெ. (n.) நாடக நடிகர் தோன்றும் பொழுது ஆடிப்பாடும் பாட்டு; a kind of song sung by an actor while appearing on the stage *(செ.அக.).*

[தோற்றம் + தரு]

தோற்றப்பட்டவன் *tōṟṟa-p-paṭṭavaṉ,* பெ. (n.) தோற்றமானவன் *(வின்.)* பார்க்க; see *tōṟṟam-āṉavaṉ* *(செ.அக.).*

[தோற்றம் + பட்டவன்]

தோற்றம் *tōṟṟam,* பெ. (n.) *1.* காட்சி; appearance. "இலக்குவன் றோன்றிய தோற்றம்" *(கம்பரா. கும்பகருண. 231)* "தோற்றஞ்சான் ஞாயிறு" *(நாலடி, 7).* *2.* பார்வை; vision, sight, perceptibility. என்னுடைய தோற்றத்தில் அது மரமாக உள்ளது. *3.* உயர்ச்சி; conspicuosness, prominence, distinctness in appearance. "நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம் மலையினும் மாணப்பெரிது" *(குறள், 124).* *4.* விளக்கம்; splendour, brightness. *5.* தொடக்கம்; origin, rise, beginning, source. "தோற்றமு நிலையுங் கேடும்" *(மணிமே. 27:181).* *6.* பிறப்பு *(பிங்.);* birth, avatar. "நாயகன் றோற்றத்தின் *(கம்பரா. சிறப்.11).* *7.* வகுப்பு; class. "வேறுபட வந்த வுவமத் தோற்றம்" *(தொல்.பொருள். 307).* *8.* படைப்பு; creation. "எவ்வகைப் பொருளுந் தோற்ற நிலையிறுதி" *(திருக்கோ. 1, உரையகவல்).* *9.* சாயை; reflection, semblance. அவனுக்குத் தந்தையின் தோற்றமிருக்கிறது. *10.* புகழ்; fame, reputation. "ஈவார்க ணென்னுண்டாந் தோற்றம் இரந்து கோள் மேவார் இலாஅக்கடை" *(குறள், 1059).* *11.* வலிமை *(பிங்.);* vigour, strength, power, force. *12.* புனைவு *(வேடம்);* costume, guise. "வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம் தானறி குற்றப் படின்" *(குறள், 272).* *13.* உருவம்; form. "நாற்றத் தோற்றச் சுவையொளி யுறலாகி நின்ற" *(திவ். திருவாய். 3, 6).* *14.* சொன்மாலை *(பிங்.);* panegyric. *15.* உறுப்பு; member, limb, part. "எம்மென வரூஉங் கிழமைத் தோற்றம்" *(தொல். பொருள். 221).* *16.* தன்மை; nature. "அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல" *(புறநா. 31).* *17.* எண்ணம்; idea. "தோற்றனனேயினி யென்னுந் தோற்றத்தால்" *(கம்பரா. இராவணன் வதை, 78).* *18.* உய்த்துணர்வு, ஊகம்; guess, estimate. "பதினைந்தாம் பக்கல் என்றொரு தோற்றம்". *19.* நாடக முன்னிகழ்வு; entrance on the stage; debut. *20.* எழுந்தருளுகை *(உதயம்);* rising, as of a heavenely body. *21.* மாயை *(வின்.);* phantom, apparition; illusion. *22.* அசையும் சொத்து அசையாச் சொத்து என்ற இருவகைத் திணை *(பிங்.);* phenomenon, of two classes, viz., movable and immovable properties. *23.* உயிர்த் தோன்றல்; genesis of life *(செ.அக.).*

ம. தோற்றம்; க. தோறிகெ

[தோன்று → தோற்று → தோற்றம்]

தோற்றமா-தல் *tōṟṟam-ā-,* 6 செ.கு.வி. (v.i.) *1.* காணப்படுதல்; to come into existence. *2.* அரங்கில் நாடகமாந்தர் தோன்றல்; to appear on the stage *(செ.அக.).*

[தோற்றம் + ஆ-]

தோற்றமானவன் *tōṟṟa-māṉavaṉ,* பெ. (n.) பல்லோர் அறிந்தவன் *(வின்.);* conspicuous, celebrated man *(செ.அக.).*

[தோற்றம் + ஆனவன்]

தோற்றரவு *tōṟṟaravu,* பெ. (n.) *1.* காட்சி; appearance. *2.* உருவாதல் *(உற்பத்தி);* coming into existence. "துன்பக் கதியிற் றோற் றரவின்றி" *(மணிமே. 26:56).* *3.* அறிகை *(வின்.);*

conspicuousness, emineance, dignity. 4. தோற்றம் (அவதாரம்); incarnation. 'ஒரு தோற்றரவு தோற்றியே யாகிலும் உதவவேணும்" (ஈடு. 3, 2,5). 5. பொய்த் தோற்றம்; phantom, apparition spectre (செ.அக.).

[தோற்றம் + அரவு. 'அரவு' தொழிற் பெயரீறு]

தோற்றல்[1] *tōṟṟal*, பெ. (n.) 1. தோன்றுகை; appearance. 2. புகழ்; praise. 3. வலிமை; vigour, strength.

தோற்றல்[2] *tōṟṟal*, பெ. (n.) 1. தோல்வி (பிங்.); defeat. 2. வீண் எண்ணம் (யாழ்.அக.); vain idea (செ.அக.).

[தோல் → தோற்றல்]

தோற்றல்[3] *tōṟṟal*, பெ. (n.) 1. புலப்படல்; being perceived by the senses. 2. பார்வை தெளிதல்; recovering eye sight. 3. தோன்றல் பார்க்க; see *tōṉṟal* (சா.அக.).

[தோன்றல் → தோற்றல்]

தோற்றவொடுக்கம் *tōṟṟa-v-oḍukkam*, பெ. (n.) விளைச்சல் அழிவுகள் (உற்பத்தி விநாசங்கள்); periodical appearance, and dispapearance, creation and dissolution.

[தோற்றம் + ஒடுக்கம்]

தோற்றன் *tōṟṟaṉ*, பெ. (n.) துருசு; sub acetate of copper blue vitriol (சா.அக.).

தோற்றனம் *tōṟṟaṉam*, பெ. (n.) சுணைக்கேடு (யாழ்.அக.); blunted sensibility (செ.அக.).

[தோல் + தனம்]

தோற்றாங்கிருமி *tōṟṟāṅ-k-kirumi*, பெ. (n.) குருதி நரம்புகளில் உலாவும் அணுவகைப் பூச்சிகளில் ஒன்று; one of the six rudimentary or embryo form of an organism in the blood vessles (சா.அக.).

[தோற்றம் → தோற்றாம் + கிருமி]

தோற்றாங்கொள்ளி *tōṟṟāṅ-koḷḷi*, பெ. (n.) அடிக்கடி தோற்றோடுபவன் (உ.வ.); one who constantly suffers defeat, as in a game (செ.அக.).

[தோல் → தோற்றான் + கொள்ளி. 'கொள்ளி' சொல்லாக்க ஈறு. ஒ.நோ. பயந்தாங்கொள்ளி]

தோற்றாணி *tōṟṟāṇi*, பெ. (n.) தோற்றாங் கொள்ளி பார்க்க; see *tōṟṟāṅ-koḷḷi* (செ.அக.).

தோற்றாமை *tōṟṟāmai*, பெ. (n.) வெளிப் படாமை; not exist.

[தோன்று → தோன்றாமை → தோற்றாமை]

தோற்றான் *tōṟṟāṉ*, பெ. (n.) மயில் துத்தம்; blue vitriol (செ.அக.).

தோற்றானம் *tōṟṟāṉam*, பெ. (n.) 1. தோற்கலம் (யாழ்.அக.); leather vessel. 2. வெடி மருந்துப்பை (வின்.); cartridge bag (செ.அக.).

[தோய் + தானம்]

தோற்று[1]**-தல்** *tōṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) தோன்று-தல் பார்க்க; see *tōṉṟu-*. "நீற்றோடு தோற்றவல்லோன் போற்றி" (திருவாச. 3, 108).

ம. தோற்று; க. தோறிசு

[தோன்று → தோற்று-.]

தோற்று[2]**-தல்** *tōṟṟu-*, 5 செகுவி. (v.i.) 1. தோன்றச் செய்தல்; to cause to appear; to show; to produce. 2. பிறப்பித்தல் (பிங்.); to create (செ.அக.).

[தோன்று → தோற்று-.]

தோற்று[3] *tōṟṟu*, பெ. (n.) தோன்றுகை; appearacne. "தோற்றவன் கேடவன்' (தேவா. 448,2).

[தோன்று → தோற்று]

தோற்றுருத்தி *tōṟṟurutti*, பெ. (n.) 1. உலைத் துருத்தி; leather bellows. "நிறைந்த தோற்றுருத்தி தன்னை" (சீவக. 1585). 2. உடம்பு; body (செ.அக.).

[தோல் + துருத்தி]



தோற்றுவாய் *tōṟṟu-vāy,* பெ. (n.) பின்வருவதை முன்னர்க்கூறும் குறிப்பு; introduction to a topic, indication. "அறத்தொடு நிற்பாளாக முன்றோற்றுவாய் செய்து" (திருக்கோ. 290).

தோற்றுவி-த்தல் *tōṟṟuvi-,* பி.வி. (caus.v.) 1. கண்ணொளி உண்டாக்கல்; to make the vision clear. 2. உண்டாக்கல்; to bring to existence. 3. பிழைக்க வைத்தல்; to restore to life. 4. தோன்றும்படிச் செய்தல்; to cause to appear (சா.அக.).

[தோற்று → தோற்றுவி]

தோற்றுன்னர் *tōṟṟunnar,* பெ. (n.) செம்மார் (சூடா.); shoe makers, leather workers (செ.அக.).

மறுவ. சக்கிலியர்

[தோல்[1] + துன்னர்]

தோற்றேங்காய் *tōṟṟeṅgāy,* பெ. (n.) உரிக்காத தேங்காய்; unhusked coconut (செ.அக.).

[தோல் + தேங்காய்]

தோறு *tōṟu,* இடை. (part.) தோறும் பார்க்க; see *tōṟum.* குன்றுதோறாடு குமரன்.

தோறும் *tōṟum,* இடை. (part.) ஒவ்வொன்றும், ஒவ்வொரு பொழுதும் என்ற பொருளில் வரும் இடைச்சொல்; each, every, whenever, a distributive suffix. "காண்டோறும் பேசுந் தோறும்" (திருவாச. 10, 3).

தோன்றக்கொடு-த்தல் *tōṉṟa-k-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) போதுமானபடி கொடுத்தல் (வின்.); to give sufficiently.

தோன்றல்[1] *tōṉṟal,* பெ. (n.) 1. தோற்றம்; appearance. "வரைமருளு முயர்தோன்றல் வினைநவின்ற பேர் யானை" (மதுரைக். 46). 2. தோன்றல் வேறுபாடு (நன். 154) பார்க்க; see *tōṉṟal-vēṟupāḍu.* 3. தலைமை; superiority, greatness. "பூவினுட் பிறந்த தோன்றல் புண்ணியன்" (சீவக. 316). 4. உயர்ச்சி; height, loftiness. "வரைகண்டன்ன தோன்றல்" (நெடுநல். 108). 5. விளக்கம்; splendour. "இருஞ்சுற வுயர்த்த தோன்ற லேத்தருங் குருசி றான்கொல்" (சீவக. 1261). 6. தலைவன்; chief, great person. "புலவரை யிறந்த புகழ்சா றோன்றல்" (புறநா. 21). 7. முல்லை நிலத் தலைவன் (பிங்.); chief of a jungle tract. 8. வேந்தன் (அரசன்) (யாழ்.அக.); king. 9. மகன் (பிங்.); son. 10. தமையன் (பிங்.); elder brother.

ம. தோன்னல்

[தோன்று → தோன்றல்]

தோன்றல்விகாரம் *tōṉṟal-vigāram,* பெ. (n.) தோன்றல்வேறுபாடு பார்க்க; see *tōṉṟal-vēṟupāḍu* (செ.அக.).

[தோன்றல் + விகாரம்]

தோன்றல்வேறுபாடு *tōṉṟal-vēṟupāḍu,* பெ. (n.) புணர்ச்சிவேறுபாடு மூன்றுள் புதிதாக எழுத்து, சாரியை முதலியன தோன்றுகை (நன். 154, உரை.); insertion of a letter, particle etc., in sandi one of three vikāram.

[தோன்றல் + வேறுபாடு]

தோன்றாத்துணை *tōṉṟā-t-tuṇai,* பெ. (n.) பிறரறியாமல் உதவுவோன்; unseen helper, as God. "தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யோங் களுக்கே" (தேவா. 1011, 1).

[தோன்று + ஆ + துணை. 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தோன்றாமற்பேசு-தல் *tōṉṟāmaṟ-pēsu-,* 6 செகுன்றாவி. (v.t.) குறிப்பிற் கூறுதல்; to speak darkly, indicate in a subtle manner (செ.அக.).

தோன்றாவெழுவாய் *tōṉṟā-v-eḻuvāy,* பெ. (n.) வெளிப்படச் சொல்லப்படாத எழுவாய் (சீவக. 1, உரை); subject not expressed but understood.

[தோன்று + ஆ + எழுவாய். 'ஆ' எதிர்மறை இடைநிலை]

தோன்றி[1] *tōṉṟi,* பெ. (n.) 1. மருதோன்றி; fragrant nail dye. 2. ஆனைத் தோன்றி, குடைத் தோன்றி; heart leaved or dure tree.

தோன்றி[2] *tōṉṟi,* பெ. (n.) 1. செங்காந்தள்; Malabar glory lily. "கொய்ம்மலர தோன்றிபோற் சூட்டுடைய சேவலும்" (சீவக. 73). 2. வெண் காந்தள் (பிங்.); the white species of gloriosa superba. 3. குருதி; blood. 4. ஒரு மலை; ancient

name of a hill. *"வான்றோ யுயர்சிமைத் தோன்றிக் கோவே" (புறநா. 399).*

தோன்றிகர் *tōṉṟigar,* பெ. (n.) **வணிகர்** *(அக.நி.);* chetti merchants.

தோன்றியடி *tōṉṟi-y-aḍi,* பெ. (n.) **காந்தள் கிழங்கு;** plough shaped bulbous root of November flower *(சா.அக.).*

[தோன்றி + அடி. அடி = வேர், கிழங்கு]

தோன்று[1]-தல் *tōṉṟu-,* 5 செ.கு.வி. (v.i.) *1.* **கட்புலனாதல்;** to be visible. "துறை திறம்பாமற் காக்கத் தோன்றினான் வந்து தோன்ற" *(கம்பரா. வாலிவதை. 74).* *2.* **அறியப்படுதல்;** to come to mind. *3.* **உண்டாதல்;** to appear, seem, spiring up, come into existence. "பெருஞ் செல்வந் தோன்றியக் கால்" *(நாலடி., 2).* *4.* **பிறத்தல்;** to be born. "தோன்றிற் புகழொடு தோன்றுக" *(குறள், 236).* *5.* **நிலைகொள்ளுதல்;** to exist. "புணரிய னிலையிடை யுணரத் தோன்றா" *(தொல்.எழுத்து. 482).* *6.* **வருதல்;** to come, turn up. "நிறுதர் தோன்றியுள ரென்றால்" *(கம்பரா. அகத்திய. 52).* *7.* **சாரியை முதலியன சொற்களிடையே வருதல்;** to be inserted, as cariyai. "வற்றென் சாரியை முற்றத் தொன்றும்" *(தொல்.எழுத்து. 189) (நன்.).*

ம. தோன்னுக; க., கோத. தோர்; தெ. தோசு; து. தோசுனி, சோ சுனி; பட. தோரு; துட. த்வீன், த்வீற்; பர். தோந்த்; கட. தோன்ட்; மா. துண்ட், தொண்ட்.

[துல் → துன்று → தோன்று. தோன்றுதல் = கண்ணொடு பொருந்துதல், தெரிதல், உருக்கொளல், உதித்தல், பிறத்தல் (மு.தா. 188)]

தோன்று[2]-தல் *tōṉṟu-,* 5 செ.கு.வி. (v.i.) **விளங்குதல்;** to be clear, explicit. "மதுரகவி தோன்றக் காட்டுந் தொல் வழியே நல்வழி" *(ரஹஸ்ய. 26).*

தோனாய் *tōṉāy,* பெ. (n.) **ஒரு வகை நாய்;** a kind of dog.

[தோல் + நாய்]

தோனிறம் *tōṉiṟam,* பெ. (n.) **உடம்பின் தோல் நிறம்;** colour of skin or body *(செஅக.).*

[தோல் + நிறம்]

தௌ

தௌ *tau*, 'த்' என்ற மெய்யும் 'ஔ' என்ற *உயிரும் கூடிய உயிர்மெய்க் கூட்டெழுத்து;* the compound of t and au.

தௌவல்[1] *tauval*, பெ. (n.) கேடு *(அகநி.);* ruin, destruction *(செ.அக.).*

[தவ்வு → தௌவல்]

தௌவல்[2] *tauval*, பெ. (n.) *1.* இளம் பருவம்; young age. *2.* கெடுதல்; destroy.

[தாவு → தவ்வு → தௌவல்]

தௌவல்[3] *tauval*, பெ. (n.) குந்தி நடத்தல்; stumble while walking.

[தாவு → தௌவல்]



CPL600913

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ஐந்தாம் மடலம் - முதல் பாகம்

ந - நா

Vol. V - Part - I

முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.

அரசு செயலாளர்,

தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட

இயக்கக வெளியீடு

2005

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ஐந்தாம் மடலம் - முதல் பாகம்

ந, நா

Vol. V - Part - I

முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.

அரசு செயலாளர்,

தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு

2005

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 13

முதற் பதிப்பு : 2005

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. V, Part - I

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு
Government of Tamilnadu

விலை : உருபா 400/–

குறியீட்டெண் : Colon No. P.J1-J, 314"K.M4

வெளியிட்டோர் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

அச்சீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை 600 113.

நூல் கிடைக்குமிடம் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை – 600 113.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

VOL. V- PART I

ஐந்தாம் மடலம் - முதல் பாகம்

(ந - நா)

பதிப்புக் குழு

முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.

அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும்

அறநிலையத் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

கூர்ந்தாய்வாளர்கள்

புலவர் த.சரவணத் தமிழன்

திரு.மா.பூங்குன்றன்

தொகுப்பாளர்கள்

திரு.முத்து.பிச்சை (பகுதிப் பொறுப்பாளர்)

முனைவர் மு.கண்ணன்

முனைவர் பா.வெற்றிச்செல்வன்

முனைவர் ச.செந்திலாண்டவன்

முனைவர் இரா.கு.ஆல்துரை

திரு.கா.இளமுருகு

திரு.ச.கி.கணேசன் (ஓவியர்)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

ஜெ ஜெயலலிதா
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை–600 009.

நாள்........ 26.12.2005

அணிந்துரை

'வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி தமிழ்!' அந்த வண்டமிழ், 'ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி இசை கொண்டு வாழ' ஏற்ற பணிகளை ஆற்றி வருகிறது எனது அரசு.

தமிழ்நாடு அரசு, தமிழ் நாடும் அரசாக விளங்குகின்றது. இந்திய அரசின் ஆட்சி மொழியாகத் தமிழை ஆக்கவும், இணையற்ற தமிழ் மறையாம் திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக ஆக்கவும், ஒல்லும் வகையான் ஓயாது முயன்று வருகிறது தமிழ்நாடு அரசு. 'முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையதாய் விளங்கும் நம் தமிழ், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய்' விளங்க வேண்டும் என்ற விழைவோடு, முத்தமிழோடு நான்காம் தமிழாக அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தி, அதனை மழலையர் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை, மாணவ மாணவியர் கற்க ஏற்பாடு செய்தேன்.

உயர்தனிச் செம்மொழியாம் தமிழின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதுடன் நில்லாது, தமிழ் வளர்த்த சான்றோர்கள் நினைவைப் போற்றும் வகையில் விழாக்கள் எடுத்தும், நினைவிடங்கள் அமைத்தும், அவர்தம் நூல்களைப் பொது உடைமையாக்கியும் சிறப்பித்து வருகிறது எனது அரசு. அந்த வகையிலே, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவைக் கொண்டாடி மகிழ்ந்ததுடன், அவரது நினைவை என்றென்றும் போற்றிப் பாராட்டிடும் வகையில் மதுரை மாநகரில் மணி மண்டபம் உருவாக்கிடவும் முனைந்துள்ளது.

தமிழ் மொழியின் தனிப் பெரும் வளர்ச்சி குறித்த கவிஞர்களின் கனவுகள் நனவாக்கப்பட வேண்டும் என்பது என் விருப்பம்

"வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளி உறுத்தும் படங்களோடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்"

என்ற பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் கனவு மெய்ப்படும் விதத்தில், தமிழ் மொழியின் சொல் வளத்தைப் பெருக்க 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி' (A Comprehensive Etymological Dictionary of Tamil Language) நூல்களை உருவாக்கும் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் சார்பாக கடந்த 2002–ஆம் ஆண்டு வரை ஆறு பகுதிகள் மட்டுமே வெளியிடப்பட்டிருந்தன. 2002–2003–ஆம் ஆண்டில், சட்டமன்றப் பேரவையில், எஞ்சிய 25 பகுதிகள் நான்காண்டுகளில் தொகுத்து முடிக்கப் பெறும் என்ற அரசின் அறிவிப்பினைத் தொடர்ந்து, தொய்வுற்றிருந்த அகரமுதலித் திட்டத்திற்குப் புத்துயிர் ஊட்டி, போதுமான நிதியுதவியும் வழங்கி, பணிகள் முடுக்கிவிடப்பட்டதன் விளைவாய், ஆண்டுக்கு ஆறு பகுதிகள் என்ற முறையில், முதற்கட்டமாகத் தொகுத்து அச்சிட்டு முடிக்கப்பட்ட 'ச' மற்றும் 'த' வரிசைச் சொற்களின் 6 பகுதிகள் அண்மையில் 9.8.2005 அன்று என்னால் வெளியிடப்பெற்றன. அதனைத் தொடர்ந்து இரண்டாவது கட்டமாக 'ந' மற்றும் 'ப' வரிசை சொற்களில், 6 பகுதிகள் தொகுத்து முடிக்கப்பட்டு அச்சிடப்பட்டு அவை தற்போது வெளியிடப்படுவதை அறிந்து பெரு மகிழ்வு அடைகிறேன்.

'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிப்' பணி சீரிய பணி. அந்தச் சீரிய பணியில் ஈடுபட்டு செந்தமிழைச் செழுந்தமிழாய் ஆக்கிவரும் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

தமிழ் வாழ்க! தமிழ்ப் பணி வளர்க!

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
டாக்டர் செல்வி ஜெ ஜெயலலிதா



தமிழ்நாடு அரசு

சி.வி.சண்முகம்
கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை

"தமிழுண்டு தமிழ் மக்களுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு"
– (பாவேந்தர்)

மிகப் பழங் காலந்தொட்டு மொழி பற்றிய ஆய்வு இருந்து வந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் உள்ளன என்பர் மொழியாராய்ச்சியாளர்கள். தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள் பண்டைக் காலத்தில் கொண்டிருந்த மொழி பற்றிய தெளிவான அறிவினைத் தெற்றெனத் தெரிவிப்பனவாக இருப்பதைக் காணலாம். மொழியானது மாறும் தன்மை கொண்டது; பழமையான மொழிக் கூறுகளில் சில அழிவதும் புதியதாக சில தோன்றுவதும் மொழி வழக்கில் இயல்பு என்பர் அறிஞர் பெருமக்கள்.

தமிழ் மொழியைப் பொறுத்தவரை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான இடைவெளியில் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை மறுக்கவியலாது. பழைய சொற்கள் சில வழக்கொழிந்துள்ளன. புதிய சொற்கள் பல உருவாகியுள்ளன. புதிய கண்டுபிடிப்புகளையும், புதுப்புனைவுகளையும் வெளிப்படுத்த புதுச் சொற்கள் தேவை. இது மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாய் அமையும் என்பதில் ஐயமில்லை.

ஞாலத் தொன்மொழிகளுள் தாய்மையும், தலைமையும், தகைமையும் கொண்டது நம் தமிழ்மொழியாகும். தமிழின் தூய்மையையும், மாண்பையும், தனித்தியங்கும் ஆற்றலையும், இயற்கைச் சிறப்பையும் இனிமையையும், எளிமையையும் விரிவாக எடுத்துக்காட்டி நிலைநாட்டிய பெருமை 'மொழிஞாயிறு' தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு உண்டு. சொற்களை அகழ்வாய்வு செய்வதன்வழி மொழிக்கு அகழ்வாய்வு என்ற துறையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்திய பெருமை அவரைச் சாரும்.

அத்தகைய மாபெரும் அறிஞர் காட்டியுள்ள நெறிமுறைகளை அடியொற்றி செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி பகுதிகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. அண்மையில் 'ச'கரம் மற்றும் 'த'கரம் வரிசையில் 6 பகுதிகள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின்

திருக்கரங்களினால் வெளியிடப்பெற்றுள்ளன. அதனைத் தொடர்ந்து தற்போது 'ந'கரம் மற்றும் 'ப'கரம் வரிசையில் 6 பகுதிகள் வெளியிடப் பெறுகின்றன என்பதையறிந்து மகிழ்கிறேன். இந்த சீரியத் திட்டத்திற்கு அனைத்து வகையிலும் பேராக்கமும், பேராதரவும் நல்கி வரும் நம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி 'அம்மா' அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே, ஏன் ஆசியக் கண்டத்திலேயே தலைசிறந்து விளங்கும், தன்னிகரில்லாத் தங்கத் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சிக் காலம் பொற்காலம் என்று மேனாட்டரும் புகழ்பாடுகின்றனர். சோதனைகளை முறியடித்து, சாதனைக்கு மேல் சாதனைப் படைத்து, வெற்றிக் கொடி நாட்டி வரும் மாண்புமிகு முதலமைச்சர் 'அம்மா' அவர்களின் சாதனைகள் நீண்டு தொடரும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி வெளியீடுகள் வருவதில் அரும்பங்காற்றிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் பொறுப்பு இயக்குநராகப் பதவி வகிக்கும் தமிழ் வளர்ச்சிப் பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசு செயலாளர் முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப., அவர்களுக்கும், நூல்களை உருவாக்குவதற்கு அயராதுழைத்த அகரமுதலித் திட்ட இயக்ககப் பணியாளர்களுக்கும் என் மனமுவந்த பாராட்டுக்கள்.

2.11.13

சி.வி.சண்முகம்

சென்னை.

முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி–பண்பாடு (ம)
அறநிலையத் துறை மற்றும்
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்.

பதிப்புரை

"சொற்பிறப்பியற் பணிக்கென்றே
தம்மை இறைவன் படைத்தனன்"

என்று உளங்கூர்ந்துரைத்து, அப்பணியிலேயே அரை நூற்றாண்டுக் காலம் மூழ்கி, உலக மொழியியல் அரங்கில், தமிழ் மொழியைத் தலைநிமிரச் செய்த பெருமை, செந்தமிழ் வேழம் தேவநேயப் பாவாணரையே சாரும். 'சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே', என்னும் உண்மையை, உலகினில் வாழும் ஒவ்வொரு தமிழனுக்கும் உணர்த்தியவர் அவர். ஞாலம் முழுவதும் சிதறுண்டு வாழுந் தமிழினத்தை ஒன்று சேர்த்த, அப்பேரறிஞரின் அறிவார்ந்த அடிச்சுவட்டில், அவரெழுதிய ஆய்வு நூல்களை உறுதுணையாகக் கொண்டு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி ஐந்தாம் மடலத்தின் முதற்பகுதி (ந, நா) அணியமாக்கப்பட்டுள்ளது. இந்நூல் பேரகரமுதலி வெளியீடுகள் வரிசையில் பதின்மூன்றாவது பகுதியாகும்.

இதுகாறும் வடசொற்களென்று கருதப்பட்டு வந்த, நகம், நந்தி, நாசம், நாட்டியம் முதலானவை, மொழிமீட்பரின் சொற்பிறப்பு நெறிமுறைக் கோட்பாட்டின் அடிப்படையில், மோனியர் வில்லியம்சின் வடமொழியகரமுதலிப் பொருளை முன்மொழிந்து, இலக்கிய வழக்கு, உலக வழக்கு, முதலானவற்றின் துணையுடன், சொற்பொருளைக் கால முறை வரிசையில் எடுத்துக்காட்டி, பொருத்தமான பொருள் விளக்கங்களுடன் வேர்மூலங் காட்டி விளக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 'நாட்டியம்' என்ற சொல்லின் விளக்கம் வருமாறு:–

நாட்டியம் *nATTiyam* பெ.(n.) 1. கூத்து; dancing, acting. *"நாட்டிய நன்னூல்" (சிலப்.158).* 2. கை, முதலியவற்றில் காட்டுங் குறிப்பு; hint, signal.

மறுவ. நடனம்

த. நாட்டியம் > skt. *nATya*

[நள்→நளி→நடி→நடு→ நட்டு→நாட்டு + இயம். இயம் = சொல்லாக்க ஈறு. ஒ.நோ. இலக்கியம், இன்னியம், பண்ணியம், பாவியம், தமிழியம், ஓவியம், வாழ்வியம்.]

.....2.....

'நள்' எனும் பொருந்துதற் கருத்து வேரிலிருந்து கிளைத்த சொல்லே, நாட்டியம். நள்→நளி→நளிதல் = ஒத்தல், ஒத்துச் செய்தல் என்னும் பொருண்மையில் இலக்கியங்களில், வழக்கூன்றியுள்ளதால், இச்சொல், தமிழ்ச்சொல்லே எனலாம். நடி என்னும் முதனிலையே, நாட்டியம் என்பதன் அடிச்சொல். வடவர் காட்டும் 'நாட்ய' என்ற நலிந்த வடிவம், நடு, நட்டு, நட்டம் என்னும் தீந்தமிழ்ச் சொற்களைத் திரித்த வடிவமாகும். பண்டைத் தமிழ் நாட்டியமே, இன்று பரதநாட்டியம் என்றழைக்கப்படுகிறது என்பார் பாவாணர்.

எம்மொழிச்சொல்லையும், நம்மொழிச் சொல்லாக்கும் தனிச்சிறப்புமிக்க சொல் வளத்தினைத் தன்னகத்தே கொண்ட, ஈடிணையில்லாச் சொற்கட்டமைப்புடன் திகழும் இயன்மொழி, நம் தமிழ்மொழி; அத்தன்மைக்கு ஏற்றவண்ணம், நகம், நந்தி, நகரம், நாணயம் போன்ற சொற்கள் செம்மையாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

இயன்றவரை, இந்நூலில் முன்னொட்டுகள், பின்னொட்டுகள், இடையொட்டுக்கள், ஈறுகள் முதலானவை, உரியவாறு பிரித்து விளக்கப்பட்டுள்ளன. நாட்டுப்புற மக்கள் நாவில் நிலைபெற்றுத் திகழும் பழமொழிகள், இடவழக்குகள் முதலானவை நேரிய வகையில் இணைத்துக் காட்டப்பட்டுள்ளன.

இக்கால வழக்குகளும் நாளிதழ், நாட்டுநடப்பு, நாடி, நாடிபார்த்தல், நாட்டுக்கட்டை போன்ற சொற்களில் நன்கு பொருத்திக் காட்டப்பட்டுள்ளன.

அகரமுதலித் திட்டத்திற்கு அனைத்து நிலைகளிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், அவர்கள் காட்டிய வழியில் அனைத்து உதவிகளையும் அளித்திடும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் கனிவான நன்றியறிதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூல் வெளிவருவதில் அரும்பணியாற்றிய தொகுப்பாளர் (பகுதிப் பொறுப்பாளர்), பதிப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர்கள் மற்றும் திட்டப் பணியாளர்கள் அனைவரும் பாராட்டுக்குரியோராவர். நூலை நன் முறையில் அச்சிட்டுத் தந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பு.ஏ.இராமையா)

சென்னை

.07.2005

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ந

ந் *n,* மெய்களுள் எட்டாவதானதும், பல்லின மூக்கொலியுடையதுமான மெல்லெழுத்து; the eighth consonant, dental nasal

[ந் = தகரம் பிறக்கின்ற இடத்தில் நாவும், பல்லும் நிற்க, வாய்வழியாக மட்டுமன்றி, மூக்கின் வழியாகவும், உயிர்வளி வெளிவர, மேலண்ணம் கீழிறங்க ஒலிக்கும். மூக்கொலியாதலின் மெல்லெழுத்து எனப் பெயர் பெறும். பந்து, கந்து, சந்து, என்பது போல, தகரத்தின் முன்வரும் இடங்களில் மட்டும், தகரத்திற்கு ஒத்த மெல்லெழுத்தாகவே, இது ஒலிக்கும்.]

ந[1] *na,* பெ. (n.), நகர மெய்யும், அகர வுயிரும் புணர்ந்து பிறக்கும், உயிர்மெய் யெழுத்து; a syllabic letter which consists of (n + a) n (ந்) and the vowel a (அ).

ந் + அ → ந.

“ந”கர உயிர்மெய்யின் பிறப்பிடத்தைத் தொல்காப்பியர் பின்வருமாறு வரையறுத் துள்ளார்.

“அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின் நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத் தாமினிது பிறக்கும் தகார நகாரம்”

(தொல்.எழுத்து.93)

தமிழ், மலையாளம் முதலிய சில மொழிகளிலன்றிப் பிற திரவிட மொழிகளில் ன–ந வேற்றுமை இல்லை.

அஞ்ஞை (அன்னை) செய்குந முதலான வழக்குகள் கழகக்காலச் செய்யுட்களில் மட்டும் சிறப்பாகக் காணப்படுபவை எனலாம்.

நகரவுயிர்மெய் வரிவடிவ வளர்ச்சி:–

படுக்கைக் கோட்டில் அமைந்த செங்குத்துக் கோடே, நகரவுயிர்மெய்யின் முந்துதமிழ் வரிவடிவாகும். இவ் வரிவடித்தின் காலம் கி.மு.6. கொற்கைப் பானையோட்டில் காணப்படுவதும், இக் குறியே ஆகும்.

இக்குறியே தமிழகக் குகைக் கல்வெட்டு களில் பரவலாகக் காணப்படுகிறது. தமிழி அல்லது தாமிழியெழுத்தென்று கல்வெட் டறிஞர்களால் குறிக்கப்படுவதும், இஃதேயாகும். இந்தியமொழிகளில் தமிழ்பிராமி அல்லது அசோகன் பிராமி என்று அழைக்கப்படுகிறது. பிராமி என்பதைப் புரோமி என்றும் வழங்குவர். அசோகன் புரோமிக்கு முந்தியது தமிழி. கி.மு.3 ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்திலும், வடஇந்தியாவில் சிறு மாற்றத்துடன் மோரியர் குசானர், குப்தர் கல்வெட்டுகளிலும் தமிழி காணப்படுகிறது.

திருநாதற்குன்று குகைக் கல்வெட்டில் காணப்படும். தமிழியெழுத்து



கி.பி.7 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில்



கி.பி.8 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில்

கி.பி.9 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில்

கி.பி.10 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில்



கி . பி . 1 1 ஆ ம் நூ ற் ற ா ண் டு க் கல்வெட்டுகளில்

கி . பி . 1 2 ஆ ம் நூ ற் ற ா ண் டு க் கல்வெட்டுகளில்

கி . பி . 1 3 ஆ ம் நூ ற் ற ா ண் டு க் கல்வெட்டுகளில்

கி . பி . 1 4 ஆ ம் நூ ற் ற ா ண் டு க் கல்வெட்டுகளில்

ந² *na,* பெ. (n.), 1. சிறப்புப் பொருளுணர்த்தும் இடைச்சொல் (நன். 420, மயிலை); a particle denoting excellence as, நப்பின்னை, நக்கீரன், நக்கடகம். 2. மிகுதிப் பொருளுணர்த்தும் இடைச்சொல்; expressing abundance, excess. *"நக்கரைந்து போம் இத்தனை"* (திவ். திருநெடுந் 7, வ்யா. 59).

[ந் + அ = ந.]

'ந' என்பது— ந் + அ → ந. 'ந' என்பது, நக்கீரன் என்பதிற் போலச் சிறப்பினையும், நக்கரைந்து (மிக்கரைந்து) என்பதிற் போல, மிகுதிப் பொருண்மை குறித்த தமிழ் முன்னீடாக (Prefix) வழங்கும். இம் முன்னொட்டினை, வடமொழியாளர் எதிர்மறைப் பொருண்மையில் பயன் கொண்டனர். நமித்திரர் (மித்திரர் அல்லார்). (எ.டு.) 'நல்' என்பதன் திரிபுமாகலாம். (எ.டு) நல்லந்துவனார். மொழிக்கு முதலில் நகரம் எல்லா உயிர் எழுத்துக்களோடும், பயிலுந் தன்மைத்து. வெரிந், பொருந் போன்ற கழகக் காலச் சொல்லாட்சிகளில், மொழிக்கு ஈறாகி வந்தது. காலப் போக்கில் நகரவீறு, 'உ'கரச்சாரியை பெறுவது, இயல்பாயிற்று.

நக்கச்சூது *nakka-c-cūdu,* பெ. (n.), நரியின்குணமொத்த நயவஞ்சகம்; mean trick, sly device, as of a fox.

க. நக்கே =நரி.

தெ. நக்கு.

[நக்கை → நக்கு → நக்க + சூது. நக்கன் =நரி.]

நக்கசாரணர் *nakka-šāraṇar,* பெ. (n.), நாகரினத்தவர்; a tribe of nāgas *"நக்க சாரணர் நாகர் வாழ்மலை"* (மணிமே. 16:15).

[நாகர் → நக்கர்.அரணம் → சரணம் → சாரணம் → சாரணர்.]

நக்கண்ணையார் *na-k-kaṇṇaiyār* பெ. (n.), புகழ்பெற்ற சங்கப்புலவர்; an eminent šaṅgam poetess

[நல் + கண்ணையார்.]

ஒருகா. நற் + கண்ணையார் → நக்கண்ணையார்.

நக்கண்ணையார் - அழகிய கண்கள் வாய்க்கப் பெற்ற கழகக்காலப் பெண்பாற் புலவர்; இவரைப் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணை, என்பர். இவர் பாடல்கள் அகநானூற்றிலும் (அகம்.252), புறநானூற்றிலும், (புறம். 83, 84, 85) நற்றிணையிலும், (நற். 19, 87) காணப்படுகின்றன. புறநானூற்றில் இவர் பாடிய பாடல்களில், சோழமன்னன் தத்தன் மகனான, போர்வைக் கோப்பெருநற்கிள்ளியைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கோப்பெருநற்கிள்ளிபால், காதற்காமம் கொண்டு தொடி நெகிழ்ந்து, பசப்பெய்திய பான்மையினைப் புறநானூறு 83–வது பாடலில் பாடுகிறார். இவர்தம் பாடல்கள், பெருநற்கிள்ளி தன் தந்தையொடு மாறுபட்டு, நாடிழந்து, புல்லரிசிக் கூழுண்டு வருந்திய நிலையினையும், ஆமூர்மல்லனைப் போரில் வென்ற திறத்தினையும் வியந்து கூறும், காமுற்ற காரிகையின் கூற்றுப்போல், அமைந்துள்ளன. இவர் பாடிய புறநானூற்றுப்

பாடல்களில் (புறம்.83,84,85), சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளிபால், இவர் கொண்ட கைக்கிளைக் காமக்காதல், திறம்படச் சித்தரிக்கப்படுகின்றன எனில், மிகையன்று.

"அடிபுனை தொடுகழன் மையணற் காளைக்கென் தொடிகழித் திடுதல்யான் யாயஞ் சுவலே அடுதோண் முயங்க லவைநா ணுவலே என்போற் பெருவிதுப் புறுக; என்றும் ஒருபாற் படாஅ தாகி இருபாற் பட்டவிம் மையலூரே." (புறம்–83).

காதலொழுக்கம் மேற்கொண்ட மகளிர், தம் காதலரைப் பிரிந்த ஞான்றும், தலைக்கூடப் பெறாத போழ்தும், உடம்பு பசந்து, நனி சுருங்கித் தொடியும், வளையும் கழல, வருந்துவாராதலின், இங்கே பெருநற்கிள்ளியைத் தலைக்கூடப் பெறாத நக்கண்ணையார், "மையணற் காளைக்குத் தொடிகழித்திடுதல் அஞ்சுவல்" என்றும், தன்னொழுக்கத்திற்குத் தாய் இடையூறாதலின், "யா யஞ்சுவல்" என்றும் கூறினார். சான்றோர் கூடிய அவையினர் ஒருத்தியை ஒருவற்குத் திருமணத்தால் கூட்டி வைப்பாராதலின், அவர் தாம் விரும்பியவாறு, தாமே சென்று கூடற்கு, அவ்வவையினர் இகழ்வர் என்பது பற்றி, "அவை நாணுவல்" என்றார். தமது மையலை ஊர்மேலேற்றி "மையலூர்" என்றார். (புறம்.83. ஔவை. சு. துரைசாமியார் உரை.)

நக்கணி¹ *nakkaṇi,* பெ. (n.), கருங்காரை வகை; (L.); black honey thorn.

நக்கணி² *nakkaṇi,* பெ. (n.), *நக்கேணி²* பார்க்க; see *nakkēṇi²*

நக்கத்தனம் *nakka-t-taṉam,* பெ. (n.), இவறன்மை (இ.வ.); miserliness stinginess. வீட்டில் உள்ள நக்கத்தனமே வெளியிலும் வளரும் (உ.வ.). ஈரக்கையால் காக்காய் ஓட்டாத நக்கத்தனம் நாட்டில் பெருகி வருகிறது (உ.வ.). நக்கத்தனத்திற்கு நாட்டில் பஞ்சமில்லை (இ.வ.).

[நக்கு → நக்க + தனம்.]

நக்கப்பறையன் *nakka-p-paṟaiyaṉ,* பெ. (n.), பறையர் தலைவன்; headman of the paraiyās (G. Tp. D, I, 131).

[நக்க + பறையன்.]

நக்கப்பிட்டிஇலை *nakka-p-piṭṭi-ilai,* பெ. (n.), மருந்திலை வகை; a kind of medicinal herb

[நக்கப்பிட்டி + இலை.]

நக்கபாரம் *nakka-pāram,* பெ. (n.), *நக்கவாரம்* பார்க்க (யாழ்.அக.); see *nakka-vāram.*

[நக்கவாரம் → நக்கபாரம்.]

நக்கபாரி *nakka-pāri,* பெ. (n.), *நக்கவாரி* பார்க்க (யாழ். அக.).; see *nakka-vāri*

[நக்கவாரி → நக்கபாரி.]

நக்கபூசவெண்ணெய் *nakka-pūša-v-eṇṇey,* பெ. (n.), உள்ளுக்குச் சாப்பிடவும், வெளிக்கு மேல் மருந்தாகத் தடவவும். பயன்படும்படிக் காய்ச்சி வடித்த எண்ணெய். a medicated oil prepared so as to be useful for taking internally and also as an external application

[நக்கல் + பூசுதல் + எண்ணெய்.]

ஒரே சமயத்தில் இரு வழிகளில் பயன்தரும் பொருட்டுக் காய்ச்சிவடித்த எண்ணெய். சித்தமருத்துவத்தில்தான் எண்ணெயின் பயன்பாடு இருவழிகளில் அமையும். சித்தமருத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்த ஆயுள்வேதத்திலும், எண்ணெய்ப் பூச்சு மருத்துவம், காணப்படுகிறது.

நக்கம் *nakkam,* பெ. (n.), 1. ஆடையின்மை; nakedness. *"நக்கம்வந்து பலியிடென்றார்க்கு"* (தேவா. 91:2). 2. வறுமை; poverty.

த. நக்கம் → skt. nagna., pkt. nakka.

[நக்கு + அம் → நக்கம்.]

மறைந்த வளமை. ஆடையற்ற வெறுமை நிலை. நக்கர் என்னும் சொல், தமிழகத்தின் வடக்கே, ஆடை அற்றவர் எனும் பொருண்மையில், இன்றும் வழங்குவதறிக. ஒன்றுமற்ற நிலையை, நக்கநிலை என்பர். வெறுமை நிலையை விளக்கும், வறுமை குறித்த சொல்.

ஆடையற்ற உடம்பு வெறுமையாய்த் தோன்றுதல் போல், பொருளற்ற வாழ்வும் வறுமையாயிருத்தல் இயல்பே. இலக்கிய வழக்கிலும், வாழ்வியல் பொருண்மையிலும், நக்கம் என்னும் இச் சொல், இன்மை குறித்த வழக்காக, வழங்கி வந்துள்ளது.

நக்கர் *nakkar,* பெ. (n.), நாகரிகத்தில், பிந்தியவர்களாக இயல்பாகவே, ஆடையின்றி வாழும் பழங்குடியினர்; uncivilized and unclothed (naked) tribals

[நக்கு + அர் → நக்கர்.]

நக்கரம்¹ *nakkaram,* பெ. (n.), முதலை; crocodile "நக்கரக் கடற்புறத்து" (கம்பரா. நட்புக் கோட். 68).

த. நக்கரம் → skt. nakra.

[நக்கு + அரம்.]

நக்க : மறைந்த பொருள், மறைந்திருக்கும் பொருள், மறைந்திருந்து, அரவம் போன்ற தனது நாவினால், உணவினைப் பிடிப்பதாலும், பிடித்த உணவினைக் கற்பொந்துகளில் மறைத்து வைத்து உண்பதாலும், இப் பெயர் வழங்கிற்று.

நக்கரம்² *nakkaram,* பெ. (n.), தேள்; scorpion.

[நாக்கு → நக்கு + அரம்.] அரம் போன்று கூர்மையான கொடுக்கினையுடைய தேள்.



நக்கரா *nakkarā,* பெ. (n.), *நகரா* (இ. வ.) பார்க்க; see *nagarā*

[நற்கரா → நக்கரா (இ. வ.)]

நக்கரி¹-த்தல் *nakkari-,* 4.செ. கு. வி. (v.i.), 1. நகர்ந்து செல்லுதல்; to move along in a sitting posture, as a lame or sick person 2. தவழ்தல்; to creep with difficulty, as a weak child, a wounded reptile 3. படுகிடையாதல்; to be bedridden. 4. படுக்கையிற் புரண்டு கிடத்தல்; to roll in bed

[நகர் → நக்கர் → நக்கரி-.]

நக்கரி² *nakkari,* பெ. (n.), *நகரிகவுளி* பார்க்க; see *nagari kavuḷi*

[நகர் → நக்கரி.]

நக்கரை—தல் *nakkarai-,* 2 செ.கு.வி. (v.i.), மிகக்கரைதல்; to stout loudly.

[ந + கரை—.]

ந = அளவிற்கு அதிகமாகக் கத்துதல் எனும் பொருண்மையில் பயின்றுவரும் மிகுதிப் பொருள் முன்னொட்டு.

நக்கல்[1] *nakkal,* பெ. (n.), 1. உணவு உட்கொள்ளும் ஐந்து முறைகளுள் ஒன்று; [ஐந்து முறைகளாவன: கடித்தல், மெல்லல், விழுங்கல், பருகல், நக்கல்] food taken by licking. 2. நக்கியுண்ணும் இளகியம் (வின்.); electuary taken by licking with the tongue. 3. நாவால் பருகல்; electuary which is taken by the tongue 4. எச்சில் (வின்.); leaving, scrapings. 5. உண்ணுகை (அரு. நி.); eating. 6. தீண்டுகை (அக. நி.); touching. நீர்நக்கல் (கல்). 7. இவறன்; miser. *"இந்நக்கலின் துர்க்குணத் தால்"* (ஆதியூரவதானி—27).

[நா → நாக்கு → நக்கு → நக்கல்.]
நக்கல் = நக்கி உண்ணல்

நக்கல்[2] *nakkal,* பெ. (n.), 1. சோறு (அரு. நி); boiled rice. 2. நக்கியுண்ணும் உணவு; food taken by licking.

அரிசி சோறாக்கப்பட்டதும் ஒளி மிகுந்திருத்தல் பற்றி வந்த பெயரென்க. சோற்றை மோர் ஊற்றிப் பிசைந்து நக்கியுண்ணுங்கால் வந்த பெயராகலாம்.

நக்கல்[3] *nakkal,* பெ. (n.), 1. சிரிப்பு (சூடா); laughing. நக்கலாய்ப் பேசுவதில் அவன் கெட்டிக்காரன் (உ.வ.). 2. ஏளனம், பகடி (பரிகாசம்); mockery. ஏன் சும்மா அவனையே எல்லோரும் சேர்ந்து நக்கல் செய்கிறீர்கள். சிரிப்பு, நையாண்டித்தனம் 'அவன் நக்கலாய்ப் பேசுகிறான்'. (உ.வ.) 3. ஒளி; brightness, splendour

மறுவ. குத்தல்பேச்சு

[நகு → நகல் → நக்கல் = இகழ்ச்சி.]

நக்கல்[4] *nakkal,* பெ. (n.), வடுச்சொல், குத்தல் பேச்சு; sarcasm. 'குறைகளைச் சொன்னால் அவற்றைத் தீர்த்து விடவா போகிறீர்கள்' என்று நக்கலாகக் கேட்டார் (உ.வ.).

[நகு → நகல் → நக்கல்]

நக்கல்[5] *nakkal,* பெ. (n.), *நகல்* பார்க்க; see *nagal.*

[நகு → நக்கு → நக்கல்]

நக்கல்செய்—தல் *nakkal-sey-,* 1 செ.குன்றாவி. (V.t.), *நங்கு—தல்* பார்க்க; see *nangu-.*

[நக்கு → நக்கல் + செய்—,]

நக்கல் செய்தல் இன்று, பொதுவாக மக்களிடையே வழக்கூன்றிவிட்டது. சிற்றூர்களிலும், பேரூர்களிலும், ஒருவரை ஒருவர் நக்கல் செய்து பேசுதல் இன்று இயல்பாய்க் காணப்படுகிறது.

நக்கலம் *nakkalam,* பெ. (n.), ஊர்வன; crawling insects

இச் சொல்லடியில் பிறந்த சொற்கள் நாகம், நகுலம் (ஊர்ந்து செல்வது) நண்டு, நந்து—முதலானவை, ஊர்தல் கருத்தினடிப்படையில் தோன்றின எனலாம்.

நக்கலாதகம் *nakkaladagam,* பெ. (n.), தகரை; ring worm plant - Cassia tora.

நக்கலெண்ணெய் *nakkal-enney,* பெ. (n.), நாவால் நக்கியுண்ணு மெண்ணெய்; a medicated oil just taken internally by licking.

[நக்கல் + எண்ணெய்.]

நக்கல் = நாவால் நக்கி உண்ணுதல்.

எள் + நெய் → எண்ணெய்.

நக்கவரி *nakkavari,* பெ. (n.), வறட்சுண்டி; floating sensitive plant.

மறுவ. நகரி, தொட்டால்சிணுங்கி.

[நக்க + வரி.]

*[***ஒருகா.** நமக்காரி → நக்கவரி.*]*

நக்கவாரக்கச்சவடம் *nakkavāra-k-kacca-vaḍam,* பெ. (n.), கைமேற் பணம் பெற்று நம்பிக்கையற்ற நக்கவாரத்தீவினர் செய்யும் வணிகம், நம்பிக்கையற்ற வணிகம்; a trade with ready cash alone is his vogue, traffic in which trust and good faith do not find a place.

[நக்கவாரம் + கச்சவடம்.]

நக்கவார மக்களிடையே நடந்த வணிகத்தில், கைமேற்பணம் பெறுவது நம்பிக்கையற்று இருந்தமையால், இப் பெயர் வழங்கியிருக்கக்கூடும்.

நக்கவாரத்தாழை *nakkavāra-t-tālai,* பெ. (n.), நக்கவாரத்தீவில் விளையும் தாழை; Nicobar bread fruit plant, screw pine growing in Nicobar island.

[நக்கவாரம் + தாழை.]

(நக்கவாரம் = வங்காளக் குடாக்கடலில் உள்ள தீவு)

நக்கவாரத்தென்னை *nakkavāra-t-tennai,* பெ. (n.), *நக்கவாரப்பிள்ளை* பார்க்க; see *nakkavārap-pillai.*

[நக்கவாரம் + தென்னை.]

நக்கவாரப்படு—தல் *nakkavāra-p-paḍu-,* 20 செ. கு. வி. (v.i.), மிக்கவறுமையடைதல்; to be in pinching poverty, in straitened circumstances.

[நக்கவாரம் = வறுமை, ஏதுமற்ற நிலை. நக்கவாரம் + படு—.]

நக்கவாரப்பேச்சு *nakkavāra-p-pēccu;* பெ. (n.), நம்பிக்கையற்ற பேச்சு (வின்.); talk betraying want of faith.

[நக்கவாரம் + பேச்சு.] நம்பியவரைக் காட்டிக்கொடுக்கும் பேச்சு; இரண்டகத் தன்மையுள்ள பேச்சு; உண்மைக்கு ஊறுவிளைவிக்கும் தவறான பேச்சு.

நக்கவாரம்[1] *nakkavāram,* பெ. (n.), வங்கக் கடலில் அந்தமான் தீவிற்குத் தெற்கே உள்ள தீவு; "தேனக்க வார்பொழில் மாநக்க வாரமும்" (முதல் இராசேந்திரன் மெய்க்கீர்த்தி); an island in bay of bengal which is situated southward of Andamān islands.

[நக்க + வாரம்.]

நக்கவாரம்[2] *nakkavāram,* பெ. (n.), வறுமை; indigence.

[நக்க + வாரம்.]

ஆடையற்ற மக்கள் வாழும் இடம். வறுமையின் உச்சகட்டம் ஆடையின்மை யாதலின், இது வறுமையைக் குறிப்பதாயிருக்கலாம்.

நக்கவாரம்பிடி—த்தல் *nakkavāram-piḍi-,* 4. செ. கு. வி. (v.i.), வறுமையாதல் (வின்.); to become poor.

[நக்கவாரம் + பிடி—.]

நக்கவாரம்பிள்ளை *nakkavāram-piḷḷai-,* பெ. (n.), நக்கவாரத் தீவிலுள்ள தென்னை; a coconut tree found in Nicōbar island.

[நக்கவாரம் + பிள்ளை.]

மிகுதியான இளநீருடன், மஞ்சள் வண்ண தேங்காய்களை அதிகமாகத் தரும் தென்னம்பிள்ளை.

நக்கவாரமாய்ப்போ—தல் *nakkavāramāy-p-pō-,* 8. செ. கு. வி. (v.i.), ***நக்கவாரப்படு —.*** (வின்.) பார்க்க; see *nakkavāra-p-paḍu-,*

[நக்கவாரம் + ஆய் + போ—.]

நக்கவாரி¹ *nakkavāri,* பெ. (n.), 1. நக்கவாரத் தீவினர் (வின்.); native of the Nicobars. 2. கைமேற்பணம் பெற்றுச் செய்யும் வணிகர்(வின்.); one who trades for ready money 3. நம்பிக்கையற்ற வணிகர் (யாழ். அக.); a merchant who has no confidence in his customers.

[நக்கவாரம் → நக்கவாரி.]

நக்கவாரி² *nakkavāri,* பெ. (n.), 1. நக்கவாரத்திலுள்ளதும், மூன்றாண்டுகளில் காய்ப்பதுமான, குறுகிய காலத்தென்னை வகை (சங்.அக.); dwarf coconut of the Nicobars that bears fruit in its third year. 2. குள்ளமானது; that which is dwarfed or stunted.

[நக்கவாரம் → நக்கவாரி.]

நக்கவாரிமூலி *nakkavāri-mūli,* பெ. (n.), விடத்தாரி; sore eye plant- Mimosa cineria alias - Acacia cineria

[நக்கவாரி + மூலி.]

மூலிகை = இறுதி எழுத்து கெட்டது.

நக்கன்¹ *nakkan,* பெ. (n.), 1. ஆடையற்றவன்; naked person "*அம்மணமாயுள்ளவன் திகம்பரனாகையாலே நக்கனென்று பேராய்*" (திவ். திருவாய் 10:8. பன்னீ). 2. அருகன் (சூடா); Arhat. "*வெல்வினை யறியா நக்கன்*" (திருவிளை. பாண்டி. 10). 3. சிவன்; śivan. "*நக்கன்காண்*" (தேவா. 619:2).

த. நக்கன் → skt. nagna.

[நகு → நக்கல் → நக்கன்.]

முதற்கண் ஆடையற்ற மாந்தனைக் குறித்த இச் சொல், அடுத்த நிலையில், ஆடையின்மை யால் வெளிப்படும் கொள்கைச் சிறப்பினைக் குறித்ததென்க.

ஆடையைத் துறப்பதுபோல், உலகப் பற்று அனைத்தையும் துறந்து, கடவுள் இல்லை, வேள்வி தவறு, கொலையும் புலையும் பிழை என்று உணர்த்திய அருக தேவனைக் குறித்து வழங்கிய பொருண்மை வளர்ச்சியினையும், "நக்கன்¹" என்னும் சொல் உள்ளடக்கியது எனலாம்.

நக்கன்² *nakkan,* பெ. (n.), நடனமகளிர்க்கு முற்காலத்து வழங்கிய சிறப்புப்பெயர்; ancient title of dancing girls attached to temples

[நகு → நக்கு + அன் → நக்கன்.]

நகுதல் விளங்கித் தோன்றுதல். மிக்கு ஒளியுடன் பளபளப்பாயிருத்தல்.

நக்கன் = பளபளப்புடன் நடனமேடையில் விளங்கித் தோன்றும் பெண். நடனமகளிர் மேடையில் நடனமாடுங்கால், பல்வகையணிகளைப் பாங்குடன் பூண்டு, மிக்கு ஒளியுடன் மிளிர்தல் இயல்பே.

நக்கன் எனுஞ்சிறப்புப் பெயர் பூண்ட நடனமகளிர் பற்றிய செய்திகள், தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுகளில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் எண்.7.

(எ.டு) 1. "பழையாறு அவனி நாரணபுரத்து நக்கன் திருவையாறு" 2. "தஞ்சாவூர் பிரமகுட்டத்து நக்கன் திருமகளாம்" 3. "திருவையாறு பெரியதளிச்சேரி நக்கன் கண்டியூர்" 4. "இத்தளி நக்கன் சோழகுல சுந்தரிக்குப் பங்கு ஒன்றும்" (S.I.I.ii.261.).

இக் கல்வெட்டுகளில் காணப்படும் தளிச்சேரிப் பெண்டுகளில் பெரும்பாண்மையோர் பெயர்கள், ஊர்களால் பெற்ற பெயர்களாகவும் அமைந்துள்ளன. இவர்களுக்கு ஊர்ப்பெயர்கள் இருந்து மறைந்தனவா, அல்லது ஊர்ப்பெயர்களே இயற்பெயர்களாக அமைந்தனவா, என்பது புலப்படவில்லை.

'நக்கன்' என்ற சிறப்புப்பெயர், சோழப்பேரரசன் அரசர்க்கரசனாம், இராசராசன் கல்வெட்டுகளில் மிகுதியாகக் காணப்படுகிறது. இவர்கள் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தமையால், ஆடல்வல்லானான நடராசனுக்குப் பெயராய் அமைந்த 'நக்கன்' என்னும் பெயரை, தம் பெயரில் முதலாக வைத்தனர் போலும்.

நக்கன்³ *nakkaṉ,* பெ. (n.), நரி; fox.

க. நக்கெ; **தெ.** நக்க.

[நக்க → நக்கன், நக்க + அன்.]

அன் = ஆ. பா. ஈறு.

நக்கனத்துவம் *nakkaṉa-t-tuvam,* பெ. (n.), *நக்கனம்* (வின்.)பார்க்க; see *nakkaṉam*

நக்கனம் *nakkaṉam,* பெ. (n.), ஆடையற்றநிலை; nakedness, nudity *"நக்கனத்தோடு நடஞ் செய்வான்"* (உபதேசிகா. சிவத்துரோ. 420)

த. நக்கனம் →*skt nagna*

[நக்கன் + அம் + நக்கனம்.]

நக்காரி *nakkāri,* பெ. (n.), வறட்சுண்டி; a kind of sensitive plant.

நக்கி¹ *nakki,* பெ. (n.), 1. ஏழை; poor. 2. இவறன்; miser

ம. நக்கி.

[நக்கு + இ. 'இ' = சொல்லாக்க விகுதி.]

நக்கி² *nakki,* பெ. (n.), ஆடை, திரை போன்றவற்றின் ஓரங்களில் அழகுமிளிர அமைக்கப்படும் பின்னல் (G.Tp.D.I 161), a kind of braid ornamentally stitched on to the borders of garments and curtains.

த. நக்கி → U nakki

[நகு → நக்கு → நக்கி.]

ஆடைகள் விளங்கித் தோன்றுவதற்கு ஏதுவாக, அழகு மிளிர அமைக்கப்படும் கரை அல்லது ஆடைமுந்தி. திரைச் சீலையின் ஓரத்தில் மின்னும் தன்மையில் அமைந்த, பின்னல் வேலைப்பாடு.

நக்கி³ *nakki,* பெ. (n.), உணவினை நக்கியுண்ணும் தன்மையன்; destitute person, as one who licks scrapings.

ம. நக்கி.

[நகு → நக்கு → நக்கி.]

நக்கிடல் *nakkiḍal,* பெ. (n.), நக்குதல்; licking, taking in by the tongue

[நக்கு + இடு + அல். இடு= துணைவினை. அல்லீற்றுத் தொழிற்பெயர்.]

நக்கிதம் *nakkidam,* பெ. (n.), **1.** இரண்டு (சங். அக); two. **2.** இண்டு, புலித் தொடக்கி (சா.அக); tiger stopper.

[நக்கு + இதம்.]

நக்கிப்பூ *nakki-p-pū,* பெ. (n.), தேட்கொடுக்கி (சா.அக.); scorpion sting plant. Indian turnsole.

[நக்கு + இ+ பூ.]

நக்கிரப்பலகை *nakkira-p-palagai,* பெ. (n.), முதலை வடிவுள்ள காலால், தாங்கப்பட்ட பலகை; a plank supported by the image of a crocodile. "*நக்கிரப் பலகையும் நறுஞ்சாந் தம்மியும்*" (பெருங். உஞ்சைக் 38:171).

[நக்கிரம் + பலகை.]

கால்கள் நான்கும் முதலைக்கால் போல் அமைந்த பலகையையோ, மரப்பலகை மேல் முதலை பொறிக்கப்பட்டதாலோ வந்த, பெயராக இருக்கலாம்.

நக்கிரம்[1] *nakkiram,* பெ. (n.), முதலை(சிவதரு. சுவர்க்கநரக. 117); alligator.

[நா → நக்கு → நக்கிரம்.]

நாக்கினால் வளைத்து உணவினை வாயகப்படுத்தும் தன்மையினால், இப் பெயர் பெற்றதாக இருக்கலாம்.



நக்கிரம்[2] *nakkiram,* பெ. (n.), மேல்வாயிற்படி (யாழ். அக.); top beam of a door-frame

நக்கிரா *nakkirā,* பெ. (n.), நக்கிப்பூ; indian turnsole.

நக்கிராக்கியம் *nakkirākkiyam,* பெ. (n.), நிரைய வகை (சிவதரு. சுவர்க்கநரக. 117); a hell.

முறை திறம்புபவர்களை நிரையத்துள், முதலைவாழ் அகழியில் தள்ளித் துன்புறுத்துவதாக, மக்களால் கருதப்படும் பகுதி.

நக்கிரை *nakkirai,* பெ. (n.), தேட்கொடுக்கி; Indian turnsole

[நக்கிரா → நக்கிரை.]

நக்கினகம் *nakkiṉagam,* பெ. (n.), பருத்தி; cotton.

நக்கினம் *nakkiṉam,* பெ. (n), **1.** ஆடையின்மை; nudity **2.** இறந்தபின் உடல் எரிப்பி (தகனத்தி)ற்குப் பிறகு செய்யப்படும், முதல் சடங்கு; the first ceremony performed in honour of a deceased person. **3.** பெண் குறி; pudendum muliebre.

த. நக்கினம் → skt. nagna

நக்கினிக்கரணம் *nakkiṉi-k-karaṇam,* பெ. (n), **1.** ஆடை பெயர்த்தல்; stripping naked. **2.** இன்ப விளையாட்டு; a love play in which the woman is stripped naked

நக்கினிகை *nakkinigai,* பெ. (n.), 1. ஆடையற்றவள் (யாழ். அக.); a naked woman. 2. பெதும்பை; adolescent girl, a girl who is ten years old.

த. நக்கினகை → skt. nagnigā

நக்கு = ஆடையற்ற நிலை.

[ந க் க ணி கை → ந க் கி னி கை. நக்கு + இனி + கை.]

நக்கீரத்தனம் *nakkīrattanam,* பெ. (n.), யாருக்கும் அஞ்சாமல், தவற்றைத் தவறு என்று சுட்டிக் காட்டும் குணம்; the quality of not fearing to criticize the authority.

[நக்கீரர் + தனம்.]

தன்மை + அம். 'அம்', சொல்லாக்க ஈறு. பாண்டிய மன்னன், தன், மனைவியோடு தனித்திருந்தபோது வந்த மணம், கூந்தலின் இயற்கைமணமா? வேறா? என்று எண்ணி, ஐயமுற்றதனை, அவைக்களத்தில் மொழிந்து, தீர்வு செய்யும் பாப்புனைவாருக்குப் பரிசில் 1000 பொற்காசுகள் என்று அறிவித்தான்.

இக் கூற்றினைச் செவிமடுத்த தருமி, இறையனார் எழுதிய பாவினைக் கொணர்ந்து பாடுங்கால், மனமகிழ்ந்த மன்னன் பரிசு வழங்க முற்பட்ட ஞான்று, நக்கீரன் தடுத்து கூந்தல் மயிர்க் கற்றைக்கு இயற்கைமணம் எப்போதுமில்லை என்று மொழிந்து, இறையனார் முன்பும் எதிர்ச்சொல்லாடி, நிலைநிறுத்திய பண்பே, நக்கீரத்தனம் என்றறிக.

நக்கீரதேவநாயனார் *nakkīra-tēva-nāyanār,* பெ. (n.), பதினோராந்திருமுறை யிலுள்ள நூல்கள் சிலவற்றை இயற்றியவர்; a canonized šaivam saint the author of certain works in patinōrān-tirumurai.

[நக்கீரதேவர் + நாயனார்.]

நக்கீரதேவ நாயனார், பதினோராந்திருமுறையில் ஒன்பது நூல்களை இயற்றியுள்ளார்.

1. திருவீங்கோய்மலை எழுபது. 70 - செய்யுட்களடங்கிய இந் நூலுள், 48 முதல் 61 வரையுள்ள பாக்கள் மறைந்து விட்டன.
2. கைலைபாதி காளத்திபாதி அந்தாதி.
3. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை.
4. திருஎழுகூற்றிருக்கை.
5. பெருந்தேவபாணி.
6. கோபப்பிரசாதம்.
7. காரெட்டு.
8. போற்றித்திருக்கலிவெண்பா.
9. திருக்கண்ணப்ப தேவர் திருமறம்.

நக்கீரர்[1] *nakkīrar,* பெ. (n.), திருமுருகாற்றுப் படை முதலியவை இயற்றியவரும், கடைச் சங்கத்தில் சிறந்து விளங்கியவருமான புலவர்; a celebrated poet of the last šangam, author of Tirumurugāṟṟu-p-paḍai, and other poems "*கணக்காயனார் மகனார் நக்கீரருமென*" (இறை. 1, உரை). காலம் கி.மு.200-கி.பி.200 என்பர்.

மறுவ. நக்கீரனார்.

[நல் + கீரர் → நற்கீரர் → நக்கீரர்.]

கீரர் = இயற்பெயர்.

நக்கீரரைச் சிறப்பித்துக் கூறுமுகத்தான், 'நல்' என்னும் சிறப்புப்பொருளுணர்த்தும் 'ந' என்னும் எழுத்தை முன்வைத்துக் கூறினர்.

(ஒ.நோ.) *[நல் + அந்துவனார்]* 'ஆர்'- மதிப்பினையுணர்த்தும் விகுதி.

கழகக்காலப் புலவர் நிரலில் தலைமை பெற்ற இவர், மதுரைக் கணக்காயனார்க்கு மகனாராவார்; இவர்தம் பாடல்கள் வாயிலாகத்

தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர் தம் அரசியல் நிகழ்வு, சிற்றரசர்கள் பற்றிய செய்திகளையும் தெரிந்துகொள்கிறோம். பாண்டியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனது, ஆலங்கானப் போரைப் பற்றிய குறிப்பினை அறியலாம்.

பொலம் பூண்கிள்ளி யென்பவன், கோயரென்பாரைவென்று, நிலங்கொண்ட திறத்தினையும், சேரமான்கோதை மார்பனுக்குப் பகையாய் இருந்த கிள்ளிவளவனைப் பழையன் மாறன் என்பான் வென்று, சேரனுக்கு உவகையெய்து வித்த திறமும், பிறவும் நக்கீரரால் நவிலப்படுவனவாகும்.

மதுரைமாநகரின் மாண்பினைப் பலபடப் பாராட்டும் பாடல் வரிகள் வருமாறு :–

(எ.டு) 1. "அரண் பலகடந்த முரண்கொள்தானை, வாடாவேம்பின் வழுதிகூடல்" 2. "மாடமலி மறுகிற்கூடல்". 3. "பொன்மலி நெடுநகர்க் கூடல்". மதுரையை மட்டுமன்றி, அன்றைய தமிழகத்து அனைத்து ஊர்களும் இவரால் சிறப்பிக்கப்படுகின்றன.

மருங்கூர்ப்பட்டினம், காவிரிபூம்பட்டினம் முசிறி, கருவூர், உறையூர் முதலான வரலாற்றுப் புகழ் மிக்க இடங்களும், இவரால் சிறப்பிக்கப் படுகின்றன. வேள் பாரியைத் தமிழ் வேந்தர் மூவரும், நெடுங்காலம் முற்றுகையிட்டிருந்த காலத்துக் கபிலர், கிளிகளைப் பயிற்றி, வெளியே விளைபுலங்களிலிருந்து, நெற்கதிர் கொணர்வித்து, உணவுக்குறைவு உண்டாகா வண்ணம் உறுதுணை புரிந்து, பேணிக்காத்த பெருமையினை, நக்கீரர் குறித்துள்ளார். கபிலரை இவர், "உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை, வாய்மொழிக்கபிலன்" எனச் சிறப்பித்துள்ளார். தூங்கலோரியார் என்னும் புலவர், இவர் காலத்தே சிறப்புற்றிருந்த செய்தி, இவர் பாட்டால் விளங்குகிறது. இவர் பாடியுள்ள பொருண் மொழிக்காஞ்சி, ஒவ்வொரு செல்வமகனும் படித்து இன்புறுதற்குரியது. இவரைப் பற்றிக் கூறப்படும் வரலாறுகள் பல.

நக்கீரர், பொதுவாகத் தமிழ்மூவேந்தரையும் வேண்டுமிடங்களிற் சிறப்பித்துப் பாடியிருப்பினும், சிறப்பாகப் பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனையும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையும் பாடிப் பெரும்பரிசில் பெற்றவர். திருமுருகாற்றுப்படை பாடி முருகன் திருவருள் சிறப்பிக்கப்பெற்றவர். தமிழகம் முழுவதையும் நன்கறிந்தவர். இவர் அந்தணரல்லர்.

பாராளும் வேந்தனுக்கும், காட்டில் வேட்டையாடும் வேடனுக்கும் இன்றியமையாது வேண்டற்பாலது, உண்பதற்கு நாழித்தவசமும், உடுப்பதற்கு இரண்டு உடையுமே. தமக்கென்று ஒருவர் எவ்வளவுதான் பொருள் சேர்த்து வைத்தாலும், அனைத்தையும் பயன்கொள்ளல் அரிதேயாகும். படைப்புப் பல படைத்து, பலரோடு கூடியுண்பதே செல்வத்துப் பயனாகும். ஒருவர் தாம் பெற்ற செல்வத்துப் பயன், பிறர்க்கு ஈந்து மகிழ்தலேயாகும். அதனால்தான் வள்ளுவப் பெருந்தகையும், ஈத்துவக்கும் இன்பமே ஈடில்லாப்பெரும் பேரின்பமென்றார். இவ்வாழ்வியல் அறத்தினைப் பின் வருமாறு பேசுகிறார்.

"தெண்கடல்வளாகம் பொதுமையின்றி
வெண்குடை நிழற்றிய
வொருமையோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந்துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவுமெல்லாமோரொக்கும்மே
செல்வத்துப் பயன் யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே"

(புறம்–189)

இப் பாடலின் வாழ்வியல் அறம் யாதெனின், செல்வர் ஈதலைக் கடனாகக் கோடலே அறம். அவ்வாறன்றி, அனைத்தையும் தாமே துய்ப்போம் என்றால், நம்மை விட்டு நீங்குவதே மிகுதியாகும் அதனாற்றான்.

"துய்ப்பே மெனினே தப்புந பலவே" என்றார். இன்றைய செல்வர் ஈதலைக் கடனாகக் கொள்ளாததால்தான், குமுகாயத்தில் கிளர்ச்சி யும், பொருள் முட்டுப்பாடும் ஏற்படுகிறது.

கீரன் என்பது இவர்தம் இயற்பெயர். இப் பெயர் கொண்டோர் பலர், அக் காலத்தில் இருந்தனர். அதனால், இவரை, *"கணக்காயனார் மகனார் நக்கீரனாரென"* இறையனார் களவியலுரை சிறப்பிக்கிறது. தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர், செய்யுளியல் 197-ஆவது நூற்பாவுரையில் காணப்படும் நக்கீரன் பற்றிய குறிப்பு வருமாறு:- "இவை தெற்கண்வாயில் திறவாத பட்டிமண்டபத்தார் பொருட்டு, நக்கீரர் ஒருவன் வாழவும், ஒருவன் சாவவும் பாடிய", என்னும் இக் குறிப்பு ஓர்ந்துணரத்தக்கது. இவர்தம் திருமுருகாற்றுப் படை, ஆற்றுப்படை இலக்கியங்களுள் தலைசிறந்தது. இவர் பாடிய நெடுநல்வாடைப் பாட்டு, சொற்சுவை, பொருட்சுவை செறிந்தது. நக்கீரர் பாடியனவாகப் பத்துப்பாட்டில் இரண்டும், நற்றிணையில் ஏழும், குறுந்தொகையில் எட்டும், அகத்தில் பதினேழும், புறநானூற்றில் மூன்றும், திருவள்ளுவமாலையில் ஒன்றுமாக, 38 பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

நக்கீரர்[2] *nakkīrar,* பெ. (n.) இறையனார் களவியல் நூலின் உரையாசிரியர்; the commentator of iṟaiyaṉār kaḷaviyal a grammar on Agapporuḷ by Iṟaiyaṉār.

மறுவ. நக்கீரனார்.

[நல் + கீரர் → நற்கீரர் → நக்கீரர்.]

இறையனார் களவியல் என்னும் அகப்பொருள் இலக்கணத்திற்கு, உரையெழுதியவர்.

பாண்டிக்கோவையைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட பாண்டிய மன்னன் காலம் கி.பி. 640-670. இறையனார் களவியலுரையில், பாண்டிக்கோவைப் பாடல்கள், மேற்கோள் பாடல்களாக எடுத்தாளப்பட்டுள்ளன. அகப்பொருள் இலக்கணங்கூறும், இக் களவியலுரையை இயற்றிய, இந் நக்கீரரின் காலம் கி.பி. 640-670-க்குப் பிற்பட்டது எனலாம்.

களவியற்கு அமைந்த உரைகளுள் சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்காக, இறைவனால் அருளப்பட்ட உருத்திரசன்மன், கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்தஇடத்துப் பதந்தொறும் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான் இருப்ப ஆர்த்தெடுத்து, 'மெய்யுரை பெற்றாம் இந்நூற்கு' என்றார், என வருவதும், "மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு, நக்கீரனாரால் உரைகண்டு குமார சுவாமியால் கேட்கப்பட்டது என்க", என வருவதும்,

"தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது என்று சான்றோர் சொல்லியது என்பது", எனவரும் எடுத்துக்காட்டுகளால், இந் நக்கீரர்[2] சங்ககாலத்திற்குப் பிற்பட்டவர் என்பதை, வெள்ளிடைமலையென விளக்கும் ஏதுக்களாகத் திகழ்கின்றன.

நக்கீரர்[3] *nakkīrar,* பெ. (n.), பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த இலக்கண நூலாசிரியர்; treatises on grammar, by Nakkīrar, 10th Centurary

மறுவ. நக்கீரனார்.

[நல் + கீரர் → நற்கீரர் → நக்கீரர்.]

இலக்கண நூலாசிரியராகிய இந் நக்கீரர்[3], நக்கீரர் நாலடி நானூறு, நக்கீரர் அடிநூல் என்னும் இலக்கண நூல்களை இயற்றிதாக, யாப்பருங்கல விருத்தியுரை உரைக்கின்றது.

1. நக்கீரர் அடிநூல்:- வெண்பாவில் ஐஞ்சீரடி வாராதென்பதே, இந் நூலின் சிறப்புச் செய்தியாகும்.

"ஐஞ்சீர் வெள்ளையுட் புகாமை எவற்றாற் பெறுதும் எனின், "ஐஞ்சீர் அடுக்கலும் மண்டிலம் ஆக்கலும் வெண்பா யாப்பிற்குரியவல்ல" என்று நக்கீரனார் அடிநூலுள் எடுத்தோதப்பட்டமை யாற் பெறுதும், என்கிறார்.

"ஐஞ்சீரடி வெண்பாவிற் புகாது என்று கூறினமையால், அகவற் பாவிலும் கலிப்பாவிலும் வரும்" என்பதறிக.

2. நக்கீரர் நாலடி நானூறு:– பாவினுள் பயின்று வரும் வண்ணங்களுள் தூங்கல் வண்ணமும் ஒன்று. "தூங்கல் வண்ணம்வஞ்சி பயிலும்'' .(தொல்.செய்யுள்.228.) என்பது தொல்காப்பிய நூற்பாவாகும்.

யாப்பருங்கல விருத்தியில் வரும் நக்கீரர் நாலடி நானூறு பற்றிய குறிப்பு வருமாறு:– "இன்னவை பிறவும், நக்கீரர் நாலடி நானூற்றில் வண்ணத்தால் வருவனவும் எல்லாம் தூங்கிசைச் செப்பலோசை" எனுங் குறிப்பினின்று, நக்கீரர் நாலடி நானூறு தூங்கிசைச் செப்பலோசையால் அமைந்த 400 வெண்பாக்களையுடையது என்ற உண்மை வெளிப்படுகின்றது.

இவ்விரண்டு நூல்களும் யாப்பிலக்கணம் கூறுவன. யாப்பருங்கல விருத்தியார் காலம் கி.பி. 10 – ஆம் நூற்றாண்டு.

யாப்பருங்கலவிருத்தியார் இந் நூலை மேற்கோள் .காட்டியுள்ளமையால், இந்த நக்கீரர்[3] கி.பி.10 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர் எனலாம்.

நக்கீரர்கோயில் *nakkīrar-koyil,* பெ. (n.), மதுரை, மேலாமாசி வீதியிலுள்ள, நக்கீரர் திருக்கோயில்; Nakkīrar's temple, located in Madurai west māsi street.

மறுவ. சங்கத்தார் கோயில்.

[நக்கீரர் + கோயில்.]

திருவிளையாடல் தொன்மத்தில், (புராணம்) நக்கீரர் கோயில் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

நக்கு[1]–தல் *nakku-,* 5 செ. குன்றாவி. (v.t) **1.** நாவினாற் தடவுதல், அல்லது துழாவுதல்; to lick, lap *"ஆமாபோ னக்கி"* (நாலடி, 377.). 'பரிவுடன் ஆ (பசு) தன் கன்றை நக்கியது (இக்.வ.). நாய் நீரை நக்கிக் குடிக்கும் (இக்.வ.). நக்குகிற போது நாவு எழும்புமா (பழ.). நக்குகிற நாய்க்குச் செக்கும் தெரியாது, சிவலிங்கமும் தெரியாது (பழ.). **2.** தீண்டுதல்; to touch *"நகைமணி மார்பநக்கி... சுடுசுரம் பரந்தவன்றே"* (சீவக. 799.); **3.** அழித்தல்; to consume. *"உலகை நக்குங் கேடறு நிலைமைக் காலன்"* (ஞானவா. சுக்கிரன். 33.). **4.** சுடுதல்; to burn *"நனந்தலைப் பேரூ ரெரியு நக்க"* (புறநா. 57.).

தெ., நகு, **க.,** நக்கு, **து.,** நக்குனி.

கோண். நாகானா. குவி. நாகலி, கூய், நாக, நாகி. கொண்டா. நாக், கோட நாகானா.

[நாக்கு → நக்கு + தல்
'தல் = தல்லீற்றுத் தொழிற்பெயர்.]

நக்கு[2]–தல் *nakku-,* 5 செ. கு. வி. (v.i.) வறுமைப்படுதல்; to be destitute அவன் கஞ்சிக்கு இல்லாமல் நக்குகிறான் (இ.வ.). நக்கத் தவிடுமில்லை, குடிக்க நீருமில்லை (பழ.). நாய்நக்கத் தண்ணியில்லை, நடந்து போகப் பாதையுமில்லை (பழ.).

க, நக்கு., நெக்கு. **தெ.** நாகு. ம. நக்குக. **து.,** நக்குனி. **கோத.,** நக்கி. நக்., **துட.,** நொக் **கோத.,** நக்கி (nakki)., **து.** நக்குனி., **கொலா.** நக். நாய்கி. நாக், (nāk) பாலி.நேக் (nēk) **கத்யா.,** நாக் (nāk). **கோண்.** நாகானா. **குவி.,** நாகலி. **கூய்.,** நாக, நாகி. **கொண்டா.,** நாக்., **கோட.,** நாகானா.

[நக்கு + தல்.]

'தல்' = தல்லீற்றுத் தொழிற்பெயர்.

நக்கு[3] *nakku,* பெ. (n.) ஆடையற்ற நிலை (தேவா. 215, 6.); nakedness

த. நக்கு → skt nagna.

நக்குடகம் *nakkuḍagam,* **பெ.** (n.) மூக்கு; nose.

[நக்கு + ஊடு → உடு + அகம்.]

நக்குணி *nakkuṇi,* **பெ.** (n.) **1.** உணவிற்குத் திண்டாடுவோன்; mean cadger of food. **2.** சிறுபையன்(வின்); little boy. **3.** பாம்புவகை (வின்.); a small snake

[நக்கு + உண்ணி→நக்குண்ணி→நக்குணி.]

நக்குநிற்றல் *nakku-niṟṟal,* **பெ.** (n.) **1.** ஆடையற்று இருத்தல்; without dress, to be naked "பொக்கம் மிக்கவர் பூவும் நீருங் கொண்டு நக்குநிற்பர் அவர்தம்மை நாணியே" (நாவுக்கரசர் தேவாரம்.). **2.** வறுமையில் வாடுதல்; to wail in poverty.

[நக்கு + நிற்றல்.]

உண்ணும் உணவிற்கும், உடுக்கும் உடைக்கும் வாய்ப்பற்று இருத்தல்.

நக்குப்பொறுக்கி *nakku-p-poṟukki,* **பெ.** (n.) **1.** எச்சிற்பொறுக்கி யுண்போன்; beggar, as one who lives on refuse food *"நக்குப் பொறுக்கிகளும் பறப்பர்"* (தனிப்பா. i 290, 7.). **2.** இவறன் (வின்.); miser

[நக்கு + பொறுக்கி.]

நக்குமருந்து *nakku-marundu,* **பெ.** (n.) நாவாற் பருகும் மருந்து; a thick syrupy medicament to be taken by licking-Lincture.

[நக்கு + மருந்து.]

தேன் முதலியனவற்றுடன் நாவினால் நக்கியுண்ணும் மருந்து.

நக்கேணி[1] *nakkēṇi,* **பெ.** (n.) காரை வகை; a kind of honey thorn, m. tr., Canthium Didymum.

தெ. நக்கேரு.

நக்கேணி[2] *nakkēṇi,* **பெ.** (n.) கருப்புமரம் (சா.அக.); a black jujube

நகக்கண் *naga-k-kaṇ,* **பெ.** (n.) விரல் நுனிக்கும், நகத்துக்கும் இடைப்பட்ட பகுதி; the part between the tip of the finger and the nail நகக் கண்ணில் அழுக்குச் சேரவிடக்கூடாது (இக்.வ.).

[நகம் + கண்.]

நகக்கண்நோய் *naga-k-kaṇ-nōy,* **பெ.** (n.) உடம்பில் வளி, பித்தம் முதலியவற்றால், கொப்புளம் எழும்புகை (சா.அக.); a disease of the finger in which the flesh of the finger nail is vitiated by deranged wind and bile in the system

மறுவ. நகச்சுற்றி.

[நகக்கண் + நோய்.]

நகக்கணுக்கட்டி *naga-k-kaṇu-k-kaṭṭi,* **பெ.** (n.) விரல் நுனியிற் காணும் கட்டி (சா.அக.); an abscess occuring at the end of the finger.

மறுவ. நகச்சுற்றி, விரற்சுற்றி.

[நகக்கணு + கட்டி.]

நகக்கணுநோய் *naga-k-kaṇu-nōy,* **பெ.** (n.) நகத்தினடியிற் காணும் ஒருவகைத் தோல் நோய் (சா.அக.); a kind of skin disease occuring an one side of the root of the nail.

[நகக்கண்ணு நோய் → நகக்கணு நோய் .]

நகக்கணுவிரணம் *naga-k-kaṇu-v-iraṇam,* பெ. (n.) கொப்புளம் எழும்பாமலே விரற் சதையிற் காணும் நோய் (அல்லது) விரற்சுற்றி (சா.அக.); a form of whitlow occuring in the bulbous end of the finger.

[நகக்கணு + Skt. விரணம்.]

நகக்கால் *naga-k-kāl,* பெ. (n.) *நகக்கண்* (யாழ்.அக.) பார்க்க; see *naga-k-kaṇ.*

[நகம் + கால்.]

நகக்காளான் *naga-k-kāḷāṉ,* பெ. (n.) களைந்தெறிந்த நகத்தினின்று முளைப்பதாகக் கருதப்படும் காளான் வகை (வின்.); a kind of fungus believed to spiring from nail parings.

மறுவ. சிப்பிக்காளான்.

[நகம் + காளான்.]

நகக்கீறல் *naga-k-kīṟal,* பெ. (n.) *நகக்குறி* பார்க்க; see *naga-k-kuṟi.*

நகக்குத்தன் *naga-k-kuttaṉ,* பெ. (n.) முடிதிருத்துவோன் (யாழ்.அக.); barber.

[நகம் + குத்தன்.]

முன்னாளில், சிற்றூர்களில், முடிதிருத்துவோர் முடிவெட்டுங்கால், விரல்களைத் தூய்மைப்படுத்தி, நகக் கண்ணிலுள்ள அழுக்குகளையெடுப்பர். இக் காலத்தேயும், சிற்றூர்ப்புறத்தே இந் நிகழ்வினைக் காணலாம்.

நகக்குறி[1] *naga-k-kuṟi,* பெ. (n.) நகத்தினாலேற் பட்ட தழும்பு; a scar or impression left by nail

[நகம் + குறி.]

நகக்குறி[2] *naga-k-kuṟi,* பெ. (n.) கலவிக் காலத்தில், மகளிர் உடலில், ஆடவர் நகத்தினாற் பதிக்கும் அரைமதி, மண்டலம், புலிநகம், மயில்அடி, முயலடி, அல்லிஇதழ் என்ற அறுவகை அடையாளங்கள் (கொக்கோ); nail marks, imprinted on the different parts of the women's body during sexual union,six in number, viz., arai-madi,maṇḍalam, puli-nagam, mayil-aḍi, muyal-aḍi, alli-y-idaḻ

[நகம் + குறி.]

நகக்கொடி *naga-k-koḍi,* பெ. (n.) விரல்களின் நகங்களைக் கொடியைப் போல் வளரவிட்ட சுருட்டை; nails allowed to grow long and tortuously

[நகம் + கொடி.]

நகங்கறு-த்தல் *nagaṅkaṟu-,* 4. செ.குன்றா. வி. (v.t.) 1. இறப்பினுக்கு அறிகுறியாக, விரல்களிலுள்ள நகங்கள் கறுத்துக் காணப்படல்; nail's turning dark which is considered as a symptom of death; 2. ஓர் சாக்குறி; a symbol of death.

[நகம் + கறு-.]

நகங்கிருதி *nagaṅ-kirudi,* பெ. (n.) எழுவகை புண்ணியங்களுள் ஒன்றான, ஆணவமற்ற நிலை (வின்.); humility, absence of pride and self importance, one of seven puṇṇiyam.

[நகம் + Skt கிருதி.]

[நகு → நகம்.] எழுவகைப் புண்ணியமாவன. 1. நகங்கிருதி; 2. தானம்; 3. நோன்பு (விரதம்); 4. நட்பு (சினேகம்); 5. நயம் பாராட்டல்; (நயபோசனம்); 6. கனம்; 7. ஊக்கம் (உற்சாகம்)விளங்குகை, ஒளிர்கை, மிளிர்கை. மனிதன், ஆணவமற்று, சுடச்சுட ஒளிரும்

பொன்போல், உயர் குணத்துடன் மிளிர்தல். இவ் வுயர்குணம் எழுவகை அறத்துள் ஒன்று.

நகச்சதை *naga-c-cadai,* பெ. (n.) நகத்தைச் சுற்றிலுமுள்ள சதைப்பகுதி; the portion of tissue around the nail.

[நகம் + சதை.]

[தடி > தசை > சதை=திரிபு.]

நகச்சிராய் *naga-c-cirāy,* பெ. (n.) நகத்தருகு கிழிந்த சிம்பு (யாழ்ப்.); splintery fragment of a nail.

[நகம் + சிராய்.]

நகச்சிலந்தி *naga-c-cilandi,* பெ. (n.) கொப்புளம் இன்றி விரலிலேற்படும் கட்டி (சா.அக.); a form of whitlow occuring in the bulbous and of the finger.

மறுவ. நகச்சுற்று.

[நகம் + சிலந்தி.]

நகச்சுவர் *nagā-c-cuvar,* பெ. (n.) நகத்தைச் சுற்றிய தசை; tissues around the nail.

[நகம் + சுவர்.]

[சுவல் → சுவர்=திரிபு.]

நகச்சுற்றி *naga-c-cuṟṟi,* பெ. (n.) பொதுவாக நகக்கண் அல்லது நுனி விரலிற்காணும் புண்; a common name for several forms of whitlow.

ம. நகச்சுற்று.

[நகம் + சுற்றி.]

நகத்தைச் சுற்றிவரும் புண் அல்லது கட்டி.

நகச்சூடு *naga-c-cūḍu,* பெ. (n.) 1. இளஞ்சூடு (வின்.); luke warm. 2. சிறுசூடு; moderati warm.

[நகம் + சூடு.]

நகச்சூரம் *naga-c-cūram,* பெ. (n) பூனைப் புல் (சா.அக.); a kind of grass.

[நகம் + சூரம்.]

நகச்சொத்தை *naga-c-cottai,* பெ. (n) சிதைவுற்ற நகம்; decayed and deformed nail

[நகம் + சொத்தை.]

[சொள்ளை → சொற்றை → சொத்தை.]

நகச்சொல்(லு)—தல் *naga-c-col(lu)-,* 8 செ. குன்றாவி. (v.t) கூடிமகிழுமாறு இனிய சொற்களைக் கூறுதல்; to utter pleasant words. *"பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி நட்பாடல் தேற்றா தவர்"* (குறள், 187.).

[நகு → நக + சொல்(லு)—தல்.]

நகச்சொற்றை *nagaccoṟṟai,* பெ. (n.) சிதைவுற்ற நகம்; worm eaten nail or decayed nail.

மறுவ: நகச் சொத்தை.

[நகம் + சொத்தை. சொள்ளை → சொற்றை.]

நகசிரிதம் *naga-śiridam,* பெ. (n.) குன்றிச் செடியின் சிவப்புவிதை; the red seed of crab's eye.

[நகம் + Skt சிரிதம்.]

நகட்டல் *nagaṭṭal,* பெ. (n.) *நகட்டுகை* பார்க்க; see *nagaṭṭugai.*

[நகட்டு → நகட்டல்.]

நகட்டு—தல் *nagaṭṭu-,* 5. செ.குன்றா.வி. (v.t.) 1. இடம்விட்டுப் பெயரச்செய்தல்; to push away, shove. 2. காலந்தாழ்த்துதல்; to delay, procrastinate அவன் கருமத்தைச் செய்யாமல் நகட்டுகிறான் (உ.வ.). 3. நன்றாய் புடைத்தல்; to thrash. 4. அரைத்தல்; to pound, grind. 5. ஆவலுடன் உண்டுவிடுதல்; to eat up with avidity.

[நகர்த்து → நகட்டு—தல்.]

நகட்டுகை *nagaṭṭugai,* பெ. (n.) 1. இடம் பெயர்க்கை; to push away. 2. அரைக்கை; grinding. அம்மியில் மிளகாய் வற்றலை வைத்து நகட்டு. (பே.வ.). 3. நசுக்குகை; crushing.

[நகர்த்து → நகட்டு.]

[நகட்டு → நகட்டுகை.]

நகடு *nagaḍu,* பெ. (n.) உடல் வெளுக்கை; pale complexion. *'மண்டினன்றுவந்த நகடுபோலன்றிறே'* (ஈடு 6, 2, ப்ர.).

[நகு → நக → நகடு.]

நகுதல் = மிளிர்தல், விளங்குதல், வெண்மையாதல், அரத்த மின்மையால் உடல் வெண்மையாய்த் திகழ்தல்.]

நகணம் *nagaṇam,* பெ. (n.) முடக்கொற்றான்; palsycurer.

நகத்தடம் *naga-t-taḍam,* பெ. (n.) *நகக்குறி* பார்க்க; see *naga-k-kuṟi.*

[நகம் + தடம்.]

நகத்துயிர் *naga-tt-ayir,* பெ. (n.) பூச்சருக்கரைக் கிழங்கு (தைலவ. தைல. 125.); panicled bindweed.

மறுவ. நிலச்சருக்கரைக்கிழங்கு.

நகத்தழும்பு *naga-t-taḻumbu,* பெ. (n.) *நகக்குறி* பார்க்க; see *naga-k-kuṟi.*

[நகம் + தழும்பு.]

நகத்திருகாணி *naga-t-tirugāṇi,* பெ. (n.) கட்டை விரல் நகத்தைப் பயன்படுத்தித் திருகிவிடக் கூடிய திருகாணி; thumb screw.

[நகம் + திருகு + ஆணி.]

நகத்துரோணம் *naga-t-turōṇam,* பெ. (n.) தும்பை (சா.அக.); leucas flower, Leucas Linifolia.

நகதிபீசம் *nagadipīšam,* பெ. (n.) புலிதொடக்கி (மூ.அ.); a prickly shrub said to be capable of stopping the tiger - Tiger stopper

நகநந்தினி *naga-nandiṉi,* பெ. (n.) மலைமகள் (யாழ்.அக.); Malaimagaḷ as the daughter of the Himalaya mountain.

[நகம் + நந்தினி.]

நகநாகு *naga-nāgu,* பெ. (n.) புளிக்கவைத்துச் சாராயம் இறக்குவதற்காகப் பயன்படுத்துமொரு மூலிகை; a drug used for fermenting spirituous liquor.

[நகம் + நாகு.]

நகநாதிகம் *naga-nādigam,* பெ. (n.) சிவப்பு அடுக்கலரி (சா.அக.); oleander rosebay-Nerium odorum.

நகநோக்கி *naga-nōkki,* பெ. (n.) வேலிப்பருத்தி (சங்.அக.); hedge-twiner.

[நகம் + நோக்கி.]

நகநோகரம் *naga-nōgaram,* பெ. (n.) மஞ்சிட்டி (சா.அக.); munject indian madder.

மறுவ. நீர்ப்பூடு.

நகப்புண் *naga-p-puṇ,* பெ. (n.) 1. நகத்திற் காணும் புண்; boil on the edge of the nail. 2. நகங்கீறுவதாலுண்டான புண்; scratch of a nail.

மறுவ. நகச்சுற்றி.

[நகம் + புண்.]

நகப்புள்ளி *naga-p-pulli,* பெ. (n.) நகத்திற் காணும் புள்ளி; dot on the nail.

[நகம் + புள்ளி.]

நகப்பூ *naga-p-pū,* பெ. (n.) நகத்தில் உண்டாகும் வெண்புள்ளி; white spots occuring on the surface of nails

[நகம் + பூ.]

நகப்பூச்சு *naga-p-pūccu,* பெ. (n.). நகத்தில் பூசும் வண்ணப்பொருள்; nail polish. தற்போது நகப்பூச்சுகள் பல வண்ணங்களில் வருகின்றன. (உ.வ.).

[நகம் + பூச்சு.]

நகபதம் *naga-padam,* பெ. (n.) *நகக்குறி* பார்க்க; see *naga-k-kuri.*

[நகம் + Skt. பதம்]

நகபர்ணி *naga-parṇi,* பெ. (n.) ஒருசெடி (சா.அக.); a plant

[நகம் + skt. பர்ணி.]

நகபுட்பி *nagaputpi,* பெ. (n.) ஒருவகை-வெந்தயம்; hourse shoe fenugreek-Trigonella corniculata .

நகம்¹ *nagam,* பெ. (n.) 1. மலை (பிங்.); mountain. *"நகராசன் மடந்தை"* (பதினொ. திருக்கைலா. 12.). 2. நிலம் (பிங்.); earth. 3. மரம் (சூடா.); tree. 4. நாகணமென்னும் மணப் பொருள்; an article of incense. *"கடிநகந் தேவதூப முதலிய விரைகளிட்டு"* (தைலவ. தைல. 43.).

[நகு + அம்.].

'நகு' என்னும் தோன்றுதற் கருத்தினின்று தோன்றிய சொல், விளங்கித் தோன்றுதல் என்னும் பொருண்மையில், மல்கும் வளமிக்க மலையைக் குறித்து நின்றது. மல்லல்மா ஞாலமாம் மாநில மடந்தையின் மடியினில் விளங்கித் தோன்றுவதே மலை. மலையிடைத் தோன்றி விளங்குபவையே, மணங்கமழ் நாகணமும், நறுஞ்சாந்தம் தரும் மரமும் என்றறிக.

நகம்² *nagam,* பெ. (n.) 1. உகிர் (பிங்.); nail. 2. பறவையுகிர்; talon daw. *"மூக்காற கொத்தா நகத்தாற் குடையா"* (கம்பரா. சடாயுவு. 113.). 3. அடிக்குளம்பு (வின்.); extremity or lower part of a hoof. 4. வெற்றிலை கிள்ளும்போது அணியும் விரலுறை (இ.வ.); thimble used in plucking betel-leaf. 5. பங்கு (யாழ்.அக.); portion.

[ஒருகா. நகு → நகல் → (நகன்) → நகம்.]

நெகு → நகு. நகு → நகல் = ஒளி. நகு → நாகார் = விளங்கித் தோன்றும் பல் (வே.க.3.21.)

த → நகம் → **வ.** nakha.

மோனியர் வில்லியம் வடமொழி அகரமுதலி, வளைவு, கூர்மை முதலான பொருள்களையே கூறுகிறது. தமிழில் அமைந்துள்ள வேர்ப்பொருள், இயல்பாகத் தோன்றி வெளிப்படுதல் என்னும் அடிப்படைப் பொருண்மையில் ஆளப்படுகிறது. மாந்தன், பறவை, விலங்கு முதலியவற்றின் உடலோடு, இயல்பாகத் தோன்றி வெளிப்படுவது என்னும், இயற்கைப் பொருண்மையில், இயன்மொழியாம் தமிழ்மொழியில் யாவரும் மறுக்கவியலா வண்ணம் அமைந்துள்ளமை கண்கூடு. வடமொழியாளர், தோன்றுதற் பொருண்மை யல்லாது, வளைவு, கூர்மை மட்டுமே கூறியுள்ளனர்.

1. கை அல்லது கால்விரல்களில் விளங்கித் தோன்றுவது.

2. கொம்பைப் போன்ற தகட்டுப் பாகத் தினையுடையது.

3. இதன், மீத்தோல் சதைப்பகுதியினின்று திரண்டு எழும்பித் தோன்றுவது.

4. விரல்நுனியின் மேற்பகுதியில் கவிழ்ந்திருப்பது.

நகம்பிடுங்கி *nagam-piḍuṅgi,* பெ. (n.) உண்மையை வரவழைக்கும் பொருட்டு குற்றவாளிகளின் நகத்தைப் பிடுங்க காவல்துறையினர் பயன்படுத்தும் கருவி; an instrument used to pluck nails of culprit at jail.

[நகம் + பிடுங்கி.]

நகம்வாங்கி *nagam-vāṅgi,* பெ. (n.) நகமெடுக்குங்கருவி; nail-parer

[நகம் + வாங்கி.]

நகம்வெட்டி *nagam-veṭṭi,* பெ. (n) நகம் வாங்கி (வின்.) பார்க்க; see nagam-vāṅgi.

[நகம் + வெட்டி.]



நகமுசம் *nagamušam,* பெ. (n.) வில் (யாழ்.அக.); bow.

[நகம் + முசம்.]

நகமுண்ணி *nagamu-ṇ-ṇi,* பெ. (n) 1. நகம் குறைந்து அல்லது விழுந்து போகும் ஒருவகை நகச்சுற்று; a form of whitlow in which the nail is destroyed. 2. விரற்குறையும் குட்டம்; a form of leprosy in which the fingers with nails are mutilated.

[நகம் + உண்ணி.]

உடலுறுப்புகளைக் குறைத்து, முடமாக்கிப் பயனற்று விழச்செய்யும் தொழுநோய்.

நகமுடி *naga-mūḍi,* பெ. (n.) ஐவண்ணவணியுள் ஒன்றாய்ப் பரவமகளிர், வலக்காற் பெருவிரலில்

அணியும் அணிகலன்; ring worn on the right toe by Parava women, one of ai-vannam, q.v.

[நகம் + மூடி.]

நகர்[1]–தல் *nagar-,* 2 செ.கு.வி. (v.i.) 1. ஊர்தல்; to creep, as a reptile. 2. தவழ்தல்; to crawl or move along in a lying or sitting posture, as an infant. 3. மறைவாய்ப் போதல்; to steal away, skulk.

[நக → நகர்–தல்.]

நகர்[2]–த்தல் *nagar,* 8செ.குன்றாவி. (v.t.) *நகர்த்து–தல்* பார்க்க; see *nagarttu-.*

நகர்[3] *nagar,* பெ. (n.) 1. நகரம்; town, city. *"நெடுநகர் வினைபுனை நல்லில்"* (புறநா. 23.). 2. மாளிகை; house, abode, mansion *"பாழியன்ன கடியுடை வியனகர்"* (அகநா. 15). 3. கோவில்; temple, sacred shrine. *"முக்கட் செல்வர் நகர்"* (புறநா. 6.). 4. அரண்மனை; palace. *"நிதிதுஞ்சு வியனகர்"* (சிலப். 27, 200.). 5. (சடங்கு) நிகழ்வு செய்யு மிடம்; dais for performing ceremonies. *"தூநக ரிழைத்து"* (சீவக. 2633.). 6. சிறப்பு நிகழ்வுகள் நிகழும் மண்டபம்; a furnished hall or place, decorated for ceremonial functions. *"அணிநகர் முன்னினானே"* (சீவக. 701.). 7. மனைவி; wife. *"வருவிருந்தோம்பித் தன்னகர் விழையக்கூடி"* (கலித். 8.).

தெ. து. நகரு. ம. நகர்.

த. நகர் → skt. nagara.

[நகு → நகல் → நகர்.]

ஒளிர்தற் கருத்தினின்று கிளைத்த சொல்லாகும். விளங்கித் தோன்றும் மாளிகை; வளமனை; அரண்மனை; அரண்மனையையொத்த கோவில். மாளிகையும் அரண்மனையும், மண்டபமும் கோயிலும் போன்ற கட்டடங்களாற் சிறந்து விளங்கும் ஊர் (வே.க. 3. 25.).

நகா என்னும் சொல் முதன்முதலில், ஒரு வளமனையை அல்லது மாளிகையையே, குறித்தது.

காலப்போக்கில், மாளிகை அரசனுக்கே சிறப்பாக வுரியதாதலால் அரண்மனையைக் குறிக்கலாயிற்று. அடுத்த நிலையில், அரசனது அரண்மனை போன்று திகழும், இறைவன் கோயிலையும் குறித்தது.

கோயிலின் கண்ணே, சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும் மண்டபம், மாளிகை போன்றிருத் தலால், இச் சொல்லை, மண்டபம் என்னும் பொருளில் திருத்தக்கதேவர் ஆளுகின்றார்.

நகர் என்னுஞ்சொல், செந்தமிழுக்குரிய தலைமைப் பண்பை நிலைநிறுத்தும் சொற்களுள் தலையாயது. இச் சொல்லினின்றே நகரி,நகரம், நாகரிகம் போன்ற சொற்கள் கிளைக்கின்றன. நகர், நகரி, நகரம், நாகரிகம் போன்ற சொற்களுக்குரிய வேரடி வடிமொழியில் இல்லை; இச் சொற்களுக்குரிய 'நகு' என்னும் வேர்ச்சொல் நந்தமிழுக்கே உரியது. 'நகு' என்னும் மூலம் வடமொழியில் இல்லை. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகர முதலியில், இவ் வடிப்படை உண்மையை உணராது, நகர், நகரி, நகரம் ஆகிய மூன்று சொல்லையும், வடசொல்லென்று குறித்துள்ளனர்.

சிப்பிச் சுண்ணாம்புச் சாந்தினால் தீற்றப்பெற்று, வெள்ளையடிக்கப்பட்ட காரைச்சுவர்க் கட்டடம், மண்சுவர்க் கூரைவீட்டோடு ஒப்பு நோக்கும்போது, மிக விளங்கித் தோன்றலால், மாளிகை நகர் என்னப்பட்டது. நகுதல்=விளங்குதல்.

நகு → நகல் → நகர்.

நகர் என்னுஞ்சொல், தனி மாளிகையையும், அதனை உடைய பேரூரையும், குறித்ததினால், இம் மயக்கை நீக்கும் பொருட்டு 'இ'கர வீறு கொண்ட நகரி என்னுஞ் சொல் எழுந்தது. (ப.த.நா.பண்.பக்.3).

நகர் என்பது சிறந்து விளங்கும் கட்டடங்களை உடையது. வித்தகர் இயற்றிய வெண்சுதை விளக்கத்துடன் கூடிய கூடகோபுரங்களையும், ஒளி விளங்கும் மாடமாளிகைகளையும் தன்னகத்தே கொண்டது. இத் தகு சிறப்புகள் செறிந்த வேர்ச்சொல்லே 'நகு' என்பது. இப் பொருண்மை பொதிந்த வேரடி வடமொழியில் இல்லை.

த.> நகர் + அம் → நகரம் → வ. → நகர.

நகரம் என்னும் இச் சொல்,ஒளிர்தற்கருத்து எனும் பொருண்மையும், "அம்" என்னும் பெருமைப் பொருட் பின்னொட்டும், செந்தமிழின் இலக்கியச் செழுமையையும், மரபார்ந்த இலக்கண வளத்தையும் எடுத்துக்காட்டுவது.

பெருநகரை, நகரம் என்று சொல்லினும் போதும். ஆயின், அவ்விலக்கணம் இன்று அறியப் படாமையால், மாநகர் என்று சொல்ல வேண்டியதாகின்றது. (ப.த.நா.பண்.பக்.4).

நாம் "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்னும், உயர்ந்த பண்பாட்டை யுடையவரேனும், நாட்டு வரலாறொத்த மொழிவரலாற்றைச் சிதைப்பதும், உலகில் முதன்முதல் நாகரிக விளக்கேற்றிய, நம் முன்னோரைத் தகவிலாரெனக் காட்டுவதும், அவர் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அரும்பாடுபட்டுத் தேடிவைத்த அருஞ் செல்வத்தைப் போற்றாது வாரி, வாரியில் எறிவதும், அறியாமையையோ, படுகோழைத் தனத்தையோ, தமிழைப் பகைவர்க்கு வெளிப்படையாகக் காட்டிக் கொடுக்கும் நாண மில்லாச் செயலையோதான் காட்டும். பண்பாடுவேறு; காட்டிக் கொடுப்பு வேறு.

மக்களின் பழக்க வழக்கங்கள், முதன்முதல் நகர் அல்லது நகரத்திலேயே திருந்தின. அதனால், சிற்றூர்வாணனையோ, நாகரிகமில்லாதவனையோ, நாட்டுப்புறத்தான் என்று அழைப்பது இன்றும் வழக்கமாயிருக்கின்றது. முதற்கண், நகர்வாழ்விற்கு அடிப்படையானதும், விளங்கித் தோன்றுவதுமான வாழ்க்கைத் திருத்தம் அல்லது பண்பாடு, நகரத்தில் தோன்றியதானாலேயே, நாகரிகம் என்னும் பெயர் பெற்றது. நகர மாந்தரே புறநாகரிகத்தின் பாதுகாவலராயினர். நேர்த்தியாக உடுத்தத் தலைப்பட்டனர். வளமனைகளில் வதிந்தனர்.

நகரப்பதிவாழ்நர்தான், நாகரிகத்தையும், பண்பாட்டையும் நாட்டுப்புறத்தார்க்குக் கற்றுத் தந்தனர். நகரி, நகரம், நாகரிகம் முதலான சொற்கள், மிக்கு ஒளியுடன் விளங்கித் தோன்றுதல் என்னும் பொருண்மையில், 'நகு' என்னும் ஒளிர்தற்கருத்து, வேரினை மூலமாகக் கொண்டு முகிழ்த்தவை.

நகு → நகர் = விளங்கித்தோன்றும் மாளிகை

நகு → நகர் → நகரி = வெண்சுதை பூசிச் சிறந்து விளங்கும் உயர்ந்த கட்டடங்களை யுடைய ஊர்.

த. நகரி → வ. நகரீ. 'இ.' சினைமுதலீறு.

நகர் + அம் → நகரம்.

'அம்' = பெருமைப்பொருட் பின்னொட்டு. இப் பின்னொட்டு தமிழ்மொழிக்கே உரியது. வடமொழியில் இல்லை.

(எ.டு) தமிழ் + அம் = நகரம்.

அவை + அம் → அவையம்.

இற்றைத்தமிழர் இப் பின்னொட்டின் பெருமையை அறியாது, பொதுப்பொருளில் வழங்குகின்றனர்.

த. நகரம் → வ. நகர.

நகர் என்னும் மூலச்சொல்லும், 'நகு' என்னும் மூலமும், வடமொழியில் இல்லை நகர் என்னும் மூலச்சொல்லே, நாகரிகம் என்னும் சொல்லிற்கும் அடிப்படை.

நகர்→நகரகம்→நகரிகம்→நாகரிகம். நகரிப்பழக்கம் = நகர்வாணரின் திருந்திய ஒழுக்கம்.

நகர்ப்புறத்தான் = நாகரிகன். நாட்டுப்புறத்தான் அல்லது பட்டிக்காட்டான் = திருந்தாத பழக்க வழக்கத்தான்.

E. urban = living in a city or town.

(ஒ.நோ.)E. urban = polite

urbanity = polished manners.

L. civis = citizen.

Civil = polite.

Civilization = advanced stage in social development (வே.க.3.).

இச் சொல் கழக இலக்கியங்களிலும், பாவிய(காப்பிய)ப் பனுவல்களிலும், மக்கள் வழக்கிலும், உலகவழக்கிலும், பழமொழி வழக்கிலும் பரவலாகக் காணப்படுகின்றது. நகர், நகரி, திருநகர், ஆழ்வார்திருநகர், ஆழ்வார் திருநகரி என்னும் இடப்பெயர்கள், தென்னக மாவட்டங்களில் பெருவாரியாகக் காணப்படுகிறது.

(எ.டு) 1. நகருக்குப் போனாலும் நாட்டுப்புறம் மாறாது (உ.வ.).

2. நகர் சென்று வந்தால் நாலும் தெரிஞ்சுக்கலாம். (இ.வ.).

3. நகர்தேடிப் போனால்தான் நாலுகாசு சேரும் (உ.வ.).

4. நாய்போல் திரிந்து நகரில் பிழைத்தாலும், நாட்டுப்புறம் வந்தவுடன் நாட்டாமை செய்திடுவர் (இ.வ.).

5. நகரத்தில் இரண்டாந்தர ஊழியனாய் உழைப்பதைவிட, நாட்டுப்புறத்தில் தலைவனாக வாழ்வதே மேல். (பழ.).

மேற் குறித்த பொருண்மை பொதிந்த பொருட்பொருத்தப்பாட்டில் பயின்று வருவதாலும், கழக இலக்கியம் முதலாக, பழமொழியிலக்கியம் ஈறாக, வழக்கூன்றியிருப்பதால், 'நகர்' எனுஞ்சொல் தூயதென்சொல்லென்று துணியவாம்.

நகர்த்து—தல் *nagarttu-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. விரும்பியேற்றுச் சிறிது தள்ளுதல்; to push with difficulty, shove a long. 2. சிறுகச் சிறுகக் களவாடுதல்; to pilfer steal little by little. 3. காலம் கடத்துதல்; to delay. வேலையை நகர்த்துகிறான் (உ.வ.) 4. நன்றாகப் புடைத்தல்; to thrash,give a good drubbing. 5. செவ்வையாகச் செய்தல்; to do well

[நகர் → நகர்த்து- .]

நகர் (த.வி) → நகர்த்து(பி.வி.)

நகர்துரோணம் *nagar-turōṇam,* பெ. (n.) தும்பை (சா.அக.); leucas flower.

[நகர் + Skt. துரோணம்.]

நகர்ப்புறத்திட்டம் *nakar-p-puṟa-t-tiṭṭam,* பெ. (n.) மக்கள் நெருக்கம் மிகுதியாக உள்ள நகரினைப் பற்றிய திட்டம்; urban planning. "சாலை பேணுதல் நகர்ப்புறத் திட்டத்துள் ஒன்று" (உ.வ.).

[நகர்ப்புறம் + திட்டம்.]

நகர்ப்புறம் *nagar-p-puṟam,* பெ. (n.) நகரமும், நகரத்தைச் சார்ந்த பகுதியும்; city and its sub-urban area. நகர்ப்புறத்திலேயே வளர்ந்த பையன். (உ.வ.). நகர்ப்புறத்தின் வளர்ச்சி, அதைச் சுற்றியுள்ள சிற்றூர்களிலும் பரவலாகக் காணப்படுகிறது. (இ.வ.). மேலைநாட்டு நாகரிகம் நகர்ப்புறத்தில்தான் முதலில் பரவுகிறது.

[நகர் + புறம்.]

நகரமாகிய (உள்)புறம் என்றும், நகரத்துக்குக் (சுற்றுப்)புறம் என்றும் பொருள்படல் காண்க.

நகர்ப்புறவளர்ச்சி *nagar-p-puṟa-vaḷarcci,* பெ. (n.) நகர் சார்ந்த பகுதிகளின் வளர்ச்சி; urban development 'சில ஆண்டுகளாக நகர்ப்புற வளர்ச்சி சிறப்பாக அமையவில்லை' (உ.வ.). நகர்ப்புறவளர்ச்சியினால் நாட்டுப்புற மக்களுக்கு வேலை கிடைக்கிறது (இ.வ.).

[நகர்ப்புறம் + வளர்ச்சி.]

நகர்படுதிரவியம் *nagar-paḍu-tiraviyam,* பெ. (n.) நகரத்துக்கு உரியனவாகிய கண்ணாடி, பித்தன், கருங்குரங்கு, காட்டானை, வேந்தன் என்ற ஐவகைப் பொருள்கள் (பிங்.); things peculiar to a city, as kaṇṇāḍi, pittaṉ, karuṅ-kuraṅgu; kāṭṭāṉai, vēndaṉ.

[நகர் + படு + திரவியம்.]

நகர்மை *nagarmai,* பெ. (n.) அசையும் தன்மை; mobility. *'உயவு' நெய்யின் கண்டு பிடிப்பால் ஊர்திகளின் நகர்மைத்திறன் அதிகரித் துள்ளது.'*

[நகர் = அசைவு, நகர் → நகர்மை.]

நகர்வாற்றல் *nagar-v-āṟṟal,* பெ. (n) பொருள்களை இடமாற்றத் தேவைப்படும் ஆற்றல்; drift energy

[நகர்வு + ஆற்றல்.]

நகர்வியக்கம் *nagar-v-iyakkam,* பெ. (n.) இடம் மாற்ற முயலும் இயக்கம்; drift mobility.

[நகர்வு + இயக்கம்.]

நகர்வு *nagarvu,* பெ. (n.) புலம் பெயர்வு, இருப்பிட மாற்றம்; migration. "தற்போது நகரங்களை நோக்கியே மக்கள் நகர்வு அதிகமாக நிகழ்கிறது". (உ.வ.).

[நகர் → நகர்வு.]

நகர்வுச்சான்றிதழ் *nagarvu-c-cāṉṟidaḻ,* பெ. (n.) புலம் பெயர்வு உறுதிச் சீட்டு; migration -certificate. 'நகர்வுச் சான்றிதழ் இல்லாத வெளி நாட்டினர் ஆறு மாதங்களுக்கு மேல் இங்கு தங்கமுடியாது. (இக்.வ.).

[நகர்வு + சான்றிதழ்.]

நகர்வுதிசைவேகம் *nagarvu-tišai-vēgam,* பெ. (n.) இடமாற்றத்திற்குத் தேவைப்படும் தூண்டல் இயக்கம்; drift velocity.

[நகர்வுதிசை + வேகம்.]

நகர்வுயிரி *nagar-v-uyiri,* பெ. (n.) புழு, பாம்பு முதலான தரையில் ஊர்ந்து செல்லும் உயிரிகள்; crawling worms, reptiles, and snakes.

[நகர்வு + உயிரி.]

நகர்ந்து அல்லது ஊர்ந்து செல்லும் உயிரிகள்.

1. புழுவகைகள்— மண்புழு, ஒளிப்புழு, துணிப்புழு, அரக்குப்புழு.
2. பூச்சி வகைகள்.
3. பாம்பு வகைகள்.
4. பூரான் வகைகள்.
5. பல்லி வகைகள்.
6. ஓணான் வகைகள்.

நகர்வுவெளி *nagarvu-veḷi,* பெ. (n.) இடமாற்றப் பகுதி; drift space.

நகரஅரசு *nagara-arašu,* பெ. (n.) கிமு. 5000 ஆண்டுகளுக்கு முன்பு கிரேக்கம், ஏதென்சு ஆகிய நாடுகளில் இருந்து முதன்முதல் உருவான சிறிய அரசியல் கூட்டமைப்பு: polis or city state-is a small independent-self-contained political society it existed in Athens and Greek, before 5000 years. polis-old greek.

[நகர் + அரசு.]

"மக்களாட்சியின் தாயகம்" "ஏதென்சு" என்று வரலாற்று வல்லுநர் கூறுவர். தன்னாட்சியுடனும், தன்னிறை வுடனும் திகழ்ந்த சிறிய அரசியல் சமுதாயம் பழங்கிரேக்கத்தில், "polis or city state" என்று அழைக்கப்பட்டது.

நகரக்கரணத்தான் *nagara-k-karaṇattāṉ,* பெ. (n.) வணிகக் கணக்கு மேற்பார்வை யாளன்; commercial account's supervisor. "திருநெய்த்தானம் ஸ்ரீகார்யம் ஆராயப்பெற்ற அரயன் நாமக் கோடனார். இவ்வூர் நகரக் கரணத்தான் பனையூருடையானைக் குற்றத்தண்டம் கொண்ட பொன்". (S.I.I.V 592)

[நகரம் + கரணத்தான்.]

நகரக்கல் *nagara-k-kal,* பெ. (n.) வணிகர்கள் வைத்திருக்கும் எடைகற்களுக்குச் சான்றாக, அரசு தணிக்கை செய்து, முத்திரையிட்டு வழங்கச் செய்த எடுத்தலளவைக்கல்; weighing stone duly sealed by government authorities.

'திருவாலந்துறை மகாதேவற்கு வைத்த வெள்ளியிற் கலசம் நகரக்கல்லால் நூற்று தொண்ணூற்று முக்கழஞ்சரை" (S.I.I V.67.).

[நகரம் + கல்.]

நகரக்கோயில் *nagara-k-kōyil,* பெ. (n.) 1. நாட்டுக்கோட்டைச்செட்டிவகுப்பினர் தலைமுறைதோறும் வணங்கும் ஒன்பது சிவன் கோயில்கள் (இ.வ.); the nine Šivaṉ shrines of Chettnāḍu, each of which is worshipped by particular sections of chetty families. 2. நாட்டுக் கோட்டைச் செட்டிகளுள் ஒரு வகுப்பு; exogamous section of Nāṭṭu-kōṭṭai chetties.

[நகரம் + கோயில்.]

நகரகாதம் *nagara-kādam,* பெ. (n.) யானை (யாழ். அக.); elephant.

த. நகரகாதம் skt. nagara-ghāda.
[நகர் + அ + காது+ அம்.]

அசைந்தவண்ணம் இருக்கும், காதுகளையுடையது. கேரளத்தில் அரச குடும்பத்தினர் யானையை வீட்டில் வைத்து வளர்க்கும் பழக்கம், இன்றும் காணப்படுகிறது.

நகரங்கம்[1] *nagaraṅgam,* பெ. (n.) மணப் பொருள் (யாழ்.அக.); fragrant substance.

[நகரம்+கம்.]

மணப்பொருள் காற்றில் கலந்து மணம் பரப்பும். இக் காற்றினை நுகருங்கால் மூக்கடைத்துக் காற்று "கம்" மென்று, மணம் வீசுவதாகக் கூறும் இயல்பு, இன்றும் மக்களிடையே பெருவழக்கூன்றி யுள்ளது.

நகரங்கம்[2] *nagaraṅgam,* பெ. (n.) நகக்குறி பார்க்க; see naga-k-kuṟi.

நகரங்களிலார் *nagaraṅgaḷilār,* பெ. (n.) வணிகர்களின் அவைக்குரிய உறுப்பினர்கள்; member's of the merchant's council.

[நகரங்கள் + இல் + ஆர்.]

நகரத்தில் தலைமைப் பொறுப்பில் இருக்கும் வணிகர், ஏனைய ஊர்களில் உள்ள வணிகர்களை, வணிகப் பேரவைக்கு உறுப்பினராகச் சேர்த்தல்.

நகரசபை *nagara-šabai,* பெ. (n) நகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட அவை; municipal council

மறுவ. நகரமன்றம்.

[நகரம் + சபை.]

நகர்மன்ற உறுப்பினர் ஒன்றுகூடி. மக்களது இன்றியமையாத தேவைகளை நிறைவேற்றும் அவை.

த. சபை → skt. சபா.
அமைதல் = பொருந்துதல்.
கூடுதல், நிறைதல்.
அமை = கூட்டம்.
அமை → அவை.
அவை → சவை → சபை.
வ → ப=திரிபு.

ஒ.நோ. உருவு → உருபு. செய்வவர் → செய்பவர். சபையென்னும் தென்சொல்லே, வடமொழியில் சபா என்று திரிந்துள்ளது.

நகரசம் *nagara-šam,* பெ. (n.) யானை, (சங்.அக.); elephant

[நகர் + அசம்.]

நகரசனி *nagara - šaṉi,* பெ. (n.) செடியும் அதன் காயும்; a plant and its fruit.

[நகர் + அசனி.]

நகரசுவாமி *nagara-šuvāmy,* பெ. (n.) வணிகர்கள் தலைவன், வணிகர் பேரவைத் தலைவன்; leader of merchants, leader of the merchant's council.

[நகரம் + skt. சுவாமி.]

ஸ்வம்+ஆ+மி என்று வட சொல்லைப் பிரித்து, செல்வன் என்று பொருள் கூறுவர். ஆயின், சொம்+து= சொத்து என்னும் தமிழ் வேர்ப்பகுதி. அப் பொருள் தருதல் காண்க.

நகரத்தந்தை *nagara-t-tandai,* பெ. (n.), மாநகராட்சி உறுப்பினர்களால் ஆட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டு, நகரின் முதல் குடிமகனாக மதிக்கப்படுபவர். mayor of a city council. (கிரி.அக.).

[நகரம் + தந்தை.]

கிரியா அகரமுதலியில், நகரத்தந்தை, ஆண்டிற்கொருமுறை நகர்மன்ற உறுப்பினர்கள் வாயிலாகத் தேர்வு செய்யப்படுவதாக குறிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஐந்தாண்டுகட்கு ஒருமுறை மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுபவரே, நகரத்தந்தை.

நகரத்தார் *nagarattār,* பெ. (n.) 1. நகர வாசிகள்; townsmen, inhabitants of city 2. நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் (இ.வ.); nāṭṭu-k-kōṭṭai-cheṭṭies. 3. வணிகர்கள் (வியாபாரிகள்); merchants.

அங்காடிகள் = தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டில், கோயில் கணபதிக்குரிய (நிவேதன)ப் படையல் வாழைப்பழத்திற்குரிய முதற்பொருளை, வட்டிக்குக் கொண்டவர்கள். அங்காடிகள் என்று பொதுவாகக் குறிப்பிட்டுள்ளபடி, அவ்வாறு வட்டிக்குக் கொண்டவர்கள் (கல்.அக.).

1. தஞ்சாவூர் புறம்படி நித்த வினோதப் பெருந்தெருவில் நகரத்தார். 2. தஞ்சாவூர் கூற்றுத்துத் தஞ்சாவூர் புறம்படி மும்முடிச்சோழப் பெருந்தெருவில் நகரத்தார். 3. தஞ்சாவூர் கூற்றத்துத் தஞ்சாவூர்ப் புறம்படி திரிபுவந மாதேவிப் பேரங்காடி நகரத்தார் என்றெல்லாம், விளக்கமாகக் குறிப்பிடப் படுவதால், நகரத்தார் என்பது வாணிகர் களையே பெரும்பாலும் குறிப்பிடுபவையே. அவர்கள் வணிகம் செய்து வாழ்ந்து வரும் ஊரும், *"நகரம் என்று பெயர் பெற்றுள்ளது என்பதும், புலனாகும். பூந்த மலியான உய்யக் கொண்டான் சோழபுரத்து வாணிகர் நக்ரத்தோம்"* (S.I.I.vol 7. Ins.537.) "தஞ்சாவூர் புறம்படி திரிபுவநமாதேவிப் பேரங்காடி நகரத்தார்". (S.I.I.vol. 2:2 Ins.37.). போன்றவை நகரத்தார் பற்றிய கல்வெட்டுச் சான்றுகளாகும்.

[நகரம் + அத்து + ஆர்.]

நகரம் என்ற சொல், ஒளி மிகுந்த விளக்குகளுடன் விளங்கித் தோன்றும் கோவில், அரண்மனை, கோட்டை, தலைநகர் முதலியவற்றைக் குறிக்கலாயின. சிப்பிச் சுண்ணாம்பு பூசப்பெற்று பளபளப்புடன் விளங்கித் தோன்றும் மாளிகைகள் நிறைந்தது நகரம்.

நாட்டுக்கோட்டைச்செட்டியார் பேரூர், நகரம் என்றே அழைக்கப்பட்டது. நகரத்தார் எனும் சிறப்புப்பெயர், நாட்டுக்கோட்டாச் செட்டி வணிகர்களுக்கு வழங்கிவந்ததை கல்வெட்டுகள் தெளிவுறுத்துகின்றன.

முதற்கண், நகரத்தில் வதிந்தவர், நகரத்தார் என்னும் பொதுப் பொருண்மையில் அழைக் கப்பட்டனர்.

நாட்டுக்கோட்டைச்சொட்டியார், வணிகம் புரிந்தமையாலும், பளபளப்பாக விளங்கித் தோன்றும் ஒளிமிக்கமாளிகையில் வதிந்த மையாலும், நகரத்தார் எனும் சிறப்புப்பெயர் பெற்றனர்.

நகரத்தார்ஊர் *nagarattār-ūr,* பெ. (n.) நாட்டுக்கோட்டைச்செட்டிமார் வாழும் ஊர்; dwelling place (village) of nāṭṭu-k-kōṭṭai-c-ceṭṭiyār's. நகரத்தார் = வணிகர். வட்டித்தொழில் செய்தவர்.

[நகரத்தார்+ ஊர்.]

நகரத்தார்கடை *nagarattār-kaḍai,* பெ. (n.) நாட்டுக்கோட்டைச் செட்டிமார் நடத்தும் வட்டிக்கடை; nāṭṭu-k-kōṭṭai-c-ceṭṭiyar's shop for money lending business.

[நகரத்தார் + கடை.]

நகரத்தார்கலை *nagarattār-kalai,* பெ. (n) நாட்டுக்கோட்டை வணிகத்தார் கட்டிய கோவில்களில் காணப்படும் கலைப்பாங்கு; the specific features found in nāṭṭu-k-kōṭṭai-c-ceṭṭiyar's art and architecture.

[நகரத்தார் + கலை.]

கண்ணாத்தாள் கோவில், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி போன்ற இடங்களில், மிகப் பிற்காலத்தே கட்டப்படட்ட, முக மண்டபங்களில் காணப்படும் கொடுங்கைகள், நாட்டுக்கோட்டைச் செட்டிமார் தம் கலைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு எனலாம்.

நகரத்தார்பாணி *nagarattār-pāṇi,* பெ. (n.) நாட்டுக்கோட்டைச்செட்டிமார் கட்டிய கோவில்களில் காணப்படும் ஒருமித்த கலையமைப்பு; the common architecture found in temples built by nāṭṭu-k-kōṭṭai-c-ceṭṭiyār's

[நகரத்தார் + பாணி.]

நகரத்துச்செட்டி *nagarattu-c-ceṭṭi,* பெ. (n.) செட்டிச் இனத்தாருள் ஒருவகையினர் (E.T V 92); a sub caste of chetties

[நகரம் + அத்து + செட்டி.]

[செட்டு + இ → செட்டி.]

நகரத்துவெள்ளாளர் *nagarattu-veḷḷāḷar,* பெ. (n.) வேளாளர் வகையினர். a sub sect of vēḷāḷās.

[நகரத்து+வேளாளர் → வெள்ளாளர்.]

நகரத்தோர் *nagarattōr,* பெ. (n) முற்காலத்திலிருந்த நகரமாந்தர் அவை (கல்வெட்டு); council of the citizens, in ancient times.

[நகரம் + அத்து + ஆர்> ஓர். நகரத்தார் → நகரத்தோர்.]

நகரப்பட்டினி *nagara-p-paṭṭiṇi,* பெ. (n) நகரதேவதையைக் குறித்து மேற்கொள்ளும் நோன்பு; a fasting vow in honour of the guardian deity of a city. "*தூநீராடி மேவருடங்குயர் நகரப்பட்டினியும் பாரணமும் விதியினாற்றி*" (சேதுபு. அகத்திய. 19.).

[நகரம்+பட்டினி.]

நகு → நகர் + அம் + பட்டினி.

பட்டு+இன்+இ = பசித்துயரால் துன்பம் பட்டுக்கிடக்கும் நிலை. 'இன்' ஈண்டு சாரியையாகி வந்தது. இன் சாரியை இன்றிவரும் பட்டு+இ= பட்டி என்பது, ஓர் எல்லைக்குள் உட்பட்டு நிற்கும் ஊரைக் குறிக்கும்.

நகரப்பதி *nagara-p-padi,* பெ. (n.), தலைநகர் (திவா.); capital

[நகரம் + பதி.]

நகரம் என்பது ஒளிமிக்க இடத்தையும், அங்கு பலர் வதிந்திருக்கும் பொருண்மையில், தலைநகரையும் குறிக்கும்.

அரசன் இருக்கும் அல்லது சென்று தங்கும் இடம் தலைநகர்.

மாடமாளிகைகள் விளங்கித்திகழும் பேரூரைப் பதி என்னுஞ்சொல் குறிக்கின்றது.

மாளிகை முதலில் அரசனுக்கே உரியதாயிருந்தது. அரசன் வாழுமூரே தலைநகர். வளமனை, மாளிகை அரண்மனை. கோயில், மண்டபம் போன்ற இடங்கள், சிறந்த ஓவிய வேலைபாட்டுடன் சிப்பிச்சுண்ணாம்புச் சாந்து தீற்றப் பெற்று விளங்கித் தோன்றும் பதியே, நகரப்பதி என்றறிக.

நகரப்பதிவாழ்நர் *nagara-p-padi-vā[l]nar,* பெ. (n.), 1. தலைநகரில் வாழ்வோர்; inhabitants of a capital. 2. நாகரிகமுள்ளோர். (திவா.); civilised persons.

[நகரப்பதி + வாழ்நர்.]

ஈண்டு நகரப்பதி வாழ்நர் என்பது, சிறப்பாகத் தலைநகரில் வாழ்பவரையே குறித்தது.

அரசனுக்கு அருந்தொண்டாற்றும் அமைச்சர்களும், அமைச்சர்க்கு உற்ற நேரத்தில் உறுதுணை புரியும் அதிகாரிகள் உறையுமிடமே நகரப்பதி.

இந் நகரப்பதியே தலைநகர். இத் தலைநகரின் வானளாவிய வளமனைகள் விளங்கித் தோன்றும்.

இத் தலைநகரில் வதியும் அமைச்சர்களும், அதிகாரிகளும், ஐம்பெருங்குழு, எண்பேராயத்தில் பணியாற்று பவேரே. இவர்களே, நகரப்பதி வாழ்நர்.

நகரம்[1] *nagaram,* பெ. (n.), 1. பேரூர் (சூடா); city, town, capital, metropolis. 2. அரண்மனை (யாழ்.அக.); palace 3. கோயில்; temple. "*மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமும்*" (சிலப். 14, 9.). 4. வாழிடம்; residence, place. "நகர மரருள்புரிந்து நான் முகற்குப் பூமேல்" (திவ். இயற்.முதற் 33.) 5. வளமனை, மாடமாளிகை, அனைத்தும் நிறைந்து, விளங்கித் தோன்றுவது. fabulous palace, elaborate wealhty houses and the unique historical temples are found in a prosperous city as town.

த. நகரம் → skt. nagara.

[நகு → நகல் → நகர் → நகரம்.]

"அம்" - பெருமைப்பொருள் பின்னொட்டு.

நகர் என்னும் சொல் 'அம்' என்னும் பெருமைப்பொருட் பின்னொட்டுப் பெற்று நகரம் என்றாகும். விளங்கித் தோன்றும் வெண்மை என்பதே இதன் வேர்ப் பொருள்.

"ஓய்மா நாட்டு நகரம் உலோக மாதேவி புரத்து வியாபாரி ஆர்வலங்கிழான்" (S.I.I.Vol V.1000).

இன்று 'நகரம்' என்னும் சொல், பெருநகர் என்னும் பொருண்மையில் வழக்கூன்றியுள்ளது. முதற்கண், அரசன் வாழும் தலைநகரையும், பின்பு அவன் சென்று தங்குமிடத்தையுஞ் சுட்டிற்று.

நகரம் என்னுந் தென்சொல்லை வடமொழியாளர், வேருந்தூரும் மொழிப் பொருட்கரணியமுமின்றி நகர, நகரீ எனத் திரித்தமைத்துக் கொண்டனர். (ப.த.நா.ப.பப்.4.)

நகரம்பழம் *nagaram-pa[l]am,* பெ. (n.) நவரம்பழம் வாழைப்பழ வகையு ளொன்று; a kind of plantain.

மறுவ. நவரை

[நவரம் > நகரம் + பழம்.]

நகரமன்றம் *nagara-maṉṟam,* பெ. (n.) நகரத்துக்கான உள்ளாட்சி அமைப்பு; municipality.

[நகரம் + மன்றம்.]

நகரமாக்கள் *nagara-mākkaḷ,* பெ. (n.), *நகரமாந்தர்*[2] (பிங்) பார்க்க; see *nagara māndar*[2]

[நகரம் + மாக்கள்.]

நகரமாகஇசைந்தநகரத்தோம் *nagaram-āga-isainda-nagarattōm,* பெ. (n.) வணிகர் குடியுருப்புப் பகுதியாக அரசின் வாயிலாக உரிமம் பெற்று வாழும் நகரத்தார்; commercial residence approved by government. "நகரமாக இசைந்த நகரத்தோம், சுந்தரசோழபுரமான தேசியுகந்து பட்டனம்" (புதுக்கோட்டை கல்வெட்டு எண்.422.).

நகரமாந்தர் *nagara-māndar,* பெ. (n.) 1. நகர்வாழ்நர்; city people. 2. அரசருக்குரிய எண்பெருந்துணைவருள் தலைமைபெற்ற நகர்வாழ்நர் (திவா.); chief citizen, one of eṉperuṁ-tuṉaivar.

நகரமீன் *nagara-mīṉ,* பெ. (n), பரவமகளிர்தம் ஐந்து வண்ணஅணிகளுள் காலின் சுண்டுவிரலிற் பூணும் அணிவகை. ring worn on the little toe by parava women, one of ai-vaṉṉam.

மறுவ. நவரை.

[நகரை → நகரமீன்.]



நகரமூக்கத்தி *nagara-mūkkatti,* பெ. (n.) நாகமூக்கொற்றிச் செடி; moon - flower

நகரவரை *nagar-avarai,* பெ. (n.) அவரைவகை (வின்.); a kind of bean. Dolichos - rugosus.

மறுவ. மொச்சை.

[நகர் + அவரை.]

புரதம் செறிந்த இம் மொச்சை, அவரைவகையுளொன்று. உண்ணுவதற்கு பெரிதும் உகந்தது.

நகரவனுச்சை *nagara-v-aṉuccai,* பெ. (n), நகரத்தார் அமைத்துக்கொள்ளும் ஒழுங்குமுறை, ஊர்க்கட்டுபாடு; *self control order between nagarattar* "*நகரவனுச்சையால் வைத்துக் கொடுத்தோம்*" (S.I.I vol. 2–III:223.).

நகரவாயிற்பழம் *nagara-vāyiṟ-paḻam,* பெ. (n.) புளிப்புச்சுவையுள்ள பழம்; grewia, asiatica a small and fruit.

மறுவ. பலசம்.

[நகரம் + வாயிற்பழம்.]

இயல்பாகவே புளிப்புச் சுவையுள்ள இப் பழச்சாற்றினின்று, கோடை வெப்பத்தைத் தணிக்கும், இனிய கலவையினை உருவாக்குவர். இவ் வின் பருகத்தினை மென்மேலும் புளிக்கவைத்து, தேட்கடுப்பன்ன புளிக்குந் தேறலாக மாற்றுவர். இத் தேறலுக்குத் துவர்ப்பு, புளிப்பு, குளிர்ச்சி முதலான குணங்களுண்டு.

நகரவாயிற் பழப்பட்டையினின்று, கடைச் சரக்குகளைச் சேர்த்து, கருக்குநீராகக் காய்ச்சிக் குடிப்பதனால், மிகுபித்தம், வெப்பு நோய் முதலானவை அகலும். (சா. அக.).

நகரவாரியம் *nagara-vāriyam,* பெ. (n.) நகரமாகக் கொள்ளப்பட்ட ஊர்களில், வணிகத் தொடர்பான செயல்களைக் கண்காணிக்கும் குழு. இத்தகைய வாரியம் சிறந்த வாணிகர் வாழும் ஊர்களிலேயே, அமைக்கப்பெறும்; supervising authority of merchant's council.

"*இவ்வூர் அங்காடியில் ஊராள்வார்கள் பெறும் அங்காடிக்கூலி கொண்ட இவ்வூர் நகரவாரியம் செய்வோமாக*" (S.I.I. vol. **5. 597.**)

[நகரம் + வாரியம்.]

நகரவிடுதி *nagara-vidudi,* பெ. (n.) நாட்டுக்கோட்டை நகரத்தார் வந்து தங்கு வதற்காக, அமைக்கப்பட்ட கட்டடம். a lodging-place specially intended for Nāṭṭuk-kōṭṭai chettties.

[நகரம் + விடுதி.]

நகரவியக்கி *nagaraviyakki,* பெ. (n.), புலித் தொடக்கி (சங். அக.); a thorny sensitive plant.

மறுவ: நகவியாக்கிரம்.

நகரவிரம் *nagaraviram,* பெ. (n.), மயில் (சங்.அக.); peacock.

நகரா *nagarā,* பெ. (n.), பெருமுரசுவகை; a large kettle-drum. "*நகரா முழுங்க*" (கொண்டல்விடு. **508.**).

நகராசிடமண் *nagarāśida-maṇ,* பெ. (n.), சவட்டு மண்; saline material in earth.

நகரப்பகுதிகளில் சுவர் எடுக்கப் பயன்படுத்தும், பற்றுக்கோடான உவர்ப்புக் கலந்த மண்.

நகராட்சி *nagarāṭci,* பெ. (n.) நகரத்துக்கான உள்ளாட்சி அமைப்பு; municipality. நகராட்சித்தேர்தல் அண்மையில் நடந்து முடிந்தது.

[நகர் + ஆட்சி.]

நகராட்சிமன்றம் *nagarāṭci-manṛam,* பெ. (n.) *நகரசபை* பார்க்க; see *nagara-sabai*

[நகராட்சி + மன்றம்.]

நகராணம் *nagarāṇam,* பெ. (n.), ஒளிநீர் (விந்து) (சங். அக.); semen. **2.** விதை; seed.

நகராபார் *nāgarā-pār,* பெ. (n.), மீன்வகையுளொன்று; yellow goat fish. மஞ்சள் வண்ணமுள்ள இறுகிய சதைப்பற்றுள்ள மீன்.

மறுவ: நகரை.

நகராமண்டபம் *nagarā-maṇḍabam,* பெ. (n.), வழிபாடு செய்வன், திருவில்லிப்புத்தூர் நாய்ச்சியாருக்கு வழிபாடு முடிந்தபின்பே,

உண்பது என்ற நோன்புமுடைமையால், அதனை அறிவித்தற் பொருட்டு, அவ்வூரிலிருந்து, மதுரைவரை, நகரா என்னும் முரசு மூலம், செய்தி அறிவிக்குமாறு வழிநெடுகத் திருமலை நாயக்கரால் அமைக்கப்பட்டுள்ள, மண்டபங்கள்; kettle-drum stations established by Tirumalai naikar along the road from *srivilliputtūr* to his palace at Madurai for announcing the Goddess at *Srivilliputtūr*, after which he would take his food;

[நகர் + ஆ = நகரா + மண்பம்.]

மண்டபம் = சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும் மாளிகை போன்றமைந்த இடம். திருத்தக்க தேவர் நகர் என்னும் சொல்லை மண்டபம் என்னும் பொருளில் ஆண்டார் (எ.டு) "அணிநகர் முன்னினானே" (சீவக.701.)

நகரா + மண்பம் = முரசுக்கட்டில்கள் அமைப்பதற்காக மன்னர்களால் அமைக்கப் பெறும் பெருமாளிகை.

நகராமுசி *nagarāmuśi,* பெ. (n.), **1.** ஈரல் (சங். அக.); liver. **2.** நுரையீரல்; the lungs.

[நகர் + ஆம் + உசி.]

உயிர்ப்புக்காற்று உள்வாங்கி வெளிவிடும் போது, நகர்வதுபோல் தோன்றலாகும் தன்மை உடையது.

நகராவம் *nagarāvam,* பெ. (n.), அலரி; olearder. nerum odorum.

நகரி[1] *nagari,* பெ. (n.), **1.** நகரம் (சூடா); city, capital. **2.** அரசுக்குரிய புறம்போக்கு நிலம்; land belonging to government (R.T).

த. நகரி → skt. nagarī.

[நகு→நகல் → நகர் → நகரி.] - நகர மாளிகையையும் செல்வச்செழிப்பு நிறைந்து திகழும் வளமனைகளும் விளங்கித் தோன்றும் ஊர்.

[நகர் + இ.]

'இ' உடைமையை உணர்த்தும் ஒன்றன் பாலீறு.

ஒ.நோ. காடைக்கண்ணி, நாற்காலி.

ஆழ்வார் திருநகர் + இ.

நகர் என்னும் சொல் தனி மாளிகையையும், அதனையுடைய பேரூரையுங் குறித்ததனால், இம் மயக்கத்தை நீக்கும் பொருட்டு, பேரூரை மட்டும் குறித்தற்கு 'இ' கரவீறு கொண்ட நகரி என்னுஞ்சொல் எழுந்தது. நகரை (மாளிகையை) யுடையது நகரி.

'நகரி' என்னுமிச்சொல் வடமொழியில் 'நகரீ' என்று ஈறு நீண்டு வழங்கினும், அதன் ஈற்றிற்கு அங்கு தனிப்பொருள் இல்லை. (ப.த.நா.ப.பக்.4.).

வீட்டைக்குறிக்கும் 'குடி' என்னுஞ்சொல், காலப்போக்கில் குடிமிக்க ஊரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

(எ.டு) காரைக்குடி; மன்னார்குடி.

நகுதல்= விளங்குதல்; விளங்கித் தோன்றுதல்.

வெண்சாந்து பூசிய காரைவீடு, கூரைவேய்ந்த மண்வீட்டோடு ஒப்பு நோக்கியபோது விளங்கித் தோன்றியதனால், 'நகர்' என்றுபெயர் பெற்றது.

[நகு → நகல் → நகர் → நகரி.]

நகர்களை (காரைவீடுகளை) உடையது நகரி. விளங்கும் மாளிகைகள் மிகுதியாக வுள்ள பேரூரே நகரி.

நகரி² *nagari,* பெ. (n.), வறட்சுண்டி (மலை); a sensitive plant. Indian worm killer.

நகரிகவுளி *nagari-kavuḷi,* பெ. (n.), தேட்கொடுக்கி; scorpion sting plant Heliotropium indicum.

[நகரி + கவுளி.]



நகரிகாவலர் *nagari-kāvalar,* பெ. (n.), நகரக் காவலாளிகள் (வின்.); city watchmen.

[நகரி + காவலர்.]

நகரிசோதனை *nagari-sōdaṉai,* பெ. (n.) அரசன் இரவில் வேற்றுருக்கொண்டு, தன் நகரத்தைச் சுற்றி ஆய்வு பார்க்கை (இ. வ.); nightly inspection of a city by its king incognito.

[நகர் → நகரி + skt. சோதனை.]

நகரிநிலம் *nagari-nilam,* பெ. (n) தீர்வையில்லாத சாகுபடிநிலம்; unassessed cultivable land. (R.T.).

[நகரி + நிலம்.]

நகரிப்பழக்கம் *nagari-p-paḻakkam.* பெ. (n.) நகர்வாழ்நர் நல்லொழுக்கம். (வின்.); urban manners, urbanity

[நகர் → நகரி + பழக்கம் = நகரமாந்தர்களின் திருந்திய ஒழுக்கம்.]

மக்களின் பழக்கவழக்கங்கள் முதன்முதல் நகர் அல்லது நகரத்திலேயே திருந்தின. அக் காலத்தே, பண்பட்ட பழக்க வழக்கத்தின் உறைவிடமாகவும், நகர் வாழ்நர் விளங்கினர். அகத்தே நல்லொழுக்கம் பூண்டு, உணவு, உடை, உறையுள் முதலான அனைத்து நிலையிலும், நாகரிகத்துடன் மிளிர்ந்த, நகரமாந்தர்தம் நல்வாழ்வுப் பழக்கமே, நகரிப்பழக்கம் எனப்பட்டது.

நகரிபகம் *nagari-pagam,* பெ. (n.), காகம் (மூ.அ.); crow.

நகரிபதம் *nagari-padam,* பெ. (n.) *நகரிபகம்* பார்க்க; see *nagari-pagam*

நகரிமாக்கள் *nagari-mākkaḷ,* பெ. (n) *நகரமாக்கள்* (சூடா.) பார்க்க; see *nagara-mākkaḷ.*

[நகர் → நகரி + மாக்கள்.]

ஒ.நோ. ஆழ்வார்திருநகர் → ஆழ்வார் திருநகரி.

மா + கள் என்று, விலங்குகளைக் குறிப்பினும், மக்கள் பொருளிலும் வரும்.

நகரியம் *nagar-iyam,* பெ. (n.) குறிப்பிட்ட தொழிலை ஒட்டி உருவாக்கிய நகரின் நிருவரகத்திற்காகத் தேர்தல்மூலம் அல்லாமல், அமைக்கப்படும் உள்ளாட்சி ஆளுகை; township.

[நகர் + இயம்.]

நகரிவகம் *nagarivagam,* பெ. (n.), *நகரிபகம்* (யாழ். அக.) பார்க்க; see *nagaribagam.*

*[*நகரிபகம் → நகரிவகம்.*]*

நகரு–தல் *nagaru-,* 2.செ. கு. வி. (v.i.) *நகர்–தல்,* பார்க்க; see *nagar-.*

*[*நகர் → நகரு.*]*

நகரூடம் *nagarūḍam,* பெ. (n.), மூக்கு (சங். அக.); nose.

நகரேகை *naga-rēgai,* பெ. (n.) *நகக்குறி* (யாழ். அக.) பார்க்க; see *naga-k-kuṟi.*

மறுவ. நகத்தழும்பு.

*[*நகம் + skt. ரேகை.*]*

நகரை[1] *nagarai,* பெ. (n.) **1.** நறுள்மரம்; small lance leaved, olive linden. **2.** மீன் வகையு ளொன்று; a kind of fish.

நகரை[2] *nagarai,* பெ. (n.) **1.** *நவரை* பார்க்க; see *navarai.* **2.** *பேய் நவரை* பார்க்க; see *pēy-navarai.* **3.** ஓர் அரிசி வகை a kind of rice.

நகரௌடதி *nagarauḍadi,* பெ. (n.) வாழை; plantain tree.

நகல்[1] *nagal,* பெ. (n.) **1.** சிரிக்கை; smiling, laughing. **2.** மகிழ்ச்சி; rejoicing, gladness. "தம்முட் குழீஇ நகலி னினிதாயின் (நாலடி.137.). **3.** நட்பு; friendship. "நகலானா நன்னயமென்னுஞ்செருக்கு" (குறள், 860). **4.** ஏளனம்(பிங்); ridicule, derision. **5.** மினுமினுக்கம் (அரு.நி); brilliance.

க. து. நகலி.

*[*நகு→ நகல்.*]*

நகலேகம் *nagalēgam,* பெ. (n.) நகத்தாற் பீறிய காயம்; a scratch with the nail.

நகலேகை *naga-lēgai,* பெ. (n.) *நகரேகை* (யாழ். அக.) பார்க்க; see *nag-rēgai.*

நகவாதம் *naga-vādam,* பெ. (n.) மூலிகை மருந்து வகையுளொன்று; a kind of herbal medicine.

*[*நகம் + Skt வாதம்.*]*

மிகுவளி (வாயு), ஊதை(வாதம்) போன்ற நோய்களுக்கு ஏற்ற மூலிகை.

நகவியாக்கிரம் *naga-viyākkiram,* பெ. (n.) *புலிதொடக்கி* (மூ.அ.) பார்க்க; see *puli-toḍakki.*

நகவிராணம் *nagaviraṇām,* பெ. (n.), *நகக்கணுவிரணம்* பார்க்க; see *naga-k-kaṇuviraṇam.*

நகவுளி *naga-v-uḷi,* பெ. (n), **1.** நகம்வாங்கி; barber's instrument for paring nails. **2.** தச்சுக்கருவி வகை (யாழ். அக.); carpenter's gouge.

மறுவ. நகவெட்டி.

[நகம் + உளி.]

நகவுறை *naga-v-uṟai,* பெ. (n), தைக்கும் பொழுது சுட்டுவிரல் நுனியில் அணியும், மாழையினால் ஆகிய மூடி; a cap, wear at the time of stiching by needle.

[நகம் + உறை.]

செங்கோட்டு யாழில் அமைந்துள்ள நரம்புகளை மீட்டுங்கால், விரல் அறுபடாமல் இருப்பதன்பொருட்டு அணியும், விரல்மேலுறை.

நகழ்¹–தல் *nagaḻ-,* 4.செ.கு.வி. (v.i.), 1. கடும்வலியால் துன்பப்படுதல்; to suffer acute pain. "*நகழமால் வரைக் கீழிட் டரக்கர் கோனை*" (தேவா. 175: 10).

[நகு + அல் > அழ்–.]

நகழ்²–தல் *nagaḻ-,* 4. செ.கு.வி. (v.i.), நகர்ந்து செல்லுதல்; to creep, crawl along. "*நகழ்வனசில*" (கம்பரா. அதிகா. 136).

[நகர் → நகழ்–.]

ஒ.நோ: உமிர் → உமிழ்.

நகழ்வாதனம் *nagaḻ-v-ādaṉam,* பெ. (n.), இருக்கை வகைகளுளொன்று (தத்துவப். 107. உரை); a kind of posture.

கால்கைகளைத் தரையில் ஊன்றி, மோவாய் தரையிற்படத் தலையைக் குனிந்தும், பிறகு நிமிர்ந்தும் இருக்கும் ஓகவிருக்கை வகை.

[நகர் → நகழ் → நகழ்வு +skt. (ஆதனம் = இருக்கை).]

நகழ்வு *nagaḻvu,* பெ. (n.), 1. துன்பம்; pain. "*நகழ்வொழிந் தாரவர் நாதனை யுள்கி*" (திருமந். 2669). 2. *நகழ்வாதனம்* பார்க்க; see *nagaḻ-v-ādaṉam.*

[நெகு→நெகிழ்வு→நகழ்வு.]

நகள்¹(ளு)–தல் *nagaḷ(ḷu)-,* 2.செ. கு. வி. (v.i.), நகர்ந்து செல்லுதல். to creep, crawl along.

[நகர்→நகள்.]

நகள்²(ளு)–தல் *nagaḷ(ḷu)-,* 2.செ. கு. வி. (v.i.), 1. *நகழ்¹* பார்க்க; see *nagaḻ¹;* 2. நசுக் குண்ணுதல்; to be crushed.

நகாஅர் *nagāar,* பெ. (n.), சிரிக்கும்போது தோன்றும் பல்; tooth as appearing in laughter. "*மடவோர் நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்*" (சிறுபாண் 57.).

[நகு → நகாஅர்.]

நகைக்குங்கால், மிளிரும் நிலையிலும், ஒளிருந்தன்மையிலும் விளங்கித் தோன்றும் பல்.

நகாஅல் *nagāal,* பெ. (n.), சிரிப்பு; laughter. "*நல்ல நகாஅலிர் மற்கொலோ*" (கலித். 142. 16).

[நகு → நகா→அர் → நகாஅல்.]

ஒளிரும் இயல்பால் விளங்கச் சிரிக்கும் சிரிப்பு.

நகாசு¹ *nagāsu,* பெ. (n.), நெற்றி (யாழ். அக.); forehead.

[நகு → நகாஅ + சு - ஒளிரும் நெற்றி]

கருமைநிறத்தவருக்கும், வெண்மை நிறத்தவருக்கும், வெயில்படும் பகுதியாக நெற்றி, ஒளிரும் தன்மையில் அமைந்த பாகமாகும். நெற்றிக்கு உள் இருக்கும் மூளையின் இயக்கமே, மாந்தர் தம் செயல்பாடு. ஆதலால் 'நுதல்', நெற்றி, எண்ணுதல் என்னும் பொருளில், பயின்று வருகின்றதெனலாம்.

நகாசு² *nagāśu,* பெ. (n.), நகை முதலியவற்றிற் செய்யப்படும் அழகிய நுணுக்க வேலை; delicate ornamental work.

த. நகாசு. பி. nagāsi.

[நகு→ நகா→ நகாசு.]

பொலிவுடன் மிளிர்ந்து, அழகுடன் விளங்கித் தோன்றும் நுணுக்க வேலை.]

நகாசுமணி *nagāśu-maṇi,* பெ. (n.), **1.** *நகாசு²* பார்க்க; see *nagāśu².* **2.** பரதவமகளிர் கழுத்தணி; necklace worn by paratava women.

[நகாசு → நகு + ஆசு. மணி = அழகுடன் ஒளிரும்மணி.]

கடற்படு பொருள்களில், கோர்த்தணியும் கழுத்தணி ஒளிமிக்கிருத்தலின், ஐந்து நிலங்களில், நெய்தல் நிலத்துக் கழுத்தணி, குறிக்கப்படுதல் காண்க.

நகாசுவேலை *nagāśu-vēlai,* பெ. (n.), நகை முதலியவற்றிற் செய்யப்படும் அழகிய நுணுக்க வேலை; delicate ornamental work done by goldsmiths.

[நகை + காசு + வேலை.]

நகாயுதம்¹ *nagāyudam,* பெ. (n.), **1.** நகத்தைப் படைக் கருவியாகக் கொள்ளுவது; that which uses its claws as weapon. **2.** புலி (யாழ்.அக.); tiger **3.** பூனை(யாழ். அக.); cat

[நகு → நகம் + skt. ஆயுதம்.]

புலி, பூனைகளைக் குறிப்பது சினையாகு பெயர்.

நகாயுதம்² *nagāyudam,* பெ. (n.), **1.** (சேவல்;) கோழி; cock fowl. **2.** நகமுள்ள விலங்கு அல்லது பறவை; any bird or beast possessing talons.

ஈண்டு பறவைக்குச் சினையாகு பெயராயிற்று. முட்டைகளை அடைகாத்துக் குஞ்சு பொறித்திருக்கும் சில நாட்களில், கழுகு போன்றவை கவ்வ வருங்கால், கோழி உகிர்க்கருவியைப் போர்க்கருவியாகக் கொண்டு பாயும்.

[நகம் + skt. ஆயுதம்.]

நகார் *nagār,* பெ. (n), **1.** முத்தையொத்த வெண்பல்; tooth like pearls *"மகாஅர் அன்ன மந்தி நகாஅர் அன்ன நளிநீர் முத்தம் மடவோர்"* (சிறுபாண். 57).

[நகு → நகார்.]

முத்துப்பற்கள். ஒளிரு தற் கருத்துவேர். நகையென்னுஞ் சொல், முதற்கண் ஒளிருதலைக் குறித்து. அடுத்த நிலையில் ஒளிரும் பற்களையும், சிரிப்பினையும் குறிக்கலாயிற்று.

நகிர் *nagir,* பெ. (n.), தேள் கொடுக்கி (மூ.அ.); indian turnsole.

நகில் *nagil,* பெ. (n.), முலை; woman's breast. *"நகின்முகத்தி னேவுண்டு"* (கம்பரா.மிதிலை.45).

[நகு → நகில் - அழகுடன் விளங்கித் தோன்றும் கொங்கை.]

கொங்கை குழந்தையர்க்குப் பாலூட்டும் உறுப்பாயினும், ஆண்மையைக் கவரும் இயற்கைப் பண்பில், ஒளிமிக்க இட மாகும்.

நகிலம் *nagilam,* பெ. (n), முலை; female breast.

[நகில் + அம்.]

நகிலெலும்பு *nagil-elumbu,* பெ. (n.), முலைக்காம்புருவாய்க் காதின் முன்புறம் இருக்கும் ஓர் எலும்பின் பாகம்; the bone resembling the nipple or breast behind the ear.

[நகில் + எலும்பு.]

நகு[1]–தல் *nagu-,* 4.செ. கு. வி. (v.i.), 1. சிரித்தல்; to laugh, smile. "*நகுதற் பொருட்டன்று நட்டல்*" (குறள், 784). 2. மகிழ்தல்; to rejoice "*மெய்வேல் பறியா நகும்*" (குறள், 774). 3. மலர்தல்; to bloom, as a flower "*நக்க கண்போ னெய்தல்*" (ஐங்குறு. 151). 4. கட்டவிழ்தல்; to open or expand "*நக்கலர் துழாய் நாறிணர்க் கண்ணியை*" (பரிபா, 4 58). 5. ஒளிர்தல்; to shine, glitter. 'பொன்னக்கன்ன சடை' (தேவா. 644:1). 6.. புள்ளிசைத்தல்; to hoot, as an owl; to sing, as a bird "*நற்பகலுங் கூகை நகும்*" (பு. வெ. 3,4).

க., நகு(g) தெ. நவ்வு., நகவு.

[நெகு → நகு - (வே. க. 3. 24)]

இஃது, ஒளிருதற் கருத்து வேரினின்று முகிழ்த்த சொல்லாகும். விளங்குதல், திகழ்தல், முகம்விளங்குமாறு சிரித்தலென்னும் பொருண்மை பொதிந்தது. முகம் விளங்குதற்கேற்ப, அகம் மகிழ்தலும் இயல்பே யென்றறிக.

நகு[2]–தல் *nagu-,* 4.செ. குன்றாவி. (v.t.). 1. இழிவாகக் கருதுதல்; to despise. "*ஈகென்பவனை நகுவானும்*" (திரிகடு. 74). 2. தாழ்த்துதல்; to surpass, overcome. defeat, "*மானக்க நோக்கின் மடவார்*" (சீவக. 1866).

[நெகு → நகு–. (வே. க. 3.24.)]

நகுதல், ஈண்டு எள்ளல் பற்றியது.

நகுடம்[1] *nagudam,* பெ. (n.), மூக்கு (யாழ். அக.). ; nose.

நகுடம்[2] *nagudam,* பெ. (n.), அமுக்கிரா (நாமதீப.); Indian winter cherry

நகுடன் *nagudan,* பெ. (n.), நகுலன் பார்க்க; see nagulan. "*நகுட னாமவேல் நராதி பனாகருக் கரசாய்*" (பாரத. குருகுல. 14).

[நகுலன்→நகுடன்.]

நகுத்தம் *naguttam,* பெ. (n.), 1. புன்கு; indian beech tree 2. காட்டுப் பச்சிலை வகை; a kind of rosewood, caps albergia larborea

நகுதலிலை *nagudalilai,* பெ. (n.). நெட்டைநாரத்தை; common cherry nutmeg.

நகுதாக்கட்டை *naguda-k-kattai,* பெ. (n.), காக்காய்ச் சரிகைக்கண்டு; reel of imitation lace thread

[நகுதா + கட்டை.]

ஒளியற்ற கருமைநூல் கண்டு.

நகுதாளிலை *nagudalilai,* பெ. (n), நூலிலை; common cherry nutmeg.

[நகு + தாள் + இலை.]

ஒளிமிக்க காம்போடுகூடிய இலை.

நகுநயமறைத்தல் *nagu-naya-maraittal,* பெ. (n.), களவுக்கூட்டத்தின் முன் தலைவி, நாணத்தால் உள்ளடங்கிய தன்மகிழ்ச்சியைத் தலைவர்க்குப் புலனாகாதவாறு மறைக்கை (தொல். பொருள். 261), a theme in which a

mistress coyly hides from her lover the inward delight she feels at the prospect of a clandestine union.

[நகு + நயம் + மறைத்தல்.]

நகுலம் *nagulam,* பெ. (n.), விலங்குவகை கீரி; mungoose, herpestes mungo. "*பிள்ளை நகுலம் பெரும்பிறிதாக*" (சிலப். 15, 54).

[நகு(கு)ல் + அம்.]

குதிரை போன்ற விலங்குகள் கனைக்கும்பொழுது, சிரிப்பது போலிருக்கும்.

நகுலமலைக்குறவஞ்சி *nagulamalai-k-kuravañji,* பெ. (n.), ஒரு நூல்; a book. இந்நூல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விசுவநாத சாத்திரியாரால் எழுதப்பட்டது.

இந் நூலில் இரட்டுறமொழிவுச் செய்யுள்களைப் பாடியுள்ளார்.

[நகுல மலை + குறவஞ்சி.]

நகுலன் *nagulaṉ,* பெ. (n.), 1. ஐவருள் (பஞ்ச பாண்டவருள்) ஒருவன்; one of pāṇḍavar prince; "*சசிகுல நகுலனென்றும்*" (பாரத. சம்பவ. 87); 2. பரிமா உகைப்போன்; skilful horseman. 3. அறிஞன்; intelligent person. 4. சிவன்; šivaṉ 5. புதல்வன் (யாழ்.அக.); son.

[நல் + குலன்.]

நகுலாந்தியம் *nagulāndiyam,* பெ. (n.), 1. கண்குருடு; blindness. 2. ஒரு வகை கண்நோய்; a kind of eye disease.

நகுலார்த்தமம் *nagulārttamam,* பெ. (n.), கீரிப்பிள்ளை கண்கள் போலாகி, இரவில் கண் தெரியாதிருத்தல்; the eyes become like those of mungoose, and loose vision during night.

நகுலி *naguli,* பெ. (n.), 1. பட்டுப்பருத்தி; red silk - cotton. 2. மணமுள்ள பொருள்; a scent

நகுலேட்டை *nagulēṭṭai,* பெ. (n.), பூடுவகை (யாழ்.அக.); a kind of shrub.

நகுவல் *naguval,* பெ. (n.), ஏளனம்; pleasantry. "நானெனதென்று நகுவறீர" (பாடு.105, பாம்பாட்டு).

[நகு+அல்.]

நகுனகி *nagunagi,* பெ. (n.), 1. மையல் கொண்ட பெண்; a lustful woman. 2. பருவமடையாப் பெண். a girl before menstruation.

[நகுவில் + நகு + இல் = நகி(ல்).]

நகேசன் *nagēšaṉ,* பெ. (n.), மலைகட்குத் தலைமையாய்த் திகழும் இமயமலை (யாழ். அக.); the Himalayas as lord of the mountains.

[ஒருகா. நாக> நக + ஈசன்.]

நகேசநங்கை *nagēša-naṅgai,* பெ. (n.), மலைமகள் (யாழ்.அக.); Malaimagaḷ,

[நாக + ஈசன் + நங்கை.]

நகேசிகம் *nagēšigam,* பெ. (n.), புல்லூரி; parasitic plant.

நகேசிறு *nagēšiṟu,* பெ. (n), புல்லுருவி (மூ.அ.); honey-suckle mistletoe.

நகை[1] *nagai,* பெ. (n.), **1.** சிரிப்பு; smile, laughter "*நகைமுகங்கோட்டி நின்றாள்*" (சீவக 1568). **2.** மகிழ்ச்சி; cheerfulness. "*இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகி*" (சிறுபாண். 220). **3.** இன்பம்; delight,gratification, pleasure, joy. "*இன்னகை மேய*" (பதிற்றுப் 68, 14). **4.** இகழ்ச்சிச் சிரிப்பு, இகழ்ச்சிப் பேச்சு, அவமதிப்பு; contemptuous laughter, sneer, derision, scorn. "*பெறுபவே........பலரா னகை*" (நாலடி, 377). **5.** இளிப்பு; grinning. **6.** ஏளனம்; pleasantry. "*நகையினும் பொய்யா வாய்மை*" (பதிற்றுப் 70,12). **7.** நட்பு; friendship. "*பகைநகை நொதும லின்றி*" (விநாயகபு. நைமி . 25). **8.** நயச்சொல்(திவா); pleasant word. **9.** விளையாட்டு; play. "*நகையேயும் வேண்டற்பாற் றன்று*" (குறள், 871). **10.** மலர்; flower. "*எரிநகை யிடையிடு பிழைத்த நறுந்தார்*" (பரிபா. 13.59). **11.** பூவின் மலர்ச்சி; blossoming of flowers. "*நகைத்தாரான் தான் விரும்பு நாடு*" (பு. வெ. 9, 17). **12.** ஒளி; brightness, splendour. "*நகைதாழ்பு துயல் வரூஉம்*" (திருமுரு 86). **13.** பல்; teeth. "*நிரைமுத் தனைய நகையுங் காணாய்*" (மணிமே. 20, 49). **14.** பல்லீறு(வின்); the gums. **15.** முத்து; pearl "*அங்கதிர் மணிநகை யலமரு முலைவளர் கொங்கணி குழலவள்*" (சீவக. 603). **16.** முத்துமாலை; garland of pearls. "*செயலமை கோதை நகையொருத்தி*" (கலித். 92,33). **17.** அணிகலன்; jewels. 'நகைக்கு மகிழ்ச்சி நட்புக்கு நஞ்சு' (பழ.). **18.** ஒப்பு; resemblance, comparison. "*நகை........ பிறவும்.......... உவமச்சொல்லே*" (தண்டி. 33).

க. நகெ(g) நக(g), **தெ. ம.,** **து.,** நக.

[நகு → நகை (வே. க. 3:24.]

தகத்தகவெனச் சொலித்து மின்னும் அணிகலன் நகையென்று பெயர் பெறும்.

விளங்கித்தோன்றி, ஒளிரும் பற்களின் சிரிப்பும் நகையெனப்படும்.

நகை[2]**-த்தல்** *nagai-,* 4.செ. குன்றாவி. (v.t.), சிரித்தல்; to laugh "*ஊர் நகைத்துட்க*" (கல்லா. 88, 1).

ம. நகெக்க.

[நகு → நகை-.]

நகைக்கடை *nagai-k-kadai,* பெ.(n.) அணிகலன் விற்பனைக்கடை; Jewels shop

[நகை + கடை.]

நகைக்கடைத்தெரு *nagai-k-kadai-t-teru,* பெ. (n.) அணிகலன்கள் விற்பனை செய்யும் கடைகள் நிரம்பிய தெரு; the street of jewellery shops.

மறுவ. காசுக்கடைத் தெரு.

[நகைக்கடை + தெரு.]

நகைக்கும் பறவை *nagaikkum-paravai,* பெ. (n.) *நகைப்பறவை* பார்க்க; see *nagai-p-paravai.*

நகைச்சுவை *nagai-c-cuvai,* (பெ.) (n.) **1.** சிரிப்பும்; மகிழ்ச்சியும் மிளிரும் வண்ணம் உள்ள பேச்சு-செயல்: humour, comic. அவருடைய பேச்சிலும், எழுத்திலும் நகைச்சுவை மிளிரும்(உ.வ.). பெண் பார்க்கப்போனதைப் பற்றி, நண்பர் மிகவும் நகைச்சுவையுடன் எழுதியிருந்தார்: கலைவாணர் மிகச்சிறந்த நகைச்சுவை நடிகர் (இக்.வ.). 2.சிரிப்பு உண்டாகும்படிப் பேசுதல்; humourous talk, joke.

[நகை + சுவை.]

நகைச்சுவைக்கலை *nagaiccuvai-k-kalai,* பெ.(n.) *நகையாட்டுக்கலை* பார்க்க; see *nagai-y-yāṭṭu-k-kalai.*

[நகைச்சுவை+கலை.]

நகைச்சுவைத்திறன் *nagai-c-cuvai-t-tiṟan,* பெ.(n) பிறரை மகிழ்விக்கும் அல்லது சிரிக்கவைக்கும் ஆற்றல்; the skill of humour.

[நகைச்சுவை + திறன்.]

நகைச்செல்லம் *nagai-c-cellam,* பெ. (n.) சிறிய அணிகலப்பெட்டி, அணிகல இருப்பு (இ.வ.); jewel-case.

[நகு → நகை + செல்வம் → செல்லம்.]

வைப்பகம் இல்லாத காலத்தில், இருப்புக் கணக்காக, நகை கருதப்பட்டது.

நகைச்சேதாரம் *nagai-c-cēdāram,* பெ. (n.) அணிகலன் செய்யும் போது பொன்னை அறுத்து அராவுங்கால் ஏற்படும் இழப்பு; wastage of gold in making jewels due to filing, etc. ஆடித்திருவிழாவில் அணிகலன் வாங்குபவர்க்கு நகைச்சேதாரம், செய்கூலி இல்லை (இ.வ.).

[நகை + சிதை + அம் → சிதயம் → சேதம் + ஆரம்.]

சேதம் = இழப்பு; அழிவு. பொன்னாலேனும், வெள்ளியாலேனும் நகை முதலியன செய்யும் போது, ஏற்படும் தேய்மான இழப்பே நகைச்சேதாரம். இச்சொல், இன்று நகர்ப்புறத்தும், நாட்டுப்புறத்தும் பரவலாக வழக்கில் உள்ளது. நகையின் எடையைப் பொறுத்து இச் சேதாரத்தின் மதிப்பு அமையும்.

நகைச்சொல் *nagai-c-col,* பெ. (n.) **1.** இகழ்ச்சிமொழி; ridicule, derisive words. நகைச்சொல் தருதல் பகைக்கு ஏதுவாகும் (பழ.). 2. வேடிக்கைப்பேச்சு; pleasantry, joking.

மறுவ. *நக்கல்பேச்சு.*

[நகை + சொல்.]

பிறரை எள்ளி நகையாடி ஏளனப் படுத்தும், சிறுபிள்ளைத்தனமான பேச்சு.

நகைச்சோதி *nagai-c-šōdi,* பெ. (n.) மின்மினிப்பூச்சி; fire fly.

[நகு + ஐ = நகை. Skt சோதி.]

நகைபோன்று மின்னுந்தன்மையுள்ள பூச்சி.

நகைத்திறச்சுவை *nagai-t-tiṟa-c-cuvai,* பெ. (n.) கோமாளிக்கூத்து (சிலப்.3,12,உரை.); comic dancing.

மறுவ. எள்ளற்கூத்து; நகையாட்டு; சிரிப்புக்கூத்து. கேளிக்கூத்து.

[நகுதிறம் → நகைத்திறம் + சுவை.]

பிறரை மகிழ்விக்குந்திறம், அறிவுறுத் திறத்தால், அனைவருக்கும் இன்பமூட்டி, அக மகிழ்விப்பவரே, நகைத்திறமிக்கவர். இந் நகைத்திறம், எந் நிலையிலும், எவர்தம்மையும், எள்ளிநகையாடாதிருத்தலே, விழுமியது என்றறிக.

நகைநட்டு *nagai-naṭṭu,* பெ. (n.) நகை முதலான பொருள்கள்; jewel and other valuables நகை நட்டையெல்லாம் விற்றுவிட்டாள் (இ.வ.).

[நகு → நகை + நள் + து → நட்டு - நகை + நட்டு.] நகையும் திருகும் என்று பொருள்படும் வழக்கு.

இஃது ஒளிருதற் கருத்தினின்று தோன்றிய மரபிணை மொழி வழக்கு. இன்று நாட்டுப்புறத்தே நன்கு வழக்கூன்றியுள்ளது.

எ.டு. 1. நகைநட்டு போட்டு வந்ததால், அவளைப் பிடிக்க முடியவில்லை (இ.வ.).
2. நகைநட்டு போடாமலே, நாட்டாமை செலுத்துகிறாள் (உ.வ.).

நகைநாணயம்[1] *nagai-nāṇayam,* பெ. (n.) நகை முதலிய பொருள்கள்; jewels and other valuables.

[நகை + நாணயம் = காசு.]

நகைநாணயம்[2] *nagai-nāṇayam,* பெ. (n.) நகையை இரவல் வாங்கிப் பயன்படுத்திய பின்பு, மீண்டும் திருப்பித்தரும் ஒழுங்கு; prompt and punctual borrowed return of the jewels

[நகை + நாணயம்=நம்பிக்கை.]

நகைநோக்கம் *nagai-nōkkam,* பெ. (n.) 1. மஞ்சள் (மலை.); turmeric 2. பட்டுப் பருத்தி; silk-coton tree-Bombox malabaricum.

நகைப்பறவை *nagai-p-paṟavai,* பெ. (n.) மக்களை மகிழ்விக்கும் இன்முகப்பறவை; charming and cheerful bird.

[நகை + பறவை.]

ஆத்திரேலியாவில் மருத்துவமனை நோயாளிகளை, மகிழ்விக்கும் பறவை.

நாவலந்தேயத்து (இந்தியநாட்டு) மீன்குத்திப் பறவையினைப் போன்றது. இதன் தலையும் வயிறும் கருமை கலந்த செந்நிறத்தது. பின்புறம் நீலங்கலந்த பசுமையானது. இதன் உணவு இறைச்சியாகும். மிகக் கடுமையான நோயினால் தாக்குண்ட மருத்துவமனை நோயாளிகளின் நோயினை, மறக்கச் செய்வதற்கு, இப் பறவையின் இன்னியங் கலந்த, 'ஆ' 'ஆ' என்னும் நகைப்பொலி பேருதவி புரிகின்றது.

ஆத்திரேலியாவில் உள்ள மருத்துவ மனைகளில், இப் பறவை வளர்க்கப் படுகின்றது. இப் பறவைகளின், ஈடில்லா இன்னிசையால், நோயின் கடுமை குறைகின்றது. நோயாளிகள், கண்ணுறங்கச் செல்லும் போதும், இன்னிசையினை எழுப்பி மகிழ்விக் கின்றது.

(அபி.சிந்.பக்.915.).



நகைப்பு *nagaippu,* பெ. (n.) 1. சிரிப்பு (இ.வ.); smiling. கிண்டல் செய்து நகைப்பூட்டுவதில் இந்த நண்பர் கைதேர்ந்தவர் (இக்.வ.). 2. பகடி, எள்ளப்படும் பொருள்; derision. நகைப்பிற்கு இடமான செய்கை (உ.வ.).

தெ. நகவு.

மறுவ. எள்ளல்; கேளி.

[நகு → நகை → நகைப்பு.]

நகைப்புலவாணர் *nagai-p-pula-vāṇar,* பெ. (n.) நட்புக்குரியரானவர்; favourites, friends "*நகைப்புலவாணர் நல்குரவகற்றி*" (புறநா.387.).

[நகைப்புலம் + வாழ்நர் → வாணர்.]

ஒ.நோ. சோழநாடு → சோணாடு நகைப்புலவாணர் என்பவர், அறிவுத் திறத்தால், அனைவரையும் அகமகிழ்விக்கும், ஆற்றல் மிக்கவர்.

நகைப்பெட்டி *nagai-p-peṭṭi,* பெ. (n.) அணிகலன்களைப் பாதுகாப்பாக வைக்கும் பெட்டி; jewel - box.

[நகை + பெட்டி.]



நகைப்பொலி *nagai-p-poli,* பெ. (n.) சிரிப்பொலி; laughter sound. நகைப்பொலி அடங்கச் சிறிது நேரமாயிற்று. (உ.வ.).

[நகைப்பு + ஒலி.]

நகைமதிப்பீட்டாளர் *nagai-madippiṭṭāḷar,* பெ. (n.) பணவைப்பகங்களிலும் (வங்கி), பிறவற்றிலும் அணிகலன்களை, மதிப்பீடு செய்பவர்; appraiser.

[நகை + மதிப்பீடு + ஆளர்.]

நகைமுகம் *nagai-mugam,* பெ. (n.) 1. சிரித்த முகம்; cheerful countenance. "நகைமுகத்த நன்கு மதிப்பு" (நீதிநெறி.39.); 2. உடன்பட்டமை தோற்றும் முகப்பொலிவு; smile of acquiescence. "*நகைமுக மழிந்து நின்றேன்*" (சீவக.478.).

[நகை + முகம்.]

நகையரல் *nagai-y-aral,* பெ. (n.) கிலுகிலுப்பை (மூ.அ.); a species of rattle-wort.

[நகை + அரல்.]

உரத்த குரலில் நகைப்பது போன்ற ஒலி எழுப்புதல் பற்றியோ, குழந்தைகளுக்குச் சிரிப்பொலி எழுப்புதல் பற்றியோ, அமைந்த பெயர்.

நகையா *nagai-y-ā,* பெ. (n.) 1. குறுப்பாலை; grey barked nageia-Putranjiva roxburghi. 2. வெள்ளை ஒழுக்கைப் போக்கும் ஒரு மூலிகை; drug for curing gonorrhoea.

[நகை → நகையா.]

நோய்த்துயர் மகிழ முடியாமையை ஏற்படுத்தலால், அமைந்த பெயர்.

நகையாட்டாளர் *nagai-y-āṭṭāḷar,* பெ. (n.) நாடகத்திலும், திரைப்படத்திலும், பிறரை நகைப்பில் ஆழ்த்தும்வண்ணம், சொல்லாடுபவர்; humorous actor. இருபதாம் நூற்றாண்டில் கலைவாணர் கருத்தாழமிக்க நகையாட்டாளர் என்று, மக்களால் போற்றப் படுகின்றார். (சென்னை).

[நகை + ஆடு + ஆளர்.]

நகையாட்டு *nagai-y-āṭṭu-,* பெ. (n.) பிறரை மகிழ வைக்கை; the art of humour

[நகை + ஆடு (கு.வி.) → ஆட்டு (பி.வி.).]

நகையாட்டுக்கலை *nagai-y-āṭṭu-k-kalai,* பெ. (n.) பிறரை மகிழ்விக்கும் அல்லது அவர்தம் துன்பத்தை மறக்கச் செய்து, இன்பத்துள் ஆழ்த்தும் கலை; the skill and the art of humour.

[நகையாட்டு + கலை.]

நகையாடு—தல் *nagai-y-āḍu-,* 5. செ. குன்றாவி. (v.t.) 1. சிரித்தல்; to smile, laugh. 2. எள்ளல், நக்கல்; to jeer, rail at; to joke. "*நகையாடிக் கூறிக் கைப்பற்றியவழி*" (ஐங்குறு.79,உரை.).

[நகு → நகை + ஆடு—.]

நகையால் *nagai-y-āl,* பெ. (n.) 1. பகன்றைச் செடி; rattle nail dye-Crotolaria verrucosa. 2. நீர்முள்ளி; water thistle. 3. கல்லால்; stone fig tree. 4. கிலுகிலுப்பை; rattle wort-Corotolaria laburnifolia.

நகைவகையராக்குவார் *nagai-vagaiyar-ākkuvār,* பெ. (n.) அறிவுரை கூறாது சிரித்துப்பேசிப், பொருள் கவர்தலைக் குறிக்கோளாகக் கொண்ட கூடா நட்பினர்; false good friends.

மறுவ. கரிமுகர்; நகைவேழம்பர்.

[நகைவகையர் + ஆக்குவார்.]

நகைவகையர் = எஞ்ஞான்றும், சிரிக்கப்பேசி பொருள் பறிப்பவர். நல்லுரை நவின்று அறிவூட்டாது, வீண் சிரிப்பையும், பகட்டாரவாரத்தையும், தொழிலாகக் கொண்டு, பொருள் பெறும் குறும்பர். உண்மை நண்பர் என்பவர், குணத்தை மட்டும் கூறுபவராக இராது, நண்பர்தம் குற்றத்தையும், இடித்துரைத்துத் திருத்துபவராகச் செயல்பட வேண்டும். "நகைவகைய ராகிய நட்பின் பகைவரால் பத்தடுத்த கோடி உறும்" (குறள்,817.).

நகைவர் *nagaivar,* பெ. (n.) நட்பினர்; friends. *"நகைவர்க் கரணமாகிப் பகைவர்க்குச் சூர்நிகழ்ந் தற்றுநின் றாணை"* (பதிற்று.31,34.).

[நகைவர் + பகைவர்.]

எதுகையொத்த சொல்லாட்சி.

நகைவேழம்பர் *nagai-vēḷambar,* பெ. (n.) கோமாளி; professional buffoons, clowns. *"நகைவேழம்பரொடு வகைதெரி யிருக்கையும்"* (சிலப்.5:53.).

மறுவ. நகையாட்டாளர்.

[நகை + வேழம் + அம்பர்.]

மூங்கில் கம்பில், வயிற்றை வைத்துச் சுழன்று காட்டும், கோமாளித்தனத்தவர்.

நங்கணவாய் *naṅgaṇa-vāy,* பெ. (n.) *நாகணவாய்ப்புள்* பார்க்க; see *nāgaṇa vāy-p-puḷ.*

[நாகணம் → நங்கணம் + வாய்.]

நங்கணவாய்ச்சி *naṅgaṇa-vāycci,* பெ. (n.) பறவை வகை (வின்.); a kind of bird.

[நாகண → நங்கண + வாய்ச்சி.]

இது நாகண வாய்ப்புள் என்றும், பூவை என்றும் மக்களிடையே வழங்குகிறது.

நங்கள் *naṅgaḷ,* பெ. (n.) நாங்கள் என்பது வேற்றுமையுருபை ஏற்கும்போது அடையும் எழுத்துருத் திரிபு; the basic form which nāṅgaḷ assumes before case-suffixes *"நங்கள் வரிவளை யாயங்களோ"* (திவ்.திருவாய்.8:2:1.). *"நங்கள் இருவினை மாமரம் வேர்பறித்து"* (திருவாச,3.86.).

[நாம் → நம் + கள்.]

நங்கனை *naṅgaṉai,* பெ. (n.) அரைப் பட்டிகையின் உறுப்பு; part of a girdle. *"திருப்பட்டிகைக் கதலிக்கை நங்கனை ஒன்று".* (S.I.I.vol. II:144.).

[ஒருகா. நங்கன் → நங்கனை.]

நங்காமணத்தி *naṅgāmaṇatti,* பெ. (n.) செம்மணத்தி; red wood, decanny deodar.

[நன்கு → நங்கை + ஆமணத்தி.]

நங்கினம் *naṅgiṉam,* பெ. (n.) நாகண வாய்ப்புள்; mynah (bird).

[நன்கு → நங்கு + இனம்.]



நங்கிலி[1] *nangili,* பெ. (n.) பயிரி. (யாழ்.அக.), கோழிக்கீரை வகை; purslane.

[நன்கு + இலி.]

நங்கிலி[2] *nangili,* பெ. (n.) கோலார் மாவட்டத்திலுள்ள செல்வ வளமுள்ள நாடு; a rich and wealthly place in kōlār (Dt.).

மலைப்பாங்கான சூழ்நிலையுடன், துங்க பத்திரை ஆற்றை, வடக்கு எல்லையாகக் கொண்டது. இதை முதற் குலோத்துங்கன் கைப்பற்றியுள்ளான்.

"*கல்லதர், நங்கிலி, துடங்கி மணலூர் நாடுவென்று துங்கபத்திரையளவும்*" (*முதற் குலோத்துங்கன்* – மெய்கீர்த்தி).

நங்கு[1]**–தல்** *nangu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. நக்கல் செய்தல்; to deride. நங்குதல் செய்வதையே அவன் வேலையாகக் கொண்டுள்ளான் (உ.வ.). 2. நையாண்டி செய்தல்; to mock at. "*நங்கவொழியினும்*" (பழமலை.50.), (இலக்.அக.).

தெ. நங்கு.

[நகு → நங்கு –. = நையாண்டி செய்தல். ஒருவரை எள்ளி நகையாடி, ஏளனஞ் செய்தல்.]

நங்கு[2] *nangu,* பெ. (n.) நக்கல்; derision, mockery. "*நங்கு தெறுப்பதற்கு நாடெங்கும் போதாது*" (ஆதியூரவதானி).

[நகு → நங்கு.]

நங்கு[3] *nangu,* பெ. (n.) மீன்வகையுளொன்று; a kind of fish.

ம., நங்கு. துளு., நங்கு.

நங்குகாட்டு–தல் *nangu-kāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) நக்கல் செய்தல்; to mimic, deride.

[நக்கு→நங்கு + காட்டு–.]

பிறர் போல் நடித்து நையாண்டி செய்தல். பிறர் பேசுவது போலவும், சிரிப்பது போலவும் பேசித், திறமையாக நடித்துக்காட்டுதல். விலங்குகள் போலவும், பறவைகள் போலவும் ஒலியெழுப்பி, ஏளனஞ்செய்தல்.

நங்குடிவேளாளர் *nanguḍi-vēḷāḷar,* பெ. (n.) திருநெல்வேலி வேளாளரில் ஒரு வகையினர் (E.T.V.246.); a division of vēḷāḷar caste in Tirunelveli district.

[நம் + குடி + வேளாளர்.]

நங்குரம் *nanguram,* பெ. (n.) *நங்கூரம்* பார்க்க; see *nangūram.* "*நங்குரத்திற்கட்டிய கயிறு காற்றாலற்று*" (சீவக.2231,உரை.).

பார. லங்கர்.

[நாங்குலம் → நாங்கூரம் → நங்கூரம் → நங்குரம்.]

கப்பலை நிறுத்தும் கலப்பை வடிவான இருப்புக்கருவி.

நங்குவலி—த்தல் *nangu-vali-*, 5 செ.கு.வி. (v.i.) *நங்குகாட்டு—,* (இ.வ.) பார்க்க; see *nangu-kāṭṭu-*.

[நங்கு + வலி—.]

நங்குவழி—த்தல் *nangu-vaḻi-*, 5 செ.கு.வி. (v.i.) *நங்குகாட்டு—,* (இ.வ.) பார்க்க; see *nangu-kāṭṭu-*.

[நங்கு + வழி—.]

நங்கூரக்கல் *nangūra-k-kal,* பெ. (n.) இரும்பால் செய்யப்படாத கல்கட்டிய நங்கூரம்; killick.

[நங்கூரம் + கல்.]

நங்கூரங்கொத்திவிடு—தல் *nangūran-kotti-viḍu-*, 5 செ.கு.வி. (v.i.) கப்பலைக் கட்டியிருக்கும் நங்கூரக் கயிற்றை அறுத்து விடுதல் (வின்.); to cut or slip the cable

[நங்கூரம் + கொத்தி + விடு—.]

நங்கூரத்தண்டு *nangūra-t-taṇḍu,* பெ. (n.) நங்கூரத்தைத் தாங்கியுள்ள இரும்புச்சங்கிலி; shank

[நங்கூரம் + தண்டு.]

நங்கூரந்தூக்கு—தல் *nangūran-dūkku-*, 5 செ.கு.வி (v.i.) 1. நங்கூரத்தைக் கடலிலிருந்து மேலேயெடுத்தல்; to weigh anchor. 2. கப்பல் புறப்படுதல் (பே.வ.). (இ.வ.); to set sail.

[நங்கூரம் + தூக்கு—.]

நங்கூரப்பல் *nangūra-p-pal,* பெ. (n) நங்கூரத்தின் கொளுவி (வின்.); fluke of an anchor.

[நங்கூரம் + பல்.]

நங்கூரம் *nangūram,* பெ. (n.) மரக்கலம் வேற்றிடஞ்செல்லாது நிறுத்தற்கு, நீருள் இடும் இருப்புக்கருவி; anchor. "மரக்கலத்துக்கு நங்கூரம் விழவிட்டாற்போலே" (திவ். திருமாலை,38,வ்யா.பக்.128.).

தெ. நாகலே.

த. நங்கூரம். → Skt lāngala.

E. anchor, OE. ancor, L. ancora GK ankura OHG anchar. LG., MHG., anker On akkeri, Sw ankare Da. anker. OF ancre. It. ancora L anchora

பார. லங்கர். (Langar)

[நாங்கூலம் → நாங்கூரம் → நங்கூரம்.]



நாங்கூழ் மண்ணைத் துளைப்பது போல், நிலத்தைத் துளைத்து உழும் கலப்பை.

கப்பலை நிறுத்தும் கலப்பை வடிவான, இருப்புக்கருவி.

வளைவைக் குறிக்கும் 'omk' என்னும் வினை முதனிலையினின்று, 'anchor' என்னும் சொல் திரிந்துள்ளதாக, ஆங்கில அகரமுதலிகள் கூறும். அஃதுண்மையாயின், அதுவுந் தமிழ் வழியே.

(ஒ.நோ.) வணங்கு → வாங்கு → வங்கு → அங்கு.

அங்குதல் = வளைதல், சாய்தல். அங்கணம் = வாட்டஞ்சாய்வான சாய்கடை (தமி.இலக்.வர.பக்.55.). வளைதற் கருத்துச் சொல்லான நங்கூரம், நிலத்தைத் துளைத்து, கப்பலை நிலைநிறுத்தும், பொருண்மையில் வந்துள்ளது.

நங்கூரம்பாய்ச்சு—தல் *nangūram-pāyccu-,* 5 செ. குன்றாவி. (v.t.). கப்பல் நகராமல் ஓர் இடத்தில் நிற்பதற்காக நீருக்குள், நங்கூரத்தை இறக்குதல்; to cast anchor.

[நங்கூரம் + பாய்ச்சு—.]

நங்கூரம்வலி—த்தல் *nangūram-vali-,* 4. செ. குன்றாவி. (v.t.). *நங்கூரந்தூக்கு—.* பார்க்க; see *nangūran-tūkku-.*

[நங்கூரம் + வலி—.]

நங்கூரமரையாணி *nangūramarai-y-āṇi,* பெ. (n.) கூர்மையான பல்வெட்டும், கூம்பான வாலும் உடைய மரையாணி; lewis bolt.

[நங்கூரம் + மரை + ஆணி.]

இது கட்டுமானப் பணிகளில் பயன்படு கின்றது.

நங்கூரமிதப்பு *nangūra-midappu,* பெ. (n.) கப்பலின் நங்கூரத் தொடரியில் பிணைக்கப் பட்டுள்ள மிதப்பு; moorings.

[நங்கூரம் + மிதப்பு.]

கப்பலின் நங்கூரச்சங்கிலியும் மிதவையும் பிகைக்குமிடம்.

நங்கூரவடம் *nangūra-vaḍam,* பெ. (n.) நங்கூரத்தையும், கலத்தையும் இணைக்கும் வடம்; bridle.

[நங்கூரம் + வடம்.]

நங்கூரவாடகை *nangūra-vāḍagai,* பெ. (n.) நங்கூரக்கூலி; fees for anchoring.

[நங்கூரம் + வாடகை.]

[வாழ் + தகை = வாடகை.]

நங்கூரவாடை *nangūra - vāḍai,* பெ. (n.) நங்கூரம் இடத்தக்க இடம் (வின்.); anchorage.

நங்கெந்தம் *nangendam,* பெ. (n.) அரிதாரம்; orpiment.

மறுவ. தாளகம்.

நங்கெந்தாகம் *nangendāgam,* பெ. (n.) (சங்.அக.) *நங்கெந்தம்* பார்க்க; see *nangendam.*

நங்கை¹ *nangai,* பெ. (n.) 1. பெண்ணிற் சிறந்தாள் (சூடா.); lady, woman of quality or distinction. "*நங்கா யெழுந்திராய்*" (திவ்.திருப்பா.14). 2. மகன் மனைவி; son's wife. "*என்னுட னங்கையீங் கிருக்கெனத் தொழுது*" (சிலப்.16;14.). 3. அண்ணன் மனைவி; elder brother's wife. 4. பெண் பாலைக்குறிக்க அஃறிணைப் பெயரோடு சேர்க்கப்படுஞ் சொல்; a word added to akiṇai nouns to denote feminine gender '*பசு நங்கை வந்தது*' (நன்.392,மயிலை.).

ம. நங்ங.

[நம் + கை.]

ஒ.நோ. தம் + கை = தங்கை.

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் ஏழுபருவமகளிர் வரிசையில் வாராவிடினும், திருமணப் பருவப் பெண்ணைக்குறிக்கும் சொல்லாட்சியாக, இது வழங்கி வருகிறது.

நங்கை² *nangai,* பெ. (n.) பெண்களுக்குப் பால்சுரக்கச் செய்வதாகக் கருதப்படும் செடிவகை; species of milk-wort.

ம. நங்ங.

நங்கை நான்கு வகைப்படும் என்று, சா.அக. கூறும்.

1. பெரியாணங்கை = பெரியாள் + நங்கை.
2. சிறியாணங்கை = சிறியாள் + நங்கை.
3. வனநங்கை = வனம் + நங்கை.
4. வேப்பிலை நங்கை = வேம்பு → வேப்பு + இலை + நங்கை.

நங்கைநாச்சி *nangai-nācci,* பெ. (n.) தலைவி (வின்.); lady of distinction.

[நங்கை + நாய்ச்சி → நாச்சி.]

நங்கைநீர் *nangai-nir,* பெ. (n.) **1.** மாதவிடாய் நீர்; menstrual blood. **2.** பெண்கழிவுநீர்; female urine. **3.** சுரப்பு நீர்; ovarian secretion in woman.

[நங்கை + நீர்.]

நங்கைமரம் *nangai-maram,* பெ. (n) புங்கமரம்; poonga oil tree, Indian beech tree.

[நங்கை + மரம்.]

நங்கையர் *nangaiyar,* பெ. (n.) நடை, உடை, தோற்றம் போன்றவற்றில், நேர்த்தியாகத் திகழும் மங்கையர்; அழகு நிலையங்களுக்குச் செல்லும் நகர நங்கையர் (இ.வ.); charming young lady.

[நங்கை + அர்.]

நங்கையார்[1] *nangaiyār,* பெ. (n.) அம்மையார்; madam

மறுவ. அம்மணி.

[நங்கை + அர் → ஆர். பெண்ணிற் சிறந்தாளைக் குறிக்கும் சொல். "ஆர்" மதிப்புரவு விளி.]

நங்கையார்[2] *nangaiyār,* பெ. (n.) அண்ணியார்; elder brother's wife.

[நங்கை + ஆர் .]

நச்சம்பச்சை *naccam-paccai,* பெ. (n.) பச்சை நாவி;; aconite root.

[நச்சம் + பச்சை .]

நச்சம்பு *naccambu,* பெ. (n.) நுனியில் நஞ்சு தோய்க்கப்பட்ட அம்பு (சங். அக.); poisoned arrow.

[நஞ்சு + அம்பு → நச்சம்பு.]

நச்சர் *naccar,* பெ. (n.) திருக்குறள் உரையாசிரியருள் ஒருவர்; a commentator on Tirukkuṟaḷ. "*தருமர், மணக்குடவர் தாமத்தர் நச்சர்*" (தொண்டை.சத.40,மேற்.).

[நசை → நச்சு + அர்.]

நச்சினார்க்கினியரின் குறுக்கம் என்று, சிலர் கூறுவர். ஆனால், இவர் நச்சினார்க்கினியர் என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. நச்சினார்க்கினியர் சிறப்புப் பாயிரத்தில், திருக்குறளுக்கு உரை இயற்றியதாய்க் குறிப்பேதும் இல்லை. ஆதலின் இந் நச்சர், நச்சினார்க்கினியரின் வேறானவர்.

நச்சரவு *naccaravu,* பெ. (n.). நஞ்சுள்ள பாம்பு; Poisonous Snake.

[நஞ்சு → நச்சு + அரவு.]

நச்சரி *naccari,* பெ. (n.) நச்சுப்பொருள் சார்ந்த கரணியங்களினால், உடம்பிலுண்டாகும் ஒரு நமைச்சல்; itching through poisionous effects.

[நச்சு + அரி.]

நாம் உண்ணும் உணவிலும், பருகும் நீரிலும், சுற்றுப்புறச்சூழலில் கலந்துள்ள நச்சுயிரி (நோய் நுண்மங்கள்) களால் உண்டாகும் நமைச்சல்.

நச்சரி—த்தல் *naccari-,* 4. செ.கு.வி. (v.i.) ஒருவரிடம் ஒன்றை வேண்டி, எரிச்சலைத் தரும் வகையில் தொடர்ந்து கேட்டல் அல்லது வற்புறுத்துதல்; pester. பணம் கேட்டு நச்சரிக்கின்றான் (உ.வ.).

[நச்சு → நச்சரி–.]

நச்சுதல்=விரும்புதல்.

நச்சரிப்பு *naccarippu,* பெ. (n.) வெறுப்புண்டாகும் வண்ணம் அலப்பி அல்லது பிதற்றிப் பேசுகை; chattering babbling.

மறுவ. தொணதொணப்பு.

நச்சவரை *naccavarai,* பெ. (n.) நகரவியக்கி (சா.அக.); a thorny sensitive plant

மறுவ. புலித்தொடக், இரண்டு.

[நச்சு + அவரை.]

நச்சறுப்பாய்ஞ்சான் *naccaṟu-p-pāyñjāṉ,* பெ. (n.) *நஞ்சறுப்பான்* (வின்.)பார்க்க; see *nañjaṟuppāṉ.*

[நச்சு+ அறுப்பு + அன். நஞ்சு + அறு + பாய்ந்தான் → நச்சறுப்பாய்ஞ்சான்.]

[நச்சு + அறுப்பு + ஆய்ந்தான் → ஆய்ஞ்சான்] என்றும், பிரித்துப் பொருள் கொள்ளலாம்.

நச்சறுப்பான் *naccaṟuppāṉ,* பெ. (n.) கழுதைப்பாலை (சா.அக.); common Indian ipecacuanha

[நஞ்சுக்கொடி → நச்சு + அறுப்பான்.]

ஒருகா. *[நஞ்சறுப்பான் → நச்சறுப்பான்.]*

கழுதைப்பாலைக் கொடி என்றழைக்கப்படும் நஞ்சறுப்பான் சாறு, அனைத்து வகையான தோல்நோய்கட்கும், கைகண்ட மருந்து என்று, சா.அக. கூறும்.

நச்சறை *naccaṟai,* பெ. (n.) நஞ்சுக்கிருப்பிடம்; a store house of poison. "*காமநாளினு நஞ்சுதுய்த்தே னச்சறையாக*" (சீவக.2882.).

[நஞ்சு + அறை = நஞ்சறை → நச்சறை.]

நச்சாம்பல் *naccāmbal,* பெ. (n.) நச்சுத்தன்மையுடைய ஒருவகை ஆம்பல்; a poisonous species of Indian water lily

[நச்சு + ஆம்பல். நஞ்சு → நச்சு +ஆம்பல்.]

நச்சி *nacci,* பெ. (n.) வீணாகப் பேசித் துன்புறுத்துபவள் (வின்.) gossiping woman. நச்சியாய் இருந்து நாசமாய்ப் போகாதே(இ.வ.).

[நசு → நச்சு + இ.]

'இ' சொல்லாக்க ஈறு.

நச்சிருமல் *naccirumal,* பெ. (n) **1.** சிணுக்கிருமல்; slight cough. **2.** அடிக்கடி ஏற்படும் மெல்லிய இருமல்; a short feeble and frequent cough-Hacking cough

[நச்சு + இருமல்; நச்சு = சிறிய.]

நச்சிலக்கியம் *naccilakkiyam,* பெ. (n.) பணம் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டு, மக்களின் உணர்வுகளைக் கீழ்த்தரமாகத் தூண்டும் வகையில், எழுதப்படும் நூல்; pulp literature.

[நச்சு + இலக்கியம்.]

நச்சிலை *naccilai,* பெ. (n.) **1.** நாய்ப்பாலை; dog paulay. **2.** ***நச்சறுப்பான்*** பார்க்க; see *naccaruppān.* **3.** நஞ்சுத்தன்மையுடைய இலை; poisonous leaf.

[நச்சு + இலை.]

நச்சிலைக்கூமா *naccilai-k-kūmā,* பெ. (n.) பச்சிலை மருந்து வகையு ளொன்று; a kind of herbal medicine.

நச்சிலைக்கூரிகம் *naccilai-k-kūrigam,* பெ. (n.) எருக்கிலை; madar leaf -calotropis gigantia.

நச்சிலைவேல் *nacilai-vēl,* பெ. (n.) நஞ்சூட்டியவேல்; poisonous spear. "*நச்சிலைவேற் கோக்கோதை நாடு*" (முத்தொள்.110.).

[நஞ்சு →நச்சு + இலை + வேல்.]

நச்சிளி *nacili,* பெ. (n.) ***நச்சினி.1*** (சங்.அக.) பார்க்க; see *naccini.1*

[நச்சினி→ நச்சிளி.]

நச்சினார்க்கினியம் *naccinārkkiniyam,* பெ. (n.) தொல்காப்பியத்திற்கு நச்சினார்க்கினியர் இயற்றியவுரை; a commentary on Tolkāppiyam by Naccinārkkiniyar. "*விருத்தி நச்சினார்க்கினியமே*" (தனிப்பாடல். பத்துப் பாட்டு பக். 30.).

[நச்சினார்க்கினியர் → நச்சினார்க்கினியம் நச்சினார்க்கு + இனியம் = விரும் பினோர்க்கு இனியது என்பது பொருள்.]

நச்சினார்க்கினியர் *naccinārkkiniyar,* பெ. (n.) தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவகசிந்தமாணி போன்ற நூல்களுக்கு உரையெழுதியவர்; author of commentaries on Tolkāppiyam, kalittogai, pattu-pāttu, Šīvaga šintāmani and other ancient classics.

[நச்சினார்க்கு + இனியர் = விரும்பி னோர்க்கு இனியர்.]

உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் என்று, உரையாசிரியர்களால் சிறப்பிக்கப்பட்ட இவர்தம் உரைப்பாங்கு, பற்பலவிடங்களில் சிவனியக்கோட்பாடு மிளிரும் தன்மையில் அமைந்துள்ளது. இவர். குறுந்தொகையில் 20 பாடல்களுக்கும், பத்துப்பாட்டில் அமைந்துள்ள பத்துநூல்களுக்கும், கலித் தொகைக்கும், சீவகசிந்தாமணிக்கும், தொல் காப்பியத்தில் எழுத்து, சொல் ஆகிய இருஅதிகாரங்களுக்கும், கொண்டு கூட்டுப் பொருள்கோள் உத்தியினைக் கையாண்டு, உரை வரைந்துள்ளார். இவ் வுரை, பற்பலவிடத்தில் சிறப்புரையாகத் திகழ்ந்தாலும், சிற்சிலவிடத்தில் வடமொழி மரபில் அமைந்துள்ளது.

அந்தத்தை அணவுவோரே, அந்தணர் என்று உரை வரைந்துள்ளமை, பொருட் பொருத்தப்பாடாகத் தோன்றவில்லை. அந்தணர் என்போர் அறவோர்; அனைவர்மாட்டும் செந்தண்மை பூண்டொழுகும், செம்மாந்த பண்பினரே அந்தணர். எந்தவொரு இனத்தாருக்கும், அந்தணர் பட்டம் உரியதன்று. "குமுகாயத்தில் செந்தண்மை பூண்டொழுகும் சீரிய பண்பினர் அனைவரும் அந்தணரே" எனும் வள்ளுவர் வாக்கினுக்கு, முரண்பட்டபாங்கினில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

நச்சினார்க்கினியர், ஆடவல்லான் திரு நடம்பயிலும் திருச்சிற்றம்பலம் (சிதம்பரம்) என்றழைக்கப்படும், 'பெரும்பற்றப்புலியூர்' என்பவற்றை முறையே, "ஆறெழுத்தொரு மொழிக்கும்" "ஏழெழுத்தொரு மொழிக்கும்" எடுத்துக்காட்டாகத், தொல்காப்பியம் எழுத்திகாரத்துமொழிமரபில், "ஒரெழுத்தொருமொழி" என்னும் நூற்பாவின் சிறப்புரையில் எடுத்துக் காட்டி, விளக்கியுள்ள பான்மை, யாவரும் வியக்கத்தக்க வண்ணம் அமைந்துள்ளது. வன்னெஞ்சைத் துளிர்ப்பிக்கும் மணிவாசகனாரின் திருவாசகம், திருச்சிற்றம் பலக்கோவை என்பவற்றினின்று, தமது உரைகளில், பலவிடங்களில் இலக்கிய, இலக்கணப் பொருள்களுக்கன்றித் தத்துவப்பொருளுக்கும், மேற்கோள்களாக எடுத்துக் காட்டியுள்ள பாங்கு குறிப்பிடத்தக்கது.

திருத்தக்கத் தேவரின் சீவகசிந்தாமணியில், பற்பலபாடல்களுக்குச் சிறப்புரை செய்துள்ளார். "மேகம்மீன்ற" என்று தொடங்கும் 333–ஆம் பாடலில் பயின்று வரும், "போகமீன்ற புண்ணியன்" என்னும் சொற்களுக்குக் கூறியுள்ள சிறப்புரை, சீர்த்திமிக்கது.

தொல்காப்பியவுரை முதலியவற்றில், வேதம், வேதாங்கம் முதலிய பலநூல்களிலிருந்தும், பல உரைகளிலிருந்தும், பற்பல அரிய கருத்துக்களை, தமக்கேயுரித்தான கொண்டு கூட்டுப் பொருள்கோள் அமைப்பில், உரைவரைந்துள்ளார்.

உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர் ஆளவந்தபிள்ளையாசிரியர் முதலானோர் பற்றிய குறிப்பு, இவர்தம் உரையில் காணப்படுவதால், ஏனைய உரையாசிரியர்களைவிட காலத்தால் பிற்பட்டவர் என்பது வெள்ளிடைமலை.

பரிமேலழகரும், இவரும் சமகாலத்தவர் என்பர். (எ.டு.) "குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே உடம்பொடு உயிரிடை நட்பு" என்னுங்குறளில், குடம்பை என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'கூண்டு' எனவும், ஆசிரியர் பரிமேலழகர் முட்டையெனவும் கூறியதாகவும், பரிமேலழகரது உரைகேட்ட நச்சினார்க்கினியர், பரிமேலழகர் உரையைப் பலவாறு பாராட்டிப் புகழ்ந்ததாகவும் கூறுவர்.

நச்சினி *naccini,* பெ. (n.) *கேழ்வரகு* (மலை.) பார்க்க; see *kēḻvaragu.* **2.** நான்காம் திங்கள் எனப் பொருள் கொண்ட மருத்துவக் குழூஉக்குறி (சங்.அக.); fourth month, a slang of physicians.

நச்சினியட்டிக்கை *acciniyaṭṭikkai,* பெ. (n.) **1.** புல்வகை; a kind of grass, as synodon gracilicus, Synodon virgalus; (A); a species of millet, Cynosurus retroflex.

[நச்சினி + அட்டிகை.]

நச்சு¹–தல் *naccu-,* 5 செ.குன்றா.வி. (v.t.) விரும்புதல்; to desire, long for, like, love *"ஒருவரா னச்சப்படாஅ தவன்"* (குறள், 1004.). "ஞாலமே கரியாக நானுனை நச்சி நச்சிட வந்திடும்" (திருவாச.30:19.).

தெ., க., நச்சு, நர்சு. **கோத.** நச்.

[(நுல்) → நல் → நள் → நய் → நய → நச.

நச → நசு → நச்சு– .]

'நுல்' எனும் பொருந்துதற்கருத்து வேரினின்று கிளைத்த சொல். நச்சுதல் என்பது யாதெனின், ஒத்த கருத்துடையோர் நட்புச் செலுத்துதல், விரும்புதல் எனும் பொருண்மையில் பொருந்திவரும். பொருந்துதற் கருத்தினின்று, விருப்பக்கருத்து தோன்றும். ஒருவரையொருவர், உள்ளநிலையிலும், உணர்வு நிலையிலும், நெடுங்காலம் பொருந்தி, நட்புச் செய்து, ஆராஅன்பில் திளைத்து மாறாக் காதலராக மாறுவர்.

நச்சு²–தல் *naccu-,* 5 செ.கு.வி. (v.i.) அலப்புதல்; to babble, prate எப்போதும் நச்சிக் கொண்டிருக்கிறான்(உ.வ.).

தெ. நசுகு. **க.** நக்த.

[நசு → நச்சு.]

வீணாகப் பிதற்றுதல். பயனற்ற சொற்களையே, பலகாலும் பேசுதல்; பொருத்தமற்ற சொற்களை, பொருத்தமற்ற இடத்திற் போசி, உளறுதல். முன்னுக்குப்பின் தொடர்பற்ற முறையில் பேசுதலும், நச்சுதலே. இந் நிலையில் பிறரைப் புண்படுத்தும் நோதற்கருத்துச் சொற்களுள் ஒன்றாகத் தேநேயர் வகைப்படுத்துகிறார்.

நச்சு³–தல் *naccu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. துன்பம் செய்தல்; தொல்லைப் படுத்துதல்; to tease. 2. எரிச்சலூட்டுதல்; to vex 3. கவலையூட்டுதல்; to trouble. எப்போதும் என்னை நச்சாதே (உ.வ.).

தெ, நட்ச்சு.

[நசு + நச்சு–.]

இஃதும், நோதற்கருத்துச்சொல்லாகும்.

பிறர்தம் உள்ளத்தை அலைக்கழித்தல்; மாற்றார்தம் மனத்தைக் கலக்கிக் கவலைப் படுத்துதல், எனும் கருத்தில், இச்சொல் வழக்கூன்றியுள்ளது.

(எ.டு) "என்னை நச்சித் துன்பம் தராவிட்டால் அவனுக்குத் தூக்கம் வராது". (உ.வ.).

நச்சு⁴ *naccu,* பெ. (n.) 1. ஆசை (சூடா.); desire, hankering, liking. 2. விரும்பப்படும் பொருள்; desired object. *"பொருளுரையாளர் நச்சுக் கொன்றேற்கு"* (சிலப். 16: 66.).

தெ., க, நச்சு.

[நசை → நச்சு.]

நீண்டநாள் விருப்பத்தின் விளைவாக ஏற்படும் ஆசை. ஆராக்காதலால் ஏற்படும் நசையும், நயப்பும், பொருந்துதற் கருத்தின் வெளிப்பாடே என்றறிக.

நச்சு⁵ *naccu,* பெ. (n.) 1. துன்பம், தொல்லை (இ.வ.); trouble, worry. 2. அலப்பல்; babble. *"நச்சுப்பிடித்தவன்"* (வின்.). 3. காலக்கழிவு; delay, procrastination. வேலையில் நச்சாயிருக்கக் கூடாது (உ.வ.).

மறுவ. நெடுநீர்மை.

[நசு → நச்சு.]

நச்சு⁶ *naccu,* பெ.எ. (adj.) சிறிய (வின்.); little, small.

தெ. நட்ச்சு. நசுகு.

[நசி → நச்சு.]

நச்சுக்கண் *naccu-k-kaṇ,* பெ.(n) கொடும்பார்வை (வின்.); the evil eye.

மறுவ. தீக்கண்.

தெ. நட்ச்சு.

[நஞ்சு → நச்சு + கண்.]

நச்சுக்கத்தி *naccu-k-katti,* பெ. (n.) நஞ்சூட்டிய கத்தி (வின்.); poisoned knife. 2. மிகக் கெட்டவன்–ள்; wicked person

[நஞ்சு → நச்சு + கத்தி.]

நச்சுக்காய்ச்சல் *naccu-k-kāyccal,* பெ. (n) நஞ்சுச் சுரம்; severe fever *'முறைக்காய்ச்சல் என்பது நச்சுகாய்ச்சல் வகையினது'* (உ.வ.).

[நஞ்சு → நச்சு + காய்ச்சல்.]

நச்சுக்காளான் *naccu-k-kāḷāṉ,* பெ. (n.) *நஞ்சுக்காளான்* பார்க்க; see *nañju-k-kāḷāṉ.*

[நஞ்சு → நச்சு + காளான்.]

இக் காளானை உண்டவர் உயிரிழப்பர் என்பதைப் பெயரினாலேயே அறியலாம்.



நச்சுக்காற்று *naccu-k-kāṟṟu,* பெ. (n.) 1. நச்சுக்காற்று; unhealthy wind. 2. மாசுள்ள காற்று; noxious air.

[நச்சு + காற்று.]

நச்சுத்தன்மையுள்ள காற்று. புகை நமக்குப்பகை என்னும் தொடர்ப்பொருளை, இச் சொல் உணர்த்தும்.

நச்சுக்குருவி *naccu-k-kuruvi,* பெ. (n.) தீயோன் (இ.வ.); bad fellow.

[நச்சு + குருவி.]

உவமையாகுபெயர்.

நச்சுக்குழல்[1] *naccu-k-kuḻal,* பெ. (n.) பெரியகுழல்; long - tube.

[நச்சு + குழல்.]

நச்சுக்குழல்[2] *naccu-k-kuḻal,* பெ. (n.) 1. *சுங்குத்தான் குழல்* பார்க்க; see *šuṅguttāṉ kuḻal.* 2. *தொலைநோக்கிக் கண்ணாடி* பார்க்க; see *tolai-nōkki-k-kaṇṇāḍi.*

[நஞ்சு → நச்சு + குழல்.]

நச்சுக்கொட்டை *naccu-k-koṭṭai,* பெ. (n.) 1. இலச்சை கெட்டமரம்; lettuce tree. 2. எட்டிக்கொட்டை; nuxvomica nut.

[நஞ்சு → நச்சு + கொட்டை.]

நச்சுக்கொட்டையிலை *naccu-k-koṭṭai-y-ilai,* பெ. (n.) உடம்பிலுண்டாகும் வளித் தொல்லையைப் போக்கும் கீரை; a kind of edible leaf eaten for curing the morbid wind, in the system.

[நச்சுக்கொட்டை +இலை.]

நச்சுக்கொடி *naccu-k-koḍi,* பெ. (n) *நஞ்சுக் கொடி.* (வின்.) பார்க்க; see *nañju-k-koḍi.*

[நஞ்சு → நச்சு + கொடி.]

நச்சுக்கொடிச்சுண்ணம் *naccu-k-koḍi-c-cuṇṇam,* பெ. (n.) நஞ்சுக் கொடியால் செய்யப்பட்டதும், நச்சு வயிற்றுப் போக்கு நீங்கக் கொடுப்பதுமாகிய சூரணம் (வின்.); a medicinal powder prepared from the after-birth, used in cholera.

[நஞ்சுக் கொடி +சுண்ணம்; நஞ்சுக் கொடிச் சுண்ணம் → நச்சுக் கொடிச் சுண்ணம்.]

நச்சுக்கொடுக்கு *naccu-k-koḍukku,* பெ. (n.) தேளின் கொட்டும் உறுப்பு முனை; sting of scorpion.

[நஞ்சு → நச்சு + கொடுக்கு.]



நச்சுக்கெளளி *naccu-k-kauli,* பெ. (n.) *நஞ்சுப் பல்லி.* 2. (நாஞ்.) பார்க்க; see *nañju-p-palli.*

[நஞ்சு + கெளளி → நச்சுக்கெளளி. கெளளி = கவ்வு + உளி.]

நச்சுகை *naccugai,* பெ. (பெ.) எப்பொழுதும் மடந்தையர்பால், இணைவிழைச்சில், நாட்டங்கொள்ளுகை; growing lust

[நச்சு → நச்சுகை.]

நச்சுச்சொல் *naccu-c-col,* பெ. (n.) 1. செய்யுளில் வழங்கக்கூடாத தீச்சொல்; inauspicious words to be avoided in a poetic composition. 2. கொடுஞ்சொல்; malicious language.

[நஞ்சு + சொல் = நஞ்சுச்சொல் → நச்சுச்சொல்]

நச்சுத்தடைமலக்குழி *naccu-t-tadai mala-k-kuli,* பெ. (n.) திடக்கழிவுப் பொருட்களை மட்கும்படி செய்வதற்கான ஓர் அமைப்பு; septic tank.

மறுவ : அழுகுதொட்டி.

[நஞ்சு + தடை + மலம் + குழி.]

நச்சுத்தலை *naccu-t-talai.* பெ. (n.) 1. பாம்பின் தலை; head of a serpent containing poison 2. *நச்சுத்தலைவலி* பார்க்க: see *naccu-t-talai vali.*

[நஞ்சு → நச்சு + தலை.]



நச்சுத்தலைவலி *naccu-t-talaivali,* பெ. (n) 1. அடிக்கடி உண்டாகும் மெல்லிய தலைவலி; slight head-ache, coming frequently. 2. நச்சுத்தன்மையினால் உண்டாகும் தலைவலி; head-ache due to systemic poisoning, Toxic head - ache

[நஞ்சு → நச்சு + தலைவலி.]

நச்சுத்தானம்¹ *naccu-t-tānam,* பெ. (n.) சிற்சில காலங்களில் ஆடவர் தொட, மகளிர்க்கு வெறுப்புண்டாக்கும் உடலுறுப்பு (கொக்கோ.) (சங்.அக.); parts of a women's body which, if touched by men on certain days are supposed to excite a feeling of disgust

[நஞ்சு + தானம்.]

நச்சுத்தானம்² *naccu-t-tānam,* பெ. (n.) கொக்கோக நூலின்படி பெண்களுடம்பில் அமைந்திருக்கும் அமுத நிலைக் கேழாமிடம்; certain parts of the female body, which if touched by men as per rules laid down in the erotic science of kokkugha muni are supposed to produce disgust.

நச்சுத்திரல் *naccuttiral,* பெ. (n.) நச்சுத்தன்மை உண்டாக்கல்; a general intoxication due to the presence of poison is the system.

[நச்சு + திரல்.]

நச்சுநச்செனல் *naccu-naccenal,* பெ. (n.) **1.** தொந்தரவு செய்தற் குறிப்பு; importuning, teasing, troubling. **2.** ஓசையிடுதற் குறிப்பு; smacking, as the lips, tapping, as with the fingers. **3.** அடுத்தடுத்துப் பல்லி சொல்லுதற் குறிப்பு (பே.வ.); chirping of the lizard.

[நச்சு + நச்சு + எனல்.]

நச்சுநா *naccu-nā,* பெ. (n.) கொடிய சொற்களைப் பேசும் நாக்கு; dangerous tongue.

[நஞ்சு → நச்சு + நா.]

நச்சுநீர் *naccu-nīr,* பெ. (n.) **1.** நஞ்சுத் தன்மையுள்ள நீர்; poisonous liquid. **2.** கெட்ட நீர்; unpure or morbid liquid

மறுவ. தீயநீர்.

[நச்சு + நீர்.]

நச்சுப்படைக்கலம் *naccu-p-paḍai-k-kalam,* பெ. (n.) நஞ்சு தோய்க்கப்பட்ட படைக்கலம் (வின்.); poisoned weapon.

[நஞ்சு → நச்சு + படைக்கலம்.]

நச்சுப்பண்டம் *naccu-p-paṇḍam,* பெ. (n.) கேடு விளைவிக்கக் கூடிய நுண்ணுயிரியால் (பாக்டீரியாவால்) கெட்டுப்போன உணவுப் பொருள்கள்; poisonous eatable items. 'நச்சுப்பண்டம் உடல் நலத்தைக் கெடுக்கும். (உ.வ.).

[நஞ்சு → நச்சு + பண்டம்.]

நச்சுப்பதார்த்தம் *naccu-p-padārttam.* பெ. (n) ஈயம், சாறு, நஞ்சு போன்ற தீய தன்மையுடைய பொருள்கள்; poisonous substances such as lead, mercury arsenic etc.

[நச்சு + Skt பதார்த்தம்.]

நச்சுப்பல் *naccu-p-pal.* பெ. (n.) **1.** காளி, காளாத்திரி, யமன், யமதூதி என்னும் பாம்பின் நச்சுப்பற்கள் (சீவக. 1288, உரை.); poisonous fangs of a serpent, four in number, viz., kāḷi, kāḷāttiri, yamaṉ, yamatūdi **2.** தீப்பயன் விளைக்கும் பல் (உ.வ.); venomous tooth, as of one whose imprecations are believed to take effect.

[நஞ்சு → நச்சு + பல்.]

நச்சுப்பல்லன் *naccu-p-pallaṉ,* பெ. (n.) கொடிய சொல்லுடையோன்; one whose words are illomened or venomous. அவன் நச்சுப்பல்லில் விழாதே (உ.வ.); நாத்தப் பல்லனை நாடினாலும் நச்சுப்பல்லனை நாடாதே (பழ.).

மறுவ. கொடும்பல்லன், தீவாயன்.

[நச்சு + பல்லன்.]

பிறரைப் புண்படுத்தும் தீயசொற்களைப் பலுக்கும் இயல்பினன். கொடுஞ் சொற்களாலேயே, இன்னல்தரும் தன்மையன். "அவன் நச்சுப்பல்லில் விழுந்து வீணாகக் கெட்டழியதே". நச்சுப்பல்லன் வீட்டிற்கு நல்லவன் போக மாட்டான் (உ.வ.). போன்ற உலகவழக்குகள், இன்றும் நாட்டுப்புறத்தே வழங்குகின்றன. நஞ்சு உடலுக்குத் தீங்கு பயத்தல் போல், கொடுமையாளர்தம் நச்சுப்பற்களினின்று வெளிப்படுஞ் சொற்கள், மனவுணர்வை மாசுபடுத்துவன.

நச்சுப்பல்லி[1] *naccu-p-palli,* பெ. (n) செய்வினையில் (பில்லி சூனியத்தில்) பயன்படுத்துதற்குரிய எச்சத்தை யிடுவதும், புள்ளி கொண்டதுமான பல்லி வகை (வின்.); a spotted wall-lizard whose excrement is used in witchcraft 2. தீப்பயனைக் குறிப்பதாகக் கருதப்படும் பல்லிச்சத்தம்; the chrip of a lizard which is supposed to prognosticate evil 3. தீப்பயனை விளைப்பதாகக் கருதப்படும் சொல்லுள்ளவள்; a woman's having an evil tongue

[நச்சு + பல்லி. புல்லி → பல்லி.]

நச்சுப்பல்லி[2] *naccu-p-palli,* பெ. (n.) *நச்செலி[2]* பார்க்க; see *nacceli[2]*.

[நஞ்சு + பல் + இ.]

பல்லில் நஞ்சுத் தன்மையுள்ள எலி.

"இ" சொல்லாக்க ஈறு.

நச்சுப்பாம்பு *naccu-p-pāmbu,* பெ. (n.) நஞ்சு மிகுதியாகக் கொண்ட பாம்பு; poisonous snakes.

[நஞ்சு → நச்சு + பாம்பு.]

நஞ்சினை மிகுதியாகக் கொண்டதும், தீண்டியவுடன் உயிரைப் போக்குவதுமான, நல்லபாம்பு, கட்டுவிரியன், கண்ணாடிவிரியன் போன்ற நச்சுப்பாம்புகள்.

சாம்பசிவ மருத்துவ அகரமுதலியில், 64–வகை நச்சுப்பாம்புகள் குறிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு.

1.	ஆடுபாம்பு	=	8 வகை.
2.	நச்சுப்பல்பாம்பு	=	6 வகை.
3.	கண்ணாடிவிரியன்	=	4 வகை.
4.	புடையன்பாம்பு	=	6 வகை.
5.	சாரைப்பாம்பு	=	3 வகை.
6.	சுருட்டைப்பாம்பு	=	4 வகை.
7.	கூழைப்பாம்பு	=	2 வகை.
8.	கொம்பேறிமூக்கன்	=	2 வகை.
9.	சாணாகமூக்கன்	=	2 வகை.
10.	வழலைப்பாம்பு	=	6 வகை.
11.	தண்ணீர்ப்பாம்பு	=	6 வகை.
12.	பச்சைப்பாம்பு (அல்லது) கண்குத்திப்பாம்பு	=	2 வகை.
13.	இருதலைமணியன்	=	1.
14.	மலைப்பாம்பு	=	5 வகை.
15.	பூநாகம்	=	1.
16.	மண்ணுளிப்பாம்பு	=	6 வகை

நச்சுப்பார்வை *naccu-p-pārvai,* பெ. (n.) 1. காமப் பார்வை (யாழ்ப்.); amorous looks. 2. கண்ணூறு (வின்.); evil - look 3. சினப்பார்வை (வின்.); angry -look. 4. கொடிய பார்வை; harsh look.

[நச்சு + பார்வை.]

நச்சுப்பால் *naccu-p-pāl,* பெ. (n) 1. சீழ்ப்பால் (சா.அசக); the first milk drawn from a cow after calving 2. கள்ளிப்பால்; the milky juice of Indian spurge 3. நஞ்சு கலந்தபால்; milk mixed with poison 4. குழந்தைகட்கு இணங்காத பால்; milk not suited to children 5. சீம்பால்; beestings (செ.அக.).

[நஞ்சு → நச்சு + பால்.]

நஞ்சுத் தன்மை கலந்த, சீழ்ப்பால், கள்ளிப்பால் முதலானவை, குழந்தைகட்கு ஒவ்வாத பால்வகைகள்.

நச்சுப்பாலை *naccu-p-pālai,* பெ. (n.) நஞ்சுத்தன்மையுள்ள மருந்திலை; a kind of poisonous medicinal plant.

[நச்சு + பாலை.]

நச்சுப்பிச்சு *naccu-p-piccu,* பெ. (n.) 1. ஓயாத் தொல்லை (இ.வ.); ceaseless trouble. 2. அலப்புகை; incessant chattering.

[நச்சு + பிச்சு.]

நச்சுப்புகை *naccu-p-pugai,* பெ. (n.) சில பொருள்களை எரிப்பதாலுண்டாகும் நச்சுப்புகை; poisonous smoke.

[நஞ்சு → நச்சு + புகை.]

நச்சுப்புல் *naccu-p-pul,* பெ. (n.) உண்டவர்க்கு நோய் விளைவிக்கும் புல்; a kind of poisonous grass, causing sickness when eaten *"பிறர்க்குப் பிணியை வருவிக்கும் நச்சுப்புல்லோடு ஒப்பர்"* (நான்மணி. 13, உரை). 2. சிவப்புநிறமுள்ள நச்சுப்புல்; a red variety of poisonous grass.

[நஞ்சு → நச்சு + புல்.]

நச்சுப்பூடு *naccu-p-pūḍu,* பெ. (n.) நஞ்சுத்தன்மையுள்ள மூலிகை; a poisonous variety of plant.

[நஞ்சு → நச்சு + பூண்டு → பூடு = கொடும் நச்சுத் தன்மையுள்ள செடி.]

நச்சுப்பெண் *naccu-p-peṇ,* பெ. (n.) 1. ஆண்களைக் கட்டித் தழுவி, தன் உடம்பில் ஏறியுள்ள நஞ்சு, அவனுக்கும் பரவும்படி செய்யும் பெண்; a woman who is trained by feeding her with poisonous food, until her embrace is rendered sufficient to poison the system of any ordinary man 2. கொடுஞ் சொல்லுடையோள்; a woman with harsh words.

[நஞ்சு → நச்சு + பெண் → நச்சுப்பெண். = கொடிய நஞ்சினையுமிழும் தீநாக்குடைய பாம்பு போல், நச்சுத் தன்மையை நெஞ்சில் கொண்டவள்.]

நச்சுப்பொடி[1] *naccu-p-poḍi,* பெ. (n.) 1. நஞ்சு கலந்த தூள்; a powder containing the essence of poison 2. சொக்குப்பொடி; a narcotic powder inducing giddiness of sleep

[நஞ்சு → நச்சு + பொடி.]

மயக்கத்தையும், உறக்கத்தையும் உருவாக்கும், நஞ்சுப்பொடி.

நச்சுப்பொடி[2] *naccu-p-poḍi,* பெ. (n.) சிறுமீன் (வின்.) small fish

[நஞ்சு → நச்சு + பொடி. பொடி = மிகச்சிறிய.]

நச்சுப்பொய்கை *naccu-p-poygai,* பெ. (n.) நஞ்சுநீர் நிறைந்த நீர்நிலை; a tank of poisonous water "நச்சுப்பொய்கைச் சருக்கம்" (பாரத.).

[நஞ்சு → நச்சு + பொய்கை.]

[பெய்கை → பொய்கை.]

நச்சும்பிச்சும் *naccum-piccum,* பெ. (n.) அற்பச்செயல் (வின்.); insignificant things, trifles.

மறுவ. அற்ப சொற்பம்.

[நச்சுப்பிச்சு → நச்சும்பிச்சும்= மரபிணை மொழி.]

நச்சுப் பாம்பு வகைகள்

கண்ணாடி விரியன்

சுருட்டைப் பாம்பு

கட்டுவிரியன்



நல்ல பாம்பு

நச்சுமண் *naccu-maṇ,* பெ. (n.) வேதிமப் பொருள்களால் நஞ்சேறியமண்; soil spoiled with excess chemicals.

[நஞ்சு → நச்சு + மண்.]

நச்சுமரம் *naccu-maram,* பெ. (n.) எட்டி முதலிய நச்சு மரங்கள்; poisonous tree. *"நடுவூரு ணச்சு மரம் பழுத்தற்று"* (குறள், 1008.).

[நஞ்சு → நச்சு + மரம்.]

நச்சுமருந்து *naccu-marundu,* பெ. (n.) நஞ்சு கலந்த மருந்து; medicine prepared with poisonous drugs.

[நஞ்சு → நச்சு + மருந்து.]

நச்சுமழை *naccu-maḻai,* பெ. (n.) 1. காலந்தப்பிப் பெய்து கேடு விளைக்கும் மழை; unhealthy or injurious rain, being untimely. 2. தொடர்ந்து பெய்யும் சிறுதூறல்; continuous drizzle.

[நஞ்சு → நச்சு + மழை.]

நச்சுமனார் *naccumaṉār,* பெ. (n.) கடைச்சங்கப் புலவருள் ஒருவர் (வள்ளுவமா, 45.); a poet of the last Śaṅgam.

இவர் மிகச்சிறந்த இலக்கணப்புலவர் திருக்குறளில் அமைந்துள்ள இலக்கணக் கூறுகளான எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி முதலான ஐவகைப் பொருண்மையும் நிறைவாகத் திகழும் வண்ணம் திருவள்ளுவமாலையுள் பாடியுள்ள பாடல் வருமாறு:-

"எழுத்(து) அசை சீர்அடி சொற்பொருள் யாப்பு வழுக்கில் வனப்(பு) அணிவண்ணம்-இழுக்(கு) இன்றி என்(று) எவர் செய்தன எல்லாம் இயம்பின இன்(று) இவர் இன் குறள்வெண்பா."

நச்சுமிழ்நீர் *naccumiḻ-nīr,* பெ. (n.) நஞ்சுத்தன்மையுடைய வாய் நீர்; saliva containing certain toxius, poisonous saliva- Venomos saliva.

[நஞ்சு → நச்சு + உமிழ்நீர்.]

நச்சுமீன் *naccu-mīṉ,* பெ. (n.) கேடு விளைவிக்கும் மீன்; poisonous and dangerous fish.

[நஞ்சு → நச்சு + மீன்.]



நச்சுமுள் *naccu-muḷ,* பெ. (n) கேடு விளைவிக்கும் முள்; poisonous thorn *சீமைக் கருவேலமரம் நச்சுமுள்ளைக் கொண்டது (உ.வ.).*

[நஞ்சு → நச்சு + முள்.]

நச்சுமுறிவு *naccu-muṟivu,* பெ. (n.) உடலிலும், உணவிலுமுள்ள நஞ்சுத்தன்மையைப் போக்கும் மருந்து; anti-oxidants.

[நச்சு + முறிவு.]

உடம்பிலுள்ள உயிரணுக்கள் சிதைவுறாமலும், நோய் உயிரிகள் நுழையாமலும், காக்கும் மருந்து.

நச்சுமுறிவுமருந்து *naccu-murivu-marundu,* பெ. (n.) **1.** இஞ்சி; ginger. **2.** வெங்காயம்; onion. **3.** வெள்ளைப்பூண்டு; garlic. **4.** மஞ்சள்; turmeric. **5.** மிளகு; pepper. **6.** மிளகாய்; chilli. **7.** ஏலக்காய்; cardamom

[நச்சுமுறிவு + மருந்து.]

நச்சுயிரி *naccuyiri,* பெ. (n.) கேடு விளைவிக்கும் நஞ்சினைக் கொண்ட உயிரி; poisonous beings *நல்லபாம்பு கொடிய நச்சுயிரி* (உ.வ.).

[நஞ்சு → நச்சு + உயிரி.]

நச்சுவலி *naccu-vali,* பெ. (n) மெல்லுவது போல், உடம்பிற்காணும் குத்தல்; gnawing pain in the body.

[நச்சு + வலி.]

உடம்பில் அடிக்கடி அல்லது விட்டுவிட்டு உண்டாகும் வலி.

நச்சுவலை *naccu-valai,* n. ஒருவகை மீன்வலை (பரதவர்.); a fishing net.

[நஞ்சு + வலை → நச்சுவலை.]

நஞ்சானும் குஞ்சானுமாகவுள்ள மிகச்சிறிய மீன்களைப் பிடிக்க உதவும், சிறுகண் வலை.

[நஞ்சு → நச்சு → நசு.]

நசுக்கு = சிறியது [நச்சு + வலை.]

நச்சுவாக்கு *naccu-vākku,* பெ. (n.) **1.** தீ வாக்கு (வின்.); evil words. அவன் நச்சுவாக்கில் விழாதே (உ.வ.). **2.** கேடு விளைவிக்கும் சொல்; malignant words.

மறுவ. தீச்சொல்.

[நஞ்சு + வாக்கு.]

நஞ்சு உடலுக்கு ஊறு விளைவிப்பது போல், பிறருக்குக் கேடு அல்லது பொல்லாங்கு தரும், தீச்சொல்.

நச்சுவாய்[1] *naccu-vāy,* பெ. (n.) கேடு விளைக்கும் வாய் (வின்.); mouth of one whose imprecations are believed to take effect.

[நஞ்சு → நச்சு + வாய்.]

தீய சொற்களைக் கூறிப் பிறருக்குக் கேடு பயக்கும் நஞ்சுத்தன்மையுள்ள வாய். பிறர்தம் உள்ளத்தில் எஞ்ஞான்றும் நிலைத்திருக்கும் வண்ணம், நீங்காத வடுப்போல், பிறரைச்சவிக்குந் தன்மையுள்ள வாய். பிறரை நாவினால் சுடுந்தன்மையுள்ள வாய்.

நச்சுவாய்[2] *naccu-vāy,* பெ. (n.) *நச்சுவாயன்* பார்க்க; see *naccu-vāyaṉ.*

[நச்சு + வாய்.]

எப்போதும், எந் நிலையிலும் தீச் சொற்களையே பேசும் வாய்.

நச்சுவாயன் *naccu-vāyaṉ,* பெ. (n.). ஓயாமற் பிதற்றுபவன்; babbler, talkative man. 'நச்சுவாயன் வீட்டிலே நாறுவாயன் பெண் கொண்டது போல' (பழ).

மறுவ. அலப்புவாயன்.

[நசு → நச்சு + வாய் + அன் → நச்சுவாயன் இடைவிடாது பெய்யும் சிறுதூறல்போல், ஓயாது பேசும் இயல்பினன்.]

ஒளிவுமறைவான செய்திகளை வெளிப்படையாகப் பேசிப் பிதற்றுபவன்; என்று, சா.அக. கூறும்.

நச்சுவாயு *naccu-vāyu,* பெ. (n.). உப்புக்காற்று; nitrogen gas.

மறுவ. சவட்டுவெடியம்.

*[நச்சு →*Skt. வாயு.*]*

வளிமண்டலத்தில் ஐந்தில் நான்கு கூறான வளித்தனிமம்.

நச்சுவார்த்தை *naccu-vārttai,* பெ. (n.) கடுஞ்சொல்; harsh words.

[நச்சு + skt. *வார்த்தை.]*

உயிரைக் கொல்லும் நஞ்சுபோல் மனத்தைப் புண்படுத்தும் பழிச்சொல்.

பிறர்தம் உள்ளத்தில் அழியாது நிலைத்த வடுவினை யேற்படுத்தும், சொல். பிறரைச்சவித்து, இறப்பினை ஏற்படுத்தும் இழிவுச்சொல். இக் கருத்தினையே, வள்ளுவப் பெருந்தகையும்,

"தீயினாற்சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்டவடு" (குறள்,129.) என்று, குறித்துள்ளார்.

நச்சுவால் *naccu-vāl,* பெ. (n.) சாரைப்பாம்பின் நஞ்சுள்ள வால்; a tail of rat-snake.

[நஞ்சு → நச்சு + வால்.]

நச்சுவாள் *naccu-vāḷ,* பெ. (n.) நஞ்சு பூசப்பட்ட வாள்; poisonous sword.

[நஞ்சு → நச்சு + வாள்.]

பகைவரைக் கொல்லுதற்பொருட்டு, வாளின் நுனியில், நஞ்சு பூசிய நச்சுவாள்.

நச்சுவி *naccuvi,* பெ. (n.) பேய்க்கரும்பு; devil sugarcane

மறுவ. நச்சுக்கரும்பு.

[நச்சு + இ.]

தோற்றத்தில் கரும்பினைப் போன்றிருந்தாலும், கடித்துச் சுவைக்கும் போது உவர்ப்புச் சுவைத் தருந்தன்மைத்து.

நச்சுவிறகு *naccu-viṟagu,* பெ. (n.) கெட்ட செயல்களுக்குப் பயன்படும் நச்சுவிறகு (யாழ்.அக.); poisonous fuel, used in witchcraft.

[நச்சு + விறகு]

நச்சுத்தன்மையுள்ள விறகு; பிறருக்குத் தீச் செயல் செய்தற்பொருட்டும், செய்வினை வைத்தல் போன்ற தீயநிகழ்வுகளின் பொருட்டும் பயன்படுத்தும் விறகு.

நஞ்சுத்தன்மையுள்ள எட்டி, கள்ளி, நாபி போன்றவற்றின் விறகு.

நச்சுவேர் *naccu-vēr,* பெ. (n.). நச்சுத் தன்மையுள்ள வேர்; poisonous root.

[நஞ்சு → நச்சு + வேர்].

நச்சுவேல் *naccu-vēl,* பெ. (n.) நஞ்சு பூசப்பட்ட வேல்; poisonous spear

[நஞ்சு → நச்சு + வேல்]

எதிரிகளையும், கொடிய விலங்குகளையும், எறியுந்தூரத்தினின்று கொல்லப் பயன்படுத்தும் வேல்.

நச்சுவேலை *naccu-vēlai,* பெ. (n.) தொல்லை உண்டாக்கும் வேலை (இ.வ.); work causing worry, troublesome piece of work.

[நச்சு + வேலை.]

பிறர்க்குப் பொருட்சிதைவை உண்டாக்கும் வேலை, தீயவேலை என்றும், உடற்சிதைவை உருவாக்கும்வேலை, நச்சுவேலை என்றும் கருதப்படும்.

நச்சுளி *nacculi,* பெ. (n.) சிறு கடல்மீன் வகை; a small sea -fish, Opisthognathus rosenbergi.

நச்சுறுப்பான் *naccuṟu-p-pāṉ,* பெ. (n.) *நஞ்சறுப்பான்* பார்க்க; see *nañjaṟuppāṉ*

[நச்சு + உறுப்பான்.]

நச்சுறுத்தல் *naccuṟuttal,* தொ.பெ. (vbl n.) ஆசை உண்டாக்கல்; to make wish

பேராசை கொள்ளல், துன்பத்திற்குக் கரணியமானது. நச்சுப்போன்றது.

நச்செண்ணெய் *naccеṇṇey,* பெ. (n) புண்ணுக்கிடும் நச்சு நெய்மம்; a poisonous oil for curing sores and itches

[நச்சு + எண்ணெய்.]

இயல்பான உடலுக்கு நஞ்சு போல் தீமையைத் தந்தாலும், புண்ணுக்கு மருந்தாகப் பூசப்படும் நெய்மம்.

நச்செலி[1] *nacceli,* பெ. (n.) 1. சுண்டெலி (யாழ்.அக.); mouse 2. மூஞ்சூறு; shrew-mouse.

[நசு → நச்சு + எலி.]

(ஒ.நோ.) நச்சுமழை = சிறுதூறல்.
நஞ்சில்லாத சிறிய எலியைக் குறிக்கும் போது, சிறுமைப் பொருள் குறித்து வழங்கிய சொல்லாகும்.

நச்செலி[2] *nacceli,* பெ. (n.) பல்லில் நஞ்சுள்ளதும், சிலசமயங்களில் சாவு விளைவிக்கக்கூடியதுமான எலிவகை. (வின்.); a kind of rat whose bite is poisonous and sometimes fatal.

மறுவ. மொரசன் எலி.

[நச்சு + எலி.]

நஞ்சுத்தன்மையைக் கொண்ட எலிவகை.

நச்செழுத்து *nacceḻuttu,* பெ. (n.) சிற்றிலக்கியத்தில், முதற்சொல் மங்கல மொழியல்லாதவிடத்து, ஆதிமொழிக்கண் வருதற்கு ஆகாதனவென்று விலக்கப்படும், ய், ர், ல், ள், யா, ரா, லா, ளா, யோ, ரோ, லோ, ளோ, ஃ, மகரக் குறுக்கம், அளபெடை ஆகிய எழுத்துக்கள் (இலக். வி. 780); inauspicious letters like y, r l, ḷ, yā, rā, lā, ḷā, yō, rō, lō, ḷō, k, magara-k-kuṟukkam and aḷapeḍai which should not be found in the initial word other than maṅgalamoḻi of a poem

[நச்சு + எழுத்து.]

இக் காலத்தே, சில எண் சிறப்பற்றவை எனச் சொல்வது போல், அக் காலத்தே இருந்த மூடநம்பிக்கை.

நச்செள்ளை *na-c-ceḷḷai,* பெ. (n.) *நச்செள்ளையார்* பார்க்க; see *na-c-ceḷḷaiyār.*

[நல் + செள்ளை.]

நச்செள்ளை = கழகக்காலத்தில் வழங்கிய இயற்பெயர்.

"செள்ளை" என்பது, பெண்பாலர்க்கு இயற்பெயராகப் பண்டைக்காலத்தில் வழக்கூன்றி இருந்தமைக்கு, இவர்பெயர் நற்சான்றுப் படைக்கின்றதெனலாம்.

நச்செள்ளையார் *na-c-ceḷḷaiyār,* பெ. (n.) பதிற்றுப்பத்தினுள், ஆறாம்பத்துப் பாடிய பெண்பாற் புலவர்; இவரது முழுப்பெயர் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்; an ancient Tamiḻ poetess, author of the 6th decad of Patiṟṟu-p-pattu.

[நற்செள்ளை→நச்செள்ளை + ஆர்] (ஆர் = பெருமைப்பொருட்பின்னொட்டு).

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்னும் ஆறாம் பத்தைப் பாடியுள்ள இவர், பிற கழக இலக்கியச் செய்யுட்களையும் இயற்றியுள்ளார். குறுந்தொகை 210 – ஆம் பாட்டில், காக்கை கரைந்தமையைச் சிறப்பாகப் பாடியதால், காக்கைப்பாடினியார் என்ற சிறப்புப்பெயரைப் பெற்றார். சிறப்புப்பெயர் பெறுதற்குக் கரணியமாய் அமைந்த குறுந்தொகைப் பாடல் வருமாறு:–

"திண்தேர் நள்ள கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெண்சோறு
எழுகலத் தேந்தினுஞ் சிறிதென்தோழி
பெருந்தோள் நெகிழ்ந்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே."

நச்செள்ளையார் பதிற்றுப்பத்தில் 51–முதல் 60–வரை–10–பாடல்களைப் பாடியுள்ளார். இப் பாடல்கள், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின், வரையாது வழங்கும் வள்ளன்மை, செல்வம், புகழ், வென்றிச்சிறப்பு, பாடினியர் நிலை போன்றவற்றைப் புகலும் பான்மையில் அமைந்துள்ளன. சேரனின் வென்றியை வியந்து கூறுங்கால்,

"பாடல்சான்ற பயங்கெழுவைப்பின்
நாடுகவி னழிய நாமந் தோற்றிக்
கூற்றடூஉ நின்ற யாக்கை போல
நீசிவந் திறுத்த நீரழி பாக்கம்"

கூற்றுவனால் அடப்பட்டு நின்ற உடலைப் (பிணத்தைப்) போல, பகைவர் நாடு அழிந்த பான்மையைப் பாடிய பாங்கு போற்றத்தக்கது.

நச்செள்ளையார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனிடம் பாடிப்பெற்ற பரிசில்:– ஒன்பது காப்பொன்னும், நூறாயிரங்காணமும் (பொற்காசும்) கொடுத்துக் கலன் அணிக என்றுகூறித் தன் பக்கத்துக் கொண்டான், அக்கோ. குடநாட்டுத்தலைவனான இவன் 38 ஆண்டுகள் ஆட்சிசெய்த வரலாற்றுண்மையை, ஆறாம்பத்தில் உள்ள பத்தாவது பதிகப்பாட்டு பகர்கின்றது.

இவர் புறநானூற்றில் 278–ஆம் பாடலையும் பாடியுள்ளார். இப் பாடலின் வாயிலாக, மறக்குடி மங்கையின் மாண்பினை அறியலாம். எட்டுத்தொகையில் 12–செய்யுட்களையும் இயற்றி, மிகச்சிறந்த பெண்பாற்புலவராக திகழ்ந்தபாங்குப் போற்றத்தக்கது.

நச்சேத்திரதிச்சி *naccēttira-ticci,* பெ. (n.) நாணல்; reed.

[நச்சேத்திரம் + இச்சி.]

நச்சோலம் *naccōlam,* பெ. (n.) நஞ்சுத் தன்மையுள்ள செடி (சா.அக.); aconite.

விடாச்சுரம், ஆறாப்புண், தீராத ஊதைநோய், கொடியபல்வலி, தலைநோய், வயிற்றுநோய்கள், பாம்புகடி, தேள்கடி முதலான அனைத்துவகை நச்சுயிரிகளின் நச்சுத் தன்மையைப் போக்கும் அரியமூலியாகும். மூளைநோய் அனைத்திற்கும், நச்சோலவேர் நனிசிறந்தது.

நசணை *naśaṇai,* பெ. (n) தொல்லை பிடித்தவன் (இ.வ.); a troublesome person.

[நச்சல் → நசல் → நசண் + ஐ.]

நச்சன் = தொல்லை: தொல்லை தந்து அலைக்கழிப்புச் செய்பவன்.

நசநச—த்தல் *naśa-naśa-,* 4 செ.கு.வி. (v. i.) *நசுநசு–* பார்க்க; see *naśu-naśu.*

[நொசி → நசி → நச + நச → நசநச–.]

உறுதிப்பாடு அல்லது கட்டு நெகிழ்ந்து போகுந் தன்மையைக் குறிக்கும், நெகிழ்ச்சிக் கருத்தினின்று தோன்றிய சொல்.

நசநசவெனல் *naša-naša-v-eṉal,* பெ. (n.). *நசுபிசெனல்* பார்க்க; see *našu-pišeṉal*

[நச + நச + எனல்.]

நசபிச—த்தல் *naša-piša-,* 4 செ.கு.வி. (v.i) *நசுபிசு* – (வின்.) பார்க்க; see *našu.pisu-.*

[நச + பிச–.]

நசபிசெனல் *naša-pišeṉal;* பெ. (n.) *நசுபிசெனல்* பார்க்க; see *našupišeṉal*

[நச + பிச + எனல்.]

நசர் *našar,* பெ. (n.) உயர் அலுவலர்க்குச் செலுத்துங் காணிக்கை; present to an official, customary gift to a superior.

[நையல் → நயல் → நசல் → நசர்.]

(ஒ.நோ.) தையில் → தயல் → தசல் → தசர்.

மையல் → மயல் → மசல் → மசர்.

நசல் *našal,* பெ. (n.) 1. நோய்; illness. 2. தீராநோய்; a chronic disease.

[நை → நையல் → நைசல் → நசல்]

நசலாளி *našalāḷi,* பெ. (n.) நோயாளி (வின்); sick person, patient

[நசல் + ஆள் + இ.]

"இ" சொல்லாக்க ஈறு.

நசற்காரன் *našaṟ-kāraṉ,* பெ. (n.) நோயாளி (வின்); patient, person in ill - health.

[நசல் + காரன்.]

'காரன்' உடைமைப் பெயரீறு.

நசறாண்டி *nasaṟāṇḍi,* பெ. (n.) *நசிறாண்டி* பார்க்க; see *našiṟāṇḍi.*

[நசல் + ஆண்டி.]

நசலாண்டி → நசறாண்டி = தொல்லை கொடுப்பவன்.

நசனை *našaṉai,* பெ. (n.) மாணிக்கக் குற்றத்தொன்று (வின்); white speck, a flaw in a ruby

நசாரி *nasāri,* பெ. (n.) எட்டி (மூ.அ.); indian poison nut.

மறுவ. காஞ்சிரை.

[நச + அரி.]

நசி[1]—தல் *naši-,* 2 செ.கு.வி. (v i.) 1. அழிதல்; to be destroyed. 2. நசுங்குதல்; to be crushed, bruised, mashed, crumpled 3. திரைதல்; to be frayed, as a worn cloth. 'நசிந்த புடைவை' (வின்). 4. குறைவு காணுதல் (வின்); to be palliated, extenuated. 5. அடக்கிப் பேசப்படுதல் (வின்.); to be kept back, spoken indistinctly or with hesitation. 6. நிலைமை சுருங்குதல்; to be reduced in circumstances.

த. நசி → வ. நச் (nas).

[நை → நயி → நசி –.] (வேக.3–31)

(ஒ.நோ.) மொய் → மொயி → மொசி.

நெகிழ்ச்சிக் கருத்தினின்று கிளைத்த வேர். நெகிழ்ந்த பொருள் நைந்து நசுங்குவது இயல்பு. நைந்த பொருள் தளரும். தளர்ந்த பொருள் சுருங்குந்தன்மைத்து. நெகிழ்வின் இறுதிநிலை, நிலைமைக் கெட்டு அழிதலாகும். நசிதல் என்னுமிச்சொல், ஈங்கு நசுங்குதல், சுருங்குதல், கெடுதல், அழிதல் என்னும் பொருண்மையில் வந்துள்ளது.

நசி²–தல் *naśi-,* 2 செ.கு.வி. (v.i.) ஓர் இனம் அல்லது குடும்பம், கலை முதலியவை எண்ணிக்கையில் குறைந்து, வளர்ச்சியில் பின்தங்கி, செல்வாக்கு அல்லது மதிப்பை இழந்து நலிவடைதல்; to become extinct, to decline "திமிங்கல இனம் எண்ணெய்க்காகப் பெருமளவில் கொல்லப்படுவதால், நசிந்து வருகிறது" (உ.வ.); "கண்ணெதிரில் நண்பரின் குடும்பம் நசிந்து போவதைப் பார்க்க மிகவும் துன்பமாக இருக்கிறது." நசிந்து வரும் *ஒயிலாட்டம், கரகாட்டம் முதலான நாட்டுப்புறக் கலைகளை* அரசும், மக்களும் ஊக்குவிக்க வேண்டும் (உ.வ.).

த. நசி→. வ. நச். (nas)

[நை → நயி → நசி.]

நசி³–த்தல் *naśi-,* 4 செ.கு.வி. (v.i) 1. அழித்தல்; to be destroyed, annihilated, consumed. *"நசியாஉலகிற் பாவமு நசிக்கும்".* (காஞ்சிப்பு மணிக. 61). 2. குறைதல்; to become reduced, diwindle, decline, as a family. 'அந்தக் குடும்பம் நசித்துக்கொண்டு வருகிறது.' அரிதாகக் காணப்படும் இந்தப் பறவையினம் நசித்து வருகிறது (இக்.வ.). சில கலைஞர்களேனும் இல்லாவிட்டால், பொம்மலாட்டக்கலை என்றோ நசித்திருக்கும் (உ.வ.); 3. சாதல்; to become extinct, die *"நசித்தவரை எழும்பியருள்"* (அருட்பா, vi, அருள்விளக்க. 4).

[நயி → நசி + த் + தல். த் = சந்தி. 'தல்' தொ.பெயர்.ஈறு.]

நசி⁴–த்தல் *naśi-,* 4 செ.குன்றா.வி. (v.t.) 1. அரைத்தல்; to crush, bruise, mash, crumple. 2. அழித்தல்; to demolish, destroy, consume. 3. கசக்குதல் (யாழ்ப்.); to squeeze, press. 4. அடக்கிப்பேசுதல்; to suppress, conceal, keep back, speak with hesitation. 5. எளிதாக்குதல் (யாழ்ப்.); to make light of treat as of small account.

ம. நசிக்க.

[நயி → நசி – த் + தல். 'தல்' தொ. பெ. விகுதி.]

நசிகோதி *naśi-kōdi,* பெ. (n.) சமையல் பாகக் குற்றம்; defect in cooking.

நசிதவாரகம் *naśida-vāragam,* பெ. (n.) பெருஞ்செருப்படை; large forceful army

[நசிதம் + வார் + அகம்].

நசிதோடணம் *naśidōḍaṇam,* பெ. (n.) மிகவுஞ்சூடு, மிகவும் குளிர்ச்சியில்லாமை; neither too warm, nor too cold

நசிந்துகொடு–த்தல் *naśindu-koḍu-,* 4 செ. கு.வி. (v.i.) 1. பழுத்து மெதுவாயிருத்தல்; to yield, as a boil or fruit to the touch. 2. இணங்குதல்; to yield to one, concede.

[நசிந்து + கொடு–.]

நசிந்துபோ—தல் *naśindu-pō-,* 4 செ.கு.வி (v.i.) *நசி¹-தல்* பார்க்க; see *naśi-,*

[நை → நயி → நசி → நசிந்து + போ—.]

நசியஞ்செய்தல் *naśiyañ-jeydal,* பெ. (n.) மூக்கின் வழி மருந்தை உட்செலுத்துதல் அல்லது உள்ளுக்கிழுத்தல்; inhaling medicinal fumes or powders through the nose.

[நசியம் + செய்தல்.]

நசியம் *naśiyam,* பெ. (n.) 1. மூக்குப்பொடி (வின்.); sternutatory, snuff. 2. மூக்கிலிடும் மருந்து (தைலவ. தைல.2); a medicine applied to the nose.

நசியம்செய்—தல் *naśiyam - śey-,* 1. செ. குன்றாவி. (v.t.) மூக்கினால் இழுத்தல்; to make the patient lie down, and pass the medicine into his nostril through a tube and funnel.

[நசியம் + செய்—.]

நசியம்பிழிதல் *naśiyam - piḻidal,* பெ. (n.) மூலிகை மருந்தை நீர் வடிவில் உட்செலுத்துதல்; to pass the juice of herbs in to the nostril.

[நசியம் + பிழிதல்.]

நசியமிடல் *naśiyam-iḍal,* பெ. (n.) மருந்தைப் புகை வடிவில் உட்செலுத்தல்; administering medicine internally in the form of fumes or vapour, exposing to smoke or vapour as of sulphur to purify from infection inhaling disinfectant fumes. - Fumigation.

[நசியம் + இடல்.]

நசியரி *naśiyari,* பெ. (n.) 1. குப்பை மேனி; indian acalypha. 2. செடிக்குப்பை; rubbish plant.

[நசி + அரி.]

நசி = சிறிய.

நசியல் *naśiyal,* பெ. (n.) 1. நெரிந்தது (வின்.); anything crushed or mashed, as overripe or decayed fruit. 2. தட்டையானது; anything pressed or bent, as a jewel. 3. வளைந்து கொடுப்பது; anything tough and yielding.

[நசி → நசியல்.]

நசியலன் *naśiyalaṉ,* பெ. (n) கழப்புணி, சாக்குப் போக்குக் காட்டி ஏய்த்து மழுப்புவன்; (வின்.); a person who practises evasion, who does not answer directly.

[நசி → நசியல் + அன்.]

'அன்' – ஆ. பா. ஈறு.

கடமையைத் தட்டிக்கழித்துச் சூழ்ச்சி செய்து, பிடிகொடாது தப்புந்தன்மையன். ஆற்ற வேண்டிய பணியை நசித்து அழிக்குந் தன்மையன்.

நசிவாந்தம் *naśivāndam,* பெ. (n) பறங்கி வைப்பு நஞ்சு; a kind of mineral poison, sublimate of mercury

[நசிவு + அந்தம்.]

நசிவானவெழுத்து *naśivāṉa-v-eḻuttu,* பெ. (n.) 1. திருத்தமில்லாததும், அரைகுறையானதுமான எழுத்து (வின்.); indistinct or ill-formed writing. 2. கவர்பொருள் கொண்ட தொடர்மொழி; a writing in equivocal terms.

[நசிவு + ஆன + எழுத்து.]

நசிவு *naśivu,* பெ. (n.) 1. நலிவு, அழிவு, கேடு; destruction, decadence, loss, injury. 2. நெரிவு; bruise, contusion. 3. வசைபாடுகை, பழிகூறுகை, இடித்துரைக்கை; reproach. 4. இகழ்கை; disparagement.

[நயி → நசி → நசிவு.]

நைந்து அழிகை; நைந்து சேதப்படுகை போன்ற பொருண்மையில், இச் சொல் இக் காலத்தே வழக்கூன்றியுள்ளது. (எ.டு) தரந்தாழ்ந்த தாளிகைகளினால் மொழிக்கும், பண்பாட்டிற்கும் ஏற்படும் பயனைவிட, நசிவுதான் மிகுதி (இக்.வ). அறிவியல் வளர வளர மூடநம்பிக்கைக் கோட்பாடுகள் நாளாக நாளாக நசிவுற்று வருகின்றன" போன்ற வழக்குகளில் நசிவு என்னுஞ்சொல் அழிவு, கேடு என்னும் பொருண்மையில், பயின்று வருகிறது.

நசிவுகாண்(ணு)—தல் *naśivu kāṇṇu-,* 12 செ. கு.வி. (v.i.) 1. நைந்து சேதப்படுதல்; to become injured or bruised, as ripe fruit. 2. மனம் வேறுபடுதல்; to turn shy or discordant, as friends. 3. நிலையற்றிருத்தல்; to be insecure, as in one's office.

[நசிவு → காண்(ணு)—.]

நசிவுகாயம் *naśivu-kāyam,* பெ. (n.) ஊமைக்காயம் (இ.வ.); contusion.

[நசிவு + காயம்.]

நசிறாண்டி *naśiṟāṇḍi,* பெ. (n.) *நசிறாணி* (யாழ்ப்.) பார்க்க; see *naśiṟāṇi.*

[நசல் → நசில் → நசிறு + ஆண்டி.]

நசிறாணி[1] *naśiṟāṇi,* பெ. (n.) 1. தொல்லைச் செய்வோன்; vexatious, teasing person. 2. இவறன்; stingy person

மறுவ. பிசிறாணி.

[நசிறு + ஆண்டி → ஆணி.]

நசிறாணி[2] *naśiṟāṇi,* பெ. (n.) கிறித்தவர்; a class of christians.

கிறித்துவ மதத்திலுள்ள பிரிவுகளுள் ஒன்று.

நசினை *naśiṉai,* பெ. (n) *நசனை* (வின்.) பார்க்க; see *naśaṉai.*

நசுக்கல் *naśukkal,* பெ. (n.), 1. நெருக்குதல், நசுக்குதல்; crushing. 2. நொறுங்குதல்; pounding, mashing, beating into a confused mass.

[நை→நசி → நசுங்கு → நசுக்கு + அல்.]

நசுக்கான் *naśukkāṉ,* பெ. (n.) சிறியது; that which is small. நசுக்கான் பையன் (வின்.).

தெ. நலுசுணி.

[நசுக்கு = சிறியது; நசுக்கு → நசுக்கான். ஒருகா. நசுங்கான் → நசுக்கான்.]

நசுக்கிப்பிழி—தல் *naśukki-p-piḻi-,* 2.செ. கு. வி. (v.i.), பசுமையான மூலிகைகளை இடித்துச் சாறுபிழிதல்; to squeeze out juice by bruise the green herbaceous leaves. *"நாயுருவி இலையை நசுக்கிப் பிழிந்து கருக்கு நீரிட்டுக்(கசாயம்) குடித்தால் மலக்கட்டு அகலும்".*

[நசுங்கு → நசுக்கு → நசுக்கி + பிழி—.]

சித்தமருத்துவத்தில் தமிழகத்தில் கிடைக்கும் பசுமையான மூலிகையும், மூலிகைக் கருக்குநீருமே, (கசாயம்) தீராத நோய்களைத் தீர்த்து, உலகமருத்துவ அரங்கில், தமிழகத்திற்கு உயர்ந்த இடத்தை, உருவாக்கித் தந்துள்ளன.

நசுக்கு¹–தல் *naśukku-*, 5.செ. கு. வி. (v.i.), 1. அழுத்தித் தேய்த்தல், நசுங்கச் செய்தல் (இ. வ.); to squeeze; press with the hand, crush, squash, crumple, as paper. '*கதவைச் சாத்தும் போது என்விரலை நசுக்கிவிட்டான்*'. '*சுருட்டுத் துண்டைக் கீழே போட்டுக் காலால் நசுக்கினான்*' (இக்.வ.). "*ஏன் இப்படி என்னை நசுக்கிறீர்கள்? சிறிது தள்ளி நிற்கக்கூடாதா?*" (உ.வ.). 2. கழப்பிப் பேசுதல். to keep back, as a matter, to tell indistinctly, to evade. '*அவன் நசுக்கிச் சொல்கிறான்*'. 3. தடுத்தல் (வின்.); to object, rebut, try to defeat 4. வலிமையால் கீழேதள்ளுதல்; to knock down. '*சண்டையில் அவனை நசுக்கி விட்டான்*' (இ. வ.); 5. அடித்தல் (இ. வ.); to beat, thrash. "*எனக்குச் சினம் வந்தால் உன்னை நசுக்கிவிடுவேன்*" (இக். வ.); 6. கீழ்ப்படுத்துதல்; to reduce, as haughtiness of a person, to subdue, to ruin, as a family. 7. போராட்டம் உரிமை போன்றவற்றை ஒடுக்குதல்; to squash revolt, freedom etc., '*தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை நசுக்க, மேலாளர் வன்முறையைக் கையாண்டார்*' (இ.வ.). '*கொடுங்கோலரசு மக்களின் விடுதலை வேட்கையை நசுக்குகிறது*' (இக்.வ.).

க. நசிகு.

[நசி → நசுங்கு → நசுக்கு–.]

நெகிழ்ச்சிக் கருத்தினை விளக்கும் வினையடி. நசுங்கச் செய்தல் என்னும் பொருண் மையுடையது. சிரங்குக் கொப்புளத்தைத் தேய்த்துப் பிதுக்குதலும், மூட்டைப்பூச்சி, பேன் முதலியவற்றை, அழுத்தி அல்லது குத்திக் கொல்லுதலும், யானை உயிரிகளை மிதித்துக் கொல்லுதலும், எதிரிகளை அடக்கி யொடுக்குதலும், பெருங்குடற் காற்றை அடக்கி வெளிவிடுதலும், 'நசுக்குதல்' எனும் பொருண்மைப் பற்றியதே.

வாழ்வியலில் நிகழும், பலதிறப்பட்ட, நெகிழ்வுப் பொருண்மைகளை உள்ளடக்கிய "நசி" (நசி → நசு) என்னும் வேரினின்று கிளைத்த சொல்லாகும். இன்றைய சூழலில் நசுக்கும் போக்கு, (பாங்கு) மன்பதையில் அங்கிங் கெனாதபடி எங்கும் மலிந்து காணப்படுகிறது. உயர்ந்தோர், தம்மைவிடத் தாழ்ந்தோரை நசுக்குவது, இன்று இயல்பாகிவிட்டது. ஐந்தறிவுள்ள யானை மரம், மட்டைகளை நசுக்கி உண்ணுவது போன்று, ஆறறிவு படைத்த மாந்தனும் தம்மினும் வலிமைகுன்றியவரை, நசுக்கி உண்பது கண்கூடு. பணக்காரன் ஏழையை நசுக்குகின்றான். முதலாளி, தொழிலாளியை நசுக்குகின்றான்.

இவ்வாறு, நசுக்குதல் என்னும் நெகிழ்ச்சிக் கருத்து, குமுகாய வாழ்வியலில் மாந்தனுடன் பல்வகையானும், பின்னிப்பிணைந்து காணப்படுகிறது.

நசுக்கு² *naśukku*, பெ. (n.), 1. நெரிவு; bruise. 2. சிறியது (வின்.); that which is small, little.

தெ. நலுசு.

[நசி → நசு → நசுக்கு.]

நசுக்குண்டல் *naśukkuṇḍal*, பெ. (n.), நெரிவுறல்; being jammed, being beaten in to a pulp or flat mass, squashing. "*நிலநடுக்கத்தினால் பலவீடுகள் நசுக்குண்டன*" (உ.வ.).

[நசுங்கு → நசுக்கு + உண்டல்.]

நசுக்குணி *naśukkuṇi*, பெ. (n), 1. சிறியது (யாழ்ப்.); that which is small 2. கூழையன் (யாழ். அக.); stunted person. 3. சுணங்கி; delaying person. 4. பின்னிடுவோன்; loitering person. 5. தொல்லை செய்வோன்; troublesome person.

[நசுக்கு → நசுக்குணி.]

நசுக்குத்திரிசமன் *naśukku-t-tirisamaṉ,* பெ. (n.), மறைந்து செய்யும் தீச்செயல் (சென்னை); secret mischief. underhand injury.

சமனிலைக் கருத்தினைத் திரித்துச் சொல்லுதல் பற்றியும், மறைத்துச் செய்யும் பொருண்மை குறித்தும், இச்சொல் வழங்கிற்று எனவாம்.

நசுக்குத்துர்ச்சனம் பண்ணு—தல் *naśukku-t-turccaṉam-paṇṇu-,* 5.செ.கு.வி. (v.i.), 1. மறைவாய்க் குறும்பு செய்தல்; to do secret mischief. 2. தொல்லை செய்தல் (வின்.); to be meddlesome.

[நசுக்கு + skt. துர்ச்சனம் + பண்ணு-.]

நசுக்குநசுக்கெனல் *naśukku-naśu-k-keṉal,* பெ. (n.), 1. ஒட்டுதற்குறிப்பு; stickiness. 2. தொல்லை செய்தற்குறிப்பு; constant worry

[நசுக்கு + நசுக்கு + எனல்.]

நசுகுணி *naśuguṇi,* பெ. (n.), *நசுக்குணி 1, 2.* பார்க்க; see *naśukkuṇi, 1, 2.*

நசுங்கச்சப்பி *naśuṅga-c-cappi,* பெ. (n.), இவறன்; stingy person, niggard.

[நசுங்கல் + சப்பி.]

நசுங்கல் *naśuṅgal,* பெ. (n.), 1. மெலிந்தது; that which is lean. 2. இவறன்; stingy person. 3. நைந்தகாயம் (இ. வ.); contusion. 4. *நசுங்கலான்* பார்க்க; see *naśuṅgalāṉ.*

[நசுங்கு → நசுங்கல்]

அல்லீற்றுத் தொழிற்பெயர் ஈறு.

நசுங்கலன் *naśuṅgalaṉ,* பெ. (n.), *நசுங்கலான்* பார்க்க; see *naśuṅgalāṉ.*

[நசுங்கல் → நசுங்கலான்]

'அன்'சாரியை ஈண்டு உடன்பாட்டுப் பொருளில் வந்துள்ளது.

நசுங்கலாண்டி *naśuṅgalāṇḍi,* பெ. (n.), *நசுங்கலான் (யாழ். அக.)* பார்க்க; see *naśuṅgalāṉ.*

[நசுங்கலன் → நசுங்கலான்.]

நசுங்கலான் *naśuṅgalāṉ,* பெ. (n.), 1. உறுதி யற்றவன்; one who speaks or acts with indecision, misgiving or hesitation. 2. *நசுக்குணி* பார்க்க; see *naśukkuṇi.*

[நசுங்கல் + ஆன்.]

நசுங்கு—தல் *naśuṅgu-,* 5.செ. கு. வி. (v.i.), 1. நசுக்கப்படுதல், உருக்குலைதல்; to be mashed, to get crushed, bruised. ஓடும் பேருந்திலிருந்து விழுந்தவர், சக்கரத்தில் சிக்கி, நசுங்கிச் செத்தார் (இ. வ.). *'கீழே விழுந்த அரத்திப்பழம் ஒரு பக்கத்தில் நசுங்கிவிட்டது'.* விரல் நசுங்கிவிடப் போகிறது, கதவைப் பார்த்துச் சார்த்து (இக்.வ.). 2. கசங்குதல்; to be crumpled, folded, bent, as a cloth. 3. பிதுங்குதல்; to be squeezed, pressed, crowded 4. கருமம் கெடுதல்; to be suppressed, dropped, as an affair. 5. நழுவி விடுதல். To fall through, become hushed, die away, as a rumour. 6. நிலைகுலைதல்; to be reduced as in circumstances.

[நை → நயி → நசி → நசுங்கு-.]

(ஒ.நோ.) மொய் → மொயி → மொசி.

நெகிழ்ச்சிக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டது. அழிந்து போதல், நசுங்கி உருக்குலைதல், நைந்துநிலைகெடுதல் என்னும் பொருண்மையில், இச் சொல் மக்களிடத்தே வழக்கூன்றியுள்ளது.

நசுக்கப்பட்ட பொருள் உருக்குலையும். உருக்குலைந்து, உருவமழிந்த மாந்தன் சின்னாபின்னமாகிச் சிதைந்து மடிவான். முடிவில், நிலைகுலைவு ஏற்பட்டு வினை அல்லது தொழில் அழிந்துபடும். நை → நயி → நசி → நசு, என்னும் வேரடி, இது போன்ற நெகிழ்ச்சிப் பொருண்மைகளை, உள்ளடக்கியதாகும்.

நசுநசு—த்தல் *našu-našu-,* 4.செ. கு. வி. (v.i.), 1. *தடுமாறுதல்;* to waver. to be undecided in speech or action. 2. விடாது தூறிக்கொண்டிருத்தல்; to be continually drizzling. "*நசுநசுத்த மழை*" (வின்.). 3. ஈரமாயிருத்தல்; to be damp, as a floor. 4. தொடக்குழைதல். to be yielding to the touch. 5. கையிறுக்கமாயிருத்தல்; to be illiberal. "*நசுநசுத்தகுணம்*" (வின்.). 6. தொல்லை (தொந்தரவு) செய்தல் (இ.வ.); to tease, trouble.

க. நசெநசெ.

[நொய் → நொசு → நசு → நசுநசு—.]

நசுநசுப்பு *našu-našuppu,* பெ. (n.), ஈரம்; dampness.

[நசுநசு → நசுநசுப்பு.]

நசுநசெனல் *našu-našenal,* பெ. (n.), 1. ஈரக்குறிப்பு; dampness. 2. வளைந்து கொடுத்தற்குறிப்பு; toughness, tenacity 3. தொல்லை செய்தற்குறிப்பு; troubling, teasing. 4. மழைதூறற்குறிப்பு; drizzling. 5. மனம் அலைபாய்தற் குறிப்பு (யாழ்ப்.); wavering. 6. காலந்தாழ்த்துதற் குறிப்பு; delay. 7. மெதுவாயிருத்தற் குறிப்பு; softness to the touch. 8. கட்டுநெகிழ்தற் குறிப்பு; looseness.

[நை → நசு → நசுநசு + எனல்.]

நெகிழ்ச்சிக்கருத்தினை வேரடியாகக்கொண்டது. இடைவிடாத நசுநசுத்த மழையால் மண் அல்லது நிலம், கட்டுநெகிழ்வதும், இடையரவுபடாத தொல்லையால், உள்ளம் கட்டுக்குலைந்து நெகிழ்ச்சியுறுதலும், இயல்பே ஆகும்.

நசுநாறி *našu-nāṟi,* பெ. (n.), இவறன்; stingy mean person, haggler for a trifling gain in bargains.

மறுவ. பிசுநாறி.

தெ., பிசிநாறி.

[நசு + நாறு + இ.]

மட்டமான மனத்தினன். மதிப்பில் குறைந்தவன். இழிதகையாளன். குறுகிய நோக்கமுள்ளவன், பெருந்தன்மையற்றவன்.

அற்பப்பொருட்களையெல்லாம், பேரம்பேசி வாங்குவதில், கைதேர்ந்தவனே இவறன். தன்னலத்தையே குறிக்கோளாகக் கொண்டு, வாழ்க்கை நடத்துபவன்.

நசுபிசு—த்தல் *našu-pišu-,* 4.செ. கு. வி. (v.i.), *நசுநசு—(யாழ்.அக.)* பார்க்க; see *našu-našu-.*

[நசு + பிசு—.]

நசுபிசெனல் *našupisenal,* பெ. (n.), *நசுநசெனல்* பார்க்க; see *našu-nasenal*

[நசு + பிசு + எனல்.]

நசுவக்கிரந்தி *naśuva-k-kirandi,* பெ. (n.), நசுங்கிய காயத்தைப் போல் காணப்படும் ஒருவகை கிரந்திப்புண்; a syphlitic sore resembling a bruised wound.

[நசு → நசுவம் + skt. கிரந்தி.]

நசுவம் = சிறியது.

அடிபட்ட சிறியபுண் வடிவில் காணப்படும், சிலந்தி.

நசுவல்[1] *naśuval,* பெ. (n.), 1. மெலிந்த–வன்–வள்–து; stunted or emaciated person or beast. 2. ஊக்கமற்றவன்–வள் (யாழ்ப்.); spiritless person. 3. குழப்பமானது (யாழ்ப்.); intricate affair, complication. 4. மலம் (இ. வ.); excrement. 5. *நசுக்குணி[1], (இ. வ.)* பார்க்க; see *naśukkuṇi.*

[நசு → நசுவு + அல்.]

நசுவல்[2] *naśuval,* பெ. (n.), 1. தொல்லை செய்வோன்; one who is always teasing. 2. இவறன்; stingy person, miser.

நசை[1]**–தல்** *naśai-,* செ. குன்றாவி. (v.t.), 1. அன்பு செய்தல்; to love. "*நசைஇயார் நல்கா ரெனினும்*" (குறள், 1199.). 2. விரும்புதல்; to desire. "*எஞ்சா மண்ணசைஇ*" (மணிமே. 19, 119.).

[நய → நச → நசை.]

நசை[2] *naśai,* பெ. (n.), தசைநார்; a bundl of fibres by which muscle is attached to the bone.

நசை[3] *naśai,* பெ. (n.), 1. விருப்பம் ஆசை; desire, eagerness, avarice. "*நசைதர வந்தோர் நசை பிறக் கொழிய*" (புறநா. 15). "நம்பும் மேவும் நசையா கும்மே" (தொல். சொல். 812). 2. அன்பு; love, affection. "*நசையிலார் மாட்டு நசைக்கிழமை செய்வானும்*" (திரிகடு. 94). 3. நம்பிக்கை; hope, expectation. "*அரிதவர் நல்குவ ரென்னு நசை*" (குறள், 1156.). 4. ஈரம்; dampness, moisture.

க. நசெ.

[நய → நச → நசை.]

நசை[4] *naśai,* பெ. (n.), எள்ளுகை, ஏளனம்; derision.

[நகு → நகை → நசை.]

நசை[5] *naśai,* பெ. (n.), குற்றம் (யாழ். அக.); fault, defect.

[நசி → நசை.]

நசைகுநர் *naśaigunar,* பெ. (n.), *நசைநர் (யாழ். அக.)* பார்க்க; see *nasainar.*

நசைத்துடி *naśai-t-tuḍi,* பெ.(n.), குளிர் காய்ச்சலின் விளைவால் ஏற்படும் தசைமுறுக்கு; movement of the muscles and tendens in typhoid condition.

நசைநர் *naśainar,* பெ. (n.), நண்பர் (பிங்.); friends, lovers, well-wishers.

[நசை + நர்.]

[நய → நச → நசை + கு + நர்.]

கு=எழுத்துப்பேறு.

அர் என்னும் வினைக்குரிய ஆண்பால் இறுதிநிலை, பிற்காலத்தே, பெயர்கருதிய நர் இறுதி நிலையாக அமைந்தது.

எ.கா. இயக்குநர், நடத்துநர், ஓட்டுநர்.

நசையுநர் *naśaiyunar,* பெ. (n.), *நசைநர்* பார்க்க; see *naśainar.* "*நசையுநர்க் கார்த்து மிசைபோரள*" (திருமுரு. 270).

[நசை + உ + நர்.]

உகரச்சாரியை, தோன்றி நிற்கிறது.

நசையுரை *naśai-y-urai,* பெ. (n.), காதற் பேச்சு (வின்.); amorous talk.

[நசை + உரை.]

கருத்தொருமித்த காதலர், தம்முள், ஆராஅன்பினால், ஒருவரையொருவர் புரிந்து கொண்டு பேசிமகிழும், நயவுரை.

நசைவினை *naśai-vinai,* பெ. (n.), நற்செயல் (வின்.); good act.

[நயம் → நயை → நசை + வினை.]

நசைவு *naśaivu,* பெ. (n.), தரையிலுண்டாகும் ஈரம்; (வின்.) moisture of the earth.

[நச > நசைவு.]

நஞ்சணிகண்டன் *nañjaṇi-kaṇḍaṉ,* பெ. (n.), கொடிய நஞ்சினைக் கழுத்திலணிந்த சிவன்; Śivaṉ, adorned with poisonous coloured neck. "*நஞ்சணிகண்டன் எந்தை மடவா ளதனோடும் விடையேறும் எங்கள் பரமன்*" (திருஞானசம்பந்தர் தேவாரம்.)

[நஞ்சனி + கண்டம் → கண்டன்.]

இம்மையில் அனைவருக்கும் நன்மையே நல்குந் தன்மையன். ஞாலத்தின் கண்ணேயுள்ள, எல்லாத்தீமையாகிய நஞ்சினையெல்லாம், தான் (அணிந்துகொண்டு) பெற்றுக்கொண்டு, மன்பதைவாழ் மாந்தர்க்கெல்லாம், வளத்தையும், நலத்தையும் வாரிவழங்கும் இயல்பினன் என்னும், வாழ்வியல் பொருண்மையினை, "*நஞ்சணிகண்டன்*" என்னும் சொல் உணர்த்துகின்றது.

நஞ்சபாதம் *nañja-pādam,* பெ. (n.), குதிரைக் குற்றங்களுளொன்று; a defect in horses. (திருவாத. பு. குதிரையிட்ட. 35.).

[நைந்த → நஞ்ச + பாதம்.]

முதன் முதலில் அரேபியாவிலிருந்து வருவித்த குதிரைகளுக்கு, (இலாடம்) இரும்புச்செருப்பு இயைக்கும் இயல்பை, வணிகச் சூழ்ச்சிக் கரணியமாகச் சொல்லாமையால், நிறைய குதிரைகள் இறந்தன என்பது, வரலாற்றுக் குறிப்பு.

நஞ்சம் *nañjam,* பெ. (n.), நஞ்சு; poison, venom. "*நஞ்ச மோவினி நானுயிர் வாழ்வனோ*" (கம்பரா. நகர்நீங்கு. 10).

[நஞ்சு + அம்.]

நஞ்சரி *nañjari,* பெ. (n.), *நச்சரி* பார்க்க; see *naccari.*

[நஞ்சு + அரி.]

நஞ்சரிவாளி *nañjarivāḷi,* பெ. (n.), தக்கை; pith.

[நைந்து → நஞ்சு + அரிவாளி

அரிவு + ஆளி.]

நைந்ததாய் இருப்பினும், பார்ப்பதற்கு விறைப்பான அரிவாள் போல் தோன்றலால், வந்தபெயர்.

நஞ்சறப்பாய்ஞ்சான் *nañjaṟa-p-pāyñjāṉ,* பெ. *நஞ்சறப்பாய்ந்தான்* பார்க்க; see *nañjaṟa-p-pāyndāṉ.*

[நஞ்சு + அற + பாய்ந்தான்

பாய்ந்தான் → பாய்ஞ்சான்.]

நஞ்சறப்பாய்ந்தான் *nañjara-p-pāyndāṉ,* பெ. (n). 1. *கழுதைப் பாலை* பார்க்க; see *kaḻudai-p-pālai.* Indian ipecacuanha. 2. கொடிப்பாலை (சங். அக.); green wax flower 3. படுவங்கீரை; (யாழ் அக.); a kind of herb

[நஞ்சு + அற + பாய்ந்தான்.]

நஞ்சறுப்பான்[1] *nañjaruppāṉ,* பெ. (n.), 1. *நஞ்சறப்பாய்ந்தான்* பார்க்க; see *nañjara-p-pāyndāṉ.* 2. கொடிப்பாலை; green wax-flower. 3. நாய்ப்பாலைஅல்லது கழுதைப்பாலை; dog paulay a dankey paulay 4. நஞ்சு முறிச்சான்; poison-killer.

மறுவ. நச்சுக்கொல்லி. கொண்டைச் சாணிக்கிழங்கு.

[நஞ்சு + அறுப்பான்.]

எல்லாவகைத் தோல் நோய்களையும் அகற்றும்; இதன் இலைகளையும், வேரினையும், சுண்டக்காய்ச்சிக் (சுருக்கிக்) குடித்தால், நாட்பட்ட கோழை அகலும். அளவுக்கு அதிகமான வேர்வையால், நச்சு நுண்மங்கள் நைந்து நலியும். பச்சை வேரினைத் தண்ணீரில் இழைத்துக் கொடுத்தால், மலச்சிக்கல் அகலும். உடம்பிலுள்ள அனைத்து நச்சுத் தன்மைகளும் நீங்கும் (சா.அக.).

நஞ்சறுப்பான்[2] *nañjaruppāṉ,* பெ. (n.), *நஞ்சு முறிச்சான்* பார்க்க; see *nañju-muriccāṉ.*

மறுவ. நாய்ப்பாலை, பேய்ப்பாலை.

நஞ்சறுப்பான்வேர் *nañjaruppāṉ-vēr,* பெ. (n.), ஒருவகைக்கள்ளி; a kind of spurge.

[நஞ்சு + அறுப்பான் + வேர்.]

நஞ்சன் *nañjaṉ,* பெ.(n.), தீயவன் (வின்); venomous person.

[நஞ்சு + அன்.]

நஞ்சாதவெலும்பு *nañjāda-v-elumbu.* பெ. (n.), முழங்கால் எலும்பு; knee - bone.

நஞ்சானுங்குஞ்சும் *nañjāṉuṅ-kuñjum.* பெ. (n.), மெலிந்த குழந்தையும் குட்டியும்; a group of weak infants and babes

மறுவ: நஞ்சானும் குஞ்சானும்.

[ஒருகா. நோய்ந்தான் > நோஞ்சான் → நஞ்சான்.]

[நைந்தான் > நஞ்சான்.]

குஞ்சு = பறவைக்குழவிப்பருவம்.

கட்டுப்பாடின்றி, அளவிற்கு அதிகமாகக் குழந்தைகளைப் பெறுவதாலும், சரியான உணவு இன்மையாலும், மெலிந்து காணப்படும் குழந்தைகளை, *"நஞ்சானும் குஞ்சானும்"* என்று கூறும் வழக்கு, சிற்றூர்களில் இன்றும் காணப்படுவது கண்கூடு.

நஞ்சி *nañji,* பெ. (n.), 1. குன்றிமணி; crab's - eye. 2. ***கொண்டைச்சாணிக்கிழங்கு;*** dog paulay.

நஞ்சிச்சி *nañjicci,* பெ. (n), *நஞ்சி* பார்க்க; see *nañji*

[நஞ்சி + நஞ்சிச்சி.]

நஞ்சிடல் *nañjiḍal* பெ. (n.), நஞ்சு கலந்த அமுதிடல்; mixing up poison is food or drink

[நஞ்சு + இடல்.]

நஞ்சிலுறுக்கிப்பாய்ஞ்சான் *nañjiluṟukki-p-pāyñjāṉ,* பெ. (n.), 1. நல்லபாம்பின் நஞ்சினை முறிக்கும் ஓர் இலை; a leaf used in cases of cobra bites. 2. *நஞ்சறுப்பான்* பார்க்க; see *nañjaṟuppāṉ.*

நஞ்சினி *nañjiṉi,* பெ. (n.), கேழ்வரகு; rāgi.

நஞ்சீடு *nañjīḍu,* பெ. (n.), நஞ்சிடப்படுகை; the state of being poisoned. "*அவன் நஞ்சீட்டால் துன்பப் படுகிறான்*". (உ. வ.).

[நஞ்சிடு → நஞ்சீடு.]

நஞ்சீயர் *nañjīyar,* பெ. (n.), 12ஆம் நூற்றாண்டினரும், திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படி, அகலவுரை முதலிய இயற்றியவருமான, ஒரு திருமாலிய வாச்சாரியர் (உபதேசரத் 47.); Thirumāliya āccāryār, of 12 century, author of a commentary on tiruvāy-moḻi called oṉpadiṉ-āyirappaḍi and other works.

[நம் + சீயர்.]

நஞ்சு *nañju,* பெ. (n.), 1. உயிர்க்கொல்லி; poison, venom. "*பெயக்கண்டு நஞ்சுண்டமைவர்*" (குறள், 580). 2. தீயது; that which is malignant, baneful, pernicious, fatal 3. நஞ்சுக் கொடி; umbilical cord. '*குழந்தை பிறந்து ஒரு நாழிகையாகியும், இன்னும் நஞ்சு விழவில்லை*' (உ. வ.) 4. பாம்பின்நஞ்சு; snake poison. 5. விலங்குகளின் நச்சுநீர்; the poisonous fluid secreted by certain animals. 6. மூன்றுவகை உப்புகள் (முப்புகள்) (மாற்று வேதியல் முறையில் மாழையைப் பொன்னாக்கு பவை); in alchemy three kind of salts. 7. மூவகை நஞ்சு; the three kinds of poisons. 8. மரவகை; spurge laurel tree.

மறுவ. கருப்பு. தீது.

க. து. நஞ்சு.

[நை→ நைஞ்சு → நஞ்சு.]

நஞ்சுக்கல் *nañju-k-kal,* பெ. (n.), ஈயக்கல் (சிலாவங்கம்); lead stone lead - ore

[நஞ்சு + கல்.]

நஞ்சுக்காளான் *nañju-k-kāḷāṉ,* பெ. (n.), நச்சுத்தன்மையுள்ள ஒருவகைக் காளான்; poisonous mushroom.

மறுவ. நாய்க்குடைக் காளான்.

[நஞ்சு + காளான்.]

நஞ்சுக்குறி *nañju-k-kuṟi,* பெ. (n.), நச்சுத்தன்மையைக்காட்டுங்குறி; poisonous symtoms. பாம்பு கடித்தால், நஞ்சுக்குறி உடலில் மெல்லிய நீலவண்ணமாகப் பரவும் (இ.வ.).

[நஞ்சு + குறி.]

நஞ்சுக்கொட்டை *nañju-k-koṭṭai,* பெ. (n.), காக்கைக் கொல்லி விதை; moon seed plant; crow killer.

[நஞ்சு + கொட்டை.]

நஞ்சுக்கொடி *nañjiu-k-koḍi,* பெ. (n.), கொப்பூழ்க்கொடி; umbilical cord plecenta.

[நஞ்சு + கொடி.]

குழந்தை பிறந்ததைத் தொடர்ந்து வெளியாவதும், கருப்பைக்குள் இருப்பதும், கடல்பஞ்சு போன்றதுமான, சவ்வுப்படலம்.

நஞ்சுகத்தல் *nañjugattal,* பெ. (n.), நஞ்சு கலத்தல்; mixing poison

[நஞ்சு + உகத்தல்.]

நஞ்சுகரையல் *nañju-karaiyal,* பெ. (n.), கருப்பங் கரைகை; abortion; miscarriage.

[நஞ்சு + கரையல்.]

கருப்பம் கரையுமாறு, உருவாக்கிய நஞ்சு கலந்த உணவு.

நஞ்சுசுரம் *nañju-šuram,* பெ. (n.), மகப் பேற்றிலுண்டாகுங் காய்ச்சல்; puerperal fever. மறுவ. பேறுகாலக் காய்ச்சல்.

[நஞ்சு + சுரம்.]

நஞ்சுண்டபாலை *nañjuṇḍa-pālai,* பெ. (n.), *நச்சுப்பாலை* பார்க்க; see *naccu-p-pālai.*

நஞ்சுண்டமரம் *nañjuṇḍa-maram,* பெ. (n.), ஒரு முள்மரம்; a variety of montana.

[நஞ்சு + உண்ட + மரம்]

நஞ்சுண்ட மாந்தன் மயிர்கள் சிலிர்த்துக் கிடத்தல் போல், முள் முளைத்தமரம் காணப்படுதலின் வந்த பெயர்.

நஞ்சுண்டம் *nañjuṇḍam,* பெ. (n), முள் மரவகை; small leathery-obovate,- obtuse or acute leaved spinous cape jasmine.

[நஞ்சு + உண்ட + (மர)ம்.]

நஞ்சு உண்டார்க்கு நலம் செய்யும் மருந்திலை தரும் மரம்.

நஞ்சுண்டல் *nañjuṇḍal,* பெ. (n.), நஞ்சை உட் கொள்ளுகை; taking or swallowing poison.

மறுவ: நஞ்சுண்ணல்.

[நஞ்சு + உண்டல்.]

நஞ்சுண்டனெண்ணெய் *nañjuṇḍaṉ-eṉṇey.* பெ. (n.), நஞ்சுண்டான் மரத்தின் விதையினின்று பிழியும் எண்ணெய்; a fixed fatty oil prepared from the seed of the tree-Balanites acgyptiaca

[நஞ்சுஉண்டன் + எண்ணெய்.]

நஞ்சுண்டான் *nañgiuṇḍāṉ,* பெ. (n.), 1. நஞ்சினையுண்ட சிவன்; šivaṉ, as having swallowed.

க., நஞ்சுண்ட து. நஞ்சுண்டெ.

[நஞ்சு + உண்டான்.]

கருநாடக மாநிலத்தில் உள்ள வீரசிவனியமரபினர், இப் பெயரைப் பெரிதும் சூடிக்கொள்வர்.

நஞ்சுண்டை *nañjuṇḍai,* பெ. (n.), முள்மர வகை; (L.) compound corymbed yellow-flowered, resin-seed

[நஞ்சு + உண்டை.]

நஞ்சுண்டோன் *nañjuṇḍōṉ,* பெ. (n.), 1. சிவன்; Šivaṉ. "*நாதப்பறையன் பெருங்குயத்தி பங்கன்றுங்க நஞ்சுண்டோன்*" (திருவாலவா. 30:9). 2. கள்ளரில் ஒரு பிரிவினர்; (திருவாலவா. 30:3 விசேடவுரை.). a division of kaḷḷars

[நஞ்சு + உண்டோன்.]

நஞ்சுண்ணி *nañjuṇṇi,* பெ. (n.), நஞ்சுண்பவன்; one who has rendered his body immune to poison

[நஞ்சு + உண்ணி.]

நஞ்சுத்தடை *nañju-t-tadai,* பெ. (n.), 1. நஞ்சுக் கொடி வீழாதிருத்தல்; detention of placenta. 2. கருப்பை வலிவு குறைந்து, அதனால், நஞ்சைப்பிரித்து வெளியில் தள்ளப் போதுமான ஆற்றலில்லாமல், கருப்பையில் ஒட்டிக் கொண்டிருத்தல்; retention of after birth in the womb by adhering to its walls in consequence of insufficient power to separate and expel it especially when the womb is weakened.

[நஞ்சு + தடை.]

நஞ்சுத்தன்மை *nañju-t-tanmai,* பெ. (n.), நச்சுத்தன்மை; having the nature of a poison.

[நஞ்சு + தன்மை.]

நஞ்சுநூல் *nañju-nūl,* பெ. (n.), நஞ்சுத்தன்மையையும், அதை முறித்து பண்டுவம் செய்யும் முறையையும், கூறும் நூல்; a book an toxicology.

[நஞ்சு + நூல்.]

இந் நூல், நஞ்சுமுறிவின் வழிவகைகளைச் சித்தர்பாடலுடன் விளக்கும் தன்மைத்து. உடம்பிற்குரிய பயறு, பழம், கிழங்கு வகைகளைக் கூறும் நூல். அளவுக்கு மீறிய உணவினால், உடம்பில் உருவாகும் நச்சுத்தன்மைகளையும், அவற்றை அகற்றும்வழி வகைகளையும் விளக்கும் நூல்.

நஞ்சுப்பாலை *nañju-p-pālai,* பெ. (n.), 1. கழுதைப்பாலை அல்லது நாய்ப்பாலை; an antidote for poison. 2. *நச்சறுப்பான்* பார்க்க; see *naccaṟuppāṉ.*

[நஞ்சு + பாலை.]

நஞ்சுபாய்ச்சு-தல் *nañju-pāyccu-,* 5.செ. குன்றாவி. (v.t.), 1. *நஞ்சூட்டு (யாழ். அக.)* பார்க்க; see *nañjūṭṭu.* 2. இரண்டகம் செய்தல் ஏமாற்றுதல்; to defraud.

[நஞ்சு + பாய்ச்சு-.]

நஞ்சுபிடித்தம் *nañju-piḍittam,* பெ. (n.), நஞ்சுக்கொடி தங்குதலால் உண்டாகும் நோய் (இங் . வை. 418.); retention of the placenta.

[நஞ்சு + பிடித்தம்]

நஞ்சுமாற்றுமருந்து *nañju-māṟṟu-marundu,* பெ. (n.), நச்சுத்தன்மையை முறிக்கும் மருந்து; an antidote especially as a cure of poison

[நஞ்சு + மாற்று + மருந்து.]

நஞ்சுமுறி *nañju-muṟi,* பெ. (n.), மணிக்குடல்; the fold of peritonium which attaches the intestines to the posterior wall of abdomen.

[நஞ்சு + முறி.]

நஞ்சுமுறிச்சான்[1] *nañju-muṟiccāṉ,* பெ. (n.), 1. நஞ்சறுப்பான் செடி; country ipecacuanha 2. அவுரி; dog bite shurb dyer's indigo.

[நஞ்சு + முறித்தான்→முறிச்சான்.]

நஞ்சுமுறிச்சான்[2] *nañju-muṟiccāṉ,* பெ. (n.), *நஞ்சறப்பாய்ந்தான்* பார்க்க; see *nañjaṟa-p-pāyndāṉ.*

நஞ்சுவிழாமை *nañju-viḻāmai,* பெ. (n.). நஞ்சுக்கொடி விழாதிருக்கை; retention of placenta.

[நஞ்சு + விழாமை.]

நஞ்சுவிழியரவு *nañju-viḻi-y-aravu,* பெ. (n.), பார்வையாலேயே நஞ்சு செலுத்திக் கொல்வதாகக் கருதப்படும் பாம்பு வகை; திட்டிவிடம்; a kind of poisonous serpent. "*நஞ்சுவிழி யரவி னல்லுயிர் வாங்கி*" (மணிமே. 23. 84).

[நஞ்சு + விழி + அரவு.]

நஞ்சுவெளிப்படு–த்தல் *nañju-veḷippaḍu-,* 5.செ. குன்றாவி. (v.t.), கருப்பையிலிருந்து நஞ்சை வெளிவாங்கல்; to expel the placenta (afterbirth) with the aid of medicine or manipulation.

[நஞ்சு + வெளிப்படு–.]

நஞ்சுறு–தல் *nañjuṟu-,* 20 செ. கு. வி. (v.i.), மனமுருகுதல்; to melt; as heart through love. "*நஞ்சுற்ற காம நன்நாகரிகந் துய்த்தவாறும்*" (சீவக. 11).

மறுவ. நெஞ்சுருகல்.

[நைந்து → நைஞ்சு → நஞ்சு + உறு–.]

மனம், அன்பு மிகுதியால் நைந்து, உருகுந் தன்மைக் குறிக்கும்.

நஞ்சுறை *nañjuṟai,* பெ. (n.), 1. நஞ்சு கலந்த மருந்து; a medicine prepared with poison, as one of the ingredients. 2. நஞ்சையே மருந்தாகப் பயன்படுத்தல்; using a poison as a remedy. 3. நச்சுக்கனிமம்; mineral poison.

[நஞ்சு + உறை.]

நீர்மநஞ்சு உறைந்த நிலையைக் குறிக்கும்.

நஞ்சூட்டு–தல் *nañjūṭṭu-,* 5 செ.குன்றாவி. (V.t.), 1. படைக்கருவி முதலியவற்றுக்கு நச்சுத்தன்மை ஏற்றுதல்; to imbue with poison, as a weapon. 2. நஞ்சு கலந்து கொடுத்தல்; to administer poison. "*நஞ்சூட்டு மெனவுரைப்ப*" (பெரியபு. திருநாவுக். 103).

[நஞ்சு + ஊட்டு–.]

நஞ்செடு–த்தல் *nañjeḍu-,* 5.செ. கு. வி. (v.i.), நஞ்சுமுறித்தல்; to neutralize the effects of poison.

[நஞ்சு + எடு–.]

திண்மம் ஆக இருந்த நஞ்சை எடுத்து நலப்படுத்தல் அல்லது பக்குவமாக்குதல்.

நஞ்சை *nañjai,* பெ. (n.), *நன்செய்* பார்க்க; see *nanšey.*

[நன்செய் → நஞ்சை]

ஒ.நோ புன்செய் → புஞ்சை

நஞ்சையன்வெட்டு *nañjaiyaṉ-veṭṭu,* பெ. (n), நாணயவகை (பணவிடு.144); an ancient coin

நஞ்சொட்டி *nañjoṭṭi,* பெ. (n), மூலிகைச் செடிவகையுளொன்று(குருகூர்ப்.45); a kind of shrub.

[நஞ்சு + ஒட்டி.]

நஞ்சொழி–த்தல் *nañjōḻi-,* 4.செ. கு. வி. (v.i.), நஞ்சை நீக்குதல்; removing poison from the body.

[நஞ்சு + ஒழி–.]

நஞ்சொளி–த்தல் *nañjoḷi-,* 4.செ. குன்றாவி. (v.t.), நஞ்சுக்கொடி வெளிப்படாதிருத்தல்; the non appearance of the after birth subsequent to child birth concealment of after birth in the womb

[நஞ்சு + ஒளி–.]

நட்சை *natšai,* பெ. (n) தணக்கு மரம்; Catamaran tree.

நட்டக்குத்தாக *natta-k-kuttāga,* வி. எ. (adv.), செங்குத்தாக(நெல்லை); perpen dicular steply.

மறுவ. நெட்டுக்குத்தாக.

நட்டகண் *natta-kaṇ,* பெ. (n.), கண் இமைக்காதும், கருவிழி அசையாதும் இருக்கும் நிலை; eye that remains still without winking that has no reflex action.

நட்டச்சாரி மூலி *natta-c-cāri-mūli,* பெ. (n.), நாய்வேளை; dog-cleome.

நட்டச்சாருதம் *natta-c-cārudam,* பெ. (n.), கட்டுக்காடை; indian-roller.

நட்டணம் *nattaṇam,* பெ. (n.), *நட்டணை* பார்க்க; see *nattaṇai.*

[நடு + அணம்.]

'அணம்'=சொல்லாக்கஈறு.

ஒ.நோ. பட்டணம்.

நட்டணை[1] *nattaṇai,* பெ. (n.), 1. கூத்து (திவா.); dancing. 2. கோமாளிக் கூத்து; mimic gestures in a dance buffoonery. 3. கணவன், மனைவி இருவருள் ஒற்றுமையின்மை (வின்.); difference of opinion between husband and wife. 4. நடிப்பு; imitative action.'*நட்டணையதாக் கற்றகல்வியும்*' (தாயு. கருணாகர.4). 5. கொடுமை (யாழ். அக.); cruelty.

க. *நடணா.*

[நடி→நடம்→நட்டம்→நட்டணை.]

ஒ.நோ. தண்டம்→தண்டனை.

நட்டணை[2] *nattaṇai,* பெ. (n.), 1. சிந்தனையின்மை; recklessness, rashness. 2. பொறுக்குந் தன்மையின்மை; fastidiousness, squeamishness

[நட்டு + அணை.]

அறியாமையை நட்டுவைத்துப் பிறரை அணைபோல் தடுத்து எண்ணுதல்.

நட்டணைக்காரன் *nattaṇai-k-kāraṉ,* பெ. (n.), ஆணவமிக்கவன்; insolent, overbearing man.

[நட்டு + அணை + காரன்.]

தன்னைமுன் நட்டு (முன்னிறுத்தி), பிறரை அணைபோல் தடுத்துநிறுத்தி முனைப்போடு இயங்குபவன். பிறர் வளர்ச்சிக்கு தடையாயிருப்பவன்.

நட்டணைக்கால் *nattaṇai-k-kāl,* பெ. (n.), ஒற்றைக்காலை நிலத்தில் ஊன்றி, மற்றைக்காலைக் குறுக்காக, அக்காலின்மேல் ஊன்றுகை; keeping one leg crossed on the other-cross legged.

மறுவ. *அட்டணைக்கால்.*

[நட்டணை + கால்.]

நட்டநடு *natta-nadu,* பெ. (n.), சரியான நடுவம்; the very centre, middle. "*நட்ட நடுவேயிருந்த நாமென்பார்*" (தாயு. பரி.பூரண. 6).

தெ. நட்டநடுவு.

மறுவ. நடுவான நடு.

[நட்டு → நட்ட + நடு.]

இது மீமிசைச்சொல்.

நட்டநடுநாள் *natta-nadu-nāl*, பெ. (n.), உரியகாலம்; the due, appointed time "*அவளுக்குத் தூரத்துக்கு நட்ட நடுநாள்*" (இ. வ.).

மறுவ. ஏற்றபொழுது.

[நட்ட + நடு + நாள்.]

நட்டநடுப்பெற *nattanadu-p-pera*, வி. எ. (adv.). **1.** சரியான நடுவில்; in the exact middle. **2.** ஒழுங்கற்ற, மதிப்பின்றி; improperly **3.** பொதுமக்களின் எண்ணத்தைக் கருதாது; in open disregard of public opinion

[நட்ட + நடு + பெற.]

இதனை இலக்கண வழக்கில் ஒருபொருட்பன்மொழி என்பர்.

நட்டபாடை *natta-pādai*, பெ. (n.), குறிஞ்சிப் பண்வகை (பிங்.); a melody-type of the kuriñji class

[நடம் → நட்டம் + skt பாஷை→பாடை.]

நட்டபீசம் *natta-pišam*, பெ. (n.), ஒளிநீர் (விந்து) ஊறாத நிலை; destitute of seminal secretion-Impotent.

நட்டம்[1] *nattam*, பெ. (n.), **1.** நேர்நிலை; erectness, uprightness, perpendicularity "*தூணை நட்டமாய் நிறுத்து*" (வின்.). **2.** (கோவண) நீர்ச்சீலை மட்டும்கட்டிக் கொண்டு, ஆடையின்றி இருக்கை; semi-nakedness **3.** அம்மணம்; nakedness **4.** வெந்நீர்; hot-water.

[நடு → நட்டு + அம்.]

நட்டம்[2] *nattam*, பெ. (n.), நடனம்; dance, dancing. "*நள்ளிருளில் நட்டம்பயின் றாடுநாதனே*" (திருவாச. 1;89).

த. நட்டம் → **வ.** ந்ருத்., Pkt. நட்ட.

ஒ.நோ. படம் → பட்டம் = துணி.

அகத்தெழும் உணர்வுகளை மெய்ப் பாடுகள் மூலம்வெளிப்படுத்துவதே, நட்டம்.

[நடி → நடம் → நட்டம்.]

நட்டமாடி *nattam-ādi*, பெ. (n.), *நடவரசன்* பார்க்க; see *nadavarašan*

மறுவ. ஆடவல்லான்.

[நட்டம் + ஆடி.]

நட்டமாய்நில்–தல் *nattamāy-nil-*, 14. செ.கு.வி. (v.i.), **1.** செங்குத்தாக நிற்றல்; stand perpendicularly. 2. அடங்கா திருத்தல் (இ.வ.); to be haughty, headstrong

[நட்டம் + ஆய் + நிற்றல்.]

நட்டமின் *natta-min*, பெ. (n.), கள்ளி; indian spurge.

நட்டமுட்டிசிந்தனை *nattamutti-šindanai*, பெ. (n.). ஒளித்து வைத்த பொருளையும் நினைத்த பொருளையும் பற்றிக் கணியர் கணித்துக் கூறுகை; divination by a soothsayer about things lost, hidden or thought of. "*பாரினில் நட்ட முட்டிசிந்தனை பகரவேண்டில்*" (சூடா. உள். 302.).

நட்டராகம் *natta-rāgam*, பெ. (n.). குறிஞ்சிப்பண்; melody-type of the kuriñji class.

[நட்டம் + skt. ராகம்.]

நட்டரிசியன்னம் *nattariši-y-annam,* பெ. (n.), பாதிவெந்த சோறு; haff-cooked rice.

மறுவ. நலுக்கரிசிக் சோறு.

நட்டவக்காணி *nattava-k-kāni,* பெ. (n), நாட்டியம் பயிற்றுவிக்கும் நட்டுவனார்க்கு அரசு அளிக்கும் இறையிலி நிலம்; (S.I.I.v,232); grand of tax free land sanctioned by king to dance faculty

[நட்டுவம் → நட்டவம் + காணி.]

நட்டவம் *nattavam,* பெ. (n.), *நட்டுவம்* பார்க்க; see *nattuvam.* "*நட்டவஞ் செய்ய நட்டவம் ஒன்றுக்கு......... பங்கு*" (S.I.I ii. 274).

மறுவ. நடனம்.

[நட்டு + அம் = நட்டுவம் > நட்டவம்.]

"*அம்*"-பெருமைப்பொருட்பின்னொட்டு.

நட்டவர் *nattavar,* பெ. (n.), நண்பர்; friendship "*நட்டவரி கலின்றித் தம்மின் மல்லு வெஞ்சமரிழைப்பவும்*" (திருவிளை.எல்லாம்11).

[நள் → நள் + து–நட்டு → நட்டவர்.]

நட்டழிவு *nattalivu,* பெ. (n.), நாற்று நட்டபிறகு, பயிரிலுண்டாகும் சிதைவு; damage to the crop after transplantation.

[நடு → நட்டு + அழிவு.]

நட்டபின் அழிவுற்ற நாற்றுப் பயிரைக் குறித்ததால் தொகுத்தல் திரிபாகும்.

நட்டாத்திசூத்திரம் *nattatti - šuttiram,* பெ. (n), கொள்ளைப் பொருள்; (யாழ்.அக.) booty

[நட்டு + ஆற்றி + சூத்திரம்.]

நிலையாக நட்டுவைத்திருக்கும் பொருளைப் போகிற போக்கில், கொள்ளையடித்துக் கட்டிச் செல்லுதல்.

நட்டாமட்டி *nattāmatti,* பெ. (n.), *நட்டா முட்டி'* (யாழ்.அக.) பார்க்க; see *natta-mutti'*

[நட்டாமுட்டி → நட்டாமட்டி.]

நட்டாமுட்டி[1] *nattā-mūtti,* பெ. (n) 1. நடுத்தரமானது (யாழ். அக.): anything ordinary. middling. 2. கீழ்மை (வின்.): vulgarity.

ம. நட்டாமுட்டி.

[நட்டு + ஆம் + முட்டி.]

நட்ட நடுவில் முட்டிநிற்கும் தன்மையைக் குறித்த சொல்லாக இருக்கலாம்.

நட்டாமுட்டி[2] *nattā-mutti,* பெ. (n.), 1. ஏய்ப்பு; இரண்டகம்; fraud பொருள்களை நட்டா முட்டியாய்க் கொண்டுபோய் விட்டான். (உ. வ.). 2. ஒரு நூல் (யாழ். அக.); a treatise

[நட்டாம் + முட்டி.]

நட்டாமுட்டிகள் *nattā - muttigal,* பெ. (n.), அறியாப் பொதுமக்கள்; common. vulgar people.

[நட்டாம் + முட்டி + கள்.]

'*கள்*' = பலர் பாலீறு. நடுவுநிலையின்றி ஒருகொள்கையில் குருட்டுப் பற்றோடு முட்டி மோதிக் கொள்ளும், பொதுநிலை மாந்தர்.

நட்டாமுட்டிமருந்து *nattā mutti-marundu,* பெ. (n.), மருத்துவர் துணையின்றி பட்டறிவின் விளைவாகச் செய்யப்படும், கைமருந்து; (இ.வ). medicine prepared not by physicians but by experienced old people.

[நட்டாமுட்டி + மருந்து.]

நடுதல் இன்றி, முட்டிப்படுமாறு இயங்கும் நிலைத்தன்மை இன்மையைக் குறிக்க முன்னொட்டாக வருமிச்சொல், ஈண்டு மருந்துக்கு ஆகி வந்தமை அறிக.

நட்டாமுட்டியாக *naṭṭāmuṭṭi-y-āga,* வி. எ. (adv.), அந்த நேரத்திற்குரிய; for the time being. இஃது இப்பொழுது நட்டாமுட்டியாக இருக்கட்டும். (இ. வ.).

[நட்டாமுட்டி + ஆக.]

நட்டாமுட்டிவேலை *naṭṭāmuṭṭi-vēlai,* பெ. (n.), சில்லரை வேலை (நாஞ்.); minor-work.

[நட்டாமுட்டி + வேலை.]

நட்டார் *naṭṭār,* பெ. (n.), 1. உற்றார்; relations. 2. நண்பர்; friends. "*நட்டாருடையான்*" (இனி. நாற். 39).

[நள்→நடு → நட்டார்.]

நட்டாற்றில்விடு-தல் *naṭṭāṟṟil-viḍu-,* 18.செ. குன்றாவி. (v.t.), 1. இடர்வரும்போது கைவிட்டுப் போதல்; to desert a person at a critical moment. 2. ஆற்றின் நடுவில் விட்டு விடுதல்; to leave in the middle of a river.

[நடு + ஆற்றில் + விடு-.]

நட்டு[1] *naṭṭu,* பெ. (n.), உப்புக் கொட்டி வைக்கும் மேடை; (c.g.) platform for the storage of salt.

தெ. நட்டு.

[நள் → நட்டு = செங்குத்து.]

நட்டு[2] *naṭṭu,* பெ. (n.), 1. நாட்டியம் (யாழ். அக.); dance. 2. நாட்டியக்காரன் (வின்.); dancer. 3. *நட்டுவன்* பார்க்க; see *naṭṭuvaṉ.* 4. கீழ்மை (யாழ்ப்.); lowness, baseness, inferiority.

[நள் → நடு → நாட்டு → நட்டு.]

நட்டு[3] *naṭṭu,* பெ. (n.), சரியான நடுவம்; exact middle.

மறுவ. நட்டநடு.

[நடு → நட்டு.]

நட்டுக்கதை *naṭṭu-k-kadai,* பெ. (n.), 1. கட்டுக்கதை (யாழ். அக.); fable. 2. நிந்தை மொழி (வின்.); scoffing, sarcasm, scornful, remark.

[நாட்டு → நட்டு + கதை.]

நட்டுக்குநடுவே *naṭṭukku-naḍuvē,* வி. எ. (adv.), மிக நடுவில் (யாழ். அக.); exactly in the middle.

[நடு → நட்டு.]

நட்டுக்கொள்ளல் *naṭṭu-k-koḷḷal,* பெ. (n.), கயிற்றில் கழுத்தை கட்டித் தொங்கித் தற்கொலை செய்து கொள்ளுதல்; to commit suicide by hanging.

மறுவ. நான்று கொள்ளல்.

[நட்டு + கொள்ளல்.]

நாணிட்டுக்கொள்ளுதல், ஞான்று கொள்ளுதல் என்று, மக்களிடையே தற்கொலை குறித்து வழக்கூன்றிய சொல்.

நட்டுச்சி *naṭṭucci,* பெ. (n.), உச்சிப்பொழுது (இ. வ.); the time of the day when the sun is exactly at the zenith.

மறுவ. நண்பகல்.

[நடு + உச்சி.]

நட்டுச்சினை *naṭṭu-c-ciṉai,* பெ. (n.), நண்டு முட்டை (யாழ். அக.); crab's egg.

[நண்டு → நட்டு.]

நட்டுச்சினைக்கல் *naṭṭu-c-ciṉai-k-kal,* பெ. (n.), நீரூற்றின் மிகுதியைக் குறிப்பதும், நண்டு முட்டையின் நிறமுடையதுமான கிணற்றுக் கல்வகை (யாழ். அக.); a kind of stone, at the bottom of wells, of the colour of crab's spawn, supposed to indicate a good supply of water.

[நண்டுச்சினை + கல் → நட்டுச்சினைக்கல்.]

நண்டு → நட்டு = வலித்தல் திரிபு.

நட்டுச்சினைமண் *naṭṭu-c-ciṉai-maṇ,* பெ. (n.), நண்டுமுட்டை நிறமுள்ள மண் (வின்.); a kind of earth of the colour of crab's spawn.

[நண்டு + சினை + மண்.]

நட்டுத்துரவு *naṭṭu-t-turavu,* பெ. (n.), நடனம் பயிலுமிடம்; the practicing place of dance.

மறுவ. நட்டத்துரவு.

[நட்டு + துரவு.]

துரவு = பரந்த இடம்.

ஒ.நோ. தோட்டந் துரவு.

நாட்டியம் பயிலும் பொருட்டு, அப்பயிற்சி நிகழுவதற்காக அமைக்கப்பட்ட தனியிடம்.

நட்டுநடு *naṭṭu-naḍu,* பெ. (n.), *நட்டுக்கு நடுவே (இ.வ)* பார்க்க; see *naṭṭukku naḍuvē.*

[நட்டநடு → நட்டுநடு.]

நட்டுப்பாழ் *naṭṭu-p-pāḻ,* பெ. (n.), நாற்று நட்டு விளையாமற் போன பயிர் (S.I.I. vii, 279); crop which become withered after transplantation.

[நடு → நட்டு + பாழ்.]

நாற்று நட்டபின்பு, நீர் இன்றியோ, மழைபொய்த்தோ, அல்லது பருவந்தவறிப் பெய்தோ, நோய்வாய்ப்பட்டோ, பாழான, நடவுப்பயிர்.

நட்டுமுட்டு *naṭṭu-muṭṭu,* பெ. (n.), 1. ஆடல் பாடல் (வின்.); music and dancing. 2. மத்தளக்காரனும், தாளக்காரனும் (இ. வ.); hand-drummer and cymbalist. 3. நடனத்துக்குரிய தளவாடப் பொருள்கள் (யாழ். அக.); accessories necessary to the art of dancing.

[நடு + முட்டு.]

நட்டு = நாட்டியம் பற்றிய சொல்.

முட்டு= தாளம், தாளக்கருவி பற்றியது.

நட்டுமுட்டுக்காரர் *naṭṭu-muṭṭu-k-kārar,* பெ. (n.), நட்டுவ மேளக்காரர்; dancing masters and drummers.

[நட்டு + முட்டு + காரர்.]

முட்டு=இங்கு மேளம் என்ற பொருளில் வந்தது காண்க. கையால் முட்டி ஒலி எழுப்புதல் பற்றியது.

"காரர்" உடைமைப் பெயரீறு.

நட்டுவக்கலைக்கூடம் *naṭṭuva-k-kalai-k-kūḍam,* பெ. (n.), நடனம்பயிலும் மாணவர்க்குரிய பயிற்சிக்கூடம்; practising hall of learners of dance.

[நட்டுவம் + கலைக்கூடம்.]

நட்டுவக்காலி *naṭṭva-k-kāli,* பெ. (n.), *நட்டுவாய்க்காலி* பார்க்க; see *naṭṭu-vāy-k-kāli.*

[நட்டுவம் + கால் + இ.]

"இ"=சொல்லாக்க ஈறு.

ஒ.நோ. நாற்காலி.
நாட்டியம் ஆடுவது போலக் கால்களை நட்டு நடக்கும், இயல்புடைய உயிரி.

நட்டுவத்துரவு[1] *naṭṭuva-t-turavu,* பெ. (n.), *நட்டுவக் கலைக்கூடம்* பார்க்க; see *naṭṭuva-k-kalai-k-kūḍam.*

[நட்டுவம் + துரவு.]

துரவு = பயிலுமிடம்.

ஒ.நோ. தோட்டந்துரவு.

நட்டுவத்துரவு[2] *naṭṭuva-t-turavu,* பெ. (n), நட்டுவத்தொழில் (M.E.R 390 of 1916); the profession of training girls in dancing.

[நட்டுவன் + துரவு]

துரவு என்று, நாட்டியம் பயிலிடத்தைக் குறித்த இச்சொல், நாட்டியத் தொழிலுக்கும் ஆகிவந்தது.

நட்டுவம் *naṭṭuvam,* பெ. (n.), நாட்டியம் கற்பிக்கும் தொழில்; the profession of training dancing girls and directing their dancing.

மறுவ. நட்டவம், நடனம்.

த. நட்டுவம் → skt naṭa-tva.

தெ. நட்டுவ.

[நடு → நட்டு + அம்.]

'அம்' = சொல்லாக்க ஈறு.

நாட்டியம் பயிலும் மாணவர்கட்கு, அக் கலையினைப் பயிற்றுவிக்கும் கலைத்தொழில்.

நட்டுவழியாள் *naṭṭu-vaḻiyāḷ,* பெ. (n.), நன்னாரி; Indian-sarasaparilla.

நட்டுவன் *naṭṭuvaṉ,* பெ. (n.), நாட்டிய ஆசிரியன்; one who instructs dancing "*உயிரையெல்லா, மாட்டுமொரு நட்டுவனெம் மண்ணல்*" (திருவாத. பு. புத்தரை. 75).

க., நட்டுவ., தெ., நட்டுவுடு., ம. நட்டுவன்.

[நாள் → நடு → நாட்டு →நட்டு + அன்.]

நட்டுவாக்காலி *naṭṭuvākkāli,* பெ. (n.), *நாட்டுவாய்க்காலி* பார்க்க; see *naṭṭuvāy-k-kālai.*

நட்டுவாக்கிளி *naṭṭuvākkiḷi,* பெ. (n.), *நட்டுவாய்க்காலி* பார்க்க; see *naṭṭuvā-k-kali*

நட்டுவாங்கம் *naṭṭu-vāṅgam,* பெ. (n), *நட்டுவம்* பார்க்க; see *naṭṭuvam.*

நட்டுவாய்க்காலி *naṭṭuvāy-k-kāli,* பெ. (n.), கல்விக் கொட்டுந் தன்மையுள்ள நச்சுயிரி; scorpion of a larger kind.

ம. நட்யகாலி.
நண்டு போன்ற வாயையும், காலையும் கொண்டது.



நட்டுவாற்காலி *nattuvār-kāli,* பெ. (n.), *நட்டுவாய்க்காலி* பார்க்க; see *nattuvāy-k-kāli.*

நட்டுவிழல் *nattu-viḻal,* பெ. (n.), 1. மெய்க்குற்றமைந்தனுள் தலைச் சாய்கை (பிங்); slanting position of the head, one of five mey-k-kurram. 2. தலை கீழேயூன்றி விழுகை (யாழ். அக.); standing on the head and tumbling, performing somersault.

[நட்டு + விழல்.]

பெருமிதமும், செம்மாப்பும் ஒருசேர இணைந்து நேர்மையின் சின்னமாய் நட்டுத் திகழ்ந்த தலை, மானக்கேட்டின் மிகுதியால், சாய்ந்து விழுகை.

நட்டுவிழு—தல் *nattu-viḻu-,* 2.செ. கு. வி. (v.i.), செருக்குறுதல்; to be haughty '*ஏன் வீணாக நட்டு விழுகிறாய்*' (உ. வ.).

[நட்டு + விழு—.]

நட்டுவை—த்தல் *nattu-vai-,* 4.செ. குன்றாவி. (v.t.), 1. மரக்கன்று முதலியவற்றை நடுதல்; to plant, as saplings. 2. குடும்பம் முதலிய வற்றை நிலைநிறுத்துதல்(வின்); to establish, as a family.

[நட்டு + வை—.]

நட்டுவைத்தவன் *nattu-vāittavan,* பெ. (n.), 1. மரக்கன்று முதலியவற்றை நட்டு வைத்தவர்; one who planted as saphings. 2. காப்பாளன்; protector, guardian.

[நட்டு + வைத்தவன்.]

நட்டுவைத்தெலும்பு *nattuvaittelumbu,* பெ. (n.), தொடைப்பக்கத்து எலும்பு; thigh bone, femur.

[நட்டு + வைத்த + எலும்பு.]

நட்டெலும்பு *nattelumbu,* பெ. (n.), முதுகெலும்பு (நெல்லை); back-bone

க. நட்டெலும்பு.

[நடு → நட்டு + எலும்பு.]

நட்டோட்டுக்கிட்டம் *nattōttu-k-kittam,* பெ. (n.), சேற்றின்மேல் உலர்ந்திருக்கும் மண்பொறுக்கு (வின்); crust or coat of dry mud formed over a brackish of moist soil.

[நட்டோடு + கிட்டம்.]

நட்டோட்டுப்பார் *nattōttu-p-pār,* பெ. (n.), எளிதில் பெயர்ந்துவரும் பாறைத் தகடு; thin coat or lamina of rock that easily splits off

[நட்டோடு + பார்.]

நட்டோடு *nattōdu,* பெ. (n.), நண்டின் மேலோடு (வின்.); lobster shell.

[நண்டு + ஓடு.]

நட்டோர் *naṭṭōr,* பெ. (n.), 1. நண்பர்; friends. "*நட்டோர்க்கல்லது கண்ணஞ்சலையே*" (பதிற்றுப். 63.3). "*முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சு முண்பர் நனிநாகரிகர்*" (நற்றிணை). 2. உறவினர்; (திவா.) relation.

[நள்→நட்டு + ஓர்.]

நட்பத்திரிகை *naṭpattirigai,* பெ. (n.), சேம்பு; Indian-kales.

நட்பாட்டம் *naṭpāṭṭam,* பெ. (n.), அன்பு வளர்க்கும் பான்மையிலாடும் ஆட்டம்; friendly match

[நண்பு → நட்பு + ஆட்டம்.]

நட்பாடல் *naṭpāḍal,* பெ. (n.), நட்பு பாராட்டுதல்; befriending; "*நட்பாட றேற்றாதவர்*" (குறள், 187.).

[நட்பு + ஆளல் → ஆடல்.]

நட்பாராய்தல் *naṭpārāydal,* பெ. (n.), நட்புக்குரியரைத் தெரிவுசெய்யும் திறம்; scrutiny in the choice of friends. (குறள், அதி.80.).

[நட்பு + ஆராய்தல்.]

நட்பாராய்தல் என்பது யாதெனின், நட்பிற்குத் தகுந்தவரை ஆராய்ந்தறிதலாகும். "*மணவுறவு போன்று, நட்புறவும் வாழ்நாள் முழுதும் நீடிப்பதாகையாலும், மெய்ந்நட்பால் ஆக்கமும், தீ நட்பால் அழிவும், நேர்வதாலும், மலர்ந்த முகத்தையும், இனிய சொல்லையுமே சான்றாகக் கொண்டு, எவரையும் நம்பிவிடாமல், எல்லா வகையாலும் ஆராய்ந்து பார்த்து, உண்மையான அன்பரையே, நண்பராகக் கொள்ள வேண்டுமென்று கூறியவாறாம்*" என்று, மொழிஞாயிறு, நட்பாராய்தல் பற்றி நவிலுகிறார். (திருக்.தமி.மர.பக்.92).

நட்பாளர் *naṭpāḷar,* பெ. (n.), 1. உற்ற நண்பினர்; trustful friends. 2. அரசர்க்குறுதிச் சுற்றமைந்தனுள் நம்பிக்கைக்குரிய நட்பினராய் உள்ளவர் (திவா.); confidant of a king, one of five arašarkkuṟuti-c-cuṟṟam.

[நண்பு → நட்பு + ஆள் + அர்.]

நட்பிலூட்டல் *naṭpil-ūṭṭal,* தொ.பெ. (vbl n.), நோய்தீர்க்கும் மருந்தை உடலுக்குஏற்றவாறு தக்க பக்குவத்தில் தருதல்; taking a medicine with its appropriate way

[நட்பில் + ஊட்டல்.]

நட்பு¹ *naṭpu,* பெ. (n.), 1. தோழமை; friends, amity. "*நட்பிடைக் குய்யம் வைத்தான்*" (சீவக. 253). 2. உயர்ந்த அரசருக்குரிய இன்றியமையாத ஆறு கூறுகளுள் ஒன்று; allies, one of six important aspects to king or Government "*படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்*" (குறள், 381.). 3. நண்பன்; friend. '*எனக்கவன் நட்பு*' (உ. வ.). 4. ஐவகைக் கோள் நிலையுள், நட்பைக்குறிக்குந் தன்மை; friendly aspect of a planet, one of five kōḷ-nilai. 5. உறவு (பிங்.); relationship, kinship 6. சுற்றம் (சூடா); relation, kindred 7. யாழின் நான்காம் நரம்பு; the fourth string of a lute. "*இணைகிளை பகை நட்பென்றிந் நான்கின்*" (சிலப். 8: 33). 8. கைக்கூலி (பரிதானம்) (வின்.); bribe. 9. மாற்றரசரோடு நட்புச்செய்கை (பு. வெ. 9.37, உரை). reconciliation with enemy kings. 10. காதல்; love. "*நின்னொடு மேய மடந்தை நட்பே*" (ஐங்குறு. 297).

மறுவ. கேண்மை.

க. நண்பு.

[நள் → நண் → நண்பு → நட்பு.]

நட்பின் இலக்கணத்தை வள்ளுவப் பெருந்தகையார் நான்கு அதிகாரங்களில் விளக்கிப் போந்துள்ளார். ஏனெனில் அறிவுநிலையும், பண்பாட்டு அமைவுநிலையும். பெரும்பகுதி, சேர்க்கையாலேயே செம்மைப்பட்டு அமைகின்றது. சேர்ந்த இடமே ஒருவனைச் சீரியவனாக்கும் என்பது மாறா உண்மையாகும். நட்பு என்பது முகத்தான் நகுவது மட்டுமன்று; அகஉணர்ச்சி ஒன்றுசேர அமைவதேயாகும். வெறும் விளையாட்டும், நகைகூடப் பேசுவதும், நட்பின் சின்னங்கள் ஆகா. நண்பன் துன்பத்தில் இருக்கும்போதும், உதவிகள் தேவையுற்றவனாக இருக்கும்போதும், உடுக்கை இழந்தவன் கைபோலச் சென்று, துன்பத்தைக் களைந்து உதவுபவனே, சிறந்த நண்பன் ஆவான். நட்பின் உயர்நிலை யாதென்றால், என்றும் மாறாது சென்று, நண்பனுக்கு உதவுதலே யாகும். '*A friend in need is a friend indeed*, என்ற ஆங்கில முதுமொழியும், இதை வலியுறுத்தல் காண்க.

நண்பன் தீயவழிகளில் செல்லுங்கால் அவ்வழி நீக்கி, நல்லாற்றில் போக்கி, அவனின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு செல்லுதல் வேண்டும். நட்புக் கைக்கோடல் முகநக நகுதற்கன்று. மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற்கேயாம். இக் கருத்துக்களை விளக்கும் குறட்பாக்கள்:

"*முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்*
தகநக நட்பது நட்பு." – (குறள், 786.)

"*உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே*
யிடுக்கண் களைவதாம் நட்பு."–(குறள், 788.).

"*நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி*
யொல்லும்வா யூன்று நிலை." –(குறள், 789.).

"*அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க*
ணல்ல லுழப்பதாம் நட்பு.'–(குறள், 787.).

"*நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்*
மேற்சென் றிடித்தற் பொருட்டு." –(குறள், 784.).

"*புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்*
நட்பாங் கிழமை தரும்." –(குறள், 785.).

எனவே நட்பின் உண்மை இலக்கணம் புணர்ந்து பழகுதல் அன்று; உணர்வு ஒன்றிய நிலையே என்பது போதரும். மேற்கூறிய அனைத்தையும் நோக்குங்கால், '*உள்ளச்செறிவே*' நட்பின் இலக்கணம் என்பது வெள்ளிடைமலை என இலங்கும்.

நட்பின் இலக்கணத்தை வரையப்புகுந்த உலகப்புகழ் நாடகமேதை, ஆங்கிலப் பெரும்புலவர் செகப்பியரும் (Shakespeare), தாம் எழுதிய '*Friendship*' என்ற பாடலில், மேற்கூறிய கருத்தை உள்ளடக்கியே வரைந்துள்ளார். அவரும் உள்ளச்செறிவே நட்பின் இலக்கணம் என்பதை உய்த்துணர வைத்துள்ளார். அவர்,

Everyone that flatters thee
Is no friend in missary

....

He that is thy friend indeed,
He will help thee in thy need
If thou sorow he will weep
If thou wake he cannot sleep
Thus of every grief in heart
He with thee doth bear a part

எனக் கூறுகின்றார். இவ்விரு பெரும்புலவர்களின் கூற்றுகளால், நட்பின் இலக்கணம் உள்ளச் செறிவே என்பது பெறப்படும். '*The union of two hearts is friendship*' என்று ஆங்கிலவாணர்கள் மொழிதலையும் நோக்குக.

எனவே நட்பின் உண்மை இலக் கணமாகிய (உள்ளச்) செறிவு என்பதை, நட்பு என்ற சொல்லின் அடிச்சொல் எவ்வாறு உணர்த்துகின்றது என்பதை நோக்குவோம்.

நள்–நண்–நண்பு–நட்பு.

இவ்வாறே நட்டல், நட்டார், நண்ணல், நணுகல், நணுகுதல், நண்ணுநர், நண்பன்,

நண்ணலர், நண்ணார், நணுகலர், நணுகார் என்ற இத்தனை சொற்களுக்கும், '*நள்*' என்பதே அடிச்சொல்லாகும். இவை யாவும் '*செறிவு*' என்ற பொருளை உணர்த்தி நிற்கும் வேர்ச்சொல்லாம். '*நள்*' என்பதின் திரிபுற்றப் பொருளை உணர்த்துவனவாகும்.

'*நள்*' என்பதற்குச் '*செறிவு*' என்பது பொருளாகும். அதுவே '*நளி*' என உரிச்சொல்லாய், இகரம் பெற்று நின்றது. நளி என்ற உரிச்சொல்லும், '*செறிவு*' என்ற பொருளை உணர்த்தும்.

"*நளிஎன் கிளவி செறிவுமாகும்.*"–(தொல். சொல். 323.).

இலக்கியங்களிலும், பல இடங்களில் செறிவு என்ற பொருளிலேயே, '*நள்*' என்பதும், '*நளி*' என்பதும், பயன்படுத்தப்பட்டுள்ளன.

"*நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந் தினிதடங் கினரே மாக்கள்........*" –(குறுந்.9.).

"*........உலகம்*

கயங்கள் அற்ற பைதறுகாலைப் பீளொடு திரங்கிய நெல்லிற்கு நள்ளென் யாமத்து மழைபொழிந் தாங்கே." – (நற்.22.)

"*கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியில் வெள்ளியம் பலத்து நள்ளிருட் கிடந்தன.*"–(சிலம்பு-பதிகம், 30–35.).

"*நரன்றுயிர்த்த நித்தில நள்ளிருள்கால் சீக்கும் வர்ன் றுயிர்த்த பாக்கத்து வந்து.*" – (திணைமா. நூ 39.).

"*நளியிரு முந்நீர் நாவாயோட்டி வளிதொழி லாண்ட உரவோன் மருக.*" –(புறநா. 99.).

"*நளியிருஞ் சோலை நரந்தந் தாஅய்.*" – (பரிபாட, 7–11.).

"*நளியிரு முந்நீர்நலம்பல தரூஉம்.*"– (மணிமே.1:92.).

"*சிலைப்புவல் ஏேற்றின் றலைக்கை தந்துநீ நளிந்தனை வருத லுற்றனளாகி.*" – (பதிற்று.52.).

பிறமொழிச்சொற்கள்: இவ்வாறே பிறமொழிச் சொற்களைப் பிரித்து நோக்குவோம்.

English - Friendship,

Anglo - Saxon - (fri-freo) - freon - to love (freond - friendship)

Gothic - (frieis) - frijou - to love (frijouds)

Dutch - (vry) - vrien - to love (vriend)

Icelandic - (fri) - frsen - to love (freendi)

German - (frei) - befreunden - to love (freund - friundschaft)

Latin - (amor-love) - aimere to love (Amitie - friendship)

Sanskrit - (pri) - priam - priam

ஈங்குக் காட்டப்பட்ட மொழிகளின் நட்பு என்ற பொருளை உணர்த்தும் சொற்களைக் காணுங்கால் அவை, '*Free*' என்ற பொருளைத் தரும் அடிச்சொல்லிலிருந்து தோன்றி வளர்ந்து '*அன்பு செய்*' '*to love*' என்ற பொருளில், செம்மையுற்றன என்பதும், விளக்கமுறும். எனவே இவை நட்பின் இலக்கணத்தை வரைந்துணர்ந்தும் அடிச்சொல்லிலிருந்து தோற்றமெடுத்தனவல்ல.

மேற்கூறியவைகளால் பிறமொழிச் சொற்களை நோக்கத் தமிழ்ச் சொல்லான '*நட்பு*' என்பது, உண்மை நட்பின் இலக்கணத்தை வரைந்துணர்த்தும், '*நள்*' என்பதை வேர்ச்சொல்லாகக் கொண்டுள்ளது என்பது, உள்ளங்கை நெல்லிக்கனி எனத் தெளிவுற்று விளங்கும். இத்தகு உயர்நிலையை நோக்குங்கால், கல்தோன்றி மண்தோன்றாக்

காலத்தே, முன்தோன்றி மூத்த குடியினராகிய தமிழ்மக்கள், நட்பின் ஆழம், இலக்கணம் ஆகிய இவைகளை அறிந்து, *'நட்பு'* என்று பெயரிட்டனர் என்பது விளக்கமுறுதலின், உள்ளத்தில் மகிழ்வுத்தேன் ஊற்றெடுக்கின்றது; தமிழ்த் தாயின் உயர்தனிச் செம்மைப்பாடு வீறுபெறச் செய்கின்றது. இவ்வாறு சொல்லின், உண்மைப் பொருளைச் செவ்வனே உணர்த்தவல்ல அடிச்சொற்களை உடைய சொற்கள் மிகப்பலவாம். இவற்றை எல்லாம் மற்ற மொழிகளோடு ஒப்பிட்டு ஆய்ந்து வெளிப்படுத்திடின், தமிழின் இனிமை, தனிமை, மேன்மை, செம்மை, தாய்மை ஆகிய இன்னோரன்ன பண்புகள் மிளிரும் என்பதில் ஐயப்பாடு சிறிதேனும் இன்றென்றறிக.

நட்பு² *naṭpu,* பெ. (n.), புணர்ச்சி; sexual union. "*நாமமருடலு நட்புந் தணப்பும்*" (பரிபா.20,108.).

[நள் → நண்பு → நட்பு.]

ஒரு பாலார் கொள்ளும் நட்பு, புறநட்பு என்றும், மறுபாலார் கொள்வது அகநட்பென்றும் உள்ளத்தால் செறிந்தவர், உடலால் பொருந்துவர்.

நட்புக்காட்டு-தல் *naṭpu-k-kāṭṭu-,* 5.செ. கு. வி. (v.i.), 1. தோழமை காட்டுதல்; to show friendliness 2. குழந்தைகட்குத் தின்பண்டம் உதவுதல்: to give bon-bons to children 3. கையூட்டுக் கொடுத்தல்; to be bribe

[நட்பு + காட்டு-.]

நட்புக்கொள்(ளு)-தல் *naṭpu-k-ko-ḷu-,* 10 செ.குன்றாவி. (v.i.), தோழமை கொள்ளுதல்; to have a friendship.

[நட்பு + கொள்-.]

நட்புக்கோள் *naṭpu-k-kōḷ,* பெ. (n.), இயைபான கோள் (யாழ். அக.); friendly - planet.

'உலகிற்கு மதிநட்புக்கோள் நாம் அறிந்த ஒன்றேயாம்' (உ.வ.)

[நட்பு + கோள்.]

நட்புச்சரக்கு *naṭpu-c-carakku,* பெ. (n.), நலம் நல்கும் சிறந்த மருந்து; friendly drugs

[நட்பு + சரக்கு.]

நட்புத்தானம் *naṭpu-t-tāṉam,* பெ. (n.), கோள்நிலைச் சிகரத்தில், (இராசியின்) ஓரையின் நட்பைக் குறிக்கும் வீடு (யாழ். அக.); the friendly house of a planet or Irāši, in a horoscopic diagram

[நட்பு + தானம்.]

நட்புத்திட்பு *naṭpu-t-tiṭpu,* பெ. (n.), நிலத்தின் திணிந்தத் தன்மை (இ.வ.); nature of soil, as good or bad

[நள் + பு → நட்பு; திள் = திண்மை. திள் + பு → திட்பு. நட்பு + திட்பு→நட்புத்திட்பு]
நிலத்தின் திண்மைத்தன்மை. மண் செறிந்த அல்லது அடர்ந்த திண்மையான நிலம். "மண்திணிந்த நிலன்" என்று, புறநானூறு 2-ஆம் பாடல் புகல்வது காண்க.

நட்புபாராட்டல் *naṭpu-pārāṭṭal,* பெ. (n.), *நட்புக்கொள்(ளு)-தல்* பார்க்க; see *naṭpu-k-koḷ(u)-.*

[நட்பு + பாராட்டல்.]

நட்புமருந்து *naṭpu-marundu,* பெ. (n.), நோயினை முழுமையாகப் போக்கும் மருந்து; principle medicine

[நட்பு + பாராட்டல்.]

நட்புவை—த்தல் *natpu-vai-*, 4செ.கு.வி. (vi), தோழமை கொள்ளுதல்; to cultivate friendship.

[நட்பு + வை—.]

நட்புரு *natpurū*, பெ. (n.), தோழமை உணர்வு மிக்கவன்; senstitive of friendship person

[நட்பு + உரு.]

நட்புறவு *natpuravu*, பெ. (n.), இருவர் அல்லது இரு நாடுகளுக்கு இடையில் மலரும் நல்லுறவு; amity or friendship between persons or countries. நாம் அண்டை நாட்டோடு நட்புறவுடனிருந்தால், எல்லைப்பகுதியில் மக்கள் தொல்லையின்றி வாழ்வர். (இக்.வ.).

மறுவ. நல்லுறவு.

[நட்பு + உறவு.]

நட்புறவு என்பது, வாழ்வியல் உறவு உண்மையானதாகவும், வலிமையுள்ளதாகவும், மாந்தர்தமை மாற்றும் உறவு. மன்பதையிலுள்ள எல்லா உறவுகளிலும் உயர்ந்தது. ஈடு இணையற்றது. இத்தகைய நட்புறவு பற்றி மொழிஞாயிறு நவிலுவது:—

"நாகரிக நிலையிலேனும், அநாகரிக நிலையிலேனும், ஒருவன் பிறர்உதவியின்றி வாழ்தல் அரிது. அவ்வுறவு இயற்கை, செயற்கை என இருதிறப்படும். இயற்கையுறவு அரத்தக் கலப்பாலான இனவுறவு; செயற்கையுறவு மணவுறவு, தொழிலுறவு, தத்துறவு (மகட் கொடையால் வந்த உறவு); உதவிப்பேற்றுறவு, பழக்கவுறவு, நட்புறவு எனப்பலவகைப்படும்" இந் நட்புறவு பற்றி வள்ளுவர் வாய்மொழி வருமாறு:—

"*செயற்கரிய யாவுள நட்பினதுபோல் வினைக்கரிய யாவுள காப்பு*" (குறள்,781.).

இந் நட்புறவு, உண்மையாக உலக மாந்தர்க்கு வாய்த்துவிட்டால், அதுவே. உயர்ந்த உறவாகும். இதுவே வலிமைசான்ற உறவு. இந் நட்புறவு உறுதிமிக்க உறவாக வாய்க்கப்பெற்றவரே. உலகில் கொடுத்து வைத்தவர். இனவுறவு உறுதியற்று வீழ்ந்தாலும், உண்மையான நட்புறவு திண்மையாக அமைந்துவிட்டால், ஒருவர் செய்யவேண்டியது யாதுமில்லை என்று வள்ளுவர் மொழிகின்றார், இவ் வுண்மையான நட்புறவு, இனவுறவினும் மிகச்சிறந்தது. இத்தகைய மாபெரும் உறவைத் தேடிக்கண்டு பிடிப்பதும், பெறுவதும், பேணிக்கொள்வதும் அரிதாதலால், "செயற்கரிய யாவுள நட்பின்" என்றார் வள்ளுவப்பேராசான். உண்மையான நண்பர், துன்பக்காலத்தில் உயிரையும் உதவிக்காப்பாராதலின். அதுபோல் "*வினைக்கரிய யாவுள காப்பு*" என்றார்.

"A father is a treasure. a brother comfort but a friend is both. என்னும் ஆங்கிலப் பழமொழி' இங்கு நினைவுகூரத் தக்கது. இருவகையுறவும், தனிப்பட்ட மாந்தர்க்குப் போன்றே, அரசுகட்கும் இன்றியமையாதனவாம்" (திரு.தமி.மர.பக்.87.பகுதி—3.).

நட்புருவாக்கு—தல் *natpuru-v-ākku-*, 5செ.குன்றாவி. (vt.), தோழமையை உருவாக்குதல்; to create friendship

[நட்பு + உருவாக்கு—.]

ஆழுங்கால்பட்ட நட்புணர்வை வளர்த்தல்.

நட்புறவுக்கொள்கை *natpuravu-k-kolgai*, பெ. (n.), இருநாடுகளுக்கு இடையிலான நல்லிணக்க ஒப்பந்தக் கொள்கை; foreign amity policy. "*அண்டை நாடுகளுக்கிடையே அமைந்த, நிலையான நட்புறவுக் கொள்கையே, மக்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்*" (இக்.வ.).

[நட்புறவு + கொள்கை.]

நட்புறுகை *natpurugai,* பெ. (n.), *நட்புக்கொள்(ளு)-தல்* பார்க்க; see *natpu-k-kollu-,*

[நட்பு + உறுகை.]

நட-த்தல் *nada-,* 3. செ. கு. வி. (v.i.), 1. நிற்கும் இடத்தைவிட்டு நீளுதல் போற் காலடிவைத்துச் செல்லுதல்; to walk, go, pass, proceed *"காளையன்னாளை நடக்கவும் வல்லையோ"* (நாலடி. 398.). தவழ்ந்து விளையாடிய குழந்தை இப்போதுதான் நடக்கத் தொடங்கயிருக்கிறது (உ.வ.) 2. ஒழுகுதல்; to behave. *'பையன் ஆசிரியரிடம் எப்படி நடக்கிறான்'* (உ. வ.). *'வேலைக்காரன் வீட்டுத்தலைவனிடம் பணிவாய் நடந்து கொள்ள வேண்டும்'.* 3. பரவுதல்; to spread. *"'குரையழனடப்ப'* (பு. வெ. 1:8). 4. காலத்தில் நிகழ்தல்; ஏற்படுதல்; to happen, occur, ensue, take place as performance, occurrence or event. நடந்து நடந்துவிட்டது வருந்திப் பயன்இல்லை (உ.வ.) 5. நிகழ்ந்து வருதல்; to rage, as war, to be rife, as disease, to prevail as influence, to be in progress, as a performance. *'தாளிகை எழுத்தாளர் அதிகாரம்தான் இன்று மிகுதியாக நடக்கிறது'.* (உ.வ.). 6. நிறைவேறுதல்; to be fulfilled, to be effective. *'உன் சூளுரை (சபதம்) நடக்கவில்லை'* (உ.வ.). போன காரியம் நடந்ததா? (உ.வ.) 7. நிகராதல்; (உ. வ.) to be reckoned as equal, to go along with. *"மனைவாழ்க்கை போற்றுடைத்தே னல்லறத்தாரோடு நடக்கலாம்"* (சிறுபஞ். 100). 8. குடும்பம், ஆட்சி, அலுவலகம் முதலியவை இயங்குதல்; to function, run. மூத்தமகனின் சம்பளத்தில் தான் குடும்பம் நடக்கிறது (உ.வ.). வணிகம் நன்றாக நடக்கிறது. (உ.வ.). 9. நாடகம் நிகழ்த்தப் படுதல்; திரைப்படம் காட்டப்படுதல்; to run of film. இந்தத் திரைஅரங்கில் என்னபடம் நடக்கிறது (உ.வ.). 10. குறிப்பிட்ட வயது உடையதாக இருத்தல்; to run of age. என் பேரனுக்கு ஒன்று முடிந்து இரண்டு நடக்கிறது (உ.வ.).

க. நாட. **தெ.** நடுச்சு. **ம.** நடக்கு **து.** நட்புணி

[நெடு → நெட → நட. நடு > நட..... (வே.க. 3:49) நீட்சிக்கருத்து வேரினின்று கிளைத்த சொல்.]

நடத்தல்= நிற்கும் இடத்தைவிட்டு நீளுதல் போற் காலடி வைத்துச் செல்லுதல்.

நடக்கீதம் *nadkkidam,* பெ. (n.), கௌரி வைப்பு நஞ்சு (மூ.அ); prepared arsenic.

[நடம் + கீதம்.]

நடக்குமிடம் *nadakkumidam,* பெ. (n.) செல்வாக்குள்ள இடம்; (சீவக. 1637, உரை). the sphere of one's influence.

[நடக்கும் + இடம்.]

நடக்கை¹ *nadakkai,* பெ. (n.), 1. செல்கை; walking, proceeding 2. வழக்கு; custom, usage *"ஞாலத்து வரூஉ நடக்கையது குறிப்பின்"* (தொல். பொருள். 91). 3. ஒழுக்கம்; conduct behaviour, character *"அவன் நல்ல நடத்தையுள்ளவன்"* (உ. வ.). *'நன்னடத்தைச் சான்றிதழ் வாங்கிக் கொண்டு வா'* (உ. வ.). 4. அளவியல் கூறுகளில் ஒன்று; traverse survey

ம. நட.

[நட → நடக்கை. (வே.க. 3.49).]

நடக்கை² *nadakkai,* பெ. (n.), நிகழ்கை; occurrence, incident, event.

ம. நட.

[நட + கை.]

நடக்கை³ *nadakkai,* பெ. (n.), நினைவு, சொல், செயல், ஆகிய முக்கரணவொழுக்கம்; to behave oneself. அவன் நடக்கையில் உயர்ந்தவன். (உ.வ.).

மறுவ. நடத்தை.

L. con, together; duct to lead

[நட → நடக்கை.]

வாழ்க்கையில் ஒருவன் நினைவு, சொல், செயல், ஆகிய முக்கரணத் தொழிலால் நடக்கிறான். இதனால் முக்கரண வொழுக்கத்திற்கு, நடத்தை அல்லது நடக்கை என்று பெயர். ஒழுக்கம் என்ற சொல்லும் இக் கரணியம் பற்றியதே. ஒழுகுதல் = நடத்தல் இன்று இப்பொருள் வழக்கற்ற தென்றறிக. (சொ.ஆ.க.பக்.70).

நடக்கையறிவாள் *nadakkai-y-arivāļ,* பெ. (n), கொடி வேலி; lead-wort plumbago zeylanica

நடகாயஇளகியம் *nada-kāya-iļagiyam,* பெ. (n.), மகவீன்ற பெண்களுக்குத் தரும் மருந்து; electuary given to woman after delivery.

மறுவ. நடைகாயம், நாட்கண்டி.

[நடகாயம் + இளகியம்.]

மகவீன்ற பெண்கள், இவ் விளகியத்தை உண்பதால், பேறுகாலத்தே இழந்த வலிமையினை, மீண்டும் பெறுவர். உடம்பிலுள்ள கசடுகள் நீங்குவதற்கும், இவ் விளகியம் கைகண்ட மருந்து. தாய்மார்தம் அயற்சி அகன்று, நல்ல முறையில் உடல் உரம்பெறுவதற்கு, இவ் விளகியம் உறுதுணை புரியும்.

நடகாயம் *nada-kāyam,* பெ. (n.), 1. மகப்பேறு மருந்து; an electuary given to woman after delivery 2. *நடகாய இளகியம்* பார்க்க; see *nada-kāya-iļagiyam*

[நட + காயம். காயம் = இளக்கிய மருந்து.]

நடச்சி *nadacci,* பெ. (n), வைப்பரிதாரம்; a prepared yellow orpiment

நடத்தல் *nadattal,* தொ.பெ. (vbl n), 1. குறிப்பிட்ட செயல் முழுமை பெறுதல்; completing a task செய்த பணி இனிதே நடந்தது. (உ.வ.). 2. பிறர் சொல்லும்முறையில் செயல்படுதல்; act according to direction. நான் சொல்வதைக் கேட்டு நடப்பதாக இருந்தால் இங்கு இரு (உ.வ.).

[நட → நடத்தல்.]

நடத்து-தல் *nadattu-,* 5.செ. குன்றாவி. (v t), 1. நடக்கச் செய்தல்; to cause to go or walk, as a child இறைவன் நம்மை மகிழ்ச்சியான பாதையில் நடத்துவார் (உ.வ.). 2. அழைத்துப் போதல்; to take a person in one's company, to lead 3. கடமை யாற்றுதல்; to carry on, transact, manage, perform execute, administer, treat 4. செலுத்துதல்; to drive, as an animal, a vehicle 5. கற்பித்தல்; to teach, as a lesson "*ஆசிரியர் பாடம் நடத்துகிறார்*" (உ. வ.); 6. அரைத்தல்; to grind '*அம்மியில் நடத்திப் பொடியாக்கு*' (உ.வ.). 7. தாக்குதல்; to make a baton charge காவலர் தடியடி நடத்திக் கூட்டத்தைக் கலைத்தனர். (உ.வ.) 8. விழாநடத்துதல்; to organise a function. இலக்கியமன்ற விழாவினைக்கல்லூரியில் மாணவர் முன்னின்று நடத்திமுடித்தனர் (இக்.வ.). 9. ஒருவரை உரியமுறையில்

நடத்துதல் (கவனித்தல்.); to treat well. நீ அவரை நடத்தியமுறை சரியில்லை (உ.வ.)

க. நடசு. ம. நடத்துக.

[நட → நடத்து– (வே.க. 3. 49).]

நடத்துநர் *nadattunar,* பெ. (n.), பேருந்தில் பயணச்சீட்டு வழங்கி வண்டியை உரியவிடத்தில் நிறுத்தி, பயணிகளுக்கு உறுதுணை புரியும் பணியினைச் செய்யும் ஊழியர்; conductor. நடத்துநர் நன்றாகப் பேருந்தில் பணிசெய்தால்தான், பொதுமக்கள் காலந்தவறாது கடமை செய்ய முடியும். (இ.வ.).

மறுவ. ஊர்திவழித்துணைவர்.

[நடத்து → நடத்துநர்.]

ஒ.நோ. ஓட்டு → ஓட்டுநர்; இயக்கு → இயக்குநர்.

நடத்தை[1] *nadattai,* பெ. (n.), 1. *நடக்கை (வின்.)* பார்க்க; see *nadakkai.* 2. செல்வாக்கு; prosperity, influence. 3. ஒழுகலாறு; deportment.

க. நடத்தை ம. நடத்த தெ. நடத்த.

[நட + அத்து + ஐ.]

நடத்தை[2] *nadattai,* பெ. (n.), 1. இயல்பு; nature அவன் நடத்தை சரியில்லை. (உ.வ.). 2. நற்குணம்; goodness 3. ஒழுக்கம்; behaviour

[நட → நடத்தை.]

நடத்தைக்காரன் *nadattai-k-kāran,* பெ. (n.), செல்வாக்குள்ளவன் (வின்.); a man of influence; one in prosperous circumstances.

[நடத்தை + காரன்.]

நடத்தைக்காரி *nadattai-k-kāri,* பெ. (n.), *நடத்தைக்கெட்டவள்* பார்க்க; see *nadattai-k-kettaval*

[நடத்தை + காரி.]

நடத்தை = ஒழுக்கம், பண்பு.

நடத்தைக்கெட்டவள் *nadattai-k-kettaval,* பெ. (n.), விலைமகள்; immoral woman நடத்தை கெட்டவளிடம் நன்றியை எதிர்பார்க்கலாமா? (உ.வ.).

[நடத்தை + கெட்டவள்.]

நடத்தை = ஒழுக்கம்.

நடத்தைக்கொள்கை *nadattai-k-kolgai,* பெ. (n.), மாந்தனின் உளவியற்கூறுகளையும், அவற்றினடிப்படையில் அமைந்த செயற்பாடுகளையும் ஆராயும் கொள்கை; behaviourism

மறுவ. ஒழுக்கக்கொள்கை.

[நடத்தை + கொள்கை.]

அகப்பண்புகளுக்குப் புறவாழ்வுக் கூறுகளே கரணியமென்னும் கோட்பாடு. புறக்கூறுபாடுகளைக் கொண்டும் ஒழுக்கத்தை (நடத்தையை) அடிப்படையாகக் கொண்டும், ஒருவரைப் பற்றி ஆராயும் முறை.

நடத்தைக்கோட்பாடு *nadattai-k-kōtpādu,* பெ. (n.), மாந்தர்தம் உளப்பாங்கினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும் கோட்பாடு; behaviour theory.

[நடத்தை + கோட்பாடு.]

நடத்தைத் தப்பிதம் *nadattai-t-tappidam,* பெ. (n.), *நடத்தைப்பிழை* பார்க்க; see *nadattai-p-pilai.*

[நடத்தை + தப்பு + இதம்.]

நடத்தைப்பிசகு *nadattai-p-piśagu,* பெ. (n.), *நடத்தைப்பிழை* பார்க்க; see *nadattai-p-pilai.*

[நடத்தை + பிசகு.]

நடத்தைப்பிழை *nadattai-p-pilai,* பெ. (n.), ஒழுக்கத்தவறு (யாழ்.அக.); immoral conduct

[நடத்தை + பிழை.]

'*நன்னடத்தை*'யின் எதிர்மறை.

நடத்தைமாற்றம் *nadattai-mārram,* பெ. (n.), செயல் மாறுபடுகை; behaviour change '*உனது நடத்தைமாற்றம் எனக்கு பிடிக்கவில்லை*' (இக்.வ.).

[நடத்தை + மாற்றம்.]

நடத்தைமுறை *nadattai-murai,* பெ. (n.), ஒழுக்கவிதி; by law

[நடத்தை + முறை.]

நடத்தைவிதி *nadattai-vidi,* பெ. (n.), *நடத்தை முறை* பார்க்க; see *nadattai-murai.*

[நடத்தை + skt *விதி.]*

நடந்தசெய்தி *nadanda-śeydi,* பெ. (n.), நிகழ்ந்த செய்தி; event that was happened

மறுவ. உண்மைச்செய்தி.

[நடந்த + செய்தி.]

நடந்தாரைத்தொடர்ந்தான் *nadantārai-t-tudarndān,* பெ. (n.), தெட்டங்காகச் செடி; an unknown kind of plant.

மறுவ. ஒட்டுப்புல்.

[நடந்தாரை + தொடர்ந்தான்.]

தொ–து=திரிபு.

(ஒ.நோ.) தொடை → துடை.

ஒட்டுப்பில்லாக இருக்கலாம் என்று சா.அக. கூறும்.

நடந்துகொள்(ளு)–தல் *nadandu-kol-(lu)-,* 16. செ. கு. வி. (v.i.), மேலோரிடத்து ஒழுகுதல்; to behave, as towards a superior

[நடந்து + கொள்–.]

நடந்துவரு–தல் *nadandu- varu-,* 2 செ.கு.வி. (v.i.), **1.** நிகழ்தல்; to be in vogue. **2.** காலால் இடம் பெயர்தல்; to move by walk.

[நடந்து + வரு–.]

நடந்துவிடு–தல் *nadandu-vidu-,* 20 செ. கு. வி. (v.i.), **1.** செயல் முடிந்துபோதல்; to be accomplished or completed **2.** ஓடிப்போதல்; to run a way "*அன்னநடை மின்னுமறியாமல் முன்னே நடந்துவிட்டான்*" (தெய்வக். விறலிவிடு.102).

[நட → நடந்து + விடு–.]

நடந்தேறு–தல் *nadandēru-,* 5.செ. கு. வி. (v.i.), நிறைவேறுதல்; to be completed, perfected successful

[நடந்து + ஏறு–.]

நடநாடகசாலை *nada-nādaga-śālai,* பெ. (n.), நாட்டியப்பெண் (வின்); dancing woman

[நடம் + நாடகசாலை.]

நாடகம், கதையோடு சாராமல், நாட்டியக்கலையாக மட்டும் இருந்த காலத்தில், பெண்கள் ஆடுதல் பார்வையாளரான ஆண்கள் பலருக்கும் ஆர்வத்தைக் கூட்டி இருத்தலால், சாலை என்பது, அன்மொழித்தொகையாய்ப் பெண்ணைக் குறித்ததாக இருக்கலாம்.

நடநாயகன்[1] *nada-nāyagaṉ,* பெ. (n.), கருடப்பச்சைக்கல் (மூ. அ.); a kind of emerald.

[நட + நாயகன்.]

நடநாயகன்[2] *nada-nāyagaṉ,* பெ. (n.), சிவபெருமான்; šivaṉ, as the lord of dancers

[நடம் + நாயகன்.]

நடநாராயணம் *nada-nārāyaṇam,* பெ. (n.), பண்வகை; a specific melody-type

[நடம் + நரன் → நாரன் + அயணம்.]

நடப்பன *nadappaṉa,* பெ. (n.), காலால் நடந்து செல்லும் உயிரிகள்; creatures that walk. "*தெரிவாக, ஊர்வன நடப்பன பறப்பன*" (தாயு. பரிபூரண.2).

[நட → நடப்பன.]

நடப்பித்தல் *nadappittal,* பி.வி. (caus.v.) ஒரு செயலை அல்லது நிகழ்வைப் பிறரைக் கொண்டு செய்வித்தல்; giving instructions for the work to be done. முதல்வர் அதிகாரிகளுக்கு ஆணையிட்டு நலப்பணித் திட்டங்களை நடப்பித்தார் (இ.வ.).

[நட → நடப்பி → நடப்பித்தல் (பி.வி.).]

நடப்பிப்பு *nadappippu,* பெ. (n.), 1. சிக்கனம்; economy. 2. மேற்பார்வை. superintendence, direction, management.

நடப்புக்கு ஏற்பப் பொருளும், செயலும் அளவாகச் செய்வித்தற் பண்பைக் குறிக்கும் சொல்லாகும். இச் சொல், இக்கால வாழ்வியலுக்கும் பொருந்தும் வண்ணம் அமைந்துள்ளது.

நடப்பினம் *nadappiṉam,* பெ. (n.), நடக்கும் விலங்கு; moving animal-kingdom

[நடப்பு + இனம்.]

ஒ.நோ. கால்நடை=விலங்குகள்.

நடப்பு[1] *nadappu,* பெ. (n.), 1. போக்குவரவு; going and coming 2. நடத்தை; behaviour, conduct, demeanour 3. தீயகாமத் தொடர்பு; criminal intimacy as between a man and woman. 4. தற்காலம்; present time, current time. "*நடப்புக்காலம் உங்களுக்கு நல்லதாக இருக்கிறது*" (உ. வ.). 5. செல்வாக்கு (யாழ்ப்.); influence, prosperity

ம. நடப்பு., து. நடபு.

[நட → நடப்பு.]

போதல் வருதல் பற்றிய நடை, ஈண்டுக் குறிக்கப்படுகிறது.

நடப்பு[2] *nadappu,* பெ. (n.), 1. குறிக்கோள், மனவொருமை (திவா.); single-minded devotion, concentration. 2. உயர்ந்த இலக்கு (வின்.); ideal. 3. எண்ணத்தின் செயல்வடிவம்; action நினைப்பிற்கும் நடப்பிற்கும் தொடர்பே இல்லை (இ.வ.).

[நட → நடப்பு.]

நடந்து சென்று அடையும் இலக்கினைக் குறித்தல் உணர்க.

நடப்பு[3] *nadappu,* பெ. (n), 1. அவ்வப்போது நிகழ்வது; நடப்புக்கணக்கு. current account

2. அடுத்தஆண்டு; next year. *'நடப்பிற் பார்த்துக் கொள்ளலாம்'.* (உ. வ.). 3. அடுத்து வரும் சுறவ (தை) மாதம்; next (tai). šuravam month நடப்பிற்குக் கலியாணம், கழுத்தே சும்மாவிரு (உ.வ.) நடப்பில் உள்ள நிகழ்வுகள் இங்கு பதியப்பட்டுள்ளன. (இ.வ.) 4. குறிப்பிடும் இடத்தில் நிகழ்வது; நிகழ்வது பற்றிய விளக்கம்; state of affairs. நாட்டு நடப்பைப் பற்றிய அக்கறை இல்லாமல் இருக்கிறாயே (இ.வ.).

ம., து. நடப்பு.

[நட → நடப்பு.]

நடப்பு⁴ *nadappu,* **பெ.** (n.),**1.** ஈமக்கடனுக்கு முதல் நாளில் நடத்தும் சடங்கு; funeral rite of planting a stone an the day previous to īma-k-k-kadan **2.** தாலி வாங்குகை (யாழ்ப்.); removing the marriage-badge from a widowed woman. **3.** செல்லுதற்குரிய விடம்; objective, destination *'ஊதியமாகிய நடப்பின் மேல்'* (சீவக. 770. உரை).

ம., து. நடப்பு.

[நட → நடப்பு.]

இறப்புக்குப்பின் நடக்கும் கரணங்கள்.

நடப்பு⁵ *nadappu,* **பெ.எ.** (adj.), நிகழ்ந்து கொண்டிருக்கிற; current (year,etc.). நடப்பு ஆண்டில் பணவீக்கம் குறைந்துள்ளது. (இக்.வ.) நடப்பு ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் (இக்.வ.).

[நட → நடப்பு.]

நடப்புஆண்டு *nadappu-āṇḍu,* **பெ.** (n.), **1.** நிகழ் ஆண்டு; current - year. **2.** நிகழ்காலம்; present - time. நடப்புஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் நலத்திட்டங்கள் மிகுதியாக உள்ளன. (இக்.வ.).

[நடப்பு + ஆண்டு.]

நடப்புக்கணக்கு *nadappu-k-kaṇakku,* **பெ.** (n.), *நடப்புச் செலவுகளுக்காக வைப்பகத்தில் வைத்துள்ள இருப்புக்கணக்கு;* current account.

[நடப்பு + கணக்கு.]

நடப்புக்காரன் *nadappu-k-kāraṉ,* **பெ.** (n.), **1.** செல்வாக்குள்ளவன்; a man of influence. **2.** வாடிக்கைக்காரன்; customer. **3.** கள்ளத் தொடர்பாளர்; (சோர நாயகன்); paramour. (இ. வ.).

ம. நடப்புகாரன்.

[நடப்பு + காரன்.]

நடப்புச்செய்தி *nadappu-c-ceydi,* **பெ.** (n.), இன்றைய நிகழ்ச்சி; current permanence. நடப்புச் செய்தி என்ன? (உ. வ.).

[நடப்பு + செய்தி.]

நடப்புச்செலவு *nadappu-c-celavu,* **பெ.** (n.), நடைமுறைச்செலவு (அன்றாடச் செலவு); current expense.

[நடப்பு + செலவு.]

நடப்புநாணயம் *nadappu-nāṇayam,* **பெ.** (n.), நடைமுறையில், புழக்கத்தில் உள்ள நாணயம்; current currency.

[நடப்பு + நாணயம்.]

தற்பொழுது மக்களிடையே, புழக்கத் திலிருக்கும் பணம்.

நடப்புநிதியாண்டு *nadappu-nidi-y-āṇḍu,* **பெ.** (n.), நடந்து கொண்டிருக்கிற வரவு

செலவுக் கணக்கு ஆண்டு; current financial year.

[நடப்பு + skt. நிதி + ஆண்டு.]

நடப்புநிலவரம் *nadappu-nilavaram,* பெ. (n.), நிகழ்ந்து கொண்டிருக்கிற நிலை ; current condition.

[நடப்பு + நிலவரம்.]

நடப்புமதிப்பு *nadappu-madippu,* பெ. (n.), ஒரு பொருளுக்கு நடைமுறையில் உள்ள இப்போதைய மதிப்பு; relative value, present value. *'தங்கத்தின் நடப்பு மதிப்பு நாள்தோறும் உயர்ந்து கொண்டிருக்கிறது' (இக்.வ.).*

[நடப்பு + மதிப்பு.]

நடப்புவட்டி *nadappu-vatti,* பெ. (n.), இற்றை வட்டி; current or prevailing rate of interest.

[நடப்பு + வட்டி.]

நடப்புவருடம் *nadappu-varudam,* பெ. (n.), *நடப்பு ஆண்டு* பார்க்க; see *nadappu-āndu*

மறுவ. நிகழ்காலம்.

[நடப்பு + Skt. வருஷம் → வருடம்.]

நடப்புவியாதி *nadappu-viyādi,* பெ. (n.), ஓரிடத்தில் அல்லது ஓரினமக்களை, ஒரு நேரத்தில் பொதுவாகத்தாக்கும் நோய் (இ. வ.); epidemic disease

[நடப்பு + Skt. வியாதி.]

நடப்புவிலை *nadappu-vilai,* பெ. (n.), இற்றை விலை; current price.

மறுவ. இன்றைய விலை.

ம. நடப்புவில.

[நடப்பு + விலை.]

நடபடி *nada-padi,* பெ. (n.), **1.** நடவடிக்கை; action. **2.** நிகழ்ச்சி; occurrence. **3.** வழக்கம்; custom, practice.

ம. நடபடி.

[நட → நடபடி.]

நடபத்திரகம் *nadapattiragam,* பெ. (n.), கத்தரிச் செடி; bringal plant.

நடபத்திரிகை *nadapattirigai,* பெ. (n.), சேம்பு (மலை); Indian kales.

நடபாவாடை *nada-pāvādai,* பெ. (n.), *நடைபாவாடை* பார்க்க; see *nadai-pāvādai*

ம. நடைபாவாடை.

[நட + பாவாடை.]

நடை→நட = ஐகாரக்குறுக்கம்.

நடபாவி *nada-pāvi,* பெ. (n.), *நடைபாவி* பார்க்க; see *nadaipāvi.*

தெ., க. நடபாவி.

[நட + பாவு → பாவி.]

நடபேதி *nadapēdi,* பெ. (n.), அளவிற்கு அதிகமாக ஏற்படும் கழிச்சல்; discharge of the foeces from the anus.

நடபைரவி *nada-pairavi,* பெ. (n.), மூலப்பண்களுள் ஒன்றுகளுளொன்று (சங்.சந்.47); a primary paṇ(rāgam)

[நடம் + பைரவி.]

நடம் *nadam,* பெ. (n.), நடனம், கூத்து; dance. "*இரத முடைய நடமாட்டுடையவர்*" (திருக்கோ. .57).

நள் → நளி → நளிதல் =ஒத்தல்.

நளி → நடி.

ஒநோ. களிறு → கடிறு.

நடித்தல் = ஒத்து நடத்தல்.

நடி= ஆட்டம்.

"நடிகொணன் மயில் சேர்திரு நாரையூர்" (தேவா.216:5).

த. நடம் → skt. நட்ட.

நடம் =அகத்தேயெழும் உணர்வுகளைப் புறத்தே உடலுறுப்புகள் வாயிலாகக் கூத்தாடி வெளிப்படுத்தி, நடம் இட்டு, நடித்தல்.

த. நடி → நடம் → நட்டம் → skt. ந்ருத்த.

(ஒ.நோ.) த. வட்டம் → skt. வ்ருத்த

நடம் என்பது அழுகுற ஆடுவது. அது நூற்றெட்டு உடற்கரணங்களோடும், கைகால், கண், வாய் முதலிய உறுப்புகளின் தொழில்களோடும் கூடியது. கைவினைகள் எழிற்கை, தொழிற்கை, பொருட்கை, என முத்திறப்பட்டு, பிண்டி அல்லது இணையாவினைக்கை யெனப் படும், ஒற்றைக்கை வண்ணம் முப்பத்து மூன்றும், பிணையல் அல்லது இணைக் கையெனப்படும், இரட்டைக் கைவண்ணம் பதினைந்தும் கொண்டன வாகும்.

தமிழகத்தில் ஆடிய தமிழ் நடமே, இன்று பரதநாட்டியம் எனும் பெயரில் நிகழ்த்தப் படுகிறது. தமிழ்நடத்தின் காலம் கி.மு.3ஆம் நூற்றாண்டு.

நடம்பயில்(லு)-தல் *nadam payil-(lu)-,* 3.செ. கு. வி. (v.i.), 1. கூத்தாடுதல்; to dance. 2. நடனம் கற்றுக்கொள்ளுதல்; to learn dancing.

[நடம் + பயில்-.]

நடமண்டனம் *nada-mandanam,* பெ. (n.), அரிதாரம் (யாழ்.அக.); yellow orpiment.

நடமாட்டம்[1] *nadam-āttam,* பெ. (n.), 1. வலிமை (வின்.); activity; energy, as in old age. 2. செல்வாக்கு (வின்.); influence. 3. பழக்கம் (வின்.); acquaintance in any affair. 4. கூடுமிடம் (வின்.); resort, haunting.

தெ. நடயாட.

[நடம் + ஆட்டம்.]

நடமாட்டம்[2] *nadam-āttam,* பெ. (n.), 1. நடந்து செல்கை; walk, act of walking. '*அவன் பாயும் படுக்கையுமாயிருக்கிறான். ஆதலால் ஒருமாதமாய் நடமாட்டமில்லை*'. (உ. வ.). 2. எழுந்து நடத்தல்; ability to move around. '*அவருக்குக் கண் மங்கி நடமாட்டம் குறைந்துவிட்டது*' (உ.வ.).

தெ. நடையாட்ட.

[நடை → நடம் + ஆட்டம்.]

நடமாட்டம்[3] *nadam-āttam,* பெ. (n.), மக்கள், விலங்கு, ஊர்தி போன்றவை, ஓரிடத்தினின்று மற்றோர் இடத்திற்குச் செல்லுதல், வருதல் போன்ற செயல்பாடு அல்லது இயக்கம்; movement of people, animals, vechile etc. '*மக்கள் நடமாட்டம் அதிகம் இல்லாத பகுதியில் வீடு கட்டினால் கள்வர்களுக்குக் கொண்டாட்டந்தான்*' (உ.வ.). '*மலையடி வாரத்தில் யானைகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது*' (இ.வ.).

[நடம் + ஆட்டம்.]

நடமாட்டம்[4] *nadam-āttam,* பெ. (n.), நடனம்; dannceing; "*நடமாட்டங் காணப் பாவியேன் நானோர் முதலிலேன்*" (திவ். நாய்ச். 10:7).

[நடம் + ஆட்டம்.]

இது ஆட்டத்திற்கு மட்டும் அழுத்தம் தரும்பான்மையில், அமைந்த சொல்லாகும்.

நடமாடல் *nadamādal,* பெ. (n.), 1. மேல் ஓங்குதல்; prevailing. 2. உலாவுதல்; about after sickness. (சா.அக.).

நடமாடு[1]**—தல்** *nadam-ādu-,* 5.செ. கு. வி. (v.i.), 1. நோய் நீங்கி உலாவுதல்; to go about, move about; as after, sickness; '*பக்கவாத (ஊதை) நோய் வந்ததால் அவரால் நடமாடமுடியவில்லை*'. (உ.வ.) '*கொடிய விலங்குகள் நடமாடும் மலைப் பாதையில் மனிதர் நடமாட முடியாது*'. 2. மீளாத்துயர், வருத்தம், முதலியவற்றுள் அடைப்பட்டிருந்து வெளிவருதல்; to rise, come out, as from depressed circumstances. 3. தீய விலங்குகள், ஊர்வன நோய், தீயஆவி முதலானவை உலவுதல்; to haunt or frequent, as evil spirits; to infest as beasts or reptiles; "*ஆவிகள் இரவில் நடமாடுகின்றன*" (உ. வ.). 4. தீயவர் திரிதல்; to walk about thieves to walk about evil person. '*திருடர் இரவில் திரிகின்றனர்*' 5. புழங்குதல்; to circulate, as coin as a report; '*இன்று கள்ளப்பணம் நடமாடுகிறது*'. 6. நோய் முதலியன பரவியிருத்தல்; to prevail, as epidemics.

தெ. நடயாடு.

[நடம் + ஆடு-.]

நடமாடு[2]**—தல்** *nada-mādu-,* 5.செ. கு. வி. (v.i.), கூத்தாடுதல்; to dance; "*வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர*" (தேவா. 278:1). "*எல்லோரும் இன்புற்றிருக்க நடமாடுகின்றீர்*" (திருவருட்பா.)

நடமாடுநோய் *nadamādu-nōy,* பெ. (n.), தொற்று நோய்; infectious disease.

மறுவ. கொள்ளைநோய்.

[நடமாடு + நோய்.]

எளிதில் பற்றிக்கொள்ளும் நுண்மங்களை உடையநோய். இந் நோய் மழைக் காலத்தும், புயற்காலத்தும் மக்களை பெருவாரியாகத் தொற்றுந் தன்மைத்து.

நடமாடும் *nadamādum,* பெ.எ. (adj.), பல இடங்களுக்கும் செல்லக்கூடிய வகையில் ஊர்தியில் அமைந்த இயங்கும் அமைப்பு; mobile. '*நடமாடும் உணவகம்*' '*நடமாடும் நூலகம்*' (இக்.வ.).

[நடம் + ஆடும்.]

நடமாடும்அரத்தவங்கி *nadamādum-aratta-vangi,* பெ. (n.), *நடமாடும் அரத்த வைப்பகம்* பார்க்க; see *nadamādum-aratta-vaippagam.*

[நடமாடும் + அரத்தம் + E. வங்கி.]

நடமாடும்அரத்தவைப்பகம் *nadamādum-aratta-vaippagam,* பெ. (n.), நிலையாக ஓரிடத்தில் தங்காமல், பொதுமக்களிடம் வந்து குருதியைத் தொகை கொடுத்துப் பெற்றுக் கொண்டு, காப்பாக எடுத்துச் செல்லும் வண்டி; mobile blood - bank.

[நடமாடும் + அரத்தம் + வைப்பு + அகம்.]

நடமாடும்ஆடைதேய்ப்பகம் *nadamādum-ādai-tēyppagam,* பெ. (n) நிலையாக ஓரிடத்தில் தங்காமல், பொது மக்களை நாடிச் சென்று அவர்களின் ஆடைகளைமடித்துச் சமன்படுத்தித் தேய்த்துக் கொடுக்கும் வண்டி; mobile iron - cart.

[நடமாடும் + ஆடை + தேய்ப்பு + அகம்.]

நடமாடும்உணவகம் *nadamāḍum-uṇavagam,* பெ. (n.), ஓரிடத்தில் நிலையாகத் தங்காது, பல இடங்களுக்கும் சென்று சிற்றுண்டிகளை விற்பனை செய்யும் வகையில், வண்டியில் அமைந்த உணவகம்; mobile - hotel

[நடமாடும் + உணவகம்.]

நடமாடும்நீதிமன்றம் *nadamāḍum-nidimanṟam,* பெ. (n.), *நடமாடும் முறைமன்றம்* பார்க்க; see *nadamāḍum - muṟai-manṟam*

[நடமாடும் + skt நீதி + மன்றம்.]

நடமாடும்நூலகம் *nadamāḍum-nūlagam,* பெ. (n.), நிலையாக ஓரிடத்தில் தங்காமல், நூலகம் இல்லாத சிற்றூர்களுக்குக் குறிப்பிட்ட நாள்களில் சென்று, மக்களுக்கு நூல்களைத் தந்து உதவும், நகரும் வண்டியில் அமைந்த நூலகம்; mobile - library. *'எங்கள் ஊரில் முப்பது பேர் நடமாடும் நூலகத்தில் உறுப்பினராகியுள்ளனர்'.*

[நடமாடும் + நூலகம்.]

நடமாடும்படிப்பகம் *nadamāḍum-paḍippagam,* பெ. (n.), *நடமாடும் நூலகம்* பார்க்க; see *nadam-āḍum - nūlagam.* *"நேற்று நடமாடும் படிப்பகம் வந்ததா?"*

[நடமாடும் + படிப்பகம்]

நடமாடும்மருத்துவமனை *nadamāḍum-maruttuvamaṉai,* பெ. (n.), ஓரிடத்தில் நிலையாகத் தங்காமல், மருத்துவமனை ஏந்து இல்லாதச் சிற்றூர்களுக்கும், உடனடி உதவி தேவைப்படும் நேரங்களிலும், இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் ஏதங்களுக்குப் (விபத்துகள்), பண்டுவம் (சிகிச்சை) மேற்கொள்ளும் மருத்துவமனை; mobile - hospital *"குசராத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டபோது நடமாடும் மருத்துவமனையின் பங்கு பெரிதாக இருந்தது."*

[நடமாடும் + மருத்துவமனை.]

நடமாடும்முறைமன்றம் *nadamāḍum-muṟaimaṉṟam,* பெ. (n.), நிலையாக ஓரிடத்தில் தங்காமல் குற்றம் நிகழுமிடத்திற்கே, சென்று வழக்கின் தன்மையை ஆய்வுசெய்து, தீர்ப்பு வழங்கும் மன்றம்; mobile - court *'நண்பரின் ஊர்தி உரிமத்தைப் புதுப்பிக்காததால், காவல்துறையினரின் ஆய்வில் சிக்கி, நடமாடும் முறைமன்றத்தில் தண்டத்தொகை கட்டினார்'.*

[நடமாடும் + முறைமன்றம்.]

நடமாடும்வங்கி *nadamāḍum-vaṅgi,* பெ. (n.), *நடமாடும் வைப்பகம்* பார்க்க; see *nadamāḍum - vaippagam.*

[நடமாடும் + E வங்கி.]

நடமாடும்வீடு *nadamāḍum-vīḍu,* பெ. (n.), தலைவர்கள் தேர்தல் வேலையின் போதும், நடிகர் நடிகையர் வெளிப்புறப்படப்பிடிப்புகளின் போதும் பயன்படுத்தும் வீட்டிலுள்ள இன்றியமையாத ஏந்துகள் உள்ள அறையைப் போன்ற அமைப்பைக் கொண்ட வண்டி; mobile house *'அமைச்சர் தேர்தல்சுற்று மேற்கொண்டபோது நடமாடும் வீட்டையே அதிகமாகப் பயன்படுத்தினார்'.*

[நடமாடும் + வீடு.]

நடமாடும்வைப்பகம் *nadamāḍum-vaippagam,* பெ. (n.), ஓரிடத்தில் நிலையாக

இருக்காமல் இடம்மாறிச் செல்லும் பணம் (பொருள்) வைப்பிடம்; mobile - bank.

[நடமாடும் + வைப்பகம்.]

நடமாதிரை *naḍamādirai,* பெ. (n.), கொத்துமல்லி; Coriander sativum.

நடமாளிகை *naḍa-māḷigai,* பெ. (n.), *திருநடை மாளிகை' (பெரியபு திருநாவு. 387.)* பார்க்க; see *tirunaḍai-māḷigai*

[நடை + மாளிகை → நடமாளிகை. (ஒ.நோ.) மடைப்பள்ளி → மடப்பள்ளி.]

நடமாளிகைமண்டபம் *naḍa-māḷigai-maṇḍabam,* பெ. (n.), *திருநடை மாளிகை* (I M P Rd 81) பார்க்க; see *tirunaḍai-māḷigai.*

[நடமாளிகை + மண்டபம்.]

நடமிடுமீசன் *naḍamiḍum-īśaṉ,* பெ. (n.), சரக்கொன்றை; purging cassia

நடமுருடு *naḍa-muruḍu,* பெ. (n), நடனத்துக்குரிய முருடென்னும் இசைக் கருவி (சிவக்.பிரபந்.பக்.237): a musical instrument, played on an accompaniment to dance.

[நடம் + முருடு.]

நடராசதங்கம் *naḍarāsa-taṅgam,* பெ. (n), மாற்றுயர்ந்த தங்கம்; gold most superior is purity

[நடராசன் + தங்கம்.]

நடராசன் தெய்வங்களில் உயர்வென்று சிவனியர் கருதல் போல், பொன்னில் உயர்ந்த பத்தரை மாற்றுத் தங்கம் பற்றிய பெயர் என்க.

நடராசன் *naḍarāśaṉ,* பெ. (n.), *நடவரசன்* பார்க்க; see *naḍavaraśaṉ*

மறுவ. ஆட(ல்)வல்லான்.

நடல் *naḍal,* பெ. (n). ஊன்றுகை; planting

[நடு + அல் → நடல்.]

அல்லீற்றுத்தொழிற்பெயர்.

நடலம் *naḍalam,* பெ. (n). 1. ஊகம்; assumption. 2. ஆணவம், செருக்கு; vanity, insolence. 3. வீண் செலவிடுகை (வின்.); abuse of property, recklessness, spuandering. 4. இகழ்ச்சி (வின்.): irreverence, derision, scoffing. 5. நடிப்பு (பாசாங்கு); pretence hypocrisy 6. மித மிஞ்சிய நாகரிகங் காட்டுகை; overnicety 7. கூர்நனிச் சுவை; fastidious ness

[ஒருகா: நடனம் → நடலம்.]

நடலம் பண்ணு-தல் *naḍalam-paṇṇu-.* 5.செ. கு. வி. (v.i.), அளவுக்கு அதிகமாக நாகரிகம் காட்டுதல். to be fastidious

மறுவ. நனிநயம் பண்ணுதல்.

[நடலம் + பண்ணு-.]

நடலமடி-த்தல் *naḍalam-aḍi-.* 4.செ. கு. வி. (v.i), பாசாங்கு செய்தல்(இ. வ.); to pretend.

மறுவ: கூத்தடித்தல்.

[நடலம் + அடி -.]

பண்பற்றவர் தமது பகட்டாரவாரத் தோற்றத்தின் வாயிலாகப் பண்புற்றவர்

போல், பொய்த்தோற்றங்காட்டிப் பிறரை நம்பச் செய்தல்.

நடலை *naḍalai,* பெ. (n.), 1. சூழ்ச்சி; இரண்டகம்; guile. "*நடலைப்பட் டெல்லா நின்பூழ்*" (கலித். 95, 33.). 2. பொய்ம்மை; deception, illusion. "*நடலை வாழ்வு கொண்டென் செய்திர்*" (தேவா. 1203:4.). 3. நடிப்பு, பாசாங்கு (உ.வ.); pretence, affectation. 4. துன்பம் (பிங்.); distress, suffering, affliction. "*நடலையு ளடிகள் வைக*" (சீவக.1914). 5. அசைவு (சூடா.); trembling; shaking. 6. நடுக்கம் (சா.அக.); trembling, shivering.

[நடலம் → நடலை.]

நடவடி *naḍavaḍi,* பெ. (n.), *நடவடிக்கை* பார்க்க; see *naḍavaḍikkai.*

ம.தெ. நடவடி.

[நடைபடி → நடவடி.]

நடவடிக்கை *naḍavaḍikkai,* பெ. (n.), 1. நடத்தை; செயல்பாடு, நடந்துகொள்ளும் முறை; behaviour, conduct. பொதுவாழ்வில் ஈடுபடுவோரின் நடவடிக்கை போற்றத் தகுந்ததாக இருக்கவேண்டும் (இக்.வ.). சில நாட்களாகவே அவனுடைய நடவடிக்கையில் ஒரு மாறுதல் தெரிகிறது (இக்.வ.). 2. குறிப்பிட்ட நோக்கத்திற்காக மேற்கொள்ளும் பணி அல்லது ஏற்பாடு; measures, proceedings. வறட்சியைப்போக்கும் நடவடிக்கைகள் முழுமையாக இல்லை (இக்.வ.). 3. அலுவலகம் முதலியவற்றில் மேற்கொள்ளும் பணி அல்லது அலுவல்; work activities.கலவரத்தின் காரணமாகப் பல தொழிற்சாலைகளின் அன்றாட நடவடிக்கைகள் தடைபட்டன. 4. ஒருவரின் நடத்தையின் மீது மேற்கொள்ளப்படும் செயற்பாடு; action அவர் மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது? (உ.வ.).

மறுவ. ஒழுக்கம், ஒழுகலாறு, செயல்.

க., நடபடிகெ. து. நடபாட.

[நடைபடி → நடவடி → நடவடிக்கை.]

நடவரசன் *naḍavarašaṉ,* பெ. (n.), சிவபெருமானின் பல வடிவங்களுள் ஒன்றான, நடனமாடும் திருவடிவம், Šivaṉ in dancing posture.

[நடம் + அரசன்.]

நடவல் *naḍaval,* பெ. (n.). நட்டபயிர்; transplanted crop '*நடவலிறைத்ததுக்கும் வரிசையில் மூன்றிலொன்று*' (புதுக்.கல்.423).

[நடு → நடவு → நடவல்.]

நடவாமுடம் *naḍavā-muḍam,* பெ. (n.), நடக்க முடியாத ஊனமுற்றோர். maimed or cripple person who can not walk.

[நட + ஆ + முடம்

ஆ. எதிர்மறைஇடைநிலை.]

நடவு¹—தல் *naḍavu-,* 5.செ. குன்றாவி. (v.t.) 1. செலுத்துதல்; to cause to go, drive, lead on, conduct, discharge. "*கணையினை நடவி*" (விநாயகபு. 80. 704.). 2. கருமம், நடத்துதல் (வின்.); to manage, administer, direct, transact, perform.

தெ., க., நடுபு. து. நடபாவுணி.

[நட → நடவு—.]

நடவு² *naḍavu*, பெ. (n.), 1. நாற்றைப் பிடுங்கி வயலில் நடுகை; transplantation of seedlings. "*போர்த்து நடவு செய்குநரும்*" (திருவிளை நாட்டுப். 20.). உங்கள் வயலில் என்றைக்கு *நடவு?*(உ.வ.). 2. நட்டபயிர்; growing crop. "*தண்ணீரில்லாமல் நடவு காய்கிறது.*" (உ. வ.). புயல்மழையில் நடவுமுழுவதும் காட்டாற்று வெள்ளத்தில்அடித்துக் கொண்டு போய் விட்டது (இக்.வ.). 3. நடவுகணக்கு (R.T.); an account containing particulars of transplanting.

து. நட்டி

[நள் → நடு → நடவு.]



நடவு³ *naḍavu-*, பெ. (n.) தணக்கு; catamaran wood tree. (சா.அக.).

நடவுகம்பு *naḍavu-kambu*, பெ. (n.), தளிர்த்து வளர்தற் பொருட்டு நடும் கம்பு(நாஞ்.); scion, shoot of plant, cut for planting. நடவுகம்பாக ஒடித்து முருங்கைக்கம்பை நட்டால் முழுமரம் உருவாகும். (இ.வ.).

[நடவு + கம்பு.]

நடவுகாரிகள் *naḍavu-kārigaḷ*, பெ. (n.), நாற்று நடவு வேலைசெய்யும் பெண்கள்; women labourers who transplant seedlings.

[நடவு + காரிகள்.]

நடவுகூலி *naḍavu-kūli*, பெ. (n.), *நடுகூலி* பார்க்க; see *naḍu-kūli*.

[நடவு + கூலி.]

நடவுகூறு *naḍavu-kūṟu*, பெ. (n.), நிலத்திற்குரியவன் அதனில் மரங்கள் முதலியன வைத்து வளர்த்தவனுக்கு கொடுக்கும் பங்குக்கூறு (நாஞ்.); a share of the produce given by an owner of a garden land to a person for his labour and money spent in rearing new plants of taxable species.

[நடவு + கூறு.]

நடவுகொத்து *naḍavu-kottu*, பெ. (n.), 1. வயல் நடுகைக்காக கொடுக்கப்படும் கூலி; wage for transplantation of seedlings 2. வயல் நடுகைக்காக ஒதுக்கப்படும் நடவு ஆட்கள்; labourers allocated for transplantation in a field. "*நடவு கொத்துக்கு கூலியை கொடுத்து அனுப்புங்கள்*" (உ. வ.).

[நடு → நடவு + கொத்து.]

கொற்று → கொத்து = கூலி.

நடவுசெய்¹–தல் *naḍavu-šey-*, 1செ. குன்றாவி. (v.t.), அரசாளுதல் (நான்மணி. 95. உரை.); to rule, govern.

[நட= நடத்து.

நட → நடவு.]

மக்கள்தரும் வரிப்பணம்பெற்ற மன்னன், அவர்க்கு நன்மை நடக்குமாறு செய்து, ஆட்சி புரிதல்.

நடவுசெய்²–தல் *naḍavu-śey,* 1.செ. கு. வி. (v.i.) நாற்று நடுதல்; to transplant seedlings. நடவு செய்தலில் இடைவெளி இருந்தால்தான், நடவுப்பயிர் செழிக்கும் (இ.வ.).

மறுவ. நடவுபோடு.

[நடவு + செய்–.]

முதற்கண் விதைக்கப்பட்ட நாற்றங்காலில் இருந்து, நாற்றுகளைப் பிடுங்கி நடுதல்.

நடவுதொளி *naḍavu-toḷi,* பெ. (n.) நாற்று நடுவதற்குமுன் வயலைச் சேறாகக் கலக்குகை; to making fit by slash the field for transplantion

[நடவு + தொளி = நன்கு சேறாக்கிப் பதப்படுத்திய வயல்.]

நடவுதொளியடித்–தல் *naḍavu-toḷi-y-aḍi-,* 4.செ. குன்றாவி. (v.t.) நாற்று நடுவதற்குமுன் வயலைச் சேறாகக் கலக்குதல்; to plough a flooded field before transplantion.

[நடவுதொளி + அடி–.]

நடவுப்பயிர் *naḍavu-p-payir,* பெ. (n.), 1. நடுவதற்கு அணியமாக வைக்கப்பட்ட நாற்று; crop which is kept ready for transplantation. நடவுப்பயிரின் வேரை அறுபடாமல் பிடுங்கு (உ.வ.). 2. முதலில் நட்ட பயிர்; crop that has been transplanted once only. இயற்கை உரம் போட்டால்தான் நடவுப்பயிர் செழிக்கும் (உ.வ.).

[நடவு + பயிர்.]

நடவுபோடு–தல் *naḍavu-pōḍu-,* 20.செ. கு. வி. (v.i.) நாற்று நடுதல்; to transplant seedlings. "*அடியுரம் போட்டு நடவுபோடுதலே, நல்ல விளைச்சலுக்கு அறிகுறி*" (மது.வழ.).

[நடவு + போ(க)டு–.]

போகு + அடுதல் = போகடுதல். இடைக்குறையாக இச் சொல் தமிழில் வழங்கிவருகிறது. ஒ.நோ. ஆயினால் → ஆனால்.

நடவை¹ *naḍavai,* பெ. (n), 1. வழி; path, road, way. "*கான்யாற்று நடவை*" (மலைபடு. 214.). 2. கடவைமரம் (பிங்.); turnstile. 3. வழங்குமிடம்; extent of country, as where a language prevails. "*தலைமைவளர் தமிழ் நடவை யெல்லை*" (சேதுபு. திருநாட்.1.). 4. வழிவகை; plan, scheme. "*நல்வரங்கொள்ளு நடவையொன் றியம்புவன்*" (சேதுபு. மங்கல. 69.).

க., நடவெ தெ. நடவ.

[நள் → நடு → நடவை.]

நடவை² *naḍavai,* பெ. (n.). 1. *நடவு* பார்க்க; see *naḍavu* 2. நுணா (மலை); small dyeing mulberry.

நடன் *naḍaṉ,* தொ. பெ. (vbl. n.) கூத்தாடுபவர்; dancer. "*வளிநடன் மெல்லிணர்ப் பூங்கொடி மேவர நுடங்க*" (பரிபா. 22. 42.).

த. நடன் → skt naa.

[நள் → நளி → நடி. நடித்தல் = ஒத்துச்செய்தல். நடி + அம் → நடம் → நடன்.]

நடம் என்னும் தொழிற் பெயரினின்று, நடன் என்னும் ஆண்பாற்பெயர் தோன்றும். (செ.ப.அ.சீ.கே.பக்.34.).

நடனக்கருமூலி *nadana-k-karumūli,* பெ. (n) தலைச்சுருளி; indian birth wort.

நடனச்சுழலான் *nadana-c-culalān,* பெ. (n) சுழல்வண்டு; a kind of whirling beetle.

நடனமாடுவதுபோல் சுழன்று பறக்கும் வண்டாக இருக்கலாம்.

நடனசாலை *nadana-šālai,* பெ. (n.), கூத்துப் பயிலிடம்; dancing hall.

[நடனம் + சாலை.]

நடனசிகாமணி *nadana-šigāmani,* பெ. (n.), நடனத்தில் சிறந்தவர்க்கு அளிக்கப்பெறும் பட்டம்; title confered for dancing ability.

[நடனம் + skt.சிகைசிகா + மணி.]

நடனத்தோற்றம் *nadana-t-tōtram,* பெ. (n.), 1. நடனமாடுபவரின் பல்வேறு நிலைகள்; dance postures 2. *நடனமுத்திரை* பார்க்க; see *nadana-muttirai.*

[நடனம் + தோற்றம்.]

நடனநடை *nadana-nadai,* பெ. (n.), அசைந்தாடி நடக்கும் நடை (பாண்டி.); a kind of ambling gait.

[நடனம் + நடை=நடனமாடுவதுபோல், அசைந்து,அசைந்து நடக்கும் நடை.]

நடனப்புயல் *nadana-p-puyal,* பெ. (n). விரைவாக நடனம் ஆடுபவர்; dancer who dance very fast

[நடனம் + புயல்.]

புயல்போல் சுழன்று வேகமாக ஆடுபவர்.

நடனபுலன் *nadanapulan,* பெ. (n.), அரிதாரம்; yellow orpiment

நடனம் *nadanam,* பெ. (n). 1. கூத்து; dancing, acting 2. குதிரைக்கதி; gaits of a horse. *"பதினெட்டு நடனத்தொழில் பயிற்றி"* (கொண்டல் விடு. 176.). 3. பாசாங்கு; pretence, hypocritical act. 4. மாயவித்தை; jugglery, magic. *"நன்று நன்று நீ நம்முனர்க் காட்டிய நடனம்"* (கந்தபு. அவைபுகு. 87.).

த. நடனம் → skt naṭana. நட்டன.

[நடி + அனம் → நடனம்.]

ஒ.நோ. படி +அனம் → படனம். நள் → நளி.

நடித்தல் = ஒத்துச்செய்தல். நாடகக் கலையின் முத்திறப்பாடுகளுள், நடனம் என்பதும் ஒன்றாகும். *'நடி'* என்னும் முதனிலை வடமொழியில் இல்லை. நிருத்த என்னும் சொல்லின் *"ந்ருத்"* என்னும் அடியையே முதனிலையாக, வடவர் ஆள்வர். இதுபற்றி மொழிஞாயிறு கூறுங்கால், *"தமிழ்நடனமே இன்று பரதநாட்டியம் என்று வழங்குகின்றது. வடமொழியில், பரதசாத்திரம் கி.மு.4-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. ஆனால், அதற்கும் முந்தியது தமிழ்ப்பரதமேயாகும்"* (தமி.நாகரி.பண்பாடு.பக்.117.).

நடனம் என்பது அழகுற ஆடுவது. அது நூற்றெட்டு உடற்கரணங்களோடும், கை, கால், கண், வாய் முதலிய உறுப்புகளின் தொழில்களோடும் கூடியது. கைவினைகள், எழிற்கை, தொழிற்கை, பொருட்கை, என முத்திறப்பட்டு, பிண்டி அல்லது இணையா வினைக்கையெனப்படும்.

ஒற்றைக்கைவண்ணம் முப்பத்து மூன்றும், பிணையல் அல்லது இணைக்கை யெனப்படும் பொருள்பொதிந்த இரட்டைக் கைவண்ணம் பதினைந்தும், கொண்டனவாகும்.

நடம், நடனம் என்னும் தென்சொற்கள், வடமொழியில் நட்ட, நட்டன என்று வலிக்கும்.

உள்ளத்தெழும் உணர்வுகளையும், வாழ்வியல் அசைவுகளையும், 108 மெய்ப்பாடுகள் வாயிலாக வெளிப்படுத்துவதே, நடனம். இதுவே தமிழ்ப்பரதம் என்றழைக்கப்படும். பரதநாட்டியம் என்னும் பெயரில், அகமலர, முகமலர அனைவராலும் கண்டுகளிக்கப்பெரும் நடனமும், இஃதே. வடமொழியில் இயற்றப்பட்ட பரதநூலிற்கு முந்தியது. இத் தமிழ் நடனம், கி.மு. 3. ஆம் நூற்றாண்டிற்கும், அப்பாற்பட்டது. அடியார்க்கு நல்லார் இயற்றிய, சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் காணப்படும், தமிழ்ப்பரதம் பற்றிய குறிப்பு வருமாறு:

"*நாடகத்தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம், முதலாகவுள்ள தொன்னூல்களுமிறந்தன*" மேற்குறித்த ஏதுக்களால், நடி என்னும் முதனிலைத் தொழிற்பெயரினின்று தோன்றிய சொல்லே, நடனம் என்று அறியலாம். இந் நடனமே தமிழ்ப்பரதம். அடியார்க்கு நல்லார் உரைப்பதும், இத் தமிழ் நடனத்தையே என்றறிக.

நடனமுத்திரை *nadana-muttirai,* பெ. (n.). *நடன மெய்ப்பாடு* பார்க்க; see *nadana-mey-p-pādu*

[நடனம் + முத்திரை.]

நடனமெய்ப்பாடு *nadana-mey-p-pādu,* பெ. (n.), அகவுணர்வுகளை அனைவரும் அறியும் வண்ணம், முகத்தின் மூலமும், கைகால் முதலான, உடலுறுப்புகள் வழியாகவும் நின்றும், இருந்தும், கிடந்தும், விறல்பட வெளிப்படுத்தும் திறன் அல்லது பாங்கு; the various kinds of dance postures.

மறுவ. நடனக்கை.

நளிநயம்.

நடனமுத்திரை.

[நடனம் + மெய்ப்பாடு.]

நடனமெய்ப்பாடுகளை, நம்நாட்டுச்சிற்பியர், கவின்கலைகளின் அருங்காட்சியகங்களாகத் திகழும், திருக்கோவில்களில், திறம்படச் செதுக்கி யுள்ளனர்.

நடனக்கலையின் இலக்கணத்தைத் தெள்ளிதிற் றெரிவிக்கும் கருவூலங்களாகச் நடனச்சிற்பங்கள் மிளிர்கின்றன.

தில்லைத் திருக்கோயிற் கோபுரத்தில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள், நடனமெய்ப் பாட்டு மரபிலக்கணத்தினின்று, சிறிதும் வழுவா வண்ணம் வடிக்கப்பட்டுள்ளன. இச் சிற்பங்கள், நடனமுத்திரை நளினங்களை நன்கு வெளிப்படுத்துகின்றன. இந் நடன முத்திரைகள் அனைத்தும், ஆடற்கலை இலக்கணத்தை நன்குணர்ந்து நடன மெய்ப்பாட்டினையும், அழகுணர்ச்சியையும், வேண்டிய அளவிற்கு இழைத்தும், குழைத்தும் எழுதப்பட்ட இலக்கியமாக, இலங்குகின்றன எனின் மிகையன்று.

இந் நடனமெய்ப்பாட்டுச் சிற்பங்கள், எப் பொருளில் எவ் விடத்தில், எதற்காக அமைக்கப்பட்டுள்ளனவோ, அவ்வவற்றிற்கு ஏற்றவாறு, ஒடித்தும், வளைத்தும், நெளித்தும், கைகளையும், கால்களையும் பலஅமைதிகளில், காட்டியுள்ள பாங்கு, கண்ணுறுவோர்தம் உள்ளத்துணர்வுகளை, உரைக்கும் பான்மையிற் செதுக்கப்பட்டுள்ளன.

இக் கவினுறு நடனமுத்திரைச் சிற்பங்களைச் சிற்பி கல்லில் வடிக்குங்கால், கண்டு களிப்போருக்கு, அவர்தம் கலையழகை மட்டுமன்றிச் சிற்பத்தின் உட்கிடையை, வாழ்வியலுடன் இணைத்துக் காணும் பெரும்பேற்றினை நல்குகின்றான் எனின், மிகையன்று

இத்தகைய கலைவேள்வியில் தன்னை மறந்துசிற்பி ஈடுபடுங்கால், நடன மெய்ப்பாட்டுச் சிற்பங்களை, இயல்புக்கு மீறிச் சற்று மிகையாக அமைக்கவேண்டிய சூழலுக்குத் தள்ளப் படுகின்றான். இதனால் நடனக் கை காட்டும் நளினமுத்திரைகள், விளக்கமுறுகின்றன. இருக்கைகள் (ஆசனங்கள்), இயல்புடன் மிளிர்கின்றன. உடல்வளைவுகள், ஈடு இணையில்லா அழகினை வாரியிறைக்கின்றன. மொத்தத்தில் ஏற்றமுறும் இத்தகைய நடனஇலக்கியச்சிற்பங்களே, சிற்பக்கலை இலக்கணநூல்கட்கு நாற்றங்காலாய்த் திகழ்கின்றன.

நடனமுத்திரைச் சிற்பங்களில், காணப்படும் நடனமெய்ப்பாடு முத்திரைகள், 32 வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இத்தகைய முத்திரைகளை நம்நாட்டுச்சிற்பிகள் '*கைஅமைதி*' என்றும், '*எழிற்கை*' என்றும், '*சிற்பக்கை*' என்றும், '*முத்திரை*' என்றும், தொழிற்கை என்றும் வகைப்படுத்தியுள்ளனர்.

32 வகை நடனமெய்ப்பாட்டினை நவிலும், ஆடல்முத்திரைகள் வருமாறு:–

1. காக்கும் (அபயக்)கை.
2. வழங்கும்கை (வரத)முத்திரை.
3. அரிமாக்காது (சிம்கர்ண)முத்திரை.
4. வணங்கும் (அஞ்சலிக்)கை.
5. விளக்கும் அல்லது கற்பிக்கும் (வியாக்யானக்) கை.
6. நிலத்தைத் தொடும் கை (பூ ஸ்பரிச முத்திரை).
7. மலர்ந்த ....தாமரைக் கை.
8. தும்பிக் (கெஜக்)கை.
9. தொங்கும் கை (டோல அஸ்தம்).
10. துடிக் (டமருகக்)கை.
11. அணைக்கும் (ஆலிங்கனக்)கை.
12. தொடைக் (ஊரு)கை.
13. சுழற்கை (விவர்த்தித அஸ்தம்).
14. நண்டுப்பிடி (கடக)முத்திரை.
15. அச்சுறுத்தும் (தர்ஜனி)கை.
16. கத்தரிக்கோல் (கர்த்தரீ)முத்திரை.
17. வியப்பு (விஸ்மய)முத்திரை.
18. மெய்யறிவு (ஞான)முத்திரை.
19. சிந்தனைக் (தியான)கை.
20. பிறைக் (அர்த்தச்சந்திரக்)கை.
21. சுட்டும் (சூசி)முத்திரை.
22. அரைக்கொடி (அர்த்தபதாக)முத்திரை.
23. அழைத்து வழங்கும் கை (ஆகூய வரத(ம்))முத்திரை.
24. முட்டி (முஷ்டி)முத்திரை.
25. ஊன்றிய (நித்ரா)முத்திரை.
26. தளிர்க் (பல்லவக்)கை.
27. விற்பிடி (தனுர்)முத்திரை.
28. அடிக்கும் (தாடன)முத்திரை.
29. எழிற்கை (சுந்தரஹஸ்த).
30. நீட்டிய (தண்டஅஸ்தம்)கை.
31. இடைக்கை (கடி அஸ்தம்).
32. அறவாழிக்கை =(தர்மசக்கர அஸ்தம்.)

நடனமெய்ப்பாடு

கத்தரிக்கோல் முத்திரை



வியப்பு முத்திரை

மெய்யறிவு முத்திரை



சிந்தனைக் கை

பிறைக் கை

சுட்டும் முத்திரை

அரைக்கொடி முத்திரை

அழைத்து வழங்கும் கை

முட்டி முத்திரை



ஊன்றிய முத்திரை

தளிர்க் கை

விற்படி முத்திரை



அடிக்கும் முத்திரை

எழிற்கை



நீட்டிய கை

இடைக்கை

அறவாழிக்கை

நடனமெய்ப்பாடு

காக்கும் கை

வழங்கும் கை முத்திரை

அரிமாக்காது முத்திரை

வணங்கும் கை

விளக்கும் கை

நிலத்தைத் தொடும் கை

மலர்ந்த தாமரைக் கை



தும்பிக் கை

தொங்கும் கை

துடிக் கை

அணைக்கும் கை

தொடைக் கை

சுழற்கை

நண்டுப்பிடி முத்திரை



அச்சுறுத்தும் கை



நடனன் *nadanan,* பெ. (n.), 1. நடனமாடுபவன்; dancer. 2. *நடிகன்* பார்க்க. see *nadigan.* "*நடனன் பாங்குற நடிப்பது*" (இரகு. குசனயோத்தி.98.).

[நடனம் → நடனன்.]

நடனியர் *nadaniyar,* பெ. (n.), கூத்தியர்; dancing girls. "*நடித்தெதிர் நடந்த தன்றே நடனியர் தம்மின் மன்னோர்*" (இரகு. ஆற்று. 20.).

நடாத்து-தல் *nadāttu-,* 5.செ. குன்றாவி. (v.t.), நடத்துதல்; to cause to walk.

[நட → நடத்து → நடாத்து–.]

ஒ.நோ: கடவுதல் → கடாவுதல்.

நடாதூரம்மான் *nadātūr-ammān,* பெ. (n.), இராமானுசாச்சாரியரின் சீடருள் ஒருவராகிய, ஒரு மாலிய ஆசிரியர்; a māliya āccāryar the disciple of Rāmānujar.

[நடாதூரர் + அம்மான்.]

நடாந்திகை *nadāndigai,* பெ. (n.), நாணம் (இலச்சை); sense of shame.

நடாவு-தல் *nadāvu-,* 5. செ. குன்றாவி. (v.t.), *நடவு* பார்க்க; see *nadavu.* "*இருளால் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்*" (திவ். இயற்.திருவிருத். 33.).

[நடவு> நடாவு–.]

நடி¹-த்தல் *nadi-,* 4.செ. கு. வி. (v.i.), 1. கூத்தாடுதல்; to dance, to act, on the stage. "*நடிக்குமயி லென்னவரு நவ்விவிழியாரும்*" (கம்பரா. வரைக்காட்சி. 15.). 2. கோலங் கொள்ளுதல்; to assume manifestations or forms, as a deity. "*நடித்தெதிர் நடந்ததன்றே*" (இரகு. ஆற்று. 20.). 3. பாசாங்கு செய்தல்; to make pretence, affect importance. "*நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து*" (திருவாச. 41:3.).

த. நடி → skt. naṭa.

[நள் → நடி –.]

நடி² *nadi,* பெ. (n.), நடனப் பெண்; dancing girl.

த. நடி > Skt நடீ (naṭī.)

[நள் → நளி → நடி.]

நடி³ *nadi,* முதனிலைத்தொ.பெ. (vbl.n.), ஆட்டம்; dancing "*நடிகொள் நன்மயில்சேர் திருநாரையூர்*" (தேவா.216:5.).

த. நடி → Skt. நடீ (நட்டீ) pkt. ந்ருத்.

[நள் → நளி → நடி.]

ஒ.நோ. களிறு → கடிறு.] விருந்தாளி → விருந்தாடி

'*நள்*' எனும் பொருந்துதற்கருத்தினின்று கிளைத்த முதனிலையாகும்.

அடி, கடி, பிடி என்னுஞ்சொற்களைப் போன்றே, நடி என்பதும், தமிழில் ஆட்டம் என்னும் பொருளில் முதனிலைத் தொழிற்பெயராய் வழங்கும்.

(எ.டு) *"நடிகொள் நன்மயில்சேர் திருநாரையூர்"* (தேவா.216:5).

பொதுவாக, முதனிலையினின்றே தொழிற்பெயர் திரிக்கப்படும். ஆயின், செ.ப. கழகத் தமிழகராமுதலி, தொழிற்பெயரினின்று முதனிலையைத் திரிக்கின்றது.

(எ.டு) நடம் → நடி.

நள்ளுதல் = பொருந்துதல்.

நள் → நளிதல் = ஒத்தல். நள் → நடி. நடித்தல் = ஒத்துச்செய்தல்.

வடவர் *'நட்ட'* என்னும் பிராகிருத வடிவினின்று. நாட்டியம் என்னும் சொல் தோன்றியதென்பர். இதற்கு *'ந்ருத்'* என்னும் வேரினை மூலமாகக் காட்டுவர். *"ந்ருத்"* என்னும் முதனிலைக்கு வேர்ப்பொருளே இல்லை.

மா.வி. அகரமுதலியிலும், *'ந்ருத்'* என்னும் முதனிலைக்கு சரியான வேர்ப்பொருளில்லை. *'நடி'* என்னும் பகுதியினின்று தோன்றியுள்ள எல்லாச்சொற்களுக்கும் மூலமாக, *'ந்ருத்'* என்பதையே வேரடியாகக் காட்டுகிறது.

ந்ருத் → ந்ருத்த(வ) → நட்டணம்(த).
நட்டணம் → நட்டம் → நடம் →நடி.

நடம் என்னும் தொழிற்பெயரினின்று, நடன் என்னும் ஆண்பாற் பெயரும், நடி(பிங்.) என்னும் பெண்பாற்பெயரும் தோன்றும்.

நடிகன், நடிகை என்னும் இருபாற்பெயரும், முறையே, naṭika, naṭikā என்னும் வடசொல்லின் திரிபாகச், சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலியிற் குறிக்கப்பட்டுள்ளது.

ஒருவன் தன்னிடம் இல்லாததை, இருப்பதாகக் காட்டிப் பாசாங்கு செய்யுங்கால், *"கூத்தாடுகின்றான்"* என்று கூறாமல், *"நடிக்கின்றான்"* என்றே, நாட்டுப்புறமக்கள் இன்றும் நவில்கின்றனர். கல்லாதார் நாவிலும் இன்றைய மக்கள்தம் வாழ்வியலிலும் வழக்கூன்றியுள்ள தொடர்கள் வருமாறு:-

1. 'நடித்து மயக்குவதில் கைதேர்ந்தவன். 2. 'நடித்துப் பணம் பறிப்பதில் அவள் கெட்டிக்காரி. 3. 'நடிக்கிற வேலை நம்(ம)கிட்ட வேண்டாம் 4. 'இந்த நடிப்பெல்லாம் இங்கு எடுபடாது.

இயன்மொழியாம் தமிழில் 'நடி' எவ்வாறு மக்களிடையே வழக்கூன்றி யுள்ளதற்கான சான்றுகள் வருமாறு.

(எ.டு.) நள் → நளி → நடி + அம் → நடம்.

(ஒ.நோ.) குறி + அம் → குறம்.

நடி → நடம் → நட்டம் → நட்ட(பி) → ந்ருத்த(வ)→ ந்ருத்.

த. → படி → வ. பிரதி.

(ஒ.நோ.) வள் → வட்டு → வட்டம் → வட்ட(பி) → வ்ருத்த(வ) (நடு) நடி + அனம் → நடனம். படம் → பட்டம் = துணி. படி + அனம் → படனம் → நடனம் → நடலம்(கொச்சை).

(நடு) நடி + அகம் → நாடகம் ஒ.நோ. படி + அகம் → பாடகம் (செ.பல்.அக.சீ.கே.பக்.33.).

மேற்குறித்த சொற்பிறப்பு எடுத்துக் காட்டுகளும் ஒப்புநோக்கும், *"நடி"* எனும் தமிழ் மொழியின் முதனிலையினின்றே, *"ந்ருத்"* என்னும் வடமொழி வேரினை அமைத்துக் கொண்டதைக் காட்டும்.

1. தமிழகத்தில் நடிப்பு, நடி என்னும் சொற்கள் வழக்கூன்றி இருந்தமைக்குக் கீழ்க்கண்ட வழக்குகள் நற்சான்று படைக்கின்றன. 1. உனக்கு ஒன்றுமே தெரியாதது போல் நடிக்கிறாயே 2. வருமானவரி அதிகாரிபோல் நடித்துக் கையூட்டு வாங்கியவர் பிடிபட்டார். 3. அந்த நடிகரின் நடிப்பு இந்தப்படத்தில் தரக்குறைவாக இருந்தது. 4. ஒன்றுந் தெரியாததுபோல் நடிக்காதே. 5. கவர்ச்சி நடிகையின் நடிப்பு எடுபடவில்லை. 6. அவளுடைய நடிப்பில் மயங்கிவிடாதே மேற்குறித்த வழக்குகள் *'நடி'* என்னும்

முதனிலை, மாந்தர்தம் வாழ்வியலில் முதன்மை பெற்று விளங்கியதைத் தெரிவிக்கின்றன.

நடி என்னும் முதனிலைத் தொழிற்பெயரினின்றே நடம், நடிப்பு, நடித்தல், நடிகன், நடிகை, நாடகம், நடனம், நடனன் போன்ற சொற்கள் தோன்றியுள்ளன.

'ந்ருத்' என்ற சொல்லிற்கு அடிப்படைப் பொருள், வடமொழியில் ஏதுமில்லை.

தமிழ்மொழியில் தேவாரம், திருவாசகம், திருவருட்பா, கந்தரலங்காரம் போன்ற பத்திப் பனுவல்களில், இச் சொல் வழக்கூன்றியுள்ளது. (எ.டு.) 1. நடிகொள் நன்மயில் சேர் திருநாரையூர் (தேவா.216:5.). 2. நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து (திருவாச.2:11.). 3. நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பல செய்து (திருவாச.41:3:1.). 4. பொன்தரத்தை என் உரைக்கேன் பொற்பொதுவில் நடிக்கின்றோய்(திருவருட்பா). 5. நடிக்கின்றிலை நெஞ்சே தஞ்சமது நமக்கினியே. (கந்தரலங்காரம்.)

மக்கள் வழக்கிலும், பத்திப்பனுவலியற்றிய அருளாளர்தம் பாக்களிலும், இச் சொல் வழக்கூன்றியுள்ளதாலும், வடமொழியாளர் நடி என்னும் முதனிலைக்குக் காட்டும் '*ந்ருத்*' என்னும் வேரடிக்கு வடமொழியில் அடிப்படைப் பொருள் ஏதுமில்லை என்பதாலும், இச்சொல் தமிழ்ச்சொலென்று தெளிக.

நடிகன் *naḍigaṉ,* பெ. (n.), நாடகமேடையிலும் திரைப்படத்திலும் நடிப்பவன்; actor.

[நடி → நடிகன்.]

நடிகை *naḍigai,* பெ. (n.), நாடகமேடையிலும் திரைப்படத்திலும் நடிப்பவள்; actress.

[நடி + கை → நடிகை.

(ஒ.நோ. கணி → கணிகை.]

நடு¹-தல் *naḍu-,* 18 செ. குன்றாவி. (v.t.) 1. ஊன்றுதல்; to set up, as a pillar. "*நடவுந்த வுழவரிது நடவொணாவகை பரலாய்த் தென்று*" (தேவா. 133:8.). 2. வைத்தல்; to place. "*திருவடி யென்றலைமே னட்டமையால்*" (திருவாச. 40,8.). 3. நிலைநிறுத்துதல்; to establish as fame. "*மண்ணின்மேல்வான்புகழ் நட்டானும்*" (திரிகடு.16.).

க., நடு. தெ., நாடு. ம., நடுக. து. நடபினி.

[நெடு → நடு.]

மேனோக்கிய நீளவாட்டில் ஊன்றுதல்

நடு²-த்தல் *naḍu-,* 4 செ.கு.வி. (v.i.), நடுங்குதல்; to tremble "*நடுத்திருக்கும்*" (சங்கர. அந்தாதி.20.).

நடு³ *naḍu,* பெ. (n.), 1. இடை; middle "*நடுவூரு ணச்சுமரம் பழுத்தற்று*" (குறள், 1008.). 2. நடுவம் (அரு. நி.); centre 3. இடைப்பட்டது; that which is intermediate, as in place or time, that which intervenes. 4. வானத்தின் உச்சி; zenith, topmost part of the heavens "*காலைக் கதிரோனடுவுற்றதொர் வெம்மை காட்டி*" (கம்பரா. நகர்நீங்கு. 123.). 5. உள்ளமுறை கடவுள்; indwelling God "*கெடுவில் கேள்வியு ணடுவாகுதலும்*" (பரிபா.2.25.). 6. இடுப்பு; waist "*நடுங்க நுடங்கு நடுவுடைய விடங்கா லயிற்கண்ணி*" (திருக்கோ. 31.). 7. நடுநிலை; impartiality, uprightness. "*நடுவாக நன்றிக்கட் டங்கியான் றாழ்வு*" (குறள் 117.). 8. அறம் (வின்.); equity justice. 9. மீதம், medium, moderation. 10. வழக்கு.(வின்.); lawsuit. 11. நிலம்; earth, as the middle world. 12. புருவநடு; space between the eye brows.

க., து., நடு. தெ., நடுமு. ம. நடு.

[நள் → நட்டு → நடு.]

(ஒ.நோ.) வள் → வட்டு → வடு.

நடு⁴ *nadu,* பெ. (n.), 1. கல்லுப்பு; stone-salt. 2. பாறையுப்பு; rock-salt.

நடுஅண்டம் *nadu-andam,* பெ. (n.), *நடுவண்டம்* பார்க்க; see *nadu-v-andam.*

[நடு + அண்டம்.]

நடுக்கட்டு¹-தல் *nadu-k-kattu-,* 5. செ. குன்றாவி. (v.t.) உடைமையைப் பொதுக் கட்டுதல் (யாழ்ப்.); to sequestrate property

[நடு + கட்டு-.]

நடுக்கட்டு² *nadu-k-kattu,* பெ. (n), 1. மகப்பேற்றுக்குப்பின் பெண்களுக்குக்கட்டும் இடுப்புக்கட்டு; a bandage tide round the waist of a woman in labour. 2. இடுப்பிற்கு வலிவும் ஆண்மையுமுண்டாக்கும் அரைக் கச்சை; waist belt which not only gives strength to the hip. but also promotes manly power.

[நடு=இடுப்பு. நடு + கட்டு.]

நடுக்கட்டு³ *nadu-k-kattu,* பெ. (n), 1. அரைக்கச்சை; girdle. 2. பெரிய வீட்டின் நடுவிலுள்ள பகுதி; middle portion of a large house

[நடு + கட்டு.]

க., நடுக்கட்டு. ம. நடுக்கெட்டு.

அரண்மனை போன்ற பெரியமாளிகை அல்லது, நாட்டுக்கோட்டைச் செட்டிமார் இல்லங்களில் அமைந்த இடைப்பகுதியே, நடுக்கட்டு. உடம்பின் நடுவிடமான இடையில் கட்டும் கச்சும் நடுக்கட்டே யாகும்.

நடுக்கண் *nadukkan.* பெ. (n.), கண்ணின் நடுப்பகுதி; middle of the eye.

[நடு + கண்.]



நடுக்கண்டம்¹ *nadu-k-kandam,* பெ. (n), 1. நடுத்துண்டு; middle piece. 2. இடை மண்டலம்; central portion of a continent

[நடு + கண்டம்.]

நடுக்கண்டம்² *nadu-k-kandam,* பெ. (n), தலைக்கும் இடுப்பிற்கும் இடையிலுள்ள பகுதி; that part of the body between the head and buttocks

[நடு + கண்டம். நடு = இடை.]

நடுக்கம் *nadukkam,* பெ. (n.), 1. நடுங்குகை; trembling, sharing, quaking, shivering. "*மின்னையுற்ற நடுக்கத்து மேனியாள்*" (கம்பரா. நகர்நீங்கு. 220.). 2. மிக்க அச்சம்; agitation, trepidation, great fear "*நள்ளிர விடையுறும் நடுக்க நீங்கலார்*" (கம்பரா. மாரீச. 120). 3. துன்பம்; distress. "*நாட்பட்டலைந்த நடுக்க*

மெலாந் தீர" (தாயு. பராபர. 260.). 4. கிறுகிறுப்பு (யாழ்.அக.); dizziness. 5. மயக்கம் (யாழ்.அக.); giddiness.

க. நடுக. ம. நடுக்கம்.

[நடுக்கு → நடுக்கம்.]

நடுக்கல் *naḍukkal,* பெ. (n.) 1. *நடுக்கம்* பார்க்க; see *naḍukkam.* 2. *நடுக்குவாதம்*² பார்க்க; see *naḍukku-vādam*².

[நடுக்கு + நடுக்கல்.]

நடுக்கல்முடக்குநோய், *naḍukkal-muḍakku-nōy,* பெ. (n), உடல் வெதும்பி, பிடரியிலும், தலையிலும் நடுக்கத்தை ஏற்படுத்திக் கை கால்களில் உதறலை உருவாக்கி, சொல் தடுமாறி, முகமும் விழியும் கருத்து, கண் சுழித்து, நிலைகொட்டித் துன்புறுத்தும் நோய்; a persistant tremor resenbling that of paralysis.

நடுக்கல்வாதம் *naḍukkal-vādam,* பெ. (n.). *நடுக்கல் முடக்கு நோய்* பார்க்க; see *naḍukkal-muḍakku-nōy.*

மறுவ. உதறுவாதம்.

[நடுக்கல் + skt. வாதம்.]

நடுக்கல்வாந்தி *naḍukkal-vāndi,* பெ. (n.) நோய்வகை (பாலவா.167.); a disease.

[நடுக்கல் + வாந்தி.]

நடுக்கற்காய்ச்சல் *naḍukkaṟ-kāyccal,* பெ.(n.) குளிர் சுரம்; fever marked by a child followed by high fever and sweating.

[நடுக்கல் + காய்ச்சல்.]

நடுக்கற்சுரம் *naḍukkaṟ-šuram,* பெ. (n) *நடுக்கற் காய்ச்சல்* பார்க்க; see *naḍukkaṟ-kāyccal.*

[நடுக்கல் + சுரம்.]

சுரம் பாலையின் பண்பாக அகப்பொருள் கூறுதல் காண்க. சுர் → (சுரீர் → சுரம். இக்காலத்தே இதனை ஜுரம் என்று தமிழர் மாற்றி வழங்குகின்றனர். ஒ.நோ. சவளி → ஜவுளி.

நடுக்காது *naḍu-k-kādu,* பெ. (n.) காதின் நடு; middle ear.

[நடு + காது.]



நடுக்காரன் *naḍu-k-kāraṉ,* பெ. (n.), நடுவன்(யாழ்ப்.); umpire, arbitrator.

மறுவ. நொதுமலாளன், காரணிகர்.

[நடு + காரன்.]

விளையாட்டில் அல்லது முறை மன்றத்தில், இருஅணிகளின் ஆட்டத்தைக் கூர்ந்து நோக்கித் தீர்ப்புத் தருபவன்.

நடுக்கால் *naḍukkāl,* பெ. (n.), சமக்காற்று; one of the ten vital airs of the body.

[நடு + கால்.]

கால் = காற்று.

உடலுள் பத்துவகைக் காற்று உள்ளதாகப் பழைய பகுப்புண்டு. அவற்றுள் ஒன்றாகும்.

நடுக்கிளி *nadu-k-kili*, பெ. (n.), 1. கிளித்தட்டில் கோட்டில் நின்று கிளியைத் தடுப்பவன்; player standing on the border lines of the square to defend it in the game of kiḷi-t-taṭṭu 2. கிளியாட்டத் தலைவன்; (வின்.). the captain in kiḷi-t-taṭṭu.

[நடு + கிளி.]

நடுக்கு[1]-தல் *naḍukku-*, 5.செ. கு. வி. (v.i.), 1. நடுங்குதல்; to shiver, tremble. '*வயது முதிர்ச்சியினால் தாத்தாவின் உடல் நடுங்குகிறது*' (உ. வ.).

[நடு → நடுக்கு-.]

நடுக்கு[2]-தல் *naḍukku-*, 5. செ. கு. வி. (v.t.), 1. நடுங்கச் செய்தல்; to shake, cause to quiver. குளிர் உடலை நடுக்குகின்றது (உ. வ.). 2. மயக்கங் கொடுத்தல் (வின்.); to cause dizziness or sickness, as betel, tobacco.

[நடுங்கு (த.வி.) → நடுக்கு (பி.வி.).]

நடுக்கு[3] *naḍukku*, பெ. (n.), 1. *நடுக்கம்* பார்க்க; see *naḍukkam*. "*முழுதுசேண் விளங்கி நடுக்கின்றி நிலியரோ*" (புறநா. 2.). 2. மனச் சோர்வு; mental agitation. "*நடுக்கற்ற காட்சியார்*" (ஆசாரக். 100).

க. நடுகு.

[நடுக்கம் → நடுக்கு.]

நடுக்குக்காய்ச்சல் *naḍukku-k-kāyccal*, பெ. (n.), *நடுக்கற்காய்ச்சல்* பார்க்க; see *naḍukkaṟ-kāyccal*

[நடுங்கு → நடுக்கு + காய்ச்சல்.]

நடுக்குசன்னி *naḍukku-šaṉṉi*, பெ. (n.), அடிக்கடி தூக்கிப் போடும் இசிவுநோய் வகை; a disease of the spinal cord. Locomotor ataxia.

மறுவ. நடுக்கு இசிவு.

[நடுங்கு → நடுக்கு + skt. சன்னி.]

நடுக்குடி *naḍu-k-kuḍi*, பெ. (n.), 1. நடு நிலைமையிலுள்ள குடும்பம்; a family of middling circumstances or rank. 2. ஒரு வகுப்பின் தலைமைக்குடி. (யாழ்ப்.); the leading family of a tribe or class. 3. நடுவூர்க்குடி. (யாழ். அக.); house is the centre of a village

[நடு + குடி.]

நடுக்குண்ணல் *naḍukkuṇṇal*, பெ. (n.), நடுக்கமுண்டாதல்; being attended with shivering.

[நடுக்கு + உண்ணல்.]

உண்ணல் ஈண்டு, உள்ளதன் அல்லது இருப்பும் பொருளில் வருகிறது.

ஒ.நோ. நெருக்குண்டேன்; அடியுண்டேன்; சோறுண்டேன்.

நடுக்குத்துக்கால் *naḍu-k-kuttu-k-kāl*, பெ. (n.), மோட்டுவளையைத் தாங்க உத்தரத்தின் மேல்பதிக்கப்பட்ட நடுக்கால் (இ.வ.); king-post, vertical post set on a

horizontal beam, connecting the two walls to support ridge pieces.

[நடு + குத்து + கால்.]



நடுக்குப்பக்கவாதம் *naḍukku-p-pakka-vādam,* பெ. (n.), *நடுக்குசன்னி* பார்க்க; see *naḍukku-šaṉṉi.*

[நடுக்கு + பக்க + Skt. வாதம்.]

skt. *வாதம் = த.முடக்கு நோய். வலிப்பு நோய்.*

நடுக்குப்பித்தம் *naḍukku-p-pittam,* பெ. (n.), பித்தக்கோளாறினால், உடம்பில் பலவுறுப்புக் களுக்குக் காணும் நடுக்கம்; a disease causing tremor in several organs of the body, due to derangement of bile.

[நடுக்கு + பித்தம்.]

நடுக்குவாதம்[1] *naḍukku-vādam,* பெ. (n.), உதறு வலிப்பு (வாதம்) (யாழ். அக.); shaking palsy

[நடுக்கு + Skt வாதம்.]

நடுக்குவாதம்[2] *naḍukku-vādam,* பெ. (n), *நடுக்கல் முடக்கு நோய்* பார்க்க; see *naḍukkal-muḍakku-nōy*

[நடுக்கு + Skt. வாதம்.]

நடுக்குறு-த்தல் *naḍukkuṟu-,* 4.செ. குன்றாவி. (v.t.), நடுங்கச் செய்தல்; to cause to tremble. "*நெஞ்சு நடுக்குறூஉ நெய்த லோசையும்*". (மணிமே. 6:71.).

க. நடுகிசு.

[நடுங்கு → நடுக்கு + உறு-.]

நடுக்கெடு-த்தல் *naḍukkeḍu-,* 4.செ. குன்றாவி. (v.t.), நடுக்கம் காணல்; to be attacked with shivering or trembling as from cold.

[நடுக்கு + எடு-.]

நடுக்கேடு *naḍu-k-kēḍu,* பெ. (n.). ஒருபுடைச்சார்பு; particlity "*நச்சுவாய்ப் பல்லர் நடுக்கேடு செய்தவர்கள்*" (சித்.நாய.5.).

[நடு + கேடு.]

நடுக்கேள்-தல் *naḍu-k-kēḷ-,* 11. செ. குன்றாவி. (v.t.), 1. வழக்கு உசாவுதல்; to hear arguments of litigants in a suit. 2. நேர்மையான முடிவு சொல்ல வேண்டுதல் to refer a case; for decision.

[நடு + கேள்-.]

நடுக்கொண்டவீடு *naḍu-k-koṇḍa-vīḍu,* பெ. (n.), நடுவத்திலுள்ள வீடு; middle - house.

நடுகல் *naḍu-kal,* பெ. (n.), போரில் இறந்த வீரரின், உருவமும் பெயரும், பீடும் எழுதிப் பெரும்பாலும், அவ் வீரரைப் புதைத்த

விடத்தில், நடுஞ்சிலை அல்லது கல்; memorial tablet set up over the grave of a deceased warrior and inscribed with his figure and achievements. *"காட்சி, கால்கோ ணீர்ப்படை நடுகல்"* (தொல். பொருள். 60.).

மறுவ. வீரக்கல்.

[நடு + கல்.]

போரில் விழுப்புண் எய்தி, வீரச்சாவு அடைந்த வீரனுக்கு, இறந்தவிடத்தில் நடப்படும் கல். நடுகல் பற்றி மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் கூறுவது:-

பழங்காலத்துத் தமிழர் வீரத்தைப் போற்றினார்கள். போர்க்களத்தில் புறங்காட்டி ஓடாமல், திறலோடு போர் செய்த வீரர்களைத் தமிழர் புகழ்ந்து போற்றிப் பாராட்டினார்கள். திறலோடு போர்செய்து, களத்தில் விழுந்து உயிர்விட்ட வீரர்களுக்கு நடுகல் நட்டு, நினைவுச்சின்னம் அமைத்தார்கள். விறல் வீரர்களின் நினைவுக்காக நடப்பட்ட நடுகற்களைப் பற்றிக் கழக நூல்களில் காணலாம்.

வெட்சிப் போர், கரந்தைப் போர், வஞ்சிப் போர், உழிஞைப் போர், நொச்சிப் போர், தும்பைப் போர், வாகைப் போர் என்று போரைத் தமிழர் ஏழு வகையாகப் பிரித்திருந்தார்கள். சங்க காலத்தில், அரசர்கள் போர் செய்வதைத் தங்கள் கடமைகளில் முகாமையானதாகக் கருதினார்கள். ஏழு வகையான போர்களிலே, எந்தப் போரிலானாலும், ஒரு வீரன் திறலாகப் போர் செய்து உயிர் விட்டால், அந்த வீரனுக்கு நடுகல் நட்டு, அவன் வீரத்தைப் பாராட்டினார்கள். வீரர்களின் நினைவுக்காகக் கல் நடுவதைத் திருக்குறளும் கூறுகிறது. "என் ஐமுன் நில்லன்மின் தெவ்விர், பலர்என்ஐ முன்நின்று கல்நின்றவர்" (குறள்,771).

வீரத்தைப் பாராட்டி நடப்படுவதனால், நடுகல்லுக்கு வீரக்கல் என்றும் பெயர் உண்டு. வீரக்கல் நடுவதற்கு ஐந்துதுறைகளைக் கூறுகிறார் தொல்காப்பியர். அவை, காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், வாழ்த்து என்று ஐந்து துறைகளாம். காட்சி என்பது நடவேண்டிய கல்லை மலையில் கண்டு தேர்ந்தெடுப்பது. கால்கோள் என்பது, கொண்டு வருவது. நீர்ப்படை என்பது கொண்டுவந்த கல்லில் இறந்த வீரனுடைய பெயரையும், அவனுடைய சிறப்பையும் பொறித்து நீராட்டுவது. நடுகல் என்பது, அந்த வீரக்கல்லை நடவேண்டிய இடத்தில் நட்டு, அதற்கு மயிற்பீலிகளையும், மாலைகளையும் சூட்டிச் சிறப்புச் செய்வது. வாழ்த்து என்பது, யாருக்காகக் கல் நடப்பட்டதோ அந்த வீரனுடைய திறனையும் புகழையும் வாழ்த்திப் பாடுவது. கல்நாட்டு விழாவுக்கு ஊரார் மட்டும் அல்லாமல் சிறப்பாக வீரர்களும் வந்து சிறப்புச் செய்வார்கள்.

போரில் இறந்த வீரர்களுக்கு, நடுகல் நடுகிறவழக்கம், பழந்தமிழகத்தில் மட்டுமல்லாமல், வேறு நாடுகளில் பழங்காலத்தில் இருந்து வந்தது. ஐரோப்பாக் கண்டத்திலும், சில நாடுகளில் நடுகல் நடுகிற வழக்கம் பழங்காலத்தில் இருந்தது. அந்த நடுகற்களுக்கு அவர்கள் மென்கிர் என்று பெயர் கூறினார்கள். மென்கிர் என்றால் நெடுங்கல் அல்லது உயரமான கல் என்பது பொருள். மென்கிர் (Menhir) என்பது பிரெடன் (Breton) மொழிச்சொல். ('Men'-Stone; 'Hir'-High.) இந்தோனேசியத் தீவுகள் எனப்படும், சாவா, சுமத்திரா போன்ற கிழக்கிந்தியத் தீவுகளிலும், நடுகல் நடுகிற வழக்கம், பழங்காலத்தில் இருந்தது. இதனால், பழந்தமிழரைப் போலவே, வேறு நாட்டாரும், நடுகல் நடுகிற வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள் என்பது தெரிகின்றது.

வீரர்களுக்கு நடுகல் நட்டதைச் கழகச் செய்யுளில் காண்கிறோம். கரந்தைப் போரில் இறந்துபோன ஒரு வீரனுக்கு, நடுகல் நட்டதை ஆவூர் மூலங்கிழார் தம்முடைய செய்யுளில் கூறுகிறார் (புறம். 261: 13–15.). இன்னொரு கரந்தைப் போரில் வீரச்சாவு அடைந்த ஒரு வீரனுக்கு, வீரக்கல் நட்டபோது, அவன் மீது கையறுநிலை பாடினார் புலவர் உறையூர் இளம்பொன்வாணிகனார். அந்த நடுகல்லின் மேல் அவனுடைய பெயரைப் பொறித்து, மாலைகளாலும், மயிற்பீலிகளாலும் அழகு படுத்தியிருந்ததை, அச் செய்யுளில் அவர் கூறுகிறார் (புறம். 264.).

சேலம் மாவட்டத்திலிருந்த, தகடூர் கோட்டையின் தலைவன் அதிகமான் நெடுமான் அஞ்சி, பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர அரசன் தகடூரின் மேல் படையெடுத்து வந்து, அக் கோட்டையை முற்றுகையிட்டான். அதன் காரணமாகப் பல நாட்கள் போர் நிகழ்ந்தது. அப்போரில் அதிகமான் நெடுமான் அஞ்சி, புண்பட்டு இறந்து போனான். அவனுக்கு வீரக்கல் நட்டு, அவன் வீரத்தைப் போற்றினார்கள். அப்போது அவனுடைய புலவராக இருந்த ஔவையார் கையறு நிலை பாடினார் (புறம். 232.).

கோவலர் (ஆயர்) வளர்த்து வந்த, ஆநிரை மந்தைகளைப் பகையரசனுடைய வீரர்கள் வந்து ஓட்டிக்கொண்டு போய் விட்டார்கள். இதனையறிந்த அவ்வூர் வீரன், அவர்களைத் தொடர்ந்து சென்று, வில்லை வளைத்து, அம்புமாரி பொழிந்து, பகைவரை ஓட்டித் தன்னூர் ஆக்களை மீட்டுக் கொண்டான். ஆனால், வெற்றிபெற்ற அவன், பகைவீரர்கள் எய்த அம்புகளினால் புண்பட்டு மாண்டு போனான். திறலுடன் போர்செய்து மாண்டு போனான். திறலுடன் போர்செய்து மாண்டுபோன அவ் வீரனுக்கு, அவ்வூர்க் கோவலர்கள் நடுகல் நட்டார்கள். அந்த நடுகல்லுக்கு, வேங்கைமரத்துப் பூக்களினாலும், பனங்குருத்துகளாலும், மாலைகள் கட்டிச் சூட்டிச் சிறப்புச் செய்தார்கள். இந்தச் செய்தியைச் சோணாட்டு முகையலூர் சிறுகருத்தும்பியார் தம்முடைய செய்யுளில் கூறியுள்ளார் (புறம். 265.).

இன்னொரு ஊரில், பகைவர்கள் வந்து அவ்வூர் மாட்டுமந்தைகளைக் கவர்ந்து கொண்டு போனார்கள். அப்போது அவ்வூர் வீரன், அவர்களைத் தொடர்ந்து சென்று போராடி, மந்தைகளை மீட்டுக்கொண்டான். ஆனால், பகைவர் எய்த அம்புகள் உடம்பில் பாய்ந்தபடியால், அவன் இறந்து போனான். அவனுக்காக நட்ட வீரக்கல்லில், அவனுடைய பெயரைப் பொறித்து மயிற்பீலிகளினால் அக் கல்லை அழகுசெய்து போற்றினார்கள் என்று மருதனிளநாகனார் என்னும் புலவர், பாடுகிறார் (அகம். 131:6–11.).

தன் ஊர்ப் ஆக்களைப் பகைவர் கவர்ந்து கொண்டு போனபோது அவ்வூர் வீரன் அப்பகைவரிடமிருந்து ஆக்களை மீட்டான். ஆனால், பகைவரின் அம்புகளினால் புண்பட்ட அவன் இறந்து போனான். அவ்வூரார் அவ் வீரனின் நினைவுக்காக, வீரக்கல் நட்டுப் போற்றினார்கள். அந்தக் கல்லின் மேல் அவ் வீரனுடைய பெயரை எழுதினார்கள். மாலைகளையும் பீலிகளையுஞ் சூட்டினார்கள். நடுகல்லின் மேலே சித்திரப் படத்தினால் (சித்திரம் எழுதப்பட்ட துணி), பந்தல் அமைத்துச் சிறப்புச் செய்தார்கள். இந் நிகழ்ச்சியை வடமோதங்கிழார் கூறியுள்ளார் (புறம். 260.).

ஒரு ஊரிலிருந்த ஆநிரைமந்தைகளைச் சில வீரர்கள் வந்து பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். அதையறிந்த அவ்வூர் வீரர் சிலர், அவர்களைத் தொடர்ந்துசென்று ஆக்களை மீட்பதற்காகப் போர் செய்தார்கள். பகைவரும் எதிர்நின்று அம்பு எய்தனர். பகைவரின் அம்புக்கு அஞ்சிச் சில வீரர்கள் ஓடிப்போனார்கள். ஒரு வீரன் மட்டும் புறங்கொடாமல் நின்று போர்செய்தான். பகைவீரர்களின், அம்புகள் அவனுடைய உடம்பில் தைத்து, அவன் அக் களத்திலே இறந்து போனான். அவ்விறல் வீரனுக்கு நடுகல் நட்டுப் போற்றினார்கள் அவ்வூரார் (புறம். 263.).

ஆண்டுதோறும் வீரக்கல்லுக்கு அவ் வீரனுடைய உறவினர் பூசை செய்தார்கள். அந் நாளில், அந்நடுகல்லை, நீராட்டி எண்ணெய் பூசி மலர் மாலைகளைச் சூட்டி நறுமணப் புகையைப் உருவாக்கினார்கள். அந்தப்புகையின் மணம் ஊரெங்கும் கமழ்ந்தது. இந்தச் செய்தியை, மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் தம்முடைய செய்யுளில் கூறுகிறார் (புறம். 329.).

கழகக் காலத்துத் தமிழகத்திலே, அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன. போரில் இறந்த வீரர்களுக்கு நடுகற்கள் நடப்பட்டன. ஆகையினால், நாடெங்கும் நடுகற்கள் காணப்பட்டன.

"நல்லமர்க் கடந்த நலனுடை மறவர் பெயரும்
பீடும் எழுதி யதர்தொறும்
பீலி சூட்டிய புறங்குநிலை நடுகல்."

(அகம். 67:8–10.)

என்று புலவர் நோய்பாடியார் கூறியது போன்று ஊர்களிலும் வழிகளிலும் நடுகற்கள் இருந்தன.

நடுகற்கள், பலகை போன்று அமைந்த கருங்கற்களினால் ஆனவை. அவை நீண்டதாக இருந்தன. 'நெடுநிலை நடுகல்' என்று ஒரு புலவர் கூறுகிறார். பன்னிரண்டடி உயரமுள்ள நடுகற்களும் இருந்தன. பழமையான நடுகற்களின் மேலே செடிகொடிகளும் படர்ந்திருந்தன. நடுகல்லின் இறந்த வீரனுடைய பெயரும் பீடும் எழுதப்பட்டிருந்த படியால் 'எழுத்துடை நடுகல்' என்று கூறப்பட்டது. வழிப்போக்கர், வழியில் உள்ள நடுகற்களண்டை நின்று, அக்கற்களில் எழுதப்பட்ட எழுத்துக்களைப் படிப்பது வழக்கம். சில சமயங்களிலே அக் கற்களில் எழுதப்பட்ட எழுத்துகளில் சில எழுத்து மழுங்கி மறைந்துபோய் சில எழுத்துக்களே எஞ்சியிருக்கும். அவ்வெழுத்துகளைப் படிப்போருக்கு அதன் பொருள் விளங்காமலிருக்கும்.

சில வீரர்கள் தங்களுடைய அம்புகளை நடுகற்களின் மேல் தேய்த்துக் கூராக்குவர். எஃகினால் ஆன அம்பு முனையைத் தேய்க்கும்போது, நடுகல்லில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களைப் படிப்போர்க்கு அவ்வெழுத்தின் பொருள் விளங்காமற் போயிற்று. இச் செய்தியை மருதன் இளநாகனார் கூறுகிறார்.

"இருங்கவின் இல்லாப் பெரும்புல் தாடிக்
கடுங்கண் மறவர் பகழி மாயத்தென
மருங்கல் நுணுகிய பேஎமுதிர் நடுகல்
பெயர்பயம் படரத் தோன்று குயிலெழுத்து
இயைபுடன் நோக்கல்செ ல் ல ா து
அசைவுடன் ஆறுசெல் வம்பலர் விட்டனர்
கழியும் சுர்முதல் இருந்த ஓமையம் புறவு."

(அகம். 297:5-11.).

உப்பு வணிகராகிய உமணர், உப்பு மூட்டைகளை வண்டிகளில் ஏற்றிக் கொண்டு, ஊர்ஊராகச் சென்று விற்பார்கள். செல்லும்போது, வழியில் உள்ள நடுகற்களின்மேல் வண்டிச்சக்கரம் உராய்ந்து நடுகல்லில் எழுதப்பட்டுள்ள எழுத்துகளில் ஒன்றிரண்டு எழுத்துகளைத் தேய்த்து விடுவதும் உண்டு. அவ்வாறு மறைந்துபோன எழுத்து இல்லாமல் மற்ற எழுத்துக்களைப் படிக்கிறவர்களுக்கு அதன் வாசகம் வேறு பொருளைத் தந்தது என்று மருதன் இளநாகனாரே மீண்டுங்கூறுகிறார்.

"மரங்கோள் உமண்மகன் பேரும் பருதிப்
புன்றலை சிதைத்த வன்றலை நடுகல்
கண்ணி வாடிய மண்ணா மருங்குல்
கூருளி குயின்ற கோடுமாய் எழுத்தால்
ஆறுசெல் வம்பலர் வேறுபயம் படுக்குங்
கண்பொரி கவலைய கானகம்."

(அகம். 343:4-9.).

நடுகற்கள் பலவித உயரங்களில் அமைக்கப்பட்டன. மூன்று அடி உயரமுள்ள நடுகற்களும், பன்னிரண்டடி உயரமுள்ள நடுகற்களும் உண்டு.

கழகக்காலத்துக்குப் பிறகு, கி.பி. 14ஆம் நூற்றாண்டு வரையிலும், தமிழ்நாட்டிலும், கன்னடநாட்டிலும், வீரர்களுக்கு நடுகல் நடுகிற வழக்கம் இருந்துவந்தது. பிற்காலத்து வீரக்கற்களில் பல நமக்குக் கிடைத்திருக்கின்றன. இந்தப் பிற்காலத்து நடுகற்களில் பிற்காலத்து வட்டெழுத்துகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சங்ககாலத்து வீரக்கற்கள் ஒன்றேனும் இதுகாறும் கிடைக்கவில்லை.



நடுகல்தெய்வம் *naḍu-kal-deyvam*, பெ. (n.), வீரச்செயல்புரிந்து ஊரைக்காக்கும் காவல் தெய்வம்; the minor deity guarding the village.

[நடுகல் + தெய்வம்.]

நடுகல்வழிபாடு *nadukal-valipādu,* பெ. (n), நடுகல்லை வணங்குகை; worshipping hero-stone. நடுகல் வழிபாடுதான் காலப்போக்கில் ஊர்க்காவல் எல்லைத் தெய்வவழிபாடாக மாறியது (உ.வ.).

[நடுகல் + வழிபாடு.]

பண்டைக்காலத்தே, கொடிய விலங்குகளிடமிருந்தும், பகைவரிடமிருந்தும், ஊரையோ அல்லது நாட்டையோ, பாதுகாத்தவர்தம் திருவுருவைக் கல்லில் புடைப்புச் சிற்பமாக வடித்துப், பீடும், பெயரும் பொறித்து நடுகல்லாக நட்டனர். காலப்போக்கில், ஊரகத்தேயும், நாட்டகத்தேயும், இவ்வாறு நாட்டப்பெற்ற நடுகற்களே, காலப்போக்கில் காவல் தெய்வமாக வழிபடப்பட்டன.

நடுகலுழலை *nadugal-ulalai,* பெ. (n.), நட்டகற்களின் துளைகளில் மூங்கிற் கழிகளையிட்டு ஆவினத்தை அடைத்து வைக்கும் இடம்; a pound provided with a stile.

[நடு + கல் + உழலை.]

நடுகூலி *nadu-kūli,* பெ. (n.), நாற்று நடுவதற்குத் தரும் கூலி; wages for transplanting.

[நடு + கூலி.]

கூலம் → கூலி.

இஃது உடைமைப்பொருள் குறித்த ஈறு. பழங்காலத்தில் பழனப் பணி செய்தவர்களுக்குக் கூலமே, ஊதியமாகத் தரப்பட்டதால், கூலி என்ற பெயர் வந்தது. வயற்பணியாளர்க்குச் சம்பாநெல்லும், கடற்பணியாளர்க்கு உப்பளப்பொருளும் ஊதியமாகத் தரப்பட்டதால், சம்பளம் அமைந்தது.

நடுகை *nadugai,* பெ. (n.), நாற்று நடவு; transplanting of seedlings.

[நடு → நடுகை.]

கை சொல்லாக்க ஈறு.

(ஒ. நோ.) விடுகை. பெறுகை, தருகை.

நடுங்க *nadunga,* இடை. (part.), ஓர் உவமவுருபு (தொல். பொருள். 286.); a particle of comparision.

[நடு → நடுங்க.]

நடுங்கநாட்டம் *nadunga-nāttam,* பெ. (n), தலைவனுக்கு ஏதமுளதோ என்று தலைவி ஐயுற்று நடுங்குமாற்றால், தோழி அவ்விடஞ் செய்தியொன்று கூறிக் களவொழுக்கத்தை அவள் வாயிலாகவே அறிய முயல்வதைக் கூறுந்துறை (திருக்கோ. 70, உரை.); theme in which the maid, narrating a fictitious accident to make the heroine tremble for her lover's safety, seeks an open avowal of her clandestine marriage

[நடுங்க + நாட்டம்.]

நடுங்கல் *nadungal,* பெ. (n.), அச்சம்; dread, fear. "*அவனைக் கண்டால் இவனுக்கு நடுங்கல்தான்*" (உ.வ.).

நடுங்கலன் *nadungalan,* பெ. (n), நடுக்கல் வலிப்புக்காரன் (யாழ்ப்.); one suffering from shaking palsy.

[நடுங்கல் + அன்.]

நடுங்கு—தல் *nadungu-,* 5செ.கு.வி. (v.i.), 1. அசைதல்; to shake, shiver, quiver. "*வாயிற் கடைமணி நடுநா நடுங்க*" (சிலப். 20:53.). 2. அஞ்சுதல்; to tremble through fear, to be agitated. "*ஒன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி*" (பெரும்பாண். 118.). 3. நாத்தடுமாறுதல்; to stutter, falter waver. "*நடுங்கா நாவி னுறைமூ தாளன்*" (மணிமே. 12:3.). 4. மனங்குலைதல்; to lose heart. "*நகையமராயம் நடுங்க நடுங்கான்*" (பு. வெ. 4, 15.). 5. அதிர்தல்; to quake, as the earth. 6. பதறுதல்; to be anxious, apprehensive. 7. கொண்டாடுதற்குறியாகத் தலையசைத்தல்; to nod one's head as a sign of appreciation "*சீறியாழ் நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி*" (புறநா. 145.). 8. ஒப்பாதல்; to be similar. "*படங்கெழு நாக நடுங்குமல்குல்*" (தொல். பொருள். 286. உரை.).

க., நடுகு; **தெ.** நடுகு.

ம. நடுங்நுக. **து.** நடுகுணி.

[நடு → நடுங்கு—.]

நடுச்சாமசுரம் *nadu-c-cāma-šuram,* பெ. (n.), நள்ளிரவிற் காணும் சுரம்; fever that comes at midnight

[நடு + சாமம் + சுரம்.]

நடுச்சாமம் *nadu-c-cāmam,* பெ. (n.), 1. மூன்றாம் சாமம்; middle or third watch from midnight to 3.am. 2. நள்ளிரவு; midnight.

[நடு + சாமம்.]

யாமம் → சாமம்.

நடுச்சாலை *nadu-c-cālai,* பெ. (n.), ஒருவகை மாம்பழம்; a kind of mango fruit.

[நடு + சாலை.]

இடவாகுபெயர்.

நடுச்சுவர் *nadu-c-cuvar,* பெ. (n.), இடைச்சுவர்; middle-wall

ம. நடுச்சுவர்

[நடு + சுவர்.]

நடுச்செய்—தல் *nadu-c-cey-,* 1.செ.கு.வி. (v.i.), 1. நயன்மை வழங்குதல்; to render justice, to decide justify "*திரமதா நடுச்செய்யுஞ் செங்கோலினான்*" (குற்றா.தல.மந்தமா.96.). 2. அமைதிப்படுத்தல் to compromise

[நடு + செய் —.]

நடுச்செவி *nadu-c-cevi,* பெ. (n.), செவிஇடை; middle of the ear

மறுவ. நடுக்காது.

[நடு + செவி.]

நடுச்செவிநோய் *nadu-c-cevi-nōy,* பெ. (n.), நடுக்காதிலிருந்து சீழ் வடிதல்; pus oozing from the mid ear

[நடு + செவி + நோய்.]

நடுச்சொல்(லு)—தல் *nadu-c-col-(lu),* 8. செ. குன்றாவி. (v.t.), 1. முடிவு செய்தல் (இ. வ.); to decide a case. 2. சந்து செய்தல் (இ. வ.); to mediate. 3. நயன்மை வழங்குதல் (யாழ். அக.); to render justice 4. சான்று கூறுதல் (பழ.148, உரை.); to bear witness

[நடு + சொல்—(லு)—.]

நடுச்சொல்வார் *nadu-c-colvār,* பெ. (n.), சான்று கூறுவோர் (பழ. 48. உரை.) (பிங்.); those who bear witness or testify

மறுவ. சான்றாளர்.

[நடு + சொல்வார்.]

நடுத்தண்டெலும்பு *naduttaṇḍelumbu*, பெ. (n.), மார்பின் நடுவெலும்பு; sternum in the centre of the chest middle breast bone.

[நடு + தண்டு + எலும்பு.]



நடுத்தரம் *naḍu-t-taram*, பெ. (n.), 1. இடைப்பட்ட நிலை; intermediate stage middle grade. '*அவன் நடுத்தர வயதுடையவன்*' (உ. வ.). 2. நடுவண் நிலை; middle - stage.

ம., நடுத்தரம் து. நடுத்தர

[நடு + தரம்.]

நடுத்தரயவம் *naḍuttarayavam*, பெ. (n.), வெண்கடுகு ஆறுகொண்டதொரு நிறையளவை (சங். அக.); a measure of weight equivalent to the weight of 6 seeds of white mustard

நடுத்தரவுடம்பு *naḍuttara-v-uḍambu*, பெ. (n.), வாகானவுடம்பு; medium structure.

[நடுத்தரம் + உடம்பு.]

மிகப் பருமனுமின்றி, மிகமெலிவுமின்றி நடுவாட்டமாக அமைந்த உடல்.

நடுத்தலை *naḍu-t-talai*, பெ. (n.), 1. உச்சந்தலை; crown of the head 2. நடுவிடம் (இ. வ.); central place.

க., நடுதலெ. ம. நடுத்தல.

[நடு + தலை.]

நடுத்திட்டம் *naḍu-t-tiṭṭam*, பெ. (n.), 1. நடுநிலைவழுவாத்தன்மை; justness. impartiality. "*உண்மை நடுத்திட்டமே யுரைக்கு நாவான்*" (பணவிடு. 13.).

[நடு + திட்டம்.]

நடுத்தீர்ப்பு *naḍu-t-tīrppu*, பெ. (n.), 1. நடுநிலை மாறா முடிவு; just decision. 2. தெய்வத்தீர்ப்பு (வின்.); devine judgement as pestilence etc, 3. இறைவனின் இறுதித் தீர்ப்புநாள், கடைசித் தீர்ப்பு; final judgement as at the judgement day.

[நடு + தீர்ப்பு.]

நடுத்தீர்ப்புநாள் *naḍu-t-tīrppu-nāḷ*, பெ. (n.), இறைவனுடைய கடைசித் தீர்ப்பு நாள்; judgement day.

[நடு + தீர்ப்பு + நாள்.]

நடுத்தீர்ப்பு நாளில் இறைவனாக வரும் ஏசுவும், இறைத்தூதராக வரும் நபியும், முறையே கிறித்துவமத உறுப்பினர்க்கும், இசுலாம் மதஉறுப்பினர்க்கும், துறக்கம், நல்குவர் என்பது, இருமதக் கருத்துக்கள் ஆகும்.

நடுத்தீர்வை *naḍu-t-tīrvai*, பெ. (n.), *நடுத்தீர்ப்பு* பார்க்க; see *naḍu-t-tīrppu*.

[நடு + தீர்வை.]

நடுத்துஞ்சல் *nadu-t-tuñjal,* பெ. (n.), காலமல்லாத காலத்தில் ஏற்படும் இறப்பு; untimely death. "*துணர் மேலெழுவெங் கனறங்கி நடுத்துஞ்சுந் தொழிறஞ்செனு*" (கோயிற்பு. வியாக். 25.).

மறுவ. எதிர்பாராத இறப்பு.

[நடு + துஞ்சல்.]

நடுத்தெரு *nadu-t-teru,* பெ. (n.), 1. ஊர் இடையில் உள்ள வீதி; middle street, as of a village. 2. தெருவின் நடுப்பகுதி; middle of a street.

[நடு + தெரு.]

நடுத்தெருவில்விடு-தல் *nadu-t-teruvil-vidu-,* 18.செ. குன்றாவி. (v.t.), ஆதரவின்றிக் கைவிட்டுப் போதல்; to forsake, leave helpless, desert.

நடுதறி *nadutari,* பெ. (n.), 1. நட்டகம்பம்; post planted in the ground, as for lethering a calf. 2. கன்றாப்பூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்; Šivan worshipped in Kanrāppūr. "*அடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே*" (தேவா. 811: 1.).

[நடு + தறி.]

நடுநடுங்கியோடு-தல் *nadu-nadungi-y-ōdu-,* 5செ.கு.வி. (v.i.), அளவிற்கு அதிகமான அச்சத்தால் நடுக்கமடைந்து ஓடுதல்; to run away tremble with fear காவலரைக் கண்ட திருடன் நடுநடுங்கி ஓடினான் (இ.வ.). 2. உடம்பின் வலிவுகண்டு, நோய் உடம்பைத் தாக்க முடியாது ஓடுதல்; to get rid off the disease, disease leave the body out of fear said figuratively.

[நள் → நடு → நடுநடுங்கி + ஓடு-.]

நடுநடுங்கி இரட்டைக்கிளவி என்று இலக்கண நூல்கள் நுவலும். நடுங்கிநடுங்கி என முழுச்சொல் வரின் அடுக்குத்தொடர் என்பர்.

நடுநடுங்கு-தல் *nadu-nadungu-,* 5.செ. கு.வி. (v.i.), 1. பயத்தால் உடல் மிகப்பதறுதல்; to tremble greatly through fear, quake with fear. "*நடமுயலும் பொழுதஞ்சி நடுநடுங்கி நானயர*" (கோயிற்பு. பதஞ் 38.). 2. குரல் இசைக்கேடாக அதிர்தல்; to quiver as the voice in vocal music. "*மிடறு நடுநடுங்கி*" (சீவக. 735.).

[நடு + நடுங்கு-.]

நடுநடு-த்தல் *nadu-nadu-,* 4. செ.கு.வி. (v.i.), நடுங்குதல்; to tremble. "*நாமவற் கண்ணாணடு நடுப்ப வாராளோ*" (திணைமாலை. 25).

[நடு + நடு-.]

நடுநாட்டம் *nadu-nāttam,* பெ. (n.), சுழிமுனைப்பார்வை; gazing look between the eye - brows.

[நடு + நாட்டம்.]

நடுநாடி[1] *nadu-nādi,* பெ. (n), 1. சுழுமுனை; a principal tubular vessel of the human body. "*பக்கவளி தனையடக்கி நடுநாடி யுறப்பயிற்றி*" (காஞ்சிப்பு. தழுவக். 57.). 2. உடம்பினுள்ளே ஊடுருவிச்செல்லும் புருவங்களின் நடுவிலமைந்துள்ள, சுழிமுனை நாடி (சா.அக.); the nerve that passes through the six psychic regions in the centre of the body and finally terminates between the eye brows. (சா.அக.).

நடுநாடி[2] *nadu-nādi,* பெ. (n.), இடகலை, பிங்கலை, சுழிமுனை முதலான நாடி நரம்புகள்; the three chief nerve-currents of the human body that is known as idagalai, pingalai šuli-munai 2. *சுழுமுனை* பார்க்க; see *šulu-munai.*

மறுவ. மய்யப்புருவ நாடி.

[நடு + நாடி.]

உடம்பிலுள்ள ஆறாதாரத்தையும் ஊடுருவிச் சென்று, புருவமத்தியில் ஒடுங்கி நிற்பது, இந் நடுநாடி.

நடுநாயகம் *nadu-nāyagam,* பெ. (n.), 1. அணிகலன்களின் இடையில் பதிக்கும் மணி; central gem of an ornament. 2. சிறந்தவன்; exalted, eminent person. "*அந்த அவையில் நடுநாயகம் அவன்*". 3. இறைவன்; God.

[நடு + நாயகம்.]

அணிகலன்களின் இடையில் பதிக்கும் மணி, அணிக்குச்சிறப்புச்சேர்த்து, தலைமைப்பண்புடன் மிளிர்வது போல், கற்றுத்துறைபோகிய சான்றோர் அவையில், நுண்மாண்நுழைபுலத்துடன் சிறந்த கல்வியாளனாக, தலைமைப் பொறுப்பேற்று, நடுநாயகமாக வீற்றிருத்தல், ஈங்கு குறிக்கத்தக்கது. நல்லார், பொல்லார் அனைவருக்கும் நடுநாயகமாக இருக்கும் இறைவன்.

நடுநாள் *nadu-nāḷ,* பெ. (n.), 1. நண்பகல்; mid-day. 2. இடையாமம்; mid-night. "*பழவிறன் மூதூர் பாயல்கொ ணடுநாள்*" (மணிமே. 7.63). 3. சித்திரை விண்மீன்; 14th nakšatra.

மறுவ. பானாள்.

[நடு + நாள்.]

நடுநிசி *nadu-niši,* பெ. (n.), நள்ளிரவு; mid-night.

மறுவ. சாமப்பொழுது.

[நடு + skt.நிசி.]

நடுநியாயம் *nadu-niyāyam,* பெ. (n.), 1. ஒருபாற் கோடாமை; fairness, uprightness, impartiality. 2. நயன்மை; equity, evenhanded justice. 3. வழக்கு; lawsuit

[நடு + skt.நியாயம் .]

நடுநில்—தல் (நடுநிற்றல்) *nadu-nil-,* 14.செ. கு. வி. (v.i.), (விளையாட்டுக்கள) நடுவராயிருத்தல் (அகநா. 25, உரை); to act as umpire.

[நடு + நில்—.]

நடுநிலை[1] *nadu-nilai,* பெ. (n.), 1. இடைநிலைமை; intermediate state or degree, middling position 2. நயன்மை; strict justice, equity. 3. பிணக்குத்தீர்த்தல்; mediation arbitration 4. சிவனியத்திற்குரிய ஒகபூசை நிலைகளுளொன்று (வின்.); one of the position in the mystic worship of the Šaivam system. 5. நடுவுரைத்தல்; arbitration

[நடு + நிலை.]

நடுநிலை[2] *nadu-nilai,* பெ. (n.), 1. விருப்பு வெறுப்பு இல்லாத சமநிலைப் பண்பு; impartiality. 2. நடுத்தரப்போக்கு; neutrality. உண்மையான திறனாய்வு என்பது நடுநிலை தவறாது மதிப்பீடு செய்தலாகும் (உ.வ.).

நடுநிலையில் நின்று அந்த வழக்கை ஆராயும்போது, புதிய உண்மைகள் புலப்படும் (இ.வ). இது ஒரு நடுநிலை நாளேடு (இக்.வ.).

[நடு + நிலை.]

நடுநிலைக்கொள்கை *nadu-nilai-k-kolgai,* பெ. (n.), விருப்பு வெறுப்பற்ற சமனிலைக் கொள்கை; the principles of neutrality. நாவலந்தேயம் (இந்தியா) நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடிக்குந் திறன் கண்டு, உலகத்தார் பாராட்டுகின்றனர் (இ.வ.).

[நடுநிலை + கொள்கை.]

உலகத்தைப் போர்மேகங்கள் சூழ்ந்துள்ள இக் காலத்தில், நடுநிலைக்கொள்கை உயிர்பெற்று விளங்குவதற்கு எடுத்துக் காட்டாக, பன்னாட்டுஉறவுகள் திகழ்கின்றன.

நடுநிலைஞாயம் *nadu-nilai-ñāyam,* பெ. (n.), *நடுநிலை* பார்க்க; see *nadu-nilai.*

[நடுநிலை + ஞாயம்.]

நடுநிலைநாடு *nadu-nilai-nādu,* பெ. (n), விருப்பு வெறுப்பற்ற சமனிலைக் கொள்கையை மேற்கொண்டு, ஒழுகும் நாடு; neutral states

[நடுநிலை + நாடு.]

ஒருநாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் போர் நிகழும்பொழுது, அந்தப்போரில் ஈடுபடாமல், போரில் எத் தரப்பினருடனும் சேராமல், போர்த்தரப்பினர்க்கிடையே பாகுபாடு காட்டாமல், போரில் தன்னாட்டு மக்கள் ஈடுபடுவதைத் தவிர்த்தும், போர்க்காலத்தில் அமைதியைக் கையாண்டும், போர்த்தரப்பைச் சார்ந்தவர்கள், தன்னாட்டிலிருந்து போர் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் பார்த்துக் கொள்ளும் நாடே நடுநிலைநாடு.

நடுநிலைப்பள்ளி *nadu-nilai-p-palli.* பெ. (n.), ஒன்று முதல் 8–ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்கள் சேர்ந்து கல்வி பயிலும் பள்ளி; middle school.

[நடுநிலை + பள்ளி.]

11 வயது முதல் 13 வயதுடைய மாணவர்கள் கற்கும் பள்ளி. இந்திய அரசியல் அமைப்பின் 45–ஆவது பிரிவு, 1500 மக்கள்தொகைக்கு ஒரு நடுநிலைப்பள்ளி தேவை என்று கூறுவது அறிக.

நடுநிலைப்பற்று–தல் *nadunilai-p-parru-,* 5.செ. கு. வி. (v.i.), உலகியலுக்கும் ஆன்மவியலுக்கும் இடைப்பட்ட நிலை; to holding a middle position between material and spritual.

நடுநிலைமந்திரம் *nadunilai-mandiram,* பெ. (n), ஒரு சிவனிய மந்திரம் (வின்.); mandiram recited in nadu-nilai worship Šaivam.

[நடுநிலை + மந்திரம்.]

நடுநிலைமை *nadu-nilaimai,* பெ. (n), *நடுநிலை* பார்க்க; see *nadu-nilai.* 1, 2.

[நடு + நிலைமை.]

நடுநிலைமையோன் *nadu-nilaimaiyōn,* பெ. (n.), நடுநிலைமை வாய்ந்தோன்; mediator.

[நடு + நிலைமையோன்.]

நடுநிற்றல்[1] *nadu-nirral,* பெ. (n), பிணைபடுகை (வின்.); standing bail

[நடு + நிற்றல்.]

நடுநிற்றல்² *nadu-nirral,* பெ. (n.), செம்மையில் நிற்றல்; middle path, "*நடுநின்ற நடுவே*" (அருட்பா.).

[நடு + நிற்றல்.]

உயிரையும் உடலையும் இணைக்கும் பேரன்புப் பிழம்பான இறையுடன் ஒன்றி நிற்றல்.

நடுநீதி *nadu-nidi,* பெ. (n.), *நடுநிலை* பார்க்க; see *nadu-nilai.*

[நடு + skt. நீதி.]

நடுநெஞ்சு *nadu-nenju,* பெ. (n.), 1. நெஞ்சாங்குலையின் நடுப்பகுதி; centre of the heart. 2. சரியான மையம்; exact centre. '*மந்தரத்தைப் பிடுங்கிக் கடலின் நடுநெஞ்சிலே நட்டு*' (ஈடு. 1, 3, 1.). 3. நெஞ்சுக்குழி(சா.அக.); pit of the stomach.

[நடு + நெஞ்சு.]

நடுநெஞ்செலும்பு *nadu-nenjelumbu,* பெ. (n.), *நடுத்தண்டெலும்பு* பார்க்க; see *nadu-t-tandelumbu.* (சா.அக.).

[நடு + நெஞ்சு + எலும்பு.]

நடுநோக்கம் *nadu-nōkkam,* பெ. (n), *நடுநாட்டம்* பார்க்க see *nadu-nāttum.*

மறுவ. நடுப்பார்வை.

[நடு + நோக்கம்.]

நடுப்பகல் *nadu-p-pagal,* பெ. (n.), காலையுமல்லாது மாலையுமல்லாது சூரியன் உச்சியை அடைந்த பகல் வேளை; mid-day, noon

மறுவ. நண்பகல், உச்சிப்பொழுது.

[நடு + பகல்.]

நடுப்பச்சை *nadu-p-paccai,* பெ. (n.), பச்சைக்கல் (மரகதம்); a precious green gem

மறுவ. அடர்பச்சை.

[நடு + பச்சை.]

நடுப்படுத்து-தல் *nadu-p-paduttu-,* 5.செ. குன்றாவி. (vt), *நடுக்கட்டு (யாழ்ப்.)* பார்க்க; see *nadu-k-kattu-.*

[நடு + படுத்து-.]

நடுப்பாட்டம் *naduppāttam,* பெ. (n.), அடிமாண்டுபோன இனத்திற்குரிய நிலத்திற்கு, அரசு தற்காலிகமாகக் கொடுக்கும் குத்தகை (நாஞ்); temporary lease of properties in escheat enquiries.

[நடு + பாட்டம்.]

நடுப்பாதை *nadu-p-pādai,* பெ. (n.), நடைவழியின் நடுவிலுள்ள பகுதி; centre of a path way.

றுவ. நடுவழி.

[நடு + பாதை.]

நடுப்பார்¹-த்தல் *nadu-p-pār-,* 4.செ. கு. வி. (v.i), அறமன்ற ஆணைப்படி ஒரு வழக்கின் நடுவராகச் செயல்படுதல்; to act as a commissioner or arbitrator by order of a court.

[நடு + பார் -.]

நடுப்பார்² *nadu-p-pār,* பெ. (n.), இடைமை (யாழ். அக.); centre

[நடு + பார்.]

பரப்பு → பார் = திரிபு.

நடுப்பார்வை *nadu-p-pārvai,* பெ. (n.), 1. சுழிமுனைப் பார்வை; looking or gazing between the eye brow. 2. மையப்பார்வை; look with just.

[நடு + பார்வை.]

நடுப்பிலே *naduppilē,* வி.எ. (adv.), *நடுப்பெற (இ. வ.)* பார்க்க; see *nadu-p-pera.*

[நடுவில் → நடுவிலே → நடுப்பிலே.]

நடுப்புரை *naduppurai,* பெ. (n.), கருப்பை; womb.

[நடு + புரை.]

நடுப்புரைவிரணம் *nadupurai-v-iranam,* பெ. (n.), கருப்பை நடுவிலேற்படும் அழற்சி; inflamanation of the middle layer of the womb.

நடுப்புற *naduppura,* வி. எ. (adv.), *நடுப்பெற* பார்க்க; see *nadu-p-pera.*

நடுப்பெற *nadu-p-pera,* வி.எ. (adv.), நடுவில்; in the middle, in the centre

[நடுப்புற → நடுப்பெற.]

நடுப்பேசு-தல் *nadu-p-pēsu-,* 5.செ. கு. வி. (v.i.), ஒருவருடைய வழக்கை எடுத்துப் பேசுதல்; to plead for, to advocate a cause.

[நடு + பேசு –.]

நடுப்போக்கு-தல் *nadu-p-pōkku-,* 5.செ. கு. வி. (v.i.), நயன்மைவழங்குதல் (யாழ். அக.); to make a just decision.

[நடு + போக்கு –.]

நடுவாகத் தீர்ப்புச் சொல்லி, இருவரையும் அனுப்பிவைத்தல் என்னும் பொருளில் வருதல் காண்க.

நடுப்போர் *nadu-p-pōr,* பெ. (n.), பணியிடை, செயலினிடை (யாழ்ப்.); middle of a work. of an operation, of an affair.

[நடு + போர் → நடுப்போர்.]

போர் என்பது செருவைக் குறிக்கும் போது பொரு(கு)தல் பொருளில் வருதல் போல் ஈண்டு வைக்கோல் குவியல் பொருளில் வருங்கால், சேர்த்துக் கட்டியமாடுகளால் அடித்தது என்றும் பொருளாகும். ஈண்டு இரு பொருளிலும் வழங்கலாயிற்று.

நடுமத்தி *nadu-matti,* பெ. (n.), இடையே; centre 'பூசை அறையில் விளக்கை நடுமத்தியில் வை' (பே.வ.).

[நடு + skt.மத்தி. மீமிசைச் சொல்.]

நடுமதியம் *nadu-madiyam,* பெ. (n.), நண்பகல்; middle of the day.

[நடு + skt. மதியம்.]

நடுமாதிரை *nadumādirai,* பெ. (n.), வாலுளுவை மரம்; spindle tree

நடுமுதுகு *nadu-mudugu,* பெ. (n.), முதுகெலும்பு வரிசை; spinal column.

[நடு + முதுகு.]

நடுமூக்கு *nadu-mūkku,* பெ. (n.), புருவ நடு; space between the eyebrows. "நாட்ட மிரண்டும் நடுமூக்கில் வைத்திடில் வாட்ட மில்லை மனைக்கு மழிவில்லை" (திருமந்.584).

[நடு + மூக்கு.]

நடுமூலம் *nadu-mūlam,* பெ. (n.), சிறுநீர்; urine.

[நடு + மூலம்.]

நடுமூளை *nadu-mūlai,* பெ. (n.), மூளையின் இடை; the middle cerebral, vesicle of the embryonic brain, midbrain.

[நடு + மூளை.]

நடுமையம் *nadu-maiyam,* பெ. (n.), 1. இடையே; centre, middle. 2. உச்சி; zenith, meridian. 3. புருவமய்யம்; middle of two eye brows.

மறுவ. நடுமத்தி மீமிசைச்சொல்.

[நடு + skt.மையம்.]

நடுயாமம் *nadu-yāmam,* பெ. (n.), நள்ளிரவு; mid-night.

[நள் → நடு → யாமம்.]

யாம் + அம் → யாமம்.

யாமம் = இருள் விளங்கித்தோன்றும் நள்ளிரவு நேரம். "நள்" என்னும் வேரடி இருட்செறிவினைக் குறித்தது.

நடுராசி *nadu-rāśi,* பெ. (n.), நடுத்தரம் (வின்); middling sort, that which is middling or moderate as in quality or size

[நடு + skt.ராசி.]

நடுவகிரெடுத்தல் *nadu-vagir-edu-,* 4 செ.குன்றாவி. (v.t.), நெற்றியின் நடுப்பகுதியிலிருந்து மயிரை ஒழுங்குபடப் பிரித்து வாருதல்; to middle part of the hair from the crown to the forehead.

[நடுவகிர் + எடு-.]

நடுவண் *naduvan,* வி. எ. (adv.), இடையில்; in the centre. "*நடுவ ணைந்திணை நடுவண தொழிய*" (தொல். பொருள். 2).

க. நடுவண.

[நடுவம் → நடுவண்.]

நடுவண்ஐந்திணை *naduvan-aindinai,* பெ. (n.), பாலைத்திணை; arid, desert land. "*நடுவண் ஐந்திணை நடுவண தொழிய*" (தொல். பொருள். 948).

க. நடுவண.

[நடுவண் + ஐந்திணை.]

நடுவண்ஐந்திணை என்பது, தமிழ் இலக்கியப்பரப்பில் பாலைத்திணையைக் குறிக்கும். பாலைநிலமென்பது, தமிழகத்தில், எப்போதும் மிகுவறட்சியே, நிலைத்திருக்கும். தனிநிலமன்று. அஃதாவது மிகுவறட்சிக் காலத்தே குறிஞ்சியின் (மலையின்) ஒரு பகுதியும், முல்லையின் (காட்டின்) ஒரு பகுதியும், வேனிற்கடுமையால், சிறிது காலம் பாலைத்தன்மை அடையும். இதுவே நடுவண் ஐந்திணை என்று பெயர் பெற்றது.

நடுவண்டம் *naduvandam,* பெ. (n), வழலையின் பெயர்; name of quint essence salt.

[நடு + வண்டம்.]

நடுவண்பல்கலைக்கழகம் *nadvan-palgalai-k-kalagam,* பெ. (n.), நடுவணரசின் நேரடியாளுகைக்குட்பட்ட பல்கலைக்கழகம்; university under the control of central government.

மறுவ. மய்யப்பல்கலைக்கழகம்.

[நடுவண் + பல்கலைக்கழகம்.]

நடுவணரசு *naduvanarašu,* பெ. (n.), மய்யஒன்றியவரசு; central government.

மறுவ. மய்யவரசு.

[நடுவண் + அரசு.]

உள்ளாட்சி அமைப்பில், தனிஅதிகாரம் படைத்ததும், பலமாநிலங்கள் ஒன்று சேர்ந்ததுமான ஒன்றியவரசு.

நடுவணைப்பதி *naduvanaippadi,* பெ. (n.), நமசிவாய 'சி' காரம் ; the middle of the five mystic letter.

[நடுவணை + பதி.]

நடுவத்தசாமம் *nadu-v-atta-šāmam,* பெ. (n.), நள்ளிரவு (யாழ்ப்.); mid-night.

[நடு + அத்து + சாமம்.]

நடுவத்தொருசாமம் *naduattoru-šāmam,* பெ. (n.), *நடுவத்த சாமம்* பார்க்க; see *naduv-atta-šāmam.*

[நடு + அத்து + ஒருசாமம்]

நடுவதுபாதியில் *naduvadu-pādiyil,* வி. எ. (adv.), பாதிமுடிந்த பிறகு (வின்.); after half the function is over. நடுவது பாதியிலே வந்தான்.

மறுவ. நடுப்பாதி.

[நடுவது + பாதியில்.]

நடுவயது *nadu-vayadu,* பெ. (n.), இளமைக்கும் மூப்பிற்கும் இடையிலுள்ள பருவம்; middle - age

மறுவ. நடுஅகவை.

[நடு + வயது (அகவை).]

நடுவயிறு *nadu-vayiru,* பெ. (n.), வயிற்றின் நடுப்பாகம்; mid-gut.

[நடு + வயிறு.]

நடுவர் *naduvar,* பெ. (n.), **1.** பேச்சுப்போட்டி போன்றவற்றில், வெற்றி பெற்றவரைத் தெரிவு செய்பவர்; judge in a competition பேச்சுப்போட்டி நடுவராக வருபவர், நல்ல கல்வியாளராக இருக்க வேண்டும் (உ.வ.). **2.** விளையாட்டுப்போட்டிகளில், இரு அணிக்கும் பொதுவாக இருந்து போட்டியை நடத்துபவர்; umpire, referee. நடுவர் தன் நாட்டு அணிக்குச் சார்பாக நடந்துகொண்டார் என்று குற்றம் சாட்டப்பட்டது. (இ.வ.). நடுவராக வருபவர் பணத்திற்கு ஆசைப்படாதவராக இருக்க வேண்டும் (உ.வ.).

[நடு → நடுவர்.]

நடுவர்தீர்ப்புஉடன்பாடு *naduvar-tirppu-udanpādu,* பெ. (n.), நிகழ்காலம் அல்லது எதிர்காலத்தில் ஏற்படும் சிக்கல்கள் பற்றித் தரப்படும், எழுத்துவகையிலான உடன்பாடு; arbitration agreement.

[நடுவர் + தீர்ப்பு + உடன்பாடு.]

நடுவர்தீர்ப்பு *naḍuvar-tīrppu,* பெ. (n.), நடுவர்குழு வழங்கும் தீர்ப்பு; arbitration tribunal judgement. காவிரி நீர்ப்பங்கீட்டிற்குரிய நடுவர்தீர்ப்பினை கருநாடகம் ஏற்றுச்செயல் படவேண்டும் (இக்.வ.). நடுவர்தீர்ப்பை மதிக்கும் மனவொருமைப்பாடு, அனைவர்க்கும் வேண்டும் (உ.வ.). மட்டைப்பந்து (கிரிக்கெட்) விளையாட்டில் நடுவர்தீர்ப்பே, இறுதியானது. (இக்.வ.).

[நடுவர் + தீர்ப்பு.]

நடுவர்தீர்ப்புமுறை *naḍuvar-tīrppu-muṟai,* பெ. (n.), இருவர்க்கிடையே ஏற்படும் பணம் சொத்து, ஒப்பந்தமுறிவு முதலான வாழ்வியல் சிக்கல்களை, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நடுவர்குழுவின் தீர்ப்புப்படி, முறைமன்றம் (court) செல்லாமலேயே தீர்த்துக் கொள்ளும் பாங்கு; arbitration.

[நடுவர்தீர்ப்பு + முறை.]

நடுவர்மன்றம் *naḍuvar-maṉṟam,* பெ. (n.), இருதரப்பினரும் பேசி முடிவு காண இயலாத சிக்கல்களுக்குத் தீர்வுகாண, இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் ஏற்படுத்தப்படும் குழு; tribunal. நடுவர்மன்ற உறுப்பினர் மனச்சான்றுடன் செயல்பட்டால்தான், முறையான தீர்ப்புக் கிடைக்கும் (இக்.வ.).

[நடுவர் + மன்றம்.]

நடுவலம் *naḍuvalam,* பெ. (n.), நரிமுருக்கு; a kind of coral tree.

[நடு + வலம்.]

நடுவழி *naḍu-vaḻi,* பெ. (n.), 1. பயணத்தின் இடை; middle of a journey. 2. வழியின் நடு; middle of the path-way.

[நடு + வழி.]

நடுவழியில் *naḍu-vaḻiyil,* வி.எ. (adj.), இருஇடங்களுக்கு இடைப்பட்ட பகுதியில்; midway. நடுவழியில் வண்டி பழுதாகி விட்டதால், மிகவும் தொல்லை ஏற்பட்டது. (உ.வ.). நடுவழியில் மழை பிடித்துக் கொண்டதால், நனைந்து கொண்டே சென்றேன். (இ.வ.).

[நடு + வழியில்.]

நடுவறு-த்தல் *naḍu-v-aṟu-,* 4.செ. குன்றாவி. (v.t.), 1. வழக்குத்தீர்த்தல் (வின்.); to judge as an umpire, to decide. 2. வழக்கின் இருசாரார்களையும் கேட்டுத் தேர்தல்; to hear the contentions of both parties to a suit.

நடுவளையம் *naḍu-vaḷaiyam,* பெ. (n.), எரு (ஆசன)வாயிலுள்ள வளையத்தின் மூன்று பாகங்களில் நடுவேயுள்ள வளையம்; the central ring of the three splincter muscles round the anus.

[நடு + வளையம்.]

நடுவறுத்தான் *naḍu-v-aṟuttāṉ,* பெ. (n.), மூக்கிரட்டை (யாழ். அக.); spreading hogweed.

மறுவ. மூக்கறுத்தான்கொடி.

[நடு + அறுத்தான்.]

நடுவன் *naḍuvaṉ,* பெ. (n.), 1. கூற்றுவன் (இயமன்); yamaṉ, as the just awarder of rewards and punishments. "*நடுவன் மேல்வர்*" (பெருங். உஞ்சைக் 53, 70). "*நாடுநகர் வீடுமாடு நற்பொரு ளெல்லாம் நடுவன் வரும்பொழுது நாடி வருமோ*" 2. முறை மன்றத்தில் தீர்ப்பெழுதும் அறமுதல்வன்

(நீதிபதி) (யாழ்ப்.); judge, arbiter. நடுவன் தீர்ப்பெழுதுவதற்கு பல ஆண்டுகள் வழக்காளிகள் காத்துக் கிடக்கின்றனர் (இக்.வ.). 3. *நடுவர்* பார்க்க; see *naḍuvar.*

[நடு + வு → நடுவு + அன் → நடுவன்.]

செங்கோற் கடவுளாகிய யமன் நடுவுநிலைமையை உடையவன். உற்றார் அற்றார் எனும் வேறுபாடின்றி, உரியகாலத்தே தமது செங்கோலை நடுவுநிலைமையோடு பயன்படுத்து பவனாகிய நமன்.

நடுவணாள் *naḍuvaṉāḷ,* பெ. (n.), உரு (பரணி); the second star. "*நடுவணாட் சித்திரைத்திங்க ணகையம்புலியின் வளர்பக்கம்*" (வேதாரணி. விசுவா. மேனகை. 68).

[நடுவன் + நாள்.]

நடுவாந்தரம்[1] *naḍuvāṇḍaram,* வி. எ. (adv.), ஒரு செயலின் நடுவே; incidentally. நடுவாந்தரத்திலே கிடைத்தது.

தெ. நடுமந்தரமு.

[நடு + skt.அந்தரம்.]

நடுவாந்தரம்[2] *naḍuvāṇḍaram,* பெ. (n.), எதிர்பாராதபடி; by chance, unexpectedly.

நடுவாந்தரம்[3] *naḍuvāṇḍaram,* பெ. (n.), 1. மையதேசம்; mid-region. 2. உதவியற்ற நிலைமை; helpless condition. "*என்னை நடுவாந்தரத்தில் விட்டுவிட்டான்*" (உ. வ.).

[நடு + skt.அந்தரம்.]

நடுவார்த்தை *naḍu-vārttai,* பெ. (n.), நேர்மையான சொல்; honesty-word.

மறுவ. உண்மைச்சொல்.

[நடு + skt.வார்த்தை.]

நன்மை, தீமை இரண்டிற்கும் நடுநின்று, நண்பர்–பகைவர் அல்லது உற்றார், அற்றார் இரண்டிற்கும் அப்பாற்பட்டு, ஒருபாற்கோடாது உரைக்கும் சான்றாண்மைச் சொல்லே, நடுச்சொல்.

நடுவான் *naḍu-vāṉ,* பெ. (n.), *நடுவிலான் (இ. வ.)* பார்க்க; see *naḍuvilāṉ.*

[நடு + ஆன்.]

நடுவிரல் *naḍu-viral,* பெ. (n.), ஐவிரல்களுள் இடையிலுள்ள விரல்; middle - finger

மறுவ. பாம்புவிரல்.

ம., நடுவிரல்.

[நடு + விரல்.]

கைவிரலைந்தனுள் நடுநின்றதும், சற்றே நீளமானதுமான விரல்.



நடுவில் *naḍuvil,* இடை. (int.), இடையில், காலத்தில், இடத்தில்; in the middle, in between. பேச்சின் நடுவில் கையிலிருந்த குறிப்பைப் பார்த்துக்கொண்டார் (உ.வ.)

[நடுவு + இல்.]

நடுவிலவன் *naḍuvilavaṉ,* பெ. (n.), *நடுவிலான்* பார்க்க; see *naḍuvilāṉ.*

ம. நடுவிலவன்.

[நடுவில் + அவன்.]

நடுவிலான் *naḍuvilāṉ,* பெ. (n.), மகன்களுள் நடுப்பிறந்தான், நடுவுள்ளவன்; middle son.

[நடுவில் → நடுவிலன் → நடுவிலான்.]

இடப்பொருள் பற்றியது.

நடுவீட்டுத்தாலி *naḍu-viṭṭu-t-tāli,* பெ. (n.), அறுதாலிமறுமணத்துக்கு வன்னியர் வழங்கும் பெயர். மறுமணத்திற்கு வழங்கும் ஒரு பெயர்; the name given to the remarriage of a widow among vaṉṉiyar, as taking place inside a house without much publicity.

[நடு + வீட்டு + தாலி.]

முதல் மணம் முற்றத்தில் செய்து கணவன் இறந்தால், மறுமணத்தை இருகுடும்பத்தார் மட்டும் காண, ஒரு வீட்டில் செய்யும் கரணம், என்றும் கருதலாம்.

நடுவீடு *naḍu-viḍu,* பெ. (n.), 1. இறைவழி பாட்டிற்குரிய உள்வீடு(வின்); middle or interior of a house, where an idol is kept for worship. 2. சாப்பாட்டறை (இ.வ.); dining room. 3. ஒரூரில் மதிப்புடையார் வாழிடத்திலுள்ள வீடு (இ.வ.); a house in a respectable quarter in the heart of a village.

[நடு + வீடு.]

நடுவீதி *naḍu-vīdi,* பெ. (n.), 1. தெருவின் நடுப்பகுதி; middle of the street. 2. வாய், செவி, மூக்கு, மத்தி, மய்யம் (சா.அக.); a mid way communicating with esophagus. below and above larynx. mouth, nasal. passages and eustachian tubes.

நடுவீதியில்விடு—தல் *naḍuvīdiyil-viḍu-,* 18 செ. குன்றாவி. (v.t.), நடுத்தெருவில் விடுதல் (இ.வ.); to leave some one in the middle of the street.

[நடுவீதியில் + விடு—.]

நடுவு[1] *naḍuvu,* பெ. (n.), 1. இடை; middle, that which is intermediate. 2. நடுவு நிலைமை; impartiality, uprightness. *"நன்பல்லூழி நடுவுநின்றொழுக"* (பதிற்றுப். 89:8.). 3. நயன், முறை (நீதி) (வின்.); justice.

க., நடுவு. தெ. நடுமு.

[நடு → நடுவு.]

நடுவு[2] *naḍuvu,* பெ. (n.) 1. பெண்கள் இடுப்பு; (சா.அக.); hip of a woman. *"நடுவு துய்யன"* (கம்பரா.நகரப்.31.). 2. *நடுவுநிலை* பார்க்க; see *naḍuvu-nilai.*

[நடு → நடுவு.]



நடுவு³ *naḍuvu,* வி.(v.) நாற்று நடுதல்; transplanting. '*இன்று நடுவுக்கு யாரும் வரவில்லையா?*' (பே.வ.).

[நடவு → நடுவு.]

நடுவுக்கூலி *naḍuvu-k-kūli,* பெ. (n.) நாற்று நடுதலுக்குக் கொடுக்கப்படும் கூலி/சம்பளம்; pay of transplanting.

[நடுவு + கூலி.]

நடுவுச்சிப்பொழுது *naḍu-v-ucci-p-poḻudu,* பெ. (n.) *நண்பகல்* பார்க்க; see *naṇpagal.*

[நடுவுச்சி + பொழுது.]

நடுவுச்சிவாதம் *naḍu-v-uccivādam,* பெ. (n.) உடல் நொந்து, உச்சித்தலை வலித்து, கண்சிவந்து, குளிரை உண்டாக்கும் வலிப்பு நோய் வகை; a kind of nervous disease, affecting chiefly the crown of the head and marked by pain in the affected part, inflamed eyes and chillness.

[நடு + உச்சி + skt. வாதம்.]

நடுவுநிலை *naḍuvu-nilai,* பெ. (n.) **1.** ஒரு தலைச் சாராமை (குறள். அதி. 12); equity, justice, strict neutrality, impartiality. **2.** அமைதியைக் காட்டும் சுவை (சாந்தம்); the sentiment of tranquillity. "*இன்புற னடுவுநிலை*" (தொல். பொருள். 260.).

மறுவ. ஒருபாற்கோடாமை.

[நடுவு + நிலை.]

ஒரு நாடு அல்லது அரசு, வேறு இரு அரசுகளுக்கிடையே நிகழும் போரில், கலந்து கொள்ளாத நிலை, நடுவுநிலை ஆகும்.

நடுவுநிலைத்திணை *naḍuvu-nilai-t-tiṇai,* பெ. (n.) பாலைத்திணை பார்க்க; see pālaittiṇai. "*நடுவு நிலைத்திணையே நண்பகல் வேனிலொடு*" (தொல். பொருள். 9.).

[நடுவு + நிலை + திணை.]

நடுவுநிலைமை *naḍuvu-nilaimai,* பெ. (n.) **1.** நடுநிலை பார்க்க; see naḍu-nilai. "*நல்லம்யா மென்னு நடுவுநிலைமையால்*" (நாலடி. 131.). **2.** உள்ளச்சமநிலை (வின்.); steadfastness, equanimity. **3.** செம்மை (யாழ்ப்.); fairness, uprightness.

[நடுவு + நிலைமை.]

நடுவுநிலைமை நாடு *naḍuvu-nilaimai-nāḍu,* பெ. (n.) இருநாடுகளுக்கிடையே போர் நிகழுங்கால், எந்தவொரு நாட்டுடனும் போரில் கலந்து கொள்ளாது, தனித்திருக்கும் நாடு; neutrality nation.

[நடுவுநிலைமை + நாடு.]

நடுவுப்பு *naḍu-v-uppu,* பெ. (n.) **1.** கல்லுப்பு; stone salt. **2.** பாறையுப்பு; rock-salt

[நடுவு + உப்பு.]

நடுவுபாடு *naḍuvu-pāḍu,* பெ. (n.) இடைப்பகுதி; middle region, central place. "*பொன்னி நடுவுபாட்டுத் திருவரங்கத் தரவணையிற் பள்ளிகொள்ளும்*" (திவ். பெருமாள். 1:11.).

[நடுவு + பாடு.]

நடுவுரை *naḍu-v-urai,* பெ. (n.) நன்மை–தீமை, நட்பு–பகைமை எனும் இரண்டிற்கும் பொதுவான, நல்லுரை; neutral advice. "*நாவில் நடுவுரையாய் நின்றாய் நீயே*" (தேவாரம்).

[நள் → நடு → உரை.]

நடுவுள்ளவன் *nadu-v-ullavan,* பெ. (n.) *நடுவிலான்* பார்க்க; see *naduvilān.*

[நடு + உள்ளவன்.]

நடுவூர் *nadu-v-ūr,* பெ. (n.) ஊரின் நடுவிடம்; heart of a town, centre of a town. "*நடுவூரு ணச்சுமரம் பழுத்தற்று*" (குறள், 1008).

நடுவெலும்பு *nadu-v-elumbu,* பெ. (n.) முதுகெலும்பு (யாழ்.அக.); back-bone.

மறுவ. முதுகந்தண்டு, வீணைத்தண்டு.

[நடு + எலும்பு.]

நடுவெழுத்தலங்காரம் *nadu-v-eluttalangāram,* பெ. (n.) சித்திரப்பாடல்; a variety of nāṟ-p-pādal.

[நடு + எழுத்து + skt.அலங்காரம்.]

நடுவெழுத்து *nadu-v-eluttu,* பெ. (n.) 1. ஆவணமெழுதுபவன்; document-writer. 2. ஆவணங்களைப் பதிவு செய்யும் அதிகாரி; an official whose duty was to attest documents of sales and mortgages.

[நடு + எழுத்து.]

நடுவெழுது—தல் *nadu-v-eludu-,* 5 செ.கு.வி. (v.i.) ஆவணமெழுதுதல்; to engross a document.

[நடு + எழுது—.]

தல்லீற்றுத் தொழிற்பெயர்.

நடுவெளி *nadu-veli,* பெ. (n.) 1. இடைவெளி (யாழ்.அக.); centre of an open plain, interspace. 2. பரவெளி (வின்.); the immense space, as filled by the Supreme Being.

[நடு + வெளி.]

நடுவே *nadu-v-ē,* இடை, (part), இடையில்; in the middle of, in the midst.of. "*உன்னடியவர் தொகை நடுவே*" (திருவாச.44:1.). "*நல்லவன் ஒருவன் நடுவே நின்றால் அறாத வழக்கும் அறும்*"(பழ.). பெரியோர் பேச்சின் நடுவே இளையோர் குறுக்கிடக்கூடாது (உ.வ.). கடலின் நடுவே கப்பல் போவது தெரிகிறது. (இ.வ.).

[நடு → நடு + ஏ.]

நடுவைத்தல் *nadu-vaittal,* பெ. (n.) நாற்று நடுதல் (சா.அக.); transplanting.

[நடு + வைத்தல்.]

நடுவோடி *nadu-v-ōdi,* பெ. (n.) வீணைத்தண்டின் நடுவேயோடும் சுழிமுனை நாடி; the subtle passage supposed to run in the middle of the spinal coloumn through which sushumuna runs.

மறுவ: சுழுமுனை, நடுநாடி.

[நடு + ஓடு → நடுவோடு → நடுவோடி]

நடேசன் *nadēšan,* பெ. (n.) *ஆட(ல்)வல்லான்* பார்க்க; see *āda(l)vallān.*

நடை *nadai,* பெ. (n.) 1. காலால் நடக்கை; walk, act of walking. "*கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்*" (நாலடி.13.). 2. கோள்களினி யக்கம்; motion, course, as of a planet.

3. செலவு (பயணம்) (வின்.); journey. 4. அடிவைக்கும் நிலை; gait, mode of walking or going, pace. "*விடைபொரு நடையினான்*" (கம்பரா. எழுச்சி.10). 5. வழி (பிங்.); route,road 6. வாசல்; gate. '*இனி நீ என் நடையில் வந்து மிதிக்காதே*' (உ.வ.). 7. இடைகழி; corridor, vestibule. "*அரக்கர் கிடைகளு நடைகளும்*" (இராமநா.சுந்.3.). 8. கப்பலேறும் வழி; gangway. 9. ஒழுக்கம்; conduct, behaviour, career. "*நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே*" (புறநா.312.). 10. வழக்கம்; custom, usage, fashion. 11. மொழியின் போக்கு; style in language. '*ஒன்றல்லவை பல தமிழ் நடை*' (காரிகை.செய்.4.உரை). 12. வாசிப்பினோட்டம் (வின்.); fluency reading. 13. இயல்பு; nature. "*என்றுங் கங்குலா. நடையதோரிடம்*" (சேதுபு. கந்தமா.69). 14. அடி; foot. "*பகூட்டாலீன்ற கொடுநடைக்குழவி*" (பெரும்பாண்.243). 15. கூத்து (சூடா.); dance, dancing. 16. தொழில்; occupation. "*மாயோனிகளாய் நடைகற்ற வானோர் பலரும் முனிவரும்*" (திவ்.திருவாய்.1,5,3). 17. செல்வம் (சூடா.); wealth. 18. ஒழுக்கநூல்; religious or moral treatise. "*நன்றாக நடைபலவு நவின்றார் போலும்*" (தேவா. 722.11.). 19. நாள் வழிபாடு (நித்திய பூசை); daily worship in a temple. "*நடையும் விழவொடு நாடொறு மல்குங் கழுமலத்துள்*" (தேவா152,8.). 20. கோயில் (T.A.S.iv,8.); temple 21. தடவை; turn, time. ஒரு நடை போய் வா (உ.வ.). 22. நீண்டநாள்; long-time. '*நடைப்பிணியா யிருக்கின்றான்*'. 23. செயல்; deed. "*உலக நடையறிந்து ஒழுகுவதே அறம்*" (உ.வ.). 24. ஒழுக்கம்; "நடையின் நின்றுயர் நாயகன்" (கம்பரா.).

க., நடெ., தெ., நட. ம., நட.

நடைஉத்திகள் *nadai-uttigal*, பெ. (n.) ஒலிநிலை, இலக்கணநிலை, சொல்நிலை எனப்பல்வேறு நிலைகளில் உருவாகும் மாற்றங்களே, நடைஉத்திகள் ஆகும்; the techniques style in change of style in which phonetics, grammatical and word etc.,

[நடை + உத்திகள்.]

நடைக்காவணம் *nadai-k-kāvaṇam*, பெ. (n.) *நடைப்பந்தல்* பார்க்க; see *nadai-p-pandal*. "*அவ்வளவு நடைக்காவணம் பாவாடையுடன்*" (பெரியபு.ஏயர்கோன்.57).

[நடை + காவணம்.]

நடைக்காற்று *nadai-k-kāṟṟu*, பெ. (n.) பரவியடிக்குங் காற்று; free current of air.

[நடை + காற்று.]

நடைக்குநடை *nadaikku-nadai*, வி.எ. (adv.) ஒவ்வொருதடவையும்; everytime, at each turn.

[நடைக்கு + நடை.]

நடைக்கூடம் *nadai-k-kūdam*, பெ. (n.) 1. வாயிலிடம் (இ.வ.); entrance to a building. 2. மாளிகையின் முகப்புக்கூடம்; vestibule of a palace. 3. உடம்பு; the body, as a moving mansion. *வீறிலி நடைக்கூடம்.* (திருவாச. 25;4).

[நடை + கூடம்.]

நடைகாயம் *nadai-kāyam*, பெ. (n.) மகப் பேறு அடைந்த பெண் உட்கொள்ளும் மருந்துவகை; a medicinal compound taken in by women after child - birth "*குறத்தி பிள்ளை பெற்றால், குறவன் நடைகாயம் தின்பான்*" (பழ.).

[நடை + காயம்.]

நடைகாயவிளகியம் *naḍai-kāya-v-iḷagiyam,* பெ. (n.) *நடகாய இளகியம்* பார்க்க; see *naḍa-kāya-iḷagiyam.*

[நடைகாயம் + இளகியம்.]

நடைகாவல் *naḍai-kāval,* பெ. (n.) *நடைகாவற்காரன்* பார்க்க; see *naḍai-kāvar-kāran.*

[நடை + காவல்.]

நடைகாவற்காரன் *naḍai-kāvar-kāran,* பெ. (n.) கோயில் முதலியவற்றின் வாயில்களிற் காவலாய் நிற்பவன்; guard at the entrance as of a temple, gate keeper.

[நடை + காவல் + காரன்.]

நடைகிணறு *naḍai-kiṇaṟu,* பெ. (n.) இறங்க ஏற உதவும் படிகள் கொண்ட கிணறு (வின்.); well with steps down to the water at its base.

[நடை + கிணறு.]



நடைகூடம் *naḍai-kūḍam,* பெ. (n.) *நடைக்கூடம்* பார்க்க; see *naḍai-k-kūḍam.*

[நடை + கூடம்.]

நடைகூலி *naḍai-kūli,* பெ. (n.) செய்திபரப்புதற்கு, நடந்து சென்று செல்வதற்குரிய கூலி; wage for going on foot, as in carring message.

[நடை + கூலி.]

நடைச்சலங்கு *naḍai-c-calaṅgu,* பெ. (n.) சிறுபடகு (யாழ். அக.); small boat

[நடை + சலங்கு.]

நடைச்சாவடி *naḍai-c-cāvaḍi,* பெ. (n.) *நடைக்கூடம்* பார்க்க; see *naḍai-k-kūḍam.*

[நடை + மரா. சாவடி.]

நடைச்சீக்கு *naḍai-c-cīkku,* பெ. (n.) *நடைநோய்* பார்க்க; see *naḍai-nōy.*

[நடை + Eng. சீக்கு.]

நடைசாரி *naḍai-šāri,* பெ. (n.) 1. குதிரையின் மந்தகதி (வின்.); the gentle pace of a horse. 2. உலாவுகை (யாழ். அக.); walk, Constitutional. 3. இடையறாத நடை (வின்.); ceaseless walking.

[நடை + சாரி.]

நடைசாரிமேளம் *naḍai-šāri-mēḷam,* பெ. (n.) 1. ஊர்வலமாகச் செல்லும் மேளம்; piper's music accompanying a procession. 2. சாப்பறை (யாழ். அக.); funeral drum

[நடை + சாரி + மேளம்.]

நடைத்திண்ணை *nadai-t-tinnai,* பெ. (n.) இடைகழித்திண்ணை; pial.

[நடை + திண்ணை (நடை = இடைகழி).]

நடைத்தேர் *nadai-t-tēr,* பெ. (n.) சிறுதேர்; child's toy-car. "*புதல்வர் நடைத்தே ரொலிகறங்கு நாடு*" (பு.வெ.3,8.).

[நடை + தேர்.]

நடைநீர் *nadai-nir,* பெ. (n.) ஓட்டமுள்ள நீர்; running or current water, as in a channal.

[நடை + நீர் = நிலையாகத் தேக்கமின்றி ஓடும் ஓடைநீர்.]

நடைநோய் *nadai-nōy,* பெ. (n.) 1. கிடைபாடில்லாத நோய்; disease not so severe as to cause one to take to bad. 2. துயில் நடை; somnambulism.

மறுவ: துயில் இயக்கம்.

[நடை + நோய்.]

இரவில் தன்னையறியாது நடக்கும் நோய். இந் நோய் கண்டவர்தம் தன்னினைவு இன்றி, செயற்பாடுகள் அனைத்தும் உறங்கிய நிலையிலேயே நிகழும்.

நடைப்படம் *nadai-p-padam,* பெ. (n.) *நடைப்படாம்* பார்க்க; see *nadai-p-padām.* "*நடைப்பட நாட்டி*" (பெருங். இலாவாண. 3,68.).

[நடை + படம்.]

நடைப்படாம் *nadai-p-padām,* பெ. (n.) *நடைப்பாவாடை* பார்க்க; see *nadai-p-pāvādai.* "*பையர வரியி னன்ன நடைப்படாம் பரப்பி*" (திருவிளை. திருமண. 147.).

[நடை + படாம்.]

ஒ.நோ. முகபடாம்

நடைப்பந்தல் *nadai-p-pandal,* பெ. (n.) 1. திருவிழாக் காலத்தில் நடந்து செல்வதற்கு அமைக்கும் பந்தல்; pandal erected throughout the entire route of a procession 2. திருவிழாக்காலத்தில் புறப்பாட்டில், இறைத்திருவுருவுடன் செல்லுமாறு அமையும், பூப்பந்தல் (இ.வ.); a kind of movable pandal carried to shade an idol during procession.

[நடை + பந்தல்.]



நடைப்பயணம் *nadai-p-payanam,* பெ. (n.) நெடுந்தூரம் நடந்துசெல்லும் பயணம்; travel on foot. நடைபயணம் மேற்கொண்டு,

பாடல்பெற்ற திருக்கோயில்களைக்காணப் போகிறோம்.

[நடை + skt பிரயாண → பயணம்.]

நடைப்பயில்—தல் *nadai-payil-*, 7செ.குன்றாவி. (v.t.) மெதுவாக அல்லது நளினமாக நடத்தல்; to walk gracefully or daintily. *அன்னம் போல் அவள் நடைபயின்றாள் (உ.வ.). நடனமகளிர், அழகு மயில் போல அசைந்தாடி நடைபயில்வர் (இ.வ.).*

[நடை + பயில்—.]

நடைப்பயிற்சி *nadai-p-payirci,* பெ. (n.) உடல் நலத்தின் பொருட்டு, வேறுநோக்கமின்றி மேற்கொள்ளப்படும் நடை; walking.

[நடை + பயிற்சி.]

மருத்துவர் அறிவுரையின் படி மேற்கொள்ளும் பயிற்சி. அரத்தக் கொதிப்பு, நீரிழிவு போன்ற நோய்களுக்கு, நடைப்பயிற்சி சாலச்சிறந்தது.

நடைப்பரிகரம் *nadai-p-parigaram,* பெ. (n.) *நடைப்பரிகாரம்* பார்க்க; see *nadai-p-parigāram.*

[நடை + பரிகரம்.]

நடைப்பரிகாரம்[1] *nadai-p-parigāram,* பெ. (n.) வாழ்விற்குரிய பொருள்கள்; means of livelihood. "*நட்டோ ருவப்ப நடைப் பரிகார முட்டாது கொடுத்த... நள்ளியும்*" (சிறுபாண். 104.). 2. பயணத்திற்கு வேண்டிய பொருள் (யாழ். அக.); things or provisions necessary for a journey.

[நடை + பரிகாரம்.]

நடைப்பரிகாரம்[2] *nadai-p-parigāram,* பெ. (n.) விலக்குணவு இல்லாத மருந்து (யாழ். அக.); medicine for which no special diet is required.

[நடை + பரிகாரம்.]

நடைப்பாவாடை *nadai-p-pāvādai,* பெ. (n.) நடைபாவாடை பார்க்க; see nadai-pāvādai. "*விரிப்புறு நடைப்பாவாடை மேனகை விரிப்ப*" (குற்றா.தல. திருமண. 131.). "*தகப்பனுக்குக் கட்டக் கோவணத்துக்கு வழி இல்லை. மகன் தஞ்சாவூர் மட்டும் நடைப்பாவடை போடச் சொன்னானாம்*" (பழ.).

[நடை + பாவாடை.]

நடைப்பிணம் *nadai-p-pinam,* பெ. (n.) 1. மக்கட்பதடி; worthless person or a useless fellow. "*பிணத்தினையொத்து வாழ்வோர், பின்னடைப் பிணங்கள் போலவுணக்கியே யுழல்வீர்*" (சி.சி. 2,96.). 2. நடக்கும் உயிர்ப் பிணம்; a walking corpse.

[நடை + பிணம்.]

நடைப்பெருவாயில் *nadai-p-peru-vāyil,* பெ. (n.) கோயிலின் சிறப்பு வாசல்; main entrance to a palace or a temple. "*நடைப்பெருவாயிலும்*" (பெருங். மகத. 14,20.).

[நடை + பெருவாயில்.]

[நடை = வாயில்.]

நடைப்பொன் *nadai-p-pon,* பெ. (n.) நடப்புச் செலவுக்குத் தேவையான பணம்; an amount of money required for current expenses. "*ஆக நடைப்பொன் பதினெட்டு லட்சமும்*" (கோயிலொ. 16.).

[நடை + பொன்.]

நடைப்போடு—தல் *nadai-pōdu-,* 19 செ.குன்றாவி. (v.t.) வெற்றியுடன் சிறப்பாக முன்னேறுதல்; to take good strides to progress tirumphantly. நாடு நல்வாழ்வை நோக்கி நடைப் போடுகிறது. (உ.வ.).

[நடை + போடு—.]

நடைபடம் *nadai-padam,* பெ. (n.) *நடைபாவாடை* பார்க்க; see *nadai-pāvādai.* "*மாதர் நடைபடம் விரிப்ப.*" (குற்றா. தல. திருமண. 82.).

[நடை + படம்.]

நடைபடி *nadai-padi,* பெ. (n) 1. நடத்தை (வின்.); action, behaviour, life, history. 2. வழக்கம்; manner, custom, practice. 3. அறமன்ற நடவடிக்கை; procedure, as in a court.

[நடை + படி.]

நடைபயம் *nadai-payam,* பெ. (n.) நடப்பதற்கு அஞ்சுகை; morbid fear of walking.

[நடை + skt.பயம்.]

உருமநேரத்தில் காட்டிடையும், இரவில் தனிமையிலும் ஏற்படும் நடையச்சம்.

நடைபரி—தல் *nadai-pari-,* 2 செ.கு.வி. (v.i.) வேகமாக நடத்தல் (யாழ். அக.); to walk fast.

[நடை + பரி—.]

நடைபழகு—தல் *nadai-palagu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நடக்கக்கற்றல்; to learn to walk as a child. குழந்தைகள் நடைபழகுதற்கு, நடைவண்டி ஏற்புடைத்தென்பது, எல்லாரும் அறிந்தது. (உ.வ.) 2. மிகமெதுவாக நடத்தல்; to walk too slowly, as just learning to walk used ironically.

[நடை + பழகு—.]

நடைபாதை *nadai-pādai,* பெ. (n.) நடக்கும் பாதை (நெல்லை); path, footway, frequented path.

மறுவ. நடைவழி.

[நடை + பாதை.]

நடைபாவாடை *nadai-pāvādai,* பெ. (n.) நடத்தற் பொருட்டு வழியில் விரிக்கும் ஆடை; cloth spread on the floor for walking upon, as in a procession.

[நடை + பாவு + ஆடை.]

மிதியடி அணியாத காலத்தில், தக்காரை வரவேற்க, கல்லும் முள்ளும் குத்தாமல் இருப்பதற்குத் துணி விரிக்கப்பட்டது.

நடைபாவி *nadai-pāvi,* பெ. (n.) 1. *நடைவாவி (இ.வ.)* பார்க்க; see *nadai-vāvi,* 2. படிக்கட்டு (யாழ். அக.); steps, flight of steps

நடைபேசி *nadai-pēsi,* பெ. (n.) நடக்கும்போதே பேசும் தொலைபேசி; walky talky.

[நடை + பேசி.]

நடைமச்சம் *nadai-maccam,* பெ. (n.) மீன்வகையுளொன்று; a kind of fish

நடைமருந்து *nadai-marundu,* பெ. (n.) *நடைப் பரிகாரம்*[2] பார்க்க; see *nadai-p-parigāram*[2].

[நடை + மருந்து.]

நடைமலை *nadai-malai,* பெ. (n.) யானை; elephant. "*நடைமலையெயிற்றினிடை தலைவைத்தும்*" (கல்லா. 12.).

[நடை + மலை.]

நடைமனை *nadai-manai,* பெ. (n.) உடம்பு; body, as a walking house. "*சாலேகமொன்பது குலாவு நடைமனையை*" (தாயு.சச்சிதா.2).

[நடை + மனை.]

நடைமாடு *nadai-mādu,* பெ. (n.) கால்நடை (ஆடுமாடுகள்) (நாஞ்.); cattle, live-stock.

[நடை + மாடு. = கால்நடைச்செல்வம்.]



நடைமாளிகை *nadai-māligai,* பெ. (n.) கருவறையைச் சூழ்ந்ததாகத் திருச்சுற்றில் அமைக்கப்படும், தொடர்நிலை மண்டபம் (கல்.அக.); outer halls adjoining. the sanctum of a temple.

[நடை + மாளிகை. (நடை = கோயில்).]

நடைமாற்று *nadai-māṟṟu,* பெ. (n.) *நடைபாவாடை (நெல்லை)* பார்க்க; see *nadai-pāvādai.*

[நடை + மாற்று.]

நடைமுதல் *nadai-mudal,* பெ. (n.) நடப்பிலுள்ள ஆண்டு (இ.வ.); current year.

[நடை + முதல்.]

நடைமுறை *nadai-muṟai,* பெ. (n.) 1. ஒரு திட்டம் கொள்கை முதலியவற்றைச் செயல்படுத்தும் முறை; practice. நாட்டில் நடைமுறைக்கு ஒத்துவரும் திட்டங்களை வகுக்கவேண்டும் (உ.வ.). 2. பழக்கம்; that which is in practice. ஏற்கனவே நடைமுறையில் உள்ளது (உ.வ.). 3. வழிமுறை; method. நாடகநடிகர்களுக்கு, மேடை நடைமுறை பற்றிய பயிற்சி தரப்படுகிறது. (இ.வ.).

நடைமுறைப்படுத்து-தல் *nadai-muṟai-p-paduttu-,* 5 செ.கு.வி. (v.t.) ஆட்சி, திட்டம், சட்டம் போன்றவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருதல் அல்லது செயல்படுத்துதல்; to put into practice, to bring into force, to implement. பல வளர்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றன. (உ.வ.).

[நடைமுறை + படுத்து-.]

நடைமுறைமூலதனம் *nadai-muṟai-mūla-tanam,* பெ. (n.) ஒவ்வொரு தொழில் நிறுவனமும், அன்றாடச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட முதல்; working capital.

[நடைமுறை + மூல. + Skt தனம்.]

நடைமுறை மூலதனத்தின் வகைகள்:- 1. வழக்கமாக அல்லது நிலையாக ஒதுக்கப்படும் நடைமுறைமூலதனம்.

2. பருவகால நடைமுறைமூலதனம்.
3. சிறப்பு நடைமுறைமூலதனம்

நடைமேடை *nadai-mēdai,* பெ. (n.) நடந்துசெல்லும் பொருட்டு, சாலையோரங்களில் அமைக்கப்பட்ட பகுதி; platform.

[நடை + மேடை.]

போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, மக்கள் நடந்து செல்லுவதற்கென்று அமைக்கப்பட்ட, மேடைபோன்ற பகுதி.

நடைமொழி *nadai-moḻi,* பெ. (n.) கிளைமொழி; dialect language. 'இலக்கிய நடைமொழி புலவர்க்கு உகந்தது' (இக்.வ.).

[நடை + மொழி.]

நடையறி-தல் *nadai-y-aṟi-,* 2செ.கு.வி. (v.i.) ஊர்வழக்கங்களையறிதல் (வின்); to understand the customs, as of a locality.

[நடை(உலகியல்) + அறி —.]

நடையன் *nadaiyaṉ,* பெ. (n.) 1. நடக்கிறவன் (வின்.); walker, pedestrian. 2. உழவுமாடு, குதிரை முதலியவை; ploughing ox, riding horse, etc., 3. செருப்பு; shoes, slippers.

ம. நடயன்.

[நடை → நடையன்.]

நடையாட்டம் *nadai-y-āṭṭam,* பெ. (n.) வழக்கிற் பயின்று வருகை; usage. "*முடுகாவழி அத்துணை நடையாட்டம் இல.*" (தொல்.பொருள்.377,உரை.).

தெ. நடயாடு.

[நடை + ஆட்டம்.]

நடையாடு-தல் *nadai-y-āḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. திரிதல்; to roam, to travel, to traverse. "*நடையாடாத தேசமாகையாலே*" (திவ். திருமாலை. 19,வ்யா.). 2. பரவுதல்; to spread, as fame. '*ராமகுணங்கள் நடையாடு மிடத்திலே*' (ஈடு.7,5,2).

மறுவ. நடமாடு.

[நடை + ஆடு—.]

நடையாடுநோய் *nadai-y-āḍu-nōy,* பெ. (n.) 1. மூச்சுத்திணறும் ஈளை நோய்; a disease in which the respiration is obstructed as asthma. 2. நடமாட்டத்தைத் தடுக்காத முடக்குநோய்கள்; certain classes of rheumatism, which allow persons to move about freely without any difficulty

மறுவ. ஈளைநோய்.

[நடையாடு + நோய்.]

நடையியல் *nadai-y-iyal,* பெ. (n) பேச்சு, மொழி, எழுத்து, மொழி ஆகியவற்றின் நடையைப்பற்றி ஆராயும், ஒரு மொழியியல் பிரிவு; style in language.

[நடை + இயல்.]

நடையில்விடு-தல் *nadaiyil-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) மாடு முதலியவற்றைப் பெருநடையிற் செலுத்துதல்; to lead or drive at a brisk pace, as a bull-cart. மாட்டைத்துரத்தாதே நடையில் விடு (இ.வ.).

[நடையில் + விடு—.]

நடை =நடக்கும் அகன்ற வாயில்

நடையுடைபாவனை *nadai-y-udai-pāvaṉai,* பெ. (n.) மக்களின் உடுப்பு வழக்கவொழுக்க முதலியன; manners and customs, as of a nation.

[நடை + உடை + Skt. பாவனை.]

மாந்தர்தம் புறநாகரிகத்தைப் புலப் படுத்துவதே, நடையும், உடையும்.

நடையுடையோன் *nadai-y-udaiyōṉ,* பெ. (n.) காற்று; air, wind, as hair motion. "*காலங்களு நடையுடை யோனும்*" (திருப்பு.994.).

[நடை + உடையோன்.]

விரைந்து வீசும் நடையுடைமை பற்றிக் காற்றுக்குரித்தான பெயரெனலாம்.

நடையைக்கட்டு—தல் *nadaiyai-k-kaṭṭu-,* 15 செ.கு.வி. (v.i.) இருக்கும் இடத்தைவிட்டு நீங்குதல், அல்லது புறப்படுதல்; to buzz off, clear off. 'வந்த வேலை முடிந்துவிட்டால், நடையைக் கட்டு' (பழ.).

[நடை + ஐ + கட்டு-.]

நடையொத்து *nadai-y-ottu,* பெ. (n.) ஒருவகைத்தாளம் (திவ்.திருவாய். பதிகத் தலைப்பு.); a mode of marking time.

[நடை + ஒத்து.]

நடைவகைகள் *nadai-vagaigaḷ,* பெ. (n.) ஓர் ஆசிரியரே தேவைக்கும், சூழலுக்கும், ஏற்றவாறு, பல்வேறு பாங்கினில் எழுதும் முறை; various kinds of writing.

[நடை + வகைகள்.]

பல்வேறு நடைவகைகள்.

1. கட்டுரை நடை.
2. வண்ணனை நடை.
3. பாட்டு நடை.
4. விளக்க நடை.

நடைவண்டி *nadai-vaṇḍi,* பெ. (n.) சிறுபிள்ளைகள் நடைபழகுதற்குதவும் வண்டி; a go-cart.

[நடை + வண்டி.]



நடைவரம்பு *nadai-varambu,* பெ. (n.) நடந்து செல்லுதற்குத் தக்கபடி அமைந்த வயல்வரப்பு; ridge of fields, used as a path-way.

[நடை + வரப்பு → நடைவரம்பு.]

நடைவழக்கு *nadai-vaḻakku,* பெ. (n.) *நடைமொழி* பார்க்க; see *nadai-moḻi*

[நடை + வழக்கு.]

நடைவழி *nadai-vaḻi,* பெ. (n.) **1.** மூன்று முழ அகலமுள்ள பாதை (சுக்கிரநீதி,37.); road, three cubits wide. **2.** நடக்கும் வழி; way, path.

மறுவ. நடைபாதை.

[நடை + வழி.]

நடைவழு *nadai-valu,* பெ. (n.) செய்யுட் குற்றங்களுள் ஒன்று (யாப்.வி.525); deviation from rule in style.

நடைவாதம் *nadai-vādam,* பெ. (n) வளிக்கோளாறினால் நொண்டி நடத்தல்; limping due of spasmodic attacks.

[நடை +Skt. வாதம்.]

நடைவாவி *nadai-vāvi,* பெ. (n.) படிகளமைந்த கிணறு (வின்.); well with steps down to the water as its base.

மறுவ. நடைக்கிணறு.

[நடை + வாவி.]

பெருங்கிணற்றில் ஏறி இறங்க ஏதுவாகச் சுவரில் படிகள் அமைக்கப் படுதல் வழக்கம்.

நடைவானம் *nadai-vānam,* பெ. (n.) *நடைப்பந்தல்* பார்க்க; see *nadai-p-pandal.*

[நடை + வானம்.]

நடைவியாதி *nadai-viyādi,* பெ. (n.) நெடுநாட்பட்டநோய்; longersistis sickness, chronic illness.

[நடை +Skt. வியாதி.]

நடைவிளக்கெரி–த்தல் *nadai-vilakkeri-,* 4 செ.குன்றா.வி. (v.t.) குற்றஞ்செய்தோரைத் தண்டிப்பதற்கு, அவர் தலையில் விளக்கை வைத்து, ஊரை வலம்வரச் செய்தல்; to punish a condemned culprit by compelling him to go around a town, with a burning lamp on his head. *'இத் தன்மைத்தொன்று கூறின், நம்மை நடைவிளக்கெரிக்கும்'* (சீவக.1162.உரை.).

[நடை + விளக்கெரி–.]

நடைவெள்ளம் *nadai-vellam,* பெ. (n.) இறைக்கவேண்டாதபடி, தோட்டம் முதலிய வற்றிற்குத் தானாகவே பாயும்நீர்; water flowing into a field or garden, from natural sources, dist. fr.iraippu-vellam.

[நடை + வெள்ளம்.]

நண்டபிண்டல் *nanda-pindal,* பெ. (n.) 1. கூழுங் கட்டியுமாய் உண்ணுதற்காகாதபடி ஆக்கப்பட்ட சோறு; rice over-boiled and made happy. *நண்டல்பிண்டலாய் ஆக்கிய சோறை நாய்கூடத் தின்னாது* (உ.வ.); 2. நொறுங்கல்; that which is crushed. சோற்றை நண்டல்பிண்டலாக்கி விட்டாள் (உ.வ.).

மறுவ : கூழ்பதம்.

நொண்டு → நண்டு + அல் → நண்டல் = நெடுநாள் நோய்வாய்ப்பட்டோர், நுகர்தற் பொருட்டுக் கிண்டிக் குழைத்த உணவு. பொங்கல் ஆக்குங்கால் கிண்டியும் நன்கு குழைத்தும் சமைப்பது மரபாகும்.

நண்டல் + பிண்டல் = உண்ணற்காகாவாறு கூழுங் கட்டியுமாகச் சமைத்தசோறு. (வே.க.3.17.).

நண்டல் *nandal,* பெ. (n.) குழைவுபட்டது; macerated mass, rice boiled to a pap நண்டல் கிண்டிப்படைக்கிறது (வின்.).

[நொள் → நொண்டு → நண்டு → நண்டல்.]

மாந்தர் நுகர்தற்பொருட்டுக் கிண்டிக் குழைத்த உண்டி. நண்டல் கிண்டிப் படைத்தல் என்பது உலகவழக்கு. (வே.க.3.17.).

நண்டற்சோறு *nandar-šōru,* பெ. (n.) தைப் பொங்கலில் சமைத்த சோறு (இ.வ.); food cooked on the pongal day.

[நண்டல் + சோறு = நன்கு கிண்டிச் சமைத்த பொங்கற் சோறு.(வே.க.3.17.).]

நொண்டு + நண்டு. நண்டுதல் = கிண்டுதல், கிளறுதல். நண்டல் = கிண்டிக் குழைத்த உண்டி.

நண்டிறைச்சி *nandiraicci,* பெ. (n.) சமைத்த நண்டின் தசை; cooked or boiled crab flesh.

[நண்டு + இறைச்சி.]

இறால் இறைச்சி போல, நண்டின் இறைச்சி சுவையுடையது.

நண்டு *nandu,* பெ. (n.) 1. நீரோரத்தில் வாழும் உயிர்வகை; crab, lobster 2. நண்டு வடிவான ஓரை (சூடா.); cancer in the zodiac. 3. குளிர்மை; cold. 4. கள்ளி; milk, spurge.

தெ., (எண்டிரி) ம. நண்டு.

[நொண்டு → நண்டு.]

நண்டுதல் = கிண்டுதல், கிளறுதல். நண்டு = வண்டலிலும், மணலிலும் கிண்டினாற். போல், கீறிச்செல்லும் நீருயிரி.) (வே.க.3.17.).

இடுக்கியின் முன்பகுதி போன்ற இரு முன்னங்கால்களையும், ஓடு மூடிய உடலையும் கொண்டது. நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினம். மருந்துக் குணமுள்ள இவ்வுயிரி ஏரி, குளம், நன்செய் வரப்பு, ஆற்று நீர்ப்படுகை போன்ற இடங்களில் காணப்படும். கடலில் இவ்வினம் மிகுதியாகக் காணப்படும். கடலில் காணப்படும் இந் நண்டு ஏழைமக்களுக்கும், மீனவர்கட்கும், ஊட்டச் சத்தினையும் நோய் எதிர்ப்பு ஆற்றலையும் வளர்க்கும்.

நண்டுச் சாறு, எல்லா நோய்கட்கும் கைகண்ட மருந்து. குளுமையைப் போக்கும். இசிவுநோய், மிகு குளுமை, உடம்புவலி முதலான நோய்களைத் தீர்க்கும்

இதன் வகைகளாகச் சாம்பசிவ மருத்துவ அகரமுதலி கூறுவது வருமாறு:-

1. குளநண்டு- small tank crab.
2. ஆற்று நண்டு- river crab
3. கடல் நண்டு- sea crab.
4. கடுக்காய் நண்டு- small crab of the size of gall nut
5. நீலக்காலி நண்டு; blue legged crab
6. ஒருகால் நண்டு;crab with one claw only.
7. செம்பாறை நண்டு; large and red crab.
8. தில்லை நண்டு: black crab
9. வயல் நண்டு; field crab
10. வெள்ளை நண்டு; white crab.
11. கருப்பு நண்டு; black crab
12. வானம்பாடி நண்டு; another variety.
13. பால் நண்டு; milk crab.
14. பீ நண்டு;
15. சீமை நண்டு; english black clawed crab.
16. சூக்காய் நண்டு;
17. பெரு நண்டு; big crab.

நண்டுக்கண்ணுக்கினி *nandu-k-kannuk-kini,* பெ. (n.) எலுமிச்சம்பழம்; lime fruit.

நண்டுக்கண்ணுப்பூடு *nandu-k-kannu-p-pūdu,* பெ. (n.) கடலுராய்ஞ்சி மரம்; climbing partridge.

[நண்டு + கண்ணு + பூடு.]

நண்டுக்கரம் *nandu-k-karam,* பெ. (n.) கற்கடகம் பார்க்க; see kar-kadagam. *"சமநிலையிலே நின்று நண்டுக்கரத்தைக் கோத்து"* (சிலப்.17; பக்.455.).

[நண்டு + கரம்.]

நடனமுத்திரைவகையுளொன்று.

நண்டுக்கல்[1] *nandu-k-kal,* பெ. (n.) இணைவிழைச்சு நோயினைத் தீர்க்கும் கல்; a kind of stone useful in venereal diseases. abdominal dropsy, etc. (சா.அக.).

[நண்டு + கல்.]

நண்டுக்கல்[2] *nandu-k-kal,* பெ. (n.) நச்சுத்தன்மையை நீக்குவதும், நண்டு இறுகி மாறியதாகக் கருதப்படுவதுமான கல்வகை (வின்.); a kind of petrified lobster, used as a charm.

[நண்டு + கல்.]

நண்டுக்கழை *nandu-k-kalai,* பெ. (n.) ஒரு வாழையினம்; a variety of plantain tree.

[நண்டு + கழை.]

நண்டுக்கறி *nandu-k-kari,* பெ. (n.) சமைத்த நண்டுக்கறி; dish, prepared out of crabsh.

[நண்டு + கறி.]

நண்டின் கால்கள், வயிறு போன்ற பகுதிகள், ஓடாக அமைந்திருக்கும். அதை உடைத்து உள்ளே கட்டைவிரலால் தோண்டி எடுக்கும் கறிப்பகுதி.

இக்கறியினை உரிய பதத்தில் சமைத்து உண்பதால், இசிவுநோய், நாட்பட்ட கோழை, போன்றவை குணமாகும்.

நண்டுக்காற்கீரை *nandu-k-kār-kirai,* பெ. (n.) கீரைவகை (மூ.அக.); a kind of eat-able greens.

[நண்டு + கால் + கீரை.]

நண்டுக்கால் போன்ற வடிவமைப்புக் கொண்ட கீரைக்கொத்து.

நண்டுக்காற்புல் *nandu-k-kār-pul,* பெ. (n) புல்வகை (யாழ்.அக.); a kind of grass. ischaemum aristatum (சா.அக.).

[நண்டு + கால் + புல்.].

நண்டுக்கால் போல், வண்ணமுடைய புல்வகை; ஈளை நோய்கண்டவர்க்கு இக் கீரைச்சாறு கைகண்ட மருந்து.

நண்டுக்கிண்ணி *nandu-k-kinni,* பெ. (n.) நண்டின் சிறுகால்; small leg of a crab

[நண்டு + கிண்ணி ; கிண்ணம் → கிண்ணி.]

ஒ.நோ. கிண்ணிக்கோழி.

நண்டுக்குழி *nandu-k-kuli,* பெ. (n.) நண்டின் வளை; the hole where the crab is living; crab's hole.

[நண்டு + குழி.]

நண்டுக்குழிநீர் *nandu-k-kuli-nīr,* பெ. (n.) நண்டுவளைத் தண்ணீர்; the water lying stagnant is the crab's hole near the ridges of the field.

[நண்டு + குழி + நீர்.]

நோயாளியின் நாவறட்சியினைப் போக்கும் கைகண்ட மருந்து. மேலும் நீங்கா விக்கல், உடம்பெரிச்சல் போன்ற நோய்களுக்கும் நண்டுக்குழி நீர் உகந்தது (சா.அக.).

நண்டுக்குழிமண் *nandu-k-kuli-man,* பெ. (n.) நண்டுக் குழியிலுள்ள மண்; the earth of crab's hole.

[நண்டு + குழி + மண்.]

மந்திரச் செயல்களுக்கு நண்டுக்குழியிலிருந்து எடுக்கப்பட்ட மண் சாலச்சிறந்தது. (சா.அக.).

சுமை இழுக்கும் எருதுகளுக்கும், நுகத்தடி ஏர்க்காலில் பிணைத்து உழுசால் ஓட்டும் காளைகட்கும், கழுத்தில் காய்ப்பு ஏற்படும். இக் கழுத்துக் காய்ப்பு, நாளா வட்டத்தில் புண்ணாக மாறும். இப் புண்களுக்கு நண்டுக்குழி மண், நனி சிறந்தது.

நண்டுக்கொடுக்கு *nandu-k-kodukku,* பெ. (n.) நண்டின் முன்புறத்துள்ள உறுப்பு; forceps of a lobster.

[நண்டு + கொடுக்கு.]



நண்டுக்கொழுப்பு *nandu-k-koluppu,* பெ. (n.) நண்டின் கொழுப்பு; crabs fat

[நண்டு + கொழுப்பு.]

தோல்நோய், இசிவுநோய், ஈளைநோய் முதலான நோய்கட்கும், உடம்பிலேற்படும் எரிச்சல் தன்மையைப் போக்குவதற்கும் நண்டுக்கொழுப்பு மிகவும் பயன்படும். (சா.அக.).

நண்டுக்கோது *nandu-k-kōdu,* பெ. (n.) நண்டின் ஓடு முதலியன (வின்.); remains of lobsters as the shell.

[நண்டு + கோது.]

நண்டுகண்ணுக்கினி *nandu-kannukkini,* பெ. (n.) எலுமிச்சை (சங்.அக.) பார்க்க; see elumiccai, sour lime

நண்டுச்சாறு *nandu-c-cāru,* பெ. (n.) நண்டுச்சதையில் சமைத்த குழம்பு நீர்; crab's soup.

[நண்டு + சாறு.]

நண்டுச்சிறுகால் *nandu-c-ciru-kāl,* பெ. (n.) நண்டின் பின்னங்கால்கள்; the two back legs of the crab.

[நண்டு + சிறுகால்.]

நண்டுச்சினை *nandu-c-cinai,* பெ. (n.) நண்டின் முட்டை; crab's egg.

[நண்டு + சினை.]

நண்டுச்செலவு *nandu-c-celavu,* பெ. (n.) நண்டு இருக்கும் வளை; crab's hole.

மறுவ. நண்டுப் பொந்து நண்டுவலை.

[நண்டு + செலவு.]

நண்டு சென்று அடையும் வளை.

நண்டுசிண்டுகள் *nandu-šindugal,* பெ. (n.) நண்டுஞ்சுண்டும் பார்க்க; see nandun-šundum. வீட்டுக்கு வெளியே ஐந்து ஆறு நண்டு சிண்டுகள் விளையாடிக் கொண் டிருந்தனர். (உ.வ.)

மறுவ : சின்னஞ்சிறுசுகள்.

நண்டுஞ்சிண்டும் *nandun-šindum,* பெ. (n.) நண்டுஞ்சுண்டும் (இ.வ.) பார்க்க; see nandun-šundum.

[நண்டும் + சிண்டும்.]

நண்டுஞ்சுண்டும் *nandun-šundum,* பெ. (n.) சிறியவும் பெரியவுமான இளங்குழந்தைகள்; small children of different ages. *நண்டுஞ் சுண்டுமாக விட்டுவிட்டுப் போய் விட்டார்.* (இ.வ.).

[நண்டும் + சுண்டும்.]

கைகால் வளைந்தும், வயிறு பெருத்தும் காணும் குழந்தைகளைக் கூறும் வழக்கு. தஞ்சைமாவட்டத்தில் வீசம்படியைச் சுண்டு என்பது வழக்கம்.

நண்டுத்தெறுக்கால் *nandu-t-terukkāl-,* பெ. (n.) நண்டுவாய்க்காலி பார்க்க; see nanduvāy-k-kāli.

நண்டுதின்னிக்குரங்கு *nandu-tinni-k-kurangu,* பெ. (n) நண்டைத்தின்று வாழும் குரங்கு; crab eating monkey.

[நண்டும் + தின்னி + குரங்கு.]

நண்டுதின்னிநாகம் *nandu-tinni-nāgam,* பெ. (n.) நண்டுகளைத் தின்றுவாழும் நாகப் பாம்பு வகை; a kind of cobra, living on crab's hole.

[நண்டு + தின்னி + நாகம்.]

நண்டு வலையில் புகுந்து, நண்டைத் தின்று வாழும் நாகம் (சா.அக.).

நண்டுதெருக்கால் *nandu-terukkāl,* பெ. (n.) நண்டுவாய்க்காலி பார்க்க; see nandu-vāy-k-kāli.

நண்டுநசுக்கு *nandu-našukku,* பெ. (n) சிறு குழந்தைகள்; little children

[நண்டு + நசுக்கு.]

கால்கை வளைந்தும், வயிறு ஒடுங்கியும் காணப்படும் குழந்தைகள்.

நண்டுப்பிடி *nandu-p-pidi,* பெ. (n) மற்போரில் அழுத்திப் பிடிக்கும்பிடி; to hold, tightly as of a crab மற்போர் வீரரின் வெற்றிக்கு நண்டுப்பிடி இன்றியமையாதது (உ.வ.).

மறுவ : கிடுக்கிப்பிடி.

[நண்டு + பிடி.]

மற்போர் விளையாட்டில், நண்டுபோல் பிடிதளராவண்ணம் இறுக்கிப் பிடிக்கும் கிடுக்கிப்பிடியே, நண்டுப்பிடியாகும்.

நண்டுபெருங்கால் *nandu-perungāl,* பெ. (n.) நண்டின் முன்னங்கால்; the two forelegs of the crab

[நண்டு + பெருங்கால்.]

நண்டுவளைத்தண்ணீர் *nandu-valai-t-tannir,* பெ. (n.) நண்டின் வளைக்குள் நிற்கும் நீர்; stagnant water in the crabs hole.

[நண்டு + வளை + தண்ணீர்.]

நண்டுவாய்க்காலி *nandu-vāy-k-kāli,* பெ. (n.) *நட்டுவாய்க்காலி.* (யாழ்.அக.) பார்க்க; see *nattuvāy-k-kāli.*

[நண்டு + வாய் + காலி.]



நண்டூருகால் *nandūru-kāl,* பெ. (n.) நண்டின் சிற்றடி (வின்.); small legs of a crab.

[நண்டு + ஊரு + கால்.]

நண்டெடுத்தல் *nandeduttal,* பெ. (n.) நீரின் கீழ் மூழ்கியிருக்கும் இளம்பயிர்; நண்டு வெட்டுதலால், அழிந்த நிற்கும் நிலை (நாஞ்.); spolit condition of tender crops under water, due to the scratches of crabs.

[நண்டு + எடுத்தல்.]

நண்டோடு *nandōdu,* பெ. (n.) நண்டின் ஓடு; crabs shell

[நண்டு + ஓடு.]

நண்ணம் *nannam,* பெ. (n.) சிறிது; small thing. "நாடு பெற்ற நன்மை நண்ண மில்லையேனும்" (திவ்.திருச்சந்.46.).

நண்ணலர் *nannalar,* பெ. (n.) நண்ணார் (பிங்.) பார்க்க; see nannār.

[நண் + அல் + அர்.

அல் = எதிர்மறை இடைநிலை.]

நண்ணார் *nannār,* பெ. (n.) பகைவர்; foes. *"ஞாட்பினு ணண்ணாரு முட்குமென் பீடு"* (குறள், 1088.).

ம. நண்ணார்.

[நள் → நண் + நண்ணார்.]

ஒருகா. நண்ணுநர் x நண்ணார் (வே.க. 3: 53.)

நண்ணி *nanni,* பெ. (n.) நன்றி; goodness.

[ஒருகா.நன்றி → நன்னி → நண்ணி.]

நண்ணிடல் *nannidal,* பெ. (n.) சேர்தல், இணைதல்; copulate,

[நள் → நண் + நண்ணிடு → நண்ணிடல்.]

நண்ணிலக்கடல் *nannila-k-kadal,* பெ. (n.) நிலநடுக்கடல்; the mediterranean sea

[நண்ணிலம் + கடல்.]

நண்ணிலக்கோடு *nannila-k-kōdu,* பெ. (n.) நிலநடுக்கோடு; equator.

[நண்ணிலம் + கோடு.]

நண்ணிலம் *nannilam,* பெ. (n.) நடுநிலம்; equator region.

[நள் → நண் + நிலம் → நண்ணிலம் = நிலநடுப்பகுதி.]

நண்ணு[1]-தல் *nannu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கிட்டுதல்; to draw near, approach, reach. *"நம்பனையுந் தேவனென்று நண்ணுமது"* (திருவாச. 12:17.). 2. பொருந்துதல்; to be attached to, united with, to adhere. 3. செய்தல்; to do, make. "நண்ணுமின்க ணல்லறமே" (சிலப். 16, ஈற்று வெண்பா.).

[நள் → நண் → நண்ணு-.]

'நள்' எனும் பொருந்துதற் கருத்தினின்று கிளைத்த சொல். அன்பின் செறிவால் சேருதல், கிட்டுதல் போன்ற கிளைக் கருத்துகள், இச் சொல்லினின்று தோன்றியுள்ளன.

நண்ணு[2]-தல் *nannu-,* 5 செ.கு.வி. (v.t.) இருத்தல் (யாழ்.அக.); to reside, live.

[நள் → நண் → நண்ணு-.]

நண்ணுநர் *nannunar,* பெ. (n.) நட்பினர் (பிங்.); friends, adherents.

[நள் → நண் → நண்ணு → நண்ணுநர்.]

நண்ணுவழி *nannu-vali,* பெ. (n.) அருகிலுள்ள இடம்; place near by. *"கண்ணிற்கான நண்ணுவழி யிரீஇ"* (பொருந. 76.).

[நண் → நண்ணு + வழி.]

நண்ணைப்பாரை *nannai-p-pārai,* பெ. (n.) ஓரடி வளரும் வெண்ணெய்ப்பாரை மீன்; horse makerel, grey, attaining 1 ft. in length, caranxire.

[நண்ணை + பாரை.]

மறுவ: நண்ணிப்பாரை.



நண்பகல் *nan-pagal,* பெ. (n.) 1. நடுப்பகல்; midday. *"நண்பகல் வேனிலொடு"* (தொல். பொருள். 9.). 2. ஆறுபொழுதுகளிலொன்று; one of the six division of the day. (சா.அக.). 3. பத்து நாழிகை முதல் இருபது நாழிகை வரை; a period of four hours from 10 a.m to 2 p.m

[நள் + பகல் → நண்பகல்.]

நண்பல் *nan-pal,* பெ. (n.) இரண்டு பற்களினிடை; space between teeth *"தின்ற நண்ப லூஉன்றோண்டவும்"* (புறநா. 384.).

[நள் → நண் + பல் → நண்பல்.]

நண்பன்[1] *nanpan,* பெ. (n.) 1. தோழன் (பிங்.); friend, campanion, associate. 2. காதலன்; lover. *"நின்றாடனி நண்பனை நினையா"* (சீவக. 1324.). 3. குறிஞ்சிநிலத் தலைவன் (திவா.); chief of a hilly tract..

[நள் → நண் → நண்பு + நண்பன்.]

நண்பன்[2] *nanpan,* பெ. (n.) **1.** சணல்; indian hemp crotalaria. **2.** சணற்பயிர்; hemp crops.

நண்பாலம் *nanpālam,* பெ. (n.) நண்பாலை பார்க்க; see nanpālai.

நண்பாலை *nanpālai,* பெ. (n.) வெட்பாலை; blue dying rosebay.

நண்பு *nanbu,* பெ. (n.) **1.** அன்பு; love, attachment, affection; "எம்மானே நண்பே யருளாய்" (திருவாச. **44: 3.**). **2.** நட்பு, நல்லுறவு; amity, friendship ***"நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்"*** (குறள், **998.**). **3.** உறவு (பிங்.); relationship.

க., ம., நண்பு **தெ.** நணுபு.

[நள் → நண் → நண்பு.]

நண்மை *nanmai,* பெ. (n.) அண்மை; proximity. *"நட்பெதிர்ந் தோர்க்கே யங்கே நண்மையன்"* (புறநா. **380,11.**).

[நள் → நண் → நண்மை.]

நணந்தம் *nanandam,* பெ. (n.) **1.** சணல் (மலை.); sunn hemp. **2.** காட்டுப் பச்சிலை பார்க்க; see kāṭṭu-p-paccilai. **3.** புன்கு (மலை.). பார்க்க; see pungu.

[நண் + அந்தம்.]

நணா *nanā,* பெ. (n.) ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஊர். இன்று பவானி என்ற பெயருடன் உள்ளது; a village in Erodu dt.

"குன்றோங்கி வன்றிரைக் கண் மோத மயிலாலும் சாரற் செவ்வி

சென்றோங்கி வானவர்களேந்தி அடிபணியும் திரு நணாவே"

(ஞானசம்பந்தர். **208–1.**).

பவானி என்பது பூவானி என்றதன் திரிபு (சேரர்.வர.).

நணி *nani,* பெ. (n.) அணிமையான இடம்; nearness, proximity. "திரைபொரு முந்நீர்க் கரைநணிச் செலினும்". (புறநா. **154.**).

[நண் → நணி.]

நணியான் *naniyān,* பெ. (n.) அண்மையி லிருப்பவன்; one who is near. "*சேயாய் நணியானே*" (திருவாச. **1: 44.**).

[நண் → நணி + ஆன்.]

நணுகலர் *nanugalar,* பெ. (n.) நண்ணார் பார்க்க; see nannār.

[நண் → நணு → நணுகு + அல் + அர்.]
அல் = எதிர்மறை இடைநிலை

நணுகார் *nanugār,* பெ. (n.) *நண்ணார்* பார்க்க; see *nannār.*

[நணுகு + ஆ+ஆர்.]

"ஆ" எதிர்மறை இடைநிலை.

நணுகு-தல் *nanugu-,* 5. செ.குன்றாவி. (v.t) **1.** அண்மித்தல்; to approach, draw nigh, arrive at. ***"நானணுகு மம்பொன்குலாத் தில்லை"*** (திருவாச. **40: 6.**). **2.** ஒன்றிக்கலத்தல்; to become attached to or united with. ***"நம்புமென் சிந்தை நணுகும் வண்ணம்"*** (திருவாச. **40: 6.**).

[நள் → நண் → நணுகு –.]

'நள்' எனும் பொருந்துதற்கருத்து வேரினின்று கிளைத்த சொல். கிட்டுதல் பொருந்திக்கலத்தல் என்னும் பொருண்மையில், இலக்கியங்களில் வழக்கூன்றியுள்ளது.

நணுங்கு–தல் *nanungu-,* 5. செ.குன்றாவி. (v.t.); 5. செ.கு.வி. (v.i.). *நணுகு* பார்க்க; see *nanugu-*. *"சுரும்பினங்கள்.....நரம்பென வெங்கு நணுங்க"* (ஏகாம். உலா. 276.).

[நணுகு → நணுங்கு–. ஒ.நோ. ஊசல் → ஊஞ்சல். சிணுகுதல் → சிணுங்குதல்.]

நத்தகம் *nattagam,* பெ. (n.) கந்தை (யாழ்.அக.) tatters

[நொள் → நொய் → நய் → நை. → நைந்து → நொய்ந்து → நொந்து. நொந்து → நந்து → நந்தகம். நந்தகம் → நத்தகம்.]

நந்துதல் = அழிதல். நத்தகம் = நைந்து அழிந்துபோன கந்தைத்துணி.

நத்தகா *nattagā,* பெ. (n.) புன்கு; indian beech.

[நந்து → நத்தகா = வளர்தல்.]

ஆக்கப்பொருளின் ஈங்டு, நன்மணம் பரவும் பொருளைக் குறித்தது.

நத்தகாலம் *natta-kālam,* பெ. (n.) 1. இரவு நேரம்; night-time 2. ஒருவன் நிழல் கிழக்கே 16 அடி நீண்டிருக்கும் மாலைப்பொழுது (சைவச. பொது. 21, உரை.); the evening time when one's shadow extends eastward to 16 ft.

நீட்சிப்பொருளில் ஈங்டு வந்துள்ளது.

நத்தங்கோயில் *nattaṅ-kōyil,* பெ. (n.) சிற்றூரிலுள்ள கோயில்; village temple. *"பரமபதம் கலவிருக்கை நத்தங்கோயில்"* (திவ். திருமாலை, 15, வ்யா. 61.).

[நத்தம் + கோயில். நத்தம் = ஊர்.]

நத்தச்சூரி *natta-c-cūri,* பெ. (n.) *நத்தைச்சூரி* பார்க்க; see *nattai-c-cūri.*

நத்தத்தனார்¹ *nattattanār,* பெ. (n) திருவள்ளுவமாலையில் ஒரு பாடலைப் பாடியவர்; a song was sung by Nattattanār, in Thiruvalluvamālai.

[ந + தத்தன் + ஆர்.]

திருக்குறளின் புகழ்பாடும் நத்தத்தனார் பாடிய, திருவள்ளுவமாலைப் பாடல் வருமாறு:–

"ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும் பாயிரத்தினோடு பகர்ந்த தன்பின் – போய் ஒருத்தர் வாய்க்கேட்க நூல் உளவோ? மன்னு தமிழ்ப்புலவராய்க்கேட்க வீற்றிருக் கலாம்". இவர் சிறுபாணாற்றுப்படை பாடியவரினின்று வேறானவர்.

நத்தத்தனார்² *nattattanār,* பெ. (n.) நத்தத்தம் என்ற இலக்கண நூலாசிரியர்; the author of the grammar work called Nattattam. was found in yāpparuṅgala-virutti-y-urai

[ந + தத்தன் + ஆர்.]

இந் நூலாசிரியர் நத்தத்தம் என்னும் இலக்கண நூலை இயற்றியதாக நச்சினார்க்கினியர் நவிலுகிறார். யாப்பருங்கல விருத்தியுரையில் நத்தத்தனார் இயற்றிய நூற்பா காணப்படுகிறது.

நத்தத்தனார்³ *nattattanār,* பெ. (n.) புறநானூற்றில் 218–ஆம் பாடலைப் பாடியவர்; a Saṅgam poet only a song was sung by Nattattanār in Puranāṉūru

[ந + தத்தன் + ஆர்.]

நத்தத்தனாரைப் பற்றிய குறிப்பு:– உ.வே.சா. அவர்கள் புறநானூற்றில் உள்ள, 218–ஆம் பாடலை நத்தத்தனார் பாடியதாகக் குறிப்பிட்டுள்ளார். இப் பாடலைக் கண்ணகனார் பாடினார் என்றும், கூறுவர். "*பொன்னுந் துகிரு முத்து மன்னிய மாமலை பயந்த காமரு மணியும்*" என்று தொடங்கும் இப் பாடல், பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனோடு வடக்கிருந்த போது பாடப்பட்டது.

நத்தத்தனார்[4] *nattattaṉār,* பெ. (n.) சிறுபாணாற்றுப்படை என்ற சங்க நூலை எழுதிய புலவர்; a Šaṅgam poet, author of ciṟu-pāṇāṟṟu-p-paḍai, one of pattu-p-pāṭṭu.

[ந + தத்தன் + ஆர்.]

இவர் இடைக்கழி நாட்டிலுள்ள நல்லூரைச் சேர்ந்தவர். இவர் உவமையை உவமேயமாகவும் உவமேயத்தை உவமையாகவும் காட்டியுள்ளார். "*... இரும்பிடித் தடக்கையிற் சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென மால்வரை ஒழுகிய வாழை வாழைப் பூவெனப் பொலிந்த ஓதி....*" பாடினியின் கொங்கையைப் போன்றிருந்த தாமரை மொக்குகள், அவளின் முகத்தைப் போன்று மலர்ந்து திகழ்ந்த தன்மையை; "*வருமுலையன்ன வண்முகை யவிழ்ந்து திருமுகம் அவிழ்ந்த தெய்வத்தாமரை*" என்று நத்தத்தனார் நவிலும்பான்மை நயமிக்கது. "*முல்லை சான்ற கற்பின் மெல்லியல் மடமா நோக்கின் வாணுதல் விறலியர்*" "*மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித் துணி மழை தவழுந் துயல்கழை நெடுங்கோட் டெறிந்துர மிறந்த வேற்றருஞ் சென்னிக் குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச் செல்லிசை நிலைஇய பண்பின் நல்லியக் கோடனை நயந்தனிர் செலினே!*"

தத்தன் என்ற பெயர் வழக்கு. கி.பி. 12–ஆம் நூற்றாண்டு வரை வழக்கிலிருந்ததைப் பிற்கால இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்.

"ந" சிறப்பினை உணர்த்தும் இடைச்சொல்.

(ஒ.நோ.) ந + பசலையார் → நப்பசலையார்.

ந + பூதனார் → நப்பூதனார்.

"ஆர்" = மதிப்புறவு விகுதி.

நத்தத்தனார் என்ற பெயரில், தமிழிலக்கியப் பரப்பில் நால்வர் காணப்படுகின்றனர்.

இந் நால்வருள் சிறுபாணாற்றுப்படை எழுதியவரே, நுண்மாண் நுழைபுலமிக்க புலவராவார். இவர் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் என்று சிறப்பிக்கப்படுவார்.

இவர் திண்டிவனத்தை அடுத்துள்ள நல்லூரைச் சார்ந்தவர். இவ்வூருக்கு 8 கல்தொலைவில் தெற்கே நல்லியக்கோடன் ஆண்ட ஓய்மாநாடு உள்ளது.

இப் பகுதி இப்பொழுது, "இடைக்க நாடு" என்று அழைக்கப்படுகிறது. திருவள்ளுவ மாலையைப் பாடிய நத்தத்தனாரினின்று, இவர், தம் சிறுபாணாற்றுப்படைப் பாடல் அமைப்பால், முற்றிலும் வேறுபட்டவர், ஆகிறார்.

திருவள்ளுவமாலையில், நத்தத்தனாரின் பாடல் அமைப்பும், நடையும் மிகவும் நெகிழ்ச்சியாயுள்ளது. சிறுபாணாற்றுப் படையில் திருவள்ளுவமாலை நத்தத்தனாரின் சாயல் சிறிதும் இல்லை. ஆகையால் இருவரும் வேறுவேறு என்று துணியலாம்.

நத்தத்தம் என்ற இலக்கண நூலாசிரியர் பற்றிய குறிப்பு, நச்சினார்க்கினியர் உரையில் மட்டும் காணப்படுகிறது. யாப்பருங்கல விருத்தியுரையில், ஒரேயொரு எடுத்துக்காட்டு நூற்பா மட்டும் காணப்படுகிறது. எனவே இருவரும் நல்லூர் நத்தத்தனாரினின்று, வேறுபட்டவர், எனலாம்.

புறநானூற்றில் காணப்படும், 218–ஆம் பாடலைப் பாடிய புலவர் பெயர், பாட வேறுபாடாகவே, நத்தத்தனார் என்று வந்துள்ளது. இப் பெயருக்கு முன்பு ஆற்றுப்படை பாடிய நத்தத்தனார் போல எவ்வித அடைமொழியும் இல்லை. எனவே நத்தத்தனார் எனும் பெயரில் நால்வர் இருந்தனர் என்பதில், யாதொரு ஐயமுமில்லை.

இந்நால்வருள் இலக்கியச் செழுமை செறிந்தவராகவும், பன்முகநோக்கில் நற்சிறப்புகள் பல பெற்றவராகவும், நத்தத்தனார் விளங்குகிறார். இவர் தம் ஊருக்கு அருகில் இருந்த ஓய்மா நாட்டுத் தலைவன் நல்லியக்கோடனையும், அந்நாட்டில் சிறப்புற்றுத் திகழ்ந்த எயிற்பட்டினம், வேலூர், ஆமூர், கிடங்கில், மாவிலங்கை ஆகிய ஊர்களைப் பற்றியும், தெளிவான செய்திகளையும் தெரிவித்துள்ளார்.

மேலும், இவர், தம் சிறுபாணாற்றுப் படையுள், சேரநாட்டு வஞ்சிமா நகரையும், பாண்டி நாட்டுக்கொற்கைத் துறைமுகத்தையும், மதுரையையும், சோழர்தம் உறையூரையும் குறிப்பிட்டுப்பாடி, மூவேந்தர் வரலாற்றிலும் இடம்பெற்றுள்ளார்.

நத்தப்பலா *natta-p-palā,* பெ. (n.) *எருக்கு* பார்க்க (மூ.அ.); see erukku.

நத்தப்பாலை *natta-p-pālai,* பெ. (n.) எருக்கு; indian madar.

நத்தப்பாழ் *natta-p-pāḻ,* பெ. (n.) 1. அழிந்துபோன ஊர்; deserted village. (R.T.). 2. பகைவரால் அழிந்த ஊர்; devasted village die to invation

மறுவ. பாழூர், நத்தத்துமேடு.

[நத்தம் + பாழ். – நத்தம் = ஊரின் மனை அல்லாத குடியிருப்பு நிலம்.]

பகைவரால் அழிக்கப்பட்டுப் பாழடைந்த ஊர் இருந்த இடம். நத்தப்பாழ் என்று அழைக்கப்படுகின்றது.

நத்தப்பிலா *natta-p-pilā,* பெ. (n.) *எருக்கு* பார்க்க (மூ.அ.); see *erukku.* reflexed-petalled giant swallow-wort.

[நத்தம் + பலா = நத்தப்பலா → நத்தப்பிலா.]

நத்தப்பூரிதம் *natta-p-pūridam,* பெ. (n) சிற்றரத்தை; smaller galangal

[நத்தம் + பூரிதம்.]

நத்தபத்திரி *natta-pattiri,* பெ. (n.) நந்தியாவட்டை (மலை); common wax-flowered dog-bane.

[நத்திபத்திரி → நத்தபத்திரி.]

நத்தபிரகி *nattapiragi,* பெ. (n.) *நத்தப்பாலை* பார்க்க; see *natta-p-pālai.*

[நத்தம் + பிரகி.]

நத்தபிலா *nattapilā,* பெ. (n.) *நத்தப்பாலை* பார்க்க; see *natta-p-pālai.*

நத்தபோசனம் *natta-pōšaṉam,* பெ. (n) இரவு உணவு; night meals.

[நந்த → நத்த + skt. போசனம்.]

நத்தம்[1] *nattam,* பெ. (n.) 1. ஆக்கம்; growth. *"நத்தம்போற் கேடும்"* (குறள், 235). 2. ஊர் (பிங்.); town, village, *"வடபுலத்தார் நத்தம்வளர"* (குமர. பிர. மீனாட். பிள்ளைத். 45). 3. ஊரின் குடியிருப்பிடம்; residential portion of a village. 4. ஊரில் ஆரிய ரல்லாதார்தம் வாழ்விடம் (C.G); portion of a village inhabited by the

non-Brahmins, (opp. to akkirakāram) **5.** ஊரின் மனையடி. (கல்வெ.); land reserved as house-sites. **6.** இடம் (பிங்.); place, site. **7.** வாழை (பிங்.) (மலை.); plantain. **8.** *எருக்கு (மலை.)* பார்க்க; see *erukku*. **9.** கடிகார முள் (வின்.); gnomon of a dial.

[நந்து + நத்து + அம்.]

நந்துதல் = வளர்தல், பெருகுதல், தழைத்தல். இங்கு நந்து என்னும் வேரடி, வளர்தல், பெருகுதல், செழித்துத் தழைத்தல் என்னும் பொருளில் வந்துள்ளது.

நத்தம் = வளர்ச்சி. முதனிலை வலித்து ஈறு பெற்ற தொழிற்பெயர். அம்: முதனிலைப் பொருளீறு. (திருக்.தமி.மர. பக். 151).

நத்தம்² *nattam*, பெ. (n.) **1.** அழிந்துபோன ஊர்; devasted village. **2.** பாலைநிலத்தூர்; village of arid tract.

[நொள் → நொது → நொந்து → நந்து → நந்தம் → நத்தம்.]

நெகிழ்ச்சிப் பொருளை மூலமாகக் கொண்ட அழிதல் கருத்துச் சொல். பகைவரால் அழிக்கப்பட்டுப் பாழடைந்த ஊரிருந்த இடங்கள் இன்றும், நத்தப்பாழ் என்றும், நத்தத்துமேடு என்றும் சொல்லப்படும் (வே.க.3–34.).

நத்தம்³ *nattam*, பெ. (n.) **1.** சங்கு (சூடா.) (சீவக. 547, உரை); conch. **2.** நத்தை (அக.நி.); snail.

[நத்தை + அம்.]

நத்தம்⁴ *nattam*, பெ. (n.) **1.** இரவு (பிங்.); night. *"அமளிமேவி நத்தநடுவெழுந்து"* (திருவாலவா. 38, 3). **2.** இருள் (திவா.) darkness.

க. நத்தம் →skt nakta

[நந்து → நத்து + அம்.]

நத்தம்⁵ *nattam*, பெ. (n.) புன்கு (உரி.நி.); indian beech pongamia glabra.

நத்தம்பாடி *nattam-pāḍi*, பெ. (n.) உடையார் சாதிவகை (E.T.vii, 212); a sub-sect of the uḍaiyār caste

[நத்தம் + பாடு = நத்தம்பாடு → நத்தம்பாடி]

முதற்கண் வளர்நிலை உடையார்களின் ஊர் குறித்து, ஆகுபெயராய்ப் பேர்குறித்து வந்த பெயர்.

நத்தம்புறம்போக்கு *nattam-puṟam pōkku*, ஊர்சார்ந்த, ஆவணப்பதிவிலாத் தரிசுநிலம்; unregistred land.

மறுவ. புறம்போக்குநிலம், ஊர்ப் பொதுநிலம்.

[நத்தம் + புறம் + போக்கு.]

அரசிற்கு இறைசெலுத்தும் வகைமை அற்றதும், ஊரார்க்குப் பயன்படுவதுமான மேட்டுநிலம்.

நத்தமக்கள் *natta-makkaḷ*, பெ. (n.) ஒருசார் வேளாளர் (யாழ்ப்.); a sub-division of the vēḷāḷar caste;

[நத்தம் + மக்கள்.]

நத்தம் = பார்ப்பனரல்லாதார்.

நத்தமாடி *nattam-āḍi*, பெ. (n.) **1.** நத்தமக்கள் வகுப்பினைச் சார்ந்தவன் (யாழ்.அக.); person belonging to nattamakkaḷ caste. **2.** உடையார் பிரிவு (E.T.vii, 212); a sub-division of uḍaiyār caste.

[நத்தபாடி → நத்தமாடி = திரிபு.]

நத்தமாதிதம் *nattamātidam,* பெ. (n.) சிறிய சிவப்பம்மன் பச்சரிசி; red false raw rice plant.

மறுவ. சின்னம்மான் பச்சரிசி

நத்தமார் *nattamār,* பெ. (n.) *நத்தமக்கள்* (R.T.) பார்க்க; see *natta - makkal.*

நத்தமாலகம் *nattamālagam,* பெ. (n.) *நத்தகா* பார்க்க; see *nattagā.*

நத்தமாலம் *nattamālam,* பெ. (n.) புன்குமரம்; indian beech tree-Pongamia glabra.

நத்தமான் *nattamāṉ,* பெ. (n.) *நத்தம்பாடி* (E.T.vii, 212) பார்க்க; see nattam-pāḍi.

நத்தமுகை *nattamugai,* பெ. (n.) இரவு; night

நத்தயிலி *nattayili,* பெ. (n.) எரிப்பு; pungency, acidity; store acid smell.

நத்தராகி *natta-rāgi,* பெ. (n.) பூவாடங் கேழ்வரகென்று சொல்லப்பெறும் ஒருவகைத் தவசம் (G.Sm D.I i, 218); a kind of rāgi called pūvāḍam kēḻvaragu.

நத்தலை *nattalai,* பெ. (n.) பாவட்டை; pavattai indica.

நத்தலைச்சூரி *nattalai-c-cūri,* பெ. (n.) *நத்தைச்சூரி* பார்க்க; see *nattai-c-cūri.*

நத்தவரி *natta-vari,* பெ. (n) பழைய வரி வகை (S.I.I.vol iv.122); an ancient tax.

[நத்தம் + வரி.]

நத்தவீரம் *natta-vīram,* பெ. (n.) அரத்தவீரரிசி; (சா.அக.); a kind of medicinal rice

நத்தாங்கூடு *nattāṅgūḍu,* பெ. (n.) நத்தைக்கூடு; snail shell.

[நத்தை + கூடு.]

நத்தாசை *nattāšai,* பெ. (n) **1.** விருப்பம். (யாழ்ப்.); wish, desire. **2.** பற்று (இ.வ.); attachment. **3.** பேராசை (யாழ்.அக.); avarice.

[நத்து + ஆசை.]

நத்தாந்தநோய் *nattānda-nōy,* பெ. (n.) இராக்குருடு; மாலைக்கண்; night blindness, failure or imperfect vision at night.

நத்தாமணி *nattāmaṇi,* பெ. (n) *வேலிப்பருத்தி (மலை.)* பார்க்க; see *vēli-p-parutti*

[உத்தாமணி → நத்தாமணி.]



நத்தார்வை—த்தல் *nattārvai-,* 4. செ.குன்றாவி. (v.t.) கப்பலைக் கயிறுகட்டி யிழுத்தல் (யாழ்ப்.); to warp a vessel

[நத்தார் + வை-.]

நத்தி¹ *natti,* பெ. (n.) மீனின் மிதவைப்பை (இ.வ.); swimming bladder of a fish.

நத்தி² *natti,* பெ. (n.) இன்மை; negation. *"நத்தியு முடைத்தன் றாகில்"* (மேருமந். 706.).

நத்திசின்னன் *nattiśiṉṉaṉ,* பெ. (n.) பரங்கிவைப்பு நஞ்சு அல்லது வீரம்; corrosive sublimate.

நத்திதம் *nattidam,* பெ. (n.) நாணயமிடப் பெற்றது (யாழ்.அக.); that on which a person stakes his credit.

நத்திநினை *natti-niṉai,* பெ. (n.) புன்கங்கொட்டை; nut of Indian beech tree.

நத்திபத்திரி *natti-pattiri,* பெ. (n.) நந்தியாவட்டம்; common wax flowered dog-bane.

நத்திரி *nattiri,* பெ. (n.) கோழிமுட்டை; fow's egg.

நத்திவேர்சத்தெலும்பு *nattivēr-šattelumbu,* பெ. (n.) முழங்காலெலும்பு; knee cap-Patella.

நத்து¹-தல் *nattu-,* 5. செ.குன்றாவி. (v.t.) விரும்புதல்; to desire, long for, hanker after, love. *"நாரியார் தாமறிவர் நாமவரை நத்தாமை"* (தமிழ்நா. 74.).

தெ., ம., நத்த, நத்து.

[நச்சு → நத்து-.]

நத்து² *nattu,* பெ. (n.) 1. *நத்தம்²* பார்க்க; see *nattam²* "நத்தொடு நள்ளி" (பரிபா. 10, 85). 2. மூக்கணிவகை; a nose ornament. *"நத்தையணி நாசிவள்ளி"* (தனிப்பா. ii,234, 557). 3. மூக்கு; nose.

தெ., ம., நத்த.

நத்து³ *nattu,* பெ. (n.) கூகை வகை (வின்.) a kind of owl,

நத்து⁴ *nattu-,* பெ. (n.) 1. நத்தை; snail. *"நத்தொடு நள்ளி நடையிறவு"* (பரிபா.10:85.). 2. சங்கு; conch. 3. உப்பு; salt

[நந்து → நத்து.]

நத்து⁵ *nattu,* பெ. (n.) விருப்பம்; desire. *"நன் நத்தாக"* (திருப்புகழ்.84.).

நத்துருவண்ண நாதம் *natturu-vaa-nādam,* பெ. (n.) ஈயமணல் (யாழ். 20.); sand containing lead.

நத்துளி *nattuḷi,* பெ. (n.) அத்திப்பால்; milk from fig tree.

நத்தை¹ *nattai,* பெ. (n.) 1. கருநந்து. (திவா.); snail, Buccinum; 2. வழலையுப்பு; a kind of salt 3. கூன்; hunch back

தெ., ம., நத்த. துளு., நர்தெ.

[நந்து = மெல்லிய சதையுள்ள நீருயிரி நந்து → நத்து → நத்தை. (வே.க. 28).]

நத்தை² *nattai,* பெ. (n.) 1. கொற்றான் (L.); parasitic leafless plant; 2. கடுகு (மலை.);

mustard. **3.** நாரத்தை; bitter organge. **4.** பூச்சிக் கூடு; whelk buceinum.

நத்தைக்கட்டை *nattai-k-kaṭṭai,* **பெ.** (n.) சாரணை; one slyed-Trianthema monogyna.

[நத்தை + கட்டை.]

நத்தைக்கறி *nattai-k-kaṟi,* **பெ.** (n.) நத்தையின் ஓட்டிலிருந்து எடுக்கப்படும் சதைப்பகுதி; the dish of snail flesh.

[நத்தை + கறி.]



நத்தைக்கிளிஞ்சல் *nattai-k-kiḷiñjal,* **பெ.** (n) நத்தாங்கூடு; snail shell, cockle shell.

[நத்தை + கிளிஞ்சல்.]

நத்தைகுத்தி *nattai-kutti,* **பெ.** (n.) பெருநாரை (யாழ்.அக.); adjutant or gigantic crane.

[நத்தை + குத்தி.]

மீன்குத்தி போல, நத்தையைக்குத்தி உண்ணும் நாரையாக இருக்கலாம்.

நத்தைகுத்திநாரை *nattai-kutti-nārai,* **பெ.** (n.) **1.** நாரை வகை (வின்.); anastomus ascitans, as living on molluscs; **2.** நாரைவகை; hair-crested stork, Leptoptilos javanica.

[நத்தைகுத்தி + நாரை.]



நத்தைக்கூடு *nattai-k-kūḍu,* **பெ.** (n.) *நத்தையோடு* பார்க்க; see *nattai-y-ōḍu*

[நத்தை + கூடு.]

நத்தைகொத்தி *nattai-kotti,* **பெ.** (n) *நத்தைகுத்தி (யாழ்.அக.)* பார்க்க; see *nattai-kutti.*

[நத்தை + கொத்தி.]

நத்தைச்சதை *nattai-c-cadai,* **பெ.** (n.) நத்தைக்கறி; snail flesh.

[நத்தை + சதை.]

நீண்ட வாணாளுக்குப் பயன்படும்.

நத்தைச்சாதி *nattai-c-cādi,* **பெ.** (n.) நத்தைவகை; lanthina.

நத்தைச்சுண்டி *nattai-c-cuṇḍi,* **பெ.** (n) *நத்தைச்சூரி* பார்க்க; see *nattai-c-cūri.*

[நத்தை + சுண்டி.]

நத்தைச்சுண்ணாம்பு *nattai-c-cuṇṇāmbu,* பெ. (n) நத்தையோட்டை நீற்றிச் செய்த சுண்ணாம்பு; shell-lime.

மறுவ: கிளிஞ்சில் சுண்ணாம்பு.

[நத்தை + சுண்ணாம்பு.]

நத்தைச்சூரி *nattai-c-cūri,* பெ. (n.) செடிவகை (மலை.); bristly button weed, Spermacoce hispida;

மறுவ. நத்தைச்சுண்டி, குழிமீட்டான்.

இதன் வேரை நத்தைக் கூட்டில் காண்பிக்க, ஓடு சூரியனைப் போல் இரண்டாக வாய் பிளந்துகாட்டும். 'நத்தைச் சூரி நாயுருவி எதைச் சொன்னாலும் கேட்கும்' (பழ.).

மாபெரும் ஆற்றல் பொருந்திய இச்செடி பற்றி சா.அக. கூறுவது வருமாறு:–

சிறிய தோற்றமுள்ள இச்செடியின், பூங்கொத்துகள் ஒவ்வொன்றிலும் 5 அல்லது 6 பூக்கள் மலரும். இம் மலர்கள் வெண்மை அல்லது நீல நிறத்தன. இச் செடியின் காய்கள் முசுமுசுப்பானவை. சதுரமான தோற்றத்தை யுடைய நத்தைச்சூரியின் விதைகள் ஆண்மைப்பெருக்கத்திற்கு உகந்தவை. அரத்தப்போக்கை அகற்றி, அரத்தமூலத்தைக் குணமாக்கும் அரியமூலி. இளைத்த உடம்பை வளர்ப்பதில், நத்தைசூரி விதைகள் ஈடு இணையில்லாதவை. இவ் விதைகள் நன்னாரியைப் போல், அரத்தத்தைத் தூய்மைப்படுத்தும் திறன்மிக்கவை.

உடம்பிலுள்ள அனைத்து நோய்களுக்கும் நத்தைச்சூரியின் கருக்குநீர் (கியாழம்) கைகண்ட மருந்து. அக் கருக்குநீர் உடம்பிற்கு உகந்தது. தீராத பழைய நோயின் தாக்கத்தைப் படிப்படியாகக் குறைக்கும். புதிய நோய்களை அறவே போக்குந் தன்மைத்து.

நத்தைச்சூரி வேரினைப் பச்சையாக அரைத்து, ஆவின் பாலில் கலந்து உட்கொண்டால், உடம்பின் திறன் பெருகும். எலும்புகள் ஆற்றலுடன் வளரும். நாட்பட்ட வயிற்றுப்போக்கு குணமாகும்.

நத்தைச்சூரி இலையை வாயில் போட்டு மென்றால், கல்லையுங் கடித்து நொறுக்கும் ஆற்றல் வளரும். பற்கள் வலிமைபெறும் பாறாங்கல் போன்ற வீக்கமெல்லாம் கதிரவனைக் கண்ட பனிபோல் மறையும்.

நத்தைத்திராளி *nattai-t-tirāḷi,* பெ. (n.) கம்பங் கொல்லையில் வளரும், ஒரு வகைக் கீரை; a kind of garden; or vegetable greens found grown in millet fields

நத்தைப்படுவன் *nattai-p-paḍuvaṉ,* பெ. (n.) கண்ணிலுண்டாம் கட்டி (யாழ்ப்.); boil in the eye, a kind of sty.

[நத்தை + படுவன்.]

கண்ணிமையில் தோன்றிய கட்டி. அசைவில் நத்தைபோல் கண்ணில் படுவதால், வந்த பெயரென்று கொள்ளலாம்.

இந்நோய் பற்றி சா.அக. கூறுவது : நத்தைக்கூடு போல் கண்விழியில் உண்டாகும் புண்கட்டி. இக்கட்டியின் வலி மிகுதியால், தலைக்குத்து வலி, புருவத்தில் முளை எழும்பல், கண் பார்வை குறைகல் முதலான நோய்கள் ஏற்படும்.

நத்தைப்பால் *nattai-p-pāl,* பெ. (n.) நத்தையின் உடலிலுள்ள நீர்; water contents in snail's body.

[நத்தை + பால்.]

நத்தையுப்பு *nattai-y-uppu,* பெ. (n) உப்புவகையு ளொன்று; a kind of salt.

நத்தையோட்டுக்கம்பு *nattai-y-ōṭṭu-k-kambu,* பெ. (n.) உட்காதினுள்ளிருக்கும் நத்தை யோட்டைப் போன்றதோர் எலும்பு; a bone of the internal ear having a conic cavity and resembling the snail shell.

[நத்தை + ஓடு + கம்பு.]

நத்தையோட்டெலும்பு *nattai-y-ōṭṭelumbu,* பெ. (n.) நத்தையோட்டுக்கம்பு பார்க்க; see nattai-y-ōṭṭu-k-kambu.

[நத்தையோடு + எலும்பு.]

நத்தையோடு *nattai-y-ōḍu,* பெ. (n.) நத்தை தன்முதுகில் சுமந்து சென்று குடிவாழும் ஓடு; snail - house.

[நத்தை + ஓடு.]

நத்தைவரி *nattai-vari,* பெ. (n.) நத்தை தனது எச்சிலால் ஏற்படுத்தும் கோடு; mark drawn by snail with its saliva.

[நத்தை + வரி.]

நத்தைவேகம் *nattai-vēgam,* பெ. (n.) மந்தம்; dead slow. *'கந்தன் நத்தைவேகத்தில் படித்ததால் தேர்வில் தோல்வியடைந்தான்'* (உ.வ.).

[நத்தை + வேகம்.]

மிகவும் மெதுவாகப் பணியாற்றுகை.

நது-த்தல்[1] *nadu-,* 4 செ.குன்றா.வி. (v.t.) 1. அவித்தல் (திவா.); to extinguish, quench. *"நாற்கடலு மேவினு நதுப்பறிய வூழிக்காற் கனலி னோதை"* (கந்தபு. சதமுகன்வ.4). 2. மறைத்தல் (வின்.); to eclipse, as rays; 3. கெடுத்தல் (யாழ்.அக.); to destroy.

[நொள் → நொது → நது-.]

நது-த்தல்[2] *nadu-,* 4 செ.கு.வி. (v.i.) திகைத்தல் (யாழ்.அக.); to be in a perplexed state

[நுது → நது -.]

நந்த *nanda,* (இடை) part. ஓர் உவம உருபு (தொல். பொருள். 291.); a particle of comparision.

நந்தகம் *nandagam,* பெ. (n.) 1. வாள் (யாழ்.அக.); sword 2. திருமாலின் வாள்; sword of Tirumāl.

நந்தகன் *nandagaṉ,* பெ. (n.) நந்தகோபன். (யாழ்.அக.) பார்க்க; see nanda-gōbaṉ

[நந்தகோபன் → நந்தகோன் → நந்தகன்.]

நந்தகாரி *nandagāri,* பெ. (n.) சிறுதேக்கு (மூ.அ.) பார்க்க; see śiṟu-tēkku.

நந்தகி *nandagi,* பெ. (n) திப்பிலி (யாழ்.அக.); long pepper;

[நந்து → நந்தகி.]

உடல் நோய் தீர்ந்து மிகு நலம் நல்கும் தன்மையுள்ள திப்பிலி.

நந்தபாலம் *nanda-pālam,* பெ. (n) பண் (இராக)வகை (பரத. ராக. பக் 103); a specific melody-type.

நந்தம்[1] *nandam,* பெ. (n.) 1. சங்கு; conch 2. மான்மணத்தி (மூ.அ.); musk, 3. காக்கை (வின்.); crow. 4. பெருமுயற்சி (இலக்.அக.);

strenuous effort. **5.** தொண்(ஒன்பது) மணிகளிலொன்று; one of the nine precious stones.

[நந்து → நந்தம்.]

நந்து = மெல்லிய சதையுள்ள நீருயிரி. அது இருக்கும் சங்கு.

நந்தம்[2] *nandam,* பெ. (n.) **1.** குபேரனது கருவூலத்துள் ஒன்று; a treasure of kubēraṉ, one of nava-nidi **2.** புன்கு; indian beech tree. **3.** எருக்கு; madar plant.

[நந்து → நந்தம்.]

நந்தம்[3] *nandam,* பெ. (n.) **1.** நாரத்தை (வின்.); bitter orange. **2.** கடார நாரத்தை; bigarade orange. **3.** வாழை; plantain tree.

[நந்து → நந்தம்.]

நந்தமாமதி *nanda-māmadi,* பெ. (n.) விரலின் நகம்; nail of the finger or toe.

வளரும் பெருநிலவு போன்ற வடிவமைப்பு, உவமைப்பொருளில் வந்துள்ளது. வளர்ந்து வரும் நகப்பகுதி, நிலவை யொத்து வளர்ந்து திகழ்ந்த தன்மையைக் குறித்து வழங்கியதெனலாம்.

நந்தமாலம் *nanda-mālām,* பெ. (n.) நத்தமாலம் (சங்.அக.) பார்க்க; see natta-mālam.

நந்தல்[1] *nandal,* பெ. (n.) **1.** அழிவு, கேடு (சூடா.); decay, decline. ***"நாடற்கரிய நலத்தை நந்தாத்தேனை"*** (திருவாச. 9:15). **2.** இகழ்ச்சி, ஏளனம் (யாழ்.அக.); scorn, disdain.

[நொய் → நொய்ந்தல் → நொந்தல் → நந்தல்.]

நொய்ந்தல் = கெடுதல், அழிதல்.
நொந்தல் = கெடுதல், பதனழிதல்.

நந்தல்[2] *nandal,* பெ. (n.) ஆக்கம்; increase, prosperity. ***"முன்னாயம் பத்துருவம் பெற்றவன் மனம்போல நந்தியாள்"*** (கலித். 136.).

உந்து → துந்து → நுந்து → நொந்து → நந்து.

நொந்துதல் = தூண்டுதல், ஊக்குதல், வளர்தல்.

துந்து → துந்தி → தொந்தி.

தொந்தி = பருத்து வளர்ந்த வயிறு. தூண்டுதற் கருத்தினின்று பெருகுதல், வளர்தல், விளங்கித் தோன்றுதல் முதலான, பொருண்மை பொதிந்த கருத்துகள் முகிழ்த்தன. (தமிழ் வரலாறு 1–பக் 66).

நந்தவனம் *nanda-vaṉam,* பெ. (n.) பூந்தோட்டம்; flower garden, especially attached to a temple ***"நந்த நந்த வனங்களி னாண்மலர்"*** (கம்பரா. கிளைகண்டு. 14).

[நந்தல் + skt வனம்.]

நந்துதல் = பெருகுதல், தழைத்தல், வளர்தல், விளங்கித்தோன்றுதல் என்னும் பொருண்மை களிற் பயிலும். பூந்தோட்டத்தில், பலவண்ண மலர்கள் பூத்து, அழகுடன் வளர்ந்து, விளங்கித்தோன்றுதலால், நந்தவனம் எனப்பெயர் பெற்றது.

நந்தளம் *nandaḷam,* பெ. (n.) **1.** நத்தை; snail **2.** நாரத்தை; bitter orange **3.** நச்சுப்பூடு வகை; a kind of poisonous plant

நந்தன்[1] *nandaṉ,* பெ. (n.) **1.** நந்தகோபாலன் பார்க்க; see nandagōpālaṉ. ***"கடைக் கண்ணினுங் காட்ட நந்தன் பெற்றனன்"*** (திவ். பெருமாள். 7: 3). 2. இடையன்; cowherd. ***"ஈட்டினன் பைந்தொடை நந்தர்கோன் பண்ணிகாரமே"*** (பாகவத. 10, கோவர்த்).

3. திருமால்; Tirumāl. *"நந்தனும்... ஏத்தும் வெங்கை விமலர்"* (வெங்கைக்கோ. 324). 4. பாடலிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட ஓர் அரசகுலத்தன்; a kind of the nandan dynasty, ruler of pādalipuram. *"நந்தன் வெறுக்கை யெய்தினும்"* (அகநா. 25.) 5. தோற்காசு வழங்கியவனாகக் கருதப்படும் ஒரு அரசன்; a king believed to have issued leather coin 6. நந்தனார், நாயன்மார்களுன் ஒருவர்; Nandaṉār, šaiva šaint; 7. மகன் (இலக். அக.); son.

[நந்து + அன்.]

அனைவராலும் விரும்பப்படுபவன், எஞ்ஞான்றும் மக்கள் மனதில் விளங்கித் தோன்றுபவன்.

நந்தன்² *nandaṉ,* பெ. (n.) வைப்புநஞ்சு வகையுளொன்று; a kind of arsenic.

நந்தனம்¹ *nandaṉam,* பெ. (n.) 1. நத்தை; (சங்.அக.); snail. 2. தவளை (யாழ்.அக.); frog. 3. நாரத்தை; bitter orange.

நந்தனம்² *nandaṉam,* பெ. (n.) 1. நந்தவனம் பார்க்க; see nandavaṉam *"சுரகுலாதிபன் றூய்மலர் நந்தனம்"* (பிரபுலிங். கணபதி காப்பு). 2. பூந்தோட்டம்; flower-garden. *"சந்தமிகு கல்யாணமா நந்தனந் தன்னில்"* (பிரபுலிங். வசவ. 3). 3. நந்தன் (வின்.) பார்க்க; see nandaṉ.

த. நந்தனம் → skt.nandana

[நந்தல் + வனம் → நந்தவனம் → நந்தனம்.]

நந்தனவனம் *nandaṉa-vaṉam,* பெ. (n.) பூந்தோட்டம்; flower -garden; *"நந்தனவனத்திலீச னல்லுமை விநாயகன்"* (புட்பபலன், 1).

[நந்தனம் + skt.வனம்.]

நந்தனார் *nandaṉār,* பெ. (n.) 63 நாயன் மார்களுள் ஒருவர்; one of a Šaiva saint among 63 Nāyaṉmārgaḷ.

த. நந்தனார் → skt.nanda.

இவரைத் திருநாளைப் போவார் என்று, சேக்கிழார் குறிக்கிறார்.

[நந்தன் + ஆர்.]

ஆர் = மதிப்பொருமை விகுதி.

நந்தனார்சரித்திரகீர்த்தனை *nandaṉār šarittira-kīrttaṉai,* பெ. (n.) அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான நந்தனாரின் வரலாற்றை, (கீர்த்தனை) இசைப்பாடல் வடிவில் கூறும் நூல்; rythematic a trestise which narates the history of Nandaṉ, one of 63 Nāyaṉmargaḷ

இந் நூலைக் கோபால கிருட்டிண பாரதியார் இயற்றினார். சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் வரலாற்றில், நிலவுடைமையாளர் எனப் பொதுவானவராகக் நந்தனார் குறிக்கப்பட்டுள்ளார்.

நந்தனை *nandaṉai,* பெ. (n) மகள் (யாழ்.அக.); daughter.

[நந்து → நந்தனை.]

வளர்ந்து விளங்கித் திகழும் அழகுடையாள் என்னும், வளர்ச்சிப் பொருளில் வாய்த்த சொல்லாகும்.

நந்தாமணி *nandā-maṇi,* பெ. (n.) 1. வேலிப் பருத்தி (மலை); stinking swallow wort. 2. உத்தாமணி; hedge cotton.

மறுவ. நத்தாவணி.



நந்தாவனம் *nandā-vaṉam,* பெ. (n.) நந்தவனம் பார்க்க; see nandavaṉam. "*நறுமலர்ப் பொய்கையு நந்தாவனமும்*" (பெருங். நரவாண. 1,186).

[நந்தவனம் → நந்தாவனம்.]

நந்தாவிளக்கு *nandā-viḷakku,* பெ.(n.) கோயிற் கருவறை முதலியவற்றிலுள்ள அணையா விளக்கு; perpetual or ever-burning lamp kept in the inner sanctum of a temple or in a palace. "*நந்தா விளக்குச் சுடர் நன்மணி நாட்டப்பெற்றே*" (சீவக. 3144).

[நுந்தா விளக்கு → நந்தா விளக்கு.]

உந்து → நுந்து = தூண்டுதல்.

நுந்தா = ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பெரும்பாலும், கோயில் கருவறை அல்லது அரண்மனையினுள், எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் விளக்கு.



நந்தி[1] *nandi,* பெ. (n.) 1. எருது (பிங்.); bull. 2. சிவகணத்தலைவராகிய நந்திதேவர் (சூடா.); Nandi, chief attendant of Šivaṉ, having a bull's face. "*நங்கணாதனா நந்தி தவஞ்செய்து*" (பெரியபு. மலை. 35). 3. விடையோரை; (யாழ்.அக.). taurus in the zodiac. 4. சிவன் (பிங்.); Šivaṉ "*நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை*" (திருமந். 1). 5. பல்லவ அரசர் சிலர்தம் பெயர்; some pallava kings. 6. மைசூர்ச் சீமையில், பாலாற்றின் பிறப்பிடமாகிய நந்திதுர்க்கம் என்னும் மலை; nandidroog a mountain in mysore in which the pālār takes its rise. "*நனைமுடி நந்திக்குன்ற நளிபடப்பொழியுந் தெண்ணீர்*" (காஞ்சிப்பு. நாட்.13). 7. சமணர் பட்டப் பெயர்; jaina title; "*கனகநந்தியும் புட்பநந்தியும் பவண நந்தியும்*" (தேவா. 859:6). 8. நந்தி நாகரம் பார்க்க; see nandi-nāgaram. "*பழுதறு நாகரநந்தி முதலிபியைப் பயின்றுவலான்*" (சிவதரு. சிவஞானதா.32). 9. பதினெண் தொன்மத்து ளொன்று; a secondary purāṇa, one of 18 upa purāṇam, (q.v.). 10. நந்தி கிராமம் பார்க்க; see nandi-kirāmam. "*நந்தியம் பதியிடை நாதன்*" (கம்பரா. கிளைகண்டு.110). 11. நந்தியாவட்டம் பார்க்க; see nandiyā-vaṭṭam "*நந்தி நறவ நறும்புன்னாகம்*" (குறிஞ்சிப். 91).

[உந்து → துந்து → நுந்து → நந்து → நந்தி → துந்து → துந்தி → தொந்தி = பெருத்த வயிறு நந்தி = பெருத்த காளை விலங்கு. (தமிழ் வரலாறு–1 பக்.66.]

நந்துதல் = வளர்தல்.

நந்துதல் = தோன்றுதல், விளங்கித் தோன்றுதல், விளங்குதல்; பெருகுதல்; வளர்தல், தழைத்தல், தழைத்து ஓங்குதல், ஆக்கம் தருதல்.. தழைத்துச்செழித்தல், தூண்டுதல் என்னும் பொருண்மைகளை உள்ளடக்கிய, "*நந்து*" என்னும் வினையடியினின்று கிளைத்த சொல்லே நந்தி.

நந்து → நந்தி = விளங்கித்தோன்றும் அறிவினன்.

அறிவு, வளமை, அழகு, செழுமை, வெற்றி, நற்பேறு முதலானவற்றை அனைவர்க்கும் நல்கும் இறைவன் நந்தி. இவன் பிறங்கொளி நல்கும் பேராளன் ஆவான். வாழ்வியல் வளங்களை வாரிவழங்குபவன். புகழின் இருப்பிடம். ஆக்கத்தின் உறைவிடமாகத் திருமூலரால், நந்திதேவர் சிறப்பிக்கப்படுகிறார். அறிவுக் கொழுந்தாக, அச்சத்தை அகற்றுபவனாக நந்தியம்பெருமான் திகழ்கிறார். வளங்களை வாரி வழங்கும் வள்ளல் நந்தியம்பெருமான். இது பற்றித் திருமூலர்,

"*அப்பனை நந்தியை ஆரா அமுதினை*
ஒப்பிலி வள்ளலை ஊழிமுதல்வனை
எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசீசன் அருள்பெற வாமே" என்று
வியந்து போற்றுகிறார்.

நந்தியே அனைத்தையும் அருளினான். அவன் அருள் வாய்த்திடின் நானிலத்தில், அனைத்தும் நல்லவண்ணம் நிகழும். அவனே, ஆகமங்களை அறிவித்தான். ...."*நந்தி உரனாகி ஆகமம் ஓங்க நின்றானே*" அனைத்தையும் அறியும் அறிவு தந்தவன் நந்தியே, "*தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ்விரண்டும் உணர்த்தும் அவனை உணரலுமாமே*". நந்தியின் திருவருட் சிறப்புக்களைப் பலவாறு போற்றிப்பரவுகின்றார், திருமூலர்.

நந்தி அருளாலே நாதனாம்பேர்பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினோம்
நந்தி வழிகாட்ட யானிருந்தேனே.

"*நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்*
நந்தி அருளாலே சதாசிவ னாயினேன்
நந்தி அருளால் மெய்ஞ்ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நான் இருந்தேனே"

தமது வாழ்வியல் நிகழ்வுகள் அனைத்தையும் நடத்துபவன் நந்தியே. நந்தியின் திருவருளாலே, மூவாயிரம் திருமந்திரப் பாடல்களை, திருமூலர் பாடியதாகத் தெரிவிப்பது, ஈங்கு குறிக்கத்தக்கது. முடிவில், நந்தியை நாள்தோறும் நெஞ்சகத்தில் நிறுத்தியே, இறைவனைக் கண்டேன் என்று நவின்றுள்ள பாங்கு, நானிலத்தார்க்கு, நன்னெறி காட்டும் தன்மையில் அமைந்துள்ளது.

"*மூலன் உரைசெய்த மூவாயிரந்தமிழ்*
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்
ஞாலத்தலைவனை நண்ணுவரன்றே"

"*பிதற்றுகின்றேன் என்றும் பேர்நந்தி தன்னை*
இயற்றுவன் நெஞ்சத்து இரவும் பகலும்
முயற்றுபவன் ஓங்கொளி வண்ணன் எம்மானை
இயற்றிகழ் சோதி இறைவனுமாமே"

இத்தகைய நலந்தரும் வாழ்வியல் வளங்களை வாரி வழங்கும் இறைவனைக் குறிக்கும் நந்தி எனுமிச்சொல், நந்தமிழ்மொழிக்குரிய நற்றமிழ்ச்சொல். நந்து என்னும் முதனிலைகள் தோன்றுதல், விளங்குதல், பெருகுதல், விளங்கித்தோன்றுதல் என்னும் பொருண்மைகளில் தொல்காப்பியம், பதிற்றுப்பத்து, முல்லைப்பாட்டு, நாலடியார், பெருங்கதை முதலான இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகிறது. "நந்த" எனும் உவமஉருபு தொல்காப்பியத்துள் இடம்பெற்றுள்ளது.

1. "*நேர வியர்ப்ப நளியநந்த என்று ஒத்துவரு கிளவி உருவின் உவமம்*" (தொல்.பொருள்.1237.).

2. விளங்குதல் பொருண்மையில்:–

"*நந்திய செந்நிலப் பெருவழி*" (முல்லைப்.97.)

3. பெருகுதல் பொருண்மையில்:– "*நூல்வேறு நனந்தலை யோராங்கு நந்த*"
(பதிற்றுப்.69,16.).

4. "*நலனந்த நாடணி நந்தப்புலனந்த*" (பரிபா–9)

5. "*நிலநலத்தால் நந்திய நெல்லே போல்*" (நாலடி,179.).

விளங்கித்தோன்றுதல் பொருண்மையில்:– "*பெரியவர் கேண்மை பிறைபோல நாளும் வரிசை வரிசையா நந்தும்*" – (நாலடி,125.).

"நந்தாவிளக்கே நாமிசைப் பாவாய்"

பெருங்கதை இலக்கியத்தில் 'நந்தி' எனும் சொல்லாட்சி இடம் பெற்றுள்ளது:-

"நாளினு நாளினு நந்தி வனப்பெய்தித்" (பெருங். நரவாண. 5,169.).

"நரவாண தத்தனாடொறு நந்தி" (பெருங். நரவாண. 8,31.)

இங்கு குறிக்கப்பெற்ற எடுத்துக்காட்டுகள் கழககால இலக்கியங்களான பதிற்றுப்பத்து முல்லைப்பாட்டு, பரிபாடலில் நந்த, நந்து என்னும் பொருண்மையில் இடம் பெற்றுள்ளதைக் குறிப்பனவாகும். அறநூலான நாலடியாரில், பெருகுதல் என்ற பொருளில் இடம்பெற்றுள்ளது.

மொழிபெயர்ப்பு இலக்கியமான பெருங் கதையில் நந்தி என்னும் பெயர் காணப்படுகிறது. தமிழ் மொழியில் உள்ளதுபோல், வடமொழியில் வேர்ப்பொருள் வினைவடிவிலும் இல்லை; வளர்தல் விளங்கித்தோன்றுதல் எனும் பொருண்மையிலும், இலக்கியத்தில் இடம் பெறவில்லை, என்பது குறிக்கத்தக்கது.

தொல்காப்பியம் முதல், பெருங்கதை ஈறாகத் தமிழிலக்கியப்பரப்பில் நந்த, நந்து எனும் முதனிலை பல்வேறுபட்ட பொருண்மைகளில், இலக்கியப்பரப்பில், இடம் பெற்று விளங்கித் தோன்றுவதால், நந்தி என்னும் சொல், நந்தமிழ்ச் சொல்லேயாகும்.

வடமொழியில் இச் சொல்லிற்கு இன்பம், மகிழ்ச்சி என்னும் பொருண்மைகளே சுட்டப்பெற்றுள்ளன. வடமொழியிலக்கியப் பரப்பிலும், விளங்கித்தோன்றுதல், பிறங்கொளி நல்குதல், பெருகுதல், வளர்தல் போன்ற பொருண்மையில் பயின்றுள்ளதாகத் தெரியவில்லை. வேர்ப்பொருளும் உரிய பொருண்மையில் இடம்பெறவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது. தொன்மக்கதைகளே வடமொழியில் குறிக்கப்பட்டுள்ளன.

ஒருமொழியில் வினைவடிவம் அல்லது முதனிலை மிகுதியாக இலக்கியத்துள் பயின்றிடின், அச் சொல் அம் மொழிக்கே உரியது என்று மொழியியலார் கூறுவர். தமிழ்மொழியில் நந்துதல் எனும் வினை, கழக இலக்கியங்களிலும், பிற இலக்கியங்களிலும் பரவலாக வழக் கூன்றியுள்ளது. வடமொழியில் வினைவடிவம் இல்லை; மகிழ்ச்சிப் பொருண்மையும் தொன்மப் பொருளுமே, "நந்தி" என்னும் சொல்லிற்குச் சுட்டப்பட்டுள்ளது.

தொல்காப்பியத்துள்ளும், கழககால இலக்கியங்களிலும், நாலடியார் முதலான அறநூல்களிலும், காப்பிய இலக்கியங்களிலும், சமயஇலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ள "நந்த" எனும் முதனிலையே "நந்து" எனத்திரிந்து, பின்பு நந்தி என்றாயிற்று. [நந்து → நந்து → நந்தி] நந்தி என்பது நந்தமிழ்ச் சொல்லாகும்.



நந்தி[2] *nandi,* பெ. (n) நன்றாக விளையாத சிறுபூசணிக் காய். (நாஞ்.); small, immature pumpkin.

[நந்து → நந்தி.]

நந்துதல் = தோன்றுதல், வளர்தல், தோன்றி வளர்ந்து நன்கு விளையாத பூசணி. இங்கு இச் சொல் வளர்தல் பொருளின் தொடக்க நிலையைக் குறித்தது.

நந்தி[3] *nandi,* பெ. (n) **1.** செக்கான் (பிங்.); oil-monger **2.** பேரிகை (சூடா.); a kind of drum. **3.** மதகரிவேம்பு; common bastard cedar. **4.** சின்னி; indian shrubby copper leaf

[நந்து → நந்தி.]

நந்தி[4] *nandi,* பெ. (n.) 1. தூணுமரம்; toon tree. 2. உப்புக்கீரை; indian glass wort. 3. வாலை; goddess energy. 4. நந்திதேவர்; one of the members of the original school of Siddhars. 5. வெண்தேக்கு; white teak wood. 6. வசிவி; a prostitute. 7. கோனந்தி; yellow orpiment. copper leaf. 8. சிறுபூசணி; small pumpkin indian shrubby. 9. வலம்புரி; Indian screw tree.

நந்திக்கலம்பகம் *nandi-k-kalambagam,* பெ. (n) 9-ஆம் நூற்றாண்டினனும், பல்லவ அரசனுமாகிய மூன்றாம் நந்தியைப் பற்றிப் பாடப்பட்ட கலம்பக நூல்; a poem on the pallava king nandi III, 9-th century.

தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவன்மனைப் பாராட்டிப் போற்றுவதே, நந்திக்கலம்பகமாகும். பதினெண் கலம்பக உறுப்புகளால் பாடப்பெற்ற, இந் நூலின் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை.

காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டு. அதில் 144 பாடல்கள் உள்ளன.

சிறந்தபாடல்:

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி

கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்

தேனுறு மலராய் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்

நானும் என் கலியும் எவ்விடம் புகுவோம்
நந்தியே நந்தியா பரனே!

[நந்தி + கலம்பகம்.]

நந்தி = மூன்றாம் நந்திவன்மன்.

குல் → கல → கலவை. கல → கலம் → கலம்பம் → கலம்பு → கலம்பகம் = பலவுறுப்புகள் கலந்து வருஞ் செய்யுள்நூல். (மு.தா. 176.).

நந்திக்கோல் *nandi-k-kōl,* பெ. (n.) மரபுவழிப் பணியாற்றும் ஊர் நிருவாக அலுவலர்; hereditary village official (E.T.VII. 310.).

[நந்தி + கோல்.]

தொன்றுதொட்டு, மூதாதையர் வழியில், சிற்றூர் நிருவாகத்தை மேற்கொள்ளும் அதிகாரி.

நந்திகம் *nandigam,* பெ. (n.) 1. உப்புக்கீரை; salt-greens. 2. நந்தி பார்க்க; see nandi.

நந்திகேச்சுரம் *nandi-gē-c-curam,* பெ. (n.) நந்தி[1], (பிங்.) பார்க்க; see nandi.[1].

[நந்திகை + ஈச்சுரம்.]

நந்திகேச்சுரன் *nandi-gē-c-curan,* பெ. (n.) நந்தி[1], 2, 4; பார்க்க; see nandi[1], 2, 4.

[நந்திகை + ஈச்சுரன்.]

நந்திகேசரன் *nandi-kēšaran,* பெ. (n.) நந்தியாவட்டம் பார்க்க; see nandiyā-vaṭṭam.

[நந்திகை + ஈசரன்.]

நந்திகேசன் *nandi-gēšan,* பெ. (n.) நந்திகேச்சுரன் பார்க்க; see nandi-gēccuran.

[நந்திகை + ஈசன்.]

நந்திகை *nandigai,* பெ. (n.) மட்பாண்டம்; earthern pot.

[நந்து + இகை.]

நந்திதேவன் *nandi-dēvaṉ,* பெ. (n.) *நந்தி¹,* 2,. பார்க்க; see *nandi¹,* 2.

[நந்தி + தேவன்.]

நந்திநாகரம் *nandi-nāgaram,* பெ. (n.) ஒருவகை நாகரவெழுத்து (சிவமரு. சிவஞானதா, 32,உரை); a kind of nāgari script.

[நந்தி + நாகரம்.]

நந்திப்பூசணி *nandi-p-pūšaṇi,* பெ. (n.) நீற்றுப் பூசணி (மலை.); common pumkin.

[நந்தி + பூசணி.]

நந்திபண்ணை *nandi-paṇṇai,* பெ. (n) வெடியுப்பு; potassium nitrate

[நந்தி + பண்ணை.]

நந்திபத்திரி *nandi-pattiri,* பெ. (n) நந்தியாவட்டம் (மூ.அ.) பார்க்க; see nandiyā-vaṭṭam.

[நந்தி + பத்திரி.]

நந்திபராகமூலி *nandi-parāga-mūli,* பெ. (n.) ஈசுரமூலி; indian birth-wort.

நந்திபீசம் *nandi-pīšam,* பெ. (n.) சோரங்கொட்டை; marking nut.

[நந்தி + பீஜம் → பீசம்.]

நந்திபுர விண்ணகரம் *nandipura-viṇṇagaram,* பெ. (n.) திருமங்கையாழ்வார் பாடலில் இடம் பெறும் வைணவக் கோயில் அமைந்துள்ள ஊர். a canonised. place Tirumangai-āḻvār hymns "*நாதன் உறைகின்ற நகர்நந்திபுர விண்ணகரம். நண்ணுமனமே*" (திருமங்கையாழ்வார். 143.)

நகர் நந்திபுரம் என்று பாடலில் குறிப்பிட்டுச் சொல்லுவதால், 'நந்திபுரம்' ஊர்ப்பெயர் என்பது தெளிவாகிறது.

[நந்தி + புரம் + விண் + நகரம்.]

நந்திபூசினி *nandi-pūšiṉi,* பெ. (n) சாம்பற்பூசனி; ash pumpkin.

[நந்தி + பூசு + இனி.]

நந்திமுகி *nandi-mugi,* பெ. (n.) நீண்டும், மென்மையாகவுமிருக்கும் ஒருவகைக் கோதுமை; an elongated soft wheat

[நந்தி + முக + இ.]

"இ"= சொல்லாக்க ஈறு.

நந்தியம்பாக்கம் *nandiyam-bākkam,* பெ. (n) திருவள்ளூர் மாவட்ட ஊர் a village, in Thiruvaḷḷūr dt.

[நந்தி + அம் + பாக்கம்.]

பகு → பக்கம் → பாக்கம்.

நந்தியாவட்டம் *nandiyā-vaṭṭam,* பெ. (n.) செடிவகை; east indian rosebay the flower or the plant, the flower used in prayers "*அலர்ந்த காலை நந்தியாவட்ட நாறு நகைமுடி யரசனாயின்*" (சீவக,1287.).

மறுவ. நந்திகேசரப்பூ.

[நந்தி + ஆவட்டம்.]

6 முதல் 8 அடிவரை வளரும்; காம்புகளில் 3 முதல் 6 வரை, எண்ணிக்கையில்

வெண்மையான பூக்களைத்தரும். ஆண்டு முழுவதும் பூக்கும். இப் பூக்கள், நள்ளிரவில் மலர்ந்து நன்மணந் தருந்தன்மையன. சிவபூசைக்கு உகந்த இப் பூக்கள், தோட்டங்களிலும், கோயில்களிலும், காடுகளிலும், சிறப்பாக விளையும். இதன் இலைச்சாறு, கண்ணோய்கட்குக் கைகண்ட மருந்து.

ஒற்றை நந்தியாவட்டப் பூச்சாறு, கண்புரைக்கட்டியைக் கரைக்கும். மண்டைக் கரப்பான் முதலான தலைநோய்கட்கு, இலைச்சாறும், பூச்சாறும் நற்பயன் தருந் தன்மைத்து. ஒற்றை நந்தியாவட்டம், இரட்டை நந்தியாவட்டம், அடுக்கு நந்தியாவட்டம், என மூவகைப் பிரிவுகள் இதனுள் உண்டு.

நந்தியாவட்டை *nandiyā-vaṭṭai,* பெ. (n.) நந்தியாவட்டம் (இ.வ.) பார்க்க; see nandiyā-vaṭṭam.

[நந்தி + ஆவட்டை.]

நந்தியாவர்த்தம் *nandiyā-varttam,* பெ. (n.) 1. நந்தியாவட்டம் பார்க்க; see nandiyāvaṭṭam. 2. அரசமரம்; holy fig tree. 3. ஒருவகைச் சிப்பி; a kind of shell or molluse 4. கட்டடவகை; a kind of building.

நந்தியுப்பு *nandi-y-uppu,* பெ. (n.) நஞ்சுக்கொடி; navel card.

[நந்தி + உப்பு.]

சத்தியுப்பு, சிவனுப்பு, கம்பியுப்பு, பூரம் இவைகளைச் சமனெடையாகச் சேர்த்துக், கலுவத்தில் அரைத்துக் கதிரவனொளியில், நண்பகலில் நன்கு உலர்த்திப் பின்பு அனைத்தையும் ஒன்றாகச், சேர்த்து உருவாக்கிய உப்பு.

நந்திரகம் *nandiragam,* பெ. (n.) சிவனார் வேம்பு; šivā's neem.

நந்திரசின்னி *nandira-šinni,* பெ. (n.) 1. நந்தி. 4 பார்க்க; see nandi4. 2. நந்தியாவட்டம் பார்க்க; see nandiyāvaṭṭam. 3. ஒடுகுமரம்; wodisha tree 4. மருத்துவக் குணமிக்க சின்னிமரம்; a medicinal tree - Acalypha fruiticosa.

நந்திவட்டம் *nandi-vaṭṭam,* பெ. (n.) நந்தியாவட்டம் பார்க்க; see nandiyāvaṭṭam *"நந்திவட்டத்தொடு கொன்றை வளாவிய நம்பனையே"* (தேவா.1200:5.).

[நந்தி + வட்டம்.]

நந்திவருத்தனன் *nandi-varuttaṉaṉ,* பெ. (n.) 1. நண்பன் (யாழ்.அக.); friend. 2. மகன்; son. 3. சிவன்; šivaṉ.

[நந்தி + skt. வருத்தனன்.]

நந்திவாகனம் *nandi-vāgaṉam,* பெ. (n.) பருவுடல்; gross body or fleshy body as opposed to, subtle body.

[நந்தி + skt.வாகனம்.]

நந்திவிருட்சம் *nandi-virutcam,* பெ. (n.) 1. தூணிமரம்; bastard cedar cedrela toora. 2. சின்னி மரம்; indian shrubby copper leaf.

[நந்தி + skt. விருட்சம்.]

நந்தினி *nandini,* பெ. (n.) 1. காமதேனுவின் கன்று; the calf of the celestial cow. "*நந்தினிப்பேர் மேன்மை தொக்கவச் செய்ய சோதிச் சுந்தரத் தோற்றத் தேனு*" (இரகு.குறை.64). 2. மகள்; daughter; "*நந்தி நந்தினி*" (தணிகைப்பு.நகர.133).

[நந்து → நந்தினி.]

நந்து¹–தல் *nandu-,* 5செ.கு.வி. (v.i.) 1. கெடுதல் (சூடா.); to become spoiled, to perish, decay, waste. "*நாடற்கரிய நலத்தை நந்தாத் தேனை*" (திருவாச.9;15.). 2. சாதல்; to die. "*திருமைந்த னந்தறீர்ந்தது மாயுளைப் பெற்றதும்*" (பிரமோத். 21,61). 3. அவிதல்; to be extinguished, put out, as a lamp. "*நந்தாவிளக்குச்சுடர் நன்மணி*" (சீவக.3144) 4. மறைதல்; to set, disappear. "*இடையுறு திருவென விந்துநந்தினான்*" (கம்பரா.உண்டாட்.67.). 5. வசைபாடுதல், பழிதூற்றுதல் (யாழ்ப்.); to be insulted, abused.

க. நந்து.

[நொய் → நொய்ந்து →

நொந்து → நந்து–.]

நொய்ந்து போதல் = நசிந்து போதல்; அழிந்து போதல். நைந்துபோதலால் ஏற்படும் பேரழிவும், நந்துதல் எனப்படும்.

நந்துதல் என்னும் வினைச்சொல், நொந்து அல்லது நைந்து போதல் என்ற நெகிழ்ச்சிப்பொருண்மையினை, அடிப்படையாகக் கொண்டது. "*நொந்து நூலாய்ப்போனான்*" "*நைந்து நாசமாய்ப் போய்விட்டான்*" என்னும் மக்கள் வழக்குகள், ஈங்கு நினைவு கூரத்தக்கன. அவிதல் பொருளிலும், இச் சொல் பயிலும். பதனழிந்த சோற்றைச் "*சோறு நைந்து விட்டது*" என்று நாட்டுப்புறத்தார், இன்றும் கூறுவது நோக்குக. நொய் → நொய்ந்து → நைந்து → நந்து என்று ஏரணமுறையில் வளர்ந்து மக்களிடையே, இச் சொல் வழக்கூன்றியுள்ளது.

நந்து²–தல் *nandu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. வளர்தல்; to increase, grow, wax. "*பெரியவர் கேண்மை பிறைபோல...நந்தும்*" (நாலடி.125.). 2. தழைத்தல்; to be luxuriant, fertile. "*கான நந்திய செந்நிலப் பெருவழி*" (முல்லை.97). 3. விளங்குதல்; to prosper, flourish. "*நால்வேறு நனந்தலை யோராங்கு நந்த*" (பதிற்றுப்.69,16). 4. செருக்குதல்; to be proud, glow with pride or splendour. '*யான் செலினந்திச் செறிற்சாம்புமிவள்*" (கலித்.78).

[நும் → நம் → நந்து–.]

உந்து →துந்து →நுந்து→ நொந்து →நந்து.

நொந்துதுல் = தூண்டுதல், ஊக்குதல், வளர்தல்.

துந்து → துந்தி → தொந்தி.

தொந்தி= பருத்து வளர்ந்த வயிறு. தூண்டுதற் கருத்தினின்று பெருகுதல், வளர்தல் முதலான பொருண்மை தரும் கருத்துகள் தோன்றின.

நந்துதல் என்னும் வினைச்சொல், தோன்றி வளர்தல், தழைத்து ஓங்குதல் விளங்கித்தோன்றுதல் என்னும் பொருண்மையில், கழகக்கால இலக்கியங்களில் பயின்றுள்ளதை நோக்குக.

நந்து³–தல் *nandu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தூண்டுதல் (இ.வ.); to stir.trim. விளக்கை நந்து (உ.வ.).

[உந்து → நுந்து → நந்து–.]

நந்து[4] *nandu,* பெ. (n.) 1. ஆக்கம்; increase, prosperity. "*நந்தெறும்பு*" (ஆசாரக்.97). 2. பறவை (பிங்.); bird.

[நும் → நம் → நந்து–.]

நந்து[5] *nandu,* பெ. (n.) 1. சங்கு (திவா.); conch 2. நத்தை (பிங்.) மெல்லியசதையுள்ள நீருயிரி; snail. "*கதிர்க்கோட்டு நந்தின் சுரிமுக வேற்றை*" (புறம்.266:4.). "*நந்தும்முரலும் ஈர்அறிவினவே*" 9(தொல்.பொருள்.9.). "நீர்வாழ் சாதியுள் நந்தும் நகே" (தொல்.பொருள்.1563).

[நொது → நுது → நுந்து →நந்து–.]

நந்து : பிற உயிரிகளால் கேடுறுங்கால் முகப்புப் பகுதியில் உள்ள, கதிர் போன்ற உணர்வறிகோட்டின், சுரிமுகப்பகுதி முழுவதையும், உள்ளிழுத்துக்கொள்ளும் இயல்பினது.

நந்துருணி *nanduruṇi,* பெ. (n.) 1. புறங் கூறுவோன் (வின்.); talebearer, backbiter. 2. அறிவிலி (வின்.); fool,silly person. 3. கீழ்மகன் (இ.வ.); insignificant person.

[நந்துரு → நக்துருணி.]

பிறரைக் குறைத்துப் பேசும் தாழ்வுப்பொருளில் வந்தது.

நந்துருணிப்பேச்சு *nanduruṇi-pēccu,* பெ. (n.) 1. பழிப்புரை; slander. 2. குறளை (வின்.) backbiting. 3. நம்பிக்கையற்ற பேச்சு (இ.வ.); unreliable talk.

[நந்துருணி + பேச்சு.]

மற்றவர் குறைகளை, நீட்டிப் பேசும் உரை. உயர்த்தல் பொருளில் அமைந்தது.

நந்தை[1] *nandai,* பெ. (n.) 1. கொற்றான் (மலை.) பார்க்க; see koṟṟāṉ 2. தேற்றாங்கொட்டை (வின்.); clearing nut. 3. கலப்பை நுகந் தொடுக்குங் கயிறு (வின்.); rope for fastening a yoke to the beam of a plough

[நந்து → நந்தா → நந்தை.]

நந்தை[2] *nandai,* பெ. (n.) 1. சில சிறப்பு நாள்கள் (பிங்.); some important days. "*நவமியுவா நந்தை யொடு*" (காசிக. இல்லொழு.26). 2. கபிலைப் பசு; brown cow. "*காபில நந்தை கரியசுபத்திரை*" (தணிகைப்பு.அகத்திய.486). 3. அருகக் கடவுளது சமவசரணத்தின் கீழ்த்திசையிலுள்ள தடாகம். (மேருமந்.1086); (jaina) a tank to the east of Arhat's heaven

நந்நான்கு *nannāṉgu,* வி.எ. (adv.) நான்கு நான்காக; by fours, at the rate of four to each.

மறுவ. நானான்கு

நப்பசலையார் *nappašalaiyār,* பெ. (n) கழகக் காலப் புலவருள் ஒருவர்; an eminent šaṅgam poet.

[நல் + பசலையார்.]

இவர் நற்றிணையில் 243–வது பாடலைப் பாடியுள்ளார். பிரிவிடை மெலிந்த தலைமகள் கூற்றாக வரும் பாடல் வருமாறு:–

"தேம்படு சிலம்பிற் றெள்ளறல் தழீஇய
துறுக லயல தூமண லடைகரை
அலங்குசினை பொதுளிய நறுவடி மாஅத்துப்
பொதும்புதோ றல்கும் பூங்கண் இருங்குயில்
கவறுபெயர்த் தன்ன நில்லா வாழ்க்கையிட்டு
அகற லோம்புமின் அறிவுடை யீரெனக்
கையறத் துறப்போர்க் கழறுவ போல

மெய்யுற விருந்து மேவர நுவல
இன்னா தாகிய காலைப் பொருள்வயிற்
பிரித லாடவர்க் கியல்பெனின்
அரிதுமன் றம்ம அறத்தினும் பொருளே".

(நற். 243)

நப்பண்ணனார் *nappaṇṇaṉār*, பெ. (n.) கழகப்புலவர்; a poet of Sangam period.

இவர் பரிபாடலில் உள்ள பத்தொன்பதாம் பாடலை இயற்றியவராவார்.

[நல் + பண்ணனார்.]

ஒ.நோ. ந + பின்னை = நப்பின்னை.

ந + பூதனார் = நப்பூதனார்.

"நிலவரை யழுவத்தான் வானுறை புகல்தந்து
புலவரை யறியாத புகழ்பூத்த கடம்பமர்ந்து
அருமுனி மரபி னான்றவர் நுகர்ச்சிமன்
இருநிலத் தோரு மியைகென ஈத்தநின்
தண்பரங் குன்றத் தியலணி நின்மருங்கு
சாறுகொள் துறக்கத் தவளொடு
மாறுகொள் வதுபோலும் மயிற்கொடி வதுவை
புலத்தினும் போரினும் போர்தோலாக் கூடற்
கலப்போ டியைந்த விரவுத்தீ ரெல்லை
அறம்பெரி தாற்றி யதன்பயன் கொண்மார்
சிறந்தோ ருலகம் படருநர் போல
உரிமாண் புனைகல மொண்துகில் தாங்கிப்
புரிமாண் புரவியர் போக்கமை தேரர்"

"தெரிமலர்த் தாரர் தெருவிருள் சீப்பநின்
குன்றொடு கூட லிடையெல்லா மொன்றுபு
நேர்பூ நிறைபெய் திருநிலம் பூட்டிய
தார்போலு மாலைத் தலைநிறையால் தண்மணல்
ஆர்வேலை யாத்திரை செல் யாறு;"

"சுடரொடு சூழ்வரு தாரகை மேருப்
புடைவரு சூழல் புலமாண் வழுதி
மடமயி லோரு மனையவ ரோடும்
கடனறி காரியக் கண்ணவ ரோடும்நின்
சூருறை குன்றிற் றடவரை யேறிமேற்
பாடு வலந்திரி பண்பிஹ் பழமதிச்
சூடி யசையுஞ் சுவல்மிசைத் தானையிற்
பாடிய நாவிற் பரந்த வுவகையின்
நாடு நகரு மடைய அடைந்தனைத்தே
படுமணி யானை நெடியாய்நீ மேய
கடிநகர் சூழ்நுவலுங்கால்;"

"தும்பி தொடர்கதுப்ப தும்பி தொடராட்டி
வம்பணி பூங்கயிற்று வாங்கி மரனசைப்பார்
வண்டார்ப் புரவி வழி நீங்க வாங்குவார்
திண்டேர் வழியிற் செலநிறுப்பார் கண்டக்
கரும்பு கவழ மடுப்பார் நிரந்து
பரிநிமிர் தானையான் பாசறை நீர்த்தே
குருகெறி வேலோய்நின் குன்றக்கீழ் நின்ற
இடைநிலம் யாமேத்து மாறு;"

"குரங்கருத்து பண்ணியங் கொடுப்போரும்
கரும்பு கருமுகக் கணக்களிப் போரும்
தெய்வப் பிரமஞ் செய்கு வோரும்
கைவைத் திமிர்புகுழல் காண்கு வோரும்
யாழி னிளிகுரல் சமங்கொள் வோரும்
வேள்வியி னழகியல் விளம்பு வோரும்
கூர நாண்குரல் கொம்மென வொலிப்ப முரசி
னாலிசெய் வோரும்." (பரிபா.19.)

பரிபாடலில் இவர் செவ்வேளின் சிறப்பினையும், திருப்பரங்குன்றத்தின் சிறப்பினையும் திறம்படப் பாடியுள்ளார்.

முருகனின் ஆடை, மாலை, வேற்படை, முகம் அனைத்தும் செந்நிறமுடையவை. முருகன், செவ்வேள் என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் எழிலுற அமைந்துள்ளதை எடுத்துரைக்குந் திறன் நயமிக்கது;

அனைவர்தம் மனமும், முருகனது அழகில் ஒன்றியிருந்து நினைக்கும் வண்ணம் அமைத்துள்ளார்.

திருப்பரங்குன்றம் பாண்டியர் பாசறை போலவும், ஒலிமலி நகராகவும், அங்குள்ள வண்ண ஓவியங்கள் காண்பவர்தம் கண்ணையும் கருத்தையும் கவரும் பாங்கில் அமைந்துள்ள சிறப்பையும், பழம்பண்பாட்டின் உறைவிடமாகவும், திகழ்ந்ததைப் பரிபாடலில் நன்கு விளக்கியுள்ளார்

நப்பாசை *nappāšai,* பெ. (n.) ஒன்று எப்படியாவது நிகழாதா என்ற எதிர்பார்ப்பு; fond hope. இந்த வேலையாவது எனக்குக் கிடைக்காதா என்கிற நப்பாசை அடிமனத்தில் துளிர்விட்டது (இ.வ.). மீண்டும் வேலைக்கு எடுக்கப்படலாம் என்ற நப்பாசைக்கு முடிவுகட்டுவது போலிருந்தது அந்த அறிக்கை (இக். வ.).

[நயப்பு → நப்பு + ஆசை.]

நயப்பு = விருப்பம்.

எண்ணியது நிறைவேறாது அல்லது அரிது என்று தெரிந்ததும், எப்படியும் நடக்கும் என்னும் விருப்பமுடன் கூடிய எதிர்பார்ப்பு.

நப்பாலத்தனார்¹ *nappālattanār,* பெ. (n) கழகக்காலப் புலவர்; a poet of šaṅgam period.

[நல் + பாலத்தன் + ஆர்.]

'ஆர்' மதிப்பொருமை விகுதி. (ஒ.நோ.) ந + செள்ளை + ஆர். 'ந' சிறப்புப் பொருளுணர்த்தும், இடைச்சொல்.

நச்சினார்க்கினியரின், சீவகசிந்தாமணி 482–ஆம் பாடலுரையால், இப் புலவரின் இயற்பெயர் நப்பாலத்தன் என்று அறிய முடிகிறது. இவர், நற்றிணையில் (52,240), இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார். சில ஆய்வாளர், நச்சினார்க்கினியர் உரைக் குறிப்பில் காணப்படும் நப்பாலத்தன், நற்றிணை பாடிய நப்பாலத்தனாருக்கு வேறானவர் என்பர். இவ்விரு பாடல்களிலும் சொல்லாட்சி, பொருளமைதி ஒத்துக்காணப்படுவதால், இருவரும் ஒருவரே என்றும் துணியலாம். (எ–டு) 1. தலைமகன் செலவழுங்கியது:– "ஐதே கம்ம வியைந்து செய்பொருளே" (நற்.52.). 2. பிரிவிடைமெலிந்த தலைமகள் கூற்று:– "ஐதே கம்ம இவ்வுலகு படைத்தோனே" மேலும் மேலே குறித்துள்ள நற்றிணை–52–ஆம் பாடலில், மாவள் ஓரியின் கொடைச் சிறப்பினை, பாடிய பாங்கு எஞ்ஞான்றும் நெஞ்சை விட்டு நீங்கா வண்ணம் அமைந்துள்ளது.

"மாக்கொடி யதிரற் பூவொடு பாதிரித்
தூத்தகட் டெதிர்மலர் வேய்ந்த கூந்தல்
மணங்கமழ் நாற்ற மரீஇ யாமிவள்
சுணங்கணி யாகம் அடைய முயங்கி
வீங்குவர்க் கவவின் நீங்கல் செல்லேம்
நீயே, ஆள்வினை சிறப்ப எண்ணி நாளும்
பிரிந்துறை வாழ்க்கை புரிந்தமை யலையே
அன்பிலை வாழியெந் நெஞ்சே வெம்போர்
மழவர் பெருமகன் மாவள் ஓரி
கைவள மியைவ தாயினும்
ஐதே கம்ம, இயைந்துசெய் பொருளே"
(நற். 52).

நப்பாலத்தனார்² *nappālattanār,* பெ. (n.) திருவள்ளுவமாலையில், திருக்குறளைச் சிறப்பித்துப் பாடியவர்; an eminent poet

[நல் + பாலத்தன் + ஆர்.]

திருவள்ளுவமாலையில் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

"அறம்தகளி; ஆன்ற பொருள்திரி: இன்பு சிறந்தநெய்; செஞ்சொல் தீ; தண்டு–குறும்பாவா

வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள் உள்இருள் நீக்கும் விளக்கு"

கழகக்கால நப்பாலத்தனாரிலிருந்து, இவர் முற்றிலும் வேறானவர். இப் பாடலின் சொல்லாட்சியும், நற்றிணை (52,240.) ஆம் பாடல்களில், காணப்படும் சொல்லாட்சியும், முற்றிலும் வேறு பட்டிருப்பதால், இருவரும் வெவ்வேறானவர் என்று துணியலாம். "அறம் தகழியாகவும், பொருள் திரியாகவும், இன்பம் நெய்யாகவும், செவ்வியசொல் தண்டாகவும்" அமைந்த திருக்குறள் என்னும் விளக்கினை, மன்பதை மாந்தர்தம், அகவிருள் அகலும் வண்ணம், திருவள்ளுவர் ஏற்றியதாகக் குறித்துள்ள சிறப்பு, ஆதனுக்கு (ஆன்மா) நல்வழிகாட்டும் பான்மையில், அமைந்துள்ளது.

நப்பிரி—தல் *nappiri-,* 4 செ.கு.வி. (v.i.) நம்மைப் பிரிதல்; to leave us, in separate from us; "*நப்பிரிந்துறைந்தோர்*" (ஐங்குறு.227.).

[நம் + பிரிதல்.]

இரண்டாம் வேற்றுமைத்தொகைச் சொல்.

நப்பின்னை *na-p-pinnai,* பெ. (n.) கண்ணனுக்கு உவந்த தேவியருள் ஒருத்தி; Krishna's favourite wife. "*கொத்தலர் பூங்குழல் நப்பின்னை*" (திவ்.திருப்பா.19).

[நல் + பின்னை.]

ஒ.நோ. நல் + கீரன் = நக்கீரன்.

நப்பு பெ. (n.) சிறுகல்வகை (இ.வ.); a kind of stone

நப்புச்சப்பு *nappu-c-cappu,* பெ. (n.) 1. சுவை; (உருசி); taste கறியில் நப்புச்சப்பு இல்லை. 2. சொத்து; property.

[நப்பு + சப்பு.]

ஒ.நோ. உப்புச்சப்பு இல்லாத உணவு.

நப்புணர்—தல் *na-p-punar-,* 4 செ.கு.வி. (v.i.) நம்மைச் சேர்தல்; to join us, unite with us. "*தேற்றஞ்செய்து நப்புணர்ந்து*" (ஐங்குறு. 23).

[நம் + புணர்-.]

இரண்டாம் வேற்றுமைத் தொகையமைப்பில் இச் சொல் வந்துள்ளது.

நப்பூதனார் *nappūdanār,* பெ. (n.) முல்லைப்பாட்டு என்ற நூலை இயற்றிய புலவர்; a poet who wrote mullai-p-pāttu.

[ந + பூதனார்.]

(ஒ.நோ.) ந + பண்ணனார்.

"செறியிலை காயா அஞ்சனம் மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
திரிமருப் பிரலையொடு மடமா னுகள
எதிர்செல் வெண்மழை பொழியும் திங்களின்"
முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துனைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே!"
(முல்லைப்.93–103).

நம்¹ *nam,* இடை (part.) தன்மைப் பன்மை (உளப்பாட்டு) பகரப்பெயர், 'நாம்' என்பதன் உருப்பேற்கும் வடிவம்; oblique form of first person plural pronoun (inclusive) 'nām'.

[நாம் → நம்]

எ—டு: நாம் + உடைய = நம்முடைய.

நாம் + ஐ → நம்மை.

ஒ.நோ: தாம் → தம்.

பகரப்பெயர் என்பது மாற்று வடிவத்தைப் பகரமாகப் பயன்படுத்தும் பெயர். பகரப்பெயர் உருபேற்கும்போது, முதனிலை குறுகுதல் பெரும்பான்மையாகும். இருப்பினும், தமிழ்க் குடும்ப மொழிகள் சிலவற்றுள், பகரப்பெயர் உருபேற்கும்போது, மாறுதலடையாமல் இருப்பதும் உண்டு.

சான்று வருமாறு:—

க., நா (தன்மை ஒருமை) — நாக (எனக்கு)

தெ., நா (தன்மை ஒருமை) — நாகு (எனக்கு)

நம்² *nam,* இடை. (part.) எல்லாம் என்னும் சொல் உயர்திணையாயின், அஃது உருபேற்கும்போது கொள்ளும் சாரியை; an infix added to the word ellām before case suffixes, when it is uyar-tiṇai "*உயர்திணையாயி னம்மிடை வருமே*" (தொல்.எழுத்.190.).

[நாம் → நம்.]

எ.டு. எல்லேம் + நம்மையும் = எல்லே நம்மையும் என்று, இலக்கியத்தில் மட்டும் வழக்குண்மையால், மக்களிடையே வழக்கூன்றவில்லை என்பது தெளிவு.

நம்பகம் *nambagam,* பெ. (n.) நம்பிக்கைக்கு உரியதாகுகை; trust, worthiness.

தெ. நம்பகமு.

[நம்பு + அகம்.]

நம்பகமாக *nambagam-āga,* கு.வி.எ. (adv.) ஐயமற, நம்பத்தகுந்த; trust, worthy. அவருக்குப் புதிய பொறுப்புத்தரப்படலாம் என்று நம்பகமாகத் தெரிகிறது.

[நம்பகம் + ஆக.]

நம்பகமான *nambagam-āṉa,* கு.பெ.எ. (adj.) கட்டாயமான, உறுதியான; certainly. அவர் ஒரு நம்பகமான ஆள் (உ.வ.).

[நம்பகம் + ஆன.]

நம்பல்¹ *nambal,* பெ. (n.) 1. விருப்பம் (சூடா.); desire. 2. நம்புகை; trusting, believing. "*நம்பலென்பதுவே யன்பினிலைமை*" (மனோன்.).

[நம்பு → நம்பல்.]

அல்லீற்றுத் தொழிற்பெயர் "*நம்பும் மேவும் நசையா கும்மே*" என்ற தொல்காப்பிய நூற்பாவின்படி, நம்பு விருப்பக்கருத்தில் வந்தது. (தொல். சொல். 812.).

நம்பல்² *nambal,* பெ. (n.) 1. ஆசைப்பெருக்கம்; intense desire. 2. பொருட்பேரவா; cupidity. 3. மாளாக்காதல், அளவுக்கதிகமான அன்பு; amorousness.

[நம்பு → நம்பல்.]

அல்லீற்றுத் தொழிற்பெயர்.

நம்பலங்கம் *nambalaṅgam,* பெ. (n.) முப்பத்து இரண்டு வகைச் சாலாங்கவைப்பு நஞ்சுகளி லொன்று; one of the thirty two kinds of native arsenics.

நம்பளவன் *nambaḷavaṉ,* பெ. (n.) நம்முடையவன்; our person.

[நம்மளவன் → நம்பளவன்]

ஒ.நோ. இம் + மட்டு = இம்மட்டு → இம்புட்டு.

நம்பன் *nambaṉ,* பெ. (n.) 1. அனைவராலும் விரும்பப் படுபவன்; a favouriate person. "*நம்பன் செல்லு நாளினும்*" (சீவக.363.). 2. கடவுள்; god "*நம்பனே யெங்கள் கோவே*" (தேவா.954;1.). 3. சிவன் (சூடா.); šivaṉ "*நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்*" (கம்பரா.ஆற்றுப்.3).

[நம் → நம்பன்.]

அனைவராலும் நம்பப்படுபவன். அனைவராலும் நம்பிப் போற்றப் படுபவன். பேரருளை அனைத்து மாந்தருக்கும் (ஆதனுக்கும்) வாரி வழங்கும் வள்ளன்மையுடையவனான கடவுள்.

நம்பாசு *nambāšu,* பெ. (n.) நம்பிக்கையின்மை (யாழ்.அக.); distrust.

நம்பாடுவான் *nam-bāḍuvāṉ,* பெ. (n.) இசைப்பாணர் குலத்துதித்த திருமாலன்பன் (குருபரம்); Vaiṣṇava devotee born in (iśai-p-pāṇar) Tamiḻ bards.

இவர், திருக்குறுங்குடிக்கருகிலுள்ள (முனிக்கிராமம்), முனிச்சிற்றூரில் பிறந்தவர். திருக்குறுங்குடிப்பெருமாள் மீது ஆராக்காதலுடையவர். வீணை இசைத்து பாடல் பாடுவதில் வல்லவர்.

நம்பாமதம் *nambā-madam,* பெ. (n.) இறையின்மையை மறுத்துக் கூறும் மதம்; இறைவன் இல்லையென்று கூறும்மதம்; atheism.

மறுவ. இல்மதம்.

[நம்பு + ஆ → நம்பா + மதி → மதம்.]

"ஆ" ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். கடவுளும், மறுமையும், இல்லையெனும் கொள்கையைக் கூறும் மதம்.

கடவுள் இல்லை யென்பதற்குக் காட்டப்படும் சான்றுகள்:–

1. உடல்நலம், மனநலம், மதிநலம் முதலிய நலங்கள் உள்ளாரும், இல்லாரும் படைக்கப்பட்டிருத்தல்.

2. பஞ்சம், கொள்ளை நோய், பெருவெள்ளம், நிலநடுக்கம் முதலிய, இயற்கை அழிவுநிகழ்ச்சிகள் நேர்தல்.

3. கடவுள் புறக்கண்ணிற்கும் புலனாவதில்லை.

4. ஒன்றோடொன்று முரண்பட்ட பல்வேறு மதங்கள் உலகில் வழங்கி வருகின்றன.

5. நல்லோர் பலர், வறுமை, நோய், பிறரால் துன்பம் முதலியவற்றால் வருந்திக் குறுவாழ்க்கையராய்ச் சாக, தீயோர் பலர் எல்லாவகையிலும் இன்புற்று, நீடு வாழ்கின்றனர்.

6. பல அஃறிணை உயிரினங்கள், பிறவற்றைக் கொன்று திண்பனவாகவே படைக்கப் பட்டுள்ளன.

7. சிலர் எத்துணை உருக்கமாய் இறைவனை வேண்டினும், தாம் விரும்பியதைப் பெறுவதில்லை.

நம்பா மதத்தினர் கடவுளில்லையென்று சொல்லச் சொல்ல, அது ஆரியமேம்பாட்டிற்கும், ஏமாற்றிற்கும் அரண் செய்ததேயாகின்றது.

நம்பு மதத்தவரின் இறையியல் கொள்கை, தமிழர்தம் வாழ்வியற் கொள்கையாகும். நம்பாமதத்தினர் இறைமறுப்புக்கொள்கையானது, ஆரியப் பார்ப்பனரின் வளர்ச்சிக்கு அடிகோலுந் தன்மைத்து. கடவுள் மறுப்புக் கொள்கையானது தமிழனுக்குத் தாழ்வையும், ஆரியனுக்கு உயர்வையும் உருவாக்கும் கொள்கையாக வளர்ந்து வருகிறது.

மக்களாட்சியும், குடியரசும் நடைபெறும் இக் காலத்தில், ஒவ்வொருவர்க்கும் தத்தம் மதத்தைப் பரப்ப முழுஉரிமையுண்டு. ஆதலால், தஞ்சையில் பெரியார் படிமையடித் தளத்தில், நம்பா மதத்தினர், "*கடவுளில்லை, கடவுளில்லை கடவுளென்பதில்லையே*" என்று பொறித்துள்ளனர். (தமிழர் மதம், பக். 158 – 59).

நம்பா மதத்தவரின் அடிப்படைக் கொள்கை, மூடநம்பிக்கைகளை யொழிப்பதே. கண்மூடித்தனமான பழக்கவழக்கங்களை மண்மூடிப்புதைப்பதே யாகும்.

தமிழர்தம் வாழ்வியற்கொள்கைக்கு ஒவ்வாத தொன்மச் செய்திகளை, தமிழர்தம் மனத்தினின்று அழிப்பதாகும்.

நம்பான் *nambāṉ,* பெ. (n.) நம்பன் பார்க்க; see nambaṉ. "*நம்பான் மேய நன்னகர் போலுந் நமரங்காள்*" (தேவா.908:1.).

[நம்பு + ஆன்.]

நம்பி *nambi,* பெ. (n.) 1. அனைவராலும் விரும்பப் படுபவன், ஆணிற்சிறந்தோன் (பிங்.); the elite among men, used as a term of respect. "*குணமாலை நலனுண்ட நம்பி*" (சீவக.1796.). 2. நிறைஞன் அல்லது நிறைவன் (பூரணன்); a perfect soul. "*நறையூர் நின்ற*

நம்பி" (திவ்.பெரியதி 7:1:1.). **3.** கடவுள்; the Supreme Being. **4.** நம்பியான் பார்க்க; see nambiyāṉ. **5.** ஒரு செல்வப்பெயர்; a term of endearment. "*நம்பி பிறந்தான் பொலிக நங்கினை*" (மணிமே.13:21.). **6.** நம்பியாண்டார் நம்பி பார்க்க; see nambi-y-āṇḍār nambi. "*எம்மான் நம்பி பொறுவெனத் தடுத்து*" (பெரியபு. திருமுறை கண்ட.4). **7.** "*அகப்பொருள் விளக்கம்*" என்னும் நூலை இயற்றிய நாற்கவிராச நம்பி; the author a treatise on agapporuḷ viḷakkam. **8.** தம்பூரச்சிகை (சா.அக.); a medical plant used in alchemy.

ம. நம்பி.

[நம்பு → நம்பி.]

நம்பு = விருப்பம்.

"நம்பும்மேவும் நசையா கும்மே" (தொல். சொல். 812).

அனைவராலும் போற்றப்படும் நற்குணத்தன். நம்பகத்தன்மையன்.

நம்பிக்கை *nambikkai,* பெ. (n.) **1.** உறுதியான தன்னார்வம், முனைப்பு; hope, trusty confidence, faith, assurance. "*இதுவே நம்பிக்கை தேறிக்கொள்*" (இராமநா.உயுத்.28) **2.** ஆணை (வின்.); பூட்கை; oath, vow. **3.** நம்பியொப்பு விக்கப்பட்டது (வின்.); that which is confidential that which is entrusted. **4.** உண்மை (யாழ்.அக.); truth.

க., நம்பிகெ., ம., நம்பிக்க.

[நம்புகை → நம்புக்கை + நம்பிக்கை.]

நம்பிக்கைஓட்டு *nambikkai-ōṭṭu,* பெ. (n.) நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படும்போது நடத்தப்படும் வாக்கெடுப்பு; vote of confidence. "*1999-இல் தேசிய மக்களாட்சிக் கூட்டணி, நம்பிக்கை ஓட்டெடுப்பில் தோல்வியுற்றது*" (உ.வ). நம்பிக்கை வாக்கெடுப்பு பார்க்க; see nambikkai vākkeḍuppu.

[நம்பிக்கை + ஓட்டு.]

நம்புகை → நம்புக்கை → நம்பிக்கை

ஒ.நோ: தும்புக்கை → தும்பிக்கை.

பாவாணர் 'ஓட்டு' என்பதை, 'நேரி' என்று, குறிப்பிட்டுள்ளார்.

நம்பிக்கைக்கேடு *nambikkai-k-kēḍu,* பெ. (n.) நம்பிக்கையின்மை (பாண்டி.); untrust worthiness.

[நம்பிக்கை + கேடு.]

நம்பிக்கைசெலுத்து-தல் *nambikkai-šeluttu-,* 5செ.கு.வி. (v.i) நம்பிக்கைக்குக் குறைவு வாராது நடந்துகொள்ளுதல் (வின்.); to acquit oneself as a trustworthy person

[நம்பிக்கை + செலுத்து-.]

நம்பிக்கைத்துரோகம் *nambikkai-t-turōgam,* பெ. (n.) **1.** நம்பும்படி நடித்திருந்து, சமையம் வரும் போது, குழிபறித்து வீழ்த்துகை, நன்றிகொல்லுகை; breach of trust, violation of confidence **2.** இரண்டகம் (யாழ்.அக.); ஏமாற்றுகை; deceit, perfidy. **3.** கீழறுப்பு; treachery.

[நம்பிக்கை + skt.துரோகம்.]

நம்பிக்கைநட்சத்திரம் *nambikkai-naṭcattiram,* பெ. (n.) குறிப்பிட்ட ஒரு துறையில், அருஞ்செயல் நிகழ்த்தும் விதத்தில், சிறப்பாகச் செயல்படுவார் என்று நம்பப்படும் ஆள்; person showing great promise, ris-

ing star. *சச்சின் தெண்டுல்கர் இந்திய முக்கோல் (கிரிக்கெட்) அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக உள்ளார்.*

[நம்பிக்கை + skt. நட்சத்திரம்.]

நம்பிக்கைப்பட்டயம் *nambikkai-p-pattayam,* பெ. (n.) உறுதிப்பத்திரம் (M.E.R.310/1916- B); deed assuring the performance of an act.

[நம்பிக்கை + பட்டயம்.]

நம்பிக்கைப்பண்டுவம் *nambikkai-p-paṇḍuvam,* பெ. (n.) முழுப்பொந்திகையுடன் மனமொன்றித் திருவருள் துணையுடன் செய்யும் மருத்துவம்; faith cure

[நம்பிக்கை + பண்டுவம்.]

நம்பிக்கைப்பத்திரம் *nambikkai-p-pattiram,* பெ. (n.) உண்மையான தூதுவனென, ஒருவனை உறுதிப்படுத்தும் சீட்டு (இ.வ.); credentials, as of an ambassador.

[நம்பிக்கை + skt. பத்திரம்.]

நம்பிக்கைப்பிசகு *nambikkai-p-piśagu,* பெ. (n) நம்பிக்கைக்கேடு பார்க்க; see nambikkai-k-kēḍu.

[நம்பிக்கை + பிசகு.]

நம்பிக்கைபண்ணு-தல் *nambikkai-paṇṇu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. உறுதிசெய்தல் (வின்.); to assure, give confidential assurance. 2. ஆணையிடுதல் (வின்.); to swear. 3. நம்பிக்கை செலுத்து-தல் பார்க்க; see nambikkai šeluttu-.

[நம்பிக்கை + பண்ணு-.]

நம்பிக்கைமோசம் *nambikkai-mōšam,* இரண்டகம் செய்கை; breach of trust. *'நம்பிக்கை மோசம் செய்பவர் நன்றாக வாழ்வதில்லை'* (இக்.வ).

[நம்பிக்கை + skt. மோசம்]

நம்பிக்கையில்லாத்தீர்மானம் *nambikkai-y-illā-t-tīrmāṉam,* பெ. (n.) மக்கள் மன்றத்தின் செயற்பாடுகளைச்சீரமைத்து, செம்மைப்படுத்திச் செயலாற்றுதற் பொருட்டும், செயலாட்சிக் குழுவினைக் கட்டுப்படுத்துவதற்காகவும், அமைச்சரவையின் மேல் நம்பிக்கை இல்லை என்று கூறி, அவையில் எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்படும் தீர்மானம்; by no-confidence motion, the parliament controls the executives, moved by the opposition.

[நம்பிக்கை + இல்லா + தீர்மானம்.]

நாடாளுமன்றம் அல்லது சட்டப் பேரவையின் சிறப்புமிகு செயற்பாடுகளுள் இஃதும் ஒன்று; அஃது யாதெனின், மக்களவை உறுப்பினர்கள், கேள்விகள், துணைக்கேள்விகள் கேட்டு, நாட்டு மக்களுக்கு நல்லாட்சி கொடுத்திட விழைவர்; அது போழ்து அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானங்கள் (நடுவுநிலைமைகுன்றாது கலந்துரையாடிச்) சீர்தூக்கி ஆய்வு செய்யப்படும். பின்பு வாக்கெடுப்பின் வாயிலாக நிறைவேற்றப் படும். சிறப்பாகச் செயலாட்சிக் குழுவினைக் கட்டுப்படுத்தும் தீர்மானம் எனினும், ஒக்கும்.

நம்பிக்கையுள்ளவன் *nambikkai-y-uḷḷavaṉ,* பெ. (n.) 1. நம்பத்தக்கவன்; trustworthyman 2. பிறர்மேல் நன்னம்பிக்கையுள்ளவன். (வின்.); a trusting, confiding person. 3. தெய்வ நம்பிக்கையுள்ளவன் (இ.வ.); deist.

நம்பிக்கையோலை *nambikkai-y-ōlai,* பெ. (n.) அனுமதிச்சீட்டு (வின்.); passport

மறுவ. இசைவுச்சீட்டு, கடவுச்சீட்டு.

[நம்பிக்கை + ஓலை.]

நம்பிக்கைவாக்கு *nambikkai-vākku,* பெ. (n) அமைச்சரவையின் மேல் நம்பிக்கையுண்மையை உறுதிப்படுத்த, தலைமையமைச்சர் அல்லது முதலமைச்சர் கொண்டுவந்த தீர்மானத்தின் மீது அவை உறுப்பினர் அளிக்கும் வாக்கு; the costing of vote in a vote of confidence.

[நம்பிக்கை + வாக்கு.]

நம்பிக்கைவாக்கெடுப்பு *nambikkai-vākkeḍuppu,* பெ. (n.) நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படும்போது, நடத்தப்படும் வாக்கெடுப்பு; vote of confidence.

[நம்பிக்கை + வாக்கெடுப்பு.]

நம்பிகாளியார் *nambi-kāḷiyār,* பெ. (n.) குலோத்துங்கசோழன் காலத்தவரான, ஒரு தமிழ்ப்புலவர் (தக்கயாகப்.457,பக்.320); a poet, contemporary of Kulōttuṅga-cōḻaṉ.

[நம்பி + காளியார்.]

நம்பிகுட்டுவனார் *nambi-kuṭṭuvaṉār,* பெ. (n.) சேரர்குடியைச் சேர்ந்த புலவர்; a poet of Cērar kuḍi.

இவரது பாடல்கள் நற்றிணையில் மூன்றும், குறுந்தொகையில் இரண்டும் உள்ளன.

"முட்கா லிறவின் முடங்குபுறப் பெருங்கிளை
புணரி யிகுதிரை தரூஉந் துறைவன்
புணரிய இருந்த ஞான்றும்
இன்னது மன்னோ நன்னுதற் கவினே"
(குறுந்.109).

தலைவன், தலைவியை விரைந்து மணம் புரிதற்பொருட்டு, தலைவன் காதில் விழுமாறு தோழி பாடும் பாங்கு, படித்து இன்புறத்தக்கது.

நம்பிமூத்தபிரான் *nambi-mūtta-pirāṉ,* பெ. (n.) (கண்ணபிரானுக்குத் தமையன்) பலராமன்; as the elder brother of krShṇa. *"நம்பி மூத்தபிரான் முற்படவந்து கிட்டினவிடத்து"* (ஈடு,4:3:1).

[நம்பி + மூத்தபிரான்.]

நம்பியகப்பொருள் *nambi-y-aga-p-poruḷ,* பெ. (n.) நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருளிலக்கணம்; a grammar of Agapporuḷ by Nāṟkavirāša nambi.

[நம்பி + அகம் + பொருள்.]

புளியங்குடி நாற்கவிராசநம்பி எனும் புலவரால் எழுதப்பட்ட, அகப்பொருள் இலக்கணநூல்

தொல்காப்பியர், அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்று நான்கு இயல்களில் விளக்கியவற்றை, வரம்பறுத்து, இடையே, வரைவு என்னும் வாழ்வியல் துறையை, இலக்கணவுலகிற்கு எடுத்துக் காட்டியவர் நாற்கவிராசநம்பி.

இஃது, பவணந்தி, பதவியல் எனும் இயலைப் புதியதாகத் தோற்றுவித்தற்கு, இணையானது எனலாம்.

எடுத்துக்காட்டாக, *"நாடக வழக்கினும், உலகியல் வழக்கினும், பாடல்சான்ற புலனெறி வழக்கம்"* என்னும், தொல்காப்பியர் கூற்றினுக்கு, *"புணைந்துரை உலகியல் எனுந்திறம் இரண்டினும், தொல்லியல் வழாமல் சொலப்படுமே"* என்று, நானிலத்தார்க்கு, இலக்கணத்தை, வாழ்வியலுடன் இணைத்துக் காட்டிய பாங்கு, நாற்கவியாரின் நற்றிறத்தினைத் தெள்ளிதில் தெரிவிக்கும் பான்மையில் அமைந்துள்ளது, எனலாம்.

நம்பியகப்பொருள்விளக்கம் *nambi-y-aga-p-poruḷ-viḷakkam,* பெ. (n.) நம்பியகப் பொருள் பார்க்க; see nambi-y-aga-p-poruḷ.

[நம்பி + அகப்பொருள் + விளக்கம்.]

நம்பி அகப்பொருளுக்கு எழுதிய உரைக்குறிப்பு.

நம்பியாண்டார்நம்பி *nambi-y-āṇḍār-nambi,* பெ. (n.) சிவனியப்புலவர்; a šaivam poet.

காஞ்சிபுரத்தில் உள்ள திருநாரையூரில் பிறந்த இவர், சிவனியப் (சைவ) படைப்பாளர்களின் செய்யுட்களை வரிசைப்படுத்தி, முதற்கண் ஏழு திருமுறைகளாக வகுத்தார்.

சோழமன்னன் இராசராசனோடு, தில்லைத் திருக்கோயிலுக்குச் சென்று, ஆங்கு ஓர் அறையில் இருந்த மூவர், தேவாரச் சுவடிகளைக் கேட்டபோது, கோயிலுக்கு உரிமை உள்ள பூசகர், "*அம்மூவரே வரின் தருவோம் அன்றி, வேறு யாவர் வரினும் தாரோம்*" என மறுத்தனராம். நம்பி அறுபத்து மூன்று நாயன்மார் சிலைகளுள், மூவர் சிலைகளைக் கொண்டு போய்க்காட்ட, ஆடவல்லானே சிலை வடிவில் இருத்தலான், மறுக்கவொண்ணாது தந்தனர் என்பது, வரலாறு.

நம்பியாண்டார் நம்பிகளால் ஆக்கப்பெற்ற திருத்தொண்டர் திருவந்தாதி, அறுபத்து மூவரின் வரலாற்றுண்மைகளை, விளக்குவது. நம்பியாரூரரின் வாழ்வியல் நிகழ்வினைக் குறிக்கும் பாடல் வருமாறு:—

"*நந்திக்கு நம்பெருமாற்கு நல்*
லாரூரில் நாயகற்குப்
பந்திப்பரியன செந்தமிழ்
பாடிப் படர்புனலின்
சிந்திப்பரியன சேவடி
பெற்றவன் சேவடியே
வந்திப்பவன் பெயர் வன்தொண்டன்
என்பரிவ் வையகத்தே"

சுந்தரர் எழுதிய நூலே தொகையாக, இவர் பாடல் வகையாக, விரியாக, சேக்கிழார் திருத்தொண்டர், திருத்தொன்மம் (புராணம்) எழுத உதவியது.

நம்பியாரூரர் *nambi-y-ārūrar,* பெ. (n.) தோழமைநெறியில் நின்று ஒழுகி, கடவுள், ஆதன்(ஆன்ம) உறவுமுறையை உலகிற்குத் தமது வாழ்வின் வாயிலாக, வாழ்ந்து காட்டியவர். a Šaivamšaint Nambiyārūrar, called Šundarar, established the friendly relationship with God and soul to the world. "*தேனொழுகு மலரினற்றா ரெம்பிரான் நம்பியாரூரனே*" (பதினொ.திருத். திருவந்.8.).

மறுவ. ஆரூரர், இசைஞானி காதலன், சடையன், சுந்தரர், தம்பிரான் தோழர், தமிழ்நாதன், நாவலர்கோன், நாவலூரர், நாவலூராளி.

[நம்பி + ஆரூரர் → நம்பியாரூரர்.]

நம்பி = ஆடவருள் சிறந்தவன்.

ஆர் + ஊர் → ஆரூர் → ஆரூரர்.

ஆர்தல் = அமைதல், பற்றப்பெறும் பொருள்களையெல்லாம், தன்னுள் அடக்கிக் கடந்து நிற்றல்.

ஊர்தல் = ஒரு பொருளை ஒற்றி, அப் பொருள் உயரஉயரத் தானும் உயர்ந்து, நிற்கும்நிலை. பற்றிஅமர்தல், ஒற்றி ஊர்தல் என்ற இருநிலைகளைக் கொண்ட காரணத்தால், ஆரூர் திருவாரூர் எனப்பெயர் பெற்றது.

இறைவனுடன் பூண்ட தோழமை நெறியை, தமது வாழ்விலும் இணைத்து ஒழுகிய கரணியத்தால், வன்தொண்டர், நம்பியாரூரர் என்று, நானிலத்தவர்களால் போற்றப்பெறுகிறார்.

நம்பியாரூரர்தம் வாழ்வியல் வரலாற்றிற்கு அகச்சான்றுகளாகத் திகழ்பவை வருமாறு:—

1. ஏழாந்திருமுறைப் பதிகம் நூறும்:— பாடல்கள்—1026.

2. நம்பியாண்டர்நம்பிகள் அருளிய

திருத்தொண்டர் திருவந்தாதியில் – சுந்தரரைப்பற்றிய 11 – பாடல்களும், சுந்தரரின் பெற்றோரான, சடையனார், இசைஞானியார் பற்றிய இரண்டு பாடல்களும்.

3. திருத்தொண்டத்தொகைப்பதிகம், திருத்தொண்டர் திருவந்தாதி எனும் இரண்டு தொகையும், வகையுமாக அமைய, அவைகளின் விரியாக அமைந்த திருத்தொண்டர் (புராணம்) மாக்கதை. (சேக்கிழார்–அருளியது).

4. கி.பி. 17ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நால்வர் நான்மணிமாலை; இந் நூலுள், சிவப்பிரகாசர் நம்பியாரூரரைப் பற்றிப் 10 பாடல்களைப் பாடியுள்ளார். 5. வள்ளலார் அருளியது ஆளுடை நம்பிகள் அருள்மாலை. இந்நூலுள் 10 பாடல்களை, இராமலிங்க அடிகள் பாடியுள்ளார். நம்பியாரூரர், இறைவனைத் தோழனாக எண்ணினார்; மதித்தார்; செயற் படுத்தினார், என்பதற்குரிய எடுத்துக் காட்டுகள் வருமாறு:–

1. "*ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக்கு உடனாகி.*" (தேவா.7:5:10.).

2. "*தன்னைத் தோழமையருளித் தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும் நாதனை*" (தேவா.7:68:8.).

3. "*என்னுடைய தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக்கு உடனாகி*" (தேவா.7:51:1.).

4. "*என்றனை ஆள்தோழனை*" (தேவா. 7:84:9.).

5. "*தூதனைத் தன்னைத் தோழமையருளித்*" (தேவா.7:68:8.).

இறைவன்–நம்பியாரூரர், இருவருக்கு மிடையில், வேற்றுமையற்ற, விழுமிய, தோழமையன்பினை ஏழாந்திருமுறையில் உள்ள திருப்பதிகத் திருப்பாக்கள், தெளிவு றுத்துகின்றன.

நம்பியாரூரனார் *nambi-y-ārūraṉār,* பெ. (n.) நம்பியாரூரர் பார்க்க; (S.I.I.Vol.II 169); see nambi-y-ārūrar.

[நம்பி + ஆரூரன் + ஆர்.]

ஆர்= பெருமைப்பொருட்பின்னொட்டு

நம்பியான் *nambiyāṉ,* பெ. (n.) கோயிற் பூசகரின் பட்டப்பெயர்; the title of officiating temple priests. "*வைகானச நம்பியாரை*" (கோயிலொ.43).

ம. நம்பியான்.

[நம்பி → நம்பியான்]

நம்பியிடையர் *nambi-y-iḍaiyar,* பெ (n.) இடையருள் ஒரு பிரிவினர் (நாஞ்.); a sub caste among cowherds.

[நம்பி + இடையர்.]

நம்பிராட்டி *nambirāṭṭi,* பெ. (n.) நம்பிராட்டியார் பார்க்க; see nambirāṭṭiyār.

[நம் + skt. பிராட்டி.]

பெருமாட்டி → பிராட்டி:

ஒ.நோ. பெருமான் → பிரான்.

நம்பிராட்டியார் *nam-pirāṭṭiyār,* பெ. (n.) 1. அரசி; queen, consort. "*உடையார் ராசராசதேவர் நம்பிராட்டியார்*" (S.I.I Vol I,91). 2. கடவுள் தேவி; Goddess. "*நம்பிராட்டியார் உமாபரமேசுவரியார்*" (S.I.I.Vol.III,16.).

[நம் + பிராட்டியார்.]

நம்பிரான் *nam-birāṉ,* பெ. (n.) **1.** தலைவன்; lord. **2.** கடவுள்; God. **3.** கடவுளர் திருவுருவைத் தாங்கிச் செல்லும் குதிரை யூர்தி; horse, as vehicle of deities. ***"குதிரையில்லாத வூரிற் கழுதை நம்பிரான்"*** (இ.வ.)

[நம் + பிரான்.]

பெருமான் → பிரான்.

நம்பிரான்விளையாட்டு *nambirāṉ-viḷaiyāṭṭu,* பெ. (n.) பங்குனியுத்தரத்தன்று, சாத்தை யரைக் குதிரையூர்தியில் எழுந்தருளுவித்து, வையாளி விடுந்திருவிழா (நாஞ்.); a festival in which the šāstā is made to promenade on his horse-vehicle, during paṅguṉi-y-uttiram.

[நம்பிரான் + விளையாட்டு.]

நம்பிள்ளை *nam-piḷḷai,* பெ. (n.) ஈடு என்று வழங்கும் திருவாய்மொழியின் உரைகாரர்; a celebrated Vaishṇava ācārya whose exposition of Tiruvāy-moḻi was the basis of the commentary known as īḍu.

[நம் + பிள்ளை.]

நம்பு[1]-தல் *nambu-,* 5செ.குன்றாவி. (v.t.) **1.** விரும்புதல்; to long for, desire intensely. ***"நின்னிசை நம்பி"*** (புறநா: **136**). **2.** நம்பிக்கை வைத்தல்; to trust, confide in, relay on, believe, have faith in. ***"நாதனே யருளிச்செய்த வார்த்தையை நம்பிவந்தேன்"*** (திருவாலவா: **28: 17.**). **3.** எதிர்பார்த்தல்; to hope, expect. அவர் வேலை கிடைக்குமென்று நம்பியிருக்கிறான் (உ.வ.) **4.** ஒப்புதலளித்தல்; to accept. ***"வினைக ணலியாமை நம்பு நம்பீ"*** (திவ். பெரியதி, **6: 3: 9**).

க., து., நம்பு. தெ., நம்மு ம. நம்புக.

நயத்தல் = விரும்புதல்.]

நயம் = விருப்பம்.

[நுல் → நல் → நள்.]

[நள் → நய் → நய → நயம்

நயம்பு → நம்பு.]

நம்பு[2] *nambu,* பெ. (n.) 1. விருப்பம், ஆர்வவேட்கை; desire. ***"நம்பு மேவு நசையா கும்மே"*** (தொல். சொல். **329**) **2.** நம்பிக்கை; hope.

மறுவ. நசை.

[நயம்பு → நம்பு.]

நம்பு[3] *nambu,* பெ. (n.) கோயிற் பூசகரின் அலுவலகம்; office of temple priest. ***"இவ்வூர்ப் பிள்ளையார் கோயிலும் நம்பும்" "நம்பு செந்தாமரைக் கண்ணாற்கு"*** (T.A.S I **263.**).

விருப்புக்குரிய, பூசைப் பணியைச் செய்வார் அலுவலகம்.

நம்பு[4] *nambu,* பெ. (n.) நாவல் (மலை.); jamoon plum.

விரும்பத்தக்க நாவற்பழமரம்.

நம்பு[5] *nambu,* பெ (n.) கோயிலிற்பூசை செய்யும் உரிமை; right of conducting pūšai in a temple. ***"அசறபங்கில் நம்பும்"*** (S I I.327).

நம்புசெய்வார் *nambu-šeyvār,* பெ. (n.) கோயில் பூசாரி (கல்); temple priest

[நம்பு + செய்வார்.]

நம்புண்டல் *nambuṇḍal,* பெ. (n.) நம்பும்படிச் செய்கை. making one to believe; "*அன்னான்சொ னம்புண்டல்*" (கலித். 47: 10.)

[நம்பு + உண்டல்.]

நம்புமதம் *nambu-madam,* பெ (n.) கடவுள் உண்டென்று நம்பிக்கை கொண்டமதம்; theism.

[நம்பு + மதம்.]

மறுவ. உள்மதம்.

மாந்தன் மனத்தை இறுகப்பிணிக்கக் கூடிய பற்றுகளுள், மிகுந்த வலிமையுடையது நம்புமதப்பற்று. தமிழருள் பெரும்பாலர் இறைப்பற்றுமிக்கவர். நம்புமதக் கொள்கை, தமிழர்தம் அகநாகரிகத்தின் வெளிப்பாடு. பண்பாட்டறிவியலின் திறவுகோல்.

நம்புமதத்தைச் சார்ந்த மெய்ப்பொருட்டுறை, இன்றளவும் மேலைநாட்டில் காலூன்றியுள்ளது. பெரும்பாலான மேலை நாட்டுமாந்தர்தம் வாழ்வியலில், இணைந்துள்ளது.

நம்பு மதத்திலுள்ள சிவக்கொண்முடிபினர், அன்புவடிவான மெய்ப்பொருளை, மேலையரும், கீழைநாட்டவரும், மனங்கொளத்தக்க வகையில் உரைத்தவர் ஆவர். அனைத்து மதத்தினரும் மனங்கொளத்தக்கவாறு,

"*அன்பிலா ரெல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
என்பும் உரியர் பிறர்க்கு" (குறள்,4.).

என்று, உலகப்பொதுமறை பேசும். இக் கருத்தினையே, நம்புமதத்தைச் சார்ந்த திருமூலரும்,

"*அன்புஞ்சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"
(திருமந்.257)

என்று, திருமந்திரமறையில், திருவாய்மலர்ந் தருளுகின்றார்.

தேவிக அறத்தை வலியுறுத்துவதே, நம்புமதத்தாரின் அடிப்படைக் கொள்கை. கடவுளும் மறுமையும் உண்டென்பதே இவர்தம் கோட்பாடு. நம்பு மதத்தினர், கடவுள் உண்டென்பதற்கு உரைக்கும் சான்றுகளைப் பாவாணர் பின்வருமாறு வரிசைப்படுத்து கின்றார்:–

1. கதிரவக்குடும்பத்தைச் சேர்ந்த கோள்கள் எல்லாம், இடையறாது ஓர் ஒழுங்காக இயங்கி வருகின்றன.

ஓர் ஊரில் ஊர்க்காவலோ, அரசியல் ஆட்சியோ, சிறிதுநேரம் இல்லாவிடினும், கலகமும் கொள்ளையும், கொலையும் நேர்கின்றன. உயிரற்ற நாளும் கோளும் பாவையாட்டுப் போல் ஒழுங்காக ஆடிவரின், அவற்றை ஆட்டும் ஓர் ஆற்றல் இருத்தல் வேண்டும். அவ் வாற்றல் முழுமையானது, நிறைவானது, எஞ் ஞான்றும், எப்போதும், எவ்விடத்தும், நிறைந்து திகழும் பேராற்றல். இப் பேராற்றல் அறிவற்றதாயிருக்க முடியாது. அவ் வாற்றலறிவே இறைவன்.

2. இவ்வுலகம் முழுமைக்கும், கதிரவன் பகல்விளக்காகவும், திங்கள் இராவிளக்காகவும், எண்ணிற்கும் எட்டாத காலத்திலிருந்து, விளங்கி வருகின்றன.

ஒரு வீட்டில் விளக்கேற்றி வைப்பது, அதிற்குடியிருக்கும் மக்கட்கே. மக்களில்லா வீட்டில் விளக்குத் தானாகத் தோன்றி எரியாது. பல வுலகங்கட்கும், இரு சுடரையும் விளக்காக ஏற்படுத்தியவன், ஒருவன் இருத்தல் வேண்டும். வேலை செய்யாத தூக்க வேளையாகிய இராக்காலத்திற்கு, வெப்பமான நெருப்பொளி விளக்காகாது. குளிர்ந்த நிழலொளி விளக்காக விருப்பதும், கவனிக்கத் தக்கது.

3. பிற கோள்களைப்போற் சுற்றாது ஒரேயிடத்திலிருக்கும் கதிரவன், பத்துத் திசையும் ஒளி சமமாகப் பரவுமாறு உருண்டையாயிருப்பதும், அளவிடப்படாத நீள்பெருங்காலம் எரிந்து வரினும், அதன் எரியாவி, குன்றி யணையா திருப்பதும், இயற்கைக்கு மாறான இறும்பூதுச் செய்தி

யாதலால், அதையியக்கி யாளும் ஒரு பரம்பொருள் இருத்தல் வேண்டும்.

4. கோள்கள் ஒன்றோடொன்று முட்டாது, தன் பாதை வட்டத்தில் இயங்குமாறும், இவை சுழலுங்கால், அவற்றின் மேலுள்ள பொருள்கள் நீங்காவாறும், ஒவ்வொன்றையுஞ் சூழ ஒரு கவர்ச்சி மண்டலம் அமைந்திருப்பதும் இயற்கைக்கு ஏற்றதேயாகும்.

5. காலமும், இடமும், தொடக்கமும், ஈறும் இல்லாதவையாதலால், இற்றை மக்களுலகந் தோன்றுமுன், எண்ணிக்கையற்ற உயிருலகங்கள் தோன்றியழிந்திருத்தல் வேண்டும். இதைத்தான்,

"படைத்து விளையாடும் பண்பி னோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும் தன்னில்
வேறு தானென் றிலோனும்
அன்னோன் இறைவ னாகும்என் றுரைத்தனன்"

மணிமேகலைக்கு அறிவுறுத்திய சிவனியத் தருக்கி (சைவவாதி).

6. மாந்தன் தோன்றி ஐம்பதினாயிரம் ஆண்டாயிற்றென வைத்துக்கொள்ளினும், நூற்றுக்கணக்கான தலைமுறைகள் கழித்திருத்தல் வேண்டும். பத்துக் கணக்காகத் தொடங்கிய மக்கட்டொகை, இன்று, நூறு கோடிக்கணக்காகப் பெருகியுள்ளது. ஒவ்வொரு தலைமுறையிலும், எத்தனையராயினும், அத்தனையரும், அடையாளங் காணுமாறு வெவ்வேறு முகவடிவிலுள்ளனர். கைவரையும் வேறுபட்டுள்ளது. இது அறிவு நிரம்பிய ஒரு பேராற்றலின் செயலேயாகும்.

7. *"கடவுளை நம்பினோர் கைவிடப் படார்"* என்பது, இன்றும் சிலர் வாழ்க்கையில் மெய்ப்பிக்கப்படுகின்றது.

நம்புமதத்தை எஞ்ஞான்றும் எவராலும் ஒருபோதும், அழிக்கவியலாது:—

கடவுள் நம்பிக்கையற்ற தற்பெருமை வேந்தரும், நெறிதப்பிய அறிவியலாராய்ச்சியாளரும், பொதுவுடமைக் கொள்கையினரும், நம்புமதத்தை (கடவுட்கொள்கையை) ஒழிக்கத் தம்மால் இயன்றவரை முயன்று வந்துள்ளமை கண்கூடு. கடவுட்கொள்கை (நம்புமதம்) என்பது, முற்றும் உள்ளந் தொடர்பானது. நம்பாமதத்தினரும் இயற்கையாற்றலை இறையென்று உரைத்து வருவது, அனைவரும் அறிந்ததே.

கனவு காணாது உறங்கும் நேரம் தவிர, மற்றெல்லாநேரத்திலும்—இருப்பினும், நடப்பினும், வேலை செய்யினும், உரையாடினும், உண்ணினும்—இறைவனை நினைக்கவும், வழுத்தவும், வேண்டவும் இயலுமாதலின், மனம் உள்ளவரை மதத்தை, நம்புமத மாந்தரை ஒருவராலும் அழிக்கமுடியாதென அறிக. நம்புமதக் கடவுள் இயலும் கொள்கையும்:—

ஊர், பேர், காலம், இடம், வண்ணம், வடிவம், பால், பருவம், முதலிய வரையறையின்றி, எங்கும் நிறைந்து, எல்லார்க்கும், எல்லாவற்றிற்கும் பொதுவாய், எல்லாவல்லதாய், என்றும் மாறாதிருக்கும் பரம்பொருளை, உள்ளத்தில் அகக்கண்ணால் கண்டு, தொழுது, உணர்ந்து உணர்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து, ஊற்றெழுங்கண்ணீர் அதனால் உடம்பு நனைந்து, அருளமுதே நல்நதியே என்று வனைந்து வனைந்து இறைவனை ஏத்தி, முக்கரணத்தூய்மையுடன் ஒழுகுவதே, நம்புமதத்தின் கடவுட்கொள்கையாகும்.

எல்லாவற்றையும் கடந்து நிற்பவன் கடவுள்; இக் கடவுளே அனைத்துலகத்தையும் ஆள்வதால், ஆண்டவன் என்றழைக்கப் படுகிறான். நம்புமதத்தில், கடவுள், தெய்வம் என்பவை, எங்குந்தங்கியிருக்கும் அனைத்து மதத்தவர்தம் மனத்தினின்று, அனைவரையுங் காத்து, எல்லாவுலகங்களை ஆள்வதால், ஆண்டவன் என்றழைக்கப்படுகின்றான். அங்கிங்கெனாதபடி எங்கும் ஆட்சி நடாத்தும் கடவுள், எல்லாமதத்தார்க்கும், அனைத்து உயிர்கட்கும், உணவைப் பகுத்தளிப்பதால் பகவன் ஆகிறான்.

கடவுள் என்னுஞ்சொல்லை, அனைத்து மதத்தாரும் பயன்படுத்தியஞான்றும், சிறப்பாகப் பயன்படுத்துபவர் நம்புமதத்தினரே ஆவர்.

கடவுள், தெய்வம், எனுஞ்சொற்கள் நம்புமதத்தில் எல்லாம் வல்ல இறைவணக்கத்தை மேற்கொண்ட, சிவனியம், மாலியம், யூதம்,

கிறித்தவம், இசலாம் முதலான அனைத்து மதத்தார்க்கும் பொதுவான சொற்கள். (எ.டு) '*தெய்வம் உணாவே*' (தொல்.964). "*வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்*" (குறள்,50). "*தெய்வம் நின்று கொல்லும்*" (பழமொழி.).

நம்புமதத்தவரான குமரிநாட்டுத்தமிழர், இசுமவேல இசுரவேலரின் முன்னோனான ஆபிரகாமிற்கு முற்பட்டவர். நோவா காலத்துப் பெருவெள்ளத்திற்கும் முன்னரே, குமரி நாட்டில் வதிந்த நம்புமதத்தினர், கடவுளை முதன்முதலாகக் கண்டவர் என்பது, பாவாணர்தம் கூற்று. தமிழர் மதம் பக். 156. கடவுள் என்னுஞ்சொல் தொல்காப்பியத்தில் ஆளப்படடிருப்பதே அதற்கு சான்றாம். எ.டு '*காமப்பகுதி கடவுளும் வரையார்*' (தொல்.புறத்.28). "*கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே*" (தொல்.புறத்33).

நம்புமதத்தவர் பயன்படுத்தும் கடவுள் என்னுஞ்சொல், எல்லாவற்றையும் கடந்து, எண்ணிற்கும் எட்டாத பரம்பொருளையே குறிக்கும்.

கடவுட்கு உருவமின்மையால், உருவ வணக்கமும் இல்லை. எவரும், எங்கும், என்றும், தமித்தும், பிறரொடும்கூடியும், நம்புமதத்தினர் இறைவனைத் தொழும் பான்மையினை இன்றும் காணலாம்.

மாந்த இனம் இம் மன்பதையில் உள்ள வரை நம்புமதம் இருக்கும்.

நம்புரி *namburi,* பெ. (n.) நம்பூதிரி பார்க்க; see nambūdiri. "*கண்ணகியும்....நம்புரிமார் வீதியிலே நலமா யெழுந்திருந்தாள்*" (கோவ.க.112).

[நம்பு → நம்புரி.]

நம்பூதிரி *nambūdiri,* பெ. (n.) மலையாளப் பிராமணர் வகையினன் (E.T.V. 152); a class of brahmins in malabar.

ம. நம்பூதிரி.

நம்பூரி *nambūri,* பெ. (n.) நம்பூதிரி (இ.வ.) காண்க: see nambūdiri.

க. நம்பூரி.

இடைக்குறைப் பட்ட சொல்.

நம்பெருமாள் *nam-perumāḷ,* பெ. (n.) திருவரங்கத்துத் திருமால்; Tirumāḷ, worshipped at Tiruvarangam. "*நம்பெருமாள் நம்மாழ்வார்*". *உபதேசரத்.50.*

[நம் + பெருமாள்.]

நம்மளவன் *nammaḷavaṉ,* பெ. (n.) நம்மையொத்தவன்; those like ourselves

[நம் + அளவு + அன்.]

நம்மனோர் *nammaṉōr,* பெ. (n.) 1. நம்மையொத்தவர்; *those like ourselves, our party.* "*ஆங்கனமற்றே நம்மனோர்க்கே*" (மலைபடு. 402). 2. எம்மனோர். பார்க்க; *see emmaṉōr,* 2.

[நம் + அன்ன + ஓர்.]

நம்மாழ்வார் *nammāḻvār,* பெ. (n.) ஆழ்வார்கள் பதின்மருள் தலைமையானவரும், திருவாய் மொழி முதலிய தெய்வப்பனுவலின் ஆசிரியரு மான திருமாலடியார் (உபதேசரத். 50); a Tirumāl Šaint, author of Tiruvāymoḻi and other works, foremost of Aḻvār

[நம் + ஆழ்வார்.]

நாலாயிரத் தெய்வப்பனுவலுள் திருவாய் மொழியும், பன்னிருதிருமுறையுள் திரு வாசகமும், மிக்குயர்ந்த நடையின. '*அற்றது பற்றெனின் உற்றது வீடு*' (திருவாய்மொழி. நம்மாழ்வார்).

நம்முள்ளவன் *nammullavan,* பெ. (n.) நம்முடையவன்; *one of our men.* (இ.வ.).

[நம் + உள்ளவன் → நம்முள்ளவன்.]

நம -த்தல் *nama-,* 4செ.கு.வி. (v.i) நமு²-த்தல் பார்க்க; *see namu²-.* "*அப்பளம் நமத்துப் போயிற்று*".

தெ. நெம்மு.

நமக்காரி *namakkāri,* பெ. (n.) தொட்டாற் சுருங்கி; worm killer, sensitive plant.

நமச்சாரம் *namaccāram,* பெ. (n.) *நவச்சாரம்* பார்க்க; see *navaccāram.*

நமசம் *namāšam,* பெ. (n.) இணக்கம்; (யாழ். அக.) pliability.

நமட்டு-தல் *namattu-,* 5 செ.கு.வி. (v.i.). 1. மறைத்தல்; to whisper. 2. ஏமாற்றுதல்; to cheat.

[நிமிண்டு → நிமிட்டு → நமிட்டு → நமட்டு-.]

நமட்டுக்கடி-த்தல் *namattu-k-kadi-,* 4 செ.கு.வி. (v.i.) *நமடுகடி* - (இ.வ.) பார்க்க; see *namadu-kadi-.*

[நமடு → நமட்டு + கடி.]

நமட்டுச்சிரங்கு *namattu-c-cirangu,* பெ. (n.) *நமட்டுச்சொறி* பார்க்க; see *namattu-c-cori.*

[நமிட்டு → நமட்டு.]

நமட்டுச்சிரிப்பு *namattu-c-cirippu,* பெ. (n) பகடி, ஏளனப் புன்சிரிப்பு; suppressed smiles in redicule

[நமட்டு + சிரிப்பு]

நமட்டுச்சொறி *namattu-c-cori,* பெ. (n.) 1. சிரங்கு; itch, scabies. 2. சொறிபுண்; papular eruption of the skin, of which violent and chronic itching is the chief symptom, prurigo. 3. சிரங்குவகை; cutaneous disease with glistening imbricated scales affecting only the superficial layers of the skin, psoriasis.

[நமட்டு + சொறி.]

நமட்டுமண் *namattu-man,* பெ. (n) ஈரக் கொல்லை. (நமட்டு மண்); wet garden.

[நமட்டு + மண்.]

நமட்டுவிஷமம் *namattu-vișamam,* பெ. (n.) மறைவாகச் செய்யும் குறும்பு; (இ.வ) secret mischief.

[நமட்டு + Skt. விஷமம்.]

நமடு *namaḍu,* பெ. (n.) சிறுபேன் (அபி.சிந்.); louse.

[நமுடு → நமடு.]

நமடுகடி-த்தல் *namaḍu-kaḍi-,* 4 செ.கு.வி. (v.i.) குழந்தைகள் உதட்டைக்கடித்தல்; to bite the lips, as children.

[நமடு + கடி-.]

நமத்தம் *namattam,* பெ. (n.) சடாமாஞ்சி; (சங்.அக.) spikenard herb.

நமத்துப்போ-தல் *namattu-p-pō-,* 6 செ.குன்றா.வி. (v.t.) ஈரமேறுதல்; to become damp, moist. அப்பளம் நமத்துப் போயிற்று. (உ.வ).

[நமத்து + போ-.]

நமதன் *namadaṉ,* பெ. (n.) ஆண்டவன்; lord, God.

[நமது + அன்.]

நமபுரம் *nama-puram,* பெ. (n.) எமனது நகரம்; yama's city."எதிர்பொருசேனை நமபுரம் நணுக" (திவ்.பெரியாழ்.4.7:4.).

[நமன் + புரம்.]

நமர்[1]-த்தல் *namar-,* 4 செ.கு.வி. (v.i.) நமு[2]-த்தல் பார்க்க; see namu[2]-

தெ. நெம்மு.

[நமு → நமர்.]

நமர்[2] *namar,* பெ. (n.) 1. நம்முடைய சுற்றத்தார்; our relations. "*நமர் விட்ட வேறு*" (பு.வெ.ஒழிபு. 5.). 2. நம் சார்பானவர்; persons of our party.

[நம் + அர்.]

ஏட்டுச்சுவடி தொகுத்து வந்த மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றில், சுவடியில் சிறுவாள் வைத்துக் கொன்ற முத்தநாதனை நோக்கி மெய்க்காப்பாளன் பாய்ந்தபோது, தத்தா நமரெனத்தடுத்து வீழ்ந்தது பொருட்செறிவு மிக்க இலக்கியச் சான்று.

நமரி *namari,* பெ. (n.) நீண்ட எக்காளவகை (குஞ்சை); a kind of long trumpet.

நமரைவாழை *namarai-vāḻai,* பெ. (n.) வாழைவகை; green banana.

நமலு-தல் *namalu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வணங்குதல்; to reverence, worship, bow, prostrate; "*வானவர் வானவர் கோனொடு நமன்றெழுந் திருவேங்கடம்*" (திவ்.திருவாய். 3:3:7).

[நமல் → நமலு-.]

நமன் *namaṉ,* பெ. (n.) எமன் பார்க்க; see emaṉ. "*நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்*" (தேவா. 1236:1).

மறுவ. யமன், யாமன், கூற்றுவன், காலன்.

[யமன் → ஞமன் → நமன்.]

யாமத்தில் வந்து மாந்தர்தம் உயிரை வவ்வுவதாகக்கருதப்படும் கற்பனையுருவன்.

நமனமண்டபம் *namaṉa-maṇḍabam,* பெ. (n.) நபன மண்டபம் (S.I.I.V. 236) பார்க்க; see nabaṉa-maṇḍabam.

நமனிகை *namanigai,* பெ. (n.) திருமஞ்சனம்; inner santuary.

நமிட்டு–தல் *namittu-,* 5செ.குன்றாவி. (v.t) கிள்ளுதல்; to pinch.

[நமட்டு → நமிட்டு–.]

நமிடு *namidu,* பெ. (n.) 1. நாரைவகை; a kind of crane. *"நமிடு கரப்பான் வாதம் நாட் சோபை மாற்றும்"* (பதார்த்த. 898). 2. நமுடு². (யாழ். அக.) பார்க்க; see namudu ².

[நமடு + நமிடு.]

நமிநந்தியடிகணாயனார் *nami-nandi-y-adiganāyanār,* பெ. (n.) நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவர் (பெரியபு); a canonized šaiva šaint one of 63.

[நமி + நந்தி + அடிகள் + நாயனார்.]

நமிநந்தியடிகள், திருவாரூர் திருவள்நெறியில் ஒன்றியவர். பெரியபுராணத்துள், நான்காம் சருக்கமாகிய திருநின்ற சருக்கத்துள், இவர்தம் வரலாறு, காணப்படுகிறது. சிவலிங்கத்தால், முத்திபெற்ற 30–அடியார்களுள் ஒருவராவார். இவரை, நம்பியாரூரர், *"அருநம்பி நமிநந்தி அடியார்க்குமடியேன்"*, என்று போற்றியுள்ளார். திருநாவுக்கரசர், தமது திருவாரூர்த் தேவாரத்தில், *"தொண்டர்களுக்கெல்லாம் ஆணிப்பொன்"* என்று குறித்துள்ளது, இவர்தம் சிறப்பிற்கு, எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இவர், திருவாரூர் குளத்துநீரில் விளக்கெரித்தவர் என்று, போற்றப்படுகிறார்.

நமு¹–த்தல் *namu-,* 4 செ.குன்றாவி. (v.t.) தொல்லை தருதல்; to trouble, tease, vex. *"என்னை நமுக்கிறான்"*. (இ.வ.).

[நச்சி → நசி → நச → நம → நமு–.]

நச்சரவு அல்லது தொல்லைத் தருபவனை நச்சுப்பேர்வழி என்பர். தொந்தரவு அல்லது தொல்லைத்தரும் கைக்குழந்தைகளை, நைநை என்று நச்சரிக்கிறது என்றும், *"நமுண்டி எடுக்கிறது என்றும்"* நமுண்டல் பொறுக்க முடியவில்லை என்றும், நாட்டுப்புறத்தே வழங்குவது அறிக.

நமு²–த்தல் *namu-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஈரமேறுதல்; to become damp, moist.

தெ. நெம்மு.

நசத்தல் = ஈரமுறுதல்.

[நச → நம → நமு–.]

நமத்தல் = ஈரமேறுதல் நமத்தல் → நமுத்தல் = ஈரமேறிப்பதனழிதல், நொந்து அல்லது நைந்துபோதலையும், நமுத்துப் போயிற்று என்பர்.

நமுகு–தல் *namugu-,* 5 செ.குன்றாவி. (v.t.) குழைதல்; to yield under pressure. *"இணைமுலை நமுக நுண்ணிடை நுடங்கத் துனியிருங்கலவி செய்து"* (திவ். திருவாய். 9:9:3.).

[நை → நய் → நசி → நசிகு → நமுகு–.]

நைந்துபோதல், குழைந்துபோதல் என்னும் பொருண்மையினின்று தோன்றும், நசி என்னும் வினையடியினின்று முகிழ்த்த சொல்.

ஒருகா. *[நம → நமத்து → நமுத்து → நமுத்து → நமுகு –.]*

குழைந்துபோன சோற்றையும், தண்ணீரில் ஊறிப்பதனழிந்துப் போன பொருட்களையும், நமத்துப்போயிற்று என்று நவிலும் பாங்கு, நாட்டுப்புறத்தே இன்றும் காணப்படுகிறது. காலப்போக்கில், தலைவனும் தலைவியும் முயங்குங்கால் ஏற்படும் இன்பக் குழைவையும் குறிக்கலாயிற்று.

நமுட்டு¹–தல் *namuṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) தினவுண்டாதல்; to itch.

[நமட்டு → நமுட்டு–.]

நமுட்டு²–தல் *namuṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நெருடுதல்; நிமிண்டுதல்; to pinch.

மறுவ. கிள்ளுதல்.

[நமட்டு + நமுட்டு–.]

நமுட்டுச்சிரங்கு *namuṭṭu-c-cirangu,* பெ. (n.) நமட்டுச்சொறி பார்க்க; see namaṭṭu-c-coṟi.

[நமுட்டு + சிரங்கு.]

நமுட்டுச்சிரிப்பு *namuṭṭu-c-cirippu,* பெ. (n) தனக்குத் தெரிந்தது பிறருக்குத் தெரியாது என்ற முறையில், வெளிப்படுத்தும் அமர்த்தலான சிரிப்பு; shy smile (generally accompanying teasing). நண்பரின் பையிலிருந்து கீழே விழுந்த தூவலைத் (பேனாவை) தன் கையில் மறைத்துக் கொண்டு நமுட்டுச் சிரிப்புடன், '*கையெழுத்துப் போட உன் தூவலைக் கொடு*' என்றார். (இக்.வ.).

[நமட்டு → நமுட்டு + சிரிப்பு.]

நமுட்டுச்சொறி *namuṭṭu-c-coṟi-,* பெ. (n.) நமட்டுச்சொறி பார்க்க; see namaṭṭu-c-coṟi.

[நமுட்டு + சொறி.]

நமுடு¹ *namuḍu,* பெ. (n.) 1. கீழுதடு; lower lip, 2. ஈர்; nits, larvae of insects; 3. கொக்கு; crane

[நம் + உடு → நமுடு.]

நமுடு² *namuḍu,* பெ. (n.) 1. தரையிலேயே கூடுகட்டி வாழும் பறவை; bird builds nest on ground. 2. பட்டு நூலில் விழும் முடிச்சு; knot is silk-fibre.

[ஒருகா. நமட்டு → நமடு → நமுடு.]

நமேரு *namēru,* பெ. (n.) 1. புன்னை; common poon, 2. *சுரபுன்னை* பார்க்க; see *śurapunnai.*

நமை¹–தல் *namai-,* 4. செ.கு.வி. (v.t) தினவெடுத்தல்; to itch. கம்பளிப்பூச்சி மேலே பட்டதால் உடம்பு நமைக்கிறது (இக்.வ). "*நமைந்தெமரிடத்து நண்ணார்*" (உத்தரரா. அசுவமே.23).

தெ. நவ.

[நம → நமு → நமை–.]

நமை²–த்தல் *namai-,* 4. செ. குன்றாவி. (v.t) 1. வருத்துதல்; to vex, trouble "*நமைப்புறு பிறவிநோய்*" (சூளா. முத். 1, 32). 2. சூட்டுதல்; to put on wear. "*குஞ்சி நமைத்த பூந்தாமம்*" (சீவக. 2839). 3. தினவெடுத்தல்; to itch

[நமு → நமை–.]

நமை³–த்தல் *namai,* 4. செ. குன்றாவி. (v.t) கட்டளையிடுதல்; to command. "*பொறிபுலன் களைந்தும் நமையால்*" (திவ்.இயற்.1:32).

நமை⁴ *namai,* பெ. (n.) வெக்காலி; button tree, "*ஞெமையு நமையும்*" (தொல்.–எழுத். 282).

க. நவெ.

நமைக்காய் *namai-k-kāy,* பெ. (n.) கத்தரிக்காய்; (தைலவ. தைல.). brinjal.

[நமை + காய்.]

அரிப்புத் தருதல் பற்றிக் கத்தரிக்காய்க்கு, இப் பெயர் வந்தது.

நமைச்சல் *namaiccal,* பெ. (n.) உடலில் ஏற்படும் சொறியத்தூண்டும் உணர்வு; itch. வேர்க்குரு வந்த இடங்களில் சாந்து தடவினால், நமைச்சல் இருக்காது (உ.வ). நமைச்சல், அரத்தக்கசிவு முதலியன மூல நோயின் அறிகுறிகள் (மருத்.வழ.).

மறுவ: அரிப்பு, தினவு.

[நமை → நமைச்சல்.]

நமைச்சிரங்கு *namai-c-cirangu,* பெ. (n) நமட்டுச்சொறி பார்க்க; see namattu-c-cori.

[நமை + சிரங்கு.]

நமைப்பு *namaippu;* பெ. (n.) 1. அரிப்பு; itching, 2. சிரங்கு; skin diseases, 3. வருத்தம், துயர்; trouble, vexation, "*நும்மானமைப் புண்ணேன் கமைத்துநீர் நடமின்களே*" (தேவா. 717:3.).

[நமப்பு → நமைப்பு.]

நய்யத்தட்டல் *nayya-tattal,* தொ பெ. (vbl.n.) நையத்தட்டல் பார்க்க; see naiya-t-tattal.

[நைய்ய → நய்ய + தட்டல்.]

நய[1]–த்தல் *naya-,* 4 செ. குன்றாவி. (v.t.) 1. விரும்புதல்; to desire greatly, long for. "*பிறன் வரையாள் பெண்மை நயவாமை நன்று*" (குறள், 150). 2. இன்புகழ்ச்சி கூறுதல், பாராட்டுதல்; to compliment, appreciate. "*நல்லறிவுடையோர் நயப்பது வேண்டியும்*" (பத்துப்பாட்டு. நச். உரைச்சிறப்.). 3. மதித்தல்; உயர்வாகக் கருதுதல்; to respect, esteem. 4. மகிழ்ச்சியூட்டுதல்; திருவுள்ளங் கொள்ளுதல்; to please, 5. தட்டிக் கொடுத்தல்; to coax, 6. கெஞ்சுதல்; to beseech implore. "*அவன். எவ்வளவோ நயந்து கேட்டான்*" (உ.வ.). 7. அன்பு செய்தல் (சூடா.); to love, show. affection for; 8. பின் செல்லுதல் (யாழ். அக.); to act upon, to follow.

நள் = சேர்தல்.

நைப்பு = விருப்பம்.

நைப்பு → நயப்பு = விரும்பப்படுகை.

[நள் → நய் → நய–.]

நய[2]–த்தல் *naya-,* 4. செ.குன்றா.வி. (v.t.) 1. மகிழ்தல்; to be glad, to rejoice. "*வல்லைமன்ற நீ நயந்தளித்த*" (புறநா. 59); 2. இனிமையுறுதல்; to be sweet, pleasing. "*நஞ்சினுங் கொடிய நாட்ட மமுதினு நயந்து நோக்கி*" (கம்பரா. பூக்கொய் 7); 3. இணங்கிப் போதல்; to be congenial, to be agreeable. "*யாரிடத்தும் அவன் நயந்து போவான்*"; 4. பயன்படுதல் (யாழ். அக.); to be advantageous, profitable, useful. 5. மலிதல்; to be cheap; இந்த ஆண்டு (கூலம்) நயத்தது (இ.வ.); 6. மேம்படுதல்; to excel, surpass, improve '*அதற்கிது நயத்திருக்கிறது*' (உ.வ.).

[நள் → நய் → நய–.]

நய[3]–த்தல் *naya-,* 4.செ. கு. வி. (v.i.) நமு[2]–பார்க்க; see namu[2]–. '*முறுக்கு நயத்துவிட்டது*' (நெல்லை).

[நசி → நமு → நய–.]

நயக்கன் *nayakkaṉ*, பெ. (n.) நாய் (வின்.); dog.

[நயப்பன் → நயக்கன்.]

உணவு கொடுப்பாரிடம் உறவோடு பழகும் பண்புள்ள நாய், தன் நயப்பைக் கால் தூக்கியும், வால் ஆட்டியும் காட்டலால் ஏற்பட்ட பெயர்.

நயக்கிளவி *naya-k-kiḷavi*, பெ. (n.) அசதியாடல் (பிங்.); banter, humorous ridicule, or jest.

[நயம் + கிளவி.]

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு" என்ற திருக்குறளில், நயம் என்னும் வடிவம் இனிமை பற்றி வருவது போன்றது.

நயகுணம் *naya-kuṇam*, பெ. (n.) நற்குணம் (வின்.); a amiable disposition.

[நயம் + குணம்.]

அனைவராலும் விரும்பப்படும் நற்குணம். எஞ்ஞான்றும் தீமையொழித்து, நன்மையே செய்யும் உயர்குணமே, நற்குணம்.

நயங்காட்டு-தல் *nayaṅ-kāṭṭu-*, 12, செ.குன்றாவி. (v.t.) இனிய சொற்கள் முதலியவற்றால் வயப்படுத்துதல், (வின்.), கவர்ச்சி யூட்டும்படிப் பேசுதல்; to coax, allure.

[நயம் + காட்டு-.]

நயச்சொல் *naya-c-col*, பெ. (n.) 1. இனியசொல்; sweet, pleasing words 2. நயக்கிளவி பார்க்க; see naya-k-kiḷavi. 3. முகமன்; courteous, civil words, winning speech. 4. கவர்ச்சிப் பேச்சு; wheedling talk.

[நயம் + சொல்.]

பிறர் விரும்பிக்கேட்குமாறு நவிலும் இன்சொல். அகனமர்ந்து பேசும் அன்புச்சொல்.

நயஞ்சரக்கு *nayañ-carakku*, பெ. (n.). உயர்தரப்பண்டம் (இ. வ.); superior articles.

மறுவ. முதல்தரப்பொருள்.

[நயம் + சரக்கு.]

நயத்தக்கநாகரிகம் *nayattakka-nāgarigam*, பெ. (n.). பண்பாட்டுக் கண்ணோட்டத்துடன் கூடிய நாகரிகம்; cultural heritage.

[நயம் + தகு + நாகரிகம்.]

நயம் தக்க நாகரிகம் = உள்ளச் செம்மையே அகநாகரிகம்: பண்டைக் காலத்தில், "நாகரிகம்" என்னும் சொல்லையே, "பண்பாடு" என்னும் பொருளிலும், ஆண்டனர்.
இக் கூட்டுச்சொல், உள்ளத்தின் பண்பட்ட நிலையினையே காட்டும். மனமது செம்மையானால் மந்திரம் சொல்ல வேண்டாம் என்னும் உலகவழக்கும், மாசற்ற மனத்தையே குறிக்குமென்றறிக. அதனால்தான் வள்ளுவரும்,
"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்"
என்றார். திருந்தியநிலை என்னும் பொதுக்கருத்தில், நாகரிகமும், பண்பாடும் ஒன்றாதல், காண்க.

நயத்தகு-தல் *naya-t-tagu-*, 2.செ. கு. வி. (v.i.). 1. விரும்பத்தகுதல்; to be pleasing, lovable. *"நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்"* (குறள், 580.). 2. நன்மையாதல்; to be good in quality. *"நயத்தக மண்ணி"* (பு. வெ. 10:10.).

[நயம் + தகு-.]

நயத்தபொன் *nayatta-poṉ,* பெ. (n.) பக்குவப் படுத்தப்பட்ட பொன்; malleable gold. வெட்டையாய்ப் போகாது வேலைக் குதவும் பொன் (இ. வ.);

நயத்தல் *nayattal,* பெ. (n.). தலைவனைக் கண்ட தலைவி தனது ஆசைப்பாடு கூறும் புறத்துறை (பு. வெ. 11, பெண்பாற். 2); theme in which the heroine expresses her deep love at the sight of the hero.

நயப்பு = விருப்பு

[நை → நநயத்தல்.]

நயத்தவிலை *nayatta-vilai,* பெ. (n) மலிந்த விலை; cheap price.

மறுவ. குறைந்தவிலை.

[நயத்த + விலை.]

நயதி *nayadi,* பெ. (n.) முறைமை; justice. சரிதையினயதியின் (இரகு. தசரத. சா.3).

[*ஒருகா. நியதி → நயதி.*]

நயந்தட்டு-தல் *nayan-taṭṭu-,* 5.செ. கு. வி. (v.i.) இனிமைதரத் தொடங்குதல்; to begin to interest. புத்தகம் இப்போது தான் நயந்தட்டுகிறது. (இ. வ.).

[*நயம் + தட்டு-.*]

நயந்துசொல்(லு)-தல் *nayandu-šollu-,* 8, செ. குன்றா. வி. (v.t.) 1. பயன்படச் சொல்லுதல்; to speak effectively. 2. பாராட்டுதல்; to praise. 3. வேண்டிக்கொள்ளுதல்; to persuade politely. நயந்து சொன்னால் நாடெல்லாம் கேட்கும். (உ.வ.).

[*நயந்து + சொல்(லு)-.*]

நயந்தோர் *nayandōr,* பெ. (n.). 1. நண்பர் (பிங்.); friends, companions. 2. கணவர்; husband, as one who loves.

[*நயம் → நயந்தோர்.*]

நயநட்டம்[1] *naya-naṭṭam,* பெ. (n.). 1. வருவாய்; profit. 2. இழப்பு; loss.

[நயம் + skt. நட்டம்.]

நயநட்டம்[2] *naya-naṭṭam,* பெ. (n.) பயன் மற்றும் இழப்பு; advantage and disadvantage, profit and loss.

நயநய-த்தல் *naya-naya-,* 4 செ.கு.வி. (v.i.) நசநச-(இ. வ.) பார்க்க; see naša-naša-.

[*நசி → நச → நய-.*]

நயநயப்பு *naya-nayappu,* பெ. (n). மென்மைத் தன்மை; softness and smoothness.

[*நயம் + நயப்பு.*]

நயநயவார்த்தை *naya-naya-vārttai,* பெ. (n.) உறுதியில்லா வார்த்தை (யாழ். அக.); unsteady, unreliable word.

[நயநய + வார்த்தை]

நயநிலைப்படலம் *naya-nilai-p-paḍalam,* பெ. (n.) நாடகம் (யாழ்.அக.); drama.

[நயநய + வார்த்தை]

நயநௌடதம் *naya-naudadam,* பெ. (n.) கண்மருந்து; collyrium for the eyes, lotion for the eyes.

நயன் + Skt. நௌடதம்.

நயப்பாடு *naya-p-pāḍu,* பெ. (n.) 1. பயன் (வின்.) ஊதியம்; advantage, profit. 2. நலன், ஆதரவு; benefit. 3. சிறப்பு; சால்பு; நயநேர்த்தி; excellence. 4. மேம்பாடு; superiority.

[நயம் + பாடு]

நயப்பி-த்தல் *nayappi-,* 4.செ. குன்றாவி. (v.t.) 1. விரும்பும்படி செய்தல்; to induce to love or desire. '*தலைமகனை நயப்பித்துக் கொள்கையில்*' (ஐங்குறு. 88. உரை). 2. அறிவுறுத்தி இணங்கவைத்தல்(வின்.); to persuade, win another's consent, secure compliance or approval. 3. ஏற்கச் செய்தல்; to approve. 4. மலிவாக்குதல் (வின்.); to render cheap, cheapen. 5. பயன்படுத்துதல் (வின்.); toimprove, benefit.

[நயப்பு → நயப்பி-.]

நயப்பு *nayappu,* பெ. (n.) 1. அன்பு; love. "*நல்லாளோடு நயப்புற வெய்தியும்*" (திருவாச. 2:12). 2. பற்றாசை, நேசம்; affection. 3. ஆர்வவேட்கை, ஆசை (சூடா.); desire. 4. இன்பம்; delight, pleasure. "*நயப்புறு சித்தரை நலிந்து வவ்வின*" (கம்பரா. கரன்வதை. 47). 4. தலைவியெழிலைப் புகழ்கை; (சீவக. 1332, உரை); praising the beauty of a heroine (akap). 6. மலிவு; cheapness. 7. முன்னேற்றம்; improvement 8. நன்மை; goodness. 9. மேம்பாடு; superiority.

[*நைப்பு → நயப்பு.*]

நயப்புணர்வு *nayappuṇarvu,* பெ. (n) 1. கண்ணோட்டம் (சூடா); kindness, tenderness. 2. இன்கனிவு, இரக்கம்

[*நயப்பு + உணர்வு.*]

நயப்பெத்தன் *nayappettaṉ,* பெ. (n) மோசக்காரன்; cheating person.

[*நயப்பு + எற்றன் > எத்தன்.*]

நம்பவைத்து ஏமாற்றுபவன்.

நயபயம் *naya-payam,* பெ. (n.) கனிவும், கண்டிப்பும்; kindness blended with reproof. '*அவன் நயபயமெல்லாம் காட்டினான்*'. (உ. வ.).

[*நயம் + skt. பயம்.*]

நயம்[1] *nayam,* பெ. (n) 1. நல்லெண்ணம்; good intention. 2. அருள்; grace. "*நன்னயம் பெற்றுழி*" (தொல். பொ. 114) 3. விருப்பம்; desire. 4. மகிழ்ச்சி; happiness. joy, gladness 5. நன்மை (திவா); goodness. "*நயமுணராக் கையறியாமாக்கள்*" (நாலடி, 163). 6. நயநாகரிகம், பண்புநயம்; civility attention, courtesy. "*சான்றோரை நயத்திற் பிணித்து விடல்*" (நான்மணி. 12). 7. அன்பு; love, affection. tenderness. "*நயந்தலை மாறுவார் மாறுக*" (கலித். 80). 8. பக்தி; piety, devotion, "*பஃறளியு நயங்கொண்டு பணிந்தேத்தி*" (தணிகைப்பு. பிரமன். 54). 9. நற்பயன்; beneifit, profit, advantage, interest, gain "*நல்வினையுந் நயந்தந்தின்று*" (திருக்கோ. 26). 10. மேம்பாடு; superiority, excellence. '*இதற்கு அது நயம்*' (உ. வ.); 11. மலிவு; cheapness. விலை நயமாயிருக்கிறது. (இ. வ.); 12. மிகுதி; (வின்.); abundance 13. பயன் (திவா.); result, effect. "*நன்றோ பழுதுளதோ நடுவரைநீ நயமென்ன*" (கம்பரா. பரசு. 6). 14. நுண்மை;

fineness. *'தங்கக்கம்பி நயமாயிருக்கிறது"* (உ. வ.); 15. இனிமை; sweetness. *"நாரத முனிவர்க் கேற்ப நயம்படவுரைத்தநாவும்"* (கம்பரா. கும்பகரு. 1.);

க., து., நய, ம. நயம்.

தெ. நயமு.

[நய → நயம்.]

நயம்² *nayam,* பெ. (n.) 1. அடிப்படை மெய்ம்மை; principle. 2. அறம், முறைமை (நீதி); policy. *"நன்றி ஈதென்று கொண்ட நயத்தினை நயந்து"* (கம்பரா. கும்பகருண, 35). 3. மறைநூல் (யாழ்.அக.); (வேதசாத்திரம்); vēdam. 4. ஒற்றுமை நயம்; வேற்றுமை நயம், புரிவின்மைநயம், இயல்புநயம் என காரணகாரியத் தொடர்பிற் கொள்ளும், நால்வகை முறை (மணிமே. 30. 218); the four kinds of causal relation viz., orrumai-nayam, vērrumai-nayam, purivinmai-nayam, iyalbu-nayam

[நய → நயம்.]

நயம்³ *nayam,* பெ. (n.) கனமும், தேசிகமும், கலந்துபாடும் வகை (கனம் கிருட்டிணய்யர்,1); a mode of singing in which both gānam and tēšigam.

நயம்பண்ணு-தல் *nayam-pannu-,* 5.செ. கு. வி.(v.i.) உதவிசெய்தல் (அனுகூலம் செய்தல்) (வின்.); to do a favour.

[நயம் + பண்ணு-.]

நயம்பாடு¹-தல் *nayam-pādu-,* 5.செ. கு. வி. (v.i.) 1. இனிமையாய்ப் பாடுதல் (வின்.); to sing sweetly. 2. முகமன் கூறுதல் (இ. வ.); to flatter.

[நயம் + பாடு-.]

நயம்பாடு² *nayam-pādu,* பெ. (n.) 1. நயப்பாடு பார்க்க; see nayap-p-ādu 2. அழகுபடுகை; being beautiful. *"பண்பில் வாய்மொழி நயம்பா டில்லை"* (மணிமே. 2:36).

[நயம் + படு → பாடு.]

நயம்பேசு-தல் *nayam-pēšu,* 5.செ. கு. வி. (v.i.). 1. மகிழப்பேசுதல் (வின்.); to speak pleasantly, courteously. 2. இனிமையாய் ஒலித்தல்; to sound sweetly, as a lute string.

[நயம் + பேசு-.]

நயமாலி *nayamāli,* பெ. (n.). சிவப்பரிதாரம் (மனோசிலை) (வின்.); red orpiment.

நயமொழி *naya-moli,* பெ. (n) 1. இன்மொழி; sweet, pleasant words. *"நயமொழியினாற் சயமுண்டு"* (பழ.) 2. நலம் பயக்கும் மொழி; words of good counsel. *"நானுனை யிரந்துகூறு நயமொழி யொன்றுங் கேளாய்"* (கம்பரா. நிகும்பலை. 68).

[நயம் + மொழி.]

நயர் *nayar,* பெ. (n.) அறிவுடையவர்; wise persons. *"மேனயரிவரென"* (சிவதரு. சுவர்க்க நரக. 24).

[நயம் → நயர்.]

நயவசனம் *naya-vašanam,* பெ. (n.) நயவசனிப்பு பார்க்க; see naya-vašanippu.

[நய + Skt. வசனம்.]

நயவசனிப்பு *naya-vašanippu,* பெ. (n) இனிய சொல்; captivating or enticing words.

[நய + Skt. வசனிப்பு.]

நயவஞ்சகம் *naya-vañjagam,* பெ. (n.) இனிமைகாட்டி ஏமாற்றுகை; smiling villainy, hypocrisy.

[நயம் + வஞ்சம் + அகம்.]

நயவர்[1] *nayavar,* பெ. (n.) முறைமையுடையோர்; just persons. "*நல்லார் நயவ–ரிருப்பி*" (நாலடி, 265).

[நயம் + அர்.]

நயவர்[2] *nayavar,* பெ. (n.) 1. காதலர் (பிங்.); lovers. 2. நண்பர் (யாழ். அக.); friends.

[நய + அர்.]

நயவரு[1]**–தல்** *naya-varu-,* 5.செ. குன்றாவி. (v.t.) விரும்புதல்; to like, appreciate, desire, ardently. "*தன்மலைபாட நயவந்து கேட்டருளி*" (கலித். 40.31).

[நயம் + வரு–.]

நயவரு[2]**–தல்** *naya-varu-,* 18.செ. கு. வி. (v.i.) நன்மையுண்டாதல்; to be beneficial. "*நயம்வரும் பள்ளிமே னல்கி*" (பு. வெ. 11. பெண்பாற். 9.).

[நயம் + வரு–.]

நயவன் *nayavaṉ,* பெ. (n.) கலை, இலக்கியம், போன்றவற்றைப் பேணி வளர்ப்பவன்; a man of cultivated taste in art and literature.

[நயம் + அன்.]

நயவார் *nayavār,* பெ. (n.) பகைவர்; enemies. நயவார் தலைபனிப்ப (பு.வெ.7,2).

[நய + ஆ + அர்.]

நயவான் *nayavāṉ,* பெ. (n.) 1. நயக்காரன்; one who seeks or is entitled to profit. 2. விரும்பத்தக்கவன்; lovable person. 3. புரவலர், கொடையாளர்; benefactor.

[நயவன் → நயவான்.]

நயன்[1] *nayaṉ,* பெ. (n.) 1 நயம் பார்க்க; see nayam. "*நயனில சொல்லினுஞ் சொல்லுக*" (குறள், 193). 2. பசை; substance. "*நறுந்தா துண்டு நயனில் காலை வறும்பூத் துறக்கும் வண்டு*" (மணிமே.18,19). 3. உறவு; (கலித். 125, 6, உரை). relation ship.

[நயம் → நயன்.]

நயன்[2] *nayaṉ,* பெ. (n.) 1. *நயவான்* பார்க்க; see *nayavāṉ.* "*நயனடன் கழலேத்தி*" (தேவா.115:11). 2. கொடையாளி, (யாழ். அக.); புரவலர்; donor, benefactor.

[நயம் → நயன்.]

நயன்[3] *nayaṉ,* பெ. (n.) 1. *நயம்*[1] பார்க்க; see *nayam,*1. 2. வழி; device. 3. திட்டமிட்டுச் செயற்படுத்துகை; contrivance. "*மன்னரை நயனாடி நட்பாக்கும் வினைவர் போல்*" (கலித். 46).

[நயம் → நயன்.]

நயன்மை *nayaṉmai,* பெ. (n.) முறைமை; justice.

மறுவ. அறம்.

[நயன் → நயன்மை.]

நயனவல்லி *nayaṉa-valli,* பெ. (n.) வல்லாரை; indian pennywort.



நயனி *nayaṉi,* பெ. (n.) காந்தள்; nouember flower.

நயனோற்சவம் *nayaṉōṟcavam,* பெ. (n.) விளக்கு (யாழ்.அக.); light.

நயாசலன் *nayāšalaṉ,* பெ. (n.) முறைமை வழுவாதவன்; person of unwavering integrity. *"நளிர்ந்த சீல னயாசலன்"* (திவ். பெரியாழ். 4: 4: 8).

[நயம் + அசலன்.]

நயம் = நெறி, முறை, அறம். Skt. அசல் + அன்.

நயிச்சியஞ்செய்–தல் *nayicciyañ-šey-,* 1. செ. குன்றா.வி. (v.t.) தன்வயப்படுத்துதல் (இ.வ.); to win over to one's side.

[நயச்சியம் → நயிச்சியம் + செய்–.]

நயிச்சியம் *nayicciyam,* பெ. (n.) 1. தன்வசப் படுத்துகை; winning over to one's side. 2. தாழ்மை; humility. 3. நீசத்தன்மை; lowness, meanness, boseness.

[நயச்சியம் → நயிச்சியம்.]

நயிச்சியம்பண்ணு–தல் *nayicciyam-paṇṇu-,* 5 செ.குன்றாவி. (v.t) *நயிச்சியம் செய்–தல்* பார்க்க; see *nayicciyam-šey-.*

[நயச்சி + அம் + பண்ணு–.]

நயிந்தை *nayindai,* பெ. (n) 1. மேம்பட்ட தகுதியாளர்; மேல் நிலையர்; superior. 2. தலைவர் (யாழ்.அக.); liege, lord. 3. அடிமை வைத்து ஆளும் இனத் தலைவன் (இ.வ.); (வின்.) the master of a slave among same castes. 4. சில இனத்தவர்க்கு வழங்கும் ஒரு பட்டப்பெயர் (வின்.); a term of respect among some castes.

[நயந்தை → நயிந்தை.]

நயத்தக்க மேம்பாடுடையவர்.

நயினார் *nayiṉār,* பெ. (n.) 1. தலைவன், இறைவன் (சுவாமி.); lord. *"நயினார் திருவேங்கட நாதன்"* (T.A.S.I. 93). 2. மேலோன், தலைவன் (வின்.); master, lord 3. சைனர்க்குச் சிறப்பாக வழங்கும் பட்டப்பெயர்; title, especially of jains. 4. *ஐயனார்* (இ.வ.) பார்க்க; see *iyaṉār.* 5. *சித்திரகுத்தன்* பார்க்க; see *šittirakuttaṉ* நயினார் நோன்பு.

[நாயகனார் → நாயனார் → நயினார்.]

நயேந்திரப்பாலை *nayēndra-p-pālai,* பெ. (n.) நெல் வகை; a kind of paddy.

நரகக்குழி *naraga-k-kuḻi,* நரகம் (வின்.); hell *[நரகல் → நரகம். நரகம் + குழி.]*

மாந்தக் கழிவு போன்ற, துன்பப் பகுதி.

நரககதி *naraga-gadi,* பெ. (n.) 1. நாற்கதியுள் நரகத்துள் தள்ளப்படுவோர், the state of hell-

being, one of ñar-kadi, (q.v.). *"நரககதித் துன்பம்"*. (சீவக. 2762, தலைப்பு). 2. நரகம் பெறுகை (யாழ்.அக.); fate of being consigned to hell.

[நரகம் + கதி.]

நரகர் *naragar,* பெ. (n.) நரகன் பார்க்க; see naragaṉ. "நரகர் துயர்கெட" (மணிமே.11.69.).

நரகல் *naragal,* பெ. (n.) 1. மலம் (இ.வ.); ordure. 2. தூய்மையின்மை (அசுத்தம்); filth, anything disgusting or offensive to the sight.

த. நரகல் → skt.naraga.

[நரகு + அல்.]

நரகல்வாய் *naragal-vāy,* பெ. (n.) எருவாய் (குதம்.); anus.

[நரகல் + வாய்.]

நரகலி–த்தல் *naragali-,* 4 செ.கு.வி. (v.i.) அழுக்குடைத்தாதல் (யாழ்.அக.); to lie defiled with excrement, as a puking child or sick person. அருவருத்தல்; to loathe, abhor.

[நரகல் + நரகலி–.]

நரகவேதனை *naraga-vēdaṉai,* பெ. (n.) நரகத்தி லனுபவிக்குந் துன்பம். (சிலப். 26, 37, உரை); hellish torment.

[நரகம் + Skt. வேதனை]

நரகன் *naragaṉ,* பெ. (n.) 1. நரகவுலகத்தி லுள்ளவன் (நன், 261); an inhabitant of the infernal region. 2. மாபாவி; great sinner, as deserving of hell. 'நரகன் வெல்வதே' (கம்பரா. சடாயுவுயி. 133). 3. நரகாசுரன் பார்க்க (திவ். பெரியாழ் 4. 3.3); see naragāśuraṉ

த. நரகன் → skt.naraga-vāsiṉ.

[நரகம் → நரகன்.]

நரகல் எனும் மாந்தக்கழிவு போன்று, வெறுக்கத் தக்க இயல்பினன்; கீழ்மைக் குணத்தன். தீய பண்புகளின் இருப்பிடமே கெட்ட மனம்; வெறுக்கத் தக்க பண்புகளின் விளை நிலமாகச் செயலாற்றுபவனே நரகன்.

நரகனாதி *naragaṉādi,* பெ. (n.) தேட்கொடுக்கி (சங்.அக.) (மூ.அ.); indian turnsole.

[நரகன் + ஆதி.]

நரகாசுரன் *naragāśuraṉ,* பெ. (n.) கண்ணனாற் கொல்லப்பட்ட ஓர் அசுரன்; a demon slain by kaṇṇaṉ.

[நரக + அசுரன்.]

நரகாந்தகன் *naragāndagaṉ,* பெ. (n.) நரகாசுரனைக் கொன்ற திருமால்; Tirumāl, as destroyer of naragaṉ.

[நரக(ன்) + அந்தகன். தீயபண்புகளைக் கொன்று, நற்பண்புகளின் இருப்பிடமாகத் திகழும் திருமால்.]

நரகாமயம் *naragāmayam,* பெ. (n.) ஆதன்; soul.

[நரக → நரகா + மயம்.]

நரகாரி *naragāri,* பெ. (n.) நரகாந்தகன் பார்க்க; see nāragāndagaṉ.

த. நரகாரி →skt. naragāri.

நரலுதல் = ஒலித்தல், கத்துதல்; பேசுதல். நரல் → நரன் = மனிதன்.

நாவினால் பலுக்கியும், நன்முறையில் நவிற்றியும் பேசும் மாந்தன்.

[நரகன் + அரி → நரகரி → நரகாரி.]

நரகாலி *naragāli*, பெ. (n.) கால்நடைகளுக்கு வரும் நோய்வகை (வின்.); a disease in cattle, a kind of tumour in the intestines

[நரகல் → நரகாலி.]

கன்றுகாலிகள் இடம், பொழுது பாராது, நரகல் கழிவதால் வந்த பெயர்.

நரகாலிகம்[1] *naragāligam*, பெ. (n.) *நரகாலி* பார்க்க; see *naragāli.*

[நரகால் + இகம்.]

இகம் = சொல்லாக்க ஈறு.

நரகாலிகம்[2] *naragāligam*, பெ. (n.) **1.** சம்பைப் புல்; a kind of sedge grass. **2.** கோரைப்புற் படுகை; sedge, bed.

[நரகால் → நரகாலிகம்.]

சம்பங்கோரை முதலான மெல்லிய கோரைப்புல் வகைகள், கால்நடைகளின் தீவனத்தின் பொருட்டு வளர்க்கும் இடம்.

நரகி *naragi*, பெ. (n.) நிரையவுலகத்தில் உள்ளவள் (தொல். சொல். 4, இளம்பூ.); woman of the infernal region.

த. நரகி → skt.naragāri.

[நரன் + நரகி.]

நரன் = மனிதன். நரகி = நிரையவுலகில் துன்பமுறும் பெண்.

நரகீலகன் *nara-gilagan*, பெ. (n.) குருவைக் கொல்வோன்; one who murdered his guru.

[நரகி → நரகீலகன்.]

நரகு *naragu*, பெ. (n) நரகம்; hell. *"நரகுஞ் சுவர்க்கமுமாய்"* (திவ். திருவாய் 6, 3, 1)

த. நரகு → skt.naraka.

[நிரை → நர + கு.]

கு = சொல்லாக்க ஈறு.

ஒ.நோ.வரகு.தரகு.

நரகேசரி *nara-kēšari*, பெ. (n.) **1.** நரசிங்க மூர்த்தி பார்க்க; see Narašinga mūrtti **2.** மக்களுட் சிறந்தவன்; a distinguished man. as lion among men. *"பசும் பொற்றேர் மாநர கேசரி"* (தக்கயாகப். 807, பாடாந்.).

[நர + Skt. கேசரி.*]*

நரகோன்மத்தம் *naragōn-mattam*, பெ. (n.) கொலைப்பைத்தியம்; homicidal monomania.

[நரகோன் + மத்தம்.]

நரங்கடி—த்தல் *narangadi-*, 4. செ.குன்றாவி. (v.t.) அழித்தல் (யாழ்.அக.); to destroy.

[நருங்கு → நரங்கு + அடி—.]

நரங்கு¹–தல் *narangu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மெலிதல்; to emaciate. 2. வளர்ச்சிக் குறைதல்; to diminish.

[நருங்கு → நரங்கு –.]

நரங்கு²–தல் *narangu-*, 5. செ.கு.வி. (v.i.) *நருங்கு* பார்க்க; see *narungu-*

[நர → நரங்கு –.]

நரசண்டன் *nara-šaṇḍaṉ*, பெ. (n.) ஆணலி; male herma phrodite.

மறுவ. பேடி.

[நரசண் → நரசண்டன்.]

பெண்தன்மை மிகுந்த ஆண், ஆணலி என்று அழைக்கப்பட்டான். ஆண்மை திரிந்து, பெண்தன்மை மிகுந்தவன் நரசண்டன் என்றழைக்கப்பட்டான். இத்தகைய, தன்மை பெற்ற பெயரை "*ஆண்மைதிரிந்த பெயர்நிலைக் கிளவி*" (தொல்.சொல்.495.) என்பார் தொல்காப்பியர். தொல்காப்பியர் கூற்றுப்படி 'நரசண்டன்' என்று ஆண்பால் விகுதியுடன் அழைப்பது, பொருத்தமன்று. பேடி என்றழைப்பதே பொருந்தும்.

நரசம்பேட்டை *narašam-pēṭṭai*, பெ. (n.) காஞ்சிபுர மாவட்ட ஊர்; a village in kāñjipuram dt.

[நரசம் + பேட்டை.]

நரசாடி *narašāḍi*, பெ. (n.) வீட்டில் இறந்தவர்களைத் தெய்வமாகத் தொழுகை; (பிர. மகள்); ancestral worship.

[நரசன் + நரசாடி.]

நரசிங்கபருமன் *narašinga-parumaṉ*, பெ. (n.) நரசிங்கவருமன்; Narašingavarumaṉ, a king of pallava dynasty.

"*கோவிசைய நரசிங்க பருமற்கு இரண்டாவது வாணகோஅ அரைசர், சேவகர்*" (தா. வேளூர்– நடுகல்).

[நர + skt சிங்க + பருமன்.]

[வர்மன் → வருமன் → பருமன்.]

நரசிங்கபுரம் *narašingapuram*, பெ. (n.) திருவள்ளூர் மாவட்ட ஊர் **நரசிங்கபுரம்.** காஞ்சிபுரமாவட்டத்திலும், திருவண்ணாமலை மாவட்டத்திலும் உள்ளது; a village in Tiruvaḷḷur & kāñjipūram Tiruvaṇṇāmalai

[நர + சிங்க + புரம்.]

நரசிங்கம் *nara-šingam*, பெ. (n.) *நரசிங்க மூர்த்தி* பார்க்க; see *narasinga-mūrtti* "*நாடி நாடி நரசிங்காவென்று*" (திவ். திருவாய். 2: 4: 1).

[நர + Skt சிங்கம்.]

நரசிங்கமுனையரையநாயனார் *narašinga munaiyaraiya-nāyaṉār*, பெ. (n) சிவனடியார்; a canonized šaiva šaint இவர், திருமுனைப் பாடி நாட்டின் அரசர். சுந்தரமூர்த்தி நாயனாரை வளர்த்தவர்.

[நர + Skt.சிங்க + முனை + அரையர்.]

[அரசர் → அரையர்.]

நரசிங்கமூர்த்தி *narašinga-mūrtti*, பெ. (n) நரனும் (சிங்கமு) அரியும் கூடிய உருவுடன், தோற்றரவு செய்த திருமால்; Tirumāl in his man lion incarnation

[நர + Skt சிங்க + மூர்த்தி.]

நரசிங்கராச்சியம் *naraśinga-rācciyam,* பெ. (n.) நரசிம்மராயர் பெயர் கொண்டு வழங்கிய விசயநகரவரசு'; the kingdom of Vijayanagar Named after nara-šimma-rāyar.

[நர + Skt சிங்க + ராச்சியம்.]

நரசிங்கவங்கம் *naraśinga-vangam,* பெ. (n.) வெள்வங்கம்; white lead tin.

நரசிங்கவாசனம் *naraśinga-v-āśanam,* பெ. (n.) ஓகவிருக்கையுளொன்று; (yōga) a kind of yōgic posture.

[நரசிங்க + ஆசனம்.]

Skt. ஆசனம் = த.அமர்வு, இருக்கை.

நரசிங்கிதம் *naraśingidam,* பெ. (n.) கருந்துளசி; black basil.

நரசிம்மக்கனி *narasimma-k-kani,* பெ. (n.) கறிப்புடலை; snake gourd

[நரம் + Skt. சிம்ம + கனி.]

நரசிம்மசயந்தி *naraśimma-śayandi,* பெ. (n.) நரசிம்மமூர்த்தி தோன்றிய வைகாசி மாதத்தின் பதினான்காம் நாள் (சதுர்த்தசி); the 14th day of the waxing moon in vaikāśi, considered as the anniversary of Narasimma's incarnation.

[நரன் + Skt சிம்மம் + Skt சயந்தி.]

நரசிம்மன் *nara-śimman,* பெ. (n.) *நரசிங்க மூர்த்தி* பார்க்க; see *Naraśinga-mūrtti*

[நர + சிம்மன்.]

நரசீவதயாபரர் *nara-śīva-tayābarar,* பெ. (n.) (மன்னுயிர்மீது கருணையுடையவர்) (வின்) கடவுள்; God, as showing grace to humanity.

[நர + சீவ + தயா + பரர்.]

சீவதயாபரர் = மனிதன் மீது அளப்பெரும் அருளை வாரிவழங்கும் இறைவன்.

பரர் = மேலான அன்பாம் அருளை, அனைவருக்கும் தருபவர்.

நரசீவன் *nara-śīvan,* பெ. (n.) மனிதன் (யாழ்.அக.); human being.

[நரன் + சீவன்.]

நரசெந்திரகம் *nara-śendiragam,* பெ. (n.) விலங்கிடம், இணை விழைச்சு செய்கை; sexual connection with an animal

நரண்டை *narandai,* பெ. (n.) மூலிகை வகையுளொன்று; a kind of herbal medicine.

நரத்துவம் *narattuvam,* பெ. (n.) மக்கட் தன்மை; human nature "***ஒழிப்பதனுக்கிறைவர் நரத்துவம்***" (வேதா.சூ. 178).

[நரன் + தத்துவம்.]

மறுவ. மனிதத்துவம்.

நரன் = மனிதன். நரவத்துவம் = மனிதனுக்கு இயல்பாகவுள்ள தன்மை.

நரத்தை *narattai,* பெ. (n.) உடுப்பைமரம்; smooth lance leaved-indian Inden

[நர → நரத்தை.]

நரதுங்கன் *nara-tungan*, பெ. (n.) *மக்களிற் சிறந்தோன்;* the illustrious among men. *'கொடை நரதுங்கனொ டணைவுறாது'* (கலிங். 24.).

[நரன் + துங்கன்.]

நரதேவன் *nara-dēvan*, பெ. (n.) (மக்கள் தலைவன்) அரசன்; king, sovereign, as lord of men *"புகுந்து நரதேவ னருளினெய்தி"* (சீவக. 1867.).

[நரன் + தேவன்.]

நரந்தம்[1] *narandam*, பெ. (n.) 1. கத்தூரிமான் (பிங்.); musk deer 2. மான்மணத்தி (கத்தூரி); musk. *"நரந்த மரைப்ப நறுஞ்சாந்து மறுக"* (மதுரைக். 553). 3. நறுமணம் (அக.நி.); fragrance, pleasant odour. 4. நறுமணப்புல் வகை; a fragrant grass. *"நறையு நரந்தமு மகிலு மாரமும்"* (பொருந. 238). 5. காகம் (அக.நி.); crow.

நரந்தம்[2] *narandam*, பெ. (n.) நாரத்தை பார்க்க; see nārrattai. *"நரந்தமு நாகமும் பரந்தலர் புன்னையும்"* (மணிமே. 162.).

[நார் → நர →நரந்தம்.]

நரந்தையைக் கிரேக்க வணிகர்கள் Norange என்று கூறுவர். Orange என்று வழங்கு வதாகப் பாவாணர் கூறுகிறார்.

நரந்தை *narandai*, பெ. (n.) 1. கொற்றான் (திவா.); parasitic leafless plant. 2. கிச்சிலி; orange

ம., நரந்த.

நரநர *naranara*, பெ. (n.) ஒலிக்குறிப்புச் சொல்; onom. expr of words.

[நர + நர.]

நரநாரணர் *nara-nāraṇar*, பெ. (n.) நர-நாராயணர் பார்க்க; see *nara-nārāyaṇar* *'நரநாரணரா யுலகத் தறநூல் சிங்காமை விரித்தவன்'* (திவ். திரியதி. 10: 6: 1.).

[நரன் + நாரணர்.]

நரநாராயணர் *nara-nārāyaṇar*, பெ. (n.) திருமால் பிறப்பியமான இருமுனிவர்; the two sages naran and Nārāyaṇan, considered as incarnations of Visṇu

[நரன் + நாராயணர்.]

[நரன் + அயணன் → நாராயணன். நாராயணன் → நாராயணர்.]

நரப்பாக்கம் *nara-p-pākkam*, பெ. (n) திருவள்ளூர் மாவட்ட ஊர்; a village in Tiruvaḷḷūr dt.

[நரம் + பாக்கம்.]

நரப்பிரதிட்டை *nara-p-piradiṭṭai*, பெ. (n) மக்களால் நிறுவப்பட்டது; that which is established by human agency.

[நரம் + skt. பிரதிட்டை.]

நரப்பு *narappu*, பெ. (n) *நரம்பு* பார்க்க; see *narambu.*

[நரம்பு → நரப்பு.]

நரப்புக்கருவி *narappu-k-karuvi*, பெ. (n.) நரம்புக்கருவி பார்க்க; see narambu-k-karuvi. *"துளைக் கருவியானும் நரப்புக் கருவி யானும்"* (சிலப். 5: 35: உரை);

[நரம்பு → நரப்பு + கருவி.]

நரப்புச்சிலந்தி *narappu-c-cilandi,* பெ. (n.) *நரம்புச் சிலந்தி* பார்க்க; see *narambu-c-cilandi.*

[நரம்பு + சிலந்தி.]

நரபதி *nara-padi,* பெ. (n.) (மக்கட்குத் தலைவன்) அரசன்; king, as lord of men. "ஒளிறுவே ணரபதி நகரம்" (சீவக.1617.) 2. சோழவரசர், விசய நகர வேந்தரின் பட்டப்பெயர் (தக்கயாகப். 9 விசேடக் பக்.); title of cōḻa and vijayanagara king

[நரர் + பதி.]

நரன் = மனிதன். பதி : தலைவன்.

நரபலி *nara-bali,* பெ. (n.) மக்கட்பலி; human sacrifice "*இச்சையி னரபலியிட்ட தலையை*" (அரிச். 4. விவாக. 121.).

[நரன் + பலி.]

நரபாலன் *nara-bālaṉ,* பெ. (n.) *நரபதி* பார்க்க; see *narabadi.* "*கடல்புடை சூழ்படி நரபாலரை*" (கம்பரா. பரசு. 21.).

[நர + பாலன்.]

நரபுடம் *nara-puḍam,* பெ. (n.) ஐம்பது வரட்டிகளால் இடப்படும் ஒருவகை எரிப்புத் திட்டம் (சங்.அக.); unit of heat produced by burning 50 cowdung cakes, used in calcining medicines.

நரம் *naram,* பெ. (n.) மனிதப்பிறவி; human being "*நரத்திலும் பிறத்தி நாத*" (திவ். திருச்சந். 29.).

த.நரம்+Skt nara.

[நரன் : மாந்தன். நரன் → நரம் நரம்= மாந்தப்பிறவி (த.வ. 99.).]

ஆறாம் அறிவில் சிறந்த மாந்தப்பிறப்பு, நரம்பு மண்டிலத் தலைமையான மூளை, நரம்பியலால் உயர்வதால் தரப்பட்ட தகுபெயர்.

நரம்படுத்த *narambaḍutta,* பெ. (n.) நரம்புக்குரிய; nervous neural.

[நரம்பு + அடுத்த.]

நரம்படைப்பு *narambaḍaippu,* பெ. (n.) நரம்புத்தடை; obstruction of nervous

[நரம்பு + அடைப்பு.]

நரம்பமைப்பியல் *narambamaippiyal,* பெ. (n.) நரம்பு மண்டிலம் பற்றிய அறிவியல்; neuro-physiology.

[நரம்பு + அமைப்பியல்.]

நரம்பழற்சி *narambaḻarci,* பெ. (n.) நரம்பின் விறைப்பால் உடம்பினுள் ஏற்படும் உள்ளழற்சி; inflammation of body due to nerves irritablity.

[நரம்பு + அழற்சி.]

நரம்பற்ற *narambaṟṟa.* கு.பெ.எ. (adj.) வலிமையற்ற; having no strength sinewless.

[நரம்பு + அற்ற.]

நரம்பன் *narambaṉ,* பெ. (n.) 1. புகையிலை வகையு ளொன்று; a kind of tobacco. 2. மெலிந்து நரம் பெழும்பிய உடலுள்ளவன்; a thin or meagre

and emaciated person. 3. நரம்புவலிமை யுடையவன்; a man of nervous strength.

[நரம்பு + அன்.]

நரம்பாண்மை *narambāṇmai,* பெ. (n.) நரம்பாற்றல்; nerve power. (சா.அக.)

[நரம்பு + ஆண்மை.]

வலிமை சான்ற நரம்பினன்.

நரம்பாணி *narambāṇi,* பெ. (n.) தலைமீதுள்ள தோலோடு இணைந்த, முடிஇறைச்சி; skin on the top of the head. (சா.அக.)

[நரம்பு + ஆணி]

நரம்பாய்வுநூல் *narambāyvu-nūl,* பெ. (n.) நரம்புமண்டல அமைப்பாய்வு நூல்; neurology.

[நரம்பு + ஆய்வு + நூல்.]

நரம்பாற்றல் *narambāṟṟal,* பெ. (n.) நரம்பினது வலிமை; nerve power.

[நரம்பு + ஆற்றல்.]

நரம்பி *narambi,* பெ. (n.) 1. ஒல்லியான உடலுள்ளவள்; a slender woman having raised veins 2. நரம்பு வலிமையுடையவள்; a woman with nerve energy.

[நரம்பு + இ.]

"இ" – பெண்பால் குறித்த சொல்லாக்க ஈறு.

நரம்பிசிப்பு *narambiśippu,* பெ. (n.) *நரம்பிழுப்பு* பார்க்க; see *narambiḻuppu*

[நரம்பு + இழுப்பு → இசுப்பு.]

இசுப்பு → இசிப்பு.

நரம்பிசிவு *narambiśivu.* பெ. (n.) நரம்பின் அளவு குன்றுதலால், உடம்பிலுண்டாகும் இசிவு அல்லது வலிப்பு; fits, apoplexy

[நரம்பு + இசிவு.]

பிறவினை தசைநார் சுருண்டு இழுக்கை. இசிப்பு என்பதற்கு, இசிவு தன்வினையாதல் காண்க.

நரம்பியல் *narambiyal.* பெ. (n.) நரம்புக் கூறுகளைப் பற்றியவை; neurology.

[நரம்பு + இயல்.]

நரம்புகளின் அமைப்பையும், செயல் பாடுகளையும் நோய்களையும் பற்றிய மருத்துவத்துறை.

சாம்பசிவம் மருத்துவ அகரமுதலியிற் கூறியவாறு, உடம்பிலுள்ள 72,000 நரம்புகளின் அமைப்புகளையும், நரம்புகளிலுண்டாகும் நோயின் தன்மைகளையும், அந் நோய்களைக் களைவதற்குரிய மருந்துகள் பற்றிய ஆய்வுகளையும், இயம்பும்இயல், நரம்பியல் எனப்படும்.

நரம்பியல்துறை *narambiyal-tuṟai,* பெ. (n.) நரம்புத்தொடர்பானநோய், அதைப் போக்கும் மருந்துகள் பற்றிய ஆய்வுத்துறை; the department of neurology

[நரம்பியல் + துறை.]

நரம்பியல்நிபுணர் *narambiyal-nibuṇar,* பெ. (n.) நரம்பியல் வல்லுநர் பார்க்க; see narambiyal-vallunar

மறுவ. நரம்பியல் திருவோன்.

[நரம்பியல் + Skt நிபுணர்.]

நரம்பியல்பண்டுவம் *narambiyal-paṇḍuvam,* பெ. (n.) நரம்புத்தொடர்பான நோய்களுக்கு செய்யப்படும் மருத்துவம்; neurological treatment.

[நரம்பியல் + பண்டுவம்.]

நரம்பியல்மருத்துவர் *narambiyal-maruttuvar,* பெ. (n.) நரம்பியல் பண்டுவம் செய்யும் மருத்துவர்; neruological doctor.

[நரம்பியல் + மருத்துவர்.]

நரம்பியல்வல்லுநர் *narambiyal-vallunar,* பெ. (n.) நரம்புத்தொடர்பான நோய்களையும், அதைத் தீர்க்கும் மருந்துகளையும், அறியும் வல்லமையுள்ளவன்; neurological expert

[நரம்பியல் + வல்லுநர்.]

நரம்பிலி *narambili,* பெ. (n) கருந்தும்பி; south india pine

[நரம்பு + இலி.]

நரம்பிழு-த்தல் *narambiḻu-,* 4செ.கு.வி (v.i.) வீணைக்கு நரம்பிட்டுச் கிட்டுதல்; to tie string to viṇai.

[நரம்பு + இழு-.]

நரம்பிழுப்பு *narambiḻuppu,* பெ. (n) 1. உடம்பின் நரம்பு, மேலே இழுத்துக் கொள்ளுகை; sterching of the nerves of the body cantraction of the nerves of the body 2. வலிப்பு; convulsion. 3. தசைநார் சுருட்டிக் கொள்ளுகை; contraction of muscular fibres. (சா.அக.).

[நரம்பு + இழுப்பு.]

நரம்பிழைமம் *narambiḻaimam,* பெ. (n.) நரம்பு வலிவிழந்து, சுருண்டு கொள்ளல்; contraction of the nerves-neurine.

[நரம்பு + இழைமம்.]

நரம்பிளை-த்தல் *narambiḷai-,* 4செ.கு.வி. (v.i.) நரம்பு ஆற்றல் இழத்தல்; to prostrate the nerves.

[நரம்பு + இளை-.]

நரம்பு முற்றிலும், தன் வலிவிழந்து களைப்புறுதல்.

நரம்பிளைப்பு *narambiḷaippu,* பெ. (n.) நரம்பு வலிமை குன்றுகை; nerves debility.

[நரம்பு + இளைப்பு.]

ஊட்டச்சத்து குறைவினாலும், எதிர்பாராத நோய்களின் தாக்கத்தாலும், உடல் நரம்புகளிலேற்படும் சோர்வு.

நரம்பின்நார் *narambiṉ-nār,* பெ. (n) நரம்பிலுள்ள நார் போன்ற பொருள்; nerve fibre.

நரம்பின்மறை *narambiṉ-maṟai,* பெ. (n) யாழ்நூல்; treatise on stringed instruments. *"இசையொடு சிவணிய நரம்பின் மறைய"* (தொல்.எழுத்.33.).

[நரம்பின் + மறை.]

நரம்பு[1] *narambu,* பெ. (n) 1. மூளையிலிருந்து உடலின் பல பாகங்களுக்கும் உணர்வுகளைக் கொண்டு செல்லும் மெல்லிய இழை; nerve, tendon *"நரம்பெழுந்து நல்கூர்ந்தாராயினும்"* (நாலடி,153.). 2. அரத்தக்குழாய்; vein, blood-vessel இறுக்கிப்பிடித்து ஊசி போடுவதற்கு ஒரு நரம்பும் கிடைக்கவில்லை (இக்.வ).

3. யாழ்நரம்பு; catgut, chord, string of a lute. *"வடிநரம் பிசைப்பபோல்"* (கலித்.36.) 4. இலைநரம்பு; இலையின் அடிப்பரப்பில் காணப்படும் நீரைக் கொண்டுசெல்லும் மெல்லிய இழை போன்ற பகுதி; fibre, as of leaves, tendril of a vine. 5. வில்லின்நாண் முதலியன (பிங்.); string, as of a bow. 6. பலா முதலிய பழங்களில், உள்ளிருக்குந் தண்டு. (வின்.); continuation of the stem through the jackfruit, custared apple and other fruits. 7. நார்; fibre, sinew. 8. நாடி(வின்.) பார்க்க; see nāḍi.

மறுவ. தசைநார்.

தெ., நரமு,துளு க., நர.நரவு ம., நரம்பு கொலாமி., நரம். பார்சி., நர்ப். கொண்டி., நரல்., நரலுக., கொண்டா., நரம். குவி நரோமி., கூர்க்., நரி மால்டோ., நரு.

த. நரம்பு → L nervus., Greek. neuron., Eng. nerve.

தமிழிலுள்ள நரம்பு என்ற சொல், இலத்தீனம், கிரேக்கம், ஆங்கிலம் போன்ற மொழிகளில், முதனிலை மாறாது பயின்று வழங்கும் பாங்கினை, மேற்குறித்த எடுத்துக்காட்டுகள், தெளிவுறுத்து கின்றன.

[நள் + நாளம் → நாரம் → நரம்பு.]

(முதல் தாய்மொழி பக்.2–78)

ஒருகா. *[நார் + அம்பு → நாரம்பு → நரம்பு.]*

தோன்றற்கருத்தினின்று தோன்றிய துளைத்தற் கருத்துப்பொருளே, நரம்பு என்னுஞ் சொல்லின் வேரடியாகும். ('யா'–ப.அருளி– பக்.223.).

நரம்பின் அமைப்பு, செயற்பாடு, வகைமை பற்றிச் சா.அக. கூறுவது,

மூளையிலும், முதுகுத்தண்டுக்கொடியிலு மிருந்து கிளைத்துச்செல்லுவதும், சிறிய கயிறு போன்ற தோற்றமுடையதுமான கொடியே, நரம்பு எனப்படும். இக் கொடிகள், மாந்தவுடம்பின், அனைத்துப் பகுதிகட்கும், கொப்புக்கொப்பாக, கூந்தல் விட்டுக் கிளைத்துச் செல்லுந் தன்மைத்து. இவை, நுண்ணிய நார்களால் ஆகியவை. உணர்ச்சியை ஒரு பகுதியிலிருந்து, மற்றொரு பகுதிக்குக் கொண்டு செல்லும் இயல்பின.

மாந்தனின் உடலில் 72000 நரம்புகள் அமைந்துள்ளன என்று, உடற்கூற்று வல்லுநர் உரைப்பர். வகைமை வருமாறு:–

1. கேள்வி நரம்பு 8 & இணை (சோடி).
2. தொடுவுணர் (பரிச) நரம்பு.
3. வடிவ (ரூப) நரம்பு.
4. நாற்ற (கந்த) நரம்பு.
5. பார்வைநரம்பு.
6. வெப்ப (உரும) நரம்பு.
7. (விசர்க்க) இரட்டை நரம்பு.
8. ஒற்றுணர்வு நரம்பு.
9. அழற்சி நரம்பு.
10. இயக்க (சலன) நரம்பு.
11. பெரு நரம்பு.
12. வளி நரம்பு.
13. துரித (செயல்) நரம்பு.
14. கசேரு நரம்பு.
15. எழுச்சி நரம்பு.

உடலுறுப்புகளின் அடிப்படையில் அமைந்த நரம்பு வகை:–

1. மூளைநரம்பு.
2. தலைநரம்பு.
3. முகநரம்பு.
4. நெற்றிநரம்பு.
5. கண்ணிறப்பை நரம்பு.
6. நாசிநரம்பு.
7. கன்னப்பொறி நரம்பு.
8. உண்ணாக்கு நரம்பு.
9. கன்னநரம்பு.
10. வெளிக்காது நரம்பு.
11. உட்காது நரம்பு.
12. கழுத்துநரம்பு.
13. தோள் நரம்பு.
14. கைநரம்பு.
15. முதுகு நரம்பு.

16. முள்ளந்தண்டு நரம்பு.
17. நுரையீரல் நரம்பு.
18. ஈரல்நரம்பு.
19. நெஞ்சாங்குலை நரம்பு.
20. வயிற்றுநரம்பு
21. விலாநரம்பு.
22. இடுப்பு நரம்பு.
23. தண்டுநரம்பு
24. கடிதடநரம்பு.
25. தொடை நரம்பு.
26. உள்ளங்கால் நரம்பு.
27. அரத்தநரம்பு.

நரம்பு[2] *narambu,* பெ. (n.) தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என்னும் ஐவகை, இசைக் கருவிகளுள் ஒன்று; the five kinds of musical instruments, viz., tōṟkaruvi, tuḷai-k-karuvi, narappu-k-karuvi, kañja-k-karuvi, miḍaṟṟu-k-karuvi.

[நூர் → நர → நரம்பு.]

மெல்லிய இழைகளைக் கொண்டு செய்யப்படும், இசைக்கருவிகள்.

நரம்புஉணர்வுக்கலம் *narambu-uṇarvu-k-kalam,* பெ. (n.) *தொடுவுணர் நரம்பு* neuro sensory cell.

[நரம்பு + உணர்வு + கலம்.]

நரம்புக்கட்டி *narambu-k-kaṭṭi,* பெ. (n.) நரம்பில் எற்படும் தசைவளர்ச்சி; neuroma.

[நரம்பு + கட்டி.]

நரம்புக்கட்டு *narambu-k-kaṭṭu,* பெ. (n.) திவவு. (திவா.); bands of catgut in a yāḻ

[நரம்பு + கட்டு.]

நரம்புக்கட்டை *narambu-k-kaṭṭai,* பெ. (n.) *நரம்புக்கடை* பார்க்க; see *narambu-k-kaḍai.*

[நரம்பு + கட்டை.]

நரம்புக்கடுப்பு *narambu-k-kaḍuppu,* பெ. (n.) நரம்பு நோய்வகை; a kind of neuralgia. (M.L.)

[நரம்பு + கடுப்பு.]

நரம்புக்கடை *narambu-k-kaḍai,* பெ. (n.) நரம்பின் இறுதி அல்லது முடிவு; terminus of nerve. நரம்போட்டத்தின் கடைக்கோடி. நரம்பு முடிச்சின் இறுதியெல்லை. (சா.அக.)

[நரம்பு + கடை.]

நரம்புக்கயிறு *narambu-k-kayiṟu,* பெ. (n.) 1. கப்பற்பாய் தைக்குங் கருவி; cords sewed into the seams of a sail-cloth. 2. வீணை முதலியவற்றின் இழை; catgut, lute-string.

[நரம்பு + கயிறு.]

நரம்புக்கருவி *narambu-k-karuvi,* பெ. (n.) இசைக்கருவியைந்தினுள் நரம்பால் யாக்கப்பட்டது; stringed instrument, one of five karuvi.

[நரம்பு + கருவி.]

நரம்பினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட இசைக்கருவி; ஐவகை இசைக்கருவி வகையுளொன்று.



நரம்புக்கழலை *narambu-k-kaḻalai.* பெ. (n.) தசைநீர் நரம்பின் வீக்கம்; inflammation of the lymphatic vessels

[நரம்பு + கழலை.]

நரம்புக்காய் *narambu-k-kāy,* பெ. (n.) **1.** நீண்டு மெலிந்த காய் (வின்.); a long thin fruit **2.** முருங்கைக்காய் (சங்.அக.); the legume or pod of horse-radish

[நரம்பு + காய்.]



நரம்புக்காயம் *narambu-k-kāyam,* பெ. (n.) நரம்பில் ஏற்படும் புண்; neurotrauma

[நரம்பு + காயம்.]

நரம்புக்கிரந்தி *narambu-k-kirandi,* பெ. (n.) *நரம்புச்சிலந்தி* பார்க்க; see *narambu-c-cilandi.*

[நரம்பு + skt கிரந்தி.]

நரம்புக்குடைச்சல் *narambu-k-kuḍaiccal,* பெ. (n.) நரம்பு நோய்வகை; a form of neuralgia (m.l.)

[நரம்பு + குடைச்சல்.]

நரம்புக்குத்து[1]-தல் *narambu-k-kuttu-* 5செ.குன்றாவி. (v.t.) நரம்பிலுண்டாகும் வலி; to nerves pain.

[நரம்பு + குத்து-.]

நரம்புக்குத்து[2] *narambu-k-kuttu-,* பெ. (n.) நரம்பிலுண்டாகும் வலி; nervous pain

நரம்புக்கூட்டம் *narambu-k-kūṭṭam,* பெ. (n.) நரம்பு வலை; a net work of nerves (சா.அக.)

[நரம்பு + கூட்டம்.]

நரம்புக்கூடு *narambu-k-kūḍu,* பெ. (n.) உடல்முழுவதும் பரவியுள்ள நரம்புத்தொகுதி; set or series of nerves parring through the whole body.

[நரம்பு + கூடு.]

நரம்புக்கூறு *narambu-k-kūṟu,* பெ. (n.) நரம்பின் பாகுபாடு; nervous system

[நரம்பு + கூறு.]

நரம்புக்கேடு *narambu-k-kēḍu,* பெ. (n.) **1.** நரம்புத்தளர்ச்சி; nervous break down, prostration **2.** நரம்பு அழற்சிகண்டு மெலிதல்;

degeneration or deterioration of the proper nerve substance. 3. நரம்பிற்குண்டாகும் அழிவு; destruction or dissolution of nerve tissue. (சா.அக.).

[நரம்பு + கேடு.]

நரம்புக்கோளம் *narambu-k-kōḷam,* பெ. (n.) நரம்பில் உருவாகும் வீக்கம்; neurula.

[நரம்பு + கோளம்.]

நரம்புக்கோளாறு *narambu-k-kōḷāṟu,* பெ. (n) நரம்புக்கேற்படும் பல்வகைக் நோய்கள்; nerves affections or disorder or derangement (சா.அக.).

[நரம்பு + கோளாறு.]

நரம்புச்சக்தி *narambu-c-cakti,* பெ. (n) *நரம்பாற்றல்* பார்க்க; see *narambāṟṟal.* (சா.அக.).

[நரம்பு + skt.சக்தி.]

நரம்புச்சலனம் *narambu-c-calaṉam,* பெ. (n) *நரம்பழற்சி* பார்க்க; see *narambaḻarci.*

[நரம்பு + skt.சலனம்.]

நரம்புச்சன்னி *narambu-c-caṉṉi,* பெ. (n.)
1. *நரம்பிசிவு* பார்க்க; see *narambišivu.*
2. நரம்பிழுப்பு; nerve apoplexy.

ஒருகா. நரம்பு + skt. ஜன்னி.

மூளையில் ஏற்படும் குருதிப் பெருக்கினால் உண்டாகும், உணர்ச்சி, செயல் ஆகியவற்றின் இழப்பினால் வரும் இசிவு நோய்.

நரம்புச்சாலம் *narambu-c-cālam.* பெ. (n.) நரம்பின் கண்ணறை; nerve cell

[நரம்பு + skt.சாலம்.]

நரம்பின் கண்ணறையில் உண்டாகும் மாற்றம், அல்லது செயல் இழப்பு.

நரம்புச்சிலந்தி *narambu-c-cilandi,* பெ. (n)
1. தோலின் அடியில் நரம்பு போன்ற புழுவை உண்டாக்கும் ஒருவகைக் கட்டி; guinea-worm 2. நரம்பின் மேலேற்படும் புண்கட்டி (வின்.); boil on a tendon

மறுவ. நரவலி. நாரப்புண்.

[நரம்பு + சிலந்தி.]

இந் நோயின் தன்மை பற்றிச் சா.அக. கூறுவது:—

உடம்பில் முதற்கண் அரிப்பு ஏற்படும். நமைச்சல் ஏற்பட்ட இடத்தில் கொப்புளம் எழும்பி, உடைந்து, அதனுள்ளிருந்து, புழுக்கள் நூலிழை போல் நீண்டும், வெளுத்தும், நெளிந்தும் வெளிவரும் தன்மையுள்ள, ஒரு வகைச் சிலந்திப் புண். இதில், உருவான புழுக்கள் அறுபடாது விழுவது நலம். அறுபட்டு விழுந்தால், சிலந்தியில் மிகு வீக்கம் ஏற்படும். வலி மிகுதியாகும்.

இப் புழுக்கள் சருகு ஊறிய குளம், குட்டை, கிணறு முதலிய நீர்நிலைகளில் மிகுதியாகக் காணப்படும். மாசுபடிந்த குளம், குட்டைகளில், உள்ள தண்ணீரைக் குடிக்கும்போதும், குளிக்கும் போதும், மாந்தர்தம் வாய் வழியாகவும், மயிர்க்காலின் வழியாகவும் உட்சென்று, கால் அல்லது பாதங்களைத் தாக்கும், தாக்கிய பகுதியில் தீக்கொப்புளம் போல், நீர்க்கட்டிகள் எழும்பும்.

இக் கொப்புளங்கள் உடையுங்கால், 20 முதல் 30 (அங்குலம்) விரற்கிடை நீளமுள்ள புழுக்கள் வெளிப்படும். பெண்களைக் காட்டிலும், ஆண்களுக்கு இக் கொப்புளங்கள் மிகுதியாக ஏற்படும். அரிசிச்சோறு, இதளியம் (பாதரசம்),

இரண்டையும் அரைத்து, இக் கலவையுடன் வாழைப்பழம், பெருங்காயம் போன்றவற்றைச் சேர்த்து, மசித்துக் கட்டினால் ஆறும்.

நரம்புச்சிலந்திப்புழு *narambu-c-cilandi-p-pul̤u,* பெ. (n.) நரம்புக்கட்டிக்குள் உருவாகும் புழு; guinea-worm.

[நரம்புச்சிலந்தி + புழு.]

நரம்புச்சுருக்கம் *narambu-c-curukkam,* பெ. (n.) நரம்புகள் முடிச்சுகளாகச் சுருங்கும் தன்மை; a morbid enlargement knotty in shape

[நரம்பு + சுருக்கம்.]

நரம்புச்சுருட்டல் *narambu-c-curuṭṭal,* பெ. (n.) *நரம்புச்சுருட்டு* பார்க்க; see *narambu-c-curuṭṭu.*

[நரம்பு + சுருட்டல்.]

நரம்புச்சுருட்டு[1] *narambu-c-curuṭṭu,* பெ. (n.) அரத்தத் தேக்கத்தினால் காணும் நரம்பு முடிச்சு; a varicose condition of the veins due to obstruction is the free passage of blood. (சா.அக.).

[நரம்பு + சுருட்டு.]

நரம்புச்சுருட்டு[2] *narambu-c-curaṭṭu,* பெ. (n.) 1. நரம்புச்சுற்று (இங்.வை.); varicose veins, varix 2. நரித்தலை வாதம்; stiff joint, Synovitis.

[நரம்பு + சுருட்டு.]

நரம்புச்சுருட்டை *narambu-c-curuṭṭai,* பெ. (n) *நரம்புச்சுருட்டு (இ.வ.)* பார்க்க; see *narambu-c-curuṭṭu.*

[நரம்பு + சுருட்டை.]

நரம்புச்சுளுக்கு *narambu-c-cul̤ukku,* பெ. (n.) நரம்புப் பிறழ்ச்சி (வின்.); sprain.

[நரம்பு + சுளுக்கு.]

சுள்ளென்று வலிப்பது, நரம்பில் விழுந்த அடியால் வருவதே. இடமாற்றம் இராது என்பது, புதுமுறை மருத்துவப் பார்வை.

நரம்புச்சுற்று *narambu-c-cuṟṟu,* பெ. (n) நரம்பின் வீக்கம்; varicose veins, varix (M.L.)

[நரம்பு + சுற்று.]

நரம்புச்சூலை *narambu-c-cūlai,* பெ. (n.) நரம்புக்குத்து; nerves pain

[நரம்பு + சூலை.]

நரம்புச்சோர்வு *narambu-c-cōrvu,* பெ. (n.) 1. நரம்புத்தளர்ச்சி; nerves prostration. 2. *நரம்பிளைப்பு* பார்க்க; see *narmbil̤aippu.* (சா.அக.).

[நரம்பு + சோர்வு]

நரம்புசன்னி *narambu-šaṉṉi,* பெ. (n) 1. இழுப்பு நோய்; tetanus, convulsions 2. நரம்பிழுப்பு பார்க்க; see narambil̤uppu

மறுவ. இசிவுநோய், நரம்பிழுப்பு.

நரம்புசார்உளவியல் *narambu-šār-ul̤aviyal,* பெ. (n.) நரம்பு சார்ந்து வரும் உள்ளத்து இயல்பு; neuro psychology.

நரம்புத்தடிப்பு *narambu-t-taḍippu,* பெ. (n.) *நரம்புக் கழலை* பார்க்க; see *narambu-k-kaḻalai.*

[நரம்பு + தடிப்பு.]

நரம்புத்தலைவலி *narambu-t-talaivali,* பெ. (n.) நரம்புக்கோளாறினால் ஏற்படும் ஒற்றைத் தலைவலி; a nervous affection marked by a periodic head-ache. (சா.அக.).

[நரம்பு + தலைவலி.]

நரம்புத்தளர்ச்சி *narambu-t-taḷarcci,* பெ. (n) நரம்பிலுண்டாகும் உறுதிக்குலைவு; nervous debility

[நரம்பு + தளர்ச்சி.]

இந் நோயினை எளிதில் கண்டுபிடிக்க இயலாது. உடலில் உண்டாகும் மிகுகளைப்பும், ஆற்றல் குறைவும், இதன் அறிகுறியாகும். நரம்புத் தளர்ச்சியின் விளைவால், கட்டுப்பாடின்றி உடலுறுப்புகளில், நடுக்கம் ஏற்படும். தூக்க மின்மையும் இந் நோயின் அறிகுறியென்று, சா.அக. கூறும்.

நரம்புத்தாபிதம் *narambu-t-tābidam,* பெ. (n.) நரம்பிற்குண்டாகும் அழற்சி; inflammation of a nerve. (சா.அக.).

[நரம்பு + skt.*தாபிதம்.]*

நரம்புத்திடம் *narambu-t-tiḍam,* பெ. (n.) நரம்பின் உறுதி; strength the specific energy peculiar to the nervous system

[நரம்பு + திடம்.]

நரம்புத்திரட்சி *narambu-t-tiraṭci,* பெ. (n.) நரம்பு முடிச்சினைப்போன்று சுருண்ட உருண்டை; a knot like mass of grey nervous matter forming a centre from which fibres radiate (சா.அக.).

[நரம்பு + திரட்சி.]

நரம்புத்திருகு *narambu-t-tirugu,* பெ. (n.) நரம்புமுறுக்கம்; twisting of the veins. (சா.அக.).

[நரம்பு + திருகு.]

நரம்புத்துடிப்பு *narambu-t-tuḍippu,* பெ. (n.) நரம்புநோய்; neuralgia (M.L.)

[நரம்பு + துடிப்பு.]

நரம்புத்தேர்ச்சி *narambu-t-tērcci,* பெ. (n.) நரம்பு வளர்ச்சி; development of nerve tissue (சா.அக.).

[நரம்பு + தேர்ச்சி.]

நரம்புத்தோற்றம் *narambu-t-tōṟṟam,* பெ. (n.) 1. நரம்பின் எழுச்சி; dilatated condition of the vein 2. இறப்பின் அறிகுறி; a symtom of death. (சா.அக.).

[நரம்பு + தோற்றம்.]

நரம்புநடுக்கம் *narambu-naḍukkam,* பெ. (n.) நரம்பினை நடுங்கச் செய்யும் ஒரு நோய்; morbid nervousness with physical unrest. (சா.அக.).

[நரம்பு + நடுக்கம்.]

நரம்புநரை *narambu-narai,* பெ. (n.) நரம்பிலுள்ள சாம்பல் நிறமான பொருள்; the grey matter of the nerves. (சா.அக.).

[நரம்பு + நரை.]

நரம்புநார் *narambu-nār,* பெ. (n.) நரம்பிலுள்ள நார்போன்ற பொருள்; nerve-fibre. (சா.அக.).

[நரம்பு + நார்.]

நரம்புநீக்கல் *narambu-nikkal,* பெ. (n.) உடம்பிலிருந்து நரம்பை அகற்றுதல்; excision of a part of a nerve. (சா.அக.).

[நரம்பு + நீக்கல்.]

நரம்புநூல் *narambu-nūl,* பெ. (n.) மீன்வலைபின்ன உதவும் நெகிழி நூல்; nylon thread used for fishing net. "***வலைபின்ன நரம்புநூல் வாங்கிவா***" (உ.வ.).

[நரம்பு + நூல்.]

நரம்புநோய் *narambu-nōy,* பெ. (n.) நரம்பைப்பற்றி வரும் நோய் வகை; disease of the nervous system (M.L.).

[நரம்பு + நோய்.]

நரம்புநோய்ச்சிகிச்சை *narambu-nōy-c-cigiccai,* பெ. (n.) நரம்பு நோய்களுக்குச் செய்யும் மருத்துவப் பண்டுவம்; treatment of nervous diseases-neuriatry.

[நரம்பு + நோய் + skt. *சிகிச்சை.]*

skt. *சிகிச்சை → த.பண்டுவம்.*

நரம்புநோவு *narambu-nōvu,* பெ. (n.) *நரம்புநோய்* பார்க்க; see *narambu-nōy.*

[நரம்பு + நோவு.]

நரம்புப்பல் *narambu-p-pal,* பெ. (n.) நரம்பின் வீக்கம்; varicose veins (M.L.).

[நரம்பு + பல்.]

நரம்புப்பிசகு *narambu-p-piśagu,* பெ. (n.) நரம்புச்சுளுக்கு; nerves sprain.

[நரம்பு + பிசகு.]

நரம்புப்பிடிப்பு *narambu-p-piḍippu,* 1. உடலிலுள்ள பொருத்துகள் நீட்டி முடக்க முடியாமலிருக்கை; stiffness of joins. 2. இழுப்பு; spasm.

[நரம்பு + பிடிப்பு.]

நரம்புப்பிணைப்பு *narambu-p-piṇaippu,* பெ. (n.) நரம்புகள் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டிருக்கை; nerves or vessels intervoven as twined together net work of nerves or vessels. (சா.அக.).

[நரம்பு + பிணைப்பு.]

நரம்புப்பிறழ்ச்சி *narambu-p-piralcci,* பெ. (n.) *நரம்புப்பிசகு* பார்க்க; see *narambu -p-piśagu*

[நரம்பு + பிறழ்ச்சி.]

நரம்புப்பின்னல் *narambu-p-pinnal,* பெ. (n.) *நரம்புப்பிணைப்பு* பார்க்க; see *narambu-p-piṇaippu.*

[நரம்பு + பின்னல்.]

அரத்தக் குழல்கள் அல்லது நரம்புகள், வலைபோல் பின்னிக் கொண்டிருக்கை.

நரம்புப்புடைப்பு *narambu-p-pudaippu*, பெ. (n.) நரம்பு வீக்கம் (வின்.); swelling of the veins, dilatation of the veins, as from straining

[நரம்பு + புடைப்பு.]

நரம்புமண்டலச்சூலை *narambu-mandala-c cūlai*, பெ. (n.) 1. நரம்பு மண்டலத்தின் செயற் பாடு; nerves whose stimulation lowers. 2. ஊக்கத்தைக் குறைக்கும் நரம்புகள்; inhibits the activity of the nerve centre, inhibitory nerves of the nervous system (சா.அக.).

[நரம்பு + மண்டலம் + சூலை.]

நரம்புமண்டலம் *narambu-mandalam*, பெ. (n.) உடம்பிலுள்ள நரம்புகளின் கூறுபாடு (இங்.வை.); the nervous system.

[நரம்பு + மண்டலம்.]

நரம்புகளின் சேர்க்கை அல்லது நரம்பின் கோட்பாடு, எனினும் ஒக்கும்.

உடம்பின் தொழிலைச் சீர் படுத்தற்பொருட்டு, பல நரம்புகள் கூடுமிடம். நரம்புமண்டலம் எனப்படும். சிந்தித்தல், உணர்வுகளைப் புரிந்துகொள்ளுதல், உறுப்புக்களை அசைத்தல், போன்றவை, நரம்புமண்டலத்தின் தலையாய பணியாகும். நரம்பு, நரம்புமுடிச்சி, மூளை, தண்டுவடம், தசைநார் ஆகியவற்றை உள்ளடக்கிய அமைப்பே, நரம்புமண்டலம் என்று, சா.அக. கூறும்.

நரம்புமணி *narambu-mani*, பெ. (n.) நரம்புப்போக்கிற்கு அடிப்படையான பொருள்; any mass of nervous substances as a centre of nervous influence.

[நரம்பு + மணி.]

நரம்புமத்திமம் *narambu-mattimam*, பெ. (n.) நரம்பின் நடுவிடம்; nerve centre.

[நரம்பு + skt மத்திமம்.]

நரம்புமருந்தியல் *narambu-marundiyal*, பெ. (n.) நரம்புத் தொடர்பான நோய்களுக்கு பயன்படுத்தும், மருந்துகளைப் பற்றிய அறிவியல்; neuro-pharmacology.

[நரம்பு + மருந்து + இயல்.]

நரம்புமுடக்கம் *narambu-mudakkam*, பெ. (n.) நரம்பு முடங்கிக் கொள்ளுகை (வின்.); stiffness of tendons making it impossible to stretch one's limbs

மறுவ. நரம்புப்பிடிப்பு.

[நரம்பு + முடக்கம்.]

நோய் நீங்குவதற்காக அளவிற்கு அதிகமாகவும், தேவையற்ற நிலையிலும், உணவுக்கட்டுப்பாட்டினை மேற்கொள்வதால், இந் நோய் ஏற்படுமென்று, சா.அக. கூறும்.

இந் நோயின் விளைவால், நரம்புகள் ஒன்றையொன்று இழுத்துக்கொள்ளும்; சரிவர நடக்கவியலாது.

நரம்புமுடிச்சு *narambu-mudiccu*, பெ. (n.) நரம்பின் முடிச்சில் ஏற்படும் நோய் வகை; a kind of disease which forms nodes as the nerves.

மறுவ. நரம்புருண்டை.

[நரம்பு + முடிச்சு.]

நரம்புமுறுக்கம் *narambu-murukkam*, பெ. (n.) நரம்பு திருகிக் கொள்ளல்; twisting of nerves.

[நரம்பு + முறுக்கம்.]

நரம்புமுறுக்கேறு—தல் *narambu-muṟu-k-kēṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நரம்புக்கு கூடுதல் வலிவு அல்லது உறுதி ஏற்படுதல்; to development of the nervous energy. (சா.அக.).

[நரம்பு + முறுக்கேறு—.]

நரம்புமூலம் *narambu-mūlam,* பெ. (n.) நரம்பின் பிறப்பிடம்; nervous origin

[நரம்பு + மூலம்; நரம்பு தோன்றுமிடம்]

மூலம் = தோற்றம்.

நரம்புவலி *narambu-vali,* பெ. (n.) நரம்பு நோய்வகை; a kind of neuralgia, neuritis. (m l)

மறுவ. நரம்பூதை வலி.

[நரம்பு + வலி.]

மிகு வளித்தொல்லையா லுண்டாகும் வலி.

இதனை, நரம்புவாத வலி என்று, சா.அக. கூறும். இவ் வலியினால், நரம்பிலும், நரம்போடும் வழியெங்கும், குத்தல் ஏற்படும். விண்விண்ணென்று தெறித்து, நரம்பில் குத்தலையுண்டாக்கும், இவ் வலி மிகக் கடுமையானது.

இவ் வலி உடம்பின் பலபகுதிகளில், பற்பல காரணங்களால் ஏற்படும். நீரிழிவு, சூலைநோய், உணவிலுண்டாகும் நச்சுத்தன்மை போன்ற காரணங்களால், இவ் வலி ஏற்படும். முகம், மார்பு, தலைபோன்ற பகுதிகள் இந் நோயினால், செயலிழக்கும் என்று, சா.அக.கூறும்.

நரம்புவலிப்பு *narambu-valippu,* பெ. (n.) வலிப்பு நோய்வகை: a kind of hysteria disease.

[நரம்பு + வலிப்பு.]

நரம்பு மண்டலம் செயலிழப்பதால், உண்டாகும் வலிப்பு. இந் நிலையில் நரம்பின் முடிச்சுகளில், அளவிற்கு அதிகமான குத்தலேற்படும் என்று, சா.அக.கூறும்.

நரம்புவலிமை *narambu-valimai,* பெ. (n.) நரம்பின் உறுதி; nerve energy, nerve potential.

[நரம்பு + வலிமை.]

நரம்பின் ஆற்றல்.

நரம்புவாங்கள் *narambu-vāṅgaḷ,* பெ. (n.) *நரம்பு வாங்குகை* பார்க்க; see *narambu-vāṅgugai.*

[நரம்பு + வாங்கள்.]

நரம்புவாங்குகை *narambu-vāṅgugai,* பெ. (n.) 1. நரம்பு இழுத்துக் கொள்ளுகை; stretching of the nerves 2. நரம்பு சுருங்குகை; contraction of nerves 3. உடம்பிலிருந்து நரம்புப்பகுதியை நீக்குகை; excision of removal of a nerve or its part

[நரம்பு + வாங்குகை.]
உயிருக்கு ஊறு ஏற்படாதாவாறு, உடலில் இழுத்துக் கொண்டு, சுருங்கித் தொங்கும் நரம்பினைக் களைதல், நரம்பு வாங்குகை, எனப்படும்.

நரம்புவாங்கு—தல் *narambu-vāṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. இலை முதலிய வற்றின் நரம்பை நீக்குதல்; to strip the fibres, as from leaves, from fruits 2. துன்புறுத்துதல்; to put one in great straits. 3. குதிகாலின் நரம்பை வெட்டுதல், to cut the tendons of the heels

[நரம்பு + வாங்கு—.]

நரம்புவாங்குதல் *narampu-vāṅgudal,* தொ.பெ. (vbl.n.) *நரம்பு முடக்கம்* பார்க்க; see *narambu-muḍakkam.*

[நரம்பு + வாங்குதல்.]

மாந்தர்களுக்கு காலப்போக்கில், அகவை கூடுவதால் நரம்பு சுருங்கும். அவ்வாறு சுருங்கிய நரம்பு, கைகால்களில், சுருண்டு இழுத்துக் கொள்ளும். இந் நோய், நரம்பு வாங்குதல் என்று, சா.அக. கூறும்.

நரம்புவாதம் *narambu-vādam,* பெ. (n.) *நரம்புவலி* பார்க்க; see *narambu-vali.*

[நரம்பு + வாதம்.]

நரம்புவாயு *narambu-vāyu,* பெ. (n) 1. *நரம்புத்துடிப்பு* பார்க்க; see *narambu-t-taḍippu.* 2. *நரம்புவாதம்* பார்க்க; see *narambu-vādam*

[நரம்பு + skt வாயு.]

நரம்புவிசை *narambu-visai,* பெ. (n) 1. நரம்பின் வேகம்; agility 2. நரம்புவலு; strength of a nerve.

[நரம்பு + விசை.]

நரம்புவிறைப்பு *narambu-viraippu,* பெ. (n.) நட்டுக்கொள்ளும்படி செய்யும் நரம்பு; nerve that causes erection

[நரம்பு + விறைப்பு.]

நரம்புவீக்கம் *narambu-vīkkam,* பெ. (n.) 1. விதைவீக்கம்; epididymitis 2. *நரம்புவலி* பார்க்க; see *narambu-vali*

[நரம்பு + வீக்கம்.]

நரம்புவீச்சு *narambu-vīccu,* பெ. (n.) *நரம்புவலி (யாழ்.அக.)* பார்க்க; see *narambu-vali.*

[நரம்பு + வீச்சு.]

நரம்புவீழ்ச்சி *narambu-vīḻcci,* பெ. (n) உடம்பின் நரம்புகள் செயலற்று சோர்வடைந்து அதனால் ஏற்படும் களைப்பு; extrenic exhaustion or powerlessness, a nervous disorder marked by nervous prostration

மறுவ. நரம்புளைச்சல்.

[நரம்பு + வீழ்ச்சி.]

நரம்புவெட்டு *narambu-veṭṭu,* பெ. (n) நரம்பறுவை, நரம்புத்துணிப்பு; neurotmy

[நரம்பு + வெட்டு.]

நரம்புவெறி *narambu-veṟi,* பெ. (n.) நரம்பு நோயினால் ஏற்படும் மனப்பித்து; nervous disease complicated with mental disorder.

[நரம்பு + வெறி.]

நரம்புவேதனை *narambu-vēdaṉai,* பெ. (n) நரம்பு வலி; pain in a nerve.

[நரம்பு + வேதனை.]

நரம்புவேர் *narambu-vēr,* பெ. (n.) நரம்புத்திரள்; a mass of nerve matter.

மறுவ. நரம்புத் தொகுதி.

[நரம்பு + வேர்.]

நரம்புளைச்சல் *naram-bulaiccal,* பெ. (n) *நரம்பு வலி* பார்க்க; see *narambu-vali*

[நரம்பு + உளைச்சல்.]

நரம்புறுதி *naramburudi,* பெ. (n.) *நரம்பு வலிமை* பார்க்க; see *narambu-valimai.*

[நரம்பு + உறுதி.]

நரம்புறைப்பு *naramburaippu,* பெ. (n) நரம்பின் உறுதி; nervous strength, specific energy peculiar to the nervous system

[நரம்பு + உறைப்பு.]

நரம்பூக்கமருந்து *narambūkka-marundu,* பெ. (n.) நரம்புக் கோளாறைத் தணிவிக்கும் மருந்து; nervice

[நரம்பு + ஊக்கம் + மருந்து.]

நரம்பூதைநோய் *narambūdai-nōy,* பெ. (n.) *நரம்புவலி* பார்க்க; see *narambu-vali.*

[நரம்பூதை + நோய்.]

நரம்பூதை(வாதம்)நோய், ஒரேயிடத்தில் நிலைத்துநின்று, உடம்பின் அனைத்துப் பகுதி நரம்புகளையும், செயல் இழக்கச் செய்யும் நோய் என்று, சா.அக. கூறும்.

நரம்பெடு[1]-த்தல் *narambedu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கடுமையாக வேலை புரியச்செய்தல்; to exact work, grind 2. ஆற்றலைக் கெடுத்தல்; to reduce one's strength or pride அவன் உன்னை நரம்பெடுத்து விடுவான் (உ.வ.).

[நரம்பு + எடு-.]

நரம்பெடு[2]-த்தல் *narambedu-,* 4 செ. கு. வி. (v.i.) உடம்பு மிக மெலிந்து போதல்; to become emaciated or thin உடம்பு நரம்பெடுத்தது. (உ.வ.).

[நரம்பு + எடு-.]

நரம்பெரிச்சல் *narambericcal,* பெ. (n.) நரம்பு நோய்வகை; a kind of neuritis

[நரம்பு + எரிச்சல்.]

நரம்பெழுச்சி *narambelucci,* பெ. (n) நரம்பு எழும்பிக் காணல்; dilated or enlarged condition of a nerve or vein above the surface of the skin.

[நரம்பு + எழுச்சி.]

நரம்போட்டம் *narambōttam,* பெ. (n) நரம்பு உடம்பின் பலவிடங்களில் ஓடிப் பிரிந்து நிற்கும் தன்மை; spreading of nerves in different parts of the body

[நரம்பு + ஓட்டம்.]

நரம்போய்ச்சல் *narambōyccal,* பெ. (n) நரம்புத்தளர்ச்சியால் ஏற்படும் சோர்வு; exhaution of nervous energy.

[நரம்பு + ஓய்ச்சல்.]

நரமடங்கல் *nara-madangal,* பெ. (n.) நரசிங்க மூர்த்தி; Tirumāl, as man-lion. *"தம்பத்தின் அனகமா நரமடங்கலா யவதரித்து"* (பாகவதை.1. மாயவன, 31).

மறுவ. நரவரி.

த. நரம் → skt. nara.

[நரன் + மடங்கல்.]

நரம்புகளால் பின்னப்பட்ட தசை நார்களின் கட்டுக்கோப்பாகிய மாந்தனும், தலை மடங்கமுடியாத யானை போல் அன்றி, மடங்கல் இயல்புடைய அரிமாவும், கலந்தவுரு.

நரமாமிசபட்சணி *nara-māmiša-paṭcaṇi,* பெ. (n.) 1. மனிதவூன் தின்போன்; anthropophagist, cannibal 2. மக்களிறைச்சி தின்னும் விலங்கு; man eater, a man-eating animal, as tiger, shark

[நரன் + Skt மாமிசபட்சணி]
நரன் = மனிதன்

நரமாமிசம் *nara-māmišam,* பெ. (n) மனிதவூன்; human flesh மனித இறைச்சி தின்னும் கழுகுகள் (உ.வ.).

[நரல் → நரன் = மாந்தன். நரம் = மாந்தப் பிறவி.

நரன் → நரம் + Skt மாமிசம்.]

நரமேதம் *nara-mēdam,* பெ. (n.) நரபலியிட்டுச் செய்யும் வேள்வி (யாகம்); human sacrifice *"அந்த நரமேதமக மியற்றுதற்கு"* (பாரத இராசசூ. 14).

[நர + Skt. மேதம்.]

நரல்[1]–லுதல் *naral-,* 5செ.கு.வி (v.i) 1. ஒலித்தல்; to sound, make noise, creak, roar *"ஆடுகழை நரலும் சேட்சிமை"* (புறநா.120). 2. கத்துதல்; to low, as cows, to caw, as crows, to hum, as many voices, to cry. "வெண்குருகு நரலவீசும் நுண் பஃறுவலைய" (அகநா:14). 3. பேசுதல்; to speak, to tell

க. நரல்.

ஒருகா. ஞரல் → நரல் → நரல்(லு)–.

நரல்(லு)–தல் பேசுதல். ஒலித்தல், கத்துதல் போன்ற நிலைகளில் பயிலும். விலங்குகள், ஒலி எழுப்புந் தன்மையின. நரலுதல் என்பது, அஃறிணை எழுப்பும் ஒலியைக்குறிக்கும். பேசுதல்–கிளி, பூவை (நாகணவாய்ப்புள்) பழக்கப்படுத்திச், சில சொல் பேசுதல்.

செப்பமுடன் பலுக்கிப்பேசும், செம்மாந்த அருட்கொடையினை, மாந்தனுக்கே, இறைவன் ஈந்துள்ளான். செம்மாந்து ஒலித்து, ஒரே சீராகப் (பலுக்கிப்) பேசுதலே, நரலுதல்.

நரல்[2] *naral* பெ. (n) காய்ந்த குப்பை (செத்தை); dry rubbish, as dead leaves

நரல்[3] *naral,* பெ. (n) மக்கள் கூட்டம்; crowd of people

[நரல் → நரல்]

பேச்சொலியும், சிரிப்பொலியும் எழுப்பும் மாந்தரைக் குறித்த சொல்.

நரல்வதி *naral-vadi,* பெ. (n) மஞ்சள்; tu-meric

[நரல் + வதி.]

நரலுதல் = ஒலிஎழ அரைத்தல். அரைத்துப் பூசும்இயல்பு, வதிந்து கிடத்தலின், மஞ்சளைக் குறித்தது.

நரல்வு *naralvu,* பெ. (n.) 1. ஒலிக்கை; sounding, roaring 2. எடுத்தலோசை (பிங்.); high pitch. 3. யாழின் உள்ளோசை (பிங்.); vibrating sound of a lute 4. உள்ளோசை; murmur

[ஞரல் → நரல் = ஒலி. நரல் → நரல்வு = ஒலிக்கை.]

நரலுகை *naralugai,* பெ. (n.) 1. பேசுகை; speaking 2. ஒலிக்கை; sounding

நரல் = ஒலி.

[நரல் → நரலு → நரலுகை.]

நாட்டு மக்களின், நாகரிகப் பண்பாட்டு அளவு கோல், மொழியே. கத்திப் பேசுவதாலும், சிரிப்பதாலும், மாந்தன் 'நரன்' என்று பெயர்பெற்றான். விலங்குகள் கத்துந் தன்மையன. மாந்தனே, வாய் அங்காந்து பேசும் பேறுபெற்றவன். நரல் எனும்சொல் பேச்சு, ஒலி, கத்துகை என்னும் பொருட்பாட்டில்பயிலும். நரலுகை என்னுஞ் சொல், பேசுகை, ஒலிக்கை என்னும் பொருளில் பயின்று வருதல் காண்க.

நரலை *naralai,* பெ. (n.) 1. கடல் (திவா.); sea. as roaring "*நரலையுட் டனிபுக் காடார் மடந்தைய ரென்ப*" (திருவாலவா9.3). 2. மதிலுறுப்புக்களுளொன்று; (பிங்.); a particular section of a fortification 3. ஒலி; roaring. "*நரலைப்பெரு வேலையெல்லாம்*" (கம்பரா. வரைக்காட்சி,71).

[நரல் → நரலை.
நரலை = ஒலியெழுப்பும் கடல்.]

நரலோகம் *naralōgam,* பெ. (n.) நிலவுலகம் (திருக்கலம்.6.உரை); earth, as the world of men 2. நரவுலகு பார்க்க; see nara-v-ulagu.

[நரன் + த. உலகம் → Skt. லோகம்.]

மாந்தர் வாழும் உலகம்.

நரவதி *naravadi,* பெ. (n.) மஞ்சள்; turmeric

நரவம் *naravam,* பெ. (n.) அனிச்ச மரம்; a kind of flowering plant whose flowers so very sensitive that they droop when smelt

நரவம்பூ *nara-v-am-pū,* பெ. (n.) *அனிச்சம்* பார்க்க: see *aniccam*

[நரவம் + பூ.]

நரவரி *nara-vari,* பெ. (n.) திருமாலின் தோற்றரவான நரசிம்மம்; Tirumāl, as man lion

[நரம் + அரி.]

நரவலி¹–த்தல் *nara-vali-,* 4செ.கு.வி. (v.i.) அலுத்தல், to become weary or tired, as with waiting

[நர + வலி–.]

வலித்தல் தொடருங்கால் அலுத்தல் ஏற்படுவது இயல்பு.

நரவலி²–த்தல் *nara-vali-* 4 செ.குன்றா.வி. (v.t.) *நரகலி* பார்க்க; see *naragali-.*

[நர + வலி–.]

நரவாகனம் *nara-vāgaṉam,* பெ. (n.) 1. மக்களால் சுமக்கப்படும் பல்லக்கு; palanquin, as carried on men's shoulders. "*மக்களாற் சுமக்கப் படும் வாகனம்*" "*பெரிய நரவாகனமும் பெற்றோம்*" (தனிப்பா. 216, 2). 2. ஊர்தி; vehicle of any kind. 3. குபேரனது ஊர்தி; kubēra's vehicle.

[நரன் + Skt வாகனம்.]

நரவாகனரேகை *nara-vāgaṉa-rēgai,* பெ. (n.) ஒருவனுக்குப் பல்லக்கேறும் ஆகூழைக் குறிப்பதாகக் கருதப்படும் கையிலமைந்துள்ள வரைவு; (திருவாரூ. குற. Mss). a kind of distinctive mark on the palm, belived to indicate a person's future prosperity, when he would be able to ride a palanquin

[நரம் + Skt. வாகனம் + ரேகை.]

நரவாகனன் *nara-vāganan,* பெ. (n.) குபேரன் (பிங்.); kubēran, as having a yaksan named naran for his vehicle.

[நரம் + Skt. வாகனம் → வாகனன்.]

இயக்கனது தோளினைப் பல்லக்காகக் கொண்ட, குபேரன்.

நரவானமண்டலம் *naravāna-mandalam,* பெ. (n.) மருக்காரை; common emelic nut.

[நரவான் + அ + மண்டலம்.]

நரவானரம் *naravānaram,* பெ. (n) 1. வாலில்லாக் குரங்கு; tailess monkey, more like a man. 2. பெரிய மனிதக் குரங்கு; one of the largest ape, resembled like man

[நர + வால் + நரம்.]

நரவிலங்குவிளக்கு *nara-vilangu-viḷakku,* பெ. (n.) உடற்பகுதி விலங்குபோலவும், தலைப்பகுதி மனிதர்போலவும், அமைக்கப் பட்டுக் கோயிலில் தெய்வத் திருமேனிமுன் காட்டப்பெறும், விளக்கு வகை (பரத. ஒழிபி. 41); a kind of lamp for waring before the deity in a temple.

[நரன் + விலங்கு + skt. விளக்கு.]

நரவுலகு *nara-v-ulagu,* பெ. (n.) மக்கள் வாழும் நிலவுலகு; earth, as the world of men.

[நர + உலகு.]

நரர் = மாந்தர்.

மாந்தர் வாழும் நிலமே நரவுலகு. உலகு என்னும் சொல் "லோக்" என்னும் வடசொல்லின் திரிபென்று, செ.ப.க. தமிழகரமுதலி கூறுகிறது. இஃது முற்றிலும் தவறு. இலக்கிய வழக்கு, உலகவழக்கு முதலானவற்றை அடிப்படையாக வைத்து நோக்குங்கால், 'உலகு' என்பது, தமிழ்ச் சொல்லென்று, நன்கு அறியலாம். உலகம் என்னுஞ்சொல்லின் கடைக்குறையே, உலகு என்னும் வடிவு. வள்ளுவர் பல இடங்களில், உலகு என்னுஞ் சொல்லைக் கையாண்டுள்ளார்.

(எ.டு.)

1. "பகவன் முதற்றே உலகு" (குறள்,1.).
2. "நீரின்றி அமையா துலகு" (குறள்,20.).
3. "வகைதெரிவான் கட்டேயுலகு" (குறள்,27.).
4. "பெருமை பிறங்கிற்றுலகு" (குறள்,23.).
5. "உலகவாம் பேரறிவாளன் திரு" (குறள்,215.).
6. "என்னாற்றுங் கொல்லோ வுலகு" (குறள்,211.).

உலகவழக்கிலும், உலகு என்னுஞ் சொல் மக்களிடையே பெருவழக்காகப் பெருகிக் காணப்படுகிறது. (எ.டு.) உலகளவு; உலகியல், உலகாளி; உலகழிவு.

"லோக்" என்னும் ஆரியச்சொல், "நோக்கு" என்னும் தென்சொல்லின் திரிபாகும். உலகு + அம் → உலகம். உலகு, உலகம் என்னுஞ் சொல்லிற்கு, உருண்டையானது அல்லது, சுற்றிவருவது என்பதே பொருந்தும். உலகு, உலகம் என்னுஞ்சொற்கள் மக்கள் வழக்கில், பொதுமக்களையே பெருவாரியாகக் குறித்து வழங்கி வருகிறது.

(எ.டு.) உலகென்ன சொல்லும்? உலகம் இவ்வளவுதான்! (உ.வ.)

தமிழ். உலகு → Skt லோக. OE locian. OS locon Hindi– லோக். OHG luogen. W G lok.

லோக், என்னும் ஆரியச்சொல்லிற்குப் "பார்" என்பது பொருள். தமிழில் உள்ள உலகு அல்லது உலகம் என்னுஞ் சொல்லிருந்துதான் வடமொழியாளர் "லோக" என்று, திரித்துக் கொண்டனர். பார் என்னும் மூலப்பொருளே வட மொழிப்பொருள்.

உலகுஉருண்டையானது: சுற்றிவருந் தன்மைத்து என்பது தமிழ்ப்பொருள். மக்கள் வாழும் 'நிலவுலகு' என்பது தமிழ்மொழியில் அமைந்துள்ள, வாழ்வியல் பொருளாகும். இலத் தீனத்திலும், இச் சொல், மக்கள் என்னும் பொருளில் ஆளப்படுகிறது.

(எ.டு.).த. உலகு → Skt. லோக. L vulgus (volgus.) L. vulgus = the people, common people.

நரவுலகு என்னும் சொல், செந்தமிழ்ச் சொல்லே. ஞாலமுதன்மொழிச் சொல். உலகு என்னும் சொல்லினின்று தான், வடமொழி, இந்தி, இலத்தீன் போன்றவற்றில் லோக, லோக், vulgus, போன்ற சொற்கள் பிறந்துள்ளன.

நரளி *naraḷi*, பெ. (n.) 1. கடலை (மலை.); bengal gram 2. வேர்க்கடலை; ground nut

[நரள் → நரளி.]

நரளை *naraḷai*, பெ. (n.) 1. பிரண்டை வகை (மூ.அ.); woolly heart vine vitis lanata 2. காட்டுப்பிரண்டை பார்க்க; see kāṭṭu-p-piraṇḍai. pedately seven-leaved vine.

[நரளி → நரளை.]

நரளையிலை *naraḷai-y-ilai*, பெ. (n.) புளிநற ளையிலை; a leaf of vitislanata

[நரளை + இலை.]

நரற்று—தல் *nararṟu-*, 5 செ.கு.வி. (v.i.) ஒலித்தல் (யாழ்.அக.); to produce sound

[ஞரல் → நரல் → நரற்று-.]

நரலுதல் = ஒலித்தல்→ஒலிப்பித்தல் = நரற்றுதல்.

நரலுதல் என்பது தன்வினைப்பொருள் தரும். இங்குப் பிறவினைவடிவம் தன் வினையாகி வருவதுபோல் அமைத்துள்ள. யாழ்ப்பாண அகரமுதலிக் குறிப்பு மறுபார்வை செய்யத்தக்கது.

நரற்றுவித்தல் *nararṟuvittal*, பி.வி. (cause v.) ஒலிக்கச் செய்தல்; to cause to sound

[நரல் → நரற்று → நரற்றுவித்தல்.]

இது பிறவினை. ஒலி எழும்புவதற்கு மூலகாரணியமாயிருத்தல்.

நரன் *naraṉ*, பெ. (n) 1. மாந்தன்; man, human being. *"வறிதே நிலையாத விம் மண்ணுலகின் னரனாக வகுத்தனை"* (தேவா. 934: 2). 2. அருச்சுனன்: Aruccuṉaṉ *"நரனெனு நாமமும் படைத்தோன்"* (பாரத. அருச்சுனன்றவ. 75). 3. நரனெனும் துறவி. a sage *"நரனு நாரணனு மானோம்"* (பாரத. முதற்போ. 6). 4. பதினெண் கணத்து ளொருவர் (கம்பரா. தாடகை. 26.); iyakkar padiṉeṉ-kaṇam

த. நரன்→skt nara

[நரல் → நரன் = மொழியினாலும் சிரிப்பொலியினாலும், மாந்தன் நரன் என்னும் பெயர் பெற்றிருத்தல் வேண்டும்.]

நரன் என்னும் சொல்லுக்கு, வட மொழியில் வேரில்லை; ஒலித்துப் பேசும் இயல்பினையுடையவன் மாந்தன். மொழி யினாலேயே மாந்தன் நரன் என்று. பெயர் பெற்றிருத்தல் வேண்டும்.

ஒலித்தல் → கத்துதல் → பேசுதல் இம்மூன்று நிலைகளும், மாந்தன் வாழ்வில் மொழியைத் தோற்றுவிக்கும் கூறுகளாகும்.

1. **ஒலித்தல் நிலை.** நரல் → நரலுதல்— "ஆடுகழை நரலும் சேட்சிமை" (புறம்.120). ஒலித்தல் நிலையின் வளர்ச்சியே, கத்துதல்.

2. **கத்துதல் நிலை.** "வெண்குருகு நரல வீசும் நுண்பஃறுவலைய" (அகம்.14)

3. **பேசுதல் நிலை.** நரன் → நரம் = மாந்தப் பிறவி "நரத்திலும் பிறத்தி நாத" (திவ்.திருச்சந்.29). கத்துதலின் முடிபுநிலை, பொருண்மை தோன்றப் பேசும் நிலையாகும்.

''மாந்தன் வறிதே நிலையாத விம்மண்ணுலகின் நரனாக வகுத்தனை'' (934:2).

சொன்மைநிலையிலும், பொருண்மை நிலையிலும், வடமொழியிலும், நரன் என்னும் சொல்லுக்கு, வேரில்லை என்பது கண்கூடு.

வானரம் (வால்நரம்) = வாலையுடைய மாந்தன் போன்ற விலங்கு.

"வானரமுகள" என்று சீவகசிந்தாமணிச் செய்யுள் கூறுவது காண்க.

வடமொழியாளர் "வானர" என்னுஞ் சொல்லை "நரஏவ" என்று பிரித்து, நரனைப் போன்றது என்று, பொருள் கூறுவர் (தமிழர்வரலாறு. பக்.99.)

ஒலித்தல், கத்துதல், பேசுதல் - எனும் முத்திறமொழி வளர்ச்சி நிலைகளில், முழுமை பெற்றவனே மாந்தன். நாட்டுமக்களின் நாகரிகப் பண்பாட்டு அளவுகோல் மொழியே யாதலால், மொழியை முழுமையாகப் பலுக்கிச் சொன்மை நிலையிலும், பொருண்மை நிலையிலும், நரற்றும் (ஒலிக்கும்) ஆற்றல் பெற்றவனே நரன் என்று ஓர்க.

நரன் என்னும் சொல் தூயதென்சொல் லென்று தெளிக.

நரன்னாதி *narannādi*, பெ. (n.) கடுகுரோகினி; black hellibore-Helliborus niger.

[நரன் + ஆதி.]

நரா *narā*. பெ. (n.) கன்றுகை; hardness in fruit through blight or injury. *'பழம் நராப்பிடித்துப் போயிற்று'.*

[நர + ஆ.]

நார் அற்ற நிலைக்கு உரித்தாதல்

நராங்கம் *narāṅgam*. பெ. (n.) 1. நாரத்தை; bitter orange 2. ஆண்குறி; penis. 3. முகத்தில் எழும்பும் பரு; eruptions on the face pimples.

[நர + skt.அங்கம்.]

நராங்கு-தல் *narāṅgu-*, 5 செ.குன்றாவி. (v.t.) வளர்ச்சி குன்றிப்போதல் (யாழ்ப்); to be stunted in growth.

[நருங்கு → நரங்கு → நராங்கு-.]

நராதாரை *narādārai*. பெ.(n.) மண்ணகமடந்தை; mother earth (சம.சொ.அக).

மறுவ. நிலமடந்தை.

நராதிபன் *narādiban*. பெ. (n) அரசன்; king, as lord of men. *''தென்னராதி நராதி பரானவர்''* (கலிங். 313).

[நர + Skt அதிபன்.]

நராந்தகம் *narāndagam*, பெ. (n.) இறப்பு; death

[நர + Skt. அந்தகம்.]

நரனின் வாணாளிறுதி நிகழ்வு.

நராந்தகன் *narāndagan*, பெ. (n.) 1. எமன் (மக்களையழிப்பவன்); yaman, as destroyer of human beings 2. கொடியோன்; cruel person, murderer.

[நர + Skt. அந்தகன்.]

அந்தகம் = இறுதி.
வாணாளின் இறுதிக்காலத்தே,
உடம்பிலிருந்து உயிரைக் கூறுபடுத்தும் கூற்றுவன்.

நராந்தம் *narāndam,* பெ. (n.) 1. காக்கை (சது.); crow 2. அழகிய (கத்தூரி)மான்; musk deer

[நர + அந்தம்.]

அம் = அழகு அம் → அந்து → அந்தம். அந்தம் என்பதற்கு, முடிவு என்று பேராசிரியர் பொருளுரைத்திருப்பது, அத்துணைப் பொருத்தமன்று என்று, தேவநேயர் முதன்மடலம், முதல்பகுதியில் குறித்துள்ளார்.

நராப்பற்று—தல் *narā-p-paṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) பழம் முதலியன கன்றுதலையடைதல் (வின்.); to become hard, as fruits.

[நரா + பற்று—.]

நராப்பிடி—த்தல் *narā-p-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) *நராப்பற்று* பார்க்க; see *narā-p-paṟṟu-*

[நரா + பிடி—.]

நராபோகம் *narā-bōgam,* பெ. (n.) 1. எதிர்பாராத பெருவாழ்வு (யாழ்.அக.); unexpected felicity befalling a person; windfall. 2. ஒருவன் போகமனுபவிக்கும் வாழ்நாளின் எல்லை; (இ.வ.) period of prosperity in a person's life.

[நரா + skt. *போகம்.]*

கடும்பசி முக்காலும், காமம் காலுமாக உள்ள வாழ்வின்பத்தை, உடல்நலம், பொருள் வளம் எல்லையுள் நின்று துய்த்தல் சிறப் பென்க.

நராயணன் *narāyaṇaṉ,* பெ. (n.) திருமால்; Tirumāl (vishṇu.). *"நாராயணனை நராயண னென் றேகம்பனோராமற் சொன்ன வுறுதியால்"* (தனிப்பா. 1,53, 104).

த. நரன் + skt. அயணன்.

[நர + அயணன் → நராயணன்.]

நராயணன் = மாந்தனாக இருந்து, தெய்வநிலைக்கு உயர்ந்தவன்.

நராலை *narālai,* பெ. (n.) நிரையம் (சது); hell.

[நர + ஆலை.]

ஒ.நோ. கச்சி + ஆலை = கச்சாலை.

நரி¹—தல் *nari-.* 2 செ.குன்றாவி. (v.t.) வருந்துதல்; to torture, torment. *"அரியுந்தசை தீற்றி நரியந்தொறும்"* (காஞ்சிப்பு. இருபத்தெண். 365).

[நலி → நரி.]

இது தன்வினை.

நரி²—த்தல் *nari-,* 4 செ.கு.வி. (v.i.) நரித்தன்மையடைதல்; to be foxy *"நரிகா ணரியாது நீர்.... நுங்குரல்காட்டும்"* (திருவாலவா 28, 12).

நரி என்னும் விலங்கை, குழந்தைக் கதைகளான, இந்தியாவின் பஞ்சதந்திரக் கதைகள், அரபு நாட்டின் ஈசாப் கதைகள் போன்ற நூல்களில், சூழ்ச்சி மிக்க விலங்காகக் காட்டி இருக்கிறார்கள். ஆயின், உயிரியல் வல்லுநர்கள் இதை மறுக்கிறார்கள். சூழ்ச்சியை மாந்தனுக்கு உவமையாக அமைத்துக் கொள்ளலாம்.

நரி³—த்தல் *nari-.* 4 செ.குன்றாவி. (v.t.) 1. எள்ளி நகையாடுதல்; to deride 2. இழிவாகக் கருதுதல், இகழ்ந்து கூறுதல், to despise.

இது பிறவினை.

நரி⁴—த்தல் *nari-,* 4 செ.கு.வி. (v.i.) 1. வருத்துதல்; to torment. *"திருச்சிராப்பள்ளி யென்றலுந் தீவினை நரிச்சிராது"* (தேவா. 369: 3). 2. நொறுக்குதல் (யாழ்.அக); to crush

[நெரி → நரி—.]

மேலே சொல்வது, சொல்லால் வருத்துதல். இது, செயலால் வருத்துதல் ஆகும்.

நரி5—த்தல் *nari-*, 4 செ.குன்றாவி. (v.t.) கெடுதல்; to perish. *"கருத்தீமை நரிச்சு நீங்க"* (காஞ்சிப்பு. வாணீ. 111.).

[நெரி → நரி—.]

நெரித்தல் → நரித்தல் சிலவிடத்துத் தன்வினை போல் பிறவினை வந்தியங்கும். அஃதொக்கும் இஃது. தீர்தலும் தீர்த்தலும், விடற்பொருட்டு ஆகும். (தொல்—உரி.)

நரி6—த்தல் *nari-*, 4. செ.கு.வி. (v.i.) வியத்தல்; to be perplexed

நரி1 *nari*, பெ. (n.) சிறுவிலங்கு வகை; jackal. *"காலாழ் களரி னரியடும்"* (குறள், 500). 2. புலி (வின்.); tiger. 3. நாற்றுப்பாவின மறுநாள், நீர் வடியும்படி கட்டியிழுக்கும். நரிவாலுருவமான வைக்கோற் புரிக்கருவி (நாஞ்.); a contrivance made of straw with a fox-like tail, for draining off water in a field after transplantation.

தெ., நரியடு க., து., நரி.

ம. நரி.

[நரை→நரி.]

சாம்பசிவ மருத்துவ அகரமுதலி வகைப்படுத்தும், நரிவகைகள் வருமாறு:— 1. குட்டிநரி; young jackal. 2. குள்ளநரி; cunning jackal. இந்த நரி 1 1/2 அடி உயரமுள்ளது. 3. பெருநரி; hitta jackal உடல்பருமனிலும், உயரத்திலும் நடுத்தரமானது. 4. நுழைநரி; fox. 5. குழிநரி; fox. 6. வளைநரி; fox



நரிக்கடி *nari-k-kaḍi*, பெ. (n.) நரியினால் உண்டான நச்சுக்கடி; poisonous bite of a fox

[நரி + கடி.]

நரிக்கண்டல் *narikkaṇḍal*, பெ. (n.) நிலைத்திணை வகையிலொன்று; goat horn, mangrove

மருந்துக்கும், தோல்பதனிடுவதற்கும் பயன்படும் பட்டையினையுடைய, வெப்பமண்டலச் சதுப்புநிலப்படர் நிலைத்திணை வகை.

நரிக்களா *narikkaḷā*, பெ. (n.) சிறுகளா; downy Bengal currant

[நலி → நரி + களா]

நரிக்காய்ச்சி *nari-k-kāycci*, பெ. (n.) நரியினிறங்கொண்ட, பழந்தரும் ஒருவகைப் பனை (வின்.); palmyra tree bearing fruit of a dun colour, like that of a fox

[நரி + காய்ச்சி.]

சிறிய பனங்காய்களைத் தருவதால், நரிக்காய்ச்சி என்ற பெயர் பெற்றது.

நரிக்காரம் *nari-k-kāram*, பெ. (n.) 1. பொரிகாரம், அல்லது வெங்காரம்; borax. 2. கோணாய் (ஓநாய்); jackal. 3. புலி; tiger

[நரி + காரம்.]

நரிக்கிண்டி *nari-k-kiṇḍi,* பெ. (n.) செடி வகையுள் ஒன்று; a kind of medicinal plant. நரிக்கிண்டியின் வேர்.

[நரி + கிண்டி.]

கண்புகைச்சலைப் போக்கும் என்பது, மருத்துவச்செய்தி.

நரிக்குடி *nari-k-kuḍi,* பெ. (n.) *நரித்தொம்பன்* பார்க்க; see *nari-t-tomban.*

[நரி + குடி.]

நரிக்குழி *nari-k-kuḻi,* பெ. (n.) 1. நரிவளை (வின்.); a fox hole. 2. நரிதங்கும் குழி; dwelling place of fox

[நரி + குழி.]

நரிக்குளிப்பாட்டி *nari-k-kuḷippāṭṭi,* பெ. (n.) நயவார்த்தைகளால் ஏமாற்றுபவன் (தஞ்சை.) one who deceives by soothing words.

[நரி + குளிப்பு + ஆட்டி.]

நரிக்குளிப்பாட்டு-தல் *nari-k-kuḷippāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) நயவார்த்தைகளால் ஏமாற்றுதல்; to deceive by soothing words as a jackal *"உரிமை போலவந்து நரி குளிப்பாட்டுகிறீர்"* (மதுரகவி. 47).

[நரி + குளிப்பு + ஆட்டு-.]

நரிக்குறத்தி *nari-k-kuṟatti,* பெ. (n.) நரிக்குறவன் என்பதன் பெண்பால்; a feminine of nari-k-kuṟavaṉ.

[நரி + குறத்தி.]

நரிக்குறவன் *nari-k-kuṟavaṉ,* பெ. (n.) 1. நரிபிடித்துண்ணுங் குறவர் வகையினன்; a person of the kuṟavar sub-caste, who hunts jackals for food 2. மிக்க தந்திரமுடையோன் (இ.வ.); a very cunning fellow

[நரி + குறவன்.]

சிறிய காட்டு விலங்குகளையும், பறவைகளையும் வேட்டையாடி விற்றுப் பிழைப்பவன்; ஊசி, பாசி, மணிமாலை போன்றவற்றை விற்று வாழும் நாடோடி இனத்தவன்.

நரிக்கெளிறு *nari-k-keḷiṟu,* பெ. (n.) மீன்வகை (உ.வ); a kind of fish

[நரி + கெளிறு.]



நரிக்கொம்பு *nari-k-kombu,* பெ. (n) 1. மந்திரக் கலை அல்லது செய்வினையிற் பயன் படுத்துவதும், சிறுபூமொட்டுப் போன்றிருப்பது மாகிய நரியின் கொம்பு. small bud-like horns on a jackal, of rare occurrence, considered very efficacious in magic 2. நரித்தலை மண்டையோட்டின் மேல் காணப்படும் இரண்டு குமிழ்; the two nodes or knotty protuberances on the top of the skill of a fox.

[நரி + கொம்பு.]

நரிக்கொன்றை *nari-k-konrai,* பெ. (n.) கொன்றை மரவகையுள் ஒன்று; a kind of tree.

மறுவ. மைக்கொன்றை.

[நரி + கொன்றை.]

நரிக்கொன்றை மரத்தில் இருவகையுண்டு. 1. கருங்கொன்றை அல்லது மைக்கொன்றை. 2. செங்கொன்றை.

இம்மரத்தின் இலை, பட்டை முதலானவை அனைத்தும் மருத்துவக் குணமிக்கது. உடம்பிலுள்ள அனைத்துத் தோல்நோய்களுக்கும், இம் மரப்பட்டையின் கருக்குநீர், கைகண்ட மருந்தாகும். குறிப்பாகத் தோல்தடிப்பு; தோல்பற்று. தோல்படை, யானைச்சொறி முதலான அனைத்துத் தோல்நோய் களுக்கும், இக்கருக்குநீர் சாலச்சிறந்தது.

நரிச்சல் *nariccal,* பெ. (n.) வெளவால் வகை (நாஞ்.); kind of bat

[நலி> நரிச்சு + அல்.]

நரிச்சின்னி *nari-c-cinni,* பெ. (n.) சிறுசின்னி செடி வகை; a species of copper leaf.

[நரி + சின்னி.]

நரிச்சீரகம் *nari-c-ciragam,* பெ. (n) சிறுசீரகம்; common cumin seed.

[நரி + சீரகம்.]

நரிஞ்சி *narinji,* பெ. (n) ஒருகாட்டு அவுரி; hill forest indigo

[நரி → நரிஞ்சி.]

நரித்தந்திரம் *nari-t-tandiram,* பெ. (n) நரிபோல் சூழ்ச்சிசெய்து, பிறரை ஏமாற்றுகை; jackal-collusion cunning, consipre.

[நரி + தந்திரம்.]

நல்லவர் போல் நடித்து, முதுகில் குத்தும் பண்பும், நரித்தந்திரமே.

நரித்தந்திரம்செய்-தல் *nari-t-tandiram-šey,* 1செ.குன்றாவி. (v t) சூழ்ச்சிசெய்து பிறரை ஏமாற்றுதல்; talk in a prevaricate way

[நரி + தந்திரம் + செய்-.]

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிச் சூழ்ச்சி செய்யும் பண்பு.

நரித்தல் *narittal,* பெ. (n) நொருக்குதல்; crushing.

[நெரித்தல் → நரித்தல்.]

நரித்தலை *nari-t-talai,* பெ. (n.) முழங்கால் மூட்டு; knee joint.

[நெரி → நரி + தலை.]

நரித்தலைப்பிடிப்பு *nari-t-talai-p-piḍippu,* பெ. (n.) 1. நரம்புப்பிடிப்பு; stiff joint. 2. சந்து வீக்கம்; inflammation of a joint. arthritis

[நரி + தலை + பிடிப்பு.]

மாந்தர்தம் முழங்கால், மூட்டுகளில் ஏற்படும், வீக்கம், நீர்க்கோவை, முழங்கால் சவ்வில் ஏற்படும் உளைச்சல், பிடிப்பு(வாதம்)ப் தொடர்பான நோய்கள் அனைத்தும், நரித்தலைப் பிடிப்பு எனப்பெயர்பெறும் என்று, சா.அக. கூறும்.

நரித்தலைவாதம் *nari-t-talai-vādam,* பெ. (n.) *நரித்தலை பிடிப்பு* பார்க்க; see *nari-t-talai-p-piḍippu.*

[நரித்தலை + Skt வாதம்.]

நரித்தலைவாயு *nari-t-talai-vāyu,* பெ. (n.) *நரித்தலை வாதம்* பார்க்க; see *nari-t-talai-vādam.*

[நரித்தலை + Skt வாயு.]

நரித்தொம்பன் *nari-t-tomban,* பெ. (n.) நரிக்குறவன் (இ.வ.); a person belonging to the nari-k-kuṟavaṉ

[நரி + தொம்பன்.]

நரித்தோல் *nari-t-tōl-,* பெ. (n.) நாவற்பட்டை; the bark of jaumoon tree.

[நலி → நரி + தோல்.]

நரிநவ்வல் *nari-navval,* பெ. (n.) சிறுநாவல்; small jaumoon.

[நலி → நரி + நாவில் → நவ்வல்.]

ஒ.நோ. வாவல் → வவ்வால்.

நரிநறளை *nari-naṟaḷai,* பெ. (n.) சிறுநறளை; large wooly-lobed vine.

[நரி + நறளை.]

மழைக்காலத்தில் நன்குபடர்ந்து, தளிர்த்துப் பூக்கும் கொடி. இதன் காய்கள் புளிப்புச்சுவையுடையன. காட்டுப் பிரண்டை என்றும் அழைக்கப் பெறும்.

நரிநாட்டாண்மை *nari-nāṭṭāṇmai,* பெ. (n.) வீண் அதிகாரம் செய்பவன்; vain authority person.

மறுவ. மொட்டையதிகாரம்.

[நரி + நாடு + ஆண்மை.]

நரிநாட்டாண்மைசெய்-தல் *nari-nāṭṭāṇmai-sey-,* 1 செ.குன்றாவி. (v.t.) தேவையில்லாமல் வீண்அதிகாரம் செய்தல்; to exercise vain authority

[நரி + நாட்டாண்மை + செய்-.]

தேவையற்ற இடத்தில், தேவையற்ற வரிடம், அதிகாரம் செல்லுபடியாகாத வரிடம், அல்லது தம்மைவிடத் தாழ்ந்தவரிடம். மொட்டையதிகாரம் செலுத்துதல்.

நரிநாமம் *nari-nāmam,* பெ. (n.) ஐகாரம்; the mystic mantric letter. “ai”

[நரி + நாமம்.]

நரியின் நெற்றிச்சுழி ‘ஐ’ போல் தோன்றும்.

நரிநாவல் *nari-nāval*, பெ. (n.) 1. மரவகை (நாஞ்.); a kind of tree. 2. *நரி நவ்வல்* பார்க்க; see *nari-navval*

[நரி + நாவல்.]

நரிநிறம் *nari-niṟam*, பெ. (n) 1. பல நிறக்கலப்பு; multi-colour. 2. பலவெண்ணம்; crowded thoughts. 3. வெறுப்பு; disgust.

[நரி + நிறம்.]

நரியின் நிறம் பழுப்பேறிய வெளுப்பு. திரு. வயவர். சி.வி. இராமன் ஏழுவண்ணக்கலப்பே வெண்மை என்று மெய்ப்பித்து, நோபல் பரிசு பெற்றார்.

நரிப்பயம் *nari-p-payam*, பெ. (n) புலிப்பயம் (வின்.); dread of a tiger. *'அந்தக் காட்டில் நரிப்பயமில்லை, மாடு கொண்டுபோய் மேய்க்கலாம்'* (இ.வ.).

[நரி + பயம்.]

புலி உலாவும் காட்டில் நரி வாராது. அதனால், சிறுதுயர் செய்யும் நரியும், பெருந்துன்பம் நல்கும் புலியும், அச்சந்தரும் தன்மையை உணர்த்துதற் பொருட்டு, நரிப்பயம் என்னும் இச் சொல், மக்களிடையே வழக்கூன்றியுள்ளது. (ஒ.நோ.) தவளை உள்ள குளத்தில் பாம்பின்மை அறிக.

நரிப்பயற்றங்கீரை *nari-p-payaṟṟa-ṅ-kīrai*, பெ. (n.) நரிப்பயற்றுச்செடியின் கீரை; the green leaves of fox gram.

[நரிப்பயறு + அம் + கீரை.]

உணவோடு சேர்த்து உண்பதற்கு உகந்தது என்று, சா.அக. கூறும்.

நரிப்பயற்றங்கொடி *nari-p-payaṟṟa-ṅ-koḍi*, பெ. (n.) சிறுபயறு; green gram

[நரி + பயறு + அம் + கொடி]

இப் பயறு, வெட்டைநோய், பித்தம், புண்ணீர் போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பயன்படும் என்று, சா.அக. கூறும்.

நரிப்பயறு *nari-p-payaṟu*, பெ. (n.) வயற்பயறு (பதார்த்த. 347.); (M.M 329) field-gram. 2. நரிபச்சைப்பயறு; jackal green-gram.

மறுவ. சிறுபயறு, பனிப்பயறு, மின்னிப்பயறு.

[நலி → நரி + பயறு.]

நரிப்பல் *nari-p-pal*, பெ. (n.) நரியின் பல்; fox tooth. 2. ஒருவகைக் கழுத்தணியுரு; bead of a kind of necklace, as resembling a jackal's tooth.

[நரி + பல்.]

நரிப்பல்சங்கிலி *nari-p-pal-šaṅgili*, பெ. (n.) ஒருவகைக் கழுத்தணி; bead of a kind of necklace, as resembling a jackal's tooth

[நரி + பல் + skt.சங்கிலி.]

நரிப்பல்லைப் பொற்சரட்டில் கோத்து அல்லது, பொன்னில் பதித்துச் செய்யப்படும் கழுத்தணி.
skt. சங்கிலி → த.தொடரி.

நரிப்பள்ளம் *nari-p-paḷḷam*, பெ. (n.) 1. ஆற்றில் பள்ளமான இடம் (வின்.); unknown depths or pits in a river. 2. நீர்தேங்குங் கிடங்கு (வின்.); pits in the dry bed of a river. 3. வழியிலுள்ள குழி; pits in a road

[நரி + பள்ளம்.]

நரிப்பாகல்[1] *nari-p-pāgal,* பெ. (n.) பாகல் வகை (மலை.); carolah balsam pear

மறுவ. காட்டுப்பாகல்.

[நரி + பாகல்.]

நரிப்பாகல்[2] *nari-p-pāgal,* பெ. (n.) சிறுபாகல்; small spiked bitter cucumber.

ம. முரிகத.

[நரி + பாகல்.]

சிற்றூர்களில் உணவிற்காக வேளாண்மை செய்யும் பாகல்.

நரிப்பாலை *nari-p-pālai,* பெ. (n.) சிறுபாலை; obtuse leaved ape flower

[நலி> நரி + பாலை.]

நரிப்பித்தம் *nari-p-pittam,* பெ. (n.) நரியின் ஈரல் பித்தம்; the bile or gall of the fox

[நரி + பித்தம்.]

நரிப்பு[1] *narippu,* பெ. (n.) 1. நரித்தன்மை; fox-like nature 2. இகழ்வு; derision, contempt *"நரிப்பாய் நாயே னிருப்பேனோ"* (திருவாச.21:91). 3. வியப்பு (யாழ்.அக.); wonder.

[நரி² → நரிப்பு.]

நரி + பு = பண்புவிகுதி.

ஒ.நோ. மாண் + பு = மாண்பு.

நரிப்பு[2] *narippu,* பெ. (n.) நொறுங்குகை (யாழ்.அக.); being crushed

[நெரி → நரி → நரிப்பு.]

நரிப்புடல் *nari-p-pudal,* பெ. (n.) சிறுபுடல்; short snake gourd

மறுவ. *கொம்புப்புடல்.*

[நலி → நரி + புடல்.]

நரிப்புத்தி *nari-p-putti,* பெ. (n.) தந்திரபுத்தி (இ.வ.); craftiness.

[நரி + புத்தி.]

குழந்தைக்கதைகளில், சூழ்ச்சி விலங்காகக் காட்டப்படுவதில் உள்ள அறிவியற் பிழையை, நரித்தல் தலைப்பில் காண்க.

நரிப்புத்து *nari-p-puttu,* பெ. (n.) முட்சுண்டை; prickly shoonday

[நரி + புத்து.]

நரிப்புள்ளடி *nari-p-pulladi* பெ. (n.) சிறுபுள்ளடி; small birds foot

[நலி> நரி + புள் + அடி]

நரிப்புறம் *nari-p-puram,* பெ. (n.) ஐந்தாம் விண்மீனான மாழ்கு; the 5th star

தொலைநோக்காடி இல்லாத பழங்காலத்தில், வெறும் கண்ணால் பார்த்த மக்களுக்கு, மரிமதுகுபோல் தோற்றமளித்தது.



நன்னாரி

நரிவிலி

நரிமிரட்டி

நரிவிளா

நரிப்பூடு *nari-p-pūḍu,* பெ. (n.) கோவை; indian caper.

[நரி + பூண்டு → நரிப்பூடு.]

நரிப்பூலா *nari-p-pūlā,* பெ. (n.) சிறுபூலாப் பூடு; a kind of medicinal shrub.

[நலி→நரி + பூலா.]

நரிப்பொடுதலை *nari-p-poḍudalai,* பெ. (n.) சிறுபொடுதலை; a small variety of creeping vervain.

[நரி + பொடுதலை.]

நரிமகம் *narimagam,* பெ. (n.) சிறுகோவை; small leaved indian cape. coccinea. indica

[நரி + மகம்.]

நரிமகாகுரும்பை *narimagā-kurumbai,* பெ. (n.) சிறுகுரும்பை; young immature cocoanut

[நரி + குரும்பை.]

நரிமருட்டி *narimaruṭṭi.* பெ. (n.) கிலுகிலுப்பை (மலை.); rattle-wort

[நரி + மருட்டி.]

நரிமாமிசம் *nari-māmišam,* பெ. (n.) சிறுதும்பை; small leucas.

[நரி + Skt. மாமிசம்.]

நரிமிரட்டல் *nari-miraṭṭal.* பெ. (n.) தூக்கத்தில் குழந்தைக்கு உண்டாகும் சிரிப்பும், அழுகையும்; infants smiling or weeping in their sleep.

[நரி + மருட்டல்→மிரட்டல்.]

நரிமிரட்டி *nari-miraṭṭi,* பெ. (n.) **1.** பேய்மருட்டி; devil frightener. **2.** கருந்தும்பை; black tumbay.

[நரி + மருட்டி →மிரட்டி.]

நரிமுகத்தில்விழி-த்தல் *nari-mugattil-viḻi-,* 4 செ.கு.வி. (v.i.) நற்பேறடைதல் (மதி.க.ii,127); to be lucky

[நரி + முகத்தில் + விழி-.]

இது மூடநம்பிக்கை.

நரிமுடுக்கி *nari-muḍukki,* பெ. (n.) மூலிகைவகை; a kind of herbal medicine

நரிமுருக்கு *nari-murukku,* பெ. (n.) **1.** முருக்கு வகை (வின்.); an inferior. species of coral-tree. **2.** நெல்வகை; a kind of paddy. (A.).

[நரி + முருக்கு.]

நரிமுருங்கை *nari-murungai,* பெ. (n.) தவசு முருங்கை; tranquebar gendarussa

மறுவ. நறுமுருங்கை.

[நரி + முருங்கை.]

நரியக்காளான் *nariya-k-kāḷāṉ,* பெ. (n.) சிறுகாளான்; small fungus growth.

நரியண்டம் *nari-y-aṇḍam,* பெ. (n.) நரி மண்டையோடு; the skull of a fox

நரியரிசி *nari-y-arisi.* பெ. (n.) சிறிய அரிசி; small rice

மறுவ. நரிச்சம்பா, நரிக்குறுணி

[நரி + அரிசி]

நரியன் *nariyaṉ,* பெ. (n.) 1. பெருநெல்வகை; a kind of coarse paddy. 2. குள்ளன் (யாழ்.அக.); dwarf short person 3. கவடன், சூழ்ச்சிக்காரன்: crafty person

[நரி → நரியன்.]

நரியன்கடம்பு *nariyaṉ-kaḍambu.* பெ. (n) சிறுகடம்பு; a kind of cadamba.

[நரி + அன் + கடம்பு]

நரியாணங்கை *nariyāṇaṅgai,* பெ. (n) சிறியாணங்கை; a species of small milk-wort

[நரியாள் + நங்கை.]

ஒ.நோ: *சிறியாள்* + நங்கு + ஐ.

நரியிலந்தை *nari-y-ilandai,* பெ. (n) இலந்தை வகை; a kind of jujube

மறுவ.சிற்றிலந்தை

[நரி + இலந்தை.]

நரியிலவு *nari-y-ilavu,* பெ. (n.) இலவமரம்; silk cotton tree

[நரி + இலவு.]

நரியீஞ்சு *nari-y-īñju,* பெ. (n.) சிற்றீஞ்சு; dwarf date.

[நரி + ஈஞ்சு.]

நரியீராகி *nariyīrāgi.* பெ. (n) சிறுபூனைக்காலி; whitish passion flower

[நரி + ஈர் + ஆகி.]

நரியுடை *nari-y-uḍai.* பெ. (n.) முசுமுசுக்கை; bryony

[நரி + உடை.]

நரியுண்ணி *nari-y-uṇṇi,* பெ. (n) நரியால் விரும்பி உண்ணப்படும் நண்டு; crab, as eaten by fox

நரியுணி *nari-y-uṇi* பெ. (n) *நரியுண்ணி* பார்க்க; see *nari-y-uṇṇi*

[நரி + உண்ணி→உணி.]

நரியுப்பு *nari-y-uppu,* பெ. (n) கறியுப்பு (சங்.அக.); common salt

[நரி + உப்பு.]

நரியுமரி *nari-y-umari,* பெ. (n) உப்புக்கீரை; common indian saltwort (L).

[நரி + உமர் + இ.]

நரியுமரிக்கீரை *nariyumari-k-kīrai,* பெ. (n.) உப்புக்கீரை; common indian salt wort

[நரி + உமரி + கீரை.]

நரியூளை *nari-y-ūḷai;* பெ. (n.) நரி இடும் கூக்குரல்; long doleful, cry of fox.

[நரி + ஊளை.]

நாய் குரைத்தல் போல், நரிஊளை இடுதல் மரபுச் சொல்லாட்சி.

நரிவரி *narivari,* பெ. (n.) **1.** நரிவிரியன் பார்க்க; see nari-viriyan̲ **2.** நாய் நறுவிலி; scabrid leaved sebesten (L)

[நரி + வரி.]

நரிவழுக்கை *nari-vaḻukkai,* பெ. (n) பிரமிப்பூடு; brany, diabetes plant.

[நரி + வழுக்கை.]

நரிவாதம் *nari-vādam,* பெ. (n) நரித்தலைவாதம் பார்க்க; see nari-t-talai-vādam

[நரி + skt வாதம்.]

நரிவாலலரி *nari-vālalari,* பெ. (n) ஆற்றலரி; common tamarisk.

[நரிவால் + அலரி.]

நரிவாழை *nari-vāḻai,* பெ. (n.) நீண்ட கொடிவகை; tubeflower.

[நரி + வாழை.]

நரிவாற்புல் *narivāṟ-pul,* பெ. (n) ஒருவகைப்புல் (யாழ்.அக.); a kind of grass. Dactylis spicata.

[நரி + வால் + புல்.]

நரிவிட்டையிலை *narivittai-y-ilai,* பெ. (n.) நரிவிட்டைப் பூண்டின் இலை. an unknown plant said to possess the virtue of consolidating mercury. இதளியத்தைக் கட்டியாக்கும் மூலி

நரிவிரி *nariviri-,* பெ. (n.) **1.** *நரிவிரியன்* பார்க்க; see *nariviriyan̲.* **2.** நாய் நறுவிலி; a kind of sebesten.

[நரி + விரி.]

நரிவிரியன் *nari-viriyan̲,* பெ. (n.) நறுவிலி வகை; oblong feather nerved sebesten (L.).

[நரி + விரியன்.]

நரிவிருசு *nari-virušu,* பெ. (n.) மரவகை (இ.வ.); a kind of tree

[நரி + விருசு.]

நரிவிருத்தம் *nari-viruttam,* பெ. (n.) திருத்தக்க தேவரால், நரியின் கதையொன்றைப் பற்றி, இயற்றப்பட்ட ஒரு நூல்; a poem founded on the story of a fox, by Tiruttakka-tēvar.

[நரி + விருத்தம்.]

கம்பன்பெயரில் நான்கு சிறுநூல் இருப்பவற்றுள், கம்பராமாயண நடைபோல் அழகில்லாததால், பிற்காலத்தில் யாரோ எழுதிவழங்கிய பெயர் என்பதுபோல், இந் நூலிலும் சீவகசிந்தாமணி மொழி நடையும், கலையுணர்வும் இன்மையறிக.

[நரி + விருத்தம்.]

நரிவிளா *nariviḷā,* பெ. (n) *நில விளா (மலை);* a species of wood - apple.

*[நரி + விளா.]

நரிவிளி *nariviḷi,* பெ. (n.) விழிச்செடி; a kind of medicinal plant.

நரிவிளிகா *nari-viḷigā,* பெ. (n.) *சிறுதும்பை; small leucas flower.*

சிறுதும்பைச் செடியின் பூக்களிலிருந்து எடுக்கப்படும் தேன். உடல் நலத்திற்கு உகந்தது. மிகு கோழையைக் கரைக்கும். குளுமையை அகற்றும்.

[நரி + விளிகா.]

நரிவிளிநாயகம் *nari-viḷi-nāyagam,* பெ. (n.) சுளுக்கு நாயகம் பார்க்க; see šuḷukku-nāyagam.

[நரிவிளி+நாயகம்.]

நரிவிளையாட்டு *nari-viḷaiyāṭṭu,* பெ. (n.) *நரிமிரட்டல்* பார்க்க; see *nari-miraṭṭal*

[நரி + விளையாட்டு.]

நரிவீழி *nari-vīḻi* பெ. (n.) உத்தாலமரவகை; a kind of uttālam tree.

[நரி→ நரிவீழி.]

நரிவெங்காயம் *nari-vengāyam,* பெ. (n.) **1.** நரி வெண்காயம் பார்க்க; see nari veṇgāyam. **2.** ஈருள்ளிவகை (பதார்த்த. 446.); indian squill. **3.** நச்சு மூங்கில்; poison lily, Crinum asiaticum (m.m.)

[நரி + வெண் + காயம்→ வெங்காயம் .]

நரிவெண்காயம் *nari-veṇgāyam,* பெ. (n) வெளிர்நிறக்காட்டுள்ளி. fox onion.

மறுவ. வெள்வெங்காயம்

[நரி + வெண்காயம்]

நரிவெந்தயம் *nari-vendayam,* பெ. (n) சிறு வெந்தயம்; ferugreek.

[நரி + வெந்தயம்.]

காட்டுவிலங்குகளில் நரி சிறிதாதலின், சிறுமை பற்றிய முன்னொட்டு உவமையாக வந்துள்ளது.

நரிவெருட்டி *nari-veruṭṭi,* பெ. (n) கிலுகிலுப்பை (மலை.); rattle - wort

மறுவ. நரிமருட்டி.

[நரி + வெருட்டி.]

உறங்கும் ஓராண்டுக்குழந்தை சிரிப்பது போல் முகத்தோற்றம் தெரியும்போது, நரி அதன் கனவில் சென்று வெருட்டுவதால், முகத் தோற்றம் மாறுவதாக, ஒரு நினைவு வழக்கு மக்களிடம் உண்டு. அதையொட்டிக் கிலுகிலுப்பைக்கு, இப் பெயர் வந்தது என்க.

நரிவெரூஉத்தலையார் *nari-verūuttalaiyār,* பெ. (n.) சங்க காலப் புலவர்; an ancient Tamil poet. இவர் பாடியுள்ள குறுந்தொகை 5, 236; புறம்–5, 195 எண்ணுள்ள பாடல்கள் எவற்றிலும், இச்சொற்றொடர் வந்திலது; நரியும் கண்டு அஞ்சும் படியான தலையும், திரிபான உருவமும் உடையவர் இப் புலவர் என்று, ஒரு கதை கூறுகிறது.

[நரி + வெரூஉம் + தலையார்.]

புறநானூற்றுரையாசிரியர் தம் காலத்திற்கு முன்பு வழங்கிய கதையைக் கூறுகின்றார். இப் புலவர் சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரல் இரும்பொறையைக் கண்ட போது, அரண்மனை மருத்துவர் திறத்தால் திரிபு நீங்கி நல்லுடம்பு பெற்றார், எனப் பேராசிரியர் ச.த. சற்குணர் கூறுவர். இவர் பாடிய குறுந்தொகை 236 ஆம் பாடல் வருமாறு:–

வரைவிடை வைத்துப் பிரிவான் "இவள் வேறுபடாமை ஆற்றுவி" என்றாற்குத் தோழி நகையாடி உரைத்தது.

அஃதாவது, வரைவிடை வைத்துத் தலைவியைப் பிரிந்துசெல்லக் கருதிய தலைவன், தோழியை நோக்கி, "யான் வருந்துணையும், இவளை மேனி நலனழியாமல் ஆற்றுவாயாக" எனத், தோழி நகைத்து, அஃதியலா தென்பதுபடக்கூறியது.

"விட்டென விடுக்கு நாள் வருக அது நீ நேர்ந்தனையாயின் தந்தனை சென்மோ குன்றத்தன்ன குவவுமணல் அடைகரை நின்ற புன்னை நிலந்தோய் படுசினை வம்ப நாரை சேக்கும் தண்கடற் சேர்ப்ப நீ உண்டவென்னலனே"

இப் பாடலின் கண்ணே தோழி, "தலைவ, என் தலைவியின் நலன் அனைத்தும் உண்டு, பொருள் மேல் மாளாக்காதல் கொண்டு, பிரிந்து செல்கின்றாய். அவ்வாறு பிரிந்தால், தலைவி உயிர்போதல் திண்ணம். நீ இவள் பாலுண்ட பெண்மை நலனை எல்லாம் தந்துபோதல் வேண்டும். இன்றேல், தலைவியை ஆற்றுவித்தல் அரிது" என்று நயம்பட உரைக்கும் பாங்கு படித்தின்புறத்தக்கது.

நரி வெரூத் தலையார், ஆழ்ந்த புலமையுள்ளம் படைத்த சான்றோர். இன்பம், துன்பம் எனும். இருபெரும் வாழ்வியல் நெறிகளையும், இயல்பாய் உரைத்துள்ள பாங்கினைப் புறநானூற்றில் 195–ஆம் பாடல் வாயிலாகப் பகர்கின்றார். "மாண்டு போகும் மாந்தப்பிறவியில் யாவருக்கும் நல்லதையே செய்யுங்கள். நல்லது செய்ய இயலாவிடின், பிறருக்குத் தொல்லைதரும் மனப்பாங்கினை விட்டொழியுங்கள். தீச்செயல் செய்வதை ஒழித்து அனைவருக்கும் நன்மையே புரியும் நல்வழியில் செல்லுங்கள்; அவ்வாறு செல்லுங்கால் எல்லோரும் அகமலர, முகமலர, வாயார வாழ்த்துவர்" எனும், வாழ்வியல் நல்லாற்று நெறியினை, உளங்கொள உரைக்கும் பொருண்மொழிக் காஞ்சித்துறைப்பாடல் வருமாறு:–

"பல்சான்றீரே பல்சான்றீரே கயன்முள்ளன்ன
நரைமுதிர் திரைகவுள்
பயனின் மூப்பிற் பல்சான்றீரே
கணிச்சி கூர்ம்படைக் கடுந்திறலொருவன்
பிணக்குங் காலை இரங்குவிர் மாதோ
நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும் நல்லாற்றுப்
படூஉ நெறியுமா ரதுவே."

நரிவெள்ளரி *nari-veḷḷari*, பெ. (n.) 1. கக்கரி; fox-cucumber

[நரி + வெள்ளரி.]

நரிவேங்கை *nari-vēṅgai*, பெ. (n.) வேங்கை மரவகை; oojein black wood. (l.)

[நரி + வேங்கை.]

நருக்கட்டியெனல் *naru-k-kaṭṭi-y-eṉal*, பெ. (n.) *நருக்கெனல் (யாழ்ப்.)* பார்க்க; see *narukkeṉal*

[நருக்கு + அட்டி + எனல்.]

நருக்கரிசிச்சாதம் *naru-k-kariši-c-cādam*, பெ. (n.) பாதிவெந்தசாதம்; half cooked rice.

[நருக்கு + அரிசி + சாதம்.]

நறுக்கு→நருக்கு=திரிபு.

நருக்கரிசியன்னம் *naru-k-kariši-y-aṉṉam*, பெ. (n.) அரிசிக்கஞ்சி; rice conjee

[நருக்கரிசி + Skt அன்னம்.]

நருக்கல்[1] *narukkal,* பெ. (n.) 1. நசுக்குண்டது (வின்.); any thing crushed mashed, or broken in to pieces. 2. வயிற்று வலிவகை (யாழ்ப்.); a severe stomach - ache 3. குத்துவலி (இ.வ.); sharp, darting pain. 4. வேகாத சோறு; insufficiently cooked rice. நண்டலொரு பக்கம், நருக்கலொரு பக்கம், நாய்விட்டெறியக் கல்லொரு பக்கம் (பழ.).

[நருக்கு + நருக்கல்.]

நருக்கல்[2] *narukkal,* பெ. (n.) *நருங்கல்* பார்க்க; see *narungal.*

[நருங்கல் → நருக்கல்.]

நருக்கற்குத்து *narukkar-kuttu,* பெ. (n.) 1. *நருக்கல் 2, 3 (யாழ்ப்.)* பார்க்க; see *narukkal,* *2.*காரியம் வாய்க்காமற் பண்ணுகை; frustation.

[நருக்கல் + குத்து.]

நருக்காணி *naru-k-kāṇi,* பெ. (n) கறளை (வின்.); being small and stunted, as a child

[நருங்கு → நருக்கு + ஆணி = நருக்காணி.]

(ஒ.நோ.) சுருங்கு → சுருக்கு

நருக்கு[1]**–தல்** *narukku-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நொறுக்குதல்; to mash, crush or grind to pieces. *"நகத்தினாலுயர் நகங்களை நருக்குமா போல"* (பாரத. நிரை. 17.). 2. கொல்லுதல்; to kill. *"நட்பகத்திலா வரக்கரை நருக்கி"* (கம்பரா. மீட்சி. 184.). 3. துண்டாக்குதல்; to cut in pieces, mince, as vegetables. *"ஈயத்தை நருக்கி வெள்ளியதாக வுருக்குவோம்"* (அட்டப். திருவரங்கக். 42.).

தெ., நருகு, ம., நருக்குகறு.

[நருங்கு → நருக்கு + தல். தல்லீற்றுத் தொழிற்பெயர்.]

நருக்கு[2]**–தல்** *narukku-,* 5 செ.கு.வி. (v.i.) குட்டுதல்; to thump, hit with the knuckle. அவன் தலையில் நருக்கினான் (உ.வ.).

[நருங்கு → நருக்கு–,]

நருக்கு[3] *narukku,* பெ. n குட்டுகை; hitting with the knuckle *"அவள் தலையில் ஒரு நருக்கு வை". (உ.வ.)*

[நரு → நருக்கு.]

நருக்குண்டல் *narukkuṇḍal,* பெ. (n.) துண்டு துண்டாகச் செய்தல்; to cut in to pieces

[நறு→நறுக்கு→நருக்கு + உண்டல்.]

நருக்குப்பிருக்கல் *narukku-p-pirukkal,* பெ. (n.) 1. மசிந்ததும் மசியாததுமான அரைப்பு (வின்.); that which is partially, mashed. 2. வெந்ததும் வேகாததுமான சோறு; rice partly cooked. 3. செரிமானமின்றி வெளியேறும் மலம் (இ.வ.); excrement containing partly, undigested food.

[நருக்கு + பிருக்கல்.]

நருக்குப்பிருக்கு *narukku-p-pirukku,* பெ. (n.) *நருக்குப் பிருக்கல் (வின்.)* பார்க்க; see *narukku-p-pirukkal.*

[நருக்கு + பிருக்கு.]

நருக்குப்பிருக்கென்றிரு–த்தல் *narukku-p-pirukkenriru-,* 5 செ.கு.வி. (v.i.) நோய் நிரம்பியிருத்தல் (வின்.); to be rife with disease, as a town.

[நருக்கு + பிருக்கு + என்று + இருத்தல்–.]

நருக்குப்புடம் *narukku-p-puḍam,* பெ. (n.) குறைந்தபுடம்; calcination with small fire.

[நருக்கு + புடம்.]

நருக்கெனல் *narukkeṉal,* பெ. (n.) 1. விரைவுக்குறிப்பு; suddenness, abruptness, or promptness. ***"காரியத்தை நருக்கென்று முடித்தான்"*** (உ.வ.). 2. குத்தல்–வலிக்குறிப்பு; sharp, darting pain. நெஞ்சு நருக்கென்று குத்துகிறது. (இ.வ.).

[நருக்கு + எனல்.]

நருங்கல் *naruṅgal,* பெ. (n.) வளர்ச்சிக் குறைவு; stunted growth. அவன் நருங்கலாயிருக்கின்றான். (உ.வ.).

[நெருங்கு → நருங்கு → நருங்கல்.]

அல்லீற்றுத்தொழிற்பெயர்.

நருங்கல்=தன்வினை.

நருக்கல்=பிறவினை.

நருங்கு–தல் *naruṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நொறுங்குதல்; to be mashed, crushed to pieces. 2. தேய்கடையாதல்(யாழ்.அக); to be deficient in growth, to decay, to grow lean, as a child; to fail, as a business, a harvest.

[நொருங்கு → நருங்கு–.]

நருஞ்சோந்தி *naruñšōndi,* பெ. (n.) ஒரு வகைப் பூமரம்; an unknown plant.

நருநரு–த்தல் *naru-naru-,* 4 செ.கு.வி. (v.i.) 1. நெறுநெறுத்தல் (வின்.); to feel grit, is the mouth along with food. 2. மிகக் குறைவாதல்; to be slight or mild as fever. நருநருத்த காய்ச்சல் (யாழ்ப்.).

[நெருநெரு→நருநரு–.]

நருநரெனல்[1] *naru-nareṉel,* பெ. (n.) நெறநெறனல் (வின்.); expr of feeling grift in the mouth along with food. சினத்தில் பல்லை நெறு நெறுவெனக் கடித்தான் (பே.வ.)

[நரு நரு +நருநரெனல்.]

நருநரெனல்[2] *naru-nareṉel,* 4செ.கு.வி. (v i) பல்லை நெறு நெறுத்தல்; gnashing teeth சினத்தில் பல்லை நெறு நெறுவெனக் கடித்தான் (பே.வ.)

[நரு + நரு + எனல்.]

நருநாட்டியம் *naru-nāṭṭiyam,* பெ. (n.) 1. அளவுக்கு அதிகமாகத் தூய்மையாக இருக்கை; over-scrupulousness 2. மிக உன்னிப் பாயிருக்கை; meticulosity

மறுவ. நொறுநாட்டியம்

[நொறு → நரு + நாட்டியம்]

நருநாட்டியம்பேசு–தல் *naru-nāṭṭiyam-pēšu-,* 5 செ.கு.வி. (v i.) குற்றத்தைக் கண்டுபிடிப்பதே குறியாகப் பேசுதல் (இ.வ.); to indulge in fault finding.

[நரு + நாட்டியம் + பேசு–.]

நருபிரு–த்தல் *narupiru-,* 4 செ.கு.வி. (v.i.) *நருபிரென்றிரு–. (யாழ்ப்.)* பார்க்க; see *narupireṉṟiru-*

[நரு + பிரு–.]

நருபிரென்றிரு—த்தல் *narupirenriru-.* 3 செ.கு.வி. (v.i.) 1. இழிந்த நிலையிலிருத்தல்; to be dirty, filthy, abominable 2. மிக வெறுப்புடனிருத்தல்; to be disgusted நருபிருத்த சாப்பாடு 3. நருவல்நொருவலாயிருத்தல்; to be crushed partially.

[நருபிரு + என்று + இரு—.]

நரும்பு—தல் *narumbu-* 5 செ.குன்றாவி. (v.t.) 1. *நறுமு—,* பார்க்க; see *narumu-.* 2. துண்டாக்குதல்; to cut into pieces

[நரு + நரும்பு—.]

நருமு—தல் *narumu-,* 5செ.குன்றாவி. (v.t.) பல்லை நறநறவென்று கடித்தல்; gnashing the teeth togehter with force.

[நற→நர→நரு→நருமு—.]

நருவல்நொருவல் *naruval-noruval,* பெ. (n.) 1. இருவல் நொருவலானது; that which is coarsely broken as grain, that which is granulated 2. மலம் கட்டி முட்டியாயிருக்கை; being clotted here and there, as stools

[நருவல் + நொருவல்.]

நறுவல் + நொறுவல்=திரிபு.

நருவாணி *naruvāṇi,* பெ. (n.) *நருக்காணி (யாழ்ப்.)* பார்க்க; see *narukkāṇi.*

[நருவு + ஆணி.]

நருவிசு *naruvišu,* பெ. (n.) 1. நாகரிகம்; refinement in manners 2. துப்புரவு; neatness, cleanliness அவன் நருவிசாகச் சாப்பிடுகிறான் (உ.வ.) 3. சிக்கனம்; thrift அந்தக் குடும்பம் நருவிசாய் நடக்கிறது (உ.வ.); 4. நேர்மையானது; straight dealing. அவன் செயல்களெல்லாம் நருவிசானவை (இ.வ.).

[நருவு + நருவிசு.]

நருவிஞ்சி *naruviñji,* பெ. (n.) ஆடவர் வேட்டி; mens cloth

[நரு + விஞ்சி.]

நருவிப்பு *naruvippu,* பெ. (n.) நாயுருவியுப்பு; salt obtained from the ashes got by burning the plant indian burr

[நருவி+ உப்பு.]

நருவி=நாயுருவி.

நருவியுப்பு *naruvi-y-uppu,* பெ. (n.) 1. உப்பு வகையு ளொன்று; a kind of salt. 2. நருவிப்பு பார்க்க; see naruvippu

[நருவி + உப்பு.]

நருள்¹ *naruḷ.* பெ. (n.) *புண்வகையுளொன்று;* a kind of ulcer

நருள்² *naruḷ.* பெ. (n.) *நரல்³ (யாழ்ப்.)* பார்க்க; see *naral³*

[நரல் →நருள்.]

நருளிகை¹ *naruḷigai,* பெ. (n.) காந்தாரியுப்பு (சங்.அக.); an acrid salt

[நருளி→நருளிகை.]

நருளிகை² *naruḷigai,* பெ. (n.) சித்திச்சாரம்; a kind of salt prepared as per process laid down in siddhar's science

நருளிச்சாரம் *naruḷi-c-cāram,* பெ. (n.) *நருளிகை*² பார்க்க; see *naruḷigai*²

[நருளி + சாரம்.]

நரேசன் *narēšaṉ.* பெ. (n.) *நரேந்திரன் (யாழ்ப்.)* பார்க்க; see *narēndiraṉ* *"நின்குலத்து நரேசர்"* (பாரத. அருச். தீர். 37.).

[நரன் +Skt ஈசன்.]

நரேசுரன் *narēšuraṉ.* பெ. (n.) *நரேந்திரன் (யாழ்ப்.)* பார்க்க; see *narēndiraṉ*

[நரன் + Skt.ஈசுரன்.]

நரேந்திரபோக்கியம் *narēndira-pōkkiyam.* பெ. (n.) சந்தன மரம்; sandal wood tree.

[நரன் + இந்திர + போக்கியம்.]

மாந்தர்கள் வேந்தர்போல், மார்பில் பூசிக்கொள்ளும் தன்மையுடையது.

நரேந்திரன் *narēndiraṉ.* பெ. (n.) அரசன்; king

[நரன் + இந்திரன்.]

நரை¹**—த்தல்** *narai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மயிர் வெளுத்தல்; to become grey haired, to grow grey, as hair *"மயிர் நரைப்ப முந்தைப் பழவினையாய்த் தின்னு மிரை மூன்றும்"* (திரிகடு. 67.); 2. பயிர் வெளிறுதல்; to fade, as standing crops from draught. 3. நிறம் வெளுத்தல் (வின்.); to be pale in colour

க., நரெ தெ., நரையு. ம., நரெக்க.

[நல் → நர் → நர → நரை—.]

நரை² *narai,* பெ. (n.) 1. வெளுத்த மயிர்; grey hairs. *"யாண்டு பலவாக நரையில வாகுதல்"* (புறநா. 101.). 2. வெண்மை; whiteness *"மரையாவின் கருநரை நல்லேறு"* (குறுந். 317.). 3. எருது (பிங்.); bull, chiefly a white one. *"கரு நரைமேற் சூடேபோல்"* (நாலடி, 186.). 4. காளையோரை (யாழ்.அக.); taurus is the zodiac 5. சாமரம்; (பிங்.) chowrg or fly whisk *"இன்னரையின் பந்தி யசைந்தாட"* (காளத் உலா. 550.). 6. கவரிமான் (பிங்.); yak 7. மூப்பு; old-age *"நரைவரு மென்றெண்ணி நல்லறிவாளர் குழவியிடத்தே துறந்தார்"* (நாலடி. 11.). 8. பெருமை; greatness. *"நரையுருமி னேறனையை"* (மதுரைக். 63). 9. வெள்ளைக் குதிரை (சூடா.); white horse 10. கருமை கலந்த வெண்மை; mixture of white and black. 11. பறவை வகை (பிங்.); a bird 12. நாரை (யாழ்.அக.); a crane. 13. மரத்தினது அடியின் உட்பாகத்தில் காணும் சொத்தை அல்லது கேடு; injured condition of the heart of a tree நல்ல மரத்தில் நரைவிழுந்தது போலாச்சு. (நாஞ்.).

தெ., ம., நர; க., து., நரெ. நரே.

[நல் → நர் → நர → நரை.]

நரைக்கொம்பு *narai-k-kombu,* பெ. (n.) 1. எலும்பு; (சங்.அக.); bone 2. வெள்ளைக் கழி; white stick

[நரை + கொம்பு. நரை = வெண்மை.]

நரைக்கொள்ளல் *narai-k-koḷḷal.* 4செ.குன்றா.வி. (v.t.) மயிர் வெளுத்தல்; getting grey.

[நரை + கொள்ளல்.]

நரைக்கொள்ளு[1] *narai-k-kollu* பெ. (n) கொள்ளு வகை (மலை.); a kind of gram

[நரை + கொள்ளு.]

நரைக்கொள்ளு[2] *narai-k-kollu,* பெ. (n) சீர்கோழிப்பூடு; grey-gram.

[நரை + கொள்ளு.]

நரைங்கிப்போ-தல் *narainki-p-pō-* செ. குன்றாவி. (v.t.) *நரைத்-தல்* பார்க்க; see *narai-*

[நருங்கி → நரங்கி→நரைங்கி+ போ-.]

நரைச்சல் *naraiccal,* பெ. (n) பயிர் முதலியவற்றின் வெளிறின தன்மை (வின்.); faded condition of growing crops

[நரை → நரைச்சல்.]

நரைஞர் *narainar,* பெ. (n.) அகவை (வயது) முதிர்ந்தவர்; aged persons, as grey haired *"நரைநரை யிளை ஞராக்கி"* (குற்றா. தல. திருமால். 73.).

[நரை → நரைஞர்.]

ஆண்டுமூப்பில், நரைமுடி கொண்டாரை இவ்வாறு அழைத்தல் வழக்கம். வழுக்கைத் தலையரையும், முகத்தோல் சுருங்கியோரையும், வேறு பெயர்களில் குறிப்பர்.

நரைத்தல் *naraittal,* பெ. (n.) மயிர் சாம்பல் நிறத்திலாதல். hair turning in to grey.

[நல் → நர → நரை-த்தல்.]

நரைத்தலை *narai-t-talai,* பெ. (n) வெளுத்த மயிருள்ள தலை; hoary head.

[நரை + தலை]

நரைத்துப்பழு-த்தல் *naraittu-p-palu-,* 4.செ.கு.வி. (v.i.) முதலில் மயிர் வெளுத்துப் பிறகு மஞ்சள் நிறமாக மாறல்; to become the hair yellow after getting grey

[நரைத்து + பழு-.]

நரைத்தை *naraittai,* பெ. (n) அங்கோலம்; thin sage-leaved Indian linden.

[நரை + நரத்தை.]

நரைதிரை *narai-tirai* பெ. (n.) 1. அகவை முதிர்ச்சியால் மயிர்கள் நரைத்து, உடம்பின் தோல் தளர்ந்து சுருக்கக் கொள்ளல்; hairs turning grey body become relaxed and the skin forming into wrinkles due to old or advanced age 2. கிழத்தன்மை; old age

[நரை + திரை.]

நரைதிரைபோக்கி *naraitirai-pōkki,* பெ. (n.) சிவனார் வேம்பு நெய்மம்; a medicated oil prepared from neem plant

[நரை + திரை + போக்கி.]

நரைதிரை மாறப்பண்ணி *naraitirai-māra-p-panni,* பெ. (n) கானல்மா; a wild tree

நரைதிரைமூப்பு *naraitirai-muppu,* பெ. (n) கிழப்பருவ அடையாளங்கள். symptoms of or attributes to old age

[நரை + திரை + மூப்பு.]

நரைநாசினி *narai-nāśiṉi,* பெ. (n.) விழுதி; a medicinal plant.

[நரை + skt நாசினி.]

நரைப்பு *naraippu,* பெ. (n.) மயிர் வெண்மை யாகை; getting grey-haried. *"நரைப்பு மூப்பொடு நடலையுமின்றி நாதன் சேவடி நண்ணுவர்"* (தேவா. 462: 10.).

நரைப்பூதம் *narai-p-pūdam,* பெ. (n.) நாணற்றட்டை; reed sterm.

[நரை + skt. பூதம்.]

நரைமயிர் *narai-mayir,* பெ. (n.) வெளுத்த மயிர்; grey hair

[நரை + மயிர்.]

நரைமாடு *narai-māḍu,* பெ. (n.) மங்கின வெண்மை நிறமுள்ள மாடு; greyish or ash-coloured cattle.

[நரை + மாடு.]

நரைமாறிச்சி *narai-māṟicci,* பெ. (n.) கருநெல்லி; black goose berry.

நரைமீறி *naraimīṟi,* பெ. (n.) கொடுக்காய்ப் புளி; sweet tamarind.

[நரை + மீறி.]

நரைமுடிநெட்டையார் *naraimuḍi neṭṭaiyār,* பெ. (n.) சங்ககாலப் புலவர்; a poet of Śaṅgam period

[நரை + முடி + நெட்டையார்.]

இவர் இயற்றிய பாடல் அகநானூற்றில் 339 ஆவதாக உள்ளது. நிரைமுடிநெட்டையார் என்ற வேறுபாடுமுளது.

"வீங்குவிசைப் பிணித்த விரைபரி நெடுந்தேர்
நோன்கதிர் சுமந்த ஆழியாழ் மருங்கிற்
பாம்பென முடுகுநீர் ஓடக் கூம்பிப்
பற்றுவிடு விரலிற் பயறுகாய் ஊழ்ப்ப
அற்சிரம் நின்றன்றாற் பொழுதே முற்பட
ஆள்வினைக் கெழுந்த அசைவில் உள்ளத்து
ஆண்மை வாங்கக் காமந் தட்பக்
கவைபடு நெஞ்சங் கட்கண் அகைய
இருதலைக் கொள்ளி யிடைநின்று வருந்தி
ஒருதலைப் படாஅ உறவி போன்றனம்
நோங்கொல் அளியள் தானே யாக்கைக்கு
உயிரியைந் தன்ன நாட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவரி யோளே"

நரைமை *naraimai,* பெ. (n.) மூப்பு; grey haired old age *"நரைமயிற் றிரைதோற் றகையின் றாயது"* (மணிமே. 20: 44.).

[நரை → நரைமை.]

நரையல்லி *narai-y-alli,* பெ. (n.) வெள்ளாம்பல்; white indian lilly.

[நரை + அல்லி.]

நரை = வெண்மை.

நரையன் *naraiyaṉ,* பெ. (n.) 1. நரைத்தவன் (வின்.); a grey-haired person. 2. பருவமின்றி நரைத்தவன்; *a person prematurely grown*

grey. **3.** சாம்பல் நிறமுள்ள விலங்கு; greyish beast. **4.** வல்லூறுவகை; a kind of hawk.

[நரை → நரையன்.]

நரையான்¹ *naraiyāṉ,* பெ. (n.) **1.** நாரை (இ.வ.); pelican. **2.** மீன்–கொத்திப் பறவை; king-fisher. *"எழினரையான் வரத்தே கண்டோம்"* (தனிப்பா. i. 289:5). **3.** காகம் (யாழ்.அக.); crow. **4.** நெல்வகை; a kind of paddy.

[நரையன் → நரையான்.]

நரையான்² *naraiyāṉ,* பெ. (n.) **1.** சின்னது (வின்.); small insignificant thing, as a child. **2.** நருங்கின குழந்தை (இ.வ.); child of stunted growth

[நரு → நரை + ஆன்.]

நரையான்³ *naraiyāṉ,* பெ. (n.) **1.** காகம்; crow. **2.** மீன்குத்தி நாரை; a heron preying on fish. **3.** செங்கானாரை; a species of crane with red legs. **4.** தேய்ந்த குழந்தை; emaciated child. **5.** நாரை; stork. **6.** நாகப்பாம்பு; cobra.

[நரு + ஐ + ஆன்.]

நரையுகம் *naraiyukam,* பெ. (n.) முதுக(முள்ள)ந்தண்டெலும்புகளை ஒன்றோடொன்றாய் இணைக்கும் மூட்டு; bone join with spinal cord.

[நரை + உகம்.]

நரையுந்திரையுமில்லான் *naraiyun-diraiyumillāṉ,* பெ. (n.) **1.** காகம் (சங்.அக.); crow believed not to grow old **2.** மூப்படையாதது; belived not to grow old.

[நரையும் + திரையும் + இல்லான்.]

நரையேடு *narai-y-ēḍu,* பெ. (n.) அரத்த நீரின் மேற்புறம் படிந்த ஏடு; the pale buff coloured stratum on the surface of a blood clot which remains when coaglation is completed.

[நரை + ஏடு.]

நல்¹ *nal,* பெ.அ (adj.) நல்ல; good *"கச்சையங்களி நல்யானை"* (சூளா. அரசியற்.27).

க., நல்.

[நூல்→ நல்.]

நல்² *nal,* பெ. (n.) நல்குரவு பார்க்க; see nalguravu. *"கல்குயின்றன்ன வென்னல் கூர்வளி மறை"* (புறநா. 196).

நல்கதி *nal-kadi,* பெ. (n.) காட்டா மணக்கு; caster seeds.

[நல் + skt. கதி.]

நல்கல் *nalgal,* பெ. (n.) **1.** கொடுக்கை; besto-wing. *"நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே"* (புறநா. 312). **2.** பெருங்கொடை (பிங்); liberal gift. **3.** அன்பு; love. *"கழிபெரு நல்கல் ஒன்றுடைத்தென"* (கலித்.4). **4.** அருள்; favour, kindness. *"கடுநவை யணங்குங் கடுப்பு நல்கலும்"* (பரிபா. 4, 49.).

[நல்கு + அல்.]

அல்லீற்றுத்தொழிற்பெயர்.

பொருள்படைத்தோர், மன்பதையில் நல்லவண்ணம் வாழவேண்டுமெனில், அனைத்தையும் தாமே துய்ப்போம் என்று எண்ணாது, பிறர்க்குக் கொடுத்துவாழும் கொள்கையை வளர்த்துக்கொள்ளவேண்டும், பிறர்க்கு நல்குகையால் பெறும் இன்பம் உளத்திற்கு நலம் பயக்கும், ஈத்துவக்கும் இன்பம் ஈடுஇணையில்லாதது. பொருள் கொடுக்க இயலாதவர், முகனமர்ந்து, அகமலர்ச்சியுடன், பிறருக்கு ஆற்றல் தரும் இன்சொற்களை, அன்புடன் கூறவேண்டும், அனைவரிடத்தும் நல்லெண்ணம் பூண்டு நட்பாதரவுடன் அன்பு செலுத்தவேண்டும், இன்றையப் பூசல் நிறைந்த உலகிற்கு, இன்றியமையாது வேண்டப்படுவதும், இஃதேயாகும். பொருளுள்ளோர் பொருளை நல்க வேண்டும்; அன்புள்ளங்கொண்டோர் அருளை நல்கவேண்டும். அன்பென்னும் பண்புத்தாய் நல்கிய, குழவியே அருள். அச்சாணி இன்றி தேரினைச் செலுத்த வியலாது; அதுபோல அன்பின்றி உலகில் உய்திபெற இயலாது. அதனால்தான் வையம் வாழ வழிகாட்டிய ஐயன் வள்ளுவப் பேராசானும்,

> "*அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும் செல்வச் செவிலியால் உண்டு*" (குறள்,757) என்றார் போலும்!

நல்கு[1]–தல் *nalgu-,* 5 செ. குன்றாவி (v.t.) 1. கொடுத்தல்; to bestow, grant, give. **"*இல்லோர் புன்கண் டீர நல்கும்*"** (பதிற்றுப். 86, 6). 2. விரும்புதல்; to desire, like. "*நறுமலர்க் கோதாய் நல்கினை கேளாய்*" (மணிமே.12:56). 3. தலையளி செய்தல்; to show deep love. "*பரிந்தவர் நல்கார்*" (குறள், 1248.). 4. படைத்தல்; to create. "*நல்கித் தான் காத்தளிக்கும் பொழிலேழும்*" (திவ். திருவாய். 1:4:5). 5. வளர்த்தல்; to train, bring up, as a child. "*நங்கைமீர் நீருமோர் பெண்பெற்று நல்கினீர்*" (திவ். திருவாய். 4:2:9).

[நல் → நல்கு–.]

தல்லீற்றுத்தொழிற்பெயர்.

நல்கு[2]–தல் *nalgu-.* 5 செ. கு.வி. (v.i.) காலந்தாழ்த்துதல்; to delay. **"*நாணத்தாற் சிறிது போழ்து நல்கின னிருந்த*"** (கம்பரா. மூலபல. 50.). 2. பயன்படுதல்; to be useful "*அயற்றேவர் நல்கார் விடினும்*" (திருநூற்.89). 3. உவத்தல்; to rejoice. "*நல்கினும் நல்கானாயினும்.... தித்தன் காண்க*" (புறநா. 80). 4. அருள் செய்தல்; to show favour, to bestow grace. "*பார்த்தனுக்கன்று நல்கிப் பாசுபதத்தை யீந்தாய்*" (தேவா. 1029:8). "*நம்பா இனித்தான் நல்காயே*" (தேவாரம்.).

ம., நல்குக.

[நல் → நல்கு–.]

நல்குந்தம் *nal-gundam,* பெ. (n.) சரகண்ட வைப்பு நஞ்சு; a kind of arsenic.

[நல்குந்து + அம்.]

நல்குரவு *nalguravu,* பெ. (n.) 1. வறுமை; poverty, indigence "*நல்குரவென்னு நசை*" (குறள், 1043.). 2. துணையின்மையால் கைவிடப்படுகை; destitution.

மறுவ. வறுமை.

[நல் + கூர்வு→குரவு.]

நல் = நன்மை. கூர்தல் = மிகுதல், நன்மையின்மை மிகுதல்.

ஒருகா. நல்கு + ஊர்வு → நல்கூர்வு → நல்குரவு.

நல் + குறைவு→குரவு–நலந்துய்க்கும் நிலையினின்று, பொருள்வளங்குன்றி, கழிபெரு வறுமையடைதலே, நல்குரவு.

நுகர்வதற்கு என்று ஏதும் இல்லாநிலைமையை நல்குரவு என்பர். நன்மையின்மையை, நன்மை மிகுதி என்று, மங்கலவழக்கால் குறித்தனர் புலவர்.

வெறுமையாகிய வறுமை நிரப்பு என்றது போல், நன்மையின்மையாக நன்மை மிகுதலே நல்குரவு. நல்கு + ஊர்தல் என்று பகுத்து, பிறர் கொடுப்பதன்மேல் ஊர்ந்து செல்லுதல் என்று, மொழிஞாயிறு கூறுகின்றார்.

நல்குரவுண்டாகும் வழிகள் பற்றி மொழிஞாயிறு கூறுவது:–

1. முன்னோர்தேட்டின்மை. 2. பெற்றோரின்மை. 3. உழைப்பின்மை. 4. மதிநுட்பமின்மை. 5. பொருளாசையின்மை 6. தாயத்தாருங் கள்வரும்,கொள்ளையரும் பொருளைக் கவர்ந்து கொள்ளுதல். 7. இயற்கைப்பேரழிவு. 8. குடியுஞ்சூதும், விலைமகளிருறவுமாகிய தீயவொழுக்கம். 9. நேர்மையின்மை.

இவ்வுலகில் உள்ள துன்பங்களுள் கழிபெருந்துன்பம் தருவது வறுமையே, இதைவிளக்க வந்த வள்ளுவர், "*இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின் இன்மையே இன்னா–தது.*" (குறள்,1041.). என்று கூறுவதறிக.

நல்கூர்[1]–தல் *nalgūr-,* 2 செ.கு.வி. (v.i.). 1. வறுமைப்படுதல்; to be poor, indigent. "*நல்கூர்ந்த மக்கட்கு*" (நாலடி, 242). 2. கைவிடப்படுதல்; துணையின்மையால் கைவிடப்படுகை; to destitute. 3. களைப் படைதல்; to be wearied. "*நடவை வருத்த மொடு நல்கூர் மேனியள்*" (மணிமே. 13:72). 4. துன்புறுதல்; to suffer. "*மாலைநீ யாயின் மணந்தா ரவராயின் ஞாலமோ நல்கூர்ந்தது வாழிமாலை*" (சிலப். 7:50).

[நல் + கூர்–.]

ஒருகா:– *[நல்கு + ஊர் → நல்கூர்–.]*

நல்கூர்[2] *nalgūr-,* பெ. (n.) 1. ஏழைமை; poverty. "*நல்கூர்க் கட்டழ லலிந்துகை யறுப்ப*" (பெருங். வத்தவ.2.21.). 2. எளிமை; simplicity.

[நல் + கூர் → நல்கூர்.]

நல்கூர்ந்தோன் *nalgūrndōṉ,* பெ. (n.) வறியவன் (திவா.); poor, indigent man.

[நல்கூர் → நல்கூர்ந்தோன்.]

நல்கை[1] *nalgai,* பெ. (n.) 1. கொடுக்கை, கொடை; bestowing, granting. 2. *நல்கல்* பார்க்க; see *nalgal.*

[நல்கு → நல்கை.]

நல்கை[2] *nalgai,* பெ. (n) கல்வி நிறுவனங்களுக்குத் தரும் நிதி உதவி; grant (to educational institutions), sponsorship. '*பல்கலைக்கழக மானியக் குழுவின் நல்கையுடன் கருத்தரங்கு நடத்தப்படும்*'.

[நல் + கை.]

நல்சித்தன் *nal-śittaṉ,* பெ. (n) அரச வயிரக்கல்; one of the two inferior varieties of diamonds with yellow specks.

நல்சித்தன் = தரம்தாழ்ந்ததும், மஞ்சள் வண்ணப்புள்ளிகளையுடையதுமான வயிரம்.

நல்துளசி *nal-tuḷaśi,* பெ. (n.). நல்லதுளசி; ocimum sanctum.

நல்தேசி *naltēśi,* பெ. (n.). *நற்றேசி* பார்க்க; see *naṟṟēśi.*

நல்நாறி *nal-nāṟi,* பெ. (n.). *நலநாறி* பார்க்க; see *nala-nāṟi.*

மறுவ. சிவகரந்தை

[நல் + நாரி.]

நல்நெருஞ்சி *nal-neruñji,* பெ. (n.). நல்ல நெருஞ்சி; a small prostrate herb, cow's thorn. "*நெருஞ்சிக் காடுறு கடுநெறியாக*" (பதிற்றுப்.26.).

நல்பசு *nal-pašu,* பெ. (n.). *நல்லா*[2] பார்க்க; see *nallā*[2]

[நல் + பசு.]

நல்மதியோன் *nal-madiyōṉ,* பெ. (n.) குரங்கு; monkey.

[நல் + மதியோன்.]

நல்மருது *nal-marudu,* பெ. (n.) மருத மரவகையுளொன்று; a kind of murdam tree.

[நல் + மருது.]

நல்மலையாதி *nal-malaiyādi,* பெ. (n.) தாமரைக்கிழங்கு; lotus root.

[நல்மலை + ஆதி.]

நல்மிளகு *nal-miḷagu,* பெ. (n.) கருமிளகு; black pepper-Pipernigrum.

[நல் + மிளகு.]

நல்முகிசம் *nal-mugišam,* பெ. (n.) *சுக்குநாறி மரம்* பார்க்க; see *sukku-nāṟi-maram.*

நல்முருங்கை *nal-muruṅgai,* பெ. (n.) முருங்கை; drum - stick tree.

[நல் + முருங்கை.]

உண்ணுவதற்குப் பயன்படும் முருங்கை; உடலுக்கு ஊறு விளைவிக்காது நலத்தையே நல்கும் முருங்கை.

நல்ல *nalla,* பெ. எ. (adj) 1. நன்மையான; good, fine, excellent. 2. மிக்க; abundant, copious "*இந்தத் தடவை மிளகாய் நல்ல காய்ப்பு*" (உ.வ.). 3. கடுமையான; intense, severe. 'நல்ல வெயில்' (இக்.வ.). நல்லஅடைமழை பெய்தால்தான் சென்னையிலுள்ள ஏரிகள் நிறைந்து தண்ணீர்ப் பற்றாக்குறை தீரும். (இக்.வ.);

க., ம., நல்ல.

[நல் →நல்ல.]

நல்லக்குடி[1] *nalla-k-kuḍi,* பெ. (n.) வளமாக வாழ்ந்து வரும் குடும்பம்; a wealthy family

நல்லக்குடி[2] *nalla-k-kuḍi,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில் உள்ள சிற்றூர். a village in Tañjāvūr, dt.

[நல்ல + குடி.]

குயிலாலுந்துறை எனப் பெயர் பெறும் இவ்விடம், மயிலாடுதுறைக்கு ஒரு கல் தொலைவில் உள்ளது என்பதால், பழைய பிரிக்கப்படாத தஞ்சை மாவட்டத்தில் உள்ளது என்பது தெரிகிறது.

நல்லகணிசம் *nalla-kaṇišam,* பெ. (n.) மீன் வலைப்படுதற்குரிய தகுந்த நேரம் (கட. பர.); time suit to catch fish

[நல்ல + கணிசம்.]

நல்லகாரை[4] *nalla-kārai,* பெ. (n.). செங்காரை; common honey-thorn. (ச.அக.).

[நல்ல + காரை]

நல்லகாரை[2] *nalla-karai,* பெ. (n.) காரை; spinous honey-thorn (l.).

[நல்ல + காரை.]

நல்லகாலம் *nalla-kālam,* பெ. (n.) நற்காலம்; auspicious time, lucky time. நல்ல காலத்தால் தப்பினான் (இக்.வ.). நல்லகாலமாக இருந்ததால் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று (உ.வ.).

மறுவ. ஆகூழ்காலம்.

[நல்ல + காலம்.]

தீமை பயக்காது, நன்மையே விளையும் காலம். நற்பேறு கொடுக்கும் காலம். உள்ளத்தில் உறுதியும், நோயற்ற செல்வமும் கொடுக்கும் காலம்.

நல்லகெந்தன் *nalla-kendan,* பெ. (n.) மேகநோய் பதினெண் வகைகளிலொன்று; one of the eighteen mega diseases.

[நல்ல + (செ)கந்து + அன்.]

நல்லகோவை *nalla-kōvai,* பெ. (n.) *கோவை* பார்க்க; see, *kōvai.*

[நல்ல + கோவை.]

நல்லகௌளி *nalla-kauḷi,* பெ. (n.) நன்னிமித்தமாக வொலிக்கும் பல்லி (நாஞ்.); lizard predicting good.

[நல்ல + skt *கௌளி.]*

நல்லங்கு *nallaṅgu,* பெ. (n.) விலங்குவகை; a kind of animal as of armadillo.

[நல் + அழுங்கு → அங்கு.]

(ஒ.நோ.) மழுங்கு → மங்கு.

நல்லங்கோலம் *nallaṅ-gōlam,* பெ. (n). அழிஞ்சில் மரம் ; sage leaved alangium.

[நல்லம் + கோலம்.]

நல்லசங்கு *nalla-šaṅgu,* பெ. (n.) சங்கஞ்செடி; a creeper with white flowers.

[நல்ல + சங்கு.]

நல்லசந்தனம் *nalla-šandaṉam,* பெ. (n) செஞ்சந்தனம்; red sandal

[நல்ல + சந்தனம்.]

உடம்பில் பூசுதற்கேற்ற, கெடுதி விளைவிக்காத சந்தனச்சாந்து. இறைத் திருவுருவங்களை, திருமுழுக் காட்டுதற்குரிய செஞ்சந்தனம்.

நல்லசமயம் *nalla-šamayam,* பெ. (n.). ஆகூழ் வேளை; favourable good opportunity

[நல்ல + சமையம்]

சமயம்–நன்மை பெருகும் நேரம்: நல்வாய்ப்புகளும், நற்செல்வமும் தேடிவரும் காலம். தீமைநேராத காலம். உள்ளஉறுதியுடன் செயல்படும் காலம். அனைத்து நிலைகளிலும் வளங் கொழிக்கும் காலம்.

நல்லசனனம் *nalla-šaṉaṉam,* பெ. (n.) 1. நற்பிறப்பு; good birth. 2. நற்குணம் வாய்ந்தவன்–ள்; a good and pious person

[நல்ல + Skt. சனனம்.]

நற்செயல்களாற்றுதற்கு வாய்த்த மானுடப்பிறப்பு. அதனால்தான்

மானுடப்பிறப்பை நாவுக்கரசர் தமது தேவாரத்துள், "*வாய்த்தது இப்பிறவி மதித்திடுமின்*" என்று மன்பதை மாந்தர்க்கு அறிவுறுத்துகின்றனர். அன்பும், அருளும் பூண்டு செயலாற்றும் நற்பேறு, மாந்தர்க்கே உண்டு; நற்பிறப்பாம் இம் மானுடப் பிறப்பையும், நற்குணத்துடன் செயலாற்றும் மனத்திட்பத்தையும், நமக்குஈந்த இறைவனுக்கு நாம் என்றென்றும், நன்றிக்கடன் பட்டவர் களாவோம்.

நல்லசா *nalla-šā.* பெ. (n.) *நல்லசாவு (வின்.)* பார்க்க; see *nalla-šāvu*

[நல் + சா.]

நல்லசாமம் *nalla-šāmam,* பெ. (n.) நடுச்சாமம் (வின்.); mid-night, dead of night.

[நல்ல + சாமம். யாமம் → சாமம்]

நல்லசாமிப்பிள்ளை *nallašāmi-p-pillai,* பெ. (n.) தமிழறிஞர்; a Tamil scholar

இவர் சிவஞானபோதம், சிவஞான சித்தியார், உண்மை நெறிவிளக்கம், திருவுந்தியார், வினாவெண்பா, கொடிக்கவி, திருவருட்பயன், இருபா இருபஃது, சிவபக்த விலாசம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

நல்லசாரம் *nalla-šāram,* பெ. (n.) அத்திப்பிசின் (சங்.அக.); fig-resin

[நல்ல + சாரம்]

நல்லசாவு *nalla-sāvu.* பெ. (n.) அகவை (வயது) முதிர்ந்த நிலையில் தானும் துன்பப்படாது, பிறருக்கும் தொல்லை இல்லாமல் ஏற்படும் இயற்கைச் ஏற்படும் சாவு; mature and painless death, euthanasia

[நல்ல +சாவு.]

நல்லசீயக்காய் *nalla-šiyakkāy,* பெ. (n.) சீயக்காய்; true soap-pad.

[நல்ல + சீரகம்]

நல்லசீரகம் *nalla-širagam.* பெ. (n.) கறிச்சீரகம்; cummin seed.

[நல்ல + சீரகம்]

நல்லசெய்கை *nalla-šeygai.* பெ. (n.) 1. நல்ல செயல்; good, virtuous, action 2. திறமையான செயல் (இ.வ.); skillful performance

[நல்ல + செய்கை.]

நல்லசேவகன் *nalla-šēvagan,* பெ. (n.) 1. சிறந்த வீரன்; good-soldier. 2. ஊரகக் காவல் தெய்வமான ஐயனார்; Aiyanār, the village deity

[நல்ல + skt சேவகன்]

நல்லசோறு *nalla-šōru.* பெ. (n.) நெல்லரிசியில் ஆக்கப்பட்ட சோறு; cooked rice நல்லசோறு சாப்பிட்டு நாளாச்சு (உ.வ.).

[நல்ல + சோறு.]

நெல்லரிசியில் சமைக்கப்பட்ட சோறே நல்லசோறு; சிற்றூர்ப்புறத்தே அன்றாடம் கூலிவேலை செய்து வாழ்வோர், விழாக்காலத்தும், பண்டிகை நாட்களிலும் தான் நல்லசோறு(நெல்லரிசிச்சோறு) சமைத்து உண்பர். ஏனைய நாட்களில் குறைந்த விலையில் கிடைக்கும். கம்பு, சோளம், வரகு, சாமை முதலான புன்செய்த் தவசங்களில் சமைத்த சோறினையே உண்பர். ஊரகத்தே

புன்செய்த் தவசஉணவும் சோறு என்றே இன்றும் அழைக்கப்படுகிறது. (எ.டு.) கம்பஞ்சோறு, சோளச்சோறு. நெல்லரிசியில் ஆக்கிய சோற்றையே "நல்லசோறு" என்று ஊரகமக்கள் உரைக்கின்றனர் எனலாம்.

நல்லடிக்காலம் *nallaḍi-k-kālam,* பெ. (n.) நன்மைக்கு மூலமான காலம் (ஈ.டு.); auspicious occasion.

நல்லணி *nallaṇi,* பெ. (n.) மங்கல நாண்; a marriage badge as ornament par excellence. "*நல்லணி யணிந்தென்னன் மனையாகி வாழ்குவையால்*" (பிரமோத். 4:26).

மறுவ. தாலி

[நல் + அணி.]

நல்லத்தி *nallatti,* பெ. (n.). *அத்தி* பார்க்க; see *atti.*

[நல் + அத்தி.]

நல்லத்தை *nallattai,* பெ. (n.) **1.** தந்தையுடன் பிறந்தாள் (வின்.); paternal aunt. **2.** தந்தையுடன் பிறந்த அத்தையருள் நடுப்பிறந்தாள் (தஞ்சை); the middle one among paternal aunts.

[நல் + அத்தை.]

நடுப்பிறந்தாள் என்னும் போது, நள்ளத்தை என்று குறிக்கப்பட வேண்டும்.

ஒ.நோ. நள்ளிரவு

நல்லதக்காளி *nalla-takkāḷi,* பெ. (n.) பெரியதக்காளி; indian winter cherry.

[நல்ல + தக்காளி.]

நல்லதண்ணித்தீவு *nalla-taṇṇi-t-tīvu,* பெ. (n.). இராமநாத புரத்திலிருந்து 40 கல் தொலைவில், ஏறக்குறைய 2 1/2 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஒரு தீவு; an island situated 40 k.m from Ramnāḍ, where fishermen, take rest in the midst of their hard work. Here they get pure drinking water நல்லதண்ணித்தீவு மீனவர்களின் நாவறட்சியைப் போக்குகிறது. (இ.வ.).

[நல்ல + தண்ணீர் + தீவு.]

இங்கே மீனவர்கள் தொழிலினூடே சென்று, ஓய்வெடுப்பார்கள். இங்கே குடிக்க நல்லதண்ணீர் கிடைக்கும்.

நல்லதண்ணீர் *nalla-taṇṇīr,* பெ. (n.) **1.** குடிதண்ணீர்; fresh drinkable water. **2.** சுவையுள்ள நீர்; good water. ஆழ்துளைக் கிணற்றில் நல்லதண்ணீர் கிடைப்பது மிகவும் அரிது. (இ.வ.).

மறுவ. நன்னீர்.

[நல்ல + தண்ணீர்.]

பருகுவதற்கு ஏற்றவண்ணம் அமைந்ததும், உவர்ப்புச் சுவையற்றதுமான தூயநீர்.

நல்லதண்ணுழுவை *nalla-taṇṇuḻuvai,* பெ. (n.) 11/2 விரலம் (அங்குலம்)வரை வளரக்கூடிய ஆற்று மீன்வகை; river gobius, a brown fresh-water fish, fawn colour, attaining 11/2 inch. in length.

மறுவ. ஆற்றுழுவை.

[நல்ல + தண் + உழுவை.]

நல்லதம்பிரான் *nalla-tambirāṉ,* பெ. (n.) **1.** அங்காளம்மன் (தஞ்சை.); the goddess

Angālammaṉ 2. தெய்வமாகக் கருதப்படும் நல்லபாம்பு (தஞ்சை.) cobra, regarded as a deity

[நல்ல + தம்பெருமான் → தம்பிரான்.]

நல்லதரட்டை *nalla-taraṭṭai,* பெ. (n.) *நல்லதுறட்டை* பார்க்க; see *nalla-turaṭṭai*

[நல்ல + தரட்டை.]

நல்லதரம் *nalla-taram,* பெ. (n.) 1. முதற்றரம் (வின்.); the first quality 2. சரியான இணை (இ.வ.); proper match, good 3. தகுதியான மணமக்கள்; good appropriate match

[நல்ல + தரம்.]

நல்லதனம் *nalla-taṉam,* பெ. (n.) 1. நட்பு (யாழ்.அக.); friendlieness 2. ஒத்துப் போகும் இயல்பு (இ.வ.); amicable dealing amiability

மறுவ. கேண்மைப்பாங்கு.

[நல்ல + தனம்.]

தன்(மை) + அம் = தனம்.

நட்பிணக்கத்துடன் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு செயலாற்றும் பாங்கு, நல்லதனம் எனப்படும். உண்மை அன்பு கெழுமியவர்பால் மட்டுமே, நல்லதனம் என்னும் இந் நற்பண்பு, காணப்படும்.

நல்லதனம்பண்ணு-தல் *nalla-taṉam-paṇṇu* 5 செ.குன்றாவி. (v.t.) அமைதிப் படுத்துதல் (வின்); to pacify

[நல்லதனம் + பண்ணு-.]

நல்லதனமாக *nalla-taṉam-āga,* வி.எ. (adv.) 1. நயமாக; suavely, politely 2. முகப் புகழ்ச்சியாக, தணிவாக(தஞ்சை); soothingly

[நல்ல + தனம் + ஆக.]

நல்லதாமரை *nalla-tāmarai,* பெ. (n.) 1. பொற்றாமரை; red lotus. 2. தாமரை பார்க்க; see tāmarai

[நல்ல + தாமரை.]

நல்லதாளி *nallatāḷi,* பெ. (n.) *நறுந்தாளி* பார்க்க; see *naṟundāḷi*

நல்லது *nalladu,* பெ. (n.) 1. நன்மையானது; (வின்); *that which is good* 2. நல்லபாம்பு பார்க்க (இ.வ.); see nalla-pāmbu

ம., நல்லது.

[நல்ல → நல்லது.]

நல்லதுசொல்(லு)[1]-தல் *nalladu-sol(lu)-,* 13 செ.கு.வி. (v.i.) 1. அறிவு கூறுதல்; to give kindly advice 2. அன்புடன் பேசுதல் (வின்.); to speak kindly

[நல்லது + சொல்லு -.]

நல்லதுசொல்(லு)[2]-தல் *nalladu-sol (lu)-,* 8 செ.குன்றாவி. (v.t.) வழியனுப்புதல் (வின்.); to bid farewell

[நல் + அது + சொல்லு-.]

நல்லதுத்தி *nalla-tutti,* பெ. (n.) பெருந்துத்தி; country mallow (l.)

[நல்ல + துத்தி.]

நல்ல = பெரிய.



நல்லதுபண்ணு—தல் *nalladu-paṉṉu-,* 5 செ.குன்றாவி. (v.t.) இணக்குதல் (வின்.); to reconcile

[நல்லது + பண்ணு—.]

நல்லதுபொல்லாது *nalladu-pollādu,* பெ. (n.) 1. நன்மை தீமை; good and evil. 2. நன்மை தீமையுமான நிகழ்வுகள் (இ.வ.); auspicious and inauspicious occasions.

[நல்லது + பொல்லது → பொல்லாது.]

நல்லதும்பை *nalla-tumbai,* பெ. (n) வெண் தும்பை; lucas flower.

[நல்ல + தும்பை.]



நல்லதுவரம் *nalla-tuvaram,* பெ. (n.) கடுகு; mustard.

[நல்ல + துவரம்.]

நல்லதுளசி *nalla-tuḷaśi,* பெ. (n.) துளசி; holy basil.

[நல்ல + துளசி.]

நல்லதுறட்டை *nalla-tuṟaṭṭai,* பெ. (n.) ஆறுவிரலம் நீளம் வளர்வதும், சாம்பல் நிறமுள்ளதுமான, கடல்மீன்வகை; see fish greyish green attaining 6 inch in length

[நல்ல + துறட்டை.]

நல்லதேட்டம் *nalla-tēṭṭam,* பெ. (n.) 1. நேர்மையான வருவாய்; acquisition of property by fair means. 2. மிக்க வருவாய்; ample income. 3. (ஆன்மாவின்) ஆதனின் பொந்திகை (திருப்தி.); seeking the good of the soul.

[நல்ல + தேட்டம்.]

நல்லந்துவனார் *nallanduvaṉār,* பெ. (n) கழகக் காலப் புலவர்; a poet of śaṅgam period

இவர் கலித்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாடலையும், நெய்தற்கலிப் பாடல்களையும் இயற்றியுள்ளார். இந் நூலினைத் தொகுத்தவரும் இவரே.

பரிபாடலில் 8,9,11,20 ஆகிய நான்கு பாடல்களை இயற்றியுள்ளார்.

திருவள்ளுவமாலையில் *"சாற்றிய பல்கலையும்"* எனத் தொடங்கும் வெண்பாவினை இயற்றியவர்.

இவர் பெயருக்கு நவ்வந்துவனார் என்ற பாட வேறுபாடும் உண்டு.

[நல் + அந்துவனார்.]

"*யான்செய் தொல்வினைக்கு எவன்பேது உற்றனை வருந்தல் வாழி தோழி யாஞ்சென்று உரைத்தனம் வருகம் எழுமதி புணர்திரைக் கடல்விளை அமுதம் பெயர்கேற் காஅங்கு உருகி உகுதல் அஞ்சுவல் உதுக்காண் தம்மோன் கொடுமை நம்வ:பின் ஏற்றி நயம்பெரிது உடைமையின் தாங்கல் செல்லாது கண்ணீர் அருவி யாக அழுமே தோழி அவர் பழமுதிர் குன்றே*" (நற்.88).

"*உரவுத்தகை மழுங்கித்தன் இடும்பையா*
லொருவனை
இரப்பவன் நெஞ்சம்போற் புல்லென்று
புறமாறிக்
கரப்பவன் நெஞ்சம்போல் மரமெல்லாம்
இலைகூம்பத்
தோற்றஞ்சால் செக்கருள் பிறைநுதி
யெயிறயாக
நாற்றிசையும் நடுக்குறூஉ மடங்கற் காலைக்
கூற்றுநக் கதுபோலும் உட்குவரு
கடுமாலை"
(கலித்.120.).

நல்லந்துவனார் பாடிய நெய்தற்கலியுள் என்றும் நின்று நிலவும் நெஞ்சுருக்கும் பாடல்வரி:-

"*போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை*" மணந்தவளைக் காப்பது மணவாளன் கடமை; புணர்ந்தவளைப் பிரியாதிருப்பது, அஃதாவது, இருமனம் இணைந்து, ஒருமனமாகித் திருமணஞ் செய்தவளைக்காத்து ஓம்புவது, ஆடவனின் வாழ்வியல் நெறி. "உன்னில் நான் என்னில் நீ", என்று கூறி வாழ்ந்தவளைப் பிரிதல் முறையன்று, என்று நவிலும் பாங்கு, உளங்கூறத்தக்கது.

இவருடைய பெயர் அந்துவன் என்றும், நல்லந்துவன் என்றும், மதுரையாசிரியர் நல்லந்துவன்என்றும் ஏடுகளில் எழுதப் பட்டுள்ளன. இப்பெயர்கள் ஒருவரையே குறிக்கின்றன. 'ந' என்பது கழகக் காலத்தில் தமிழ்ப் புலவருக்கு இட்டு வழங்கப்பட்ட சிறப்புச் சொல். அந்துவன் என்பது இவருடைய பெயர்.

நல்லந்துவனார் இயற்றிய இரண்டு செய்யுள்கள் அகநானூற்றில் 43-ஆம் செய்யுளாகவும், நற்றிணையில் 88ஆம் செய்யுளாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. கலிப்பாக்களினால் ஆகிய கலித்தொகை என்னும் நூலை இவர் தொகுத்தார். அந்தக் கலித்தொகையில், நெய்தற்கலியைப் பற்றி இவர் பாடிய 33 செய்யுள்களையும் தொகுத்திருக்கிறார். இவர் தொகுத்த கலித்தொகைக்குக் கடவுள் வாழ்த்தையும் இவரே பாடியுள்ளார். கலித்தொகையில் பெருங்கடுங்கோன் பாடிய பாலைக்கலிச் செய்யுட்களையும், கபிலர் இயற்றிய குறிஞ்சிக்கலிச் செய்யுட்களையும், மருதன் இளநாகனார் இயற்றிய மருதக்கலிச் செய்யுட்களையும், சோழன் நல்லுருத்திரனார் இயற்றிய முல்லைக்கலிச் செய்யுட்களையும் இவர் தொகுத்துள்ளார். இதனை,

"*பெருங்கடுங்கோ பாலை, கபிலன் குறிஞ்சி,*
மருதனிள நாகன் மருதம் – அருஞ்சோழன்
நல்லுருத் திரன்முல்லை, நல்லந் துவனெய்தல்
கல்விவல்லார் கண்ட கலி"

என்னும் செய்யுளினால் அறியலாம்.

கலித்தொகையின் இறுதியில் "*தொகுத்தார் – நல்லந்துவனார்*" என்று எழுதப்பட்டிருப்பது, இதனைத் தொகுத்தவர் இவரே, என்பதை உறுதிப்படுத்துகின்றது.

மதுரையில் இருந்த இவர், மதுரைக்கும் அருகில் உள்ள திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருந்த முருகப் பெருமான் மீது (8ஆம் பரிபாடலைப்) பாடினார். அதில் திருப்பரங்குன்றத்தை மிகப் பாராட்டியுள்ளார். "*பரங்குன்று இமயக்குன்றம் தகர்க்கும்*" என்று கூறியுள்ளார். முருகனுக்குத் திருப்பரங்குன்றம் என்றென்றும் நிலை பெறுவதாக, என்று வாழ்த்துகிறார்.

மணிமிடற் றண்ணற்கு மாசிலோள் தந்த
நெறிநீர் அருவியசும்புறு செல்வ! மண்பரிய
வானம் வறப்பினும் மன்னுகமா தண்
பரங்குன்றம்! நினக்கு (பரிபாடல் 8:127-30).

என்று வாழ்த்துகிறார்.

வையையாற்றையும், இவர் பரிபாடலில் பாடியுள்ளார். (பரிபாடல்6, 11, 20.). இவர் இசைக்கலையில் வல்லவர் என்பது, இவர் இயற்றியுள்ள பரிபாடல்களினால் அறியலாம். ஏனென்றால் பரிபாடல் இசைப்பா வகையைச் சேர்ந்தது. இதனை இவர், "*இன்னியல்மாண் தேர்ச்சி இசைப் பரிபாடல்*" (பரிபாடல் 11:137). என்று கூறியிருப்பது காண்க.

நல்லந்துவனார் முருக(பக்தர்)னடியார் என்றும், அவர் முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள புகழ்பெற்ற திருப்பரங்குன்றத்தைப் பரிபாடலில் பாடியுள்ளார் என்றும் கூறினோம். இச் செய்தியை, இப் புலவர்கள் காலத்தில் இருந்த மருதன் இளநாகனார் என்னும் புலவரும், தாம் பாடிய அகப்பாட்டு ஒன்றில் பாடியுள்ளார்.

"*சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்*
சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை"
(அகநா.59:10–12.).

என்று அவர் கூறியுள்ளது காண்க.

நல்லந்துவனாரும், மருதன் இளநாகனாரும் சமகாலத்தில் இருந்தவர் என்பது நன்கு தெரிகின்றது. மருதன் இளநாகனார் இயற்றிய, மருதக்கலிச் செய்யுட்களை நல்லந்துவனார் தாம் தொகுத்த கலித்தொகையில் தொகுத்து இருக்கிறார். தனக்குச் சமகாலத்தில் இருந்த புலவர் செய்யுட்களை மட்டும் தொகுக்க முடியுமேயல்லாமல், தமக்குப் பிற்காலத்தில் இருந்த புலவர்களின் பாடல்களை ஒருவர் தொகுக்க முடியாதல்லவா? எனவே, நல்லந்துவனாரும், மருதன் இளநாகனாரும் சமகாலத்தவர் என்பது தெரிகின்றது. மருதன் இளநாகனார், நல்லந்துவனாருக்கு முன்பு இருந்திருக்கக் கூடாதோ என்றால், மருதன் இளநாகனார், நல்லந்துவனார் பாடிய திருப்பரங்குன்றத்தை,

"*சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து*
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை"
(அகம் 59:11–12.).

என்னும் பாடல் கூறுகிறபடியால், மருதன் இளநாகனார், நல்லந்துவனாருக்கு முன்பு வாழ்ந்திருத்தல் முடியாது. எனவே நல்லந்துவனாரும், மருதம் பாடிய இள நாகனாரும், சமகாலத்தவர் என்பது ஐயமறத் தெரிகின்றது.

மதுரையாசிரியர் நல்லந்துவனார், திருப்பரங் குன்றத்து மலையில் இருந்த, இயற்கைக் குகையொன்றைச் செப்பனிட்டு, அதைத் திருப்பரங்குன்றத்து மலையில் தவம் செய்து கொண்டிருந்த முனிவருக்குத் தானமாக வழங்கினார் என்னும், அரிய செய்தி ஒன்றும் தெரிகின்றது. திருப்பரங்குன்றத்தையும், அதில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானையும், பத்திமையுடன் (பக்தியுடன்) பாடிய ஆசிரியர் நல்லந்துவனார், அந்த மலையில் தவம் செய்துகொண்டிருந்த முனிவருக்குக் குகையைச் செப்பனிட்டுக் கொடுத்தது மிகப் பொருத்தமே யாகும். திருப்பரங்குன்றத்து மலையில் உள்ள இயற்கைக் குகைகள் சிலவற்றில், ஒரு குகையில் கீழ்க்கண்ட எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வெழுத்து அக் காலத்தில் வழங்கி வந்த தமிழி (பிராமி) எழுத்தாகும்:

"அந்துவான் கொடுபிதாவான்"

என்பது இதன் கல்வெட்டு வரியாகும்.

அந்துவன் என்பதை, அந்துவான் என்றும், கொடுப்பித்தவன் என்பதைக் கொடுபிதாவன் என்றும், படிப்பில்லாத கல்தச்சன் இவ் வெழுத்துகளைப் பாறையில் செதுக்கியிருக்கிறான். இதன் சரியான வரி, அந்துவன் கொடுப்பித்தவன் என்றிருக்க வேண்டும்.

முருக பத்தரும், திருப்பரங்குன்றத்து முருகனைப் பரிபாடலில் பாடினவரும், சங்கப் புலவருமாயிருந்த அந்துவரே, இந்தத் தானத்தைச் செய்திருக்கவேண்டும் என்பதில் ஐயமுண்டோ?

நல்லநடத்தை *nalla-nadattai,* பெ. (n.) நல்லொழுக்கம்; good virtuous conduct.

[நல்ல + நடத்தை.]

நல்லொழுக்கமும், நற்குணமும் பூண்டு, ஒழுகும் நடத்தை.

நல்லநாள் *nalla-nāḷ,* பெ. (n.) **1.** விருப்பமான நாள்; favourite day. **2.** திருவிழா நாள் (வின்.); நல்லநாளில் குழந்தைகளுக்குப் புதுத் துணிகள் வாங்கவேண்டும். (உ.வ.). day of festivity. **3.** மகிழ்ச்சியான நாள்; happy day. நல்லநாளில் வீணாகப் பகையை வளர்த்துக் கொள்ளாதே (இக்.வ.). **4.** நன்மைபயக்கும் நாள்; auspicious day.

[நல்ல + நாள்.]

நல்லநினைப்பு *nalla-niṉaippu,* பெ. (n.) **1.** சிறந்த நினைவு (வின்.); good memory. **2.** நல்லெண்ணம்; good thoughts "*நல்ல நினைப் பொழியி*" (தேவா.744:4.).

[நல்ல + நினைப்பு.]

நல்லநீர் *nalla-nīr,* பெ. (n.) **1.** நன்னீர்; fresh uncontaminated water. **2.** மழைநீர்; rain water. **3.** வாலையில் வடித்தநீர்; distilled water. **4.** சிறுநீர்; urine.

[நல்ல + நீர்.]

நல்லநெருஞ்சில் *nalla-neruñjil,* பெ. (n.) சிறு நெருஞ்சில்; small caltrope.

[நல்ல + நெருஞ்சில்.]

நல்லப்பன் *nallappaṉ,* பெ. (n.) தந்தையுடன் பிறந்தவன் (யாழ்ப்.); paternal uncle.

நல்லபசி *nalla-paśi,* பெ. (n.) உணவு வேண்டுமென்கிற மிகு உணர்ச்சி; good appetite.

மறுவ. கடும்பசி.

[நல்ல + பசி.]

நல்லபலசு *nalla-palaśu,* பெ. (n.) நீரல்லி; black horey thorn.

[நல்ல + பலசு.]

நல்லபழக்கம் *nalla-paḻakkam,* பெ. (n.) **1.** நற்பயிற்சி (வின்.); good habit. **2.** நெருங்கிய நட்பு (இ.வ.); intimate acquaintance, close friendship. **3.** நல்லோரிணக்கம்; friendship with the good.

[நல்ல + பழக்கம்.]

நல்லபாம்பு *nalla-pāmbu,* பெ. (n.) நாகப்பாம்பு; cobra

[நல்ல + பாம்பு.]

[பம்பு → பாம்பு.]

பம்புதல் = விரிதல்.

படம் விரித்துத் அச்சுறுத்தும் கொடிய நச்சுயிரி.

பாம்பு என்பது, நாகப்பாம்பிற்கே உரிய சிறப்புப்பெயர். பரவுதல் = விரிதல் எனப்பொருள் படும். பம்பு(பம்புதல்) என்னும் சொல் பாம்பு எனத் தலைநீண்டு, படம்விரிக்கும், நல்லபாம்பின் பெயராயிற்று. ஆயினும் பாம்பு என்னும் பெயர் இனத்தைக் குறிக்குமுகத்தான், விரியன் பாம்பு, சாரைப்பாம்பு, வழலைப்பாம்பு, மண்ணுளிப் பாம்பு என்று எல்லாவற்றுக்கும் பொதுப்பெயராயிற்று.

படம் விரித்தாடும் சிறப்புப் பண்பினை விளக்குமுகத்தான், நல்லபாம்பு என்று மக்களிடையே வழக்கூன்றியது எனலாம். நல்லபாம்பு வகைகள் பற்றிச் சா.அக. கூறுவது வருமாறு:—

1. கருநாகம்.
2. கரும்படநாகம்.
3. பாப்பாரநாகம்.
4. செட்டிநாகம்.
5. பூநாகம்.
6. தாழைநாகம்.
7. மலைநாகம்.
8. செந்நாகம்.
9. கோதுமைநாகம்.





நல்லபாம்புச்சட்டை *nalla-pāmbu-c-caṭṭai,* பெ. (n) நாகப்பாம்பின் மேல்தோல்; the outer skin of the cobra.

நல்லபாலை *nalla-pālai,* பெ. (n.) கொடிப் பாலை; green wax flower.

[நல்ல + பாலை.]

நல்லபிரண்டை *nalla-piraṇḍai,* பெ. (n.) சதுரப் பிரண்டை; square stalked wild grape

[நல்ல + பிரண்டை.]

நல்லபுத்தி *nalla-putti,* பெ. (n.) 1. தெளிவான அறிவு; good state of mind, good sense, good understanding. 2. பகுத்துணர்வு; discretion, discrimination faculty 3. நல்லுரை வழங்குதல்; good counsel, sound advice.

[நல்ல + புத்தி.]

நல்லபூசணி *nalla-pūšaṇi.* பெ. (n) சருக்கரைப் பூசணி (இ.வ.); common gourd red pumpkin.

[நல்ல + பூசணி.]



நல்லபூலாத்தி *nalla-pūlātti.* பெ. (n) செடிவகை; long-sepalled feather-foil (L.).

நல்லபெண் *nalla-peṇ,* பெ. (n.) நல்லொழுக்கம் நிறைந்தவள்; virtuous lady. "*நல்லபெண் என்றால் உள்ளூரில் வாழ்வாள்*" (இ.வ.).

[நல்ல + பெண்.]

அக் காலத்தே பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது திருமணத்திற்கு நல்லபெண் கிடைப்பது அரிது. இக் காலத்தேதான் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் முன்னோடியாக நல்ல நிலையில் உள்ளனர். நல்லபெண் என்றால், ஒழுக்கத்திலும், உழைப்பிலும் நன்னிலையிலிருப்பவள் என்பதையே குறிக்கும். வள்ளுவர் வாய்மொழியில் மனைத்தக்க மாண்புடையாளே நல்லபெண்.

நல்லம்[1] *nallam,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒருசிற்றூர் a village in Tañjāvūr dt. "*நல்லான் நமையாள்வான் நல்ல நகரானே*" (ஞான சம்பந்தர். 85:1) இன்று கோனேரி ராசபுரம் என்று அழைக்கப்படுகிறது.

நல்லம்[2] *nallam,* பெ. (n.) 1. கறுப்பு (சூடா.); blackness, darkness. 2. கரி (பிங்); charcoal

தெ. நல்ல.

நல்லம்[3] *nallam,* பெ. (n.) இஞ்சி (பிங்.); ginger.

தெ. அல்லமு.

[நல் → நல்லம்.]

நல்லம்மாள் *nallammāḷ,* பெ. (n.) தாயுடன் பிறந்தாள் (யாழ்ப்.); maternal aunt.

[நல் + அம்மாள்.]

நல்லம்மான் *nallammāṉ,* பெ. (n.) தாயுடன் பிறந்தான்; maternal uncle.

[நல் + அம்மான்.]

நல்லம்மான்பச்சரிசி *nallammāṉ-paccariši,* பெ. (n.). *அம்மான் பச்சரிசி* பார்க்க; see *ammāṉ-paccariši.*

நல்லமஞ்சள் *nalla-mañjaḷ,* பெ. (n.) கத்தூரி மஞ்சள்; musk turmeric.

[நல்ல + மஞ்சள்.]

நல்லமணி *nalla-maṇi,* பெ. (n) பட்டாணி; peas.

[நல்ல + மணி.]

நல்லமந்தனம் *nalla-mandaṇam,* பெ. (n.) மரவகை; medium leathery polished. elliptic-obtuse leaved honey-thorn

நல்லமரணம் *nalla-maraṇam,* பெ. (n.) *நல்லசாவு* பார்க்க; see *nalla-šāvu.*

[நல்ல + skt மரணம்.]

வயதுஆன நிலையிலும், பிறருக்குத் தொல்லை தராத இயற்கையான சாவு.

நல்லமழை *nalla-maḻai,* பெ. (n.) அதிகமழை; heavy rain. '*சென்னையில் நல்லமழை பெய்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன*' (இ.வ.).

[நல்ல + மழை.]

அளவிற்கு அதிகமான மழை. கேடு விளைவிக்காத மழையும் தேவையான நேரத்தில், மிகுதியாகப் பெய்யும் மழையும், நல்ல மழை என்று, அழைக்கப்பெறும். இங்கு நல்ல என்னும் அடை, மிகுதிப்பொருள், குறித்தது.

நல்லமனம் *nalla-maṉam,* பெ. (n.) 1. உதவு முள்ளம்; benevolent mind. 2. தூய சிந்தை; pure heart.

[நல்ல + மனம்.]

பிறருக்குத் தீதுநினைக்காத மனம்.

நல்லமாதிரி *nalla-mādiri,* பெ. (n.) 1. நல்லொழுக்கம்; good. examplary conduct; good character 2. நல்ல வகை; good sort.

[நல்ல + skt மாதிரி.]

நல்லமாதுளை *nalla-mādulai,* பெ. (n.) இனிப்புமாதுளை; sweet pomegranate. (சா.அக.).

[நல்ல + மாதுளை.]

குடலிலுள்ள நச்சுயிரிகளைக்கொன்று, உடலுக்கு நலம் பயக்கும் மாதுளை.

நல்லமாரி *nalla-māri,* பெ. (n) மாரிக்காலம் (யாழ்ப்); rainy season.

[நல்ல + மாரி.]

அடைமழை பெய்யும் கார்காலம்.

நல்லமிளகு *nalla-milagu,* பெ. (n) கருப்பான கெட்டி மிளகு; black solid pepper; piper nigram.

[நல்ல + மிளகு.]

நல்லமுத்து *nalla-muttu,* பெ. (n.) சிப்பி யிலிருந்து எடுக்கும் நல்லமுத்து; oyster pearls.

மறுவ. நன்முத்து.

[நல்ல + முத்து.]

முத்து என்று சிறப்பித் துரைக்கப்படுவது தொண்மணிகளுள் ஒன்றான முத்துமணியே.

சிப்பியினின்று எடுக்கப்படும் முத்தே யன்றியும், மூங்கிலிருந்து பிறக்கும் வேய்முத்தும், யானைமருப்பிற் பிறக்கும் வேழமுத்தும், நெல்மணியில் தோன்றும் சாலிமுத்தும், பிறவுமாக முத்து பல வகைப்படும். கிளிஞ்சலில் தோன்றும் முத்தே இயற்கையான நல்ல முத்து ஆகும்.

நல்லமுருங்கை *nalla-muruṅgai,* பெ. (n) முருங்கை; sweet drum stick tree

[நல்ல + முருங்கை.]

நல்லமெழுகு *nalla-meḻugu,* பெ. (n.) தேன் மெழுகு; pure yellow wax.

[நல்ல + மெழுகு.]

நல்லரிசி *nallariši,* பெ. (n) 1. பச்சரிசி; raw rice. 2. கருப்புப் புட்டரிசி; black singapore rice

[நல் + அரிசி.]

நல்லரிவஞ்சம் *nallari-vañjam,* பெ. (n.) விளைநிலம் ஆறுனுள் ஒன்று (திவா.); a blissful region, where the fruits of good karma are enjoyed, one of six

[நல்லரி + வஞ்சம்.]

நல்லவர் *nallavar,* பெ. (n.) 1. நல்லோர்; the good the holy 2. நண்பர்; friends. 3. அறிஞர் (திவா.); the learned 4. பெண்கள்; women *"நல்லவர் நுடக்கம் போனயம் அந்த கொம்பொடும்"* (கலித்.32). 5. நாகப்பாம்பு (இ.வ.); cobra.

நல்லவர்ணக்காரி *nalla-varṇakkāri,* பெ. (n.) சவுரிக்காய்; palmated gourd. (சா.அக.)

[நல்ல + skt. வர்ணகாரி.]

நல்லவளம் *nalla-vaḷam,* பெ. (n.). **1.** தக்க சமயம், உரியபொழுது (வின்.); good opportunity, favourable time. **2.** மிகுந்த செழிப்பு; extreme fertility.

[நல்ல + வளம்.]

நல்லவாகை *nalla-vāgai,* பெ. (n.) வெள்வாகை; white siris (L.)

நல்லவாந்தம் *nalla-vāndam,* பெ. (n) வெண் காரவள்ளி; pungent white onion.

[நல்ல + வாந்தம்.]

நல்லவாய் *nalla-vāy,* பெ. (n.) இனிய மொழிகள்; sweet or pleasant words. முதலில் அவன் நல்ல வாயைக் காட்டினான் (இ.வ.).

[நல்ல + வாய் = நல்லதையே பேசும்வாய்.]

நல்லவார்த்தை *nalla-vārttai,* பெ. (n) **1.** இன்சொல் (வின்.); sweet, kind words. **2.** உவப்புச்சொல் (வின்.); word of approbation or recommendation. **3.** வாழ்த்து மொழி; blessing, benediction. மணமக்களை நல்லவார்த்தை சொல்லி வாழ்த்துதல் மரபாகும் (உ.வ.). **4.** கொஞ்சு மொழி; word of entreaty *'அவனை நல்லவார்த்தை சொல்லிக் கேட்டுக் கொண்டேன்'* (இ.வ.). **5.** அமைதிப்பேச்சு; words of pacification. *"நல்லவார்த்தைக் கிணங்காமற் சினம் கொண்டு போய் விட்டான்."* (இக்.வ.).

[நல்ல + skt. வார்த்தை.]

நல்லவிளக்கு *nalla-viḷakku,* பெ. (n) கடலை எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் ஊற்றித் திரிபோட்டு சாமிக்கு முன் ஏற்றி வைக்கும் விளக்கு; a lamp with a wick burnt with certain kind of oil, placed in front of a deity (at home). மார்கழி மாதத்தில் விடியற்காலையில் நல்லவிளக்கை ஏற்றி வைப்பார்கள். (இ.வ.)

மறுவ. திருவிளக்கு. மங்கலவிளக்கு.

[நல்ல + விளக்கு.]

இங்கு நல்ல விளக்கு என்னும் இச் சொல், வீடுகளில் ஏற்றி இறைவனை வழிபடும் நெய்விளக்கான மங்கல விளக்கையே குறித்தது எனலாம். பல்வகை விளக்குகள் மக்களிடையே புழக்கத்தில் வந்துவிட்டன. தமிழ்மக்கள் விளக்கைக் காரிருள் அகற்றும் கருவியாக மட்டும் பயன்படுத்தவில்லை. வழிபாட்டுற் குரியதும், நல்ல அருளொளியை வாரி வழங்கும் நல்விளக்காகவும், கருதி வழிபட்டனர். தெய்வத்தன்மை பொருந்தியதும்; இறையருளை வாரி வழங்குவதும். எண்ணங்களை ஒருமைப் படுத்துவதுமான திருவிளக்கே நல்ல விளக்கு.

நல்லவுப்பு *nalla-v-uppu,* பெ. (n.) சவுட்டுப்பு; impure carbonate of soda.

[நல்ல + உப்பு.]

உவர்ப்புச்சுவை மிகுதியாக உள்ள உப்பு; இங்கு நல்ல என்னும் சொல் "மிகுதி" என்னும் பொருளில், வழங்குகிறது. உப்பின் இயற்கைச் சுவையான உவர்ப்புத்தன்மையை உணர்த்துதற் பொருட்டு, "நல்லவுப்பு" என வழங்கலாயிற்று.

நல்லவெயில் *nalla-veyil,* பெ. (n.) கொடிய வெயில்; the scorching sun.

[நல்ல + வெயில்.]

நன்குசுட்டெரிக்கும் வெயில்; நல்லவெயில் என்று கூறுங்கால் கொடுங்கதிர்களுடன் மக்களை வாட்டும் கடுமையான வெயில் என்று பொருள். இங்கு நல்ல என்பது கடுமைப்பொருள் தந்தது.

ஒ.நோ. நல்லபாம்பு.

நல்லவெல்லம் *nalla-vellam,* பெ. (n.) **1.** கரும்பு வெல்லம்; (பதார்த்த. 184). cane sugar, as a superior sort. நல்லவெல்லத்தில் பொங்கிய சருக்கரைப்பொங்கல் சுவையாக இருக்கும் (உ.வ.). **2.** கருப்புக்கட்டி (வின்.); jaggery. நல்லவெல்லத்தில் செய்த கரும்புக்கட்டி கெடாமல் இருக்கும். (சா.அக.).

[நல்ல + வெல்லம்.]

கரும்புவெல்லம் என்னுஞ்சொல் ஈங்கு, கரும்பின் இயல்புத்தன்மை அல்லது உண்மைநிலையை உணர்த்துதற் பொருட்டு, “நல்லவெல்லம் என்று, மக்களிடையே” வழக்கூன்றியதெனலாம்– கரும்பின் ஆக்கங்களுள் ஒன்றே வெல்லம். உருண்டைவெல்லம், அச்சுவெல்லம் எதுவாயினும், கருப்பஞ் சாற்றின் கட்டியே ஆகும். பனைவளம் மிகுந்த தென்பாண்டிப்பகுதியில் பனைவெல்லத்தை வெல்லம் என்று பொதுவழக்கிலும், கருப்பு + கட்டி= கருப்பட்டி என்று, சிறப்பு வழக்கிலும், இன்றும், வழங்கி வருகின்றனர். கரும்புவெல்லம் அதன் உண்மை நிலையை உரைக்கு முகத்தான், நல்லவெல்லம் என்றழைக் கப்படுகிறது.

நல்லவெழுத்து *nalla-v-eḻuttu,* பெ. (n.) **1.** அழகிய கையெழுத்து; fair, good handwriting. **2.** அவரவரின் ஊழ்பற்றிய குறிப்பை. அவரவர் தலையில் எழுதி வைத்திருப்பதாக நம்பப்படும் எழுத்து; good destiny or fate இறைவன் நம்தலையில் எழுதிய நல்லவெழுத்தை அழிப்பவர் யார்? (இ.வ.).

[நல்ல + எழுத்து.]

கல்வி பயிலுஞ்சிறார் கையெழுத்து நல்லெழுத்தாக அமைதற்பொருட்டு, இருகோட்டுக்குறிப்பேட்டில் ஆங்கிலத் தையும்,நாற்கோட்டுக் குறிப்பேட்டில்தமி ழெழுத்தையும் எழுதச்செய்யும் பழக்கம், இன்றும் தொடக்கப்பள்ளிகளில் காணப் படுகிறது.

மூளையில் மடிப்புகள் மிகுதியாகக் காணப்படின், ஆய்வுத்திறன் அல்லது நினைவாற்றல் மிகுதியென்று, உளவியல் மருத்துவர் கணிக்கின்றனர். இம் மடிப்பினையே, பொதுவாக மாந்தர் நல்லெழுத்தென்று அழைத்தனர்.

நல்லவேதைக்கனி *nalla-vēdai-k-kaṉi,* பெ. (n.) நாய்வேளை; dog mustard

[நல்ல + வேதைக்கனி.]

நல்லவேல் *nalla-vēl,* பெ. (n) **1.** சீமைவேல்; jerusalem thorn **2.** பச்சைவேல். (சா.அக.); green babool

[நல்ல + வேல்.]

நல்லவேளை[1] *nalla-vēḷai,* பெ. (n.) **1.** நல்லூழிக் காலம்; fortunate hour, lucky time; **2.** நெருக்கடியான நேரம்; critical moment

[நல்ல + வேளை.]

நல்லவை நடக்கும் காலம். தீயவை ஒழியும் காலம். மனம், வாக்கு, செயல் அனைத்து நிலைகளிலும், நன்மை பெருகும் வேளை நல்லவேளை எனலாம்.

நல்லவேளை² *nall-vēḷai,* பெ. (n.) தைவேளை; five leaved celome.

இம் மூலி மாந்தம், கணமாந்தம், கோழை, மிகுசுரம், வளித்தொல்லை (வாயு) போன்றவற்றிற்கு உகந்தது என்று, சா.அக. கூறும்.

நல்லவை¹ *nallavai,* பெ. (n.) நற்செயல்கள்; good things or deeds. *"நல்லவை செய்யினியல் பாகும்"* (நாலடி, 144.). *"அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை நாடி இனிய சொலின்"* (குறள்,96).

[நல் → நல்லவை.]

நல்லவை² *nallavai,* பெ. (n.) 1. அறிவு ஒழுக்கம் முதலியவற்றாலுயர்ந்தோர் அவை; learned assembly, society of the good and the virtuous. *"தீமொழி யெல்லா நல்லவை யுட்படக் கெட்டாங்கு"* (கலித். 144). "புல்லவையுள் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையுள் நன்கு செலச் சொல்லுவார்" (குறள்,719). 2. நேர்மையாகப் பேசுவோர் அவை; (யாப்.வி.பக். 514). an assembly or panel of impartial judges.

[நல் + அவை.]

நல்லழிசியார் *nallaḻiśiyār,* பெ. (n.) சங்ககாலப் புலவர்; a poet of śangam period.

[நல் + அழிசி + ஆர் = நல்லழிசியார்.*]*

இவர் பரிபாடலில் உள்ள 16 மற்றும் 17ஆம் பாடலை இயற்றியவராவார்.

பரிபாடல்–16 வையை

"கரையே, கைவண் தோன்றல் ஈகை
போன்மென
மைபடு சிலம்பிற் கறியொடுஞ்
சாந்தொடும்
நெய்குடை தயிரின் நுரையோடும்
பிறவொடும் எவ்வயினானு மீதுமீ
தழியும்;"

"துறையே, முத்துநேர்பு புணர்காழ்
மத்தக
நித்திலம்
5 பொலம்புனை யவிரிழை கலங்கலம்
புனல்மணி
வலஞ்சுழி யுந்திய திணைபுரி புதல்வர்
கயந்தலை முச்சிய முஞ்சமொடு தழீஇத்
தத்தந் துணையோ டொருங்குடன் ஆடுந்
தத்தரிக் கண்ணார் தலைத்தலைவருமே;"

"செறுவே, விடுமலர் சுமந்து பூநீர்
நிறைதலிற்
படுகண் இமிழ்கொளை பயின்றன
ராடுங்
களிநா ளரங்கின் அணிநலம்
புரையும்:"

"காவே, சுரும்பிமிர் தாதொடு
தலைத்தலை மிகூஉம்
நரந்த நறுமலர் நன்களிக் கும்மே
கரைபொழுகு தீம்புனற் கெதிர்விருந்
தயர்வபோல்;
கானலங் காவுங் கயமுந் துருத்தியுந்தேன்
தேனுண்டு பாடத் திசைதிசைப் பூநலம்
பூத்தன்று வையை வரவு;"

"சுருங்கையின் ஆயத்தார் சுற்று
மெறிந்து
குரும்பை முலைப்பட்ட பூநீர்
துடையாள்
பெருந்தகை மீளி வருவானைக்
கண்டே
இருந்துகிற் றானையி னொற்றிப்
பொருந்தலை
பூத்தனள் நீங்கெனப் பொய்யாற்றால்
தோழியர்
தோற்றமோ ரொத்த மலர்கமழ்
தண்சாந்தின்

நாற்றத்திற் போற்றி நகையொடும்
போத்தந்து
இருங்கடற் கூங்கிவரும் யாறெனத்
தங்கான்
மகிழக் களிப்பட்ட தேன்தேறல்
மாற்றிக்
குருதி துடையாக் குறுகி மருவினியர்
பூத்தனள் நங்கை பொலிகென
நாணுதல் வாய்த்தன்றால் வையை
வரவு;"

"மலையி னிழியருவி மல்கிணர்ச்
சார்ச்சார்க்
கரைமரஞ் சேர்ந்து கவினி மடவார்
நனைசேர் கதுப்பினுள் தண்போது
மைந்தர் மலர்மார்பிற் சோர்ந்த
மலரிதழ் தாஅய்
மீனாரம் பூத்த வியன்கங்கை நந்திய
வானம் பெயர்ந்த மருங்கொத்தல்
எஞ்ஞான்றும் தேனிமிர் வையைக்
கியல்பு;"

"கள்ளே புனலே புலவியிம் மூன்றினும்
ஒள்ளொளி சேய்தா வொளிகிளருண்
கட்கெண்டை
பல்வரி வண்டினம் வாய்சூழ்
கவினொடும்
செல்நீர் வீவயின் தேன்சேரப் பன்னீர்
அடுத்தடுத் தாடுவார்ப் புல்லக்
குழைந்து
வடுப்படு மான்மதச் சாந்தா
ரகலத்தான்
எடுத்தவே யெக்கி நூக்குயர்பு தாக்கத்
தொடுத்ததேன் சோரும் வரைபோலுந்
தோற்றம்
கொடித்தேரான் வையைக் கியல்பு;"

"வரையார்க்கும் புயல்கரை
திரையார்க்குமித் தீம்புனல்
கண்ணியர் தாரர் கமழ்நறுங்
கோதையர்
பண்ணிய ஈகைப் பயன்கொள்வான்
ஆடலால்
நாணா ளுறையும் நறுஞ்சாந்துங்
கோதையும் பூத்த புகையு மவியும்
புலராமை மறாஅற்க வான மலிதந்து
நீத்தம் வறாஅற்க வையை நினக்கு."

காதற்பரத்தையுடன் புனலாடிய தலைமகன் தோழியை வாயில் வேண்ட அவள் புனலாடியவாறு கூறி வாயின் மறுத்தது.

நல்லழிசியாரின் புலமைத்திறத்திற்கு, இவ் வையைப் பாடல் நற்சான்று படைக்கின்றது. வையையின் இயல்பாக நல்லழிசியார் வருணிக்கும் பாங்கு எண்ணி மகிழத்தக்கது.

நல்லறம் *nallaram,* பெ. (n) **1.** மேன்மையான கொடை; beneficence, charity *"பாங்கிய நல்லறம் பலவுஞ் செய்த பின்"* (மணிமே. 21:173). 2. சமயக்கொடை; religion charity *"தொன்மாண் பமைந்த புனை நல்லறம் துன்னி நின்ற."* (சீவக. 3). 3. நல்லொழுக்கம்; virtuous life, morality

மறுவ. அறக்கொடை.

[நல் + அறம்.]

சமயம் சார்ந்த நல்லெண்ணக்கொடை; நற்செயல்கள் தழைப்பதற்காக வழங்கப்பெறும், அறக்கொடை.

நல்லறிவு *nallarivu,* பெ. (n) **1.** மதிப்பீட்டுத் திறனுடன் கூடிய பொதுஅறிவு, நல்லபுத்தி; good sense *"நல்லறிவு நாளுந் தலைப்படுவர்"* (நாலடி, 139). 2. நல்ல அறிவுரை (வின்.); good instruction or counsel 3. ஒரு அறநூல் (யாழ்.அக.); an ethical treatise

[நல் + அறிவு.]

அழிவைக்காக்கும் திண்மையான செயலறிவு; பகைவரால் அழிக்கவியலாத அரண்போன்ற வலிமைமிக்க அறிவு. எஞ்ஞான்றும் தீமைபயக்காத அறிவு. இத்தகைய அறிவின் சிறப்பைப் பற்றி வள்ளுவர் *"சென்ற இடத்தில் செலவிடா தீதொரீஇ நன்றின்பால் உய்ப்ப தறிவு"* (குறள்,422.) என்று

மொழிகின்றார். மேலும், மெய்ப்பொருளை ஆராய்ந்து காணும் அறிவு பற்றிக் கூறுங்கால், *"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"* (குறள்,423.) என்று கூறியுள்ளது, ஈங்கு நினைவு கூரத்தக்கது.

நல்லன்காவூர் *nallan-kāvūr,* திருவள்ளூர் மாவட்ட ஊர்; a village in Thiruvallūr dt.

[நல்லன் + காவூர்.]

நல்லா[1] *nallā,* பெ. (n.) நல்லாக பார்க்க; see nallāga. நல்லாப்பேசினான். (உ.வ.).

[நல் → நல்லா.]

நல்லா[2] *nallā,* பெ. (n.) 1. முற்காலத்திற் ஆநிரைகளின் மேல் விதிக்கப்பட்டிருந்த வரிவகை; an ancient tax on cows. *"நல்லாவும் நல்லெருதும்"* (S.I.I.ii. 521). 2. காராம் (பசு)ஆ; a sacred cow with black and nipples.

[நல் + ஆ.]

ஆ= ஆநிரை.

நல்லாக *nallāga,* கு.வி.எ. (adv.) நன்றாக. well, excellently. "நல்லாகப் பற்றடைப்பில்" (கொண்டல். விடு. 85).

[நல் + ஆக.]

நல்லாங்கு *nallāṅgu,* பெ. (n.) நன்மை (வின்.); goodness.

[நல் + ஆங்கு.]

நல்லாசனம் *nallāśaṉam,* பெ. (n.) வயிற்றில் குடலைப் புரட்டிச் சுழற்றும் ஓக நிலையுள் ஒன்று (இ.வ.); a yogic feat in which the intestines are rolled togather and made to assume a required position

[நல் + Skt. ஆசனம்.]

நல்லாட்டிக்கட்டி *nallāṭṭi-k-kaṭṭi,* பெ. (n.) கருப்புக்காசுக்கட்டி; black catachu. (சா.அக.).

நல்லாடு *nallāḍu,* பெ. (n.) முற்காலத்தில் ஆடுகளின் மீது விதிக்கப்பட்ட வரி; an ancient tax on sheep

[நல் + ஆடு.]

நன்கு வளர்க்கப்பட்ட பொலிகடா. ஆடுகளின் இனப்பெருக்கத்திற்காக வளக்கப்படும், பொலிகடா ஆட்டின்மீது விதித்த வரி.

நல்லாடை *nallāḍai,* பெ. (n) சிறந்த துகில்; (திவா.); fine, superior cloth. *"கொல்புலித் தோல் நல்லாடை"* (திருவாச. 12:3).

[நல் + ஆடை]

நல்லாத்தூர் *nallā-t-tūr,* பெ. (n.) காஞ்சிபுர மாவட்டச் சிற்றூர்; a village in Kāñjipuram dt.

[நல் + ஆற்றூர் → ஆத்தூர்.]

நல்லாதனார் *nallādaṉār,* பெ. (n) கழகக்காலத்தைச் சார்ந்த அற (நீதி)நூற் புலவர்; an ancient Śaṅgam poet.

இவர் திரிகடுகம் என்ற நூலை இயற்றியவர். இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

இவரது காலம் ஐந்தாம் நூற்றாண்டில் இறுதி என்பர்.

*"நல்விருந்து ஓம்பலின் நட்டாளாம் வைகலும் இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய்–
தொல்குடியின்
மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன்".*

நல்லாதிமண் *nalladiman*, பெ. (n.) சவட்டுமண்; fuller's earth

[நல் + ஆதி + மண்.]

நல்லாப்பிள்ளை *nallā-p-pillai*, பெ. (n) மாபாரதக் கதையைத் தமிழில் செய்யுளாக இயற்றிய புலவர்; a poet who composed Tamil lyrics of magā-bāradam

இவரது நூல் நல்லாப்பிள்ளை பாரதம் என்று வழங்கப்பட்டது.

காலம் 18ஆம் நூற்றாண்டு. இந் நூல் பதினான்காயிரம் பாடல்களால் ஆனதென்பர்.

இவர் பெரும்பற்றப் புலியூரில் பிறந்தவர் என்பர்.

நல்லாப்பு *nallāppu*, பெ. (n) நன்மை (யாழ்ப்); good, opp of pollāppu

[நல் → நல்லாப்பு.]

இச்சொல், நன்மைதருஞ் செயலைக் குறித்து யாழ்ப்பாணத்தில் இன்று வழங்குகிறது. பொல்லாப்பு என்ற சொல்லிற்கு எதிர்மறையானது.

நல்லாமூர் *nallāmūr*, பெ. (n) காஞ்சிபுர மாவட்டச் சிற்றூர்; a village in Kañjipuram dt

[நல் + ஆமூர்.]

நல்லாய்ச்சி *nallāycci*, பெ. (n.) சிறியதாய் முறையாள் (யாழ்ப்.); maternal aunt or wife of a paternal uncle

[நல் + ஆய்ச்சி.]

நல்லார் *nallār*, பெ. (n) 1. நற்குணமுடையோர்; the good *"பொல்லா ரிணை மலர் நல்லார் புனைவரே"* (சி.போ.காப்பு). 2. பெரியார்; the great person *"நல்லார் தொடர்கை விடல்"* (குறள், 450). 3. கற்றவர்; the learned person *"நல்லார்கட் பட்ட வறுமையின்"* (குறள். 408). 4. மகளிர்; women *"மைப்படு மழைக்க ணல்லார் வாய்க்கொண்ட வமுதம்"* (சீவக. 2881).

[நல் + ஆர்]

இயல்பாக மேன்மையான குணங்கள் கைவரப்பெற்ற பெரியார். யாவருக்கும் தீமை செய்யாத உயர் குணம் வாய்க்கப் பெற்றவர். கற்றுத்துறை போயவர். நற்குணத்திலும், நல்லறிவிலும் சால்புடன் விளங்கும் பெரியோரே, நல்லார் ஆவர்.

நல்லாரை *nallārai* பெ. (n) ஆரைக்கீரை; edible auray greens (சா.அக.).

[நல் + ஆரை.]



நல்லாவூர்க்கிழார் *nallāvūr-k-kiḻār,* பெ. (n) கழகக்காலப் புலவர்; a poet of Šaṅgam period.

[நல் + ஆவூர் + கிழார்.]

அகநானூற்றில்86ம், நற்றிணையில் 154ம், இவரியற்றியவை.

"உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிரு ளகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கட்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவு முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பின் வழாஅ நற்பல வுதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரித ழலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணங் கழிந்த பின்றைக்
கல்லென் கம்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி யாகெனத் தமர்தர
ஓரிற் கூடிய உடன்புணர் கங்குற்
கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள் கிடந்த ஓர்புறந் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப
அஞ்சின ளுயிர்த்த காலை யாழநின்
நெஞ்சம் படர்ந்த தெஞ்சா துரையென
இன்னகை யிருக்கைப் பின்யான்
வினவலிற்
செஞ்சூட் டொண்குழை வண்காது
துயல்வர
அகமலி யுவகைய ளாகி முகன் இகுத்து
ஒய்யென இறைஞ்சி யோளே மாவின்
மடங்கொள் மதைஇய நோக்கின்
ஒடுங்கீ ரோதி மாஅ யோளே." (அகநா.86.).

"கான முங் கம்மென் றன்றே வானமும்
வரைகிழிப் பன்ன மையிருள் பரப்பிப்
பல்குரல் எழிலி பாடோ வாதே
....
....
வாரா ராயினோ நன்றே சாரல்
விலங்குமலை யாரா றுள்ளுதொறும்
நிலம்பரந் தொழுகுமென் நிறையில் நெஞ்சே".

(நற்றிணை. 154.)

நல்லாள்[1] *nallāḷ,* பெ. (n.) **1.** குணத்திற் சிறந்த பெண்; woman of noble character. *"நாணென்னு நல்லாள் புறங் கொடுக்கும்"* (குறள். 924). **2.** கற்புள்ள பெண்; chaste woman

[நல் → ஆள்.]

நல்லாள்[2] *nallāḷ,* பெ. (n.) தக்கவன்–ள்; good person. *"நல்லாளிலாத குடி"* (குறள், 1030).

[நல் → நல்லாள்.]

நல்லாற்றூர் *nallāṟṟūr,* பெ. (n.) திருநாவுக்கரசரின் அடைவுத்திருத்தாண்டகம் (பதி. 295–4)–இல், சுட்டப்படும் ஊர்ப் பெயராகும்; a canonized place by Tirunāukkarasar *'நரையூரும் நல்லூரும் நல்லாற்றூரும்'*

[நல் + ஆறு +ஊர்.]

ஆற்றூர் என்பதற்கு அடையாக, நல்ல என்பது அமைந்து, நல்லாற்றூர் என ஆயிற்று.

நல்லாறன்மொழிவரி *nallāṟaṉ-moḻivari,* பெ. (n.) இறந்துபட்ட ஒரு தமிழிலக்கணநூல் (யாப். வி. பக். 537); a grammatical treatise is Tamiḻ, not extant.

நல்லாறனார் *nallāṟaṉār,* பெ. (n.) யாப்பருங் கலக்காரிகை உரையில் கூறப்பட்ட தொல்லாசிரியர்களுள் ஒருவர்; one of the ancent author mentioned in yāpparuṅgalak kārigai.

[நல்லாறன் + ஆர்.]

"ஆர்" = பெருமைப் பெயரீறு.

நல்லாறுடையான் *nallāṟuḍaiyāṉ,* பெ. (n.) நல்வழிச் செல்வோன்; (வின்.); a man of good morals, one whose conduct is unimpeachable.

[நல் + ஆறு + உடையான்.]

நல்லான் *nallāṉ,* பெ. (n.) ஒருவகைக் குதிரை இனம் (அசுவசா. 152); a breed of horse.

[நல் → நல்லான்.]

நல்லி[1] *nalli,* பெ. (n.) பெண்; woman as fair.

[நல் + இ.]

'இ'கரம் பெண்பால் ஈறு.

நல்லி[2] *nalli,* பெ. (n.) 1. விலங்குக் காலின் எலும்பு; thigh-bone of a quadruped, femur. 2. முதுகெலும்பு; the back bone. "*என்னிடம் நீ வாலாட்டினால் உன் நல்லியெலும்பை உடைத்து விடுவேன்*" (பே.வ.).

த. நல்லி → பு *nalli.*

[நுல் → நல் → நல்லி.]

நல்லி உள்துளையுள்ளதும், நல்லமுத்த முள்ளதுமான மூளையெலும்பு.

த. நல்லி → இந்தி. நல்லீ.

நல்லிசம் *nalliśam,* பெ. (n.) 1. கொள்ளுக்காய் வேளை; கொழுஞ்சி; zanzibar indigo. (சா.அக.)

[நல் + இசம்.]

நல்லிசைவஞ்சி *nalliśaivañji,* பெ. (n.) பகைவரது வேற்றுப்புலத்தை அழித்த, வீரனது வெற்றியை மிகுத்துக் கூறும் புறத்துறை (பு.வெ. 3, 24); theme celebrating the victory of a warrior who has devastated his enemy's dominios. 2. பகைப்புலம் அழி வெய்தியதற்கு இரங்கலைக் கூறும் புறத்துறை (பு.வெ. 3, 25); theme of commiseration over the ruin of an enemy's country.

[நல்லிசை + வஞ்சி.]

நல்லிடதம் *nalliḍadam,* பெ. (n.) மாழைக்காடி (உலோகத்திராவகம்); mineral acid.

[நல் + இடதம்.]

நல்லிடாமாசி *nalliḍāmāśi,* பெ. (n.) பத்மினி இனப்பெண்; one of the four classes of women devided according to lust.

[நல் + இடமாசி.]

நல்லிடையாள் *nalliḍaiyāḷ,* பெ. (n.) உடும்பு; guana. (சா.அக.).

[நல் + இடையான்.]



நல்லிணக்கம் *nallinakkam,* பெ. (n.) 1. இயைந்து போகுந் தன்மை; concordance. 'அண்டை நாட்டோடு நாம் மேற்கொள்ளும் நல்லிணக்கமே, நாட்டுவளர்ச்சிக்கு உகந்தது' (உ.வ.). 2. பொறுத்துக் கொள்ளுகை; tolerance. '*மதநல்லிணக்கமே இன்றைய இந்தியாவிற்கு இன்றியமையாதது.*' (இக்.வ.).

[நல் + இணக்கம்.]

நல்லியக்கோடன் *nalliya-k-kōdan,* பெ. (n.) பழங்கால மன்னர்; an ancient king of Šangam period.

இவன் எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகிய பகுதிகளைச் சார்ந்த ஓய்மா நாட்டை ஆண்டவன். இவனைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து, நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற்றுப்படை இயற்றியுள்ளார்.

நல்லிரயத்தக்குறைவு *nalliyaratta-k-kuraivu,* பெ. (n.) தூயவரத்தம் உடலில் குறைந்து காணப்படுகை; deficiency of arterial blood in the body

[நல்லியரத்தம் + குறைவு.]

நல்லிரவுநாயகி *nalliravu-nāyagi,* பெ. (n.) சிறிய மரம்; a small tree.

இதிலிருந்து மணநெய்மம் எடுக்கப்படுகிறது. (மூலி. களஞ்.).

நல்லிருக்கை *nallirukkai,* பெ. (n.) நல்லிருப்பு பார்க்க; see naliruppu

நல்லிருப்பு[1] *nalliruppu,* பெ. (n.) 1. வேலைகளொன்றுஞ் செய்யாமற் சும்மாவிருக்குமிருப்பு; (நாஞ்); condition of being free from any household work. 2. நலவாழ்வு (இ.வ.); a life of case and comfort

[நல் + இருப்பு.]

நல்லிருப்பு[2] *nalliruppu,* பெ. (n.) சமமாயிருத்தல், நலமாயிருத்தல்; healthy state.

[நல் + இருப்பு.]

நல்லிளம்படியர் *nallilampadiyar,* பெ. (n.) அழகிய இளமாதர்; beautiful young women "*நாகர் நல்லிளம்படியர் போல*" (சீவக. 1098).

[நல் + இளம்படியர்.]

பேரழகு மிளிரும்படி கட்டுடல் வாய்க்கப் பெற்ற இளமாதர்.

நல்லிறையனார் *nalliraiyanār,* பெ. (n.) சங்ககாலப் புலவர்; a poet of Šangam period.

"ஆர்." மதிப்புப் பெயரீறு.

புறநானூற்றின் 393ஆம் பாடல் இவருடையது.
"பதிமுதற் பழகாப் பழங்கண் வாழ்க்கைக்
குறுநெடுந் துணையொடு கூமை வீதலிற்
குடிமுறை பாடி யொய்யென வருந்தி
அடல்நசை மறந்தவெங் குழிசி மலர்க்குங்
கடனறி யாளர் பிறநாட் டின்மையின்

வள்ளன் மையினெம் வரைவோர் யாரென
உள்ளிய உள்ளமொ டுலை நசை
துணையா...
கவக மெல்லா மொருபாற் பட்டென
மலர்தா ரண்ணல்நின் நல்லிசை யுள்ளி
ஈர்ங்கை மறந்தவெ னிரும்பே ரொக்கல்
கூர்ந்த எவ்வம் விடக் கொழுநிணங் கிழப்பக்
கோடைப் பருத்தி வீடுநிறை பெய்த
மூடைப் பண்ட மிடைநிறைந் தன்ன
வெண்ணிண மூரி யருள நாளுற
ஈன்ற வரவி னாவுருக் கடுக்குமென்
தொன்றுபடு சிதாஅர் துவர நீக்கிப்
போதுவிரி பகன்றைப் புதுமல ரன்ன
அகன்றுமடி கலிங்க முடீஇச் செல்வமுங்
கேடின்று நல்குமதி பெரும மாசில்
மதிபுரை மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி
ஆடுமக ளல்கு லொப்ப வாடிக்
கோடை யாயினுங் கோடி....
காவிரி புரக்கும் நன்னாட்டுப் பொருந
வாய்வாள் வளவன் வாழ்கெனப்
பீடுகெழுய் நோன்றாள் பாடுகம் பலவே."

நல்லினம் *nallinam,* பெ. (n.) 1. நல்லோர் கூட்டம்; good persons or society "*நல்லினஞ் சேர்தல்*" (நாலடி.). 2. ஆநிரை; herd of cows, opp to pullinam. "*குடஞ்சுட்டு நல்லினத்தாய ரெமர்*" (கலித். 113).

[நல் + இனம் → நல்லினம்.]

நல்லீரல்[1] *nallīral,* பெ. (n.) ஆட்டு ஈரல்; the liver of sheep.

[நல் + ஈரல்.]

நல்லீரல்[2] *nallīral,* பெ. (n.) 1. கல்லீரல் (வின்.); the liver 2. மண்ணீரல்; spleen.

[நல் + ஈரல்.]



நல்லுப்பு *nalluppu,* பெ. (n.) 1.கல்லுப்பு; stone salt; sea-salt. 2. நல்லூசரம் பார்க்க; see nallūšaram.

[நல் + உப்பு.]

நல்லுயிர் *nalluyir,* பெ. (n.) கணவன்; husband as wife's soul "*நல்லுயிர் நீங்களும்*" (சீவக. 332.).

[நல் + உயிர்.]

மனைவிக்கு உயிர் போன்ற தன்மையன்.

நல்லுருத்திரன் *nalluruttiran,* பெ. (n) சங்ககாலப் புலவர்; a poet of Šaṅgam period.

[நல் + உருத்திரன்.]

இவர் சோழ மன்னன் ஆவார்.

இவர் கலித்தொகையில் உள்ள முல்லைத் திணைப் பாடல்களைப் பாடியுள்ளார்.

"இகல்வேந்தன் சேனை யிறுத்தவாய் போல
அகலல்குல் தோள்கண் எனமூ வழிப்பெருகி
நுதலடி நுசுப்பென மூவழிச் சிறுகிக் கவலையிற்
காமனும் படைவிடு வனப்பினோ டகலாங்கண்
அளைமாறி அலமந்து பெயருங்கால்
நகைவல்லேன் யானென்றென் உயிரோடு

படைதொட்ட இகலாட்டி நின்னை எவன் பிழைத்தேன். எல்லாயான்". (கலித்.108).

நல்லுவகை *nalluvagai* பெ. (n.) *நல்ல மந்தணம்* பார்க்க; see *nalla-mandaṉam* 2. முட்டைச் செடி வகை; elliptic obtuse leaved honey thorn

நல்லுவை *nalluvai,* பெ. (n) *நல்லுவகை* பார்க்க; see *nalluvagai*

[நல் + உவகை → உவை.]

நல்லுறவு *nalluṟavu,* பெ. (n.) நெருங்கிய உறவு; near relation beyond the first degree

[நல் + உறவு]

நல்லூசரம் *nallūśaram.* பெ. (n) வழலையின் பெயர்; efflorescence salt on the soil of fuller's earth.

நல்லூண் *nallūṇ,* பெ. (n) 1. நலம் பயக்கும் உணவு; good and healthy food 2. உடலுக்கு எஞ்ஞான்றும் தீமை செய்யாத உணவு; harmless food 3. தெய்வ நலம் கெழுமியதும், இறைத்தன்மை வாய்ந்ததுமான அருளுணவு; devine and merciful food. "*வழங்கு நல்லூண் உண்ணும்போதும்*" (பாம்பனார் – சண்முகக்கவசம்).

[நல் + உண் → ஊண் → நல்லூண். நல் = பெயரடை.]

உடலுக்கு ஒருபோதும் தீமை செய்யாது, எஞ்ஞான்றும் அனைவருக்கும் நலம் நல்கும் ஊணே, நல்லூண் ஆகும்

"இழந்து போகாத வாழ்வை ஈயும் முத்தையனார் கைவேல் வழங்கு நல்லூண் உண்ணும்போதும், மால்விளையாட்டின் போதும்" *[பாம்பனார். சண்முகக் கவசம்.]*

முத்தையனார், அனைவருக்கும் அருளினை வாரி வழங்கும் தெய்வம்: தீதுபுரியாத கந்தசாமித் தெய்வம். நல்லார்க்கும், பொல்லார்க்கும் நலமளிக்குந் தெய்வம்; வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்குந் தெய்வம். எல்லோருக்கும் இழந்து போகாத வாழ்வினை வழங்குந் தெய்வம்.

உலகத்தார் உய்வு பெறுதற்பொருட்டு, நாம் அன்றாடம் உண்ணும் ஊணை, நல்லூணாக மாற்றுந் தன்மையது முத்தையனார் கைவேல். எந் நிலையிலும், எப்போதும் நன்மையே நல்கும் ஊணே நல்லூண். இம்மையில் அனைவருக்கும் நலமளிக்கும் நல்லூணை வாரி வழங்கும் வள்ளன்மை வாய்ந்தது, முழுதற் கடவுளான முத்தையனார் கைவேல் ஆகும்.

அறிவியல் ஆற்றலை முழுமையாகப் பயன் படுத்தும், இன்றைய மருத்துவர், முழுமைச்சத்து நிறைந்த நல்லூண் பற்றிப் பின்வருமாறு பகுப்பர்.

1. சருக்கரை நோயாளிகட்கு இனிப்பு, மாவுச்சத்துக் குறைந்த ஊணே நல்லூண்.

2. கொழுப்புச்சத்து மிகுதியாயும், நெஞ்சாங்குலை நோயால் அல்லலுறுபவர்களுக்கு தீமை பயக்காத நல்லெண்ணெயுடன் கூடிய நார்ச்சத்துணவே நல்லூண்.

3. குருதியழுத்தம் மிக்கவருக்கு உப்புச்சத்துக்குறைந்த உணவே, நல்லூண்

ஆனால், பாம்பனார் பகரும் நல்லூண், யாதெனின், மன்பதை மாந்தருக்கு எஞ்ஞான்றும் நலமே நல்குவது. அருள்நலஞ் செறிந்தது; அனைவருக்கும் இழந்து போகாத வாழ்வை வாரிவழங்கும் வள்ளன்மை வாய்ந்ததென்றறிக.

நல்லூர்[1] *nallūr.* பெ. (n) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஓர் சிற்றூர்; a village in

Tanjāvūr dt., "*நாறும் மலர்ப் பொய்கை நல்லூர்*" (ஞானசம்பந்தர். 86: 2).

[நல் + ஊர்.]

சிறந்த ஊர் என்ற நிலையில் நல்லூர் எனப் பெயர் பெற்றது.

பொன்னியாற்றின் தென்கரையில் வளம் கொழிக்கும் செழிப்பான நன்செய் நிலப்பகுதியில் இவ்வூர் அமைந்துள்ளதால், நல்லூர் எனப்பெயர் பெற்றது. ஈங்கு "நல்" என்னும் பெயரடை வளத்தின் மிகுதியைச் சுட்டி நின்றது.

நல்லூர்² *nallūr,* பெ. (n.) காஞ்சிபுர மாவட்டத்திலுள்ள ஓர் சிற்றூர்; a village in kāñchipuram dt.

நல்லூர் என்கிற ஊர், பல இடங்களில் உள்ளது. திருவள்ளூர், செங்கல்பட்டு போன்ற இடங்களில் அமைந்துள்ளது.

நல்லூர்ச்சிறுமேதாவியார் *nallūr-c-ciṟu-mēdāviyār,* பெ. (n.) சங்கப்புலவர்; an eminent Šaṅgam poet

இவர், நன்பலூர் சிறுமேதாவியார் என்றும் குறிக்கப்படுகிறார்.

அகநானூற்றில் 94–ம் நற்றிணையில் 282–ம் திருவள்ளுவமாலையில் 20–ம் இவரியற்றியன.

"*தோடமை செறிப்பின் இலங்குவளை ஞெகிழக்*
கோடேந் தல்கு லவ்வரி வாட
நன்னுதற் பாய படர்மலி யருநோய்
காதலன் தந்தமை யறியா துணர்த்த
அணங்குறு கழங்கின் முதுவாய் வேலன்
கிளவியற் றணியின் நன்றுமன் சாரல்
அகில்சுடு கானவன் உவல்சுடு கமழ்புகை
ஆடுமழை மங்குலின் மறைக்கும் நாடுகெழ
வெற்பனொ டமைந்தநந் தொடர்பே"
(நற்.282).

இப்பாடல் இவர்தம் இலக்கியப்புலமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

நல்லூர்ப்பெருமணம் *nallūr-p-perumaṇam.* பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் சிற்றூர்; a village in Tañjāvūr dt

"*நல்லியலார் தொழு நல்லூர்ப் பெருமணம்*". (சம்பந்தர். 383.4).

[நல் + ஊர் + பெரு + மணம்.]

தற்போது ஆச்சாள்புரம் எனச் சுட்டப்படுகிறது. நல்லூர் எனச் சுட்டப்படுவதற்காகப் பெருமணம் என்ற கோயிலை இணைத்து நல்லூர்ப் பெருமணம் எனச் சுட்டினர்.

இத் திருத்தலத்தில், திருஞான சம்பந்தர் "தமது திருமண நிகழ்விற்கு வந்த அனைத்து மக்களுக்கும், முத்திப்பேறு நல்கினார்" என்று சிவனியக் கொண்முடிவாளர் கருதுகின்றனர்.

நல்லூழ் *nallūḻ,* பெ. (n.) புண்ணியம்; good karumam. "*அம்மைப் பிறப்பி னுஞற்று நல்லூழி னடுத்து*" (துணிகைப்பு. களவு. 185).

மறுவ. நல்வினை.

[நல் + ஊழ்.]

நல்லெண்ணம் *nalleṇṇam,* பெ. (n) நல்ல சிந்தை (கொ.வ.); good intention, good faith, bona fides.

[நல் + எண்ணம்.]

அனைவருக்கும் நலம்பயக்கும் நேர்மையான எண்ணம். தீதற்ற உயர்ந்த எண்ணம். பகைவருக்கும் நல்லதே செய்யும் எண்ணம்.

நல்லெண்ணெய் *nalleṇṇey,* பெ. (n.) எள்ளிலிருந்து எடுக்கும் எண்ணெய்; sesame oil.

[நல் + எள் + நெய் → எண்ணெய்]

"நல்" பழமை, சிறப்பு என்பதைக்குறித்தது. எள்ளிலிருந்து எடுக்குப்படுவதும், உடல் நலத்திற்கு நன்மை பயக்குந்தன்மை யுடையதுமான எண்ணெய், நல்லெண்ணெய். அதன் போலிகளையும் குறிக்கும் சிறப்புப் பெயராக மருவி விட்டமையால், அந் நெய்யின் இடத்தை நிறைக்க வந்த எண்ணெய் என்னுஞ்சிறப்புப்பெயர், பொதுப்பெயராக மருவியது. இவ்வாறு மருவியதால், கடலைநெய் கடலைஎண்ணெயாகவும், தேங்காய்நெய், தேங்காய் எண்ணெயாகவும், மக்களிடையே வழக்கூன்றிவிட்டது. இவ்வாறே, விளக்கெரிக்கும் நெய், விளக்கெண்ணெயாகவும், மருந்திற்குப் பயன்படும் வேப்பநெய், வேப்பெண்ணெயாகவும், மக்களிடையே மருவி வழங்கியது. மேற்குறித்த வண்ணம், எள் + நெய் என்ற சொல், எண்ணெய் என்று அனைத்து எண்ணெய்களுக்கும் மருவி வழங்கியதால், உண்மையாக, எள்ளினின்று எடுக்கப்பட்டதும், உடல்நலத்திற்கு நன்மை பயப்பதுமான எண்ணெய், நல்லெண்ணெய் என்றழைக்கப் பட்டது. இங்கு "நல்" என்பது, நல்லெண்ணெய் என்று வழக்கூன்றியது. மூலம் பொருளைக் குறிக்கும் பெயரடை. கிழமை தோறும் நல்லெண்ணெய் தேய்த்துக் குளித்து வந்தால், நாட்பட்ட மலர்ச்சிக்கல் அகலும். காது வயிறு, பாதம் முதலான உடலுறுப்புகளில், இவ்வெண்ணெய்யைத் தேய்த்துக் குளித்தால், உடற்சூடு தணியும், சிறுநீர்க்கட்டு அகலும் என்று சா.அக. கூறும்.

நல்லெருது *nallerudu,* பெ. (n.) பழைய காலத்தில் எருதுகளின் மேல் விதிக்கப் பட்டிருந்த வரிவகை; an ancient tax on bull. "*நல்லாவும் நல்லெருதும்.*" (S.i.i.ii. 521).

மறுவ. நல்லேறு.

[நல் + எருது.]

சிறந்த இனப்பெருக்கத்திற்குப் பயன்படும் காளை, நல்லெருது என்று அழைக்கப்பட்டது. இத்தகைய எருதுகளை வளர்ப்போர் "நல்லெருது" என்ற பெயரில், அரசிற்கு வரிசெலுத்தி வந்தனர். இவ் வரிவகைகள், சிறந்த காளை, ஆ, எருமை போன்றவற்றைச் சிறந்த முறையில் பாதுகாப்பதற்குச் செலவிடப்பட்டன. சிற்றூர்களில் நல்லெருதுகள் மிகுதியாக இருந்தன என்பதை, இச் சொல் இனிது விளக்குகிறது.

நல்லெருதுகாட்சிக்காசு *nallerudu-kāṭci-k-kāšu,* பெ. (n.) காட்சியெருதாகப் பயன்பட்ட (இன்றைய பூம்பூம்மாடு போல்) காளைகளின் மீது விதிக்கப்பட்ட பழைய வரிவகை; an ancient tax on bull

[நல்லெருது + காட்சிக்காசு.]

நல்லெருமை[1] *nallerumai,* பெ. (n.) தொட்டி நஞ்சு; red arsenic.

நல்லெருமை[2] *nallerumai,* பெ. (n.) இனப்பெருக்கத்திற்குப் பயன்பட்ட எருமைகளின்மீது விதிக்கப்பட்ட பழைய வரிவகை; an ancient tax on buffalo.

[நல் + எருமை.]

இனப்பெருக்கத்திற்கு வளர்க்கப்பட்ட பொலியெருதுக்கிடாவும், அதன்மீது விதித்த வரிப்பெயரும், நல்லெருமை எனப்பட்டது.

நல்லெழினியார் *nalleliniyār,* பெ. (n) சங்கப்புலவர்; a poet of Šaṅgam period

இவர் பரிபாடலில் உள்ள பதின்மூன்றாம் பாடலை இயற்றியுள்ளார்.

இவர் மெய்ம (தத்துவ) நூலில் வல்லவர். மணிவரை யூர்ந்த மங்குல் ஞாயிற்று அணிவனப் பமைந்த பூந்துகில் புனைமுடி இறுவரை யிழிதரும் பொன்மணி யருவியின் நிறனொடு மாறுந்தார்ப் புள்ளுப் பொறி புனைகொடி (பரிபா.13).

பரிபாடலில் 60 அடிகளைக் கொண்டமைந்த பாடலில் இந்நான்கடிகளும் இவரின் பாடல் திறத்திற்குச் சான்றாகும்.

திருமாலின் தோற்றம் பற்றி நல்லெழினியார் நவிலுவது, சங்கும் சக்கரமும் ஏந்திய கையனை நம்கண்முன் நிறுத்தும் பான்மையில் அமைந்துள்ளது, வருமாறு:-

"விண்ணளி கொண்ட வியன்மதி யணிகொளத்
தண்ணளி கொண்ட அணங்குடை நேமிமால்
பருவம் வாய்த்தலி னிரும்விசும் பணிந்த
இருவேறு மண்டிலத் திலக்கம் போல
நேமியும் வளையும் ஏந்திய கையாற்
கருவி மின்னவி ரிலங்கும் பொன்பூண்
அருவி யுருவி னாரமொ டணிந்தநின்
திருவரை யகலந் தொழுவோர்க்கு"
(பரிபா,5-12.)

நல்லேகம் *nallēgam,* பெ. (n.) சரக்கொன்றை; cassia fistula.

நல்லேர்கட்டு-தல் *nallēr-kattu-,* 5 செ. குன்றாவி. (vt) நல்ல நாளில் பருவத்திற்குரிய உழவைத் தொடங்குதல்; to commencement of seasonal ploughing at an anspicious hour.

[நல் + ஏர் + கட்டு-.]

சிற்றூர்களில் நல்லேர் கட்டுதற்காக, நல்ல நாளைத் தெரிவு செய்யும் பழக்கம் இன்றும் காணப்படுகிறது.

நல்லேலம் *nallēlam,* பெ. (n.) சிற்றேலம்; small cardomom; Ellcteria cardamomum.

நல்லேறு *nallēṟu,* பெ. (n.) 1. காளை; bull. *"இனத்திற் றீர்ந்த துளங்கிமினல்லேறு"* (மலைபடு. 30). 2. ஆண்எருமை; buffalo bull. *"நல்லேறு பொருஉங் கல்லென் கம்பலை"* (மலைபடு. 335).

[நல் + ஏறு.]

இனப்பெருக்கத்திற்கு உதவும் காளை, நல்லேறு என்றும், காட்சியெருது என்றும், அழைக்கப்பட்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. (எ.டு.) *"நல்லாவும் நல்லெருதும்"* (S.I.I ii 521.).

நல்லொழுக்கம் *nallolukkam,* பெ. (n) 1. நன்னடக்கை; moral conduct. *"நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கம்"* (குறள். 138). 2. மும்மணிக்கொள்கைகளுள் மூன்றாவதாகத் திகழும் நல்லறிவையும், நற்காட்சியையும், ஒரு சேரக்கொண்டு ஒழுகும் ஒழுக்கம் (மேருமந். 107); right conduct one of irattina-t-tirayam.

[நல் + ஒழுக்கம்.]

நல்லோர் *nallōr,* பெ. (n.) 1. நல்லவர்; the good. 2. மகளிர்; women *"நல்லோர் நல்லோர் நாடி வதுவையயர்"* (ஐங்குறு. 61).

[நல் + நல்லோர்.]

நல்வங்கம் *nalvangam,* பெ. (n.) தூய்மைப்படுத்தாத ஈயம் (மிருதாரசிங்கி); litharge: impure oxide of lead.

நல்வசம்பு *nalvašambu,* பெ. (n.) புறணி நீக்கிய வசம்பு; sweetflag purifield.

[நல் + வசம்பு.]

நல்வசளை *nal-vašaḷai,* பெ. (n.) *நற்பசளை* பார்க்க; see *naṟpasaḷai*

நல்வசி *nalvaši,* பெ. (n.) சூலம்; (பிங்.); trident.

[நல் + வசி.]

நல்வழி[1] *nalvaḻi,* பெ. (n.) நல்லொழுக்கம்; right path. "*ஏகு நல்வழி யல்வழி யென்மன மாகுமோ*" (கம்பரா. மிதிலைக். 147). மறுவ. நேர்வழி.

[நல் + வழி.]

தீமையற்ற வழி. நல்லொழுக்கமுடையார் செல்லும் உயர்ந்த வழி. பிறருக்கு நன்மைபுரிதற்பொருட்டு, அமைந்த நேர்வழி. அனைவருக்கும் நன்மை நல்கும், அன்புவழியே நல்வழி. ஞாலம் உய்வடைந்து, அனைவரும் அனைத்தும் பெற்றுவாழும், உயர்வழியே நல்வழி.

நல்வழி[2] *nalvaḻi,* பெ. (n) பிற்கால ஒளவையார் எழுதிய நீதிநூல்; a moral book which was written by later Auvaiyār.

[நல் + வழி.]

"*வெட்டெனவை வெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில் பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது – நெட்டிருப்புப் பாறைக்கு நெக்கு விடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்கு விடும்*"

"*ஆற்றங் கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே – ஏற்றம் உழுதுண்டு வாழ்வார்க்குஒப்பில்லை கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு*"

நல்வழுதியார் *nalvaḻudiyār,* பெ. (n.) சங்கப்புலவர்; a poet of Šaṅgam period

இவர் பரிபாடலில் உள்ள பன்னிரண்டாம் பாடலை இயற்றியுள்ளார்.

இவர் பாண்டியர் குலத்தைச் சேர்ந்தவர் என்பர்.

[நல் + வழுதியார்.]

"வளிபொரு மின்னொடு வானிருள் பரப்பி விளிவின்று கிளையொடு மேன்மலை முற்றித் தளிபொழி சாரற் றதர்மலர் தாஅய் ஒளிதிக ழுத்தி யுருகெழு நாகம்...(பரிபாடல்.12)."

இவரின் பாடற்சிறப்பிற்கு பரிபாடலில் 100வரிகள் கொண்டமைந்ததில் இந் நான்கடிப் பாடல் நனிசிறந்தது எனலாம்.

நல்வாக்கு *nalvākku,* பெ. (n.) 1. நன்னிமித்தமான சொல்; good. auspicious word. 2. வேண்டுகோட் சொல்; (இ.வ.) word of entreaty. 3. வாழ்த்து; blessing.

[நல் + வாக்கு.]

நல்வாசனை *nalvāšaṉai,* பெ. (n) *நற்பசளை* பார்க்க; see *naṟpašaḷai.*

[நல் + வாசனை.]

நல்வாசி *nalvāši,* பெ. (n.) வால்மிளகு; a fragrant drug chewed with betel; tail pepper.

[நல் + வாசி.]

நல்வார்த்தை *nalvārttai,* பெ. (n.) 1. *நல்வாக்கு* பார்க்க; see *nalvākku.* 2. சிறந்த செய்தி; good news. "*சேனையை நாசஞ் செய்திட்டு நடந்த நல்வார்த்தை யறிந்துமே*" (திவ். தருவாய். 7.5.7).

[நல் + skt.வார்த்தை.]

நல்வாழ்வு *nalvāḻvu,* பெ. (n) 1. மேன்மையும், சீருஞ் சிறப்புமாய் வாழ்கை; happy, prosperious life 2. மகிழ்வான இல்வாழ்க்கை; happy married life.

[நல் + வாழ்வு.]

நல்விதி *nalvidi,* பெ. (n.) புண்ணியப்பயன்; (வின்); good disting or fate.

[நல் + skt. விதி.]

நல்விளக்கனார் *nalviḷakkaṉār,* பெ. (n.) சங்க காலப் புலவர்; a poet of Šaṅgam period.

[நல் + விளக்கனார்.]

நற்றிணையில் 85—ஆம் பாடல் இவருடையது.

நல்விளாஞ்சு *nalviḷāñju,* பெ. (n.) காட்டுப் பச்சிலை; bastard rose wood

[நல் + விளாஞ்சு.]

நல்வினை *nalviṉai,* பெ. (n.) அறச்செயல்; good action, virtuous deed. "*நல்வினை மேற்சென்று செய்யப்படும்*" (குறள். 335). 2. முற் பிறப்பிற் செய்த புண்ணிய செயல்; good karmam. opp to tīviṉai. "*நல்வினை தீர்விடத்து நிற்குமாந் தீது*" (நாலடி. 51).

[நல் + வினை.]

நல்வெள்ளஞ்சு *nalveḷḷañju,* பெ. (n.) காட்டுப் பச்சிலை; bastard rose wood.

நல்வெள்ளியார் *nalveḷḷiyār,* பெ. (n) சங்க காலப் புலவர்; a poet of Šaṅgam period

[நல் + வெள்ளி + ஆர்.]

'ஆர்' மதிப்புப் பெயரீறு.

மதுரை நல்வெள்ளியாரென்றும், நல்லொளியாரென்றும் கூறுவர்.

நற்றிணையில் 7—ஆம் மற்றும் 47—ஆம் குறுந்தொகையில் 365ஆம் அகநானூற்றில் 32—ஆம் இவரியற்றியன.

"கோடீ ரிலங்குவளை நெகிழ நாளும்
பாடில கலிழ்ந்து பனியா னாவே
துன்னரு நெடுவரைத் ததும்பி யருவி
தண்ணென் முழவின் இமிழிசை காட்டும்
மருங்கிற் கொண்ட பலவிற்
பெருங்கல் நாடநீ நயந்தோள் கண்ணே"
(குறுந்:365).

நல்வேட்டனார் *nalvēṭṭaṉār,* பெ. (n.) சங்க காலப் புலவர்; a poet of Šaṅgam period

[நல்வேட்டன் + ஆர்.]

'ஆர்' மதிப்புப் பெயரீறு.

நற்றிணையில் 53, 210, 292, 349 ஆகியவையும், குறுந்தொகையில் 341—ஆம் பாடலும் இவரியற்றியன.

"பல்வீ படரிய பசுநனைக் குரவம்
பொரிப்பூம் புன்கொடு பொழிலணிக்
கொளாஅச்
சினையினி தாகிய காலையும் காதலர்
பேணா ராயினும் பெரியோர்
நெஞ்சத்துக்
கண்ணிய வாண்மை கடவ தன்றெனு
வலியா நெஞ்சம் வலிப்ப
வாழ்வேன் தோழியென் வன்த ணானே."
(குறுந்.341).

நல்வேளை *nalvēḷai,* பெ. (n) 1. தைவேளை "பசி கொடுக்கு நல்வேளை"(பதார்த்த. 284); block vailay. 2. *நல்லவேளை* பார்க்க; see *nallavēḷai.*

[நல் + வேளை.]

நல—த்தல் *nala-,* 4செ.கு.வி. (v.i.) 1. நலமாதல்; to result in good, to take a tarourable turn. "நலக்க வடியோமை யாண்டுகொண்டு" (திருவாச.9.6.): 3செ.குன்றாவி. (v.t.) 2. விரும்புதல்; to wish, desire "விலங்குசாக நலந்ததனுருவங்கொண்ட தென்கொலோ" (திருவாலவா.59.2.).

[நய → நல—.]

நலக்கு-தல் *nalakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கசங்கச் செய்தல்; to crumple as cloth or paper. 2. அழுக்காக்குதல்; to soil slighty, sully, tarnish.

க. நலுகிசு.

[நலுங்கு → நலங்கு → நலக்கு-.]

(ஒ.நோ.) அழுங்கு → அழுக்கு.

நலங்கம் *nalangam,* பெ. (n.) சாலங்கவைப்பு நஞ்சு; a kind of native arsenic.

நலங்கனி-தல் *nalankaṉi-,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. அன்புமுற்றுதல்; to over-flow with love "***நலங்கனிந்துருகி நின்றாள்***" (சீவக. 2060). 2. அழகு முற்றுதல்; to mellow with ripe beauty

[நலம் + கனி-.]

நலங்கிடல் *nalangiḍal,* தெ.பெ. (vbl n.) உடம்பில் அரைத்த குழம்பு மருந்தைப் பூசுதல்; anointing the body with liquid medicine

[நலங்கு + இடல்.]

நலங்கு[1]-தல் *nalangu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. நொந்து போதல்; to grow faint, wilt. "*உயிர் வருந்த நலங்கி வந்ததும்*" (அரிச் பு.வெட்டஞ். 40). 2. வருந்துதல்; to suffer, pain. "*விஞ்ச நலங்கியதும்*" (திருவாய் 4). 3. கசங்குதல் (இ.வ.); to lose stiffness, become crumpled. 4. நுடங்குதல்; to bend, as a bow. "*மலைமாவி னலங்க லுளைத்தவர்*" (மருதூரந். 100).

தெ., க., நலகு.

[நலி→ நலிங்கு → நலுங்கு → நலங்கு-.]

நசி → நசிவு + நலிவு = துன்பம்.

நலங்கு[2] *nalangu,* பெ. (n.) 1. திருமணத்தில் மணமக்களை அவையிலிருத்தி, ஒருவர்க் கொருவர் சந்தனம் முதலியன கொண்டு பூசி விளையாடச் செய்கின்ற கொண்டாட்டம்; festive ceremony in a marriage in which the bride and bridegroom daub each other with sandal, saffron and other things. 2. நறுங்கூட்டு (வின்.); macerated mass of fragnant stuffs. 3. வைசூரிப் புண்ணுக்கிடும் மருந்து (வின்.); a medicine applied to pustules of small - pox.

தெ. நலுகு.

[நலம் → நலங்கு.]

உடலிற்கும், உள்ளத்திற்கும் நலம் நல்கும், நறுமணச்சாந்து உடம்பிற் பூசியவுடன், மூக்கு நறுமணத்தை நுகர்தலால், ஈங்கு, உள்ளத்தில் ஏற்படும் 'பொந்திகை' நலமென்று குறிக்கப்பட்டது.

நலங்குச்சாந்து *nalangu-c-cāndu,* பெ. (n.) குழம்பாக அரைத்த மேற்பூச்சு மருந்து; a semi solid preparation of triturated medicine intended for external application. (சா.அக.)

[நலங்கு + சாந்து.]

நலுங்குபூசு-தல் *nalangu-pūśu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. *நலங்கிடு-.* 1. பார்க்க; see *nalangiḍu-*.1. 2. வைசூரிக்கு (அம்மை நோய்க்கு) வேப்பிலையையும், மஞ்சளையும் அரைத்துப் பூசுதல்; to apply a mixture of ground marpgosa leaves and green turmeric to cure small-pox.

[நலங்கு + பூசு-.]

நலங்குமா *nalaṅgu-mā,* பெ. (n.) குளிக்கும் போது பயன்படுத்தும் நறுமணப்பொடி; fragrant powder used while taking bath.

[நலங்கு + மா.]

நலங்குலை¹-த்தல் *nalaṅgulai-,* 4 செ. குன்றாவி. (v.t.) 1. கெடுத்தல்; to defile or pollute. 2. கற்பழித்தல்; to bring to a surrender of chastity sedyce.

[நலம் + குலை-.]

நலங்குலை²-தல் *nalaṅ-gulai-,* 2 செ. கு. வி. (v.i.) கற்பழிதல்; to carnal knowledge of a woman forcibly and against her will; to seduction, to rape

[நலம் + குலை-.]

நலங்குலைவு *nalaṅgulaivu,* பெ. (n.) கற்பழிவு; rape, seduction. (சா.அக.)

[நலம் + குலைவு.]

நலச்சம் *nalaccam,* பெ. (n.) விலாமிச்சைவேர்; khuskhus root. (சா.அக.).

நலச்சி *nalacci,* பெ. (n.) வெட்சாரம்; salt nitrate of potash (சா.அக.).

நலச்சூடு¹ *nala-c-cūḍu,* பெ. (n) சூட்டின் கடுப்பு; inflamation or irritation.

[நல்ல + சூடு.]

[ஒருகா. நலம் → சுள் → சுடு → சூடு.]

நலச்சூடு² *nala-c-cūḍu,* பெ. (n.) எருதுகளுக்கு இடுங் கடுப்புச்சூடு (வின்.); brand on a bull's testicles.

[நலம் + சூடு.]

நலச்செம்பி *nalaccembi,* பெ. (n.) செந்திராய்; red indian chick weed. (சா.அக.)

[நலம் + செம்பி.]

நலஞ்சாற்று-தல் *nalañ-šāṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) அரசனாணையை வெளியிடுதல்; to proclaim, as a royal command. "*பெரும்பயண மெழுக வென்று நலஞ்சாற்ற*" (பெரியபு. சேரமான் பெ. 46).

[நலம் + சாற்று-.]

நலஞ்சுடு-தல் *nalañšuḍu-,* 20 செ.கு.வி. (v.i.) காளை, எருது ஆகியவற்றிற்கு கடுப்புச் சூடிடுதல் (வின்.); to geld a bull and cauterize the wound.

[நலம் + சுடு-.]

நலம் = எருதின் விதைக்காய்

நலத்தம் *nalattam,* பெ. (n.) சடாமாஞ்சில் மூலிகை (சங்.அக.); spikenard herb

நலதம் *naladam,* பெ. (n.) வெள் வெட்டிவேர்; white cuscus rootor grass

நலதம்பு *naladambu,* பெ. (n) வேம்பு; neem, margosa. (சா.அக.)



நலதை *naladai,* பெ. (n.) *நலத்தம் (சா.அக.)* பார்க்க; see *nalattam.*

[நலதம் → நலதை.]

நலந்தட்டு-தல் *nalan-dattu-,* 5 செ.குன்றா.வி. (v.t.) விதையடித்தல் (வின்.); to castrate by crushing the testicles, geld, emasculate.

மறுவ. காயடித்தல், விதைவாங்குதல்.

[நலம் + தட்டு-.]

நலந்திகழ் *nalan-digal,* பெ. (n.) சாகுபடியின் ஏற்றத்தாழ்வு; the yielding capacity of soil

[நலம் + திகழ்.]

நலம் = நல்வாழ்விற்கு நலம் நல்கும், விளைச்சல்.

நலந்நசுக்கு-தல் *nalan-našukku-,* 5செ. குன்றாவி. (v.t.) *நலந்தட்டு-,* பார்க்க; see *nalan-dattu-.*

[நலம் + நசுக்கு-.]

நலநாறி *nalanāri,* பெ. (n.) சிவகரந்தை (சங்.அக.); cylon toolsy. (சா.அக.)

[நலம் + நாறி.]

நலநிலம் *nala-nilam,* பெ. (n.) துருசு; blue vitriol, Subacetate of copper.

[நலம் + நிலம்.]

நலப்பாடு *nala-p-pādu,* பெ. (n.) 1. நன்மை; (யாழ்ப்.); goodness. 2. சிறப்பு, மேம்பாடு; excellence. 3. ஆதாயம்; advantage. 4. ஊதியம், மேன்மை, பயன், நலமேம்பாடு; profit. 5. ஆகூழ் (அதிருஷ்டம்) good fortune

[நலம் + பாடு.]

படு → பாடு. நன்மை விளைகை.

நலப்பாணி *nala-p-pāṇi,* பெ. (n.) *நல நிலம்* பார்க்க; see *nala-nilam.* (சா.அக.).

[நலம் + பாணி.]

நலப்பு *nalappu,* பெ. (n.) 1. நன்மை (சங்.அக.); goodness, benefit. 2. வெற்றி, நற்பயன்; success 3. செயல்திறன் (யாழ்.அக.); efficacy.

[நலம் → நலப்பு.]

நலப்புண் *nala-p-puṇ,* பெ. (n.) எருத்தின் விதையடித்த புண் (வின்); sore cauterizing the wound of a gelded bull

[நலம் + புண்.]

காயடிக்கப்பட்ட காளை, உழுதொழிலில் வலிவாகப் பணி செய்யும் பாங்கு பற்றி மக்கட்கு நலப்புண் எனக் குறிக்கப் படுகிறது. காயடித்த காளைதான் நன்ற பணிசெய்யும்.

நலபிரதி *nala-piradi,* பெ. (n.) பொட்டிலுப்பு (சங்.அக.); nitrate of potash.

நலம் *nalam,* பெ. (n.) 1. நன்மை, ஒழுக்கம்; goodness, virtue. *"நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி"* (திருவாச. 1:58.). 2. அழகு; beauty, fairness, handsomeness. *"தொன்னலந் தொலை பீங்கி யாந்துய ருழப்ப"* (கலித். 16.). 3. அன்பு; love, affection *"நன்னலம் மவற்கேவைத்த நங்கையே"* (சீவக. 1336).

4. ஆசை; hope, faith. *"பொது நலத்தார்"* (குறள், **915.**). **5.** இன்பம்; delight, pleasure, gratification. *"சிறந்த நின்னலத்தைச் சேரே னாய் விடில்"* (சீவக. **2067.**). **6.** இரக்கம், அருட்குணம்; kindness. **7.** பயன் (சங்.அக.) ஆதரவு; benefit, favour. **8.** குணம், இயல்பு, தன்மை; nature, characteristic *"பிறர்தீமை சொல்லா நலத்தது சால்பு"* (குறள், **984**). **9.** பயன், மேன்மை (சங்.அக.). ஊதியம்; advantage, utilitly; profit. **10.** புகழ்; reputation, fame. *"தந்நலம் பாரிப்பார்"* (குறள், **916**). **11.** உயர்வு (சங்.அக.); excellence. *"நாநனி வருந்த வென்னலம் பாராட்டலின்"* (மணிமே. **21, 140**). **12.** கண்ணோட்டம் (வின்.); connivance, partiality, indulgence. **13.** வளவாழ்வு; நலவாழ்வு; prosperity, welfare, health. *"நலந் தீங்கிலு முன்னை மறந்தறியோன்"* (தேவா. **946:6.**). **14.** நிறம் (வின்.); colour. *"செயலையந் தளிரேய்க்கு மெழினலம்"* (கலித். **15.**). **15.** செம்மை நிறம்; red colour. *"நலம் பெறு கலிங்கத்த"* (திருமுரு. **109.**). **16.** நளி(விருச்சிகம்) (பிங்.); scorpio in the zodiac. **17.** எருத்துவிதை (யாழ்ப்.); testicle of a bull. **18.** சுக்கு (வின்.); dried ginger.

[நல் → நலம்.]

நலம்பலம் *nalam-palam,* பெ. (n.) இலந்தை; common-jujube.

[நலம் + பழம் → பலம்.]

நலம்பாடு *nalam-pāḍu,* பெ. (n.) வளமை, வெற்றிப்பொலிவு, தகுதி; propriety, fitness *"நலம்பாடில்லை நாணுடைத்து"* (மணிமே. **2:36,** பாடவேறுபாடு).

[நலம் + படு → நலம்பாடு.]

ஒருகா. நலப்பாடு → நலம்பாடு.

வாழ்வாங்கு வாழ்தற்குரிய, அனைத்து நலமும், வளமுடைய வெற்றிப்பொலிவே நலம்பாடு எனப்படும்.

நலம்பாராட்டல் *nalam-pārāṭṭal,* பெ. (n.) தலைவியின் அழகை வியந்துரைக்கும் அகத்துறை; praising the beauty of one lady love. "கலந்துழி மகிழ்தலு நலம் பாராட்டலும்" (நம்பியகப். **125.**).

[நலம் + பார் + ஆட்டல்.]

இஃது அல்லீற்றுத்தொழிற்பெயர்.

நலம்பாராட்டு[1]-தல் *nalam-pārāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) அழகுபடுத்துதல்; to dress, adorn. *"நறுமலர்க் கோதைநின் னலம்பாராட்டுநர்"* (சிலப். **2:62.**).

[நலம் + பாராட்டு-.]

இது தல்லீற்றுத்தொழிற்பெயர்.

நலம்பாராட்டு[2] *nalam-pārāṭṭu,* பெ. (n.) *நலம்பாராட்டல்* பார்க்க; see *nalam - pārāṭṭal* *"நலம்பாராட்டாகிய பொருள்பொதிந்த உரையை"* (சிலப். **2:81,** உரை).

[நலம் + பாராட்டு.]

நலம்பிடி-த்தல் *nalam-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) *நலந்தட்டு-. (நாஞ்.)* பார்க்க; see *nalan-taṭṭu-.*

[நலம் + பிடி-.]

நலம்புரிதம் *nalam-puridam,* பெ. (n.) ஆண்டு; one year.

ஓராண்டின் பன்னிரண்டு திங்களை ஆறுபெரும்பொழுதாகத் தமிழின் பொருளிலக்கணம் பிரிக்கும். அதன்படி

வரும்சுழற்சி, உயிர்வளர்ச்சிக்கு நலம்புரிவதால், இப் பெயர் பெற்றது.

நலம்புனைந்துரை—த்தல் *nalam-puṉaindurai-*, 4.செ.குன்றாவி. (v.t.) தலைவியின் அழகைப்புனைந்துரைத்தல் (அகப்); to praise the beauty of one's lady love.

[நலம் + புனைந்து + உரை—.]

தலைமகன், தலைமகள் அழகைப் பாராட்டிக் கூறுதலே நலம் புனைந்துரைத்தல். தலைமகன், தலைமகளிடம் புணர்ச்சி இன்பம் துய்த்த பின்பு, அளவில்லா மகிழ்ச்சியொடும், அடக்க வொண்ணா உணர்ச்சியோடும் உரைத்தல். (எ.டு.) "*நன்னீரை வாழிஅனிச்சமே நின்னினு மென்னீரள் யாம் வீழ்பவள்*" (குறள்,1111.). தலைவன் அனிச்ச மலரை நோக்கிக் கூறும்பான்மையில், இப் பாடல் அமைந்துள்ளது. "அனிச்சப்பூவே! நீ மோப்பக்குழையும் தன்மையுடையை! ஆனால், எனது தலைவியோ உன்னைவிட மென்மையானவள் என்பதை அறிவாயாக" இஃது இயற்கைப் புணர்ச்சியின் இறுதியில், காமவின்பத்தின் மகிழ்ச்சியில், தலைவன் உரைத்ததாகும். ஈங்கு, "அனிச்சம்" ஆகுபெயர். இவ்வுலகில் தலைவியே மென்மையிற் சிறந்தோள் என்பது, குறிப்பாற் பெறப்பட்டது.

நலம்பெறுசித்தன் *nalamperu-šittaṉ*, பெ. (n.) காந்தம்; magnet.

[நலம் + பெறு + சித்தன்.]

நலம்பொலம் *nalam-polam*, பெ. (n.) நன்றுதீது (வின்.); good and evil.

[நலம் + பொலம் = நன்மையும் தீமையும் கலந்த வாழ்வியல் நிலை.]

நலமாலை *nalamālai*, பெ. (n.) அத்திப்பிசின் (சங்.அக.); fig resin.

[நலம் + மாலை.]

அத்திமரத்திலிருந்து வடியும் பிசின் மாலைபோல் தொங்குவதால், இப் பெயர் உண்டாகியிருக்கிறது.

நலமிளப்பம் *nalam-iḷappam*, பெ. (n.) *நலம் பொலம் (வின்.)* பார்க்க; see *nalam-polam*

[நலம் + இளப்பம்.]

நலமெடு—த்தல் *nalam-eḍu-*, 4. செ.குன்றாவி. (v.t.) *நலந்தட்டு—. (வின்)* பார்க்க; see *nalan-taṭṭu-*

[நலம் + எடு—.]

நலவர் *nalavar*, பெ. (n) நல்லோர்; good, virtuous persons. "*நலவரு ணன்மை வரம்பாய் விடல்*" (நாலடி, 188.).

[நல் → நல → நலவர்.]

நலவல் *nalaval*, பெ. (n.) *நாவல் (சங்.அக.)* பார்க்க; see *nāval*

மறுவ. நவ்வல்.

[நலல் → நலவல்.]

நலவு *nalavu*, பெ. (n.) 1. நன்மை (சங்.அக.); goodness. 2. மன்னிப்புக்கேட்கும் மொழி; pardon apology. '*உன் குற்றத்திற்கு என்னிடம் நலவுகேட்க வேண்டும்*' (நெல்லை). '*வாய்க்கு வந்ததைப்பேசிவிட்டு நலவு கேட்பதில் ஞாயம் இல்லை*' (இ.வ.).

க., நலவு.

[நல் → நலவு.]

நலிகம் *naligam,* பெ. (n.) சுருள்பட்டை; a red bark used in colousing or scenting medicinal oils.

[நலி → நலிகம்.]

நலிதம் *nalidam,* பெ. (n.) 1. தாமரை; lotus 2. வெண்ணாரை; white stork. 3, நீர்; water.

[நலிகம் → நலிதம்.]

நலி¹–தல் *nali-,* 2 செ.கு.வி. (v.i.). 1. மெலிதல்; to waste, pine away. தொடர்ந்து நோய் வாய்ப்பட்டதால் உடம்பு நலியத் தொடங்கியது. (இ.வ.). 2. அழிதல்; to perish. *"நண்ணா வசுரர் நலியவே"* (திவ். திருவாய். 10:7:4.). 3. சரிதல் (வின்.); to slide, to roll; to fall down. 4. உச்சாரணத்தில் ஓசை நடுநிலையாதல்; to be pronounced in a middle tone. *"நலிதலுமுழைப்பின்"* (நன். 88.). 5. வருந்துதல்; to suffer to be in distress. *"தேடி நலிந்தே கண்ணாற் காணாத காரணனை"* (சிவரக, நந்திகண. 1.). 6. தோற்றல் (வின்.); to yield before a foe; to fail. 7. நல்லநிலைமை வீழ்ச்சி அடைந்து தாழ்வடைதல்; to decline in progress, prosperity, etc. தந்தை இறந்தபிறகு அந்தக்குடும்பம் நலிந்தநிலையிலிருந்து இப்பொழுதுதான் தலையெடுத்துத் தழைக்கிறது. (உ.வ.).

[நசி → நலி–.]

நலி²–தல் *nali-,* 2 செ.குன்றாவி. (v.t.) நெருக்கி வருத்துதல்; to afflict, distress. *"நடுங்கஞர் நலிய"* (பு. வெ. 12. பெண்பாற். 15. கொளு.).

தெ. நலி.

[நசி → நலி–.]

இது தன்வினை வடிவம்.

நலி³–த்தல் *nali-,* 4 செ.குன்றாவி. (v.t.) துன்புறுத்துதல் (யாழ்.அக.); to afflict, cause distress.

இது பிறவினை வடிவம்.

நசல் = துன்பம்.

நசித்தல் = துன்புறுத்துதல்.

[நசி → நலி.]

நலி⁴ *nali,* பெ. (n.) 1. நோய் (வின்.); disease, illness. 2. நோவு (வின்.); pain. 3. மெலிவு (இ.வ.); thinness, leanness.

[நசி → நலி.]

நலிதல் *nalidal,* பெ. (n) 1. மெலிகை (வின்.); becoming thine 2. சரிகை (வின்.); sliding. 3. நலிதலோசை (பி.வி. 40.); circumflex accent. *"எடுத்தல் படுத்தல் னலித லோயாதுரப்பல்"* (வீரசோ. சந். 4.).

[நசிதல் → நலிதல்]

நலிந்தோர் *nalindōr,* பெ. (n.) நோயால் பீடிக்கப் பட்டோர்; one who suffering from a disease, patient

நசிவு = துன்பம்.

நசிந்தோர் = நோயால் துன்புறுவோர்.

நலிவு = நோயால் படுந்துயர்.

[நசிந்தோர் → நலிந்தோர்.]

நலிநீருகம் *nali-nirugam,* பெ. (n) தாமரைத் தண்டு; lotus stalk.

[நலிநீர் + உகம்.]

நலிப்பளம் *nali-p-palam,* பெ. (n.) கொசுக்களை அழிக்கும் நெய்மம்; mosquitues oil.

நலிபு *nalipu.* பெ. (n.) ஆய்தவெழுத்திற்குச் செய்யுளில் வழங்கு மொரு பெயர் (தொல். பொருள். 535. உரை); a poetic name for the letter āydam

[நலி → நலிபு.]

நைந்து ஒலிப்பதால் ஏற்பட்ட பெயர்.

நலிபுவண்ணம் *nalipu-vannam.* பெ. (n.) ஆய்தம் அடிக்கடி பயின்றுவரும் சந்தம் (தொல். பொருள். 535.); a rhythm effected by the frequent use of āydam.

[நலிபு + வண்ணம்.]

இசையை நிறைக்கப் பயின்றுவரும் வண்ணம்.

நலிவி-த்தல் *nalivi-* 4 செ.குன்றாவி. (v.t.) மெலியச்செய்தல்; *to make thin reduce the* obesity

[நலி → நலிவி-.]

நலிவு[1] *nalivu,* பெ. (n.) 1. துன்பம்; trouble, distress, affliction *"வையகத்து நலிவுகண்டு"* (பு. வெ. 8, 34. கொளு). 2. கேடு; ruin, destruction *"நோற்று நலிவிலா வுலகமெய்தல்"* (சீவக, 2727). 3. அழிவு; the state of being eunacuated suffering.

[நசி → நலி → நலிவு.]

நலிவு[2] *nalivu,* பெ. (n.) 1. நல்லநிலையிலிருந்து கெட்டநிலைக்குச் செல்லும் வீழ்ச்சி; decline ஆயுள்வேத மருத்துவம் நல்லநிலையில் இருந்து நலிவுற்றது. சிலதொழிற்சாலைகள் நலிவு அடைந்த நிலையில் உள்ளன. (இக்.வ.) 2. நோய் முதலியவற்றால் உடலில் ஏற்படும் நலக்குறைவு. debility of the body நீங்கள் உடல் நலிவுற்ற நேரத்தில், அதிகம் பேச வேண்டாம் (இக்.வ.).

[நசி → நலி → நலிவு.]

நலினம் *nalinam,* பெ. (n.) 1. தாமரைநீர்; lotus water 2. வெண்ணாரை; white stork.

நலுங்கு *nalungu,* பெ. (n.) நலங்கு *(நெல்லை)* பார்க்க; see *nalangu*

[நல் → நலங்கு → நலுங்கு.]

நலுங்கு[1]**-தல்** *nalungu-* 5 செ.குன்றாவி. (v.t.) உடல் வருத்துதல்; to strain oneself உடல் நலுங்காது வேலை செய்ய முடியுமா? உடை நலுங்காமல் வேலை செய்பவருக்குத்தான் ஊதியம் மிகுதி (உ.வ.).

[நலி + நலிங்கு + நலுங்கு-.]

எதிர்மறைவடிவங்களில் இச் சொல்லாட்சி வழக்கூன்றியுள்ளது.

நலுங்கு[2]**-தல்** *nalungu-,* 5செ.கு.வி. (v.i.) 1. நெகிழ்தல்; to slip off. "கலைகள் அவிழ்ந்தவிழந்து நலுங்க" (கனம் கிருட்டிணையர்.107.) 2. மெலிதல்; to become lean. "உடல் நலுங்க உள்ளமும் நலுங்கும்" (இ.வ.). 3. நலிவுறுதல்; to be distressed. "வயிற்றிலிருந்த காலம் நலுங்காமல் நோக்கினவள்" (திவ்.பெரியாழ். 3:2:8, வ்யா, பக்.552.).

[நலங்கு → நலுங்கு-.]

நவ்வங்கம் *nav-v-angam,* பெ. (n.) வெள்வங்கம்; white lead

[நவ்வு + அங்கம்.]

நவ்வல் *navval,* பெ. (n.) இனிப்புநாவல்; sweet jaumoon.

[நாவல் → நவ்வல்.]

நவ்வல்பிசின் *navval-pisin,* பெ. (n.) நாவல் மரத்துப் பிசின்; gum of jaumoon tree.

[நாவல் + பிசின்.]

நவ்வார் *navvār,* பெ. (n.) பகைவர் (கயாகரம்); enemies, foes.

[நவ்வு + ஆர்.]

நவ்வி[1] *navvi,* பெ. (n.) 1. பெண்மான் (தொல். பொருள். 612); female deer, hind 2. மான்குட்டி; young of a deer. "*சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை*" (புறநா.2). 3. இளமை (சூடா.); youth, tender age. 4. அழகு (சூடா.); beauty, handsomeness. "*நவ்வித் தோகையர்*" (கம்பரா. மாரீச.14). 5. அத்தநாள் (சூடா.); the 13th nakṣatra, part of corvus

[நுவ்வு → நவ்வு → நவ்வி.] (வே.க.3.5.)

நவ்வி[2] *navvi,* பெ. (n.) மரக்கலம்; navy, boat, vessel, ship. "*நவ்விதம் பாயொடு வேலையிற்றிரியும் பண்பின்*" (கம்பரா. படைத்த. 47.).

[நவ்வு → நவ்வி.]

நவ்வு[1]**-தல்** *navvu-,* 5செ.குன்றாவி (v.t.) 1. முழுதும் நம்புதல்; to trust unreservedly. அவனை ஏன் நவ்விக் கொண்டிருக்கிறாய்? 2. ஆசையோடு எதிர்பார்த்திருத்தல்; to expect eagerly. '*உனக்கு வர வேண்டிய பணத்தை இப்பொழுது நவ்வியிருத்தலாற் பயனில்லை*'.

[நம்பு → நவ்வு-.]

நவ்வு[2] *navvu,* பெ. (n.) *நவ்வி*[2] பார்க்க; see *navvi*[2] '*அவனி பவ்வமுறு நவ்வெனத் தலை நடுங்கவே*' (பாரத. இரா. 60). 2. ஆடு; sheep.

[நவ்வி → நவ்வு]

நவ்வுசவ்வு *navvu-savvu,* பெ. (n.) நலம்பொலம் (வின்.); good and evil, profit and loss.

[நவ்வு → சவ்வு]

நவ்வூகிதம் *navvūkidam,* பெ. (n.) வரிக் கற்றாழை; striped aloe.

நவட்டு-தல் *navaṭṭu-,* 5செ.குன்றாவி. (v.t.) *நகட்டு-தல்* பார்க்க; see *nagaṭṭu-*

[நகட்டு → நவட்டு-.]

நவமாலிகம் *navamāligam,* பெ. (n.). இரட்டைமல்லிகை; jasminum sambag.

நவமை *navamai,* பெ. (n.) குற்றம்; defect, fault "நவமைநீங்கிய நற்றவன்" (கம்பரா.அகத்.31.)

[நவை → நவமை.]

நவரப்புஞ்சை *navara-p-puñjai,* பெ. (n.) நெல்வகை; a kind of paddy (a.)

நவரம்பழம் *navaram-paḻam,* பெ. (n.) ஒருவகை வாழைப்பழம்; a kind of plantain (G.Sm.D.i i, 213).

நவரை[1] *navarai,* பெ. (n.) 90 நாளில் பயிராகும் நெல்; paddy maturing in 90 days. 2. கருங்குருவை; black paddy possessing medical virtues.

[நவல் → நவர் → நவரை.]

நவரை[2] *navarai,* பெ. (n.) ஐந்து விரல நீலத்திற் குறையாது வளர்வதும், செந்நிறமுடையதுமான கடல்மீன்வகை; red mullet, reddish chestnut in colour, attaining at least 5 inch in length. Uponcoides sulphurens

நவரை வகைகளாகச் சம்பசிவம் மருத்துவ அகரமுதலி கூறுவது:–

1. கல்நவரை.
2. பேய்நவரை.
3. பருநவரை.
4. செந்நவரை.

நவரை[3] *navarai,* பெ. (n.) சிறுகாய் வாழை வகை (பதார்த்த.729.); a kind of plantain. "நவரை வாழைப் பழத்தான் மதி" (பதார்த்த.765.).

[நவல் → நவல் → நவர் → நவரை.] (வே.க.3–5.)

நவரைவாழை *navarai-vāḻai,* பெ. (n.) மகரவாழை; species of plantain

நவற்குப்பு *navaṟ-kuppu,* பெ. (n.) வெடியுப்பு; nitre.

[நவல் + குப்பு.]

நவனாகம் *nava-nāgam,* பெ. (n.) ஓமம்; bishop's weed.

[நவன் + நாகம்.]

நவாச்சாரம் *navāccāram,* பெ. (n.) மருந்துக்குப் பயன்படும் உப்பு; ammoni-chloridum.

நவாட்டுச் சருக்கரை *navāṭṭu-c-carukkarai,* பெ. (n) பூராச்சருக்கரை (இ.வ.); fine, white cane sugar

[நகட்டு → நவட்டு → நவாட்டு + சரக்கரை.]

நவாடா *navāḍā,* பெ. (n) தோணி (வின்.); boat, dhoney.

தெ. வாடா.

[நாவு → நவா → நவாடா.]

நவாத்து *navāttu,* பெ. (n) மணற்சருக்கரை; aska sugar.

[நவாட்டு → நவாத்து.]

நவாது *navādu,* பெ. (n.) வெண்மையான சருக்கரைவகை (இ.வ.); a kind of white sugar.

நவான்னம் *naviāṉṉam,* பெ. (n.) சுடுசோறு; hot cooked rice.

நவி[1]**–த்தல்** *navi-,* 4செ.குன்றாவி (v.t.) *1. நவிழ் (சுடா.)* பார்க்க; see *naviḻ.* 2. அவித்தல்; baking.

[நசி → நலி → நவி–.]

நசிவு = அழிவு. நசித்தல் → நவித்தல்.

நவி²—த்தல் *navi-* 4செ.குன்றாவி (v.t.) அழித்தல்; to extinguish

[நசி → நவி—.]

நவி³ *navi,* பெ. (n.) *நவியம்¹* பார்க்க; see *naviyam¹* *"எரிபத்தர் தூக்கு நவியம்"* (திருவாரூ. 405.).

நவியம் *naviyam.* பெ. (n.) கோடரி; axe *"வடிநவில் நவியம் பாய்தலின்"* (புறநா. 25).

[நசி → நவி → நவியம்.]

வெட்டி அழிக்கும் கோடரி.

நவிர்¹ *navir-* 2செ.கு.வி. (v.i.) பீறுதல்; to be torn *"நுண்ணவிரறுவை"* (சீவக.2010.).

[நவு → நவிர்—.]

நவிர்² *navir.* பெ. (n.) 1. ஆண்மயிர் (திவா.); mans hair 2. மருதயாழ்த்திறம் நான்கனுள் ஒன்றாகிய தக்கேசிப்பண் (பிங்.); a melody-type of the marudam class, one of four marudayāḻttiṟam. (q.v.) 3. வாள் (பிங்.) sword. 4. *நவிரம்* பார்க்க; see *naviram* *"அனங்கன் பேரால் நவிருடைமா மயலுழந்து"* (பாரத. அருச்சுனன்றீ. 31.). 5. முண்முருக்கு (உரி.நி.); indian coral tree 6. *திரணம்;* blade of grass *'மாடு ஒரு நவிருமெடுக்கவில்லை'.* (யாழ்ப்).

க. நவிர்.

[நவு → நவிர்.]

நவிரம் *naviram,* பெ. (n.) 1. ஆண்மயிர் (திவா.); man's tuft of hair 2. உச்சி (திவா.); crown of the head 3. தலை (திவா.); head 4. மயில் (பிங்.); peacock 5. மலை (திவா.); mountain. 6. மலைபடுகடாங் கொண்ட நன்னனுடைய மலை; a mountain belonging to Nannan the hero of malaipaḍukaḍām *"கழைவளர் நவிரத்து"* (மலைபடு. 574.). 7. *நவிர்² (அக.நி.)* பார்க்க; see *navir².* 8. வாள் (வின்.); sword. 9. புன்மை (பிங்.); inferiority, baseness

[நவிர் → நவிரம்.]

நவிரல் *naviral.* பெ. (n.) மரவகை; a kind of tree *"நாரின் முருங்கை நவிரல்"* (அகநா. 1.).

[நவிரம் → நவிரல்.]

நவிரெழுசங்கு *navireḻu-sangu,* பெ. (n.) முட்சங்கு; four spined monetia

[நவிர் + எழு + சங்கு.]



நவில்¹(லு)—தல் *navil-* 7 செ.குன்றாவி. (v.t.) 1. சொல்லுதல்; to say tell declare pronounce *"நாவினா னவில்பவர்"* (தேவா. 36: 11), (சூடா.). 2. கற்றல்; to learn, study, read. *"நவிறொறு நூனயம் போலும்"* (குறள். 783.). 3. பெரிதொலித்தல்; to utter, sound loudly *"நாதப் பெரும்பறை நவின்று"*

(திருவாச.2:108). 4. பாடுதல்; to sing. *"தேனவின்ற.... அருவிசெய்யாநிற்கும் மாமலைக்கே"* (திவ். இயற். திருவிருத்.50.). 5. செய்தல்; to perform, as a dance. *"நட்டமே நவில்வாய்"* (தேவா. 2:2). 6. பழகுதல்; to practice *"செல்சமந் தொலைத்த வினைநவில்யானை"* (பதிற்றுப். 82, 4.). 7. தாங்குதல்; to bear *"மைஞ்ஞவிலுங் கண்டத்து"* (தேவா. 974:7). 8. விரும்புதல்; to desire *"இகன்மிக நவின்று"* (பரிபா. 6:28). 9. குறித்தல்; to indicate, intend. *"கொலை நவில் வேட்டுவர் கொடுமர மஞ்சி"* (மணிமே. 13:31.). 10. மிகுதல் (பரிபா. அரும்.); to exceed

[நவில் → நவிலு–,]

'தல்' வீற்றுத்தொழிற்பெயர்.

நவிலு²–தல் *navilu-,* 7 செ.குன்றாவி. (v t) நாவினால் ஒலித்துப் பயிலுதல்; to make a sound with help of tongue in practice 'நாவில்தோறும் நூல் நலம் பயக்கும். (பே.வ.).

[நவில் → நவிலு–.]

இது தன்வினை வடிவம்.

"பலகால் ஒன்றைச் சொல்லிப் பயிலுதலே, நவிலுதல்"
(சொல்.ஆ.க.பக்.49.)

நவிழ்–த்தல் *naviḻ-,* 4 செகுன்றாவி (v t) அவித்தல் (சது.); to extinguish. *"குழிகட்பேய் சூழநோக்கிச் சுடலை நவிழ்த்து"* (பதினொ. காரை. மூத்த. 2.).

[நவி → நவிழ்–.]

நவிற்று–தல் *naviṟṟu-,* 5செ.குன்றாவி. (v t) 1. சொல்லுதல் (யாழ்.அக.); to say, speak, utter 2. ஆராய்தல்; to investigate *"எண்ணவிற்றுஞ் சிறப்பினை"* (பரிபா.3:80). 3. அதிகாரத் தோடுரைத்தல் (சது.); to declare with authority

[நவில் → நவிற்று–.]

இது பிறவினை வடிவம்.

நவின்றோர்க்கினிமை *naviṉṟōr-k-kiṉimai.* பெ. (n). பயில்வோர்க்கு இன்பந் தருவதாகிய ஒருவகை நூலழகு (நன். 13.); sweet diction one of ten nūl-alagu

[நவின்றோர்க்கு + இனிமை.]

நவு–தல் *navu-,* 4 செ.கு.வி. (v i) 1. நெகிழ்தல் (யாழ்ப்.); to be come soft, to be soddened by boiling; to be weary, as the limbs by labour 2. மக்கிப்போதல்; to rot, decay, as clothes, books, wood

[நலி → நவி → நவு–.]

நவு *navu,* பெ. (n) கொத்துமல்லி; coriander

[நவ்+நவு.]

நவுக்கர் *navukkar,* பெ. (n) வேலையாள்; servant

நவுகா *navugā,* பெ. (n) *நவுகு* பார்க்க; see *navugu*

[நவுகு → நவுகா.]

நவுகு *navugu,* பெ. (n) கருமுருகி; edipre plant

மறுவ. கையாந்த

[நவு → நவுகு.]

நவுட்டு—தல் *navuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *நவட்டு—தல் (இ.வ.)* பார்க்க; see *navattu-,*

[நகட்டு → நவட்டு → நவுட்டு—.]

நவுரி *navuri,* பெ. (n.) நமரி பார்க்க; see namari. *"திண்டிம நவுரிகாளம்"* (குற்றா. தல. 14, 15.) a kind of trumpet.

க. நவுரி.

[நவு + நவுரி.]

நவூரியம் *navūriyam,* பெ. (n.) சிவப்புச் சிற்றகத்தி; red variety of sesban.

[நவு → நவூரியம்.]

நவை¹—த்தல் *navai-,* 4 செ.குன்றாவி. (v.t.) கொல்லுதல்; to kill. *"சூர்நவை முருகன் சுற்றத்தன்ன"* (புறநா. 23.).

[நவு → நவை.]

நவை² *navai,* பெ. (n.) 1. குற்றம்; fault. 2. தீமை; evil. "அருநவையாற்றுதல்" (நாலடி,295). 3. இழிவு; disgrace. 4. தண்டனை; punishment. "பெரும்பெயர் மன்னனிற் பெருநவைப்பட்டீர்" (சிலப்.16: 171).

[நவு → நவை.]

நழுக்கம் *nalukkam,* பெ. (n.). 1. உழவு படைச்சால் முதலியவற்றில், ஆழமின்மை (யாழ்ப்.); shallowness, as of a dent, an impression, a furrow. 2. மழுங்கல்; bluntness, as of a point.

[நழுங்கு → நழுக்கு → நழுக்கம்.]

நழுக்கு¹—தல் *nalukku-,* 5 செ.குன்றா.வி. (v.t.) 1. வருத்துதல்; to torture, distress *"நழுக்கு கோர நரகி லழுத்தினார்"* (குற்றா. தல. கவுற்சன. 66.). 2. அரிசியை ஒன்றிரண்டாகக் குத்துதல் (யாழ்ப்.); to pound coarsely, as paddy. 3. மழுங்கச்செய்தல் (யாழ்ப்.); to blunt, level. 4. கீறுதல் (யாழ்ப்.); to make a shallow furrow, dent or impression. 5. தந்திரமாய் விட்டுவிலகுதல்; to evade, to slip away.

[நழுங்கு → நழுக்கு—.]

நழுக்கு²—தல் *nalukku-,* 5 செ.கு.வி. (v.i.) சிறிது சிறிதாக மலம் போதல்; to pass in stools, little by little என் குழந்தைக்கு மலம் நழுக்கிப் போகுது (இ.வ.)

[நழுங்கு → நழுக்கு—,]

நழுங்கு—தல் *nalungu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. மழுங்குதல் (யாழ்ப்.); to become blunted, as a point; to be dull. 2. கீறப்பெறுதல்; to be ploughed with shallow furrows; to be written or engraven with a faint impression. 3. வழுவுதல்; to slip

[நழு → நழுங்கு—.]

நழுநழு—த்தல் *nalu-nalu-,* 4 செ.கு.வி. (v.i.) பிடிகொடாது பேசுதல்; to speak evasively; to shuffle. பேசுவதைத்தெளிவாய்ப் பேசு, நழுநழுத்தலாகப் பேசாதே. (உ.வ.).

[நழுவு → நழு → நழுநழு—.]

நழுப்பு—தல் *naluppu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. மயங்கச் செய்தல்; to fascinate. *"நன்கொடு மனமது மறுகிட நழுப்பு நஞ்சென*

சிறுமிகள்" (திருப்பு. 5.). 2. வேலை செய்ய மறுகுதல்; to shrink from, shirk, as one's. duty

[நழுவு → நழுப்பு-.]

நழுவமுது *naḻu-v-amudu,* பெ. (n.) கூழ் (யாழ்.அக.); rice-gruel.

[நழுவல் + அமுது.]

நழுவல் *naḻuval.* பெ. (n) 1. பிடிகொடாது பேசுகை; evading. 2. மறைந்து செல்லுகை; skulking கூட்டத்திலிருந்து நழுவப் பார்க்கிறாள்(உ.வ.). 3. தீய பண் (திருவாலவா. 57, 14, அரும்); a defective note. (mus.).

[நழுவு + நழுவல்.]

நழுவன் *naḻuvaṉ.* பெ. (n) *நளவன் (யாழ்.அக.)* பார்க்க; see *naḷavaṉ.*

[நழுவல் → நழுவன்.]

நழுவி *naḻuvi,* பெ. (n). பிடிகொடாதவன் (யாழ்ப்.); one who shuffles or gives indirect answers, slippery person

[நழுவு → நழுவி.]

நழுவு-தல் *naḻuvu-* 5 செ.கு.வி. (v.i) 1. வழுவுதல்; to slip, as a garment. 2. தந்திரமாய் நீங்குதல்; to steal or skulk away, escape *"என்னல மேகொண்டு நழுவினார்காண்"* (அருட்பா. iii. இன், 5). 3. பிடி கொடாது பேசுதல்; to evade, shift, shuffle, give an indirect answer

[நழு + நழுவு-.]

தல்லீற்றுத்தொழிற்பெயர்.

நழுவுசாதம் *naḻuvu-sādam,* பெ. (n.) *நழுவமுது (யாழ்.அக.)* பார்க்க; see *naḻu-v-amūdu*

நள்¹(ளு)-தல் (நட்டல்) *naḷ(ḷu)-.* 5 செ.குன்றாவி. (v.t.) 1. சேர்தல், அடைதல்; to approach, join, associate with. *"உயர்ந்தோர் தமை நள்ளி"* (திருவானைக். கோச்செங். 25). 2. நட்புக்கொள்ளுதல்; to contract friendship, befriend *"உறினட்டறினொரூஉ மொப்பிலார் கேண்மை"* (குறள்,812.). 3. விரும்புதல்; to like accept. *"நள்ளா திந்த நானிலம்"* (கம்பரா. கைகேசி. 26.). 4. செறிதல்; to dense "நள்ளிருள் யாமத்து" (சிலப்.15:105.)

[நல் → நள் → நள்ளு-.]

நள்ளுதல் = விரும்புதல். நட்புக் கொள்ளுதல் (வே.க.3-52)

நள்² *naḷ,* பெ. (n) 1. நடு; middle centre; *"நள்ளிராவும் நண்பகலும்"* (திவ். திருவாய். 4:7:2.). 2. உச்சிப்பொழுது (யாழ்.அக.); a mid-day 3. இரவு (பிங்.); night *"நள்ளிற் சாகிலன் பகலிடைச் சாகிலன்"* (கம்பரா. இரணிய. 17). 4. திருவோணம் (திவா.) பார்க்க; see tiruvōṇam.

க. நள்.

[நுள் → நள்.]

நள் = உள், நடு. ஒ.நோ. அகடு = உள், நடு.

நள்³ *naḷ,* பெ.எ. (adj) செறிந்த; dense *"மழைகுழுமி நாட்டம் புதைத்தன்ன நள்ளிருள்"* (திருக்கோ. 156.).

[(நுல் →)நல் → நள்.]

நள் + நள்ளு = செறிவு. (வே.க.3-52.)

நள்ளலர் *nallalar,* பெ. (n.) *நள்ளார்* பார்க்க; see *nallār.* *"நள்ளலர்க் கடந்த துப்பி னம்பியை"* (கந்தபு. மூன்றாநா. பானுகோப. யுத். 165).

[நள் + அல் + அர் → நள்ளலர்.]

நடுவில்லாதவர், நடுநீங்கியவர் ஒருபாற்கோடி, மற்றொருவர்க்கு தீமைசெய்பவர் நடுவுநிலைமை நீங்கியவர்.

நள்ளாதார் *nalladār,* பெ. (n.) *நள்ளார்* பார்க்க; see *nallār.* *"தந்நள்ளாதாரி ல்லத்து"* (நாலடி, 207).

[நள் + ஆ → நள்ளா → நள்ளார் → நள்ளாதார்.]

நள்ளார் = பகைவர். 'ஆ'= எதிர்மறை இடைநிலை. நட்புத்தன்மை இல்லாதவர்.

நள்ளார் *nallār,* பெ. (n.). பகைவர் (சூடா.); enemies, foes. *"நள்ளார் பெரும்படை"* (கம்பரா. அதிகாயன். 219).

[நள் → நள்ளார். (வே.க.3–52).]

மனத்தால் பொருந்தாதவர்.

ஒ.நோ.நண்ணார்.

நள்ளி[1] *nalli,* பெ. (n.) 1. நண்டு; crab. *"நள்ளி சேரும் வயல்"* (திவ். திருவாய். 9:10:2). 2.(கர்க்கடக) அலவ ஓரை (சூடா.); cancer in the zodiac. 3. கடைவள்ளல் ஒருவன்; a liberal chief, one of seven kaḍai-vallal. *"பிறங்கு மலை நள்ளி"* (புறநா. 148).

க., நள்ளி

[நள் → நள்ளி.]

ஈங்கு, தண்ணீரில் செறிந்திருக்கும் வண்டும், இரவலர்க்கு விரும்பிப் பொருளளிக்கும் வள்ளலும், செறிதற் கருத்தில் வந்த சொல்லாகும்.

நள்ளி[2] *nalli.* பெ. (n.) உறவு (சூடா.); relation ship.

[நள் → நள்ளி.]

நெருக்கம்பற்றியது உறவு.

செறிந்த உறவு.

நள்ளி[3] *nalli,* பெ. (n.) கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; one of seven kaḍai-vallal

[நள் → நள்ளி.]

அகநானூற்றின் 238 ஆம் பாடல், இவனைப் பற்றி கூறுகின்றது.

நள்ளிடை *nal-l-iḍai,* பெ. (n.) நடுவிடம்; middle place, central position *"நள்ளிடைச் சிவபுர நணுகு மன்னதை"* (சீகாளத் பு. சிலந்தி. 13).

[நுள் → நள் + இடை = நள்ளிடை.] நள்ளி = நடுவிடம் (வே.க. 3.13)

நள்ளிரவு *nalliravu,* பெ. (n.) நடு இரவு = mid-night.

[நள் + இரவு → நள்ளிரவு.]

நள் → நடுப்பொருளில் வந்தது.

இருள்செறிந்த நடுஇரவு நேரம். இராக்காலத்தில் – அதனின் நடுப்பகுதி நேரமாகிய, நள்ளிரவு. 'நள்' என்னும் ஓசை இடையீடின்றி ஒலிக்கும் இரவு, நள்ளிரவு.

நள்ளிருணாறி *nallirunāri,* பெ. (n.) *இருவாட்சி* tuscan jasmine. *"நரந்த நாக நள்ளிருணாறி"* (குறிஞ்சிப். 94.).

[நள் + இருள் + நாறி.]

நடுஇரவில் மணம்வீசும். மல்லிகை மலர்.

நள்ளிருள் *nal-l-irul,* பெ. (n.) செறிந்தவிருள்; intense darkness. *"நள்ளிருள் யாமத்து"* (சிலப். 15:105).

[நள் + இருள்.]

நள் = பொருந்தற்பொருளில் வந்தது.

இருள் பொருந்திய நள்ளிரவு நேரம். நன்கு அடர்ந்து செறிந்த இருள், நள்ளிருள் ஆகும்.

நள்ளு *nallu,* பெ. (n.). 1. *நள், 1.* பார்க்க(வின்); see *nal* 1. 2. மருங்கு (யாழ்.அக.); side.

[நள் → நள்ளு.]

நள்ளுநர் *nallu-nar,* பெ. (n.) நண்பர் (திவா.); friends, associates, adherents.

[நள் → நள்ளு → நள்ளுநர்.]

நள்ளுதல் = நட்புச்செய்தல் (வே.க.3–52).

நள்ளெனல் *nal-l-enal,* பெ. (n.) ஓர் இசைக் குறிப்பு; onom expr. signifying a kind of subdued noise *"நள்ளென் மாலை மருதம் பண்ணி"* (புறநா. 149.).

[நள் + எனல்.]

'நள்' = ஒலிக்குறிப்புச்சொல்.

பறவைகளும், விலங்குகளும், மாந்தரும், பிறபிறவும் வெளிப்படுத்தும் தொடரோசை அடங்கிய பின்பு, வெளிப்படும் இசைக்குறிப்பு. (எ.டு.) *"ஒலியவிந்து அடங்கி யாமம் நள்ளென"* (நற்.303:1.).

"நள்ளென் யாமத்து" (குறுந்.160:4.). நள்ளென்னும் ஒலிக்குறிப்பு கழகவிலக்கியத்தில், நெடுநல்;186, நற்.22:11; 333:12; குறுந்தொகை 6:1; 160:4; 244:1. போன்ற பலவிடங்களில் இசைக்குறிப்புச் சொல்லாக இடம் பெற்றுள்ளது.

நள *nala,* பெ. (n.). தமிழ்ஆண்டு என்பதாக வழங்கும், அறுபதனுள் ஐம்பதாமாண்டு; the 50th year of the jupiter cycle

[நள் → நள.]

நளகம் *nalagam,* பெ. (n.) காலின் உட்புறத்திலுள்ள எலும்பு; the large bone of the lower leg. 2. முன் காலெலும்பு; the skin bone. 3. குழாயைப் போன்ற உறுப்பு; a tubular organ of the body 4. நீண்ட எலும்பு; long bone of the body.

[நள → நளகம்.]

நளகி *nalagi,* பெ. (n.) தாமரை; lotus flower.

[நள → நளகி.]

நளகுகா *nalagugā,* பெ. (n.) சீனிக்கொத்த வரை; a kind of custer beans.

[நளகு → நளகுகா.]

நளசிசுமஞ்சரி *nalaśiśu-mañjari,* பெ. (n) துளசி; holy basil.

[நளசி + சுமஞ்சரி.]

நளத்தம் *nalattam,* பெ. (n) *சடாமாஞ்சி (மலை.)* பார்க்க; see *śaḍa - māñji.*

[நள + நளத்தம்.]

நளத்தி *nalatti,* பெ. (n.). நளவரினப் பெண் (யாழ்.அக.); a woman of the nalavar caste.

[நளத்து → நளத்தி.]

நளப்பன் *nalappan,* பெ. (n.) வெட்பாலை; dyer's oleander, (blue dying rose bay).

[நளப்பு → நளப்பன்.]

நளபன் *nalaban,* பெ. (n.) சணல் (சா.அக.); hemp.

நளபாகம் *nala-bāgam,* பெ. (n.) 1. நளன் சமைத்தது போன்ற மேன்மையான உணவு; excellent cooking as that of Nalan. 2. நன்றாய்ச் சமைத்த உணவு; food cooked excellently.

[நளம் + பாகம்.]

நன்கு பக்குவப்படுத்தி, உண்பதற்கு ஏற்றவண்ணம் சமைத்த உணவு.

நளம்[1] *nalam,* பெ. (n.). நளவ இனம் (யாழ்ப்.); a caste in jaffna.

[நள + நளம்.]

நளம்[2] *nalam,* பெ. (n.). அகலம் (சது.); width, breadth, extent.

[நள் → நளி + நளம்.]

நள் = நடுப்பரப்பின் அகலம்.

நளம் எனுஞ்சொல் பொருந்துதற் கருத்தினின்ற கிளைத்தசொல். (வே.க.3–52.)

நளம்[3] *nalam,* பெ. (n.) ***தாமரை (மலை.)*** பார்க்க; see *tāmarai.*

[நளினம் → நளம்.]

நளம்[4] *nalam,* பெ. (n.) முப்பது இரண்டு சிற்ப நூல்களிலொன்று; name of treatise on architecture, one of the 32 sirpanūl.

[நள → நளம்.]

நளம்[5] *nalam,* பெ. (n.). 1. தாமரை; lotus 2. ஓர் பூடு;- a kind of herbal.

[நளி → நளம்.]

நளம்பள்ளு *nalam-pallu,* பெ. (n.) நளவரும் பள்ளருமாகிய இனம்; the nalavar and the pallar castes.

[நளம் + பள்ளு.]

நளமீன் *nala-mīn,* பெ. (n.). ஒருவகைமீன்; a kind of fish.

[நள + மீன்.]

நளவன் *nalavan,* பெ. (n) கள்ளிறக்கும் இனத்தவர் (யாழ்ப்.); a person of the caste of toddy-drawers.

நளவெண்பா *nala-venbā-* பெ. (n.) ஒரு செய்யுள் நூல்; a poetic verse, in venbā metre.

இந் நூல், நளன் என்ற மன்னன் சூதாட்டத் தினால் அடைந்த நிலையை, வெண்பாச் செய்யுட்களில், விளக்கு கிறது.

மகாபாரதத்திலுள்ள, 'நளோபாக்கியானம்' என்ற பகுதியைத் தழுவி, எழுதப்பட்டது.

இதனை இயற்றியவர், புகழேந்திப் புலவர் ஆவார்.

நளல் *nalal,* பெ. (n) நண்டு; crab.

[நள்ளல் → நளல்.]

வளைக்குள் பொருந்திக்கிடத்தலால் வந்தபெயர்.



நளன்[1] *nalaṉ,* பெ. (n.) 1. நிடதநாட்டரசனும் நைடதத்தின் பாட்டுடைத் தலைவனுமான மாமன்னன்; a famous emperor of Niṣadha, hero of the Niḍatam. 2. இராமனுடைய குரங்குப்படைத் தலைவன்–வீரன்; a monkey belonging to Rāmās hosts, said to have built the Adam's Bridge for Rama and his army to cross over to ceylon. *"நளன் வருகென்றனன் கவிக்கு நாயகன்"* (கம்பரா. சேதுப். 1.). 3. முதல்வள்ளல் க ளொருவன்; name of a liberal chief one of seven mudal-vaḷḷalgaḷ.

[நளம் → நளன்.]

நளன்[2] *nalaṉ,* பெ. (n.) ஒருவகைக் குரங்கு; a kind of monkey

நளி[1]**–தல்** *naḷi-,* 2 செ.கு.வி. (v.i.) 1. செறிதல்; to be close together, crowded. *"நளிந்துபலர் வழங்காச் செப்பந் துணியின்"* (மலைபடு. 197.). 2. பரத்தல்; to be vast in extent. *"நளிந்த கடலுட் டிமிறிரை போல்"* (களவழி. 18). 3. ஒத்தல் (தொல். பொருள். 291); to resemble.

[நுல்⁶ → நல் → நள் → நளி–, 'நுல்⁶' பொருந்துதற் கருத்தினின்று கிளைத்த சொல். ஒத்தபொருள் பொருந்தும். பொருந்திய பொருள் பரந்து சிறக்குத் தன்மைத்து.] (வே.க.3–52).

நளி[2] *naḷi,* பெ. (n) கடுங்குளிர் அல்லது நடுங்கு குளிர்; chillness

[நள் + நளி.]

இரவின் நடுப்பகுதி குளிர்மிக்கது. கடுங்குளிரால், நடுங்கச்செய்யும் நடுஇரவு.

நளி[3] *naḷi,* பெ. (n) 1. செறிவு; closeness, density. *"நளியென் கிளவி செறிவு மாகும்"* (தொல். சொல். 323). 2. பெருமை; greatness, vastness. *"நளியும் பெருமை"* (தொல். சொல். 320). 3. அகலம் (சது); width, breadth, extent. *"நளிகடற் றண்சேர்ப்ப"* (நாலடி, 166). 4. கூட்டம் (பிங்.); crowd, multitude 5. செருக்கு; conceit, vanity. *"விந்தகிரி நளி நீக்கென்றான்"* (சேதுபு. அகத். 3). 6. தண்மை; உறைகுளிர்ச்சி; coldness frigidity. *"மரம் பிறங்கிய நளிச்சிலம்பில்"* (புறநா. 136). 7. *வெள்ளைச் சாரணை (தைலவ. தைல.)* பார்க்க; see *veḷḷaiccāraṇai.* white trianthema 8. *நளினம்² 2, 3, 4* பார்க்க; see *naḷiṉam² 2, 3, 4. 'அவன் எப்போதும் நளிபேசிக் கொண்டிருப்பான்'* (நாஞ்.).

[நல் → நள் → நளி (வே.க. 3: 52).]

நளி[4] *naḷi,* பெ. (n) தேள் (பிங்.); scorpion

[நள் → நளி .]

செறிந்த நஞ்சினைக் கொடுக்கில் கொண்டது.



நளிகை *naligai,* பெ. (n.) 1. ஒருவகைக் குழல்; a kind of syringe. 2. மூங்கிற் குழாய்; bamboo pipe

[நுல் → நள் → நளி → நளிகை.]

நள் → நூள் → நாளம் = உட்டுளை, உட்டுளைப்பொருள். அரிசி அல்லது நெல்லளக்கும் படி முதன்முதல் மூங்கிற் குழாயாலேயே அமைந்தது. "உட்டுளைப் பொருளைத் தோற்றுவிக்குஞ் சொற் கனைத்தும் "நுல்²" என்னும் துளைத்தற் கருத்தில் தோன்றியவையே" (எ.டு.). இசைக்குழல், (நாதசரம்), புல்லாங்குழல், மூங்கிற்குழல், மூங்கிற்படி புறக்காழது. (வே.க. 3: 18).

நளிநீருகம் *nalinīrugam,* பெ. (n.) தாமரைத் தண்டு; lotus stalk.

[நளி + நீருகம்.]

நளிப்பு *nalippu,* பெ. (n.) செறிவு; closeness overcrowdedness. *"பழந்தூங்கு நளிப்பில்"* (அகநா. 18:15.).

[நுல்⁶ → நல் → நள் → நளி → நளிப்பு. (வே.க. 3: 52)]

நளிய *naliya,* இடை. (part.) ஓர் உவம உருபு (தொல். பொருள். 1237); a particle of comparison

[நளி → நளிய.]

உவம உருபுகள் நான்குவகைப்படும். அவற்றுள், 'நளிய' எனும் உவம உருபு உருவகம் வகையைச் சார்ந்தது.

(எ.டு.) *"போல மறுப்ப ஒப்பக் காய்த்த நேர வியர்ப்ப நளிய நந்த என்று ஒத்துவரு கிளவி உருவின் உவமம்"* (தொல். பொருள். 1237.).

மேற்குறித்த உவம உருபுகள். வரலாற்று முறையால், பொருள்களை யுணர்த்தும் தன்மையைச் சுட்டுவனவாகும்.

நளிர்¹-தல் *nalir-,* 4 செ.கு.வி (v.i) 1. குளிர்தல்; to be cool *"நளிர்ந்தசீல னயாசலன்"* (திவ். பெரியாழ். 4:4:8). 2. நடுங்குதல்; to shake, tremble.

[நள் → நளி² → நளிர்-.]

நளிர்² *nalir,* பெ. (n.) 1. குளிர்; cold. 2. நண்டு; (சூடா.); lobster

[நள் → நளி → நளிர் .]

குளிர்ந்த இடத்தில் வாழும் நண்டு, குளிர்மைப் பொருளைக் குறித்தது.

நளிர்³ *nalir,* பெ. (n.) 1. குளிர்ச்சி (பிங்.); cold, frigidity, coldness *"நளிரிளந் திங்கள் சூடுங் கோலமார் சடையினானே"* (தேவா. 231: 4). 2. காய்ச்சல், குளிர்சுரம்; ague, shivering fits, malaria. 3. பகை (யாழ்.அக.); enmity

ம. நளிர்.

[நள் → நளி² → நளிர்.]

"நள் எனும் செறிதற் கருத்துவேர், செறிந்த குளிர்மையைக் குறித்துச் செய்யுட்களில் கடுங்குளிர், கடுங்காய்ச்சல், கடும்பகை

முதலான செறிதல் பொருண்மையில் நளிர் இடம் பெற்றுள்ளது, அறிக.

நளிர்காய்ச்சல் *na/ir-kāyccal,* பெ. (n.) குளிர் காய்ச்சல்; shivering fever, ague.

[நளி² → நளிர் + காய்ச்சல்.]

நன்கு செறிந்த காய்ச்சல் என்னும் பொருளில் வந்துள்ளது.

நளிர்குளிர் *na/ir-ku/ir,* பெ. (n.) நடுங்கும் குளிர்; shivering cold.

[நளி² → நளிர் + குளிர்.]

நளிர்சுரம் *na/ir-šuram,* குளிர்காய்ச்சல்; shivering fever.

[நள் → நளி² → நளிர் + சுரம்.]

நளிர்மண் *na/ir-maṇ,* பெ. (n.). செம்மண்; red ochre.

[நள் → நளி = நளி : செறிவு. நளி¹ → நளிர்¹ + மண் .]

நளிர்வி—த்தல் *na/irvi-,* 4 செ.குன்றாவி. (v.t.) நடுங்கச் செய்தல்; to cause to tremble *"நவையை நளிர்விப்பான் றன்னை"* (திவ். இயற். பெரியதிருவந். 43.).

[நளி → நளிர் = குளிர். நளிர் → நளிர்வு– நளிர்வித்தல் = குளிர்வித்தல் .]

நளிவிடம் *na/i-viḍam,* பெ. (n.) தேளின் நஞ்சு; poison from scorpion sting.

[நளி + விஷம் + skt.விடம்.]

நளிவு *na/ivu,* பெ. (n.). செறிவு; attachment, holding fast. *"வளியா வறியாவுயிர் காவல் கொண்டு நளிவாய்"* (கலித். 103).

[நள்¹ → நளி → நளிவு.] (வே.க.3–52.)

நளினக்கதை *na/iṉa-k-kadai,* பெ. (n)
1. நகையாட்டும் (விகடப்) பேச்சு (யாழ்.அக.); jest, joke, fun. 2. இச்சகப் பேச்சு (யாழ்.அக.) coaxing, flattering talk.

மறுவ. சிரிப்புக்கதை.

[நள் → நளினம் + கதை.]

நளினக்காரன் *na/iṉa-k-kāraṉ,* பெ. (n.)
1. நகையாட்டுப் (சாதுரிய) பேச்சுள்ளவன் (வின்.); wag, witty, humorous man. 2. கோமாளி; buffoon. 3. ஏளனஞ் செய்வோன்; mocker, scoffer.

மறுவ. நையாண்டிக்காரன்.

[நளி → நளினம் + காரன் .]

திறமையுடன் பேசி அனைவரையும் மகிழ்விப்பவன்.

நளினகங்கை *na/iṉa-kaṅgai,* பெ. (n.) சித்தினி இனப்பெண்; one of the four classes of women divided accurding to lust.

[நள் → நளி¹ → நளிம் + கங்கை.]

நளினநாபி *na/iṉa-nābi,* பெ. (n.) தாமரை போன்ற கொப்பூழ்; lotus shaped navel.

[நளி → நளினம் + skt. *நாபி.]*

நளினம்[1] *na/iṉam,* பெ. (n.) 1. *தாமரை (சூடா.)* பார்க்க; see *tāmarai* *"நாளங்கொ ணளினப்*

பள்ளி" (கம்பரா. சூர்ப்ப. 4.). 2. தண்ணீர் (யாழ்.அக.); water. 3. நறுமணப் பண்டம்; a fragrant substance. 4. பாசி; moss.

த. நளினம் → skt. naḷina.

[நளி → நளினம்]

நளினம்² *naḷiṉam,* பெ. (n.) 1. நயச்சொல்; pleasing attractive speech. *"பயிலு மானவர் பேச னளினமே"* (சேதுபு. திருநா. 115). 2. நகையாட்டு ஏளனம் (வின்.); pleasantry, jesting. 3. முரண்நகைச் சுவை, நிந்தை (வின்.); irony, satirical language. 4. ஏளனம் (வின்.); buffoonery, mocking, scoffing, ridicule.

[நளி → நளினம்.]

பிறர்தம் உள்ளத்தைக் குளிர்விக்கும் பொருட்டு, செறிந்த நகையுணர்வுடன் சொல்லாடுதல் நனம் ஆகும்.

நளினம்³ *naḷiṉam,* பெ. (n.) கொப்பூழின் கீழ், வலதுபுறம், தொங்கும் நிலையில் அமைந்துள்ள, ஐந்து விரல நீளமுள்ள பை; a worm like diverticulum.

[நளி → நளினம்.

நளினமாதா *naḷiṉa-mādā,* பெ. (n.) சடாமாஞ்சில்; a medicinal grass known as indian spikenard.

[நளி → நளினம் + skt. மாதா .]

நளினவிருட்சம் *naḷiṉa-viruṭcam,* பெ. (n.) முண்டினி மரம்; (சா.அக.) an unknown tree.

[நளினம் + skt. விருட்சம் .]

நளினவேதி *naḷiṉa-vēdi,* பெ. (n.) செம்மரம்; red tree

[நளினம் + வேதி.]

நளினாட்சமாலை *naḷiṉāṭca-mālai,* பெ. (n.) தாமரை மணிமாலை (நித்தியா. 6.); necklace of lotus seeds.

[நளி → நளினா + skt. அட்சமாலை.]

நளினி¹ *naḷiṉi,* பெ. (n.) 1. பாற்சோற்றி; indian gutta percha - Dichopsis elliptica. 2. ஒரு நறுமணப் பொருள்; a fragrant substance. 3. தேங்காய்ப் பாலினின்று தயாரிக்கும் ஓர் வகைப் போதைப் பொருள்; a fermented and intoxicating substance prepared from the milk extracted from the cocoanut 4. தாமரை; lotus. 5. பத்மினி இனத்துப்பெண்; first of the four classes of women divided according to lust.

[நளி → நளினி.]

நளினி² *naḷiṉi,* பெ. (n.) 1. திருமகள் (உரி.நி.); Thirumagaḷ (lakṣhmi.) 2. தாமரைத்தடாகம் (பிங்.); lotus tank. 3. பண்வகை (அக.நி.); a musical mode (mus.).

[நளி → நளினி.]

நளினீசம் *naḷiṉīšam,* பெ. (n.) தாமரைமணி; lotus-bead.

நளினீருகம் *naḷinīrugam,* பெ. (n.) தாமரைத் தண்டு (சங்.அக.); lotus stalk.

நளினை *naḷiṉai,* பெ. (n.) திருமகள் (வின்.); Tirumagaḷ (lakṣhmi.).

நளு *naḷu,* பெ. (n.) அட்டை; centripede.

நளுக்கல் *naḷukkal,* பெ. (n.) நெல்லின் இரண்டாங்குத்து; second perinding of paddy. அருக்கல் குத்தினாள், நளுக்கல் குத்துவாள் (உ.வ.).

நளுக்கு[1]-தல் *naḷukku-,* 5 செ.கு.வி. (v.i.) நடுக்குதல்; to shake, tremble. '*காலைமுதல் உடம்பு நளுக்கிக் கொண்டேயிருக்கிறது*' (நாஞ்.).

[நருக்கு → நளுக்கு-.]

நளுக்கு[2]-தல் *naḷukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) *நழுக்கு-, 2.* பார்க்க; see *naḻukku-. 2.*

[நழுங்கு → நளுக்கு-.]

நளுங்கு[1] *naḷuṅgu,* பெ. (n.) *1. அழுங்கு,[1]* பார்க்க; see *aḻuṅgu* 2. கிளிஞ்சல்; bivalve, mussel.

[நளு → நளுங்கு.]

நளுங்கு[2] *naḷuṅgu,* பெ. (n.) ஒரு பெரிய பல்லி; a large lizard. (தமி. ஆங். அக.)

[நளு → நளுங்கு.]

நளுத்தை *naḷuttai,* பெ. (n.) பண்வகை (வின்.); a kind of melody.

நளுநொளு-த்தல் *naḷu-noḷu-,* 4 செ.கு.வி. (v.i.) நொளநொளத்தல்; to be soft and mashy.

[நசி → நலி → நளி → நளு.
நொசி → நொயி → நொளி → நொளு-.]

நளுநொளு = கட்டியான திடப்பொருள் நைந்து அல்லது மசிந்து கூழாகுதல்.

நற்கடைப்பிடி *naṟkaḍai-p-piḍi,* பெ. (n.) பழுதற்ற சிந்தனை; pure thought (சம. சொ. அக.).

யாவருக்கும் நலமே நல்கும், தீதற்ற சிந்தனை.

நற்கணம்[1] *naṟ-kaṇam,* பெ. (n.) செய்யுளின் தொடக்கத்தில் வருமாறு அமைத்தற்குரிய, நிலம், நீர், மதி, இயமானன் என்ற நான்குகணம் (பிங்.); the four kinds of metrical feet with which a poem may auspiciously begin.

[நல்கணம் → நற்கணம்.]

நற்கணம்[2] *naṟ-kaṇam,* பெ. (n.) நற்கூட்டம் வானுலகில் இருப்பதாகக் கூறப்படும் தேவர்கள் (தக்கயாகப்.183, உரை.); hindu Gods numbering thirty three crores. good gang.

[நல்[1] + கணம்.]

நற்கதி *naṟ-kadi,* பெ. (n.) துறக்க முதலிய நற்பதவி; bliss, salvation. *"இறுதியி னற்கதி செல்லும் பெருவழி"* (மணிமே. 12:59.).

[நல் + skt *கதி.]*

நற்கந்தம் *naṟkandam,* பெ. (n.) நல்லமணம்; fragrant smell.

[நல் + skt *கந்தம்.]*

தீமை பயக்காத நறுமணம். எந்நிலையிலும் எப்போதும் நலமே நல்கும் நறுமணம்.

நற்கரணாதியெலும்பு *narkaranādi-elumbu,* பெ. (n.) மாரெலும்பு; breast bone, chest bone, sternum.

[நற்கரணாதி + எலும்பு.]

நற்கருணை[1] *nar-karunai,* பெ. (n.) இரா வுணவு (கிறித்.): sacrament of the eucharist

[நல் + skt கருணை.]

கிறித்துவதேவக் கோயில்களில் (ஆலயங்களில்), இராப்பொழுது சமயமெய் (வினை) வழிபாடு முடிந்த பின்பு, தரும் அருளுணவு.

நற்கருணை[2] *nar-karunai,* பெ. (n) காறாக் கருணை; (சா.அக.); elephant foot yam having no acrid taste

தொண்டையில் காறுதல் இல்லாத, கருணைக்கிழங்கு.

நற்கருணைகொடு-த்தல் *nar-karunai-kodu-* 4 செ.கு.வி. (v.i.) கிறித்துவ தலைமைப் பேராயர், அவைபாருக்கு நற்கருணை பண்ணி வைத்தல்; to administer the sacrament

[நல் + skt கருணை + கொடு-.]

நூறு ஆண்டுகளுக்கு முன், மொழி பெயர்க்கப்பட்ட பைபிளில் கருணை முதலான வடசொற்கள் மிகுதியாகப் பதிவாகி உள்ளன.

நற்கருணைபரிமாறு-தல் *nar-karunai parimāru-,* 4 செ.கு.வி. (v.i.) *நற்கருணை கொடு-.* பார்க்க: see *nar-karunai-kodu-*

[நல் + skt கருணை + பரி + மாறுதல்.]

பிழைசெய்தவர், அத் தவற்றைக் கூறுங் கால், அருளுணர்வோடு அது மன்னிக்கப் பட்டதாகத் தெரிவித்தல்.

நற்கல் *narkal,* பெ. (n) ஆட்டுக்கல்; granite stone mortar and pestle for grinding wet materials.

[நல் + கல்.]

திருகையைவிட உறுதிமிக்க நற்கல்லில் செய்யப்பட்டிருக்கும், ஆட்டுக்கல்

நற்கள்ளி *narkalli,* பெ. (n) அழுகண்ணி; (சா.அக.); indian weeping plant.

[நல் + கள்ளி.]

அழுகண்ணிச்செடியுள் மூன்று வகைகள் உண்டு 1. பெரும் அழுகண்ணி 2. சிறு அழுகண்ணி 3. நாட்டு அழுகண்ணி (சா.அக.).

நற்கனிச்சாறு *narkani-c-cāru,* பெ. (n) இனிப்புப் பழத்தைப் பிழிந்த சாறு; juice of sweet fruit

[நல் + கனி + சாறு.]

நற்காசு *nar-kāsu,* பெ. (n) குற்றமற்ற பொற்காசு; pure gold coin, without any adulteration குற்றமற்ற அன்றாடு நற்காசு (S.I.I.vii.613.).

[நல் + காசு.]

உரையும் துளையும் எடையும் குறையாத, மதிப்புமிக்க பொற்காசு. மக்களிடையே புழக்கத்திலுள்ள, மாற்றுக்குறையாத பொன்னில் செய்தகாசு.

நற்காட்சி *nar-kātci,* பெ. (n) சமண சமயத்தின் மும்மணிக் கோட்பாடுகளுள் ஒன்று; right understanding one of

mummaṇi-k-kōṭpāḍu. *"மதிமாண்ட நற்காட்சி வழிநின்று தவந்தாங்கில்"* (சூளா. துற. 228.).

[நல் + காட்சி.]

தூயமனம், தூயமொழி, தூயசெயல் என்று சமணம் கூறிய நற்காட்சிக் கருத்துகளை எட்டாக்கி பௌத்தம் பகுத்தது, தழுவும் முயற்சியே.

நற்காந்தபற்பமாக்கி *naṟ-kānda-paṟpam-ākki*, பெ. (n.) இடுகொள்; four leaved cassia (சா.அக.).

மறுவ. இடிக்கொள், காட்டுக்கொள்

[நல் + காந்தம் + skt. பற்பம் + ஆக்கி.]

நற்காமம் *naṟ-kāmam*, பெ. (n.) ஒத்தகாமம்; reciprocated mutual love *"கைக்கிளைக்கும் பெருந் திணைக்கும் மெய்ப்பாடாவதன்றி நற்காமத்துக் காகாவென்பது கருத்து"* (தொல். பொருள். 265, உரை.).

[நல் + காமம்.]

ஒத்தகாமம் ஐந்திணை என்பது தொல்காப்பிய வழக்கு.

நற்காரம் *naṟ-kāram*, பெ. (n.) வழலை; efflorescent salt found on the soil of fullers earth.

[நல் + காரம்.]

நற்காலம்[1] *naṟ-kālam*, பெ. (n.) 1. *நல்லகாலம்* பார்க்க; see *nalla-kālam*. 2. வாணாள், நல்லூழ் நுகர்ச்சி போன்றவை பெருகுங்காலம்; period of upward course in the evolution of the world

[நல் + காலம்.]

நற்காலம்[2] *naṟ-kālam*, பெ. (n) பருவமழை பொய்க்காது பெய்து, பயிர்விளையுங் காலம்; if the monsoon rain falls timely, the crops grow rich in right time *"இரண்டு நந்தா விளக்கு எரிப்பதாகவும், நற்கால வற்கால மெல்லாம்"* (S I I viii 10.).

[நல் + காலம்.]

நற்கீர்த்தி *naṟ-kīrtti*, பெ. (n) பெரும்புகழ் (வின்.); fame, good report, good name

[நல் + Skt. கீர்த்தி.]

ஒ.நோ. மெய்க்கீர்த்தி (கல்வெட்டு).

நற்கீரர் *naṟ-kīrar*, பெ. (n.) *நக்கீரர் (சங்.அக.)*. பார்க்க; see *nakkīrar*

[நல் + கீரர்.]

நற்கு[1] *naṟku*, பெ. (n) நன்மை; good *"பண்டுநற் கறியாப் புலம்பெயர் புதுவிர்"* (மலைபடு. 392.).

[நன் + கு → நற்கு.]

வலித்தல் திரிபு.

வழக்கில் நன்(மை) + கொடை= நற்கொடை என வழங்காது. பிழையாகி, நன்கொடை என்று மக்களிடையே வழங்குகிறது.

நற்கு[2] *naṟku* வி.எ. (adv) நன்றாக; well *"அது நற்கறிந்தனை யாயின்"* (புறநா. 35.).

[நன்கு → நற்கு]

நற்குடி *naṟ-kuḍi*, பெ. (n) நற்குலம்; good family *"நற்குடி நாற்பத் தெண்ணாயிரத்து வந்த கூடல்கிழான்"* (சேக்கிழார். 4:12.).

[நல் + குடி → நற்குடி.]

நற்குணம்[1] *narkuṇam,* பெ. (n.) நல்ல பண்பு; good habit.

[நல் + குணம்.]

மெய்யுரை, நற்சொல், இனியவைகூறல் பயனுடையன சொலல், இவை வாய்மொழி நலம்.

திருக்கோயில் வலம் வரல், பூங்காசெல்லல், விளையாட்டு, இவை உடலின் நலம்.

அருள் நினைவு, அவா அறுத்தல், தவப்பற்று இவை மூன்றும் மனத்தின் நற்குணம்.

நற்குணம்[2] *naṟ-kuṇam,* பெ. (n) நல்லொழுக்கம் அல்லது நல்ல தன்மை (வின்.); good character amiable disposition

[நல் + குள் → குணம்.]

குணம் = பணிவு, வளைவு, ஒத்துவரும் இயல்பு, மேன்மை, நிறம் மேம்பட்டுத் திகழும் அறிவு போன்ற பொருண்மையில், மக்களிடையே பயின்று வழங்குகிறது. நற்குணம் நான்கு வகைப்படும்.

1. வடிவம் – (எ.டு.) குள்ளவாத்து.
2. வண்ணம் – (எ.டு.) செந்தாமரை.
3. அளவு – (எ.டு) முத்தமிழ்.
4. இயல்பு – (எ.டு.) சுடுநீர்.

நற்குணி *naṟkuṇı,* பெ. (n) 1. நல்ல குணமுடைய பொருள்; drug with good porperties 2. காக்கை; crow

[நல் + குணம் → குணி.]

உயர்திணையைக் குறிப்பதுபோல் தோன்றினும், உணவிட்டால் காக்கை பத்துக்காக்கையைக் கரைந்து அழைத்துண்பதும், ஒரு காக்கை இறந்து விடின், நூறுகாக்கைகள் கூடுவதும், இதற்கு எடுத்துக்காட்டு.

நற்குலம் *naṟ-kulam,* பெ. (n.) உயர்ந்தகுடி; good or respectable family. *"நீடுசூத்திர நற்குலஞ் செய் தவத்தினால்"* (பெரியபு. இளையான். 1.).

[நல் + குலம் → நற்குலம்.]

நற்குலமேரு *naṟkula-mēru,* பெ. (n.) செம்பு மலை; (சா.அக.) mountain of copper ore

நற்குறி *naṟ-kuṟi,* பெ. (n) நன்னிமித்தம் (வின்.); good omen favourable sign

[நல் + குறி → நற்குறி.]

நற்குன்றம் *naṟkuṉṟam,* பெ. (n) திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற இடம்; a canonized place, by Tıruñāṉa-sambandar "குறும்பலா நீடு திருநற்குன்றம்" (சம்பந்த. தேவா.175–9.)

[நல் + குன்றம் → நற்குன்றம்.]

பலாமரங்கள் நிறைந்த குன்றுப் பகுதியான இடம் என்பதால், நற்குன்றம் எனச் சுட்டப்படுகிறது.

நற்கேசி *naṟ-kēsi,* பெ. (n) *நற்கோலி* பார்க்க; see *naṟkōlı*

நற்கையான் *naṟ-kaiyāṉ,* பெ. (n) கரிசலாங் கண்ணி; eclipse plant

மறுவ. கரிசாலை.

நற்கொம்மட்டி *naṟ-kommaṭṭi,* பெ. (n.) *கொம்மட்டி மாதுளை* பார்க்க; see *kommaṭṭi-māduḷai.*

[நல் + கொம்மட்டி.]

நற்கோலி *naṟ-kōli,* பெ. (n.) *தக்கோலம்* பார்க்க; see; *takkōlam.*

நற்கோவை *naṟ-kōvai,* பெ. (n.) 1. தித்திப்புக் கோவை; (சா.அக.); sweet caper. 2. *நல்லகோவை* பார்க்க; see *nalla-kōvai.*

[நல் + கோவை → நற்கோவை.]

நற்கோள் *naṟ-kōḷ,* பெ. (n.) வியாழன் (குரு), வெள்ளி (சுக்கிரன்), நிலவு முதலிய நற்கோள்கள்; benign planets, as venus, jupiter the full moon, etc., *"வியந்த நற்கோளுயர்ந்துழி நோக்கி"* (பெருங். நரவாண. 1, 124.).

[நல் + கோள்.]

நற்சக்தி *naṟ-cakti,* பெ. (n.) *நவாச்சாரம்* பார்க்க; see *navāccaram.*

[நல் + skt. சக்தி.]

உடலில் உண்டாகும் எல்லாநோய்களையும் போக்கும் உப்பு என்று சா.அக. கூறும்.

நற்சகுனம் *naṟ-cagunam,* பெ. (n.) *நற்குறி (வின்.)* பார்க்க; see *naṟ-kuṟi.*

[நல் + Skt. சகுனம்.]

நற்சகெந்தி *naṟca-kendi,* பெ. (n.). *நற்பாசகெந்தி* பார்க்க; see *naṟ-pāša-kendi.*

நற்சங்கலிதம் *naṟ-cangalidam,* பெ. ெ. ஒன்று முதலாக முறையே, எண்களை நிறுவும் கணக்குவகை (வின்.); arithmetical series of natural numbers one of 14 canka-lidam.

[நல் + skt.சங்கலிதம்.]

நற்சங்கு *naṟ-cangu,* பெ. (n.) சங்கஞ்செடி; four spined monetia

[நல்சங்கு → நற்சங்கு.]

நற்சந்தனம் *naṟ-candanam,* பெ. (n.) உயர் சந்தனமரம்; good sandal wood.

[நல் + சந்தனம்.]

நற்சரக்கு *naṟ-carakku,* பெ. (n.) 1. உயர்ந்த அல்லது மேலான சரக்கு; (சா.அக.); superior material 2. கலப்பில்லாச் சரக்கு; unadultered durg. 3. நல்ல நிலையில் உள்ள நேர்த்தியான சரக்கு; commodities in good condition.

[நல் + சரக்கு.]

நற்சலாபம் *naṟ-calādam,* பெ. (n.) பயனுள்ள முத்துக்குளிப்பு (வின்.); lucrative pearl - fishery.

[நல் + Skt. சலாபம்.]

நற்சா *naṟcā,* பெ. (n) 1. மகிழ்வான சாவு; happy death. 2. பிணிப்படாச்சாவு; death without sufferings from disease

[நல் + சா → நற்சா.]

'சாவ' என் ஈற்றுயிர்மெய் சாதலும் விதி. (நன்னூல்.)

நற்சாங்கம்[1] *nar-cāṅgam,* பெ. (n.) தாலம்ப வைப்பு நஞ்சு (சங்.அக.); a kind of prepared arsenic.

[நல் + சாங்கம் → நற்சாங்கம்.]

நற்சாங்கம்[2] *nar-cāṅgam,* பெ. (n.) நல்ல அடையாளம் (யாழ்.அக.); good sign or mark.

[நல் + சாங்கம் → நற்சாங்கம்.]

நற்சாட்சி *nar-cāṭci,* பெ. (n.) 1. பரிந்துரை; recommendation 2. பயனுள்ள சாட்சி; favour able testimony

[நற் + skt. *சாட்சி.]*

நற்சாட்சிப்பத்திரம் *nar-cāṭci-p-pattiram,* பெ. (n.) நல்லவரெனக் குறிக்குஞ் சீட்டு (துற்கா.); certificate of character and ability, letter of recommendation.

[நல் + சாட்சி + பத்திரம்.]

நற்சாந்தம் *nar-cāndam,* பெ. (n.) சிவந்த நச்சுப்புல்; red poisonous grass.

[நல் + சாங்தம் → நற்சாங்தம்.]

நற்சாந்து *nar-cāndu,* பெ. (n) 1. சுண்ணச் சாந்து; lime mortar, used in building, opp. to karuñjāndu 2. சன்னச்சாந்து; fine plaster, stucco

[நல் + சாந்து → நற்சாந்து.]

நற்சார்பு *nar-cārpu,* பெ. (n.) *நற்சார்வு (வின்.)* பார்க்க; see *nar-cārvu.*

[நல் + சார்பு → நற்சார்பு.]

நற்சார்வு *nar-cārvu,* பெ. (n.) 1. நல்லோர் கூட்டம்; good company நற்சார்வு சார்ந்தார் மேல் (நாலடி, 178.). 2. நல்லடைக்கலம்; safe refuge. 3. தெய்வநலங்கெழுமிய வல்லுநர் கூட்டம்; virtuous scholar 4. சமய நோன்பிகள்; religiousman. 5. தருமசிந்தை; virtuous

[நல் + சார்வு → நற்சார்வு.]

நற்சாரி *nar-cāri,* பெ. (n.) 1. நவச்சாரம் (மூ.அ.); sal ammoniac 2. *நற்சாறி* பார்க்க; see *nar-cāri.*

[நல் + சாரி → நற்சாரி.]

நற்சாளை *nar-cāḷai.* பெ. (n) உயர்ந்த சாளை மீன் வகை; a superior kind of oil - sardine or cāḷai.

[நல் + சாளை → நற்சாளை.]



நற்சாறி *narcāri,* பெ. (n) பளபளப்பானதும் எவ்வித மணமற்றதும், வெண்மையானதும் செங்கக்சூலையின் வேகாத பகுதிகளிலிருந்து சேகரிக்கப்படுவதுமான, கட்டித்தோற்றமுடைய மருந்துப்பொருள்; a colourless in odorous and translucent fibrous mass known as salammoniac (சா.அக.)

மறுவ. நவாச்சாரம்.

[நல் + சாறி.]

உடம்பிலுள்ள எல்லாக்கோளாறுகளுக்கும் நற்சாறி பயன்படும். இதை நவாச்சாரம் என்றும், அழைப்பர். நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், கருப்பை போன்றவற்றின் கோளாறுகளுக்கும், தலைவலி, நரம்புக் கோளாறு, கடுங்கோழை, இடுப்புவலி, ஈரல்நோய், மஞ்சட்காமாலை முதலான அனைத்து வகை நோய்களுக்கும், நற்சாறியைச் சாம்பலாக்கியும், கடைச் சரக்குகளுடன் சேர்த்தும் பயன்படுத்துவர். எல்லாவகையான ஊதை நோய்களையும் போக்கும்.

நற்சான்றிதழ் *naṟ-cāṉṟidaḻ,* பெ. (n.) ஒருவரின் நடத்தை குறித்துஅளிக்கும் சான்றிதழ்; conduct certificate.

[நல் + சான்றிதழ்.]

நற்சித்தன் *naṟ-cittaṉ,* பெ. (n.) உயர்ந்த நுண்கல்; a kind of precious stone (சா.அக.).

[நல் + சித்தன் → நற்சித்தன்.]

நற்சித்தி[1] *naṟ-citti,* பெ. (n.) 1. கருநொச்சி; an unknown black variety of chaste tree. 2. *விழுதி மூலிகை; a kind of herbal* medicine

[நல் + சித்தி.]

நற்சித்தி[2] *naṟ-citti,* பெ. (n.) தாயின்தங்கை அல்லது சித்தப்பாவின் மனைவி; mother's younger sister or wife of father's younger brother 2. தந்தையின் இளையமனைவி; father's second wife.

[நல் + சித்தி.]

நல்ல சிற்றன்னை, தாயுடன் பிறந்து வேறு வீட்டில் வாழும் சிற்றன்னை, அன்போடும், இரண்டாம் தாரமாகத் தந்தைக்கு வந்த சிற்றன்னை, வன்போடும் இருத்தல் இயல்பு.

நற்சிலை *naṟ-cilai,* பெ. (n.) கருங்கல் (யாழ்.அக.); black stone.

[நல் + சிலை → நற்சிலை.]

நற்சிறிது *naṟ-ciṟidu,* பெ. (n.) நிலவேம்பு; french chiretta.

நற்சீந்தில் *naṟ-cīndil,* பெ. (n) சீந்தில் வகை (வின்.); gulancha of a superior kind, moon creeper.

[நல் + சீந்தல்.]

நற்சீர்[1] *naṟcīr,* பெ. (n.) *நற்சீரகம்* பார்க்க; see *naṟcīragam.*

[நல் + சீர் → நற்சீர்.]

நற்சீரகம் *naṟ-cīragam,* பெ. (n) 1. சன்னச் சீரகம் (மூ.அ.); cumin, an annual. 2. *கருஞ்சீரகம் (மலை.)* பார்க்க; see *karuñ-jīragam,* black cumin.

மறுவ. சிறுசீரகம், கரிச்சீரகம்.

[நல் + சீரகம் → நற்சீரகம்.]

நற்சீனப்பால் *naṟ-cīṉa-p-pāl,* பெ. (n) பரங்கிப்பட்டை; china root

நற்செங்கல் *naṟ-ceṅgal,* பெ. (n.) காவிக்கல் (யாழ்.அக.); (சீவக. 353, உரை.) ochre

நற்செய்தி[1] *nar-ceydi,* பெ. (n.) நல்லசெய்தி (வின்.); good tidings, happy event.

[நல் + செய்தி → நற்செய்தி.]

நற்செய்தி[2] *nar-ceydi,* பெ. (n.) ஏசுபிரானின் வாழ்வு, அறவுரை குறித்து, புதியஏற்பாட்டில் நால்வர் எழுதிய குறிப்புகள்; gospel.

[நல்செய்தி → நற்செய்தி.]

நற்செய்தியாளர் *nar-ceydiyāḷar,* பெ. (n.) புதியஏற்பாட்டில் நற்செய்தியை எழுதியவர்; evangelist

நற்சேந்தனார் *narcēndaṉār,* பெ. (n.) சங்க காலப்புலவர்; a poet of Šaṅgam period

நற்றிணையில் 128-ம் அகநானூற்றில் 179 மற்றும் 232-ம் இவரியற்றியன.

[நல் + சேந்தன் + ஆர் → நற்சேந்தனார்.]

"பகலெரி சுடரின் மேனி சாயவும்
பாம்பூர் மதியின் நுதலொளி கரப்பவும்
எனக்கு நீ யுரையா யாயினை நினக்கியான்
உயிர்பகுத் தன்ன மாண்பினே னாகலின்
அதுகண் டிசினால் யானே யென்றுநனி
அழுத லான்றிசி னாயிழை யொலிகுரல்
ஏனல் காவலி னிடையுற் றொருவன்
கண்ணியன் கழலன் தாரன் தண்ணெனச்
சிறுபுறங் கவையினனாக அதற்கொண்டு
அஃதே நினைந்த நெஞ்சமொடு
இஃதே கின்றுயா னுற்ற நோயே" (நற்.128.).

நற்சேவுகன் *narcēvagaṉ,* பெ. (n.) கோடங் கிழங்கு; root of malabar glory.

மறுவ. கார்த்திகைக் கிழங்கு.

[நல் + சேவகன்.]

நற்சொல் *nar-col,* பெ. (n.) நற்குறி மொழி; word of good omen - *"இருண்ட மாலை யிடத்து நற்செய்தி கேட்டது"* (பு. வெ. 14. கொளு. உரை.).

[நல் + சொல் → நற்சொல்.]

விரிச்சி என்று ' இடைக்காலத்துக் குறிக்கப்பட்ட குறிமொழி இன்றைய அறிவியலுக்குப் பொருந்தாமை அறிக.

நற்பகல்நாயகி *narpagal-nāyagi,* பெ. (n) புதர் போன்ற செடி வகை; kind of a thicket இதன் இலைகள் பூக்களில் இருந்து மணநெய் எடுக்கப்படுகின்றது (மூலி. களஞ்.).

நற்பச்சை[1] *narpaccai* பெ. (n) துரிசு; blue vitriol.

நற்பசளை *narpašalai,* பெ. (n.) *பசலை* பார்க்க; see *pasalai.*

[நல்பசளை → நற்பசளை.]

நற்படிரம் *narpaḍiram,* பெ. (n) சந்தனம்; sandal wood paste

[நற்படீரம் → நற்படிரம்.]

நற்பரங்குன்றி *narparaṅ-guṉṟi,* பெ. (n) கடலுப்பு (சங்.அக.); sea-salt

மறுவ. சிந்துப்பு.

[நல் + பரம் + குன்றி → நற்பரங்குன்றி.]

நற்பலம் *nar-palam,* பெ. (n) *வெட்பாலை (மலை.)* பார்க்க; see *vetpālai,* woolly dyeing rosebay

[நல் + பலம் → நற்பலம்.]

நற்பலா *naṟpalā,* பெ. (n.) வேர்ப்பலா; trunk jack fruit.

[நல் + பலா → நற்பலா.]

வேர்ப்பகுதியில் காய்த்துப் பழுக்கும் சுவையுடைய பலா நற்பலா. உடல் நலத்திற்கு உகந்தது.

நற்பவளம் *naṟpavaḷam,* பெ. (n.) நல்லபவழம்; good coral

[நல் + பவளம் → நற்பவளம்.]

நற்பன்னகம் *naṟpaṉṉagam,* பெ. (n.) பாம்பின் நஞ்சு; snake poison.

[நல் + பன்னகம் → நற்பன்னகம்.]

நற்பனை *naṟpaṉai,* பெ. (n.) பெண்பனை; female palmyra tree.

[நல் + பனை → நற்பனை.]

நற்பாசகெந்தி *naṟpāśa-kendi,* பெ. (n.) தனிக்கந்தகம்; pure sulphate.

நற்பாம்பு *naṟpāmbu,* பெ. (n.) நல்லபாம்பு; cobra. (சா.அக.)

[நல் + பாம்பு → நற்பாம்பு.]

நற்பாலை[1] *naṟ-pālai,* பெ. (n.) பாலை மரவகை; (மாட்டுவா. 47.); a tree.

[நல்பாலை → நற்பாலை.]

நற்பாலை[2] *naṟ-pālai,* பெ. (n.) பாற்சோற்றுப் பாலை; milk - tree

[நல்பாலை → நற்பாலை.]

நற்பிரியம் *naṟ-piriyam.* பெ. (n) 1. மிக்க அன்பு (யாழ்.அக.); intimacy. 2. பற்படாம் (மலை.); a chick weed.

[நல் + skt.பிரியம்.]

நற்பிறப்பியல் *naṟ-piṟappiyal,* பெ. (n.) மக்கள் இனத்தின் பண்புகளை உயர்த்துவதற்கான, வழிகளை ஆராயும் இயல்; eugenics

மரபுநிலை, சூழ்நிலை ஆகிய இரண் டினாலுமே, மக்கட் பண்புகள் உருவாக்கப் படுகின்றன. ஆனால், இவ்வியல் மரபினை மட்டுமே, முதன்மையானதாக எடுத்துக்கொண்டு செயல்படுகிறது.

நற்பீடகம் *naṟ-pīḍagam,* பெ. (n.) வாதுமைக் கொட்டை; almond.

[நல் + பீடகம் → நற்பீடகம்.]

நற்பீர்க்கு *naṟ-pīrkku,* பெ. (n.) கறிப்பீர்க்கு; common luffa.

[நல்பீர்க்கு → நற்பீர்க்கு.]

பேய்ப்பீர்க்கு, காட்டுப்பீர்க்கு, கறிப்பீர்க்கு எனும் மூவகையுள் கறிப்பீர்க்கு மட்டுமே உண்பதற்குப் பயன்படுவதால், நற்பீர்க்கு என வழங்கலாயிற்று.

நற்பு *naṟpu,* பெ. (n) நன்மை; goodness *"நற்புடைய நாடமிர்து"* (சிறுபஞ். 4.).

[நல்[1] → நல்பு → நற்பு.]

ஒருகா. நன்பு → நற்பு.

வலித்தல் திரிபு.

நற்புத்தி *naṟ-putti,* பெ. (n) 1. அறிவுரை: advice, good counsel 'அவனுக்கு நற்பத்தி

சொன்னேன்' (உ.வ.). 2. நல்லறிவு; right-mindedness உனக்கு நற்புத்தி இல்லையே (இக்.வ.)

[நல் + புத்தி → நற்புத்தி.]

நற்புதிற்பு *narpu-tirpu,* பெ. (n.) நன்மைதீமை (நெல்லை); the good and the bad of a thing, merits and defects

மறுவ: நன்மைதின்மை

நற்புறம் *nar-puram,* பெ. (n.) துணிகளிலும், கடிதங்களிலும் அச்சிட்ட வடிவம், செம்மையாகத் தோன்றும் பக்கம் (இ.வ.); right side, as of a fabric

[நல்¹ → புறம் → நற்புறம்.]

நற்போசனம் *nar-pōšanam,* பெ. (n.) 1. நல்ல சாப்பாடு; rich meals dainty dish. 2. காய்கறி யுணவு; vegetable food.

[நல் + Skt. போசனம் → நற்போசனம்.]

[நல் + போசனம்.]

வடமொழியாளர்கள் புலால் உணவை வெறுத்தமையால், நற்போசனம் என்ற தலைப்புச்சொல்லிற்கு காய்கறியுணவு என்று வலிந்து பொருள் கூறுவர். நல்ல உணவு என்பது, புலால் உணவாகவும், புல்லுணவாகவும் இருக்கலாம்.

நற்போர் *nar-pōr,* பெ. (n.) அறநெறி தவறாத போர்; war in conformity with the traditional code of honour *"நற்போரோடா வல்விற்றூணி நாற்றி"* (முல்லை. 38.).

[நல் + போர் = நற்போர்.]

நற்றங்கொற்றனார் *narrankorranār,* பெ. (n.) சங்க காலப்புலவர்; a poet of šangam period

நற்றிணையில் 136ஆம் பாடல் இவரியற்றியதாகும்.

"திருந்துகோ லெல்வளை வேண்டியா னழவும்
அரும்பிணி யுறுநர்க்கு வேட்டது கொடாஅது
மருந்தாய்ந்து கொடுத்த அறவோன் போல
என்னை வாழிய பலவே பன்னிய
மலைகெழு நாடனொடு நம்மிடைச் சிறிய
தலைப்பிரி வுண்மை யறிவான் போல
நீப்ப நீங்காது வரின் வரை யமைந்து
தோட்பழி மறைக்கு முதவிப்
போக்கில் பொலந்தொடி செறீஇ யோனே"
(நற்.136.).

நற்றத்தம் *narrattam,* பெ. (n.) நற்றத்தனார் இயற்றிய ஒரு யாப்பு நூல் (யாப்.வி.); a treatise on prosody narrattanār.

நற்றத்தனார் *narrattanār,* பெ. (n.) அகத்தியரின் மாணாக்கர், பன்னிருவருள் நற்றத்தமென்று வழங்கும் யாப்பிலக்கண மியற்றியவர் (யாப்.வி. 1, பக், 16.); the author of narrattam, said to be one of the 12 disciples of Agattiyar.

[நல்தத்தனார் → நற்றத்தனார்.]

நற்றம் *narram,* பெ. (n.) நல்ல தன்மை; நல்ல பண்பு; goodness *"நாயினே செய்த குற்ற நற்றமாகவே கொள் ஞாலநாதனே"* (திவ். திருச்சந். 111.).

[நற்று → நற்றம்.]

நற்றமனார் *narramanār,* பெ. (n.) புகழ்பெற்ற சங்கப்புலவர்; a famous šangam poet

"தோளே தொடிகொட் பானா கண்ணே
வாளீர் வடியின் வடிவிழந் தனவே நுதலும்

பசலை பாயின்று திதலைச் சில்பொறி
யணிந்த பல்கா ழல்குல் மணியே
ரைம்பால் மாயோட் கென்று வெவ்வாய்ப்
பெண்டிர் கௌவை தூற்ற நாமுறு துயரஞ்
செய்யல ரென்னுங் காமுறு தோழி
காதலங் கிளவி இரும்புசெய் கொல்லன்
வெவ்வுலைத் தெளித்த

தோய்மடற் சின்னீர் போல நோய்மலி
நெஞ்சிற் கேமமாஞ் சிறிதே." (நற்.133.).

நற்றரி—த்தல் *naṟṟari-,* 4 செ.கு.வி. (v.i.) நன்றாக நிலைத்தல்; to be well established, to settle firmly. *"பெரிய திருவடி கழுத்திலே நற்றரிக்கவிருத்தல்"* (திவ். திருமாலை, 10, வ்யா. பக். 47.).

[நள் + தரி → நற்றரி—,]

நற்றலைதேவி *naṟṟalaitēvi,* பெ. (n.) *கரிசலை* பார்க்க; see *kariśalai.*

[நல் + தலை + தேவி.]

நற்றவம் *naṟṟavam,* பெ. (n.) வீடு பெறுதற்குச் செய்யுந் தவம்; penance with a view to salvation *"நற்றவஞ் செய்வார்க்கிடம்"* (சீவக. 77.).

[நல்[1] + தவம் → நற்றவம்.]

நற்றவமூர்த்தி *naṟṟava-mūrtti,* பெ. (n.) புத்தன் (திவா.); Buddhaṉ

[நல் + தவம் → நற்றவம் + மூர்த்தி.]

நற்றாய்[1] *naṟṟāy,* பெ. (n.) பெற்றதாய்; ones own mother. *"நற்றாய் தனக்கு நற்றிறஞ் சாற்றி"* (மணிமே. 22. 99).

[நல் + தாய் → நற்றாய்.]

மகவை ஈன்றவளே தாய். இவளே நற்றாய் என்று இலக்கியங்களில் குறிக்கப்படுகிறாள். ஆனாலும், மகவை வளர்க்க அரண்மனைகளில், சிறப்பாகச் செவிலித் தாயார் இருப்பர். இன்றும் மேனிலைச்செல்வர்களின் வளமனை களில், வளர்ப்புத்தாயாரைக் காணலாம். நிகண்டுகள் ஐவகைத் தாயாரைப் பற்றிக் கூறுவது வருமாறு:—1. ஈன்றதாய். 2. ஊட்டுத்தாய். 3. முலைத்தாய். 4. கைத் தாய். 5. செவிலித்தாய்.

ஆகவே தாய் என்னும் பெயர், பெற்றவளை மட்டுமின்றி, மற்றவர்கள் சிலரையும், சிறப்பாகச் செவிலித்தாயையும் குறிக்கும் நிலை ஏற்பட்டமையால், பெற்றதாய், நற்றாய், எனப்பட்டாள்.

நற்றாய்[2] *naṟṟāy,* பெ. (n.) செவிலித்தாய்; foster mother.

[நல் + தாய் → நற்றாய்.]

தோழியின் நற்றாயாகிய செவிலியை, அன்பு மிகுதி பற்றிக் கூறப்படுவது.

நற்றாளி *naṟṟāḷi,* பெ. (n.) 1. தாளிக்கொடி; hedge bind weed 2. சிறுதாளி; common creamy white bindweed

[நல் + தாளி → நற்றாளி.]

நற்றானம் *naṟṟāṉam,* பெ. (n.) தலைவனியற் பெயரின், முதன்மூன்றெழுத்துகளும், சிற்றிலக்கியத்தில், முதற்கண் வருமாறு பாடும், நன்மை விளைவிக்குஞ் செய்யுட்டானம் (பிங்.); a metrical device by which the first three letters of the name of the hero of a poem are made its opening letters, considered auspicious.

[நல்தானம் → நற்றானம்.]

நற்றிணை *narrinai,* பெ. (n.) பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி தொகுப்பித்ததும். எட்டுத்தொகையுள் ஒன்றானதும், அகப் பொருளைப் பற்றியதுமான தொகைநூல்; a classical anthology in Tamil, treating of aga-p-poruḷ compiled by pannādu-tanda-pāṇḍiyan-māran-vaḻudi, one of eṭṭu-t-togai

[நல் + திணை → நற்றிணை.]

நல் = நன்மை பயப்பது.

திணை = ஒழுக்கம்.

எந்நிலையிலும் எக்காலத்தும் வாழும் மாந்தர்தம் வாழ்வியல் நெறிகளைக் கூறும்பாடல்,

புறப்பாடல் நானூற்றைத் தொகுத்தபோது, ஆயிரத்து இருநூறு இருக்கவே, அவற்றுள் எட்டடிக்கு உட்பட்ட நானூறு பாடல்களைக் குறுந்தொகை என்றும், முப்பத்து மூன்றடிக்கு உட்பட்ட நானூறு பாடல்களை, அகநானூறு என்றும், வரையறுத்தபின், இடைப்பட்ட ஒன்பது அடிமுதல் பதினைந்து அடி வரை இருந்த பாடல்களை, நற்றினை நானூறு என்றும் வகுத்தமை உணரலாம்.

ஒருகா. நள் + திணை = நட்டிணை; ஈன்று நடுப்பட்ட அடிகள் கொண்டநூல் என்றுவழங்கி, நற்றிணை எனத் (நல் + திணை) திரிந்திருக்கலாம்.

நற்றிணைப் பாடல்கள் பழமையில் புதுமையைக் கூறுவனவாய் அமைந்துள்ளன. தொகுக்கப்பட்ட காலத்திலேயே நல் எனும் அடைச்சொல்லைப் பெற்றுள்ளன.

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்" (நற்.355.)

இப் பாடல்வரிகள், அகநாகரிகச் செம்மையும், நட்பின் பெருமையும் பேணிக் காக்கும் பெற்றிமையுடையன. எக் காலத்தும், எல்லாமாந்தரிடத்தும், குமுகாயத்தில் எஞ்ஞான்றும், பொருந்தித் திகழும் வாழ்வியல் உண்மையை, நிலையாமையை, நிலைநிறுத்துவன.

"தேய்புரிப் பழங்கயிறு போல வீவது கொல்என வருந்திய உடம்பே" (நற்.284) எனும் வரிகள் உணர்த்துகின்றன.

நற்றிறம் *narriram,* பெ. (n.) 1. அற(நீதி)நெறி; righteous course. *"நற்றிறம் படராக் கொற்கை வேந்தே"* (சிலப். வழக். 66.). 2. நோன்பு; vow *"நற்றாய் தனக்கு நற்றிறஞ் சாற்றி"* (மணிமே. 22:99.).

[நல் + திறம் → நற்றிறம்.]

நற்று *narru,* பெ. (n) நன்மை; that which is good. *"நற்றாங்கதி யடைவோமெனில்"* (திருவாச. 34:5.).

[நல் + து = நற்று.]

நற்றுடி *narrudi,* பெ. (n.) 1. நாவல்மரம்; jambu 2. வேர்; tree. root.

நற்றும்பை *narrumbai,* பெ. (n.) 1. மூலிகை வகையுளொன்று; a kind of medicine. 2. காசித்தும்பை; flower toombay

[நல் + தும்பை → நற்றும்பை.]

நற்றுளசி *narrulaśi,* பெ. (n.) நல்லதுளசி; holy basil.

[நல் + துளசி = நற்றுளசி.]

நாய்த்துளசி போன்று பயன்பாடாத் தன்மையினின்று, கடவுள் வழிபாட்டிற்கும் நுண்ணியிர் ஒழிப்பிற்கும், மருத்துவத்திற்கும் பயன்படும் தன்மையினால், இஃது நற்றுளசி என்றாயிற்று.



நற்றுளி *narruḷi,* பெ. (n.) 1. அத்திப்பிசின்; gum of fig tree. 2. அத்திமரம்; (சா.அக.); fig tree

[நல்துளி→ நற்றுளி.]

பிசின் துளித்துளியாய்க் கசிந்து படிவதாலும், அத்திப்பழத்தின் உள்விதை துளித்துளியாய் இருத்தலாலும், இப்பெயர் பெற்றது.

நற்றூக்கம் *narrūkkam,* பெ. (n.) அயர்ந்த தூக்கம்; deep sleep.

[நல் + தூக்கம்.]

மறுவ. ஆழ்ந்த உறக்கம், ஆழ்துயில், நீடுதுயில்.

நற்றூபம் *narrūbam,* பெ. (n.) 1. சாம்பிராணி; frankincense, benzoin 2. நறுமணத் தீபம்; fragrant fume

[நல் + skt.தூபம்→ நற்றூபம்.]

நற்றேசி *narrēśi,* பெ. (n.) கழுதை; ass

[நல்தேசி → நற்றேசி.]

நற்றோழி *narrōḻi,* பெ. (n.) அருமைத் தோழி; good, faithful maid. *"பாடுகம் வா வாழிதோழி நற்றோழி பாடுற்று"* (கலித். 41.)

[நல் + தோழி→ நற்றோழி.]

நற *nara,* பெ. (n.) *நறவு,* 1.2 பார்க்க; see *naravu,* 1.2 *"கொழு நீர் நறப்பருகும் பெரு நீர்மை யளிகுலமே"* (திருக்கோ. 123.).

[நறா → நற.]

நறதியா *naradiyā,* பெ. (n.) 1. வட்டத்துத்தி (சா.அக.); rox burghs lotus croton 2. பூசனிவகை; a kind of pumking.

நறநறப்பு *nara-narappu,* பெ. (n.) மன வேற்றுமை (இ.வ.); strained relationship, estrangement.

[நற + நறப்பு.]

இஃது, இரட்டைக்கிளவி.

நறந்றவெனல் *nara-nara-v-enal,* பெ. (n.) நறநறெனல் பார்க்க; see naranarenal

நறநறெனல் *nara-narenal,* பெ. (n.) 1. பல்லைக் கடித்தற் குறிப்பு; grinding the teeth 2. சுரசுரப்புக் குறிப்பு; roughness, hardness

[நறநற + எனல்.]

நறம்பருப்பு *naram-paruppu,* பெ. (n.) நறுமருப்பு (சங்.அக.); green ginger

மறுவ. இஞ்சி.

[நறுமை + பருப்பு = நறும்பருப்பு.]

ஒ.நோ. செந்தாமரை.

நறவம் *naravam,* பெ. (n.) 1. தேன்; honey *"விரையார் நறவந் ததும்பு மந்தாரத்தில்"* (திருவாச. 6:36.). 2. கள்; toddy. *"அன்பெனு

நறவ மாந்தி" (கம்பரா. நாட்டுப். 1.). 3. பால்; milk. *"கோசொரி நறவ மென்ன"* (கம்பரா. சேதுப. 25.). 4. நன்மணம் (யாழ்.அக.); fragrance 5. சாப்பிரா (மலை.); ornotto. 6. மயிற் கொன்றை; peacocks crest. "நறவுமலி பாக்கத்து" (குறுந்.394.). 7. மணந்தருங் கொடி வகை; a kind of creeper. *"நந்தி நறவம் நறும்புன் னாகம்"* (குறிஞ்சிப். 91.). 8. குங்குமம் (மலை.); saffron. 9. ஞாழல் (மலை.); fotetid cassia

[நறவு + அம் → நறவம்.]

நறவு *naṟavu,* பெ. (n.) 1. தேன்; honey. *"நறவேய் கமழ்தெரியல்"* (பு. வெ. 3,11.). 2. கள்; toddy. *"சூடா நறவி னாண்மகி ழிருக்கை"* (பற்றுப் 85, 8.). 3. நன்மணம் (வின்.); odour, fragrance. *"நெய்த னற வுயிர்க்கு நீள்கடற் றண்சேர்ப்ப"* (நாலடி. 108.). 4. சாப்பிரா (மலை.); arnotto 5. நன்மணக் கொடி வகை; a kind of fragrance creeper. 6. சேரநாட்டிலுள்ளதோர் ஊர்; a city in the chērar dominions. *"ஊதையிற் பனிக்குந் துவ்வா நறவின் சாயினத்தானே"* (பதிற்றுப். 60, 12.).

[நறு → நறவு.]

நறளை *naṟaḷai,* பெ. (n.) 1. மரவகை (சங்.அக.); woolly heart-vine. 2. காட்டுப்பிரண்டை; pedately seven-leaved vine.

மறுவ. நறளைப் பூடு.

நறளை: = நறளை வகையுள், இதுவும் ஒன்று. கொடியும் மரமுமாகக் கலந்து காணப்படுகிறது என்று சாம்பசிவ மருத்துவ அகரமுதலி கூறும்.

1. புளிநறளை; sore creeper. இஃது படர் கொடி வகையைச்சார்ந்தது. காட்டுப் பிரண்டை என்று அழைக்கப்படுவது. சித்தமருத்துவத்தில் தோல் நோய்க்கும், செரியாமைக்கும் சிறந்த மருந்தாவது.

2. பெருநறளை; heart-leaved vine tree. மரவகையைச் சார்ந்தது; இதன் காய்கள் மேற்பக்கம் தட்டையாகவும், அடிப்பகுதி நான்கு பிரிவினதாயு மிருக்கும். இதனுள் நான்கு விதைகள் அமைந்துள்ளன. மழைக்காலத்திற் பூக்கும். இம் மரத்தின் பூக்கள் சிறியன. பச்சை நிறத்தன.

3. பெரும்புளி நறளை; large acid naralay.

4. சிறுபுளிநறளை; small acid naralay.

5. சிறு நறளை; large wooly lobed vine

நறா *naṟā,* பெ. (n.) 1. தேன் (வின்.); honey 2. கள்; toddy. *"அடுநறாக் காமம் போற் கண்டார்"* (குறள், 1090.). 3. நறுமணம் (வின்.); odour, fragrance.

[நறு → ஆ = நறா.]

நறு *naṟu,* பெ. (n.) அகல்; coromandel ailanto

நறுக்கரிசி *naṟu-k-kariši,* பெ. (n) பாதிவெந்த சோறு (நெல்லை.); rice half-boiled.

மறுவ. நொறுக்கரிசி.

[நறுக்கு + அரிசி.]

[ஒருகா. நலுக்கரிசி → நறுக்கரிசி.]

நறுக்கு[1]-தல் *naṟukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. வெட்டுதல்; to cut off. *"கைக்கத்திரிகை யிட்டு நறுக்கின தலையாட்டத்தினை யுடைய பரிகள்"* (பு. வெ. 3, 10, உரை.). 2. துண்டித்தல்; to mince, chop. கன்னலிடு மாலையி னறுக்கிடுதி (காசிக. சிவகன்மா. இயமன் 42.). 3. நொறுக்குதல்; to smash.

க., நரக்கு; **தெ.,** நருக்கு; **ம.,** நறுக்குக

[நறுங்கு → நறுக்கு–,]

[நறுக்குதல் = வெட்டுதல், துண்டித்தல் நொறுக்குதல். உன்னைக் கண்டங் கண்டமாய் நறுக்குகிறேன் பார் என்னும் உலகவழக்கினை நோக்குக.]

நறுக்கு² *narukku,* பெ. (n.) 1. துண்டு; piece, cut off 2. ஓலைச்சீட்டு; an ōlai bond, note of hand 3. பெருவங்கியம் (நாகசுரத்தின்) நாக்கு (வின்.); mouth piece of a pipe or clarionet.

மறுவ. தாழ்குரல், துளைக்கருவி, இசைக் குழல்.

[நறு → நறுக்கு (வே.க. 3. 9.).]

நறுக்குக்கொடிச்சி *narukku-k-kodicci,* பெ. (n.) தொழுகண்ணி; telegraph plant.

நறுக்குச்சீட்டு *narukku-c-cittu,* பெ. (n.) *நறுக்கு, 2, (வின்.)* பார்க்க; see *narukku, 2.*

[நறுக்கு + சீட்டு.]

நறுக்குத்திப்பலி *narukku-t-tippali,* பெ. (n.) நறுக்கிய திப்பிலி வேர்த்தண்டு; pepper-stalk cut in small pieces.

மறுவ. தேசாவரம், திப்பிலிமூலம், கண்டத்திப்பிலி.

[நறுக்கு + திப்பலி.]

நறுக்குத்தெறித்தாற்போல் *narukku-t-terittār-pōl,* கு.வி.எ. (adv.) தெளிவாகவும் சுருக்கமாகவும்; succinctly. எதைப்பற்றியும் நறுக்குத்தெறித்தாற்போல் பேசுவதில், அவர் கைதேர்ந்தவர் (இ.வ.).

மறுவ. செறிவாக.

நறுக்குநெட்டி *narukku-netti,* பெ. (n) 1. நெட்டி; sola-pith 2. நறுக்கிய நெட்டிவேர்; root of the pith cut to make pith-toys

நறுக்குப்புறுக்கெனல் *narukku-p-purukkenal,* பெ. (n.) அரிசி முதலியன வெந்ததும், வேகாததுமாயிருத்தற் குறிப்பு (நாஞ்.); expr. signifying half-boiled condition, as of rice.

[நறுக்கு + புறுக்கு + எனல்.]

நறுக்குமுறுக்கெனல் *narukku-murukkenal,* பெ. (n.) கடினமானவற்றைக் கடித்துத் தின்னும் ஓசைக்குறிப்பு; onom. signifying biting sound of hard food-items. *'நறுக்குமுறுக்கென்று அரிசிமுறுக்கைக் கடித்தான்'* (உ.வ.)

[நறுக்கு + முறுக்கு + எனல்.]

நறுக்குமுறுகெனல் *narukku-murugenal,* பெ. (n.) பொறாமைக்குறிப்பு; expr. signifying jealously or envy. *"சிசுபாலாதிகள் நறுகுமுறு கென்றால்"* (ஈடு. 6:9:5.).

[நறுகு + முறுகு + எனல்.]

நறுக்குமூலம் *narukku-mūlam,* பெ. (n) 1. கண்டத்திப்பலி (தைலவ. தைல.); root of long-pepper. 2. வெட்டிவேர் (மூ.அ.); black cuscuss root. 3. நன்னாரிவேர் (சா.அக.); sarasaparilla.

[நறுக்கு + மூலம்.]

நறுக்குவெட்டி *narukka-vetti,* பெ. (n) வெட்டிநெட்டி; the stalathe.

நறுக்கென்று *naṟukkeṉṟu-,* கு.வி.எ. (adv) 1. சுள்ளென்று வலிக்கும்படியாக; sharply பாடத்தைக் கவனிக்காது, பேசிய மாணவன் தலையில் ஆசிரியர் நறுக்கென்று குட்டினார். (இ.வ.) 2. சுருக்கென்று மனதில் பதியும்படியாக; briefly, மேடையில் ஏறி நறுக்கென்று நாலுவார்த்தை பேசிவிட வேண்டும் போலிருந்தது. (இ.வ.)

[நறுக்கு + என்று.]

நறுங்கரந்தை *naṟuṅgarandai,* பெ. (n) கரந்தை வகை (யாழ்.அக.); sweet basil.

மறுவ. சிவகரந்தை நாறு கரந்தை.

[நறும் + கரந்தை.]

பண்பு முன்னொட்டுப்பெயர்.

நறுங்கல் *naṟuṅgal,* பெ. (n) *நருங்கல் (இ.வ.)* பார்க்க; see *naruṅgal*

[நருங்கல் → நறுங்கல்.]

நறுங்கற்றாழை *naṟuṅ-gaṟṟāḻai,* பெ. (n) *கற்றாழை வகை;* aloe

நறுங்கு-தல் *naṟuṅgu-,* 5. செ.கு.வி (v.i) வளர்ச்சி குறைதல்; to be stunted அவன் நறுங்கிப் போய்விட்டான்.

க., நலுகு (g)

[நுறு → நுறுங்கு → நறுங்கு-.]

நுல் எனும் வேரடியினின்று, கிளைத்த இச் சொல் நொறுங்குதல், பொடியாக்குதல் எனும் பொருண்மையினை அடிப்படை யாகக் கொண்டது. அடுத்த நிலையில் தேய்கையாதல், வளர்ச்சி குறைதல், எனும் பொருட் பாங்கில் மக்களிடையே வழக்கூன்றியது.

நறுங்குறிஞ்சி *naṟuṅ-guṟiñji,* பெ. (n.) நல்ல குறிஞ்சி; cone head

நறுசுவொறுசாக *naṟušu-v-oṟušāga,* வி.எ. (adv) 1. செட்டாக; thriftily. *'அவள் நறுசு வொறுசாகப் பரிமாறுவாள்'* (உ.வ.). 2. நேர்த்தியாக; neatly.

மறுவ. சிக்கனமாக

[நறுவிசு → நறுசு.]

'வி' = இடைக்குறை. நறுசுவொறுசு + ஆக. கட்டுச்செட்டாக வாழ்தலையும், சிக்கன மாயிருத்தலையுங், குறித்ததென்க.

நறுஞ்சுதை *naṟuñjudai,* பெ. (n.) தூய்மையான ஆவின் பால் (தைலவ. தைல.); fresh milk of a cow

[நறும் + சுதை.]

பண்புத்தொகை.

நறுஞ்சோதி *naṟuñjōdi,* பெ. (n) நறுமணப்பூ; a fragrant flower

[நறும் + Skt சோதி.]

நறுதடி *naṟu-taḍi,* பெ. (n.) அடைகல் (யாழ்ப்.); goldsmiths anvil attached to a block

[நறுக்கு + தடி → நறுதடி.]

நறுதடிக்குற்றி *naṟutaḍi-k-kuṟṟi,* பெ. (n) அடைகற் கட்டை (வின்.); anvil-block of goldsmiths.

[நறுக்குத்தடி → நறு + தடி + குற்றி.]

நறுந்தக்காளி *narun-dakkaāḻi,* பெ. (n.) தக்காளி வகை; Winter cherry.

நறுந்தாது *narundādu,* பெ. (n.) 32 ஓமாலிகை களுளொன்றான நறுமணச்சரக்கு (சிலப். 6:7, உரை.).

[நறும் + skt.தாது]

நறுந்தாளி *naṟundāḻi,* பெ. (n) ஒருவகை நறுமணச்செடி வகை; a kind of fragrant plant

மறுவ. நறுநகை

[நறும் + தாளி.]

இதன் இலையைக் கீரையாக உபயோகிக்க உள்ளுறுப்பின் எல்லாவித அழலை, புண் முதலியன குணமாகும்.

நறுந்தேன் *naṟundēn,* பெ. (n.) கொம்புத்தேன்; medicinal honey

நறுந்தை *naṟundai,* பெ. (n.) *நறுந்தாளி (சங்.அக.)* பார்க்க; see *naṟun.dāḻi.*

[நறு → நறுந்தை.]

நறுந்தைலம் *naṟundailam,* பெ. (n.) நறுமண நெய்மம்; balsam.

நறுந்தொகை *naṟundogai,* பெ. (n.) அதிவீரராம பாண்டியனியற்றிய ஒரு அற(நீதி)நூல்; a minor didactic work by a pāṇḍiyaṉ king, kulasēgaraṉ, who ruled at korkai

[நறும் + தொகை.]

மறுவ: வெற்றிவேற்கை.

"கற்கைநன்றே கற்கைநன்றே பிச்சைப்புகினும் கற்கைநன்றே" என்பதுபோன்ற, பல்வகை நற்கருத்துப் பாக்களைக் கொண்ட குழந்தை இலக்கியம்.

நறுந்தொடை *naṟun-doḍai,* பெ. (n) மணமுள்ள மாலை (வின்.); fragrant garland.

மறுவ. தொங்கல்.

[நறும் + தொடை.]

நறுநறெனல் *naṟu-naṟeṉal,* பெ. (n) *நறநறெனல்* பார்க்க; see *naṟa-naṟeṉal*

[நறு + நறு + எனல்.]

நறுநன்றி *naṟu-naṉṟi,* பெ. (n.) நன்னாரி (பதார்த்த. 492.); indian sarsasparilla

[நறு + நன்று + இ.]

நறுநன்றி = நறுமணமிக்க கொடி.



நறுநாழி *naṟu-nāḻi,* பெ. (n.) நிறை நாழி (இ.வ.); a measure filled with paddy

[நறு+நாழி.]

திருமணம் முதலிய நன்னிகழ்வுகளில் மங்கலக்குறியாகப் படியில் நெல் வைத்து நிரப்பிய, நாழி.

நறுநாற்றம் *naṟu-nāṟṟam,* பெ. (n.) நறுமணம் (வின்.); fragrance

[நறு + நாற்றம்.]

மனங்கவரும் இனிமையான மணம்.

நறுநிண்டி *naṟu-nindi,* பெ. (n.) நன்னாரி; sarasa parilla. (சா.அக.)

நறுநுதல் *naṟu-nudal,* பெ. (n.) அழகிய நெற்றியையுடைய பெண்; damsel, lady, as having a beautiful forehead.

மறுவ. நன்னுதல்

[நல் + நுதல்]

நறுநெய் *naṟu-ney,* பெ. (n.) ஆவின் நெய் (சங்.அக.); cows ghee of the best quality.

[நறும் + நெய்.]

நறும்பிசின் *naṟum-pišiṉ,* பெ. (n.) **1.** கரிய போளம்; socotrine aloe. **2.** இனிய மணமுள்ள பிசின்வகை (யாழ்.அக.); a kind of fragrant gum. *"நறும்பிசி னாகண நற்கோட்டம்"* (சிலப். 7. 76, அரும். மேற்கோள்.).

[நறும் + பிசின்.]

நறும்பிளி *naṟum-piḷi,* பெ. (n.) மரவகை; south indian pine

[நறும் + புளி → பிளி.]

நறும்பு-தல் *naṟumbu-,* 5 செ.குன்றாவி & செ.கு.வி. **1.** பல்லைக் கடித்தல் (யாழ்ப்.); to grind the teeth, gnash. **2.** பல்லால் கடித்தல்; to bruise, crush between the teeth

தெ. நறுமு.

[நறு → நறும்பு-,]

நறும்புகை *naṟumbugai,* பெ. (n.) நன்மணங்கமழும் தீச்சுடர்; incenser perfume.

புகை தீபத்திற்கு ஆகிவருதலின் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை

[நறும் + புகை.]

நறும்புல் *naṟum-bul-,* பெ. (n.) நறுமப்புல்; fragrant grass.

நறும்புன்னை *naṟum-puṉṉai,* பெ. (n) 32 ஓமாலிகைளு ளொன்றான நறுமணச்சரக்கு; a fragrant substance, one of 32 ōmāligai. *"நண்ணு நறும்புன்னை நறுந்தாது"* (சிலப். 6. 77, உரை).

[நறும் + புன்னை.]

நறுமகாசீரம் *naṟu-magšīram,* பெ. (n.) நற்சீரகம்; cumin seed.

நறுமண் *naṟu-maṉ,* பெ. (n.) மகளிர் கூந்தலிற் றேய்த்துக் கொள்ளும், இனியமணங் கமழும் மண்; a fragrant earth, used in dressing womens hair. *"கூந்த ன்றுமண் சாந்தொடு கொண்டு"* (பெருங். உஞ்சைக். 40, 28.).

[நறும் + மண்.]

நறுமணத்தக்காளி *naṟumaṇa takkāḷi,* பெ. (n.) சிவப்பு மணித்தக்காளி; red indian hounds berry.

நறுமரம் *naṟu-maram,* பெ. (n.) பெருமரம்; tooth-leaved tree of heaven. (L.).

[நறும் + மரம்.]

நறுமருப்பு *naṟu-maruppu,* பெ. (n.) இஞ்சி (சூடா.); green ginger.

[நறும் + மருப்பு.]

மறுவ. நறும்பருப்பு

நறுமா *naṟu-mā,* பெ. (n.) 1. அற்பம் (வின்.); insignificance 2. அற்பன் (வின்.); mean, vile person. 3. வெறுமை (யாழ்.அக.); bareness, emptiness.

[நறும + மா.]

நறுமாதுளம் *naṟu-mādulam,* பெ. (n.) தித்திப்பு மாதுளை (தைலவ. தைல. 135.); sweet pomegranate

[நறும் + மாதுளம் → மாதுலம்.]

நறுமு[1]-தல் *naṟumu-,* 5 செ.கு.வி. (v.t.) பல்லைக்கடித்தல் (யாழ்ப்.); to grinds the teeth, gnash.

[நற → நறு → நறுமு-.]

நறுமு[2]-தல் *naṟumu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பல்லாற் கடித்தல்; to bruise, crush between the teeth.

[நறு → நறுமு-,]

நறுமுருங்கை *naṟu-muruṅgai,* பெ. (n) முருங்கை வகை; drum-stick.

நறுமுறு-த்தல் *naṟu-muṟu-,* 4 செ.கு.வி. (v.i) 1. முறுமுறுத்தல்; to grumble, mutter, murmur. 2. உறுமுதல் (வின்.); to growl, as cats, dogs 3. பொறாமை கொள்ளுதல்; to envy. *"நறுமுறு தேவர் கணங்களெல்லாம்"* (திருவாச. 9:5.).

[நறு → நறு + முறு-.]

நறுமுறெனல் *naṟu-muṟeṉal,* பெ. (n.) முறுமுறுத்தற் குறிப்பு; grumbling. *"நாகாதிபனு மயனு மாலு நறு முறென்னவே"* (அருட்பா, VI, மெய்யருள்வி. 14.).

[நறு + முறு + எனல்.]

நறுமுன்னை *naṟu-muṉṉai,* பெ. (n.) முன்னமரம்; Indian head-ache tree.

நறுமை *naṟumai,* பெ. (n.) மணங்கவரும் நறுமணம்; odour, scent, perfume. 2. நன்மை (புறநா. 29.); goodness.

க. நறு.

[நறு → நறுமை.]

நறுமொறு-த்தல் *naṟu-moṟu-,* 4 செ.கு.வி. (v.i) *நறுமுறு-.* பார்க்க; see *naṟu-muṟu-.* *"இந்திரனு நறுமொறுப்ப நாவலர்கள் புகழ்ந்தேத்த"* (விநாயகபு. 65, 7.).

[நறு + முறு → நறு + மொறு-.]

நறுவட்டாணி *naṟu-vaṭṭāṇi,* பெ. (n) 1. மிகு திறமை; extraordinary skill 2. செயல்திறம், அறிவுடைமை; cleverness 3. கருத்துப் பொருளேதுமின்றித் திறமையாகப் பேசுமாற்றல்;

(திவ். இயற். பெரியதிருவந். 10, வ்யா.); skill in meaningless speech.

[நறு + வட்டம் + ஆணி.]

நறுவல்லி *naṟu-valli,* பெ. (n.) 1. செடிவகை; common sebesten. 2. பிண்ணாக்குச் செடி; jute. 3. செடி வகை; a species of jute.

[நறு(ம)ம + வல்லி.]

நறுவிசு *naṟuvišu,* பெ. (n.) தூய்மை (இ.வ.); cleanliness.

[நறுவிது→நறுவிசு.]

நறுவிலி *naṟu-vili,* பெ. (n.) 1. சிறுநறுவிலி; sebesten plum. 2. பெருநறுவிலி; large sebesten. 3. நாய் நறுவிலி; smaller sebesten. 4. அச்சிநறுவிலி; rough leaved sebesten. 5.சிறுமர வகை; oblong feather-nerwed. "நறுவிலி புனைந்து" (பெரியபு. ஆனாய. 15.). 6. சிறுமரவகை (பதார்த்த. 384.); orange long-flowered sebesten.

மறுவ. விருசமரம்.

ம., நறுவரி.

நறுவிலி: நறுவிலி மரத்தின் மருத்துவக் குணத்தையும், தோற்றத்தையும் அடிப்படை யாகக் கொண்டு, நான்கு வகையாகச் சாம்பசிவ மருத்துவ அகரமுதலி பிரித்துள்ளது.

1. **பெரியநறுவிலி:** நறுமணமிக்க, இன் சுவைக் கனிகளைத் தருவது. பல வண்ணப் பூக்கள் நிறைந்தது. அகண்ட வடிவுள்ள காய்களின் உட்பக்கம், நான்கு பிரிவுகளையுடையது. ஒவ்வொரு பிரிவிலும், ஒவ்வொரு விதையிருக்கும். வெட்டவெளியிலும், தோட்டங்களிலும் வைத்து வளர்க்கப்படும். கொட்டைக்களியைப் போன்ற சதைப்பற்று நிறைந்த, இப் பழங்கள் உணவாகப் பயன் படுவன. இப்பழங்களிலிருந்து கரும்பிசின் தயாரிக்கலாம். பழக்கொட்டைகளின், நாரினின்று கயிறு திரிக்கலாம்.

தீர்க்கும் நோய்:– மரவண்டிகளுக்கு இம் மரம் மிகவும் ஏற்றது. இம் மரத்தின் வேரினைக் கருக்கு நீரிட்டுக் குடித்தால், தீராத எலும்புருக்கு நோய் குணமாகும். இம் மரத்தின் பட்டைகள் துவர்ப்புச் சுவை மிக்கவை. இப் பட்டைகளைக் கருக்கிப் பல் தேய்த்தால், வாய்நாற்றம் தீரும்.

2. **பொன்னறுவிலி:** நறுவிலி வகையு ளொன்று. இந் நறுவிலிமரம் படர்ந்து கிளைக்குந் தன்மையது. இலைகள் அடர்ந்து வளர்வன. சாம்பல் நிறமுள்ள இம் மரப்பட்டைகளைக் கருக்கித் தோலில் தடவினால், தோல் மினுமினுக்கும்.

காய்கள் குலை குலையாயிருக்கும். பழச் சுளை பளபளப்பானது. மென்மையானது.

தீர்க்கும் நோய்கள்: நாட்பட்ட இருமலைத் தணிக்கும் இப் பழங்கள், உடம் பெரிச்சலையும் போக்குந்தன்மை யுடைத்து. நாவறட்சியை அகற்றும். அரத்தப்பித்தம், மேகம், படை முதலான தோல் நோய்களையும் நீக்கும் இயல்புடையன.

3. **சிறுநறுவிலி:–** சிறிய இலைகளுடன் கூடியவை. இச் சிறு நறுவிலியின் கொட்டையை இடித்துச் சாம்பலாக்கி, எண்ணெயிற் குழைத்துப் படை நோய்க்குத் தடவலாம். இம் மரத்தின் இலைகளைக் கருக்குநீரிட்டுக் குடித்தால், மூலஅரத்தம் குணமாகும்.

4. **நாய்நறுவிலி:–** முகத்திற் காணும் கொப்புளங்கட்கும், பருக்களுக்கும், இம் மரத்தின் இலைச்சாற்றினைப் பிழிந்து தடவுவர். இம் மரப்பட்டைகளை இடித்துக் காய்ச்சிக், கருக்குநீரிட்டு வாய் கொப்பளித்தால், வாய்நாற்றம் தீரும். பல்லாட்டம் நிற்கும். பல்லீறுகளிலுள்ள

புண்கள் ஆறும்.

இம் மரப்பட்டையின் சாற்றைத் தேங்கா யெண்ணெயிற் கலந்து உட்கொள்ள, வயிற்று நோய்கள் அனைத்தும் அகலும் என்று சாம்பசிவ மருத்துவ அகரமுதலி கூறுகிறது.

நறுவிலியிலைச்சவ்வு *naṟuvili-y-ilai-c-cavvu,* பெ. (n.) அல்குல் துளைக்குள்ளிருக்கும் நான்கு மடிப்புகளுள்ள சுருங்கிய தசை; four rings or folds of the membrane in the vagina. (சா.அக.).

[நறுவிலியிலை + சவ்வு.]

நறுவிலியிலைத்தசைமடிப்பு *naṟu-vili-y-ilai-t-tašai-maḍippu,* பெ. (n) நறுவிலி யிலை யிலுள்ள சதைமடிப்பு; mysticle shaped nfleshy bodies

[நறுவிலியிலை + தசைமடிப்பு.]

சதைத்திரட்சி மிக்க மாந்தர்தம், தசைபோல் தோன்றும் தசைமடிப்பு என்று, சா.அக. கூறும்.

[நறுவிலியிலை + தசை + மடிப்பு.]

நறுவிளம்பிஞ்சு *naṟu-viḷam-piñju,* பெ. (n) 1. நறுமணமிக்க இளங்காய்; fragrant tender fruit. 2. நறுவிலிச் செடியின் இளங்காய்; the young fruits of sebesten

[நறுவிளம் + பிஞ்சு.]

நறுவீழி *naṟu-vīḻi,* பெ. (n) *நறுவிலி* பார்க்க; see *naṟuvili*

[நறுவிலி →நறுவிளி → நறுவிழி.]

நறுவுளி *naṟuvuḷi,* பெ. (n) *நறுவிலி (யாழ்.அக.)* பார்க்க; see *naṟuvili*

[நறுவிளி → நறுவுளி.]

நறுள் *naṟuḷ,* பெ. (n.) மரவகை; small lance-leaved olivelinden (a)

நறுளி *naṟuḷi,* பெ. (n.) 1. சிறுநறுவிலி; common sebesten 2. நறுள் மரவகை; small lance-leaved olievelinden tree.

[நறுள் → நறுளி.]

நறை *naṟai,* பெ. (n) 1. தேன்; honey *"முறுக்க விழ் நறைக் கமலம்"* (குணிகைப்பு. பிரமனருள். 2.). 2. கள் (பிங்.); toddy *"வெண்ணிற நறை"* (கம்பரா. உண்டாட்டு. 1.). 3. நறுநாற்றம்; fragrance *"நறைக்கண் மலிகொன்றை யோன்"* (திருக்கோ. 258.). 4. நறும்புகை (பிங்.); incense *"நறையொடு துகளெழ"* (கலித். 101.). 5. நறுமணப் பண்டம்; spices *"அருங் கலத்துப் பட்ட நறையாற் றாளித்து"* (பெரியபு. சிறுத்தொண்ட. 66.). 6. நறுமணக்கொடி வகை; a fragrant creeper. *"நறை நார்த்தொடுத்த வேங்கையங் கண்ணி"* (புறநா. 168.). 7. குற்றம் (சது.); fault defect

க., ம., நறு.

[நல் → நறு → நறை.]

நறைக்காய் *naṟai-k-kāy,* பெ. (n.) சாதிக்காய்; nutmeg. *"பைங்கொடி நறைக்கா யிடையிடுபு"* (திருமுரு. 190.).

[நறை + காய்.]

நறைக்கொடி *naṟai-k-koḍi,* பெ. (n) நறுமணக்கொடி; a fragrant creeper

[நறு → நறை + கொடி.]

நறைசகி *narai-šagi,* பெ. (n.) *நறைக்காய்* பார்க்க; see *narai-k-kāy.*

[நறை + Skt. சகி.]

நறைபடுபுகை *narai-padu-pugai,* பெ. (n.) கொழும்புகை; incense.

[நறைபடு + புகை.]

அகில் முதலான நறுமணப் பொருட்களினின்று வரும், மணங் கெழுமிய நறும்புகை.

இப்புகையினை, நீராடிமுடித்த அரச அல்லது செல்வ மகளிர், தமது நெடுங்கூந்தலை உலர்த்துதற்பொருட்டுப் பயன் கொள்ளுவர். தமது கூந்தலுக்குச் செயற்கை மணம் ஊட்டுதற்குப் பயன்படுத்தியதாகக் குறுந்தொகையில் இறையனார் பாடிய பாடல் பகர்கின்றது.

[நறைபடு + பகை.]

நறையால் *naraiyāl,* பெ. (n.) பகன்றைக் கொடி (திவா.); a creeper

நன்கலந்தருநன் *nankalan-darunan,* பெ. (n.) (இரத்தினப்) தொண்மணிப் பணித்தட்டான்; jeweller. "*பொன்செய் கொல்லரு நன்கலந்தருநரும்*" (சிலப்.5:31.).

[நல் → நன் + கலம் + தருநன்.]

நன்கனம் *nan-kanam,* வி.எ. (adv.) நன்றாக; well "*நாவிடை நன்னூ லன்கன நவிற்றி*" (மணிமே.13:24.).

[நல் → நன் + கனம்.]

நன்காடு *nan-kādu,* பெ. (n.) சுடுகாடு; cremation ground, used euphemistically. "*சுடு காட்டை நன்காடு என்றலும்*" (தொல்.சொல். 17, இளம்பூ.).

[நல் → நன் + காடு.]

நல் + மரம் = நன்மரம் என, 'மெலிமே வின் னணவும்' என்று நன்னூல் கூறுமாறு வரவேண்டும். நல் + காடு = நற்காடு எனவருவது, விதி விலக்காக, "நன்காடு" என வழங்கி வருவது உணர்க.

சுடுகாட்டை, ஈங்கு நன்காடென்று குறித்துள்ளது, மங்கல வழக்காகும். தீச்சொல்லை மறைத்து, மங்கலக் குறிப்பாகக் கூறுதல், உலகம் போற்றும் தமிழிலக்கியக் கூறாகும்.

நன்கு¹ *nangu,* பெ. (n.) 1. நல்லது; that which is good. "*நல்லவையு ணன்கு செலச்சொல்லு வார்*" (குறள்,719.). 2. மிகுதி (அக.நி.); abundance 3. அழகு (சூடா.); beauty "*பொருளின் விளைவு நன்கறிதற்கு*" (பு.வெ.1,4,கொளு.). "*கற்புடையாடன் மணாளரை விட்டிங் குறைகின்றது நன்குறுமோ*" (சிவரக. தேவியிமையம்பு.). 4. உடல்நலம்; health. 5. இன்னலம்; welfare "*இமையவர் காதல் பெற்று நன்காவரக் காண்டியால்*" (கம்பரா.நகர்நீ.24.). 6. நன்னிமித்தம் (நற்சகுணம்); good omen "*நன்றி மதுரைப் பதியை நன்கொடு கடந்தார்*" (திருவாத. பு.மந்திரி.38.). 7. மகிழ்ச்சி; happiness. "*ஆவி நன்குறா திருப்ப*" (திருவாலவா.16,6.).

[நல் → நன் → நன்கு.]

நன்கு² *nangu,* வி.எ. (adv.) மிகவும்; thoroughly well. "*இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின் நடைதெரிந்த நன்மை யவர்*" (குறள்,712.).

[நல் → நல்கு → நன்கு.]

நன்குமதி-த்தல் *nangu-madi-,* 4 செ. குன்றாவி. (v.t.) மிகவும் உயர்வாகக் கருதுதல் (குறள்,195,உரை); to respect, hold in high esteem

[நன்கு + மதி-.]

நன்கொடை *nan-kodai,* பெ. (n.) 1. வெகுமதி; donation 'சிலபள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு நன்கொடை வாங்கு கிறார்கள்' (இ.வ.). 'வாழ்நாளில் தான்சேர்த்த பொத்தகங்களை எல்லாம் பொதுநூலகத்திற்கு நன்கொடையாகக் கொடுத்துவிட்டார்' (உ.வ.). 2. பணிக்கொடை; gratuity. 3. அறச் செயலுக்கான உதவி அல்லது மானியம்; benefaction, present. 4. முழு உரிமையுடன் கொடுக்கப்பட்ட தானம் (சட்டம்); gift with full power of disposal conferred on the donee.

[நல்[1] → நன் → கொடை → நன்கொடை.]

கோயில், கல்விநிறுவனம் போன்ற வற்றின் வளர்ச்சிக்காக, மனம் உவந்து வழங்கும் தொகை அல்லது பொருள்.

நன்செய்[1] *nan-šey,* பெ. (n.) ஏரி நீர் பாயும் நிலம்; wet land, opp. to *pun-šey.*

[நல் → நன் + செய்.]

நன்செய்[2] *nan-šey* பெ. (n.) நெல், கரும்பு, வாழை போன்றவை விளையும் கழனி; special products such as paddy, sugarcane, banana cultivated in wet land

[நல் → நன் → செய்.]

நன்செய்த்தரம்புன்செய் *nan-šey-t-taram-pun-šey,* பெ. (n.) 1. புன்செய்ப் பயிர் விளையும் நன்செய் நிலம்; wet land so poorly irrigated that it does not produce wet crops and is assessed at lower rates 2. கலப்பினம்; mixed descent, mixed breed

[நன்செய் + தரம் + புன்செய்.]

நன்செய் நிலத்தில், இரண்டு ஈடு நெல் விளைவித்துவிட்டு, நிலக்கடலை, எள், உழுந்து, பயறு போன்றவற்றை மூன்றாம் ஈடாய் இடுவது, தஞ்சைமாவட்ட வழக்கு.

நன்செய்ப்பயிர் *nanšey-p-payir,* பெ. (n) நீர் அதிகம் தேவைப்படும் பயிர்; large quantity of water for irrigation மழையில்லாமல் நன்செய்ப்பயிர் காய்கிறது. (உ.வ.).

[நன்செய் + பயிர்.]

நன்செய்மேற்புன்செய் *nan-šey-mēr-pun-šey,* பெ. (n) *நன்செய்த்தரம் புன்செய்* பார்க்க: see *nan-šey-t-taram-pun-šey*

[நன்செய் + மேல் + புன்செய்.]

நன்செய்வான்பயிர் *nan-šeyvān-payir.* பெ. (n) நன்செயில் விளையும் வெற்றிலை, கரும்பு முதலியன; special products, such as betel, sugarcane, cultivated in wet land

[நன்செய் + வான் + பயிர்.]

நன்சொல் *nan-šol,* பெ. (n) 1. இன்சொல் (வின்.); compliment, civil words. 2. நன்னலம் நல்கும் நல்லுரை; good advice. 3. ஆறுதல் அல்லது தேறுதலுரை; profitable discourse, words of comfort

[நன்மை + சொல்.]

நன்ஞானம் *nan-ñānam,* பெ. (n.) சமண சமயத்தில் வழங்கும் (இரத்தினத் திரயம்) மும்மணிக் கொள்கைகளுளொன்று

(சீவக.2813, உரை.); right knowledge one of (irattina-t-tirayam) mummaṉi-k-kolgai. (jaina.)

[நன்மை + ஞானம்.]

ஆதனைச் சமைத்து, நன்னிலைக்கு உயர்த்தும் நல்லறிவு. சமணம் மும்மணிக் கொள்கையாகக் கொண்டதைச் சைவம், இறைவனை அறியும் அறிவென்று கூறும்.

நன்பகல்[1] *naṉ-pagal,* பெ. (n.) *நன்பகலந்தி* பார்க்க; see *naṉpagal-andi* "*நன்பகலவணீத்து*" (கலித்.74,10.).

[நன் + பகல்.]

நன்பகல்[2] *naṉ-pagal,* பெ. (n.) 1. அடியொத்த காலம்; high noon. "*வளைவாய்க் கூகை நன்பகற்கு மறவும்*" (பட்டின.268.). 2. உச்சிக்காலம்; high noon, midday "*நன்பகலவணீத்து*" (கலித்.74,10.). 3. எப்பொருளும் நுகர்தற்கு நன்றாகிய பகல்; ever utility of good noon "*என்பெழுந்தியங்குமியாக்கையர் நன்பகல்*" (திருமுரு.1:30.).

நன்பகலந்தி *naṉ-pagalandi,* பெ. (n.) உச்சிக்காலம்: high noon. "*நன்பகலந்தி நடையிடை விலங்கலின்*" (பொருந.46.).

மறுவ. நடுப்பகல். உச்சிப்பொழுது, நண்பகல்.

[நன் + பகல் + அந்தி.]

நன்பலூர்ச்சிறுமேதாவியார் *naṉ-palūr-c-ciṟumēdāviyār,* பெ. (n.) கழகக்காலப் புலவர்; an ancient šaṅgam poet.

"தேம்படு சிமயப் பாங்கர்ப் பம்பிய
குவையிலை முசுண்டை வெண்பூக் குழைய
வானெனப் பூத்த பானாட் கங்குல்
மறித்துரூஉத் தொகுத்த பறிப்புற இடையன்
தண்கமழ் முல்லை தோன்றியொடு விரைஇ
வண்டுபடத் தொடுத்த நீர்வார் கண்ணியன்
ஐதுபடு கொள்ளி அங்கை காயக்
குறுநரி உளம்புங் கூரிருள் நெடுவிளி
சிறுகட் பன்றிப் பெருநிரை கடிய
முதைப்புனங் காவலர் நினைத்திருந் தூதுங்
கருங்கோட் டோசையொ டொருங்குவந்
திசைக்கும்
வன்புலக் காட்டுநாட் டதுவே அன்புகலந்து
ஆர்வஞ் சிறந்த சாயல்
இரும்பல் கூந்தற் றிருந்திழை யூரே."
(அகநா.94.).

நன்பன் *naṉ-paṉ,* பெ. (n.) சணல் (மலையக.); sunn-hemp

நன்பால் *naṉ-pāl,* பெ. (n.) நல்லொழுக்கம்; moral conduct "*நன்பால் பசுவே துறந்தார் பெண்டிர் பாலர் பார்ப்பார்*" (சீவக.443).

[நன்மை + பால்.]

நன்பு[1] *naṉpu,* பெ. (n.) 1. நன்மை; goodness 2. சிறப்பு, மேன்மை, மேம்பாடு; excellence "*நன்புளோர் வியந்தாரில்லை*" (திருவாலவா.16,12.).

தெ. நன்பு.

மறுவ. நயம், செம்மை.

நன்பு[2] *naṉpu,* வி.எ. (adv.) செவ்வையாய், செம்மையாய், நன்றாய்; well "*நன்புருகி ஞானச் சுடர்விளக் கேற்றினேன்*" (திவ்.இயற்.2:1.).

[நல் → நன் → நன்பு.]

நன்பொருள் *naṉ-poruḷ,* பெ. (n.) 1. அடிப்படைச்சமயக்கோட்பாடு, மெய்யியல் கொண்முடிபு; fundamental doctrines of a religion. "*மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும்*" (மணிமே.1:11.). 2. மகன்; son. "*நங்கை நீ நடக்கவேண்டு நன்பொருட் கிரங்கல் வேண்டா*" (சீவக.267.).

[நன்மை + பொருள்.]

நன்மக்கட்பேறு *naṉ-makkaṭ-pēṟu,* பெ. (n) *நன்மக்கள்* பார்க்க; see *naṉ-makkaḷ*

[நன்மக்கள் + பேறு.]

முதல்பத்தாண்டுகள் பெற்றோரால் வளர்க்கப்படும் பிள்ளைகள், பெற்றோரின் சோர்வுற்ற இறுதிப் பத்தாண்டுகளில், நன்கலமாய்த் திகழ்ந்து, குடும்பத்திற்கு ஆதாரமாய் அமைவர். மனைக்கு மாட்சிமை பயக்கும் நன்கலமே நன்மக்கள். ஒருவர் பெறற்கரிய பெரும்பேறுகளுள், உயர்ந்தபேறு நன்கலமாகத் திகழும் நன்மக்கட் பேறேயாகும். இதனை வள்ளுவர்,

"*மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட் பேறு*" (குறள்,60.). என நவில்கிறார்.

நன்மக்கள் *naṉ-makkaḷ,* பெ. (n) சிறப்புறு மக்கட் செல்வம் (குறள்,அதி.7.); good children. 2. சான்றோர் (வின்.); the good, the virtuous, the eminent.

மறுவ. நற்சான்றோர், மேன்மக்கள்

[நல் + மக்கள்.]

அறிவறிந்த நன்மக்கட்செல்வமே, பெறற்கரிய பெருஞ்செல்வம். அறிவறிந்த நன்மக்கட் செல்வமே, ஞாலம் போற்றும் நற்செல்வம். இந் நன்மக்கட் செல்வம் நல்லமுறையில் ஒருவருக்கு வாய்த்து விட்டால், ஏனைய பேறுகள் இனிது அமையும், என்பதில் யாதொரு ஐயமில்லை. சிறப்புறு செல்வங்களுள் சிறந்தசெல்வம் நன்மக்கட் செல்வம் ஆகும்.

நன்மச்சான் *naṉ-maccāṉ,* பெ. (n) அம்மான் மகன் (யாழ்ப்.); son of a maternal uncle

[நல் → நன் + மச்சான்.]

மைதுனன் → மைத்துனன் → மச்சினன் → மச்சான்

நன்மச்சினி *naṉ-maccini,* பெ. (n.) தாய்மாமன் மகள்(வின்.); daughter of a maternal uncle

[நன்மை + மச்சினி.]

ஆண்பால் மச்சான் என்பதற்குப் பெண்பால் மச்சினி என்றறிக.

நன்மதை *naṉmadai,* பெ. (n) நருமதை; the river Narumadai. "*நன்மதைக்கரை நற்றவம் போற்றுவான்*" (சேதுபு.தனுக்.38.).

[நருமதை → நர்மதை→நன்மதை.]

ஒ.நோ. தருமம்→தர்மம்→தன்மம்.

நன்மரம்¹ *naṉ-maram,* பெ. (n.) கட்டட வேலைக்குப் பயன்படும் உறுதிமிக்க மரம்; strong, durable wood, used in building

[நல் + மரம்.]

நன்மரம்² *naṉ-maram,* பெ. (n.) 1. காய்க்கும் மரம்; fruitful tree. 2. பழம் முதலியன தரும் மரம்; trees yielding good fruit. (சா.அக.).

[நல் + மரம்.]

நன்மருகன் *naṉ-marugaṉ,* பெ. (n.) சொந்த மருமகன் (யாழ்ப்.); son of a man's sister or a woman's brother.

[நன் + மரு(ம)கன்.]

தாய்வழியிலோ அல்லது தந்தைவழியிலே வாய்த்த மருமகன்.

நன்மருகி *naṉ-marugi,* பெ. (n.) ஒருவனுக்கு உடன் பிறந்தாள் மகள் அல்லது ஒருத்திக்குத் தமையன் மகள் (வின்.); daughter of a man's sister or a woman's brother

மறுவ. மருமகள்.

[நல் → நன் + மருகி.]

நன்மருமகள் *naṉ-marumagaḷ,* பெ. (n.) *நன்மருகி (வின்.)* பார்க்க; see *naṉ-marugi*

[நன் + மருமகள்.].

நன்மருமகன் *naṉ-marumagaṉ,* பெ. (n.) *நன்மருகன் (வின்.)* பார்க்க; see *naṉ-marugadṉ.*

[நன் → மருமகன்.]

நன்மனம் *naṉ-maṉam,* பெ. (n.) 1. மனத் திருத்தி (யாழ்.அக.); perfect goodwill, heartiness. 2. நல்லதையே நினைக்கும் மனம்; mind with good thinking. 3. பிறருக்குத் தீங்கு புரியாத, இறையுணர்வு, இயல்பாய் வாய்த்த மனம்; a mind with pious thoughts.

[நன் + மனம்.]

நன்மாமன் *naṉ-māmaṉ,* பெ. (n.) தாயுடன் பிறந்தவனாகிய அம்மான் (யாழ்ப்.); maternal uncle

மறுவ. தாய்மாமன், முறைமாமன்.

[நன் + மாமன்.]

நன்மாமி *naṉ-māmi,* பெ. (n.) தந்தையுடன் பிறந்த அத்தை (யாழ்ப்.); paternal aunt.

[நன் + மாமி.]

நன்மார்க்கம் *naṉ-mārkkam* பெ. (n.)
1. நன்னெறி (வின்.); path of virtue
2. அறநூல், நீதிமுறைமை; morality

[நன் + skt மார்க்கம்.]

நன்முகம் *naṉ-mugam,* பெ. (n.) 1. அழகிய முகம்; beautiful face *"கையுணன் முகம் வைக்கும்"* (திவ்.திருவாய்.5:5,8.). 2. இன்முகம் (வின்.); cheerful countenance, pleasant looks. 3. தாராளம் (யாழ்.அக.); liberality

[நன் + முகம்.]

நன்முத்து[1] *naṉ-muttu,* பெ. (n.) நல்லமுத்து; genuine pearls

[நன் + முத்து.]

நலம் பயக்கும் முத்து. உடல் நலத்திற்கும், வளமான வாழ்விற்கும், உறுதுணையாகும் முத்து.

நன்முத்து[2] *naṉ-muttu,* பெ. (n.) கெட்டிமுத்து; solid natural pearl

[நல் → நன் + முத்து.]

நன்முருங்கை *naṉ-muruṅgai,* பெ. (n.) முருங்கை வகை (நாஞ்.); a kind of muruṅgai tree.

மறுவ. நறுமுருங்கை

[நல் → நன் + முருங்கை.]

நன்மை[1] *nanmai,* பெ. (n.) 1. நலம்; goodness. "*தீமை நன்மை முழுதுநீ*" (திருவாச.33:5.). "*நன்மையுந் தீமையும் நாடி நலம்புரிந்த தன்மையால்*" (குறள்.511.). 2. சிறப்பு; excellence 3. உதவி, உறுதுணை; help, aid 4. நற்செயல்; benefit; benefaction. '*அவனுக்கு எவ்வளவோ நன்மை செய்திருக்கிறேன்*' (வின்.). 5. பயன், பயனுடைமை, பயனோக்கம்; utility, usefulness "*நன்மை கடலிற் பெரிது*" (குறள்,103). 6. அறநூல், அறமுறைமை, நன்னெறி (சன்மார்க்கம்); virtue, morality. "*நன்மை கடைப்பிடி*" (ஆத்திசூ.). 7. ஆக்கம்; auspiciousness, prosperity, welfare 8. நன்னிகழ்வு (மங்களம்); happy occasion "*நன்மை தின்மைகளுக்கு இரட்டைச் சங்கும்*" (S.I.I. iii 47.). 9. நற்குணம், நல்லியல்பு; good nature, good temper. "*நயன் சாரா நன்மையி னீக்கம்*" (குறள், 194.). 10. பூப்பெய்துகை (இ.வ.); puberty. 11. நல்வினை (வின்.); good karumam. 12. வாழ்த்து மொழி; word of blessing, benediction. "*இவணிருந்தோர்க் கெல்லாம் ஞாலநாய கன்றன் றேவி சொல்லினை னன்மை*" (கம்பரா.திருவடி.7.). 13. மிகுதி (சீவக.2738.); abundance. 14. மேம்பாடு (குறள்,300.); superiority. 15. புதுமை (சிலப்.16,20.); that which is new. 16. அழகு (பு.வெ.10, முல்லைப்.10, கொளு.); beauty. 17. வழிபாட்டினிறுதியில் வழங்கும் நற்பொருள் அல்லது நல்லருள் (நற்கருணை. கிறித்.); eucharist.

க. நல்மெ.

[நல்[1] → நன் → நன்மை.]

நன்மை[2] *nanmai,* பெ. (n.) நற்செயல் நிகழ்வு; benefit

நன்மைக்கிருத்துதல் *nanmai-k-kuiruttudal,* பெ. (n) இறப்பு நிகழ்வுகட்குப் பின்பு, நன்னிகழ்வுகளை (சுபகாரியங்களை) மேற்கொள்வதற்கறிகுறியாகச் செய்யும் நடைமுறைவினை (நாஞ்.); a ceremony of resuming auspicious practices at the close of funeral ceremonies

[நன்மைக்கு + இருத்துதல்.]

நன்மைத்துனன் *nan-maittunan,* பெ. (n) நல்லம்மான் அல்லது நல்லத்தை மகன் (வின்.); son of a maternal uncle or a paternal aunt

[நல்[1] + மைத்துனன்.]

நன்மைத்துனி *nan-maittuni,* பெ. (n) நல்லம்மான் அல்லது நல்லத்தைமகள் (வின்.); daughter of a maternal uncle or a paternal aunt

[நல்[1] + மைத்துனி.]

நன்மைதின்மை *nanmai-tinmai,* பெ. (n) 1. நலமும் கேடும்; the good and the evil. 2. நன்னிகழ்வும், தீமைகளும் நிகழுங் காலம் (யாழ்.அக.); auspicious and inauspicious occasions "*நன்மை தின்மைகளுக்கு இரட்டைச் சங்கும்*" (S.I.I.iii.47.).

[நன்மை + தீமை > தின்மை.]

நன்மைதீமைசொல்(லு)–தல் *nanmai-tīmai-šol(lu)-,* 13 செ.கு.வி. (v.i) இறக்குந்தறுவாயில் இறுதியாகப் பேசுதல் (வின்.); to utter the lost words before dying

[நன்மை + தீமை + சொல்லு–.]

காவல்துறையினர் இறக்கவுள்ள மாந்தர் கூறும் வாய்மொழிப் பதிவை, (மரணவாக்குமூலம்) முதன்மை கொடுத்துக் கருதுவது, மனச்சான்றின் படிச்சொல்வர் என்னும், உளவியல் பற்றியதே.

நன்மைதீமைபோடு-தல் *nanmai-tīmai-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) *நன்மை தீமை சொல்(லு)-தல் (வின்.)* பார்க்க; see *nanmai-tīmai-šol(lu)-.*

[நன்மைதீமை + போடு-.]

நன்மைநிகழ்தல் *nanmai-nigaḻdal,* பெ. (n.) ஒருவர் வீட்டில் திருமண முதலான நன்னிகழ்வுகள் நடைபெறுதல்; a happy occasion like marriage etc.

நன்மைப்பகுதி *nanmai-p-pagudi,* பெ. (n.) நல்வினைப்பயன் (வின்.); fruit of good karumam.

[நன்மை + பகுதி.]

நன்மைப்பேறு *nanmai-p-pēṟu,* பெ. (n.) *நன்மைப் பகுதி (வின்.)* பார்க்க; see *nanmai-p-pagudi.*

[நன்மை + பேறு.]

நன்மைபெறுஅருள்நெறி *nanmai-peṟu-aruḷneṟi,* பெ. (n) எல்லோரும் இன்புற்று வாழ, அனைத்து நலங்களையும், அனைவருக்கும் நல்கும் நெறி; benevolence

நன்மையா-தல் *nanmaiyā-,* 6 செ.கு.வி. (v.i.) பூப்பெய்துதல் (பெண் பருவமடைதல்); to attain puberty, become marriageable, as a girl.

மறுவ. சமைதல்.

[நன்மை + ஆதல்.]

திருமணம் என்னும் நன்னிகழ்விற்கு, ஏற்ற வண்ணம் பருவமடைதல்.

திரு.வி.க. பெண்ணின் பெருமை என்னும் நூலில், பெண்மை, தூய்மை, இறைமை என்னும் முப்படி நிலைகளாகக் கூறுகிறார். இனப்பெருக்கம் பெண் வழி நடத்தலின், தூய்மையுறும் பூப்பெய்தலை, நன்மையாதல் என்று கூறியுள்ளார்.

நன்மொழி *nan-moḻi,* பெ. (n.) 1. இன்மொழி; kind, good word. 2. உறுதிமொழி; spiritual or religious teachings. "*நன்மொழியைச் சிற்றின மல்லார்கட் சொல்லலும்*" (திரிகடு.32.). 3. தேவபாணி; sacred songs "*சீருடை நன்மொழி சீரொடு சிதறி*" (பொருந.24.).

[நன்மை + மொழி.]

நன்மொழிபுணர்த்தல் *nan-moḻi-puṇarttal,* பெ. (n.) நூலழகு பத்தனுள், இனிய மொழிகளைச் சேர்த்து வழங்குகை (நன்.13.); use of appropriate and elegant words, one of ten nūl-aḻagu.

"சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்க் கினிமை, நன்மொழி புணர்த்தல், ஓசை யுடைமை, யாழமுடைத் தாதல், முறையின் வைப்பே யுலகமலை யாமை விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த தாகுத னூலிற் கழகெனும் பத்தே" (நன்.13)

[நன்மொழி + புணர்த்தல்.]

நன்றாக¹ *nanṟāga,* வி.எ. (adv.) செம்மையாக, முழுமையாக; well, satisfactorily. "*நன்றாக நால்வர்க்கு... அறம் உரைத்தான்*" (திருவாச.12.). "*தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே*" (திருமந்.).

[நன்று + ஆக.]

நன்றாக² *nanṟāga,* வி.எ. (adv.) ஒரு வாழ்த்துத் தொடர்; a term of benediction (Insc.). "*நன்றாக குருவாழ்க, குருவே துணை*"

[நன்று + ஆக.]

நன்றாய் *nanṟāy,* வி.எ. (adv.) 1. *நன்றாக* பார்க்க; see *nanṟāga* 2. தாராளமாய் (வின்.); liberally.

[நன்று + ஆய்.]

நன்றாயிரு—த்தல் *nanṟāy-iru-,* 20 செகு.வி. (v.i.) 1. நல்ல நிலைமையிலிருத்தல்; to be good, beautiful. 2. செழுமையாக நலவாழ் வுடனிருத்தல்; to prosper, flourish, farewell to be in health

[நன்று + ஆய் + இரு—.]

நன்றி *nanṟi,* பெ. (n.) 1. நன்மை (சூடா.); goodness 2. உதவி; help. 3. அருட்பண்பு, அன்புச் செயல்; kindness. 4. நலன், பயன்; benefit, favour. "*எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்*" (குறள்.110). "*ஒரு நன்றி செய்தவர்க்கு*" (நாலடி,357). 5. செய்ந்நன்றி; gratitude "*நன்றி மறப்பது நன்றன்று*" (குறள்,108.). அவன் செய்த உதவிக்காக நன்றி கூறினான் (உ.வ.). 6. அறம்; virtue, merit "*நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*" (குறள்,994.).

[நல் → நன் → நன்றி.]

நன்றிக்கடன் *nanṟi-k-kaḍan,* பெ. (n.) செய்த உதவிக்கு நன்றி செலுத்த விரும்பும் கடமை உணர்வு; debt of gratitude. '*என் நன்றிக் கடனை எப்படித் தீர்ப்பேன்*' (உ.வ.).

[நன்றி + கடன்.]

நன்றிக்கேடு *nanṟi-k-kēḍu,* பெ. (n.) செய்ந்நன்றி மறக்கை; ingratitude.

[நன்றி + கேடு.]

நன்றிகூறு—தல் *nanṟi-kūṟu-,* 5 செ.கு.வி. (v.i.) *நன்றி சொல்(லு—,* பார்க்க; see *nanṟi-sol(lu)-.*

[நன்றி + கூறு—.]

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றிகொன்ற மகற்கு." "என்ற குறளில் நன்றி என்பது" நல்லசெயல் என்றும், செய்ந்நன்றி என்பது, உதவிக்கு மாற்று என்றும் பொருள்படுதல் காண்க.

நன்றிகெட்டவன் *nanṟi-keṭṭavan.* பெ. (n.) செய்ந்நன்றி நினைவில்லாதவன்; ungrateful person

[நன்றி + கெட்டவன்.]

நன்றிகெடு—தல் *nanṟi-keḍu-,* 20 செ.கு.வி. (v.i.) செய்ந்நன்றி மறத்தல் (வின்.); to be ungrateful

[நன்றி + கெடு—.]

நன்றிகொல்(லு)—தல் *nanṟi-kol(lu)-,* 13 செ.கு.வி. (v.i.) *நன்றி கெடு—,* பார்க்க: see *nanṟi-keḍu-,* "*செய்ந்நன்றி கொன்ற மகற்கு*" (குறள்,110.). நன்றிகொல்லுதல் பண்பு இக்காலத்தே அதிகமாகக் காணப்படுகிறது (உ.வ.).

[நன்றி + கொல்(லு)—.]

ஒருவர் செய்த உதவியை மறந்தோ அல்லது மறைத்தோ, அவர்க்குக் கேடு சூழ்தல்.

நன்றிகோறல் *nanṟi-kōṟal.* பெ. (n.) *நன்றிக்கேடு (வின்.)* பார்க்க; see *nanṟi-k-kēḍu.*

[நன்றி + கொல்தல்→ கோல்தல்→ கோறல்.]

கோறல் முதனிலை நீண்டதொழிற்பெயர்.

ஒ.நோ. செல்தல்→சேறல்

நன்றிசொல்(லு)–தல் *nanri-šol(lu)-*, 13 செ.கு.வி. (v.i.) செய்ந்நன்றி யறிவித்தல் (வின்.); to acknowledge benefits, thank

[நன்றி + சொல்லு–.]

நன்றியற்றவன் *nanri-y-arravan*, பெ. (n.) செய்ந்நன்றி மறந்தவன் (வின்.); ungrateful person

[நன்றி + அற்றவன்.]

நன்றியறி–தல் *nanri-y-ari-*, 2 செ.கு.வி. (v.i.) செய்ந்நன்றி நினைத்தல் (வின்.); to be grateful, thankful

[நன்றி + அறி–.]

நன்றியறிவு *nanri-arivu*, பெ. (n.) செய்ந்நன்றி யறிகை; gratitude.

[நன்றி + அறிவு.]

நன்றியில்செல்வம் *nanriyil-šelvam*, பெ. (n.) பயனற்ற செல்வம் (குறள். 101–ஆம் அதி.); riches not used in doing good, useless wealth

[நன்றி + இல் + செல்வம்.]

நன்றியீனம் *nanri-y-inam*, பெ. (n.) *நன்றிக்கேடு (வின்.)* பார்க்க; see *nanri-k-ēdu*

[நன்றி + ஈனம்.]

நன்று[1] *nanru*, பெ. (n) 1. நல்லது; that which is good, goodness "*அங்கிது நன்றிது நன்றெனு மாயை யடங்கிடு மாகாதே*" (திருவாச.49:8.). 2. சிறப்பு (சூடா.); excellence. 3. பெரிது (தொல்.சொல்.343.); greatness, largeness. "*செய்ய சந்த நந்தீம்பழமாதியா னையவாரி நடந்தது நன்றரோ*" (சிந்தா.நாமக.8.). "*நன்று பெரிதாகும்*" (தொல்.உரி.45). 4. அறம்; merit, virtue. "*நட்டார் குறை முடியார் நன்றற்றார்*" (குறள்,908). "*சான்றோர் செய்த நன்றுண்டாயின்*" (புறநா.34.). 5. இன்பம்; happiness, felicity "*நன்றாகு மாக்கம் பெரிதெனினும்*" (குறள்.328.). 6. நல்வினை; good deed. 7. ஆதரவு, பயன்; benefit "*தக்கார்க்கு நன்றற்றார்*" (நாலடி.327.). 8. வாழ்வினாக்கம்; prosperity "*நன்றாங்கா னல்லவாக் காண்பவர்*" (குறள், 379.). 9. வீடுபேறு, துறக்கம்; heaven "*வாள்வாய் நன்றாயினு மஃதெறி யாது விடாதே காண்*" (கலித்.149.). 10. ஒப்புகைக் குறிப்பு (அங்கீகாரக் குறிப்பு), ஏற்றுக் கொள்ளுதற் குறிப்பு; expr signifying approval. "*நன்றப் பொருளே வலித்தேன்*" (சீவக. 1932.).

[நல்[1] → நன் → நன்று.]

நன்று[2] *nanru*, பெ. (n.) வாழ்வு; welfare (சா.அக.).

நன்னடத்தை *nannadattai*, பெ. (n) *நன்னடை (இக்.வ.)* பார்க்க; see *nannadai*.

[நல் + நடத்தை.]

ஒருவருக்கு அமைந்த நல்லொழுக்கம்.

நன்னடத்தைச்சான்றிதழ் *nannadattai-c-canridal*, பெ. (n) ஒருவரின் செயற்பாடு குறித்து அளிக்கும் சான்றிதழ்; conduct certificate.

[நன்னடத்தை + சான்றிதழ்]

ஒருவருக்கு அடிப்படையாக இருக்கும் நல்லொழுக்கம், நற்செயல் போன்றவை குறித்து அளிக்கப்படும் சான்றிதழ்.

நன்னடத்தைப்பிணை *nannadattai-p-pinai*, பெ. (n.) நல்லொழுக்கமாய் நடந்து கொள்ளுவதற்குக் கொடுக்கும் பிணை அல்லது உடன்பாடு; security for good behaviour (legal).

[நன்னடத்தை + பிணை.]

நன்னடத்தைஜாமீன் *nannadattai-jāmīn*, பெ. (n.) ***நன்னடத்தைப் பிணை*** பார்க்க; see *nannadattai-p-pinai*.

[நன்னடத்தை + U. ஜாமீன்.]

நன்னடவடிக்கைஜாமீன் *nannada-vadikkai-jāmīn*, பெ. (n.) ***நன்னடத்தை ஜாமீன்*** பார்க்க; see *nannadattai-jāmīn*.

[நல்[1] + நடவடிக்கை + U. ஜாமீன்.]

நன்னடை *nannadai*, பெ. (n.) நல்லொழுக்கம் (யாழ்.அக.); good conduct. ***"நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே"*** (புறநானூறு.).

[நல்[1] → நடை → நன்னடை.]

நன்னயம் *nannayam*, பெ. (n) **1.** இன்சொற் செயல்கள்; gratifying words or deeds, acts of kindness ***"இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண நன்னயஞ் ,செய்துவிடல்"*** (குறள், 314.). **2.** பண்பட்ட பழக்கவழக்கம்; politeness, civility **3.** மகிழ்ஆட்டுகை, இன்முகமுடைமை (வின்.); complaisance **4.** நன்மை (வின்.); goodness, excellance. **5.** சைனர் கூறும் எழுவகைச் சொற்போர் முறை (சி.போ.பா.பக்.40.); the seven-fold doctrine of qualified predication (Jainam) **6.** நினைவு (வின்.); thought.

[நல் + நயம்.]

எழுவகைச் சொற்போர்முறையாவன:

(i) உண்டாம், (ii) இல்லையாம், (iii) உண்டும், இல்லையுமாம்,(iv) சொல் லொணாததுமாம், (v) உண்டும் சொல்லொணாததுமாம், (vi) இல்லையுமாம், சொல்லொணாததுமாம், (vii) உண்டும் இல்லையுமாம், சொல்லொணாத துமாம்.

நன்னர் *nannar*, பெ. (n) நன்மை; goodness, that which is good ***"பலவுட னன்னர் நெஞ்சத் தின்னகை வாய்ப்ப"*** (திருமுரு.64.). ***"நன்னர் நெஞ்ச நெகிழ்த்த பின்றை"*** (குறுந்.176); (சூ.நிக.8:36.).

[நல் → நன் → நன்னர்.]

நன்னர்த்தொகை *nannar-t-togai*, பெ. (n) தொழிலாளர்களுக்கு சம்பளத்தோடு கொடுக்கும் ஊதியப் பங்கீடு; bonus சென்ற ஆண்டு போக்குவரத்து, ஊழியர்க்குக் குறைந்த அளவு நன்னர்த் தொகை வழங்கப்பட்டது. (இக்.வ.).

[நன்னர் + தொகை.]

மேலைநாடுகளில் கிழமை (வாரம்)ச் சம்பளம் வழங்கப்படுகிறது. நம்நாட்டில் மாதச் சம்பளமே வழங்கப்படுகிறது. ஓர் ஆண்டிற்கு 52 கிழமைகள் இருப்பதால் 12 மாதங்கள் போக 4 கிழமை எஞ்சுவதால் 8.33 விழுக்காடு மிகை யூதியமாகத் தரப்படும் தொகையே நன்னர்த்தொகை.

நன்னருக்கல்[1] *nannarukkal*, பெ. (n.) **1.** பசி, மந்தம் முதலியவற்றால் வயிற்றில் விட்டுவிட்டு வலியுண்டாகுகை; slight, internal pains, as in the first stages of pregnancy, pain from hunger, indigestion or fever. **2.** குழந்தை பிறக்கும்பொழுது ஏற்படும் இடுப்பு வலி; first labour pains.

[நல் → நன் + நருக்கல்.]

நன்னருக்கல்[2] *nannarukkal,* பெ. (n) சிறுநோய்; slight diseases, indisposition.

[நல் → நன் + நருக்கல்.]

உடலில் ஏற்படும் சிறுசிறு நோய்கள்.

நன்னல் *nannal,* பெ. (n.) மதகரிவேம்பு; red cedar.

நன்னலம் *nannalam,* பெ. (n.) அழகு; beauty.

நன்னன்[1] *nannan,* பெ. (n.) விச்சிக்கோவின் மரபுவழியைச் சேர்ந்த மன்னன்; hereditary king of Vicci-k-kō

இவன் பல்குன்ற கோட்டமுடையான். பெண் கொலை புரிந்தவன் என்று, புறநானூறு கூறுகிறது. இவன் மகன்மீது இரணிய முட்டத்துப்பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் மலைபடுகடாம் பாடியுள்ளார்.

நன்னன்[2] *nannan,* பெ. (n.) பூழிநாட்டின் சிற்றரசன்; a petty king of pūḻināḍu. "*அகவுநர்ப் புரந்த அன்பின்... நன்னன்*" – (அகநா.97.). "*இசைநல்லி கைக்களிறு வீசுவண் மகிழ்... நன்னன்*" – (அகநா–152.).

இவன் சேரர் குடியைச் சார்ந்தவன். இந் நன்னனது பூழிநாடும் பிறவும் கொங்கணதேசம் எனப்படும். "*பொன்படு கொண்கான நன்னன்*" என்னும் நற்றிணை வரியால், இச் செய்தி பெறப்படுகிறது.

இவ்னது நாடு, ஏழில்மலை என்று, இன்று அழைக்கப்படுகிறது. இவனது பூழிநாட்டைச் சேர்ந்த ஊர்களாக, கடம்பின் பெருவாயில், பாரம், வியலூர், பிரம்பு முதலானவற்றை, அகநானூறு 152–ஆம் பாடலாலும், பதிற்றுப்பத்தின் நாலாம் பதிகத்தாலும், அறியலாம்.

இந் நன்னனது நாட்டுவளத்தினையும், கொடைச் சிறப்பினையும் அகநானூற்றின் 152–ஆம் பாடல் நன்கு விளக்குகிறது.

நன்னன்[3] *nannan,* பெ. (n.) செங்கண் மாத்துவேளும், மலைபடுகடாத்தின் பாட்டுடைத் தலைவனுமாகிய சிற்றரசன்; the chief of Šengaṇ-māttu-vēḷ and hero of malai-paḍu-kaḍām. "*செங்கண்மாத்துவேள் நன்னன் சேய் நன்னனை*" (மலைபடு.இறுதித்தொடர்.).

மறுவ. நன்னன் வேண்மான் நன்னன் சேய்நன்னன்.

இவனை நன்னன் சேய் நன்னன் என்றும், கூறுவர். வள்ளல் தன்மை கொண்டவன்.

இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர் பெருங் கௌசிகனார், இவனது வள்ளல் தன்மையைப் பாராட்டி மலைபடுகடாம் என்ற நூலை இயற்றியுள்ளார்.

இவன் நாடு பல்குன்றக் கோட்டம். இவன் தலைநகர் செங்கண்மா. இவன் மலைநாடு எழிற்குன்றம் என்று அழைக்கப்பட்டது. இவ் வெழிற்குன்று, ஏழுமலைகளை உள்ளடக்கி யதால், இப் பெயர் பெற்றதென்பர். இச் செய்திகளை மலைபடுகடாம் தெரிவிக் கின்றது.

அவ்வேழு மலைகளிற் பாழிச்சிலம்பு, நவிரம் என்னுமிரண்டே இப்போது தெரிவன. நன்னனது நாட்டில் பாழி, வியலூர், பாரம், பிரம்பு – என்ற ஊர்களும், சேயாறு என்னும் நதியும் இருந்தன என்பது, முன்னூல்களால் அறியப்படுகிறது.

இவன் ஆண்ட பல்குன்றக்கோட்ட நாடு இப்போது, வடஆற்காடு, தென்னார்க்காடு மாவட்டத்தில் அடங்கியுள்ளது. நன்னனது நவிரமென்னும் மலைமீது, "*காரியுண்டிக் கடவுள்*" என்னும் சிவபிரான் கோயிலொன்று உண்டு. அகநானூற்றில் உள்ள, பின்வரும் பாடல்வரிகள் இச் செய்தியினைத் தெரிவிக்கின்றன.

"*பாடுநர் செலினே அருங்குறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை சூழாது சுரக்கும் நன்னன்*" இவனது வெள்ளணிவிழா (பிறந்தநாள்)வின் சிறப்பினை, மாங்குடி மருதனார்,

"*பேரிசை நன்னன் பெரும்பயர் நன்னாள் சேரிவிழவின் ஆர்ப்பெழுந்தாங்கு*" என்று உவமித்துப்பாடுகின்றார்.

இவ்வெள்ளணி விழா நாளினை நச்சினார்க்கினியரும் "*நன்னாள்*" என்று தமதுரையில் குறித்துள்ளார்.

நன்னன்வேண்மான் *nannan-vēṇmāṉ*, பெ. (n) 1. சங்ககால சிற்றரசன்; a petty king of Šaṅgam period "*நறவுமகி ழிருக்கை நன்னன் வேண்மான்*" (அகநா.97.). 2. *நன்னன்*[3] பார்க்க; see *Nannan*[3].

[நன்னன் + வேள்மான் → வேண்மான் .]

நன்னனார் *naṉṉaṉār*, பெ. (n.) ஒரு புலவர்; a poet

இவர் பரிபாடலின் 12ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.

நன்னாகையார் *naṉṉāgaiyār*, பெ. (n.) சங்க காலப் பெண் கவிஞர்; a women poet of Saṅgam period.

இவர் ஊர் நாகபட்டினமாக இருக்கலாம்.

"புள்ளும் மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நாரின் மாலைப்
பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ – எனவும்
வாரார் தோழிநம் காத லோரே

(குறுந்.118.).

சேறுஞ் சேறு மென்றலின் பண்டைத்தன்
மாயச் செலவாச் செத்து மருங்கற்று
பன்னிக் கழிகென் றேனே அன்னோ
ஆசா கெந்தை யாண்டுளள் கொல்லோ
கருங்கால் வெண்குருகு பேயும்
பெருங்குளம் ஆயிற்றென் இடைமுலை
நிறைந்தே" – (குறுந்,325.).

நன்னாட்கொள்ளு–தல் *naṉṉā-ṭ-koḷḷu-*, 13செ.கு.வி. (v.i.) நன் (மங்கல)னிகழ் விற்கேற்ற நாளினைக் குறிப்பிடுதல்; to appoint an auspicious day "*நன்னாட் கொண்டு பெரும்பயண மெழுகவென்று நலஞ்சாற்ற*" (பெரியபு.சேரமான்பெரு.46.).

[நல்[1] → நன் + நாள் + கொள்ளு–.]

நன்னாரி *naṉṉāri*, பெ. (n.) 1. கொடிவகை (பதார்த்த.492.); indian sarasaparilla 2. நறுமணமிக்க வேர்; fragrant root

மறுவ. பாற்கொடி, நறுமணவல்லி.

[நல் → நன் + நாறி .]

உடம்பின் வெப்பத்தைப் போக்குதற்கும், கோடைக்காலத்தில் பருகும், இன்சுவைப் பருகங்களுக்கு நறுமணமூட்டுதற்கும், பயன்படும் வேர்மூலி. இது முறுக்கிக் கொண்டிருக்கும் தோற்றத்தையுடையது. இக் கொடியின் அடிப்பாகம் வழவழப்புடன் இருக்கும். இலைகள் இருபுறமும் கூரானவை. இதன் பூக்கள் உட்புறம் கருஞ்சிவப்புடனும், வெளிப்பக்கம் வெண்மை கலந்த பச்சை வண்ணத்துடனும் காட்சி தரும். மழைக் காலத்தில் பூக்கும். இக் கொடி வட இந்தியா, வங்காளம், தமிழகம், இலங்கை போன்ற எல்லா இடங்களிலும் பயிராகும். நறுமண மிக்க இதன் வேர்கள் இனிப்புச்சுவை பொருந்தியன. உடலின் வெம்மையை அகற்றி, குளுமையைத் தருவன. ஒளிநீரை (விந்து)ப் பெருக்கும் தன்மையது. நன்னாரி கலந்த இன்பருகத்தினால் மலச்சிக்கல் தீரும். சீறுநீரைடைப்பு நோய் குணமாகும். காய்ந்த

நன்னாரியின் வேரினைக் கருக்கு நீராகக் காய்ச்சி (கியாழம்) (கசாயம்) ஆவின் பாலுடன் சேர்த்துக் குடித்தால், கல்லடைப்பு, நீர்ச்சுருக்கு நீங்கும்.

செரியாமை, தொழுநோய், தோல்நோய், கடுஞ்சுரம், ஆறாப்புண், ஊதைநோய், இணைவிழைச்சு நோயினாலேற்பட்ட புண், கட்டி, வெள்ளைபடுதல் முதலான அனைத்து நோய்களுக்கும், இக் கருக்கு நீரினைச் சித்தமருத்துவர், பயன்படுத்துவர்.

மேலும் இந் நன்னாரிக் கருக்குநீர், அரத்தத்தைத் தூய்மையாக்கும் மாமருந்து. மிகுபித்தத்தினாலேற்பட்ட வாய்க்கசப்பை அகற்றும்.

தமிழ் மருத்துவத்திற்கு வாய்ந்த நன்மூலியான இந் நன்னாரிவேர், அனைத்து மருத்து வத்திற்கும் பயன்படும் அருமூலியாகும்.

குழந்தை மருத்துவத்திற்கு நன்னாரியை. கருக்கு நீருடன், சீரகம், பால் சருக்கரை சேர்த்துக் கொடுத்தால், கொக்கிருமல் தீரும். குழந்தைகளின் செரியாமைநோய் குணமாகும். வயிற்றுப்போக்கு தீரும்.

சித்தமருத்துவர், நன்னாரிக் கருக்கு நீருடன், வால்மிளகு, குக்குலு, கொம்மட்டி வேர் போன்ற கடைச்சரக்குகளைச் சேர்த்து யானைக்கால் நோயினைத் தீர்ப்பர்.

யுனானி மருத்துவர் நன்னாரி வேரில் இன்பருகம் (சர்பத்து) காய்ச்சி அனைத்துப் பிணிகளையும் போக்கும் மருந்துகளுடன் கலந்து தருவர் என்று சா.அக. கூறும்.

நன்னாரி வகைகள் : 1. நாட்டு நன்னாரி,

2. சீமை நன்னாரி. 3. பெரு நன்னாரி. 4. சிறு நன்னாரி.

நன்னாள் *nannāḷ,* பெ. (n.) 1. விழவு நாள்; festivel occasion, festival day "*தீவகச்சாந்தி செய்தரு நன்னாள்*" (மணிமே.1:35.). 2. நன்னிகழ்வுகட்குரிய மங்கல நாள்; auspicious day

[நல் + நாள்.]

நன்னாறி *nannāṟi,* பெ. (n.) பன்னீர்; rose water

[நல் + நாறு + இ.]

இ = சொல்லாக்காறு.

நன்னி¹ *nanni,* பெ. (n.) 1. *சிறியது*; that which is small, short. "*நன்னிக் குரங்கும் கொசுகும் பகையோ நமக்கென்றானே*" (இராமநா.உயுத்.1.). 2. மிகச் சிறியது; that which is minutie

தெ. நன்ன.

[நுல் → நுன் + நுன்னி → நன்னி.]

தோன்றல் கருத்தினின்று கிளைத்த இச் சொல், மிகச்சிறிய கொசுகு போன்ற உயிரிகளையும், சிறிய குட்டிகளையும் குறித்து வழங்கிற்று எனலாம்.

நன்னி² *nanni,* பெ. (n) பருத்தி; cotton

[நல்→நன் + இ.]

நெசவுக்குப் பட்டு நூலைவிடவும் நன்றாதலின் பருத்தி, இப்பெயர் பெற்றது. செயற்கைஇழை (நைலான் காற்றோட்டம் இன்மை அறிக.

நன்னிக்கல்¹ *nanni-k-kal,* பெ. (n.) மருந்து அரைக்கும் அம்மி (தைலவ.பாயி.12, உரை.); a grinding stone for preparing medicine

நல் → நன்.

[நன்னி + கல் → நன்னிக்கல் மருந்தரைக்கும் சிற்றம்மி. (வே.க.3:4.).]

நன்னிக்கல்² *nanni-k-kal,* பெ. (n) கழுவக்கல் செய்யவுதவும் கடினமான கல்;

hard stone used for making mortar which used for grinding medicine.

நன்னிநூல் *nanni-nūl,* பெ. (n.) துணியின் நூற்குறை (வின்.); short ends of threads in cloth badly woven.

[நன்னி + நூல் → நன்னிநூல் = துணியின் ஓரத்திலுள்ள சிறு நூல் துணுக்கு (வே.க.3:4.).]

நன்னிப்பயல் *nanni-p-payal,* பெ. (n.) *நன்னிப் பையல்* பார்க்க; see *nanni-paiyal*

[நன்னி + பையல் → பயல்.]

நன்னிப்பயறு *nanni-p-payaru,* பெ. (n.) துலுக்கப் பயறு (வின்.); aconite-leaved kidney bean

[நன்னி + பயறு.]

[நன்னி = சிறுமை குறித்த வழக்குச் சொல். நன்னியுங்குன்னியும்.]

நன்னிப்பிள்ளை *nanni-p-pillai,* பெ. (n.) சிறுபிள்ளை; small child.

மறுவ. நன்னிகுன்னி.

[நன்னி + பிள்ளை.]

நன்னிப்பையல் *nanni-p-paiyal,* பெ. (n.) சிறுபையன் (வின்.); small boy

[நன்னி + பையல் → பயல்.]

பையல் > பையன்

நன்னிபின்னி *nanni-pinni,* பெ. (n.) சில்வாழ் நாள்களையுடைய சிற்றுயிரினம் (பிராணி.); minute insect, animalcule.

மறுவ. நன்னிகுன்னி.

[நன்னிபின்னி = குறு விலங்கு, நுணுக்க உயிரி அல்லது கண்ணுக்குப் புலப்படாத உயிரினம். சிறுபிள்ளைகளையும் சிற்றுயிரிகளையும், நன்னியும் குன்னியும், நன்னிபின்னி என்பது உலகவழக்கு.]

நன்னியம்மா *nanni-y-ammā,* பெ. (n.) பாட்டி(புதுக்); grandmother

(கிளை.மொ.இயல்) (புது.கோ.வழ.சொ)

நன்னியல்பு *nanniyalbu,* பெ. (n.) நல்லியல்பு; pleasing manner

[நல் + நன் + இயல்பு.]

பண்பு மீதூர்ந்த சொல்லாட்சிகளுள் ஒன்று. இயல்பாகவே நல்லியல்பு வாய்க்கப் பெற்றவர் பூண்டொழுகும் ஒழுக்கம்.

நன்னிலம்¹ *nannilam,* பெ. (n.) நாகை மாவட்டத்தில் உள்ளது; a village in Nāgai dist

[நன்மை + நிலம்.]

"பலங்கிளர் பைம்பொழிறண் பணிவெண் மதி
 யைத்தடவ
நலங்கிளர் நன்னிலத்துப் பெருங் கோவில்
நயந்தவனே" (சுந்தரர்–98,2.)

சிறப்புடைய அல்லது செழிப்புடைய நிலம் என்ற இயல்பு காரணியமாக, இப் பெயர் பெற்றது எனலாம்.

நன்னிலம்² *nannilam,* பெ. (n.) நன்செய் (வின்.); wet-land.

[நல்¹ + நிலம்]

நன்செய்ப் பயிர்களான நெல், கரும்பு, வாழை முதலியன விளையும் நிலம்.

நன்னிலமிதித்தல் *nannila-midittal,* பெ. (n.) மணமகனான அரசன், தன் மனைவியை விட்டு, முதன்முதல் அத்தாணிமண்டபத்திற்கு அடிவைக்கும் சடங்கு; the ceremony in which a royal bridgegroom first steps out of his place and goes to his audience chamber, after marriage. *"திருமால் நன்னிலமிதித்தற்குப் போந்தான்"* (சீவக.2369, உரை.).

[நல்¹ → நிலம் + மிதித்தல்.]

நன்னிலை *nannilai,* பெ. (n.) 1. நல்ல நிலைமை; good position or condition. *"நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானும்"* (நாலடி.248.). 2. நல்லொழுக்கம் (சது.); moral conduct. 3. தவம் (அக.நி.); religious austerities. 4. உலகம் (சது.); the world

[நல்¹ → நன் + நிலை.]

நன்னிறம் *nanniram,* பெ. (n.) வெண்ணிறம் (யாழ்.அக.); a white colour.

[நல்¹ + நிறம்.]

பன்னிறமாகிய ஏழ்நிறம் கலந்தது வெண்மை என்பது சி.வி. இராமனின் கண்டுபிடிப்பு எனினும், வெளுத்த தோலினர்க்குச் சார்புவண்ணமாகவும், கறுத்ததோலினர்க்கு எதிர்வு வண்ணமாகவும், தோற்றம் தருதலின், நன்னிறமாயிற்று.

நன்னீர்¹ *nannir,* பெ. (n.) 1. குடிநீர்; pure or wholesame water fit to be drunk 2. பனிநீர்; rose water. *"நன்னீர் விரவிய செந்நிறச் சுண்ணம்"* (பெருங்.நரவாண.7,59.). 3. மென்னீர் (சா.அக.); soft-water.

[நல்¹ + நீர்.]

நோய்பரப்பும் நுண்மங்கள் அழிக்கப்பட்ட குடிநீர் இயற்கையாய் இறைவன் தந்த மழைநீரும், பனிநீரும் உவர்ப்புச் சுவையற்ற தூய நன்னீர் எனலாம்.

நன்னீர்² *nannir,* பெ. (n.) நல்லியற்கை; good nature or disposition. *"நன்னீரை வாழி அனிச்சமே"* (குறள்,1111.).

[நல்¹ + நீர்.]

நன்னீர்க்கடல் *nannir-k-kadal,* பெ. (n.) எழு கடலுள், உவர்ப்பிலா நீரையுடைய கடல்; ring-shaped ocean of fresh water, one elu-kadal

[நன்னீர் + கடல்.]

நன்னு *nannu,* பெ. (n.) பெண்; girl.

நன்னு சிறுமைப்பொருளில் வந்தால் மேதை என்றும், நண்ணு→நன்னு திரிபுப் பொருளில் வருங்கால் மங்கை என்றும், பொருள்படும்.

நன்னு¹–தல் *nannu-.* 5 செ.குன்றாவி. (v.t.) பல்லாற் கடித்தல் (யாழ்ப்.); to nibble, as rats or squirrels, to bite or nibble off anything, as nails.

[நன் + நுதல்–.]

நன்னுதல்² *nannudal,* பெ. (n.) அழகிய நெற்றியை உடைய பெண்; damsel, lady, as having a beautiful forehead *"நன்னுதல் கணவ"* (பதிற்றுப்.42,7.).

[நல்¹ + நுதல்.]

இது பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை

நன்னூல் *naṉṉūl*, பெ. (n.) 13 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த பவணந்தி முனிவர் இயற்றிய இலக்கணநூல்; a Tamil grammar by Pavaṇandi-muṉivar, early in the 13th-C.

[நல் + நூல்.]

தொல்காப்பியத்திற்குப் பிறகு, சில இலக்கண மாறுபாடுகளுடன் வெளிவந்த இலக்கணநூல் பவணந்தியாரின் நன்னூல்.

'மொழிப் பொருட்காரணம் விழிப்பத் தோன்றா' என்று தொல்காப்பியர் கூறியதைப் பவணந்தி, பகுதி + சந்தி + இடைநிலை + சாரியை + விகுதி என்று பிரித்துப் பொருள் கூறினார்.

நன்னூல் குறித்து மொழிஞாயிறு கொண்டிருந்த உடன்பாடு முரண்பாடு பற்றி 1957-இல், தென்றல் என்ற இதழில் அவர் எழுதியுள்ள மறுப்புக்கட்டுரையை இங்கு காணலாம்:-

> 'நன்னூல் நன்னூலே' என்னும் கட்டுரையாசிரியர் சென்னைச் சௌக்கார்பேட்டை செயின் உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் வித்துவான் எ.சு.பி.கெம்பீர நைனார் என்னும் செய்தியொன்றே, அவர் பவணந்தி என்னும் சமண முனிவர் இயற்றிய நன்னூற் குறையை மறைத்தற்காரணத்தை அறிஞர்க்குணர்த்தப் போதுமானதாம்.

இனி, மறுப்பாசிரியர் மறுப்புகளையெல்லாம் ஒவ்வொன்றாய், எடுத்தறுப்பாம்.

மறுப்பு: நன்னூல் நன்னூலா? என்று கேட்டிருப்பது, மரத்தைக் கண்ட ஒருவன், இந்த மரம் மரமா? என்று கேட்பது போல் வினாவில் தவறுபட்டு வினா வழுவாய் அமைந்துள்ளது.

அறுப்பு: மரத்தை மரமென்று கண்ட ஒருவனுக்கு. இது நன்மரமா என்று ஐயம் எழுமேயன்றி, மரமா என்று ஐயம் எழாது. அதுபோல் ஒரு நூலைக் கண்டவனுக்கு இது நன்னூலா என்று ஐயம் எழுமேயன்றி, நூலா என்று ஐயம் எழாது. பவணந்தி முனிவர் தம் நூலுக்கு நன்னூல் என்று பெயரிட்ட அளவிலேயே, அது நன்னூலாகிவிடாது. பொருளுக்கும் பெயருக்கும் பொருத்தம் இருப்பினும் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். இரு கண்ணுமில்லானுக்குத் தாமரைக்கண்ணன் என்றும், இருகாலு மற்றவனுக்குத் தாண்டவராயன் என்றும், பெயரிட்டிருக்கலாம் குற்றம் நிறைந்த வேறுசில நூல்கள்கூட நன்னூல் என்று பெயர்பெறலாம்.

ஒரு கனியை உண்டமட்டில் அது நன்றென்று ஒரு பொதுமகன் கொள்ளுதல் தகாது. அதனை ஆய்ந்து அதன் உண்மைத் தன்மையைக் காண்பவன் மருத்துவனே. அதுபோல், ஒரு நூலையும் ஒரு மாணவன் கற்ற அளவில், அது நன்றென்று கொள்ளுதல் முடியாது. ஆராய்ச்சியாளனே அதன் உண்மைத் தன்மையைக் காண இயலும்.

நன்னூல் என்ற பெயரளவில் அதை நன்னூலென்று தாம் மயங்கியதுமன்றி, தம்மைப்போற் பிறரையுங் கருதி அம் மயக்கத்தைப் பிறர் மீதும் ஏற்றிக்கொள்கின்றார், நம் மறுப்பாசிரியர். "நன்னூல் நன்னூலா"? என்னும் வினாவை, நல்லெண்ணெய் நல்லெண்ணெயா? நன்மாறன் நன்மாறனா? நல்ல பாம்பு நல்ல பாம்பா? என்றித் தகையவற்றுள் ஒன்றற்கு ஒப்பிடலாமேயன்றி, இந்த மரம் மரமா? என்னும் வினாவுக்கு ஒப்பிடலாகாது. இதை உவமையிலக்கணம் செவ்வையாய் அறிந்தாரே உணர்வர்.

மேலும், வினாவில் தவறுபட்டு வினா வழுவாயமைந்துள்ளது. என்னும் சொற்றொடர், கூறியது கூறலாம். வினாவில் தவறுபட்டுள்ளது. வினா வழுவாயமைந்துள்ளது என்னும் இவ் விரண்டில், ஒன்றே அமையும்.

மறுப்பு 2: "இன்னின்ன எழுத்துகள் இன்னின்ன இடத்தில் குறுகி ஒலிக்கும் என மாத்திரை குறிக்கும் இடத்தும், புணரியலிலும் கூறினாற் போதுமானதாம்." எனக் கூறி, முன்பு தாம் மறுத்த அச் சார்பு எழுத்துகளின் வகைகளை ஏற்றுக்கொள்ள உடன்படுகிறது."

அறுப்பு: சில எழுத்துகள் சிலவிடத்திற் குறுகி யொலித்தமட்டில் சார்பெழுத்து

களாகிவிடா. எழுத்துகள் குறுகி யொலித்தல் மட்டுமன்றி, நீண்டும் ஒலிக்கும்.

"ஆவியு மொற்றும் அளவிற் றிசைத்தலும்

மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின்"
(101)

என்று நன்னூலாரே நன்றாய் (தெளிவாய்)க் கூறியுள்ளார். ஆகவே, குறுகியும் நீண்டும் ஒலிக்குமிடமெல்லாம் சார்பெழுத் தியல்பைப் பிறழவுணர்தலாம். குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகிய மூன்றும், குறுகி யொலித்தலால் மட்டுமன்றித் தத்தம் முதலினின்று திரிந்தொலித்தாலும் சார்பெழுத்து களாயின என்றறிதல் வேண்டும்.

மறுப்பு 3: 'சன்மதி', 'யசோமதி' யென்ற பெயர்களும், 'பவணந்தி,' 'தரும நந்தி' என்ற பெயர்களும் பண்டுதொட்டு இன்றுகாறும், தமிழ்நாட்டு ஜைனர்களுக்கே யிட்டு வழங்கப்படும் பெயர்களாக அமைந்துள்ளன.... இப்படியிருக்க யாதொரு ஆதாரமுமின்றி நன்னூலாரை ஆரிய அந்தணர் என்றால், அதை ஆராய்ச்சியுலகம் அடியோடு ஏற்காது.

அறுப்பு: சன்மதி, யசோமதி, பவணந்தி, தருமநந்தி என்பன 'தமிழ்ப் பெயர் களல்லவென்பதும், சமணம் வடநாட்டினின்று வந்த அயன்மதம் என்பதும், யாவரும் அறிவர். பவணந்தியார், ஒருகால் பிறப்பளவில் திரவிடரா யிருந்திருப்பினும், கருத்தளவில் மாறுபட்டவர் என்பதை, எவரும் மறுக்கவொண்ணாது. ஒருவரை ஓர் இனத்தோடு சார்புபடுத்துவது, சிறப்பாக அவர் மனப்பான்மைபற்றியே யன்றிப் பிறப்புப் பற்றியன்று.

மறுப்பு 4: நம் தமிழ்நாடு தொல்காப்பியர் காலத்திற்குப் பின்பும், நன்னூலார் காலத்திற்கு முன்பும் ஆகிய இடைப்பட்ட காலத்தில், தொடர்பைப் பெரிதும் மேற்கொண்டு, அவர் தம் நடையுடை பாவனைகளில் பெரிதும் ஈடுபட்டு இருந்ததோடன்றி, அவர் தம் வடமொழியையும் தமிழில் கலந்து வழங்குதலை, உயர்ந்த நாகரிகமாகக் கருதிவந்தது.

அறுப்பு: நம் மறுப்பாசிரியர் தமிழ் நாகரிகத்தையும் தமிழ் வரலாற்றையும் செவ்வையாய் அறியாமையை அவர் மறுப்பு அறிவிக்கின்றது. அதற்கு விடை விளக்கம் ஒரு பெருநூலாய் விரியும். வடமொழியாளர் தென்னாட்டுக்கு வந்த பின்பு, தமிழ்ப் புலவருள், தமிழன்பரும் (காட்டிக் கொடுக்கும்) தமிழ்ப் பகைவரும், (கவலையற்ற) நொதுமலருமாக மூவேறு சாரார் தோன்றினர். இடைக்காலத்தில் தமிழன்பர் கை முற்றும் தாழ்ந்து விட்டதினால், வடவர் வாழ்க்கை முறையும், வடமொழியும் போற்றப்படத் தொடங்கினவேயன்றி வேறன்று.

இந்திய நாகரிகப் பண்பாட்டின் அடிப்படை தமிழரதே யென்பதும், தமிழ் தெற்கில் மூழ்கிப் போன குமரிநாட்டில் தோன்றி, வடக்கே சென்று திரவிடமாய்த் திரிந்தென்பதும், திரவிடமே ஆரியத்துக் கடிப்படை யென்பதும், தமிழ் வடமொழியால் தளர்ந்ததேயன்றி வளர்ந்ததன்று என்பதும், கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நூல்கள் ஒளிக்கப்பட்டும், ஒழிக்கப்பட்டும் வந்தன என்பதும், உலகம் அறியும் காலம் அடுத்து வருகின்றது என்பதை. நம் மறுப்பாசிரியர்க்கு உணர்த்த விரும்புகின்றேன்.

மறுப்பு 5: "சீயகங்கன் அரும்பொருள் ஐந்தையும் தருகவெனக் கேட்டதாகவும். பன்னருஞ் சிறப்பிற் பாடித் தந்ததாகவும் பாயிரஞ் செப்புகின்றது. ஆதலின், ஐந்தும் அமைந்ததாய் அந் நன்னூல் நிறைநூலே ஆம் என்க."

அறுப்பு: சீயகங்கன் ஐந்திலக்கணமும் இயற்றித் தருமாறு பவணந்தி முனிவரைக் கேட்டிருக்கலாம். அவரும் இசைந்திருக்கலாம். ஆயின், அந் நோக்கம் நிறைவேறியதென்பதைக் காட்டற்கு யாதொரு சான்றுமில்லை.

பாயிரம், நூலியற்றியதைக் குறிக்குமிடத்து, *"முன்னோர் நூலின் வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்"* என்று மட்டும் கூறுகின்றதே யன்றி, ஐந்திலக்கணமும் வகுத்தனன் என்று ஐயமறக் கூறவேயில்லை.

பெயரியலில் (11)

"பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்"

என்று செய்யுளிலக்கணம் கூறியிருப்பது, சொல்லின் பொதுவிலக்கணம் கூறிய நூற்பாவில் உள்ள "*வழக்கொடு செய்யுளின்*" என்னும் பாகுபாட்டின் ஒரு பகுதியை விளக்க எழுந்ததாயினும், தொல்காப்பியத்தில் அங்ஙனம் கூறப்படாமையை நோக்கும் போது, நன்னூலில் செய்யுளதிகாரம் என ஒன்று என்றேனும் அமைந்திருந்ததாகத் தெரிகின்றிலது.

மேலும், சமணம் சம்பந்தர் காலத்துக்குப் பின் தமிழ்நாட்டில் தலை தாழ்ந்து போயினும், ஓரளவு இன்றுவரை இடையறாது தொடர்ந்து வருவதால், ஒரு சமணர் வீட்டிலும் ஐந்ததிகார நன்னூலில்லாமையும், ஏனை மூவதிகாரங்களுள் ஒன்றேனும் ஒரிடத்து மின்மையும், அவை ஆசிரியரால் இயற்றப்பட்டில என்பதே யுணர்த்தற் பால.

மறுப்பு 6 : தமிழ்ப்புலவராம் குடிகள்........

"*முன்னோர் ஒழியப் பின்னோர் பலரிலும்*
நன்னூலார் தமக்கு எந்நூலாரும் இணையோ"

எனப் புகழ்வராயினர்.

அறுப்பு : இது, குயக்கொண்டான்மாரும் சுவாமிநாத தேசிகன்மாரும், வையாபுரிகளும் ஆகிய கோடரிக்காம்புகளின் கூற்றேயெனக் கூறி விடுக்க.

மறுப்பு 7 : "*ஒன்றொழி முந்நூறு எழுபான் என்ப*" என்று விரிவைக் கண்டவர்களையும் காட்டுகின்றார்.

அறுப்பு : 'என்ப' என்பது அசைச் சொல்லாயும் வரும் என்பதை மறுப்பாசிரியர் அறியார் போலும். தொல்காப்பியம் – சொல்லதிகாரம் 293–ஆம் நூற்பா வுரையைக் காண்க.

மேலும், ஒன்றொழி முந்நூற்றெழுபான் என விரிக்கும் முன்னை நூலொன்றும் இதுபோதில்லை.

மறுப்பு 8 : உயிரெழுத்தாயினுஞ் சரி, மெய்யெழுத்தாயினுஞ் சரி, எல்லா எழுத்துகளையும் மனத்தால் நினைக்கும்போது மாத்திரம், வாய்திறவாமல் நினக்கலாமே யொழிய, எதிராளிக்குத் தாம் கூறிக் காட்டுங் காலத்து வாய் திறந்தே கூற வேண்டுதலின் மெய்த்தன்மையையுடைய ஆய்தம் அங்காத்தலில் தோன்றாது எனக் கொள்ளுதல், எப்படிப் பொருந்தும்?

அறுப்பு : மெய்யெழுத்துகளையும் கூறிக் காட்டுங்காலத்து அங்காந்தே கூற வேண்டியிருத்தலின், ஆய்தத்துக்குமட்டும் ஏன் 'அங்கா' முயற்சியை விதந்து கூற வேண்டும்?

மேலும் பவணந்தி முனிவரே,

"*அவற்றுள்*

முயற்சியுள் அஆ அங்காப் புடைய"

என முதலீருயிர்கட்கும்.

"*இஈ எஏ ஐஅங் காப்போ*

டண்பன் முதனா விளிம்புற வருமே"

என ஏனைச் சில வுயிர்கட்குமாக, அங்கா முயற்சியை இதழகல் உயிர்கட்கு மட்டும் ஏன் வரையறுத்தல் வேண்டும்?

மறுப்பு 9 : "தும்மல் ஒலிபோன்று ஆய்த ஒலி தலையில் பிறப்பதை யெப்படி மறுத்தல் இயலும் எனக் கேட்க நேரிடுகின்றது."

அறுப்பு : தும்மல் ஒலிபோன்று எங்ஙனம் ஆய்த வொலி தலையில் பிறக்கும் எனக் கேட்க நேரிடுகின்றது.

மறுப்பு 10 : நகரம் மொழிக்கு முதலாகும் எனக் கூறும் ஒரு கட்சியினரும், நகரம் மொழிக்கு முதலாகாது எனக் கூறும் மற்றொரு கட்சியினரும் இருந்தனர். அவ் விரு சாராரையும் ஒன்றுபட் டாலுண்டு வாழ்வே என ஒன்றுபடுத்துதற்கே நன்னூலார்...... கூறிய அதனைக் குற்றமாகக் காட்டினால் அறிஞர் உலகம் ஆதரிக்குமா?"

மறுப்பு 11 : "அங்ஙனம் என்று கூறலே தொன்றுதொட்ட மரபாகும் என்க."

அறுப்பு : "*ஆங்கன மாகிய வாதிரை கையால்*" என்று மணிமேகலையிலும் (16,128.), "*ஆங்ஙனம் விரிப்பின்*" என்று தொல்காப்பியத்திலும் (1308) வந்திருப்பதால், நெடின் முதல் வடிவமே முந்தியதென்பது பெறப்படும். தொல்காப்பியம் மணிமேகலைக்கு முந்தியதாயினும், ஆங்ஙனம் என்பது ஆங்கனம், என்பதன் திரிபென்பது ஆராய்ச்சியால் தெளிவாம். அங்கிட்டு, இங்கிட்டு என்னும் சொற்கள் முறையே, அங்ஙோட்டு இங்ஙோட்டு என மலையாளத்தில் வழங்குவது கவனிக்கத் தக்கது. ஆங்கனம் ஆங்ஙனம் என்னும் வடிவங்களே, முறையே, அங்கனம் அங்ஙனம் எனக் குறுகி வழங்குகின்றன. இங்ஙனமே, இங்கனம் இங்ஙனம் முதலியனவும், இவை யெல்லாம். பாண்டிநாட்டு வழக்கை யறிந்த சொல் லாராய்ச்சியாளர்க்கன்றிப் பிறர்க்குச் செவ்வன விளங்கா.

மறுப்பு 12 : "இடுகுறிப் பெயர், காரணப் பெயர், காரண இடுகுறிப்பெயர் என்ற இவற்றின் வேறுபாட்டைச் சூடாமணி நிகண்டு முதலிய பண்டைய நூல்களை ஓதியுணர்ந்தவர் மறுக்க முன்வரமாட்டார்."

அறுப்பு : சூடாமணி நிகண்டு மண்டலபுருடன் என்னும் சமணர் 16ஆம் நூற்றாண்டில் தொகுத்த சொற்பொருட்டொகுதி. அது இலக்கண நூலுமன்று. ஆதலால், அதை அளவையாகக் கொள்பவர் தமிழியல்பை யறியார் என்பது தேற்றம்.

1. ஆங்ஙனம் என்பது ஆங்கு + அனம் எனப் பிரியும்.

2. அங்கிட்டு என்பது அங்கு + இட்டு எனப் பிரியும்.

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே." என்னும் தொல்காப்பியம் உண்மையானதாம்.

முடிவு: நன்னூல் நன்னூலே என்னுங் கட்டுரைக்கு உண்மையில் எதிர்மறுப்புத் தேவையில்லாவிடினும்,

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் கொல்குறும்பும்" சேரவியலும் இற்றைத் தமிழ்நாட்டின் சீர்கெட்ட நிலை நோக்கி, தமிழ் மாணவர்மருள் நீங்கித் தெருளும் வண்ணம் தென்றலிதழின் கட்டுரையிடச் சிறுமைக்கும் என் ஒழிவு நேரக் குறுமைக்கும் ஏற்ப, சுருங்கச் சொல்லன் முறையில், ஓரளவு வரைந்தேன்.

தமிழ்நாடு தமிழுக்குச் சிறப்புரிமையின்றிப் பொது நாடாயிருக்கு மளவும், தமிழ்க் கொள்கைகள் தலையெடா. அறியாமையிலும் அடிமைத்தனத்திலும் மயங்கிக் கிடக்கும் இளங்காளையர் உள்ளம் தளிர்ப்பெய்துமாறு, தென்றல் வீசுகின்றது. தெளிந்தெழுக.

இதனால், நன்னூல் அறவே தீ நூல் என்பதன்று. அதிலும் சில நற்கூறுகள் உள. ஆயின், தமிழின் உயிர்நாடியான தனித் தன்மைக்கும் தமிழ்மொழி நூலுண்மைக்கும் மாறான பல கருத்துகள் உண்மையின், அது முற்றும் நன்னூலன்று என்பதே, நன்னூல் நன்னூலா? என்னும் கட்டுரைக்கும் இம் மறுப்பறுப்புக்கும் முடிபும் என்க.

– "தென்றல்" 16.11.1957

நன்னெருக்கல் *nannerukkal,* பெ. (n.) *நன்னருக்கல்,2* (யாழ்ப்.) பார்க்க; see *nannarukkal²*.

நன்னெல் *nannel,* பெ. (n.) செஞ்சாலி (பிங்.); a superior paddy of yellowish hue

[நல்¹ + நெல்.]

நன்னெறி *nanneri,* பெ. (n.) 1. (சன்மார்க்கம்) செந்நெறி; righteous conduct, path of virtue, moral life. 'ஏமஞ்சார் நன்னெறியும் சேர்கலார்' (நாலடி.327.). 2. 17ஆம் நூற்றாண்டிலிருந்த சிவப்பிரகாச முனிவரியற்றிய ஒரு நீதிநூல்; a didactic poem of 40 stanzas composed by Šiva-p-piragāša-munivar, 17th c.

[நன் + நெறி.]

நன்னை *nannai,* பெ. (n.) ஏளனம் (பே.வ.); mimicking, mooking, ridiculing.

மறுவ. நக்கல்.

[நன் + நை]

நனந்தம் *nanandam,* பெ. (n.) 1. புன்கு (மலை.); indian beach. 2. சணல்; sunn hemp (L.)

நனந்தலை *nanan-talai,* பெ. (n.) 1. அகன்ற விடம்; expanse "*நனவே களனும் அகலன், செய்யும்*" (தொல். சொல்.859.). "*நனந்தலைப் பேரூ ரெரியுநக்க*" (புறநா.57.). "*கழைபயினனந் தலைக்கறி வளரடுக்கம்*" (புறநா.168.). 2. மண்டலம்; region, dominion. "*பல்வேறு வகைய நனந்தலை ஈண்டிய*" (பதிற்றுப்.59,14.). 3. நடு; (பிங்.) middle "*நாற்றடந்தயிர் கடனனந்தலை நிலங்கீண்டு*" (திருவிளை. அந்நந்குழி.3.). 4. உச்சந்தலை; crown of the head 5. உச்சி (அக.நி.); the highest point, zen.the 6. திசை; cardinal point, direction. "*நால்வேறு நனந்தலை யோராங்கு நந்த*" (பதிற்றுப்.69,16.).

[நல்→நன் + அம் + தலை.]

நனம் *nanam,* பெ. (n) அகற்சி; wide extent, expansiveness "*கவின்கொண்ட நனஞ்சாரல்*" (கலித்.44.). "*கல்லுயர் நனஞ்சாரற்கலந்தியலு நாடகேள்*" (கலித்.52.).

மறுவ. அகலம்.

[நல்→நன் + அம்.]

நனவு¹ *nanavu,* பெ. (n.) 1. விழிப்புநிலை (சாக்கிரம்); wakefulness, opp.to kanavu. "*நனவோ கனவோ வென்பதை யறியேன்*" (மணிமே.8,21.). "*நனவூடொரு பொருளாயிரு நயநங்கொள நின்றான்*" (மதுரை. பதிற்று.84.). 2. தேற்றம்; (சூடா.) certainty. 3. மெய்ம்மை; truth, reality "*நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்*" (பதிற்றுப்.85,12.). 4. பகல்; daylight "*நனவினா னலம்வாட*" (கலித்.35.). 5. விழிப்பு; wakefulness 6. கனவு; dream. 7. மயக்கம் நீங்கல்; being free from drowsyness.

[நல் → நன் → நனவு.]

நனவு² *nanavu,* பெ. (n) உணர்வுநிலையில் உண்மையாக இருப்பது; realization as opposed to dream உங்கள் கனவுகள் நனவாக வாழ்த்துகிறேன். (பே.வ.)

[நல் → நன் → நனவு]

நனவு³ *nanavu,* பெ. (n) 1. களன்; stage. "*நனவுப்புகு விறலியிற் றோன்று நாடன்*" (தொல்.சொல்.377, உரை.). 2. போர்க்களம் (இராமநா.); battlefield. 3. அகலம் (தொல்.சொல்.377.); width, breadth, expanse

நனவோடை *nanavōdai,* பெ. (n.) (உரைநடை இலக்கியத்தில்) குறிப்பிட்ட நேரத்தில், மனத்தில் எழும் எண்ணங்களையும், உணர்வுகளையும் தொடர்ச்சியாக எழுதுதல்; stream of consciouness (as a presentation technique in prose writing) (க்ரி.தற்.தமி.அக.). நனவோடைக் கதை (இக்.வ.)

[நனவு + ஓடை.]

நனா *nanā,* பெ. (n) *கனவு* பார்க்க; see *kanavu.* "*நனாவத்தையி லானவகையை*" (திருமந்.2310.).

நனி¹ *nani,* வி.எ. (adv) அளவிற்கு அதிகமாய், மிகுதியாய்; well abundantly. "*வந்துநனி வருந்தினை வாழியென் நெஞ்சே*" (அகநா.19.).

மறுவ. மிகை.

[நல் → நன் → நனி.]

நனி² *nani,* வி.எ. (adv) பெருமை (பிங்கல.2225.); greatness.

நனிபள்ளி *nanipalli,* பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் சிற்றூர்; a village in Tañjāvūr dist. இன்று புஞ்சை எனச் சுட்டப்படுகிறது. "*செழுந் தரளப் பொன்னி சூழ் திருநனி பள்ளி*" (பெரிய, 34–112,1.).

[நனி + பள்ளி.]

நனை¹–தல் *nanai-,* 4 செ.கு.வி. (v.i.) ஈரமாதல்; to become wet, to be moistened, soaked "*நனைகவுள் யானையால் யானை யாத்தற்று*" (குறள்.678.). முழுதும் நனைந்தவனுக்கு முக்காடு தேவையா? (பழ.). வீட்டுக்கு வரும்போது மழையில் நனைந்து விட்டேன் (இக்வ.).

[நல் → நன் → நனை–.]

நனை²–தல் *nanai-,* 4 செ.கு.வி. (v.i) 1. அரும்புதல்; to bud. "*பிடவ மலரத் தளவு நனைய*" (ஐங்குறு. 499.). 3. தோன்றுதல்; to appear. "*மகிழ்நனை மறுகின் மதுரையும்*" (சிறுபாண்.67.).

நளிர் = குளிர்ச்சி.

நளிர் → நளிர்மை → (நளுமை) → நமை.

நமை → நனை – நமத்தல் = ஈரமாதல்.

(ஒ.நோ.) குளிர் → குளிர்மை → குளுமை.

[நுல் → நல் → நன் → நனை.]

நனைதல், தோன்றுதல், அரும்புதல். "நுல்" என்னும் வேரடி, தோன்றுதல் என்னும் "தலைமைப் பொருண்மையை அடிப் படையாகக் கொண்டது. இத் தோன்றுதற் கருத்தினின்றே நனை–தல் என்னுஞ் சொல் கிளைத்தது.

நனை³–த்தல் *nanai-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஈரமாக்குதல் (வின்.); to wet, moisten, soak

[நமை + நனை–.]

நளிர் → நளிர்மை → (நளுமை) → நமை. நமத்தல் = ஈரமாதல்

நளிர் = குளிர்ச்சி.

(ஒ.நோ.) குளிர் → குளிர்மை → குளுமை.

நனை⁴ *nanai,* பெ. (n) 1. பூவரும்பு (பிங்.); flower-bud. "*மாநனை கொழுதி மகிழ்குயி லாலும்*" (நற்.9.). "*வேப்புநனையன்ன நெடுங்கட்கள்வன்*" (ஐங்குறு 30.). 2. தேன்; honey "*நனைகொள் போது வேய்நது நாதற் பாடுகின்றான்*" (சீவக.1417.). "*நனைவழி வேம்பன்றேரிற்றண்டிக்கு நம்மை யென்னா*" (திருவிளை. மாமனாகவந். 33.). 3. கள்; toddy "*மாரியினளிக்குநின் சாறுட்டு திருவி னை மகிழரனே*" (பதிற்றுப்.65,17.). 4. எறும்பு; ant 5. கச்சோலம்: an aromatic drug 6. யானை வெறி; elephant must

தெ. நான்.

[நல் → நன் → நனை. (வே.க.3:3).]

நனைகை *nanaigai,* பெ. (n) ஈரமாகுகை; becoming wet

[நன் → நனை → நனைகை.]

கையீற்றுத்தொழிற்பெயர்.

நனைந்த *nanainda,* வி.எ. (adv) ஈரமான; wetted

இது பெயரச்ச வடிவம்.

நனைந்தவம் *nanaindavam*, பெ. (n.) சிறுகட்டுக் கொடி; a kind of shrub.

[நனை + தவம்.]

நனைந்துசுமத்தல் *nanaindu-šumattal*, பெ. (n.) 1. (மூட்டை அல்லது பாரத்தை நனைத்துத் தூக்குகை) முன்னிலைமையிலும் மிகக் கடுமையான செயலில், தன்னை உள்ளாக்கிக் கொள்ளுகை (இ.வ.); bearing a burden in a wet or drenched condition. rendering more difficult or irksome, what is already difficult or irksome. 2. உரிய காலத்தில் செயலைச் செய்யாதிருந்து, இடையூறு வந்த பின்பு, மிகுந்த துன்பத்துடன் அதைச் செய்கை; letting pass the proper time and doing a thing under more stringent circumstances, as not selling jewels instead pledging them and paying interest afterwards

[நன் → நனை → நனைந்து + சுமத்தல்.]

நனைபூசனம் *nanai-pūšanam*, பெ. (n.) ஈரம்; wet

[நனை + பூசனம்.]

நனைபொருள் *nanai-poruḷ*, பெ. (n.) நீரில் கரையும் பொருள்; wetting agent.

[நனை + பொருள்.]

நனைவிற்கடா *nanaivirkaḍā*, பெ. (n.) ஈரமில்லா நிலம்; dry place.

நனைவு *nanaivu*, பெ. (n.) ஈரம்; wet. mositure, humidity. "*நனைவிற் கடை*" (தைலவ.தைல.).

[நன் → நனை → நனைவு.]

நா[1] nā, நகரமெய்யும், ஆகார உயிரும், புணர்ந்து பிறக்கும் உயிர்மெய். the syllable formed by adding the long vowel, 'ā' to the consonant 'n'. "*அண்பல்லடி நா முடியுறத் தந வரும்*" (நன், 80.).

நா: நகரத்தின் நெடிலாகிய இவ் வெழுத்து, நகரத்திற்குரிய முயற்சியோடு, வாயை அங்காத்து நீட்டுவதால், இதன் ஒலியை எழுப்புகிறது.

"நகர ஆகாரம்" – "நா" – வரிவடிவம்

கி.மு. 3–ஆம் நூற்றாண்டு முதல், நகர ஆகாரத்தின் (நா) வரிவடிவம், தமிழகக் குகைக் கல்வெட்டுக்களில், பரவலாகக் காணப்படுகிறது. படுக்கைக் கோட்டின் மேல், செங்குத்துக் கோட்டின், வடிவமே, இவ் வரிவடிவத்தின் அடிப்படைக்குறியாகும். கொற்கைப் பானையோட்டில் காணப்படுவதும், இக் குறியே ஆகும். இக் குறியே, தமிழகத்தில் தமிழி என்றும், இந்தியமொழிகளில் தமிழ்பிராமி என்றும், அசோகன் பிராமி என்றும், பெயர்பெற்றது. அசோகன் பிராமிக்கு முந்தியது தமிழ்பிராமி. இதன் காலம் கி.மு.6–ஆம் நூற்றாண்டு. கி.மு.3–ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்திலும், சிறு மாற்றத்துடன் மௌரியர், குசானர், குப்தர் கல்வெட்டுகளிலும், மிகுதியாகக் காணப்படுகிறது. புரோகிருதமொழி எழுத்துக் கல்வெட்டு என்பதை, புரோமி என்று குறியாது, பிரேமி என்று குறிப்பது ஆரியச் சூழ்ச்சியே.

நகரத்திற்கு வலப்புறம் தலைக்கட்டிலிருந்து இழுக்கப்படும் கோடு ஆகாரத்தைக் குறிக்கும். ஏனைய எழுத்துக்களின் வரிவடிவத்தைப் போலவே, இதுவும், அடுத்த வளர்ச்சிக் கட்டத்தில், ஆகாரக்குறி நடுவிலிருந்து இழுக்கப்பட்டது. வழக்கம்போல வலப்புறம் கோடு இழுத்தால், "ங" கரத்தின் உருவத்தைக் காட்டுமாகையால், குழப்பத்தைத் தவிர்க்க, இடையில் கோடு இடப்பட்டது.



செங்கம் நடுகற்களின் பழைய கல்வெட்டுக் களிலும், (கி.பி. 4,5 நூ.) ஆண்டிப்பட்டி, வேந்தன் நாணயத்திலும், இவ் வடிவம் காணப்படும். அதே சமயத்தில் பழைய "ஊ"-வின் வடிவமாக இருந்த இதனோடு, இந்தக்காலத்து ஊகாரம் என்ற தலை, வளைந்த வடிவத்தால் வேறுபட்டது. பின்பு, மறுபடியும் மேலிருந்தே கோடு இழுக்கப்பட்டு, மற்ற எழுத்துக்களோடு ஒத்தநிலையில் வளர்ந்தது.

கி.பி. 8 – ஆம் நூற்றாண்டில், வலப்புறக்கோடு வளைந்து பிரிந்து விட்டது. இஃது, இரண்டாம் பல்லவ பரமேச்சுரவருமனின் திருவதிகைக் கல்வெட்டில் காணப்படும் வரிவடிவம்.



கி.பி. 9 – ஆம் நூற்றாண்டில், நிருபதுங்கனின் (இலால்குடிக்) கல்வெட்டில், காணப்படுவது. இந் நிலையில், நகரத்தை அடுத்து, ஒரு புறமாக வளர்ந்த கோடு தோன்றிற்று.

கி.பி. 14 – ஆம் நூற்றாண்டிற்கு முன்பே, இராசநாராயண சம்புவரையனின், குன்றத்தூர்க் கல்வெட்டின்படி, நகரத்தோடு ஒட்டிய நிலையில் முழுவடிவம் பெற்றது.

விசயநகர ஆட்சிக்காலத்தில், இன்றைய நா. முழு வரிவடிவம் தோன்றிற்று.

நா^{2} *nā*, பெ. (n.) **1.** நாக்கு; tongue. *"யாகாவா ராயினு நா காக்க"* (குறள், 127.). **2.** சொல்; word. *"நம்பிநாவினு ளுலகமெல்லா நடக்கும்"* (சீவக., 316.). **3.** நடு (திவா.); (மய்யம்.); middle, centre. **4.** துலைநா எடைக்கருவியின் முள்; index of a balance *"துலைநா வன்ன சமனிலை யுளப்பட"* (ஆத்திரையன் பேராசிரியன் பொதுப்பாயிரம்). **5.** மணியின் நாக்கு; clapper of a bell *"வாயிற்கடைமணி நடுநா நடுங்க"* (சிலப்.20: 53.). **6.** தீயின் சுடர்; flame-tongue எழுநா (பிங்.). **7.** பூட்டின் தாள் (வின்.); bolt of a lock **8.** திறவுகோலின் நாக்கு (வின்.); wards of a key. **9.** இசைக்குழலின் (நாயனத்தின்) ஊதுவாய் (வின்.); mouthpiece of a music-pipe **10.** அயல் (யாழ்.அக.); nighbourhood **11.** பொலிவு (யாழ்.அக.); splendour

க., நாலகெ(g) **தெ.,** நாலுக.

து., நாளாயீ **ம.** நாக்கு.

[நாலு → நாவு → நா → (வே.க.3:29.).]

நாலுதல் : தொங்குதல், அசைதல், வளைதல், ஆடுதல்.

நால்→நால்கு→நாகு→நாக்கு=வாய்க்குள் தொங்கும் உறுப்பு; அசைத்து ஆட்டி வலிக்கும் துடுப்பு (வே.க.3:29.).

நால்கு→நாகு→நாக்கு : நமது உடம்பில் அமைந்துள்ள மிகச் சிறந்த உறுப்புகளுள், உடம்பின் பாதுகாப்பிற்கும், ஊட்டத்திற்கும் பயன்படுவது. உணவுப் பொருள்களின் சுவையை உணர்ந்து, உடம்பிற்குள் செலுத்துவது மட்டுமின்றி, மனத்திற்கு மகிழ்வையும் உண்டாக்கும்.

உடம்பிற்கு, பயனற்ற உணவுப் பொருள்களை விலக்கும், தலையாய பணியினைச் செய்வது நாக்கேயாகும். இதன் மேற்புறம், சுவையை அறிவிக்கப் பயன்படாது. நாவின் விளிம்புப் பகுதியும், முதல், நடு, கடையென்றமைந்துள்ள இடங்கள்தாம், அனைத்துச் சுவையையும் உணர்ந்து, அறிவிக்குந் திறன் பெற்றவை.

நாவின் முன்பகுதி இனிப்பையும், பின்பகுதி கசப்பையும், நடுப்பகுதி, உப்புச்சுவையையும் உணர்த்தும். நாவின் கீழ்ப்பகுதி, கொழுப்புச் சுவையை அறிவிக்கும்.

ஒவ்வொருமாந்தனும், உடல்வாழ்விலும், உலகவாழ்விலும், வாழ்வாங்கு வாழ்ந்து, வளம் பல பெற்று, நலமடைய, நாவினை நன்முறையில் சொற்காத்துப் பேணிச், சோர்விலா வாழ்க்கை வாழ, நாக்கினை ஓம்ப வேண்டுமென்று, சா. அக. கூறும்.

வாயினுள் தொங்குந் தன்மையில் அமைந்து திகழும். மொழி வாழிடமாகும்; நாவலர், மொழிவலர் ஆவர்.

இஃது ஒரெழுத்துச் சொல்லாகும். பல் வகைப் பொருள் பயக்குந்தன்மைத்து. அடிப்படைக் கருத்து, நாக்கு என்ற பொருளைத் தழுவியது. வாயினுள் நாக்கு எப்படி நடுவில் இருக்கிறதோ, அதைப்போலவே, நடுநிலை என்ற பொருளும், உண்டு.

பேசுவதற்கு நா இன்றிமையாதது போல, நடுவுநிலைமை, மாசற்றவாழ்வு வாழ்வதற்கு இன்றியமையாதது. நீட்சிக்கருத்தினை அடிப்படையாகக் கொண்ட, "நா" – என்னுமிச்சொல், பேச்சு என்ற பொருளையும் தரும். மணியுள் நடுவில் தொங்கும் நாக்கிற்கும், 'நா' என்ற பொருள் உண்டு. துலை(தராசு)வின் நடுவில் எடையைக் குறிக்கும் முள்ளும் 'நா' என்றே, பெயர்பெறும். (நாகசுரத்தின்) நாயனத்தின், ஊதுவாயில் செருகப்படும், *சீவாளி* யெனும் ஊதுநெட்டியும், 'நா' என்றே, பொருள் தரும். யாழ்ப்பாணத்தில் இவ் வோரெழுத்துச் சொல்லிற்கு அயல், பொலிவு என்னும் பொருள்களுண்டு.

நா³ *nā*, பெ. (n.). 1. தவசக்கதிர் (யாழ்ப்.); ear of corn, ear of grain. 2. படகு வலிக்குந் துடுப்பின் பலகை (வின்.) blade of an oar.

நாஇ *nāi*, பெ. (n.) *நாய் (தொல்.எழுத்து, 58 உரை);* பார்க்க; see *dog*.

க., து. நாயி.

[நா + இ → நாஇ.]

நாவினை நாய் எஞ்ஞான்றும் நீட்டிய வண்ணம் இருத்தலால், வந்த பெயராகலாம்.

நாக்கசப்பு *nā-k-kaśappu*, பெ.(n.) மிகு பித்தத்தினால் ஏற்படும் வாய்க்கசப்பு; bitterness of taste experienced when the bile is excited.

[நா + கசப்பு.]

பித்தநீர் அளவிற்கதிகமாகச் சுரத்தலின் அறிகுறியாக, நாவிலேற்படும் கசப்புச்சுவை. இந் நாக்கசப்பு, உடம்பில் மிகுசுரம் இருக்குங்கால் ஏற்படும். இந் நாக்கசப்பு வந்தால், உண்டஉணவு சுவைச்காது; இந் நாக்கசப்பு, உள்காய்ச்சலின் அறிகுறியாகும்.

நாக்கட்டி *nā-k-kaṭṭi*, பெ. (n.) 1. நாக்கிலெழும்புஞ் சிறுசிறு கொப்புளங்கள்; ulceration of the tongue. 2. *நாக்கொப்பளம்* பார்க்க; see *nā-k-koppaḷam*.

[நாக்கு + கட்டி.]

வயிற்றிலுண்டாகும், புண்களின் விளைவாக, நாவிலேற் படுங்கட்டி. ஒவ்வாமையின் விளைவாகவும் உருவாகும்.

நாக்கட்டுப்பாடு *nā-k-kaṭṭu-p-pāḍu*, உணவுக்கட்டுப்பாடு; food restriction நாக்கட்டுப்பாடு உடையவர்களே நலமுடன் நீண்ட நாள் வாழ்வர் (உ.வ.).

மறுவ. உணவுக்கட்டுப்பாடு.

[நா+ கட்டு + படு → பாடு.]

ஈளை நோயாளிகள் குளிர்காலத்தே, நாவைக் கட்டுப்படுத்துவதன் வாயிலாக, இசிவு(இழுப்பு) வாராமல் வாழலாம். இந் நோயாளிகள் பனிக்கூழ் (ஐஸ்கிரீம்) முதலான,

குளிர்மையுணவுகளைத் தவிர்த்து, நாவினைக் கட்டுப்படுத்தி, உணவுக்கட்டுப்பாட்டுடன், மருத்துவர்தம் அறிவுரைப்படி வெப்பந்தரும் உணவுகளையே உண்ணவேண்டும்.

நாக்கடு *nā-k-kaḍu,* பெ. (n.). நாக்கின் பின்புறத்தின் மேல்காணப்படும், முள் போன்ற சிறுசிறு முளை; small elevations found on the back (upper) surface of the tongue.

[நா + கடு.]

நாக்கடுகு *nā-k-kaḍugu,* பெ. (n.). *நாய்க்கடுகு* பார்க்க; see *nāy-k-kaḍugu.*

[நா + கடுகு.]

நாக்கடைப்பான் *nā-k-kaḍaippāṉ,* பெ. (n.). மாட்டுநோய் வகை (மாட்டுவை.); a disease of cattle.

[நாக்கு + அடைப்பான்.]

கூரியமுள் வாய்ந்த, கற்றாழை, கருக்குவேல் முதலான இலைதழைகளை உண்பதால், உண்டாகும் நோய்.

நாக்கடைப்புரட்டி *nā-k-kaḍai-p-puraṭṭi,* பெ. (n.). *நாகவைப்பு நஞ்சு* பார்க்க; see *nāga-vaippu-nañju..*

[நாக்கடை + புரட்டி.]

நாக்கத்தான்பூச்சி *nā-k-kattāṉ-pūcci,* பெ. (n.). *நாக்குப்பூச்சி (இ.வ.)* பார்க்க; see *nākku-p-pūcci.* நாக்கத்தான் பூச்சி குழந்தைகளின் உணவை உண்டு, அவர்களை நோஞ்சான் ஆக மாற்றும் (உ.வ.)

[நாக்கு + அத்து + ஆன் + பூச்சி.]

நாக்கப்பாம்பு *nā-k-ka-p-pāmbu,* பெ. (n.), *நாக்குப்பூச்சி* பார்க்க; see *nākku-p-pūcci.*

ம. நாக்குப்பாம்பு.

[நாக்கு + அம் + பாம்பு.]

[நாக்கம்பாம்பு → நாக்கப்பாம்பு]

நாக்கப்பூச்சி *nā-k-ka-p-pūcci,* பெ. (n.), *நாக்குப் பூச்சி* பார்க்க; see *nākku-p-pūcci.*

[நாக்கு + அம் + பூச்சி.]

[நாக்கம்பூச்சி → நாக்கப்பூச்சி.]

நாக்கரணை *nā-k-karaṇai,* பெ. (n.), நாக்கு நோய் வகை (பரராச. I, 226.); a disease of the tongue.

[நாக்கு+அரணை.]

அரணை = செந்நிறக் கோடுகளுடன் கூடியது. இந் நச்சுயிரியைப் போன்ற நிறத்துடன், நாக்கில் கட்டி ஏற்படும்; ஏதும் உண்ண வியலாதபடி நாக்கில், எரிச்சலுடன், வலியுண்டாகும்.

இந் நோய் ஏற்பட்ட நாக்கு, செந்நிறக் கோடுகளுடன், அரணை போன்றிருப்பதால், இப் பெயர் ஏற்பட்டது.

நாக்கரளை *nā-k-karaḷai,* பெ.(n.). நாக்கு நோய் வகை (யாழ்.அக); disease of the tongue. Perhaps pappilloma.

[நாக்கு+அரணை→அரளை.]

நாவில் அரிப்பெடுக்குஞ், சிறுசிறு கட்டிகளை உருவாக்கும் நோய்.

நாக்கரிக்கிரந்தி *nā-k-kari-k-kirandi,* பெ.(n.) அரிக்கும் உணர்வுடன் நாக்கிலெழும் சிறுசிறு கொப்புளம்; ulceration of the tongue due to syphilitic causes.

மறுவ. நாக்கரளை.

[நா → நாக்கு + அரிக்கிரந்தி.]

நாக்கரிப்பு *nā-k-karippu,* பெ. (n.). 1. *நாக்கரிக் கிரந்தி* பார்க்க; see *nā-k-karikirandi.* 2. வளி மிகுதியால் நாக்கிலேற்படும் உப்புச்சுவை; salin taste in the mouth, when the wind is excited in the system.

[நாக்கு + அரிப்பு.]

நா + கரிப்பு என்று பிரித்து, வழங்கும் வழக்கும் உண்டு.

நாக்கழற்சி *nā-k-kaḻaṟci,* பெ. (n) *நாக்குப்புண் (இ.வ.)* பார்க்க; see *nā-k-ku-puṇ.*

[நாக்கு+அழற்சி.]

நாக்களாம்பூச்சி *nā-k-kaḷām-pūcci,* பெ. (n). மண்புழு; earth.worm நாக்களாம் பூச்சி உழவர்களின் நண்பன் (இ.வ.).

மறுவ. நாங்கூழ்.

[நாங்கூழ் + ஆம் + பூச்சி.]

[நாக்களம் → நாக்களாம் + பூச்சி.]

ஒ.நோ. கொப்பூழ்→தொப்புள்

நாக்களின்கற்பம் *nākkaḷiṉ-kaṟpam,* பெ. (n). காக்கை, கரிச்சான், செந்தலைக் கழுகு முதலான பறவைகளின், நாக்கினைக் கொண்டு செய்யப்படும் வாணாள் மருந்து; a rejuvenating powder prepared by dying and then pounding the tongues of crow, black bird, red brahmini kite and vulture

நாக்கறு—த்தல் *nā-k-kaṟu-,* 4 செ.குன்றாவி. (v.t.). கத்தியால் நாக்கினைத் துண்டித்தல்; to excise of the tongue - Glossotomy

[நாக்கு + அறு—.]

நாக்கறுத்தான் *nā-k-kaṟuttāṉ,* பெ. (n.). *நாக்கறுத்தான் புல்* பார்க்க; see *nā-k-kaṟuttāṉ-pul.*

[நாக்கு + அறுத்தான்.]

நாக்கறுத்தான்புல் *nā-k-kaṟuttāṉ-pul,* பெ. (n). தருப்பைப்புல் (M.M);sacrificial grass or kusa grass-Erogrostis cynosrinoides the blades of this grass are generally sharp It alludes to a leged that serpents which greedily lick the honey fallen on the grass get their tongue forked

[நாக்கு + அறுத்தான் + புல்.]

கூர்மையான இலையினையுடைய தருப்பை. இக் கூர்மையான புல்லின் மேலிருக்கும் தேனைப் பாம்புகள் ஆர்வத்துடன் நக்க வருங்கால், அவற்றின் நாக்குகள் அறுபடும் என்று சா.அக. கூறும்.

நாக்கறுப்பு *nā-k-kaṟuppu,* பெ. (n.) 1. நாக்கை அறுக்கை; incision of the tongue 2. நாக்கிலேற்படும் கறுப்பு நிறம்; the dark colour of the tongue.

[நா + கறுப்பு.]

நாக்கில் கண்ணுக்கு எட்டாத நுண்ணுயிரி களால் ஏற்படும் கறுப்பு. (சா.அக.).

நாக்கனிடுங்கூர்மை[1] *nākkaṉiḍu-ṅ-kūrmai,* பெ. (n.). கந்தகவுப்பு (சங்.அக.); impure chloride of sodium, black salt

நாக்கனிடுங்கூர்மை² *nākkaṉiḍuṅ-kūrmai,* பெ. (n.). கந்தக உப்புடன் ஏனைய கடைச்சரக்குகளைக் கொண்டு உருவாக்கப் படும் உப்பு (சா.அக.); a prepared salt from sulphur mixed with other ingredients.

நாக்காம்பூச்சி *nākkām-pūcci,* பெ. (n.), நாக்குப்பூச்சி (இ.வ.), வயிற்றில் நோயினை ஏற்படுத்தும் புழு; round worm, thread worm Ascaris lumbricoides. (L.)

[நாக்குப்பூச்சி → நாக்காம்பூச்சி]

ஒநோ: மண்கட்டி-மண்ணாங்கட்டி.

நாக்காளப்பூச்சி *nākkāḷa-p-pūcci,* பெ. (n), *நாகப்பூச்சி* பார்க்க; see *nāga-p-pūcci.*

மறுவ. நாக்குளிப்பூச்சி.

[நாக்காளம்பூச்சி → நாக்காளப்பூச்சி]

நாக்கி *nākki,* பெ. (n). மனித உடம்பில் உள்ள பத்து நாடிகளுள் ஒன்று; one of the ten tuberous vessels of the human body.

மறுவ. அலம்புசா.
(அலம்புடை).

எருவாயின் இறுதிப் பகுதிவரை, உணர்வு நரம்புகளைத் தட்டியெழுப்புந் தன்மை மிக்கதென்று, சா.அக. கூறும்.

நாக்கியாக்கிரம் *nākkiyākkiram,* பெ. (n,). 1. கருஞ்சுண்டி (யாழ்ப்.); a species of sensitive tree. 2. முட்செடிவகை (யாழ்.அக.); a thorny shrub.

நாக்கிரந்தி *nā-k-kirandi,* பெ. (n.). *நாக்குப்புண் (யாழ்.அக.)* பார்க்க; see *nākku-p-puṇ*

[நா + SKt. கிரந்தி]

இணைவிழைச்சு நோய் கொண்ட பெண்களைப் புணருவதால், ஆடவர்தம் நாக்கிலேற்படும் சிறுசிறு கொப்புளவகை என்று சா. அக. கூறும்.

நாக்கில்வை-த்தல் *nākkil-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஒருவர்தம் வளர்ச்சியும், ஆக்கமுங்கண்டு, பழித்துக் கூறுதல்; to slander *"அவனை நாக்கில் வைத்துக் கரித்துக் கொட்டுகிறான்"* (இக்.வ.) 2. நாக்கில் வைத்துச் சப்பிச்சாப்பிடும் இருமல் மாத்திரை; chewable cough tablets etc. நச்சிருமலுக்கு நாக்கில் வைத்துச் சப்பிச்சாப்பிடும் (மாத்திரை) குளிகை நல்லது. (இக்.வ.). 3. சிறுவர் நாக்கில்வைத்துச் சுவைக்கும் இனிப்பு; sweets consuming by the children, by tasting with tongue

[நாக்கில் + வை-.]

ஒருவர்தம், ஆக்கமும் ஆள்வினையுடைமையும், அறிவுத்திறனுங் கண்டு, உள்ளங்குமைந்து, பொறாமையால் வெதும்புந் தன்மையரைக் குறிக்கும், மரபார்ந்த நாட்டுப்புற வழக்கு இஃதென்று உணர்க. மேலும், பெருந் தன்மையாளர்தம், சிறுசிறுபிழைகளைப் பெரிதுபடுத்தி, நாக்கில் வைத்து நச்சுரை நவிலும், சிறுமதியாளர்தம் செயலென்றறிக. இப் பண்பாளர் நாட்டுப் புறத்தும் நகர்ப்புறத்தும் மலிந்துள்ளமை கண்கூடு.

நாக்கிலாம்பூச்சி *nākkilām-pūcci,* பெ. (n.) *நாக்களாப்பூச்சி* பார்க்க; see *nākkaḷā-p-pūcci*

[நாக்களாம்பூச்சி → நாக்கிலாம்பூச்சி.]

நாக்கிலிரு-த்தல் *nākkil-iru-,* 4 செ.குன்றாவி. (V T) பெ. (n.) பிறரின் வயிற்றெரிச்சலைக் கொட்டி, கடுஞ்சொற்களுக்கு ஆட்படுதல் அல்லது சாவித்தலுக்குள்ளாதல்; to be cursed by

causing irritation to others. நல்லமனிதர் நாக்கிலிருந்து நாசமாய்ப் போகாதே (உ.வ.)

[நாக்கில் + இரு–.]

நாக்கிழுப்பு *nākkiḻuppu,* பெ. (n.). நாக்குத் தடிப்பினாலேற்படும் நோய்; a disease of the tongue, marked by the thickness of the tongue

[நாக்கு + இழுப்பு.]

நாக்குத் தடிப்பினாலுண்டாகும், இந் நோய் குணமாவதற்கு கடுகுக் கொதிநீரை, நன்றாகச் சுண்டக் காய்ச்சித் தேன் அல்லது புளிப்புக்காடி சேர்த்து, வாய் கொப்புளிக்க வேண்டும்.

நாக்கு[1] nākku, பெ. (n.) **1.** உணவைச் சுவைத்து உண்ணவும் பேசவும் பயன்படும் வாய்க்குள் அமைந்திருக்கும் தொங்கு தசைப்பகுதி; tongue is a muscular organ of speech and taste

க., நாலகெ. தெ., நாலுக. மா., நாக்கு. து.

[நால் → நால்கு → நாகு → நாக்கு.] வாய்க்குள் தொங்கும் உறுப்பு. (வே.க.3:29.)



நாக்கு[2] nākku. 4 பெ. (n.). மரக்கட்டையின் விளிம்பில் தனியே புடைத்து நிற்கும் நாக்குப் போன்ற அமைப்பு; tenon.

[நால்கு → நாகு→நாக்கு.]

அசைத்து ஆட்டி வலிக்கும் துடுப்பு. (வே.க.3:29.)

நாக்குக்கறு—த்தல் nākku-k-kaṟu-. 4 செ. குன்றாவி. (v.t.). *நாக்கறு—த்தல்* பார்க்க; see *nākkaṟu-*.

[நாக்கு + கறு–.]

நாக்குக்கிளிஞ்சல் *nākku-k-kiḷiñjal,* பெ. (n.). நீர்வாழ் உயிரி; a kind of shell.

[நாக்கு + கிளிஞ்சல்.]



நாக்குக்குளறல் *nākku-k-kuḷaṟal,* பெ. (n.). **1.** பேச்சுத் தடுமாறுகை; faltering **2.** நா செயல் இழத்தல்; having tongue unable to move freely or tongue tied.

[நாக்கு +உளறல்.]

நாக்குச்சப்பு—தல் *nākku-c-cappu-,* 5 செ. குன்றாவி. (v.t.). குழந்தைகள் பாலைச் சுவைத்துக் குடித்தல்; to make a shrap noise with the tongue as is done by a child when sucking.

[நாக்கு + சப்பு–.]

நாக்கும், மேலுதடும் சேர்ந்து இயங்குதல், சப்புதல் என்றும், மேலுதடும் கீழுதடும் சேர்ந்து இயங்குதல், உறிஞ்சுதல் என்றும், மக்கள் வழக்கில் குறிக்கப்படும்.

நாக்குச்சாதல் *nākku-c-cādal,* தொ.பெ.(vbl.n). நா சுவை உணர்ச்சியை இழத்தல்; losing the sense of taste, as tongue.

[நாக்கு + சாதல்.]

'தல்' லீற்றுத் தொழிற்பெயர்.

முதுமையிலும், நெடுநாள் நோய்வாய்ப்பட்ட ஞான்றும், நாக்கு மரத்துப்போதலை நாக்குச் சாதல் என்று குறித்தல் உலகவழக்கு.

நாக்குச்சூலை *nākku-c-cūlai,* பெ. (n.), நாக்கில் உண்டாகும், ஒரு குத்தல் நோய்; pricking or gouty pain of the tongue - Glossagra.

[நாக்கு + சூலை = நாக்கில்]

வெப்ப மிகுதியால் ஏற்படும் குத்தல்நோய்.

நாக்குச்செத்துப்போ-தல் *nākku-c-cettu-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.). 1. *நாக்குச் சாதல்* பார்க்க; see *nākku-c-cādal.* 2. உணவின் சுவையை இழந்தது போல் உணர்தல்; to loose sensation to get fed up நோயுற்ற காலத்தில் நாக்குச் செத்துப் போனதால் உடம்பு தேறவில்லை (இக்.வ.). உப்பில்லாக் கஞ்சியை மட்டுமே குடித்துக் குடித்து நாக்குச் செத்துப் போய்விட்டது (உ.வ.).

[நாக்கு + செத்து + போ-.]

நோயுற்ற காலத்தும், அகவை முதிர்ந்து நாட்பட்ட காய்ச்சலால் உடல் நலிவுற்ற காலத்தும், நாக்குச் சுவையறியும் தன்மையினை இழத்தல் இயல்பேயாகும். நீண்ட நாள் நோய் வாய்ப்பட்டோர், மருத்துவரின் அறிவுரையின் படி, காரவுணவைக் குறைத்துக் கஞ்சியை மட்டுமே, அல்லது விலக்கு (பத்திய) உணவை உண்பதால், சிறிது, காலத்திற்குச் சுவையறியுந் தன்மையை நா இழக்கும்.

நாக்குச்சொறசொறப்பு *nākku-c-cora-corappu,* பெ. (n.). நாக்கின் மேற்பகுதியில் முள்பாய்கை; roughness of the surface of the tongue.

[நாக்கு + சொறசொறப்பு.]

காய்ச்சலால் ஏற்படும் இச் சொறசொறப்பால், எந்த உணவும் சுவைக்காது என்று, சா. அக. கூறும்.

நாக்குட்டிநகசம்வேர் *nākkuṭṭi-nagaśam-vēr,* பெ. (n.) *நாய்க்குட்டிச் செடி* பார்க்க; see *nāykkuṭṭi-c-ceḍi.*

[நாக்குட்டி + நகசம்வேர்.]

நாக்குண்ணி *nākkuṇṇi,* பெ. (n.). நாக்கைத் தின்று கொண்டே போகும் ஒருவகைக் கட்டி; cancer of the tongue

மறுவ. நாப்புற்று, நாவறளை.

[நாக்கு + உண்ணி.]

(ஒருகா; நாவுண்ணி → நாக்குண்ணி)

உண்ணிப்புழு மற்றொரு உயிரியின் அரத்தத்தை உறிஞ்சிச் செயலிழக்கச் செய்வது போன்று, நாவைச் சிதைக்கும் புற்றுநோய். என்ற சா.அக. கூறும்.

நாக்குத்தட்டு-தல் *nākku-t-taṭṭu-,* 5 செ.குன்றா.வி. (v.t.). நாக்கினால் ஒலி உண்டாக்குகை; to make a sharp sound with the tongue when tasting.

[நாக்கு + தட்டு–.]

உணவைச் சுவைத்துச் சுவைத்துச் சப்புக் கொட்டிச் சாப்பிடும் பொழுது, ஏற்படும் நாக்கொலி.

நாக்குத்தட்டுகை *nākku-t-tattugai,* பெ. (n.). 1. திக்கிப் பேசுகை (வின்.); stammering. 2. பூட்டின் நாக்குக் கெடுகை; derangement of the bolt of a lock.

[நாக்கு + தட்டுகை.]

நாக்குத்தடித்தல் *nākku-t-taḍittal,* பெ. (n.). நா மரத்துப்போகை; stiffness or rigidity of the tongue due to chewing of betel.

[நாக்கு + தடித்தல்.]

நாக்குத்தடிப்பு *nākku-t-taḍippu,* பெ. (n.). 1. நாக்குப் பருமன்; tongue getting thick. 2. *நாக்குத் தடித்தல்* பார்க்க; see *nākku-t-taḍittal*

[நாக்கு + தடிப்பு.]

நாக்குப் பருமனால் ஏற்படும் நோயாகும். இந் நோய்க்குக் கடைச் சரக்குகளுடன், மருதம் பட்டையினைச் சேர்த்துச் சுண்டக் காய்ச்சிக் கருக்குநீர் வைத்துக் குடிப்பதால் தீரும். (சா.அக.).

நாக்குத்தப்பல் *nākku-t-tappal,* தொ.பெ. (vbl. n.) 1. *நாக்குத் தப்பு–தல்* பார்க்க; see *nākku-t-tappu-.* 2. உணவைச் சுவைத்துச் சுவைத்துச் சப்புக்கொட்டிச் சாப்பிடுதல்; a sharp sound with the tongue when tasting 3. *நாக்குச்சப்பு* பார்க்க; see *nākku-c-cappu.*

[நாக்கு + தப்பல்.]

அல் ஈற்றுத் தொழிற்பெயர்.

நாக்குத்தப்பு–தல் *nākku-t-tappu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. பேச்சுறுதி தவறுதல்; to fail in a promise. *'அவன் நாக்குத் தப்பினான்'.* *"நாக்குத்தப்புதல் அவருக்குக் கைவந்தகலை"* (உ.வ.). 2. பொய் சொல்லுதல்; to speak falsely. நாக்குத் தப்புதலை அரசியல் தலைவர்கள் பிழைப்பாகக் கொண்டுள்ளனர் (உ.வ).

மறுவ. தவறிப்பேசுதல், மாற்றிப்பேசுதல்.

[நாக்கு + தப்பு–.]

தல் ஈற்றுத்தொழிற்பெயர்.

நாக்குத்தம்பனம் *nākku-t-tambaṉam,* பெ. (n.) 1. நாக்குச்செயலிழக்கும்படி செய்கை; arresting of the movements of the tongue 2. நாவினைப் பேசவொட்டாது இசிவு ஏற்படுத்துகை; pull of the tongue and there by rendering one unable to speak

[நாக்கு + தம்பனம்.]

நாக்குத்தவறு–தல் *nākku-t-tavaṟu-* 5 செ.கு.வி.(v.i.) *நாக்குத் தப்பு –.* பார்க்க; see *nākku-t-tappu-.*

[நாக்கு → தவறு–.]

நாக்குத்தள்ளல் *nākku-t-taḷḷal,* பெ. (n.) *நாக்குத் தள்ளு–*தல் பார்க்க; see *nākku-t-taḷḷu-dal.*

[நாக்கு+தள்ளல்]

நோய் அல்லது வேறு செயல்களால், நாக்கு வெளியே தள்ளல்.

நாக்குத்தள்ளு–தல் *nākku-t-taḷḷudal,* தொ.பெ. (vbl.n.) வாயினின்றும் நா வெளிவருதல்; the protrudiny of the tongue outside the mouth

[நாக்கு + தள்ளுதல்.]

நாக்குத்தாபிதம் *nākku-t-tāpidam,* பெ. (n.) *நாக்குப்புண் (இ.வ.)* பார்க்க; see *nākku-p-puṇ.*

[நாக்கு + Skt. *தாபிதம்.]*

நாக்குத்தாளம்போடுதல் *nākku-t-tāḷam-pōḍutal,* பெ. (n.) **1.** உணவு கொள்ள விரும்புகை; being greedy for food. **2.** வரையறையின்றி பகடி செய்தல் (இ.வ); indutlsing in unrestrained ridicule.

[நாக்கு + தாளம் + போடுதல்.]

நாக்குத்தான்பூச்சி *nākkuttāṉ-pūcci,* பெ. (n.) *நாக்குப்பூச்சி* பார்க்க; see *nākku-p-pūcci*

[நாக்குத்தான் + பூச்சி.]

நாக்கொத்தான் பூச்சி → நாக்கத்தான் பூச்சி → நாக்குத்தான் பூச்சி என்பன பேச்சு வழக்குத்திரிபு

நாக்குத்திமிர்[1] *nākku-t-timir,* பெ. (n) நாக்கின் உணர்ச்சியறல்; loss of sensation of the tongue - Glossoplegia.

[நாக்கு + திமிர்.]

நாக்குத்திமிர்[2] *nākku-t-timir,* பெ. (n.) செல்வச் செழிப்பிலும், பதவி ஆசையிலும் ஆட்பட்டு, அறிவு மிகுதியை வெளிக்காட்டிப் பிறரை எடுத்தெறிந்து, தன் முனைப்புடன் பேசுகை; egotistic talk

[நாக்கு + திமிர்]

நாக்குத்திருந்துதல் *nākku-t-tirundudal,* பெ. (n) எழுத்தின் பலுக்கம் திருத்த மாயிருக்கை; clearness and precision in pronunciation.

[நாக்கு + திருந்துதல்.]

நாக்குத்தீட்டு[1]**-தல்** *nākku-t-tīṭṭu-* 5 செ.கு.வி. (v.i) உணவை மிகுதியாக விரும்புதல்; to hanker after food.

[நாக்கு + தீட்டு–.]

நாக்குத்தீட்டு[2]**-தல்** *nākku-t-tīṭṭu-.* 5 செ.குன்றாவி (v.t) புகழ்தல் (யாழ்ப்.); to praise one-self

[நாக்கு + தீட்டு–.]

நாக்குத்துடிப்பு *nākku-t-tuḍippu,* பெ. (n) **1.** *நாக்குத்தாளம் போடு–* பார்க்க; see *nākku-t-tāḷam-pōḍu-,* **2.** *நாக்குநீளம்,* பார்க்க; see *nākku-nīḷam*

[நாக்கு + துடிப்பு.]

நாக்குத்தூக்கல் *nākku-t-tūkkal,* தொ.பெ. (vbl n.) உணவில் மிகு சுவையையே எப்போதும் விரும்புதல்; fondness towards spicy edibles 'நாக்குத்தூக்கலாக உண்ணுவதையே சிலர் குறிக்கோளாகத் கொண்டுள்ளனர்'.

[நாக்கு + தூக்கு + அல்.]

'அல்' தொழிற்பெயர் விகுதி.

உறைப்பும், புளிப்புங் கலந்த காரசாரமுள்ள உணவுண்ணுதலே நாக்குத் தூக்கல் ஆகும். நறுமணங்கமழும் நாற்சுவைமிக்க நல்லுணவு களைப் பற்றிக் கழககாலச் செய்யுட்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. நளபாகம் என்பது தமிழருக்கே உரிய நல்லூண் பற்றிய செய்தியாகும். உணவில் மிகுசுவை சேர்க்கும் உப்பு, காரம், புளிப்பு போன்றவற்றைக்

குறைப்பதே உடலுக்கு நலந்தரும் என்று மருத்துவர் கணித்துள்ளனர். நடுத்தரவயதிற்குப் பின்பு, நாக்குத் தூக்கல் உணவை விட, உடல் நலத்தைப் பேணும் உணவே, சாலச் சிறந்தது.

ஏலம், கிராம்பு, மிளகு, இஞ்சி பச்சைக்கருப்பூரம் போன்ற நாக்குத்தூக்கற் சுவை நல்கும் பொருட்களை பல்வேறு உணவுகளில் குறிப்பிட்ட அளவுகளில் இன்றும் பயன்படுத்துகின்றனர்.

நாக்குத்தெறிக்கப்பேசு-தல் *nākku-t-terikka-p-pēsu-*, 5 செ. குன்றாவி. (v.t.) பெரியோரைப் பழித்தல்(வின்.); to insult a superior, to speak in an unbecoming manner.

[நாக்குத்தெறிக்க + பேசு-.]

நாக்குத்தேய்-த்தல் *nākku-t-tēy-*, 4செ. குன்றாவி. (v.t.) நாக்குவழித்தல்; to clean of the tongue

[நாக்கு + தேய்-.]

நாக்குத்தொங்கல்[1] *nākku-t-toṅgal*, பெ. (n.) முடக்குவளி நோயால் நாக்கு வெளிக் காணும்படி, கீழ்தள்ளல் ; paralytic protrusion of the tongue

[நாக்கு + தொங்கல்.]

நாக்குத்தொங்கல்[2] *nākku-t-toṅgal*, பெ. (n.) நாவின் சுவைக்கு முதன்மை தருகை; giving importance to eating tasty-food

[நாக்கு + தொங்கல்.]

நாக்குநரம்பற்றவன் *nākku-narambaṟṟavaṉ*, பெ. (n.) 1. அளவுகடந்து பேசுபவன்; a man who wags his tongue. 2. சொன்னசொல்லை மறுப்பவன்; one who denies previous speech.

[நாக்கு + நரம்பு + அற்றவன்.]

நாக்குநீட்டு-தல் *nākku-nīṭṭu-*, 5 செ.கு.வி (v.i.) 1. அளவுகடந்து பேசுதல்; to wag one's tongue. 2. ஆள் இருவர்தம் உரையாடலில், தொடர்பில்லாத மூன்றாமவர் கருத்துக் கூறுதல்; third person's unwarranted opinions.3. பெரியோர் அல்லது ஆசிரியர் உரையில் குறுக்கிடுதல்; to intervene in scholars or teachers speech

[நாக்கு + நீட்டு-.]

நாக்குநீள்(ளு)-தல் *nākku-nīḷ(ḷu)-* 5 செ.கு.வி (v.i.) 1. விருப்பமிகுதல்; to be greedy; to have unbounded desires "*நாக்கு நீள்வன் ஞானமில்லை*" (திவ். திருவாய். 4. 6:7). 2. கடுமையாய்ப் பேசுதல்; to be reckless in speech, to have a long tongue 3. அளவுகடந்து பேசுதல்; to talk endlessly 4. வரம்பு மீறுதல்; to speak in an impertinent.

[நாக்கு + நீள்(ளு)-.]

நாக்குநீளம் *nākku-nīḷam*, பெ. (n.) 1. உணவு விருப்பம்; hankering for food, as that of a glutton 2. கடும்பேச்சு; reckeless of opeech. 'அவளுக்கு நாக்கு கொஞ்சம் நீளம்' (பே.வ.).

[நாக்கு + நீளம்.]

நாக்குநோய் *nākku-nōy*, பெ. (n.) நாக்கிலேற்படும் ஆறுவகை நோய்கள்; disease of the tongue, it is of six varieties

[நாக்கு + நோய்.]

நாக்குப்பாம்புநோய் *nākku-p-pāmbu-nōy,* பெ. (n.) *நாக்குப்பூச்சி நோய் (இ.வ.)* பார்க்க; see *nākku-p-pūcci-nōy.*

[நாக்குப்பாம்பு + நோய்.]

நாக்குப்பிடிப்பிணைப்பு *nākku-p-piḍi-p-piṇaippu,* பெ. (n.) ஒரு கல்லின் ஒரு பக்கத்தில் நாக்குவடிவ முனை அமைத்து, மற்றொரு வடிவ முனை பொருந்துமாறு துளையிட்டு, அத் துளையில் முனையைப் புகுத்தி இணைக்கை; a tongue shaped stone-coupling

நாக்குப்பிடிப்பு *nākku-p-piḍippu,* பெ. (n.) நாக்கின்அடிப்பகுதியிலுண்டாகும் சதைப் பிடிப்பு; a defect at the inferior surface of the tongue- tongue tied.

மறுவ: நாக்கு முடிச்சு

[நாக்கு + பிடிப்பு.]

நாக்குப்பிளவை *nākku-p-piḷavai,* பெ. (n.) நாக்கில் தோன்றும் கட்டி; carbancle of the tongue-

[நாக்கு → பிளவு → பிளவை.]

(அறுவையால்) பிளக்கும்படியான கட்டிக்குப் பிளவை என்பதாகக் கொள்ளலாம்.

(ஒ.நோ.) பிளந்த நாக்கினைப் போன்ற வடிவினது பிண்ணாக்கு.

நாக்குப்புண் *nākku-p-puṇ,* பெ. (n.) நாவில் தோன்றும் நோய்வகை (வின்.); inflammation of the tongue, Glossitis.

[நாக்கு + புண்.]

நாக்குப்புரட்டு *nākku-p-puraṭṭu,* பெ. (n) பொய் (யாழ். அக.); lie

[நாக்கு + புரட்டு.]

மெய்யினை அமிழ்த்தி, பொய்யினை உயர்த்திப் புகலும் பொய்மொழிகளே நாக்குப்புரட்டு. பொய்புரட்டு, புனைசுருட்டு எனும் வழக்கும் நாக்குப் புரட்டினையே குறித்தது.

நாக்குப்புரள்(ளு)-தல் *nākku-p-puraḷ(ḷu)-,* 16 செ.கு.வி (v.i.) சொல்தவறுதல்; to fail in one's word. 'அவன் நாக்குப் புரளுகிறான்' (உ.வ).

[நாக்கு + புரள்(ளு) + உ -.]

"உ" சாரியை. "தல்" தொ.பெ.ஈறு.

நாக்குப்புரளாமை[1] *nākku-p-puraḷāmai,* பெ. (n.). நாக்கை அசைக்க இயலாமை; limitation of the movement of tongue-tongue tie.

நாக்குப்புரளாமை[2] *nākku-p-puraḷāmai,* பெ. (n.). சொல் தவறாமை; keeping up one's word. நாக்குப் புராளாமையே ஒருவனை உயர்ந்த மனிதானாக்கும் (இக்.வ.).

மறுவ: மாற்றிப் பேசாமை.

[நாக்கு + புரளாமை.]

நாக்குப்புற்று *nākku-p-puṟṟu,* பெ. (n) நாவிலுண்டாகும் புண்வகை (யாழ்.அக.); cancer of the tongue.

[நாக்கு + புற்று]

நாக்கில் உருவாகும் கொப்புளங்களால் ஏற்படும் புற்று. (சா.அக.).

நாக்குப்பூச்சி[1] *nākku-p-pūcci,* பெ. (n.) **1.** நாக்கிலுண்டாகும் பூச்சிகள்; tongue-worm. **2.** மலப்பைச் சிறுபுழு; round worm, thread worm, Ascaris lumbricoides. **3.** வயிற்றிலுள்ள நீண்ட புழுவகை; tape-worm. **4.** நாங்கூழ்; earth worm. **5.** *நாகப்பூச்சி* பார்க்க; see *nāga-p-pūcci.*

மறுவ. குடற்புழு.

[நாக்கு + பூச்சி.]

பெரும்பாலும் மாந்தர்தம் குடலிற் காணப்படும் பூச்சிகளை, நாக்குப் பூச்சி என்று சா.அக.கூறும். இப் பூச்சிகள் உடம்பின் ஆற்றலால், உயிர் வாழ்கின்றன. இவற்றின் விளைவாக வயிற்றுவலி, இசிவுநோய், அரத்தசோகை முதலான நோய்கள் ஏற்படுகின்றன என்று சா.அக. கூறும்.

நாக்குப்பூச்சி[2] *nākku-p-pūcci,* பெ. (n.) விலங்குகளின் உறுப்புகளில் காணப்படும் பூச்சி; a genus of worm found in the organs of animals. - Porocephalus.

[நாக்கு + பூச்சி.]

நாக்குப்பூச்சிநோய் *nākku-p-pūcci-nōy,* பெ. (n.) வயிற்றிற் பூச்சியுண்டாக்கும் நோய்; intestinal worms (m.l).

மறுவ: நாக்குப்பாம்பு நோய்.

[நாக்குப் பூச்சி + நோய்.]

நாக்குப்பூச்சியாணி *nākku-p-pūcci-y-āṇi,* பெ. (n) சிறுகொண்டையுள்ள சிற்றாணி வகை (இவ); a nail with the small head.

மறுவ. நாவூத்தை.

[நாக்குப்பூச்சி + ஆணி.]

நாக்குப்பூர்த்தல் *nākku-p-pūrttal,* பெ. (n) *நாக்குமா* பார்க்க; see *nākku-mā.*

[நாக்கு + பூர்த்தல்.]

போர்த்தல்→பூர்த்தல்.

நாக்குமம் *nākkumam.* பெ. (n.) சுக்கு; dry ginger.

[நாக்கு → நாக்குமம்.]

நாக்குமறுத்தல் *nākku-maṟuttal,* பெ. (n.) நாக்கு மரத்து, உணர்ச்சியற்றுப் போகை; loss of sensation of the tongue-Glossoplegia

[நாக்கு + மரத்தல் → மறத்தல் → மறுத்தல்.]

நாக்குமா *nākku-mā,* பெ. (n) நாக்கில் படரும் ஊத்தை; white layer on the surface of the tongue.

[நாக்கு + மா.]

மா:– = உணவுண்டு உறங்கியெழுந்த நிலையில், நாவிற் படர்ந்து காணப்படும் ஊத்தை.

ஊற்றை → ஊத்தை.

நாக்குமாபடிதல் *nākkumā-paḍidal,* பெ. (n) நாக்கின் மேல் மாவைப்போல் வெண்மையாகப் படரும் ஊத்தை; tongue covered with a whitish layer - Coated tongue

[நாக்கு + மா + படிதல்.]

நாக்குமாறி *nākku-māṟi,* பெ. (n.) முன்னுக்குப்பின் முரணாகப் பேசுபவன்–ள்; man who talks inconsistently. 'நாக்கு மாறிகளே நாட்டில் பெரிய மனிதர்களாக உலாவருகின்றனர்' (இ.வ.).

மறுவ: பேச்சுமாறி.

[நாக்கு + மாறி.]

நாக்குமீன் *nākku-mīṉ,* பெ. (n.) 1. கடல் மீன்வகை; indian sole, Pleuronectida solea 2. பதினாறு அங்குலம் வரை வளர்வதும் கருநிறமுள்ளதுமான வாரையென்னு மீன்வகை; flat fish, brownish or purplish black, attaining 16 in. in length, Psettodes erumier.

தெ., நாலுகசேப. ம., நாக்குமீன்.

[நாக்கு + மீன்.]

உருவானும் நிறந்தானும், நாக்குப் போற் காணப்படும், கடல்மீன்

நாக்குமீன்வகை

1. எருமைநாக்கு மீன்.
2. கடல்நாக்கு மீன்.
3. திட்டைநாக்கு மீன்.
4. தடிநாக்கு மீன்.
5. வெள்ளைநாக்கு மீன்.
6. வரிநாக்கு மீன்.
7. கத்திநாக்கு மீன்.
8. பட்டைநாக்கு மீன்.

நாக்குமுடிச்சு *nākku-muḍiccu,* பெ. (n) நாக்குப் பிடிப்பு; tongue tie.

[நாக்கு + முடிச்சு.]

நாக்குமுள் *nākku-muḷ,* பெ. (n.) நோயினால் நாக்கில் காணப்படும் முள்ளைப் போன்ற எழுச்சி; roughness of the tongue due some diseases-Furred tongue.

மறுவ. களசுண்டி

[நாக்கு + முள்.]

நாக்குமூக்கு *nākku-mūkku,* பெ. (n.) மூக்கிரட்டை (சங்.அக.); spreading hog-weed

[நாக்கு + மூக்கு.]

நாக்குமூக்குச்சாதல் *nākku-mūkku-c-cādal* பெ. (n) நாக்குப் பகுதியும், மூக்குப்பகுதியும் உணர்ச்சியறுகை; lose of sensation of taste and smell of the tongue and nose due to sickness.

[நாக்கு + மூக்கு + சாதல்.]

நாக்குமூக்குச்சுடுகை *nākku-mūkku-c-cuḍugai,* பெ. (n) உடம்பினைத் தூய்மைப் படுத்துதற்குச் சூட்டுக்கோலினால், நாக்கையும், மூக்கையும் சுடுதல்; branding the tongue and the nose which is considered by the ancients as a purification of the contaminated body of an out cast.

[நாக்கு + மூக்கு + சுடுகை.]

நாக்குமூக்குநடுவறுத்தான் *nākku-mūkku-naḍu-v-aṟuttāṉ,* பெ. (n) மூக்கிரட்டை (சங்.அக); spreading hog-weed

[நாக்குமூக்கு + நடுவறுத்தான்.]

நாக்குமேற்றாளி *nākku-mēṟṟāḷi,* பெ. (n.) நாக்கு நோய் வகையுளொன்று; a disease of the tongue

[நாக்கு + மேல்தாளி → மேற்றாளி.]

நாக்குரோதம் *nākku-rōdam,* பெ. (n) காட்டாமணக்கு; bronze leaved physic nut-Jatropha gossypifolia

[நாக்கு + skt. ரோதம்.]

நாக்கு மீன் வகைகள்

தட்டை நாக்கு மீன்



வரி நாக்கு மீன்

பட்டைநாக்கு மீன்



தடிநாக்கு மீன்

கத்தி நாக்கு மீன்

வெள்ளை நாக்கு மீன்

எருமை நாக்கு மீன்

நாக்குலர்—தல் *nākku-lar-,* 2 செ. குன்றாவி. (v.t.) நாக்கு பசைத்தன்மையற்றுப் போதல்; to parch of the tongue.

[நாக்கு + உலர்—.]

நாக்குவரி *nākku-vari,* பெ. (n) நாக்கு வெடிப்பு; cracked tongue, fissure of the tongue

[நாக்கு + வரி.]

நாக்குவலி *nākku-vali,* பெ. (n.) நாக்கில் ஏற்படும் வலி; pain in the tongue Glossalgia.

[நாக்கு + வலி.]

நாக்குவழி[1]—த்தல் *nākku-vaḷi-,* 4 செ.கு.வி. (v.i.) நாவின் மாசினை வழித்து நீக்குதல்; to scrape and clean one's tongue. "*நாக்குவழித்து நீராட்டு மிந்நம்பிக்கு*" (திவ்.பெரியாழ்.1:2:15).

[நாக்கு + வழி—.]

வழி—த்தல் = நாவிற் படர்ந்து நின்ற ஊத்தையை வழித்தெடுத்துத் தூய்மைப் படுத்துதல்.

நாக்குவழி[2]—த்தல் *nākku-vaḷi,* 4 செ.கு.வி. (v.i.) 1. பயன்பெறாமல் போதல்; to be useless. '*பணமில்லாமல் வெறும்புகழை மட்டும் வைத்து நாக்கு வழிக்கவா முடியும்*' (இக்.வ.). 2. போதிய அளவின்றிக் குறைதல்; to insufficient caused as contempt. '*நீ கொடுத்த பத்து உருபாவை வைத்து நாக்கு வழிக்கவா முடியும்*' (இக்.வ.).

[நாக்கு + வழி—.]

இவ்வழக்குத் தொடர் பெரும்பாலும் நாட்டில் அனைத்துப் பகுதி மக்களிடையேயும் வழக்கூன்றியுள்ளது. மதிப்பற்றுப்போன ஒன்றை எதிர்மறைப் பொருளில் வழங்குதற்கும், இழிவு, பயன்பாடின்மை, சிறுமை முதலான பொருண்மையிலும் வழங்குவதறிக.

[நாக்கு + வழி—.]

நாக்குவழு *nākku-vaḻu,* 4 பெ. (n) நாக்கின் மேற்காணும் வழுவழுப்பு; white or yellow slimy matter deposited on the surface of the tongue.

[நாக்கு + வழு.]

நாக்குவளை—த்தல் *nākku-vaḷai-,* 4செ. குன்றாவி (v.t.) பழித்தல்; to blame, despise '*நாக்கு வளைக்கும்படியான செயலைச் செய்யலாகாது.*' (இ.வ.).

[நாக்கு + வளை—.]

நாக்குவாங்கல் *nākku-vāṅgal,* பெ. (n.) முடக்குவளியினால், நாக்கு பேசவொட்டாது இழுத்தல்; நாக்குச் செயலிழத்தல்; paralysis of the tongue

[நாக்கு + வாங்கல்.]

நாக்குவாங்கிப்போதல் *nākku-vāṅgi-p-pōdal,* பெ. (n.) 1. பேசமுடியாதபடி நா உள்ளிழுத்துக் கொள்கை; being tongue-tied in utter amazement, as when asked an exorbitant price. 2. நா—வறளுகை; getting dry and parched in the tongue through thirst

[நாக்குவாங்கி + போதல்.]

நாக்குவாங்கு—தல் *nākku-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.t.) 1. நாக்கை உள்ளிழுத்தல்; to draw in the tongue. 2. களைத்துப் போதல்;

to be completely exhausted, sorely tried. வேலை என்னை நாக்கு வாங்குகிறது. (உ.வ.)

[நாக்கு+ வாங்கு-.]

நாக்குவாதம் *nākku-vādam,* பெ. (n.) வளி மிகுதியால் நாக்கெழாது பேசமுடியாமை; when the excited vaḷi (vāyu) affects the nerves supplying the voice box and tongue. paralysis of the tongue may occur rendering the patient unable to eat, drink or speak.

[நாக்கு+ skt. வாதம்.]

நாக்குவிரணம்[1] *nākku-v-iraṇam,* பெ. (n.) நாக்குப்புண்; ulcer of the tongue.

[நாக்கு+ skt.இரணம்.]

நாக்குவிரணம்[2] *nākku-v-iraṇam,* பெ. (n.) நாக்கில்வரும் சிவப்புத் தழும்புகள்; red patches on the tongue.

[நாக்கு+ skt. இரணம்.]

நாக்குவிழல் *nākku-viḻal,* பெ. (n.) *நாக்குவிழுதல்* பார்க்க; see *nākku-viḻudal.*

[நாக்கு+ விழல்.]

நாக்குவிழுதல் *nākku-viḻudal,* பெ. (n.) பேச நா வெழாமற் போதல்; (இ.வ.); inability to speak.

[நாக்கு+ விழுதல்]

நாக்குவீக்கம் *nākku-vīkkam,* பெ. (n.) நாக்கிலுண்டாகும் வீக்கம்; swelling of the tongue. Glossoncus.

[நாக்கு+ வீக்கம்]

நாக்குவெடிப்பு[1] *nākku-veḍippu,* பெ. (n.) நாவில் பிளவுண்டாகும் நோய்வகை; cracked tongue.

மறுவ. நாக்குவரி.

[நாக்கு+ வெடிப்பு.]

நாக்குவெடிப்பு[2] *nākku-veḍippu,* பெ. (n.) நாக்கின் சளி சவ்வுக்கு அழற்சி கண்டு வெடித்தல்; fissure in the mucous membrane marked by white thickened patches-Leukoplakia.

[நாக்கு+ வெடிப்பு.]

நாக்குழறு-தல் *nā-k-kuḻaṟu-,* 5செ.கு.வி. (v.i.) நாத்தழுதழுத்தல்; to falter or stammer, as in the ecstatic joy or other emotion. "*வேந்தர்... நாக்குழறிப் பாடினர் புகழ்ந்து*" (பாரத.இராச.150).

[நா+ குழறு-.]

நாக்குழிஞ்சான் *nākkuḻiñjāṉ,* பெ. (n.) மரவகை (வின்.); silky backed round-leaved tree caper.

நாக்குளறுகை *nā-k-kuḷaṟugai,* பெ. (n.) பேச்சுத்தடுமாறுகை; stammering.

மறுவ. நாத்திக்குகை.

[நா+ குளறுகை.]

நாக்குளிப்பாம்பு *nākkuḷi-p-pāmbu,* (n.) நாக்குப் பூச்சி (யாழ்.அக) பார்க்க; see nākku-p-pūcci. 2. குடற்புழு; long intestinal worm.

3. நாக்குள்ளிருக்கும் கண்ணுக்குத் தெரியாத நுண்பூச்சி; micro organism of the tongue.

[நாக்குளி + பாம்பு.]

நாக்குளிப்பூச்சி *nākkuḷi-p-pūcci,* பெ. (n.) 1. *நாக்குப்பூச்சி (யாழ்.அக)* பார்க்க; see *nākku-p-pūcci* 2. *நாக்குளிப்பாம்பு* பார்க்க; see *nākkuḷi-p-pāmbu.*

[நாக்குளி + பூச்சி.]

நாக்குறுதி *nākkuṟudi,* பெ. (n.) சொல் தவறாமை (இக்.வ.); being true to one's word. சொன்னசொற்படி நடத்தலே நாக்குறுதி ஆகும் (இ.வ.).

மறுவ. நாக்கோடாமை.

[நாக்கு + உறுதி.]

சொன்னசொல்லைக் காப்பாற்றுகை. கொடுத்த வாக்குறுதிப்படி, செயலாற்றுகை. நாக்குறுதி நல்லவர்க்கு அழகு என்பது மக்கள் வழக்கு.

நாக்கூசு–தல் *nā-k-kūšu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. விருப்பத்திற்கு ஒவ்வாத சுவையால் நாக்கில் வெறுப்புணர்ச்சி ஏற்படுதல்; to feel irritant sensation due to unsuitable taste மாங்காயின் அளவிற்கு அதிகமான புளிப்புச்சுவையால், நாக்கூசுகிறது (இக்.வ.). 2. விரும்பாதவற்றைச் சொல்லத் தவிர்த்தல். to feel bad taste as of telling unwanted or abusive language "*அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை நாடி இனிய சொலின்*" (குறள்,96.). கற்றோர் அவையில் நாக்கூசும்படி இழிந்தசொற்களை, அவர் பேசினார் (உ.வ.).

[நா + கூசு–.]

விருப்பத்திற்கு ஒவ்வாத சுவையால் நாக்கிலேற்படும் எரிச்சல், நாக் கூசுதலாகும். உண்ணும் உணவினால் நாக்கூசும். எண்ணும் எண்ணம் இனியதாயிருந்தால், எந்த இடத்திலும், நாக்கூசும் சொற்களை நாம் நவில மாட்டோம். நாக்கூசும் சொற்களை நாம் கூறாது இருத்தற்பொருட்டே, இனியவை கூறல் எனும் அதிகாரத்தை வள்ளுவர் வகுத்துள்ளார். நாக்கூசாத நல்ல சொற்களை நாம் பேசிவந்தால், அல்லவை அழியும். நல்லறம் செழிக்கும்.

நாக்கூறல்¹ *nākkūṟal.* பெ. (n.) நாவில் தண்ணீர் கசிதல்; salivation.

[நாக்கு + ஊறல்.]

அளவிற்கு அதிகமாக நாக்கில் உமிழ்நீர் ஊறுதல், நாக்கூறல் எனப்படும்.

நாக்கூறல்² *nākkūṟal.* பெ. (n.) நேருக்கு நேர் ஏசுதல்; talking directly abusive language

[நா + கூறல்.]

நேருக்குநேராக இருந்து, இழிந்த சொற்களைக் கூறி, ஏசுதல், நாக்கூசும்படி யாரும்கூறமுடியாத தீய சொற்களைக் கூறுதல்.

நாக்கெடு¹–த்தல் *nākkeḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. நாக்கை நீக்குதல்; to remove of the tongue. 2. *நாக்கு வழி–த்தல்* பார்க்க; see *nākku-vaḷi-.*

[நாக்கு + எடு–.]

நாக்கெடு²–த்தல் *nākkeḍu-.* 4 செ. குன்றாவி, (v.t.) ஒருவரைத் தவறாகப் புரிந்து கொண்டு பேச வாயெடுத்தல்; to attempt to speak with wrong understanding as of others.

[நாக்கு + எடு–.]

நாக்கெரிச்சல் *nākkericcal,* பெ. (n.) பெருநோயின் விளைவாக நாக்கிலுண்டாகும் எரிச்சல்; burning sensation of the tongue as in cases of dyspepsia- Glossopyrosis. (சா.அக.)

[நாக்கு + எரிச்சல்.]

எரி → எரிதல் → எரித்தல் → எரிச்சல்

பெருநோயின் விளைவால், நாக்கில் எரிச்சல் ஏற்படும். சில நேரத்தில் வயிற்றில் செரிமானக்கோளாறு ஏற்படுவதினாலும், நாக்கெரிச்சல் ஏற்படும்.

நாக்கெரிதல் *nākkeridal,* பெ. (n.) *நாக்கெரிச்சல்* பார்க்க; see *nākkericcal.*

[நாக்கு + எரிதல்.]

நாக்கெரிவு *nākkerivu,* பெ. (n.) *நாக்கெரிச்சல்* பார்க்க; see *nākkericcal.*

[நாக்கு + எரிவு.]

நாக்கேணி[1] *nākkēṇi,* பெ. (n.) பெருமருந்துப் பூடு; Indian birthwort- aristolochia indica.

[நா + கேணி.]

நாவில் வைத்து நன்கு உமிழ் நீர் ஊறிய பின்விழுங்கும் மருந்து.

நாக்கேணி[2] *nākkēṇi,* பெ. (n.) பரிந்துரை; recommendation.

[நாக்கு + ஏணி.]

நாக்கை ஏணியாகக் கொண்டு, பரிந்துரையால் வாழ்வில் முன்னேறுகை.

நாக்கேணி செய்–தல் *nākkēṇi-šey-* 1. செ.கு.வி. (v.i.) 1. பரிந்துரை செய்தல்; to recommend 2. தகவுரை கூறுதல்; to elaborate one's qualities.

[நாக்கேணி + செய்–.]

காலமறிந்து, இடமறிந்து, தகுதியானவரை, தகுதியான பதவிக்கு, அறிமுகம் செய்தல்.

நாக்கை *nākkai,* பெ. (n.) *நாக்குப்பூச்சி (யாழ்.அக.)* பார்க்க; see *nākku-p-pūcci.*

நாக்கைப்பிடுங்கிக்கொள்[1](ளு)–தல் *nākkai-p-piḍuṅgi-k-koḷ(ḷu),* 16 செ.கு.வி. (v.i.). 1. நாக்கினைப்பிடுங்கிக் கொண்டு, தற்கொலை செய்து கொள்ளுதல்(இ.வ.); to commit suicide, as by pulling out the tongue. 2. தவறு நடந்ததற்கு மிக்க வருத்தங் கூறுதல் (இ.வ.); to be extremely sorry for a mistake. 3. தன்னாலான முயற்சி யெடுத்துக் கொண்டும், செயல் நடவாது போதல்; to strike one's utmost. '*நீ நாக்கைப் பிடுங்கி கொண்டாலும்*' இதைச் செய்யமுடியாது (உ.வ.). 4. பிறர் மனம் புண்படும்படி மிகுதியாய்ப் பேசுதல் (இ.வ.); to talk much பிறர் நாக்கைப் பிடுங்கிக் கொள்ளும்படி இழிந்த சொற்களால் புண்படுத்துவது, பலருக்கு இன்று வாடிக்கையாக உள்ளது (இ.வ.).

[நாக்கை + பிடுங்கி + கொள்ளு–.]

நாக்கைப்பிடுங்கிக்கொள்[2](ளு)–தல் *nākkai-p-piḍuṅgi-k-koḷ(ḷu)-,* 7 செ.குன்றாவி. (v.t.). பிறர் உள்ளத்தில் தைக்கும்படிக் கடுஞ்சொற்களால் ஏசுதல்; to abusive அவன்மீது, நாக்கைப் பிடுங்கிக் கொள்ளும் படிப் பழிசுமத்தினான்.

[நாக்கை + பிடுங்கி + கொள்ளு–.]

நாக்கைப்பிடுங்கு-தல் *nākkai-p-piḍuṅgu-,* 5செ.கு.வி. (v.i.) இறத்தல்; to die.

[நாக்கு + ஐ → நாக்கை + பிடுங்கு-.]

"கு" - பிற்காலத்தில் பயின்று வழங்கிய சாரியை.

"ஐ" - இரண்டாம் வேற்றுமை உருபு.

நாக்கைப்புரட்டல் *nākkai-p-puraṭṭal,* பெ. (n.) *நாக்கைப் புரட்டு-தல்* பார்க்க; see *nākkai-p-puraṭṭu-.*

[நாக்கை + புரட்டல்.]

நாக்கைப்புரட்டு-தல் *nākkai-p-puraṭṭu-,* 5 செ.குன்றாவி, (v.t.) ஓகநிலையில் அடிநாக்கை இடையண்ணத்திற் படும்படிச் செய்தல்; to turn the tongue upwards to reach the palate in a yoga stage.

[நாக்கை + புரட்டு-.]

அடிநாக்கை இடையண்ணத்தில் பொருத்தல், ஓகநிலையில் ஒன்றாகும்.

நாக்கைப்பூச்சி *nākkai-p-pūcci,* பெ. (n.) *நாக்குப்பூச்சி* பார்க்க; see *nākku-p-pūcci.*

[நாக்கு + ஐ + பூச்சி.]

ஐ =சாரியை. நா = நழுவலாக வந்துள்ளது.

நாக்குப்பூச்சி என்பது, "ஐ" சாரியை பெற்று, நாக்கைப்பூச்சி என்று மக்களிடம் நாநழுவலால் ஏற்பட்ட, தவற்று வழக்காகும்.

நாக்கொட்டி *nākkoṭṭi,* பெ. (n.) நாக்கு ஏழாமல் அடிப்பக்கம் ஒட்டிக் கொள்ளுகை; adhesion on the tongue at the bottom.

நாக்கொட்டு[1]-தல் *nākkoṭṭudal,* பெ. (n.) 1. நாவறளுகை; the state of tongue being dry and cleaving to the palate, as from thirst. "*தாய்முலையை அகலில் நாக்கொட்டுமாபோல*" (ஈடு.1:3:9); 2. குலவையொலி எழுப்புதல்; to utter shrill sounds chorusly made by women.

[நாக்கு + ஒட்டுதல்.]

நாக்கொட்டு[2]-தல் *nā-k-koṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நாவினால் பல்வகை யொலிகளை இசைததும்ப ஒலித்துக் காட்டுதல்; to mimicry.

[நா + கொட்டு-.]

நாடகப் பின்புலத்தில் காட்சிக்கு ஏற்ற வண்ணம், குதிரையின் குளம்படியோசை போன்றும், களிற்றின் பிளிற்றொலி போன்றும், பறவையின் கீச்சொலி போன்றும், நாவினால் ஒலித்துக் காட்டுதல்.

முற்காலத்தே நாக்கொட்டிப் பல்வகை ஒலிகளை ஒலிக்கும் பாங்கு, தெருக்கூத்துகளிலும், நாடகங்களிலும் இருந்தது. இக் காலத்தே, நாக்கொட்டி பல்வகை ஒலியெழுப்பும் பாங்கு திரைப்படங்களில் காணப்படுகிறது.

நாக்கொட்டு[3]-தல் *nākkoṭṭu-,* 5 செ.குன்றாவி, (v.t.) உணவின் சுவை மிகுதியால், நாவினைத் தட்டுதல்; to sound with the tongue from excessive taste.

மறுவ. சப்புக்கொட்டுதல்.

[நா + கொட்டு-.]

நாக்கொப்புளம் *nā-k-koppuḷam,* பெ. (n.) நாக்கிலுண்டாகும் சிறுசிறு கொப்புளங்கள்; ulcertation of the tongue.

[நா + கொப்புளம்.]

நாக்கில் எழும்பும் சிறுசிறு கட்டிகள்: இதைத் தொடக்கத்திலேயே கண்டு, மருத்துவஞ் செய்யாவிடில், புற்றுக்கட்டிகளாக மாறும். இதற்கு, மருதம்பட்டை, வெள்ளைக்காசுக்கட்டி இரண்டையும் சேர்த்து, தூள்செய்து நாவில் தெளிப்பதால் தீரும் என்று சா.அக. கூறும்.

[நா + கொப்புளம்.]

நாக்கோடாமை *nā-k-kōḍāmai,* பெ. (n.) நடுவுநிலை திறம்பாமை; not avert in promise.

[நா + கோடு + ஆ + மை.]

'ஆ' எதிர்மறை இடைநிலை.
'மை' பண்புப் பெயர் விகுதி.

ஒருகா:– நா + கோடாமை.

இது சான்றோர்க்கு அமைய வேண்டிய அருங்குணத்துள் ஒன்று.

நாக்கோடு—தல் *nā-k-kōḍu-,* 12 செ.கு.வி. (v.i.) ஒருபாற் சார்ந்து பேசுதல்; to speak impartiality "*நாக்கோடாமை சான்றோர்க்கு அழகு*". (உ.வ.). "*கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக் கோடாமை கோடிபெறும்*" (ஔவை–பாடல்).

[நா + கோடு–.]

நாக்கோடுதல் என்பது ஆகுபெயராய், நாவின் செயற்பாடாகிய பேசுதலைக் குறித்ததென்க.

நாக்கோணல் *nā-k-kōṇal,* பெ. (n.) சொல்மாறல்; insubstantiality.

[நா + கோணல்.]

'அல்' = தொழிற்பெயர் ஈறு.

நாவு கோணல் என்பது, சொன்ன சொல்லை, மாற்றிப் பேசுதல். கோணல் என்பது, மறுத்து அல்லது மறைத்துப் பேசுதலைக் குறித்து நின்றது.

நாக்குமாறி, சொற்புரட்டன், பேச்சுமாறி என்பனவெல்லாம், நாக்கோணல் பற்றிய கருத்தமைவுச் சொற்களே.

நாகக்கசடு *nāga-k-kašaḍu,* பெ. (n.) துத்தநாகயிழையை உருக்கும் போது தங்கும் கசடு; a soft bluish metal obtained in the smelting of zinc ores-zinc deposit- cadmium.

[நாகம் + கசடு.]

நாகக்கட்டு *nāga-k-kaṭṭu,* பெ. (n.) பொன்னாக்க (வாத)முறையில் கட்டிய துத்தநாகம்; consolidated zinc by process of Alchemy

[நாகம் + கட்டு.]

நாகக்கண்ணி *nāga-k-kaṇṇi-,* பெ. (n.) கள்ளிச்செடி வகை; orange-flowered prickly pear.

மறுவ. நாகதாளிக்கள்ளி.

[நாகம் + கண்ணி.]

கள்ளி →கண்ணி.

ள → ண = திரிபு.

(ஒ.நோ.) களவாளி→களவாணி.

நாகக்கல் *nāga-k-kal,* பெ. (n.) நாகவுரு வமைந்த கற்சிற்பம் (இ.வ.); stone with serpent figures.

[நாகம் + கல்.]



நாகக்கள்ளி *nāga-k-kaḷḷi,* பெ. (n.) *நாகதாளி(L.).* பார்க்க; see *nāgatāḷi*

[நாகம் + கள்ளி.]

நாகக்கறுப்பு *nāga-k-kaṟuppu,* பெ. (n.) மூலிகை வகையுளொன்று; a kind of medicinal herb. (சா.அக.).

[நாகம் + கறுப்பு.]

நாகக்கிண்ணி *nāga-k-kiṇṇi,* பெ. (n.) நாகத்தினாற் செய்த வாயகன்ற ஏனம்; basin or broad vessel made of zinc.

[நாகம் + கிண்ணி.]

நாகக்குந்தளமாக்கி *nāga-k-kundaḷamākki,* பெ. (n.) துத்தநாகவைப்பு நஞ்சு; zinc poison used in Tamiḻ medicine and alchemy.

[நாகம் + குந்தளம் + ஆக்கி.]

நாகக்குமரி *nāga-k-kumari,* பெ. (n.) பொன்னைக் கரைக்கும் ஆற்றலுடை நீர்மம்; a mineral dissolving gold

மறுவ. தங்கபேதி.

[நாகம் + குமுறி → குமரி.]

மேலான மேன்மைக் குணத்துடனும், வண்ணத்துடனும் ஒளிரும் நாகம் போன்று, ஒளிரும் பொன்னைக் கரைக்கும் நீர்மமும், நாகக்குமரி என்று பெயர் பெற்றது, எனலாம்.

நாகக்குவடு *nāga-k-kuvaḍu,* பெ. (n.) செம்புமலை (யாழ்.அக.); copper mountain.

[நாகம் + குவடு.]

நாகக்கொல்லி *nāga-k-kolli,* பெ. (n.) சருக்கரை வேம்பு; a sweet variety of margosa tree - Azadirachta indica.

[நாகம் + கொல்லி.]

நாககர்ணம் *nāga-karṇam.* (n.) செவ்வாமணக்கு (மூ.அ.); red caster plant

[நாகம் + கருணம்.]

நாககள்ளி *nāga-kaḷḷi,* பெ. (n.) நாகதாளிக்கள்ளி; snake hood fig

நாககற்பம் *nāga-kaṟpam,* பெ. (n.) செவ்வீயம் (மூ.அ.); red lead

மறுவ. சிகப்பு ஈயம்.

[நாகம் + கற்பம்.]

நாககன்னி *nāga-kaṉṉi,* பெ. (n.) *நாக கன்னிகை* பார்க்க; see *nāga-kaṉṉigai.*

[நாகம் + கன்னி.]

நாககன்னிகை *nāga-kaṉṉigai,* பெ. (n.) நாகவுலகத்துப் பெண்; virgin of the serpent-world.

மறுவ. பருந்து

[நாகம் + கன்னிகை.]

நாககாலன் *nāga-kālaṉ,* பெ. (n) கழுலன்; brahmini kite.

[நாகம் + காலன்.]

நாககுமாரகாவியம் *nāga-kumāra-kāviyam.* பெ. (n.) நாககுமாரனைப் பற்றிய ஒரு காப்பியம்; a jaina poem treating of the story of nāga-kumāraṉ in Tamil.

[நாக + குமாரன் + skt. காவ்ய → காவியம்.]

ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்று

நாககெந்தி *nāga-kendi,* பெ. (n.) 1. நேர்வாளம்(மலை.); purging croton. 2. வஞ்சிக்கொடி; common rattan of south india

[நாகம் + கெந்தி.]

நாககேசம் *nāga-kēšam,* பெ. (n.) வெண்சம்பங்கி; white champak

மறுவ. சிறுநாகப்பூ, நாகசம்பங்கி.

[நாகம் +skt. kēsa → த. கேசம் = இதன் நறுமணத்தால் கட்டுண்ட சிறுநாகப் பாம்புகள், இப் பூவிலேயே வசிக்கத் தலைப்பட்டன என்று, சா.அக. கூறும்.]

நாககேசரம் *nāga-kēšaram,* பெ. (n) சிறுநாகப்பூ; iron- wood of ceylon.

[நாகம் + கேசரம்.]

நாககேளி *nāga-kēḷi,* பெ. (n.) *நாககேணி* பார்க்க; see *nāga-kēṇi.*

மறுவ. ஈசுரமூலி.

[நாகம் + கேளி.]

நாககேணி *nāga-kēṇi.* பெ. (n.) பெருமருந்து (சங்.அக.); indian birth-wort

[நாககேளி → நாககேணி.]

நாகங்கட்டி *nāgangaṭṭi,* பெ. (n) 1. கருங்காளான்; black mushroom 2. இம்பலி வேர்ச்சாறு; juice of the root of common satin ebony.

[நாகம் + கட்டி.]

நாகச்சாரம் *nāga-c-cāram.* பெ. (n) பொன்துகள், பொன்மணல்; sand mixed with gold dust- gold-ore (சா.அக.).

மறுவ. ஏமமணல்.

[நாகம் + சாரம்.]

நாகச்சுண்ணம் *nāga-c-cuṇṇam.* பெ. (n.) முப்பு; a mystic salt prepared from zinc as one of the ingrediants

[நாகம் + சுண்ணம்.]

நாகச்சுழி *nāga-c-cuḻi,* பெ. (n) முன்னந் தலையில் அமையும் மயிர்ச்சுழி; curl formed in front part of the head.

[நாகம் + சுழி.]

முன்னந் தலைச்சுழி நாகத்தின் படப்பகுதி போல காணப்படுவதால், அமைந்த பெயர்.

நாகசகம் *nāga-šagam,* பெ. (n.) பாம்பினைப் போல் இணைந்து, பிணைந்து விளையாடும், இணைவிழைச்சு ஆட்டம்; a kind of coitus like that of snakes.

[நாகம் + Skt. சகம்.]

நாகசண்பகம் *nāga-sanbagam,* பெ. (n.) 1. பொன்னிறப் பூக்களையுடைய பாதிரி மரம்; yellow trumpet flower tree. 2. *நாகசெண்பகம்* பார்க்க; see *nāga-šenbagam.*

[நாகம் + சண்பகம்.]

நாகசத்துமூலி *nāga-šattu-mūli,* பெ. (n.) பூடு வகை; a prostrate herb- Herpestis mouniera.

[நாகம் + சத்து + மூலி.]

நாகசந்திரன் *nāga-sandiran,* பெ. (n.) தீர்த்தங்கரரு ளொருவர் (த.நி.போ.249,உரை.); jaina Arhat.

நாகசப்பூ *nāgasa-p-pū,* பெ. (n.) *நாகப்பூ* பார்க்க; see *nāga-p-pū.*

[நாகசம் + பூ]

நாகசம் *nāgašam,* பெ. (n.) 1. சிந்தூரம்; vermilin. 2. செவ்வீயம்; red lead.

[நாகசு + அம்.]

'அம்' சொல்லாக்க ஈறு.

நாகசம்பங்கி *nāga-šambangi,* பெ. (n.) *சிறுநாகப்பூ* பார்க்க; see *siru-nāga-p-pū,* narrow- leaved ceylon iron-wood.

க. நாகசம்பகெ.

[நாகம் + சம்பங்கி. Skt. சம்பங்கி.]

நாகசம்பவம் *nāga-šambavam,* பெ. (n.) *நாகசம் (யாழ்.அக.)* பார்க்க; see *nāgašam.*

மறுவ. நாககற்பம். செவ்வீயம்.

[நாகம் + சம்பவம். Skt. சம்பவம்.]

நாகசர்ப்பம் *nāga-sarppam,* பெ. (n.) நாகப்பாம்பு; cobra snake.

[த. நாகம். → Skt. சர்ப்பம்.]

நாகசரம் *nāga-saram,* பெ. (n.) *நாகசுரம் (யாழ்.அக.)* பார்க்க; see *nāga-suram.*

[நாகம் + சரம்.]

நாகசாகம் *nāga-šāgam,* பெ. (n.) பேரிலாழும்; a kind of medicinal herb.

[நாகம் + சாகம்.]

நாகசாபூ *nāgašā-pū,* பெ. (n.) *நாக சம்பங்கி* பார்க்க; see *nāga-šambangi.*

நாகசாவம் *nāga-šāvam,* பெ. (n.) நாகசாவம், தெறுமொழி, வசைமொழி சாபம் (சர்ப்ப); curse of childlessness. முற்பிறப்பில் நல்லபாம்பைக் கொன்றதனால், பிறங்கடையற்றுப் போம்படி நேருஞ்சாவம்; curse of childless resulting from cobra killing in former births.

[நாகம் + சாவம்.]

நாகசிகு *nāga-šigu,* பெ. (n.) *நாகசிகுவிகை* பார்க்க; see *nāga-šiguvigai.*

[நாகம் + சிகு.]

நாகசிகுவிகை *nāga-šiguvigai,* பெ. (n.) சிவப்பரிதார வைப்பு நஞ்சு(யாழ்.அக.); red arsenic

[நாகம் + சிகுவிகை.]

நாகசிங்கி *nāga-šiṅgi,* பெ. (n) தும்மலை உண்டாக்கும் அரிய மூலிகை; a rare medicinal plant, generally found grown in tanks and pools.

[நாகம் + சிங்கி.]

நிலையான நீர்நிலைகளிற் காணப்படும், அரியமூலிகை. இதைப் பொழுதுக்கு முன் பிடுங்கினால், தும்மலை ஏற்படுத்தும் என்று, சா.அக. கூறும்.

நாகசிங்கு *nāga-šiṅgu.* பெ. (n) 1. வன்னிமருந்து வகையுள் ஒன்றான கலப்புகுவன்னி; a rare medicinal plant probably of vaṉṉi (mesquit) variety. 2. பொடுதலை; creeping vervain.

[நாகம் + சிங்கு]

ஒருகா. *[நாகம் + சிங்கு.]*

ஒன்பது வகை மாழைகளையும், வைப்பு நஞ்சினையும் கரைக்கும் வன்னிமருந்து.

நாகசிந்தூரம் *nāga-šindūram,* பெ. (n.) *நாகசெந்தூரம்* பார்க்க; see *nāga-šendūram.*

[நாகம் + சிந்தூரம்]

நாகசிலை *nāga-šilai,* பெ. (n.) *நாகசிலைக்கல்* பார்க்க; see *nāga-šilai-k-kal.*

[நாகம் + சிலை.]

நாகசிலைக்கல் *nāga-šilai-k-kal.* பெ. (n) செந்நாகக்கலவை; red zinc ore-zno

[நாக + சிலை + கல்.–]

சிவப்பு வண்ணமுடைய இந் நாகக்கல் 120 வகை தமிழ் மருந்துகளுள் ஒன்றாகும்.

நாகசின்னம் *nāga-šiṉṉam,* பெ. (n) *நாகசுரம் (யாழ்.அக.)* பார்க்க; see *nāgasuram.*

[நாகம் + சின்னம்.]

நாகசீவனம் *nāga-šīvaṉam.* பெ. (n.) துத்தநாகம் (சங்.அக.); zinc

[நாக + சீவனம்.]

நாகசுரம் *nāga-šuram,* பெ. (n.) துளைக்கருவி வகை; nāgašuram, one of the chief musical instruments " *தாரை நவுரி தவண்டை துடி நாகசுரம்* " (கூளப்ப.)

மறுவ. நெடுவங்கியம்.

[நாகம் + சுரம்.]

தமிழ் இசைக்கருவிகளில் தலைசிறந்தது. துளைக்கருவிகளுள் ஒன்று. இக் கருவி, இன்றும் மங்கலச்சின்னமாக, மக்களால் மதிக்கப்படுகிறது. இதன் ஓசை அனைத்து மங்கல நிகழ்வுகளிலும் இடம்பெறும்.

தமிழகத்திற்குத் தனிச்சிறப்புத்தரும் இசைக்கருவிகளில், சிறப்பிடத்தைப் பெற்றுள்ள இக் கருவியின் இன்னிசை, நெடுந்தொலைவு கேட்கும் தன்மைத்து.

மொழிஞாயிறு நாதசுரம் என்கிற நாயனத்தை 'நாகசுரம்' என்றே குறித்துள்ளார்.

கோவில் வழிபாடு – திருவிழாக்களிலும், இல்லங்களில் நிகழும் இசைநிகழ்ச்சிகளிலும், நாகசுரம், சிறப்பிடம் பெற்றுள்ளது.



நாகசுவந்தை *nāga-šuvandai,* பெ. (n.) *கிரிப் பூண்டு (யாழ்.அக.)* பார்க்க; see *kiri-p-pūṇḍu.*

[நாகம் + சுவந்தை.]

நாகசெண்பகம்[1] *nāga-šeṇbagam,* பெ. (n.) 1. சிறுமரவகை; common yellow trumpet flowered tree.s.tr., Tecoma stans. 2. *சிறுநாகப்பூ* பார்க்க; see *širu-nāga-p-pū.* 3. பொன்னிறப்பூக்களையுடைய பாதிரிமரம்; trumpet flower tree.

[நாகம் + சண்பகம்.]

நாகசெண்பகம்[2] *nāga-šeṇbagam,* பெ. (n.) பொற்கரை வேய்ந்த ஆடை; golden border of the dress.

நாகசெந்தூரம் *nāgašendūram,* பெ. (n.) நாகத்தைப் புடமிட்டுச் சுண்ணமாக்கிச் செந்தூரிக்கும் மூலிகை; drug-capable of turning zinc into red oxide by process of calcination.

மறுவ. மாகாளி சுரபுன்னை.

[நாகம் + செந்தூரம்.]

நாகசெந்தூரிச்சி *nāga-šendūricci,* பெ. (n.) நீண்டநாள் வாழச்செய்யும் வாணாள் மூலி; rejuvenating zinc.

மறுவ. மாஞ்சரோகனி.

[நாகம் + செந்தூரம் → செந்தூரிச்சி.]

கண்களின் பார்வையைக் கூர்மையாக்கி, நீண்ட நாள் வாழச்செய்யும், வாணாள் மூலிகை.

நாகசேதகன் *nāga-sēdagaṉ,* பெ. (n.) மலைகளின் சிறகை அரிந்த இந்திரன் (யாழ்.அக.); indiran, as one who clipped the wings of mountains.

[நாகம் + சேதகன்.]

நாகஞ்சம் *nāgañjam,* பெ. (n.) திருமால்காந்திச் (விட்டுணுக்கிராந்தி) செடி, அரியமருந்துச்செடி; a rare medicinal plant.

[நாகம் + நாகஞ்சம்.]

நாகஞ்செம்பாக்கி *nāgañ-jembākki,* பெ. (n.) செம்மரம்; red word capable of turning zinc into copper.

[நாகம் + செம்பாக்கி—.]

[துத்த நாகத்தை தாமிர மாழையாக்கப் பயன்படும் மூலிகை. என்று, சா.அக. கூறும்.]

நாகஞ்சேர்வை *nāgañ-jērvai,* பெ. (n.) மட்டமான மாழையும், துத்தநாகமும் இணைந்த கலவை; an alloy of zinc or any compound of zinc.

[நாகம் + சேர்வை.
சேர்வை = மாழைக்கலவை.]

நாகஞ்சேர்வைச்செந்தூரம் *nāgañjērvai-c-cendūram,* பெ. (n.) மற்ற கடைச் சரக்குகளுடன், நாகத்தைச்சேர்த்துப் புடமிட்ட

செந்தூரம்; a red oxide of zinc prepared with other drugs by process of calcination.

[நாகஞ்சேர்வை + செந்தூரம்.]

நாகடமண் *nāgaḍamaṇ,* பெ. (n.) உவர்மண்; saline-soil.

மறுவ. நாவடமண்,

உழை மண்,

சவட்டு மண்,

களர் மண்.

நாகணத்தி *nāgaṇatti,* பெ. (n.) காக்கட்டான் கொடி; crow creeper- Clitoria ternatea.

நாகணப்பேரி *nāgaṇa-p-pēri,* பெ. (n.) சுடலையாவரை; tanners cassia found grown in burial ground

[நாகணம்+பேரி.]

நாகணம்[1] *nāgaṇam,* பெ. (n.) நறும்பண்ட வகை (தைலவ.தைல.43,உரை.); an aromatic substance.

மறுவ. நகம்.

[நாகம் → நாகணம்.]

இந் நறுமணச்சரக்கு மலட்டுத் தன்மையைப் போக்கும், கூர்மையான பார்வைக்கும், கண்களிலேற்படும் பிணிகளுக்கும், கைகண்ட மருந்து. பெருவயிற்றைக் குறைக்கும் தன்மைத்து என்று, சா.அக. கூறும்.]

நாகணம்[2] *nāgaṇam,* பெ. (n.) **1.** நேர்வாளம்; croton oil plant. **2.** நாகணவாய்ப்புள்; the minabird. **3.** சங்கு; conch.

நாகணவாய் *nāgaṇa-vāy,* பெ. (n.) *நாகண வாய்ப்புள் (யாழ்.அக.)* பார்க்க; see *nāgaṇa-vāy-p-pul.*

[நாகணம் + வாய்.]

நாகணவாய்ச்சி *nāgaṇa-vāycci* பெ. (n.) *நாகணவாய்ப்புள்* பார்க்க; see *nāgaṇa-vāy-p-pul.* "*கேகயப்புள்ளும் நாகணவாய்ச்சியும்*" ((குற்றா.குற.87.3.).

நாகணவாய்ப்புள் *nāgaṇa-vāy-p-puḷ* பெ. (n.) பூவைப்பறவை (திவா.); bush myna, Fuscus acridotheres- Mainate.

மறுவ. மைனாக்குருவி

[நாகண + வாய் + புள்.]



நாகணி *nāgaṇi,* பெ. (n.) புன்கு; malabar poon.

நாகணை *nāgaṇai,* பெ. (n.) திருமாலின் பாம்பணைப் பள்ளிக் கொள்கை; the serpent-bed of Tirumāl "*நாகணைமிசை நம்பரர்*" (திவ்.நாய்ச்.10:10).

[நாகம் + அணை.]

நாகணையான் *nāgaṇaiyāṉ,* பெ. (n.) (பாம்பைப் படுக்கையா யுடைய) திருமால்; Tirumāl (viṣhṇu), as couched on a serpent.

[நாகணை → நாகணையான்.]

நாகத்தம் *nāgattam,* பெ. (n.) *நாகத்தாதனம்* பார்க்க; see *nāgattādaṉam.* "*நாகத்த மிடாதனம்*" (தத்துவப்107).

இரண்டுகால்களையும் கழுத்தில் ஏறிட்டு வைத்துத் தலைகால்களுக்குட்படுமாறு உடலை வளைத்து நிற்கும் இருக்கை வகை.

நாகத்தம்பிரான் *nāga-t-tambirāṉ,* பெ. (n.) தெய்வமாக வைத்து வணங்கப்படும் தலைமைப்பாம்பு (யாழ்ப்); cobra, regarded as a god

[ஒருகா: நகர் → நாகு → நாகம் + தம்பிரான் = இளமையுடன் விளங்கித் தோன்றும், ஒளிமிக்க தலைமைத் தன்மைப்பூண்ட நாகம்.]

நாகத்தல்லி *nāga-t-talli,* பெ. (n) நறுமணப்பொருள் (பெருங்,மகத.17,132); a kind of fragrant substance.

[நாகம் + தல்லி.]

நாகத்தாதனம் *nāgattādaṉam,* பெ. (n.) இரண்டுகாலுங் கழுத்திலேறிட்டு, தலை, காலுக்குட்பட, உடலை வளைத்து நிற்கும் ஓகவகை (தத்துவப்.107,உரை.); a posture in which the legs are twined round the neck in a yoga stage

[நாகம் + அத்து + ஆதனம்.]

நாகத்தி *nāgatti,* பெ. (n) மையிலை; small elliptia, leaved wild tea - Goldonia obtusa.

[நாகம் → நாகத்தி.]

நாகத்திசை *nāga-t-tišai,* பெ. (n) வடமேற்கு; north- west.

[நாகம் + திசை.]

நாகத்தின்சத்துரு *nāgattiṉ-šatturu,* பெ. (n) சிறு பூனைக்காலி; passion flower.

[நாகத்தின் + சத்துரு.]

நாகத்தின்பாம்பு *nāgattiṉ-pāmbu,* பெ. (n) பூநாகம்; small snake found in flowers

மறுவ. சிறுபாம்பு.

[நாகத்தின் + பாம்பு.]

நாகத்தினுயிர்பெந்தத்தி *nāgattiṉuyir-pendatti,* பெ. (n) வெள்ளைக் கிலுகிலுப்பை; white flowered rattle wort.

நாகத்துக்குருவாணி *nāgattu-k-kuruvāṇi.* பெ. (n.) *நாகதமனியம்* பார்க்க; see nāgatamaṇiyam.

[நாகத்துக்கு + உருவாணி.]

நாகத்துகள் *nāga-t-tugaḷ,* பெ. (n.) *நாகப்பொடி* பார்க்க; see *nāga-p-poḍi.*

[நாகம் + துகள்.]

நாகத்துரு *nāga-t-turu,* பெ. (n) நாகமரத்தின் வேர்; root of jammoon tree

[நாகம் → நாகத்துரு.]

நாகம் = நாகமரம்.

நாகத்தேமணி *nāga-t-tēmaṇi,* பெ. (n.) *நாகதாளி²* பார்க்க; see *nāgatāḷi².*

மறுவ. மணித்தக்காளி

நாகத்தைச்சூரணமாக்கி *nāgattai-c-cūraṇam-ākki,* பெ. (n.) வெற்றிலை; betal leaf capable of reducing zinc into powder.(சா.அக.)

[நாகத்தை + சூரணம் + ஆக்கி.]

நாகத்தைச்செந்தூரம்பண்ணி *nāgattai-c-cendūram-paṇṇi,* பெ. (n.) அழுகண்ணி; indian weeping plant.(சா.அக.)

மறுவ. நலகண்ணி, நற்கள்ளி.

[நாகத்தை + செந்தூரம் + பண்ணி.]

நாகத்தைச்செந்தூரியாக்கி *nāgattai-c-cendūriyākki,* பெ. (n.) 1. கரூமத்தை; black dhatura. 2. கசப்புப்பசளை; bitter portulaca or spinach. (சா.அக.)

[நாகத்தை + செந்தூரி + ஆக்கி.]

நாகத்தைச்சொர்ணமாக்கி *nāgattai-c-cornamākki,* பெ. (n.) பொன்னாக்கி; நாகத்தைக் கரைக்கும் நீர்மம்; a solvent capable of converting zinc into gold. (சா.அக.)

மறுவ. கரைமம்.

[நாகத்தை + சொர்ணம்+ ஆக்கி.]

நாகத்தைநாசமாக்கி *nāgattai-nāšam-ākki,* பெ. (n.) முருங்கை; moringa. (சா.அக.)

[நாகம் + அத்து + ஐ + நாசம் + ஆக்கி.]

நாகத்தைப்பற்பமாக்கி *nāgattai-p-parpam-ākki,* பெ. (n.) மான் செவிக்கள்ளி; spiral leafy milk hedge

[நாகம் + அத்து + ஐ + பற்பம் + ஆக்கி.]

நாகத்தைப்பேதமாக்கி *nāgattai-p-pēdam-ākki,* பெ. (n.) பொன்னாக்க முறைக்குப் பயன்படும் செப்புச்சதுரக்கள்ளி; a red variety of milk spurge capable of transmuting zinc into gold. (சா.அக.)

மறுவ. பொன்னாக்கமூலி.

[நாகத்தை + பேதமாக்கி.]



நாகத்தொட்டி *nāga-t-toṭṭi,* பெ. (n.) நாகம் சேர்த்துச் செய்த, தொட்டி வைப்பு நஞ்சு; a kind of prepared arsenic compound

[நாகம் + தொட்டி.]

நாகதகனி *nāgadagaṇi,* பெ. (n.) மரவகை; a tree. (சா.அக.).

[நாகம் + தகனி.]

நாகதண்டிகை *nāga-taṇḍigai,* பெ. (h.) **நாகதந்தம்** பார்க்க; see *nāga-tandam.*

[நாகம் + தண்டிகை.]

நாகணவாய் வகைகள்

மலை நாகணவாய்

நாகணவாய்

சாம்பல்தலை நாகணவாய்

செவ்வா நாகணவாய்

காட்டு நாகணவாய்

கருங்கொண்டை நாகணவாய்

நாகதந்தம் *nāga-tandam,* பெ. (n) 1. யானைத் தந்தம்; elephant's tusk. 2. பாம்பின் பல்; serpent's fangs. 3. முளையாணி; peg.

[நாகம் + தந்தம்.]

நாகதந்தி¹ *nāga-tandi,* பெ. (n) மரவகை; heliotropeum indicum 2. பேய்த்தும்மட்டி; bitter apple

[நாகம் + தந்தி.]

நாகதந்தி² *nāga-tandi,* பெ. (n.) 1. முள்ளங்கி; garden radish. 2. நேர்வாளம்; croton.

மறுவ: நர்க்கணம்.

[நாகம் + தந்தி.]

நாகதந்தி³ *nāgatandi,* பெ. (n.) நாகணம் பார்க்க; see nāganam.s

நாகதமனம் *nāga-tamanam,* பெ. (n) தண்ணீர் விட்டான்; common asparagus. (சா.அக.)

[நகர் → நாகம் + தமனம்]

நாகதமனி *nāga-tamani,* பெ. (n.) மாசிபத்திரி (மூ.அ); worm-wood (சா.அக.)

[நாகம் + தமனி.]

நாகதமனியம் *nāga-tamaniyam,* பெ. (n) 1. பழுபாகல்; prickly carolah 2. காய்ப்பாகல்; buffalo carolah 3. தலைச்சுருடுவள்ளி; indian birth-wort (சா.அக.)

[நகம் + நாகம் + தமனியம்.]

நாகதமாலம் *nāga-tamālam,* பெ. (n) புன்கமரம்; indian beech, Pongamia glabra. (சா.அக.)

[நகம் → நாகம் + தமாலம்.]

நாகதவனம் *nāga-tavanam,* பெ. (n) நச்சுமூங்கில்; poison bamboo, Crinum asiaticum.

நாகதாளி¹ *nāga-tāli,* பெ. (n.) 1. *சப்பாத்துக் கள்ளி*(L). பார்க்க; see *šappāttukkalli*-common Prickly-Pear 2. *நாகதாளிக்கள்ளி* பார்க்க; see *nāgatāli-k-kalli*

[நாகம் + தாளி.]



நாகதாளி² *nāga-tāli,* பெ. (n.) பேய்ப்பீர்க்கு; bitter luffa or wild luffa. Luffa acutangula

[நாகம்+தாளி.]

நாகதாளி³ *nāga-tāli,* பெ. (n.) குங்குமப்பூவின் மணத்தையும், வெற்றிலையின் வடிவையும் உடைய தாளிச்செடி; a kind of tāli Ipomea plant its leaves smell like european saffron and the resemble betel leaves

மறுவ: நாகத்தமனி, நாகத்தேமனி.

[நகம்→நாகம்+தாளி.]

இதன் சூரணத்தைப் பொடித்து, தேனில் கலந்து உட்கொள்ள, அனைத்து

நோய்களும் அகலும். இச் சூரணத்தை ஒரு மண்டலம் உண்டு வந்தால், வெருகம் பூனையின் நச்சுத்தன்மை படிப்படியாகக் குறையும். பாம்பின் நச்சுத்தன்மை நீங்கும். நரைதிரை மாறும். தோலின் சுருக்கம்மாறி, உடம்பில் மினுமினுப்பு ஏற்படும். நாகதாளிச் செடியின் தோற்றத்தையும், அதன் மருத்துவக் குணங்களையும் அடிப்படையாகக் கொண்டு, சாம்பசிவ மருத்துவ அகரமுதலி, பின்வருமாறு பிரித்துள்ளது.

1. *கருநாகதாளி.*
2. *செந்நாகதாளி.*
3. *அடுக்கு நாகதாளி.*
4. *மஞ்சள் நாகதாளி.*

நாகதாளி4 *nāga-tāḷi,* பெ. (n.) சதுர (கிரி)மலையிற் காணப்படும், மஞ்சள் வண்ண மூலிகைச்செடி; an another nāgatāḷi medicinal herb found grown in šadurakiri hills.

மறுவ: நாகமணிஇலை,ஈசுவரமூலி.

[நாகம்+தாளி.]

மஞ்சள் நிறமுடைய இந் நாகதாளி சதுரமலையிற் பரவலாகக் காணப் படுகிறது. சிறிய வெற்றிலையின் தோற்றங் கொண்ட இவ் வகை நாகதாளி இலைக்கலவையினைக் கடைச் சரக்குகளுடன் சேர்த்து உண்டு வந்தால், நீண்ட வாணாளை வாரி வழங்கும். நன்கு காய்ச்சிய நல்லெண்ணெய், இதளியக் (பாதரச) கலவையில், இச் சாற்றினைச் சேர்த்தால், இதளியம் கட்டியாக மாறும். பின்பு, இக் கட்டியினைச் செந்தூரமாக்கி, ஆவின் நெய்யில் ஒரு வாரம் உண்டுவந்தால், உடலுள்ளுறு நோய்கள் அனைத்தும் அகலும்.

நாகதாளிக்கள்ளி1 *nāga-tāḷi-k-kaḷḷi,* பெ. (n.) 1. கள்ளிச்செடிவகை(வின்); Orange flowered Prickly Pear.sh.,Opuntia spinessisima 2. சப்பாத்துமுள்; slipper milk hedge

மறுவ. சப்பாத்திச் செடி,-சப்பாத்திக்கள்ளி, சப்பைக்கள்ளி, நாகக்கள்ளி, பலகைக்கள்ளி, மஞ்சள்கள்ளி.

இக் கள்ளி, இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் கிடைக்கும் அமெரிக்கா விலிருந்து கொண்டு வந்து பயிராக்கப்பட்டது.

இச்செடி மஞ்சள் நிறமுடையது. இதன் அடித்தண்டு சப்பையானது. சதைப்பற்று மிக்கது. இதன் பூ பெரியது. மஞ்சள் அல்லது சிவப்பு வண்ணமுடையது. இப் பழங்களைப் பறவைகள் விரும்பி உண்ணும். இச் செடி அடர்ந்து முட்களுடன் வளருந்தன்மைத்து. இதைத் தீயிட்டுக் கொளுத்திச் சாம்பலாக மாற்றுவர். இச் சாம்பலினின்று உப்பு உண்டாக்குவர். இதன் பழம் கக்குவான், இளைப்பு, நாட்பட்ட இருமல், முதலான நோய்களுக்குக் கை கண்ட மருந்து. இந் நாகதாளிப் பழத்தின் மென்மையான சதைப்பகுதி, உடலுக்கு வலிமையையும், சூமிகுகுளிர்ச்சியையும் நல்கும். சூட்டைப்போக்கும்.

நாகதாளிக்கள்ளி2 *nāga-tāḷi-k-kaḷḷi,* பெ. (n.) அசாம், கேரளம், நேபாள மலைகளிற் காணப்படும் நாகதாளிக்கள்ளி; many spined prickly pear. This is another variety found grown in hills in Assam, Malabar, Nepal and other places.

[நாகதாளி+கள்ளி.]

இதன் இலைச்சாறு எல்லா நச்சுஉயிர்களின் நச்சுக்கடிக்குச் சிறந்த மருந்தாகும். இணைவிழைச்சு நோயினைப் போக்கும். இச் செடியின் கொழுந்து, மிகுந்த காரத்தன்மை மிக்கது. வயிற்றுப்போக்கினைப் போக்கும்.

இவ் வகை நாகதாளி இலைகள், நாட்பட்டு உடையாத கட்டிப்புண்களை உடைக்கும்.

இதன் பழச்சாற்றில் சருக்கரை சேர்த்துக்காய்ச்சி, இன்பருகம் உருவாக்கலாம். இப் பருகம், உடம்பிலுள்ள அனைத்து நச்சுநீரினையும் அகற்றும் இயல்புடையது. இருமல், மிகுகோழை (காசம்), ஈளை முதலான நோய்களையும் அகற்றும் என்று, சா.அக. கூறும்.

நாகதாளிவேர் *nāga-tāḷi-vēr,* பெ. (n.) படமெடுத்தாடும் நாகத்தின் ஆட்டத்தைக் கட்டுப்படுத்தும் வேர்; the nāgatāḷi root is used to control snakes and draw their heads and retire

மறுவ. நல்லபாம்பு வேர், பாம்புக்கடி வேர்.

[நாகதாளி+வேர்.]

நல்லபாம்பின்நச்சுத் தன்மையையும், சீறிப்பாயும் சினமிக்க நாகத்தின் ஆட்டத்தையும், மட்டுப் படுத்திக் கட்டுப்படுத்தும் வேர். பாம்பாட்டிகளுக்குப் பாதுகாப்புத் தரும் வேர்.

பாம்பாட்டிகள், இவ் வேரினைப் படமெடுத் தாடும் பாம்பின் முன்பு காட்டினால், பாம்புகள் தலையைப் பின்னுக்கு இழுத்துப் படத்தினைச் சுருக்கிக் கொள்ளும்.

நாகதிசை *nāga-tiśai,* பெ. (n.) மேற்கு; west.

[நாகம் + திசை.]

நாகதீபம் *nāga-tībam,* பெ. (n.) ஐந்தலை நாகத்தின் வடிவம் போன்ற விளக்கு (வின்.); lamp on a stand shaped like a five headed cobra

[நாகம் + sktதீபம்.]



நாகதூமம் *nāga-tūmam,* பெ. (n) ஐந்துதலை நாகம் போன்று விரிந்த சீமையாதளை; common quince-cydonia vulgaris.(சா.அக.); on a stand shape like a five headed cobra.

[நாகம் + தூமம்.]

நாகதெந்தி *nāgatendi,* பெ. (n.) நேர்வாளம் (மலை); purging croton plant.

[நாகம் + தெந்தி.]

நாகதெய்வம் *nāga-teivam,* பெ. (n.) இந்துப்பு; sodium chloride

[நாகம்+தெய்வம்.]

நாகதேமணி *nāga-tēmaṇi,* பெ. (n) மணித்தக்காளி; black berried solanum

[நாகம் + தேமணி.]

நாகதேவதாளி *nāga-tēva-tāḷi,* பெ. (n) நாகதாளி + தேவதாளி ஆக இரண்டு மூலிகைகள்; snake hood.fig + snake luffa

[நாகம்+தேவதாளி]

இவ் விரண்டு மூலிகைகளும், இதளியத்தைக் (பாதரசம்) கட்டுந் தன்மைமிக்கது. பொன்னாக்க முறைப்படிச் செம்புமாழையினை வெண்மையாக்குந் தன்மையது என்று, சா.அக. கூறும்.

நாகதேவன் *nāga-tēvaṉ,* பெ. (n.) திரு மாலிருக்கை (ஆதிசேடன்) (யாழ்.அக.); Adišedan.

[நாகம் + தேவன்.]

நாகதேவி *nāga-tēvi,* பெ. (n.) நாகதேவதை (யாழ்.அக.); cobra,considered a Goddess

[நாகம் + தேவி.]

நாகதேனி *nāga-tēṉi,* பெ. (n.) பெருமருந்து (மலை); indian birth-wort.

மறுவ. ஈசுரமூலி, தலைச்சுருளி, தலைச் சூடுவல்லி முல்லை, பீநாறிச்சங்கு, தராசுக்கொடி.

நாகதொனி *nāga-toṉi,* பெ. (n.) மருதப் பண்களிலொன்று (பிங்); a melody-type of marudam class

[நாகம் + skt.தொனி.]

நாகதோரணி *nāga-tōraṇi,* பெ. (n) சிவப்பு எலிச்செவிக்கீரை; a red variety of rat's ear plant-Ipomea rheniformis.

[நாகம் + தோரணி.]

நாகந்தகன் *nāgandagaṉ,* பெ. (n.) கழுலன் (கருடன்); brahmini kite.

[நாகந்தம்→ நாகந்தகன்.]

நாகந்தி[1] *nāgandi,* பெ. (n.) *நாகதெந்தி* பார்க்க; see *nāgatendi.*

நாகந்தி[2] *nāgandi,* பெ. (n.) **1.** நேர்வாளம்; croton oil plant **2.** *நாகணம்* பார்க்க; see *nāgaṇam*

நாகநகர் *nāga-nagar,* பெ. (n.) கீழுலகம் (சிலப்.1.21,அரும்.); the nether world.

[நகர் → நகம் → நாகம் + நகர்.]

நாகநஞ்சு *nāga-nañju,* பெ. (n) துத்த நாகத்தினால் ஏற்பட்ட நஞ்சு; zinc-poisoning

[நாகம் + நஞ்சு.]

நாகநந்தி *nāga-nandi,* பெ. (n.) மரவகையு ளொன்று; a kind of tree

[நாகம் + நந்தி.]

நாகநாகிக்கிழங்கு *nāga-nāgi-k-kiḻaṅgu,* பெ. (n.) கிழங்கு வகையுளொன்று; a kind of tuberous root

[நாகநாகி + கிழங்கு.]

நாகநாகி = பாம்பு போல் தோற்றமும், உடம்பிற்கும் இளமையினையும். வனப்பினையும் வழங்கும் கிழங்கு.

நாகநாடு[1] *nāga-nādu,* பெ. (n.) துறக்கவுலகம் (சிலப்.1.1:21.அரும்.); heavenly region

[மாகம் → நாகம் + நாடு.]

மாகநாடு = உயர்ந்த அல்லது மேலான. மேன்மை மிக்க நாடு; துறக்கவுலகம்.

[ஒருகா. மாகநாடு → நாகநாடு.]

நாகநாடு[2] *nāga-nāḍu,* பெ. (n.) **1.** நாகரென்பார் வாழும் நாடு; land of the nāga race. "*கீழ்நில மருங்கினாக நாடாளும்*" (மணிமே.8:54.). **2.** கீழுலகம்; the nether world. "*நாகநீண கரொடு நாக நாடதனொடு*" (சிலப்.1:21.).

[நாகர் + நாடு → நாகநாடு]

கி.பி.2–இல், நாகநாடு என்னும் பெயர், மேலை நாடுகளுக்கும், கீழைநாடுகட்கும், பொதுப்பெயராக வழங்கிற்றென்பதற்கு, மணிமேகலையும், சிலப்பதிகாரமும் நற்சான்று நல்குகிறது.

நாகநாதம் *nāga-nādam,* பெ. (n.) பண்வகையிலொன்று; a specific melody type.

[நாகம் + Skt. நாதம்.]

படமெடுத்தாடும் பாம்பினை, மென்மேலும் ஆட்டுவிக்கவும், பெட்டிப்பாம்பாய் அடக்கி வைப்பதற்கும் பயன்படும் பண்.

நாகநாதன்[1] *nāga-nādaṉ,* பெ. (n.) துறக்க வுலகத்திற்கிறைவன் இந்திரன் (சூடா); Indraṉ, as the lord of the celestial world.

[மாகநாதன் → நாகநாதன்.]

மாகம்:துறக்கவுலகம். மாகநாதன்:துறக்கவுலகத் தலைவனான இந்திரன். நாகநாட்டுத்தலைவன் இந்திரன்:நாகநாடு என்பது, இந்திரனின் நாடு: நாகநாடென்பது, மேலைநாட்டையும், கீழை நாட்டையும் குறிக்கும் பொதுப்பெயராகும்.

தேவருலகிலுள்ள இந்திரன் என்னும் பட்டம், சாலிநாட்டிலும் வழங்கியது.

துறக்கவுலகத்தலைவன் இந்திரனுக்கு வழங்கிய நாகநாதன் என்னும் தலைமை குறித்த பெயர், மேலை நாட்டிலும், கீழை நாட்டிலும், பொதுப் பெயராக வழங்குவதோடன்றி, இன்றும் அனைத்து ஊர்களிலும் வழக்கூன்றியுள்ளது.

நாகநாதன்[2] *nāga-nātaṉ,* பெ. (n.) 1. ஆதிசேடன்; Adišeḍaṉ, as lord of serpents. 2. (பாம்பரணனாகிய தலைவன்;) சிவன்; šivaṉ,as wearing serpants.

[நாக + skt நாதன்.]

நாகநீள்நகர் *nāga-nīḷ-nagar,* பெ. (n.) 1. தேவருலகம்; indra's heaven, the world of Gods. "*நாகநீள் நகரொடு நாகநாடதனொடு*" (சிலப்.1:21). மறுவ. உம்பர்நகர்.

[நாகம் + நீள்நகர்.]

[மாகம்= விண்ணுலகம், துறக்க நாடு. "மாகந்தொட நனி நிவந்த கொடி" (ஞானா:34:15) மாகநாடு → நாகநாடு: மாகம் என்பது, நாகமெனத்திரியும். நாகநாடென்பது, மேலையுலகத்திற்கும், கீழை நாடுகட்கும் பொதுப்பெயராம்.]

நாகநெய் *nāga-ney,* பெ.(n.) மருந்தெண்ணெய் வகை (இராசவைத். 132); a medicinal oil.

[நாகம் + நெய்.]

நாகப்பகை *nāga-p-pagai,* பெ. (n.) (பாம்பிற்குப் பகைவன்) கலுழன்; Garudaṉ, as the enemy of snakes. "*நாகப்பகைக் கொடியானுக்கு*" (திவ்.திருப்பல்.8.).

[நாகம் + பகை.]

நாகப்பச்சை[1] *nāga-p-paccai,* பெ. (n.) தரங்குறைந்த பச்சைக்கல்; ஆற்றுப் பச்சைக்கல்; an inferior green stone.

[நாகம் + பச்சை.]

சித்தமருத்துவத்திற்குப் பயன்படும் ஆற்றுப்பச்சைக்கல், 120–வகைக்கற்களுள் ஒன்று. இது மதிப்புக்குறைந்த தென்று, சா.அக. கூறும்.

நாகப்பச்சை[2] *nāga-p-paccai,* பெ. (n.) பச்சைக்கல் வகை; a variety of green stone.

[நாகம் + பச்சை]

நாகப்பஞ்சமி *nāga-p-pañjami,* பெ. (n.) பால், பயறு முதலியவற்றை, நாகத்துக்கு இட்டு, அதனை வணங்கும் மடங்கல் (ஆவணி) முழுநிலவு ஐந்தாம் நாள்; the fifth lunar day of the bright fortnight in the month of šrāvaṇa in the which the nāgar or serpent-

gods are worshipped with offerings of milk,grain,etc .

[நாகம் + skt பஞ்சமி.]

நாகப்பட்டினம் *nāga-p-paṭṭiṉam,* பெ. (n.) சோழநாட்டிலுள்ள ஒரு துறைமுகப்பட்டினம்.; a sea port town in the Cōḻanāḍu நாகப்பட்டினத்துச் சோழன் (பெரும்பாண்.31, உரை).

[நகு → நகர் → நாகர் → நாகம் +பட்டினம்.]

வங்கக்கடல் தோன்றுமுன் அங்கிருந்த நிலப்பரப்பில், நாகரிகப்பண்பாட்டுடன் விளங்கித்தோன்றிய மக்கள், வதிந்த இடம் நாகப்பட்டினம்.

நாகப்படக்கள்ளி *nāga-p-paḍa-k-kaḷḷi,* பெ. (n) கள்ளிவகை; a kind of spurge

நாகப்படக்கற்றாழை *nāga-p-paḍa-k-kaṟṟāḻai,* பெ. (n) *நாகப்படம்* பார்க்க; see *nāga-p-paḍam*

மறுவ. வாணாள்மூலி.

[நாகப்படம் + கற்றாழை.]

நாகப்படத்தாலி¹ *nāga-p-paḍa-t-tāli.* பெ. (n) *கழுத்தணி வகையு* ளொன்று; a kind of necklet

[நாகபடம் + தாலி.]

நாகப்படத்தாலி² *nāga-p-paḍa-t-tāli.* பெ. (n) நாகப்படமுகப்புடன் கூடியதும் திருமணத் தன்று கணவனால் அணிவிக்கப் பெறுவதுமான மங்கலநாண்; a kind of necklet

[நாகம் + படம்+தாலி.]

பழங்காலத்தே பரியம் போடுங்கால், கணவன் பெயரைப் பனை போலையில் பொறித்தல் மரபு. பின்னர், திருமணத்தன்று. மணமகள் கழுத்தில் தொங்குமாறு மணமகனால் அணிவிக்கப்படும்



நாகப்படம்¹ *nāga-p-paḍam,* பெ. (n) **1.** நல்லபாம்பின் படம்; hood of the cobra **2.** படமெடுத்த நாகத்தின் உருவங் கொண்ட தோளணிவகை; armlet shaped like a coiled up cobra without-spread hood, "*வலய நாகபடங்கொடு பாரித்திட்டான்*" (இரகு. கடிமண.64). **3.** பாம்புப்படத்தின் உருவங் கொண்ட மகளிர் காதணிவகை(வின்.); ear-ornament resembling a cobra's hood,worn by women

[நாகம் + படம்.]

நாகப்படம்² *nāga-p-paḍam,* பெ. (n) முள்ளில்லாக் கற்றாழை; thornless aloe

மறுவ. சப்பாத்திச்செடி.

[நாகம் + படம்.]

நீண்டநாள் வாழ்வதற்கு உறுதுணை புரியும் கற்றாழை. இக் கற்றாழை, சதுர(கிரி) மலையில் மிகுதியாகக் காணப்படுகிறது. பாம்பின் படத்தினைப் போன்ற தோற்றமுடையது. கற்றாழைச்சாற்றுடன் பால் கலந்து பருகினால், தீராத மயக்கநோய் அகலும். இளமைப்பொலிவுடனும் உடல்வனப் புடனும் திகழும் என்று, சா.அக. கூறும்.

நாகப்படலம் *nāga-p-paḍalam,* பெ. (n.) கண்ணோய் வகை (யாழ்.அக); an eye disease.

[நாகம் + படலம்.]

முதற்கண் நோயின் அறிகுறியாக இரு கண்களும் சிவக்கும். அடுத்த நிலையில், வளர்ந்து வரும் தடிப்புள்ள அழுத்தமான தசை வளர்ச்சியேற்படும். தசைவளர்ச்சி வெள்விழி முழுதும் படர்ந்து, கருவிழியையுங் கடந்து, நாளாவட்டத்தில் கண்ணின் நடுவிலுள்ள பாவையையும் மறைக்கும். இவற்றின் விளைவாகக் கண்களில் தீராத அரிப்புண்டாகும் மென்று, சா.அக. கூறும்.

நாகப்படக்கற்றாழை *nāga-p-paḍa-k-kaṟṟāḻi,* பெ. (n.) நாகப்படம் பார்க்க; see nāga-p-paḍam.

மறுவ. வாணாள்மூலி.

[நாகப்படம் + கற்றாழை.]

நாகப்படிக்கற்றாழை *nāga-p-paḍi-k-kaṟṟāḻai,* பெ. (n.) *நாகப்படக்கற்றாழை* பார்க்க; see *nāga-p-paḍa-k-kaṟṟāḻai.*

[நாகப்படி + கற்றாழை.]

நாகப்பணம் *nāga-p-paṇam,* பெ. (n.) அணிவகை (S.I.I.vi,180); an ornament.

நாகப்பணம் = நாகமுகப்பிணையுடைய பளபளப்பும், வழவழப்பும் பொருந்திய அணி. நாகத்தின் உருவினைப் பல்வகை யணிகளில் பொறிப்பது இன்றும் காணப்படுகிறது.

[நாகம்+பணம்.]

நாகப்பத்திரி *nāga-p-pattiri,* பெ. (n.) பெருவகை; Parrot tree-Albizzia lebbek.

[நாகம் + பத்திரி.]

நாகப்பழக்காடி *nāga-p-paḻa-k-kāḍi,* பெ. (n.) நாகப்பழச்சாற்றினை மட்டும் பிழிந்தெடுத்து, ஏதும் கலக்காமல், புளிக்க வைத்தக் காடி; a fermented essence obtained by pressing and squeezing out the juice of jaumoon fruit, without adding water to it.

மறுவ. நாவல்பழக்காடி.

[நாவ→நாக + பழம் + காடி.]

[நாகப்பழம் + காடி]

நாவல் பழச்சாற்றில், தண்ணீரோ அல்லது கடைச்சரக்குக் கலவையோ, ஏதுமின்றித் தனியாகப் புளிக்கவைத்த காடி. இதன் காடி குடற் காய்ச்சலைப்போக்கும். செரிமான ஆற்றலைப் பெருக்கும். சருக்கரைநோய்க்குக் கைகண்ட மருந்தாகும்.

நாகப்பழம் *nāga-p-paḻam,* பெ. (n.) நாவல் பழம்; jaumnoon fruit.

[நாவற்பழம் → நாகற்பழம் →நாகப்பழம்.]

நாகப்பழமரம் *nāga-p-paḻa-maram,* பெ. (n.) *நாவல்மரம்* பார்க்க; see *nāval-maram.*

[நாக + பழம்+மரம்.]

நாகப்பன்வெட்டு *nāgappaṉ-veṭṭu,* பெ. (n.) பழையகாசுகளில் ஒன்று (பணவிடு.143); a kind of ancient coin.

[நாகப்பன் + வெட்டு.]

நாயக்கர்காலக் காசு. வெட்டு = வெட்டியமைக்கப்படும் வெண்கலக்காசு, அல்லது செப்புக்காசு.

நாகப்பாம்பு *nāga-p-pāmbu,* பெ. (n.) 1. நல்லபாம்பு; cobra. 2.வயிற்றுப்பூச்சி (இ.வா): round worms.

[நாகம்+பாம்பு.]

நாகம்பாம்பின் வகைகள்பற்றி, சா.அக. கூறுவது வருமாறு: கருநாகம் 2. பரநாகம் 3. கல்நெஞ்ச நாகம் 4. ஊமை நாகம் 5. கண்ணெரியனாகம்.



நாகப்பாம்புநஞ்சு *nāga-p-pāmbu-nañju,* பெ. (n) 1. நல்லபாம்பின் நஞ்சு; poison from snake bite- cobra venom

[நாகப்பாம்பு+நஞ்சு.]

நாகப்பாலை *nāga-p-pālai,* பெ. (n) கொடிப்பாலை; cotton milk plant-Dregea volubils

[நாகம் + பாலை.]

நாகப்பிணையல் *nāga-p-piṇaiyal,* பெ. (n) இணைந்த இரு பாம்புகள் போல வரைந்த ஓவியத்தின் (சித்திரத்தின்) அறைகளில், எழுத்துகளை அடைக்கும்படி அமைந்த, ஓவிய(சித்திர)ப் பாட்டு வகை; a variety of ōviyakavi (cittira-k-kavi,), whose letters can be arranged to fit in a diagram in the form of two intertwining snakes

[நகர்வு → நகம் → நாகம் + பிணையல்]

நாகப்பிணையல் வகை:- 1. இரட்டை நாகப்பிணையல். 2. எண்நாகப்பிணையல்.

இரட்டை நாகப்பிணையல், இரு நாகங்கள் பிணைந்திருப்பது போன்ற சித்திரத்தில், ஒன்றோடொன்று இடம்பெறும் பாட்டு.

அருளின் றிருவுருவே யம்பலத்தா யும்பர் தெருளின்மரு வாருயிர்ச் சீரே. பொருவிலா வொன்றே யுமையாளுடனேயுறுதிதரு குன்றே தெருளவருள்.

இப் பாடலின் வாயிலாக, இரண்டு நாகங்களின் தலையினின்று தொடங்கி. வால்முனைகளிறுதியாக, இடையிடையே தத்தம் உடலினும், பிறிதுபிறிதுடலினும் மாறாடிச், சந்திகளினின்ற எழுத்தே, மற்றை யிடங்களினு முறுப்பாய் நிற்க, ஒவ்வொரு பாம்பிற்கும், மேற்சுற்றுச் சந்தி நான்கினும், நான்கெழுத்தும், கீழ்ச்சுற்றுச் சந்தி நான்கினும், நான்கெழுத்தும், இரண்டு பாம்பிற்கும் நடுச்சந்தி நான்கினும், இரண்டு பாட்டிற்கும் பொருந்த நான்கெழுத்துமாக, ஓவியத்தி (சித்திரத்தி)லடைபட்டு முடியும் பாங்கினை அறியலாம்.

நாகப்பிரண்டை *nāga-p-piraṇḍai,* பெ. (n) படப்பிரண்டை; a kind of adament creeper-Vitex species

[நாகம்+பிரண்டை.]

உணவிற்குக் கறியமுதாகப் பயன்படும், பிரண்டை வகை.

நாகப்பிரம்பு *nāga-p-pirambu,* பெ. (n) பாம்புபோன்ற ஒருவகைப் பிரம்பு; a kind of snake-like rattan

[நாகம் + பிரம்பு.]

நாகப்பிராசிகம் *nāga-p-pirāśigam,* பெ. (n) சீமைப்பிச்சி; chinese jasmine

[நாகம் + skt பிராசிகம்.]

நாகப்புல்லுருவி *nāga-p-pulluruvi,* பெ. (n) செடிவகை(நாஞ்.); a plant

[நாகம் + புல்லுருவி.]

நாகமரத்தில் வளரும் புல்லுருவி என்று, சா.அக. கூறும்.

நாட்டு வாதுமை

நாகபலை



நாவல்

நாகப்புல்வரி *nāga-p-pulvari,* பெ. (n.) நாகப்புல்லுருவி (நாஞ்.); a plant.

நாகப்பூ[1] *nāga-p-pū,* பெ. (n.) 1. சிறுநாகப் பூ; iron wood of ceylon. 2.பெருநாகப்பூ; a species of iron wood.

[நாகம் + பூ.]

நாகப்பூ[2] *nāga-p-pū,* பெ. (n.) 1. மருந்துவகை; a kind of prepared medicine. 2. பூப்போன்ற துத்தநாகம்; flower of zinc.

மறுவ. தக்கோலம்.

[நாகம் + பூ.]

நாகப்பூச்சி *nāga-p-pūcci,* பெ. (n.) 1. *நாக்குப்பூச்சி* பார்க்க; see *nākku-p-pūcci.* 2. பூநாகம்; an earth worm.

[நாகம் + பூச்சி.]

நாகப்பொடி *nāga-p-poḍi,* பெ. (n.) நன்கு புடமிட்டு தூய்மைப் படுத்தப்பட்ட நாகத்தூள்; calcined white powder of zinc.

மறுவ. நாகபற்பம்.

[நாகம் + பொடி.]

முதற்கண், நாகத்தை இலுப்பை நெய்யில் 20 முறை உருக்கித் தூய்மைப் படுத்த வேண்டும். உருக்கிய நாகத்தில், இலைக்கள்ளியைச் சேர்த்து, இரும்புக் கரண்டியால் தீய்த்து, புகை வரும்வரை துழாவிக் கொண்டேயிருக்க வேண்டும். இவ்வாறு இலுப்பை நெய், இலைக்கள்ளி, துத்தநாகம் மூன்றும் எரிந்து சாம்பலாகும் வரை, வறுத்துக் கொண்டே இருக்கவேண்டும். இவ்வாறு வறுவலான கலவையை, மெல்லிய துணியில் நன்குவடிகட்டவேண்டும். இவ்வாறு வடிகட்டிய முக்கூட்டு மருந்தின், பொடியை, (பற்பம்) சித்தமருத்துவத்தில், பல்வேறு நோய்கட்கு, பல்வேறு வழிகளில் பக்குவப்படுத்திப் பயன் படுத்துவர். மேலும் சித்தமருத்துவர், இப் பொடியினை, அரத்தப்பிரமியம், வெள்ளை படுதல் முதலான நோய் களுக்குப் பயன்படுத்துவர்.உடம்பின் சூட்டைத் தணிப்பதற்கும் நாகப்பொடி பயன்படும் மென்று, சா.அக. கூறும்.

நாகபந்தம்[1] *nāga-bandam,* பெ. (n.) *நாகப்பிணையல்* பார்க்க; see *nāga-p-piṇaiyal.*

[நாகம் + பந்தம்.]

நாகபந்தம்[2] *nāga-bandam,* பெ. (n.) இணைந்த இரண்டு பாம்புகள் போல வரைந்த, சித்திரத்தின் அறைகளில், எழுத்துக்களை அடைக்கும்படி யமைந்த சித்திரவகை (தண்டி.95); a variety of cittira-k-kavi, whose letters can be arranged to fit in a diagram in the form of two interwining snakes.

[நாகம் + Skt. பந்தம்]

நாகபந்தம்[3] *nāga-bandam,* பெ. (n.) 1. ஆடு தின்னாப்பாளை—worm killer-Aristolochia bracteata. 2. பொன்னாவரை; fetid cassia sophera. 3. பாலிருள்; a white species of iron wood -Mesua.

[நாகம் + skt. பந்தம்.]

நாகத்தைக் கட்டும் மூலிகைகள்:—

நாகத்தின் படமெடுக்கும் பாங்கினையும், சீறிப்பாயும் சினத்தையும், உயிரைக் கொல்லும் நச்சுத் தன்மையையும் போக்கும் மூலிகைகள்.

நாகபந்தனி *nāga-bandaṉi,* பெ. (n) 1. நாகத்தின் நச்சுத்தன்மையைப் போக்கும் மூலிகைகள்; a medical herb to prevent cobra venom 2. *நாகபந்தம்* பார்க்க; see *nāga-bandam*

மறுவ. பாலிருள், பொன்னாவரை.

[நாகம் + skt. பந்தம் → பந்தனி.]

நாகபந்து *nāga-bandu,* பெ. (n.) அரசமரம் (யாழ்.அக); pipal tree - Ficus religiosa.

[நாகம் + skt பந்து.]

நாகபலம் *nāga-palam,* பெ. (n.) பூடுவகை; a kind of medicinal herbal sida spinosa alias S.alba

[நாகம் + பலம்.]

உடலுக்கு ஆற்றல் தரும் மூலிகை என்று, சா. அக. கூறும்.

நாகபலன் *nāga-palaṉ,* பெ.(n.) வீமன் (யாழ்.அக.) (யானை வலியுடையவன்); Vīmaṉ, as having the strength of an elephant.

[நாகு + அ → வலன் > பலன்.]

நாகு = வலிமை. ஆற்றல், யானை போன்று வலிமை, ஆற்றல் வாய்க்கப் பெற்ற வீமன்.

நாகபலா *nāga-palā.* பெ.(n) 1. நாகமல்லி; yellow jasmine, tree jasmine 2. வலிவைக் கொடுக்கும் மூலிகை; elephant-tonic-canthium parutiflora.

மறுவ. காரை

[நாகம் + பலா.]

நாகம் : வலிமை. திறன், ஆற்றல். பலா = யானையின் வலிமையையும், ஆற்றலையும், உடலுக்கு ஊட்டக்கூடிய மூலிகை.

நாகபலி *nāga-pali,* பெ. (n.) சுக்கு; dried ginger.

[நாகம் + பலம் → பலி]

உடலுக்கு வலிவு, திறன், இளமை, பொலிவு அனைத்தையும் ஒரே நேரத்தில் அளிக்கும் ஆற்றல் சுக்கிற்குஉண்டு.

நண்பகலிலோ அல்லது மாலைப் பொழுதிலோ, நன்கு சுண்டக் காய்ச்சிய ஆவின் பாலில் சுக்கும், பனை வெல்லமும் சேர்த்துப் பருகுவதால், உடலுக்கு உறுதியும், தோற்றப்பொலிவும் ஏற்படும்.

காலை இஞ்சி, கடும் பகல் சுக்கு, மாலை கடுக்காய், மூன்று வேளையும் பருகினால், கோலூன்றி நடக்கும் கிழவனும், குமரனாக வான் என்பது, அனைவரும் அறிந்த முதுமொழி.

நாகபலிகை *nāga-paligai,* பெ.(n) திரண்டபெண்; a woman who has recently matured

[நாகம்: திரட்சி. திறன். நாகம் + பலிகை. பலிகை. = வலிமை. உடலாலும், உள்ளத்தாலும் மணவாழ்க்கைக் குரியவள். உடல் வலிமை, இல்லறத்திற்கு ஏற்ற உள்ளவலிமை, இரண்டுமுடையவள்.]

நாகபலை *nāga-palai* பெ. (n) *நாகமல்லி* (*தைலவ.தைல.*) பார்க்க; see *nāga-malli.*

நாகபற்பம் *nāga-paṟpam,* பெ. (n.) *நாகப்பொடி* பார்க்க; see *nāga-p-poḍi.*

மறுவ. நாகசூரணம்.

[நாகம் + பற்பம்.]

வாந்தி, வயிற்றுப் போக்கு, காக்கைவலிப்பு முதலான நோய்களுக்குரிய சூரணமென்று சா.அக.கூறும்.

நாகபாசக்கம்பி *nāga-pāša-k-kambi,* பெ. (n.) நாகபாசத்திலுள்ள கம்பிகள்; zinc threads.

[நாகபாசம் + கம்பி.]

நாகபாசத்தார் *nāga-pāšattār,* பெ. (n.) ஐந்துவகை இசைக்கருவிகளை இசைப்பவர்; one who is capable of five kinds of musical instruments. 'நாலுமுக நாகபாசத்தார் செப்பேடு'.

[கல்வெட்டிதழ் - 2034 - ஆனி காலாண்டிதழ்.]

நாகபாசத்தார் தோற்கருவி, துளைக்கருவி, மிடற்றுக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி முதலான ஐவகை இசைக்கருவிகளை இசைத்தனர். இவர்கள் காலம் - 1732-33.

நாகபாசம்[1] *nāga-pāšam,* பெ.(n.) மாட்டில் காணப்படும் தீயசுழி; cattle hair-curl considered as evil symptom.

[நாகம் + பாசம்.]

மாடுகளின் இரு தொடைகளுக்கு மய்யப்பகுதியில், கையகலம் கரியநிறமாகப் பட்டையா யிருக்கும் தீயசுழி.

நாகபாசம்[2] *nāga-pāšam,* பெ.(n.) போரிற் பகைவரைப் பிணிக்கச்செலுத்தும் பாம்புருவமான மந்திரக்கயிறு(கம்பரா.நாகபாச.); a kind of serpentine magical noose, used in battles.

[நாகம் + பாசம்.]

நாகபாசம்[3] *nāga-pāšam,* பெ. (n.) 1. நாகவொத்து (இ.வ.); a kind of armlet worn by women. 2. இரும்புக்கொக்கி வகை; W-shaped hook

[நாகம் + பாசம்.]

நாகப்பாம்பு சுருண்டு படமெடுத்தாடும் அமைப்புள்ளதும், நடனமங்கையர் அணி வதுமான, பச்சைக்கல் பதித்த தோளணி.



நாகபாசம்[4] *nāga-pāšam,* பெ. (n.) ஆலையில் முப்பது இழைகள் செல்லும் பகுதி; the part where thirty threads get into , in powerloom

நாகபாசமுடிச்சு *nāga-pāša-muḍiccu,* பெ.(n.) முடிச்சுவகை (சைவபூ.சந்.218); a kind of knot.

[நாகபாசம் + முடிச்சு.]

நாகப்படம் போன்று வளைந்து சுருண்ட முடிச்சு வகை.

நாகபாடாணம் *nāga-pāḍāṇam,* பெ.(n.) 1. வைப்புநஞ்சு வகையுளொன்று; a kind of prepared arsenic 2. நாகம் சேர்ந்த நஞ்சு; zinc poison.

[நாகம் + skt பாடாணம்.]

யா + கு → யாகு → ஞாகு → நாகு.

நாகு + அம் → நாகம்

யா = கருமைக் கருத்துவேர். வைப்புநஞ்சும், நாகங்கலந்த நஞ்சும் கருநீல நிறத்தது. பலவகை மருந்துச்சரக்கு களைத் சேர்த்துப்புடமிட்டு, உருக்கிக் கட்டியாகச் செய்யப்படும் வைப்புநஞ்சு, உருக்கிக் கட்டியாக்கச் சேர்க்கப்படும் மருந்துச்சரக்குகள் வருமாறு: 1. சூதம், 2. இலிங்கம், 3. கருவங்கம், 4. பச்சை, 5. பொன்னரிதாரம், 6. காரம் முதலானவற்றைப் பொடித்துக் குகையில் வைத்து மேல்மூடி, சீலைமண் செய்து, அனல் மூட்டிப் புடமிடுவர். அனல், கனன்று ஆறியபின், புடத்தினை உடைத்துப் பார்த்தால், மருந்து உருகிப் பின் இறுகிக் கட்டிவடிவில் இருக்கும். இதுவே நாக வைப்புநஞ்சு எனப்படும்.

இந் நஞ்சு மாழையில் (உலோகத்தில்) பழுக்குந் தன்மைத்து.

நாகபாணி *nāga-pāṇi,* பெ.(n.) தில்லைமரம்; tigers milk spurge-Excoecaria crenulata.

[நாகம் + பாணி.]

நாகபுரம் *nāga-puram,* பெ. (n.) சாவக நாட்டுத் தலைநகர்; the ancient capital of šāvagam "*நாகபுரமிது நன்னக ராள்வோன்*" (மணிமே. : 24:169).

[நாகம் + புரம்]

நாகபூசணன் *nāga-pūšaṇaṉ,* பெ. (n.) பாம்பணி பூண்ட சிவன்; šivaṉ as wearing serpent ornaments

நாகம்[1] *nāgam,* பெ. (n) 1. விண் (பிங்.); sky, visible heaven. "*நீடுநாக மூடுமேக மோட*" (கம்பரா.கலன்காண்.37). 2. துறக்கம் (திவா;) வீடுபேறு; indiras paradise "*எம்மை நாகமேலிருத்து மாற்றால்*" (சுந்தபு. திருவிளை.99). 3. மேகம்; cloud "*நாகமே லாயுலவென்னாகமே*" (கொண்டல் விடு.). 4. ஒலி (யாழ்.அக.); sound.

[மாகம் = விண்ணுலகம், மேலானவிடம், தேவருலகம். மாகம் → நாகம்].

ஒ.நோ. முப்பது→நுப்பது.

ஒருகா. *[*யாகு → ஞாகு→ நாகு + அம் → நாகம். *]*

வானம் கரியது; நீல நிறத்தது. கருமையும் நீலமும் ஓரளவிற்கு, ஒத்த தோற்றத்தின.

[எடு] "கார்வான்" (புறநா. 147:3) "நீல்நிற விசும்பின் மீனொடு புரைய" (நற். 199:9.).

விசும்பு கரிய நிறத்தது : நீலமும் கருமையும் ஒத்தன்மையின என்பதற்குக் கழக இலக்கியப் பதிவுகள் ஏராளமாக உள்ளன. "யா" என்னும் கருமைக்கருத்து மூலவேர், நீலநிற வானைக் குறித்துப் பின்பு காலப்போக்கில், விண்ணுலகில் இருப்பதாகக் கருதப்படும், நாகப்பாம்பையும் குறிக்கலாயிற்று.

நாகம்[2] *nāgam*, பெ. (n) **1.** நல்ல பாம்பு; cobra. "*நன்மணியிழந்த நாகம்போன்று*" (மணிமே.25:195). **2.** பாம்பு (பிங்.); serpent "*ஆடுநாகமோட*" (கம்பரா. கலன்காண்.37). **3.** நஞ்சு; poison, "*அதகங் கண்ட பையண னாகம் போல*" (சீவக.403). **4.** நாகவுலகம்; nether region "*நாகர்நாகமும்*" (சீவக.2550). **5.** யானை; elephant. "*காளமேகமு நாகமுந் தெரிகில*" (கம்பரா.சித்திர.2). **6.** குரங்கு; monkey. "*வேடச்சிறா ருழைத்தோற்பறையை நாகம் பறித்துலர் வாகை நெற்றாற் கொட்ட.*" (திருப்போ.சந்.அலங்.14). **7.** கருங்குரங்கு (யாழ்.அக.); black monkey. **8.** காரீயம்; black lead **9.** துத்தநாகம்(பிங்.); zinc **10.** நஞ்சு வகை; a prepared arsenic **11.** நற்றூசு (பிங்.); fine cloth, as resembling a snake's slough. **12.** *நாகப்பச்சை* பார்க்க; see *nāga-p-paccai* **13.** மாட்டு வாலிலுள்ள தீச்சுழிவகை (அபி,சிந்.); an unlucky hair curl in the tail of cattles **14.** குறிஞ்சிப்பண் வகை(பிங்.).; a melody of the kuriñji class. **15.** கந்தகம் (யாழ்.அக.); sulphur.

த. நாகம் → Skt nāga, நாக(ஒ).

/நகர்வு = ஊர்ந்து செல்லுதல் நகர் → நாகம் = பாம்பு. ஊர்ந்து செல்லும் நச்சுயிரி./

/ஒ.நோ./ E snake. F.snican, to creep. ஒ.நோ. நல்ல வெயில்.

வடவர் நக(மலை) என்னுஞ் சொல்லைக் காட்டி, மலையிலுள்ளதென்று பொருட் காரணங் கூறுவர். (வ.வ.பக்.19.).

இஃது பொருந்தப்பொய்த்தலே. நகர்வு என்னும் வினையினின்று நாகம் தோன்றியது என்று மொழிஞாயிறு கருதுகின்றார்.

கருமைக்கருத்து வேரிலிருந்து, "நாகம்" என்ற சொல்லை வருவிப்பதும், இன்னொரு ஆய்வுப் பார்வையாகும்.

ஒருகா. /யாகு → ஞாகு → நாகு + அம்./

யா = கருமைக்கருத்து வேர். நாகம் = கருநாகம்

கருங்குரங்கு, கருநாகம், காரீயம் போன்ற கருமைப் பொருட்களைக் குறிக்கும் கருமைக்கருத்து வேரினின்று, "நாகம்" தோன்றிற்று என்றும் கொள்ளலாம்.

கருமைக்கருத்து வேரினின்று நாகம் தோன்றியது என்பதற்குக் கீழ்க்கண்ட இலக்கியச் சான்றுகள் வருமாறு.

1. "*நீலநாகநல்கிய கலிங்கம்*" (சிறுபாண்:96.)

2. "*திருமணி யுமிழ்ந்த நாகம்*" (அகம்:138:17.)

3. "*வேக வெந்திறல் நாகம் புக்கென*" (புறம்37:2.)

4. "*எலிப்பகை நாகம் உயிர்ப்பக் கெடும்*" (குறள்,763.).

5. "*பை அவிந்த நாகம் போல்*" (நாலடி,66:3.)

மேற்குறித்த கழகவிலக்கியங்களில், நாகம் கருமைக்கருத்துப் பொருண்மையில் ஆளப்பட்டுள்ளது. இவ் வுண்மையினை அறியாத வடவர் மலையில் உள்ளது என்னும் பொருண்மையில் மா.வி. அகரமுதலியில் நாக(ஒ) என்று குறித்துள்ளது. நாகம் அனைத்து இடத்திலும் வாழுந்தன்மைத்து. நாகம் தொடர்பான நல்ல தமிழ்ச்சொற்கள், நற்றமிழில் பேராளமாகப் பயின்று வந்துள்ளன. அவற்றுட் சில வருமாறு:–

(எ.டு.) நாகக்கல் = நாகவுரு அமைந்த சிலை.

நாகணை = திருமாலின் நாகப்படுக்கை.

நாகதாளி (நாகத்தாளி.) நாகப்படம் போன்ற தோற்றங்கொண்ட கள்ளிச்செடி (நாகக்கள்ளி).

நாகப்பாம்பு = நாகம், கருநல்லரா.

நாகப்பகை = நாகத்துக்குப் பகைவனான கலுழன், இன்னும், நாகமல்லி; நாகவல்லி, நாகவடம் போன்றசொற்கள் தமிழ்மொழியின் இருவகை வழக்கிலும், வழக்கூன்றியுள்ளது குறிக்கத்தக்கது. தமிழிலிருந்து வடவர் கடன்கொண்ட இச் சொல், இந்திய ஆரியமொழிகளில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது.

த. நாகம் → skt nāga; pāli-nāga

pkt. nāya-oriya-naa sinhalese nay, nā.

மேற்குறித்தசான்றுகளை அடிப்படையாகக் கொண்டு இலக்கிய வழக்கிலும், மக்கள் வழக்கிலும் பயின்றுள்ளதால், நாகம் என்பது நற்றமிழ்ச்சொல்லே யெனலாம்.

நாகம்³ *nāgam*, பெ. (n.) மலை(பிங்.); mountain "*பொன்னாகமும்*" (கம்பரா.கார்முக.32.)

[மாகம் = மேலான இடம், உயர்ந்த இடம் மாகம் → நாகம்.]

ஒருகா. *[யாகு→ ஞாகு→ நாகு + அம் → நாகம்.]*

யாழ்ப்பாண அகரமுதலியும், பிங்கலமும், நாகம் என்னுஞ் சொல் மலை என்னும் பொருள் பற்றியது என்று குறித்துள்ளது காண்க.

(எ.டு.) 1. நாகு = மலை (யாழ்.அக.) 2. "*நாகமென் கிளவி....... வெற்பும்*" (பிங்.)

நாகம்⁴ *nāgam*. பெ. (n.) 1. சிறுகண்ணாகம், பெருங்கண்ணாகம் முதலான துத்த நாகவகை; term refering to different kinds of zinc ,as mentioned siṟu-kaṇ-ṇāgam and peruṅaṇ-ṇāgam. 2. ஐம்மாழைக் கலவை (பஞ்சலோகக்கலவை); an alloy of five metals.

[யாகம் → ஞாகம்→ நாகம்.]

நாகம்⁵ *nāgam*, பெ. (n.) 1. சுரபுன்னை; long-leaved two - sepalled gamboge "*நறுவீ யுரைக்கு நாகம்*" (சிறுபாண்.88) 2. புன்னை (பிங்.); mast-wood 3. ஞாழல் வகை (திவா.), cinnamon, Cinnamomum 4. கஞ்சாங் கோரை; white basil 5. இலாமிச்சைவேர்; cuscuss root

[ஞாகு→ நாகு + அம் → நாகம்.]

புன்னை மரத்தின் தோற்றம் கருநீல நிறத்தது. இரவு போன்ற இருண்ட நிறத்தையுடைய புன்னை என்று, நற்றினை நவில்வது காண்க.

(எ.டு.) "*எல்லியன்ன இருள்நிறப் புன்னை*" (நற்.354:5.) "*கருங்கோட்டுப் புன்னை*" (311:9.)

நற்றினை, ஐங்குறு (161:1–2.) போன்ற கழக இலக்கியப் பதிவுகள், புன்னை கருமை வண்ணத்தது என்பதற்கு நற்சான்றாய்த் திகழ்கின்ற தெனலாம்.

நாகம்⁶ *nāgam*, பெ. (n) 1. கண்டத் திப்பிலிவேர்; root of long pepper 2. நாகம் விரும்பியுறையும் வெண்சம்பங்கி மலர்; white champak flower

[ஞாகம் → நாகம்.]

நாகம்⁷ *nāgam*, பெ. (n) நாவல்மரம் (இ.வ.); jaumooan plum

[ஞாவல் → நாவல்→நாகல்→நாகம்.]

யா = கருமை நிறத்தினைக் குறிக்கும் வேரடி கரிய கனிகளைத்தரும் நாகம் என்னும் சொல்லும் கருமைப் பொருண்மையிலிருந்து முகிழ்த்த சொல் எனலாம். நாகப்பழம் என்று மக்களிடையே இச்சொல் வழக்கூன்றியது அறிக.

நாகம்⁸ *nāgam*, பெ. (n.) நாகமல்லி நாகதாளி, நாகமுள்ளு. நாகவல்லி முதலான மருந்துச் செடிகள்; the medicinal plants

[நாகு + அம் → நாகம்.]

நாகு = இளமைப்பொருள் பயப்பது.
அம் = சொல்லாக்க ஈறு.

நாகம்[9] *nāgam,* பெ. (n.) அம்மணம்; nakedness

[நகு → நாகு + அம்.]

நகுகை = ஆடையற்ற நிலையைக் கண்டு நகைக்கை.

நாகம்[10] *nāgam,* பெ.(n.) மட்டற்ற மகிழ்வுடன் கூடிய சிரிப்பு; joy, happiness.

[நகு → நாகு → நாகம்.]

நாகம் = இளமைக்கருத்து வேரினின்று கிளைத்தது. இளமை விளங்கித் தோன்றுவதற்கான, மட்டற்ற மகிழ்ச்சி.

நாகம்பூசல் *nāgam-pūšal,* தொ.பெ. (vbl.n.) மின்னேற்றம் செய்தல்; galvanising

[நாகம் + பூசல்.]

நாகம்போத்தனார் *nāgam-bōttaṉār.* பெ.(n.) கழகக்காலப் புலவர்; a šaṅgam poet.

இயற்கையெழிற் காட்சியினை வாழ்வியலுடன் இணைத்துப் பார்க்கும் பாடல்:–

"செவ்விகொள் வரகின் செஞ்சுவற் கலித்த
கவ்வை நாற்றின் காரிரு ளோரிலை
நவ்வி நாண்மறி கவ்விக் கடன்கழிக்கும்
காரெதிர் தண்புனங் காணிற் கைவளை
நீர்திகழ் சிலம்பின் ஓராங்கு விரிந்த
வெண்கூ தாளத் தந்தூம்பு புதுமலர்
ஆர்கழல் புகுவ போலச்
சோர்குவ வல்ல என்பர்கொல் நமரே"
(குறுந்.282.).

நாகம்போல்படமமுக்கி *nāgampōl-paḍam-amukki,* பெ. (n.) 1. அழுகண்ணி; indian weeping plant. 2. *நாற்கள்ளி* பார்க்க; see *nāṟ-kaḷḷi.*

[நாகம்போல் + படம் + அமுக்கி.]

நாகம்மா *nāgammā* பெ. (n.) *நாகதேவி* பார்க்க; see *nāga-tēvi*

நாகமடிப்பட்டு *nāgamaḍi-p-paṭṭu* பெ.(n.) பட்டாடைவகை (இ.வ.); a kind of silk cloth

[நாகம் + மடி + பட்டு.]

நாகமண் *nāga-maṇ.* பெ.(n.) செம்மண்; red earth, red ochre

[நாகம் + மண்.]

செந்நாகம் போன்று வெளிறிய சிவப்பு வண்ணத்திலுள்ள மண்.

நாகமணல்[1] *nāga-maṇal.* பெ.(n.) ஈயங்கலந்த மணல்(வின்.); sand containing lead

[நாகம் + மணல்.]

நாகமணல்[2] *nāga-maṇal.* பெ.(n.) துத்தநாகங் கலந்த மணல்; zincore.

[நாகம் + மணல்.]
120 வகை இயற்கைக் கனிமங்களில் ஒன்று.

நாகமணி *nāga-maṇi.* பெ. (n.) நாகபாம்பு வைத்திருப்பதாகக் கருதப்படும் மணி; a gem belived to be possessed by the cobra

[நாகம் + மணி.]

நாகமதி *nāga-madi.* பெ. (n.) துளசி; holy basil-Ocimum sanctum

[நாகம் + மதி.]

நாகமதுசெம்பாக்கி *nāga-madu-šembākki,* பெ. (n.) செவ்வலரி; oleander rosebay-Nerium odorum.

[நாகம் + அது + செம்பாக்கி.]

நாகமதுநித்தார்நயனம் *nāgamadu-nittār-nayaṉam,* பெ. (n.) அக்கமணி; rudrākṣa bead.

மறுவ. சிவமணி.

[நாகமது + skt நித்தார்நயனம்.]



நாகமம் *nāgamam,* பெ. (n.) *நாகரம்*[1] *(சங்.அக.)* பார்க்க; see *nāgaram*[1].

நாகமரம் *nāga-maram,* பெ. (n.) **1.** வெள்ளை நாகமரம்; chirimaun-Anogassus latifolia. **2.** *நாவல் மரம்* பார்க்க; see *nāval-maram.*

மறுவ. வெக்காலி.

[நாகம் + மரம்.]

நாகமல்லி[1] *nāga-malli,* பெ. (n.) கொடிவகை; white flowered justicia-Justicia nasuta

மறுவ. வெண்மல்லி, ஊரகமல்லி.

[நாகம் + மல்லி.]

நாகமல்லி[2] *nāga-malli* பெ. (n.) பாம்பு முதலான நச்சுயிரிகளின் எல்லாப்பூச்சி நஞ்சினையும்,தோல் நோயினையும் போக்கும் மருந்து வேர்; a medicinal root which act as a remedy for snake bites and all kinds of poisonous insect bites and also for all diseases.

மறுவ. நாகமுட்டி. அனிச்சைச்செடி, நச்சுமல்லி

[நாகம் + மல்லி.]

அனைத்து நச்சுயிரிகளின் நஞ்சினை முறிக்கும் சிறப்புமிக்க இந் நாகமல்லிச் செடி 4 முதல் 5 அடி வரை உயரமுடையது. குட்டையான காம்பினையும், சிறிய பூக்களையுமுடையது. மாவலிபுரம், திருவாங்கூர் போன்றவிடங்களில் மிகுதியாகப் பயிராகின்றது.

இதன் பச்சைநிற வேரையும், இலையையும் கலந்து, இடித்து எலுமிச்சைச் சாற்றுடன் கலந்து, உடம்பில் தடவினால், எல்லாத் தோல் நோய்களும் அகலும், தோல் பளபளப்புடன் திகழும். வண்டுகடி, படை, சொறி, சிரங்கு முதலான நோய்களைப் போக்கும்.

மேற்குறித்த மருந்தினைப் பாலில் கலந்து பருகிவந்தால், காமம் பெருகும். இந் நாகமுட்டிச் செடியின் இலைகளும், வேரும், உடம்பிற்கு மிகு வெப்பமூட்டி, எல்லா நோய்களையும் போக்கும் மருத்துவக் குணமிக்கவை.

நாகமல்லி[3] *nāga-malli,* பெ. (n.) பெருமல்லி அல்லது காட்டு மல்லிகை; jungle jasmine-Jasminum latifdium

[நாகம் + மல்லி.]

நாகமல்லிகை *nāga-malligai,* பெ. (n) *நாகமல்லி* பார்க்க; see *nāga-malli.*

[நாகம் + மல்லிகை.]

நாகமலை[1] *nāga-malai,* பெ. (n.) துத்தநாக மெடுக்கும் மலை; mountain containing zinc ore.

[நாகம் + மல்லி.]

துத்தநாகக் கனிமம் மிகுதியாகக் கிடைக்கும் மலை.

நாகமலை² *nāga-malai,* பெ. (n) மதுரை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Madurai dt.

சமண முனிவர்கள் வாழ்ந்ததாகக் கூறப்பெறும் சமணப்பாழிகள் இங்கு காணப்படுகின்றன. தொல்லியல் துறையினர், பாதுகாத்து வருகின்றனர்.

நாகமாணிக்கம் *nāgā-māṇikkam,* பெ. (n.) 1. நாகத்தின் தலைமீதுள்ள உயர்ந்த இனத்தைச் சார்ந்த மணி; gem (ruby) supposed to be on the head of a species of cobra carbuncle. 2. நாகமணி ; see *nāga-maṇi.*

[நாகம் + மாணிக்கம்.]

நாகமாதா *nāga-māda,* பெ. (n.) துளசி (சங்.அங்.); holly basil:ocitnum-sanctum.

த. மாதர்→skt. **மாதா.**

[நாகம் + skt. மாதா.]

நாகமாதிகம் *nāga-mādigam,* பெ. (n.) *நாக மாதா* பார்க்க; see *nāga-mādā.*

[நாகமாதி → நாகமாதிகம்.]

நாகமாபுரம் *nāgamāpuram,* பெ. (n.) மதுரை; Madurai. "*நாகமாபுரத்து வாழ்வோன்*" (திருவாலவா.35,16).

நாகமாரணி *nāga-māraṇi,* பெ. (n.) இதிர்க்கிழங்கு; wild elephant yarm-Dracontium polyphyllum.

[நாகம் + ஆரணி.]

நாகமுகன் *nāga-mugaṉ,* பெ. (n.) யானை முகத்தோன் கணபதி; Gaṇapadi, as elephant faced."*நாகமுக னம்பிக்கு நவிலலுற்றான்*" (பெரியபு. திருமுறைகண்.11).

[நாகம் + முகன்.]



நாகமுட்டி¹ *nāga-muṭṭi,* பெ.(n.) கொடிவகை; snakewood.

மறுவ. நச்சுமுட்டிக்கொடி.

[நாகம் + முட்டி.]

நாகமுட்டி² *nāga-muṭṭi,* பெ. (n.) நச்சுமுட்டிக் கொடி; creepermushty, frog creeper

[நாகம் + முட்டி.]

வேலிகளில் முறுக்கிய நிலையில் காணப்படும் கொடி: இலைகள் அகன்றும், கூர்மையான முனையுடனுமிருக்கும். இலைக்காம்பு இலையின் பாதியளவிற்கு நீளமானது. மணமுள்ள, வெண்மையான சிறிய பூக்களுடன் வேலிகளிற் படர்ந்து காணப்படும்.

இப் பூக்களை அரைத்துத் தண்ணீரில் கலந்து குடித்தால், எல்லாவகைப் பாம்பின் நஞ்சும் நீங்கும். யானைக்கால் நோய்க்கும் இப் பூக்கள் சிறந்த மருந்தாகும். இதன் இலைகளைக் கருக்குநீராக்கிக் குடித்தால், உடம்பினுள் நாட்பட்ட புண்கள் விரைவில் குணமாகும்.

நாகமுட்டி³ *nāga-mutti,* பெ. (n.) **1.** எட்டிமரம்; nuxvomica tree. **2.** நாகமல்லி வகை; downy jasmine.

[நாகம் + முட்டி.]



நாகமுடிச்சு *nāga-mudiccu,* பெ. (n.) பெண்களணியும் அனந்த முடிச்சு என்னும் காதணிவகை; a kind of woman's ear ornament.

[நாகம் + முடிச்சு.]

நாகமுத்தக்காசு *nāga-mutta-k-kāšu,* பெ. (n) நீண்ட கோரை; straight sedge-Cyperus pertinuis

மறுவ. தருப்பைப்புல்.

[நாகமுத்தும் + காசு.]

நாகமுல்லை *nāga-mullai,* பெ. (n.) *நாகமல்லி* பார்க்க; see *nāga-malli.*

மறுவ. ஊரகமல்லி, அனிச்சைமல்லி.

[நாகம் + முல்லை.]

நாகமுழுணிவேர் *nāga-mulaṇi-vēr,* பெ. (n.) நல்லபாம்பின் நஞ்சினை மாற்றுவதற்குக் கொடுக்கும் நாகதாளி வேர்; root of nāga-tāḷi, it is an antidote to snake poison.

[நாகமுழுணி + வேர்.]

நாகமுள்ளு *nāga-muḷḷu,* பெ. (n.) சப்பாத்திச் செடி; prickly pear cactus indus alias-Opuntia nigricans.

மறுவ. சப்பாத்திக்கள்ளி.

[நாகம் + முள்ளு.]

நாகமூக்கத்தி *nāga-mūkkatti,* பெ. (n) *நாகமூக்கொற்றி* பார்க்க; see *nāga-mūkkoṟṟi*

[நாகம் + மூக்கத்தி.]

நாகமூக்கொற்றி *nāga-mukkoṟṟi,* பெ. (n.) **1.** தாளிவகை; Indian moon flower. **2.** தாளிக் கொடிவகை; American moon flower

மறுவ. நச்சுமூக்கொற்றி, சீமைநாக மூக்கொற்றி.

[நாகம் + மூக்கொற்றி.]

நல்லபாம்பு முதலாக அனைத்து, நச்சுயிரிகளின் நஞ்சினை, அகற்றும் அரிய மூலி. இதன் இலை, விதை அனைத்தும் உணவுக்குப் பயன்படும். பிஞ்சுவிதைகளுடன் கூடிய காயினை, கறிசமைத்து உண்பர். இதன் முற்றிய விதைகள் உயிர்ச்சத்து நிறைந்தது. சீமைநாக மூக்கொற்றியின் வேர் நெய்ச்சத்து நிறைந்தது. உப்புச்சுவை தருவது. அதன் வேர்ப்பட்டை மலமிளக்குந் தன்மையது.

நாகமூசிகை *nāga-mūšigai,* பெ. (n.) **1.** குங்குமமரம்; saffron tree monkey turmeric. **2.** கபிலப்பொடி; kamela dye.

[நாகம் + மூசிகை.]

நாகமோடிசேலை *nāga-mōḍi-śēlai,* பெ. (n.) நாகக்கோடிட்ட சேலைவகை (வின்); a kind of saree with serpent -like stripes.

[நாகமோடி + சேலை.]

நாகமோடிவேட்டி *nāga-mōḍi-vēṭṭi,* பெ.(n.) நாகக் கோடிட்ட வேட்டிவகை(வின்); a kind of cloth with serpent-like stripes

[நாகம் + மோடி + வேட்டி.]

நாகமோதோவாக்கி *nāga-mōdōvākki,* பெ. (n) காட்டுக்கொள்; wild gram-Rynchosia genus.

நாகர்[1] *nāgar,* பெ. (n.) தேவர்; celestial. "*வழுத்தவரங்கொடுப்பார் நாகர்*" (நாண்மணி.62) "*நாகம் வேட்டுறை நாகரை*" (சேதுபு.சேதுச்.46).

[நகு → நகர் → நாகர்.]

"நகு" = விளங்கித் தோன்றுகை என்னும் பொருள் தருவது. நகர் = வெண்சுதை மாளிகையுடன் விளங்கித் தோன்றுவது.

நாகர் = தெய்வநலத்துடனும் மிகுந்த ஒளியுடனும் விளங்கித் தோன்றும் தன்மையர். இன்று வடகிழக்கு எல்லையில் வாழும் நாகர்களும், மஞ்சள் வண்ணத்துடன், விளங்கித் தோன்றும் தன்மையர், என்பது குறிப்பிடத்தக்கது.

நாகர்[2] *nāgar.* பெ. (n.) பாதி மக்கள் வடிவும், பாதி நாகவடிவுமாயமைந்தார்; the race of serpents, half human in form. "*காமநனி நாகரிற்றுய்த்தவாறும்*" (சீவக.11.). 2. ஒரு பழைய இனத்தார்; a powerful scythian race having the serpent as their having totem. "*நக்கசாரணர் நாகர் வாழ்மலை*" (மணிமே.16:15.). 3. ஐந்தலை அல்லது ஏழுதலை நாகத் தலையணிவகை; a gold ornament having the design of a God under the hood of the five or sevan headed cobra, worn by woman on the crown of the head

[நகு → நகர் → நாகர்.]

கீழ்த்திசை நாட்டாரே நாகர். நாக வணக்கத்துடனும், நாகமுத்திரையுடனும் கீழ்த்திசை நாட்டில் வதிந்தவரே நாகர். இவர்கள் வாழ்ந்தநாடு நாகநாடு. மணிமேகலையில், நாகர்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இங்கு குறிப்பிடப்படும் நாகர், நாகநாட்டில் வாழ்ந்தவர். நாகரிகத்துடன் விளங்கித் தோன்றுபவர். "*கீழ்நில மருங்கின் நாகநாடாளும்*" (மணிமே.9:55.). "*நாகநாடு நடுக்கின் றாள்பவன்*" (மணிமே.24:54.). வங்கக்கடல் தோன்றுமுன் அங்கிருந்த நிலப்பரப்பில் நாகர்கள் வாழ்ந்தனர். கீழக்கரை நெடுகலும் குடியேறியதனால் நாகர் சேர்ந்தவூர்கள், நாகர்கோவில், நாகூர், நாகப்பட்டினம், நாகபுரி எனப்பெயர் பெற்றன. இந் நாகரைக் குறிக்கும் கம்பராமாயணப் பாடலடிகள் வருமாறு:– "*கீண்டது வேலை நன்னீர் கீழுறக்கிடந்த நாகர் வேண்டிய வுலக மெங்கும் வெளிப்பட மணிகள் மின்ன*" (கம்பரா.கடல்தாவு.21.)

ஆரியத்தொல்கதை மயக்கினால், இடைக்காலப் பெரும்புலவரும் நாகர் என்னும் மாந்தரினத்தாரைப் பாம்பினமாகக் கருதிவிட்டனர். கீழ்நாடு என்பதையும், கிழக்கு நாடென்று கொள்ளாது, நிலத்திற்கும், நீருக்கும் கீழுள்ள நாடென்று பிழைபடக் கருதி விட்டனர். (தமிழக.வர.பக். பழையது.145.)

நாகர்[3] *nāgar,* பெ. (n.) இந்தியாவில் வடகிழக்கு எல்லைப்புற மாநிலங்களில் வாழும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பழங்குடியினர்; Nāgā's.

[நகு → நகர் → நாகர்.]

நாகர்கள் மஞ்சள் வண்ணத்துடன் விளங்கித் தோன்றுபவர்; இயற்கைவளம் கொழிக்கும் பகுதியில், மிகுந்த வளத்துடனும், செல்வத்துனும் வாழ்பவர். வேளாண்மை செய்து வாழும் இவர்தம் எண்ணிக்கை, 5 இலக்கம் ஆகும்.

நாகரகம் *nāgaragam*,பெ. (n.) *நாகரங்கம் (மலை)* பார்க்க; see *nāgarangam.*

[நாகர் + அகம்.]

நாகரகன் *nāgaragan,* பெ. (n.) **1.** வண்ணந் தீட்டுவோன்; painter. **2.** கள்வன்; thief

[நாகர் → நாகரகன்.]

நாகரங்கம் *nāgarangam,* பெ. (n.) தேன்றோடை (மலை); a sweet orange Citrus

நாகரசகந்தகம் *nāgaraša-gandagam,* பெ.(n.) *நாகரசச் செந்தூரம்* பார்க்க; see *nāgaraša-c- cendūram.*

[நாகரசம் + கந்தகம்.]

நாகரசச்செந்தூரம் *nāgaraša-c-cendūram,* பெ. (n) நாகம். இதளியம் (பாதரசம்) இவ் விரண்டையும் முதன்மையாகக் கொண்டு, கந்தகம் முதலிய கடைச் சரக்குகளையும் சேர்த்துச் செய்யப்படும் புடமிட்ட செந்தூரம்; an alchemical preparation consisting of zinc, mercury as chief ingredients mixed with sulphur and other drugs by process of calcination

[நாகரசம் + செந்தூரம்.]

இப் புடமிட்ட செந்தூரம் மிகச்சிறந்த வாணாள் மூலிகையாகவும், உடம்பிலுள்ள வளியின்ன அகற்றும் பொருளாகவும், உறுதுணை புரியுமென்று சா.அக. கூறும்.

நாகரசவிந்து *nāgaraša-vindu,* பெ. (n.) அரிய மூலிகைவகை; a kind of rare medicinal herb.

[நாகரசம் + விந்து.]

நாகரசவூஞ்சல் *nāgaraša-v-ūnjal,* பெ. (n) நாகரசம், இதளியம், கோழிமுட்டை போன்ற வற்றால் உருவாக்கப்படும் மருந்து; an alchemical preparation consisting of zinc, mercury and fowl's egg

[நாகரசம் + ஊஞ்சல்.]

நாகரசம் இதளியம், கோழிமுட்டை முதலான வற்றை, சித்த மருத்துவர் உரிய முறையில் கலந்து, வாயகன்ற ஏனத்தில் ஊற்றி. தீக்கொழுந்து படும்படியாகப் ஏனத்தை உறியில் வைத்து, நன்கு எரித்துச் செய்யப்படும் மருந்தென்று, சா.அக. கூறும்.

நாகரசு *nāgarašu,* பெ. (n.) இல்வாழ்க்கைக்கு ஏற்றவண்ணம் சமைந்து, பக்குவப்பட்ட பெண்; a girl recently meanstruafed or attained maturity.

நாகரடி-த்தல் *nāgar-adi-,* 4.செ.கு.வி, (v.i.) நிறுவுதற் பொருட்டுக் கல்லில் நாகவுருவம் வகுத்தல்; to make a cobra image in stone for the nāga-nirumāṇam.

[நாகர் + அடி-.]

நாகரத்தம் *nāga-rattam,* பெ. (n.) கபிலப்பொடி; karmela dye- Mallotus philippinensis.

[நாகர் + அத்தம்.]

நாகரத்தினம் *nāga-rattiṇam,* பெ. (n.) *நாகமணி* பார்க்க; see *nāga-maṇi*

[நாகர் + Skt. *இரத்தினம்.]*

நாகரம்[1] *nāgaram,* பெ. (n.) **1.** தேவநாகரி; sanskrit script. *"நாகரநந்தி முதலியவை"* (சிவதரு.சிவஞானதா.32.).2.சுக்கு (தைலவ.தைல.).; dry ginger.

நாகரம்[2] *nāgaram,* பெ. (n.) **1.** ஆதன் (ஆன்மா) அடையும் பேரின்பம்; blissful state for soul. **2.** இளைப்பு; emaciation.

நாகரம்[3] *nāgaram,* பெ. (n.) **1.** நாகரங்கம் (சங்.அக.); sweet orange. **2.** நாரத்தை; bitter orange

நாகரம்[4] *nāgaram.* பெ. (n.) இணைவிழைச்சு இன்பவிளையாட்டுகளுள் ஒன்று, a posture of consisting of two attitudes.

[நாகர் + அம்.]

கணவனும், மனைவியும் ஒருவரது தொடையுடன், மற்றொருவர் தொடையைச் சேர்த்து, நாகம் போல் பின்னிப் பிணைந்து புணரும் நிலை. இஃது அறுபத்து நான்கு இன்ப விளையாட்டுகளுள் ஒன்று என்று, சா.அக. கூறுகிறது.

நாகரமத்தகம் *nāgara-mattagam.* பெ. (n.) *நாகரம்[1]* பார்க்க; see *nāgaram[1].*

[நாகரம் + மத்தகம்.]

நாகரவண்டு *nāgara-vaṇḍu,* பெ. (n.) **1.** பொன்வண்டு (திவா.); green beetle, Chrysochroa chinensis. **2.** நத்தைவகை; snail. **3.** சிறுகுழந்தை; urchin, a term of contempt. நண்டுசிண்டு நாகர வண்டுகளெல்லாம் அங்கே வந்தன. (இ.வ.).

[நாகரம் + வண்டு.]

நாகரவண்டுத்தூள் *nāgara-vaṇḍu-t-tūḷ,* பெ. (n.) பாம்புப்புற்றுகளில் சிதைந்து கிடக்கும் வண்டுகளின் உடம்பிலுள்ள தோல் துண்டுகள்; the wings of insects usually found on the ant hills

[நாகரவண்டு + தூள்.]

நாகரவிந்தாதியிளகியம் *nāgara-vindādi-y-iḷagiyam,* பெ.(n.) உண்டஉணவு முறையாகச் செரித்து, உடலின் அனைத்துப் பகுதிகளும், ஆற்றல் பெறுவதற்காக உண்ணப்படும் இளகியம்; an electuary which causes good appetite and digestion, and gives energy and strength to the body and binds the semen.

[நாகரவிந்தாதி + இளகியம்.]

இவ் விளகியத்தை (இலேகியம்) முறையாக உண்பதால், மூன்று வேளையும் பசியுணர்வு உண்டாகும். உண்ட உணவும் செம்மையாகச் செரிமானமாகும். அவ்வாறு செரித்த உணவின் ஆற்றல், உடம்பின் அனைத்துப் பகுதிகளும் பெறும் வண்ணம், அரத்தவோட்டம் சீராக நடக்கும். மேலும் இவ் விளகியத்தால், உடம்பில் அரத்தவோட்டம் சீராக நடப்பதால், விழியம் (விந்து) மிகுதியாக ஊறிக் கெட்டிப்படுமென்று, சா.அக. கூறும்.

நாகரன் *nāgaraṉ,* பெ. (n.) **1.** நகரத்தான்; townsman. **2.** சிறந்தோன்; an illustrious person. **3.** கணவனுடன் பிறந்தான்; husband's brother

[நகர்→நாகர் + அன்.]

நாகராகம் *nāga-rāgam,* பெ. (n.) பெரும்பண்களுளொன்று; (சிலப்.8:35,உரை). a main musical mode

[நாகர் + ராகம்.]

நாகராசன் *nāga-rāšaṉ,* பெ. (n.) காண்க: ஆதிசேடன்; Ādišēaṉ, as chief of the nāgās.

[நாகம் + அரசன் → அரைசன் → ராசன்.]

நாகராசா *nāga-rāšā,* பெ. (n.) *நாகராசன்* பார்க்க; see *nāgā-rāssšan.* "*நாகராசாவினுடைய தேவிமாரும்.*" (தக்கயாகப்.39,உரை.).

[நாகர் + skt ராசா.]

அரசன் → அரைசன் → அரைசர் → ராசர் → ராசா.

நாகராதி *nāga-rādi,* பெ. (n.) *நாகராதித் தயிலம்* பார்க்க; see *nāgarādi-t-tayilam.*

நாகராதித்தயிலம் *nāgarādi-t-tayilam,* பெ. (n.) சுக்கு முதலியவற்றினின்று வடித்த நெய்மம்; (தைலவ.தைல.2). oil extracted from ginger and other substances "*கடத்திலிடு நாகராதித்தைலம்*"

[நாகராதி + skt தயிலம்.]

சுக்குடன் ஏனைய கடைச்சரக்குகளும் சேர்த்துக் காய்ச்சி, வடித்த நெய்மம் என்று சா.அக. கூறும்.

நாகராதியிளகியம் *nāgarādi-y-iḷagiyam,* பெ.(n.) சுக்கு இளகியம்; an electuary of dried ginger and other drugs

[நாகராதி + இளகியம்.]

நாகராயர் *nāga-rāyar,* பெ.(n.) பாம்புகட் கரசன்; serpent-king. "*வலமாக நாகராயர் சூழ் திருவாலவாயுள்*" (திருவாலவா.கடவுள்.13).

[நாகம்+அரையர்→ராயர்.]

நாகரி *nāgari,* பெ. (n.) 1. தேவநாகரி; the sanskrit script 2. குருக்கத்தி (பிங்.); a plant, common delight of the wood 3.தவசி முருங்கை பார்க்க; see tavaši-murungai.

[நாகர் → நகரி → நாகரி.]

முதற்கண், பண்பட்ட மக்கள் நகரத்தில் வாழ்ந்தனர். நகரத்தில் வாழ்ந்தவர், முதன்முதல் பயன்படுத்திய எழுத்து, நகரி அல்லது நாகரி எனப்பட்டது. முதற்கண், நகரங்களில் வழங்கியதனால் வடமொழியை, எழுதுவதற்குப் பயன்பட்ட வடமொழி எழுத்து, நாகரியெனப்பட்டது. பின்பு. வடமொழியாளரின் ஏமாற்றினால், 'தேவநாகரி'யெனப் பெயர் பெற்றது.

வடமொழியாளர், நகரத்தில் வழங்கிய வடமொழியெழுத்திற்குத் தெய்வத்தன்மையூட்டி, தேவநாகரியாக்கினர்.

நாகரிகம் *nāgarigam,* பெ. (n.) 1. நகர வொழுக்கம்; manners speech and dress pertaining to a city 2. நகர சம்பந்தமான செப்பம்; civilization "*நனிநாகரிகத்தம்மென் சாயலரிவை மகளிர்*" (பெருங்.உஞ்சை.41,83). 3. மென்னயநடை; politeness,refinement of manners. 4. பண்பட்ட பழக்க வழக்கம்; urbanity. "*நாகரிகமாமைந்தரை*" (சிவரக.தாருக .9). 5. கண்ணோட்டம்; friendly regard "*நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்*" 6. வீண்பகட்டு, பிலுக்கு (வின்.); affectation, foppishness(w)

[நகர் + அகம் → நகரகம் → நகரிகம் → நாகரிகம்]

த. நாகரிகம் skt. நாகரிக (nāgariga)

எல்லா நாட்டிலும், மாந்தர் முதன்முதல் நகரநிலையிலேயே நாகரிக மடைந்துள்ளனர். அதனால் நகரப்பெயரினின்று நாகரிகப்பெயர் தோன்றியுள்ளது. நாகரிகம் என்பது நகரமக்களின் திருந்திய வாழ்க்கை. மொழி ஞாயிறு எழுதிய நாகரிகம் என்னும் சொல் விளக்கம் வருமாறு: நகர மக்களின் திருந்திய பழக்கவழக்கமே நாகரிகமாயிற்று.

'நாகரிகம்' என்னும் சொல்லுக்குத் 'திருந்திய வாழ்க்கை' என்பது பொருள். அறிவும். அதன் வழிபட்ட ஒழுக்கமும் சேர்ந்து, திருந்திய

வாழ்க்கையாகும். ஒழுக்கமின்றி அறிவுமட்டு மிருப்பின், அது நாகரிகமாகாது, அநாகரிகத்தின்பாற் படுவதேயாகும்.

அறிவென்பது, ஒழுக்கத்திற்குக் காரணமாய், இயற்கையாகவும், செயற்கையாகவும் இருவகையா யிருப்பது. அவற்றுள், இயற்கையாவது குடிப்பிறப்பாலும், தெய்வத்தாலும் உண்டாவது; செயற்கையாவது, கல்வியாலும், நல்லினத்தாலும் உண்டாவது.

ஒழுக்கமென்பது, அகம், புறமென்னும் இருவகைத் தூய்மை. அவற்றுள் அகத்தூய்மையாவது, நினைவு, சொல், செயலென்னும் முக்கருமங்களும் தூயவாயிருத்தல். புறத்தூய்மையாவது உடம்பு, உடை, உணவு, காற்று, வீடு முதலியன தூயவாயிருத்தல்.

புறத்தூய்மையினும், அகத்தூய்மையே நாகரிகத்திற்குச் சிறந்ததாக எண்ணப்படும். ஞானத்தாலும், ஒழுக்கத்தாலும், இல்லறத்தினும், பன்மாண் சிறந்த துறவறத்தில், புறத்தூய்மை ஒரு பொருளாகக் கொள்ளப்படுவதன்று. இல்லறத்தினும், ஒருவன் எத்துணை எளியனா யிருப்பனும், தன்னையும், தன் பொருள்களையும், தூயவாய் வைத்துக் கொள்வதே புறத்தூய்மை யாகும். அழகியனவும், விலை யுயர்ந்தனவுமாகிய உடைகளால் உடம்பைப் பொதிவதும், விலையும், சுவையுமிக்க உண்டிகளைப் பன்முறையுண்பதும், மேனிலையும், அகலிடமுள்ள மாளிகைகளில் வாழ்வதும், வசதியும், விலையுயர்ந்தனவுமான வாகனங்களில் ஊர்வதும், இயந்திரத்தாலும், ஏவலாளராலும் வினைசெய்வதும், இன்னும் இவைபோல்வன பிறவும், (அறிஞர்களும் அறிவிலிகளுமான) செல்வர்க்கே யுரிய, ஆடம்பர வாழ்க்கையேயன்றி, நாகரிக வாழ்க்கை யாகா. இவற்றை நாகரிகமென் றெண்ணுவது, மேலைப்புது நாகரிகம்பற்றிய திரிபுணர்ச்சியாகும்.

"*கந்தை யானாலும் கசக்கிக் கட்டு*" வதும்,

"*கூழா னாலுங் குளித்துக் குடி*" ப்பதும்,

"*குடிலா னாலுங் கூட்டிக் குடியிரு*" த்தலுமே, தமிழ்நாட்டுத் தலைநாகரிகமாகும். கூட்டலாவது மயலகற்றல்.

பரிமேலழகர், திருக்குறளுரைப்பாயிரத்தில், ஒழுக்கத்தைப்பற்றி, "ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார், தத் தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று, அவ்வவற்றிற் கோதிய, அறங்களின் வழுவா தொழுகுதல்" என்று கூறியுள்ளார். இது குலந்தோறும் வேறாகி, நடுவுநிலை திறம்பிய ஆரியவழி யொழுக்கமாதலின், எல்லார்க்கும் பொதுவானதும், நடுவுநிலை திறம்பாததுமான தமிழொழுக்கத்திற்குச் சிறிதும் வேண்டப்படாது, இதை அவ் வுரையாசிரியரே மீண்டும்,

"அதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையாகிய அச் சிறப்பியல்புகளொழித்து, எல்லார்க்கு மொத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி, இல்லறந், துறவறமென இருவகை நிலையாற் கூறப்பட்டது" என்று நூலர்சிரியர் கருத்திற்கேற்பக் குறித்துள்ளார். ஆதலால், ஒழுக்கமென்பது எல்லார்க்கும் பொதுவான, முக்கருமத் தூய்மையேயன்றி, குலந்தோறும் வேறுபட்ட வருணாசிரமத் தருமமன்று.

நாகரிகமென்னும் சொல்லை, திருவள்ளுவர் 'கண்ணோட்டம்' என்னும் பொருளில் வழங்கியுள்ளார்.

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர்
நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்" (குறள்,50).

என்னும் குறளுரையில், நாகரிகத்திற்குக் கண்ணோட்டமென்று பொருள் கூறப்பட்டுள்ளது. இதே பொருளில் கம்பரும்,

"நாக்கரியும் தயமுகனார் நாகரிக
ரல்லாமை" என ஆண்டிருக்கின்றார்.

'கண்ணோட்டம்' தூய நினைவுகளில், அல்லது திருந்திய குணங்களில், ஒன்றாதலின், நாகரிக மெனப்பட்ட தென்க.

நாகரிகமென்னும் சொல், 'நகர் அகம்' என்னும் சொற்றொடரின் (அல்லது

பகுசொல்லின்) திரிபாகும். நகர் என்பது, பேரூர் அல்லது பட்டினம், அகமென்பது, இடம் அல்லது இடத்திலுள்ள ஒழுக்கம்.

மக்கட்பெருக்கால், சிற்றூர்கள் பேரூர்களாவதும், பேரூர்கள் நகரங்களாவதும் இயல்பு. 'சிற்றூர்' சிறிது சிறிதாய் நகர்ந்து, பேரூரானபின் நகரெனப்படும். நகர் என்பது, முதனிலைத் தொழிலாகுபெயர்; நகரம் என்பது அம் சாரியை பெற்ற, முதனிலைத் தொழிலாகு பெயராகவும், அம் விகுதிபெற்ற தொழிலாகு, பெயராகவுங் கருதப்படும். நகர்தலாவது, பெயர்தல் அல்லது தள்ளுதல். மக்கள் நெருக்கம்பற்றி, ஒரு மனையிலுள்ளார் நகர்ந்து புதுமனை புகுவதும், ஒரு தெருவிலுள்ளார் நகர்ந்து, புதுத்தெரு புகுவதும் கண்கூடாகக் காண்கிறோம். இங்ஙனமே, ஓர் ஊரானது, சிறிது சிறிதாய் நகர்ந்து, நாளடையில் நகராகின்றது.

பண்டைத் தமிழின்படி, ஊர், நகரம் என்பன, ஒருபொருட் சொற்கள். ஊர் என்னும் பெயர்க்கும் இதுவே காரணம். ஊர்தலும், நகர்தலும் (ஏறத்தாழ) விரைவளவில், ஒன்றே. முற் காலத்தில், மருதநிலத்தூர்களே ஊர்களெனப்பட்டன. குறிஞ்சி, முல்லை, பாலை நிலங்களிலுள்ள, குறிச்சி, பாடி, பறந்தலைகளை விட, மருதநிலத்தூர்கள் மிகப் பெரியவனவா யிருந்தன. வாணிகம்பற்றி, நெய்தல்நிலத்துப் பட்டினங்களும், உழவுபற்றி, மருத நிலத்தூர்களும், மிகச் சிறந்தனவும், பெரியனவுமான நகரங்களாயின. அவ் விருவகை நகரங்களில், வாணிகம்பற்றியும், உழவுபற்றியும், பலவகைக் கைத்தொழில்களும் சிறந்திருந்தன. பட்டினங்களையும், ஊர்களையுமே, பண்டை மன்னரும், தத்தம் தலைநகராகக் கொண்டிருந்தார்கள். காவிரிப் பூம்பட்டினமும் கொற்கையும், நெய்தனிலத் தலைநகர்களாகவும், உறையூரும், மதுரையும் மருதநிலத் தலைநகர்களாகவும் இருந்தமை காண்க.

உழவு, வாணிகம் என்னும் இரண்டினுள், உழவே, தலைமை யானதாயும், உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாததாயும், வாணிகத்திற்குக் காரணமாயு மிருத்தலின், முதலாவது ஏற்பட்ட தொழில், உழவேயென்றும், முதலாவது நகராகியது மருதநிலத்தூரே என்றும், தெரிந்துகொள்க. பலநிலத்து மக்களும், தொழில்பற்றியும், பாதுகாப்புப் பற்றியும், செய்ப்படுபொருள் (manufacture) களாலேற்பட்ட வசதிபற்றியும், வாணிகம்பற்றியும் ஊரையும், பட்டினத்தையும் அடுத்ததினால், அவை, விரைந்து, நகரும், மாநகருமாயின. ஊர் என்னும் பெயர், இக் காலத்தில், பலவகையூர்களுக்கும் பொதுப்பெயராகவும், சிற்றூர் என்னும் பொருளில், சிறப்புப் பெயராகவும் வழங்குகின்றது; நகரென்னும் பொருளில் வழங்குகின்றிலது.

பட்டிகளிலும், சிற்றூர்களிலுமிருந்த மக்களைவிட, பட்டினங்களிலும், நகர்களிலு மிருந்த மக்களே, நாகரிகமாயிருந்தனர். இக் காலத்திலும், பெரும்பான்மை அதுவே. மக்கட்பெருக்கால், நகரங்களில் வழக்குத் தீர்ப்பிற்கும், பொருட்காவலுக்கும், ஊராண்மை, நாட்டாண்மை முதலிய அரசியல்களும், அவற்றின் சட்டங்களும், அவற்றை மீறியவழித் தண்டங்களும் ஏற்பட்டன. தண்டனைகட் கஞ்சி, மக்கள் திருந்திய ஒழுக்கமுடை யராயினர். பலவகைக் கைத் தொழிலால், பலவகைப் பொருள்களும் செய்யப்பட்டதினால், வசதியாகவும், சிறப்பாகவும் வாழத்தொடங்கினர். சிறந்த பாத்திரங்களிற் சமைத்துண்ணவும், வசதியான வீடுகளில் வசிக்கவும், நெய்தவுடைகளை உடுக்கவும் தலைப்பட்டனர். நடையுடை பாவனைகள் நாளடைவில் திருந்திவரலாயின. இங்ஙனமே நாகரிகமானது நகரங்களில், சிறிது சிறிதாய் வளர்ந்து, முதிர்ச்சியடைந்தது. 'நகரகம்' என்னும் சொல், 'நகரிகம்', 'நாகரிகம்' என மருவி வரும்.

சிற்றூர்களிலும், பட்டிகளிலுமிருந்த மக்கள், நாகரிகமின்றி மிலேச்சராயும், முரடராயு மிருந்துவந்தனர். இக் காலத்திலும், நாகரிக மில்லாதவனைப் 'பட்டிக்காட்டான்' என்பது வழக்கம்.

ஆங்கிலத்திலும், நாகரிகத்தைக் குறிக்கும், 'civilisation' என்னும் சொல், இதே காரணத்தாற்றான் உண்டாயிருக்கின்றது. 'Civitas' என்பது, இலத்தீன் (Latin) மொழியில் 'நகர்'

அல்லது 'பட்டினம்' (city) என்று பொருள்படும். அதிலிருந்தே, 'civilise' என்னும் வினை யுண்டாகும். மரியாதையை அல்லது திருந்திய ஒழுக்கத்தை உணர்த்தும், 'civility' என்னும் சொல்லும், அதனின்றும் திரிந்ததே.

civil: having the refinement of city-bred people

civil war a war between citizens of the same state.

city a large town. L. civitas

(Chamber's Etymological Dictionary).

நாகரிகமென்னும் சொல், நாகர் என்னும் பெயரினின்று வந்ததென்றும், நாகரென்பார், நாகரிகத்திற் சிறந்திருந்தவரென்றும், ஆயிரத் தெண்ணூறாட்டைமுற் றமிழர் (The Tamils 1800 Years Ago) என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளது.

நாகரென்பர், நாகநாடெனப்பட்ட கீழ்த்திசை நாடுகளில், நாகவணக்கம், கொண்டிருந்த மக்கள் வகுப்பாரே. நாகவணக்க முடைமைபற்றி, நாகரெனப்பட்டார். நாகருடைய நாடு, நாகநாடெனப்பட்டது.

நாகம் என்பதும், நாகர் என்பதும், பாம்பின் பெயர்கள். நகர்வது நாகம், அது முதனிலை திரிந்த தொழிலாகு பெயர்; நாகர் என்பது நாகம் என மருவும். ஆங்கிலத்திலும் snake என்பது, இதே பொருள் பற்றியது.

snake a creeping animal: snican, to creep - (Chambers' Etymological Dictionary).

நகர், நாகம், என்னும் தமிழ்ச்சொற்களே, 's' என்னும் முதல் எழுத்துப் பெற்று ஆங்கிலத்தில் வழங்குமென்க. அது முதற்குறைக்கு மாறானதோர் முதல் விரிபாகும். அதை ஆங்கிலத்தில் 'prosthesis' என்பர்.

நாகம் என்னும் சொல்லுக்கு, மலையிலுள்ள தென்றும், மரத்திலுள்ள தென்றும்; வடநூலார் பொருள் கூறுவது சிறிதும் பொருந்தாது.

கீழ்த்திசை நாடுகளில், பெரும் பாம்புகளிருந்தனவாக, வான்மீகி இராமாயண, கிட்கிந்தா காண்டத்தா லறியக்கிடக்கின்றது. இற்றைக்கும், கழிபெரு நச்சுப்பாம்புகள், தென்அமெரிக்காக் கண்டத்தி லுள்ளனவாகச் சொல்லப்படும். நாகத்தின் தீமைபற்றி, அதைத் தெய்வமாக மக்கள் வணங்கி வந்தனர் என்க.

நாகத்தொடு பெயரொப்புமைபற்றி, நாகரை, நாகத்தலையும், மக(மாநுட)வுடம்பும் பெற்ற ஒருவகை உயர்திணை வகுப்பாராகப் பிறழக் கருதுவர் சிலர்.

பர்மா, சாவா முதலிய தீவுகளும், ஆத்திரேலியா, அமெரிக்கா வென்னும் கண்டங்களும், வங்காளக்குடாக்கடலில் அமிழ்ந்துபோன நிலப்பாகங்களும் நாகநாடுகளாகும்.

மணிமேகலையில்,

"கீழ்நில மருங்கி னாகநா டாளும்"

"நாகநன் னாட்டு நானூறி யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்துகே டெய்தும்"

"நாக நாடு நடுக்கின் றாள்பவன்
வாகை வேலோன் வளைவணன்"
(கம்பரா.சுந்தர20) எனக் கீழ்த்திசை நாடுகள் பொதுவாகவும், சிறப்பாகவும், நாகநாடெனச் சுட்டப்பட்டன.

சாவக நாட்டுள்ள புண்ணியராசன் தலைநகர், நாகபுரமெனக் கூறப்பட்டுள்ளது.

கம்பராமாயணச் சுந்தரகாண்டத்தில்,
"கீண்டது வேலை நன்னீர் கீழுறக் கிடந்த நாகர்
வேண்டிய வுலக மெங்கும் வெளிப்பட மணிகண் மின்ன
ஆண்டகை யதனை நோக்கி யரவினுக் கரசர் வாழ்வும்
காண்டகு தவத்த னானேன் யானெனக் கருத்துட் கொண்டான்"

என்னும் செய்யுளில், நாகநாடு குறிக்கப் பட்டுள்ளது. இதில், கீழென்பது கிழக்கு. இதைக்

கடலின் அடிப்பாகமெனக் கொண்டு இடர்ப்படுவர் சிலர்.

அனுமான் கடலைத் தாவின வேகத்தினால், எழுந்த காற்று மோதுதலினாலே, கீழ்த்திசையில், பூமியின் வளைவான பாகத்திலுள்ள கடல்நீர் விலகி, அதனால் முன்னம் மறைக்கப்பட்டு (அதற்கப்பால் கிழக்கே) இருந்த நிலப்பாகம் அல்லது நாகநாடு தோன்றிற்று என்பது, இச் செய்யுளின் கருத்தாகும்.

பூமி உருண்டையா யிருத்தலால், கிழக்கே செல்லச்செல்லப் பூமியின் கீழ்ப்பாகமாகும் அமெரிக்கா, பூமிக்கு நேர் கீழாகும். அதனால், கீழ்ப்பாகமெனப்படும். அது பூமியின் மேற்பரப்பின் வழியாய்ச் சென்றெய்தப் படுவதல்லது, நிலத்தை யகழ்ந்தும் கடலின் மூழ்கியும், நேர் கீழாகச், சென்றெய்தப் படுவதன்று. மேற்கே மலைத்தொட ரிருந்தமையால், தமிழ்மக்கள் மேற்றிசையிற் பெரும்பாலும் சென்றிலர். கிழக்கே மலையின்றி யிருந்ததுடன், நிலத்தொடர்பும் நெடுந்தூர மிருந்ததாகத் தெரிகின்றது.

நாகநாட்டை யடுத்த கீழ்கரையூர்கள், நாகூர், நாகப்பட்டினமெனப் பெயர் பெற்றிருக்கின்றன.

நாகரில், நாகரிகரும், அநாகரிகருமாக இருவகுப்பார் இருந்திருக்கின்றனர். நாகரிக வகுப்பைச் சேர்ந்த கன்னிகைகளையே, அர்ச்சுனனும், சோழனும் மணந்ததாகப், பாரதமும், மணிமேகலையுங் கூறும்.

மணிமேகலை, ஆதிரை பிச்சையிட்ட காதையுள்,

"சாதுவ னென்போன் தகவில னாகி

....

வங்கம் போகும் வாணிகர் தம்முடன்

தங்கா வேட்கையிற் றானுஞ் செல்வுழி

நளியிரு முந்நீர் வளிகலன் வௌவ

....

நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்

பக்கஞ் சார்ந்தவர் பான்மைய னாயினன்

....

ஒங்குயர் பிறங்க லொருமர நீழல்

துஞ்சுதுயில் கொள்ளச் சூர்மலை வாழு

நக்க சாரணர் நடமிலர் தோன்றிப்

பக்கஞ் சேர்ந்து பரிபுலம் பினனிவன்

தானே தமியன் வந்தன னளியன்

ஊனுடை யிவ்வுடம் புணவென் றெழுப்பலும்

....

கள்ளடு குழிசியுங் கழிமுடை நாற்றமும்

வெள்ளென் புணங்கலும் விரவிய விருக்கையில்

எண்குதன் பிணவோ டிருந்தது போலப்

பெண்டுட னிருந்த பெற்றி நோக்கி" (மணிமே, 69.).

என்னும் அடிகளால், நாகரில் ஒரு வகுப்பார் அம்மணரா யிருந்தா ரென்றும், மக்களைக் கொன்று தின்றாரென்றும், அறியக் கிடக்கின்றது. ஆதலால் நாகரிகம் என்னும் சொல், நாகர் என்பதினின்றும் வந்ததன்று என்றும், நாகரென்பார் கீழ்த்திசை நாடுகள் பலவற்றிலுமுள்ள மக்கட்கூட்டத்தாரே என்றும், அவருட் சிலர் நாகரிகராயும், சிலர் அநாகரிகராயு மிருந்தனரென்றும்அறிந்துகொள்க. ("செந்தமிழ்ச் செல்வி" கடகம். 1932)

நாகரிகர் *nāgarigar,* பெ.(n) 1. நகரப்பதியோர் (திவா.); citizens, townsmen, city folk. "*காஞ்சி நாகரிகராலிவர்*" (திருவிளை.மெய்க்கா.33). 2. கண்ணோட்டமுள்ளவர்; persons possessing a kindly feeling for their friends "*நஞ்சுமுண்பர் நனிநாகரிகர்*" (நற்.355).

3. பல்கலைவல்லோர்; scholars, learned persons. "*நுதிகொ ணாகரிக னென்பான்*" (சீவக.1110). 4. சதுரர் (பிங்.); skilful persons. 5. காமுகர் (பிங்.); licentious persons. 6. நேயர் (இரசிகர்); persons of cultivated taste in art, literature etc., "*நம்பர் நம்மில்லம் புகுந்து நின்றார் நாகரிகர் பெரிது மிளையர்.*" (திவ்.பெரியதி. 9:2:4.).

[நாகரிகம் → நாகரிகர்.]

நாகரிகி *nāgarigi,* பெ.(n.) செப்பமான நடையுடையவள்; woman of refined manners. "*நங்கைதோழி நனிநாகரிகியும்.*" (பெருங். உஞ்சை.42,171.).

[நாகரிகர் → நாகரிகி.]

நாகரிசம் *nāgarišam,* பெ.(n.) தவசி முருங்கை; tranquebar gendarussu

[நாகரி → நாகரிசம்]



நாகரிபு *nāgaribu,* பெ. (n.) பருந்து; brahmini kite

நாகரீகக்காரன் *nāgariga-k-kāraṉ,* பெ. (n.) பண்பட்ட பழக்கவழக்கமுடையவன்(வின்); gentle, accomplished person.

மறுவ. நகர்ப்புறத்தான்.

த. நாகரிகம் → skt. நாகரிக → நாகரீக + காரன். "காரன்" – உடைமைப்பெயரீறு.

[நாகரிகம் → நாகரிகம் +காரன். 'காரன்' உடைமைப் பெயரீறு. பண்பட்ட பழக்க வழக்கங்கள். முதன்முதல் நகர் அல்லது நகரத்திலேயே திருந்தின. திருந்திய பண்பட்ட பழக்க வழக்கத்தினை யுடையவன், நாகரிகக் காரன் எனப்பெயர் பெற்றான். வாழ்க்கைத் திருத்தம் அல்லது பண்பட்ட பழக்க வழக்கத்திற்கு உடைமையாளன் என்றறிக.]

நாகரீகங்காட்டு—தல் *nāgarigaṅ-kāṭṭu-,* 5.செ.கு.வி.(v.i.) *நாகரிகம்பண்ணு—தல் (வின்.)* பார்க்க; see *nāgarigam-paṇṇu-.*

நாகரீகசெம்பு *nāgariga-šembu,* பெ. (n.) ஆண்குறி; penis.

மறுவ. தண்டு.

நாகரீகம் *nāgarigam,* பெ. (n.) 1. *நாகரிகம்* பார்க்க; see *nāgarigam* 2. புதுமை; something new, curiosity "*அந்த நாகரீக வேடிக்கை நான் சொல்லக்கூடுமோ.*" (இராமநா.உயுத்.124)

[நாகரிகம் → நாகரீகம்]

நாகரீகம்பண்ணு—தல் *nāgarigam-paṇṇu-,* 5. செ.கு.வி. (v.i.) 1. பண்பட்ட பழக்கத்துடன் நடத்தல்; to behave politely. 2. ஆடம்பர மாயிருத்தல்; to be foppish.

[நாகரிகம்→நாகரீகம் + பண்ணு—.]

மிதமிஞ்சிய பகட்டாரவாரம் காட்டுதல். அளவிற்கு அதிகமாகச்செயற்கை ஆடம்பரம் செய்தல்.

நாகரீகம்விடு-த்தல் *nāgarīgam-viḍu-,* 4.செ.கு.வி.(v.i.) பண்பட்டநிலையில் பேசுதல் (யாழ்.அக.); to speak politely.

[நகரிகம் → நாகரிகம் → நாகரீகம் + விடு-.]

நாகரீகர் *nāgarīgar,* பெ. (n.) *நாகரிகர் (சூடா.)* பார்க்க; see *nāgarigar*

[நாகரிகர் → நாகரீகர்.]

நாகரு *nāgaru,* பெ. (n.) குருக்கத்தி (மூ.அ); common delight of the woods.

நாகருகம் *nāgarugam,* பெ. (n.) தேன்றோடை (யாழ்.அக.); a sweet orange.

மறுவ. இலாமிச்சை, கிச்சலி, நாகரம்.

நாகருசம் *nāgaruśam,* பெ.(n.) *நாகருகம் (சங்.அக.)* பார்க்க; see *nāgarugam.*

நாகருடப்பூடு *nāgaruḍa-p-pūḍu,* பெ.(n.) கீரிப்பூண்டு; mungoose plant- Ophiorrhiza mungoos

நாகரேணு *nāgarēṇu,* பெ. (n.) மிளகு(மலை); black pepper.

நாகரேணுவம் *nāgarēṇuvam,* பெ.(n.) செவ்வியம்; root of pepper plant.

[நாகரேணு → நாகரேணுவம்.]

நாகரை[1] *nāgarai,* பெ. (n.) பூடுவகை (யாழ்.அக.); a kind of mungoose

நாகரை[2] *nāgarai,* பெ. (n.) 1. கறிப்புடோல் snake gourd. 2. *நாகரவண்டு* பார்க்க; see *nāgara-vaṇḍu.*

நாகரையன் *nāgaraiyaṉ,* பெ. (n.) *நாகராசன்* பார்க்க; see *nāgarāśśṉ.* "*கழனாகரையன் காவலாக*"(தேவா.138,10)

நாகரொட்டியெலும்பு *nāgaroṭṭi-y-elumbu,* பெ.(n.) மார்பெலும்பு; chest bone- Starnum

நாகல் *nāgal,* பெ. (n.) *நாவல்(சங்.அக.)* பார்க்க; see *nāval.*

நாகலதை *nāga-ladai,* பெ. (n.) ஆண்குறி (யாழ்.அக.); virile membrum

மறுவ. தண்டு.

நாகலிங்கசாத்திரி *nāga-linga-śāttiri,* பெ. (n.) தமிழ்ப்புலவர்; a Tamil poet இவர் 'வேளாளர் இயல்பு' என்ற நூலை இயற்றியுள்ளார். இந் நூல் வேளாளரை, சூத்திரர் என்பது தவறு என்றும், வணிக மரபினரென்றும் காட்டுகிறது. வேளாளர் இயல்பு பற்றி, தேவாரம் முதலிய நூல்களிலிருந்து ஆதாரங்கள் காட்டப் பட்டுள்ளன.

நாகலிங்கம் *nāga-lingam,* பெ. (n.) நாகத்தால் கவிக்கப்பெற்ற இலிங்கம் (குறி)போன்ற உருவத்தைத் தன்னுட்கொண்ட பூவுள்ள மரவகை (M.M 1277); cannon ball tree having a flower in which the staminal portion curves over the ovary like a cobra's hood, m tr., Couroupita guianensis.

மறுவ. ஆவுடையார்மரம்.

[நாகம் + இலங்கம்→ இலிங்கம்.]

இயற்கையின் படைப்பிலுள்ள மிகவுயர்ந்த சிறப்பினுக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் மரம்.சிவப்பு மணமுள்ள பூவின் நடுவில் இலங்கத்தைப்போன்று அமைப்பு, உள்ளது. நாகப்படத்தைப் போன்ற இம்லிமரத்தின் இதழ்கள், ஆவுடையாரை யொத்த விடிவின: கதிரவன் சாயுங் காலத்து இலிங்கத்தைச் சுற்றியுள்ள பகுதி, நாகப்படத்தை யொத்த மேலிதழோடு பிரிந்து விழுந்துவிடும் தன்மைத்து. (சா.அக.)

நாகலிங்கமுனிவர் *nāgaliṅga-muṉivar,* பெ.(n.) தமிழ்ப்புலவர்; a Tamil poet.

இவரது ஊர், காஞ்சிக்கருகில் உள்ள ஏகனாம் பேட்டையாகும். வண்ணம் பாடுவதில் புலமைப்பெற்று, 'வண்ணக்களஞ்சியம்' என்ற பட்டம் பெற்றார். இவர், பல தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். சிவனிய நூல்களைக் கற்பிக்க, 'மெய்கண்டான் கல்லூரி' யை நிறுவி, நடத்தினார். செங்குந்தமித்திரன் என்ற திங்களிதழை நடத்தினார். திருத்தணிகை வண்ண மஞ்சரி, தென்கடம்பன்துறை பதிற்றுப்பத்தந்தாதி, வடபழநி மயிலேறும் பெருமாள் மாலை, திருவாமாத்தூர் வண்ணங்கள், திருவெறும்பியூர் புராணம், முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

நாகலோகம்¹ *nāga-lōgam,* பெ. (n.) *நாகவுலகம்¹* பார்க்க; see *nāga-v-ulagam¹.*

[நாகம் + த.உலகம் →skt லோகம்.]

நாகலோகம்² *nāga-lōgam,* பெ. (n.) *நாகவுலகம்²* பார்க்க; see *nāga-v-ulagam².*

[நாகம் + த.உலகம் →skt. லோகம்.]

நாகவங்கம் *nāga-vaṅgam,* பெ. (n.) 1. நாகவங்கமணல்; an ore consisting of lead and zinc. 2. வங்கமணல்; sand mixed with lead graphite.

[நாகம் + வங்கம்.]

நாகவடம் *nāga-vaḍam,* பெ. (n.) *நாகபடம் (வின்.)* பார்க்க; see *nāga-paḍam.*

நாகவம்¹ *nāgavam,* பெ. (n) 1.கரணம் பதினொன்றனுள் ஒன்றாகிய காருவா, (அமாவாசை) உவாநாளின் பிற்பகுதி (விதான.பஞ்சாங்.29,உரை); a divison of time, the latter half of the new moon day, one of eleven karaṇam. 2. பாம்புகரணம் (சா.அக.); onion of two snakes

நாகவம்² *nāgavam,* பெ. (n.) திருகுகள்ளி; tursted spurge.

நாகவராளி *nāga-varāḷi,* பெ. (n.) பண்வகை (யாழ்.அக.); a musical mode

நாகவல்லரி *nāgavallari,* பெ. (n.) 1. வெற்றிலை; betel leaf 2. *நாகவல்லி¹* பார்க்க; see *nāga-valli¹.*

நாகப்பாம்பின் படத்தினைப் போன்ற தோற்றமுடையதாலே வந்த பெயர்.

நாகவல்லி¹ *nāga-valli,* பெ. (n.) 1.வெற்றிலை (பிங்.); betel. leaf. 2. திருமணத்தின் இறுதியில் ஐந்தாம் நாள் நடக்கும் நிகழ்வு (சடங்கு); concluding ceremony of a marriage on the fifth day.

[நாகம் + வல்லி.]

நாகவல்லி² *nāga-valli,* பெ. (n.) 1. நாகவல்லிக் கொடி; betel vine. 2. ஓரிதழ்த் தாமரை; one petel lotus. 3. பாம்புக்கொடி; snake creeper. 4. கீரி புரண்டான்; mungoose plant.

நாகவல்லித்தழை *nāgavalli-t-talai,* பெ. (n.) 1. நாகவல்லிச் செடியின் இலைகள்; leaves of nāgavalli 2. *நாகவல்லி¹* பார்க்க; see *nāgavalli¹*

[நாகம் + வல்லி → நாகவல்லி நாகவல்லி + தழை.]

நாகம் போன்று சுருண்ட தன்மையுடன், வலித்துக் கொள்ளும் கொடிமுனைக் காம்பு. இக்காம்பு வளர வளர வலித்துக்கொண்டு, இழுத்துச் செல்லும் இயல்புபற்றி வந்ததென்க.

நாகவள்ளி *nāga-valli,* பெ. (n.) 1. *நாகவல்லி¹ (யாழ்.அக.)* பார்க்க; see *nāga-valli¹*. a kind of valli creeper 2. வள்ளிக்கிழங்கு; sweet potato.

[நாகம் + வள்ளி.]

வள் → வள்ளி = வளமுடன் உருண்டு திரண்டகிழங்கு

நாகவள்ளித்தளம் *nāgavalli-t-talam,* பெ. (n) 1. வெற்றிலை; betel leaf 2. *நாகவல்லி²* பார்க்க; see *nāgavalli²*

[நாகவல்லி → நாகவள்ளி + தளம்.]

நாகவாசம் *nāga-vāsam,* பெ. (n.) 1. நாதாங்கி; staple of a bolt, as shaped like a snake's head. 2. குழந்தைகளை உட்காரப்பயிற்றும் நாகம் போன்ற முன்னணை யுள்ள ஊஞ்சல் வகை (இ.வ.); a kind of swing with a snake-shaped hold in the front, used for teaching infants to sit up. 3. பாம்பு இருக்கு மிடத்தினின்று குறிப்பாக அடைகாக்கும்போது வரும் மணம்; snake's incubating smell.

தெ. நாகவாசமு.

மறுவ: கொண்டி.

[நாகம் + skt வாசம்.]

[வயம் → வசம் → வாசம்.]

நாகவாடை *nāga-vāḍai,* பெ. (n) 1. துத்தநாகப்பிடிப்பு (வின்.); alloy of zinc and silver, used in soldering. 2. செம்பூறல்; verdigris.

[நாக(ம்) + அடை → நாகவடை → நாகவாடை.]

நாகவாதி *nāga-vādi,* பெ. (n.) 1. துத்தநாகத்தைப் பொன்னாக்கும் கலையறிந்தவன்; an alchemist handling consolidated zinc 2. பாம்புப்பிடாரன்; snake charmer.

[நாகம் + வாதி. நகர்வு → நாகம்.]

நாகவாய் *nāga-vāy.* பெ. (n.) 1. கடைசற்கருவி வகை(வின்.); tool used in turning. 2. நாகத்தின் வாய்; the mouth of snake

[நாகம் + வாய்.]

நாகவாயு *nāga-vāyu,* பெ. (n.) பத்துவகை வளிகளுள் ஒன்றான நாகன்(சங்.அக.); one of the ten vital air in the human body supposed to assist in extending and contracting the body and in speaking

[நாகம் + skt வாயு .]

நாகவாரிகம் *nāga-vārigam,* பெ.(n.) 1. அரசர் அமர்வதற்குரிய யானை; royal elephant 2. கருடன்; garudan 3. மயில்; peacock

நாகு = இளமை; விளங்கும் அழகு.

[நாகு + அம் + வார் + இகம்.]

நாகம் + வாரிகம்.

இளமை விளங்கும் அழகுடைய மயில், கழுலன், யானை முதலியவற்றைக் குறித்து வந்தது.

நாகவாரிகன் *nāga-vārigaṉ,* பெ. (n.) யானைப் பாகன் (யாழ்.அக.); elephant's driver.

[நாகம் + வாரிகன்.]

யானையை இயக்குபவன்.

நாகவாலெலும்பு[1] *nāga-vālelumbu,* பெ.(n.) நெஞ்செலும்பு; breast bone.

மறுவ. மார்பெலும்பு.

[நாகவால் + எலும்பு.]

நாகத்தின் வாலெலும்பு போன்ற, நெஞ்செலும்பு.

நாகவாலெலும்பு[2] *nāga-vālelumbu,* பெ. (n.) நாகப்பாம்பின் வால்புறத்திலிருக்கும் எலும்பு; the bone of nāga snake's tail.

[நாகவால் + எலும்பு.]

நாகவி *nāgavi,* பெ. (n) வெட்டிவேர்; khuskhus root- Andropogn muricatus.

[நாகம் > நாகவி.]

நாகவிடபாகம் *nāga-viḍa-pāgam,* பெ. (n.) 1. துத்தநாகக்களிம்பு; verdigris of zinc. 2. நாகப்பாம்பின் நஞ்சு; cobra- poisoning. 3. துத்தநாகம் சேர்ந்த மருந்தினாலேற்பட்ட நஞ்சுநோய்; chronic zinc poisoning due to medicines, consisting of zinc compounds as ingredients- Zinc alism.

[நாகம் + skt. விடம் + பாகம்.]

நாகவீதி *nāga-vīdi,* பெ.(n.) 1. நாகப்பாம்பு மணலில் ஊர்வதாலேற்பட்ட வளைவுப் பாதை; a zic-zac line which created by snake. 2. பால்வீதி மண்டலம் (யாழ்.அக.); milky way.

[நாகம் + வீதி.]

நாகவீதியர் *nāga-vīdiyar,* பெ. (n.) துறக்கவுலகத்திற்குச் செல்லும் வழியில் வாழும் தேவ குலத்தார்; a glass of gods re-

siding on the way to švargam. "மருந்தினு மினிய நாகவீதியரென்றுரைப்பர்" (கூர்மபு. சங்.அக.).

[நாகம் + வீதியர்.]

ஏழுலகில் ஒன்றான துறக்க வுலகத்திற்குச் செல்லுங்கால், இருக்கும் ஏனைய ஆறுலகங்களில் ஒன்றாகிய, நாகவுலகிடை வாழும், ஒளியுடம்பினர்.

நாகவுப்பு *nāga-v-uppu,* பெ. (n.) துத்தநாக உப்பு; (C.E.M.) white vitriol, sulphate of zinc

[நாகம் + உப்பு.]

சித்தமருத்துவத்தில், பல கடைச் சரக்குகளுடன் சேர்த்துச் செய்யப்படும் உப்பு. இது நச்சுத்தன்மை மிக்கது. இவ் வுப்பினைக் குறிப்பிட்ட அளவு நோயின் தன்மைக்கு ஏற்றவாறு, கடைச் சரக்குகளுடன் சேர்த்து, மருந்து செய்யவேண்டுமென்று, சா.அக. கூறும்.

நாகவுலகம்[1] *nāga-v-ulagam,* பெ. (n.) **1.** தேவ வுலகம் (சங்.அக.); Indiran heaven, švargam. **2.** எழுவகையுலகினுளொன்று (திருக்கலம்.,6, உரை); one of the seven worlds.

[நாகம் + உலகம்.]

நாகவுலகம்[2] *nāga-v-ulagam,* பெ. (n.) கீழுலகம்; the nether region as the abode of the nāgas "*நீ நாகலோகந் தகுவழியே சாரக்*" (கோயிற்பு. பதஞ்சலி.75).

[நாகம் + உலகம்.]

நாகர் வாழ்வதாகக் கருதப்படும் (பாதாளம்) கீழுலகம்.

நாகவெள்ளி *nāga-veḷḷi.* பெ. (n.) பொன்னாக் கத்துக்கும், சிவபூசைக்கும் பயன்படுத்தும் வெள்ளி; an alloy of zinc and copper used in alchemy and the worship of šivan.

[நகு → நாகு + அ + வெள்ளி.]

நகு = மிக்கு கொளியுடன் விளங்கித் தோன்றுகை. நகு → நாகு 'அ'சாரியை. பளபளப்புடன் அழகுடன் விளங்கித் தோன்றும் வெள்ளி.

நாகவெள்ளை *nāga-veḷḷai,* பெ. (n.) நாகபற்பம்; an Indian preparation of zinc oxide prescribed for gonorrhoea

மறுவ. நாகப்பொடி.

[நாகம் + வெள்ளை.]

நகர் → நகம் → நாகம் + பற்பம். நகர் = வெண்மையான சுதை பூசப்பட்டு விளங்கித் தோன்றுவது. நகர் → நகம் → நாகம்: பளபளப்புடன் திகழும் வெண்துத்தம். வெண்மை யானதும், பளபளப்பதுமான நாகவெள்ளைப் பொடி.

வெள் → வெண் (வெண்மை) + ஐ = வெள்ளை. ஐ = விகுதி.

நாகவேதம் *nāga-vēdam,* பெ. (n.) மருது; winged myrobalan

[நகம் → நாகம் + வேதம்.]

நல்விதையில் வனப்புடன் வளர்ந்து, வழவழப்பாகவும், பளபளப்புடனும் திகழும் மருதமரம்.

நாகவொத்து *nāga-v-ottu,* பெ. (n.) **1.** மகளிர் தோளணிவகை; a kind of armlet with a golden bead suspended, worn by women. **2.** நாகசுரத்திற்கு இணையாக, ஒத்திசைக்கும்

கருவி; a parallal instruments when nagaswaram played, with it.

நாகன்[1] *nāgaṉ*, பெ. (n) பத்துவகை வளி யுள், விக்கல் முதலியவற்றை உண்டாக்குவது (பிங்.); the vital air of the body which produces hiccup, one of tašavaḷi.

[நகர் – நகம் → நாகம் → நாகன்.]

நாகன் என்பது உடம்பில் எழுச்சியுடன் மேலெழும் வளி (வாயு.).

நாகன்[2] *nāgaṉ*, பெ. (n.) நாகவளி(வாயு) பத்துவகை வளிகளுள் ஒன்றானதும், கொட்டாவி, விக்கல், குமட்டல், முதலிய குணங்களையும், ஆண்குறிக்கு எழுச்சியையும் ஏற்படுத்தும், தன்மையுள்ள வளி (வாயு.); one of the ten vital airs in the human system which is said to be responsible to cause yawning, hiccups, vomitting and erection of penis.

[நகம் → நாகம் → நாகன்.]

நாகன்சண்பகம் *nāgaṉ-šaṇbagam*, பெ. (n.) **1.** சித்தமருத்துவ முறைப்படி செய்யப்படும் நாகப்பொடி; a calcined powder prepared as per process of siddha. medicine. **2.** *நாகேசுரம்* பார்க்க; see *nāgēšuram*.

[நாகம் → நாகன் + சண்பகம்.]

நாகனவல்லி *nāgaṉa-valli*, பெ.(n.) வெற்றிலைக் கொடி; betel leaf.

[நாகு + அன் + அம் + நாகனம் + வல்லி. மணம், குணம், காரம் முதலான பண்புகளைத் தன்னகத்தே கொண்டது.]

நாகனழைத்தான்வேர் *nāgaṉaḻaittāṉ-vēr*, பெ. (n.) நஞ்சுமுறிச்சான் வேர்; country ipecacuanha.

[நாகன் + அழித்தான் → அழைத்தான் + வேர்.]

நாகன் அழித்தான் என்பது, நஞ்சுமுறித்தலைக் குறித்தலால், "அழைத்தான்" என்பது மரூஉ வழக்காகலாம்.

நாகனாதி *nāgaṉ-ādi*, பெ. (n.) தேட்கொடுக்கி; scorpion sting plant.

[நாகம் → நாகன் + ஆதி.]

ஆதி: முதன்மையானது விலங்கில் வால் முதன்மையென்று கருதப்படுதலால், இம் மூலிகை, நாகனாதி எனப் பெயர்பெற்றது.

நாகனாய் *nāga-ṉāy*, பெ. (n.) இலைக்கள்ளி; leaf spurge- leafy milk hedge.

[நாகன் + நாய்.]

நாகப்பாம்பின் படத்தையொத்த சதைப்பற்றான இலைகளையும், நாயின் பற்களையொத்த கூர்மையான முட்களையு முடைய, கள்ளிவகை.

நாகனி *nāgaṉi*, பெ. (n.) திருகுகள்ளி; trusted milk hedge.

[நாகன் → நாகனி.]

நாகா[1]—த்தல் *nākā-*, 4 செ.கு.வி. (v.i.) பேச்சில் விழிப்பாயிருத்தல்; to speak vigilantly "*யாகாவா ராயினும் நாகாக்க*" (குறள்,127.). மேடைப்பேச்சாளருக்கு நாகாத்தல் இன்றியமையாதது (உ.வ.).

[நா + கா—.]

நாகா[2]—த்தல் *nā-kā-*, 4 செ.கு.வி. (v.i.) 2. உண்ணும்போது கட்டுப்பாட்டுடன் இருத்தல்; to kee pon dietary. சாப்பாட்டில் நா காத்தால், உடம்பு கட்டழகுடன் மிளிரும்.

[நா + கா—.]

மூச்சுவிடும் இயல்பும், மோப்பக்குணமும் மூக்கிற்கு உடைமையாதல் போல், நாவடக்கமும், உணவைச்சுவைக்குந் திறனும் நாக்கிற்கு உடைமை ஆகும்.

நாகாகுயம் *nāgā-guyam*, பெ. (n.) சிறுநாகப்பூ மரம்; ceylon iron-wood

[நாகம் + குல் → குய் → குயம்.]

நாகம் = மாந்தர்க்கு இளமையும் வலிமையும் நல்கும் வட்டமான பூப்பூக்கும் மரம்.

நாகாங்கம் *nāgāṅgam*, பெ. (n.) ஆடா தோடை; malabar winter cherry-Adadhota vesica

[நாகம் + skt. அங்கம்.]

நாகாசம் *nāgāśam*, பெ. (n.) அசோகமரம்; asoka tree-Uvaria longifolia

மறுவ: நெட்டிலிங்கம்.

நாகசம் → நாகாசம்.

நாகாசனம் *nāgāśaṉam*, பெ. (n.) பாம்பை உணவாகவுடைய கருடன் (நாமதீப.236); garuḍaṉ, as feeding on snakes.

நாகம் +skt. ஆசனம்.

நாகாசனன்[1] *nāgāśaṉaṉ*, பெ. (n.) *நாகாசனம்* பார்க்க; see *nāgāśaṉam*

நாகம் + skt.ஆசனம் → ஆசனன்.

நாகத்தை கொத்தியுண்டபின்பு, அதன் தோலை இருக்கையாகக் கொண்ட கலுழன்.

நாகாசனன்[2] *nāgāśaṉaṉ*, பெ.(n.) கருடன் கிழங்கு; sky root - Bryonia epigaea.

நாகாசி *nāgāśi*, பெ. (n.) காய்ப்பாகல்; spiked bitter cucumber - Momordica charantia

பச்சைப்பசேல் என்றிருக்கும் பாகற்காய்.

நாகாஞ்சனம் *nāgāñjaṉam*, பெ.(n.) வெண்துத்தம்; white vitriol

நாகம் + skt anjna → த. அஞ்சனம்.

நாகாத்தம்மன் *nāgāt-t-ammaṉ*, பெ. (n.) 1. மாந்தர். புதர்வாழ் பாம்பினைக் கண்டு அஞ்சிய சூழலிற் சூட்டிய பெயர்; people out of fear for the snake from the thick bush named Nāgāttammaṉ. 2. நாவடக்கம் வேண்டி வழிபடும் அம்மன்; people prayed for decent talk to this deity

1. நாகம் + ஆத்தா + அம்மன்.

2. நா + காத்த + அம்மன்.

மாந்தர், அச்சத்தின் பொருட்டும், நாவடக் கத்துடன் கூடிய அமைதியான வாழ்வு அமைதற்பொருட்டும், நாகாத்தம்மனை வழிபட்டனர் எனலாம். தாய்மை வழிபாடு தமிழகத்தில் தலைசிறந்து திகழ்கின்றது, என்பதற்கு நாகாத்தம்மன் வழிபாடு எடுத்துக்காட்டாகும்.

நாகாத்திரம் *nāgāt-tiram*, பெ. (n.) நாகபாணம் (யாழ்.அக.); serpant missile

[நாகம் + skt astra → த. அத்திரம்.]

நாகாதிபன்[1] *nāgādiban*, பெ. (n.) 1. இந்திரன்; Indira,as lord of the švargam. "*நாகாதிபன் மகன்*" (பாரத.அருக்சுனன்றீ.10). 2. (யானை அரசன்) ஐராவதம்; indra's elephant, as lord of elephants "*நாகாதிபன் விடுமும்மத நாறுந்திசை புக்கான்*" (பாரத. அருக்சுனன்றீ.10). 3. நாகவரசன்; Adišēdan, as lord of serpants. "*நாகாதிபன் மகண்மைந்தனங்கண்டு*" (பாரத.அருச்சுனன்றீ.10.).

[நாகம் + skt அதிபன்.]

நாகவுலகின் வேந்தன்.

யானைகளிற் சிறந்தது இந்திரனது ஊர்தியான ஐராவதம் ஆகும். தேவர்களின் தலைவனான இந்திரன் கவர்ந்து செல்வதால், இதுவே யானைகளின் தலைவனாக மதிக்கப் பெறுகிறது. பாம்புகளின் தலைவனான ஆதிசேடன் திருமாலுக்கு ஊர்தியாக, திகழ்வதால், பாம்புகளின்தலைவனாகத் திகழ்கிறது என்பது, தொன்மச்(இதிகாசச்) செய்தியாகும்.

நாகாதிபன்[2] *nāgādiban*, பெ. (n.) (மலையரசன்) இமயமலை; the Himālayās, as Lord of the mountains "*நாகாதிபன் வண்சாரலின்*" (பாரத.அருக்சுனன்றீ.10). 2. மேருமலை(யாழ்.அக.); Mt.mēru. 3. குறிஞ்சிநிலத் தலைவன் (சங்.அக.); king of the kuriñji tract

[நாகம் + skt.அதிபன்.]

மலைகளுள் அதிக உயரமுடைய இமயம் போல், ஆளுமைப் பண்பு அதிகம் பெற்றவன் குறிஞ்சிநிலத் தலைவனாவன்.

[ஒருகா: நாகம் + அதிபன்.]

நாகம் = விளங்கித்தோன்றும் மலை. இது அழகு மிக்கது. மலையும், மலைசார்ந்து திகழும் தன்மைவாய்ந்த குறிஞ்சி நிலமும், நாகம் என்று பெயர்பெற்றது. விளங்கித்தோன்றும், அழகு மிக்க மலைகள் நிறைந்த குறிஞ்சி நிலத்தலைவன், நாகாதிபன் என்று அழைக்கப்பட்டான்.

நாகாதோரம் *nāgādōram*, பெ. (n) 1. கருப்பம் வளராது, மெலிந்து அசைவின்றி, வயிற்றில் தங்குதல்; abortion of the ovum in the tubal pregnancy in the abdomen. 2. பாம்புவயிறு (சா.அக.); flat belly

நாகாந்தகன் *nāgāndagan*, பெ.(n) (நாகங்களைக் கொல்பவன்) கழுலன் (யாழ்.அக.); garuḍan, as the destroyer of snakes

[நாகம் + skt.andaga - த. அந்தகன்.]

நாகாபரணன் *nāgābaraṇan*, பெ. (n.) சிவன்; lord šivan, as adorned with serpents "*பணஞ்செய் பொறியிள நாகாபரணர்*" (வெங்கைக்கோ.191.).

[நாகம் + skt. ஆபரணன்.]

நாகாமத்தம் *nāgāmattam*, பெ. (n.) கோரைவகையுளொன்று; a species of cyperus grass.

நாகாயுதம் *nāgāyudam,* பெ. (n.) *நாகாத்திரம்* பார்க்க; see *nāgāttiram.*

நாகாராதி *nāgārādi,* பெ. (n.) *நாகாந்தகன்* பார்க்க; see *nāgāndagaṉ.* (சா.அக)

நாகாரி *nāgāri,* பெ. (n.) கருடன்; brahmini kite.

நாகாலயம்¹ *nāgālayam,* பெ. (n.) (நாகங்கள் வாழ்விடம்) கீழுலுகம்; nether region, the abode of the the nāgās. "*நாகாலயங்களொடு நாகருலகும்*" (கம்பரா.ஊர்தேடு.9).

நாகாலயம்² *nāgālayam,* பெ. (n.) தேவர்களிருப்பிடம் (யாழ்.அக.); the abode of the gods.

நாகானந்தி *nāgāṉandi,* பெ. (n.) 72–வகை மேளகருத்தாக்களுள் ஒன்று (சங்.சந்.47.); a primary music paṉ. (rāgam.).

[நாகம் + skt.ஆணந்தி.]

நாகிதசரம் *nāgidašaram,* பெ. (n.) *நாகிதம்* பார்க்க; see *nāgidam.*

நாகிதம் *nāgidam,* பெ. (n.) *நாகியந்தம்* பார்க்க; see *nāgiyandam.*

நாகியந்தம் *nāgi-y-andam,* பெ.(n.) பால்; milk.

[நாகி + skt. அந்தம்.]

விளங்கித் தோன்றும் வெண்மை வண்ணமுள்ள பால்.

நாகியர் *nāgiyar,* பெ. (n.) தேவமாதர்; women of the celestial world."*நாகியர் திங்கண் முகத்தியர்*" (கம்பரா.ஊர்தே.121).

மிகுந்த அழகுடன் விளங்கித்தோன்றும் தெய்வநலஞ்சான்ற அரம்பையர். இத் தேவமாதர் நாக உருவத்தை முடியில் அணிந்தவர். இளமையாகவும், அழகாகவும், விளங்குபவராகையால் நாகியர் என்னும் பெயர் ஏற்பட்டது.

நாகினி *nāgiṉi,* பெ. (n.) 1.வெற்றிலை(மலை.); betel. 2. வஞ்சிக்கொடி (மலை.); common rattan of the south india.

நாகினிப்பாலை *nāgiṉi-p-pālai,* பெ.(n.) வெட்பாலை; oleandenr rosebay.

நாகு¹ *nāgu,* பெ. (n.) 1. இளமை; youthfulness, tenderness, juvenility. "*நாகிலைச் சொரிந்த வந்தீம்பால்*" (சீவக.2102). 2. பெண்மை (சீவக.74,உரை); femininity. 3. இளம்பெண், பெண் (தொல்.மரபு.3); youngwoman, woman. 4. எருமை; மரை, பெற்றம் என்பவற்றின் பெண்; female of erumai, marai and peṟṟam. 5. நத்தை; female snail, sea-snail."*நீர்வாழ் சாதியுணந்து நாகே*" (தொல்.பொருள்.618.). 6.சங்கு (சூடா.); conch. 7. மரக்கன்று (அக.நி.); sapling. 8. ஆவின் பெண்கன்று; (யாழ்.அக.) female calf, heifer. 9. பெண்மீன் (யாழ்.அக.); female fish. 11. கடல்நத்தை; sea-snail.

[நுகு → நகு → நாகு.]

இளமை, இளமை கொழிக்கும் பெண். அழகுடன் வளர்ந்து விளங்கும் ஆவின் கன்றும், நாகு என்றே அழைக்கப்பட்டது.

நாகு² *nāgu,* பெ. (n.) புற்று (தைலவ.தைல.); anti-hill.

நாகு[3] *nāgu,* பெ. (n.) மலை (யாழ்.அக.); mountain.

[நகு →நாகு .]

வலிமையுடன், வளர்ந்து விளங்கித் தோன்றும் மலை.

நாகுகன்று *nāgu-kaṉṟu,* பெ. (n) கிடாரிகன்று (S I.I ii,489,491.); heifer.

நாகுணம் *nāguṇam,* பெ. (n) நாகணம் என்ற நறுமணப்பண்டம் (பெருங்.மகத.17,135.); the aromatic substance, nāgaṇam.

[நாகணம் →நாகுணம்]

நாகுதா *nāgudā,* பெ. (n) மீகாமன்(வின்); captain of a ship

[நாவு→நாகு→நாகுதா.]

நாகுதாளிலை *nāgu-tāḷ-ilai,* பெ.(n.) *நாகதாளி* பார்க்க; see *nāgatāḷi.*

மறுவ. நாகமணி இலை.

[நாகதாளி →நாகுதாளி + இலை.]

சிறிய வெற்றிலை போன்றம் சிறிய, நாகத்தின் படம் போன்றும், அமைந்துள்ள மூலிகை. இதற்கு ஈசுவர மூலி என்றும் பெயர்.

உடலைத்தூய்மை செய்வதற்கு நாகுதாளிச்சூரணம் மிகவும் பயன்படும்.

நாகுராசிகம் *nāgu-rāśigam,* பெ.(n.) சீயக்காய்; soap-pod- Acacia concianna

நாகுருவேர் *nāguru-vēr,* பெ. (n.) சவர்க்காரம்; dhobies earth-soil.

[நாகு →நாகுரு + வேர்.]

நாகுலி[1] *nāguli,* பெ. (n.) 1. அரத்தை; galangal. 2. பேரரத்தை; greater galangal 3. கீரிப்பூண்டு (மலை.); Indian snake-root

[நாகு →நாகுலி.]

நாகுலி[2] *nāguli,* பெ. (n.) மிளகுக்கொடி; pepper creeper

[நாகு →நாகுலி.]

நாகுலிகம் *nāguligam,* பெ. (n.) சுக்கு; dried ginger -Zingiber officinali.

நாகூர் *nāgūr,* பெ. (n.) நாகப்பட்டினத்திற்கு வடக்கிலுள்ளதும், முகமதியருக்கு சிறப்பிடமாகத் திகழ்வதுமான, கடற்றுறையில் அமைந்துள்ள ஓர் ஊர்; a sea-port north of Nāgapaṭṭiṉam, containing a mosque with a minaret 90 feet high, a place of pilgrimage for muslims.

நாகூர்க்காசு *nāgūr-k-kāśu,* பெ. (n.) *நாகூர்ச்சல்லி* பார்க்க; see *nāgūr-c-calli.*

[நாகூர் + காசு.]

நாகூர்ச்சல்லி[1] *nāgūr-c-calli,* பெ. (n.) 1. உலாந்தா நாட்டார் நாகூரில் அடித்து வழங்கிய, தாமிர நாணயவகை; a small copper coin of the Dutch, minted at Nāgūr. 2. மிகு ஏழை (இ.வ.); very poor person.

[நாகூர்+ சல்லி.]

நாகூர்ச்சல்லி[2] *nāgūr-c-calli,* பெ. (n.) மருந்து செய்யப் பயன்படும், பழைய செப்பு நாணயம்; an old copper coin made of pure copper, so fit for making medicine.

[நாகூர்ச்சல்லி = செம்புப்பொடி செய்வதற்குப் பயன்படும் தாமிரக்காசு. பழைய செப்புக்காசில், தாமிரக்கலவை மிகுதியாக இருப்பதால், மருந்துப்பொடி செய்வதற்குப் பயன்படுமென்று, சா.அக. கூறும்.]

நாகூராண்டவன் *nāgūr-āṇḍavaṉ,* பெ. (n.) நாகூரில் அடக்கம் செய்யப்பட்ட முகமதியப் பெரியர் (இ.வ.); a Muhammadan śaint interred at Nagore.

[நாகூர் + ஆண்டவன்.]

நாகூலகி *nāgūlagi,* பெ. (n.) சிறுகாஞ்சொறி; climbing nettle-Tragia involucrata.

நாகேசர் *nāgēśar,* பெ. (n.) 1. யுனானி மருத்துவத்தில், நீரடைப்பு, மலச்சிக்கல் இவைகளைப் போக்கப் பயன்படும் மருந்துப்பூடு; (in uṉāṉi, medicine) a drug used for curing stranguary constipation etc,. 2. *நாகேசுரப்பூ* பார்க்க; see *nāgēśura-p-pū.* 3. சுரபுன்னை. soorapoon.

[நாக → ஈசர் → நாகேசர்.]

நாகேசுரப்பூ *nāgēśura-p-pū,* பெ. (n.) சிறுநாகப்பூ; serpent champak.

மறுவ: நாகாசிப்பூ, நாகப்பூ.

[நாகம் + ஈசுவரப்பூ.]

கருநாடகம், மலையாளக் கடற்கரையில் பயிராகும்; இம் மரம் 40 அடி உயரம் வளரும். இதன் பூக்கள் பெரியன; வெண்ணிறமுடையன. மணமிக்கவை; பழமும் நறுமணமிக்கது. இப் பூவின் நறுமணத்திற்காகவும், பழத்தின் சுவைக்காகவும், வீடுகளில் பயிரிடுவர். வெயிலின் வெம்மையைத் தணிப் பதற்காகவும், சந்தனத்துடன் அரைத்து உடம்பில் தடவிக் கொள்வர்.

நாகேசுர வேரினை இஞ்சியில் சேர்த்து, அரைத்துச் சாறு பிழிந்து அருந்தினால், சுரக்காய்ச்சல் குறையும். மிகுவியர்வை ஏற்படும். மந்தமான வயிற்றில் பசியுணர்வு ஏற்படும்.

நாகேசுர வேர், பட்டை, இஞ்சி, பூ போன்றவற்றைக் கடைச்சரக்குகளுடன் சேர்த்துக் கருக்குநீரிட்டுக் (கியாழம்) குடித்தால், செரியாமை அகலும்; மூலநோய் நீங்கும். ஆண்களுக்கு மிகு எழுச்சியான விழியம் (ஒளிநீர்) சுரக்கும்; இவ் வேரினையும், பட்டையையும் சேர்த்துச் சாறு பிழிந்து, கருப்பிணிகளுக்கு உண்டாகும் நீர்க்கட்டுக்கு மருந்தாகக் கொடுப்பர். இச் சாறு அனைத்து நோய்களுக்கும் கைகண்ட மருந்து.

நாகேசுரப்பட்டை, வேர் இரண்டையுஞ் சேர்த்துத் தனிச் சூரணம் செய்து, தேனில் கலந்து கொடுத்தால், வயிற்றுவலி, உடம்புவலி, நீரடைப்பு போகும். இச் சூரணத்தால் பெண்களுக்கு ஏற்படும் அரத்தப்போக்கு தடைப்படும்.

சதாப்பிலை மூலியுடன், இச் சூரணத்தைச் சேர்த்து, அரைத்துக் குடித்தால், முறைச்சுரம் போகும். இத் தனிப்பொடியைப் பாலில் கலந்து, வெண்ணெயில் சேர்த்துக் குடித்தால், பெண்களுக்கு ஏற்படும் எல்லாநோய்களும் அகலும். வெள்ளை படுதல் நீங்கும். சீதளம், அரத்தமூலம், பெரும்பாடு போன்றவை அகலும்.

நாகேசுர இலையைப் பாலில் சேர்த்துக் கொதிக்கவைத்துத் தலையில் கட்டினால், தலைப்பாரம் குறையும். கோழை, இருமல் நீங்கும். நாகேசுரக்காய்ப்பிஞ்சிலிருந்து எண்ணெய் எடுத்து, உடம்பில் தடவினால் கைகால் குடைச்சல் அகலும். மூட்டுக்களி லுண்டாகும் வலி, அறவே ஒழியும். ஊதைநோய் போகும்.

நாகேசுரப்பட்டை, வேர் இரண்டையும் கருக்குநீரிட்டுக் குடித்தால், ஆண்களுக்கும், பெண்களுக்கும் மலட்டுத்தன்மை அகலும். ஆற்றல் மிகும் என்று, சா.அக. கூறும்.

நாகேசுரம்[2] *nāgēšuram,* பெ. (n.) *நாகேசுரப்பூ* பார்க்க; see *nāgēšura-p-pū.*

நாகேசுரம்[3] *nāgēšuram,* பெ. (n.) நாகப்பொடி அல்ல நாகத்தூள் (பற்பம்); a calined powder.

[நாகம் + ஈசுவரம்.]

நாகப்பொடி (பற்பம்) இளங்கம், மனோசிலை, கந்தகம் முதலானவற்றுடன், கடைச் சரக்கினையும், நாகேசுரப் பழச்சாற்றையும் சேர்த்து, ஆயுர்வேத முறைப்படி புடமிட்டு எடுக்கப்படும் பற்பம், இப்(பற்பத்து) பொடியுடன் தேன்கலந்து, ஒருமண்டலம் உண்டு வந்தால், ஆண்களும், பெண்களும் ஆற்றல் அதிகரித்து, மகப்பேறு காண்குவர்

நாகேசுவரச்சாறு *nāgēšuvara-c-cāṟu,* பெ. (n.) நாகேசுவரத் துகள், இதளியம், சேர்த்துத் தூய்மையாக்கிய ஆயுர்வேத மருந்து; an Ayurvedic preparation given for curing consumption. anaemia, piles, diarrhoea fever etc. It is prepared according to the text by grinding and calcining the calcned powders of mercury zine, copper, and conch with the juice of the leaves madar.

[நாகம் + ஈசுவரம் + சாறு.]

தூய்மைப்படுத்திய நாகேசுரத்துகள் (பற்பம்) இதளியம் ஆகியவற்றைச் சேர்த்துப் புடமிட்டு, பொடி செய்த (ஆயுள் வேத வாணாள் மறை மருந்து.

இப் புடமிட்ட மருந்தினைச் செய்வதற்கு நாகேசுரப்பொடி, இதளியம், சங்குப்பொடி, எருக்கஞ்சாறு போன்றவற்றை, ஆயுர்வேத முறையில் கலந்து, புடமிட்டுப் பொடி செய்வர்.

நாள்பட்ட கொக்கிருமல், அரத்தசோகை, மூலம், கடுங் காய்ச்சல், நச்சுக்காய்ச்சல், குடற்புண்காய்ச்சல், தொழுநோய் போன்ற நோய்களுக்கு, நாகேசுவரச்சாற்றில் செய்த இம் மருந்து, கைகண்ட பயன்தரும் என்று, சா.அக. கூறும்.

நாகேசுவரன் *nāgēšuvaraṉ,* பெ. (n.) சிவபிரான்; šivaṉ, as the lord of wearing serpents.

நாகேந்திரன் *nāgēndiraṉ,* பெ. (n.) அரவரசன் (ஆதிசேடன்); Adišēḍaṉ, as lord of serpents.

நாகை[1] *nāgai,* பெ. (n.) நாவல் (இ.வ.); jamun plum.

[நாவல் → நாகல் > நாகை.]

நாகை[2] *nāgai,* பெ. (n.) *நாகப்பட்டினம்* பார்க்க; see *Nāga-p-aṭṭiṉam.* “*குலோத்துங்க ணாகை*” (குலோத். கோ,173).

[நாகப்பட்டினம் → நாகை.]

ஒ.நோ. தஞ்சாவூர்→தஞ்சை

நாகை³ *nāgai,* பெ. (n.) பாம்பு; snake. "*நாகைதே டெண்ணமாங்கில்லையோ*" (சரபேந்திரபூபால குறவஞ்சி,71,5.).

[நாகம் → நாகை.]

நாகை⁴ *nāgai,* பெ. (n.) 1. வெற்றிலைச் செடி (சா.அக.); betel vine. 2. வெள்ளை நாகை; Annogeissus latifolia.

[நாகு → நாகை.]

நாகைக்காரோணம் *nāgai-k-kārōṇam,* பெ. (n.) நாகப்பட்டினத்துள்ள சிவன்கோயில்; Šivan̠ shrine in Nāga-p-aṭṭin̠am.

[நாகை + காரோணம்.]

நாகோதரக்கருப்பம் *nāgōdara-k-karuppam,* பெ. (n.) முறையற்ற உறவின் மூலமாகவோ, அல்லது ஆண், பெண், இருபிரிவினருக்கும் ஏற்படும் வளித்தொல்லையின் விளைவாகவோ, உண்டாகும் கருப்பம்; false or ampullar pregnancy.

[நாக + skt. உதரம் + கருப்பம்.]

பெண்களுக்கு ஏற்படும் வளித் தொல்லையால், இக் கரு வளர்ச்சி தடைப்படும். இக் குறைபாட்டினால், கருவுற்ற பெண்ணுக்கு, மிகுதியான அரத்தப்போக்கு ஏற்பட்டு, கருச்சிதைவு உண்டாகும்.

நாகோதரம் *nāgōdaram,* பெ. (n.) கருப்பையில் உண்டாகும் கருவின் கேடு; a diseases affecting the foetus in the womb.

[நாகம் + உதரம்.]

நாங்கணைச்சான் *nāṅgaṇaiccān̠,* பெ. (n.) நாகணவாய்ப்புள் (கன்னியா.சிந்து.); bush myna.

நாங்கர் *nāṅgar,* பெ.(n.) வேளாண்மை; (C.G.) cultivation, agriculture.

நாங்கல் *nāṅgal,* பெ. (n.) நாகரகசம்பங்கி மரவகை; mesua genus.

நாங்கல் மரம், நாகசம்பங்கி என்று அழைக்கப்படுகிறது. இம் மரத்துள் இருவகையுண்டு:– 1. மண்ணை நாங்கல். 2. நீர் நாங்கல்.

நாங்கள் *nāṅgaḷ,* ப. (pr.n) பெ. (n.) தன்மைப் பன்மைப் பகரப்பெயர்; first person plural pronoun.

[நாம் + கள் → நாங்கள்.]

இச்சொல், பேசுபவர், முன்னிருப்பவரை, உட்படுத் தாத தன்மைப்பன்மைச் சொல்லாக வழக்கிலுள்ளது. யாழ்ப்பாணத்தில், முன்னிருப்பவரையும், உள்ளடக்கிய தன்மைப்பன்மைச் சொல்லாக வழங்கி வருவதறிக.

நாங்கில்மரம் *nāṅgil-maram,* பெ. (n.) 1. மரவகையு ளொன்று; a kind of tree. 2. நாங்கு பார்க்க; see nāṅgu.

நாங்கில் மரவகை;

1. சிறுநாங்கில்.

2. பெருநாங்கில்.

நாங்கு[1]–தல் *nāṅgu-*, 5.செ.கு.வி.(V.I.) மனவுறுதி தளர்தல்; to shrink in spirit, become nerveless.“ *தாங்கி நாங்கிப் போக*” (யாழ்ப்).

[நால்கு → நாங்கு–.]

நாங்கு[2] *nāṅgu-*, பெ. (n.) தவசமாகச் செலுத்தும் வட்டி(C.G.); interest on debt, paid in grain.

நாங்கு[3] *nāṅgu*, பெ.(n.) மரவகை; musua. (சா.அக.).

நாங்குமரவகை *nāṅgu-maravagai*, பெ. (n.) 1. கருநாங்கு; long pointed broad leaved ceylon iron wood. 2. தாடி நாங்கு; mesua ferrea. 3. மலை நாங்கு; large flowered ceylon iron-wood. 4. நீர்நாங்கு; same as no 3. 5. மண்ணை நாங்கு; narrow leaved ceylon iron-wood.

நாங்குழு *nāṅguḻu*, பெ. (n.) *நாங்கூழ்* பார்க்க; see *nāṅgūḻ*. “*நாங்குழுவை வள்ளுகிரா லெற்றாமல்*” (பணவிடு.205.).

நாங்கூழ்[1] *nāṅgūḻ*, பெ. (n.) பெருங்குடலில் தொங்கும் நாகப்புழு போன்ற (சவ்வு) வளர்ச்சி; vermiform appendix.

நாங்கூழ்[2] *nāṅgūḻ*, பெ. (n.) நாக்குப்பூச்சி; earth worm. “*எறும்பிடை நாங்கூழெனப் புலனா லரிப்புண்டு*” (திருவாச.6:25.).

[நாங்குள்→நாங்கூழ்.]

நாச்சி *nācci*, பெ. (n.) தலைவி (நாமதீப.183); lady, mistress.

[நாயகன்→நாயகச்சி + நாச்சி.]

நாச்சிமார் *nāccimār*, பெ. (n.) 1. திருமாலின் தேவிமார்; two consorts of Vishṇu. 2. தெய்வ ஆற்றலுள்ள ஏழு அன்னைமார் (சப்தமாதர்) (வின்); the sevan divine mothers.

[நாயகச்சி→நாய்ச்சி + மார்

ஒருகா. நாய்ச்சி→நாய்ச்சிமார்.]

ஒ.நோ. பிள்ளை→பிள்ளைமார்.

நாச்சியார் *nācciyār*, பெ. (n.) 1. அரசி அல்லது தலைவி; lady, queen, mistress. அரசி அருள் “*இராணி மங்களேசுவரி நாச்சியார்.*” 2. பெண்தெய்வம்; Goddess. நாச்சியாரைக் கும்பிட்டபின்புதான் நல்லபேச்சுபேசவேண்டும் (இ.வ.). “*நாச்சியார்க்கு வைத்த சந்தி விளக்கொன்றும்.*” (S.I.I.iii,123). 3.ஆண்டாள்; the Vaiṣṇava female šaint of šrivilliputtūr. “*நாச்சியார் திருமொழி*” (திவ்.). நாச்சியார் ஆண்டாள், தெய்வத்தமிழ்மொழியால் நம்மையெல்லாம் ஆண்டாள் (உ.வ.).

தெ. நாஞ்சாரு.

[நாய்ச்சிமார் → நாச்சியார்.]

நாச்சு *nāccu*, பெ. (n.) நாட்டியம்; dance.

நாச்செறு *nā-c-ceṟu*, பெ. (n.) வசை; abuse, blame. “*நாச்செறு பராவு கொள்ளார்*”. (சீவக.2825).

[நா + செறு.]

நாசகரம் *nāšagāram*, பெ. (n.) பேரழிவு; great destruction. நாசகார அணுகுண்டுகள் உலகை அழிக்குந் தன்மையான (இக்.வ.).

நாசகாரி[1] *nāša-kāri*, பெ. (n.) கேடுவிளை விப்பவ-ன்-ள் (யாழ்.அக.); a person who causes ruin.

[நாசம் + காரி.]

[நை → நசி → நாசம்.]

நாசம் = அழிவு, கேடு.

நாசகாரி[2] *nāša-kāri*, பெ. (n.) 1. நோய்களை அழிக்கும் மருந்து (சா.அக.); an infalliable remedy. 2. வளித் (வாயு.) தனிமம்; nitrogen.

[நாசம் + காரி.]

நாசகாலம் *nāša-kālam*, பெ. (n.) அழிவுகாலம்; bad times. "*நாசகாலம் வரும்பொழு தாண்மையு ஞானமுங் கெடுமோ*" (பாரத.கீசக.14).

[நாசம் + காலம்.]

நாசகாலன்[1] *nāša-kālan*, பெ. (n.) கொடியோன்(வின்.); atrociously wicked person, as yaman.

[நாசம் + காலன்.]

நாசகாலன்[2] *nāša-kālan*, பெ. (n.) பொருளை யழிப்பவன்(இ.வ.); extravagant fellow, spendthrift, prodigal.

[நாசம் + காலன்]

நாசம் = அழிவு

நாசநட்சத்திரம் *nāša-naṭcattiram*, பெ. (n.) "*வெள்ளிநின்ற நாளுக்குப் பத்தாம் நாள்*" (விதான.குணாகுண.41,உரை.); the 10th nakṣatram counted from the asterism occupied by venus.

[நாசம் + skt.நட்சத்திரம்.]

நாசநன் *nāšnan*, பெ. (n.) 1. அழிவு செய்கிறவன்; destroyer. 2. *நாசகாரி* பார்க்க; *see nāša-kāri.* "*திமிரநாசநன் செய்ய மேனியன்.*" (பாரத.சூது.141.).

[நாசம் + நன்.]

ஒ.நோ. இயக்குநர், ஓட்டுநர், நடத்துநர்.

நாசப்பழக்கம் *nāša-p-paḻakkam*, பெ. (n.) கெட்டப்பழக்கம்; pernicious habits.

நாசம் *nāšam*, பெ. (n.) 1. அழிவு; destruction, ruin, dissolution, annihilation, loss, damage, waste. "*நாசமான பாசம்விட்டு*" (திவ்.பெரி யதி.1,3:8) "*நம்புண்ணியபூமி யாவையு நாசமாம்*" (சிவரக.நந்திகேசுரநம.7). 2. இறப்பு; death. "*சுமாலிகேசி தேனுகன் நாசமுற்று வீழ.*"(திவ்.திருச்சந்.107). 3. *நாசநட்சத்திரம் (விதான.குணாகுண.41)* பார்க்க; see *nāša-naṭcattiram.*

த நாசம் → skt. nāša.

[நை → நசி.]

[நசி→நாசம்.]

நசிவு = அழிவு, கேடு.

ஒருகா நசி → நசம் → நாசம்

நாசம் என்னும் சொல், "நசி" எனும் நெகிழ்ச்சிக்கருத்து வேரிலிருந்து தோன்றிய சொல். வடமொழியில் உள்ள, 'நச்' என்னும் வேரடிக்கு சரியான பொருள் கூறப்படவில்லை.

நுல்[4] என்னும் வேரடி, நெகிழ்ச்சிக் கருத்தினின்று தோன்றிய அழிதற்கருத்தினைக் குறிக்கும் வேரடி என்று தேவநேயர் வகுத்துள்ளார். நெகிழ்ந்தபொருள்

நைய்யுந்தன்மைத்து. நைந்தபொருள் அழியும். 'நசி' என்னும் வேரடியே, நாசம் என்னும் சொல்லிற்கு மூலமாகும்.

நொள் → நொய் → நய் → நை.

"*அகரத்திம்பர் யகரப் புள்ளியும் ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்*" (தொல்.56.). நைதல் = நசுங்குதல், கெடுதல்.

நசிதல் = அழிதல். நை → நசி. நசி → நசிவு = அழிவு, கேடு நசி → நசம் → நாசம்.

நாசம் என்னும் சொல்லின் வேரடி, 'நசி' என்னும் வினையடியாகும்.

இலக்கியவழக்கு, மக்கள்வழக்கு என்னும் இருவழக்குகளிலும், அழிதல், முற்றுமழிதல், பெருங்கேடு அடைதல் என்னும் பொருண்மையில், 'நாசம்' என்னும் சொல், வழக்கூன்றியுள்ளது. குடித்துக்குடித்து அவர் நாசமாய்ப் போகிறார். (உ.வ.). பிறர்பொருளை எடுத்துக்கொண்டவர் நாசமாய்ப் போவது உறுதி (உ.வ.). நாசமாய் போவதற்கு நல்லநாள் பார்க்கணுமா (பழ.).

நாசம் என்னும் சொல், அழிவு, இறப்பு என்னும் பொருளில் நாலாயிரத் தெய்வபனுவலில், ஆளப்பட்டுள்ளது.

1. "நாசமான பாசம்விட்டு".

2. "சுமாலிதேனுகன் நாசமுற்று விழ" (திவ்.திருச்சசந்.107.).

"நசி" என்னும் நெகிழ்ச்சிக்கருத்து வேரினின்றே, 'நாசம்' என்னும் சொல் கிளைத்தது. மக்கள் வழக்கும் இக் கருத்திற்கு அரணமைக்கின்றன, என்பதில் யாதொரு ஐயமில்லை.

இன்றும் மக்களிடையே "நாசமாய்போ" நம்பியவரைக்கெடுத்தவன் நாசமாய் போவான் போன்ற வழக்குகள், சிற்றூர் முதல் நகரம் வரை வேரூன்றியுள்ளன.

நாசம்வருவான் *nāšam-varuvāṉ*, பெ. (n.) *நாசமற்றுப் போவான் (வின்.)* பார்க்க; see *nāšam-aṟṟu-p-pōvāṉ*.

[நாசம் + உறுவான்→ வருவான்.]

நாசமற்றுப்போவான் *nāšam-aṟṟu-p-pōvāṉ*, பெ. (n.) ஒரு வசைச்சொல் (இ.வ.); accursed person, used in imprecation.

[நாசம் + உற்று→ அற்று + போவான்.]

'உற்று' என்பது, மக்கள் வழக்குத் திரிபாக 'அற்று' என ஒலித்தது. குடும்பம் முழுதுமழிந்து பிறங்கடையற்றுப் போவான் என்பது இவ் வசைவழக்கின் பொருளாகும்.

நாசமறுவான் *nāšam-aṟuvāṉ*, பெ. (n.) *நாசமற்றுப்போவான் (வின்.)* பார்க்க; see *nāšam-aṟṟu-p-pōvāṉ*.

[நாசம் + உறுவான்→ அறுவான்.]

நாசமாய்ப்போ-தல் *nāšamāy-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) வாழ்க்கையில் உருப்படாமல் அழிந்துபோதல்; to go to rack and ruin. குடித்துக்குடித்து நாசமாய்ப்போய்விட்டான் (இ.வ.). நல்லவர்கள் நாசமாய்ப்போ என்று பிறரை ஏசமாட்டார்கள் (உ.வ.). நீ நாசமாய்போ!

[நை → நசி → நசம் → நாசம் + நாசமாய் + போ-.]

நாசமோசம் *nāša-mōšam*, பெ. (n.) கேடு, அழிவு (வின்.) ; peril, jeopardy, danger of life.

[நாசம் + மோசம்.]

நாசயோகம் *nāša-yōgam,* பெ. (n.) கேடு விளைக்கும் வார விண்மீன்களின் சேர்க்கை (பெரியவரு.); inauspicious conjunction of nakšatram and vāram.

[நாசம் + skt. *யோகம்.]*

நாசவக்கணை *nāšavakkaṇai,* பெ. (n.) காகதும்புரு (சா.அக.); kanjilals mottled ebony.

நாசவாயு *nāša-vāyu,* பெ. (n.) வளித்தனிமம்; nitrogen.

[நாசம் + Skt. *வாயு.]*

நாசவேலை *nāša-vēlai,* பெ. (n.) யாரும் அறியாது, மந்தணமாகச் செய்யும், தீய நோக்கமுடைய செயல்; sabotage. "தொடர்வண்டியின் பேரழிவிற்குக் காரணம், நாசவேலைதான் என்று கூறப்படுகிறது. (இ.வ.); அமைதி (சமாதான) ஒப்பந்தத்தைக் கெடுப்பதற்கென்றே இந்த நாசவேலைகள் நடைபெற்றுள்ளன.

மறுவ. அழிவுப்பணி.

[நாசம் + வேலை.]

நாசன் *nāšaṉ,* பெ. (n.) 1. அழிப்பவன்; destroyer. "*என்பிறவி நாசனே*" (திருவாச.5:51); 2. எமன் (பிங்.); yamaṉ, as God of death.

மறுவ. கூற்றுவன்.

[நாசம்→நாசன்.]

நாசனம் *nāšaṉam,* பெ. (n.) *நாசம்* பார்க்க; see *nāšam.*

[நாசம்→நாசன் + அம்.]

நாசனன் *nāšaṉaṉ,* பெ. (n.) அழிவு செய்பவன்; கேடு விளைவிப்பவன்; destroyer. "*திமிரநாசனன்*" (பாரத.சூது.141).

[நாசன் → நாசனன்.]

நாசனி *nāšaṉi,* பெ. (n.) அழிவு செய்பவன்; destroyer. "*கன்மநாசனி*" (நாமதீப.).

[நசி → நசம் → நாசம் → நாசம் → நாசன் + இ.]

"நசி" என்னும் அழிவுக்கருத்து வேரினின்று கிளைத்த சொல்

நாசி-த்தல் *nāši-,* 4செ.கு.வி (v.i.) 1. அழிதல்; to perish, to be destroyed, 2. ஒடுங்குதல்; to be reduced to primitive elements,

[நசி → நசம் → நாசம்
ஒருகா நசித்தல் → நாசித்தல்.]

நாசித்தலை *nāši-t-talai,* பெ. (n.) கோவில் திருமதில் கோபுரங்களில் அமைந்த யாளியின் தலை (யாழ்.அக.); figured head of the yāḷi on the walls of a temple.

[நாசி + தலை.]

நாசுகம் *nāšugam,* பெ. (n.) பீர்க்கு; gourd plant.

நாசுவன்காறல் *nāšuvaṉ-kāṟal,* பெ. (n.) வெண்மைகலந்த நீலநிறமுள்ள கடல்மீன்; a sea-fish, bluish-silvery.

நாசோற்பத்தி *nāšōṟpatti,* பெ. (n.) உலகம் மாறிமாறி அழிந்து தோன்றுகை(வின்.); periodical dissolution and appearance of the worlds.

[நாசம் + உற்பத்தி.]

நாஞ்சில்[1] *nāñjil,* பெ. (n.) 1. கலப்பை; plough. "*நாஞ்சி லொப்ப*" (புறநா.19.). 2. மதிலுறுப்பு; a component part of a fortification. "*தசும்புடைக் கனகநாஞ்சில்*" (கம்பரா. கடறாவு.90). 3. வள்ளுவன் என்ற தலைவற்கு உரியதாயிருந்த ஒருமலை; a mountain belonging to the chief, Vaḷḷuvaṉ. "*நாஞ்சிற் பொருந*" (புறநா.137). 4. கலப்பை வடிவு போன்ற மூக்கு; a nose like a plough.

[நாங்கு→நாஞ்சில் .]

நாஞ்சில்[2] *nāñjil,* பெ.(n.) ஒரு ஊர்; a village.

நாஞ்சில்வள்ளுவன் *nāñjil-vaḷḷuvaṉ,* பெ. (n.) *நாஞ்சில் மலைக்குரியனான தலைவன்* (புறநா.137); an ancient chief of Nāñjil.

[நாஞ்சில் + வள்ளுவன்.]

நாஞ்சிலான் *nāñjilāṉ,* பெ. (n.) கலப்பைப்படையுடையோன் maṉ, as having a plough for his weapon. "*நாஞ்சிலான் றார்போல்*" (கலித்.36.).

[நாஞ்சில் → நாஞ்சிலான்.]

நாஞ்சிலேறு-தல் *nāñjil-ēṟu-,* 5செ.குன்றாவி. (v.t.) மூக்கில் புரையேறுதல்; to be suffocated by food passing into the wind-pipe. உணவு உண்ணும்போது நாஞ்சிலேறாமல் மெதுவாகத் தண்ணீர் குடிக்கவேண்டும். உணவு நாஞ்சிலேறினால், உயிருக்கு ஆபத்து ஏற்படும் (இ.வ.). (தஞ்சை.).

மறுவ. புரையேறுதல்.

[நாஞ்சில் + ஏறு-.]

நாஞ்சிற்படையோன் *nāñjiṟ-p-paḍaiyōṉ,* பெ.(n.) நாஞ்சிலான் பார்க்க; see nāñjilāṉ.

[நாஞ்சில் + படையோன்.]

நாஞ்சினாடு *nāñjiṉāḍu,* பெ.(n.) தென் திருவாங்கூர்ப்பகுதியான ஒரு நாடு; a portion of south Tiruvāṅgūr. "*நாஞ்சினாடுடையான்*" (S.I.I.ii,161).

[நாஞ்சில் + நாடு.]

நாட்கடத்து-தல் *nāṭ-kaḍattu-,* 5. செ.கு.வி. (V.I.) 1. நாள்கழித்தல் (யாழ்.அக.); to pass away time. 2. நாள் ஒற்றி வைத்தல் (இ.வ.); to put off from day to day.

[நாள் + கடத்து -.]

நாட்கடன் *nāṭ-kaḍaṉ,* பெ.(n.) காலைக்கடமை; daily observances, morning duties. "*நாட்கடன் கழிந்தபின்*" (சீவக.1944).

[நாள் + கடன்.]

நாட்கணக்கன் *nāṭ-kaṇakkaṉ,* பெ.(n.) (வாழ் நாளுக்குக் கணக்கு வைத்திருப்போன்) எமன் (இ.வ.); yamaṉ, as keeping account of one's days.

[நாள் + கணக்கன்.]

நாட்கணக்கு *nāṭ-kaṇakku,* பெ. (n.) 1. அன்றாட வேலை (இ.வ.); daily work. 2. அன்றாடக் கணக்கு(வின்.); daily account. 3. வாழ் நாளின் எல்லை (வின்.); the term of life, one's appointed days.

[நாள் + கணக்கு.]

ஒவ்வொரு நாளும், ஆற்ற வேண்டிய பணியினைப் பகுத்து, வகுத்துக் கணக்கிட்டுச் செய்கை; அன்றாடு ஆகும் செலவினைக் கணக்கிடுகை; இச்சொல் நீட்சிக்கருத்தின் அடிப்படையில் வாணாளெல்லையைக் குறித்தது.

நாட்கதிர்[1] *nāṭ-kadir,* பெ. (n.) அறுவடைக்கு முன், நன்னாளிற் கொள்ளும், நெற்கதிர் (நெல்லை.); the first sheaves of an harvest gathered on an auspicious day. நாட்கதிரறுத்த நெல்லை நல்லநாளுக்குப் பயன்படுத்த வேண்டும் (இ.வ.).

மறுவ: தலைக்கதிர், முதற்கதிர்.

[நாள் + கதிர்]

இறைவனுக்குப் படைக்கு முகத்தான், முதல் விளைச்சலில், தெரிவு செய்து எடுத்த தலைநெற்கதிர்.

நாட்கதிர்[2] *nāṭ-kadir,* பெ. (n.) காலையில் தோன்றும் கதிரவனின் ஒளியிழை; the first rays of the rising sun.

[நாள் + கதிர்.]

புலர்காலைப் பொழுதில் தோன்றும் புத் தொளிக்கதிர்

நாட்கவி[1] *nāṭ-kavi,* பெ. (n.) அன்றன்று அரசனைப் புகழ்ந்து கூறும் பாடல்; daily salutaion to the king by the court poet, in verse. "*நாட்கவி பாடு நாட்போல்*", (ஈட்டியெழுபது.2.).

[நாள் + Skt. *கவி.]*

நாட்கவி[2] *nāṭ-kavi,* பெ. (n.) புலர்பொழுதில், மன்னன் பள்ளியெழுதற்பொருட்டு பாடும் பாணன்; the musical singer who awakens king.

[நாள் + கவி. Skt.*]*

நாள்தோறும் பாடும் அரசனின் பள்ளியெழுச்சிப் புதுப்பாட்டிற்கும், அப் பாட்டினைப் பண்ணோடு இசைக்கும் பாணனுக்கும், பொதுமையாய் வந்தமை காண்க.

நாட்கழிவு *nāṭ-kaḻivu,* பெ. (n.) 1. காலக்கழிவு; passing of time. 2. சம்பளம் போடுகையில் நாளைக் குறைத்துவிடுகை (வின்.); deduction of days while counting for payment of wages. 3. வீணே பயனின்றிப் பொழுது போக்குகை; passing the time uselessly.

[நாள் → கள் → கழி + வு–"வு" தொ.பெ.ஈறு.]

[நாள் + கழிவு.]

குறிப்பிட்ட நாளில் பெறும் கூலிக்கழிவு. யாதொரு பயனுமின்றிக் கிடைத்தற்கரிய வாணாளைப் பணியின்றிக் கழிக்கை.

நாட்காட்டி *nāṭ-kāṭṭi,* பெ. (n.) *நாள்காட்டி* பார்க்க; see *nāḷ-kāṭṭi.*

[நாள் + காட்டி.]

நாட்கால்[1] *nāṭ-kāl,* பெ. (n.) *நாட்காலம்* பார்க்க; see *nāṭ-kālam.* "*நாட்காலே நீராடி*" (திவ். திருப்பா.2).

[நாள் + கால்.]

நாட்கால்[2] *nāṭ-kāḷ.* பெ. (n.) 1. நன்முழுத்தக்கால் (முகூர்த்தக்கால்) (நெல்லை); a post set up with ceremony on an auspicious day to erect a wedding pavilion. 2. *நாட்காலம்* பார்க்க; see *nāṭ-kālam.*

[நாள் + கால்[2].]

நாட்காலம் *nāṭ-kālam,* பெ. (n.) 1. விடியற் காலம்; early morning. '*நாட்காலத்துச் செய்யுங் கடன்களை*' (சீவக.1944,உரை). 2. ஏற்றபருவம்; appropriate time, fitting season. '*நாட்கால மன்றாயினும்*' (சீவக. 132,உரை.).

மறுவ. புலர்காலைப்பொழுது.

[நாள் + காலம்.]

நாட்காலை *nāṭ-kālai,* பெ. (n.) *நாட்காலம்* பார்க்க; see *nāṭ-kālam.*

[நாள் + காலை.]

"ஐ" சொல்லாக்க ஈறு.

நாட்குணம் *nāṭ-kuṇam,* பெ. (n.) நறுங்குறிஞ்சி; conchead.



நாட்குறி-த்தல் *nāṭ-kuṟi-,* 4செ.கு.வி, (v.i.) 1. ஏற்றநாளை யேற்படுத்துதல் (வின்.); to appoint a suitable day. 2. நற்செயல்களுக்கு உரிய நாளைத் தேர்ந்தெடுத்தல்; to select on auspicious day for good events.

[நாள் + குறி.]

நாட்கூலி *nāṭ-kūli,* பெ. (n.) 1. அற்றைக்கூலி; daily wage. 2. புதிதாக வரையறுத்த கூலி; latest fixed wages.

[நாள் + கூலி.]

நாட்கூறு *nāṭ-kūṟu,* பெ. (n.) 1. முற்பகல்; fore noon. (சா.அக.) "*தொண்டர் நாட்கூறு திருவமுது செய்யக்கண்டு* (பெரியு.திருஞான. 567). 2. பிற்பகல்; after-noon.

[நாள் + கூறு.]

நாட்கொடி¹ *nāṭ-koḍi,* பெ. (n.) 1. திருவிழா மற்றும் சிறப்பு நாளை யறிவித்தற்குக் கட்டுங் கொடி; flag hoisted on an auspicious day. "*இஞ்சி நாட்கொடி நுடங்கும்*" (புறநா.341,5). 2.அரசன் நாடோறுஞ் செய்த வெற்றிக்கு அறிகுறியாகக் கட்டிய கொடி; flag hoisted to celebrate the victory of a king. "*நாட்கொடி நுடங்கும் வாயில்*" (சிலப்.15:21).

[நாள் + கொடி.]

நாள் = புதுமை, சிறப்பு

நாட்கொடி² *nāṭ-koḍi,* பெ. (n.) புதிதாகத் தோன்றுங் நிலைத்திணையியற் கொடி; the new creeper.

[நாள் + கொடி நாள்= புதுமை.]

நாட்கொல்லி¹ *nāṭ-kolli,* பெ. (n.) (வாணாளைப் போக்குபவன்) கூற்றுவன்; yamaṉ, as ending one's days. "*நாட்கொல்லி யென்றா னடுங்கு கின்றாய்*" (அருட்பா.நெஞ்சறி.412).

[நாள் + கொல்லி.]

நாட்கொல்லி² *nāṭ-kolli,* பெ. (n.) பயனிலசொல்லிப் பிறர்நேரத்தை வீணாக்கு பவன் - ன்; useless-person talking useless word wasting other's time.

[நாள் + கொல்லி.]

நாட்கொள்(ளு)—தல் *nāṭ-koḷ(ḷu)-,* 13.செ.கு.வி, (v.i.) 1. நன்னாளில் தொழில் தொடங்குதல்; to enter on a work or business on an auspicious day. "*பின்பு செய்யும் மொய்யமருக்கு முதலே நாட்கொண்டு*". (சீவக.418.உரை). 2. அரச சின்னங்களைப் பரத்தானம் அல்லது புறவீடு விடுதல்; to send forward the royal equipage on an auspicious day preparatory to a king's journey. "*மன்னவன் குடைநாட் கொண்டன்று*" (பு.வெ.3,3).

[நாள் + கொள்ளு—.]

நாட்கோள் *nāṭ-kōḷ,* பெ. (n.) அரச சின்னங் களைப் புறவீடு விடுகை; sending the royal equipage forward on an auspicious day preparatory to a king's journey. '*புறத்தோன் குடைநாட் கோள்*' (தொல்.பொருள்.68,உரை.).

[நாள் + கோள்.]

நாட்சரக்கு *nāṭ-carakku,* பெ. (n.) 1. மகளிரின் பேறுகாலத்தைக் கணக்கிட்டு முன்கூட்டியே நல்ல நாளில் வாங்கும் மருந்துகள்; drugs bought on an auspicious day before child birth for use as medicine for a woman in confinement. 2. நாள்தோறும் வீட்டிற்குத் தேவைப்படும் பலசரக்கு; groceries for daily use.

[நாள் + சரக்கு.]

நாட்செய்[1]—தல் *nāṭ-cey-,* செ.குன்றாவி, (v.t.) நல்ல வேளையில் பணியினைத் தொடங்குதல்; to enter on a work or business on an auspicious day. "*மொய்யமர் நாட்செய்து*" (சீவக.448).

[நாள் + செய்—.]

நாட்செய்[2]—தல் *nāṭ-cey-,* 1, செ.குன்றாவி, (v.t.) விளையாட்டு நிகழ்வில் ஒளிமிக்க விளக்குகளையிட்டு இருளகற்றுதல்; to use flood lights during matches held in the night (day-night matches).

நாட்செல்(லு)—தல் *nāṭ-cel(lu)-,* 13,செ.கு.வி, (v.i.) 1. நெடுங்காலம் நிற்றல் ; to be long standing, as a chronic disease. 2. அகவை முதிர்தல்; to become old, advanced in years.

[நாள் + செல்லு—.]

நாட்செலவு *nāṭ-celavu,* பெ. (n.) 1. நாள் கழிகை; passage of time. 2.அன்றாடஞ் செலவாகும் பணச்செலவு; daily expenses 3. நாட்செலவிற்காக நாள்தோறும் மகனுக்கோ மகளுக்கோ கொடுக்கும் சிறுசெலவிற்கான காசு; pocket money

மறுவ. கைச்செலவு.

[நாள் + செலவு.]

வாழ்நாளில் ஒவ்வொரு நாளும், கழிதலும் நாட்செலவே யாகும். சிறுசிறு செலவிற்கும், இன்றியமையாத தேவைகட்கும் புதல்வர்க்குத்தரும் கைப்பணமும் காலப் போக்கில் நாட்செலவு, என்று பெயர் பெற்றது.

நாட்சென்றவியாதி[1] *nāṭ-ceṉṟa-viyādi,* பெ. (n.) நெடுநாட்பட்ட நோய்; chronic disease

மறுவ. நாட்பட்ட நோய்.

[நாள் + சென்ற + skt. வியாதி.]

நீண்டநாள் ஆகியும் நீங்காத நோய்; வாழ்நாள் முழுமையும், மருந்துகள் உட்கொண்டும் தீராத நோய்.

நாட்சென்றவியாதி[2] *nāṭ-ceṉṟa-viyādi,* பெ. (n.) கால்வழி (பரம்பரை) நோய்; hereditary disease

[நாள் + சென்ற + skt. *வியாதி.]*

நாட்சோறு *nāṭ-cōṟu,* பெ. (n.) காலைஉணவு; morning meal.

நாட்டக்றோட்டு *nāṭṭakṟōṭṭu,* பெ. (n.) நாட்டு அக்ரோட்டு பார்க்க; see nāṭṭu-akrōṭṭu.

[நாடு + அக்றோட்டு.]

இந்தக் கொட்டையிலிருந்து, ஆற்றலைத் தரும் எண்ணெய் எடுப்பர். இந்த எண்ணெய் மலமிளக்கியாகப் பயன்படும். இதன் பிண்ணாக்கு வயலுக்கு உரமாகப்பயன்படும்.

நாட்டகத்தி *nāṭṭagatti,* பெ. (n.) அகத்திவகை; west indian sesbane.

நாட்டங்கால் *nāṭṭaṅgāl,* பெ. (n.) நாட்கால்[1] பார்க்க; see nāt-kāl[1].

நாட்டம்[1] *nāṭṭam,* பெ. (n.) 1. கண்; eye. "*வயவர் தோளு நாட்டமு மிடந்துடிக்கின்றன*" (கம்பரா.கரன்வதை.71). 2. பார்வை; sight. 3. ஆராய்ச்சி; examination, investigation. "*நன்மதி நாட்டத் தென்மனார்*" (தொல்.எழுத்.483). 4. கணியநூல்; astrology. "*சொற்பெயர் நாட்டங்கேள்வி நெஞ்ச மென்று*" (பதிற்றுப்.21,1). 5. செவ்வழி யாழ்த்திற வகையு ளொன்று (பிங்.); a secondary melody- type of the mullai class. 6. அழகு; beauty. "*இராசபுரமென்னு நாட்டமுடை நகரம்*" (சீவக.1785). 7. விருப்பம்; desire. '*அரசனுக்கு அன்னத்தில் நாட்டமில்லை*' (வின்.). '*அவனுக்கு படிப்பில் நாட்டமில்லை*' (இக்.வ.). 8. நோக்கம்; intention, pursuit, aim, quest. "*வேறொரு நாட்ட மின்றி*". (தாயு.பாயப்புலி.12). 9. சிறப்புநோக்கு; special sight. "*நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக் கூட்டியுரைக்கும் குறிப்புரை யாகும்*" (தொல்.களவு.5). 10. ஐயம் (வின்); suspicion "*அவன்பேரில் நாட்டமாயிருக்கிறது*' (வின்.). 11. அசைவு, இயக்கம்; movement "*பெண்ணாட்ட மொட்டேன்*" (கம்பரா. நகர்நீ,122).

ம. நாட்டம்.

[நாடு →நாட்டம்.]

நாட்டம்[2] *nāṭṭam,* பெ. (n.) மாவட்டத் தலைமை; (R.T.) chiefship of a district

நாட்டம்[3] *nāṭṭam,* பெ. (n.) 1. நிலைநிறுத்துகை; establishment. 'மறைமலையடிகள் தொடங்கிய தனித்தமிழ்க் கொள்கையை, மொழி ஞாயிறு தமது சொல்லாய்வின் மூலம், தமிழர்தம் மனதில் நிலைநாட்டம் செய்தார்'. (இக்.வ.) "*உரைத்திறநாட்டம்*" (தொல். பொருள்.41.). 2. வாள் (பிங்.); sword.

[நடு → நாடு →நாட்டம்.] =நாட்டம் – கொள்கையை நிலைநாட்டுகை.



நாட்டம்கார் *nāṭṭam-kār*, பெ. (n.) ஒரு நிலத்தை வேளாண்மை செய்தற்குரிய நிலையான உரிமையுடையோன்;(R.T.). those having a perferential right of cultivating land in certain places.

மறுவ. நிலவுடமைக்காரன்.

[நாட்டம் + காரர் → கார்]

நாட்டம்பலம் *nāṭṭam-balam*, பெ. (n.) 1. ஊரவை; village council. 2. நாட்டுத்தலைவன்; headman of a village.

[நாட்டு →நாடு+ அம்பலம்.]

ஊரவையைக் கூட்டுந்தலைவனுக்கும், ஊரார் கூடும் மன்றத்திற்கும், அம்பலம் பொதுவாகி நின்றது. சிற்றூரை ஆளுந்தகுதி பெற்றவன்.]

நாட்டம்பாட்டம்[1] *nāṭṭam-pāṭṭam*, பெ. (n.) செங்கல்லைக் குறுக்கும் நெடுக்குமாக வைத்துக் கட்டுகை (இ.வ.); english bond in which bricks are placed in alternate courses of headers and stretchers.

[நாட்டம் + பாட்டம்.]

நெடு → நடு → நாட்டம் = நெடுக்காக.

படு = கிடை; குறுக்காக.

நாட்டம்பாட்டம்[2] *nāṭṭam-pāṭṭam*, பெ. (n.) விருப்பத்திற்கேற்ற பாடலைப் பாடுகை; the music played according to listner's Joice.

[நாடு → நாட்டம் + பாடு → பாட்டம்.]

நாட்டத்திற்குத் தகுந்த பாடல்.

நாட்டமிலி *nāṭṭamili*, பெ. (n.) குருடன்; (சா.அக.) blind man

நாட்டம் = பார்வை

[நாட்டம் + இலி.]

(ஒ.நோ.) தேட்டமிலி, வாட்டமிலி.

நாட்டமைதி *nāṭṭa-maidi*, பெ. (n.) 1. நாடு குழப்பமின்றியிருக்கும் நிலை (வின்.); settled state of a country. 2. செல்வம்; விளையுள், பல்வளம், செங்கோல், குறும்பின்மை, பிணியின்மையென நாட்டை வளம் படுத்தும், அறுவகைப் பொருள்கள் (பிங்.); things that promote the tranquillity of a state, six in numbers viz., selvam, viḷaiyuḷ, palvaḷam, seṅkōl, kuṟumbiṉmai, piṇi-y-iṉmai 3. ஊரில் நோயின்மை (சா.அக.); state free from epidemics.

[நாடு + அமைதி.]

நாட்டவத்தனம் *nāṭṭava-t-taṉam*, பெ. (n.) *நாட்டுச்சந்தம் (யாழ்ப்.)* பார்க்க; see *nāṭṭu-c-candam*

[நாட்டவன் + தனம்.]

நாட்டவரை *nāṭṭa-varai*, பெ. (n.) அவரைவகை; (சா.அக.); country beans

[நாடு + அவரை.]

சீமைஅவரைக்கு மாறுபட்டது (சா.அக.).

நாட்டவன் *nāṭṭavaṉ*, பெ. (n.) 1. திணைப் பிறப்புரிமையாளர்; native. 2. நாட்டுப்புறத்தான் (வின்.); rustic.

[நாடு →நாட்டு + அவன் → நாட்டவன்.]

நாட்டா *nāṭṭā,* பெ. (n.) சிற்றூரில் உள்ள ஆவினத்தைச் சார்ந்தது; country cow.

மறுவ. ஊரா.

[நாடு + ஆ.]

காட்டாவிற்கு மாறுபட்டது. மாந்தருடன் எளிதில் பழகும் தன்மைத்து.

நாட்டாசாரம் *nāṭṭāšāram,* பெ. (n.) நாட்டுநடப்பு அல்லது வழக்கம்; customs and manners of a country.

மறுவ. உலகநடப்பு.

[நாடு + skt. ஆசாரம்.]

நாட்டாண்மை *nāṭṭāṇmai,* பெ. (n.) 1. ஊரதி காரம்; office of village headman, sovereignty, over- lordship of a country. "*நாட்டார்கள் யாவருமந் நாட்டாண்மை வேண்டி*" (அருட்பா. VI, அனுபவ.80). 2. ஆளுமை (நிருவாக) ஆற்றல்; business capacity.

ம, நாட்டாண்ம.

[நாடு + ஆண்மை → நாட்டாண்மை.]

இச் சொல், திரிபுப்புணர்ச்சியில் எழுத்து தோன்றுந் தன்மைக்கு எடுத்துக்காட்டு.

நாட்டாண்மைக்காரன் *nāṭṭāṇmai-k-kāraṉ,* பெ. (n.) 1. நாடு, இனம் முதலியவற்றின் தலைமைக்காரன்; headman of a village, of a tribe, etc., as the leading man in a nāḍu. 2. சில இனத்தவருக்குரிய பரம்பரைத் தலைவன் (இ.வ.); hereditary overlord of a tribe.

[நாட்டாண்மை + காரன்.]

'காரன்' உடைமை குறித்து வந்த பெயர்விகுதி.

நாட்டாண்மைக்காரி *nāṭṭāṇmai-k-kāri,* பெ. (n.) 1. நாட்டாண்மைக்காரன் மனைவி (வின்.); wife of a village headman. 2. துணிகர முள்ளவள்; bold, forward woman. 3. பணியினைத் திறம்பட நிருவகிக்கும் பெண்; a woman having a good business capacity.

[நாட்டாண்மை + காரி.]

உடைமை குறித்த பெண்பாலீறு.

நாட்டாமணக்கு *nāṭṭāmaṇakku,* பெ. (n.) ஆமணக்குவகையுளொன்று; (சா.அக.) castor oil plant.

[நாடு + ஆமணக்கு]

கட்டாமணக்கிற்கு வேறுபட்டதென்று சா.அக. கூறும்.

நாட்டாமை[1] *nāṭṭāmai,* பெ. (n.) *நாட்டாண்மை (வின்.)* பார்க்க; see *nāṭṭāṇmai.*

[நாட்டு + ஆண்மை.]

நாட்டாண்மை என்னும் சொல், இக் காலத்தே நாட்டாமை என்று வழக்கிலுள்ளது.

நாட்டாமை[2] *nāṭṭāmai,* பெ. (n.) குளத்தில் வாழும் ஆமை; trutle living in a pond.

[நாடு + ஆமை.]

இவ்வகை ஆமை கடலாமையினின்று வேறுபட்டது. குளத்து மீன்போலக் குழம்பிற்குச் சுவைமிக்கது.



நாட்டார் *nāṭṭār,* பெ, (n.) 1. தேசத்தார்; people of a country peoples. "*நாட்டார் நகைசெய்ய நாம் மேலை வீடெய்த*" (திருவாச.8,6). 2. நாட்டு மக்கள் (S.I,I,ii,514); assembly of country people. 3. நாட்டாண்மைக்காரர்; chief men. 4. கள்ளர், செம்படவர் முதலிய இனத்தவரின் பட்டப்பெயர்; title of certain castes as kaḷḷar, šembaḍavar. 5. தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்த ஒரு வேளாண்வகுப்பார(G.S.A.D.I.323); an ancient divison of cultivators in South Arcot district.

ம. நாட்டார்.

[நாடு → நாட்டான் →நாட்டார்.]

நாட்டார்வழக்காற்றியல் *nāṭṭār-vaḻakkāṟṟiyal,* பெ, (n.) சிற்றூர்ப்புறத்து மக்களின் வழக்காறுகளை ஆராயும்துறை; study of folk-lore;

[நாடு → நாட்டார் + வழக்காறு + இயல்.]

கல்லாதவர் நாவில் வழங்கும் நல்ல தமிழ்ச்சொற்களை ஆராயும் துறை.

நாட்டார்வழக்காறு *nāṭṭār-vaḻakkāṟu,* பெ,(n.) ஊரகத்தார்தம் உள்ளத்தே எழுதப்படாது நிலைநிற்கும் நிகழ்வுகளும், பழக்க வழக்கங்களும்; folklore.

[நாட்டார் + வழக்காறு.]

சிற்றூர்வாழ் மாந்தர்தம் மனத்தகத்தே கருக்கொண்ட தாலாட்டுப்பாடல், விடுகதை, ஒப்பாரி, பழமொழிகள் முதலானவற்றில் வெளிப்படும் வாழ்வியற்கூறு அல்லது வழக்காறு.

நாட்டாரஞ்சி *nāṭṭārañji,* பெ. (n) நாட்டுக்கிச்சிலி (சா.அக.); country orange.

[நாடு + ஆரஞ்சி.]

காட்டுக்கிச்சிலிக்கு மாறுபட்டதென்று சா.அக. கூறும்.

நாட்டாவாரை *nāṭṭāvārai,* பெ. (n.) 1. ஆவாரை வகை; tanner's senna 2. பேயாவாரை; wild cassia.

நாட்டாள் *nāṭṭāḷ,* பெ. (n.) கூலிவேலை செய்வோன்; labourer. '*நாட்டாளுக்கு ஒரு நீட்டாளோ*' (பழ.).

நாடு = சிற்றூர்ப்புறம்.

சிற்றூர்ப்புறத்தே நாள்தோறும் கூலி வேலை செய்து, பிழைப்பவன்.

நாட்டான் *nāṭṭāṉ,* பெ. (n) 1. தேசத்தான்; inhabitant of a country. "*தென்பாண்டி நாட்டானே*" (திருவாச1:90). 2. நாட்டுப்புறத்தான்; countryman, rustic, 3. வேளாண்மையை மேற்பார்க்கும் அலுவலர்; a revenue officer under native administration whose duty it was to superintend cultivation 4. *நாட்டாண்மைக்காரன்* பார்க்க; see *nāṭṭāṉmai-k-kāraṉ*

[நாடு + அன் → நாடன் → நாட்டான்.]

நாட்டிகம் *nāṭṭigam,* பெ. (n.) வெண்முத்துச் சோளம்; white guinea wheat - zesmays. (சா.அக.)

நாட்டிஞ்சி *nāṭṭiñji,* பெ. (n) தடித்த முரட்டிஞ்சி; wildginger.

[நாடு + இஞ்சி.]

காட்டுஇஞ்சிக்கு மாறுபட்ட குணத்தினை உடையதென்று சா.அக. கூறும்.

நாட்டிடர் *nāṭṭiḍar,* பெ. (n) *நாட்டுக்குற்றம் (பு.வெ.9.17.)* பார்க்க; see *nāṭṭu-k-kuṟṟam.*

[நாடு + இடர்.]

நாட்டியக்காரன் *nāṭṭiya-k-kāraṉ,* பெ. (n.) 1. கூத்தன்; dancer. 2. ஆரவாரம், வீண் பெருமை; foppish, ostentatious man.

[நள் → நடி → நடு → நாட்டு + இயம் + காரன்.]

(ஒ.நோ.) வாச்சியக்காரன். பாட்டியக் காரன்.

உள்ளத்தில் எழும் உணர்வுகளையும், கருத்துக்களையும், உடலுறுப்புகள் வாயிலாக, 108 உடற்கரணங்களை, பிறர் அறியும் வண்ணம் திறம்பட நாட்டிஆடுபவன், நாட்டியக்காரன்.

நாட்டியக்காரி *nāṭṭiya-k-kāri,* பெ. (n.) 1. நாட்டியம் ஆடுபவள்; dancing girl. நாட்டியக்காரியின் ஆட்டம் இன்னும் நெஞ்சில் நிற்கிறது. (உ.வ.) 2. வீண் பெருமை பேசுபவள்; foppish, ostentatious woman.

[நடு → நட்டு → நாட்டு + இயம் + காரி.]

முற்காலத்தே அகவுணர்வுகளைத் திறல்பட நாட்டி, 108 உடற்கரணங்களை, கை கால், கண்வாய் முதலிய உறுப்புகளின் தொழில்களோடு வெளிப்படுத்தி ஆடுபவள் நாட்டியக்காரி.

நுண்ணுணர்வுகளையும் நன்முறையில், பிறர்அறியும் பாங்கில் பிறர்உள்ளத்தே நிலை நிறுத்திப் பதியுமாறு நாட்டி, நாட்டியம் ஆடுபவள் நாட்டியக்காரி.

நாட்டியத்தான் *nāṭṭiyattāṉ,* பெ. (n.) ஆடவல்லான்; lord šivaṉ

[நாட்டியம் + ஆன்.]

எல்லோரையும் செயற்படுத்தும் சிவன் நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டு அனைவரையும் ஆட்டுவிக்கும் (செயற்படுத்தும்) செம்மேனிக்கடவுள்.

நாட்டியத்தான்குடி *nāṭṭiyattāṉ-kuḍi,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள பாடல்பெற்ற ஊர்; a canonized place in Tañjore Dt.

[நாட்டியத்தான் + குடி.]

நாவுக்கரசர், நம்பியாரூரர் இருவராலும் பாடல்பெற்ற ஊர்.

நாட்டியநன்னூல் *nāṭṭiya-naṉṉūl,* பெ. (n.) தமிழ்த்திரவிடவியல் இசைக்களஞ்சியம்; a treatise on dance "*வேத்தியல் பொதுவியல் என்றிருதிறத்தில் நாட்டிய நன்னூல் நன்குகடைப்பிடித்து*" (சிலப்.39:48).

[நள் → நடி → நடு → நட்டு → நாட்டு + இயம் → நாட்டியம் + நன்னூல்.]

இலக்கியம் இயற்றுங்கால், செய்யுள் வழக்கும், மக்கள் பேச்சுவழக்கும் தழுவிச் செய்வது போன்று, வேந்தனுக்கு, அரண்மனைக் கண்ணும், பொதுமக்களுக்குக் கோவில் திருவிழாக்கண்ணும், நடத்துதற்குரிய நாட்டிய

உத்திகளை நன்கு உரைப்பது, நாட்டிய நன்னூல் என்றறிக.

பண்டு, நம்முன்னோர் நிகழ்த்திய நாட்டியம் குறித்தசொல்; தொல்காப்பியர் காலத்தே, 'கூத்து' என்று குறிக்கப்பட்டது. தேவநேயர் கூறுங்கால், "நட்டம் என்பதினின்றும் பிராகிருத வடிவமான நட்ட பிறக்கும்" இப் பிராகிருதத்தினின்றே "நாட்ய" என்னும் சொற்பிறக்கும்" என்கிறார். மொழியியலார், தமிழகத்தில், உள்ள வடபுலத்தார் பேசிய மொழியே, பிராகிருதம் என்பர். உள்ளத்துணர்வுகளைத் திறம்பட நிலைநாட்டுதலே நட்டம் ஆகும். இந் நட்டத்தினின்று தோன்றியதே நாட்டியம்; இந் நாட்டியம் குறித்துச் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படும் நூலே, நாட்டியநன்னூல் ஆகும். நாட்டியம் குறித்த பல்வகை நூல்கள் பாங்குடன் பண்டைக்காலத்தே மிளிர்ந்ததை, அடியார்க்கு நல்லாரின் உரைப்பாயிரவுரையால் அறிந்து கொள்கிறோம். காலப்போக்கில் அனைத்துத் தமிழ் நாட்டியநூல்களும் அழிக்கப்பட்டன என்று, ஆய்வாளர் கருதுகின்றனர்.

நாட்டியநாடகம் *nāṭṭiya-nāḍagam,* பெ. (n.) இயல், இசை, நடிப்பு, நடனம் ஆகிய நான்கும், உரியமுறையில், உரியஇடத்திற் சேர்த்து நிகழ்த்தப்பெறும் கலை; dance-drama.

[நாட்டியம் + நாடகம்.]

சிலப்பதிகாரம், பெரியபுராணம், கம்பராமாயணம் போன்ற காப்பியங்களில் உள்ள நிகழ்வுகளை, நாட்டியம் பார்ப்பவர்தம் நெஞ்சில் நிலைநாட்டும் நாடகமே, நாட்டிய நாடகம். இன்றும், இதுபோன்ற நாட்டிய நிகழ்வுகள் சென்னை இராணி மெய்யம்மை கலையரங்கிலும், இராசா அண்ணாமலை கலையரங்கிலும், நிகழ்வது கண்கூடு. பாவேந்தரின் வீரத்தாய், பாரதியாரின் பாஞ்சாலிசபதம் போன்ற நாட்டிய நாடகங்களும், காண்போர்தம் நெஞ்சில் பதியும் வண்ணம் நடிக்கப்பெறுகின்றன.

நாட்டியப்பிரியன் *nāṭṭiya-p-piriyaṉ,* பெ. (n.) 1. நடனப்பிரியன்; one fond of acting on the stage or dancing. 2. *சிவபிரான் (வின்.)* பார்க்க; see *śiva-pirāṉ.* 3. *நாட்டியக்காரன்* பார்க்க; see *nāṭṭiya-k-kāraṉ.* 4. கருத்து (சூடா.); intention, idea.

[நடு + நட்டு → நாட்டு + இயம் + skt பிரியன்.]

இறைவன், அனைத்து ஆதனிடத்தும் ஆராக்காதல் கொண்டு, திருநடம் புரிபவன். மாந்தர் உய்வு பெறுதற் பொருட்டு ஆதன்மீது நடனமிட்டு, நல்வழிப்படுத்துதலையே விருப்பமாகக் கொண்டுள்ளவன் சிவபிரான் என்பது சைவக்கொண்முடிபாகும்.

நாட்டியம் *nāṭṭiyam,* பெ. (n.) 1. கூத்து; dancing, acting. *"நாட்டிய நன்னூல்"* (சிலப்.3:158). 2. கைமுதலியவற்றாற் காட்டுங் குறிப்பு; hint, signal.

[நள் → நளி → நடி → நடு → நட்டு → நாட்டு நாட்டு + இயம்.]

(ஒ.நோ.) வள் → வடு → வட்டு.

"இயம்" = சொல்லாக்க ஈறு.

(ஒ.நோ.) இலக்கியம்; பண்ணியம்; இன்னியம்; தமிழியம்; பாட்டியம்; பாவியம்; ஓவியம்; வாழ்வியம்.

நாட்டியம் என்பது தூயதென்சொல்.

நள் → நளி → நளிதல் = பொருந்துதல், ஒத்தல்; ஒத்துச்செய்தல் என்னும் பொருண்மையில், இலக்கியங்களில் வழக்கூன்றியுள்ளது. "*நள்*" எனும் பொருந்துதற்கருத்து வேரினின்று கிளைத்த சொல்லே நாட்டியம். நளி → நடி என்று திரியும். (ஒ.நோ.) களிறு → கடிறு. ள → ட திரிபு

"*நடி*" என்னும் சொல்லே நட்டு, நட்டுவம், நட்டம் முதலான நாட்டியப் பொருண்மையை விளக்கும் சொற்களுக்கு மூலச்சொல்லாகும்.

உள்ளத்துறும் உணர்வுகளை உடலுறுப்புகளின் வாயிலாகக் காண்பவர்தம் நெஞ்சில் மிகநுட்பம் செறிந்த அவிநயங்களுடன் நிலைநாட்டி ஆடுவது, நாட்டியமாகும்.

எழில்நுட்பஅசைவுகளைத் தன்னகத்தே கொண்ட நாட்டியம் பற்றி, நாட்டியக்கலை வல்லுநர், பின்வருமாறு பேசுவர், "*நெஞ்சிலே பீறெட்டெழும் பெருமை மிக்கஉணர்வுகளையும், அடக்கவியலாத அவலங்களையும், ஈடில்லா எண்ணக்குவியல்களையும், முகவமைதி கையமைதி மூலம், காண்பவர்தம், கருத்திலும் நெஞ்சிலும் நிலைநாட்டி நிறுவுதலே நாட்டியம்*"

சுருங்கக் கூறின்,

நாட்டியம் என்பது அழகுற ஆடுவது; அஃது நூற்றெட்டு உடற்கரணங்களோடும், கைகால், கண்வாய் முதலிய உறுப்புகளின் தொழில்களோடும் கூடியது. நுண்ணிய எழிற்கை வினைகளைக் காண்பவர்தம் உள்ளத்தில் நிலைநிறுத்தி ஆடுவது, நாட்டியம்.

நாட்டியம் என்னும் சொல் பண்டைத் தமிழ் மரபில், கூத்து என்று வழங்கி வந்தது. தொல்காப்பியர் காலத்துத் தமிழில் வழக்கிலிருந்த சில சொற்களும் பின்பு தோன்றிய மாறுதல்களும், வருமாறு:-

கூத்து = நாட்டியம்.

ஆடல் = நடனம்.

புலன் = 108 உடற்கரணங்களோடும் கை கால், கண் வாய் முதலான உறுப்புகளோடு இயைந்ததும் கருத்துகளைத் தெள்ளத் தெளிவாகக் கண்ணுறுவோர்தம் நெஞ்சில் நிலைநிறுத்துவதுமான நாட்டியம்.

ஆடுகளம் = அரங்கம்.

விறலி = நடனமாடுபவள், நடனமகளிர்.

கூத்தர், கூத்தி = நடிகர், நடிகை. நடி என்னும் முதனிலையே நாட்டியம் என்பதன் அடிச்சொல். வடவர் காட்டும் "*நாட்ய*" என்ற, நலிந்த வடிவம், நடு, நட்டு, நட்டம் என்னும் தீந்தமிழ்ச் சொற்களைத் திரித்த வடிவமாகும்.

பண்டைத் தமிழ் நாட்டியமே, இன்று பரதநாட்டியம் என்றபெயரில் வழங்குகிறது என்பார், மொழிஞாயிறு.

பரதசாத்திரம் கி.மு.4–இல் இயற்றப்பட்டது. தமிழ்ப்பரதமே. பரதசாத்திரத்திற்கு முந்தியது என்பார் பாவாணர்.

(எ.டு.) "*நாடகத்தமிழ் நூலாகிய பரதம், அகத்திய முதலாவுள்ள தொன்னூல்களு மிறந்தன*" என்று அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரவுரைப் பாயிரத்தில்,உரைத்துள்ளதால் தமிழில், கி.மு.4–ஆம் நூற்றாண்டிற்கு முன்பே, நாட்டியம், நாடகம் தொடர்பான நூல்கள் இருந்தமையும், வடவரால் அழிந்து போனமையும், உள்ளங்கை நெல்லி போன்று, வெளிப்படை எனலாம். கி.மு. 3–ஆம் நூற்றாண்டிலேயே நாட்டியம் என்றசொல், மக்களிடையே வழக்கூன்றியிருந்ததால்தான், நாட்டியம், நாடகம் குறித்த நூல்களும், வடவரால் அழிக்கப்பட்டிருக்கலாம் என்பது, ஆய்வாளர்தம் கொள்கையாகும்.

"*நட்டம்*" என்னும் தமிழ்ச்சொல்லிலிருந்து, '*நட்ட*' என்ற பிராகிருதச்சொல் தோன்றும். தமிழகத்தின் வடபகுதியில், வடபுலத்தில் வாழ்ந்த தமிழர் பேசியமொழியே பிராகிருதம் என்பது மொழியியலார் கருத்தாகும். இக் கருத்தினை, "*வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து*" என்ற, தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம் உறுதி செய்துள்ளது. வடபுலத்தமிழர்தம் மொழியே பிராகிருதம். ஆகையால், அதில் 80 விழுக்காடு தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளதில், வியப்பேதும் இல்லை.

(எ.டு.) **த.** நட்டம் → skt. நட்ட → skt நாட்ய.

மேற்குறித்த இவ்வெடுத்துக்காட்டு, '*நாட்ய*' என்ற திரிசொல்லாம், வடசொல்லின், முதனிலை தமிழே என்று, மென்மேலும், உறுதிப் படுத்துகின்றது.

நள் → நளி → நடி → நடு → நட்டு → நட்டம். உள்ளத்துணர்வுகளை, உடலுறுப்புகளின் உறுதுணையுடன், திறம்பட வெளிப்படுத்துவதே

நட்டம். நம் அனைவர் நெஞ்சிலும், நட்டம் பயின்றாடும் நாயகனே, நம் தலைவன். இவனே தென்னாட்டில் குடிகொண்ட சிவன். எந்நாட்டவர்க்கும் இறைவனாகத் திகழ்பவன். நாட்டியத்தான் என்னும் பெயர், தொன்முதுச் செந்நெறித் தலைவனான சிவன் என்னும் செம்மேனி அம்மானுக்கேயுரிய செஞ்சொல். "*நாட்டியத்தான்குடி*" என்னும் ஊர், திருநாவுக்கரசராலும், நம்பியாரூரராலும் திருப்பதிகம் பெற்றது. ஆரூரரின் நற்றமிழ்ப் பாடல் வருமாறு:—

பூணாணாவதோ ரரவங்கண்டஞ்சேன்
புறங்காட்டாடல் கண்டிகழேன்
பேணீராகிலும் பெருமையை யுணர்வேன்
பிறவோனாகிலு மறவேன்
காணீராகிலுங் காண்பெனென் மனத்தாற்
கருதீராகிலுங் கருதிடிலிகழேன்
நானேலும்மடி பாடுதலொழியேன்
நாட்டியத்தான் குடி நம்பீ.

நர்ட்டியத்தான் குடி நம்பி ஆடிய நாட்டியக் கரணங்களைக் குறிக்குஞ் சிற்பங்கள், தில்லைக்கோயிற் கோபுரத்தில் திறம்படச் செதுக்கப்பட்டுள்ளதை, இன்றும் காணலாம்.

(ஒ.நோ.) நாட்டியம், நாட்டியக்கலை குறித்த செய்திகள், இரட்டைக்காப்பியங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. "*நாட்டிய நன்னூல்*" நாட்டிய நுணுக்கங்களை நுவல்வது:— "*நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து*" என்ற சிலப்பதிகாரச் செய்யுளால், நாட்டியம், மக்களிடையே பெற்றிருந்த செல்வாக்கு இனிது புலப்படுகின்றது. மாதவி ஆடிய எட்டுவகை நாட்டியங்களாக இளங்கோவடிகள் கூறுவது:— "பண்ணல் பரிவட்டணை ஆராய்தல் தைவரல் கண்ணியசெலவு, விளையாட்டுக்கையும் கண்ணியகுறும்போக்கு என்று *நாட்டியம் எண்வகை*" (கானல்வரி).

நாட்டியம் என்ற சொல்லிற்கு "*ந்ருத்*" என்னும் வேரடியை, வடவர் மூலமாகக் காட்டுவர். இஃது பொருந்தப் பொய்த்தலாகும். "*நள் → நடு → நட்டு*"— என்னும், ஏரணச் சொற்பிறப்பில், "*நட்டு*" என்பதே, "*நாட்ய*" என்பதன் மூலம் என்பது தெள்ளிதிற் தெரிகிறது. (ஒ.நோ.) வள் → வடு → வட்டு.

நடு என்னும் சொல்லோடு கூடி நட்டுவம் என்பது, நட்டு எனக் குறுகிற்று. முட்டு = நட்டுவ இசைக்கருவிகள். நட்டுமுட்டுவர் = நட்டுவமேளக்காரர்.

தலைக்கழகக் காலத்திலிருந்து, தமிழ் இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வழங்கி வந்துள்ளது. "*கூத்து*" என்பது, நாடகம், நாட்டியம் போன்றவற்றை உள்ளடக்கிய, பழஞ்சொல்.

வள்ளுவப்பெருந்தகையும்,

"*கூத்தாட் டவைக்குழாத் தற்றே*" (குறள்,332.) என்று கூறியுள்ளது, இங்கு எண்ணத்தக்கது. மொழியாராய்ச்சி இல்லாதாரும் தமிழ்ச்சொல் வளத்தை அறிந்தும் அறியாதும், தெரிந்தும் தெரியாதுபோன்று நடிப்போருமே, "*நாட்டியம்*" வடசொல் என்று, கருதுவர்.

பரதமுனிவரின் நாட்டியசாத்திரம் தொன்மச்செய்திகள் செறிந்தது. ஆனால் தமிழில் உள்ள நாட்டியம் என்ற சொல் ஆட்டம், பொருத்தமுறச் செய்தல் என்னும் பொருட் பொருத்தப்பாட்டினை உள்ளடக்கியது.

"*நள் → நடி*" என்னும் வேர்ப்பொருள் வளர்ச்சியே, நாட்டியம் என்ற சொல்லின் தோற்றம்! ஒத்தல், ஒத்துச்செய்தல், ஆட்டம் என்ற பொருட்பொருத்தப்பாட்டின் பொதிவே நாட்டியம். திருஞானசம்பந்தரும், "*ஆட்டம்*" என்னும் பொருண்மையில், "*நடி*" என்ற சொல்லைத் தமது தேவாரத் திருப்பதிகத்துள் எடுத்தாண்டுள்ளார்.

"*நடிகொள் நன்மயில் சேர்திரு நாரையூர்*" (தேவா.261:5) உள்ளத்தெழும் உணர்வுகளை ஆட்டத்தின் மூலம் 108 உடற்கரணங்கள் வாயிலாக நடித்து வெளிப்படுத்திக் காண்போர்தம் நெஞ்சில் நிலைநிறுத்துவதே நாட்டியம்.

"*ந்ருத்*" என்ற வடமொழி முதனிலைக்கு வேர்ப்பொருளே இல்லை.

"*ஆட்டம்போடுதல்*", "*நடித்தல்*"—என்னும் பொருட்பொருத்தப்பாட்டில், நாட்டுப்புறத்தே இன்றும் பலநல்லதமிழ்வழக்குகள், வேரூன்றி யுள்ளன.

(எ.டு.) 1. அளவுக்கு அதிகமாக ஆடுகிறான்

2. ஆட்டம் போட்டு நடிப்பதில் அவனுக்கு நிகர் யாருமில்லை.

3. ஆட்டம்போட்டு நடிப்பதில் அவள் கைதேர்ந்தவள்.

4. நொறுநாட்டியம் பிடித்தவன்.

5. ஆட்டம்போட்டு பாட்டுப்பாடும் அழகான கோமாளி வந்தோமய்யா!

மேற்குறித்த நாட்டுப்புற வழக்குகள் "*நாட்டியம்*" என்பது, தூயதென்சொல் என்று தெளிவுறுத்துகின்றன எனலாம்.

நாட்டிருவமுது *nāṭṭiru-v-amudu,* பெ. (n.) இறைவனுக்குப் படைக்கும் திருவமுது; daily midday meals offered to god and goddess in temples. "*நாட்டிருவமுதுக்கும் உச்சம் போதைக்கும்*" (S.I.I,iii 229).

[நாள் + திருவமுது .]

நாள்தோறும் இறைவனுக்குப் படைக்கும் பகல்நேரத்து உணவு.

நாட்டிலந்தை *nāṭṭilandai,* பெ. (n.) முருட்டுத் தன்மையுள்ள இலந்தை; indian plum.

[நாடு + இலந்தை.]

நாட்டிலமிர்து *nāṭṭil-amirdu,* பெ. (n.) *நாடுபடு திரவியம் (சீவக.2110,உரை)* பார்க்க; see *nāḍu-paḍu-tiraviyam.*

[நாடு + இல் + அமிர்து.]

நாட்டிலவு *nāṭṭilavu,* பெ. (n.) இலவமர வகையுளொன்று(சா.அக.); a kind of silk-cotton.

[நாடு + இலவு.]

நாட்டிலுப்பை *nāṭṭiluppai,* பெ. (n) இலுப்பை மரவகை(சா.அக.); mahwa of South India.

[நாடு + இலுப்பை.]

காட்டிலுப்பைக்கு மாறுபட்ட குணமுள்ளது.

நாட்டீருள்ளி *nāṭṭīruḷḷi,* பெ. (n) நாட்டுவெங்காயம் (சா.அக.); country onion

[நாடு + ஈருள்ளி.]



நாட்டு[1]–தல் *nāṭṭu-,* 5,செ.குன்றாவி,(v t) 1.நடுதல்; to set up, fix, plant, place in the ground, as a pole , to erect; to insert "*கற்பக நாட்டி*" (திருவாச.9:3). 2. நிலைநிறுத்துதல்; to establish, as laws, customs, rules, fame, reputation; to lay down, as a theory, an opinion. "*சிலப்பதிகார மென்னும் பெயரா னாட்டுதும் யாமோர் பாட்டுடைச்செய்யுள்*" (சிலப்.பதி.60). தமிழே ஞாலமுதன்மொழி என்று நாட்டுதல் பணியில் தமதுவாணாளைச் செலவிட்டவர் மொழி ஞாயிறு (இ.வ.). 3. வாழவைத்தல்; to establish one in life. '*அவனை நன்னிலையில் நாட்டினான்*' (இவ). 4. படைத்தல்; to create, "*மண்ணாட்டுநர் காக்குநர் வீட்டுநர் வந்த போதும்*" (கம்பரா.நகர்நீ.122). 5. எழுதுதல்; (ஈடு.4:5:2). to write, inscribe, as placing a style upon a palm leaf.

க.தெ. நாடு ம., நாட்டுக.

[நடு → நட்டு → நாட்டு-.]

நாட்டு² *nāṭṭu,* பெ. (n.) 1. நிலை; position, posture. "*ஒருநாட் டரசுணங்க*" (சீவக.2582). 2. ஊருக்குரியது (சா.அக.); relating or referring to country

க.தெ. நாடு ம., நாட்டுக.

[நட்டு → நாட்டு.]

நாட்டு³ *nāṭṭu,* பெ. (n.) சுவரெழுப்பும்போது குறுக்கே வைக்குங் கல் (இ.வ.); the cross brick, in a layer of bricks.

[நட்டு → நாட்டு.]

நாட்டுஅக்ரோட்டு *nāṭṭu-akrōṭṭu,* பெ. (n.) ஆமணக்கு எண்ணெயைவிடச்சிறந்த மருத்துவக் குணமுள்ள எண்ணெயைத்தரும் மரம்; country akrōṭṭu nut is extracted a large proportion of fixed medicinal oil, which is pronounced to be superior to castoroil.

[நாடு + அக்ரோட்டு.]

சிறப்பான மருந்துக்குணமுள்ள அக்ரோட்டு எண்ணெய், குமட்டல், வயிற்றுவலி முதலானவற்றைப் போக்கும்; உடம்பின் மிகு வெம்மையை அகற்றிக் குளிர்மையூட்டுந்தன்மைத்து என்று, சா.அக. கூறும்.

நாட்டுஅதிமதுரம் *nāṭṭu-adimaduram,* பெ. (n) அதிமதுரவகையு ளொன்று; country liquorice

மறுவ. குன்றிவேர்.

[நாடு + அதிமதுரம்.]

நறுமணங்கமழும் குன்றிவேர் இவ் வகையைச் சார்ந்தது என்று சா.அக. கூறும்.

நாட்டுஅதிவிடயம் *nāṭṭu-adividayam,* பெ. (n.) மூலிகைவகையுளொன்று(சா.அக.); a kind of herbal medicine

நாட்டுஅமுக்கிராக்கிழங்கு *nāṭṭu-amukkirā-k-kiḻaṅgu,* பெ. (n) கட்டிகளைக் கரைக்குந் தன்மையுள்ள அமுக்கிராக்கிழங்கு; the root of Indian winter cherry used as an absorbency of abscess

[நாடு + அமுக்கிரா + கிழங்கு]



நாட்டுஇரவேல்சின்னி *nāṭṭu-iravēl-ciṉṉi,* பெ. (n.) *நாட்டுமஞ்சட் சீனக்கிழங்கு* பார்க்க; see *nāṭṭu-mañjaṭ-ciṉa-k-kiḻaṅgu*

நாட்டுஈச்சை *nāṭṭu-īccai,* பெ. (n.) ஈச்சமரவகை; common date.

[நாடு + ஈச்சை.]

நாட்டுஊமத்தை *nāṭṭu-ūmattai,* பெ. (n) ஊமத்தை (சா.அக.); Indian datura

[நாடு + ஊமத்தை]



நாட்டுளிவண்டு *nāṭṭu-eri-vaṇḍu,* பெ. (n.) எரிவண்டு வகை; telimifly.

நாட்டுக்கஞ்சா *nāṭṭu-k-kañjā,* கஞ்சா வகையுளொன்று(சா.அக.); indian hemp.

[நாடு + கஞ்சா.]

சிற்றூர்ப்புறத்தே மறைவிடத்தில் பயிராகும் கஞ்சா.

நாட்டுக்கட்டை[1] *nāṭṭu-k-kaṭṭai,* பெ. (n.) *நாட்டான். 2,* பார்க்க; see *naṭṭāṉ.2.*

நாட்டுக்கட்டை[2] *nāṭṭu-k-kaṭṭai,* பெ. (n.) உழைத்து உரமேறிய கட்டுடல் வாய்க்கப்பெற்ற சிற்றூரைச் சார்ந்த ஆண் அல்லது பெண்; sturdy man of the countryside; buxom country girl

[நாடு + கட்டை.]

சிற்றூர்மாந்தர், இயல்பாகவே வனப்பெய்தி இருப்பினும், அன்றாடப்பணிகளை, வஞ்சனையற்ற உள்ளத்துடன் செய்வதினால், வாய்த்த, உடல்அழகினைக் குறித்த சொல்லாகும். கடினப்பணியினையும், திடமனத்துடன் செய்வதால் ஏற்படும் கட்டுடல் வனப்பைக் குறித்த சொல்லாகும்.

நாட்டுக்கடலை *nāṭṭu-k-kaḍalai,* பெ. (n.) பருமனான கடலை; big size bengal gram

மறுவ. கொண்டைக்கடலை.

[நாடு + கடலை.]

நாட்டுக்கடுக்கன் *nāṭṭu-k-kaḍukkaṉ,* பெ. (n.) இலங்கையில் வடபாலுள்ள ஊர்களில் வாழ் வோ ரணியுங் கடுக்கன்வ கை (யாழ்ப்.); ear- rings worn in the rural districts north of ceylon.

[நாடு + கடுக்கன்.]

பொதுவாக ஆடவர் அணியுங் காதணி

நாட்டுக்கடுக்காய் *nāṭṭu-k-kaḍukkāy,* பெ. (n.) கடுக்காய் வகை; (சா.அக.); indian gall nut.

[நாடு + கடுக்காய்.]

நாட்டுக்கடுகு *nāṭṭu-k-kaḍugu,* பெ. (n.) முருட்டுக்கடுகு; black mustard.

[நாடு + கடுகு]

சிறிது பருமனான கடுகு.

நாட்டுக்கடுகுரோகணி *nāṭṭu-k-kaḍugu-rōgaṇi,* பெ. (n.) கருப்புக்கடுகு ரோகணி; black hellebore.

[நாடு + கடுகுரோகணி.]

நாட்டுக்கணக்கன் *nāṭṭu-k-kaṇakkaṉ,* ஊர்க்கணக்கன்; village accountant.

[நாடு + கணக்கன்.]

நாட்டுக்கத்தரி *nāṭṭu-k-kattari,* பெ. (n.) கத்தரிவகை; a kind of bringal.

[நாடு + கத்தரி.]



நாட்டுக்கதலி *nāṭṭu-k-kadali,* பெ. (n.) வாழை வகை (பதார்த்த.391); a kind of plantain.

மறுவ. நாட்டுமொந்தன், நாட்டுவாழை.

[நாடு + கதலி.]

நாட்டுக்கந்தம் *nāṭṭu-k-kandam,* பெ. (n.) பேராமுட்டி (சா.அக.); fragrant pavonia.

[நாடு + கந்தம்.]

கந்தம் = நறுமணம்.

நாட்டுக்கமுகு *nāṭṭu-k-kamugu,* பெ. (n.) கமுகு வகையுளொன்று; a kind of areca nut palm.

[நாடு + கமுகு.]

நாட்டுக்கர்ச்சு *nāṭṭu-k-karccu,* பெ. (n.) ஊர்ப் பொதுச்செலவு; charges for the administration of the village. 2. தஞ்சைப்பகுதி நவாபு துரைத்தனத்தில் விதிக்கப்பட்ட தனிவரி; (பதார்த்த.391); extra cess imposed in Tañjāvūre under the Nawab government.

நாட்டுக்கர்ணம் *nāṭṭu-k-karṇam,* பெ. (n.) 1. *நாட்டுக்கணக்கன்* பார்க்க; see *nāṭṭu-k-kaṇakkaṉ.* 2. ஊர்க் கணக்குப் பொத்தகம்; the register kept by the village accountant

நாட்டுக்கரு *nāṭṭu-k-karu,* பெ. (n.) 1. ஐங்காயமெழுகு (சா.அக.); a medicine prepared from the foetus. 2. வழலையின் பெயர்; salt found on the soil of fullers earth

[நாடு + கரு.]

நாட்டுக்கருணை *nāṭṭu-k-karuṇai,* பெ. (n.) கருணைக்கிழங்கு வகையுளொன்று; a kind of elephant foot yam.

மறுவ. காராக்கருணை.

[நாடு + கருணை.]

காட்டுக்கருணைக் குணத்திற்கு மாறுபட்டது.

நாட்டுக்கருவா *nāṭṭu-k-karuvā,* பெ. (n.) கருவாப்பட்டை; country cinnamum

[நாடு + கருவா.]

நாட்டுக்கருவாழை *nāṭṭu-k-karu-vāḻai,* பெ. (n.) வாழை வகையுளொன்று; a kind of plantain.

[நாடு + கருவாழை.]

நாட்டுக்கருவேல் *nāṭṭu-k-karuvēl,* பெ. (n.) கருவேல்மர வகை (சா.அக.); a kind of black babool.

மறுவ. படர்கருவேல்.

[நாடு + கருவேல்.]

சிற்றூர்ப்புறத்தே கண்மாய்களிலும், காடுகளிலும் படர்ந்து காணப்படும். இம் மரத்தின் காய்களும், இலைக் கொழுந்தும்,வெள்ளாடுகளின் விருப்பமான உணவாகும்.

நாட்டுக்கல் *nāṭṭu-k-kal,* பெ. (n.) கொங்கு வேளாளரின் திருமண நாளில் அரசற்குப் பதிலியாக வைத்து மணமகன் வணங்கற்கு நாட்டுஞ் சிலை; (E.T.iii.420) stone set up on a marriage occassion among koṅgu-vēḷāḷar to represent the king, which the boy bridegroom worships.

[நாட்டு + கல்.]

நாட்டுக்கல்நார் *nāṭṭu-k-kalnār,* பெ. (n.) கல்நார் வகை(சா.அக.); a fibrous mineral substance.

[நாடு + கல்நார்.]

நாட்டுக்கலக்கல் *nāṭṭu-k-kalakkal,* பெ. (n.) *நாட்டுச்சரக்கு* பார்க்க; see *nāṭṭu-c-carakku.*

நாட்டுக்கலப்பை *nāṭṭu-k-kalappai,* பெ. (n.) மரக்கலப்பை; wooden plough.

மறுவ. காறுகலப்பை.

[நாடு + கலப்பை.]

தரிசு உழவிற்கும், தொளியுழவிற்கும் முதன்முறை உழுவதற்குப் பயன்படும் கலப்பை. இக் கலப்பை முதன்முதல் நிலத்தை உழும்பொழுது, அஃதாவது மேட்டுப்பகுதியைச் சமப்படுத்தும்போது, சிற்றூர்ப்புறத்தே இன்றும், பயன் படுத்தப்படுகிறது.



நாட்டுக்கவுண்டன் *nāṭṭu-k-kavuṇḍaṉ,* பெ. (n.) கொங்கு வேளாளருள் பெரியதனக் காரன்(E.T.iii,418); head of nāḍu, among koṅgu vēḷāḷar.

[நாடு + கவுண்டன்.]

நாட்டுக்கற்பூரஇலை *nāṭṭu-k-kaṟpūra-ilai,* பெ. (n.) கருப்பூரஇலை; comphor leaf

[நாடு + கருப்பூரம் → கற்பூரம் + இலை.]

நாட்டுக்கற்பூரவல்லி *nāṭṭu-k-kaṟpūra-valli,* பெ. (n.) நாட்டுப்புறத்தே பயிராகும் கருப்பூரவல்லி மருந்துப்பூடு; a kind of medicinal country lavender.

[நாடு + கருப்பூரவல்லி → கற்பூரவல்லி.]



நாட்டுக்கற்றாழை *nāṭṭu-k-kaṟṟāḻai,* பெ. (n.) கற்றாழை வகையுளொன்று; a kind of indian aloe.

மறுவ. குமரி, சோற்றுக்கற்றாழை.

[நாடு + கற்றாழை.]

நாட்டுக்கறிவேப்பிலை *nāṭṭu-k-kaṟi-vēppilai,* பெ. (n.) சமையலுக்கு நறுமணஞ்சேர்க்கும் கறிவேப்பிலை; curry leaf tree.

[நாடு + கறிவேப்பிலை.]

நாட்டுக்காணிக்கை *nāṭṭu-k-kāṇikkai,* பெ. (n.) பழைய வரிவகை (S.I.I.vi,2); an ancient tax

[நாடு + காணிக்கை.]

நாட்டுக்காமிண்டன் *nāṭṭu-k-kāmiṇḍaṉ,* பெ. (n.) சிற்றூர்த் தலைவர்களின் பட்டப்பெயர்களு ளொன்று(M.E R.229 of 1927–8); a title of village chieftains

[நாடு + காமிண்டன்.]

நாட்டுக்காவல் *nāṭṭu-k-kāval,* பெ. (n.) 1. நாடுகாக்குந் தொழில்; office of watchman of a nāḍu. 2. வரிவகையு ளொன்று; a kind of tax.

[நாடு + காவல்.]

நாட்டைக் காவல்புரியும் காவலர்க்காக ஊரவையார் பெற்று வந்த வரிவகை.

நாட்டுக்கிச்சடி *nāṭṭu-k-kiccaḍi,* பெ. (n.) உள்ளூர்க்கிச்சிலி; Indian country paddy.

[நாடு + கிச்சடி]

வெளியூர்க் கிச்சடிநெல்லியினின்று வேறுபட்டது.

நாட்டுக்கிச்சிலி *nāṭṭu-k-kiccili,* பெ. (n) நாட்டுப்புறத்தே விளையும் உள்ளூர்க்கிச்சிலி; indian country orange.

[நாடு + கிச்சிலி.]

நாட்டுக்கிச்சிலிக்கிழங்கு *nāṭṭu-k-kiccili-k-kiḻaṅgu,* பெ. (n.) கருப்பூரக் கிச்சிலிக்கிழங்கு; orange root.

[நாடு + கிச்சிலி + கிழங்கு.]

சீனக்கிச்சிலிக் கிழங்கினின்று தோற்றத்திலும் சுவையிலும் மாறுபட்ட தென்று, சா.அக. கூறும்.

நாட்டுக்கிளுவை *nāṭṭu-k-kiḷuvai,* பெ. (n) கிளுவை மரவகை; indian balsam tree.

[நாடு + கிளுவை.]

நாட்டுக்கீழாநெல்லி *nāṭṭu-k-kīḻā-nelli,* பெ. (n.) கீழக்காய்நெல்லி மருந்துப்பூடு (சா.அக.); feather foil.

[நாடு + கீழக்காய்நெல்லி → கீழாநெல்லி.]

நாட்டுப்புறத்தே பரவலாகக் காணப்படும் இக் கீழக்காய்நெல்லி மருந்துப்பூடு, மிகுதியான உடல்வெப்பத்தைத் தணிக்கும். ஆவின்பாலில், இதை அரைத்துப் புலர்காலைப்பொழுதில் உண்டுவந்தால், நாட்பட்ட மஞ்சள்காமாலை குணப்படும் என்று, மூலிகை அகரமுதலி கூறும்.

நாட்டுக்குடி *nāṭṭu-k-kuḍi,* பெ. (n) *நாட்டுக்குடி மக்கள்* பார்க்க; see *nāṭṭu-k-*

kudimakkal. 'நாட்டுக்குடிகளுக்கு நன்மைசெய்வதே நல்லாட்சியின் குறிக்கோள்.' (இக்.வ.).

[நாடு + குடி.]

நாட்டுக்குடிமக்கள் *nāṭṭu-k-kudimakkal,* பெ. (n) சிற்றூரில் வாழ்பவர்; village peoples மிகக்கடுமையான தண்ணீர்ப் பற்றாக் குறையால், நாட்டுக்குடிமக்கள் அனைவரும், வயிற்றுப்பிழைப்பிற்கு வழிதேடி நகர்ப்புறம் செல்லுகின்றனர் (இக்.வ.).

மறுவ. நாட்டுப்புறத்தார்.

[நாடு + குடிமக்கள்.]

நாட்டுக்குற்றம்[1] *nāṭṭu-k-kuṟṟam,* பெ. (n.) விட்டில், கிளி, நால்வாய், வேற்றரசு, தன்னரசு, நட்டம், பெரும்பெயல், காற்று என்ற எண்வகை நாட்டுத் துன்பங்கள்; the evils of a country eight in number, viṭṭil, kiḷi, nālvāy vēṟṟarašu, taṉṉarašu, naṭṭam, perumpeyal, kāṟṟu, etc

[நாடு + குற்றம்.]

நாட்டுக்குற்றம்[2] *nāṭṭu-k-kuṟṟam,* பெ. (n) நாட்டுக்கு நாடு செய்யும் மறைமுக வன்முறை; underground activities that triggar enemity between nations

[நாடு + குற்றம்.]

நாட்டுக்கூட்டம்[1] *nāṭṭu-k-kūṭṭam,* பெ. (n.) மக்கள் கூட்டம்; assembly of countrymen

ம. நாட்டுக்கூட்டம்.

[நாடு + கூட்டம்.]

நாட்டுக்கூட்டம்[2] *nāṭṭu-k-kūṭṭam,* பெ. (n.) அனைத்து நாடுகள் அவை; united nations organization

[நாடு + கூட்டம்.]

நாட்டுக்கெந்தி *nāṭṭu-k-kendi,* பெ. (n) கௌரி வைப்புநஞ்சு வகையுளொன்று; (சா.அக.); a kind of prepared yellow oxide arsenic.

நாட்டுக்கொட்டை *nāṭṭu-k-koṭṭai,* பெ. (n.) சுவையுள்ள கொட்டைப்பருப்பு வகையுளொன்று; a kind of sweet country almound

[நாடு + கொட்டை.]

நாட்டுக்கொட்டைக்களா *nāṭṭu-k-koṭṭaikkaḷa,* பெ. (n.) கொட்டைக்களா எனும் முட்செடிவகை (சா.அக.); sweet thorn

நாட்டுக்கொடிமுந்திரிகை *nāṭṭu-k-kodi-mundirigai,* பெ. (n) கொடிமுந்திரி வகையுளொன்று; common grape vine

[நாடு + கொடி + முந்திரிகை.]

மலைச்சாரலில் அமைந்த சிற்றூர்ப்புறத்தே விளையும் திராட்சை. இக் கொடிமுந்திரி பழச்சாறெடுத்து, நீண்ட நாள் வைத்துப் பயன்படுத்துதற்கு உகந்தது. விழாக்காலங்களில், சிற்றூர் வாழ்நர், இந் நாட்டுக் கொடி முந்திரிப்பழத்துடன், பல்வகைப்பழச் சாற்றினைச் சேர்த்துக் கலக்கி. நாட்டுத்தேறல் அல்லது நாட்டுக்கலக்கல் மதுவை, உருவாக்குவர்.]

நாட்டுக்கொய்யா *nāṭṭu-k-koyyā,* பெ. (n.) கொய்யாப்பழ வகை; common country guava.

[நாடு + கொய்யா.]

நாட்டுக்கொழுஞ்சி *nāṭṭu-k-koḻuñji,* பெ. (n.) சிறுகிச்சலி; small orange.

[நாடு + கொழுஞ்சி.]

நாட்டுக்கொன்றை *nāṭṭu-k-koṉṟai,* பெ. (n.) சரக்கொன்றை; common cassia.

[நாடு + கொன்றை.]

காட்டுக்கொன்றையினின்று மாறுபட்ட தென்று சா.அக. கூறும்.



நாட்டுக்கோட்டைச்செட்டி *nāṭṭu-k-kōṭṭai-c-ceṭṭi,* பெ,(n.) முகவை மாவட்டத்தில் செல்வம்படைத்து வாழும் ஒருசார் வகுப்பினர்; a prominent and wealthy ceṭṭi caste in Rāmnāḍu district.

[நாட்டுக்கோட்டை + செட்டி.]

நாட்டுக்கோட்டையார் *nāṭṭu-k-kōṭṭaiyār,* பெ.(n) *நாட்டுக்கோட்டைச்செட்டி* பார்க்க; see *nāṭṭu-k-kōṭṭai-c-ceṭṭi.*

மறுவ. நகரத்தார். செட்டிநாட்டார்.

[நாட்டுக்கோட்டை + செட்டி.]

நாட்டுச்சடாமாஞ்சி *nāṭṭu-c-caḍā-māñji,* பெ. (n.) பெருங்கோரை(இங்.வை.); spikenard herb.

[நாடு + சடாமாஞ்சி.]

நாட்டுப்புறத்தே, அஃதாவது சிற்றூர்ப் புறத்து வயல் வரப்புகளிற் காணப்படும், பெருங்கோரை வகை.

நாட்டுச்சடாமாஞ்சியெண்ணெய் *nāṭṭu-c-caḍā-māñji-y-eṇṇey,* பெ. (n.) சடா மாஞ்சிலோடு, ஏனைய கடைச்சரக்குகளைச் சேர்த்துக் காய்ச்சித் தலையில் தடவப் பயன்படுத்தும் எண்ணெய்(சா.அக.); a medicated oil prepared from valerian root as a chief ingredient along with other drugs for luxuriant growth of hair

[நாடு+ சடாமாஞ்சி + எண்ணெய்.]

தலைமுடி நன்கு வளரவும், வெளுத்த நரைமுடியைக் கருப்பாக்கவும், பயன் படுத்தும் எண்ணெய், சடா மாஞ்சியொடு, ஏனைய கடைச் சரக்குகளைச் சேர்த்துக் காய்ச்சிப் பதப்படுத்தும் எண்ணெய்.

நாட்டுச்சண்பகம் *nāṭṭu-c-caṇbagam,* பெ. (n.) பொன்னிறமுள்ள சண்பகமலர்; golden champak

[நாடு + சண்பகம்.]

நாட்டுச்சணச்சி *nāṭṭu-c-caṇacci,* பெ. (n) பேய்த்தும்பை; leucus linifolia.

[நாடு + சணச்சி.]

நாட்டுச்சதகுப்பை *nāṭṭu-c-cadakuppai,* பெ. (n.) சதகுப்பை வகையுளொன்று; dill plant.

[நாடு + சதகுப்பை.]

மகவீன்ற தாய்க்கு இச் சதகுப்பை மருந்தினைக் காயம், கருப்பட்டி போன்றவற்றுடன் சேர்த்துச் சாறுவைத்துக் கொடுப்பர். இச் சாறானது உடம்பிலுள்ள நச்சு நீரினையுங், கசடுகளையும் வெளியேற்றும் தன்மைத்து.

சதக்குப்பை வகைகளாகச் சா.அக. கூறுவது வருமாறு:–

1. காட்டுச்சதகுப்பை.
2. சீமைச்சதகுப்பை.

நாட்டுச்சந்தம்[1] *nāṭṭu-c-candam,* பெ. (n.) பட்டிக்காட்டுத்தனம்(வின்.); rustic dress and manners.

[நாடு + சந்தம்.]

நாட்டுச்சந்தம்[2] *nāṭṭu-c-candam,* பெ. (n) நாட்டுப்புறப்பாட்டிற்குரிய இசைக்குழிப்பு; the music of folk-song.

[நாட்டு + சந்தம்.]

நாட்டுச்சந்தனம் *nāṭṭu-c-candaṉam,* பெ. (n.) சிவப்புச் சந்தனம்; red sandal wood.

[நாடு + சந்தனம்.]

கடும் வெய்யிலில் தோன்றும் வேர்க்குரு, வேனற்கட்டி போன்றவற்றின் மீது, கடைச்சரக்கோடு கலந்து பூசுவதற்கும், உடலின் வெம்மையைப் போக்குதற்கும் பயன்படும் சந்தனம்.

நாட்டுச்சர்க்கரை *nāṭṭu-c-carkkarai,* பெ. (n.) *நாட்டுச்சருக்கரை* பார்க்க; see *nāṭṭu-c-carukkarai.*

[நாடு + சர்க்கரை.]

உள்ளூர்க் கரும்பினின்று காய்ச்சி எடுக்கும் சிவப்புச் சருக்கரை. இச் சருக்கரை நாட்டுமருந்து செய்வதற்குப் பயன்படும்.

நாட்டுச்சர்க்கரைவள்ளி *nāṭṭu-c-carkkarai-vaḷḷi,* பெ. (n.) *நாட்டுச்சருக்கரைவள்ளிக் கிழங்கு* பார்க்க; see *nāṭṭu-c-carukkarai-vaḷḷi-k-kiḻaṅgu.*

[நாடு + சர்க்கரைவள்ளி.]

நாட்டுச்சரக்கு[1] *nāṭṭu-c-carakku,* பெ. (n.) உள்தேசத்திலுண்டாம் பண்டம்; indigenous product, goods or commodities

[நாடு + சரக்கு.]

நாட்டுச்சரக்கு[2] *nāṭṭu-c-carakku,* பெ. (n) 1. சாராயம்; arrack 2. அயல்நாட்டு மதுபோல், சிற்றூர்ப்புறத்தே உருவாக்கும் பழக்கலவைக் காடி; a local fruit beverage imitating the foreign wine.

மறுவ. நாட்டுறல்.

[நாடு + சரக்கு.]

சிற்றூர்ப்புறத்தே, பல்வகைப் பழச்சாற்றினை, மட்பாண்டத்தில் வைத்துப் பலநாள் கழித்துப் பருகும் புளிப்பூறல்.

நாட்டுச்சருக்கரை *nāṭṭu-c-carukkarai,* பெ. (n.) 1. கரும்புச்சாற்றில் காய்ச்சி எடுத்த பழுப்புச்சருக்கரை வகை; a kind of sugar-

cane brown sugar. 2. தூய்மை யாக்கப்பட்ட வெள்ளைச் சருக்கரை; white sugar purified from brown sugar.

மறுவ. சிவப்புச்சருக்கரை.

[நாடு + சருக்கரை.]

தமிழகத்தில் இன்றும், நாட்டுப்புறத்தில் உள்ள கரும்பாலையில் நாட்டுச் சருக்கரை, குடிசைத் தொழிலாக உருவாக்கப்படுகிறது.

நாட்டுச்சருக்கரைவள்ளிக்கிழங்கு *nāṭṭu-c-carukkarai-vaḷḷi-k-kiḻaṅgu,* பெ. (n.) சருக்கரை வள்ளிக்கிழங்கு; sweet potato

[நாடு + சருக்கரை + வள்ளிக்கிழங்கு.]

நாட்டுச்சலம் *nāṭṭu-c-calam,* பெ. (n.) நிலத்தடிநீர்; water of low level earth.

[நாடு + சலம்.]

நாட்டுச்சவுக்காரம் *nāṭṭu-c-cavukkāram,* பெ. (n.) 1. உழமண்; fuller's earth. 2. சுண்ணாம்புச் (சவுக்காரம்); சவர்க்காரம்; country soap

[நாடு + சவுக்காரம் .]

நாட்டுச்சவுண்டல் *nāṭṭu-c-cavuṇḍal,* பெ. (n.) பெருந்தகரை; west indian bead tree.

[நாடு + சவுண்டல்.]

நாட்டுச்சாதிக்காய் *nāṭṭu-c-cādikkāy,* பெ. (n.) சிற்றூரில் பயிராகும் சாதிக்காய்; common nutmeg cultivated in countries.

[நாடு + சாதிக்காய்.]

நாட்டுச்சாம்பல் *nāṭṭu-c-cāmbal,* பெ. (n.) நாவல்; common jaumoon.

[நாடு + சாம்பல்.]

நாட்டுச்சாம்பிராணி *nāṭṭu-c-cāmbirāṇi,* பெ. (n.) குங்கிலியம் (சா.அக.); frankincence

[நாடு + சாம்பிராணி.]

நாட்டுச்சார்பு[1] *nāṭṭu-c-cārbu,* பெ. (n.) மருதநிலம் (வின்.); agricultural tract.

[நாடு + சார்பு.]

முதற்கண் மனித நாகரிகந் தோன்றியது ஆற்றுப் படுகையிலேயே எனலாம். இப் படுகையைச் சார்ந்தே நாட்டுவளம் கணிக்கப்பட்டது.

நாட்டுச்சார்பு[2] *nāṭṭu-c-cārbu,* பெ. (n.) ஒருநாட்டின் கொள்கைகளும் செயற் பாடுகளும் இணைந்து செல்லும் தன்மை; integrated activities where preaching and practice go together.

[நாடு + சார்பு.]

நாட்டுச்சாரி *nāṭṭu-c-cāri,* பெ. (n.) சுடலையாவாரை; a kind of senna.

நாட்டுச்சாவல் *nāṭṭu-c-cāval,* பெ. (n.) உயர் இனமல்லாத ஆண்கோழி(வின்.); an inferior cock opp. to šādi-c-cāval.

[நாடு + சேவல் → சாவல்.]

நாட்டுச்சிமிக்கி *nāṭṭu-c-cimikki,* பெ. (n.) மலர்வகையுளொன்று; passion flower

நாட்டுச்சிறப்பு *nāṭṭu-c-ciṟappu,* பெ. (n.) தேயவளம்; excellencess, natural or artificial, of a country.

[நாடு + சிறப்பு.]

நாட்டுச்சீயக்காய் *nāṭṭu-c-cīyakkāy,* பெ. (n.) நல்ல சீயக்காய் மரம்; soap pod-tree

நாட்டுச்சீரகம் *nāṭṭu-c-cīragam,* பெ. (n.) சீரகவகையுளொன்று; common cumin.

[நாடு + சீரகம்.]

நாட்டுச்சீரகவல்லி *nāṭṭu-c-cīragavalli,* பெ. (n.) வள்ளிக்கிழங்குக் கொடி; common yam.

[நாடு + சீரகவல்லி.]

நாட்டுச்சீனி *nāṭṭu-c-cīṉi,* பெ. (n.) வெண்மை நிறக் கரும்புச் சாற்றிலிருந்து உருவாக்கப்பட்டச் சருக்கரை; fine white-cane sugar.

[நாடு + சீனி.]

நாட்டுச்சீனி, சீனத்திலிருந்து தமிழகத்திற்கு வந்த கரும்பிலிருந்து எடுக்கப்பட்ட சீனி. ஔவை அதியமானைப் பாடிய புறப்பாடலில் ***"கரும்பிவண் தந்தும்"*** என்ற அடியினால் அறியலாம்.

நாட்டுச்சுண்டெலி *nāṭṭu-c-cuṇḍeli,* பெ. (n.) வீட்டுச்சுண்டெலி; common mouse.

[நாடு + சுண்டெலி.]

நாட்டுச்சுரை *nāṭṭu-c-curai,* பெ. (n.) பெருஞ்சுரை; large bottle gourd.

[நாடு + சுரை.]

நாட்டுச்சேங்கொட்டை *nāṭṭu-c-cēṅ-koṭṭai,* பெ. (n.) பெரியசேரான் கொட்டை; glabrous marking-nut.

[நாடு + சேங்கோட்டை.]

நாட்டுச்சேர்வை *nāṭṭu-c-cērvai,* பெ. (n.) வல்லம்பர் இனத்தலைவன் (E.T.vii.300); head-man of the Vallambar caste.

[நாடு + சேர்வை.]

நாட்டுச்சேவகன் *nāṭṭu-c-cēvagaṉ,* பெ. (n) முதற்காலத்தில் நாட்டாண்மைக்காரனுக்கு, உதவி புரிந்த பணியாள்; a peon who helped nāṭṭāṇmai-k-kāraṉ collecting revenue.

[நாடு + சேவகன்.]

நாட்டுச்சோளம் *nāṭṭu-c-cōḷam,* பெ. (n.) சோளவகை; great millet

[நாடு + சோளம்.]

நாட்டுடைமைச்சாலை *nāṭṭuḍaimai-c-cālai,* பெ. (n.) தேசியநெடுஞ்சாலை; national high-ways.

[நாடுடைமை + சாலை.]

நாட்டுடைமையாக்கப்பட்ட நெடுஞ்சாலை.

நாட்டுடைமையாக்கு-தல் *nāṭṭuḍaimai-ākku-,* 5,செ.குன்றாவி, (v.t.) 1. அரசுடைமை ஆக்குதல்; to nationalize. 2. நாட்டிலுள்ள மக்களுக்கு உடைமையாகும் வண்ணம் பல்வகை அறிஞர் நூல்களுக்கு நல்கை (மானியம்) தருதல்; to nationalize literary sources to extend fiscal help to scholars.

பாவாணர் நூல்கள் அனைவருக்கும் பயன்படும் வண்ணம் அரசு நாட்டுடைமையாக்கியுள்ளது. (உ.வ.)

[நாட்டு + உடைமை + ஆக்கு-.]

நாட்டுடைமைவங்கி *nāṭṭuḍaimai-vaṅgi*, பெ. (n.) *நாட்டுடைமை வைப்பகம்* பார்க்க; see *nāṭṭuḍaimai-vaippagam*.

[நாட்டுடைமை + வங்கி.]

Eng. பாங்க் → வங்கி.

நாட்டுடைமைவைப்பகம் *nāṭṭuḍaimai-vaippagam*, பெ. (n.) பணம், நகை முதலானவற்றைப் பாதுகாப்பாக வைப்பதற்கான நாட்டுடைமை நிறுவனம்; nationalised bank, safty locker

[நாட்டுடைமை + வைப்பகம்.]

நாட்டுத்தக்காளி *nāṭṭu-t-takkāḷi*, பெ. (n.) 1. பிள்ளைத் தக்காளி; small Indian winter-cherry. 2. செடிவகை; bifarious green- leaved date- Phoenix rupticola.

[நாடு + தக்காளி.]

நாட்டுத்தமரத்தை *nāṭṭu-t-tamarattai*, பெ. (n.) *தமரத்தை வகை; coramandal goose berry.*

நாட்டுத்தலையாரி *nāṭṭu-t-talaiyāri*, பெ. (n.) நாடுகாவற்றலைவன்; district watch man under the native police system.

[நாடு + தலையாரி.]

நாட்டுத்தாமரை *nāṭṭu-t-tāmarai*, பெ. (n.) நீர்த்தாமரை; lotus.

[நாடு + தாமரை.]

நாட்டுத்துவரை *nāṭṭu-t-tuvarai*, பெ. (n.) துவரை; common dholl.

[நாடு+துவரை.]

நாட்டுத்துளசி *nāṭṭu-t-tuḷasi*, பெ. (n.) துளசிவகை; a kind of holy basil.

[நாடு+துளசி]

நாட்டுத்தேவர் *nāṭṭu-t-tēvar*, பெ. (n.) 1. நாட்டில் வணங்கப்படுந்தேவர்; the Gods whose worship is prevalent in a country. "*நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே*" (திருவாச:23.25). 2. அந்தணர்; andaṇar

[நாடு + தேவர்.]

நாட்டுத்தேன் *nāṭṭu-t-tēṉ*, பெ. (n.) சிற்றுப்புற மரங்களில் கிடைக்கும் தேன்; country honey.

[நாடு+தேன்.]

நாட்டுநடப்பு[1] *nāṭṭu-naḍappu*, பெ. (n.) 1. அன்றாடச் செய்தி, current news 2. செய்தித்தாள்; current news paper இன்றையச் செய்தித்தாள்கள், நாட்டு நடப்பினை நல்லமுறையில் தெரிவிக்கின்றன (இக்.வ.). நாட்டுநடப்பு மாணவர் பயன்படுமாறு, தேர்வுக்குரிய வினாவிடைகளை வெளியிடு கிறது (இ.வ.).

[நாட்டு + நடப்பு.]

அன்றாடச் செய்திகளை மக்களுக்குத் தெரிவிக்கும் செய்தித்தாள்.

நாட்டுநடப்பு² *nāṭṭu-naḍappu,* பெ. (n.) *நாட்டுப்போக்கு* பார்க்க; see *nāṭṭu-p-pōkku.*

நாட்டுநன்னாரி *nāṭṭu-nannāri,* பெ. (n.) நன்னாரி வகை; country sarasaparilla

[நாடு+நன்னாரி.]

நாட்டுநாயகம் *nāṭṭu-nāyagam,* பெ. (n.) நாட்டின் தலைமை (S.I.I.vii,49); headship of a nāḍu, a territorial division.

[நாடு + நாயகம்.]

நாட்டுநாரத்தை *nāṭṭu-nārattai,* பெ. (n.) நாரத்தை வகை; bitter-orange.

நாட்டுநாவல் *nāṭṭu-nāval,* பெ. (n.) சிற்றூரில் விளையும் நாவல்; country jaumoon

நாட்டுநிலாவரை *nāṭṭu-nilāvarai,* பெ. (n.) *நாட்டாவாரை* பார்க்க; see *nāṭṭāvārai.*

நாட்டுநிலாவிரை *nāṭṭu-nilāvirai,* பெ. (n.) நிலவாகை; Tinnevelly senna.

நாட்டுநீங்கல் *nāṭṭu-niṅgal,* பெ. (n.) நாட்டின் அரசுரிமை நீங்கிய சிற்றூர்; land excluded from the ownership of the government. "*நாட்டு நீங்கலாய் உட்புரவாய் தேவர் தான மாக*" (S.I.I.ii.509.).

[நாடு + நீங்கல்.]

நாட்டுநூக்கு *nāṭṭu-nūkku,* பெ. (n.) நூக்குமரவகை; black wood.

நாட்டுப்பச்சிலை *nāṭṭu-p-paccilai,* *நாட்டுமூலிகை* பார்க்க; see *nāṭṭu-mūligai.*

[நாடு + பசுமை + இலை]

நாட்டுப்பஞ்சு *nāṭṭu-p-pañju,* பெ. (n) *நாட்டுப் பருத்தி பார்க்க;* see *nāṭṭu-p-parutti.*

[நாடு+பஞ்சு.]

நாட்டுப்படகு *nāṭṭu-p-paḍagu,* பெ. (n) மரபுவழிப்பட்ட பழமையான கடற்கலம்; country-small boat.

மறுவ. மரக்கலம், ஓடம்

[நாடு + படகு]



நாட்டுப்படை *nāṭṭu-p-paḍai,* பெ,(n.) நால்வகைப்படையுள் நாட்டுப்புறத்துள்ள மக்களாலியன்ற படை (குறள்,762,உரை.); army enlisted from the rural population of a country. corresponding šrēṇī-bala, one of nāl-vagai-p-paḍai

[நாடு + படை.]

நாட்டுப்பண்டாரம் *nāṭṭu-p-paṇḍāram,* பெ. (n.) வேற்றிடங்களில் அமைக்கப்பட்ட கருவூலம்; treasuries in the mofussil

"தஞ்சாவூர்த் தேவர்க்கு அடைத்த *நாட்டுப்பண்டாரங்களும் அளந்து*" (S.I.I.ii.311.).

[நாடு + பண்டாரம்.]

நாட்டுப்பண்டுவம் *nāṭṭu-p-paṇḍuvam,* பெ. (n.) ஊரகமருத்துவம்; country medical practice. 'தீராத நோய்களை நாட்டுப்பண்டுவம் தீர்க்கும்' (உ.வ.).

[நாடு + பண்டுவம்.]

இயற்கையாகக் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு, சிற்றூர்ப்புறத்தே செய்யப்படும் மருத்துவம்.

நாட்டுப்பண்டுவர் *nāṭṭu-p-paṇḍuvar,* பெ. (n.) சிற்றூர்ப்புறத்தேயுள்ள சித்தமருத்துவர்; country medical practioner.

[நாடு + பண்டுவர்.]

நாட்டுப்பயறு *nāṭṭu-p-payaṟu,* பெ. (n.) சிற்றூரில் விளையும் பயறு; cultivated green pulse

[நாடு + பயறு.]

நாட்டுப்பருத்தி *nāṭṭu-p-parutti,* பெ. (n.) சிற்றூரில் விளையும் பருத்தி; country cotton.

[நாடு + பருத்தி.]

நாட்டுப்பலா *nāṭṭu-p-palā,* பெ. (n.) ஊர்ப்பலா; common jack.

[நாடு +பலா.]

நாட்டுப்பழம் *nāṭṭu-p-paḻam,* பெ. (n) 1. நாட்டுவாழைப் பழம்; plantains of the plains. 2. ஒட்டுக்கனி யல்லாத பழம் (இ.வ.); fruits other than graft-mangoes.

[நாடு + பழம்.]

நாட்டுப்பற்று *nāṭṭu-p-paṟṟu,* பெ. (n.) ஒருவர் தன்நாட்டு நலனிலும் வளர்ச்சியிலும் கடமையுணர்வோடு இருக்கும் ஈடுபாடு; patriotism, love for one's country.

[நாடு + பற்று.]

நாட்டுப்பறங்கிப்பட்டை *nāṭṭu-p-paṟaṅgi-p-paṭṭai,* பெ,(n.) செடிவகை; groundsel, weed-Senecio arnothianus.

[நாடு + பறங்கிப்பட்டை..]

நாட்டுப்பன்றி *nāṭṭu-p-paṉṟi,* பெ. (n) சிற்றூரில் வளர்க்கும் பன்றி; country pig.

[நாடு + பன்றி.]

நாட்டுப்பாங்கு *nāṭṭu-p-pāṅgu,* பெ. (n.) நாட்டுச்சந்தம்(வின்.) பார்க்க; see nāṭṭu-c-candam.

[நாடு + பாங்கு.]

நாட்டுப்பாடல் *nāṭṭu-p-pāḍal,* பெ. (n.) *நாட்டுப்புறப்பாடல்* பார்க்க; see *nāṭṭu-p-puṟa-p-pāḍal.*

[நாடு + பாடல்.]

நாட்டுப்பாதாம் *nāṭṭu-p-pādām,* பெ. (n) நாட்டு வாதுமை பார்க்க; see nāṭṭu-vādumai.

நாட்டுப்புகையிலை *nāṭṭu-p-pugaiyilai,* பெ. (n.) சிற்றூர்ப் புகையிலை வகை; a kind of country tobacco.

[நாடு + புகையிலை.]

நாட்டுப்புளி *nāṭṭu-p-puḷi,* பெ. (n) சிற்றூர்ப்புறத்தே விளையும் சதைப்பற்றுமிக்க புளி; a kind of country tamarind.

[நாடு + புளி.]

நாட்டுப்புறஅறிவியல் *nāṭṭu-p-puṟa-aṟiviyal,* பெ. (n.) ஊரகமக்களின் பழக்கவழக்கம், மரபுவழி பற்றிய ஆய்வு; the science of folk-lore.

[நாடு + புறம் + அறிவியல்.]

நாட்டுப்புறத்தான் *nāṭṭu-p-puṟattāṉ,* பெ. (n.) 1. பட்டிக்காட்டான்; rustic, unpolished person. 2. நகரவாழ்க்கையையும், அறிவியல் பயன்பாட்டையும் அறியாதவன்; one who from the country. 'நாட்டுப்புறத்தான் பெரும்பாலும் உழுதுண்டு வாழ்வதையே உயிர்நாடியாகக் கொண்டவன்.' (இக்.வ.).

[நாடு + புறத்தான்.]

நாட்டுப்புறப்பாடல் *nāṭṭu-p-puṟa-p-pāḍal,* பெ. (n.) நாட்டார் வழக்காற்றில் உள்ள பாடல்; folk-song.

[நாடு + புறம் + பாடல்.]

கதையைப் பொருளாகக் கொள்ளாத பாடல். நாட்டுப்புற மாந்தர்தம் உள்ளத்துணர்வுகளை உணர்த்தும் தாலாட்டு, ஒப்பாரி, ஏற்றப்பாட்டு போன்றவை நாட்டுப்புறப்பாடலுள் அடங்குவனவாகும். நாட்டுப்புறத் தாலாட்டுப் பாடல்

"அத்தை அடிச்சாளோ அரளிப்பூச்
செண்டாலே
மாமன் அடிச்சானோ
மல்லிகைப்பூச்செண்டாலே
அடித்தாரைச் சொல்லியழு ஆக்கினைகள்
செய்திடுவோம் ஆரும்அடிக்கவில்லை
ஐவிரலும் தீண்டவில்லை ஏனோ
அழுகின்றான் ஏலம்பூ வாய்நோக
தானாய் அழுகின்றான் தம்பிதுணை
வேணுமென்று"

மேற்குறித்த பாடல் மாந்தர்தம் அகவுணர்வுகளை நயம்படவுரைக்கும் நற்றமிழ்ப் பாடல் எனில் மிகையன்று.

நாட்டுப்புறம் *nāṭṭu-p-puṟam,* பெ. (n.) 1. பட்டிக்காடு; country side, mofussil 'நாட்டுப்புறவளர்ச்சியே நாட்டின் முழுமையான வளர்ச்சி' (இக்.வ.). "*நாட்டுப் புறமாக்களும் வேட்டுவத் தலைவரும்*" (பெருங். உஞ்சைக்.43,54). 2. *நாட்டுப்புறத்தான்* பார்க்க; see *nāṭṭu-p-puṟattāṉ.*

மறுவ. சிற்றூர்ப்புறம்.

தெ. நாடுப்புறமு. ம. நாட்டுப்புறம்.

[நாடு+ புறம்.]

நாட்டுப்புறா *nāṭṭu-p-puṟā,* பெ. (n.) வீட்டுப்புறா; home pigeon.

[நாடு + புறா.]

நாட்டுப்பூரா *nāṭṭu-p-pūrā,* பெ. (n.) *நாட்டுச் சருக்கரை;* a kind of brown sugar.

[நாடு + பூரா.]

நாட்டுப்பூவரசு *nāṭṭu-p-pūvarašu.* பெ. (n.) ஊர்ப்பூவரசு; portia tree.

[நாடு + பூனை.]

நாட்டுப்பூனை *nāṭṭu-p-pūṉai,* பெ. (n.) வீட்டுப் பூனை; country cat.

[நாடு + பூவரசு.]

நாட்டுப்பெண் *nāṭṭu-p-peṇ,* பெ. (n.) மகன் மனைவி(இ.வ.); daughter-in-law.

மறுவ. மருமகள்.

[நாடு + பெண்.]

நாட்டுப்பேய்ப்புடல் *nāṭṭu-p-pēy-p-puḍal,* பெ. (n.) சிற்றூர்புடல்; snake gourd.

மறுவ. நாட்டுமாதரை.

[நாடு + பேய்ப்புடல்.]

நாட்டுப்பைத்தியம் *nāṭṭu-p-paittiyam.* பெ. (n.) எப்பொதுழும் ஊரிலேயே இருந்து வாழ்வதற்கு மனங்கொள்ளுகை; a mania for living in the country

[நாடு + Skt. பைத்தியம்.]

நாட்டுப்பொட்டு *nāṭṭu-p-poṭṭu,* பெ,(n.) மகளிரணியும் பொட்டுத்தாலி ; marriage badge tied on a kaikōḷar girl by the head-man of the caste, making her a tāši.

[நாடு + பொட்டு.]

நாட்டுப்போக்கு *nāṭṭu-p-pōkku,* பெ. (n.) 1. நாட்டுவழக்கம் (யாழ்.அக.); country style, fashion or manners. 2. பொதுவாக வழங்கும் முறை (இ.வ.); prevaling fashion or style.

[நாடு+ போக்கு.]

நாட்டுப்போங்கு *nāṭṭu-p-pōṅgu,* பெ.. (n.) 1. *நாட்டுப்போக்கு* பார்க்க; see *nāṭṭu-p-pōkku.* 2. பட்டிக்காட்டுத்தனம் (வின்.); rusticity, coarseness

[நாடு + போக்கு → போங்கு.]

நாட்டுபாதி *nāṭṭu-pādi,* பெ,(n.) ஒரு பழைய வரி (S.I.I.ii **115.**): an ancient tax

[நாடு + பாதி.]

நாட்டுமகிழம் *nāṭṭu-magiḻam,* பெ. (n.) மகிழம்பூ வகை; a kind of ilanji.

[நாடு + மகிழம்.]

நாட்டுமஞ்சட்சீனக்கிழங்கு *nāṭṭu-mañjaṭ-ciṉa-k-kiḻaṅgu,* பெ,(n) கிழங்கு வகை; indian rhubarb.

[நாட்டுமஞ்சள் + சீனக்கிழங்கு.]

உருசியா, சீனம், துருக்கி போன்ற நாடுகளில் பயிராகும். இக் கிழங்கு நறுமணமிக்கது: புளிச்சத்து, சுண்ணாம்புச் சத்து செறிந்தது. மலக்கட்டு, அரத்த சோகை, சூலைப்பிடிப்பு போன்ற வற்றிற்குச் சிறந்த மருந்து.

நாட்டுமட்டம் *nāṭṭu-maṭṭam,* பெ. (n.) குதிரை வகை; country pony, opp-to paikō-maṭṭam.

[நாடு + மட்டம்.]

நாட்டுமண் *nāṭṭu-maṇ,* பெ. (n.) செம்மண்; red ochre.

நாட்டுமந்தாரை *nāṭṭu-mandārai,* பெ. (n.) மந்தாரை வகை; a kind of mountain ebony.

நாட்டுமரம் *nāṭṭu-maram,* பெ. (n.) *கட்டுமரம்* பார்க்க; see *kaṭṭu-maram.*

[நாடு + மரம்.]

நாட்டுப்பழங்குடி மக்கள் பயன்படுத்திய மரக்கலம்



நாட்டுமரவட்டை *nāṭṭu-maravaṭṭai,* பெ. (n) மரவட்டை வகை (**சீவரட்.358.**); a kind of mara-v-aṭṭai.

[நாடு + மரவட்டை.]

நாட்டுமருக்காரை *nāṭṭu-marukkārai,* பெ. (n.) கக்கல் மருந்து; emetic nut.

[நாடு + மருக்காரை.]

நாட்டுமருத்துவம் *nāṭṭu-maruttuvam,* பெ. (n.) தமிழ்ச்சிற்றூர்புறத்தே இயற்கையாகக் காணப்படும் மூலிகைகளைக் கொண்டு செய்யப்படும் மருத்துவம்; naturopathy.

[நாடு + மருத்துவம்.]

சிறப்பாக வேப்பிலை, வில்வம், துளசி போன்ற இயற்கைப் பச்சிலை மூலிகை களைக் கொண்டு, நோய்தீர்க்கும் மருத்துவம். நம் நாட்டிலேயே தோன்றி வளர்ந்த மருத்துவம். நாட்பட்ட ஈளை இசிவுநோய்களைப் போக்கும் மருத்துவம்.

நாட்டுமருத்துவர் *nāṭṭu-maruttuvar,* பெ. (n.) *நாட்டுப்பண்டுவர்* பார்க்க; see *nāṭṭu-p-paṇḍuvar.*

[நாட்டு + மருத்துவர்.]

உள்நாட்டிலேயே கிடைக்கும் மூலிகை வேர் போன்றவற்றைப் பயன்படுத்தி மருத்துவம் செய்யும். ஊரகமருத்துவர்.

நாட்டுமருந்து *nāṭṭu-marundu,* பெ. (n) சிற்றூர்களில் இயற்கையாகக் காணப்படும் பச்சிலை மூலி; native herbal medicine

[நாட்டு + மருந்து.]

நாட்டுமருந்துக்கடை *nāṭṭu-marundu-k-kaḍai,* பெ. (n.) மூலிகை மருந்துக்கடை; country medical shop

[நாடு + மருந்து + கடை.]

நாட்டுமல்லிகை *nāṭṭu-malligai,* பெ. (n) மல்லிகை வகை; a kind of jasmine.

நாட்டுமானிடம் *nāṭṭu-māṉiḍam,* பெ. (n.) 1. சமுதாயத்தில் கடைநிலை வகுப்பினர் குழு; proletariate 2. சாமானியர்; the common people of a country. "*நாட்டு மானிடத்தோ டெனக்கரிது*" (திவ்.பெரியாழ். 5:1:5.).

[நாடு + மானிடம்.]

நாட்டுமானியம் *nāṭṭu-māṉiyam,* பெ. (n.) ஊர்த்தலைவன் பயன்கொள்ளும் கொடை நிலம்; land held rent-free, as by the head-man of a village

[நாடு + மானியம்.]

வரிவிலக்குப்பெற்ற கொடைநிலம்.

நாட்டுமிளகாய் *nāṭṭu-miḷagāy,* பெ. (n.) நீளமான மிளகாய்; country chilli.

[நாடு + மிளகாய்.]

குண்டு மிளகாயைக் காட்டிலும் நீண்ட வடிவினது.

நாட்டுமிளகு *nāṭṭu-miḷagu,* பெ. (n.) மிளகு; common black - pepper

[நாடு + மிளகு.]

நாட்டுமீன் *nāṭṭu-mīṉ,* பெ. (n) குளம் அல்லது ஆற்றுமீன்; fresh water fish

[நாடு + மீன்.]

நாட்டுமுயல் *nāṭṭu-muyal,* பெ. (n) சிற்றூர்ப்புறதே வீடுகளில் வைத்து வளர்க்கப்படும் முயல்; country hare.

[நாடு + முயல்.]

நாட்டுமுருங்கை *nāṭṭu-muruṅgai,* பெ. (n.) ஊரகத்தே வீட்டுக் கொல்லையில் விளையும் முருங்கை; country muruṅgai.

[நாடு + முருங்கை.]

காடுகளில் விளையும் முருங்கை மிகு சுவையினையுடையது.

நாட்டுமுள்ளங்கி *nāṭṭu-muḷḷaṅgi,* பெ. (n) முள்ளங்கி வகையுளொன்று; a kind of country radish

[நாடு + முள்ளங்கி.]

ஊரகத்தே வீட்டின் கொல்லைப் புறத்தே, விளையும் முள்ளங்கி.

நாட்டுமூங்கில் *nāṭṭu-mūṅgil,* பெ. (n.) குழாய்மூங்கில்; hallow country bamboo

[நாடு + மூங்கில்.]

நாட்டுமூப்பன் *nāṭṭu-mūppaṉ,* பெ. (n.) பள்ளர்தலைவன்; the headman of the paḷḷar caste

[நாடு + மூப்பன்.]

நாட்டுமூலிகை *nāṭṭu-mūligai,* பெ. (n) சிற்றூர்ப்புறத்தே காணப்படும் வேப்பிலை, வில்வம் துளசி போன்ற மூலிகை; country medicine

மறுவ. நாட்டுமருந்து, இயற்கைமூலி.

[நாடு + மூலிகை.]

நாட்டுரம் *nāṭṭuram,* பெ. (n) *நாட்டெரு* பார்க்க; see *nāṭṭeru.*

[நாடு + உரம்.]

நாட்டுரோசா *nāṭṭu-rōsā,* பெ. (n) சீனம் அல்லது வங்கநாட்டிலிருந்து வந்த மலர்; Beṅgāḷ or Chiṉā rose

நாட்டுவக்கீல் *nāṭṭu-vakkīl,* பெ. (n) மேம்போக்காகச் சட்டம் அறிந்த சிற்றூரரான்; the man who knows little law

[நாடு + Arabi *வக்கீல்.]*

நாட்டுவசம்பு *nāṭṭu-vaśambu,* பெ. (n.) நாட்டு(சித்த)மருத்துவத்தில் குழந்தை மருத்துவத்திற்குப் பயன்படும் மருந்து; sweet flag.

[நாடு + வசம்பு.]

சிற்றூர்ப் புறத்தே குழந்தைகள் செரியாமைக் கோளாறினால், வயிற்று நோவால் அழும்போது, வசம்பினை இழைத்துத் தேனுடன் சேர்த்துத் தருவர். இது பாட்டி மருத்துவம் என்றழைக் கப்படும்.

நாட்டுவர்த்தமானம் *nāṭṭu-vartta-māṉam,* பெ.(n.) தலைநகருக்கு வெளியிடங்களிலிருந்து வரும் செய்தி (வின்.); the mofussil news.

மறுவ. புறநகர்ச்செய்தி.

[நாடு + Skt வர்த்தமானம்.]

நாட்டுவழக்கம் *nāṭṭu-vaḻakkam,* பெ. (n.) நாட்டின் அடிப்படை வழக்காறு (ஆசாரம்); (யாழ்.அக.) customs of a country.

[நாடு + வழக்கம்.]

நாட்டுவள்ளி *nāṭṭu-vaḷḷi,* பெ. (n) சருக்கரைவள்ளி; sweet potato.

[நாட்டு + வள்ளி.]

அரிசித்தட்டுப்பாடு ஏற்பட்டபோது, நாட்டுவள்ளிக்கிழங்கு பசியைப் போக்குதற்கும், ஊட்டசத்தாகவும் விளங்கியது.

நாட்டுவளப்பம் *nāṭṭu-vaḷppam,* பெ. (n) 1. நாட்டுவளம் பார்க்க; see nāṭṭuvaḷam. 2. நாட்டுவழக்கம் பார்க்க; see nāṭṭu-vaḷakkam "கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்" (உ.வ.).

[நாடு + வளப்பம்.]

நாட்டுவளம் *nāṭṭu-vaḷam,* பெ. (n) 1. தேச செழிப்பு; fertility. 2. தேசவமைதி (வின்.); good condition of a country, as regards its inhabiants, animals, etc.,

[நாடு + வளம்]

நாட்டுவறியாள் *nāṭṭu-vaṟiyāḷ,* பெ. (n.) பெருங்குறிஞ்சா; vomitting swallow root (சா.அக.).

நாட்டுவன்[1] *nāṭṭuvaṉ,* பெ. (n.) புதுக்கொள்கையை நிலைநிறுத்துபவன்; the person who establish a new theory. "மறைமலையடிகள், மொழிஞாயிறு தேவநேயர் போன்றோர், தனித்தமிழ்க் கொள்கையை நாட்டுவன் ஆயினர்" (உ.வ.).

[நாட்டு + அன்.]

'அன்' = படர்க்கை ஆண்பால் விகுதி

நாட்டுவன்[2] *nāṭṭuvaṉ,* பெ. (n) பெரியகுடித்தனக்காரன்; leading ryot or cultivator.

நாட்டுவாகை *nāṭṭu-vāgai,* பெ. (n) வாகைமர வகையுளொன்று; a kind of common sirissia tree

[நாடு + வாகை.]

நாட்டுவாதுமை *nāṭṭu-vādumai.* பெ. (n.) வாதுமை மரவகையுளொன்று; a kind of country almound tree - Terminalia catappa.(L.)

[நாடு + வாதுமை]

பாதாம்பருப்பின் சுவையையொத்த பருப்பினைத் தரும். இம் மரம், இந்தியா முழுமையும் காணப்படுகிறது. 50 அடி உயரம் வளருந்தன்மைத்து. இம் மரத்தின் இலைகள் கிளைகளையொட்டியே அமைந்திருக்கும். சிறிய

காம்புகளை யுடையன. வெளிறிய வெண்ணிறமுள்ள, இம் மரத்தின் பூக்கள் சிறியன.

இம் மரத்தின் கொட்டைப்பருப்புகள் பாதாம்கொட்டையைப் போன்றவை. தித்திப்புச் சுவையுடையவை. உண்ணுவதற்குகந்தவை. வாதுமைக்கொட்டைகளினின்று, வடித்தெடுக்கும் எண்ணெய், சமையலுக்குப் பயன்படும். இம் மரத்தின் இலை, பட்டை முதலானவை, வண்ணக்கலவை செய்வதற்குப் பயன்படு மென்று சா.அக. கூறும்.

நாட்டுவாழை *nāṭṭu-vāḻai,* பெ. (n.) சிற்றூர்ப்புறத்தே விளையும் வாழை; a kind of country plantain.

மறுவ: நாட்டுமொந்தன், கதலிவாழை

[நாடு + வாழை]

மலச்சிக்கலைப் போக்குந் தன்மையுள்ள இப் பழத்தைத் தொடர்ந்து உண்டு வந்தால், அரத்தக்கொதிப்பு அகலும். நோயினால் நலிந்த உடல் தேறும்.

நாட்டுவாறிகம் *nāṭṭu-vāṟigam,* பெ. (n) நெருஞ்சில்; caltropes.

நாட்டுவியவன் *nāṭṭu-v-iyavaṉ,* பெ. (n) நாட்டதிகாரி (S.I.I ii, 352.); headman of a nāḍu, a territorial division

[நாடு + வயவன் → வியவன்.]

வலிமைசான்ற நாட்டதிகாரி.

நாட்டுவினியோகம் *nāṭṭu-viṉiyōgam,* பெ. (n.) பழையவரிவகை (S.I.I.V.95.); an ancient tax

[நாடு + skt. விநியோகம் → வினியோகம்.]

நாட்டுவெண்டை *nāṭṭu-veṇḍai,* பெ. (n) சிற்றூர்ப் புறத்தே விளையும் வெண்டைக்காய்; country. veṇḍaikkāy.

[நாடு + வெண்டை.]

நாட்டுவேங்கை *nāṭṭu-vēṅgai,* பெ. (n.) வேங்கை மரவகையுளொன்று; common kino-tree.

[நாடு + வேங்கை.]

நாட்டுவேம்பு *nāṭṭu-vēmbu,* பெ. (n.) வேப்புமரவகை; country margosa.

[நாடு + வேம்பு.]

நாட்டுவேல் *nāṭṭu-vēl,* பெ. (n.) வேலமரவகை; common babool tree

[நாடு + வேல்.]

நாட்டுவெள்ளரி *nāṭṭu-veḷḷari,* பெ. (n.) வெள்ளரிவகை (வின்.); a kind of cucumber

[நாடு + வெள்ளரி.]

நாட்டுவைத்தியம் *nāṭṭu-vaittiyam,* பெ. (n.) *நாட்டுமருத்துவம்* பார்க்க; see *nāṭṭu-maruttuvam*

[நாட்டு + Skt. வைத்தியம்.]

நாட்டுவைத்தியர் *nāṭṭu-vaittiyar,* பெ. (n) *நாட்டுமருத்துவர்* பார்க்க; see *nāṭṭu-maruttuvar* அவர் கைராசியான நாட்டுவைத்தியர். (உ.வ.)

[நாடு + skt வைத்தியர்.]

நாட்டெரிவண்டு *nātteri-vaṇḍu,* பெ. (n.) கொப்பளிக்கச் செய்யும் எரிவண்டுவகை; telini fly.

[நாடு + எரிவண்டு.]

நாட்டெரு *nātteru,* பெ. (n.) இயற்கையெரு; natural fertilise.

[நாடு + எரு.]

நாட்டுப்புறத்தே, இயற் கையாகக் கிடைக்கும், ஆடு,மாடு ஆகியவற்றின் சாணம், சாம்பல், தழை, குப்பை முதலியன. நாட்டெருப்போட்டு, நல்விளைச்சல் கண்டு, நோயற்ற நலவாழ்வு வாழ்ந்தனர், நம்முன்னோர்.

நாட்டைக்குறிஞ்சி *nāttai-k-kuriñji,* பெ. (n.) பண்வகை; a musical mode.

[நாட்டை + குறிஞ்சி.]

பழங்காலத்தில், குறிஞ்சி நிலத்துப் பண்ணாக இருந்து, இடைக்காலத்தே தேவாரப்பண்களுள் ஒன்றாக மாறியது.

நாட்டைபைரவி *nāttai-pairavi,* பெ. (n.) பண்வகையுளொன்று (பரத. ராக. பக். 102.); a specific melody type.

·[நாட்டை + குறிஞ்சி.]

நாட்டையர்[1] *nāttaiyar,* பெ. (n.) கிறித்தவ நல்லாயர்; pastor.

மறுவ. மேய்ப்பர். பேராயர்.

[நாடு → நாட்டு + ஐயர்.]

திருக்கோயிலின் அல்லது திருப்பேரவையின் தலைமை தலைமை நல்லார்.

நாட்டையர்[2] *nāttaiyar.* பெ. (n.) ஊரகச் சிறுதெய்வப் பூசகர்; the priest for the village diety.

[நாடு → நாட்டு + ஐயர்.]

நாட்டையலைத்தான் *nāttai-y-alaittāṉ,* பெ. (n.) மூலிகை வகையுளொன்று; a country herbal medicine

நாட்டோடரிசி *nāttōdariši,* பெ. (n.) வெள்ளைப் பூண்டு; garlic

நாட்பட்டகழிச்சல் *nāt-patta-kaliccal,* பெ. (n.) நீண்டநாட்களாகத் தொடர்ந்து ஏற்படும் வயிற்றுப்போக்கு; chronic diarrhoea.

[நாள்பட்ட + கழிச்சல்.]

மருந்து உட்கொண்டும் சீரக்க முடியாத, வயிற்றுப்போக்கு.

நாட்பட்டகள் *nāt-patta-kal,* பெ. (n.) நாட்படுதேறல் பார்க்க; see *nātpadu-tēral.*

[நாள்படு + கள் → நாட்பட்டகள்.]

நாட்பட்டசரக்கு *nāt-patta-šarakku,* பெ. (n.) சத்து இல்லாத பழைய மருந்து; an old drug without effect.

நாட்பட்டநோய் *nāt-patta-nōy,* பெ. (n.) தீராத நோய்; chronic disease

நாட்பட்டிரு-த்தல் *nāt-pattiru-,* 3 செ.கு.வி, (v.i.) நெடுங்காலமிருத்தல்; to stay for a long time. "*நாட்பட்டிருந் தின்ப மெய்தலுற்று*" (தேவா.29:3).

[நாள் + படு + இரு-.]

நாட்படு—தல் *nāṭ-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. நெடுங்காலந்தங்குதல்; to be long-standing as a chronic disease. 'நாட்பட்ட நோய்' (உ.வ.); 'நாட்பட்ட வேலை.' (உ.வ.). 2. பழமையாதல்; to become old, stale நாட்பட்ட மரம் (இ.வ.), நாட்பட்ட வீடு (உ.வ.). 3. தற்காலப் பயன்பாட்டிற்குத் தகுதியற்ற தாதல்; to become out of date. இச் செயல் நாட்பட்டது (இ.வ.).

[நாள் + படு—.]

நாட்படுதேறல் *nāṭ-paḍu-tēṟal,* பெ. (n.) வெளியூட்டும் புளிப்பேறிய கள்; toddy. "*தேட்கடுப்பன்ன நாட்படு தேறல்*" (புறம்.).

[நாள்படு + தேறல்.]

ஓரிரு நாளில் இறக்கப்பட்டதும், காலங் கடந்ததால் தேள்கொட்டியது போன்ற புளிப்புச்சுவை மிக்கதுமான, தேறல்.

நாட்பணி *nāṭ-paṇi,* பெ. (n.) 1. புதிதாக ஏற்கும் பணி; a new job. 2. *நாட்பணிவிடை* பார்க்க; see *nāṭ-paṇi-viḍai.*

[நாள் + பணி.]

நாட்பணிவிடை *nāṭ-paṇi-viḍai,* பெ. (n.) 1. அன்றாட வேலை (யாழ்.அக.); daily work 2. நன்முழுத்தத்தில் செய்யும் வேலை; work done in an auspicious hour

[நாள் + பணிவிடை.]

நாட்பழக்கம் *nāṭ-paḻakkam,* பெ. (n.) அன்றாடம் மேற்கொள்ளும் வழக்கமான செயல்; daily practice.

நாட்பறை[1] *nāṭ-paṟai,* பெ. (n.) நாழிகைப்பறை (சிலப்.3; 27. உரை.); hour drum.

[நாள் + பறை.]

நாட்பறை[2] *nāṭ-paṟai.* பெ. (n.) புதிதாக அமைக்கப்பட்ட பறை; a new drum

[நாள் + பறை.]

முரசுவழியாக மன்னன் தெரிவித்த செய்தியை, ஊரகங்களில் பரப்பும் பயிற்சியாளர்க்கு, முதியோர் ஆக்கித்தரும் புதியபறை.

நாட்பார்—த்தல் *nāṭ-pār-* 4 செ.குன்றாவி. (v.t.) திருமண முதலிய மங்கல நிகழ்வுகட்கு நன்னாள் குறித்தல்; to fix an auspicious day, as for a marriage

[நாள் + பார் —.]

நாட்பார்[2]**—த்தல்** *nāṭ-pār-,* 4 செ.குன்றாவி. (v.t.) நாட்காட்டியில் நல்ல நிகழ்விற்குத் தக்க நாள் பார்த்தல்; looking for an auspicious day in a calander.

[நாள் + பார் —.]

விடுமுறை நாளையோ, வாழ்வியலுக்கு இன்றியமையாத பிறபுதிய செய்திகளையோ, நாட்காட்டியில் பார்த்து அறிந்து கொள்ளுதல்.

நாட்பு *nāṭpu,* பெ. (n.) 1. ஆற்றல் வண்மை (வின்.); power, strength, force. 2. ஞாட்பு பார்க்க; see ñāṭpu. "*விழுமியோர் துவன்றிய வகன்க ணாட்பின்*" (பதிற்றுப்.45,5.).

[ஞாட்பு → நாட்பு.]

நாட்பூ *nāṭpū,* பெ. (n.) *நாட்போது (யாழ்.அக.)* பார்க்க; see *nāṭ-pōdu.*

[நாள் + பூ.]

நாட்பொருத்தம் *nāṭ-poruttam,* பெ. (n.) மணமக்கள் பிறக்கும் போது காணப்படும் நாண்மீன் பொருத்தம். correspondence between the vinmīn (naṭcattiram) of the prospective bride and bridegroom(astrol.). "*நாட்டுகின்ற சோதிடத்தி னாண் பொருத்த நாட்பொருத்தம்*" (ஏரெழு.9.) 2. செய்யுண் முதன்மொழிப் பொருத்தத்துள், பாட்டுடைத் தலைவன் பெயரின், முதலெழுத்தின் நாண்மீனுக்கும், நூலின் முதன் மொழியின், முதலெழுத்தின் நாண்மீனுக்கும் உள்ள பொருத்தம் (வெண்பாப். முதன்.11); rule of propriety which enjoins that the nāṇmīṉ of the initial letter of a poem and that of the initial letter of its hero's name should agree, judged by established rules, one of ten, seyyuṇ-mudaṉ-moḻi-p-poruttam (poet.). 3. ஒருவனுக்குரிய நாண்மீனொடு பொருந்திய நாளினன்மை (வின்.); the auspicious lunar mansions connected with one nāṇ-mīṉ.

[நாள் + பொருத்தம்.]

நாட்போது[1] *nāṭ-pōdu,* பெ. (n.) அன்றலர்ந்த பூ; new blown, fresh flower, "*தாமரை முகிழ்விரி நாட்போது*" (சிறுபாண்.183).

[நாள் + போது.]

போது = மலர்ந்தும் மலரா நிலையில் உள்ள, அவிழ்மொட்டு.

நாட்போது[2] *nāṭ-pōdu,* பெ. (n.) குறித்தபொழுது; குறித்த நிகழ்வினைக் குறித்தநாளில், குறித்தநேரத்தில் செய்து முடித்தற்குரிய பொழுது; apt time

[நாள் → பொழுது → போது.]

நாடக்கரிவாள் *nāḍa-k-karivāḷ,* பெ. (n.) வெள்ளாடு; goat.

நாடகக்கணிகை *nāḍaga-k-kaṇigai,* பெ. (n.) நாட்டியப்பெண்; actress, dancing girl "*நாடகக்கணிகையர் தகுதியென்னார் தன்மை யன்மையின்*" (மணிமே. 24:23).

மறுவ. நாடகமகள்.

[நடி + அகம் →நாடகம் →கணிகை.]

கண் → கணி → கை =கணிகை.

கணிகை = பண்ணும், தாளமும் இயைய, செம்மையாகக் கணித்துச் சீர்தூக்கி ஆடும் கூத்தி. ஆடல், பாடல், அழகு என்னும் மூன்றிலும் குறைவின்றித் திகழ்ந்த சிலப்பதிகார மாதவி, சிறந்த நாடகக்கணிகை. இவள் தலைக்கோல் பட்டம் பெற்றவள். சிலம்பும், மணிமேகலையும், பூம்புகார் நகரத்தில் வாழ்ந்த நாடகக்கணிகையர் பற்றிய செய்திகளையே தெரிவிக்கும் காப்பியங்கள். தஞ்சைப்பெருவுடையார் கோயில் கல்வெட்டுகளில், நூற்றுக் கணக்கான நாடகக் கணிகையரின் பெயர், அவர்கள் வதிந்த வீடு, தெரு முதலான செய்திகள் இடம் பெற்றுள்ளன.

நாடகக்கதைமாந்தர் *nāḍaga-k-kadai-māndar,* பெ. (n) 1. நாடகத்தில் சிறப்புப்பாத்திரம் ஏற்று நடிப்போர்; dramatic characters. 2. *நாடகப்பாத்திரம்* பார்க்க; see *nāḍaga-p-pāttiram.*

[நாடகம் + கதைமாந்தர்.]

நாடகக்கலை *nāḍaga-k-kalai,* பெ. (n.) முத்தமிழில் ஒன்றாகிய நாடகமாகிய கவின்கலை; drama

[நடி + அகம் →நாடகம் →கலை.]

காலந்தோறும் நாடகக்கலை தமிழ் மொழியில் வளர்ந்து வந்த பாங்கு வருமாறு:-

(1.) கண்ணாடி:

ஒரு நாட்டின் பண்பை, நாகரிகத்தைக் கண்ணாடியாகக் காட்டக் கூடியன, அந் நாட்டின் கலைகளே ஆகும். ஒரு நாட்டின் கலையைக் கொண்டே, அந் நாட்டின் பண்பாட்டை வெளிநாட்டார் கணிக்க முடியும். கலை அருகினால், பண்பாடு அருகும்; பண்பாடு அருகினால் நாடே அருகிவிடும். அதனால்தான் பண்டைத் தமிழ்நாட்டில், இக் கலைகளை யெல்லாம், அரசனே, போற்றிப் பாதுகாத்துப் பேணி வளர்த்திருக்கின்றான்.

நாடகங்களில் இருபெரும் பிரிவுகள் இருந்தன. அவை, "*வேத்தியல்*" என்றும், "*பொதுவியல்*" என்றும் கூறுவர். நாகரீகம் மிக்கவர், கலைப்பணியில் உயர்ந்தவர் ஆவர். மன்னர் பயன்கொள்ளுகின்ற நாடகங்களை, "***வேத்தியல்***" நாடகங்கள் என்றும், பொதுமக்கள் பயன்கொள்ளுகின்ற நாடகங்களை "***பொதுவியல்***" நாடகங்கள் என்றும் பிரித்தார்கள். வேத்தியல் நாடகங்கள் வேந்தர்கள் மடியிலே தவழ்ந்தன. அவர்கள் போற்றும்வரை, அவை வாழ்ந்து வளர்ந்தன. ஆனால் வேந்தர்கள், சிற்றரசர்களாகி அவர்கள் கையில் சிக்குண்டு, அவை வெறும் காமக் கூத்துக்கள் ஆனபின், அருகி ஒழிந்தன. அதன் பின்னர்தான், "*பொதுவியல்*" நாடகங்கள், தன் மரபை மீறி, வேற்றியலோடு பொதுவியலாகி, பல நாடகங்கள் தோன்றலாயின.

நாடகமே உலகம் என்று சேக்சுபியர் சொல்லுகின்றார். தமிழ் மக்கள் இறைவனையே, கூத்தனாக்கிக் கூத்தபிரானாக வழிபட்டவர்கள். எனவே, அவர்கள் மனிதர்களின் உணர்ச்சிகளையும், உள்ளங்களில் தோன்றும் புயலையும், தென்றலையும் நாடகமாக நடத்திக் காட்டினார்கள்.

(1) தொல்காப்பியம்:

தமிழ் இலக்கியத்திற்கு இன்று கிடைத்துள்ள தொன்மையான நூல் தொல்காப்பியமாகும். தொல்காப்பிய காலத்திற்கு முன்னாலும், தமிழ்ச்சங்கங்கள் இருந்தன வென்றும், எண்ணிலடங்காத தமிழ் இலக்கியங்கள், இசை நூல்கள், நாடக நூல்கள், அவற்றிற்குரிய இலக்கண நூல்கள் இருந்தனவென்றும், ஆனால் அவையனைத்தும் கடல்கோள்களால் அழிந்தனவென்றும் வரலாற்றுச் சான்றுகள் கூறுவதால், அந் நாளில் இருந்த நாடகக்கலையின் இலக்கியம், இலக்கணம் என்னவென்று உணர முடியாமற் போயிற்று.

தொல்காப்பியத்தில் நாடகத்தைக் குறித்துப் பல குறிப்புகள் உள்ளன. '*மெய்ப்பாடு*' என்பனவற்றை ஆராய்ந்த பகுதிகள் உள்ளன. நாடகத்தைப் "***பண்ணை***" என்று தொல்காப்பியர் கூறினார். சுவை பற்றி சொல்லுகின்ற பகுதியிலே, முதல் நூற்பாவில் "***பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருள்***" என்று கூறுகிறார். நாடகம் மனதிற்கு மகிழ்ச்சியை விளையாட்டாக உண்டாக்குவதால், "***பண்ணை***" என்ற பெயர் ஈந்தார் போலும். மற்றும் தொல்காப்பியத்திலே ஆசிரியர் "நாடகவழக்கு" என்று ஒரு வழக்கைச் சொல்லுகின்றார். எனவே, அக் காலத்திலேயே, உலகியல் வழக்கு வேறு, நாடகவழக்கு வேறு என்று பகுத்து வைத்திருந்தார்கள் என்று தெரிகின்றது. உலகியல்வழக்கு என்பது, உள்ளதை உள்ளவாறு சொல்வது என்றும், நாடகவழக்கு என்பது, வாழ்க்கை நிலையைச் சற்று மிகைப் படுத்திக் காட்டுவது என்றும் தொல்காப்பியத்தின்கண் குறிக்கப்பட்டுள்ளன. இதுகாறும் கூறியவற்றால், நாடகத்தமிழ் மிகமிக தொன்மை வாய்ந்தது என்றும், மிக்க சிறப்புப் பெற்றதென்றும், தெரிகிறது.

தொன்மையில், நாடகத்தமிழ், கூத்துக்கள் மூலம் வளர்ந்தது. வசைக்கூத்து, புகழ்க்கூத்து, வேத்தியல் கூத்து, சாந்திக்கூத்து, ஆரியர் கூத்து, தமிழ்க்கூத்து, தேசிக்கூத்து, மார்க்கக்கூத்து, தெருக்கூத்து முதலியவை இருந்திருக்கின்றன என்று அறிகிறோம்.

நாடகம் ஒன்றில்தான், இலக்கியச் சுவையையும், இசைச்சுவையையும் மெய்ப்பாடாகிய சுவையையும், ஒருசேரக் காணலாம் என்பது வெள்ளிடைமலை; இலக்கியங்கள் எழுதலாம்; இசைப் பாட்டுக்களையும் எழுதலாம். ஆனால், பாட்டு என்பதற்கு இசைத்தால்தான் பாட்டாகும்.

அதுபோல, நாடகத்தையும் நடித்தால்தான் நாடகமாகும். மேலை நாட்டினரைப் போல நம் நாட்டு நாடகங்கள், வெறும் படிப்பதற்கான நாடகங்கள் என்றும், நடிப்பதற்கான நாடகங்கள் என்றும், பிரித்து நின்றது இல்லை. நம் நாட்டு நாடகங்கள் நடிப்பதற்காகவே எழுதப்பட்டன. நாடகங்கள் படிப்பதற்கு மட்டும் எழுதுவது என்பது, தமிழனின் கருத்தில் தோன்ற வேயில்லை.

(2) திருக்குறள்:

திருக்குறளில் துறவற இயலில் ''*நிலையாமை*'' என்னும் அதிகாரத்தில், ''*கூத்தாட்டு அவைக்குழாத்தற்றே பெருஞ்செல்வம் போக்கும் அது விளிந்தற்று*'' என்று ஒரு குறள் வருகின்றது.

இதிலிருந்து, இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பே, தமிழகத்தில் நாடக அரங்கங்களும், கூத்தாட்டங்களும் இருந்தன என்பதை அறியலாம். அது மட்டுமன்று. பொய்யாப் புலவர் இயற்றிய, முப்பாலில் ஒரு பாலான காமத்துப்பாலில் உள்ள 250 பாடல்களும், ''*நாடக*''மே யாகும். இப் பாடல்களில், வள்ளுவர்பெருமான் தான் புகாமல், கதைமாந்தர்களையே பேச வைத்திருக்கின்றார். உண்மையிலேயே நாடகத்தமிழுக்கு இக் காமத்துப்பாலை, "*முதல் மேற்கோள் நூல்*" என்றே குறிப்பிட வேண்டும்.

(3) சிலப்பதிகாரம்:

சிலப்பதிகாரக் காலத்தில் ஆடலரங்குகள், மக்களுடைய எண்ணத்தையெல்லாம் கவரக் கூடிய பகுதியாகிய, ஊரின் நடுவே அமைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

"ஊரகத்தாசி உளைமான் பூண்ட தேரகத்
தோடும் தெருவுமுகம்நோக்கிக்
கோடல் வேண்டும் ஆடரங்கதுவே"

என்ற "*அரங்கேற்ற காதை*" வரிகள், அந்த நாளில் நாடகத்திற்கு மக்களிடையே இருந்த செல்வாக்கையே, புலப்படுத்துகின்றது.

மணிமேகலையில், ''*நாடகக்காப்பிய நன்னூல் நுனிப்போர்*'' என்று ஓர் இடத்தில் வருகின்றது. அக் காலத்துப் புலவர்கள் நாடகக் காப்பியங்களையும், அக் காப்பியங்களுக்குரிய, இலக்கணங்களையும் திறனாய்வு செய்து, அவற்றைப்பற்றிச் சொற்போர் செய்தனர் என்பதும் தெரிகின்றது. இவற்றாலும், அந் நாளில் நாடகத்திற்கிருந்த செல்வாக்கு நன்கு புலப்படுகின்றது. சிலப்பதிகாரக் காலத்திலே கூத்தச் சாக்கையன், சாக்கைக்கூத்தாடினான். விரிசடைக் கடவுளுடைய ஆட்டத்தை ஆடினான். அவ் வாட்டத்தை மெய்ப்பாட்டுடன் நடித்துக் காட்டினான் என்றெல்லாம் வருகிறது. இந்த ஆட்டம், பிறரால் விளக்கிச் சொல்ல வேண்டிய தேவையில்லாமல், கண் படைத்தோரும், கருத்துப் படைத்தோரும், கண்டு மகிழ ஆடின "*நாடகமாகும்*".

(4) திருவாசகம்:

திருவாசகத்தில் நாடகத்தைப் பற்றி பல குறிப்புகள் வருகின்றன. ''*நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நான் நடுவே வீடகத்தே புகுத்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்*'' மாணிக்கவாசகப் பெருமான் தானியற்றிய திருவாசகத்தின் ஒரு பகுதியான, திருச்சதகத்தில் தான் ஒரு போலி (பக்தன்) அன்பன் என்று சொல்ல வந்தவர், நாடகம் என்ற சொல்லையும், நடிப்பு என்ற சொல்லையும், பயன்படுத்தியிருக்கிறார். "*இழு தொடு காட்டிடை நாடகமாடி*" என்று ஏழாவது பாடலிலும், "*நகவே தகும் எம்பிரான் என்னை நீ செய்த நாடகமே*" என்று பத்தாவது பாடலிலும், நாடகம் என்ற சொல்லை ''*ஆட்டம்*'' என்ற பொருளில் பயன்படுத்தியிருக்கிறார். எனவே, அக் காலத்திலும், நாடகம் நல்லதொரு சிறப்பினைப் பெற்றிருந்தது என்பதற்கு, இது ஒரு சான்றாகும்.

(5) 17–ஆம் நூற்றாண்டு:

17–ஆம் நூற்றாண்டில் பள்ளு, குறவஞ்சி முதலிய இசை நாடகங்கள் தோன்றின. நாடகத்தோடு நடனமும் ஒன்றி வளர்ந்தன. இவைகளிலே, மோன நாடகம் என்றும், இசையுடன் கலந்த நடன நாடகமென்றும், இருவகையாக தனித்தனியே வளர்ந்தன. சேர நாட்டிலிருந்த, "*கதகளி*" நாடகங்கள், நடன நாடகங்களுக்கு ஓர் பெரும் எடுத்துக் காட்டாகும்.

(6) 18, 19–ஆம் நூற்றாண்டு:

18–ஆம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயர் "*இராம நாடகத்தை*" இயற்றினார். பின்பு (புராண இதிகாச) தொன்ம நாடகங்கள் பல தோன்றின. நந்தனார் நாடகம், இக் காலத்தில் இயற்றப்பட்டு, மிகவும் செல்வாக்குப் பெற்றது.

19–ஆம் நூற்றாண்டுக்கு மேல் நாடகப் பாணி தமிழகத்திற்கு வந்தது. அந்தப் பாணியை ஒட்டித் தமிழகத்திலும் நாடகங்கள் எழுந்தன. அவைகளில் குறிப்பிடத்தக்கவை, பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் "*மனோன்மணியம்*", சூரிய நாராயண சாத்திரிகள் எழுதிய, "*மான விஜயம்*", "*ரூபாவதி*", "*கலாவதி*" ,ஆகிய நாடகங்களாகும்.

(7) 20–ஆம் நூற்றாண்டு:

20–ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் வருகையின் காரணமாகவும், அம் மொழியின் மீது ஏற்பட்ட காதலாலும், நாடகத்தமிழ் பயில்வோருக்கு ஒரு புத்துணர்ச்சியை அளித்தது. நம் தாய்மொழியின் மீது ஏற்பட்ட பற்று மிகுதியினால், கிரேக்க மொழியிலே தோன்றிய, உயர்ந்த நாடகங்களையும் செர்மன், பிரஞ்சு, வடமொழி ஆகியவைகளில் தோன்றிய உயர்ந்த நாடகங்களையும், ஆங்கில மொழியில் தோன்றிய "*சேக்சுபியர்*" எழுதிய நாடகங்களையும், ஆர்வத்தோடு படித்து, அவ் வாறான நாடகங்களைத் தமிழுலகுக்கு அளிக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. வயிற்றுப் பிழைப்புக்கென்று ஆரம்பிக்கப்பட்ட நாடக அரங்குகள் முதல், உண்மைக் கலையிலே ஆர்வம் கொண்டு இலங்கும் தமிழ்க்கலை மன்றங்கள் வரை, பிற நாட்டு நாடகங்களைத் தழுவிய தமிழ் நாடகங்கள் நூற்றுக்கணக்காக நடத்தப்பட்டன. இப்புதிய நூற்றாண்டில் பணி செய்த பெரியார்களுள் மறக்க முடியாதவர்கள், பம்மல் சம்பந்தமுதலியாரவர்களும், சங்கரதாசு சுவாமி களும் ஆவார்கள்.

சம்பந்த முதலியாரவர்கள், சேக்சுபியர் நாடகங்களை மொழிபெயர்த்தும், மனிதப் பண்பாட்டை விளக்கும் நாடகங்களை எழுதியும், மேலைநாட்டுப் பாணியை அப்படியே கையாண்டு, ஆங்கிலமொழி கற்ற இளைஞர் சமுதாயத்தை நாடகத்துறைக்கு ஈர்த்து விட்டார்.

சங்கரதாசு சுவாமிகள் நடத்திய நாடகங்கள் வேறு வகையைச் சேர்ந்தவை. அந் நாடகங்களில் நவரசமும் இருக்கும். கலித்தொகையும், குறுந்தொகையும், நற்றிணையும், நாலடியாரும், திருக்குறளும் விளையாடி வரும். அந்நாடகத்தில் வைக்கப்பட்ட கருத்துக்கள், தருமநெறியை வலியுறுத்துவதாகவே அமைந்து வரும். அவர் நாடகங்களிலே மறக்கமுடியாதவை, "*அபிமன்பு சுந்தரி*", "*சீமந்தனி*", "*பவளக்கொடி*" ,"*மணிமேகலை*", "*பிரபுலிங்க லீலை*" என்பன போன்று பலவாகும். அடுத்து ஆசிரியர் எஸ். டி. சுந்தரம் அவர்களின் "*கவியின் கனவு*", "*ஜீவா*", "*தீட்டிய உயிரோவியம்*", கு. சா. கிருட்டிணமூர்த்தி எழுதிய "*அந்தமான் கைதி*", அரு. இராமநாதன் எழுதிய "*இராசராச சோழன்*", அறிஞர் அண்ணா எழுதிய "*சந்திரோதயம்*", கலைஞர் கருணாநிதி எழுதிய "*மந்திரகுமாரி*" என்பன போன்ற பல நாடகங்களும் இன்றுள்ளன.

அன்றும், இன்றும், **தமிழ் நாடகக் கலை**

(8) உருசியாவில்:

மாசுகோ நகரத்தின் மையத்திலுள்ள "*பஃரூசியன் தியேட்டர் மியூசியம்*" என்ற கட்டிடத்தில், உருசிய நாட்டின் நாடக வரலாற்றைக் காட்சிப் பொருளாக வைத்திருக்கிறார்கள். உருசிய நாட்டில் நாடகங்கள் வளர்த்த முறைகள், அந் நாடகங்களை வளர்த்த பெரியார்களின் வாழ்க்கை, அவர்கள் அத் துறையிலே பட்ட இன்னல்கள், துன்பங்கள் ஆகியவைகளை அழகாகச் சித்தரித்து, பார்ப்போர் எளிதில் அறிந்து கொள்ளும் வண்ணம் வைக்கப்பட்டு உள்ளன. தமிழ்நாட்டின் நாடக வரலாற்றை அதேபோல் காட்சிப் பொருளாக வைத்திருக்கும் திரையரங்கமோ, காட்சிச் சாலையோ ஒன்று அமைக்க ஏற்பாடு செய்தால், நாடகக்கலை மென்மேலும் செழிக்கும் என்பதில் ஐயமில்லை!

(9) அனைத்துலக நாடக அமைப்பு:

மாந்தரினத்தைச் சேர்ந்தவர்கள் எந்தமொழியைப் பேசுகிறவரானாலும், எந்த தேசத்தவரானாலும், அனைவருக்கும் உள்ள இதயத் துடிப்புகள், உணர்ச்சிகள், இன்பதுன்பங்கள், அன்பு, ஈவு, இரக்கம், துன்பம், தீக்குணம் ஆகிய குணநலன்கள் அனைத்தும் ஒரே வகையினவாகவே இருக்கும். இந்த உலகப் பொது உணர்ச்சிகளை, குணநலன்களை உலகத்தோர்க்கு அடிக்கடி எடுத்துக் காட்ட வேண்டும். இதற்காக, அனைத்துலக நாடக அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அவ் வமைப்பின் மூலம், ஆண்டுதோறும், ஒவ்வொரு நாட்டிலும், பல மொழிகளில் உள்ள நாடகங்களை நடத்தி, மக்கள் கண்டு இன்புறுமாறு செய்யவேண்டும். இப்படிச் செய்வதனால், அனைத்துலக அமைப்புக்கே உலகில் அமைதி காண இது உயிர்மூச்சாக அமையும்.

நாடகக்கவி¹ *nāḍaga-k-kavi,* பெ. (n.) *நாடகக் காப்பியம்* பார்க்க; see *nāḍaga-k-kāppiyam.* *'நாடகக் கவிசெய்யவல்ல நல்ல நூலை வல்லபுலவனும்'* (சிலப்.3:44,உரை).

[நடி + அகம் → நாடகம் + skt. கவி.]

நாடகக்கவி² *nāḍaga-k-kavi,* பெ. (n.) **1.** நாடகத்தை எழுதிய கவிஞன்; the poet who create the drama. **2.** நாடகத்தினிடையில் உணர்ச்சிக்கேற்ப வரும் பண்ணோடு இயைந்த பாட்டு; the musical songs in drama.

[நாடகம் + skt. கவி.]

ஒரு நாடகம் மக்கள் மனத்தில் நிலைக்க வேண்டுமாயின், பண்ணோடு இயைந்த இசைப்பாட்டு விரவிவரவேண்டும். நாடகக்கவி யெனுமிச் சொல் பண்ணார்ந்த பாட்டினையும், அப் பாப்பாடும் பாவலனையுங் குறித்து வந்தது எனலாம்.

நாடகக்காப்பியம் *nāḍaga-k-kāppiyam,* பெ. (n.) நாடகத்தமிழ் நூல்; dramatic work, drama. *"நாடகக் காப்பிய நன்னூ னுணிப்போர்"* (மணிமே. 9:80)

[நடி + அகம் →நாடகம் + காப்பியம்.]

முத்தமிழும் விரவிவரும் சிலப்பதிகாரம் நாடகக்காப்பியத்துள் தலையாயது. அடுத்தநிலையில் பேரா. சுந்தரம் பிள்ளை யவர்களால் எழுதப்பெற்ற, மனோண் மணியம், நாடகக் காப்பியக்கூறுகள் நிரம்பப்பெற்றது.

நாடகக்காரன் *nāḍaga-k-kāraṉ,* பெ. (n.)
1. நாடகம் ஆடுவோன்; actor in a drama.
2. ஒழுக்கக் கேடன், காமுகன்; profligate
3. ஏதுமறியாதது போல் பாசாங்கு செய்பவன் சூழ்ச்சியாளன் (இ.வ.); hypocrite,
4. போலியாகப் பகட்டுபவன்; பகட்டுப் பேர்வழி; pretender.

[நடி + அகம் →நாடகம் + காரன்.]

நாடகச்சந்தி *nāḍaga-c-candi,* பெ. (n.) முகம், படிமை முகம் (பிரதிமுகம்), கருப்பம், வளைவு, துய்த்தல் என்று ஐவகைப்பட்ட நாடகக்கதைப் பொருத்து (சிலப்.3:13,உரை); juncture or division of a drama, reckoned to be five in number, viz, mugam, paḍimai mugam, (piradimugam), karuppam, vaḷaivu, tuyttal.

[நடி + அகம் →நாடகம் + சந்தி.]

தொடக்கம் (முகம்), வளர்ச்சி (படிமை முகம்), சிக்கல் (கருப்பம்), வளைவு (திருப்பம்–climax), தீர்வு (துய்த்தல்) எனும் ஐங்கூறுகளும் நாடகத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவன. இவ்வைந்து கூறுகளும், புனைகதை கட்கும், பொருந்தும்.

நாடகசாலை *nāḍaga-šālai,* பெ. (n.) 1. கூத்து நிகழ்த்தும் அரங்கம் (சிலப்.25:14,அரும்.); stage, play-house, theatre. 2. நாடகக்கணிகை (வின்.); dancing girl. 3.கோவிலுக்கு நன்கொடையாளர் இறைவனைக் காணவரும் போது, அவர்க்கு முன் திருக்கோயில் நடனமகளிர், நாட்டியஞ்செய்து அழைத்து வரும் கோயில் மதிப்பு (மரியாதை); honour done to a donor to a temple, by which he is received with nautch as he approaches the temple.

[நடி + அகம் → நாடகம் + சாலை.]

நாடகசாலையர்[1] *nāḍaga-sālaiyar,* பெ. (n.) கூத்தர் (தொல்.பொருள்.168. உரை. பக்.741.); dancers.

[நாடகம் + சாலையர்.]

நாடகசாலையர்[2] *nāḍaga-šālaiyar,* பெ. (n.) நாடகம் செவ்வனே இயங்க உறுதுணை புரிவோர்; dramatists and technicians who help for the successful performance of the drama.

[நாடகம் + சாலையர்.]

நாடகத்தமிழ் *nāḍaga-t-tamiḻ,* பெ. (n.) முத்தமிழுள் கூத்துப்பற்றி வழங்கும் தமிழிலக்கியப் பகுதி; the class of tamiḻ literature which pertains to dances or to dramatic representation of puranic stories, one of mu-t-tamiḻ *'இனிநாடகத் தமிழில் தேவபாணி வருங்கால்'* (சிலப்.6,35,உரை.).

[நாடகம் + தமிழ்.]

முத்தமிழ்ப்பிரிவில் மூன்றாவதாய் அமைவது

ஒருகா:– நாடு + அகம் → நாடகம்.

அகத்தை நாடுதல் நாடகமாகும்.

த. நாடகம் → skt nāḍaga. (t.)

நடி + அகம் → நாடகம். அகம் என்பது வீடு, நாடு, உலகு, காதல் ஆகியவற்றைக் குறிப்பதாகி, அவற்றுள் நடப்பதை – உண்மை நிகழ்வை – காட்டுவது நாடகம் என்றும் கூறுவார்.

கதை தழுவிய ஆடலே நாடகம் என்றும் கூறுவர். "*நாடகம் என்பது கலைக்காக*" என்பர்.

இயலும் இசையும் இணைந்து கதை தழுவிவரும் கூத்தே நாடகம் என்பதால், முத்தமிழும் ஒருங்கே அடைந்திருப்பது நாடகத்தமிழாகும்.

இதனை, "நாடகத்தின் கண்ணாடி, பாமர மக்களின் பல்கலைக்கழகம்" என்றும் கூறுவர்.

இது கூத்துக்கலையாகத் தொடங்கி, நாட்டியமாகி, நாட்டிய நாடகமாகி பின்பு நாடகமாக செழித்து வளர்ந்தது.

நாடகம் நிகழுமிடத்தை அடிப்படையாக வைத்து மேடை நாடகம், வீதிநாடகம் வானொலிநாடகம், தொலைக்காட்சி நாடகம் என்றவாறு வகைப்படுத்துவர்.

பயன்பாட்டைப் பொறுத்து நடிப்பதற்குரிய நாடகங்கள், படிப்பதற்குரிய நாடகங்கள், படிப்பதற்கும் நடிப்பதற்குமுரிய நாடகங்கள் என்று மூவகைப்படுத்துவர்.

உள்தன்மையைப் பொறுத்து:–

தொன்ம (புராண) நாடகங்கள், வரலாற்றுநாடகங்கள், குமுகாய (சமுதாய) நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், துப்பறியும் நாடகங்கள் என ஐவகைப்படுத்துவர்.

நாடகத்தரம்பையர் *nāḍaga-t-tarambaiyar,* பெ. (n.) மேனகை, அரம்பை, உருப்பசி, திலோத்தமை என்ற தேவகணிகையர் (பிங்.); celestial dancing-girls, four in number, viz., mēṉagai, arambai, uruppaši, tilōttamai.

[நாடகம் + அத்து + அரம்பையர்.]

"அத்து" = சாரியை.

நாடகத்தரு *nāḍaga-t-taru,* பெ, (n.) நாடகப்பாடல் வகை; a kind of song in drama.

[நாடகம் + தரு.]

நாடகத்தி *nāḍagatti,* பெ, (n.) 1. கூத்து நிகழ்த்தும் பெண் (யாழ்.அக.); actress. 2. விலைமகள் (வின்.); immodest woman.

[நாடகம் + அத்து + இ.]

'அத்து' = சாரியை.

"இ" பெண்பால் ஒருமைவிகுதி.

நாடகத்துறை *nāḍa-t-tuṟai,* பெ. (n.) நடனவித்தை (வின்.); dramatic art, art of dancing.

[நாடகம் + துறை .]

கதை தழுவிய கூத்துத்துறை. திரைப்படத்துறையின் புதியவடிவினால், நாடகத்துறை, பொலிவிழந்து நலிந்து வருவது கண்கூடு. பண்டைக்காலத்தே இத் துறை இசை தழுவியதாக இருந்ததற்குச் சிலப்பதிகாரம் நற்சான்றாகும்.

நாடகநடி—த்தல் *nāḍaga-naḍi-,* 4 செ.கு.வி, (v i.) *நாடகமடி (வின்.)—.* பார்க்க; see *nāḍagam-aḍi-.*

[நாடகம் + நடி —.]

நாடகநூல் *nāḍaga-nūl,* பெ. (n.) நாடக விலக்கணத்தைக் கூறும் நூல்; work on dramaturgy. '*நாடநூல்களி னமைந்த முறைமை யாகலான்*' (சிலப்.3:146,உரை.).

[நாடகம் + நூல்.]

நாடகவியல் நூல் என்று அழைக்கப்பெறும். நாடகக்கலை, கோட்பாடுகள் முதலான நாடகவியலை உள்ளடக்கியது.

நாடகநூலார் *nāḍaga-nūlār,* பெ, (n.) நாடக நூல் இயற்றிய ஆசிரியர்; writers on dramaturgy. '*'நாடகநூலார் இவ்விருப்பை ஐம்பதென விரிவரையரையாற்கூறி*'' (சிலப்.8:25,உரை.).

[நாடகம் + நூலார்.]

நூலார் = நூலாசிரியர்.

நாடகப்பண் *nāḍaga-p-paṇ,* பெ, (n.) நாடகத்தில் வழங்கும் பண்வகை (வின்.); a tune sung on the stage.

[நாடகம் + பண்.]

நாடகப்பரத்தை *nāḍaga-p-parattai,* பெ, (n.) *நாடகக்கணிகை* பார்க்க; see *nāḍaga-k-kaṇigai.*

[நாடகம் + பரத்தை.]

நாடகப்பாங்கு *nāḍaga-p-pāṅgu,* பெ, (n) நாடகக்கதை மாந்தர் நாடகக்கதைக்கு ஏற்றவாறு, தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ளும் செயல்; involvement role-play.

[நாடகம் + பாங்கு.]

நாடகப்பாடகர் *nāḍaga-p-pāḍagar,* பெ, (n.) நாடகத்தில் உரத்தகுரலிற் பாடுவதிலும், நடிப்பதிலும் வல்லார் (இ.வ.); actor as well as singer in a drama.

[நாடகம் + பாடகர்.]

நாடகப்பாத்திரம் *nāḍaga-p-pāttiram,* பெ, (n.) நாடகமேடையில் நடிப்போன் (இ.வ.); actor in a drama, dramatic person.

[நாடகம் + பாத்திரம்.]

நாடகப்பிரியா *nāḍaga-p-piriyā,* பெ, (n.) மேளகருத்தாக்களுளொன்று (சங்.சந்.47); a primary paṇ.

[நாடகம் + skt.பிரியா.]

நாடகப்பின்பாட்டு *nāḍaga-p-piṉ-pāṭṭu,* பெ, (n.) நாடகக் கதைமாந்தர்தம் பின்புலத்திலிருந்து பாடுபவர்; play-back singer of a drama.

[நாடகம் + பின்பாட்டு.]

நாடகம் தொய்வின்றித் தொடருதற் பொருட்டும், நாடகம் பார்ப்போருக்கு உவகை ஊட்டுதற்பொருட்டும், நாடகக் கதைமாந்தர் பாடலைப் பாடுந் தன்மையர் இவர்தமை நாடகப் பின்பாட்டு என்று அழைப்பர்.

நாடகப்பெண் *nāḍaga-p-peṇ,* பெ, (n.) *நாடகக்கணிகை (யாழ்.அக.)* பார்க்க; see nāḍaga-k-kaṇigai.

[நாடகம் + பெண்.]

நாடகம் *nāḍagam,* பெ, (n.) 1. தாளவொத்துக்கு இயைய நடிக்கும் நடம் (பிங்.); measursed dance. 2. கதை தழுவி வரும் கூத்து; dramatic performance play, drama. 3. இன்பியல் துன்பியல் எனும் இருவகைக்கூத்து; comedy and tragedy of play or drama. *"கதை மாந்தர்தம் உருவம் பூண்டு ஒரு கதையை இயல்பாக நடந்தது போல் நடித்துக்காட்டுவது"* (சிலப்,3:12,உரை.); 4. *நாடகத்தமிழ்* பார்க்க; see *nāḍaga-t-tamiḻ.* இயலிசை நாடகம்.

த. நாடகம்→ Skt. nātaga

[நடி + அகம் →நாடகம் =நடம் (பிங்.) கதை தழுவி வருங் கூத்து " நாடக வழக்கினும் உலகியல் வழக்கிலும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்." (தொல்.அகத்.53.) (வே.க.3:54.)]

பன்னெடுங்காலமாக இசைதழுவி யமைந்த கூத்து வகையே, காலப்போக்கில் கதை தழுவிய நாடகமாக மாறிற்று.

நாடகம் பற்றி மொழிஞாயிறு கூறுவது:–

நாடகம் என்பது தென்சொல்லே. நள்ளுதல் = பொருந்துதல், ஒத்தல். நள் →நளி என்பது ஓர் உவமஉருபு. நளிதல் = ஒத்தல். நளி → நடி **ஒ.நோ:** களிறு → கடிறு.

நடித்தல் என்பது, இன்னொருவனைப் போல் அல்லது இல்லாததை, உள்ளதுபோலச் செய்து காட்டுதல்.

த. நடி → நடம் → நட்டம் → ந்ருத்த (வ.)

ஒ.நோ: வட்டம் – வ்ருத்த (வ.).

நட்டம் → நட்டணம், நட்டணை.

நட்டம் → நட்ட(பிரா.).

ஒ.நோ: வட்டம் → வட்டணம் → வட்டணை.

த. நட்டணம் → நர்த்தன (வ.)

நட்டம் → நட்டுவன்.

ஒ.நோ: குட்டம் → குட்டுவன்.

நடி → நடனம். ஒ.நோ: படி → படனம் = படிப்பு.

நடி → நாடகம். ஒ.நோ: படி → பாடகம் = பாதத்திற் படிந்து கிடக்கும் அணி.

முத்தமிழ் தொன்றுதொட்டே இயலிசை நாடகம் என்றே வழங்கும்.

நாடகக்கலை கூத்து, நடனம், நாடகம் என முத்திறப்படும்.

குதித்தாடுவது கூத்து. அது வேத்தியல், பொதுவியல்; உலகியல், தேவியல்; வசைக் கூத்து, புகழ்க்கூத்து; வரிக்கூத்து, வரியமைதிக் கூத்து (வரிச்சாந்திக் கூத்து); அமைதிக் கூத்து (சாந்திக் கூத்து), வேடிக்கைக் கூத்து (விநோதக் கூத்து); அகக்கூத்து, புறக் கூத்து, விளையாட்டுக் கூத்து, வினைக் கூத்து; வெற்றிக்கூத்து, தோல்விக்கூத்து; எனப் பல்வேறு வகையில் வருங்கூத்தை வேத்தியல், பொதுவியல் என இருவகையுள் அடக்குவர்.

நடனம் அல்லது நடம் என்பது, அழகுற ஆடுவது. அது நூற்றெட்டு உடற்கரணங் களோடும், கைகால் கண்வாய் முதலிய உறுப்புகளின் தொழில்களோடும் கூடியது. கைவினைகள் எழிற்கை, தொழிற்கை, பொருட்கை என முத்திறப்பட்டு, பிண்டி அல்லது இணையா வினைக்கை யெனப்படும். ஒற்றைக்கை வண்ணம் முப்பத்து மூன்றும், பிணையல் அல்லது இணைக்கை யெனப்படும் இரட்டைக் கைவண்ணம் பதினைந்தும் கொண்டனவாகும்.

நடம், நடனம் என்னும் தென்சொற்கள், வடமொழியில் நட்ட, நட்டன என்று வலிக்கும். நட்ட என்பதினின்றும் 'நாட்ய' என்னும் சொற் பிறக்கும்.

நடி என்னும் முதனிலை வடமொழியில் இல்லை. நிருத்த என்னும் சொல்லின் "ந்ருத்" என்னும் அடியையே, முதனிலையாக ஆள்வர்.

தமிழ் நடனம் இன்று பரத நாட்டியம் என்று வழங்குகின்றது. பரத சாத்திரம் கி.மு. 4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. அதற்கும் முந்தியது தமிழ்ப் பரதமே.

"நாடகத்தமிழ்நூலாகிய பரதம் அகத்திய முதலாகவுள்ள தொன்னூல்களு மிறந்தன," என்று அடியார்க்குநல்லார், சிலப்பதிகாரவுரைப் பாயிரத்திற் கூறியிருப்பதால் அறிந்துகொள்க.

நாடகம் என்பது கதை தழுவிவரும் கூத்து. அது பொருள், கதை(யோனி), தலைமை (விருத்தி), நிலை (சந்தி), சுவை, வகுப்பு (சாதி), குறிப்பு, விறல் (சத்துவம்), நளிநயம் (அபிநயம்), சொல், சொல்வகை, வண்ணமா, வரி, சேதம் என்னும் பதினான்குறுப்புகளை யுடையது.

நாடக அரங்கு நல்ல கெட்டி நிலத்தில், ஈரடி நீளமுள்ள கோலால், எண்கோல் நீளமும் எழுகோல் அகலமும், ஒருகோல் உயரமும் உள்ளதாக அமைக்கப்பட்டு, மேலே முகடும், ஒருமுகவெழினி, பொருமுக வெழினி, கரந்துவர லெழினி என்னும் மூவகைத் திரைகளும், புகுவாயில், புறப்படவாயில் (Exit) என்னும் இருவாயில்களும், உடையதாயிருந்தது.

தமிழ் நாடகமெல்லாம் இசைப் பட்டுள்ளவையே (operas)

நாடகம்[2] *nāḍagam,* பெ. (n.) தேரையர் இயற்றிய மருத்துவ பாரதம் என்னும் தமிழ் மருத்துவ நூல்; a medical science by Thēraiyar.

நாடகம்விளையாடு-தல் *nāḍagam-viḷai-āḍu-,* 5 செ.கு.வி, (v.i.) *நாடகமாடு- (வின்.)* பார்க்க; see *nāḍagam-āḍu-.*

[நாடகம் + விளையாடு-.]

நாடகமகள் *nāḍaga-magaḷ,* பெ, (n.) 1. நாடகமாடுங் கணிகை; dancing- girl. *"நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த*

வோவியச் செந்நூல்" (மணிமே.2:30.). 2. *நாடகக்கணிகை* பார்க்க; see *nāḍaga-k-kaṇigai.*

[நாடகம் + மகள்.]

நாடகமாடுங்கணிகை, ஆடலும் பாடலும், அழகும் எனும் முத்திறனும், குறைவின்றி நிறைவாகப் பெற்றிருக்கவேண்டும்.

நாடகமடி—த்தல் *nāḍagam-aḍi-,* 5 செ.குன்றாவி, (v.i.) 1. பாசாங்கு செய்தல் (யாழ்.அக.); to play the hypocrite 2. புறத்தே மாற்றுருக்காட்டுதல்; to make an outward show. 3. வீணே, பகட்டாரவாரங் காட்டுதல்; to be showy, ostentatious 4. சினம் முதலியவற்றால், பிறருக்கு எரிச்சலூட்டும்படி, வெறுப்புடன் நடத்தல் (வின்.); to be arrogant or affected, as a woman in displeasure.

[நாடகம் + அடி—.]

நாடகமரபு *nāḍaga-marabu,* பெ, (n.) நாடக அமைப்பில் தொன்றுதொட்டு கடைப்பிடிக்கும் உத்தி; traditional techniques of drama.

[நாடகம் + மரபு—.]

நாடகத்தில் தொன்றுதொட்டு கடைப்பிடிக்கப்படும், அடிப்படைக் கலைநுணுக்கம்.

நாடகமாடு—தல் *nāḍagam-āḍu-,* 5 செ.குன்றாவி, (v.i.) 1. கூத்து நடித்தல்; to act or play on the stage, to dance. "*கழுதொடு காட்டிடை நாடக மாடி*" (திருவாச.5.7); 2. *நாடகமடித்தல்* பார்க்க; see *naḍagam-aḍi-.*

[நாடகம் + ஆடு—.]

நாடகமுகப்பு *nāḍaga-mugappu,* பெ, (n.) நாடகமேடை; stage. "*நாடக முகப்பிற் றழுங்கு பல்லியம்*" (உபதேசகா.சிவபுண்.102.).

[நாடகம் + முகப்பு.]

நாடகமேடை *nāḍaga-mēḍai,* பெ, (n.) நாடகமாடும் அரங்கு (இ.வ.); stage.

[நாடகம் + மேடை.]

நாடகமேடையின் அமைப்புப் பற்றி இளங்கோவடிகள், "*நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும் காலளவு இருபத்து நூல் விரலாக, எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து, ஒருகோல் உயரத்து உறுப்பினதாகி*" என்று அரங்கேற்றுகாதை (99—103)யில் கூறியுள்ளார்.

நாடகர் *nāḍagar,* பெ, (n.) *நாடகியர் (வின்.)* பார்க்க; see *nāḍagiyar.*

[நடி + அம் → நாடகம். கதைதழுவி வருங் கூத்து. நாடகம் → நாடகர்.]

அகத் தெழும் உணர்வை, அஃதாவது உள்ளக் குறிப்பைத் திறலுடன், புறத்தே மெய்ப்பாடு மிளிர, வெளிப்படுத்துபவர்.

நாடகவரங்கம் *nāḍaga-v-araṅgam,* பெ, (n.) நாடகம் நிகழுமிடம்; drama theatre.

த. நாடகம் → skt. நாட்டக்க.

[நடி + அம் → நாடகம். + அரங்கம்.]

(ஒ.நோ.) படி + அகம் → பாடகம். அர் → அரங்கு + அம் → அரங்கம்.

அரங்கு = அறை.

த. அரங்கம் → skt ரங்க.

நாடகவரங்கம் = நாடகம் நிகழும் கூடம் அல்லது அரங்கம்.

நாடகவழக்கு *nāḍaga-vaḻa-kku,* பெ. (n.) நாடகத்திற்குரிய நெறி; dramatic usage-2, புனைந்துரை வழக்கு; idealism in poetry, opp, to ulagiyal vaḻakku. ***"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்"*** (தொல்.பொருள்.53).

[நாடகம் + வழக்கு.]

நாடகவியல் *nāḍaga-v-iyal,* பெ. (n) நாடகநூல் பார்க்க; see nāḍaga-nūl.

[நாடகம் + இயல்.]

பரிதிமாற் கலைஞரால், கி.பி. 1897-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட நூல். நடிகர் இயல்பு, நடிப்பின் தன்மை, நாடகவரங்க அமைப்பு போன்றவற்றை, நூற்பாவடிவில் இயற்றப்பட்ட தலைச்சிறந்த நாடக இலக்கணநூலாகும்.

நாடகவிருத்தி *nāḍaga-virutti,* பெ, (n.) சாத்துவதி, ஆரபடி, கைசிகி, பாரதி என்ற நால்வகை நாடகநடை (சிலப்.3:13.உரை.); the style of dramatic art, of four kinds, viz., šāttuvadi, ārapaḍi, kaišigi, pāradi.

[நாடகம்+Skt.விருத்தி.]

நாடகவுத்தி *nāḍaga-v-utti,* பெ, (n.) *நாடகமரபு* பார்க்க; see *nāḍaga-marabu.*

[நாடகம்+உத்தி.]

நாடகன் *nāḍagaṉ,* பெ. (n.) 1. நடனமாடுவோன் (பிங்.); dancer. *"பதஞ்சலிக்கருளிய பரம நாடக"* ***(திருவாச.வ:138).*** 2. நடிகன்; actor.3. நடிப்பையும், நடனத்தையும், வாழ்க்கைத் தொழிலாகவுடையர்; player.

[நடி + அகம் → நாடகம் → நாடகன்.]

நாடகாங்கம் *nāḍagāṅgam,* பெ.(n.) 1. அகத்துணர்வைத் தெரிவிக்கும் மெய்ப்பாட்டசைவு (வின்.); gesture. 2. நிற்கும் நிலை, மனப்பாங்கினை வெளிப்படுத்தும் கலைப் பாங்கு; pose.

[நாடகம் + அங்கம் → நாடகவங்கம் → நாடகாங்கம்.]

நாடகி *nāḍagi,* பெ. (n) நாடகமாடுபவள் (இ.வ.); actress.

[நாடகம்→நடகி.]

நாடகியர் *nāḍagiyar,* பெ. (n.) 1. கூத்தர் (திவா.); dancers 2. நடிகர்; actor. 3. ***நாடகன்³.*** பார்க்க; see *nāḍagaṉ.³.*

[நாடகம் + நாடகர் →நாடகி + அர்.]

நாடகீயர் *nāḍagīyar,* பெ. (n.) *நாடகியர்* ***(வின்.)*** பார்க்க; see *nāḍagiyar*

[நாடகியர் → நாடகீயர்.]

நாடங்காய் *nāḍaṅgāy,* பெ. (n.) சுரைக்காய் (யாழ்ப்.); bottle gourd.

நாடடிப்படு-த்தல் *nāḍaḍi-p-paḍu-,* 20 செ.கு.வி, (v i.) நாட்டைவென்று கீழ்ப்படுத்தல் (யாழ்.அக.); to subjugate a country.

[நாடு + அடிப்படு-.]

நாடவர் *nāḍavar,* பெ. (n) தேசத்தார்; countrymen, people of the country "*நாடவர்*

பழித்துரை பூணது வாக" (திருவாச.4:69.). "*நாடவர் நந்தமை ஆர்ப்ப ஆர்ப்ப நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப*". (திருவாசக.9:28).

[நாடு → நாடவர்.]

நாடறிவான் *nāḍarivāṉ,* பெ. (n.) நாடுகளை அறியும் நிலவன் (சந்திரன்.); moon, as witnessing all countries. "*நாடறிவான் பொன்புந்தி*" (சினேக்.தாது.2).

[நாடு + அறிவான்.]

நாடன் *nāḍaṉ,* பெ. (n.) 1. தேசத்தான்; inhabitant, countryman. "*வானாடர் கோவுக்கே*" (திருவாச.13:5). "*வான நாடனே வழித்துணை மருந்தே*" (தேவா.) 2. ஆளுந் தலைவன்; ruler, lord of a country. "*தென் பாண்டி நாடனைக் கூவாய்*" (திருவாச. 18:2). 3. குறிஞ்சிநிலத் தலைவன்; chief of kuriñji tract "*நாட னென்கோ வூர னென்கோ*" (புறநா.49). 4. கார்த்திகை விண்மீன் (திவா.); the third(naksatra) viṇmīṉ.

[நாடு + அன் → நாடன்.]

நாடன்பருத்தி *nāḍaṉ-parutti,* பெ. (n.) பருத்தி வகை (மூ.அ); coconada cotton-. Gossypium nadam.

[நாடன் + பருத்தி.]

நாடன்பூ *nāḍaṉ-pū,* பெ. (n) மருத்துவகுணமுள்ள மலர்; a kind of medicinal flower.

[நாடன் + பூ.]

நாடன்மஞ்சள் *nāḍaṉ-mañjaḷ,* பெ. (n.) மஞ்சள் வகை; a kind of turmeric. "*திருச் சுண்ணத்துக்கு நாடன்மஞ்சள் நாற்பதின் பலமும்*" (S.I.I iii,187.).

[நாடன் + மஞ்சள்.]

நாடா *nāḍā,* பெ, (n.) 1. நெசவுக்கருவி வகை; weaver's shuttle, commonly made of a small hallow bamboo "*தார் கிடக்கும் நாடாப்போல மறுகுவர்*" (சீவக.3019,உரை). 2. கட்டுதற்கு உதவும்படி ஆடைக்கரையில் நெய்யப்பட்ட நாற்பட்டை; ribbon, tape. நாடா வைத்துத் தை. 3. யூதர்கள் தம் வேதத்தொடர்களை எழுதிச் சிறுதோற்பையிலடக்கஞ் செய்து அணிந்து கொள்ளும் அணிவகை(கிறித்.); phylactery, frontlet.

த. நாடா→ ப. நாரா.

நாளம் → நாளி → நாழி = உள்துளைப்பொருள்.

நாழி → நாடி = அரத்தக்குழாய்.

நாடி → நாடா = நெசவுக்குழல்.



நாடாஎக்குகை *nāḍā-ekkugai.* பெ. (n) நாடாவின் இடையே பாவுநூல் தாண்டிச்செல்கை; shuttle's thread flying between two ends of the warp.

[நாடன் + எக்குகை.]

நாடாக்கம்பம் *nāḍā-k-kambam,* பெ. (n.) நாடாவில் தார் செருகுவதற்குரிய இரும்புக்கம்பி; steel bobbin.

[நாடா+ கம்பம்.]

நாடாக்குமிழ் *nāḍā-k-kumiḻ,* பெ. (n.) நூல்தறி நாடாவின் இருமுனையிலும் இரும்பால் செய்யப்பட்டக் கூம்பு; iron knob fixed at both ends of shuttle.

[நாடா+ குமிழ்.]

நாடாட்சி *nāḍāṭci,* பெ. (n.) தேசத்தை ஆளுகை (S.I.I.ii,512.); administeration of a country.

[நாடு + ஆட்சி→ நா(ட்)டாச்சி.*]*

ஒ.நோ. ஊராட்சி, நகராட்சி.

நாடாத்தந்தம் *nāḍā-t-tandam,* பெ. (n.) தந்தத்தாலான பட்டுத்தறி நாடாவின் குமிழ்; ivory shuttle's knob of the silk-loom.

[நாடு+ skt *தந்தம்.]*

நாடாத்தி *nāḍātti,* பெ. (n.) சான்றார் (சானார்) பெண்ணுக்குரிய சாதிப்பெயர்; title of sāṉṟār woman.

[நாடான் → நாடாத்தி.]

(ந.நோ.) குறவன் → குறத்தி.

மறவன் → மறத்தி.

குயவன் → குயத்தி.

'அத்தி' பெ.பா. ஈறு.

நாடாநகரமைப்பு *nāḍā-nagar-amaippu,* பெ. (n.) சீரான, ஒரே மாதிரியான கட்டட அமைப்புகளைக் கொண்ட நகர வளர்ச்சி; ribbon development.

[நாடா + நகர்+ அமைப்பு.]

நாடாப்புழு *nāḍā-p-puḻu,* பெ. (n.) 1. நீண்ட தட்டையான பூச்சி; tape-worm. 2. பெரிய நாடாப்புழு; tape-worm of man.

[நாடா + புழு.]

நாடாப்பூச்சி *nāḍā-p-pūcci,* பெ. (n.) வயிற்றுப் புழுவகை; tape-worm.

[நாடா+ பூச்சி.]

நாடார் *nāḍār,* பெ. (n) *நாடான்* பார்க்க; see *nāḍāṉ.*

நாடாவில் *nāḍā-vil,* பெ. (n.) நூல்தறி நாடாவில் உள்ள வில்போன்ற தகடு; a steel plate fixed in the shuttle of the loom.

[நாடா+ வில்.]

நாடாள்வார் *nāḍāḷvār,* பெ. (n.) 1. பழனிமலைப் பகுதியிலுள்ள ஒரு சாதியார்; a caste in the Paḻaṉi region 2. ஆளுங்கட்சியர்; ruling party.

[நாடு + ஆள்வார்.]

நாடான் *nāḍāṉ,* பெ. (n) சான்றார் சாதிப் பெயர்; title of the sāṉṟār.

[நாடு → நாடான்.]

நாடி[1] *nāḍi,* பெ. (n.) 1. நாட்டிலுள்ளவள்; woman of a country. "*மிதிலை நாடிக்கும்*" (கம்பரா.சித்திர.48.). 2. நாட்டையுடையாள்; queen of a country., "*மையறு சிறப்பின் வானநாடி*" (சிலப்.11:215);

[நாடன்→ நாடி.]

நாடி[2] *nāḍi,* பெ. (n.) 1. (வாதம்) வளி அல்லது ஊதை, பித்தம், சளி முதலானவற்றைக் குறிக்கும் தாதுநரம்பு; நாழிகைக்கணக்கில் குருதியோடும் குழாய். pulse, of three kinds, viz., vaḷi-nāḍi(vādam), pitta-nāḍi, silēṭṭuma-nāḍi "*மூளையெலும்புகள் நாடி நரம்புகள்*" (திருப்பு–918.). 2. உடல் முறுக்கு; vitality நாடி தளர்ந்த பிறகுதான் சிலருக்குத் தாம் செய்த தவறுகள் நினைவுக்கு வருகின்றன (இ.வ.). 3. உட்டுளையுள்ள இடை, பிங்கலை, சுழிமுனை என்ற மூச்சுக் குழாய்கள்; tubular, organs of breath, of which there are three viz., iḍai, piṅgalai, suḻimuṉai 4. அரத்தக்குழாய் முதலியன; artery, vein tendon, sinew, muscle, ligament 5. யாழ் நரம்பு; lute- string.6. உட்டொளை யுடையது (அரு.நி.); anything tubular, tubular stalk, as of a plant. 7. பூவின்தாள் (யாழ்.அக.); flower- stalk. 8.மயிர் (அக.நி.); human hair. 9. நாழிகை (24 நிமையம்) (சூடா); the indian hour of 24 minutes.

[நாள் + நாளி →நாழி →நாடி]

அரத்தம் அல்லது மூச்சுக்குழாய். ஊதை(வாத), பித்தம், கோழை. நாடி, நாடித்துடிப்பு (வ.வ.19.).

நாடி[3] *nāḍi,* பெ. (n) கணிய நூல் (சோதிடம்); astrological treatise.

[நள் → நடு → நாடு → நாடி.]

நாடி[4] *nāḍi,* பெ. (n.) மோவாய்; chin. நல்ல வார்த்தை சொல்லி நாடியைத் தாங்கினான் (நெல்லை); உதவி கேட்டு நாடியைப் பிடித்துக்கெஞ்சினார் (இக்.வ.).

[தாடை → தாடி → நாடி.]

நாடி[5] *nāḍi,* பெ, (n) 1. மூக்கு (தைலவ. தைல.); nose. 2. மாளிகையின் மேற்பாகத்த தோர் உறுப்பு; a component part of the upper storey of a mansion. "*நாடிமுக நாள்கதனின்*" (சீவக.598.).

[நாளி → நாழி → நாடி.]

நாடிஅழுந்தல் *nāḍi-aḻundal,* பெ. (n.) நாடி நடைக்குறவு; sinking of pulse.

[நாடி + அழுந்தல்.]

நாடி அழுந்தல் 16 வகைப்படும் இதுபற்றிச் சா.அ் க. கூறுவது:–

1. அற்று நிற்றல்.
2. சிதறி ஓடல்.
3. கழன்று காணல்.
4. அழுந்தி நிற்றல்.
5. உதறி நிற்றல்.
6. விரைந்து (கதிப்பொடு) துடித்து நிற்றல்.
7. தணித்துத் தளரல்.
8. வேகமாய் ஓடல்.
9. மாறி ஓடல்.
10. நடுங்கி ஓடல்.
11. இரண்டுற ஓடல்.
12. அடுத்தடுத்தோடல்.
13. விரிந்து ஓடல்.
14. கூர்மையாய் ஓடல்.
15. புழுப்போலூர்தல்.
16. வலித்து ஓடுகை.

நாடிக்கட்டி *nāḍi-k-kaṭṭi,* பெ. (n.) *நாடி வித்திரதி (இங்.வை.)* பார்க்க; see *nāḍi-vittiradi.*

[நாழி → நாடி+ கட்டி.]

நாடிக்கதிப்பு *nāḍi-k-kadippu,* பெ. (n.) 1. நாடிக்குழலின் வாய் சிறுத்துப்போகும் தன்மை; the undue augumentation. 2. நாடிநடையின் விரைவு; (சா.அக.); rapid pulse

[நாடி+ கதிப்பு.]

நாடிக்குழல்கள் தடித்துப்போவதினால் நாடிக்குழாய் வாயில் உண்டாகும் மாற்றம் சுருங்குதல் தன்மை.

நாடிக்கபாடம் *nāḍi-k-kabāḍam,* பெ. (n) அரத்தம் பின்னிட்டு ஓடாதபடித் தடுக்கும் நாடிப்பூட்டு (சா.அக.); semilunar valves of the vessels.

நாடிக்கமலம் *nāḍi-k-kamalam,* பெ. (n.) மூக்கினின்று வடியும் நீர்; the watery discharge from the nose.

நாடிக்கவசம் *nāḍi-k-kavašam,* பெ. (n.) நாடிச்சுவரின் உள், நடு, வெளி ஆகிய மூன்று பகுதிகள்; the three coats of the walls of an artery.

[நாடி+ Skt. கவசம்.]

நாடிக்காயம் *nāḍi-k-kāyam,* பெ. (n.) நாடிக்குழலில் ஏற்படும் சிதைவு; injury or wound to blood vessels.

[நாடி+ காயம்.]

அரத்தக்குழலில் ஏற்படும் அழிபாடு.

நாடிக்குழல் *nāḍi-k-kuḻal,* பெ. (n.) செங்குருதியைக் கொண்டும் செல்லும் குழல் (சா.அக.); arterial tube conveying the bright red blood.

[நாடி+ குழல்.]

நாடிக்குறி *nāḍi-k-kuṟi,* பெ. (n.) வளி(வாத), பித்த, கோழை நாடிகளின் குறிப்பு; indication of the pulse.

[நாழி → நாடி+ குறி.]

நாடிக்குறிப்பு *nāḍi-k-kuṟippu,* பெ. (n) அரத்தவோட்ட நிலைமை; the state of blood in the arteries.

[நாடி → குறிப்பு.]

நாடிகம் *nāḍigam,* பெ. (n.) 1. பொட்டிக்கீரை; bristle leaved jew's mallow. 2. தொண்டை; wind-pipe throat

[நாடி → நாடிகம்.]

நாடிகரணம் *nāḍi-karaṇam,* பெ. (n.) தண்டைப்போன்ற கால்களுடைய பறவை; stalk legged bird.

நாடிகருப்பம் *nāḍi-karuppam,* பெ.(n.) மரமஞ்சள் (சங்.அக.); tree turmeric

நாடிகுடிலம் *nāḍi-kuḍilam,* பெ. (n) வளைந்து அல்லது குறுக்காக ஓடும் நாடி நடை; a bent or crooked movement of the pulse

நாடிகுணம் *nāḍi-kuṇam,* பெ. (n.) மூன்றுவகை நாடியின் தன்மைகள்; the three characteristic symptoms of the pulse.

[நாடி + குணம்.]

நாடிகூடம் *nāḍi-kūḍam,* பெ. (n.) திருமணம் உறுதிசெய்யுங்கால், பார்க்கும் கோள்சேர்க்கை; planetary conjuction consulted before a matrimonial alliance is fixed(astrol.)

[நாடி+ கூடம்.]

நாடிகெர்ப்பம் *nāḍi-kerppam,* பெ. (n) நாடிகருப்பம் பார்க்க; see nāḍi-karuppam.(ச.அக.).

[நாடி+ skt. கெர்ப்பம்.]

நாடிகெற்பம் *nāḍi-keṟpam,* பெ. (n.) மரமஞ்சள்; tree turmeric.

நாடிகேரளம் *nāḍi-kēraḷam,* பெ. (n.) தென்னை மரம்; cocoanut tree.

நாடிகேளம் *nāḍi-kēḷam,* பெ. (n) தென்னை(யாழ்.அக.); coconut tree.

[நாளிகேரம் → நாடிகேளம்.]

நாளி → நாடி. கேரம் →கேளம். நாடி = மூங்கிலொத்த புறக்காழ்த்தென்னை. மூங்கில் போன்றே, தென்னையும், குமரி நாட்டுத் தொன்மையை உணர்த்தும் சொல்லாகும்.

நாடிகை *nāḍigai,* பெ. (n) குருதிக்குழாய்; artery or vein.

[நாடி→நாடிகை.]

நாடிசுத்தி *nāḍi-sutti,* பெ.(n.) ஓகஞ்செய்வதற்கு நாடியைத் தூய்மைப்படுத்துகை; purification of pulse for yōga practice

[நாடி+ skt. சுத்தி.]

நாடி = செங்குருதியோடுங்குழல்.

நாடிஞானம் *nāḍi-ñāṉam,* பெ. (n.) நாடியின் தன்மையை அறியும் அறிவு; knowledge of pulse.

[நாடி→ ஞானம்.]

நாடித்துடிப்பு[1] *nāḍi-t-tuḍippu,* பெ. (n.) 1. குருதியோட்டத்தினால் உடம்பிற் பலவிடங்களிற் காணும் படபடப்பு; the beating of the pulse felt at several parts of the body owing to the circulation of blood. 2. நாடி வேகமாய் அடித்தல்; rapit pulsation

[நாடி+ துடிப்பு.]

குதிக்கால், உந்தி, மார்பு, கைம்மூலம் சந்து, கழுத்து, காதடி, மணிக்கட்டு, கவின் துண்டம் ஆகியன நாடிநடையை உடம்பிற் கண்டறியத்தக்க விடங்களென சா.அக. குறிப்படும்.

நாடித்துடிப்பு[2] *nāḍi-t-tuḍippu,* பெ. (n.) அரத்தம் (இதயம்) நெஞ்சாங்குலையிலிருந்து விட்டுவிட்டுப் பாய்வதால் அரத்தக்குழாய் (தமனி) விரிந்து சுருங்கி ஏற்படுத்தும் துடிப்பு; pulse. மணிக்கட்டைப் பிடித்துப் நெற்றிப்பார்த்தால், நாடித்துடிப்பை உணரலாம்.

[நாடி+ துடிப்பு.]

நாடித்தூக்கம் *nāḍi-t-tūkkam,* பெ. (n.) நாடியொடுக்கம்; sinking of the pulse

[நாடி+தூக்கம்.]

நாடித்தொகுதி *nāḍi-t-togudi,* பெ. (n.) பலநாடிகள் சேர்ந்த கூட்டம் (சா.அக.); group of arteries

[நாடி+தொகுதி.]

நாடித்தொந்தம் *nāḍi-t-tondam,* பெ. (n.) மூன்றுவகை நாடிகளின் பிணைப்பு; the pulse interchanging of three humours

நாடித்தோற்றம் *nāḍi-t-tōṟṟam,* பெ. (n.) 96(அங்குலம்) விரலஅளவுள்ள உடம்பில் காணப்படும் 72000 நரம்புகள்; there are 72,000 nerves in the 96 inches body.

நாடிதயம் *nāḍidayam,* பெ. (n.) குழலின் வழியாக இழுத்தல் அல்லது குடித்தல்; sucking or drawing through a tube.

நாடிதரங்கம் *nāḍi-daraṅgam,* பெ. (n) நஞ்சுவகையு ளொன்று; a kind of poison.

நாடிதாது *nāḍi-tāḍu,* பெ. (n.) உடம்பின் ஆக்க மூலப்பொருளைக் கொண்டு செல்லும் தசைக்கட்டு நிரம்பிய வலிமை வாய்ந்த நரம்பிழை; nervous tissue.

[நாடி+தாது.]

நாடிதாரணை *nāḍi-tāraṇūai,* பெ. (n.) 1. நாடியோட்டம் பார்க்க; see nāḍi-y-ōṭṭam. 2. நாடிகளின் நடைமுறை (வின்); the system of nerves and arteries with their ramifications.

மறுவ. நாடிநடை.

ஒரு நிமையத்திற்கு 30 அடிதூரம் பாய்ந்து ஓடும் செவ்வரத்தக் குழல்களின் துடிப்பே, நாடிதாரணை யெனப்படும். மருத்துவ முறைப்படி நாடிதாரணையை மிக நுண்மையாக அறியவேண்டின். கணுக்கைக்கருகில் உள்ள மணிக் கட்டினை அழுத்திப் பார்த்து அறியலாம்.

நாடிநடை *nāḍi-naḍai.* பெ.(n.) 1. *நாடியோட்டம்* பார்க்க; see *nāḍi-y-ōṭṭam.* 2. *நாடிதாரணை* பார்க்க; see *nāḍi-tāraṇai.*

[நாடி+ நடை.]

நெஞ்சாங்குலை சுருங்கி விரிவதன்மூலம், உண்டாகும், செவ்வரத்தக்குழல்களின் துடிப்பே, நாடிநடை. சுருங்கக்கூறின் செவ்வரத்தக் குழல்களின் அரத்தவோட்ட நிலைமை, நாடிநடை எனப்படும்.

நாடிநரம்பு *nāḍi-narambu,* பெ. (n.) அரத்தக்குழலும், நரம்பும் (சா.அக.); blood vessels and nerves "*மூளையெலும்புகள் நாடிநரம்புகள்*" (திருப்பு.918).

[நாடி+ நரம்பு.]

நாடிநாளம் *nāḍi-nāḷam,* பெ. (n) செவ்வரத்தமும், காரரத்தமும் ஓடும் குழல்; artery and vein

[நாடி+ நாளம்.]

நாடிநிலை *nāḍi-nilai,* பெ. (n.) நாடியின் நிலைமை; state of the pulse.

[நாடி + நிலை.]

நாடிநூல் *nāḍi-nūl,* பெ. (n.) உடம்பில் நாடிகள் இயங்கும் தன்மையைக் கூறும் நூல்; a treatise on pulsation

நாடிப்பத்திரம் *nāḍi-p-pattiram-,* சேம்பு;, cocoa root (சா.அக.)

நாடிப்பயிற்சி *nāḍi-p-payiṟci,* பெ. (n.) நாடியைத் தெரிவு செய்கை; examination of the pulse, feeling the pulse.

[நாடி + பயிற்சி.]

நாடிப்பரீட்சை *nāḍi-p-parīṭcai,* பெ.(n.) *நாடிப்பயிற்சி* பார்க்க; see *nāḍi-p-payiṟci.*

[நாடி + skt. பரீட்சை.]

நாடிபார்-த்தல் *nāḍi-pār-,* 4 செ.கு.வி, (v.i.) தாது பார்த்தல்(யாழ்.அக.); to feel the pulse

[நாளி →நாடி + பார்]

மணிக்கட்டில் விரலால் அழுத்தி நாடியை உணர்தல்.

இந் நாடி பார்த்தலாலேயே, உயர் அரத்தவழுத்தத்தினையும், குறைந்த அரத்தவழுத்தத்தினையும், மருத்துவரால் அறிவியலும். அன்று முதல் இன்று வரை நாட்டுமருத்துவத்திலும் ஆங்கில மருத்துவத்திலும், நாடிபார்த்து, உடல் நலத்தை மருத்துவர் கணிப்பர்.

நாடிமண்டலம் *nāḍi-maṇḍalam,* பெ. (n.) **1.** சூரியவீதி (வின்.), நிலநடுக்கோடு; celestial equator, equinoctial. **2.** நரம்புமண்டலம்; nervous region. **3.** நாடிநடையைக் குறிப்பிடக்கூடிய இடங்கள்; the places in which the human body, where in the pulsation is perceivable.

[நாடி+ மண்டலம்.]

கோளங்களின் இருதுருவங்களுக்கு இடையிலுள்ள நடுவட்டக்கோடு, அஃதாவது, நிலவுலக ஊடச்சுக்குச் செங்குத்தான தளமுடைய, வான்கோள் வட்டம்.

நாடிமருத்துவம் *nāḍi-maruttuvam,* பெ. (n.) ஊதை, பித்தம், கோழை என்னும் முந்நாடியையும் நாடி, நாடித்துடிப்பு அல்லது நாடிநடையறிந்து செய்யும் மருத்துவம் South Indian system of medical treatment.

மறுவ. சித்தமருத்துவம்.

[நள் → நாளம் → நாளி → நாழி → நாடி+மருத்துவம்.]

அறிவரால் வளர்க்கப்பெற்ற மருத்துவமே நாடி மருத்துவம். முதற்கண் ஊதை, பித்தம், கோழை என்னும் முத்திற நாடியையும் ஆய்ந்து, நாடிதுடிப்பையும் உணர்ந்து, நோயின் தன்மைக்கு ஏற்றவாறு, செந்தூரச்சுண்ணம், வேர்களால் உருவாக்கிய மருந்துகளினால் செய்யப்படும் மருத்துவம். தமிழ் மருத்துவக்கலை, சித்தரால் வளர்க்கபெற்றது. நாடிபிடித்துநோயின் தன்மையை அறிந்து செய்யப்படுவதே நாடிமருத்துவம். நாடிமருத்துவர் தமிழகத்தின் அனைத்துச்சிற்றூர்களிலும் வதிந்து, நாடிமருத்துவக் கலையினை நன்கு வளர்த்துள்ளனர்.

மாந்தர்தமை நூற்றுக்கணக்கான ஆண்டுகள் வாழ்விப்பதும், நோயினை வேரொடு களைவதும், நாடி மருத்துவத்தின் தலையாயச்சிறப்பெனின் மிகையன்று. வள்ளுவப் பொருந்தகை நாடி மருத்துவம் பற்றிக் கூறுங்கால், ''*மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று*'' (குறள்,941). எனக் குறித்துள்ளது அறிக.

ஊதை, பித்தம், கோழை என்னும் முத்திற நாடியையும் நாடி. அதனால் இற்றைக் கருவிகளைக் கொண்டு தலைசிறந்த தேர்ச்சிபெற்ற மேலை மருத்துவரும் கண்டுபிடிக்க முடியாத, நோயின்தன்மையை

"*நோய்நாடி நோய்முதல்நாடியது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச்செயல்*" (குறள்,648.) என்று, வள்ளுவர் வகுத்த வண்ணம், நாடிபிடித்துப் பண்டுவஞ் செய்யும் சித்தமருத்துவனின் செயல், தெய்வத்திறமாம்.

நாடி பார்க்கும் திறமில்லாதவன் மருந்தனே யன்றி, மருத்துவனாகான் இந்திய மருத்துவம் எனப்படுவது யாதெனின் நாடிபார்த்துச் செய்யப்படும் நாட்டுமருத்துவமே ஆகும்.

"*வேர்பார், தழைபார், மெல்ல, மெல்லச் செந்தூரச் சுண்ணம் பார்*" என்பது நாடிபார்த்துச் செய்யப்படும் நாட்டுமருத்துவப் பழமொழி, "*ஆயிரம் வேரைக் கொன்றவன் அரைமருத்துவன்*" (பழ.) என்பது "*ஆயிரம் பேரைக் கொன்றவன் அரைமருத்துவன்*" என்னும் பழமொழியின் திரிபே. இங்கு, வேர் → பேர் (வேர் என்பது பேர்) என்று மக்கள் பேச்சுவழக்கில் வழக்கூன்றியுள்ளமை அறிக.

நாடி மருத்துவமென்பது யாதெனின், உடம்பில் நாடிநடையைக் குறிக்கும், உந்தி, மார்பு, கைம்மூலம், சந்து, கண்டம், காதடி, இருகை, கவின்துண்டம் முதலானவற்றில் உள்ள நாடியை ஆய்ந்து, உந்தியில் தோன்றும் ஊதையையும். மார்பிலுறையும் பித்தத்தையும், தலையில் படியும் கோழையையும், நீக்குவதேயாகும்.

நாடிமூங்கில் *nāḍi-mūṅgil,* பெ. (n.) குழாய் மூங்கில்; hollow bamboo.

நாடியழற்சி *nāḍi-y-aḻarci,* பெ. (n) செவ்வரத்தக் குழாய்களில் ஏற்படும் வீக்கம்; inflammation of an artery.

நாடியழுந்து—தல் *nāḍi-y-aḻundu-,* 5செகுன்றாவி. (v.t.) நாடியனது நடை குறைதல்; to come down the function or rate of pulse. "*நாடியழுந்தியதால் அவர், அதிகநாள் தாங்கமாட்டார்*" (இ.வ.).

[நாடி + துடிப்பு.]

வாணாளில் இறுதிக்காலத்தே, சிறிது சிறிதாக, நாடித்துடிப்புக் குறைதல்.

நாடியளவு *nāḍi-y-aḷavu,* நாடிநடையின் வேகத்தினளவு – வளி(வாதம்)1, பித்தம்1/2, கோழை(கபம்) 1/4 இவ்வளவேயிருப்பின் உடம்பில் நோயில்லையெனக் கொள்ளப்பெறும் (சா.அக.); vaḷi, pittam and kabam in normal sate must be in the proportion of 1:1/2:1/4 any difference in the proportion indicates disease.

[நாடி + அளவு.]

நாடியிருக்கம் *nāḍi-yiyakkam,* பெ. (n.) நாடிநடை; beating of the pulse.(சா.அக.)

நாடியுப்பு *nāḍi-y-uppu,* பெ. (n.) வளையலுப்பு (சங்.அக.); glass-gall

[நாடி + உப்பு.]

நாடியெழு—தல் *nāḍi-y-eḻu-,* 2 செ.கு.வி. (v.i.) *நாடியெழும்பு—தல்* பார்க்க; see nāḍi-eḻumbu-

[நாடி + எழு—.]

நாடியெழும்பு—தல் *nāḍi-eḻumbu-,* 5 செ.கு.வி, (v.i.) துடிப்பு கிளம்புதல்; to rise of the pulse.

மறுவ. தாதுஓடுதல்

[நாடி + எழும்பு—.]

நாடியைத்தாங்கு—தல் *nāḍi-yai-t-tāṅgu-,* செ.குன்றா.வி, (v.t.) இரத்தல் (இ.வ.); to entreat, beg.

[நாடி[4] + தாங்கு.]

நாடியொடுங்குதல் *nāḍi-y-oḍuṅgudal,* பெ. (n.) *நாடிவிழுதல்* பார்க்க; see *nāḍi-viḻudal*

[நாடி² + ஒடுங்குதல்.]

நாடியொடுங்குதல் சாக்குறி நிலையாகும்.

நாடியோட்டம் *nāḍi-y-ōṭṭam,* பெ, (n.) 1. தாது நடக்கும் இயல்பு; pulsation. 2. *நாடி நிலை* பார்க்க; see *nāḍi-nilai.*

[நாடி + ஓட்டம்.]

நாடிவித்திரதி *nāḍi-vittiradi,* பெ, (n.) நாடிக்குழாய்கள் விரிந்து காணும் ஒருவகைக் கட்டி (இங்.வை.); morbid dilatation of the coats of an artery.

[நாடி + skt.வித்ரதி → வித்திரதி.]

நாடிவிசை *nāḍi-viśai,* பெ, (n.) நாடிநடையின் வேகம்; a rapidity of the pulse.(சா.அக.)

[நாடி + விதி.]

நாடிவிதி *nāḍi-vidi,* பெ, (n.) நாடித்திட்டம் அறிவிக்கும் ஒரு நூல்; a treatise on pulse.

[நாடி + விதி.]

நாடிவிரணம் *nāḍi-viraṇam,* பெ, (n.) நரம்பில் ஏற்படும் கட்டி; abscess of the artery.

நாடிவிழுதல் *nāḍi-viḻudal,* பெ, (n) 1. தாதுவின் ஒடுக்கம்; sinking of the pulse. 2. துணி விழக்கை: மனஉறுதி குறைகை; losing courage and hope, becoming downhearted.

[நாடி + விழுதல்.]

நாடிவேகம் *nāḍi-vēgam,* பெ, (n.) நாடிவிசை பார்க்க; see nāḍi-viśai (சா.அக.)

நாடு¹–தல் *nāḍu,* 5 செ.குன்றாவி, (v.t.) 1. தேடுதல்; to seek, enquire after "*தனக்குத் தாய் நாடியே சென்றாள்*" (நாலடி,15.). 2. விரும்பித்தேடுதல்; to seek. கட்சிக்காரர் தேர்தல்காலத்தில் மட்டும் மக்களை நாடுகின்றனர் (இக்.வ.). பழுத்தமரத்தை நாடிப் பறவைகள் வருதல் இயல்பே (இக்.வ.). உங்களிடம் ஒருஉதவி நாடி வந்திருக்கிறேன் (இக்.வ.). 3. தொடர்தல் to pursue. 4. ஆராய்தல்; to examine "*நாடாது நட்டலிற் கேடில்லை*" (குறள்,791.) 5. துருவித்தேடுதல்; to investigate 6. விரும்புதல்; to desire earnestly. "*நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்*" (பதிற்றுப்.86.7). அமைதியைநாடி ஊர்ஊராகத் திரிந்தார் (இ.வ.). பணத்தை நாடாதவர்கள் யார் (இ.வ.). 7. தெரிதல் ; to know, understand. "*முன்னவ னிதனை நாடி*" (கந்தபு. ததீசியு.32): 8. ஒத்தல்; to resemble. "*வேயொடு நாடிய தோள்*" (தொல்.பொருள்.286,உரை.) 9. அளத்தல்; to measure. "*நாடற்கரிய சீர் ஞானசம்பந்தன்*" (தேவா.518:11). "*நாடற்கரிய நலத்தை நந்தாத் தேனைப் பழச்சுவை ஆயினானை*" (திருவாச.) 10. கிட்டுதல்; to reach, approach. இங்கே நாடவொட்ட வில்லை (உ.வ.) 11. நினைத்தல்;to think, consider "*நன்மார்க்க ஞானத்தை நாடி*" (சி.சி. 8,22.) 12. மோப்பம் பிடித்தல்(வின்.); to scent, as dogs

ம., நாடுக து., நாடுனி.

[நோள் → நோடு → நாடு–.]

நாடு²–தல் *nāḍu-,* 5 செ.கு.வி, (v.i.) பயன்கருதிச் செல்லுதல்; to opproach சிக்கல் அல்லது நிலத்தகராறு போன்றவற்றைப் போக்க அறமன்றங்களை நாடுவதால் பணச் செலவுதான் மிஞ்சும் (உ.வ.).

[நோடு → நாடு.]

நாடு³–தல் *nāḍu-,* 5 செ.கு.வி, (v.i.) அளவு படுதல்; to be measured. "*நண்பென்னு நாடாச் சிறப்பு*" (குறள்,74.).

ம., நாடுக து., நாடுனி.

[நோள் → நோடு → நாடு–.]

நாடு⁴ *nāḍu,* பெ, (n.) 1. முல்லைக்கும் நெய்தற்கும் இடைப்பட்டமருதநிலம்; agricultural tract "*நாடிடையிட்டும் காடிடையிட்டும்*" (சிலப். 8:61, அரும்.) 2. மக்கள் வாழுமிடம்; city, locality, situtaion "*ஈமநாட்டிடையிராமல்*" (கம்பரா. இலங்கைக்கே. 45.) 3. தேசம்; country 4. தேசப்பகுதி; district, province "*நாடு மூரு மறியவே*" (திவ்.பெரியாழ்.3:7:5.) (எ–டு) பாண்டிநாடு (S I.I.ii.48.). 5. ஊர்; town, village (எ–டு) கூடறைநாடு. 6. சிற்றூர்; small village 7. நாட்டுப்புறம் (இ.வி.), rural tracts,opp.to nagar-p-puram 8. நிலப்பரப்பு,பூமி; earth, land. 9. உலகம்; world. "*புலத்தலிற்புத்தேள் நாடுண்டோ*" (குறள்,1323.) 10. முடியரசு நாடு; kingdom. 11. அரசியல்; மாநிலம்; state. ஆட்சிப்பகுதி, "*நாடுகவர்ந்தான்*" (கம்பரா.மாரீசன்.108.).

க,தெ,து, நாடு ம. நாடு

[நண் →நள் →நடு →நாடு.]

நாடு⁵ *nāḍu-,* பெ, (n.) 1. இடம்; place, 2. இடப்பரப்பு(வின்.); open place. space, area. 3. அறை; room, 4. பக்கம் (வின்.) side. 5. கால்பங்கு: 25 விழுக்காடு; quarter 6. ஒரு பேரெண்(பிங்.); a very large number = 8 padumam.

[நள் → நடு → நாடு.]

நாடுகடத்து–தல் *nāḍu-kaḍattiu-,* 5 செ.குன்றாவி, (v.t.) நாட்டிற்கு இரண்டகம் செய்தல், கமுக்கச் செய்திகளை வெளியிட்டுக் காட்டிக் கொடுத்தல் போன்ற சட்டத்திற்குப் புறம்பான செயல்களுக்காக, ஒருவரை நாட்டைவிட்டு வெளியேற்றுதல்; to exile, to banish.

[நாடு + கடத்து–.]

நாடுகண்காட்சி *nāḍu-kaṇkāṭci,,* பெ, (n.) நாட்டில் நடக்கும் நிருவாகத்தையும் செயற்பாடுகளையும் கண்காணிக்கும் அதிகாரி; overseer of a nāḍu. (I M P.cg.211.).

[நாடு+ கண்காட்சி.]

நாடுகாவல் *nāḍu-kāval.* பெ. (n.) வரிவகை (S.I.I.iii 437.); an ancient tax

[நாடு + காவல்.]

நாடுகிழவோன் *nāḍu-kiḻavōṉ,* பெ. (n.) நாட்டிற்குரியோன்; king of owner of that region "*பழமுதிர்சோலை நாடுகிழவோனே*" (திருமுருகாற்றுப்படை).

[நாடு + கிழவோன்.]

நாடுகிழவோன் என்பது, ஊர்த்தலைவனைக் காட்டிலும், ஆளுமைப் பண்பிற்குரியவனும், உயர்ந்த நிலையி லிருப்பவனுமான, குறுநிலமன்னனைக் குறிக்கும். நாடு என்பது, ஒன்றிற்கு மேற்பட்ட பலவூர்களை உள்ளடக்கியது. கிழார் என்பவன் கிழவர் என்பதன் மரூஉ.

(ஒ.நோ.) கிழவன்→ கிழான்.

பெருமான் + பிரான்.

கிழவர் என்பது, கிழவன் என்பதன் உயர்வுப்பன்மை குறித்த, உரிமைப்பெயர். கிழவன் என்பவன் நிலத்திற்குரியவன்; உழவன்

என்னும் பொருண்மை பொதிந்த சொல். இக் கருத்தினை உலகப்பொதுமறை பின் வருமாறு பேசும். "*செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலர் இல்லானின் ஊடி விடும்*" (குறள், 1039.).

ஈங்கு, நாடுகிழவோன் என்றவிடத்து "*நாட்டிற்கு உரிமையாளன்*" என்னும் பொருண்மையே பொருந்தும்.

நாடுகூறு *nāḍu-kūṟu,* பெ. (n.) நிலத்தீர்வை விதிப்போன்; (cōḻas ii, 254); revenue officer.

[நாடு + கூறு.]

நாடுகை *nāḍugai,* பெ, (n.) மனஉறுதி குறைகை; losing courage and hope.

[நாடு → நாடுகை.]

நாடுசார் நிலம் *nāḍušār-nilam,* பெ, (n.) நாட்டின் பக்கத்திலுள்ள கழனி முதலியவை (வின்.); lands adjacent to a populated area.

[நாடுசார் + நிலம்.]

நாடுதலவாரிக்கை *nāḍu-tala-vārikkai,* பெ, (n.) வரிவகை; a kind of tax (I.M.P.sm.91.).

[நாடு + தலவாரிக்கை.]

நாடுநீங்கு-தல் *nāḍu-nīngu-,* 5 செ.கு.வி, (v.i.) அரசன் இறத்தல் (நாஞ்.); to die, said of a king.

[நாடு + நீங்கு-.]

நாடுபடிதல் *nāḍu-paḍidal,* பெ, (n.) தேசம் ஆணைக்கீழ் அடங்குகை (வின்.); submission of a country , as to its rulers.

[நாடு + படிதல்.]

நாடுபடுதிரவியம் *nāḍu-paḍu-diraviyam,* பெ, (n.) நாட்டில் விளையும் செந்நெல், சிறுபயறு, ஆனெய், கரும்பு, வாழை ஆகிய பொருள்கள் (பிங்.); products of country parts, viz., šennel, siṟu-payaṟu, āney, karumbu, vāḻai.

[நாடு + skt. திரவியம் = அரசிற்குப் பெரு வருவாயினை ஈட்டித்தரும் பணப்பயிர்கள்.]

நாடுபாவு-தல் *nāḍu-pāvu-,* 5செ.குன்றாவி, (v.t.) பகைவர்நாட்டில் படையுடன் நுழைதல்; to invade. "*முத்தரைசர் நாடுபாவஇய தஞ்சிற்றப்படிகள் பொன்மாந்தனார்*" (செங்கம் நடுகற்கள்–கி.பி.7. பல்லவர்காலம்).

[நாடு + பாவு-.]

நாடுபிடி-த்தல் *nāḍu-piḍi-,* 4 செ.கு.வி, (v.i.) 1. தேசத்தை வென்று கைக்கொள்ளுதல்; to seize, capture a country. 2. குத்தகை யெடுத்தல்; to take a lease. "*நாடு பிடித் தார்க்கு ஒழுகைக் காட்டி*" (திவ். திருமாலை.3 வ்யா.22.).

[நாடு + பிடி-.]

நாடுரி *nāḍuri,* பெ, (n.) $1^{1/2}$ நாழிகொண்ட முகத்தலளவை (தொல்.எழுத்.240); a standard measure- $1^{1/2}$nāḻi.

[நாழி + உரி → நாடுரி.]

நாடுவாழ்க்கை *nāḍu-vāḻkkai,* பெ, (n.) அரசாட்சி புரியுங்காலம் (T.A.S iii, 174); duration of a reign, one's region

மறுவ. ஆட்சிக்காலம்.

[நாட்டுவாழ்க்கை → நாடுவாழ்க்கை]

நாடுவாழுமவர் *nāḍu-vāḻu-mavar,* பெ, (n.) நாட்டை வழிநடத்திச்செல்லும் அரசதிகாரிகள் (T.A.S.iii,167.); officers governing a country.

[நாடு→வாழுமவர்.]

உலகம் என்பது நாட்டை வழி நடத்தும் உயர்ந்தோர். இதனைத் தொல்காப்பியர் "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்று பொருளியலில் பேசுவார்.

நாடு பசியும் பிணியும் நீங்கி, வசியும் வளனும் பெற்று, வாழ்வாங்கு வாழத் திறமையாக அரசினை வழிநடாத்திச் செல்லும். அரசதிகாரிகள்.

நாடேயன் *nāḍēyaṉ,* பெ, (n.) நாடகக் கணிகையின் மகன் (யாழ்.அக.); the son of an actress or a dancing- girl.

[நாடக + ஏய் + அன் → நாடேயன்.]

நாடோடி *nāḍōḍi,* பெ, (n.) 1. நாட்டுகட்குரியது (வின்.); that which is common to a country. 2. இயல்புவழக்கிற்குரியது; customary, 3. நடைமுறை யொழுங்கிற்குட்பட்டது; habitual routine. 4. பொதுவானது (சாதாரணமானது) (வின்.); that which is average merit 5. ஊர்சுற்றித்திரிபவன் (இ.வ.); ஒன்றிற்கும் உதவாதவன்; vagrant. 6. போக்கற்றவன்; நாடுகுடியற்றவன்; vagabond, stroller. மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் நாடோடிகளைச் சேர்த்துக் கொள்வதில்லை (இக்.வ.).

மறுவ. ஊர்சுற்றி

க. நாடாடி.

[நாடு + ஓடி.]

எந்த ஒரு இடத்திலும், நிலையாகத் தங்கி, வாழ்ந்திடாமல் பல இடங்களுக்குச்சென்று, பிழைப்பு நடத்தி வாழ்பவரைக் குறித்த இச் சொல், காலப்போக்கில் பயனின்றி ஊர்சுற்றித் திரியும், உதவாக்கரைப் பேர் வழியையும் உணர்த்தலாயிற்று.

நாடோடிஇலக்கியம் *nāḍōḍi-ilakkiyam,* பெ, (n.) நாட்டுப்புற இலக்கியம்; folklore.

[நாடோடி + இலக்கியம்.]

இவை பெரும்பாலும் கல்வியறிவு நிரம்பாத மக்களால் உண்டாக்கப்பட்டதாகும்.

பண்டைக்கால மக்கள் தாங்கள் காண்பவைகளை எல்லாம், விளக்க முயன்றார்கள், அதன் பயனாகவே நாடோடி இலக்கியம் எழுந்தது.

இவை எழுதப்பட்ட இலக்கியமல்ல. ஒரு தலைமுறையினர், அடுத்த தலைமுறையினருக்குச் சொல்ல, தொடர்ச்சியாக சமுதாய மக்களால் நுகரப்பட்டு வந்தனவாகும்.

நாடோடி இலக்கியத்தைப் பெரும்பாலும் இரு பகுதிகளாகப் பிரிப்பர்.

1. பழங்குடி மக்களிடம் வழங்குபவை.

2. நாகரிகம் வாய்ந்த மக்களிடம் வழங்குபவை.

கதைகள், பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் ஆகியன நாடோடி இலக்கியமாகும்.

சிறிதளவு வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கிப் பெரிய அளவிலான கற்பனைகள் சேர்ந்து உருவானதாக நாடோடிக்கதைகள் அமைந்திருக்கும்.

அமைப்பிலும் கருத்துக்களிலும் பலவகைப்பட்டனவாகவும், சில சிறுகவிதைகளாகவும், சில பெருங்காவியங்களைப் போல் பலநாள்கள் சொல்லத்தக்கவையாகவும், தொன்றுதொட்டு வரும் பழக்கவழக்கங்களைக் கொண்டதாகவும், சமூகத்தாக்கங்களைக் கொண்டதாகவும், சமய நம்பிக்கைகளைக்

கொண்டதாகவும், மனித வாழ்வின் விளக்கமாகவும், நாடோடிப் பாடல்கள் இருக்கும்.

பல்வேறு காலங்களில் நேர்ந்த நுகர்ச்சியினால் ஏற்பட்ட, அறிவில் விளைந்த சொற்களே, பழமொழிகளாகும்.

நாடோடிஇனம் *nāḍōḍi-iṉam,* பெ, (n.) நிலைத்து வாழாது ஊர்சுற்றித் திரிந்து தொழில் புரியும் இனம்; nomads.

[நாடோடி + இனம்.]

"மாடுமேய்க்கும் நாடோடி இனமாக நாவலந்தேயத்திற்குள் புகுந்த ஆரியர், கோயிற்பூசகராகித் தமிழரை ஏமாற்றிப் பிழைக்கின்றனர்" என்பார், மொழி ஞாயிறு பாவணர்.

நாடோடிஓவியம் *nāḍōḍi-ōviyam,* பெ, (n) நாட்டுப்புற வரைகலை; folk painting.

மட்பாண்ட ஓவியமே, நாடோடி ஓவியக் கலையின் தொடக்கமாகும். பாண்டங்களில் ஓவியம் தீட்டுவதே. மிகத் தொன்மையான தாகும். பின்னர் அது மற்றகுடிசைத் தொழில்களான, ஆடைநெய்தல், பனை ஓலையை முடைந்து பொருட்கள்செய்தல், போன்றவற்றால் பெரிதும் வளர்ந்தது.

விளையாட்டுப் பொருட்கள் செய்தல், பொம்மைகள் செய்தல், போன்ற கலைகளும் நாடோடி ஓவியமுறையை வளர்ந்தன.

கண்ணாடியில் ஓவியம் வரையும் முறை, தஞ்சாவூரில் தோன்றி வளர்ந்தது.

துணிகளிலும் ஓவியங்கள் வரையப் பட்டன.

சங்குகளைத்தேய்த்து, அதன் மீதும் ஓவியத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

பாய். கூடை. பெட்டி ஆகியவை முடையும் போது அதன் மீதும் ஓவியங்களை வரைந்துள்ளனர்.

நாடோடி ஓவியங்களில் இன்றுவரை தொடர்ந்து நிலைத்திருப்பது. கோலமிடுதலே ஆகும்.

உடல் மீது பச்சைக்குத்துதலையும், நடோடி ஓவியவகையுள் அடக்குவர்.

இக் கலைக்கு அரசின் ஆதரவு கிடைக்காததால், இதன் வரலாறு காலமணலில் புதையுண்டு கிடக்கிறது.

நாடோடிக்கதை *nāḍōḍi-k-kadai,* பெ, (n) **1.** நாடோடிகளின் வாழ்வியல் கதை; nomad stories. **2.** *நாடோடி இலக்கியம்* பார்க்க; see *nāḍōḍi-ilakkiyam*

[நாடோடி + கதை.]

நாடோடிக்கூட்டம் *nāḍōḍi-k-kūṭṭam,* பெ, (n) கூட்டங்கூட்டமாக வாழும் நாடோடிக் குழுமம்; nomad's group.

[நாடோடி + கூட்டம்.]

நாடோடிச்சொல் *nāḍōḍi-c-col,* பெ, (n.) வழக்குச்சொல்; words common in a country, colloquial word.

[நாடோடி + சொல்.]

நாடோடிநடனம் *nāḍōḍi-naḍaṉam*, பெ, (n.) நாட்டுப்புறமக்கள் ஆடும் நடனம்; folk dances.

[நாடோடி + நடி + அனம் → நடனம்.]

மக்கள் மனதில் எழும் உணர்ச்சிகள் வெளிப்படுவதற்கு, நடனமே முதலில் எளிய கருவியாய், இருந்துள்ளது.

நாடோடி நடனங்கள், வெறும் மகிழ்ச்சிப் பெருக்கின் பொழுது போக்குக்காக மட்டுமல்லாது, தெய்வப்பற்று, நல்லொழுக்கம், அழகுணர்ச்சி இவற்றைப் புகட்டி, மக்களின் வாழ்வைப் பண்படுத்துவதாகவும், வளர்ந்து வந்துள்ளன.

தமிழக நாடோடி நடனங்களை, 1. விழாக்களில் மக்களால் ஆடப்படுவது. 2. தொழில் குழுவினர் ஆடுவது. 3. மலைவாசிகள் ஆடுவது, என மூன்று வகைகளாகப் பிரிப்பர்.

கும்மியும் கோலாட்டமும் முதல் வகையின.

பொம்மலாட்டம், தேவராட்டம், பொய்க்கால், குதிரையாட்டம், தோற்பாவைக் கூத்து, நிழலாட்டம், தெருக்கூத்து, ஒட்டந்துள்ளல், கரகம், புலியாட்டம் முதலியன, இரண்டாம் வகையின.

பழங்குடியினர் சடங்கு முறைகளாகக் கையாண்டு வரும் ஆடல்கள், மூன்றாம் வகையின.

இவையே இன்றைய நாகரிக ஆடல்களுக்கு. அடவுகளை அமைத்துத் தந்துள்ளன, எனில் மிகையன்று.

நாடோடிப்பாட்டு *nāḍōḍi-p-pāṭṭu*, பெ, (n.). நாடோடி மக்கள் பாடும் பாட்டு; nomads song

[நடோடி + பாட்டு.]

கிடைபோடுவோர்: ஆடுமாடு மேய்ப்போர் பாடும் பாட்டு. வழிநடைக் களைப்பினைப்போக்குதற் பொருட்டுப் பாடும் பாட்டும், இவ்வகையைச் சார்ந்தது.

நாடோடிப்பாஷை *nāḍōḍi-pāṣai*, பெ, (n.) *நாடோடிப்பேச்சு* பார்க்க: see *nāḍōḍi-p-pēccu*

[நாடோடி + skt பாஷை.]

நாடோடிப்பேச்சு *nāḍōḍi-p-pēccu*, பெ, (n) 1. நாட்டில் வழங்கும்பொதுமக்கள் பேச்சு மொழி(வின்.) தாய்நில மொழி; vernacular language. 2. நாட்டுமக்களின் பொதுப் (இயல்புப்) பேச்சில் வழங்கும் மொழி; colloquial word.

[நாடோடி + பேச்சு.]

நாடோடிமரபினர் *nāḍōḍi-marabiṉar*, பெ, (n.) மேய்ச்சல் நாடி, இடத்துக்குஇடம் அலைந்து திரியும் வாழ்வினை, வழிவழியாக மேற்கொள்ளும் இனத்தவர்; nomad.

மறுவ. குடிநிலவரம்பற்றவர்.

[நாடோடி + மரபினர்.]

நிலையான இருப்பிடமற்றவர். அலைந்து திரியும் வாழ்க்கை மரபினர். ஆடுமாடு மேய்த்துக் கிடைபோடுவோர், வாத்து மேய்ப்போர், போன்றோரைக் குறிப்பிடலாம்.

நாடோறும் *nāḍōṟum*, வி.எ, (adv) ஒவ்வொரு நாளும் (தினமும்); daily "*நாடீீர் நாடோறும்*" (திவ்.திருவாய்.10:5:5).

[நாள் + தோறும்.]

நாடோன்¹ *nāḍōṉ*, பெ. (n) *நாடேயன்* *(யாழ்.அக.)* பார்க்க; see *nāḍēyaṉ*.

நாடோன்² *nāḍōṉ*, பெ. (n.) நாட்டைச் சார்ந்தவன்; one who belongs to the nation.

நாண்[1] *nāṇ,* பெ. (n.) 1. வெட்கம்; sense of shame "*நாணாக நாணுத்தரும்*" (குறள்,902.). 2. மகளிர்க்குரிய கூச்சம்; bashfulness, modesty. "*அச்சமு நாணும்*" (தொல்.பொருள்.99.).

தெ., நாண. க. நாண்.

[நால் → நால் → நாண்] வெட்கவுணர்வினால் ஏற்படும் கூச்சத்தில், உடல் நாணல் போன்று வளைதல்.

நாண்[2] *nāṇ,* பெ. (n.) 1. கயிறு (சூடா.); string. 2. வில்லின் நாண், bowstring "*வஞ்சிலை வல்விற் புரிநாண் புடையின்*" (கலித். 15, 21.). "*சூழ்கழி மருங்கின் நாண் இரை கொள்*" (ஐந். 111, 2.). 3. மங்கலவணியில் கோத்த சரடு; woman's necklet containing the marriage badge "*உன் கழுத்தின் நாணுன் மகற்குக் காப்பின் நாணாம் என்றான்*" (கம்பரா. நகர்நீங்.49.). 4. அரைஞாண்; waist- string. "*நாணும் அரைத்தொடரும்*" (திவ்.பெரியாழ்,1:2:4.).

க. நேண்.

ஒருகா. ஞாண் → நாண்.

நாண்[3] *nāṇ,* பெ. (n) 1. தேள் scorpion, 2. தலைச்சுருளிவேர்; root of indian birth wort.

நாண்கொடை[1] *nāṇ-koḍai,* பெ. (n.) தொன்று தொட்டு வரும் மரபுப்படி, சிறப்பு நாட்களில், உறவினர் முதலியோர்களுக்குக் காணிக்கையாகக் கொடுக்கப்படும் நன்கொடை (சுக்கிரநீதி.145.); customary offering made to relations, friends, etc., on auspicious occasions

[நாண் →நாள்+ கொடை.]

நாண்கொடை[2] *nāṇ-koḍai,* பெ. (n.) நிலவுடைமையாளர்களால், பண்ணைப் பணியாளர்களுக்குத் திருமண நாட்களில் தரப்படும், தாலிக்கொடை; a golden tāli given by land-lords serb for their wedding.

[நாண் →நாள்+ கொடை.]

நாண்ஞாயிறு *nāṇ-ñāyiṟu,* பெ. (n.) காலை; sunrise. "*நாண்ஞாயி றுற்ற செருவிற்கு*" (களவழி.1).

[நாள் + ஞாயிறு.]

நாள்ஞாயிறு = புதிதாகப் புலர்பொழுதில் தோன்றும் ஞாயிறு.

நாண்டுகொள்(ளு)–தல் *nāṇḍu-koḷ(ḷu)-,* 13 செ.கு.வி.(v.i.) *நாணிக்கொள்(ளு)–தல்(தஞ்.)* பார்க்க; see *nāṇi-k-koḷ(ḷu-)*

[நால் → நாலுதல் = தொங்குதல். நான்று →நாண்டு +கொள்(ளு)–.]

நான்று→நாண்டு = திரிபு.

ஒப்புநோக்கு: கன்றுக்குட்டி→கண்டுக்குட்டி.

நாண்புடை *nāṇ-puḍai,* பெ. (n.) வில்லின் நாணொலி; twang of a bow string. "*வஞ்சிலை வல்விற் புரிநாண் புடையின்*" (கலித்.15,2.).

[நாண் + புடை.]

புடைத்தல் = வில்லின் நாண் ஒலிக்கை.

நாண்பூட்டு–தல் *nāṇ-pūṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) *நாணேற்று–தல்* பார்க்க; see *nāṇ-ēṟṟu-*

[நாண் + பூண் + து–பூட்டு–.]

"தல்" தொழிற்பெயர் பகுதி.

நாண்மகிழ் *nāṇ-magiḻ,* பெ.(n.) *நாண் மகிழிருக்கை* பார்க்க; see *nāṇ-magiḻirukkai.* "*நாண்மகிழ் மகிழின்*" (புறநா.123).

[நாண் + மகிழ்.]

நாண்மகிழிருக்கை *nāṇ-magiḻ-irukkai,* பெ. (n.) நாளோலக்கம்; durbar, as of a king. "*வீயாது சுரக்குமவனாண் மகிழிருக்கையும்*" (மலைபடு.76.).

[நாண்மகிழ் →நாள்மகிழ் →இருக்கை.]

மன்னன் நாட்பொழுதில் மகிழ்வோடு, தன் அரியணையில் வீற்றிருக்கை.

நாண்மங்கலம் *nāṇ-maṅgalam,* பெ. (n.) **1.** தருமத்தினை யுண்டாக்கும் செங் கோலினையும், அருளினையும் விரும்பியோன் பிறந்த நாளின் சிறப்பைச் சொல்லும் புறத்துறை (பு.வெ.9:24.); theme celebrating the birthday of a just and benign ruler. **2.** அரசற்கு யாண்டு இத்துணை சென்றது என்று கல்வெட்டில் எழுதும் மங்கலம் (தொல். பொருள்.91,பக்.336.); the ceremony of writing down the regnal year of a king.

மறுவ. வெள்ளணி மங்கலம்.

[நாள்மங்கலம் →நாண்மங்கலம்.]

மன்னன் தமது பிறந்தநாளின் போது, வெள்ளாடையுடுத்திக் கொடை கொடுக்கும் மரபு, தொன்றுதொட்டுப் பயின்று வருவது. இது குறித்த முத்தொள்ளாயிரப் பாடலடிகள் வருமாறு:—

"அந்தணர் ஆவொடு பொன்பெற்றார், நாவலர் மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தார்"

இலங்கிலைவேல் தென்னன்இரேவதி நாட்(டு) என்னோ சிலம்பிதன் கூடிழந்தவாறு (முத்தொள்.82.).

முத்தொள்ளாயிரம் முத் தமிழில் இருக்கும் முதிர்சுவைநூல். மக்கள் மன்னனின் பிறந்தநாளை ஒட்டடை அடித்துக் கொண்டாடியதால், சிலந்திகள் வீடிழந்தன என்று, குறித்துள்ள இலக்கிய நயம் குறிக்கத்தக்க வொன்றாகும்

நாண்மதி *nāṇ-madi,* பெ, (n.) (முழுநிலவு) வெள்ளுவா; full moon. "*நாண்மதியே நீ யிந்நாள்*" (திவ். திருவாய்.2:1:6.).

[நாள் + மதி.]



நாண்மதியம் *nāṇ-madiyam,* பெ. (n.) *நாண்மதி* பார்க்க; see *nāṇ-madi.* "*நன்னாண்மதியக் குடையான் குலோத்துங் கன்*" (குலோத்.கோ.173).

[நாள்மதியம் → நாண்மதியம்.]

நாண்மலர் *nāṇ-malar,* பெ. (n) அன்றலர்ந்த பூ; fresh, new- blown flower. "*நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சி*" (சிறுபாண்,23.).

[நாள் + மலர் → நாண்மலர்.]

நாண்மீன் *nāṇ-mīṇ,* பெ. (n.) இரலை(அசுவதி) முதலிய விண்மீன்; the lunar asterism. "*நாண் மீன் வாய் சூழ்ந்த மதிபோல்*" (கலித்.104:27.).

[நாள் + மீன் → நாண்மீன்.]

நாண்முதல் *nāṇ-mudal,* பெ. (n.) புலர்காலைப் பொழுது (அதிகாலை); early morning. "*நாண்முதற் கமைந்த யாவுநயந் தன னியற்றி*" (கம்பரா.கங்கை.52.).

[நாள் + முதல் = நாண்முதல்.]

நாண்முல்லை *nāṇ-mullai,* பெ. (n.) போரின் பொருட்டுக் கணவன் பிரிந்த இல்லின் கண்ணே, தலைவி தற்காத்துத் தங்கிய நிலைமை கூறும் புறத்துறை (பு.வெ.10, முல்லைப்.4.); theme describing how the heroine protected her honour, living in the very house where her lord left her for joining a battle.

[நாண் + முல்லை.]

தலைவியின் கற்புநிலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழும், முல்லைத்திணை ஒழுக்கத்தினை உரைப்பது.

நாண்முழவு *nāṇ-mul̲avu,* பெ. (n.) 1. காலை முரசு; morning drum. 2. நாழிகைப்பறை (சிலப்.3:27;உரை.); hour-drum to indicate the nāl̲igai.

[நாள் + முழவு → நாண்முழவு.]

அரசன் உறையும் அரண்மனையில் தினந் தோறும், அரசனின் அன்றைய அலுவல் நிலையினை அரசனுக்கு அறிவித்தற் பொருட்டு ஒலிக்கும் முரசே, நாண் முழவு எனப்படும்.

நாண்மேயல் *nāṇ-mēyal,* பெ. (n.) பகல் மேய்ச்சல்; early pasturing of flocks and herds. "*எருமை கயிறுபரிந் தசைஇ நெடுங் கதிர் நெல்லின் நாண்மேய லாரும்*" (ஐங்குறு,95.).

[நாள் + மேயல் → நாண்மேயல்.]

மேய்ச்சல்→மேயல்

நாள் = பகலவன் விளங்கித்தோன்றும் பகற்பொழுது. பகற்பொழுதில் மேயும் கால்நடை, மேயல் எனப்பட்டது.

நாண்மை *nāṇmai,* பெ.(n.) *நாண்*[1] பார்க்க; see *nāṇ*[1]. "*நாண்மையே யுடையார் பிழைத்தார்*" (கம்பரா.தாடகை.56.).

[நாண் → நாண்மை.]

நாணக்கேடு *nāṇa-k-kēḍu,* பெ. (n.) வெட்கக்கேடு; immodesty, shamelessness

[நாணம் + கேடு.]

நாணகபரிட்சை *nāṇaga-pariṭcai,* பெ.(n.) நாணய நோட்டம்; assay

[நாள் + நயம் → நாணயம் → நாணகம் skt பரிட்சை.]

வெள்ளீயம், தாமிரம், செம்பு முதலான மாழைகளாற்செய்யப்பட்டதால், பளபளப்புத் தன்மையுடன் கூடிய காசு என்னும் பொருண்மை ஏற்பட்ட தென்றறிக. பளபளப்புமிக்க பணத்தாளில் அச்சிட்டது பணம் என்று பெயர்பெற்றது போல், பளபளப்புமிக்க மாழையிற் செய்யப்பட்டது நாணயம்.

நாணகம் *nāṇagam,* பெ. (n.) நாணயம்; stamped coin.

நாணங்கப்புல் *nāṇanga-p-pul,* பெ. (n.) மான்மணத்தி, நாறிப்புல்; musk grass.

நாணத்தேளி *nāṇa-t-tēḷi,* பெ. (n.) மீன்வகையுளொன்று; a kind of fish.

நாணநாட்டம் *nāṇa-nāṭṭam,* பெ. (n.) தலைவி நாணும் வகையால், அவட்குத் தலைவனுடன் கூட்டமுண்மையை ஆய்ந்தறிகை (திருக்கோ.67.); theme in which the maid makes indelicate enquiries and suggestions, and seeing her mistress blush, infers the truth of her clandestine marriage.

[நாணம் + நாட்டம்.]

பகற்குறியில் தினைப்புனத்தே பாங்கனோடு வந்த தலைவன், பாங்கியற் கூட்டத்திடை கணை எய்த மான் தேடிவந்ததை உணர்ந்த தோழி தலைவியிடம், 'நும் ஆளா?' என்று நாணநாட்டமும், 'என்னவனே', என்று நடுங்க நாட்டமும், நடாத்தல் குறித்த அகத்திணை மரபாகும்.

நாணம்[1] *nāṇam,* பெ. (n.) 1. மகடூஉக்குணம் நான்கனுள் ஒன்றான வெட்கம் (பிங்.); shyness, coyness, as a feminine quality, one of four magaḍū-k-kuṇam. 2. வெட்கம், கூச்சம்; bashfulness in certain relationships as the mother-in-law, towards her son-in-law, as a man in a gathering of women. embarrassment. "*நனிநாண மீதூரா*" (சீவக.736.). 3. உண்மைக்குத் தலைவணங்கும் தன்மை, போற்றரவு, பெருமதிப்பு; delicate regard, esteem, respect. அவனுடைய சொல்லுக்கு இவன் நாணப்படுவான் (வின்.). 4. பழிச்சொல் முதலியவற்றால் உண்டாகும் மானக்கேடு; shame, sensitive, dread of evil: keen moral sense. "*நாணொணாததோர் நாணமெய்தி*" (திருவாச.30:4.). 5. தணிகை (வின்.); yielding, as a disease to its antidote. 6. செடி கொடி முதலியவற்றுக்கு உண்டாகும் கூச்சம்; (வின்.) shrinking, as a sensitive plant to a touch, shying, as a startled animal.

தெ., நாண. ம. நாணம்.

[நள் → நண் → நாண் + அம்]

[நள்ளுகை = நெருங்குகை. நள்ளுகை → நண்ணுகை. ஆணுடன் பெண் நெருங்குங்கால், முகம் தரையை நோக்குவதால் ஏற்படும் வெட்கம் அல்லது கூச்சம்.]

'நள்' எனும் நெருங்குதற் கருத்து வேரினின்று கிளைத்த சொல். ஆடவர் நெருங்குங்காலுண்டாகும் கூச்சம் அல்லது வெட்கத்தால் முகம் தலையை நோக்குவதே, நாணம் ஆயிற்று.

நாணம்[2] *nāṇam,* பெ. (n.) 1. அறிவு; knowledge. "*நாணமுடைய மரமுதலியவையும்*" (நீலகேசி.374.). 2. அறிவுக்கூர்மை; intelligence

நாள் = புதுமை. புதியகருத்துக்களைப் புரிந்து கொள்ளுங்கால் உண்டாகும் அறிவுத் தகைமை.

[நாள் → நாண் + அம்.]

அம் – சாரியை

நாணமாலை *nāṇa-mālai,* பெ. (n.) தேரையற் இயற்றிய மருத்துவநூல்; a medical treatise by Tēraiyar.

[நாணம்+மாலை.]

நாணயக்கயிறு *nāṇaya-k-kayiṟu,* பெ. (n.) மூக்கணாங்கயிறு; nose- string.

[நாணயம் + கயிறு.]



நாணயக்காரன் *nāṇaya-k-kāraṉ,* பெ. (n.) **1.** காசுக்கடைக்காரன்; gold- dealer. **2.** சொல் தவறாமல் நேர்மையாகச் செயலாற்றுபவன்; upright dealer, a man of his word, a man of credit.

[நாணயம் + காரன்.]

"காரன்" உடைமைப் பெயரீறு. சொல்லும் செயலும் ஒன்றாக மதிப்பவன்.

நாணயங்குத்து—தல் *nāṇayaṅ-kuttu-,* 5 செ.கு.வி, (v.i.) மாட்டிற்கு மூக்குத்துளைத்தல் (யாழ்ப்.); to perforate the septum of a bullock's nose.

[நாண் +அயம் + குத்து—.]

இளங்காளை கலப்பையோ, வண்டியோ இழுக்கும்போது, முரடாக இருந்தால், ஓட்டுநர் நாணி முகம் கவிழ்த்தல் போல், சுண்டி இழுக்க ஏதுவாக, மூக்கில் குத்தித் துளைவழி, கயிறு மாட்டுதல் வழக்கம். இப்பழக்கம் இன்றும் நாட்டுப்புறத்தே காணப்படுகிறது. அடங்காத இளைஞனுக்குக் கால்கட்டும் அடங்காத காளைக்கு மூக்கணாங் கயிறும் பூட்டு. (பழ.).

நாணயச்சரக்கு *nāṇaya-c-carakku,* பெ. (n) நாள்பட்டால், விலை தாழக்கூடிய உயர்ந்த சரக்கு (யாழ்.அக.); commodity of value, liable to depreciate from being kept for a long- time.

[நாணயம் + சரக்கு.]

நாணயசில்லம் *nāṇaya-šillam,* பெ. (n.) **1.** *நாணயத்தப்பு* பார்க்க; see *nāṇaya-t-tappu.* **2.** மதிப்புக்குறைவு, வெட்கக்கேடு; disgrace.

[நாணயம் + சில்லம்.]

நாணயஞ்செலுத்து—தல் *nāṇayañ-šeluttu-,* 5செ.கு.வி, (v.i.) செய்யும் செயலில், (ஆற்றும் வினையில்) தகுதி காட்டுதல்; to acquit oneself honourably, in business.

[நாணயம் + செலுத்து—.]

ஆற்றும் பணியினைச் சீர்மையுடன், நேர்மையாகச் செய்தல்; மேற்கொண்ட வினையில், தமது முழுத்திறமையும் விளங்கும் வண்ணம், தகுதி காட்டிச் செம்மையுடன் முடித்தல். வாழ்வில் முக்கால் பங்கு பொறுப்பேற்கும் நாணயம், கொடுக்கல் வாங்கலில், ஒரு மாந்தன் குறித்த நாளில், குறித்தபடி இயங்கும் இயக்கத்தினைக் குறிக்கும் வழக்கம், இன்றைய வழக்கில் உள்ளது கருதத்தக்கது.

நாணயத்தங்கம் *nāṇaya-t-taṅgam,* பெ. (n.) காசுசெய்வதற்கு ஏற்ற பொன்; gold suitable to mint coins.

[நாணயம் + தங்கம்.]

நாணயத்தப்பு *nāṇaya-t-tappu,* பெ. (n.) நேர்மை தவறுகை; dishonour, loss of one's credit.

[நாணயம் + தப்பு.]

நேர்மை தவறுவதா லுண்டாகும் மதிப்புக்குறைவு.

நாணயப்பணம் *nāṇaya-p-paṇam,* பெ. (n.) நற்காசு (வின்.); good coin, opp.to. tēykaḍai-p-paṇam

[நாணயம் + பணம்.]

நாணயப்புடைவை *nāṇaya-p-puḍaivai,* பெ. (n.) உயர்ந்த சீலை (வின்.); fine cloth. நல்லவிலை கொடுத்தால்தான் நாணயப் புடைவை கிடைக்கும் (உ.வ.).

[நாணயம் + புடைவை.]

கூடுதல் நாணயம் கொடுத்து வாங்கிய மதிப்புமிக்க விலையுயர்ந்த புடைவை.

நாணயம்[1] *nāṇayam,* பெ. (n.) **1.** முத்திரை யிட்ட காசு; stamped coin. "*அங்கங்கே நாணயங்களாக வைத்தாய்*" (பணவிடு.128.). **2.** நேர்மை; uprightness, honesty, probity, honour, as in money-dealings, punctuality. "*இது மெத்த நாணயமே*" (குனிப்பா.11,176,431.). **3.** இயற்கை நிகழ்ச்சி (வின்.); extraordinary facts or supposed facts in nature, as of the cobra shrinking from the sight of the nāga-tāḷi root. **4.** செயல் முதலியன குறித்த பயன் தவறாமை (வின்.); supposed virtue of an action or plant, as the presenting of a herb to the eyes, as a cure for opthalmia. **5.** கட்டுப்பாடு (யாழ்.அக.); restriction, rule **6.** நேர்த்தியானது, ஒழுங்கானது; that which is of good quality, as a commodity. 'நாணயமான புடைவை' (இ.வ.).

த. நாணயம்→Skt nāṇga

க., நாணய, **தெ.,** நாணயமு,
ம. நாணியம்,

[நாள் + நயம்.]

நாள் என்பது பகலவன் விளங்கித் தோன்றும் நேரம். பகற்போது நாட்கதிர் ஒளிரும் பளபளப்பான பொழுதாகும். நாட்கதிரின் ஒளிக்கற்றைகள் பளபளப்புடன் ஒளிறுவது போல், அக் காலத்து மன்னர்தம் முகத்தை, முத்திரையாகப் பெற்றிருந்த பொன், வெள்ளி, செப்புக்காசுகளும் பளபளக்கும் தன்மையன. நாணயம் என்னும் சொல்லிற்கு, வடமொழியில் குறிப்பேதும் இல்லை. திராவிட மொழிகளில் இனச்சொற்கள் காணப்படுகின்றன.

அக் காலத்தே ஆட்சி செய்த மன்னர்களின் ஒழுங்கு, நேர்மை, கட்டுப்பாடு, புகழ் போன்றவற்றை புலப்படுத்தும் சின்னங்களாகவும், நாணயங்கள் திகழ்ந்தன.

நாணயத்தின் ஒரு புறத்தில், மன்னர் தம் முகமுத்திரையையும், மறுபக்கத்தே, அவர்தம் ஆட்சியாண்டும், முறையாக இடம் பெற்றிருக்கும்.

மறுபக்கத்தில், நெறிப்படி வரிசையாகக் குறிக்கப்பட்ட நாணயத்தின் எண்ணானது, கொடுக்குநரும், வாங்குநரும் நெறிபிறழாது ஒழுகவேண்டும் என்பதைக் குறிப்பால் உணர்த்தின எனலாம்.

நாணயம்[2] *nāṇayam,* பெ. (n.) **1.** உறுதி மொழியைக் காப்பாற்றுகை; honesty **2.** நம்பிக்கை, நன்மதிப்பு; credit trust worthiness. எனக்கு முழுநம்பிக்கை உண்டு (இ.வ.). நாணயமான முறையில் வாழ்க்கை நடத்துவதில் தொல்லைகள் பல உண்டு (இக்.வ.).

[நா + நயம்.]

உண்மையே பேசுதல், சொல்லிலும், செயலிலும், பிறரை ஏமாற்றாமல் இருத்தலை, நாணயத்துடன் இருத்தல் என்னும் பொது வழக்குண்மையால் அறியலாம்.

நாணயம்[3] *nāṇayam,* பெ. (n.) **1.** விலங்கின் மூக்கிலிடும் கயிறு (யாழ்ப்.); the rope inserted in a beast's nose, nose-string. **2.** மாடு முதலியவற்றிற்கு, மூக்குத்துளைக்கை (யாழ்ப்.); perforation of the septum of a beast's nose for inserting a rope to giude it.

[ஞாண்→நாண் → நாண் → நயம்.]

நாண் = கயிறு.

நாணயம்[4] *nāṇayam,* பெ. (n.) மனச்சான்று; conscience (pond.).

[நா + நயம்]

மனச்சான்றுடன், எதிலும் பொய்மைத் தன்மையின்றி இருத்தலும், நாணயம் ஆகும். நாணயம் என்னும் இவ் வாழ்வியல் கொள்கையானது, உள்ளத்தின் உள்ளே ஒளிரும் உண்மைப் பொருளான இறைமைத் தன்மை பொருந்திய மனச்சான்றினையே முடிந்த முடிபாகக் குறித்து வழங்கியது எனலாம்.

நாணயமதிப்பீடு *nāṇaya-madippīḍu,* பெ. (n) உலகஅளவில் ஒரு நாட்டின் நாணயத்துக்கு உள்ள மதிப்புப்படி, பிறநாட்டு நாணயத்தை *மதிப்பீடு செய்யும் முறை; money exchange* rate

[நாணயம் + மதிப்பீடு.]

நாணயமதிப்பு *nāṇaya-madippu,* பெ. (n) பணத்தை மதிப்பிடும் முறை; *currency.* அமெரிக்க நாணயமதிப்பு அண்மையில் மிகவும் உயர்ந்துள்ளது (இக்.வ.).

[நாணயம் + மதிப்பு.]

நாணயமாற்றுமுறை *nāṇaya-māṟṟu-muṟai,* பெ. (n.) *நாணயமதிப்பீடு* பார்க்க; see *nāṇaya-madippīḍu.*

[நாணயமாற்று + முறை.]

நாணயவட்டம் *nāṇaya-vaṭṭam,* பெ. (n.) நாணயமாற்றிற் கொடுக்கும் தள்ளுபடி; discount on coins (P.T.L.).

[நாணயம் + வட்டம்.]

நாணயவரியோலை *nāṇaya-vari-y-ōlai,* பெ. (n.) இருப்புத்திட்டம், மாதவருவாய், முதலியவற்றைக் காட்டும், நாணயக்கணக்கு (நாஞ்.); a monthly account of coins showing balance in hand, at the begining of a month, collections in the month,etc.

[நாணயம் + வரியோலை.]

நாணயவான் *nāṇayavāṉ,* பெ. (n.) நேர்மை தவறாதவன் (யாழ்.அக.); a man of credit or honour.

[நாணய + வ் + ஆன்.]

நாணயவேலை *nāṇaya-vēlai,* பெ. (n.) நேர்த்தியான வேலை; fine, superior work, opp.to maṭṭi-vēlai.

[நாணயம் + வேலை.]

நாணயம் போன்ற வேலை. மனச்சான்றுடன் செய்யும், திறமையான வேலை.

ஒழுங்காகவும், நேர்த்தியாகவும் செய்யப்பட்ட நாணயம் போல், ஆற்றும் பணியை, அறிவை அனைவருக்கும், செப்பமுறத் தெரிவிக்கும் வேலை.

நாணயன் *nāṇayaṉ,* பெ. (n.) *நாணயக்காரன்* பார்க்க; see *nāṇaya-k-kāraṉ.*

[நாணயம் → நாணயன்.]

நாணல்¹ *nāṇal,* பெ. (n.) நாணுகை; feeling bashful, modest. "*பிறர் தன்னைப் பேணுங்கா னாணலும்*" (திரிகடு.6.).

[நாண் → நாணல் = வெட்கத்தால் வளைகை: மெய்கூசுகை.]

நாணல்² *nāṇal,* பெ. (n) **1.** புல்வகை; kaus, a large and coarse grass. **2.** எழுதுவதற்குப் பயன்படும் புல்வகை; penreed-grass.

3. *கோரை* பார்க்க; see *kōrai.* 4. தருப்பை வகை; lalong-grass, Imperata arundinacea. (L.) 5. பெருநாணல் (சா.அக.); large reed.

த> நாணல் + skt. நாட

[நாளம் → நாணம் → நாணல் = உட்டுளையுள்ள புல் வகை.]

நாணல்கெண்டை *nāṇal - keṇḍai,* பெ. (n.) மீன் வகையுளொன்று; a kind of fish.

[நாணல் + கெண்டை.]



நாணல்தட்டை *nāṇal-taṭṭai,* பெ. (n.) நாணல் புல்லின் அடித்தண்டு; the stalk of reedgrass

மறுவ. பேய்க்கரும்பு.

[நாணல் + கெண்டை.]

நாணவந்தான் *nāṇa-vandāṉ,* பெ. (n.) நாகணவாய்ப்புள் (வின்.); common myna.

[நா(கு)ண + வந்தான்.]

நாணற்கரும்பு *nāṇaṟ-karumbu,* பெ. (n) கரும்புவகை (பதார்த்த.179.); a kind of sugar-cane.

[நாணல் + கரும்பு.]

தட்டையாக இருக்கும், இக் கரும்பின் சாறு, வயிற்று நோய்கள் அனைத்தையும் போக்கும். அரத்தசோகையை அகற்றும்.

நாணற்குழாய் *nāṇaṟ-kuḻāy,* பெ. (n.)
1. மணிவகை (இ.வ.); a kind of bead.
2. நாணல் போன்ற குழாய் மணிவகை (இ.வ.); bugle beads, as reed- shaped.
3. நாணற் குழாய் போன்று, பொன்னாலாகியதும் கனப்பொள்ளல் வடிவில் செய்யப் படுவதும், தாலியோடு கோக்கப் படுவதுவான குழல்; a hollow tube like ornament of gold, tied along with tāli.

[நாணல் + குழாய்.]

நாணற்குளம் *nāṇaṟ-kuḷam,* பெ. (n) நாணற்கற்கண்டு; sugar candy prepared from reeds

நாணற்கோரைக்கட்டை *nāṇaṟ-kōrai-k-kaṭṭai,* பெ. (n.) மருந்துக்குணமுள்ள வேர்; a kind of medicinal root Clansena-indica

[நாணல் + கோரைக்கட்டை.]

நாணற்புதர் *nāṇaṟ-p udar,* பெ. (n.) நாணல்புல்துறு; reed grass bush.

[நாணல்+ புதர்.]

நாணற்புல் *nāṇaṟ-pul,* பெ. (n.) *நாணல்* பார்க்க; see *nāṇal.*

[நாணல் + புல்.]

நாணற்பூ *nāṇaṟ-pū,* பெ. (n.) பழுத்த வெண்ணிறமுள்ள நாணற்பூ; the yellowish white flower of reedgrass.

[நாணல்+ பூ.]

நாணற்றாது *nāṇaṟ-rādu,* பெ. (n.) நாணற்பூவின் கருவுறச் செய்யும் ஆண்பாற்கூறு; pollen grains of reed.grass.

[நாணல் + தாது.]

நாணாங்கள்ளி *nāṇāṅ-kaḷḷi,* பெ. (n) 1. இலைக்கள்ளி வகை (இ.வ.); spiral five-tubercled spurge. s.tr. Euphorbia nivulia(L). 2. *நாணுகக்கள்ளி* பார்க்க; see *nāṇuga-k-kaḷḷi.*

[நாண் + ஆம் + கள்ளி.]

நாணாளும் *nāṇāḷum-,* கு.வி.எ. (adv) நாள்தோறும், ஒவ்வொரு நாளும்; daily, every day, day by day. "*நாணாளு மச்சத்தா ணாணுத னாணன்றாம்*" (நாலடி,299). நாணாளும் நாம் நன்மையே செய்யவேண்டும். (இக்.வ.).

[நாள் + நாளும்.]

நாணி[1]–த்தல் *nāṇi-,* 4 செ.கு.வி. (v.i) நாணங்கொள்ளுதல் (யாழ்ப்.); வெட்கப்படுதல்; to be shy, bashful.

[நாணு → நாணி–.]

நாணி[2] *nāṇi-,* பெ. (n.) நாணமுடையாள்(ன்); bashful person.

[நாண் → நாணி.]

நாணி[3] *nāṇi-,* பெ. (n.) 1. வில்லின் நாண் (சூடா.); bowstring. "*நாணியிற் கோலொன்றி னால்*" (தேவா.616:4.). 2. தொடைநரம்பு (சா.அக.); nerve of thigh.

[நாண் → நாண் →நாணி.]

நாண் = கயிறு . கயிறு போன்று இழுத்துக் கட்டிய நாண்.

நாணிக்கொள்ளு–தல் *nāṇi-k-koḷḷu-.* 16 செ.கு.வி (v.i.) நான்று (கழுத்தில் சுருக்கிட்டுக்) கொள்ளுதல்; to hang oneself. "*நாணிக்கொள்ளப் பஞ்சமோ கயிறு*" (இராம நா.உயத்.72.).

[நால் → நாண் →நாணி + கொள்ளு–.]

நாணிலி *nāṇili,* பெ. (n.) நாணமற்றவன்–(ள்); a shameless person. "*வருவையான் நாணிலி நீ*" (கலித்.116:17.).

[நாண்+ இலி.]

நாணிழல் *nāṇiḻal,* பெ. (n.) கலை நிழல் ; fore noon shadow "*நாணிழற்போல விளியுஞ் சிறியவர் கேண்மை*" (நாலடி,116.)

[நாள்+ நிழல்.]

நாள் = புதியது நாள்.

நிழல் = காலைவெயிலில் தோன்றும் நிழல்.

காலை ஞாயிறு, கதிர்கடாவுறுக்குங்கால் தோன்றும் நிழல்.

நாணு[1]–தல் *nāṇu -,* 5 செ.கு.வி. (v.i.) வெட்கப்படுதல்; to be shy, to feel bashful, to be embarrassed, as a woman "*அஞ்ஞான்று கண்டேம் போ னாணுதுமால்*"

(நாலடி,385.). 2. மனங்குன்றுதல்; to be abashed, to shrink back, as from a forbidding sight; to feel repugnance or dislike. "*தகவுடையார் தாமேயு நாணித் தலைச்செல்லார்*" (நாலடி,241.). 3. அச்சமின்றித் துணிவு காட்டுதல் (வின்.); to acquiesce or yield through regard. 4. ஒன்றற்கு அடங்குதல் (வின்.); to shrink from the touch, as some plants, to yield, as disease to medicine, to be subdued, as snakes in proximity to certain roots. 5. அஞ்சுதல்; to fear. "*தன்கட் பழிநாணுவானை*" (குறள்,794.). 6. குவிதல்; to close, as flowers. "பங்கயம் போல்னாணி" (தஞ்சைவா.210.). 7. பிணங்குதல் (யாழ்ப்.); to be affected unfavourably, as some trees or plants by nearness to the tamarind, to be uncongenial to each other, as the red and white lotus.

க. நாண்சு.

[நாண் → நாண் → நாணு –.]

நாணு[2] *nāṇu,* பெ. (n.) *நாணம்* பார்க்க; see *nāṇam.* "*கருமத்தா னாணுத னாணு*" (குறள், 1011.).

[நாண் → நாணு–.]

நாணுகம் *nāṇugam,* பெ. (n.) 1. குதிரை (வின்.); horse. 2. நறுமணப்பூ; a fragrant flower.

[நாணு → நாணுகம்.]

நாணுவத்தான் *nāṇu-vattāṉ,* பெ. (n.) *நாணுவம்* பார்க்க; see *nāṇuvam.*

நாணுவம் *nāṇuvam,* பெ. (n.) நாகணவாய்ப்புள் (வின்.), common myna.

நாணுவரையிற–த்தல் *nāṇu-varai-y-iṟa-* 4 செ.கு.வி. (v.i.) பத்துத் துன்பத்துள் நாணம் நீங்குதலாகிய தொல்லை; (தொல்.பொருள். 100.). transgreesing the bounds of propriety and modesty, as a heroine in love, one of ten avattai.

[நாணு + வரையிறத்தல்–.]

நாணுவான் *nāṇuvāṉ,* பெ. (n) *நாகணவாய்ப்புள் (யாழ்.அக.)* பார்க்க; see *nāgaṇavāy-p-puḷ.*

[நாணுவம் → நாணுவான்.]

நாணெறி–தல் *nāṇ-eṟi-,* 2 செ.குன்றாவி. (v.t.) நாணைத் தெறித்து ஒலியெழுப்புதல்; to twang the bowstring "*நாணெறிந்து முறைமுறை தொடர்ந்து*" (கம்பரா.நாகபாச.61.).

[நாண்[2] + எறி–.]

நாணேற்று–தல் *nāṇ-ēṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வில்லை வளைத்து நாணைச் செருகுதல்; to bend a bow and fasten its string.

[நாண் + ஏற்று–.]

நாணேறிடு–தல் *nāṇ-ēṟiḍu-,* 5 செ.கு.வி. (v.i.) *நாணேற்று–.* பார்க்க; see *nāṇ-ēṟṟu-.*

[நாண் + ஏறி+இடு–.]

நாணையம் *nāṇaiyam,* பெ. (n.) *நாணயம்*[1] (இ.வ.) பார்க்க; see *nāṇayam*[1].

[நாணயம் → நாணையம்.]

நாணொளிப்புளி *nāṉoḷi-p-puḷi,* பெ. (n.) புளிமரவகையுளொன்று; a kind of tamarind tree.

நாத்தடுக்கு[1] *nāt-t-aḍukku,* பெ. (n) திக்கல் (pond); stammering

[நா + தடுக்கு.]

நாத்தடுக்கு–[2]தல் *nāt-t-taḍukku-,* 5.செ. குன்றாவி. (v t.) *நாத்தாங்கிப் பேசு–தல்* பார்க்க; see *nā-t-tāṅgi-p-pēšu-*

[நா + தடுக்கு –.]

நாத்தம் *nāttam.* பெ. (n). 1. கந்தகம்; Sulphur 2. வசம்பு; sweet flag

நாத்தலைமடிவிளி *nā-t-talai-maḍi-viḷi,* பெ. (n.) சீழ்க்கை; whistle "*நாத்தலை மடிவிளிக் கூடத்தொடு குயிறர்*" (சீவக.120.).

[நா + தலைமடி + விளி.]

நாத்தழும்பிரு–த்தல் *nā-t-taḻumbiru-,* 2 செ.கு.வி. (v.i) *நாத்தழும்பேறுதல்–.* பார்க்க; see *nāttaḻumbēṟu-* "*நாத்தழும் பிருப்பப் பாடாதாயினும்*" (புறநா.200).

[நா + தழும்பு + இரு–.]

நாத்தழும்பு–தல் *nā-t-taḻumbu-,* 5 செ.கு.வி. (v.i.) *நாத்தழும்பேறு–.* பார்க்க; see *nāttaḻumbēṟu-* "*நாத்தழும்ப வேத்தாதார்*" (சீவக. 1469.).

[நா + தழும்பு –.]

நாத்தழும்பெழு–தல் *nā-t-taḻumbeḻu-,* 2 செ.கு.வி. (v.i.) *நாத்தழும்பேறு–.* பார்க்க; see *nāttaḻumbēṟu-.* "*நாத்தழும்பெழ நாரணாவென் றழைத்து*" (திவ்.பெருமாள்.2:3).

[நா + தழும்பு + எழு–.]

நாத்தழும்பேறு–தல் *nā-t-taḻumbēṟu-,* 5 செ.கு.வி. (v.i.) பலமுறை சொல்லுதலால் நாவுக்குப் பழக்கமுண்டாதல்; to acquire ease in utterance, as tongue by constant recitation "*நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்*" (திருவாச.4:4.).

[நா + தழும்பு + ஏறு–.]

நாத்தன்தகரை *nāttaṉ-tagarai,* பெ. (n) கெட்ட மணமுள்ள தகரை; fetid cassia.

நாத்தனார் *nāttaṉār.* பெ. (n.) கணவனுடன் பிறந்தாள்; husband's sister

க. நாதினி.

[நாற்றுண் → நாத்துண் → நாத்தன் + ஆர்.]

ஒரு குடியிற் பிறந்தபெண், பூப்பெய்தித் தக்கபருவம் வந்தக்கால், புக்ககம் செல்வது பொதுமரபாகும். இஃதே போன்று, ஒருகுடியில் நாற்றாயிருந்து, மறுகுடிக்கு, நடுபயிராகச் செல்லுந்தன்மை யுடையாளாதலின், "நாற்று அன்னார்," என்னும் பொருண்மையிற் கூறுதல் பொருந்துமென்க.

ஒருகா. நாத்துணையார் → நாத்தனார்.

நா + துணையார் = பிறந்தகத்திலிருந்து, புகுந்தகத்திற்கு வந்த, பெண்ணுட னுறைந்து, ஆறுதலும், தேறுதலும் தரும், கணவனின் தமக்கை அல்லது தங்கை.

சிலப்பதிகாரத்தில், இளங்கோ அடிகள், 'நாத்தூண் நங்கை' என்று குறிப்பதால்,

புகுந்த வீட்டார், பிறந்தவீட்டைத் தாழ்த்திப் பேசினால், புதுப்பெண் தன் வீட்டுப் பெருமையைத் தூணாக நின்று காப்பவள் என்று, பொருள்படுதல் காண்க.

நாத்தாங்கி *nā-t-taṅgi,* பெ. (n.) 1. *நாதாங்கி* (வின்.) பார்க்க; see *nātāṅgi.* 2. இலைக்கள்ளி வகை; five- tubercled spurge. 3. வலி, கொருக்கு வலி.(சா.அக.); cramp.

[நா + தாங்கி → நாத்தாங்கி.]

தாழ்க்கோலின், 'நா' போன்ற தண்டினைத் தாங்கும் தாழ்ப்பாள்.

நாத்தாங்கிப்பேசு-தல் *nā-t-tāṅgi -p-pēšu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. திக்கிப்பேசுதல்; to falter in speech, stammer. 2. எண்ணிப்பேசுதல்; to speak thoughtfully.

[நா + தாங்கிப்பேசு-.]

நாத்தாங்கிவாய் *nā-t-tāṅgi-vāy,* பெ. (n.) 1. நாதாங்கி(இ.வ.); hasp. 2. மூலப்பொருள், ஆக்கப்பொருளுக்கு மூலமான அடிப்படைச் சரக்கு; staple.

மறுவ. கொக்கி, கொளுவி, கொண்டி.

[நா + தாங்கி + வாய்.]

நாத்தி[1] *nātti,* பெ. (n.) *நாத்தனார் (இ.வ.)* பார்க்க; see *nāttaṉār.*

[நாற்றூண் → நாத்தூண் → நாத்தன் + ஆர் → நாத்தன் → நாத்தி.]

நாத்தி[2] *nātti,* பெ. (n.) 1. இன்மை; non-existance. யாரியற்றினு நாத்திசெய் தெங்கணும் (விநாயகபு.73,30.). 2. ஒன்றுக்கு உள்ளதான ஒருபொருள், மற்றொன்றுக்கு இல்லாதாகை; absence, as of a characteristic. "*மனைவி யானகாலத்துப் புத்திரியாகாமை போல*" "*நாத்தியொன்று மித்திறப்பங்கமேழும்*" (மேரு மந்.708.). 3. நாசம்(யாழ்.அக.): destruction.

நாத்தி[3] *nātti,* பெ. (n.) தாழ்வாரம் (யாழ்.அக.); sloping roof.

நாத்திக்காசு *nātti-k-kāšu,* பெ. (n.) நாத்திப்பட்டத்திற்குப் பகரமாகக் கட்டப்படும் பொற்காசு; instead of gold pendant, a gold coin is tied.

[நாத்தி + காசு.]

பொருளாதாரச் சூழலுக்கு ஏற்ற வண்ணம், சிலர் பொற்பட்டமாகவும், வசதிவாய்ப்பற்றோர், சிறியகாசுவடிவிலும், மணமகளின் நெற்றியில் கட்டுவர்.

நாத்திப்பட்டம் *nātti-p-paṭṭam,* பெ. (n.) திருமணத்தில் மணமகனின் தங்கை அல்லது தமக்கையான நாத்துணை நங்கை, மணமகளின் நெற்றியில் கட்டும் பொற்பட்டம்; it is an golden pendant tied on the forehead of bride by bridegrooms sister.

[நாத்தி + பட்டம்.]

நாத்தி என்னுஞ்சொல், நாத்துணையாள் என்பதன் மரூஉ.

நாத்திப்பணம் *nātti-p-paṇam,* பெ. (n.) மணமகன் அல்லது மணமகள் வீட்டார், நாத்திவிளக்கேந்திய பெண்ணுக்குத் தரும் பணம்; money given to bridegroom's sister who held the holy lamp by bride or bride-grooms parents.

[நாத்தி + பணம்]

நாத்திரம் *nāttiram,* பெ. (n.) புகழ்; fame.

[நா + திறம் → திரம்.]

ற → ர = திரிபு.

மந்திரம், தந்திரம் என்பவும், இவ்வாறு திரிந்தன என்பது, பாவாணர் கருத்து. நாவின் வாயிலாக ஒருவர்தம் திறனை அல்லது புகழை, வானளாவ உயர்த்திப் பேசுகை.

நாத்திவிளக்கு *nātti-viḷakku,* பெ. (n.) திருமணத்தில் மணமகனின் தமக்கை ஏந்திச்செல்லும் விளக்கு; on the occasion of wedding the holy lamp held by bridegrooms sister.

[நாத்தி + விளக்கு.]

திருமணத்தில், தாலிகட்டும் நிகழ்வு நடைபெறுங்கால், மணமகனின் தங்கை அல்லது தமக்கையான நாத்தனார் எனப்படும் நாத்துணையாள், தாம்பலத்தில் வைத்துப் பிடித்து மணமக்கள் மண மேடையைச் சுற்றிவரும் பொழுது, முன்கொண்டு செல்வதுமான கைவிளக்கு

நாத்திவேடம் *nātti-vēḍam,* பெ. (n.). அசோகு; asoka tree.

நாத்து *nāttu,* பெ. (n.) *நாத்தனார்* பார்க்க; see *nāttaṉār.*

நாத்துடுக்கு *nāt-tuḍukku,* பெ. (n.) கடுஞ்சொற்களால் ஏசுகை; abuse. நாத்துடுக்காகப் பேசுபவர்களே, நல்லமுறையில் இருக்கிறார்கள் (இ.வ.).

[நா + துள் → துடு → துடுக்கு.]

பணச்செருக்கிலும், பதவிவெறியிலும் பிறரை மதிக்காது, நாத்துடுக்காக எடுத்தெறிந்து பேசுகை.

நாத்தூண் *nāttūṇ,* பெ. (n.) 1. *நாத்தனார்* பார்க்க; see *nāttaṉār* 2. *நாத்தூண்நங்கை* பார்க்க; see *nāttūṇ-naṅgai.*

ம. நாத்தூண்.

நாத்தூண்நங்கை *nāttūṇ-naṅgai,* பெ. (n.) கணவனுடன் பிறந்த மங்கை; husband's sister. *"நாத்தூ ணங்கையொடு.....அடிசி லாக்குதற்கு"* (சிலப். 16:19.).

[நாற்றூண் → நாத்தூண் + நங்கை.]

பிறந்த வீட்டுப்பெருமைக்கு, பிறழ்வு நேராவண்ணம், தன் பிறந்தகத்துப் பெருமையை, நாவின் சொற்களால், தாங்கி நிலைநிறுத்தும் நங்கை.

நாத்தொங்கல் *nāttoṅgal,* பெ. (n) நாக்கு வெளிகண்டு தொங்கல்; port rusion of the tongue. (சா.அக.).

நாதசலசயம் *nādaśalaśayam,* பெ. (n.) இலாமிச்சை வேர்; cuscus root.

நாதசாரம்[1] *nāda-śāram,* பெ. (n.) மருந்துவகை; a medicine.(சங்.அக.)

நாதசாரம்[2] *nāta-sāram,* பெ. (n.) சிவ சாரவுப்பு; a kind of prepared salt.

நாதசுரம் *nāda-śuram,* பெ. (n.) *நாகசுரம்;* பார்க்க; see *nāga-śuram.*

நாதத்து பீடம் *nādattu-pīḍam,* பெ. (n) துத்தநாகம்; Zinc.

நாதநாதம் *nāda-nādam,* பெ. (n.) பேரரத்தை; greater galangal.

நாதநாமக்கிரியை *nāda-nāma-k-kiriyai,* பெ. (n) பண்வகையுளொன்று; a musical mode.

நாதநீர் *nāda-nīr,* பெ. (n.) பனிக்குடத்து நீர்; amniotic-fluid.

நாதபரவாசல் *nāda-paravāšal,* பெ. (n.) பெண்குறி; the vagina in the female genital.

நாத பருணி *nāda-paruṇi,* பெ. (n.) மலம்; fecal matter.

நாதமுட்டை *nāda-muṭṭai,* பெ. (n.) சினை; ovum.

நாதமுனி *nāda-muṇi,* பெ. (n.) திருவாய் மொழி முதலான நூல்களை முதன்முதற் கண்டு, வெளிக்கொணர்ந்த திருமாலியத் தலைவர் (அஷ்டப். திருவரங்கந்.காப்பு.3.); the first Vaiṣṇava Acārya who brought to light Tiruvāy-moḻi and other prabandhas.

நாதயந்தனஞ்சரி *nādayandaṉañjari,* பெ. (n.) சிறுகுறிஞ்சா; small indian opicacuanha.

நாதயம் *nādayam,* பெ. (n) இந்துப்பு; rock salt

நாதரவி *nādaravi,* பெ. (n.) 1. உடற்கொழுப்பு (மூ.அ.); fat in the body. 2. வெண்கண்டங் கத்தரி; white flowred prickly night shade.

நாத வடியுப்பு *nāda-vaḍiyuppu,* பெ. (n.) கறியுப்பு; common salt.

நாதவணு *nāda-v-aṇu,* பெ. (n.) பெண்ணின் கருமுட்டை; female. ovum.

நாதவத்தம் *nāda-v-attam,* பெ. (n.) 1. *யானை நெருஞ்சி (மலை)* பார்க்க; see *yāṉai-nerunji.* a small plant. 2. பெருநெருஞ்சில்; large caltrope.

நாதவாகி *nāda-vāgi,* பெ. (n.) கருப்பைக்குழல்; uteras-tube.

நாதவுப்பு *nāda-v-uppu,* பெ. (n.) நிலத்தி லுண்டாகும் முப்பு; salt from mines under the earth.

நாதவொளி *nād-v-oḷi,* பெ. (n.) பொன்; gold.

நாதாக்கள்சட்டை *nādākkaḷ-šaṭṭai,* பெ. (n.) மரப்பட்டை; bark.

நாதாங்கி *nādāngi,* பெ. (n.) பூட்டு, தாழ்ப்பாள்; சங்கிலி இவை மாட்டவுதவும் கதவுநிலையுறுப்பு; hasp of a lock, staple; clincher of a chain

[நா + தாங்கி.]

நாதாங்கிமொந்தன் *nādāngi-mondaṉ,* பெ. (n.) ஈரோட்டுப் பக்கத்தில் வளரும் மொந்தன் வாழை வகை; a species of the mondaṉ plantain, cultivated near Erode.

[நாதாங்கி + மொந்தன்.]

நாதாசயம் *nādā-šayam,* பெ. (n.) உயிரணுக்கள் உருவாகும் சினைப்பை; egg. glands.

நாதாந்திக்காவி *nādāndi-k-kāvi,* பெ. (n.) *கற்காவி; red-ochre.*

நாதி *nādi,* பெ. (n) 1. பெருங்காய வகை (வின்.); a kind of asafoetida. 2. தான்றிக்காய்; devils abode.

நாதிருடி *nādirudi,* பெ. (n.) எருக்கிலை; giant swallow wortk

நாதேயம் *nādēyam.* பெ.(n) 1. வஞ்சிக்கொடி; *rattan cane palm.* (மூ.அ.); 2. சீந்தில்(மலை.); gulancha 3. துரிசு (தைலவ.தைல.); sulphate *of copper* 4. இந்துப்பு (வின்.); rock salt

[நா + தேயம்.]

நாதேனி *nādēṇi.* பெ. (n.) மணித்தக்காளி (மலை.); indian hounds-berry

[நா + தேனி.]

நாந்தகம் *nāndagam.* பெ. (n.) 1. திருமாலின் வாள்; sword of Tirumāl. "*நாந்தகஞ்சங்கு தண்டு*" (திவ்.பெரியாழ்.4,1:2.). 2. வாள் (பிங்.); sword. "*நாந்தக மின்னும் வீசி*" (கம்பரா. அதிகாய.209.).

[நாந்து + அகம்.]

நாந்தல் *nāndal.* பெ. (n.) 1. மழைமூட்டம் (வின்.); cloudiness, 2. ஈரம் (வின்.); dampness. 3. *நாந்தற் காலம்* பார்க்க;see *nāndar-kālam.*

தெ., நாந்துடு. க. நாந்து.

நாந்தற்காலம் *nāndar-kālam.* பெ. (n) மழை வானமாயிருக்குங் காலம்; damp. cloudy weather

மறுவ. கார்காலம்.

[நாந்தல் + காலம்.]

வானம் மேகம் சூழ்ந்து, மப்பும் மந்தாரமுமாக இருக்கும் காலம்.

நாந்தி[1] *nāndi,* பெ. (n) 1. நாடகமுன்னுரை; an invocatory verse, as in a drama 2. பாயிரம்; prologue. "*இது ...... நாந்தி கூறுகின்றது*" (பி.வி.3,உரை.). 3. திருமணம் முதலிய நற்செயல் செய்வதற்கு முன், செய்யுமோர் சடங்குமுறை; a virtual ceremony, performed. to propitiate a class of manes before celebrating any auspicious event

நாந்தி[2] *nāndi,* பெ. (n.) முதுகு (இ.வ.); back

நாந்திகந்தரு *nāndi-gandaru,* பெ. (n.) மர மஞ்சள் (சங்.அக.); turmeric.

நாந்திசிராத்தம் *nāndi-širāttam,* பெ. (n.) *நாந்தி*[1] 3. பார்க்க; see *nāndi*[1]. 3.

[நாந்து + skt. சிராத்தம்.]

நாந்திமுகம் *nāndi-mugam.* பெ. (n) *நாந்தி*[1] பார்க்க; see *nāndi*[1]. "*நாந்திமுக மெனுஞ் சிராத்த மோம்பி*" (தணிகைப்பு.வள்ளி.161.).

நாந்து–தல் *nāndu-,* 5 செ.கு.வி. (v.i.) நனைதல்(யாழ்.அக.); to become wet.

க. நாந்து.

[நந்து → நாந்து.]

நாந்தெனி *nāndeṉi,* பெ. (n.) *நாந்தொனி (யாழ்.அக.)* பார்க்க; see *nāndoṉi.*

நாந்தேனி *nāndēṉi,* பெ. (n.). நச்சுப்பூடு; poisonous herb. (சா.அக.).

நாந்தொனி *nāndoṉi,* பெ. (n.) பூடுவகை (சங்.அக.); a plant.

நாநல்கூர்–தல் *nā-nalkūr-,*17 செ.கு.வி. (v.i.) பேசாதிருத்தல்; to be poor or sparing in words, to be silent. "*மலரடி வணங்காது நாநல் கூர்ந்தனை*" (மணிமே.10:34.).

[நா + நல்கூர் –.]

நாநலம் *nā-nalam,* பெ. (n.) சொல்வன்மை; சொல்லாற்றல்; பேச்சுநயம்; eloquence. "*நாநலமென்னு நலனுடைமை யந்நலம் யாநலத் துள்ளதூஉ மன்று*" (குறள்,641.). பேரறிஞர் அண்ணா, தமது மிகச் சிறந்த நாநலத்தால், தமிழர்தம் நெஞ்சில் நிலையான இடத்தைப் பெற்றார் (இக்.வ.).

மறுவ. பேச்சாற்றல், பேச்சுத்திறன்.

[நா + நலம்]

அமைச்சனுக்கு அமைய வேண்டிய தலையாய நலம். அஃதாவது ஈடு இணையற்ற தனிப்பெருஞ்செல்வமான நாநலத்தால் அமைச்சன், தன் சூழ்ச்சியை அரசனுக்கு எடுத்துச் சொல்வதில் வல்லவனாதல், அமைச்சிலக்கணங்களுள் இன்றியமையாது, வேண்டப்படும் தனிப்பெருங்குணம். இதனை வள்ளுவர் வரையறுக்குங்கால்

நாநலம் என்பது, அறிவுடையோரால் மதிக்கப்பெறும் உயர்பெருஞ்செல்வம். அமைச்சனுக்குரிய தனிப்பெருஞ்செல்வமும், தலையாய செல்வமும், இஃதே. இச் செல்வம் யாவராலும் விரித்துரைக்க இயலாத மாப்பேறாகும். நற்பேறுகட்கு அப்பாற்பட்ட நனிபெரும் பேறாகும். இத் தன்மைத்து என்று எவராலும் எடுத்தியம்ப இயலாத தனிப்பெருஞ் செல்வமாகும். புகழ்பெறும் அமைச்சனுக்குரிய வாழ்வியற் பேறாகும்.

இம் மாப்பேறு பற்றி மொழிமீட்பர் கூறுவது:–

நாவின் நலம் நாநலம். அது நாவின் நன்மையும், வன்மையும் கலந்தது. நன்மை, பிறருக்கு நன்மை செய்வதும், வன்மை, பிறரை வயப்படுத்துவதுமாகும். இப் பேறு தனிப் பட்டதாதலின், "*யாநலத்துள்ளதூஉ மன்று,*" என்றார்.

நாநலம் பற்றிப் பரிமேலழகர் பகருங்கால், "*நாவால் உளதாய நலம்*" இந் நலம் உலகத்தைத் தம் வயத்ததாக்கும், அமைச்சர்க்கு வேறாக வேண்டும், என்னும் நீதிநூல் வழக்குப் பற்றி, நாநலம் என்னும் நலன் என்றும் பிறர்க்கும், இது போலச் சிறந்தது பிறிது இன்மையான், "*அந் நலம் யாநலத் துள்ளதூஉம் அன்று*" என்றும் கூறினார். பிரித்தல், பொருத்தல் முதலிய தொழில் இல்லாதார்க்கும், இஃது இன்றி யமையாததாயின், அத் தொழிலார்க்குக் கூறவேண்டுமோ என்பது கருத்து.

இந் நானிலத்தில் நல்வாழ்வு வாழவிரும்பும் அனைவருக்கும் வேண்டப்படுந் தனிப்பெருஞ்செல்வமே, நாநலம். இந் நலம் சிறப்பாக அமைச்சர்க்கு இன்றியமையாது, வேண்டப்படுந் தனிப்பெருங் குணமென்றறிக.

நாநாழி *nānāḻi,* பெ. (n). பெரியபடி கொண்ட அளவு; one chennai measure.

நாநீட்டு—தல் *nā-nīṭṭu-*,5 செ.கு.வி.(v.i.) பேசுதல்; to speak, tell, as wagging one's tongue "*அவையறிந்து நாநீட்டுதல் ஆன்றோர்க்கு அழகாகும்*" (இக்.வ.). "*ஒதியி னொதுங்கி... நாநீட்டும்*" (மணிமே.5:108). கண்ட இடத்தில் கண்டபடி நாநீட்டினால், மிஞ்சுவது பகையே ஆகும். (இக். வ.). நாநீட்டுதல் எனும் பண்பினைத் தக்க இடம் அறிந்து மேற்கொள்ளவேண்டும். 2. ஏசுதல்; to rebuke.

[நா + நீட்டு—.]

நாப்பண்[1] *nā-p-paṇ*, பெ. (n.) 1. நடு; middle, centre. "*பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்*" (புறநா.13). 2. தேர்நடு; central flat of a chariot. 3. யாழினுறுப்பு (சூடா.); bridge of a lute.

[நடு + பண் →நாப்பண்.]

[நடு → நா + பண்.]

நாப்பண்[2] *nā-p-paṇ*. பெ. (n.) வாய்ப்பாட்டு; notes

[நா + பண்.]

நாப்பாடம் *nā-p-pāḍam*, பெ. (n.) நெட்டுருப் பண்ணிய வாய்ப்பாடம், எழுத்துவகைச் சுவடியில்லாமல் வாய்வழியாகவே பயிற்றிய பாடம் lip-learned lessons. "*நாப்பாடஞ்சொல்லி நயமுணர்வார் போற் செறிக்குந் தீப்புலவற் சேரார்*" (நாலடி.312).

[நா + படி → பாடம்.]

உள்ளத்தில் காலூன்றிப் படிந்து, நாவில் எஞ்ஞான்றும் நிலைத்திருக்கும் பாடம்.

நாப்பிவிடு—தல் *nāppi-viḍu-*, 18 செ.கு.வி. (v.t.) *நாப்புக் காட்டு—, (வின்.)* பார்க்க; see *nāppu-k-kāṭṭu-*

[நாப்பு + விடு—.]

நாப்பு[1]**—தல்** *nāppu-*, 5 செ.கு.வி. (v.t.) *நாப்புக்காட்டு—,(வின்.)* பார்க்க; see *nāppu-k-kāṭṭu-*.

நாப்பு[2] *nāppu*, பெ. (n.) 1. இகழ்ச்சி, ஏளனம் (பரிகாசம்); mockery. 2. எள்ளி நகையாடுகை; ridicule. 3. நடையுடைத்தோற்றம் போன்ற வற்றைப் போலச் செய்யும் நடிப்பு; mimicry "*இந்திரனுமெனை நாப்புக் காட்டுவானே*" (இராமநா. உயத்.80).

[நகைப்பு → நாப்பு.]

நாப்புக்காட்டு—தல் *nāppu-k-kāṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. அழகு காட்டுதல்; to imitate in derision, to mimic 2. வஞ்சித்தல், ஏய்த்தல்,(வின்.); to deceive

[நாப்பு + காட்டு—.]

நகைப்பு → நாப்பு = பிறருக்குத் துன்பமிழைத்து, அவர்படுந் துயரங்கண்டு, அகமகிழ்தல்.

நாப்புற்று *nā-p-puṟṟu*, பெ. (n.) 1. நாவினி லுண்டாகும் வீண்தசைத்திரட்சி அல்லது கழலை; excrescence 2. நா நோவுவகை; a cancerous disease on the tongue.

[நா + புற்று.]-

புற்றுக்கட்டி வகையுளொன்று; நாவிலேற் படும் எழுச்சி அல்லது கழலை.

நாப்பொடி—தல் *nā-p-poḍi-*, 2 செ.குன்றாவி. (v.t.) நாவுலர்தல் (யாழ்.அக.); to dry up of the tongue

[நா + பொடி —.]

நாபதி *nā-padi,* பெ. (n.) நாவிற்கு நீர் வார்ப்பவன்; he whose grace is indispensable for speech. "*நாரணனை நாபதியை*" (திவ்.இயற்.நான்மு.67.).

நாபம் *nābam,* பெ. (n.) நஞ்சுவகை (வின்.); a strong poison prepared from the root of indian aconite.

நாம்[1] *nām,* பெ. (n.) அச்சம்; fear, dread, terror. "*பேம் நாம் வரும் என வரூஉம் கிளவி ஆமுறை மூன்றும் அச்சப்பொருள*" (தொல்.சொல்.365).

[யா → யாஅம் → யாம் → ஞாம் → நாம்.]

யா = கருமைக்கருத்து வேர்.

விண்மீன்கள் தவிர, மாந்தர், பறவை விலங்கு, தம்ரும், பிறரும் கண்களுக்குப் புலப்படாத தன்மையில் அமைந்த, நள்ளிருள் செறிந்த–கடுங்காலமான, அச்சந் தருங் காலத்தை, நடுயாமம் என்பர், நம் முன்னோர்.

கருமைக்கருத்து வழித் தோன்றிய இருண்மைக்கருத்து, அச்சக்கருத்து வளர்ச்சிக்கு வழிகோலியது என்பார், ப.அருளி [semantic extension] தொல்காப்பியரும், "நாம்" என்பது அச்சப்பொருள் தரும் தன்மைத்து என்று உரைத்துள்ளது, நாம் அறிந்ததே. உரியியலில் அமைந்துள்ள இந் நூற்பாவிற்குத் தெய்வச்சிலையார், "போம் என்னும் சொல்லும். "நாம்" என்னும் சொல்லும், உரும் என்னும் சொல்லுமாகிய அம் முறைமையுடைய மூன்று சொல்லும், அச்சப்பொருண்மையை உடைய, என்று குறித்துள்ளார்.

மொழிஞாயிறு கூறுவது, நாம் + அம் → நாமம் = அச்சம். இஃது, உரிச் சொல். அகலம், ஆழம், தீயவுயிர்கள், கொந்தளிப்பு, நிலமுழுக்கு போன்றவற்றால் ஏற்படுவது, என்று மொழிந்துள்ளமையால், "நாம்" என்னுஞ்சொல், அச்சப்பொருண்மையை, முதன்மையாயுடைத்து என்று, துணியலாம்.

நாம்[2] *nām,* ப, பெ. (pron.) 1. தன்மைப் பன்மைச் சொல்; (தொல்.சொல்.164); we. 2. தாங்கள்; you, used honorifically. "*நடந்தவரோ நாமென்ன*" (கம்பரா.சூர்ப்ப.119).

க. நாவு.

நாம்: தன்மையையும், படர்க்கையையும் இணைத்து வழங்கும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைச் சொல். பேசுபவரையும், கேட்பவரையும் சேர்த்துக் குறிப்பிடும், தன்மை இடத்துப் பன்மைச்சொல்.

நாம்பல் *nāmbal,* பெ. (n) 1. இளைப்பு (நாமதீப.761),; emaciation, leanness. 2. இளைத்த விலங்கு (யாழ்ப்.); emaciated creature.

[நாம்பு → நாம்பல்.]

அல்லீற்றுத் தொழிலாகுபெயர்.

நாம்பன் *nāmban,* பெ. (n) இளவெருது (யாழ்ப்); steer, bull-calf.

மறுவ. கட்டிளங்காளை.

[நம்பன் → நாம்பன்.]

நாம்பு[1]–தல் *nāmbu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. இளைத்தல் (வின்.); to become meagre, thin or emaciated. 2. நாவு–தல் பார்க்க; see nāvu-.

க. நாம்பு.

[நரம்பு → நம்பு → நரம்பு–.]

நரம்பு போன்று இளைத்தல். நரம்பன், நரம்பி போன்ற மக்கள் வழக்குகளை நோக்குக.

நாம்பு² *nāmbu-,* பெ. (n.) **1.** மெலிந்தது (வின்.); anything lean. **2.** மெல்லிக்கொடி; small climber. "*சுருங்கிய நாம்பின் முடிமுதிர் பரதவர்*" (நற்.207.)

க. நாம்பு.

[நரம்பு → நம்பு → நாம்பு-.]

இஃது, இளைத்தல் பொருண்மை குறித்த சொல். நரம்புபோல் இளைத்த மெல்லிய கொடி. நண்பர் நரம்புபோல் நாம்பிவிட்டார் என்பது உலகு வழக்கு.

நாமக்கட்டி *nāma-k-kaṭṭi,* பெ. (n.) திருமண்கட்டி (இ.வ.); pipe clay, used for the Vaisṇava mark

[நாமம் + கட்டி.]

நாமம் = வெண்மை.

நாம் = அச்சம். மாந்தர்தம் அச்சத்தை அகற்றும் வெண்மையான திருமண் என்பர், மாலியத்தார்.

நாமக்கரடி *nāma-k-karaḍi,* பெ. (n.) அச்சந்தரும் கரடிவகை; (இ.வ.); a species of bear.

[நாம் + அ + கரடி.]

பார்த்த அளவில் மாந்தர்க்கு அச்சத்தை யுண்டாக்கும் கரடி. 'அ' சாரியை. கரடு + இ → கரடி. "பேம் நாம் உரும் என வரூஉம் கிளவி ஆமுறை மூன்றும் அச்சப் பொருள" (தொல். உரி. 848.). மேற்காட்டிய தொல்காப்பிய நூற்பா, "நாம்" என்னும் முன்னொட்டு, அச்சப் பொருண்மையுணர்த்தும் பான்மையில் அமைந்துள்ளது காண்க.

நாமக்கரும்பு *nāma-k-karumbu,* பெ. (n.) நாமம் போற் கீறுகளமையப் பெற்ற கரும்பு (இ.வ.); a spicies of red sugar-cane with white streaks.

மறுவ. நாமதாரிக்கரும்பு.

[நாமம் + கரும்பு.]

நாமக்கல்¹ *nāmakkal,* பெ. (n.) வெள்ளைக் களிமண்; pipe clay.

[நாமம் + கல்.]

நாமம் = வெண்மை.

நாமக்கல்² *nāmakkal,* பெ. (n.) ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த ஓர் பேரூர்; a city in Erode.dist.

தமிழ்நாட்டிலேயே அதிகமான சரக்குந்துகள், கோழிப்பண்ணைகள், நிறைந்த பேரூராகும்.

நாமக்காரர் *nāma-k-kārar,* பெ. (n.) நெற்றியில் திருமண் குறியிட்ட மாலியத்தார்; (Vaisṇavas) Māliyattār, as wearing the nāmam

[நாமம் + காரர்.]



நாமக்காரல் *nāma-k-kāral,* பெ. (n.) காரல் மீன்; a kind of fish

நாமக்காலம் *nāma-k-kālam,* பெ. (n.) அச்சந்தரும் இரவுக்காலம்; dreaded night. "*காமக்காலத்துண்டெனத் தோ தோழி*" (தொல்.பொருள்.146.).

[யாமம் → நாமம் + காலம்.]

ஒ.நோ. யான் → நான்.

நாமக்காறல் *nāma-k-kāṟal,* பெ. (n.) பக்கங்களில் பொற்கோடுகள் கொண்டதும், வெண்ணிறமானதும், ஐந்து (அங்குலம்) விரற்கிடை வரை. வளரக் கூடியதுமான மீன்வகை; sea fish, silvery, with golden stripes along the sides, attaining 5 in. in length equula daura

[நாமம் + காறல்.]

நாமம் = வெண்மை. வெண்ணிறமுள்ளகாறல் மீன்.



நாமக்கிரியை *nāma-k-kiriyai,* பெ. (n.) பண்வகையுளொன்று; a kind of musical mode

[நாமம் + skt. கிரியை.]

நாமக்குச்சரி *nāma-k-kuccari,* பெ. (n.) வரிக்கோடிட்ட புடைவை வகை (இ.வ.); a kind of striped saree

நாமக்குச்சலி *nāma-k-kuccali,* பெ. (n.) *நாமக்குச்சரி* பார்க்க; see *nāma-k-kuccari.*

நாமக்குச்சிலி *nāma-k-kuccili,* பெ. (n.) *நாமக்குச்சரி* பார்க்க; see *nāma-k-kuccari.*

நாமக்குவளை *nāma-k-kuvaḷai,* பெ. (n.) நாமக்கட்டியால் செய்த குவளை (வின்.); a kind of cup made of white clay

நாமம் = வெள்ளைககளமண்:

[நாமம் + குவளை.]

நாமக்கூசா *nāmak-kūšā,* பெ. (n.) *நாமக்குவளை* பார்க்க; see *nāma-k-kuvaḷai*

[நாமம் + கூச்சு → கூசா.]

நாமக்கோவை *nāma-k-kōvai,* பெ. (n.) கோவைவகையுளொன்று; a variety of indian caper

[நாமம் + கோவை.]

நாமகம் *nāmagam,* பெ. (n.) தும்பை; lecuas flower

நாமகரணி *nāma-garaṇi,* பெ. (n.) வெள்ளூமத்தை; white flowered dhatura

நாமகள்¹ *nā-magaḷ,* பெ. (n.) சிவப்பரிதாரம்; red arsenic

மறுவ. தாளகம்.

[நா + மகள்.]

நாமகள்² *nā-magaḷ,* பெ. (n.) கல்விக்கு இறைவியான கலைமகள்; Kalai-magaḷ (saraswadi) Goddess of learning.

[நா + மகள்.]

கல்வி முதலான கலைகளுக்கு இறைவியாக மதிக்கப்பெறுபவள்.

நாமகா *nāmagā,* பெ. (n.) நாரத்தை; bitter orange.

நாமகி *nāmagi,* பெ. (n.) மஞ்சள்வண்ண சாதிபத்திரி; yellow coloured pulp extending over the nutmeg.

நாமச்சி *nāmacci,* பெ. (n.) நத்தை; snail.

மறுவ. ஊமச்சி.

நாமசங்கிதை *nāma-šangidai,* பெ. (n.) ஒரு சிற்பநூல்; a treatise on architecture.

நாமசேயம் *nāma-šēyam,* பெ. (n.) வெண்சாரணை; white shauranay.

நாமஞ்சாத்து-தல் *nāmañ-sāttu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ஏமாற்றுதல் (பே.வ.); to deceive. 2. திருமண் பூசுதல்; to wear tridental mark. 3. *நாமம் போடு-தல்* பார்க்க; see *nāmam-pōḍu-*

[நாமம் + சார்த்து → சாத்து-.]

நாமடந்தை *nā-madandai,* பெ. (n.) நாமகள்² பார்க்க; see nāmagaḷ². "*நாமடந்தை யழுதாள்*" (கம்பரா.பிராட்டி.களங்.5.).

[நா + மடந்தை.]

நாமடிக்கொள்ளு-தல் *nā-madi-k-kollu-,* 7 செ.குன்றாவி. (v.t.) நாவை மடித்தல்; to touble the tongue "*நாமடிக் கொண்ட உதட்டையும்*" (ஈடு.4,87.).

[நா + மடிக்கொள்ளு-.]

சினக்குறிப்புக் காட்டுங்கால், நாவை மடித்துக்கொண்டு பேசுதல், அல்லது நடித்தல்.

நாமத்தம்¹ *nāmattam.* பெ. (n.) வெண்ணிறக் கடல் மீன்; white sea fish.

நாமத்தம்² *nāmattam.* பெ. (n.) சடாமஞ்சில்; spihenard.

நாமத்தராசு *nāma-t-tarāšu,* பெ. (n.) சீர்கோல் வகை (இ.வ.); a kind of weighing balance.

[நாமம் + தராசு.]

விறகுக்கடையில் பயன்படுத்தும் பெரியதலைக்கோல்.

நாமத்தவளை *nāma-t-tavaḷai,* பெ. (n.) தவளை வகை (இ.வ.); a kind of frog.

[நாமம் + தவளை.]

வரிக்கோடுகளையுடைய தவளை.



நாமத்தாலி *nāma-t-tāli,* பெ. (n.) கார்காத்த வேளாளரது விளக்கிடு கலியாணத்தில், பெண்

கழுத்திலணியும் தாலிவகை (G.Tn.D.1,241.). a kind of tāli worn by bride in the viḷakkidu-kārkātta-vēḷāḷar.

[நாமம் + தாலி.]

தஞ்சைப் பகுதியில் வாழும் கார்காத்த வேளாளர்தம் விளக்கிடு திருமண நிகழ்வில், இத் தாலிவகை, இன்றுங் காணப்படுகிறது.

நாமத்துத்தி *nāma-t-tutti,* பெ. (n.) துத்திச் செடிவகையுளொன்றான திருநாமத்துத்தி; lobe leaved mysore mallow.

நாமத்துரு *nāma-t-turu,* பெ. (n.) சவ்வு; membrane

நாமதாரணம் *nāma-dāraṇam,* பெ. (n.) திருமண் பூசுகை; wearing a Vaiṣṇava mark.

நாமதாரி[1] *nāma-dāri,* பெ. (n.) திருமண் காப்பிடும் மாலியத்தான்; a Māliyattāṉ (Vaiṣṇavaṉ) as wearing the nāmam.

[நாமம் + skt.தாரி.]

நாமதாரி[2] *nāma-dāri,* பெ. (n.) மூங்கில் வகை; female bamboo.

நாமதாரிக்கரும்பு *nāma-dāri-k-karumbu,* பெ. (n) *நாமக்கரும்பு* பார்க்க; see *nāma-k-karumbu.*

நாமதீபநிகண்டு *nāma-tība-nigaṇḍu,* பெ. (n) கல்லிடைக்குறிச்சிச் சிவசுப்பிரமணிய கவிராயரால், 808 வெண்பாக்களில் இயற்றப்பட்ட நிகண்டு; a glossary in 808 stan zas of veṇpā metre by šivasubramaṇiya-k-kavirāyar of kalliḍai-k-kuṟicci.

[நாமதீபம் + நிகண்டு.]

நாமநாத்தி *nāma-nātti,* பெ. (n.) வக்கணத்திப் பூடு; mottled ebony

நாமநாராயணி *nāma-nārāyaṇi,* பெ. (n.) தலைமைப்பண் (சங்.சந்.47.); a primary rāgam

நாமநீர் *nāma-nīr,* பெ. (n) அச்சந்தரும் கடல்; sea, asinspiring fear "*நாமநீர் வைப்பின்*" (குறள்,149.)

[நாமம் + நீர்.]

நாமம் = அச்சம். இஃது, உரிச்சொல். அகலம், ஆழம் தீயஉயிர்கள், கொந்தளிப்பு, நிலமுழுக்கு முதலியவற்றால், அஞ்சத் தக்கதாகலின், கடலை நாமநீர் என்றார். (திருக்.மரபு.பக்.108.).

இளங்கோவடிகளும், அச்சத்தைத் தருகின்ற கடல்சூழ் உலகு எனும் பொருண்மையில், பின்வருமாறு கூறியுள்ளதை நோக்குக.

"*நாமநீர் வேலி யுலகிற்கு*" (சிலம்பு:1:8.).

நாமநீர்வைப்பு *nāma-nīr-vaippu,* பெ. (n.) கடல்நீர் சூழ்ந்த உலகம்; the world sourrounded the sea.

[நாமநீர் + வைப்பு.]

அச்சம் பொருந்திய நீரையுடை கடல்சூழ்ந்த உலகம்.

நாமப்பாறை *nāma-p-pāṟai,* பெ. (n.) அகன்ற பொற்கோடுள்ளதும், வெண்ணிறமுடையது மான மீன்வகை; horse-mackerel, silvery, with broad golden stripes.

[நாமம் + பாறை.]



நாமப்பூசல் *nāma-p-pūšal,* பெ. (n) அச்சந்தரும் சண்டை; uproar. *"நாமப்பூசல்"* (நற்.65,7.)

[நாமம் + பூசல்.]

நாமம்[1] *nāmam,* பெ. (n.) தும்பை (மலை); a common herb with milk-white flowers.

[நாம் + அம் → நாமம்.]

வெண்மைப்பொருளில் தும்பை மலரைக் குறித்தது. நாமக்கல், நாமக்கட்டி, நாமச்சாந்து போன்ற வெண்மைப் பொருள்கரும் சொற்களை நோக்குக.

நாமம்[2] *nāmam,* பெ. (n.) 1. அச்சம்; fear. *"நாமக்காலத்து"* (தொல்.பொருள்.146.) 2. நிறைவு; fulness *"நாமவெள்ளத்து நடுவட் டோன்றிய வாய்மொழி மகனொடு"* (பரிபா.3,92.) 3. *நாம்[1]* பார்க்க; see *nām[1]*

[யாம் → ஞாம் → நாம் + அம் → நாமம்.]

யா = கருமைக்கருத்துவேர்.

யா + அம் → யாம்.

யாம் + அம் → யாமம்.

யாமம் = அச்சம் தரும் நள்ளிருள்.

நடுஇரவுக்காலம் அச்சம் தரும் காலம். அச்சக்கருத்திற்கு அடிப்படைக்கருத்து இருண்மையே. இருட்டைக் கண்டு அஞ்சுவது மாந்தரியல்பாகும். இது பற்றிச் சொல்லாய்வாளர் ப. அருளி *"கருமைக்கருத்துவழித் தோன்றிய இருண்மைக் கருத்து அச்சக்கருத்து வளர்ச்சிக்கு வழிகோலியது"* என்று, (Semantic extension) கூறியுள்ளார்.

தேவநேயரும், நாமம் என்பது அச்சப்பொருள் தரும் உரிச்சொல் என்று, குறித்துள்ளமை காண்க.

அச்சப்பொருண்மை பற்றித் தொல்காப்பியர், உயிரியல் 67–ஆவது நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார். மேலும் கற்பியலில், களவுக்காலத்தை, *"நாமக்காலம்"* என்று கூறியுள்ளது, கூர்ந்து நோக்கத்தக்கது.

"தலைவன் வரும் வழியின் இடையூறுகளை எண்ணித் தோழியும், தலைவியும், தலைவனுக்கு என்ன நேருமோ என, அஞ்சுதற்கு ஏதுவாகிய களவுக்காலம்" என்று உரையாசிரியர் நாமக்காலத்தைக் குறிப்பிடுவர். மேலும் கழக இலக்கியங்களில்

"நாமஅருந்துறை" என்று, அகம் 18–ஆம் பாடலிலும், *"நாமநள்ளிருள்"* என்று, நற்றிணை 122–ஆம் பாட்டிலும், *"நாமஞ்சால் தெவ்வர்"* என்று, கலித்தொகை 30–ஆம் பாட்டிலும், *"நாமம் அறியா வேம வாழ்க்கை"* என்று பதிற்றுப்பத்திலும் (68:12.); *"நாமநீர்வைப்பு"* என்று திருக்குறளிலும், (குறள், 149.) *"நாமநீர்வேலி"* சிலப்1:8.) என்று சிலம்பிலும், *"நாமப்பூசல்"* என்று நற்றிணை 65–ஆம் பாட்டிலும், *"நாமவெள்ளத்து நடுவண்"* என்று பரிபாடல் 3–ஆம் பாட்டிலும், அச்சப்பொருள், கழக இலக்கியப் புலவர்களால் சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளது கண்டு, தெளிக.

நாமம்³ *nāmam,* பெ. (n.) 1. புகழ்; fame, reputation. "*வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன்*" (தஞ்சைவா.7.) 2. வெள்ளைக் களிமண்ணாலாகிய திருமண்கட்டி; white clay, used for nāmam. 3. சமணசமயத்தில் எண்குற்றங்களுள் ஒன்றான கருமம் (சூடா.); the karumam which determines one's kati, one of eṉ-karumam. 4. முள்ளுத்தராசின் நடு (வின்.); the part of the scales enclosing the needle as resembling a nāmam

[நமம் → நாமம்.]

நாமம்⁴ *nāmam,* பெ. (n.) 1. நாரத்தை; bitter orange 2. பாசி; moss

நாமம்போடு¹-தல் *nāmam-pōḍu-,* 20. செ.குன்றாவி. (v t) கொடுத்ததற்குரியதைத் தராமல் ஏமாற்றுதல்; to cheat. வேலை வாங்கித் தருவதாகச் சொல்லிப் பணம் பெற்றுக் கொண்டு, எல்லோருக்கும் நாமம் போட்டு விட்டான். (இக். வ.).

[நாமம் + போடு-.]

ஒரு பணியின் பொருட்டோ அல்லது பொருளுக்காகவோ, முன்கூட்டியே பணம் பெற்றுக் கொண்டு ஏமாற்றுதல்.

நாமம்போடு²-தல் *nāmam-pōḍu-,* 20 செ.குன்றாவி. (v t) திருமண் காப்பிடுதல்; to wear the Vaiṣṇava tridental mark.

[நாமம் + போடு-.]

மாலியத்தில், நாமத்திருமண்காப்பினை, நெற்றியில் இட்டுக்கொண்டவர்களை, நாராயணனாகவே மதிக்கும் பாங்கு, இன்றும் காணப்படுகிறது.

நாமமிடுதல் *nāmam-iḍu-,* 20 செ.குன்றாவி (v.t.) *நாமஞ்சாத்துதல் (சங்.அக.)* பார்க்க; see *nāmañ-šāttu-*

[நாமம் + இடு.]

நாமருதை *nā-marudai,* பெ. (n.) வெள்ளிக்குன்றி மணி; white jeweller's beed.

நாமலைக்கிநீலம் *nā-malaikki-nilam,* பெ. (n.) மயில்துத்தம் (துருசு); blue vitriol

[நாமலைக்கி + நீலம்.]

நாமலோமலம் *nāmalōmalam,* பெ. (n.) கொறுக்காய்ப்புளி; malabar tamarind

நாமவந்தம் *nāma-vandam,* பெ. (n.) ஆனைநெருஞ்சி (சங்.அக.); a small plant

மறுவ. பெருநெருஞ்சில்.

நாமவந்திகம் *nāma-vandigam,* பெ. (n) பெருந்தும்பை; large variety of leuca flower

நாமவாழை *nāma-vāḻai,* பெ. (n) செவ்வரி இலைகொண்ட வாழைவகை (இ.வ.); a kind of banana.

[நாமம் + வாழை.]

நாமவிரி *nāma-viri,* பெ. (n) நறுவிலி வகை; felted large sebesten.

நாமவெகுண்டம் *nāma-veguṇḍam,* பெ. (n.) *நாமவைகுண்டம்* பார்க்க; see *nāma-vaiguṇḍam*

நாமவைகுண்டம் *nāma-vaiguṇḍam,* பெ. (n) தும்பை (மலை.); a common herb with milk-white flowers.

நாமனூரலைவாய் *nāmaṉūr-alaivāy,* பெ. (n) திருச்செந்தூர் (திருமுரு. 125, உரை.); Tiruccendūr inTirunelvēli district.

மறுவ. திருச்சீரலைவாய்.

[நாமநீர் → நாமனூர் + அலைவாய்.]

அச்சம் தரும் கடல்நீர் சூழ்ந்த ஊர்.

நாமுடி *nā-muḍi,* பெ. (n.) நாவின் நுனி (வின்.); tip of the tongue.

[நா + முடி.]

நாமுள் *nā-muḷ,* பெ. (n.) நாக்கில் இலவு முள்ளைப் போல் காணும் குறி; morbid symptom in which the tongue is found furred

[நா + முள்.]

நாமுள்தோஷம் *nā-muḷ-tōṣam,* பெ. (n.) கருவுயிர்த்த காலத்தில், தாய்க்கு ஏற்பட்ட மிகுபசி, நாவறட்சி முதலியவற்றால் குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்; a congenital disease in childeren inherited while in the womb, when the mother was especially suffering from hunger, thirst etc.

[நாமுள் + skt. தோஷம்.]

நாய்¹ *nāy,* பெ. (n.) 1. மூலிகையின் முதற்பெயர்; medicinal plants first term 2. புளியமரம்; tamarind tree. 3. விண்மீன் வகை; a kind of star. (சா.அக.).

நாய்² *nāy,* பெ. (n.) 1. ஒரு விலங்கு; dog. "*நாயேபன்றி புலிமுய னான்கும்*" (தொல். பொருள்.1507). 2. சூதாடுங் கருவி; game-pieces, used in dice. "*நாயிடக் குழிந்த வல்லி னல்லகம்*" (புறநா.52).

க.,ம.,து., நாய்.

நாவைத் தொங்கவிட்டுக் கொள்ளும் இயல்பு மிக்கதால் வந்த பெயர்.

[நா + இயி = நாய்.]

(ஒ.நா.) குதி → குதிரை.

நாய்களின் அமைப்பினைக் கருத்திற்கொண்டு, சாம்பசிவம் மருத்துவ அகரமுதலி வகைப் படுத்தியமை வருமாறு:—

1. ஓநாய்.
2. கடல்நாய்.
3. காட்டுநாய்.
4. கோம்பைநாய்.
5. கோனாய்.
6. சீமைஓநாய்.
7. சீமைநாய்.
8. செந்நாய்.
9. நரிநாய்.
10. நாட்டுநாய்.
11. நீர்நாய்.
12. பரநாய்.
13. மரநாய்.
14. வீட்டுநாய்.
15. வேட்டைநாய்.



நாய்க்கட்டம் *nāy-k-kaṭṭam,* பெ. (n.) *நாய்க்கரணை* பார்க்க; see *nāy-k-karaṇai.*

மறுவ. நாய்வேளை.

நாய்க்கடம்பு *nāy-k-kaḍambu,* பெ. (n.) வெள்ளைக்கடம்பு (சா.அக.); bridal-couch plant (L.).

[நாய் + கடம்பு.]

நாய்க்கடி *nāy-k-kaḍi,* பெ. (n.) 1. நாயின் கடிப்பு; dog - bite. 2. *நாய்க்கடிசன்னி (வின்.)* பார்க்க; see *nāy-k-kaḍi-šaṉṉi.* 2. நாய்க்கடியினால் ஏற்படும் புண்; dog-bite injury.

[நாய் + கடி.]

நாய்க்கடிச்சை *nāy-k-kaḍiccai,* பெ. (n.) வரிக்கற்றலை என்னுங் கடல் மீன்; a sea-fish, reddish, Lutjanus sebae.

மறுவ. கற்றலைமீன்.

நாய்க்கடிசன்னி *nāy-k-kaḍi-šaṉṉi,* பெ. (n). *நாய்க்கடியிசிவு* பார்க்க; see *nāy-k-kaḍi-y-išivu.*

[நாய்க்கடி + சன்னி.]

நாய்க்கடிசன்னிவாதம் *nāy-k-kaḍi-šaṉṉi-vādam,* பெ. (n.) வெறிநாய்க்கடியின் விளைவாக ஏற்படும், இசிவுநோய்; rabies with symtoms like those of acute paralyis.

[நாய்கடி + skt. சன்னிவாதம்.]

நாய்க்கடிப்புண் *nāy-k-kaḍi-p-puṇ,* பெ. (n) வெறிநாய்க்கடியால் ஏற்பட்ட புண்; ulcer due to dog-bite.

[நாய்கடி + புண்.]

நாய்க்கடிமருந்து *nāy-k-kaḍi-marundu,* பெ. (n.) ஊமத்தை; datura.

நாய்க்கடியிசிவு *nāy-k-kaḍi-y-išivu,* பெ. (n) வெறிநாய்க்கடியின் விளைவாக மனிதர்க்குண் டாகும், நீர்வெறுப்பு நோய்; rabies, hydrophobia (M L)

[நாய்க்கடி + இசிவு.]

[இழுப்பு → இழிவு → இசிவு .]

நாய்க்கடிவேர் *nāy-k-kaḍi-vēr,* பெ. (n) நாய்க்கடிக்கு பயன்படுத்தும் வேர்; root used for dog-bite.

[நாய்கடி + வேர்.]

நாய்க்கடுகு *nāy-k-kaḍugu,* பெ. (n). 1. வேளைப்பூடு; black cleome. 2. நாய்வேளை (பதார்த்த.104); a sticky plant that grow's best in sandy places 3. காட்டுக்கடுகு (சா.அக.); jungle mustard.

மறுவ. காட்டுக்கடுகு.

[நாய் + கடுகு.]

நாய் வேளைப்பூண்டின் விதை . இது சமைப்பதற்குப் பயன்படாத கடுகு வகையைச் சேர்ந்ததென்றறிக. வெம்மைத் தன்மையுள்ள இக் கடுகு காதுவலியைப் போக்கும். உடம்பிலுள்ள அனைத்து வலியையும் அகற்றும். வயிற்றிலுள்ள நாக்குப்பூச்சிகளைக் கொல்லும். செரியாமையைச் சீராக்கிப் பசியையுண்டாக்கும் என்று சா.அக. கூறும்.

நாய்க்கடுவான் *nāy-k-kaḍuvāṉ,* பெ. (n). பார்ப்பனப் பெண்ணிடம் வேறுகுலத்தவனுக்குப் பிறந்த மகன்: son of brahmin woman by some other cast man. "*நாய்க்கடுவான் றீண்டியிடின்*" (சிவதரு. பரி.43).

[நாய்க்கு + அடுவன் → அடுவான்.]

நாய்க்கயிறு *nāy-k-kayiṟu,* பெ. (n). கவிப்புக் (தொப்பி) கயிறு; hat retainer நாய்க்கயிறு : தலையிலுள்ள கவிப்பு (தொப்பி) கழன்று விழாதவாறு, இறுக்கிப் பிணைக்கும் கயிறு.

[நால்கயிறு → நாய்க்கயிறு.]

நாய்க்கரணை *nāy-k-karaṇai,* பெ. (n). சிறுகாஞ்சொறி; small climbing nettle.

நாய்க்கரந்தை *nāy-k-karandai,* பெ. (n). **1.** குன்றி (மலை.); crab's eye. **2.** குன்றிமணிக் கொடி; indian liquorice plant (சா.அக.)

மறுவ. சிறுகாஞ்சொறி.

நாய்க்கரிச்சான்பட்டை *nāy-k-kariccāṉ-paṭṭai,* பெ. (n). மருந்துவகையுளொன்று; a kind of herbal.

[நாய் + கரிச்சான்பட்டை.]

நாய்க்கடிமருந்து என்று சா.அக. கூறும்.

நாய்க்கரும்பு *nāy-k-karumbu,* பெ. (n) *நாணல்;* buffalo reed

ம. நாய்க்கரிம்பு.

[நாய் + கரும்பு.]

நாய்க்கல் *nāy-k-kal* பெ. (n) கல் வகையுளொன்று; a kind of stone

[நாய் + கல்.]

நாய்க்கள்ளி *nāy-k-kaḷḷi.* பெ. (n) இலைக்கள்ளி வகை; a kind of leafy milk-spurge

மறுவ. நாய்நக்கி, நாய்நாக்குக்கள்ளி.

[நாய் + கள்ளி.]

நாய்க்கற்றாழை *nāy-k-kaṟṟāḻai.* பெ. (n) பேய்க்கற்றாழை; demon aloe

[நாய் + கற்றாழை.]

நாய்க்காசு *nāy-k-kāšu.* பெ. (n) சிறு குழந்தைகளரையில் பாதுகாப்பாகக் கட்டும் நாயுரு வரைந்த பட்டைச்சிறுகாசு; an amulet of copper coin bearing the figure of a dog, worn by children at the waist

[நாய் + காசு.]

ஐம்படைத்தாலியுள் ஒன்று.

நாய்க்காத்தான் *nāy-k-kāttāṉ,* பெ. (n). குன்றிமணி; jeweller's bead.

[நாய் + காத்தான்.]

நாய்க்காய்ச்சல் *nāy-k-kāyccal,* பெ. (n) நாய்க்கடியால் வரும் சுரம்; fever due to dog-bite.

[நாய் + காய்ச்சல்.]

நாய்க்காளான் *nāy-k-kāḷāṉ,* பெ. (n). *நாய்க்குடை* பார்க்க; see *nāy-k-kuḍai.*

[நாய் + காளான்.]

நாய்க்கிட்டம் *nāy-k-kiṭṭam,* பெ. (n) *நாயுருவி* பார்க்க; see *nāyuruvi.*

நாய்க்குட்டி *nāy-k-kuṭṭi,* பெ. (n). 1. குட்டி நாய்; puppy, 2. ஒரு பணிவுமொழி; a term of humility.

[நாய் + குட்டி.]

நாய்க்குட்டிச்செடி *nāy-k-kuṭṭi-c-ceḍi,* பெ. (n). செடிவகை (யாழ்.அக.); a plant.

[நாய்க்குட்டி + செடி.]

நாய்க்குட்டி போல் தோற்றமுள்ள, கொத்துச்செடி.

நாய்க்குட்டிப்பாம்பு *nāy-k-kuṭṭi-p-pāmbu,* பெ. (n). கண்ணாடி விரியன்; russell's viper.

[நாய்க்குட்டி + பாம்பு.]

நாய்க்குட்டி படுத்திருப்பது போல், தோற்றமுள்ள பாம்பு.



நாய்க்குட்டிமரம் *nāy-k-kuṭṭi-maram,* பெ. (n). சுணங்கன் மரம்; dog or pup tree.

நாய்க்குடை *nāy-k-kuḍai,* பெ. (n). காளான் வகையுளொன்று (இ.வ.); a kind of mushroom.

[நாய் + குடை.]

உண்ணுவதற்கு உரியதன்று: சில நாய்க்குடைக் காளான், விளையும் இடத்திற்கு ஏற்றவாறு நச்சேறுந் தன்மைத்து. வெண்மை, கருமை, பழுப்பு முதலான மூன்று வண்ணத்தில் காணப்படும்.]



நாய்க்குணம் *nāy-k-kuṇam,* பெ. (n). 1. இழிகுணம்; meanness. low-minded. நாற்பது அகவையில் 'நாய்க்குணம்' (உ.வ.); 2. முரட்டுத்தனம் (வின்.); rudeness, churlishness.

[நாய் + குணம்.]

காக்கைபோல் தன்னினம் தழுவாமையும், யானை போல் இனக்குழுவோடு வாழாமையும் கொண்டு, அயல்தெருவில் உள்ள தன் இனநாய் வரின், வெறுப்பைப் பலரும் அறியக் குரைத்துக் காட்டுதல்.

நாய்க்குமிழ் *nāy-k-kumil,* பெ. (n). ஆற்றுப்பூவரசு; river portia.(L.)

[நாய் + குமிழ்.]

நாய்க்குரங்கு *nāy-k-kurangu,* பெ. (n) கட்டைவாற்குரங்கு; a monkey with short tail.

நாய்க்குருவி[1] *nāy-k-kuruvi,* பெ. (n.) *நாயுருவி. (மலை.)* பார்க்க; see *nāy-uruvi.*

[நாய் + குருவி.]

நாய்க்குருவி[2] *nāy-k-kuruvi,* பெ. (n). இலைக் கள்ளி (சங்.அக.); five tubercled spurge

[நாய் + குருவி.]

நாய்க்கெரி—த்தல் *nāy-k-keri-,* 4 செ.கு.வி. (vi). 1. இழிதொழில் செய்தல்; to perform the vilest services "*நாய்க்கெரிக்கும் புலைநிருபன்*" (ஞானவா.காதிக.17.). 2. நாய்க்குச் சமைத்தல்; to cook for a dog.

[நாய்க்கு + எரி—.]

நாய்க்கெரிப்போன் *nāy-k-kerippōn,* பெ. (n.) 1. கீழ்த்தரமானவன்; low, degraded man 2. போக்கிரி; villian. "*பிலைநாய்க் கெரிப் போனாலே*" (ஞானவா.காதிக.16.). 3. நாய்க்குச் சோறு சமைப்பவன்; cook for a dog.

[நாய்க்கு + எரிப்போன்.]

நாய்க்கெளிறு *nāy-k-kelru,* பெ. (n) *நாய்க்கெளுத்தி* பார்க்க; see *nāy-k-kelutti.*

[நாய் + கெளிறு.]

நாய்க்கெளுத்தி *nāy-k-kelutti,* பெ. (n) நீலங்கலந்த வெண்மைநிறமுடையதும் ஆறு(அங்குலம்)விரற்கிடை வரை வளரக் கூடியதுமான, ஆற்று மீன் வகை; fresh-water fish, bluish silvery attaining 6inch in. length.

[நாய் + கெளுத்தி.]

கெளிறு → கெளிற்றி → கெளுத்தி.



நாய்க்கொட்டான்வேர் *nāy-k-kottāṉ-vēr,* பெ. (n.) காட்டுக்கொட்டையின் வேர்; a medicinal root of kāttu-k-kottai.

[நாய்க் கொட்டான் + வேர்.]

நாய்க்கொட்டி *nāy-k-kotti,* பெ. (n.) கொட்டிச் செடிவகை (தைலவ.தைல.); an aquatic plant

[நாய் + கொட்டி.]

நாய்க்கொல்லி *nāy-k-kolli,* பெ. (n.) நச்சுவேர்; aconite root.

நாய்கன் *nāygaṉ*, பெ. (n.) வணிகன்பிங்); merchant, chetti, "*மதலையிற்றுழி நாய்கர்போற் றுயர்க் கடன் மறிகின்றார்*" (கந்தபு. மோனநீங்.2.).

[நாயகன் →நாய்கன்.]

நாய்கன் = வணிகர் தலைவன். (மு.தா.170.).

கண்ணகியின் தந்தை மாநாய்கன். நாவாய்கன் → நாய்கன். கடல் வணிகத் தலைவனைக் குறிக்கும் பான்மையில் வழங்கியதெனலாம். மேலும் 'மா' எனும் உரிச்சொல், 'பெரிய' என்னும் பொருளில், பெரிய கடல் வாணிகனாகத் திகழ்ந்ததால், 'மாநாய்கன்' என்னும் பெயர் வந்ததாகக் கொள்ளலாம்.

நாய்ச்சாறு *nāy-c-cāṟu*, பெ. (n.) நாய்ச்சிறுநீர்; dog's urine

[நாய் + சாறு.]

நாய்ச்சி *nāycci*, பெ. (n.) தலைவி; lady, mistress.

[நாயன் →நாய்ச்சி.]

நாய்ச்சி → ஆய்ச்சி.

நாய்ச்சிமார் *nāyccimār*, பெ. (n.) திருமாலின் தேவிமார்; the two consorts of Tirumāl "*தேவரீரையும் நாய்ச்சிமாரையும்*" (ஈடு.1,3:10.).

[நாய்ச்சி →நாய்ச்சிமார்.]

ஒ.நோ. பிள்ளை → பிள்ளைமார்.

நாய்ச்சியார் *nāycciyār*, பெ. (n) 1. தலைவி; lady, mistress 2. ஆண்டாள்; saint Āṇḍāḷ. 3. மலைமகள்; Malaimagaḷ (Pārvadi) 'நாயனாய்ச்சியார்' (யாழ்ப்.).

[நாய்ச்சி + ஆர் → நாய்ச்சியார்.]

நாய்ச்சீரகம் *nāy-c-cīragam*, பெ. (n) காட்டுச்சீரகம்; purple fleabane

[நாய் + சீரகம்.]

நாய்ச்சுண்டை *nāy-c-cuṇḍai* பெ. (n) பேய்ச்சுண்டை; wild brinjal

[நாய் + சுண்டை.]

நாய்ச்சுரம் *nāy-c-curam*, பெ. (n) நாய்க்கடியால் ஏற்படும் காய்ச்சல்; fever due to dog bite.

[நாய் + சுரம்.]

நாய்ச்சூலை *nāy-c-cūlai*, பெ. (n) சூலைநோய் வகையுளொன்று; a kind of šūlai-nōy diseases

[நாய் + சூலை.]

பெண்களுக்கு மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் சூலைநோய்.

நாய்ச்சொறி *nāy-c-coṟi*, பெ. (n) நாயினால் மனிதனுக்கு ஏற்படும் சொறிநோய்: a communicable cutaneous disease of domestic animals as dog etc. 2. நாய்க்கு ஏற்படும் சொறிநோய்; scabbies of dogs

[நாய் + சொறி.]

நாய்ச்சோளகம் *nāy-c-cōḷagam*, பெ. (n) பெண்துவரை; white dholl

[நாய் + சோளகம்.]

நாய்த்தயிர்வேளை *nāy-t-tayirvēḷai,* பெ. (n.) *நாய்வேளை (யாழ். அக.)* பார்க்க; see *nāy-vēḷai.*

[நாய் + தயிர்வேளை.]

நாய்த்தருவை *nāy-t-taruvai,* பெ. (n) புல் வகை; a kind of grass

[நாய் + தருவை.]

நாய்த்திசை *nāy-t-tiśai,* பெ. (n) தென் மேற்றிசை (வின்.); south-west(astrol)

[நாய் + திசை.]

எட்டுத்திசைக்கும், எண்கடவுளரை அக் காலத்தில் கூறியிருக்கின்றனர். அதன்படி பைரவர் திசை என்றும் நாய்த்திசை என்றும், தென்மேற்றிசையைக் குறிப்பர்.

நாய்த்திராட்சை *nāy-t-tirāṭcai,* பெ. (n) நச்சுக்குணமுள்ள கொடிமுந்திரி; dog-grape

மறுவ. நாய்க்கொடி முந்திரி.

[நாய் + திராட்சை.]

நச்சுத்தன்மையுள்ள, இத் திராட்சைச் சாறு, கண்விழிநோய்க்கு மருந்தாகும். முறைச்சுரத்தைத் தணிக்கும். நோயின் தாக்கத்தைக் குறைக்கும்.

நாய்த்தீற்றி *nāy-t-tīṟṟi,* பெ. (n.)நாய்க்குரிய இழிவான உணவு; miserable food, as fit only for a dog

[நாய் + தீற்றி.]

நாய்த்துளசி[1] *nāy-t-tuḷaśi,* பெ. (n) வெண்மை கலந்த சாம்பல் நிறமுடையதும், மருந்திற்குப் பயன்படுவதுமான துளசி; white basil, wild morjoram Indian tea

க. நாய்தொளசி.

[நாய் + துளசி.]

இக் காட்டுத் துளசியின் காய்கள் மருந்து குணமுடையது. கடுஞ்சுரம். சிணுக் கிருமல், கோழை போன்றவற்றிற்கு. இக் காட்டுத் துளசியின், காய்கள் பயன்படும்.

நாய்த்துளசி[2] *nāy-t-tuḷaśi,* பெ. (n) கஞ்சாங் கோரை; basil

மறுவ. காட்டுத்துளசி.

க. நாய்தொளசி.

[நாய் + துளசி.]

துழாய் → துளாய் → துளசி.

மிகுசுரம், சிணுக்கிருமல் போன்றவற்றிற்கு நாய்த்துளசியிலையினைச் சுண்டக்காய்ச்சித் தேயிலை போன்று பருகினால், நன்மை பயக்குமென்று சா.அக. கூறும்.

துளசி போன்று தோற்றமுடையதும். பூசை மருந்து இவைகளுக்கு பயன்படாத் தன்மையினால், இஃது நாய்த்துளசி எனப்பெயர் பெற்றது. இது போலவே நாய்க்கடுகு, நாய்வேம்பு, நாய்க்காளான் போன்றவையும் பயன்படாத் தன்மையால் வந்த பெயரென்று கொள்ளலாம்.

நாய்த்துளசியிலை *nāy-t-tuḷaśi-y-ilai.* பெ. (n) தேயிலைக்குப் பதிலாகப் பயன்படுத்தும் நாய்த்துளசி இலை; leaves of white basil used as a substitute for tea

[நாய்துளசி + இலை.]

நாய்த்தேக்கு *nāy-t-tēkku,* பெ. (n) புன்னை வகை (யாழ்ப்), a large timber tree

நாகமல்லி

நாய் துளசி

நாய் வேம்பு

மறுவ. கற்றேக்கு.

[நாய் + தேக்கு.]

இருபது அடிஉயரம் வளரும் புன்னைமரம். மணமிக்க பொன்னிறம் வாய்ந்த பூக்களைத் தரும். பூ, காய் உணவாகப் பயன்படும்.

நாய்நரம்பு *nāy-narambu,* பெ. (n.) கக்குவான் நோய் நீங்கவேண்டிக் குழந்தைகளின் கழுத்திற்கட்டும் நரம்பு (வின்.); catgut hung round the neck of children for whooping cough

[நாய் + நரம்பு.]

நாய்க்குக் கழுத்தில் கட்டுவதுபோல், குழந்தைக்குக் கட்டுவதால் வந்தபெயர்.

நாய்நறுவிலி *nāy-naṟuvili,* பெ. (n.) நறுவிலி வகை (யாழ்ப்.); a kind of sebesten

[நாய் + நறுவிலி.]

நாய் + நறுவு + இலி.

நறுமணமில்லாத வகை.

நாய்நாக்கி *nāy-nākki,* பெ. (n.) *நாய்நாக்கு* ***(வின்.)*** பார்க்க; see *nāy-nākku.*

நாய்நாக்கு *nāy-nākku,* பெ. (n) இலைக் கள்ளி (மலை.); five-tubercled spurge

[நாய் + நாக்கு.]

நாய்நாக்குப் போன்ற இலைவடிவால் வந்தபெயர்.



நாய்நாக்குக்கள்ளி *nāy-nākku-k-kaḷḷi,* பெ. (n) *நாய்நாக்கு* பார்க்க; see *nāy-nākku.*

[நாய்நாக்கு + கள்ளி.]

நாயின் நாக்கு தொங்குவது போன்ற, தோற்றமுடைய இலைக்கள்ளி.

நாய்ப்பயறு *nāy-p-payaṟu,* பெ. (n.) பூடுவகை (வின்.); dog green gram

[நாய் + பயறு.]

பச்சைப்பயிறு போன்ற, பயறு வகையினைச் சார்ந்தது என்று, சா.அக. கூறும்.

நாய்ப்பல் *nāy-p-pal,* பெ. (n.) கோரைப்பல்; canine tooth.

[நாய் + பல்.]

நாய்ப்பனிப்பூண்டு *nāy-p-paṉi-p-pūṇḍu,* பெ. (n.) நெருஞ்சி; caltropes.

நாய்ப்பாகல் *nāy-p-pāgal,* பெ. (n.) கொடி வகை (பதார்த்த.334.); bryony.

[நாய் + பாகல்.]

கசப்பில்லாதது.

நாய்ப்பாலை *nāy-p-pālai,* பெ. (n.) நீர்க் குறிஞ்சா (யாழ்ப்.); indian ipecacuanha (L).

[நாய் + பாலை.]

நாய்ப்புகையிலை *nāy-p-pugai-y-ilai,* பெ. (n.) மருந்திலை; medicinal plant.

நாய்ப்புடல் *nāy-p-pudal,* பெ. (n) கொடிவகை; a kind of creeper.

[நாய் + புழல் → புடல்.]

மறுவ. பேய்ப்புடல்.

புடலையினத்தைச் சார்ந்த நாய்ப்புடல் காய்களைக் கறிசமைத்து உண்பர். இக் காய்கள் கசப்புத் தன்மையு டனிருப்பினும், வயிற்றுக் கோளாற்றினை அகற்றும். மலத்தை இளக்கும். செரிமானத்தை ஏற்படுத்தும். நாய்ப்புடல் விதைகள் சுரத்திற்கு மருந்து. இதன் பூக்கள் வயிற்றுப் பூச்சிகளைக் கொல்லும்.

நாய்ப்புடுக்கன் *nāy-p-pudukkan,* பெ. (n.) இருட்பூ (வின்.); malabar wrinkled logs matrix.

[நாய் + புடுக்கன்.]

நாய்ப்புடுக்கன் இலையைப் பாலிலிட்டுக் கொதிக்க வைத்துச் சிறிது தேன்கலந்து, உடம்பில் பூசினால், தோலில் உண்டாகும் அனைத்து நோய்களும் அகலும்.

நாய்புடுக்கன் விதையினின்று வடித்த எண்ணெய், நாட்பட்ட தொழுநோய் சொறிசிரங்கிற்கு உகந்தது என்று, சா.அக. கூறும்.

நாய்ப்புடோல் *nāy-p-pudōl,* பெ. (n.) *நாய்ப்புடல்* பார்க்க (வின்.); see nāy-p-pudal.

[நாய் + புடல் → புடோல்.]

நாய்ப்புல் *nāy-p-pul,* பெ. (n.) 1. சுணங்கன் புல்; dog-grass. 2. அறுகம்புல்; dogs tooth grass.

[நாய் + புல்.]

நாய்ப்புலி *nāy-p-puli,* பெ. (n.) பதினைந்தாம் புலி; a kind of dice game.

மறுவ. ஆடுபுலி ஆட்டம்.

[நாய் + புலி.]

நாய்மண்டை *nāy-mandai,* பெ. (n) நாயின் தலையோடு; dog's skull-bone.

[நாய் + மண்டை.]

நாய்மரம் *nāy-maram,* பெ. (n) மரவகை; dog-wood.

[நாய் + மரம்.]

குளிர்காய்ச்சல், முறைக்காய்ச்சல், வலிப்பு போன்ற நோய்களுக்கு, நாய்மரக்கருக்கு நீர் பயன்படுமென்று சா.அக. கூறும்.

நாய்மீன் *nāy-mīn,* பெ. (n.) கடல்மீன் வகை; parrot wrasse, olivaceous. 2. குரங்கன் சுறா; dog-fish fawn coloured shark. 3. உல்லமீன் வகை; dog erring-fish.

[நாய் + மீன்.]



நாய்முருகை *nāy-murugai,* பெ. (n.) முருகைக்கல் வகை (யாழ்ப்.); a kind of coral stone

[நாய் + முருகை.]

நாய்முள் *nāy-muḷ,* பெ. (n.) ஒரு வகைச் சினைப்பு (இ.வ.); nettle rash- urticaria.

[நாய் + முள்.]

இலவமுள்ளைப் போன்றவை. பெரியவர்களுக்கு உடம்பிலுண்டாகும் குருக்கள், இவ் வகையைச் சார்ந்தவை என்று சா.அக. கூறும்.

நாய்முள்தீட்டு *nāy-muḷ-tīṭṭu,* பெ. (n.) சூலுற்றிருக்கும்போது தாயின் பசியினாலும், மிகுதுயரினாலும், குழந்தைக்கு உண்டாகும் நோய் வகை (சீவரட்.221.); a disease of children produced by the famished condition, grief,etc of the mother during pregnancy

[நாய்முள் + தீட்டு.]

நாய்முள்ளி *nāy-muḷḷi,* பெ. (n.) செடிவகை (யாழ்அக.); indian nightshade.

மறுவ. கறிமுள்ளி.

[நாய் + முள்ளி.]

நாய்மூங்கில் *nāy-mūṅgil,* பெ. (n.) ஆண்மூங்கில்; dog bamboo, stone bamboo.

மறுவ. கல்மூங்கில்.

[நாய் + மூங்கில்.]

நாய்வணங்கி *nāy-vaṇaṅgi,* பெ. (n.) *நாயுருவி* பார்க்க; see *nāyuruvi.*

[நாய் + வணங்கி.]

நாய்வால்நெல் *nāy-vāl-nel.* பெ. (n.) நெல் வகை; a kind of paddy.

[நாய் + வால் + நெல்.]

ஒ.நோ. குதிரைவால் சம்பா.

நாய்விட்டைக்கல் *nāy-viṭṭai-k-kal* பெ. (n.) ஒருவகைச் சுண்ணாம்புக்கல் (யாழ்ப்.), a kind of Limestone

[நாய்வட்டைக்கல் → நாய்விட்டைக்கல்.]

நாய்விடக்கடி *nāy-viḍa-k-kaḍi.* பெ. (n.) வெறிநாய்க்கடியினால் ஏற்படும் இசிவுநோய்; a tetanic disease communicated to man by bite of a mad-dog

[நாய் + skt விஷம் + கடி.]

நாய்விருத்தி *nāy-virutti.* பெ. (n.) ஊழியஞ் செய்யும் வாழ்வு; dog's life, a life of miserable subserviency *"சேவகஞ் செய்தல் வைத்த நாய்விருத்தி"* (காஞ்சிப்பு.ஒழுக்.37).

[நாய் + skt. விருத்தி.]

நாய்விளா *nāy-viḷā.* பெ. (n.) குட்டிவிளா மரவகை (யாழ்ப்); musk-deer plant, dog wood apple.

[நாய் + விளா.]

நாய்விளாஞ்சு *nāy-viḷāñju* பெ. (n) மரவகை; a kind of tree Dulbergia Paniculata

நாய்வெள்ளங்கு *nāy-veḷḷaṅgu.* பெ. (n) பன்றிவாகை (யாழ்ப்.), tube-in-tube wood

[நாய் + வெள்ளங்கு.]

நாய்வெள்ளை[1] *nāy-veḷḷai,* பெ. (n.) கபில நிறம் (வின்.); whitish brown

மறுவ. புகர்நிறம்.

[நாய் + வெள்ளை.]

நாய்வெள்ளை[2] *nāy-veḷḷai,* பெ. (n.) *நாய் வேளை (யாழ்.அக.)* பார்க்க; see *nāy-vēḷai.*

மறுவ. நாய்த்தை வேளை.

[நாய் + வெள்ளை.]

நாய்வேட்டம் *nāy-vēṭṭam,* பெ. (n.) **1.** நாயின் உதவிகொண்டு ஆடும் வேட்டை; hunting with dogs **2.** நாய்கள் *வேட்டையில் விலங்குகளை வருத்துவது போன்ற இடுக்கண்;* teasing like a dog worrying its game. "*நாய் வேட்ட மாடாத மாத்திரையே*" (சீவக.2788).

[நாய் + வேட்டு + அம்.]

நாய்வேம்பு *nāy-vēmbu,* பெ. (n.) சிறுமர வகை (வின்.); dog-neem

[நாய் + வேம்பு.]

நாய்வேளை *nāy-vēḷai,* பெ. (n) பெருவேளைச் செடிவகை (பதார்த்த.286.); a sticky plant that grows best in sandy places

மறுவ. நாய்க்கடுகுச்செடி.

[நாய் + வேளை.]

ஆண்டுதோறும் காய்க்கும், நாய் வேளையின், காய்களில் கருப்புவிதைகள் இருக்கும். இதன் இலைகள் பெருங் காயம் போன்று காரமணமிக்கவை. நாய்வேளைக்கீரை சமையலுக்கு உகந்தது. நாய்வேளைச் சாறு, தலைவலி, மிகு குளுமையைப் போக்கும் என்று சா.அக. கூறும்.

நாயக்கச்சி *nāyakkacci,* பெ. (n.) வடுகர், வன்னியர், வேடர், இருளர் முதலிய இன மகளிர்: woman of certain castes as vaḍugar, vaṉṉiyar vēḍar iruḷar

[நாயக்கன் → நாயக்கச்சி.]

நாயக்கவரசர் *nāyakka-v-arašar,* பெ. (n) மதுரையையும், திருச்சியையும் தலைநகர் களாய்க்கொண்டு ஆண்ட வடுகமன்னர்; Nāyakkar rulers of Madurai and Trichy

[நாயகன் → நாயக்கன்.
நாயக்கன் + அரசர் (மு.தா.170).]

நாயக்கன் *nāyakkaṉ,* பெ. (n.) **1.** வடுகருள் ஒரு சாரார் தம் இனப்பெயர்; title of certain Telugu castes. **2.** வன்னியர், வேடர், இருளர் முதலிய தமிழினப் பெயர்; title of certain Tamiḻ castes, as vaṉṉiyar, vēḍar, iruḷar **3.** ஓர் தலைமையாளர் (யாழ்.அக.); captain, soldier, headman

[நாயகன் →நாயக்கன் .]

சில குலத்தார் பட்டப்பெயர். ஒருகா. நாய்கன்→ நாயக்கன் = படைத்தலைவன். நாயகன், நாயக்கம் முதலான வடிவங்கள் முதற்கண் குலத்தலைவர்க்கு வழங்கியவை. (மு.தா.170).

நாயகக்கண்டம் *nāyaga-k-kaṇḍam,* பெ. (n.) பதக்க அணிவகை (S I I Viii.53.): a kind of necklace ornament.

[நாயகம் + கண்டம்.]

கழுத்தில் தொங்கும் முகப்புடன் கூடியதும், அனைத்து அணிகலன்களுக்கும் தலைமை சேர்க்கும் தன்மை மிக்கதுமான கழுத்தணி வகை. இம் முகப்பானது பொன்னில், மணிகள் இழைக்கப்பட்டு, வேலைப்பாட்டுடன் கூடியது. இக் கழுத்தணிக்கு, இம் முகப்பே அனைவராலும் விரும்பப்படுவதும், நடுநாயமாகத் திகழ்வதுமாகையால், நாயகக்கண்டம் என்றும் பெயர் வந்தது.

நாயகசின்னம் *nāyaga-šinnam,* பெ. (n.) நாகசுரம்; a kind of clarionet.

[நாயகம் + சின்னம்.]

சின் → சின்னம்.

நாயகசுரம் *nāyaga-šuram,* பெ. (n.) *நாயக சின்னம் (யாழ்.அக.)* பார்க்க; see *nāyaga-šinnam.*

[நாயகம் + சுர்+அம் → சுரம்.]

சுரம் என்பது பாலை நில வெப்பம் குறித்த பழந்தமிழ்ச் சொல்.

நாயகத்தான் *nāyagattān,* பெ. (n.) நாயகன் பார்க்க; see nāyagan. "*வானோர் தொழு திறைஞ்சும் நாயத்தான் பொன்னடிக்கணான்*" (திவ்.இயற்.பெரியதிருவந்.45).

[நாயகம் + அத்து + ஆன்.]

நாயகத்தி *nāyagatti,* பெ. (n.) *நாயகி (யாழ்.அக.)* பார்க்க; see *nāyagi.*

[நாயகம் + அத்து + இ.]

நாயகத்தூக்கம் *nāyaga-t-tūkkam,* பெ. (n.) சிறந்து நிற்கும் அணிகலத்தொங்கல் (S.I.I.ii, 226); the chief pendant in an ornament.

[நாயகம் + தூங்கு → தூக்கு + அம்.]

தொண்மணிகளுடன் கூடிய முகப்புடன் தொங்கும், கழுத்தணி.

நாயகப்பத்தி *nāyaga-p-patti,* பெ. (n.) நாடகமாடுந் தலைமையிடம்; the stage where acting takes place. '*தூண்களின் நிழல் நாயகப்பத்தியின் கண்ணும், அவையின் கண்ணும் படாதபடி*' (சிலப். 3:108,உரை).

[நாயகம் + பத்தி.]

பந்தி → பத்தி.

நாயகப்பானை *nāyaga-p-pānai,* பெ. (n.) கோயிலிற் பொங்கலிடும் பெரிய பானை (வின்.); a pig pot used for pongal at a temple.

[நாயகம் + பானை.]

நாயகப்பேர் *nāyaga-p-pēr,* பெ. (n.). வேலைக்காரரின் தலைவன்; head man of a gang of servants. "நாயகப்பேர் இரண்டுக்கு" (S.I.I.vii.27.).

[நாயகம் + பேர்.]

நாயகம்[1] *nāyagam,* பெ. (n.) தலைமை; head-ship, superiority, supremacy, pre-emience. "*மூவுலகுக்குந் தருமொருநாயகமே*" (திவ். திருவாய்.3:10:11). 2. மேம்பாடு; greatness, honour, esteem. "*தன்சீறடியா லுதைக்கின்ற நாயகம்*" (திவ்.இயற். திருவிருத்.34). 3. சிறப்பின்மிக்கது; the choicest or the most prized of a class of things. "*சுடர்க்கெலா நாயகமனையதோர் மாலை*" (கம்பரா. மந்தரை.52). 4. *நாயகமணி* பார்க்க; see *nāyaga-mani,* "*நாயகத்தைத் தொட்டு*

நவில்க" (சைவச.பொது.139). 5. கிரந்தி நாயகம்; a plant.

த. நாயகம் → skt. nāyaka

[நாயன் →நாயகன் = தலைவன், கணவன், அரசன், கடவுள். நயம் →நாயம் →நாயகம் = அனைவராலும் விரும்பப்படும் தலைவன், அரசன், கடவுள். (மு.தா.170).]

நாயகம்² *nāyagam,* பெ. (n.) இறைவனால் அனுப்பப்பட்ட (இசுலாமிய) இறைத்தூதர்; messenger of Allā

[நயம் →நாயம் →நாயகம்.]

நயம் = விருப்பம்

அனைவராலும் விரும்பப்படும் இறைத்தூதுவர்.

நயம் = விருப்பம்.

நாயகம்³ *nāyagam,* பெ. (n.) கத்தூரி மணமுள்ள செடிவகையுளொன்று (சா.அக.); a kind of musk

நாயகம்பண்ணு-தல் *nāyagam-paṇṇu-,* 5 செ.கு.வி. (v.i.) தலைமைத்தன்மை செலுத்துதல் (யாழ்.அக.); to rule, exercise sovereignty, to impose authority.

[நாயகம் + பண்ணு-.]

தலைமைத் தகவால், தவறுகளைத் தட்டிக் கேட்டு நெறிப்படுத்துதல்.

நாயகமணி *nāyaga-maṇi,* பெ. (n.) 1. மணிமாலையின் நடுக்கோக்கும் பெருமணி (சைவச.பொது.139.); a large bead at the centre of a necklace 2. அணிகலனின் நடுமணி; central gem in an ornament. '*வனவசை நகரத்தை நாயக மணியாகக் கூறவே*' (பிரபுலிங். மாயையினுற்.6.உரை).

[நாயகம் + மணி.]

நாயகமுத்து *nāyaga-muttu,* பெ. (n) தொங்கலியின் நடுவிலமைந்த பெருமுத்து; a big pearl at the centre of a necklace. '*துளை யிடாத நாயகமுத்தென்றுமாம்*' (சீவக. 2184. உரை).

[நாயகம் + முத்து.]

நாயகமேனி *nāyaga-mēṉi,* பெ. (n.) மரகதப்பச்சை (யாழ்.அக.); a kind of emerald.

[நாயகம் + மேனி.]

வண்ணங்களிற் சிறந்ததும், தலையாயதுமான, தமிழர் மேனிநிறம் மாநிறம் என்பது பச்சை நிறமுடைய திருமாலை, நீலவண்ணன், கருநிறத்தன், பச்சைமா மலைபோல் மேனியன் (திவ்.பிர.) என்று குறித்ததால் அறியலாம்.

நாயகர் *nāyagar,* பெ. (n.) நாயகர் என்ற இனப்பெயர்; a subtitle of nāyagar caste

[நாயக்கர் → நாயகர்.]

நாயகவளந்து *nāyaga-vaḷandu,* பெ. (n) *நாயகப்பானை (யாழ்.அக.)* பார்க்க; see *nāyaga-p-pāṉai.*

நாயகன்¹ *nāyagaṉ,* பெ. (n.) 1. தலைவன்; lord, master, chief "*பூதநாயகன்*" (கம்பரா.அங்கத.21.). 2. கணவன்; husband. (பிங்.) "*மலர் மங்கை நாயகன்*" (திவ்.

பெரியதி.10:7:6). 3. அரசன் (திவா.); king. *"நாயகன் வன நண்ணலுற்றானென்றும்"* (கம்பரா. நகர்நீங்கு.222). 4. கடவுள்; the supreme being. 5. நடத்துவோன் (சங்.அக.); leader, conductor. 6. இருபது யானைகட்டும் இருபது குதிரைகட்டும் தலைவன் (சுக்கிரநீதி.74); head of 20 elephants and 20 horses. 7. பத்து ஊர்களுக்குத் தலைவனாக நியமிக்கப் பட்டவன் (சுக்கிரநீதி.27.); a person appointed to the headship of ten villages. 8. பாட்டுடைத்தலைவன் அல்லது கதை நாயகன்; hero of a poem or story.

த. நாயகன் → skt nāyaka.

[நாயன் → நாயகன் = தலைவன், கணவன், அரசன், கடவுள் (மு.தா.170).]

ஒருகா: நாயகம் →நாயகன்.

நாயகன்² *nāyagaṉ,* பெ. (n.) 1. கலுழக்கல்; a kind of stone. 2. கந்தக நஞ்சு; a kind of native arsenic

நாயகாதிபன் *nāyagādibaṉ,* பெ. (n.) அரசன் (யாழ்.அக.); king

[நாயக + skt. *அதிபன்.]*

மக்களை வழி நடத்தும் தலைமைப் பண்பினன்.

நாயகி *nāyagi,* பெ. (n.) 1. தலைவி; lady. 2. மனைவி (சூடா.); wife, mistress 3. பார்வதி; pārvati 4. பண்வகை; a kind of tune. 5. கதைத்தலைவி; heroine, as of a story.

[நாயகன் → நாயகி.]

நாயகிமேனி *nāyagi-mēṉi,* பெ. (n.) பச்சைக்கல் (மரகதம்) வகையுளொன்று; a green gem-Emerald.

நாயகிவாணி *nāyag-vāṇi,* பெ. (n.) நால்வகைப்பெண் பிரிவில், சங்கினி வகையினள்; one of the four kinds of woman.

நாயகை *nāyagai,* பெ. (n.) கத்தூரிவகை (பதார்த்த.1081); a kind of musk

[நாயகி + நாயகை.]
தலைமையான நறுமணப்பொருள்.

நாயங்கியிலை *nāyaṅgi-y-ilai,* பெ. (n.) கள்ளி; spurge tree.

நாயடியேன் *nāy-aḍiyēṉ,* பெ. (n.) 'நாய்போல் அடிமைப்பட்ட யான்', என்ற பொருளில் வருமொரு பணிவுமொழி; a term of humility meaning this dog is your slave. *"நாயடியேன் பாழ்த்த பிறப்பறுத்திடுவான்"* (திருவாச.5:13.).

[நாய் + அடியேன்.]

நாயர் *nāyar,* பெ. (n.) மலையாளருள் ஓர் இனத்தார்; a caste of hindus in malabar

ம. நாயர்.

*[நாயன் = தலைவன், அரசன்,கடவுள், தந்தை.
நாயம் →நாயன் →நாயர் = சேர(மலையாள) - நாட்டுப் படைத்தலைர் வழிவந்த குலத்தார் (மு.தா.170.).]*

நாயரஞ்சி *nāyarañji,* பெ. (n.) *நாயுருவி (மலை.)* பார்க்க; see *nāy-uruvi.*

நாயறல் *nāyaṟal,* பெ. (n.) எருமைநாக்கி; flat fish

நாயன் *nāyaṉ,* பெ. (n.) 1. கடவுள்; the Supreme Being 2. அரசன்; king. 3. தலைவன்; master, lord "*நாயன் வென்றிகொள பாடல் கேட்க*" (திருவாலவா. 54,36.).

த. நாயன் → skt. nāya nāyaga.

[நய →நாயம் →நாயன் = தந்தை, தலைவன், அரசன், கடவுள்.]

நயத்தல் = விரும்புதல்; அனைவராலும் விரும்பப்படுதல், பேணுதல் = விரும்புதல்; போற்றுதல். எல்லோராலும் விரும்பப்படும் குலத்தலைவன். குடிகள் விரும்புந் தலைவனும், ஞாலத்துயிர்களைப் பேணிக்காக்கும் இறைவனும் ஒன்றே. இறைவனையும், மன்னனையும், ஒருசேரவைத்து, உய்த்துணர்ந்த கழகப்புலவோர், "மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்" என்றனர். திருவுடைய மன்னனையும் திருமாலையும் ஒன்றாகக் கருதிப்பாடினர். "திருவுடை மன்னனைக் காணின் திருமாலைக் கண்டேனே" என்று (நாலாயிரத் தெய்வப்பனுவலில்,) நாயன் எனுமிச்சொல், திருவுடைய மன்னனையும், இறைவனையும் ஒன்றாகக் குறித்தல் காண்க.

நாயன் என்னும் பெயர் தந்தை பெயராகவும், குலப்பட்டப் பெயராகவும் வழங்கும் வழக்கு, வடமொழியில் இல்லை. மேலும், நாயன் என்னும் பெயர், தமிழக மாந்தர்தம் வாழ்வியலில் தந்தை, குலத்தலைவன் என்னும் பொருண்மையில் வழக்கூன்றி யுள்ளமை அறிக. தமிழில் வழங்கும் பல்வேறு வடிவங்கள் வடமொழியில் இல்லை. நாய,(nāya) *நாயக (*nāyaga*) என்னும், இரு வடிவங்களே அங்குள.*

நாயன்தே *nāyaṉdē,* பெ. (n.) '*சாமி*' யென்று பொருள்படும் தொடர்; a term of address meaning 'my lord' '*நாயன்தே இவன் திரு வரைக்கு ஈடாம்படி வாட்டின படி*' (ஈடு.4:3:5);

[நாயம் →நாயன் →நாயன்தே.]

நாயன் + தே → நாயந்தே அல்லது நாயன்றே என்று கூட்டு ஒலிபெறும்.

நாயன்மார் *nāyaṉmār,* பெ. (n) 1. தலைவர் (வின்.); lords, masters 2. கடவுளர்; Gods. "*மற்றைத் திருப்பதிகளின் நாயன் மார்க்கும்*" (ஈடு.7:2:11.). 3. பெரியபுராணத்தில் வரலாறு கூறப்பெற்ற சிவனடியார்; canonized Šaiva Šaints whose history is narrated in Periya-purāṇam

[நாயன் + மார் →நாயன்மார்.]

நாயகன் → நாயன் → மார்.

நாயனகாரன் *nāyaṉa-kāraṉ,* பெ. (n) பெரு வங்கியம் (நாகசுரம்) வாசிப்போன் (இ.வ.); player on clarionet

[நாயனம் + காரன்.]

நாயனம் *nāyaṉam,* பெ. (n.) நாயகச்சின்னம்; native clarionet.

[நாயன் + அம் →நாயனம்.]

மங்கல இசையாக ஒலிபெருக்கி இல்லாத காலத்திலிருந்து அனைத்து நன் நிகழ்ச்சிகளிலும், இசைக்கும் இசைக் கருவிகளுள், தலைமையானதும், இனிமையானது மான நாகசுரம்.

நாயனாய்ச்சியார் *nāyaṉāycciyār,* பெ. (n) 1. உமையும் சிவனும்; Šivaṉ and Malaimagaḷ. 2. தலைவன் தலைவி; master and mistress, as of a slave.

[நாயன் + நாய்ச்சியார்.]

நாயனார் *nāyaṉār,* பெ. (n.) 1. தலைவர்; Lord, Master 2. கடவுள்; God. "*இந் நாயனார்க்குத் திருவிடையாட்டமாக*" (S.I.I i, 68:60.). 3. சிவபெருமான்(தக்கயாகப் பக்.344.); Šivaṉ. 4. தந்தை; father. '*நாயனார் போன நாள் இன்றென்று அகத்துலுள்ளோ ரெல்லாருங் கூறி அழுத பின்பு*' (சீவக.209,உரை.). 5. சிவனடியார்; title of canonized Šaiva Šaint. 6. சில இனத்தாரின் பட்டப்பெயர்; title of certain caste, as Jaiṉar, kaikkōḷar, uḍaiyār and a section of vēḷāḷar. 7. *திருவள்ளுவர்* பார்க்க; see *Tiruvaḷḷuvar.*

ம. நாயனார்.

[நாயன் → நாயனார் = இறைவனடியாரையும் தலைவரோடொப்பக் கருதும் வழக்க முண்மையால், நாயன், நாயனார் என்னும் பெயர்கள், அடியாரையுங் குறிக்கு மென்றறிக.]

நயத்தல் = விரும்புதல்.

[நய → நாயம் → நாயன்.]

நாயன் = கடவுள், தலைவன், அரசன், தந்தை நாயனார் என்னுஞ்சொல் விரும்புதற் கருத்தினடிப்படையில் தந்தையையுங் குறிக்கும். (எ.டு) 'நாயனார் போன நாள் இன்றென்று அகத்திலுள்ளோர் எல்லாருங் கூறி' (சீவக;2097,உரை.).

நாயாட்டம் *nāy-āṭṭam,* பெ. (n.) 1. உலைச்சல்; physical pain. 2. பேயாட்டம்; restless activity of an obsessed person

[நாய் + ஆட்டம்.]

"ஆட்டம்" என்பது இங்கு உவமஉருபாக வந்துள்ளது.

[ஒ.நோ.] குரங்காட்டம்.

நாய் இரைக்கு அலைவது போன்று, ஒருவர் பணத்தேட்டத்திற்காக அலைவ தால் ஏற்பட்ட, உடல்துன்பம்.

நாயாடி *nāy-āḍi,* பெ. (n) 1. வேட்டையாடு வோன்; hunter "*நாயாடிகளும் தூதுவரும்*" (S.I.I.ii,352.). 2. திருவிதாங் கூரிலுள்ள காட்டுச்சாதியார்; a hill-tribe in Tiruvidāṉgūr.

[நாய் + ஆடு → ஆடி.]

நாயுடன் சென்று வேட்டையாடுபவன். 'இ' சொல்லாக்க விகுதி.

நாயிகை *nāyigai,* பெ. (n.) தலைவி; lady. mistress. 'இவள் நாயிகை' (ஈ.டு.5,3,3.).

[நாயகி → நாயகை → நாயிகை.]

நாயிந்தே *nāyindē,* பெ. (n.) corr of *நாயன்தே* பார்க்க; see *nāyaṉdē*

[நாயன் + தே → நாயிந்தே.]

எழுத்துத் திரிபினாலேற்ற உலகவழக்கு.

நாயிராஞ்சி *nāyirāñji,* பெ. (n.) நாயுருவி; indian burr.

நாயிருமல் *nāyirumal,* பெ. (n.) 1. நாயைப் போல் இருமுதல்; a deep resonant cough. 2. தொண்டையை அமுக்குவது போல் இருமுருகை; compression cough

*[*நாய் + இருமல்.*]*

நாயில் *nāyil,* பெ. (n.) மதிலுறுப்பு வகை; a component part of a fortification. "*நாயில் பூண்முலை*" (சீவக.144:4.).

[ஞாயில் → நாயில்.]

நாயிலந்தை *nāyilandai,* பெ. (n.) நரியிலந்தை; small round errate and obtuse leaved jubube.

நாயிலை *nāyilai,* பெ. (n.) இலைக்கள்ளி; leafy euphorphia.

*[*நாய் + இருமல்.*]*

நாயிறு *nāyiṟu,* பெ. (n) 1. சூரியன்; sun. "*கருநாயிறு போல்பவர்*" (கம்பரா.கடிமண.4.). 2. ஞாயிற்றுக் கிழமை; sunday.

க. நேசறு.

[ஞாயிறு + நாயிறு.]

நாயிறுதிரும்பி *nāyiṟu-tirumbi,* பெ. (n) நாயிறு வணங்கி (மலை.) பார்க்க; see nāyiṟu-vaṇaṅgi.

மறுவ. சூரியகாந்தி. பொழுதுவணங்கி.

*[*ஞாயிறு → நாயிறு + திரும்பி.*]*

நாயிறுபாடு *nāyiṟu-pāḍu,* பெ. (n.) காலை; early morning, as the coming of the day. "*சக்ரவர்த்திக்கு...அன்று நாயிறுபாடு*" (ஈடு.6:7:3).

[ஞாயிறு → நாயிறு + படு → பாடு.]

கதிரவன் சாயுங்காலத்தில் நடத்தப்படும், கலைநிகழ்ச்சி.

நாயிறுபோது *nāyiṟu-pōdu,* பெ. (n.) மாலை; evening, as the going of the day "*ஒரு தீர்த்தத்தினன்று நாயிறு போது*" (ஈடு.6:4:10).

[ஞாயிறு → நாயிறு + பொழுது → போழ்து போது.]

ஞாயிறு சாயும் பொழுது. சாயும் + காலம் → சாங்காலம்

நாயிறுவணங்கி *nāyiṟu-vaṇaṅgi,* பெ. (n) பொழுது வணங்கி (மாலை.) என்ற செடி; sun flower.

மறுவ. சூரியகாந்தி.

[ஞாயிறு → நாயிறு + வணங்கி.]

நாயீ *nāy-ī,* பெ. (n) ஈவகை (வின்.); dog-fly

[நாய் + ஈ.]

நாயுடு *nāyuḍu,* பெ. (n.) வடுகநாயக்க இனத்தாரின் இனப்பெயர்; title of the vaḍuga nāyak caste

[நாயக்கர் → நாயுடு.]

நாயுண்ணி *nāy-uṇṇi,* பெ. (n.) உண்ணிவகை (வின்.); dog-tick, Ixodes.

[நாய் + உண் + இ.]

நாயுண்ணு *nāyuṇṇu,* பெ. (n.) தோற்புலவு; heart leaved woolly jacker. (சா.அக.).

நாயும்புலியும் *nāyum-puliyum,* பெ. (n) பதினைந்தாம் புலியென்னும் விளையாட்டு (வின்); a dice game

மறுவ. ஆடும் புலியும்.

[நாயும் + புலியும்.]

15 நாய்களும், புலிகளும் என்ற எண்ணிக்கையில், காய்களை வைத்து நகர்த்தும் விளையாட்டு.

நாயுரீஇ *nāy-urīi,* பெ. (n.) *நாயுருவி* (திவா.) பார்க்க; see *nāyuruvi.*

[நாயுருவி → நாயுரீஇ.]

நாயுருவி *nāy-uruvi,* பெ. (n.) பூடுவகை (திவா.); a plant growing in hedges and thickets.

[நாய் + உருவி.]

நாயுருவி என்பது, சிறு செடி வகையைச் சேர்ந்தது. விலங்குகளினால் விதை பரவும் வகையில், இதன் விதைகள் சிறு சிறு முட்களைக் கொண்டதாக இருக்கும்.

நாயுருவி, இந்தியாவில் எங்கும், எக் காலத்திலும் பயிராகும். மழை, குளிர் காலங்களில், இச் செடி நன்கு விளையும். இச் செடி 3 முதல் 4 அடி வரை வளரும் தன்மையுடையது. இதன் இலைகளின் தண்டு, நீல நிறமும், பச்சை வண்ணமும், கலந்து காணப்படும். இதன் வேரைப் பற்குச்சியாக பயன்படுத்துவதன் வாயிலாக, பல்நாற்றம், பல்லரணை அகலும். நாயுருவி வேரினைக் கருக்குநீரிட்டுக் குடித்தால், சிறுநீர்க் கடுப்பு தீரும். அரத்த மூலம் அகலும். வெறிநாய்க்கடி, பாம்புக்கடி, தேள்கடி போன்ற நச்சுக்கடிகளுக்கு, இக் கருக்கு நீரினைப் பாலில் கலந்து குடித்தால், நச்சுத் தன்மை அழியும். இதன் இலைகளைக் கசக்கிக், தேள் கடிக்கு கொடுத்தால், நச்சுத்தன்மை அகலும். நாயுருவி வேரினைக் கருக்கு நீரிட்டுக் குடித்தால், முதிர்கரு அழியும். எளிய மகப்பேற்றிற்கும், இஃது உறுதுணை புரியும். இதன் வேரினைச் சூரணமாக்கி, நல்லெண்ணையில் கலந்து, காதில் விடுவதால், காதிரைச்சல் நீங்கும் என்று. சா.அக. கூறுகின்றது.

நாயுருவிஅரிசி *nāyuruvi-ariši,* பெ. (n) நாயுருவிச் செடியின் விதை; the seeds of the nāyuruvi plant.

நாயுருவிச்சாம்பல் *nāyuruvi-c-cāmbal,* பெ. (n.) நாயிருவியின் விதைச் சாம்பல்; ashes obtained from the burnt plant Inion burr.

[நாயுருவி+ சாம்பல்.]

நாயுருவியுப்பு *nāyuruvi-y-uppu,* பெ. (n.) நாயிருவிச்சாம்பலினின்று செய்த மரவுப்பு; salt prepared out of the ashes of the burunt Indian burr.

[நாயுருவி + உப்பு.]

நாயுருவிவேர் *nāyuruvi-vēr,* பெ. (n) நாயுருவிச்செடியின் வேர்; root of indian burr

[நாயிருவி + வேர்.]

பிறரைத் தன்வயப்படுத்த, நாயுருவிவேர் பயன்படும் என்று சா.அக. கூறும்.

நாயுள்ளி *nāy-uḷḷi,* பெ. (n.) நரிவெண்காயம்; indian squill, Urginia indica.

[நாய் + உள்ளி.]

நாயுறக்கம் *nāy-uṟakkam,* பெ. (n) சிறுதூக்கம் (வின்.); dog- sleep.

[நாய் + உறக்கம்.]

நாய் சிறிது நேரம் உறங்குதல் குறித்த சொல்லாட்சி.

ஒ.நோ. காக்கைகுளியல்.

நாயெச்சில் *nāy-eccil,* பெ. (n) படர்தாமரை; (இ.வ.); ring-worm.

[நாய் + எச்சில்.]

நாயெலுமிச்சை *nāy-elumiccai,* பெ. (n.) நாய்விளா, மரவகை (யாழ்ப்.); musk deer plant

[நாய் + எலுமிச்சை.]

நாயோட்டம் *nāy-ōṭṭam,* பெ. (n.) குதிரை முதலியவற்றின் கதிவகை (யாழ்.அக.); a pace, as of a horse

[நாய்+ஓட்டம்.]

நாய் விரைந் தோடுவது போன்று, மிகவிரைந்து செல்லும் குதிரை முதலான விலங்குகளின் ஓட்டத்தையும், காலப்போக்கில் குறித்தது.

நாயோட்டு மந்திரம் *nāy-ōṭṭu-mandiram,* பெ. (n) திருவைந்தெழுத்தில் 'சி' என்னும் எழுத்து; the letter in the sacred five lettered *'si' mantra of the śaivaites.* "*நாயோட்டு மந்திரம் நாதனிருப்பிடம்*" (திருமந்.பதிப்புரை. பக்.30).

[நாயோட்டு + மந்திரம்.]

சிவாயநம மந்திரத்தில், 'சி' எனும் ஐந்தெழுத்து மந்திரம் தொன்முதுச் சிவத்தின் முதல் எழுத்தாகும். சிவநெறி, சிந்துவெளிச் சீமையில் கிளைத்த செந்நெறி. நாயினைச் "சீ" என்று ஓட்டுங்கால், *[சி → சீ.]* சிவாயநம மந்திரத்தின் முதலெழுத்தான 'சி'காரம். "சீ" காரமாக, ஒலிக்கப்படுவது, தொன்று தொட்டு வழங்கும் வாழ்வியல் உண்மையாகும்.

"சீ' என்று, நாயை விரட்டுவதும். அதை 'சிவாயநம' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தின் முதலெழுத்தாகக் குறிப்பதும், அக் கால வழக்குப் போலும்.

நார்¹ *nār,* பெ. (n.) 1. மட்டை முதலியவற்றின் நார்; fibre, as from the bark of a leaf-stalk வாழைநார் பூத்தொடுக்கப் பயன்படும் (உ.வ.). வாழை மட்டையால் மூக்குப் பொடி மடிக்கலாம். "நாரின் முருங்கை நவிரல் வான்பூ" (அகநா:1). 2. கயிறு; string, cord, rope, as made of fibre தென்னை நாரில் கொச்சக்கயிறு பின்னலாம் (இ.வ.). "*உள்ளமெனு நாரினாற் கட்டி*" (நாலடி,153). 3. வில்லின் நாண்; bowstring. "*நாருள தனுவுளாய்*" (கம்பரா.நகர்நீங்.156). 4. பன்னாடை; web about the foot of a coco-nut or palmyra leaf "*நாரரி நறவி னெருமை யூரன்*" (அகநா.36). 5. அன்பு; love, affection, as a bond. "*நலத்தின்க ணாரின்மை தோன்றின்*" (குறள்,958). 6. கல்நார்(தைலவ. தைல.); asbestos. 7.நரம்பு; *nerve,*

க., ம., நார். து., நாரு. தெ., நார. *Nēpāli-nāri.*

[யார் → ஞார் → நார்.]

யா = பொருந்துதற் கருத்துவேர். யாத்தல் = கட்டுதல்.

யா → யார் → ஞார் → நார்.

ய → ஞ = திரிபு.

பண்டையப் பயன்பாட்டில், நூல் கயிறு தோன்றுவதற்கு முன்பு, தென்னை, பனை, கற்றாழை, வாழை முதலானவற்றின் பட்டையினின்று எடுத்த நார் கயிறு என்னும் பொதுப் பொருளில், பழக்கத்தில் இருந்தது. பின்பு, காலப்போக்கில் கயிற்றுப்பின்னல் போன்று, நன்கு அமைக்கப்பட்ட வில்லின் நாண், பன்னாடை நார் போன்றவற்றிற்கும், நார் என்ற பெயர் ஏற்பட்டது.

பனை, தென்னை, வாழை, கற்றாழை முதலான நிலைத்திணைப் பொருட்களின் மட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்படும் இழை அல்லது பட்டை; இந் நார் பொரும்பாலும் மயிரிழை போன்றும், நூலிழை போன்றுமி ருக்கும். நாரின் வகைகளாகச் சாம்பசிவ மருத்துவ அகரமுதலி கூறுவது வருமாறு:-

1. சணல் நார்.
2. பூண்டு நார்.
3. காய்கறி நார்.
4. பட்டை நார்.
5. தேங்காய் நார்.
6. வித்து நார்.
7. கற்றாழை நார்.
8. முள்ளி நார்.
9. பருத்தி நார்.
10. வாழை நார்.
11. எருக்கு நார்.
12. செம்புளிச்சை நார்.
13. வக்கை நார்.

நார்[2] *nār,* பெ. (n) மாந்தன் அல்லது விலங்குகளில் காணப்படும், நூலிழை போன்ற நார்ப்பொருள் அல்லது, தசைப்பகுதி (நிணநார்); in physiology, fibre is an elongated thread like structure of organic tissue animal fibres

[நூல் + நார்.]

இந் நாரின் உட்பிரிவுகளாகச் சாம்பசிவமருத்துவ அகரமுதலி கூறுவது வருமாறு :

1. நரம்பு நார்.
2. கிளை (உப) நார்.
3. தசை அல்லது நரம்பிணைக்கும் நார்.
4. மூளை இடை நார்.
5. மயிர் நார்.
6. பாவை நார்.
7. பாசி நார்.
8. தசை நார்.

நார்க்கட்டில் *nār-k-kaṭṭil,* பெ. (n.) கட்டில்வகை; a kind of cot.

[நார் + கட்டில்.]

நார்க்கயிற்றால் கட்டப்பெற்ற கட்டில்.



நார்க்கட்டு *nār-k-kaṭṭu,* பெ. (n.) பனைநார்த் தொகுதி; a bundle of palmyra fibre cords, commonly 100.

[நார் + கட்டு.]

நார்க்கண்ணாடி *nār-k-kaṇṇāḍi,* பெ. (n.) கல்நாராலான கண்ணாடி; fibre glass.

[நார் + கண்ணாடி.]

நார்க்கத்தி *nār-k-katti,* பெ. (n.) மட்டை யினின்று நாரெடுக்குங் கத்திவகை; a kind of knife for peeling off bark from palmyra leaf-stalk.

[நார் + கத்தி.]

நார்க்கதுவு-தல் *nār-k-kaduvu-,* 5 செ.கு.வி. (v.i.) கத்தியாற் பட்டை சீவி நாரெடுத்தல்; to peel off bark from palmyra leaf-stalks.

[நார் + கதுவு-.]

நார்க்கயிறு *nār-k-kayiṟu,* பெ. (n.) கொச் சுக்கயிறு; coir rope.

[நார் + கயிறு.]

தென்னைநாரால் பின்னப்பட்டதும், வலிமையான சிறிய நாரிழைகளால் நன்கு முறுக்கேற்றியதுமான, கொச்சுக்கயிறு.

நார்க்கழிவு *nār-k-kaḻivu,* பெ. (n.) மக்கிய தென்னை நார் உரம்; decomposed coconut fibre fertilizer.

நார்ச்சத்து *nār-c-cattu,* பெ. (n.) செரிமான மண்டலத்தின், சீரான இயக்கத்திற்குத் தேவையான கீரை, வாழைத்தண்டு போன்றவற்றிலிருக்கும், நாரப்பொருள்; fibrous matter, found in certain greens, banana pith, etc. நார்ச்சத்துள்ள உணவு மலச்சிக்கலைத் தவிர்க்கும் (இக்.வ.).

[நார் + சத்து.]

உடலுக்கு உறுதி பயப்பதும், நெஞ்சாங்குலைக்கு வலிவு சேர்த்து, நீண்ட வாணாளைக் கொடுக்குந் தன்மை வாய்க்கப் பெற்றதுமான, நார்ச்சத்து.

நார்ச்சிலந்தி *nār-c-cilandi,* பெ. (n.) புழுவகை (இ.வ.); guinea-worm.

[நார் + சிலந்தி.]

நார்ச்சீலை *nār-c-cīlai,* பெ. (n.) 1. நார்மடி பார்க்க (வின்.); see *nār-maḍi.* 2. மரவுரி (யாழ்.அக); bark of trees.

[நார் + சீலை.]

நார்ப்பட்டடை *nār-p-paṭṭaḍai,* பெ. (n.) நாருரிக்கும் எந்திரம் (இ.வ.); fibre-extracting machine.

[நார் + பட்டு + அடை.]

நார்ப்பட்டு *nār-p-paṭṭu,* பெ. (n.) 1. நார்மடி பார்க்க; see *nār-maḍi.* 2. வலைக்கோணி (தைலவ.தைல.); gunny cloth.

ம. நார்ப்பட்டு.

[நார் + பட்டு.]

நார்மட்டை *nār-maṭṭai,* பெ. (n.) நாருரிக்கத் தகுதியான பனைமட்டை; stalk of palmyra leaf fit for nār.

[நார் + மட்டை.]



நார் மடி *nār-madi,* பெ. (n.) பட்டாடை போல்வதும், நாராற்செய்ததுமான ஆடைவகை (பதார்த்த.1323); cloth made of fibre, resembling silk.

க. நார்மடி.

[நார் + மடி.]

சிலவகை நிலைத்திணை (தாவரங்களின்) நாரிலிருந்து, உருவாக்கப்படும், பட்டுப்போன்ற ஒருவகைத் துணி.

நாரகம் *nāragam,* பெ. (n.) நிரையம் (யாழ்.அக.); hell.

த. நரகம் → skt. nāraga.

[நரகம் → நாரகம்.]

நாரகர் *nāragar,* பெ. (n.) நிரையத்துக்குரிய மாந்தர் (பாவிகள்); sinners, as fit for hell. "*கடவுளைக் கயந்த நெஞ்சா நாரகர்*"(சிவதரு.பாவ.8).

த. நரகம் → skt. nāraga.

[நார் + அகர்.]

நாரங்கம் *nārangam,* பெ. (n.) *நாரத்தை* (சூடா.) பார்க்க; see *nārattai.*

[நார் + skt. அங்கமி.]

நாரங்கி[1] *nārangi,* பெ. (n) *நாரங்கம்* (இ.வ.) பார்க்க; see *nā-rangam*

[நார் + skt. அங்கி.]

நாரங்கி[2] *nārangi,* பெ. (n). *நாராங்கி* (இ.வ.) பார்க்க; see *nārāngi.*

நாரசிங்கம் *nāra-śingam,* பெ. (n.) 1. கிளைத்தொன்மத் தொன்று (பிங்.); a secondary purāṇam, one of up a kiḷai-p-purāṇam, (q v.) 2. மருந்துவகை (பதார்த்த.1216); a compound medicine.

[நர → நார + சிங்கம்.]

நாரசிங்கன் *nāra-śingaṉ,* பெ. (n.) மனிதனின் உடலும், (சிங்கத்தின்) மடங்கலின் தலையுமாக உருவங் கொண்டு, தோற்றரவு செய்த திருமால்; Tirumāl in his man-lion incarnation.

[நரசிங்கன் → நாரசிங்கன்.]

நாரணவன் *nāraṇavaṉ,* பெ. (n.) 1. செம்மறியாட்டின் கொம்படியில் உண்டாம் புழுப்பூச்சி வகை (யாழ்ப்.); a kind of maggot in rams, under the horns. 2. மாட்டு நோய் வகை; a disease in cattle.

நாரணன் *nāraṇaṉ,* பெ. (n.) திருமால்; *Tirumāl* 'நாராணனை நரபதியை' (திவ்.இயற்ற. நான்மு.67.).

[நாராயணன் → நாரணன்.]

நாரணா *nāraṇā,* பெ. (n.) நெட்டி(மலை.), sola pith

[நார் + அணவு → அணா.]

நாரணி *nāraṇi,* பெ. (n.) கொற்றவை (துர்க்கை) (பிங்.); Korravai.

நாரணிச்சட்டி *nāraṇi-c-caṭṭi,* பெ. (n.) திருக் கார்த்திகையன்று கோயிற்றிருமுன் எரிக்கும் விளக்குச் சட்டி; (நாஞ்) a kind of broad mud-vessel, used as a lamp on Tiru-k-kārttigai day.

மறுவ. அகல்விளக்கு.

[நாரணி + சட்டி.]

நாரணியவன் *nāraṇi-y-avaṉ,* பெ. (n.) சிவபிரான்; šivaṉ, as the Lord of Nāraṇi. "அந்திவணங்கொண்ட மேனிய னாநந்த னாரணியவன்" (மருதூரந்.41).

[நாரணி + அவன்.]

நாரத்தம் *nārattam,* பெ. (n.) 1. வசம்பு (வின்.); sweet flag 2. சடாமாஞ்சி; spikenard herb.

[நார் + அத்தம்.]

நாரத்தம்புல் *nārattam-pul,* பெ. (n.) புல்வகை (வின்.); lemon grass, Andropogon schoenanthus.

[நாரத்தம் + புல்.]

நாரத்தை *nārattai,* பெ. (n.) 1. மரவகை (பதார்த்த.746); orange, Citrus aurantium 2. கடார நாரத்தை; seville orange 3. கொழுஞ்சிவகை (இ.வ.); loose - skinned orange 4. காட்டு நாரத்தை; indian wild-lime

[நார் + அத்து + ஐ.]

கரும்பச்சைவண்ணத் தோலையும். புளிப்புச் சுவையுள்ள, சுளை சுளையான சதைப் பகுதியையும் கொண்ட காய். மேற்குறிப்பிட்ட காயைத் தரும், முள் உள்ள சிறுமரம்.

நாரதசரிதை *nārada-šaridai,* பெ. (n.) இறந்து பட்டதொரு தமிழ்நூல்; (புறத்திரட்டு.) an ancient work, not extant

[நாரத + skt சரிதை.]

நாரதப்பிரியம் *nārada-p-piriyam,* பெ. (n.) தணிகை மலை; Taṇigai hill "*மகதியாழ் முனிக்குறு பிரியம் விரவிய சிறப்பா னாரதப் பிரியம்*" (தணிகைப்பு.புராணவர.60).

[நாரதன் + skt. பிரியம்.]

நாரதபரிவிராசகம் *nārada-parivirāšagam,* பெ. (n.) நூற்றெட்டுபநிடதங்களு ளொன்று; an upaniṣad, one of 108.

[நாரதன் + பரிவிராசகம்.]

நாரதம் *nāradam,* பெ. (n.) 1. *நாரதீயம்* பார்க்க; see *nāradīyam.* 2. பெரிய யாழ்வகை; a large lute. "*ஆரியப் பதங்கொ ணாரதப் பேரியாழ்*" (கல்லா.81). 3. மேகம் (யாழ்.அக.); cloud.

[நாரதன் → நாரதம்.]

நாரதராட்டம் *nāradar-āṭṭam,* பெ. (n.) புறங்கூறி ஒருவருக்கொருவர் பகை யுண்டாக் குகை (வின்.); sowing discord by tale bearing.

[நாரதர் + ஆட்டம்.]

நாரதவேலை *nārada-vēlai,* பெ. (n.) இருவரிடமும் சென்று பேசிக் கலகம் மூட்டுகை; act of setting one against another "நாரதர் வேலை நன்மையில் முடியும் என்பது பழைய(தொன்மப்) பழமொழி. (இக்.வ.).

[நாரதர் + வேலை. ஆனால் இக் கலகத்தின் முடிவு நன்மையே என்பது முதுமொழி. [கலகமூட்டும் வேலை.]

நாரதன் *nāradaṉ,* பெ. (n) 1. படைப்புத் தேவன்(பிரமன்) மகன்களுள் குறிப்பிடத்தக்க முனிவர்; nārada a celebrated sage and son of brammā. "நாரதன் வீணை" (சிலப்.6;18). 2. புத்தருள் ஒருவர் (வின்.); a Buddhar (w.) 3. கலகக்காரன்(உ.வ.); mischief-maker tale-bearer.

[நரன் → நாரதன்.]

நாரதீயம் *nāradīyam,* பெ. (n.) 1. பதினெண் (புராண)தொன்மதொன்று; (பிங்.), a chief purāṇam. one of padiṉeṉ-purāṇam 2. ஓர் துணைத் (புராணம்) தொன்மம்; (திவா.) a secondary purāṇam. one of 18 upa-purāṇam,

[நாரதம் + இயம் → நாரதியம் → நாரதீயம்.]

நாரநிதி *nāra-nidi,* பெ. (n.) கடல்; sea. *''நாரநிதியினை நோக்கிச் செல்லும்''* (சேதுபு.திருநா.22). 2. நீர்நிலை; a water- store house.

[நார + Skt நிதி.]

நாரம் = நீர், நீர்நிரம்பிய கடல்.

நாரப்புண் *nāra-p-puṇ,* பெ. (n) நரம்புச் சிலந்தி; guinea-worm

தெ. நரிபுண்டு.

[நரம் → நாரம் + புண்.]

நாரப்புண் நரம்பிலுண்டாகும் மெல்லிய கட்டி.

நாரம்[1] *nāram,* பெ. (n.) 1. அன்பு; love. attachment. 2. காதல்; fondness, affection love. "நாரங்கொண்டார்" (கம்பரா. மாரீசன். 180.)

த. நாரம் → skt. nāra.

[நார் + அம் → நாரம்.]

"அம்" பெருமைப்பொருள் பின்னொட்டு.

நாரம் = அன்பு வலைக்குள் அகப்படும் காதல்.

நாரம்[2] *nāram,* பெ. (n) 1. நீர்; water "நாரநின் றனபோற் றோன்றி" (கம்பரா.நட்பு.31). 2. பாசி; (பிங்.); moss, muscus. 3. ஆன்மாக்கள்; (வின்.) souls, living beings. 4. மக்கட்பகுதி; (யாழ்.அக.); multitude, crowd of persons. 5. ஆவின்கன்று (யாழ்.அக.); calf 6. நீர்வாழ் புள்; (யாழ்.அக.) aquatic bird

நாரம்[3] *nāram,* பெ. (n.) *நாரத்தை,1.* (பிங்.) பார்க்க; see *nārattai.1.*

நாரன் *nāraṉ,* பெ. (n.) மன்மதன்; indian cupid, as exciting love. "வேழவில்லால்...எய்யு நாரனார்" (கம்பரா.இராவண.244).

[நரன் → நாரன்.]

ஒருகா. நார் : அன்பு, காதல்.

நார் + அன் → நாரன்.

ஆண், பெண் இருபாலரிடத்தும், அன்பையும், காதலையும் வெளிப்படுத்தும் அம்பினை எய்பவன்.

நாராங்கி *nārāṅgi,* பெ. (n.) பூட்டு, தாழ்ப்பாள், தொடரி, (சங்கிலி) இவை மாட்ட உதவும் கதவுநிலை உறுப்பு, (இ.வ.); staple for the bolt of a door

[நாதாங்கி → நாராங்கி.]

த→ர திரிபு.

நாராசநாழி *nārāśa-nāḻi,* பெ. (n.) ஒருவகை அளவுப்படி; a kind of measure, used in temples (S.I.I.v 242.)

[நாராசம் + நாழி.]

நாராசம் *nārāśam,* பெ. (n) 1. இரும்புக்கம்பி; iron pin, rod, probe. "நாராசத்திரிவிற் கொள்ளத்தகுவது காந்தம்" (மணிமே.27,55). 2. இரும்பிற் செய்த அம்பு; iron arrow 3. எழுத்தாணி; iron style. 4. தெருவிலிருந்து குறுக்கே போகும் ஒடுக்கச்சந்து (வின்.); narrow straight lane at right angles to a street.

நாராசம்பாய்ச்சு-தல் *nārāśam-pāyccu-.* 5 செ.கு.வி. (v.i.) *நாரசமேற்று,²-.* பார்க்க; see *nārāśam-ēṟṟu-.²*

[நாராசம் + பாய்ச்சு-.]

நாராசமுத்திரை *nārāśa-muttirai* பெ. (n) முத்திரை வகை; (யாழ்.அக.) a finger-pose

[நாராச + முத்திரை.]

நாராசமேற்று-தல் *nārāśam-ēṟṟu-* 5 செ.கு.வி. (v.i.) 1. ஓலையில் துளையிடுதல்; to pierce a hole by passing a boring pin through an ōlai. 2. தண்டனையாகக் காதில் இரும்புக்கம்பி செலுத்துதல்; to thrust an iron rod into one's ear. as a punishment

[நாராசம் + ஏற்று-.]

நாராயணகௌளம் *nārāyaṇa-kauḷam,* பெ. (n.) பண்வகையு ளொன்று; a kind of tune.

[நரன்> நாரம் + skt *அயணம் = நாராயணம். நாராபணம் +* skt. *கௌளம்.]*

நாராயணசாமிகொண்டாடி *nārāyaṇa-sāmi-koṇḍāḍi,* பெ. (n) வெள்ளைமண்கட்டியால் நாமமிட்டுக் காவியுடையுடுத்தும் ஒருசார் சாத்தாத வைணவக்குரு; a class of non-brahmin vaiṣṇavaite priests who. wearing nāmam of white clay. put on salmon coloured cloth and act as soothsayers

[நாராயணசாமி + கொண்டாடி.]

நாராயணத்தைலம் *nārāyaṇa-t-tailam,* பெ. (n.) வளிப்(வாயு)பிடிப்பைப் போக்குந் நெய்மவகை; an ointment for rheumatism

[நாராயணம் + தயிலம்.]

தைலம் = நெய்மம்.

நாராயணப்பிரியன் *nārāyaṇa-p-piriyan̲,* பெ. (n.) சிவபிரான் (யாழ்.அக.); Šivan̲ as visṇu's friend.

[நாராயணம் + skt பிரியன்.]

நாராயணம் *nārāyaṇam,* பெ. (n.) 1. நூற்றெட்டுப நிடதங்களு ளொன்று; an upanisda, one of 108. 2. அரசு (மலை.), pipal. 3. நாராயணன் தும்பிலி (வின்.) பார்க்க ; see; nārāyaṇan̲-tumbili.

[நரன் → நாரன் + skt.அயணம்.]

நாராயணமண்டூரம் *nārāyaṇa-maṇḍū-ram,* பெ. (n) மருந்து வகை(பதார்த்த. 1210); a tonic

[நாராயணன் + மண்டூரம்.]

நாராயணரசம் *nārāyaṇa-rašam,* பெ. (n.) குளிகை வகை; a compound pill.

[நாராயண் + skt ரசம்.]

நாராயணன் *nārāyaṇan̲,* பெ. (n.) 1. திருமால் (திவ். இயற்.நான்மு.1); Visṇu as reposing on the waters 2. சிவபிரான் (யாழ்.அக.); Šivan̲ 3. நான்முகன் (பிரம்மன்) (யாழ்.அக.); bramma 4. வருணன் (யாழ்.அக.); varuṇan̲. 5. நிலவு (யாழ்.அக.); moon. 6. திருமாலின் பிறப்பியமான ஒரு முனிவர்; a sage, as an incarnation of Viṣṇu. 7. நாரை வகை; blue heron.

த. நரன் + skt. ayaṇa.

[நரன் → நாரன் + skt.அயணன்.]

மனித நிலையினின்று, தெய்வநிலையை அடைந்தவன்.

நாராயணன்சுழி *nārāyaṇan̲-šuḻi* பெ. (n) வெள்ளை முள்ளி; (இவ.) esser yellow nail-dye.(l.)

[நாராயணன் + சுழி.]

நாராயணன்தும்பிலி *nārāyaṇan̲-tumbili,* பெ.(n.) பதினாறு அங்குலம் வளர்வதும், பொன்னிறங் கொண்டதுமான, கடல் மீன்வகை; sea-fish, golden, attaining 16 in in length, Saurus myops

[நாராயணன் + தும்பிலி.]

நாராயணன்பூண்டு *nārāyaṇan̲-pūṇḍu,* பெ. (n.) சவரிக்கொத்து எனும் பூடு (சங்.அக.); a plant.

[நாராயணன் + பூண்டு.]

நாராயணி *nārāyaṇi,* பெ. (n) 1. வெற்றிச் செல்வி (பிங்.); Ko_r_ravai, Durgai. 2. எழுவகை பெண்தெய்வங்களுள் ஒருத்தி; Nārāyaṇi one of the šapta-mādar 3. பார்வதி (சங்.அக.); Pārvadi. 4. கங்கை (சங்.அக.); the Ganges 5. குறிஞ்சியாழ்த் திறத் தொன்று; (பிங்.) a secondary melody type of the kuriñji class 6. தண்ணீர் விட்டான் (தைலவ.தைல.); long pungent Sparsifasciculate asparagus.

[நாராயணன் → நாராயணி.]

நாராயணிதம் *nārāyaṇidam,* பெ. (n.) ஒரு செய் நஞ்சு (மூ.அ); a prepared arsenic

[நாராயணி + (இ)தம்.]

நாராயணீயம் *nārāyaṇīyam,* பெ. (n.) வடமொழியில் நாராயணர் இயற்றிய ஒரு கணிதநூல்; a sanskrit treatise on astronomy by Nārāyaṇar. "*நாராயணீயம் வாராகம் முதலிய கணிதங்களும்*" (தொல்.பொருள்.75,உரை).

[நாராயணி + அம் →நாராயணீயம்.]

நாராயநாழி *nārāya-nāḻi,* பெ. (n.) *நாராசநாழி* பார்க்க; see *nārāśa-nāḻi* (T.A.S.ii,143).

[நாராயம் + நாழி.]

நாராயம்¹ *nārāyam,* பெ. (n.) 1. அம்பு; arrow. "*குறுநரிக்கு நல்ல நாராயங்கொளல்*" (பழ.80.). 2. எழுத்தாணி (நாஞ்.); style.

[நார் + ஆயம்.]

நார் = நாண்.

நாராலாகிய நாணிலிருந்து, இடையற வின்றி, வரிசையாகச் சரமாரியாக எய்யப் படுவதால், அம்பைக் குறித்து வழங்கிற்று.

நாராயம்² *nārāyam,* பெ. (n.) அளவு படிவகை; a measure. "*நாராயத்தால் நிசதம் உரிநெய்*" (S.I.I v,286.).

[நாழி→ நாளி →நாலி →நாரி + ஆயம்.]

ஒரு முகத்தலளவு திரிந்து, வேறொரு முகத்தலளவுப் பெயராக மாறிற்று

நாரி¹ *nāri,* பெ. (n) 1. வில்லின் நாண்; bowstring "*நாரியின் பேரொலி*" (கந்தபு.தாரக.142). 2. பன்னாடை (பிங்.); fibrous covering at the bottom of a leaf-stalk , as of a coconut palm. 3. யாழ்நரம்பு (வின்.); lute-string. 4. இடுப்பு (யாழ்ப்.); loins, hip.

க., தெ. நாரி.

[நார் + இ.]

"இ" சொல்லாக்க ஈறு.

நாரி =நாரால் முறுக்கேற்றிச் செய்யப்படும் நாண்.

நாரி² *nāri,* பெ. (n.) 1. கள் (பிங்.); toddy. 2. தேன் (உரி.நி); honey. 3. தாளகம்; orpiment.

[நார் + இ →நாரி.]

நாரி³ *nāri,* பெ. (n.) நன்னாரி (தைலவ.தைல.); indian sarasa parilla.

[நல் + நாரி → நன்னாரி → நாரி.] நாராலாகியதும், இனியமென்பருகலுக் குரியதுமாகிய நன்னாரி.

நாரி⁴ *nāri,* பெ. (n.) 1. பெண் (பிங்.); woman. "*நாரிய ரில்லையிஞ் ஞாலமேழு மென்ன*" (கம்பரா.கைகேசி சூழ்.22.). 2. மலைமகள் (பிங்.); Malaimagaḷ.

த. நாரி→ skt. nāri.

[நரன் →நாரன் → நாரி.]

ஒருகா. நார் + இ → நாரி.

நார் = அன்பு, விருப்பவுணர்வு, காதல்.

நார் + அம் → நாரம் = அன்பு, காதல்.

நார் + அன் → நாரன் = காமன்.

நாரி என்னுஞ்சொல் விரும்பத்தக்கவள், அன்புடையவள், பெண் என்னும் பொருண்மையில் கழகவிலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகிறது.

(எ.டு.) "*நலத்தின் கண் நாரின்மை தோன்றின்*" (குறள்,958.). "*நாரில் நெஞ்சம்*" (குறுந்,212:2.).

நாரியர், நாரிகை என்னும் சொற்கள் தமிழிலக்கியப் பரப்பில், பெண் என்னும் பொருளில் மிகுதியாக வழக்கூன்றியுள்ளன. அவற்றுட் சில:–

"*நாரியர் இல்லை இஞ் ஞாலம் ஏழும் என்ன*" (கம்பரா.கைகே.22.).

"*நாணா எவனையிந் நாரிகை*" (பரிபா.12:56.). "நாரம்" என்னுஞ்சொல்லும், அன்பு காதல் என்னும் பொருண்மையில் பயின்று வந்துள்ளது.

(எ.டு.) "*நாரங்கொண்டார்*" (கம்பரா. மாரீச.180.). பிங்கலநிகண்டும், "பெண்" என்னும் பொருளையே குறித்துள்ளது நோக்குக. "*நறவு பெண் நாணி பன்னாடை நாரி*" (பிங்.3721.).

"நாரி" என்னும் சொல்லை, வடசொல்லாக சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலி குறித்துள்ளது. இஃது, முற்றிலும் பிழையே.

அன்புடையவள், விரும்பத்தக்கவள், பெண், காதல் என்னும் பொருட்பொருத்தப்பாட்டில், "நாரி" என்னும் சொல் கழகவிலக்கியங்களில் வழக்கூன்றியுள்ளது. பிங்கல நிகண்டிலும் இடம்பெற்றுள்ளது.

மேற்குறித்த எடுத்துக்காட்டுகளால், நாரி என்பது தமிழ்ச்சொல்லே, என்பது நன்கு போதரும். பெண் என்னும் சொல் ஈங்கு, "பெள்" என்னும் விரும்புதற்கருத்து வேரிலிருந்து தோன்றியது.

பெள் + பெண்.

பெள் + பு → பெட்பு = விருப்பம் (சூடா.).

பெள் + தல் → பெட்டல் = விருப்பம் (திவா.).

பெட்டர் = விரும்பியவர். "*பேணாது பெட்டார்*" (குறள்,1178.).

தாய்மை, அன்பு,போன்ற அனைத்து ஆராஅன்பினுக்கும் இருப்பிடம் பெண்; பெண்ணைக் குறிக்கும் "நாரி" எனுஞ் சொல், அன்பு, விருப்பம், காமம் என்னும் பொருண்மைகளில், இலக்கியங்களில் பயின்றுள்ளதால், இச் சொல் நற்றமிழ்ச்சொல் என்பதில் யாதொரு ஐயமில்லை.

நாரி⁵ *nāri,* பெ. (n.) தானை (சேனை) (யாழ்.அக.); army.

[நார் → இ. நாரால் வரிசையாகத் தொடுத்த மாலைபோன்று திகழும், படை அணிகுப்பு.]

நாரி⁶ *nāri,* பெ. (n.) நறுமணம் (வின்.); odour, fragrance.

[நாறு → நாரு → நாரி.]

நாறுதல் = தோன்றுதல்.

விளங்கித் தோன்றும் நறுமணம் என்னும் பொருண்மையில், ஆளப்படும்சொல்.

நாரிக்கரு *nāri-k-karu,* பெ. (n.) பெண்களின் சினைப்பை; the female reproductive cell which develops after impregnation ovum 2. முப்பு; mystic salt

[நாரி⁴ + கரு.]

நாரிக்குத்து *nāri-k-kuttu,* பெ. (n.) இடுப்புவலி (யாழ்ப்.); pain in the loins.

[நாரி + குத்து.]

நாரி = இடுப்பு. குத்து = வலி. நாரால் பிணைக்கப்பட்டது போன்று, அமைந்த இடுப்புப்பகுதியி லேற்படும் குத்தல்வலி.

நாரிகேரம் *nāri-kēram,* பெ,(n.) *நாரிகேளம் (யாழ்ப்.)* பார்க்க; see *nārikēḷam*

[நார் → நாரி + நேரம்.]

நாரிகேளபாகம் *nāri-kēḷa-pāgam,* பெ. (n.) மட்டை முதலியவற்றை உரித்து நீக்கி, உட்புறத்துள்ள பருப்பைக் கடித்து மென்றா லன்றித் தேங்காயினது இனிப்பை அறிய

இயலாததுபோல், மிக வருந்தாது, அழகை அறிய முடியாத செய்யுள் நடைவகை; a style of poetic composition in which the beauty of a poem, can be appreciated only after hard and laborious study.

[நாரிகேளம் + பாகம்.]

நாரி + கீள் → கேள் + அம் + பாகம்.

நாரிகேளம் *nāri-kēḷam,* பெ. (n.) தென்னை; coconut.

[நாரி + கேளம்.]

நுள் → நள் → நாள் → நாளம்.

நாளம்= உட்டுளையுள்ள தென்னைமரம், புறக்காழுடையது.

"புறக்காழனவே புல்லென மொழிப" (தொல்.பொருள்.1585.) எனுந் தொல்காப்பிய நூற்பாவால், நார்மட்டையை உடையது, நாரி என்று தென்னையைக் குறிக்கும். புறக்காழுள்ள நார்த்தன்மை மிக்க மட்டைகளை யுடையது தென்னை.

நார் → நாரி.

கீள் → கேள் + அம் = கேளம்.

கேளம் = பருப்பைத் தோண்டி எடுக்குந் தன்மையுடைய காய்.

நாரிகேளாஞ்சனம் *nāri-kēḷāñjaṉam,* பெ. (n.) இளநீரினைக் கொண்டு செய்யும் கண் மருந்து வகை; medicinal collyrium prepared from the milk of tender cocounts.

[நாரி + கோளம் + skt.*அஞ்சனம்.]*

நாரிகை *nārigai,* பெ. (n.) பெண்; woman. *"நாணார் எவனையிந் நாரிகை"* (பரிபா.12,56).

[நரன் → நாரன் → நாரி + கை.]

"கை"=சொல்லாக்க ஈறு.

நாரிச்சுண்ணம் *nāric-c-uṇṇam,* பெ. (n) 1. மூப்பு; mystic salt. 2. நாரிக்கரு பார்க்க. see nāri-k-karu.

[நாரி + சுண்ணம்.]

நாரிசண்டன் *nāri-šaṇḍaṉ,* பெ. (n) ஆணலி; female hermaphrodite. (சா.அக.).

[நாரி + சண்டன்.]

நாரிசி *nāriši,* பெ. (n) பேய்த்துவரை; a kind of bitter dhal. (சா.அக.).

[நாரி[4] → துவரை.]

நாரிசுக்கிலம் *nāri-šukkilam,* பெ. (n.) பெண்களுக்கு, புணர்ச்சிக்காலத்தே வெளிப்படும் நீர்மம்; ovarian discharge in female during sexual intercourse.

[நாரி[4] + skt. *சுக்கிலம்.]*

நாரிசுரம் *nāri-šuram,* பெ. (n) வீட்டுக்கு விலக்கான (மாதவிடாய்ப்) பெண்களுடன், உடலுறவு கொள்ளுவதால் உண்டாகும் காய்ச்சல்; a kind of fever 2. *நாரிக்கரு* பார்க்க; see *nāri-k-karu.*

[நாரி + அரம்.]

நாரிட்டம் *nāriṭṭam,* பெ. (n.) உணவைச் செரிமானமாக்கும் வயிற்றுத் தீ; fire of digestion, gastric fire 2. மூச்சுக்காற்று; the wind of birth. 3. மல்லிகை; arabian jasmine

[நார் + இட்டம்.]

நாரிண்டு *nārinḍu,* பெ. (n.) இண்டஞ்செடி வகை; a kind of plant of the mimosa genus.

மறுவ. நுரையிண்டு.

[நார் + இண்டு.]

நாரிப்பால் *nāri-p-pāl,* பெ. (n.) முலைப்பால்; woman's breast milk.

[நாரி[4] + பால்.]

நாரி = பெண்.

நாரிப்பிடிப்பு *nāri-p-piḍippu,* பெ,(n.) இடுப்புப்பிடிப்பு (யாழ்ப்.); contraction of muscles in the loins.

[நார் → நாரி + பிடிப்பு.]

நாரிபாகன் *nāri-pāgaṉ,* பெ,(n.) மாதொரு பங்கினனான சிவபிரான் (வின்.); Šivaṉ. as having his consort on one side of his body.

[நார் → நாரி + பாகன்.]

பகு → பாகம் + அன்.

நாரி = பெண்.

பெண்ணைப் பாகமாக உடையோன்.

நாரிமருந்து *nāri-marundu,* பெ.(n.) *நாரிசுக்கிலம்* பார்க்க; see *nāri-šukkilam*

[நாரி + மருந்து.]

நாரிமின்னாள்கரு *nāri-minnāḷ-karu,* பெ,(n.) *நாரிக்கரு* பார்க்க; see *nāri-k-karu.*

[நாரிமின்னாள் + கரு.]

நாரிமூலம் *nāri-mūlam,* பெ, (n.) நன்னாரிவேர்; root of Indian sarasaparilla.

[நாரி + மூலம்.]

நாரியங்கம்[1] *nāriyaṅgam,* பெ, (n.) தேன்றோடை (மலை.); sweet orange.

[நாரி + skt.அங்கம்.]

நாரியங்கம்[2] *nāriyaṅgam,* பெ. (n.)
1. *நாரிமூலம்* பார்க்க; see *nāri-mūlam.*
2. பெண்ணின் உடம்பு; female body.
3. பெண்குறி; the genial of a female.

[நாரி + skt அங்கம்.]

நாரியதாபம் *nāriya-dābam,* பெ. (n.) பருந்து; kite.

நாரியர்பால் *nāriyar-pāl* பெ. (n.) தாய்ப்பால்; woman's breast milk.

மறுவ. அம்மம் (சா.அக.).

நாரி = பெண். தாய்.

நாரிரோகம் *nāri-rōgam,* பெ. (n.) பெண்களுக்கு ஏற்படும் நோய்கள்; diseases peculiar to women.

[நாரி + skt.ரோகம்.]

நாரி = பெண்.

நாரிவல்லபம் *nāri-vallabam,* பெ. (n.) ஞாழல்; orange cup-calyxed brasiletto-climber wagaty.

நாரிவலி[1] *nāri-vali,* பெ. (n.) நாரிக்குத்து; pain in the loins.

மறுவ. இடுப்புவலி.

[நாரி + வலி.]

நாரிவலி[2] *nāri-vali,* பெ,(n.) *நாரிக்குத்து* பார்க்க; see *nāri-k-kuttu.*

[நாரி + வலி]

நாரிவிரசு *nāri-virašu,* பெ,(n.) நாய்நறுவிலி; smaller discscabrid-leaved sebesten.

[நாரி + விராய் → விரசு.]

நாரிவெருட்டி *nāri-verutti,* பெ. (n.) 1. புலிநகக் கொன்றை; a species of cassia tree like tigers claws. 2. நன்னாரி வேர்; root of indian sarasaparilla.

நாரிவேர் *nāri-vēri,* பெ. (n.) *நன்னாரி* பார்க்க; see *nannāri.*

நாரீசம் *nārišam,* பெ. (n.) பிண்ணாக்குச் செடி; pat fibre.

நாரை *nārai,* பெ,(n.) 1. பறவை வகை; pelican ibis. "*நந்து நாரையோடு*" (பதிற்றுப்.23). 2. கொக்கு வகை; common crane. 3. வெண் கொக்கு; white stork. 4. நொள்ளைமடையான்; a small heron. 5. மாட்டின் அலைதாடி (மாட்டுவா.14); dewlap. 6. ஒருவகை ஆ; a kind of cow.

[நார் → நாரை.]

நார் = வெண்மை.

நாரை = வெண்மை நிறக்கொக்கு, நாரை போன்றவை.

முன்னொடுங்கி இருக்கும், நீண்ட அலகை உடைய கொக்குப் போன்ற பறவை. மீனைத்தின்று வளரும். நாட்டுப்புறத்தில் இப் பறவையினைச் சுட்டுத் தின்பர். நாரையின் வகைகள் வருமாறு:–

1. அகத்திப்பூ நாரை.
2. அகலவாயன் நாரை.
3. கருநாரை (கருப்பு நாரை (அ) கருப்பு மூக்கு நாரை).
4. குருட்டு நாரை.
5. கொய்யடி நாரை.
6. கோணக்கால் நாரை.
7. கோணமூக்கு நாரை (கரண்டி மூக்கு நாரை).
8. சங்க நாரை (சங்கு வளை நாரை).
9. சாம்பான் நாரை.
10. சிறுநாரை.
11. செங்கால் நாரை.
12. செவ்வரி நாரை.
13. தடும்ப நாரை.
14. துடுப்பு மூக்கு நாரை (துடுப்பு நாரை).
15. நத்தைக்குத்தி நாரை (நத்து நாரை).
16. நீர் நாரை.
17. நெடலை நாரை.
18. பவளக்கால் நாரை.
19. பூ நாரை.
20. பெரு நாரை.
21. மஞ்சள் மூக்கு நாரை.

நாரை வகைகள்

மஞ்சள் மூக்கு நாரை

செங்கால் நாரை

சாம்பல் நாரை

நத்தை குத்தி நாரை



பெருநாரை

நந்து நாரை

22. வண்ணாத்தி நாரை.

23. வெண்கழுத்து நாரை.

24. வெள்ளை நாரை.



நாரைக்கெண்டை *nārai-k-keṇḍai,* பெ. (n.) கெண்டைமீன்வகையுளொன்று; a kind of keṇḍai fish

[நாரை + கெண்டை = கெண்டை மீன்வகையைச் சார்ந்தது.]



நாரைக்கொம்பன் *nārai-k-komban,* பெ. (n.) நீண்ட வெண்கொம்புள்ள மாடு (யாழ்ப்.); ox having long white horns.

[நாரை + கொம்பன்.]

நாரைப்பசு *nārai-p-pašu,* பெ. (n.) *நாரையா* பார்க்க; see *nārai-y-ā.*

நாரைமூலி *nārai-mūli,* பெ. (n.) நற்கள்ளி மூலி; Indian weeping plant

மறுவ. அழுகண்ணி

[நாரை + மூலி.]

நாரையா *nārai-y-ā,* பெ. (n.) வெண்மை நிறமுள்ள ஆ; a kind of cow.

[நாரை + ஆ.]

நாரை = வெண்ணிறம்.

நாரையாப்பால் *nārai-y-ā-p-pāl,* பெ. (n.) வெண்ணிறமுள்ள நாரையினத்தைச் சார்ந்த ஆவின்பால்; the milk of a species of cow known as "Narai".

[நாரையா + பால்.]

நாரையா = வெண்ணிறமுள்ள ஆ (பசு.)

நாரையுளுவை *nārai-y-uḷuvai,* பெ. (n.) உளுவை மீன்வகையுளொன்று; a kind of uḷuvai fish.

[நாரை + உளுவை = நாரைகளால் விரும்பியுண்ணப்படும் மீன்.]

நாரொடுப்பை *nāroḍuppai,* பெ. (n.) நிலப்பாலை மூலிகை வகையுளொன்று; a kind of herbal medicine.

நால்¹(லு)—தல் *nāl(lu)-,* 16 செ.கு.வி. (v.i.) 1. தொங்குதல்; to hang, swing, to be suspended, hung up. "*நான்ற முலைத்தலை நஞ்சுண்டு*" (திவ்.இயற்.1,18). 2. கழுத்திற் சுருக்கிட்டுக் கொள்ளுதல்; to hang oneself. "*நான்றியான் சாவலென்றே*" (சீவக.2513).

[நால் → நாலுதல் = சரிந்து அல்லது தளர்ந்து தொங்குதல்.]

ஞால் → நால் → நாலுகை = சரிந்து தொய்வுற்றுத்தொங்குகை.

துளைத்தற் பொருண்மையினின்று கிளைத்த, நெகிழ்ச்சி அல்லது தளர்ச்சிக் கருத்துச் சொல்லாகும். சரிந்து தளர்வுடைய பொருள்களெல்லாந் தொங்குந் தன்மைத்து, தளர்தற் பொருண்மையுடைய இச் சொல், காலப் போக்கிற் கழுத்திற்சுருக்கிட்டுத் தொங்கிச் சாதலைக் குறித்தது.

நால்[2] *nāl.* பெ. (n.) 1. நான்கு; the number four "*நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்*" (தொல்.பொருள்.75), 2. *நாலடியார்* பார்க்க; see *nāladiyār* "*பழகுதமிழ்ச்சொல்லருமை நாலிரண்டில்*" (பெருந்தொ.).

க., ம., நால். **தெ.** நல்லு.

[நல் → நால்.]

நால்[3] *nāl.* பெ.எ. (adj.) நான்கு என்னும் எண்ணின் பெயரடை வடிவம்; adjectival form of nāṉgu நால்வகை: நாலுலகு. "நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி" "நாலும் கலந்துனக்கு நான்தருவேன்" (ஔவையார் பாடல்).

[நால்கு → நால்.]

நால்[4] *nāl:* பெ. (n.) பிரம்பு; cane. (சா.அக.).

[ஞால் → நால்.]

நாலுதல் = வளைதல். வளைத்துச் செய்த பிரம்பு.

நால்கண்ணாடி *nāl-kaṇṇāḍi.* பெ. (n.) கோரோசனை: cow's bezoar

ஆவின் வயிற்றிலிருந்து எடுக்கப்படும் மஞ்சள் நிறமுள்ள நறுமணப் பொருள்.

நால்கு *nālgu.* பெ. (n.) நான்கு; the number four. "*வாலுளைப் புரவி...நால்குடன் பூட்டி*" (பெரும்பாண்.489).

க., நால்கு. **தெ.,** நாலுகு.

[நால் → நால்கு.]

நால்திசை *nāl-tisai* பெ. (n.) *நாற்றிசை* பார்க்க; see *nāṟṟisai*

நால்வகுப்பு *nāl-vaguppu.* பெ. (n.) மறவர், அரசர், வணிகர், வேளாளர் என்று தொழிலை அடிப்படையாக வைத்துப் பிரித்த குமுகாயப் பகுப்பு; the four division of the society viz., kings, virtuous persons merchants, agriculturists

[*நால் + வகுப்பு.*]

தொழிலை அடிப்படையாக வைத்துப் பிரித்த நால்வகைப்பகுப்பு, பிற்காலத்தில். ஆரியப் பிராமணர் பிறப்பையடிப்படையாக மாற்றி வழக்குப்படுத்தியது. வரலாறு.

நால்வகைச்சாந்து *nāl-vagai-c-cāndu* பெ. (n.) கலவை, பொன் வண்ணம் (பீதம்), புலி, வட்டிகை என்ற நால்வகையாகிய சாந்து (திவா.); the four kinds of sandal unguents, viz., kalavai, poṉ-vaṇṇam (pīdam), puli, vaṭṭigai.

மறுவ. நறுமணச்சாந்து.

[நால்வகை + சாந்து.]

நால்வகைத்தேவர் *nāl-vagai-t-tēvar,* பெ. (n.) பவணர், வியந்தரர், சோதிசுகர் (ஜோதிஷ்கர்), கல்பவாசியர் என்ற நால் வகையான தேவர்கள் (மேருமந்.8,உரை); the four kinds of gods, viz., pavaṇar, viyandarar, jotiṣukar, kalpavāṣiyar.

[நால்வகை + தேவர்.]

இறைமறுப்பாளரான சமணர், வடமொழிப் பாங்கினை அடியொட்டி, அமைத்த பெயர்கள்.

நால்வகைத்தோற்றம் *nāl-vagai-t-tōṟṟam,* பெ. (n.) நால்வகை உயிர்த்தோற்றங்கள் (அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம்), the four modes in the genesis of life, viz. (aṇḍasam, suvēdasam, uṟpiccam, sarāyušam.)

[நால்வகை + தோற்றம்.]

(ஸ்வஸ்திக்) நாற்கோணக்குறியீடு (卐) நான்குவகைத் தோற்றத்தைக் குறிப்பதாகச் சமணம் சாற்றியது.

நால்வகைநிலம் *nāl-vagai-nilam,* பெ. (n.) *நானிலம்* பார்க்க; see *nāṉilam.*

[நால்வகை + நிலம்.]

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன நான்குவகை நிலங்கள். பாலைநிலம் தமிழகத்தில் இல்லை. அதனால் சிலப்பதிகாரம், "முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்து நடுங்குதுயர்உறுத்துப், பாலை என்பதோர் படிவங்கொள்ளும்" என்று நிலையற்ற நிலமாகப் பாலை நிலத்தைக் குறித்துள்ளது.

நால்வகைப்பூ *nāl-vagai-p-pū.* பெ. (n.) கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, புதற்பூ அல்லது நிலப்பூ என்ற நால்வகையான மலர் (திவா.); the four kinds of flowers, viz., kōṭṭu-p-pū, koḍi-p-pū, nīr-p-pū, pudaṟ-p-pū on nila-p-pū.

[நால்வகை + பூ.]

நால்வகைப்பொருள் *nālvagai-p-poruḷ,* பெ. (n.) அறம், பொருள், இன்பம், வீடு என்ற நால்வகையான உறுதிப்பொருள் (சூடா.); the four kinds of uṟudi-p-poruḷ, viz., aṟam, poruḷ, iṉbam, vīḍu

[நால்வகை + பொருள்.]

நால்வகையுணவு *nālvagai-y-uṇavu.* பெ. (n) உண்டல், தின்றல், நக்கல், பருகல் என நான்கு வகையான உணவு (சூடா.); the four kinds of food, viz., uṇḍal, tiṉṟal, nakkal, parugal.

[நால்வகை + உணவு.]

நால்வகையோனி *nālvagai-yōṉi,* பெ. (n) நான்குவகையாகப் பகுத்த பெண் பிறப்புறுப்பு; the four varieties of vagina

நால்வகைவருணம் *nālvagai-varuṇam.* பெ. (n.) *நால்வகுப்பு* பார்க்க; see *nāl-vaguppu.* "*நெறிமுறை நால்வகை வருணமுமாயினை*" (திவ்.இயற். திருவெழு.29.).

செய்யுந்தொழில் அடிப்படையில், வாழ்வை வழுப்பட, வடவர் வர்ணாசிரமம் என்றனர்.

[நால்வகை + வர்ணம்→வருணம்.]

நால்வண்ணம் *nāl-vaṇṇam,* பெ. (n.) *நால்வகுப்பு* பார்க்க; see nāl-vaguppu.

[நால் + வண்ணம்.]

வடவர் சிவப்பு, வெள்ளை, நீலம், கருமை என்னும் நான்கு வண்ணத்தில் குலப்பிரிவு அமைத்துப் பண்பும் கூறினர்.

நால்வர் *nālvar,* பெ. (n.) திருநெறிய தமிழ் என்னும் திருப்பதிகத் தமிழ்நெறியைத் தோற்றுவித்து, வளர்த்து, நிலைநாட்டிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருநாவலூரர், மாணிக்கவாசகர்; the canonized Šaiva, Šaints, Tiruñana-sambandar, Tirunāvu-k-karašar, Tirunāvalūrar, Māṇikka vāšagar.

மறுவ. சமயக்குரவர்.

நால்வர்நான்மணிமாலை *nālvar-nāṉmaṇi-mālai,* பெ. (n) சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற சிவனடியார்கள்மேல், சிவப்பிரகாசர் இயற்றிய நால்வகையாப்பில் அமைந்த நாற்பது பாடல் கொண்ட சிறந்த சிற்றிலக்கியம்; a poem by Sivappiragāsar, on the four, Šaivam Šaints, Šampandar, Appar, Šundarar and Māṇikka-vāšagar.

[நால்வர் + நான்மணிமாலை.]

நம்பியாரூரரின் தோழமை நெறியினைச் சிவப்பிரகாசர் நால்வர் நான்மணி மாலையில், நவிலும் பான்மை வருமாறு:—

"அறிந்து செல்வம் உடையானாம் அளகைப் பதியான் தோழமை கொண்டு

உறழ்ந்த கல்வி உடையானும் ஒருவன் வேண்டும் என இருந்து

துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா, நினைத் தோழமை கொண்டான்

டெறிந்த அறிவு வடிவமாய்த் திகழும் நுதற்கட் பெருமானே."

நால்வருணம் *nāl-varuṇam,* பெ. (n.) *நால்வகுப்பு* பார்க்க; see *nāl-vaguppu.*

[நால் + வர்ணம்→வருணம்.]

நால்வலங்கம் *nāl-valaṅgam,* பெ. (n) கல்வெள்ளாங்கு; bastard rose wood.

மறுவ. நால்வெள்ளங்கு.

நால்வரோதயம் *nālvarōdayam,* பெ. (n) மணித்தக்காளி; black berried solanum.

நால்வாய் *nāl-vāy,* பெ. (n) தொங்கும் வாய்; hanging mouth or jaw *"நால்வாய்க் கரி"*, (திருக்கோ. 55.). 2. யானை (சூடா.), elephant

[ஞால் → நால் + வாய்.]

நாலுதல் = தொங்குதல்.

நால்வாய் = தொங்கும் வாய்.

அதியமான் ஔவைக்குப் பரிசாக யானை தந்தபோது, ஒருவாய்க்கு உணவின்றி நான் துயர்ப்படுங்கால் (தொங்கும் அகன்ற வாய் கொண்ட) யானையைப் பரிசளிக்கிறாயே என்று, இரட்டுறமொழிதலாகப் பாடியிருப்பது (புறநானூறு). இங்கு குறிக்கத் தக்கது.

நால்வாயன் *nāl-vāyaṉ,* பெ. (n.) 1. யானை முகக்கடவுள்; Piḷḷaiyār as elephant-like. *"ஒரு கோட்டன்...நால்வாயன்"* (சி.சி.காப்பு.) (அக.நி.). 2. ஐராவத யானையை யுடைய இந்திரன்; (அக.நி.) indiran, as having an elephant

[ஞால்நால் →நாலுகை = தொங்குகை. நால்வாய் →நால்வாயன்= தொங்கும் வாயன்.]

நால்வேதியன் *nāl-vēdiyaṉ,* பெ. (n.) மூலிகைக் கொடி; a medicinal creeper.

நாலடி *nāladi,* பெ. (n.) *நாலடியார்* பார்க்க; see *nāladiyār.* "*நாலடி நான்மணி நானாற்பது*" (தனிப்பா.).

[நால் + அடி.]

நாலடிநானூறு *nāladi-nāṉūṟu,* பெ. (n.) *நாலடியார்* பார்க்க; see *nāladiyār.* "*அள வினாற் பெயர்பெற்றன...நாலடிநானூறு முதலாயின*" (நன்.48,மயிலை.).

[*நாலடி + நானூறு.*]

நாலடியார் *nāladiyār,* பெ. (n.) பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்றாயதும், சமண முனிவர்களால் இயற்றப்பட்டதும், அறம், பொருள், இன்பம் இவற்றை, 400 வெண்பாக் களாற் கூறுவதுமாகிய நூல்; a Tamil classic treating of virtue, wealth and love, being a collection of 400 veṇbās or quatrains composed by Jaina ascetics, one of padiṉ-eṇ-kīḻkkaṇakku.

[*நால் + அடி + ஆர்.*]

ஒருவரே இயற்றியது என்ற ஆய்வுக்கருத்தும் உண்டு.

நாலடியார் சங்கம் மருவிய காலத்தது என்பர். பதுமனார், நாற்பது அதிகாரங்களாகப் பகுத்து உரையும் இயற்றினார். இந் நூலுள் அமைந்துள்ள கடவுள் வாழ்த்தும், அவரால் பாடப்பட்டதாகும்.

கற்றுத்துறைபோகிய நுண்மாண் நுழைபுலமிக்க வல்லுநராயினும் வாழ்வாங்கு வாழவேண்டுமாயின், தக்க மெய்ந்நூல்களைத் தெரிவுசெய்து, தெளிவாகக் கற்கவேண்டும் என்னும் கருத்தமைந்த நாலடியார் பாடல் வருமாறு:-

"கல்விகரையில! கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கின் பிணிபல

தெள்ளிதின் ஆராய்ந்தமைவுடைய
கற்பவே- நீரொழியப் பாலுண்குருகின் தெரிந்து"
(நாலடி,135.).

நாலம்[1] *nālam,* பெ. (n.) தொங்கும் கோளம் அல்லது உலகம்; the earth hanging in the space or orbit.

[ஞால் → நால் →நால் →நாலம் = ஞாலம். ஒ.நோ. ஞெண்டு → நண்டு. (தமி.வ.149).]

நாலம்[2] *nālam,* பெ. (n.) தாமரை முதலிய பூவின் காம்பு; pedicles of flowers like lotus.

[நால் + அம் → நாலம்.]

நாலம்பலம் *nāl-ambalam,* பெ. (n.) கோயிலுள் ஒரு பகுதி (நாஞ்.); a portion of a temple.

நால்திசை வாயில் கொண்ட, நடுத்திறப்புப் பகுதி.

நாலல் *nālal,* பெ. (n.) தணக்கு; yellow flowered silk- cotton.

[ஞால் → நால் + அல்.]

தொங்கும் கிளைகள் மிக்க தணக்கு.

நாலறிவுயிர் *nāli-v-uyir,* பெ. (n.) சுவை, ஒளி, ஊறு, நாற்றம் என்ற நான்கறிவுடைய நண்டு, தும்பி முதலியன (தொல்,பொருள்.586); living creatures having the four senses of taste, sight, touch and smell, as crabs, beetles.

[நால் + அறிவு →நாலறிவு + உயிர்.]

நாலா¹ *nālā,* பெ. எ. (adj.) 1. பல; many, "*நாலாபக்கமும்*", 2. நான்கு; four

[நால் → நாலா.]

ஒ.நோ. தலை → தலா.

நாலா = நால்வகை, எல்லா, பலவகை.

நால் → நாலா= அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகுப்பைச் சேர்ந்த எல்லா மக்களும் வந்திருந்தனர் என்றும், நாற்றிசை யிலுமிருந்து மக்கள் வந்திருந்தனர் என்பதை, நாலா திசையிலுமிருந்து மக்கள் வந்திருந்தனர் என்று கூறுவது மரபு. (வ.வ.19).

நாலா² *nālā,* பெ. (n.) 1. வாய்க்கால் (வின்.); water channel; water-course. நாலா பக்கமும் தண்ணீர் பாய்வதற்கு ஏதுவாக நன்செய் உள்ளது. (உ.வ.) 2. பள்ளத்தாக்கு; ravine

[ஞால் → ஞாலா → நாலா.]

நாலாங்காண்டம் *nālāṅ-gāṇḍam,* பெ. (n) கொடிமாதுளை; lemon citron

[நாலாம் + skt *காண்டம்.]*

நாலாங்காய்ச்சல் *nālāṅ-kāyccal,* பெ. (n) 1. நான்குமுறை காய்ச்சி எடுத்தது; that which is boiled and filtered four times 2. வெடியுப்பு; nitre

[நாலாம் + காய்ச்சல்.]

நாலாங்காய்ச்சலுப்பு *nālāṅ-kāyccal-uppu,* பெ. (n) 1. நான்கு தடவை காய்ச்சித் தெளிவிறுத்த வெடியுப்பு; nitre boiled and filtered four times; four times purified nitre 2. நான்கு மாதக் கருப்பிண்டத்தைப் பனிக் குடத்து நீர்விட்டு நான்கு தரம் எரித்து, வடிகட்டித் தெளிவிறுத்த ஓர்வகைப் பிண்டவுப்பு; a salt prepared from four months foetus by boiling it with amiotic fluid four times and filtering the same. (சா.அக.).

[நாலாம் + காய்ச்சல் + உப்பு.]

நாலாஞ்சடங்கு *nālāñ-šaḍaṅgu,* பெ. (n.) *நாலாநீர்* பார்க்க; see *nālā-nīr.*

[நால் + ஆம் + சடங்கு.]

நாலாட்டுயாபடிலம் *nālāṭṭāu-yā-paḍilam,* பெ. (n) ஏலரிசி; cardamon seeds. (சா.அக.).

நாலாதிசீலம் *nālādi-šīlam,* பெ. (n) கடல் அல்லது மலையின் மேல்மட்டத்திலுள்ள தண்ணீர்; water from the hills and mountains above the sea-level. (சா.அக.).

நாலாதிசை *nālā-tišai,* பெ. (n.) கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு முதலான நான்கு திசை; all directions viz. east, west, north and south

[நாலா + திசை.]

நாலாநீர் *nālā-nīr,* பெ. (n) 1. திருமணத்தின் நான்காம் நாள், மணமக்கள் புரியும் நீராட்டநிகழ்வு; bath taken by a newly married pair on the fourth day of marriage. 2. திருமணத்தின் நான்காம் நாள் (இ.வ.), the forth day of marriage

[நால் → நாலா + நீர்.]

நாலாநீராடு—தல் *nālā-nīr-āḍu-,* 5 செ.கு.வி. (v.i.) பூப்படைந்து நாலாநாள் நீராடுதல்; to take a purificatory bath on the fourth day after menstruation.. "*நாலாநீராடி வந்தாள்*" (கொக்கோ.).

[நாலா + நீர் + ஆடு—.]

நாலாபக்கமும் *nālā-pakkamum,* பெ. எ. (adj.) நாலாதிசையும் எல்லாப் பகுதியும். எல்லாத் திசையும்; all directions. காணாமல் போன சிறுவனைத் தேடி, நாலாபக்கமும் ஆட்கள் சென்றிருக்கிறார்கள் (இக்.வ.). நாலாபக்கமும் தீ எரிய ஆரம்பித்தது (இக்.வ.).

[நாலா + பக்கமும்.]

நாலாபுறமும் *nālā-puṟamum,* பெ.எ. (adj.) *நாலாபக்கமும்* பார்க்க; see *nālā-pakkamum*

[நாலா + புறமும்.]

நாலாபேரும் *nālā-pērum,* பெ.எ. (adj.) எல்லாரும்; many people. திருவள்ளுவர் திருநாள் விழாவிற்கு நாலா பேரும் வந்திருந்தனர் (இக்.வ.).

[நாலா + பேரும்.]

எல்லா, எல்லாரும், பலவகை.

அரசு நடத்தும் திருவள்ளுவர் திருநாள் விழாவிற்கு, எல்லா மக்களும் வந்திருந்தனர் என்பதை, 'நாலாபேரும்' வந்திருந்தனர் என்பர்.

நாலாம்பாதகன் *nālām-pādagaṉ,* பெ. (n.) கொலைகாரர்; murderer, as one who commits the fourth im-peruṅ-kuṟṟattāṉ "*நன்றெனவுவந்து நாலாம் பாதக னதற்கு நேர்ந்தான்*" (திருவிளை.அங்க.12.)

[நால் + ஆம் + skt. *பாதகன்.]*

நாலாம்பொய்யுகம் *nāl-ām-poy-yugam,* பெ. (n.) கலியூழி; kali-ūḻi. "*செம்பொன் மேனி வேறாகி நாலாம் பொய்யுகத் தவர்க்குத் தக்க பொருந்துருவாகி மன்னும்*" (திருவிளை. இரச.30.).

[நாலாம் + பொய் + உகம்.]

நாலாம்வருணம் *nālām-varuṇam,* பெ. (n.) வேளாளர் குலம்; the Śūttirar caste, as the fourth varuṇam

[நாலாம் + வருணம்.]

நாலாம்வாசல் *nālām-vāšal,* பெ. (n.) நிலக்கிழார் தம் வீட்டின் முற்றத்தை ஒட்டியுள்ள தாழ்வாரம்; passage leading to courtyard in a landlord's house (G.Tn.D.i.102).

[நால் + ஆம் + வாசல்.]

நாலாமாயிரம் *nālām-āyiram,* பெ. (n.) நம்மாழ்வாரின் திருவாய் மொழி; a book of fourth verse of Nālāyira-teyva-p-paṉuval

[நால் + ஆம் + ஆயிரம்.]

நாலாமாறல் *nālām-āṟal,* பெ. (n.) நான்காமுறைக் காய்ச்சல்; quartan fever (சா.அக.).

நாலாமுறைக்காய்ச்சல் *nāla-muṟai-k-kāyccal,* பெ. (n.) நான்கு நாட்களுக்கொரு முறை வரும் முறைக்காய்ச்சல்; quartan fever

[நாலாமுறை + காய்ச்சல்.]

நாலாயிரத்தெய்வப்பனுவல்[1] *nālāyira-t-teyva-p-paṉuval,* பெ. (n.) ஆழ்வார்கள் அருளிச்செயல்களாய், மாலியத்தின் மாண்புகளை விளக்குந் தன்மையில் அமைந்த 4000 பாடல்களைக் கொண்ட நூற்றொகுதி; a collection of 4000 hymns in Tamiḻ by Aḻvārs

சிவனிய இலக்கியத்திலுள்ள தேவாரத்திற்கு ஒப்பாக மாலிய இலக்கியத்திலுள்ளது, நாலாயிரத் தெய்வப்பனுவல். இது 6–, 7–,

8–, 9–ஆம் நூற்றண்டுகளில், முதலாழ்வார் முதல், திருமங்கையாழ்வார் வரை பன்னிரு தலைசிறந்த திருமாலடியாரார் பாடப்பெற்ற திருமால் வழுத்துத்திரட்டு, வேதாந்த தேசிகரின் பிரபந்த சாரம்,

"வையகமென் பொய்கை பூதம்
பேயாழ்வார் மழிசையக் கோன்
மகிழ்மாறன் மதுரகவி
பொய்யில் புகழ்கோழியர் கோன்
விட்டு சித்தன் பூங்கோதை
தொண்டரடிப் பொடிபாணாழ்வார்
ஐயனருட் கலியன்.....'

என்று, பன்னீராழ்வார் பெயரையும் காலமுறைப் படுத்திக் கூறும். ஆயின் பாடற்பொருள் நோக்கி, பன்னீராழ்வார் பாடல்களும், நாலாயிரத் தெய்வப்பனுவற்றிரட்டில் பின்வரு மாறு அமைக்கப்பட்டுள்ளன.

I. முதலாயிரம்.

1. திருப்பல்லாண்டு.

2. பெரியாழ்வார் திருமொழி. பெரியாழ்வார் (8ஆம்–நூற்.).

3. திருப்பாவை.

4. நாச்சியார் திருமொழி ஆண்டாள் (8–ஆம் நூற்.).

5. பெருமாள் திருமொழி–குலசேகராழ்வார் (7ஆம்–நூற்.).

6. திருச்சந்த விருத்தம் (திருமழிசையாழ்வார்–7–ஆம் நூற்.).

7. திருமாலை.

8. திருப்பள்ளியெழுச்சி தொண்டரடிப் பொடியாழ்வார் (7–ஆம் நூற்.).

10. கண்ணி நுண்சிறுதாம்பு–மதுரகவியாழ்வார் (9–ஆம் நூற்.).

II. இரண்டாமாயிரம் அல்லது பெரிய திருமொழி.

1. பெரிய திருமொழி.

2. திருக்குறுந்தாண்டகம்– திருமங்கையாழ்வார் (8–ஆம் நூற்.).

3. திருநெடுந்தாண்டகம்.

III. மூன்றாமாயிரம் அல்லது இயற்பா.

1. முதல் திருவந்தாதி–பொய்கையாழ்வார்.

2. இரண்டாம் திருவந்தாதி–பூதத்தாழ்வார்.

3. மூன்றாந்திருவந்தாதி–பேயாழ்வார் (6–ஆம் நூற்.).

4. நான்முகன் திருவந்தாதி–திருமழிசையாழ்வார் (7–ஆம் நூற்.).

5. திருவிருத்தம்.

6. திருவாசிரியம்.

7. பெரியதிருவந்தாதி – நம்மாழ்வார் (9–ஆம் நூற்.).

8. திருவெழு கூற்றிருக்கை.

9. சிறிய திருமடல்.

10. பெரிய திருமடல் திருமங்கையாழ்வார் (8–ஆம் நூற்.).

நாலாயிரப்பிரபந்தம் *nālāyira-p-pirabandam,* பெ. (n.) *நாலாயிரத்தெய்வப்பனுவல்* பார்க்க; see *Nālāyira-t-teyva-p-paṉuval.*

[*நாலாயிரம்* + skt. *பிரபந்தம்.*]

நாலாயிரம் *nāl-āyiram.* பெ. (n.) *நாலாயிரப் பிரபந்தம்* பார்க்க; see *nālāyira-p-pirapandam.* "*நாதனுக்கு நாலாயிர முரைத்தான் வாழியே*" (வாழித்திருநாமம்.).

[*நால்* + *ஆயிரம்.*]

நாலாரச்சக்கிரம் *nālāra-c-cakkiram*, சித்திரப்பாட்டுவகை (மாறனலங். 282,உரை); a kind of cittra-k-kavi

[*நாலாரம் + சக்கிரம்.*]

நாலாவது *nālāva-du*, பெ. (n.) புகையிலை (இ.வ.); tobacco leaf, as being the fourth article used in chewing.

நாலாவான் *nāl-āvāṉ*, பெ. (n.) 1. நான்காமவன்; the fourth man. 2. நான்காம் இனத்தவன்; the šūttiraṉ as belonging to the fourth. "*நாலாவான் மந்திரியு மாவான்*" (தனிப்பா. 1, 106,40);

மறுவ. நாலாமன்.

[*நால் + ஆவான்.*]

[*நாலாமவன் →நாலாவான்.*]

நாலாவித *nālāvida*, பெ.எ. (adj.) குறிப்பிட்ட வகையில் அடங்கும் பல்கூறு; of all kinds of sorts. ஊரில் புகுந்த கொள்ளையர்களை மக்கள், கத்தி,கம்பு போன்ற, நாலாவித ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு துரத்தினார்கள் (இக்.வ.)

மறுவ. நானாவித,

[*நால் → நாலா + வித.*]

நாலாவிததட்சணி *nālāvida-taṭcaṇi*, பெ. (n.) தலைச்சுருளி; flame flower.

நாலி *nāli*, பெ. (n.) 1. கந்தைத்துணி; rag. 2. கார்த்திகைப்பூ அல்லது கிழங்கு (மலை.); malabar Tlory-lily. 3. முத்து (சது.) (மனோன்.I.iii.163); pearl. 4. தகரை; ring worm plant.

[*நால் →நாலி.*]

கோலுங் கொடுக்குமாய்த் தொங்கும் கந்தைத் துணி (வே.க.3.27).

கையினாலும், கோலினாலும் எளிதாய்த் துளைக்கப்படும் அல்லது ஊடுருவப்படும் பொருள்களெல்லாம், நீருங்கூழும் போல் நெகிழ்ச்சிப்பொருள்களாகும்;

கந்தைத்துணி. முத்து, போன்ற பொருள்களெல்லாம், துளைத்தற்கருத்தினின்று தோன்றிய நெகிழ்ச்சிப்பொருள் என்றறிக.

நாலிக்கம் *nālikkam*, பெ. (n.) பித்தளை அல்லது தாமிரத்தகடு; alloy copper and spelter.

[*நாலி → நாலிக்கம்.*]

நாலிகங்கபாடிக்கல் *nāli-kaṅgapāḍi-k-kal*, பெ. (n.) தொண் (ஒன்பது) மணி வகையுளொன்று (S.I.I ii196); one of the nine precious gems.

நாலிகம்[1] *nāligam*, பெ. (n.) 1. தாமரை; lotus. 2. எருமை; buffalo

நாலிகம்[2] *nāligam*, பெ. (n.) காகம் (மூ.அ); crow.

நாலிகாடி *nālikāḍi*, பெ. (n.) காட்டாமணக்கு; purging nut

[*நாலி → நாலிகாடி.*]

நாலிகை *nāligai*, பெ. (n.) மூங்கில் (சங்.அக.); bamboo.

[*நால் → நாலி → நாலிகை=உட்டுளையுள்ள மூங்கில் (வே.க.3-12).*]

நாலிலைப்புன்னை *nālilai-p-puṉṉai,* பெ. (n.) நான்கு இதழ்களையுடைய புன்னை; four leaved poon, rhomb leaved poon. (சா.அக.)

[நாலிலை + புன்னை.]

நாலிலைப்பைரவி *nālilai-p-pairavi,* பெ. (n.) சதைியொட்டி மூலி; a medicinal plant consisting of four leaves

நாலிலொன்றாய்க்காய்ச்சல் *nālil-oṉṟāy-k-kāyccal,* பெ. (n) மருந்துக்களுக்கு நீரை நாலில் ஒரு பங்காகும்படிச் சுண்டக் காய்ச்சுதல்; boiling down any decotion to one fourth of its original quantity.

நாலிவாடி *nālivāḍi,* பெ. (n.) கருங்குளவி; wasp

நாலு[1]-தல் *nālu-,* **1.** சரிந்து அல்லது தளர்ந்து தொங்குதல்; to saggy; to dangle. "*நான்ற முலைத்தலை நஞ்சுண்டு*" (திவ்.இயற்.1:18.). **2.** *நான்று கொள்(ளு)தல்* பார்க்க; see *nāṉṟu-koḷ(ḷu)-*

[நல் → நால் → நாலு-.]

[ஒருகா. ஞால் → நால் → நாலு-.]

நாலு[2] *nālu,* பெ. (n.) **1.** நான்கு; the number four, **2.** பல; many, manyfold, **3.** சில; a few நாலு வார்த்தைதான் பேசினான்; **4.** நாலடியார் பார்க்க; see *nālaḍiyār.* "*ஆலும் வேலும் பல்லுக் குறுதி, நாலுமிரண்டுஞ் சொல்லுக் குறுதி*" (பழ.)

[நால் → நாலு.]

நாலுகட்டு *nālu-kaṭṭu,* பெ. (n.) நாற்புறமும் சுற்றுக்கட்டுத் திண்ணைகொண்ட வீட்டின் பகுதி (நாஞ்.); the central portion of a house surrounded with verandas on all sides.

[நாலு + கட்டு.]



நாலுகண்சட்டி *nālu-kaṇ-śaṭṭi,* பெ. (n.) அடியில் நான்கு துளையிட்ட மண்சட்டி; an earthern ware or pot with four holes underneath. (சா.அக.)

[நாலுகண் + சட்டி.]

நாலுகண்மீன் *nālu-kaṇ-mīṉ,* பெ. (n) நான்குகண்மீன் பார்க்க; see *nāṉku-kaṇ-mīṉ.*

[நாலுகண் + மீன். நால் → நாலு + கண்+மீன்.]

நாலுகவிப்பெருமாள் *nālu-kavi-p-perumāḷ,* பெ. (n.) நான்கு வகைப்பாவிலும் வல்லவரான, திருமங்கையாழ்வார் (குருபரம்.); Tirumaṅgai-āḻvār, as pre-eminent in the four kinds of verses.,

[நாலு + skt. கவி + பெருமாள்.]

வெண்பா, அகவல், கலி, வஞ்சி என்பது பழமைப்பகுப்பு. இடைக்காலத்தே ஆசு,

மதுரம், சித்திரம், வித்தாரம் என்று கூறப்பட்டன.

நாலுகாசு *nālu-kāšu,* பெ. (n) பிறர் தன்னை மதிக்கிற அளவுக்கு அல்லது ஒன்றைத் தனித்து நின்று செய்கிற அளவுக்கு, போதிய பணம்; money necessary (for a comfortable life). *'நாலுகாசு (சம்பாதிக்கத்) தேடத் தெரியவில்லை'* (இ.வ). நாலுகாசு உள்ள ஆளைப்பார்த்துப் பெண்கொடு (இ.வ.). நாலுகாசு சேர்த்தால்தான் உலகம் மதிக்கும் (இ.வ.).

[நால் —> நாலு + காசு.]

நாலுகாற்சீவன் *nālu-kāṟ-šivan,* பெ. (n.) விலங்கு; quadruped. "*நாலுகாற் சீவனோ நரர்களோ பறவையோ*" (சீவக்.பிரபந்.பக்.345.).

[நாலுகால் + skt *சீவன்.]*

நாலுகாற்பிராணி *nālu-kāṟ-pirāṇi,* பெ. (n.) நான்கு கால்களையுடைய விலங்கு; fostered animal.

நாலுகாற்புணர்ச்சி *nālu-kāṟ-puṇarcci,* பெ. (n.) பெண்களுடன் விலங்குகளைப்போல் கூடுதல்; having sexual union with females like quadripeds.

[நாலுகால் + புணர்ச்சி.]

இக் கலை 64 இன்ப விளையாட்டுகளுள், ஒன்று.

நாலுசதுரக்கமலம் *nālu-šatura-k-kamalam,* பெ. (n.) மூலாதாரம்; a lotus shaped mystic centre situated above the generative organ. "*நாலுசதுரக்கமல முற்றின்*" (திருப்பு.399).

[நாலு + சதுரம் + skt *கமலம்.]*

கருவாய்க்கும் எருவாய்க்கும் இடையே, நெற்றிவரை அமைந்துள்ள ஆறு இடங்கள்.

நாலுசாதிப்பூ *nālu-šādi-p-pū,* பெ. (n.) *நால்வகைப்பூ* பார்க்க; see *nāl-vagai-p-pū.*

நாலுத்தட்டு *nālu-t-taṭṭu,* பெ. (n.) மகளிர் கழுத்தணி (நாஞ்.); a kind of woman's ornament, worn along with šiṟṟuru

[நாலு + தட்டு.]

சிற்றுருக்களோடு சேர்த்து மகளிர் கழுத்திலணியும் அணிகலன்.

நாலுதட்டு *nālu-taṭṭu,* பெ. (n.) ஞாலித்தட்டு; a kind of woman's ornament.

[ஞாலு —> நாலு + தட்டு.]

நாலுதல் = தொங்குதல்.

நாலுபாதசைவம் *nālu-pāda-šaivam,* பெ. (n.) சைவம் பதினாறனுள் சரியை, கிரியை, ஒகங்களால் ஞானமடைந்து, பின் ஆன்மா வீடுபெறும் என்று கூறும் மதபேதம்; a šaiva doctrine that the initiatē should pass successively through šariyai, kiriyai, yōgam and ñāṉam stages and thence obtain mōksam one of sixteen Šaivam

[நாலு + பாதசைவம்.]

நாலுபேர் *nālupēr,* பெ. (n.) ஒருவருக்கு உதவி செய்கிற அல்லது ஆதரவாக உள்ள ஆட்கள் சிலர்; people who are well disposed. இருந்தா நாலுகாசு இருக்க வேண்டும் இல்லாவிட்டால், நாலுபேராவது இருக்க வேண்டும் (இக்.வ.) இப்படி நடந்தால் நாலுபேர்

உன்னைப்பற்றி என்ன சொல்வார்கள்? (இக்.வ.).

[நாலு + பேர்.]

நாலுமா *nālu-mā,* பெ. (n.) ஐந்திலொன்றைக் குறிக்கும் 'கி' என்னும் பின்னவெண்; the fraction 1/5, as four mā.

[நாலு + மா.]

நாலுமூலைக்கப்பு *nālu-mūlai-k-kappu,* பெ. (n.) *நாலுமூலைத்தாய்ச்சி* பார்க்க; see *nālumūlai-t-tāycci.*

[நாலு + மூலை + கப்பு.]

நாலுமூலைத்தாய்ச்சி *nālu-mūlai-t-tāycci,* பெ. (n.) மகளிர் விளையாட்டு வகை; a girls play.

[நாலு + மூலை + தாய்ச்சி.]

நாலூர் *nālūr,* பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தேவாரத்திருப்பதிகப் பாடல்பெற்ற ஊர்; a canonized place in Tañjāvūre Dt., "*நறை யார் பொழில் புடைசூழ் நாலூர் மயானம்*"

[நாலு + ஊர் → நாலூர்.]

திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற இத் திருக்கோயிலைச் சுற்றிலும், நான்கு இனத்தவரின் குடியிருப்புப் பகுதிகள் இருந்தமையால், இப் பெயர் பெற்றது.

நாவக்கலப்பூர்வசத்து *nava-k-kala-p-pūrva-šattu,* பெ. (n.) பலகல்லின் சத்து; essence of several kinds of stones.

நாவகம் *nāvagam,* பெ. (n.) பாம்புஇணைவம்; copulation of snakes (சா.அக.).

மறுவ. பாம்புக்கரணம்.

நாவகீச்சான் *nāva-kiccān,* பெ. (n.) மீன் வகையுளொன்று; a kind of fish.

நாவச்சென்னை *nāva-c-cennai,* பெ. (n.) செந்தினை; red italian millet.

நாவசிகரம் *nāva-šigaram,* பெ. (n.) வில்வம்; Indian bael

நாவசை-த்தல் *nā-v-ašai-,* 4 செ.குன்றாவி. (v.t.) பேசுதல்; to speak, utter a word, as moving ones tongue.

[நா² + அலை → அசை-.]

நாவட்சரம் *nāvatsaram,* பெ. (n.) நாக்கில் தோன்றும் கொப்புளம் அல்லது கட்டி; ulcerative stomatitis

நாவடக்கம்¹ *nā-v-adakkam,* பெ. (n.) 1. மந்திரத்தால் வாயைப் பேசவொட்டாமற் செய்கை; silencing one by magic. 2. அமைதி; reserve, silence. 3. நாவின் சுவையை அடக்குகை; suppressing the sense of taste.

ம. நாவடக்கம்.

[நா² + அடங்கு → அடங்கு → அடக்கம்.]

கடுஞ்சொல் பேசாது நாவை அடக்கி வைத்தலும், மந்திரத்தால் நா எழாதபடி செய்தலும், நாவடக்கம் ஆகும்.

நாவடக்கம்² *nāvadakkam,* பெ. (n.) மருக்காரை; common emitic nut. (சா.அக.).

நாவடக்கி *nā-v-aḍakki,* பெ. (n.) மருந்துப்பூடு; a medicinal plant. "*நின்று சிணுங்கி நிலம்பரண்டி நாவடக்கி*" (தெய்வச். பிறலிவிடு.403.).

[நா + அடக்கி.]

நாவறட்சியினைப் போக்குவது.

நாவடக்கு—தல் *nāvaḍakku-,* பெ. (n.) 1. உணவின் சுவையை நாக்கு அடக்கிவைத்தல்; to suppress the sense of taste. 2. நா எழாமல் பண்ணுதல்; to render one incapable of move the tongue through sorcery

[நா + அடக்கு—.]

நாவடங்கணம் *nāvaḍaṅgaṇam,* பெ. (n.) தேத்தான்கொட்டை; water clearing nut. (சா.அக.).

நாவடம் *nāvaḍam,* பெ. (n.) 1. நாகவடம்; a pendent ear-ornament. 2. தாலியுருவகை; a jewel worn along with the marriage-badge.

[நால்வடம் → நாவடம்.]

தொங்குமாறு செய்யப்பட்ட அணிகலன்.

நாவடமஞ்சள் *nāvaḍa-mañjaḷ,* பெ. (n.) திகைப்பூச்சி; a hypnotic insect. (சா.அக.).

நாவடிக்கோளம் *nāvaḍi-k-kōḷam,* பெ. (n.) நாக்கின் அடிப்பகுதியில் அமைந்துள்ள சுரப்பிகள்; the smallest of the salivary glands.

[நாவடி + கோளம்.]

நாவடிவீக்கம் *nāvaḍi-vīkkam,* பெ. (n.) நாக்கினடிப் பகுதியிலேற்படும் வீக்கம்; swelling below the tongue

[நாவடி + வீக்கம்.]

நாவடை *nā-v-aḍai,* பெ. (n.) கிணற்றில் நீர் இறைப்பவன், நீர்ச்சாலைச் சாய்க்கும் இடம் நீர் (இக்.வ.); place near a well where the baling bucket is emptied

[நா² + அடு → அடை.]

நாவடைக்கல் *nāvaḍai-k-kal,* பெ. (n.) தண்ணீர் பாயும் கல்; rock where water flows.

[நா + அடை + கல்.]

நாவடைசலம் *nāvaḍai-šalam,* பெ. (n) நிலத்தின் மேற்பரப்பின் மீதுள்ள தண்ணீர்; water of an elevated place.

[நாவடி → நாவடை + சலம்.]

நாவடைத்துப்போ—தல் *nā-v-aḍaittu-p-pō-,* 5 செ.கு.வி. (v.i.) பேச முடியாமற் போதல்; to become speechless, dumb founded.

[நா + அடைத்து + போ—.]

நாவணம் *nā-v-aṇam,* பெ. (n.) உள்நாக்கு (வின்.); uvula.

[நா² + அண்ணம் → அணம்.]

ஒருகா. நா + வண்ணம் → வணம்

நாவணை *nāvaṇai,* பெ. (n.) எருத்தின் நான்கு இணை (வின்.); four pairs of oxen.

[நாலணை → நாவணை.]

நாவதாரு *nāva-tāru,* பெ. (n.) வேதிமப்பொருளுள் ஒன்றான வீரம்; corrosive sublimate.

நாவரசு *nā-v-araśu,* பெ. (n.) அறுபத்து மூவருள் ஒருவரான திருநாவுக்கரசு நாயனார்; a canonised šaiva šaint, 7th,c. one of the three Tēvāram hymnists,one of 63 "*மிளிர்தரு நாவரசே*" (சிவப்.பிரபந்.நல்வர்.34).

மறுவ. தாண்டகவேந்தர்.

[நா² + அரசு.]

நாவரணை *nā-v-araṇai,* பெ. (n.) நாப்புற்று நோய் வகை; a kind of pimple or ulicer on the longue

[நா + அரண் → அரணை.]

பல்லிற்கு அரண்போன்று அமைந்துள்ள பல்லரணையிலோ, அல்லது நாவிலோ ஏற்படும் புண்.

நாவரையர் *nā-v-araiyar,* பெ. (n) *நாவரசு* பார்க்க; see *Nāvarašu.* "*தமிழின் செய்யுள் பாடு நாவரையர் புகழ்மொழிகள்*" (சேதுபு. கடவுள்,வா.9.).

மறுவ. திருநாவுக்கரசு நாயனார்.

[நா + அரசர் → அரைசர் → அரையர்.]

நாவல்¹ *nāval,* பெ. (n.) 1. மரவகை; jaumoon-plum-, Cugenia fambolana. "*நாவ றுநீஇயவிந் நானிலம்*" (திருக்கோ.191). 2. மலை மரவகை; arnott's mountain black plum. 3. *நாவலந்தீவு* பார்க்க; see *nāvalan-ḍivu.* "*நாவலந் தண்பொழில்*" (மணிமே.22:29). 4. போர்க் கழைக்கை (நன்,100,மயிலை.), challenging for fight. 5. வெற்றிக் குறிப்பாக இடும் ஒலி; a shout of victory in the form of nāvalō-nāval. "நாவலிட்டுழிதர்கின்றோம்" (திவ். திருமாலை,1.)6. நெற்போரிடுவோர் மகிழ்ச்சியினா லிடுமொலி (ஏரெழு.59); a shout of joy made while heaping grain on the threshing-floor. 7. நெற்போர் தெழிக்கும் பகட்டினங்களைத் துரப்பதொரு சொல்; a shout of driving the oxen while treading sheaves on the threshing-floor "*காவலுழவர் ..நாவலோஓ வென்றிசைக்கு நாளோதை*" (நன்,101,உரை). 8. துயரக்குறிப்பு; exclamation of grief. "*கன்னி மீர் நாவ லிக்கண நண்ணுதிர்*" (கந்தபு. பானுகோ.192). 9. எள்காயை அழிக்கும் பூச்சிவகை; (S.A.) a kind of insect which blights the gingelly crops

ம. ஞாவல்.

[ஞாவல் → நாவல்.]

நாவல்² *nāval,* பெ. (n.) துவர்ப்புக் கலந்த இனிப்புச்சுவையுடைய கருநீலச் சிறுபழம். மேற்குறிப்பிட்ட பழத்தைத் தரும் உயரமான மரம்; jaumoon-plum (the fruit and the tree).

யா = கருமைக்கருத்துவேர்.

[யா + வு → யாவு; யாவு + அல் → யாவல் → யாவல் → ஞாவல் → நாவல்.]

நாவற்கனி நம் மண்ணுக்குரியது. கன்ன ங்கரியது.

யகர ஞகரத்திரிபு = யாவல் → ஞாவல்.

ஞகர நகரத்திரிபு = ஞாவல் → நாவல்.

கருமைக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டே, "நாவல்" என்னும் பெயர் ஏற்பட்டது என்பார் சொல்லாய்வாளர், ப. அருளி. கருங்கனி, இருங்கனி என்னும் கருமைப் பொருண்மையை விளக்கும், நாவல் பற்றிய சொல்லாட்சிகள் கழகஇலக்கியப் பரப்பில் பரவலாகக் காணப்படுகின்றன.

(எ.டு) "புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி" (நற்.35:2.). "காலின் உதிர்ந்தன கருங்கனி நாவல்" (மலை.135.) "கருங்கனி நாவல் இருந்து கொய் துண்ணும்" (புறம்.177:11.).

மேற்குறித்த கழகஇலக்கியப் பதிவுகளில், கருமைக்கருத்து, மிகத்தெளிவுற ஒளிர்கின்ற பாங்கினைக் கண்டு தெளிக.

நாவல்மரம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. பண்டைய இந்தியா நாவலந்தேயம் எனப் புகழ்பெறுதற்கு, இம் மரமே முழுமுதற் கரணியமென்பார் மொழி ஞாயிறு. நாவல் மரமும், பழமும், நானிலத்தவர்தம் நலவாழ்விற்கு நற்றுணை நல்குவனஎனில், மிகையன்று. நாவல் பழத்தை நாகப்பழமென்றும் அழைப்பர். இம் மரம் பரந்து வளரும் பான்மையது. மனையடி நிலத்திலும், தோப்புத்துரவிலும் நாவல் நன்கு செழித்து வளரும். இம் மரம் 70 முதல், 80 அடி உயரம் வரை வளரும். இதன் இலைகள் 3, 6 விரலம் நீளமுடையவை. மாசி, பங்குனியில் அரும்பும், இம் மரத்தின் பூக்கள் சிறியதாகவும், வெண்மை நிறங்கொண்டதாகவும் இருக்கும். இதன் விளைச்சல் 40 ஆண்டுகளில் பூரணமாய்க் கிடைக்கும். கருநீல நிறத்திலும், சிறியதாகவும் உள்ள இப் பழம் சுவையானது. துவர்ப்பாயும் இருக்கும். இதன் பட்டையும் துவர்க்குந் தன்மைத்து. நாவல் பழத்தை நசுக்கினால் கருப்பூரமணம் வீசும். இந்த நாவலிலிருந்து பச்சை நிற எண்ணெய் தயாரிக்கலாம். இந்த எண்ணெய், குடற்கோளாற்றினைப் போக்கும். செரிமான ஆற்றலை மிகுவிக்கும். நாவல்மரத்தினது பட்டையை மற்ற கடைச்சரக்கோடு சேர்த்து அரைத்து, வாய்ப்புண்களைக் குணப்படுத்துவர். பட்டைச்சாற்றை, வெள்ளாட்டுப்பாலில் கலந்து கொடுக்க, குழந்தைகளின் வயிற்றுப்போக்கு நீங்கும். இதன் கொட்டைகள் நீரிழிவு நோய்க்குச் சிறந்த மருந்தாகும். நாவல்மரத்தின் மேற்பட்டைச் சூரணத்தைச் சீழ்வடிகின்ற புண்ணில் விட்டால், காயம் குணமாகும். தோல்நோயைப் போக்கி உடம்பிற்கு மினுமினுப்பை ஏற்படுத்தும். இம் மரத்தின் வேரால் கரப்பான் புண், மச்சை மேகம் ஆகியன ஆறும். நாவல்பழச் சாற்றில் இன்பருகம் செய்து அருந்தினால், நன்கு செரிமானமாகும். நாவற்சூரணம் இருமல், ஈளை, வாய்ப்புண் முதலான உடம்பிலுள்ள பெரும்பாலான நோய்களுக்குக் கைகண்ட மருந்தாகும்.

நாவல் வகைகளாகச் சா.அக. கூறுவது வருமாறு:-

1. ஈழத்து நாவல்.
2. ஓர நாவல்.
3. கரு நாவல்.
4. கரும்பு நாவல்.
5. காட்டு நாவல்.
6. குழி நாவல்.
7. கொடி நாவல்.
8. கொட்டை நாவல்.
9. கொரநாட்டு நாவல்.
10. சம்பு நாவல்.
11. சாவா (ஜாவா) நாவல்.
12. சிவப்பு நாவல்.
13. சிறு நாவல்.
14. திப்பிலி நாவல்.
15. நரி நாவல்.
16. நாட்டு சம்பு நாவல்.
17. நிழல் நாவல்.
18. நீர் நாவல்.
19. புளி நாவல்.
20. பூ நாவல்.
21. பூமி நாவல்.
22. பெரு நாவல்.
23. மலை நாவல்.
24. வெண்ணாவல்.
25. வெள்ளை நாவல்.

நாவல்³ *nāval,* பெ. (n.) உரைநடையில் விரிவாகக் கதையைக் கூறும் ஓர் இலக்கிய வடிவம்; novel; fiction.

மறுவ. நவீனம், புதினம்.

நாவல்கூறு-தல் *nāval-kūṟu-,* 5 செ.கு.வி. (v.i.) நாவலோ நாவலென்று சொல்லுதல்; to shout nāvalō-nāval. "*விளியும் பண்டமாற்றும் நாவல் கூறலும்*" (யாப்.வி.பக்.45).

மறுவ. அறைகூவல் இடுதல்.

[நாவல் + கூறு-.]

நாவல்நீர் *nāval-nīr,* பெ. (n.) நாவல் மரத்து வேரில் ஊறிய நீர்; water where in the root of the jaumoon tree is soaked

[நாவல் + நீர்.]

உடலுக்கு ஆண்மையைத் தரும், நீரிழிவு, மிகுகாய்ச்சல் போன்றவற்றைப் போக்கும்.

நாவல்நெல் *nāval-nel,* பெ. (n.) நெல்வகை; a kind of paddy.

[நாவல் + நெல்.]

நாவலகலிடம் *nāval-agal-iḍam,* பெ. (n) *நாவலந்தீவு* பார்க்க; see *nāvalan-dīvu.* "*நாவலகலிடத்து ஞாயிறனையனாய்*" (பு. வெ.8.17).

[நாவல் + அகல் + இடம்.]

நாவலந்தண்பொழில் *nāvalan-ḍanpoḻil,* பெ. (n.) ஏழுதீவுகளுள் ஒன்று: பெருந். India. "*நாவலந் தண்பொழில் நண்ணார் நடுக்குற*" (மணிமே.22:25).

மறுவ. நாவலந்தேயம், மூவர் தண்பொழில்.

[நாவல் + அம் + தண்பொழில்.]– பொழி + இல் = மழைப்பொழிவால் செழிக்கும் இடம்.

நாவல் மரங்கள் சூழ்ந்த, இந்து தேயம். பொழில் = சோலை; மரங்களின் பொழிப்பு அல்லது தொகுப்பு. நாவலந்தண் பொழில் குறித்து, மொழி ஞாயிறு கூறுவது வருமாறு:–

மாந்தன் தோன்று முன்பும், மக்கள் பெருகு முன்பும், ஞாலத்திலுள்ள நிலமெல்லாம் தோன்றிற்று. பெருநிலப்பகுதிகளும், சிறுநிலப் பகுதிகளும், தனித்தனி பெருஞ்சோலையும், சிறுசோலையுமாக விருந்தன. இதனால் மண்ணுலகும், அதன் கண்டங்களும், நாடுகளும் 'பொழில்' என்னும் பொதுப்பெயர் பெற்றன.

பொழில் என்பது சோலை. மரங்களின் பொழிப்பு அல்லது தொகுப்பு பொழில். "*தொழில் காவல் மலிந்தியலும் பொழில் காவலன் புகழ் விளம்பின்று*" என்னும் புறப்பொருள் வெண்பாமாலைக் கொளுவில் 'பொழில்' என்பது,

ஞாலத்தை (பூமியை)க் குறித்தது. "*ஏழுடையான் பொழில்*" என்னும், திருக்கோவைத் தொடரில், 'பொழில்' என்பது, ஞாலம் போன்ற உலகத்தைக் குறித்தது,

"*நாவலந் தண்பொழில் நண்ணார் நடுக்குற*" (மணிமே.22:26) என்னும் மணிமேகலை யடியில், '*பொழில்*' என்பது, இந்து தேயத்தைக் குறித்தது. இச் சொல் காலப்போக்கில், "*வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்*" *(தொல்.79)* என்னும் தொல்காப்பிய அடியில், தமிழ்நாட்டைக் குறித்தது.

பரத கண்டமெனப்படும் இந்து தேயம், பழங் காலத்தில் நாவல் மரத்தால், சிறப்புற்றிருந்தமையால், நாவலம் பொழில் எனப்பட்டது. ஒரு காலத்தில் குமரிமலை முதல், பனிமலை (இமயம்) வரையும், தமிழக வேந்தர் ஆட்சி செலுத்தி யமையால், தமிழகம், நாவலந்தண்பொழில் என்னும் பெயர்பெற்றது. இஃது பிற்கால வழக்காகும்.

நாவலந் தண்பொழிற்கு, மூவர் தண்பொழில் என்றும் பெயர். பிற்காலத்தில் தமிழ் வழக்கும் தமி ழாட்சியும் தெற்கே ஒடுங்கிவர; மூவர் தண்பொழில் என்பது, தென்னாட்டை அல்லது தமிழ் நாட்டை மட்டும் குறித்தது. (சொ.ஆ.பக்.17).

நாவலந்தீவம் *nāvalan-tivam,* பெ. (n.) *நாவலந்தீவு* பார்க்க; see *nāvalan-tivu.* "நாவலந்தீவம் போற்றி" (திருவாலவா.கடவு.8).

[நாவலம் + தீவு + அம்.]

நாவலந்தீவு *nāvalan-tivu,* பெ. (n.) ஏழுதீவுகளுள் உப்புக்கடல் சூழ்ந்த தீவு; the central annular continent surrounded by the ocean of salt-water one of eḻu-tivu, (q.v) "*நாவலந்தீ வாள்வாரே நன்கு*" (ஏலாதி.56).

[நாவலம் + தீர்வு → தீவு = நாற்புறமும் கடலால் சூழ்ந்திருப்பது.]

த. தீர்வு → தீவு → skt. dvipa.

நால்வலம் → நாவலம் → நாவலம் + தீவு. ஞாலநிலப்பகுதி, ஒருகாலத்தில் ஏழு தீவுகளாகப் பிரிந்திருந்தது. ஏழுதீவுகளும், ஒன்றிலொன்று தீர்ந்திருந்தமையால், தீவுகள் எனப்பட்டன. இவ் வெழு தீவுகளுள், நாவலந் தீவும் ஒன்றாகும். இத் தீவுகளைப் பற்றித் திவாகரம், பின்வருமாறு பேசும்.

"நாவலந் தீவே இறலித் தீவே
குசையின் தீவே கிரவுஞ்சத் தீவே
சான் மலித் தீவே தெங்கின் தீவே
புட்கரத் தீவே எனத்தீவேழே".

வடமொழியாளர் தீவம் என்னுந் தென் சொல்லைத் '*த்விப்*' என்று திரித்து, இருபுறமும் நீரால் சூழப்பட்டது எனப் பொருட்கரணியங்கூறுவர். தீவு என்னும் பெயர், நாவலந்தீவு, ஆப்பிரிக்காவினின்றும் பிரிந்துபோன நிலையைக் காட்டும் என்பார், தேவநேயர்.

நாவலந் தீவின் முந் நிலைகள் குறித்து மொழி ஞாயிறு வரையறுப்பது வருமாறு:

1. பனிமலையும் வடஇந்தியாவும் இல்லாத இந்தியநிலப்பகுதி; தெற்கில் முழுகிப்போன குமரிக் கண்டத்தொடு அல்லது பழம்பாண்டி நாட்டொடு கூடியது.

2. பனிமலையொடு கூடிய இந்தியாவும் பழப்பாண்டி நாடும்,

"*பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்து குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு தென்றிசை யாண்ட தென்னவன் வாழி*" (சிலப்.11:19:32) என்று சிலப்பதிகாரம் கூறுவதால், பழம்பாண்டி நாடு முழுமையும் இருந்த காலத்தில், பனிமலையும் இருந்தமை அறியப்படும்.

3. பழம் பாண்டி நாடு இல்லாத இந்தியா. "*நாவலந் தீவிலிந் நங்கையை யொப்பார்*" (மணிமே,25:12.)

நாவல் மரங்களின் செறிவிடம் என்னும் பொருட்காரணமாகவே, இந்தியா "நாவலந்தீவு" என்னும் பெயர் பெற்றது. (எ.டு) "நாவல் தழீஇய நானிலம்" (திருக்கோ.19.).

"நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து" (மணிமே.11:107.)

"நாவல் ஓங்கிய மாபெருந்தீவத்து" (மணிமே.2:1.).

திவாகரநிகண்டில் நாவலந்தீவு குறிக்கப்பட்டுள்ளது காண்க.

"நாவலந் தீவே.........எனத்தீவேழே" இவ்வாறு, நாவலந்தீவு, இலக்கியங்களில் பதிவு பெற்றுள்ளது.

நாவலந்தேயம் *nāvalan-tēyam,* பெ. (n.) 1. இந்தியா; India. 2. நாவலந்தண் பொழில் பார்க்க; see nāvalan-daṇpoḻil.

மறுவ. நாவலம்பொழில்.

[நாவலம் + தேசம் → தேயம்.]

(ஒ.நோ.) நேசம் → நேயம்.

தொன்முது காலத்தில், நாவல் மரங்களினால், சிறப்புற்றமையால் (இந்தியா) நாவலந்தேயம் எனப்பட்டது.

நாவலம்புவி *nāvalam-puvi,* பெ. (n) *நாவலந்தீவு* பார்க்க; see *nāvalantivu.* "*நாவலம் புவிமன்னர் வந்து வணங்க*" (திவ். பெரியதி. 9,10,6).

நாவலம்பொழில் *nāvalam-poḻil,* பெ. (n.) *நாவலந் தண்பொழில்* பார்க்க; see *nāvalandaṇ-poḻil.*

[நாவலம் + பொழில்,]

நாவலம்பொழில் என்பது, நிலைத்திணையால் (தாவரத்தால்) நிறைந்து, ஒரு மாபெருஞ் சோலை போல் தோன்றியதனால், பெற்ற பெயராகும். பரதகண்ட மெனப்படும் இந்து தேயம், பழங்காலத்தில் நாவல் மரத்தாற் சிறப்புற்றிருந்தமையால், நாவலம்பொழில் எனப்பட்டது. (சொ.ஆ.பக்.17).

நாவலர்¹ *nā-valar,* பெ. (n.) 1. புலவர்; poets, oractors, the learned. "*செந்நாவலர் பரசும் புகழ்த் திருப்பெருந்துறை யுறைவாய்*", (திருவாச.34,1) 2. அமைச்சர்; ministers "*நாவலர் சொற் கொண்டார்க்கு நன்கலாற்றீங் குவாரா*" (சீவக.206), 3. நாவன்மையுடவர்கள்; attributed persons. "*நாவலர்கணான் மறையே*" (தேவா.297,3).

[நா → நாவலர்=நாவன்மையுடையவர்.]

நாவலர்² *nāvalar,* பெ. (n) சொல்வன்மையாளர், மொழிவல்லுநர்; langnage expert. "*மொழி ஞாயிறு தேவநேயபாவணர் மிகச்சிறந்த நாவலர்*" (இக்.வ.).

[நா + வல்லவர் → வலர் – 'ல்' இடைக்குறை.]

நாவலர். சோமசுந்தரபாரதியார், நாவலர். ந.மு.வேங்கடசாமிநாட்டார், நாவலர். செய்குத்தம்பி பாவலர், நாவலர். இரா.நெடுஞ்செழியன் எனப் பலர் பாராட்டப்பட்டனர். இரா.பி. சேதுபிள்ளை அரசியல் அறிஞர் அண்ணாவுக்கு முன்னோடியாக, மோனைநடையில் பேசும் உத்தியைத் தொடங்கியதால், நாவலர் என்னும் பொருளில், 'சொல்லின் செல்வர்' என்று அடைமொழியுடன் அழைக்கப்பட்டார்.

நாவலர்க்காந்தம் *nāvalar-k-kāndam,* பெ. (n.) *நாகமுக்கொற்றி* பார்க்க; see *nāga-mūkkōṟṟi.*

[நாவலர் + காந்தம்.]

நாவலர்கோன் *nāvalar.kōṉ,* பெ. (n.) *நாவலூராளி (பெரியபு.திருமலை.17)* பார்க்க; see *nāvalūrāḷi.*

மறுவ. தம்பிரான்தோழர்.

[நாவலர் + கோன்.]

நாவலூராளி *nāval-ūr-āḷi,* பெ. (n.) சுந்தரர்; the šaiva šaint šuntarar. a native of nāvalūr, "*நாவலூராளி நம்பி வன்றொண்டன்*" (தேவா. 942,10).

மறுவ. நம்பியாரூரர்.

[*நாவல் + ஊர் + ஆள் + இ.*]

இ=விகுதிமேல்விகுதி.

ஒ.நோ. அவர் + கள்.

திருநாவலூரில் தோன்றியவர். நாவலூர் இறைவனை உடைமையாகவும், தோழனாகவும், வாழ்க்கையில் ஏற்று, வாழ்ந்து காட்டியவர்.

நாவலோ *nāvalō,* பெ. (n.) *நாவலோ நாவல்(நன்.101,உரை)* பார்க்க; see *nāvalō-nāval.*

[நாவல் →நாவலோ.]

நாவலோநாவல் *nāvalō-nāval,* பெ. (n.) *நாவல்,5,6,* பார்க்க; see *nāval,5,6.* "*நாவலோ நாவலென நாட்டிய முறையிட்ட*" (ஏரெழு.59).

[நாவல் →நாவலோ + நாவல்.]

நாவழற்சி *nā-v-aḻaṟci,* பெ. (n.) நாக்கு வெந்து போகை; inflammation of the tongue.

[நா + அழற்சி.]

நாவழிக்கை *nā-vaḻikkai,* பெ. (n.) நாக்கைத் தூய்மைப் படுத்துகை; cleaning the tongue by scraping.

[நா + வழிக்கை.]

நாவழி[1]-த்தல் *nā-vaḻi-,* செ.குன்றாவி. (v.t) நாக்கின் அழுக்கிசைச் சுறண்டுதல்; to clean the torgue by scraple.

[நா + வழி-.]

நாவழி[2] *nā-vaḻi,* பெ. (n.) நாக்குவழிக்குங் கருவி; tongue scraper. "*பொன்னா வழியாற் புகழ் நாவழித்து*" (சீவக.3045).

[நா[2] + வழி.]

நாவழுக்கல் *nā-vaḻukkal,* பெ. (n) 1. நாக்கில் மாசு படருதல்; tongue being covered with a coat of pale matter. 2. நாக்குத் தவறுகை (சா.அக.); slip of the tongue

[நா + வழுக்கல்.]

நாவழுக்கு *nā-vaḻukku,* பெ. (n.) நாக்கின்மேல் பகுதியில் படரும் வெள்ளை அல்லது மஞ்சள் நிறமான மாவைப் போன்ற, அழுக்கு; the whitish or yellowish layer or coating on the surface of the tongue

[நா + அழுக்கு.]

நாவழுவழுத்தல் *nā-vaḻu-vaḻuttal,* பெ. (n.) நாக்கில் சளிச்சவ்வு படர்ந்திருத்தல்; a feeling of the tongue from mucous.

[நா + வழுவழுத்தல்.]

நாவளநோக்கு *nāvaḷa-nōkku,* பெ. (n.) மறு; mole.

மறுவ. மச்சம்.

நாவற்பொழில் *nāvaṟ-poḻil,* பெ. (n) *நாவலந்தீவு* பார்க்க; see *nāvalandīvu* "*பூமலி நாவற் பொழிலகத்து*" (பு.வெ.9.38).

[நாவல் + பொழில்.]

நாவறட்சிக்கசாயம் *nāvaṟaṭci-k-kašāyam,* பெ. (n) நிலவேம்பு, வசம்பு, மிளகு, கருஞ்சீரகம், ஓமம் முதலான கடைச் சரக்குகளால், உருவாக்கப்படும் கருக்குநீர்; the above drugs are slightly fried and decoction is prepared as per rules

[நாவறட்சி + skt. கசாயம்.]

இக் கருக்குநீர் மிகுகாய்ச்சலைத் தணிக்கும். நாவறட்சியைப் போக்கும் என்று, சா.அக. கூறும்.

நாவறட்சிக்காய்ச்சல் *nāvaṟaṭci-k-kāyccal,* பெ. (n.) நாவை வறளச்செய்யும் நச்சுக் காய்ச்சல்; a kind of malarial fever, marked by dryness of tongue

[நாவறட்சி + காய்ச்சல்.]

மிகு நீர்வேட்கையை உருவாக்கும் காய்ச்சல்.

நாவறட்சி *nā-vaṟaṭci,* பெ. (n.) நீர்வேட்கை; thirst, as causing dryness of the tongue.

மறுவ. நாக்குலர்வு.

[நா[2]+ வறட்சி.]

நாவறளுகை *nā-vaṟaḷugai,* பெ. (n.) நீர்வேட்கையால் நா காய்தல்; feeling thirsty from dryness of the tongue.

[நா + வறளுகை.]

நாவறளை *nā-vaṟaḷai,* பெ. (n.) *நாப்புற்று* பார்க்க; see *nāppuṟṟu.*

[நா வறள் → நாவறளை.]

நாவன்மை *nā-vaṉmai,* பெ. (n.) 1. பேச்சாற்றல்; power of speech; eloquence. தங்களது நாவன்மையினால் மக்களைக் கவர்ந்தவர்கள் பலர் (இக்.வ.). 2. *நாநலம்* பார்க்க; see *nā-nalam.*

[நா + வன்மை.]

நாவாசித்தி¹ *nāvā-šitti,* பெ. (n.) *நாவூறு (யாழ்.அக.)* பார்க்க; see *nā-v-ūṟu.*

[*நா + ஆசித்தி.*]

நாவாசித்தி² *nāvā-šitti,* பெ. (n.) *நாவாய்ச்சித்தி (யாழ்.அக.)* பார்க்க; see *nāvāy-c-citti.*

நாவாசீகம் *nāvā-šīgam,* பெ. (n.) சிற்றொடுவை மரம்; a kind of medicinal tree.

நாவாஞ்சகம் *nāvāñjagam,* பெ. (n.) சிறுகாடை; common quail.

நாவாதி *nāvādi,* பெ. (n.) *அக்கமணி* பார்க்க; see *akkamaṇi.* downy-nerved olive linden.

நாவாய்¹ *nāvāy,* பெ. (n.) உள்ளீடற்ற கதிர் (இ.வ.); blighted grain.

[நா + வாய்.]

நாவாய்² *nāvāy,* பெ. (n.) 1. மரக்கலம்; vessel, ship "*முந்நீர் வழங்கு நாவாய் போலவும்*" (புறநா.13); 2. *நாவாய்ப்பறை* பார்க்க; see *nāvāy-p-paṟai* "*பறை நாவாய்*" (இலக்.வி.392,உரை)

த. → நாவாய் → **வ.** நௌ.

நாவுதல் = கொழித்தல். நாவு → நாவாய்.

கடல் நீரைக் கொழித்துச் செல்லும் பெருங்கலம்.

"வானி யைந்த விருமுந்நீர்ப்
பேஎநிலைஇய விரும் பௌவத்துக்
கொடும்புணரி விலங்கு போழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடி மிசை யிதையெடுத்
தின்னிசைய முரசமுழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்ட
மாடியற் பெருநாவாய் நாடார நன்கிழி தரு
மழைமுற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர்சான்ற வுயர்நெல்லி
னூர் கொண்ட வுயர்கொற்றவ"

என்று, (மதுரைக்.75–88). தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மீது, அவன் முன்னோருள் ஒருவன். சாலி(சாவக)த் தீவைக் கைப்பற்றியமை ஏற்றிக் கூறப்பட்டிருத்தல் காண்க. (வட.மொ.வ.20).

வேத ஆரியர், கடலையும் கப்பலையும் கண்டறியாது நிலவழியாக இந்தியாவிற்கு வந்தவர். சிந்தாற்றில் இயங்கிய படகுகளைப் பற்றித்தான், அவர்க்குத் தெரியும். அதனால் வடநாட்டில் வழங்கிய நௌ என்னும் சொல்லாற், படகையே முதலிற் குறித்தனர். வடவர் காட்டும் வேடிக்கையான சொன்மூலம் வருமாறு:

1. நௌ = வாச்(c)–(நிருக்த,1,11). வாச்= பேச்சு, மொழி, குரல், ஒலி. 2. நு⁴ = பராவு(praise) தெய்வத்தைப் பராவும் மன்றாட்டு (prayer) வானு லகிற்குச் செலுத்துகின்ற காலமாக இருக்கின்றது.

"2. nau = vāe, nir.i.ll (either because prayer is a vessel leading to heaven or fr.4.nu, to praise)" மா.வி.அ.ப.571.

த. நாவாய் → L navis = ship.OF navie = fleet
நாவாய் → E Navy = a fleet

நாவாய்க்குழி *nāvāy-k-kuḻi,* பெ. (n) அல்குலின் இதழ்கள் விரியும் இடத்தினுள்ளே, உட்புறமாய் அமைந்தகுழி; a groove of furrow seen on separating the labia between their inferior extremities or cavity behind the vaginal aperture.

[*நாவாய் + குழி.*]

நாவாய்ச்சித்தி *nā-vāy-c-citti,* பெ. (n.) வாக்குச்செல்வாக்கு (வின்.); influence superstitiously attributed to the words of some persons.

[*நா² + வாய் + சித்தி.*]

நாவாய்ப்படி *nāvāy-p-paḍi,* பெ. (n.) மேல்மதகுக்கட்டை சொருகும் துளை; inesrting hole for sluice.

[*நாவாய் + படி.*]

நாவாய்ப்பறை *nāvāy-p-paṟai,* பெ. (n.) நெய்தனிலப்பறை (இறை,1,பக்,17); drum used in neydal tract.

[*நாவாய் + பறை.*]

நாவாயெலும்பு *nāvā-y-elumbu,* பெ. (n) கைக்குழைச்சின் (மணிக்கட்டின்) மேல்வரிசை யெலும்புகளில் ஒன்று; one of the bones in the proximal row of wrist.

[*நாவாய் + எலும்பு.*]

நாவாள் *nāvāḷ,* பெ. (n.) நாமகள் (வின்.); Kalai-magaḷ, "*நாவாளுடனீ யெனு நான்முகனே*" (சேதுபு.சிவதீர்.46).

மறுவ. கலைமகள்.

[*நா + ஆள்.*]

நாவாகிய வாள் = [*நா + வாள்.*]

நாவி¹ *nāvi,* பெ. (n) 1. கத்தூரி மான்; musk-deer 2. புனுகுப்பூனை; civet-cat 3. பச்சைக்கருப்பூரம்; crude camphor. 4. கருநாவி; blackaconite. 5. சவ்வாது; zibet.

[*நவ்வி → நவி → நாவி.*]

நாவி² *nāvi,* பெ. (n.) 1. பச்சைநாவி (பதார்த்த.1054); indian aconite. Aconitum ferox. 2. ***ஊமத்தை (மலை.)*** பார்க்க; see *ūmattai,* trumpet-flower nightshade 3. நச்சுவேர்; aconite root

[நவ்வி → நாவி.]

பச்சை நாவி என்று அழைக்கப்படுகின்ற இச் செடியானது, பச்சையாய் தென்படுவது குறைவு. காரணம், இவை பனிமலையிலும் (இமயம்) அதன் சுற்றுப்புறங்களிலும், அதிகம் தென்படும். இச் செடியின் மேல்தண்டு 2–3 அடி உயரம் வரை நேராக வளரும். இதன் வேர்க்கிழங்கு 4 விரலம் நீளமும், வெளிப்புறம் சிறிது கருப்பாகவும், உடபுறம் வெண்மையாயு மிருக்கும். பூக்கள் நீலநிறமும் வெண்மையும் கலந்து, நீண்டும் காணப்படும். வேர்க்கிழங்கு 3–4 விரலம் நீளமும், 1–2 விரலம் பருமையுங் கொண்டது. இவ் வேரினைச் சூரணமாக்கி, தேள்கடி, பாம்புக்கடி போன்ற நச்சுக்கடிகளுக்கு தேறலில் (மதுவில்) கலந்து கடிபட்ட இடத்தில் தடவ, நச்சுத்தன்மை நீங்கும். உடலின் வெப்பத்தை தணிப்பதற்கும், பச்சை நாவியைப் பயன்படுத்துவர். இவ் வேரானது நச்சுத்தன்மை கொண்டது. 10 ஆண்டுகள் வைத்திருந்தாலும்,

நச்சுத்தன்மை நீங்காத்தன்மைத்து எனவே, இதைத் தனி ஒரு மருந்தாகப் பயன்படுத்தக் கூடாது. மற்ற கடைச்சரக்குகளுடன் சேர்த்து வயிற்றுப்போக்கு, முறைச்சுரம், பல்வலி தலைநோய், செரிமானமின்மை, பசியின்மை, மூளைக்கோளாறு, இருமல், ஈளை, தொண்டைக்கட்டு போன்ற நோய்களுக்கு மருந்தாகக் கொடுக்க, மேற்சொன்ன நோய்கள் அகலுமென்று, சா.அக. கூறுகின்றது. நாவி வகைகள்பற்றிச், சா.அக. கூறுவது வருமாறு:–

1. அந்தணநாவி.
2. அரசநாவி.
3. கருநாவி.
4. சீமைநாவி.
5. செந்நாவி.
6. பச்சைநாவி.
7. வெண்ணாவி.

நாவி³ *nāvi.* பெ. (n.) *நாவாய்², 1.* பார்க்க; see *nāvāy², 1.* "*வங்க நாவியி னதன்வடக் கிழிந்து*" (மணிமே.26,85).

நாவாய் → நாவி.

நாவிக்கிழங்கு *nāvi-k-kiḻaṅgu,* n கிழங்கு வகையுள்ஒன்று (சா.அக.); green aconite root - Aconitam ferox

மறுவ. கலப்பைக்கிழங்கு.

[*நாவி + கிழங்கு.*]

நாவிக்குழம்பு *nāvi-k-kuḻambu,* பெ. (n.) புனுகு; civet. '*நாவிக்குழம்புறீஇ*' (சீவக.2692)

[*நாவி + குழம்பு.*]

நாவிகன் *nāvigaṉ,* பெ. (n.) கப்பற்காரன்; mariner.

[*நாவி → நாவிகன்.*]

நாவிகாக்கிழங்கு *nāvigā-k-kiḻaṅgu,* பெ. (n.) *நாவிக்கிழங்கு* பார்க்க; see *nāvi-k-kiḻaṅgu.*

நாவிகாக்குவளை *nāvigā-k-kuvaḷai,* பெ. (n.) செங்குவளை; red water-lily

நாவிகாச்சங்கு *nāviga-c-caṅgu,* பெ. (n.) பீச்சங்கு; fetid smooth volkameria.

நாவிச்சட்டம் *nāvi-c-caṭṭam,* பெ. (n.) 1. மான்மணத்திச் சட்டம்; the scrotum of the musk-deer, whence musk is taken 2. புனுகுச்சட்டம்; ventricle or sack in the civet cat in which civet is generated 3. *சவ்வாது;* புனுகுப்பூனை; zibet.

[*நாவி + சட்டம்.*]

நாவிச்சூலை *nāvi-c-cūlai,* பெ. (n.) சூலைநோய்வகையு ளொன்று. இஃது வசநாவியினால் ஏற்படுவது; a kind of severe colicky pain in the abdomen arising from taking aconit internally (சா.அக.).

[*நாவி + சூலை.*]

நாவிடம் *nāviḍam,* பெ. (n.) 1. உடம்பின் நரம்பு; nerves in the body 2. நாக்கின் அமைப்பு; the nature of the tongue. 3. தெறுமொழி, வசைமொழி (சாபம்); curse.

[*நா + இடம் → நாவிடம்.*]

நாவித்தண்டை *nāvi-t-taṇḍai,* பெ. (n.) 1. *வெதுப்படக்கி (மலை.)* பார்க்க; see *veduppaḍakki.* 2. எருமுட்டை (சங்.அக.); dried dung-cake. 3. பீநாறிச்செடி; stinging plant

[நாவி + தண்டை.]

நாவிதன்[1] *nāvidaṉ,* பெ. (n.) **1.** *கார்த்திகை* பார்க்க; see *kārttigai,* **2.** பூரநாள்; the 11th naksatra, part of leo.

நாவிதன்[2] *nāvidaṉ,* பெ. (n.) மயிர் திருத்துவோன்; barber. "சாபத்தி னாவித னாயினான்" (சீவக,2491.).

[நாவிசன் → நாவிதன்.]

நாவிநெய்[1] *nāvi-ney,* பெ. (n.) **1.** மயிர்ச்சாந்து; a perfumed pungent. **2.** நாவிக்கிழங்கினின்று வடிக்கும் பச்சை வண்ண எண்ணெய்; a bright green oil extracted from aconite root.

[*நாவி + நெய்.*]

நாவிநெய்[2] *nāvi-ney,* பெ. (n.) புனுகு; civet

[*நாவி + நெய்.*]

நாவிப்பிள்ளை *nāvi-p-piḷḷai,* பெ. (n.) கத்தூரி மான் குட்டி (தொல்.பொருள்.562,உரை); fawn of the musk-deer.

[*நாவி + பிள்ளை.*]

நாவிப்புருதி *nāvi-p-purudi,* பெ. (n)நாக்கில் எழும்பும் கட்டி; abscess of the tongue.

மறுவ. நாப்புற்று.

நாவிப்புழுகு *nāvi-p-puḻugu,* பெ. (n.) புனுகு (யாழ்ப்.); civet

[*நாவி + புழுகு.*]

நாவிப்பூனை *nāvi-p-pūṉai,* பெ. (n.) **1.** கத்தூரிமான்; musk-deer **2.** புனுகுச் சட்டம்; civet cat. **3.** சவ்வாதுபூனை; zibet cat.

[*நாவி + பூனை.*]

நாவிமிருகம் *nāvi-mirugam,* பெ. (n.) *நாவிப்பூனை* பார்க்க; see *nāvi-p-pūṉai.*

[*நாவு + skt. மிருகம்.*]

நாவியப்பூ *nāviya-p-pū,* பெ. (n.) கார்த்திகைப்பூ; november flower.

[நாவியம் → நாவியப்பூ.]

நாவியம் *nāviyam,* பெ. (n.) *காந்தள்* பார்க்க; see *kāndaḷ,* malabar glory-lily

[*நாவு → நாவயிம்.*]

நாவில்லாவலரி *nā-v-illā-v-alari,* பெ. (n.) ஈழத்தலரி; pagoda tree(L.)

[*நா + இல்லா + அலரி.*]

நாவில்லான் *nāvillāṉ,* பெ. (n) **1.** நாக்கு இல்லாதவன்; a person without a tongue. **2.** ஊமை; dumbness.

[*நா + இல்லான்.*]

நாவிலட்சரம் *nāvilaṭcaram,* பெ. (n.) *நாவட்சரம்* பார்க்க; see *nāvaṭcaram.*

நாவிலரணை *nāvilaraṇai,* பெ. (n.) *நாவரணை* பார்க்க; see *nāvaraṇai.*

நாவிலை *nā-v-ilai,* பெ. (n.) வெற்றிலை; betel leaf.

[*நா + இலை.*]

நாவிழுப்பு *nāviḻuppu.* பெ. (n.) நாக்கு உள்ளே இழுத்துக்கொள்ளுகை; with drawal of the tongue there by rendering in capable of utterance

[*நா + இழுப்பு.*]

நாவின்கிழத்தி *nāviṉ-kiḻatti,* பெ. (n) நாமகள்; Nāmagaḷ, goddess of learning "*நாவின் கிழத்தி யுறைதலால்*" (நாலடி.252).

மறுவ. கலைமகள்.

[*நாவின் + கிழத்தி.*]

நாவின்மா *nāviṉ-mā,* பெ. (n) *நாவழுக்கு* பார்க்க; see *nāvaḻukku.*

[*நாவின் + மா.*]

நாவின்முடிச்சு *nāviṉ-muḍiccu,* பெ. (n) நா பேசமுடியாதபடி, நாக்கின் அடியிலுள்ள முடிச்சு; tongue

நாவினார் *nāviṉār* பெ. (n.) நாவலர்; poet "*முந்திய நாவினார்*" (கம்பரா.பாயி.).

[*நாவின் → நாவினார்.*]

நாவீங்கித்தொங்கல் *nā-vīṅgi-t-toṅgal,* பெ. (n.) நாக்கில் தோன்றும் நோய்வகை; a kind of tongue disease

நாவு[1]-தல் *nāvu-* 5 செ.கு.வி. (v t) 1. கொழித்தல் (நெல்லை); to winnow and clear grain from stones 2. நா வளைத்தல் (யாழ்.அக.); to thrust out the tongue and move it sideways. 3. நாவாற் குறிகாட்டி ஏளனஞ் செய்தல் (வின்.). to mock by thrusting out the tongue

[*நா → நாவு → நாவு-. = கொழித்தல்.*]

நாவு[2] *nāvu,* பெ. (n) நாக்கு; tongue

[*நா → நாவு.*]

நாவுக்கரசு *nāvukkarasu,* பெ.(n) 1. திருநாவுக்கரசு நாயனார்; a canonised Saiva Saint 7th.c). 2. நாவால் (பேச்சாற்றலால்) புகழ் பெற்றோர்; superstitiously attributed to speak of some person

[*நாவுக்கு + அரசு.*]

"கு" நான்காம் வேற்றுமை. கொடைப்பொருள் குறித்த ஈறு.

மறுவ. அப்பர், தாண்டகவேந்தர்; மருணீக்கியார்; தருமசேனர்; வாகீசர்.

திருநின்றசெம்மை என்ற பெயரில், திருத்தொண்டு நெறியைக் கொள்கையுமாகவும், செயல்முறைப் பட்டிகையாகவும், அமைத்தவர். அப்பர் பெருமான். மகேந்திரபல்லவன் காலத்தவர். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். செயற்பாட்டு நிலையில் அமைந்த வரலாற்று வாழ்வியல் நிகழ்வுகளைக் கொண்டவர். குமுகாயத்தில் நிகழும் சமயமாற்றத்தின் சூழல்களையும், காரணங்களையும் ஆய்ந்து விளக்கியவர்; திருஞானசம்பந்தரின் சமகாலத்தில் வாழ்ந்து, அவருடன் இணைந்து தொண்டு செய்தவர். தீர்திறனைத் திறம்பட எடுத்தியம்பியவர். சைவசமயத்துக்குப் பல வகையான அரண்களை அமைத்துக் காத்தவர். திருநாவுக்கரசரைச் செயற்படுத்திய திலகவதியார், திருத்தொண்டு நெறியினுக்குக் கட்டளைக் கல்லாக அமைந்தவர். திலகவதியார், திருநாவுக்கரசருடன் தோன்றி, மிகு சூலைநோயால் நலிவுற்ற ஞான்று, திருவாலவாயன் திருநீறு தந்து, நாவுக்கரசரை ஆற்றுப்படுத்தித், தொன்முதுச் செந்நெறியாம் சைவத்திருநெறி, நானிலத்தில் ஓங்கி வளரச்

பன்னிரு திருமுறைகளுள் திருநாவுக்கரசர் அருளியவை:–

1. நான்காம் திருமுற்ற–113 பதிகங்கள். 1069 பாட்டுக்கள்.

2. ஐந்தாம் திருமுறை–100 பதிகங்கள். 1015 பாட்டுக்கள்.

3. ஆறாம் திருமுறை–99 பதிகங்கள். 980 பாட்டுக்கள்.

மொத்தப்பதிகங்கள் = 312.

மொத்தப்பாட்டுக்கள் = 3064.

நான்காம் திருமுறை முழுவதும், பண்முறையின் அடிப்படையில், அருளப் பெற்றவை.

ஐந்தாம் திருமுறை முழுவதும், குறுந்தொகை என்னும் யாப்புமுறையில் அமைந்தவை. "திருக்குறுந் தொகை" என்பது பொதுப்பெயர். குறுகிய அமைப்புடைய பாடல்களைக் கொண்டது.

ஆறாந்திருமுறை முழுவதும், திருநாவுக்கரசரால் முதன்முதலாக, மூல இலக்கியமாகப் பாடப்பெற்றவை. தாண்டகயாப்பு முறையில் அமைந்தவை. இலக்கிய உலகில், "தாண்டகவேந்தர்" என்னும் சிறப்புப்பெயரைப் பெற்றுத்தந்தவை. அப்பர் பெருமான் பாடிய தாண்டகப்பாக்களே, எண்சீர் விருத்தப்பாக் களுக்கு முன்னோடி எனலாம். நம்பியாண்டார் நம்பி பாடிய "*திருநாவுக்கரசு தேவர் திரு ஏகாதச மாலை*" யில் உள்ள பதினொரு பாடல்களும், திருத்தொண்டர் திருவந்தாதியில் வரும், 24, 25 ஆம் எண்களுள்ள திருப்பாடல்களும், அப்பர்தம் வரலாற்றினை எடுத்தியம்புகின்றன, எனலாம்.

திருநாவுக்கரசர் தம் வாழ்வியல் நிகழ்வுகளை, நெஞ்சில் நிலைநிறுத்தீக் காட்டும், நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதிப் பாடல் வருமாறு:–

"மணியினை மாமறைக் காட்டு மருந்தினை
வண்மொழியால்
திணியன நீள்கதவந் திறப்பித்தன
தெண்கடலிற்
பிணியன கன்மிதப்பித்தன
சைவப்பெருநெறிக்கே
அணியன நாவுக்கரையர் பிரான்றன்
அருந்தமிழே"

மேற்குறித்த பாடலின், வரலாற்றுண்மையை தெளிவுறுத்தும், நாவுக்கரசர்தம் பாடல் வரிகள்:–

"கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே"

நம்பியாரூரர், நாவுக்கரசரைப் பற்றி நவில்வது:–

"திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட திருநாவுக்கரசர்".

தொன்முதுச் செந்நெறியாம் சைவநெறி ஞாலந்தழீஇய பொதுமைத் தொண்டுநெறி என்பதைத் தம் வாழ்வியல் நிகழ்வுகள் வாயிலாக, வையத்தார்க்கு உணர்த்திய பெருமை, நாவுக்கரசரையே சாரும். இதனாற்றான் சேக்கிழார் பெருமான்,

"திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறிவாழ வருஞானத் தவமுனிவர் வாகீசர்" என்று விதந்து போற்றுகின்றார்.

வாய்மை வாழ்வினையே, தமது வாழ்வியல் பேரறமாகக் கொண்டு ஒழுகியவர், நாவுக்கரசர். வாய்மையாக வாழ்பவர்க்கு அச்சவுணர்வு, அணுவளவும் இருக்காது. வாய்மையெனும் உயர்தனிப் பேரறத்தில், தம்வாழ்வை அமைத்துக்கொண்டவர்.

"நாவுக்கரசு" பெயர்க்கரணியம் பற்றி:–

"*சொல்லுக்கு உறுதி அப்பரெனச் சொல்*" என்னும் சொற்றொடருக்கு, ஏற்றவண்ணம் நாவுக்கரசர் பாடிய நற்றமிழ்ச் செய்யுட்கள் நின்றிலங்குகின்றன. நாவுக்கரசர்தம் சொற்களில் பொதிந்துள்ள வாழ்வியல் மெய்மை, செம்மை போன்றவற்றை விரிக்கின், பெருகும். இலக்கிய உலகில், திருநெறிய தமிழைக் கட்டிக்காத்த தமிழாளியாகத் திகழ்கிறார். தாண்டகப் பாக்களை, இலக்கியவுலகில் முதற்கண் எடுத்தாண்டார். காய்ச்சீர் இரண்டும், மாச்சீர் இரண்டும், கலந்தமைத்துப் பாடல்கள் பாடியபெருமை, இவருக்கு உண்டு. நாவுக்கரசு என்னும் அருட்பெயர், இலக்கியஉலகில், நயப்புற மன்னுதற்கு, எடுத்துக் காட்டாக, இவர் பாடிய மறுமாற்றத் திருத்தாண்டகம் திகழ்கிறது. அருளாளர்தம் குறைதீர்க்கும் தாண்டகமாகத் திகழ்ந்த இப் பாடல்களே, எண்சீர்மண்டலப் பாக்களுக்கு முன்னோடி எனலாம்.

(எ.கா.)

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம், நடலையில்லோம்,
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை,
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன் நற்சங்க வெண்குழையோர்காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளை ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடியினையே குறுகினோமே."

திருக்குறுந்தொகை: திருநேரிசை என்னும் யாப்புமுறையில் அமைந்த நாவுக்கரசர்தம் பாடல்கள் அனைத்தும் பண்ணோடு அமைந்த, பைந்தமிழ்ப் பாக்களாகத் திகழ்கின்றன.

"*தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்*" என்ற இவர்தம் இசைப்பாடல் எல்லோர் நெஞ்சிலும் நின்று நிலவும் நற்றமிழ்ப் பாடலாகும்.

நான்காம், ஐந்தாம், ஆறாந்திருமுறையில் அமைந்துள்ள அனைத்துப் பாக்களும், நாவுக்கரசரின் திருநின்ற செம்மை, மெய்மை போன்ற வாழ்வியல் கொள்கைகளை விளக்குவதோடு மட்டுமல்லாமல், இவர்தம் பெயர்க்கரணியத்தை நிலைநிறுத்தும் நற்சான்றாகவும் மிளிர்கின்றன.

நாவுக்கரசு என்னும் பெயர் விளக்கிக்காட்டும் வாழ்வியல் அடிப்படைக் கொள்கைகள் இரண்டு.

நாவுக்கரசு என்னும் பெயர்ச்சிறப்பினை, தமது வாழ்வியலின் வாயிலாகவே விளக்குகிறார், அப்பர்.

1. சிவன் எனச்சொல்லும் நாக்குடையவர், தம்மை ஆளும் அரசு எனக்கொண்டு, அடிமை பேணுதல்.

(எ.டு) "*செம்பவளத் திருமேனிச் சிவனே என்னும் நாவுடையார் நமையாள உடையார் அன்றே*" (மறுமாற்றத்திருத்தாண்டகம்–6ஆம் பாட்டு)

2. சிவத்தின் பெருமையே, பேசுமாறு தம்முடைய நாக்கை முதற்கண் செயற்படுத்துதல். பின்னர், அந் நாக்கையும் தமக்கு "*அரசு*" எனக்கருதி, அதற்குப் பணி செய்தல். இவ் வருள் நிகழ்வில் "*நாநமக்கு அரசு*" என்ற பொருண்மை நெஞ்சகத்தே தோன்றும். இந் நிலையில், இறைவனது பொற்பினை அல்லது பொருள்சேர் புகழினை, நாவுக்கரசு நவில்வது வருமாறு:–

"*நிற்பனவும்........நடப்பனவும் ஆகின்ற தன்மையனை நன்மையோடும் பொற்புடைய பேசக் கடவோம்; பெயர் பேசுவன பேசுதுமோ பிழையற்றோமே*" (மறுமாற்றத்திருத்தாண்டகம்.7.).

நாவுக்கரசர்தம் திருஅங்கமாலைப் பதிகமானது நா நமக்கு அரசு என்ற அடிப்படையில், நாக்கினால் அவன் பொற்பினைப் பேசுதலும், அவ்வாறு பேசுவோர்க்கு அடிமைத்திறம் பூணுதலுமாகிய இருவகைத் செயற்பாடுகளை, விளக்கும் பதிகமாக அமைந்துள்ளது.

உயிரினுள் சிவம் நின்ற நிலையும், உடம்பினுள் சிவம் நின்ற நிலையும் விளக்கிக்காட்டும், திருவருள் நலஞ்செறிந்த பாக்கள், நாவுக்கரசுதம் நற்றமிழ் பாக்கள் எனில் மிகையன்று.

அப்பருடைய வாழ்வியல் நிகழ்வுகள் அனைத்திலும், நாநலம் நன்கு மிளிரும் வண்ணம் நாவுக்கரசு என்னும் பெயர் நயப்புற மன்னும் வண்ணம், திருநெறியத் தேவாரத் திருப்பாக்கள் திகழ்கின்றன எனலாம்.

நாடாளும் மன்னனுக்கும், உயிரைவவ்வும் நமனுக்கும் அஞ்சார்.

இப் பொருண்மை பொதிந்த நாவுக்கரசர்தம் வாழ்வியலில் இணைந்த தேவாரத் திருப்பதிகவரி வருமாறு:–

"*நம்ஆர்க்கும் குடி அல்லோம் நமனை அஞ்சோம்*" இவ்வஞ்சாமைக்கெல்லாம் அடிப்படையாயிருப்பது, வாய்மையென்னும் வாழ்வியல் கொள்கையே, இக் கருத்தினை வள்ளுவப் பேராசான்.

"*உள்ளத்தால் பொய்யா தொழுகின்*" என்றும், "*மனத்தொடு வாய்மை மொழியின்*" என்றும், '*சான்றோர்க்குப் பொய்யாவிளக்கே விளக்கு*' என்றும், முடிவாக முத்தாய்ப்பு வைத்தாற் போல், "*யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும் வாய்மையின் நல்லபிற*" (குறள்,300.). என்று மொழிந்தவற்றை நோக்குக; இவ்வாக்கினுக்கு மேலும் வலுவூட்டும் வண்ணம், வாய்மைப் பேறத்தை மனத்தகத்தில் பதிக்கும் பான்மையில் நாவுக்கரசர் நவில்வது:–

"*மெய்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்*

பொய்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்

தம்மையும் நோக்கிக் கண்டு தகவு எனும் வேலியிட்டுச்

செம்மையுள் நிற்பராயின் சிவகதி விளையுமன்றே" (தேவா.4:76:2)

இப் பாடலானது வாய்மை, செம்மை இவற்றின் அடிப்படையில் வாழ்ந்த அப்பர் பெருமானின் அருளியல் வாழ்வினை, ஞாலத்தார்க்கு நெஞ்சில் நிலைநிறுத்தும் பான்மையில் அமைந்துள்ளது என்று தெளியலாம்.

அன்பர் பணி செய்வதற்கே தம்மை இறைவன் படைத்தான் என்பது நாவுக்கரசர் தம் வாழ்வியற்கொள்கை. தோன்றாத் துணையாய் அங்கிங்கெனாதபடி எஞ்ஞான்றும், நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளை, நானிலத்தார் அனைவரும் தத்தம் நெஞ்சிற் கண்டு களிக்க வேண்டும் என்பதே நாவுக்கரசர்தம் எண்ணமாகும். மனம் செம்மையாகத் திகழ்ந்தால், உண்மையாம் பரம்பொருள் ஒளிரும் என்பது, திருநாவுக்கரசர் தம்திருவாக்கு. (எ.கா.) "*பனைக்கை மும்மத வேழம்உரித்தவன் நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்*".

ஆகையால் அனைவருக்கும் எல்லாம்வல்ல இறைவனை தத்தம் நெஞ்சில் நிலைபெறச் செய்தால் தீதொன்றும் நம்மைத் தீண்டாது. மாண்பு பலபெற்று நல்லவண்ணம் வாழலாம். ஞாலத்தார் ஆற்றவேண்டிய அரும்பணி மாதொரு பாகனை மனத்திலிறுத்துவதே. ஒன்றியிருந்து நினைப்பதேயாகும். "*ஒன்றியிருந்து நினை மின்கள் உந்தமக்கு ஊன மில்லை*" என்னும் திருப்பாட்டில், இக்கருத்தினை நிலைநிறுத்து கின்றார்.

நாவுக்கரசர் மன்பதைவாழ் மாந்தர்தம் மனத்தில் மலரும், அனைத்து உறவுகளிலும், பரம்பொருளைப், பார்த்தார், இந் நற்கருத்தினைத் தெரிவிக்கும், நாவுக்கரசர்தம் பாடல்:—

"அப்பன்நீ! அம்மைநீ! ஐயனும்நீ, அன்புடைய
மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஒரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சத்துஉறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்து
இறைவன் நீ ஏனூர்ந்த செல்வன் நீயே!"

குமுதாயத்தின் அனைத்துக் கூறுகளிலும், அம்மையப்பனைக் கண்டு களிக்கின்றார்.

வீணாகச் சாத்திரமும், குலமும் கோத்திரமும் பேசி, உள்ளத்தில் உறைகின்ற உத்தமனை உணராது ஆடம்பரமாக ஆற்றும் ஆரவாரச் செயல்கள் எல்லாம், பாழ்பட்டவையென்று பறைசாற்றுகின்றார்.

"*சாத்திரம் பலபேசுஞ் சழக்கர்காள் கோத்திரமும் குலமுங் கொண்டு என்செய்வீர் பாத்திரம்சிவமென்று பணிதிரேல்*

மாத்திரைக்குள் அருளுமாற்பேறரே."

"*அச்சமில்லை நெஞ்சே அரன் நாமங்கள் நிச்சலும் நினையாய் வினை போயற*"

நாவுக்கரசர்தம் தேவாரத்திருப்பதிகங்கள் அனைத்தும், அனைத்து மாந்தர்தம் பிறப்புரிமையை இனிது எடுத்தியம்பும் செம்பதிகங்களாகும்.

நல்லாற்றல் நல்கி, இறைவன் மூச்சுக்காற்றாய் நம்முள் வந்து, நலம்பல தந்து, நம்மை வாழவைக்கும் வாழ்வியலுண்மையை, "*என்னில் ஆரும் எனக் கினி யார் இல்லை*

என்னிலும் இனி யானொருவன் உளன்

என்னுளே, உயிர்ப்பாய்ப் புறம் போந்துபுக்கு

என்னுள்ளே நிற்கும் இன்னம்பர் ஈசனே" (தேவ.5:1.). என்று குறித்துள்ளார். இக் கருத்து அனைத்துச் சமயத்தார்க்கும், பொதுவான வாழ்வியல் கருத்தாகும். நாவுக்கரசரின் தேவாரத்திருப்பதிங்களை நுணுகி நோக்குவார்க்கு, இக் குமுகாயத்தில், மானுடச்சட்டை தாங்கிவந்ததன் மாண்பு நன்கு புலப்படும் "*நாமார்க்கும் குடியல்லோம்*" என்றும்,

"*நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்*",

"*அஞ்சுவது யாதொன்று மில்லை, அஞ்சவருவதுமில்லை*",

"*அஞ்சேல் நெஞ்சே*".

"*புந்தி வட்டத்திடைப் புக்கு நின்றானையும் பொய்யென்பனோ*"

"*ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே, உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே*",

"*கங்கைவார்சடைக் கரந்தார்க்கு அன்பராகில், அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுள்*",

"*குலமிலர் ஆகிலும் குலத்திற்கு ஏற்பதோர் நலமிகக்கொடுப்பது நமச்சிவாயவே*",

"*தேடிக்கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்*", முதலான உறுதிமொழிகள் ஒளிர்வதைக் காணலாம்.

பற்றற்ற தொண்டே, பார்போற்றுந் தொண்டாகும் அன்பர்பணி செய்யும் அருள் வாழ்வே உலகோர் போற்றும் உயர்வாழ்வாகும். இவ் வாழ்விய லுண்மையைத் தாயுமானவர், "*அன்பர் பணிசெய்ய எனைஆளாக்கி விட்டுவிட்டால், இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே*" என்று விளக்குவதால், அறியலாம்.

புறந்தோல் போர்த்து எங்கும் புழுவழுக்கு மூடியுள்ள புலால்துருத்தியான, இவ் வுடம்பினைப் பூந்துருத்தியாக மாற்றி, இறைவனை எப்போதும் உடம்பில் நிலைபெறச் செய்யவேண்டும் என்பதே, நாவுக்கரசரின் வாழ்வியல் குறிக்கோளாகும்.

"*ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெல்லாம் நான் நிலாவியிருப்பன்*" என்று, இறைவனும் தானும் எப்பொழுதும் இணைந்திருக்கும் எழில் நிலையினைக் கூறும் பாங்கு, எல்லோரும் எளிதல் அறியும்வண்ணம் அமைந்துள்ளது.

எண்ணிலும், எழுத்திலும், சொல்லிலும், பொருளிலும், இறைவனைக் காணல்:–

ஒலியிலும், தன்மையாலும், ஒருபொருளைக் கேட்டும், துய்த்தும் அறிதல் போலவே, இறைவனை எண்ணாலும், எழுத்தாலும் அறியும், வாழ்வியல் நெறிமுறைகளை, அனைவரும் அறிந்து கொள்ளும் பான்மையில், அப்பரடிகள் விளக்கியுள்ளார்.

(எ.டு.) "*எண்ணவன் காண் எழுத்தவன் காண்*" (திருவலிவலம்; திருத்தாண்டகம்–7.).

"*எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்தும் ஆகி*" (நின்ற திருத்தாண்டகம்.2.).

"*எண்ணதனில் எழுத்தை*" (திருக்கற்குடித் திருத்தாண்டகம்–3.).

"*எண்ணாகி எழுத்தாகி இயல்புமாகி*" (திரப்பாசூர்த் திருத்தாண்டகம்–1).

"*எண்ணும் எழுத்தும் சொல்லானாய் போற்றி*" (வேற்றாகி மண்ணாகி என்ற கயிலைப் பதிகம்–7).

வள்ளுவர் வாக்கும் ஈங்கு எண்ணுதற் குரியதாகும்:–

"*எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு*" (குறள்,392.).

எண்ணாகவும், எழுத்தாகவும் இறைவனைக் கண்ட நாவரசர், சொல்லாகவும் சொல்லின் பொருளாகவும், நம்முள் கலந்து, நமக்கு நன்மை புரிதற்பொருட்டே காத்துநிற்கின்றான். இறைவன் நின்றுநிலவும் இடம், மாந்தர்தம் உள்ளமே யாகும். நம்மை விட்டால் இறைவனைப் போற்றுவார் புகழ்பாடுவார் யாருமில்லை; "*ஒன்று*" என்ற எண்ணின் பொருண்மையினை, ஒன்றுதல் என்னும் வினைச்சொல்லாக நோக்கினால், இறைவனின் எளிவந்ததிறம். இனிது புலப்படும். தனிப்பெரும் பேரருளாளனாக மிளிரும் இறைவனை, ஒன்றியிருந்து நினைத்தால், அடியவரைத் தாங்கும் பொருட்டு, ஆதனுடன் (ஆன்மா) ஒன்றியிருந்து பணிசெய்யுந் தலைவனை, அனைவரும் எளிதல் உணரலாம். அதனாற்றான் அப்பரடிகள் தாம் சொல்லும் சொல்லிலும், எண்ணும் பொருளிலும் நீக்கமற நிறைந்துள்ள, இறைவனின் தன்மையினைத் தமது திருப்பதிகங்கள் மூலம் தெளிவுறுத்துகின்றார்:–

"*சொல்லொடு பொருளனைத்தும் ஆயினான்*" (திருக்கழுக்குன்றத் திருத்தாண்டகம்–2). "*சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளுமாகி*" (நின்ற திருத்தாண்டகம்–3). "*சொல்லாதன எல்லாஞ்சொல்லி தொடர்ந்து இங்கு அடியேனை ஆளாய்க் கொண்டு*" (பூந்துருத்தி–திருத்தாண்டகம்–1).

"*வாராதசெல்வமும் வருவிப்பான் தீராத நோயுந் தீர்ப்பான்*":–

ஆராஅன்புப் பெருக்குடன் நாள்தொறும், நாம் இறைவனைத் தொழுதால், தீராதநோய் ஏதுமில்லை என்பது, நாவுக்கரசர்தம் நற்கொள்கை. எஞ்ஞான்றும் அவனை உள்ளத்திலிறுத்தும், பிரிவில்லாத அடியார்களுக்கு, வராத செல்வம் ஏதுமில்லை. அனைத்து வளங்களையும், நலங்களையும் வாரிவழங்கும் வள்ளல், எல்லா மாந்தரும், ஒன்றியிருந்து அவனை நினைத்தால், என்றும் இன்பம்தழைக்க இருக்கலாம். "*நமக்கு மந்திரமும் அவனே, தந்திரமும் அவனே, தீராதநோய்தீர்த்து நல்லாற்றுப்படுத்தி நம்மை நலப்படுத்தும் மருத்துவனும் அவனே*" என்னும் பொருண்மையில் அமைந்துள்ள, திருத்தாண்டகம் வருமாறு:–

"*பேராயிரம்பரவி வானோரேத்தும் பெம்மானைப் பிரிவிலா அடியார்க்கு என்றும் வாராத செல்வம் வருவிப்பானை*

மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராதநோய் தீர்த்தருள வல்லான் தன்னை" (தேவா.6:7.)

நிறைவாக அப்பரடிகளின் திருத்தொண்டு உழவாரப்படையின் உயர்தொண்டாக, மிளிர்ந்தது. உள்ளம் என்னும் வயல்வெளியில், மெய்மையாம் உழவினைச் செய்தார். பொய்மைக் களையை அகற்றினார். விருப்பு என்னும் விதையினை நட்டார். "*தகவு*" எனும் வேலியினை அமைத்தார். முடிவில் செம்மையாஞ் சிவப்பயிரினை அறுவடை செய்து.

அகற்றினார். விருப்பு என்னும் விதையினை நட்டார். "*தகவு*" எனும் வேலியினை அமைத்தார். முடிவில் செம்மையாஞ் சிவப்பயிரினை அறுவடை செய்து, நானிலத்தில் தொண்டுநெறி நிலைக்கச் செய்த பெருமை, நாவுக்கரசரையே சாரும்.

"*தொண்டர்க்கு ஆணி*" என்று சிறப்பிக்கப்பட்ட பெருமை அப்பருக்கே, உரியது.

"தொண்டலால் துணையுமில்லை," என்ற திருப்பதிகத் தொடருக்கு இலக்கியம் படைத்தவர் நாவுக்கரசர்.

இவர்தம் பாடல்களில், தொண்டு, தொண்டர் எனுஞ் சொற்கள் ஆளப்பெற்றுள்ள பாங்கு, வருமாறு:–

"*தொண்டராகித் தொழுது பணிமினோ*" (5 திருமுறை7–ஆம் பாடல்).

"*தொண்டர்கள் தம்தகவி னுள்ளார் போலும்*" (6–ஆம் திருமுறை, 3–ஆம் பாடல்).

"*தொண்டர்கள் தொழவும் வைத்தார்*" (4ம் திருமுறை, 4–ஆம் பாடல்).

"*தொண்டர்குழாம் தொழுதேத்த அருள் செய்வானை*" (6ஆம் திருமுறை, 3–ஆம் பாடல்).

"*தொண்டர்க்குத் தூநெறியாய் நின்றான் தன்னை*" (6–ஆம் திருமுறை, 1–ஆம் பாடல்).

"*தொண்டர் தொழுதேத்துஞ் சோதி யேற்றார்*" (6–ஆம் திருமுறை, 5–ஆம் பாடல்).

"*தொண்டலால் துணையுமில்லை*" (6–ஆம் திருமுறை, திருவையாறு).

"*தொண்டனேன் பிறந்து வாளா தொல்வினைக் குழியில் வீழ்ந்து*" (4–ஆம் திருமுறை, 2.).

"*தொண்டனேன் பட்ட தென்னே தூயகா விரியின் நன்னீர்*" "*தொண்டராய்ப் பணிவார்க் கணியார் தாமே*" (6–ஆம் திருமுறை, 6.).

"*தொண்டிலங்கும் அடியவர்க்கோர் நெறியினாரும்*", "*தொண்டுபடு தொண்டர்துயர் தீர்ப்பான்காண்*" (திருக்கச்சியேகம்பப்பதிகம் 88).

"*தொண்டுபாடியுந் தூமலர் தூவியும்*" (5–ஆம் திருமுறை 10.).

உழவாரத்திருத்தொண்டு:–

நாவுக்கரசரின் உழவாரத் திருத்தொண்டு குமுகாய வளர்ச்சியில் அவர் பூண்ட அன்பின் வெளிப்பாடாகும். அன்பு பெருகப் பெருக அமையுந் தொண்டே உழவாரம். நமது உள்ளத்தைத் தூய்மைசெய்ய, தமிழாளியாயிருந்து, திருப்பதிகத் தமிழ்நெறி வளர்த்தது போல், இறைவன் உறையும் திருக்கோயில்களையும், உழவாரப்படை கொண்டு தூய்மைசெய்தார். செம்பொன்னையும் ஓடாக மதித்தார். இந் நிகழ்வினைப் பற்றிச் சேக்கிழார் கூறுவது வருமாறு:–

"*கேடும் ஆக்கமும் கெட்டதிருவினார்*

ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்

கூடும் அன்பினில் கும்பிடுதலேயின்றி

வீடும்வேண்டா விறலின் விளங்கினார்"

உழவாரக் குமுதாயத்தை முதன்முதல் உருவாக்கியவர் அப்பரே. ஏற்றத்தாழ்வற்ற திருநாட்டின் முதல் அடித்தொண்டராக, நாவுக்கரசர் மிளிர்வதை அவர்தம் நற்றமிழ் பாக்கள், உறுதி செய்கின்றன.

நாவுக்கிதம் *nāvu-k-kidam,* பெ. (n.) நாவுக்கு இனிமை; நாவிற்குச்சுவையாயிருக்கை; sweet and tasteful to the tongue. "*நாவுக்கிதமான தெல்லாம் உடல்நலத்திற்கு உகந்தல்ல*" (இ.வ.).

[நாவுக்கு + skt. இதம்.]

நாவுப்புளித்தல் *nāvu-p-puḷittal,* பெ. (n.) நாக்கில் புளிப்புச்சுவை உண்டாதல்; sourness of tongue due to billousness.

[நாவு + புளித்தல்.]

நாவுப்புற்று *nāvu-p-puṟṟu,* பெ. (n.) நாக்கிலுண்டாகும் புற்றுநோய்; cancer of the tongue.

[நா → நாவு + புற்று.]

நாவுரி[1] *nāvuri,* பெ. (n.) $1^{1/2}$ நாழிகொண்ட அளவை; a standard measure= $1^{1/2}$ nāḻi.

[நாழி + உரி → நாடுரி → நாவுரி.]

நாவுரி² *nāvuri,* பெ. (n.) கால்நடைகளின் அண்ணத்து வீக்கம் (இ.வ.); swollen condition of the hard palate in the cattle.

[நா → நாவு → உரி.]

நாவுரி³ *nāvuri,* பெ. (n.) *நாயுருவி* **(நாஞ்.)** பார்க்க; see *nāyuruvi.*

[நாயுரி → நாவுரி.]

நாவுலர்ச்சி *nā-v-ularcci.* பெ. (n.) *நாவறட்சி* பார்க்க; see *nā-varaṭci.*

[நா + உலர்ச்சி.]

நாவுழலை *nā-v-uḻalai,* பெ. (n.) **1.** விடாய் **(வின்.)**; thirst. **2.** நாக்குழறுகை; faltering of the tongue. **3.** *நாவூறு* பார்க்க; see *nāvūṟu.*

[நா + உழல் → உழலை.]

நாவுழற்று-தல் *nā-v-uḻaṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பொறாமைப்பட்டு பேசுதல் (நாஞ்.); to give expressions to one's jealousy.

[நா + உழல்(து.வி) → உழற்று-(பி.வி.).]

நாவூறு *nā-v-ūṟu,* பெ. (n.) **1.** நாவால் வருங்கேடு (வின்.); harm resulting from evil tongue. **2.** சவித்தலால் ஏற்படும் துன்பம்; affliction through curse. **(சா.அக.).**

[நா + ஊறு.]

நாவூறுபடு-த்தல் *nāvūṟu-paḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) நாவாற் சுடுதல்; to blight of the tongue

[நாவூறு + படு-.]

கொடிய சொற்களைக் கூறி, பிறர் மனத்தைப் புண்படுத்துதல்.

நாவெடிப்பு *nā-veḍippu.* பெ. (n.) நாக்கில் ஏற்படும் பிளவு; fissures of the tongue.

[நா + வெடிப்பு.]

நாவெலும்பு *nā-v-elumbu,* பெ. (n.) காலெலும்பு வகை **(இங்.வை.15)**; seaphoid bone. a carpal bone.

[நா + எலும்பு.]

(நாவாய்) நாவுதல் என்னும் தொழில் பற்றிக் காலைக் குறித்து வழங்கிற்று.

நாவெழாமை *nā-v-eḻāmai,* பெ. (n.) நாக்கிலேற்படும் பிடிப்பினால் பேச இயலாமை; a peculiar form of aphasia due to spasm of the muscles of the tongue

[நா + எழாமை.]

நாவேர்ப்பட்டை *nā-vēr-p-paṭṭai,* பெ. (n.) காட்டுமரத்தின் பட்டை; bark of a forest tree.

[நா + வேர்ப்பட்டை.]

நாவேறு *nā-v-ēṟu,* பெ. (n.) *நாவூறு* **(வின்.)** பார்க்க; see *nāvūṟu.*

[நாவூறு → நாவேறு.]

நாவேறுசெல்வி *nā-v-ēṟu-šelvi,* பெ. (n.) கலைமகள்; Kalaimagaḷ, the goddess of learning. "*நாவேறு செல்வியு நாரணனு நான்மறையும்*" (திருவாச.10:1.).

[நா + ஏறு + செல்வி .]

நாவை *nāvai,* பெ. (n.) 1. கலப்பை; the part of the plough that receives the share. 2. கொழுநுனி; lower end of the plough share.

[நாவு → நாவை.]

நாவொட்டிக்காய்ச்சல் *nā-v-oṭṭi-k-kāyccal,* பெ. (n.) நாவறட்சியை உண்டாக்கும் சுரவகை (சீவரட்.); continuous fever in which the tongue becomes dry.

[நா + ஒட்டி + காய்ச்சல்.]

நாழ்¹ *nāḻ,* பெ. (n.) 1. குற்றம்; fault 2. செருக்கு; pride. "*நாழா லமர்முயன்ற வல்லரக்கன்*" *(திவ்.இயற்.பெரிய திருவந். 11).* 3. இல்லாதது சொல்லுகை (ஈடு.4:6:9); fabrication, concoction. 4. திறமை; skill. "*நாழிவளோ வென்னும்*" (திவ்.இயற்.திருவிருத்.71).

[நலி → நாழ் .]

நாழ்² *nāḻ,* பெ. (n.) நாள்; day. "*நாழ்மலர்த் தெரியல்*" *(கம்பரா. இலங்கைகாண்.47).*

[நாள் → நாழ்.]

நாழ்மை *nāḻmai,* பெ. (n.) 1. ஆணவம், தன்முனைப்பு (திவ்.திருவாய்.4.6:9 பன்னீ.); vanity, self-conceit. 2. குற்றம் (ஈடு.4.6:9); fault.

[நான் → நாழ்¹ → நாழ்மை.]

நாழம் *nāḻam,* பெ. (n.) தவறான வழியில் பயன் படுத்துகை, ஏசுகை; abuse "*பலபல நாழஞ் சொல்லிப் பழித்த சிசுபாலன்*" (திவ். பெரியாழ்.4.3:5).

[நாழ் → நாழம்.]

நாழல் *nāḻal,* பெ. (n.) ஞாழல் பார்க்க; see *ñāḻal.* "*பைந்த ணாழல்கள் சூழ் புறவார் பனங்காட்டூர்*" (தேவா.1016 : 9).

[ஞாழல் → நாழல்.]

நாழி¹ *nāḻi* பெ. (n.) 1. உட்டுளைப்பொருள் (பிங்.); tubularity, tube. 2. ஒருபடி; a measure of capacity, one measure= 8 ollocks. "*நாழி நவைதீ ருலகெல்லாம்*" (கம்பரா. சரபங்க.29). 3. காற்படி; one fourth of a measure. "*உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்*" (நல்வழி,28). 4. நாழிகை (பிங்.); indian hour= 24 minutes. 5. நூனாழி; weaver's shuttle 6. அம்பறாத்தூணி; quiver. "*ஆர்ததும்பு மயிலம்பு நிறைநாழி*" (பரிபா.18,30). 7. நாழிவடிவான முற்கொழுங்கால் நாண்மீன்; (புரட்டாதி) (பிங்.); the 25th nakṣatra.

ம., க., நாழி.

[நாளம் → நாளி → நாழி.]

ஒருகா. நுள் → நள் → நாள் → நாளி → நாழி = உட்டுளைப் பொருள்,

மூங்கிற்படி, முகவைப்படி, நெசவுக்குழல், அம்பறாத்தூணி, கன்னல் (நாழிகைவட்டில்), நாழிகை போன்ற பொருண்மைகளை உள்ளடக்கிய சொல்.

நாழிக்கிணறு, நாழிச்செம்பு, நாழிமணி, நாழியோடு, நாழிவழி என்பன தொன்றுதொட்ட பெருவழக்குச் சொற்கள். (வ.வ.21).

நாழி² *nāḻi* பெ. (n.) 1. 16 பலம் கொண்ட நிறை; 16 palams weight or about 560 gms. 2. இரண்டுவரி கொண்ட அளவு; a measure consisting of two oories. (சா.அக.)

[நாள் → நாளி → நாழி.]

நாழி என்றால் ஒரு படி என்று பொருள் கூறப்பட்டுள்ளது. சென்னைப்பல்கலைக்கழக அகரமுதலியில், காலப்போக்கில் மக்களிடையே ஏற்பட்ட வழக்கிற்கு ஏற்றவாறு, 8 ஆழாக்கு கொண்ட அளவினை நாழி என்று குறித்துள்ளனர். இது பட்டணம்படி அல்லது பெரியபடி, என்றும் பெயர்பெறும்.

ஆனால் சாம்பசிவ மருத்துவ அகரமுதலி 5 ஆழாக்கு கொண்டஅளவினை நாழி என்று குறித்துள்ளது; சா.அக. கூறுவது வருமாறு:-

"இப்போது கூட வணிகர்கள் சிற்றூர்புறத்தில், பொருள்களை ஒரு தூக்கு என்கிற 50 பலம் எடைஅளவாக வாங்கி, 40 பலம் கொண்ட வீசையளவாக விற்று, நான்கில் ஒரு பங்கு ஊதியம் (இலாபம்) அடைவதைக் காணலாம் அதுபோலவே, முற்காலத்தில் ஐந்தாழாக்குக் கொண்ட படியளவாக வாங்கி, நான்கு ஆழாக்கு கொண்ட படியளவாக விற்று, நான்கில் ஒருபங்கு ஊதியம் (இலாபம்) அடைந்தனர். நான்கு ஆழாக்கு கொண்டபடி, சிறியபடி அல்லது பழைய படியாகும் ஐந்தாழாக்குக் கொண்ட படியைத்தான் நாழி என்றனர்", என்று குறித்துள்ளது.

இந்த அளவு, சாம்பசிவம்பிள்ளை அகரமுதலி தொகுத்த காலத்தே மக்களிடையே நிலவியது எனலாம். ஆனால் தற்பொழுது நாழி குறிக்கும் அளவு, மக்களிடையே வழக்கில் இல்லை என்பது, இங்கு குறிக்கத்தக்கது.

மேலும் சாம்பசிவம்பிள்ளை இதுபற்றிக் கூறுங்கால்:- *"உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்"* இந்த பழமொழியில் குறிப்பிட்டுள்ள "நாழி" ஐந்தாழாக்குக் கொண்ட படியேயாகும். ஒருவர், ஒரு நாளைக்கு உண்ண வேண்டியது நாழியில் பாதி அரிசியும், மற்றபாதி பருப்பு, கிழங்கு, இளங்கீரை, காய்கறி என நான்கும் ஆகும் என்று கூறியிருப்பது, கருதத்தக்கது.

நாழிக்கட்டை *nāḻi-k-kaṭṭai,* பெ. (n) ஏர்க்காலுக்கும், நுகத்தடிக்கும் இடையில் வைக்கும் கட்டை (இ.வ.); the joining piece between the thrill and the yoke.

[நாளி → நாழி + கட்டை.]



நாழிக்கிணறு *nāḻi-k-kiṇaṟu,* பெ. (n) 1. மகளிர் விளையாட்டிற்கு அமைக்கப்பட்ட கிணறு; well used for women's sport. 2. சிறுகிணறு; a kind of well with a very small mouth

[நாளி → நாழி + கிணறு.]

நாழிகை *nāḻigai,* பெ. (n.) 1. 24 நிமையம் கொண்ட நேரம்; indian hour = 24 minutes. *"உயிர்த்தில னொரு நாழிகை"* (கம்பரா. பிரமா.200). 2. இலவம் $38^{1/2}$ கொண்ட ஒரு காலஅளவு (மேருமந்.94,உரை); measure of time consisting of $38^{1/2}$ ilavam 3. *நாடா* பார்க்க; see *nāḍā.* *"நெய்யுநுண்ணு*

னாழிகையி னிரம்பாநின்று சுழல்வாரே" (சீவக.3019). 4. பிற்கொழுங்கல் (உத்திரட்டாதி) (சது.); the 26th nāṉmīṉ (naksatra.). 5. தெய்வப்படிமை இருக்கும் சிற்றறை அல்லது திருவுண்ணாழிகை; face of an idol or inner-most sanctuary of a temple. "*உண்ணாழிகையா ருமையாளோடு*" (தேவா.592:3).

த. நாழிகை → skt. *nāḍigā.*

க., நாளிகெ, நாளிகே (g.), ம., நாழிக.
த. → நாழிகை → வ. நாடிகா.

[நாள்> நாழி → நாழிகை (வ.வ.21).]

24 நிலையம் = 1 நாழிகை. கணியத்தில் 60 நிமையம் = 1 நாழிகை ஆகும்.

நாழிகைக்கணக்கன் *nāḻigai-k-kaṇakkaṉ,* பெ. (n.) 1. நாழிகைவட்டிலிடுவோன்; one who calculates the time of the day from the hour- glass. 2. நாழிகையை அரசற்குப் பாடலின் மூலம் அறிவிப்போன் (சிலப்.5:46,உரை); the poet who announces to the king, the time of the day in verse.

[நாள் → நாழிகை + கணக்கன்.]

நாழிகைக்கல் *nāḻigai-k-kal,* பெ. (n.) தொலைவைக் குறித்திருக்கும் கல் (நாஞ்.); mile stone.

[நாழிகை + கல்.]

நாழிகைக்கவி *nāḻigai-k-kavi,* பெ. (n.) அரசருங் கடவுளரும் நாழிகை தோறுஞ் செய்யும் செயல்களை, 30 நேரிசை வெண் பாவிற்பாடும், சிற்றிலக்கிய வகை (பன்னிருபா. 290,291); a poem describing the hourly programme of gods and kings, generally in 30 nērisai-veṇbā.

[நாழிகை + skt. கவி.]

ஒரு நாளுக்கு 60 நாழிகையாதலின், தனிச்சொல் பெற்ற 30 நேரிசை வெண்பாக்கள், 60 குறட்பாக்களாகக் கருதப்படுதலின். இவ்வாறு அமைந்தது.

நாழிகைக்குள்காயசித்தி *nāḻigai-k-kuḷ-kāyaśitti,* பெ. (n) கருநெல்லி; a black variety of Indian goose berry

[நாழிகைக்குள் + skt. காயசித்தி.]

நாழிகைத்தூம்பு *nāḻigai-t-tūmbu,* பெ. (n) "*நீர்வீசுங் கருவிவகை*" (பெருங். உஞ்சைக். 38,106); a water-squirt

[நாளி → நாழிகை + தூம்பு.]

நாழிகைப்பறை *nāḻigai-p-paṟai,* பெ. (n.) ஒருவகைத் தோற்கருவி (சிலப்.3:279,உரை); a kind of hour-drum.

[நாழிகை + பறை.]

நாழிகைவட்டம் *nāḻigai-vaṭṭam,* பெ. (n.) 1. சூரிய கடிகாரம்; sun-dial. 2. கடிகாரம்; watch, clock. 3. கால்வாயிலிருந்து தண்ணீர் பகிர்ந்து கொள்ளுமுறை (இ.வ.); method of the distribution of water from a canal.

[நாழிகை + வட்டம்.]

நாழிகைவட்டில் *nāḻigai-vaṭṭil,* பெ. (n.) நாழிகையை அறிவிக்குங் கருவி; clepsydra, ancient clock worked by flow of water, hour-glass. "*நாழிகை வட்டி லிடுவாரும் எஃப*" (சிலப்.5:49,உரை).

[நாழிகை + வட்டில்.]

நாழிகைவழி *nāḻigai-vaḻi* பெ. (n.) *நாழிவழி* பார்க்க; see *nāḻi-vaḻi.*

[நாழிகை + வழி.]

நாழிகைவெண்பா *nāḻigai-veṇbā* பெ. (n.) *நாழிகைக்கவி (இலக்.வி.850)* பார்க்க; see *nāḻigai-k-kavi.*

[நாழிகை + வெண்பா.]

நாழிச்செம்பு *nāḻi-c-cembu,* பெ. (n.) செம்பு வகை (நாஞ்.); a kind of vessel.

[நாளி → நாழி + செம்பு.]

நாழிப்பூட்டு *nāḻi-p-pūṭṭu,* பெ. (n.) ஒருவகைப் பூட்டு; a kind of lock.

[தாழி → நாழி + பூட்டு.]

நாழியுரி *nāḻi-y-uri,* பெ. (n.) ஒன்றரைப்படி; a measured one and a half

[நாழி + உரி.]

நாழியோடு *nāḻi-y-ōḍu,* பெ. (n.) **1.** ஒருவகை ஓடு (இ.வ.); a kind of tile. **2.** வீட்டு முகட்டில் நீர்விழ வைக்கும் ஓடு (வின்.); water - spout for draining off water from the roof of a house.

[நாழி + ஓடு= உள்துளையுள்ள ஓடு.]

நாழில் *nāḻil,* பெ. (n) கொடிக்காந்தள்; moss creeper.

நாழிவழி *nāḻi-vaḻi,* பெ. (n.) ஒரு நாழிகைப் போதில் நடக்கக்கூடிய தொலைவு; distance travelled in one nāḻigai.

[நாழி + வழி.]

நாள்[1] *nāḷ* பெ. (n.) **1.** ஒரு பகலும் இரவும் சேர்ந்த 24 மணி நேரக் காலப் பிரிவு; day of 24 hours. "*சாதலொருநா ளொரு பொழுதைத் துன்பம்*" (நாலடி,295). "*நாளென ஒன்று போல் காட்டி*" (குறள்.). **2.** காலம்; time "*பண்டை நாள்*"(கம்பரா.நட்பு,43). **3.** வாணாள்; life-time, life "*நாளோடு வாள் கொடுத்த நம்பன் றன்னை*" (தேவா.219:10). **4.** நல்லநாள்; auspicious day. "*நாட்கேட்டுக் கல்யாணஞ்செய்து*" (நாலடி,86). **5.** காலை; early dawn "*நாண்மோர் மாறும்*" (பெரும்பாண்.160). **6.** முற்பகல்; forenoon. "*நாணிழற்போல விளியுஞ் சிறியவர் கேண்மை*" (நாலடி,166). **7.** விண்மீன்; lunar austerism "*திங்களு நாளு முந்து கிளந் தன்ன*" (தொல்.எழுத்.286). **8.** நிலவு நிலை (வின்.); lunar day, period of the moon's passage through an asterism **9.** புதுமை; freshness, newness "*கோதையை நாணீராட்டி*" (சிலப்.16:8). **10.** இளமை; youth juvenility, tenderness "*நெளவி நாண்மறி*" (குறுந்.282). **11.** அன்றலர்ந்த பூ; new-blown flower. "*பொன் குறையு நாள் வேங்கை நீழலுள்*" (திணைமாலை.31).

தெ., நாடு **ம.,** நாள்.

[நள் → நாள்.]

ஒருகா. ஞால் → ஞாள் → நாள்.

யா → யாஅலே → யால் → ஞால் → ஞாள் → நாள்.

இச் சொல் "யா" எனும் கருமைக் கருத்தினின்று முகிழ்த்தது என்பார் ப. அருளி. யா → யாமம் = நள்ளிரவு, நடுவிருள் நாள் என்பது

முழு இரவுப் பொழுதையே, முதற்கண் குறித்தது. "பானாள் கங்குல்" "பானாள் இரவு" "நடுநாள் யாமம்" முதலான கழகஇலக்கியச் சொல்லாட்சிகள், இதனை வலியுறுத்தும்.

"நாள்" என்பது தொடக்கத்தில் இரவுநேரத்தை மட்டுமே குறித்தது. மாலை 6.00 முதல், விடியல் 6.00 மணிவரையுள்ள காலமே நாள், எனப்பட்டது. "அரைநாள்" என்னும் சொல்லாட்சி, நள்ளிரவுப் பொருளில், அகநானூற்றில் மட்டும் ஏழு இடங்களில் ஆளப்பட்டுள்ளது (எ.டு.) அகம்:112–7; 138:15–9; 198:4–11; 260:11–13; 294:11–16; 298:10–14; 311:1–5.

நாள் என்னும் சொல், பகற்பொழுதைக் குறிக்கும் பாங்கு வருமாறு:–நெடுநல்:72–758; குறுந்: 280:3–5.

நாள்² *nāḷ,* பெ. (n.) 1. முழுஇரவு நேரம்; full-night. "பானாள் கங்குல்" (குறுந்.301:4.). 2. நள்ளிரவு; mid-night. *"பானாள் இரவின் வந்தெம் இடைமுலை பொருந்தி"* (அகம்,328:4.). *"உருகெழு நடுநாள்"* (அகம்.22:11.).

நாள்³ *nāḷ,* பெ. (n.) வெண்பாவின் ஈற்றடியிறுதியில் வரும் ஓரசைச்சீர் வாய்ப்பாடு; a symbolic expression of the last metrical foot of one syllable, in veṇbā-verse.

[நள் → நாள்.]

வெண்பாவின் ஈற்றடியின் இறுதிச் சீர், நாள், மலர், காசு, பிறப்பு என்னும் நான்கினுள் ஒன்று பெற்று வரும்.

நாள்காட்டி *nāḷ-kāṭṭi,* பெ. (n.) குறிப்பிடும் ஆண்டுக்குரிய நாள், கிழமை,மாதம் முதலியவற்றைக் காட்டும் வண்ணம் அச்சடிக்கப்பட்ட தாள் அல்லது, தாள்கள் கொண்ட தொகுதி; Calendar. தற்பொழுது வரும் நாள்காட்டியில் கணியம், பொன்மொழி, மருத்துவக் குறிப்புகள் மிகுதி.

[நாள் + காட்டி.]

நாள்குறிப்பு *nāḷ-kuṟippu,* பெ. (n.) ஒருவர் தன்னுடைய அன்றாட நிகழ்வுகளைக் குறித்து வைத்துக் கொள்ளப் பயன்படுவதும், நாள், கிழமை, மாதம் முதலியவை, அச்சடிக்கப்பட்ட பக்கங்களை உடையதுமான ஏடு; diary "ஆனந்தரங்கம் பிள்ளையின் நாள்குறிப்பு, பிரெஞ்சுக்காரரின் புதுச்சேரி ஆட்சியை அறிய உதவுகிறது". (இ.வ.).

[நாள் + குறிப்பு.]

நாள்கேள்–தல்(நாள்கேட்டல்) *nāḷ-kēḷ-.* 11 செ.குன்றாவி. (v.t.) நன்னாள் குறிக்கும்படி கேட்டல்; to consult an astrologer or priest for fixing an auspicious day

[நாள் + கேள் –.]

நாள்தள்ளு–தல் *nāḷ-taḷḷu-,* 5 செ.கு.வி. (v.i.) காலங்கழித்தல்; to manage to pass one's days வாங்கிய பணத்தைத் திருப்பித் தராமல் நாள் தள்ளுவது நல்ல பழக்கமில்லை. (இ.வ.).

[நாள் + தள்ளு–.]

நாள்பட்ட *nāḷ-paṭṭa-,* பெ.எ. (adj.) 1. பல நாட்களாக இருந்து வரும்; நாட்பட்ட நட்பு எப்போதும் வளரும் (இ.வ.) of a pretty long-time. நாள்பட்ட இருமல் ஈளைநோயின் அறிகுறியாகும். 2. பல நாட்கள் கழிந்த; chronic, old. நாள்பட்ட கள், தேள்கொட்டியது போல் புளிக்கும். (இ.வ.).

[நாள் + பட்ட.]

நாள்பட்டநோய் *nāḷ-paṭṭa-nōy,* பெ. (n.) மருந்தினால் குணமாகாத நோய்; an incurable disease, chronic disease.

[நாள்பட்ட + நோய்.]

நாள்பட்டமேகம் *nāḷ-paṭṭa-mēgam,* பெ. (n.) வெள்ளையொழுக்கு; leucorrhoea.

[நாள்பட்ட + மேகம்.]

நாள்படாநோய் *nāḷ-paḍā-nōy,* பெ. (n.) **1.** விரைவில் தீரும் நோய்; a disease curable in a short-time. **2.** குணப்படும் நோய்; curable disease as opposed to tīrā-nōy.

[நாள்படா + நோய்.]

நாள்பழக்கம் *nāḷ-paḻakkam,* பெ. (n.) ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளும் பழக்கம்; daily routine.

நாள்பார்க்கிறவன் *nāḷ-pārkkiṟavaṉ,* பெ. (n.), கணியன்; astrologer. **2.** மனவுறுதி யற்றவன் (இ.வ.); fickle - minded person.

[நாள் + பார்க்கிறவன்.]

(கேலக்சி முதல் அடுக்கில் 5 ஆயிரம் விண்மீன்களும், 55 கோள்களும், உள்ளனவாக வானியல் வல்லார் தெரிவித்துள்ளனர். 27 விண்மீன்களையும், 9 கோள்களையும் வைத்துக் கணக்கிட்டு, நாள்பார்ப்பவர்.

நாள்போக்கு-தல் *nāḷ-pōkku-,* 5செ.குன்றாவி. (v.t.) வீணே, பொழுது போக்குதல் அல்லது யாதொரு பயனுமின்றிக் காலத்தைக் கழித்தல்; to spend time vainly. "*போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே*" (நாவுக்கரசர் தேவாரம்.).

[நாள் + போக்கு-.]

நாள்மஞ்சள்வாங்கு-தல் *nāḷ-mañjaḷ vāṅgu-,* 5செ.கு.வி. (v.i.) திருமண உறுதியின் (நிச்சயத்தின்) அறிகுறியாக, பேசிமுடித்த நல்ல நாளில், பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும் மஞ்சள் கைம்மாற்றுதல். (இ.வ); to exchange turmeric on an auspicious day as a token of the final settlement of a marriage.

[நாள் + மஞ்சள் + வாங்கு-.]

நாள்வட்டம் *nāḷ-vaṭṭam,* பெ. (n.), நாள்சுற்று; cycle of one day

[நாள் + வட்டம்.]

நாள்வழி *nāḷ-vaḻi,* பெ. (n), *நாள்வழிக் கணக்கு* பார்க்க; see *nāḷ-vaḻi-k-kaṇakku.*

[நாள் + வழி.]

நாள்வழிக்கணக்கு *nāḷ-vaḻi-k-kaṇakku.* பெ. (n.), நாட்கணக்கு; day - book.

[நாள்வழி + கணக்கு.]

நாள்விடு-தல் *nāḷ-viḍu-* 20 செ.கு.வி. (v.i.). வாழ்க்கை நடத்துதல் (யாழ்.அக.); to spend one's life time.

[நாள் + விடு-.]

நாள்வித்துப்பிடி-த்தல் *nāḷ-vittu-p-piḍi-,* 4 செ.கு.வி. (v.i). நல்லநாளில் வயலில் விதை விதைத்தல்; (நாஞ்.); to sow on an auspicious day.

மறுவ. நாள்விதை போடல்.

[நாள் + வித்து + பிடி-.]

நாள்வெயிற்காலம் *nāḷ-veyiṟ-kālam,* பெ. (n.), புலர்காலைப் பொழுது (இ.வ.) (சூரியோதய காலம்); sunrise.

[நாள்+ வெயில் + காலம்.]

நாள்வேலை *nāḷ-vēlai,* பெ. (n.), 1. அன்றன்று செய்யும் வேலை (யாழ்.அக.); daily work 2. மணமகன் திருமணத்தன்று செய்து கொள்ளும் முகமழிக்கும் நிகழ்வு (சவரச் சடங்கு); (நெல்லை); the ceremonial shaving of a bridegroom on the day of marriage.

[நாள் + வேலை.]

நாள்வை—த்தல் *nāḷ-vai-,* 4 செ.கு.வி. (vi), மணநாள் உறுதி செய்தல்; to fix an auspicious day, as for a marriage.

[நாள் + வை—.]

நாளக்கபாடம் *nāḷa-k-kabāḍam,* பெ. (n.), நாளக்குழலின் பூட்டு: valve of the vein.

[நாளம் + கவாடம் → கபாடம்.]

நாளகம் *nāḷagam,* பெ. (n.), *நாளிகம்*[1] பார்க்க; see *nāḷigam*[1]

நாளகி *nāḷagi,* பெ. (n.) சூழ்ந்துமரம்; torch tree.

நாளங்காடி *nāḷ-angāḍi-,* பெ. (n.), பகற்கடை; day-bazar, opp. to al-l-aṅkāḍi. "*நாளங்காடி யில் நடுக்கின்றி நிலைஇய*" (சிலப். 5, 62).

[நாள் + அங் + காடி.]

பண்டைத் தமிழக மாநகர்களில், சிறப்பாக வேந்தர் தலைநகர்களில், நாள்தோறும், பகலிலும், மாலையிலும், பல பண்டங்களும் விற்கும் அங்காடிச் சந்தைகள் நடைபெற்று வந்திருக்கின்றன. பகற்சந்தை '*நாளங்காடி*' யென்றும், மாலைச்சந்தை '*அல்லங்காடி*' யென்னும் பெயர் பெற்றிருக்கின்றன. "*நடுக்கின்றி நிலைஇய நாளங்காடியில்*" (சிலப்.5:63). அல்லங்காடியு முண்டாதலின், இதனை நாளங்காடி யென்றார் (அடியார்க்.உரை.). "*அல்லங்காடி யழிதரு கம்பலை*" (மதுரைக்.544.). "*நாளங்காடி அல்லங்காடியாகிய இரண்டு கூற்றையுடைத்தென்றார்*" (மதுரைக் 365,நச்.உரை).

'*அம்முதல்*' என்னும் வினைச்சொல். இற்றைத் தமிழகத்தில் வழங்காவிடினும் குமரிநாட்டில் வழங்கியிருத்தல் வேண்டும்.

அம்முதல் = பொருந்துதல், ஒத்தல், ஒத்தமதிப்புள்ள பொருளுக்கு மாறுதல்: தமிழ்மொழிக்குடும்பமாகிய தெலுங்கில் அம்முதல், 'விற்றல்' என்னும் பொருளில் வழக்கூன்றியுள்ளது.

கடை → கடி → காடி என்று திரிந்திருக்கலாம்.

(செ.சொ.அ—முதன்மடலம்—முதற்பகுதி. பக்.68)

நாளச்சுருட்டு *nāḷa-c-curuṭṭu,* பெ. (n.), நரம்புச் சுருட்டு; uneven, permanent dilatation of a vein, Varix

[நாளம் + சுருட்டு.]

நாளஞ்சுருக்கி *nāḷañ-surukki,* பெ. (n.). அரத்த நாளத்தைச் சுருக்கும் மருந்து; drug which contracts veins as alum.

நாளடைவில் *nāḷ-aḍaivil,* வி.எ. (adv.) நாள் செல்லச் செல்ல; incourse of time புதிய இடமும், புதிய உணவும் முதலில் சற்றுக் கடினமாகத் தோன்றினாலும், நாளைடைவில் பழக்கமாகிவிடும். (இ.வ.).

[நாள் + அடைவில்.]

நாளத்தி *nāḷatti,* பெ. (n.), ஊதும் உலைத்துருத்தி; bellows

நாளத்தீதகம் *nāḷattidagm,* பெ. (n.), இரட்டை ஊதுதுருத்தி; double bellows.



நாளத்தூதல் *nāḷattūdal,* பெ. (n.), துருத்தியைக் கொண்டு ஊதல்; blowing with bellows.

நாளதினாலே *nāḷadiṉālē,* (வி.எ.) (adv.) நடப்பு நாளில்; on that day. "*நாளதினாலே கொடுத்த*" (S.I.I,ii. 3.).

[நாள் + அதனாலே → அதினாலே.]

நாளது *nāḷadu,* (வி.எ.) (adv.) நடப்பு, current, passing, present. நாளது ஆண்டு (இக்.வ.).

[நாள் + அது.]

நாளதைலம் *nāḷa-tailam,* பெ. (n.) நாட்பட்ட வயிற்றுப்போக்கினை நிறுத்துவதற்காகத் தேரையர் கூறும், நெய்மம்; a superior medicated oil described in Tēraiyar treatise and prescribed for chronic diarrhoea.

நாளந்தகம் *nāḷandagam,* பெ. (n.) தாமரை வளையம்; coils of lotus stalk.

நாளந்தி *nāḷ-andi,* பெ. (n.) சிறுசாலை. early morning. "*நாளந்திக் கோறின்று*" (ஆசாரக்.10);.

நாளம்¹ *nāḷam,* பெ. (n.). 1. உட்டுளை (சூடா.), tubularity. "*கழுநீர் நாளத்தாளினா லொருத்தி யுண்டாள்*" (இராமநா. உண்டாட்.19). 2. தண்டு; pipe or tube, hollow stalk as of a lotus. "*கமல நாளத்திடை*" (கம்பரா. மிதிலைக் 75.). 3. நரம்பு; (யாழ்.அக.); vein, nerve. 4. பொன்னரிதாரம்; yellow orpiment.

[நுள் → நள் → நாள் → நாளம் = உட்டுளை, உட்டுளைப் பொருள், தண்டு, (வே.க.3:18).]

நாளம்² *nāḷam,* பெ. (n.). அரத்தம், தசைநீர் (நிணநீர்) கொழுப்புநீர், முதலானவற்றை, உடலின் பல பகுதிகளுக்கும் எடுத்துச்செல்லும் குழாய்; vessel. அரத்தநாளம். நிணநீர் நாளம்.(உ.வ.)

[நள் → நாள் + அம் → நாளம்.]

உடம்பிலுள்ள, தந்துகிகள் எனப்படும் சின்னஞ்சிறிய குழாய்களில் நிறைந்திருக்கும் அரத்தத்தை வாங்கிக்கொண்டு, நெஞ்சாங் குலைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் காரரத்தக் குழாய்கள் என்று, சா.அக. கூறும்.

உடல் நலிவின்றி, நலமுடன் இயங்குதற்கு நாடிகளைப் போல, நாளங்களும், உறுதுணை புரிகின்றன. உடல்முழுவதும், நாளங்கள் பரந்து சென்று செயல்படுந்தன்மையன. நாடியைப் போலவே உள்நாளம், நடுநாளம், கடைநாளமென முத்திற அறைகளாகப் பிரிந்து செயல்படுபவை. ஆனால் நாடியைப் போன்று தடிப்பாயிராது. ஆனால், நாளத்தின் நடுவறை மட்டும் நாடியைக் காட்டிலும் தடித்தவை. உள்நாளம், கடைநாளத்தைவிட, நடுநாளம் கட்டித்தன்மை மிக்கது. எதிர்பாராத நிலையில் நாளம் அறுபட நேர்ந்தால், இதன் வடிவம் அழிந்தொழியும்.

அனைத்து நாளங்களும், நரம்பினால் இயன்ற (கபாடங்களால்) சவ்வுக்கூடங்களால், ஆக்கப்பட்டவை. இச் சவ்வுக்கூடங்கள், நாளத்தைக் கவர்ந்து கொண்டிருக்கும் தன்மையில் அமைந்தவை. சவ்வு மடிப்பினால்

ஆக்கப்பட்ட பெரிய நாடிகளுக்கும், ஆழ்ந்த நாளங்கள் உண்டு.

உடம்பில் அரத்த வோட்டத்தைச் சீராக வைக்கும் செயலினை, நாளங்கள் செய்கின்றன. இந் நாளங்களின் தலையாய, இப் பயன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு, சாம்பசிவ மருத்துவ அகரமுதலி நாளங்களை 20 வகைகளாகப் பகுத்துள்ளது, வருமாறு:–

1. கேள்வி நாளம்.
2. நெஞ்சாங்குலை (இதய) நாளம்.
3. ஈரல் நாளம்.
4. குண்டிக்காய்நாளம்.
5. புப்புசநாளம்.
6. கன்னநாளம்.
7. மூலக்கருநாளம்.
8. மூளைநாளம்.
9. வயிற்று நாளம்.
10. தண்டுநாளம்.
11. முகநாளம்.
12. குதமூலநாளம்.
13. கழுத்துநாளம்.
14. பிடரிநாளம்.
15. கண்ணாளம்.
16. ஊணீர்(விந்து)நாளம்.
17. மண்ணீரல் நாளம்.
18. கழுத்திலுள்ள கேடயச்சுரப்பிநாளம்.
19. கொப்பூழ்(உந்தி)நாளம்.
20. தொடைநாளம்.

நாளமில்லாசுரப்பி *nāḷam-illā-c-curappi*, பெ. (n). நாளங்கள் மூலம் அல்லாமல், நேரடியாக நீர்மங்களை, அரத்தத்தில் சேர்க்கும் வகையில் அமைந்த சுரப்பி; ductless gland.

[நாளமில்லா + சுரப்பி.]

நாளயம் *nāḷayam*, பெ. (n.). சின்னம்மான் பச்சரிசி; thyme leaved spurge.

நாளரம் *nāḷaram*, பெ. (n) (சங்.அக.) *நாளிகம்*[1], பார்க்க; see *nāḷigam*[1].

நாளராவம் *nāḷarāvam*, பெ. (n) 1. காரரத்தக்குழலிலுள்ள அழுக்கு; impurities in the vein 2. அரத்தம் குத்தியெடுக்கை; blood letting bleeding

நாளவம் *nāḷavam*, பெ. (n.). ஒட்டநாளம்; elder wood tree vine.

நாளவா *nāḷavā*, பெ. (n) *நாளவம்* பார்க்க; see *nāḷavam*.

நாளவிரிவு *nāḷa-virivu*, பெ. (n.). அகன்று திருகிய அரத்தநாளம்; enlarged and twiseted veins.

[நாளம் + விரிவு.]

நாளவை *nāḷ-avai*, பெ. (n). நாளோலக்கம்; the durbar of a king. "*செம்மனாளவை யண்ணாந்து புகுதல்*"; (புறநா.54.)

[நாள் + அவை.]

நாளளத்தல் *nāḷaḷattal*, பெ. (n.). திருமணத்திற்கு நாள் குறித்தல்; to fix a particular day as of a marriage. 'நாளைக்கு என் பெண்ணுக்கு நாளளக்கிறோம்' (மீனவ.).

[நாள் + அளத்தல்.]

நாளளவு *nāḷaḷavu,* பெ. (n.). இன்னமருந்தை, இத்தனை நாளைக்குத்தான், உட்கொள்ள வேண்டும் என்ற வரம்பு; limitation or restriction as to a particular medicine to be taken only for a particular period.

[நாள் + அளவு.]

நாளறுதி[1] *nāḷ-aṟudi,* பெ. (n.). காலவெல்லை; expiration of a term

[நாள் + அறுதி.]

நாளறுதி[2] *nāḷ-aṟudi,* (கு.வி.எ.) (adv.) நாளடைவில் (வின்.); in course of time, gradually

[நாள் + அறுதி.]

நாளாகநாளாக *nāḷ-āga-nāḷ-āga,* வி.எ. (adv.). நாட்கள் செல்லச்செல்ல; as days go by day by day 'நாளாக நாளாக அவர் திரும்பி வருவார் என்ற நம்பிக்கை குறைந்து வருகிறது' (இக்.வ.)

மறுவ. நாளுக்கு நாள்.

[நாள்ஆக + நாள்ஆக.]

நாளாகமம் *nāḷ-āgamam,* பெ. (n.) கிறித்துவ மறை நூற்பகுதி; book of the chronicles

நாளாசறுதி *nāḷ-āšaṟudi,* (வி.எ.) (adv.) *நாளடைவில் (யாழ்.அக.)* பார்க்க; see *nāḷ-aḍaivil.*

நாளாசறுதியில் *nāḷ-āšaṟudiyil,* வி.எ. (adv.) *நாளடைவில் (வின்.)* பார்க்க; see *naḷ-aḍaivil.*

[நாள் + ஆசறுதியில்.]

நாளாடகம் *nāḷ-āḍagam,* வி.எ. (adv.) *நாடோறும். (இ.வ.)* பார்க்க; see *nadōṟum.*

நாளாதல் *nāḷ-ādal,* பெ. (n.) **1.** காலங்கழிதல்; passing away of time **2.** காலத்திற்கு உரியதன்றாதல் (இ.வ.); becoming out of date.

[நாள் + ஆதல்.]

நாளாந்த *nāḷānda,* பெ.எ. (adj.) அன்றாட; daily. 'நாளந்த வாழ்வு நாளந்த வேலை' (இலங்கை வழக்கு.).

[நாள் → நாளாந்த.]

நாளாந்தம் *nāḷāndam,* பெ. (n.). வி.எ. (adv.) **1.** ஒவ்வொரு நாளும்; daily. 'நாளந்தம் வாழ்க்கைச்செலவு கூடிக்கொண்டே போகிறது' (இலங்கை.). **2.** நாளிதழ்; daily news paper

நாளாய்ந்தோர் *nāḷ-āyndōr,* பெ. (n) (வாழ்நாளைக் கணிப்பவர்) மருத்துவர் (தைலவ.தைல.); physicians, as investigating the length of one's days

[நாள் + ஆய்ந்தோர்.]

நாளாயபோ-தல் *nāḷāya-pō-,* 8 செ.கு.வி. (v.i.) ஒவ்வொருநாளும் செல்லுதல்; to go daily. *"நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே ஆளாய அன்பு செய்வோம் மடநெஞ்சே"* (தேவா.1).

[நாள் + ஆய + போ-.]

நாளார் *nāḷār,* பெ. (n) கூற்றுவன்; yamaṉ. *"நாளார் வந்தணுகி நலியாமுனம்"* (தேவா.326.6).

[நாள் + ஆர் → நாளார். வாழ்வினிறுதி. நாளினை உறுதி செய்பவர். உடல்வேறு, உயிர்வேறாகக் கூறுபடுத்துங் கூற்றுவன்.]

நாளாவட்டத்தில் *nāḷ-āvaṭṭattil,* வி.எ. (adv.) *நாளடைவில் (இக்.வ.)* பார்க்க; see *nāḷaḍaivil.* புதிய வேலை முதலில் துன்பம் தந்தாலும் நாளாவட்டத்தில் பழகிவிடும் (இ.வ.). அடிக்கடி மகப்பேற்றினால், தாய் நாளாவட்டத்தில் நலிவடைகிறாள் (இக்.வ.). மாற்றுமுறைப் பயிர் செய்யாவிடின், நாளாவட்டத்தில் நிலம் தன் ஊட்டச்சத்தை இழந்துவிடும்.(இக்.வ.).

[நாள் + ஆ → நாளா + வட்டத்தில்.]

நாளாவட்டத்தில்குணப்படு–தல் *nāḷā-vaṭṭattil-kuṇappaḍu-,* 20 செ.கு.வி. (v.i.) நாள் செல்லச்செல்ல, நோயகன்று நலம்பெறுதல்; to recover from illness gradually

[நாளாவட்டத்தில் + குணப்படு–.]

நாளாவட்டம் *nāḷā-vaṭṭam,* பெ. (n.) ஒவ்வொரு நாளும் கழிகை; after lapse of some days.

[நாள் + ஆ + வட்டம்.]

நாளாவர்த்தியில் *nāḷ-āvarttiyil,* வி.எ. (adv.) *நாளடைவில் (இக்.வ.)* பார்க்க; see *nāḷaḍaivil.*

[நாள் + ஆவர்த்தியில்.]

நாளாவிர்த்தியில் *nāḷ-āvirttiyil,* வி.எ. (adv.) *நாளாடைவில் (இ.வ.)* பார்க்க; see *nāḷaḍaivil.*

[நாள் → ஆவர்த்தியில் → ஆவிர்த்தியில்.]

நாளி[1] *nāḷi,* பெ. (n.) நாய். (அக.நி.); dog.

[நா → நாளி நா → நாய் → நாயி → நாளி. சொல்திரிபும் ஆகலாம். ள் → ய் = திரிபுபெறும் என்பது பாவாணர் முதல் தாய்மொழியின் குறிப்பு. வீட்டு வளர்ப்பு விளங்குகளில் பூனை இரவில் கண்விழித்து இயங்குவதும், நாய் பகலில் இயங்குவதும் பற்றி வந்த பெயர்.]

நாளி[2] *nāḷi,* பெ. (n.) 1. உட்டுளையுள்ள மூங்கில்; bamboo-tube 2. மூங்கில், பனை முதலியவற்றிலுள்ள வெளிவயிரம்; hard outer part of the stem of a tree, as of bamboo and palmyra

[நள் → நாள் → நாளம் → நாளி= பனை. உட்டுளையுள்ள மூங்கில், புறக்காழது. (வே.க.3:18.)]

நாளி[3] *nāḷi,* பெ. (n) உட்டுளையுள்ள மூங்கிற் படி; a measure.

[நாள் → நாளம் → நாளி.]

உட்டுளையுள்ள மூங்கிற்படி. அரிசி அல்லது நெல்லளக்கும் படி முதன்முதல் மூங்கிற் குழாயாலேயே அமைந்தது. "புறக்காழனவே புல்லென மொழிப" (தொல்.மரபு.6.). என்னும் தொல்காப்பிய மரபியல் நூற்பாவால், தென்னையும் மூங்கிலொடு சேர்ந்து நாளியினமாம். (வே.க.3;18.).

நாளி[4] *nāḷi,* பெ. (n) *நாழிகை, 1,2,3.* பார்க்க; see *nāḷigai, 1,2,3.* "*இலவமே நாளி மூழ்த்தம்*" (மேருமந்.94).

[நாழி → நாளி.]

நாளி[5] *nāḷi,* பெ. (n.)1. கள் (யாழ்.அக.); toddy 2. கற்றாழை; aloe. 3. புளிச்சைக்கீரை; deccan hermp

[ஞாளி → நாளி.]

நாட்காலையில், பாளையில் கட்டிய பானையிலிருந்து எடுக்கப்படுவதால், வந்தபெயர்.

நாளிக்கிருமுறை *nāḷikkiru-muṟai,* பெ. (n.) 1. ஒரு நாளுக்குக் காலை, மாலை ஆகிய இருமுறை; twice a day viz. morning and evening. 2. நாளிற்கு இரண்டு தடவை; twice a day

[நாளுக்கு → நாளிக்கு + இருமுறை.]

நாளிகம் *nāḷigam,* பெ. (n.) 1. *இலாமிச்சை (மலை.)* பார்க்க; see *ilāmiccai.* cuscuss grass. 2. வள்ளைக்கொடி (சூடா.); wild pot-herb, aquatic plant, Ipomaea aquatica. 3. தாமரை (யாழ்.அக.); lotus. 4. கோட்டை மதிற் சுவரில் அமைக்கப்படும் எறிபடை வகை (சுக்கிரநீதி.328); a kind of machine planted on a fortwall for defence.

[நாள் → நாளகம் → நாளிகம்.]

நாளிகயேலசம் *nāḷigayēlašam,* பெ. (n.) நறும்பிசின்; socotrine aloe (சா.அக.).

நாளிகா *nāḷigā,* பெ. (n.) சுனைக்கோரைப்புல்; rough sedge grass. (சா.அக.).

நாளிகாசு *nāḷi-kāšu,* பெ. (n) *நாளிகாதி* பார்க்க; see *nāli-kāti.* (சா.அக.).

நாளிகாதி *nāḷi-kādi,* பெ. (n.) 1. கிளிமுறுக்கு மரம்; indian Coral tree. 2. கட்டாமணக்கு; common physic nut.

மறுவ. முள்முறுக்கு.

[நாளி → நாளிகாதி.]

நாளிகாயந்திரம் *nāḷigā-yandiram.* பெ. (n.) மருந்தை வடிப்பதற்காகப் பயன்படுத்தும் வாலை எந்திரம்; distrillary appartus

நாளிகாவித்து *nāḷigā-vittu,* பெ. (n.) பாற்சோற்றி; a viscid liquid.

நாளிகேரகிருதம் *nāḷi-kēra-kirudam.* பெ. (n.) 1. தேங்காயெண்ணெய்; cocoanut oil 2. தேங்காய்ப்பாலுடன் ஏனைய கடைச் சரக்குகளைச் சேர்த்துக் காய்ச்சி வடிக்கும் மருந்தெண்ணெய்; a medicated oil prepared from milk of cocoanut kernel and other drugs.

[நாளிகேரம் + skt. கிருதம்.]

நாளிகேரபாகம் *nāḷikēra-bāgam,* பெ. (n.) *நாளிகேரம்* பார்க்க; see *nāḷikēram.*

[நாலிகேரம் → நாளிகேரம் + பாகம்.]

நாளிகேரம் *nāḷikēram.* பெ. (n.) தென்னை; common cocount *"வெள்ளை நாளிகேரம் விரியா நறும்பாளை"* (தேவா. 106:5).

[நள் → நாள் → நாளம் = உட்டுளை, உட்டுளையுள்ள மூங்கில் படி. நாளம் → நாளி = உட்டுளையுள்ள புறக்காழ். ஒருகா. நால் → நாலி + கேரம் → நாலிகேரம் → நாளிகேரம்.]

அரிசி அல்லது நெல்லளக்கும் படி, முதன்முதல் மூங்கிற் குழாயாலேயே அமைந்தது. "*புறக்காழனவே புல்லென மொழிப*" என்னும் தொல்காப்பிய மரபியல் நூற்பாவால், தென்னையும் மூங்கிலொடு சேர்ந்து நாளியினமாம்.

வேந்தன் குடிப்பெயரினின்று அவன் நாட்டுப்பெயர் திரிவதுண்டு.

[(எ.டு.)பாண்டியன் → பாண்டியம் = பாண்டிநாடு. இம் முறைப்படி, சேரலன் → சேரலம். சேரன் → சேரம் என்று திரியும், தென்மொழிச்சகரம் வடமொழியில், 'க'கர மாகத் திரிவதால், சேரலம் → கேரளம்; சேரம் → கேரம் என்றாம். ஆகவே, நாலிகேர என்பது, சேரநாட்டில் சிறப்பாக வளரும் மூங்கிலொத்த புறக்காழ்த் தென்னை என்று பொருள்படலாம்.]

ஒருகா. நாளி + சேரம் → கேரம்.

வடமொழியில் தென்னைக்கு, 'நாலிகேர' என்று பெயர். அதினின்று கேரளம் என்னும் சொல்லைத் திரிக்கவுஞ் செய்வர். "நாலிகேர" என்பது வடமொழியில் தன்னந்தனிச்செல்; அதற்கு அம் மொழியில் மூலமில்லை. கேரளம் என்பது சேரலம் என்பதன் திரிபாயிருக்கவும், அத் திரிபைத் தலைகீழாகக் காட்டுவது வடமொழியாளர் வழக்கம். ஆகவே, நாலிகேர என்பது, தமிழில் நாளிகேரம் என்னும் வடிவே கொள்ளும். (வே.க.3:18.).

நாளிகேரளம் *nāḷi-kēraḷam,* பெ. (n) *நாளிகேளம்* பார்க்க; see *nāḷ-kēḷam.*

நாளிகேளம் *nāḷi-kēḷam,* பெ. (n.) *நாளிகேரம் (யாழ்.அக.)* பார்க்க; see *nāḷikēram.*

[நாளிகேரம் → நாளிகேளம்.]

நாளிகை *nāḷigai,* பெ. (n.) **1.** *நாழிகை* பார்க்க; see *nāḻigai.* **2.** நாளம்; a tube.

[நாழி → நாளி → நாளிகை]

நாளிடு-தல் *nāḷi-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) நன்னாள் குறித்தல்; to fix or appoint an auspicious day, as for a marriage. *"நாளை வதுவை மணமென்று நாளிட்டு"* (திவ்.வாய்ச்.6:2).

[நாள் + இடு-.]

நாளிதம் *nāḷidam,* பெ. (n.) சேம்பு; arum colocasia.

[நாள் + இதம் → நாளிதம்.]

நாளிதழ் *nāḷidaḻ,* பெ. (n.) செய்தித்தாள்; news paper. இன்றை நாளிதழ்கள் பெரும்பாலும் நடுநிலையாகச் செய்திகளைத் தருவதில்லை. (இக்.வ.). மேனிலைப்பள்ளி மாணவர்களுக்காக, இன்றைய சில நாளிதழ்கள், வினாவிடைப் பகுதிகளை வெளியிடுகின்றன.

மறுவ. நாட்டுநடப்பு.

[நாள் + இதழ்.]

நாளிது *nāḷidu,* பெ.எ. (adj.) *நாளது (இ.வ.)* பார்க்க; see *nāḷ-adu.*

[நாள் + இது.]

நாளிமியாவரை *nāḷimiyāvarai,* பெ. (n.) சூரத்து நிலாவாரை; surat senna.

நாளிருக்கை *nāḷirukkai,* பெ. (n.) *நாளோலக்கம்* பார்க்க; see *nāḷ-ōlakkam.* *"பெருநாளிருக்கை விழுமியோர் குழீஇ"* (மதுரைக்.525.).

[நாள் + இருக்கை.]

நாளில் *nāḷil,* வி.எ. (adv.) *நாளடைவில்* பார்க்க; see *nāḷ-aḍaivil.* *"மனத்தினை நாளிற் றாழ்குழல்.....ஆக்கினான்"* (திருவாலவா.8:2.).

[நாள் + இல்.]

நாளினி *nāḷiṉi,* பெ. (n.) **1.** புளிமா (மலை.); hog. plum. **2.** புளி மாமரம்; sour mango tree.

[நாள் → நாளினி.]

புளிப்பு முற்றிய நிலையே இனிப்பாதலின் உற்றபெயர். புளிப்புக்கனியுண்டாக்கும் மாமரம் எனினும், ஒக்கும்.

நாளினுநாளும் *nāḷiṉu-nāḷum,* வி.எ.(adv.), ஒவ்வொரு நாளும்; every day. "*நம்பன் செல்லு நாளினுநாளு நலமிக்கே*" (சீவக. 363.).

[நாள் + இனி+நாளும்.]

நாளீபம் *nāḷīpam,* பெ. (n.) கடம்பு; cadamba tree.

நாளுக்கு *nāḷukku-,* வி.எ. (adv.) 1. ஒரு நாளில் (வின்); for the day, on a day 1. நாளுக்கு ஒரு புது வேட்டி கட்டுவது பகட்டாரவாரமாகும் (இ.வ.) 2. நல்லநாளில் (யாழ்ப்); on an auspicious day

[நாள் → நாளுக்கு.]

நாளுக்குநாள் *nāḷukku-nāḷ-,* வி.எ. (adv) ஒவ்வொரு நாளும்; from day to day. 'நாளுக்கு நாள் நோய் வாட்டுகிறது' (உ.வ.). 'நாளுக்கு நாள் வெயிலின் கொடுமை தாங்கமுடியவில்லை' (இக்.வ.). 'நாளுக்கு நாள் தண்ணீர்த்தட்டுப்பாடு கூடிக்கொண்டே போகிறது' (இக்.வ.).

[நாளுக்கு + நாள்.]

நாளுநாளினும் *nāḷu-nāḷiṉum,* வி.எ. (adv.) *நாளினு நாளும்* பார்க்க; see *nāḷiṉu-nāḷum.* "*நாளுநாளினு நைந்து*" (சீவக.1628.).

[நாளு + நாளினும்.]

நாளும் *nāḷum,* வி.எ. (adv.) ஒவ்வொருநாளும்; every day, "*நல்லறிவு நாளுந் தலைப்படுவர்*" (நாலடி,139.).

மறுவ. நாள்தோறும்.

[நாள் → நாளும்.]

நாளும்நினை-த்தல் *nāḷum-niṉai-,* 4. செ.கு.வி. (v.i) ஒவ்வொருநாளும் இடைவிடாது எண்ணுதல்; to think everyday without break.

[நாளும் + நினை-.]

நாளுல-த்தல் *nāḷ-ula-,* 4. செ.கு.வி. (v.i) இறத்தல்; to end one's days, *die.* "*தேனுக ணாசமாகி நாளுலப்ப*" (திவ்.திருச்சந். 80.).

[நாள் + உல-.]

உல் → உல.

நாளெல்லை *nāḷ-ellai,* பெ. (n.) 1. அந்திநேரம் (யாழ்.அக.); sunset, close of the day 2. இறுதிக்காலம், (மரண காலம்); the end of the one's days,time of death நாளெல்லைக் காலத்தில்தான் சிலருக்கு நல்லதுகெட்டது புரியும். (உ.வ.)

மறுவ. கதிரவன் மறைவு. வாழ்வினிறுதி.

[நாள் + எல்லை.]

நாளேடு *nāḷēḍu,* பெ. (n.) *நாளிதழ்* பார்க்க; see *nāḷidaḻ.* மக்களிடையே நாளேடு படிக்கும் பழக்கம் வளர்ந்துள்ளது (இ.வ.).

[நாள் + ஏடு.]

நாளேர்வை-த்தல் *nāḷēr-vai-,* 4செ.கு.வி. (v.i.) *நாளேரடி-த்தல்* பார்க்க; see *nāḷēr-aḍi-.*

[நாள் + ஏர்+வை-.]

நாளேரடி—த்தல் *nāḷ-ēr-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) நல்ல நாளில் உழத்தொடங்குதல் (இ.வ.); to begin ploughing on an auspicious day

மறுவ: நல்லோர் அடித்தல், பொன்னேர் பூட்டுதல்.

[நாளோர் + அடி—.]

நாளை[1] *nāḷai,* வி.எ. (adv.) 1. 'இன்று' என்று குறிப்பிடப்படும் நாளுக்கு அடுத்த நாள்; tomorrow. இன்றும் நாளையும் விடுமுறை (இக்.வ.). 2. எதிர்காலம்; the near future. நாளை என்பது நம் குழந்தைகள் கையில். (இக்.வ.). நாளைநடப்பதை யார் அறிவார்? (இக்.வ.) இன்று நீ செய்யும் தவற்றுக்கு நாளை பதில் சொல்ல வேண்டியிருக்கும்.(இக்.வ.)

[நாள் → நாளை.]

நாளை[2] *nāḷai,* வி.எ. (adv.) 1. அடுத்த நாளில்; tomorrow "*நாளை வதுவை மணமென்று நாளிட்டு*" (திவ்.நாய்ச்.6,2.). 2. எதிர்காலத்தில்; in the future. நாளை நடப்பதை அறிவார் யார்? (இ.வ.). இன்று நீ செய்யும் தவற்றுக்கு நாளை விடை சொல்ல வேண்டியிருக்கும் (இக்.வ.).

ம. நாள.

நாளை[3] *nāḷai,* பெ.எ. (adj.). நாளுக்குரிய; pertaining to a day. "*ஒருநாளை யின்பமே காமுறுவர்*" (நாலடி,54.).

[நாள் → நாளை.]

நாளை[4] *nāḷai,* பெ. (n.) மருந்துக் குணமுள்ள மரம்; a medicinal tree. (சா.அக.).

நாளைக்கழித்து *nāḷai-k-kaḻittu,* வி.எ. (adv.). *நாளைநின்று (இ.வ.).* பார்க்க; see *nāḷai-niṉṟu.*

[நாளை + கழித்து.]

நாளைக்கு *nāḷaikku,* வி.எ. (adv.). அடுத்த நாளில், மறுநாளில்; tomorrow.

க., நாளெகெ.

[நாளை → நாளைக்கு.]

நாளைநின்றன்று *nāḷai-niṉṟaṉṟu,* வி.எ. (adv.). *நாளை நின்று (இ.வ.)* பார்க்க; see *nāḷai-niṉṟu.*

நாளைநின்று *nāḷai-niṉṟu,* வி.எ. (adv.) பிற்றை நாளை அடுத்து (நெல்லை); on the day after tomorrow.

[நாளை + நின்று.]

நாளைநீக்கி *nāḷai-nīkki,* வி.எ. (adv.). *நாளை நின்று (இ.வ.).* பார்க்க; see *nāḷai-niṉṟu.*

[நாளை + நீக்கி.]

நாளைமற்றைநாள் *nāḷai-maṟṟai-nāḷ,* வி.எ. (adv.). நாளை அல்லது நாளை நின்று. (இ.வ.); tomorrow or the day after. 2. இனிமேல்; sometime hence 3. வருங்காலத்தில், பிற்காலத்தில்; here after

[நாளை + மற்றை + நாள்.]

நாளைமறுநாள் *nāḷai-maṟu-nāḷ,* பெ. (n.) 'நாளை' என்று குறிப்பிடப்படும் நாளுக்கு அடுத்து வரும் நாள்; day after tomorrow.

[நாளை + மறுநாள்.]

நாளைய[1] *nāḷaiya,* பெ.எ. (adj.) 1. தற்காலத்துக்குரிய; modern, of the present time. 'இந்நாளைய மனிதர்' (வின்.). 2. நாளுக்குரிய; pertaining to a day. "*பத்து*

நாளைய வேலை"(வின்.). 3. மறுநாட்குரிய; pertaining to the following day. 'நாளைய வேலை' (இக்.வ.).

[நாள் → நாளை → நாளைய.]

நாளைய² *nāḷaiya,* கு.பெ.எ. (adj.) எதிர்காலத்தில் வரவிருக்கும் of tomorrow, future. இன்றைய மாணவர்களே நாளைய ஆட்சியாளர்கள் (இக்.வ.). நாளைய தேவைகளைக் கணக்கில் கொண்டு அரசு தீட்டிய திட்டங்கள். (இக்.வ.).

[நாள் → நாளை → நாளைய.]

நாளையினின்று: *nāḷaiyiṉ-iṉṟu,* வி.எ. (adv.). *நாளைநின்று* பார்க்க; see *nāḷai-niṉṟu.*

நாளொருமேனி *nāḷoru-mēṉi,* பெ. (n.) தொடர்வளர்ச்சி; continuous growth "நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் குழவி வளர்ந்து வருகிறது" (இ.வ.).

[நாளொரு + மேனி.]

இது மரபிணைமொழியாகும்.

நாளோட்டு-தல் *nāḷ-ōṭṭu-,* 5. செ.கு.வி. (v.i.) 1. காலங்கழித்தல்; to pass one's days. 2. காலத்தாழ்வு செய்தல்; to delay, procrastinate

[நாள் + ஓட்டுதல்.]

நாளோட்டுதல் என்னுமிச்சொல் மரபுத் தொடராக, மக்களிடையே வழக்கூன்றி யுள்ளது.

நாளோதி *nāḷ-ōdi,* பெ. (n.) ஐந்திறஓதுவோன்; (நன்.138, மயிலை); one whose duty is to make known the titi, nakṣatra etc., of every day.

[நாள் + ஓதி.]

நாளோலக்கம் *nāḷōlakkam,* பெ. (n). கடவுளர், அரசரது காலை யத்தாணியிருப்பு; durbar, assembly of state. "*நாளோலக்கமருள அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே*" (திவ்.திருப்பள்ளி.9).

[நாள் + ஓலக்கம்.]

நாளோலை *nāḷ-ōlai,* பெ. (n.). 1. முழுத்த ஒலை; ōlai or notice of the auspicious hour, as of a marriage, sent round as invitation "*கொற்றவர் திருவுக்கேற்பக் குறித்து நாளோலை விட்டார்*" (பெரியபு. தடுத்தாட்.9). 2. வீடுவேய்தற்கு நல்லநாள் பார்த்து ஒலை வெட்டுகை; cutting ōlas on an auspicious day for thatching a house 3. நல்ல முழுத்தத்தில் வீட்டுக்கு ஒலைவேய்கை; thatching a house with ōlai in an auspicious hour. 4. கணியத்துளொரு வகை (யாழ்.அக.); horoscope.

[நாள் + ஓலை.]

நாற்கணம் *nāṟ-kaṇam,* பெ. (n.). உயிர்க்கணம், வன்கணம், மென்கணம், இடைக்கணமென்ற நால்வகை யெழுத்துக்கள் (யாழ்.அக.); the four kinds of letters, viz., uyir-k-kaṇam, vaṉkaṇam, meṉ-kaṇam, iḍai-k-kaṇam.

[நாள் + கணம்.]

நாற்கதி *nāṟ-kaḍi,* பெ. (n.). மக்கள், தேவர், நரகர்,விலங்கு என்ற நால்வகைப் பிறப்பு (யாழ்.அக.); the four modes of existence through which the soul may pass, according to its karmam, viz, makkaḷ, dēvar, naragar, vilaṅgu.

[நால் + கதி.]

சமணமதத்தின் இக் குறியீடு நாற்குழுப் பிறப்பு பற்றியது.

நாற்கவி *nāṟ-kavi,* பெ. (n.). 1. ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்ற நால்வகைக்கவி (பிங்.); the four kinds of poetry viz, āšu-kavi, madura-kavi, cittira-kavi, vittāra-kavi. 2. ஆசுகவி முதலிய நால்வகைப் புலவர்கள் (வச்சணந்.செய்யு.1); the four classes of poets.

[நால் + கவி]

நாற்கவிராசநம்பி *nār-kavi-rāša-nambi,* பெ. (n.). அகப்பொருள் விளக்கம் இயற்றிய சைனவாசிரியர்; the jaina author of agapporuḷ-viḷakkam.

தொல்காப்பியம் எழுத்து, சொல் என்ற இரண்டதிகாரத்துக் கூறியவற்றை, நன்னூல் சுருக்கியும், திருத்தியும் எழுதிய செம்மை போன்றே, அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற நான்கு இயல்களில் கூறியவற்றைத் திறம்படத் தொகுத்தும், வகுத்தும் எழுதிய நூலாசிரியர்.

நாற்காலி *nāṟ-kāli,* பெ. (n.). 1. *நாற்காற்சீவன் (நாமதீப.234)* பார்க்க; see *nāṟ-kāṟ-šīvaṉ.* 2. நான்குகாலுள்ள பீடம். "*நாற்காலிப் பீடமொன்று*" (S.I.I.ii.195); any four legged seat, as a chair, a stool.

[நால் + காலி. கால் → காலி.]

'இ' உடைமை குறித்த ஈறு.



நாற்காற்சீவன் *nāṟ-kāṟ-šīvaṉ,* பெ. (n.). நாலுகால்களையுடைய விலங்கு (யாழ்.அக.); quadruped.

நாற்குணம் *nāṟ-kuṇam,* பெ. (n.) 1. ஆடுஉக்குணங்கள் நான்கு; the four masculine qualities. 2. மகடூஉக்குணங்கள் நான்கு; the four feminine qualities. "நாற்குணமு நாற்படையா" (நள.32).

[நான்கு → நால் + குணம்.]

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று, பெண்களின் பண்பாகக் கூறப்படும் நான்கு. அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என நான்கு குணங்களை ஆடவர்க்குரியதாகப் பிங்கலம் கூறுகிறது.

நாற்கைவிலங்கு *nāṟkai-vilaṅgu,* பெ. (n). நான்கு கைகளையுடைய குரங்கு முதலான பாலூட்டிகள்; four handed animals like monkey, ape etc

[நால்கை → நாற்கை + விலங்கு.]



நாற்கோணக்கொடி *nāṟ-kōṇa-k-koḍi,* பெ. (n.). வெள்ளைவட்டச்சாரணை; white flowered trianthema.

[நாற்கோணம் + கொடி.]

நாற்கோணம் *nāṟ-kōṇam,* பெ. (n.). நான்கு கோணமுள்ள உருவம் (யாழ்.அக.). square; quadrangular figure, tetragon.

[நால் + கோணம்]

நாற்சதுரம் *nāṟ-caduram,* பெ. (n.). 1. சமநீளமும், சமஅகலமுமுடைய உருவம் (யாழ்.அக.); square. 2. *பிரண்டை;* square-stalked vine.

[நால் + சதுரம்.]

நாற்சந்தி[1] *nāṟ-šandi,* பெ. (n.) நாலுதெருக்கள் கூடுமிடம்; junction of four roads or streets.

[நால் + சந்தி.]

நாற்சந்தி[2] *nāṟ-šandi,* பெ. (n.). மூக்கின் உட்புறத்தில் காது, கண், தொண்டை முதலான நான்கு துளைகள் இணையுமிடம்; the pharyngeal opening or cavity which forms the junction of four passages viz- nose, ears, eyes and throat

[நால்சந்து → நாற்சந்தி]

நாற்சாதி *nāṟ-cādi,* பெ. (n.). 1. நான்கு வகை இனப்பகுப்பு; the four different castes. 2. கொக்கோகம் நூலிற் கூறியுள்ள நான்குவகைப்பெண்ணினம்; the four classes of women divided according to their lust. 3. நான்கு வகை ஆணினம்; the four classes of men divided according to their passion etc. 4. நான்குவகைப் பிரிவைக்குறிக்கும் பொதுச்சொல்; any classification into four

[நால்சாதி → நாற்சாதி]

நாற்சாதிக்கரு *nāṟ-cādi-k-karu,* பெ. (n.). நான்குவகைப்பெண்களின் வயிற்றிலுண்டாகும் கரு; the foetuses of the four classes of women

[நாற்சாதி + கரு]

நாற்சாதிப்பெண் *nāṟ-cādi-p-peṇ,* பெ. (n). பருவப்பொருண்மையில் பகுக்கப்பட்ட நான்குவகைப் பெண்கள்; women divided into four types according to her lifes span.

[நால்சாதி → நாற்சாதி + பெண்.]

சாம்பசிவ மருத்துவ அகரமுதலி பெண்களைப் பருவத்தின் அடிப்படையில் நான்கு வகையாகப் பிரித்துள்ளது. வருமாறு:–

1. குமரி (வாலை).
2. கன்னி (தருணி).
3. இளம்பெண் (பிரிவிடை).
4. பேரிளம்பெண் (விருத்தை).

நாற்சாரும்வீடு *nāṟ-cārum-vīḍu,* பெ. (n). வீட்டின் சுற்றுக்கட்டு (யாழ்ப்.); a square-built house with verandah inside.

[நால் + சாரம் + வீடு → சாரும்வீடு.]

நாற்சி *nārci,* பெ. (n.). தொங்குகை (யாழ்.அக.); hanging.

[நால்சி→நாற்சி.]

நாலுதல்=தொங்குதல்.

நாற்சில்வண்டி *nārcil-vaṇḍi,* பெ. (n.). நான்குசக்கரங்களையுடைய வண்டிவகை (பாண்டி.); four-wheeled carriage.

[நால்சில் → நாற்சில் + வண்டி]

நாற்சீரடி *nār-cīraḍi,* பெ. (n.). நான்கு சீர்களைக் கொண்ட நேரடி; nēraḍi, which consists of four šīrs (metrical foot). "*வெண்பாவும், ஆசிரியப்பாவும், கலிப்பாவும் அவ் வடியினால் வரும்*" (இளம்.தொல்.செய்யுள். 64.).

மறுவ. அளவடி.

[நால்சீர் + நாற்சீர + அடி.]

1. நாற்சீரடி கொண்ட நேரிசை வெண்பா:–
"வெய்ய வினையிரண்டும் வெந்தகல
மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகாது என்செய்கேன்–
செய்ய திருவார் பெருந்துறையான் தேனுந்து
செந்தீ மருவா திருந்தேன் மனத்து".

2. நாற்சீரடி கொண்ட ஆசிரியப்பா:–
"வேறுவேறுருவும் வேறுவேறு இயற்கையும்
நூறுநூறு ஆயிரம் இயல்பினதாகி
குதிரையைக் கொண்டு குடநாடு அதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந்து அருளியும்"

3. நாற்சீரடி கொண்ட தரவுகொச்சகக் கலிப்பா:–
'வேனில்வேள் மலர்க்கணைக்கும்
வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும்
பாழ்நெஞ்சே
ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டான்
இன்றுபோய்
வானுளான் காணாய் நீ மாளாவாழ்கின்றாயே'

நாற்படை *nāṟ-paḍai,* பெ. (n.). யானை, தேர், பரி, காலாள் என்ற நால்வகையான சேனை; the four division of army. viz, yāṉai, ter,pari-kālāl. "நாற்படைவன்னியர்" (கல்லா.37,15.).

[நால் + படை.]

நாற்பத்துமுக்கோணம் *nāṟ-pattu-mukkōṇam,* பெ. (n.). நாற்பது கோணங்களை உள்ளடக்கியதும் மாந்த ஆற்றலின் மந்தணங்களை உள்ளடக்கியதுமான மந்திரச் சக்கரம்; a mysterious diagram consisting of forty triangles.

[நால்பத்து → நாற்பத்து + முக்கோணம்.]

நாற்பதாண்டுமூலி *nāṟ-padāṇḍu-mūli,* பெ. (n.). பசியுணர்வு ஏற்படாமலிருக்கும் பொருட்டு 40 ஆண்டுகட்கு ஒருமுறை சித்தர்களால் உண்ணப்படும் மூலிகைமருந்து; a kind of rare medicinal drug used by siddhar's once in forty years to suppress or get over hunger. (சா.அக.)

[நால்பது → நாற்பது + ஆண்டு + மூலி]

நாற்பால்மரம் *nāṟ-pāl-maram,* பெ. (n). ஆல், அரசு, அத்தி, இத்தி என்னும் நால்வகை மரம்; the four milk yielding trees banian, peepul, fig and nomboid leaved fig. (சா.அக.)

[நால்பால் → நாற்பால் + மரம்.]

நாற்பொருள் *nāṟ-poruḷ,* பெ. (n). அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகைப்பொருள்; the four fold virtues viz., aṟam, poruḷ, iṉbam, vīḍu.

[நால்பொருள் → நாற்பொருள்.]

நாற்பொன் *nāṟ-poṉ* பெ. (n.). நான்குவகை மாழைகள் (உலோகம்); the four kinds of metals.

[நால்பொன் → நாற்பொன்.]

நான்குவகை மாழைகளாகச் சாம்பசிவ மருத்துவ அகரமுதலி கூறுவது.

1. கரும்பொன் (இரும்பு)- black gold
2. செம்பொன் (செம்பு)-red gold.
3. வெண்பொன் (நிகர்வெள்ளி)-white gold.
4. மஞ்சட்பொன் (நற்பொன்– ஆணிப்பொன்)-yellow gold.

நாற்றங்கருங்காலி *nāṟṟaṅ-karuṅgāli,* பெ. (n.). கருங்காலி மரவகையுள்ளொன்று; a kind of karuṅgāli tree.

நாற்றங்கால்[1] *nāṟṟaṅgāl,* பெ. (n.). நெல்முதலியவற்றின் நாற்றுக்களை வளர்க்கும் இடம்; nursery for paddy and other seedlings.

[நாறுதல் = தேன்றுதல், முளைத்தல். நாறு = நாற்று. நாற்று + அம் + கால்.] இளம்பயிர், அல்லது பறித்து நடக்கூடிய பயிர் முதலானவற்றை விதைக்கும் இடம்.



நாற்றங்கால்[2] *nāṟṟaṅgāl,* பெ. (n.). கொள்கையாளர் கூட்டம் உருவாகக் கரணியமாக இருப்பவர்; a leader who trains people for a principle. 'மறைமலையடிகள் தனித்தமிழ் கொள்கைக்கு நாற்றங்காலாய்த் திகழ்ந்தார்' (உ.வ.).

[நாற்றம் + கால்.]

பயிர்நன்கு வளர்ந்து செழித்துப் பயன்தரவேண்டுமாயின், நாற்றங்காலின் தேவை மிகவும் அடிப்படையானது. நாற்றங்காலில் பாவிய நெல் பழுதின்றி வளர்ந்து, குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பு நடவுவயலில் நடவேண்டும். இஃதே போல், தனித்தமிழ் கொள்கைவித்து வளர்ந்து, செழித்தோங்குதற்கு அடிப் படையாகத் திகழ்ந்தவர், மறைமலை யடிகளாவார். இவர்தம் செம்மாந்த தனித்தமிழ்நடை, கல்வியாளரிடையே நாற்றங்காலாய்த் திகழ்ந்தது எனலாம்.

நாற்றங்கேள்–தல் *nāṟṟaṅ-kēḷ-,* 11. செ.குன்றாவி. (v.t.). மணமறிதல்; to smell. "நாற்றங் கேட்டலுந் தின்ன நயப்பதோர் கூற்று" (கம்பரா. தாடகை.63.).

[நாற்றம் + கேள்–.]

நாற்றங்கொல்லை *nāṟṟaṅkollai,* பெ. (n.). *நாற்றங்கால்* (P.T.L.) பார்க்க; see *nāṟṟaṅgāl.*

[நாற்றம் + கொல்லை நாற்றுப்பாவுமிடம்.]

நாற்றசூதகம் *nāṟṟa-śūdagam,* பெ. (n.). தீயமணத்தை விளைவிக்கும் மாதர்தம் அரத்தப்போக்கு; the discharge of menses characterised by an affensive odour

[நாற்றம் + சூது.]

நாற்றடி *nāṟṟaḍi,* பெ. (n.). *நாற்றங்கால்* (நாஞ்.) பார்க்க; see *nāṟṟaṅgāl.*

நாற்றடிப்பாட்டம் *nāṟṟaḍi-pāṭṭam,* பெ. (n.) ஒருவர் நிலத்தில் மற்றவர் நாற்றுப்பாவுதற்குக் கொடுக்குங் குத்தகை (நாஞ்.); lease given to raise seedlings.

[நாற்று + அடி + பாட்டம்.]

நாற்றடிப்பாழ் *nāṟṟaḍi-p-pāḻ,* பெ. (n.) நாற்று (இளநாற்று) பாழ்படுகை (S.I.I.vii,279); withering of seedlings

[நாற்று + அடி + பாழ்.]

நாற்றத்தமானி *nāṟṟa-t-tamāṉi,* பெ. (n.) 1. கொழுப்பு; fat. 2. இறைச்சி; flesh.

நாற்றந்தகரை *nāṟṟan-tagarai,* பெ. (n.) 1. பேயவரை (யாழ்ப்.); negro-coffe. 2. கெட்ட மணமுள்ள தகரை (சா.அக.); fetid cassia.

நாற்றநரம்பு *nāṟṟa-narambu,* பெ. (n.) 1. தொப்பூழ்க் கொடி; navel string. 2. காரரத்தக் குழல்; veins 3. நறுமணத்தை யுணர்த்தும் நரம்புகள்; nerves that perceive the smell.

[நாற்றம் + நரம்பு.]

நாற்றம்[1] *nāṟṟam,* பெ. (n.) 1. நன்மணம்; good smell, scent, odour. "*நாற்ற நாட்டத் தறுகாற் பறவை*" (புறநா.70). "*முகைமொக்குள் உள்ளது நாற்றம் போல்*" (குறள்,). 2. மூக்காலறியப்படும் புலனறிவு; sense of smell, one of aim-pulaṉ. "*சுவை யொளி யூறோசை நாற்றமென்று*" (குறள்,27). 3. தீ நாற்றம் அல்லது முடைநாற்றம் (இக்.வ.); offensive smell, stench. 4. வசம்பு (மலை.); sweet flag. 5. கள்(பிங்.); toddy. 6. தொடர்பு; connection. அவர்கள் நாற்றமே எனக்கு வேண்டாம் (உ.வ). 7. தோற்றம்; (சூடா.); origion, appearance.

க., து., நாட ம., நாற்றம்.

[ஒருகா. நாறு → நாற்று → நாற்றம்.]

நாறுதல்:– தோன்றுதல், தோன்றித் திகழ்ந்து நன்மணம் பரப்புதல் விதையிலிருந்து முளை தோன்றுதல்: நெல், துவரை, கம்பு, முளைகட்டுங்கால், (முளை தோன்றும்பொழுது) திகழும் நன்மணம். முளைப்பு வைத்த இடத்தினின்று நன்மணம் வெளிப்படின், முளை அரும்பத்தொடங்கிவிட்டது எனலாம், முளைஅரும்புதலும், நன்மணம் நாறுதலும் ஒரே காலத்தே நிகழ்வதாகும்.

[நாறு → நாற்றம்.]

['அம்'= தொ.பெ.ஈறு. உலகவழக்கில், நாற்றம் என்னுஞ் சொல், தீய மணத்தையே குறிக்கும். இலக்கிய வழக்கில், நல்லது, தீயது ஆகிய இரண்டிற்கும் பொதுவாம். முதற்கண் நறுநாற்றத்தை மட்டுங்குறித்த இச் சொல், காலப்போக்கில் வேறுபட்ட அல்லது மாறுபட்ட மணத்தையுங் குறிக்கலாயிற்று. தற்போது, தீ நாற்றம் அல்லது முடை நாற்றத்தைக் குறிக்கும் பொருண்மையில் வழக்கூன்றியுள்ளது.]

"நாற்றம் உரைக்கும் மலருண்மை" (நான்மணி).

நாற்றம்[2] *nāṟṟam,* பெ. (n.) 1. வாணகெந்தி; sulphur used in fire-works. 2. பித்தநீர் நாளம்; bile-duct. 3. தாளகம்; yellow orpiment. 4. புனுகு; civet.

[நாறு → நாற்றம்.]

நாற்றம்போக்கி *nāṟṟam-pōkki,* பெ. (n.) 1. *நாற்றமாற்றி* பார்க்க; see *nāṟṟa-māṟṟi.* 2. நாற்றமறச்செய்யும் மருந்து; a drug that over comes or destroys ill smells.

[நாற்றம் + போக்கி.]

நாற்றம்வீசு–தல் *nāṟṟam-vīśu-,* 5 செ.கு.வி. (v.i.) தீயநாற்ற மடித்தல்; to emit a bad smell, as a carcass

[நாற்றம் + வீசு–.]

வீச்சம் என்பது தீய நாற்றத்தைக் குறித்த உலகவழக்கு.

நாற்றமாற்றி *nāṟṟa-māṟṟi,* பெ. (n.) தீயமணத்தைத் தடுக்கும் பொருட்களான கரித்துகள், சாம்பல் மண், அரம்பத்தூள் முதலியன; deodorising powders such as charcoal dust, ashes earth, saw dust etc.

[நாற்றம் + மாற்றி.]

நாற்றமெடு–த்தல் *nāṟṟam-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) *நாற்றம் வீசு–தல்* பார்க்க; see *nāṟṟam viśu-.*

[நாற்றம் + எடு–.]

நாற்றரத்தவொழுக்கு *nāṟṟaratta-v-oḻukku,* பெ. (n.) சிரங்கு, புண் இவைகளினின்றும் கெட்ட மணத்துடன் ஊன், சூழ், அரத்தம் முதலானவை வெளிப்படுகை; a fetid ichorous discharge of serum, pus, blood etc., from a wound or ulcer.

[நாற்றம் + அரத்தவொழுக்கு.]

நாற்றவுணவு *nāṟṟa-v-uṇavu,* பெ. (n.) திருப்படையல்; oblation or burnt offerings "*நாற்றவுணவின்*" (மதுரைக்.458). "முகைமொக்குள் உள்ளது நாற்றம்" (குறள்.).

[நாறு → நாற்றம் + உணவு.]

நாற்றி *nāṟṟi,* பெ. (n.) நான்கு மடங்கு; four-fold. "*கிளந்தவற்றின்...நாற்றியே*" (சீவக.567).

[நான்கு → நாற்றி.]

நாற்றிசை *nāṟṟiśai,* பெ. (n.) நான்கு (திக்கு) பக்கம்; the four cardinal points. "*நாற்றிசை முனிவரும்*" (திருவாச.4:3).

[நால் + திசை → நாற்றிசை.]

நாற்று[1]–தல் *nāṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தொங்கவிடுதல்; to hang, suspend "*முத்துத் தாம முறையொடு நாற்றுமின்*" (மணிமே.1:49). 2. தூக்குப் போடுதல் (வின்.), to hang a person.

[ஞால் → நால் → நாலு – நாற்று → நாற்றுதல் –. தொங்குதல், நாற்றுதல்= தூக்கில் போடுதல்.]

நாற்று[2] *nāṟṟu,* பெ. (n) பிடுங்கி நடக்கூடிய பயிர்; seedlings reared for transplantation. 'நெல்நாற்று நெருக்கமாக இருந்தால், தூர்கட்டி விளச்சல் தராது' (இ.வ.). 'மிளகாய் நாற்றை முழுமையாக மறைக்கும் அளவுக்குக் களை வளர்ந்திருந்தது' (இக்.வ.).

[நாறு → நாற்று.]

வேறு இடத்தில் பிடுங்கி, நடுவதற்கான இளம்பயிர்.

நாற்றுக்கட்டு *nāṟṟu-k-kaṭṭu* பெ. (n.) நாற்று முடிகளின் தொகுதி; a bundle of nāṟṟu-muḍi

[நாற்று + கட்டு.]



நாற்றுக்கற்றை *nāṟṟu-k-kaṟṟai,* பெ. (n.) *நாற்றுக்கட்டு* பார்க்க; see *nāṟṟu-k-kaṭṭu.*

[நாற்று + கற்றை.]

நாற்றுத்தேங்காய் *nāṟṟu-t-tēṅgāy,* பெ. (n.) தேங்காய் நெற்று (யாழ்ப்.); seed coconut.

மறுவ. விதைத்தேங்காய், பிள்ளைத் தேங்காய்

[நெற்று → நாற்று + தேங்காய்.]

நெற்று → நாற்று = பேச்சுத்திரிபு.

நன்கு முற்றிய தேங்காய்.

நாற்றுநடவு *nāṟṟu-naḍavu,* பெ. (n.) நாற்று நடுகை; transplantation of seedlings.

[நாற்று + நடவு.]

நாற்றுப்பறி-த்தல் *nāṟṟu-p-paṟi-,* 4செ.குன்றாவி. (v.t.) நாற்றங்காலிலிருந்து நெல் நாற்றுகளைப் பெயர்த்து எடுத்தல்; to transplant as of paddy nursery.

[நாற்று + பறி-.]

நாற்றுப்பாக்கு *nāṟṟu-p-pākku,* பெ. (n) விதைக்குரிய பாக்கு (யாழ்ப்.); superior areca-nuts, used as seeds

[நாற்று + பாக்கு.]

நாற்றுப்பாத்தி *nāṟṟu-p-pātti,* பெ. (n.) நாற்று உண்டாக்கும் செய்; seed-bed, nursery

[நாற்று + பாத்தி.]

நாற்றுப்பாவு-தல் *nāṟṟu-p-pāvu-,* 5 செ.கு.வி (v.i.) 1. வித்தூன்றுதல் அல்லது விதை விதைத்தல்; to sow seeds. 2. இளஞ் செடிபதியம் வைத்தல்; to transplant seedlings.

[நாற்று + பாவு-.]

நாற்றுப்பிடி *nāṟṟu-p-piḍi,* பெ. (n.) *நாற்றுமுடி* பார்க்க; see *nāṟṟu-muḍi.*

[நாற்று + பிடி.]

நாற்றுப்பிடுங்கு-தல் *nāṟṟu-p-piḍuṅgu-,* 5செ.குன்றாவி. (v.t.) *நாற்றுப் பறி-த்தல்* பார்க்க; see *nāṟṟu-p-paṟi-.*

[நாற்று + பிடுங்கு-.]

நாற்றுமரம் *nāṟṟu-maram,* பெ. (n.) நாற்றுவிட்டுப் பிறகு எடுத்து நட்டுவளர்க்கும் மரம் (யாழ்ப்.); tree grown from a seedling.

[நாற்று + மரம்.]

தென்னை, மாமரம் முதலானவற்றை, முதற்கண், நாற்றங்கால் போன்ற இடத்தில் மரக்கன்றுகளாக வளர்ப்பர். தக்கபருவம் வந்தபின்பு, தோப்புகளில் பெயர்த்து நடுவர்.

நாற்றுமுடிமாலை *nāṟṟu-muḍi-mālai,* பெ. (n.) நாற்றங்காலிலிருந்து, நடவுவயலுக்கு வாய்க்காலில் இழுத்துச் செல்லும்படி நீண்டகயிற்றில் பிணைக்கப்பட்ட நாற்றுமுடித் தொகுதி; paddy plant bundle tied with long rope fecilitate pull via water canal.

[நாற்றுமுடி + மாலை.]

நாற்றுகளை, ஆற்றுப் பாசனம் அல்லது நீண்டவாய்க்கால் படுகையிலுள்ள வயல்கட்கு, எளிமையாகக் கொண்டு செல்லுதற்குப் பயன்பட்ட வழி எனலாம்.

நாற்றுமுடி *nāṟṟu-muḍi,* பெ. (n) ஒருசேரக் கட்டிய நாற்றின் முடிப்பு (ஏரெழு.31.); a small bundle of seedling for transplantation

[நாற்று + முடி.]



நாற்றுவிடு-தல் *nāṟṟu-viḍu-,* 18 செ. குன்றாவி. (v.t.) நாற்று உண்டாக்க விதை விதைத்தல்; to grow seedlings.

மறுவ. நாற்றுப்பாவுதல்.

[நாற்று + விடு-.]

விதையை அல்லது தவசத்தை ஊறவைத்து, நிலத்தில் முளைக்கச் செய்வதற்காகப் பாவுதல்.

நாறடி-த்தல் *nāṟaḍi-,* 4 செ.கு.வி. (v.i.) தரக்குறைவாக நடந்து மதிப்பின்மையை உருவாக்குதல்; to talk or behave in an extremely brazen manner

[நல் → நறு → நாறு + அடி-.]

பொதுவாக உயர் பணியிலிருப் போர். தம்கடமையைச் செவ்வனே செய்யாது, கண்ணியக் குறைவாக நடத்தல். சால்புடைமையைக் குழி தோண்டிப் புதைத்துத் தரக்குறைவாக நடத்தல்.

நாறல் *nāṟal,* பெ. (n) 1. நாறுகை; stinking, being offensive in smell 2. முடை நாற்றம்; stench, bad smell "*நாறற் பாழ்ந்துணி*" (அரிச்பு.சூழ்வி. 91.). 3. நாற்றமுடையது; stinking object. 4. தோன்றல்; coming to existence. 5. முளைத்தல்; spiringing out.

[நாறு → நாறல்.]

நாறல்தேகம் *nāṟal-tēgam,* பெ. (n.) நாற்றவுடம்பு; vile body.

நாறல்வாயன் *nāṟal-vāyaṉ,* பெ. (n.) வாய் நாற்றமுடையவன்; person whose mouth smells foul. 2. இவறன் (கஞ்சன்); miser "*நல்லவாயன் தேட்டை நாறல்வாயன் தின்னுவான்*" (பழ.). 3. யாவராலும் வெறுக்கத் தக்க வாய்முடை நாற்றத்தினன்; dirty, loath some person.

[நாறல் + வாயன்.]

நாறற்பாக்கு *nāṟaṟ-pākku,* பெ. (n.) சுவையுண்டாகத் தோலை அழுகுமாறு செய்த பாக்குவகை (யாழ்.அக.); areca-nut soaked in water till its husk begins to putrefy

நாற்று நடுதல்

[நாறல் + பாக்கு.]

பாக்கும் புகையிலையும் புற்று நோய்வருவிக்கும் தன்மையன. அதற்கு வெற்றிலை சேர்ப்பது மருந்தாகிச் செரிப்பிக்கும். இளைஞர்கள் பாக்கும் புகையிலைத்தூள்கலந்த பொக்கணமும் போடுவது மிகு கேடு.

நாறனா *nāṟaṉā*, பெ. (n) நெட்டி (மூ.அ.); sola pith

நாறாக்கரந்தை *nāṟā-k-karandai*, பெ. (n.) சிவகரந்தை; śivā's basil

நாறி[1] *nāṟi*, பெ. (n.) கற்றாழை (மலை.); aloe

[நார் → நாரி → நாறி = நாரினை மிகுதியாக உடையது.]

கற்றாழைகளில், சோற்றுக்கற்றாழை மருந்துப் பொருளாகவும், நீண்ட கற்றாழையில் நார் மிகுந்திருப்பதால் கயிறு போன்றவை திரிக்கவும் பயன்படுகிறது.

நாறி[2] *nāṟi*, பெ. (n.) நன்னாரி (சங்.அக.); indian sarasaparilla

[நார் → நாரி → நாறி.]

நாறு[1]**-தல்** *nāṟu-*, 5 செ.கு.வி. (v.i.) மணத்தல், to emit a sweet smell, to give forth perfume. "*நாறுபூம்பொழி னாரையூர்*" (தேவா.215:1.). 2. கெட்ட நாற்றம் வீசுதல்; to stink. "அழுகிய முட்டையைக் குளிர்பெட்டியில் வைத்ததால், காய்கறியெல்லாம் நாறுகிறது" "*நாறாதெடுத்தடவி வெரியூடே*" (திருப்பு.904.). 3. தோன்றுதல்; to appear, arise. "*திருநாறு விளக்கத்து*" (பதிற்றுப்.52,13.). 4. பிறத்தல்; to come into being, to be born "*தேர்பத்தினன் மகவென நாறி*" (கல்லா.94:25.). 5. முளைத்தல்; to sprout, shoot forth "*நிலத்திட்ட நல்வித்து நாறாமை யின்னா*" (இன்.நாற்.20.).

க., ம., நாறு.

[நுல் → நல் → நறு → நாறு-.]

தோன்றுதற்கருத்து வேரினின்று, இச் சொல் கிளைத்தது. காலப்போக்கில் நறுமணத்தைக் குறித்து நின்றது. இன்று மக்களிடையே முடைநாற்றத்தைக் குறிக்குஞ்சொல்லாக, வழக்கூன்றியுள்ளது. தற்காலத்தே, தகாத வழியில் பொருள் சேர்ப்போரின் செயற்பாடும், நாறுதல் என்னும் மக்கள்வழக்கு, குறித்தலுணர்க.

நாறு[2]**-தல்** *nāṟu-* 5 செ.குன்றாவி. (v.t.) முகர்தல்; smell "*உற்று நாறியுங் கண்டு முணர்ந்து*" (சீவக,885.).

[நறு → நாறு-.]

நாறு[3] *nāṟu*, பெ. (n.) 1. *நாற்று* பார்க்க; see *nāṟṟu* "*நாறிது பதமெனப் பறித்து*" (சீவக. 45). 2. முளை (வின்.); shoot, sprout

[நல் → நறு → நாறு]

முளை, நாற்று போன்ற பொருண்மையில் கழகக்காலத்தே, இச்சொல் வழக்கூன்றி யிருந்தது. பதிற்றுப்பத்தும், கல்லாடமும் 'நாறு' பற்றிய சொல்லாட்சிக்கு நற்சான்றாய்த் திகழ்கின்றன. காலப் போக்கில், கழகக்காலத்திற்குப் பின்பு சீவகசிந்தாமணியிலும், இச் சொல் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

தெ., ம., நாறு. க., நாறே.

நாறுகட்டி *nāṟu-kaṭṭi*, பெ. (n.) பெருங்காயம் (யாழ்.அக.); asafoetida

[நாறு(ம்) + கட்டி.]

நாறுகரந்தை *nāṟu-karandai.* பெ. (n.) கொட்டைக்கரந்தை (குறிஞ்சிப். 76, உரை); indian globe thistle.

[நாறு + கரந்தை.]

நாறுநறுவிலி *nāṟu-naṟuvili.* பெ. (n.) கொட்டை நாகவகை; clove - leaved black plum

[நாறு + நறுவிலி.]

நான் *nāṉ,* ப. பெ. (pro n.) தன்மையொருமைப் பெயர்; first person singular one of three iḍam *"ஊனில்ஆவி உயிர்க்கும் பொழுதெல்லாம் நான் நிலாவியிருப்பன் என் நாதனை".* (அப்பர்.தேவாரம்).

தெ., நா. க., நான். ம., நான்.

Aust nganya

chin ngowo

[யான் → நான்.]

நான்காம்குட்டம் *nāṉgām-kuṭṭam,* பெ. (n.) உடம்பு முழுவதும் பச்சை வண்ணத்துடன் கூடிய புண்களை யுருவாக்கும் தொழுநோய்; a kind of leprosy marked by green pallor of the skin and lesions all over the body

[நாலாம் → நான்காம் + skt. குட்டம்.]

நான்காம்வேதம் *nāṉgām-vēdam,* பெ. (n) நான்காவது வடமொழி வேதமான அதர்வம்; the adarva-vēdam, as the fourth.

[நான்கு + ஆம் + வேதம்.]

ருக், யஜுர், சாம, அதர்வணமென்று வடமொழியில் நான்கு மறைகள் அன்றித் தமிழில் இருந்ததாகக் கருதும் அறம். பொருள். இன்பம். வீடு என்பனவற்றுள் வீடு ஆகும். இது குறித்து ஆய்வாளரி டையே கருத்துவேறுபாடு உண்டு.

நான்காமீற்றுப்பால் *nāṉgām-īṟṟu-p-pāl* பெ. (n) நான்குமுறை கன்று போட்ட ஆவின்பால்; the milk yielded by the cow in its fourth calving

[நாலாம் → நான்காம் + ஈத்து → ஈற்று + பால்.]

நான்காமுறைக்காய்ச்சல் *nāṉgāmuṟai-k-kāyccal.* பெ. (n.) *நானாளை மாறன்* பார்க்க; see *nāṉāḷai-māṟaṉ*

[நான்காமறை + காய்ச்சல்.]

நான்கு[1] *nāṉgu.* பெ. (n) மூன்றுக்குமேல் ஒன்றுகூடும் எண்; the number four "அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்" (நாலடி,82.).

தெ., நாலுகு ம. நாங்கு.

[நால்–நால்கு→நான்கு.]

(ஒ.நோ.). நல்→ நால்→நாலம்→ஞாலம்= உலகம்.

பர →பார்= ஞாலம், உலகம்.

இது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நால்வகைப்பட்ட நிலத்தின் பெயரினின்று தோன்றியதாகும். ஞாலத்திற்கு, நானிலம் என்னும் பெயருண்மை காண்க. (த.வ.149.).

நான்கு[2] *nāṅgu,* பெ. (n.) நாலிலொரு பங்கு வட்டிக்காகச் சேர்த்து, அறுவடையானதும் கொடுப்பதாக ஏற்றுக்கொண்டு, பெறுந் தவசக்கடன் (இ.வ.); a system of loan by which grain is borrowed in the off season and repaid at the next harvest with an addition of 25 percent as interest.

[நால்கு →நான்கு .]

நான்குகண்மீன் *nāṅgu-kaṇ-mīṉ,* பெ. (n) காக்கை போன்ற கருமை நிறத்ததும், சேல்கெண்டை இனத்தைச் சேர்ந்ததுமான, மீன்வகை; a kind of blackish sēl fish.

[நான்குகண் + மீன்.]

இதன் வாலின் இருபக்கத்திலும் கண்போன்று இருபுள்ளி களையுடைய, சேல்மீன்.



நான்குகைப்பிராணி *nāṉku-kai-p-pirāṇi,* பெ. (n.) *நாற்கைவிலங்கு* பார்க்க; see *nāṟ-kai-vilaṅgu.*

[நான்குகை + skt. பிராணி.]

நான்குலி *nāṅguli,* பெ. (n) முன்னை மரம்; indian head acha tree

நான்கெல்கைமால் *nāṅgelgai-māl,* பெ. (n.) 1. நிலவெல்லை; limits or boundaries of a piece of land 2. அதிகாரவரம்பு; jurisdiction, as pertaining to boundaries

[நால்கு → நான்கு + எல்லை → எல்கை + மால்.]

நான்மணிக்கடிகை *nāṉmaṇi-k-kaḍigai,* பெ. (n.) பதினெண்கீழ்க்கணக்கினுள் அறம் என்னும் உறுதிப்பொருள் பற்றி, நூறு செய்யுட்களில், விளம்பிநாகனாரால் இயற்றப்பட்ட அறநூல்; an ancient didactic work by viḷambi-nāgaṉār in 100 stanzas, one of padiṉeṉ kīḻ-k-kaṇakku, (q.v)

[நால் → நான். + மணி + கடிகை.]

நான்கு மாணிக்கக்கற்கள் பதித்து ஆக்கிய கழுத்தணி என்னும் பெயர், ஒவ்வொரு பாவிலும் நான்கு கருத்துகள் வருவதைக் குறிக்கும் உத்தியைக் குறிப்பது.

"கள்ளிவயிற்றில் அகில் பிறக்கும். மான்வயிற்றில் ஒள்ளரிதாரம் பிறக்கும். பெருங்கடலுள் பல்விலைய முத்தம் பிறக்கும் – அறிவார் யார் நல்லாள் பிறக்கும் குடி" (நான்மணிக்கடிகை).

திரிகடுகம் மூன்றுகருத்துகளும், சிறுபஞ்சமூலம் ஐந்து கருத்துகளும், ஏலாதி ஆறுகருத்துகளும் கொண்டு வரும். அவை மூன்றும், மருந்து பற்றிய பெயர்களாக அமைய, இஃதொன்றே அணிகலன் பற்றியதாக அமைந்தது.

நான்மணிமாலை *nāṉ-maṇi-mālai,* பெ. (n). (அந்தாதி) ஈறு தொடக்கித் தொடையாகப் பாடப்பட்டதும், வெண்பா, கலித்துறை, அகவல், விருத்தம் என்பன, மாறி மாறி இயைந்து வரும் நாற்பது செய்யுள் கொண்டதுமான சிற்றிலக்கியவகை (பன்னிருபா. 255); a poem of 40 stanzas in andādi-t-toḍai (iṟū-toḍakki).

[நான்கு(நான்)மணி + மாலை.]

நான்மருப்பியானை *nāṉ-maruppi-yāṉai,* பெ. (n.) நாற்கொம்புடைய வெள்ளையானை (ஐராவதம்.) the four-tusked elephant of indiraṉ.

[நால் → நால்கு → நான்கு + மருப்பு + யானை.]

நான்மருப்பியானையூர்தி *nāṉ-maruppi-y-āṉai-y-ūrdi,* பெ. (n.). வெள்ளையானையை (ஐராவதத்தை) ஊர்தியாக உடைய இந்திரன் (சூடா.); indiraṉ, as riding airāvadam.

[நால் → நால்கு → நான்கு + மருப்பு + யானை + ஊர்தி.]

நான்மலத்தார் *nāṉ-malattār,* பெ. (n) தன்முனைப்பு (ஆணவம்), ஊழ்வினை, (கன்மம்), சுத்தமாயை (தூயமாயை) மறைப்பாற்றல் (திரோதாயி) என்னும் நான்கு மலமுடைய பிரளயாகலர் (தத்துவப்.21,உரை.); piraḷayā kalar having four malas, viz., taṉ-muṉaippu (āṇavam) ūḻviṉai, karumam, (kaṉmam) tūya-māyai (šutta-māyai) maṟaippāṟṟal (tirotāyi.).

(அனுக்கிருகம்) அருளல் சேர்த்துப் பிற்காலத்தில், மலம் ஐந்தென்றும் கூறுவர்.

நான்மலர் *nāṉ-malar,* பெ. (n). *நால்வகைப்பூ* பார்க்க; see *nāl-vaga-p-pū*

[நால்வகை → நான்மலர்.]

நான்மறை *nāṉ-maṟai,* பெ. (n.). ஆதனை வேதிக்கும் (பக்குவப்படுத்தும்) நான்கு மறைகள்; the four vēdās. "*நான்மறை முற்றிய அதங்கோட் டாசாற்கு*" (தொல்.பாயி).

[நால்மறை → நான் மறை.]

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் கூறுகள் என்பது தி.கா.சு.பிள்ளையின் தமிழர் சமயக்குறிப்பு.

நான்மறைபற்றி புலவர். இறைக்குருவனார் கூறுவது வருமாறு:-

வேதம், ஆகமம் என்னும் சொற்கள் அடுத்தடுத்து வைத்துப் பேசப்படுவதால், அவை இரண்டும் ஒரு நிகரன அல்ல. வேதம் - வேள்வி வழிபாட்டுக்குரிய வடபுலத்ததும், ஆகமம் கோயில் வழிபாட்டுக்குரிய தென்புலத்ததும் ஆகும்.

வேதம் முதலில் நான்காக இல்லை. இருக்கு (ரிக்) மட்டுமே, வேதமாக இருந்தது. பின்னர் அதனின்றும் பிரித்தெடுத்து, வேள்வி (எக்ஞம்) செய்வதற்கு ஏற்ப விரிவுபடுத்திய எசுர்வேதமும், இசைகூட்டிப் பாடுவதற்குச் செய்த சாமவேதமும் அமைக்கப்பட்டன.

இம் மூன்றினின்றும் பிரித்தெடுத்துச் சேர்த்ததே அதர்வன வேதம்.

நான்மறை என்னும் பழைய தமிழ் வழக்கையொட்டி, வடமொழி வேதங்களும் நால்வேதம் எனப்பட்டன.

நான்மறை என்னுஞ் சொல், தமிழில் தொல்காப்பியத்திலேயே இடம்பெற்றுள்ளது. வடமொழியில் நால்வேதம் அமைந்ததற்கு முந்தைய அதன் தொன்மையைச்சுட்டி, உரையாசிரியர் நச்சினார்க்கினியர், அந் நான்மறை, 'தமிழ்நான்மறை' என்று கூறுகிறார். அவர்கூறும் பெயர்கள் பிற்காலத்தன போலும்.

வாய்ப்பு நேர்ந்துழி நச்சினார்க்கினியரை வன்மையாக மறுத்தெழுதும் போக்குடைய மாதவச் சிவஞானமுனிவர், தாமெழுதிய தொல்காப்பியப் பாயிர விருத்தியில், நச்சினார்க்கினியரின் கருத்தை மறுத்தெழுதவு மில்லை, இருக்கு முதலாயினவென விரித்தெழுதவுமில்லை. ஆகவே, இனியர் கருத்து, முனிவர்க்கும் உடன்பாடென்றே கொள்ளலாம்.

இனி, பெரும் புலவர் அரசஞ் சண்முகனார் அவர்கள் தாமெழுதிய, தொல்காப்பிய பாயிரவிருத்தியில், நான்மறை பற்றி, நச்சினார்க்கினியர் கருத்தையே வழிமொழிகிறார். இதுபற்றிய அவர்தம் விளக்கம் வருமாறு:

"இனி, இருக்கும், யசுவும், சாமமும், அதர்வணமும் ஆகாவோவெனின், அவை அதங்கோட்டாசிரியர்க்கும், தொல் காப்பியனார்க்கும், பிற்காலத்தினராகிய வியாசமுனிவரால், சிலவாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினார்க்குப் பயன்படுமாறு, முன்னுள்ள மறையுட் சிலவற்றை, நான்கு கூறாகச் செய்யப்பட்டமையான் ஆகா வென்பது."

"இனித் தசரதன் மகன் இராகவன் காலத்திற்கு முன்னுள்ளதாகிய கபாடபுரம் தோன்றுவதற்கு முன்னும், தென் மதுரையைக் கடல்கொள்வதற்கு முன்னும், இந் நூல் செய்யப்பட்டமையானும், கபாடபுரமும் கடல்கொண்ட பின்னர், உத்தர மதுரை தோன்றிய காலத்துச் சந்துனுவின் மனைவியாகிய பரிமள கந்தியிடத்து வியாசமுனிவர் தோன்றியமையானும், அவர் பாரதத்துட் சமதக்கினி முனிவரையும், பரசுராமரையும் பற்றிக் கூறுதலால், சமதக்கினி முனிவர்க்கு மகனாரும், பரசுராமர்க்கு உடன் பிறந்தாருமாகிய, திரண தூமாக்கினி என்னும் இயற்பெயரையுடையவாசிரியர், தொல்காப்பியனார்க்கும், அவருடன் கற்ற அதங்கோட்டாசிரியர்க்கும், வியாசர் காலமும், அவர் புகுந்த நான்மறை காலமும், பிற்பட்டமை—யுணரப்படும்."

மொழிஞாயிறு பாவாணர் அவர்கள், ஆரிய வேதங்களை நான்காக வகுத்தமைத்த வியாசமுனிவரின் காலம், தொல்காப்பியர் காலத்துக்கு முந்நூறு யாண்டுகள் முந்தியது என்று கருதுகிறார். ஆகவே, ஆரிய நான்மறைகள் தொல்காப்பியத்துக்கு முந்தியன என்பதே அவர் கருத்து. இருப்பினும் தமிழில் மறைநூல்கள் மந்திரங்கள் எல்லாம் தொல்காப்பியர் கண்ட முந்துநூல்கட்கும் முந்தியன என்பதை அவர் வலியுறுத்துவது, ஈண்டுக் கருதத்தக்கது. ஆகவே, அவர் கூற்று தமிழ்நான்மறைகள் பற்றிய கருத்துக்கு முரணாமை அறியப்படும்.

இனி, தொல்காப்பியத்துக் கூறப்படும் மறையும், பிறவும் பற்றி அறிஞர் பா.வே. மாணிக்கனார் கூறுவது உளங்கொளத்தக்கது. அது வருமாறு:

தொல்காப்பியத்துச் சொன்ன மறை ஆரியமறை என்று ஒப்பினுங்கூட, உரையாசிரியர் கொள்கைப்படி, வியாசர் ஆரிய வேதங்களைச் சிக்கலகற்றித் தொகுப்பதற்கு நெடுங்காலத்துக்கு முன்னரே, தொல்காப்பியம் இயற்றலாயினது என்றலின், வியாசருக்குச் சில ஆண்டுகளுக்குப்பின்னர் வந்த, உரையாசிரியர் காலத்து வழங்கிய, இப்போது வழங்குகின்ற, உட்ராப்புத் துரையோ, மாக்கசுமுல்லரோ, பதிப்பித்த நான்கு வேதங்களல்ல என்பது, உரையாசிரியர் கூற்றாலேயே வெளிப்படை. வியாசருக்கு முந்திய ஆரியவேதமும், அவருக்குப் பிந்திய ஆரியவேதமும், ஒன்றற்கு ஒன்று படியாயின், வேதவியாசர் என்னும் பெயர்பெற்றார், புரட்டியது தான் என்ன?

வியாசருக்கு முந்திய தொல்காப்பியத்தில், வியாசருக்குப் பிந்தியதும், அவரால் திருத்தப் பட்டதுமான, ஆரிய வேதங்களினின்று திருத்தப்பட்டதுமான, ஆரிய வேதங்களினின்று உய்த்துப் பொருள்கோடல், தொல்லியல் ஆய்வு முறைக்கு ஒவ்வாது.

தொல்காப்பியத்தில் சொன்ன மறை இத்தகையது என்பது தெரிவதற்கு, நூலாவது, சுருதியாவது இப்போது இல்லை. அந்தணன் மறையைத் தழுவியே தொல்காப்பியம் எழுதப்பட்டிருக்கிறது என்பதும், தொல் காப்பியத்துட் காணாதது அந்த அந்தணர் மறையிற் காணலாகும் படியும், அவ்வந்தணர் மறையிற் காணாதவை தொல்காப்பியத்திற் காணலாகும் படியும் அமைந்திருக்கிறது என்பது, என் நம்பிக்கை.

ஆனால், அந்த அந்தணர் யாவர், அவர் மறை யாது என்பதுதான் புலப்படாதவற்றுட் சில. வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழுலகத்து அந்தணர் என்பாரும், சிந்துநாட்டுப் பிராமணர் என்பாரும் ஒருவரா? தமிழ்நாட்டு அந்தணர் மறையும், சிந்துநாட்டுப் பிராமணர் வேதமும் ஒன்றேயா? நான்மறை – சதுர்வேதம், அந்தணர், அரசர், வணிகர் வேளாளர் – பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் போலிஒற்றுமை கொண்டு இரண்டும் ஒன்றென்பதா? உட்கிடை வேற்றுமை கண்டு அன்றென்பதா?

தொல்காப்பியம் சொன்ன தமிழகத்து அந்தணர் மறை, வியாசருக்குப் பிந்திய ஆரிய வேதம் அன்றென்பதற்குச் சான்று, தொல்காப்பிய நூலிற் பல்லிடங்களிற் காணலாம். சிற்சிலவே இம் முடங்கலிற் குறிக்கவியலும்.

தமிழகத்து அந்தணர் மறையோ, தெய்வம் அஃறிணை என்பது, மந்திரங்கள் மாந்தர் கிளந்தவை என்பது, அந்த மந்திரங்களுக்கு–ருக்குகள் போன்ற அளவு முறையாகிய கட்டுப்பாடில என்பது, கொடி நிலை, கந்தழி, வள்ளி என்ற சிறப்பின் மூன்றும் முதல் என்பது, ழ, ற, ன, எ ஒவ்வுமன்றி ஆய்தம் முதலிய முச்சார்புத்தொகையாகச் சாரவரும் எண்ணிறந்த எல்லா எழுத்து களுக்கும், அகத்தெழு வளியிசை நுவல்வது, இத்தகையவான பல அடிப்படைக் கொள்கை களினாலேயே, இப்போதைய ஆரிய வேதங் களின்றும், முற்றும் வேறுபட்டிருத்தல் காணலாம்.

'ஆர்ய' என்னுஞ் சொல், தொல்காப்பியக் காலத்துக்குப் பின்னும், திவாகரக் காலத்துக்கு முன்னும், வந்து நுழைந்திருத்தல் கூடும். அப்போது, அதற்கு மிலேச்சன் என்னும் பொருள் இருந்ததும், நமக்குத் தெரியுமன்றோ? இன்னும் பிற்காலத்தில் 'ஆர்ய' என்பது மிலேச்சன் என்னும் பொருளை இழந்து 'ஆசான்' என்னும் பொருளில் வந்ததும், தெரிந்ததே.

ஆகவே, ஆரியன் ஆசானான சில நூற்றாண்டுகளிற்றான், அந்த ஆரியர் தமிழர்க்கு நெறி கற்பிக்கக் கூடுமேயன்றி, ஆரியன் மிலேச்சனாய் இருந்த காலத்தும், ஆரியனே உண்டாயிராத தொல்காப்பியக் காலத்தும், அதன் முற்காலத்தும், முந்திய நாளையில், ஆரியன் போய் வியாசருக்குப் பிந்திய ஆரிய வேதத்தை வைத்துக்கொண்டு பண்டைத் தமிழர்க்கு நெறி கற்பித்திருப்பான் என்பது, தொல்லியல் ஆராய்ச்சிக்கும் பொருந்தாது.

அவையல் கிளவிகள் அடுக்கடுக்காய்க் கிடக்கும் வேத வேதாந்தங்கள் வியாகரணங் களையுடைய, பிற்காலத்துச் சிந்துநாட்டாரியன், முந்திய தொல்காப்பியக் காலத் தமிழனுக்கு நெறி கற்பித்திருப்பானேல் அவையல் கிளவிக்கு மறுப்புத் தொல்காப்பியத்தில், தோன்றியிராது.

ஆரியன் ஆசானான சில நூற்றாண்டுகளில், அவன் நெறியைக் கடைபிடித்துத் தமிழரும், அவையல் கிளவிகளைப் பேச்சிலும், எழுத்திலும், வழங்கி வருவது வெட்டவெளியாய்த்தெரிகின்றதன்றோ? ஆயினும் அவையல் கிளவிகளை மாத்திரம் ஆரிய மொழியிற்றான் வழங்குவார்கள். (தமிழகம். பக்.153–55.).

'பண்டாய நான்மறை', 'மூவா நான்மறை' எனத்திருவாசகம் அடைமொழி கொடுத்துக் கூறுவது, வடமொழி நான்மறையினின்றும் தமிழ் நான்மறையை வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே என்று, நல்லறிஞர்கள் கருதுகின்றனர்.

இது பற்றிய விரிவான செய்திகளை பேரா. கா.சு.எழுதிய திருநான்மறை விளக்கம் என்னும் நூலிற் காணலாம். பேரா. சாம்பசிவம் என்பார் அதனை மறுத்தெழுதினும், அம் மறுப்புக்கு அக்காலத் தமிழறிஞர்கள் உடன்படினும் கா.சு. வின் கருத்து வலிமை குன்றிவிடவில்லை.

பழைய தமிழ் நான்மறைகள் அழிந்து போனமையானும், வடமொழி நால் வேதங்கள் வைதிக நெறிக்குப் பொருந்துவதன்றி, அதனின் வேறுபட்ட சிவநெறிக்குச் சிறப்பு வகையில் பொருந்தாமையானும், இறையருள் பெற்ற சமயக் குரவர்கள் நால்வர் அருளிய, தேவார திருவாசகங்களைத் தமிழ் நான்மறைகள் என்பது பிற்கால வழக்கு. அதனால் இழுக்கு ஒன்றும் இல்லை.

தென்னாடுடைய சிவனே யாயினும் எந்நாட்டவர்க்கும் இறைவனாய் விளங்கு பவனைப் பொதுவியல்பு பற்றி 'ஆரியன்காண் தமிழன்காண்' என்றோ கூறுவதைப் பிழை என்று தக்கோர் யாருங் கூறார். அப் போக்கில் இன்னும் பலவும் கூறிக் கொண்டே போகலாம்.

ஆனால், இவற்றையெல்லாஞ் சுட்டித் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில், தமிழ் மந்திரங்களை – திருமுறைகளை ஓதிக் குடமுழுக்குச் செய்யக்கூடாது என்பது, என்ன ஞாயம்?

வடபுல வைதிகத்தின் வேறுபட்ட தனித்தன்மை கொண்டது, தென்னாடுடைய சிவநெறி என்னும் உண்மையை, மறைப்பதுதான் முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது!

அன்று தமிழ்நாட்டில் சிவநெறியிடம் அடைக்கலம் புகுந்த வேத – வேள்விநெறிக்கு எதிராக நின்றன சமண, புத்த மதங்கள். இன்று தமிழ்நெறிக்கு எதிராக நிற்பது, இந்துமதத்தால் ஏற்றம் பெற்றுள்ள வைதிகநெறி!

திருஞானசம்பந்தர் முதலான அருளாளர்கள் அனைவரும், தமிழில் திருப்பதிகங்கள் ஓதித்தான், அருள்நிகழ்ச்சிகள் பலவற்றை நிகழ்த்தியிருப்பதாக, நூல்கள் கூறுகின்றனவே தவிர, யாரும், எவ் விடத்தும், பிறமொழி மந்திரங்களால் எச் செயலும் செய்ததாகச் சமய நூல்களில் சிறு குறிப்பும் இல்லை.

திருக்கோயில்களில், திருமுறைப் பதிகங்கள் பெற்ற கோயில்கள், 'பாடல்பெற்ற கோயில்கள்' என்று சிறப்பிக்கப்படுகின்றன. தனிப்பதிகம் இல்லாவிட்டாலும், பிற பதிகங்களில், ஊர்ப்பெயர் மட்டும் இடம் பெற்றிருப்பினும், அவையெல்லாம் 'வைப்புத் தலங்கள்' என்று, பெருமைப்படுத்தப்படுகின்றன. வடமொழியால் சிறப்புப் பெற்ற கோயில்கள் என்று ஏதும் இல்லை. தமிழ் என்றால், தெய்வநலங்கெழுமியது, அருள் நிறைந்தது என்று பொருள். அதனால்தான் அருணகிரியார், முருகன், முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் என்று பாடியுள்ளார். திருமூலதேவநாயனாரும், "தமிழ்ச்செய்தல்" என்று, பாடியுள்ளமையும், இவ் வுண்மையினை உணர்த்துதற்பொருட்டே, எனலாம்.

வடமொழி தனிமொழியன்று. தேவநாகரி, கிரந்தம் போன்ற எழுத்துக்களால் ஆயமொழி. நன்கு செய்யப்பட்டது, கட்டப்பட்டது என்பதே, வடமொழிக்குரிய பொருளாகும். தனிஎழுத்து ஏதுமில்லாமொழியில் வாய்மொழியாகச் சொல்லப்பட்ட நான்மறைகள் இருப்பதை மட்டும் பொருளாக எடுத்துக்கொண்டு, நான்மறை நந்தமிழ்மொழியில் இல்லை என்று முடிவுக்கு வருதல். ஆய்வாளர்தம் நேர்வழிப்பாதை ஆகாது. வடமொழியால் பாடல் பெற்ற திருக்கோயில் ஏதும் தமிழகத்தில் இல்லை.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் வாழ்வியல் பொருண்மைகளைத் தன்னகத்தே கொண்ட திருக்குறள் முதலான கழகப்பனுவல்களும், நால்வர்தம் நற்றமிழ்ப் பாக்களும், நாலாயிரத்தெய்வப்பனுவலும், இறைவனின் திருவுளப்பாங்காலும், தமிழ்த் தாத்தா அவர்களின் விடாமுயற்சியாலுமே, நமக்குக் கிட்டியுள்ளன வெனில் மிகையன்று! அனல்வாதம், புனல்வாதத்தால் அழிந்துபட்ட சுவடிகளை யாரறிவார்.

இதுகாறும் கூறியவற்றால், நான்மறை நந்தமிழ் மொழியில் இருந்து, பார்ப்பனீயரால் அழிக்கப்பட்டுவிட்டது என்பதில். இருவேறு கருத்திற்கு இடமில்லை எனலாம்.

நான்மறைமுதல்வன் *nāṉ-maṟai-mudalvaṉ,* பெ. (n). அந்தணன்; (brahmin) andaṇaṉ "*நான்மறை முதல்வர் திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி*" (புறநா.93.).

[நான்மறை + முதல்வன்.]

பழந்தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளைச் சிதைப்பதற்காக ஆரியப் பிராமணர்களால் திரித்துக் கூறப்பட்டவை; நான்மறை, நான்மறையோன் என்பனவாகும்.

எழுதாக்கிளவியாகிய நான்குமறையை நெட்டுருச் செய்வதவர் முதலில் கூற, வல்லின 5 எழுத்துகளுக்கு 4 ஒலிக்கூறுமட்டும் கற்றவர்களின் கணபாடமாகக் கூறுவர்.

அந்தணன் என்பது, அறவோரையே குறிக்கும். எல்லோரிடத்தும் செந்தண்மை பூண்டு ஒழுகுபவரே அந்தணர். காலப்போக்கில் குறிப்பிட்ட இனத்தாரைக் குறித்து வழங்கலாயிற்று. வள்ளுவர் அறத்தின் வழிப் பட்டவரே அந்தணர். என்று குறட்பாக்களில் குறித்துள்ளது, ஈங்கு எண்ணத்தக்கது. (குறள்,30,543.).

நான்மறைக் கோட்பாடு, நானிலத்தார் அனைவருக்கும் பொதுவானது. குமுகாய மாந்தர்தம் வாழ்வியலுக்கு வழிகாட்டுவது. காலப்போக்கில் ஒரு குலத்தாரைக் (பார்ப்பனரை) குறித்து வழங்கும் சொல்லாயிற்று, எனலாம்.

நான்மறையாளன் *nāṉ-maṟai-y.āḷaṉ,* பெ. (n.) நான்குவேதத்திலும் வல்லவனான அந்தணன் (பிராமணன்); andaṇaṉ (brahmin.) as versed in the four vēdās. "*தூயநான்மறையாளர் சோமுச்செய்ய*" (திவ்.பெரியதி.2:10:1.).

[நான்மறை + ஆளன்.]

ஓதும் முதல்வன் அன்றிக் கணபாடம் கூறுவாரில் சிலர் பொருளறிந்திருப்பர்.

நான்மறையுதிர்த்தகரு *nāṉ-maṟai-y-dirtta-karu,* பெ. (n.) பெண்குறி; the genital of female

நான்மறையோன்[1] *nāṉ-maṟaiyōṉ,* பெ. (n.)முப்புவல்லுநர்; the greatest scientist capable of finishing muppū.

[நால்மறை → நான்மறையோன்.]

நாலுதல் = விரிதல், நீட்டித்தல்.

மட்டமான மாழைகளைப் பொன்னாக்க முறைப்படித் தங்கமாக்குந் தன்மையுள்ள பொன்னாக் மூலியினைக் கண்டறிந்தவர், வாணாளை நீட்டிக்கச் செய்யும், பொன்னாக்க மூலியினை அறிந்தவர்.

நான்மறையோன்[2] *nāṉ-maṟaiyōṉ,* பெ. (n.). 1. பிரமன்; Brahmaṉ. 2. *நான்மறையாளன்* பார்க்க; see *nāṉ-maṟaiyāḷaṉ.* "*நந்தும்பாடியில் நான்மறையோனாய்*" (திருவாச.2:21.).

[நான்மறை → நான்மறையோன்.]

தமிழ்மறைகள் காலவெள்ளத்தில் அழிக்கப்பட்ட பின்பு, நான்கு வடமொழி மறைகள் மக்களிடையேச் சிறிதுசிறிதாக வழக்கூன்றலாயின. நான்மறையோதும் பார்ப்பனர், மன்னனின் அறியாமை அச்சத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமது பிழைப்பிற்காக, அரண்மனையில் நான்மறை ஓத ஆரம்பித்தனர். நான்கு முகங்கொண்ட பிரமன் என்னும் மூன்றாம் கடவுளைப் படைத்தனர் என்று, ஆய்வாளர் கருதுவர்.

நான்மறைவல்லி *nāṉ-maṟai-valli,* பெ. (n.) திருகுகள்ளி;(சா.அக.): twisted milk hedge.

[நால்மறை → நான்மறை + வள்ளி.]

அகன்ற முட்களுடன் கூடிய இலைகளையுடைய திருகுகள்ளி.

நான்மாடக்கூடல் *nāṉ-māḍa-k-kūḍal.* பெ. (n.) கூடல்மாநகர். Madurai city "*நான்மாடக்கூடன் மகளிரு மைந்தரும்*" (கலித்.92,65.).

மறுவ. தென்மதுரை.

[நால்மடம் → நான்மாடம் + கூடல்.]

திருக்கோயிலை மய்யமாகக் கொண்ட நான்கு மாடவீதிகளிலும், வானளாவிய வளமனைகள் விளங்கித் தோன்றும் மதுரை மாநகர்.

நான்மாடக்கூடலின் பெயர்க்கரணியம் குறித்து நச்சினார்க்கினியர் நவில்வது:– "திருஆலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் இவைகளுக்கு நடுவிருத்தலின் இப் பெயர் பெற்றது".

நான்முகக்கள்ளி *nāṉ-muga-k-kaḷḷi,* பெ. (n). சதுரக்கள்ளி; Squre spurge

[நான்முகம் + கள்ளி.]

நான்முகத்தோன் *nāṉ-mugattōṉ,* பெ. (n.). *நான்முகன்,1.(பிங்.)* பார்க்க; see *nāṉ-mugaṉ.*

[நான்முகன் → நான்முகத்தோன்.]

நான்முகப்புல் *nāṉ-mugappul,* பெ. (n) நாணல் (வின்.); kaus.

மறுவ. சதுரப்பட்டைப்புல்.

[நான்முகம் + புல்.]

நான்கு பக்கங்களிலும் பட்டையாகத் திகழும் அமைப்புடன் கூடிய புல்.

நான்முகவேதியன் *nāṉ-muga-vēdiyaṉ,* பெ. (n.) *கல்லாரை*; a kind of herbal.

நான்முகன் *nāṉ-mugaṉ,* பெ. (n) **1.** நாலுமுகமுடையவனாகக் கருதப்படும் பிரமன்; Brahmaṉ, as four-faced *"நான்முகற்கு...... மறைபயந்த பண்பன்"* (திவ்.இயற்.1:33.). **2.** அருகன்; Arhat

[நால்முகன் → நான்முகன்.]

நான்முகன்கிழத்தி *nāṉ-muagaṉ-kiḻatti,* பெ. (n.). நான்முகன் மனைவியாகிய கலைமகள் (பிங்.); Kalaimagaḷ, as the consort of Nāṉmugaṉ.

[நால்முகன் + கிழத்தி.]

நான்முகன் மனைவி கலைமகள் என்றும், திருமால் மனைவி திருமகள் என்றும் பிற்காலப் புனைகதைகள் கூறும்.

நான்முகன்திருவந்தாதி *nāṉ-mugaṉ-tiru-v-andādi,* பெ. (n). திருமழிசையாழ்வார் இயற்றியதும், நான்முகன் என்ற சொல்லால் தொடங்குவதுமான, நாலாயிரத்தெய்வப்பனுவல் பகுதி; a section nālāyira-p-pirabandam by Tiru.-maḻišai-y-āḻvar,commencing with the word nāṉ-mugaṉ.

[நான்முகன் + திரு + அந்தாதி.]

அந்தம் + ஆதி = ஈறுமுதலி.

நான்முகன்தேவி *nāṉ-mugaṉ-tēvi.* பெ. (n). நான்முகன் கிழத்தி; Kalaimagaḷ, as the consort of Nāṉ-mugaṉ **2.** மனோசிலை (யாழ்.அக.); a mineral poison.

[நான்முகன் + தேவி.]

நான்முலையாயம் *nāṉ-mulai-y-āyam,* பெ. (n.). ஆநிரைத்தொகுதி மாடு; hard of cows. *"நான்முலையாய நடுங்குபு நின்றிரங்கும்"* (சிலப்.17, உரைப்பாட்டுமடை,5.).

[நால் + முலை + ஆயம்.]

நான்மைநன்னெறி *nāṉmai-naṉṉeṟi,* பெ. (n.). திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருநாவலூரர், மாணிக்கவாசகர் முதலான நால்வர் பெருமக்களால், நானிலம் உய்யும்பொருட்டு வாழ்ந்து காட்டிய வாழ்வியல் நெறி; the fourfold life principles of nālvar viz., Tiruñāṉa-šampandar, Tirunāvu-k-karašar, Tirunāvalūrar (šundarar), Māṇikka-vāšagar.

[நான்மை → நன்னெறி.]

1. மகன்மைநெறி– திருஞானசம்பந்தப் பெருமான், இறைவனைத் தந்தையாகவும், இறைவியைத் தாயாகவும், மேற்கொண் டொழுகி, ஞாலத்துவாழ் மாந்தர்தமக்கு நல்லொழுக்கம் கற்பித்த நன்னெறி.

(எ.டு.) 1. "சிந்தையே புகுந்தான் திருவாரூர்எம் எந்தை தானெனை யேன்று கொளுங் கொலோ"

2. "தாதையார் முனிவுறத்தான் எனைஆண்டவன்"

3. "வெந்தநீ றாடியார் ஆதியார் சோதியார் வேதகீதர் எந்தையாரூர் தொழுதுய்யலாம் மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே"

4. "வெப்பொடுவிரவியோர் வினைவரினும் அப்பாவுன் உன்அடியலால் அரற்றாது என்நா"

5. "இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார்"

6. "வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும் எந்தாய் உன்னடியலால் ஏத்தாது என்நா"

மேற்குறித்த திருஞானசம்பந்தர் தம் திருப்பதிகப் பாடல் வரிகள்– இறைவன்பால் இவர்பூண்ட மகன்மை உறவினை எடுத்துக்காட்டுகின்றன எனலாம். சிவக்கொண்முடிபாளர், திருஞானசம்பந்தப் பெருமானைச் (சரியைநெறி) அல்லது நல்லொழுக்க நன்னெறியினைத் தமது வாழ்க்கையில் மேற்கொண்டு ஒழுகி, இவ் வையம் உய்யும் பொருட்டு, வாழ்ந்து காட்டிய புகலியர்கோன் என்று புகல்வர்.

சரியைநெறி அல்லது நல்லொழுக்க நன்னெறி என்பது, இறைவனின் புகழ்மொழிகளையே, எஞ்ஞான்றும் பேசுவதும், பாடுவதுமாகும். திருஞானசம்பந்தர், இறைவனுடைய பொருள் பொருந்திய புகழ்மொழிகளைத் தாமும் பாடி, பிறரையும் பாடச்செய்தார். இவர்தம் நல்லொழுக்க நன்னெறிக்கு எடுத்துக்காட்டாக, வள்ளுவர் வகுத்துள்ள வாய்மொழி வருமாறு:–

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு" (குறள்,5.)

இக் குறட்பாவினுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தவர் சம்பந்தர். முடிவாக, ஞானசம்பந்தர், மண்ணில் நல்லவண்ணம், வையத்தார் வாழும் பொருட்டு, எல்லாம்வல்ல இறைவனின் பொருள் பொதிந்த புகழ்தரும் செஞ்சொற்களைத் திருப்பதிகத்தமிழ்நெறியின் வாயிலாகப் பாடி, திருவருளை அடைந்து, பிறப்பிறப்பற்ற முத்திநிலையை எய்தினார் எனலாம்.

2. தொண்டுநெறி–திருநாவுக்கரசர்

இவ் வையம் வாழ்வாங்கு வாழ்வதற்கு உறுதுணை புரியும்நெறி: மாந்த வாழ்வியக் கத்தின் அடிப்படைநெறி: அனைத்துச் சமயத் தவரும், தத்தம் வாழ்வில் கடைபிடித்து ஒழுக வேண்டிய பொதுநெறி. சமயப்பற்று அற்றவரும், சார்ந்து ஒழுகும் நன்னெறி. இந் நெறிபற்றி நாவுக்கரசர் குமுகாயத்தார்க்குக் கூறுவது

> "நன்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
> தென்கடம்பைத் திருக்கரக்கோயிலான்
> தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
> என்கடன்பணி செய்து கிடப்பதே"
> என்பதாகம்.

ஒவ்வொருவரும், அவரவர்தம் பணியினைச் செம்மையாகச் செய்து முடிக்க வேண்டும். என்னும் தொண்டு நெறியின் மூலப்பொருளை. இப் பாடல் பகர்கின்றது என்பார், திரு.வி.க.

தொண்டுநெறியின் பொருளாழம் குறித்து திரு.வி.க மேலும் கூறுவது வருமாறு:–

அஞ்சாமை, உண்மை, இன்பம்–இவற்றின் முதன்மையாகிய உரிமை–இவற்றைப் பெறுதற்கு நாவுக்கரசர் நவிலும் நல்வழியே–பணி என்னுஞ்செவ்வழி. பணியினால் அனைத்தும் பெறலாம். அப்பர், மனம், மொழி, மெய்களால் பணிபுரிந்தே, அஞ்சாமை, உண்மை, இன்பம், உரிமை என்பவைகளைப் பெற்றார்.

திருப்பணியை (service)ப் பற்றிப் பேசாத பெரியோரில்லை; நூலில்லை; பணிசெய்யாதார் உலகத்திலுளரோ? தோட்டியும் பணி செய்கிறான்; தொண்டைமானும் பணிசெய்கிறான்; அறவோனும் பணி செய்கிறான்; ஆண்டவனும் பணிசெய்கிறான்"

இவ்வுலகிலும் உயிர்கள் எல்லாம் ஓயாது பணிசெய்கின்றன. உலகமெல்லாம் "பணி" மயமாகவே பொலிகின்றன. எல்லா உயிர்கட்கும், பொதுவாயுள்ள பணியின் சிறப்பை, நாவுக்கரசர் "என்கடன் பணிசெய்துகிடப்பதே" என்னுந் திருப்பதிக வரியின் வாயிலாகச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார்.

இத் திருப்பதிகத் திருவரி காலதேசத்தைக் கடந்து நிற்கும் பொருட் பொருத்தப்பாட்டினைப்

புகல்வ,து எஞ்ஞான்றும் நின்றுநிலவும், செந் நெறியாம், தொண்டுநெறி பற்றியது. எவரெவர், எப்பணியில் காதல் கொண்டிருக்கிறாரோ, அவரவர் அவ்வப் பணிவழி நின்று, பயன்கருதா நன்னெஞ்சுடன் நற்றொண்டாற்ற வேண்டும் என்னும் பொருண்மையது.

இறைவன், தொண்டாற்றும் தூய அடியார்க்கு, எஞ்ஞான்றும் உறுதுணை புரிவா னெனும், வாழ்வியல் கொள்கை, நாவுக்கரசர் பாடல்களில் பரவலாக பதிந்துள்ளது எனலாம். நற்றமிழ்ப்பாக்களால், நானில மாந்தர்தம் மனத்தைத் தூய்மை செய்து, இறைமைத் தன்மையை வளர்த்ததுபோல், உழவாரப்படை கொண்டு, திருக்கோயில்கள் தோறும் சென்று, தூய்மைசெய்து–தொண்டு நெறியை வளர்த்தார். நல்லொழுக்கநெறி நின்று (சரியைநெறி) பயன்கருதாத் தொண்டாற்றிய பெருமை நாவுக்கரசரையே சாரும்.

3. ஓகநெறி தோழமைநெறி

ஓகம் என்றால் மனச்செறிவு; மனம் ஒருமுகப்பட்டு, எஞ்ஞான்றும் இறைவனைச் சார்ந்து நிற்றலே ஓகம். உடல், உயிர், உயிர்க்குயிராகிய இறைவன் ஆகிய வரிசை அமைப்பில். இடையில் நிற்கும் உயிர் உடலையும். உலகப்பொருள்களையுமே சார்ந்து நின்று. பிறவியில் அழுந்தும் தன்மைத்து. பிறப்பிற்குக் கரணியமாகத் திகழும் உலகவாழ்க்கையில் திளைக்காது. எப்பொழுதும் இறைவனுடன் ஒன்றியிருப்பதே ஓகமாகும். இந் நிலையில், இறைவனும் ஆதனும் ஓகநெறியில் (யோகமார்க்கத்தில்) தோழமைநெறியில் நிற்பார்கள் என்று, சிவக்கொண்முடிபாளர் விளக்குவர்.

இவ் வோக நெறியில் இறைவனுடன் தோழமை பூண்டு, ஒழுகியவர் நம்பியாரூரர் எனப்படும் சுந்தரராவார்.

நம்பியாரூரரால், ஏழாந்திருமுறையில் இத் தோழமை நெறி, பலவாறு சிறப்பித்துப் பேசப்படுகிறது.

"நம்மைஉமக்குத் தோழனாகத்தந்தோம்" என்று இறைவன் அருளிய திறம், உலகச்சமயவரலாற்றில் எஞ்ஞான்றும் நிகழ்ந்திலது என்பர், சிவக்கொண்முடிபாளர்

தமிழகத்துச் சைவம் தந்த, பெரும்பேறே தோழமைநெறி என்று, உலகத்தத்துவ அறிஞர்கள் கருதுகின்றனர். இறைவன் ஆதன் (ஆன்ம) உறவுமுறையைச் சமயவுலகில். நம்பியாரூரர் தவிர வேறு எவரும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. தோழமை உறவினை விளக்கும் நம்பியாரூரரின் திருப்பாட்டு வருமாறு:– "ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக்கு உடனாகி" (தேவா. 7:51:10).

4. மெய்யுணர்வுநெறி (ஞானம், அறிவம்)

எல்லாம்வல்ல பரம்பொருளை அறியும் நெறியே மெய்யுணர்வு நெறி. இம் மெய்யுணர்வு பெற்றோர் அடையும் உயர்நிலையை வள்ளுவப்பெருந்தகை "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாராநெறி" (குறள்,356.) என்று விளக்குவது காண்க. மாணிக்கவாசகர் மெய்யுணர்வு நெறியில் (ஞானத்தில்) தலைநின்றவராவார். இவர் மெய்யுணர்வ நெறியில் (ஞானநெறியில்) பரம்பொருளால். ஆட்கொள்ளப்பட்டவர். இக் கருத்தினை.

"நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து என்உளம்புகுந்து அடியேற்கு அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே"

என்றபாடலின் மூலம் விளக்குகிறார். மெய்யறிவுபெற்றவர், மீண்டும் பிறவார். முத்தியில் திளைப்பர். இக் கருத்தினை "ஞானம் வந்தால் பின் நமக்கெது வேண்டும்?" என்று கூறுவதன் வாயிலாக, ஔவையார் வலியுறுத்துவது காண்க.

உலகியல் பொருள்கள் மீது அதாவது மண், பெண், பொன் இவற்றில் கொண்டுள்ள

பற்றினையே, பற்றாகக்கொண்டு ஒழுகும் நெறியே. மெய்யறிவு (ஞான) நெறியாகும். பதியறிவு வாய்க்கப்பெற்றவரே மெய்யறிவு பெற்றோர். மாணிக்கவாசகரை இறைவன் தானாக வலியவந்து ஆட்கொண்டான். இக் கருத்தினை,

"ஊனாய் உயிராய் உணர்வாய் என்உட்கலந்து"........"தாமேவந்து எமைத் தலையளித்து ஆட்கொண்டருளும்" ஊன் கெட்டு, உயிர்கெட்டு, உணர்வுகெட்டு, என் உள்ளமும் போய், நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என்ற பாடல்வரிகள் மாணிக்கவாசகரின் உள்ளத்தில், மெய்யுணர்வு அருள்நெறி, எஞ்ஞான்றும் நின்று நிலவியதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன என்று, சிவக்கொண்முடிபாளர் கருதுகின்றனர்.

(எ.டு) "இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க" இம்மெய்மை வரிகளே, ஜி.யு.போப் அவர்களை நெக்குருகச்செய்தன.

அவனருளாலே அவன்தாள் வணங்கியவர் மானிக்கவாசகர். இக் கருத்தினைச் "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனக்கருளியவாறு ஆர்பெறுவார்அச்சோவே" என்ற பாடல்வரிகளில் தெளிவுறுத்துகிறார். இம் மும்மல நீக்கத்தை வள்ளுவர், "காமம்வெகுளிமயக்கம் இவை மூன்றின் நாமம்கெடக் கெடும் நோய்" (குறள்,360.). என்ற குறட்பாவில் விளக்குகிறார்.

நான்றவாய் *nāṉṟa-vāy,* பெ. (n.). நால்வாய்; hanging mouth.

[ஞால் → நால் → நான் → நான்ற + வாய்.]

நாலுதல் = தொங்குதல்.

தொங்கிக்கொண்டிருக்கும் வாய்.

நான்றீஅளவு *nāṉṟi-aḷavu,* பெ. (n.). இரண்டு பலம் அல்லது இரண்டு வராகன் எடையளவு; six tōla weight or two pagōda weight.

நான்று *nāṉṟu,* பெ. (n.) காலம்; day, time "*உலகளந்து நான்று*" (திவ்.இயற்.1.17.).

[ஞான்று → நான்று.]

நான்றுகொண்டுநில்-தல் *nāṉṟu-koṇḍu-nil-,* 14 செ.கு.வி. (v.i.) *நான்று கொள்–* பார்க்க; see *nāṉṟu-koḷ-*

[ஞால் → ஞான் → ஞான்று → நான்று + கொள் → கொண்டு → நில்–.]

நான்றுகொள்ளு-தல் *nāṉṟu-koḷḷu-* 16 செ.கு.வி. (v.i.) கயிற்றைக் கழுத்திலிட்டுக் கொண்டு. தானாக உயிரை மாய்த்துக் கொள்ளுதல்; to hang oneself. "*நான்றியான் சாவலன்றே*" (சீவக.2513.).

[ஞால் → நால் → நான்று+கொள்ளு–. கழுத்திற்சுருக்கிட்டுத் தொங்கிச் சாதல் (வே.க.3.16.).]

நானச்செப்பு *nāṉa-c-ceppu,* பெ. (n.). புழுகுச் செப்பு; box or receptacle for civet "நானச்செப்போ டல்லவுங் கொள்க வென்றான்" (சீவக.558.).

[நானம்¹ + செப்பு.]

நானம்¹ *nāṉam,* பெ. (n.) 1. நறுமணப்பண்டம்; fragrant substance, "*நானங் கலந்திழிய நன்மலைமேல் வாலருவா*" (ஐந்.ஐம்.13.). 2. மான் (கத்தூரி)மணத்தி; mush "*நானங் கமழுங்கதுப்பினாய்*" (நாலடி,294.). 3. புனுகுப் பூனை; civet. "*தேமார்ந்த நானந் தோய்த்து*" (சீவக.1652.). 4. மான்மணத்தி (கத்தூரிமான்.); (சூடா.) mush deer. 5. பூசுவன (பிங்.); unguents for the body· perfumed oil for bathing scented hair. oil 6. நறுமணப்பொடி fragrant powder. "*நலத்தகு நானநின்றிடிக்கு*

நல்லவா்" (சீவக.92.). 7. கவரி மான் (பிங்.); yāk. Bos grunniens.

[நாணம்¹ + செப்பு.]

நானமா *nāṉa-mā,* பெ. (n.). கத்தூரிமான்; musk-deer

நானமாலி *nāṉa-māli,* பெ. (n.). கவுரிவைப்பு நஞ்சு; a kind of prepared arsenic.

நானல்கூர்கை *nāṉal-gūrgai,* பெ. (n). அமைதியாய் இருக்கை; preserving silence.

[நா + நல்கூர்கை.]

நானவெண்ணெய் *nāṉa-v-eṉṉey,* பெ. (n.). நறுமணநெய்மம்; perfumed oil. "நான வெண்ணெய் கதுப்புரைத்து நறுநீராடி" (சீவக.2692.).

[நறுமணம் + எண்ணெய்.]

நீராடுங்கால், தேய்த்துக் குளிக்கும் நறுமண எண்ணெய்.

நானா *nāṉā,* பெ.எ. (adj.) ஒன்றுக்கு மேற்பட்ட பல: sundry, diverse, various, many. "*பிராரத்வ நானாவாகும்*" (கைவல்.தத்.97.).

[நால்² → நாலா → நானா.]

ஒ.நோ. தலை→தலா.

நானாங்கள்ளி *nāṉāṅ-kaḷḷi,* பெ. (n.) இலைக்கள்ளி (மலை.); ilaik kaḷḷi, spiral five tubercled spurge.

[நால்² → நானாம் + கள்ளி.] படம்



நானாதேசி *nāṉā-tēśi,* பெ. (n.). வணிகர் பிரிவு (I.M/P.cg.682) a class of merchants.

[நாலா → நானா + தேசி.]

நாட்டின் நாலாபக்கத்திலிருந்து வரும் வணிகர்.

நானாமருந்து *nāṉā-marundu,* பெ. (n.). பலவகைக் கடைச்சரக்குகளால் உருவாக்கப்பட்ட மருந்து; a mixture or compound of different medicinal drugs.

நானார்த்தபதம் *nāṉārtta-padam,* பெ. (n.) பலபொருளொரு சொல்; a word of many senses. "*உரிச்சொல்.....நானார்த்த பதமாகியும் அமானார்த்த பதமாகியும்*" (பி.வி. 18,உரை).

[நால்² → நாலா → நானா + skt. அர்த்தம் + பதம்.]

நானாவிகாரி *nāṉā-vigāri,* பெ. (n.). பல கோணங்களில் நிலைமாறுந் தன்மையுள்ள பொருள்; that which is subject to many transformations. "*நானாவிகாரியாய் நானறிந்தறி யாமையாய்*" (தாயு.ஆனந்த.7.).

[நால்² → நாலா → நானா + skt. விகாரி.]

நானாவிதச்செடி *nāṉā-vida-c-ceḍi,* பெ. (n.). வேப்பிலை நங்கை; pepper naṅgay.

[நாலாவிதம் → நானாவிதம் + செடி.]

நானாவிதமாய்ப்போ-தல் *nāṉā-vidamāy-p-pō-*. 8 செ.கு.வி. (v.i.) பலவகையாய்ச் சிதறுண்டு போதல் (இக்.வ.); to be scattered in many ways, as riches.

[நாலா → நானா + விதமாய் + போ-.]

நான்குதிசையிலும் பிரிந்துபோதல்.

நானாளைமாறன் *nāṉāḷai-māṟaṉ,* பெ. (n) நாலுநாளைக்கு ஒருமுறைவரும் காய்ச்சல் (சாதுர்த்திகம் (யாழ்.அக.); quartan fever

மறுவ. முறைக்காய்ச்சல்.

நானாற்றிசை *nāṉāṟṟisai,* பெ. (n). பலதிசை; different directions "*நானாற்றிசையும் பிணம் பிறங்க*" (களவழி.6.).

[நால் + நால் + திசை.]

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்னும் நான்கு திசைகள். வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என்பதையும் குறிக்கும்.

நானிலப்பிரிப்பு *nāṉila-p-pirippu,* பெ. (n). *நானிலமுறை* பார்க்க: see *nāṉila-muṟai*

நால்நிலம் → நானிலம் + பிரிப்பு.

நானிலம் *nāṉilam,* பெ. (n) குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் என்னும் நால்வகைப்பட்ட பிரிவுடைய நிலம்; earth, as consisting of the four kinds of tracts, viz kuriñji, mullai, neydal, marudam

[ஒருகா. நான்கு + நிலம் → நாநிலம் → நானிலம்.]

நால்வகை நிலத்தொகுதி (சொ.அ.பக்.45.).

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்து நடுங்குதுயர்உறுத்து பாலை என்பதோர் படிவங்கொள்ளும்" (சிலம்பு). தமிழில் உலகத்தைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று நானிலம். இது காரணப்பெயர். பழந்தமிழ் மக்கள். தாம் வாழ்ந்த உலகை—தமிழகத்தை—அதன் இயற்கை இயல்புகளை நோக்கி, நான்காகப் பகுத்தனர். தமிழர் தாம் கண்ட உலகினை, அதிற்காணும் மலை, காடு, வயல், கடல் ஆகியவற்றின் அடிப்படையிலான ,இயற்கைத் தன்மையை உளங்கொண்டு..... நன்றாகப் பகுத்துக் கண்டு—, அதற்கு நானிலம் என்று பெயரிட்டு வழங்கிய பாங்கு, தமிழர்தம் நிலநூலறிவினை உலகத்தார்க்குப் பறைசாற்றுந்தன்மையில் அமைந்துள்ளதெனலாம்.

நானிலமுறை *nāṉilamuṟai,* பெ. (n) *நானிலவொழுங்கு* பார்க்க; see *nāṉila-v-oḻuṅgu*

[நால்நிலம் → நானிலம் + முறை.]

நானிலவைப்பு *nāṉila-vaippu,* பெ. (n) *நானிலவொழுங்கு* பார்க்க; see *nāṉila-v-oḻuṅgu*

[நானிலம் + வைப்பு]

1. குறிஞ்சி = மலையும்மலைசார்ந்த இடமும்.
2. முல்லை = காடும்காடு சார்ந்த இடமும்.
3. மருதம் = வயலும்வயல் சார்ந்த இடமும்.
4. நெய்தல் = கடலும். கடல்சார்ந்த இடமும்.

நானிலவொழுங்கு *nāṉila-v-oḻuṅgu,* பெ. (n.). *நானிலவைப்பு* பார்க்க; see *nāṉ-nila-vaippu*

[நானிலம் + ஒழுங்கு.]

நானூல் *nāṉūl,* பெ. (n.) மார்பிற் றொங்கும் நான்கு புரிகளையுடைய பூணூல்; sacred thread, as hanging on the shoulder "*நானூன் மார்க்க ணணிக்குறி சொற்று*" (கல்லா.46,7.).

[நால்[1] → நான் + நூல்.]

மார்பில் தொங்கும் பூணூல்.

திருமணமாகும்முன், கல்வி முடிக்கும் பணி (பிரமச்சாரி) நிலையில் 4 புரியும், திருமணம் 48 அகவையில் முடிந்தபின், 8 புரிநூலணியும் பாங்கு, பார்ப்பனீயப் பண்பாகும்.

நானூறு *nāṉūṟu,* பெ. (n.) நான்கு நூறு கொண்ட எண்; four hundred

க. நானூறு.

[நால்[2] + நான் + நூறு.]

கடைக்கழகப் பாடல்களைப் புறம் பற்றித் தொகுத்தபோது, 400 பாக்கள் இருந்தால், அகநானூறு, (நற்றிணை) நட்டிணை, குறுந்தொகை என அகப்பாக்களையும், அடிவரம்பு பற்றி மூன்று நானூறுகளாகப் பிரித்தனர். பழமொழி நானூறு என்றும், ஒருதுறைக்கோவை நானூறு என்றும், இடைக்கால, பிற்காலங்களில் தமிழில் நானூறு எனும் சொல்லாட்சி, இலக்கியங்களைப் பிரிக்கும் பான்மையில் எழிலுற இடம்பெற்றுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ஐந்தாம் மடலம் - இரண்டாம் பாகம்

நி, நீ

Vol. V - Part - II

முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.

அரசு செயலாளர்,

தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட

இயக்கக வெளியீடு

2005

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ஐந்தாம் மடலம் - இரண்டாம் பாகம்

நி - நீ

Vol. V- Part - II

முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.

அரசு செயலாளர்,

தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு

2005

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 14

முதற் பதிப்பு : 2005

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. V, Part - II

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு
Government of Tamilnadu

விலை : உருபா 400/–

குறியீட்டெண் : Colon No. P.J1-J, 314"K.M4

வெளியிட்டோர் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

அச்சீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை 600 113.

நூல் கிடைக்குமிடம் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை – 600 113.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

VOL. V- PART II

ஐந்தாம் மடலம் - இரண்டாம் பாகம்

(நி - நீ)

பதிப்புக் குழு

முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.

அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும்

அறநிலையத் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

கூர்ந்தாய்வாளர்கள்

புலவர் த.சரவணத் தமிழன்

திரு.மா.பூங்குன்றன்

தொகுப்பாளர்கள்

திரு.முத்து.பிச்சை

முனைவர் மு.கண்ணன் (பகுதிப் பொறுப்பாளர்)

முனைவர் பா.வெற்றிச்செல்வன்

முனைவர் ச.செந்திலாண்டவன்

முனைவர் இரா.கு.ஆல்துரை

திரு.கா.இளமுருகு

திரு.ச.கி.கணேசன் (ஓவியர்)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

ஜெ ஜெயலலிதா
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை—600 009.

நாள் 26.12.2005

அணிந்துரை

'வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி தமிழ்!' அந்த வண்டமிழ், 'ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி இசை கொண்டு வாழ' ஏற்ற பணிகளை ஆற்றி வருகிறது எனது அரசு.

தமிழ்நாடு அரசு, தமிழ் நாடும் அரசாக விளங்குகின்றது. இந்திய அரசின் ஆட்சி மொழியாகத் தமிழை ஆக்கவும், இணையற்ற தமிழ் மறையாம் திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக ஆக்கவும், ஒல்லும் வகையான் ஓயாது முயன்று வருகிறது தமிழ்நாடு அரசு. 'முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையதாய் விளங்கும் நம் தமிழ், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய்' விளங்க வேண்டும் என்ற விழைவோடு, முத்தமிழோடு நான்காம் தமிழாக அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தி, அதனை மழலையர் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை, மாணவ மாணவியர் கற்க ஏற்பாடு செய்தேன்.

உயர்தனிச் செம்மொழியாம் தமிழின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதுடன் நில்லாது, தமிழ் வளர்த்த சான்றோர்கள் நினைவைப் போற்றும் வகையில் விழாக்கள் எடுத்தும், நினைவிடங்கள் அமைத்தும், அவர்தம் நூல்களைப் பொது உடைமையாக்கியும் சிறப்பித்து வருகிறது எனது அரசு. அந்த வகையிலே, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவைக் கொண்டாடி மகிழ்ந்ததுடன், அவரது நினைவை என்றென்றும் போற்றிப் பாராட்டிடும் வகையில் மதுரை மாநகரில் மணி மண்டபம் உருவாக்கிடவும் முனைந்துள்ளது.

தமிழ் மொழியின் தனிப் பெரும் வளர்ச்சி குறித்த கவிஞர்களின் கனவுகள் நனவாக்கப்பட வேண்டும் என்பது என் விருப்பம்

"வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளி உறுத்தும் படங்களோடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்"

என்ற பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் கனவு மெய்ப்படும் விதத்தில், தமிழ் மொழியின் சொல் வளத்தைப் பெருக்க 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி' (A Comprehensive Etymological Dictionary of Tamil Language) நூல்களை உருவாக்கும் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் சார்பாக கடந்த 2002—ஆம் ஆண்டு வரை ஆறு பகுதிகள் மட்டுமே வெளியிடப்பட்டிருந்தன. 2002—2003—ஆம் ஆண்டில், சட்டமன்றப் பேரவையில், எஞ்சிய 25 பகுதிகள் நான்காண்டுகளில் தொகுத்து முடிக்கப் பெறும் என்ற அரசின் அறிவிப்பினைத் தொடர்ந்து, தொய்வுற்றிருந்த அகரமுதலித் திட்டத்திற்குப் புத்துயிர் ஊட்டி, போதுமான நிதியுதவியும் வழங்கி, பணிகள் முடுக்கிவிடப்பட்டதன் விளைவாய், ஆண்டுக்கு ஆறு பகுதிகள் என்ற முறையில், முதற்கட்டமாகத் தொகுத்து அச்சிட்டு முடிக்கப்பட்ட 'ச' மற்றும் 'த' வரிசைச் சொற்களின் 6 பகுதிகள் அண்மையில் 9.8.2005 அன்று என்னால் வெளியிடப்பெற்றன. அதனைத் தொடர்ந்து இரண்டாவது கட்டமாக 'ந' மற்றும் 'ப' வரிசை சொற்களில், 6 பகுதிகள் தொகுத்து முடிக்கப்பட்டு அச்சிடப்பட்டு அவை தற்போது வெளியிடப்படுவதை அறிந்து பெரு மகிழ்வு அடைகிறேன்.

'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிப்' பணி சீரிய பணி. அந்தச் சீரிய பணியில் ஈடுபட்டு செந்தமிழைச் செழுந்தமிழாய் ஆக்கிவரும் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

தமிழ் வாழ்க ! தமிழ்ப் பணி வளர்க !

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
டாக்டர் செல்வி ஜெ ஜெயலலிதா



தமிழ்நாடு அரசு

சி.வி.சண்முகம்
கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை

"தமிழுண்டு தமிழ் மக்களுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு"
– (பாவேந்தர்)

மிகப் பழங் காலந்தொட்டு மொழி பற்றிய ஆய்வு இருந்து வந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் உள்ளன என்பர் மொழியாராய்ச்சியாளர்கள். தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள் பண்டைக் காலத்தில் கொண்டிருந்த மொழி பற்றிய தெளிவான அறிவினைத் தெற்றெனத் தெரிவிப்பனவாக இருப்பதைக் காணலாம். மொழியானது மாறும் தன்மை கொண்டது; பழமையான மொழிக் கூறுகளில் சில அழிவதும் புதியதாக சில தோன்றுவதும் மொழி வழக்கில் இயல்பு என்பர் அறிஞர் பெருமக்கள்.

தமிழ் மொழியைப் பொறுத்தவரை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான இடைவெளியில் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை மறுக்கவியலாது. பழைய சொற்கள் சில வழக்கொழிந்துள்ளன. புதிய சொற்கள் பல உருவாகியுள்ளன. புதிய கண்டுபிடிப்புகளையும், புதுப்புனைவுகளையும் வெளிப்படுத்த புதுச் சொற்கள் தேவை. இது மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாய் அமையும் என்பதில் ஐயமில்லை.

ஞாலத் தொன்மொழிகளுள் தாய்மையும், தலைமையும், தகைமையும் கொண்டது நம் தமிழ்மொழியாகும். தமிழின் தூய்மையையும், மாண்பையும், தனித்தியங்கும் ஆற்றலையும், இயற்கைச் சிறப்பையும் இனிமையையும், எளிமையையும் விரிவாக எடுத்துக்காட்டி நிலைநாட்டிய பெருமை 'மொழிஞாயிறு' தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு உண்டு. சொற்களை அகழ்வாய்வு செய்வதன்வழி மொழிக்கு அகழ்வாய்வு என்ற துறையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்திய பெருமை அவரைச் சாரும்.

அத்தகைய மாபெரும் அறிஞர் காட்டியுள்ள நெறிமுறைகளை அடியொற்றி செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி பகுதிகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. அண்மையில் 'ச'கரம் மற்றும் 'த'கரம் வரிசையில் 6 பகுதிகள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின்

திருக்கரங்களினால் வெளியிடப்பெற்றுள்ளன. அதனைத் தொடர்ந்து தற்போது 'ந'கரம் மற்றும் 'ப'கரம் வரிசையில் 6 பகுதிகள் வெளியிடப் பெறுகின்றன என்பதையறிந்து மகிழ்கிறேன். இந்த சீரியத் திட்டத்திற்கு அனைத்து வகையிலும் பேராக்கமும், பேராதரவும் நல்கி வரும் நம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி 'அம்மா' அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே, ஏன் ஆசியக் கண்டத்திலேயே தலைசிறந்து விளங்கும், தன்னிகரில்லாத் தங்கத் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சிக் காலம் பொற்காலம் என்று மேனாட்டரும் புகழ்பாடுகின்றனர். சோதனைகளை முறியடித்து, சாதனைக்கு மேல் சாதனைப் படைத்து, வெற்றிக் கொடி நாட்டி வரும் மாண்புமிகு முதலமைச்சர் 'அம்மா' அவர்களின் சாதனைகள் நீண்டு தொடரும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி வெளியீடுகள் வருவதில் அரும்பங்காற்றிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் பொறுப்பு இயக்குநராகப் பதவி வகிக்கும் தமிழ் வளர்ச்சிப் பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசு செயலாளர் முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப., அவர்களுக்கும், நூல்களை உருவாக்குவதற்கு அயராதுழைத்த அகரமுதலித் திட்ட இயக்ககப் பணியாளர்களுக்கும் என் மனமுவந்த பாராட்டுக்கள்.

சி.வி.சண்முகம்

சென்னை.

முனைவர்.பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி – பண்பாடு
(ம) அறநிலையத் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்.

பதிப்புரை

நாளும் உணவு தேடி நாடோடிகளாய் வாழ்ந்த மாந்தவினம், குழுவாய்க் கூடிவாழ முற்பட்டுக் குமுகாயத் தோற்றத்தையுண்டாக்கிக் கொண்டபோது, தங்களுக்குள் கருத்து மாற்றம் நிகழ்த்த வேண்டிய கட்டாயச் சூழ்நிலை உருவாகியது. அப்போது, கையாலும் வாயாலும் சைகை காட்டித் தம் எண்ணங்களை வெளிப்படுத்தினர். அதனைச் 'சைகைமொழி' அல்லது 'இயற்கைமொழி' என்றனர்.

காலப்போக்கில் வெறுக்கும் பொருளைச் 'சீ' என்றும், வியக்கும் பொருளை 'ஆ' என்றும், வெகுளிச் சுவையிற் 'போ' என்றும், உள்ளம் மகிழ்ந்தபோது 'வா' என்றும் இன்னும் பிறவாரும் சொற்களமைத்தனர். இவற்றைச் சுவை வகையில் தோன்றிய சொற்கள் என்றனர். இந்த வகையிலேயே உலகின் முதன்மொழி உருவானது என்பது மொழியாராய்ச்சியாளர்களின் ஆய்வு. இவ்வாறு மக்களது இயற்கை வேட்கையில் தோன்றி, அவரவர் நாகரிக முன்னேற்றத்திற்கேற்ப வளர்ந்து வரும் மக்களாக்கப் பொருளே மொழியாகும்.

உலக முதன்மொழி தமிழே! இந்திய மொழிகளுக்கு மூலமும் வேரும் தமிழே! திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழே என்று ஆணித்தரமாக சான்றுகளுடன் எடுத்துரைத்த மாபெரும் சான்றோராகிய 'மொழி ஞாயிறு', தேவநேயப் பாவாணர் அவர்கள் காட்டிய வழிகளில், இந்நூலில் வேர் விளக்கம் தரப்பட்டுள்ளது.

இன்றைக்குக் கோயிலில் செய்யப்படும் கும்பாபிடேகம் என்னும் 'குடமுழுக்கு', தமிழில் 'நீர்த்தெளி' என்றே முற்காலத்தில் வழங்கப் பெற்றதென்பதைக் கல்வெட்டுச் சான்றுகளுடன் 'நீர்த்தெளி' எனும் சொல் தலைப்பில் வரையறுக்கப்பட்டுள்ளது.

'நில்' என்னுஞ் சொல்லுக்கும், 'நிமிர்' என்னும் சொல்லுக்கும் 'நீர்' என்னும் சொல்லுக்கும் வரையறுக்கப்பட்டுள்ள பொருள் விளக்கங்களும் இலக்கிய மேற்கோள்களும் கற்குந்தோறும் களிப்பூட்டும் வகையில் தரப்பட்டுள்ளன. நிலையம் என்னும் சொல்லை நிலயம் என தவறான வடிவில் வழங்கி அது வடசொல்லென மயங்கியிருத்தலை மாற்றியமைத்து, அது தென்சொல்லேயென நிறுவப்பட்டுள்ளது.

தேவநேயப் பாவாணரின் கருத்துப்படி, சென்னைப் பல்கலைக் கழகப் பேரகரமுதலியையும், சாம்பசிவம்பிள்ளை மருத்துவ அறிவியல் அகரமுதலியையும் அடிப்படையாகக் கொண்டு, பிந்தைய அகரமுதலியில் ஆளப்பட்டுள்ள சொற்களுள் தமிழ்ச்சொற்களை மட்டும் தொகுத்து இவ்வகரமுதலிப் பகுதி அணியப்படுத்தப்பட்டுள்ளது. சொல்லுக்குப் பொருள் விளக்கங்கள் உரிய வகையில் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. அவற்றை மெய்ப்பிக்கும் வகையிலான இலக்கிய மேற்கோள்களும் நாட்டு மக்களிடை வழங்கும் பழமொழிகளும் உலக வழக்குத் தொடர்களும் ஆங்காங்கே இணைக்கப்பட்டுள்ளன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி வரிசையில் அனைத்து மடலங்களும் செந்தமிழின் தரத்தை உலகோர் உணரும் வகையில் திகழ்கின்றன. பேரகரமுதலி வெளியீடுகள் வரிசையில் நி, நீ வரிசையான இந்நூல் பதினான்காவது வெளியீடாகும்.

பேரகரமுதலியின் எஞ்சிய தொகுதிகள் யாவும் நான்காண்டுக் கால வரம்பெல்லைக்குள் முடிக்கப்பெறும் என்று அரசு அறிவித்த வண்ணம், திட்டமிட்டவாறு இலக்கினை எய்துதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு முதற்கண் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்முயற்சியில் உறுதுணையாயிருந்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் எனது இதயங் கனிந்த நன்றி. இந்நூல் வெளிவர அயராதுழைத்த அகரமுதலித் தொகுப்பாளர் (பகுதிப் பொறுப்பாளர்), பதிப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர்கள் மற்றும் திட்டப் பணியாளர்கள் அனைவரையும் பாராட்டிட நான் கடமைப்பட்டுள்ளேன். மேலும், இந்நூலை நன்முறையில் அச்சிட்டுத் தந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை
–07–2005

(பு.ஏ. இராமையா)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி
A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE
நி

நி[1] *ni,* 'ந்' என்ற மெய்யெழுத்தும் 'இ' என்ற உயிரெழுத்துங் கூடிய கூட்டெழுத்து; the syllable formed by adding the short vowel 'i' to the consonant 'n'.

[ந் + இ.]

நிகடை *nigaḍai,* பெ. (n.) மாழையை உருக்க உதவும் மண் சிமிழ்; a melting pot used by goldsmiths, chemists and others for melting metals etc. (சா.அக.).

நிகண்டகம் *nigaṇḍagam,* பெ. (n.) கடலைச் செடி; bengal gram plant-cicer anetinum. (சா.அக.).

நிகம் *nigam,* பெ. (n.) ஒளி (அக.நி.); brightness, brilliance.

நிகமம் *nigamam,* பெ. (n.) 1. முடிவு; conclusion. 'நிகமத்தில் இத்திரு வாய்மொழி, (ஈடு. 1, 8, 11.). 2. வேதம்; vedam, 'நிகமாகமம் விதித்தநீதி' (சிவஞா. நெஞ். 27,7.). 3. நகரம் (சூடா.); town, city. 4. நெடுந்தெரு, பொதுச் செல்வழி; street thoroughfare. *'நீண்டவந் நிகமம் புக்க நிமலன்'* (கந்தபு. ததீசியுத். 83.). 5. கடைவீதி (யாழ்.அக.); bazaar 6. வணிகம் (யாழ்.அக.); trade 7. வணிகக் கூட்டம் (யாழ்.அக.); group of traders.

நிகமனம் *nigamaṉam,* பெ.(n.) அனுமானவுறுப்பு ஐந்தனுள் இறுதியானது (தருக்க. சங்.); conclusion, being the fifth member of the Indian syllogism.

நிகமி–த்தல் *nigami-,* 11 செ.குன்றாவி. (v.t.) முடித்தல் (ஈடு. 1, 6, பிர.ஜீ.பக். 262.); to conclude.

நிகர்[1]–தல் *nigar –,* 4 செ.குன்றாவி. (v.t.) நிகர்[2]–, பார்க்க; see nigar-. *"மஞ்சை நிகருந் த்யாக வள்ளலே"* (விறலிவிடு. 902.).

நிகர்[2]–த்தல் *nigar-,* 4 செ. குன்றாவி. (v.t.) ஒத்தல்; to be similar, alike. *'கண்ணொடு நிகர்க்குங் கழிப்பூங் குவளை'* (தொல். பொருள். 290.).

நிகர்[3]–த்தல் *nigar-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மாறுபடுதல்; to rival. *"தன்னொடு நிகரா வென்னொடு நிகரி"* (ஐங்குறு. 67.). 2. விளங்குதல்; to shine; to be visible. *"தஞ்சேணிகர் காவின்"* (திருக்கோ. 183.).

நிகர்[4] *nigar,* பெ. (n.) 1. ஒப்புமை; comparison, likeness, simile. *"தனக்கு நிகருமேலு மின்றாகியே"* (கந்தபு. ததீசியுத். 150.). 2. ஒப்பு; equal, parallel, match. *"நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்"* (நாலடி, 64.). 3. ஒளி; lustre, brightness, splendour. *"நீர்வார் நிகர்மலர்* (அகநா.11.). *"காமர் செங்கையிற் கண்ணீர் மாற்றித் தூநீர் மாலை தூத்தகை இழந்தது நிகர்மலர் நீயே கொணர்வா யென்றலும்"* (மணிமே. 5: 13–15.). 4. போர் (யாழ்.அக.); battle,fight. 5. கூட்டம்; crowd.

து. நிசாசு, **தெ.** நிகநிக, நிகாரிஞ்சு.

நிகர்த்த *nigartta,* பெ.அ. (adj.) ஒத்த; similar.

[நிகர் → நிகர்த்த.]

நிகர்த்தல் *nigarttal,* பெ. (n.) போர் (சூடா.); battle, war.

நிகர்த்து—தல் *nigarttu-,* 5 செ. குன்றாவி. (v.t.) நன்றாகப் புடைத்தல்; to tharsh, give a good drubbing.

[நகர்த்து—நிகர்த்து—.]

நிகர்ப்பு *nigarppu,* பெ. (n.) **1.** ஒப்பு; resemblance, likeness. **2.** போர் (திவா.); battle, fight.

[நிகர்—நிகர்ப்பு.]

நிகர்பக்கம் *nigar-pakkam,* பெ. (n.) உவமைப் பொருளிருக்குமிடம்: comparing thing's place.

[நிகர் + பக்கம்]

நிகர்மலர் *nigar-malar,* பெ. (n.) **1.** புதுப்பூ; fresh flower. *"ஆய்சுனை நிகர்மலர் போன்மென நசைஇ வீதேர் பறவை விழையும் போதார் கூந்தனங் காதலி கண்ணே."* (அகநா. 371.). **2.** ஒளியுடைய பூ; flower with brightness. *"காது சேர் நிகர்மலர் கொய்யும் ஆயம் எல்லாம் உடன் கண்டன்றே"* (குறுந். 311.). *"அகனக ரெல்லாம் மரும்பவிழ்முல்லை நிகர்மலர் நெல்லோடு தூஉய்க்".* (சிலப். 9:1.).

[நிகர் + மலர்.]

நிகர்வு *nigarvu,* பெ. (n.) ஒப்பு (வழக்.); comparison.

[நிகர் → நிகர்வு.]

நிகர[1] *nigara,* இடை. (part.) ஓர் உவம உருபு (நன்.367.); a term of comparison.

[நிகர் → நிகர.]

நிகர[2] *nigara,* இடை. (part.) ஒளி; light; lustre. (த.சொ.அக.).

[நிகு → நிகர.]

நிகரணாளகி *nigaraṇāḷagi,* பெ. (n.) காதிற்குள் நடுவரையிலிருந்து மிடற்றுக்குச் செல்லும் குழல்; the tube which forms a communication between the internal ear and the back of the mouth- Eustachiartube. (சா.அக.).

நிகரம்[1] *nigaram,* பெ. (n.) **1.** கூட்டம்; company, assemblage, flock, multitude. *"உடனடப்பன புகர்முகக் கரிநிகரமே"* (பாரத.அணி.6.). **2.** குவியல்; heap. *'பருத்த நிகரமாகிய கருப்பூரம்'* (மலைபடு. 516, உரை.). **3.** மொத்தம் (வின்.); total. **4.** அரும்பொருட்குவை (யாழ். அக.); treasure. **5.** கொடை (யாழ்.அக.); gift.

[நிகர் → நிகரம்.]

நிகரம்[2] *nigaram,* பெ. (n.) விழுங்குகை; swallowing, *"நிகரம்பயி லமுதுண்டு"* (பாரத. அருச்சுனன்றவ. 154.).

நிகரவா *nigaravā,* பெ. (n.) *பிரமிப்பூண்டு;* பார்க்க; see *pirami-p-pūṇḍu* (சா.அக.).

நிகரா *nigarā,* வி.எ. (adv.) பகையாத; without having enmity. *"தன்னொடு நிகரா வென்னொடுநிகரி"* (ஐங்குறு.67.).

[நிகர் + ஆ.]

நிகரார் *nigarār,* பெ. (n.) பகைவர் (திவா.); enemies. "*நிகரா ருயிர்க்கு நஞ்சாய வேற்கைக் குலோத்துங்க சோழன்*" (குலோத். கோ. 384.).

[நிகர் → நிகரார்.]

நிகரி *nigari,* வி.எ. (adv.) பகைத்து; with enmity.

[நிகர் + இ.]

நிகரிடு–தல் *nigaridu-,* 17 செ.குன்றாவி. (v.t.) ஒப்பிடுதல்; to compare. "தன்னொடு நிகரா என்னொடு நிகரிப் பெருநலம் தருக்கம் என்ப விரிமலர்த்" (ஐங்குறு. 67.).

[நிகர் + இடு.]

நிகரில்பக்கம் *nigaril- pakkam,* பெ. (n.) 1. எதிர்க்கட்சி; opposite side or party. 2. எதிரிடையான கொள்கை; opposite view. "*பக்க நிகர்பக்க நிகரில்பக்கமென*" (சி.சி.அளவை.9.).

[நிகர் + இல் + பக்கம்.]

நிகரில்லகறை *nigarillagarai,* பெ. (n.) கரிசலாங் கண்ணி; eclipse plant- Echypta prostata. (சா.அக.).

நிகரில்லாவாசான் *nigarillā-v-āsān,* பெ. (n.) (ஞானக் கண்) அறிவுக்கண்; eye of wisdom. (சா.அக.).

நிகரிலிசோழமண்டலம் *nigar-ili-cōla-mandalam,* பெ. (n.) சோழராட்சிக்குள்ளடங் கியிருந்த எருமையூ (மைசூ) ரிலொரு பகுதி; a division in Mysore when it formed part of the Cōla dominion.

[நிகரிலிசோழன் + மண்டலம்.]

மண்டிலம் > மண்டலம்

நிகரிலிசோழன் *nigar-ili-cōlan,* பெ. (n.) முதலாம் இராசராசன் பட்டப்பெயர்களு ளொன்று (I.M.P.Tn. 109.); one of the titles of Rāja Rāja the first.

[நிகரிலி + சோழன்.]

நிகரோதயம் *nigarōdayam,* பெ. (n.) சிற்றரத்தை; lesser galangal. Alpinia galanga (minor.) (சா.அக.).

நிகலம் *nigalam,* பெ. (n.) 1. தோள்மேல், (வின்.); the upper part of the shoulder. (சா.அக.). 2. பிடர் (வின்.); nape.

நிகவா *nigavā,* பெ. (n.) 1. பிரமிப்பூடு; hyssop plant-zoofa-hyssopus officinalis. 2. நீர்ப்பிரமி; Indian brahmi- Gratiola monicri (சா.அக.).

நிகழ்[1]–தல் *nigal-,* 4 செ.கு.வி. (v.i.) 1. நேருதல்; to happen, occur. "*தொண்டனார்க் கங்கு நிகழ்ந்தன*" (பெரியபு. திருநா. 380.). 2. நடந்துவருதல்; to be current, passing, as time. "*நிகழுங் காலத்துச் செய்யு மென்னுங்*

கிளவியொடு'' (தொல். சொல்.229.). 3. செல்லுதல்; to enter, pass. *"செயிர்க்க ணிகழாது"* (பு.வெ.8,17.). 4. தங்குதல்; to abide, continue. *"தொன்மை மேன்மையி னிகழ் பெருந் தொண்டைநன்னாடு''* (பெரியபு. திருக்குறிப்பு. 2.). 5. நிறைவேறுதல்; to be performed, transacted, carried on.

நிகழ்²–தல் *nigal-*, 4 செ.கு.வி. (v.i.) 1. விளங்குதல்; to shine. *"வளனற நிகழ்ந்து வாழுநர் பலர்பட"* (பதிற்றுப்.49, 15, உரை.). 2. ஒளி செய்தல்; to emit light, to be respiendent.

நிகழ்களன் *nigal-kalan,* பெ. (n.) கதை நாடகம் முதலியன நிகழ்வதாகக் காட்டப்படும் இடம்; scene; setting for a play, etc., *போர்க்களத்தை நிகழ்களனாகக் கொண்ட நாடகம். (உ.வ.).*

[நிகழ் + களன்.]

நிகழ்காலம் *nigal-kālam,* பெ. (n.) வினை நடைபெறுகிற காலம் (தொல்.சொல். 240, இளம்பூ.); தொழில் தொடங்கப் பெற்று முற்றுப் பெறாத நிலைமை (தொல். சொல். 200, சேனா.); present tense.

[நிகழ் + காலம்.].

தொழிலாவது பொருளினது புடைப் பெயர்ச்சியாகலின் அஃதொருகணம் நிற்பதல்லது இரண்டுகணம் நில்லாமையில் நிகழ்ச்சி யென்பதொன்று அதற்கில்லை.

நிகழ்காலவிலக்கு *nigal-kāla-vilakku,* பெ. (n.) நிகழ்காலம் பற்றிவரும் முன்னவிலக் கென்னும் அணி (தண்டி.42, உரை.) ; a kind of rhetoric signifying the present.

[நிகழ்காலம் + விலக்கு.]

நிகழ்காலவினையெச்சம் *nigal-kāla-vinai-y-eccam,* பெ. (n.) அகர ஈறுபெற்று இடைநிலை யோடு கூடாது தானே நிகழ்காலம் காட்டி நிற்குஞ்சொல் (த.சொ.அக.); present verbal participle.

[நிகழ்காலம் + வினையெச்சம்.]

எ–டு.

வந்திருக்கிறான் – நிகழ்கால நிறைவு.

வந்திருப்பான் – எதிர்கால நிறைவு.

வந்திருந்தான் – இறந்தகால நிறைவு.
வந்து கொண்டிருக்கிறான் – நிகழ்கால நிறைவுத் தொடர்ச்சி.
வந்து கொண்டிருந்தான் – இறந்தகால நிறைவுத் தொடர்ச்சி.
வந்து கொண்டிருப்பான் – எதிர்கால நிறைவுத் தொடர்ச்சி.
(மொழி. கட். 31.)

நிகழ்ச்சி¹ *nigalcci,* பெ. (n.) 1. நேர்ச்சி; occurrence, incident, event. *'மூன்று கால நிகழ்ச்சியையும் அறியுமவன்'* (பு.வெ. 8, 13, உரை.). 2. நிலைமை; situation. *"ஒலி யெழுதற்கஞ்சி நின்ற நிகழ்ச்சியும் போன்ம்"* (பரிபா.10:62.). 3. செயல்; business. *"நினக்கு யான்புரிய நிகழ்ச்சி யாது''* (காஞ்சிப்பு. தழுவக்.10.). 4. இக்காலம்; present moment.

[நிகழ் → நிகழ்வு → நிகழ்ச்சி.]

நிகழ்ச்சி² *nigalcci,* பெ. (n.) ஒளி; light. (த.சொ.அக.).

[நிகர் → நிகழ்.] [நிகர் = ஒளி.]

நிகழ்ச்சி³ *nigalcci,* பெ. (n.) வரவு, பெருக்கம்; income, increasing the quantity. *"கெழியின்மை கேட்டாலறிக பொருளின் நிகழ்ச்சி யானாக்கம் அறிக"* (நான்மணி. 64.).

நிகழ்ச்சி[4] *nigalcci,* பெ. (n.) தொலைக்காட்சி வானொலி முதலியவற்றில் நடத்திக்காட்டப் படுவது; programme, broadcast. இன்றையத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் காணத் தகுவனவாய் இல்லை (உ.வ.). "வானொலி நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து கேட்கும் பழக்கத்தைக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகக் கொண்டவர்" (உ.வ.).

[நிகழ் → நிகழ்ச்சி.]

நிகழ்ச்சிநிரல் *nigalcci-niral,* பெ. (n.) நடைபெறப்போகும் நிகழ்ச்சிகளின் ஒழுங்கு படுத்தப்பட்ட தொகுப்பு; *agenda;* list of programmes. கலைமாமணி விருது வழங்கும் நிகழ்ச்சி நிரலைச் சரியாக அமைத்து வழங்கியிருந்தனர் (உ.வ.). முதலமைச்சரின் சுற்றுப் பயண நிகழ்ச்சி நிரலைப் பெற்றுக் கொண்டு அதற்கேற்ப செயற்பட வேண்டும் (உ.வ.). இன்றையக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலை அணியப் படுத்திவிட்டேன் (உ.வ.).

[நிகழ்ச்சி→ நிரல்.]

நிகழ்சாதி *nigalšādi,* பெ. (n.) ஆண்சாதி நான்கு வகைகளில் ஒன்று; one of the four classes of men. (சா.அக.).

நிகழ்த்து[1]—தல் *nigalttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** அருஞ்செயல் புரிதல்; to create a record. அகரமுதலித் துறையில் அருஞ்செயல் நிகழ்த்தியோர் பலர் (உ.வ.). **2.** விந்தை ஏற்படுத்துதல்; to work a miracle. இறைவன் நிகழ்த்தி யதாகக் கூறப்படும் விந்தைகளின் தொகுப்பே திருவிளையாடற் புராணமெனும் தொன்ம நூலாகும் (உ.வ.). **3.** நாடகம், நாட்டியம் முதலிய வற்றை நடித்து, நடத்துதல்; to perform. நாடகம் என்பது நிகழ்த்திக் காட்டப் படுவதுதான். (உ.வ.). தெருக்கூத்தைச் சிறப்பாக நிகழ்த்திக் காட்டினார்கள். (உ.வ.). **4.** உரை வழங்குதல்; to deliver a speech etc., குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துவார். (உ.வ.). **5.** சொற்பொழிவாற்றுதல், கலந்துரையாடல்; to conduct a discussion. மதுரையில் நடந்த ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் தேவநேயப் பாவாணர் நிகழ்த்திய உரையை நூலாக வெளியிட்டுள்ளனர். (உ.வ.).

நிகழ்த்து[2]—தல் *nigalttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** நடப்பித்தல்; to effect, perform, transact, set on foot, bring to pass., "*ஐந்தொழி னிகழ்த்தலாகும்*" (திருவாத. பு. திருவெம்.6.). **2.** சொல்லுதல்; to speak, say, mention, narrate, declare. "*முதல்வன் வன்மை யாவரே நிகழ்த்தற்பாலர்*" (கந்தபு. சூரப. வதை.74.).

நிகழ்பு *nigalbu,* பெ. (n.) *நிகழ்ச்சி,* **1,2** பார்க்க; see *nigalcci.* "*முக்காலமு நிகழ்பறிபவன்*" (பு.வெ.8.13, கொளு.).

[நிகழ்—நிகழ்பு.]

நிகழ்முறை *nigal-murai,* பெ. (n.) *நிகழ்ச்சி நிரல்* பார்க்க; see *nigalcci-niral.*

[நிகழ்+முறை.]

நிகழ்வாக்கம் *nigal-v-ākkam,* பெ. (n.) படிநிலை மாற்றம், படிநிலை வளர்ச்சி; transformation. "*ஒத்த பொருள்க ணிகழ்வாக்க முரைத்து நின்றேன்*" (நீலகேசி, 421.).

[நிகழ்வு + ஆக்கம்.]

நிகழ்வினைவிலக்கு *nigalvinai-vilakku,* பெ. (n.) நிகழ் வினையைக் காட்டி விலக்குவதாகிய ஓர் அணி: a figure of speech.

[நிகழ்வினை + விலக்கு.]

எ–டு:

மாதர் நுழைமருங்கு நோவ மணிக்குழைசேர்
காதின்மிசை நீலங்கவின் புனைவீர்–மீதுலவு
நீனிலவு வாட்கண் நிமிர்கடையே செய்யாவோ
நானிலஞ் செய்யு நலம்.

நிகழ்வு[1] *nigaḻvu,* பெ. (n.) *நிகழ்ச்சி[1], 1,4* பார்க்க; *see nigaḻcci.* "*இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றா*" (தொல். சொல். 202.).

[நிகழ் → நிகழ்வு.]

நிகழ்வு[2] *nigaḻvu,* பெ. (n.) 1. வாழ்க்கையில் இயற்கையாக நிகழ்வது, நடைபெறுவது; happening, occurrence. பிறப்பு, இறப்பு என்ற இரு நிகழ்வுகளுக்கு இடையே நடைபெறுவது தான் வாழ்க்கை. (உ.வ.). 2. நிகழ்ச்சி; incident. 3. நடப்பு: event. உண்மை நிகழ்வுகளை அடித்தளமாய் கொண்டமைக்கப்பட்டது இந்நாடகம். (உ.வ.).

நிகழாசம் *nigaḻāšam,* பெ. (n.) உயிர்ப்பினை (இரேசகம்) விடுத்தல்; exhabation of vital air in scientific breathing, It is opposed to உயிர்ப்பினை உள்ளிழுத்தல் (பூரகம்) (சா.அக.).

நிகழும் *nigaḻum,* வி.எ. (adv.) நடைபெற்றுக் கொண்டிருக்கிற; current, in force. நிகழும் திருவள்ளுவராண்டு 2034 துலைத் திங்கள் பத்தாம் பக்கல் எம் மகளுக்குத் திருமணம் நடக்கவுள்ளது. (உ.வ.). 2. செல்லுகின்ற, ஒழுகும்; on going, adapt. "*நாறுபு நிகழும் யாறு கண்டழிந்து வேறுபடு புனலென விரை மண்ணுக் கலிழைப் புலம்புரி யந்தணர் கலங்கினர் மருண்டு*" (பரிபா. 6:43.).

நிகளம்[1] *nigaḷam,* பெ. (n.) 1. நீர்க்கடம்பு; water cadambam tree-Nauclia parviflora. 2. மலம்; filth. (சா.அக.).

நிகளம்[2] *nigaḷam,* பெ. (n.) நீளம் (உ.வ.); length வகுள பரிமள நிகள கவிமாலை சூடுவதும் (திருவகுப்பு.).

நீட்சிக் கருத்து நெகிழ்ச்சிக் கருத்தின் வழிநிலைக் கருத்தே. நிற்றற் கருத்தும் நடத்தற் கருத்தும் நீட்சிக் கருத்தினின்று தோன்றும். நுல் → நெல் → நெள் → நெகு → நெகிழ் (நெகிள்) → நீள். நெகிள் (நெகிழ்) →நிகள் → நீள் →நீளம்→ நிகளம். எதுகை முகனை என்பதை எகனை முகனை யென்பதுபோல், அகலம் நீளம் என்பதை அகலம் நிகளம் என்றும் பொதுமக்கள் வழங்கியிருக்கலாம். ஈயமும் மெழுகும் போல்வன உருகியும், களியும் களிமண்ணும் போல்வன நீர்கலந்தும் நெகிழும் போது நீளுதல் காண்க. (வே.க.3:37).

நிகளம்[3] *nigaḷam,* பெ. (n.) 1. யானைக் காற் சங்கிலி; chain for an elephant's feet. "*அயிராவதத்தி னிகளங்கால் விட்ட நினைவு*" (தமிழ்நா. 123.). 2. விலங்கு; chain, fetters. "*மறலினர் நிகளஞ் சீத்து*" (தணிகைப்பு. அகத்தி.170.). 3. பிணை (பந்தம்.); bondage. "*யார்க்கு நிகளமாம் விருத்தி தோன்ற*" (திருவிளை. தீர்த்.3.). 4. நீர்க் கடம்பு மரம் (சங்.அக.); water cadamba tree.

[நீளம் → நிகளம்.]

நிகற்புதம் *nigaṟpudam,* பெ. (n.) வியப்பு (அற்புதம்) (பிங்.); wonder (கதி.அக.).

நிகன்னம் *nigaṉṉam,* பெ. (n.) கொலை; (உ.வ.); murder (சா.அக.).

நிகாசகம்[2] *nigāšagam,* பெ. (n.) மகிழமரம்; morning face flower-mimusops alingi- (சா.அக.).

நிகாநயம் *nigānayam,* பெ. (n.) நிலவுமலர் (சந்திரகாந்தி); moon flower Ipomaea grandi flora. (சா.அக.).

நிகாயம் *nigāyam,* பெ. (n.) குக்கில் எனும் செடி; Indian dammar regin-shorea robusta (சா.அக.).

நிகாரணன் *nigāraṇaṉ,* பெ. (n.) கொலைஞன் (யாழ்.அக.); murderer. (சா.அக.).

நிகாரம் *nigāram,* பெ. (n.) **1.** பனி; dew. **2.** உறைந்த பனித்தூள்; white particles of frozen dew, hoar frost. (சா.அக.).

[நில் + காரம்.]

நில் – நி எனக் குறுகி முன்னொட்டானது. காரச்சீலை, காரச்சேவு. காரத்துளி(பூந்தி) காரப்பகை, காரப்பொடி, காரமருந்து முதலியன வேகத்தையும் உறைப்பை யுமுடைய பொருள்கள். கரி என்னும் வினையடியால் பிறந்த தொழிற்பெயர். கரி + அம் – காரம்: முதனிலைத் திரிந்து விகுதி பெற்ற தொழிற் பெயர். ஒ.நோ. படி + அம் = பாடம், தவி +அம் = தாவம். கரித்தல் – மிகுதல், காரம்மிகுதி. காரம் என்னும் சொல் முதலாவது மிகுதியை உணர்த்திப் பின்பு உறைப்பு மிகுதியை உணர்த்தும். உறைப்பு உறைந்த பனியையும் உணர்த்தும். காரம் பார்க்க; see kāram.

நிகாலம் *nigālam,* பெ. (n.) கழுத்து; neck. (சா.அக.).

நிகாவப்புடவி *nigāva-p-puḍavi,* பெ. (n.) *நிகவா* பார்க்க; *see nigavā.* (சா.அக.).

நிகாவரி *nigāvari,* பெ. (n.) *நிகவா* பார்க்க; *see nigavā.* (சா.அக.).

நிகாவா *nigāvā,* பெ. (n.) *நிகவா* பார்க்க; see *nigavā.*

நிகீயெனல் *nigī-y-eṉal,* பெ. (n.) குதிரையின் கனைப்புக் குறிப்பு; onom. expr.of the neighing of a horse.

நிகு[1] *nigu,* பெ. (n.) அறியுங் கருவி (யாழ்.அக.); instrument of knowledge.

நிகு[2] *nigu,* பெ. (n.) மஞ்சள்; turmeric-curcuma longa. (சா.அக.).

நிகுஞ்சகம் *niguñjagam,* பெ. (n.) ஒரு மரம்; a kind of a tree. (சா.அக.).

நிகுஞ்சரம் *niguñjaram,* பெ. (n.) சுக்குநாறிப்புல்; ginger grass- andropogon hardus. (சா.அக.).

நிகுநிகுவெனல் *nigunigu-v-eṉal,* பெ. (n.) மினுமினுத்தற் குறிப்பு; expr. signifying the glittering of an object. நெய் பூசிய கத்தி நிகுநிகு வென்றிருக்கிறது. (உ.வ.).

க. நிகிநிகி

[நிகு + நிகு + எனல்.]

நிகும்பசாரி *nigumbašāri,* பெ. (n.) காட்டாமணக்கு; parging nut-jhatropha curcas. (சா.அக.).



நிகும்பம் *nigumbam,* பெ. (n.) **1.** நேர்வாளம்; croton oil plant-croton tigilium. **2.** நேர்வாளக் கொட்டை; croton seed. **3.** காட்டு நேர்வாளம்; small wild aumanac-Jatropha

multifida. **4.** எலியாமணக்கு; rat aumanac, adul oil plant-Jatropha glandulifera. **5.** சிவதை; Indian rhubarb-Ipomaea turpethem (சா.அக.).

நிகுமம் *nigumam,* பெ. (n.) *நிகும்பம்* பார்க்க; *see nigumbam.* (சா.அக.).

[நிகும்பம் → நிகுமம்.]

நிகுரம் *niguram,* பெ. (n.) **1.** பினத்தல் நளிர்; delirium. **2.** ஒருவகை வெறி; frenzy-phrenitis (சா.அக.).

நிகேசரம்[1] *nigēšaram,* பெ. (n.) **1.** சம்பங்கிமரம்; champauk tree michelia champaca. **2.** சம்பங்கிப் புல்; a kind of grass with fragrance of champak. (சா.அக.).

நிகேசரம்[2] *nigēšaram,* பெ. (n.) மரவகை (சங்.அக.); a kind of tree.

நிகோடா *nigōḍā,* பெ. (n.) பூவந்தி எனும் மரவகை; four leaved soap nut.

நிங்கசம் *ningašam,* பெ. (n.) சங்குத் திராவகம் பார்க்க; see sangu-t-tirāvagam. (சா.அக.).

நிச்சடம் *niccaḍam,* பெ. (n.) **1.** தாளிக்கொடி; hedge bind weed-Ipomaca sepiaria alias-convolvulus marginatus. **2.** காட்டுத்தாளி; kaldanah-convolvulus muri-catus. (சா.அக.).

நிச்சதம் *niccadam,* பெ. (n.) செடிக் காசரைக் கீரை, குப்பைக்கீரை; dung hill green-Amaranthus virdis. (சா.அக.).

நிச்சநிரப்பு *nicca-nirappu,* பெ. (n.) நாடோறும் இரவான் வருந்தித்தன் வயிறு நிறைத்தல்; living on daily begging. "*பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை நிச்ச நிரப்புக்கொன் றாங்கு*" (குறள், 532.).

[நித்தம் → நிச்சம் + நிரப்பு எப்போதும் வறுமையிலிருப்பது.]

நிச்சம்[1] *niccam,* வி.எ. (adv.) **1.** எப்பொழுதும்; always, perpetually. **2.** நிலைத்த; constantly, "*நிச்சமும் பெண்பாற்குரிய வென்ப*" (தொல். பொருள். 99.). **2.** என்றும்; daily.

pkt. niccam skt. nitya

நில் → நிற்றம் = நிலைப்பு
ஒ.நோ: வெல் → வெற்றம்
கொல் → கொற்றம்.
நிற்றம் → நிச்சம்
ஒ.நோ: முறம் → முற்றில் → முச்சில்.
(வே.க.3:46.)

நிச்சம்[2] *niccam,* பெ. (n.) *நிச்சயம்* பார்க்க; see *niccayam,* "*நிச்ச நினையுங்காற் கோக் கொலையாம்*" (நாலடி,81.).

skt.niš-caya

[நில் → நிற்றம் → நிச்சம் = நிலைப்பு.]

நிச்சயதாம்பூலம் *niccaya-tāmbūlam,* பெ. (n.) திருமணத்தை உறுதிப்படுத்த மணமகனின் தகப்பன் மணமகளின் தகப்பனுக்குத் தாம்பூலம் முதலியன அளிக்கை; presentation of betel, plantains, turmeric, new cloths etc. by the father of the bride in confirmation of a marriage; betrothal.

[நில் → நிற்றம் → நிச்சம் → நிச்சயம்
ஒ.நோ: முற்றில் → முச்சில்.
நிச்சயம் + தாம்பூலம்.]

நிச்சயப்பத்திரிகை *niccaya-p-pattirigai*, பெ. (n.) உறுதிச் சீட்டு (புதுவை.); certificate.

[நில் → நித்தம் → நிச்சம் → நிச்சயம் + பத்திரிகை.]

skt. *பத்திரிகா*

நிச்சயம் *niccayam*, பெ. (n.) **1.** உறுதி; certainty, assurance. **2.** மெய் (திவா.); truth, veracity. **3.** துணிவு; decision, resolution, determination, *"நிச்சயமெனுங் கவசத்தான் நிலைநிற்பதன்றி"* (கம்பரா. சூரன்வதை. 142.).

[நிச்சம் + அயம்.]

நிச்சயாந்தம் *niccayāndam*, பெ. (n.) அணிவகை (பாப்பா.132.); (Rhet.) a figure of speech.

நிச்சயார்த்தம் *niccayārttam*, பெ. (n.) **1.** மெய்ப்பொருள் (வின்.); certainty, truth. **2.** *நிச்சயதாம்பூலம்* பார்க்க (இ.வ.); see *niccaya - tāmbūlam*.

நிச்சயி—த்தல் *niccayi-*, 11 செ.குன்றாவி. (v.t.) **1.** உறுதிப்படுத்துதல் (வின்.); to ascertain, confirm. **2.** உறுதிசெய்தல்; to resolve, determine, decide. *"அறிஞர் நிச்சயித்தனர்"* (கந்தபு. சூரனமைச். 137.).

[நில் → நிச்சம் → நிச்சயி.]

நிச்சல் *niccal*, வி.எ. (adv.) **1.** *நிச்சம்*[1] பார்க்க; see niccam. *"நிச்ச லேத்து நெல்வாயிலார் தொழ"* (தேவா.21,3.).

தெ. நிச்சலு, **க.** நிச்சல்

நில்→நிற்றம்—நிலைப்பு.

ஒ. நோ: வெல் → வெற்றம்

கொல் → கொற்றம்.

நிற்றம் → நிற்றல் → நிச்சல்.

நிச்சல்காவி *niccal-kāvi*, பெ. (n.) காவிபாயின் கீழ்ப் பகுதி (M.Navi.83); lower top-sail.

[நிச்சல் + காவி.]

நிச்சல்சவர் *niccal-šavar*. பெ. (n.) சவர் பாயின் கீழ்ப் பகுதி; (M. Navi.38); lower top-gallant sail.

[நிச்சல் + சவர்.]

நிச்சலும் *niccalum*, வி.எ.(adv.) *நிச்சல்* பார்க்க; see *niccal*. *"நிச்சலும் விண்ணப்பஞ் செய்ய"* (திவ்.திருவாய்,1,9,11.).

[நிச்சல் → நிச்சலும்.]

நிச்சள் *niccaḷ*, பெ.(n.) கொடி வகை (மலை.); hedge bind-weed.

நிச்சனதாரி *niccaṉadāri*, பெ.(n.) மாமரம்; mango tree-mangifera indica. (சா.அக.).

நிச்சாணம் *niccāṇam*, பெ.(n.) இதளியம்; mercury-hydargyrum. (சா.அக.).

நிச்சி—த்தல் *nicci-*, 11 செ.குன்றாவி. (v.t.) நிச்சயி—, பார்க்க; see niccayi-. *"நிச்சித்திருந் தேனென் னெஞ்சங் கழியாமை"* (திவ். திருவாய்.10,4,5.).

[நில் → நிச்சல் → நிச்சி.]

நிச்சிதம் *niccidam*, பெ. (n.) உறுதி; certainty. *'இப்பரிசு ஒத்து ஒவ்வாமைப்படப் படைத்தான் நிச்சிதமாக'* (புறநா. 194, உரை.).

[நில் → நிச்சம் → நிச்சிதம்.]

நிச்சிதார்த்தம் *niccidārttam,* பெ.(n.) *நிச்சயதாம்பூலம்* (உ.வ.) பார்க்க; see *niccaya-tāmbūlam.*

[நிச்சயதாம்பூலம் – நிச்சிதார்த்தம் (கொ.வ.). *]*

நிச்சியம் *nicciyam,* பெ.(n.) வெள்ளைப் பூண்டு; garlic - alliumsativum. (சா.அக.).



நிச்சிரம் *nicciram,* பெ. (n.) *நிச்சியம்* பார்க்க; see *nicciyam.*

நிசக்கல்லு *niša-k-kallu,* பெ. (n.) நஞ்சு (வைத்திய பரிபா.); a kind of prepared poison. (கதி.அக.).

நிசமம் *nišamam,* பெ. (n.) *நியமம்* பார்க்க (யாழ்.அக.) ; see *niyamam.*

[நியமம் → நிசமம். *]*

நிசாகசம் *nišākašam,* பெ. (n.) **1.** இரவில் மலரும் வெள்ளாம்பல்; white Indian water lily-nymphaea pubescense. **2.** மகிழமரம்; morning face flower-mimusops alingi. (சா.அக.).

நிசாகசி *nišākaši,* பெ. (n.) தாமரைக் கொடி; lotus creeper-nelumbium speciosum. (சா.அக.).

நிசாகம் *nišāgam,* பெ. (n.) மஞ்சள்; turmeric-curcuma longa. (சா.அக.).

நிசாகரம் *nišāgaram,* பெ. (n.) கோழிக்கீரை; cocks green-portulaca oleracea. (சா.அக.).

நிசாடு *nišāḍu,* பெ. (n.) மஞ்சள்; turmeric. (சா.அக.).

நிசாடுகம் *nišāḍugam,* பெ. (n.) *நிசாடு* பார்க்க; see *nišāḍu.* (சா.அக.).

நிசாதமை *nišādamai,* பெ. (n.) பழமுள்ளிப் பாலை; edible palay mimusops kanki. (சா.அக.).

நிசாதல் *nišādal,* பெ. (n.) நவச்சாரம்: ammonia chloride. (சா.அக.).

நிசாதனம் *nišādanam,* பெ. (n.) பழமுள்ளிப் பாலை; edible palay. mimusops kanki. (சா.அக.).

நிசாபிகம் *nišābigam,* பெ. (n.) மரமஞ்சள்; tree turmeric-coscinum fenestratum. (சா.அக.).

நிசாபிகாரி *nišābigāri,* பெ. (n.) சிற்றாமரைப்பூ; small lotus flower. (சா.அக.).

நிசாபிசா *nišā-pišā,* பெ. (n.) *நிசாபிகம்* பார்க்க; see *nišābigam.* (சா.அக.).

நிசாரம் *nišāram,* பெ. (n.) **1.** மஞ்சள்; turmeric-curcumalonga. **2.** வாழை; plantain. (சா.அக.).

நிசாவர்த்தி *niśā-vartti,* பெ. (n.) மஞ்சள், இந்துப்பு, கடுகு, குங்கிலியம் இவற்றைத் தேனில் அரைத்துத் துணிக்குத் தடவி வர்த்தியாகச் செய்து நாடிவிரணம், பவுத்திரம் முதலியவைகளுக்கு இடும் ஒரு மருந்து; a medicinal gauze or wick used for introducing into simus ulcer of fistula; the gauze or wick is smeared with the paste prepared with turmeric mustard, conkany resin, rock salt and honey. (சா.அக.).

நிசி *niśi,* பெ. (n.) **1.** மஞ்சள்; turmeric . **2.** மான்மணத்தி; musk. (சா.அக.)

நிசிகம் *niśigam,* பெ. (n.) மஞ்சள்: turmeric. (சா.அக.).

நிசிதாவி *niśidāvi,* பெ. (n.) செங்கொன்றை; red cassia-cassia marginata. (சா.அக.).

நிசுலம் *niśulam,* பெ. (n.) அலரி; oleander-Nerium odorum. (சா.அக.).

நிசுளம் *niśuḷam,* பெ. (n.) நீர்க்கடம்பு; water cadamba-stephegyne parviflora alias s.purpurea. (சா.அக.).

நிசுனம் *niśuṉam,* பெ. (n.) நீர்க்கடம்பு எனும் செடி; a plant called nīr-k-kaḍambu. (சா.அக.).

நிசோதகம் *niśōdagam,* பெ. (n.) செஞ்சிவதை; a red variety of turbith root-Ipomaea turpithum. (சா.அக.).

நிட்களக்கல் *niṭkaḷakkal,* பெ. (n.) ஒருவகை நஞ்சு (சீதங்க பாடாணம்); a mineral poison. (சா.அக.).

நிட்குடி *niṭ-kuḍi,* பெ. (n.) ஏலம்; cardomum-Elleteria cardamomum. (சா.அக.).

நிட்சைமாதுறுதம் *niṭsai- māduṟudam,* பெ. (n.) சிற்றரத்தை; lesser galangal-alpinia galanga. (minor) (சா.அக.).

நிட்பலம் *niṭpalam,* பெ. (n.) **1.** அவரை; bean. **2.** மொச்சைப்பயிறு (1,2 வைத்திய. பரிபா.); hyacinth bean (கதி.அக.).

நிட்பவம் *niṭpavam,* பெ. (n.) **1.** அவரை; bean. **2.** மொச்சை; country bean. (சா.அக.).

நிட்பாவம் *niṭ-pāvam,* பெ. (n.) மொச்சைக் கொட்டை; dry bean. (சா.அக.).

நிடலம் *niḍalam,* பெ. (n.) நெற்றி (சூடா.); forehead.

[நுதல் → நுதலம் → நிதலம் → நிடலம்.]

நிடலாட்சன் *niḍalāṭśaṉ,* பெ. (n.) (நெற்றிக் கண்ணையுடையவனான) சிவன்; sivan, as having an eye in his forehead.

[நுதல் → நிதல் → நிடல் + அட்சன்.]

skt. அக்ஷய → அட்ச → அட்சன்

நிடாடம் *niḍāḍam,* பெ. (n.) ஆந்தை (வைத்திய.கருப்பொ.); owl. (கதி.அக.).

நிடாலம் *niḍālam,* பெ. (n.) நெற்றி (வைத்திய. கருப்பொ.); forehead. (கதி.அக.).

[நுதல் → நிதல் → நிடல் → நிடலம் → நிடாலம்.]

நிண்ணயம் *ninnayam*, பெ. (n.) **1.** உறுதி (யாழ்.அக.); *determination, resolution.* **2.** ஆராய்வு (சங்.அக.); *ascertaining.* *"நிண்ணயந் தெரிவிவேகம்"* (கைவல்.தத்.8).

[நில் = உறுதி, உறுதிப்பாடு. நில் + நயம்.]

நிண்ணயி–த்தல் *ninnayi-*, 4 செ. குன்றாவி. (v.t.) முடிவுபடுத்துதல் (உ.வ.); to determine, resolve.

[நிண்ணயம் → நிண்ணயி–,]

நிண்ணி–த்தல் *ninni-*, 4 செ. குன்றாவி. (v.t.) நிண்ணயி–த்தல் பார்க்க (உ.வ.); see ninnayi-,

[நிண்ணயம் → நிண்ணயி → நிண்ணி–,]

நிண[1]–த்தல் *nina-*, 4 செ.கு.வி. (v.i.) கொழுத்தல்; to grow fat.

(நிணம் → நிண–,)

நிண[2]–த்தல் *nina-*, 3செ. குன்றாவி. (v.t.) **1.** கட்டுதல்; to tie up, fasten. *"கட்டினிணக்கு மிழிசினன்"* (புறநா.82.). **2.** முடைதல் (சூடா.); to braid.

(நிணர் → நிண–,)

நிணக்கழலை *nina-k-kalalai*, பெ. (n.) கொழுப்புக்கட்டி (M.L.); fatty tumour.

(நிணம் + கழலை.)

நிணக்கும் *ninakkum*, கு.வி.எ. (adv.) கட்டும்; binding. *"சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப் பட்ட மாரிஞான்ற ஞாயிற்றுக் கட்டினிணக்கு மிழிசினன் கையது"* (புறநா.82.).

நிணங்கிழிப்ப *ninankilippa*, கு.வி.எ. (adv.) தசையின் உள்சவ்வு கிழிபட; trint out flesh tissue. *"ஈர்ங்கை மறந்தவெனிரும்பே ரொக்கல் கூர்ந்த வெவ்வம் விடக்கொழு நிணங்கிழிப்பக் கோடைப் பருத்தி வீடு நிறை பெய்த"*. (புறநா.393:10)

[நிணம் + கிழப்ப.]

நிணங்கொள்புலால் *ninankolpulāl*, பெ. (n.) கொழுப்பு நிறை இறைச்சி; fatted flesh. *"நிணங்கொள் புலாலுணங்கனின்று புள்ளோப்புறலைக் கீடாகக் கணங்கொள் வண்டார்த்துலாங் கன்னி நறுஞாழல் கையிலேந்தி* (சிலப்.7:9.).

[நிணம் + கொள் + புலால்]

நிணச்செருக்கு *nina-c-cerukku*, பெ. (n.) உடற்கொழுப்பாலாகிய செருக்கு; pride in one's own muscular strength. *நிணச்செருக்கு அவனை ஆட்டுகிறது.*

(நிணம் + செருக்கு.)

நிணச்சோறு *nina-c-cōru*, பெ. (n.) புலால் விரவின சோறு (சிலப். 5:68. உரை.); meat rice.

(நிணம் + சோறு.)

நிணஞ்சுடுபுகை *ninañ-cudupugai*, பெ. (n.) கொழுப்பைத் தீயிலிடுவதால் ஏற்படும் புகை; smoke arising out of burning fats. *"நிணஞ்சுடு புகையொடு கனல் சினந் தவிராது நிரம்பகல் பறிய வேறா வேணி"* (நற்.43:32.).

(நிணம் + சுடு + புகை.)

நிணத்திசு *nina-t-tisu*, பெ. (n.) குருதிச்சவ்வு; adipose tissue.

[நிணம் + திசு.]

நிணந்தவை *ninandavai,* பெ. (n.) தெற்றின மாலை; garland. "*நிணந்தவை கோத்தவை நெய்தவை தூக்க மணந்தவை போல வரைமலை யெல்லாம்*" (பரிபா.19:80.).

நிணந்து *ninandu,* வி.எ. (adv.) பிணித்து; bond. "*நிணந்தெ னெஞ்ச நிறை கொண்ட கள்வனை*" (சீவக.பதுமை 144.).

நிணநரம்புகள் *nina-narambugal,* பெ. (n.) ஊன் நரம்புகள்(M.L.); lymphatic vessels; absorbents.

[நிணம் + நரம்புகள்.]

நிணநீர் *ninanir,* பெ. (n.) குருதியில் சென்று சேரும் வெள்ளையணுக்களைக் கொண்ட நிறமற்ற நீர்மம்; lymph.

[நிணம் + நீர்.]

நிணநெய் *nina-ney,* பெ. (n.) மணிக்கட்டு களிலுண்டாகும் பசை (M.L.); synovia.

[நிணம் + நெய்.]

நிணப்பு *ninappu,* பெ. (n.) கொழுப்பு; fat. (சா.அக.).

[நிணம் + நிணப்பு.]

நிணம் *ninam,* பெ. (n.) 1. கொழுப்பு; fat "*நிணங்குடர் நெய்த்தோர் நிறைத்து*" (பு.வெ.3,5.). 2.ஊன்; flesh. "*மைந்நிண விலைஞர்*" (மணிமே.28:33.). 3. ஊனீர் (வின்.); serum.

க. நிணெ **ம.,** **க.**நிணம்; **க.**நிணெ; **து.** நிணம்; *கோத.* நினிக்;

நிணம்படுகுருதி *ninam-padukurudi,* பெ. (n.) குருதி கலந்த கொழுப்பு; fat stained with blood. "*பிணஞ்சமந் தொழுகிய நிணம்படு குருதியிற் கணங் கொள் பேய்மகள் கதுப்பிகுத் தாட*" (சிலப்,26:209.).

[நிணம்படு + குருதி]

நிணமுருக்கு *ninam-urukku,* பெ. (n.) உடம்பிலுள்ள கொழுப்பைக் கரையும்படி செய்யும் ஒரு நோய்; a disease lending to decrease fat in the system, a wasting disease as tuberculosis etc. **2.** உடம்பின் கொழுப்பைக் கரையச்செய்யும் மருந்து; any medicine prescribed for reducing the fat in the body. (சா.அக.).

[நிணம் + உருக்கு.]

நிணமூரி *nina-mūri,* பெ. (n.) நிணத்தின் துண்டம்; a piece of fat. "*மூடைப் பண்ட மிடை நிறைந்தன்ன வெண்ணின மூரி யருள*" (புறநா.393.).

[நிணம் + மூரி.]

நிணர்[1]–தல் *ninar-,* 2 செ.கு.வி. (v.i.) கட்டுதல்; to tie, fasten. "*பட்டு நிணர்கட்டில்*" (சீவக. 2030.).

து. நிணே, நிணெ, நினெ; **துட.** நின்,

நிணர்[2]–தல் *ninar-,* 2 செ.கு.வி. (v.i.) செறிதல்; to crowd, gather thick. "*எங்கணு நிணர்ந்த பூங்குளிர் நிழல்*" (திருவானைக். நாட்.109.).

நிணல் *ninal,* பெ. (n.) சாயை; shade.

[நில் → நில → நிழல் → நிணல்.]

நிணவுதி *ninavudi,* பெ. (n.) *நிணத்திசு* (இ.வ.) பார்க்க; see *nina-t-tišu.*

நிணவை *ninavai,* பெ. (n.) 1. பிணிப்பு (பெருங்.உஞ்சைக். 34, 144.); tying, bondage. 2. பின்னிச் செய்யப்பட்டது; that which is plaited. **அம்பணை மூங்கிற் பைம்போழ் நிணவையும்** (பெருங். உஞ்சைக்.42,28.).

[நிணர் → நிண → நிணவை.]

நிணறு *ninaru,* பெ. (n.) 1. உருக்கம்; affection, love. "*அவன் நெஞ்சம் நிணறு கொண்டு பேசினான்*" (வின்.). 2. நலம்; benefit, good. "*கிணறு வெட்ட வேணும் நிணறு சொன்னேன்*" (இராமநா. உயுத்.23.).

தெ. நெனறு

[நில் → நிணம் → நிணர் → நிணறு.]

நிணர் = கட்டு, இறுக்கம், செறிவு, நட்பு.

நிணனுகுகுருதி *ninanugu-kurudi,* பெ. (n.) நிணத்தோடு கலந்து உகா நின்ற குருதிப் பலி; sacrifer with fat stained blood. "*நிணனுகு குருதிகொ ணிகரடு விலையே*" (சிலப்.12:19.).

நித்தக்கட்டளை *nitta-k-kattalai,* பெ. (n.) நாள்தோறுமாய ஏற்பாடு (வின்.); daily allotment, whether of allowance or expense.

(நித்தம் + கட்டளை.)

நில் → நிற்றல் → நித்தல் → நித்தம்.

கள் → கட்டு → கட்டளை = முறைமை; முறையான செலவு.

நித்தக்கத்தரி *nitta-k-kattari,* பெ. (n.) பெரிய கத்தரி; long brinjal. (சா.அக.).

நித்தக்கருமம் *nitta-k-karumam,* பெ. (n.) 1. அறநூல்களில் விதிக்கப்பட்டதும், செய்யாமற் போவது கரிசெனக் கருதப்படுவதுமான செயல்; a constant act or duty enjoined by sāstras, non-performance of which is considered a sin. 2. நாள்தோறும் செய்வதான செயல்; daily duties enjoined by sāstrās.

[நித்தம் + கருமம்.]

நில்→நிற்றம்→நித்தம்.
ஒ.நோ. வெல் → வெற்றம்
கொல் → கொற்றம்
குற்று → குத்து
முற்றகம் → முத்தகம்
பீற்றல் → பீத்தல்.
குல் → குரு → கரு → கருமம்.
கரு → கருத்தல் – செய்தல்.

நித்தக்காய்ச்சல் *nitta-k-kāyccal,* பெ. (n.) நாளும் அடிக்கும் காய்ச்சல் (வின்.); quotidian fever.

[நித்தம் + காய்ச்சல்.]

நில் → நிற்றல் → நித்தல் → (நித்தன்)→நித்தம்.

நித்தத்துவம் *nittattuvam,* பெ. (n.) என்றுமுளதாந் தன்மை; eternity. "*நிராமய மான நித்தத்துவம்*" (உத்தரரா.திக்குவி.248.).

[நித்தம் + தத்துவம்.]

நில் → நிற்றல் → நித்தல் → (நித்தன்)→நித்தம்.

நித்தநிமந்தம் *nitta-nimandam,* பெ. (n.) நித்தியக் கட்டளை; daily offerings in a temple. "*மகாதேவர்க்கு நித்த நிமந்தஞ் செலுத்துகைக்கு*" (S.I.I:392).

[நித்தம் + நிமந்தம்.]

நில் → நிற்றல் → நித்தல் → (நித்தன்)→நித்தம்.

நித்தப்படிகாரன் *nitta-p-paḍikāraṉ,* பெ. (n.) நாட்கூலிக்காரன்; one who works on daily wages. (சரவண. பணவிடு.81–2.).

[நித்தப்படி + காரன்.]

நித்தம்[1] *nittam,* பெ. (n.) **1.** என்றும் அழியாதுள்ள நிலை; eternity. *"நேரினித்தமு மொட்டின னாகுமே"* (மேருமந்.592.). **2.** ஓமகுண்டம் (பிங்.); sacrificial pit. **3.** *நித்திய கருமம்* பார்க்க; see *nittiya karumam.* *"கருமநித்த நைமித்தங் காமியங்கள்"* (பிரபோத.39,13.). **4.** *நீர்முள்ளி (மலை.)* பார்க்க; see *nirmuḷḷi.*

[நில் → நிற்றம் → நித்தம். *]*
நித்தம் → நித்தல்.

ஒ.நோ. வெல் → வெற்றம்
கொல் → கொற்றம்
குற்று → குத்து
முற்றகம் → முத்தகம்
பீற்றல் → பீத்தல்.

இடம் (வெளி), காலம், இறைவன் மூன்றும் வேறு ஒன்றினின்றும் தோன்றாது என்றும் ஒரே தன்மையாய் நிற்கும் நித்தப் பொருளாம். காலம் கருத்துப் பொருளே. (த.ம.85.).

நிற்றம், நிச்சம், நித்தம் என்னும் மூவடிவுகளுட் கடைப்பட்ட நித்தம் என்னும் வடிவினின்று நித்ய என்னும் வடசொல்லைத் திரித்துக் கொண்டு, அதையே முத்தென்சொல் வடிவிற்கும் மூலமாகக் கூறி ஏமாற்றி வருகின்றனர் வடமொழியாளர். இதற்கு ஏதுவானது, ஏமாறுந் தன்மை மிக்க தமிழரின் பேதைமையே.

என்றுமுண்மைக் கருத்தைத் தோற்றுவித்தற்கு நிலைப்புக் கருத்தே பொருத்தமானது. வடமொழியாளர் 'நி' என்னும் முன்னொட்டை மூலமாகக் கொண்டு, ஒன்றன் உட்பட்டது, ஒன்றொடு தொடர்புள்ளது, தொடர்ந்தது, நீடித்தது, நிலைத்தது என்று கருத்துத் தொகுத்து, நித்ய என்னும் சொற்குப் பொருட்கரணியங் காட்டுவர். இதன் பொருந்தாமையை இனி மேலாயினுங் கண்டு தெளிக. (வே.க.3:47.).

நித்தம்[2] *nittam,* வி.எ. (adv.) எப்போதும்; constantly, perpetually, eternally. *"நித்தமணாளர் நிரம்பவழகியர்"* (திருவாச. 17:3.).

நில் → நிற்றம் → நித்தம்.

ஒ.நோ. வெல் → வெற்றம்
கொல் → கொற்றம்
குற்று → குத்து
முற்றகம் → முத்தகம்
பீற்றல் → பீத்தல்.

நித்தம்[3] *nittam,* பெ. (n.) நாட்டியம்; dance. *"நித்தந் திகழு நேரிழை முன்கையால்"* (பரிபா.12:43.).

skt. nrtta

நித்தரு *nittaru,* பெ. (n.) கற்பூரம்; camphor-camphora officinarum. (சா.அக.).

நித்தல்[1] *nittal,* வி.எ. (adv.) *நித்தலும்* பார்க்க; see *nittalum.* *'நித்தல் பழி தூற்றப்பட்டிருந்து'* (இறை.கள.1,14.).

[நில் → நிற்றல் → நித்தல்.]

நித்தல்[2] *nittal,* பெ. (n.) *நித்தம்* பார்க்க; see *nittam.*

[நில் → நிற்றல் → நித்தல்.]

நித்தல்விழா *nittal-viḻā,* பெ. (n.) கோயிலில் நடக்கும் நாள்பூசை (நித்தியோற்சவம்); daily procession of the cipali idol. *"நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே"* (சிலப்.உரைபெறுகட்.4.).

[நில் → நிற்றல் → நித்தல் + விழா.]

நித்தலம்[1] *nittalam,* பெ. (n.) முத்து; pearl-margarita sinensis. (சா.அக.).

நித்தலம்[2] *nittalam,* பெ. (n.) *நித்திலம்* பார்க்க; see *nittilam.* "*நத்தளித்த வெண்டூய வனித்தலத் தண்வயல்*" (மருதூரந்.37.).

[நுல் → நெல் → நில் → நில = ஒளிவீசுதல். நில + திலம் = நிலத்திலம் = ஒளிவீசும் முத்து நிலத்திலம் → நித்திலம்(வே.க.3:21.).]

நித்தலழிவு *nittal-alivu,* பெ. (n.) நாட்படிச் செலவு; daily expenses. (தெ.க.தொ. 3: 298.).

[நில் → நிற்றல் → நித்தல் + அழிவு. அழிவு = செலவு.]

நித்தலும் *nittalum,* வி.எ. (adv.) எந்நாளும்; always, continually, perpetually. "*உமை நித்தலுங் கைதொழுவேன்*" (தேவா. 25,1.).

[நில் → நிற்றல் → நித்தல் → நித்தலும்.]

நித்தவஞ்சி *nittavañji,* பெ. (n.) பூவந்தி; soap nut tree-sapindas trifoliatus. (சா.அக.).

நித்தவினோதம் *nitta-vinōdam,* பெ. (n.) அருகனின் முக்குடைகளுளொன்று (சூடா.); an umbrella of Arhat, one of mukkuḍai.

[நித்தல் + (skt.) வினோதம்.]

நித்தவினோதவளநாடு *nitta-vinōda-vaḷanāḍu,* பெ. (n.) சோழமண்டலத்தின் பழைய நாடுகளில் ஒன்று; an ancient division in Cōḻa maṇḍalam. "*நித்தவினோத வளநாட்டுக் கிழார்க் கூற்றத்துப் பிரமதேயம்*" (தெ.க.தொ.2:76:95.).

[நில் → நிற்றல் → நித்தல் → நித்தம். நித்தம் + (skt.) வினோதம் + வளநாடு.]

நித்தற்கத்திரி *nittaṟ-kattiri,* பெ. (n.) *நித்தக்கத்தரி* பார்க்க; see *nitta-k-kattari.* (சா.அக.).

[நித்தல் + கத்திரி.]

நித்தன் *nittaṉ,* பெ. (n.) 1. கடவுள்; the supreme being, as eternal. 2. சிவன் (பிங்.); Lord Sivan. 3. அருகன் (பிங்.); Arhat.

[நில் → நிற்றல் = நிற்கை, நிலை. நிற்றல் → நித்தல் = என்றும். நித்தல் → நித்தலும் = நிலையான, என்றுமுள்ள. நித்தல் → நித்தன் = நிலையானவன், என்றுமுள்ளவன்.]

நித்தாசம் *nittāšam,* பெ. (n.) நிலவேம்பு: ground neem. french chiretta-justicia paniclata. (சா.அக.).

நித்தாசில்லி *nittāšilli,* பெ. (n.) பொருத்துள் பொசியும் நீர்மம்; an ankaline fluid contained in a joint cavity-synovia-a secretion like the white of a egg moisteniny the joints. (சா.அக.).

நித்தாநித்தம் *nittānittam,* பெ. (n.) நிலை பேறும், நிலையாமையும்; being eternal and temporal. "*நித்தநித்த நிகழுநல்லேது*" (மணிமே. 29:121.).

[நித்தம் + அநித்தம்.]

நித்தாரம் *nittāram,* பெ. (n.) உறுதிப்பாடு நிலைப்பேறு; determination; ascertainment. "*நித்தாரமி தென்றலும்*" (ஞானவா.சிகித்.134.).

skt. nir-dhāra

[நித்தம் + ஆரம்.]

நித்திகம்[1] *nittigam,* பெ. (n.) கண்டங்கத்தரி; a prickly plant with diffuse branches. **2.** தூதுவளை; climbing brinjal.

நித்திகம்[2] *nittigam,* பெ. (n.) ஒருவகைப் பூடு; a kind of shurb. (த.சொ.அ.).

நித்திட்டம் *nittiṭṭam,* பெ. (n.) செஞ்சந்தனம்; red sandal-pterocarpus santalinus. (சா.அக.).

நித்திடம் *nittiḍam,* பெ. (n.) கொடிக்கத்தரி; climbing brinjal - solanum trilobatum. (சா.அக.).

நித்திதம் *nittidam,* பெ. (n.) *நித்திகம்* (மலை,) பார்க்க; see *nittigam.*

நித்தியக்கட்டளை *nittiya-k-kaṭṭaḷai,* பெ. (n.) நாள்தொறுமாய ஏற்பாடு (வின்.); daily allotment, whether of allowance or expense.

[நில் → நிற்றல் → நித்தம் → நித்தியம் + கட்டளை.]
இதனை நிதக்கட்டளை என்பர்.

நித்தியகண்டம் *nittiya-kaṇḍam,* பெ. (n.) நாள்தோறும் வரும் ஏதம்; daily peril. '*நித்திய கண்டம் பூரணாயுள்*' (உ.வ.).

[நித்தியம் + கண்டம். நில் → நிற்றல் → நித்தல் → நித்தம் → நித்தியம்.]

நித்தியகதி *nittiya-kadi,* பெ. (n.) காற்று; wind, as ever moving.

[நித்தியம் + கதி.]

நித்தியகம்பலை *nittiya-kambalai,* பெ. (n.) ஓயாச்சண்டை (யாழ்ப்.); constant quarrelling.

[நித்தியம் + கம்பலை.]

நில் → நிற்றல் → நித்தம் → நித்தியம்.
கும் → கம் → கம்பல் → கம்பலை = திரண்டெழும் பேரோசை, சண்டை.

நித்தியகம்புலு *nittiya-kambulu,* பெ. (n.) நித்திய கம்பலை (யாழ்ப்.) பார்க்க; see nittiya kambalai.

[நித்தியம் + கம்புலு.]
நித்தம் → நித்தியம்
கம்பலை → கம்பலு → கம்புலு.

நித்தியகருமம் *nittiya-karumam,* பெ. (n.) **1.** சாத்திரங்களில் விதிக்கப்பட்டதும் செய் யாமை தீதென்று கருதப்படுவதுமான செயல்; a constant act or duty enjoined by sastra, non-performance of which is considered a sin. **2.** சாத்திரங்களில் அறுதியிட்டப்பட்ட அன்றாட செயல்கள்; daily duties enjoyed by sastras.

[நித்தம் → நித்தியம் + கருமம்.]

நில் → நிற்றம் → நித்தம் → நித்தியம்

குல் → குரு → கரு → கருமம் → கம்மம் (பே.வ.) karma- Pali and Prak. *எ–டு: (கருமான்)–கருமாளன்–கம்மாளன். கரு என்னும் முதனிலை இன்று வழக்கற்றது. கருத்தல்–செய்தல்.*

கருமம் → கம்மம் → கம். கம்மம்= முதற் றொழிலாகிய பயிர்த்தொழில்.

கம்மவர் → கம்மவாரு = பயிர்த் தொழில் செய்யும் தெலுங்கர். கம் = பல்வேறு கனிம (உலோக)த் தொழில். "ஈமும் கம்மும்" (தொல். 328.).

கம்மாளன் = பொற்கொல்லன், ஐங்கொல்லருள் ஒருவன். கம்மியன் = கற்றச்சன் (சிற்பி.) கரு + வி = கருவி. கரு + அணம் = கரணம் = செய்கை, திருமணச் சடங்கு, கருவி, அகக்கருவி. 'கற்பெனப்படுவது கரணமொடு புணர' (தொல். 1088.).

இதிற்கரணம் என்பது திருமண வினையாகிய சடங்கைக் குறித்தது. வடவர் 'கரு' என்னும் முதனிலையைக் 'க்ரு' எனத் திரித்துள்ளனர். இங்ஙனம் சொன் முதல் உயிர்மெய்யில், உயிரை நீக்குவது ஆரிய மரபு.

ஒ.நோ. பொறு → ப்ரு, திரு → ச்ரீ, வரி →வ்ரீஹி. கரை – E. cry. துருவு = E.through புருவம் – E. brow.

வடவர் கரணம் என்னும் சொல்லைக் காரண என நீட்டி, அதற்கேற்பக் கார்ய என்னும் சொல்லைத் திரித்துள்ளனர். காரணம் என்னும் நீட்டம் தமிழுக்கேற்கும். ஆயின், காரிய என்னும் திரிபு ஏற்காது. ஏற்கனவே காரணம் என்பதினின்று கரணியம் என்னும் சொல் திரிந்துள்ளது. அதற்கேற்பக் கருமம் என்பதினின்று, கருமியம் (காரியம்) என ஒரு சொல்லைத் திரித்துக் கொள்ளலாம்.

செய், பண்(ணு), புரி முதலிய பல பிற ஒருபொருட் சொற்கள் தமிழில் இருப்பதனாலும், கரு என்பது வழக்கற்றுப் போனதினாலும், பின்னது வடசொல்லென மயங்கற் கிடந்தருகின்றது. தமிழ் வடமொழிக்கு முந்தியதென்றும் பெருஞ் சொல்வள மொழியென்றும் அறியின், இம்மயக்கந் தெளிந்துவிடும். தமிழ் திராவிட மொழிகட்குரிய இல், மனை, வீடு முதலிய சொற்களை மட்டுமின்றி, ஆரிய மொழிகளில் புகுந்த 'குடி' என்னுஞ் சொல்லையுந் தன்னகத்துக் கொண்டுள்ள தென்று, கால்டுவெலார் கூறியிருப்பதைக் கூர்ந்து நோக்குக. (வ.வ. 274.).

கரு – கருத்தல் = செய்தல், வினையாற்றுதல். நெல்லை மாவட்ட மீனவர் உழைப்பாளியைக் கருவாளி எனக் குறிப்பிடுதலை இன்றுங் காணலாம். கருத்தல் என்னும் வினை வடதமிழில் வழக்கூன்றித் தென்னகத்தில் வழக்கிழந்த தெனினும் இது தொன்முது செந்தமிழ்ச் சொல் என அறியத்தகும்.

நித்தியகலியாணம் *nittiya-kaliyāṇam,* பெ. (n.) தொலையா மகிழ்ச்சி (நிரந்தரசுகம்) (வின்.); everlasting, perpetual happiness.

[நித்தியம் + கலியாணம்.]

நித்தியகலியாணி *nittiya-kaliyāṇi,* பெ. (n.) செடிவகையுளொன்று; old-maid, a garden plant.

[நித்தியம் + கலியாணி.]

நில் → நிற்றல் = நிற்கை, நிலை.
நிற்றல் → நித்தல் = என்றும்.
நித்தல் → நித்தம் = என்றும்.
நித்தம் → நித்தியம் = நிலையான, என்றும்.
கலி + யாணம் = கலியாணம்.
கலி = தழைத்தல்.
யாணம் = புதுமை, புதுவருவாய்.
கலியாணம் → கலியாணி (தென்.கட்.12.).

நித்தியசகலம் *nittiyašagalam,* பெ. (n.) இரு வகைச் சகலாவத்தையுளொன்று.; one among two types of sagālavattai. (கதி.அக.).

நித்தியசுந்தரேசுவரர் *nittiya-sundarēsuvarar,* பெ. (n.) திருநெடுங்களத்திருக்கோயிலில் கோயில் கொண்டிருக்கும் இறைவன்; the deity at Thirunedungaḷam. (த.சொ.அக.).

[நித்தியம் + சுந்தரேசுவரர்.]

நித்தியசுமங்கலி *nittiya-sumaṅgali,* பெ. (n.) கணிகையர்; dancing-girl.

[நித்தியம் + சுமங்கலி.]

நில் → நிற்றல் = நிலையான, என்றும்.
நிற்றல் → நித்தல் = என்றும்.
நித்தல் → நித்தியல் = என்றும்.
நித்தம் → நித்தியம் = என்றும்.
நன்கலம் (நங்கலம்) = மங்கலம்.
நன்கலம் = தாலி, சிறந்த அணி.
நன்கலம்= அணியத்தக்கநிலை, மங்கலம்.
நன்கலம் = மங்கலம். ந= ம,போலி
மாட்டுப் பெண் = நாட்டுப்பெண்
முனி = நுனி
மங்கலம் = மங்கலி.. 'சு' வடசொல் முன்னொட்டு தமக்கென வரைந்த கணவரின்றி நாடொறுமொருவரைக் கணவராய்க் கொள்ளுதலின் கணிகையர் நித்தியசுமங்கலி எனப்பட்டனர்.

நித்தியசேவகம் *nittiya-šēvagam,* பெ. (n.) நாடோறும் செய்யுஞ் தொண்டு; daily service. (த.சொ.அக.).

[நித்தியம் + Skt. சேவகம்.]

நித்தியசேவனை *nittiya-šēvaṉai,* பெ. (n.) *நித்திய சேவகம்* பார்க்க; see *nittiya-sevagam* (த.சொ.அக.).

[நித்தியசேவகம் → நித்தியசேவனை.]

நித்தியதாநம் *nittiya-dānam,* பெ. (n.) *நித்தியதானம்* பார்க்க; see *nittiya-dāṉam* (த.சொ.அக.).

நித்தியதானம் *nittiya-dāṉam,* பெ. (n.) நாடொறுமளிக்குங் கொடை (வின்.); daily alms, gifts, or presents.

[நித்தியம் + தானம்.]

நித்தியநட்சத்திரம் *nittiya-natcattiram,* பெ. (n.) *நித்தியவிண்மீன்* பார்க்க; see *nittiya-viṇmīṉ.*

[நித்திய + skt. நட்சத்திரம்]

நித்தியநைமித்திகம் *nittiya-naimittigam,* பெ. (n.) 1. நாட்சடங்கும் சிறப்புச்சடங்கும்; daily and occasional or special ceremonies. 2. பழம் நூல்களால் உருவாக்கப்பட்டதும், கோள்நிலை கண்டு இன்றியமையாது செய்ய வேண்டியதுமான செயல்; any regularly - recurring, occasional duty enjoined by sastras.

[நித்தியம் + skt.நைமித்திகம்.]

நித்தியப்பகுவசனம் *nittiya-paguvašaṉam,* பெ. (n.) 1. பன்மையாகவே வழங்குஞ் சொல்; words used always in the plural as makkal. 2. வசவு (உ.வ.); abusive language.

[நித்தியம் + பகுவசனம்.]

நித்தியப்படி¹ *nittiya-p-paḍi,* வி.எ. (adv.) நாடோறும்; daily. *'நித்தியப்படிக்குத் தனித்துப்படுத்து'* (தனிப்பா. ii, 49, 118.).

[நித்தியம் + படி.]

படி = போல.

நித்தியப்படி² *nittiya-p-paḍi,* பெ. (n.) *நித்தியக் கட்டளை* பார்க்க; see *nittiya-k-kaṭṭaḷai.*

நித்தியம் + படி.
படி = படியளந்து செய்யும் கட்டளை.

நித்தியப்படித்தரம் *nittiya-p-paḍittaram,* பெ. (n.) கோயில் நித்தியக்கட்டளை; fixed daily allowance for routine service in a temple.

[நித்தியம் + படித்தரம்.]

நித்தியப்படிமோகினி *nittiya-p-paḍi-mōgiṉi,* பெ. (n.) ஆலயத்திற்கு நாள்தொறும் நிகழ்வுறும் பூசையின் பொருட்டு அரசால் கொடுக்கப்படும் படித்தொகை (ரொக்கம்) (W.G) ; allowance in money for daily services in a temple, made by the government.

[நித்தியப்படி + skt. மோகினி.]

நித்தியப்பிரளயம்¹ *nittiya-p-piraḷayam,* பெ. (n.) 1. உயிர்களின் உறக்க (சுழுத்தி) நிலை (சங்.அக.); (நாள்தோறும் நிகழும் பிரளயம்) lit. daily dissolution; sound sleep. 2. இறப்பு (வின்.); death.

[நித்தியம் + skt. பிரளயம்.]

நித்தியப்பிரளயம்² *nittiya-p-piraḷayam,* பெ. (n.) இடைவிடாத சாவு: continuous death. (த.சொ.அக.).

நித்தியப்பூசை *nittiya-p-pūšai,* பெ. (n.) அன்றாடு நிகழ்வுறும் பூசை; daily worship, as in a temple.

[நித்தியம் + பூசெய் → பூசை.]

நித்தியம்[1] *nittiyam,* பெ. (n.) (சாசுவதம்) நிலையானது; eternity, permanence. நித்தியமாய் நிர்மலமாய் (தாயு. பொருள்வ. 1.). 2. முத்தி (யாழ்.அக.); everlasting bliss. 3. நித்திய பூசை பார்க்க; see nittiya pūšai. 4. நித்திய விதி, 1 பார்க்க. உடையவர் நித்தியம். 5. கடல் (யாழ்.அக.); sea, ocean.

[நில் → நித்தம் → நித்தியம்.]

நித்தியம்[2] *nittiyam,* வி.எ. (adv.) நாடோறும்; daily.

நித்தியம்[3] *nittiyam,* பெ. (n.) *நித்திகம்* பார்க்க; see *nittigam.*

நித்தியமல்லி *nittiyamalli,* பெ. (n.) 1. சிவப்புப் பூக்களையுடையதொரு பூடு; jasmine bendy-hisbiccus hirtus. 2. ஒருவகை மல்லிகை; (சா.அக.).

நித்தியமல்லிகை *nittiya-malligai,* பெ. (n.) மல்லிகை வகை: a kind of jasmine.

[நித்தம் → நித்தியம் + மல்லிகை.]

நித்தியமுத்தன் *nittiya-muttaṉ,* பெ. (n.) 1. கடவுள் (வின்.); God, as the being of eternal bliss.

நித்தியமுத்தி *nittiya-mutti,* பெ. (n.) மீளா நற்கதி (யாழ்.அக.); eternal bliss.

[நித்தியம் + முத்தி.]

நித்தியமோட்சம் *nittiya-mōṭcam,* பெ. (n.) *நித்தியமுத்தி* (யாழ்.அக.) பார்க்க; see *nittiya mutti.*

[நித்தியம் + மோட்சம்.]

நித்தியயோகம் *nittiya-yōgam,* பெ. (n.) 1. குறையா(த) செல்வம்(வின்.); everlasting wealth. 2. என்றும் விடாசேர்க்கை; perpetual, inseparable union.

நித்தியல்[1] *nittiyal,* பெ.அ. (adj.) நாள்தோறும்; daily. *"நித்தியல் திருப்பெருக்கு அமுது கொடுக்கிற"* (T.A.S.v,117.).

[நித்தம்→ நித்தயம் → நித்தியல்.]

நித்தியல்[2] *nittiyal,* பெ. (n.) 1. *நித்தியபூசை* பார்க்க; see *nittiya-pūšai.* 2. *நித்திய்க்கட்டளை* பார்க்க; see *nittiya-k-kaṭṭalai.*

நித்தியவஞ்சி *nittiya-vañji,* பெ. (n.) கொஞ்சி வஞ்சி; gum lac tree-schleichera trijuga. (சா.அக.).

நித்தியவநித்தியம் *nittiya-v-anittiyam,* பெ. (n.) *நித்தாநித்திம்* பார்க்க; see *nittā-nittam.* *"நித்தியவ நித்தியங் கணிண்ணயம்"* (கைவல். தத். 8.)

[நித்தியம் + அ(ல்)நித்தியம்.]

நித்தியவாசம் *nittiya-vāšam,* பெ. (n.) நிலையான இருப்பு; permanent habitation.

[நித்தியம் + வாசம்.]

நித்தியவாசி *nittiya-vāši,* பெ. (n.) இறைவன் (கிறித்.); God, as the eternal being.

[நித்தியம் + வாசி
நித்தல் → நித்தம் → நித்தியம்
வதி → வசி → வாசி.]

நித்தியவிண்மீன் *nittiya-viṇmīṉ,* பெ. (n.) அன்றன்று நிலவுடன் சேரும் நாண்மீன்; lunar asterism pertaining to each day.

[நித்தியம் + விண்மீன்.]

நித்தியவிதி *nittiya-vidi,* பெ. (n.) **1.** அன்றாடக் கடமையுணர்த்தும் நூல்; book of rules on daily duties. **2.** இறந்தவர் பொருட்டு பத்து நாளுஞ் செய்யும் சடங்கு (உ.வ.); daily offering to the deceased during the ten days following death. **3.** ஓமக்கிடங்கு (யாழ்.அக.); sacrificial pit. **4.** காவு கொடுக்குமிடம் (யாழ்.அக.); sacrificial altar.

[நித்தியம் + விதி.]

skt. விதி

த. நெறி.

நித்தியவிபூதி *nittiya-vibūdi,* பெ. (n.) திருமாலின் இருப்பிடம் (அஷ்டாதச. ஸ்ரீவசன. 4, பிர. 381, வியா.); the abode of Tirumāl.

நித்தியன் *nittiyaṉ,* பெ. (n.) கடவுள்(வின்.); God, as eternal.

[நித்தம் → நித்தியம் → நித்தியன்.]

நித்தியாசாரம் *nittiyāšāram,* பெ. (n.) நாடொறும் கடைப்பிடிக்க வேண்டுவன (C.G.); daily observance.

[நித்தியம் + Skt. ஆசாரம்.]

நித்தியாதேவா *nittiyādēvā;* பெ. (n.) தழுதாழை; wind killer-cleodendron phlomoides. (சா.அக.).

நித்தியாநித்தியம் *nittiyā-nittiyam,* பெ. (n.) *நித்தாநித்தம்* பார்க்க; see *nittā-nittam.*

[நித்தியம் + அல் + நித்தியம்.]

நித்தியானந்தம் *nittiyāṉandam,* பெ. (n.) நிலையான மகிழ்ச்சி (வின்.); eternal bliss. **2.** வீடுபேறு (யாழ்.அக.); salvation.

[நித்தியம் + Skt. ஆனந்தம்.]

நித்தியானந்தன் *nittiyāṉandaṉ,* பெ. (n.) கடவுள் (சங்.அக.); God.

[நித்தியம் + Skt. ஆனந்தன்.]

நித்தியானம் *nittiyāṉam,* பெ. (n.) பார்க்கை (யாழ்.அக.); seeing, sight.

நித்திரகாசம் *nittira-kāšam,* பெ. (n.) நொச்சி; notchi-vitex negundo. (சா.அக.).

நித்திரம் *nittiram,* பெ. (n.) *நிதித்திகம்* பார்க்க; see *nidittigam.* (சா.அக.).

நித்திரவரி *nittira-vari,* பெ. (n.) *நிதித்திகம்* பார்க்க; see *nidittigam.* (சா.அக.).

நித்திராவி *nittirāvi,* பெ. (n.) ஊமத்தை; dhatura-datura stramonium. (சா.அக.).

நித்தில்[1] *nittil,* பெ. (n.) நொச்சி; five leaved chaste tree-vitex negundo. (சா.அக.).

நித்தில்² *nittil,* பெ. (n.) மின்மினி (நாமதீப. 253.); firefly.

[நிலத்தில் > நித்தில்.]

நித்திலக்கோவை *nittila-k-kōvai,* பெ. (n.) அகநானூற்றின் மூன்றாவது பகுதி; the third section of Aganāṉūṟu.

[நித்திலம் + கோவை.]

நிலத்திலம் என்பது இடைக்குறையாய் நித்திலம் என்றாயிற்று என்பது பாவாணர் கருத்து.

சங்கப் பனுவலுள் அகநானூறென்னும், நூலின் மூன்று பகுதிகளுள் இறுதிப் பகுதி நித்திலக்கோவை என்பதாகும். அகம் பற்றிய நானூறு பாக்களின் தொகுதி அகநானூறென்று கொள்வோமாயின், அப்பொருள்பற்றிய நானூறு பாக்களைக் கொண்ட குறுந்தொகைக்கும், நற்றிணைக்கும் இப்பெயர் பொருந்துதல் வேண்டும். அங்ஙனமின்மையை அறிவோர் ஓர்ந்துணர்க. அகநானூற்றுக்கு நெடுந்தொகையென்றொரு பெயருமுண்டு. இஃது அடி நிமிர்ந்தோடி அகப்பொருட் பனுவலுக்கியன்ற முதல் கரு உரி என்னும் முப்பொருளையும் அப்பொருட்கேயுரிய உள்ளுறையுவமைகளையும் இறைச்சிப்பொருளையும் விரித்தோதும் சிறப்புடைத்தாதலால் அகநானூறு என்னும் பெயர் இதற்கு மாத்திரமே பொருந்துவதாயிற் றென்பது கற்றறிந்தார் துணிபு.

இதன்கண்ணமைந்துள்ள நானூறு பாக்களை வரிசைப்படுத்தியமைத்த அமைப்பு வியத்தற்குரியதும் தனிச்சிறப்பு வாய்ந்ததுமாகும். 1, 3, 5, 7, 9 என ஒற்றைப்படை எண் பற்றி வரும் பாக்களனைத்தும் பாலைத் திணைக்கும், 2, 8, 12, 18, 22, 28 என்னும் முறை பற்றி வரும் பாக்களனைத்தும் குறிஞ்சித் திணைக்கும் 4, 14, 24, 34 என்னும் முறைபற்றி வரும் பாக்களனைத்தும் முல்லைத் திணைக்கும், 6, 16, 26, 36 என்னும் முறைபற்றி வரும் பாக்களனைத்தும் மருதத் திணைக்கும், 10, 20, 30, 40 என்னும் முறை பற்றி வரும் பாக்களனைத்தும் நெய்தற்றிணைக்குமுரிய வாயமைந்து பாலைக்கு இருநூறும், குறிஞ்சிக்கு எண்பதும், முல்லை, மருதம் நெய்தலுக்கு நாற்பது நாற்பதுமாக நானூறு பாக்களடங்கிய பனுவலாயமைந் திலங்குகின்றது.

முதலிலுள்ள 120 பாக்களுக்குக் களிற்றியானை நிரை எனவும், 121 முதல் 300 பாக்களுக்கு மணிமிடைபவளம் எனவும், 301 முதல் 400 முடியவுள்ள பாக்களுக்கு நித்திலக் கோவை எனவும் பெயர் கொடுத்து இந்நூலை மூன்று பகுதிகளாகப் பகுத்திருப்பதும் போற்றற்குரியதே. இவ்வாறு பெயரிட இந்நூலிற் போந்துள்ள அழகிய சொற்றொடர்களையே ஆய்ந்தெடுத்துப் பெயராக அமைத்தல் வேண்டு மென்று இப்பெயர்களைச் சூட்டியவர் முயன்றுள்ளன ரென்று ஊகித்தற்கிடனுளது. மணிமிடைபவளம் என்னுந் தொடர் இந்நூலகத்து இடைக்காடனார் பாடிய 304 ஆவது பாடலில்

'சுரும்பிமிர் பூதப் பிடத்தளையவிழ
அரும்பொறி மஞ்ஞை யால வரிமணல்
மணிமிடை பவளம் போல அணிமிகக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்ப'

என்றாங்கமைந்துள்ளதைக் கண்டு இத்தொடர் தானே ஒரு பகுதிக்குப் பெயராக அமையுமென்று கருதி இதுபோன்று பெயர்த்தன்மையுடைய வேறு இரண்டு தொடர் பெறுதற்கு முயன்றும் கிடைக்கப் பெறாமை யால் நிரலாகத் தொடுக்கப்பட்ட கோவையாகலின் அப்பொருளமைந்த 'களிற்றின நிரை' என இந்நூலுள் போந்த தொடரினையே களிற்றியானை நிரை என சிறிது திருத்தி அதனை ஒரு பகுதிக்குப் பெயரமைத்தனரென்றும் எஞ்சிய பகுதிக்கு நித்திலக் கோவை என்னும் பொருள்பட இந்நூலிற் போந்துள்ள அழகிய சொற்றொடர் பலவற்றையும் கருதி அப்பொருள் பயப்ப நித்திலக்கோவையென்று பெயரமைத்தனரென்றும் கொள்ளலாம்.

இனி, இவ்வகநானூற்றின் முற்பகுதியில் சார்த்து வகையால் வருகின்ற அக்காலத்து மன்னர் போரும் புகழும் அமைந்த செய்யுள்களை ஆராய்ந்தெடுத்துக் கோத்து அவற்றினூடே களிற்றியானையின் பெயர்களும் மறப்பண்பும் மிக்குத் தோன்றுதலால் அம் மறப்பண்பு இப்பெயரினும் தோன்றல் வேண்டும் என்று கருதி '*களிற்றியானை நிரை*' என்னும் இப்பெயரை அம்முற்பகுதிக் கிட்டனரெனலாம். இப்பெயர் மறப்பண்புணர்த்தும் தன்மையுடைத் தாதலும் நினைக.

இங்ஙனமே மணிமிடைபவளத்தில் சார்த்து வகையாற் கூறப்பட்ட புறப்பொருளும் நூல்நுவலும் அன்பறமாகிய அகப்பொருளும் விரவி வருமாறு கோவை செய்து அச்செய்கை தோன்ற மணிமிடைபவளம் எனப் பெயரிட்டனரெனலாம்.

நித்திலக்கோவையில் முழுவதும் இன்பநுதலிய செய்யுள்களே காணப்படுகின்றன. முற்பகுதிகளிற் போலச் சார்த்துவகையால் மன்னருடைய போரும் புகழும் கூறுகின்ற செய்யுள்கள் இல்லை. ஆதலான், இஃது இன்பமாகிய ஒரு பொருளே நுதலி வருகின்ற பண்பு தோன்ற நித்திலக்கோவை என்னும் இனிய இப்பெயரை இட்டனர் எனலாம்.

நித்தியமல்லி

நிலாவாரை

நிலப்பனங்கிழங்கு

நிலவேம்பு

நித்திலத்தாமம் *nittila-t-tāmam,* பெ. (n.) முத்துமாலை; pearl garland. *"மத்தக மருங்கின் மாலையொடு கிடந்த நித்திலத் தாம நிலையின்வாழாமை"*.(பெருங். உஞ்ஞைக். 48:62.).

[நித்திலம் + தாமம்.]

நித்திலப்பூண் *nittila-p-pūṇ,* பெ. (n.) முத்தாலான பூண்; pearl ring. *"நித்திலப் பைம்பூ ணிலாத்திக ழுவிரொளித் தண்கதிர் மதியத் தன்ன மேனியன்."* (சிலப்.22:17.).

[நித்திலம் + பூண்.]

நித்திலப்பூம்பந்தர் *nittila-p-pūmpandar,* பெ. (n.) முத்துப் பந்தல்; roof with pearls. *"நீல விதானத்து நித்திலப் பூம்பந்தர்க் கீழ்"*. (சிலப். 1:49.).

[நித்திலம் + பூ + பந்தல் → பந்தர். ல > ர போலி]

நித்திலம் *nittilam,* பெ. (n.) முத்து; pearl. *"உரைபெறு நித்திலத்து மாலை"* (சிலப்.3:112– 3.). *"எக்கர் இடுமணல்மேல் ஓதம் தரவந்த நித்திலம் நின்றிமைக்கும் நீள்கழித் தண்சேர்ப்ப"* (ஐந். ஐம்.48.).

நுல் → நெல் → நில் → நில.
நில = ஒளி வீசுதல்.
நில + திலம் = நிலத்திலம்.
நிலத்திலம் = ஒளிவீசும் முத்து.
நிலத்திலம் → நித்திலம். (வே.க.3:21.)
இனி,
நிழற்றுதல் = ஒளிவீசுதல்.
நிழற்றி = ஒளிஉமிழ்வது.
நிழற்றி → நிழத்தி → நித்தி → நித்திலம் என்றுமாம்.

நித்திலமதாணி *nittila-madāṇi,* பெ. (n.) ஒருவகை அணிகலன், முத்துமாலை; an ornament made up of pearl. *முத்தாலாயது நித்திலமதாணி அத்தகு மதிமறு.* (பரிபா. 2:30.).

[நித்திலம் + அது + அணி.]

நித்திலமாலை *nittila-mālai,* பெ. (n.) முத்து மாலை; pearl garland. *"உரைபெறு நித்திலத்து மாலைத் தாமம்"* (சிலப். 3:11.).

[நித்திலம் + மாலை.]

நித்திலவட்டம் *nittila-vaṭṭam,* பெ. (n.) முத்து மாலை; garland of pearls. *"நித்தில வட்டமோர் பொன்செய் நாண்"* (சீவக.1323.).

[நித்திலம் + வட்டம்.
வள் → வளை → வட்டம்.]

நித்திலவிதானம் *nittila-vidāṉam,* பெ. (n.) முத்துப்பந்தர்; pearl ceiling. "திகழொளி நித்திலச் சித்திர விதானத்து விளங்கொளி பரந்த பளிங்கு செய் மண்டபத்து" (மணிமே. 18:46–47.).

நித்திலவூர்தி *nittila-v-ūrdi,* பெ. (n.) முத்துப் பல்லக்கு; a planquin decorated with pearls. *"நீந்து நித்திலவூர்தி"* (சீவக. 858.).

[நித்திலம் + ஊர்தி.]

நித்திறம் *nittiṟam,* பெ. (n.) கண்டங்கத்தரி; என்னுஞ் செடி: a plant called kaṇḍan-kattari. (சா.அக.).

நித்தை[1] *nittai,* பெ. (n.) உமை; Parvadi, as eternal, *"நித்தை யனுப்பிரவேசி"* (கூர்மபு. திருக்.21.).

[நில் → நிற்றல் = நிலையானது.

நிற்றல் → நித்தல் = நிலையானது, அழிவற்றது. நித்தல் → நித்தன் = அழிவற்றவன்.

நித்தன் → நித்தை = அழிவற்றவள், நிலைத்திருப்பவள்.]

நித்தை[2] *nittai,* பெ. (n.) உறக்கம்; sleep. "*நித்தைநீள் பசலைப் பேரோர் விராகெனும் வேலின் வீழ்*" (சீவக.3080.).

க. நித்தெ.

நிதகம் *nidagam,* பெ. (n.) நீர்முள்ளி (மலை.); water thistle-nygrophila spinosa alias barleria longiflora. (சா.அக.).

நிதகாரி *nidagāri,* பெ. (n.) *நிதகம்* பார்க்க; *see nidagam.* (சா.அக.).

நிதத்துரு *nidatturu,* பெ. (n.) சோனைப்புல்; guinea grass-panicum maximum. (சா.அக.).

நிதந்துய்—த்தல் *nidantui,* 4 செ.குன்றாவி. (v.t), நாள்தோறும் உண்ணல்; to eat all the day.

[நிதம் + துய்–.]

நிதம்[1] *nidam,* பெ. (n.) நஞ்சு; poison. (சா.அக.).

நிதம்[2] *nidam,* வி.எ. (adv.) நாளும்; daily, "*நிதமிந்தப் படியிருந்து*" (திருப்பு.788.).

[நித்தம் → நிதம்.]

நிதம்பசூலை *nidamba-šūlai,* பெ. (n.) பிள்ளைப் பேற்றின் (பிரசவத்தின்) முறைக் கேட்டால் உண்டாம் நோய்வகை (வின்.); an arthritic disease, due to derangement in the process of childbirth.

[நிதம்பம் + சூலை.]

நிதம்பம் *nidambam,* பெ. (n.) **1.** பெண்ணின் குந்துபுறம் (குண்டி) (பிருஷ்டம்); buttocks or hind quarters; posteriors, especially of a woman. **2.** அல்குல் (பிங்.); pubic region. "*இன்றீங் கிளவியு நிதம்பமு மொன்றி*" (ஞானா. 60,6.). **3.** மலைப்பக்கம் (பிங்.); side or swell of a mountain. **4.** ஆற்றின் கரை (யாழ்.அக.); bank or shore as of a river. **5.** நடனக் கை வகை (சிலப்.பக்.81.); (nātya.) a hand-pose. **6.** கற்பரி நஞ்சு; a mineral poison. **7.** தோள் (யாழ்.அக.); shoulder.

skt.-nitamba.

நிதற்பம் *nidarpam,* பெ. (n.) வேம்பு; margosa-azadiracta indica. (சா.அக.).

நிதானகாண்டம் *nidāṉa-kāṇḍam,* பெ. (n.) வளி முதலா எண்ணிய முக்கூற்றின் அளவு வேறுபாட்டினால் உடம்பிலுண்டாகும் நோய் பற்றிக்கூறும் மருத்துவநூல்; the branch of medicine in ayurveda which treats of the essential nature of diseases,their structural and functional changes, their causes and symptoms. etc. (சா.அக.).

[நிதான + காண்டம்.]

நிதானநூல் *nidāṉa-nūl,* பெ. (n.) மாதவ நிதானம் என்னும் மருத்துவநூல்; an ayurvedic book called mādava nidāṉam. (சா.அக.).

நிதிகோமல் *nidi-k-komal,* பெ. (n.) முருங்கை; moringa tree-Hyperinthera moringo. ((சா.அக.).

நிதிசம் *nidišam,* பெ. (n.) பெருவழுதலை; long brinjal- Solanum melongina. (சா.அக.).

நிதித்திகம் *nidittigam,* பெ. (n.) **1.** கண்டங் கத்திரி; prickly night shade; yellow berried night shade-solanum jacquini. **2.** ஏலம்; cardomum. (சா.அக.).

மறுவ. நிதித்திகா.

நிதித்துருஞ்சு *niditturuñju,* பெ. (n.) வெண் கருங்காலி; egg fruited ebony-diosphyros vocarpa. (சா.அக.).

நிதிந்தம் *nidindam,* பெ. (n.) *நிதித்திகம்* பார்க்க; *see nidittigam.* (சா.அக.).

நிதிநாயகன் *nidināyagaṉ,* பெ. (n.) வெட்டி வேர்; cuscus root-andropogon muricatus. (சா.அக.).

நிதிநூல் *nidinūl,* பெ. (n.) புதையலைக் கண்டறியும் செய்திபற்றிக் கூறும் நூல்; a system of metallurgy burried treasures. (சா.அக.).

நிதியம் *nidiyam,* பெ. (n.) மிளகு; pepper-piper nigrum. (சா.அக.).

நிதியவம் *nidiyavam,* பெ. (n.) சிறுதேக்கு; bettle killer-cleodendron serrata. (சா.அக.).

நிதியோபம் *nidiyōbam,* பெ. (n.) குங்கிலியம்; bedellium-shorea robusta. (சா.அக.).

நிதைருநூறு *nidairunūṟu,* பெ. (n.) சீந்தில்; moon creeper -menispermum condifolium alias tinosphora cordifolium. (சா.அக.).

நிந்திரம் *nindiram,* பெ. (n.) கண்டங்கத்தரி (மலை.); a thorny plant.

நிப்பாட்டம் *nippāṭṭam,* பெ. (n.) *நிற்பாட்டம்* பார்க்க; see *niṟ-pāṭṭam.*

[நிற்பாட்டம் → நிப்பாட்டம்.]

நிப்பாட்டியம் *nippāṭṭiyam,* பெ. (n.) *நிற்பாட்டம்* (இ.வ.) பார்க்க; *see niṟpāṭṭam.*

[நிற்பு + ஆட்டம் → நிற்பாட்டம் → நிற்பாட்டியம் → நிப்பாட்டியம்]

நிப்பாட்டு[1]–தல் *nippāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நிற்பாட்டு[1]–தல் பார்க்க; see *niṟ-pāṭṭu-.*

நிப்பாட்டு[2] *nippāṭṭu,* பெ. (n.) *நிற்பாட்டு[2]* பார்க்க; *see niṟpāṭṭu.*

நிபம் *nibam,* பெ. (n.) **1.** கடம்பு; cadamba tree-nauclea cadamba. **2.** வேம்பு; margasa-azadiracta indica. **3.** நீர்ச்சாடி; water jar. (சா.அக.).

நிபலம் *nibalam,* பெ. (n.) முடக்கொத்தான்; palsy creepe-cardiospermum halicacabum. (சா.அக.).

நிம்தேசன் *nimdēsaṉ,* பெ. (n.) கொத்தான்; air creeper- cassytha filiformis. (சா.அக.).

நிம்பக்காய் *nimba-k-kāy,* பெ. (n.) **1.** வேப்பங் காய்; margosa fruit. **2.** எலுமிச்சங்காய்; lime fruit. (சா.அக.).

நிம்பகம் *nimbagam,* பெ. (n.) வேம்பு; margosa tree-azadiracta indica. (சா.அக.).

நிம்பச்சாறு *nimba-c-cāṟu,* பெ. (n.) எலுமிச்சம் பழச்சாறு; juice of lime fruit or margosa fruit. (சா.அக.).

நிம்பசேதம் *nimbašēdam,* பெ. (n.) முடக் கொற்றான் (மலை.); ballon vine. (சா.அக.).

நிம்பத்தாரோன் *nimba-t-tārōṉ,* பெ. (n.) பாண்டிய குல அரசர்; the pāṉdiya-kings.

[நிம்பம் + தாரோன்.]

தமிழக வேந்தர்கள் தமக்குரிய குறியீடுகளுளொன்றாகப் பூவையும், மாலையையும் கொள்வது பண்டை மரபு. அந்த வகையில் வேம்பு மாலையை அடையாளமாகக் கொண்டகுடி பாண்டியகுடி.

நிம்பத்தின்சளி *nimbattiṉ-šaḷi,* பெ. (n.) வேப்பம்பிசின் (தைலவ.தைல.); margosa resin.

[நிம்பம் + சளி.]

நிம்பதரு *nimbadaru,* பெ. (n.) 1. வேப்பமரம்; margosa tree. 2. எலுமிச்சை மரம்; lime tree citrusmedica (acida). (சா.அக.).

நிம்பதேசி *nimbadēši,* பெ.(n.) முடக்கொத்தான்; palsy curer-cardio spermum halicacabum. (சா.அக.).

நிம்பதைலம் *nimbatailam,* பெ. (n.) 1. வேப்பெண்ணெய்; margosa oil. 2. வேப்பெண்ணெய்த் தைலம்; a medicated oil prepered with the margosa oil as the chief ingredient along with other drugs. (சா.அக.).

நிம்பப்பத்திரி *nimba-p-pattiri,* பெ. (n.) வேப்பிலை; margosa leaf. (சா.அக.).

நிம்பப்பழம் *nimba-p-paḻam,* பெ. (n.) 1. வேப்பம்பழம்; margosa ripe fruit. 2. எலுமிச்சம் பழம்; lime fruit. (சா.அக.).

நிம்பப்பாசி *nimba-p-pāši,* பெ. (n.) வேப்பம் பாசி; an acquatic plant-moschara corallina. (சா.அக.).

நிம்பப்பாசிகம் *nimba-p-pāšigam,* பெ. (n.) எலுமிச்சம் பழச்சாறு; juice of lime fruit. (சா.அக.).

நிம்பம் *nimbam,* பெ. (n.) வேம்பு; margosa, neem. "*நிம்பம் முளைத்து நிகழ்தல் நித்தியம்*" (மணிமே.27:173.).

நிம்பமாலை *nimba-mālai,* பெ. (n.) *நிம்பளம்* பார்க்க (நாஞ்.); *see nimbaḷam.*

நிம்பமோலி *nimba-mōli,* பெ. (n.) வேப்பம் பட்டை; bark of margosa tree. (சா.அக.).

நிம்பயிலை *nimba-ilai,* பெ. (n.) 1. வேப்பிலை; margosa leaf. 2. கறிவேப்பிலை; curry leaf used in preparation of food - murraya koenigi. (சா.அக.).

நிம்பழச்சாறு *nimbaḻa-c-cāṟu,* பெ.(n.) வேப்பம் பழச்சாறு அல்லது எலுமிச்சம் பழச்சாறு; juice of margosa fruit or lime fruit. (சா.அக.).

நிம்பளம் *nimbaḷam,* பெ. (n.) *நிம்மதி* (இ.வ.) பார்க்க; *see nimmadi.*

நிம்பன் *nimban,* பெ. (n.) வேப்பமாலையுடைய பாண்டியன் (பழ.); the pandya king, as wearing a garland of morgosa flowers.

[நிம்பம் → நிம்பன்.]

நிம்பாணி *nimbāṇi,* பெ. (n.) இணைக்கும்படி இருபக்கமும் கூருள்ள ஆணி; coupling nail.

[நெம்பு + ஆணி → நெம்பாணி → நிம்பாணி.]



நிம்பிச்சி *nimbicci,* பெ. (n.) சர்க்கரை வேம்பு; sweet margosa so called from its bark being sweet after some years. (சா.அக.).

நிம்பியம் *nimbiyam,* பெ. (n.) வாழை; plantain tree-musa paradisiaca. (சா.அக.).

நிம்பிரி *nimbiri,* பெ. (n.) பொறாமை; jealousy, "*சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு*" (தொல். பொருள்.245.).

நிம்பு—தல் *nimbu-,* 5 செ.குன்றாவி.(v.t.) நெம்புதல்; to lift with a lever,

[நெம்பு—, → நிம்பு—,]

நிம்புகம் *nimbugam,* பெ. (n.) எலுமிச்சை; lime-citrus medica. (சா.அக.).

நிம்பொளம் *nimboḷam,* பெ. (n.) முத்துவகை; a kind of pearl. "*ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும்*" (தெ.க.தொ. 2:143.).

நிமம் *nimam,* பெ. (n.) பிடர்த்தலை (பிங்.); nape of the neck.

[நிவ → நிம → நிமம், நிவ = உயர, மேலே.]

நிமயம் *nimayam,* பெ. (n.) 1. கண்ணிமைப் பொழுது; twinkling of the eye, moment, instant; 2. அறுபது நொடி கொண்ட காலவளவு; minute of time =1/60 hour.

[நிமையம் → நிமயம்]

நிமரம்பாம்பு *nimaram- pāmbu,* பெ. (n.) '*இரையெடுத்து அசைய முடியாமற் கிடக்கும் பாம்பு*' (நாஞ்.); snake unable to move after taking its prey.

[நிமிர் → நிமர் + அம் + பாம்பு.]

நிமி[1]—தல் *nimi-,* 4 செ.கு.வி.(v.i.) வாய் நெளிதல்; to twitch, as the lips of a child in crying. "*நிமியும் வாயொடு கண்கணீர் மல்க*" (திவ்.திருவாய். 6,5,2.).

[நெளி → நிமி.]

நிமி[2] *nimi,* பெ. (n.) கதிரவன் குலத்து வேந்தரு ளொருவன்; a king of the solar race. "*நிமித்திருமரபுளான்*" (கம்பரா.திருவவதா.9.).

நிமிச்சுற *nimiccuṟa,* வி.எ. (adv.) நிறைய; full, to the brim.

நிமிட்டாம்பழம் *nimiṭṭām-paḻam,* பெ. (n.) கிள்ளு; pinch, humorously expressed as a fruit which a child may expect.

[நிமிட்டு + ஆம் + பழம்.]

நிமிட்டு¹–தல் *nimiṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) 1. கிள்ளுதல் (வின்.); to pinch, as in punishment. 2. நெருடித் தூண்டுதல்; to trim, as a wick. 3. கசக்குதல் (வின்.); to rub or crush between the hands, as grain.

[நிமிடு → நிமிட்டு–,]

நிமிட்டு² *nimiṭṭu,* பெ. (n.) கிள்ளுகை; pinch.

நிமிடன் *nimiḍaṉ,* பெ. (n.) மிகத்திறமை யானவன்; extremely clever person.

[நிமிடு → நிமிடி → நிமிடன்.]

நிமிடி¹ *nimiḍi,* பெ. (n.) நெருடி; a hand signal. ***"அகினா றங்கை சிவப்ப நல்லோர் துகிலின் வெண்கிழித் துய்க்கடை நிமிடி உள்ளழுதுறீஇய வொள்ளடர்ப் பாண்டி"*** (பெருங். உஞ்சை. 33:91.).

நிமிடி² *nimiḍi,* பெ. (n.) சுறுசுறுப்புள்ளவன்; clever, active person. ***அவன் வேலையில் நிமிடி.*** (உ.வ.).

[நிமிடு → நிமிடி.]

நிமிடிபாதம் *nimiḍipādam,* பெ. (n.) 1. கண்டிப்பு; strictness. 2. தன்முரண்டு; obstinancy.

நிமிடு¹ *nimiḍu,* பெ. (n.) திறன்மிகு வேலை (இ.வ.); clever workmanship.

[நிமையம் → நிமிடு.]

ஒரு வேலையை விரைவாய்ச் செய்தலை ஒரு நொடியில் முடி என்றும் ஒரு நிமையத்தில் முடி என்றும் வழங்கும் வழக்கில் இச்சொல் உருவாகியிருக்கலாம்.

நிமிடு²–தல் *nimiḍu-,* 5 செ. குன்றாவி. (v.t.) நெருங்குதல்; to feel between fingers. ***"துகிலின் வெண்கிழித் துய்க்கடை நிமிடி"*** (பெருங். உஞ்சை. 33, 92.).

நிமிண்டி *nimiṇḍi,* பெ. (n.) 1. சிறு திருடன் (வின்.); sly thief. 2. எறும்பு வகை (யாழ்.அக.); a kind of ant.

[நிமிண்டு → நிமிண்டி.]

நிமிண்டு¹–தல் *nimiṇḍu-,* 5 செ. குன்றாவி. (v.t.) 1. கசக்குதல்; to crush, squeeze between the hands, as grain, ***"கொல்லைக்கம்பை நிமிண்டியு மூதியுந் தின்ன வல்லோர்"*** (தனிப்பா. i, 142,38.). 2. கிள்ளுதல்; to pinch, nip off, with the fingers. 3. பிறர் அறியாமல் சிறிதுசிறிதாகக் கவர்தல் (யாழ்ப்.); to pilfer little by little.

[நிமி → நிமிண்டு–.]

நிமிண்டு²–தல் *nimiṇḍu-,* 5 செ. குன்றாவி. (v.t.) கட்டை விரலுக்கும் சுட்டுவிரலுக்கும் இடையே பிடித்து அழுத்தி முன்பின் அசைத்தல்; to pinch, to trim as a wick, etc. ***குழந்தையின் கன்னத்தை நிமிண்டக் கை குறுகுறுத்தது (உ.வ.). விளக்குத் திரியை நிமிண்டினாள். (உ.வ.)***

[நிமி → நிமிண்டு–.]

நிமித்த சூடாமணி *nimitta-šūdāmaṇi,* பெ. (n.) நிமித்த (சகுண) நூல் (யாழ்.அக.); a treatise on omens.

[நிமித்தம் + சூடாமணி.]

நிமித்தத்துவம் *nimi-t-tattuvam,* பெ. (n.) ஏதுத் தன்மை (சங்.அக.); causality.

நிமியும்வாய் *nimiyum-vāy,* பெ. (n.) நெளிந்த வாய்; dented mouth, out of shape as the lips of a child in crying. (திவ்.திருவாய்.1–5–2.).

[நிமியும் + வாய்.]

நிமிர்[1](ரு)–தல் *nimir(ru)-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** உயர்தல் (சூடா.); to become erect; to be straightened; to stand upright; to raise or hold the head erect. **2.** நீளுதல்; to be outstretched, as the arm. "*திரையெனு நிமிர்கையால்*" (கம்பரா.கங்கை. **62.**). **3.** வளர்தல்; to grow tall, as a youth; to increase in height; to shoot up; "*ஓங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி*" (தேவா. **1160, 5.**). **4.** ஏறுதல்; to exceed the limit, as a foot in verse. "*அம்மை தானே அடிநிமிர் பின்றே*" (தொல். பொருள்.**547.**). **5.** பரத்தல்; to extend, expand, spread out. "*உரைகுறுக நிமிர் கீர்த்தி*" (கம்பரா. குலமுறை.**4.**). **6.** நுடங்குதல்; to bend, shake, "*மின்னு நிமிர்ந் தனையராகி*" (மதுரைக். **679.**). **7.** நடத்தல்; to walk, proceed. "*கடற்றானை யொன்னார் நடுங்க வுலாய்நிமிரின்*" (பு.வெ. **7,5.**). **8.** ஓடுதல் (சூடா.); to run. **9.** மிகைத்தல்; to be excessive. "*நிமிர்பரிய மாதாங்கவும்*" (புறநா.**14.**). **10.** தொலைவாதல்; to be far,distant. "*நணுகவு நிமிரவு நடக்கு ஞானத் தருணர்வினின்*" (கம்பரா.கடிமண. **60.**). **11.** பொன்போல் உயர்ந்ததாதல்; to be of superior quality, as gold. "*நிமிர்பொன் சொரியும் வரையே*" (சீவக.**1376.**) **12.** நெருங்குதல் (வின்.); to be close,thick, crowded. **13.** உறுதியாதல்; to be bold, firm decided. செயற்றிறத்தில் நிமிர்ந்து நிற்கிறான். (வின்.). **14.** இறுமாத்தல் (வின்.); to be proud, affected, arrogant. **15.** முயலுதல்; to be active, make an effort. இசைச் சொலளவைக் கென்னா நிமிராது (மணிமே. **11:81.**). **16.** கோள் முறைமாறி (வக்கிரித்து) திரும்புதல் (வின்.); to return from retrograde motion-, as a planet.

க. நிமிர்.

நிமிர்[2]–தல் *nimir-,* 4செ.கு.வி. (v.i.) இடையிடுதல்; to interpose. "*நிறைந்து முறழ்ந்து நிமிர்ந்துந் தொடர்ந்தும்*" (பரிபா.**19:82.**).

நிமிர்[3] *nimir,* பெ. (n.) தெரிநிலை வினைப் பகுதி; verb explicity denoting tense by a tense-sign; "*நிமிர்சுடர்*" (நான்மணி. **9.**).

நிமிர்கழிச்சேர்ப்பன் *nimir-kaḻi-c-cērppaṉ,* பெ. (n.) நீண்ட கழியைக் கையில் வைத்திருக்கும் கடற்கரைத் தலைவன்; chief of maritime tract who holding strick. "*எறிசுறா நீள்கடல் ஓதம் உலாவ நெறியிறாக் கொட்டும் நிமிர்கழிச் சேர்ப்பன்*" (திணை. மொழி.)

[நிமிர்கழி + சேர்ப்பன்]

நிமிர்ச்சி[1] *nimircci,* பெ. (n.) **1.** இறுமாப்பு; proud. **2.** உறுதி; confidence. ***3.*** *நிமிர்வு* பார்க்க; see *nimirvu.* **4.** மேட்டிமை; vanity haughtiness.

நிமிர்ச்சி[2] *nimircci,* பெ. (n.) **1.** உயர்ச்சி; hight. **2.** நிமிர்வு; erect. **3.** நீட்சி; length. (கதி.அக.).

நிமிர்சுடர் *nimir-šuḍar,* பெ. (n.) நிமிர்ந்தெரியும் நெருப்பு; a straight flame. "*மையால் தளிர்க்கும் மலர்க்கண்கள் மாலிருள் நெய்யால் தளிர்க்கும் நிமிர்சுடர்*" (நன்மணி. **38.**).

நிமிர்த்திப்பிடி–த்தல் *nimirtti-p-piḍi-,* 4 செ. குன்றாவி. (v.t.) **1.** நேர்நிற்கச் செய்தல்; to hold erect. **2.** வலுக்கட்டாய (பிடிவாத)மாக வற்புறுத்துதல்; to persist in; to be obstinate in. **3.** உயர்த்துதல்; to hold aloft, lift up.

[நிமிர்த்தி + பிடி –,]

நிமிர்த்திவிடு–தல் *nimirtti-viḍu-,* 18 செ. குன்றாவி. (v.t.) **1.** நிமிரச் செய்தல்; to straighten. **2.** நன்றாய்ப் புடைத்தல் (வின்.); to give a good drubbing.

[நிமிர்த்தி + விடு–,]

நிமிர்த்து[1]–தல் *nimirttu-,* 5 செ. குன்றாவி. (v.t.) **1.** நேர்நிற்கச் செய்தல்; to straighten up, set upright, as a pot. *நீர்க்குடத்தை நிமிர்த்து. (உ.வ.).* **2.** வளைவு நீக்குதல்; to unfold, uncoil, as an ola. *"மண்மூடு தோட்டின் முடங்க னிமிர்த்து"* (கம்பரா. பள்ளி.6.). **3.** சீர்படுத்துதல் (வின்.); to improve, as one's circumstances. *உன்னை வளர்த்து நிமிர்த்தினவன் நானல்லவோ?* (உ.வ.). **4.** நன்றாய்ப் புடைத்தல்; to thrash, beat severely. *அவனை நன்றாய் நிமிர்த்தி வெளியே அனுப்பு.* (உ.வ.)

க. நிமிர்சு.

[நிமிர் → நிமிர்த்து–,]

நிமிர்த்து[2]–தல் *nimirttu-,* 5செ.குன்றாவி. (v.t.) **1.** இருக்கும் நிலையிலிருந்து உயர்த்துதல்; raise. குனிந்து எழுதிக் கொண்டிருந்தவன் தலையை நிமிர்த்திப் பார்த்தான் (உ.வ.) கூனிக் குறுகாமல் நெஞ்சை நிமிர்த்தி நில். (உ.வ.). **2.** நேராக்குதல்; straighten. கம்பியை நிமிர்த்தப் போய்க் கையைக் கிழித்துக் கொண்டாயா (உ.வ.) தவலையை நிமிர்த்தி வைக்கக் கூடாதா? (உ.வ.).

நிமிர்ந்தநடை *nimirnda-naḍai,* பெ. (n.) மேட்டிமையான நடை; haughtiness style.

நிமிர்ப்பு *nimirppu,* பெ. (n.) *நிமிர்ச்சி* பார்க்க; see *nimircci.*

[நிமிர் → நிமிர்ப்பு.]

நிமிர்வு *nimirvu,* பெ. (n.) *நிமிர்ச்சி* பார்க்க; see *nimircci.*

[நிமிர்ச்சி → நிமிர்வு.]

நிமிரல் *nimiral,* பெ. (n.) **1.** நிமிர்கை; straightening out, becoming erect. **2.** சோறு (பிங்.); boiled rice. *"மகளிர் புறங்கடை யுகுத்த கொக்குகிர் நிமிரல்"* (நற்.258.).

[நிமிர் → நிமிரல்.]

வளைவு நீளுவதே நிமிரல். அரிசி சோறாகும் போது சற்று நீளுகிறது. அந்த நீளலும் நிமிரலின் பாற்பட்டதாய்க் கொள்ளப்படும்.

நிமிரி *nimiri,* பெ. (n.) **1.** மஞ்சனிறம் (G.Tj.D.i.**120.**); yellow colour. **2.** குதிரை வலிப்பு நோய் (M.Cm.d.**249.**); a disease of cattle.

நிமிளன் *nimiḷaṉ,* பெ. (n.) **1.** திறமையாளன் (கெட்டிக்காரன்) (நெல்லை); clever, tactful person. **2.** சுருசுருப்பானவன்.; agile, active person.

[நிமிடன் → நிமிளன்.]

நிமிளை[1] *nimiḷai,* பெ.(n.) செவ் வெண்மையான கல்வகை (பதார்த்த. **1133.**); bismuth pyrites.

நிமிளை[2] *nimiḷai,* பெ. (n.) **1.** அம்பரை; bismuth. **2.** கூட்டுக்கலவை; compound stone. (சா.அக.).

நிமுட்டு—தல் *nimuṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *நிமிண்டு—தல்* பார்க்க; see *nimiṇḍu-,*

[நிமிண்டு → நிமிட்டு → நிமுட்டு.]

நிமேசகம் *nimēšagam,* பெ. (n.) மின்மினிப் பூச்சி; firely glow worm. (சா.அக.).

நிமை[1] *nimai,* பெ. (n.) இமை; eyelid. *'நீலிக்கு கண்ணீர் நிமையிலே'* (பழ.).

[இமை → நிமை.]

உம்முதல் = பொருந்துதல், கூடுதல்.
உம் → அம். அம்முதல் = பொருந்துதல்.
அம் → அமை. அமைத்தல் = பொருந்துதல்.
அமை → இமை. இமைத்தல் = கண்மூடுதல்
இமை → நிமை.

நிமை[2]**—த்தல்** *nimai-,* 11 செ. குன்றாவி. (v.t.) இமைத்தல்; to wink, "*புருவநிமிரவிரு கண வாள் நிமைக்க*" (திருப்பு.497.).

[இமை → நிமை.]

நிமைக்கழலை *nimai-k-kaḻalai,* பெ. (n.) கண் இமையில் வரும் கட்டி; a tumour in the eyelid-Blepharoneus. (சா.அக.).

[நிமை + கழலை.]

நிமைகொட்டு—தல் *nimai-koṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) கண் இமை மாறி மாறி வேகமாக மூடவும் திறக்கவும் செய்தல்; to close and open the eye lids alternatively and also repeatedly-nictating. 2. சாடை காட்டுதல்; to have a hint or intimation by the motion of eyelids. (சா.அக.).

[நிமை + கொட்டு—,]

நிமைத்தடிப்பு *nimai-t-taḍippu,* பெ. (n.) இமைத் தடிப்பு; the morbid thickening of an eyelid.

[நிமை + தடிப்பு.]

நிமைதொங்கு—தல் *nimai-toṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) கண்ணிமை செயலற்றுத் தொங்குதல்; droping of the upper eyelid from paralysis (சா.அக.).

[நிமை + தொங்கு—.]

நிமைமூடு—தல் *nimai-mūḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கண் இமைமூடுதல்; to shutting or closing of the eyelids. (சா.அக.).

[நிமை + மூடு—.]

நிமையம் *nimaiyam,* பெ. (n.) 1. கண்ணிமைப் பொழுது; twinkling of the eye; moment, instant. 2. அறுபது நொடி கொண்ட கால அளவு; minute of time = 1/60 hour.

[இமை → நிமை → நிமையம்.]

நிமையழற்சி *nimai-y-aḻaṟci,* பெ. (n.) கண் இமையிலுண்டாகும் அழற்சி; inflammation of the eyelid .(சா.அக.).

[நிமை + அழற்சி.]

நிமையாட்டம் *nimai-y-āṭṭam,* பெ. (n.) கண் இமையின் ஆட்டம்; consistant movement of the muscles of the eyelid. (சா.அக.).

[நிமை + ஆட்டம்.]

நிமையொட்டு–தல் *nimai-y-oṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கண் இமைகளைச் சேரத் தைத்தல்; to stich the upper and lower lids together-the plastic surgery of the eye lids.

[நிமை + ஒட்டு–,]

நிமைவீழ்ச்சி *nimai-vīḻcci,* பெ. (n.) கண் இமையின் செயலிழப்பு; paralysis of an eye-lid. (சா.அக.).

[நிமை + வீழ்ச்சி.]

நியக்கியம் *niyakkiyam,* பெ. (n.) நரிமுருங்கை; tranquebar genderussa-Justicia tranque barensis. (சா.அக.).

நியக்கு *niyakku,* பெ. (n.) நாளவம்; elder wood tree wine-Leea sambucena. (சா.அக.).

நியக்குரோதம் *niyakkurōdam,* பெ. (n.) ஆலமரம்; banyan tree.

நியதீசம் *niyadīšam,* பெ. (n.) சுனைப்புன்கு; rusty soap nut erioglossum adule. (சா.அக.).

நியமனம் *niyamaṉam,* பெ.(n.) வேம்பு(வைத்திய பரிபா.); margosa. (சா.அக.).

நியர் *niyar,* பெ. (n.) ஒளி; light, brilliance. "*நியர்வளை முன்கையாள்*" (தேவா.134,4.)

[நிகர் → நியர்.]

நியர்ப்புதம் *niyarppudam,* பெ. (n.) பதினாயிரங்கோடி (பிங்.); a hundred thousand millions.

நியரசம் *niyarašam,* பெ. (n.) *நியரதம்* பார்க்க; see *niyaradam.* (சா.அக.).

நியரதம் *niyaradam,* பெ. (n.) வேம்பு; margosa tree. (சா.அக.).

நியா *niyā,* பெ. (n.) சிவதுளசி; sivās basil-besilicumalba. (சா.அக.).

நியாசதி *niyāšadi,* பெ. (n.) அனிச்சம்; snake jasmine- Rhinecanthas communis. (சா.அக.).

நியாதூற்றி *niyādūṟṟi,* பெ. (n.) கடம்பு; cadamba tree-nancles cadamba alias n.purpurea. (சா.அக.).

நிர்க்குண்டி[1] *nirkkuṇḍi,* பெ. (n.) நொச்சி (திவா.); a species of chaste tree.

நிர்க்குண்டி[2] *nirkkuṇḍi,* பெ. (n.) தாமரைக் கிழங்கு; lotus root. (சா.அக.).

நிர்த்தகனம் *nirttagaṉam,* பெ. (n.) சேரான் கொட்டை; marking nut - semi carpas-anacardium alias sansviera roxburghiana. (சா.அக.).

நிர்த்தித்தம் *nirttittam,* பெ. (n.) கண்டங்கத்தரி; yellow berried night shade-solanum xanthocarpum. (சா.அக.).

நிர்மூலி *nirmūli,* பெ. (n.) ஒரு பூடு; aglaia minutiflora. (சா.அக.).

நிர nira, பெ. (n.) **1.** நிறைவடைதல்; to be full. படி நிரக்க அளந்து ஊற்றினாள் (உ.வ.). **2.** பங்கிடுதல்; to share. எல்லோருக்கும் நிரந்து கொடு (உ.வ.)

நிரக்க *nirakka,* வி.எ. (adv.) (பொருந்திகையான வகையில்) நிறைய; to be full. திருமணத்துக்கு வந்திருந்தவர்களுக்கு நிரக்கப் பரிமாறினார்கள் (உ.வ.)

[நிர → நிரக்க.]

நிரகுள்ளி *nirakuḷḷi,* பெ. (n.) நொச்சி; five leaved chaste tree- vitex negundo. (சா.அக.).

நிரஞ்சத்திமூலி *nirañjattimūli,* பெ. (n.) நிலத்துளசி; ground basil- ocimum prostatum. (சா.அக.).

நிரஞ்சனம் *nirañjanam,* பெ. (n.) **1.** அறிவு (ஞான)க் கண்; eye of wisdom. **2.** உணவு கொள்ளாமை; abstaing from food. (சா.அக.).

நிரட்டிகா *nirattigā,* பெ. (n.) கண்டங்கத்திரி; yellow barried night shade-solanum jacquini. (சா.அக.).

நிரந்தவர்[1] *nirandavar,* பெ. (n.) பகையரசர்;

நிரந்தவர்[2] *nirandavar,* பெ. (n.) (கூடாதிருந்தே தமக்கு வாய்க்குமிடம் பெறுந்துணையும்) கூடியொழுகுவார்; to attacher. "சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை நேரா நிரந்தவர் நட்பு"(குறள், 821.).

நிரந்து *nirandu,* பெ. (n.) **1. நிரல்படக் கோத்து;** to join correctly. "விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்" (குறள், 648.). **2. வரிசையுற்று;** to roll. "நரந்த நாறுங் குவையிருங்கூந்தல் நிரந்திலங்கு வெண்பல் மடந்தை" (குறுந். 52.)

[நிர → நிரந்து]

நிரப்படுபுணை *nira-p-paḍu- puṇai,* பெ. (n.) வறுமையைக் கடத்தற்குரிய தெப்பம்; a device to manage the poverty. "***இரப்பச் சிந்தியே னிரப்படு புணையின் உளத்தினளக்கு மிளிர்ந்த தகையேன்***" (புறநா. 376.).

[நிரப்பு = வறுமை, ஏழ்மை.
நிரப்பு + படு + புணை.]

நிரப்பம் *nirappam,* பெ. (n.) **1.** முழுமை; fullness, repletion, perfection. '*நிரப்ப மெய்திய நேர்பூம் பொங்கணை*' (பெருங். மகத. 14,62.). **2.** சிறப்பு; superiority, excellence. (திவ். திருவாய். 1,2,3, பன்னீ.). **3.** ஒப்புமை; Symmetry. '*நிரப்பமில் யாக்கை*' (கலித். 94.). **4.** சமம்; uniformity. "*குடக்குந் தெற்குங் கோண முயர் நிரப்பங் கொளீஇ*" (பெருங். இலாவாண. 4,59–60.). **5.** கற்பு; chastity. (திவ்.திருவாய். 5,3,3, பன்னீ.).

[நிரம்பு → நிரப்பு → நிரப்பம்.]

நிரப்பலா *nirappalā,* பெ. (n.) ஆசினிப்பலா; the bread fruit tree- artocarpus. incisa. (சா.அக.).

நிரப்பிவிடு–தல் *nirappi-vidu-,* 18 செ.குன்றாவி. (v.t.) **1.** நிறைவு செய்தல்; to complete, fulfil. **2.** சூலடையச் செய்தல்; to impregnate. (Loc.) **3.** நிறைகுடத்தடியில் நெற்பரப்புதல்; (வின்.). to strew paddy round a niṟaikuḍam.

நிரப்பு[1]—தல் *nirappu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. நிறைத்தல்; to fill, replenish; to cause to abound. '*அல்லன் மாக்கட் கில்லது நிரப்புனர்*' (மணிமே. 23,133, பி.ம்.). நீர் வந்தால் தொட்டியை நிரப்பு. (உ.வ.) மண்ணைக் கொட்டிப் போட்டுப் பள்ளத்தை நிரப்பு. (உ.வ.) 2. நிறைத்தல்; to load a gun etc. துமுக்கியில் குண்டுகளைப் போட்டு நிரப்பி வை. (உ.வ.) 3. நிறைவு செய்தல்; to complete; to perform satisfactorily. '*வேள்வி நிரப்பி*' (கம்பரா. பிராட்டிகளங்.20.). இந்த விண்ணப்பத்தை நிரப்பிக்கொடுங்கள். (உ.வ.) வினாத்தாளில் கோடிட்ட இடங்களைத் தக்க சொற்களைக் கொண்டு நிரப்புக. (உ.வ.) 4. அமர்த்துதல்; to fill a vocancy, post. அகர முதலித்துறையில் வெறுமையாயுள்ள இடங்களைத் தக்கவர்களைக் கொண்டு நிரப்பினால் பணி விரைவாய் நிறைவுறும். (உ.வ.) 5. பொந்திகையாக்குதல்(யாழ்.அக.); to satisfy. 6. விடையளித்தல்; to tell, reply, respond, answer. '*உயிர் நீக்கினரியாரது நிரப்புவீர்*' (கம்பரா. சம்பாதி. 29.). 5. பரப்புதல்; to spread.

[நிரம்பு → நிரப்பு.]

நிரப்பு[3] *nirappu-,* பெ. (n.) 1. நிறைவு (சூடா.); fullness, completeness. 2. சமதளம்; levelness. தரை நிரப்பு வரவில்லை. (உ.வ.). 3. வறுமை; destitution, poverty. "நெருநலுங் கொன்றது போல நிரப்பு" (குறள், 1048.). 4. குறைவு (வின்.); deficiency, want. 5. சோம்பு; inactivity, sloth, want of energy. 6. நிறை குடத்தினடியில் இடப்படும் நெல்; paddy strewn round a niraikuḍam. 7. நிறை நாழி (யாழ்.அக.); measure full of paddy.

நிரப்புநர் *nirappu-nar,* பெ. (n.) கொடுப்போர்; donars, givers. "*அல்லன் மாக்கட் கில்லது நிரப்புநர்*" (மணிமே.23:133.).

நிரப்பு → நிரப்புநர்
நிரப்புதல் – நிறைத்தல்,
நிறைவு செய்தல், கொடுத்தல்.

நிரப்போர் *nirappōr,* பெ. (n.) 1. இரப்பவர்; beggars. 2. வறியவர்; the destitute.

[நிரப்பு → நிரப்போர்.]

நிரம்ப *niramba,* வி.எ. (adv.) 1. நிறைய; fully. 2. மிகுதியாக; abundantly, highly, "*நிரம்ப வெழுந்ததங் கூர்மையும்*" (நாலடி,28.).

[நிரம்பு → நிரம்ப.]

நிரம்பவழகியர்[1] *niramba-v-aḻagiyar,* பெ. (n.) பேரழகுள்ளவர்; exquisitely "*நித்தமணாளர் நிரம்ப வழகியர்*" (திருவாச.17,3.).

[நிரம்ப + அழகியர்]

நிரம்பவழகியர்[2] *niramba-v-aḻagiyar,* பெ. (n.) சேதுபுராணம், திருப்பரங்குன்றப் புராணம் முதலிய நூல்களினாசிரியரும் 16 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவருமான புலவர்; the author of *sēdupurāṇam, Tirupparaṅkuṉṟa-p-purāṇam* and other works, 16th century.

நிரம்பாச்சொல் *nirambā-c-col,* பெ. (n.) *நிரம்பா மென்சொல்* பார்க்க (யாழ்.அக.); see *nirambāmeṉcol.*

[நிரம்பு + ஆ + சொல்.
'ஆ' எதிர்மறை இடைநிலை.]

நிரம்பாத்துயில் *nirambā-t-tuyil,* பெ. (n.) *நிரம்பாத் தூக்கம்* (பிங்.) பார்க்க; see *nirambā-t-tūkkam.*

[நிரம்பு + ஆ + துயில்.
ஆ –எதிர்மறை இடைநிலை.]

நிரம்பாத்தூக்கம் *nirambā-t-tūkkam,* பெ. (n.) அரைத்தூக்கம் (திவா.); unsound. sleep; broken sleep.

[நிரம்பு + ஆ + தூக்கம்.
ஆ –எதிர்மறை இடைநிலை.]

நிரம்பாநெறி *nirambā-neṟi,* பெ. (n.) கடைபோய் நிரம்பாத குறைவழி; not filled fully. "*அரம்போ ழவ்வளை மகளிர் மனத்தின் நிரம்பா நெறியினவாகி யரும் பொருள் கல்லா மாந்த ருள்ளம் போல*" (பெருங். உஞ்சை. 50: 10–13.).

நிரம்பாநோக்கு *nirambā-nōkku,* பெ. (n.) இடுக்கிப் பார்க்கும் பார்வை; look with eyes contracted. "*நிரம்பா நோக்கினிரையங் கொண்மார்*" (அகநா.67.).

[நிரம்பு + ஆ + நோக்கு.
ஆ –எதிர்மறை இடைநிலை.]

நிரம்பாமென்சொல் *nirambā-meṉ-šol,* பெ. (n.) மழலைச் சொல் (திவா.); lisping indistinct prattle.

[நிரம்பு + ஆ + மென்சொல்.
ஆ –எதிர்மறை இடைநிலை.]

நிரம்பாமேனி *nirambā-mēṉi,* பெ. (n.) முற்ற வளராத உடல்; not growth full body. "*இரந்தூணி ரம்பா மேனி யொடு விருந்தி னூரும் பெருஞ்செம் மலனே*" (குறுந்.33.).

நிரம்பாமொழி *nirambā-moḻi,* பெ. (n.) *நிரம்பா மென்சொல்* பார்க்க (யாழ்.அக.); see *nirambā men-šol.*

[நிரம்பு + ஆ + மொழி.
ஆ –எதிர்மறை இடைநிலை.]

நிரம்பிப்பாய்–தல் *nirampi-p-pāy-,* 2 செ.கு.வி. (v.i.) ததும்பி வழிதல் (வின்.); to over flow.

[நிரம்பு + பாய்–,]

நிரம்பியபுட்பம் *nirambiya-puṭpam,* பெ. (n.) *நிரம்பிய பூ* பார்க்க; see *nirambiya-pū.*

[நிரம்பிய + புட்பம்.]

skt. புஷ்பம்.

நிரம்பியபூ *nirambiya-pū,* பெ. (n.) வாழை (மலை.); plantain.

[நிரம்பிய + பூ.]

நிரம்பியம் *nirambiyam,* பெ. (n.) *நிரம்பிய பூ* பார்க்க (சங்.அக.); see *nirambiya- pū.*

நிரம்பியமரம் *nirambiya- maram,* பெ. (n.) **1.** வாழை மரம்; plantain tree- musa paradisiaca. **2.** தென்னை மரம்; coconut tree-cocos nuciyerd **3.** ஆலமரம்; banyan tree-ficus bengalansis. (சா.அக.).

[நிரம்பிய + மரம்.]

நிரம்பிவழி–தல் *nirambi-vaḻi-,* 2செ.கு.வி. (v.i.) அளவுக்கதிகமாக நிறைந்து காணுதல்; over flow, spill over. மண்டபத்தில் உட்கார இடமில்லாமல் கூட்டம் நிரம்பி வழிந்தது. (உ.வ.) பெட்டி ஏற்கனவே நிரம்பி வழிகிறது, இதில் இந்த புத்தகத்தை எப்படி திணிப்பது? (உ.வ.)

நிரம்பினபெண் *nirambiṉa-peṇ,* பெ. (n.) பூப்பெய்திய பெண் (யாழ்.); girl who has attained puperty.

[*நிரம்பு → நிரம்பின + பெண்.*]

நிரம்பு¹—தல் *nirambu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நிறைதல்; to become full, complete, replete. "*பருவ நிரம்பாமே*" (திவ்.பெரியாழ். 1,2,17.). 2. மிகுதல்; to abound, be abundant, copious. "*நெற்பொதி நிரம்பின*" (கம்பரா. கார்கால.74.). 3. முடிவுறுதல்; to be over; to end, terminate. "*நெறிமயக்குற்ற நிரம்பா நீடத்தஞ் சிறுநனி நீதுஞ்சி யேற்பினு மஞ்சும்*" (கலித்.12.). 4. பூப்படைதல்; to attain puperty as a girl. அவள் நிரம்பின பெண் (யாழ்ப்.). 5. முதிர்தல் (வின்.); to mature, as grain.

க. நெர.

நிரம்பு²—தல் *nirambu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. முழுமையாதல், நிறைதல்; to be filled with, become full. குளத்தில் நீர் நிரம்பியிருக்கிறது. (உ.வ.). பை நிரம்பக் காய்கறிகள் வாங்கி வந்தார். (உ.வ). 2. முழுமை யடைதல்; finish or complete (certain years in one's age). இன்றோடு குழந்தைக்கு மூன்று அகவை நிரம்புகிறது. (உ.வ.). அவளுக்கு இன்னும் பதினெட்டு அகவை நிரம்பவில்லை. (உ.வ.). 3. அதிக அளவில் இடம் பெறுதல்; to be full (of). பிறமொழிச் சொற்கள் நிரம்பியிருக்கும் கதை. (உ.வ.).

நிரம்பையர்காவலன் *nirambaiyar-kāvalaṉ,* பெ. (n.) கொங்குநாட்டிலுள்ள நிரம்பை என்ற ஊர்த்தலைவரான அடியார்க்குநல்லார்; Adiyārkku nallār, the chief of Nirambai, a village in Koṉgu country. "*காருந் தருவு மனையா னிரம்பையர் காவலனே*" (சிலப். உரைச்சிறப்புப்பாயிரம்.).

[நிரம்பையர் + காவலன்.]

நிரயத்தானை *niraya-t-tāṉai,* பெ. (n.) மாற்றாருக்குப் பெருந்துன்பந்தரும் படை; to oppose, confront. "இரவிடங் கொடுத்த நிரைமணி விளக்கின் விரவுக் கொடி யடுக்கூத்து நிரயத்தானையோ டைம்பெருங் குழவு மெண்பேராயமும்" (சிலப்.26:37.).

[நிரயம் + தானை.]

நிரயம் = அளறு.
அளறிடைப் பட்டாருவதொப்பத்
துன்பத்தைத் தரும் படை யென்க.

நிரயத்துன்பம் *niraya-t-tuṉbam,* பெ. (n.) அளறு (நரக)த்துன்பம்; consigned to hell. "இனிப்பேரின்பத்தைத் தரும் தவத்தில் நின்றோர் அதனைவிட்டு இழிதலின் விளைவாகிய நிரயத்துன்பத்தை யுறுதலுமாம்" (சிலப்.14—2. உரை.).

[நிரயம் + துன்பம். நிரயம் = அளறு.]

நிரயப்பாலர் *niraya-p-pālar,* பெ. (n.) *நிரயபாலர்* பார்க்க; see *niraya-pālar.*

[நிரயம் + பாலர்.]

நிரயபாலர் *niraya-pālar,* பெ. (n.) நிரயத்தின் தலைவர்; chief of the infernal regions. '*நிரயபாலர் பலரும்*' (சீவக. 2771. உரை.).

[நிரயம் + பாலர்.]

நிரயம் = அளறு.

நிரயம் *nirayam,* பெ. (n.) அளறு; hell. "*நீங்கா நிரயங் கொள்பவரோ டொன்றாது*" (புறநா.5.).

மாந்தப் பிறப்புற்று வாழுங் காலத்து நன்மையைச் செய்து, நன்னெறி செல்வோர் இறப்புக்குப் பின் துறக்கம் செல்வர் என்பதும், அல்லவர் நிரயம் செல்வர் என்பதும் நம்பிக்கை.

நிரயவட்டம் *niraya-vaṭṭam,* பெ. (n.) பெருகளற்றுவட்டம், மணல்வட்டம், எரிபரல் வட்டம், அரிபடைவட்டம், புகைவட்டம், இருள்வட்டம், பெருங்கீழ்வட்டமாகிய ஏழு

நிரயங்கள் (பிங்.); the seven internal regions,viz., peru kaḷaṟṟu vaṭṭam, maṇalvaṭṭam, eriparal vaṭṭam, aripadai vaṭṭam, pugaivaṭṭam, irulvaṭṭam, perunkīḷ vaṭṭam.

[நிரயம் + வட்டம்.]

நிரயனம் *nirayaṉam,* பெ. (n.) மேழராசியின் தொடக்கத்திலிருந்து கணிக்கப்படும் வான் செலவின் தொலைவு (செந்.viii. 67.); celestial longitudinal difference measured from the zero point of the fixed Hindu zodiac.

நிரல்[1] *niral,* பெ. (n.) **1.** வரிசை; row, order, arrangement. "*நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு*" (தொல். பொருள்.482.). **2.** ஒப்பு; equality, similarity. "*நிரலல்லோர்க்குத் தரலோ வில்லென*" (புறநா.345.).

ம. நிர.
க.து. நிருகெ. **கோத.** நெர்வ் (வரிசையில் நிற்றல்) நெர்ட் (வரிசையில் நிற்கவை) **துட.** நெர் (வரிசையில் செல்தல்)

[நில் → நில → நிர → நிரல்.]

நிரல்[2]**(லு)–தல்** *niral(lu)-,* **11** செ.கு.வி. (v.i.) ஒழுங்குபடுதல்; *to be placed in a row, arranged in order.* '*நேரின மணியை நிரலவைத் தாற் போல்*'. (தொல்.பொருள். 482.உரை.). "*நெடுங்காழ்க் கண்ட நிரல்பட நிரைத்த கொடும்பட நெடுமதிற் கொடித்தேர் வீதியுள் குறியவு நெடியவுங்குன்று கண்டன்ன*" (சிலப்.27:151.).

நிரல்பட *niral -paḍa,* வி.எ. (adv.) வரிசைப்படி; in proper order. *நடந்த நிகழ்ச்சிகள் நிரல்படத் தரப்பட்டுள்ளன.*

[நிரல் + பட.]

நிரலளவு *niral-aḷavu,* பெ. (n.) பொதுப்படையான மதிப்பீட்டளவு; average. கிடைத்த தொகையை நிரலளவாய்ப் பகிர்ந்து கொண்டனர். (உ.வ.)

[நிரல் + அளவு.]

நிரவல்[1] *niraval,* பெ. (n.) *நிரவு–, பார்க்க;* see niravu–, *எல்லோருக்கும் ஒரே நிரவலாகப் பங்கீடு செய்.* (உ.வ.).

[நிரவு → நிரவல். 'அல்' தொழிற்பெயரீறு.]

நிரவல்[2] *niraval,* பெ. (n.) ஒரு பாட்டின் வரியை அதற்கான பண்ணின் அழகைக் காட்டும் வகையில் பயன்படுத்தும் முறை: rendering a line of musical composition elaboratley so as to bring the nuances of ragam.

நிரவல்[3] *niraval,* பெ. (n.) சராசரி (இ.வ.); average.

[நிர → நிரவல்]

நிரவலடி–த்தல் *niraval-aḍi-,* **4** செ.கு.வி. (v.i.) உழுத நிலத்தைச் சமனாக்குதல் (யாழ்ப்.); to cover, fill up, level, as furrows.

[நிரவு → நிரவல் + அடி –.]

நிரவற்பயிர் *niravaṟ-payir,* பெ. (n.) பெருமழையில் மண்ணால் மூடப்பட்ட பயிர் (வின்.); growing corn covered with earth during heavy rain.

[நிரவு → நிரவல் + பயிர்.]

நிரவனிலம் *niravaṉilam,* பெ. (n.) நீர்வாரடித்த நிலம்; influx of water over the land, flooded land.

[நிரவல் + நிலம்.]

நிரவிப்பிடி—த்தல் *niravi-p-piḍi-,* 4 செ. குன்றாவி. (v.t.) **1.** நிரப்புதல்; to fill up, make full. **2.** சிறுகச் சிறுகக் கடனைத் தீர்த்தல்; to discharge by small instalments as a debt. **3.** குளமுதலியவற்றைத் தூர்த்து நிலமாக்கி அடாவடியாய்த் தனதாக்கிக் கொள்ளல்; to fill up a tank and appropriate the land to one self, generally unjustly.

[நிரவி + பிடி.]

நிரவு[1]—தல் *niravu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** சமனாக்குதல்; to level, fill up, as a hole or well. *"உழாஅ நுண்டொளி விரவிய வினைஞர்" (பெரும்பாண்.211.). அந்தப் பள்ளத்தை நிரவு.* (உ.வ.). **2.** குறை தீர்த்தல் (வின்.); to make up a deficiency. அவரின் அருளினால் என் துன்பமெல்லாம் நிரவிப் போயிற்று. (உ.வ.). **3.** பொதுப்படையான மதிப்பீடு பார்த்தல்; to average. *எல்லோருக்கும் நிரவிக் கொடு.* (உ.வ.). **4.** சரிப்படுத்துதல்; to equalise, as threads for weaving; to proportion, as income and expenditure; to adjust. *இழைகளை நிரவி நெய்தால் துணி நயமாயிருக்கும். (உ.வ.). வருவாயைக் கருத்திற் கொண்டு நிரவி செலவிடு. (உ.வ.).* **5.** அழித்தல்; to demolish, as a fort; to level down. *"அடங்கார் புரமூன்றும் நிரவ வல்லார்"* (தேவா. 77,2.). தேவநேயப் பாவாணர் தம் ஆய்வாற்றலால் மொழிநூலின் மூடக் கருத்துகளனைத்தையும் நிரவிவிட்டார். (உ.வ.)

[நிர → நிரவு—]

நிரவு[2]—தல் *niravu-,* 7 செ.கு.வி. (v.i.) **1.** சமனாதல்; to be filled, become level, full, covered, as a well, a furrow or a sore. *பெரு வெள்ளத்தினால் வயல் நிரவி விட்டது. (உ.வ.). பயன்பாடற்ற பாழுங்கிணறு எப்போது நிரவுமோ. (உ.வ.).* **2.** தீர்தல்; to be liquidated, as a dept. *இவ்வாண்டு வேளாண்மையில் கிடைத்த வருவாயினால் என் எல்லாக்கடனும் நிரவியது.* **3.** பரவுதல்; to spread, expand. *"பார்முழுதும் நிரவிக் கிடந்து"* (தேவா.152:9.). **4.** வரிசையாயிருத்தல்; to lie in rows; *"நிரவிய தேரின் மேன்மேல்" (கம்பரா. முதற்போர்.151.).*

[நிர → நிரவு—.]

நிரவுவீடு *niravu-vīḍu,* பெ. (n.) சுவருக்குப் பகரமாய் மரப்பலகைகளை வைத்துக் கட்டிய வீடு (நாஞ்.); house in which wooden planks are used for walls.

[நிரவு + வீடு.]

நிரளியசாரை *niraḷiya-šārai,* பெ. (n.) ஒரு வகை மாழைக் கரு (கானகக் கல்) (யாழ்.அக.); a kind of metallic ore.

நிரனிறு—த்தல் *niraṉiṟu-,* 10 செ.கு.வி. (v.i.) நிறுத்தமுறையால் வரிசையாக அமைத்தல்; to arrange words or phrases in different sets so that each term of one set may qualify or govern the corresponding term in another set. *"நிரனிறுத்துக்கூறிய ஒழுக்கம்"* (தொல். பொருள்.12,உரை.).

[நிரல் + நிறு—,]

நிரனிறை *niraṉirai,* பெ. (n.) பொருள்கோள் வகையுள் நிறுத்தமுறையே சொற்களை வரிசைப்பட அமைத்துப் பொருள் கொள்ளுதல் (தொல்.சொல்.405.); mode of construing a verse in which words are so arranged in groups that each term of one group is made to govern or qualify the corresponding term in another group,one of porul-kōl.

[நிரல் + நிறை.]

பொருள்கோள் வகைகள்:

1. யாற்று நீர்.
2. மொழி மாற்று.
3. நிரனிறை.
4. விற்பூட்டு.
5. தாப்பிசை.
6. அளைமறிபாப்பு.
7. கொண்டு கூட்டு.
8. அடிமறிமாற்று.

நிரனிறை: சொல்லையும் பொருளையும் வரிசைபட அமைத்து முறையே என்பதுபோல நிரலே பொருள் கொள்ளப்படுவதாகும். இது பெயர் நிரனிறையும் வினை நிரனிறையும் என இருவகைப்படும்.

[நிரல் + நிறை]

நிரனிறைத்தொடை *niranirai-t-todai,* பெ. (n.) பொருளைச் சேர நிறுத்திப் பயனைச் சேர நிறுத்தல் (இளம். தொல். செய். 87.); meaningful of words which is similar in meaning.

[நிரனிறை + தொடை]

நிரனிறையணி *niranirai- y-ani,* பெ. (n.) சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்ளும் அணிவகை; rhetoric mode of construing a verse in which words are so arranged in groups that each term of one group is made to govern or qualify the corresponding term in another group.

எ–டு: நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது:
காரிகை மென்மொழியா னோக்காற் கதிர்முலையால்
வார்புருவத் தாலிடையால் வாய்த்தளிரால் நேர் தொலைந்த
கொல்லி வடிநெடுவேற் கோங்கரும்பு விற்கரும்பு வல்லி கவிர் மென்மலர்.

நிரலே நிறுத்தி மொழி மாற்றிப் பொருள் கொள்வது:

ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா– நீடியமால்
நின்றா னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு.

[நிரனிறை + அணி]

நிரனிறைவழு *niranirai-valu,* பெ. (n.) (அணியி.) ஒரு நிரலை முன்வைத்து அதன் பின்வைக்கும் நிரலை மாறுபட வைக்குங் குற்றம்; a defect in composition which consists in following one order at one place and the reverse order later on. (இலக்.வி.697.).

[நிரனிறை + வழு.]

நிரா *nirā,* பெ. (n.) பழம் முதலியவற்றின் கன்றின நிலை (யாழ்.அக.); hardness in fruit through blight or injury.

[நரா → நிரா.]

நிராங்கு–தல் *nirangu-,* 9 செ.கு.வி. (v.i.) நரங்குதல் (யாழ்ப்.); to be thin, stunded, as a person, a beast, vegetable.

[நரங்கு → நருங்கு → நிருங்கு → நிராங்கு–,]

நிராமலம் *nirāmalam,* பெ. (n.) விளா; wood apple tree.- feronium elephantum. (சா.அக.).

நிராமாலு *nirāmālu,* பெ. (n.) நிராமலம் பார்க்க; see nirāmalam. (சா.அக.).

நிரியசம் *niriyašam,* பெ. (n.) வேம்பு; margosa or neem tree-azadirachta indica. (சா.அக.).

நிரியம் *niriyam,* பெ. (n.) தினை; Italian-millet-panicum italicum. (சா.அக.).

நிருங்கு¹–தல் *nirungu-,* 9 செ.கு.வி. (v.i.) 1. நொறுங்குதல்; to be mashed, crushed to pieces 2. தேய்கடையாதல்; to be deficient in growth; to decay; to grow lean, as a child; to fail, as a business, a harvest.

[நலிவு → நலுங்கு → நருங்கு → நிருங்கு.]

நிருங்கு² *nirungu,* பெ. (n.) வளர்ச்சிக் குறைவு; stunted growth.

[நலிவு → நருங்கு → நிருங்கு.]

நிருத்தி *nirutti,* பெ. (n.) ஒரு தருக்கநூல்; an astorict book.

நிருதிதா *nirutitā,* பெ. (n.) கோடாசூரி; a virulent mineral poison. (சா.அக.).

நிருவாலி *niruvāli,* பெ. (n.) காட்டுப்பூவரசு; false fern tree-folicium decipiens. (சா.அக.).

நிரை¹–தல் *nirai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. வரிசையாதல்; to be in a row; to form a column. 2. முறைப்படுதல்; to be regular, orderly. 3. திரளாதல்; to crowd, swarm. "*நிரைவிரி சடைமுடி*" (தேவா. 994.9.).

[நிர → நிரை.]

நிரை²–த்தல் *nirai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஒழுங்காய் நிறுத்துதல்; to arrange in order, classify. "*முட்ட நித்தில நிரைத்த பந்தரில்*" (பாரத. கிருட்டிண.103.). 2. நிரப்புதல்; to crowd, cluster "*நிரைதிமில் வேட்டுவர்*" (மதுரைக்.116.). 3. பரப்புதல்; to spread, over. "*நெடுங்கழைக் குறுந்துணி நிறுவி மேனிரைத்து*" (கம்பரா. சித்திர.46.). 4. கோத்தல்; to string together. "*நிணநிரை வேலார்*" (பு.வெ.1,9.). 5. நிறைவேற்றுதல்; to fulfil, accomplish, perform. 6. தனித் தனியாகச் சொல்லுதல் (வின்.); to enumerate, say, declare. 7. ஒலித்தல் (வின்.); to sound.

[நிர → நிரை.]

நிரை³–தல் *nirai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. நிரப்புதல் (யாழ்ப்.); to make full, crowd fill up by adding thing to thing. "*வயிறு நிரைந்த மட்டும் உண்டேன்*" (உ.வ.) 2. ஒழுங்காக்குதல்; to place in row. 3. ஓலை முதலியவற்றை வரிசையாக வைத்து மறைத்தல்; to hide or cover as with plaited leaves. *தோட்டம் மூன்றுபுறமும் நிரைந்திருக்கிறது* (உ.வ.). 4. முடைதல்; to plait *வீடுவேயக் கிடுகு நிரைகிறார்கள்* (உ.வ.).

[நிர → நிரை.]

நிரை⁴–தல் *nirai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. திரளுதல்; to swarm, crowd together. "*மேகக் குழாமென நிரைத்த வேழம்*" (சீவக.1859.). 2. அவைகூட்டுதல்; to form an assembly, "*மறுநிலை மைந்தனை நிரைத்துக் கிளைகொள் வழக்குய்த்தலும்*" (கல்லா.43.21.). 3. தொடர்ந்து வருதல்; to follow in succession. "*நிரைத்த தீவினை நீங்க*" (சீவக.1603.).

[நிர → நிரை]

நிரை[5] *nirai,* 4 பெ. (n.) 1. வரிசை; row, column, line, train, series. "*நிரைமனையிற் கைந்நீட்டுங் கெட்டாற்று வாழ்க்கையே நன்று*" (நாலடி,288.). 2. ஒழுங்கு (சூடா.); order, regularity, arrangement system. 3. கொடிப்படை (திவா.); van of an army. 4. படைவகுப்பு (யாழ்.அக.); array of an army, military division. 5. மறை சொற்களை மேன்மேலுங் கூட்டியோதும் முறை; a mode of reciting vedic text. 6. கோபுரம்; temple tower, "*உயர்ந்தோங்கிய நிரைப் புதவின்*" (மதுரைக்.65.). 7. கூட்டம்; collection, pack, herd. "*சிறுகட் பன்றிப் பெருநிரை*" (அகநா.94.). 8. ஆன்மந்தை herd of cows. "*கணநிரை கைக்கொண்டு*" (பு.வெ.1,9.). 9. ஆன் (பிங்.); cow. 10. நிரையசை (காரிகை.) பார்க்க; see nirai-y-ašai. 11. விளையாட்டு வகை (யாழ்.அக.); a kind of game. 12. எடை; weight. 13. வலிமை; strength.

ம. நிர. தெ. தெறி. க. நிரி.

[நிர → நிரை]

நிரைக்கட்டை *nirai-k-kaṭṭai,* பெ. (n.) உல்லடைப்பு (புதுவை.); damming a river with stockade.

[நிரை → கட்டை]

நிரைக்கழு *nirai-k-kaḻu,* பெ. (n.) எயிற்கதவுக்குக் காவலாக வைக்கப்படும் ஒருவகை முட்கழு (சிலப்.15.213.உரை.); spikes set up to protect gates and walls; palisade.

[நிரை → கழு.]

நிரைகவர்தல் *nirai-kavardal,* பெ. (n.) நிரைகோடல் பார்க்க; see nirai-kōḍal.

[நிரை + கவர்தல்.]

நிரைகிளம்பி *niraikiḷambi,* பெ. (n.) சினையாடு (சங்.அக.); a pregnant sheep.

[நிரை + கிளம்பி.]

நிரைகோட்பறை *nirai-kōṭ-paṟai,* பெ. (n.) நிரைகவரும்போது அடிக்கும் பாலைப் பறைவகை (இறை.கள.1.18.); drum for capturing cows, peculiar to pālai tract.

[நிரைகோள் + பறை.]

நிரைகோடல் *nirai-kōḍal,* பெ. (n.) போர்த் தொடக்கமாகப் பகைவர் ஆன்மந்தையைக் கவர்கை; seizing the cattle of one's enemy, considered as the chief mode of declaring war in ancient times.

[நிரை + கோடல். நிர → நிரை. கொள் + தல் = கொள்தல் → கொள்ளல் → (கொள்ளுதல்) → கோள் + தல் → கோடல்.]

நிரைகோள் *nirai-kōḷ,* பெ. (n.) நிரைகோடல் பார்க்க; *see nirai-kōḍal* "*கொடுங்காற் சிலையர் நிரைகோ ளுழவர்*" (திவ். இயற். திருவிருத்.37.).

[நிரை + கோள்.]

நிரைச்சம் *niraiccam,* பெ. (n.) நிரைச்சல், 1,2 (இ.வ.) பார்க்க; *see niraiccal.* 1,2.

[நிரைச்சல் → நிரைச்சம்.]

நிரைச்சல் *niraiccal,* பெ. (n.) **1.** ஒலை முதலியவற்றாலிடும் அடைப்பு; screen, hedge with stakes covered with plam leaves in regular order. **2.** இரவல் (வின்.); loan of articles to be returned. **3.** சூதுவிளையாட்டு வகை (யாழ்.அக.); a game with squares marked on the ground. **4.** படையின் முன்னணி (யாழ்.அக.); vanguard. **5.** படைவகுப்பு (யாழ்.அக.); disposition or array of an army.

க. நெரகே.

[நிரை → நிரைச்சல். நிரை = கொடிப்படை, கூட்டம், விளையாட்டு.]

நிரைசல் *niraišal,* பெ. (n.) நிரைச்சல், 1 (வின்.) பார்க்க; *see niraiccal.*

[நிரைச்சல் → நிரைசல்.]

நிரைத்தாலி *nirai-t-tāli,* பெ. (n.) ஒரு வகைத்தாலி (சிலப்.121:28.உரை.); a kind of tāli.

[நிரை + தாலி. நிரை–வரிசை.]

நிரைதல் *niraidal,* பெ. (n.) மறைப்பு; keep out of sight, hide.

நிரைந்துகாட்டு–தல் *niraindu-kāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) விளக்கிக்கூறுதல் (வின்.); to explain seriatim in detail.

[நிரை = நிரப்புதல், வரிசையாதல், முறைப்படுதல்.
நிரை → நிரைந்து + காட்டு–,]

நிரைநிறை *nirai-niṟai,* பெ. (n.) நிரனிறை (வின்.) பார்க்க; see niraniṟai.

[நிரல் + நிறை.]

நிரைப்பு *niraippu,* பெ. (n.) ஒழுங்கு (பாண்டி.); order.

[நிரல் → நிரை → நிரைப்பு]

நிரைபசை *niraibašai,* பெ. (n.) முற்றியலு கரத்தாலேனும் குற்றியலுகரத்தாலேனும் தொடரப்படும் நிரையசை; a nirai-y-ašai followed by 'u' or shortened 'u'.

[நிரை → நிரைபு. நிரைபு + அசை.]

குறிலிணையும் குறினெடிலும் ஒற்றடுத்தும் ஒற்றடாதும் இணைந் தொலிப்பது நிரையசை.

நிரைபு *niraibu,* பெ. (n.) நிரைபசை (தொல். பொருள்.327. உரை.)பார்க்க; see niraibašai.

[நிரை . → நிரைபு.]

நிரைபுலிப்பற்றாலி *nirai-puli-p-paṟṟāli,* பெ. (n.) வலிய புலியின் பற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட தாலி (சிலப்.12:28.உரை.); tāli with tiger's teeth.

[நிரை + புலிப்பல் + தாலி.]

வலிமை வாய்ந்த புலியின் வாயைப் பிளந்து உதிர்த்த பற்களை வரிசையா யமைத்துச் செய்யப்பட்ட தாலி.

நிரைபூத்தி *niraipūtti,* பெ. (n.) கோடகசாலை எனும் ஒரு வகைப்பூடு; a very small plant called kōḍagašālai.

[நிரை + பூத்தி.]

நிரைபெயர்–த்தல் *nirai-peyar-,* 4செ.கு.வி. (v.i.) பகைவர் கைக்கொண்ட ஆனிரைகளைத் திரும்பக் கைப்பற்றல்; to recover cattle seized by one's enemy. "*தலைக்கொண்ட நிரைபெயர்த் தன்று*" (பு.வெ.2.1.கொளு.).

[நிரை + பெயர்–.]

நிரைமணி *niraimaṇi,* பெ. (n.) அவுரி; indigo-feratinctoria. (சா.அக.).

நிரைமீட்சி *nirai-mīṭci,* பெ. (n.) பகைவர் கவர்ந்த ஆனிரை மீட்கை; recovering the cattle seized by one's enemy.

[நிரை + மீட்சி.]

நிரை = கூட்டம், ஆன்மந்தை.
மீள் → மீட்சி.

நிரைமீட்டல் *nirai-mīṭṭal,* பெ. (n.) நிரைமீட்சி (பு.வெ.2.1.கொளு.உரை.) பார்க்க; see nirai-mīṭci.

[நிரை + மீட்டல். நிரை = கூட்டம், ஆன்மந்தை (ஆநிரை) மீள் + தல் – மீள்தல் → மீட்டல்.]

நிரையசை[1] *nirai-y-aśai,* பெ. (n.) இணைக்குறிலாலேனும் ஒற்றடுத்த இணைக் குறிலாலேனும் குறில்நெடிலாலேனும் ஒற்றடுத்த குறில் நெடிலாலேனும் ஆகிய செய்யுளசை; metrical syllable made up either of two short vowels as veṟi, or of two short vowels followed by a consonant as niṟam, or of a short and a long vowel as cuṟā, or of a short and a long vowel followed by a consonant as viḷām. "*குறிலிணை குறினெடிற்றனித்து மொற்றடுத்து நெறிவரு நிரையசை நான்குமாகும்*" (இலக்கணவி.714.).

[நிரை + அசை.]

இணைக்குறில்–வெறி.
ஒற்றடுத்த இணைக்குறில்–நிறம்.
குறில் நெடில்–சுறா.
ஒற்றடுத்த குறில்நெடில்–விளாம்.

நிரையணி *nirai-y-aṇi,* பெ. (n.) அவுரி (வைத்தியபரிபா.); indigo plant. (கதி.அக.).

நிரையநிலம் *niraiya-nilam,* பெ. (n.) நிரையம் (நீலகேசி, 75.உரை.); hell.

[நிரையம் + நிலம்.]

நிரையம் *niraiyam,* பெ. (n.) மாந்தப் பிறவியில் தீவினை செய்வோர் இறப்புக்குப்பின் சென்ற டைவதாகக் கருதப்படுவது; hell. "*நிரைகளி றொழுகிய நிரைய வெள்ளம்*" (பதிற்றுப்.15.).

நிரையாடல் *nirai-y-āḍal,* பெ. (n.) தரையிற் சதுரக்கோடு கீறிக் கற்களை வைத்து ஆடும் விளையாட்டுவகை (யாழ்ப்.); playing with stones an squares drawn on the ground.

[நிரை + ஆடல்.]

நிரை = கூட்டம், கூடியாடும் விளையாட்டு, விளையாட்டு வகை.
நிரை + ஆடல். ஆடுதல் → ஆடல்.



நிரையொன்றாசிரியத்தளை *nirai-y-onṟāśiriyattaḷai,* பெ. (n.) ஆசிரியப்பாவில் நிரையீற்றியற்சீர்முன் நிரைமுதலியற்சீர் வந்து ஒன்றுந் தளை (காரிகை.உறுப்.10.); metrical connection in āśiriyappā between any two adjoining cīr where the last syllable the preceding and the first syllable of the preceding and the first syllable of the succeeding cīr are nirai.

[நிரை + ஒன்றாசிரியத்தளை.]

"*திருமழை தலைஇய இருணிற விசும்பின் விண்ணதிர் இமிழிசை கடுப்பப் பண்ணமைந் தவர்தேர் சென்ற வாறே.*"

இது நிரையொன்றாசிரியத் தலையால் வந்த செய்யுளாகும்.

நில்[1]–தல்(நிற்றல்) *nil-,* 3 செ.கு.வி. (v.i.) 1. கால்கள் ஊன்ற உடம்பு முழுவதும் நெடிதாக நிமிர்ந்திருத்தல்; to stand, "*நின்றா னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச் சென்றான்*" (நாலடி, 29.). 2. உறுதியாயிருத்தல்; to be steadfast; to persevere, persist in a course of conduct "*வீடுபெற நில்*" (ஆத்திசூடி.) 3. மேற்செல்லாதிருத்தல்; to stop, halt, tarry. "நில்லடா, சிறிது நில்லடா" (கம்பரா.நாகபாச.73.). 4. இடங்கொண்டிருத்தல்; to stay, abide, continue "*குற்றியலிகர நிற்றல் வேண்டும்*" (தொல். எழுத்து.34.). 5. ஒழிதல்; to cease; to be discontinued, stopped or suspended. வேலை நின்று விட்டது (உ.வ.). 6. அடங்கியமைதல்; to be subdued "*சாயவென் கிளவிபோற் செவ்வழி யாழிசைநிற்ப*" (கலித்.143.38.). 7. எஞ்சியிருத்தல்; to remain; to be left, as matter in a boil, as disease in the system; to be due, as a debt "*நின்றதிற் பதினையாண்டு*" (திவ்.திருமாலை.3.). 8. காலந்தாழ்த்துதல்; to wait, delay. '*அரசன் அன்று கேட்கும், தெய்வம் நின்று கேட்கும்*' (பழ.). 9. ஒழுக்கத்தில் உறுதியாயிருத்தல்; to persist in a course of conduct. 10. நிலைத் திருத்தல்; to be permanent '*என் வலத்தில் மாறிலாய் நிற்க*' (பெரியபு.கண்ணப்ப.185.). 11. நீடித்தல்; to lengthen time, distance etc.,

ம. நில்க்க; **க.** நில்லு, நில்; **து.** நில்புன், நிலிபுனி; **கொலா., நா.** இல்; **கோண்.** நித்தானா; **கூ.** நிசல; **மால.** இலை.

[நீள்→நிள்→நில்.]

நீள் → நீண்டிருத்தல்; உடம்பு முழுவதும் நெடிதாக நிமிர்ந்திருத்தல்

நில்[2] *nil,* 3 செ.கு.வி. (v.i.) 1. பொறுத்து நிற்றல்; to wait. '*நில், வருகிறேன்*'. 2. வினை செய்யாது விடுதல்; to stop. '*நில்லுகண்ணப்ப*'. (பெரியபு.ஆறுமுக. உரைநடை. ப.97.), '*கண்ணப்ப நிற்க*' (பெரியபு. கண்ணப்ப.183.).

நில்லாதநிலை *nillāda-nilai,* பெ. (n.) நிலையாத நிலை; state of uncertainty நில்லாத நிலையிது (சேதுபு.கடவுள்வா.).

[நில்லாத + நிலை.]

நில்லாமை *nillāmai,* பெ. (n.) 1) உறுதிப்பாடின்மை; uncertainty. 2 தவறுகை; slipping.

[நில்→நில்லா→ நில்லாமை.]

நில்லிகா *nilligā,* பெ. (n.) நிறுத்துக; *stop.* "நில்லிகா வென்பான்போ னெய்தற் றொடுத்தாளே மல்லிகா மாலை வளாய்" (பரிபா;11:104.).

நில் → நில்லிகா. நில் + இக = நில்லிக → *நில்லிகா* '*இக*' என்னும் முன்னிலையசை இகா என்றானது.

நிலஅதிர்வு *nila-adirvu,* பெ. (n.) பேரழிவையுண்டாக்கிய நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ஏற்படும் மெல்லிய நில அதிர்வு; after shock.

[நிலம் + அதிர்வு]

நிலஅவுரி *nila-avuri,* பெ. (n.) பேராவுரி; a large variety of indigo plant-Indigofera tinctoria. (சா.அக.).

நிலஅளவர் *nila-aḷavar,* பெ. (n.) நிலங்களை அளந்து பதிவுசெய்து ஆவண மாக்கும் அலுவலர்; surveyor (of land).

[நிலம் + அளவர்.]

நிலஆவிரை *nila-āvirai,* பெ. (n.) *நிலவாகை* பார்க்க; see *nila-vāgai.*

[நிலம் + ஆவிரை.]

நிலஇயல் *nila-iyal,* பெ. (n.) *நிலவியல்* பார்க்க; *see nila-v-iyal.*

[நிலம் + இயல்.]

நிலஇலந்தை *nila-ilandai,* பெ. (n.) *நிலவிலந்தை* பார்க்க; *see nila-v-ilandai.*

[நிலம் + இலந்தை.]

நிலஉடமை *nila-uḍamai,* பெ. (n.) *நிலஉடைமை* பார்க்க; *see nila-uḍaimai.*

[நிலம் + உடமை. உடைமை → உடமை.]

நிலஉடைமை *nila-uḍaimai,* பெ. (n.) தனிப் பட்ட முறையில் நிலம் சொத்தாக இருப்பது; landed property. *நில உடைமைக் குமுகாயம்.*
[நிலம் + உடைமை.]

நிலக்கடம்பு[1] *nila-k-kaḍambu,* பெ. (n.) செடிவகை (A); a plant.

[நிலம் + கடம்பு.]

நிலக்கடம்பு[2] *nila-k-kaḍambu,* பெ. (n.) குதிரைக்குளம்பு; horse hoof plant. (சா.அக.).

நிலக்கடலை *nila-k-kaḍalai,* பெ. (n.) (எண்ணெய் எடுக்கப் பயன்படுவதும் உணவுப் பொருளாகப் பயன்படுவதுமான) இரு பகுதிகளாக உடையக் கூடிய, சிறு நீள் உருண்டை வடிவ ஓட்டினுள் இருக்கும் பருப்பு; வேர்க்கடலை; peanut (the nut and the crop); ground nut.

[நிலம் + கடலை.]

இது வேரிற் காய்ப்பதால் வேர்க்கடலை; நிலத்தடியிலிருப்பதால் நிலக்கடலை; அயலகப் பயிராயினமையால் மணிலாக் கொட்டை அல்லது மல்லாக் கொட்டை; கப்பலில் வந்தமையின் கப்பற்கடலை என்றழைக்கப் படும்.



நிலக்கடலைச்செடி *nila-k-kaḍalai-c-ceḍi,* பெ. (n.) (எண்ணெய் எடுக்கவும் உணவுப் பொருளாகவும் பயன்படும்) இரு பகுதிகளாக உடையக் கூடிய சிறு நீள் உருண்டை வடிவ ஓட்டினுள் இருக்கும் பருப்பையுடைய கடலை வேரில் காய்க்கும் சிறு செடி; groundnut plant, groundnut crop.

[நிலக்கடலை + செடி.]



நிலக்கடலைப்பயறு *nila-k-kaḍalai-p-payaṟu,* பெ. (n.) *நிலக்கடலை* பார்க்க; see *nila-k-kaḍalai.*

[நிலக்கடலை + பயறு.]

நிலக்கடலைப்பயிர் *nila-k-kaḍalai-p-payir,* பெ. (n.) வேளாண்மையில் இட்டிருக்கும் நிலக்கடலைச் செடி; crop of ground nut.

[நிலக்கடலை + பயிர்.]

நிலக்கடலைமணி *nila-k-kaḍalai-maṇi,* பெ. (n.) *நிலக்கடலை* பார்க்க; see *nila-k-kaḍalai.*

[நிலக்கடலை + மணி.]

ஒ.நோ: நெல்மணி.

நிலக்கடற்செடி *nila-k-kaḍaṟcedi,* பெ. (n.) கடலாரை; sea sorrel-marsiles genus. (சா.அக.).

நிலக்கடிம்பு *nila-k-kaḍimbu,* பெ. (n.) ஒருவகைப்பூண்டு: a kind of shurb.

[நிலம்+கடிம்பு.]

நிலக்கண்ணிவெடி *nila-k-kaṇṇi-veḍi,* பெ. (n.) நிலத்தில் மறைத்து வைத்து வெடிக்கச் செய்யும் வெடி; land mine.

[நிலம் + கண்ணிவெடி.]

நிலக்கணம் *nila-k-kaṇam,* பெ. (n.) (செய்யுள்) மூன்று நிரையடுத்து வருவதும் செய்யுளின் தொடக்கத்திருப்பின் நன்மை பயக்குமென்று கருதப்படுவதுமான செய்யுட் கணம்; metrical foot of three nirai as karu-viḷaṅ-kaṉi, considered auspicious at the commencement of a poem. "*நிலைக்கணந்தானே மலர்த் திருவிளங்கும்*" (இலக்.வி.800. உரை.).

[நிலம் + கணம்.]

நிலக்கரி *nila-k-kari,* பெ. (n.) நிலத்தடியில் படிவுகளாக இருப்பதும் வெட்டியெடுத்து எரிபொருளாகப் பயன்படுத்துவதுமான கறுப்பு நிறக்கனிமம்;coal,pitcoal.

[நிலம் + கரி.]

நிலக்கரிச்சுரங்கம் *nila-k-kari-c-curaṅgam,* பெ. (n.) நிலத்தடியில் படிந்தமைந்த கரியை வெட்டுதற்கான சுரங்கம்; coal mine.

[நிலக்கரி + சுரங்கம்
சுல் – குத்தற் கருத்துவேர்
சுல் → சுர் → சுரங்கு → சுரங்கம்.]



நிலக்கலி *nila-k-kali,* பெ. (n.) பெருங்கட்டுக்கொடி; big broom creeper. (சா.அக.).

நிலக்கள்ளி *nila-k-kalli,* பெ. (n.) கள்ளிவகை; green-tubed reddish backed white sepalled torch thistle.

[நில் →நிலம் = நீர்போல் நீண்டோடாது ஒரேயிடத்தில் நிற்கும் பூதவகை. கள் → கள்ளி = பாலூறும் நிலைத் திணை. நிலம் + கள்ளி.]



நிலக்கறையான் *nila-k-karaiyān,* பெ. (n.) கறையான் வகை (சங்.அக.); the common white ant.

[நில் → நிலம் = நீர்போல் நீண்டோடாது ஒரேயிடத்தில் நிற்கும் பூதவகை. கல் → கர் → கரை → கறை. கறையான் = அரிப்பது, அரித்துக் கரைப்பது, குறைப்பது. நிலம் + கறையான்.]

நிலக்கன்று *nila-k-kanru,* பெ. (n.) சிறுபயிர் (யாழ்.அக.); tender-crop.

[நில் → நிலம் = நீரைப்போல் நீண்டோடாது ஓரிடத்து நிற்பது. கல் → கன் → கன்று = மா,புளி,வாழை முதலியவற்றின் இளநிலைப்பெயர்; யானை, குதிரை, கழுதை, ஆன், எருமை முதலியவற்றின் இளமைப் பெயர்.]

[நிலம் + கன்று.]

நிலக்கன்னி nila-k-kanni, பெ. (n) **1.** நிலம்பு; american bindweed. **2.** தாளி; impomea.

[நிலம் + கன்னி.]

நிலக்காணிக்கை *nila-k-kāṇikkai,* பெ. (n.) வரிவகை (தெ.க.தொ.4:39.); a kind of tax.

[நிலம் + காணிக்கை.]

நிலக்காரை *nila-k-kārai,* பெ. (n.) முட்செடிவகை (வின்.); a low thorny shrub.

[நிலம் + காரை.]
நில் →நிலம்.
குல் – குத்தற்கருத்துவேர்.
குல்→கல் →கர் →கார் →காரை = முட்செடி.



நிலக்காலி *nila-k-kāli,* பெ. (n.) அவுரி; indigo plant-Indigofera tinctoria. (சா.அக.).

நிலக்காளான் *nila-k-kāḷāṉ,* பெ. (n.) காளான்வகை (வின்.); toadstool, a fungus.

[நிலம் + காளான்
நில் → நிலம்
கல் → கள் → காள் → காளான்.]



நிலக்கிழங்கு *nila-k-kiḻaṅgu,* பெ. (n.) நிலப்பனைக்கிழங்கு (சங்.அக.); tuber of nila-p-paṉai.

[நிலம் + கிழங்கு.]

நிலக்கிழவி *nila-k-kiḻavi,* பெ. (n.) மூவிலைக் குருந்து; thin leaved wild lime-Trichillia spinosa. (சா.அக.).

நிலக்கிழார் *nila-k-kiḻār,* பெ. (n.) பேரளவிலான விளை நிலத்தைச் சொத்தாக வைத்திருப்பவர்; பெரும் நில உடைமையாளர்; landowner, land lord.

நிலம்+கிழார்.

நில் → நிலம். குல் →கில் (திரட்சி,உருண்டை) கிழ → கிழான் → கிழார். நீரிறைக்கும் சால், நன்செய் வேளாண்மை செய்யும் உழவர், உரிமையாளர்.

நிலக்கீல் *nila-k-kīl,* பெ. (n.) கீல்; bitumen, asphalt. (சா.அக.).

நிலக்குண்டி *nila-k-kuṇḍi,* பெ. (n.) குன்றிமணி; Jeweller's bead. (சா.அக.).

நிலக்குதம் *nila-k-kudam,* பெ. (n.) சேனைக்கிழங்கு; elephant ham - typhonium trilobatum alias Dracontium maxima. (சா.அக.).

நிலக்குமிழ் *nila-k-kumiḻ,* பெ. (n.) நீண்டசெடிவகை (பதார்த்த.274.); small Cashmere tree.-Gmelina Asiatica. கழிச்சல், விழிசொருகல், கொட்டாவி, மந்தம் ஆகியவற்றைப் போக்கும் மருத்துவக் குணமுடையது. (சா.அக.).

நிலக்குரா *nila-k-kurā,* பெ. (n.) நிலக்குரோசினை; an unknown drug. இது பித்தளையின் களிம்பை அகற்றும்; வெடியுப்பைச் செந்தூரம் செய்யும். (சா.அக.).

[நிலக்குரோசினை → நிலக்குரா.]

நிலக்குரோசினை *nila-k-kurōšiṉai,* பெ. (n.) பெயரறியா மருந்துச் செடி an unknown drug. இது பித்தளையின் களிம்பை அகற்றும்; வெடியுப்பைச் செந்தூரம் செய்யும். (சா.அக.).

[நிலக்குரோசினை → நிலக்குரா.]

நிலக்குழி *nila-k-kuḻi,* பெ. (n.) **1.** உரல்குழி; pit in the ground in which a mortar is fixed **2.** எழுத்துக்குழி (அட்சரக்குழி); the figure of a letter marked in sand for a child to trace over.

[நிலம் + குழி.]



நிலக்குற்றம் *nila-k-kuṟṟam,* பெ. (n.) *அரங்கக்குற்றம்;* defect in theatre, stage. *"எண்ணப்பட்ட நாடக நூலாசிரியர், வகுத்த இயல்புகளின் வழுவாதவகை அரங்கு செய்யத் துவர் வரி வளை பொருத்தல் முதலிய நிலக்குற்றங்கள் நீங்கின விட்த்து" (சிலப்.3:95. உரை.).*

[நிலம் + குற்றம்]

நிலக்குறி *nila-k-kuṟi,* பெ. (n.) நிலத்தின்மேல் சில சாற்றைப் பிழிய அதன் கீழுள்ள பொருட்குவையைக் கண்டறியுமாறு தோன்றும் அடையாளம் (வின்.); sign said to appear on the ground when certain juices are poured on it, showing the presence of treasure underground and its quality.

[நிலம் + குறி.]

நிலக்கூந்தல் *nila-k-kūndal,* பெ. (n.) கொடியாள் கூந்தல் என்னும் செடி; pea-fruited dodder.

[நிலம் + கூந்தல்.]

நிலக்கூலி *nila-k-kūli,* பெ. (n.) நிலவாடகை; rent for land. *"நிலக்கூலி தண்டிப் போந்த படிக்கும்"* (தெ.க.தொ. 6:385.).

[நிலம் + கூலி.]

நிலக்கொட்டை[1] *nila-k-koṭṭai,* பெ. (n.) நிலக்கடலை பார்க்க; see nila-k-kaḍalai. (சா.அக.).

[நிலம் + கொட்டை.]

நிலக்கொட்டை[2] *nila-k-koṭṭai,* பெ. (n.) பூடுவகை (வின்.); a kind of plant.

நிலக்கொடி *nila-k-koḍi,* பெ. (n.) நிலமகள் பார்க்க; see nila-magaḷ. *"நிலக்கொடியுந் துயர் நீத்தனள்"* (கம்பரா. திருவவ.122.).

[நிலம் + கொடி.]

நிலக்கொடிவேலி *nila-k-koḍivēli,* பெ. (n.) நீலக்கொடிவேலி பார்க்க; see nīla-k-koḍivēli. (சா.அக.).

நிலக்கொதி *nila-k-kodi,* பெ. (n.) நிலக்கொதிப்பு பார்க்க (வின்.); see nila-k-kodippu.

[நிலம் + கொதி.]

நிலக்கொதிப்பு *nila-k-kodippu,* பெ. (n.) வெய்யோனின் வெப்பத்தால் நிலத்திலெழும் வெக்கை; heat of the ground, due to hot sun.

[நிலம் + கொதிப்பு.]

நிலக்கொறுக்கை *nila-k-koṟukkai,* பெ. (n.) மஞ்சணிறமானதும் இரண்டடி நீளம் வளர்வதுமான கடல்மீன் வகை; sea-fish, canary-yellow, attaining two feet in length.

[நிலம் + கொறுக்கை.]



நிலக்கோட்டை *nila-k-kōṭṭai,* பெ. (n.) ஒருவகைப்பூண்டு; a kind of shrub.

நிலகடகம் *nila-kaḍagam,* பெ. (n.) சிவதுளசி; shiva's basil-Basili cum alba. (சா.அக.).

நிலகந்திகம் *nilakandigam,* பெ. (n.) நொச்சி; notchy-vitex negundo. (சா.அக.).

நிலகி *nilagi,* பெ. (n.) கள்ளிக்கொடி; creeping milk hedge-sarcostemma intermedium. (சா.அக.).

நிலகிக்கொத்தவரை *nilagi-k-kottavarai,* பெ. (n.) இனிப்புக்கொத்தவரை; sweet cluster bean-cyamopsis psoralioides. (சா.அக.).

நிலங்கடந்தநீனிறவண்ணன் *nilaṅ-kaḍandanīniṟavaṇṇaṉ,* பெ. (n.) திருமால்; tirumal. "*காமன் மகன் அநிருத்தனைத் தன்மகள் உழை காரணமாக வாணன் சிறை வைத்தலின், அவனுடைய சோவென்னும் நகரவீதியிற் சென்று நிலங்கடந்த நீனிற வண்ணன் குடங்கொண்டாடிய குடக்கூத்தும்*" (சிலப்.6.55:உரை.).

[நிலம் + கடந்த + நீலம் + நிறம் + வண்ணன்.]

நிலங்கடந்தநெடுமுடியண்ணல்: *nilaṅ-kaḍanda-neḍumudi-y-aṇṇal,* பெ. (n.) திருமால்; tirumal. "*நீணிலங்கடந்த நெடுமுடியண்ணல் தாடொழுதகையேன் போகுவல் யானென*" (சிலப்.11:147.).

[நிலம் + கடந்த + நெடுமுடி + அண்ணல்.]

நிலங்கீறு—தல் *nilaṅ-kīṟu-,* 7 செ.கு.வி. (v.i.) பொழுது புலருதல் (நெல்லை); to dawn.

[நிலம் + கீறு—,]

காலைக் கதிரவன் நிலத்தைக்கீறி வெளி வருவது போன்று தோன்றுதலால் இவ்வாறழைக்கப்பட்டிருக்கலாம்.

நிலங்கு *nilaṅgu,* பெ. (n.) பெரியகாடை (பிங்.); quail.

நிலங்கொள்பாம்பு *nilaṅ-koḷ-pāmbu,* பெ. (n.) நிலத்திலிருக்கும் பாம்பு; snakes. "*நிலங்கொள் பாம்பின் இழிதரும் விலங்கு மலை நாடனொடு கலந்த நட்பே*" (குறுந்.134.).

[நிலம் + கொள் + பாம்பு.]

நிலச்சம்பங்கி *nila-c-cambaṅgi,* பெ. (n.) செடிவகை; tuberose.

[நிலம் + சம்பங்கி.]

நிலச்சரிவு *nila-c-carivu,* பெ. (n.) மேடான இடத்திலிருந்து மண், மலையிலிருந்து பாறை, கல் முதலியவை திடுமெனப் பெயர்ந்து விழுதல்; landslide. பெருமழை பெய்ததால் *நீலமலையில் நிலச்சரிவு ஏற்பட்டுப் போக்குவரத்துத் தடைபட்டது.* (உ.வ.).

[நிலம் + சரிவு.]

நிலச்சருக்கரை *nila-c-carukkarai,* பெ. (n.) நிலச்சருக்கரைக் கிழங்கு; wild ground potato merma arenaria. (சா.அக.).

நிலச்சல்லியம் *nila-c-calliyam,* பெ. (n.) கிணறு வெட்டுதற்குரிய தகுதியை யறிவிக்கும் நிலக்குறி; the sign on a plot of land indicating whether it is suitable for digging a well.

[நிலம் + சல்லியம்.
சுல் – குத்தற் கருத்து வேர்.
சுல் → சல் → சல்லியம்.]

நிலச்சாடை *nila-c-cāḍai,* பெ. (n.) *நிலச்சார்பு* பார்க்க; see *nila-c-cārbu.*

[நிலம் + சாடை.]

நிலச்சாந்து *nila-c-cāndu,* பெ. (n.) **1.** சுண்ணக்காரை; சுண்ணாம்புக்காரை; lime, mortar. **2.** மண்ணைக்கொண்டு குழந்தை நெற்றியிலிடும் பொட்டு; mark on the forehead of child, made with earth.

[நிலம் + சாந்து.]

நிலச்சாய்வு *nila-c-cāivu,* பெ. (n.) *நிலச்சார்பு* பார்க்க; see *nila-c-cārbu.*

[நிலம் + சாய்வு. சார்பு → சாய்வு.]

நிலச்சார் *nila-c-cār,* பெ. (n.) *நிலச்சார்பு* (யாழ்ப்.) பார்க்க; see *nila-c-cārbu.*

[நிலம் + சார். நில் → நிலம். சால் → சார்.]

நிலச்சார்பு *nila-c-cārbu,* பெ. (n.) **1.** நிலத்தின் தன்மை; nature of the soil. **2.** நிலவளம்; fertility of the soil.

[நிலம் + சார்பு. நில் → நிலம்.சால் → சால்பு → சார்பு.]

நிலச்சுருங்கி[1] *nila-c-curuṅgi,* பெ. (n.) தொட்டாற்சுருங்கி; sensitive plant-mimosa indica olias oxalis sensitive. (சா.அக.).

[நிலம் + சுருங்கி.]

நிலச்சுவான்தார் *nila-c-cuvāṉdār,* பெ. (n.) *நிலக்கிழார்* பார்க்க; see *nila-k-kiḻār.*

நிலச்சூடு *nila-c-cūḍu,* பெ. (n.) *நிலக்கொதிப்பு* (வின்.) பார்க்க; see *nila-k-kodippu.*

[நிலம் + சூடு.]

நிலச்சேமை *nila-c-cēmai,* பெ. (n.) சேம்பையினச் செடிவகை (A.); a kind of arum.

[நிலம் + சேமை.]

நிலசம் *nilašam,* பெ. (n.) துருசு; blue vitrol-copper acetate. (சா.அக.).

நிலத்தடிநீர் *nilattaḍi-nīr,* பெ. (n.) நிலத்தின் அடியில் இருக்கும் நீர்; ground water. ஆழ்த்துளைக் கிணற்றின் மூலம் நிலத்தடி நீரை எடுத்து வேளாண்மைக்குப் பயன்படுத்துவர். (உ.வ.).

[நிலத்தடி + நீர்]

நிலத்தடிநீர்மட்டம் *nilattaḍi-nīr-maṭṭam,* பெ. (n.) மண்ணுள்ளிருக்கும் நீரின் அளவு; ground water level.

[நிலத்தடி + நீர்மட்டம்.]

நிலத்தண்டு *nila-t-taṇḍu,* பெ. (n.) **1.** வேர்த்தண்டு; a stem resembling a root-rhizome **2.** கீரைத்தண்டு; garden green-Amaranthus blitum. **(சா.அக.).**

[நிலம் + தண்டு.]

நிலத்தரசு *nilattarašu,* பெ. (n.) ***நிலத்தரசுகாரர்*** பார்க்க; see *nilattarašu-kārar.*

[நிலம் + அத்து + அரசு.]

நிலத்தரசுகாரர் *nilattarašu-kārar,* பெ. (n.) நிலவுடையாளர் **(யாழ்ப்.)**; proprietors of the land.

[நிலம் + அத்து + அரசுகாரர்.]

நிலத்தழல் *nila-t-taḻal,* பெ. (n.) *நிலச்சூடு* **(தக்கயாகப்.52,உரை.)** பார்க்க; see *nila-c-cūḍu.*

[நிலம் + தழல்.]

நிலத்தளம் *nila-t-taḷam,* பெ. (n.) தரை; ground, earth.

[நிலம் + தளம்.]

நிலத்தாமரை *nila-t-tāmarai,* பெ. (n.) முளரி; rose-Rosa centifolia.

[நிலம் + தாமரை.]

நீரிலுறையும் தாமரையையொத்திருக்கும் அயலகப் பூஞ்செடி.

நிலத்தி *nilatti,* பெ. (n.) மின்மினி, நுளம்பு **(சூடா.)**; firefly.

[நித்தில் → நிலத்தி.]

நிலத்திணை *nila-t-tiṇai,* பெ. (n.) ***நிலைத்திணை*** பார்க்க; see *nilai-t-tiṇai.*

நில் → நிலை + திணை.

நிலை → நில ***(கொ.வ.)***

நிலத்திலம் *nilattilam,* பெ. (n.) முத்து; pearl.

[நிலத்தி – ஒளிர்வு
நிலத்தி → நிலத்திலம்.]

நிலத்துஇன்மைகூறிமறுத்தல் *nilattu-iṉmaikūṟi-maṟuttal,* பெ. (n.) அகப் பொருட்டுறையுள் ஒன்று; one of agapporul-turai.

[நிலைத்து + இன்மைகூறி + மறுத்தல்.]

திருக்கோவையாரில் வரும் அகப்பொருட் துறைகளுளொன்று, இதன் பொருள் சந்தனத் தழையின்றி வேறுதழை கொண்டு செல்ல, இது எங்கள் நிலத்தில் இல்லாதது, உறவினர் ஐயுறுவர் என்று கூறி மறுப்பது என்பதாம்.

நிலத்துத்தி[1] *nila-t-tutti,* பெ. (n.) அரிவாள் முனைப்பூண்டு; a shruby plant-sida cordifolia. (சா.அக.).

நிலத்துத்தி[2] *nila-t-tutti,* பெ. (n.) துத்திவகை (யாழ்ப்.); downy heart leaved morning mallow.

[நிலம் + துத்தி.]

நிலத்துளக்கு *nila-t-tuḷakku,* பெ. (n.) நிலநடுக்கம்; earthquake. "*நிலத்துளக்கு விண்ண திர்ப்பு*" (ஆசாரக்.48.).

[நிலம் + துளக்கு. துளங்கு → துளக்கு = அசைவு, அதிர்வு.*]*

நிலத்துளசி *nila-t-tuḷaśi,* பெ. (n.) துளசிவகை, (பதார்த்த.305.); a kind of basil-Geniospermum gracile.

[நிலம் + துளசி.]



நிலத்தூழி *nila-t-tūḻi,* பெ. (n.) நிலத்துத் தோன்றிய ஐந்தாம் ஊழி; the fifth deluge. "உள்ளீடாகிய இருநிலத் தூழியும் நெய்தலுங் குவளையும் ஆம்பலும் சங்கமும்" (பரிபா.2:12.).

[நிலம் + அத்து + ஊழி]

நிலத்தெய்வம் *nila-t-teyvam,* பெ. (n.) 1. நிலத்தேவி (பூதேவி) (தக்கயாகப் 671, உரை.); earth,as goddess. 2. ஐந்திணைக் குரிய தெய்வங்கள்; deities presiding over the five-fold,tiṇai. "*நிலத்தெய்வம் வியப்பெய்த நீணிலத்தோர் மனமகிழக் கலத்தொடு புணர்ந்துமைந்த கண்டத்தாற் பாடத் தொடங்கு மன்*" (சிலப்.7:24.).

[நிலம் + தெய்வம்.]

நிலத்தேவர் *nila-t-tēvar,* பெ. (n.) ஆரியப் பார்ப்பனர்; brahmins. மேலாத்தேவர்களும் நிலத்தேவரும் மேவித்தொழும். (திவ். திருவாய்.5.1.8.)

[நிலம் + தேவர்.]

ஆரியப் பார்ப்பனர்களாகிய பிராமணர்கள் மண்ணுலகத் தேவர்களாகக் கருதப் பட்டமையானால் பூசுரர் எனப்பட்டனர். பூசுரர் என்பதின் தமிழ் வடிவமே நிலத்தேவர் என்பது.

நிலத்தேவர்குழு *nila-t-tēvar-kuḻu,* பெ. (n.) பிராமணர்குழு; group of bramins.

[நிலத்தேவர் + குழு.]

நிலத்தோர் *nila-t-tōr,* பெ. (n.) மாந்தர்; human being. இருநிலத்தோரும் இயைகென ஈத்தநின் தண்பரங் குன்றத் தியலணி. (பரிபா. 19:4)

நிலந்தட்டி[1] *nilan-taṭṭi,* பெ. (n.) நிலஞ்சமனாக்கும் பலகை (யாழ்ப்.); an instrument for levelling or smoothing a floor or road.

[நிலம் + தட்டி.]



நிலந்தட்டி[2] *nilan-taṭṭi,* பெ. (n.) கடல்மீன் வகை; a kind of sea-fish.

நிலந்தடி *nilantaḍi,* பெ. (n.) *நிலந்தட்டி*[1] (நாஞ்சில்.) பார்க்க; see *nilan-taṭṭi.*

[நிலந்தட்டி → நிலந்தடி.]

நிலந்தரஞ்செய்—தல் *nilan-taraṅ-cey-,* 1செ.குன்றாவி. (v.t.) முற்றும் அழித்தல்; to destroy utterly, as razing to the ground "*துயராயினவெல்லா நிலந்தரஞ் செய்யும்*" (திவ்.பெரியதி.1.1.9.).

[நிலம் + தரம்செய்—,]

நிலந்தருதிருவிற்பாண்டியன் *nilantaru-tiruviṟ-pāṇḍiyaṉ,* பெ. (n.) தொல்காப்பியம் அரங்கேறிய அவைக்குரியோனும் இடைச்சங்க காலத்தவருமான பாண்டியன் (தொல்.பாயி.); Pāṇḍiyaṉ of the second sangam in whose court Tolkāppiyam was first approved and published.

நிலந்தருதிருவின்நிழல் *nilan-taru-tiruviṉ niḻal,* பெ. (n.) நிலத்திற்குப் பல செல்வத்தினையும் தருகின்ற அருள்; benidiction. நிலந்தருதிருவின் நிழல்வாய் நேமி (சிலப்.15:1.).

(நிலம்+தரும்+நிழல்.)

மன்னன் குடிகளிடத்து அருளுடையான் ஆயவழி நிலத்துப் பல்வளமும் பெருகுமாகலின் நிலந்தருவின் நிழலாயிற்று. நிழல்=அருள். மாற்றாரது நிலத்தைத்தரும் வெற்றியாகிய செல்வம் என்றும், ஒளிபொருந்திய ஆணைச்சக்கரம் என்றுமாம்.

நிலந்தருதிருவினெடியோன் *nilantaru-tiruviṉeḍiyōṉ,* பெ. (n.) *நிலந்தருதிருவிற் பாண்டியன்* பார்க்க; see *nilan-taru-tiruviṟ-pāṇḍiyaṉ.* "*புகழ்சால் சிறப்பி னிலந்தரு திருவினெடியோன் போல்*" (மதுரைக். 763.).

[நிலம்தருதிருவின் + நெடியோன்.]

நிலந்திரைத்தானை *nilan-tirai-t-tāṉai,* பெ. (n.) நிலஅகலத்தைத் தன்னுள்ளே அடக்கிய தானை; battalian of army. "கலந்த கேண்மையிற் கனக விசயர் நிலந்திரைத் தானையொடு நிகர்த்துமேல்வர" (சிலப்.26:186.). "நிலந்திரைக்கும் கடற்றானை" (புறநா.96.).

[நிலம் + திரைத்த + தானை]

திரைத்தல் = சுருங்குதல், நிலவகலத்தைத் தன்னுள்ளே யடக்குதல்.

நிலந்தெளிதல் *nilan-teḷidal,* பெ. (n.) பொழுது புலரல்; day-breaking.

[நிலம் + தெளிதல்.]

இருளாற் கவ்வப் பட்டிருந்த நிலத்தைத் தன் கதிரொளியால் புலப்படுத்தித் தெளிவிக்கின்றமையால் பொழுது புலரலை நிலந்தெளிதல் என்றனர்.

நிலநட்டம் *nila-naṭṭam,* பெ. (n.) வேளாண்மை செய்யாமையால் உண்டாகும் இழப்பு (இ.வ.); loss on land by allowing it to lie fallow.

[நிலம் + நட்டம்.]

த. நட்டம். வ. நஷ்டம்.

நிலநடுக்கம் *nila-naḍukkam,* பெ. (n.) (உள்ளடுக்குகள் நொறுங்கி நகர்வதன் மூலம்) நிலத்தின் மேற்பரப்பு அடையும் அதிர்வு; earth tremor, earthquake. *நேற்று சென்னையில் ஏற்பட்ட நிலநடுக்கம் பத்து நொடிகள் நீடித்தது.* (உ.வ.).

[நிலம் + நடுக்கம்.]

நிலநடுக்கோடு *nila-naḍu-k-kōḍu,* பெ. (n.) இரு முனையங்களிலிருந்தும் நிலப்பந்தைச் சமஅளவில் பிரிக்கக் குறுக்கு வாட்டில் இருப்பதாகக் கொள்ளும் கற்பனைக்கோடு; equator.

[நிலம் + நடு+ கோடு.]

நிலநயம் *nila-nayam,* பெ. (n.) *நிலநலம்* பார்க்க; see *nila-nalam.*

[நிலம் + நயம்
நலம் → நயம்.]

நிலநலம் *nila-nalam,* பெ. (n) நிலத்தினது நன்மை; profit on land.

தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணம் கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால்—பெண்ணீர்மை
கற்பழியா ஆற்றல் கடல் சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி.
(நல்வழி.16.).

நிலநெல்லி *nila-nelli,* பெ. (n.) நெல்லிவகை; a common herb-phyllanthus maḍeras patensis.

க.,து. நெலநெல்லி.

[நிலம் + நெல்லி.]

நிலப்படுகை *nila-p-paḍugai,* பெ. (n.) ஆற்றோரத்தமைந்துள்ள நீர்வளம் மிக்க நிலம்; land on the banks of a river fit for cultivation.

[நிலம் + படுகை.]

நிலப்படை *nila-p-paḍai,* பெ. (n.) (பண்டைக்காலத்திருந்த) நால்வகைப் படையுளொன்றான தரைப்படை; military one among the four divisions; of armed force in olden days.

[நிலம் + படை.]

நிலத்தில் ஊர்ந்து சென்று பகைவரைத்தாக்கும் படைவகை. இப்படைவகைப் பழங் காலத்திலிருந்து இன்றுவரையுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

நால்வகைப்படைகளாவன:

இக்காலம்	முற்காலம்
1. நிலப்படை.	1. நிலப்படை.
2. நீர்ப்படை.	2. குதிரைப்படை.
3. வான்படை.	3. யானைப்படை.
	4. தேர்ப்படை.

நாட்டுமக்களையும் தன்னையும் காத்துக் கொள்வதற்கும், தம் பகைவரைத் தெருட்டுதற்கும், ஆளும் நிலப்பரப்பை விரிவாக்கிக் கொள்வதற்கும், பயன்படும் வகையில் அமைத்துக்கொள்வது படையாகும்.

அது மன்னராட்சிக் காலத்தில், தேர், கரி, பரி, காலாள் என நான்வகையாய் அமைந்திருந்தது. இன்றைய மக்களாட்சியில் நிலம், நீர், வான் என மூவகையாய்ப் பாகுபாடு கொண்டது. அஃதெவ்வாறாயினும் காலட்படையாம் நிலப்படை இன்றுவரை தொடர்ந்து வருகின்றது.

நிலப்பயன் *nila-p-payaṉ,* பெ. (n.) நில விளைவு (வின்.); produce of the soil, profit on the land.

[நிலம் + பயன்.]

நிலப்பயிர் *nila-p-payir,* பெ. (n.) பெண் (வைத்தியபரி.கருப்பொ.); female,

நிலப்பரணி *nila-p-paraṇi,* பெ. (n.) சிற்றீஞ்சு; small date fruit-phoenix farnifera. (சா.அக.).

நிலப்பரப்பு *nila-p-parappu,* பெ. (n.) **1.** நிலத்தின் பரப்பளவு (வின்.); a measure of land. **2.** நிலப்பந்தின் பரப்பளவு; spread of extent of the earth.

[நிலம் + பரப்பு.]

நிலப்பலா *nila-p-palā,* பெ. (n.) வேர்ப்பலா (சங்.அக.); common jack fruit.

[நிலம் + பலா.]

நிலத்தடியில் காய்க்கும் கடலை நிலக்கடலை என்றாற் போல், நிலத்தையொட்டியுள்ள வேரில் பழுக்கும் வேர்ப்பலா நிலப்பலா எனப்பட்டது.

நிலப்பனை *nila-p-paṉai,* பெ. (n.) செடிவகை (பதார்த்த.403.); moosly or weevil root-curculigo orchioides.

[நிலம் + பனை.]

நிலப்பனைக்கிழங்கு *nila-p-paṉai-k-kiḻaṅgu,* பெ. (n.) நிலப்பனையின் கிழங்கு; ground palm-curculigo orchioides.

[நிலப்பனை + கிழங்கு.]

பனைமரத்தின் கொட்டைகளை மண்ணில் புதைத்து வைத்து, குறிப்பிட்ட காலம் வரை தண்ணீர் ஊற்றி வந்தால் முளைவிட்டு கிழங்காக வளரும். இதுவே பனைக் கிழங்கு. இக் கிழங்கு மருத்துவக் குணங்களைக் கொண்டது. (சா.அக.).

நிலப்பாகல் *nila-p-pāgal,* பெ. (n.) பாகல் வகை (மலை.); balsam-apple, climber-mormordica humilis.

[நிலம் + பாகல்.]

பாகல் கொடிப் பாகல், நிலப்பாகல் என இரு வகையுடைத்து. கொடிப்பாகல் என்பது மரம்,செடி வேலி போன்றவற்றில் படர்ந்து காய்க்கும். நிலப்பாகல் என்பது நிலத்தில் கொடி போல் படர்ந்து காய்க்கும் தன்மையுடையது.

நிலப்பாகை *nila-p-pāgai,* பெ. (n.) நிலப் பாகல் (சங்.அக.) பார்க்க,; see nila-p-pāgal.

[நிலம் + பாகை. பாகல் → பாகை.]

நிலப்பாசம் *nila-p-pāšam,* பெ. (n.) நாகப் பாம்பு; cobra. (சா.அக.).

நிலப்பாலை[1] *nila-p-pālai,* பெ. (n.) சிறுமரவகை (L); round leaved discous feather foil.

[நிலம் + பாலை.]

நிலப்பாலை² *nila-p-pālai,* பெ. (n.) 1. கும்பம் பாலை; blue dyeing roseberry-wrightia tinetoria 2. ஒழுகு; ground paulay, round leaved discous feather foil-cleistanthus collinus alias amanoa collina. 3. நிலத்தையொட்டிப் படரும் ஒரு செடி வகை; an annual with procumbent branches-Euphorbiahirta. (சா.அக.).

[நிலம் + பாலை.]

நிலப்பாவாடை *nila-p-pāvāḍai,* பெ. (n.) நடைபாவாடை (வின்.); cloth spread on the ground to walk on, as in a procession.

[நிலம் + பாவாடை.]

நில் → நிலம்
பா = பரவுதல், பாவுதல்
பா + ஆடை = பரவும் ஆடை.

நிலப்பாளை¹ *nila-p-pāḷai,* பெ. (n.) *அம்மான்பச்சரிசி* (சங்.அக.) பார்க்க; see *ammāṉ- paccariši.*

[நிலம் + பாளை.]



நிலப்பாளை² *nila-p-pāḷai,* பெ. (n.) பங்கம்பாளை; Indian worm killer-aristolochia bracteata. (சா.அக.).

நிலப்பிப்பிலி *nila-p-pippili,* பெ. (n.) ஒரு பூடு; lippia nodiflora. (சா.அக.).

[நிலம் + பிப்பிலி.]

நிலப்பிரண்டை *nila-p-piraṇḍai,* பெ. (n.) ஓரிலைத்தாமரை; one leaf lotus-Londium sufsruticosum. (சா.அக.).

[நிலம் + பிரண்டை.]

நிலப்பிரபு *nila-p-pirabu,* பெ. (n.) *நிலக்கிழார்* பார்க்க; see *nila-k-kiḻār.*

[நிலம் + பிரபு]

நிலப்பிரபுத்துவம் *nila-p-pirabuttuvam,* பெ. (n.) தனியாள் பெருமளவு நிலத்தைச் சொந்தமாகக் கொண்டிருக்கும் முறை; feudal-ism. *நிலப்புரபுத்துவக் குமுகாயத்தில் கொத்தடிமை முறையும் இருந்தது.* (உ.வ.).

[நிலம் + பிரபுத்துவம்.]

நிலப்பிரயோசனம் *nila-p-pirayōšaṉam,* பெ. (n.) நிலப்பயன் பார்க்க; see *nila-p-payaṉ.*

[நிலம் + பிரயோசனம்.]

நிலப்பிளப்பு *nila-p-piḷappu,* பெ. (n.) நிலம் பலகாலாகப் பிரிதல்; வெடித்தல் (சங்.அக.); crack in the earth.

[நிலம் + பிளப்பு. நில் → நிலம், பிள் → பிள → பிளப்பு.]

நிலப்பீர்க்கு *nila-p-pīrkku,* பெ. (n.) பீர்க்கு வகை; species of luffa.

[நிலம் + பீர்க்கு. நில் → நிலம், பிள் → பீர் → பீர்க்கு.]

நிலப்புரண்டி *nila-p-purandi,* பெ. (n.) நிலத்தில் புரண்டு கிடக்கும் பூண்டு (வின்.) a therb which takes fast hold of the ground.

[நிலம் + புரண்டி]

[புரள் – புரண்டு – புரண்டி]

நிலப்புழு *nila-p-pūlu,* பெ. (n.) *நிலப்பூச்சி* (வின்.) பார்க்க; see *nila-p-pūcci.*

[நிலம் + புழு.]

நிலப்புழுக்கம் *nila-p-pulukkam,* பெ. (n.) *நிலக்கொதிப்பு* (யாழ்.அக.)பார்க்க; see *nila-k-kodippu.*

[நிலம் + புழுக்கம்.]

நிலப்பூ[1] *nila-p-pū,* பெ.(n.) புற்புதர் களிலுண்டாகும் பூ; flowers of grasses and herbs. "*நீர்ப்பூ நிலப்பூ மரத்திலொண்பூ*" (திவ்.இயற்.திருவிருத்.55.).

[நிலம் + பூ.]

நிலப்பூ[2] *nila-p-pū,* பெ. (n.) தாளி; convolulus. (சா.அக.).

நிலப்பூச்சி *nila-p-pūcci,* பெ.(n.) சில்வண்டுப்பூச்சிவகை (வின்.); mob-cricket gryllotalpa forealis.

[நிலம் + பூச்சி.]

நிலப்பூசணி *nila-p-pūšaṇi,* பெ. (n.) செடிவகை (l.); panicled bindweed.

[நிலம் + பூசனி.]

நிலப்பூதம் *nila-p-pūdam,* பெ. (n.) ஐவகைப் பூதங்களுளொன்று; the earth, one among the five elements of the nature.

[நிலம் + பூதம்.]

ஐவகைப் பூதங்களாவன:

1. நிலம். 2. நீர். 3. வான். 4. வளி. 5. தீ.

நிலப்பெயர் *nila-p-peyar,* பெ. (n.) வாழும் நாட்டின் அடிப்படையில் ஒருவனுக்கிடும் பெயர்; names of persons derived from their countries, as aruvāḷaṉ, cōḻiyaṉ. "*நிலப்பெயர் குடிப்பெயர்*" (தொல். சொல். 167.).

[நிலம் + பெயர்.]

நிலப்பெயர்ச்சி *nila-p-peyarcci,* பெ. (n.) இடமாறுகை (யாழ்.அக.); change of place.

[நிலம் + பெயர்ச்சி.]

நிலப்பெயர்வு *nila-p-peyarvu,* பெ. (n.) நிலப்பெயர்ச்சி பார்க்க; see nila-p-peyarcci.

[நிலப்பெயர்ச்சி → நிலப்பெயர்வு.]

நிலப்பொட்டு[1] *nila-p-poṭṭu,* பெ. (n.) மண்ணைக்கொண்டு குழந்தை நெற்றியில் இடும் பொட்டு; mark on the forehead of child, made on earth. வீரபாண்டி கட்டப்பொம்மன் பிறந்த ஊராகிய பாஞ்சாலங் குறிச்சியில் இன்றும் அவ்வூரில் பிறந்த குழந்தைகளுக்கு மண்ணை எடுத்து நெற்றில் பொட்டு வைக்கும் வழக்கம் உண்டென்பதறிக.

[நிலம் + பொட்டு.]

நிலப்பொட்டு² *nila-p-poṭṭu,* பெ. (n.) காளான்வகை (வின்.); a kind of medicinal fungus.

[நிலம் + பொட்டு.]

நிலமாகிய தரையில் பொட்டு போன்றிருப்பது.

நிலப்போக்கு *nila-p-pōkku,* பெ. (n.) மண்ணின் தன்மை; quality of soil.

[நிலம் + போக்கு.]

நிலப்போங்கு *nila-p-pōṅgu,* பெ. (n.) நிலத்தினியல்பு அல்லது தன்மை (வின்.); quality of soil.

[நிலம் + போங்கு.]

நில் → நிலம்

போக்கு → போங்கு.

நிலபுலம் *nila-pulam,* பெ. (n.) புன்செய், நன்செய் நிலம்; (property in) dry and wet lands. அவருக்கு நிறைய நிலபுலங்கள் இருக்கின்றன. (உ.வ.)

[நிலம் + புலம்.]

நில் → நிலம் = நீர் போல் ஓடாது நிலைத்து நிற்கும் பூதம்.

புல்→ புலம்= பொருந்தியிருக்கும் நிலம்.

நிலபுலன் *nila-pulaṉ,* பெ. (n.) நிலபுலம் பார்க்க; see nila-bulam.

[நிலபுலம் → நிலபுலன்.]

நிலம்¹ *nilam,* பெ. (n.) **1.** நீர் போல் இயங்காது ஒரேயிடத்தில் நிலையாக நிற்கும் பூதவகை; the earth. "நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்" (தொல்.மரபு.90.). **2.** மண்; ground, land. "நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க் கினத்தியல்ப தாகும் அறிவு" (குறள்,452.). 'நிலத்தில் எழுந்த பூண்டு நிலத்தில் மடியவேண்டும்' (பழ.). **3.** நிலத்தின் புறணி; soil. 'நிலந்தினக் கிடந்தன நிதி' (சீவக.1471.). **4.** தரை; ground; நிலத்திற் கிடந்து வணங்கினான். (உ.வ.). **5.** நன்செய் அல்லது புன்செய் ஆகிய வயல்; விளை நிலப் பரப்பு; field. நிலத்திற்குத்தகுந்த கனியும் குலத்திற்குத் தகுந்த குணமும். (பழ.). **6.** நீரும் நிலமுஞ் சேர்ந்த ஞாலம்; the world. 'நிலந்திறம் பெயருங்காலையும்' (பதிற்றுப்.63:6.); "நிலம் பெயரினும் நின் சொல் பெயரல்" (புறநா.3.). **7.** இடம்; place. "நிலப்பெயர்" (தொல். சொல்.167.). **8.** நிலத்திலுள்ளார்; inhabitants of the world. "நிலம் வீசும்" (சீவக.267.). **9.** நிலமகள்; Goddess of earth. "இலமென் றசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்" (குறள்,1040.). **10.** நாடு; region. '*செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி*' (தொல்.சொல்.398.). **11.** நிலத்துண்டு; piece of land. நிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்து (தொல்.சிறப்புப்பா.). **12.** யாப்பின் நிலைக்களம்; prosody point "*பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்*" (தொல்.பொருள்.320). **13.** செய்யுளடி யெழுத்து; poetical syllable. "*மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்தும்*" (தொல். பொருள்.290.). **14.** எழுத்தசை சீரென்னும் இசைப்பாட்டிடம்; source of musical sound, as letters, syllables and metrical feet. 'நிலங்கலங் கண்ட நிகழக் காட்டும் (மணிமே.28:42.). **15.** வரிசை; rank. '*கற்றுணர்ந்தோரைத் தலைநிலத்து வைக்கப்படும்*' (நாலடி,133.). **16.** புலனம் (விஷயம்); object of sense. 'அவதார ரகசியம் ஒருவர்க்கும் அறிய நிலமல்ல' (ஈடு.1:3:11.). **17.** மேன்மாடம் அல்லது மேல்தளம்; storey or upper floor of a building. '*பல நிலமாக அகத்தை எடுக்கும்*' (ஈடு.4.9.3.).

18. *நிலக்கள்ளி* (மலை.) பார்க்க; see *nila-k-kaḷḷi.*19. அகத்திணையில் முதற்பொருள் இரண்டினுளொன்று; one of the mudarporul (nature of land and season) in Agattiṉai.

[நில் → நிலம்]

ம., நிலம்; க., து., குட., பட., நெல., தெ. நேல; துட. நெல்ன்; கோத. நெல்ம், நெதல்; பர். நெந்தில், நெதில்

[நுல் – நீட்சிக்கருத்து வேர். நுல் → நெல் → நெள் → நெரு → நெகிழ் (நெகிள்) → நீள் → நிள் → நில் → நிலம்.]

நிலம்நீச்சு *nilam- nīccu,* பெ. (n.) *நிலபுலம்* பார்க்க; see *nila-pulam.*

(நில் → நிலம் – வயல், வேளாண் நிலம்.

நீர் → நீந்து → நீச்சு. நிலம் +நீச்சு – நீர்வளம் சூழ்ந்த நிலப்பகுதி. எனினும் நிலபுலம் என்பதே வழக்கு.)

நிலம்பாலை *nilam-pālai,* பெ. (n.) கும்பம் பாலை; blue dyeing rose bery-wrightia tinctona. (சா.அக.).

நிலம்பி *nilambi,* பெ. (n.) கொசுகு (பிங்.); gnat.

[நுளம்பு → நுளம்பி → நிலம்பி.]

நிலம்பிராண்டி *nilam-pirāṇḍi,* பெ. (n.) நிலப் புரண்டி பார்க்க; see nila-p-puranḍi

[நிலம் + பிராண்டி.

நில் – நிலம்.
புரள் → புரண்டு → புரண்டி → புராண்டி → பிராண்டி.]

நிலம்பிறாண்டு – தல் *nilam-piṟāṇḍu-,* 5செ.குன்றாவி. (v.t.) நிலத்தைச் சுரண்டுதல்; to scratch the land.

[நிலம் + பிறாண்டு –,]

[நில் → நிலம்]

புல் → புர் → புரள் → பிறழ் → பிறண்டு → பிறாண்டு –,]

நிலம்பு *nilambu,* பெ. (n.) தாளி (மலை.); american bindweed-ipomaca.

நிலம்புரண்டி *nilam-puranḍi,* பெ. (n.) மழைக்காலங்களில் புல்லில் நுரை போல் தோன்றி அதற்குள்ளிருக்கும் பச்சைப் பூச்சி; a green insect found in a middle of frothy substance that appears on grass during rainy seasens. (சா.அக.).

[நிலம் + புரண்டி]

நிலம்புலம் *nilam-pulam,* பெ. (n.) பல்வகை நிலம் (வின்.); different kinds of lands.

[நிலம் + புலம்.]

நிலம்புறண்டி *nilam-puṟanḍi,* பெ. (n.) நிலம்புரண்டி (யதார்த்த.247.) பார்க்க; see nilam-puranḍi.

[நிலம் +புறண்டி, புரண்டி → புறண்டி.]

நிலம்பூ² *nilam-bū,* பெ. (n.) 1. *நிலப்பூ* பார்க்க; see *nila-p-pū.* 2. கள்ளி; milk spurge-ephorbia genus. 3. கொசு; mosquito. 4. சீதாப்பழம்; custard apple-anona squa-mosa 5. தாளி; a running plant of convolvulous genus. (சா.அக.).

[நுளம்பு → நுலம்பூ → நிலம்பூ.]

நிலம்பெயர்கை *nilam-peyargai,* பெ. (n.) வேற்று நாட்டிற்குச் செல்லுதல்; to go abroad. *"நிலம் பெயர்ந்து உரைத்தல் வரைநிலை உரைத்தல் கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய"* **(தொல்.பொருள்.கற்.28.).**

[நிலம் + பெயர்கை.

பெயர் = இடம்மாறுதல். பெயர் → பெயர்கை. கை –தொழிற்பெயரீறு.]

நிலமக்கள் *nila-makkaḷ,* பெ. (n.) மண்ணின் மைந்தர்கள்; son of the soil.

[நிலம் + மக்கள்.]

பழங்காலத் தமிழர்கள் தம் நிலங்களை அதன் தன்மைக்கேற்ப நால்வகையாகப் பிரித்துக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப் பாகுபடுத்தி, அவற்றுள் முல்லையுங்குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்ததைப் பாலையென்றோர் படிவமாக்கி அவ்வந்நிலத்தில் வாழ்வோரை அவ்வந் நிலமக்கள் என்றழைத்தனர்.அந்நிலத்திற் கேற்ப ஒழுக்கத்தையும் புணர்தல், பிரிதல், ஊடல், இருத்தல், இரங்கல்என்ற வகையாக வரையறுத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தினர். இன்றும் அவ்வழக்கந் தொடர்ந்த போதிலும் பண்டிருந்த பண்பாட்டைத் தொலைத்துவிட்டு பண்பாடற்று, வாழும் மாநிலத்திற் கேற்ப மொழிவழிப் பாகுபாடு கொண்டு பகைமேலிட வாழ்கின்றனர்.

நிலமகள்[1] *nila-magaḷ,* பெ. (n.) *சீதா செங்கழுநீர்* பார்க்க; see *śīdā -ceṅgaḻunīr.* **(சா.அக.).**

நிலமகள்[2] *nila-magaḷ,* பெ. (n.) நிலமாகிய பெண்; Goddess of earth. "*நிலமகளழுத காஞ்சியும்*" **(புறநா.365.).**

[நிலம் + மகள்.]

நிலமகன் *nila-magan̠,* பெ. (n.) (நிலமகளின் மகனான) செவ்வாய் **(திவா.)**; the planet mars, as the son of the earth.

[நிலம் + மகன்.]

நிலமங்கை *nila-maṅgai,* பெ. (n.) *நிலமகள்*[2] **(திவ்.பெரியதி.8.4.9.)** பார்க்க; see *nila-magaḷ.*

[நிலம் + மங்கை.]

நிலமங்கைநாச்சியார் *nilamaṅgai-nācciyār,* பெ. (n.) *நிலமகள்* பார்க்க; see *nila-magaḷ.* "*பெருமாளுக்கும் நிலமங்கைநாச்சியார்க்கும்*" **(தெ.க.தொ.1:126.).**

[நிலமங்கை + நாச்சியார்

நாய்கன் – தலைவன்
நாய்ச்சி – தலைவி
நாய்ச்சி → நாய்ச்சியார்→நாச்சியார்.*]*

நிலமட்டம் *nila-maṭṭam,* பெ. (n.) **1.** தரைமட்டம்; ground level. **2.** நீர்மட்டம் **(வின்.)**; water-level.

[நிலம் + மட்டம்.]

நிலமடக்கு—தல் *nilam-aḍakku-,* 5 செ.கு.வி. (v.i.) நிலத்துக்குத் தரம் ஏற்படுத்துதல் **(தெ.க.தொ.4:142.)**; to classify arable lands according to quality.

[நிலம் + அடக்கு.]

நிலமடந்தை *nila-madandai,* பெ. (n.) *நிலமகள்*[2] பார்க்க **(திவ்.பெரியதி.4.4.8.)**; see *nila-magaḷ.*

[நிலம் + மடந்தை.]

நிலமண் *nila-maṉ,* பெ. (n.) மனைத்தளத்தை நிரப்புமண் (யாழ்ப்.); earth forming the floor of the house.

[நிலம் + மண்.]

நிலமண்டிலஆசிரியப்பா *nila-maṇḍila-āśiriyappā,* பெ. (n.) *நிலைமண்டில* வாசிரியப்பா பார்க்க; see *nilaimaṇḍila-v-āśriyappā.*

[நிலைமண்டில வாசிரியப்பா → நிலமண்டில ஆசிரியப்பா.]

நிலமண்டிலவாசிரியப்பா *nilamaṇḍila-v-āśiriyappā,* பெ. (n.) *நிலைமண்டில* வாசிரியப்பா பார்க்க; see *nilai -maṇḍila-v-āśiriyappā.*

[நிலைமண்டில வாசிரியப்பா → நிலமண்டில வாசிரியப்பா.]

நிலமதிப்பு *nila-madippu,* பெ. (n.) தரை மதிப்பு; ground value.

[நிலம் + மதிப்பு.]

நிலமயக்கம்[1] *nila-mayakkam,* பெ. (n.) ஒரு நிலத்துக்குரிய காலம் உரிப்பொருள் கருப் பொருள்கள் மற்ற நிலத்துக்குரிய அப்பொரு ளுடன் கலந்துவரப் பாடலமைக்கையாகிய திணைமயக்கம் (சீவக.48.உரை.); harmonious blending of the features of one tiṇai with those of another.

[நிலம் + மயக்கம்.]

பழந்தமிழர் தம் வாழ்வுமுறையையும் நிலத்தின் தன்மைக்கேற்பவே பகுத்திருந்தனர். ஐவகை நிலப்பாகுபாட்டை ஐவகை ஒழுக்கலாறாகவேக் கருதினர். அவற்றைச் செய்யுளிலமைத்துப் பாடுங்கால் ஒரு திணைக்குரிய ஒழுக்கம் மற்றொரு திணையில் மயங்கி வருதலுண்டு. அதையே நில மயக்கம் என்றனர்.

நிலமயக்கம்[2] *nila-mayakkam,* பெ. (n.) மண்கலப்பு; mixing of soils.

[நிலம் + மயக்கம்.]

நிலமருந்து *nila-marundu,* பெ. (n.) அவுரி; indigo plant.

[நிலம் + மருந்து.]

நிலமளந்தோன் *nilam-aḷandōṉ,* பெ. (n.) திருமால்; Tirumal as having measured the earth "நீணில மளந்தோ னாடிய குடமும்" (சிலப்.6:55.).

[நிலம் + அளந்தோன்.]

மாவலிப் பேரரசனின் செருக்கடக்க, குறளனாய்த் தோற்றரவு செய்து மாவலியிடம் மூன்றடி மண்கேட்க, அவனும் அதற்கிசைய, நெடுமாலாந் திருமால் வானுயர்ப்பேருரு கொண்டு ஓரடியால் மண்ணுலகையும், அடுத்தவடியால் விண்ணு லகையும் அளந்து பின் மூன்றாமடி வைக்க இடமின்மையால் மாவலியின் தலைமீது காலூன்றி அவனையுங்கொண்டாரென்பது தொன்மக்கதை.

நிலமறி-தல் *nilam-aṟi-,* 2 செ.கு.வி. (v.i.) சூதாட்டத்தில் வெற்றியடைவிக்கும் இடன் அறிதல் (வின்.); to know the lucky side in gambling.

[நிலம் + அறி-,]

நிலமாந்தர் *nila-māndar,* பெ. (n.) *நிலமக்கள்* பார்க்க; see *nila-makkaḷ*

[நிலம் + மாந்தர்.]

மாந்தரெனினும் மக்களெனினு மொக்கும்.

நிலம் நீர்வாழ் விலங்குகள்

தவளை



ஆமை

முதலை

நிலமாளிகை *nila-māligai,* பெ. (n.) நிலவறை (இ.வ.); cellar.

தெ. நேலமாலிகா.

[நிலம் + மாளிகை.]

நிலமானியம் *nila-mā ṉiyam,* பெ. (n.) கொடையாய் வழங்கிய இறையிலி நிலம்; emolument given as land.

[நிலம் + மானியம்.]

வ. மானியம் த. இறையிலி.

நிலமிதி *nila-midi,* பெ. (n.) 1. ஒரு நாட்டை அடைகை; entering a region, as treading on it. "*நிலமிதி தானே அறிவை யுண்டாக்கும்*" (ஈ.டு.). 2. இடத்தின் தன்மை; peculiarity of a place, as affecting health or disposition. 3. நடைவாகு (யாழ். அக.); accessibility.

[நிலம் + மிதி.]

நிலமுதல் *nila-mudal,* பெ. (n.) நிலஅடங்கற்குறிப்பு; land register.

[நிலம் + முதல்.]

நிலமெடு—த்தல் *nilam-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) வீடுகட்டுதற்கோ, கோயிலமைப்பதற்கோ, கிணறு தோண்டுதற்கோ அன்றி பிற வற்றிற்கோ உரிய இடத்தைக் கணியம்மூலம் கணித்தறிந்து தேர்வு செய்தல் (வின்.); to select by astrological calculations an auspicious site for a house, temple or well.

[நிலம் + எடு.]

நிலமை *nilamai,* பெ. (n.) நிலஉடைமை; (யாழ்ப்.); landed property.

நிலயம் *nilayam,* பெ. (n.) நிலையம் பார்க்க; see nilaiyam.

[நிலையம் – நிலயம்.]

நிலயம்பிடி—த்தல் *nilayam-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) *நிலையம் பிடி—த்தல்* பார்க்க; see *nilaiyam-piḍi-,*

[நிலையம் → நிலயம் + பிடி—.]

நிலயனம் *nilayaṉam,* பெ. (n.) நிலையம் 1,2,3,4,5 (யாழ்.அக.) பார்க்க; see nilaiyam.

[நில் → நிலை → நிலையனம் → நிலயனம்.]

நிலலோசபற்பாந்தம் *nilalōšaparpāndam,* பெ. (n.) 1. நறும்பிசின்; a fragrant resin or gum. 2. குந்திரிக்கம் பார்க்க; see kundirikkam. (சா.அக.).

நிலவடலி *nila-vaḍali,* பெ. (n.) சிறுபனை (சங். அக.); young palmyra tree.

[நிலம் + வடலி.]

நிலவடி *nila-v-āḍi,* பெ. (n.) கையினா லடிக்கும் கதிரடிப்பு; threshing grain with the hand. 2. களத்திற் கையாலடித்த கூலமணி; grain threshed by the hand on the threshing-floor.

[நிலம் + அடி.]



நிலவடுப்பு *nila-v-aḍuppu,* பெ. (n.) நிலத்தில் அமைக்கும் அடுப்புவகை (வின்.); a pit or hole dug in the ground, used as the fire-place.

[நிலம் + அடுப்பு.]

நில் → நிலம் = ஓடாது நிலைத்து நிற்பது. அடுதல் = சுடுதல், சமைத்தல். அடு → அடுப்பு. நிலவடுப்பு = நிலத்திலமைக்கும் அடுப்பு.



நிலவம்மான்பச்சரிசி *nila-v-ammāṉ-paccariši,* பெ. (n.) பூடுவகை (a.); kind of plant- euphorbia indica.

[நிலம் + அம்மான்பச்சரிசி.]

நிலவர் *nilavar,* பெ. (n.) 1. நீரின் நிலையை முழுகியறிபவர்; persons employed in sounding the depths of water. as in river, *'சமுத்திரத்தே நிலவராயிருக்குமவர்கள் முழுகி மண்கொள்ளுமாபோலே'* (திவ்.திருநெடுந். 18:143.). 2. நிலத்துள்ளவர்; human-beings. *"நிலவரையாற்றி"* (பரிபா.15.6.).

[நிலம் → நிலவர்.]

நீர்நிலையில் நிலம்வரை மூழ்குபவரும் நிலமிசை வாழ்பவரும் நிலவர் எனப்பட்டனர்.

நிலவரண் *nila-v-araṇ,* பெ. (n.) 1. நீரும் நிழலுமில்லாத மருநிலமாகிய அரண்வகை (குறள்,742.உரை.); natural defences consisting of arid expanse of earth etc.,

[நிலம் + அரண்.]

அரண்கள் நான்கு:

1. எஞ்ஞான்றும் வற்றாத மணிநீரரண்.
2. நீருநிலமுமில்லா மதிலரண்.
3. செறிந்த காட்டரண்.
4. நிலைத்த மலையரண்.

நிலவரம்¹ *nilavaram,* பெ. (n.) 1. நிலைவரம், 1 பார்க்க; see nilaivaram. *"பாக்கியங்கணிலவரமென் றுன்னுகின்ற நெஞ்சன்"* (சிவரக.சிவதன்ம.4.). 2. நிலைவரம், 3 பார்க்க; see nilaivaram. *"குறுநில வரத்தைத் தேர்ந்து கொள்வாய்"* (குற்றா.குற.64.3.). 3. அன்றாட விலை (இ.வ.); current price.

தெ. நிலவரமு.

[நிலைவரம் → நிலவரம்.]

நிலவரம்² *nilavaram,* பெ. (n.) 1. (நாடு, வீடு முதலியவற்றின்) நடப்புநிலை, சூழ்நிலை; condition (of the country, home, etc.), நாட்டு

நிலவரம் தெரியாத கிணற்றுத் தவளையாக இருக்கிறாயே. (உ.வ.). வீட்டு நிலவரம் நன்றாக இருந்திருந்தால் மகளை மேல்படிப்புக்கு அனுப்பியிருப்பேன். (உ.வ.). கலவரம் நடந்த இடத்தின் நிலவரத்தை அறிந்து கொள்ள அமைச்சர் வந்திருந்தார். (உ.வ.) 2. (விற்பனை, அளவு முதலியவற்றின்) நிலைமை; report. நேற்றைய நிலவரப்படி ஆறகழூர் அணையின் நீர்மட்டம் 18 அடியாக இருந்தது. (உ.வ.).

நிலவரி *nilavari,* பெ. (n.) விளைச்சல் பாசன வசதி அடிப்படையில் விளை நிலத்துக்காக அரசு தண்டும் ஆண்டு வரி; land revenue. இந்த ஆண்டு நிலவரித் தண்டலில் சேலம் மாவட்டம் முதலிடத்தைப் பிடித்தது. (உ.வ.).

[நிலம் + வரி.]

நிலவருந்தி *nilavarundi,* பெ. (n.) நிலாமுகிப்புள்; greek partvidege. "*புதுநிலவருந்தியும்*" (திருப்பு.843.).

[நிலவு + அருந்து → நிலவருந்து → நிலவருந்து → நிலவருந்தி.]

நிலவலயம் *nilavalayam,* பெ. (n.) *நிலவலையம்* பார்க்க; see *nila-valaiyam.* நிலவலயந் தாங்கு நளன் (நளவெண்.காப்பு.).

[நிலம் + வலயம். வலையம் → வலயம்.]

நிலவலையம் *nila-valaiyam,* பெ. (n.) நில மண்டிலம்; terrestrial globe, the earth.

[நில் → நிலம்.
வல் → வள் → வளை →
வளையம் → வலையம்.
நிலம் + வலையம்]

நிலவழி *nila-vaḻi,* பெ. (n.) வாகனங்கள் செல்லவும், மக்கள் நடக்கவும் ஏற்றதாகத் தரையில் அமைக்கப்படும் வழி; சாலை; road intended for vehicles and public.

[நிலம் = தரை. வழி = பாதை
நிலம் + வழி.]

நிலவழிப்போக்குவரத்து *nila-vaḻi-p-pōkku-varattu,* பெ. (n.) தரைவழியாய் அமையும் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து; system of conveying people, goods etc from place to place by road; road transport, road ways.

[நிலம் = தரை. வழி = பாதை. நிலவழி + போக்குவரத்து.]

நிலவளம் *nila-vaḷam,* பெ. (n.) மண்ணின் வளம்; fertility of the land.

[நிலம் + வளம்.]

ஒவ்வொரு நிலத்தின் தன்மையினையும் அத் தன்மையின் மிகுதியினையும் குறிப்பிடுவது நிலவளம்.

நிலவளவங்கி *nila-vaḷa-vaṅgi,* பெ. (n.) வேளாண்மைப் பிரிவினருக்குதவும் வங்கி (இக்.வழ.); land development bank.

[நிலவளம் + வங்கி.]

நிலவளம் என்பது ஆகுபெயராய் நிலத்தை வளப்படுத்தி நாட்டின் வளஞ் சேர்க்கும் வேளாண் பிரிவினரைக்குறித்தது. அப் பிரிவிரினரின் வேளாண்மை மேம்பாட்டுக்குக் கடன் உதவி பெறுவதற்காக அரசால் அமைக்கப்பட்டுக் கடனுதவி வழங்கும் வைப்பகம் நிலவள வங்கி. இதனை நிலவள வைப்பகம் எனலே சரி.

நிலவளி *nila-vaḷi,* பெ. (n.) இயற்கை எரிவளி; natural gas used as fuel.

[நிலம் + வளி.]

நிலவறை *nila-v-a<u>r</u>ai,* பெ. (n.) **1.** நிலத்துள் ளமைந்தஅறை; cellar, subterranean hall. **"நிலவறை செயச்சிலர் விரைவார்"** (செவ்வந்திப்பு.உறையூரழித்.62.). **2.** எரி எண்ணெயைத் தேக்கி வைக்க நிலத்தடியில் அமைக்கப்படும் அறை; bunker.

[நிலம் + அறை. நில் → நில → நிலம். அறு → அறை.*]*

நிலவாகை[1] *nila-vāgai,* பெ. (n.) செந்வகை (மலை.); tirunelveli senna-cassia angustifolia.

[நிலம் + வாகை.]

நிலவாகை[2] *nila-vāgai,* பெ. (n.) நிலப்பாகல் எனும் பாகல் வகை; balsam-apple.

[நிலப்பாகல் → நிலப்பாகை → நிலவாகை.]

நிலவாகைச்சூரணம் *nilavāgai-c-cūraṇam,* பெ. (n.) நில ஆவாரையைப் பொடியாக்கி மலமிளக்கக் கொடுக்கப்படும் மருந்து; senna powder given as a purgative. (சா.அக.).

நிலவாசி *nila-vāši,* பெ. (n.) நிலத்தன்மை; quality of the soil.

[நிலம் + வாசி. நில் → நிலம். வதி → வசி → வாசி.*]*

நிலவாடகை *nila-vāḍagai,* பெ. (n.) மேலெழுப்புங் கட்டடத்துக்கன்றி நிலத்துக்கு மட்டுமேயுரிய வாடகை; தரை வாடகை; ground rent.

[நிலம் + வாடகை. நிலம் = தரை.]

நிலவாடை[1] *nila-vāḍai,* பெ. (n.) *நிலவாசி* (இ.வ.) பார்க்க; see *nila-vāši.*

[நிலம் + வாசி – நிலவாசி → நிலவாசை நிலவாடை.]

நிலவாடை[2] *nila-vāḍai,* பெ. (n.) மண்ணின் மணம்; fragrance of soil.

[நிலம் + வாடை.]

நிலவாமியம் *nila-v-āmiyam,* பெ. (n.) சீதா செங்கழுநீர்; purple Indian water lily-nymphae odorata. (சா.அக.).

நிலவாய்வு *nila-vāviu,* பெ. (n.) *நிலவளி* பார்க்க; see *nila-vaḷi.*

[நிலம் + வாய்வு. (கொ.வ.).]

த. வளி, **வ.** வாயு.

நிலவாயு *nila-vāyu,* பெ. (n.) *நிலவளி* பார்க்க; see *nila-vaḷi.*

[நிலம் + வாயு.]

த. வளி.

வ. வாயு

நிலவாரம் *nila-vāram,* பெ. (n.) மேல்வாரம் (வின்.); owner's share of the produce of land.

[நிலம் + வாரம்.]

நிலவாவிரை *nila-v-āvirai,* பெ. (n.) *நிலவாகை,*1 (மலை.) பார்க்க; see *nila-vāgai.*

[நிலம் + ஆவிரை.]

நிலவாழை *nila-vāḻai,* பெ. (n.) பூடுவகை (வின்.); a kind of plant.

[நிலம் + வாழை.]

நிலவிந்தை *nila-vindai,* பெ. (n.) பூடுவகை (சங்.அக); a kind of plant.

[நிலம் + விந்தை.]

நிலவிப்பனை *nilavi-p-paṉai,* பெ. (n.) *நிலப்பனை* பார்க்க; see *nila-p-paṉai.* (சா.அக.).

நிலவியல் *nila-v-iyal,* பெ. (n.) நிலத்தின் மேற்பரப்பாக அமைந்திருக்கும் மண், பாறை போன்றவற்றை விளக்கும் ஆய்வுத்துறை; soil science; geology.

[நிலம் + இயல்.]

நிலவிரிசு *nila-viriśu,* பெ. (n.) தரையில் வைத்துக் கொளுத்தும் வாணவெடிவகை (இ.வ.); a kind of fire-work set on the ground.

[நிலம் + விரிசு.]

திரியில் தீ மூட்டியதும் விரைந்தும் விரிந்தும் செல்வதால் வாணம் விரிசு எனப்பட்டது.



நிலவிலந்தை *nila-v-ilandai,* பெ. (n.) இலந்தை என்னும் முள்மரவகை (மூ.அ.); jujube-tree.

[நிலம் + இலந்தை.]

நிலவிழுது *nila-viḻudu,* பெ. (n.) நிலப்பனை எனும் செடி வகை; moosly or weavil root.

[நிலம் + விழுது.]

நிலவிளா *nila-viḷā,* பெ. (n.) **1.** விளா; wood apple. **2.** நாய் விளா எனும் நிலைத்திணை; must-deer plant.

[நிலம் + விளா.]

நிலவிளாத்தி *nila-viḷātti,* பெ. (n.) *நிலவிளா,* (யாழ்.அக.) பார்க்க; see. *nila - viḷā,.*

[நிலம் + விளாத்தி. நில் → நிலம். விள் → விள → விளா → விளாத்தி.]

நிலவிறிசு *nila-viṟiśu,* பெ. (n.) *நிலவிரிசு,* (யாழ்.அக.) பார்க்க; see *nila - viriśu.*

[நிலவிரிசு → நிலவிறிசு.]

நிலவிறை *nila-v-iṟai,* பெ. (n.) நிலவரி; land tax,.

[நிலம் + இறை.]

நிலவீரம்¹ *nila-vīram,* பெ. (n.) பூ நீறு; a kind of medicinal plant.

[நிலம் + வீரம். நில் → நிலம். விள் → வில் → விர் → வீர் → வீரம்.]

நிலவீரம்² *nila-vīram,* பெ. (n.) **1.** நிலத்தின் கொடுமை; the virulity of the soil. **2.** குட்டிவேர்; சல்லிவேர்; side roots under the earth. (சா.அக.).

நிலவீரம்³ *nila-vīram,* பெ. (n.) நிலத்தின் ஈரத்தன்மை; wetly land.

[நிலம் + ஈரம்.]

நிலம் + ஈரம் என்பது உடன்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி நிலமீரம் என வழங்குதல் வேண்டும் எனினும் மவ்வீறு ஒற்றொழிந்து உயிரீறு ஒப்பவும் என்னும் விதிப்படி வகர உடம்படுமெய் பெற்றது.

நிலவீரியம் *nila-viriyam*, பெ. (n.) *நிலவீரம்*[3] பார்க்க; see *nilaviram.*

[நிலவீரம் + நிலவீரியம்.]

நிலவு[1]–தல் *nilavu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. நிலைத்திருத்தல்; to be permanent, fixed; "*யாரு நிலவார் நிலமிசை மேல்*" (நாலடி, 22.). 2. நின்று சிறத்தல்; to stay "*இறுதியு மிடையு மெல்லா வுருபும் நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார்*" (தொல். சொல். 103.). 3. வழங்குதல்; to exist, to be in use, in vogue or in circulation, as a word; to be extant, in force or practice, as a religion. "*நிலவு மரபினை யுடையது*" (வின்.). 4. ஒளிவிடுதல்; to emit rays; to shine. 5. பரவுதல்; (வின்.); to spread, extend, pervade.

[நுல் → நில் → நில → நிலவு
(வே.க. 3:45.).]

நிலவு[2]–தல் *nilavu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. அறியக்கூடிய வகையில் காணப்படுதல்; to be (in existence.) prevail. *பருவ மழை பெய்யாமல் நாட்டில் வறட்சி நிலவுகிறது. (உ.வ.). சட்டசபையில் இன்று ஒரு மணி நேரம் குழப்பம் நிலவியது. (உ.வ.). தேர்தல் நடத்துவது பற்றி நாட்டில் முரண்பட்ட கருத்துகள் நிலவுகின்றன.(உ.வ.).* 2. அமைதல், ஏற்படுதல்; to be established or formed. *எல்லா நாட்டிலும் மக்களாட்சி நிலவ வேண்டும். (உ.வ.). நாட்டில் அமைதி நிலவ வேண்டுமென அனைத்து மதத்தினரும் கடற்கரையில் கூடி மன்றாட்டு செய்தனர். (உ.வ.).*

நிலவு[3] *nilavu*, பெ. (n.) 1. நிலா; moon. "நிலவுப் பயன்கொள்ளு நெடுமணன் முற்றத்து". (நெடுநல். 95.). 2. நிலவொளி; moon light.

[நுல் – ஒளிர்தற்கருத்துவேர்.
நுல் → நில் → நிலா → நிலவு.]

நிலவு[4] *nilavu*, பெ. (n.) 1. தெரிநிலை வினைப்பகுதி; verb expelicitly denoting tense by a tense-sign. opp. to kuṟippu-viṉai. 2. நிலைபெறுகை; to be stability. "*நீரொலித்தன்ன நிலவு வேற்றானையொடு*" (மதுரைக். 369.).

[நில் → நில →நிலவு.]

நிலவுகாய்[1]–தல் *nilavu-kāi-*, 2 செ.கு.வி. (v.i.) நிலவின் ஒளி படர்தல்; to spread of the moon light.

[நிலவு + காய்–, நில் → நிலவு.
கனல் → கனய் → காய்.]

நிலவுகாய்[2] *nilavukāy*, பெ. (n.) 1. எருக்கங்காய்; fruit of sun plant caltropis gigantia. 2. உகாய் மரம்; mahomadon tooth brush tree - salvadora persica. (சா.அக.).

நிலவுதயம் *nilavudayam*, பெ. (n.) *நிலவெழுகை* (வின்.) பார்க்க; see *nilavu-elugai.*

[நிலவு + (skt.) உதயம்.]

நிலவுநாழிகை *nilavu-nāḻigai,* பெ. (n.) நிலவின் நிழலைக் கொண்டு கணிக்கும் நாழிகை (யாழ்.அக.); time, as measured by the moon's shadow.

[நிலவு + நாழிகை.]

நிலவுப்பயணம் *nilavu-p-payaṇam,* பெ. (n.) பிற கோள்களை ஆய்வு செய்வதற்காகச் செல்லும் பயணம், விண்வெளிப் பயணம்; space research voyage.

[நிலவு + பயணம்.]

நிலவுபடுதல் *nilavu- paḍudal,* பெ. (n.) நிலவு அடிவானில் மறைகை (வின்.); setting of the moon.

[நிலவு + படுதல்.]

நுல் → நில் → நில → நிலவு + படுதல்

படுதல் = மறைதல், அழிதல்.

நிலவுபார்-த்தல் *nilavu-pār-,* 4 செ.குன்றாவி. (v.t.) **1.** மூன்றாம் பிறை பார்த்தல்; to see the crescent moon, appearing on the third day after new moon. **2.** சில நோன்பு நாட்களில் பகலில் பட்டினியிருந்து இரவில் உணவு கொள்ளுமுன் நிலவைப் பார்த்தல்; to see the moon after a day long not taking anything, taking supper after seeing the moon.

[நுல் → நில் → நிலவு + பார்-,]

நிலவுபிறை[1] *nilavu-piṟai,* பெ. (n.) கூர்மையான முனைகளோடு வளைந்த கீற்றாகத் தோற்றமளிக்கும் நிலவு; crescent moon.

[நிலவு + பிறை.
நுல் → நில் → நில → நிலவு.
புள் → புறு → புறை → பிறை.]



நிலவுபிறை[2] *nilavu-piṟai,* பெ. (n.) தலையின் இடப்பக்கத்தில் மகளிர் அணிந்து கொள்ளும் மணிபதித்த பொன்னணி வகை; ornament of gold set with precious stones, worn on the left side of the head by women. நெற்றிச் சுட்டியும் நிலவுபிறையும். (இ.வ).

[நிலவு + பிறை.]



நிலவுமரி *nila-v-umari,* பெ. (n.) கோழிப்பசளை என்னும் கீரைவகை; sea-blite.

[நிலம் + உமரி.]

நிலவுலகம் *nila-v-ulagam,* பெ. (n.) மண்ணுலகம்; the earth.

[நிலம் + உலகம்.]

நிலவூமத்தை *nila-vūmattai,* பெ. (n.) நீல ஊமத்தை; blue flower datura. (சா.அக.).

நிலவூறணி *nila-v-ūṟaṇi,* பெ. (n.) *நிலவூறல்* பார்க்க; see *nila-v-ūṟal.*

[நிலவூறல் + நிலவூறணி.]

நிலவூறல் *nila-v-ūṟal,* பெ. (n.) மண்ணிலேற்படும் நீர்க்கசிவு (யாழ்.அக.); dampness of soil.

[நிலம் + ஊறல்.]

நிலவெக்கை *nila-vekkai,* பெ. (n.) வெயில் காய்வதால் நிலத்தில் உண்டாகும் காங்கை (வெப்பம்); earth's heat on account of hot sun.

[நிலம் + வெக்கை.]

நிலவெடிப்பு *nila-veḍippu,* பெ. (n.) கடும் வறட்சியினால் ஏற்படும் தரைப் பிளப்பு; splitting of earth due to heavy drought.

[நிலம் + வெடிப்பு.]

நிலவெடுப்பு *nila-veḍuppu,* பெ. (n.) முதலுழவு (யாழ்ப்.); breaking new soil.

[நிலம் + எடுப்பு. நில் → நிலம். எடு → எடுப்பு. எடுப்பு = தொடங்குதல், தொடங்கின செயல்.]

நிலவெரி—த்தல் *nilavu-eri-,* 4 செ.கு.வி. (v.i.) *நிலவுகாய்—தல்* பார்க்க; see *nilavu-kāi-,*

[நிலவு + எரி—.]

நிலவெரிக்கை *nilaverikkai,* பெ. (n.) நிலவின் ஒளி; moon light.

[நிலவு + எரிக்கை.]

நிலவெழுகை *nila-v-eḻugai,* பெ. (n.) நிலவு தோன்றுகை; moon rise.

[நில் → நில → நிலவு + எழுகை.]

நிலவெழுத்து *nila-v-eḻuttu,* பெ. (n.) தரையிற் பிள்ளைகளெழுதும் எழுத்து (வின்.); letter written on the ground by school boys.

[நிலம் + எழுத்து.]

திண்ணைப் பள்ளி நடைமுறையிலிருந்த காலத்தில் அரிவரியைத் தரையில் மணல் பரப்பி அம்மணலில் விரலால் எழுதிப் பழகினர்.

நிலவேம்பு *nila-vēmbu,* பெ. (n.) **1.** செடிவகை; french chiratta-Andrographis paniculata. **2.** செடிவகை; chiretta - Swertia chirata.

தெ. நேலவேமு. க. நெலபேவு. ம. நிலவேப்பு.

[நிலம் + வேம்பு.]

நிலவேர்[1] *nila-vēr,* பெ. (n.) மரம் பூண்டு ஆகியவை முளைக்கும் போதே நீண்டு நிலத்தினுள் நேரே ஊடுருவிச் செல்லும் முகாமையான மூலவேர் அல்லது நடுவேர்;

central root of a tree or a plant which begins to penetrate right down into the earth from its growth; tap-root.

[நிலம் + வேர்.]

நிலவேர்² *nila-vēr,* பெ. (n.) **1.** நாங்கூழ், நாக்குப் பூச்சி (நாமதீப. **266.**); earth-worm. **2.** நாக்கில்லாபூச்சி; tongueless worm. **3.** ஆண்; male. **4.** குற்றி விளா; a variety of wood apple. (சா.அக.)

[நிலம் + வேர்.]

நிலன் *nilaṉ,* பெ. (n.) *நிலம்* பார்க்க; see *nilam.*

[நிலம் – நிலன்

ம > ன போலி, கடைப்போலி.]

நிலா *nilā,* பெ. (n.) **1.** திங்கள் (நிலவு.); moon. *"துணிநிலா வணியினான்"* (திருவாச. **35. 5.**). **2.** நிலவொளி; moon light. *"விசும்பி னகனிலாப் பாரிக்குந் திங்களுஞ்"* (நாலடி,**151.**). **3.** ஒளி; light, splendour. *"நிலாவிரித்து முச்சக முற்றும் நிழல் செய"* (திருநூற். **78.**).

ம. நிலா. **தெ.** நெல.

[நிலவு → நிலா.]

நிலாக்கல் *nilā-k-kal,* பெ. (n.) நிலவொளியில் நீர் கால்வதாகிய கல்வகை; moonstone, a crystal , said to emit water when exposed to moon-light, as moon-beloved. *"நின்றொளி திகழ்வதோர் நிலாக்கல் வட்டமும்"* (சூளா. இரத. **74.**).

[நிலா + கல்.]

நிலாக்கொழுந்து *nilā-k-koḻundu,* பெ. (n.) இளம்பிறை (வின்.); the young moon, crescent moon.

[நிலா + கொழுந்து.]

நிலாச்சாப்பாடு *nilā-c-cāppāḍu,* பெ. (n.) *நிலாச்சோறு* பார்க்க; see *nilā-c-cōṟu.*

[நிலா + சாப்பாடு. நில் → நிலா.
சப்பு → சப்பிடு → சாப்பிடு → சாப்பாடு.]

நிலாச்சோறு *nilā-c-cōṟu,* பெ. (n.) நிலவொளி யில் உண்ணும் உண்டி; moonlight picnic.

[நிலவு + சோறு.
நிலவு → நிலா.]

நிலாத்திரி *nilā-t-tiri,* பெ. (n.) மத்தாப்பு; light displayed in fire-works. *"தடத்து நீர் நிலாத்திரி"* (கைவல். சந். **41.**).

[நிலா + திரி.]

நிலாப்பதிவு *nilā-p-padivu,* பெ. (n.) கரும் பக்கம் (கிருட்டிண பக்கம்) (வின்.); dark fortnight.

[நிலா + பதிவு.]

நிலாப்பூச்சி *nilā-p-pūcci,* பெ. (n.) நிலவொளியில் நிற்கும் போது எதிர்க் கட்சியினரால் தொடப்படின் தோல்வி யுறுவதாகக் கருதப்படும் சிறுவர் விளை யாட்டுவகை; a game like 'prisoner's base' in which one party of children is considered to be defeated it, as they stand in moon light, they are touched by the opposing party.

[நிலா + பூச்சி.]

நிலாபார்–த்தல் *nilā-p-pār-*, 4 செ.குன்றாவி. (v.t.) *நிலவு பார்–த்தல்* பார்க்க; see *nilavu-pār-*,

[நிலவு → நிலா. நிலா + பார்–,]

நிலாமண்டபம் *nilā-maṇḍapam*, பெ. (n.) *நிலாமுற்றம்* பார்க்க; see *nilā-muṟṟam*. *'மாடமிசை யோங்க நிலா மண்டபத்தே மகிழ்ந்தேன்.''* (அருட்பா, VI. தலைவி வருந்தல், 10.).

[நிலா + மண்டபம்.]

நிலாமண்டலம் *nilā-maṇḍalam*, பெ. (n.) நிலவு மண்டிலம் (யாழ்.அக.); sphere of the moon.

[நிலா + மண்டலம்.]

நிலாமணக்கு *nilāmaṇakku*, பெ. (n.) பூடுவகை (சங். அக.); a plant.

[நிலம் + ஆமணக்கு.]

இச்செடி ஆமணக்குச் செடியைப் போன்றே தோற்றமளிக்கும் வெற்றுச் செடி.

நிலாமணி *nilā-maṇi*, பெ. (n.) நிலவொளியில் நீர் கால்வதாகிய கல்வகை; moonstone, a crystal and to emit water when exposed to moon light, as moon-beloved.

[நிலா + மணி.]

நிலாமாடம் *nilā-māḍam*, பெ. (n.) நிலா முற்றம் பார்க்க; see nilāmuṟṟam. *"முழுநிலா மாடத்து முடிமுத றழுவ"* (பெருங். உஞ்சைக். 54. 13.).

[நிலா + மாடம்.]

நிலாமுக்கி *nilā-mukki*, பெ. (n.) நிலாமுகி (நாமதீப. 245.) பார்க்க; see nilā-mugi.

[நிலா + முக்கு → நிலாமுக்கு → நிலாமுக்கி.]

நிலாமுகி *nilā-mugi*, பெ. (n.) நிலாவொளிச் (கிரணங்கள்) சிதறலை உணவாகக் கொண்டு வாழ்வதாகக் கருதப்படும் புள்வகை (திவா.); cakōra, the greek patridge, caccabis gracca, as feeding on as moon-beams.

[நிலா + முகி.

நில் → நிலா.

முக்கு → முகி.

முக்குதல் – உண்ணுதல்.]

நிலாமுற்றம் *nilā-muṟṟam*, பெ. (n.) நிலவின்பம் துய்க்கும் திறந்த மேன்மாடம் (திவா.); terrace for enjoying the moonlight. ***"நீணிலா முற்றத்து நின்றிவள் நோக்கினாள்"*** (திவ். பெரியதி. 8. 2. 2.). 2. நிலாக்காலத் துலாவச் செய்யும் வீட்டின் வெளி; court yard of a house for enjoying the moon light

[நிலா + முற்றம்.]

நிலாவாரை *nilā-vārai*, பெ. (n.) *நிலவாகை;* Indian senna. (சா.அக.).

நிலாவிரை *nilāvirai*, பெ. (n.) *நிலவாகை* (புதார்த்த. 1059.) பார்க்க; see *nilavāgai*.

[நிலம் + ஆவிரை.]

நிலாவிழுது *nilā-viḻudu*, பெ. (n.) நிலப்பனை பார்க்க; *see nila-p-paṉai*. (சா.அக.).

நிலாவிளையாட்டு *nilā-viḷaiyāṭṭu*, பெ. (n.) நிலாப்பூச்சி (இ.வ.) பார்க்க; see nilā-p-pūcci.

[நிலா + விளையாட்டு.]

நிலாவு[1]—தல் *nilāvu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நிலவு, 1 பார்க்க; see nilavu. நிலாவாப் புலாற்றானம் (தேவா. 1224. 2.).

[நிலவு → நிலாவு.]

நிலாவு[2]—தல் nilāvu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. ஒன்றித்தல் (தியானித்தல்); to meditate upon. "*நானிலாவியிருப்ப னென்னாதனை*" (தேவா. 4. 5.). 2. ஒப்பாதல்; to resemble. "*மானிலாவிய நோக்கியர்*" (திருவிசை. 5. 4.).

[நிலவு → நிலாவு—.]

நிலுவை[1] niluvai, பெ. (n.) 1. தங்குகை; standing, staying. "*நோயு நிலுவை கொண்டது*" (திருப்பு. 1111.). 2. மிச்சம்; balance, as of dues; arrears. ஏது குடிநிலுவை (பணவிடு. 169.). 3. இறுத்து மிஞ்சின தொகை; excess amount left over. பேரிடருக்காக நடுவணரசு வழங்கிய தொகையில் பத்தாயிரம் நிலுவை இருக்கிறது. (உ.வ.).

தெ. நிலுவ. **ம.** நிலவு.

[நில் → நிலுவை.]

நிலுவை[2] niluvai, பெ. (n.) தரப்படாமல் அல்லது நோக்கின்றி இருக்கும் கிடப்பு நிலை; something pending. நிலுவையிலுள்ள வழக்குகளை உடனடியாகத் தீர்க்குமாறு அறமன்றம் ஆணையிட்டது. (உ.வ.).

[நில் → நிலுவை.]

நிலுவைஅஞ்சனா niluvai-añjaṉā, பெ. (n.) நிலுவையஞ்சனா பார்க்க; niluvai-y-anja.

[நிலுவை →அஞ்சனா.]

நிலுவைக்காரன் niluvai-k-kāraṉ, பெ. (n.) 1. கடன்காரன்; debtor (வின்.); நிலுவையைத் தண்டுபவன்; debtor; one who collects arrears.

[நிலுவை + காரன்.]

நிலுவையஞ்சனா[4] niluvai-y-añjaṉā, பெ. (n.) விளைச்சல் மதிப்பு (c.c.); estimate of the probable out-turn of standing crops.

[நிலுவை + அஞ்சனா.]

நிலுவையறுவிடு—தல் niluvai-y-aṟuviḍu-, 20 செ.கு.வி. (v.i.) நிலுவையைத் தண்டுதல்; to recover arrears.

[நிலுவை + அறுவிடு—.]

நிலை[1]—தல் *nilai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. நீண்ட காலத்திற்கு நீடித்து அமைதல்; stay for long; last. *இந்த ஆட்சி நிலைக்கும் என்பதில் ஐய மில்லை. (உ.வ.). முறையற்றவகையில் சேர்த்த பணம் நிலைக்காது. (உ.வ.). ஒரு வேலையிலும் அவன் நிலைக்க மாட்டான். (உ.வ.).* 2. (பார்வை) ஓர் இடத்திலேயே பதிதல்; (of eyes) get fixed on smoothing or someone பாதி திறந்திருந்த கண்கள் அருகில் நின்ற மகனின் மேல் நிலைத்தன. (உ.வ.). 3. (பெயர் சொல் முதலியவை) உறுதிப்பட்டு வழங்குதல்; gain currency. தேவநேயருக்கு இயற்பெயர் மறைந்து பாவாணர் என்னும் பட்டப்பெயரே நிலைத்துவிட்டது. (உ.வ.). 4. (குழந்தையைக் குறிப்பிடும் போது) உயிரோடுதங்குதல்; (of one's children) be left alive. ஐந்து குழந்தையில் ஒன்றும் நிலைக்கவில்லை; இந்த குழந்தையாவது நிலைத்ததே. (உ.வ.).

[நீள் → நிள் → நில் → நிலை.]

நிலை²—தல் *nilai-,* 4 செ.கு.வி. (v.i.) நிலைத்து நிற்றல்; to remain permanent; to stay. "*உம்மை நிலையு மிறுதியான*" (தொல்.எழுத்து.189.).

[நில் → நிலை.]

நிலை³—த்தல் *nilai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. நிலை நிற்றல்; to obtain a footing; to be settled, lasting. 2. காலந்தாழ்த்துதல் (வின்.); to delay, stay too long in a place. 3. ஆளளவுக்கு நீர் இருத்தல்; to be just deep enough to allow a man to stand, as a river. *தண்ணீர் ஆளுக்கு நிலைக்கும்.* (உ.வ.).

க.நெலசு.

[நில் → நிலை.]

நிலை⁴ *nilai,* பெ. (n.) 1. நிற்கை; standing, staying, "*பனை நிலை முனைஇ*" (புறநா.23.). 2. உறுதி; firmness, fixedness, stability, permanence, durability. "*நீக்கமு நிலையும்*" (திருவாச.3.9.) 3. தன்மை (பிங்.); character; quality; temper; nature. "*திருந்துநிலை யாரத்து*" (பெரும்பாண்.46.). 4. நிலைமை; condition, state, situation, "*நன்னிலைக்கட்டன்னை நிறுப்பானும்*" (நாலடி,248.). 5. தொழில் (வின்.); profession, vocation, calling. 6. இடம்; place, seat, location. "*நின்னிலைத் தோன்றும்*" (பரிபா.2:27.). 7. தங்குமிடம்; stopping place, station, stand, residence "*நெடுந்தேர் நிலைபுகுக*" (பு.வெ.6.2.). 8. நிலம் (பிங்.); earth. 9. நிலைத்திணை (நாமதீப. 373.) பார்க்க; see nilai-t-tiṇai. 10. வீடு, தேர்களின் தட்டு; storey, floor, as of a building; sitting room in a car. "*இழிந்து கீழ்நிலை*" (சீவக.2673.). 11. கதவுநிலை; door-frame. "*ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை*" (நெடுநல்.36.). 12. தூண் (நாமதீப.448.); pillar. 13. விளக்கு. முதலியவற்றின் தண்டு (வின்.); standard, as of a lamp. 14. ஒழுக்க நெறி; prescribed path. "*நிலையிற்றிரியா தடங்கியான் றோற்றம்*" (குறள்,124.). 15. வழக்கு (அக.நி.); usage, custom. 16. வாழ்க்கை நிலை; stages of religious life. '*பிரமசரிய முதலிய நிலைகளினின்று*' (குறள், பரிமே. உரைப்பா.). 17. குலம்; family, tribe, "*காணிகைக் கொண்ட மறுநிலை மைந்தனை*" (கல்லா.43,20.). 18. கால்வழியுரிமை (பரம்பரைப் பாத்தியம்); inheritance, hereditary right. "*தன்பாட்டன் நிலையாய் வருகிறகாணி*" (S.I.I. II; 310.). 19. இசைப்பாட்டு வகை (சீவக.650 உரை.); a kind of song. 20. பொழுது (அக.நி.); time. 21. முழுத்தம்; a unit of time. "*ஒரு நிலைகாறு முள்ளே யொடுக்கி*" (பெருங். உஞ்சை.34.63.). 22. ஒருவகை நிலவளவு (யாழ்ப்.); a land measure for dry lands. 23. ஒருவன் நிற்கக்கூடிய நீராழம்; depth of water allowing one to stand in opp. to nīccu '*நீர்நிலை காட்டுங் காலத்து*' (பெரும்பாண், 273. உரை.). 24. பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடம் என நால்வகைப் பட்டனவான வீரர் அம்பெய்யும் நிலை (திவா.); attitude in archery, numbering four, viz., paicācam, maṇḍalam, ālīdam, pirattiyālīḍam. 25. அணிகலத் தொங்கல் (வின்.); a pendant of a jewel. 26. ஆன் ஒருதடவை கழிக்கும் சாணி (தஞ்.); cowdung evacuated at a time.

தெ. நெலவு. க. நிலி. ம. நில.

[நீள் → நிள் → நில் → நிலை.]

நிலை⁵ *nilai,* பெ. (n.) 1. இருக்கும் தன்மை; state. தாத்தா வீடு இப்போது என்ன நிலையில் இருக்கிறது (உ.வ.). 2. இருப்பின் முறை; condition. உட்கார்ந்த நிலையிலேயே மறுமொழி சொன்னான் (உ.வ). 3. இருப்பு;

position. அகரமுதலித் துறையிலிருந்த தேக்க நிலை மாறிவிட்டது (உ.வ). **4.** சூழ்நிலை; situation, environment. சண்டையின்போது வீட்டை விட்டு வெளியே செல்லமுடியாத நிலை(உ.வ.). இன்று நிலை தலைகீழாய் மாறிவிட்டது (உ.வ.). **5.** (பலபிரிவுகளாக உள்ளவற்றுள்) ஒருகட்டம், பிரிவு; stage. அலுவலர்களின் வேலைநீக்கம் முதல்நிலை நடவடிக்கைதான். (உ.வ.) **6.** சமநிலை; equilibrium, balance. அவன் ஒரு நிலையில் இல்லை (உ.வ.). நிலை தடுமாறி கீழே விழுந்தான். (உ.வ.)

[நீள் → நிள் → நில் → நிலை.]

நிலைக்கட்டு—தல் *nilai-k-kaṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) நிலைக்கச்செய்தல் (இ.வ.); to establish, make permanent.

[நிலை + கட்டு நீள் → நிள் → நில் → நிலை. கள் → கட்டு → கட்டு–,]

நிலைக்கடகம் *nilai-k-kaḍagam,* பெ. (n.) உறுதியானபெருங்கூடை (யாழ்ப்.); a durable large basket.

[நிலை + கடகம்.]

நில் → நிலை – உறுதி. குள் → குண் → குணம் → குடம் – வளைவு, உருண்டகலம், சக்கரக்குறடு. குடந்தம் – வளைவு, வணக்கம். குடக்கு → குடக்கி – வளைவானது. (குடகம்) → கடகம் – வட்டமான பெருநாற்பெட்டி. (வ.மொ.வ.6.).

நிலைக்கண் *nilai-k-kaṇ,* பெ. (n.) இமையாக்கண் (சிமிட்டாக்கண்); fixed eyes-no reflex action. (சா.அக.).

[நில் → நிலை. கள் (கருமை) → கண் = கருமணி கொண்ட பார்வையுறுப்பு. ஒ.நோ; உள் → உண். நள் → நண். பெள் → பெண்.]

நிலைக்கண்ணாடி *nilai-k-kaṇṇāḍi,* பெ. (n.) உடல் முழுதும் பார்க்கும்படி ஓரிடத்து நாட்டப்பட்ட பெரிய கண்ணாடி; a large fixed mirror. "*கட்டிற் றவிசொடு நிலைக்கண்ணாடி*" (சீவக.558.).

க. நிலுகண்ணாடி.

[நிலை + கண்ணாடி. நில் → நிலை – நிற்கை, உறுதி. காண் + ஆடி – காணாடி → கண்ணாடி.]



நிலைக்கதவம் *nilai-k-kadavam,* பெ. (n.) நிலையிலமைந்த கதவு; door fixed on a frame. "*முழுநிலைக்கதவ மகற்றிமுன்னின்று*" (பெருங்.மகத.13,71.).

[நிலை + கதவம். நில் → நிலை. கடவு – கதவு, கடந்து செல்லும் வழி, வாயில், வாயிலிலமைந்த கதவு. கதவு → கதவம்.]

நிலைக்கல்[1] *nilai-k-kal,* பெ.(n.) நிலைப்படிக்கீழுள்ள கல் (இ.வ.); stone base for door-frame.

[நிலை + கல். நில் → நிலை. கதவுநிலை, கதவுநிலையின் கீழமைந்த கல்.]



நிலைக்கல்² *nilai-k-kal,* பெ. (n.) ஆட்டுக்கல்; அரைக்கும்கல்; grinding stone.

[நிலை + கல்.]



நிலைக்களப்போலி *nilai-k-kaḷa-p-pōli,* பெ. (n.) ஓரெழுத்து நின்ற இடத்தில் அதற்குப் போலியாய்வரும் மற்றொரு எழுத்து (யாழ்.அக.); a letter substituted for another.

[நிலைக்களம் + போலி. போல வருவது போலி.]

நிலைக்களம்¹ *nilai-k-kaḷam,* பெ. (n.) தங்குமிடம்; stand, standing place. "போர்யானை யாக்கு நிலைக்களம்" (ஏலாதி,12.).

[நிலை + களம்.

நில் → நிலை = நிற்கை, உறுதி. உல் → உத்தல் = பொருந்துதல். உத்தி = விளையாட்டில் இருவர் சேர்ந்து வரும் சேர்க்கை. உல் → குல் → குலவுதல் – கூடுதல். கள் → களம் –கூட்டம், கூடும் ஏர்க்களம், கூடுமிடம், இடம்.

நிலைக்களம்² *nilai-k-kaḷam,* பெ. (n.) (ஒன்றின்) இருப்பிடம்; source of seat (of something). அன்பின் நிலைக்களம் அம்மா. (உ.வ). தமிழும் வடமொழியுங் கலந்த மணிப்பவள நடை மேலோங்கிய காலத்துத் தமிழை மீட்பதற்குத் தனித்தமிழியக்கந் தொடங்கி அதற்கு நிலைக்களமாயிருந்தவர் நிறைமலையாம் மறைமலையடிகளார். (உ.வ.).

[நிலை + களம்.]

நிலைக்களம்³ *nilai-k-kaḷam,* பெ. (n.) அரசிறை தண்டுஞ் சாலை (தெ. க. தொ. 2:353.); office for collection of revenue.

[நிலை + களம்.]

நிலைக்களன் *nilai-k-kaḷaṉ.* பெ. (n.) இடம்; place

[நிலை + களன். களம் → களன்.]

நிலைக்கால்¹ *nilai-k-kāl,* பெ. (n.) **1.** கட்டில் முதலியவற்றின் கால்; stand, as of a sofa. *"நிலைக்காலமைந்த நிழறிகழ் திருமணி கயிற்குரல் வளைஇய கழுத்திற் கவ்விய பவழ விழிகைப் பத்திக் கட்டத்துப் பட்டு நிணர் விசித்த கட்டமை கட்டிலுள்"* (பெருங்.மகத.14.54). **2.** நிலை 11 (வின்.) பார்க்க; see nilai.

[நிலை + கால். நில் → நிலை = விளக்கு முதலியவற்றின் தண்டு. குல் – தோன்றற் கருத்துவேர். குல் → கல் → கால். தோன்றல், வளர்தல், நீட்சிப்பொருள்.]

நிலைக்கால்[2] *nilai-k-kāl,* பெ. (n.) ஆட்டுக்கால் பார்க்க; see āṭṭu-k-kāl. (சா.அக.).

நிலைக்கிடாரம் *nilai-k-kiḍāram,* பெ. (n.) எளிதாய் இடம் பெயர்க்கவியலாத பெரியதோர் ஏனம்; a big vessel kept stationary.

[நிலை + கிடாரம். நில் → நிலை = இருப்பு, இருப்பின் முறை, இருக்கும் தன்மை. குடம் → கடம் → கடாரம் → கிடாரம் (வாயகன்ற பெரிய ஏனம்,) ஆரம் சொல்லாக்க ஈறு. ஒ.நோ: கூடு → கூடாரம்.]

நிலைக்கிடை *nilai-k-kiḍai,* பெ. (n.) நடனத்தில் (நாட்டியத்தில்) உட்காரும் நிலை (விறலிவிடு.413.); a sitting pose, in dancing.

[நிலை + கிடை. நில் → நிலை = தன்மை, நிலைமை. கிட → கிடை.]

நிலைக்குடி *nilai-k-kui,* பெ. (n.) 1. பழங்குடி (யாழ்.அக.); settled or ancient inhabitants. 2. நிலவுடைமையாளரின் நிலைத்த குடிகள் (இ.வ.); permanent servants of a landlord engaged in agricultural operations.

[நிலை + குடி. நில் → நிலை = நிலைத்த, பழைய, மூத்த. குட → குடி. குட = வளைந்த. சுற்றிலும் காப்பமைத்துக் கொண்டு வளைவில் இருப்பு அமைத்துக்கொண்டுவாழ்ந்தோரே குடி எனப்பட்டனர்.]

நிலைக்குத்து[1]–தல் *nilai-k-kuttu-,* 5 செ.கு.வி. (v.i.) இறக்குந்தறுவாயில் விழிமுதலியன அசைவின்றி நிற்றல் to be fixed or regid, as the eye at the dying stage.

[நிலை + குத்து –. நில் → நிலை. குல் → குத்து.]

நிலைக்குத்து[2]–தல் *nilai-k-kuttu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. அசையாது நிற்றல்; to stand firmly. 2. குடியேறுதல்; to immigrate. 3. பயிர்கள் நிலைத்துப் போதல்; to withstand as a crop, after its blighted stage.

[நிலை + குத்து –,. நில் → நிலை. குல் → குத்து.]

நிலைக்குழு *nilai-k-kuḻu,* பெ. (n.) சிக்கல்கள் எப்போது எழுந்தாலும் அதைப் பற்றி ஆய்வு செய்ய அமைக்கப்படும் நிலையான குழு; (any) standing committee. நாடாளுமன்ற நிலைக்குழு நாளை சென்னை வருவதாய்ச் சொன்னார்கள். (உ.வ.)

[நிலை + குழு. நில் → நிலை. குல் → குள் → குழு.]

நிலைக்கூடம் *nilai-k-kūḍam,* பெ. (n.) 1. பித்தளை; brass. 2. ஒகநிலையிலிருக்கும் தனியோர் (பிரத்தியேக) இடம்; a secluded hall intended or set apart for yoga practice. (சா.அக.).

[நிலை + கூடம்.]

[நில் → நிலை. கூடு → கூடம் = இடம்.]

நிலைகலங்கு–தல் *nilai-kalaṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நிலைகுலை–, 1, பார்க்க; see nilai-kulai-, ***"ஐந்துபுலனிலை கலங்குமிடத்து"*** (பெரியபு. திருஞான.301.).

[நிலை + கலங்கு –. நில் → நிலை குல் → கல் → கல → கலங்கு.]

நிலைகுலை[1]–தல் *nilai-kulai-,* **2** செ.கு.வி. (v.i.) **1.** நிலைமை தவறுதல்; to be ruined in circumstances. **2.** நெறிவழுவுதல்; to swerve from the path of virtue. **3.** தயங்குதல்; to be discouraged; to lose self-command; to be disconcerted, perplexed. **4.** நிலைமை தளர்தல்; to lose hold; to be unstrung. வச்சிரமுட்டிதன் னிலைகுலைந்து விழுதலின் (கம்பரா. முதற்போர். 55.). **5.** சிதறுண்ணுதல்; to be routed, as an army.

[நிலை + குலை–. நில் → நிலை. குல் → குலை → குலை–,]

நிலைகுலை[2]–தல் *nilai-kulai-,* **2** செ.கு.வி. (v.i.) **1.** கட்டுப்பாட்டுடன் இருக்கும் சமநிலையை இழத்தல்; lose balance, upset. *சாலையின் குறுக்கே குழந்தை ஓடிவந்ததைக் கண்டு வண்டியைச் சட்டென நிறுத்தியதில் நிலைகுலைந்து போனான். (உ.வ.). அம்மாவின் இறப்புச் செய்தியைக் கேட்ட ஆல்துரை நிலைகுலைந்தார் (உ.வ.).* **2.** சீர் கெடுதல், சீர் குலைதல்; get disrupted. *அளவுக்கு அதிகமாக இறக்குமதி செய்வதால் உள்நாட்டுப் பொருளாதாரம் பெரிதும் நிலைகுலைகிறது. (உ.வ.).*

[நிலை + குலை–,]

நிலைகுலை[3]–த்தல் *nilai-kulai-,* **4** செ.குன்றாவி. (v.t.) **1.** நிலைமையழித்தல்; to ruin. **2.** கற்பழித்தல்; to seduce, ravish. **3.** ஒழுக்கங் கெடுத்தல்; to cause to swerve from the path of virtue or to neglect religious observances. **4.** சிதறவடித்தல்; to rout, as an army. **5.** தயங்கச் செய்தல்; to intimidate, disconcert.

[நிலை + குலை–,]

நிலைகேடு *nilai-kēḍu,* பெ. (n.) கெட்டுப்போன நிலைமை; straitened circumstances, loss of position.

[நிலை + கேடு.]

நிலைகொள்(ளு)[1]–தல் *nilai-koḷ(ḷu)-,* **16** செ.கு.வி. (v.i.) **1.** உறுதியாதல்; to be permanent; to remain firm. **2.** தன்னிலையடைதல்; to come into its natural state, as a diseased mind. **3.** நிற்குமளவு ஆழமாதல்; to be just deep enough to allow one to stand in.

க. நிலிகொளா.

[நிலை + கொள்–,]

நிலைகொள்(ளு)[2]–தல் *nilai-koḷ(ḷu)-,* **16** செ.கு.வி. (v.i.) **1.** ஓரிடத்தில் நிலையாக இருத்தல், தங்குதல்; come to stay, settle down. செயற்கைக்கோள் இன்னும் *ஒருவாரத்தில் தனக்குரிய சரியான சுற்றுப்பாதையில் நிலைகொள்ளும். (உ.வ.)* **2.** (பெரும்பாலும் எதிர்மறையில்) அமைதியாக இருத்தல்; ஒன்றில் கவனம் செலுத்துதல்; to be peaceful or undisturbed. இரவு வெகு நேரமாகியும் அலுவலகம் சென்ற கணவன் வராததால் அவள் நிலைகொள்ளாமல் தவித்தாள். (உ.வ.). தான் ஏமாற்றப்பட்டு விட்டதை அறிந்த பிறகு கண்ணனுக்கு நிலைகொள்ளவில்லை. (உ.வ.).

[நிலை + கொள்.]

நிலைகோலு–தல் *nilai-kōlu-,* **5** செ.கு.வி. (v.i.) **1.** அணிவகுத்தல்; to array, as force. **2.** இடஞ்தேடுதல்; to seek shelter.

[நிலை + கோலு–,]

நிலைச்செண்டு *nilai-c-cenḍu,* பெ.(n.) நிலத்தில் நின்றெறிந்து விளையாடும் பந்து; a kind of ball played standing on the ground. *"நிலைச் செண்டும் பரிச்செண்டும் வீசி மிக மகிழ்வெய்தி"* (பெரியபு. சேரமான்.126.).

[நிலை + செண்டு.]

நிலைச்செரு *nilai-c-ceru,* பெ. (n.) இடையறாப் போர்; continuous engagement in war operation. *"நிலைச் செருவினாற் றலையறுத்து"* (பதிற்றுப். ஐந்தாம். பதி.).

[நிலை + செரு.]

நிலைசெல் (லு) —தல் *nilai-cel(lu)-,* 14 செ.கு.வி. (v.i.) நிலைகொள்—, பார்க்க; see nilai-koḷ-,

[நிலை + செல்—,]

நிலைத்தண்ணீர் *nilai-t-taṇṇīr,* பெ. (n.) நிலையாயுள்ள நீர்; standing water, as in pools, tanks.

[நிலை + தண்ணீர்.]

தண்ணீரெனினும் நீரெனினும் ஒக்கும். நீரெனலே தமிழுக்குச் சாலும்.

நிலைத்தானம் *nilai-t-tāṉam,* பெ. (n.) கோயில்; shrine. *"கானும்பலபதியுமந்நிலைத் தானங்கள்"* (பெரியபு. திருஞான. 340.).

[நிலை + தானம்.]

நிலைத்திணை *nilai-t-tiṇai,* பெ.(n.) 1. இயங்கு திணைக்கு எதிரிடையான இயங்கா (அசையா) திணை; the category of the immovables, as the vegetable kingdom, opp.to iyaṅgu-tiṇai. *'இறைவன் இயங்கு திணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு'* (தொல். எழுத்து. 46. உரை.). 2. பயிரிகள்; flora.

[நிலை + திணை.]

நில் → நிலை – நிலைத்து நிற்பது, இயங்காதது.

நிலைத்திருவமிர்து *nilai-t-tiru-v-amirdu,* பெ. (n.) கோயிலில் நாளும் படையலுக்கென விடப்படும் நிலைக்கொடை (தெ.க.தொ. 3:96.); permanent endowment for daily offerings in a temple.

[நிலை + திருவமிர்து.]

நிலைத்துத்தி *nilai-t-tutti,* பெ. (n.), நிலத்துத்தி பார்க்க; see nila-t-tutti. (சா.அக.).

நிலைத்துறை *nilai-t-tuṟai,* பெ.(n.) வழக்கமாயிறங்கும் நிலையாழமுள்ள நீர்த்துறை; the usual bathing-ghat. *"நிலைத்துறை வழீஇய மதனழி மாக்கள்"* (மலைபடு. 280.).

[நிலை + துறை.
நில் → நிலை.]

நிலைத்தேர் *nilai-t-tēr,* பெ. (n.) ஒப்பனை செய்து நிறுத்தப்படும் தேர் (திருவினை. திருமணப். 62.); standing decorated car. *"விளக்குறு நிலைத்தேர் செய்தார்"* (பிரபுலிங்.சூனிய. இருந்த. 40.).

[நிலை + தேர்.]

நிலைத்தேர்மூடு *nilai-t-tēr-mūḍu,* பெ. (n.) தேரை வழக்கமாய் நிறுத்துமிடம் (இ.வ.); the place where a temple car ordinarily stands.

[நிலை + தேர்மூடு.]

நிலைதடுமாறு–தல் *nilai-tadu-māṟu-,* 5 செ.கு.வி. (v.i.) நிலைகுலை–, பார்க்க; see nilai-kulai-,

[நிலை + தடுமாறு–,]

நிலைதவறு–தல் *nilai-tavaṟu-,* 5 செ.கு.வி. (v.i.) நிலைகுலை–, பார்க்க; see nilai-kulai,

[நிலை + தவறு–,]

நிலைதளம்பு–தல் *nilai-taḷambu-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** நிலையற்றிருத்தல்; to be unstable. **2.** கலக்கமுற்றிருத்தல்; to be unsettled, as a family, a government. **3.** நிலைகுலை–,1,2, பார்க்க; see nilai-kulai-, **4.** பேணாது கிடத்தல்; to be neglected, as one's property or affairs.

[நிலை + தளம்பு–,]

நிலைதளர்–தல் *nilai-taḷar-,* 2 செ.கு.வி. (v.i.) நிலைகுலை–, பார்க்க; see nilai-kulai-,

[நிலை + தளர்–,]

நிலைதிரி–தல் *nilai-tiri-,* 2 செ.கு.வி. (v.i.) முறைகெடுதல்; to swerve from principle. "*யாது நிலைதிரியான்*" (ஏலாதி, 3.).

[நிலை + திரி–,]

நிலைநாட்டு–தல் *nilai-nāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நிலைகொள்ளும்படி செய்தல், நிலைக்கச் செய்தல், நிறுவுதல்; enforce (peace, law and order; establish rights, facts etc.) கலவரம் நடக்கும் பகுதியில் அமைதியை நிலைநாட்ட பட்டாளம் அனுப்பப்பட்டுள்ளது. (உ.வ.). இது அறத்தை நிலைநாட்ட நடக்கும் போராட்டம். (உ.வ.). அவர் தன் கட்டுரையில் பாவாணரின் கருத்துகளைத் திறம்பட நிலைநாட்டியுள்ளார். (உ.வ.).

[நிலை + நாட்டு–,]

நிலைநில்–தல் (நிலைநிற்றல்) *nilai-nil-,* 14 செ.கு.வி. (v.i.) **1.** கொள்கை முதலியவற்றில் உறுதியாய் நிற்றல்; to stand firm, as in one's principles; to maintain consistency. **2.** நிலை பெறு–, பார்க்க; see nilai peṟu-,

[நிலை + நில்–,]

நிலைநிறுத்து–தல் *nilai-niṟuttu-,* 5செ.குன்றாவி. (v.t.) **1.** நிலைநாட்டு; to set up, establish. "*கீர்த்தி நிலைநிறுத்திக் கொண்டோம்*" (தனிப்பா. **1. 216. 2.**). **2.** முடிவாய் எண்பித்தல்; to prove conclusively.

[நிலை + நிறுத்து–,]

நிலைநீச்சு *nilai-nīccu,* பெ. (n.) ஒருவகை நீச்சு; a kind of swimming.

[நிலை + நீச்சு.]

நிலைநீர்[1] *nilai-nīr,* பெ. (n.) **1.** ஓட்டமில்லா நீர்; still water, as in a tank. "*கூவ நீணிலைநீர்களும் பசையறக் குடித்தான்*" (திருவிளை. அன்னக்.7.). **2.** கடல் (கல்லா. **21. 1.** மயிலேறும்.); ocean.

[நிலை + நீர்.]

நிலைநீர்[2] *nilai-nīr,* பெ. (n.) முட்டளவுள்ள நீர்; knee-deep water.

[நில் → நிலை = ஓரளவு, தாளளவு. நிலை + நீர்.]

நிலைநீர்ப்பாட்டம் *nilai-nīr-p-pāṭṭam,* பெ. (n.) ஏரிப்பாய்ச்சல் வரி (கல்.); tax on tank-water used for irrigation, opp. to oḻukku-nīr-p-pāṭṭam.

[நிலை + நீர்ப்பாட்டம்.]

நிலைப்பட்டம் *nilai-p-paṭṭam,* பெ. (n.) நிலையான அல்லது மாறா உரிமை; absolute title, as to a property; permanent interest.

[நிலை + பட்டம்.]

நிலைப்படம் *nilai-p-paḍam,* பெ. (n.) இயக்கமற்ற பொருள்களைக் காட்டும் ஓவியம்; still life.

[நிலை + படம்.]

நிலைப்படி *nilai-p-paḍi,* பெ. (n.) கதவு நிலையின் அடிப்படி; sill, threshold. "*வன்மீகன் சந்துரைத்துநின்ற நிலைப்படியா யிருந்தேனில்லை தீவினையே*" (தனிப்பா.).

[நிலை + படி.]



நிலைப்படு-தல் *nilai-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) **1.** நிலையாதல்; to become permanent; stationary. **2.** உறுதியாதல்; to be fixed, steady; to remain firm. **3.** உறுதிப்படுதல்; (வின்.) to become definite or certain.

[நிலை + படு-,]

நிலைப்படுத்து-தல் *nilai-p-paḍuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** நிலை நிறுத்து-பார்க்க; see nilai-niṟuttu-, **2.** உறுதியாக்குதல் (வின்.); to make firm or steady. **3.** உறுதிப்படுதல் (வின்.); to make certain.

[நிலை + படுத்து-,]

நிலைப்படை *nilai-p-paḍai,* பெ. (n.) காவற்குத் தலைநகரிலேயே நிறுத்திவைக்கப்பட்ட படைப்பிரிவு (கல்.); standing army stationed in the capital of a country.

[நிலை + படை.]

நிலைப்பதம் *nilai-p-padam,* பெ. (n.) *நிலைமொழி* (நன். **242.** மயிலை.) பார்க்க; see *nilai-moḻi.*

[நிலை + பதம்.]

நிலைப்பந்தம் *nilai-p-pandam,* பெ. (n.) தீவட்டிவகை (புதுக்.கல்.**307.**); a kind of torch.

[நிலை + பந்தம்.]

நிலைப்பரப்பு *nilai-p-parappu,* பெ. (n.) ஒருவகை நிலவளவை (யாழ்ப்.); a measure of land.

[நிலை + பரப்பு.]

நிலைப்பல்லி *nilai-p-palli,* பெ. (n.) ஓரிடத்திலே பலகாலுஞ் சொல்லிக் கொண்டிருக்கும் பல்லி (ஈடு.4.9.3.); lizard that chirps frequently from the same place.

[நிலை + பல்லி.]

நிலைப்பாடு *nilai-p-pāḍu,* பெ. (n.) 1. நிலைமை; condition, state. *"தம்மிறைக் கியன்ற நிலைப்பாடெல்லாம் நெஞ்சுணக் கேட்டு"* (பெருங்.வத்தவ.4,32.). 2. உறுதிப்பாடு (வின்.); firmness, permanence, durability.

[நிலை + பாடு.]

நிலைப்பு *nilaippu,* பெ. (n.) 1. உறுதிப்பாடு; permanance, continuance, durability 2. விடாமுயற்சி (வின்.); perserevance, persistence.

[நிலை → நிலைப்பு.
ஒ.நோ: உழை → உழைப்பு.
அழை → அழைப்பு.]

நிலைப்பூட்டு *nilai-p-pūṭṭu,* பெ. (n.) கதவில் தைக்கப்பட்ட பூட்டுவகை (இ.வ.); a kind of lock fitted on a door.

[நிலை + பூட்டு.]



நிலைப்பெறு–தல் *nilai-p-peṟu-,* 20 செ.கு.வி. (v.i.) சலியாதிருத்தல்; to be at rest *"நிலைப்பெற்றென் னெஞ்சம்"* (திவ்.திருவாய். 3.2.10.).

க. நிலெவெறு.

[நிலை + பெறு–,]

நிலைப்பொலியூட்டு *nilai-p-poli-y-ūṭṭu,* பெ. (n.) நிலைபொலியூட்டு பார்க்க; see nilai-poli-y-ūṭṭu.

[நிலை + பொலியூட்டு.]

நிலைபரம்[1] *nilaiparam,* பெ. (n.) 1. உறுதி; certainly. 2. நிலைமை; state.

நிலைபரம்[2] *nilai-param,* பெ. (n.) அடிப்படை (ஆதாரம்); foundation.

[நிலைவரம் → நிலைபரம்.]

நிலைபிடி[1]–த்தல் *nilai-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1.தொழில் முதலியனபெற்று நிலையாயிருத்தல்; to settledown, as by seeing an office or residence for oneself. 2. குறிக்கோளெய்துதல்; to reach the goal.

[நிலை + பிடி –,]

நிலைபிடி[2]–த்தல் *nilai-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) வளம்பிடித்தல்; to get productiveness, luxuriance.

[நிலை + பிடி.]

நிலைபெறு[1]–தல் *nilai-peṟu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. நிலையாய்த் தங்குதல்; to stay firmly. *"வேற்றுமையுருபு நிலைபெறு வழியும்"*

(தொல்.எழுத்து.132.). 2. துன்பமற்ற நிலையை யடைதல்; to gain a resting place; to secure peace. "*நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா*" (தேவா.727.3.). 3. நீடித்தல் (வின்.); to endure. 4. ஒன்று நிற்கக் கூடியவளவு ஆழமுடைத்தாதல்; to be fathomable "*கழைநிலைபெறாஅக் குட்டத் தாயினும்*" (பதிற்றுப்.86.9.).

[நிலை + பெறு—,]

நிலைபெறு²—த்தல் *nilai-peṟu-*, 18 செ.குன்றாவி. (v.t.) 1. நிலைநிறுத்து— பார்க்க; see nilai-niṟuttu-. 2. காத்தல் (சூடா.); to maintain, protect, "*உலகம் யாவையும் தாமுளவாக்கலும் நிலைபெறுத்தலும்*" (கம்பரா. சிறப்.1.).

நிலைபேறு¹ *nilai-pēṟu,* பெ. (n.) 1. உறுதி; permanence, stability. 2. நிலைப்பிடம்; firm footing or situation. 3. தூண் (வின்.); pillar or post. 4. துறக்கம் (அக.நி.); final bliss. 5. மானம் (அக.நி.); honour, reputation.

[நிலை + பேறு.]

நிலைபேறு² *nilai-pēṟu,* பெ. (n.) நிலைத் திருப்பது; everlasting. *செல்வம் நிலை பேறுடையது அல்ல என்றனர் அறிஞர்கள்.* (உ.வ.).

[நிலை + பேறு—,]

நிலைபொலியூட்டு *nilai-poli-y-ūṭṭu,* பெ. (n.) நிலைவட்டி (I.M.P.Cg.1048.); interest secured permanently, as on a deposit.

[நில் → நிலை - நிலையான, உறுதியான. புல் → பொல் → பொலி. பொலிதல் = பெருகுதல், மிகுதல், செழித்தல். பொலி - பொலிசை - ஊதியம், வட்டி. பொலிசை யூட்டு → பொலியூட்டு. (தெ.க.தொ.2;82.) நிலை + பொலியூட்டு.]

நிலைபோடு¹—தல் *nilai-pōḍu-,* 20 செ. குன்றாவி. (v.t.) தொடங்குதல் (யாழ்.அக.); to begin.

[நிலை + போடு—,]

நிலைபோடு²—தல் *nilai-pōḍu-,* 20 செ. குன்றாவி. (v.t.) மாடு சாணி போடுதல்; to evacuate the dung, as cow or an ox. இரண்டு நாட்களாக வயிற்றுக்கோளாறிலிருந்த மாடு இன்றுதான் நிலைபோட்டது.

[நில் → நிலை - மாடு ஒரு தடவை கழிக்குஞ் சாணம். நிலை + போடு—,]

நிலைமக்கள் *nilai-makkaḷ,* பெ. (n.) போரின்கண் பின்வாங்காது நிலைத்து நிற்கும் மறவர்; untottered warriors. "*நிலைமக்கள் சால வுடைத்தெனினும் தானை தலைமக்க ளில்வழி யில்*" (குறள்,770.).

[நிலை + மக்கள். நில் → நிலை = தாக்குதலுக்கு அஞ்சாது நிலையாக இருக்கும் தன்மை. மக → மக்கள்.]

நிலைமடக்கு *nilai-maḍakku,* பெ. (n.) அணிவகை (திவா.); a figure of speech.

[நிலை + மடக்கு.]

நிலைமண் *nilai-maṇ,* பெ. (n.) இட்டு நிரப்பப்படும் கொட்டு மண்ணுக்கு எதிரான, இயற்கையான மண் (யாழ்ப்.); natural soil, opp.to koṭṭu-maṇ.

[நிலை + மண்.]

நிலைமண்டிலம் *nilai-maṇḍilam,* பெ. (n.) *நிலைமண்டிலவாசிரியப்பா* பார்க்க (இலக்.வி.734.); see *nilaimaṇḍila-v āširiyappā.*

[நிலை + மண்டிலம்.]

நிலைமண்டிலவாசிரியப்பா *nilaimaṇḍila-v-āširiyappā,* பெ. (n.) சீர்கள் தம்மில் அளவொத்த அடிகளையுடைய ஆசிரியம். (இலக். வி. 734, உரை.); a kind of āširiyappā, in which all the lines have the same number of feet.

[நிலைமண்டிலம் + ஆசிரியப்பா.]

நில் → நிலை.

முல் → முள் → முண் → மண் → மண்டு → மண்டலம். மண்டலம் → மண்டிலம்– வட்டம், செய்யுள் வகை. இறுதியடியின் அல்லது இறுதிப் பாட்டின் இறுதி எழுத்து அசை சீர் என்பனவற்றுள் ஒன்று, முதலடியின் அல்லது முதற்பாட்டின் எழுத்து அசை சீர் என்பவற்றுள் ஒன்றாய் வருமாறு செய்யுளிசைத்தல். மண்டில யாப்புத் தொல்காப்பியத்திலேயே (தொல்.செய். 114 or 116.) சொல்லப் பட்டிருத்தலையும் *'என்மனார் புலவர்'* என்னும் முன்னூல் பலவற்றைக் குறிக்குந் தொடரையும் ஊன்றி நோக்குக.

நிலைமண்டில ஆசிரியப்பா அடிமறிமண்டில ஆசிரியப்பா என்னும் அகவற்பா வகைகள், தொன்று தொட்டு வழங்கி வருவன. தமிழ் யாப்புமுறை முற்றும் ஆரியச் சார்பற்றது. (வே.க. 3:84.).

நிலைமண்டு–தல் *nilai-maṇḍu-,* 9 செ.கு.வி. (v.i.) 1. அயலூரில் நீடித்துத் தங்குதல்; to make a long stay as in a foreign place. 2. ஓரிடத்தைப் பற்றிக்கொள்ளுதல்; to stick to a place, as a person or animal.

[நிலை + மண்டுதல்

முல் → முள் → முண்டு → மண்டு. மண்டுதல் – வளைதல், வட்டம்.]

நிலைமாலை *nilai-mālai,* பெ. (n.) 1. கடவுளர்க்குச் சாத்தும் பெரிய பூமாலைவகை; a big garland put on a deity. 2. கழுத்திலிருந்து கால்வரைத் தொங்கும் நீண்ட மாலை; a graland from neck to bottom.

[நிலை + மாலை.]



நிலைமாறு–தல் *nilai-māṟu-,* 9 செ.கு.வி. (v.i.) 1. இடம் முதலியவற்றினின்றும் மாறுதல்; to change in place, principles or circumstances. 2. சொல்லில் எழுத்துகள் இடம் பிறழ்தல் (வின்.); to be transposed as letters in words, as சதை for தசை.

[நிலை + மாறு–,]

நிலைமை *nilaimai,* பெ. (n.) 1. படித்திறம்; condition; state, as of affairs, of one's feelings. பண்பு மேம்படு நிலைமையார் (பெரியபு. திருநீலநக். 23) 2. இயல்பு (திவா.); quality; property; character. *வலியி னிலைமையான் வல்லுருவம்* பெற்றம் புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று (குறள்,273.). 3. வாழ்விலுள்ள நிலை; station,

rank, degree. **4.** நிற்குநிலை; standing posture. "*நிலைமையிலுண லுடையவர்களும்*" (தேவா. **815, 10.**). **5.** திண்மை; strength. "*நேரார் படையி னிலைமை*" (பு.வெ. **7.22.**). **6.**உறுதி; firmness. "*நிலைமையினெஞ்சத்தான்*" (நாலடி, **87.**). **7.** மெய் (திவா.); truth, veracity, probity. **8.** புகழ்; fame. "*நில்லா வுலகத்து நிலைமை தூக்கிச் செல்கென விடுக்குவ னல்லன்*" (பொருந. **176.**). **9.** துறக்கம்; final bliss. "*நிலைமை நீடுதல் தலைமையோ வன்றே*" (ஞானா. பாயி. **3.**). **10.** நிலவுடைமை (வின்.); landed property.

[நில் → நிலை → நிலைமை.]

நிலைமைக்காரன் *nilaimai-k-kāran̲,* பெ. (n.) **1.** நிலச்சொத்துள்ளவன்; man of landed property. **2.** நேர்மையுள்ளவன்; man of principle.

[நிலைமை + காரன்.]

நில் → நிலை → நிலைமை. காரன் = உடைமைகுறித்த ஆண்பாலீறு.

நிலைமைப்பத்திரம் *nilaimai-p-pattiram,* பெ. (n.) புலவர் முதலியோர்க்கு உரிமை யேற்படுத்தி அவ்வுரிமை நிலைக்க எழுதப்படும் ஆவணம் (சங்.அக.); a deed of gift made to learned men in recognition of their merits.

[நிலைமை + பத்திரம்

நில் → நிலை → நிலைமை.]

த. ஆவணம். வ. பத்திரம்.

நிலைமொழி *nilai-moḻi,* பெ. (n.) சொற்புணர்ச்சிக்கண் முதனிற்குமொழி; antecedent word, the first of two words in a euphonic combination. "*நிலைமொழி முன்னர் வேற்றுமையுருபிற்கு*" (தொல். எழுத்து. **173.**).

[நிலை + மொழி

நில் → நிலை.]

நிலையக்கலைஞர் *nilaiya-k-kalaiñar,* பெ. (n.) வானொலி நிலையத்தில் அமர்த்தம் பெற்றுப் பணிசெய்யும் கலைஞர், permanent paid staff artists in radio station.

[நிலையம் + கலைஞர்.]

நிலையகம் *nilai-y-agam,* பெ. (n.) மனை; (அக.**15**) house, abode.

[நிலை + அகம். நில்→ நிலை. அகழ்தல் =தோண்டுதல். அகைதல்=ஒடிதல். அகைத்தல் = அறுத்தல்.]

ஒருகா. அகு → அகம் = உட்டுளை, உள், குடி, வீடு.

ஒ.நோ: புரை = துளை, வீடு. E. hold = small mean dingy abode.

நிலையங்கி *nilai-y-aṅgi,* பெ. (n.) **1.** முகமதியர் அணியும் நீண்ட சட்டை (உ.வ.); gown reaching at the ankles, chiefly worn by muhamadans. **2.** திருவுருவச் சிலைக்கு அணியும் மெய்யுறை; a metallic cover put on idols. **3.** திருவுருவச் சிலைக்கு செய்யு மொப்பனை; full decoration of an idol. **4.** முழுஉடலையும் மூடுகிறசட்டை; long jacket.

[நிலை+ அங்கி.]

skt. அங்கி.

நிலையஞ்சி *nilai-y-añji,* பெ. (n.) பிறப்புநின்ற நிலையை அஞ்சி; instability. "நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக் கொல்லாமை சூழ்வான் தலை". (குறள்,325.).

[நிலை + அஞ்சி.]

பிறப்பு நின்ற நிலையாவது, இயங்குவ, நிற்ப என்னும் இருவகைப் பிறப்பினும் இன்பமென்ப தொன்றன்றி உள்ளன எல்லாந் துன்பமேயாய நிலைமை.

நிலையடி¹ *nilai-y-aḍi,* பெ. (n.) களநெல்லின் தலையடி (நெல்லை); first threshing of harvested sheaves of paddy.

[நிலை + அடி.]

நிலையடி² *nilai-y-aḍi,* பெ. (n.) தேர் நிறுத்தி வைக்கப்படும் இடம், தேரடி; station for a temple ear. பொழுதுசாயுமுன் ஊர்வலம் முடிந்து தேர் நிலையடிக்கு வந்துவிட வேண்டும். (உ.வ.).

மறுவ. தேரடி,தேர்முட்டி.

[நிலை + அடி.]



நிலையப் புலவர் *nilaiya-p-pulavar,* பெ. (n.) நிறுவனத்தில் நிலையாயப் பணி செய்யும் புலவர்; permanent paid scholar

[நிலையம் + புலவர்.]

நிலையம்¹ *nilaiyam,* பெ. (n.) **1.** தங்குமிடம்; house, habitation, abode, seat, place, room. *"நியாயமத் தனைக்குமோர் நிலய மாயினான்"* (கம்பரா.கிளை.55.). **2.** கோயில்; temple. *"நல்லூ ரகத்தே திண்ணிலயங்கொண்டு நின்றான்"* (தேவா. 414.5.), **3.** மருதநிலத்தூர் (சூடா.); agricultural town or village. **4.** இலக்கு; object, aim; direction. *'அவன் நிலையம் பார்த்து நிற்கிறான்' (வின்.)* **5.** படி (வின்.); degree, stage. **6.** கூத்து (திவா.); acting; dancing; dramatic exhibition. *"முன்கைவந்த நிலையம்'* (கோயிற்பு. பதஞ்.34.). **7.** தொடர்வண்டி நிலையம்; railway station. இனி எல்லா வண்டிகளும் இந்த நிலையத்தில் நின்று செல்லும். (உ.வ.). **8.** பேருந்து நிலையம்; bus stand. ஆறகழூர் பேருந்து நிலையம் அண்மையில் புதுப்பிக்கப் பட்டது. (உ.வ.). **9.** வாடகை வண்டிகளுள்ள கடை; a shop providing vehicle for hire, as bicycles. கண்ணன் மிதிவண்டி நிலையத்தில் ஒரு வண்டியை வாடகைக்கு எடுத்துவா. (உ.வ.). **10.** நிலையம்; plant அணுமின் நிலையம். (உ.வ.)

[நில்–நிலை–நிலையம்.]

வடமொழியாளர் திருட்டுத் தனமாகவும் ஏமாற்றுத்தனமாகவும் நிலையம் என்னும் தென்சொல்லை நி+லயம் என்று பகுத்து, ஓரிடத்தோடு ஒன்றிப் போதல் என்று பொருள்கூறி, வடசொல்லாகக் காட்டுவர். அம்முறையையே பின்பற்றிச் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகரமுதலியும் நிலயம் என்னும் தவற்று வடிவையே மேற் கொண்டுள்ளது. (வே.க.3:45.).

நிலையம்² *nilaiyam,* பெ. (n.) **1.** மக்களுக்குக் குறிப்பிட்ட தொண்டினை அளிக்க அமைந்திருக்கும் கட்டடம்; house or building (for any public service). தொலைக்காட்சி நிலையம், வானொலிநிலையம். **2.** (போக்குவரத்து குறித்து வருகையில்) பயணிகளை அல்லது சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கு உரிய முறையில் அமைக்கப்

பட்டிருக்கும் இடம்; (in combination (bus) stand; (railway) station: (airport) பேருந்து நிலையம, தொடர்வண்டி நிலையம், வானூர்தி நிலையம். 3. மக்களுக்குத் தேவையான பணிகளைத் தொழில்முறையில் மேற் கொள்ளும் இடம்; place where one can hire something or get some service. மிதிவண்டி நிலையம், முடிதிருத்தும் நிலையம், உலர்சலவை நிலையம்.

[நில் → நிலை → நிலையம்]

நிலையம்காட்டி *nilaiyām-kāṭṭi,* பெ. (n.) குறியிடச் சுட்டுமுள், வரைபடங்களில் இடஞ்சுட்ட உதவும் முக்கவர் கோணவடிவக் கருவி; station pointer.

[நிலையம் + காட்டி.]

நிலையம்பிடி—த்தல் *nilaiyam-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.i.) 1. இடங்காணுதல்; to find quarters. 2. நிலைப்படுதல்; to settle oneself. 3. மருந்து முதலியவற்றின் அளவை மதிப்பிடுதல்; to ascertain or hit, by guess or practice, the right proportion, as the giving medicine.

[நிலையம் + பிடி –,]

நிலையல்[1] *nilaiyal,* பெ. (n.) நிலைபெற்று நிற்றல்; state of permanence "*நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே*" (தொல்.பொருள்.44.).

[நில் → நிலை → நிலையல். அல் – தொழிற் பெயரீறு.]

நிலையல்[2] *nilaiyal,* பெ. (n.) நிற்கை; abiding, staying. "*பிறிதவ ணிலையலும்*" (தொல். சொல்.253.).

[நில் → நிலை → நிலையல். 'அல்' தொழிற்பெயரீறு.]

நிலையலை *nilai-y-alai,* பெ. (n.) அளவுமாறா அலை; standing wave.

[நிலை + அலை.]

நிலையவித்துவான் *nilaiya-vidduvāṉ,* பெ. (n.) 1. நிலையக்கலைஞர் பார்க்க; see nilaiya-k-kalaiñjar. 2. நிலையப் புலவர் பார்க்க; see nilaiya-p-pulavar.

[நிலையம் + வித்துவான்.]

skt. வித்துவான்.

நிலையழி[1]**—தல்** *nilai-y-aḻi-,* 2 செ.கு.வி. (v.i.) நிலைகுலை–, பார்க்க; *see nilai-kulai* "*நிலையழிந்த சிந்தையராய்*" (பெரியபு. அப்பூதி.13.).

[நிலை + அழி–,]

குல் – குலை = அவிழ்தல், கலைதல், நிலைகெடுதல், அழிதல். குலைதல் அழிதலெனவும் வழங்கப்படும்.

நிலையழி[2]**—தல்** *nilai-y-aḻi-,* 2 செ.கு.வி. (v.i.) தோற்றல்; to defeat.

[நிலை + அழி. தன்னிலையில் தாழ்தல், இழிதல், தோற்றுப்போதல்.]

நிலையழிவு *nilai-y-aḻivu,* பெ. (n.) 1. தோல்வி; defeat. 2. நிலைகேடு; loss of position.

[நிலை + அழிவு.]

நிலையற்றவன் *nilai-y-aṟṟavaṉ,* பெ. (n.) 1. உறுதியில்லாதவன் (உ.வ.); fickle minded person; unstable unreliable man. 2. சாய்காலகற்றவன்; a man of no status.

[நிலை + அற்றவன். நில் → நிலை = உறுதி, சாய்கால், செல்வாக்கு.]

நிலையறி—தல் *nilai-y-aṟi-,* 2 செ.கு.வி. (v.i.) 1. எண்ணமறிதல்; to know the idea. 2. நிலைவரமறிதல் ; to know the condition.

[நிலை + அறி . நில்→ நிலை = எண்ணம், நிலைவரம்.]

நிலையனம் *nilaiyaṉam,* பெ. (n.) நிலையம் பார்க்க; *see nilaiyam.*

[நில் → நிலை → நிலை + அன் + அம் . அன்—சாரியை; அம்— சொல்லாக்க ஈறு.]

நிலையாடி[1] *nilai-y-āḍi,* பெ. (n.) 1. நெய்வார் கருவியுளொன்று (யாழ்.அக.); weaver's swoft.

நிலையாடி[2] *nilai-y-āḍi,* பெ. (n.) நிலைக்கண்ணாடி பார்க்க; *see nilai-k-kaṇṇāḍi.*

[நிலை + ஆடி. ஆடி —கண்ணாடி.]

நிலையாணி[1] *nilai-y-āṇi,* பெ. (n.) நகைகளில் பதித்திருக்கும் ஆணிவகை (தெ.க.தொ.2:15.); fixed pin, in jewels dist. from ōḍāṇi.

[நிலை + ஆணி. நில் → நிலை.நிலையாய்ப் பதிந்திருப்பது; ஓடாணிக்கு எதிராயது.]

நிலையாணி[2] *nilai-y-āṇi,* பெ. (n.) பெரிய தலையுள்ள ஆணி: stud.

[நிலை + ஆணி.]



நிலையாணை *nilai-y-āṇai,* பெ. (n.) ஒரேவகையான சூழல்களுக்கு எப்போதும் செயற்படுத்தும் வண்ணம் பிறப்பிக்கப்பட்ட ஆணை; standing order.

[நிலை + ஆணை.]

நிலையாப்பொருட்பிணி *nilaiyā-p-poruṭpiṇi,* பெ. (n.) நிலையுதலில்லாத பொருட்பற்று; impermanence. ***"ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும் மலையுடைக் கான நீந்தி நிலையாப் பொருட்பிணிப் பிரிந்திசினோரே"*** (குறுந்.350.).

[நிலையா + பொருட்பிணி]

நிலையாமை *nilaiyāmai,* பெ. (n.) உறுதியாயிராமை; நிலையாயில்லாமை (குறள்,அதி.34.). instabilily, as of riches; transitoriness. 2. உறுதியின்மை (யாழ்.அக.); fickleness, wavering.

[நிலை + ஆ + மை.]

ஆ— எதிர்மறை இடைநிலை.

நிலையாமையாவது, நிலவுலகத்தில் தோன்றும் அறுவகையுயிர்களும் பிறிதோருயிராற் கொல்லப்படாவிடத்தும், எப்பருவத்தும் பிணியாலும், பிணியில்லாது வாழ்நாள் நீடினும் தத்தம் இனத்திற்குரிய கால வெல்லையில் மூப்பாலும், ஒருவகை யானும் தடுக்கப்பெறாது தம்முடம்பினின்று நீங்கி

நிலையாமற்போதல். மயக்கத்தினால் தானென்று நினைத்திருக்கின்ற யாக்கையும் தனதென்று நினைத்திருக்கின்ற பொருளும் நிலை நில்லாமை (குறள். மணக்குடவர். அதிகார, முன்னுரை.).

நிலையாமை மூன்று வகைப்படும், செல்வநிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என (குறள்,332. மணக்குடவர் உரை.).

நிலையாமையாவது அறம், பொருள், இன்பம், இளமை, யாக்கை, உயிராதி நிலையாமை (வீரசோ.100.).

தோற்றம் உடையனயாவும் நிலையுதல் இலவாம் தன்மை (குறள், அதிகாரம்– 34. அதிகார, முன்னுரை.).

நிலையாவாரை *nilai-y-āvārai,* பெ. (n.) நிலாவாரை பார்க்க; *see nilā-vārai.* (சா.அக.)

[நிலாவரை → நிலையாவரை.]

நிலையாள் *nilai-y-āḷ,* பெ. (n.) நிலைத்த வேலையாள்; பதிவான பணியாள்; permanent servant. "*நிலையாள் என்றுகாட்டி*" (தெ.க.தொ.11:140.).

[நிலை + ஆள். நில் → நிலை.]

நிலையாற்றல் *nilai-y-āṟṟal,* பெ. (n.) செயல்திறன் மிக்க ஆற்றல்; potential energy.

[நிலை + ஆற்றல்.]

நிலையாறு–தல் *nilai-y-āṟṟal-,* 4 செ.கு.வி. (v.i.) அமைதியுறுதல்; to be pacified. "*வானவருநின்று நிலையாறினார்கள்*" (கம்பரா.மூலபல.155.).

[நிலை + ஆறு–,]

நிலையிடு–தல் *nilai-y-iḍu-,* 17 செ.குன்றாவி. (v.t.) 1. நிலைநிறுத்து–, பார்க்க; *see nilai niruttu-,* "*மால்சமயத்தை மண்மேல் நிலையிட்ட*" (இருசமய.கடவுள்வாழ்த்து.2.). 2. அளந்தறிதல்; to determine, measure. "*நிலங்க டாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான்*" (கம்பரா.அயோத்தி.மந்திரப்.60.).

[நிலை + இடு–,]

நிலையியற்பொருள் *nilai-y-iyaṟ-poruḷ,* பெ. (n.) நிலைத்திணை (நன்.259. உரை.) பார்க்க; *see nilai-t-tiṇai.*

[நிலை + இயற்பொருள்.]

நிலையில்லாமை *nilai-illāmai,* பெ. (n.) உறுதியின்மை, திண்ணமிலாநிலை, ஐயப் பாட்டு நிலை; uncertainty.

[நிலை + இல்லாமை.]

நிலையிலாச்சம் *nilaiyilāccam,* பெ. (n.) வரகு நாற்றங்கால் (யாழ்.அக.); seed-bed where ragi in sown.

[நிலை + இலாச்சம்.]

நிலையின்மை *nilai-iṉmai,* பெ. (n.) *நிலையில்லாமை* பார்க்க; *see nilai-y-illāmai.*

[நிலை + இன்மை.]

நிலையீடு *nilai-y-īḍu,* பெ. (n.) ஒன்றின் நிலைபற்றிய மதிப்பீடு; *estimation, valuation.*

[நிலையிடு → நிலையீடு .]

நிலையுடைக்கட்டை *nilai-y-uḍai-k-kaṭṭai,* பெ. (n.) முளையாணி (வின்.); pivot.

[நிலை + உடை+ கட்டை.]



நிலையுடைமை[1] *nilai-y-uḍaimai,* பெ. (n.) **1.** தகுதிப்பாடு; quality. **2.** உறுதிப்பாடுடைமை; certainty, stability.

[நில் → நிலை + உடைமை.]

நிலையுடைமை[2] *nilai-y-uḍaimai,* பெ. (n.) எண் (சூளா.நி.8:40.); number.

[நில் → நிலை + உடைமை.]

நிலையுதல் *nilaiyudal,* பெ. (n.) நிலை பெறுகை; being stable or permanent. '*தோற்ற முடையனயாவும் நிலையுதலிலவாந் தன்மை*' (குறள், அதி. 34, அவதா.).

[நில் → நிலை → நிலையுதல்.]

நிலையுமல் *nilai-y-umal,* பெ. (n.) தொம்பை (யாழ்ப்.); a large basket for grain, kept stationary.

[நில் → நிலை + உமல். உம் → உல் = ஓலைப்பை, ஓலைக் கூடை அது போன்றமைந்துள்ள தொம்பை.]



நிலையுயர்கடவுள் *nilaiyuyar-kaḍavuḷ,* பெ. (n.) உயர்ந்தகடவுள் ; a high God. "*மலைமகள் மகனை நின் மதிநுதன் மடவரல் குலமலை யுறைதரு குறவர்தம் மகளார் நிலையுயர் கடவுணின் னிணையடி தொழுதேம் பலரறி மணமவர் படுகுவ ரெனவே*" (சிலப்.24:17.).

[நிலையுயர் + கடவுள்.]

நிலையுரல்[1] *nilai-y-ural,* பெ. (n.) பெருவிரல்; thumb.

[நில் → நிலை உல்→ உர் →உரல்.உல் = குத்துதல், பதித்தல். ஆளறியடை யாளமாகப் பெருவிரல் வரிகையைப் பதிவதால் இப்பெயர் பெருவிரலுக்கு மாயிற்று. குத்துதல்–பதித்தல். கைவரிகை ஆளாளுக்கு மாறுவது மட்டுமின்றி வாணாளிறுதி வரை மாறாத்தன்மையது என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது.]



நிலையுரல்[2] *nilai-y-ural,* பெ. (n.) நிலத்திற் புதைத்து வைக்கும் பெரியவுரல் (யாழ்.அக.) a large mortar, often junk in the ground.

தெ. நிலவுரோலு.

[நிலை + உரல்.]

[நில் → நிலை. உல் → உர் → உரல் உல் = குத்துதல்.]



நிலையுருக்காண்(ணு)-தல் *nilai-y-uru-k-kāṇ(ṇu)-,* 11 செ.கு.வி. (v.i.) பதிவுக்குறிப்பில் உள்ளபடி பண்டங்களை எண்ணிக் கணக்கிடுதல்; to check and verify the stock account. ஸ்ரீபண்டாரஞ் சோதிச்சு ஸ்ரீபண்டாரப் பொத்தகப் படி நிலையுருக்கண்டு (தெ.க.தொ.7:447.).

[நில் → நிலை = பதிவு. உல் = தோன்றுதல் உல் → உர் → உரு. நிலை + உரு + காண்.]

நிலையுறுதி *nilai-y-urudi,* பெ. (n.) இடஉறுதிப்பாடு; ஓரிடத்திற் பொருத்தப்பட்ட பொருள்; இணைத்துக்கட்டப்பட்ட பொருள் பந்தயத்திட்டம் செய்யப்பட்டுள்ள காலம்; fixture. எந்தக் கட்சியுடனும் கூட்டணியில்லை என்ற நிலையுறுதியைத் தலைவர் இப்போது தளர்த்தி விட்டார். (உ.வ.).

[நிலை + உறுதி.]

நிலையூன்று-தல் *nilai-y-ūṉṟu-,* 14 செ.கு.வி. (v.i.) 1. உறுதிப்படுதல்; to obtain a firm footing, become firmly settled in a place. 2. மரமுதலிய வேரூன்றுதல்; to become firmly. rooted, as a tree.

[நிலை + ஊன்று. நில் → நிலை. உவல் → (உவன்று) → ஊன்று-,]

நிலையெடு-த்தல் *nilai-y-eḍu-,* 4 செ.கு.வி (v.i.) பெருமை பெற்று விளங்குதல்; to be in the zenith of one's fame. "*நிலையெடுத்து நெடுநிலத்து நீயிருக்க*" (கம்பரா. சூர்ப்பநகை.101.)

நிலை + எடு-,

[நில் → நிலை. உல் → எல் → எள் → எடு = மேலெடு, தூக்கு, வெளிப்படுத்து, நீங்கு, விளங்கு,ஒளிவிடு,]

நிலைவரம் *nilaivaram,* பெ. (n.) 1. நிலைபேறு; permanence, firmness. 2. உறுதி; certainty, assurance, sureness. "*வானகம் புகுவது நிலைவரம்*" (இராமநா. அயோத்.16.). 3. நிலைமை; state, condition, circumstances.

தெ. நிலவரமு.

[நில் → நிலை → நிலை+வரம்.]

நிலைவரி *nilai-vari,* பெ. (n.) இசைப்பாட்டு வகை; a kind of song. "*முகமுமுரியுந் தன்னோடு முடியும், நிலையை யுடையது நிலையெனப்படுமே.*" (சிலப்:7:13. உரை)

[நிலை + வரி]

நிலைவரிச்செய்யுள் *nilai-vari-c-ceyyuḷ,* பெ. (n.) நிலைவரி பார்க்க; see nilai-vari.

[நிலைவரி + செய்யுள்]

நிலைவாகை *nilaivāgai,* பெ. (n.) செடிவகை; tinnevelly senna.

[நிலை + வாகை]

நிலைவிடு–தல் *nilai-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) மனைக்கு வாயில்நிலை அமைத்தல் (இ.வ.); to set up the door-frame of the main entrance of a house in construction.

[நிலை + விடு–.]

நில் → நிலை – கதவுநிலை.

நிலைவிளக்கு[1] *nilai-viḷakku,* பெ. (n.) குத்துவிளக்கு; lamp fixed to a stand, as in front of a temple. "***நிலைவிளக்கு..... கிடந்திலங்கும்***" (திருவிசை.கருவூர்த்.7.5.).

[நிலை + விளக்கு.]

நில் → நிலை = நிற்கை. விள் – (ஒண்மைக் கருத்துவேர்) விள்–விள–விளங்கு–விளக்கு (வே.க.3:135.).



நிலைவிளக்கு[2] *nilai-viḷakku,* பெ. (n.) சட்டவிளக்கு; lamp fixed to a stand. as in front of a lemple.

[நில் → நிலை = கதவுநிலை. நிலை + விளக்கு.]



நிவ[1]**–த்தல்** *niva-,* 12 செ.கு.வி. (v.i.) **1.** உயர்தல்; to rise; to be elevated; to become high. "*மாக்கட னிவந் தெழுதருஞ் செஞ்ஞாயிற்றுக் கவினை*" (புறநா.4.). **2.** வளர்தல்; to grow. "***ஊர்க்கால் நிவந்த பொதும்பருள்***" (கலித்.56.). **3.** படர்தல்; to spread. "***பைங்கறி நிவந்த பலவி னீழல்***" (சிறுபாண்.43.). **4.** மேலாதல்; to be exalted, distinguished. "***நிலமகள் கணவன் வேந்தர் குழாத்திடை நிவந்திருந்தான்***" (சீவக.2566.). **5.** மேல்வழிதல்; to swell, overflow inundate. "***நிவந்தது நீத்தம்***" (பரிபா.12:34.). **6.** தோன்றுதல்; to appear, occur, arise. "***உண்ணிவந்த கருத்து முணர்ந்தனன்***". (கம்பரா. நகர்நீங்கு.229.).

க. நெகபு.

நிவ[2]**–த்தல்** *niva-,* 12 செ.கு.வி. (v.i.) ஓடுதல்; to run. "***புள்ளூறவு வொசிந்த பூமயங் கள்ளற் கழிச்சுரம் நிவக்கும் இருஞ்சிறை இவுளி***" (நற்.63.).

நிவ[3]**–த்தல்** *niva-,* 12 செ.குன்றாவி. (v.t.) நீரின்மேலே வருதல்; to come upon water. "***இருஞ்சேற்றீரளை அலவள் நிவப்ப வழங்குநர் இன்மையிற் பாடான்றறன்றே***" (அகநா.350.)

நிவக்கும் *niva-k-kum,* வி.எ. (adv.) உயர்ந்த, to be high. "பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்" (குறுந்.9.). "கான யானை கைவிடு பசுங்கழை மீனெறி தூண்டிலின் நிவக்கும்" (குறுந்.54.).

[நிவ → நிவக்கும்.]

நிவகம் *nivagam,* பெ. (n.) கூட்டம் (உரி. நி.); company, multitude, assembly, flock.

நிவந்து *nivandu,* வி.எ. (adv.) உயர்ந்து; high "*என்றவ னிசைமொழி யேத்தக் கேட்டதற் கொன்றிய மாதவ ருயர்மிசை யோங்கி நிவந்தாங் கொருமுழ நீணிலை நீங்கிப் பவுந்தரு பாசங் கவுந்தி கெடுகென்" (சிலப்.10:208.).*

[நிவ → நிவந்து]

நிவந்தோங்குயர் *nivan-tōṅguyar,* வி.எ (adv.) மிக ஓங்கி வுயர்ந்த; to be high. to be very highly. "*பயந்தோளிடுக்கண் களைந்த புள்ளின் நிவந்தோங்குயர்கொடிச் சேவலோய்*" (பரிபா 3:17.). "*நிவந்தோங் கியமத்து நீலப்பைஞ்சுனைப் பயந்தோ ரென்ப பதுமத்துப் பாயல்*" (பரிபா.5:48.).

[நிவந்து + ஓங்கு + உயர்.]

ஒருபொருட்பன்மொழி

நிவப்பு *nivappu,* பெ. (n.) புகழ்; repute. "*புகழ், சிறப்பு புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பின் பொதியிற் றென்றல் போடிலா தீங்கு மதுரைத் தென்றல் வந்தது காணீர்*" (சிலப்.13:130.). "*உயர்ச்சி மலைகண்டன்ன நிலைபுனர் நிவப்பின்*" (நற்.60.).

நிவப்புத்தூக்கு *nivappu-t-tūkku,* பெ. (n.) ஐஞ்சீருள்ள இசைப்பாட்டு (சிலப். 3:16. உரை.); a stanza of five feet.

[நிவ → நிவப்பு + தூக்கு.]

"*ஒருசீர் செந்தூக் கிருசீர் மதலை,
முச்சீர் துணிபு நாற்சீர் கோயில்,
ஐஞ்சிர் நிவப்பா மறுசீர் கழாஅலே
எழுசீர் நெடுந்தூக் கென்மனார் புலவர்*"
(சிலம்பு3:16. உரை.)

எழுவகைத்தூக்கு:

1. செந்தூக்கு.
2. மதலைத்தூக்கு.
3. துணிபுத்தூக்கு.
4. கோயிற்றூக்கு.
5. நிவப்புத்தூக்கு.
6. கழாற்றூக்கு.
7. நெடுந்தூக்கு.

நிவம் *nivam,* பெ. *(n.)* தோண்மேல்; (நாமதீப.583.); top of th shoulder

[நிவ → நிவம்]

நிவர்–தல் *nivar.* 2 செ.கு.வி, (v.i.) ஒங்குதல்; (திவ். இரண்டாந்.திருவந்.78.). to highly.

[இவர் → நிவர்–,]

நிவர்த்ததாளம் *nivartta-tāḷam,* பெ. (n.) ஒன்பது தாளத்தொன்று (பரத.தாள.6.); a variety of time-measure, one of nava-taḷam, (q.v.).

நிவரை *nivarai,* பெ. (n.) கன்னி (யாழ்.அக.); a maiden

[நவரை → நிவரை; நவரை= இளமை; நுகு → நாகு = இளமை; நுகு → நுரு → நறு → நாறு → நாற்று. நாற்று= இளம்பயிர். நகு → நவ → நவரை → நிவரை.]

நிவறு—தல் *nivaṟu-,* 5 செ.கு.வி. (v.i.) பொடியாதல் (அக.நி.); to be powdered. 2. மொய்த்தல் (சது.); to swarm, gather thick.

[நீறு → நிவறு
நீறு = பொடி
நீறுதல் = பொடியாதல்.]

நிவா *nivā,* பெ. (n.) நடுநாட்டிற் செல்லுமோ ராறு; a river in naḍunāḍu. *"பெருநீர் நிவாஉந்தி"* (திவ்.பெரியதி.3.2.9.).

[நிவ + ஆ.]

நிவி *nivi,* பெ. (n.) மாமரம் (சங்.அக.); mango tree,

நிழத்து¹—தல் *niḻattu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. முன்னுள்ள நிலையினின்றும் நுணுகுதல் (தொல்.சொல்.330.); to ware, decrease; to be reduced. *"நிலவரையல்ல னிழத்த"* (பரிபா.10.3.).

[நில் → நில → நிழல் → நிழற்று – நிழற்று + நிழத்து–,]

நிழத்து²—தல் *niḻattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தின்றழித்தல்; to reduce. as by eating. *"வாய்மடுத் திரும்புன நிழத்தலின்"* (குறிஞ்சிப்.157.). 2. இல்லையாக்குதல்; to cause to disappear; to lose; to be deprived of. *"அருவி மாமழை நிழத்தவும்"* (பொருந.235.).

[நில் → நில → நிழல் → நிழற்று → நிழத்து.]

நிழல்¹—தல்(நிழற்றல்) *niḻal-,* 3 .செ.கு.வி. (v.i.) 1. சாயை வீழ்த்தல்; to cost shadow; to shadow. *'வண்டுந் தேன்களு நிழன்றுபாட'* (சீவக.1270.). 2. காப்பாயமைதல்; to give shelter. *'ஏரோர்க்கு நிழன்ற கோலினை'* (சிறுபாண்.233.). 3. ஒளி செய்தல்; to shine. *'நெய்த்தலை கருங்குழ னிழன்று'* (சீவக.1101.). 4. படிவடிவிடுதல்; (பிரதிபலித்தல்) (வின்.); to be reflected, as an image.

[நுல் → நெல் → நில் → நில → நிழல்] (வே.க.3:22.).

நிழல்² *niḻal,* பெ. (n.) ஒளி; light. *"நிழன் மணி"* (சீவக.321.). *'நிழல் கானெடுங்கனின்ற மன்றமும்'* (சிலப் 5:127.).

[நில் → நிழ → நிழல்.]

நிழல்³ *niḻal,* பெ. (n.) 1. சாயை; shade, shadow. *"நாணிழற் போல"* (நாலடி,166.). 2. படிவடிவம் (பிரதி பிம்பம்); image, reflection, as in a mirror. *"நிழனோக்கித் தாங்கல் மகிழ்தூங்கி"* (சீவக.2790.). 3. அச்சு (வின்.); type, representation, counterpart. 4. ஒளி; lustre. *"நிழல்கா னெடுங்கல்"* (சிலப்.5:127.). 5. குளிர்ச்சி (சூடா.); coolness. 6. அருள்; grace, favour, benignity. *"தண்ணிழல் வாழ்க்கை"* (பட்டினப்.204.). 7. நயன்மை; (பிங்.); justice. 8. புகலிடம்; protection, asylum, refuge, 9. இடம் ; place. *"நீரு நிழலும்"* (நல்வழி.21.). 10. இடம் (சூடா.); wealth, prosperity, affluence. 11. மரக்கொம்பு (அக.நி.); branch of a tree. 12. நோய் (அக.நி.); disease, ailment. 13. பேய்; devil.

ம. நிழல், நிழலிக்க (எதிர்ஒளி வருதல்); **க.** நெழல், நெரள், நெள்ளு; **தெ.** நிட; **து.** நெரெளு, கிரெளு; **கோத.** நொல்; **து.** நெச்; **குட.** நெள; **கொலா.** நீண்ட; **நா.** நீண்ட; **பர்.** நீளு; **கட.** நிகர்; **கோண்.** நிரா; **பட.** நாலு.

[நுல் → நில்→நில→நிழல் (வே.க.3:22.).]

நிழல்[4] *niḻal,* பெ. (n.) பேய்; devil.

[நில் → நிழல் = சாயை, பேய்.]

நிழல்கான்மண்டிலம் *niḻal-kāṉ-maṇḍilam,* பெ. (n.) கண்ணாடி; mirror, as having a reflecting surface. ***"நிழல்கான் மண்டிலந் தம்மெதிர் நிறுத்தி"*** (சிலப்.28:30.).

[நிழல் + கால் + மண்டிலம்.]

நிழல்நாவல் *niḻal-nāval,* பெ. (n.) நிழனாவல் பார்க்க; *see niḻaṉāval*

[நிழல் + நாவல்.]

நிழல்விழு—தல் *niḻal-viḻu-,* 2 செ.கு.வி. (v.i.) நிழல்வீசுதல்; to cast a shadow, to shade.

[நிழல் + விழு—,]

நிழலடங்கும்பொழுது[1] *niḻal-aḍaṅgum-poḻudu,* பெ. (n.) **1.** உச்சிப்பொழுது; noon. **2.** கதிரவன் தோற்றத்திற்கு முற்பொழுது; வைகறை.

[நிழல் + அடங்கும் + பொழுது.]

தன் நிழல் தன் காலடியிலேயே அடங்கும் நேரம்.

நிழலடங்கும்பொழுது[2] *niḻal-aḍaṅgum-poḻudu,* பெ. (n.) மாலையந்தி; dusk.

[நிழல் + அடங்கும் + பொழுது]

நிழல் = ஒளி, வெளிச்சம். வெளிச்சம் அடங்கும் மாலைநேரம்.

நிழலாட்டப்பாவை *niḻal-āṭṭa-p-pāvai,* பெ. (n.) தோற்பாவைக்கூத்து (நாடகத்தமிழ். பக்.9.); puppet show.

[நிழல் + ஆட்டம் + பாவை.]

நிழலாட்டம்[1] *niḻal-āṭṭam,* பெ. (n.) **1.** ஆள் நடமாடுவதால் ஏற்படும் நிழலின் அசைவு; movement of a person's shadow. ***'குறுவிழிக்கொண்டு வந்தார்போனார் நிழலாட்டம் பார்த்துக்கொண்டு கிடக்கையிலே'*** (திவ்.பெரியாழ்.2.5.3.வ்யா. பக்.340.). **2.** புகைப் படங்களின் அசைவுகளாலமைந்த காட்சி; cinema. **3.** தோற்பாவையாட்டம்; a kind of puppet show.

[நிழல் + ஆட்டம்.]

[நுல் → நில் → நில → நிழல். ஆடு — ஆட்டம். ஆடுதல் — அசைதல். ஆடு + அம் — ஆட்டம். அம்— சொல்லாக்க ஈறு.]

நிழலாட்டம்[2] *niḻal-āṭṭam,* பெ. (n.) **1.** மங்கினபக்கம் (வின்.); shade in painting. **2.** மாதிரி (வின்.); typical representation. **3.** மெய்ம்மையற்றது (வின்.); a mere phantom.

[நிழல் + ஆட்டம் .]

[நுல் → நில் → நில → நிழல். அண் → அட்டு — நெருங்கியிருத்தல் ஒத்திருத்தல், ஒத்திருக்குந்தன்மை. அட்டு → ஆட்டு → ஆட்டம் — போன்றிருத்தல், ஒத்திருத்தல்.]

நிழலாடு[1]**—தல்** *niḻal-āḍu-,* 5 செ.கு.வி. (v.i.) தெளிவின்றித் தோன்றுதல்; to appear vaguely; to be overshadowed by something. ***வற்கடத்தால் மக்கள் படப்போகும் துன்பம் என்கண்முன் நிழலாடியது. (உ.வ.). சோகம் நிழலாடும் முகம் கண்டேன். (உ.வ.).***

[நில் → நிழல் + ஆடு—,]

நிழலாடு[2]**—தல்** *niḻal-āḍu-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** எதிரொளித்தல் (பிரதிபலித்தல்); to be reflected. **2.** படிவடிவம் (பிரதிபிம்பம்) தோன்றுமாறிருத்தல்; to be reflective, as a

surface. *சுவர் நிழலாடுகிறது. (உ.வ.).* **3.** நிழல்மட்டும் தெரியும்படி பார்வை குன்றுதல்; to be dim in sight, as eyes. *கண் நிழலாடுகிறது. (உ.வ.).*

[நிழல் + ஆடு –.]

நிழலி *nilali,* பெ. (n.) **1.** ஒளி (திவா.); lustre; light. **2.** நயன்மை (பிங்.); virture, morality. **3.** காற்று (பிங்.); wind. **4.** நோய் (சூடா.); disease.

[நிழல் → நிழலி.]

நிழலிடாவிளக்கு *nilalitdā-vilakku,* பெ. (n.) நிழலிடாத முகிழ்விளக்கு; astral lamp.

[நிழல் + இடா + விளக்கு.]

நிழலிடு–தல் *nilal-idu-,* 20 செ.கு.வி. (v.i.) **1.** நிழலைக் கொடுத்தல்; to cast a shadow; to shade. **2.** எதிரொளித்தல் (பிரதிபலித்தல்) (வின்.); to be reflected. **3.** ஒளிவிடுதல்; to throw light or lustre. *"நிழலிடு குண்டலம்" (கம்பரா.மிதிலைக்.43).*

[நிழல் + இடு–,]

நிழலு–தல் *nilalu-,* 3 செ.கு.வி. (v.i.) நிழல்[2]– பார்க்க; see *nilal-,*

[நிழல் –, → நிழலு–,]

நிழலுலர்த்தல் *nilal-ularttal,* பெ. (n.) நிழலில் மருந்து முதலியவைகளை உலர வைக்கை; drying in the shade, as medicines. *வெள்ளைத் துணியை வெளுத்து நிழலுலர்த்தலாக உலர்த்தினால் மங்காமல் இருக்கும். (உ.வ.).*

[நிழல் + உலர்த்தல்.]

நிழலொதுக்கு *nilal-odukku,* பெ. (n.) இளைப்பாறுதற்குரிய நிழலிடம் (யாழ்.அக.); shade cover or retreat.

[நிழல் + ஒதுக்கு,]

[நில் → நில → நிழல். ஒதுக்கம் → ஒதுக்கு. ஒதுக்கம் = இடம்.]

நிழலோடுதல் *nilal-ōdudal,* பெ. (n.) **1.** நிழல் நீளுகை; lengthening of a shadow. **2.** கதிரவன் மறைவு நெருங்குகை; approach of sunset.

[நிழல் + ஓடுதல்/]

கதிரவன் மறையுங்காலத்து, தரையில் பொருளின் நிழல் உச்சமாய் நீண்டிருக்கும். அதனையே நிழலோடுதல் என்றனர். (ஓடுதல்–நீளுதல்.)

நிழற்குடை *nilar-kudai,* பெ. (n.) (போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் காவலருக்கு அல்லது நிறுத்தத்தில் காத்திருக்கும் பயணிகளுக்கு) நிழல் தருவதற்காக வட்டமான அல்லது நீள் செவ்வகக் கூரையுடைய அமைப்பு; shelter (for the traffic police or for the passengers at a bus stop.).



நிழற்கூத்து *nilar-küttu,* பெ. (n.) பாவையின் நிழலைத் திரையில் விழச் செய்து நடத்தும் ஆட்ட வகை; *shadow play.*

[நிழல் + கூத்து.]

நிழற்சரிவு *nilar-šarivu,* பெ. (n.) **1.** நிழலின் சாய்பு; declining of a shadow. **2.** சாயுங்காலம்; evening.

[நிழல் + சரிவு.]

நிழற்சாய்ப்பு *nilar-šāippu,* பெ. (n.) நிழலொதுக்கு (வின்.) பார்க்க; *see nilal-odukku.*

[நிழல் + சாய்ப்பு.]

நிழற்சாய்வு *nilar-šaivu,* பெ. (n.) நிழலொதுக்கு (திவ்.திருநெடுந்.6.வியா.) பார்க்க; *see nilal-odukku.*

[நிழல் + சாய்வு.]

நிழற்சுருங்கி *nilar-surungi,* பெ. (n.) பூடுவகை; (அபி.சிந்.1480.); a kind of plant.

[நிழல் + சுருங்கி.]

நிழற்செய்–தல் *nilar-cey-,* **1.**செ.கு.வி. (v.i.) **1.** சாய்கை விழுதல்; நிழற்படுத்தல்; being in the shade, as in jurious to plants. **2.** மந்தாரம் போடுதல்; to be clouded to rain.

[நிழல் + செய்–,]

நிழற்படக்கருவி *nilarpada-k-karuvi,* பெ. (n.) நிழற்படமெடுக்கும் கருவி; camera.

[நிழற்படம் + கருவி.]



நிழற்படச்சுருள் *nilarpada-c-curul,* பெ. (n.) நிழற்படமெடுக்க உதவும் படச்சுருள்; film roll.

[நிழற்படம் + சுருள்]



நிழற்படத்தாள் *nilar-pada-t-tāl,* பெ. (n.) நிழற்படச் சுருளில் பதிவு செய்த காட்சியைப் படமாகஆக்கப் பயன்படும் ஒருவகைத் தாள்; paper used for printing the image from the negative.

[நிழற்படம் + தாள் .]

நிழற்படம் *nilar-padam,* பெ. (n.) ஒருகாட்சி யிலிருந்து அல்லது உருவத்திலிருந்து வரும் ஒளியை ஆடிகள் பொருத்தப்பட்ட ஒரு கருவியின் மூலம் புகைப்படச் சுருளில் பதிவு செய்து வேதியியல் மாற்றங்களுக்கு உள்ளாக்கிப் படியெடுக்கப்படும் படம்; photograph.

[நிழல் + படம் .]

புகைப்படம் என்று முன்னர் மொழி பெயர்க்கப்பட்ட நிழற்படம் இக்கால் ஒளிப்படம் என்று பெயர்த்துரைக்கப் படுவது செம்மைவடிவமாகும்.

நிழற்பயிர் *nil̲ar̲-payir,* பெ. (n.) நிழற்கீழ் விளையும் பயிர் (இ.வ.); crops growing in the shade of trees.

[நிழல் + பயிர் .]

நிழற்பாடு *nil̲ar̲-pāḍu,* பெ. (n.) நிழல் படுகை (யாழ்ப்.); being in the shade as injurious to plant.

[நிழல் + பாடு

நில்→நில→நிழல்.

படு→பாடு*]*

நிழலில் பயிர் வளர்ந்து பயன் தருவதில்லை. அத்தகைய நிழல் விழும் பகுதியை விளை நிலத்தின் நிழற்பாடு என்றழைப்பர்.

நிழற்பாவை *nil̲ar̲-pāvai,* பெ. (n/) திரைச் சீலையில் சாயல் விழும்படி வைத்து ஆட்டும் பாவை (வின்.); திரைச் சீலைக்குள் விட்டாட்டும் பாவை; puppet whose image is projected on a screen.

[நிழல் + பாவை .]

நிழற்பிடி—த்தல் *nil̲ar̲-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) *நிழற்படு—தல்* பார்க்க; *see nil̲ar̲-paḍu-,*

[நிழல் + பிடி —,]

நிழற்போடு—தல் *nil̲arpōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) நிழலிடு— பார்க்க; *see nil̲aliḍu-,*

[நிழல் + போடு —,]

போக்கு→போடு.

நிழற்றல்¹ *nil̲ar̲r̲al,* பெ. (n.) நிரம்பா மென்சொல் (திவா.); lisping, as of children.

[மிழற்று → நிழற்று → நிழற்றல்.]
அல்லீற்றுத்தொழிற்பெயர்.

நிழற்றல்² *nil̲ar̲r̲al,* பெ. (n.) நிழல் விழச்செய்தல்; to shade.

*[*நிழ → நிழற்றல்.*]*

இது பிறவினை வடிவம்.

நிழற்றாங்கல் *nil̲ar̲r̲āṅgal,* பெ. (n.) பந்தல் (நாஞ்.); a temporary shed; a pandal.

[நிழல் + தாங்கல்.]

நிழற்று¹—தல் *nil̲ar̲r̲u-,* 5 செ.குன்றாவி.(v.t.) ஒளிவிடுதல்; to shed radiance. *"பசும்பொ னவிரிழை பைய நிழற்ற"* (ஐங்குறு. 74.).

[நிழல் → நிழற்று —,]

நிழற்று²—தல் *nil̲ar̲r̲u-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. நிழற்செய்தல்; to shade. *"கொல்களிற்று மீமிசைக் கொடி விசும்பு நிழற்றும்"* (புறநா. 9.). 2. காத்தளித்தல் (வின்.); to protect, defend. 3. மணி முதலியன அடித்தல்; to ring as bells. *"நெடுநா வொண் மணி நிழற்றிய நடுநாள்"* (முல்லைப். 50.).

[நிழல் → நிழற்று —,]

நிழற்று³—தல் *nil̲ar̲r̲u-,* 5 செ.குன்றாவி. (v.t.) அடங்குதல் (முல்லை. 50. உரை.); to be still, calm.

[நிழல் → நிழற்று—,]

நிழறு—தல் *nilaru-,* 5 செ.குன்றாவி. (v.t.) ஒளிவிடுதல்; to shine. *"திண்சக்கர நிழறு தொல்படையாய்"* (திவ். திருவாய். 6. 2. 5.).

[நிழல் → நிழலு—, → நிழறு—,]

நிழன்ற *nilanra,* வி.எ. (adv.) நிழல் செய்த; to make a shade.

[நிழல் → நிழன்ற]

நிழனாவல் *nilanāval,* பெ. (n.) பூடுவகை (யாழ்.அக.); a kind of shurb.

[நிழல் + நாவல் .]

நிற்க *nirka* வியங்.வி. (opt.v.) **1.** இயங்கிக் கொண்டிருக்கிற அல்லது நடந்து கொண்டிருக்கின்ற ஒருவரை நிற்க வைக்கக் கூறும் ஏவற் சொல்; a word used to stop the person, who walking or doing. ***2.*** அமர்ந்திருக்கிற ஒருவரையோ பலரையோ நோக்கி எழச் சொல்லும் ஏவற்சொல்; a word used to stand up the person, who in sitting down. ***3.*** போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் காவல்துறையினர் கையில் காட்டிநிறுத்தும் வட்டப்பலகையில் எழுதியிருக்கும் சொல்; a word on the sound board used to show and control by the traffic police man. **4.** (மடலில்) ஒரு செய்தி முடிவடைந்து அடுத்தது தொடங்குகிறது என்பதைத் தெரிவிக்கப் பயன்படும் சொல்; a connective used mostly in letters to indicate the ending of a subject and the beginning of another. நீ சேலம் சென்று சேர்ந்திருப்பாய். நிற்க. இங்கு நேற்று பெய்த பெருமழையில் ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடியதால் நமது ஊர் ஏரி நிறைந்துவிட்டது. **5.** ஒழுகுதல்; behavior. *'கற்றபின் நிற்க அதற்குத்தக'* (குறள்.391)

[நில்→ நிற்க.]

நிற்காங்கு *nirkāngu,* பெ. (n.) நிருவாலி பார்க்க; *see niruvāli.* (சா.அக.).

நிற்குண்டி *nirkundi,* பெ. (n.) நொச்சி மரம் (தைலவ. தைல. 16); stalked leafiet chaste tree.

நிற்கை *nirkai,* பெ. (n.) நிற்றல் (பழமலை யந்தாதி); standing.

[நில்→ நில்கை= நிற்கை]

நிற்ப *nirpa,* பெ. (n.) (உலகப் பிறப்பிரு வகையுள்) மரஞ்செடி கொடிகளாக நிற்பன; immovable as the vegetable kingdom.

[நில் — நிற்பன — நிற்ப. கடைக்குறை.]

நிலைத்திணை, இயங்குதிணை எனுமி ரண்டனுள் இயங்காது ஓரிடத்து நின்று வளர்ந்து மடியும் நிலைத்திணையைக் குறிக்கும் சொல்.

நிற்பது *nirpadu,* பெ. (n.) நிலைத்திணை; the immovables, as the vegetable kingdom. *"நிற்பதுஞ் செல்வது மானோன் காண்க"* (திருவாச. 3. 53.).

[நீள் → நிள் → நில். (வே.க. 3:43.) நில் — இடம் பெயராதிரு. நிற்பது — இடம் பெயராதிருப்பது. ஓரிடத்தில் நிலையாக நிற்பது.]

நிற்பன[1] *nirpana,* பெ. (n.) இயங்காதன; (நிலைத்திணை) immovable. அது மர முதலியன. *"உலகினிடை நிற்பனவு நடப்பனவு நெறியினீந்த"* (இராமா. மாரிசன்வதை. 2.)

[நில் → நில்பன → நிற்பன.]

நிற்பன[2] *nirpana,* பெ. (n.) நிற்ப பார்க்க; see nirpa.

[நில்→ நிற்பன]

நிற்பாட்டம் *nir-pāttam,* பெ. (n.) **1.** நிறுத்துகை (இ.வ.) ; delay, stop. **2.** நேராக நட்டு வைக்கை; setting up, erecting. **3.** சாரமரத்தில் நாட்டும் கொம்பு (சென்னை); post setup in scaffolding.

[நீள் → நிள் → நில். நில் → நிற்பு → நிற்பாட்டு → நிற்பாட்டம்.]

நிற்பாட்டு[1]—தல் *nirpāttu,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** நிறுத்துதல்; to leave, as an employment; to stop, as a carriage. *இறங்க வேண்டிய நிறுத்தம் வந்துவிட்டது வண்டியை நிற்பாட்டு* (உ.வ.). **2.** காலந் தாழ்த்துதல்; to delay, procrastinate. **3.** நேராக நடுதல் (சென்னை); to setup, erect, as posts in sacffolding.

[நிற்பு+ஆட்டு .]

நீள்→நிள்→நில். நில்→நிற்பு→நிற்பாட்டு (வே.க. 3:46.).

நிற்பாட்டு[2] *nirpāttu,* பெ. (n.) நிறுத்துகை; stopping.

[நில்→ நிற்பு→ நிற்பாட்டு.]

நிற்பாடு *nirpādu,* பெ. (n.) நிறுத்துகை; stopping.

[நில்→ நிற்பு→ நிற்பாட்டு→ நிற்பாடு.]

நிற்பின் *nirpin,* வி.எ. (adv.) நின்றால்; same position or condition.

[நிற்பு → நிற்பின்.]

நிற்பு *nirpu,* பெ. (n.) நிறுத்திவைப்பு; ceasing, stopping.

[நில் →நிற்பு (வே.க. 3:46.).]

நிற்றம் *nirram,* பெ. (n.) நிலைப்பு; standing, staying.

[நில் →நிற்றம் .]

ஒ.நோ. வெல்→ வெற்றம்.
கொல் →கொற்றம் (வே.க. 3:46.).

நிற்றல்[1] *nirral,* பெ. (n.) நிற்கை; staying. *"அவற்றொடு சிவணி நிற்றலு முரித்தே"* (தொல். எழுத்து. 177.).

[நில் → நிற்பு =நிற்றல் .]

ஒ.நோ:

நில் → நிற்றம்.
கொல் →கொற்றம்.
வெல் → வெற்றம்.
நிற்றம் → நிற்றல்.
நில் + தல் – நிற்றல் எனினுமாம்.

நிற்றல்[2] *nirral,* பெ. (n.) ஒழிதல்; cease.

[நில்+ தல்]

நிற்றல்[3] *nirral,* பெ. (n.) **1.** நின்று கொண்டிருக்கும் நிலை; standing position இருக்கை (ஆசன) வகை; sitting posture.

நிற்றலிருத்தல் கிடத்த னடத்த லென்
றொத்த நான்கி னொல்கா நிலைஃமையொ
டின்பம் பயக்குஞ் சமய முதலிய
அந்தமில் சிறப்பினாசன மாகும்.
(சிலப். 14:11. உரை.).

நிற்றலும் *nirralum,* வி.எ. (adv.) நித்தலும் பார்க்க *see nittalum.* "குணபத்திரன்றாள் நிற்றலும் வணங்கி" (சூடா. 7. 76.)

[நித்தல்→ நிற்றல்→ நிற்றலும் .]

நிற்றிகா *niṟṟigā,* பெ. (n.) சிற்றேலம்; small cardamom. (சா.அக.).

நிற—த்தல் *niṟa-,* 11 செ. கு.வி. (v.i.) 1. நிறம் பிடித்தல்; to take on colour as fruits or leaves to be tinged as flowers. '*நிறத்தகாய்*'. 2. நிறம் முற்றுதல், to deeper in colour. 3. புதுப் பொலிபோடு இருத்தல்; to be distinguished, brilliants to be bright and fresh in appearance. '*சத்துவ குணப் பிறப்பினர் புவிமே னிறத்து வாழ்வது*' (ஞானவா.திதி.1.). 4. பயனளித்தல்: to have effect. நான் செய்ததொன்றும் நிறக்கவில்லை. (உ.வ.).

[நில்→ நிற—,]

நிறக்கதிர் *niṟa-k-kadir,* பெ. (n.) வண்ண மிகுதியுடைய கதிர்; colour ray. '*வானவில் ஏழு நிறக்கதிர்களைக் கொண்டது*'. (உ.வ.).

[நிறம் + கதிர் .]

நிறக்குமஞ்சள் *niṟakku- mañjal,* பெ. (n.) கப்பு மஞ்சள், பூசு மஞ்சள்; turmeric (சா.அக.).

[நிறக்கும் + மஞ்சள் .]

நிறக்குருடு *niṟa-k-kuruḍu,* பெ. (n.) குறிப்பிட்ட சில வண்ணங்களை உணரவியலமை; unable to distinguish certain colour: colour- blind.

[நிறம் + குருடு.]

நிறக்குறியீடு *niṟa-k-kuṟiyīḍu,* பெ. (n.) வண்ணத்தால் குறிக்கப்படும் ஒரு குழுஉக் குறி; colour code.

[நிறம் + குறியீடு.]

நிறக்கேடு *niṟa-k-kēḍu,* பெ. (n.) புகழ்க் குறைவு; loss of repute. '*இவனோடு சம்பந்திக்கை நிறக்கேடாம்*' (ஈடு, 4. 9. 3.).

[நிறம் + கேடு. நிறம் – புகழ். கெடு → கேடு→ அழிவு குறைவு.]

நிறங்குணம் *niṟaṅ-guṇam,* பெ. (n.) இயல்பு (வின்.); characteristics, traits of character, properties. '*நிறங்குணமறிந்து உறவாடு*' (பழமொழி).

நிறங்கொடு[1]—த்தல் *niṟaṅ-koḍu-,* 4 செ. குன்றாவி. (v.t.) 1. நிறமூட்டுதல்; to tinge, give colour. 2. நிறமுடைத்தாதல்; to be coloured, have a colour. 3. மேனியாதல்; to be sleek, smooth, plump, as a person in health.

[நிறம் + கொடு —,]

நிறங்கொடு[2]—த்தல் *niṟaṅ-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஒளிரச் செய்தல்; to give lustre, brilliance, as to an occasion.

[நிறம் + கொடு —,]

நிறஞ்சனாதிமூலி *niṟañjanādi -mūli,* பெ. (n.) சிவ துளசி; shivas basil-ocimum hirsutum. (சா.அக.).

நிறஞ்சோதி *niṟañjōti,* பெ. (n.) மரமஞ்சள்; tree turmeric-coscinium fenestratum. (சா.அக.).

[நிறம் + சோதி.]

நிறத்தகண்காரி *niṟattakaṇkāri,* பெ. (n.) குண்டுமணி, குன்றிமணி; wild licorice-abrus precatorius. (சா.அக.).

நிறத்தகை *nira-t-tagai,* பெ. (n.) நிறவழகு; handsome body. "*மூவிரு கயந்தலை முந்நான்கு முழவுத்தோ் ஞாயிற்றோ் நிறத்தகை நளினத்துப் பிறவியை*". (பரிபா. 5:12.).

[நிறம் + தகை.]

நிறநீக்கி *niranikki,* பெ. (n.) வண்ணம் போக்கி; bleaching powder.

[நிறம் + நீக்கி.]

நிறப்பிறழ்ச்சி *nira-p-piralcci,* பெ. (n.) வண்ணத்தினால் உண்டாகிற நிலையினின்று விலகுதல்; chromatic aberration.

[நிறம் + பிறழ்ச்சி.]

நிறப்பெயர்ச்சி *nira-p-peyarcci,* பெ. (n.) நிறம் மாறுகை; change of colour.

[நிறம் + பெயர்ச்சி.]

நிறப்பேதிப்பு *nira-p-pēdippu,* பெ. (n.) நிறப் பெயர்ச்சி பார்க்க; *see nira-p-peyarcci.*

[நிறம் + பேதிப்பு.]

நிறம்[1] *niram,* பெ. (n.) **1.** வண்ணம்; complexion., colour. "*நிறங்கொள் கண்டத்து நின்மலன்*" (தேவா. 370:4.). **2.** சாயம்; dye, tincture. **3.** இயல்பு; quality, property, temper, nature. "*வின்னிறவாணுதல்*" (திருக்கோ. 58.). **4.** ஒளி (சூடா.); light, lustre. "*நிறப் பெரும் படைக்கலம்*" (கம்பரா. தைல. 30.). **5.** புகழ்; fame, reputation. '*இவனோடு சம்பந்திக்கை தரமன்று; நிறக்கேடாம்*'. (ஈடு. 4. 9. 3.). **6.** இசை (ஈடு, 2. 6. 11.); harmony in music. **7.** மார்பு; bosom, breast. "*செற்றாா் நிறம்பாய்ந்த கணை*" (கலித். 57.). **8.** நடுவிடம்; middle place. "*கடலிற் றிரை நிறஞ்சோ் மத்தின்*" (திருமந். 2313.). **9.** உயிர்நிலை (அக.நி.); vital spot. **10.** உடல்; body. "*மெல்லியலை மல்லற் றன்னிற மொன்றி லிருத்தி நின்றோன்*" (திருக்கோ. 58.). **11.** தோல்; skin. "*புலிநிறக் கவசம்*" (புறநா. 13:2.).

க. நெற; **தெ.** நெறனு (மந்தனம்); **து.** நெரவு (ஆண் பிறப்புறுப்பு); **கோண்.** (ஆண் விலங்கின் பிறப்புறுப்பு)

[நில் → (நிரை) → நிறை = நிறைதல் =நிறைந்திருத்தல். நிறை → நிறம் = வண்ணம் நிறைந்திருக்கும் நிலை.]

நிறம்[2] *niram,* பெ. (n.) **1.** இயற்கையாக அமைந்து அல்லது செயற்கையாக ஊட்டப் பட்டு ஒளியின் உதவியால் கண்ணுக்குத் தெரியும் கறுப்பு, சிவப்பு, மஞ்சள் போன்ற வற்றின் பொதுப் பெயர்; colour. *விலங்கு களுக்கு மாந்தா்களைப் போல் நிற வேறுபாட்டை அறியும் ஆற்றல் இல்லை.* (உ.வ.). **2.** (உடல் நிறத்தைக் குறிக்கையில்) கறுப்பு அல்லாத வெளிர் நிறம்; fair comoplexion. *பெண் நல்ல நிறமாக இருக்கிறாள்.* (உ.வ.).

நிறம்நீக்குபவர் *niram-nikkubavar,* பெ. (n.) சாயம் போக்குபவர்; வெளிரச் செய்யும் வண்ண நீக்குபவர்; bleacher.

[நிறம் + நீக்குபவர்.]

நிறம்படுகுருதி *niram-padukurudi,* பெ. (n.) மார்பிற் வழியும் அரத்தம் blood drawn from the chest. "*நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர் நிறம்படு குருதி நிலம்படா்ந்தோடி*" (நற். 49:10.). "*நிறம்படு குருதி புறம்படி னல்லது*" (நற். 79:16.).

[நிறம்+ படு+ குருதி.]

நிறம்பூசு—தல் *niṟam -pūśu-,* 5 செ.கு.வி. (v.i.) வண்ணம் பூசுதல்; to apply colour கோயிற் கோபுரத்திற்கு நிறம் பூசும்பணி தொடங்கிய பிறகு குடமுழுக்கு நடத்த நாள் குறித்தல் நலம். (உ.வ.)

[நிறம் + பூசு–,]

நிறம்பெயர்—தல் *niṟam-peyar-,* 4 செ.கு.வி. (v.i.) நன்னிறமாதல் (வின்.); to improve in colour, become vivid of hue.

[நிறம் + பெயர் –,]

நிறம்போக்கி *niṟam-pōkki,* பெ. (n.) *நிறநீக்கி* பார்க்க; see *niṟanikki.*

[நிறம்+ போக்கி.]

நிறம்போடு—தல் *niṟam-pōḍu-,* 19. செ.குன்றாவி. (v.t.) நிறங் கொடுத்தல்; to tinge, give colour.

[நிறம் + போடு.]

நிறமாலை *niṟa-mālai,* பெ. (n.) வெண்ணிற ஒளி முப்பட்டகக் கண்ணாடியை ஊடுருவிச் செல்லும் போது ஏற்படும் ஏழு நிறத்தொகுப்பு; spectrum.

[நிறம் + மாலை.]

நிறமானபழத்தி *niṟamāṉa- paḻatti,* பெ. (n.) மணித்தக்காளி; black berried solanum-solanum nigrum. (சா.அக.).

நிறமி *niṟami,* பெ. (n.) (தோல், முடி, இலை முதலியவற்றிற்கு) நிறம் தரும் இயற்கையான நுண்பொருள் அல்லது (பொருளுக்கு) நிறம் கொடுக்கும் நுண்ணிய வேதிப் பொருள்; pigment (which gives something a particular colour).

[நிறம் → நிறமி.]

நிறமேற்று—தல் *niṟam-ēṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வண்ணமேற்றுதல்; to make colouring.

[நிறம் + ஏற்று.]

நிறவாளத்தி *niṟa-v-āllatti,* பெ. (n.) இசையின் ஆலாபனவகை (சிலப். 3. 26. உரை.); an elaboration of musical modes.

[நிறம் + ஆளத்தி .]

[ஆள் + அல் – ஆளல் 'அல்' தொழிற் பெயரீறு. ஆளல் – பாடிப் பாடிப் பழகிப் பண்படுத்திக்கொள்ளுதல். ஆளல் → ஆளத்தி – ஒரு பண்ணை ஆண்டு பாடுவது. ஆளத்தி – பாடிப்பழகி இனிமை மிகுவிக்கப்பட்ட ஓசையழகு.]

ஆளத்தி செய்யுமிடத்துத் தென்னா வென்றும் தெனாவென்றும் இரண் டிசையுங் கூட்டித் தென்னாதெனா வென்றும் பாடப் படும். இவைதாம் காட்டாளத்தி, நிறவாளத்தி, பண்ணாளத்தி என மூன்று வகைப்படும். இவற்றுட் காட்டாளத்தி அச்சுடனிகழும் நிறவாளத்தி நிறம் குலையாமற் பாரணை யுடனிகழும். பண்ணாளத்தி பண்ணையே கருதி வைக்கப்படும். (சிலப். 3:26. உரை.).

நிறவெறி *niṟa-veṟi,* பெ. (n.) மாந்தவினத்தில் சில இனத்தினர் உடல் நிற அடிப்படையில் தங்களை உயர்வானவர்களாகக் கருதிப் பிற நிறத்தவரைத் தாழ்வாக நடத்தும் முனைப்பான போக்கு; racism.

[நிறம் + வெறி.]

நிறவேற்றுமை[1] *nira -vērrumai,* பெ. (n.) *நிற வேறுபாடு*[1] பார்க்க; *see nira-vērupāḍu.*

[நிறம் + வேற்றுமை.]

நிறவேற்றுமை[2] *nira- vērrumai,* பெ. (n.) மாந்தவினத்தின் நிறத்தைக் கொண்டு உயர்வு தாழ்வு என்று வேற்றுமை கற்பிக்கும் போக்கு; discrimination on the grounds of colour (of skin). ***தென்னாப்பிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கை நிற வேற்றுமையின் அடிப்படையில் ஏற்பட்டது.*** (உ.வ.).

[நிறம் + வேற்றுமை.]

நிறவேறுபாடு[1] *nira-vērupāḍu,* பெ. (n.) வண்ணங்களின் வேறுபாடு; difference of colour. *விலங்குகளுக்கு நிறவேறுபாடு தெரியாது.* (உ.வ.).

[நிறம் + வேறு + பாடு.]

நிறவேறுபாடு[2] *nira-verupāḍu,* பெ. (n.) மாந்தருக்குள் பிறப்பை (நிறத்தை) அடிப்படை யாகக் கொண்டு காணும் வேற்றுமை; racial discrimination; apartheid.

[நிறம் + வேறுபாடு.]

நிறன் *niran,* நிறம்; colour. பெ. (n.) வண்ணம்; colour. ஒன்னார் உடங்குண்ணுங் கூற்றம் உடலே பொன்னோர் பவிரழல் நுடக்கதன் நிறனே (பரிபா. 2:51.).

[நிறம் – நிறன்.]

ம்–ன்–கடைப்போலி.

ஒ.நோ: கடம்→கடன்.

நிறா *nirā,* பெ. (n.) நறா (யாழ்.அக.); hardness in fruit.

[நறவு → நறா → நிறா.]

நிறீஇ *nirii,* வி.எ. (adv.) நிறுத்தி (பத்துப்பா); stopness. 2. நிறுவி; to prove.

[நில் → நிறுவி → நிறீஇ.]

நிறு–த்தல் *niru-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. தூக்குதல்; to weigh, poise, balance. 2. தீர்மானித்தல்; to decide, determine. *"நாள்வரை நிறுத்து"* (கலித். 31:23.). 3. படைத்தல், அமைத்தல்; to create, construct. ***"காமர்சாலை தனி நிறுமின் (சீவக.306*** ***4. வைத்தல்;*** to put, set, place. *நிறுத்த முறையானே"* (நன். 109. மயிலை.). 5. துலைதூக்கி எடை பார்த்தல்; to weigh by using a balance.

[நில் → நிறு. நில் → நிலு → நிலுவை = தங்குகை, கட்டளை, எச்சம். நிலு → நிறு–,]

நிறுத்தகாமவாயில் *nirutta-kāma-vāyil,* பெ. (n.) ஒத்த அன்பு; ஒத்த காதல் நிலை; similar affection. "பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு உருவு நிறுத்த காமவாயில்" (தொல்.பொருள்.மெய்.25.).

[நிறுத்த = தோன்றி நின்ற. காமம் = அன்பு. நிறுத்தம் + காமம் + வாயில்.]

நிறுத்தசொல் *nirutta-šol,* பெ. (n.) நிலை மொழி பார்க்க. *see nilai-moli.* ***"நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்று"*** (தொல். எழுத்து. 10.).

[நில் → நிலு → நிறு → நிறுத்து → நிறுத்தம். நிறுத்தம் + சொல்.]

நிறுத்தம்[1] *niṟuttam,* பெ. (n.) **1.** நிறுத்துகை (வின்.); stop, pause, as in reading. **2.** நிற்கு மிடம்; stopping place. *அடுத்த நிறுத்தத்தில் இறங்க வேண்டும். (உ.வ.).* **3.** தடுப்புக் கருவி, முட்டுக்கட்டை; instrument for retarding motion of wheel on vehicle, brake.

[நிறுத்து → நிறுத்தம்.]

நிறுத்தம்[2] *niṟuttam,* பெ. (n.) (பேருந்து) ஊர்தியில் மக்களை ஏற்றிக்கொள்ளவும் இறக்கிவிடவும் குறிப்பிடப்பட்ட இடம்; (bus) stop. கலைஞர் கருணாநிதி நகரில் பாவாணர் இல்லம் என்பதும் பேருந்து நிறுத்தங்களுள் ஒன்று. (உ.வ.). அண்ணா நகர் ஐயப்பன் கோயில் நிறுத்தத்திற்கருகில் அகரமுதலி இயக்கக அலுவலகம் அமைந்துள்ளது. (உ.வ.).

[நிறுத்து → நிறுத்தம்.]

நிறுத்தமை *niṟuttamai,* பெ. (n.) நிலை நாட்டுதல் (பிரதிட்டை செய்தல்); erection. "இராகவனீடிலிங்கம் மிதியாமை நிறுத்தமை பேசுவ னென்று பேசும்" (சேதுபு. இராமனருச் 5.).

[நிறுத்து→ நிறுத்தமை]

நிறுத்தல் *niṟu-t-tal,* பெ. (n.) தடுத்தல்; stop. ஒறுப்ப ஓவலை நிறுப்ப நில்லலை புணர்ந்தோர் போலப் போற்றுமதி நினக்கியான் கிளைஞன் அல்லனோ நெஞ்சே (அகநா. 342.).

[நிறுத்து → அல்.]

நிறுத்தலளவை[1] *niṟuttal-aḷavai,* பெ. (n.) **1.** நிறையளவு; weighing. **2.** நிறுத்தல் வாய்பாடு; table of weighing.

[நிறுத்தல் + அளவை.]

நிறுத்தலளவை[2] *niṟuttal-aḷavai,* பெ. (n.) பொருள்களின் எடையைக் கணக்கிடு வதற்கான முறை; measure of weight.

[நிறுத்தல் + அளவை.]

நிறுத்தளத்தல் *niṟuttaḷattal,* பெ. (n.) நிறுத்தலளவை பார்க்க (தொல். எழுத்து. 7. உரை.); see *niruttal-aḷavai.*

[நிறுத்து + அளத்தல்.]

நிறுத்தி *niṟutti,* வி.எ. (adv.) **1.** தடை செய்தல்; to stop. உன் புகைப் பழக்கத்தை உடனே நிறுத்தி விடு (உ.வ.). **2.** தகுந்த இடை வெளிவிட்டு, மெதுவாக; giving pause; slowly *பாடத்தைச் சற்று நிறுத்திப்படி (உ.வ.). நெல்லை நிறுத்தி அளந்துபோடு. (உ.வ.).*

[நில் → நிறுத்து + இ.]

நிறுத்திக்கொள்(ளு)—தல் *niṟutti-k-koḷ(ḷu)-,* 10 செ.குன்றாவி. (v.t.) **1.** நிறுத்து- பார்க்க, *see niruttu-,* **2.** நிறைவேற்றுதல் (வின்.); be bring about; to accomplish an object. **3.** மதிப்பிடுதல் (உத்தேசித்தல்) (வின்.); to make an estimate, form a plan in the mind.

[நிறுத்தி + கொள் –,]

நிறுத்திச்சொல்(லு)—தல் *niṟutti-c-col(lu)-,* 8 செ.குன்றாவி. (v.t.) வேகமின்றித் தெளிவாய்ச் சொல்லுதல்; to pronounce slowly and distinctly with proper pauses.

[நிறுத்தி + சொல் –,]

நிறுத்திப்பிடி[1]–த்தல் *niṟutti-p-piḍi-*, 4 செ.கு.வி. (v.i.) **1.** கண்டிப்பாதல் (வின்.); to be rigid, strict, sharp. **2.** நிலைநிற்றல் (யாழ்.அக.); to stand firm, persist.

[நில் → நிறு → நிறுத்து → நிறுத்தி. நிறுத்தி + பிடி –,]

நிறுத்திப்பிடி[2]–த்தல் *niṟutti-p-piḍi-*, 4 செ.குன்றாவி. (v.t.) **1.** சிறு குற்றங்களைக் கவனித்தல்; to go minutely, as into ones little faults. **2.** தூக்கிப் பிடித்தல் (யாழ்.அக.); to hold aloft.

[நில் → நிறு → நிறுத்து – நிறுத்தி + பிடி –,]

நிறுத்தியெழுது–தல் *niṟutti-y-eḻudu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **1.** செவ்வையாயிருக்கும் படி மெதுவாய் எழுதுதல்; to write legibly and slowly. **2.** இடம் விட்டெழுதுதல் (வின்.); to leave proper speces in writing. **3.** எழுத்துகள் சாய்வின்றி நிமிர்ந்து நிற்கும்படி எழுதுதல் (வின்.); to write an upright hand.

[நிறுத்தி + எழுது–,]

நிறுத்திவிடு–தல் *niṟutti-viḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒன்றை நிலையாக நிறுத்தி விடுதல்; to stop constantly.

[நிறுத்தி + விடு.]

நிறுத்திவை–த்தல் *niṟutti-vai*, 4 செ.குன்றாவி. (v.t.) தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு செயலை இடைக்காலமாக நிறுத்துதல்; to stop temprorily the continuious process.

[நிறுத்தி + வை.]

நிறுத்து[1]–தல் *niṟuttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **1.** நிமிர நிற்கச் செய்தல்; to setup, raise erect, plant. *"வெயில் வெரி நிறுத்த பயிலிதழ்ப் பசுங்குடை"* (அகநா. 37.). **2.** நிலை நாட்டுதல்; to fix on a firm basis; to set up, establish in life. நீதானா என் குடும்பத்தை நிறுத்தியவன்? (உ.வ.). **3.** முடிவுசெய்தல்; to determine, resolve. **4.** மனத்தை ஒருநிலையில் இருத்துதல்; to concentrate, as the mind. **5.** பணியமர்த்தல்; to appoint, place in office. **6.** பேணுதல் (வின்.); to maintain, support. **7.** சீர்திருத்துதல் (வின்.); to restore to better circumstances; to re-establish; to reform. **8.** தழுவிக் கொள்ளுதல் (இறை. களவி. 12.); to keep one on friendly terms. **9.** ஒப்புவித்தல் (வின்.); to place under ones charge. **10.** மேற் செல்லாதிருக்கச் செய்தல்; to stop as a person; to arrest progress. **11.** தள்ளி வைத்தல் (வின்.); to put off; defer, postpone. **12.** படிக்கும் போதும் பாடும் போதும் உரியவிடங்களில் நிறுத்துதல் (வின்.); to make proper pauses, as in reading or singing. **13.** விலக்குதல்; to dismiss, suspend. அவரைப் பணியிலிருந்து நிறுத்திவிட்டார். (உ.வ.) **14.** செய்யாதொழிதல்; to put an end to. மதுகுடிப்பதை எப்போதோ நிறுத்தி விட்டான். (உ.வ.). **15.** அவித்தல்; to put out, extinguish, as a lamp. *"விளக்கமெய்யிற் காற்றினா னிறுத்தி"* (உபதேசகா. சிவத்துரோ. 492.).

க. நிரிசு. ம. நிறுத்துக.

[நில் → நிறு → நிறுத்து–,]

நிறுத்து[2]–தல் *niṟuttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) (பொருளைத் துலையில் வைத்து) எடையைக் கணக்கிடுதல், எடை போடுதல்; to weigh. பழைய நகையை நிறுத்துப் பார்த்தபோது தேய்மானத்தால் எடை குறைந்திருப்பது தெரிய வந்தது. (உ.வ.).

[நில் → நிறு → நிறுத்து–,]

நிறுத்து³–தல் *niṟuttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) **1.** (ஒரு நோக்கத்திற்காக) நிற்கச் செய்தல்; to stop (a vehicle, etc.) *போக்குவரத்துக் காவலர் கையைக் காட்டியதும் வண்டியை நிறுத்தி விட்டார். (உ.வ.). மாடு குறுக்கே வருகிறது, வண்டியை நிறுத்து. (உ.வ.).* **2.** (பேச்சை) மேற்கொண்டு நிகழாதபடி செய்தல்; to stop (in activity.) *பேச்சை நிறுத்து. (உ.வ.). குழந்தை அழுவதை நிறுத்தி விட்டுச் சிரித்தது (உ.வ.). போராட்டத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு நிறுத்தப் பட்டது. (உ.வ.).* **3.** (மின் விசிறி, மின்விளக்கு போன்றவற்றின்) செயல்பாட்டை நிற்கச் செயல்; to stop (the functioning of some-thing); to switch off. *இருக்கையை விட்டுச் செல்லும் போதும் தேவையில்லாத போதும் விளக்கையும் விசிறியையும் நிறுத்திவிட்டுச் செல்வதே பண்புடைய செயல். (உ.வ.).* **4.** (வண்டியை, ப்டை முதலியவற்றை அல்லது வீரர் முதலியோரை ஓரிடத்தில்) இருக்க விடுதல்; to park (a vehicle); station (an army, a sentty). *மிதிவண்டியை ஓரமாக நிறுத்து. (உ.வ.). எல்லைப் பகுதியில் பட்டாளத்தை நிறுத்தி வைத்துள்ளனர். (உ.வ.). தேர்தலின் போது எல்லா வாக்குச் சாவடிகளிலும் காவலர்கள் நிறுத்தப் படுவார்கள். (உ.வ.).* **5.** (ஒருவரைக்) காத்திருக்கச் செய்தல்; to make (some one) wait (so as to join him or her later) *அம்மாவைக் கடை முன்னால் நிறுத்திவிட்டு வந்துள்ளேன் விரைந்து திரும்ப வேண்டும். (உ.வ.).* **6.** (மற்றொருவர் முன் ஒருவரைக்) காணும்படி வைத்தல்; to produce (some-one before someone). *கொலையாளியைக் கண்டுபிடித்து என் முன் கொண்டுவந்து நிறுத்த வேண்டுமெனக் கட்டளையிட்டார். (உ.வ.) அவருடைய பாடல் இயற்கையழகை நம் முன் நிறுத்துகிறது. (உ.வ.).* **7.** (மனத்தை ஒன்றில்) நிலைக்கச் செய்தல்; to focus (mind on something) மனத்தை அலை பாயவிடாமல் நிறுத்த ஊழ்கம் உதவுகிறது. (உ.வ.). **8.** (தேர்தலில்) போட்டியிட வைத்தல்; to putup (a candidate in an election) to field. *'எங்கள் கட்சி எல்லாத் தொகுதிகளிலும் வேட்பாளரை நிறுத்தும்'* என்று எதிர்க்கட்சித் தலைவர் அறிவித்தார். (உ.வ.).

[நில் → நிறு → நிறுத்து–,]

நிறுத்து⁴ *niṟuttu*, பெ. (n.) இசைப்பாட்டின் சிறுபகுதி (இ.வ.); a single unit of a musical piece.

[நிறு → நிறுத்து.]

நிறுத்துக்கட்டு–தல் *niṟuttu-k-kaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) அளவிடுதல் (யாழ்.அக.); to make an estimate; to determine; to fathom.

[நிறு – தூக்கு, தூக்கி அளவிடு, அளவிடு. நிறு → நிறுத்து + கட்டு–.]

நிறுத்துகட்டை *niṟuttu-kaṭṭai*, பெ. (n.) ஓட்டத்தைத்தடுத்து நிறுத்தும் கட்டை: stop log.

[நிறுத்து + கட்டை.]



நிறுத்துப்பார்[1]–த்தல் *niṟuttu-p-pār-,* 4 செ.குன்றாவி. (v.t.) எடையளவை ஆய்ந்து பார்த்தல்; to weigh, examine the weight of. *அந்தக் கடையில் வாங்கிய நகையை நிறுத்துப் பார்த்த பிறகுதான் எடை குறைவாயிருப்பது தெரியவந்தது. (உ.வ.).*

[நிறு → நிறுத்து + பார்–,]

நிறுத்துப்பார்[2]–த்தல் *niṟuttu-p-pār-,* 4 செ.குன்றாவி. (v.t.) **1.** கருதிப் பார்த்தல்; to cosider. *இருதரப்பையும் நிறுத்துப் பார்த்துத் தீர்ப்புச் சொல். (உ.வ.).* **2.** ஆழ்ந்து ஆராய்தல்; to deliberate. *நன்றாக நிறுத்துப் பார்த்துத் தீர்வு செய். (உ.வ.).* **3.** தீர எண்ணிப்பார்த்தல்; to ponder. *எதையும் நிறுத்துப் பார்த்த பின்பே முடிவுக்கு வரவேண்டும். (உ.வ.).* **4.** ஒப்பிடுதல்; to compare. *அவரை இவரோடு நிறுத்துப் பார்த்தல் நன்றன்று. (உ.வ.).*

[நிறுத்து + பார்.]

நிறுத்துமுள் *niṟuttu- muḷ,* பெ. (n.) துலையின் நடுமுள் (புதுவை.); middle of a scale.

[நிறுத்து + முள். நில் → நிறு.]

நிறுத்துமுள்ளு *niṟuttu- muḷḷu,* பெ. (n.) *நிறுத்துமுள்* பார்க்க; see *niṟuttua-muḷ.*

[நிறுத்து + முள்ளு. முள் → முள்ளு.]

நிறுதிட்டம் *niṟu-tiṭṭam,* பெ. (n.) **1.** நேர்நிற்கை; erectness, perpendicularity, uprightness. **2.** விறைப்பு; stiffness in posture or carriage.

[நில் → நிறு → நிறுவு + திட்டம்.]

நிறுப்பான் *niṟuppāṉ,* பெ. (n.) **1.** துலை (பிங்.); balance. **2.** துலையோரை (திவா.); libra in the zodiac.

[நில் → நிறு → நிறுப்பான்.]



நிறுப்பு[1] *niṟuppu,* பெ. (n.) **1.** நிறுவுதல்; establish. **2.** நிறுத்துகை; erection, stop.

[நில் → நிறு → நிறுப்பு.]

நிறுப்பு[2] *niṟuppu,* பெ. (n.) சுணக்கம் (தாமதிப்பு); late.

[நில் → நிறு → நிறுப்பு]

நிறுபூசல் *niṟu-pūšal,* பெ. (n.) **1.** *நிறைபூசல்* (வின்.) பார்க்க; *see niṟaipūšal,* **2.** மும்முரம் (யாழ். அக.); condition of being in full swing.

[நிறு + பூசல்.]

நிறுவனம் *niṟuvaṉam,* பெ. (n.) **1.** ஊழியர், தொழிலாளர் முதலியோரைக் கொண்டு வணிகம், தொண்டு முதலியவற்றை மேற்கொள்வதற்கான ஆளுகை அமைப்பு; firm, concern. *ஆடை ஏற்றுமதி நிறுவனம் ஒன்றில் அவர் வேலை செய்கிறார். (உ.வ.). இந்த நிறுவனம் தன் தொழிலாளர்களுக்கு அதிக ஊக்கத் தொகை அளிக்க முன்வந்துள்ளது. (உ.வ.).* **2.** கல்வி, ஆய்வுப்பணி அமைப்பு;

(educational, research) institution, establishment. *அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். தனியார் கல்வி நிறுவனங்கள்.*

[நில் → நிறு → நிறுவு
நிறுவு → நிறுவனம்.]

நிறுவு¹–தல் *niṟuvu-*, 5 செ. குன்றாவி. (v.t.) **1.** (மாதிகை, தாளிகை, அமைப்பு போன்றவற்றை முதன் முதலாக) தொடங்குதல், ஏற்படுத்துதல்; to found, to start, to constitute. *தென்மொழி மாதிகையை நிறுவியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார். (உ.வ.). பாவாணர் பெயரில் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஓர் அறக் கட்டளையை நிறுவப் பலரும் கொடையளித்தனர். (உ.வ.). இந்த உசாவற்குழு எதற்காக நிறுவப்பட்டதோ அதிலிருந்து திசைமாறிச் செல்கிறது. (உ.வ.).* **2.** (கட்டடம், வரவேற்பு வளைவு முதலியவற்றை ஓரிடத்தில்) உருவாக்குதல், எழுப்புதல்; to be erect, to set up. *பாவாணர் பிறந்த ஊரில் பாவாணர் கோட்டத்தை நிறுவிட தமிழக அரசு நிதி ஒதுக்கிடவுள்ளது. (உ.வ.). முதல்வரின் வருகையை ஒட்டிச் சாலையில் பல ஒப்பனை வளைவுகள் நிறுவப்பட்டுள்ளன. (உ.வ.).* **3.** (எந்திரம், பொறி, சிலை முதலியவற்றைக் கொண்டுவந்து ஓரிடத்தில்) பொருத்துதல், அமைத்தல்; to install (a statue, machinery etc.). *மொழிப் போராளிகளின் சிலை நிறுவப்படும். (உ.வ.). தொழிற்சாலை ஆட்சிக்குழு நச்சு நீக்கும் கருவியை நிறுவ ஒப்புக் கொண்டுள்ளது. (உ.வ.).* **4.** (ஒரு கருத்தைத் தக்க சான்றுகளுடன்) நிலை நாட்டுதல், வலியுறுத்தல்; establish (a fact one's argument etc.). *பல்லவர் காலத்தில் தமிழகத்தில் கலைகள் சிறந்திருந்தன என்பதை நிறுவுக. (உ.வ.). அவர் தன் கருத்தைப் பிறர் மறுக்க முடியாதபடி நிறுவுவதில் வல்லவர். (உ.வ.).*

[நில் → நிறு → நிறுவு.]

நிறுவு²–தல் *niṟuvu-*, **5.** செ.குன்றாவி. (v.t.) நிறுத்து–, பார்க்க; see niṟuttu-.

[நில் → நிறு → நிறுவு–,]

நிறுவுகை *niṟuvugai-*,பெ.(n.) கோட்பாட்டை மறுப்புக்கிடமின்றி தக்க சான்றுகளுடன் நிலைநாட்டுகை; prove the theory with proper evidence.

[நில் → நிறு → நிறுவு → நிறுவுகை–,]

நிறுவுதல் *niṟuvudal-*, பெ. (n.) *நிறுவுகை* பார்க்க; see *niṟuvugai.*

[நிறு → நிறுவு → நிறுவுதல்–,]

நிறுவை *niruvai-*, பெ.(n.) **1.** எடையிடும் முறை; method of weighing. **2.** எடைக்கல்; weighing unit. **3.** எடையிடும் கருவி; weighing machine.

[நில் → நிறு → நிறுவை–,]

நிறை¹–தல் *niṟai-*, **2.**செ.கு.வி. (v.i.) **1.** நிரம்புதல்; to become full, to be replete. "*நிறையின்ன முதை*" (திருவாச. 27:4.). **2.** மிகுதல்; to abound; to be copious, plenteous, profuse. **3.** எங்கும் நிறைந்திருத்தல் (வியாபித் திருத்தல்); to be every where; to pervade. **4.** பொந்திகையாதல்; to be satisfied, contended. "*நிறைந்த மனத்து மாதரும்*" (திருவாலவா. 38.5.). **5.** அமைதியாதல்; to be silent. நிறைந்திருங்கள் (வின்.).

க. நிரி **ம.** நிறியக.

[நில் → நிறு → நிறை.]

நிறை²–தல் *nirai-*, 2 செ.கு.வி. (v.i.) 1. நிரம்புதல்; to be or become full. *மழை பெய்ததால் ஏரி குளங்கள் நிறைந்தன. (உ.வ.) வயிறு நிறைந்துவிட்டது. (உ.வ.).* 2. (குறிப்பிட்ட அகவை) முடிதல்; to complete (years of life). இந்த ஆண்டுடன் என் மகளுக்குப் பத்து அகவை நிறைகிறது. (உ.வ.).

[நில் → நிறு → நிறை–,]

நிறை³–தல் *nirai-*, 2 செ.கு.வி. (v.i.) 1. நிறை வடைதல்; முழுமையாதல் (சூ.நிக.8:15.); to complete. 2. பெருகுதல்; fill. "*நிறைதலொடு குறைதலாய்*" (சிவரக. 1. கணபதிவந். 19.).

[நில் → நிறு → நிறை–,]

நிறை⁴–த்தல் *nirai-*, 11 செ.குன்றாவி. (v.t.) 1. நிரம்பச்செய்தல்; to fill, make full; to supply abundantly. "*குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும் நெட்டெழுத் திம்பர் ஒத்த குற்றெழுத்தே*" (தொல். எழுத்து. 41.). 2. பரவச் செய்தல் (வின்.); to diffuse, cause to pervade, suffuse. 3. திணித்தல் (வின்.); to stuff, cram.

ம. நிறுக்க.

[நில் → நிறை–.]

நிறை⁵ *nirai*, பெ. (n.) 1. நிறுக்கை (பிங்.); weighing. 2. துலை (பிங்.); scale, balance. 3. துலை ஓரை (திவா.); libra, in the zodiac. 4. எடை; standard weight. "*காவெனிறையும்*" (தொல்.எழுத்து. 169.). 5. நூறு பலங் கொண்ட அளவு (சூடா.); weight of 100 palam.6. வரையறை (திவா.); measure, standard, degree.

[நில் → நிறு → நிறை.]

நிறை⁶ *nirai*, பெ. (n.) 1. சிதைவுபடா முழுமை (பூர்த்தி); completion. completeness. "நிறைப் பெருஞ் செல்வத்து நின்றக்கடைத்தும்" (நாலடி, 360.). 2. எண்வகைப் பாடற் பயன்களுள் ஒன்று (சிலப். 3:16, உரை.); fulness repletion, copiousness, one of eight pāḍaṟpayaṉ 3. மாட்சிமை; excellence, splendour, "*வானவரேத்து நிறைகழலோன்*" (திருவாச. 13:13.). 4. அடுத்தடுத்துவரும் பண்; note repeated often in siging a musical piece. 5. இரண்டு தாக்குடைய தாளவகை (பரிபா. 17:18.). a time-measure consisting of two beats. 6. நீர்ச்சால் (சூடா.); large water-pot. 7. நாட்கதிரும் நெல்லும் ஒரு பானையிலிட்டு நிறைக்கும் நிகழ்வு. (நாஞ்.); the ceremony of filling up a pot with nāt-kadir and paddy. 8. ஆசை (அக.நி.); desire.

க. நெறெ.

[நில் → நிறை–,]

நிறை⁷ *nirai*, பெ. (n.) 1. நிறுத்துகை; bringing to stand; stopping. "*நிறையருந் தானையொடு*" (மணிமே. 9:26.). 2. வைத்து அமைக்கை; fixed position or arrangement. "*நிறைக்கற் றெற்றியும்*" (மணிமே.6:6.). 3. மனத்தைக் கற்புவழியில் நிறுத்துகை; firm adherence to a life of chastity. "*நிறைகாக்குந் காப்பே தலை*" (குறள், 57.). 4. ஆடுஉக் குணம் நான்கனுள் ஒன்றான காப்பனகாத்துக் கடிவன கடியுந் திண்மை (பிங்.), (இறை. 2:29.); strength of mind, moral firmness, one of four āḍū-u-k-kuṇam. 5. மனவடக்கம்; complete self control. "*நிறையெனு மங்குசம்*" (கம்பரா.

மிதிலை.40.). **6.** கற்பு; chastity, marital fidelity. "*நிறையிற் காத்துப் பிறர்பிறர்க் காணாது*" (மணிமே.18:100.). **7.** சூளுரை (சபதம்); vow. "இண்டை புனைகின்ற மாலை நிறையழிப்பான்" (தேவா.1040:4.). **8.** வலிமை; strength. "*கன்னிறையழித்த மொய்ம்பு*" (கந்தபு. இரண்டாநாள். சூர. யுத். 24.). **9.** அறிவு (அக.நி.); knowledge. **10.** மறைபிற ரறியாமை (கலித்.133.); non-betrayal of one's secrets, silent enduring of one's troubles. **11.** அழிவின்மை (சூடா.); indissolubility, imperishableness. **12.** சமன்மை (வின்.); equity, **13.** நிமிர் நேர்வு; uprightness **14.** கூறுபடா முழுமை; integrity. **15.** மனஒருமை; concentration. "*கழல்களை நிறையால் வணங்க*" (தேவா. 502:6.).

[நில் → நிறை.]

நிறை[8] *niṟai,* பெ. (n.) மிகுதி; abundance. "*நிறையென்று மிகுதியாய்*" (ஈடு.1,2,3.).

[நில் → நிறு → நிறை.]

நிறைக்குளப்புதவு *niṟai-k-kuḷa-p-pudavu,* பெ. (n.) நீர் நிறைந்திருத்தலையுடைய குளத்தின் வாய்த்தலை; head-sluice of a water tank. "*நிறைக்குளப் புதவின் மகிழ்ந்தனெனாகி*" (புறநா. 376.).

[நிறைக்குளம் + புதவு]

நிறைக்கோற்றுலாம் *niṟai-k-kōṟṟulām,* பெ. (n.) நிறுக்கும் துலாக்கோல்; balance, scale. "*நிறைக்கோற் றுலாத்தர் பறைக்கட் பராரையர்*" (சிலப்.14:208.).

[நிறைக்கோல் + துலாம்.]



நிறைகட்டு[1]–தல் *niṟai-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** எடைகட்டுதல்; to make up a weight equal to given thing. **2.** மதிப்புக்குத் தக்கவாறு பண்டமாற்றம் செய்தல் (வின்.); to barter, give commodities of equal value in return for other commodities.

[நிறை + கட்டு–,]

நிறைகட்டு[2]–தல் *niṟai-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) பாலொடு நீரைக்கலத்தல்; to mix the water with milk.

[நிறை + கட்டு–,]

நிறைகட்டியபால் *niṟai-kaṭṭiya-pāl,* பெ. (n.) நீர் கலந்த பால்; water mixed milk.

[நிறை + கட்டிய + பால்.]

கறந்த பாலுக்கு மறுதலையானது.

நிறைகர்ப்பம் *niṟai-karppam,* பெ. (n.) நிறைகருப்பம் பார்க்க; *see niṟai-karuppam.*

[நிறை + கர்ப்பம்.]

நிறைகர்ப்பிணி *niṟai-karppiṇi,* பெ. (n.) நிறைகருப்பிணி பார்க்க; *see niṟai-karuppiṇi.*

[நிறை + கர்ப்பிணி. சூல் கொண்டவளைச் சூலி என்றழைப்பதே தமிழ்வழக்கு.]

நிறைகரகம் *niṟai -karagam,* பெ. (n.) மாரியம்மன் முதலிய பெண் தெய்வங்களின் பொருட்டுத் தலைமேல் வைத்து ஆடிக் கொண்டு எடுத்துச் செல்லப்படுவதும் நீர் நிரம்பப் பெற்றதும் பூக்களால் ஒப்பனை செய்யப்பட்டதுமான குடம் (வின்.); vessel filled with water decorated with flowers and carried on one's head for propitiating mariammaṉ and other deities.

[நிறை + கரகம்.]



நிறைகருப்பம் *niṟai-karuppam,* பெ. (n.) முழுவளர்ச்சியடைந்த கருப்பம்; advanced pregnancey.

[நிறை + கருப்பம்.]

நிறைகருப்பிணி *niṟai-karuppiṉi,* பெ. (n.) முழுமையான கருப்பமுடையவள்; woman in advanced pregnancy.

[நிறை + கருப்பிணி.]

நிறைகல் *niṟai-kal,* பெ. (n.) எடைக்கல், படிக்கல்; standard weight.

[நிறை + கல்.]



நிறைகல்நகை *niṟai-kal -nagai,* பெ. (n.) மதிப்பு மிகு மணிக்கற்களை மிகுதியாக வைத்திழைத்த நகை; ornament set profusely with precious stones, as dist. fr. cuṟṟukkal-nagai.

[நிறை + கல் + நகை.]

நிறைகலவை *niṟai-kalavai,* பெ. (n.) செழுமையாகக் கலக்கப்பட்ட கலவை: rich mixiture.

[நிறை + கலவை.]

நிறைகலை *niṟai-kalai,* பெ. (n.) **1.** குறைவிலா முழுமை; fulness. completion of the parts. **2.** தெய்வப் படிமையின் முகத்திற் காணப் பெறும் ஒளிவட்டம்; splendour in the face of an idol from a supposed divine immanence. **3.** முழு நிலவு; வெள்ளுவா; full moon. **4.** தெய்வ வெறி; possession of a person by a deity or demon. **5.** முழு வெறி (வின்.); being intoxicated; top-heaviness. **6.** முழுத் தோற்றரவு; (பூரணாவதாரம்); the manifestation of a deity in its full glory.

[நிறை + கலை.]

நில் → நிறை.

குல் → கல் → கலை.

குல்= தோற்றம், பொலிவு, அழகு, முழுமை ஆகியவற்றைக் குறிக்கும் வேர்.

நிறைகன்றுத்தாய்ச்சி *niṟai-kaṉṟu-t-tāycci,* பெ. (n.) கன்றொடு கூடிய ஆன் (யாழ்ப்.); cow with calf.

[நிறை + கன்று + தாய்ச்சி.]

நிறைகாவல் *niṟai -kāval,* பெ. (n.) காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகுதல் (இறை. 27.); முழுமையான காப்பு; complete security. (உ.சொ.களஞ்.).

[நிறை + காவல்.]

நிறைகுடம் *niṟai-kuḍam,* பெ. (n.) நீர் (நிறைந்தளவுள்ள) குடம்; a pot full of water. "நிறைகுடத்திட்ட கை புல்லினும் போதினும் நெகிழாமற் புணர்ந்தனராயும் நிரையினர்கள்" (சிலப்.1:58. உரை.).

[நிறை + குடம்.
நில் → நிறை
குல் → குள் → குடம்.]

நிறைகுறை *niṟai-kuṟai,* பெ. (n.) ஆளத்தித் தொழில்கள்; mode of musics, improvised introduction to a melody. "*பாடினி முரலும் பாலையங் குரலின் நீடுகிளர் கிழமை நிறைகுறை தோன்ற ஒரு திறம்*" (பரிபா. 17:18.).

[நிறை + குறை]

நிறைகோல் *niṟai-kōl,* பெ. (n.) துலைக்கோல்; balance. "*நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்*" (நன்.26.).

[நிறை + கோல்.]

நில் → நிறை = எடை. குல் → குலவு. குலவுதல் = வளைதல். குலவு → குலாவு. குலுத்தல் = வளைந்த காயுள்ள கொள். குலுக்கை = உருண்டு திரண்டகுதிர். குல் → (கொல்) → கோல் = உருட்சி, திரட்சி, உருண்டு திரண்ட நீண்டகோல். நீண்ட கோலின் இருபுறமும் தட்டு களைத் தொங்கவிட்டுத் துலையாகப் பயன் படுத்தியமையால் துலைக் கோலையும் கோலெனவே வழங்கினர்.



நிறைச்சளவு *niṟaiccaḷavu,* பெ. (n.) சரியான அளவு (தெ.க.தொ. ii: 107.); full and correct measure.

[நிறை → நிறைத்த → நிறைச்ச+அளவு.]

நிறைசபை *niṟai-šabai,* பெ. (n.) பெரியசபை; large assembly.

[நில் → நிறை = முழுமை, பெருமை. அவை → சவை → சபை.]

நிறைசன்னி *niṟai-šaṉṉi,* பெ. (n.) இசிவு நோய் (வின்.); severe fit of apoplexy.

[நிறை + சன்னி.]

நிறைசெல்வம் *niṟai-šelvam,* பெ. (n.) நிரம்பிய சொத்து; abundant wealth.

[நிறை + செல்வம்.]

நிறைசெல்வன் *nirai-šelvan,* பெ. (n.) 1. நிறைந்த சொத்துடையவன்; (குபேரன்) (உரி.நி.); Kubera, as a person of immense wealth 2. மணமகன்; bridegroom.

[நிறை + செல்வன்.]

நிறைசெலுத்து–தல் *nirai-šeluttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கொண்டு செலுத்துதல் (நெல்லை); to bring to fruition, contending against difficulties.

[நிறை + செலுத்து–,]

நிறைசூல் *nirai-šūl,* பெ. (n.) 1. முழு வளர்ச்சி யடைந்த கருப்பம்; advanced pregnancy. 2. மேகம் பொழிதற்குக் கருக் கொண்டுள்ள நிலை; heaviness of a cloud ready to drop rain. 3. மிகுதியாகப் பூக்கும் நிலை (வின்.); teeming with buds ready to blossom or bear.

[நிறை + சூல்
நில் → நிறை = முழுமை, நிறைவு.]

நிறைசூலி *nirai-šūli,* பெ. (n.) முழுமையான கருப்பமுடையவள்; woman in advanced pregnancy.

[நிறை + சூலி. நில் → நிறை. சூல் → சூலி.]

நிறைசெறிவு *nirai-šerivu,* பெ. (n.) தெவிட்டு நிலை; saturation, state of being saturated.

[நிறை + செறிவு.]

நிறைதப்பு *nirai-tappu,* பெ. (n.) வழுவான நயன்மை (யாழ்.அக.); miscarriage of justice.

[நிறை + தப்பு.]

நிறைதருதுறு *niraitaruturu,* பெ. (n.) சீந்தில்; moon creeper-menispermum cordifolium alias tindsphora cardifolium. (சா.அக.).

நிறைந்தகுணம் *nirainda-gunam,* பெ. (n.) 1. பொந்திகையுள்ள மனத்தன்மை; satisfied, contended state of mind. 2. மகிழ்ச்சியுள்ள (சித்தம்) மனநிலை; cheerful disposition.

[நிறைந்த + குணம்.]

[நிறை + குணம். நில் → நிறை = நிறைவு, பொந்திகை. உல் → குல் → குணம் = வளைவு, அடங்கிய தன்மை, பணிவு, ஒத்துவருமியல்பு, நலம், மேன்மை மேம்பட்டு விளங்கும் திறம், அறிவு.]

நிறைந்தன்று *niraintanru,* பெ. (n.) நிறைந்தது; fullfil. "*துகில் சேர் மலர் போல் மணிநீர் நிறைந்தன்று*" (பரிபா. 12:93.).

[நிறை → நிறைந்து → நிறைந்தன்று]

நிறைந்திடு–தல் *niraindidu-,* 18 செ. குன்றாவி. (v.t.) நிறை–, பார்க்க; *see nirai-,*

[நிறைந்து + இடு.]

நிறைந்தவீடு *nirainda-vidu,* பெ. (n.) 1. மங்கல மனை; house in prosperity. 2. திருமண வீடு (வின்.); marriage house.

[நிறைந்த + வீடு.]

நிறைந்தமனம் *nirainda -manam,* பெ. (n.) நிறைந்த குணம் பார்க்க; *see nirainda gunam.*

[நிறைந்த + மனம்.]

நிறைந்தமனிதன் *niṟainda -maṉidaṉ,* பெ. (n.) நிறைந்த மாந்தன் பார்க்க; see *niṟanda- māndaṉ.*

[நிறைந்த + மனிதன்.]

நிறைந்தமாந்தன் *niṟainda -māndaṉ,* பெ. (n.) உயர்குணமுடையான் (வின்.); perfect man; noble minded person.

[நிறைந்த + மாந்தன். நில் → நிறை = நிறைவு, பொந்திகை, உயர்வு, உயர் குணம்.]

நிறைநரம்பு *niṟai-narambu,* பெ. (n.) ஏழு சுரமுள்ள பண் (திவா.); primary melody, heptatonic. opp. to kuṟai narambu.

[நிறை + நரம்பு.]

நிறைநாழி *niṟai-nāḻi,* பெ. (n.) மங்கலக் குறியாக நெல் வைத்து நிரப்பிய நாழி; a measure filled with paddy, used on auspicious occasions.

[நிறை + நாழி.]



நிறைநாழிவை[1]–த்தல் *niṟai-nāḻi-vai-,* 4 செ.கு.வி. (v.i.) திருமண முதலியவற்றில் மங்கலக் குறியாகப் படியில் கூலத்தை நிரம்பப் பெய்தல்; to place a measure filled with paddy, as at a marriage, deemed auspicious. *"பொற்கோலமிட்டு நிறைநாழி வையாய்"* (குமர. பிர. மீனாட். குறம். 6.).

[நிறை + நாழி + வை–,]

நிறைநாழிவை[2]–த்தல் *niṟai-nāḻi-vai-,* 4 செ.கு.வி. (v.i.) சாச் சடங்கி னொன்று; a kind of ceremony on death.

[நிறை + நாழி + வை–,]

நிறைநிலவு *niṟai-nilavu,* பெ. (n.) முழுநிலவு; வெள்ளுவா; full moon.

[நிறை + நிலவு.]

நிறைநீர்வேலி *niṟai-nīr-vēli,* பெ. (n.) 1. கானல்நீர்,பேய்த்தேர்; mirage. *"நிறைநீர் வேலியு முறைபடக் கிடந்த"* (சிலப். 11:69.). 2. உடை குளம்; breached tank. "அறையும் பொறையு மாரிடை மயக்கமும் நிறைநீர் வேலியு முறைபடக்கிடந்தே" (சிலப். 11:69.).

[நிறை + நீர் + வேலி.]

நிறைநீராவி *niṟai-nīrāvi,* பெ. (n.) ஈரத் தன்மை மிகுந்த நீராவி; saturated steam.

[நிறை + நீர் + ஆவி.]

நிறைப்பு *niṟappu,* பெ. (n.) உடம்பிற்கு ஊட்டமூட்டும் மருந்து; a medicine that gives tone to the system-tonic. (சா.அக.).

நிறைபடி *niṟai-paḍi,* பெ. (n.) தலைதட்டாத படி, தலை வெட்டாமல் அளக்கும்படியளவு; (while using a measure) with the partion of grain above the brim. நிறைபடியாய் அளந்து போடு.(உ.வ.)

[நிறை + படி.]

கூலங்களை யளக்க படி, மரக்கால், வள்ளம் போன்றவைப் பயன் பாட்டிலிருந்தன. அதனைக் கொண்டளக்கும் போது கூலங்கள் நிறையளவாய் இருக்கும் வகையில் அளக்கப்பட்டது. பதின்ம அளவையாகிய மெட்ரிக் அளவை வழக்கிற்கு வந்ததும், தலையைத் தட்டியளக்கும் வழக்கம் நடைமுறைக்கு வந்துவிட்டது. கூலத்தை அளக்கும் போது வழிய வழிய அளந்தால் மேன்மேலும் பெருகுமென்பது பண்டையர் நம்பிக்கை போலும்.

நிறைபணி *niṟai-paṇi,* பெ. (n.) இந்திரனை வழிபடுவதற்காகத் திருவாரூர்க் கோயிலில் தியாகேசருக்கு நிறைபணி பூட்டிப் புரட்டாசி உவா நாளன்று கொண்டாடும் திருவிழா (இ.வ.); a festival celebrated in the temple at Tiruvārūr on the full moon day in the month of puraṭṭasi when Indran is believed to worship Tiyakēsar.

[நிறை + பணி.]

நிறைபாரம் *niṟai-pāram,* பெ. (n.) **1.** பெருஞ் சுமை; heavy load. **2.** அணி, அம்மை முதலியன உடல் முழுதும் நிறைந்திருக்கை; being loaded as a person with jewels, a tree with fruit, the bady with pustules in small-pox. நிறைபாரமாக அணிந்திருக்கிறாள். (உ.வ.). **3.** நிரம்ப உண்ணுகை; eating to the full.

[நிறை + பாரம்.]

நிறைபிள்ளைத்தாய்ச்சி *niṟai-piḷḷai-t-tāycci,* பெ. (n.) *நிறைசூலி* பார்க்க; see *niṟai-šūli.*

[நிறை + பிள்ளை + தாய்ச்சி.]

நிறைபூசல் *niṟai-pūšal,* பெ. (n.) பேரொலி (வின்.); great noise, bustle.

[நிறை + பூசல்.]

நிறைபூத்தி *niṟai-pūtti,* பெ. (n.) கோடகசாலை எனுஞ்செடி; a very small plant. called kōḍaga sālai. (சா.அக.).

நிறைபூரணம் *niṟai-pūraṇam,* பெ. (n.) முழுப் பொந்திகை; full satisfaction.

[நிறை + பூரணம்.]

நிறைபொங்கல்[1] *niṟai-poṅgal,* பெ. (n.) மங்கலக்குறியாகப் பொங்கலன்று பொங்கல் மிகுதியாகப் பொங்குகை; abundant overflow of pongal at the pongal festival.

[நிறை + பொங்கல், நில் → நிறை = மிகுதி, நிறைவு.]

நிறைபொங்கல்[2] *niṟai-poṅgal,* பெ. (n.) பல பானைகளிலிடும் பொங்கல்; rice boiling in a series of pots, as at a temple.

[நிறை + பொங்கல். செழிப்பின் அறிகுறியாகப் பல பானைகளில் பொங்கலிடுவதென்பது தமிழகத்தில் பெருவழக்கு. பலருக்குப் படையலிடவும் பல பானைகளில் பொங்கலிடுவர்.]

நிறைமணி *niṟai-maṇi,* பெ. (n.) **1.** பிள்ளையாருக்குச் செய்யும் முழுக்காட்டுடன் கூடிய வழிபாடு; a profuse bath and offering, especially given to Ganēša. **2.** கண்டிக்கை; taking a person to task. *அவனுக்கு நிறை மணி யாயிற்று* (இ.வ.).

[நிறை + மணி.]

நிறைமதி *niṟai-madi,* பெ. (n.) முழுநிலவு, முழுத்திங்கள்; full moon. *"நிறைமதி போல"* (பெருங். மகத. 3. 14.). *"பிறைவளர் நிறைமதி யுண்டி அணிமணிப் பைம்பூண் அமரர்க்கு முதல்வனி"* (பரிபா. 3:52.)

மறுவ. வெள்ளுவா.

[நிறை + மதி.]

நிறைமதியம்[1] *niṟai-madiyam,* பெ. (n.) நண்பகல்; உச்சிப்பொழுது (யாழ்ப்.); noon.

[நில் → நிறை = மிகுதி, உச்சம்; நிறை + மதியம்.]

நிறைமதியம்[2] *niṟai-madiyam,* பெ. (n.) முழு நிலவு நாள், வெள்ளுவா நாள்; full moon day.

[நிறை + மதியம். மதி → மதியம் = நிலவு.]

நிறைமாசக்கருப்பிணி *niṟaimāša-k-karuppiṇi,* பெ. (n.) *நிறைசூலி* பார்க்க; *see niṟaišūli.*

[நிறைமாசம் + கருப்பினி. நில் → நிறை மாதம்→ மாசம் (கொ.வ.).]

நிறைமாசக்காரி *niṟai -māša-k-kāri,* பெ. (n.) *நிறைசூலி* பார்க்க; see *niṟai-sūli.*

[நிறை + மாசம் + காரி.]

நிறைமாசச்சூலி *niṟai-māša-c-cūli,* பெ. (n.) *நிறைசூலி* பார்க்க; *see niṟai-šūli.*

[நிறை + மாசம் + சூலி.]

நிறைமாசம் *niṟai-māšam,* பெ. (n.) *நிறைசூல்* பார்க்க; *see niṟai-šūl.*

[நிறை + மாசம். மாதம் → மாசம்.]

நிறைமாதக்கருப்பிணி *niṟaimāda-k-karuppiṇi,* பெ. (n.) *நிறைசூலி* பார்க்க; *see niṟai-šūli.*

[நிறைமாதம் + கருப்பிணி. கரு → கருப்பிணி. நிறைமாதம் – நிறைந்த மாதம். சூல் → சூலி.]

நிறைமாதச்சூலி *niṟai-māda-c-cūli,* பெ. (n.) *நிறைசூலி* பார்க்க; *see niṟai-šūli.*

[நிறைமாதம் + சூலி சூல்→சூலி=சூலினை யுடையவள்.]

நிறைமாதம் *niṟai-mādam,* பெ. (n.) முழு வளர்ச்சி யடைந்த குழந்தையை ஈன் றெடுக்கும் பத்தாவது மாதம்; the last month of pregnancy. *அவள் நிறைமாதமாக இருக்கிறாள்.* (உ.வ.).

[நிறை + மாதம். நில் → நிறை = நிறைவு, முழுமை. முழுவளர்ச்சியடைந்த சூலினைத் தாங்கியிருக்கும் பெண்ணைக் குறிப்பது.]

நிறைமொழி *niṟai-moḻi,* பெ. (n.) பயன்கள் தவறாத வாக்கு; prophetic words of holy persons which are sure to take effect. *"நிறைமொழி மாந்தர் பெருமை"* (குறள், 28.). 2. வேதம் (திவ். பெரிய. 11:6:3.); vedic.

[நிறை + மொழி.]

நிறைமொழிமாந்தர் *niṟai-moḻi-māndar,* பெ. (n.) சொல்லாலும் செயலாலும் பிறன்கேடு சூழா மாந்தர்; noble man. "நிறைமொழி மாந்தர் ஆணையின் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப" (தொல். பொருள். 488.).

[நிறை + மொழி + மாந்தர். நில் → நிறை = பெருமை, முழுமை. மொழி = சொல்.]

சொல்லாலும், செயலாலும் பிறன்கேடு சூழாதவர் மொழிவதே சொற்கட்டாய் அமையும் மந்திரம்.

சொல்லியன சொல்லியாங்கு நிறைவேறு மாறு குறைவறப் பொருள் பயக்கும் சொற்களைப் பேசுவோராகிய சான்றோரே நிறைமொழி மாந்தராவார்.

'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்' —என்றார் திருவள்ளுவரும்.

நிறைமொழியாளர் *niṟaimoḻi-y-āḷar,* பெ. (n.) **1.** முனிவர் (வின்.); holy persons, sages. **2.** புலவர் (அக.நி.); scholars.

[நிறை + மொழி + ஆளர்.]

நிறைய *niṟaya,* வி.எ. (adv.) நிரம்ப; abundantly, plentifully. *"தலைநிறைய பூச்சூடி"* (நாலடி, 43.).

[நிறை → நிறைய.]

நிறையருந்தானை *niṟai-yaruntāṉai,* பெ. (n.) நிறுத்தற்கரிய படை; viberated army. "நிறை யருந் தானை வேந்தரைத் திறை கொண்டு பெயர்க்குஞ் செம்மலு முடைத்தே" (புறநா. 156.). "நிறையருந் தானை வெல்போர் மாந்தரன், பொறையன்" (அகநா. 142:4–5.). "நிறையருந் தானை வேந்தனு நேர்ந்து". (சிலப். 28:178.).

[நில் → நிறை + அருந்தானை.]

நிறையவை *niṟai-y-avai,* பெ. (n.) எல்லாப் பொருளையும் அறிந்து எதிர்வரும் மொழிகளை எடுத்துரைக்க வல்லவர் குழுமிய அவை (யாப்.வி.பக். 515.); assembly of the great.

[நிறை + அவை.]

நிறையழி-தல் *niṟai,-y-aḻi-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** கற்பழிதல்; to lose chastity. **2.** ஒழுக்கங் கெடுதல்; to degenerate in character. **3.** யானை மதம் பிடித்தல்; to rut, as an elephant. *"நிறையழி கொல்யானை"* (கலித். 56.).

[நிறை + அழி–,]

நிறையளவு *niṟai-y-aḷavu,* பெ. (n.) நிறுத்தறியுமளவு; measure of weight.

[நில் → நிறு → நிறை + அளவு.]

நிறையறிகருவி *niṟai-y-aṟi-karuvi,* பெ. (n.) **1.** கட்டளைக்கல் (திவா.); touch-stone. **2.** துலை (வின்.); balance.

[நிறை + அறி + கருவி.]

நில் → நிறு → நிறை + அறிகருவி. நிறை யறியுங்கருவி என்க.

நிறையாமை *niṟai-yāmai,* பெ. (n.) குறைவு; incompleteness.

[நில் → நிறை. நிறை + ஆ + மை. 'ஆ' எதிர்மறை இடைநிலை.]

நிறையிலி *niṟaiyili,* பெ. (n.) சிற்றூர் வரி வகை; (i.m.p.) a kind of village cess.

[நிறை + இலி.]

நிறையுடைமை *niṟai -yuḍaimai,* பெ. (n.) சால்புடைமை; noblety. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை போற்றி யொழுகப் படும் (குறள்,154.).

[நிறை + உடைமை.]

நிறையுரை *nirai-y-urai,* பெ. (n.) எடையும் மாற்றும்; weight and quality of precious metals. ***"நிறையுரை பார்த்துப் பொன் முதலியவை வாங்கவேண்டும்"*** (உ.வ.).

[நிறை + உரை.]

நிறுத்துப்பார்க்குங்கால் எடையும் உரைத்துப் பார்க்குங்கால் தரமும் அளந்து அளவிட வியலும்.

நிறையுவா *niraiyuvā,* பெ. (n.) முழுமதி; full moon. "எண்மதி நிறையுவா இருண்மதிபோல நாள் குறைபடுதல் காணுநர் யாரே" (பரிபா.11:37.)

[நிறை + உவா.]

நிறையுள்ளவன் *nirai-y-ullavan,* பெ. (n.) பொறுமைசாலி; man of patience.

[நிறை + உள்ளவன்.]

அறிவும் பண்பும், குணமும் நிறைந் தோனுக்குச் சினம் மேலோங்காது. சினம் மேலோங் காதெனின் பொறுமையே மேலோங்கும். அத்தகையோனை அறிவும் பண்பும் குணமும் நிறைந்த வனென்பது நல்லுலகோர் பண்பு. நிறையெனின் இச்சால்பு நிறைதலையே குறிக்கும்.

நிறையெடு-த்தல் *nirai-y-edu-,* 4 செ. குன்றாவி. (v.t.) நிறுத்தல்; to weigh. தட்சிண மேருவிடங்கன் என்னுங்கல்லால் நிறை யெடுத்தும். (தெ.க.தொ.ii; 178.).

[நிறை + எடு-,]

நிறைவாகரம் *niraivāgaram,* பெ. (n.) *நிறைவு,* 1, 2 (வின்.) பார்க்க; see *niraivu.*

[நிறைவு + ஆகரம்.]

நிறைவிளக்கு *nirai-vilakku,* பெ. (n.) ஏற்றாத விளக்கு (இ.வ.); unlit lamp.

[நிறை + விளக்கு.]

விளக்கேற்றி வினை தொடங்குத லென்பது தமிழப்பண்பு. வினை தொடங்கி நடக்குங்கால் ஏற்றிய விளக்கு கெட்ட தெனின் தீக்குறியா யெண்ணி மாழ்குவர். அத்தகைய தீக்குறியினைத் தவிர்த்தற் பொருட்டு தேய்த்துக் கழுவிப் பொட்டும் பூவுமிட்ட விளக்கில் நெய்யுந் திரியுமிட்டு வினைத் தொடங்குவ தென்பது வழக்கு. அதையே நிறை விளக்கு என்றனர். இங்கு நிறை யென்பது அனைத்தும் நிறைந்த தென்பதே.

நிறைவு¹ *niraivu,* பெ. (n.) 1. முழுமை fullness, completeness, perfection. ***"குறைவிலா நிறைவே"*** (திருவாச. 22.5.). 2. மிகுதி; abunance, copiousness, profusion. 3. நிரப்புகை; filling, diffusing. 4. பொந்திகை; satisfaction, contentment. ***"செல்வமென்பது சிந்தையினிறைவே"*** (குமர. பிர. சிதம்.மும். 25.). 5. மகிழ்ச்சி; joy, gladness. ***"முனிவர்க ணிறைவு கூர்ந்து"*** (திருவாலவா. 1. 36.). 6. மாட்சிமை (திவா.); excellence, glory. 7. துறக்கம் (மோட்சம்); final bliss. ***"வினைபோகும் வண்ண மிறைஞ்சுந் நிறைவாமே"*** (தேவா. 241:2.).

தெ. நெரவு.

[நில் → நிறை → நிறைவு.]

நிறைவு² *niraivu,* பெ. (n.) 1. அமைதி; peace. (தொல். பொருள். 206 இளம்.), 2. அறிவோடு கூடிய ஒழுக்கம் (பேரா. திரு. 18; 1.), (உ.சொ களஞ்.); good behaviour with wisdom.

[நிறை → நிறைவு.]

நிறைவுகுறைவாகியவெண்பொருட்டாரணை *niṟaivu-kuṟāivāgiya-veṇ-poruṭṭāraṇai,* பெ. (n.) ஒகவகை (தாரணை) ஒன்பதினு ளொன்று (திவா.); one of navatāraṇai. nine modes in the art of meditation.

[நிறைகுறை + ஆகிய + வெண்பொருள் + தாரணை.]

நிறைவுரை *niraivurai,* பெ. (n.) விழாவிலோ, கருத்தரங்கிலோசிறப்புரையாய் நிகழ்த்தப்பெறும் சொற்பொழிவு;special address in a function or seminar.

[நிறைவு + உரை]

நிறைவுவிழா *niṟaivu-viḻā,* பெ. (n.) ஒன்று முடிவுபெறும் நாளில் நிகழ்த்தப்படும் விழா; concluding function (of a series) *விளையாட்டுப் போட்டியின் நிறைவு விழாவில் முதலமைச்சர் பரிசுகளை வழங்கினார்.* (உ.வ.).

[நிறைவு + விழா.]

நிறைவேற்றம் *niṟaivēṟṟam,* பெ. (n.) **1.** முற்றுகை; fulfilment. **2.** நடத்துகை; performance, execution.

[நிறைவேறு → நிறைவேற்று → நிறைவேற்றம்.]

நிறைவேற்று¹–தல் *niṟaivēṟṟu-,* 5 செ. குன்றாவி. (v.t.) **1.** முற்றச்செய்தல்; to fulfil, complete. **2.** நடத்துதல்; to perform, execute, effect. கட்டளையை நிறைவேற்றினான். (உ.வ.).

[நிறைவு + ஏற்று → நிறைவேற்று.]

நிறைவேற்று²–தல் *niṟaivēṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** முடிவு பெறும்படி அல்லது பயன்கிடைக்கும்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல்; செயற்படுத்துதல்; to carry out, to fulfil, to implement. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஏராளமாகச் செலவாகும். (உ.வ.). வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்பதில் ஆளுங்கட்சி ஆர்வமாக உள்ளது. (உ.வ.). தங்களது கோரிக்கைகளை ஆட்சிக்குழு நிறைவேற்றும்வரைப் போராடுவதெனத் தொழிற்சங்கம் முடிவெடுத்தது. (உ.வ.). **2.** (கடமையை, வேலையைச்) செய்தல், நிகழ்த்துதல்; to perform (ones duty) அரசு அலுவலர் தம் பணியை நிறைவேற்றவிடாமல் தடுப்பது சட்டப்படிக் குற்றமாகும். (உ.வ.).

[நில் → நிறை → நிறைவேற்று–,]

நிறைவேறு¹–தல் *niṟaivēṟu-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** முற்றுதல்; to be fulfilled, accomplished, completed. **2.** நன்னிலை அல்லது நற்பேறடைதல்; to attain heavenly bliss. அவன் நற்செயலால் முன்னோர் நிறைவேறிப் போனார்கள். (உ.வ.).

தெ. நெறவேறு.

[நிறை → நிறைவு + ஏறு–.]

நிறைவேறு²–தல் *niṟaivēṟu-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** (மேற்கொண்ட நடவடிக்கையால்) முடிவு அல்லது பயன் கிடைத்தல்; to be completed, to get fulfilled. இந்தத் திட்டங்கள் நிறைவேற மூன்றாண்டுக் காலம் ஆகும். (உ.வ.). உன்னுடைய ஆசைகள் நிறைவேறும் காலம் வந்துவிட்டது. (உ.வ.). **2.** (கடமை) செய்யப்பட்டு முடிதல்; (of duty) to be done. என் கடமை நிறைவேறியது; இனி என் பொறுப்பும் விட்டது. (உ.வ.). **3.** (தீர்மானம், சட்டமுன்வடிவு முதலியவை) பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒப்புதல் பெறுதல்; (of a bill, amendment) to be passed.

[நில் → நிறை → நிறைவேறு–,]

நிறோவடி *nirōvadi,* பெ. (n.) பொன்னாங் காணி; sessila plant - illecebrum sessile. (சா.அக.).

நின் *nin,* பெ. (n.) உனது; yours.

[நீன் → நின்.]

நீன் என்னும் பெயரே நீ என்று குறைந்து வழங்குகின்றது. நீன் என்னும் வடிவை இன்றும் தென்னாட்டுலக வழக்கிற் காணலாம். தான் என்பது தன் என்று குறுகினாற் போல், நீன் என்பது நின் என்று வேற்றுமை உருபேற்கக் குறுகும். நீன் என்பது இலக்கண வறியாமை காரணமாகக் கொச்சையாகக் கருதப் படுகிறது. நானும் நீனும் செல்வோமா? (உ.வ.)

நின்பம் *ninbam,* பெ. (n.) வேம்பு; neem tree-margora tree. (சா.அக.).

நின்றசீர்நெடுமாறன் *ninra-šir-neḍumāran,* பெ. (n.) திருஞானசம்பந்தர் காலத்தவரும் பாண்டியவரசரும் நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவருமான அடியார்; a cononized šaiva saint, Pandiya king and contemporary of Tiruñānašambandamoorti nāyanār of **63.** *"நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன்"* (தேவா. 737, 8.).

நின்றசொல் *ninra-šol,* பெ. (n.) மாறாவாக்கு; promise.

[நில் → நின்ற + சொல்.]

நின்றசொல்லர் *ninra-šollar,* பெ. (n.) சொன்ன சொல் மாறா மாண்பினர்; the man who keeps his promise; honest man. *"நின்ற சொல்லர் நீடுதோன்றினியர்"* (நற். 1.).

[நின்றசொல் → நின்றசொல்லர். 'அர்' உடைமைப் பொருள்பற்றிய மதிப் பொருமை ஈறு.]

நின்றதிருக்கோலம் *ninra-tirukkōlam,* பெ. (n.) திருமால் திருக்கோலம் மூன்றனுள் நின்றருளும் நிலை; standing posture of Viṣṇu, one of three tiru-k-kōlam.

[நில் → நின்ற + திருக்கோலம்.]

நின்றது *ninradu,* பெ. (n.) **1.** நிலைத்த பொருள்; that which is permanent. *"நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்து"* (நாலடி, **47.**). **2.** நிலைத்திணை; category of immovables. *"நின்றனவுந் திரிந்தன"* (கம்பரா. கையடை. **13.**). **3.** எஞ்சியது; remainder, as standing over. *"நின்றதிற் பதினையாண்டு பேதை பாலகன தாகும்"* (திவ். திருமாலை. **3.**).

[நில் → நின்றது.]

நின்றநிலை *ninra-nilai,* பெ. (n.) **1.** நிற்கும் நிலை; standing posture. **2.** ஒரே நிலை; same position or condition. **3.** முரண்டு (பிடிவாதம்); obstinacy.

[நின் → நின்ற + நிலை.]

நின்றவடி *ninra-v-adi,* பெ. (n.) **1.** நின்ற இடம்; standing place. **2.** காலடி; foot-print.

[நில் → நின்ற + அடி.]

நின்றவிடந்தீய்ஞ்சான் *ninra-v-idan-tiyñjān,* பெ. (n.) குருவிச்சை என்னுஞ் செடி; box-leaved, ivory wood.

[நில் → நின்ற + இடந்தீய்ஞ்சான். தீய்ந்தான் > தீய்ஞ்சான்.]

நின்றாடல் *ninṟāḍal,* பெ. (n.) அல்லியம், கொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல் என்ற அறுவகைப்பட்ட நின்றாடுந் தெய்வக் கூத்து (சிலப். 3:14, உரை.); divine dance in standing posture, of six kinds, viz., alliyam, koṭṭi, kuḍai, kuḍam, pāṇḍaraṅgam, mal.

[நில் → நின்று + ஆடல்.]

நின்றால்மேனி *ninṟāl -mēṉi,* பெ. (n.) மாந்தர் நிழல்விழுந்தால் பொன்னிறமாகுமொரு பூடு. இதில் இரசங்கட்டும். வங்கம் சுண்ணமாகும்; a plant that turns to golden colour when mens shadow fall on it. it is capable of binding mercury and calcifying tin. (சா.அக.).

நின்றாற்சிணுங்கி *ninṟāṟ-ciṇuṅgi,* பெ. (n.) சிறியா நங்கை (பதார்த்த. 247.) எனுஞ்செடி; a species of small milkwort, a herb that is continuously emitting water.

[நின் → நின்று → நின்றால் + சிணுங்கி.]

இது பாம்பின் நஞ்சினை முறிப்பதோடு பெண்ணைத் தன்வயப்படுத்தவுமுதவும் என்பது குறிப்பு.

நின்றாற்போல் *ninṟāṟpōl,* வி.எ. (adv.) திடீரென்று; suddenly. *நின்றாற்போல் விழுந்து விட்டான்.* (உ.வ.).

நின்றிடம்தீஞ்சான் *ninṟiḍam -tīñjāṉ,* பெ. (n.) *1. நின்றவிடம் தீய்ஞ்சான் பார்க்க; ninṟa-v-idam tīyñjaṉ.* 2. பல்லிப்பூடு; lizard plant-buchnere asiatica or strigalutea (lour.) (சா.அக.).

[நின்றவிடந்தீஞ்சான் → நின்றிடம் தீஞ்சான். தீய்ந்தான் → தீஞ்சான் (கொ.வ).]

நின்றிதம் *ninṟidam,* பெ. (n.) தரைப்பசலி; malabar night shade. (சா.அக.).

நின்று[1] *ninṟu,* வி.எ. (adv.) எப்பொழுதும்; always, permanently. *"நிறைமய னொருங்குட னின்றுபெற நிகழுங் குன்றவை சிலவே"* (பரிபா. 15, 7.).

[நில் → நின்று.]

நின்று[2] *ninṟu,* இடை. (part.) ஐந்தாம் வேற்றுமைப் பொருள்பட வரும் ஓரிடைச்சொல் (திருக்கோ. 34, உரை.); a particle used in the ablative sense. *மரத்தினின்று பழம் விழுந்தது.*

[நில் → நின்று.]

நின்று[3] *ninṟu,* பெ. (n.) 1. நிற்றல். standing. *2. நிறுத்தல்* stop.

நின்றுசிணுங்கி *ninṟu-ciṇuṅgi,* பெ. (n.) *நின்றாற்சிணுங்கி பார்க்க;* see *ninṟāṟ-ciṇuṅgi.*

[நில் → நின்று + சிணுங்கி.]

நின்றுபயனின்மை *ninṟu-payaṉ-iṉmai,* பெ. (n.) நூற்குற்றம் பத்தனுள் சொல் அல்லது தொடர் பொருட்பேறின்றி இருத்தலாகிய குற்றம் (நன். 12.); the state of being purposeless, as of a word or phrase, one of ten nūr-kuṟṟam.

[நில் → நின்று + பயன் + இன்மை.]

நின்றுபிடி—த்தல் *ninṟu-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) தாக்குப்பிடித்தல் (யாழ்ப்.); to withstand. *கட்டடம் எந்தப் புயலுக்கும் நின்றுபிடிக்கும்.*

(உ.வ.). இந்தத் துணி இரண்டு வெள்ளைக்கு நின்று பிடிக்காது, வெளுத்துவிடும். (உ.வ.).

[நின்று + பிடி –,]

நின்றுபோ[1]—தல் *ninṟu- pō-,* 8 செ.கு.வி. (v.i.) வேலை முதலியன நடவாதுபோதல்; to stop, cease as work. *வேலை நின்றுபோய்விட்டது. (உ.வ)*

[நில் → நின்று + போ.]

நின்றுபோ[2] *ninṟu-pō,* வி.எ. (adv.) ஓரிடத்தைக் கடக்குமுன் விழிப்பாய்க் கட; stop and go.

[நின்று + போ.]

நின்றும் *ninṟum,* வி.எ. (adv.) ஐந்தாம் வேற்றுமை யினீக்க வுருபுகளினொன்று; a particle used in the ablative sense. *ஊர்தியினின்றும் இழிந்தான். (உ.வ.).*

[நின்று → நின்றும்.]

நின்றுவற்று—தல் *ninṟu- vaṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) சொல் அல்லது தொடர் இருந்தும் பயனிலதாதல் (குறள், 825, உரை.); to be wanting in significance, as a word or phrase in a sentence.

[நில் → நின்று + வற்று–,]

நின்றுவா—தல் (நின்றுவருதல்) *ninṟu- vā-,* 18 செ.கு.வி. (v.i.) 1. காலந்தாழ்ந்து வருதல் (உ.வ.); to delay in coming. 2. விட்டு விட்டு வருதல்; to come intermittently. *காய்ச்சல் நின்றுவருகிறது. (உ.வ).*

[நின்று + வா–,]

நின்றுவிடு—தல் *nindṟu- viḍu-,* 18 செ.குன்றா. வி. (v.t.) *நின்று போ–,* பார்க்க; see *ninṟu- pō-.*

[நில் → நின்று+ விடு.]

நின்றுவெட்டி *ninṟu- veṭṭi,* பெ. (n.) மண்வெட்டி வகை; a long-handled hoe.

[நில் → நின்று + வெட்டி.]

மண்வெட்டியின் காம்பு நின்று மண்வெட்டுவதற்குப் பெரிதாகவும், குனிந்து வெட்டுவதற்குச் சிறிதாகவும் இருக்கும்.



நின்றேத்துவார் *ninṟēttuvār,* பெ. (n.) நின்று கொண்டு அரசரின் புகழ்பாடுவோர் (சிலப். 3:48, உரை.); panegyrists who stand and praise their king.

[நில் → நின்று + ஏத்துவார்.]

நின்றை[1] *ninṟai,* இடை. (part.) அசைநிலை (தொல். சொல். 426.); an-expletive.

நின்றை[2] *ninṟai,* பெ. (n.) சென்னைக் கருகிலுள்ள தின்னனூர் என்று வழங்கும் திருநின்றவூர்; Tinnanūr, a village near Chennai. *"காளத்தி நின்றைக்கே சென்றக்கால்"* (தொண்டை. சத. 32.).

நின்றவூர் → நின்றை.
ஒ.நோ: தஞ்சாவூர் → தஞ்சை.

நின்றோசி *niṉṟōśi,* பெ. (n.) நாகப்படக் கற்றாழை; thorn less aloe. (சா.அக.).

நினவ *niṉava,* வி.எ. (adv.) உன்னுடைய; yours. *'நினவ கூறுவல் எனவ கேண்மதி' (புறநா. 35.).*

[நீ → நின் → நினவ; 'அ' பலவின் பால் விகுதி.]

நினை[1]–த்தல் *niṉai-,* 4 செ.குன்றாவி. (v.t.) **1.** கருதுதல்; to think. *"விளியுமென் இன்னுயிர் வேறெல்லாம் என்பார் அளியின்மை ஆற்ற நினைந்து"* (குறள்,1209.). **2.** (ஆலோசித்தல்) கலத்தல்; to consider, reflect, ponder. *"வினை வேறு படாஅப் பலபொரு ளொருசொன் னினையுங் காலைக் கிளந்தாங்கியலும்"* (தொல். சொல். 55.). **3.** நினைவிற் கொணர்தல்; to remember. **4.** ஒன்றித்திருத்தல் (தியானத்தல்); to medidate. *"நிறுத்திய வம்மன நிலைதிரி யாமற், குறித்த பொருளொடு கொளுத்துவது நினைவே"* (சிலப். 14:11, உரை); **5.** அறிதல்; to know, understand. *"நீதிகள் சொல்லியு நினைய கிற்கிலார்"* (தேவா. 52. 10.). **6.** நோக்கமாகக் கொள்ளுதல்; to intend, design, have in view. **7.** போலச் செய்தல் (பாவித்தல்); to imagine, fancy.

க. நெனே.

நினை[2]–த்தல் *niṉai-,* 4 செ.குன்றாவி. (v.t.) **1.** *நினை[1]–* பார்க்க; see *niṉai-*. *"என்கொலோ நினைப்பதே"* (திருவாச.5,75). **2.** தீர்மானித்தல்; திகைத்தல் (வின்.); to resolve determine.

ம. நினையுகே. க நீனாசு.

நினைஇ *niṉai-i-,* வி.எ. (adv.) நினைந்து; to think.

[நினை + இ; இ – அளபெடை.]

நினைத்தகாரியம் *niṉaitta-kāriyam,* பெ. (n.) எண்ணிய பொருள்; thinking matter.

[நினைத்த + காரியம். கரு → கார் → காரியம்.]

நினைதல் *niṉaidal,* பெ. (n.) மனனம்; reflection. *"தெரித னினைத லெண்ண லாகாத் திருமாலுக்கு"* (திவ். திருவாய். 6, 9, 11.).

[நினை → நினைதல்.]

நினைப்பணி *niṉaippaṇi,* பெ. (n.) ஒரு பொருள் ஒப்புமையாற் பிறிதொன்றினை நினைவு படுத்துவதாகக் கூறும் அணிவகை (அணியி. 8.); figure of speech where in an object suggests another similar to it.

[நினைப்பு + அணி.]

நினைப்பாயிரு–த்தல் *niṉaippāy-iru-,* 3 செ.கு.வி. (v.i.) **1.** கருத்தாயிருத்தல்; to be mindful, cautious, attentive, thoughtful. **2.** மனத்தினை ஒரு முகப்படுத்துதல்; to concentrate ones thoughts.

[நினைப்பு → நினைப்பாய் + இரு.]

நினைப்பாளி *niṉaippāḷi,* பெ. (n.) நினைவாற்றலுடையோன் (வின்.); person of retentive memory.

[நினைப்பு + ஆள் + இ.]

ஒ.நோ.முதலாளி.

நினைப்பிடு–தல் *niṉaippiḍu-,* 20செ.கு.வி. (v.i.) **1.** ஆணையிடுதல்; to give command, issue an order. *இராஜா இன்ன மண்டபத்தேயிருந்து நினைப்பிட்டான் என்றால்* (திவ். திருமாலை. 1. வியா. 13.).

[நினைப்பு + இடு.]

நினைப்பீடு *ninaippīdu,* பெ. (n.) *நினைப்பு* பார்க்க; see *ninaippu.* சர்வேச்வரன் இவர் களுடைய பூர்வாபராதத்தாலேயிட்ட நினைப்பீடு மாறுகைக்கு ப்ரதான காரணம் மூன்றுண்டு (ரஹஸ்ய. 709.).

[நினைப்பிடு → நினைப்பீடு.]

நினைப்பு[1] *ninaippu,* பெ. (n.) 1. *நினைவு* பார்க்க; see *ninaivu. "நினைப்பெறு நெடுங் கிணற்றை நின்றுநின் றயராதே"* (தேவா. 1145. 8.). 2. (ஏரணம்) *கரணியம் நிகழாது உனக்கிவர் தாயுந் தந்தையும் என்றாற் போலப் பிறர் சொலத் தான் கருதுதலாகிய பிரமாணபாசம்* (மணிமே. 27:75.); fallacious reasoning based only on hearsay, one of eight piramāna pāsam.

[நினை → நினைப்பு.]

நினைப்பு[2] *ninaippu,* பெ. (n.) சூள்; will. *"நாட்டுக்கிட்ட நினைப்பு அந்தப் புரத்துக்கு அரிதாக வேணுமோ"* (ஈடு, 1, 4, 5, பக். 191.).

[நினை → நினைப்பு.]

நினைப்பு[3] *ninaippu,* பெ. (n.) 1. (ஒருவரை அல்லது ஒன்றைக் குறித்த) எண்ணம்; thought, idea. *அவர் மறுக்க மாட்டார்; என்னும் நினைப்பில் அதைச் சொன்னேன். (உ.வ.). 'நினைப்பு பிழைப்பைக் கெடுக்கும்'* (பழ.). 2. *நினைவு* பார்க்க; see *ninaivu.*

[நினை → நினைப்பு.]

நினைப்பு[4] *ninaippu,* பெ. (n.) 1. நினைக்குகை; thought. அது உடற்குற்றம் பதினெட்டி னொன்று (சூ. நி. 2 12: 118.).

நினைப்பூட்டு[1]**-தல்** *ninaippūttu-,*5 செ. குன்றாவி. (v.t.) 1. நினைவுபடுத்துதல்; to put in mind. *மாலையில் முதல்வரைச் சந்திக்க வேண்டு மென்பதைச் செயலருக்கு நினைப்பூட்டினார்.* (உ.வ.). 2. அறிவுறுத்துதல்; to suggest, indicate. *குறித்த காலத்தில் அகரமுதலி வெளிவருதல் கட்டாயமென்பதை இயக்குநர் நினைப்பூட்டினார். (உ.வ.).*

[நினைப்பு + ஊட்டு.]

நினைப்பூட்டு[2] *ninaippūttu,* பெ. (n.) *நினைவூட்டு* பார்க்க; see *ninaivūttu.*

[நினைவூட்டு → நினைப்பூட்டு.]

நினைவுஅஞ்சலி *ninaivu-añjali,* பெ. (n.) *நினைவஞ்சலி பார்க்க;* see *ninai-v-añjali.*

[நினைவு + அஞ்சலி.]

நினைவஞ்சலி *ninai-v-añjali,* பெ. (n.) ஒருவர் இறந்தநாளில் அவரை நினைத்துச் செலுத்தும் இரங்கல்; homage (done on someones death anniversary.).

[நினைவு + அஞ்சலி.]

நினைவற்றுப்போ-தல் *ninaivarru-p-pō-,* 8செ.கு.வி. (v.i.) *மறந்துபோதல்;* to forget.

[நினைவு + அற்று+ போதல்.]

நினைவாலயம் *ninai-v-ālayam,* பெ. (n.) *நினைவாலையம் பார்க்க,* see *ninai-v-ālaiyam.*

[நினைவாலையம் – நினைவாலயம்.]

நினைவாலையம் *ninai-v-ālaiyam,* பெ. (n.) (புகழ் பெற்றவரின் அல்லது உயர்ந்த நோக்கத் திற்காக உயிர் துறந்தவரின்) நினைவாகக் கட்டப்படும் கட்டடம்; memorial, mausoleum.

[நினைவு + ஆலையம். ஆல் → ஆலை = சுற்றிவருதல், சுற்றுமதில், மதிலகத்துக் கோயில். ஆலை → ஆலையம். ஆலை = கோயிலின் சுற்றுமதில்.]



நினைவில்கொள்(ளு)—தல் *ninaivil-koḷ(ḷu)-,* 10 செ.குன்றாவி. (v.t.) *நினைவிற் கொள்(ளு)—, பார்க்க;* see *niai-vir-koḷ(ḷu)-,*

[நினைவில் கொள்(ளு) → நினைவிற் கொள்(ளு)—,]

நினைவில்வை—த்தல் *ninaivil-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) *நினைவுவை— பார்க்க;* see *ninaivu-vai-.*

நினைவிற்கொள்ளு—தல் *ninaivir-koḷḷu-,* 10 செ.குன்றாவி. (v.t.) *1. திட்டமிடல், to plan. 2. எண்ணத்தில் இருத்துதல்; to keep in the mind.*

நினைவு *ninaivu,* பெ. (n.) 1. எண்ணம்; thought, idea. *"நினைவுந் துணிபுமாகும்"* (தொல். சொல். 337.). 2. உசாவு, கலப்பு, reflection, consideration. *"நினைவிலார் போல நெஞ்ச நெகிழ்த்தியோ"* (கம்பரா. நாகபா. 213.). 3. நினைவாற்றல்; recollection, remembrance. 4. பாவனை; imagination. 5. நோக்கம்; object, design, purpose. 6. விழிப்பு (கவனம்.); care, attention, thoughtfulness. 7. ஒன்றிப்பு (தியானம்); meditation, contemplation. *'மனநிலை திரியாமற் குறித்த பொருளொடு கொலுத்த நினைவே'* (தொல். பொருள். 75, உரை.) 8. வருத்தம்; anxiety, distress. *"நெறிமையிற் கூற நினைவினகன்றான்"* (சீவக. 333.). 9. அரசர்கட்டளை (கல்.); order, command as of a king. 10. நினைவுப் பொருள் (வின்.); memorandum, memento. 11. ஊகம்; supposition. 12. கருத்து; notion. 13. கருத்துருவம்; conception. 14. கற்பனை; fancy.

ம. நினம்.

[நினை → நினைவு.]

நினைவுக்குறிப்பு *ninaivu-k-kurippu,* பெ. (n.) ஒருவர் தனது சொந்த வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வுகளையும் சந்தித்த பெருமக்களையும் நினைவு கூர்ந்து எழுதிய செய்திகளின் தொகுப்பு; memories.

[நினைவு + குறிப்பு.]

நினைவுகூர்—தல் *ninaivu-kūr-,* 2 செ.குன்றாவி. (v.t.) நினைவுக்குக் கொண்டு வருதல்; to remember, recollect, to bring ones mind. *தலைவர் தன் இளமைக் காலத்தை நினைவு கூர்ந்தார். (உ.வ.). இது உங்கள் வாழ்க்கையில் என்றும் நினைவு கூரத்தக்க செய்தி. (உ.வ.).*

[நினைவு + கூர்—,]

நினைவுகேடு *ninaivu-kēḍu-,* பெ. (n.) *நினைவுத்தப்பு* பார்க்க; see *ninaivu-t-tappu.*

[நினைவு+ கேடு.]

நினைவுச்சின்னம் *ninaivu-c-cinnam,* பெ. (n.) நினைவில் நிறுத்துவதற்காகவும் நன்றியைத் தெரிவிப்பதற்காகவும் அடையாள மாக நிறுவப்படுவது; memorial, monument. *மொழிப்போரில் உயிர் நீத்த மாவீரர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்பிட தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.(உ.வ.). இவை விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவுச்சின்னம். (உ.வ.).*

[நினைவு + சின்னம்.]



நினைவுத்தடுமாற்றம் *ninaivu-t-taḍumāṟṟam,* பெ. (n.) 1. *நினைவுத் தப்பு* பார்க்க; see *ninaivu-t-tappu.* 2. மயக்கம்; delirium, delirium tremens. 3. மனநலக்கேடு (பைத்தியம்); பித்து, dementia.

[நினைவு + தடுமாற்றம்.]

நினைவுத்தப்பு[1]–தல் *ninaivu-t-tappu,* 7செ.கு.வி. (v.i.) மறதியாதல்; to forget.

[நினைவு + தப்பு–.]

நினைவுத்தப்பு[2] *ninaivu-t-tappu,* பெ. (n.) 1. நினைவுக்குறைவு; loss of memory. 2. அறிவு அழிகை; loss of consciousness.

[நினைவு + தப்பு.]

நினைவுத்தூண் *ninaivu-t-tūn,* பெ. (n.) ஒருவரின் நினைவாக நிறுவப் பெறும் தூண்; memorial pillar. *சங்கப் புலவர்கள் வாழ்ந்ததாக கண்டறியப்பட்ட ஊரில் நினைவுத்தூண் நிறுவும் பணியைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொள்ளும் என்று முதலமைச்சர் அறிவித்தார். (உ.வ.).*

[நினைவு + தூண்.]



நினைவுதிரும்பு–தல் *ninaivu-tirumbu-,* 7. செ.கு.வி. (v.i.) (ஒருவர் இழந்த) தன் உணர்வு மீண்டும் வருதல்; to regain consciousness. *நேற்று நிகழ்ந்த ஏதத்தில் சிக்கிய என் நண்பருக்கு இன்னும் நினைவு திரும்பவில்லை. (உ.வ.).*

[நினைவு + திரும்பு–.]

நினைவுநாள் *ninaivu-nāḷ,* பெ. (n.) (ஒருவருடைய மறைவிற்கு நினைவேந்தல் (அஞ்சலி) செலுத்துகிற) இறந்தநாள்; death anniversary. *ஆண்டுதோறும் சனவரி 30ஆம் பக்கல் வரும் அண்ணல் காந்தியடிகளின்*

நினைவு நாள் தீண்டாமை ஒழிப்பு நாளாகக் கடைபிடிக்கப்படுகிறது. (உ.வ.).

[நினைவு + நாள்.]

நினைவுபடுத்து–தல் *ninaivu-paduttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** நினைவுக்குக் கொண்டு வருதல்; to recollect. *ஏதம் நடந்தபோது என்ன நிகழ்ந்தது என்பதை என்னால் நினைவு படுத்த முடியவில்லை. (உ.வ.).* **2.** (ஒன்றை மறந்து விடாமல்) நினைக்கச் செய்தல்; to remind. *நாளை திருமணத்திற்குச் செல்ல வேண்டுமென அமைச்சருக்கு அவர் உதவியாளர் நினைவுபடுத்தினார். (உ.வ.).*

[நினைவு + படுத்து–.]

நினைவுமறதி *ninaivu-maradi,* பெ. (n.) நினைவின்மை (இ.வ.); loss of memory.

[நினைவு + மறதி.]

நினைவுமோசம் *ninaivu-mōšam,* பெ. (n.) *நினைவுத் தப்பு2* (யாழ்.அக.) பார்க்க; see *ninaivu-t-tappu.*

நினைவுவை–த்தல் *ninaivu-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) **1.** மனம்வைத்தல்; to fix the mind on, concentrate the thoughs on. **2.** நினைதல் (வின்.); to think. **3.** நன்றியின் பொருட்டேனும் அன்பினாலேனும் நினைவு வைத்தல்; to remember with gratitude or affection. **4.** இச்சித்தல்; to hanker after, desire.

[நினைவு + வை–,]

நினைவூட்டிக்கொள்(ளு)–தல் *ninai-v-ūṭṭi-k-koḷ(ḷu)-,* 10 செ.குன்றாவி. (v.t.) மறந்தவற்றை நினைவுபடுத்துதல்; to remember.

[நினைவு + ஊட்டிக்கொள்–,]

நினைவூட்டு[1]–தல் *ninaivūṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) *நினைவுபடுத்து–,* பார்க்க; see *ninaivu-paduttu-,*

[நினைவு + ஊட்டு–,]

நினைவூட்டு[2] *ninaivūṭṭu,* பெ. (n.) கிடப்பில் உள்ள செய்தியை முடிக்குமாறு எழுதும் மடல்; reminder. அகரமுதலி விற்பனையான செய்தியைத் தெரிவிக்குமாறு கடலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்குப் பல நினைவூட்டு எழுதியும் மறுமொழி இல்லை. (உ.வ.).

[நினைவு + ஊட்டு.]

நினைவேந்தல் *ninai-v-ēndal-,* பெ. (n.) **1.** சான்றோரையோ மதிப்புமிக்க குடும்பப் பெரியோரையோ அவரின் மறைவையொட்டி அவரின் பெருமைகளை நினைவு கூர்வதான நிகழ்ச்சி, இரங்கற்கூட்டம்; condolence meeting after the death of respected leader or family head. **2.** மறைந்தவரின் நினைவுநாள்; anniversary commemorative of a person's death.

[நினைவு + ஏந்தல்]

நினைவோட்டம் *ninai-v-ōṭṭam,* பெ. (n.) மறந்ததை நினைக்கை; remembrance.

[நினைவு + ஓட்டம்.]

நினைவோடு–தல் *ninaivōdu-,* 5 செ.கு.வி. (v.i.) மறந்தவை நினைவுக்கு வருதல்; to remember.

[நினைவு + ஓடு.]

நீ[1] *nī,* 'ந'கர மெய்யும் 'ஈ' கார உயிருங் கூடிய கூட்டெழுத்து; the compound of 'n' and 'ī'.

[ந் + ஈ.]

நீ[2]–த்தல் *nī,* 11 செ.குன்றாவி. (v.t.) **1.** பிரிதல்; to separate from "*நல்லசொல்லி மணந்தினி நீயே னென்ற தெவன்கொல் லன்னாய்*" (ஐங்குறு.**22.**). **2.** துறத்தல்; to renounce, as the world. "*ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு*" (குறள்,**21.**). **3.** தள்ளுதல் (வின்.); to put away, reject. **4.** இழித்தல்; to put to disgrace. "*பிள்ளையேயாயினு நீத்துரையார்*" (ஆசாரக்.**69.**). **5.** வெறுத்தல்; to despise, loathe. "*ஊரேது வல்லதே தென்றா னீத்து*" (திருவால.**13.13.**). **6.** விடுதல்; to abandon, leave. "*மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர்நீப்பர் மானம் வரின்*" (குறள்,**969.**).

நீ[3]–த்தல் *nī-,* **4.** செ.கு.வி. (v.i.) நீங்குதல்; to be removed. "*மயிர்நீப்பின் வாழாக் கவரிமா*" (குறள்,**969.**).

நீ[4] *nī,* ம.பெ. (pron.) முன்னிலையொருமைப் பெயர்; second person singular "*நீயென வரூஉங்கிளவி*" (தொல்.சொல்.**190**)

ம. நிங்ஙள்;
க., து., கோத. நிம்;
தெ. ஈறு, மீறு;
து. இரு, மிரு;
கொலா. நிர்; **நா.** நிர்;
பர். இம்; **கட.** இம்;
கோண்.இம்மக், நிம்மத் நிமெக்;
கூ.ஈறு;
குவி. மீம்பு; **குரு.** நீம்;
மால. நம்; **பிரா.** நும்;

நீன் → நீ (கடைக்குறை)

நீன் என்னும் பெயரே நீ என்று குறைந்து வழங்குகின்றது. நீன் என்னும் வடிவை இன்றும் தென்னாட்டுலக வழக்கிற் காணலாம். தான் என்பது தன் என்று குறுகினாற் போல நீன் என்பது நின் என்று குறுகும். நீன் என்பது இலக்கணவறியாமை காரணமாகக் கொச்சையாகக் கருதப் படுகின்றது. நீனுக்குப் பன்மை நீம் என்பது (இலக்.கட்.**4.**).

நீ[5] *nī,* பெ. (n.) நீங்கு; remove.

நீ[6] *nī,* பெ. (n.) மலைவேம்பு; hill neem-melia composita. (சா.அக.).

நீக்கப்பெருக்கம் *nīkka-p-perukkam,* பெ. (n.) நீக்குப் போக்கு (நாஞ்.) பார்க்க; *see nīkku-p-pōkku.*

[நீக்கம் + பெருக்கம்.]

நீக்கப்பொருள் *nīkka-p-poruḷ,* பெ. (n.) ஐந்தாம்வேற்றுமைப் பொருள்களுளொன் றாகிய நீக்குதற்குரிய பொருள்; case ending of the ablative denoting separation. அது, மலையினின்று நீங்கினான் என்பதிற்போல வரும். (நன்.**219**,உரை.).

[நீக்கம் + பொருள்]

நீக்கம்[1] *nīkkam,* பெ. (n.) **1.** நீங்குகை; separation, removal, disengagement, liberation. '*நீக்கப்பொருண்மை தீர்தல் பற்று விடுத லென்பனவற்றாற் பெறப்படும்*' (தொல். சொல்.**77.** சேனா.). **2.** பிளப்பு (வின்.); interstice, gap, chink, crack. **3.** நீளம் (திவா.); length. **4.** முடிவு; end, close '*இயற்கைப் புணர்ச்சியது நீக்கத்துக்கண்*' (திருக்கோ.**110**, உரை.). **5.** தறுவாய்; occasion, opportunity. "*நீக்கங்கிடைத்தால் விடமாட்டான்*" (வின்.).

[நீங்கு → நீக்கு→ நீக்கம்.]

நீக்கம்[2] *nīkkam,* பெ. (n.) இடைப்பட்ட இடம்; interspace. *"எள்ளிருக்க நீக்கமின்றி"* (கதிரைமலைப் பேரின்பக்காதல்,பக்.12.).

[நீங்கு → நீக்கம்.]

நீக்கம்[3] *nīkkam,* பெ. (n.) குறுக்குக் கோடிடுகை, அழிக்கை; cancellation.

[நீங்கு → நீக்கு→ நீக்கம்.]

நீக்கம்[4] *nīkkam,* பெ. (n.) 1. நீக்கல்; removal. 2. பிரிப்பு (சிவஞானபோத. சூத்.1.); separation.

[நீக்கு→ நீக்கம்.]

நீக்கம்[5] *nīkkam,* பெ. (n.) காப்பு, நீக்கம், நிறைப்பு என்னும் மூன்றுவகை மருந்துகளில் ஒன்று. நோய்களைத் தீர்க்கும் மருந்து; one of the three kinds of treatment by medicine ie. curing disease. (சா.அக.).

நீக்கமற *nīkkam-aṟa,* வி.எ. (adv.) ஓர் இடம்கூட விடாமல்; எங்கும்; everywhere, omnipresent. *காற்று நீக்கமற நிறைந்துள்ளது. (உ.வ.)*

[நீக்கம் + அற → நீக்கமற.]

நீக்கல்[1] nikkal, பெ. (n.) அகக்கூத்தின் ஒருபிரிவாகிய வடுகிற்குரிய கால்கள் பதினான்கனுள் ஒன்று; one of the dance posture.

வடுகிற்குறிய கால்களின் வகைகள்:

1. சுற்றுதல்.
2. அறிதல்.
3. உடைத்தல்.
4. ஒட்டுதல்.
5. கட்டுதல்.
6. வெட்டுதல்.
7. போக்கல்.
8. நீக்கல்.
9. முறுக்கல்.
10. அணுக்கல்.
11. வீசல்.
12. குடுப்புக்கால்.
13. கத்தரிகைக்கால்.
14. கூட்டுதல்.

(சிலப்.3:15 உரை.).

நீக்கல்[2] *nīkkal,* பெ. (n.) 1. அழிக்கை; destroying *"உலகம் யாவையுந் தாமுளவாக்கலு நிலைபெறுத் தலு நீக்கலும்"* (கம்பரா.சிறப்.1.). 2. மாறுபாடு (வின்.); opposition, disagreement. 3. துளை; opening, hole. நீக்கல்வழியாய்ப் பார் (யாழ்ப்.). 4. படகின் தையலிணைப்பு (யாழ்ப்.); seam of a ship.

[நீக்கு → நீக்கல்.]

நீக்கல்போடு—தல் *nīkkal-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) தொண்டைப் பயிரைக் காற்றோட்டம் ஏற்பட நீக்கி விடுதல்; to make a gap in the crop field for free circulation of air.

[நீக்கல் + போடு—.]

நீக்கவுருபு *nīkkavurubu,* பெ. (n.) நீக்கப்பொருளைத்தருமுருபு; oblative case ending.

[நீக்கல் + உருபு.]

நீக்கி *nīkki,* பெ. (n.) ஒழுக்கு; leakage. அறையின் வடமேற்குச்சாரில் ஒரு நீக்கியிருக்கிறது. (உ.வ.).

[நீக்கு + இ.]

நீக்கிலக்கம் *nīkkilakkam,* பெ. (n.) கணக்குவகை (கணக்கதி.); a kind of calculation.

[நீக்கு + இலக்கம்.]

நீக்கு[1]–தல் *nīkku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. ஒழித்தல்; to remove, exclude, put aside, dismiss. "*இளைப்பினையியக்கம் நீக்கி*" (திவ். திருக்குறுந்.18.). 2. (ஒருவரைப்பதவியிலிருந்து) வெளி யேற்றுதல், (ஒருவரின் பெயரைப் பட்டியல் போன்றவற்றிலிருந்து) எடுத்தல்; remove, dismies (a person from his post)/strike off (one's name). அவரைப் பதவியிலிருந்து நீக்க ஆணை வந்துள்ளது. (உ.வ.) வாக்காளர் பட்டியலிலிருந்து என் பெயரை நீக்கி இருக்கிறார்கள். (உ.வ.). 3. விடுவித்தல்; to extricate, liberate, exempt. "*இப்புழுக்கூடு நீக்கெனை*" (திருவாச. 5,100.). 4. கழித்தல்; to deduct. வட்டியை நீக்கிக் கொடுத்தான் (உ.வ.). 5. ஒதுக்குதல் to turn, draw aside, as a curtain. திரையை நீக்கிப் பார்த்தான் (உ.வ.). 6. அழித்தல் (அக.நி.); to kill, despatch, destroy. 7. அகலவைத்தல்; to spread out, as the legs, fingers. விரலை நீக்கு (உ.வ.). 8. திறத்தல்; to open, force apart. கதவை நீக்கிக் கொண்டு போ (உ.வ.). 9. பிரித்தல்; to separate. அவர் நட்பை நீக்கிவிட்டான் (உ.வ.). 10. கைவிடுதல்; to give up, abandon. "*மான வருங்கல நீக்கி*" (நாலடி,40.). 11. மாற்றுதல்; to change. *அவனெண்ணத்தை நீக்கி விட்டான்.* (உ.வ.). 12. விதித்திருக்கும் தடையை மாற்றிக் கொள்ளுதல்: வேண்டாம் என விடுதல். lift (sanctions, prohibition etc.,). பொருளியல் தடைகளை நீக்கினால் போதுமா. (உ.வ.)

தெ., க. நீகு. ம. நீக்குக.

[நீங்கு → நீக்கு.]

நீக்கு[2] *nīkku,* பெ. (n.) விலக்கு; separation, removal. "*நீக்கிலாத்துப்பு*" (சூடா.8,46.). 2. பிளப்பு (வின்.); opening, cleft, crack. 3. கழிவு; deduction. 4. மிச்சம்; remainder, balance, *நீக்கு உருவாய் பதினைந்து* (வின்.).

[நீங்கு → நீக்கு.]

நீக்கு[3] *nīkku,* பெ. (n.) நீக்கம் பார்க்க; see nīkkam. "*நீக்கற வெடுத்துப் பல்காலின்னண நிரந்து கூறி*" (இரகு. திக்குவி. 218.).

நீக்குப்பல்லன் *nīkku-p-pallaṉ,* பெ. (n.) 1. குட்டிப்பல்லன்; one having snaggy teeth. 2. சிங்கப்பல்லன்; one having high teeth ie. with one cuspid or point. (சா.அக.).

[நீக்கு + பல்லன்.]

நீக்குப்போக்கு *nīkku-p-pōkku,* பெ. (n.) 1. இணக்கமாயிருக்கை; adaptabiltiy, give-and-take. *அவன் நீக்குப்போக்குள்ளவன்* (உ.வ.). 2. மதிப்புரவு; etiquette, courtesy. *நீக்குப்போக்கறியாதவன்.* (உ.வ.). 3. வழி முறை (உபாயம்); means, expedient, contrivance. *அதற்கு ஒரு நீக்குப் போக்குக் காட்டவேண்டும்.* (உ.வ.). 4. உதவி; help. *அவனுக்கு நீக்குப்போக்குக் கிடையாது* (உ.வ.). 5. சாக்குப் போக்கு (இ.வ.); excuse. 6. இடைவெளி (வின்.); opening, interstice, gap. 7. இளைப்பாறுகை (இ.வ.); leisure, rest. 8. வாலாயம், முறைப்பணி, செயல் வரிசை (காரியக்கிரமம்) (வின்.); routine of business.

[நீக்கு + போக்கு.]

நீகதம் *nīgadam,* பெ. (n.) கொடிவகை (பதார்த்த.29.); climbing asparagus.

[நீர் + கதம் = நீகதம்.]

நீகம் *nīgam,* பெ. (n.) 1. தவளை (திவா.); frog. 2. மேகம் (சது.); cloud.

[நீரகம் → நீகம். நீர் + அகம் – நீருள்வாழ்வது, நீரையுடையது.]

நீகாசம்[1] *nīgāšam,* பெ. (n.) 1. ஒப்பு; resemblance. 2. உண்மை; truth.

நீகாசம்[2] *nīgāšam,* பெ. (n.) உறுதி (நாநார்த்த.) certainty.

நீகாமன் *nīgāman,* பெ. (n.) நீகான் (வின்.) பார்க்க; *see nīgān.*

[நீர் + கலமகன் → நீகாமன்.]

நீகாரம்[1] *nīgāram,* பெ. (n.) நீ என்னும் எழுத்துக் குறியீடு; the letter nī.

[நீ + காரம்]

'காரம்' நெடிற் சாரியை

நீகாரம்[2] *nīgāram,* பெ. (n.) பனி (திவ.); frost, hoarfrost, dew, heavy dew. *"நீகார மழை பொழிய"* (பாரத.காண்டவ.19.).

[நீர் + காரம்]

நீகாரம்[3] *nīgāram,* பெ. (n.) மும்மலங்களு ளொன்றான ஆணவமலம் (சி.சி.2.80. மறைஞா.); (Saiva) matter which is eternally encasing the soul and lasting till its final liberation, one of mu-m-malam.

நீகாரம்[4] *nīgāram,* பெ. (n.) பொருட்டாகக் கருதுகையின்மை (யாழ்.அக.); contempt, disdain.

[நீங்கு + ஆரம்.]

நீகான் *nīgān,* பெ. (n.) ஓசுநன், மாலுமி; captain, pilot, steersman. (திவா.); *"திசையறி நீகானும் போன்ம்"* (பரிபா.10:55.). *"கோடுயர் திணிமணலகன்றுறை நீகான் மாட வொள்ளெரி மருங்கறிந் தொய்ய"* (அகநா. 255.).

[நீர் + கலமகன்.
கலமகன் → காமான் → கான்
ஒ.நோ: பெருமகன் → பெருமான் பெம்மான்
குலமகன் → கோமகன் → கோமான்.]

நீங்கல்[1] *nīṅgal,* பெ. (n.) 1. விலகுகை, removing, separating. 2. பிளப்பு (யாழ்ப்.); gap,chink. 3. புறம்பு (யாழ்.அக.); outside.

[நீங்கு → நீங்கல்.].

நீங்கல்[2] *nīṅgal,* பெ. (n.) காட்டுப்பூவரசு; false fern tree.

நீங்கல்[3] *nīṅgal,* பெ. (n.) மாறுதல்; (in astrology) being changed as planets. (சா.அக.).

நீங்கலாக *nīṅgalāga,* இடை. (part.) (மற்றவற்றோடு குறிப்பிடப்படுவது) தவிர்த்து, தவிர; except; other than. *பிடிப்பட்டவர்களில் ஒருவர் நீங்கலாக மற்றவர்களைக் காவலர் உடனே விடுவித்து விட்டனர். (உ.வ.). ஆளுங்கட்சி நீங்கலாக மற்ற கட்சிகள் அனைத்தும் போராட்டத்தில் கலந்து கொள்கின்றன. (உ.வ.).*

[நீங்கு → நீங்கல் → நீங்கலாக.]

நீங்கள் *ni̇̄ṅgaḷ,* பெ. (n.) முன்னிலைப்பன்மைப் பெயர்; you. *"நூலவையார் போனீங்க ணோக்குமினே"* (சீவக.1045.).

[நீன் → நீம் → நீங்கள்.]

நீன் என்னும் பெயரே நீ என்று குறைந்து வழங்குகின்றது. நீன் என்னும் வடிவை இன்றும் தென்னாட்டுலக வழக்கிற் காணலாம். தான் என்பது தன் என்று குறுகினாற்போல, நீன் என்பது நின் என்று குறுகும். நீன் என்பது இலக்கணவறியாமை காரணமாகக் கொச்சையாகக் கருதப்படுகின்றது. நீனுக்குப் பன்மை நீம் என்பது. மகரம் பன்மைப் பொருளுரைத்தலை ஆங்கில இலக்கண நூல்களிலும் காணலாம். நீங்கள் என்பது விகுதிமேல் விகுதி பெற்ற இரட்டைப் பன்மை. (இலக்.கட்.4.).

நீங்காசலமலம் *ni̇̄ṅgāšala-malam,* பெ. (n.) கடற்பாசி; sea weeds-*gracilaris lichenoides* alias *G. onfervides.* (சா.அக.).

நீங்காதவோசையோன் *ni̇̄ṅgāda-v-ōšaiyōṉ,* பெ. (n.) சங்கு (யாழ்.அக.); conch.

[நீங்காத + ஓசையோன்.]

நீங்காமை *ni̇̄ṅgāmai,* பெ. (n.) பிரியாமை; impatience of separation.

[நீங்கு + ஆ + மை.]
மை – பண்பு விகுதி.
'ஆ' எதிர்மறை இடைநிலை.

நீங்காவிக்கல் *ni̇̄ṅgā*-vikkal, பெ. (n.) தொடர்விக்கல்; non-stopping or continous hiccups. (சா.அக.).

[நீங்கா + விக்கல்]

நீங்காவிட்டம் *ni̇̄ṅgā-viṭṭam,* பெ. (n.) 1. கூரைக் கைகளை யிணைக்கும் மரம் (இ.வ.); cross-piece connecting the rafters. 2. வீட்டின் கூரையைத் தாங்கும் உத்திரம் (வின்.); a beam strengthen the roof of a house.

[நீங்கு + ஆ + விட்டம்.]

'ஆ' எதிர்மறை இடைநிலை



நீங்கு¹–தல் *ni̇̄ṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. பிரிதல்; to leave, go, depart, separate from. *"நீங்கிற் றெறூஉம்"* (குறள்,1104.). 2. ஒழித்தல்; to give up, abandon. *"பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்"* (சிலப். 30:186.). 3. கடத்தல்; to pass over. *"நீங்கி னானந்த நெடுநதி"* (கம்பரா.வனம்புகு.36.).

தெ., க. நீகு. **ம.** நீன்னுக.

[நீள் → நீங்கு –,]

நீங்கு²–தல் *ni̇̄ṅgu,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. (பசி, நோய் முதலியவை) இல்லாமற் போதல், தீர்தல்; (of hunger, illness etc.,) to cease end. *வயிறு முட்ட நீர் குடித்த பிறகே பசி நீங்கியது போன்றிருந்தது. (உ.வ.).* 2. (ஒருவரை விட்டு) அகலுதல், ஒன்றிலிருந்து விலகுதல்; to leave, depart (from). *மக்கள் வேலை தேடிச் சொந்த ஊர் நீங்கி நகரத்திற் குவியத் தொடங்கி விட்டனர் (உ.வ.). நெஞ்சிலிருந்து நீங்கா நினைவுகள் (உ.வ.).*

[நீள் → நீங்கு –,]

நீங்கு³–தல் *ningu-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** மாறுதல் (வின்.); to turn away; to be warded off. **2.** விடுதலையாதல் (வின்.) ; to be liberated, released. **3.** தள்ளுண்ணுதல்; to be dismissed, discharged. **4.** ஒழிதல் (வின்.); to be excepted excluded. **5.** நடத்தல் (சூடா.); to go, proceed. **6.** நீந்துதல் (யாழ்ப்.); to swim. **7.** பிளவுபடுதல் (யாழ்ப்.); to form, as a gap, crevice, chasm. **8.** விரிந்தகலுதல் (வின்.); to be spread out, as fingers, legs. **9.** சிதறுதல் (வின்.); to be dispelled, scattered.

[நீள் → நீங்கு –,]

நீச்சக்குட்டை *nicca-k-kuttai,* பெ. (n.) நீச்சல்² (இ.வ.) பார்க்க; *see niccal²*.

[நீச்சல்² + குட்டை.]

நீச்சசலம் *nicca-šalam,* பெ. (n.) சிறுநீர் ; urine. (சா.அக.).

[நீச்சம் + சலம். சலசலத்து ஓடுவதால் சலம்.]

நீச்சடி¹–த்தல் *niccadi-,* 4 செ.கு.வி. (v.i.) நீந்துதல்; to swim.

[நீஞ்சு → நீச்சு + அடி.]

நீச்சடி²–த்தல் *niccadi-,* 4 செ.குன்றாவி. (v.t.) கால்நடைகளைக் குளிப்பாட்டுதல்; to wash as cattle.

[நீச்சு + அடி –,]

நீச்சடி³–த்தல் *niccadi-,* 4 செ.கு.வி. (v.i.) மீன், நாற்றம்போன்று நாற்றமடித்தல் (இ.வ.); to smell as fish.

[நீச்சு + அடி.]

நீச்சத்தண்ணி *nicca-t-tanni,* பெ. (n.) நீர்ச்சோற்றுத்தண்ணீர் பார்க்க; (இ.வ.) see *nir-c-cōrru-t-tannir.*

நீர் + சோற்று + தண்ணீர் → நீர்ச்சோற்றுத் தண்ணீர் → நீச்சோற்றுத்தண்ணீர் → நீச்சோத்துத்தண்ணீர் – நீச்சுத்தண்ணீர் →நீச்சத்தண்ணி (கொ.வ.).

நீச்சத்தாணி *niccattāni,* பெ. (n.) இதளியம், (வைத்தியபரிபா.) ; mercury.

நீச்சம்¹ *niccam,* பெ. (n.) நீந்துகை; swimming.

[நீஞ்சு → நீச்சு.]

நீச்சம்² *niccam,* பெ. (n.) முடைநாற்றம்; stink offersive smell.

நீச்சல்¹ *niccal,* பெ. (n.) நீந்துகை; swimming.

[நீஞ்சு → நீஞ்சல் → நீச்சல்.]

நீச்சல்² *niccal,* பெ. (n.) நீர்ச்சீலை, குளித்துணி (இ.வ.); man's loin cloth.

[நீர்ச்சீலை → நீச்சல்.]

நீச்சல்குளம் *niccal - kulam,* பெ. (n.) மகிழ்ச்சிக்காகவும், பயிற்சிக்காகவும் நீந்துவதற்குச் செயற்கையாய் அமைக்கப்பட்ட குளம் ; swimming pool.

[நீச்சல் + குளம்.]



நீச்சல்போட்டி *niccal-pōtti,* பெ. (n.) நீந்துவதில் போட்டியிடும் விளையாட்டு; swimming race as a sports. மாநிலங்களுக்கிடையிலான நீச்சல் போட்டியில் தமிழ்நாடு முதலிடம் பெற்றது (உ.வ.)

[நீச்சல் + போட்டி.]



நீச்சன் *niccaṉ,* பெ. (n.) நீச்சாள் (இ.வ.) பார்க்க; see niccāḷ.

[நீச்சாள் → நீச்சான் → நீச்சன்.]

நீச்சாள் *niccāḷ,* பெ. (n.) நீந்துவோன்; swimmer.

[நீச்சு + ஆள்.]

நீச்சு[1] *niccu,* பெ. (n.) 1. நீந்துகை; swimming. 2. வெள்ளம்; flood. "*நீச்சாற் பெருத்திடு காவிரியாற்றை*" (தனிப்பா. 1,82,163.). 3. நீந்தக்கூடிய ஆழம்; swimming depth, as of water. "***நீச்சுநிலை காணாமனிற்கு நாள்***" (தாயு. எந்நாட். ஆனந்த.1).

[நீந்து → நீச்சு.]

நீச்சு[2] *niccu,* பெ. (n.) முடைநாற்றம், மீன்நாற்றம் bad smell of fish. இவனுக்கு மீசை மேலே நீச்சடிக்க வேண்டும். (பழ.)

தெ.நீச்சு.

நீச்சுக்காரன் *niccu-k-kāraṉ,* பெ. (n.) நீச்சலடிப்போன் (வின்.); swimmer.

[நீச்சல் → நீச்சு. நீச்சு + காரன்.]

நீச்சுத்தண்ணீர்[1] *niccu-t-taṇṇir,* பெ. (n.) நீர்ச் *சோற்றுத்தண்ணீர்* பார்க்க; see *nir-cōṟṟu-t-taṇṇir.*

[நீர்ச்சோற்று + தண்ணீர் – நீர்ச்சோற்றுத் தண்ணீர் → நீச்சோற்றுத் தண்ணீர் – நீச்சுத்தண்ணீர் (கொ.வ).]

நீச்சுத்தண்ணீர்[2] *niccu-t-taṇṇir,* பெ. (n.) நீந்தக்கூடிய ஆழமுள்ள நீர் (வின்.); water of swimming depth.

[நீச்சு + தண்ணீர்.]

நீச்சுநிலையறி–தல் *niccu-nilai-y-aṟi-,* 2 செ.கு.வி. (v.i.) 1. ஆழத்தைஅறிதல்; lit., to sound the deep and shallow places. 2. உள்ள நிலைமையை ஆய்ந்து அறிதல் (வின்.); to investigate a business, examine a position.

[நீச்சுநிலை + அறி–,]

நீச்சோற்றுத்தண்ணீர் *niccōṟṟu-t-taṇṇīr,* பெ. (n.) *நீர்ச்சோற்றுத் தண்ணீர்* பார்க்க; see *nīr-c-cōṟṟu-t-taṇṇīr.*

[நீர்ச்சோற்றுத்தண்ணீர் → நீச்சோற்றுத் தண்ணீர்.]

நீசகம் *nīšagam,* பெ. (n.) தண்ணீர்; water. (சா.அக.).

[நீசு + அகம்.]

நீசடுவா *nīšaḍuvā,* பெ. (n.) பால்; milk. (சா.அக.).

நீசதை *nīšadai,* பெ (n.) *நீசம்* பார்க்க; see *nīšam.*

நீசம் *nīšam,* பெ. (n.) மஞ்சள்; turmeric. (சா.அக.).

நீசரக்கு *nīšarakku,* பெ. (n.) *நீசம்* பார்க்க; see *nīšam.* (சா.அக.).

நீசல் *nīšal,* பெ. (n.) நீர்ச்சீலை, (இ.வ.); loin cloth.

[நீர்ச்சீலை → நீச்சல் → நீசல்.]

நீஞ்சு—தல் *nīñju-,* 5 செ.கு.வி. (v.i.) 1. *நீந்து—* (வின்.) பார்க்க; see *nīndu-,* 2. அருஞ் செயல்களை முடிக்கப் பெருமுயற்சி யெடுத்தல்; to be activity engaged, as in a stupendous work. *வேலையில் நீஞ்சிச் கொண்டிருக்கிறான். (உ.வ.).* 3. மிகுதியாகக் குடித்தல் (வின்.); to drink to excess, especially toddy. *கள் மிடாயில் நீஞ்சக் கூடியவன். (உ.வ.).*

நீஞ்சுமூசி[1] *nīñcum-ūši,* பெ. (n.) *நீந்துமூசி* பார்க்க; see *nīndum-ūši.*

[நீந்தும் + ஊசி → நீந்தும் ஊசி → நீஞ்சும் ஊசி = நீஞ்சுமூசி.]

நீட்சம் *nīṭšam,* பெ. (n.) குருவி; a kind of sparrow. (சா.அக.).

நீட்சி *nīṭci,* பெ. (n.) *நீட்டம்* (உ.வ.) பார்க்க; see *nīṭṭam.*

[நீள் → நீட்டு → நீட்டம் → நீட்சி.]

நீட்சிமை *nīṭcimai,* பெ. (n.) *நீட்டம்* (யாழ்.அக.) பார்க்க; see *nīṭṭam.*

[நீள் → நீட்டம் → நீட்சி → நீட்சிமை.]

நீட்டக்கத்தரி *nīṭṭa-k-kattari,* பெ. (n.) கத்தரிக்காய் வகை; long brinjāl.

[நீட்டம் + கத்தரி.]

நீள் → நீட்டம் + கத்திரி. கத்தரிக்காயைக் கத்திரிக்காய் என்றழைப்பது வழு.

நீட்டக்காவிதம் *nīṭṭa-k-kāvidam,* பெ. (n.) சுரைக்காய்; bottle gourd-cucurbita lagenaria. (சா.அக.).

[நீட்டம் + காவிதம்.]

காவிதம் என்னுஞ் சொல்லிற்குக் கருங் குவளை எனப்பொருள் கூறும் சாம்பசிவம் பிள்ளை மருத்துவ அகர முதலி, நீட்டக்காவிதம் என்ற சொல்லுக்குச் சுரைக்காய் என்ற பொருளைப் பதிவு செய்துள்ளது.

நீட்டச்சோதி *nītta-c-cōdi,* பெ. (n.) ஒளிரும் மரம்; a tree luminous in the dark-phosphorous tree. (சா.அக.).

[நீட்டம் + சோதி.]

நீட்டம்[1] *nīṭṭam,* பெ.(n.) **1.** நீளம்; length. *"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனைய துயர்வு"* (குறள், **595.**). **2.** ஒசையின் நீட்சி; elongation of sound. *"நீட்டம் வேண்டின் அவ்வள புடைய கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்" (தொல். எழுத்து. 6.).*

[நீள் → நீட்டு → நீட்டம். (மு.தா.286).]

நீட்டம்[2] *nīṭṭam,* பெ. (n.) **1.** நீட்டுகை; stretching, lengthening. **2.** காலநீட்டிப்பு; procrastination. *"நிலைமை யறிய நீட்ட மின்றி"* (பெருங். மகத. **23:51.**).

[நீள் → நீட்டு → நீட்டம்.]

நீட்டல்[1] *nīṭṭal,* பெ. (n.) தலைமயிரைச் சடையாக்குகை; twisting into matted. locks. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்த தொழித்து விடின் (குறள், **280.**).

[நீட்டு → நீட்டல்.]

நீட்டல்[2] *nīṭṭal,* பெ. (n.) **1.** நீளச்செய்கை; lengthening, extending, stretching **2.** (இலக்.) குற்றுயிரை நெட்டுயிராக இசைக்கும் செய்யுள் திரிபு (விகார) வகை (தொல். சொல். **403.**); (gram.); poetic licence which consists in the lengthening of a short vowel into a long one. **3.** அளவை நான்கனுள் நீட்டி யளக்கும் முழம் காதம் போன்ற அளவு; linear measure, one of four alavai. *"முகத்த னீட்டல்"* (குறள், **280.**). **5.** பெருங்கொடை (பிங்.); liberality.

[நீள் → நீட்டு → நீட்டல்.]

நீட்டல்மானம் *nīṭṭal-māṉam,* பெ. (n.) நீட்டல், (யாழ்.அக.) அளவு; linear measure.

[நீள் → நீட்டு → நீட்டல் + மானம். மானம் = அளவு.]

நீட்டலளவு *nīṭṭal-aḷavu,* பெ. (n.) நீளத்தை அளக்கும் அலகு; linear unit measure.

[நீள் → நீட்டு → நீட்டல் + அளவு.]

நீட்டலளவை *nīṭṭal-aḷavai,* பெ.(n.) நீளத்தை அளக்கும் அளவை முறை; linear measure.

[நீட்டல் + அளவை.]

நீட்டாணம் *nīṭṭāṇam,* பெ. (n.) **1.** உப்புநீர், சாறு; soup. **2,** குழம்பு; (வின்.); pottage,

[நீட்டு + ஆணம்.]

நீள் → நீட்டு. நீள் – ஒழுங்கு, அமைப்பு. அள் → அளம் → ஆளம் → ஆணம். அள் → அளம் - சேறு, சாறு, குழம்பு.

இறைச்சியையோ மரக்கறிகளையோ வேகவைத்து உப்பு மிளகு முதலியன இட்டுக் கொதிக்க வைத்து வடித் தெடுத்தச் சாறு. இது குழம்புபோல் கெட்டியாய் இல்லாமல் நீர்த்த தன்மை யுடையதாயிருக்கும்.

நீட்டாய்நட—த்தல் *nīṭṭāi-naḍa-,* **3** செ.கு.வி. (v.i.) நேராய் நடத்தல்; to walk straight.

[நீள் → நீடு → நீட்டு + ஆய் + நட.]

நீட்டாய்ப்போ—தல் *nīṭṭāi-p-pō-,* **8** செ.கு.வி. (v.i.) நேராய்ப் போதல் (சென்னை.); to go straight.

[நீள் → நீடு → நீட்டு + ஆய் + போ–,]

நீட்டாள்[1] *niṭṭāḷ,* பெ. (n.) வேலையாள்; attendant or waiting servant. *நாட்டாளுக்கு ஒரு நீட்டாளோ? (பழ.).*

[நீட்டு + ஆள்.]

நீள் → நீட்டு.
ஆல் → ஆள் – வினையாற்றுபவன், செயல் திறவோன்.

நீட்டாள்[2] *niṭṭāḷ,* பெ. (n.) நெட்டையாள் (உ.வ.); tall person.

[நீள் → நீளு → நீடு → நீட்டு + ஆள்.]

நீட்டி[1]–த்தல் *niṭṭi-,* 8 செ.குன்றாவி. (v.t.) 1. நீளச் செய்தல்; to lengthen. *மடங்கி யிருக்கும் இருப்புக் கம்பியை நீட்டிக்க வேண்டும். (உ.வ.).* 2. நீட்டிப்பேசு–, பார்க்க; see niṭṭi-p-pēšu. *பேச்சை நீட்டிக்கிறான். (உ.வ.).* 3. காலந்தாழ்த்துதல்; to delay. *"தீம்பால் பெருகு மளவெல்லா நீட்டித்த காரணமென்"* (கலித். 83.). 4. முடித்தல் (அக.நி.); to finish, complete. 5.நெடும் பொழுது செல்லல் (1, 2, வழக்.); to elongate.

[நீள் → நீளு → நீடு → நீட்டு → நீட்டி –.]

நீட்டி[2]–த்தல் *niṭṭi-,* 5 செ.கு.வி. (v.i.) நெடுங்காலம் நிலைத்தல்; to be prolonged; to endure long. *"இவ்வுடம்பு நீட்டித்து நிற்கு மெனின்"* (நாலடி, 40.).

[நீடு → நீட்டு → நீட்டி –.]

நீட்டித்திரு–த்தல் *niṭṭi-t-iru-,* 3 செ.கு.வி. (v.i.) நீளுதல்; to lengthen. *"கேட்டனை யாயினித் தோட்டார் குழலியொடு நீட்டித்திராது நீபோ கென்றே"* (சிலப். 15:199.).

[நீட்டித்து + இரு –,]

நீட்டிநட[1]–த்தல் *niṭṭi-naḍa-,* 3 செ.கு.வி. (v.i.) மெல்ல நடத்தல்; to walk slowly.

[நீள் → நீட்டு → நீட்டி + நட –,]

கால நீட்டிப்பு, சுணக்கம்.

நீட்டிநட[2]–த்தல் *niṭṭi-naḍa-,* 3 செ.கு.வி. (v.i.) எட்டி நடத்தல்; to take long strides.

[நீள் → நீட்டு → நீட்டி + நட –,]

காலைநீட்டி வைத்து நடத்தல்.

நீட்டிப்படு–த்தல் *niṭṭi-p-paḍu-.* 4 செ.கு.வி. (v.i.) 1. உடம்பைப் படுக்கையில் கிடத்துதல்; to lie the body on the bed. *பணிச்சுமை யிலேற்பட்ட களைப்பினைப் போக்க நேற்று நீட்டிப்படுத்து விட்டேன்.* (உ.வ.). 2. செயல் செய்யாது முடங்கிப் போதல்; to strike, refuse to work until a grievance is remedied. *என் கோரிக்கை நிறைவேறும் வரை நீட்டிப்படுத்து விடப் போகிறேன். (உ.வ.).*

[நீட்டி + படு–,]

நீட்டிப்பேசு–தல் *niṭṭi-p-pēšu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. விளக்கிச் சொல்லுதல்; to speak at great length, in great detail. *'நீட்டிப் பேசுதலை நினைக்கவும் பயந்தனனெந்தாய்* (அருட்பா, பிள்ளைப் பெரு.63.). 2. சொற்களை நீட்டிப் பலுக்கிப் பேசுதல்; to drawl out.

[நீள் → நீட்டு → நீட்டி + பேசு.]

நீட்டிப்போடு–தல் *niṭṭi-p-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) 1. நடக்கும் போது காலை எட்டி வைத்தல்; to take a big stride in walking. *இந்த வேகத்தில் நடந்தால் ஊரடையு முன் பொழுது அடைந்துவிடும்;*

நடையைச் சற்று நீட்டிப்போடு. (உ.வ.). 2. காலம்(ம்) நீட்டித்தல்; to put off. *இந்த வழக்கிற்குத் தீர்ப்பு சொல்வதைக் கொஞ்சம் நீட்டிப் போடு; அதற்குள் அவர்கள் இணக்கமாகப் போகக் கூடும். (உ.வ.).* 3. உட்கார்ந்த நிலையில் காலை நீட்டி மடக்காமல் நீளமாய் வைத்துக் கொள்ளுதல்; to sit by. *காலை நீட்டிப் போட்டுக் கொண்டு பாட்டியைப் போல் அமர்ந்துள்ளாயே. (உ.வ.).* 4. பயிர்த் தொழிலில் வேலையாளுக்குரிய பகிர்வை அகலமாய்ப் போடுதல்; to extended in agriculture cooly's shares. எனக்கு மட்டும் மனையை நீட்டிப் போடுவது முறையா. (உ.வ.).

[நீட்டி + போடு–.]

நீட்டிப்பு *nīṭṭippu-,* பெ. (n.) உரிய காலம் முடிந்த பின்பும் தொடர்வதற்கான காலநீடிப்பு; extension (time.) *பணியிட நீட்டிப்பு இன்னும் வழங்கவில்லை.* (உ.வ.))

[நீள்டி → நீட்டு → நீட்டிப்பு–,]

நீட்டிமுழக்கு–தல் *nīṭṭi- muḻakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) (சுருக்கமாகக் கூறாமல்) விரித்துக் கூறுதல், பேச்சை வளர்த்தல்; dwell upon, speak at great length (on something), hold forth. *நீட்டி முழக்காமல் சுருக்கமாய்ச் சொல்.* (உ.வ.).

[நீட்டி + முழக்கு–.]

நீட்டியள[1]–த்தல் *nīṭṭi-y-aḷa-,* 3 செ.குன்றாவி. (v.t.)எஞ்சாது அளத்தல், குறைவற அளத்தல்; to measure accuratly, *கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை நீட்டியளப்பதோர் கோல்* (குறள்,796.)

நீட்டியள[2]–த்தல் *nīṭṭi-y-aḷa-,* 3 செ.கு.வி. (v.i.) துணி, இடம் போன்றவற்றை அளக்கும் போது ஏமாற்றாய் அளத்தல்; as measuring the cloth place to cheating. *நான்கு முழத்துணியை ஐந்து முழத்துணியாய் நீட்டியளத்து விட்டான். (உ.வ.) நிலத்தை அளக்கும் போது கோலை நீட்டியளந்து என்னுடைய இடத்தையும் சேர்த்துக் கொண்டான் (உ.வ.)*

[நீள் → நீட்டு → நீட்டி+ அள–.]

நீட்டியளத்தல் *nīṭṭi-y-aḷattal,* பெ. (n.) ஓரிடத்தையேனும் பொருளையேனும் கோல் முதலிய கருவிகொண்டு அளக்கை (தொல். எழுத்து. 7. உரை.); measuring by rod, etc.

[நீள் → நீட்டு →நீட்டி + அளத்தல்.]

நீட்டினவிரல்குறித்தான் *nīṭṭiṉa-viral kuṟittāṉ,* பெ. (n.) கிரந்தி நாயகம் என்னும் நிலைத் திணை (மலை.); a plant-Ruella patula.

நீட்டு[1]–தல் *nīṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. நீளச்செய்தல்; to lengthen, reach forth, extent; to stretch out. 2. முடக்காமல் நேர் நிறுத்துதல்; to straighten. *கையை நீட்டினான்.* 3. திருப்படையல் முதலியன படைத்தல்; to offer, as oblations. *"தளிகை நீட்டினதெல் லாம்"* (திருவிருத். 33. பக். 204.). 4. கொடுத்தல்; to give. *"பாடிய புலவர்க்குப் பரிசினீட்டின்று"* (பு. வெ. 3. 16. கொளு.). 5. செருகுதல்; to insert, drive into. *"குருதிவாள்... புண்ணுநீட்டி"* (சீவக. 2293.). 6. நீளப்பேசுதல்; to speak at length or too much. 7. இசை முதலியவற்றில் கால நீட்டித்தல்; to prolong, as a note. 8. கால நீட்டித்தல்; to delay, procrastinate, retard, defer.

[நீள் → நீட்டு–,]

நீட்டு²–தல் *nīṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. முன்நோக்கிக் காட்டுதல்; to brandish, draw (something); put forth. ***கத்தியை நீட்டி அச்சுறுத்தினான். (உ.வ.). அவர் கேட்டதும் பணத்தை நீட்டுவதா? (உ.வ.).*** 2. (கால அளவில்) தொடர்ந்து நிகழ்த்துதல், (எண்ணிக்கை அளவில்) மிகுதியாதல்; to prolong, extend. பேச்சை நீட்டாதே. (உ.வ.) ***பெயர்ப்பட்டியலை இதற்குமேல் நீட்ட வேண்டாம். (உ.வ.).*** 3. (பேச்சில், பாட்டில்) சொற்களை இழுத்துப் பலுக்குததல்; (while speaking) to drow out, drawl out, lengthen. ***அந்த ஊர்க்காரர்கள் எப்பொழுதும் நீட்டி நீட்டித்தான் பேசுவார்கள்.*** (உ.வ.).

[நீள் → நீட்டு–,]

நீட்டு³ *nīṭṭu,* பெ. (n.) 1. நீளம்; length, as of time or space. ஆவணம் நீட்டிலே மடித் திருந்தது. (உ.வ.). 2. தொலைவு (தூரம்); distance. *"மதுரை நீட்டைந்து கூப்பிடு"* (திருவாலவா. 26. 8.). 3. திருமுகவோலை; rescripts, writs, as of a king. ***"சித்திர சேனனீட்டவிழா"*** (உபதேசகா. சிவத்துரோ. 174.). (T.A.S.II,i,4.).

[நீள் → நீட்டு.]

நீட்டு⁴ *nīṭṭu,* பெ. (n.) 1. நீட்டுகை; extend. 2. தெரிநிலை வினைப்பகுதி; sign of vbl.part.

[நீள் → நீட்டு]

நீட்டுக்கதியோன் *nīṭṭu-k-kadiyōṉ,* பெ. (n.) வெள்ளாடு; goat. (சா.அக.).

நீட்டுக்கால் *nīṭṭukkāl,* பெ. (n.) முடவாட்டுக் கால்; goats foot-ipomea bilobs. (சா.அக.).

நீட்டுசெடிச்சி *nīṭṭu - šeḍicci,* பெ. (n.) பேய்த் தும்பை; devil toombay-*leucas linifolia* alias *phlomis zeylanica.* (சா.அக.).

நீட்டுப்பாவு *nīṭṭu-p-pāvu,* பெ. (n.) சேலைக்கும் வேட்டிக்கும் உரிய தோய்ச்சல் பாவு; spun thread. esp. for knitting and weaving; yarn.

[நீட்டு + பாவு.]



நீட்டுப்பை¹ *nīṭṭu-p-pai,* பெ. (n.) 1. சுருக்கி விரிக்கக்கூடிய தையற் பை; a long bag or purse opened or closed by means of a string.

[நீட்டு + பை.]



நீட்டுப்பை² *nīṭṭu-p-pai,* பெ. (n.) பெருவயிறு; capacious stomach. ***நீட்டுப்பை சுருக்குப்பை வைத்திருக்கிறான்.*** (குஞ்சை.).

[நீட்டு + பை.
பொள் → பொய் → பை. பை போன்ற வயிறு.]

நீட்டுப்போக்கு *niṭṭu-p-pōkku,* பெ. (n.) 1. நீளவாட்டு; lengthwise direction. 2. உயரம்; tallness. 3. திறமை, ஆற்றல், வல்லமை; ability, pecuniary or otherwise. *அவன் நீட்டுப் போக்கான ஆள். (உ.வ.).*

[நீட்டு + போக்கு.]

நீட்டுமிளகாய் *niṭṭu - miḷagāi,* பெ. (n.) மலை மிளகாய்; chilly.

[நீட்டு + மிளகாய்.]



நீட்டுமுடக்கில்லாதவன் *niṭṭu-muḍakkillā dāvaṉ,* பெ. (n.) 1. ஏழை; person in straitened circumstances. 2. இவறன், நெஞ்சீரமி லாதான் (உலோபி); miser, unaccommodating person. 3. குடும்பக் கவலையற்றவன்; person free from domestic worries. *மகன் தலை யெடுத்த பிறகு அவன் நீட்டு முடக்கில்லாதவனாகி விட்டான். (உ.வ.).*

[நீட்டு + முடக்கு + இல்லாதான்.]

நீட்டுமுடக்கு *niṭṭu-muḍakku,* பெ. (n.) 1. கொடுக்கல் வாங்கல்; giving and receiving; lending and borrowing. 2. உதவுங்குணம்; accommodating disposition. 3. நீட்டுப் போக்கு, 3 பார்க்க. *see niṭṭu-p-pōkku.*

[நீட்டு + முடக்கு.]

நீட்டோலை *niṭṭōlai,* பெ. (n.) திருமுகவோலை; rescripts writs as of a king. *"நீட்டோலை வாசியா நின்றான்"* (மூதுரை.).

[நீட்டு + ஓலை.]

நீட்பம் *nīṭpam,* பெ. (n.) நீளம் (யாழ்ப்.); length.

[நீள் → நீட்பம்.]

நீடசேந்திரன் *nīḍaśēndiraṉ,* பெ. (n.) பருந்து (கருடன்); brahmini kite. (சா.அக.).

நீடம்[1] *nīḍam,* பெ. (n.) பறவைக் கூடு (இலக்.அக.); birds nest.

[நீள் → நீடு +அம்
தொடர்ந்து தங்குமிடம்.]



நீடம்[2] *nīḍam,* பெ. (n.) இடம் (நாநார்த்த); place.

நீடல்[1] *nīḍal,* பெ. (n.) 1. காலம் நீட்டித்தல்; to extends the time. 2. நீளுகை (வழக்); prolongation.

[நீள் → நீளல் → நீடல்.]

நீடல்² *nīḍal,* பெ. (n.) நீளுகை (வழக்); prolongation.

[நீள் → நீளல் → நீடல்.]

நீடலர் *nīḍalar,* பெ. (n.) காலம் நீட்டியார்; time not extender. "பூச்சேரணையிற் பெருங்கவின் றொலைந்த நின் நாடுதுயர் கேட்பின் நீடலர் மாதோ". (குறுந். 253.).

[நீள் → நீடு + அல் + அர்.]
'*அல்*' எதிர்மறை இடைநிலை.
'*அர்*' பன்மையீறு.

நீடாணம் *nīḍāṇam,* பெ. (n.) நீட்டாணம் (யாழ்.அக.) பார்க்க; *see nīṭṭāṇam.*

[நீட்டாணம் → நீடாணம்–இடைக்குறை.]

நீடாலைக்கோடு *nīḍālai-k-kōḍu,* பெ. (n.) சூடாலைக்கல் (யாழ்.அக.); a kind of stone.

[நீடு + ஆலை + கோடு.]

நீடி¹–த்தல் *nīḍi-,* 4 செ.குன்றாவி. (v.i.) 1. நீளுதல்; to lengthen time, distance. *வாணாள் நீடிக்க வழியுண்டு. (உ.வ.).* 2. நிலைநிற்றல் (வின்.); to endure, last; to be permanent. *அவர் ஐந்தாண்டு காலம் பதவியில் நீடித்ததே அருஞ்செயல் தான். (உ.வ.).*

[நீடு → நீடி –.]

நீடி²–த்தல் *nīḍi-,* 4 செ.கு.வி. (v.i.) (கால அளவில்) தொடர்தல்; முடிவுக்கு வருவது தள்ளிப் போதல்; (of time) to last, extend. *பேச்சு மேலும் அரை மணி நேரம் நீடித்தது (உ.வ.). இரு நாடுகளின் நீடித்த நட்பின் அடையாளம் இந்த ஒப்பந்தம் (உ.வ.). சட்டத்தை மேலும் ஓராண்டிற்கு நீடித்து ஆணையிட்டார். (உ.வ.).*

[நீள் → நீளு → நீடு → நீடி –,]

நீடி³ *nīḍi,* பெ. (n.) நீக்கமற நிறைந்திருக்கை; omnipresence. *"தேய நீடி யில்லாமை போல்" (ஞானவா. வீலை. 32.).*

[நீடு → நீடி.]

நீடித்திரு–த்தல் *nīḍittiru-,* 3 செ.கு.வி. (v.i.) நெடுங்காலத்திற் கிருத்தல்; to be for a long time.

[நீடித்து + இரு –,]

நீடிப்பு¹ *nīḍippu,* பெ. (n.) தொடர்ந்திருக்கை; persistance.

[நீள் → நீளு → நீடு → நீடி → நீடிப்பு.]

நீடிப்பு² *nīḍippu,* பெ. (n.) பதவி, வேலை போன்றவற்றில் ஒருவர் உரியகாலம் முடிந்த பின்பும் தொடர்ந்து இருப்பதற்கு ஏற்ற வகையில் அளிக்கப்படும் கால அதிகரிப்பு; extension (of service, permit, visa etc.,) *அவருக்கு மேலும் ஓராண்டிற்குப் பதவி நீடிப்புக் கிடைத்துள்ளது. (உ.வ.).*

[நீள் → நீளு → நீடு → நீடி → நீடிப்பு.]

நீடிரும்பெண்ணை *nīḍirum-peṇṇai,* பெ. (n.) நீண்ட கரிய பனை; a long palmora tree. "நீடிரும் பெண்ணைத் தொடுத்த கூட்டினும் மயங்கிய மையலூரே" (குறுந்.374.).

[நீடு + இரும் + பெண்ணை.]

நீடின்றி *nīḍiṉṟi,* பெ. (n.) நீடுதலின்றி; without extended the time. "கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம் நீடின்றி ஆங்கே கெடும்" (குறள், **566.**).

[நீடு + இன்றி]

நீடு¹-தல் *nīḍu-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** நீளுதல்; to grow long; to be lengthened; to be extended through space or time. *"அளபிறந்து யிர்த்தலும் ஒற்றிசை நீடலும் உளவென மொழிப"* (தொல். எழுத்து. **33.**). **2.** பரத்தல்; to spread; to extend. *"நீடாழி யுலகத்து"* (பாரத. சிறப்புப். **1.**). **3.** பெருகுதல்; to abound; to be copious; *நீடிய செல்வம்* (வின்.). **4.** செழித்தல் (யாழ்.அக.); to thrive, grow well. **5.** மேம்படுதல்; to rise high. *"நிலைமை நீடுத றலைமையோ வன்றே"* (ஞானா. பாயி. **3.**). **6.** நிலைத்தல்; to last long; to endure; to be permanent. *"அளி நீடளகம்"* (திருக்கோ. **122.**). **7.** இருத்தல் (வின்.); to exist, subsist. **8.** காலம் நீட்டித்தல்; to delay. *"நீடன்மின், வாரு மென்பவர் சொற்போன்றனவே"* (பரிபா. **14:9.**). **9.** கெடுதல்; to become decayed. *"நீடாப் பனைவிளைவு நாமெண்ண"* (திணைமாலை. **5.**).

தெ. நெகது **க.** நீடு **ம.** நீடுக

[நீள் → நீடு. (மு.தா.287).]

நீடு²-தல் *nīḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** தாண்டுதல் (திவா.); to pass over; to leap over. **2.** பொழுது கடத்துதல்; to delay. "நீடலை முடியுதென்றான்" (யசோதர.**2:35.**).

[நீள் → நீடு-,]

நீடு³-தல் *nīḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தேடுதல் (அக.நி.); to seek, search.

[நேடு → நீடு. நேடு = தேடு.]

நீடு⁴ *nīḍu,* பெ. (n.) **1.** நெடும் பொழுது; a long time *"நீடுநீர் நெடுஞ்சுனை ஆயமொ டாடாய்"* (அகநா. **358.**) **2.** நெடுங்காலம்; a long time. *"நிலமிசை நீடு வாழ்வார்"* (குறள், **3.**). **3.** நிலைத்திருக்கை; permanence. *"நெடுஞ்செல்வ நீடின்றி யாங்கே கெடும்"* (குறள், **566.**).

[நீளு → நீடு.]

நீடுநினைந்திரங்கல் *nīḍu-niṉaindiraṅgal,* பெ. (n.) (அகப்.) கூட்டம் வாயாது காலம் நெடிதாகத் தலைவன் தலைவியை நினைந்து இரங்குதலாகிய அகப்பொருட்டுறை (சங்.அக.); theme in which the hero bewails his long separation form the heroine.

[நீடு + நினைந்து + இரங்கல்.]

நீடுநினைந்துருகல் *nīḍu-niṉaindurugal,* பெ. (n.) நீடுநினைந்திரங்கல் பார்க்க; see nīḍu-niṉaindiraṅgal.

[நீடு + நினைந்து + உருகல்.]

நீடுநீர் *nīḍu - nīr,* பெ. (n.) தூய்ய நீர்; sacred water. *"நீடு நீர்மணி நீரு மல்லவும்"* (சீவக. **2418.**).

[நீடு + நீர்.]

நீடுநீர்வையை *nīḍu - nīr-vaiyai,* பெ. (n.) ஒழுக்கறா நீருடைய வையையாறு; perennial vaigai river. *"நீடுநீர் வையை நெடு மாலடியேத்தத் தூவித் துறைபிடியப் போயினாண்மேவி"* (சிலப். **18:4.**).

*[நீள் → நீளு → நீடு .
நீடு + நீர் + வையை.]*

நீடுருவாணி *nīḍuruvāṇi,* பெ. (n.) சித்தரத்தை; lesser galangal-alpinia galanga (minor). (சா.அக.).

நீடுவரை *nīḍuvarai,* பெ. (n.) நெடிய மலை; a long hills. "நீடுவரை யடுக்கத்து நாடுகைக் கொண்டு". (நற். 55:18.).

[நீடு + வரை.]

நீடூர் *nīḍūr,* பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊர். a village in Tanjavur; dt. "*நீரில் வாளை வரால் குதி கொள்ளும் நிரைநற் கழனிச் செல்வ நீடூர்*" (சுந்தரர். 56–1.).

நீடூரம் *nīḍūram,* பெ. (n.) நஞ்சு (பாடாணம்) (சங்.அக.); arsenic.

நீடூழி *nīḍūḻi,* பெ. (n.) *நீடூழிக் காலம்* பார்க்க; *see nīḍūḻi-k-kālam.*

[நீடு + ஊழி.]

நீடூழிக்காலம் *nīḍūḻi-k-kālam,* பெ. (n.) நெடுநாள்; long aeons; long ages.

[நீடூழி + காலம்.]

நீடூழிகாலம் *nīḍūḻi-kālam,* பெ. (n.) *நீடூழிக் காலம்* பார்க்க; see *nīḍūḻi-k-kālam.*

[நீடு + ஊழி.]

நீடோடநட – த்தல் *nīḍōḍa-naḍa-,* 3 செ.கு.வி. (v.i.) நெடுங்காலம் நிகழ்தல் (வின்.); to last, a long time.

[நீடு + ஓட + நட.]

நீண்ட *nīṇḍa,* பெ.அ. (adv.) (நீளத்தில்) அளவை விட அதிகமான, (காலத்தில்) அதிகமாகச் செல்கிற; (in length and time) long. *நீண்ட கடிதம் (உ.வ.) நீண்ட கூந்தல் (உ.வ.) நீண்ட காலக் கடன்(உ.வ.) நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தோம். (உ.வ.).*

[நீள் → நீண்ட.]

நீண்டகையன்[1] *nīṇḍa-kaiyan̲,* பெ. (n.) யானை; elephant.

[நீண்ட + கையன்.]



நீண்டகையன்[2] *nīṇḍa - kaiyan̲,* பெ. (n.) களவுப்பழக்கமுள்ளவன்; thief.

[நீள் → நீண்ட + கையன்.]

இவன் கை நீளமுள்ளவன் என்னும் வழக்குக் களவாணியைக் குறிக்கும். மேலும் பிழைசெய்தவன், தன் தவறு தெரியாதிருக்க, பேசி கொண்டிருக்கும் போதே அடித்துவிடும் இயல்புடை யானையும் குறிக்கும்.

நீண்டகையான் *nīṇḍa-kaiyān̲,* பெ. (n.) ஒற்றைக்கொம்பன் (காண்டா மிருகம்); rhinoceros. (சா.அக.).



நீண்டகையானை *nīṇḍa-kai-yāṉai,* பெ. (n.) ஒற்றைக் கொம்பனின் கொம்பு (யாழ்.அக.); the horn of the rhinoceros.

நீண்டதும்பை *nīṇḍa-tumbai,* பெ. (n.) பேய்த்தும்பை; devil toombay-Leucas liniflia alias phlomis zeylanica.

[நீண்ட + தும்பை.]

நீண்டவன் *nīṇḍavaṉ,* பெ. (n.) திருமால்; višṇu; as one who grew to great height in his dwarf incarnation. ***"நீண்டவன் றுயின்ற சூழ லிதுவெனின்"*** (கம்பரா. குகப். 41.).

[நீள் – நீண்டவன்.]

தோற்றரவில் குறுமையுரு வெடுத்து மூன்றடி மண்கேட்டபின் பேருருக் கொண்டு உலகளந்து மாவலியின் செருக்கடக்கியதான தொன்மக்கதை.

நீண்டவிலை *nīṇḍa-v-ilai,* பெ. (n.) ஆடாதோடை; malabar nut-adthoda vasica. (சா.அக.).

[நீள் → நீண்ட + இலை.]

நீண்டாயம் *nīṇḍāyam,* பெ. (n.) நீளம் (யாழ்.அக.); length.

[நீள் → நீண்ட.நீண்ட+ஆயம் நீண்டாயம்.]

நீண்டொழுகுமேகம் *nīṇḍolugu - mēgam,* பெ. (n.) *தந்துமேகம்* பார்க்க; see *tandu mēgam.* (சா.அக.).

நீண்டோன் *nīṇḍōṉ,* பெ. (n.) *நீண்டவன்* பார்க்க; see *nīṇḍavaṉ.*

[நீள் → நீண்ட → நீண்டவன் → நீண்டோன்.]

நீண்முடி *nīṇ-muḍi,* பெ. (n.) அரசன்; king, as wearing a high crown. ***"நின்றமா மள்ளர்க் கெல்லா நீண்முடி யிலக்க மானான்"*** (சீவக. 286.).

[நீள் + முடி.]

நீண்மை *nīṇmai,* பெ. (n.) பழைமை; antiquity, olden times. ***"நீண்மைக்க ணின்று வந்த நீதியெலாந் தருவல்"*** (சீவக. 1119.).

[நீள் → நீண்மை.]

நீண்மொழி *nīṇ-moḻi,* பெ. (n.) 1. சூளுரை; vow. ***"நீண்மொழிக் குன்றா நல்லிசைச் சென்றோ ரும்பல்"*** (மலைபடு. 539.). 2. வீர னொருவன் செய்த வஞ்சினங் கூறும் புறத்துறை (புறநா. 287, தலைப்பு.); a theme describing the vow taken by a warrior. ***"நீண்மொழி யெல்லா நீலன் கூற"*** (சிலப்.28:109.).

[நீள் + மொழி.]

நீணகர் *nīṇagar*, பெ. (n.) நீண்ட பெருமனை; a large house. *"நெடுமணிஞ்சி நீணகர் வரைப்பின்"* (பதிற். **68:16.**).

[நீள் + நகர்.]

நீணாளம் *nīṇāḷam*, பெ. (n.) நீள் புகைக் குழாய் (தைலவ. தைல.); long blow-pipe.

[நீள் + நாளம்
நாளம் – உட்டுளை, தண்டு.]



நீணிதி *nīṇidi*, பெ. (n.) பெருஞ்செல்வம்; great riches. *"நீணிதி வணிகர்"* (சீவக. **615.**).

[நீள் + நிதி.]

skt. nidi

நீணிரை *nīṇirai*, பெ. (n.) நெடும்பிணக்குவை; collection of carcass. *"நிலமிழி நிவப்பி னீணிரை பலசுமந் துருவேழு கூளிய ருண்டு மகிழ்ந்தாட"* (பதிற்றுப். **36:11.**).

[நீள் + நிரை.]

நீணிலங்கடந்தநெடுமுடியண்ணல் *nīṇilaṅ kaḍanda-neḍumuḍiyaṇṇal*, பெ. (n.) திருமால்; Tirumāl. *"நீணிலங் கடந்த நெடுமுடி யண்ணல் தாடொழு தகையேன் போகுவல் யானென"* (சிலப். **11:148.**).

[நீள் + நிலம் + கடந்த + நெடுமுடி + அண்ணல்.]

நீணிலம் *nīṇilam*, பெ. (n.) பெருநிலப்பரப்பு; a large area. *"நிரப்பின் றெய்திய நீணிலம்"* (மணிமே. **14:51.**).

நீணிலமளந்தோன் *nīṇilam-aḷandōṉ*, பெ. (n.) (உலகளந்த) திருமால்; Tirumal. *"வாணன் பேரூர் மறுகிடை நடந்து நீணில மளந்தோ னாடிய குடமும்"* (சிலப். **6:54.**).

[நீள் + நீளம் + அளந்தோன்.]

நீணிலமளந்தோன்மகன் *nīṇilam-aḷandōṉ magaṉ*, பெ. (n.) திருமாலின் மகனாகிய காமன்; kāmaṉ. "வாணன் பேரூர் மறுகிடை நடந்து நீணில மளந்தோன் மகன்முன் னாடிய பேடிக் கோலத்துப் பேடு காண்குநரும்" (மணிமே. **3:116.**).

[நீணிலம் + அளந்தோன் + மகன்.]

நீணிலை *nīṇilai*, பெ. (n.) ஆழம்; depth. *"நீணிலைக் கூவல்"* (கல்லா. **12.**).

[நீள் + நிலை.]

நீணு–தல் *nīṇu-*, 5 செ.கு.வி. (v.i.) நெடுந் தொலைவு செல்லுதல்; to go a long distance. *"மாலொடு தண்டாமரையானு நீணுதல் செய்தொழிய நிமிர்ந்தான்"* (தேவா. **62. 9.**).

[நீள் → நீளு → நீணு–,]

நீணெறி *nīṇeṟi*, பெ. (n.) **1.** நீண்டவழி (யாழ்.அக.); long way. *"வேலியில் இடுமுள் ளொன்றைப் பிரித்து அதனை நீங்கிக் காலைக் கடன் கழித்தற்கு நீணெறிக் கண்ணதோர் நீர்நிலைக்கண் தலைப் படுகின்றவனென்க."* (சிலப். **13:43**, உரை.). **2.** இடைவிடா இன்பத்திற்குரிய நெறி (வின்.); the path of lasting happiness.

[நீள் + நெறி.]

நீணோக்கம் *nīṇōkkam,* பெ. (n.) விடாமற் பார்த்தல்; seeing without stop. *"நீணோக்கங் கண்டு நிறைமதி வாண் முகத்தைத் தானோர் குரக்குமு மாகென்று போன"* (சிலப். 21:20.).

[நீள் + நோக்கு+அம்]

நீத்தண்ணீர் *nī-t-taṇṇīr,* பெ. (n.) நீர்ச் சோற்றுத் தண்ணீர் (இ.வ.); water allowed to stand over cooked rice over-night.

[நீர்ச்சோற்றுத் தண்ணீர் → நீர்த்தண்ணீர் → நீத்தண்ணீர்.]

நீத்தம்² *nīttam,* பெ. (n.) 1.நீந்தற்குரிய ஆழிய இடம்; swimming depther place. *"வெள்ளநீர் நீத்தத்து ளூர்பூர் புழுக்குநரும்."* (பரிபா.11:53.). 2.வெள்ளம்; flood. *"நிவந்துசென் னீத்தங் குளங் கொலச் சாற்றி"* (மதுரைக். 246.). 3. ஆழம்; depth. *"வெள்ளநீர் நீத்தத்துள்"* (பரிபா. 11:53.). 4. கடல்; sea. (சீவக. 2421, உரை.). 5. மிகுதி; excess, abundance. *"நிறை நறுங் கூந்த னீத்தம்"* (கம்பரா. நாடவி. 59.).

[நீந்து → நீத்தம்.]

நீத்தம்² *nīttam,* பெ. (n.) தண்ணீர் விட்டான் கிழங்கு; water root, aspargus racemos.

நீத்தவன் *nīttavaṉ,* பெ. (n.) 1. துறவி; ascetic. 2. அருகன் (சூடா.); Arhat.

[நீ → நீக்கு → நீத்தல். நீத்தல் = விடுபடுதல், விலகுதல், துறத்தல். நீத்து → நீத்தவன்.]

நீத்தார்¹ *nīttār,* பெ. (n.) இறந்தவர்; (இக்.வழ.) மறைந்தவர்; the dead. *'நீத்தாருக்கு ஆற்ற வேண்டிய கடன்'* (உ.வ.).

[நீத்தார் – உயிரை நீத்தவர், இறந்தவர்.]

நீத்தார் என்பது முற்றத்துறந்த முழு முனிவரையே குறிக்குமெனினும், உயிரைத் துறந்த பின் துறப்பதற் கேதுமின்மை கருதி மறைந்தவரைக் குறிக்கவும் இச்சொல் வழங்குவது இக்கால வழக்கு.

நீத்தார்² *nīttār,* பெ. (n.) முற்றுந் துறந்த முனிவர், renounced person. *"ஒழுக்கத்து நீத்தார் பெருமை"* (குறள், 21.).

[நீ → நீக்கு → நீத்தார்.]

முற்றத் துறந்த முழுமுனிவர். தமக்குரிய ஒழுக்கத்தின் கண் உறைந்து நின்று உலகப் பற்றைத் துறந்த முனிவர்.

நீத்தார்இறுதிச்சடங்கு *nīttār-iṟudi-c-caḍaṅgu,* பெ. (n.) இறந்தவரின் பொருட்டு அவர் பிறங்கடைகள் செய்யும் இறப்புக்குப் பிந்தைய கரணம்; performence funeral rites to the death by their heir.

[நீத்தார் + இறுதிச்சடங்கு.]

நீத்தார்கடன் *nīttār-kaḍaṉ,* பெ. (n.) நீத்தார் இறுதிச் சடங்கு பார்க்க; see nīttār-iṟudi-c-caḍaṅgu.

[நீத்தார்² + கடன். கடம் → கடன் = செய்யத் தக்கது, செலுத்தத் தக்கது.]

நீத்தார்சடங்கு *nīttār-šaḍaṅgu,* பெ. (n.) நீத்தார் இறுதிச்சடங்கு பார்க்க; *see nīttār-iṟudi-c-caḍaṅgu.*

[நீத்தார் + சடங்கு.]

நீத்தார்பெருமை *nīttār-perumai,* பெ. (n.) திருக்குறள் அதிகாரங்களுள் ஒன்று; one of the chapters of Tirukkuṟaḷ.

[நீத்தார் + பெருமை.]

இறைவன் திருவருளைப் பெற்றவரும், மழை பெயற்கு ஓரளவு கரணியமாகக் கருதப்பெறுபவரும், பேரரசர்க்கும் பெருந் துணையாகும் அறிவாற்றல் மிக்கவரும், மழைக்கு அடுத்தபடியாக நாட்டு நல்வாழ்விற்கு வேண்டியவருமான, முற்றத் துறந்த முழு முனிவரின் பெருமை கூறுதல் (குறள், மரபுரை 1:50).

நீத்திடு—தல் *nīttiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. பெருக்கிடுதல்; (சீவக. 1382, உரை.); to overflow, flood. 2. மிகுத்திடுதல்; to become excessive. *"இகவாவிட ரென்வயி னீத்திட"* (சீவக. 1382.).

[நீத்து + இடு—,]

நீத்திருணி *nīttiruṇi,* பெ. (n.) காமப்பால்; semen virile. (சா.அக.)

நீத்து[1] *nīttu,* பெ. (n.) பெருக்கம் (ஐங்குறு.); multiplicity.

நீத்து[2] *nīttu,* பெ. (n.) 1. நீந்துகை; swimming. *"நீத்துநீ ரிருங்கழி"* (ஐங்குறு.162.). 2. நீந்தக்கூடிய ஆழமுடைய நீர்; water of swimming depth. *"யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப"* (தொல்.சொல்.406,சேனா.). 3. வெள்ளம்; flood.

[நீந்து → நீத்து.]

நீத்துநீர் *nīttu-nīr,* பெ. (n.) நீந்துதற்குரிய ஆழ்ந்த நீர்; depth of water to be used for swimming. *"பெருங்கடற் கரையது சிறு வெண்காக்கை நீத்து நீர் இருங்கழி இரைதேர்ந்துண்டு பூக்கமழ் பொதும்பிற் சேக்குந் துறைவனொடு"* (குறுந்.313.).

[நீந்து → நீத்து + நீர்.]

நீத்துப்பாகம் *nīttu-p-pāgam,* பெ. (n.) *நீர்ச் சோற்றுத்தண்ணீர்* பார்க்க; see *nīr-šōṟṟu-t-taṇṇīr*

[நீர் + பாகம் → நீர்ப்பாகம் → நீற்றுப்பாகம் → நீத்துப்பாகம்.]

நீத்தோர் *nīttōr,* பெ. (n.) பிரிந்தோர்; as divider. "அஞ்சி லோதி யாய்வளை நெகிழ நொந்தும் நம் அருளார் நீத்தோர்க்கு அஞ்சல் எஞ்சினம் வாழீ தோழி" (குறுந்.211.).

[நீத்து → நீத்தோர்.]

நீதகம் *nīdagam,* பெ. (n.) 1. வெற்றிலைக் கொடி எனும் கொடிவகை; betel-pepper. 2. *நீர்வல்லி* பார்க்க; see *nīr-valli.*

[நீர் → நீத்தம் → நீதம் → நீதகம்.]

நீதச்சிலைச்சூதம் *nīdaccilai-c-cūdam,* பெ. (n.) துரிசு; blue vitriol, verdigris.

நீதச்செம்மண் *nīda-c-cemmaṇ,* பெ. (n.) நிலத்தின் மேல் மண்; the red soil of a table land. (சா.அக.).

[நீதம் + செம்மண்.]

நீதபரிமளம் *nīda-parimaḷam,* பெ. (n.) சீதாங்கச் செய்நஞ்சு (யாழ். அக.); a mineral poison.

[நீதம் + பரிமளம்.]

நீந்தக்கொடு—த்தல் *nīnda-k-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) *நீந்தப் பெய்—தல்* பார்க்க; see *nīnda-p-pey-,*

[நீந்து[2] + கொடு—,]

நீந்தப்பெய்–தல் *ninda-p-pey-*, 1 செ.குன்றாவி. (v.t.) மிகுதியாய்க் கொடுத்தல்; to give or pour in abundance. "*கன்னலு நெய்யு நீந்தப் பெய்து*" (சீவக. 2401.).

[நீந்து² + பெய்.
நீஞ்சு → நீந்து = கடத்தல், அளவு கடத்தல், மிகுதி. பிள் → பிய் → பெய் = பொழிதல், கொடுத்தல், வழங்குதல்.]

நீந்தல் *nindal*, தொ.பெ. (vbl.n.) நீந்துதல் (சூ.நிக.5:25. மூலம்.); to swim.

[நீர் + நீந்து + அல்.]

அல்– தொழிற்பெயரீறு.

நீந்து¹–தல் *nindu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. கைகால்களாலடித்து நீரில் மிதந்து செல்லுதல்; to swim in water. "*நீந்துபுனல்*" (திவா. 5:68.). 2. பெருகுதல்; to overflow. "நெடும்பெருங்க ணீந்தின நீர்" (பு.வெ.12. பெண்பாற்.8.).

[நீஞ்சு → நீந்து.]

நீந்து²–தல் *nindu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கடத்தல்; to swim across, cross over, escape from. "*பிறவிப் பெருங்கடனீந்துவார்*" (குறள்,10.). 2. வெல்லுதல்; to get over, overcome. "*கலங்கருவிய வரைநீந்தி*" (மதுரைக் 57.). 3. கழித்தல்; to relinquish, give up. "*மணப்பருங் காமந் தணப்ப நீந்தி*" (அகநா. 50.).

நீந்து³ *nindu*, பெ. (n.) பெருங்கடல்; ocean. "*நீந்து நித்தில விதான நிழலான்*" (சீவக.2421.).

நீந்துபுனல் *nindu-punal*, பெ. (n.) ஆழமுள்ள நீர் (திவா.); deep water.

[நீந்து + புனல்.]

நீந்துமூசி *nindum-ūši*, பெ. (n.) காந்தம்; load stone

[நீந்தும் + ஊசி]

நீப்பு *nippu*, பெ. (n.) 1. துறவு; relinquishment, renunciation. 2. பிரிவு; separation, parting.

[நீ → நீப்பு]

நீப்புரவு *nippuravu*, பெ. (n.) நீங்குகை; leaving, abudoning. "*யாப்புறு பால்வகை நீப்புரவின்றி*" (பெருங். மகத. 6:63.).

[நீ → நீப்பு → நீப்புரவு.]

நீபம்¹ *nibam*, பெ. (n.) 1. *நீர்க்கடம்பு* (பிங்.) பார்க்க; see *nir-k-kadambu*. 2. பெண் கடம்பு common Indian oak. 3. செங்கடம்பு; small Indian oak. 4. மரவகை; niepabark. 5. உத்திரட்டாதி (பிங்.) பார்க்க; see uttirattādi.

நீபம்² *nibam*, பெ. (n.) கரணியம் (பிங்.); cause, reason.

நீம் *nim* , பி. பெ. (pron.) முன்னிலைப் பன்மைப்பெயர்; you. "*நீமே வென்றிக் களிற்றானுழைச் செல்வது வேண்டு மென்றான்*" (சீவக. 1932.).

[நீன் → நீ → நீம்.]

நீன் என்னும் பெயரே நீ என்று குறைந்து வழங்குகின்றது. நீன் என்னும் வடிவை

இன்றும் தென்னாட்டுலக வழக்கிற் காணலாம். தான் என்பது தன் என்று குறுகினாற் போல் நீன் என்பது நின் என்று குறுகும். நீன் என்பது இலக்கண வறியாமை காரணமாகக் கொச்சையாகக் கருதப்படுகிறது. நீனுக்குப் பன்மை நீம். மகரம் பன்மைப் பொருளுணர்த்தலை ஆங்கில இலக்கண நூல்களிலும் காணலாம் (இலக்.கட்.4.).

நீம்பயம் *nimbayam,* பெ. (n.) பனிதாங்கி; southern wood-artimisa abrotanum. (சா.அக.).

நீம்பல் *nimbal,* பெ. (n.) **1.** இரண்டு பலகையினூடே தோன்றுவது போன்ற பிளப்பு (இ.வ.); interstice, gap, cleft, chink, as between two boards. **2.** வெடியுப்பு (சா.அக.); saltpetre.

[நுல் → நெல் → நெள் → நெரு →நெகிழ் (நெகிள்) நீள் → நீம் → நீம்பு → நீம்பல்.]

நீமம் *nimam,* பெ. (n.) **1.** ஒளி; light **2.** பளபளப்பு; lustre. (சா.அக.).

நீயான் *niyān,* பெ. (n.) கப்பலின் தலைவன்; captain of a ship. "*பௌவத்தருங்கலமியக்கு நீயான் போல*" (பெருங். உஞ்சைக்.49:10.)

[நீர்கலமகன் → நீகாமன் → நீகான் → நீயான்]

நீயிர்[1] *niyir,* பி.பெ. (pron.) முன்னிலைப் பன்மைப்பெயர்; you.

நீயிர் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர் வேற்றுமைப்படும்போது நும் என்று திரியுமேயன்றி, நும் மென்னும் வேற்றுமைத் திரிபுப் பெயர் நீயிரென்று திரியாது.

முன்னிலைப் பெயர்	வேற்றுமைத்திரிபு
நீ, நீ	நின், நுன், உன்
நீம்	நும், உம்
நீம் + கள் = நீங்கள்	நுங்கள், உங்கள்
நீம் + இர் = நீவிர்	நும், உம்.
நீயிர், நீவிர்;	

நீன் என்னும் பெயரே நீ என்று குறைந்து வழங்குகின்றது. நீன் என்னும் வடிவை இன்றும் தென்னாட்டுலக வழக்கிற் காணலாம். தான் என்பது தன் என்று குறுகினாற்போல், நீன் என்பது நின் என்று குறுகும். நீன் என்பது இலக்கண வறியாமை காரணமாகக் கொச்சையாகக் கருதப்படுகிறது. நீனுக்குப் பன்மை நீம் என்பது மகரம் பன்மைப் பொருளுணர்த்தலை ஆங்கில இலக்கண நூல்களிலும் காணலாம். நீங்கள் என்பது விகுதிமேல் விகுதி பெற்ற இரட்டைப்பன்மை. (இலக்.கட். 4.).

நீன், நீம், நூன், நூம் என்பன பழந்தமிழ் முன்னிலைப் பெயர்கள். இவற்றின் னகரவீறு ஒருமையையும் மகரவீறு பன்மையையுங் குறிக்கும். இவற்றுள் நீன் என்னுஞ் சொல் இன்றும் தென்னாட்டு வழக்கிலுள்ளது. நூன் நூம் என்பன இருவகை வழக்கும் அறினும், அவற்றின் வேற்றுமைத் திரிபான நுன், நும் என்னும் அடிகள் இன்றுஞ் செய்யுள் வழக்கிலுள்ளன. நீன் என்னுஞ் சொல்லின் கடைக்குறையான நீ என்பது இருவகை வழக்கிலுமுள்ளது.

நீ என்பது சீனமொழியில் '*நி*' எனக் குறுகி வழங்குகின்றது. '*நிமென்*' என்பது இதன் பன்மை.

பொர்னு என்னும் ஆப்பிரிக்க மொழியில் '*நி*' என்பதே முன்னிலை யொருமைப் பெயர்.

சில பழஞ்சிந்திய மொழிகளில் நீ என்னும் பெயர் தமிழிற் போன்றே சிறிதும் திரியாமல் வழங்கிவந்தது.

ஆத்திரேலிய மொழிகளின் முன்னிலை யொருமை '*நின்ன*' '*ஙின்னீ*' '*ஙிந்தெ*' என்பன; இருமை '*நிவ*' '*நுர*' என்பன; பன்மை

'*நிமெதூ*' என்பது. இங்ஙனமே ஏனை யிடப் பெயர்களும் இயல்பு வடிவில் அல்லது திரிபுவடிவில் ஏறத்தாழ எல்லா மொழிகட்கும் பொது வாகவுள்ளன. (மொழி.கட்.14.).

நீயிர்[2] *nīyir,* பி.பெ. (pron.) நீவிர்; you. "*நீயிர்கள் வாய்மையை நிகழ்த்துமென்னவே*" (கந்தபு. சூரனகர்புரி.18.).

நீயேகூறென்றல் *nīyē-kūreṉṟal,* பெ. (n.) திருக்கோவையார் கூறும் அகப் பொருள் துறைகளிலொன்று; one of the theme of the love-poetry.

தன் பிரிவைத் தலைவியிடங் கூறுமாறு தலைவன் தோழியிடம் வேண்ட, அதற்கவள் உடம்படாளாய்த், தலைவ, அவளுக்கு நீயே கூறுக' எனுந்துறை.

[நீயே + கூறு + என்றல்.]

நீர்[1]–த்தல் *nīr-,* 11 செ.கு.வி. (v.i.) (நீர்மத்தின்) அடர்த்தியைக் குறைத்தல்; (மோர் போன்ற வற்றில்) நீர் கலந்து நீர்த்தன்மை உடையதாக்குதல்; to dilute (a liquid) make thin (by adding water). *நீர்த்த மோராக இருந்தாலும் குடிப்பதற்குச் சுவையாய் இருக்கிறது. (உ.வ.). மேலும் மேலும் திருத்தங்கள் செய்ததால் கருத்து நீர்த்துப் போய்விட்டது. (உ.வ.). தலைவர்களின் கடைபிடி இன்மையால் கொள்கை நீர்த்துப் போய்விட்டது.* (உ.வ.). 2. (சுண்ணாம்பில்) நீர் சேர்த்துக் குழைத்தல்; slake (lime).

[நீள் → நீர்.]

நீர்[2]–த்தல் *nīr-,* 4 செ.கு.வி. (v.i.) 1. நீராதல்; to become thin or watery, as liquid food in cooking. 2. ஈரமாதல்; to be wet, moist. "*நீர்க்கின்ற செஞ்சடை*" (திருமந்.2121.).

நீர்[3] *nīr,* பெ. (n.) 1. ஐம்பூதங்களிலொன்றான நீர்; water, one of the five elements. "*தீமுரணிய நீரும்*" (புறநா. 2.). 2. கடல்; sea, ocean. "*நீரொலித்தன்ன*" (மதுரைக்.369.). 3. சாறு (இரசம்); juice, liquor. "*கரும்பினை..... யிடித்துநீர் கொள்ளினும்*" (நாலடி, 156.). 4. பனிநீர்; rose water. "*நீரால் வெண்ணிறப் பொடியை மாற்றி*" (சீவக.117.). 5. உடலிலுள்ள அரத்தம், பித்தநீர் முதலிய நீர்மப்பொருள் (வின்.); humours of the body, as serum, lymph. 6. சிறுநீர்; urine. "*இவ்வெல்லையி னீர்பெய்து யான் வருகாறும்*" (பிரமோத்.2.50.). 7. *பூராடம்* (பிங்.) பார்க்க; see *pūrāḍam.* 8. *பூரட்டாதி* (அக.நி.) பார்க்க; see *pūrattādi.* 9. ஈரம் (வின்.); dampness, moisture, humidity. 10. ஒன்பான் மணியொன்றின் (இரத்தினத்தின்) ஒளி; water in a gem. "*நெடுநீர் வார்குழை*" (நெடுநல்.139.). 11. குணம்; nature, disposition. "*அன்ன நீரார்க்கேயுள*" (குறள்,527.). 12. நிலை (வின்.); state, condition. 13. முறைமை; order, manner. "பேர்யாற்றடை கரை நீரிற் கேட்டாங் கார்வ நெஞ்சமோ டவலங் கொள்ளார்" (சிலப்.10:140.).

ம., க., கோத., து., கட., குவி., நீர்;
தெ., நீர்., நீள்ளு; து., பர்., நீர்;
கொலா., இர்; பிரா., திர்.,
Skt. nīru = water, juice, liquor.

[நுல் (நீட்சிக்கருத்துவேர்) நுல் → நெல் → நெள் → நெகு → நெகி (நெகிள்) → நீள் → நீர் (வே.க.3:42).]

நீர்[4] *nīr,* பெ. (n.) தன்மை; nature. "செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த முந்நீர் விழவி னெடியோன் நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" (புறநா.9.). "நீர்மிகிற் சிறையு மில்லை தீமி கின் மன்னுயிர் நிழற்று நிழலுமில்லை" (புறநா.9.). "இரங்கு முரசி னினஞ்சால் யானை முந்நீ ரேணி விறல் கெழுமூவரை கடல்" (புறநா.137.). "காரொவ்வா வேனில் கலங்கின் தெளிவரல் நீரொவ்வா வையை நினக்கு" (பரிபா.11:73.).

நீர்⁵ *nīr,* பெ. (n.) நீ என்ற முன்னிலை ஒருமைச் சொல்லைவிட மதிப்புக் கூடியதாகவும் நீங்கள் என்ற முன்னிலைச் சொல்லைவிட மதிப்பிற் குறைந்ததாகவும் உள்ள முன்னிலைச் சொல். (இக்.வ.); second person pronoun more polite than நீ but less polite than நீங்கள்.

[நீ → நீர்.]

நீர்⁶ *nīr,* பெ. (n.) முன்னிலைப் பன்மைப் பெயர்; you.

[நீன் → நீ → நீர்.]

நீன் என்னும் பெயரே நீ என்று குறைந்து வழங்குகின்றது. நீன் என்னும் வடிவை இன்றும் தென்னாட்டுலக வழக்கிற் காணலாம். தான் என்பது தன் என்று குறுகினாற்போல நீன் என்பது நின் என்று குறுகும். நீன் என்பது இலக்கண வறியாமை காரணமாகக் கொச்சையாகக் கருதப் படுகின்றது. நீனுக்குப் பன்மை நீம் என்பது. மகரம் பன்மைப் பொருளுணர்த்தலை ஆங்கில இலக்கண நூலிலும் காணலாம். நீங்கள் என்பது விகுதிமேல் விகுதி பெற்ற இரட்டைப் பன்மை. நீவிர் என்பது இலக்கணப் போலி. நீயிர் என்னும் சொல்லே நீர் என இடைக்குறைந்து நின்றது. (இலக்.கட்.4.).

நீர்அடைவு *nīr-aḍaivu,* பெ. (n.) நீர்ப்பெருக்கு; water gain or bleeding.

[நீர் + அடைவு.]

நீர்அளவு *nīr-aḷavu,* பெ. (n.) நீரின் கொள்ளளவு; water content.

[நீர் + அளவு.]

நீர்அளவை *nīr-aḷavai,* பெ. (n.) நீரைக்கணக்கிடுகை; water measurement.

[நீர் + அளவை.]

நீர்இயக்கவியல் *nīr-iyakkaviyal,* பெ. (n.) நீரின் இயக்கம் பற்றிய அறிவியற் பிரிவு; hydro dynamics.

[நீர் + இயக்கம் + இயல்.]

நீர்ஊடுருவாமை *nīr-vūḍuruvāmai,* பெ. (n.) நீர்ப்புகா இறுக்கம்; water tightness.

[நீர் + ஊடுருவாமை.]

நீர்ஒவ்வாமை *nīr-ovvāmai,* பெ. (n.) உடம்புக்கு நீர் ஒத்துக்கொள்ளாமையாகிய மாறுபாடு; injuriousness of some kinds of water.

[நீர் + ஒவ்வாமை. உல் → ஒல் → ஒவ் → ஒவ்வு + ஆ + மை.]

ஆ—எதிர்மறை இடைநிலை.

நீர்ஓட்டம் *nīr-ōṭṭam,* பெ. (n.) நீர்ப்பெருக்கு current (water).

[நீர் + ஓட்டம்.]

நீர்க்கசிவு¹ *nīr-k-kašivu,* பெ. (n.) ஊற்று பாய்தல்; welling up.

[நீர் + கசிவு.]

நீர்க்கசிவு² *nīr-k-kašivu,* பெ. (n.) கசிவு; dampness.

[நீர் + கசிவு. கள் → கழி → கசி → கசிவு.]

நீர்க்கட்டி¹ *nīr-k-kaṭṭi,* பெ. (n.) கம்முக்கட்டி; water boil.

[நீர் + கட்டி.]

நீர்க்கட்டி[2] *nīr-k-kaṭṭi,* பெ. (n.) 1. நீர்க்கண்டி பார்க்க; see nīr-k-kaṇḍi. 2. ஆலங்கட்டி (இ.வ.); hail-stone. 3. கெடுநீர் (சலம்) வைத்த புண் கட்டி (இ.வ.); a cyst.

[நீர் + கட்டி.]

குள்→ கள் → கட்டு → கட்டி (மு.தா. 244.) கள் – திரளல், பெருகுதல், உருண்டையாதல், உருண்டு கட்டியாதல், திரண்டு பெருகுதலால் தோற்றப் பொலிவு பெறுதல்.

நீர்க்கட்டு[1]**–தல்** *nīr-k-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) புண் சீழ் பிடித்தல் (வின்.); to form pus.

[நீர் + கட்டு–.]

குள்→கள்→கட்டு. கள் – திரளல், பெருகுதல், உருண்டையாதல், திரண்டு பெருகுதலால் தோற்றப் பொலிவு பெறுதல்.

நீர்க்கட்டு[2]**–தல்** *nīr-k-kaṭṭu-,* பெ. (n.) 1. சிறுநீர்தடைப்பட்டிருக்கும் நோய் (வின்.); retention or stoppage of urine, stricture of urethra. 2. நீராலுண்டாம் உடல் வீக்கம் (வின்.); dropsy. 3. நீர்க்கோவை (இ.வ.); tonsilitis 4. நீர்நோய் வகை (இ.வ.); inflammation of a synovial membrance, synovitis.

[நீர் + கட்டு–.]

நீர்க்கட்டு[3] *nīr-k-kaṭṭu,* பெ. (n.) ஏரி முதலியவற்றில் நீர் தேங்கும் அளவு; the maximum height up to which water collects, as in a lake, tank, etc. இந்த ஏரிக்கு நீர்க்கட்டு எவ்வளவு? (உ.வ.).

[நீர் + கட்டு.]

நீர்க்கட்டுக்கொடி *nīr-k-kaṭṭu-k-koḍi,* பெ. (n.) பெருங்கட்டுக்கொடி; a bigger variety of coagulating creeper-cocaulus villofus. (சா.அக.).

[நீர் + கட்டு + கொடி.]

நீர்க்கட்டுவாதம் *nīr-k-kaṭṭu-vādam,* பெ. (n.) *நீர்க்கட்டுவூதை* பார்க்க; see *nīr-k-kaṭṭu-ūdai.*

[நீர்க்கட்டு + வாதம்.]

skt. vādam › த. ஊதை.

நீர்க்கட்டுவூதை *nīr-k-kaṭṭu-ūdai,* பெ. (n.) ஊதைநோய் வகை; rheumatism.

[நீர்க்கட்டு + ஊதை.]

நீர்க்கடம்பு *nīr-kaḍambu,* பெ. (n.) கடப்ப மரவகை (L.); water cadamba tree.

[நீர் + கடம்பு.
நீள் → நீர்
கடு → கடம்பு.]

நீர்க்கடலை *nīr-k-kaḍalai,* பெ. (n.) பேய்க்கடலை; bitter bengal gram, devil's gram - cicergenus. (சா.அக.).

[நீர் + கடலை.]

நீர்க்கடவுள் *nīr-k-kaḍavuḷ,* பெ. (n.) மழைக்கடவுள், வருணன்; varuṇan, as god of the waters. "*வருணன் மேய பெருமணலுலகமும்*" (தொல்.பொருள்.5.), "*கதுமெனக் கண்ட சிங்கனீர்க்கடவுளை நினைந்தான்*" (உபதேசகா. உருத்திராக். 227.).

[நீர் + கடவுள்.]

நீள் → நீர்.
கடவு → கடவுள் = இயக்குபவன், செலுத்துபவன்.

கடவுள் என்னும் பெயர், மனமொழி மெய்களையும் எல்லாவற்றையுங் கடந்த முழுமுதற் கடவுளையே குறிக்க எழுந்த சொல்லென்பது அதன் பகுதியாலேயே விளங்கும் (சொ.ஆ.க.87.).

நீர்க்கடன் *nīr-k-kaḍaṉ,* பெ. (n.) நீத்தார் பொருட்டுச் செய்யும் நீர்க்கரணம் (சடங்கு); libations of water with sesame seeds and quitch grass or kaus, offered to one's manes. "*நீர்க்கடன் மரபுதாங்கி*" (சீவக.1737.). 2. *சந்தியாவந்தனம்* (இ.வ.) பார்க்க; see *santhiyavanthanam.*

[நீர் + கடன்.

நீள் → நீர். கட = இயங்கு, செல். கடம் → கடன் = செய்யத்தக்கது, செலுத்தத் தக்கது. கடம் →கடன் – கடைப்போலி. ஒ.நோ: நலம்→நலன்.*]*

நீர்க்கடிகை[1] *nīr-k-kaḍigai,* பெ. (n.) நேரத்தைத் தெரிந்து கொள்வதற்காகப் பழந்தமிழர் பயன்படுத்திய கருவி; clepsydra, ancient clock worked by flow of water; hour-glass.

[நீர் + கடிகை.]

கடிகை – சிறிய மட்பானை, நீர்க்கலம், நாழிகை வட்டில்.
குள் → குண்டு = குழி, ஆழம். குண்டு→ குண்டான் – குழிந்த அல்லது குண்டானகலம். குண்டான் → குண்டா. குண்டு → குண்டிகை → குடிகை → குடிக்கை, குடுவை. குடிகை – நீர்க்கலம் (கமண்டலம்). குடிகை → கடிகை – நீர்க்கலம், நாழிகை வட்டில்.

நீர்க்கடிகை[2] *nīr-k-kaḍigai,* பெ. (n.) துறவியர் கையிலேந்தும் வளைந்த கைப்பிடியுடைய மூக்குச் செம்பு; a vessel for holding water used by ascetics.

[நீர் + கடிகை.]



நீர்க்கடியாரம் *nīr-k-kaḍiyāram,* பெ. (n.) நீர்க்கடிகை பார்க்க; see nīr-k-kaḍigai.

[நீர் + கடியாரம்.]

கடிகை + ஆரம் – கடிகையாரம் → கடிகாரம். கடிகை → கழிகை. ஒ.நோ.: வட்டு + ஆரம் – வட்டாரம், கொட்டு+ஆரம் – கொட்டாரம் ஆரம் – சொல்லாக்க ஈறு (வே.க.158.). பழங்காலத்தில் காலம் அறிவதற்குப் பயன்படுத்திய கருவி நீர்க்கடிகை எனப்பட்டது. கடிகை=சிறிய மட்பானை, நீர்க்கலம், நாழிகைவட்டில். கடீயந்திர, கடிகாயந்திர என்னும் வடசொற் புணர்ப் பினின்று கடிகாரம் என்னும் தென்சொல் வந்ததன்று (வ.வ.103.).

நீர்க்கடுப்பு *nīr-k-kaḍuppu,* பெ. (n.) சிறுநீரில்சூடுபிடிப்பு; எரிச்சலோடு துளி துளியாய்ச் சிறுநீர் இறங்கும் நோய்வகை; dysury, strangury; urethritis, stricture of urethra.

[நீர் + கடுப்பு.]

மறுவ. நீர்க்கிரிச்சரம், நீர்க்குத்து, நீர்க்கொதி, நீர்க்கொதிப்பு.

நீர்க்கடும்புத்தோல் *nīr-k-kaḍumbu-t-tōl,* பெ. (n.) ஒருவகை மருந்துப் பச்சிலை (மாட்டுவா.); a medicinal herb.

நீர்க்கண்டகி *nīr-k-kaṇḍagi,* பெ. (n.) நீர்முள்ளிச் செடி (தைலவ.தைல.135.); a herb growing in moist places.

[நீர் + கண்டகி.]

கள் →கண்டு →கண்டகி. கள் – முள். கண்டகி–முட்செடி.

நீர்க்கண்டம்[1] *nīr-k-kaṇḍam,* பெ. (n.) நீரில் மூழ்கிப் போதல் முதலிய ஏதம்; peril by water, as drowing.

[நீர் + கண்டம்.]

நீர்க்கண்டம்[2] *nīr-k-kaṇḍam,* பெ. (n.) பனிக்கட்டி; ice, snow. (சா.அக.).

[நீர் + கண்டம்.]

நீர்க்கண்டி *nīr-k-kaṇḍi,* பெ. (n.) நீர் பாய்ச்சும் வேலையைக் கவனிக்கும் ஊர் ஊழியக்காரன் (இ.வ.); a village servant who looks to the distribution of water for irrigation.

க. நீர்க்கண்டி.

மறுவ. நீர்ப்பாய்ச்சி, நீராணிக்காரன்.

நீர்க்கணம்[1] *nīr-k-kaṇam,* பெ. (n.) செய்யுளின் முதலில் மங்கலமாக அமைக்கத் தக்கதும் நேர்நிரைநிரையென வருவதுமாகிய செய்யுட்கணம் (திவா.); metrical foot of one nēr and two nirai, as kū-viḷaṅ-gaṉi, considered auspicious at the commencement of a poem.

[நீர் + கணம்.]

நீர்க்கணம்[2] *nīr-k-kaṇam,* பெ. (n.) குழந்தைகட்குவரும் கண நோய்வகை (பாலவா. 41.); a wasting disease, in children.

[நீர் + கணம்.]

குள் →குண் → கண் → கண → கணம் (வே.க.187.).

நீர்க்கதவு *nīr-k-kadavu,* பெ. (n.) ஏரி முதலியவற்றிலிருந்து நீர் விடுதற்குரிய கதவு; flood gate. (C.E.M).

[நீர் + கதவு.]



நீர்க்கம்பம் *nīr-k-kambam,* பெ. (n.) காற்றில் சிதறுண்டு மேலெழும் நீர்த்திவலை; rising of water from the sea or lake in spray or gets to a certain level giving the appearance of a pillar due to a violent wind - water spout. (சா.அக.).

[நீர் + கம்பம்.]

நீர்க்கம்மல் *nīr-k-kammal,* பெ. (n.) நோய்வகை (தைலவ. தைல.34.); a disease.

[நீர் + கம்மல்
செறுமுதல் → செம்முதல் →
கெம்முதல் → கெம்மல் → கம்மல்.]

நீர்க்கமல்லி *nīrkkamalli,* பெ. (n.) அல்லி (மலை.); water lily.

[நீர் + கம் + அல்லி.]

நீர் எனினும் கம் எனினும் ஒக்கும். அம் → கம். அம் = நீர். அல்–இரா. அல் → அல்லி = இரா. ஒ.நோ. அல் → எல் → எல்லி = → இரா. அல் → அல்லி – இரவில் மலரும் பூவகை.

நீர்க்கரப்பன் *nīr-k-karappan,* பெ. (n.) சொறிப்புண் (சிரங்கு)வகை (m.l.); eczeme.

[நீர் + கரப்பன்

கரப்பு→கரப்பான். கரப்பு – சொறி, சுரசுரப்பு.*]*

நீர்க்கருநோய் *nīr-k-karu-nōy,* பெ. (n.) சிறுநீரகத்திலுண்டாகும் நோய் வகை; bright's disease.

[நீர் + கருநோய்
நீர்=சிறுநீர்.]

நீர்க்கருவியாதி *nīr-k-karu-viyādi,* பெ. (n.) *நீர்க்கருநோய்* பார்க்க; *see nīr-k-karau-nōy.*

[நீர்க்கரு + வியாதி.]

த. நோய் > skt. வியாதி.

நீர்க்கரை *nīr-k-karai,* பெ. (n.) 1. ஆறு குளம் இவற்றின் கரை; embankment of a river or tank. "*நீர்க்கரை நின்ற கடம்பையேறி*" (திவ். நாய்ச்.12:5.). 2. நீருள்ள பகுதி; water side.

[நீர் + கரை.]

கரு → கரை.
கரு = மேடு, உயரம்.

நீர்க்கல்லடைப்பு *nīrkkal-adaippu,* பெ. (n.) சிறுநீர்ப்பையில் கல்லுண்டாக்கி நீர்த் துளையினை அடைத்து நீர் இறங்காமை யாகிய நோய்; retention of urine due to the obstruction of calculus or stone in the passage of urethra. this stone is the formation in the bladder.

[நீர் + கல்லடைப்பு.]

நீர்க்கலம் *nīr-k-kalam,* பெ. (n.) 1. நீர் இருக்கும் ஏனம்; water vessels. 2. நீரருந்தும் ஏனம்; vessel for drinking water. 3. கமண்டலம்; a vessel for holding water used by ascetics.

[நீர் + கலம்.]

நீர்க்கவிதை *nīrkkavidai,* பெ. (n.) நீர்க்கோவை; dropsy. (சா.அக.).

நீர்க்கழலை *nīr-k-kalalai,* பெ. (n.) ஒருவகை இமைக்கட்டி; excrescence on the eyelid.

[நீர் + கழலை

கழல்→கழலை. கழல்–கழற்சிக்காய், கழற்சிக்காய் போன்ற கட்டி.*]*

நீர்க்கழிவு *nīr-k-kalivu,* பெ. (n.) *நீரிழிவு* (யாழ்.அக.) பார்க்க; see *nīr-ilivu.*

[நீரிழிவு →நீர்க்கழிவு.]

நீர்க்கனதி *nīr-k-kanadi,* பெ. (n.) *நீர்க்கனம்* (இ.வ.) பார்க்க; *see nīr-k-kanam.*

[நீர் + கனதி.]

கல் → கனம் → கனதி.

நீர்க்கனம் *nīr-k-kaṉam,* பெ. (n.) சளி; cold.

[நீர் + கனம்.]

கனம்—செறிவு, திரட்சி, உறுதி, மிகுதி. கல் → கன். கல் = உறுதிப்பாடு. கன் → கன. கனத்தல் = பளுவாதல், மிகுதியாதல். கன → கனம் = தடிமன், பருமன், பெருமை, செறிவு, திரட்சி, உறுதி, மிகுதி, கூட்டம். சளிப்பிடித்திருத்தலைத் தடுமன் பிடித்துள்ளது என்று கூறுவது முண்டு.

நீர்க்காக்கை *nīr-k-kākkai,* பெ. (n.) (நீர் நிலைகளின் கரையில் காணப்படும்) வாத்து போன்ற தோற்றமும், கூரிய அலகுமுடைய மீனை உணவாகக் கொண்டு வாழும் காக்கையினத்தைச் சார்ந்த ஒருவகைக் கருநீலப் பறவை; cormorant. *"செங்காலன்னமும் பைங்காற் கொக்கும் கானக் கோழியும் நீர்நிறக் காக்கையும் உள்ளு மூரலும் புள்ளும் புதாவும் வெல்போர் வேந்தர் முனையிடம் போல"* (சிலப். 10:115.).

மறுவ. நீர்நிறக்காக்கை.

[நீர் + காக்கை.]

நீர்க்காகம் *nīr-k-kāgam,* பெ. (n.) *நீர்க்காக்கை* பார்க்க ; see *nīr-k-kākkai.*

நீர் + காகம்.
காக்கை → காகம்.

நீர்க்காங்கு *nīr-k-kāṅgu,* பெ. (n.) காட்டுப் பூவரசு மரம் ; false fern free.

நீர் + காங்கு.

கோங்கு → காங்கு.

நீர்க்காசம் *nīr-k-kāšam,* பெ. (n.) ஈளை (காச) நோய்வகை; a kind of asthma, consumption.

நீர்க்காணம் *nīr-k-kāṇam,* பெ. (n.) நீர்வரி (கல்வெட்டு); water cess.

[நீர் + காணம். கண் → காணி = காணப்படுவது, கண்காணிக்கப்படுவது, பேணுகையில் உள்ள நிலம். வெறுந் தரையாயிருந்து யாரும் நுழைந்திட இடங்கொடாமல், ஒருவரின் காப்பிலிருப்பது காணி. அக்காணிக்கு இறுக்கப்படும் இறை, காணம்.]

நீர்க்காப்பு *nīr-k-kāppu,* பெ. (n.) நீர்புக வழியளிக்காத காப்பு; water proof.

[நீர் + காப்பு.
நீள் → நீர்
கா → காப்பு.]

நீர்க்காய் *nīr-k-kāy,* பெ. (n.) நீர்த்தன்மை மிகுந்துள்ள காய்; vegetables with more water content.

[நீர் + காய்.]
சுரை, வெள்ளரி, பூசணி முதலான காய்களில் நீர்த்தன்மை மிகுந் திருத்தலின் இவை நீர்க்காய்கள் எனப்படுகின்றன.

நீர்க்காய்ச்சுப்பு *nīr-k-kāyccuppu,* பெ. (n.) 1. இந்துப்பு; rock salt.

[நீர் + காய்ச்சு + உப்பு.]

நீர்க்காயம் *nīr-k-kāyam,* பெ. (n.) நத்தை; snail. (சா.அக.)

நீர்க்காரன் *nīr-k-kāraṉ,* பெ. (n.) *நீர்க் கொணர்பவன்* பார்க்க; see nīr-k-koṇarbavaṉ.

[நீர் + காரன்.]

"காரன்' உடைமைப்பொருள் பின்னொட்டு

நீர்க்காரி *nīr-k-kāri,* பெ. (n.) *நீர்க்கொணர்பவள்* பார்க்க; see nīr-k-koṇarbavaḷ.

[நீர் + காரி.
காரன், காரி என்பன உடைமைப் பொருள் பின்னொட்டு.]

நீர்க்காரிச்சி *nīr-k-kāricci,* பெ. (n.) *நீர்க்கொணர்பவள்* பார்க்க; see nīr-k-koṇarbavaḷ.

[நீர்க் கொணர்பவள் → நீர்க்காரி → நீர்க்காரிச்சி.]
காரிச்சி – விகுதிமேல்விகுதி.

நீர்க்கால் *nīr-k-kāl,* பெ. (n.) **1.** நீரோடும் வழி; water course. (C.E.M). **2.** வாய்க்கால்; canal, *"நீர்க்கால் கொழுநிழல் ஞாழல்"* (கலித். 56.).

[நீர் + கால்
நீள் → நீர்
குல் = தோன்றுதல் கருத்துவேர்.
குல் → கல் → கால் = தோன்றுதல், வருதல், பாய்தல், ஓடுதல், பரவுதல், வழி, தடம், பாதை.]

நீர்க்கால்சலாகை *nīr-k-kāl-šalāgai,* பெ. (n.) சந்திர காந்தக்கல் (சூ. நி.4:41); moon stone.

[நீர் + கால் + சலாகை.]

நீர்க்காலி *nīr-k-kāli,* பெ. (n.) நீர்போற் ஊட்ட மில்லாத பாலைக் கொடுக்கும் ஆன் (உ.வ.); cow which gives watery milk.

[நீர் + காலி.]

காலி – கால்நடை, கறவை, ஆன்.

நீர்க்காவி *nīr-k-kāvi,* பெ. (n.) அடிக்கடி துவைத்து ஈரந் தங்க வைத்தலால் ஆடையிற் பற்றுஞ் செந்நிறம்; a kind of reddish tinge in cloth, produced by frequently washing it in water without allowing it to dry. **2.** கருங் குவளை. (வின்); blue nelumbo.

[நீர் + காவி.]

நீர்க்கிண்ணம் *nīr-k-kiṇṇam,* பெ. (n.) நீர்க்கடிகை (புதுச்.) பார்க்க; see *nīr-k-kḍigai.*

[நீர் + கிண்ணம்.]

நீர்க்கிரந்தி *nīr-k-kirandi,* பெ. (n.) நோய் வகை (இங். வை. 166.); a disease.

[நீர் + கிரந்தி.]

நீர்க்கிராம்பு *nīr-k-kirāmbu,* பெ. (n.) செடிவகை; prime rose-willow.

நீர்க்கிரிச்சரம் *nīr-k-kiriccaram,* பெ. (n.) *நீர்க்கடுப்பு* (m.l.) பார்க்க; *see nīr-k-kaḍuppu.*

நீர்க்கிரிச்சினம் *nīr-k-kriccinam,* பெ. (n.) சிறுநீர் தடைப்படுதல்; stricture of urine. (சா.அக.).

நீர்க்கிழங்கு *nīr-k-kiḻaṅgu,* பெ. (n.) **1.** சிறு கிழங்கு; small water root. **2.** *தண்ணீர் விட்டான் கிழங்கு* பார்க்க ; *see taṇṇīr -viṭṭāṉ kiḻaṅgu.* (சா.அக.).

[நீர் + கிழங்கு.]

நீர்க்கிழவன் *nīr-k-kiḻavaṉ,* பெ. (n.) *நீர்க்கடவுள்* (திருவிளை. பதிக. 4.) பார்க்க; *see nīr-k-kaḍavuḷ.*

[நீர் + கிழவன்.]

கிழவன் – உரிமையுடையவன்

நீர்க்கீரி nīr-k-kīri, பெ. (n.) *நீர் நாய்* பார்க்க; *see nīr-nāy.*

[நீர் + கீரி.]

நீர்க்கீரை[1] *nīr-k-kīrai,* பெ. (n.) நீரிலுண்டாகும் கீரை வகை (வின்.); an edible water-plant.

[நீர் + கீரை.]

நீர்க்கீரை[2] *nīr-k-kīrai,* பெ. (n.) ஆரைக்கீரை; ārai-k-kīrai. (சா.அக.).

[நீர் + கீரை.]



நீர்க்கீழ் *nīr-k-kīḻ,* பெ. (n.) *நீர்த்தானம்* (வின்.) பார்க்க; see *nīr-t-tāṉam.*

[நீர் + கீழ்.]

நீர்க்குட்டம் *nīr-k-kuṭṭam,* பெ. (n.) ஒருவகை நோய்; a kind of disease.

[நீர் + குட்டம்.]

நீர்க்குடத்தி *nīr-k-kuḍatti,* பெ. (n.) தண்ணீர் விட்டான் கிழங்கு; water-root, *asparagus racemosus.* (சா.அக.).

[நீர் + குடத்தி.]

நீர்க்குடம் *nīr-k-kuḍam,* பெ. (n.) **1.** நீர் முகக்கும் குடம்; water-pot.

நீர்க்குண்டி[1] *nīr-k-kuṇḍi,* பெ (n.) **1.** சிறுநீர் (முத்திர)குண்டி; in continence of urine-nocturnol enuresis. **2.** வயலுக்குச்செல்லும் நீர்மடையைத் திருப்பி நிரவலாகப் பாயவைக்கும் பணியாளன்,மடையான்; one who distributes water for irrigation.

[நீர் + குண்டி.]

நீர்க்குண்டி[2] *nīr-k-kuṇḍi,* பெ. (n.) நொச்சி மர வகை; a species of chaste tree.

[நீர் + குண்டி.]

நீர்க்குண்டிக்காய் *nīr-k-kuṇḍi-k-kāy,* பெ. (n.) சிறுநீர் உருவாகும் (உற்பத்தியாகும்) குண்டிக்காய்; an organ that secretes urine-kidney. (சா.அக.).

[நீர் + குண்டிக்காய்.]

நீர்க்குணபாடம் *nīrkkuṇa - pāḍam,* பெ. (n.) பதார்த்த குண சிந்தாமணியில் சொல்லியபடி ஆறு, ஏரி, அருவி, கடலிற் பொருந்திய மருத்துவ குணத்தைப் பற்றியதொரு நூல்; the science which deals about the medicinal properties of the principle rivers and different water like tank, lake, shallow well, deep well, stream and sea. (சா.அக.).

[நீர்க்குணம் + பாடம்.]

நீர்க்குத்தல் *nīr-k-kuttal,* பெ. (n.) *நீர்க்குத்து* பார்க்க ; *see nīr-k-kuttu.*

[நீர் + குத்தல் .]

நீர்க்குத்திரம் *nīr-k-kuttiram,* பெ. (n.) *நீர்ச்சுண்டி* பார்க்க ; see *nīr-c-cuṇḍi.* (சா.அக.).

[நீர் + குத்திரம்.]

நீர்க்குத்து[1] *nīr-k-kuttu,* பெ. (n.) **1.** சிறுநீர் தடைப்படுவதால் நீர்வழியிலேற்படும் குத்தல் வலி; an acute pain caused in the urethra from suppression or retention of urine. **2.** கல்லடைப்பினால் நீர்த்தாரையில் உண்டாகும் குத்தல் வலி; pin prick pain felt in the urethra due to obstruction of calculus in the urethra, a urinary disease. **3.** கொப்பூழ் (தொப்புள்); naval. (சா.அக.).

[நீர் + குத்து.]

நீர்க்குத்து[2] *nīr-k-kuttu,* பெ. (n.) *நீர்க்கடுப்பு* பார்க்க; see *nīr-k-kaḍuppu.*

[நீர் + குத்து.]

நீர்க்குத்து[3] *nīr-k-kuttu,* பெ. (n.) நீர்நிலைக்கு எதிராக வீட்டுவாயில் அமைந்திருக்கும் நிலை (இ.வ.); position of the entrance of a house being opposite to a tank, well, etc., considered inauspicious.

[நீர் + குத்து.]

நீர்க்குதிரை *nīr-k-kudirai,* பெ. (n.) குதிரை முகம் போன்ற தலையை நீட்டியவாறே நீந்திச் செல்லும் மீன்வகை; sea horse fish - hippo campus.

[நீர் + குதிரை]

நீர்க்குப்பி *nīr-kuppi,* பெ. (n.) *நீர்முள்ளி* (மலை.) பார்க்க; see nīr-muḷḷi.

[நீர் + குப்பி.]

நீர்க்கும்பி *nīr-k-kumbi,* பெ. (n.) *நீர்முள்ளி* பார்க்க; see *nīr-muḷḷi.*

[நீர் + கும்பி.]

நீர்க்குமிழம் *nīr-k-kumiḻam,* பெ. (n.) வெள்விழியில் சங்கம் பழம் போல் கொப்புளத்தை யுண்டாக்கும் ஒரு வகை கண் நோய் (சீவரட். **206.**); an eye disease.

[நீர் + குமிழம்.]

நீர்க்குமிழி *nīr-k-kumiḻi,* பெ. (n.) நீரிற் றோன்றும் மொக்குள் (திவா.); water bubble. *"நீர்க்குமிழி போலென்னினைவு வெளி வாய்க் கரைய"* (தாயு. பராப. **204.**).

[நீர் + குமிழி
கும் → குமி → குமிழ் → குமிழி. *]*

நீர்க்குரு *nīr-k-kuru,* பெ. (n.) **1.** வியர்க்குரு; prickly heat-millaria. **2.** நீர்க்கொள் சிறுகுரு; pimple, pastule. **3.** குருப்பொது; any papule **4.** தேரையர் கரிசலில் மருத்துவப்பிரிவுகளுள் ஒன்று; one of the medicinal classification referred to in the karisal work of Theraiyar an authority in Tamil medicine. (சா.அக.).

[நீர் + குரு.]

நீர்க்குவை[1] *nīr-k-kuvai,* பெ. (n.) கடைக் கண்ணில் குளிர் (சிலேட்டும) மொத்தைபோல் சதை வளர்ப்பிக்குமொரு கண்ணோய்; a disease of the inner corner or angle of the eyes marked by a mucous growth. (சா.அக.).

[நீர் + குவை.]

நீர்க்குவை[2] *nīr-k-kuvai,* பெ. (n.) கடைக் கண்ணில் வளரும் தேவையற்ற தசை (சீவரட்.); proud flesh in the corner of the eye.

[நீர் + குவை.]

நீர்க்குழாய் nīr-k-kuḻāi, பெ. (n.) நீரினைக் கொண்டு செல்லும் குழாய்; water-pipe.

[நீர் + குழாய்.]

நீர்க்குளரி *nīr-k-kuḷari,* பெ. (n.) கல்லாரச் செடி (பெரியபு. தடுத்தா. 173, உரை.); creeper.

[நீர் + குளரி.]

நீர்க்குளிரி *nīr-k-kuḷiri,* பெ. (n.) **1.** செடிவகை (திவா.); arrow-head- sagittarai obtusifolia. **2.** பற்றுக்கோடின்மை; want of support. **3.** இழப்பு; loss.

[நீர் + குளிரி.]

நீர்க்குளுமையூட்டி *nīr-k-kuḷumai-y-ūṭṭi,* பெ. (n.) நீரோட்டத்தால் அறையின் வெம்மையைத் தணிக்கும் கருவி; water cooler.

[நீர் + குளுமை + ஊட்டி.]

நீர்க்குளுவான் *nīr-k-kuḷuvāṉ,* பெ. (n.) *நீர்க் கொளுவான்* (இ.வ.) பார்க்க; see *nīr-k-koḷuvāṉ.*

[நீர் + குளுவான்
கொளுவான் > குளுவான்.*]*

நீர்க்குறட்டை *nīr-k-kuṟaṭṭai,* பெ. (n.) வயற் பாம்புவகை; checkered snake, as holding the flesh like pincers while biting.

[நீர் + குறடு → நீர்க்குறட்டை.]



நீர்க்குறி[1] *nīr-k-kuṟi,* பெ. (n.) **1.** தேரையர் செய்ததொரு தமிழ்மருத்துவ நூல். இது சிறுநீரை ஆராய்ந்து நோயைப் பற்றிக் கூறும்; a Tamil medical work compiled by Theraiyar, it treats of diagnostic examination of urine in detail before ascertaining or determining the disease. **2.** சிறுநீர் ஆய்வு; the medical examination of urine-urinos copy, uroscopy. **3.** தண்ணீர் ஏறுவதையும் இறங்குவதையும் காண்பிக்கும் அடையாளம்; a mark indicating the raise and fall of water-water mark. (சா.அக.).

[நீர் + குறி.]

நீர்க்குறி[2] *nīr-k-kuṟi,* பெ. (n.) நீர்க்குறியறியும் நிமித்தம்; art of divining the existence of water under ground.

[நீர் + குறி.]

நீர்க்குறிஞ்சா *nīr-k-kuṟiñjā,* பெ. (n.) கழுதைப் பாலை என்னும் நஞ்சறுப்பான் கொடி (வின்.); Indian ipecacuanna.

[நீர் + குறிஞ்சா.]

நீர்க்குன்று *nīr-k-kuṉṟu,* பெ. (n.) நத்தை (யாழ்.அக.); snail.

[நீர் + குன்று.]



நீர்க்கூட்டை *nīr-k-kūṭṭai,* பெ. (n.) குளவட்டை, நீரட்டை; small kind of leech.

[நீர் + கூட்டை.]



நீர்க்கூலி *nīr-k-kūli,* பெ. (n.) நீருக்கான தீர்வை (r.t.); water rate.

[நீர் + கூலி.]

நீர்க்கைக்கதவு *nīr-k-kai-k-kadavu,* பெ. (n.) மதகு (வின்.); sluice.

[நீர் + கை + கதவு.]



நீர்க்கொணர்பவர் *nīr-k-koṇarbavar,* பெ. (n.) நீர்சுமந்து கொடுப்பவன்; water-carrier.

[நீர் + கொணர்பவர்.]

நீர்க்கொணர்பவள் *nīr-k-koṇarbavaḷ,* பெ. (n.) நீர் சுமந்து கொடுப்பவள்; water supplying women, water women fem. of waterman.

[நீர் + கொணர்பவள்.]

நீர்க்கொத்தை *nīrkkottai,* பெ. (n.) ஒருவகை தண்ணீர்ப் பாம்பு; a kind of water snake. (சா.அக.).



நீர்க்கொதி *nīr-k-kodi,* பெ. (n.) *நீர்க்கடுப்பு* (வின்.) பார்க்க ; see *nīr-k-kaḍuppu.*

[நீர் + கொதி.]

நீர்க்கொதிப்பு *nīr-k-kodippu,* பெ. (n.) *நீர்க் கடுப்பு* (யாழ்ப்.) பார்க்க ; see *nīr-k-kaḍuppu.*

[நீர் + கொதிப்பு.]

நீர்க்கொப்புளம் *nīr-k-koppuḷam,* பெ. (n.) உடலில் ஏற்படும் கொப்புளவகை ; water-blister.

[நீர் + கொப்புளம்.]

நீர்க்கொம்பன் *nīr-k-kombaṉ,* பெ. (n.) நீர்க் கொம்பு (இ.வ.) பார்க்க; see nīr-k-kombu.

[நீர் + கொம்பன்.]

நீர்க்கொம்பு *nīr-k-kombu,* பெ. (n.) கக்கல் கழிச்சல்; cholera. இந்தப்பாவி நீர்க்கொம்பிலே போக (உ.வ.).

[நீர் + கொம்பு.]

நீர்க்கொழுக்கட்டை *nīr-k-koḻukkaṭṭai,* பெ. (n.) நீராவியில் வெந்ததும் இனிப்பு சேராததுமான கொழுக்கட்டை வகை (இ.வ.); a kind of ball-cake made of pure flour-paste and steamed.

[நீர் + கொழுக்கட்டை.]

நீர்க்கொழுந்து *nīr-k-koḻundu,* பெ. (n.) நீரோட்டம் (சூடா.); head or flow of a current or stream; head of a tide.

[நீர் + கொழுந்து.]

நீர்க்கொள்(ளு)–தல் *nīr-k-koḷ(ḷu)-,* 12 செ.கு.வி. (v.i.) **1.** சளி பிடித்தல்; to feel heavy with cold, as the head. **2.** சீழ்பிடித்தல் (இ.வ.); to suppurate, form pus, as a tumour.

[நீர் + கொள்–,]

நீர்க்கொள்கை[1] *nīr-k-koḷgai,* பெ. (n.) *நீர்க்கனம்* பார்க்க ; see *nīr-k-kaṉam.*

[நீர் + கொள்கை.]

(கொள் → கொள்ளு → கொள்ளுகை → கொள்கை.)

நீர்க்கொள்கை[2] *nīr-k-koḷgai,* பெ. (n.) மாநிலங்களுக்கிடையே ஓடும் ஆற்று நீரைப் பங்கிட்டுக் கொள்ளும் கொள்கை; water policy.

[நீர் + கொள்கை.]

நீர்க்கொள்வான் *nīr-k-koḷvāṉ,* பெ. (n.) *நீர்க் கொளுவான்* (யாழ்ப்.) பார்க்க; see *nīr-k-koḷuvāṉ.*

[நீர் + கொள்வான்.]

நீர்க்கொளுவான் *nīr-k-koḷuvāṉ,* பெ. (n.) சின்னம்மை வகை; measles.

[நீர் + கொளுவான்]

நீர்க்கோங்கு *nīr-k-kōṅgu,* பெ. (n.) கோங்கு வகை; iron wood of malabar.

[நீர் + கோங்கு.]

நீர்க்கோசம் *nīr-k-kōšam,* பெ. (n.) சிறுநீர்ப்பை ; urinary bladder. (சா.அக.).

[நீர் + கோசம்.]

நீர்க்கோத்தை *nir-k-kottai,* பெ. (n.) நீர்ப் பாம்பு வகை (யாழ்ப்.); a water snake.

[நீர் + கோத்தை.]

நீர்க்கோப்பு *nir-k-kōppu,* பெ. (n.) சளி; cold.

[நீர் + கோப்பு.]

நீர்க்கோவை¹ *nir-k-kōvai,* பெ. (n.) நீர்தங்கி நிற்கக் கூடிய நிலப்பகுதி (தெ.க.தொ.3.479.); water-spread.

[நீர் + கோவை.]

நீர்க்கோவை² *nir-k-kōvai,* பெ. (n.) 1. சளி; cold. 2. சிலேட்டுமை (கப) நோய்; bronchial catarrh. 3. நீராலுண்டாகும் உடம்பு வீக்கம்; dropsy. *"நீர்ப்பந்த ரழித்தவர் நீர்க்கோவை நோயர்"* (கடம்ப. பு. இலீலா. 148.).

[நீர் + கோவை.]

நீர்க்கோரை *nir-k-kōrai,* பெ. (n.) கோரை வகை (a.); a smooth sedge, leafy at base.

[நீர் + கோரை.]

நீர்க்கோலம்¹ *nir-k-kōlam,* பெ. (n.) புனலாட்டின் போது மகளிர் கொள்ளும் ஆடை வகை; dress and adornment of girls for sporting in water.

[நீர் + கோலம்.]

நீர்க்கோலம்² *nir-k-kōlam,* பெ. (n.) தண்ணீரால் இடப்படும் குறியான கோலம் (இ.வ.); diagrams on the ground made with water, believed to be inauspicious. 2. நீரிலெழுதும் வரை (இ.வ.); lines drawn on water, as unstable. *"நீர்க்கோல வாழ்வை நச்சி"* (கம்பரா. கும்ப. 154.).

[நீர் + கோலம்.]

நீர்க்கோலி *nir-k-kōli,* பெ. (n.) *தண்ணீர்ப் பாம்பு* (இ.வ.); *water snake.*

[நீர் + கோலி.]

நீர்க்கோழி *nir-k-kōḻi,* பெ. (n.) நீர்வாழ் பறவை வகை; water fowl. *"நீர்க்கோழிக் கூய்ப் பெயர்க் குந்து"* (புறநா. 395.).

[நீர் + கோழி.]

நுல் (நீட்சிக்கருத்து வேர்) நுல் → நெல் → நெள் → நெரு → நெகிழ் (நெகிள்) → நீள் → நீர். உள் → உளு துளைக்கும் புழு. உளுத்தல் = புழு மரத்தைத் துளைத்தல். உளு → உழு → உழுதல் = நிலத்தைக் கீறுதல். குள் → குழி → குழை → குடை. குடைதல் = துளைத்தல். குழி → கொழு → கொழுது → கோது. கோது தல் = குடைதல். கொழு = நிலத்தைத் துளைக்கும் ஏருசி. கொழு → கொழி → கோழி = நிலத்தைக் கிளைக்கும் பறவை. கோழி பார்க்க; *see kōḻi.*

நீர்க்கோன் *nir-k-kōṉ,* பெ. (n.) மழைக்கடவுள், வருணன்; rain god. *"நீர்க்கோ னொல்லை தாழ்ந்து"* (திருவிளை. நான்மட. 21.).

[நீர் + கோன். நீள் → நீர். கோ → கோவன் → கோன்.]

நீர்கட்டல் *nīr-kaṭṭal,* பெ. (n.) சிறுநீர் (மூத்திரம்) அடைபட்டிருக்கும் நோய் (m.l.); retention of urine.

[நீர் + கட்டல்.]

அல்– தொழிற்பெயரீறு.

நீர்கட்டு[1]–தல் *nīr-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) வயல் முதலியவற்றில் நீர் பாய்ச்சுதல்; to irrigate a field, garden bed etc., *மேல் வயலுக்கு நீர் கட்டினாயா?* (உ.வ.).

[நீர் + கட்டு–,]

நீர்கட்டு[2]–தல் *nīr-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) நீர்க் கொப்புளங் கொள்ளுதல்; to form pus; to blister.

[நீர் + கட்டு.]

நீர்கடம்பு *nīr-kaḍambu,* பெ. (n.) ஒருவகை மரம்; a kind of tree.

[நீர் + கடம்பு.]

நீர்கரந்தசெஞ்சடைக்கடவுள் *nīrkaranda-šeñjaḍai-k-kaḍavuḷ,* பெ. (n.) சிவன்; sivan. *"ஆடக மாடத் தறிதுயி லமர்ந்தோன் சேடங் கொண்டு சிலர் நின் றேத்தத் தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள் வண்ணச் சேவடி வைத்தலின்"* (சிலப். 26:63.).

[நீர் + கரந்த + செஞ்சடை + கடவுள்.]

நீர்கழி–த்தல் *nīr-kaḻi-,* 4 செ.குன்றாவி. (v.t.) சிறுநீர் கழித்தல்; to urinate.

[நீர் + கழி. நீள் → நீர் = நிலம் போல் ஓரிடத்து நில்லாது நீண்டு செல்லும் புனல், சிறுநீர்.]

நீர்கள் *nīrkaḷ,* பெ. (n.) நீங்கள்; you. (திவ். திருவாய். 7, 3, 9.).

நீர்காட்டு[1]–தல் *nīr-kāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கால்நடைகளை நீர்குடிக்க வைத்தல்; to water as beasts.

[நீர் + காட்டு.]

கால்நடைகளைத் தீனியும் நீருங் கலந்த தொட்டியில் நீர்பருகுமாறு அத்தொட்டியின் அணித்தே இட்டுச் சென்று காட்டு வித்தல் நீர் காட்டுதல் எனப்படும்.

நீர்காட்டு[2]–தல் *nīr-kāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. குடிக்கவொட்டாது நீரைக் காட்டுவதை மட்டும் செய்து ஏமாற்றுதல் (வின்.); to deceive over reach, as showing water without allowing one to drink. 2. அலைக்கழித்தல்; to tantalize, harass.

[நீர் + காட்டு–,]

நீர்கிழி *nīr-kiḻi,* பெ. (n.) தண்ணீரைக் கிழித்துச் செல்லும் கப்பலின் முன்புற முகப்பு; பாலத்தின் அலைதாங்கி முன்விளம்பு; cut water.

[நீர் + கிழி.]

நீர்கிள்ளி *nīr-kiḷḷi,* பெ. (n.) ஒரு வகைப் பூண்டு; a kind of herb.

[நீர் + கிள்ளி.]

நீர்குடித்தல் *nīr-kuḍittal,* பெ. (n.) 1. விடாய்க்கு நீரைப் பருகுகை; drinking water for thirst. 2. சூளுறுதற் கறிகுறியாக நீரை உட்கொள் ளுகை; drinking of water, considered a form vow taking. *'நீர் குடித்தலும் ஒரு சூளுற வென்று கொள்க'* (குறிஞ்சிப். 211, உரை.).

[நீர் + குடித்தல்.]

நீர்கொள்ளுதல் *nīr-kolludal,* பெ. (n.) தடுமன்; cold.

மறுவ. நீர்க்கோவை.

[நீர் + கொள்ளுதல்.]

நீர்கோலு—தல் *nīr-kōlu-,* 7 செ.கு.வி. (v.i.) கிணற்றிலிருந்து நீரிறைத்தல்; to take up or bale water.

[நீர் + கோலு—,]

நீர்ச்சங்கு *nīr-c-cangu,* பெ. (n.) ஒருவகைச் செடி (மலை.); mistle-toe berry thorn.

[நீர் + சங்கு.]

நீர்ச்சண்டி *nīr-c-candi,* பெ. (n.) நீர்ப்பூடு வகை; water mimosa. *desmanthus vergatus.*

[நீர் + சண்டி.]

நீர்ச்சண்டை *nīr-c-candai,* பெ. (n.) புனற் பூசல், நீர் விளையாட்டாலுண்டாகும் சண்டை; quarrel in water play. (புறநா. 42, உரை.).

[நீர் + சண்டை.]

நீர்ச்சப்பி *nīr-c-cappi,* பெ. (n.) நீர்க் கக்கி, கெட்ட நீரை இழுக்கும் பூண்டு; a kind of chinese laurel plant *daphriphyllum/ glancescens.* it is so called from its probebitity of absorbing morbid fluid from the body. (சா.அக.).

[நீர் + சப்பி.]

நீர்ச்சலவை *nīr-c-calavai,* பெ. (n.) துணிகளை வெள்ளாவி வையாது வெளுக்கை; washing cloth without boiling it lye.

[நீர் + சலவை.]

நீர்ச்சம்மட்டி *nīr-c-cammatti,* பெ. (n.) குழாய் உள் நீரழுத்த விசை; உள் நீரழுத்த மோதொலி; குழாயுள் நீராவி அழுத்த விசை; water hammer.

[நீர் + சம்மட்டி.]

நீர்ச்சாடி *nīr-c-cādi,* பெ. (n.) **1.** நீண்டு குறுகிய கழுத்துடைய நீர்க்கலம்; water-monkey. **2.** வாயகன்ற நீர்க்கலம்; நீர்க்கொள் கலன்; water trough; tub, cistern.

[நீர் + சாடி.]



நீர்ச்சாணை *nīr-c-cāṇai,* பெ. (n.) சாணைக் கல் வகை (வின்.); a kind of stone.

[நீர் + சாணை.]

நீர்ச்சாய்வு *nīr-c-cāivu,* பெ. (n.) நீர்க் கசிவுள்ள நிலம்; wet soil. "*ஒருருக்குப் போம்போது நீர்ச்சாய்வையும் நிலச்சாய்வையும் பற்றிப் போவாரைப் போலே*" (திவ். திருநெடுந். 6, வியா.).

[நீர் + சாய்வு.]

நீர்ச்சாரை *nīr-c-cārai,* பெ. (n.) நீர்ப்பாம்பு வகை; a kind of rat-snake.

[நீர் + சாரை.]

நீர்ச்சால்[1] *nīr-c-cāl,* பெ. (n.) தண்ணீர் பூரிக்குஞ் சால் (சூ.நிக.7:64); water trough.

நீர்ச்சால்[2] *nīr-c-cāl,* பெ. (n.) 1. நீர் மிடா; large water-pot. ***"நீர்ச்சாலை யொத்த நிறைந்த சுனைகளையுடைய"*** (மலைபடு. 104, உரை.). 2. நீரிறைக்குஞ் சால் (வின்.); bucket.

[நீர் + சால்.]

நீர்ச்சாவி[1] *nīr-c-cāvi,* பெ. (n.) வெள்ளக் கெடுதியாலுண்டாம் நெற்பதர் (யாழ்.அக.); blighted crop, due to flood.

[நீர் + சாவி.]

நீர்ச்சாவி[2] *nīr-c-cāvi,* பெ. (n.) நீரின்மையால் உண்டாம் பயிர்ச்சாவி; blighted crop, due to lack of water. ***'ஒரு நீர்ச்சாவி கிடக்கக் கடலிலே*** .(ஈடு. 6, 8, 8.).

[நீர் + சாவி]

நீர்ச்சி *nīrcci,* பெ. (n.) நீர்க்கோவை; containing both serum and purulent matter-sero purulent as in boils. (சா.அக.).

நீர்ச்சிக்கு *nīr-c-cikku,* பெ. (n.) *நீர்க் கடுப்பு* (வின்.) பார்க்க; see *nīr-k-kaḍuppu.*

[நீர் + சிக்கு.]

நீர்ச்சிகரம் *nīr-c-cigaram,* பெ. (n.) நீர் வழங்கீட்டு விசைக்குரிய உயர்முகட்டு நீர்த் தொட்டி; water-tower.

[நீர் + சிகரம்.]



நீர்ச்சிங்கி *nīr-c-cingi,* பெ. (n.) ஒருவகைச் சீழ்ப்புண் நோய்; an ulcer.

[நீர் + சிங்கி.]

நீர்ச்சித்திரம் *nīr-c-cittiram,* பெ. (n.) *நீரடி முத்து* (தைலவ. தைல.116.) பார்க்க; see *nīradi muttu.*

[நீர் + சித்திரம்.]

நீர்ச்சிரங்கு *nīr-c-cirangu,* பெ. (n.) சேற்றுப் புண் (யாழ்ப்.); itching sore between the toes, caused by contact with slush or mire.

[நீர் + சிரங்கு.]

நீர்ச்சிலந்தி *nīr-c-cilandi,* பெ. (n.) சிலந்தி வகை (அபி.சிந்.); a kind of spider.

[நீர் + சிலந்தி.]

தேங்கிய குளத்துநீர் ஓரத்தில் கூடுகட்டும் இயல்புடையது.

நீர்ச்சிறுப்பு *nīr-c-ciṟuppu,* பெ. (n.) *நீர்க் கட்டல்* (வின்.) பார்க்க; see *nīr-k-kaṭṭal.*

[நீர் + சிறுப்பு
செறி → செறு → செறுப்பு → சிறுப்பு.]

நீர்ச்சிறை *nīr-c-ciṟai,* பெ. (n.) **1.** அணையிட்டுத் தடுக்கை, குறுக்கணை; check dam. **2.** இடைத்தடையிடும் திட்டமிட்ட குண்டுமாரி (படை.); barrage.

[நீர் + சிறை.]

நீர்ச்சின்னி *nīr-c-ciṉṉi,* பெ. (n.) செடிவகை (மூ.அ.); a plant.

[நீர் + சின்னி.]

நீர்ச்சீலை *nīr-c-cīlai,* பெ. (n.) குளித்துணி (இ.வ.); loin cloth.

[நீர் + சீலை.]

மறுவ. கோவணம்.

நீர்ச்சுண்டல் *nīr-c-cuṇḍal,* பெ. (n.) கருக்கு (கஷாயம்) வடிநீர்; decoction.

[நீர் + சுண்டல்
சுள் → சுள் + டு → சுண்டு → சுண்டல்
= வற்றுதல், குறைதல்.

நீர்ச்சுண்டி[1] *nīr-c-cuṇḍi,* பெ. (n.) **1.** சுண்டைக் கீரை floating desmanthus, floating sensitive plant-neptumia genus. **2.** நிலப்பூடு வகை; water mimosa-mimosa *virgata alias desmanthus virgata* as opposed to. வறட்சுண்டி. (சா.அக.).

[நீர் + சுண்டி.]

நீர்ச்சுண்டி[2] *nīr-c-cuṇḍi,* பெ. (n.) கொடி நெட்டிச் செடி (வைத்தியபரிபா.); mimosan.

நீர்ச்சுரப்பு[1] *nīr-c-curappu,* பெ. (n.) **1.** நீரால் உண்டாம் உடல்வீக்கம் (உ.வ.); dropsy. **2.** *நீரிழிவு* (இ.வ.) பார்க்க; see *nīriḻivu.*

[நீர் + சுரப்பு.]

நீர்ச்சுரப்பு[2] *nīr-c-curappu,* பெ. (n.) நீர்க் கோவை, நீர்ச்சுரப்பினால் காணும் உடல் வீக்கம்; swelling from accumulation of bad fuild oedema. (சா.அக.).

மறுவ. நீர்க்கோவை.

[நீர் + சுரப்பு.]

பிடங்கு நாறியிலையால் இந்நோய் தீரும்.

நீர்ச்சுரம்[1] *nīr-c-curam,* பெ.(n.) கப்பல் செல்லும் பாதை; கடல் வழி, கடல் நெறி; sea-way, sea faring. ***"தாங்கரு நீர்ச்சுரத் தெறிந்து வாங்குவிசைக் கொடுந்திமிற் பரதவர் கோட்டு மீனெறிய"*** (குறுந். 304.).

[நீர் + சுரம்.]

நீர்ச்சுரம்[2] *nīr-c-curam,* பெ. (n.) நீர்க் கோவையால் உண்டாகும் காய்ச்சல்; cold with fever.

[நீர் + சுரம்.]

நீர்ச்சுரவை *nīr-c-curavai,* பெ. (n.) *நீர்ச்சுரப்பு* (m.l.) பார்க்க; see *nīr-c-curappu.*

[நீர் + சுரவை.]

நீர்ச்சுருக்கு *nīr-c-curukku,* பெ. (n.) **1.** *நீர்க் கடுப்பு* பார்க்க; see *nīr-k-kaḍuppu.* **2.** மூத்திரப்பை நோய்வகை; inflammation or irritablity of the urine baldder.

[நீர் + சுருக்கு.]

நீர்ச்சுழல் *nīr-c-culal*, பெ. (n.) *நீர்ச்சுழி* பார்க்க; see *nīr-c-culi*.

[நீர் + சுழல்.]

நீர்ச்சுழி[1] *nīr-c-culi*, பெ. (n.) தண்ணீரிலுண்டாம் சுழி; eddy, whirlpool. *'கடிய நீர்ச் சுழியிலே அகப்பட்டான்'* (கலித். 140, உரை.).

[நீர் + சுழி. நீள்→நீர்
சுழி = சுழித்துச் செல்வது.]

நீர்ச்சுழி[2] *nīr-c-culi*, பெ. (n.) மாட்டுச் சுழிவகை (மாட்டுவா. 21.); circular or curved marks on the head or body of cattle, indicating their good or ill luck.

[நீர் + சுழி.]

நீரில் தோன்றும் சுழியைப் போன்று மாட்டின் மேற்றோலிற் காணப்படுவதை, நீர்ச்சுழி யென்றே பெயரிட்டழைத்தனர்.

நீர்ச்சுறுக்கு *nīr-c-curukku*, பெ. (n.) *நீர்க்கடுப்பு* பார்க்க; see *nir-k-kaduppu*. (கதி.அக.).

நீர்ச்சூசம் *nīr-c-cūšam*, பெ. (n.) *நீரடிமுத்து* பார்க்க; see *nīr-adi-muttu*. (சா.அக.).

[நீர் + சூசம்.]

நீர்ச்சூலை *nīr-c-cūlai*, பெ. (n.) **1.** அண்டவீக்கம்; hydrocele. **2.** அண்டவாயு; scrotal hernia.

[நீர் + சூலை.]

நீர்ச்செடி *nīr-c-cedi*, பெ. (n.) நீர்வாழ் நிலைத்திணை; aquatic plant.

[நீர் + செடி.]

நீர்ச்செண்டாட்டம் *nīr-c-cendā-ttam*, பெ. (n.) நீச்சுக்காரர்கள் இலக்கு வைத்தாடும் கைப் பந்தாட்டம்; water-polo.

[நீர் + செண்டு + ஆட்டம்.]



நீர்ச்செண்டு *nīr-c-cendu*, பெ. (n.) நீச்சுக்காரர்கள் இலக்கு வைத்தாடுதற்குப் பயன்படும் பந்து; a kind of bouquet used as ball in water polo.

[நீர் + செண்டு.]



நீர்ச்செம்பை[1] *nīr-c-cembai*, பெ. (n.) நீர்வளர் செம்பை; sensitive pea-sesbenia aculeate alias coro nillia aculeata. (சா.அக.).

[நீர் + செம்பை.]

நீர்ச்செம்பை² *nīr-c-cembai,* பெ. (n.) செங்கிடை என்னும் ஒருவகை முட்செடி (மூ.அ.); prickly sesban.

[நீர் + செம்பை.]

நீர்ச்செலவு *nīr-c-celavu,* பெ. (n.) **1.** நீர் விளையாட்டிற்குச் செல்லும் செலவு; journey for sporting in water. **2.** நீர்வழிச் செலவு; journey by ship, seafaring.

மறுவ. நீர்ப்பயணம், நீராத்திரை.

[நீர் + செலவு.]

நீர்ச்செறுப்பு *nīr-c-ceṟuppu,* பெ. (n.) *நீர் கட்டல் பார்க்க; see nīr-kaṭṭal. "அரத்தமூல நீர்ச்செறுப்பு வெங்கயத்தர்"* (கடம்ப.பு.இலீலா. 128.).

[நீர் + செறுப்பு.]

நீர்ச்சேம்பு *nīr-c-cēmbu,* பெ. (n.) **1.** நீரில் வாழும் செடிவகை (m.m.); arrow-head, aquatic plant. **2.** பருவெட்டான் பூண்டுவகை; cocco, a coarse herb.

[நீர் + சேம்பு.]

நீர்ச்சோகை *nīr-c-cōgai,* பெ. (n.) உடல் வீக்கம்; dropsy.

[நீர் + சோகை.]

நீர்ச்சோதனை *nīr-c-cōdaṉai,* பெ. (n.) நீரைக் கலந்து செய்து பார்க்கப்படும் ஆய்வு; analysis by mixing water.

[நீர் + skt. *சோதனை.]*

நீர்ச்சோபை *nīr-c-cōbai,* பெ. (n.) உடல் வீக்கம்; dropsy.

[நீர் + சோபை.]

நீர்ச்சோறு *nīr-c-cōṟu,* பெ. (n.) நீர் கலந்த பழைய சோறு; cooked rice mixed with water and kept overnight. *'கையாற் பிழிந்து கொள்ளப் பட்ட நீர்ச்சோற்றுத் திரளுடனே'* (புறநா. 246, உரை.).

[நீர் + சோறு.]

நீர்செய்காந்தமணி *nīr-cey-kāndamaṇi,* பெ. (n.) சந்திரகாந்தக்கல் (சீவக. 1671.); moonstone.

[நீர் + செய் + காந்த + மணி.]

நீர்சோதனை *nīr-šōdaṉai,* பெ.(n.) *நீராய்வு* பார்க்க; see *nīr-āivu.*

த. ஆய்வு.

[நீர் + skt. *சோதனை.]*

நீர்சோதிப்பு *nīr-sōdippu,* பெ.(n.) *நீராய்வு* பார்க்க; see *nīr-āivu.*

[நீர் + skt. *சோதிப்பு.]*

நீர்சோற்றுத்தண்ணீர் *nīr-šōṟṟu-t-taṇṇīr,* பெ. (n.) அரிசிச் சோறு ஊறிய நீர்; water extracted from cooked rice. mixed with water and kept overnight. water allowed to stand over cooked rice overnight.

[நீர் + சோறு + தண்ணீர்.]

நீர்த்தசுண்ணாம்பு *nirtta-cuṇṇāmbu,* பெ. (n.) நீர் கலந்த சுண்ணம்; diluted lime.

[நீர்த்த + சுண்ணாம்பு.]

நீர்த்தட்டு *nir-t-taṭṭu,* பெ. (n.) நீர்ப்பற்றாக் குறை; scarcity of water. *சென்ற கோடையை விட இந்தக் கோடையில் நீர்த்தட்டு மிகுதி. (உ.வ.).*

[நீர் + தட்டு; தட்டு – தட்டுப்பாடு.]

நீர்த்தட்டுப்பாடு *nir-t-taṭṭu-p-pāḍu,* பெ. (n.) *நீர்த்தட்டு* பார்க்க; see *nir-t-taṭṭu.*

[நீர்த்தட்டு + பாடு. படு – பாடு; பாடு – சொல்லாக்க ஈறு.]

நீர்த்தடுப்பு[1] *nir-t-taḍuppu,* பெ. (n.) நீர் இறங்காமை; water proofing.

[நீர் + தடுப்பு.]

நீர்த்தடுப்பு[2] *nir-t-taḍuppu,* பெ. (n.) பொறி யில் தண்ணீர் வடிவிலுள்ள தடையமைவு; water seal.

[நீர் + தடுப்பு.]

நீர்த்தடை *nir-t-taḍai,* பெ. (n.) நீரால் விளையும் கேட்டைத் தடுப்பது; water-proof.

[நீர் + தடை.]

நீர்த்ததண்ணீர் *nirtta-taṇṇir,* பெ. (n.) *நீர்த்த நீர்* பார்க்க; see *nirtta-nir.*

[நீர்த்தநீர் → நீர்த்ததண்ணீர்.]

நீர்த்தநீர் *nirtta-nir,* பெ. (n.) கரைசல் தன் பதத்தில் திரிந்த நீர்; turning to water as of lost proper congistency of a mixture.

[நீர்த்த+நீர்.]

நீர்த்தருபூசல் *nir-t-taru-pūšal,* பெ. (n.) நீர் விளையாட்டி லெழும் ஆரவாரம்; polo water noice. "நீர்த்தரு பூச லினம் பழிக்குநரும்" (பதிற்றுப். 22:29.).

[நீர்தரு + பூசல்.]

நீர்த்தல் *nirttal,* பெ. (n.) நீராதல்; hydration. *"எட் டொன்றாய் நீர்க்கூட்டி"* (தைல. தைலவ. 32.).

[நீர் → நீர்த்தல்.]

நீர்த்தலை *nir-t-talai,* பெ. (n.) மூளையில் அரத்தம் குறைவாகும் நோய் (m.m.); hydrocephalus.

[நீர் + தலை.]

நீர்த்தளம் *nir-t-taḷam,* பெ. (n.) நீர்நிலையின் அடித்தரை; bottom of a water tank.

[நீர் + தளம்.]

நீர்த்தாக்கு *nir-t-tākku,* பெ. (n.) நீர் அதிக மாகத் தேங்கி நிற்குமிடம்; water-logged place.

[நீர் + தாக்கு.]

நீர்த்தாரை[1] *nir-t-tārai,* பெ. (n.) **1.** சாக்கடை; gutter. **2.** மழைத்தாரை; rain water.

[நீர் + தாரை.]

நீர்த்தாரை² *nīr-t-tārai,* பெ. (n.) **1.** ஆண் குறி; membrum virile. **2.** மூத்திரப்பை யிலிருந்து சிறுநீர் கொண்டுவருங்குழாய் (C.E.M.); urethra.

[நீர் + தாரை.]

நீர்த்தாரை³ *nīr-t-tārai,* பெ. (n.) உடம்பின் பலவிடங்களில் உள்ள நீரைக் கொண்டு செல்லும் குழல்; ducts or canals conveying liquids or fluids to the various parts of the body.

[நீர் + தாரை.]

நீர்த்தாரைக்கல் *nīr-t-tārai-k-kal,* பெ. (n.) சிறுநீர்க் குழாயிலுண்டாகும் கல்; calculus obstructing the passage of urine.

[நீர்த்தாரை + கல்.]

நீர்த்தாரைப்புண் *nīr-t-tārai-p-puṇ,* பெ. (n.) சிறுநீர்ப் பாதையிலுண்டாகும் புண்; ulcer in the urethral passage.

[நீர்த்தாரை + புண்.]

நீர்த்தாரையடைப்பு¹ *nīr-t-tārai-y-aḍaippu,* பெ. (n.) நீர்க்கடுப்பு (M.L.); stricture of urethra.

[நீர்த்தாரை² + அடைப்பு]

நீர்த்தாரையடைப்பு² *nīr-t-tārai-y-aḍaippu,* பெ. (n.) சாக்கடை யடைப்பு; drainage blocking.

[நீர்த்தாரை¹ + அடைப்பு.]

நீர்த்தாரையெரிச்சல் *nīr-t-tārai-y-ericcal,* பெ. (n.) சிறுநீர்ப்பாதையிலுண்டாகும் எரிச்சல்; inflammation of urethera-urithritis.

[நீர்தாரை² + எரிச்சல்.]

நீர்த்தாழ்வு *nīr-t-tāḻvu,* பெ. (n.) *நீர்நிலை* (சூடா. 11. 91.) பார்க்க; see *nīr-nilai.*

[நீர் + தாழ்வு.]

நீர்நிற்கும் நிலக்குழி

நீர்த்தாளி *nīr-t-tāḷi,* பெ. (n.) நீரில் முளைக்குஞ் செடி; a running plant of the convolvulus genus. (சா.அக.).

நீர்த்தானம்¹ *nīr-t-tāṉam,* பெ. (n.) நீர் வழங்குகை; giving water.

[நீர் + தானம்.]

நீர்த்தானம்² *nīr-t-tāṉam,* பெ. (n.) (பிறப்.) பிறப்பிடத்தினின்று நாலாமிடம் (வின்.); (astrol.) the fourth house from the ascendant.

[நீர் + தானம்.]

நீர்த்திசம் *nīrttiśam,* பெ. (n.) மஞ்சள்; Indian saffron, *turmeric-curcuma lanfa.* (சா.அக.).

நீர்த்தித்திப்பு *nīr-t-tittippu,* பெ. (n.) *நீரிழிவு* (M.L.) பார்க்க; see *nīriḻivu.*

[நீர் + தித்திப்பு.]

நீர்த்திப்பலி *nīr-t-tippali,* பெ. (n.) திப்பலி வகை (மலை.) (M.M. 997.); water long-pepper, climber.

[நீர் + திப்பலி.]

நீர்த்திமிரம் *nirttimiram,* பெ. (n.) கண்ணில் நோயையுண்டாக்கிக் கருவிழிப் பக்கங்களில் குத்தலையும் நடுவில் புகைச்சலையும் உண்டாக்கும் ஒரு கண்ணோய்; a disease of the black of the eye marked by lesion of the eye, acute pain and dimness of vision. (சா.அக.).

[நீர் + திமிரம்.]

நீர்த்திரை *nīr-t-tirai,* பெ. (n.) கடலலை; sea wave. "நீர்த்திரையரங்கத்து நிகர்த்து முன்னின்ற" (சிலப். 6:50.).

[நீர் + திரை.]

நீர்த்திரையரங்கம் *nīr-t-tirai-yarangam,* பெ. (n.) நீரலையரங்கம்; sea-wave. நீர்த் திரை யரங்கத்து நிகர்த்து முன்நின்ற (சிலப். 6:50.).

[நீர்த்திரை + அரங்கம்.]

கரிய கடலினடுவு நின்ற சூரனது வேற்றுருவாகிய வஞ்சத்தையறிந்து அவன் போரைக் கடந்த முருகன் அக்கடனடுவண் திரையே அரங்கமாக நின்று துடி கூத்தாடியதாகத் தொன்மக் கதை.

நீர்த்திவலை *nīr-t-tivalai,* பெ. (n.) *நீர்த்துளி* பார்க்க; see *nīr-t-tuḷi.*

[நீர் + திவலை.]

நீர்த்து *nirttu,* பெ. (n.) நீர்மையுடைத்து தன்மையது; nature. "*உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது தள்ளினுந் தள்ளாமை நீர்த்து*" (குறள், 596.).

[நீர் → நீர்த்து.]

நீர்த்துப்போ–தல் *nirttu-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) நீரின்தன்மையடைதல் (உ.வ.); to become watery, thin, as honey from fermentation.

[நீர்த்து + போ–,]

நீர்த்தும்பல் *nīr-t-tumbal,* பெ. (n.) ஒரு வகைக் கண்ணோய்; an eye disease. (சா.அக.).

[நீர் + தும்பல்.]

நீர்த்தும்பை *nīr-t-tumbai,* பெ. (n.) ஒரு வகைத்தும்பை; a kind of tombay of the leucas genus.

[நீர் + தும்பை.]

நீர்த்துரும்பு *nīr-t-turumbu,* பெ. (n.) பருகும் நீரிலுள்ள துரும்பு போன்ற இடையூறு; obstruction, as a straw in drinking water.

[நீர் + துரும்பு.]

நீர்த்துலக்கி *nīr-t-tulakki,* பெ. (n.) மகப்பேறு காலத்தில் கருப்பையிலுள்ள நீரை எடுப்பதற்காக பயன்படுத்தும் கருவி; a delicate probe used for causing escape of fluid the womb during labour. (சா.அக.).

நீர்த்துவாரம் *nīr-t-tuvāram,* பெ. (n.) நீர்த்துளை பார்க்க; see nīr-t-tuḷai.

[நீர் + துவாரம்.]

த.துளை. skt. துவாரம்.

நீர்த்துவாரவுள்ளரிப்பு *nīr-t-tuvāra-v-uḷḷarippu,* பெ. (n.) *நீர்த்துளையுள்ளரிப்பு* பார்க்க; see *nīr-t-tuḷai-y-uḷḷarippu.*

[நீர்த்துவாரம் + உள்ளரிப்பு.]

நீர்த்துவையல் *nir-t-tuvaiyal,* பெ. (n.) தளர இருக்கும் துவையல்; a kind of strong relish prepared by adding paste of chilli to coconut, ginger, curry leaf or to similar things in semi solid condition.

[நீர் + துவையல்.]

நீர்த்துளக்கி *nir-t-tuḷakki,* பெ. (n.) **1.** நீர்க் குழலின் துளக்கி; stilette of probe, a delicate probe. **2.** நீர்க்குழலின் கம்பி; a wire used to stiffen or clear a catheter. **(சா.அக.).**

[நீர் + துளக்கி.]

நீர்த்துளி *nir-t-tuḷi,* பெ. (n.) சொட்டு; drop as tears. *"கல்லென அதிர்குர லேறொடு துளிசொரிந் தாங்கு"* (புறநா. **160.).**

[நீர் + துளி]

நீர்த்துளை *nir-t-tuḷai,* பெ. (n.) **1.** சிறுநீர்ப் பாதையின் துளை; urethral opening. **2.** சிறுநீர் வரும் வழி; opening of the urinary passage.

[நீர் + துளை.]

நீர்த்துளையுள்ளரிப்பு *nir-t-tuḷai-y-uḷḷarippu,* பெ. (n.) **1.** சிறுநீர்ப் பாதையிலுண்டாகும் தினவு; itching of the urethra.

[நீர்துளை + உள்ளரிப்பு.]

நீர்த்துறை *nir-t-tuṟai,* பெ. (n.) நீர்நிலையில் இறங்குடம்; ghat, a path of descent to a tank or river; ford, ferry; watering-place for cattle; place for bathing or washing clothes. *"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின் நீர்த்துறை படியும் பெருங்களிறு போல"* (புறநா. **94.).**

[நீர் + துறை.]



நீர்த்துறையேறு—தல் *nir-t-tuṟai-ēṟu-,* **5.** செ.கு.வி. (v.i.) பெண்கள் வீட்டு விலக்காய்த் தீட்டாதல்; to be in ones periods.

[நீர்த்துறை + ஏறு–.]

நீர்த்தூம்பு¹ *nir-t-tūmbu,* பெ. (n.) மதகு; sluice. *"செங்குளக் கோட்டுக் கீழ் நீர்த்தூம்பு"* (களவழி. **2.).**

[நீர் + தூம்பு.]



நீர்த்தூம்பு² *nir-t-tūmbu,* பெ. (n.) கூரை நீர் வழிந்தோட அமைக்கப்பட்டிருக்கும் குழாய்; water-shoot.



நீர்த்தெளி *nīr-t-teḷi,* பெ. (n.) திருக்கோயிலிற் செய்யும் குடமுழுக்கு; ceremony of consecration or purificatum in a temple.

[நீர் + தெளி.]

எங்கும் நிறைந்து விளங்கும் பரம்பொருள் வழிபடற்கெளிதாய் ஓமகுண்டத்துத் தீயின்கண் முனைந்து விளங்குவதாகக் கொண்டும் கண்டும் போற்றி, அருகில் புதிய மட்குடங்களில் நிரப்பி வைக்கப் பட்டிருக்கும் நீரின்கண் எழுந்தருளுமாறு வழுத்தி வேண்டி அதனை வழிபட்டு, அந்நன்னீரைக் கோயிலின் உச்சியில் உள்ள கலசத்தின் மீதும் கோயிலில் உள்ள திருமேனிகளின் மீதும் ஊற்றி முழுக்காட்டுதலே கோயிலில் இறைவன் எழுந்தருளுவதாகக் கொள்ளப்படுதலால் அது *'கும்பாபிடேகம்'* எனப்படுகின்றது.

கும்பாபிடேகத்தில் இடம் பெற்றுள்ள கும்பம் என்னுஞ் சொல் வடமொழியில் வழக்கூன்றி இருப்பினும் அது தூய தமிழ்ச் சொல்லேயாம்.

கும்முதல் (கும்) என்னுஞ் சொல் குவிதல் என்னும் பொருளது. கும்→குமி→குமிழ்→குமிழி என்பவற்றை நோக்குக!

கும் என்பது கும்பு என வளர்ந்தும், கூம்பு என நீண்டும் குவிதற் பொருளை உணர்த்துகின்றது. கும்புதல் → கூம்புதல் - குவிதல்.

கும்பு → கும்பிடு → கும்பிடுதல் = கை குவித்தல்.

கும்பு என்றது கும்பம் என்றாகிக் குடம், தேர்முடி, யானைத்தலைக் குலவு, கட்டடக் குவிமுகடு ஆகியவற்றைக் குறிக்கின்றது. ஆகவே கும்பம் தமிழ்ச் சொல்லேயாதல் தெளியப்படும்.

குவிந்த சுரைக்காய் கும்பச்சுரை எனவும், கீழ்நோக்கிக் குவிந்த உண்கலம் கும்பா எனவும் வழங்கப் பெறுதல் காண்க!

இனி, கும்ப என்னுஞ் சொல் இருக்கு வேதத்திலேயே இடம்பெற்றிருப்பினும் வடவர் அதற்குக் காட்டும் *'கும்ப்'* என்னும் மூலம் கும்பு என்னுந் தமிழ்ச் சொல்லின் சிதைவே. இதற்கு வடவர் கூறும் பொருள் கவிதல் என்பதும் தென்னவர் கூறும் பொருள் குவிதல் என்பதும் ஆகும்.

கவிதல் கீழ்நோக்கியது என்றும் குவிதல் மேல்நோக்கியது என்றும் வேறுபாடு காட்டி விளக்குகிறார் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்.

கும்பம் என்பது தூய தமிழ்ச்சொல்லே யாயினும் அது வடமொழியில் வழக் கூன்றியுள்ளமையால் வடசொல்லாகவே கருதப்படுதலானும் கும்பாபிடேகம் குட முழுக்கு எனத் தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளது.

ஆயினும் பழந்தமிழ் நூல்களில் மட்டுமன்றி இடைக்கால நூல்களிலுங் கூடக் குடமுழுக்கு, கும்பாபிடேகம் என்னுஞ் சொற்களோ அவற்றைப் பற்றிய வேறு குறிப்புகளோ காணப்படவில்லை.

திருத்தொண்டர் புராணத்தில் அல்லது தொன்மத்தில் பூசலார் நாயனார் கோயில் கட்டியது பற்றிக் கூறப்பட்டுள்ளது. கடைக்கால் போட்டுப் படிப்படியாகக் கட்டி முடிக்கப்பட்ட நாயனாரின் மனக் கோயிலிலோ, அவ்வாறே பல்லவமன்னன் கட்டிய புறக்கோயிலிலோ, இறைவன் எழுந்தருளும் நிகழ்ச்சி, கும்பாபிடேகம் அல்லது குடமுழுக்கு என்னுஞ் சொல்லால் குறிக்கப்படவில்லை.

புதுமனைப் புகுவோர், வீடுகட்டி முடித்து ஒழுங்குபடுத்திய பின் தூநீர் தெளித்துக் குடிபுகுவது இன்றும் வழக்கமாக இருப்பது போலவே கோயில் திருப்பணி

செய்வது வழக்கமாய் இருந்திருக்கிறது. இது நீர்த்தெளி என வழங்கப் பெற்றுள்ளது. என்பது கல்வெட்டுகளால் அறியப்படுகின்றது.

ஆனைமலைக் கல்வெட்டு:

கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பிற் பகுதியிலும் ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் **(768–816)** மதுரையை ஆண்ட சடில பராந்தக நெடுஞ்சடையன் என்ற பாண்டிய மன்னனின் மதி யமைச்சனாக விளங்கிய மாறன்காரி என்பவன் மதுரையையடுத்த ஆனை மலையில் நரசிங்கப் பெருமாள் கோயிலொன்று கட்டினான் என்றும், அது முற்றுப்பெறு முன்னரே அவன் இறந்து விட்டமையால், அவனுக்குப் பின் அவ்வமைச்சுப் பதவியை ஏற்ற அவன் தம்பி மாறன் எயினன் என்பவன் அத் திருப்பணியை நிறைவேற்றி நீர் தெளித்தான் என்றும் ஆனைமலை வட்டெழுத்துத் தமிழ்க் கல்வெட்டுக் கூறுகிறது. அதுவருமாறு:

"கோமாறஞ் சடையற்கு உத்தர மந்திரி களக்குடி வைத்தியன் மூவேந்த மங்கலப் பேரரையன் ஆகிய மாறன் காரி இக் கற்றளி செய்து நீர்த் தெளியாதேய் சு(ஸ்)வர்க்காரோகணம் செய்த பின்றை அவனுக்கு அநுச(ஜ)ன் உத்தர பதமெய்தின பாண்டியமங்கல விசையரையன் ஆகிய மாறன் எயினன் முகமண்டபஞ்செய்து நீர்த்தெளித்தான்."

இக்கல்வெட்டில் பல வடசொற்கள் இடம் பெற்றிருந்தும் கும்பாபிடேகம் நீர்த்தெளி என்னும் தமிழ்ச் சொல்லாலேயே குறிக்கப் பட்டிருக்கிறது என்பதும், இக் கல்வெட்டின் அருகில்அவனாலேயே பொறிக்கப் பெற்றுள்ள வடமொழிக் கல் வெட்டிலுங்கூடக் கும்பாபிடேகம் இடம் பெறவில்லை என்பதும் கவனிக்கத் தக்கன.

மாறன்காரி, மாறன்எயினன் என்னும் உடன்பிறந்தார் வடமொழியில் அல்லது வடமொழி மிகுதியும் கலந்த தமிழில் எழுதும் வழக்கமுடையவர்களாய் இருந்தும், அவர்களேகூட இதனைக் கும்பாபிடேகம் எனக் குறியாமையால் ஒன்பதாம் நூற்றாண்டு வரையிலும் நீர்த் தெளி என்பதே பெருவழக்காய் இருந்தமை அறியப்படும் எனத் தொல்லியல் அறிஞர் க.குழந்தைவேலன் தமிழிய வாழ்வில் கல்லுஞ் சொல்லும் என்னும் நூலில் உறுதியாய்க் கூறுகிறார். (இத்தரவு, திருக்குறள்மணி இறைக்குருவனாரின் திருக்கோயில் வழிபாடும் தமிழ்க் குடமுழுக்கும் என்னும் நூலிலிருந்து.).

நீர்த்தெளியான் *nīr-t-teḷiyāṉ,* பெ. (n.) தரைக்கு நீர் தெளித்துத் தூய்மை செய்யும் வேலைக்காரன்; servant who cleans the floor of a building by sprinkling water. *"நீர்த்தெளியான் நால்வர்க்குப் பேராற் பங்கு அரையாக"* (தெ. க. தொ. **2 : 227.**).

மறுவ. நீர்த்தெளியன்.

[நீர் + தெளியான்.]

நீர்த்தெளிவி *nīr-t-teḷivi,* பெ. (n.) **1.** நீரைத் தெளியச் செய்யும் கருவி; water-filter. **2.** தேற்றான் (தேத்தான்) கொட்டை; water cleaning nut-stry chnos potatorum. (சா.அக.).

நீர்த்தேக்கம் *nīr-t-tēkkam,* பெ. (n.) ஆற்றின் குறுக்கே அணை கட்டி நீரைத்தேக்கி வைத்திருக்கும் இடம்; ஆற்றுநீர் அல்லது மழைநீர்தேக்கி வைக்கப்பட்டிருக்கும் ஏரி, குளம் முதலியவை; dam, reservoir, tank அண்மையில் பெய்த பெருமழையில் ஆறகழூர் நீர்த்தேக்கம் நிரம்பியது. (உ.வ.).

[நீர் + தேக்கம்.]



நீர்த்தேள் *nīr-t-tēḷ*, பெ. (n.) நீரில் வாழும் ஒருவகைத் தேள்; water scorpion.

[நீர் + தேள்.]

நீர்த்தொட்டி *nīr-t-toṭṭi*, பெ. (n.) நீர் வைத்திருக்கும் தொட்டி; water butt.

[நீர் + தொட்டி. தொடு → தொட்டு → தொட்டி.]



நீர்த்தொப்பை *nīr-t-toppai*, பெ. (n.) ஆறு அல்லது ஏரியின் நீரானது வாய்க்கால் வழியே வந்து ஓரிடத்தில் மேலும் பலகிளைகளாகப் பிரிந்து செல்லுமிடம்; *water canal.*

மறுவ. *நீர்த்தொந்தி,*

[நீர் + தொப்பை.]

நீர்த்தோசம் *nīr-t-tōšam*, பெ. (n.) நீர்க்கோப்பு (யாழ்.அக.); cold.

மறுவ. நீர்க்கோவை.

[நீர் + skt. தோசம்.]

நீர்தலைப்படு—தல் *nīr-talaippaḍu-*, 20 செ.கு.வி. (v.i.) சந்தியில் வழிபாடு செய்தல்; to perform daily ablutions. *"நெடு நெறி மருங்கி னீர்தலைப் படுவோன்"* (சிலப். 13:45). 2. நீர்த்துறையை அடைதல்; to get into the water tank, canal for banking and etc.,

[நீர் + தலைப்படு—.]

நீர்தலைப்படுகை *nīr-talai-p-paḍugai*, பெ. (n.) நீர்நிலையை அடைகை; getting into water sorces. for bathing and etc., *"இடுமுள் வேலி நீங்கி யாங்கோர் நெடுநெறி மருங்கி னீர்தலைப் படுவோன்"* (சிலப். 13:42.).

[நீர் + தலைப்படுகை]

நீர்தூவுந்துருத்தி *nīrtūvunturutti*, பெ. (n.) நீர்விடு சிவிறி; water sprinkle.

[நீர்தூவும் + துருத்தி.]



நீர்தெளி–த்தல் *nīr-teḷi-,* 4 செ.குன்றாவி. (v.t.) தூய்மை செய்தற்காக நீர் தெளித்தல்; to sprinkle water for purificatum.

[நீர் + தெளி–,]

நீர்தெளித்துவிடு–தல் *nīr-teḷittu-viḍu-,* 5செ.குன்றாவி. (v.t.) ஒருவனைத் தன்போக்கிற் செல்லும்படி விடுதல்; to leave one to oneself.

[நீர் + தெளித்துவிடு.]

நீர்தொடு–தல் *nīr-toḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. சிறுநீர் பெய்தபின் பிறப்புறுப்பை நீராற் கழுவுதல்; to clean the parts with water after urination. 2. சிறுநீர் பெய்தல்; to pass urine. *"நீர் தொடுகிற்பான் போமவன் முன்னா"* (பிரமோத். 2, 49.).

[நீர் + தொடு.]

வாய்பூசி வந்தான் என்பது போன்ற வழக்காறு.

நீர்நக்கல் *nīr-nakkal,* பெ. (n.) ஏரியின் உள் வாய்நீர் தேங்கும் எல்லையிடம்; limit of water-spread of a tank. *"கீழெல்கை சங்கரனேரிக் குளத்து நீர்நக்கலுக்கு மேற்கு"* (T.A.S. I; IV 103.).

[நீர் + நக்கல்.]

நீர்நசைவேட்கை *nīr-našai-vēṭkai,* பெ. (n.) நீரை விரும்பும் விருப்பம்; desire in water. *"வருநர்ப் பார்க்கும் வன்கண் ணாடவர் நீர்நசை வேட்கையின் நாமென்று தணியும்"* (குறுந். 274.).

[நீர் + நசை + வேட்கை.]

நீர்நரம்பு *nīr-narambu,* பெ. (n.) நிலத்துட் பாயும் நீரோட்டம்; underground spring or flow of water. *'கடின ஸ்தலதத்திலே நீர்நரம்பு அறியுமவனா கையாலே* (ஈடு, 10, 6, 4, பக். 195.).

[நீர் + நரம்பு.]

நீர்நாகம் *nīr-nāgam,* பெ. (n.) நீர் ஓரங்களில் காணப்படும் நாகப்பாம்பு; cobra found on the sea coasts-water cobra.

[நீர் + நாகம்.]

நீர்நாங்கல் *nīr-nāṅgal,* பெ. (n.) நீண்ட மரவகை (nels.); long-leaved large-flowered iron wood.

[நீர் + நாங்கல். நாங்கு – மரவகை. நாங்கு → நாங்கல்.]

நீர்நாங்கள் *nīr-nāṅgaḷ,* பெ. (n.) *நீர்நாங்கு* பார்க்க; see *nīr-nāṅgu.* (சா.அக.).

நீர்நாங்கு *nīr-nāṅgu,* பெ. (n.) நாங்கின் ஒருவகை; a kind of ceylon iron wood-mesna ferrea (speciosa). (சா.அக.).

[நீர் + நாங்கு.]

நீர்நாணநெய்வழங்கு *nīrnāṇa-ney-vaḻaṅgu,* பெ. (n.) மிகுதியாய் நெய்யிடுகை; put more ghee. "நீர்நாண நெய் வழங்கியும் எண்ணாணப் பலவேட்டும் மண்ணாணப் புகழ்ப்பரப்பியும்" (புறநா. 166.). "மண்ணாணப் புகழ் வேட்டு நீர் நாண நெய் வழங்கிப்" (புறநா. 384.).

[நீர்நாண + நெய்வழங்கு]

விலையற்ற நீர் வெட்குமாறு விலைமிக்க நெய் வழங்குதலைக்குறிக்கும்.

நீர்நாடு *nīr-nāḍu,* பெ. (n.) நீர்வளமுள்ள சோழநாடு; Cōla country, as well-watered. *"நாவலர் புகழு நீர்நாடு"* (திருவானைக். திருநாட். 1.).

[நீர் + நாடு.]

நீர்நாய் *nīr-nāy,* பெ. (n.) நீரில் வாழும் ஒரு வகை நாய்வகை; a kind of water dog, otter. "அரிற்பவர்ப் பிரம்பின் விரிப்புற நீர்நாய் வாளை நாளிரை பெறூஉம் ஊரன்" (குறுந். 364). "ஒண்செங் குரலித் தண்கயகங் கலங்கி வாளை நீர்நாய் நாறிரை பெறூஉப்"(புறநா. 283.). "வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்"(அகநா.6:18.).

[நீர் + நாய்]

நீர்நாய்ச்சவ்வாது *nīr-nāy-c-cavvādu,* பெ. (n.) ஒருவகை நீர்நாயின் நறுமணச் சட்டம்; secretion from the beaver. 2. புனுகு; civet.

[நீர்நாய் + சவ்வாது.]

நீர்நாவல் *nīr-nāval,* பெ. (n.) 1. சிறு மரவகை; munro's apple. 2. நாவல் மரவகை; gardener's black plum.

[நீர் + நாவல்.]

நீர்நாள் *nīr-nāḷ,* பெ. (n.) 20 ஆவது விண்மீன் பூராடம் (பிங்.); pūrādam.

[நீர் + நாள்.]

நீர்நாற்று *nīr-nāṟṟu,* பெ. (n.) நீர்பாய்ச்சிய நிலத்தில் உண்டாகும் நாற்று (G.Tj.D. 1. 97); seedlings grown in watered lands.

[நீர் + நாற்று.]

நீர்நிதி[1] *nīr-nidi,* பெ. (n.) கடல்; sea.

[நீர் + நிதி. நீரின் மிகுதி, நீரின் குவை, நீராகிய செல்வம்.]

[நீர் + (skt.) நிதி]

நீர்நிதி[2] *nīr-nidi,* பெ. (n.) செந்தாமரை; red lotus flower-nelumbrum speciosum. (சா.அக.).

[நீர் + நிதி. நீரில் உண்டாகும் குவை, செல்வம்.]

நீர்நிலஇயக்கம் *nīr-nila-iyakkam,* பெ. (n.) நிலத்திலும் நீரிலும் வாழ்கை; amphibious.

[நீர் + நிலம் + இயக்கம்.]

நீர்நிலக்காசு[1] *nīr-nila-k-kāšu,* பெ. (n.) பழைய (வரி) காசாய வகை (தெ. க. தொ. 1:89.); an ancient tax in cash.

[நீர் + நிலம் + காசு.]

நீர்நிலக்காசு[2] *nīr-nila-k-kašu,* பெ. (n.) நீர் நிலங்களுக்கான வரி; water land tax.

[நீர் + நிலம் + காசு.]

நீர் நிலைகளின் நிலங்களுக்கு வரியிட்டு அதனைத் தண்டி அதைக் கொண்டு நீர் நிலைகளைப் பேணி வந்தனர். இது மூன்றாம் இராசராசன் காலத்தில் நடை முறையிலிருந்தது. (அபி.சிந்.).

நீர்நிலம் *nīr-nilam,* பெ. (n.) நன்செய் (கல்); wet land.

[நீர் + நிலம்.]

நீர்நிலை¹ *nīrnilai,* பெ. (n.) ஏரிகுளம் முதலியன; tank, lake, pond etc. "*நிலம் குழிந்த விடத்தே நீர்நிலை மிகும்*" (புறநா. 18, உரை.).

[நீர் + நிலை.]



நீர்நிலை² *nīr-nilai,* பெ. (n.) முத்தின்குற்றம்; a flaw in the pearl. "*அருவியாடியு மகன் சுனை குடைந்தும் என்பதனால் நீர் நிலையும்*" (சிலப். பதி. உரை.). "*காற்றேறு மணலேறு கல்லேறு நீர்நிலை யென்பன மிக்க குற்றங்கள்*" (சிலப். 14:193 உரை.).

நீர்நிலை³ *nīr-nilai,* பெ. (n.) 1. சதுப்பு நிலம் (c.g.); place where water stagnates, marshy ground. 2. ஆழம்; depth of water. '*கையை மேலே கூப்பி முழுகி நீர்நிலை காட்டுங் காலத்து*' (பெரும்பாண். 273, உரை.).

[நீர் + நிலை.]

நீர்நிலைஇயல் *nīr - nilai - iyal,* பெ. (n.) அமைந்த நிலையில் உள்ள நீர்மத்தின் அழுத்த ஆற்றலமைதி; hydrostatics.

[நீர் + நிலை + இயல்.]

நீர்நிலைக்காவலர் *nīr-nilai-k-kāvalar,* பெ. (n.) 1. நீர் நிலைகளைக் காப்பவர்; security for water tanks. 2. காப்பு நீர்நிலைகளில் மீன்பிடிப்பதைத் தடுப்பவர்; water-bailiff.

[நீர்நிலை + காவலர்.]

நீர்நிலைச்செறு *nīr-nilai-c-ceṟu,* பெ. (n.) நீர்வளமிக்க வயல்; fertile field. "அங்ஙனம் ஒலித்தல் செல்லாக் கழனியிற் செந்நெல்லும் கரும்புஞ் சூழ்ந்த இடத்தையுடைய நீர்நிலைச் செறுவி லுண்டாகிய தாமரைக் காட்டி லென்க". (சிலப். 10: 122, உரை.).

நீர்நிறக்காக்கை *nīr-niṟa-k-kākkai,* பெ. (n.) நீர்க்காக்கை பார்க்க; see nīr-k-kākkai "*கானக்கோழியு நீர்நிறக் காக்கையும்*" (சிலப். 10:116.).

[நீர் + நிறக்காக்கை.]

நீர்நிறம்¹ *nīr-niṟam,* பெ. (n.) நீரின் நிறம்; colour of water.

[நீர் + நிறம்.]

நீர்நிறம்² *nīr-niṟam,* பெ. (n.) நீரில் குழைத்து எழுதும் வண்ணம்; water colour.

[நீர் + நிறம்.]

நீர்நீக்கம் *nīr-nīkkam,* பெ. (n.) நீர்க் கூறகற்றம்; dehydration.

[நீர் + நீக்கம்.]

நீர்நீக்கி *nīr-nīkki,* பெ. (n.) நீர்க்கூறகற்றி; dehydrator.

[நீர் + நீக்கி.]

நீர்நுங்கு *nīr-nuṅgu,* பெ. (n.) நீரையுடைய பனநுங்கு; pulpy kernel of a tender palmyra fruit with full of water. "நீர்நுங்கின் கண்வலிப்பக்கானவேம்பின் காய்திரங்கக் கயங்களியுங் கோடையாயினும் ஏலா வெண்பொன் போருறு காலை" (புறநா. 389.).

[நீர் + நுங்கு.]

நீர்நெட்டி *nīr-neṭṭi,* பெ. (n.) கிடைப் பூடுவகை (யாழ்.அக.); a species of pith.

[நீர் + நெட்டி.]

நீர்நெருப்பு[1] *nīr-neruppu,* பெ. (n.) கல்லுருவி (சங்.அக.) என்னும் நிலைத்திணை; blistering plant.

[நீர் + நெருப்பு.]

நீர்நெருப்பு[2] *nīr-neruppu,* பெ. (n.) **1.** நீர்மேல் நெருப்பு; fire on water. **2.** கல்லுருவி; gravel plant-ammrnnia vesi-catoria alies a baccifera. **3.** ஆகாயத் தாமரை; sky lotus-pislia stratotes. **4.** கொட்டைப்பாசி; green moss found on the surface of water. (சா.அக.).

நீர்நெல்லிக்காய் *nīr-nellikkāy,* பெ. (n.) நீரில் ஊறவைத்த நெல்லிக்காய்; fruits of myrobalan pickled in water.

[நீர் + நெல்லிக்காய்.]

நீர்நொச்சி *nīr-nocci,* பெ. (n.) **1.** நொச்சி மரவகை (L.); three-leaved chaste tree. **2.** மரவகை; water peacock's-foot tree. **3.** பீநாறிச்சங்கு; smooth volkameria. **4.** காட்டுச்சீரகம்; purple fleabane.

[நீர் + நொச்சி.]

நீர்ப்பகண்டை *nīr-p-pagaṇḍai,* பெ. (n.) *நீர்ப் பகன்றை* (வின்.)பார்க்க; see *nīr-p-pagaṉṟai.*

[நீர்பகன்றை → நீர்ப்பகண்டை.]

நீர்ப்பகன்றை *nīr-p-pagaṉṟai,* பெ. (n.) பகன்றை வகை (யாழ்.அக.); a kind of Indian jalap.

[நீர் + பகன்றை.]

நீர்ப்பகை *nīr-p-pagai,* பெ. (n.) உடம்புக்கு நீர் ஒத்துக் கொள்ளாமையாகிய மாறுபாடு; நீர் ஒவ்வாமை; injuriousness of some kinds of water; water allergy.

[நீர் + பகை.]

நீர்ப்பச்சை *nīr-p-paccai,* பெ. (n.) **1.** ஆமை; tortoise. **2.** கடலாமை; sea turtle. **3.** *கடலாரை* பார்க்க; see *kaḍal-ārai.* (சா.அக.).

[நீர் + பச்சை.]

நீர்ப்பசு *nīr-p-pašu,* பெ. (n.) *காளிந்தி* பார்க்க; see *kāḻindi.* (சா.அக.).

நீர்ப்பஞ்சு[1] *nīr-p-pañju,* பெ. (n.) **1.** காந்தச் செய்–நஞ்சு (பாஷாணம்); one of the 32 kind of native arsenic. **2.** தண்ணீரிழுக்கும் பஞ்சு; absorbment cotton. (சா.அக.).

[நீர் + பஞ்சு.]

நீர்ப்பஞ்சு[2] *nīr-p-pañju,* பெ. (n.) கடற்காளான் (யாழ்.அக.); sponge.

[நீர் + பஞ்சு.]

நீர்ப்பட்டை *nīr-p-paṭṭai,* பெ. (n.) பிசின் பட்டை; a gum bark. (சா.அக.).

[நீர் + பட்டை.]

நீர்ப்படலம் *nīr-p-paḍalam,* பெ. (n.) கண்ணோய் வகை (C.E.M); opacity of the cornea, nebula.

[நீர் + படலம்.]

நீர்ப்படுக்கை *nīr-p-paḍukkai,* பெ. (n.) புண்பட்ட நோயருக்குரிய நீரடைத்த படுக்கை; water-bed for patients who is affected by bed soar.

[நீர் + படுக்கை.]

நீர்ப்படுகை *nīr-p-paḍugai,* பெ. (n.) ஆற்றோரத்து நிலம்; land on the banks of a river fit for cultivation.

[நீர் + படுகை.]

நீர்ப்படு–த்தல் *nīr-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) முழுக்காட்டுதல்; to bathe. "*தென் றமிழ் நாடாளும் வேந்தர்..... நங்கை தன்னை நீர்ப்படுத்தி வெஞ்சினந்தரு வெம்மை நீங்கி*" (சிலம்பு. 26:9–15, உரை.).

நீர்ப்படுபருந்து *nīr-p-paḍu-parundu,* பெ. (n.) மலை; mountain. "*நீர்ப்படு பருந்தினீர்ஞ்சிறகன்ன*" (பதிற். 12:19.).

நீர்ப்படுவன்[1] *nīr-p-paḍuvaṉ,* பெ. (n.) *நீர்ப் பாடு* 1, 2 (வின்.) பார்க்க; see *nīr-p-pāḍu.*

[நீர் + படுவன்.]

நீர்ப்படுவன்[2] *nīrppaḍuvaṉ,* பெ. (n.) காலின்கீழ் எப்பொழுதும் நீர் கசிந்து கொண்டிருக்கும் சிலந்திநோய்; an ulcer below the knee marked by constant watery discharge. (சா.அக.).

நீர்ப்படை *nīr-p-paḍai,* பெ. (n.) (புறம்) நடுகல்லை நீராட்டித் தூய்மை செய்தலைக் கூறும் புறத்துறை; theme of bathing a nadukal before consecration. "*காட்சி கால்கோ ணீர்ப்படை நடுகல்*" (தொல். பொருள். 60.). "தங்கிய நீர்ப்படை தகவோ வுடைத்தெனப் பொதியிற் குன்றத்துக் கற்கால் கொண்டு" (சிலப். 25:121.).

[நீர் + படை.]

நீர்ப்படைக்காதை *nīr-p-paḍai-k-kādai,* பெ. (n.) சிலப்பதிகாரத்தின் இருபத்தேழாம் காதை; 27th chapter of šilappadikaram.

[நீர்ப்படை + காதை.]

நீர்ப்படைசெய்–தல் *nīr-p-paḍai-cey-,* 1 செ.குன்றாவி. (v.t.) திருமுழுக்காட்டுதல்; holi bath to an idol. "*கங்கைப் பேர்மாற்றுக் கரையகம் புகுந்து பாற்படு மரபிற் பத்தினிக் கடவுளை நூற்றிறன் மாக்களி னீர்ப்படை செய்து*" (சிலப். 27:14.).

[நீர்ப்படை + செய்–,]

நீர்ப்பண்டம் *nīr-p-paṇḍam,* பெ. (n.) நீர்மப் பொருள்; liquid. "*மனம் நீர்மப் பொருளா யுருகி*" (திவ். பெரியாழ். 3, 6, 3, வியா. பக். 675.).

[நீர் + பண்டம்.]

நீர்ப்பண்டமா–தல் *nīr-p-paṇḍam-ā-,* 6 செ.கு.வி. (v.i.) உருகுதல்; (திவ். திருவாய். 1, 5, 2, பன்னீ.); to become liquid; to melt, as the heart.

[நீர் + பண்டம் + ஆ.]

நீர்ப்பணைப்பு[1] *nīr-p-paṇaippu,* பெ. (n.) நீர்க் கோப்பு (M.L.); cold in the head.

[நீர் + பணைப்பு.]

நீர்ப்பணைப்பு² *nir-p-paṇaippu,* பெ. (n.) நீர்க்கோவையினால் உடம்பு பருத்துக் காணப் படுகை; corpulency due to accumulation of morbid fluid in the system.

[நீர் + பணைப்பு.]

நீர்ப்பத்தர்¹ *nir-p-pattar,* பெ. (n.) நீர் பீறிட்டு வெளிப்படுங் குழாய் (திவா.), தூம்பு; water-spout.

[நீர் + பத்தர்.]

நீர்ப்பத்தர்² *nir-p-pattar,* பெ. (n.) அம்மணம் (சூ.நிக. 8:58.); nude, naked, bare.

நீர்ப்பத்தாயம் *nir-p-pattāyam,* பெ. (n.) நீர்த் தொட்டி; cistern reservior of water.

[நீர் + பத்தாயம்.]

[பற்று + ஆயம்.] அடுக்கடுக்காக நெல் கொட்டிவைக்க மரத்தால் அமைக்கப் படுவதைப்பற்றாயம் என்பதும், மண்ணால் அமைக்கப்படுவதைக் குதிர் என்பதும் தஞ்சைமாவட்ட வழக்கு.

நீர்ப்பதுமம் *nir-p-padumam,* பெ. (n.) இமையில் வரும் நோய்வகை (சீவரட்.); a disease of the eyelids.

[நீர் + பதுமம்.]

நீர்ப்பந்தர் *nir-p-pandar,* பெ. (n.) *நீர்ப்பந்தல்* பார்க்க; see *nir-p-pandal.*

[நீர் + பந்தர்; பந்தல் → பந்தர்– கடைப் போலி.]

நீர்ப்பந்தல் *nir-p-pandal,* பெ. (n.) வேனிற் காலத்தில் வழிச் செல்வோர்க்குக் குடிநீர் முதலியன தந்துதவும் அறச்சாலை; place where drinking-water, butter-milk etc. are given to passers-by during the hot season.

[நீர் + பந்தல்.]

நீர்ப்பயணம் *nir-p-payaṇam,* பெ. (n.) *நீர்ச் செலவு* பார்க்க; see *nir-c-celavu.*

[நீர் + பயணம்.]

நீர்ப்பயறு *nir-p-payaṟu,* பெ. (n.) மின்னிப் பயறு; a species of jungle green gram. (சா.அக.).

[நீர் + பயறு.]

பை → பையல் → பயிறு.

நீர்ப்பயிர் *nir-p-payir,* பெ. (n.) நன்செய்ப் பயிர் (இ.வ.); wet cultivation.

[நீர் + பயிர்.]

நீர்ப்பரிசகம் *nir-p-parišagam,* பெ. (n.) ஆமை; tortoise. (சா.அக.).

நீர்ப்பரிசை *nir-p-parišai,* பெ. (n.) ஆமை (மூ.அ.); tortoise.

நீர்ப்பருத்தி¹ *nir-p-parutti,* பெ. (n.) மரவகை (L.); sea-coast rose mallow.

[நீர் + பருத்தி.]

நீர்ப்பருத்தி² *nir-p-parutti,* பெ. (n.) கடற் கரைப் பருத்தி; sea coast rose mellow-hisbiscus tiliaceous. (சா.அக.).

[நீர் + பருத்தி.]

நீர்ப்பற்றாக்குறை *nīr-p-paṟṟā-k-kuṟai*, பெ. (n.) அணைக்கட்டுகளில் போதுமான நீர் தேங்காமற் போதல்; shortage of water in the reservoir. நீர்ப்பற்றாக்குறைக் காலங்களில் தமிழ்நாடும் கருநாடகமும் காவிரி நீரை எவ்வாறு பங்கிட்டுக் கொள்ள வேண்டு மென இந்தியத் தலைமையமைச்சர் தலைமையிலான காவிரி நடுவர் குழு வரையறை செய்கிறது. (உ.வ.).

[நீர் + பற்றாக்குறை.]

நீர்ப்பறவை[1] *nīr-p-paṟavai*, பெ. (n.) நீர்நிறக் காக்கை; little cormorant. ***"நீர்க் காக்கை"*** (சிலம்பு. 10:114–9, உரை.).

[நீர் + பறவை.]

நீர்ப்பறவை[2] *nīr-p-paṟavai*, பெ. (n.) நீரில் வாழும் பறவை (பிங்.); water-bird.

[நீர் + பறவை.]

நீர்ப்பன்றி *nīr-p-paṉṟi*, பெ. (n.) பெருமீன் வகை; perpoise.

[நீர் + பன்றி.]

நீர்ப்பனை[1] *nīr-p-paṉai*, பெ. (n.) பூடுவகை (மலை.); creeping aumanac.

[நீர் + பனை.]

நீர்ப்பனை[2] *nīr-p-paṉai*, பெ. (n.) புல்லாமணக்கு (வைத்திய பரி.); caster plant.

[நீர் + பனை.]

நீர்ப்பா *nīr-p-pā*, பெ. (n.) நீரிழிவு நோய்; diabetes.

நீர்ப்பாக்கு *nīr-p-pākku*, பெ. (n.) ஊறற் பாக்கு (வின்.); arecanut cured in water.

[நீர் + பாக்கு.]

நீர்ப்பாசனம் *nīr-p-pāšaṉam*, பெ. (n.) வேளாண்மைக்கு நீரைப் பயன்படுத்துகை; water irrigation. காவிரியில் போதிய நீர்வரத்து இன்மையால் காவிரி நீர்ப்பாசனப் பகுதி இவ்வாண்டு வறண்டது. (உ.வ.).

[நீர் + பாசனம்.]

ஆற்றுநீர், ஏரிநீர், கிணற்றுநீர் ஆகிய மூன்றையும் வேளாண்மைக்குப் பயன் படுத்துவர். பாசனமெனலே சாலும்; எனினும், நீர்ப்பாசனமென்றது விளங்கத்தோன்ற.

நீர்ப்பாசி[1] *nīr-p-pāši*, பெ. (n.) தண்ணீரில் மிதக்கும் பாசிவகை; moss or morass-weed.

[நீர் + பாசி.]

நீர்ப்பாசி[2] *nīr-p-pāši*, பெ. (n.) வைப்பு நஞ்சான முப்பத்திரண்டினொன்று; a kind of prepared poison.

[நீர் + பாசி.]

நீர்ப்பாடி *nīr-p-pāḍi*, பெ. (n.) *நீராரை* பார்க்க; see *nīr-ārai*. (சா.அக.).

[நீர் + பாடி.]

நீர்ப்பாடு[1] *nīr-p-pāḍu*, பெ. (n.) **1.** கடும் வயிற்றுப் போக்கு; violent diarrhoea, sudden and often fatal. ***'நீர்ப்பாடு வந்ததாம்'*** (பணவிடு. 300.). **2.** நீரிழிவு (வின்.); diabetes. **3.** நீர்க்குறைவு; shortage of water. நீர்ப் பாடான பயிர் (வின்.).

[நீர் + பாடு.]

நீர்ப்பாடு² *nīr-p-pāḍu,* பெ. (n.) குழந்தை நோய்வகை (பாலவா. **451.**); a disease of children.

[நீர் + பாடு.]

நீர்ப்பாண்டு *nīr-p-pāṇḍu,* பெ. (n.) பாண்டு நோய்வகை (பைஷஜ.); dropsy.

[நீர் + பாண்டு.]

நீர்ப்பாம்பு *nīr-p-pāmbu,* பெ. (n.) தண்ணீரில் வாழும் பாம்புவகை; common water-snake. *"அஞ்சாப் புறங்கிடக்கு நீர்ப்பாம்பு"* (வாக்குண். **25.**).

[நீர் + பாம்பு.]

நீர்ப்பாய்ச்சல் *nīr-p-pāyccal,* பெ. (n.) **1.** ஆறு கால்வாய் முதலியவற்றின் மூலம் ஏற்படும் பாசனம் (உ.வ.); irrigation from a river, stream etc. **2.** சீழ் வடிகை (வின்.); discharge of serum from a sore, of water from the eyes, of mucus from the nose. **3.** நீர்க்குத்து, (இ.வ.) பார்க்க; see nir-k-kuttu.

[நீர் + பாய்ச்சல்.]

நீர்ப்பாய்ச்சி *nīr-p-pāycci,* பெ. (n.) ***நீர்க்கண்டி*** பார்க்க; see *nīr-k-kaṇḍi.*

[நீர் + பாய்ச்சு → நீர்பாய்ச்சு → நீர்ப்பாய்ச்சி.]

நீர்ப்பாய்ச்சிமானியம் *nīṉ-p-pāycci-māṉiyam,* பெ. (n.) நீராணிக் காரற்குரிய இலவய நிலம் (இ.வ.); service avayinām held by a water distributor.

[நீர்ப்பாய்ச்சி + மானியம்.]

நீர்ப்பாய்ச்சுமானியம் *nīr-p-pāyccu-māṉiyam,* பெ. (n.) வரியின்றி நீர்ப் பாய்ச்சிக் கொள்ளும் நிலம் (வின்.); land irrigable free of water-rate.

[நீர்ப்பாய்ச்சு(ம்) + மானியம்.]

நீர்ப்பானை *nīr-p-pāṉai,* பெ. (n.) நீர்ச்சால்; a pot for holding water;water-pot. (சா.அக.).

[நீர் + பானை.]

நீர்ப்பிச்சான் *nīr-p-piccāṉ,* பெ. (n.) நேர்ப் பிசின்; false zedoary-koemferia rotunda alias k.longa. (சா.அக.).

நீர்ப்பிடி¹ *nīr-p-piḍi,* பெ. (n.) ***நீர்ப்பிடிப்பு*** பார்க்க; see *nīr-p-piḍippu.*

[நீர் + பிடி.]

நீர்ப்பிடி² *nīr-p-piḍi,* பெ. (n.) அகந்தை (இ.வ.); arrogance.

[நீர் + பிடி.]

நீர்ப்பிடி³—த்தல் *nīrp-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) *நீர்க் கொள்ளு—தல்* பார்க்க; see *nīr-k- koḷḷu-,*

[நீர்க்கொள்ளு—, → நீர்ப்பிடி—,]

நீர்ப்பிடிப்பரப்பு *nīr-p-piḍipparappu,* பெ. (n.) அணைக்கு ஆற்று நீர்வரத்துப் பரப்பு; catchment area.

[நீர்ப்பிடி + பரப்பு]

நீர்ப்பிடிப்பு¹ *nīr-p-piḍippu,* பெ. (n.) **1.** ஏரியில் நீர்பற்றுமிடம்; water-spread of a tank. ஆறகழூர் ஏரியின் நீர்ப்பிடிப்புப் பகுதியில்

இந்த ஆண்டு நல்ல மழை பெய்தது (உ.வ.) **2.** நிலத்தில் நீர் வடியாது நிற்கும் நிலை; water-logged condition, as of land. *நீர்ப்பிடிப்பு நிலம். இந்த வயலில் நீர்ப்பிடிப்பு மிகுந்திருந்தமையால் பயிர் அழுகிவிட்டது.* (உ.வ.). **3.** நீரளவு (வின்.); quantity of water. இந்த ஆண்டு ஏரியின் நீர்ப்பிடிப்பு தாழ்வில்லை. (உ.வ.). **4.** காய்கனிகளிலுள்ள சாறு (வின்.); juiciness of fruits or vegetables. *இந்தப் பழம் நீர்ப்பிடிப்பானது.* (உ.வ.).

[நீர் + பிடிப்பு.]

பிடி – கைப்பற்றுதல், நிறுத்திக் கொள்ளுதல், வயப்படுத்தல், பிடி → பிடிப்பு.

நீர்ப்பிடிப்பு[2] *nīr-p-piḍippu*, பெ. (n.) நீர்த்தட்டுப்பாடு (இ.வ.); scarcity of water.

[நீர் + பிடிப்பு.]

பிடி – உறுதி, இறுக்கம், குறைவு, தட்டுப்பாடு.

நீர்ப்பிடிப்புநிலம் *nīr-p-piḍippu-nilam*, பெ. (n.) தண்ணீரில் முழுகிநிற்கும் வயல் (c.g.); land which is liable to frequent submersion. *இந்த நீர்ப் பிடிப்பு நிலத்தில் என்ன வேளாண்மை செய்ய இயலும்.* (உ.வ.).

[நீர்ப்பிடிப்பு + நிலம்.]

நீர்ப்பிடிப்புப்பகுதி *nīr-p-piḍippu-p-pagudi*, பெ. (n.) நீர்ப்பிடி பரப்பு பார்க்க; see nīr-piḍi-p-parappu.

நீர்ப்பிடிபரப்பு *nīr-p-piḍi-parppu*, பெ. (n.) நீர்த்தேக்கங்களில் நிறைவதற்கான மழைநீர் வடிகால் பகுதி; area from which rainfall flows into a river etc.

நீர்ப்பிணக்கு *nīr-p-piṇakku*, பெ. (n.) நீர்ப்பிணிப்பு (இ.வ.) பார்க்க; see nīr-p-piṇippu.

[நீர்[1] + பிணக்கு.]

நீர்ப்பிணிப்பு *nīr-p-piṇippu*, பெ. (n.) நீர்க்கோவையாலுண்டாகும் காய்ச்சல் (இ.வ.); fever due to cold.

[நீர் + பிணிப்பு.]

நீர்ப்பிரமி *nīr-p-pirami*, பெ. (n.) நீர்க் கொடி வகை (M.M. **1045.**); water hyssop, climber herpestis monniera.

நீர்ப்பிரமியம் *nīr-p-piramiyam*, பெ. (n.) *நீர்க்கடுப்பு* (யாழ்.அக.) பார்க்க; see *nīr-k-kaḍuppu.*

[நீர் + பிரமியம்.]

நீர்ப்பிளவை *nīr-p-piḷavai*, பெ. (n.) பிளவை வகை (வின்.); a kind of carbuncle.

[நீர் + பிளவை.]

நீர்ப்பீனசம் *nīr-p-pīnašam*, பெ. (n) சளி நோய்வகை (வின்.); catarrh with offensive discharges of mucus through the nostrils.

[நீர் + பீனசம்.]

நீர்ப்பு *nīrppu*, பெ. (n.) நீர்த்துப்போனது; diluted.

[நீர் →நீர்ப்பு]

நீர்ப்புட்டை *nīr-p-puṭṭai*, பெ. (n.) அண்டவீக்கவகை; hydrocele.

[நீர் + புட்டை
புடைத்தல் = பெருத்தல், வீங்குதல். புடை– புட்டை.*]*

நீர்ப்புடையன்[1] *nīr-p-puḍaiyaṉ,* பெ. (n.) நீரில் வாழும் நச்சுப் பாம்புவகை (யாழ்.அக.); a poisonous water-snake.

[நீர் + புடையன்.]

நீர்ப்புடையன்[2] *nīr-p-puḍaiyaṉ,* பெ. (n.) **1.** ஆற்றுப்புடையன்; river water snake-hydrus granulatus. **2.** புடையன்; water snake.

[நீர் + புடையன்.]

இப்பாம்பு அலை வாய்க்கரையொட்டிய நான்கு கல் தொலைவு வரையுங் காணக்கூடும். (சா.அக.).

நீர்ப்புணைப்பு *nīr-p-puṇaippu,* பெ. (n.) *நீர்ப்பிணிப்பு* (C.L.) பார்க்க; see *nīr-p-piṇippu.*

[நீர் + புணைப்பு(கொ.வ.).]

பிணிப்பு → பிணைப்பு → புணைப்பு (கொ.வ.).

நீர்ப்புள் *nīr-p-puḷ,* பெ. (n.) *நீர்ப்பறவை* (நாமதீப.244.) பார்க்க; see *nīr-p-paṟavai.*

[நீர் + புள்.]

நீர்ப்புள்தோசம் *nīr-p-puḷ-tōšam,* பெ. (n.) நீர்ப்புள்ளூறு பார்க்க; see *nīr-p-puḷ-ūṟu.*

த. ஊறு. skt. தோசம்.

[நீர்ப்புள் + தோசம்.]

நீர்ப்புள்ளூறு *nīr-puḷ-ūṟu,* பெ. (n.) நீர்வாழ்ப் பறவைகளினாலுண்டாகும் ஊறுபாடு; a disease of children, believed to be caused by aquatic birds.

[நீர் + புள் + ஊறு.]

நீர்ப்புற்று *nīr-p-puṟṟu,* பெ. (n.) வெள்விழியிற் சதைவளரும் நோய்வகை (சீவரட்.266.); growth of flesh on the cornea of the eye.

[நீர் + புற்று.]

இந்நோய்கண்டோரின் கண்கள் நீரை மிகுதியாய் ஒழுகுவித்தலின் இது நீர்ப்புற்று எனலாயிற்று.

நீர்ப்புன்கு *nīr-p-puṉgu,* பெ. (n.) புன்கு மரவகை (l.); poonga oil tree.

[நீர் + புன்கு.]

நீர்ப்பூ *nīr-p-pū,* பெ. (n.) பூவகை நான்கனுள் நீரில் உண்டாவது; aquatic flower, one of four. "*நீர்ப்பூ நிலப்பூ மரத்திலொண்பூ*" (திருவிருத்.55.). "முழு நெறியாகிய மேதகு குவளையுடைய அரும்புகள் சுரும்பு இமிர இதழ் அவிழ்ந்த கழுநீர் முதலிய நீர்ப்பூக்களின் வாசத்தைக் கலந்துண்டு" (சிலப். 2 : 14 உரை.).

[நீர் + பூ.]

நால்வகைப்பூக்களாவன:

1. நீர்ப்பூ.
2. நிலப்பூ.
3. கோட்டுப்பூ.
4. கொடிப்பூ. கொடிப்பூவையும் இவர்கொடி, படர்கொடி என இருவகையாய்ச் சொல்லலாம்.

நீர்ப்பூண்டு *nīr-p-pūṇḍu,* பெ. (n.) *நீர்முள்ளி* (சங்.அக.) பார்க்க; see *nīr-muḷḷi;*

[நீர் + பூண்டு.]

நீர்ப்பூதம் *nīr-p-pūdam,* பெ. (n.) ஐவகைப் பூதங்களுள் நீராகிய பூதம்; water.

[நீர் + பூதம்.]

நீர்ப்பூலாஞ்சி *nīr-p-pūlāñji,* பெ. (n.) நீரில் வாழும் பூலாச்செடிவகை; black-berried featherfoil.

[நீர் + பூலாஞ்சி.]

நீர்ப்பெருக்கு[1] *nīr-p-perukku,* பெ. (n.) **1.** வெள்ளம்; flood. **2.** கடல்நீரேற்றம் (வின்.); flow of the tide.

[நீர் + பெருக்கு.]

நீர்ப்பெருக்கு[2] *nīr-p-perukku,* பெ. (n.) நோய்வகை (இராசவைத்.166.); a disease.

[நீர் + பெருக்கு.]

நீர்ப்பை *nīr-p-pai,* பெ. (n.) சிறுநீர்ப்பை; urine bladder.

[நீர் + பை
நீர் = சிறுநீர்
பொல் → பொள் → பொய் → பை.]

நீர்ப்பைத்தாபனம் *nīr-p-pai-t-tāpaṉam,* பெ. (n.) *நீர்ச்சுருக்கு,* 2 (m.l.) பார்க்க; see *nīr-c-curukku.*

[நீர்ப்பை + தாபனம்.]

நீர்ப்போர் *nīr-p-pōr,* பெ. (n.) நீரின் கண்ணே போலிப் போர் புரியும் விளையாட்டு; the sport of mock-fight played in a tank or river *"புணைபுறந் தழுவித் தூநீர்ப் போர்த்தொழி றொடங்கினாரே"* (சீவக.2655.).

[நீர் + போர்.]

நீர்ப்பௌந்திரம் *nīr-p-paundiram,* பெ. (n.) சிறுநீர்த் துளையில் உண்டாகும் புண்கட்டி (M.L.); urethral fistula.

[நீர் + skt. *பௌந்திரம்.]*

நீர்பாய்ச்சு–தல் *nīr-paiccu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வயலுக்கு நீரைப்பாய்ச்சுதல்; to irrigate to the fields. நீர்ப்பற்றாக்குறையினால் கீழ்மடையிலுள்ள நெற்பயிருக்குப் போதுமான நீர் பாய்ச்ச இயலவில்லை. (உ.வ.).

[நீர் + பாய்ச்சு–,]

நீர்பிரி–தல் *nīr-piri-,* 2செ.குன்றாவி. (v.t.) சிறுநீர் கழிதல்; discharge of urine. அப்பாவுக்குக் கடந்த நான்கு நாட்களாக நீர் பிரியவில்லை. (உ.வ.).

[நீர் + பிரி–,]

நீர்பூசா *nīr-pūšā,* பெ. (n.) பூடுவகை (மாட்டுவா.109.); a plant.

[நீர் + பூசா.]

நீர்பெய்–தல் *nīr-pey-,* **1.** செ.குன்றாவி. (v.t.) சிறுநீர்விடுதல்; to pass urine, to urinate. *"நீர்பெய்தவித்துமே"* (துக்கயாகப்.506.).

[நீர் + பெய்.]

நீர்பெய்கலன் *nīr-pey-kalaṉ,* பெ. (n.) நீரைப் பரிமாறும் ஏனம் (வின்.); water-jug.

[நீர் + பெய்கலன்.]



நீர்பெயர்வலகு *nīr-peyar-v-alagu,* பெ. (n.) மிகக் குறைந்த அழுத்தத்தில் ஒரு விரல விட்டமுள்ள குழாய் மூலம் 24 மணிநேரத்தில் வெளியேற்றப்படும் நீரின் அளவு; water-inch.

[நீர் + பெயர்வு + அலகு.]

நீர்போகி *nīr-pōgi,* பெ. (n.) மதகு (பிங்.); sluice.

[நீர் + போகி. போக்கி→போகி. *]*

நீர்மக்குறி *nīrma-k-kuṟi,* பெ. (n.) நீர்மத்தினால் செய்யப்படும் குறி; water mark.

[நீர்மம் + குறி.]

நீர்மஞ்சள் *nīr-mañjaḷ,* பெ. (n.) மஞ்சள்வகை (சீவக.3076,உரை.); a kind of turmeric.

[நீர் + மஞ்சள்.]

நீர்மட்டம்[1] *nīr-maṭṭam,* பெ. (n.) (அணை,ஏரி முதலியவற்றில்) நீர் இருக்கும் அளவின் உயரம்; level of water (in a reservoir, lake,etc.,).

[நீர் + மட்டம்.]

நீர்மட்டம்[2] *nīr-maṭṭam,* பெ. (n.) **1.** கொத்தன் நிலவாட்டம் பார்க்குங் கருவி; bricklayers level. **2.** சாதிமட்டப்பலகை; spirit-level.

தெ. நீருமட்டமு. **க.** நீர்மட்ட.

[நீர் + மட்டம்.]



நீர்மட்டம்[3] *nīr-maṭṭam,* பெ. (n.) கடல் மட்டம்; sea - level.

[நீர் + மட்டம்.]

நீர்மட்டு *nīr-maṭṭu,* பெ. (n.) நீர் நிலையில் நீர் நிற்கும் உச்சி; head of water in water tank.

[நீர் + மட்டு.]

நீர்மநிலை *nīrma-nilai,* பெ. (n.) உலகப் பொருள்நிலை மூன்றனுள் நீர்மநிலை; one of three state of object, liquid state.

[நீர்மம் + நிலை.]

மூன்றுநிலையாவன – நீர்மநிலை, பருமநிலை, வளிமநிலை.

நீர்மம் *nīrmam,* பெ. (n.) நீர்ம நிலை; liquid state.

[நீர் → நீர்மம்.]

நீர்மருத்துவம் *nīr-maruttuvam,* பெ. (n.) நீரின் உதவியால் நோய் நீக்கும் மருத்துவம்; water cure.

[நீர் + மருத்துவம்.]

நீர்மருத்துவமுறை *nīrmaruttuva-muṟai,* பெ. (n.) சிலநோய்களுக்கு நீரின் உதவியால் செய்யப்படும் மருத்துவ முறை; water-treatment method.

[நீர் + மருத்துவம் + முறை.]

நீர்மருது *nīr-marudu,* பெ. (n.) மருதமரவகை; a kind of tree.

[நீர் + மருது.]

நீர்மலர் *nīr-malar,* பெ. (n.) குவளைப்பூ; purple Indian water-lily. "தீஞ்சுனை நீர்மலர் மிலைந்து மதஞ் செருக்கி" (நற்.70:8.).

[நீர் + மலர்.]

நீர்மலிகண் *nīr-mali-kaṇ,* பெ. (n.) துன் பத்தாலே நீர் பெருகும் கண்; tearful eyes, grief-stricken. "சூர்மலை நாடன் கேண்மை நீர்மலி கண்ணொடு நினைப்பாகின்றே" (குறுந்.105.).

[நீர் + மலி + கண்.]

நீர்மலிவான் *nīr-mali-vāṉ,* பெ. (n.) மழைமேகம் சூழ்ந்தவான்; clouded sky. "அக்காலத்து அவர்நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னு மாற்றிற்கும் குமரி யென்னு மாற்றிற்கும் இடையே எழுநூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர்மலிவானென மலிந்த" (சிலப்.8:1–2, உரை.).

[நீர்+மலி + வான்.]

நீர்மலை *nīrmalai,* பெ. (n.) காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிற்றூர்; a village in Kanjipuram dt. "சேடார் பொழில் சூழ்திருநீர் மலையான்" (நாலா. 1521.).

[நீர் + மலை.]

நீர் சூழ்ந்த மலை என்ற காரணத்தினால் நீர் மலை என்பர். திரு என்னும் அடைமொழியுடன் திருநீர்மலை என வழங்கப்படுகிறது.

நீர்மவரம்பு *nīrma-varambu,* பெ. (n.) நீர்மப் பொருளின் வரம்பு; limit liquid.

[நீர்மம் + வரம்பு.]

நீர்மறி–த்தல் *nīr-maṟi-,* 4 செ.குன்றாவி. (v.t.) நீரைத் தடுத்தல்; to stop the water of a channel.

[நீர் + மறி–,]

நீர்மறிப்பு *nīr-maṟippu,* பெ. (n.) **1.** நீரைத் தடுத்துத் திருப்புகை; diverting the water of a channel by a bund. **2.** *நீரடைப்பு* பார்க்க, see *nīr-aḍaippu.*

[நீர் +மறிப்பு.]

நீர்மனிதன்¹ *nīr-maṉidaṉ,* பெ. (n.) மாந்தன் முகம்போல் முகமுடைய ஒருவகைக் கடலுயிரி; dugong, a cetaceous mammal.

[நீர் + மனிதன்.]

Skt. *மனிதன். த.மாந்தன்.*

நீர்மனிதன்² *nīr-maṉidaṉ,* பெ. (n.) *நீர்மாந்தன்* பார்க்க; see *nīr-māndaṉ.*

[நீர் + மனிதன்.]

நீர்மமாக்கல் *nirmam-ākkal,* பெ. (n.) திண்மத்தை நீர்மநிலைக்கு மாற்றுகை; liquefaction.

[நீர்மம் + ஆக்கல்.]

நீர்மாங்காய் *nir-māṅgāy,* பெ. (n.) நீரில் ஊறவைத்த வடுமாங்காய் (இ.வ.); mangoes pickled in water.

[நீர் + மாங்காய்.]

நீர்மாடம் *nir-māḍam,* பெ. (n.) பள்ளியோடம்; a kind of boat. "*ஓங்குநீர் மாடமொடு நாவா யியக்கி*" (சிலப்.14:74.).

[நீர் + மாடம்.]



நீர்மாதளம் *nir-mādaḷam,* பெ. (n.) வில்வம்; lingam tree-cretaeva religiosa. (சா.அக.).

நீர்மாந்தம் *nir-māndam,* பெ. (n.) செரியாமை யாலுண்டாகும் குழந்தை நோய்வகை (சீவரட்.); a disease of children caused by indigestion.

[நீர் + மாந்தம்.]

நீர்மாந்தன் *nir-māndaṉ,* பெ. (n.) உலகிய லறிவில்லாதவன் (இ.வ.); person who knows nothing of the affairs of the world as if he lived in the sea.

[நீர் + மாந்தன்.]

அகவைக்குத் தகுந்த அறிவில்லாதவனைக் கிணற்றுத்தவளை என்பர். தான் வாழும் நீர்நிலையே உலகென்று இறுமாந்திருக்கும் இயல்பைச் சுட்டி அதுபோல தனக்குத் தெரிந்ததே உலகமென்பாரையும் அவ்வாறே கூறுவர்.

நீர்மாலை *nir-mālai,* பெ. (n.) உயிர்நீங்கிய உடலைக் (பிணத்தை) குளிப்பித்தற்கு நீர்கொண்டுவருஞ் சடங்கு அல்லது செய்கை (இ.வ.); ceremony of bringing water for bathing a corpse before cremation or burial.

[நீர் + மாலை.]

நீர்மாலைக்கடன் *nir-mālai-k-kaḍaṉ,* பெ. (n.) *நீர்மாலை* பார்க்க; see *nir-mālai.*

[நீர்மாலை + கடன்.]

நீர்மாறு-தல் *nir-māṟu-,* 4 செ.கு.வி. (v.i.) ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நீரை மாற்றிப் பாய்ச்சுதல்; to lead water, as from one field to another; from one channel to another.

[நீர் + மாறு-,]

நீர்மின்சாரம் *nir-minšāram,* பெ. (n.) நீரின் விசையாலுண்டாக்கப்படும் மின்னாற்றல்; hydro-electricity.

[நீர் + மின்சாரம்.]

நீர்மின்நிலையம் *nir-miṉ-nilaiyam,* பெ. (n.) நீரோட்டவிசையைப் பயன்படுத்தி மின்சாரம் எடுக்கப்படும் இடம்; hydro electric power plant.

[நீர் + மின் + நிலையம்.]

நீர்மின்வாரியம் *nīr-miṉ-vāriyam,* பெ. (n.) மின்னாற்றலைப் பேணும் வாரியம்; electricity-board.

[நீர் + மின் + வாரியம்.]

நீர்மீட்டான் *nīr-miṭṭāṉ,* பெ. (n.) தண்ணீர் விட்டான் என்னும் கொடி; climbing asparagus.

[நீர் + மீட்டான்.]

நீர்முகம் *nīr-mugam,* பெ. (n.) **1.** நீர்த்துறை (வின்.); bathing ghat. **2.** ஆற்றுவாய்த் (சங்கம) துறை (யாழ்.அக.); mouth of a river. **3.** இறங்குதுறை; landing place. "நீர்முகந்திகழ் நீரிலும்" (சேதுபு.கோடி.5.).

[நீர் + முகம்.]

நீர்முட்டான் *nīr-muṭṭāṉ,* பெ. (n.) *நீர்விட்டான்* பார்க்க; see *nīr-viṭṭāṉ.*

[நீர் + முட்டான். விட்டான் → முட்டான்.]

ஒ. நோ : விழி → முழி

நீர்முட்டு[1]–தல் *nīr-muṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** நீர்நிரம்புதல்; to be full to the brim, as eyes with tears. **2.** சிறுநீர் பெய்தல் (வின்.); to make water, to urinate.

[நீர் + முட்டு–,]

நீர்முட்டு[2] *nīr-muṭṭu,* பெ. (n.) பூச்சிக் கடியினாலேனும், கண்ணோவினாலேனும் கண்ணினின்று நீர்வடிகை (M.L.); incessant watering in the eyes, as in cases of bites, or corneal inflammation.

[நீர் + முட்டு.]

நீர்முட்டு[3] *nīr-muṭṭu,* பெ. (n.) நீர்ப்பற்றாக்குறை; water scarcity.

[நீர் + முட்டு. முட்டுப்பாடு → முட்டு.]

நீர்முட்டுப்பாடு *nīr-muṭṭu-p-pāḍu,* பெ. (n.) *நீர்முட்டு* பார்க்க; see *nīr-muṭṭu.*

[நீர் + முட்டு + பாடு.]

நீர்முழுகி *nīr-muḻugi,* பெ. (n.) **1.** நீரில் முழுகுவோன்; diver. **2.** மதகுக் கண்களில் அடைபட்ட செத்தை முதலியவற்றை முழுகி எடுப்போன் (W.G.); one who dives down when a tank is full and removes silt and other obstructions in the sluice.

[நீர் + முழுகு = நீர் முழுகு → நீர்முழுகி.]

நீர்முழுகியினாம் *nīr-muḻugi-y-iṉām,* பெ. (n.) நீர்முழுகிக்குக் கொடுக்கப்படும் இறையிலி நிலம் (W.G.); tax-free land enjoyed by a nīr-muḻugi.

[நீர்முழுகி + (உருது) இனாம்.]

நீர்முள்தையல் *nīrmuḷ-taiyal,* பெ. (n.) குறுக்குத் தையல்வகை (இ.வ.); herringbone stich, a cross-stich in needle work, chietly used on flannel.

[நீர்முள் + தையல்.]

நீர்முள்ளி[1] *nīr-muḷḷi,* பெ. (n.) *நீர்க்கும்பி* பார்க்க; see *nīr-k-kumbi.*

[நீர் + முள்ளி.]

நீர்முள்ளி² *nīr-muḷḷi,* பெ. (n.) பூடுவகை; water thorn.

[நீர் + முள்ளி.]

நீர்முள்ளிக்காடி *nīr-muḷḷi-k-kāḍi,* பெ. (n.) நீர்முள்ளி இலையை ஊறவைத்துப் பிழிந் தெடுத்த சாறு; expressed juice of the leaves of water thistle plant soaked in vinegar; distilled vinegar combined with juice of the leaves of water thistle plant. (சா.அக.).

[நீர்முள்ளி + காடி

கடு → கடி → காடி

கடு = உறைப்பு அல்லது புளிப்பு மிகுதி.*]*

நீர்மூடிதழ் *nīrmūḍidaḻ,* பெ. (n.) நீர் அடிப்பு, water closet.

[நீர் + மூடிதழ்.]

நீர்மூழ்கி¹ *nīr-mūḻgi,* பெ. (n.) நீரில் நடந்துலாவும் பறவை; the dipper that can walk about under water-water ozsel.

[நீர் + மூழ்கி.]

நீர்மூழ்கி² *nīr-mūḻgi,* பெ. (n.) நீர்மூழ்கிக் கப்பல் பார்க்க; see nīr-mūḻgi-k-kappal.

[நீர்மூழ்கிக்கப்பல் → நீர்மூழ்கி.]

நீர்மூழ்கிக்கப்பல் *nīr-mūḻgi-k-kappal,* பெ. (n.) நீரினுள் அமிழ்ந்து செல்லக்கூடிய கப்பல்; submarine.

[நீர்மூழ்கி + கப்பல்.]



நீர்மூழ்கிவுந்தம் *nīr-muḻgi-vundam,* பெ. (n.) நீரினுள் அமிழ்ந்திருந்து நீரோற்றும் உந்தம்; submercible motor.

[நீர்மூழ்கி + உந்தம்.]



நீர்மூளி *nīr-mūḷi,* பெ. (n.) பெருமரவகை (I.); downy many-leaved tree of beauty.

[நீர் + மூளி.]

நீர்மேகம் *nīr-mēgam,* பெ. (n.) நீர்த்துளையினின்று சீழ்போன்று நீர்வடியும் நோய்வகை (M.L.); gleet.

[நீர் + மேகம்.]

நீர்மேல்எழுத்து *nīr-mēl-eḻuttu,* பெ. (n.) *நீர்மேலெழுத்து* பார்க்க; see *nīrmēl-eḻuttu.*

[நீர்மேல் + எழுத்து → நீர்மேலெழுத்து.]

நீர்மேல்செவ்வந்தி *nīr-mēl-šev-andi,* பெ. (n.) செந்தாமரை; red lotus.

[நீர்மேல் + செவ்வந்தி.]

நீர்மேல்நெருப்பு *nīr-mēl-neruppu,* பெ. (n.) கல்லுருவி என்னும் மூலிகைச் செடி; a medical herb called kal-l-uruvi.

[நீர்நெருப்பு → நீர்மேல்நெருப்பு.]

நீர்மேல்வாழ்க்கை *nīrmēl-vāḻkkai,* பெ. (n.) பரதவர் வாழ்க்கை; life of sea-man.

[நீர்மேல் + வாழ்க்கை.]

நீர்மேல்வெள்ளி *nīr-mēl-veḷḷi,* பெ. (n.) ஒருவகைப் புழு; a kind of water-worm. (சா.அக.).

[நீர் + மேல் + வெள்ளி.]

நீர்மேலாண்மை *nīr-mēlāṇmai,* பெ. (n.) நீரைப் பகிர்ந்தளிக்கும் ஆளுமை; water-management.

[நீர் + மேலாண்மை]

நீர்மேலூரல் *nīr-mēlūral,* பெ. (n.) குளுவை எனும் உயிரி (சிலப்.10:114, உரை.); a kind of insect.

[நீர்மேல் + ஊரல்]

ஊர்ந்து செல்வது ஊரல்

ஒ.நோ. நீரினுள் வாழ்வது நீரி.

நீர்மேலெழுத்து *nīr-mēl-eḻuttu,* பெ. (n.) நிலையற்றதைக் குறிப்பதற்குப் பயன்படும் மரபுத் தொடர்; நீர்மேலெழுதும் எழுத்து; letters written on water, as unstable. *"நீர்மேலெழுத்துக்கு நேர்"* (மூதுரை,2.).

[நீர்மேல்+ எழுத்து → நீர்மேலெழுத்து.]

நீர்மேலேற்று-தல் *nīrmēl-ēṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கடல் கடந்து நாடு கடத்துதல்; to sentence one to transportation, as sending across the water.

[நீர் + மேல் + ஏற்று-,]

நீர்மேற்செறிப்பு *nīr-mēṟ-ceṟippu,* பெ. (n.) கொட்டைப்பாசி (மலை.); a kind of moss.

[நீர்மேல் + செறிப்பு.]

நீர்மேற்பிரிவு *nīr-mēṟ-pirivu,* பெ. (n.) கடல்கடந்து செல்லுகை; departing by sea.

[நீர்மேல் + பிரிவு.]

நீர்மேனெருப்பு *nīrmēṉeruppu,* பெ. (n.) கொட்டைப்பாசி (மலையக.); a kind of moss.

[நீர்மேல் + நெருப்பு.]

நீர்மை[1] *nīrmai,* பெ. (n.) **1.** நீரின்றன்மை (குறள்,195,உரை.); property of water, as coolness. **2.** தன்மை; property, nature, inherent quality. *"நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்"* (குறள்,17.). **3.** சிறந்த குணம்; goodness, essential excellence. *"பயனில னீர்மையுடையார் சொலின்"* (குறள்,196.). **4.** எளிமை; affability. *"ஆவாவென்ற நீர்மையெல்லாம் புகழ்ப்பெறுவ தென்று கெல்லோ"* (திருவாச.27.5.). **5.** அழகு; beauty. *"மெய்ந்நீர்மை தோற்றாயே"* (திவ். திருவாய். 2,1,6.); **6.** ஒளி; brilliance, lustre. *"நெடுநீர் வார்குழை"* (நெடுநல்.139.). **7.** நிலைமை; state, condition. *"என்னீர்மை கண்டிரங்கி"* (திவ். திருவாய்.1,4,4.). **8.** ஒப்புரவு (வின்.); observance of proper rules or established custom.

[நீர் → நீர்மை.]

நீர்மை[2] *nīrmai,* பெ. (n.) பண்பு; quality. *"நீருரை செய் நீர்மையில் சூளென்றி நேரிழாய்"* (பரிபா.8:73.). *"இசைப்புலவன் ஆலத்தி வைத்த பண்ணீர்மையை முதலும், முறைமையும், முடிவும், நிறைவும், குறையும், கிழமையும், வளைவும், மெலிவும், சமனும், வரையறையும் நீர்மையுமென்னும் பதினொரு பாகு பாட்டினானும்"* (சிலப்.3:41, உரை.).

[நீர் → நீர்மை.]

நீர்மோர் *nīr-mōr,* பெ. (n.) மோருடன் நீர் பெருக விட்டு வேறுசிலவற்றைச் சேர்த்துண்டான பருகம்; butter milk diluted and mixed with certain ingredients, used as a drink. *"நீர்மோ ரிள நீர்"* (விநாயகபு.39.40.).

[நீர் + மோர்.]

நீர்யானை *nīr-yāṉai,* பெ. (n.) (ஆப்பிரிக்கக் காடுகளில் காணப்படும்) யானையைப் போன்ற பருத்த உடலையும் பெரிய தலையையும் முடியில்லா தடித்தத் தோலையுமுடைய நீர் வாழ் விலங்கு; hippopotamus.

க. நீரனை.

[நீர் → யானை.]



நீர்ரோகம் *nīr-rōgam,* பெ. (n.) நீரிழிவு (உ.வ.); diabetes.

[நீர் + (skt) ரோகம்.]

நீர்வஞ்சி[1] *nīr-vañji,* பெ. (n.) 1. ஆற்றுப்பாலை; four seeded willow. 2. ஆற்றில் வளரும் கொடிவகை; calamus rotang.

[நீர் + வஞ்சி.]

நீர்வஞ்சி[2] *nīr-vañji,* பெ. (n.) தண்ணீரில் முளைக்கும் பிரம்பு; water rattan-calamus rotang. (சா.அக.).

[நீர் + வஞ்சி.]

நீர்வடி[1]—த்தல் *nīr-vaḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஊறிய அரிசி போன்றவற்றிலிருந்து நீரை வடித்தல்; to drain the water from soaked rice etc. 2. வயலில் பாய்ந்த மிகுதியான நீரை வெளியேற்றுதல்; to drain the excess water from the field.

[நீர் + வடி.]

நீர்வடி[2]—தல் *nīr-vaḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கண்ணீர் முதலியன வடிதல்; to drain the water from eyes. 2. புண் முதலியவற்றிலிருந்து சீழ் வெளியேறுதல்; to drain the water from wound. 3. கஞ்சி போன்ற நீர்மம் வடிதல்; to drain the soaked rice water.

[நீர் + வடி.]

நீர்வண்டி[1] *nīr-vaṇḍi,* பெ. (n.) நீர் வழங்கும் வண்டி; water waggon.

[நீர் + வண்டி.]



நீர்வண்டி[2] *nīr-vaṇḍi,* பெ. (n.) தெருவில் நீர் தெளிக்கும் வண்டி; watering cart.

[நீர் + வண்டி.]



நீர்வண்டு *nīr-vaṇḍu,* பெ. (n.) நீரில் வாழும் வண்டு வகை (வின்.); a water-fly; water beetle. Any of a large number of beetles living on or in water, having fringed legs by means of which they swim easily.

[நீர் + வண்டு.]

நீர்வண்டுக்கடி *nīr-vaṇḍu-k-kaḍi,* பெ. (n.) நீர்வண்டு கடிப்பதனால் கடிவாயில் ஏற்படும் தழும்பு; a kind of ring-worm due to the bite of water beetle. (சா.அக.).

[நீர் + வண்டு + கடி.]

நீர்வண்ணஓவியக்கலை *nīr-vaṇṇa-ōviya-k-kalai,* பெ. (n.) நிறங்களை நீரில் கரைத்துத் தூரிகையால் தீட்டும் சித்திரக் கலை; water colour painting.

[நீர்வண்ணஓவியம் + கலை.]

நீர்வண்ணஓவியம் *nīr-vaṇṇa-ōviyam,* பெ. (n.) *நீர்வண்ண ஓவியக்கலை* பார்க்க; see *nīr-vaṇṇa-ōviya-k-kalai.*

[நீர்வண்ணம் + ஓவியம்.]

நீர்வண்ணம் *nīr-vaṇṇam,* பெ. (n.) நீரில் கலந்தெழுதப்படும் வண்ண நீர்க் கரைசல்; water colour.

[நீர் + வண்ணம்.]

நீர்வரத்து *nīr-varattu,* பெ. (n.) **1.** வெள்ளப் பெருக்கு (யாழ்.அக.); flood. **2.** நீரின் வருகை; water flow in river etc., நீர்ப்பிடிப்புப் பகுதியில் மூன்று நாளாக நல்ல மழை பெய்ததன் விளைவாய்க், காவிரியில் நீர்வரத்து மிகுந்து காணப்பட்டது. (உ.வ.)

[நீர் + வரத்து.]

நீர்வரி *nīr-vari,* பெ. (n.) நீரின் பொருட்டு விதிக்கும் வரிவகை; water-rate, water-tax.

[நீர் + வரி.]

நீர்வரிக்குறி *nīr-vari-k-kuṟi,* பெ. (n.) *நீர்மக் குறி* பார்க்க; see *nīrma-k-kuṟi.*

நீர்வரும்பரப்பு *nīr-varum-parappu,* பெ. (n.) நீர்த்தேக்கங்களுக்கான மழை நீரைப் பெரும் பரப்பு; catchment area.

[நீர் + வரும் + பரப்பு.]

நீர்யானை

நீர்வீழ்ச்சி

நீர்வரைப்பு[1] *nīr-varaippu,* பெ. (n.) *நீர்வலயம்* (பிங்.) பார்க்க; see nīr-valayam.

நீர்வரைப்பு[2] *nīr-varai-p-pu,* பெ. (n.) அலை வாய்க்கரை, கடற்கரை; sea-shore. "கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள் கலந்திருந் துறையு மிலங்குநீர் வரைப்பும் வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும் பூவும் புகையுமேவிய விரையும்" (சிலப். 5:11.). *"தத்துநீர் வரைப்பிடற் கொற்கைக் கோமான்"* (சிறுபாண். 62.).

[நீர் + வரைப்பு]

நீர்வல்லி *nīr-valli,* பெ. (n.) 1. வெற்றிலை; bettel pepper. 2. தண்ணீர்விட்டான் என்னும் கொடி (மலை.); climbing asparagus.

[நீர் + வல்லி.]

நீர்வல்லிக்காலா *nīr-valli-k-kālā,* பெ. (n.) புல்லூரி; a kind of parasitic plant. (சா.அக.).

[நீர் + வல்லி + காலா.]

நீர்வலயம் *nīr-valayam,* பெ. (n.) கடலாற் சூழப்பட்ட நிலம்; the earth, as surrounded by the sea. *"மருவுநீர்வலய முதலிய உலக மனைத்தையும்"* (கூர்மபு. அந்தகா. 20.).

[நீர் + வலயம்.]

நீர்வலி *nīr-vali,* பெ. (n.) பேறு காலத்தில் சிறுநீர் பெய்ய முடியாமல் ஏற்படும் வலி; pain due to the difficulty of urination during childbirth.

[நீர் + வலி.]

நீர்வழங்கீட்டுநிறுவனம் *nīr-vaḻaṅgīṭṭu-niṟuvaṉam,* பெ. (n.) நீர்வழங்கீட்டுப் பணியாளர் குழாம்; water board.

[நீர் + வழங்கீட்டு + நிறுவ்னம்.]

குடிநீர் தட்டுப்பாட்டு நேரங்களில் பொது மக்களுக்காக அரசே முறையாகக் குடிநீர் அளிக்கும் நிறுவனம்.

நீர்வழங்கீடு *nīr-vaḻaṅgīḍu,* பெ. (n.) முறையாக நீர் வழங்குகை; water-supply.

[நீர் + வழங்கீடு.]

நீர்வழங்கும்வாய்த்தலை *nīr-vaḻaṅgum-vāy-t-talai,* பெ. (n.) நீர் மிகுந்த இடம்; abundance of water in a region. *"எவ்வியது நீர்வழங்கும் வாய்த்தலைகளையுடைய மிழலைக் கூற்றத் துடனே வயலகத்துக் கயலை மேயும் நாரை"* (புறநா. 242. உரை.)

[நீர் + வழங்கும் + வாய் + தலை .]

நீர்வழி *nīr-vaḻi,* பெ. (n.) கடலில் கப்பல் செல்லும் பாதை; water way;

[நீர் + வழி.]

நீர்வழிப்படும்புணை *nīrvaḻi-p-paḍum-puṇai,* பெ. (n.) நீரின் வழிச்செல்லும் ஓடம்; a boat passes on the water. "நீர்வழிப்படூஉம் புணைபோ லாருயிர்"(புறநா.192.). "நீர்வழிப்பட்ட புணை"– (நீதிநெறி. 44.).

[நீர் + வழிப்படும் + புணை.]

நீர்வழிப்போக்குவரத்து *nīr-vaḻi-p-pōkku-varattu,* பெ. (n.) நீரின் வழியாக போதல்; transport by the water.

[நீர் + வழி + போக்கு + வரத்து.]

கடல், ஆறு போன்ற நீர் சூழ்ந்த பகுதியினைக் கடப்பதற்குப் பயன்படுத்தும் போக்குவரத்து.

நீர்வழிப்போக்குவரவு *nīrvaḻi-p-pōkku-varavu,* பெ. (n.) நீர்வழியில் போகுகை; water-carriage.

[நீர்வழி + போக்கு + வரவு.]

நீர்வழுக்கை *nīr-vaḻukkai,* பெ. (n.) நீர்ப் பூடுவகை (யாழ்.அக.); an aqutic plant.

[நீர் + வழுக்கை.]

நீர்வள்ளி *nīr-vaḷḷi,* பெ. (n.) ***நீர்வல்லி*** (தைலவ. தைல. 94.) பார்க்க; see *nīr-valli.*

[நீர் + வள்ளி.]

நீர்வள்ளிக்கிழங்கு *nīr-vaḷḷi-k-kiḻaṅgu,* பெ. (n.) ***தண்ணீர் விட்டான் கிழங்கு*** பார்க்க; see *taṉṉīr-viṭṭāṉ -kiḻaṅgu.* (சா.அக.).

[நீர் + வள்ளிக்கிழங்கு.]

நீர்வளம்[1] *nīr-vaḷam,* பெ. (n.) நீர்நிறைவு (யாழ்.அக.); abundance of water in a region.

[நீர் + வளம்.]

நீர்வளம்[2] *nīrvaḷam,* பெ. (n.) நேர்வாளம் என்னும் நிலைத்திணை; true croton oil plant. (சா.அக.).

நீர்வற்றம் *nīr-vaṟṟam,* பெ. (n.) நீரிறக்கம் (யாழ்.அக.); ebb of the tide.

[நீர் + வற்றம்.]

நீர்வற்றல் *nīr-vaṟṟal,* பெ. (n.) வற்றல் (வின்.); anything dried.

[நீர் + வற்றல்.]

நீர்வற்றற்றேங்காய் *nīr-vaṟṟaṟṟēṅgāy,* பெ. (n.) கொப்பரைத் தேங்காய் (யாழ்.அக.); copra.

க. நீருபட்டிடதெங்கிநகாய்.

[நீர்வற்றல் + தேங்காய்.]

நீர்வாகை *nīr-vāgai,* பெ. (n.) ***நீர்வாழை*** (M.M. 922.). பார்க்க; see *nīr-vāḻai.*

[நீர் + வாகை.]

நீர்வாங்கு *nīr-vāṅgu,* பெ. (n.) மடல்வாத்து (இ.வ.); a kind of water-fowl.

[நீர் + வாங்கு.]



நீர்வாங்குதளம் *nīr-vāṅgu-talam,* பெ. (n.) நீர்த்தேக்கங்களுக்கு நீர்சேரும்பரப்பு; catchment basin.

[நீர் + வாங்குதளம்.]

நீர்வாசி *nīr-vāśi,* பெ. (n.) **1. *நீர்ப்பாசி*** பார்க்க; see *nīr-p-pāśi.* **2.** நீரால் நோய் நீக்குதல்; water cure. (சா.அக.).

[நீர் + வாசி.]

நீர்வாசியாக்கு—தல் *nīr-vāśi-y-ākku-*, 5 செ.குன்றாவி. (v.t.) **1.** நிலத்து உப்புகள் கலந்துள்ள நீரைக்கொடுத்து நோயைக் குணப்படுத்துதல்; a mode of treating diseases by frequent use of mineral waters both internally and externally-water cure. **2.** நீரை மந்திரித்துக் கொடுத்து நோயைக் குணப்படுத்துதல்; (in mantric science) treating disease by water through magic spell. (சா.அக.)

[நீர் + வாசி + ஆக்கு–,]

நீர்வாட்டம் *nīr-vāṭṭam*, பெ. (n.) (கட்டட.) கட்டடம் முதலியவற்றில் நீர் தானே யோடு தற்கமைந்த சரிவு; water-fall, amount of slope required for unobstructed flow of water, gradient. இந்தத் தரையில் நீர்வாட்டம் சரியாய் அமையாததால் நீர் தேங்குகிறது. (உ.வ.)

[நீர் + வாட்டம்]

நீர்வாத்து *nīr-vāttu*, பெ. (n.) வாத்துவகை (வின்.); fenduck.

க. நீருபாடு.

[நீர் + வாத்து.]

நீர்வாதம் *nīr-vādam*, பெ. (n.) **1.** *நீர்ப்புட்டை* பார்க்க; see *nīr-p-puṭṭai*. **2.** வளி (வாத) நோய்வகை; synovitis.

[நீர் + வாதம்.]

நீர்வாய்ப்பத்தல் *nīrvāy-p-pattal*, பெ.(n.) நீருள்ள கிணறு; well water. "*சிறுசில வூறிய நீர்வாய்ப்பத்தற் கயிறு குறு முகவை மூயின மொய்க்கும்*" (பதிற். 22:13.).

[நீர்வாய் + பத்தல்.]

நீர்வார்[1]—த்தல் *nīr-vār-*, 4 செ.கு.வி. (v.i.) தாரைவார்த்துக் கொடுத்தல்; to make a gift by pouring water on the right hand of the donee. "*திரு நெடுமாலோன் .... பெறுநீர் வார்ப்ப மும்முலை யொருத்தியை மணந்து*" (கல்லா. 30. 13.).

[நீர் + வார்–;]

நீர்வார்[2]—த்தல் *nīr-vār-*, 4 செ.குன்றாவி. (v.t.) **1.** வழிச் செல்வோர் முதலாயினோர்க்கு விடாய்த் தீர்க்க நீர்விடுதல்; to give water for drinking as to travellers. **2.** நோய் நீங்கினோர் முதலாயினோரை நீராட்டி விடுதல்; to give bath, as to a convalescent.

நீர்வார்[3]—தல் *nīr-vār-*, 4 செ.குன்றாவி. (v.t.) தொடர்பற நீக்கிவிடுதல்; to wash ones hands of, give up, as a person.

[நீர் + வார்–,]

நீர்வார்கண் *nīrvārkaṇ*, பெ. (n.) நீர் சொரியும் கண்; crying eye. "*நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய் யாரை யோநீ மடக்கொடி யோ யெண்*" (சிலப். 20:48.).

[நீர்வார் + கண்]

நீர்வார்கூந்தல் *nīr-vār-kūndal*, பெ. (n.) ஈரத்தலைமுடி; wet hair. "*அடும்பி னாய்மல் விரைஇ நெய்தல் நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்*" (குறுந்.).

[நீர்வார் + கூந்தல்]

நீர்வாரம்[1] *nīr-vāram*, பெ. (n.) *நீர்வஞ்சி* (யாழ்.அக.) பார்க்க; see *nīr-vañji*.

[நீர் + வாரம்.]

நீர்வாரம்² *nīr-vāram,* பெ. (n.) **1.** குளநெல்; a kind of paddy. **2.** தினை; Italian millet. (சா.அக.).

நீர்வாரி *nīr-vāri,* பெ. (n.) யானைக் காலிற் கட்டுந்தொடரி (சங்கிலி) (மதுரைக். **382,** உரை.); foot chain of an elephant.

[நீர் + வாரி.]

நீர்வாழ்சாதி *nīr-vāḻ-šādi,* பெ. (n.) *நீர்வாழுஞ்சாதி* பார்க்க; see *nīr-vāḻuñšādi.* *"நீர்வாழ் சாதியு ணந்து நாகே"* (தொல். பொருள். **618.**).

[நீர் + வாழ் + சாதி.]

நீர்வாழ்வன *nīr-vāḻvaṉa,* பெ. (n.) நீர்வாழுயிரி (பிங்.); aquatic creatures.

[நீர் + வாழ்வன.]

நீர்வாழுஞ்சாதி *nīr-vāḻuñ-šādi,* பெ. (n.) **1.** நீரி; aquatic creatures; nīri. **2.** நெய்தனில மாக்கள்; people of the maritime tract.

[நீர் + வாழுஞ்சாதி.]

நீர்வாழை *nīr-vāḻai,* பெ. (n.) தண்ணீருதவும் வாழை; travellers palm or madagascar palm.

[நீர் + வாழை.]

வாழையைப் போல் நீருள்ளதால் இதற்கு பெயராகலாம். (சா.அக.).

நீர்வாழைக்காய் *nīr-vāḻai-k-kāy,* பெ. (n.) மீன் (உ.வ.); fish.

[நீர் + வாழைக்காய்.]

நீர்வாழையங்கம் *nīr-vāḻai-y-aṅgam,* பெ. (n.) மீனெலும்பு; fish bone. (சா.அக.).

மறுவ. மீன்முள்ளு.

[நீர்வாழை + அங்கம்.]

நீர்வாளம் *nīr-vāḷam,* பெ. (n.) *நேர்வாளம்* பார்க்க; see *nēr - vāḷam.* (சா.அக.).

[நீர் + வாளம்.]

நீர்வாளி *nīr-vāḷi,* பெ. (n.) **1.** காட்டுப் பூவரசு மரம்; false fern tree. **2.** தண்ணீர்விட்டான் என்னும் கொடி (நாமதீப. **340.**); climbing asparagus.

[நீர் + வாளி.]

நீர்விசை *nīr-višai,* பெ. (n.) பொறிகளை இயக்குதற்குப் பயன்படுத்தப்படும் நீராற்றல்; water-power.

[நீர் + விசை.]

நீர்விசைஉருளை *nīr-višai-uruḷai,* பெ. (n.) *நீர் விசையுருளை* பார்க்க; see *nīr-višai-uruḷai.*

[நீர்விசை + உருளை.]

நீர்விசையாலை *nīr-višai-y-ālai,* பெ. (n.) நீரின் விசையாலியங்கும் ஆலை; a mill driven by water; water-mill.

[நீர்விசை + ஆலை.]

நீர்விசையியல் *nīrvišai-y-iyal,* பெ. (n.) நீர்விசையைப் பற்றிய பகுதி; hydraulics.

[நீர் + விசை + இயல்.]

நீர்வாழ் விலங்குகள்

மிதவையுயிர்கள்
கடல்புழு
பவளம்
பைசேலியா
கடல்வெள்ளரி
பேக்கடம்பான்
கணவாய்
கல்சொறி
பார்னக்கிள்
கடல் சாமந்தி
நண்டு
ஒடி நட்சத்திரம்
கடல்பஞ்சு
கடல் முள்ளெலி
திமிங்கலம்
விசிறிக் கிளிஞ்சில்
கடல் நத்தை
கடல்பஞ்சு பார்னக்கிள்
மீன்

நீர்விசையுருளை *nīr-višai-yurulai,* பெ. (n.) **1.** நீரின் விசையாற் சுழலும் சக்கரம்; the wheel moved by water. **2.** உந்தத்தில் நீரை மேலே ஏற்றுஞ்சக்கர உருளை; a roller for raising water in water motor pump.



நீர்விட்டான் *nīr-viṭṭāṉ,* பெ. (n.) தண்ணீர் விட்டான் என்னும் கொடி (நாமதீப. **340.**); climbing asparagus.

[நீர் + விட்டான்.]

நீர்விட்டுப்போ–தல் *nīr-viṭṭu-p-pō-,* **8** செ.கு.வி. (v.i.) **1.** நீர்த்துப்போ–, (வின்.) பார்க்க; see nīrttu-p-pō-, **2.** பதனழிந்து சுவை கெடுதல் (யாழ்.அக.); to become tasteless or spoiled, as boiled rice. **3.** மிகுதியாக வியர்த்தல் (இ.வ.); to perspire profusely, as in fever.

[நீர் + விட்டுப்போ–,]

நீர்விடுசிவிறி *nīr - viḍu-šiviṟi,* பெ. (n.) *நீர் தூவுந் துருத்தி* பார்க்க; see *nīr-tūvun-turutti.*

[நீர் + விடு + சிவிறி]

நீர்விதை *nīr-vidai,* பெ. (n.) நன்செய்ச் சாகுபடி (இ.வ.); wet cultivation opp. to poḍi-vidai.

[நீர் + விதை.]

நீர்வியாதி *nīr-viyādi,* பெ. (n.) **1.** *நீர்ச்சுரப்பு* பார்க்க; see *nīr-c-curappu.* **2.** நீரிழிவு பார்க்க; see *nīr-iḻivu.*

[நீர் + skt வியாதி.]

நீர்விலை *nīr-vilai,* பெ. (n.) நீருக்கான வரி; (**தெ.க.தொ.3:142.**); water cess.

[நீர் + விலை.]

நீர்விழவு *nīr-viḻavu,* பெ. (n.) *நீர்விளையாட்டு* (சீவக. **856**, உரை.); பார்க்க; see *nīr-viḷaiyāṭṭu.*

[நீர் + விழவு.]

நீர்விழு–தல் *nīr-viḻu-,* **2** செ.குன்றாவி. (v.t.) மணியில் உள்ளொளி தங்குதல் (வின்.); to be of good water, as gem, diamond.

[நீர் + விழு–,]

நீர்விளா *nīr-viḷā,* பெ. (n.) **1.** குட்டிவிளா; small wood apple tree-feronia elephantum. **2.** மாவிலங்கை; water wood apple capparis nurvala. (சா.அக.).

[நீர் + விளா.]

நீர்விளாவு¹–தல் *nīr-viḷāvu-,* **5** செ.குன்றாவி. (v.t.) சரியான சூட்டிற்காக வெந்நீரோடு தண்ணீர் கலத்தல்; adding or mixing cold water with hot water. (சா.அக.).

[நீர் + விளாவு–.
அள → அளவு → அளாவு →
விளாவு. அளாவுதல் = கலத்தல்.]

நீர்விளாவு²—தல் *nīr-viḷāvu-*, 5 செ.குன்றாவி. (v.t.) உணவு கொள்ளுமுன் உள்ளங்கையில் நீரையூற்றி உண்கலத்தைச் சுற்றிச் சிதற விடுதல்; to spread water around the plate, dish or leaf with food before eat.

[நீர் + விளாவு, வள் → வளை → விளை → விளா = வட்டம், சுற்று, கழனியில் ஒரு சுற்று உழவு. விளாவுதல் = சுற்றுதல்.]

நீர்விளையாட்டு *nīr-viḷaiyāṭṭu*, பெ. (n.) நீச்சல் போட்டி; sporting in water. *"விழவு நீர் விளையாட்டு விருப்பினால்"* (சீவக. 856.).

[நீர் + விளையாட்டு.]

நீர்விளைவமை *nīr-viḷai-v-amai*, பெ. (n.) உப்பு (சிந்தா.); salt. (கதி.அக). (சா.அக.).

[நீர் + விளைவமை.
விளை → விளைவு → விளைவமை.]

நீர்வீசுகருவி *nīr-vīsu-karuvi*, பெ. (n.) நீர் விளையாட்டில் நீரை வீசுதற்கு உதவுங் கருவி (திவா.); a squirt, used while sporting in water.

[நீர் + வீசு + கருவி.]



நீர்வீழ்ச்சி *nīr-vīḻcci*, பெ. (n.) மலையருவி (இக்.வ.); water-fall.

[நீர் + வீழ்ச்சி.]

நீர்வெக்கை *nīr-vekkai*, பெ. (n.) கால்நடைகளுக்கு வரும் நோய்; cattle disease.

[நீர் + வெக்கை.]

நீர்வெட்டி *nīr-veṭṭi*, பெ. (n.) *நீரெட்டிமுத்து* பார்க்க; see *nīr-eṭṭi-muttu.*

[நீர் + வெட்டி.]

நீர்வெட்டிக்கொட்டை *nīr-veṭṭi-k-koṭṭai*, பெ. (n.) *நீர்வெட்டிமுத்து* பார்க்க; see *nīr-veṭṭi-muttu.* (சா.அக.).

[நீர்வெட்டி + கொட்டை.]

நீர்வெட்டிமுத்து *nīr-veṭṭi-muttu*, பெ. (n.) பேயாமணக்கு; red physic nut, m.sh. baliospermum axillare.

[நீர்வெட்டி + முத்து.]

நீர்வெண்ணெய் *nīr-veṇṇey*, பெ. (n.) சுண்ணாம்பு நீர்த்தைலம் (C.E.M.); liniment of lime.

[நீர் + வெண்ணெய்.]

நீர்வெள்ளரி *nīr-veḷḷari,* பெ. (n.) வெள்ளரிக் காய்; water cucumber, common cucumber. cucumis sativus. (சா.அக.).

[நீர் + வெள்ளரி.]

நீர்வெள்ளை *nīr-veḷḷai,* பெ. (n.) எட்டு திங்களில் விளையும் நெல்வகை (cg.); a kind of paddy that matures in eight months.

[நீர் + வெள்ளை.]

நீர்வேட்கை *nīr-vēṭkai,* பெ. (n.) நீர்விடாய் (திவா.); thirst. "*அங்ஙனம் அவள் போன பின்பு தாமரைப்பொதியுள் தான் அந்தவிடத்திற் குளிர்ந்த நீரைக்கொண்டு சென்று நீர்வேட்கை யான் வருத்தமுற்ற மடந்தையது வருத்தத்தைத் தீர்த்தென்க*" (சிலப். 11:201, உரை.).

[நீர் + வேட்கை.]

நீர்வேட்டல் *nīr-vēṭṭal,* தொ.பெ. (vbln.) *நீர் வேட்கை* பார்க்க; see *nīr-vēṭkai.* (சா.அக.).

[நீர் + வேட்டல்.]

நீர்வேணிப்பாசி *nīr-vēṇi-p-pāši,* பெ. (n.) கடற்பாசி; sea moss. (சா.அக.).

[நீர்வேணி + பாசி.]

நீர்வேம்பு *nīr-vēmbu,* பெ. (n.) காளான்வகை (l.); polypody fern family.

[நீர் + வேம்பு.]

நீர்வேலி[1] *nīr-vēli,* பெ. (n.) **1.** கிடங்கு; trench. "*தாழ்நீர் வேலித் தலைச் செங்கானத்து நான் மறை முற்றிய நலம்புரி கொள்கை மாமறை முதல்வன் மாடல னென்போன்*" (சிலப். 15:11.).

2. ஏரிக்கரை: bond of a lake. "*அறையும் பொறையு மாரிடை மயக்கமும் நிறை நீர் வேலியு முறைபடக் கிடந்த*" (சிலப். 11:68.).

[நீர் + வேலி.]

நீர்வேலி[2] *nīr-vēli,* பெ. (n.) யாழ்ப்பாணத்திலுள்ள ஓரூர்; a village in Jaffna, ceylon.

[நீர் + வேலி.]

நீர்வேலிமூதூர் *nīrvēi-mūdūr-,* பெ. (n.) சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள வளமிக்க பழைமையான ஊர்; olden village with fertility.

[நீர்வேலி + முது(மை) + ஊர்.]

நீர்வேலியுத்தரம் *nīr-vēli-yuttaram,* பெ. (n.) சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள ஒரு மாநிலம்; Northern state refered in Silappatikāram. "ஆங்கவ ரெதிர்கொள வந்நாடு கழிந்தாங் கோங்குநீர் வேலி யுத்தர மறீஇப் பகைப் புலம் புக்குப் பாசறை யிருந்த தகைப் பருந்தானை மறவோன்" (சிலப். 26:178.).

[நீர்வேலி + உத்தரம்.]

நீர்வேலியுலகு *nīr-vēli-y-ulagu,* பெ. (n.) கடற்சூழுலகு; the world sourrended with sea. "*மாமழை போற்றுது மாமழை போற்றுதும் நாமநீர் வேலி யுலகிற் கவனளிபோல் மேனின்று தான்சுரத்த லான்*" (சிலப். 1:7.). "*ஓதங் கரை தவழ் நீர் வேலி யுலகினுள் வேதங் கரை கண்டான் வீற்றிருக்கும்— ஏதம் சுடுசுடர் தானாகிச் சொல்லவே வீழ்ந்த விடுதடர் வேள்வி யகத்து*" (பு. வெ. 163.). "*வீங்கு நீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன் ஓங்காரணங் காத்த வுரவோன் யாரம்மானை.*" (சிலப். 29:16.).

[நீர்வேலி + உலகு]

நீரகம்[1] *nīragam,* பெ. (n.) 1. கடல் சூழ்ந்த நிலம்; the earth, as sea-girt. "*நீரகம் பனிக்கு.... கடுந்திறல்*" (மலைபடு. 81.). 2. கச்சியிலுள்ள திருமால் கோயில்களுள் ஒன்று (திவ். திருநெடுந். 8.); a Tirumal shrine in Kāñjipuram.

[நீர் + அகம்.]

நீரகம்[2] *nīragam,* பெ. (n.) நீர்நிலை; water sources. "*அவிழ் வேண்டுநர்க் கிடையருளி விடைவீழ்த்துச் சூடுகிழிப்ப நீர்நிலை பெருத்தவார்மண லடைகரை*" (புறநா.366:18).

நீரங்காடி *nīrańkāḍi,* பெ. (n.) நீராட்டுக்குரிய பொருள் விற்கும் கடை; bathing market. "*ஊரங்காடி யுய்த்துவைத் ததுபோல் நீரங்காடி நெறிபட நாட்டி*" (பெருங். உஞ்ஞைக். 38:56.).

[நீர் + அங்காடி]

நீரங்கொண்டி *nīrańgoṇḍi,* பெ. (n.) நொச்சி; five leaved notch-vitex negundo. (சா.அக.).

நீரசம்[1] *nīrašam,* பெ. (n.) 1. சுவையற்றது; anything insipid, tasteless. "*நீரசமான செய்யுள்*" 2. மாதுளை (யாழ்.அக.); pome granate.

நீரசம்[2] *nīrašam,* பெ. (n.) நீரிலுண்டாகும் தாமரை (யாழ்.அக.); lotus, as produced in water.

நீரசம்[3] *nīrašam,* பெ. (n.) நீரக வளி (பாண்டி.); hydrogen.

நீரசாதிசாத்திரம் *nīrasādi-sāttiram,* பெ. (n.) மாழை சாத்திரம் (md.); mineralogy.

[நீரசாதி + (skt) சாத்திரம்.]

நீரட்டு-தல் *nīr-aṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) தாரை வார்த்தல்; to pour water in making a gift. '*இவனைக் கண்டுவைத்துக் கடுக நீரட்டிக் கொடாதே*' (திவ். இயற். திருவிருத். 21, 140.).

[நீர் + அட்டு-,]

நீரடி[1] *nīr-aḍi,* பெ. (n.) நீர்வெட்டிமுத்து (யாழ்.அக.) பார்க்க; see nīr-veṭṭimuttu.

[நீர் + அடி.]

மருந்துவகைச் செடி: நீரடிமுத்து நீரெட்டி, நீர்வெட்டி முத்து என்றும் கூறுவர் (hydrocarpus-egdhiarae.). கழலை, பெருநோய், வாதம், சிரங்கு, நமைச்சல் ஆகியனவற்றை நீக்கும்.

நீரடி[2] *nīraḍi,* பெ. (n.) நீரடிமுத்து பார்க்க; see nīraḍi- muttu. (சா.அக.).

நீரடிமுத்தம் *nīraḍi-muttam,* பெ. (n.) நீரடி முத்து பார்க்க; see nīraḍi - muttu. (சா.அக.)

[நீரடி + முத்தம். முத்து → முத்தம்.]

நீரடிமுத்து *nīr-aḍi-muttu,* பெ. (n.) பேயாமணக்கு; fish poison tree - hydnocapus incbrians.

நீரடிமுத்தெண்ணெய் *nīraḍi - muttenney,* பெ. (n.) நீரடிமுத்துக் கொட்டையினின்று வடித் தெடுக்கும் எண்ணெய்; oil prepard from the kernel of hydnocarpus wightiana nut is almost equal to chaulmoogra oil. (சா.அக.).

[நீரடிமுத்து + எண்ணெய்.]

நீலஅல்லி

நீரடிமுத்து தந்தி

நீர் பிரம்மி

நீரடை[1] *nīr-aḍai,* பெ. (n.) நீராவியில் வேக வைக்கும் அடைவகை (இ.வ.); rice-cake boiled in stream.

[நீர் + அடை.]

நீரடை[2] *nīraḍai,* பெ. (n.) பன்றிப் புடல்; hog-snake gourd or small snake gourd-trichosanthes. (சா.அக.).

நீரடைப்பான் *nīr-aḍaippāṉ,* பெ. (n.) ஆட்டு நோய்வகை (இ.வ.); a disease affecting sheep.

[நீர் + அடைப்பான்.]

நீரடைப்பு *nīr-aḍaippu,* பெ. (n.) சிறுநீர்த் தடைநோய்; retention of urine. *"வருநீரடைப்பினுடன் வெகுகோடி சிலை நோயடைத்த வுடல்"* (திருப்பு. 627.).

[நீர் + அடைப்பு.]

நீரண்டம் *nīr-aṇḍam,* பெ. (n.) *நீர்ப்புட்டை* பார்க்க; see *nīr-p-puṭṭai.*

[நீர் + அண்டம்.]

நீரணங்கு *nīr-aṇaṅgu,* பெ. (n.) *நீரரமகள்* பார்க்க; see *nīr-aramagaḷ.*

[நீர் + அணங்கு.]

நீரணி *nīr-aṇi,* பெ. (n.) *நீர்க்கோலம்[3]* பார்க்க; see *nīr-k-kōlam.* *"நீர்கொ ணீரணி நின்று கனற்றலின்"* (சீவக.2668.). *"நீரணி வெறிசெறி மலருறு கமம்தண்"* (பரிபா.11:62.).

[நீர் + அணி.]

நீரணிமாடம் *nīr-aṇi-māḍam,* பெ. (n.) *நீர்மாடம்* பார்க்க; see *nīr-māḍam.* *"காவிரிப் பேரியாற்று நீரணிமாடத்து நெடுந்துறை போகி"* (சிலப்.10:214–15.).

[நீர் + அணிமாடம்.]

நீரணிவிழவு *nīraṇi-viḻavu,* பெ. (n.) புதுப்புனலாட்டு; *sporting in water.* *"நீரணி விழவினு நெடுந்தேர் விழவினும் சாரணர் வரூஉந் தகுதி யுண்டாமென"* (சிலப். 10:22.)

[நீரணி + விழவு.]

நீரணை *nīraṇai,* பெ. (n.) நீரை எதிர்நின்று தடுக்கும் கல்; *water hinder stone.* *"கொல் புனல் சிறையின் கரையைக் கொல்லும் புனலின்கண் நீரணை போல"* (புறநா. 263. உரை).

[நீர் + அணை.]

நீரத்தம் *nīr-attam,* பெ. (n.) நீரையுடைய வழி; *water path.* *"வயச்சுறா வழங்குநீ ரத்தந் தவச்சின் னாளினன் வரவறி யானே"* (குறுந். 230.).

[நீர் + அத்தம்.]

நீரத்தி *nīratti,* பெ. (n.) பேயத்தி (வின்.); wild fig.

[நீர் + அத்தி.]

நீரதம்[1] *nīradam,* பெ. (n.) நீரைக் கொடுப் பதாகிய முகில்; cloud, as giving water.

நீரதம்[2] *nīradam,* பெ. (n.) நீரற்றது; that which is waterless. *"நீரத நெறியில் வாவி நிறைந்த நீரென நின்றான்"* (பாரத. திரௌபதி. 5.).

நீரதி *nīradi,* பெ. (n.) **1.** கடல்; sea. **2.** சாறு; juice.

நீரதிசாரம் *nīr-adišāram,* பெ. (n.) நீரிழிவு (m.l.) பார்க்க; see nīr-iḻivu.

[நீர் + அதிசாரம்.]

நீரம் *nīram,* பெ. (n.) நீர் (பிங்.); water. *"ஆறுநாலுகுளிர் நீரமுறை கூறினோம்"* (சேதுபு. பாலோடை.).

[நீர் + அம். அம் சாரியை.]

[நீர் → நீரம். நீரம் என்னும் தமிழ்ச் சொல் வடமொழியில் நீர என்று கடைகுறைந்து ஒலிக்கும் (வே.க. 3:119.).]

நீரமுக்குஎந்திரம் *nīr-amukku-endiram,* பெ. (n.) *நீரியல் அழுத்தி* பார்க்க; see *nīriyal-aḻutti.*

[நீர் + அமுக்கு + எந்திரம்.]

நீரமுக்குப்பொறி *nīr-amukku-p-poṟi,* பெ. (n.) *நீரியல் அழுத்தி* பார்க்க; see *nīriyal-aḻutti.*

[நீரமுக்கு + பொறி.]

நீரரண் *nīr-araṇ,* பெ. (n.) அரண் நான்கனுள் நீர் நிறைந்துள்ள அகழி (குறள். 742, உரை.); moat, considered as a defence, one of four araṇ.

[நீர் + அரண்.]

நீரரமகள் *nīr-aramagaḷ,* பெ. (n.) நீரில் வாழும் தெய்வப் பெண்; water-nymph. *"நீரர மகளிவள்"* (பெருங். வத்தவ. 14:40.). *"புலவி நோக்கத்துப் பூந்தொடி புலம்பி நீரர மகளிரொடு நிரந்துடனின்ற"* (பெருங். உஞ்ஞைக். 40:327.).

[நீர் + அரமகள்.]

நீரரவு *nīr-aravu,* பெ. (n.) தண்ணீர்ப் பாம்பு (நாமதீப. 257.); water-snake.

[நீர் + அரா.]

நீர் + அரவு
அர → அரவு – பாம்பு
அரவுதல் – வருத்துதல்.
அரவு → அரா.

ஒ.நோ: கனவு > கனா
நிலவு > நிலா.

நீரரா *nīr-arā,* பெ. (n.) நிரரவு பார்க்க; see *nīr-aravu.*

[நீரரவு – நீரரா.]

நீரருகல் *nīr-arugal,* பெ. (n.) **1.** சிறுநீர் அருகி இறங்குகை (வின்.); passing urine with difficulty; strangury.

[நீர் + அருகல்

அருகு → அருகல்
அருகல் = குறைதல்.]

நீரல்லாநீர் *nīrallā-nīr,* பெ. (n.) சீறுநீர் (மூத்திரம்); urine. *"நீரல்லாத ஈரத்துப்பிணவு பசியால் வருந்த வேட்டை மேற்சென்ற"* (நற். 103; உரை.).

நீரலரி *nīr-alari,* பெ. (n.) ஆற்றலரி; alligators rose.

[நீர் + அலரி
அலர் → அலரி – மலர்ந்தபூ,
பூவின் அழகு.]

நீரலறி *nīr-alaṟi,* பெ. (n.) ஒருவகை நீர்ப்பூண்டு; a kind of water shrub.

[நீர் + அலறி.]

நீரலை *nīr-alai,* பெ. (n.) **1.** நீரின் அலை; water-wave. **2.** ஈரம்பதக் கூந்தல் அலை. dripped hair.

[நீர் + அலை.]

நீரவர் *nīravar,* பெ. (n.) அறிவுடையவர்; *man of knowledge, savant, wiseman.* "*நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்னீர பேதையார் நட்பு*" (குறள், 782.).

[நீர் + அவர்.]

நீர்மையுடையவர் நீரவர். நீர்மை = சிறந்த தன்மை. நீர்மையுடையவர் சொலின் (குறள்,195.). என்பதிற்போல நட்பைக் கேண்மை யென்றதினால், அது இனவுறவுபோற் சிறந்ததென்பது பெறப்படும் (குறள்,782, மரபுரை.)

நீரழிபாக்கம் *nīraḻi-pākkam,* பெ. (n.) தம் நீர்மையழிந்த பேரூர்; destructed town. "நீசிவந் திறுத்த நீரழிபாக்கம்" (பதிற். 13:12.).

[நீர் + அழி + பாக்கம்.]

நீரழிவு *nīr-aḻivu,* பெ. (n.) *நீரிழிவு* (நெல்லை.) பார்க்க; see *nīr-iḻivu.*

ம. நீரழிவு.

[நீரிழிவு → நீரழிவு.]

நீரளவி *nīr-aḷavi,* பெ. (n.) நீரையளக்கும் கருவி; water-meter.

[நீர் + அளவி. அளப்பது அளவி.]

நீரளவு *nīr-aḷavu,* பெ. (n.) காற்றிலுள்ள ஈரத்தன்மையின் அளவு; moisture content.

[நீர் + அளவு.]

நீரா—தல் *nīr-ā-,* 6 செ.கு.வி. (v.i.) நீர் மயமாய்ப் போதல்; to become watery, diluted. **2.** நெட்டுருவாதல்; to be committed to memory.

[நீர் + ஆ.]

நீராக்கு—தல் *nīr-ākku-,* 9செ.கு.வி. (v.i.) **1.** ஒருவனை இரக்கங்கொள்ளும்படி செய்தல்; to make one pity. **2.** மாழை முதலியவற்றை நீர்மமாக்குதல்; to melt the metal into liquid state. **3.** பால் முதலியவற்றிற்கு நீர் கலத்தல்; to dilute, as milk. **4.** நெட்டுருப் பண்ணுதல்; to get by heart.

[நீர் + ஆக்கு.]

நீராகாசிதம் *nīrākāšidam,* பெ. (n.) நான்முகப்புல்; wild sugarcane four faced stalk grass-saccharum genus. (சா.அக.).

*[நீர் +(*skt.*)அகாசிதம்.]*

நீராகாரம் *nīrāgāram,* பெ. (n.) பழஞ்சோற்றிற் கலந்த நீர்; rice water, usually kept overnight.

[நீர் + ஆகாரம்.]

இந்நீர் பருகுவதால் வளிமுதலா எண்ணிய மூன்றும் போவதோடு ஒளிநீர்சுரப்பு பெருக்கமுண்டாகும். (சா.அக.).

நீராகாரி *nīrāgāri,* பெ. (n.) *பாலாட்டங்கொடி* பார்க்க; see *pālāṭṭaṅgoḍi.* (சா.அக.).

நீராசனம் *nīrāšaṉam,* பெ. (n.) *நீராரத்தி* பார்க்க; see *nir-āratti. "அன்றெதிர் கொண்டு நன்னீராசன மெடுத்து வாழ்த்த"* (பாரத. நிரை. 131.).

நீராசனை *nīrāšaṉai,* பெ. (n.) *நீராரத்தி* (திவ். திருவாய், 1, 8, 9, சீ.) பார்க்க; see *nir-āratti.*

[நீர் + ஆசனை.]

நீராஞ்சனம் *nīrāñjaṉam,* பெ. (n.) *நீராரத்தி* பார்க்க; see *nir-āratti. "தூபதீபத் தட்டேந்தி பெருவி னீராஞ்சன முதவி"* (பிரமோத். 18. 31.).

[நீர் + அ + அஞ்சனம்.]

நீராஞ்சனை *nīrāñjaṉai,* பெ. (n.) *நீராரத்தி* (இ.வ.) பார்க்க; see *nir-āratti.*

நீராட்டணி *nīrāṭṭaṇi,* பெ. (n.) *நீர்க்கோலம், 3,* பார்க்க; see *nir-k-kōlam. "வான் கிளர்ந்தன்ன வளநீராட்டணி"* (பெருங். உஞ்சைக். 37:273.).

[நீர் + ஆட்டு + அணி.]

நீராட்டம்[1] *nīrāṭṭam,* பெ. (n.) *நீராட்டு* பார்க்க; see *nīrāṭṭu. மார்கழி நீராட்டம்* (உ.வ.).

[நீராட்டு → நீராட்டம்.]

நீராட்டம்[2] *nīrāṭṭam,* பெ. (n.) காதலர் ஆடும் புனலாட்டம்; young lover's play in the water.

[நீர் + ஆட்டம்.]

நீராட்டரவம் *nīrāṭṭaravam,* பெ. (n.) குளித்தல் ஒலி; bathing sound.

[நீராட்டு + அரவம்.]

பெருங்கதை உஞ்சைக் காண்டத்து நாற்பத் தொன்றாம் காதை. உஞ்சை நகர மாந்தரும் உதயணனும் பிறரும் திருநீர்ப் பொய்கையில் நீராடுதலால் உண்டான முழக்க வகைகளைக் கூறும் பகுதி.

நீராட்டு[1]**-தல்** *nīr-āṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) முழுக்காட்டுதல்; to bathe, as an idol. *"நீராட்டி யாட்டுபொற் சுண்ணந் திமிர்ந்தள்ளி"* (குமர. மீனாட். பிள்ளைத். செங்கீரை.1.).

[நீர் + ஆட்டு-.]

நீராட்டு[2] *nīrāṭṭu,* பெ. (n.) குளியல்; bathing. *"நெய்யாட்டரவமுநீரட்டரவமும்"* (பெருங். நரவாண. 6.71.).

[நீர் + ஆட்டு]

நீராடல் *nīr-āḍal,* பெ. (n.) 1. *நீராட்டு* பார்க்க; see *nir-āṭṭu.* 2. நீர்விளையாட்டு; sporting in water. *"சுந்தரச் சுண்ணமுந் துரநீராடலும்"* (மணிமே. 2:23.).

[நீர் + ஆடல்.]

நீராடற்காய் *nīr-āḍaṟ-kāy,* பெ. (n.) முற்றின தேங்காய் (இ.வ.); ripe cocoanut in which the water sounds when shaken.

[நீர் + ஆடற்காய்.]

அளவாக முற்றின தேங்காயை உலுக்கிப் பார்த்தால் உள்ளிருக்கும் நீர் ஆடும். அஃதாவது உள்ளிருக்கும் நீரின் அளவைப் பொறுத்துத் தேங்காயின் தன்மையறிவர். தேங்காய் முற்றமுற்ற உள்ளிருக்கும் நீரினளவு குறையும். இளநீர்ப் பதத்தை அடுத்த நிலையிலுள்ள தேங்காயில் முழுஅளவும், அது முற்றிய நிலையில் அளவுகுறைந்தும் காணப்படும். முழுதும் நீரற்ற தேங்காயைச் சமையலுக்குப் பயன் படுத்துவதில்லை. அதை எண்ணெய் எடுப்பதற்குப் பயன்படுத்துவர்.

நீராடற்பதம் *nīr-āḍaṟ-padam,* பெ. (n.) நீர் குலுங்கும்படி தேங்காய் முற்றிய பருவம் (வின்.); the stage in the ripening of a coconut when the milk sounds if shaken.

[நீராடல் + பதம்.]

நீராடற்பருவம் *nīr-āḍaṟ-paruvam,* பெ. (n.) பெண்பாற் பிள்ளைத் தமிழ்ப் பருவம் பத்தனுள் பாட்டுடைத் தலைவி நீராடுதலைக் கூறும் பகுதி; section of peṇpāṟ-piḷḷai-t-tamiḻ, which describes the stage of childhood in which the child delights in bath, one of ten.

[நீராடல் + பருவம்.]

நீராடு[1]–தல் *nīr-āḍu-,* 5 செ.கு.வி. (v.i.) எண்ணெய்க் குளியல்; oil bath. "*சனிநீராடு*"

[நீர் + ஆடு–,]

நீராடு[2]–தல் *nīr-āḍu-,* 5 செ.கு.வி. (v.i.) குளித்தல்; to bathe (in a river, sea, etc. கடலில் நீராடுவது சிறார்களுக்கு மிகுந்த இன்பம்தரும். (உ.வ.).

[நீர் + ஆடு–.]

நீராடு[3] *nīr-āḍu,* பெ. (n.) குளியல்; bathing. "நெய்யாட்டரவ நீராட்ட டரவமும்" (பெருங். நரவாண. 6, 71.).

[நீர் + ஆடு.]

நீராடுங்காய் *nīr-āḍuṅ-gāi,* பெ. (n.) *நீராடற் காய்* பார்க்க; see *nīrāḍaṟ-kāy.*

[நீர் + ஆடுங்காய்.]

நீராணி *nīr-āṇi,* பெ. (n.) **1.** *நீராணிக்கண்* பார்க்க; see *nīrāṇi-k-kaṉ.* **2.** முந்தைக் காலத்து நீர்வரி; an ancient irrigation tax.

[நீர் + ஆணி.]

நீராணிக்கம் *nīrāṇikkam,* பெ. (n.) **1.** நீர்ப் பாய்ச்சுவோனுக்குக் குடிகள் கொடுக்கும் தொகை; fee paid by ryots to the village servent who distributes water for irrigation. **2.** நீர் வளம்; abundance of water in a region. *நீராணிக்கமான தேயம்* (உ.வ.). **3.** ஈரம் (நாஞ்.); moisture.

[நீர் + ஆணிக்கம்.]

நீராணிக்கன் *nīr-āṇikkaṉ,* பெ. (n.) **1.** நீர்க் கண்டி, சிற்றூரில் நீர்ப்பாய்ச்சும் பணியாள்; village servent who distributes water for irrigation. **2.** நீர் வளம்; abundance of water in a region. **2.** கொங்குநாட்டு ஏரிமதகின் காவற் காரன் (வின்.); one who is incharge of the sluice of a public tank in the kongu country.

[நீர் + ஆணிக்கன்.]

நீராணிக்காரன் *nīrāṇi-k-kāraṉ,* பெ. (n.) *நீராணிக்கன்* பார்க்க; see *nīrāṇikkaṉ.*

[நீராணி + காரன்.]

நீராத்திரை *nīr-āttirai,* பெ. (n.) *நீர்ச்செலவு* பார்க்க; see *nīr-c-celavu.* "*விரைந்தனர் கொண்ட விரிநீ ராத்திரை*" (பெருங். உஞ்சைக். 38, 1.).

[நீர் + யாத்திரை.]

நீராத்தோற்பலம் *nīrāttōṟpalam,* பெ. (n.) செங்கழுநீர்; red Indian water lily.

நீராம்பல்[1] *nīr-āmbal,* பெ. (n.) ஆம்பல்; water-lily. "*நீரளவே யாகுமா நீராம்பல்*" (வாக்குண். 7.).

[நீர் + ஆம்பல்.]

நீராம்பல்[2] *nīr-āmbal,* பெ. (n.) *நீராம்பற்கட்டி* (வின்.) பார்க்க; see *nīrāmbaṟ-kaṭṭi.*

[நீர் + ஆம்பல்.]

நீராம்பல்[3] *nīrāmbal,* பெ. (n.) குளஆம்பல் செடி; water-platter.

[நீர் + ஆம்பல்.]

நீராம்பற்கட்டி *nīr-āmbaṟ-kaṭṭi,* பெ. (n.) அகட்டு நீர்க்கோவை (மகோதரம்); ascites.

[நீர் + ஆம்பற்கட்டி.]

நீராமம்[1] *nīr-āmam,* பெ. (n.) நீராம்பற்கட்டி (யாழ்.அக.) பார்க்க; see nīr-āmbaṟ-kaṭṭi.

[நீர் + ஆமம்.]

நீராமம்[2] *nīrāmam,* பெ. (n.) ஒரு நோய் (வழக்); a kind of disease.

[நீர் + ஆமம்.]

நீராமயம் *nīr-āmayam,* பெ. (n.) *நீராம்பற்கட்டி* பார்க்க; see *nīr-āmbaṟ-kaṭṭi.*

[நீர் + ஆமயம்.]

நீராமை[1] *nīr-āmai,* பெ. (n.) கடலாமை (வின்.); sea-turtle.

[நீர் + ஆமை.]

நீராமை[2] *nīr-āmai,* பெ. (n.) அகட்டு நீர்க் கோவை (மகோதரம்); a kind of dropsy marked by swelling of the abdomen which almost resembles the shell of a tortoise. (சா.அக.).

மறுவ. ஆமைக்கட்டி, கெண்டைக்கட்டி.

நீராமை[3] *nīr-āmai,* பெ. (n.) பெண்களுக்கு கருப்பையிற் காணும் கட்டி; overian tumour occuring in women. (சா.அக.).

நீராமைக்கட்டி *nīr-āmai-k-kāṭṭi,* பெ. (n.) *நீராம்பற்கட்டி* பார்க்க; see *nīr-āmbar-kaṭṭi.* **2.** சிலந்திக் கட்டி (யாழ்.அக.); tumour.

[நீராமை + கட்டி.]

நீராய்வு *nīr-āyvu,* பெ. (n.) நீரைப் பகுப்பாய்வு செய்யும் ஆய்வு; water analysis.

[நீர் + ஆய்வு.]

நீராரத்தி *nīr-āratti,* பெ. (n.) *நீராலத்தி* பார்க்க; see *nīr-ālatti.*

[நீர் + ஆரத்தி. ஆலத்தி → ஆரத்தி.]

நீராரம் *nīr-āram,* பெ. (n.) *நீராகாரம்* பார்க்க; see *nīr-āgāram.*

[நீராகாரம் → நீராரம்.]

நீராரம்பம் *nīr-ārambam*, பெ. (n.) நீர்ப் பாய்ச்சல் வாய்ப்பு உள்ள நிலம்; காடாராம் பத்துக்கு எதிரானது. tract having irrigation facilities opp. to kāḍārāmbam.

[நீர் + ஆரம்பம்.]

நீராரம்பலம் *nīr-ārambalam*, பெ. (n.) *நீராரம்பம்* (தஞ்சை.) பார்க்க; see *nīr-ārambam.*

நீராரை *nīr-ārai*, பெ. (n.) கீரைவகை (பதார்த்த. 594.); cryptogamous plant.

நீராரைக்கீரை *nīrārai-k-kīrai*, பெ. (n.) ஒரு வகைக் கீரை; a kind of greens. (சா.அக)

அரத்தப்போக்கு, பித்து, நீரிழிவு ஆகிய நோய்களைக் குணமாக்கும்.

[நீர் + ஆரை + கீரை.]

நீரால் *nīr-āl*, பெ. (n.) ஆலின் ஒருவகை; narrow leaved fig-ficus nervosa. (சா.அக.).

[நீர் + ஆல்.]

நீராலத்தி *nīr-ālatti*, பெ. (n.) கண்ணேறு கழிப்பதற்காக முன்னால் நின்று இடமுறை யாகச் சுற்றப்படும் மஞ்சள் நீர் மங்கலத்தட்டு அல்லது மஞ்சள் நீரிடை விளக்கிட்ட மங்கலத் தட்டு; ritual of waving turmeric water-plate to avert the blight of the eyes of unlucky persons on marriage or other special occasions, also in front of the idol, after the procession, before if is taken into the temple.

[நீர் + ஆலத்தி

ஆல் + ஆற்று – ஆலாற்று → ஆலாத்து→ ஆலாத்தி → ஆலத்தி. ஆலாற்றுதல் – சுற்றச்செய்தல்.]

நீராவி¹ *nīr-āvi*, பெ. (n.) வெப்பத்தினால் மாறிய நீரின் ஆவி; steam.

[நீர் + ஆவி. ஆவு – முன்செல், மேலேறு. ஆவு →ஆவி = புகை, நீராவி.]

நீராவி² *nīr-āvi*, பெ. (n.) தடாகம் (சிலப். 25:4 அரும்.); tank or well.

மறுவ. இலவந்திகை, இலவந்தி.

[நீர் + ஆவி.]

ஆவு → ஆவி. ஆவி = சுனை, சுனையிருந்த பள்ளத்தில் தேங்கிய நீர்நிலை.

நீராவிஆற்றல் *nīrāvi-āṟṟal*, பெ. (n.) *நீராவி யாற்றல்* பார்க்க; see *nīrāvi-y-āṟṟal.*

[நீராவி + ஆற்றல்.]

நீராவிக்கப்பல் *nīrāvi-k-kappal*, பெ. (n.) நீராவியாற் செல்லுங்கப்பல்; steamer.

[நீராவி + கப்பல்.]

கள் → கய் → கவ். கப்பு → கப்பம் = பள்ளம், குழி. கப்பல் = உட்குழிந்த மரக்கலம்.



நீராவிக்கொதிகலம் *nīrāvi-k-kodi-kalam,* பெ. (n.) கொதிகலம்; boiler.

[நீராவி[1] + கொதிகலம்.]

நீராவிச்சட்டை *nīrāvi-c-caṭṭai,* பெ. (n.) நீராவியானது இடைவழி ஊடுசென்று வெப்பூட்டும்படி அமைக்கப்பட்ட எந்திர இயக்குருளையின் புறத்தோடு; steamer-jacket.

[நீராவி[1] + சட்டை.]

நீராவிச்சுத்தி *nīrāvi-c-cutti,* பெ. (n.) நீராவியாலியங்கும் சுத்தி; rig by hammer.

[நீராவி[1] + சுத்தி.]

நீராவிச்சூழ்ச்சியப்பொறி *nīrāvi-c-cūḻcciya-p-poṟi,* பெ. (n.) நீராவி ஆற்றலால் இயங்கும் பொறி; steam engine.

[நீராவி[1] + சூழ்ச்சிப்பொறி.]

நீராவிச்சோலை *nīrāvi-c-cōlai,* பெ. (n.) சோலைகள்; park "கூடாரப் பண்டியும் கடகத் தண்டும் பல்லக்குமென்னும் இவ்வரிசைகள் பெற்றதேயன்றி நீராவிச் சோலைக் கண்ணே தமக்கு உற்ற துணைவனாகிய அரசனோடு மேவி மெய்தொட்டு விளையாடும் மகிழ்ச்சியும்" (சிலப். 14:126, உரை.).

[நீராவி[2] + சோலை.]

நீராவிப்படகு *nīrāvi-p-paḍagu,* பெ. (n.) நீராவியின் விசையினாலியங்கும் படகு; steam-launch, steam boat, steamer.

[நீராவி[1] + படகு.]



நீராவிப்புண் *nīr-āvi-p-puṇ,* பெ. (n.) வெந்நீர் முதலியன பட்டு உண்டாம் புண்; (M.L.); scald.

[நீராவி[1] + புண்.]

நீராவிமண்டபம் *nīr-āvi-maṇḍabam,* பெ. (n.) ஆறு, தடாகங்களின் நடுவே அமைந்த மண்டபம்; hall in the centre of a tank or river. "*தாமரை சூழ்ந்த நீராவி மண்டபம்*" (சீவக. 2869, உரை.).

[நீராவி[2] + மண்டபம்.]

நீராவியந்திரம் *nīr-āvi-yandiram,* பெ. (n.) 1. நீராவியினாற் செலுத்தப்படும் பொறி; steam engine, 2. நீராவி விசையாக்கப் பொறி; engine which uses steam to generate power.

[நீராவி[1] + இயந்திரம்.]

நீராவியம் *nīrāviyam,* பெ. (n.) பாற்கடுக்காய்; white myrobalan of cudappa-terminalia pallide. (சா.அக.).

நீராவியாற்றல் *nīrāvi-y-āṟṟal,* பெ. (n.) நீராவியின் ஆற்றல்; steam-power.

[நீராவி[1] + ஆற்றல்.]

நீராழி[1] *nir-āḻi,* பெ. (n.) கடல் (பிங்.); sea.

[நீர் + ஆழி. ஆழ் → ஆழி.]

நீரென்பது ஆகுபெயராய் நீராலான கடலைக் குறிக்குமேனும், இங்கு ஆழிக்கு அடையாய் வந்தது. ஆல்–சுற்று, சூழ். ஆல்→ஆலி→ஆழி. உலகைச் சுற்றியிருப்பது; நிலத்தைச் சூழ்ந்திருப்பது எனினுமாம்.

நீராழி[2] *nirāḻi,* பெ. (n.) மாட்டுநோய் வகை (மாட்டுவை.); a disease of cattle. குளம்பில் வரும் **'கோமாரி'** நோய் ஆகலாம்.

நீராழி[3] *nirāḻi,* பெ. (n) *நீராழி மண்டபம்* பார்க்க; see *nirāḻi-maṇḍabam.*

நீராழிமண்டபம் *nirāḻi-maṇḍabam,* பெ. (n.) ஆறு, தடாகம் இவற்றின் நடுவே அமைந்த மண்டபம்; hall in the centre of a tank or river.

[நீராழி + மண்டபம்.]



நீராளக்கஞ்சி *nirāḷa-k-kañji,* பெ. (n.) தடிமனில்லாக்கஞ்சி; water-gruel.

[நீர் → நீராளம் + கஞ்சி.]

நீராளங்கட்டியிறக்கு–தல் *nirāḷaṅ-kaṭṭi-y-iṟakku-,* 5 செ.கு.வி (v.i.) மாலைப் பதநீர் இறக்குதல் (இ.வ.); to draw the sweet toddy of the evening from the palmyra tree.

[நீராளம் + கட்டி + இறக்கு –,]

நீராளம் *nir-āḷam,* பெ. (n.) **1.** நீர்த்தன்மை; fluidity. ***"நீராளமாயுருக வுள்ளன்பு தந்தது நின்னதருள்"*** (தாயு.பரிபூரண.8.). **2.** நீர்மிகுதி; abundance of water. ***"நீராள வாவிசெறி நாடனைத்தும்"*** (அரிச்.பு.மயா.25.). **3.** நீருடன் கலந்த உணவு; liquid food. **4.** மயக்க மளிக்காத, தித்திப்புக்கள் (வின்.); sweet toddy.

[நீர் → நீராளம்.]

நீராளமாய்விடு–தல் *nirāḷamāy-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) உணவில் குழம்பு முதலியவற்றை மிகுதியாய்ப் பரிமாறுதல்; to serve in large quantity, as curry, curds, broth.

[நீர் → நீராளம் → நீராளமாய் + விடு.]

நீரி *niri,* பெ. (n.) நீரில் வாழ்வது; that which lives in water, aquatic life. ***"நீரியாயூர்வனவாய் நின்றநாள் போதாதோ"*** (பட்டினத்துப்.பக்.200.).

[நீர் → நீரி.]

நீரிடம் *niriḍam,* பெ. (n.) நாவல்; common jaumoon-eugenia jambolina. (சா.அக.).

நீரிடை *niriḍai,* பெ. (n.) செயநீர்; a pungent saline liquid. (சா.அக.).

நீரிண்டம் *niriṇḍam,* பெ. (n.) தொட்டாற் சுருங்கியை உள்ளடக்கிய துவரை (நுரையிண்டு) இனக்குத்துச்செடிவகை; a variety of mimosa. (சா.அக.).

நீரிண்டு *nīrindu,* பெ. (n.) *நீரிண்டம்* பார்க்க; see nīrindam. (சா.அக.).

நீரிணை *nīr-iṇai,* பெ. (n.) இருகடல்கள் இணையுமிடத்தமைந்த குறுகிய நீர் வழி; narrow passage of water connecting two seas or large bodies of water.

மறுவ. சலசந்தி.

[நீர் + இணை.]



நீரிய *nīriya,* பெ.அ. (adj.) நீர்சார்ந்த, நீர்கலந்த, நீர்த்த; aqueous.

[நீர் → நீரிய.]

நீரியக்கவியல் *nīr-iyakka-v-iyal.* பெ. (n.) நீர் இயக்க விசை சார்ந்த இயற்பியல் துறை; hydrodynamics.

[நீரியக்கம் + இயல்.]

நீரியல் *nīr-iyal,* பெ. (n.) நிலத்தின் அடியிலும் மேற்பரப்பிலும் இருக்கும் நீரைப்பற்றியும் அந்த நீருள்ள இடத்தின் அமைப்பைப் பற்றியும் விளக்கும் அறிவியற்பிரிவு; hydrology.

[நீர் + இயல்.]

நீரியல்அழுத்தி *nīriyal-āḻutti,* பெ. (n.) நீராற்றலால் இயக்கப்படுகின்ற அமுக்கும் பொறி; hydraulic press.

மறுவ. நீரமுக்குப் பொறி, நீரமுக்கு எந்திரம்.

[நீரியல் + அழுத்தி.]

நீரியல்உயர்த்தி *nīriyal-uyartti,* பெ. (n.) இயங்கு நீரின் தடையாற்றலால் அதன் பகுதியை உயர்த்தும் அமைவு; hydraulic ram.

[நீரியல் + உயர்த்தி.]

நீரியல்சரிவு *nīriyal - šarivu,* பெ. (n.) நீராற்றலால் இயக்கப்படும் திறன்; hydraulic slope.

[நீரியல் + சரிவு.]

நீரியல்திறன் *nīriyal-tiṟaṉ,* பெ. (n.) நீராற்றலால் இயக்கப்படும் திறன்; hydraulic efficiency.

[நீர் + இயல் + திறன்.]

நீரில்வறுங்கயம் *nīril-vaṟuṅgayam,* பெ. (n.) நீரில்லாத வறிய குளம்; dry lake. "*வருவர்கொல்வாழி தோழி நீரில் வறுகயந் துழைஇய விலங்கு மருப்பியானை*" (குறுந்.215.).

[நீர் + இல் + வறிய + கயம்.]

நீரில்வைப்பு *nīr-il-vaippu,* பெ. (n.) நீரற்ற பாலை நிலம்; dry barren sandy tract; desert. "*நீரில் வைப்பிற் சுரனிறந்தோரே*" (குறுந்.211.).

[நீர் + இல் + வைப்பு.]

நீரிலாநிலம் *nīr-ilā-nilam,* பெ. (n.) பொட்டற்காடு, பாலைநிலம் (யாழ்.அக.); desert tract, as waterless.

[நீர் + இலா + நிலம்.]

நீரிலாறு *nīr-il-āṟu,* பெ. (n.) நீரற்ற வழி; route, as waterless. "*படுமுடை பருந்து பார்த்திருக்கும் நெடு மூதுடைய நீரில் லாறே*" (குறுந்.283.).

[நீர் + இல் + ஆறு. ஆறு = வழி,தடம்.]

நீரிலை *nīr-ilai,* பெ. (n.) **1.** நூல்தாளி; larger chinese lauvel-antidesma menasu. **2.** பொன்னாங்காணி சக்களத்தி; water leaf, river blatty-hydrolea zeylanica. (சா.அக.).

நீரிலோடி *nīril-ōḍi,* பெ. (n.) ஒருவகை நெட்டி; a kind of pitch plant. (சா.அக.).

[நீரில் + ஓடி.]

நீரிழிச்சல் *nīr-iḻiccal,* பெ. (n.) நீரிழிவு; diabetes. "*நீரிழிச்சல் பெருவயிறு*" (திருப்பு.627.).

[நீர் + இழிச்சல்.]

நீரிழிபிரமேகம் *nīr-iḻi-piramēgam,* பெ. (n.) கடுமையான வெட்டைநோய்வகை; (கடம்ப.பு. இலீலா.113.); a severe form of gonorrhoea.

[நீரிழி + பிரமேகம்.]

நீரிழிவு *nīr-iḻivu,* பெ. (n.) மூத்திரம் சர்க்கரைத் தன்மை கலந்து மிதமிஞ்சி இறங்கும் நோய்; diabetes. "*நீரிழிவாளர்* " (கடம்ப.பு. இலீலா.109.). "*மூக்கடைப்புட்காந்தி நீரிழிவு, குன்மம்*" (தைல.தைலவ.140.).

[நீர் + இழிவு.]

நீரிறக்கம் *nīr-iṟakkam,* பெ. (n.) **1.** கடலில் நீரேற்றம் உள்வாங்கும் நிலை (யாழ்.அக.); ebb of the tide. **2.** நீரிழிவு (இ.வ.) பார்க்க; see *nīriḻivu.*

நீரிறங்குதல் *nīr-iṟaṅgudal,* பெ. (n.) **1.** சிறுநீர் இறங்குகை; urination. **2.** உடம்பில் கெட்டநீர் தங்குகை; formation of impure watery humours in the body.

[நீர் + இறங்குதல்.]

நீரிறை—த்தல் *nīr-iṟai-,* 4 செ.குன்றாவி. (v.t.) வேளாண் பயிருக்கு நீர் பாய்ச்சுதல்; to irrigate for crops.

[நீர் + இறை—.]

நீரிறைவன் *nīr-iṟaivaṉ,* பெ. (n.) *நீர்க் கடவுள்* (நாமதீப.82.) பார்க்க; see *nir-k-kaḍavul.*

[நீர்+ இறைவன்.]

நீரின்மைநிலை *nīriṉmai-nilai,* பெ. (n.) நீர்த் தட்டுப்பாடான தன்மை (சிலப்.பதி,உரை.); scarcity of water cure.

[நீர் + இன்மை + நிலை.]

நீரின்றிவேனில்தெறுநிலம் *nīriṉṟi-vēṉilteṟu-nilam,* பெ. (n.) பாலை (சிலப்.பதி.உரை.) desert.

[நீர் + இன்றி + வேனில் + தெறுநிலம்.]

நீருடும்பு *nīr-uḍumbu,* பெ. (n.) உடும்புவகை; a kind of iguana, water gaunaneut.

க. நீருடு.

[நீர் + உடும்பு.]

நீருடை[1] *nīr-uḍai,* பெ. (n.) நனைந்த ஆடை; wet cloth. "*போகா தாடுநர் புன்க மெய்தி மேகலை விரீஇய தூசுவிசி யல்குல் நீருடை களைதல் செல்லார்*" (பெருங்.உஞ்சைக்.44:5.).

[நீர் + உடை.]

உடை = ஆடை.

நீருடை[2] *nīr-uḍai,* பெ. (n.) நீருடைய மரம்; rubber thorn-acacia latronum.

[நீர் + உடை. உடை = உடைமை.]

நீருடை[3] *nīruḍai,* பெ. (n.) வேலமர வகை; buffalo thorn cutch.

நீருணவு *nīr-uṇavu,* பெ. (n.) உப்புநீர், கஞ்சி முதலியன; liquid diet as soup, conjee., etc, (சா.அக.).

[நீர் + உணவு.]

நீருதடன் *nīr-udaḍaṉ,* பெ. (n.) அட்டை; leech so called from its sucking blood. (சா.அக.).

[நீர் + உதடன்.]

நீருதித்தநாள் *nīruditta-nāḷ,* பெ. (n.) *நீர் நாள்* (சூடா.) பார்க்க; see *nīr-nāḷ.*

[நீர் + உதித்த + நாள்.]

நீருதிபாசம் *nīrudi-pāšam,* பெ. (n.) கடற்பாசி; sea moss-gracilaria lichenoides. (சா.அக.).

நீருந்தம் *nīr-undam,* பெ. (n.) நிலத்தடியிலிருக்கும் நீரைக் குழாய் வழி உறிஞ்சிமேலேற்றும் பொறி; water-motor.

[நீர் + உந்தம். உந்து → உந்தம்.]



நீருமரி *nīr-umari,* பெ. (n.) 1. சிறுமரவகை; cyprus tamarisu. 2. சாயத்துக்கு உதவும் பூடுவகை; seaside Indian salt wort.

[நீர் + உமரி.]

நீருமிழ்நோய் *nīr-umiḻ-nōy,* பெ. (n.) உமிழ்நீர் பெருகிவரும் நோய்; excessive or abnormal salivation.

[நீர் + உமிழ் + நோய்.]

நீருமிழ்வியாதி *nīrumiḻ-viyādi,* பெ. (n.) *நீருமிழ் நோய்* பார்க்க; see *nir-umiḻ-nōy.*

[நீருமிழ் + (skt.) வியாதி.]

நீருருள் *nīr-uruḷ,* பெ. (n.) சகடமாகப் பண்ணித் தண்ணீரேற்றியுருட்டுங் கருவி; a kind of cart-like water barrel. "*நீருருள் பிளந்து*" (சீவக.1831.).

[நீர் + உருள்.]

நீருரோகம் *nīr-u-rōgam,* பெ. (n.) *நீரிழிவு* (m.l.) பார்க்க; see *nīr-iḻivu.*

[நீர் + உ ரோகம்.]

நீருவஞ்சி *nīruvañji,* பெ. (n.) வஞ்சிமரம்; common willow of India; south Indian willow - sabix tetrasperma. (சா.அக.).

[நீர் + உ + வஞ்சி.]

நீருள்ளாரை *nīr-uḷḷ-ārai,* பெ. (n.) நீராரை பார்க்க; see nīr-ārai.

[நீர் + உள் + ஆரை.]

நீருள்ளி *nīr-uḷḷi,* பெ. (n.) வெங்காயம்; onion-allium sepa. (சா.அக.).

மறுவ. ஈரங்காயம்.

க.,தெ. நீருள்ளி.

[நீர் + உள்ளி.]

நீருளாரை *nīruḷ-ārai,* பெ. (n.) *நீராரை* பார்க்க; see *nīr-ārai.* (சா.அக.).

[நீருள் + ஆரை.]

நீருறை[1] *nīr-uṟai,* பெ. (n.) **1.** நீர்மநிலை மருந்து; liquid medicine, lotion. **2.** மருந்துநீர்; mixture of solution. (சா.அக.).

[நீர் + உறை.]

நீருறை[2] *nīr-uṟai,* பெ. (n.) குளிர்ச்சியாக வைத்திருக்க வேண்டிய பொறியின் பாகத்தைச் சுற்றியுள்ள நீர் நிரப்பப்பட்ட உறை; water-jacket.

[நீர் + உறை.]

நீருறைதெய்வம் nīr-uṟai-deivam, பெ. (n.) நீரில் வாழும் தெய்வம்; watersprite.

[நீர் + உறை + தெய்வம். உறை = வாழ்தல்.]

நீருறைமகன்றில் *nīruṟai-magaṉṟil,* பெ. (n.) நீரில் வாழும் மகன்றிற் பறவை; a species of love bird which lives in water. "*பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன நீருறை மகன்றிற் புணர்ச்சி போல*" (குறுந்.57.).

[நீருறை + மகன்றில்.]

இப்பறவைகள் ஆணும் பெண்ணும் கூடி இணைபிரியாது வாழும் இயல்புடையன. தம்முட் சிறியதொரு பிரிவு நிகழினும் ஆற்றாது உயிர்விடும் ஆராக் காதலுடையன என்பர்.

நீரூர்பாதை *nīr-ūr-pādai,* பெ. (n.) நிறைபுனல்(நாமதீப.534.); full flood.

நீரூற்று *nīr-ūṟṟu,* பெ. (n.) **1.** ஊற்று; spring, fountain. **2.** கழிவு; oozing, dampness.

[நீர் + ஊற்று.]

நீரூறி *nīr-ūṟi,* பெ. (n.) கீழ்க்காய் நெல்லிச்செடி; a small plant (M.M.587.).

ம. நீரூரி.

[நீர் + ஊறி.]

நீரெக்கி *nīr-ekki,* பெ. (n.) **1.** சிவிறி; a kind of syringe. "*நெய்த்தோர் நிறவரக்கி னீரெக்கி*" (பரிபா 10:12.). **2.** துருத்தி; bellows.

[நீர் + எக்கி; எக்குதல் → பிலிற்றுவித்தல்; பீச்சுதல்.]

நீரெட்டி *nīr-eṭṭi,* பெ. (n.) *நீரெட்டிமுத்து* பார்க்க; see *nīr-eṭṭi-muttu.*

நீரெட்டிமுத்து *nīr-eṭṭi-muttu,* பெ. (n.) **1.** பேயாமணக்கு (பைஷஜ.**96.**); wild croton. **2.** மரவட்டை மரம் (I.); marotti.

[நீரெட்டி + முத்து.]

நீரெடுப்பு *nīr-eḍuppu,* பெ. (n.) *நீரேற்றம்,* **1** (வின்.) பார்க்க; see *nīr-ēṟṟam.*

[நீர் + எடுப்பு.]

நீரெரிப்பு *nīr-erippu,* பெ. (n.) *நீர்க்கடுப்பு* பார்க்க; see *nīr-k-kaḍuppu.*

[நீர் + எரிப்பு.]

நீரெரிவு *nīr-erivu,* பெ. (n.) நீர்க்கடுப்பு (புதுவை); dysury.

[நீர் + எரிவு.]

நீரெலி *nīr-eli,* பெ. (n.) எலிவகை (வின்.); water rat.

[நீர் + எலி.]

நீரெழுச்சி *nīr-eḻucci,* பெ. (n.) வெள்விழியில் காணும் கண்ணோய்; a film flesh growth on the scientific of the eye as transparent as drop as water. (சா.அக.).

[நீர் + எழுச்சி.]

நீரேற்றநுண்பொறி *nīrēṟṟa-nuṇpoṟi,* பெ. (n.) நீரின் தடையாற்றலால் அதன் பகுதியை யுயர்த்தும் அமைவு; water-ram.

[நீர் + ஏற்றம் + நுண்பொறி.]

நீரேற்றம்[1] *nīr-ēṟṟam,* பெ. (n.) **1.** நீர்ப்பெருக்கு (வின்.); flood, tide, flow. **2.** சளி; catarrh. **3.** தீய நீரால் உடம்பு வீங்கும் நோய் (பதார்த்த.**24.**); dropsy. **4.** திமிர் (தஞ்சை.); impudance.

[நீர் + ஏற்றம்.]

நீரேற்றம்[2] *nīr-ēṟṟam,* பெ.(n.) வெள்விழியில் ஏற்படும் நீர்ப்பெருக்கு; accumulation of morbid fluid in the white of the eye. (சா.அக.).

[நீர் + ஏற்றம்.]

நீரேற்றுநிலையம் *nīr-ēṟṟu-nilaiyam,* பெ. (n.) குழாய் வழியாக நீர் எல்லா இடங்களுக்கும் சீராகச் செல்வதற்கான அழுத்தத்தைத் தரும் எந்திரம் உள்ள நிலையம்; pumping station.

[நீரேற்று + நிலையம்.]

நீரேற்றுமடு *nīr-ēṟṟu-maḍu,* பெ. (n.) நீர் பாய்ச்சமுடியாத மேட்டுநிலம். (R.T.); high land that cannot be irrigated.

[நீரேற்று + மடு.]

நீரொட்டி *nīr-oṭṭi,* பெ. (n.) *நீராரை* (மலை.) பார்க்க; see *nīr-ārai.*

[நீர் + ஒட்டி.]

நீரொடி *nīroḍi,* பெ. (n.) *நீரொட்டி* பார்க்க; see *nīr-oṭṭi* (சா.அக.).

[நீரொட்டி→ நீரொடி.]

நீரொடுசொரிந்தமிச்சில் *nīroḍu-šorinda-miccil,* பெ. (n.) நீரொடு தானம் செய்தெஞ்சிய பொருள்; leavings, what is left after making gifts by pouring water on the right hand of

the donee. "நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும் வரைகோ ளறியாச் சொன்றி நிரைகோற் குறுந்தொடி தந்தை யூரே" (குறுந்.233.).

[நீரொடு + சொரிந்த + மிச்சில்.]

நீரொடை *nīr-oḍai,* பெ. (n.) *நீருடை2* பார்க்க; see *nīr-uḍai.* (சா.அக.).

[நீருடை → நீரொடை.]

நீரொலி *nīroli,* பெ. (n.) நீரலையின் ஓசை; water noise. பெருமிதம் என்பது கரைகடவா நீரொலி போன்றது. தற்பெருமை என்பது உள்ள நீரையும் வற்றச் செய்து கரையைப் புரைப்படுத்தும் கதிர்ச்சூடு போன்றது. (உ.வ.)

[நீர் + ஒலி.]

நீரொவ்வாமை *nīr-ovvāmai,* பெ. (n.) *நீர்ப்பகை* பார்க்க; see *nīr-p-pagai.*

[நீர் + ஒவ்வாமை.
உல் → ஒல் → ஒவ் → ஒவ்வு + ஆ + மை.]

நீரொழுக்கு¹ *nīr-oḻukku,* பெ. (n.) **1.** துளையினின்று நீரொழுகும் ஒழுக்கு; leakage through a hole. **2.** வானின்று பெய்யும் மழை; rain.

[நீர் + ஒழுக்கு.]

நீரொழுக்குச் சிறுத்திருப்பின் பெய்தலென்றும் திரண்டிருப்பின் பொழிதலென்றும் சொல்லப்படும்.

நீரொழுக்கு² *nīr-oḻukku,* பெ. (n.) *நீரிழிவு* பார்க்க; see *nīr-iḻivu.*

[நீர் + ஒழுக்கு.]

நீரொற்றி *nīr-oṟṟi,* பெ. (n.) நீரை ஒற்றி யுலர்த்தும் பொறி; desiccator.

[நீர் + ஒற்றி.]

நீரோசை *nīr-ōšai,* பெ. (n.) **1.** கொண்டாட்டம்; festivity, joviality. **2.** மகிழ்ச்சி; delight, joy, enjoyment, gratification.

[நீர் + ஓசை.]

நீரோட்டஆற்றல் *nīrōṭṭa-āṟṟal,* பெ. (n.) இயங்கு நீரின் ஆற்றல்; flow energy.

[நீர் + ஓட்டம் + ஆற்றல்.]

நீரோட்டம்¹ *nīr-ōṭṭam,* பெ.(n.) **1.** ஓடும் நீர் (நாமதீப.80.); running water, current. **2.** மணியின் உள்ளொளி; lustre or water of a gem. **3.** நீர் செல்லுங்கால்; rivulet, channel.

[நீர் + ஓட்டம்.]

நீரோட்டம்² *nīrōṭṭam,* பெ. (n.) **1.** (கடல், ஆறு போன்றவற்றில்) வெளியே தெரியாத, விசையோடு செல்லும் நீரின் இயக்கம்; current (in a river or sea). ***ஆற்றின் நடுவே நீரோட்டம் மிகுதியாயிருக்கும் விழிப்பாய் நீந்த வேண்டும்.*** (உ.வ.)

[நீர் + ஓட்டம்]

நீரோட்டம்³ *nīrōṭṭam,* பெ. (n.) **2.** (உரூவாத் தாள், தாள் முதலியவற்றில்) வெளிச்சத்திற்கு எதிராய்ப் பார்த்தால் மட்டுமே புலப்படக்கூடிய வகையில் அச்சடிக்கப் பட்டிருக்கும் உருவம் அல்லது எழுத்து; watermark (in a currency note, paper etc.).

[நீர் + ஓட்டம்.]

நீர் ஓடிய தாரையைப் போன்றிருப்பது.

நீரோட்டம்[4] *nirōṭṭam,* பெ. (n.) நாட்டின் பொதுத்தன்மை; common persptive. இந்தியாவின் எந்த மாநிலமும் தேசிய நீரோட்டத்திலிருந்து விலகிச் செல்வதை ஏற்கவியலாது எனக் குடியரசுத் தலைவர் தனது குடியரசுநாள்விழா உரையில் வலியுறுத்திக் குறிப்பிட்டார். (உ.வ.). இளைஞர்கள் தேசிய நீரோட்டத்தில் பங்கு பெற வேண்டுமென இந்தியத் தலைமை யமைச்சர் தனது பொழிவில் குறிப்பிட்டார். (உ.வ.).

[நீர் + ஓட்டம்.]

ஓடும் நீர் ஒரே திசைநோக்கிச் செல்வது போன்று நாட்டுமக்கள் அனைவரும் ஒருபோகாய்ச் செல்வதைக் குறித்து வந்த சொல்.

நீரோட்டவலை *nirōṭṭa-v-alai,* பெ. (n.) *நீரின் மேற்பரப்பு அசையா நிற்க கீழ்பரப்பின் நீரின் ஓட்டம்* current in the lower part of the sea or river.

[நீர் + ஓட்டம் + அலை.]

நீரோட்டு *nir-ōṭṭu,* பெ. (n.) *நீரோட்டம்* பார்க்க; see *nir-ōttam.*

[நீரோட்டம் → நீரோட்டு.]

நீரோடட்டிக்கொடு–த்தல் *nirōḍaṭṭi-k-koḍu,* 4 செ.குன்றாவி. (v.t.) தனக்குரியதைப் பிறருக்குத் தாரைவார்த்துக் கொடுத்தல்; to make gifts by pouring water on the right hand of the donee. “இருநூறு பறை செய்து நெல் ஆண்டு வரை கொடுப்பதாகப் பொதுவாள் கையில் நீரோடட்டிக் கொடுத்தான்” (மாம்பள்ளிக் கல்வெட்டு– தி.தொ.4:1).

[நீரோடு + அட்டி + கொடு. அட்டு = பொருந்து. அட்டு → அட்டி.]

நீரோடி[1] *nir-ōḍi,* பெ. (n.) **1.** மதகு; sluice, conduit. **2.** நீரோடும் உள்வாய்; bed of a stream.

[நீர் + ஓடி.]

நீரோடி[2] *nir-ōḍi,* பெ. (n.) கூரைக் கூடல்வாய் (வின்.); gutter of a roof.

[நீர் + ஓடி.]



நீரோடுகால் *nir-ōḍu-kāl,* பெ. (n.) **1.** கால்வாய்; water course, canal. **2.** ஊரில் நீர் வடிந்து செல்லுந் தாழ்ந்த நிலம் (R.T.); low lands into which the rain water of a village discharges itself.

[நீர் + ஓடு + கால்.]

நீரோடை[1] *nir-ōḍai,* பெ. (n.) **1.** *நீரோடுகால்,* (வின்.) பார்க்க; see *nir-ōḍu-kāl.* **2.** நீர்நிலை (குஞ்சை); pond.

[நீர் + ஓடை.]

நீரோடை[2] *nir-ōḍai,* பெ. (n.) (பெரும்பாலும்) இயற்கையாக ஆற்றிலிருந்து பிரிந்து வரும் சிறிய நீர் வழி; stream or rivulet.

[நீர் + ஓடை.]

நீரோது—தல் *nīr-ōdu-,* 5 செ.கு.வி. (v.i.) பேற்றுக்கால வேதனையிலிருக்கும் பெண்டிர் முதலியோருக்குக் கொடுக்க நீரை மந்திரித்தல்; to consecrate water by mantras, for being given to a woman in labour.

[நீர் + ஓது—,]

நீரோம்பல்[1] *nīr-ōmbal,* பெ. (n.) 1. பூமருது; flowering murdah. 2. நீர்க்கடம்பு; water cadamba.

[நீர் + ஓம்பல்.]

நீரோம்பல்[2] *nīr-ōmbal,* பெ. (n.) பேய்க்கடுக்காய் (கதி.அக.); crape myrtle.

[நீர் + ஓம்பல்.]

நீரோருகம் *nīrōrugam,* பெ. (n.) தாமரை; lotus. (சா.அக.).

நீல்[1] *nīl,* பெ. (n.) 1. நீலம்; blue. "*நீனிற மஞ்ஞையும்*" (சிலப்.12:34.). "*நீனெய் தாழ் கோதையவர் விலக்க நில்லாது*" (பரிபா.11:124.). 2. கறுப்பு (சூடா.): black. 3. அவுரி; common indigo. 4. கருங்குவளை; blue helumbo. "*நீலிதழுண் கண்ணாய்*" (கலித்.33:28.).

pkt. nīl.

நீல்[2] *nīl,* பெ. (n) 1. காற்று; wind. 2. (வாதக்) *வளிக்கூறுள்ள நோய்* (தைலவ. பாயி.42); diseases in which the vadam element is predominant.

நீலஒளி *nīlaoḷi,* பெ. (n.) நீல நிறம்; blue glow.

[நீலம் + ஒளி.]

நீலஒளிர்வு *nīla-oḷirvu,* பெ. (n.) *நீலஒளி* பார்க்க; see *nīla-oḷi.*

[நீலம் + ஒளிர்வு]

நீலக்கச்சு *nīla-k-kaccu,* பெ. (n.) நீலநிறத்துணி; blue cloth. "*நிறங்கவர்பு புனைந்த நீலக்கச்சினர் மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர் நிலனகழுளியர் கலனசைஇக் கொட்கும் கண்மாறாடவ ரொடுக்க மொற்றி*" (மதுரைக்.639—42.).

[நீலம் + கச்சு.]

நீலக்கச்சை *nīla-k-kaccai,* பெ. (n.) நீலநிறத்துணி; blue cloth. "*நீலக்கச்சைப் பூவாராடைப் பலிக்கண்ணிப் பெருந்தகை மறவன்*" (புறநா.274.).

[நீலம் + கச்சை.]

நீலக்கட்டி *nīla-k-kaṭṭi,* பெ. (n.) அவுரிச்சாயக் கட்டி (வின்.); lumps of indigo due.

[நீலம் + கட்டி.]

நீலக்கடம்பை[1] *nīla-k-kaḍambai,* பெ. (n.) நீலநெல்லி; lowly nelly madras phyllanthus. (சா.அக.).

[நீலம் + கடம்பை.]

நீலக்கடம்பை[2] *nīla-k-kadambai,* பெ. (n.) பூலா என்னுஞ் செடி வகை; a common weed, black-berried feather foil.

[நீலம் + கடம்பை.]

நீலக்கடிப்பிணை *nīlakkaḍippiṇai,* பெ. (n.) குதம்பை போல்வதோர் அணி (சீவக நாமக.266,உரை.) (கதி.அக.); an ornament like gudambai.

[நீலம் + கடிப்பு + இணை.]

நீலக்கத்தரி[1] *nīla-k-kattari,* பெ. (n.) வழுதுணை வகை; New York purple brinjal. (சா.அக.).

[நீலம் + கத்தரி.]

நீலக்கத்திரி[2] *nīla-k-kattiri,* பெ. (n.) *நீலக்கத்தரி* பார்க்க; see *nīla-k-kattari.*

நீலக்கத்தரி → நீலக்கத்திரி. (கொ.வ.).

நீலக்கபித்தம் *nīla-k-kapittam,* பெ. (n.) மாங்காய்; mango mangifera indica. (சா.அக.).

நீலக்கல் *nīla-k-kal,* பெ. (n.) நீலமணி; sapphire.

[நீலம் + கல்.]

நீலக்கள்ளி *nīla-k-kaḷḷi,* பெ. (n.) அறுகோணக்கள்ளி; six angled torch light-cercus hexagonus. (சா.அக.).

[நீலம் + கள்ளி.]

நீலக்களக்கட்டான் *nīla-k-kaḷa-k-kaṭṭāṉ* பெ. (n.) ஒருவகை பூண்டு; a kind of plant.

[நீலம் + களம் + கட்டான்.]

நீலக்காக்கட்டான் *nīla-k-kākkaṭṭāṉ,* பெ. (n.) *நீலக்காக்கணம்* பார்க்க; see *nīla-k-kākkaṇam.*

[நீலம் + கா + கட்டான்.]

நீலக்காக்கணம் *nīla-k-kākkaṇam,* பெ. (n.) காக்கணங்கொடி வகை; mussell-shell creeper.

[நீலம் + காக்கணம்.]

நீலகாம்போதி *nīlakāmpōdi,* பெ. (n.) பண்வகை (பாரத நாக.பக்.103.); a specific melody-type.

[நீலம் + காம்போதி.]

நீலக்காரம் *nīla-k-kāram,* பெ. (n.) துரிசு (யாழ்.அக.); blue vitriol, verdigris.

[நீலம் + காரம்.]

நீலக்காலி[1] *nīla-k-kāli,* பெ. (n.) அவுரி (வின்.); common indigo.

[நீலம் + காலி.]

நீலக்காலி[2] *nīla-k-kāli,* பெ. (n.) நண்டுவகை (யாழ்.அக.); a kind of crab.

[நீல + காலி.]

நீலக்காலிநண்டு *nīla-k-kāli-naṇḍu,* பெ. (n.) *நீலக்காலி* 2 (வின்.) பார்க்க; see *nīla-k-kāli.*

[நீலம் + காலி+ நண்டு.]

நீலக்கிரந்தை *nīla-k-kirandai,* பெ. (n.) கிரந்தை வகை; vishnu's basil - sphaeranthus indicus. (சா.அக.).

[நீலம் + கிரந்தை.]

நீலக்குடி *nīla-k-kuḍi,* பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர்; a village in Tanjavur dt.

"*கல்லினோடெனைப் பூட்டியமண்கையர் ஒல்லை நீர்புக நூக்கி வென் வாக்கினால் நெல்லு நீள் வயனீலக் குடியரன் நல்ல நாம நவிற்றி யுய்ந்தேனன்றே*" (அப்பர்.18–7.).

[நீலம் + குடி.]

'நீலகண்டன் குடி' யெனச் சுட்டப்பட்டுப் பின்னர் நீலன்குடி ஆகி, பின்னர் நீலக்குடியெனத் திரிந்தது. பின்னர் இன்றைய *'தென்னலக்குடி'* என்று திசையைக் குறித்து அழைக்கப்படுகிறது.

நீலக்குதம்பை *nila-k-kudambai,* பெ. (n.) காதணி வகை. a kind of ear's ornament. "*முகப்பிற்கட்டின இந்திரநீலத்திடையிடையே பயிலக்கட்டின வயிரங்களால் அழகுபெற்ற நீலக்குதம்பையை வடிந்த காதினிடத்தே அழகு மிகும்படி அணிந்தென்க*" (சிலப்.6:103,உரை.).

[நீலம் + குதம்பை.]

நீலக்குமிழ் *nila-k-kumil,* பெ. (n.) குமிழ்க் கொடி; small cashmere tree - gmelina asiatica alias gordonia obtrosa. (சா.அக.).

[நீலம் + குமிழ்.]

நீலக்குருத்து *nila-k-kuruttu,* பெ. (n.) மூவிலைக்குருத்து; three leaved wild lime-Trichilia spinosa. (சா.அக.).

[நீலம் + குருத்து.]

நீலக்கொடி *nila-k-kodi,* பெ. (n.) கருங்குவளை; blue Indian water lily, blue nelumbo - monochoria vaginalis. (சா.அக.).

[நீலம் + கொடி.]

நீலக்கொடிவேலி *nila-k-kodi-vēli,* பெ. (n.) நீலசித்திரமூலம்; blue flowered lead wort-plum bago-capensis.

[நீலம் + கொடிவேலி.]

நீலக்கொடுவேலி *nila-k-koduvēli,* பெ. (n.) கொடுவேலிவகை; blue-flowered leadwort.

[நீலம் + கொடுவேலி.]

நீலக்கொண்டி *nila-k-kondi,* பெ. (n.) புல்லா மணக்கு; creeper ammanac small castor plant - sebastiana chamaciea. (சா.அக.).

[நீலம் + கொண்டி.]

நீலக்கொழுந்து *nila-k-kolundu,* பெ. (n.) மாழையை யுருக்கும் பொழுது நெருப்பில் காணப்படும் நீல வெளிச்சம்; a blue glow found when melting metals. (சா.அக.).

[நீலம் + கொழுந்து.]

நீலக்கோலன் *nila-k-kōlan,* பெ. (n.) காமன் (நாமதீப. 59.); cupid.

[நீலம் + கோலன்.]

நீலகண்டசிவாச்சாரியார் *nila-kanda-śivāccāriyār,* பெ. (n.) பிரமசூத்திரம் என்னும் நூலுக்குச் சிவபரமாக உரையெழுதியவர்: author of a šaiva commentary of on Brahmasūtra.

நீலகண்டபாடியம் *nila-kanda-pādiyam,* பெ. (n.) பிரமசூத்திரத்துக்கு நீலகண்ட சிவாச் சாரியார் இயற்றிய பேருரை; the šaiva commentary on Brahmasūtra by Nilakandacivācāriyur.

நீலகண்டம்¹ *nila-kandam,* பெ. (n.) சிவ பெருமானுடைய நஞ்சு தங்கிய கண்டம்; neck of šivan, as blue from poison. "*சிவனெந்தை கண்டந்தன்னைத் திருநீல கண்டமென்பார்*" (பெரியபு. திருநீல.4.). "*நீலமணிமிடற் றொருவன்*

போல மன்னுக பெரும நீயே" (புறநா.91.). 2. மயில்; peacock as blue-throated. *"நீல கண்டந் தம்போல் நிமலன் படைத்திருந்த கோலம்"* (பூவண. உலா. 131.).

[நீலம் + கண்டம்]

நீலகண்டம்² *nīla-kaṇḍam,* பெ. (n.) 1. பெரு முள்ளங்கி; country raddish of a bigger variety-raphan us sativus. 2. காட்டுக்காடை; Indian jay-coracias indica. (சா.அக.).

நீலகண்டமந்திரம் *nīlakaṇḍa-mandiram,* பெ. (n.) சிவனிய மந்திரம்; a holy mandiram relating to šiva. (சா.அக.).

[நீலகண்டன் + மந்திரம்.]

நீலகண்டவாலை *nīlakaṇḍa-vālai,* பெ. (n.) மருந்துவகை (இ.வ.); a kind of medicine.

[நீலகண்ட + வாலை.]

நீலகண்டன் *nīla-kaṇḍaṉ,* பெ. (n.) 1. சிவன் (திவா.); šiva, as having azure-coloured neck. *"நீற்ற ரேற்றா் நீலகண்டா்"* (தேவா.187.2.). 2. *நீலக்காரம்* (மூ.அ.) பார்க்க; see *nīla-k-kāram.* 3. முருங்கை; horse radish tree. 4. நஞ்சு; a prepared arsenic.

[நீலம் + கண்டன்.]

நீலகண்டனிலை *nīlakaṇḍaṉ-ilai,* பெ. (n.) வெற்றிலை; betel leaf; piper betle. (சா.அக.).

[நீலம் + கண்டன் + இலை.]

நீலகண்டி *nīla-kaṇḍi,* பெ. (n.) 1. கொற்றவை; koṟṟavai; Durga. 2. பொல்லாதவள் (வின்.); cruel woman. 3. பாம்பின் நச்சுப் பற்களு ளொன்று (வின்.); a poison fang of a snake.

[நீலம் + கண்டி.]

நீலகந்தி¹ *nīla-kandi,* பெ. (n.) நீலமலர், குவளை, (சிலப்.14:182, உரை.); a kind of blue flower.

[நீலம் + கந்தி.]

நீலகந்தி² *nīla-kandi,* பெ. (n.) மாணிக்கவகை (சிலப்.14:186,உரை.); a kind of precious stone.

நீலகம் *nīlagam,* பெ. (n.) 1. காருப்பு; salt produced from sasamum seed. 2. துரிசு (1,2 வைத்திய பரிபா.); fault. (கதி.அக.).

[நீலம் + அகம்.]

நீலகமலம் *nīla-kamalam,* பெ. (n.) கருங்குவளை (மலை.); blue nelumbo.

[நீலம் + கமலம்.]

நீலகாந்தி *nīlagāndi,* பெ. (n.) 1. ஒருவகை நீலப்பூ; a kind of azure blue flower. 2. நீலம்; sapphire. 3. நீலவொளி; blue brilliancy. 4. ஒருவகைக் கண்ணோய்; a kind of eye disease affecting the pupil. (சா.அக.).

நீலகாசம் *nīlakāšam,* பெ. (n.) *கண்ணின் கருவிழியை பற்றிய கண்ணோய்;* a disease relating to the black of the eye associated with the affection of the lens. (சா.அக.). 2. கருவிழிநோய் வகை (வின்.); a disease of the eye.

நீலகிரி *nilagiri*, பெ. (n.) *நீலமலை* பார்க்க; see *nila-malai*. "*நீலகிரியி னெடும்புறத் திறுத்தாங்கு*" (சிலப்.26:85.).

[நீலம் + கிரி. skt. கிரி த. மலை நீலகேரி → நீலகிரி என்றுமாம். சேரி = சேர்ந்து வாழுமிடம். சேரி → கேரி.]

நீலகிரிச்சண்பகம் *nilagiri-c-canbagam*, பெ. (n.) *நீலமலைச்சண்பகம்* பார்க்க; see *nilamalai-c-canbagam*..

[நீலகிரி+ சண்பகம். நீலமலை → நீலகிரி.]

நீலகேசி *nilakēši*, பெ. (n.) ஐஞ்சிறு காப்பியங்களுளொன்று; one of five small epic, aiñjiru-kappiam.

[நீலம் → நீலகேசி.]

இக்காப்பியத்தை நீலம் என்று வழங்கின ரென்பது, "*தருக்கமாவன—ஏகாந்த வாதமும் அநேகாந்த வாதமுமென்பன. அவை, நீலம், பிங்கலம், அஞ்சனம், தத்துவ தரிசனம், காலகேசி முதலிய செய்யுட்களுள்ளும் சாங்கியம் முதலிய ஆறு தரிசனங்களுள்ளும் காண்க*" என வரும் யாப்பருங்கல விருத்தியின் குறிப்பாலறியலாம்.

இன்னும் யாப்பருங்கல விருத்தியிலேயே "*சிந்தாமணி, சூளாமணி, குண்டலகேசி, நீலகேசி, அமிருதபதி என்பவற்றின் முதற்பாட்டு வண்ணத்தான் வருவன*" என வரும் குறிப்பினால் நீலம், நீலகேசி என்னும் இருவகைப் பெயர்களால் அந்நூலாசிரியர் காலத்திலேயே வழங்கப் பட்டன என்பதும், சமய திவாகரர் வகுத்த இந்த நீலகேசியின் பழைய உரை நூலின்கண் சருக்கம்தோறும் இறுதியில் நீலகேசித்திரட்டு என்று இந்நூல் குறிப்பிடப்படுகின்றமையால் நீலகேசித்திரட்டு என்றும் வழங்கப்பட்டதென்று ணரலாம்.

இனி, இந் நூற்றலைவியாகிய நீலகேசியை நோக்கி அவள் ஆசிரியராகிய முனிச்சந்திரபட்டாரகர் "*நங்காய்! இனி நீ கடல் நாட்டிற் சினவரன் நெறியே தெருட்டு*" என்று பணிப்ப, நீலகேசியும் அப்பணி தலைமேற் கொண்டு பல நாட்டினும் சென்று அச்சினவரன் நெறியே தெருட்டுகின்றாள் ஆதலின் இந்நூல், தொடக்கத்தில் '*நீலகேசித் தெருட்டு*' என வழங்கப்பட்டு நாளடைவில் தெருட்டு என்னும் சொல்லே திரட்டு என்று திரிந்துவழங்குவதாயிற்றென்று நினைத்திற்கும் இடமுண்டு.

பௌத்த சமயத்தைச் சார்ந்த குண்டலகேசி ஆசிரியர் தம் பெருங்காப்பியத்துள் தமது சமயச் சிறப்பை உலகினர்க்குணர்த்தற் பொருட்டேயுமன்றி அக்காலத்தே ஆருகதர் தம் பௌத்த சமயத்தோடு இகலித் தமது சமயத்தைப் பரப்புவதில் பெரிதும் முனைந்திருந்தமையால் அவ் வாருகத சமயச் சான்றோர் கொள்கைகளைக் குற்றங்கூறி அச்சமயத்தை வீழ்த்துவதனையே சிறப்பான குறிக்கோளாகக் கொண்டிருந்தன ரென்பதும் இந்நீலகேசி யாலறிய வருகின்றது. குண்டல கேசியின் பல கூற்றுகள் ஆருகத சமயக் கணக்கர்கள் உள்ளத்தைப் புண்படுத்து மளவிற்கு ஆற்றல் பெற்றிருந்தன வென்பதும், இவ்வாற்றால் மனம் புண்பட்ட இந்நீலகேசியின் ஆசிரியர் தாம் குண்டலகேசியின்கண் தமது ஆருகத சமயத்திற்குக் கூறப்பட்டிருந்த குற்றங்கட் கெல்லாம் தீர்வு காட்டுவதோடன்றி அப் பௌத்த சமயத்துக் கொள்கைகள் பெரிதும் குற்றமுடையனவென்று உலகினர்க்கு அம்பலப்படுத்தி, மேலும் தமது ஆருகத சமயமே சாலச்சிறந்த மெய்ச்சமயமாம் ஆதலால் இதன்கண் சேரவாரும் செகத்தீரே என்று அழைத்துத் தமது சமயத்தைப் பரப்ப வேண்டுமென்று கருதியவராய் நெடுநாள் நீள நினைத்து அக்கருத்தையெல்லாம் இந்நீலகேசி எனும் நூல்வழியாய்ப் பெரிதும் திறம்படவே செய்து நிறைவேற்றினாரென்பதும் தெரிய வருகின்றது. இவ்வாற்றால் இந்நூல்

'பிறன்பழி கூறுவான் தன்பழியுள்ளும் திறன்தெரிந்து கூறப்படும் என வரும் திருக்குறட்குச் சிறந்த எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்ற தெனலாம்.

இனி, தெய்வப்புலவர் திருவள்ளுவனார் '*கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்*' எனச் சொல்லிற்கு இலக்கணம் கூறிப் போந்தார். இக் குறட்பாவிலுள்ள கேளார் என்பதற்குப் பகைவர் என்பது பொருளாகும். பகைவரும் கேட்க விரும்பும் பெற்றிமை யுடையனவாகச் சொற்கள் அமைதல் வேண்டும் என்பது தெய்வப் புலவரின் கருத்தாகும். இந்நீலகேசி யாசிரியரின் சொல்வன்மை அத்தகையதே என்பது மிகையன்று. மேலும் இவர் செய்யுள் செய்வதினும் பேராற்றல் வாய்ந்தவர் என்பதனை இந்நூலிற் றிகழும் அவர்தம் செய்யுள்கள் நன்கு புலப்படுத்துகின்றன. மெய்யியல் (தத்துவ) நூல் பெரும்பாலும் சுவையற்ற னவாகவே இருப்பதுதான் இயல்பு. இப்புலவர் பெருமான் இத்தத்துவ நூலைப் பெருங் காப்பியத்திற்குரிய நகை முதலிய சுவையெல்லாம் கெழுமச் செய்திருக்கின்ற செயற்கைத் திறம் பெரிதும் போற்றற்பாலதாம்.

இத்தகைய சிறந்த நூலை யாத்தருளிய நல்லிசைப் பெரும் புலவர் யாவர், எவ்வூரினர், எந்நாட்டினர், எக்காலத்தினர் அவர்பெயர் யாதென்பன போன்ற வினாக்களுக்கெல்லாம் விடை யிறுத்தலரிதாம்.

நீலகேசித்திரட்டு *nīlakēši-t-tiraṭṭu,* பெ. (n.) *நீலகேசி* பார்க்க; see *nīlakēši.*

[நீலகேசி + திரட்டு.]

நீலகேசித்தெருட்டு *nīlakēši-t-teruṭṭu,* பெ. (n.) *நீலகேசி* பார்க்க; see *nīlakēši.*

[நீலகேசி + தெருட்டு
திரட்டு → தெருட்டு.]

நீலங்கட்டு—தல் *nīlaṅ-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** நீலச்சாயந் தோய்த்தல் (வின்.); to dye a cloth with indigo. **2.** பொய் கற்பித்தல் (யாழ்ப்); to invent a lie.

[நீலம் + கட்டு—,]

நீலங்கம் *nīlaṅgam,* பெ. (n.) வாழைவகை (G.sm, D.I.i,**215.**); a kind of plantain.

நீலச்சம்பா *nīla-c-cambā,* பெ. (n.) *நீலநெல்* (இ.வ.) பார்க்க; see *nīlanel.*

[நீலம் + சம்பா.]

நீலச்சால் *nīla-c-cāl,* பெ. (n.) நீலச்சாயம் ஊறவைக்கும் சால்; the pot or jar in which indigo dye is kept.

[நீலம் + சால்.]

நீலச்சிகை *nīla-c-cigai,* பெ. (n.) நீலச் சிகைப்பூடு; blue crest plant-plumpego zeylanica. (சா.அக.).

[நீலம் + சிகை.]

நீலச்சித்திரமூலம் *nīla-c-cittiramūlam,* பெ. (n.) *நீலக்கொடிவேலி* பார்க்க; see *nīla-k-koḍivēli.* (சா.அக.).

[நீலம் + சித்திரமூலம்.]

நீலச்சுறா *nīla-c-curā,* பெ. (n.) சுறாமீன்வகை; a kind of sea-fish. "*நீலச்சுறா பிறழ்வ போன்ற*" (களவழி.**9.**).

[நீலம் + சுறா.]

நீலச்சூலி *nīla-c-cūli,* பெ. (n.) *நீலக்குருத்து* பார்க்க; see *nīla-k-kuruttu.* (சா.அக.).

[நீலம் + சூலி.]

நீலச்செடி *nīla-c-ceḍi,* பெ. (n.) சேங்கொட்டை மரம்; marking nut tree.

[நீலம் + செடி.]



நீர்முள்ளி

நீலக்கொடிவேலி

நீர்த்திப்பிலி

நீலச்செம்முள்ளி *nila-c-cemmuḷḷi,* பெ. (n.) 1. வெள்ளை நீலாம்பரம் (A.); crested purple nail dye. 2. செடிவகை; shining sepalled blue nail dye.

[நீலம் + செம்முள்ளி.]

நீலஞ்சம்பா *nilañ-cambā,* பெ. (n.) காஞ்சிபுரம் மாவட்டத்தில் விளையுஞ் சம்பா நெல்வகை; a kind of campā paddy, raised in the Kanjeepuram district.

[நீலம் + சம்பா.]

நீலஞ்சூத்திரன் *nilañšūttiraṉ,* பெ. (n.) ஒன்பான் மணியுளொன்று; a kind of white stone - lupis lazuli. (சா.அக.).

நீலஞ்சோதி *nilañ-jōdi,* பெ. (n.) 1. திருகு கள்ளிவேர்; the root of the twisting spuoge tree. 2. இருளில் ஒளிரும் மரம்; a tree luminous in the dark. 3. கற்பவகையிலொன்று; one of the classified rejuvenating drugs. 4. புல்லூரி; a parasitic plant. Loranthus genus.

நீலத்தாமரை *nila-t-tāmarai,* பெ. (n.) கருங் குவளை; blue nelumboo.

[நீலம் + தாமரை.]

நீலத்திருவாத்தி *nila-t-tiru-v-ātti,* பெ. (n.) மந்தாரை (இ.வ.); purple mountain ebony.

[நீலம் + திருவாத்தி.]

நீலத்தொட்டி *nila-t-tōṭṭi,* பெ. (n.) *நீலச்சால்* (இ.வ.) பார்க்க; see *nila-c-cāl.*

[நீலம் + தொட்டி.]

நீலதரு *nila-taru,* பெ. (n.) தென்னை (மூ.அ.); common cocoanut.

[நீலம் + தரு.]

நீலந்தன் *nilandaṉ,* பெ. (n.) பாணன் (அக.நி.); bard.

நீலந்தீர்—தல் *nilan-tir-,* 4 செ.கு.வி. (v.i.) நீலச் சாயந் தோய்தல் (யாழ்.அக.); to be dyed or tinged with indigo.

[நீலம் + தீர்–,]

நீலநாகம் *nila-nāgam,* பெ. (n.) கருநாகம்; cobra. "*நீலநாகம் பைவிரித்தன்ன*" (பெருங். இலாவாண.15:142.).

[நீலம் + நாகம்.]

நீலநாரை *nila-nārai,* பெ. (n.) நாரைவகை (M.M. 907.); Indian bastard.

[நீலம் + நாரை.]



நீலநிர்க்குண்டி *nila-nirkkuṇḍi,* பெ. (n.) நீல நொச்சி; blue notchy-justica gendarussa. (சா.அக.).

[நீலம் + நிர்க்குண்டி.]

நீலநெல் *nīla-nel*, பெ. (n.) கார்நெல்; a kind of paddy. '*நீலநெல்லரி கூலிகொண் டுண்ணுநாள்*' (பெரியபு. அரிவாட்.10.).

[நீலம் + நெல்.]

நீலநொச்சி *nīla-nocci*, பெ. (n.) *நீல நிர்க்குண்டி* பார்க்க; *see nīla-nirkkuṇḍi*. (சா.அக.).

[நீலம் + நொச்சி.]

நீலப்படாம் *nīla-p-paḍām*, பெ. (n.) இருள் (சிலப்.5:4, உரை.); darkness.

[நீலம் + படாம்.]

நீலப்பணி *nīla-p-paṇi*, பெ. (n.) நீலச்சாய மிடுந் தொழில்; work of dyeing with indigo.

[நீலம் + பணி.]

நீலப்பறவை *nīla-p-paṟavai*, பெ. (n.) மயில்; peacock, as blue coloured. "*நீலப் பறவைமே னேரிழை தன்னொடும்*" (சிலப். 24.15.).

[நீலம் + பறவை.]

நீலப்பிசின் *nīla-p-pišiṉ*, பெ. (n.) கற்பூரமரம்; camphor tree, blue gum-eucalyptus genus. (சா.அக.).

[நீலம் + பிசின்.]

நீலப்புகார் *nīla-p-pugār*, பெ. (n.) அழுத்தமாகப் படியாத நீலச் சாயம் (வின்.); faint blue-dye.

[நீலம் + புகார்.]

நீலப்புடவை *nīla-p-puḍavai*, பெ. (n.) *நீலப்புடைவை* பார்க்க; see *nīla-p-puḍaivi.*

[நீலம் + புடவை.]

நீலப்புடைவை *nīla-p-puḍaivai*, பெ. (n.) காங்குச்சீலை (வின்.); blue saree.

[நீலம் + புடைவை.]

நீலப்புறா *nīla-p-puṟā*, பெ. (n.) கோயிற் புறா; blue rock pigeon-colomba intermedia. (சா.அக.).

[நீலம் + புறா.]

நீலப்பைங்குடம் *nīla-p-paiṅguḍam*, பெ. (n.) பச்சைக்குப்பி; blue green jar. "*நீலப் பைங்குடந் தொலைச்சி*" (பெரும்பாண். 382.).

[நீலம் + பை + குடம்.]

நீலப்பைஞ்சுனை *nīla-p-paiñjuṉai*, பெ. (n.) நீலப் பூவினையுடைய பசிய சுனை; blue flowered spring. "*நிவந்த போல் இமயத்து நீலப் பைஞ்சுனை*". (பரிபா. 5:47.).

[நீலம் + பை + சுனை.]

நீலப்பைம்போது *nīla-p-paimpōdu*, பெ. (n.) நீலமாகிய பசிய மலர்; blue-green flower. "*வாராராயினும் வரினும் அவர்நமக்கு யாராகியரோ தோழி நீர நீலம்பைப்போ துளரிப் புதல்*" (குறுந்.110.).

*[நீலம் + பைம்போது
நீலம் = கருங்குவளை.]*

நீலப்போது *nīla-p-pōdu,* பெ. (n.) குவளை மலர்; nelumbo flower. "*மாதரார் கண்ணு மதிநிழனீ ரிணைகொண்டு மலர்ந்த நீலப் போது மறியாது வண்டூச லாடும் புகரே யெம்மூர்*" (சிலப்.6:6.).

[நீலம் + போது]

நீலம்[1] *nīlam,* பெ. (n.) நீலமலர்; nelumbo-flower. "*ஊதை யவிழ்த்த வுடையிதழ் ஒண்ணீலம்*" (பரிபா.11:22.).

நீலம்[2] nīlam, பெ. (n.) தருப்பைப்புல், நாணல்; kaus the sacred grass; "*நீவந்தோங் கிமயத்து நீலப்பைஞ்சுனை*" (பரிபா.5:47.).

நீலம்[3] *nīlam,* பெ. (n.) **1.** நீலநிறம் (திவா.); blue azure or purple colour. **2.** நீலச்சாயம்; blue die, indigo. **3.** தொன்மணியு ளொன்று (பிங்.); sapphire. **4.** மாணிக்க வகை; a kind of gem. "*பதுமமு நீலமும்*" (சிலப்.14:186.). **5.** ஒன்பது செல்வத்துளொன்று; one of the nine treatise of Kubēra. (நாமதீப.387.); **6.** கருப்பு (திவா.); black colour. **7.** இருள் (திவா.); darkness. **8.** கருங்குவளை (திவா.); blue nelumbo. "*நீலமொடு நெய்த னிகர்க்குந் தண்டுறை யூரன்*" (ஐங்குறு.2.). **9.** நீல ஆடை; blue cloth. "*பூக்கரை நீலந் தழீஇ*" (கலித்.115.). **10.** நஞ்சு; poison. "*நீறேறு மேனியார் நீல முண்டார்*" (தேவா.226.9.). **11.** மருந்தாகப் பயன்படும் தாமிரக் காடிப் படிக அடை (மூ.அ.); verdigris. **12.** கண்ணிலிடும் மை; collyrium. "*நீல மிட்டகண் மடவியர் மயக்கால்*" (அருட்பா.ii,கருணைபெறாதிரங்.7.). **13.** *நீலமலை1* (பிங்.) பார்க்க; see *nīla-malai.* **14.** பனைமரம் (அக.நி.); palmyra tree. **15.** பழைய காசு வகை (நேமிநா. சொல்.10,உரை.); an old coin.

[நிழல்= சாயல், இருட்டு, நிழல் → நீழ் → நீல் → நீலம். நீர் → நீல் → நீலம் = கடலின் நிறம்.]

'nīla', of a dark colour; dark blue or black; darkness. Gt. (p.**522**) gives nīla the meaning of 'shade' and compares D.nel̠al (nil̠al) (KKEDXXVIII).

நீலம்[4] *nīlam,* பெ. (n.) நீலகேசி என்னும் பாவியம் (காப்பியம்); the epic Nīlakēši. "*தருக்கமாவன ஏகாந்தவாதமும் அநேகாந்த வாதமும் என்பன. அவை நீலம், பிங்கலம், அஞ்சனம் தத்துவதரிசனம், காலகேசி முதலிய செய்யுட்களுள்ளும் சாங்கிய முதலிய ஆறு தரிசனங்களுள்ளும் காண்க*" (யாப்.விருத். உரை.).

நீலம்[5] *nīlam,* பெ. (n.) (வெளுத்த வெள்ளைத் துணிகள் பளிச்சிடுவதற்காக நீரில் கரைத்துப் பயன்படுத்தும்) நீலநிறப் பொடி அல்லது நீர்மம்; laundering blue.

நீலம்பற்றவை– த்தல்[1] *nīlam-par̠r̠a-vai-,* 4 செ.கு.வி. (v.i.) கதைகட்டுதல்; to fabricate a story.

[நீலம் + பற்றவை–,]

துணிக்குச் சாயமேற்றுவதைப் போல கதை கட்டி விடுதல்.

நீலம்பற்றவை[2] **–த்தல்** *nīlam-par̠r̠a-vai-,* 4 செ.கு.வி. (v.i.) ஆடைக்கு நீலமேற்றுதல்; to dye a cloth with blue.

[நீலம் + பற்றவை–,]

நீலம்பாரி–த்தல் *nīlam-pāri-*, 4 செ.கு.வி. (v.i.) நச்சுயிரி தீண்டலால் உடம்பு நீலநிறமாதல் (இ.வ.); to become blue, as the face or eyes by poisonous bites. 2. இருளடைதல் (வின்.); to be darkened as the earth in an eclipse.

[நீலம் + பாரி.]

நீலம்பாலை *nīlam-pālai*, பெ. (n.) வெட்பாலை மரம் (L.); ivory tree.

நீலம்பாவி–த்தல் *nīlam-pāvi-*, 4 செ.கு.வி (v.i.) *நீலம்பாரி–*(நெல்லை.) பார்க்க; see *nīlam-pāri*

[நீலம் + பாவி
பாவு = பரவு
பாவு → பாவி.]

நீலம்பிடிபடு–தல் *nīlam-piḍipaḍu-*, 20 செ.கு.வி. (v.i.) கைகூடாமற் போதல்; to be impossible of accomplishment.

[நீலம் + பிடி + படு–,]

நீலம்பூரி–த்தல் *nīlam-pūri-*, 4 செ.கு.வி. (v.i.) *நீலம் பாரி–த்தல்* பார்க்க; see *nīlam-pāri-*,

[நீலம் + பூரி.]

நீலமண்டலம்[1] *nīla-maṇḍalam*, பெ. (n.) சிற்றீந்து (சங்.அக.); dwarf wild date-palm.

[நீலம் + மண்டலம்.]

நீலமண்டலம்[2] *nīla-maṇḍalam*, பெ. (n.) சிற்றீச்சை; small date fruit - phoenix farinifera. (சா.அக.).

[நீலம் + மண்டலம்.]

மண்டிலம் > மண்டலம்.

நீலமணல் *nīlamaṇal*, பெ. (n.) கருமணல்; black sand. (சா.அக.).

[நீலம் + மணல்.]

நீலமணி[1] *nīlamaṇi*, பெ. (n.) பனைமரம் (வைத்தியபரிபா.); palmyra tree.

[நீலம் + மணி.]

நீலமணி[2] *nīla-maṇi*, பெ. (n.) 1. *நீலம்* பார்க்க; see *nīlam*. *"நீலமணி மிடற்றொருவன்"* (புறநா.91.). 2. கருவிழி (வின்.); pupil of the eye. 3. தென்னை (சங்.அக.); cocoanut tree.

[நீலம் + மணி.]

நீலமணிகாசம் *nīlamaṇi-kāšam*, பெ. (n.) *நீலகாசம்* பார்க்க; see *nīla-kāšam*. (சா.அக.).

[நீலம் + மணிகாசம்.]

நீலமணிவண்ணன் *nīla-maṇivaṇṇaṉ*, திருமால் (சிலப்.6:54 உரை.); God Tirumāl.

[நீலம் + மணி + வண்ணன்.]

நீலமணிவோன் *nīlam-aṇivōṉ*, பெ. (n.) முருகக்கடவுள் (நாமதீப.32.); Lord Murugaṉ.

[நீலம் + அணிவோன்.]

நீலமந்தி *nīlamandi*, பெ. (n.) கருங்குரங்கு; black monkey -macacus silenus. (சா.அக.).

[நீலம் + மந்தி.]

நீலமருந்து *nīlamarundu*, பெ. (n.) அவுரி (மலை.); indigo.

[நீலம் + மருந்து.]

நீலத்தலைப் பூங்குருவி

நீலப் பூங்குருவி

நீலத் தாழைக் கோழி

நீளவால் இலைக்கோழி

நீல ஈப்பிடிப்பான்

நீலச்சிட்டு

நீலமல்லிகை *nīla-malligai,* பெ. (n.) **1.** *நீலமலிக்கம்* பார்க்க; see *nīlamalikkam.* **2.** நீலநிற மல்லிகை; blue jasmine-agle marmelos. (சா.அக.).

[நீலம் + மல்லிகை.]

நீலமலிக்கம் *nīlamalikkam,* பெ. (n.) வில்வம்; bael fruit tree - crataeva religiosa. (சா.அக.).

நீலமலை *nīla-malai,* பெ. (n.) கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள நீண்ட மலைத்தொடர்; a hill station near Coimbatore.

[நீலம் + மலை.]

நீலமலைச்சண்பகம் *nīlamalai-c-caṇbagam,* பெ. (n.) நீல மலையிலுண்டாகும் பெரிய மரம்; white stalked fruited tulip tree of The Nilgris.

[நீலமலை + சண்பகம்.]

நீலமலைத்தொடர் *nīla-malai-t-toḍar,* பெ. (n.) *நீலமலை* பார்க்க; see *nīla-malai.*

[நீலமலை + தொடர்.]

நீலமாதகம் *nīlamādagam,* பெ. (n.) கையாந்த கரை; eclipse plant. eclypta-prostrata. (சா.அக.).

நீலமார்க்கம் *nīlamārkkam,* பெ. (n.) கையாந்தகரை; eclipse plant-eclypta prostrata. (சா.அக.).

[நீல + மார்க்கம்.]

நீலமீலிகை *nīla-mīligai,* பெ. (n.) மின்மினிப் பூச்சி (யாழ்.அக.); fire fly.

[நீலம் + மீலிகை.]

நீலமுள்ளி *nīla-muḷḷi,* பெ. (n.) செடிவகை (c.); fragrant sky bule.

[நீலம் + முள்ளி.]

நீலமெடு—த்தல் *nīlam-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) அவுரியிலிருந்து நீலச்சாயம் உண்டாக்குதல்; to extract blue dye from the indigo.

[நீலம் + எடு—,]

நீலமென்சிறை *nīlameṉ-śiṟai,* பெ. (n.) நீலநிறமுடைய மெல்லிய சிறகு; blue-coloured feather. "*நீலமென்சிறை வள்ளுகிர்ப் பறவை நெல்லியம்புளிமாந்தியயலது முள்ளி லம்பணை மூங்கிற் றூங்கும்*" (குறுந். 201.).

[நீலம் + மென்சிறை]

நீலமேகநோய் *nīla-mēga-nōy,* பெ. (n.) குருதி யோட்டக் குறைவினாலும் குருதி தூய்மைப் படாமையாலும் உடலை நீலநிறமாகச் செய்யும் நோய்; a disease in which the body is rendered blue or has a blue tint arising either from imperfect circulation of the blood or due in sufficient oxygenation of the blood-cyanosis, blue disease. (சா.அக.).

நீலமேகம்¹ *nīlamēgam,* பெ. (n.) கார்முகில்; dark clouds. "*நீலமேக நெடும்பொற் குன்றத்துப் பால்விரிந் தகலாது படிந்தது போல*" (சிலப். 11:35.).

[நீலம் + மேகம்.]

நீலமேகம்² *nīla-mēgam,* பெ. (n.) *நீலமேக நோய்* பார்க்க; see *nīla-mēga - nōi.* (சா.அக.).

[நீலம் + மேகம். மேகம் = மேகநோய்.]

நீலமேகரோகம் *nīla-mēga-rōgam,* பெ. (n.) *நீலமேகம்²* பார்க்க; see *nīlamēgam.*

நீலமேகன் *nīla-mēgaṉ,* பெ. (n.) *நீலமேனியன்,* 1. பார்க்க; see *nīlamēṉiyaṉ.*

[நீலம் + மேகன்.]

நீலமேனிநெடியோன் *nīla-mēṉi-neḍiyōṉ,* பெ. (n.) (நீலமணிபோலும் நிறத்தையுடைய நெடிய) திருமால்; Tirumal. ***"வால்வளை மேனி வாலியோன் கோயிலும் நீலமேனி நெடியோன் கோயிலும்"*** (சிலப். 5:171.).

[நீலம் + மேனி + நெடியோன்.]

நீலமேனியன் *nīla-mēṉiyaṉ,* பெ. (n.) 1. திருமால்; Tirumāl. 2. *நீலக்காரம்* பார்க்க; see *nīla-k-kāram.*

[நீலம் + மேனியன்.]

நீலயானை *nīla-yāṉai,* பெ. (n.) இரவு; night. *"மாலை நெற்றி வான்பிறைக் கோட்டு நீல யானை மேலோர் இன்றி"* (மணிமே. 19:19.).

நீலர் *nīlar,* பெ. (n.) அரக்கர் (நாமதீப. 73.); rāksasas.

[நீலம்→நீலர்.]

நீலரோகம் *nīla-rōgam,* பெ. (n.) *நீலமேகம்²* பார்க்க; see *nīla-mēgam.*

[நீல + ரோகம்.]

நீலல்லி *nīlalli,* பெ. (n.) *நீலவல்லி* (இ.வ.) பார்க்க; see *nīla-v-alli.*

[நீலம் + அல்லி.]

நீலலோகிதம் *nīlalōgidam,* பெ. (n.) ஏகாதசருத்திரருள் ஒருவர் (திவா.); a rudra one of ēkātaca-rutti-rar. ***"கருமையும் செம்மையும் கலந்த வடிவம் சோதியுணீலலோகித நிலவு மேருவைப் போலு மிக்கதோர் புருடனிற்பதே"*** (சேதுபு. சிவதீர். 74.) (கதி.அக.).

[நீலம் + லோகிதம்.]

நீலவண்ணம் *nīla-vaṇṇam,* பெ. (n.) 1. நீல நிறம்; blue colour. 2. நீலச்சாயம் (வின்.); blue dye 3. தீப்பொழியும் முகில் (பிங்.); a cloud which rains fire.

[நீலம் + வண்ணம்.]

நீலவண்ணன் *nīla-vaṇṇaṉ,* பெ. (n.) 1. திருமால்; Tirumāl. 2. காரி; Saturn.

[நீலம் + வண்ணன்.]

நீலவண்ணான் *nīla-vaṇṇāṉ,* பெ. (n.) சாயக்காரன் (வின்.); dyer.

[நீலம் + வண்ணம் + ஆன்.]

நீலவல்லி *nīla-v-alli,* பெ. (n.) கருநெய்தல்; blue Indian water-lilly.

[நீலம் + அல்லி.]

நீலவல்லிக்கிழங்கு *nīla-v-alli-k-kiḻaṅgu,* பெ. (n.) நீல அல்லிக்கிழங்கு; bulb of nymphae stellata. (சா.அக.).

[நீல + அல்லி + கிழங்கு.]

நீலவழுதலை *nīla-vaḻudalai,* பெ. (n.) *நீலக் கத்தரி* பார்க்க; see *nīla-k-kattari.*

[நீலம் + வழுதலை.]

நீலகண்டன்

நீலமலைக் காட்டுப்புறா

நீலமலை ஈப்பிடிப்பான்

நீலமலைப் பூங்குருவி

நீலமலை நெட்டைக்காலி

நீலமலைச் சிரிப்பான்

நீலவழுதுணை *nīla-valudunai,* பெ. (n.) *நீலக்கத்தரி* (வின்.) பார்க்க; see *nīla-kattari.*

[நீலம் + வழுதுணை.]

நீலவிதானம் *nīla-vidāṉam,* பெ. (n.) நீலப்பட்டு மேற்கட்டியின் கீழ் நிறுத்திய பந்தல்; canopy. "*நீல விதானத்து நித்திலப் பூம்பந்தர்க் கீழ்*" (சிலப். 1:49.).

[நீலம் + விதானம்.]

நீலவூமத்தை *nīla-v-ūmattai,* பெ. (n.) ஊமத்தை வகை; bule thorn-apple.

[நீலம் + ஊமத்தை.]

நீலவேலி *nīla-vēli,* பெ. (n.) *நீலக்கொடி வேலி* பார்க்க; see *nīla-k-kodi-vēli.* (சா.அக.).

[நீலம் + வேலி.]

நீலன்[1] *nīlaṉ,* பெ. (n.) 1. காரி (திவா.); Saturn 2. கொடியவன்; wicked person. "*நிவர்த் தியவை வேண்டு மிந்த நீலனுக்கே*" (தாயு. பன்மாலை. 6.). 3. குரங்கு வீரன் (கம்பரா. தானை. 8.); a monkey chief in Rama's army. 4. குதிரைவகை (அசுவசா.); a horse with particular marks. 5. மாங்கனி வகை (இ.வ.); a variety of mango.

நீலன்[2] *nīlaṉ,* பெ. (n.) 1. கருங்குரங்கு; blue black monkey. 2. துருசு; blue vitriol. 3. கரு நெல்லி; blue black gooseberry. (சா.அக.).

நீலம்→நீலன்.

நீலன்சம்பா *nīlaṉ-šambā,* பெ. (n.) நீலஞ் சம்பா பார்க்க; see nīlañ-jambā.

[நீலன் + சம்பா.]

நீலா *nīlā,* பெ. (n.) அவுரி (சங்.அக.); indigo plant.

நீலாங்கம் *nīlāṅgam,* பெ. (n.) 1. புழு ; worm. 2. மலைத் தேள்; scorpion of the hills.

[நீலம் + அங்கம்.]

நீலாங்கு *nīlāṅgu,* பெ. (n.) *நீலாங்கம்,* 1. (சங்.அக.) பார்க்க; see *nīlāṅgam.*

[நீலாங்கம் → நீலாங்கு.]

நீலாஞ்சனக்கல் *nīlāñjaṉa-k-kal,* பெ. (n.) கருப்புக்கல் (வின்.); sulphide of antimony.

[நீலம்+அஞ்சனம் + கல்.]

நீலாஞ்சனம் *nīlāñjaṉam,* பெ. (n.) 1. *நீலக் காரம்* (வின்.)பார்க்க; see nīlakkāram. 2. *நீலாஞ்சனக்கல்* (யாழ்.அக.) பார்க்க; see *nīlāñjaṉa-k-kal.* 3. கல்லீயம் (யாழ்.அக.); a kind of lead.

[நீலம்+அஞ்சனம்.]

நீலாஞ்சனை *nīlāñjaṉai,* பெ. (n.) மின்னல் (யாழ்.அக.); lightning.

[நீலம்+அஞ்சனை.]

நீலாப்பிரகம் *nīlāppiragam,* பெ. (n.) கரு மணல் (யாழ்.அக.); fine black sand.

[நீலம் + அப்பிரகம்.]

நீலாம்பரம் *nīlāmbaram,* பெ. (n.) செடி வகை; dense-spiked blue nail dye.

[நீலம் + அம்பரம்.]

நீலாம்பரன் *nilāmbaran*, பெ. (n.) பலபத்திரன்; Balabhatra. *"நீலாம்பரனும் யதுவீர நிருபர் யாரும்"* (பாரத. அருச்சனன்றீர். 81.).

[நீலம் +அம்பரன்.]

நீலாம்பரி *nilāmbari*, பெ. (n.) 1. செடிவகை; blue fox-tail nail dye. 2. *நீலாம்புரி* (இ.வ.) பார்க்க; see *nilāmburi*.

[நீலம் +அம்பரி.]

நீலாம்பல் *nilāmbal*, பெ. (n.) *நீலோற்பலம்* (இ.வ.) பார்க்க; see *nilōṟbalam*.

[நீலம் + ஆம்பல்.]

நீலாம்புசம் *nilāmbušam*, பெ. (n.) *நீலோற் பலம்* (சங்.அக.) பார்க்க; see *nilōṟbalam*.

[நீலம் + அம்புசம்.]

நீலாம்புரி[1] *nilāmburi*, பெ. (n.) ஒருவகைப் பண் (யாழ்.அக.); a kind of melody type.

[நீலம் + அம்புரி.]

நீலாம்புரி[2] *nilāmburi*, பெ. (n.) 1. காசாங்கம்– காசாவின் சமூலம்; the entire iron wood tree-memy. cylon edule. 2. நிலவு; moon. 3. *நீலாம்பரி* பார்க்க; see *nilambari*. (சா.அக.).

நீலாம்புரியாள் *nilāmburiyāḷ*, பெ. (n.) அலரி; oleander-nerium odorum. (சா.அக.).

[நீலம் + அம்புரி + ஆள்.]

நீலார்கண்டம் *nilār-kaṇḍam*, பெ. (n.) கருமை; black.

[நீலம் + ஆர் + கண்டம்.]

நீலாரம் *nilāram*, பெ. (n.) *நீவாரம்* பார்க்க; see *nivāram*. (சா.அக.).

நீலி[1] *nili*, பெ. (n.) நீலநிறத்தை யுடையோள், கொற்றவையின் மறுபெயர்; durga. *"சூலி நீலி மாலவற் கிளங்கிளை"* (சிலப். 12:68.). *"சங்கரி யந்தரி நீலி சடாமுடி"* (சிலப். 12:25.). *"நிலைக்களங் காணா நீலி யென்போள்"* (சிலப். 23:159.).

[நீலம் → நீலி]

நீலி[2] *nili*, பெ. (n.) 1. கருநிறம் (பிங்.); black hue. 2. கொற்றவை (பிங்.); Durgai. 3. மலை மகள் (பிங்.); Pārvati. *"நீலியோடுனை நாடொறு மருச்சித்து"* (சிவப். பிரபந். சோண. 55.). 4. ஒரு பெண் பேய்; a female devil. *"மாறுகொடு பழையனூர் நீலிசெய்த வஞ்சனையால்"* (சேக்கிழார். பு. 15.). 5. கொடியவள் (இ.வ.); wicked woman. 6. அவுரி (நாமதீப. 295.); indigo plant. 7. மேகவண்ணப் பூவுள்ள மருதோன்றி (l.); western ghats blue nail dye. 8. *நீலாம்பரம்* பார்க்க; see *nilāmbaram*. 9. கருநொச்சி (மலை.); three-leaved chaste tree. 10. பாம்பின் நச்சுப் பற்களுளொன்று (வின்.); a poison fang of a snake. 11. துரிசு (நாமதீப.397.); bule vitriol.

நீலி[3] *nili*, பெ. (n.) தீங்கு நினைக்கும் பசப்புக் காரி; wicked woman who feigns innocence. அந்த நீலி சொல்வதைக் கேட்டுக் கொண்டு என்னைத் திட்டுவதா? (பழ.).

[நீலம் → நீலி]

நீலிக்கண்ணீர் *nili-k-kaṇṇir*, பெ. (n.) உண்மையான வருத்தமின்றிப் பொய்யாக வடிக்கும் கண்ணீர், போலி வருத்தம்; in-sincere tears, crocodile tears. *முதலாளியின் நீலிக்கண்ணீரைக் கண்டு தொழிலாளிகள் ஏமாந்து விடக் கூடாது எனக் தொழிற்சங்கத் தலைவர் முழங்கினார்*. (உ.வ.).

[நீலி + கண்ணீர்.]

நீலிகற்பம் *nīli-karppam,* பெ. (n.) என்றும் மாறாஇளமைசெய் கற்பமூலிகை; a rejuvenating drug taken for longevity. (சா.அக.).

[நீலி + கற்பம்.]

நீலிகை *nīligai,* பெ. (n.) அவுரி (யாழ்.அக.); indigo plant.

நீலிசம் *nīlišam,* பெ. (n.) பசலை; spinach-portulaca qudrifida. (சா.அக.).

நீலிஞ்சிகை *nīliñjigai,* பெ. (n.) பசு; cow. (சா.அக.).

நீலித்தனம் *nīli-t-taṉam,* பெ. (n.) 1. கொடுமை (இ.வ.); cruelty, wickedness, hard-heartedness. 2. பாசாங்கு; pretence. 3. செருக்கு (வின்.); impudence.

[நீலி + தனம்]

நீலிதம் *nīlidam,* பெ. (n.) நீலநிறமானது; that which is blue. "*பரிமள நீலிதவுடை யாடை யுடுத்தாள் பாரத*" (அருச்சுனன்றவ. 158.).

[நீலம் + இதம்.]

நீலிமருந்து *nīli-marundu,* பெ. (n.) அவுரிச் சாயம்; indigo dye-indigo fera. (சா.அக.).

நீலியம் *nīliyam,* பெ. (n.) மருதோன்றி; fragrant nail dye-mindic-lawsonia alba. (சா.அக.).

நீலியாவரை *nīli-y-āvarai,* பெ. (n.) சூரத்து நீலாவரை; surat senna. (சா.அக.).

நீலினி *nīliṉi,* பெ. (n.) அவுரி (யாழ்.அக.); indigo plant.

நீலோற்பலம் *nīlōṟpalam,* பெ. (n.) 1. கருங் குவளை (திவா.); blue nelumbo. 2. கரு நெய்தல் (பிங்.); blue Indian water lily.

[நீலம் + உத்பலம்.]

நீவரகம் *nīvaragam,* பெ. (n.) (பஞ்சம்), வற்கடகம் (யாழ்;அக.); dearth, famine.

நீவரசிகம் *nīvarašigam,* பெ. (n.) பிச்சிப்பூடு; spanish jasmin-jasminum grandflorum.

நீவார் *nīvār,* பெ. (n.) நீவாரம் பார்க்க. see nīvāram. (சா.அக.).

[நீவாரம் → நீவார்]

நீவாரம் *nīvāram,* பெ. (n.) குளநெல் (திவா.); wild rice. "*நீவாரத்தாளினில்*" (இரகு. அயனு. 15.). 2. செந்தினை (மூ.அ.); Italian millet.

நீவாரி *nīvāri,* பெ. (n.) *நீவாரம்* பார்க்க; see *nīvāram.*

[நீவாரம் → நீவாரி.]

நீவான் *nīvāṉ,* பெ. (n.) மீகாமன் (அக.நி.); steers man.

[நாவு → நீவு → நீவான்.]

நீவி[1] *nīvi,* பெ. (n.) 1. கொய்சகம் (திவா.); ornamental plaiting in a saree hanging from the waist. 2. மகளிர் ஆடையுடுத்தும் போது இடையில் முடிக்கும் முடிச்சு; knot of a

saree tied at the waist when dressing. "*நீவி நிதம்ப வுழத்தியர்*" (பெரியபு ஆனாய. 2.). 3. ஆடை (திவா.); cloth. 4. கிழி; money or other valuables tied up in a cloth. "*ஓங்கிய நீவிக் கைக் கொடருமி*" (திருவாலவா. 16. 11.).

நீவி[2] *nīvi,* பெ. (n.) 1. துடைக்கை; wiping. 2. இறகு; feather.

நீவி[3] *nīvi,* பெ. (n.) 1. தெரிநிலை வினையெச்சம்; an inf. ending. "*மாசறு சுடர் நுத னீவி*" (கு.பா. 182.). 2. சீலை; saree. "*நீவியின்றியிந் நெற்றியுங்கண்ணுதல்*" (கந்தபு. ததிசியுத். 56.) (கதி.அக.).

நீவியம் *nīviyam,* பெ. (n.) *நீவி* 1, 3, (சூடா.) பார்க்க; see *nīvi.*

(நீவி → நீவியம்)

நீவிர் *nīvir,* பெ. (n.) முன்னிலைப் பெயர்; second person. "*நீவிரிவண் வந்து புகலும்*" (சிவரக. தாருக. 28.) (கதி.அக.).

(நீ → நீர் → நீவிர்)

நீவிர் *nīvir,* பி. பெ. (pron.) நீங்கள் (நன். 287.); you.

க. நீவு.

நீ (ஒருமை) → நீவிர் (பன்மை)

நீவு[1]–தல் *nīvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கையாலே தடவுதல், பூசுதல்; to stroke, daub. "*சாரல் ஆரம் வண்டுபட நீவி*" (நற். 259.).

நீவு[2]–தல் *nīvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கைவிடுதல்; to cease, discontinue. "*ஒலிநீவி யினநாரை முக்கோல்கொ ளந்தணர் முதுமொழி நினைவார்போல் எக்கர்மேல் இறைகொள்ள*" (கலித். 126.). 2. கடத்தல்; to pass beyond, transgress. "*எந்தை யருங்கடி நீவி*" (குறிஞ்சிப்.20.). 3. அழித்தல் (அக.நி.); to destroy. 4. அறுத்தல்; to break asunder, as a chain. "*பின்னிய தொடர் நீவி*" (கலித்.15.).

க. நீவு.

நீவு[3]–தல் *nīvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தடவிக்கொடுத்தல்; to stroke, rub gently, handle softly. "*தன்னைப் புறம்பழித்து நீவ*" (கலித். 51.). 2. கோதுதல்; to smooth by passing the fingers over. "*பொம்ம லோதி நீவி யோனே*" (குறுந். 379.). 3. துடைத்தல்; to wipe off. "*ஒண்ணுத னீவுவர் காதலர்*" (கலித்.4.). 4. பரப்புதல்; to spread. "*நீவிநித்திலம் பரத்திய ருணக்குவ*" (பெரியபு. திருக்குறிப். 6.). 5. பூசுதல்; to daub, smear. "*நறுஞ்சாந்து நீவிய கேழ்கிள ரகலத்து*" (மதுரைக். 493.).

நீவு[4]–தல் *nīvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தூண்டுதல்; to propel; to raise, as the wick of a lamp.

நீவு[5]–தல் *nīvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) (தாள், துணி போன்றவற்றைச் சுருக்கம் போகும்படி விரலால்) அழுத்தி இழுத்தல்; smooth out (the surface of a page), to press (the pleats of a saree). புத்தகத்தின் பக்கத்தை நீவி விட்டுக்கொண்டே படிப்பது சிலரின் பழக்கம். (உ.வ.). சேலையின் கொய்சகத்தைப் பலமுறை நீவி விட்டுக் கொண்டாள். (உ.வ.).

நீழல்[1] *nīḻal,* பெ. (n.) *நிழல்* பார்க்க; see *niḻal.* "*பலகுடை நீழலுந் தன்குடைக்கீழ்க் காண்பர்*" (குறள், 1034.).

(நிழல் → நீழல்)

நீழல்[2] *nīḻal,* பெ. (n.) 1. காற்று (திவா.); wind. 2. குளிர்தடம், ஒளி ஒதுக்கம், சாயல்; shade. "*ஈசன் எந்தை இணையடி நீழலே*" (திருஞான. தேவாரம்.).

(நிழல் → நீழல்)

நீழலவர்[1] *nīḻalavar,* பெ. (n.) இரப்போர்க் கெல்லாம் ஈதலாகிய தண்ணளியுடையோர்; a kind hearted person. "*பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர் அலகுடை நீழ லவர்*" (குறள், 1034.).

(நிழல் → நீழல்→ நீழலவர்.)

[நிழல் → நீழல். நிழல் = வெம்மைக்கு மாறானது குளுமை, தண்ணளி.]

நீழலவர்[2] *nīḻalavar,* பெ. (n.) ஈர நெஞ்சத்தாரான உழவர்; agriculturists as kind hearted. "*நீழலவர்* என்றது இரப்போர்க் கெல்லாம் ஈயும் தண்ணளி பற்றி" (குறள், 1034, மரபுரை.).

[நீழல் + அவர்; நிழல் = குளுமை நிழல் → நீழல்.]

நீழி *nīḻi,* பெ. (n.) மரமஞ்சள்; tree turmeric-coscinium fenestratum. (சா.அக.).

நீழை[1] *nīḻai,* பெ. (n.) ஒளி; light, lusture. "*நீழை யாண்மலர்*" (அரிசமய. குலசே. 5.).

நீழை[2] *nīḻai,* பெ. (n.) *நீளை[1]* (கயாகரம்) பார்க்க; see *nīḷai.*

நீள்[1](ளு)-தல் *nīḷ(ḷu)-,* 16 செ.கு.வி. (v.i.) 1. நீடு பார்க்க; see nīḍu. 2. பெருமையாதல்; to be great. "*நீள்கழற் கன்பு செய்வாம்*" (கந்தபு. கடவுள்வா. 2.). 3. ஓடுதல் (திவா.); to run.

ம. நீளுக, நீள, நீளெ, நீளவே.

நுல் (நீட்சிக்கருத்துவேர்) → நெல்→ நெள் → நெகிழ்→ நெகிள் → நிகள் → நீள்.

நீள்[2] *nīḷ,* பெ. (n.) 1. நீளம் (வின்.); length. extension, elongation. 2. நெடுங்காலம்; long time, duration. நீடுங்காய் (கலித். 131.). 3. உயரம் (வின்.); height, tallness, loftness. 4. ஆழம்; depth. "*நீணிலைக் கூவல்*" (கல்லா. 12.). 5. ஒளி (வின்.); light, lustre. 6. ஒழுங்கு (சது.); order, series, row.

தெ. நீலுகு (உடலுறுப்புக்களை நீட்டுதல்); கோத. நீர், நீன்; நீட் (நீளுதல்); துட. நீர் (நீட்டுதல், விரித்தல்).

[நெகிள் → நிகள் → நீள்]

நீள்கோளம் *nīḷ-kōḷam,* பெ. (n.) முட்டை வடிவமான கோளம் (வின்.); spheroid.

[நீள் + கோளம்]



நீள்சடையான் *nīḷ-šaḍaiyāṉ*, பெ. (n.) கொன்றை; Indian laburhnum.

[நீள் + சடையாள்.]

நீள்சடையோன்[1] *nīḷ-šaḍaiyōṉ*, பெ. (n.) *நீளச்சம்* பார்க்க; see *nīḷaccam.* (சா.அக.).

[நீள் + சடை.யோன்.]

நீள்சடையோன்[2] *nīl-šaḍaiyōṉ*, பெ. (n.) **1.** சிவபெருமான்; Sivaṉ, as having long matted locks. 2. சரக்கொன்றை (மலை.); Indian laburnum.

[நீள் + சடை.யோன்.]

நீள்சதுரம் *nīḷ-šaduram*, பெ. (n.) செவ்வகம்; rectangle.

[நீள் + சதுரம்.]



நீள்புகழ் *nīḷ-pugaḻ*, பெ. (n.) பொன்றாது நிற்கும் புகழ்; a great virture. "*நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப் போற்றாது புத்தே ளுலகு*" (குறள், 234.).

நீள்மைஅளவி *nīḷmai-aḷavi*, பெ. (n.) நீளத்தை அளவிடும் கருவி; extenso meter.

[நீள்மை + அளவி.]

நீள்வட்டம் *nīḷ-vaṭṭam*, பெ. (n.) முட்டை வடிவம்; ellipse. '*நிலவுலகம் கதிரவனை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருகிறது*' (உ.வ.)



நீள *nīḷa*, பெ. அ. (adj.) **1.** நெடுந்தொலைவாக; to a great length or distance. 2. நெடுங்காலமாக; all along. "*நீளநினைந் தடியே னுமை நித்தலுங் கைதொழுதேன்*" (தேவா. 825, 1.). 3. மிகு தொலையில் (இ.வ.); at a great distance.

[நீள் → நீள.]

நீளக்க *nīḷakka*, பெ. அ (adj.) *நீள* பார்க்க; see *nīḷa.*

[நீள் → நீள → நீளக்க.]

நீளங்கடை *nīḷaṅ-gaḍai*, பெ. (n.) நாட்செல்லுகை (யாழ்.அக.); delay, procrastination.

[நீளம் + கடை.]

நீளச்சம் *nīḷaccam*, பெ. (n.) கொன்றை; cassia-cassia fistula. (சா.அக.).

நீளத்தில்விடு—தல் *nīḷattil-viḍu-,* 17 செ.குன்றாவி. (v.t.) 1. காலநீட்டித்தல்; to protract delay. 2. வெறும் பேச்சுப் பேசிக்காலத்தைக் கடத்துதல்; to put off with empty words. 3. வேண்டுமென்றே புறக் கணிப்பு செய்தல்; to neglect intentionally.

[நீள் → நீளம் → நீளத்தில் + விடு—,]

நீளத்திலே போ—தல் *nīḷattilē-pō-,* 8. செ.கு.வி. (v.i.) 1. நீளவாட்டமாய்ச் செல்லுதல்; to go lengthwise. 2. தாழ்ச்சியாதல் (வின்.); to be protracted; to be put off.

[நீள் → நீளம் → நீளத்திலே + போ—,]

நீளப்பூச்சி *nīla-p-pūcci,* பெ. (n.) வயிற்றுப் பூச்சிவகை (வின்.); tapeworm, as being long.

[நீளம் + பூச்சி.]

நீளம்[1] *nīḷam,* பெ. (n.) 1. நெடுமை; extension, length. "*நீளம் பெறுங் கண்களே*" (திருக்கோ. 109.). 2. தொலைவு (பிங்.); distance remoteness. '*கையானீளமாப் புடைப்ப*' (சீவக. 2248.). 3. தாழ்ச்சி (வின்.); delay, procrastination.

க. நீள. ம. நீளம்.

[நீள் → நீளம்.]

[நுல் → நீட்சிக்கருத்துவேர். நுல் → நெல் → நெள் → நெகிழ் → நெகிள் → நிகள் → நீள் → நீளம் = நீண்டு செல்வது.]

நீளம்[2] *nīḷam,* பெ. (n.) பறவைக்கூடு; bird's nest. "*நீள நீங்கிய பறவையின் விண்ணுற நிமிர்ந் தான்*" (கம்பரா. கவந். 40.).



நீளம்தாண்டுதல் nīḷam-tāṇḍudal, பெ. (n.) (விளையாட்டில்) ஓடிவந்து குறிப்பிட்ட இடத்தில் காலை ஊன்றி எழும்பி முடிந்த அளவுக்குத் தொலைவைத் தாண்டுதல்; long jump.

[நீளம் + தாண்டுதல்.]

நீளமல்லிகை *nīḷa-malligai,* பெ. (n.) மல்லிகை (இ.வ.); Arabian jasmine.

[நீளம் + மல்லிகை.]

நீளமாக *nīḷamāga,* பெ.அ. (adj.) இயல்பான நீளத்தை விட அதிகமாக; long. *நீளமான பாதை* (உ.வ.). கயிறு நீளமாக இருக்கிறது. (உ.வ.).

[நீளம் → நீளமாக.]

நீளலை *nīḷalai,* பெ. (n.) நெடுந்தொலைவு வரை தெரியும் ஒளியலை; long distance wave. சிவப்பு நிறம் நீளலையைக் கொண்டதால் போக்குவரத்து விளக்குகளில் நிறுத்துங் குறியாக அந்நிறம் கொண்ட விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. (உ.வ.).

[நீள் + அலை.]

நீளவாடு *nīḷa-vāḍu,* பெ. (n.) நெடும்போக்கு (இ.வ.); lengthwise direction.

[நீளம் + வாடு.

மாடு → வாடு.] ஒ.நோ:தலைமாடு

நீளாதேவி *nīḷādēvi,* பெ. (n.) திருமால் தேவியருளொருத்தி (அபி.சிந்.); a wife of Tirumāl.

நீளி[1]–த்தல் *nīḷi-,* 11 செ.கு.வி. (v.i.) 1. நீளுதல் (வின்.); to be lengthened, extended. 2. நெடுங்காலமிருத்தல்; to be long as time or life; to be prolonged; to last long endure. 3. சுணங்குதல்; to be protracted, delayed.

க. நீள்.

[நீள் → நீளி–,]

நீளி[2] *nīḷi,* பெ. (n.) 1. நெடியவன் (வின்.); tall person. 2. நெடியது; that which is long, lofty. *"நிணம்பசைகொண்ட நீளி நெடும்பல்"* (பெருங். இலாவாண. 8, 108.).

[நீள் → நீளி.]

நீளி[3] *nīḷi,* பெ. (n.) 1. நீளத்தையுடையது; that which is long. *'நெடுந்தரு நீளிகள்'* (கந்தபு. அக்கினிமுகா.104.). 2. தெரிநிலை வினைப் பகுதி (கதி.அக.); verbal part.

[நீள் → நீளி.]

நீளிடை *nīḷiḍai,* பெ. (n.) 1. நெடுந்தொலைவு; long distance. *"இன்ப நீளிடைப் பயக்கும்"* (கல்லா. 2.). 2. நெடியவழி; long way. *"நீளிடைச் செல"* (கலித். 10.). 3. காடு; jungle tract. *"நீளிடை மருங்கின்"* (சிலப். 13:12, அரும்.).

[நீள் → நீளிடை.]

நீளிடையத்தம் *nīḷiḍai-y-attam,* பெ. (n.) நீண்டநெறி; a long distance. *"தோளும் அழியும் நாளும் சென்றென நீளிடை அத்தம் நோக்கி வாள் அற்றுக் கண்ணுங் காட்சித் தெளிவின வெண்ணீத்து"* (நற். 397.).

[நீள் + இடை + அத்தம்.]

நீளிப்பு *nīḷippu,* பெ. (n.) நீளுகை (வின்.); prolongation.

[நீள் → நீளிப்பு.]

நீளியசாரை *nīḷiyasāṟai,* பெ. (n.) கானகக்கல் (யாழ்.அக.); a kind of metallic ore.

[நீளிய + சாரை.]

நீளியது *nīḷiyadu,* பெ. (n.) 1. நீண்டது (வின்.); that which is long. 2. நீக்கமற நிறைந்திருப்பது; that which is omnipresent. *"காலமுஞ் சிறிது நீளியதல்ல"* (ஞானவா. லீலை. 32.).

[நீள் → நீளியது.]

நீளியன் *nīḷiyaṉ,* பெ. (n.) நெடியவன் (யாழ்.அக.); tall man.

[நீள் → நீளியன்.]

நீளுமை *nīḷumai,* பெ. (n.) உடையாமல் கம்பிகளாக இழுக்கப்படும் ஆற்றல்; ductility.

[நீள் → நீளுமை.]

நீளெட்டு *nīl-eṭṭu,* பெ. (n.) தேசியப்படை மாணவர் பயிற்சி ஏவல்களுள் ஒன்று; one of the command in N.C.C., step out.

[நீள் + எட்டு.]

நீள் → நீளம் → நீளமாக
எடு → எட்டு = காலின் எடுப்பு, அடிவைப்பு.

எட்டு என்பது காலின் எடுப்பையும் அடிவைப்பையும் குறிக்கும். விரைவாய் நடத்தற்கேவுதலை எட்டி நடவென்றும், நாலெட்டில் சென்றுவாவென்றும், ஓரெட்டில் ஓடிவா என்றும் வழங்குவதைக் காணலாம்.

நீளெரி *nīḷ-eri,* பெ. (n.) 1. பெருநெருப்பு; great fire, conflagration. "*நீணகர் நீளெரி வைத்தருளாயென்று*" (திவ். இயற். திருவிருத். 92.). 2. மிகுவெப்பம்; extreme heat. "*கதிர்தெற நீளெரி பரந்த நெடுந்தா ளியாத்து*" (அகநா. 51.).

[நீள் + எரி.]

நீளை[1] *nīḷai,* பெ. (n.) காற்று (பிங்.); wind.

[நீள் + ஐ.]

[நுல் – நீட்சிக்கருத்துவேர். நுல் → நெல் → நெள் → நெகிழ் → நெகிள் → நிகள் → நீள். நீள் → நீளை (நீண்டு இயங்குவது).]

நீளை[2] *nīḷai,* பெ. (n.) *நீளாதேவி* பார்க்க; see *nīḷādēvi.* "*நீளைக்கு மணவாள ராடிரூசல்*" (அஷ்டப். சீரங்கநாயக. 9.).

[நீள் → நீளை.]

நீற்கண்டன் *nīṟkaṇḍaṉ,* பெ. (n.) *நீலகண்டன்* பார்க்க; see *nīla-kaṇḍaṉ.*

[நீலகண்டன் → நீற்கண்டன்]

நீலம் என்ற சொல் அம் ஈறு கெட்டு நீல் என நின்று '*ல்*' , '*ற்*' ஆயிற்று

நீற்புப்பிழை *nīṟpu-p-piḻai,* பெ. (n.) எரிபொருள் எச்சம், ஆவியாக்கத்தில் மிச்சம்; residual error. *கன்னெய் (பெட்ரோலியம்) பிரித்தெடுப்பின்போது நீற்புப்பிழையாக தார் கிடைக்கிறது.* (உ.வ.).

[நீற்பு + பிழை.]

நீற்றமுது *nīṟṟamudu,* பெ. (n.) (மாலிய.) வெற்றிலையில் தடவுஞ்சுண்ணாம்பு; lime used with betel.

[நீறு + அமுது.]

சுண்ணாம்புக் கல்லைச் சுட்டு நீறாக்கிச் சுண்ணாம்பாக்குவர்

உண்ணத் தகுவன அனைத்தையும் அமுதென அழைப்பது மாலியர் வழக்கு. அவ்வகையில் சுண்ணாம்பு நீரும் அமுதெனப் பட்டது.

நீற்றறை *nīṟṟaṟai,* பெ. (n.) சுண்ணாம்புக் காளவாய்; lime kiln. "*நீற்றறை... மலர்ப் பொய்கையாக*" (பிரபுலிங். துதி. 9.).

[நீறு → நீற்று + அறை.]

நீற்று[1]–தல் *nīṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** நீறச் செய்தல்; to slake, as lime. **2.** பொடியாக்குதல் (வின்.); to reduce to ashes or powder. **3.** கனிமங்களைப் பற்பமாக்குதல்; to calcine, as metals; to calcinate.

ம. நீற்றுக.

[நீறு → நீற்று + தல்.]

நீற்றுதல்[2] *nīṟṟudal,* பெ. (n.) உலர்த்துதல், சாம்பலாக்குதல், பொடியாக்குதல்; calcination. *சுண்ணாம்புக் கல்லிருந்தும் கடல் சிப்பிகளி லிருந்தும் நீற்றுதல் முறையிலேயே சுண்ணாம் புப்பொடி பெறப்படுகிறது.* (உ.வ.).

[நீறு → நீற்று]

நீற்றுக்குட்டான் *nīṟṟu-k-kuṭṭāṉ,* பெ. (n.) கள்ளிறக்குவோன் பயன்படுத்தும் சிறிய சுண்ணாம்புப் பெட்டி (யாழ்ப்.); the small lime basket of a toddy drawer

[நீறு → நீற்று + குட்டான்.]



நீற்றுக்கோயில் *nīṟṟu-k-kōyil,* பெ. (n.) திருநீற்றுப்பை; bag for sacred ashes. *"நீற்றுக்கோயி லுணீற்றை மென்கரத்தள்ளி"* (திருவாலவா. 37, 57.).

[நீறு → நீற்று + கோயில்.]



நீற்றுண்டவூமை *nīṟṟuṇḍa-vūmai,* பெ. (n.). முட்டை; egg. (சா.அக.).

நீற்றுண்டை[1] *nīṟṟuṇḍai,* பெ. (n.) *நீற்றுருண்டை* பார்க்க; see *nīṟṟu-uṟuṇḍai.*

[நீறு → நீற்று + உருண்டை.]

உருண்டை → உண்டை (கொச்சை.)

நீற்றுண்டை[2] *nīṟṟuṇḍai,* பெ. (n.) *நீற்றுண்ட வூமை* பார்க்க; see *nīṟṟuṇḍa-ūmai.* (சா.அக.).

நீற்றுப்பாகம் *nīṟṟu-p-pāgam,* பெ. (n.) *நீர் சோற்றுத் தண்ணீர்* பார்க்க; see *nīr-šōṟṟu-t-taṇṇīr.*

[நீர்ப்பாகம் → நீற்றுப்பாகம்.]

நீற்றுப்பூசணி *nīṟṟu-p-pūšaṇi,* பெ. (n.) கலியாணப்பூசணி; ash pumpkin or ash gourd-benincasa cerifera. (சா.அக.).

[நீறு → நீற்று + பூசணி. நீறு → சாம்பல்.]

நீற்றுப்பூசணிக்குழம்பு *nīṟṟu-p-pūšaṇi-k-kuḻambu,* பெ. (n.) கல்யாணப்பூசணி நெய்; a medicinal ghee, prepared with ash pumpkin as chief ingrediant. (சா.அக.).

[நீற்று + பூசணி + குழம்பு.]

நீற்றுப்பெட்டி[1] *nīṟṟu-p-peṭṭi,* பெ. (n.) 1. பிட்டுசுடும் பெட்டி; basket in which the piṭṭu pastry is cooked. 2. எண்ணெயூற்றுங் கூடை; a kind of basket in which the powdered mahwa or other seeds are kept while extracting oil.

[நீறு + பெட்டி.]



நீற்றுப்பெட்டி[2] *nīṟṟu-p-peṭṭi,* பெ. (n.) திருநீறு வைக்கும் பெட்டி; casket of sacred ashes.

[நீறு + பெட்டி.]



நீற்றுமானம் *nīṟṟu-māṉam,* பெ. (n.) புடமிடுகை; calcination. "*குழு முடித்து நீற்றுமானம் புரிய நேரறிவேன்*" (பஞ்ச.திருமுக. 848.).

[நீறு → நீற்று + மானம்.]

நீற்றுமுண்டி *nīṟṟu-muṇḍi,* பெ. (n.) திருநீறு அணிந்தவன்-ள் (திருவாலவா. 13, 14, உரை.); one who wears marks of sacred ashes.

[நீறு > நீற்று + முண்டி.]

நீற்றுருண்டை *nīṟṟuruṇḍai,* பெ. (n.) திருநீற்றுக்காக உருட்டி வைக்கும் சாணிவுருண்டை; cow dung ball for preparing sacred ashes.

[நீறு → நீற்று + உருண்டை → நீற்றுருண்டை,]

நீறடி-த்தல் *nīṟaḍi-,* 4 செ.கு.வி. (v.i.) சுண்ணாம்பு நீற்றில் தோய்த்த கயிற்றினால் கோடு போடுதல் (யாழ்.அக.); to draw ornament figures on floor with a rope soaked in lime-water.

[நீறு + அடி-,]

நீறணிகடவுள் *nīṟaṇi-kaḍavuḷ,* பெ. (n.) *நீறாடி* (பிங்.) பார்க்க; see *nīṟāḍi.*

[நீறு+அணி + கடவுள்.]

நீறணிந்தோன் *nīṟaṇindōṉ,* பெ. (n.) *நீறாடி* (சூடா.) பார்க்க; see *nīṟāḍi.*

[நீறு + அணிந்தோன்.]

நீறாகு-தல் *nīṟāgu-,* 7 செ.கு.வி. (v.i.) சாம்பலாய்ப் போதல்; to be burnt to ashes. "*அசுரர்களை நீறாகும் படியாக நிருமித்துப் படைதொட்ட மாறாளன்*" (திவ். திருவாய். 4, 8, 1.).

[நீறு + ஆகு-,]

நீறாடி *nīrādi,* பெ. (n.) சிவன்; sivan, as wearing sacred ashes. "*நீறாடி தான்காண மாட்டாத*" (திவ். இயற். நான்முக. 27.).

மறுவ. நீறணிகடவுள், நீறணிந்தோன், நீறுபூசி.

[நீறு + ஆடி.]

நீறாடு[1]-தல் *nīrāḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பொடியாக்குதல் (வின்.); to reduce to ashes, bring to ruin.

[நீறு + ஆடு-,]

நீறாடு[2]-தல் *nīrāḍu-,* 7 செ.கு.வி. (v.i.) 1. திருநீறணிதல்; to be smear one self with sacred ashes. 2. புழுதி படிதல்; to be covered with dust.

[நீறு + ஆடு-,]

நீறு[1]-தல் *nīru-,* 5 செ.கு.வி. (v.i.) 1. சுண்ணமாதல்; to become slaked, as lime. 2. சூரணமாதல்; to be turned to ashes or calcined, as metals or stones. "நீறியநீறு" (துணிகைப்பு. நாரத. 41.). 3. அழிதல்; to perish, to be ruined. "*பிணி செயும் வினைகணீற*" (விநாயகபு. நைமி. 3.).

ம. நீறுக

[நுல் → நீள் → நீல் → நீர் → நீறு.]

நீறு[2] *nīru,* பெ. (n.) 1. சாம்பல்; ashes, dross of any substance after it has been burnt. "*பொற்பாவாய் நீறாய் நிலத்து விளியரோ*" (நாலடி, 266.). 2. திருநீறு; sacred ashes. "*மந்திரமாவது நீறு*" (தேவா. 857.). 3. புழுதி; dust. "*அருவி துகளவிப்ப நீறடங்கு தெருவின்*" (சிறுபாண். 201.). 4. நீற்றின சுண்ணாம்பு; slaked line.

ம., க., தெ. நீறு; பர். நித்; கோண். நீர்

[நூல் → நீள் → நீல் → நிர் → நீறு]

நீறுண்டி *nīrundi,* பெ. (n.) 1. தண்ணீர் விட்டான்; water root-asparagus recemosus. 2. நன்னாரி வேர்; root of sarasparilla (சா.அக.).

[நீறு + உண்டி.]

நீறுதரிக்கும்புதன்கிழமை *nīru-tarikkum-pudan-kilamai,* பெ. (n.) சாம்பலடிப் பெருநாள் (யாழ்ப்.); ash wednesday.

[நீறு தரிக்கும் + புதன் கிழமை.]

புதன் என்பதற்கு அறிவன் என்பது தமிழ்.

நீறுதரித்தநெற்றி *nīru-taritta - nerri,* பெ. (n.) திருநீறணிந்த நெற்றி; forehead with mark of sacred ash.

[நீறு + தரித்த + நெற்றி.]



நீறுபூ-த்தல் *nīṟu-pū-*, 4 செ.கு.வி. (v.i.) 1. நன்றாய் நீறுதல்; to be slaked, as lime. *சுண்ணாம்பு நீறு பூத்திருக்கிறது* (உ.வ.). 2. சாம்பனிறம் பிடித்தல்; to be covered with dirt, ashy coating. 3. உடலில் அழுக்குப் படிதல் (வின்.); to be covered with dirt, as the body.

[நீறு + பூ –,]

நீறுபூசி *nīṟu-pūši*, பெ. (n.) 1. *நீறாடி* பார்க்க see *nīṟāḍi*. 2. அருகசமயத்தவராயிருந்து சிவனியரான வேளாளவகையினர் ; a sect of vēlālas belived to be converts from Jainisim. 3. சிவத்தொண்டர்; canonized šaiva saint.

[நீறு + பூசி.]

நீறுபூத்தநெருப்பு[1] *nīṟu-pūṭṭa-neruppu*, பெ. (n.) சாம்பல் படிந்த கட்டைத் தணல்; live embers covered with ashes.

நீறுபூத்தநெருப்பு[1] *nīṟu-pūṭṭa-neruppu*, பெ. (n.) சினங் காட்டாதான் (பே.வ.); person who conceals his anger.

[நீறுபூத்த + நெருப்பு.]

சினத்தைக் கனலும் நெருப்புக்கு உவமையாகவும், அச்சினத்தையடக்கியாளுந் தன்மைக்கு நீறுபூத்தலை உவமையாகவும் கொள்க.

நீன்மை *nīṉmai*, பெ. (n.) நீலநிறம்; blue colour. "*நீன்மை மேனியன்*" (சேதுபு. விதூம.1.).

நீனிறம் *nīṉiṟam*, பெ. (n.) நீலநிறம்; blue; blue-black; purple. "*நீனிற வோரி பாய்ந்தென*" (மலைபடு. 524.). "வயச்சுறா எறிந்த புண்தணிந் தெந்தையும் நீனிறப் பெருங்கடல் புக்கனன்" (குறுந். 209.).

[நீல் + நிறம்.]

நீனிறமஞ்ஞை *nīṉira-mañjai*, பெ. (n.) நீலநிறமயில்; peacock. "*கானக்கோழியு நீனிற மஞ்ஞையும்*" (சிலப். 12:34.).

[நீல + நிறம் + மஞ்ஞை.]

நீனிறவண்ணன் *nīniṟa-vaṇṇaṉ*, பெ. (n.) திருமால்; Tirumāl. "*அவனுடைய நகர வீதியிற் சென்ற நிலங்கடந்த நீனிற வண்ணன் குடங்கொண்டாடிய குடக்குத்தும்*" (சிலப். 6:55, உரை.).

[நீல + நிறம் + வண்ணன்.]

நீனிறவியலகம் *nīniṟa-viyalagam*, பெ. (n.) நீலப்பரப்பாகிய கடல் (ஐங்குறு. 401.); sea, ocean, as the blue expanse.

[நீனிறம் + வியலகம்.]

நீனிறவினை *nīṉiṟa-viṉai*, பெ. (n.) கரிசு (பாவச்செயல்); sinful deeds. "*நீனிற வினையி னீங்கி*" (சீவக. 947.).

[நீல் + நிறம் + வினை.]

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ஐந்தாம் மடலம் – மூன்றாம் பாகம்

நு – நௌ

Vol. V - Part - III

முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.

அரசு செயலாளர்,

தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட

இயக்கக வெளியீடு

2005

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ஐந்தாம் மடலம் - மூன்றாம் பாகம்

நு - நௌ

Vol. V - Part - III

முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.

அரசு செயலாளர்,

தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு

2005

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 15

முதற் பதிப்பு 2005

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. V, Part - III

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு
Government of Tamilnadu

விலை : உருபா 400/–

குறியீட்டெண் : Colon No. P.J1-J, 314"K.M4

வெளியிட்டோர் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

அச்சீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை 600 113.

நூல் கிடைக்குமிடம் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை – 600 113.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி
A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE
VOL. V- PART III

ஐந்தாம் மடலம் - மூன்றாம் பாகம்
(நு - நௌ)

பதிப்புக் குழு
முனைவர் திரு.பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும்
அறநிலையத் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

கூர்ந்தாய்வாளர்
புலவர் த. சரவணத் தமிழன்

தொகுப்பாளர்கள்
திரு.முத்து.பிச்சை
முனைவர் மு.கண்ணன்
முனைவர் பா.வெற்றிச்செல்வன் (பகுதிப் பொறுப்பாளர்)
முனைவர் ச.செந்திலாண்டவன்
முனைவர் இரா.கு.ஆல்துரை
திரு.கா.இளமுருகு
திரு.ச.கி.கணேசன் (ஓவியர்)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

ஜெ ஜெயலலிதா
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை–600 009.

நாள்........26.12.2005

அணிந்துரை

'வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி தமிழ்!' அந்த வண்டமிழ், 'ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி இசை கொண்டு வாழ' ஏற்ற பணிகளை ஆற்றி வருகிறது எனது அரசு.

தமிழ்நாடு அரசு, தமிழ் நாடும் அரசாக விளங்குகின்றது. இந்திய அரசின் ஆட்சி மொழியாகத் தமிழை ஆக்கவும், இணையற்ற தமிழ் மறையாம் திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக ஆக்கவும், ஒல்லும் வகையான் ஓயாது முயன்று வருகிறது தமிழ்நாடு அரசு. 'முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையதாய் விளங்கும் நம் தமிழ், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய்' விளங்க வேண்டும் என்ற விழைவோடு, முத்தமிழோடு நான்காம் தமிழாக அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தி, அதனை மழலையர் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை, மாணவ மாணவியர் கற்க ஏற்பாடு செய்தேன்.

உயர்தனிச் செம்மொழியாம் தமிழின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதுடன் நில்லாது, தமிழ் வளர்த்த சான்றோர்கள் நினைவைப் போற்றும் வகையில் விழாக்கள் எடுத்தும், நினைவிடங்கள் அமைத்தும், அவர்தம் நூல்களைப் பொது உடைமையாக்கியும் சிறப்பித்து வருகிறது எனது அரசு. அந்த வகையிலே, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவைக் கொண்டாடி மகிழ்ந்ததுடன், அவரது நினைவை என்றென்றும் போற்றிப் பாராட்டிடும் வகையில் மதுரை மாநகரில் மணி மண்டபம் உருவாக்கிடவும் முனைந்துள்ளது.

தமிழ் மொழியின் த்னிப் பெரும் வளர்ச்சி குறித்த கவிஞர்களின் கனவுகள் நனவாக்கப்பட வேண்டும் என்பது என் விருப்பம்

"வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளி உறுத்தும் படங்களோடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்"

என்ற பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் கனவு மெய்ப்படும் விதத்தில், தமிழ் மொழியின் சொல் வளத்தைப் பெருக்க 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி' (A Comprehensive Etymological Dictionary of Tamil Language) நூல்களை உருவாக்கும் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் சார்பாக கடந்த 2002–ஆம் ஆண்டு வரை ஆறு பகுதிகள் மட்டுமே வெளியிடப்பட்டிருந்தன. 2002–2003–ஆம் ஆண்டில், சட்டமன்றப் பேரவையில், எஞ்சிய 25 பகுதிகள் நான்காண்டுகளில் தொகுத்து முடிக்கப் பெறும் என்ற அரசின் அறிவிப்பினைத் தொடர்ந்து, தொய்வுற்றிருந்த அகரமுதலித் திட்டத்திற்குப் புத்துயிர் ஊட்டி, போதுமான நிதியுதவியும் வழங்கி, பணிகள் முடுக்கிவிடப்பட்டதன் விளைவாய், ஆண்டுக்கு ஆறு பகுதிகள் என்ற முறையில், முதற்கட்டமாகத் தொகுத்து அச்சிட்டு முடிக்கப்பட்ட 'ச' மற்றும் 'த' வரிசைச் சொற்களின் 6 பகுதிகள் அண்மையில் 9.8.2005 அன்று என்னால் வெளியிடப்பெற்றன. அதனைத் தொடர்ந்து இரண்டாவது கட்டமாக 'ந' மற்றும் 'ப' வரிசை சொற்களில், 6 பகுதிகள் தொகுத்து முடிக்கப்பட்டு அச்சிடப்பட்டு அவை தற்போது வெளியிடப்படுவதை அறிந்து பெரு மகிழ்வு அடைகிறேன்.

'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிப்' பணி சீரிய பணி. அந்தச் சீரிய பணியில் ஈடுபட்டு செந்தமிழைச் செழுந்தமிழாய் ஆக்கிவரும் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

தமிழ் வாழ்க! தமிழ்ப் பணி வளர்க!

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
டாக்டர் செல்வி ஜெ ஜெயலலிதா



தமிழ்நாடு அரசு

சி.வி.சண்முகம்
கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை

"தமிழுண்டு தமிழ் மக்களுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு"
– (பாவேந்தர்)

மிகப் பழங் காலந்தொட்டு மொழி பற்றிய ஆய்வு இருந்து வந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் உள்ளன என்பர் மொழியாராய்ச்சியாளர்கள். தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள் பண்டைக் காலத்தில் கொண்டிருந்த மொழி பற்றிய தெளிவான அறிவினைத் தெற்றெனத் தெரிவிப்பனவாக இருப்பதைக் காணலாம். மொழியானது மாறும் தன்மை கொண்டது; பழமையான மொழிக் கூறுகளில் சில அழிவதும் புதியதாக சில தோன்றுவதும் மொழி வழக்கில் இயல்பு என்பர் அறிஞர் பெருமக்கள்.

தமிழ் மொழியைப் பொறுத்தவரை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான இடைவெளியில் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை மறுக்கவியலாது. பழைய சொற்கள் சில வழக்கொழிந்துள்ளன. புதிய சொற்கள் பல உருவாகியுள்ளன. புதிய கண்டுபிடிப்புகளையும், புதுப்புனைவுகளையும் வெளிப்படுத்த புதுச் சொற்கள் தேவை. இது மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாய் அமையும் என்பதில் ஐயமில்லை.

ஞாலத் தொன்மொழிகளுள் தாய்மையும், தலைமையும், தகைமையும் கொண்டது நம் தமிழ்மொழியாகும். தமிழின் தூய்மையையும், மாண்பையும், தனித்தியங்கும் ஆற்றலையும், இயற்கைச் சிறப்பையும் இனிமையையும், எளிமையையும் விரிவாக எடுத்துக்காட்டி நிலைநாட்டிய பெருமை 'மொழிஞாயிறு' தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு உண்டு. சொற்களை அகழ்வாய்வு செய்வதன்வழி மொழிக்கு அகழ்வாய்வு என்ற துறையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்திய பெருமை அவரைச் சாரும்.

அத்தகைய மாபெரும் அறிஞர் காட்டியுள்ள நெறிமுறைகளை அடியொற்றி செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி பகுதிகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. அண்மையில் 'ச'கரம் மற்றும் 'த'கரம் வரிசையில் 6 பகுதிகள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின்

திருக்கரங்களினால் வெளியிடப்பெற்றுள்ளன. அதனைத் தொடர்ந்து தற்போது 'ந'கரம் மற்றும் 'ப'கரம் வரிசையில் 6 பகுதிகள் வெளியிடப் பெறுகின்றன என்பதையறிந்து மகிழ்கிறேன். இந்த சீரியத் திட்டத்திற்கு அனைத்து வகையிலும் பேராக்கமும், பேராதரவும் நல்கி வரும் நம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி 'அம்மா' அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே, ஏன் ஆசியக் கண்டத்திலேயே தலைசிறந்து விளங்கும், தன்னிகரில்லாத் தங்கத் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சிக் காலம் பொற்காலம் என்று மேனாட்டரும் புகழ்பாடுகின்றனர். சோதனைகளை முறியடித்து, சாதனைக்கு மேல் சாதனைப் படைத்து, வெற்றிக் கொடி நாட்டி வரும் மாண்புமிகு முதலமைச்சர் 'அம்மா' அவர்களின் சாதனைகள் நீண்டு தொடரும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி வெளியீடுகள் வருவதில் அரும்பங்காற்றிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் பொறுப்பு இயக்குநராகப் பதவி வகிக்கும் தமிழ் வளர்ச்சிப் பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசு செயலாளர் முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப., அவர்களுக்கும், நூல்களை உருவாக்குவதற்கு அயராதுழைத்த அகரமுதலித் திட்ட இயக்ககப் பணியாளர்களுக்கும் என் மனமுவந்த பாராட்டுக்கள்.

சி.வி.சண்முகம் 2.11.03

சி.வி.சண்முகம்

சென்னை.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

நு

நு[1] *nu*, நகர மெய்யும் உகர உயிரும் சேர்ந்து பிறந்த எழுத்து; the compound of ந் + உ.

[ந் + உ-நு]

நகரமும் உகரமும் இணைந்த ஒலி. நாவின் நுனி மேலண்ணத்தின் நுனியில் பல்லை ஒற்ற குவிந்த நிலையில் இவ்வெழுத்துப் பிறக்கும். இது தனி மொழியாக வழக்கு இல்லை.

கி.மு. 3 ஆம் நுற்றாண்டிலிருந்து இன்று வரை இவ்வெழுத்தின்  நு வரிவடிவம் எனப் பல மாற்றங்களை யடைந்துள்ளது.

நு[2] *nu*, பெ. (n.) 1. ஊழ்கம் (தியானம்); contemplation. 2. நேரம்; time. (சா.அக.).

நு[3] *nu*, பெ. (n.) 1. புகழ்; fame. 2. பழிப்பு; abuse. 3. தோணி; boat. (சா.அக.)

நுக்காங்குலை *nukkāṅ-gulai*, பெ. (n.) காய் விழுந்த பனங்குலைத்தண்டு (யாழ்ப்.); fruit stalk of the palmyra tree when stripped of fruits.

[நுங்கு + குலை – நுங்குகுலை → நுக்காங்குலை]

நுக்கு[1]**–தல்** *nukku-*, 5செ.குன்றாவி. (v.t.) 1. பொடியாக்குதல்; to break in pieces, grind to powder, crush. 2. புடைத்தல்; to thrash, beat soundly. *அவனை நுக்கிவிட்டான்.*

தெ., க. நுக்கு; ம. நொக்குக.

[நொறுக்கு → நுக்கு → நுக்கு–தல்]

நுக்கு[2]**–தல்** *nukku-*, 5செ.கு.வி.(v.i.) மிகுதியாய்ப் பெய்தல்; to pour heavily. *மழை நுக்குகிறது.*

ம. நொக்குக; க., தெ. நுக்கு

[நொறுக்கு → நுக்கு → நுக்கு–தல்]

நுக்கு[3] *nukku*, பெ. (n.) பொடித்துண்டு (வின்.); bit, piece.

[நொறுக்கு → நுக்கு.]

நுக்கு[4] *nukku*, பெ. (n.) எட்டி மரம் (மூ.அ.); strychnine-tree.

மறுவ. காஞ்சிரை.

நுக்கு[5] *nukku*, பெ. (n.) 1. நுங்கு; kernel of young palmyra fruit. 2. விழுங்குகை; swallow (சா.அக.).

[நுங்கு → நுக்கு–வலித்தல்]

நுக்குகி *nukkugi*, பெ. (n.) தெல்லுக்கொடி; creeping mimosa, Mimosaentada. (சா.அக.)

நுக்குடம் *nukkuḍam*, பெ. (n.) நுக்கு[4] (சங்.அக.) பார்க்க; see *nukku*[4]

[நுக்கு → நுக்குடம்.]

நுகக்கால் *nuga-k-kāl,* பெ. (n.) **1.** **நுகம்,1** (நெல்லை) பார்க்க; see *nugam,***1.** **2.** ஏர்க்கால் (வின்.); shaft of a plough.

[நுகம் + கால்]

நுகக்காற்குச்சி *nuga-k-kāṟ-kucci,* பெ. (n.) நுகத்து முளைக்குச்சி (நெல்லை); small wooden peg or bolt inserted in the holes at either end of a yoke.

[நுகக்கால் + குச்சி]



நுகக்காற்சாவி *nuga-k-kāṟ-cāvi,* பெ. (n.) **நுகக்காற்குச்சி** பார்க்க; see *nuga-k-kāṟ-kucci.*

[நுகக்கால் + சாவி]

நுகக்கோல் *nuga-k-kōl,* பெ. (n.) **நுகத்தடி** பார்க்க; see *nuga-t-taḍi.*

[நுகம் + கோல்].

நுகக்கோல் என்பது இன்று பாண்டி நாட்டில் முகக் கோல் என்று திரிந்து வழங்குகின்றது. மோக்கால் என்பது அதன் கொச்சை வடிவம்.

உயிர் முதற்சொற்கள் நகரமெய்ம் முதலாவது இயல்பே. எ–டு: இமை–நிமை, உந்து–நுந்து, ஊன்–நூன் – நீன், ஊக்கு–நூக்கு. (வ. மொ. வ.)

நுகத்தடி *nuga-t-taḍi,* பெ. (n.) ஏர், வண்டி போன்றவற்றினை இழுத்துச் செல்வதற்காக மாட்டின் கழுத்தில் பிணைக்கப் பயன் படுத்தப்படும் நீளமான உருட்டுக்கட்டை; yoke. *நுகத்தடி அழுத்தியதால் காளைகளின் கழுத்துக் காய்ப்பேறி போச்சு. தனியார சாட்சியின் (ஏகாதிபத்தியம்) நுகத்தடியை உதறி யெறிவது அவ்வளவு எளிதல்ல.*

மறுவ. நுகக்கோல், முகத்தடி.

ம. நுகத்தடி

[நுகம்+தடி]

நடுவில் பருத்ததும், ஓரத்தில் சிறுத்தும், நீண்ட உருளை வடிவமும் உடைய மரம்.



நுகத்தடிக்கயிறு *nuga-t-taḍi-k-kayiṟu,* பெ. (n.) நுகத்தடியை வண்டி ஏர்க்காலுடன் இணைக்கும் கயிறு; a rope tide between yoke and yērkkāl.

[நுகத்தடி +கயிறு]

நுகத்தடிச்சங்கிலி *nuga-t-taḍi-c-caṅgili,* பெ.(n.) நுகத்தடியையும் வண்டி ஏர்க்காலையும் இணைக்கும் இருப்புத் தொடரி; iron chain tide yoke and yērkkal.

[நுகத்தடி +skt.சங்கிலி]

நுகத்தடிச்சீர் *nugattaḍi-c-cīr,* பெ. (n.) திருமணச்சடங்கு வகை (இ. வ.); a marriage rite. (செ.அக.)

நுகத்தடித்துளை *nuga-t-taḍi-t-tuḷai,* பெ. (n.) **நுகத்துளை** பார்க்க; see *nuga-t-tuḷai.*

[நுகத்தடி + துளை]

நுகத்தடிப்பிள்ளையார் *nuga-t-taḍi-p-piḷḷaiyār,* பெ. (n.) நுகத்தடியின் நடுவில் அமைந்துள்ள கொண்டை போன்ற கட்டை; a wooden piece, centre of the yoke.

[நுகத்தடி + பிள்ளையார்]

நுகத்தடியின் நடுவில் கட்டையால் அமைக்கப்படும் உருவம். இது கடவுள் உருவமாகவோ, மனித உருவமாகவோ, விலங்குருவமாகவோ அமைக்கப்படும்.

நுகத்தாணி *nugattāṇi,* பெ. (n.) நுகத்தடியை ஏர்க்காலில் இணைக்கும் ஆணி (ஏரெழு. 8); stud of the yoke.

[நுகம் + அத்து + ஆணி.
அத்து – சாரியை]



நுகத்துளை *nuga-t-tuḷai,* பெ. (n.) நுகத்தடியின் இருமுனைகளிலும் உள்ள துளை; hole at each end of a yoke. *"வான்கழி... நுகத்துளை வந்துபட் டாங்கு"* (பெருங். உஞ்சைக். 32:18)

மறுவ. நுகத்தடித்துளை

ம. நுகத்துள

[நுகம் + துளை]

நுகப்பிடி *nuga-p-piḍi,* பெ. (n.) இணை (சோடி) (யாழ்ப்.); match, as a pair of oxen, a couple of persons.

[நுகம் + பிடி]

நுகம் *nugam,* பெ. (n.) **1.** காளையின் கழுத்தில் பூட்டப்படும் மரம்; yoke. *"எருதே யிளைய நுகமுண ராவே"* (புறநா.102). *"பளிக்கு நுகம் பிணைத்து"* (கம்பரா. பாலகா. கார்முக.16). **2. நுகத்தாணி** (அரு. நி.)பார்க்க; see *nugattāṇi.* **3.** சுமை (பாரம்); burden, weight. *"எழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்"* (சிறுபாண்,113). *"வையம்... காக்கும் படுநுகம் பூண்பல்"* (சீவக.203). *"பொழில்கண் விளக்குந் தொழினுகம் பூண்டு"* (பெருங். உஞ்சைக்,1:54). **4.** வலிமை; power, strength. *"தெவ்வர் தேஎம் நுகம்படக் கடந்து நூழிலாட்டி"* (மலைபடு.87). **5.** பதினைந்தாவது விண்மீனாகிய விளக்கு (சுவாதி) விண்மீன் (நாமதீப.108); the 15th naksatra. **6.** கொடு நுகம் (மகநாள்) (அரு.நி); the 10th nakasatra. **7.** கதவுக்குக் காப்பாக இடப்படும் கணையமரம்; protecting bar of a door. *"கொடு நுகந் தழீஇயபுதவின்"* (பெரும்பாண். 127)

ம. நுகம்; க. நொக(g); வ. யுக(g); குட. நொக; து. நுக, நொக; தெ. நொக.

[உ → உக → உகம் = இணை, நுகம். உகம் – நுகம் = ஏரிலும் வண்டியிலும் காளைகளைப் பூட்டும் மரம்.]

நுகம்புரட்டி *nugam-puraṭṭi,* பெ. (n.) 1. கட்டுக் கடங்காத எருது; a refractory ox which will not submit to the yoke. 2. வேலையைக் குழப்புபவன்; one who shirks work.

[நுகம் + புரட்டி]

நுகம்வை—த்தல் *nugam-vai-,* 4செ. கு. வி. (v.i.) நல்ல நாளில் முதன்முறையாக எருத்தின் கழுத்தில் நுகம்பூட்டுதல்(வின்.); to set the yoke on a bull's neck for the first time on an auspicious day.

[நுகம்+வை—த்தல்]

நுகர்[1]—த்தல் *nugar-,* 2செ. குன்றாவி.(v.t.) 1. தின்னச் செய்தல்; causing one to eat, 2. தின்னுதல்; eating. (சா. அக.)

[நுல் (துளை) → நுள் → நுழு → நுகு → நுகர் → நுகர்—த்தல்]

நுகர்[2]—தல் *nugar-,* 2செ. குன்றாவி.(v.t.) 1. துன்பப்படுதல்; suffering. 2. விழுங்குதல்; swallowing. (சா. அக.).

[நுல் → நுள் → நுழு → நுகு → நுகர்→ நுகர்—தல். நுல்—தல் = துளைத்தல்]

நுகர்[3]—தல் *nugar-,* 2செ. குன்றாவி.(v.t.) 1. துய்த்தல்; to enjoy; to experience, as the fruits of actions. "*அஞ்சலோம்பு நின் னணிநல நுகர்கென்*" (குறிஞ்சிப்.181). *ஐம்புலன்களால் நுகரும் இன்பம்.* "*இனிமை நுகர்ந்த மடந்தையும்*" (கோயிற்பு.பதஞ்சலி.42). "*வித்தக நறுந்தார் விருப்பொடு பொருந்தி நுகர்தற் கமைந்த புகர்தீர் பொம்மற்*" (பெருங். இலாவாண. 17:110,111). 2. உண்ணுதல்; to eat,drink. "*அடிசில் பிறர் நுகர்க*" (பு. வெ. 10, முல்லைப். 8). "*அம்பிகையோடு நுகர்ந்து களித்தனன்*" (சிவரக.தேவிமேரு. கயிலை.10). 3. செய்தல்; to do perform. "*நுங்கள் வினைதீர வழிபாடு நுகரா வெழுமினே*" (தேவா. 1060,4)

[நுல் (துளை) → நுள் → நுழு → நுகு → நுகர் → நுகர் —தல் (வே. க.)]

நுகர்ச்சி *nugarcci,* பெ. (n.) 1. வினைப்பயன் துய்ப்பு (அனுபவம்); to enjoyment, experience of pleasure or pain, as from former deeds. "*அருந்தவ மாற்றியார் நுகர்ச்சி போல்*" (கலித்.30). "*தொய்யா வுலகத்து நுகர்ச்சியும் கூடும்*" (புறநா.214). "*சின்னகை முகத்த ணன்னுதல் வாவென நுகர்ச்சியி னுகந்த வளமுலை நோவ*" (பெருங்.மகத,3:122,123). 2. உண்ணுகை; eating, feeding. "*கவியமுதம் நுகர்ச்சியுறுமோ*" (திவ். திருவாய். 8.10:5). 3. துய்ப்புணர்ச்சி; sensation. "*உருவு நுகர்ச்சி குறிப்பே பாவனை*" (மணிமே. 30:189).

[நுகர் → நுகர்ச்சி]

நுகர்ச்சியிலுலகம் *nugarcci-y-il-ulagam,* பெ.(n.) வீடு; heaven. "*நோற்றவன் வலையை நீங்கி நுகர்ச்சியி லுலக நோக்கி யாற்றுறப் போத றேற்றா மளியமோஒ பெரிய மேகாண்*" (சீவக.376).

[நுகர்ச்சி + இல் + உலகம்]

நுகர்ச்சியின்மையணி *nugarcci-iṉmai-y-aṇi,* பெ. (n.) ஒரு பொருள் நுகர்ச்சிக்கு (அநுபவம்) வராமையே அதனின்மைக்கு மூல (ஆதாரம்) மாகக் கூறும் அணி (குவல.113); a figure of speech.

[நுகர்ச்சி + இன்மை + அணி]

நுகர்பொருள் *nugar-poruḷ,* பெ. (n.) அன்றாடத் தேவைகளுக்காக மக்கள் வாங்கிப் பயன் படுத்தும் பொருள்; consumer goods.

[நுகர்+ பொருள்]

நுகர்வு *nugarvu,* பெ. (n.) **நுகர்ச்சி** பார்க்க; see *nugarcci.* "*நோயும் வேட்கையும் நுகர்வு மென்றாங்கு*" (தொல். பொருள். 247). *அலுவலங்களின் மின்சார நுகர்வைக்குறைக்க நடவடிக்கை தேவை.*

F. consumption; E. consommation, G. verbrauch(m); It. consumo.

[நுகர் → நுகர்வு]

நுகர்வு *(consumption)*: மனிதனுக்குப் பசி, தாகம் போன்ற பல தேவைகள் ஏற்படுகின்றன. அத்தேவைகளை ஈடுசெய்ய உணவுப்பொருள், தண்ணீர், வீடு, உடை ஆகிய பொருள்களைப் பயன்படுத்துகின்றான். அவ்வாறு பயன் படுத்துவது 'நுகர்வு' எனப்படும். அதாவது மனிதனின் விருப்பத்தை நிறைவு செய்யும் பொருள்களும் பணிகளும் அவற்றின் செயற்பாட்டில் நுகர்வு எனப்படும்.

உணவை உண்ணுதல், நீரைக் குடித்தல் போன்ற செயல்களின்றி உடையை உடுத்தல், நாற்காலியில் உட்காருதல், மருத்துவரின் தொண்டைப் பயன்படுத்தல் போன்ற செயல்களும் நுகர்வின்பாற் பட்டவையே. எனவே, நுகர்வு என்பது பொருளை அழித்தல் அன்று. திடப்பொருளை மனிதனால் ஆக்கவும் முடியாது; அழிக்கவும் முடியாது. மனிதன் திடப் பொருள்களின் உருவம், நிறம் போன்றவை களை மாற்றி அதன் பயன்படும் ஆற்றலைப் பெருக்குகின்றான். அவ்வாறு செய்யும் செயலை ஆக்கம் (உற்பத்தி) என்கிறோம். ஒரு பொருளை நுகரும்போது மனிதன் அதை அழிக்கவில்லை; ஆக்கத்தினால் (உற்பத்தியி னால்) சேர்க்கப் பெற்ற பயன்பாட்டையே பயன்படுத்துகின்றான். எனவே பொருளை ஆக்குதல் பயன்பாட்டின் ஆக்கம் என்றால், நுகர்வு பயன்பாட்டின் அறிவு எனலாம்.

நுகர்வு, பொருளியல் செயற்பாட்டின் முடிவு ஆகும். அதே சமயத்தில் அது பொருளியற் செயற்பாட்டின் தூண்டுதலுமாகும். ஒரு பொருளை நுகர்வோர் இல்லையென்றால் அதை ஆக்குவோரும் இல்லை; விற்பவரும் இல்லை. எனவே, பொருளியற் செயற்பாட்டின் தொடக்கமும் முடிவும் நுகர்வேயாகும். (கலைக் களஞ்சியம்).

நுகர்வோர் *nugarvōr,* பெ.(n.) தன் பயன்பாட்டுக்காகப் பொருளை வாங்குபவர்; consumer. *வாங்குபவர் வருமானத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல் நுகர்வோரின் நலனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.*

F. consommateur; G. verbraucher (inf)m., It. consumatore, trice.

[நுகர்வு → நுகர்வோர்]

நுகர்வோர்கடன் *nugarvor-kaḍaṉ,* பெ. (n.) வைப்பகம் போன்ற அமைப்புகள் நுகர் வோர்க்கு வழங்கும் கடன்; consumer credit.

[நுகர்வோர் + கடன்]

நுகர்வோர் கூட்டுறவு *nugarvōr-kūṭṭuṟavu,* பெ.(n.) நுகர்வோர் குழுவுக்குச் சொந்த மானதும், அதனாலேயே நடத்தப்படுவதுமான ஒரு வாணிகத் தொழில் அமைப்பு; consumer co-operative.

[நுகர்வோர் + கூட்டுறவு]

இவ்வமைப்புச் சில்லறை, மொத்த விற்பனையுடன் தோற்றுவித்தல், நுகர்ச்சிப் பண்டங்களைப் பதப்படுத்துதல் போன்ற வற்றையும் செய்கிறது.

நுகர்வோர்பாதுகாப்பு *nugarvōr-pādukāppu,* பெ.(n.) நுகர்வோர், பண்டம் பற்றிய குறை, இழப்பு, மனநிறைவின்மை போன்றவற்றைக் களைந்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நுகர்வோர் ஒருங்கிணைந்து மேற் கொள்ளும் அமைப்பு; consumer protection.

[நுகர்வோர் + பாதுகாப்பு]

நுகர்வோர் பாதுகாப்பு என்பது, அவரது உடல் நலனைக் கெடுக்கும் பண்டம், பணிகளிலிருந்து காத்தல்; ஏமாற்று வாணிகமுறை, சூழ்நிலைச் சீர்கேடு போன்ற செயல்களிலிருந்து காத்தல்.

நுகர்வோருளவியல் *nugarvōr-uḷaviyal,* பெ. (n.) நுகர்வோரின் நடத்தையைப் பற்றி விளக்கும் உளவியல் துறை; consumer psychology.

[நுகர்வோர் + உளவியல்]

நுகர்வோர் நடத்தையில் இரு இன்றியமையாக் கூறுகள் உள்ளன. அவை: 1. இயற்கைத் தேவைகளை நிறைவேற்றுதல், 2. மற்றத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளுதல் என்பன. இரண்டுக்கும் பெரிய வேறுபாடுகள் இல்லையென்றாலும் சிற்சில வகைகளில் வேறுபடுகின்றன. நுகர்வோரின் நடத்தை இயற்கைத் தேவைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அமைந்தால் அந்நடத்தைக்கு விளக்கம் பெரிதும் தேவைப்படாது. ஆனால், பிறதேவைகளைப் பொறுத்து நுகர்வோர் நடத்தை அமைந்தால் அதற்கு விளக்கங்கள் பெரிதும் தேவைப்படும்.

இயற்கைத் தேவைகள் என்பன உடல் தொடர்புடையனவாகும். அதாவது பசி, வேட்கை, ஓய்வு முதலியன. ஆசை, மேலாண்மை, அடைவு முதலியன உளத் தொடர்புடைய பிற தேவைகளாகும். (வாழ்வியல்).

நுகும்பு *nugumbu,* பெ. (n.) 1. பனை, வாழை முதலியவற்றின் மடல்விரியாத குருத்து; unexpanded tender leaf of palmyra, plantain, etc. *"பனை நுகும்பன்ன சினைமுதிர் வராலோடு"* (புறநா. 249). *"வரிமரல் நுகும்பின் வாடி அவண"* (நற்.92:3). *"சோலை வாழைச் சுரிநுகும்பு இனைய"* (குறுந்.308:1). 2. பனையோலை; palmyra leaf. *"நுகும்பினு ளிடைப்பட வெழுதுக"* (பெருங். நரவாண. 7:123). *"நாடு நகரமு நளிமலை முட்டமும் உள்கண் டமைந்த கொள்குறி நுகும்பிற்"* (பெருங்.வத்தவ.2:43,44).

[நுல் (= இளமை, மென்மை) → நுள் → (நுழு) → நுகு → நுகும்பு = பனங்குருத்து. ஒ. நோ : தொழு → தொகு (வே. க).]

நுகை[1]–தல் *nugai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. தளர்தல்; to become lax, loose, as a garment. *நுகைந்த கட்டு.* 2. இளகுதல்; to become soft, as the earth from rain.

[நுள் → நுகு → நுகை → நுகை–தல் (சு. வி.)]

நுகை[2]–த்தல் *nugai-,* 4 செ. குன்றாவி. (v.t.) 1. தளரச்செய்தல் (யாழ்ப்.); to relax, loosen, slacken, mitigate. 2. இளகச்செய்தல்; to soften.

[நுள் → நுகு → நுகை → நுகை–த்தல் (சு.வி.)]

நுகை[3] *nugai,* பெ. (n.) சிவதை (சங். அக.); Indian jalap.

[நுசை → நுகை. நுசை = சிவதை.]

நுகை[4] *nugai,* பெ. (n.) 1. தளர்; loose. 2. இளகு; soft.

[நுள் → நுகு → நுகும்பு = மடல் விரியாத குருத்து. நுள் → நுகு → நுகை (சு. வி.)]

நுகைப்பு *nugaippu,* பெ. (n.) இளகச்செய்கை; to act of loosening. (சா.அக.).

[நுகை= இளகு, தளர். நுகை[4] → நுகைப்பு]

நுகைவு *nugaivu,* பெ. (n.) 1. தளர்வு; looseness, laxity. 2. தளர்ந்தது; anything loose. 3. மென்மையானது (மிருது); softness, mellowness. 4. தணிவு; mitigation, relaxation, as of a disease. 5. மனக்கனிவு; tenderness of mind. 6. பொருளுதவி; pecuniary.

[நுகை → நுகைவு]

நுங்கம்பாக்கம் *nungam-pākkam,* பெ. (n.) சென்னை மாநகரில் உள்ள நெய்தல் நில ஊர்ப் பெயர்; a village in Chennai city.

கடற்கரைச் சிற்றூர்கள் பாக்கம் என்று பெயர் பெறும். சென்னை மாநகரின் அருகே சில பாக்கங்கள் உண்டு. கோடம்பாக்கம், மீனம்பாக்கம், வில்லிபாக்கம் முதலிய ஊர்கள் நெய்தல் நிலத்தில் எழுந்த குடியிறுப்பேயாகும். சில காலத்திற்கு முன் தனித்தனிப் பாக்கங்களாய்ச் சென்னையின் அண்மையில் இருந்த சிற்றூர்கள் இப்போது அந்நகரின் பகுதிகளாய் விட்டன. புதுப்பாக்கம், புரசைபாக்கம், சேப்பாக்கம், நுங்கம்பாக்கம், பட்டினப்பாக்கம் முதலிய ஊர்கள் சென்னை மாநகரோடு சேர்ந்திருக்கின்றன.

நுங்கல் *nungal,* பெ. (n.) 1. பருகுகை; drinking. 2. விழுங்குகை; swallow. (சா. அக.).

[நுங்கு = விழுங்கு. நுங்கு → நுங்கல்]

நுங்கள் *nungaḷ,* ப.பெ. (pron.) 1. முன்னிலைப் பெயராகிய நீங்கள் என்பது வேற்றுமை யுருபேற்கும் போது அடையும் உருவம்; the form which *niṅgaḷ* assumes in obligue cases. "*நுங்கட்கு*" (திங். திருவாய். 8.2:1). 2. உங்கள்; your. "*உமைத் தொடுத்த சாபத்துப் பறநோக்கி நுங்கடொல்லுரு நல்கி*" (திருவிளை.அட்ட.10). "*நுங்களை வீணை வென்ற*" (சீவக.796).

[நும் → நுங்கள்]

நுங்கன் *nungaṉ,* பெ. (n.) ஆதனுங்கன் என்னும் குறுநில மன்னன்; Adanungaṉ, the king of Thiruvēngaḍam.

[ஆதனுங்கன் → நுங்கன். திருவேங்கடத்தைச் சார்ந்த மலைநாட்டை ஆண்டவன். இப்போது திருப்பதியில் திருவேங்கடவன் கோயில் இருக்கும் பகுதியே இவன் வாழ்ந்த இடம். கள்ளில் ஆத்திரையனார் என்னும் புலவர் இவனைப் பாடியுள்ளார். (சி. பெ. அ.)]

நுங்கி *nungi,* பெ. (n.) 1. இரைக்குழல்; oesophagus. 2. கண்டநாளம்; the passage in the neck of an animal through which food and drink are taken to the stomach - Gullet. (சா. அக.).

[நுங்கு → நுங்கி]

நுங்கு¹–தல் *nungu-,* 5 செ. குன்றாவி.(v.t.) 1. விழுங்குதல்; to swallow, devour. 2. வயிறாரப் பருகுதல்; to drink in large draughts. "*நூறுநூறு குடங்களு நுங்கினான்*" (கம்பரா. கும்ப. 60). "*இந்தநஞ் சேர்கானகத்தை நுங்குமெரிபோல்*" (பிரமோத்.காண்.13:20). 3. கைக்கொள்ளுதல்; to take possession of capture. "*பகைவர் முனுங்கி*" (பு. வெ. 4:15). 4. உட்கொள்ளுதல்; to include; suck "*மகரவாய் நுங்கிய சிகழிகை*" (கலித். 54).

து. நிங்குநி, நிங்குடுநி, திங்குநி, திங்குடுநி; **க.** நுங்கு; **குரு.** நுநுக்நா; **மா.** நுந்கெ; **பிரா.** நுகுசிங் (nugushing).

[நுல்(துளை) → நுள் → நுழு → நுகு → நுங்கு → நுங்கு – தல் = துளை போன்ற வாய்க்குளிட்டு விழுங்குதல் (வே.க.)]

நுங்கு²–தல் *nungu-,* 5செ. கு.வி.(v.i.) கெடுதல்; to perish; to be destroyed. "*வினை கணுங்கிடாவே*" (சி.சி.8:35)

[நுங்கு¹ → நுங்கு²–தல்]

நுங்கு³ *nungu,* பெ. (n.) 1. இளம் பனங்காயின் உள்ளீடான இனிப்புச் சுவையுடைய வழவழப்பான சதைப்பகுதி; pulpy kernel of a tender palmyra fruit. "*நுங்கு சூன்றிட்ட கண்*" (நாலடி, 44). 2. நுங்குக்காய்; tender palmyra fruit. "*நுங்கின் றடிகண் புரையுங் குறுஞ்சுனை*" (கலித். 108:40).

"தோட்ட நுங்கிற் றொளை யுறு மூக்கினை" (கம்பரா.கரன்.8). *"ஓங்கிரும் பெண்ணை நுங்கொடு பெயரும்"* (குறுந். 293:3). *பனைமரத்தில் ஏறி ஒருகுலை நுங்கு வெட்டிப் போட்டான்.*

தெ. நுங்கு; ம. நொங்ங்டு.

[நுல் = இளமை, மென்மை. நுல் → நுள் → நுழு → நுகு → நுங்கு = இளம்பனங்காய்]

நுங்குக்கசர் *nuṅgu-k-kašar,* பெ. (n.) நுங்கின் மேற்றோல் (யாழ்ப்.); the astringent skin covering the pulp of a tender palmyra fruit.

மறுவ. நுங்குத்துவர்.

[நுங்கு + கசர்]

நுங்குக்கட்டி *nuṅgu-k-kaṭṭi,* பெ. (n.) முற்றின நுங்கின் உள்ளீடு(வின்.); hard pulp of the seed of a palmyra fruit.

மறுவ. கொட்டை நுங்கு.

[நுங்கு + கட்டி]

நுங்குக்கண் *nuṅgu-k-kaṇ,* பெ. (n.) வெட்டிய பனங்காயிற் காணப்படும் உள்ளீட்டுக்குழி (உ.வ.); the holes of a tender palmyra fruit containing the pulp.

[நுங்கு + கண்]

நுங்குக்குவளை *nuṅgu-k-kuvaḷai,* பெ. (n.) நுங்கு எடுத்தப் பனங்காய்(வின்.); shell of a young palmyra fruit after the pulp has been removed. *நுங்குக்குவளை அடுப்பெரிக்கப் பயன்படும்.*

மறுவ. நுங்குக்கோம்பை, நுங்குக்கோளை.

[நுங்கு + குவளை. குவளை = நுங்கு எடுத்த பனங்காயின் குழிவான பகுதி.]

நுங்குக்கோம்பை *nuṅgu-k-kōmbai,* பெ.(n.) நுங்குக்குவளை(வின்.) பார்க்க; see *nuṅgu-k-kuvaḷai.*

[நுங்கு + கோம்பை]

நுங்குக்கோளை *nuṅgu-k-kōḷai,* பெ.(n.) நுங்குக்குவளை (வின்) பார்க்க; see *nuṅgu-k-kuvaḷai.*

[நுங்கு + கோளை]

நுங்குகை *nuṅgugai,* பெ.(n.) விழுங்குகை; the act of swallowing-Deglutition.

[நுங்கு → நுங்குகை]

நுங்குத்துவர் *nuṅgu-t-tuvar,* பெ.(n.) நுங்குக்கசர் (யாழ்ப்.) பார்க்க; see *nuṅgu-k-kašar.*

[நுங்கு + துவர்]

நுங்குந்நுரையுமாக *nuṅgu-n-nuraiyumaga,* வி.எ.(adv.) பால், தண்ணீர் போன்ற நீர்மப் பொருளின் மேலெழும் நுரையுடன்; foamy. *ஆற்றில் வெள்ளம் நுங்கும் நுரையுமாகக் கரைபுரண்டு ஓடியது. அப்போதே கறந்த பால் நுங்கும் நுரையுமாக இருக்கும்.*

[நுங்கு^{3} + உம் + நுரை + உம் + ஆக.]

நுங்குநீர் *nuṅgu-nīr,* பெ. (n.) பனையிளங் காயின் தண்ணீர்; water of young palmyra fruit.

[நுங்கு + நீர்]

இது தாகத்தை அடக்கி வெப்பத்தைத் தணிக்கும். வேர்க்குருவில் தடவ, குணமாகும். (சா.அக.).

நுக்குகி

நுச்சிலி

நுட்டம்

நுங்குப்பற்று *nungu-p-parru,* பெ. (n.) கட்டியும் குழம்புமாகக் கலந்த கலப்பு; a colloid solution in which the particles or solid suspended as it were in the fluid part of the solution - Suspension colloid. (சா.அக.).

[நுங்கு[3] + பற்று]

நுங்குப்பாக்கு *nungu-p-pākku,* பெ. (n.) இளம்பாக்கு (வின்.); green, tender arecanut.

[நுங்கு[3] + பாக்கு]

நுங்கை[1] *nungai,* பெ.(n.) 1. உன் தங்கை; your younger sister. "*மிருகாபதியெனு நுங்கை தன்னகர்*" (பெருங். இலாவாண. 11:130), "*நுங்கை கையிழந்த தென்மாயமோ*" (கந்தபு.சூரன்றண்ட.23). 2. உன்தாய்; your mother. "*நுங்கையு மேருவி னிருந்தாள்*" (கந்தபு. சயந்தன்கன.9).

[நும் → நுங்கை. முன்னிலைப்பெயர்]

நுங்கை[2] *nungai,* பெ. (n.) நுங்கம்பாக்கம் பார்க்க; see *nungam-pākkam.*

நுச்சிலி *nuccili,* பெ.(n) ஏழிலைப்பாலை; seven leaved milky plant-Alstonia scholaris alias A.oleandrae folia. (சா.அக.).

நுசுப்பு *nušuppu,* பெ.(n.) மகளிர் சிற்றிடை; waist of a woman. "*நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை*" (குறள், 1115). "*முற்றாமுகிழ் முலைப்பான் முற்றி முகங்கறுப்பப் பற்றா நுசுப்பாள் கருப்பம் படைத்தனளே*" (பிரமோப.காண்.3:10). "*அம்மா மேனி ஐதமை நுசுப்பின்*" (அகநா.75:18). "*மேலிருந்த தனயான் பொறையாற் றேனென் றொசிவது போலுநின் னொசிநுசுப் புணரா*" (பெருங்.உஞ்சைக். 1:212,213). *உடுக்கை போன்று நுசுப்பு இருக்கும் பெண்கள் அழகாக இருப்பர்.*

[நுல் → நுள் → நுளு → நுசு → நுசுப்பு = நுணுகிய, மகளிர் இடை; சிறுத்த இடை. நுல் = சிறுமை, மென்மை. ஒ.நோ : உளு → உசு.]

நுசை *nušai,* பெ. (n.) சிவதைவேர் (தைலவ. தைல.103); root of Indian Jalap.

தெ. நுசலிங்க.

நுஞ்சு *nuñju,* பெ. (n.) அதிமதுரம்; honey creeper-Glycirrhhiza glabra. (சா.அக.).

நுட்டம் *nuṭṭam,* பெ. (n.) எருக்கு; sun plant-Calotropis gigantea. (சா.அக.).

நுட்பக்காரன் *nuṭpa-k-kāraṉ,* பெ. (n.) அறிவுக் கூர்மையாளன் (இ.வ.); man of acute intellect. *தொலைக்காட்சி பழுது பார்ப்பதில் அவன் நுட்பக்காரன்.*

[நுட்பம் + காரன். நுட்பம் = அறிவு நுட்பம். காரன் = ஆண்பால் ஒருமை ஈறு.]

நுட்பக்கோள் *nuṭpa-k-kōḷ,* பெ. (n.). நுட்பம்–4 பார்க்க; see *nuṭpam–4.*

[நுட்பம் + கோள்]

நுட்பபாகம் *nuṭpa-pāgam,* பெ.(n.). அணு போன்ற சிறிய பகுதி; finer parts. 2. எளிதில் மாற்ற மடையக்கூடிய பகுதி; the part of a substance which changes by yielding to slightest pressure, the fluid part. (சா.அக.).

[நுட்பம் + பாகம். நுட்பம் = நுண்மை, சிறுமை. பாகம் = சிறிய பகுதி.]

நுட்பம் *nuṭpam,* பெ. (n.) 1. நுணுக்கம், நுண்மை; minuteness, fineness. *"நெய்யினும் யாரு மறிவர் புகை நுட்பம்"* (நாலடி,282). *"கொற்றவற் காண்மென வெற்றவேற் றடக் கையர் கோல்வித்தகங் குயின்ற நுட்பத்து"* (பெருங்.இலாவாண.2:36,37). *தொலைக் காட்சியில் ஏற்பட்ட நுட்பமான கோளாறு இன்றுதான் சரி செய்யப்பட்டது.* 2. அறிவு நுட்பம், அறிவுக்கூர்மை; subtlety, insight, acuteness. *நுட்பம் மிகுந்த அறிவுடையவர்.* 3. பொருளின் நுட்பம்; precision, accuracy. *"திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்"* (நன்.18). 4. கரந்துறை கோள்களுள் ஒன்று; an invisible planet. *'வட்டம், சிலை, நுட்பம், தூமம்'* என்னும் கோள்கள் நான்கினும் (சிலப்.10:102, உரை). 5. காலநுட்பம்(பிங்.); minute point of time. 6. ஒரு கருத்தைக் குறிப் பினாலுணர்த்தும் பொருளணி; figure of speech which expresses an idea by implication. *"திரிபுவேறு கிளவாது குறிப்பினுந் தொழிலினும் அரிதுணர் வினைத்திற நுட்ப மாகும்"* (தண்டி.64). 7. நுண்ணிய ஆராய்ச்சி தோன்ற எழுதப் பெற்ற உரை (யாப்.வி.1); critical commentary.

[நுட்பு → நுட்பம்] [நுட்பு + அம்]

நுட்பமான *nuṭpamāṉa,* பெ.எ. (adj.) நுண்மை யான; minute. *நுட்பமான பொருள்கள், நுட்பமான கருத்துக்கள்.*

[நுட்பம் → நுட்பமான]

நுட்பவணி *nuṭpa-v-aṇi,* பெ. (n.) பிறர் கருத்தை யறிந்து கொண்டு, வெளிப் படையாகக் கூறாமல் குறிப்பினாலாவது தொழிலினாலாவது அரிதாக அறியத்தக்க தன்மையுடைய அணி (தண்டி. 64 உரை); figure of speech which expresses an idea by implication.

[நுட்பம் + அணி]

நுட்பவணி, குறிப்பு நுட்பம், தொழில் நுட்பம் என இருவகைப்படும்.

குறிப்பு நுட்பம் : கருத்தை வெளிப் படையாகக் கூறாமல் குறிப்பால் நுட்பமாக தெரிவிக்கும் அணி.

"காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததால்
போதைய ராயம் பிரியாத – மாதர்
படரிருள்கால் சீக்கும் பகலவனை நோக்கிக்
குடதிசையை நோக்குங் குறிப்பு."
(தண்டி.64 மேற்கோள்)

காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்தால் ஆயத்தால் பிரியாது சூழப்பட்ட மாதர் கதிரவனை நோக்கி மேற்றிசையையும் பார்த்தனர். இதில் கதிரவனைப் பார்த்து மேற்றிசையையும் பார்த்த குறிப்பு வருவதால் மாலைக் காலத்து கூட்டம் நேர்ந்தவாறு என்னும் நுட்பக் குறிப்பு அறியப்படுவதால் இது குறிப்பு நுட்பவணி.

தொழில் நுட்பம் : தொழிலால் கருத்தை நுட்பமாக அறிவிக்கும் அணி.

"பாடல் பயிலும் பணிமொழி தன் பணைத்தோள்
கூடல வாவாற் குறிப்புணர்த்தும் –ஆடவற்கு
மென்றீந் தொடையாழின் மெல்லவே
தைவந்தாள்
இன்றீங் குறிஞ்சி யிசை" (தண்டி.64,மேற்கொள்).

பாடுந் தொழிலை யுடையாள் தலைவனைத், தழுவ வேண்டுமென்னும் ஆசையால் தலைவற்குத் தன் உள்ளக் கருத்தைத் தெரிவிக்கும் முகத்தான் குறிஞ்சிப் பண்ணை யாழிலே இசைத்து அறிவிக்கின்றாள். குறிஞ்சிக்குக் காலம் இடையாம மாகலால் இடையாமத்திற் கூட்டம் வேண்டும் என்ற கருத்தை யாழிலே, குறிஞ்சிப் பண்ணை யிசைப்பதாகிய தொழிலால் நுட்பமாக அறிவிப்பதால் இது தொழில் நுட்பவணி.

நுட்பு *nuṭpu,* பெ.எ. (adj.) நுண்மை; minuteness.

[நுண் → நுண்பு → நுட்பு (வே.க.)
நுள் + பு – நுட்பு (சு.வி.)]

நுடக்கம்[1] *nuḍakkam,* பெ. (n.) **1.** அசைவு; shaking, waving, as of a flag in the wind; tremulousness. *"கோங்கரும் பழித்த வீங்கிள மென்முலை உட்பட விட்ட வட்ட நுடக்கத்து"* (பெருங்.இலாவாண,2:211,212). **2.** துவட்சி; flexibility, pliability. *"சூரமை நுடக்கத்து நின்வெங் காதலி"* (ஐங்குறு. 71). **3.** தள்ளாட்டம்(வின்.); tottering, as a of an old man. **4.** கூத்து; dancing. *"நல்லவர் நுடக்கம்போ னயம்வந்த கொம்பு"* (கலித்.32), *"வெறியுறு நுடக்கம் போலத் தோன்றி"* (பதிற்றுப்.51). **5.** வளைவு (யாழ்.அக.); bend. flexure.

[நுடங்கு → நுடக்கம்]

நுடக்கம்[2] *nuḍakkam,* பெ. (n.) **1.** நுட்பம்; minuteness. **2.** முடக்கம்; condition of being bent as limbs.

[நுடங்கு → நுடக்கம்]

நுடக்கம்[3] *nuḍakkam,* பெ. (n.) புழுக்கைப் பட்டை அல்லது கனகிப்பூடு; round leaved tadda - Grewia orbiculata. (சா.அக.).

[நுடங்கு → நுடக்கம்]

நுடக்கி *nuḍakki,* கு.வி.எ(adv.) ஒன்றாகக் கரைத்து; dissolve. *"நூலிலாட்டி நுடக்கிக் குடித்து"* (சீவக.762).

[நுடக்கு → நுடக்கி.]

நுடக்கு[1]**–தல்** *nuḍakku-,* 5 செ.குன்றாவி.(v.t.) **1.** கழுவுதல்; to wash. *"வள்ள நுடக்கிய வார்ந்துகு சின்னீர்"* (பெரும்பாண்.339). **2.** துவட்டுதல் (சூடா.); to wipe off moisture. **3.** மாய்த்தல்; to destroy. *"பொங்குபிசிர் நுடக்கிய செஞ்சுடர் நிகழ்வின்"* (பதிற்றுப்.72:14). **4.** கரைத்தல்; to dissolve. *"நூழி லாட்டி நுடக்கிக் குடித்து"* (சீவக.762). **5.** மடக்குதல்; to bend, fold.

[நுடங்கு → நுடக்கு]

நுடக்கு[2] *nuḍakku,* பெ. (n.) அசைவு; shaking, waving as of a flag in the wind. *"அவிரழ னுடக்கு"* (பரிபா. 2:51).

[நுடங்கு → நுடக்கு]

நுடக்கு[3] *nuḍakku,* பெ. (n.) **1.** முடக்கு; bend. **2.** தள்ளாட்டம்; totter. (சா.அக.).

[நுடங்கு → நுடக்கு]

நுடங்கு[1]**–தல்** *nuḍaṅgu,* 5 செ.கு.வி.(v.i.) **1.** அசைதல்; to shake, wave; to be tremulous. *"பல்கொடி நுடங்குமுன்பிற் செறுநர் செல்சமந் தொலைத்த வினைநவில் யானை"* (பதிற்றுப்.82:3.), *"நுடங்குகொடி மருங்கி னுணுகிய நுசுப்பின் மடந்தை மகளிர் குடைந்தா டரவமும்"* (பெருங். உஞ்சைக். 1:80,81). **2.** துவளுதல்; to be flexible, pliable. *"மின்னேர் நுடங்கிடை"* (திருவாச.11:9). **3.** தள்ளாடுதல்; to totter, tremble. *"நக்கான்முக நோக்கி நடுங்கி நுடங்கி"* (பெரியபு.தடுத்.39). **4.** ஆடுதல்; to dance. *"மாறிரியச் சீறி நுடங்குவான்"* (பு.வெ.2:9). **5.** வளைதல்; to be bent. *"நுடங்குநுத லிளவே ரிடங்கெட வணிய"* (ஞானா.36:4). **6.** நுட்பமாதல்(வின்.); to be fine, thin, at tenuated. **7.** அடங்குதல்; to be contained. *"நூறுயோசனை அகலமு மாழமு நுடங்க"* (கம்பரா. அகலிகை.38). **8.** ஈடுபடுதல்; to be fascinated. *"நுடங்கு கேள்வி மிசையென்கோ"* (திவ்.திருவாய்.3.4:6).

[நுள்(வளைவு) → நுட → நுடங்கு → நுடங்கு–தல் (மு.தா.)]

நுடங்கு^{2}–தல் *nuḍaṅgu-,* 5செ.கு.வி.(v.i.) மெலிதல்; to be feeble, thin or weak. *"நொந்தவரே முதலாக நுடங்கி யனன்னியராய்"* (ரஹஸ்ய.390).

[நுடங்கு^{1} → நுடங்கு^{2}-தல்]

நுடங்கு^{3} *nuḍaṅgu,* பெ. (n.) 1. அசைவு; tremulousness. 2. நுட்பம் (யாழ்.அக); thinness, smallness. 3. துவளுதல்; to be flexible. *"நிறைவளை முன்கைத் தோழியர் குடைந்த நுரைகை யரிக்குமோர் நுடங்கிடை காண்மின்"* (பெருங்.உஞ்சைக். 1:150,151).

[நுடங்கு^{1} → நுடங்கு^{3}]

நுடம் *nuḍam,* பெ. (n.) 1. வளைவு; bent 2. கால், கை வளைவு; crookedness.

[நுள்(வளைவு) → நுட → நுடம் (மு.தா.)]

நுண்^{1} *nuṇ,* பெ. (n.) 1. அணு; minute particle of matter. 2. நுண்மை; minuteness. *'நுண்பொருள் கொடுத்து நுண்ணியராவர்' (பழ.).*

ம. நுண்மு; **கோத.** நுந்க்.

[முள் → நுள் → நுண் = கூர்மை, நொய்மை, சிறுமை. முள் = ஊசி, ஊசிபோன்ற உறுப்பு. (சுவி.40)]

[நுல்(கூர்மை, சிறுமை) → நுள் → நுண் (வே.க.)]

[முன் → முனி → நுனி → நுணி → நுண்.]

நுண்–L. min. இதனின்று minor, minority, minish, minin, minmum, minister, ministrel, minute, minus முதலிய பல சொற்கள் பிறக்கும். (ஒ.மொ.நூ.326)

நுண்^{2} *nuṇ,* கு.பெ.எ. (adj.) 1. நுட்பமான; fine. *நுண்கலைப்பொருள்.* 2. நுணுக்கமான; minute. *ஒரு சிறிய நுண் பொருள் விழுந்து விட்டது.* 3. கூரிய; sharpness. 4. நொய்ய; lightness. 5. பருப்பொருளல்லாத; minuteness.

க. நுண்; **து.** நொண்ணத, நொண்ணகே; **தெ.** நுநு.

[நுல் (கூர்மை, சிறுமை) → நுள் → நுண்]

நுண்கணிதம் *nuṇ-kaṇidam.* பெ.(n.) இடத்தையும் காலத்தையும் பொறுத்து மாறுபடும் அளவுகளைக் கணக்கிடுவதற்கான ஒரு வகைக் கணிதப் பிரிவு; claculus.

[நுண் + கணிதம்]

நுண்கலை *nuṇ-kalai,* பெ. (n.) அழகியலை அடிப்படையாகக் கொண்ட ஓவியம், இசை, சிற்பம் போன்ற கலை; fine arts like painting, music etc.

[நுண் + கலை]

கலையைப் (Arts of use) பயன்கலை, நுண்கலை என இருகூறாகப் பிரிப்பர். பயன்கலை: சமைத்தல், பானை வனைதல், கூடை முடைதல் போன்றவற்றை உள்ளடக்கியது. உடற்பயன் அன்றி மனமகிழ்ச்சி பற்றிக் கூறப்படும் மற்றொன்று நுண்கலை.

நுண்காட்சி *nuṇ-kāṭci,* பெ.(n.) கூர்ந்து பார்க்கும் காட்சி; observation.

[நுண் + காட்சி]

நுண்கிருமி *nuṇ-kirumi,* பெ.(n.) மக்களுக்கும், விலங்குகளுக்கும் நோயையும், பொருள்களில் வேதியல் மாற்றத்தையும் ஏற்படுத்தும் நுண்ணுயிர்; virus, bacteria.

[நுண் + Skt. கிருமி]

நுண்டுகில் *nuṇḍugil,* பெ. (n.) பட்டாடைவகை (சிலப்.14:108, உரை.); a kind of fine silk cloth. *"வாழ்வோ ருளரெனிற் சூழ்கதன் வினையென ஆவி நுண்டுகில் யாப்புறுத் தாயினும்"* (பெருங். உஞ்சைக். 1:63,64). *"நுண்டுகி லகலல்கு னோசித்த வெம்முலை"* (சீவக.654).

[நுண் + துகில்]

நுண்டொடர் *nuṇḍoḍar,* பெ. (n.) நேர்ஞ்சங்கிலி பார்க்க; see *nērñjaṅgili. "சங்கிலி நுண் டொடர் பூண்ஞாண் புனைவினை"* (சிலப்.6:99).

[நுண் + தொடர்]

நுண்ணயமுள்ள *nuṇṇayamuḷḷa,* கு.பெ.எ. (adj.) நுண்மையானதும், சிறியதுமான; that which is thin and fine.

[நுண் + நயம் + உள்ள.]

நுண்ணயமுறை *nuṇṇaya-muṟai,* பெ.(n.) செயல் நுட்பம்; tactics.

[நுண் + நயம் + முறை]

நுண்ணளவுகோல் *nuṇṇaḷavu-kōl,* பெ.(n.) வெர்னியர் அளவுகோல்; Vernier scale.

[நுண் + அளவு + கோல். நுண்ணள வையும் அளக்கும் கோல்.]



நுண்ணறிவு *nuṇ-ṇ-aṟivu,* பெ. (n.) நுண்ணு ணர்வு பார்க்க; see nuṇṇuṇarvu. *"நூலளவே யாகுமா நுண்ணறிவு"* (வாக்குண்.7).

[நுண் + அறிவு]

நுண்ணாக்கை *nuṇ-ṇ-ākkai,* பெ. (n.) நுண் உடல் (சூட்சும சரீரம்); subtle body. *"பாச மடங்கு நுண்ணாக்கை நீங்க"* (சிவதரு. சிவயோ. 107)

[நுண் + ஆக்கை]

நுண்ணாய்வாளர் *nuṇṇāy-vāḷar,* பெ. (n.) துல்லியமான திறனாய்வாளர்; critic.

[நுண் + ஆய்வாளர்]

நுண்ணிச்சிறை *nuṇṇi-c-ciṟai,* பெ.(n.) கொசுக்கட்டைக் குருவி; an unknown small bird so called probably of its minute and delicate wings. (சா.அக.).

[நுண் → நுண்ணி + சிறை]

நுண்ணிய இறகுகளையுடைய குருவியாக இருக்கலாம்

நுண்ணிடை *nuṇ-ṇ-iḍai,* பெ. (n.). ஒடுங்கிய இடையையுடைய பெண் (திவா.); woman, as having a slender waist. *"வஞ்சி நுண்ணிடை மணிமே கலை"* (சிலப்.5:81).

[நுண் + இடை]



நுண்ணிநாளம் *nuṇṇi-nāḷam,* பெ.(n.) நுட்பமான நாளம்; minute capillaries. (சா.அக.)

[நுண் → நுண்ணி + நாளம்]

நுண்ணிமை *nuṇṇimai,* பெ.(n.) **நுண்மை** பார்க்க; see *nuṇṇimai.* *"நுண்ணிமை யிறந் தமை யறிவன்"* (திருவிசை. கருவூர்த். திருப்பூவ.4)

[நுண் → நுண்ணிமை]

நுண்ணிய *nuṇṇiya,* பெ.எ. (adj.) 1. மிகச் சிறிய; tiny. 2. நுட்பமான; fine. *"நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றும் தன் உண்மை அறிவே மிகும்"* (குறள்,373). *நுண்ணிய ஞானம் உரைப்பார்கள் சொன்னதில் ஒன்றும் நடவார்கள்* (பழ.) 3. நுணுக்கமான; minute. *'நுண்ணிய கருமமும் எண்ணித் துணி' (பழ.), 'நுண்ணிய கருமமும் எண்ணிச் செய்தல் வேண்டும்' (பழ.). நுண்ணிய வேறுபாடுகள் இருக்கும். நுண்ணிய அறிவு கொள்ள வேண்டும். "நுண்ணிய வரியோடு திரண்டு நோக்குநர்"* (சீவக.1702).

[நுண் → நுண்ணிய]

நுண்ணியம் *nuṇṇiyam,* பெ. (n.) **நுண்ண** றிவுடைமை; acute intellect. *"நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற் கண்ணல்ல தில்லை பிற"* (குறள்,710).

[நுண் → நுண்ணியம்]

நுண்ணியது *nuṇṇiyadu,* பெ. (n.) நுண்மை யானது; that which is meticulous.

[நுண் → நுண்ணியது]

நுண்ணியர் *nuṇṇiyar,* பெ.(n.) 1. அறிவுடை யோர்; intellectual people. 2. நுட்பமானவர்; subtle man. 3. பெரியோர்; great persons. 4. மந்திரிகள்; the ministers.

[நுண் → நுண்ணியர்]

நுண்ணியான் *nuṇṇiyāṉ,* பெ. (n.) 1. கூரறிவுடையோன்; person of acute intellect, quick parts or subtle discrimination. 2. அமைச்சர் (அக.நி.); minister.

[நுண் → நுண்ணியான்]

நுண்ணுடம்பு *nuṇ-ṇ-uḍambu,* பெ. (n.) **நுண்ணாக்கை** பார்க்க; see *nuṇṇākkai.* (சா.அக.).

[நுண் + உடம்பு]

நுண்ணுணர்வு *nuṇ-ṇ-uṇarvu,* பெ.(n.) நுண்ணறிவு (நுட்ப புத்தி); keen pesception, acute intellect. *"நுண்ணுணர் வின்மை வறுமை"* (நாலடி,251).

[நுண் + உணர்வு]

நுண்ணுயிர் *nuṇṇuyir,* பெ. (n.) 1. நுண் ணோக்கியின் மூலம் மட்டுமே அறிந்திடக் கூடிய பலவகையான மிகச் சிறிய உயிரினம்; micro organism. 2. சிற்றுயிர்; delicate life of small creatures.

E. germ; F. microbe; G. mikrobe(f); It. microbo.

[நுண் + உயிர்]

நுண்ணுயிர்கலத்தல் *nuṇṇyir-kalattal,* தொ.பெ.(vbl.n.) **விதை முளைகட்டும் பொழுது பூச்சிமருந்து கலக்கை;** mixing of pesticide with seeds for sowing.

[நுண்ணுயிர் + கலத்தல். நுண்ணுயிர் = சிற்றுயிர், நுண்ணுயிரிகளை அழிக்கும் மருந்து.]

நுண்ணுயிரி *nuṇṇuyiri,* பெ.(n.) **நுண்ணுயிர்** பார்க்க; see *nuṇṇuyir.*

[நுண் + உயிரி. உயிர் → உயிரி]

நுண்ணுருக்கு–தல் *nuṇ-ṇ-urukku-,* 5செ. குன்றாவி.(v.t.) கரையவுருக்குதல்; to melt thoroughly. ***"நுண்ணுருக் குற்ற... பாண்டில்"*** (மலைபடு.4).

[நுண் + உருக்கு–தல்]

நுண்ணூட்டச்சத்து *nuṇṇūṭṭa-c-cattu,* பெ. (n.) பயிரிகளுக்கு மிகக் குறைந்த அளவில் அளிக்கப்படும் கனிமச்சத்து; micro-nutrients. ***கரும்புக்கு நுண்ணூட்டச்சத்து வைத்தால் அதிக விளைவைத்தரும்.***

[நுண் + ஊட்டச்சத்து]

நுண்ணேலம் *nuṇ-ṇ-ēlam,* பெ. (n.) ஓமாலிகை முப்பத்திரண்டனு ளொன்றாகிய மணப்பொருள் a fragrant substance, one of 32 ōmāligai. ***'பதுமுக நுண்ணேலம் பைங்கொடுவேரி கதிர்நகையா யோமாலிகை'*** (சிலப்.6.77,உரை)

[நுண் + ஏலம்]

ஓமாலிகை (மணப்பொருள்கள்) **32:** இலவங்கம், பச்சிலை, கச்சோலம், ஏலம், நாகணம், கோட்டம், நாகம், மதாவரிசி, தக்கோலம், நன்னாரி, வெண்கோட்டம், கத்தூரி, வேரி, இலாமிச்சம், கண்டில் வெண்ணெய், கடு, நெல்லி, தான்றி, துத்தம், வண்ணக்கச்சோலம், அரேணுகம், மாஞ்சி, சயிலேகம், புழுகு, புன்னை நறுந்தாது, புலியுகிர், சரளம், தமாலம், வகுளம், பதுமுகம், **நுண்ணேலம்,** கொடுவேரி.

நுண்ணோக்கி *nuṇṇōkki,* பெ. (n.) கண்ணுக்கு எளிதாகப் புலப்படாத மிகச் சிறிய பொருட்களையும், நுண்ணுயிரி(கிருமி) களையும் காண்பதற்கு ஏற்றவாறு பெரிதுபடுத்திக் காட்டக்கூடிய ஆடிகளைக் கொண்ட (அறிவியல்) கருவி; microscope.

[நுண் + நோக்கி]

நுண்திறம் *nuṇḍiṟam,* பெ. (n.) நுட்பமான திறமை; flair.

[நுண் + திறம். திறம் = திறமை]

நுண்திறமுடைய *nuṇḍiṟam-uḍaiya,* பெ.எ.(adj.) கூர்மையான அறிவும், திறமும் உடைய; intelligent.

[நுண் + திறம் + உடைய]

நுண்பிண்டி *nuṇ-piṇḍi,* பெ. (n.) புழுதி; dust.

[நுண் + பிண்டி. பிண்டி = பொடி, புழுதி]

நுண்பு *nuṇbu,* பெ. (n.) **நுண்மை** பார்க்க; see *nuṇmai.* ***"பாவியேங்கண் காண்பரிய நுண்புடையீர்"*** (திவ்.இயற்.பெரியதிருவந்.8)

க. நுண்பு

[நுண் → நுண்பு]

நுண்புலம் *nuṇ-pulam,* பெ.(n.) நுண்ணறிவு; insight.

[நுண் + புலம்]

நுண்புலமுள்ள *nuṇ-pulam-uḷḷa,* பெ.எ.(adj.) அறிவுக் கூர்மையுள்ள; intelligent.

[நுண் + புலம் + உள்ள]

நுண்பேராடி *nuṇ-pērāḍi,* பெ. (n.) நுண்ணோக்கி; microscope.

[நுண் + பேராடி. பேராடி = பெரிதாகக் காட்டும் ஆடி.]

நுண்பொடி *nuṇ-poḍi,* பெ.(n.) நுட்பமான பொடி; fine powder.

[நுண் + பொடி]

நுண்பொருள் *nuṇ-poruḷ,* பெ. (n.) 1. நுண்ணிய பொருள்; small, minute things, dist. fr. paru-p-poruḷ. *'நுண்பொருள் கொடுத்து நுண்ணிய ராவர்'* (பழ.). *'நுண்பொருள் காண்பது அறிவு'* (குறள், 424). *"நகைப்பதம் பார்க்கு நனிநாகரிகத்துச் சொல்லி னுண்பொருள் காட்டியில்லின்"* (பெருங்.உஞ்சைக்.1:14,15). 2. நுட்பமான கருத்து; subtle meaning or idea. *'நுண்பொருளினைத் தலைவனெதிர் நின்றுணர்த்துவாள்'* (கலித்.18, உரை).

[நுண் + பொருள்]

நுண்மணல்[1] *nuṇ-maṇal,* பெ. (n.) சிறுமணல்; fine sand. *"மீதே நுண்மண லிறைத்து"* (திருவாத.பு. மண்சுமந்த.3). *"அரக்கத்தன்ன நுண்மணற் கோடுகொண்டு"* (பதிற்று.30.27).

[நுண் + மணல்]

நுண்மணல்[2] *nuṇ-maṇal,* பெ.(n.) 1. நீட்டலளவை வாய்பாடு; lenthening table. 8 மயிர் = 1 நுண்மணல். 8 நுண்மணல் = 1 கடுகு. 2. கீழ்வாயிலக்க வாய்பாடு; multiplication of fraction table. 6 1/2 தேர்த்துகள் = 1 நுண்மணல். 100 நுண்மணல் = 1 வெள்ளம்.

[நுண் + மணல்]

நுண்மதி *nuṇmati,* பெ.(n.) கூர்மையான அறிவு; insight. *"நுண்மதி போன்று தோன்றா, நுணுகிய நுசுப்பினார்."* (சீவக.2611).

[நுண் + மதி. மதி = அறிவு.]

நுண்மருங்குல் *nuṇ-maruṅgul,* பெ.(n.) நுண்ணிடை; woman, as having a slender waist.

[நுண் + மருங்குல். மருங்குல் = இடை]

நுண்மை *nuṇmai,* பெ.(n.) 1. நுணுக்கம், நுட்பம்; minuteness; *நுண்மையான உயிரிகள் நுண்மை நுகரேல்* (பழ.). 2. மிகுதி; excess. *"நுண்கருமை கொண்டொசிந்து"* (சீவக.166). 3. கூர்மை; sharpness. 4. வேலைநுட்பம்; refinement, nicety, exquisiteness, as in workmanship. *"தும்பை மாலை இளமுலை நுண்பூ ணாகம் விலங்கு வோளே"* (ஐங்குறு.127). *நுண்மையான அமைப்புக் கொண்ட கைக் கடிகாரம்.* 5. அறிவு நுட்பம்; acuteness, subtlety, discrimination. 6. பொருணுட்பம்; precision, accuracy. *"நுண்ணூல் உணர்விலராகிய ஊதியமில்லாப் புணர்தல் நிரயத்துள் ஒன்று"* (நாலடி,233). 7. சிற்றுண்டி; delicacies, dainties. *"அடிக்கடி நுண்மை விழைந்துபோய்"* (அருட்பா,vi, அவாவறுப்பு.12). 8. கமுக்கம் (இரகசியம்); mystery. *"பெருமைக்கு நுண்மைக்கும்"* (திருவருட்.பதிமுது.3).

க. நுண்மை; ம. நுண்ம

[நுல் = (கூர்மை, சிறுமை, மென்மை) → நுள் → நுண் → நுண்மை (வே.க.)]

நுண்மையற்ற *nuṇmai-y-aṟṟa,* பெ.(n.) நுண்மையானதும், சிறியதும் அல்லாத; that which is not thin and fine.

[நுண்மை + அற்ற]

நுணக்கம்[1] *nuṇakkam,* பெ. (n.) 1. கூர்மை (அக.நி.); sharpness. 2. நுண்மை; minuteness. 3. நுடக்கம்; bending.

[நுணங்கு → நுணக்கம்]

நுணக்கம்[2] *nuṇakkam,* பெ. (n.) **1.** வாட்டம்; withering, fading.

[நுணங்கு → நுணக்கம்]

நுணகம் *nuṇagam,* பெ. (n.) பொன் (அக.நி.); gold.

[நுணுக்கம் → நுணகம்]

நுணங்கியோர் *nuṇaṅgiyōr,* பெ. (n.) நுணுகிய அறிவுடையோர் (யாழ்.அக); persons of subtle or sharp intellect. *"யாப்பும் பாட்டுந்தூக்குந் தொடர்புஞ் செய்யுளை நோக்கிற்றென்ப நுணங்கியோரே"* (யா.கா.1,உரை).

[நுணங்கு → நுணங்கியோர்]

நுணங்கு[1]–தல் *nuṇaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) **1.** அசைதல்; to shake, move. *"நுதலூரும் பசப்பாயின் நுணங்கிறை யளியென்னோ"* (கலித்.28:15). **2.** மெல்லியதாதல்; to be thin, minute, attenuated. *"நுண்ணறல்போல நுணங்கிய பைங்கூந்தல்"* (ஐந்.ஐம்.27). **3.** நுட்பமாதல்; to be subtle, fine, refined. *"நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய வாயினர் ஆதல் அரிது"* (குறள்,419). **4.** வளைதல்; to be bent. **5.** துவளுதல்; to be pliable, flexible. *'நுணங்கு நுண்கொடி மின்னார்'* (தொல்.சொல்.374, உரை). **6.** செறிதல்; to be dense, close, crowded. "நுணங்கரில்" (பு.வெ.4:7).

[நுள் (அசைதல், வளைதல்) → நுண் → நுணங்கு → நுணங்கு–தல் (மு.தா.)]

நுணங்கு[2]–தல் *nuṇaṅgu-,* 5செ.கு.வி.(v.i.) வாடுதல் (யாழ்.அக); to drop, fade, wither.

[உணங்கு → நுணங்கு]

நுணங்கு[3] *nuṇaṅgu,* பெ. (n.) **1.** நுண்மை, minuteness, subtlety, fineness. *"நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை"* (தொல். சொல்.உரி.76). **2.** நுடக்கம் (தொல். சொல். உரி.76, உரை); flexure, bending. **3.** தேமல் (சூடா.); yellowish spreading spots on the skin.

[நுண் → நுணங்கு. நுண் = மிகச் சிறியது, கூரியது (வே.க.)]

நுணங்கு[4] *nuṇaṅgu,* பெ.(n.) பெண்; woman. *"நுணங்கு நுண்கொடி மின்னொர் மழைமிசை"* (சீவக.344).

[நுண் → நுணங்கு. நுண்ணிய இடையை யுடைய பெண்]

நுணல் *nuṇal,* பெ. (n.) **1.** தவளை; frog. *"வரிநுணல் கறங்கத் தேரை தெவிட்ட"* (ஐங்குறு.478:1). *"ஆடுகளப் பறையின் வரிநுணல் கறங்க"* (அகநா.364:3). *"மணலுண் முழுகி மறைந்து கிடக்கும் நுணலுந்தன் வாயாற் கெடும்"* (பழ.114). **2.** கடல்மீன் வகை(வின்); a herring greenish, Clupea brachysoma.

[நுல்(துளை) → நுள் → நுழு → நுழல் → நுணல் = மணலிற்குள் நுண்ணிதாய் முழுகிக் கிடக்கும் தவளை வகை.]

நுணல் தவளையினத்தில் ஒருவகை. கருங்கல்லுக்குள்ளும் ஆழ்ந்த மணலுக் குள்ளும் நுண்ணிதாய் நுழைந்து கிடக்கும். அதனால், அதற்கு நுணல் என்று பெயர்.



நுணலி *nuṇali,* பெ. (n.) நுணா என்னுங் கொடி; small dyeing mulbery, Morinda umbellata. (சா.அக.).

நுணலை *nuṇalai,* பெ. (n.) மணற்காடை; a kind of frog found on the seashores with golden spots, mud frog, Rhacophorus plavrostictus. (சா.அக.).

[நுணல் → நுணலை]

சென்னைப்பல்கலைக் கழக அகரமுதலி மணற்காடையை மணற்கூகையென்று வின்சுலோ குறிப்பதாகக் காட்டுகிறது. நுணல், நுணலை என்னும் ஊர்வன வகையைச் சார்ந்த தவளைக்குக் காடை (சா.அக.). கூகை (வின்.) என்று பறப்பனவற்றின் பெயர் அமைந்ததன் கரணியம் அறியப்படவில்லை.

நுணவம் *nuṇavam,* பெ. (n.) **நுணா** பார்க்க; see *nuṇā.* *"நாகுமுதிர் நுணவம்"* (சிறுபாண்.51).

[நுணவு[1] → நுணவம் = மஞ்சணாறி மரம்]

நுணவு[1] *nuṇavu,* பெ.(n.) **நுணா** பார்க்க; see *nuṇā.*

[நுணா → நுணவு]

நுணவு[2] *nuṇavu,* பெ.(n.) கட்டில் (அக.நி.); couch, cot.

தெ. நுலக.

[நுணா → நுணவு. நுணா மரத்தில் செய்த கட்டிலாகலாம்]

நுணவை[1] *nuṇavai,* பெ.(n.) **1.** எள்ளுருண்டை (சூடா.); a ball of sesame confection. **2.** நெல் முதலியவற்றின் மா (சூடா.); flour of rice and other stains.

[நுள் → நூ = சிறிய எள். நூவு = எள். நுள் → நுணவை = மாவு, எள்ளுருண்டை (சு.வி.40)]

நுணவை[2] *nuṇavai,* பெ.(n.) **நுணா** (மலை.) பார்க்க; see *nuṇā.*

[நுணவு → நுணவை]

நுணா *nuṇā,* பெ. (n.) **1.** மஞ்சணாறி மரம்; Indian mulberry, Morinda citrifolia. **2.** மஞ் சணாறிச் செடி; dyeing mulberry, Morinda tinctoria. **3.** மஞ்சணாறிக் கொடி; small achroot, Morindaum, bellata. **4.** தணக்கு வகை (மலை.); whirling-nut.

[நுணல் → நுணா = நுணல் போன்ற காய் காய்க்கும் மஞ்சணாறி மரம் (வே.க.)]

முறுக்கிக் கொண்டாற் போல் காணப்படும் கிளைகளையும் மணமுள்ள வெள்ளை நிறப் பூக்களையும் கொண்ட மரம்.

மஞ்சள் நாறி அல்லது மஞ்சள் நத்தி மரத்தின் காய், நுணல் போன்ற தோற்ற முடைமையால் நுணா எனப்பட்டது. பின்னர் அது சினையாகு பெயராய் மரத்திற்காயிற்று.

நுணல் என்பது நுணலை என்றும், நுணா என்பது நுணவு, நுணவம், நுணவை என்றும் திரியும். பொருள் வேறுபாடுணர்த்தற்கு நுணல் நுணா என்பன ஈறு வேறுபட்டன. (சொ.ஆ.க.13). இதன் பூ மல்லிகை போலும் மணந்தரும். இதன் வேர் சாயப்பூச்சுக்கும், மரம் மிதியடிக்கட்டை செய்யவும் பயன்படும். இதன் இலை, காய், பழம் யாவும் பயன் கொள்ளத்தக்கன. மரக்கூறு மஞ்சளாயிருப்பது கருதி மஞ்சட் பாவட்டை, மஞ்சணாறி என வழங்கக் காணலாம். (சா.அக.).

நுணல்



நுணலை



நுணா

நுவணை



நுணாக்காய்க்கிரந்தி *nuṇā-k-kāy-k-kirandi,* பெ.(n.) ஒரு வகைப் புண்நோய்; a kind of syphilitic tumour due to venereal and heat.

Skt. பங்கிவிசர்ப்பி.

[நுணாக்காய் + கிரந்தி. Skt.கிரந்தி = புண்]

உடம்பில் வெப்பத்தைத் தந்து, தடிப்புக்களை உண்டாக்கி, கழிச்சலைத் தந்து, உடம்பு வீக்கத்தால் பருத்து மினுமினுத்து நுணாக்காயைப் போல் கட்டிகளை எழுப்பும் ஒருவகைப் புண் நோய். (சா.அக.).

நுணாசு–தல் *nuṇāšu-,* 5செ.குன்றாவி.(v.t.) **நுணாவு–தல்** பார்க்க; see *nuṇāvu-.*

[நுண் → நுணா → நுணாவு → நுணாசு – நுணாசு–தல் (வே.க.)]

நுணாப்பரு *nuṇāpparu,* பெ.(n.) **நுணாக்காய்க் கிரந்தி** பார்க்க; see *nuṇākkāy-kirandi.*

நுணாப்பூக்கிரந்தி *nuṇāppū-k-kirandi,* பெ.(n.) உடம்பில் பலவிடங்களில் நுணாப் பூவைப் போல் வெண்மையான புண்களை உண்டாக்கும் தோல் நோய் (மேக நோய்); a syphilitic affection marked by multiple abscesses in various parts of the body of the size of morinda fruit. *"தொக்கண்ணி யெழும்பு நுணாப்பூக்கிரந்தி முதனோய் தொலையும்"* (தைல. தைலவ,106). (சா.அக.).

[நுணா + பூ + கிரந்தி]

நுணாமஞ்சள் *nuṇā-mañjal,* பெ.(n.) சிறிய பூக்களையுடைய மலைஆத்தி; small flowered mountain ebony, Bauhinia racemosa. (சா.அக.).

நுணாவு–தல் *nuṇāvu-,* 5செ.குன்றாவி.(v.t.) **1.** தடவித் தெரிதல்; to rub and feel with the fingers. **2.** நுனி நாவால் தடவியுணர்தல்; to feel with the tip of the tongue, as the gums or palate.

க. நொணெ.

[நுண் → நுணா → நுணாவு → நுணாவு–தல் = விரல் நுனியால் அல்லது நாநுனியால் தடவியறிதல்]

நுணாவெண்ணெய் *nuṇa-v-eṇṇey,* பெ.(n.) நுணா இலையின் சாற்றை, நல்லெண்ணெயில் மற்ற கடைச் சரக்கு களோடு காய்ச்சி வடித்த எண்ணெய்; a medicated oil prepared with the juice of the morinda leaves as chief ingredient along with some bazaar drugs. (சா.அக.).

[நுணா + எண்ணெய். இது புண்நோயைக் குணமாக்கும்.]

நுணாவேர் *nuṇa-vēr* பெ.(n.) சிவப்பு கபில நிறமும் வழவழப்பான பட்டையுமுடைய, நுணா மரத்தின்வேர்; ach root morinda root, Morinda umbellata. It is reddish brown in colour. (சா.அக.).

[நுணா + வேர். கருவிலேயே இறந்த பிள்ளையை வெளியாக்க இவ்வேர் பயன்படும்.]

நுணி¹–தல் *nuṇi-,* 2செ.கு.வி.(v.i.) தேய்தல் (அக.நி.); to waste away; to be thinned down.

[நுண் → நுணி → நுணி–தல்.]

நுணி² -த்தல் *nuṇi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கூர்மையாக்குதல்(வின்.); to sharpen to a point. 2. பொடியாக்குதல்(வின்.); to powder. 3. நுணுகி ஆராய்தல்; to examine carefully. *"தெய்வ நுணித்தறங் குணித்த மேலோர்"* (கம்பரா.மந்திரப்.8).

[நுண் → நுணி → நுணி–தல்.]

நுணி³ *ḏnuṇi,* பெ.(n.) நுனி (யாழ்.அக.); tip.

[நுண் → நுணி]

நுணிசம் *nuṇiśam,* பெ. (n.) பூவிந்தி; soap nut, Sapindas trifolius. (சா.அக.).

நுணுக்கம்¹ *nuṇukkam,* பெ. (n.) 1. நுண்மை; fineness, minuteness. 2. கூர்மை (யாழ்.அக); sharpness. 3. கூரறிவு; acuteness, acumen, subtlety. *"நூல்கற்றக் கண்ணு நுணுக்க மொன் றில்லாதார்"* (நாலடி,352). *தம் ஆய்வுரையில் இசைக் கலையைப்பற்றி நுணுக்கமாக ஆய்வு செய்கிறார்.* 4. வேலைத் திறம்; exquisiteness, as of a work. *வேலை நுணுக்கம். சிற்பம் நுணுக்க வேலைபாடு நிறைந்தது.* 5. பொருளடக்கம்; comprehesiveness. *"நான்மறை நுணுக்கமும்"* (உபதேசகா. சிவபுராண.4). 6. யாழின் உள்ளோசை (பிங்.); vibrating note of a yāḻ. 7. நுட்பம், 5 (வீரசோ.அலங்.27) பார்க்க; see *nuṭpam.*

[நுணுங்கு → நுணுக்கம் = கூர்மை கூரறிவு, நுண்மை, நுட்பம், வேலைத் திறம்]

நுணுக்கம்² *nuṇukkam,* பெ. (n.) 1. கஞ்சம் (உலோபம்); niggardliness. *அவன் கை நுணுக்க முடையவன்.* 2. பொன் (அக.நி.mss); gold.

[நுணுக்கு → நுணுக்கம்]

சிறியது என்ற பொருளில் கஞ்சத்தையும் நுண்ணியதான வேலைக்குதவுதல் என்ற பொருளில் பொன்னையும் குறித்தது.

நுணுக்கம்பார்–த்தல் *nuṇkkam-pār-,* 4செ.கு.வி.(v.i.) பொருட்டாய்க்கருதவியலாதன வற்றில் மிகுந்த கருத்துச் செலுத்தல்(வின்.); to be meticulous, over-scrupulous.

[நுணுக்கம் + பார்–த்தல்]

நுணுக்கியெழுது–தல் *nuṇukki-y-eḻudu-,* 5செ.குன்றாவி. (v.t.) பொடியாக எழுதுதல் (உ.வ.); to write a small hand.

[நுணுக்கு → நுணுக்கி + எழுது–தல்.]

நுணுக்கிருமல் *nuṇukkirumal,* பெ. (n.) சிணுக்கிருமல்; dry cough. (சா.அக.).

[நுணுக்கு + இருமல்]

நுணுக்கு¹–தல் *nuṇukku-,* 5செ.குன்றாவி. (v.t.) 1. நுண்மையாக்குதல்; to make very small, as beads. 2. பொடிசெய்தல்; to powder, pulverise. *மாத்திரையை நுணுக்கிக்கொடு.* 3. அரைத்தல்; to pound, grind. *மிளகை நுணுக்கிக் கொடு. "நுண்மணல் விராய் நுணுக்குநர்"* (திருவானைக்.திருநீற்.14). 4. சிதைத்தல்; to shatter to pieces. *"வெகுளி நுணுக்கும் விறலும் மகளிர்கட்கு ஒத்த ஒழுக்க முடைமையும்"* (திரிகடு.40). 5. சிறிதா யெழுதுதல்; to write a small hand. *அஞ்சல் அட்டையில் குறளை நுணுக்கி எழுதினார்.*

இப்படி நுணுகி எழுதினால் எப்படிப் படிப்பது. **6.** கையைக் குலுக்குதல், கஞ்சத்தனம் (உலோபம்) செய்தல்; to be niggardly, to stint. அவன் மிகவும் கையை நுணுக்குகிறான். **7.** யாழில் இன்னிசை யெழுப்புதல்; to produce soft notes from the yāl. *"அதுதன்னை வீணையிலே ஏறிட்டு நுணுக்கினாள்".* (திவ்.திருநெடுந்.15:122). **8.** கூர்மையாக்குதல் (இலக்.அக.); to sharpen to a point, as a stick. **9.** அறிவை (புத்தியை)க் கூர்மையாக்குதல் ; to sharpen the wits. *"ஐய னேயறி யும்மென வந்தனம் பொய்ய தன்றிப் புலமை நுணுக்கி"* (சீவக.886). **10.** நுண்ணிதாக வேலை செய்தல்; to execute minutely or finely, as a work.

[நுண் → நுணுகு → நுணுக்கு – நுணுக்கு–தல் = கூர்மையாக்குதல், மதியைக் கூர்மை யாக்குதல், நுண்மையாக்குதல், பொடி செய்தல், சிறிதாயெழுதுதல், நுண்ணிதாக வேலை செய்தல்.]

நுணுக்கு² *nuṇukku,* பெ. (n.) **1.** நுண்மை (யாழ்.அக.); smallness, fineness, subtlety. **2.** நுட்பமானது; any small or minute thing. **3.** பொடி யெழுத்து (யாழ்.அக.); small hand writting.

[நுண் → நுணுகு → நுணுக்கு]

நுணுக்குக்காட்டி *nuṇukku-k-kāṭṭi,* பெ.(n.) நுண்ணோக்கி; microscope.

[நுணுக்கு + காட்டி]

நுணுக்கெழுத்து *nuṇukkeḻuttu,* பெ.(n.) பொடியாக எழுதும் எழுத்து (உ.வ.); letter written in a very small hand.

[நுணுக்கு + எழுத்து]

நுணுகி *nuṇugi,* வி.எ.(adv.) **1.** கூர்ந்து; with a sharp focus. *பாட்டின் பொருளை நுணுகி ஆராய்ந்து பார்க்கவேண்டும்.* **2.** மெலிந்து; lean. *இசைக்கலையை நுணுகி ஆராய்ந்து படித்திருக்கிறார் என்பது அவரின் பேச்சில் இருந்து தெரிகிறது. "பூப்போ லுண்கண் பசந்த தோணுணுகி"* (புறநா.96). *"துள்ளு தாவியிற் பைப்பய நுணுகி"* (அகநா.71:14).

[நுண் → நுணுகு → நுணுகி]

நுணுகு¹–தல் *nuṇugu-,* 5செ.கு.வி.(v.i.) **1.** நுட்பமாதல்; to be slender, delicate, as a woman's waist; to be minute. *"நுணுகிய நுசுப்பினார்"* (சீவக.2631). **2.** மெலிதல்; to become thin. *"பூப்போ லுண்கண் பசந்த தோணுணுகி"* (புறநா.96). **3.** கூர்மையாதல்; to be sharp, keen, acute as one's intellect. *நுணுகிய அறிவு.*

[நுண் → நுணுகு → நுணுகு–தல்]

நுணுகு² *nuṇugu,* பெ. (n.) **1.** நுண்மை (திவா.); minuteness.

[நுண் → நுணுகு]

நுணுங்கு¹–தல் *nuṇuṅgu-,* 5செ.கு.வி. (v.i.) **1.** நுணுகு–தல் (உ.வ.) பார்க்க; see *nuṇugu-*. **2.** பொடியாதல்; to be powdered, pulverised.

[நுணுகு→ நுணுங்கு → நுணுங்கு–தல்]

நுணுங்கு²–தல் *nuṇuṅgu-,* 5செ.கு.வி.(v.i.) **1.** மெல்லப்பாடுதல்; to sing softly as a tune. *"அழகை யுடைத்தான பண்ணை நுணுங்கி"* (திவ்.திருநெடுந் 22:204).

[நுணுகு → நுணுங்கு → நுணுங்கு–தல்.]

நுணுங்கு[3] *nuṇuṅgu,* பெ. (n.) பொடி (பிங்.); powder.

[நுணுகு → நுணுங்கு]

நுணை[1]–த்தல் *nuṇai-,* 4செ.குன்றாவி. (v.t.) நுனி நாவால் தடவியுணர்தல்; to feel with the tip of the tongue, as the gums or palate.

ம. நுண; க. நொணெ.

[நுண் → நுணா → நுணை → நுணை–தல் (வே.க.)]

நுணை[2] *nuṇai,* பெ. (n.) கோட்சொல் (நெல்லை); back-biting.

ம. நுணா.

நுதம் *nudam,* பெ. (n.) நீராடுந்துறை (அக.நி.); bathing ghat.

நுதம்பு[1]–தல் *nudambu-,* 5செ.கு.வி. (v.i.) 1. நனைந்திளகுதல்; to become soft or moist, as soap in water; to be mashy. 2. ஈரமாதல்; to become damp, as furniture, in wet weather.

[நுதம் → நுதம்பு → நுதம்பு–தல்]

நுதம்பு[2] *nudambu,* பெ. (n.) 1. கள்; toddy. 2. சோறு; boiled rice.

[நுதம் → நுதம்பு.]

நுதல்[1](லு)–தல் *nudal-,* 5செ.குன்றாவி.(v.t.) 1. கருதுதல்; to denote; to mean, intend. *"பல்லவை நுதலிய வகர விறுபெயர்"* (தொல்.எழுத்து.174). 2. கூறுதல்; to speak, tell. *"நூற்குள் நுதலிய பொருளல்லனவற்றை அதற்குத் தந்துரைத்தலின் தந்துரை"* (நன்.1, சங்கர.). 3. தோற்றுவித்தல்; to bring into being, create. *"தேவுபல நுதலி"* (திவ்.இயற்.திருவாசி.4)

[நுதல் → நுதலு–தல் = முற்கூறுதல், கூறி (சொல்லி)த் தொடங்குதல்]

ஒவ்வொரு செம்மொழியிலும் ஒரு பொருட் பலசொற்கள் நிரம்பவுள. அவை பருப்பொருளில் ஒன்றுபட்டிருப்பினும் நுண்பொருளில் வேறுபட்டவை. சொல்வளத்திற் சிறந்த தமிழ் ஒருபொருட் பல சொற்களில் சிறந்துள்ளது. சொல்லுதலைப் பற்றிப் பலசொற்கள் தமிழில் உள. அவை:

அசைத்தல்	– அசையழுத்தத்துடன் சொல்லுதல் (அசையழுத்தம்–accent)
அறைதல்	– அடித்து (வன்மையாக மறுத்து)ச் சொல்லுதல்
இசைத்தல்	– ஓசை வேறுபாட்டுடன் சொல்லுதல்
இயம்புதல்	– இசைக் கருவி இயக்கிச் சொல்லுதல்
உரைத்தல்	– அருஞ்சொற்கு அல்லது செய்யுட்குப் பொருள் சொல்லுதல்
உளறுதல்	– ஒன்றிருக்க ஒன்றைச் சொல்லுதல்
என்னுதல்	– என்று சொல்லுதல்
ஓதுதல்	– காதிற்குள் மெல்லச் சொல்லுதல்
கத்துதல்	– குரலெழுப்பிச் சொல்லுதல்
கரைதல்	– அழைத்துச் செல்லுதல்
கழறுதல்	– கடிந்து சொல்லுதல்
கிளத்தல்	– இன்னதென்று குறிப்பிட்டுச் சொல்லுதல்
கிளத்துதல்	– குடும்ப வரலாறு சொல்லுதல்
	குயிலுதல்,
குயிற்றுதல்	– குயில்போல் இன்குரலில் சொல்லுதல்
குழறுதல்	– நாத் தளர்ந்து சொல்லுதல்
கூறுதல்	– கூறுபடுத்திச் சொல்லுதல்
சாற்றுதல்	– பலரறியச் சொல்லுதல்
செப்புதல்	– வினாவிற்கு விடை சொல்லுதல்
நவிலுதல்	– நாவினால் ஒலித்துப் பயிலுதல்
நுதலுதல்	– ஒன்றைச் சொல்லித் தொடங்குதல்
நுவலுதல்	– நூலின் நுண்பொருள் சொல்லுதல்
நொடித்தல்	– கதை சொல்லுதல்
பகர்தல்	– பாண்டங்களைப் பகுத்து விலை சொல்லுதல்
பறைதல்	– மறை(இரகசியம்) வெளிப்படுத்திச் சொல்லுதல்
பன்னுதல்	– நிறுத்தி நிறுத்திச் சொல்லுதல்

பனுவுதல் – செய்யுளிற் புகழ்ந்து சொல்லுதல்
புகலுதல் – விரும்பிச் சொல்லுதல்
புலம்புதல் – தனக்குத் தானே சொல்லுதல்
பேசுதல் – ஒருமொழியிற் சொல்லுதல்
பொழிதல் – இடைவிடாது சொல்லுதல்
மாறுதல் – உரையாட்டில் மாறிச் சொல்லுதல்
மிழற்றுதல் – மழலைபோல் இனிமையாய்ச் சொல்லுதல்
மொழிதல் – சொற்களைத் தெளிவாகப்பலுக்கிச் சொல்லுதல்
வலத்தல் – கேட்பார் மனத்தைப் பிணிக்கச் சொல்லுதல்
விடுதல் – மெள்ள வெளிவிட்டுச் சொல்லுதல்
விதத்தல் – சிறப்பாய் எடுத்துச் சொல்லுதல்
விள்ளுதல் – வெளிவிட்டுச் சொல்லுதல்
விளைத்துதல் – (விவரித்துச்) சொல்லுதல்
விளம்புதல் – ஓர் அறிவிப்பைச் சொல்லுதல்

(ப.த.நா.ப.21,22)

நுதல்² *nudal,* பெ. (n.) சொல் (பிங்.); word.

நுதல்³ *nudal,* பெ.(n.) 1. நெற்றி; forehead. *"தன்கைக் கொண்டெ னன்னுத னீவியும்"* (நற்.28). *நுதலில் பொட்டு வை.* 2. புருவம் (பிங்.); eyebrow. *"பிறைபுரை திருநுத லஃகப் பிறையின் குறைவிடந் தீர்ந்த கொள்கை போல"* (பெருங்.நரவாண.5:11,12). 3. தலை; head, skull. *"குடுமி களைந்த நுதல்"* (புறநா.77). 4.மேலிடம்; top, upper part. *"தாமரை வரம்பணைந் ததனுதற் கிடந்த வார்செந்நெல்"* (சீவக.1442).

ம. நுதல்; **க.** நொசல்; **தெ.** நுதரு; **து.** நெசலு; **கொண்.** நெத; **மா.** நித்லு.

[நுதி = நுனி. நுதி → (நுத்தி) → நெத்தி → நெற்றி (மு.தா) = மண்டையின் முற்பாகம்]

நுதலணி *nudal-aṇi,* பெ. (n.) நெற்றிச்சுட்டி (யாழ்.அக.); an ornament for the forehead.

மறுவ. தலைக்கோலம், இலம்பகம்.

[நுதல்³ + அணி]

நுதலிப்புகுதல் *nudali-p-pugudal,* பெ.(n.) உத்தி முப்பத்திரண்டனுள் சொல்லப் போகும் செய்தியை முதலிற் குறித்துப் பின் விளக்குவதான தந்திர வுத்தி (நன்.14); a literary deivce which consists in stating one's theme before dealing with it in detail, one of 32 utti. *"நுதலிப் புகுதலோத்து முறை வைப்பே"* (நன்.பாயி,14).

[நுதல் → நுதலி + புகுதல். நுதலிப்புகுதல் = இன்னது கூறுவேன் என்று கூறப்போகும் பொருளைச் சொல்லித் தொடங்கும் நூலுத்தி.]

நுதற்கண்ணன் *nudaṟ-kaṇṇaṉ* பெ.(n.) நெற்றியில் கண்ணுடைய சிவன்; Lord Sivā.

[நுதல் + கண்ணன்.]

நுதற்குறி *nudaṟ-kuṟi,* பெ.(n.) நெற்றிக்குறிகள் (திவா.); sacred marks on the forehead.

[நுதல் + குறி. நெற்றியில் இட்டுக் கொள்ளும் சமயக்குறிகள்.]



நுதற்சூடிகை *nudaṟ-cuḍigai,* பெ.(n.) நுதலணி (திவா.) பார்க்க; see *nudal-aṇi.*

[நுதல் + சூடிகை. சுட்டி → சுட்டிகை → சூடிகை.]

நுதற்சூட்டு *nudaṟ-cūṭṭu,* பெ.(n.) நுதலணி பார்க்க; see *nudal-aṇi.* "*திருநுதற் சூட்டயற் சுடரும்*" (பெருங். உஞ்சைக். 40:101).

[நுதல் + சூட்டு. சூடுதல் = அணிதல். சூடு → சூட்டு]

நுதற்சேதம் *nudaṟ-cēdam,* பெ.(n.) 1. நெற்றி வலி; pain in the forehead. 2. தலைவலி; headache. (சா.அக.).

[நுதல் + சேதம். சிதைவு → சேதம்]

நுதனாட்டி *nudaṉāṭṭi,* பெ. (n.) நெற்றிக் கண்ணுடைய கொற்றவை (துர்க்கை); Durgā, as having an eye in Her forehead. "*பிறைநுத னாட்டி*" (கல்லா. 78:11).

[நுதல் → நுதனாட்டி. நாட்டம் (= கண்) → நாட்டி.]

நுதி[1]–த்தல் *nudi-,* 4செ.குன்றாவி.(v.t.) அடைசுதல்; to cover with, as a garment lining. "*நுதிமயிர்த் துகிற்குப் பாயம் புகுக என நூக்கினானே*" (சீவக.819).

[நுனி → நுதி → நுதி–த்தல்.]

நுதி[2] *nudi,* பெ. (n.) 1. நுனி; tip, point, end. "*நுதிமுக மழுங்க... பாயுநின் களிறு*" (புறநா.31). "*திருக்கரத்தினக நுதியால்*" (கோயிற்பு. பதஞ்சலி.32). 2. அறிவுக்கூர்மை; acumen, sharpness of intellect. "*நோக்கன்மின் நாணும் கண்டீர் நுதிகொ ணாகரிகன்*" (சீவக.1110). "*நுதி கொண்டன வெம்பர னுண்ணி வேல்*" (சீவக.1186). 3. தலை; head. "*நுதிநுனைக் கோட்டாற் குலைப்பதன் றோற்றங்காண்*" (கலித்.101). 4. புகழ்; fame. 5. வணக்கம்; regard. 5. முன்பு; front. '*நூற்றைவரோடு நடந்தாணுதி*' (சீவக. 1933, உரை). 6. கூர்மை; sharpness. "*நிணங்கொள் வைந்நுதி வேல்நெடுங் கண்ணினாள்*" (சீவக.344).

[நுனி → நுதி. நுனி = உச்சி, நுனை, கூர்மை, நுண்மை]

நுதித்தோல் *nudi-t-tōl,* பெ. (n.) ஆண்குறியின் நுனித்தோல்; foreskin.

[நுதி + தோல்.]

நுது–த்தல் *nudu-,* 4செ.குன்றாவி. (v.t.) 1. அவித்தல்; to put out, quench, extinguish. "*நெய்யாலெரி நுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்காம நுதுப் பேமெனல்*" (குறள்,1148). 2. அழித்தல்; to destroy. "*வரதன் நம்படையை நுதுக்கம்*" (துணிகைப்பு. சீபரி.162). 3. நீக்குதல்; to remove. "*இன்ன னுதுக்குந் தண்கவிகை வள்ளல்*" (விநாயகபு.46:4).

க. நொந்து.

[நுதி → நுது → நுது–த்தல்.]

நுதுப்பு *nuduppu,* பெ.(n.) தணிக்கை (வின்.); quenching, suppressing.

[நுது → நுதுப்பு]

நுந்தாவிளக்கு *nundā-viḷakku,* பெ. (n.) கோயிலில் எப்பொழுதும் அணையாமல் எரியும் விளக்கு (தெ.க.தொ.2:132) ; ever-burning lamp, as in a temple. "*உதையி அற்தமனமும் அற்தமன உதயமும் எரியவைத்த திரு நுந்தா விளக்கு*" (தெ.க.தொ.17:447). "*இத்திரு நுந்தா விளக்கு எரிக்க இட்ட குத்துவிளக்கு ஒன்று இது தரா இடை அய்*" (தெ.க.தொ.7:741).

[நுந்து + ஆ + விளக்கு. ஆ –எதிர்மறை இடைநிலை]

நுந்தாவிளக்கு = இறைவன் கருவறையில் நாள் முழுவதும் தொடர்ந்து தூண்டா விளக்காக எரியும் விளக்கு. இவ்விளக்கு பலவகை வடிவங்களில் அமைந்திருக்கும். தூண்டாது தொடர்ந்து எரியுமாறு செய்யப்பெறும் விளக்கு இது. கல்வெட்டுகளில் நொந்தா விளக்கு, நந்தா விளக்கு என்றும் காணப்படுகின்றன. "*திருவாலந் துறை மகாதேவர்க்கு சந்திராதித்தவல் இரவும் பகலும் ஒரு நொந்தா விளக்கு எரிய வைத்த நெய்*" (தெ.க.தொ.5:682).

இவ்விளக்கு இறைவன் திருமேனிக்கு அருகில் தொங்கு விளக்காகப் பெரும் பான்மையும் அமைக்கப் பெறினும், குத்து விளக்கு அமைப்பிலும் இவ் விளக்கு தரையில் நிலையாக நிற்கும் தோற்றத்திலும் செய்யப் பெறுவதுண்டு என்பதைத் திருவோத்தூர்க் கல்வெட்டு உணர்த்துகிறது. "*தொண்டை மானார் வார்ப்பித்துக் குடுத்த திருக்குத்து விளக்கு இரண்டிலெரியுந் திருநுந்தா விளக்கு இரண்டுக்கு*" (தெ.க.தொ.7:93). "*திருவுண் ணாழிகையில் ஒரு நொந்தா விளக்கு இரவும் பகலும் எரிய வைத்த பொன் முப்பதின் கழஞ்சு*" (தெ.க.தொ.8:676).



நுந்தாவிளக்குக்குடி *nundā-viḷakku-k-kuḍi,* பெ. (n.) நுந்தா விளக்கு எரிப்பதற்கு மூலமாக வைக்கப்பட்ட ஆடுகளைக் காத்து நாளும் கோயிலுக்கு நெய்யளக்கும் குடியினரான மன்றாடிகள்; a cast. "*இத்தேவர்க்கு திரு நுந்தா விளக்கு குடிகளாய் ஆடுகளைக் கொண்டு நெய்யளந்து வருகிற மன்றாடிகளில்*" (தெ.க.தொ.17:447).

[நுந்தாவிளக்கு+குடி. நுந்தாவிளக்கு எரிக்க நெய்தரும் குடிமக்கள்.]

நுந்து-தல் *nundu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தள்ளுதல், முன் தள்ளுதல்; to prople, thrust forth, cast away. "*பரந்து பொன் னிரந்து நுந்தி*" (திவ்.திருச்சந்.51). 2. தூண்டுதல்; to trim, stir up. "*நுந்தாத வொண் சுடரே*" (தேவா.811, 5).

க. நொந்து; வ. நுத்(d)

[உந்து → நுந்து → நுந்து-தல். உந்துதல் = முன் தள்ளுதல், தள்ளுதல்]

நுந்தை *nundai,* பெ. (n.) உன் தந்தை; your father. "*நுந்தை நும்மூர்வருதும்*" (ஐங்குறு.92). "*கண்டிசின் வாழியோ குறுமகள் நுந்தை*" (அகநா. 99:11). "*நொந்தனளாகி நுந்தையை யுள்ளி*" (புறநா. 160:23). "*எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்*" (குறுந்.40:2). "*பிறையது காணா யிறைவளை முன்கை திருமுகை மெல்விரல் கூப்பி நுந்தை*" (பெருங். உஞ்சைக். 166,167).

[நும் → நுந்தை]

நுப்பது *nuppadu,* பெ. (n.) முப்பது; thirty.

ம. நுப்பது.

[முப்பது → நுப்பது. ஒ.நோ. மணாட்டுப் பெண் → மாட்டுப்பெண் → நாட்டுப் பெண். ம-ந. திரிபு.]

நுபகம் *nubagam,* பெ. (n.) நுபம் பார்க்க; see *nubam.*

[நுபம் → நுபகம்.]

நுபம் *nubam,* பெ. (n.) எருக்கு (மலை.); madar.

நுபுவருத்தி *nubu-varutti,* பெ.(n.) ஆமையோடு (சங்.அக.); tortoise shell.

[நுபு + வருத்தி. வல் → வன் → வரு → வருத்தி. நுவ்வு = எள். கருமைநிறம் பற்றிய பெயர். நுவ்வு → நுபு = யாமை. யாமை → ஆமை. யாமம் → யாமை = கருமை நிற ஆமை.]

நும்[1] *num,* ப.பெ.(pron.) வேற்றுமையுருபிற்குமுன் நீயிர் என்ற முன்னிலைப் பன்மை கொள்ளு முருவம்; the form which nīyir, the second personal pronoun plural, assumes in oblique cases. "*நும்மெ னிறுதி யியற்கை யாகும்*" (தொல்.எழுத்து.187). 2. உம்; your. "*நும்மொடு வரவுதானயரவும்*" (புறநா. 12:9). "*தண்ணருங்கானல் வந்து நும் வண்ண மெவனோ வென்றனிர் செலினே*" (அகநா. 30:14,15). "*எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மி னென*" (புறநா. 9:5).

[நீம் → நீமிர் → நீவிர் → நீயிர் → நும் எனத் தொல்காப்பியம் கூறுவது இலக்கணமரபு. பாவாணர் நீம் → நூம் → நும் எனக் கூறுவது (மு.தா.40) மொழியியற் பார்வை.]

நும்[2] *num,* இடை.(part.) எல்லீரும் என்ற முன்னிலைப் பெயர் வேற்றுமை யுருபேற்கும் போது கொள்ளுஞ் சாரியை; the infix which *ellīrum* takes in oblique cases, as எல்லீர்நும்மையும். "*எல்லீரு மென்னும் முன்னிலை யிறுதியும்... நும்மிடை வரூஉ முன்னிலை மொழிக்கே*" (தொல்.எழுத்து.191).

"நும்மெனிறுதி யியற்கையாகும்" (தொல். எழுத்து. 187.) என்னுமிடத்துவரும்நும் முன்னிலைப் பன்மையாகும். இங்கு எல்லீர் நும்மையும் என்றவிடத்து வரும் 'நும்' சாரியையாகும். எல்லீர் என்பதே முன்னிலைப் பெயராக அமைவதால் அடுத்துவரும் 'நும்' சாரியையாகும்.

நும்பி *numbi,* பெ. (n.) நும் தம்பி; your younger brother. "*நும்பி பின்வரு நும்பி*" (துணிகைப்பு.சீபரி.397). "*எம்முடை யளவையிற் பண்புறப் பேணி நுன்பதிப் பெயர்க்கு மளவையி னும்பியர்*" (பெருங். உஞ்சைக். 1:12,13).

[நும் → நும்பி]

நும்முன் *num-mun,* பெ.(n.) 1. உம் முன்னோன்; your ancestor, as father. "*சுரும்பார் கண்ணிப் பெரும் பெயர் நும்முன்*" (புறநா.174). 2. உன் அண்ணன்; your elder brother.

[நும் + முன் – நும்முன் = உமக்கு முன் பிறந்தவன்–ள்–ர்.]

நுமன் *numan,* பெ. (n.) உம்மைச் சார்ந்தவன் (தொல்.சொல்.410, இளம்பூ); your relation, party or associate. "*தமர்மேல் வந்தமை தானகத் தடக்கி நுமரோ மற்றிவர் பிறரோ தாமென*" (பெருங். உஞ்சைக். 1:245,246.).

[நும் + அன் – நுமன்.]

நுமையன் *num-aiyan,* பெ. (n.) 1. உம் தமையன்; your elder brother. "*வில்வலாய் நுமைய னாரைக் காண்டி*" (சீவக.1709). 2. உன் தந்தை; your father. 3.உன் பாட்டன்; your grand father. 4. உன் தலைவன்; your master.

[நும் + ஐயன்]

நுரம்பு *nurambu,* பெ. (n.) சேறு (பிங்.); mud, mire.

து. நுரும்பு

[நுல் → (நொறு) → நுர → நுரம்பு.]

நுரு *nuru,* பெ. (n.) **1.** அறுத்த தாளில் துளிர்க்குந் (முளைக்குந்) தளிர் (யாழ்ப்.); tender shoots in paddy stubble. **2.** இளம்பிஞ்சு; tender fruit.

[நுல் → நுரு. நுல் = இளமை, சிறுமை, மெலிவு, நுண்மை, கூர்மை, நுனிமை, முன்மை.]

நுரை[1] *nurai,* பெ. (n.) **1.** நீர்க் குமிழிகளின் தொகுதி; froth, foam, scum, spume, lather. *"நெல்லுக்கு உமியுண்டு நீர்க்கு நுரையுண்டு புல்லிதழ் பூவிற்கும் உண்டு"* (நாலடி,221). *"திரையொடு பட்டு நுரையோடு மறுகி"* (பெருங்.உஞ்சைக். 40:271). *"நுரை ஒத்ததுவே தரையின் பவிசு"* (பழ.); *"நுரையைத் தின்றால் பசிபோகாது"* (பழ.). **2.** குமிழி (சூடா.); bubble. "நுரைமுகந்தன்ன மென்பூஞ் சேக்கை". (அகநா.93:13). *"மரையான் கறந்த நுரை கொடீம்பால்"* (புறநா.168:8). **3.** வெண்ணெய்; butter. *"உறையமை தீந்தயிர் கலக்கி நுரை தெரிந்து"* (பெரும்பாண்.158). **4.** வயிரக்குற்ற வகை; flaw in a diamond. **5.** வெண்மை (யாழ்.அக.); whiteness.

ம. நுர; **க.** நொரெ; **தெ.** நுருகு; **கோத.** நொர்; **குட.** நெரெ; **து.** நுரே.

F. ecume; G. schaum(m), gischt (f); It. schiuma.

[நுர → நுரை = புளிப்பினால் எழும் சிறு குமிழி. அதன் நிறமான வெண்மை. நுரை வெண்மை யாயிருத்தல் காண்க. நுரை → நரை = வெண்மை. நரைத்தல் = வெளுத்தல். (மு.தா.)]

நுரை[2]–த்தல் *nurai-,* 4செ.கு.வி. (v.i.) **1.** நீர் முதலியன கொப்புளங் கொள்ளுதல்(வின்.); to froth, foam, effervesce. *நுரை உண்டாதல். மாட்டின் வாய் நுரை தள்ளுகிறது. பூட்டை அவிழ்த்து விடு. வெண்ணெய், நுரை அடங்கியதும் இறக்கி விடு.* **2.** நுரை வரும்படிச் செய்தல்; to work up a lather. *சோப்பை நுரைத்து முகத்தில் பூசு.*

[நுரை[1] → நுரை[2] –த்தல்,]

நுரைகக்கு–தல் *nurai-kakku-,* 5செ.கு.வி. (v.i.) நுரைதள்ளு(வின்.)தல் பார்க்க; see *nurai-tallu.*

[நுரை+ கக்கு –தல்.]

நுரைத்தெழு–தல் *nurai-t-telu-,* 12 செ.கு.வி. (v.i.) பொங்குதல்; effervescence. (சா.அக.). *சர்க்கரைப் பாகு நுரைத் தெழுகிறது, பார்த்து இறக்கு.*

[நுரை → நுரைத்து + எழு–தல்.]

நுரைதப்பு–தல் *nurai-tappu-,* 5 செ.கு.வி. (v.i.) நுரை தள்ளு–தல் (இ.வ.) பார்க்க; see *nurai-tallu-.*

[நுரை+ தப்பு–தல். தாவு → தவ்வு → தப்பு]

நுரைதள்ளு–தல் *nurai-tallu-,* 5செ.கு.வி. (v.i.) நுரையை வாயிலிருந்து வெளியிடுதல் (உ.வ.); to foam at the mouth. *கண்கள் செருகி வாயில் நுரை தள்ளுகிறதைப் பார்த்தால் பாம்பு கடியாக இருக்கும். வேகமாக ஓடி வந்த காளையின் வாயில் நுரை தள்ளுகிறது.*

[நுரை + தள்ளு–தல்.]

நுரைநீர் *nurai-nir,* பெ. (n.) அமுதநீர்; liquor amnii. (சா.அக.).

[நுரை + நீர்.]

நுரைப்பால் *nurai-p-pāl,* பெ. (n.) நுரை நீங்காத, அப்போதே கறந்த பால்; fresh milk with froth. (சா.அக.).

[நுரை + பால்]

நுரைப்பீர்க்கு *nurai-p-pīrkku,* பெ. (n.) **1.** பாற்பீர்க்கு; towel-gourd. **2.** பேய்ப்பீர்க்கு; snake luffa.

[நுரை + பீர்க்கு]

மறுவ. பேய்ப்பீர்க்கு. **வ.** தேவதாளி.

இதன் அடித்தண்டு மருந்திற்குப் பயன்படும். ஐங்கோணமுள்ளது. சிறிது முசுமுசுப் பாயிருக்கும். இலைகள் ஐந்து பிரிவினையுடையது. முசுமுசுப்பையும் ஓரங்களில் வட்டமான அரும்புகளையும் உடையது. இலைக் காம்பு இலையின் நீளமி ருக்கும். இதன் காய் கோழி முட்டை வடிவமுள்ளது. காய்க்குள் 18 விதைகள் இருக்கும். விதைகள் தட்டையாயும், கருப்பாயும் இருக்கும். (சா.அக.).

நுரைப்பு *nuraippu,* பெ. (n.) **1.** கொதிப்பு, பொங்குகை; effervescence as in preparations of salts. **2.** நுரைக்கை; foaming. (சா.அக.).

[நுரை → நுரைப்பு]

நுரைப்பேரினி *nurai-p-pērini,* பெ. (n.) சிறுதாளி; hairy leaved creamy white bindweed-Ipomaea obswra (gemella). (சா.அக.).

நுரைபடிந்த *nurai-paḍinda,* பெ.எ.(adj.) நுரையுள்ள; covered with froth; foamy. *நுரைபடிந்த பால்.* (சா.அக.).

[நுரை + படிந்த.]

நுரையாம்பூச்சி *nurai-y-ām-pūcci,* பெ. (n.) பூச்சி வகை (சங்.அக.); a kind of insect.

[நுரை + ஆம் + பூச்சி]

நுரையிண்டு *nurai-y-iṇḍu,* பெ. (n.) நீரிண்டு; a sensative plant in water - Mimosa genus. (சா.அக.).

நுரையிலிகம் *nurai-y-iligam,* பெ. (n.) சிறுதும்மை; a small variety leucas plant, small leucas flower - Leucas genus. (சா.அக.).

நுரையீரல் *nurai-y-īral,* பெ. (n.) மார்பினிரு புறத்துள்ளதும், தூய்மையில்லாக் காற்றை வெளியிட்டுத் தூய்மையான காற்றை உட் கொண்டு குருதியைத் தூய்மை (சுத்திகரிப்பது) செய்வதுமான உறுப்பு(வின்.); lungs.

[நுரை + ஈரல்]

நுரையீரல் *(lung):* மூச்சு விடுவதற்காக மனிதனிடமும் முதுகெலும்பிகளிடமும் அமைந் துள்ள உறுப்பாகும். மனிதனிடம் இரண்டு நுரையீரல்கள் உள்ளன. அவை மார்பில் கடற் பஞ்சு போன்ற அமைப்புடையனவாய் இருக்கின்றன. அவை எண்ணிறந்த காற்றறை களால் ஆனவை. அவைகள் சற்றொப்ப 60 கோடி என்று கணக்கிடுகின்றனர்.

இரண்டு நுரையீரல்களும், கூம்பு உருவமுடையன; நுரையீரல்தாங்கியின் (உதரவிதானத்தின்) மீது அமைந்துள்ளன. நுரையீரலின் உச்சியானது காரை எலும்பின் பின்புறம் வரை நீண்டிருக்கும். நுரையீரல் களுக்கிடையே உணவுக் குழல் (Esophagus), நெஞ்சாங்குலை (இதயம்,) பெரிய அரத்தக் குழாய்கள் காணப்படும். நுரையீரல்கள் இரண்டும் மூச்சுக் குழலுடன் (Trachea) இணைந்திருக்கும். மூச்சுக் குழல் மார்பில் இறங்கியதும் இரண்டாகப் பிரியும். அவை மூச்சுக் கிளைக் குழல்கள் (bronchi) எனப் பெறும். ஒவ்வொரு மூச்சுக்குழலும் ஒரு நுரையீரலின் நடுவே புகுந்து எண்ணற்ற சிறு குழாய்களாகப் பிரிகின்றது. இவை

கோப்பை உருவமுடைய மூச்சுச் சிற்றறைகளில் (alveoli) வந்து முடியும். ஒவ்வொரு சிற்றறையின் உட்பகுதியிலும் (தந்துகிகள் எனப்பெறும்) நுண்ணிய அரத்தக் குழாய்கள் பின்னிக்கிடக்கின்றன.

மூச்சுக் கிளைக் குழாய்களும், நுரையீரல் களிலுள்ள அரத்தக் குழாய்களும், நிணநீர்க் குழாய்களும், நரம்புகளும் எல்லாம் மீள்ஆற்றலையுடைய தசையால் (திசுவால்) பிணைக்கப்பட்டுள்ளன. நுரையீரல்கள் காற்று நிறையும் போது விரியக் கூடியன. நுரையீரலின் பருமனை வைத்து, மற்ற உறுப்புக்களுடன் ஒப்பிட்டால் அதுவே உடம்பின் எடை குறைந்த உறுப்பாகும். ஆணின் நுரையீரலை விடப் பெண்ணின் நுரையீரல் எடை குறைந்து காணப் படும். நுரையீரல் இளஞ்சிவப்பு நிறமாக இருக்கும்.

நுரையீரலின் வேலை: நுரையீரல்கள் உடம்பிலுள்ள உயிரணுக்களுக்கு வேண்டிய உயிர்வளி (ஆக்சிஜன்) யை வழங்குகின்றன. அரத்தமானது உடம்பில் ஓடும்போது தசைகளுக்கு (திசுக்களுக்கு) உணவுச் சத்தையும் உயிர்வளி (ஆக்சிஜன்)யையும் தந்துவிட்டு, கெட்ட காற்றை (கார்பன்–டை–யாக்சைடு)ப் பெற்றுக் கொண்டு நுரையீரலுக்கு வருகிறது. மூச்சு விடும்போது நுரையீரல் சிற்றறைக்குச் செல்லும் உயிர்வளி அங்குள்ள அரத்த நுண் குழாய்களுக்குச் சென்று, அரத்தத்தில் கலந்து, உடல் முழுவதும் செல்கின்றது. அரத்தம் கொண்டு வந்த கெட்ட காற்று மூச்சுவிடும் போது வெளியே சென்று விடுகிறது.



நுரையீரல்தாங்கி *nurai-y-īral-tāṅgi,* பெ. (n.) மார்புப் பகுதியையும் வயிற்றுப் பகுதியையும் பிரிக்கும் மெல்லிய தோல் (சவ்வுப்)பகுதி; the muscular membraneous partition that separates the abdomen from the thorax - Diaphragm. (சா.அக.).

[நுரையீரல் + தாங்கி]

நுரையிரல் தாங்கித்தோல் (சவ்வு) (உதரவிதானம்) கிழிந்தால் சிறுகுடல் விதைப்பையில் இறங்குவதே குடல் இறக்க நோய் (Hiranya) என்று கூறப்படும்.

நுரையீரலுறை *nurai-y-īral-uṟai,* பெ. (n.) நுரையீரலைச் சுற்றியுள்ள மெல்லிய தோல்; a thin membrance investing either lungs - Pleura. (சா.அக.).

[நுரையீரல் + உறை]

நுரையீரற்கட்டி *nurai-y-īraṟ-kaṭṭi,* பெ. (n.) நுரையீரலில் உண்டாகும் கட்டி; an abscess of the lungs - Pulmonary abscess. (சா.அக.).

[நுரையீரல் + கட்டி]

நுரையீரற்கல் *nurai-y-īraṟkal,* பெ. (n.) நுரையீரலுக்குள்ளாவது அல்லது மூச்சுக் குழலிலாவது காணப்படும் சுண்ணாம்புக்கல்; calcium calculus found in the bronchi or some portions of the lung tissue - Lung stone or lung calculus (சா.அக.).

[நுரையீரல் + கல்]

நுரையீரற்சன்னி *nurai-y-īraṟcaṉṉi,* பெ. (n.) நுரையீரலுக்குள்ளிருக்கும் மூலப் பகுதிக்குள் அரத்தம் பாய்வதாலேற்படும் இசிவு; apoplexy due to the escape of blood into the parenchyma or the functional elementary part of the lungs - Pulmonary apoplexy.

[நுரையீரல் + Skt. *சன்னி]*

நுரையீரற்சீழ்க்கூடு *nurai-y-īraṟ-cīḻ-kūḍu,* பெ. (n.) நுரையீரலுக்குள்ளாகச் சீழ் நிறையப் பெற்ற குழல்கள்; a lung containing numerous small pus filled cavities - Honey comb lung. (சா.அக.)

[நுரையீரல் + சீழ் + கூடு]

நுரையீரற்சுரம் *nurai-y-īraṟ-curam,* பெ. (n.) ஈளை மற்றும் வளியால் உண்டான காய்ச்சல்; fever due to the inflammation of the lungs, lung fever - Croupous pneumonia. (சா.அக.).

[நுரையீரல் + சுரம். சுர் → சுரம் = பாலை நிலவெப்பம் குறித்த சுரம் இக்கால் மேனிநிலை வெப்பம் குறிக்கிறது. பொது மக்கள் சிலவிடத்து 'ஜுரம்' என்று வழங்குவர் ஒ.நோ.சவளி → ஜவுளி.]

நுரையீரற்றாபனம் *nurai-y-īraṟ-ṟāpaṉam,* பெ. (n.) நுரையீரற்றாபிதம் (M.L.) பார்க்க; see *nurai-y-īraṟ-ṟāpidam.*

[நுரையீரல் + Skt. தாபனம். ஸ்தாபனம், ஸ்தாபிதம் இரண்டும் வடசொல் முன்னொழுத்து கெட்டுநின்றன.]

நுரையீரற்றாபிதம் *nurai-y-īraṟ-ṟābidam,* பெ. (n.) கோழை (கபம்) மிகுதியாலுண்டாம் காய்ச்சல் (சுரம், (M.L.); preumonia.

[நுரையீரல் + Skt. தாபிதம்]

நுரையெழுப்பி *nurai-y-eḻuppi,* பெ. (n.) 1. நுரையையுண்டாக்கும் பொருள்; that which gives rise to forth - Saponin. 2. கோழையை (சளியை) அறுக்கும் மருந்து; a medicine which promotes expectoration - Expectorent. (சா.அக.).

[நுரை + எழுப்பி]

நுரைவாய் *nurai-vāy,* பெ. (n.) நுரை தள்ளும் வாய்; foaming mouth.

[நுரை + வாய்]

நுரைவாயன் *nurai-vāyaṉ,* பெ. (n.) 1. நுரை தள்ளும் வாயுடையவன்; one who foams at the mouth. 2. சாளைவாயன்; one who has a dribbling mouth.

[நுரை + வாயன்.]

நுரைவீக்கம் *nurai-vīkkam,* பெ. (n.) நுரையீரற்றாபிதம் (M.L.) பார்க்க ; see *nurai-y-īrar-rāpidam.*

[நுரை + வீக்கம்]

நுலையிலி *nulai-y-ili,* பெ. (n.) ஊமை (யாழ்.அக); dumb person.

[நுவல் + இலி – நுவலி → நுலையிலி]

நுவ்வை *nuvvai,* பெ. (n.) 1. நும் தங்கை; your younger sister. "*நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகும்*" (நற்.172). 2. தமக்கை; elder sister.

[நும் + தவ்வை]

நுவக்கல் *nuvakkal,* பெ. (n.) துவட்டுகை; rubbing the moisture. (சா.அக.).

நுவணம்[1] *nuvaṇam,* பெ. (n.) 1. பஞ்சி நூல்; cotton thread. 2. மாமரம்; mango tree - Mangifera indica. (சா.அக.).

[நுள் → நுண் → நுவண் → நுவணம். பஞ்சிலிருந்து நுண்ணிதாய் நூல் இழுத்தல்]

நுவணம்[2] *nuvaṇam,* பெ. (n.) கல்வி நூல் (சூடா.); treatise.

[நுவல் → நுவள் → நுவண் → நுவணம் (வே.க.). நுவலுதல் = நுண்ணிய அறிவுச் செய்தியைச் சொல்லுதல்]

நுவணம்[3] *nuvaṇam,* பெ. (n.) இடித்தமா (திவா.); flour.

[நுவணை[2] → நுவணம்.]

நுவணை[1] *nuvaṇai,* பெ. (n.) **1.** நுட்பம் (திவா.); minuteness, fineness. **2.** கல்வி நூல் (சூடா.); treatise.

[நுவல் → நுவள் → நுவண் → நுவணை (வே.க.). நுவலுதல் = நுண்ணிய அறிவுச் செய்திகளைச் சொல்லுதல்]

நுவணை[2] *nuvaṇai,* பெ. (n.) **1.** இடித்தமா (திவா.); flour. "*மென்றினை நுவணை யுண்டு*" (ஐங்குறு. 285). **2.** பைந்தினை (பிங்.); black Italian millet. "*மென்றினை நுவணை முறைமுறை பகுக்கும்*" (பதிற்று. 30:24).

க. நவணெ, நவணி

[நுவ்வு → நூ → நுவல். நுவ்வு = எள். நுவல் → (நோல்) → நோலை = எள்ளுருண்டை. நுவல் → நுவள் → நுவண் → நுவணை (மு.தா.)]

நுவணை[3] *nuvaṇai,* பெ. (n.) **1.** நொச்சி மரம்; five leaved notchi-Vitex negundo. **2.** மாமரம்; mango tree - Mangifera indica. (சா.அக.).

நுவல்[1]-தல் (நுவறல்) *nuval-,* 13செ. குன்றாவி.(v.t.) **1.** நுண்ணிய அறிவுச் செய்தியைச் சொல்லுதல்; to say, speak, declare, utter. "*மெய் தெரி வளியிசை அளவு நுவன்றிசினே*" (தொல்.எழுத்து.102). "*நூலே நுவல்வேன் நுவலுந் திறனே*" (நன். பாயி.3). **2.** விரும்புதல்; to desire. "*பருகியு மமையாது நுவலு மமைதிய*" (ஞானா.25:6). "நசைதர வந்து நின்னிசை நுவல் பரிசிலேன்" (புறநா.209:11).

[நூவு → நுவ்வு → நுவல் → நுவல் – தல் (வே.க.). நுட்பமாகச் சொல்லுதல், நூலுரைத்தல், நுண் பொருள் கூறுதல். நுல் → நூல் → நூ → நூவு. நூல் = நுண்மை, நுட்பம், கூர்மை, இளமை]

நுவல்[2] *nuval,* பெ. (n.) **1.** சொல் (திவா.); word, saying. **2.** நுண்மை; minuteness.

[நுவல்[1] → நுவல்[2]]

நுவல்வோன் *nuvalvōṉ,* பெ. (n.) அறிவுச் செய்திகளைக் கூறும் ஆசிரியன்; teacher. "*நூலே நுவல்வோன் நுவலுந் திறனே*" (நன்.பாயி.3)

[நுவல் → நுவல்வோன். **நுவல்தல் = நுட்பமான** *அறிவுச் செய்திகளைக் கூறுதல்]*

நுவலம் *nuvalam,* பெ. (n.) சிறுதேக்கு; small teak - Cleodendran serratum. (சா.அக.).

நுவலாச்சொல் *nuvalā-c-col,* பெ. (n.) ஒரு பொருளைப் பழித்தாற்போலப் புகழும் அணி (வீரசோ. அலங்.32); a figure of speech in which a person or thing is enlogised by apparent condemnation.

[நுவல் + ஆ + சொல். ஆ – எதிர்மறை இடைநிலை]

புகழாப் புகழ்ச்சி யெனினும் நுவலாச் சொல் எனினும் ஒக்கும். "மாறி யிகழ் மொழி வண்புகழாய் நுவலாச்சொல் வரும்" என்பது வீரசோழியம். (விரசோ.அலங்.32)

நுவலாநுவற்சி *nuvalā-nuvaṟci,* பெ. (n.) **1.** ஒட்டணி (குறள்,475, உரை); a figure of speech. **2.** குறிப்பெச்சம் (நன். 359, மயிலை.); suggested sense.

[நுவல் + ஆ + நுவற்சி. ஆ – எ.ம.இ.நி.]

ஒட்டணி:

புலவன் தன்னாற் கருதப்பட்ட பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்தற்குத் தக்க பிறிதொன்றினை சொல்லின், அஃது ஒட்டென்னும் அணியாகும்.

"கருதிய பொருடொகுத் ததுபுலப் படுத்தற் கொத்த தொன்றுரைப்பினஃ தொட்டென மொழிப" (தண்டி.52). இதனை உவமைப்போலி எனவும், பிறிது மொழிதல் எனவும் நுவலா நுவற்சி எனவும் கூறுவர்.

வகை:

கூறுகின்ற பொருளும் அதனது அடையும் வேறுபட மொழிதலும், அடை பொது வாக்கிப் பொருள் வேறுபட மொழிதலும், அடை விரவிப் பொருள் வேறுபட மொழிதலும், அடையைப் பிறழ்வுபடுத்திப் (விபரீதப்படுத்திப்) பொருள் வேறுபட மொழிதலும் என நான்கு வகையினையுடைத்து ஒட்டென்னும் அணி.

"அதுவே,
அடையும் பொருளு மயல்பட மொழிதலும்
அடைபொது வாக்கி யாங்ஙன மொழிதலும்
விரவத் தொடுத்தலும் விபரீதப் படுத்தலும்
எனநால் வகையினு மியலு மென்ப".
(தண்டி.53)

"வெறிகொ ளினச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுதேன் வேட்டுங் குறுகும்—நிறைமதுச்சேர்ந்
துண்டாடுந் தன்முகத்தே செவ்வி யுடையதோர்
வண்டாமரை பிரிந்த வண்டு"
(தண்டி.53 மேற்கோள்.)

தாமரையின்கண் குறைவற்ற நிறை மதுவை உண்ட வண்டும், களித்தபல வண்டுகள் சேர்ந்து உண்டு வெறுத்து விட்ட குறைபடு காவியின் மதுவை ஆசைப்பட்டுச் உண்ணப்புகும் என்பது இப்பாடலின்பொருள்.

ஆனால் புலவன் கூறக் கருதிய பொருள்வேறு. தலைவிமாட்டு எவ்வளவு தூய அன்பைத் தலைவன் பெற்றாலும் அவன் உள்ளம் தூய்மையற்ற பரத்தையின் பால் செல்லும். பின் அவளால் வெறுக்கப்பட்டுத் தலைவியை நாடுவான் என்பது புலவன் கருத்து. இதைக்கூறக் கருதிய புலவன் இதனைப் பாட்டில் வெளிப்படுத்தாது தாமரை மலரையும்அதனை நுகரும்வண்டையும் பற்றி பாடி தன்கருத்தை வெளிப்படுத்துவதால் இப்பாடல் ஒட்டணியின்பாற் படும். இது ஒட்டணி வகையுள் அடையும் பொருளும் அயல்பட மொழிதல் வகையைச் சாரும்.

எச்சம்:

பொருளை முழுமையாக்க வரும் எஞ்சிய சொற்கள் எச்சம் எனப்படும். எச்சம் இரு வகைப்படும் சொல்லெச்சம், குறிப்பெச்சம் என்பன.

குறிப்பெச்சம்:

பொருளை முடிக்கக் குறிப்பாகவரும் எஞ்சியசொற்கள். இது பல வகைப்படும். 1. ஒன்றொழிப்பொதுச்சொல். எ—டு. இன்று மருத்துவமனையில் ஐவர் குழந்தைப்பெற்றனர். ஐவர் என்னுந் பொதுச்சொல் குழந்தைப் பெறுதல் என்னுந் தொழிலால் பெண்களை மட்டுமேகுறித்தது. 2. திரிபு (விகாரம்). எ—டு. மரைமலர்— தாமரைமலர் என்பதைக்குறிப்பால் உணர்தியது. முதல்திரிபு. 3. தகுதி. எ—டு. கால்கழுவி வந்தான். இஃது இடக்கரடக்கலாக மலங்கழுவிவருதலை மறைமுகமாகக் குறிப்பதால் தகுதிக்குறிப்பெச்சம். 4. ஆகுபெயர்: எ—டு. வெள்ளையடித்தான், வெள்ளை என்னும் பண்புப் பெயர் சுண்ணாம்பிற்கு ஆகிவருகிறது. 5. அன்மொழித்தொகை. எ—டு. பொற்றொடி வந்தாள். இவ்வன்மொழித் தொகை அவற்றையுடைய மகளிரைக் குறிப்பாலுணர்த்து கின்றது. 6. வினைக்குறிப்பு: எ—டு. இவன் இப்போது பொன்னன். பொன்னன் என்பது

பெயர்ப் பொருளை யொழித்து, வினைக்குறிப்புப் பொருளைக் குறிப்பால் உணர்த்திற்று. 7. முதற் குறிப்பு. எ–டு: "அறத்தாறிதுவென வெள்ளைக் கிழிவு"– இம் முதற் குறிப்புச் சொற்கள், "அறத்தாறிதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோ டூர்ந்தா னிடை" என்னும் குறளைக் குறிப்பாலுணர்த்தின. 8. தொகைக் குறிப்பு: எ–டு. அலங்குளைப் புரவியைவரொடு சினைஇ" – ஐவர் என்னுந்தொகைக் குறிப்புச்சொல் பாண்டவரைக் குறிப் பாலுணர்த்திற்று.

இன்ன பிறவும் என்றதனால், தெரிநிலை குறிப்பு வினையாலணையும் பெயர்களும், தெரிநிலை வினை முற்றாலுங் குறிப்பு வினை முற்றாலும் வரு மெச்சங்களும், செய்யு மென்னும் முற்றும் "கேட்குந போல" முதலியவாக அஃறிணையிடத்துச் சொல்லப் படுவனவும், ஆகிய இவை முதலானவையும் குறிப்பாற் பொருளுணர்த்தும்.

"ஒன்றொழி பொதுச்சொல் விகாரந் தகுதி
ஆகு பெயரன் மொழி வினைக் குறிப்பே
முதறொகை குறிப்போ டின்ன பிறவும்"
(நன்.269).

நுவலுழித்தோற்றம் *nuvaluḻi-t-tōṟṟam,* பெ. (n.) 1. பாடி வீட்டிலுள்ளோர் மகிழ்ந்துரைத் தற்குக் கரணியமான நிரை கொண்டோர் வரவுணர்த்தும் புறத்துறை (தொல்.பொருள்.58); theme of there return of persons after capturing the cattle of their enemies, when there is great rejoicing in their camp. 2. ஊரிலுள்ளோர் கண்டு மகிழ்ந் துரைத்தற்குக் கரணியமான நிரைமீட்டோர் வரவுணர்த்தும் புறத்துறை (தொல். பொருள்.58); theme of the return of persons after recovering the cattle captured by their enemies, when their is great enemies, when their is great rejoicing in their town.

மறுவ. தலைத்தோற்றம்

[நுவலுழி + தோற்றம்]

வெட்சியார் ஆத்திரளைக் கைக்கொண்டு அவர்தம் கிளைகள் மகிழ்தற்கேதுவாக ஊரின் அணித்தே வந்து தோன்றியது தலைத்தோற்றம் என்னும் துறையாம் என்று புறப்பொருள் வெண்பா மாலை கொளு கூறுகிறது. "உர வெய்யோன் இனந்தழீஇ வரவுணர்ந்து கிளைமகிழ்ந்தன்று" (பு.வெ.1:11). ஆசிரியர் தொல்காப்பியனார்இதனை "நுவலுழித்தோற்றம்" எனக் குறியீடு செய்கிறார்.

நுவழலோசைப்பூடு *nuvaḻal-ōšai-p-pūḍu,* பெ. (n.) கையாந்தகரை; eclipse plant-Eclypta prostata. (சா.அக.).

[நுவழல் + ஓசை + பூடு.]

[கை + ஆர்ந்த + கீரை → கையாந்த கரை. கீரை → கரை–திரிபு.]

நுவற்கரி *nuvaṟkari,* பெ. (n.) நீர்க்கரகம் (நாமதீப.473); a water - vessel.

நுவற்சி *nuvaṟci,* பெ. (n.) சொல்லுகை (நன்.458); saying , utterance.

[நுவல் → நுவற்சி]

நுவறல் *nuvaṟl,* பெ. (n.) சொல்லுகை; say. "நோக்கு நெடும்பாரவர்க்கு நோன் புலைவான்றலையவர்க்கு நுவறல் கேட்டா" (சேதுபு. காயத். 4.).

[நுவல் → நுவறல்]

நுவறு–தல் *nuvaṟu-,* 5செ.குன்றாவி. (v.t.) நுண்ணிதாக அல்லது பொடியாக அராவுதல்; to file. *"நுணங்கர நுவறிய நுண்ணீர் மாமைக் களங்கனி யன்ன கதழ்ந்துகிள ருருவின் வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்"* (மலைபடு.35–37).

[நுவல் → நுவறு → நுவறு–தல்(வே.க.)]

நுழல் *nuḻal,* பெ. (n.) கொற்றுகம், ஒரு பூண்டு (வைத்தியபரி.); a kind of herb.

நுழாய் *nuḻāy,* பெ. (n.) **1.** இளமை; tenderness. **2.** இளம்பாக்கு; immature arecanut.

[நுல் = இளமை, சிறுமை. நுல் → நுள் → நுழு → நுழாய். (வே.க.)
நுள் → நுளை → நுழை → நுழாய் (சு.வி.)]

நுழாய்ப்பாக்கு *nuḻāy-p-pākku,* பெ. (n.) முற்றாதபாக்கு (யாழ்ப்.); immature arecanut.

[நுல் = இளமை, சிறுமை. நுல் → நுள் → நுழு → நுழாய் + பாக்கு, நுழாய்ப்பாக்கு = இளம்பாக்கு. (வே.க.)]

நுழுது–தல் *nuḻudu-,* 5செ.குன்றாவி. (v.t.) தலைமயிரைச் சுருட்டி நுழைத்து முடித்தல்; to tie, as a coil of hair. "*மயிர் நுழுதி மருங்கு யர்ந்த தேசுடைய சீகழிகையில்*" (பெரியபு. ஆனாய.15).

க. நுலிசு; தெ. நுலுமு.

[நுழு → நுழுது → நுழுது–தல்]

நுழுந்தி *nuḻundi,* பெ. (n.) பொறுப்பேற்காது நழுவுவோன் (யாழ்ப்.); one who shirks responsibility.

[நுழுந்து → நுழுந்தி]

ஒருவரம்பிலிருந்து வேறொரு எல்லைக்கு இடுக்குவழி நுழைந்து நழுவும் இயல்புடையானைக் குறித்தல் காண்க.

நுழுந்து[1]–தல் *nuḻundu-,* 5செ.குன்றாவி. (v.t.) **1.** தலைமயிரைச் சுருட்டி நுழைத்து முடித்தல்; to tie, as a coil of hair. "*திருக்குழலைக் குலைத்து நுழுந்த*" (ஈடு,10. 1:1). **2.** நுழைத்தல், செருகல் (வின்.); to insert, stick in, tuck in. **3.** மறைத்து வைத்தல், எளிதில் அறியக் கூடாத இடத்தில் நுழைத்து வைத்தல்; to keep in a place not easily found out. **4.** கவர்தல்; to carry away by stealth.

[நுல்(துளை) → நுள் → நுழு → நுழுது → நுழுந்து → நுழுந்து–தல் (வே.க.)]

நுழுந்து[2]–தல் *nuḻundu-,* 5செ.கு.வி. (v.i.) **1.** பதுங்குதல் (யாழ்ப்.); to skulk slink or sneak away. **2.** மறைதல், நழுவுதல் (யாழ்ப்.); to slip out of sight, as one among many. **3.** நகர்தல் (யாழ்ப்.); to crawl, creep, as reptiles.

[நுழுது → நுழுந்து → நுழுந்து–தல்]

நுழுவல் *nuḻuval,* பெ. (n.) **1.** நுழாய்ப் பாக்கு பார்க்க; see *nuḻāy-p-pākku.* **2.** நழுவும் பொருள்; anything slippery.

[நுல் (= இளமை, சிறுமை) → நுள் → நுழு → நுழுவல் = இளம்பாக்கு, (வே.க.)]

நுழுவு–தல் *nuḻuvu-,* 5செ.கு.வி.(v.i.) நகர்தல் (யாழ்ப்.); to creep along, as reptiles.

[நழுவு → நுழுவு]

நுழை[1]–தல் *nuḻai-,* 2செ.கு.வி.(v.i.) **1.** இடுக்க மான இடைவழியுட்செல்லுதல்; to creep through a narrow passage; to penetrate. "*மலர்ப்பொழி னுழைந்து*" (சிலப்.10:35). *திருடன் பலகணி வழியாய் வீட்டிற்குள் நுழைந்து விட்டான் (உ.வ.). ஊசிக்காதில் ஒட்டகம் நுழையுமா? பூனையைக் கண்டதும் எலி வளையில் நுழைந்து கொண்டது.* **2.** நுண்ணி

தாக விளங்குதல்; to be impressed in one's mind. *அது அவன் அறிவில் நுழைய வில்லை.* **3.** வலக்காரமாக அல்லது கமுக்க மாக ஒரு வேலையில் சேர்தல்; to get into, take up, as an office. *அவன் அந்தப் பணியில் நுழைந்து விட்டான். அவன் மெல்ல மெல்ல அரசு வேலையில் நுழைந்து விட்டான். இந்தக் காலத்தில் பெண்கள் நுழையாத துறையே இல்லை.* **4.** இடைச் செருகப்படுதல்; to be interpolated. *சிந்தாமணியில் கந்தியார் பாட்டு நுழைந்தது. உங்கள் பையன் பெயரை எப்படியாவது தேர்வுப் பட்டியலில் சேர்த்து விடுகிறேன். தொல்காப்பியத்துள்ளும் ஆரியக் கருத்துகள் நுழைந்து விட்டன.* (உ.வ.)

ம. நுழுக; **க.** நொளெ; **கொலா.** நொலாந்க்; **குட.** நுக்க்; **குரு.** நுற்நா; **து.** நுரும்கே; **மா.** நுடே; **தெ.**நுசுலு.

[நுல்(துளை) → நுள் → நுழு → நுழை → நுழை–தல்]

நுழைதல் என்னுஞ் சொல்லில், நுண்மை, புகவு என்னும் இரு கருத்துகள் கலந்துள்ளன. இடுக்கமான வாயில் அல்லது புழை அல்லது இடைவெளி வழியாக, உடம்பை ஒடுக்கியும் ஒடுக்காதும் உட்செல்வது நுழைதல் என்றும், உடம்பைச் சற்றும் ஒடுக்காது, நிமிர்ந்து தாராளமாக ஒரு பெருவாயில் வழி உட்செல்வது புகுதல் என்றும் சொல்லப்படும். இவ்வழக்கு, காட்சிப் பொருள் கருத்துப் பொருள் ஆகிய இருவகைக்கும் பொருந்தும். ஆதலால், புகவுச் சீட்டை நுழைவுச்சீட்டு என்றும், புகவுத் தேர்வை நுழைவுத் தேர்வு என்றும் குறித்தல் வழக்கம்.

நுழை²–தல் *nuḻai-,* 2செ.குன்றாவி. (v.t.) **1.** கடத்தல் (சிலப்.10 : 35, உரை.); to pass. **2.** மட்டுக்கட்டுதல் (யாழ்.அக.); to stint, limit down or lessen the due measure or quantity. **3.** சாடை சொல்லுதல் (யாழ்.அக.); to make innuendoes.

ம. நுழுக; **க.** நொளெ.

[நுழை¹–தல் → நுழை²–தல்]

நுழை³–தல் *nuḻai-,* 2செ.கு.வி. (v.i.) **1.** நுண்மை யாதல்; to be minute, fine. *"நுழை நூற் கலிங்கம்"* (மலைபடு.561). **2.** கூரிதாதல்; to be keen acute. *"நுழைந்த நோக்கிற் கண்ணுள் வினைஞரும்"* (மதுரைக்.517). *"ஒடுதேர் நுண்நுகம் நுழைத்த மாவே"* (நற்.58:11). *"வேற்றிழை நுழைத்த வேர்நனை சிதாஅர்"* (புறநா. 69:3). *"சலாகை நுழைந்த மணித்துளை அகவையின்"* (மணிமே.12:66). *"தனிமணி யிரட்டுந் தாளுடைக் கடிகை நுழைநுதி நெடுவேற் குறும்படை மழவர்"* (35:3,4).

[நுல் (நுண்மை, கூர்மை) → நுள் → நுழு → நுழை → நுழை–தல்]

நுழை⁴–த்தல் *nuḻai-,* 4செ. குன்றாவி. (v.t.) புகுத்துதல்; to put, insert; interpolate. *கால்சட்டைப் பைக்குள் இரண்டு கைகளையும் நுழைத்துக் கொண்டு நின்றான். ஊசியின் காதில் ஒட்டகத்தை நுழைத்தாலும் தீய வழிச் செல்வரைத் துறக்கத்தில் நுழைக்கமுடியாது.* (விவிலியம்).

[நுழை¹–தல் → நுழை⁴–த்தல்]

நுழை⁵ *nuḻai,* பெ. (n.) **1.** சிறுவழி; narrow way. *நுழை விட்டு செய், நூல் கற்று அடங்கு* (பழ.) *"பிணங்கரி னுழைதொறும்"* (மலைபடு.379). **2.** பலகணி (பிங்.); window. **3.** குகை; cave. *"உயர்மலை நுழைதனிற் புக்கு"* (தாயு. சின்மய.11). **4.** துளை (தைலவ.தைல.); opening, aperture.

[நுல் (துளை) → நுள் → நுழு → நுழை]

நுழை⁶ *nuḻai,* பெ. (n.) **1.** நுண்மை (திவா.); minuteness, fineness. **2.** அறிவு நுட்பம் (வின்.); intellectual sharpness.

[நுல் (நுண்மை, கூர்மை) → நுள் → நுழு → நுழை]

நுழைகடவை *nuḻai-kaḍavai,* பெ. (n.) வேலி முதலியவற்றின் சிறு திறப்பு(வின்.); narrow passage, as through a hedge; narrow entrance.

[நுழை[5] + கடவை. கட → கடவு → கடவை = கடந்து செல்லும் வழி.]

நுழைகதவு *nuḻai-kadavu,* பெ. (n.) வாயிற் கதவு; gate.

[நுழை[5] + கதவு]



நுழைச்சல் *nuḻaiccal,* பெ. (n.) **1.** **நுழைகடவை** பார்க்க; see *nuḻai-kaḍavai.* **2.** ஏழு என்னும் எண்ணிற்கு வழங்கும் குழுஉக் குறி; seven, a slang term.

[நுழை[5] → நுழைச்சல்]

நுழைச்சு *nuḻaiccu,* பெ. (n.) **நுழைச்சல்,2** பார்க்க; see *nuḻaiccal,***2.**

[நுழை → நுழைச்சு]

நுழைநரி *nuḻai-nari,* பெ. (n.) **1.** நரி(வின்.); fox, as burrowing in the ground. **2.** கபடன் (இ.வ.); hypocrite.

[நுழை[5] + நரி]

நுழைபுலம் *nuḻai-pulam,* பெ. (n.) நுண்ணிய அறிவு; intellectual acumen. "*நுழைபுலம் படர்ந்த*" **(பு.வெ.10, காஞ்சிப்.4.கொளு)**

[நுழை[6] + புலம்]

நுழைபொட்டு *nuḻai-poṭṭu,* பெ. (n.) **நுழைகடவை(வின்.)** பார்க்க; see *nuḻai-kaḍavai.*

[நுழை[5] + பொட்டு]

நுழைவழி[1] *nuḻai-vaḻi,* பெ. (n.) **நுழைவாசல்** பார்க்க; see *nuḻai-vāšal.*

[நுழை[5] + வழி]

நுழைவழி[2] *nuḻai-vaḻi,* பெ. (n.) **1.** உணவு, நீர் செல்லும் வழி; the canal through which food and drink pass to the stomach - Oesophagus. **2.** காதில் ஓசை (ஒலி) நுழையும் வழி; the passage carrying sound from the external ear to the tympanam - Auditory canal. **3.** சுழிமுனை வாயில்; the subtle passage functioning in the body of a yogi or other Spiritualists. It extends from the nerve centre at the sacral region upto the cerebral region finding its lodgment at the crown of the head. **(சா.அக.).**

[நுழை[5] + வழி]

நுழைவாசல் *nuḻai-vāšal,* பெ. (n.) திட்டிவாசல் (வின்.); low or small gate, wicket.

[நுழை[5] + வாசல். வாயில் → வாயல் → வாசல் – திரிவு]



நுழைவாயில் *nuḻai-vāyil,* பெ. (n.) 1. **நுழைவாசல் (திவா.)** பார்க்க; see *nuḻai-vāšal.* 2. கட்டடம், திடல் முதலியவற்றினுள் செல்வதற்கு வெளி எல்லையில் உள்ள திறப்பு; entrance. *விளையாட்டுத்திடலின் நுழை வாயிலில் தோரணங்கள் கட்டப் பட்டுள்ளன. இந்தியாவின் நுழைவாயில் மும்பை.*

[நுழை[5] + வாயில்]

நுழைவு[1] *nuḻaivu,* பெ. (n.) 1. நுண்மை; minuteness, fineness. "*நொசிவு நுழைவு நுணங்கும் நுண்மை*" (தொல்.சொல்.உரி.76). 2. நுண்ணறிவு; keen understanding or parception. "*நூலவர் நுழைவொடு நுழைந்து*" (சூளா.இரத.117).

[நுல்(நுண்மை) → நுள் → நுழு → நுழை → நுழைவு]

நுழைவு[2] *nuḻaivu,* பெ. (n.) 1. இடம் பெறுவதற் குரியது அல்லது அனுமதிக்கப் படுவதற் குரியது; entrance. *நுழைவுத் தேர்வு, நுழைவுக் கட்டணம் நுழைவுச்சீட்டு.* 2. சேர்க்கை; admission.

நுழைவு = 1. E. entrance; F. entee; G. eintritt(m), eingangm; It. ingresso. 2. F. admission; G. zulassing, einweisung; It. ammissione.

[நுல்(துளை) → நுள் → நுழு → நுழை → நுழைவு]

நுழைவுச்சீட்டு *nuḻaivu-c-cīṭṭu,* பெ. (n.) ஒன்றில் நுழைவதற்கு அல்லது இடம் பெறு வதற்குரிய அனுமதிச்சீட்டு; entrance ticket.

[நுழைவு[2] + சீட்டு.]

நுழைவுச்சீட்டை புகவுச்சீட்டு என்று கூறுதல் நலம். எற்றுக்கெனில் நுழைவு என்பது புழை அல்லது இடைவெளி வழியாக உடம்பை ஒடுக்கியும் ஒடுக்காதும் செல்வதாகும். புகுதல் என்பது பெருவாயில் வழி உடம்பைச் சற்றும் ஒடுக்காது, நிமிர்ந்து தாராளமாகச் செல்வதாகும்.

நுழைவுத்தேர்வு *nuḻaivu-t-tērvu,* பெ. (n.) வேலைக்கோ, படிப்புக்கோ அனுமதிக்கும் முன் நடத்தப்பெறும் தேர்வு; entrance examination.

[நுழைவு[2] + தேர்வு]

நுழைவுத் தேர்வை புகவுத் தேர்வு எனக் கூறுதல் பொருந்தும். நுழைதல் பார்க்க.

நுள் *nuḷ,* பெ. (n.) கிள்ளு; pinch.

[முள் → நுள் = விரல் நுனியாற் கிள்ளு. முள் = ஊசி, ஊசிபோன்ற உறுப்பு, உட்குவிவு. (சு.வி.40)]

நுள்ளல் *nuḷḷal,* பெ. (n.) **நுளம்பு (அக.நி.)** பார்க்க; see *nuḷambu.*

[நுல் = சிறுமை, கூர்மை. நுல் → நுள் → நுள்ளல் = சிறிய உலங்கு]

நுள்ளான் *nuḷḷāṉ,* பெ. (n.) கடிக்கும் சிற்றெறும்பு (வின்.); small biting ant.

[நுல் = சிறுமை, கூர்மை. நுல் → நுள் → நுள்ளான் (வே.க.)]

நுள்ளி *nuḷḷi,* பெ. (n.) நீர்ச் செடிவகை (நாஞ்.); an aquatic plant.

நுள்ளு¹–தல் *nuḷḷu-,* 5செ.குன்றாவி. (v.t.) கூரிய உகிராற் கிள்ளுதல் (உ.வ.); to pinch, nip.

ம. நுள்ளுக; **கோத.** நுள்ளி; **தெ.** நுல் (லு). *[நுல் = கூர்மை. நுல் → நுள் → நுள்ளு–தல் (வே.க.)]*

நுள்ளு² *nuḷḷu,* பெ. (n.) **1.** கிள்ளு; pinch, nip. **2.** சிறுதுண்டு அல்லது துணுக்கு; bit.

[நுல் = கூர்மை, சிறுமை. நுல் → நுள் → நுள்ளு (வே.க.)]

நுளம்பப்பல்லவர் *nuḷamba-p-pallavar,* பெ. (n.) நுளம்பர் பார்க்க; see *nuḷambar.*

நுளம்பபாடி *nuḷamba-pāḍi,* பெ. (n.) எருமையூர் (மைசூர்) நாட்டின் பகுதியாய் நுளம்ப வேந்தரால் ஆளப்பட்ட ஒரு நாடு (கல்.); country of the Nuḷambar, a portion of Modern Mysore. *"கங்கபாடியும் நுளம்பபாடியும்"* (முதல் இராச இராசன் மெய்க்கீர்த்தி)

[நுளம்பர் + பாடி]

நுளம்பபாடி: எருமையூர் எனப்படும் மைசூரின் கீழ்ப்பகுதியும் பல்லாரி மாவட்டமும் அடங்கிய நிலப்பகுதி. இதில் தும்கூர், சித்தல், துர்க்கம் பெங்களூர், கோலார் ஆகிய பகுதிகளும் அடங்கும். இதனைப் பல்லவருள் ஒரு பிரிவினரான நுளம்பர்கள் ஆண்டு வந்தனர். இதனை முதலாம் இரசராசன் கைப்பற்றி நிகரிலி சோழ மண்டலம் எனப் பெயரிட்டான்.

நுளம்பர் *nuḷambar,* பெ. (n.) **1.** நுளம்பபாடியைச் சேர்ந்த மக்கள்; a people in Nuḷamba-pāḍi. **2.** நுளம்பபாடியை ஆண்டவர்கள்; a king, ruled in Nulamba-pāḍi. ***நுளம்பபாடியை ஆண்டவர்கள் நுளம்பர்கள்.***

நுளம்ப குடிவழியை (வமிசத்தை) நிறுவியவன் திருநயனன். கேமாவதி கல்வெட்டுப்படி இதன் முதல் அரசன் மங்களன். நுளம்பர்களின் தலைநகரம் கேமாவதி. இவர்கள் மதம் சிவமதம் (சைவம்). பல சிவன் கோயில் களைக் கட்டினார்கள். பல ஏரிகளி களை வெட்டிக் குடிமக்களுக்கு உதவிய தாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. நுளம்பப் பல்லவர் என்பவரும் இவர்களே.

நுளம்பு¹ *nuḷambu,* பெ. (n.) **1.** சிறு கொசுகு (திவா.); gnat, eye-fly. **2.** பெருங் கொசுகு (பிங்.); mosquito. **3.** மாட்டுஈ; cow-fly. *"ஆனுளம் புலம்புதொ றுளம்பும் நாநவில் கொடுமணி நல்கூர் குரலே"* (குறுந்.86)

ம. நுழம்பு; **தெ;** நுசும; க. நொள, நொளவு, நொண, நொணவு (a fly), நொசி (a minute insect that destroys wool, any cloth, and paper); **கொலா; பிரா.** நுல்லெ; **பர்.** நுற்ஞி; **கோண்.** நுல்லெ (a flea); **மா.** நுடொ (very small gnat.)

[நுல் = கூர்மை, சிறுமை. நுல் → நுள் → நுளம் → நுளம்பு = சிறிய உலங்கு (வே.க.)]

நுளம்பு² *nuḷambu,* பெ. (n.) மின்மினி; fire fly. (சா.அக.)

நுளம்பு³–தல் *nuḷambu-,* 5செ.கு.வி.(v.i.) அசட்டை செய்தல்; to treat with contempt.

நுளுப்பு–தல் *nuḷuppu-,* 5செ.குன்றாவி.(v.t.) கழப்புதல் (வின்.); to neglect or shirk, as work.

[நழுப்பு → நுளுப்பு–தல்.]

நழுப்பு–தல் = மயங்கச் செய்தல், வேலை செய்ய மறுகுதல்.

நுளும்பு *nuḷumbu,* பெ. (n.) ஒருவகைப் பறவை; a kind of bird. (சா.அக.).

[நுளம்பு → நுளும்பு]

நுளை *nuḷai,* பெ. (n.) 1. வலைகொண்டு மீன் பிடிக்கும் மீனவர்; a caste of fishermen. "*நுளைமக ளரித்த பழம்படு தேறல்*" (சிறுபாண்.158). 2. ஈனம், இழிவு(வின்.); inferiority, baseness; meanness. 3. குருடு(வின்.); blindness.

[நுல்(துளை) → நுள் → நுளை = நுளையர் குலம்]

நுளைச்சி *nuḷaicci,* பெ. (n.) நுளையரின மகள்; a fisher-woman. "*நுளைச்சியர்... மடற் கொய்து*" (தேவா. 39 : 5).

மறுவ. நுளைமகள்

[நுளை → நுளைச்சி = வலைகொண்டு மீன்பிடிக்கும் நுளையரினப்பெண்.]

நுளைச்சியர் *nuḷaicciyar,* பெ. (n.) நெய் தனிலத்துத் தாழ்ந்த பெண்டிர்; women of maritime tract. "*தழுவுசீர் நுளைச்சியர் தசும்பிற்சேலுடன்*" (சேதுபு.கந்தமா.87).

[நுளையர் (ஆ.பா.) → நுளைச்சியர் (பெ.பா.)]

நுளைப்புண் *nuḷai-p-puṉ,* பெ. (n.) தசை அழுகி சீழோடு இருக்கும் புண்; an ulcer marked by sloughing particles in the discharge - Phagedenic ulcer. (சா.அக.).

[நுளை + புண்]

நுளைப்புழுக்கையன் *nuḷai-p-puḻu-k-kaiyaṉ,* பெ. (n.) இழிந்தோன்(வின்.); base, mean person.

[நுளை + புழுக்கையன். புழுக்கையன் = புழுக்கைபோல் சிறியவன், இழிந்தவன்.]

நுளைமகள் *nuḷai-magḷ,* பெ. (n.) நுளையற் இனத்தில் பிறந்த மகள்; a fisher- woman. "*நுதிவேனோக்கினுளை மகளரித்த*" (சிறுபாண்.158.).

[நுளை + மகள்]

நுளையர் *nuḷaiyar,* பெ. (n.) 1. நெய்தனிலத்து மக்கள்; the people of maritime tract. "*நுளையர் நுளைச்சியர் பரதர் பரத்தியர்*" (நம்பியகப். அகத்தி.24.). 2. நெய்தல் நில ஆண்மகன்; male person of maritime tract. "*நனைமுதிர் தேறல் நுளையர்க் கீயும்*" (அகநா. 366:11).

[நுளையன் → நுளையர்]

நுளையன் *nuḷaiyaṉ,* பெ. (n.) 1. மீனவன், நெய்தனிலத்தான் (திவா.); fisher-man, inhabitant of the maritime tract. *நுளையன் அறிவானா ரத்தினத்தின் பெருமை?* (பழ.) *நுளையன் பேச்சு அம்பலம் ஏறாது* (பழ.). 2. இழிந்தோன்(வின்)); mean fellow. 3. நெய்தல் நில ஆண்மகன்; male of maritime tract.

[நுல்(துளை) → நுள் → நுளை → நுளையன் = நீருட் புகுந்து அல்லது முழுகி மீன் பிடிப்பவன். ஒ.நோ. ம. முக்குவன் = மீன்பிடிப்பவன், நெய்தல் நிலத்தான் (வே.க.)]

நுளைவாய் *nuḷai-vāy,* பெ. (n.) ஊத்தைவாய் (மதி.கள.1:72); foul mouth.

[நுளை + வாய்]

நுறுக்கு–தல் *nuṟukku-,* 5செ.குன்றாவி. (v.t.) பொடியாக்குதல்; to crush, pulverise, reduce to powder. "*வெற்பினங்களை நுறுக்கின*" (கம்பரா.பிரமாத்.108).

க. நுறுகு; தெ. நுருமு.

[நுறுங்கு → நுறுக்கு–தல்]

நுறுங்கு¹–தல் *nuṟuṅgu-,* 5செ.கு.வி. (v.i.) 1. பொடியாதல்; to be powdered. 2. சிதைதல்; to be bruised, squeezed. "*நுறுங்கிய யாக்கையோடு*" (விநாயகபு. 80 : 442).

[நுல் → நுள் → நுறு → நுறுங்கு → நுறுங்கு–தல். நுல் = நுண்மை, சிறுமை. (வே.க.)]

நுறுங்கு² *nuṟuṅgu,* பெ. (n.) குறுநொய்; grit. '*நொய்யும் நுறுங்குங் களைந்து அரிசியமைத் தாரை*' (தொல்.சொல்.1, உரை).

ம. நுறுநு

[நுறு → நுறுங்கு]

நுன் *nuṉ,* பெ. (n.) உன், உனது; yours. முன்னிலை ஒருமைப் பெயர்.

[நூன் → நுன்]

நுன *nuṉa,* பெ. (n.) உனது, நினது; yours. "நுனசீறடிநோ வநடந் துசெலேல்" (சீவக:1517).

[நூன் → நுன]

நுனி¹ *nuṉi,* பெ. (n.) 1. நுனை; tip, point. "*நுனிக் கொம்ப ரேறினார் அஃதிறந்தூக்கின் உயிர்க்கிறுதியாகிவிடும்*" (குறள்,476). *நுனிக்கொம்பில் ஏறி அடிக்கொம்பை வெட்டுவார்களா?* (பழ.) 2. நுண்மை(திவா.); minuteness, fineness, smallness. *நுலோடுபோன நுனி கூர் நோலாரு ஞானமுநி வீர்* (சேதுபு. பாலோடை. 46.). 3. நாக்கு, கத்தி முதலியவற்றின் முன்பகுதி; point, tip of one's tongue, a kinfe. *நாக்கு நுனியால் மூக்கு நுனியைத் தொடமுடியுமா?* 4. மேசை முதலியவற்றின் இருபக்கங்களும் இணையும் இடம்; முனை; edge, corner. *ஓடிவந்ததால் மேசை நுனியில் இடித்துக் கொண்டேன். மேசை நுனியில் வைத்து அடிக்காதே, நுனி உடைந்து விடும்.* 5. உச்சி; top.

ம. நுனி

[நுல் → நுன் → நுனி. நுல் = நுனிமை, முன்மை, கூர்மை]

நுனி²–த்தல் *nuṉi-,* 4செ.குன்றாவி. (v.t.) 1. கூராக்குதல்; to sharpen to a point, whet. 2. கூர்ந்து நோக்குதல் அல்லது ஆராய்தல்; to examine carefully, to look intently. "*நாடகக் காப்பிய நன்னூ னுனிப் போர்*" (மணிமே.19:80).

[நுல் → நுன் → நுனி → நுனி–த்தல். நுல் = நுன்மை, முன்மை, கூர்மை]

நுனி³–த்தல் *nuṉi-,* 4செ.குன்றாவி. (v.t.) 1. ஆராய்ந்து கூறுதல்; to state after a full consideration. "*நூற் பொருளுணர்ந்தோர் நுனித்தனரா மென*" (மணிமே.19:38). "கதிர்வினை நுனித்த நின் கணியெனைக் கூறி" (பெருங். உஞ்சைக்.36:210). 2. கருதுதல்; to intent. "*நோக்கருஞ் சாலை போக நுனித்து*" (இரகு.குறைக.67).

[நுல் → நுன் → நுனி. நுனி–த்தல்]

நுனிக்கை *nuṉi-k-kai,* பெ. (n.) விரல் நுனி (உ.வ.); tip of the fingers, as extremities.

[நுனி¹ + கை]

நுனித்தல் *nuṉittal,* பெ. (n.) குணம்(திவா.); quality, nature.

நுனித்தோல் *nuṉi-t-tōl,* பெ. (n.) ஆண்குறியின் முனைத்தோல் (விவிலி.ஆதி); fore skin.

[நுனி + தோல்]

நுனித்தோலழற்சி *nuṉi-t-tōlaḻarci,* பெ. (n.) ஆண்குறி முன்தோல் வெந்து காணுகை; inflammation of the fore skin - Balanitis. (சா.அக.).

[நுனி + தோல் + அழற்சி]

நுனிநா *nuṉi-nā,* பெ. (n.) நாக்கின் நுனி; tip of the tongue. "*டகார ணகார நுனிநா வண்ணம்*" (தொல்.எழுத்து.91). *சாப்பிடும்போது நுனி நாக்கைக் கடித்துக் கொண்டான்.*

[நுனி + நா]

நுனிநாசிச்சிலந்தி *nuṉi-nāsi-c-cilandi,* பெ. (n.) மூக்குமுனையில் வரும் ஓர் சிலந்திப்புண் அல்லது புற்று; an ulcer on the tip of the nose. (சா.அக.)

[நுனி + நாசி + சிலந்தி. சிலந்தி = புண், புற்று, கட்டி.]

நுனிப்பந்தி *nuṉi-p-pandi,* பெ. (n.) கடைப்பந்தி; guests at the extreme end of a row.

[நுனி + பந்தி. பந்தி = வரிசை]

நுனிப்பு *nuṉippu,* பெ. (n.) கூர்ந்தறிகை; examining carefully. "*நூனெறி வழாஅ நுனிப்பொழுக் குண்மையின்*" (பெருங். வத்தவ.7:34). "*நூன்மேற் சூழ்ந்தநுனிப்பில் வழாமை*" (பெருங். உஞ்சைக். 43:22).

[நுனி→ நுனிப்பு. நுனி = கூர்ந்து நோக்குதல் அல்லது ஆராய்தல்.]

நுனிப்புல்மேய்-தல் *nuṉi-p-pul-mēy-,* 1 செ.குன்றாவி.(v.t.) மேலெழுந்த வாரியாகப் படித்தல் (உ.வ.); to study or read cursorily to pay superficial attention to. *நுனிப்புல் மேய்வது போல் நூலைப் படிப்பது அவருக்குப் பிடிக்காது.*

[நுனி + புல் + மேய்-தல்.]

சில ஆடுகள் நின்று முழுமையாக மேயமாட்டா. நடந்து கொண்டே புல் நுனிகளை மேய்ந்து கொண்டே போகும். அதுபோல் மேலெழுந்த வாரியாக அரைகுறையாகப் படிப்பதை நுனிப்புல் மேய்தல் என்று சொல்வர்.

நுனியாடி *nuṉi-y-āḍi,* பெ. (n.) படைத்தலைவர் (சேனாதிபதி) (ஈடு.4. 8:7); commander-in-chief.

[நுனி + ஆடி]

படைமுகத்தில் நின்று படைகளைப் போருக்கு ஆயத்தமாக்குபவர் என்ற கருத்தில் வந்தபெயராகலாம். ஆடு-தல் = பொருதல்.

நுனியிலை *nuṉi-y-ilai,* பெ. (n.) தலை வாழையிலை (இ.வ.); plantain leaf with the tapering end intact.

[நுனி + இலை]

நுனை *nuṉai,* பெ. (n.) 1. முனை; point. 2. நுனி; tip. "*தானையுங் கடலென முழங்குங்*

கூர்நுனை வேலும்" (புறநா.42). "*மாய்த்த போல மழுகுநுனை தோற்றி*". (அகநா.5:12). "*குவிமுட் கருவியுட் கோணமும் கூர் நுனைக்கவை முட்கருவியும்*" (மணிமே.18:163.). "*ஏனமாகிய நுனைமுரி மருப்பின்*" (பதிற்றுப்.16:6). "*திகழ்ந்த திற்றென நெருப்பு நுனையுறீஇ*" (பெருங். உஞ்சைக். 47:237). 3. முடிவு; end.

[நுனி → நுனை. நுல் → நுனி = உச்சி, முனை, கூர்மை, நுண்மை, சிறுமை, இளமை]

நூ[1] *nū*, நகர ஒற்றும் ஊ கார உயிரும் சேர்ந்து பிறக்கும் எழுத்து; the compound of ந் and ஊ.

[ந் + ஊ – நூ]

தமிழ் நெடுங்கணக்கில் எட்டாவதாக அமையும் உயிர் மெய்யெழுத்தாகிய நகரத்தின் ஆறாவது எழுத்து.

நூ[2] *nū*, பெ. (n.) எள் (சூடா.); sesame.

தெ. நூ, நூவு, நுவு, நுவ்வு; **கொலா.** நுவ்வூ; **நா.** நுவ்வ்; **கோண்.** நுநக்.

[நூல் → நூ. நூல் = எள். எள் மிகச் சிறிய கூலமாதலால், நூ (நூல்) எனப் பெயர் பெற்றது. எள்ளளவும், எள்ளத்தனையும், எட்டுணையும் என்னும் வழக்குகளை நோக்குக. (வே.க.)]

நூ[3] *nū*, பெ. (n.) யானை(அக.நி); elephant.

நூ[4] *nū*, பெ. (n.) அணிகலன் (யாழ்.அக.); ornament.

நூ[5]-த்தல் *nū-*, 4செ.கு.வி.(v.i.) நொதுத்தல்; to turn sour.

நூக்கம்[1] *nūkkam*, பெ. (n.) 1. மரவகை; sissoo wood. 2. தோதகத்தி; black-wood.

தெ. நூக.

[ஊங்கு → நூங்கு → நூக்கம் = உயர்ந்த மரவகை]

நூக்கம்[2] *nūkkam*, பெ. (n.) உயரம் (அக.நி.); height, elevation.

[நூங்கு → நூக்கம்]

நூக்கமரம் *nūkkamaram*, பெ. (n.) 1. மலையாள நாட்டில் வளரும் கருமை மரம்; Malabar black wood cast Indian rose wood- Dalbergia genues. 2. சீமை நூக்கு; foreign rosewood - Swietence mhogany.

மறுவ. நூக்கம், சிசுமரம், பிச்சை, தோதகத்தி, ஈட்டி.

[நூக்கம் + மரம்]

இம்மரம் 50 அடி உயரம் வளரும். இதன் இலைகள் இறகைப்போல் இருக்கும். இதன் பூக்கள் சிறியன; மஞ்சள் கலந்த வெண்ணிறம் உடையன. இதன் காய்க்குள் மூன்று விதைகள் இருக்கும். வேனிற் காலத்தில் பூக்கும் தன்மை கொண்டது. மாலைவேளையில் மணம் வீசும் இயல்புடையது. சாலை ஓரங்களில் இம்மரம் வளர்க்கப்படும். இம்மரத்தூளில் எண்ணெய் எடுத்து மருந்தாகப் பயன்படுத்துவர். (சா.அக.)

நூக்கமரம் பனிமலை (இமயமலை) அடிவாரத்திற்குத் தெற்கே இந்தியா முழுவதிலும் காணப்படும் இலையுதிர் மரமாகும். இதன் இலைகள் சிறியன; வேனிற் காலத்தில் இலைகள் உதிரும். நூக்கமரம் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் 3,500 அடி உயரம் வரை காணப்படுகிறது. இதன் அடிமரம் வளைந்து வளைந்து வளரும் தன்மையுடையது. இம்மரங்கள் கூட்டமாக வளர்வதில்லை. இது ஆழமான வண்டல் மண்ணிலேயே செழித்து வளருமாயினும் பலவகை மண்ணிலும் வளரக் கூடியது. தமிழ்நாட்டில் கோவைப் பகுதியில் இம்மரம் அதிகம் பயிராகிறது. வெளிநாடுகளுக்கு இம்மரம் அதிகமாக

ஏற்றுமதி செய்யப்படுகிறது. இம்மரம் மிகுந்த உறுதியுடையது. நீண்ட நாள் கெடாமல் இருக்கக் கூடியது. செதில் இம்மரத்தை எளிதில் அரிப்பதில்லை. இம்மரம் பளுவும் ஒடியக் கூடியதுமாகையால் கட்டட வேலைக்குப் பயன்படுத்துவதில்லை. இது கருமை நிறமும், வரிக்கோடுகளுடையதாகவும் இருப்பதால் மிசைப் பலகை (மேசை) முதலிய பொருள்கள் செய்யப் பயன் படுகிறது. இதனை மெருகேற்றினால் அழகுடைய தாகக் காணப்படும்

நூக்கல்[1] *nūkkal,* பெ. (n.) நெய்வார் கருவியி னொன்று (யாழ்.அக.); a weaver's implement.

[நூக்கு → நூக்கல்]

நூக்கல்[2] *nūkkal,* பெ. (n.) தள்ளுகை; pushing or thrusting aside. (சா.அக.).

[நூக்கு[1] → நூக்கல்.]

நூக்கி *nūkki,* வி.எ.(adv.) **1.** சார்த்தி; to shut. "வன்னிலைக் கதவ நூக்கித் தாழக்கோல் வலித்து" (திருவிளை.அங்கம். 8). **2.** செலுத்தி; to insert. "ஆறுமேழுமறுபது மைம்பதும் நூறுமாயிரமுங்கணை நூக்கி" (இராமா. நாகபாச. 16). **3.** தள்ளி; to push. "நூக்கி யெறி பொறியும்" (சீவக. நாமக. 72). **4.** முறித்து; to break. (கதி.அக.)

[நூக்கு → நூக்கி.]

நூக்கு[1]**–தல்** *nūkku-,* 5செ.குன்றாவி.(v.t.) **1.** முன் தள்ளுதல்; to shove, push, thrust aside. "*நூக்கிப் புறத்திரு போகென்னு மின்னாச் சொல்*" (நாலடி,326). *தள்ளுவதை நூக்குதல் என்பது வடவார்க் காட்டு வழக்கு.* **2.** ஊசலாட்டுதல்; to swing. "*நடலைந் நடுவின் மகளிர் நூக்கப் பரிந்தகாசு*" (சீவக.922). **3.** அசைத்தல்; to shake. "*ஞாழற் படுசினை தோழியர் நூக்க*" (பெருங்.உஞ்சைக். 40:37). **4.** தூண்டுதல்; to impel, incite. "*நூறுவா யெனமாதலி நூக்கினான்*" (கம்பரா. இராவணன்வதை.174). **5.** எறிதல்; to throw, discharge, as a weapon. '*கைப்படையை நூக்கி*' (தொல்.பொருள்.72, உரை,பி.ம்.). **6.** முறித்தல்; to break, cut down. "*ஊழாரத் தோய்கரை நூக்கிப் புனறந்த*" (பரிபா.9:27). **7.** நீக்குதல்; to remove, redress. "*நோவெலா மிவணூக்க வருளினான் மேவி*' (பிரபுலிங். முத்தாயி.7). **8.** கழுவாய் (பரிகாரம்) செய்தல்; to treat, as a patient. "*புண் களுற்றார்க் கிதுமருந்தென்ன நல்லார் இழுது சேர் கவளம் வைத்துப் பதுமுகன் பாவை மார்பின் நெய்க்கிழி பயிலச் சேர்த்தி நுதிமயிர்த் துகில் குப்பாயம் புகுக என நூக்கினானே*" (சீவக.819). **9.** சாத்துதல்; to shut, close, as a door. "*வன்னிலைக் கதவ நூக்கி*" (திருவிளை. அங்கம்.8).

க.,தெ. நூகு; **து.** நூகுநி; **குட., கொலா.** நுக்.

[நூங்கு–தல் → நூக்கு – தல்]

நூக்கு[2] *nūkku,* பெ. (n.) **நூக்கம்**[1] (யாழ்ப்.) பார்க்க; see *nūkkam*[1].

நூக்கு[3] *nūkku,* பெ. (n.) **நூக்கம்**[2] பார்க்க; see *nūkkam*[2]. "*எடுத்தவே யெக்கி நூக்குயர்பு*" (பரிபா.16:45).

[நூங்கு → நூக்கு]

நூக்கு[4] *nūkku,* பெ. (n.) **1.** நொய்; crushed rice. **2.** நெல்லின் முனைப் பகுதி; tip of the paddy. (சா.அக.)

நூக்குணா *nūkkuṇā,* பெ. (n.) நிலப்பனை (சித்.அக.); moosly root.



நூக்குவாய் *nūkku-vāy,* பெ. (n.) தோட்டத்திற் புகவமைத்த சிறுவழி (இ.வ.); a small entrance leading to a garden.

[நூக்கு + வாய்]

நூங்கர் *nūṅgar,* பெ. (n.) தேவர் (அக.நி.); the Gods, as great.

[நூங்கு → நூங்கர். நூங்கு = உயர்வு]

நூங்கள் *nūṅgaḷ,* பெ. (n.) முன்னிலைப் பெயராகிய நீங்கள்; you., your.

[நுங்கள் → நூங்கள்]

நூங்கு[1] *nūṅgu,* பெ. (n.) **1.** பெருமை (அக.நி.); greatness. **2.** மிகுதி(வின்.); abundance, intenseness. **3.** உயர்வு; hight.

[ஊங்கு → நூங்கு]

நூங்கு[2]**–தல்** *nūṅgu-,* 5செ.கு.வி. (v.i.) மிகுதல் (வின்.); to be great, intense or abundant, to exceed.

[ஊங்கு → நூங்கு → நூங்கு–தல்]

நூங்கு[3] *nūṅgu,* பெ. (n.) கடல்வாழ் உயிரி; sea living being. இஃது இறால்போல் தோற்றமளிக்கும். இதனை இறாலுடன் கலப்பதும் உண்டு. இதன் விலை மலிவு. (மீனவ.)



நூடி *nūḍi,* பெ. (n.) சிற்றேலம் (மலை.); a species of cardamom.

[துடி (=ஏலம்) → தூடி → நூடி.]

நூதல் *nūdal,* பெ. (n.) அவிகை (யாழ்.அக.); being extinguished.

[நுது → நூது → நூதல்]

நூதவம் *nūdavam,* பெ. (n.) சிற்றாமல்லி; narrow leaved jasmine - Jasminum angustifolium. (சா.அக.).

மறுவ. காட்டு மல்லிகை.

✡நூநெய் *nūney,* பெ. (n.) நல்லெண்ணெய்; sesame oil.

தெ. நூனெ.

[நூ + நெய். நுவ்வு → நூ = எள்]

தெலுங்கில் 'நூன' என்னுஞ் சொல் எண்ணெய் (எள்+நெய்) எனப்பொருள் படுகிறது. 'நூ' என்னுந் தமிழ்ச் சொல்லுக்கு 'எள்' என்று பொருள். நூ+நெய் (எள்+நெய்) என்னுந் தமிழ்ச் சொல்லே தெலுங்கில் 'நூன' எனத்திரிகிறது. இச்சொல் இன்று வழக்கில் இல்லை.

நூப்பு *nūppu,* பெ. (n.) தணிப்பு (யாழ்.அக.); reduction, subduing, abatement.

[நூக்கு → நூப்பு.]

ஒ.நோ: "மோப்பக் குழையும் அனிச்சம்" "மோக்கக் குழையும் அனிச்சம்" (காளிங்கர் பாடவேறுபாடு ப் → க்.)

நூபம்[1] *nūbam,* பெ. (n.) எருது (அக.நி.); bull, bullock.

நூபம்[2] *nūbam,* பெ. (n.) எருக்கு(வின்); madar.

[நுபம் → நூபம்]

நூபுவருத்தி *nūpu-varutti,* பெ. (n.) ஆமையோடு; shell of tortoise or turtle. (சா.அக.).

[நுபு → நூபு + வருத்தி]

சிறுவர்கள் ஆமையைக் காணும்போது கல்லாலோ, கம்பாலோ எறிந்து வருத்துவதால் வருத்தி என்பது ஓட்டைக் குறிக்கும்.

நூம் *nūm,* பெ. (n.) முன்னிலைப் பன்மைப் பெயராகிய நீம்; you.

மரா. தும்ஹீ.

[நீம் → நூம்.]

நூமுறுக்கி *nūmuṟukki,* பெ. (n.) முறுக்குதற்குப் பயன்படும் கருவி; an implement with which cords are twined for net.

[நூல் + முறுக்கி – நூன்முறுக்கி → நூமுறுக்கி.]

நூர்[1]–தல் *nūr-,* 2செ.கு.வி. (v.i.) **1.** அவிதல்; to go out; to be extinguished, as a lamp, to become extinct, as a family. *தீ நூர்ந்து போனது.* **2.** ஆறுதல்; to be appeased or suppressed, as hunger, anger. **3.** பதனழிதல்; to be spoiled; to begin to rot; to grow too soft.

[நுது → நூர் → நூர்–தல்.]

நூர்[2]–த்தல் *nūr-,* 4செ.குன்றாவி.(v.t.) **1.** அவித்தல்; to put out, quench. *விளக்கை நூர்த்துப் போடு.* **2.** ஆற்றுதல்; to appease or suppress, as hunger, anger.

[நுது → நூர் → நூர்–த்தல்.]

நூல்[1] *nūl,* பெ. (n.) **1.** பஞ்சிநூல்; yarn, cotton thread, string. *"நூல் விரித் தன்ன கதுப்பினள்"* (புறநா.159). *காந்தியடிகள் இராட்டையால் நூல் நூற்றார். நூல் இல்லாமல் மாலை கோத்தது போல (பழ.). நூல் நூற்கும்– இராட்டை அல்ல; ஆடைநெய்யும் தறியல்ல– அது என்ன? –சிலந்தி. (விடுகதை).* **2.** பூணூல்; sacred thread. *"நூலே கரக முக்கோல் மணையே"* (தொல்.பொருள்.625). **3.** மங்கல நாண்; the cord of the wedding badge. *"தகுமகட் பேசினோன் வீயவே நூல் போன சங்கிலிபால்"* (திருத்.திருவந்.69). **4.** எற்றுநூல் முதலியன; carpender's or mason's line. *"பொல்லா மரத்தின் கனக் கோட்டந் தீர்க்குநூ லஃதேபோல்"* (நன்.25). **5.** பொருத்தனைக்காக தெய்வச் சிலைக்குக் (விக்கிரகம்) கட்டும் நூல் (R.C); string tied round an image in token of a vow. **6.** ஆண்குறியிலுள்ள நரம்பு (யாழ்.அக.); sinew in the private parts of a male. 7. ஆண்குறி (யாழ்.அக.); male organ.

ம., க. நூல்; **தெ., து.** நூலு; **கோத.** நுல்; **துட.** நுசு (nu-s); **குட.** நுலி; **கொலா.** நுவ்; **பர்.** நூல்; **கட.** நூல்; **கோண். நூல்;** **கூ.** நூடு; **குவி.** லூலூ; **குரு.** நோஎநா.

[நுல் → நூல் = நுண்ணிய இழை. நுல் = நுண்மை, கூர்மை (வே.க.)]

நூல் என்பது பருத்தியிலிருந்து பெறப்படும் பஞ்சு இழைகளையோ, பட்டு இழை, ஆட்டு மயிர், சணல் நார், போன்றவற்றையோ முறுக்குவதால் பெறப் படுகிறது. செயற்கை முறையில் தோற்றுவித்த இழைகளை முறுக்கேற்றியும் நூல் செய்கின்றனர்.

நூல்² *nūl*, பெ. (n.) 1. வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளைக் கூறும் நூல் (சாத்திரம்); systematic treatise, science. *"ஒற்றுமுரை சான்ற நூலும்"* (குறள்,581). *நூல் கற்றவனே மேலானவன்* (பழ.). 2. தோன்றியம் (ஆகமம்); agama. *"உரைநூல் மறை"* (திவ்.இயற்.1:5). 3. பண்டை நாடகத் தமிழ் நூல்களில் ஒன்று (சிலப்.உரைப்பா.பக்.9); an ancient treatise on drama and dancing. 4. கலந்தாய்வு (ஆலோசனை); deliberation. *"ஏதில வேதிலார் நூல்"* (குறள்,440); (திவா.).

ம. நூல்; க.,தெ., து. நூலு.

[நுள் → நூள் → நுவள் → நுவண் + அம் – நுவணம் = நுட்பம், மாவு, கல்வி நூல். நுவணை = நுட்பம், மாவு, கல்வி நூல். நூல் → நுவல். நூல் = நுண்ணிய பஞ்சிழை, இழை போல் நீண்டு செல்லும் செய்யுள் அல்லது கல்வி நூல். ஒநோ. இழை → இழைபு = ஒருவகை நூல். E.yarn, a thread, a sailor's story (spun out to some length). Text = the original words of an author; Lit. 'Something woven' L.textus - texo, to weave. இனி நுவல் → நூல் என்றுமாம். பல் → பன் = சொல்லு, நூலிழு. சொல்லுக்குப் பல் தேவை. *"பல்போனால் சொல் போகும்"* என்பது பழமொழி. பல்லில்லா விடின் சொல் தெளிவாயிராது. பன் → பன்னல் = கல்விநூல், பஞ்சுநூல், பஞ்சு, பருத்தி.

பன்னல் – L.punnus, cotton. பன்னா – It. panno, cloth.

பன் → பன்னு → பனுவல் = கல்விநூல், பருத்தி நூல். கல்வி நூலுக்கும், பருத்தி நூலுக்கும் நுண்மையிலும் நெடுமையிலும் ஒப்புமையுள்ளது. ஒரு நீண்ட செய்யுள் அல்லது நூல் ஒரு நீண்ட இழை போன்றி ருக்கின்றது. ஒருவன் வாயினின்று தொடர்ந்துவரும் சொல் ஒரு மொத்தைப் பஞ்சினின்று தொடர்ந்து நூற்கும் நூல் போல், அல்லது, ஒரு சிலந்தியின் அல்லது பட்டுப்பூச்சியின் உடம்பினின்று வரும் நூல் போலிருக்கின்றது. நூற்றல் = நூலிழைத்தல். நுவல் = நூலுரை, உரை. பா = நெசவின் நெடுக்கிழை (wrap); செய்யுள் அல்லது செய்யுள் நூல். பா → பாவு → பாவுதல் = பரவுதல், பரப்புதல், நீட்டல்.

பஞ்சி நூற்பாள் பருத்திப் பெண்டு. *"நூல் போறலின் நூல் என்ப; பாவை போல் வாளைப் பாவை என்றது போல. என்னை? நுண்ணிய பலவாய பஞ்சின் நுனிகளாற் கைவல் மகடூஉத் தனது செய்கை நலந் தோன்ற ஒரிழைப் படுத்தலாம் உலகத்து நூல் நூற்றலென்பது. அவ்வாறே பரந்த சொற் பரவைகளாற் பெரும்புலவன் தனது உணர்வு மாட்சியின் பிண்டம், படலம், ஒத்துச், சூத்திர மென்னும் யாப்பு நடைபடக் கோத்து நூற்கப் படலி னென்க"* (இறைய.1).

நெயவு நூலுக்கும் அறிவு நூலுக்கும் பலபெயர்கள் பொதுவாக உள்ளன. இரண்டும் 'நூல்' பெயர் பெற்றமைக்குக் கரணியத்தை,

"பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா – எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு" (நன்.24).

எனவும்,

"உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா – மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூல் அஃதே போல் மாந்தர்
மனக்கோட்டம் தீர்க்குநூல் மாண்பு" (நன்.25).

எனவும், உன்னித்துக் கூறினார் பவணந்தியார்.

பருத்தி நூலுக்கும் அறிவு நூலுக்கும் பனுவல் என்பது பொதுப்பெயர். இழைபு என்றொரு நூல்வகையின் இலக்கணம் தொல்காப்பியத்தில்,

> *“ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்து அடக்காது குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து ஓங்கிய மொழியான் ஆங்ஙனம் ஒழுகின் இழைபின் இலக்கணம் இயைந்த தாகும்”*
> (தொல்.பொருள்.செய்.240).

எனக் கூறப்பட்டுள்ளது. இழைபு என்னும் பெயர் நூலை அல்லது இழைத்தலைக் குறிக்கும் இழை என்னும் சொல்லடியாய்ப் பிறந்ததாகும்.

பா என்பது, நெயவுப்பாவிற்கும் செய்யுட் பாவிற்கும் பொதுப் பெயர். ஆங்கிலத்திலும் நூற் பொருளைக் குறித்தற்கு நெசவுத் தொழிலினின்று text, yarn என்னும் இருசொற்கள் எடுத்தாளப் பெறுகின்றன. (E.text from L.Texre, weave). நூல் மடியைக் குறிக்கும் yarn என்னும் சொல், ஓசுநர் (Sailors) கூறும் கதைக்குப் பொதுப்பெயராகும். அதை Sailor's yarn என்பர்.

இங்ஙனம் நூலும் நெயவும் பற்றிய சொற்கள் அறிவுநூலையும் செய்யுட்பாவையும் குறிக்க வருதலால், நெயவுத் தொழிலுக்கும் செய்யுள் தொழிலுக்கும் யாதேனும் ஒப்புமையுண்மை பெறப்படும்.

முதலாவது இருவகை நூலையும் நோக்கின், அவற்றுக்குப் பொதுவான நுண்மை, நீட்சி, நேர்மை என்னும் மூவியல்புகள் புலனாகும். பஞ்சினால் நெயவு நூலிழைப்பதுபோலச் சொல்லால் அறிவு நூலிழைத்தல் அல்லது சிலந்தி, பட்டுப்பூச்சி முதலியவற்றின் உடம்பினின்று வெளிவரும் நெயவு நூலைப் போலப் புலவனின் உள்ளத்தினின்று அறிவுநூல் வெளிப்படுதல், மற்றுமொரு பொதுத் தன்மையாகும்.

இரண்டாவது இருவகைப் பாவையும் நோக்கின், அவற்றிற்குப் பொதுவான நீட்சி, பரப்பு, இசைப்பு ஆகிய மூவியல்புகள் புலனாகும்.

நூல் என்பது காரணப் பெயர். ஒருவர் பஞ்சினால் நூல் நூற்றல் போல் ஒரு புலவன் சொற்களால் நூல் இயற்றுகிறான். நூலை நூற்பதற்குக் கதிர் கருவியாவது போலப் புலவனுக்கு அவன் அறிவு பயன்படுகிறது. (நன்.பொது.24). இவ்வாறு ஒரு புலவன் செய்த நூல், ஒரு மரத்தை அறுக்கப் புகுமுன் அதன் கோணலைத் தீர்க்கப் பயன்படும் நூல்போலக் கற்போனுக்கு அறிவின் கோட்டத்தை நீக்கப் பயன்படுகிறது. (நன்.பொது.25). எனவே கற்று வல்ல அறிஞனாற் செய்யப் பெறுவதே நூலெனவும், அந்நூல் அறியாமையை நீக்க வல்லது எனவும் கொள்ளலாம். ஒரு புலவனுடைய அறிவாகிய உடம்பை அவன் நூலில் காணலாம். அது அவனுக்குப் புகழுடம்பாக அமைகிறது. நூலைப் படிக்கும் போது நூலாசிரியனையே காண்கிறோம்.

ஒரு நூல் என்பது ஆழ்ந்த கருத்துக்களைத் தெள்ளிய இனிய சொற்களால் அமைத்ததாக இருத்தல் வேண்டும். படிக்குந்தொறும் புதிய கருத்துக்களைத் தோற்றுவிக்கும் நயமுடைய தாக இருக்கவேண்டும். தொல்காப்பியத்தில், *‘நூல்’* என்பது முன்னுக்குப் பின் முரணின்றிப் பொருளைத் தொகுத்தும் வகுத்தும் கூறப் பெற்ற தாகவும், உள் நின்றகன்ற உரையொடு பொருந்தி யுமிருக்க வேண்டும் என்றும் (தொல்.பொருள்.478), அது ஒரு பொருளைக் கூறும் சூத்திரமும், இனமான பொருளைத் தொகுக்கும் இயலும், பல பொருட்கும் பொதுவாகிய படலமும் ஆகிய மூன்று உறுப்பினை அடக்கியிருக்கும் எனவும் (தொல். பொருள்.480) நூலின் பொது விலக்கணங் கூறப் பெற்றுள்ளது. மற்றும் பத்துவகைக் குற்றமின்றிப் பத்துவகையழகுகளுடனும், முப்பத்திரண்டு வகை உத்திகளுடனும் நூல் வருமெனத் தொல்காப்பியர் மரபியலிலும் நூலுக்கிலக்கணம் கூறினார். (தொல்.பொருள்.653).

நன்னூலாசிரியர் தொல்காப்பியர் கருத்தைத் தழுவி மேலும் சிறிது விளக்கமாகப், *‘பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரமெனும் இரண்டையும் உடையதாய் முதல், வழி, சார்பு எனும் மூவகையுள் ஒன்றாய், அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகைப் பொருட்பயன் தருவதாய், எழுவகைக் கொள்கை களையும் தழுவி வரும்’* என்றார்

> “நூலினியல்பே நுவலி னோரிரு
> பாயிரந் தோற்றி மும்மையி னொன்றாய்
> நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி
> ஐயிரு குற்றமு மகற்றியம் மாட்சியோ
> டெண்ணான் குத்தியி னோத்துப் படலம்
> என்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை
> விருத்தியாகும் விகற்பநடை பெறுமே” (நன்.4).

ஏழுவகைக் கொள்கை: பிறர் நூற் கொள்கையைத் தான் உடன்படல், மறுத்தல், மேற்கொண்டு ஒரு காரணத்தால் மறுத்தல், தன்கொள்கையை ஓரிடத்தில் நிலைநாட்டிப் பின் பலவிடத்தும் அதனைக் காட்டி நிறுத்தல், இருவர் மாறுகொண்ட கருத்தைக் கூறி ஒன்றை உடன்படல், பிறர்நூற் குற்றங்காட்டல், பிறர் கொள்கைக்கு உடன்படாமல் தன் கொள்கையையே வற்புறுத்தல் (நன்.11).

நூலில் அமையக்கூடாத பத்துக்குற்றம்: கூறியது கூறல், மாறுகொளக் கூறல், குன்றக்கூறல், மிகைபடக் கூறல், பொருள் இலாதன கூறல், மயங்கக் கூறல், இனிமையல்லாத யாப்புடையதாதல், இழி சொற்களாற் புனைதல், ஆதாரமின்றித்தானே ஒரு பொருளைப் படைத்துக் கூறல், எவ்வகையினும் படிப்போர் மனங் கொள்ளாதவாறு செய்தல் (தொல்.பொருள்.663).

நூலில் அமைய வேண்டிய பத்தழகு: சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், படிப்பவர்க் கினிமை, நல்ல சொற்களை யமைத்தல், இனிய ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், பொருள் களை முறையுடன் அமைத்தல், உயர்ந்தோர் வழக்கத்துடன் மாறு படாமை, சிறந்த பொருள் உடைத்தாதல், விளக்கமான காட்டுகள் உடையதாதல் (நன்.13).

முப்பத்திருவகை உத்திகளையும் நன்னூலும் (நன்.14), தொல்காப்பியமும் (தொல். பொருள்.665) கூறுகின்றன.

நூலில் அமையும் உத்தி முப்பத்திரண்டு: நுதலிப் புகுதல், ஒத்துமுறை வைப்பு, தொகுத்துச் சுட்டல், வகுத்துக் காட்டல், முடித்துக்காட்டல், முடிவு இடங்கூறல், தான் எடுத்து மொழிதல், பிறன்கோட் கூறல், சொற்பொருள் விரித்தல், தொடர்ச்சொற் புணர்த்தல், இரட்டுற மொழிதல், ஏதுவின் முடித்தல், ஒப்பின் முடித்தல், மாட்டெறிந்து ஒழுகல், இறந்தது விலக்கல், எதிரது போற்றல், முன்மொழிந்துகோடல், பின்னது நிறுத்தல், விகற்பத்தின் முடித்தல், முடிந்தது முடித்தல், உரைத்தும் என்றல், உரைத்தாம் என்றல், ஒருதலை துணிதல், எடுத்துக்காட்டல், எடுத்த மொழியின் எய்த வைத்தல், இன்னது அல்லது இது என மொழிதல், எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல், பிறநூல் முடிந்தது தான் உடன் படுதல், தன்குறி வழக்கம் மிக எடுத்துரைத்தல், சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல், ஒன்றின் முடித்தல், தன் இனம் முடித்தல், அதற்கினமாகிய மற்றொன்றையும் அதனோடு முடித்தல் என உத்தி முப்பத்திரண்டு (நன்.14).

இங்குக் கூறிய இலக்கணங்கள் நூல் சிறப்பாக அமைப்பதற்கும், அமையாமைக்கும் அடிப்படையாகக் கூறப்படும் இலக்கணம்.

நூல்வகை: நூல் முதல்நூல், வழிநூல் என இருவகைப்படும் என்பர் தொல்காப்பியர். (தொல்.பொருள்.648). 'வினையின் நீங்கிய விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூல்' (தொல். பொருள். 649) என்பர். முதல் நூலைப் பின்பற்றி அந் நூலின் பொருளைத் தொகுத்தேனும், விரித்தேனும், தொகை விரியாகவேனும், மொழி பெயர்த்தேனும் இயற்றுவது வழிநூலாகும் (தொல்.பொருள்.652). நன்னூல் சார்புநூல் என ஒருவகையைச் சொல்லுகிறது. அது முதனூலின் பொருளைச் சிறுபான்மையும் வழிநூலின் பொருளைப் பெரும் பான்மையும் தழுவி அமைப்பதென்பர் நன்னூலார் (நன். 8.). ஆராயின் சார்பு நூலும் வழிநூலிலே அடங்கும். இன்றேல் சார்புநூலைத் தழுவி மற்றொருநூல் எழுதப்படுமேல் அதற்கு என்னபெயர் வைப்பது? ஆகையால் இருவகை நூலே போதுமானது. ஒருவர் எழுதிய நூலை மறுத்தெழுதுவது எதிர்நூல் எனப் பெறும். முதல் நூலுக்கு அகத்தியத்தையும், வழிநூலுக்குத் தொல் காப்பியத்தையும், சார்பு நூலுக்கு நன்னூலையும் சான்றாகக் கொள்ளலாம். மொழிபெயர்ப்பு நூல்களுக்குப் பல தொன்மங்களை (புராணங்களை)ச் சான்றாகக் காட்டலாம்.

நூல்[3] *nūl,* பெ. (n.) **1.** மரத்தை அறுக்கும்போது அளவிடும் 24 சதுரவடி; a measure = 24 sq.ft. **2.** ஆய்தவகை; a machine. "*கூர்ந்தரிவ நுண்ணூல்*" (சீவக.104).

[நூல்[1] → நூல்[3]]

நூல்[4]–தல் *nūl-,* 14செ.கு.வி. (v.i.) சூழ்ச்சி செய்தல்; to make a plot. "*நூற்றுவரை யன்றுமங்க நூற்ற*" (திவ்.திருவாய்.7. 3:10).

நூல்[5]–தல் (நூற்றல்) *nūl-,* 9செ.குன்றாவி. (v.t.) நூலிழை யுண்டாக்குதல்; to spin.

[நுல் → நூல் → நூல் – தல். நுல் = நுண்மை. நுல் → நூல் = நுண்ணிய இழை. நூல் → நூல் – தல் = பஞ் சிழையுண்டாக்குதல் (வே.க.)]

நூல்[6]–தல் (நூற்றல்) *nūl-,* 9செ.குன்றாவி. (v.t.) செய்யுளியற்றுதல்; to compose, as a poem. "*நொய்ய சொன் னூற்கலுற்றேன்*" (கம்பரா.சிறப்.5).

[நுவல் → நூல் → நூல் – தல். நுவலுதல் = நுண்ணிய அறிவுச் செய்தியைச் சொல்லுதல்.(வே.க.)]

நூல்[7] *nūl,* பெ. (n.) இறந்துபட்ட இசைநூல் களில் ஒன்று; an ancient treatise on music.

> *'நூல்'* என்னும் பெயரையுடைய இந்நூல் தமிழில் இறந்துபட்ட இசை நூல்களில் ஒன்று. *'ஆயிரம் நரம்புடையது ஆதியாழாகும்'* என்றும், அதன் உறுப்புக்கள் இவையெனவும் *'நூல்'* கூறுகிறது என்பர் அடியார்க்கு நல்லார், (சிலப். உரைப்பா. பக்.9)

சென்னைப் பல்கலைக் கழக அகர முதலி, இந்நூலை, *'பழைய நாடகத் தமிழ் நூல்களில் ஒன்று எனக் கூறுகிறது.'* இசை நூல் என்னும் பெயரின் முற்கூறு கரையான் அரிப்பில் விடுபட்டிருக்கலாம். 'தமிழ்நூல்' என்னும் நூலின் அணிந்துரையில் பாவாணர் நூல் என்பது இலக்கணம் பற்றியது என்று விளக்கியுள்ளார்.

நூல்[8] *nūl,* பெ. (n.) எள்; gingelly seed. (சா.அக.).

[நூ → நூல்]

நூல்[9] *nūl,* பெ. (n.) எண்ணுமெண்ணம்; deliberation. *"ஏதிலார் நூல்"* (குறள்,440).

[நுதலு–தல் → நுதல் ⇒ நூல்]

நூல்கண்டு *nūl-kaṇḍu,* பெ. (n.) நூல் உருண்டை; skein of thread.

[நூல்[1] *+ கண்டு. கண்டு = நூற்பந்து]*

நூல்குழல் *nūl-kuḻal,* பெ. (n) மரம் முதலிய பொருள்களாலான நூல் சுற்றுவதற்குரிய குழல் (நெசவு); a wooden pipe used for spin of thread.

[நூல் + குழல்.]

நூல்கெடை *nūl-keḍai,* பெ. (n.) சாயமேற்றிய நூல் தொகுதியைக்காய வைக்கும் மூங்கில் கழி (நெசவு); a bamboo pole, used for thread drying.

[நூல் + கெடை.]

நூல்கேள்–தல் (நூல்கேட்டல்) *nūl-kēḷ-,* 12செ.கு.வி.(v.i.) பாடங் கேட்டல்; to read a book or learn a science under a teacher.

[நூல் + கேள்–தல்]

நூல்கோல் *nūl-kōl,* பெ. (n.) அடிப்பகுதி தவிர்த்த மேல்பகுதி முழுமையும் நீண்ட காம்பினை உடைய இலைகளைக் கொண்ட, வெளிர் நிறமான பச்சைக் கிழங்கு; turnip.

நூல்கோல்கிழங்கு *nūl-kōl-kiḻaṅgu,* பெ. (n.) **நூல்கோல்** பார்க்க; see *nūl-kōl.*

[நூல்கோல் + கிழங்கு]

நூல்சோர்–த்தல் *nūl-śōr-,* 3செ.கு.வி. (v.i.) நூலைப் பதனிடுதல் (யாழ்.அக.); to refine a thread.

[நூல் + சோர்–த்தல்]

நூல்தட்டு¹–தல் *nūl-taṭṭu-,* 5செ.கு.வி. (v.i.) **நூலெற்று–தல் (இ.வ.)** பார்க்க; see *nūl-eṟṟu-*

[நூல் + தட்டு–தல்]

நூல்தட்டு²–தல் *nūl-taṭṭu-,* 5செ.குன்றாவி. (v.t.) **நூலுதறு–தல்** பார்க்க; see *nūludaṟu-.*

[நூல் + தட்டு–தல்]

நூல்நாக்குப்பூச்சி *nūl-nākku-p-pūcci,* பெ. (n.) ஒருவகை வயிற்றுப் புழு (M.L.); thread worms.

[நூல் + நாக்கு + பூச்சி]

மக்களில் பெரும்பான்மையோர்க்குக் குடலில், உருண்டை வடிவ நீண்ட வெண்ணிறப் புழுக்கள் ஒட்டுண்ணிகளாகப் பிடித்திருப்பதுண்டு. அவை வழுவழுப்பாக, மெல்லியவாக, இருமுனையும் கூரியவாக, இப்பக்கமும் அப்பக்கமும் பாம்புபோல் நெளிவதாக இருக்கும். பெரும்பாலும் அவைகளை மலத்தில் காணலாம். அப்புழுக்களை நாக்குப்பூச்சி, நாகப்பூச்சி, நாக்கப் பாம்பு, நாக்குளப் பாம்பு முதலான பல பெயர்களால் குறிப்பதுண்டு. நாக்குப் பூச்சியைப் போலவே, ஆயினும் அதினும் மிகச் சிறிய மெல்லிய நூலிழைத் துண்டு போன்ற கீரிப்பூச்சியும் குழந்தைகளின் குடலில் இருப்பதுண்டு. 50 வகையான வெவ்வேறு இன நாக்குப்பூச்சிகள் மனிதனின் உடலில் காணப்படுகின்றன. இவற்றில் ஒட்டுண்ணி கள் சிலவே. சில புழுக்களால் கேடு விளை வதில்லை. சில புழுக்களால் எளிய நோய்கள் உண்டாகும். சில புழுக்களால் கொடிய நோய்களும் உண்டாகும்.



நூல்போன்று இருப்பதால் இவை நூல் புழுக்கள் எனப்படும். நூல் என்பதற்குக் கிரேக்க மொழியில் நீமா என்று பெயர். அதனால் இந்தப் புழுத் தொகுதிக்கு 'நீமட்டோடா' என்பது அறிவியல் பெயராகும். சில புழுக்களை மண்ணிலும், சிலவற்றை மனித உடலின் வெவ்வேறு பகுதிகளிலும், சிலவற்றைச் செடிகளிலும் காணலாம். கொக்கிப்புழு, நரம்புச் சிலந்தி, யானைக்கால் புழு, கீரிப்பூச்சி ஆகியவெல்லாம் நூல் புழுக்களே.

நூல்நிமிண்டு–தல் *nūl-nimiṇḍu-,* 5செ.கு.வி. (v.i.) **1.** துண்டான நூலை இணைத்தல்; to patch up broken threads. **2.** பொருத்தமின்றிக் கூறுதல் (வின்.); to talk unconnectedly.

[நூல் + நிமிண்டு–தல்]

நூல்நிலை *nūl-nilai,* பெ. (n.) **நூல் நிலையம்** பார்க்க; see *nūl-nilaiyam.*

[நூல் + நிலை]

நூல்நிலையம் *nūl-nilaiyam,* பெ. (n.) நூல்கள் துறை வாரியாகப் பிரிக்கப்பட்டு, எண்கள் இடப்பட்டு அடுக்கப்பட்டுள்ளதும், அங்கேயோ, வீட்டிற்குக் கொண்டு வந்தோ படிப்பதற்கான பொத்தகங்களை யுடையதுமான இடம்; library. ***நூல் நிலையத் தெருவில் என் வீடு உள்ளது.***

[நூல் + நிலையம்]

நில் → நிலை = நிற்கை, உறுதி, நிலைமை, தன்மை, தங்குமிடம், இடம், கதவுநிலை, மாடியடுக்கு, மரபு வழியுரிமை, வில்மறவன் நிற்கும் வகை (மடக்கு, மண்டலம், முன்வலம், பின்வலம்), ஒராள் நிற்கக்கூடிய நீராழம், வாழ்க்கை நிலை, குலம், நிலைத்த தொழில், ஒட்டாரம், அமையம், வளர்ச்சிப்படி (stage).

ம. நில; க. நெலெ; தெ. நெலவு.

நிலை → நிலையம் = தங்குமிடம், உறைவிடம், கோயில், தொடர் வண்டி நிற்குமிடம், நிலையாக இருக்குமிடம், நூல்கள் நிலையாக வைக்கப்பட்டிருக்கும் இடம். (நிலை + அம் – நிலையம். அம் – சொல்லாக்கயீறு).

வட மொழியாளர் நிலையம் என்னும் தென் சொல்லை நி + லயம் என்று பகுத்து, ஓரிடத்தொடு ஒன்றிப் போதல் என்று பொருள் கூறி, வட சொல்லாகக் காட்டுவர். அம்முறையையே பின்பற்றிச் சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலியும் நிலயம் என்னும் தவற்று வடிவையே மேற் கொண்டுள்ளது. (வே.க.)

பொத்தகம் என்பது ஒரு நூலைக் கூறும் ஏட்டுத் தொகுதி அல்லது தாட்கற்றை. பொத்தகக் களஞ்சியம் என்பது இன்று நூல் நிலையம் என வழங்குகிறது.

பல்வேறு நூல்களும், பருவ இதழ்களும், செய்தித் தாள்களும், முறைப்படித் திரட்டி ஓரிடத்தில் வைக்கப்பட்டிருக்கும் அறிவுக் களஞ்சியங்கள் நூல் நிலையம் எனப்படும். பழங் காலத்தில் இந்தியாவில் சமணர்களும், பௌத்தர்களும் கல்வியை வளர்த்து வந்தனர். அவர்கள் தங்கள் பள்ளிகள் என்னும் மடங்களில் ஏட்டுச் சுவடிகள் பல சேர்த்து வைத்திருந்தனர். பின்னர் சிவமடங் களிலும் ஏராளமான சுவடிகள் திரட்டிப் பாதுகாக்கப்பட்டன என்று தெரிகிறது. அரசர்களும் அரண்மனைகளில் நூல்களைச் சேர்த்து வைத்திருந்தனர். தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையம் அண்மைக் காலத்து எடுத்துக் காட்டு.

தஞ்சையில் 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய சரசுவதி மகால் நூல் நிலையம் தஞ்சை மன்னர்களால், அதுவும் சிறப்பாக சரபோசி மன்னரால் வளர்க்கப்பட்டது. இதில் தேவ நாகரி, நந்தி நாகரி, தமிழ், காச்மீரம், ஒரியா ஆகிய பலமொழிகளில் 16,000 கையெழுத்துப் படிகளும் 8,000 நூல்களும் உள்ளன.

இந்தியாவிலுள்ள நூல்நிலையங்களுள் கொல்கத்தா தேசிய நூல்நிலையம் தலைமையானது. அதில் 4,52,000 நூல்களும், கொல்கத்தா வடமொழிக் கல்லூரிகளில் 1,652 நூல்களும், 4000 கையெழுத்துப் படிகளும் உள்ளன. கி.பி. 1784–ல் நிறுவிய (*'ஏசியாட்டிக் சொசைட்டி'*) நூல்நிலையத்தில் 35000 அச்சு நூல்களும், 20000 கையெழுத்துப் படிகளும் உள்ளன. புவியியல் அளவை நிலையத்தில் 50000 நூல்களும் உள்ளன. நூல் வெளியிடுவோர் கொல்கத்தா (காளிக்கோட்டம்) தில்லி, சென்னை கன்னிமாரா அகிய மூன்று தேசிய நூலகங்களுக்கு நூல் அனுப்பி அறிவொப்ப (acknowledgement) அட்டைபெற்றால்தான் மாநில நூலக இயக்குநர் கிளை நூலகங்களுக்கு எடுத்துக் கொள்வார்.

மும்பையில் 1804–ல் நிறுவிய (*'ஏசியாட்டிக் சொசைட்டி'*) கிளை நூல் நிலையத்தில் 1,00,000 அச்சு நூல்களும், 2,000 கையெழுத்துப் படிகளும் உள்ளன. 1864–ல் நிறுவப்பட்ட மும்பை பல்கலைக் கழக நூல் நிலையத்தில் 35,000 அச்சு நூல்கள் உள்ளன.

சென்னையில் 1847–ல் நிறுவப்பட்ட அரசாங்கக் கீழ்த்திசை மொழிக் கையெழுத்துச் சுவடி நூல் நிலையம் முதலில் அரசாங்கப் பொருட் காட்சிச் சாலைக் கட்டடத்திலிருந்து, பின்னர்ப் பல்கலைக் கழக நூல்நிலையக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. இந்நிலையத்துக் கையெழுத்துச் சுவடிகளுள் சில, கூடுமான விளக்கங்களுடன் ஆண்டுதோறும் பதிப்பிக்கப்பட்டு அச்சிடப்படுகின்றன.

சென்னைப் பல்கலைக் கழகக் கட்டடத்தில் அது நிறுவியுள்ள நூல் நிலையத்தில் 1,82,000 நூல்களும் இதழ்களும் உள்ளன.

1896ல் தற்போதைய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட கன்னிமாரா நூல் நிலையத்தில் ஏறக்குறைய 1,00,000 நூல்களும் இதழ்களும் உள்ளன். இந்நூல் நிலையம் பொதுமக்கள் நூல் நிலையமாக்கப்பட்டு ஒவ்வொரு வெளியீடுகளிலும் ஐந்து படிகள் பெறப்படுகின்றன.

சென்னை அரசாங்கம் சென்னைப் பொது நூல் நிலையங்களின் சட்டத்தை 1948ல் இயற்றி, 1950யில் செயல்முறைக்குக் கொண்டு வந்தது. சட்டப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் நூல் நிலையங்கள் நிறுவப் பெற்று, நூல்நிலைய இயக்குநர் பொறுப்பில் இயங்கி வருகிறது.

இந்தியாவிலேயே முதலாவதான குழந்தை நூல் நிலையம் ஒன்று சென்னை கல்வித்துறை இயக்குநர் அலுவலகக் கட்டடத்தில் நிறுவப் பட்டுள்ளது.

'சென்னை நூல்நிலையச் சங்கம்' சென்னையில் பல நாட்களாகத் தொண்டாற்றி வருகிறது. நூல்நிலையம் பற்றிய நூல்கள் பலவற்றை இச்சங்கம் வெளி யிட்டிருக்கிறது. 1923ல் அகில இந்திய பொதுமக்கள் நூல்நிலையச் சங்கம் தோன்றி மாநிலச் சங்கங்கள் மூலம் நூல் நிலைய இயக்கத்தைப் பரப்புகிறது. ஆண்டுதோறும் மாநாடுகளும் கூட்டப் படுகின்றன.

மிகப் பழங்காலத்தில் முதன் முதல் எழுந்த நூல் நிலையம் பாபிலோனியாவில் கண்டெடுக்கப் பட்ட களிமண் பலகை (clay tablets) களாலான நூல் நிலையமாகும். இவையே பாபிலோனிய நாகரிக மக்களின் நூல்கள். இவற்றின் காலம் ஏறக்குறைய கி.மு.2000. அசிரிய மன்னர் ஆசூர் பானீ–பால் (Assurbani-pal) (கி.மு.600) என்பவருடைய நூல்நிலையம்

மிகப் பழமையானது. இவர் சேர்த்து வைத்தவற்றுள் 22 களிமண் பலகைகள் இப்போது இலண்டன் நகரத்திலுள்ள பிரிட்டிசு பொருட்காட் சிச்சாலையில் உள்ளன. இவை வரலாறு, வானவியல், கணிதம் போன்ற இக்காலத்து அறிவுத்துறைகள் பற்றியனவாகும்.

பண்டை எகிப்து நாட்டு நூல்நிலையங்களும் மிகப் பழமையானவையே. தீப்சு (Thebes) என்ற நகரிலிருந்த கார்னாக் என்னும் கோயில் நூலகமும், House of Books என்ற பெயருடைய கல்வெட்டும், இட்பூ (Idfu) என்னும் ஊரில் 'பாப் பைரசு அகம்' (The house of Papyrus) என்ற கட்டடமும் தோண்டிக் காணப்பட்டுள்ளன. இந்தக் கட்டடத்தின் கற்சுவர்களில் வரலாறு முதலிய பல்துறை நூல்கள் உள்ளனவாக வெட்டப்பட்டிருக்கின்றன. முதலாம்தாலமி (Ptolemy I) என்னும் கிரேக்க மன்னன் கி.மு.300ல் அலெக்சாந்திரியா நகரில் நிறுவிய இரண்டு நூல்நிலையங்களே, முதன் முதல் நிறுவப்பட்ட நூல்நிலையங்கள் ஆகும். அவற்றில் ஏறக்குறைய 7 இலக்கம் சுவடிகள் இருந்தன. எகிப்தியருக்கும் ரோமானியருக்கும் ஏற்பட்ட போரில் சூலியசீசர் இந்த நூல் நிலையங்களில் ஒரு பகுதியை அழித்து விட்டார் எனக் கூறப்படுகிறது.

தாலமிக்குப் பின் அட்டாலசு (Attalus I) என்பவர் ஆசியாமைனரிலுள்ள பர்கமம் (Pergamum) என்னும் ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தினார். இந்த நூல் நிலையத்துக்கு மார்க் ஆண்டனி என்னும் ரோமானிய வீரர் 2 இலக்கம் நூல்கள் அளித்தார். மிகப் புகழ் வாய்ந்த பிளேட்டோ, அரிட்டாட்டில் என்பவர்களிடம் பல சுவடித் தொகுப்புகள் இருந்தன. கிரீசில் இருந்த நகர அரசுகளே முதன் முதலில் பொது மக்களுக்கான நூல் நிலையங்களை நிறுவின.

ரோமாபுரியில் கி.மு.150ல் நூல்நிலையம் முதன் முதல் தோன்றியது. ரோமாபுரியின் புகழ் பெற்ற நூலகமாக '*அல்ப்பியன் நூலகம்*' (Ulpian Library) விளங்கியது. பொதுமக்களுக்கான நூலகங்கள் பெரும்பாலும் கோயில்களில் அமைக்கப்பட்டன. தனி மனிதர்களும் நூல்நிலையங்கள் வைத்திருந்தனர். கி.பி.530ல் இத்தாலியில் ,Monte Cristo Abbey என்ற கோயிலில் முதல் மடத்து நூல்நிலையம் தோற்றுவிக்கப்பட்டது.

இங்கிலாந்தில் முதன் முதல் 596ல் கான்டர்பரி (canterbury) என்ற ஊரில் நூல் நிலையம் தோற்று விக்கப்பட்டது. எருதந்துறையில் (ஆக்சுபோர்டில்) உள்ள புகழ் பெற்ற நூல் நிலையம் (Fransiscan) துறவிகளால் உண்டாக் கப்பட்டது. இந்நூல் நிலையங்கள் சிறியன வாயினும் அரிய நூல்களைப் பாதுகாத்து வருகின்றன.

பிரிட்டிசு பொருட்காட்சிச்சாலை நூல்நிலையம் உலகிலேயே உயரியது. Sloane என்பவரின் நன் கொடையால் 1753 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 32,00,000 இலக்கம் அச்சு நூல்களும், 56,000 கையெழுத்துப் படிகளும் கொண்டது. இங்கிலாந்தில் வெளிடப்படும் நூல்கள் ஒவ்வொன்றும் இந்நூல் நிலையத்திற்கு அனுப்பப்படவேண்டும். இந்நூலகப் புத்தகப் பேழைகளை வரிசையாக நிறுத்தினால் 55 கல்தொலைவு நீண்டிருக்குமாம்.

பிரான்சு நாட்டு நூல் நிலையங்களில் மொத்தம் ஏறக்குறைய 3 கோடி நூல்கள் உள்ளனவென்று கணக்கிட்டுள்ளனர். சிறந்த உலக நூல் நிலையங் களுள் ஒன்றான பாரிசு '*பீப்ளியோத்தெக் நாசியானால்*' (Bibliotheque Nationale) நூல் நிலையத்தில் 44,00,000க்கு மேற்பட்ட அச்சு நூல்களும், 1,22,000 கையெழுத்துப் படிகளும் உள்ளன.

உருசியாவில், உலகிலேயே மிகப் பெரிய நூல் நிலையம் உள்ளது. லெனின் கிரேடு நகர நூல் நிலையத்தில் 45,66,645 அச்சு நூல்களும், 2,40,000 கையெழுத்துப் படிகளும் உள்ளன. மாசுக்கோவில் உள்ள லெனின் நினைவு நூல் நிலையமும், பல்கலைக்கழக நூல•மும் பெரியவை.

சீனாவில் பீக்கின் (Peking) நகர நூல் நிலையம் பெரியது. சப்பான் நாட்டிலும் நூல் நிலைய இயக்கம் மிக முன்னேற்றம் அடைந்துள்ளது. அமெரிக்காவில் நியூயார்க்கு, கார்வர்டு, யேல், கொலம்பியா, காலிபோர்னியா, சிக்காகோ, பென்சில்வேனியா முதலிய இடங்களில் அமைந்துள்ள நூலகங்கள் சிறந்தவை. அமெரிக்கக் காங்கிரசு நூலகம் 1800 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இங்கு உலகிலேயே வான்வூர்தித்துறை பற்றிய நூல்கள் மிகுதியாக உள்ளன. யாழ்ப்பாணத்தில் ஒரு இலக்கம் நுல்கள்கொண்ட தமிழ் நூலகத்தைச் சிங்களவர் கலவரத்தில் எரித்தது வருந்தத்தக்கது.

நூல்பிடி-த்தல் *nūl-piḍi-,* 4செ.கு.வி.(V.i.) சுவரொழுங்கு பார்க்க நூலைப்பிடித்தல் (இ.வ.); to apply plumb-line.

[நூல் + பிடி-த்தல்]

நூல்புடை-த்தல் *nūl-puḍai-,* 4செ.குன்றாவி. (V.t.) நூலெற்று= பார்க்க; see *nūleṟṟu,* "*நூல் புடைத்தாற்போற் கிடந்த வித்தகஞ்சேர் நுண்வரிகள்*" (சீவக.1044)

[நூல் + புடை-த்தல்]

நூல்போ—தல் *nūl-pō-*, 8செ.கு.வி. (v.i.) 1. கல்வியிற் றேர்ந்தவனாதல்; to acquire proficiency in learning. '*கணி நூல் போனவன்*' (சீவக.113, உரை). 2. கைம் பெண்ணாதல் (விதவையாதல்); to become widowed. "*நூல்போன சங்கிலிபால்*" (திருத்.திருவந்.9).

[நூல் + போ—தல்]

நூல்போடு¹—தல் *nūl-pōḍu-*, 19செ.குன்றாவி. (v.t.) நூலெற்று—பார்க்க; see *nūleṟṟu*.

[நூல் + போடு—தல்]

நூல்போடு²—தல் *nūl-pōḍu-*, 20செ.கு.வி.(v.i.) 1. சரியான முறைமை (நியாயஞ்) செய்தல் (வின்.); to administer strict justice. 2. பூணூல் திருமணஞ் செய்தல் (பிரா.); to invest a person with sacred thread.

[நூல் + போடு—தல்]

நூல்முறுக்கி *nūl-muṟukki*, பெ. (n.) நூலை முறுக்கி உறுதிப்படுத்தும் கருவி; an instrument used twine.

[நூல் + முறுக்கி. முறுக்கி = முறுக்கப் பயன்படும் கருவி.]

நூல்யாப்பு *nūl-yāppu*, பெ. (n.) 1. தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழியாக்கம் (மொழிபெயர்ப்பு) என நான்கு வகையாக இயற்றப்படும் நூலினமைப்பு (நன்.50); composition of a treatise, of four kinds viz. toguttal, vrittal, togai-viri, moḻi-y-ākkam. 2. ஒருவகைப் புடைவை (சிலப்.14:108, உரை); a kind of saree.

[நூல் + யாப்பு]

நூல்வல்லோர் *nūl-vallōr*, பெ. (n.) 1. கல்வியாளர்; scholars, literati. 2. அமைச்சர்கள் (பிங்.); ministers.

[நூல் + வல்லோர்]

நூல்வலை *nūl-valai*, பெ. (n.) பருத்திநூலால் பின்னப்பட்ட மீன்பிடிவலை; cotton fishing net.

[நூல் + வலை.]

இக்காலத்தில் மீன்பிடிவலை அழுத்தமான நெகிழி ('நைலான்')இழையால் அதிகம் பின்னப் படுகிறது. பருத்தி நூலால் பின்னப்படும் வலை குறைந்துவிட்டது.

நூல்வழக்கு *nūl-vaḻakku*, பெ. (n.) 1.செய்யுள் வழக்கு; literary usage. 2. நூல் (சாத்திர)முறை (சீவக.214, உரை); authority of šāstras.

[நூல் + வழக்கு]

நூல்விடு¹—தல் *nūl-viḍu*, 20செ.கு.வி. (v.i.) சிலந்தி முதலியன நூற்கூடு கட்டுதல் (யாழ்.அக.); to form or spin cobweb.

[நூல் + விடு—தல்]

நூல்விடு²—தல் *nūl-viḍu-*, 18செ.குன்றாவி. (v.t.) வானில்தாள் பட்டம் பறக்கும் போது நூல் உராய்வு ஏற்படின் அறாமல் இருப்பதற்கு விரைவாக நூலைவிடுதல்; to let fly the paper kite.

[நூல் + விடு—தல்.]

நூல்விடு³—தல் *nūl-viḍu-*, 18செ.குன்றாவி. (v.t.) மனநிலையின் ஆழம் பார்த்தல் (இ.வ.); to sound a person's ideas.

[நூல் + விடு—தல்]

நூல்விலக்கு *nūl-vilakku,* பெ. (n.) ஆடையில் உண்டையிழை இடையிடையே விலகியிருக்கை (இ.வ.) ; thin place in a cloth, the woof not being beaten enough with the comb.

[நூல் + விலக்கு]

நூல்வெண்மாடம் *nūl-veṇ-māḍam,* பெ. (n.) கூடாரம்; tent. "*நூல்வெண் மாடங் கோலொடு கொளீஇ*" (பெருங்.உஞ்சைக்.57:113).

[நூல் + வெண்மாடம்]

நூலகம் *nūlagam,* பெ. (n.) **நூல்நிலையம்** பார்க்க; see *nūl-nilaiyam.*

[நூல் → நூலகம்]

நூலகர் *nūlagar,* பெ. (n.) நூலகத்தைப் பொறுப்பாகக் கவனித்துக் கொள்ளும் அலுவலர்; librarian.

[நூல் → நூலகர்]

நூலகவியல் *nūlaga-v-iyal,* பெ. (n.) நூல்களை வகைப்படுத்துதல், நூலகம் அமைத்தல் போன்றவற்றைப் பற்றிய துறை; library science.

[நூலகம் + இயல்]

நூலச்சு *nūl-accu,* பெ. (n.) 1. நெசவுக் கருவியின் உறுப்பு வகை (இ.வ.); weaver's reed. 2. கம்பிச் சட்டம் (யாழ்ப்.); goldsmith's mould for drawing wire.

[நூல் + அச்சு]

நூலச்சூகம் *nūlaccūgam,* பெ. (n.) சின்னம்மான் பச்சரிசி; thyme leaved spurge - Euphorbia thymifolia alias E.macrophylla. (சா.அக.)

நூலட்டவணை *nūl-aṭṭavaṇai,* பெ. (n.) நூலின் பட்டியல் (வின்.); contents of a book.

[நூல் + அட்டவணை]

நூலடி *nūl-aḍi,* பெ. (n.) 1. தச்சர் மரத்திலிடும் நூற்குறி; mark on a wood made with the carpenter's line. 2. ஆண்குறியிலிருந்து எருவாய்க் (குதம்)குச் செல்லும் நரம்பு (யாழ்ப்.); line or membrane passing from the private parts of a male to the anus.

[நூல் + அடி]

நூலவையார் *nūl-avaiyār,* பெ. (n.) அற (நீதி) நூலோதினோர்; persons well-read in ethical and legal treatises. "*நூலவையார் போனீங்க ணோக்குமினே*" (சீவக.1045).

[நூல் + அவையார்]

நூலழகு *nūl-aḻagu,* பெ.(n.) சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க் கினிமை, நன்மொழி புணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், முறையின் வைப்பு, உலகமலையாமை, விழுமியது பயத்தல் விளங்குதாரணத்ததாகுதல் என்னும் பத்து வகை நூல்நயங்கள் (நன்.13); beauties or excellences of a treatise, ten in number, viz. šuruṅga-c-collal, viḷaṅga-vaittal, naviṉṟōrkkiṉimai, naṉ-moḻi-puṇarttal, ōšai-y-uḍaimai, āḻam-uḍaittāḍal, muṟaiyiṉ-vaippu, ulagamalaiyāmai, viḻumiyadu-payattal, viḷaṅgu dāraṇatta-tāgudal.

[நூல் + அழகு]

நூலளவு *nūl-aḷavu,* பெ. (n.) ஆண் குறியினின்று (இலிங்கத்தினின்று) எருவாய் ((குதம்)குச் செல்லும் நரம்பு நாடி; the artery or vein occupying the prenium between the anus and genital organ of the male. (சா.அக.)

[நூல் + அளவு. நூல்போன்ற நரம்பு.]

நூலறிபுலவர் *nūl-aṟi-pulavar,* பெ. (n.) அற (நீதி) நூல்களை நன்கு உணர்ந்த கலைஞர், அமைச்சர்; ministers, as versed in the science of polity. "*நூலறி புலவரை நோக்க*" (சிலப்.25:116).

[நூல் + அறி + புலவர்]

நூலறிவு *nūl-aṟivu,* பெ. (n.) கல்வியறிவு; knowledge gained from books, theoretical knowledge. "*நூறாக் கற்கினு நூலறி வென் செயும்*" (மனோன்.).

[நூல் + அறிவு]

நூலாக்கலிங்கம் *nūl-ā-k-kaliṅgam,* பெ. (n.) நூற்கப்படாத நூலானியன்ற பட்டாடை; silk cloth, as made of unwoven threads. "*நூலாக்கலிங்கம் வாலரைக் கொளிஇ*" (பதிற்றுப்.12:21).

[நூல் + ஆ (எ.ம.இ.நி.) + கலிங்கம்]

நூலாங்குருத்து *nūlāṅ-guruttu,* பெ. (n.) குருத்தமரம்; a tree of the Atlantia genus. (சா.அக.).

நூலாசிரியன் *nūl-āśriyaṉ,* பெ. (n.) நூலாக்கி யோன்; author of a work. "*நூலாசிரியர் கருத்தினை நோக்காது*" (இலக்.கொத்.6).

F. auteur; G. autor; It. autore, autrice.

[நூல் + ஆசிரியன்]

ஆசிரியன் இலக்கணம்பற்றி நன்னூல் கூறுவது: நூல் கற்பிக்கும் ஆசிரியனுக்குக் கூறும் இலக்கணம் அனைத்தும் நூலை இயற்றும் ஆசிரியனுக்கும் பொருந்தும். ஆசிரியன் என்பவன் உயர் குடிப் பிறப்பும், உயிரிரக் கமும் கடவுள் வழிபாடுமாகிய இவைகளால் எய்திய மேன்மையும், பல நூல்களைக் கற்றுத்தேர்ந்த பயிற்சியும், நூற்பொருளை மாணாக்கர், மக்கள் எளிதல் உணரும்படி தொகுத்துச் சொல்லும் சொல்வன்மையும், நிலத்தையும், மலையையும், நிறை கோலையும், பூவையும் ஒத்த குணங்களும், உலக நடையை அறியு மறிவும், உயர் குணங்களும் இவைபோல்வன பிறவும் நிறம்பப் பெற்றவன் நூல் கற்பிக்கும் ஆசிரியனாவான்; நூலை இயற்றும் ஆசிரியனும் இக்குணங்களை உடையவனாக இருக்கவேண்டியது அவசியம்.

"*குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை*
கலைபயில் தெளிவு கட்டுரை வண்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மிணையவும்
அமைபவ னூலுரை யாசிரி யன்னே" (நன்.26)

ஆசிரிய ராகாதவ ரிலக்கணமும் நன்னூலில் கூறப்படுகிறது. (நன்.31).

நூலாஞ்செடி *nūlāñ-jeḍi,* பெ. (n.) அசன்னியம்; an unknown plant. (சா.அக.).

நூலாடை *nūl-āḍai,* பெ. (n.) வெளவால் போலும் உருவமும் முள்ளும் உள்ள கடல் மீன். (முகவைமீனவ.); a kind of sea fish.

நூலாதிப்பால் *nūlādi-p-pāl,* பெ. (n.) காட்டு மாட்டின் பால்; milk of wild cow or buffalo. (சா.அக.).

நூலாப்பண்ணை *nūlā-p-paṇṇai,* பெ. (n.) மூங்கில்; bamboo tree, Bambusa arundinacia. (சா.அக.).

[நூல் + ஆம் + பண்ணை.]

1. மூங்கிலை உடைத்து நீண்ட பட்டை அல்லது குச்சி யாகச் செய்து படல், கூடை முதலியன செய்யப்பயன்படும் நீண்ட மூங்கில் வகை. 2. நூல் போல் மெல்லிய கழிகளையுடைய மூங்கில்.

நூலாம்படை[1] *nūlām-paḍai,* பெ. (n.) ஒட்டகம்; camel (சா.அக.).

நூலாம்படை[2] *nūl-ām-paḍai,* பெ. (n.) ஒட்டடை (நெல்லை); spider's network, cobweb.

[நூல் + ஆம் + படை]

சுவரில் ஒட்டிக்கொண்டு அடைந் திருப்பதால் இது ஒட்டடை எனப் படுகிறது. சிலந்திப் பூச்சியின் மெல்லிய நூல்போன்ற வலையாலேயே இந்த ஒட்டடை அதிகம் உண்டாகிறது. புகையின் படிமத்தினாலும் திரித்திரியாகச் சிறிய கரிய நூலாகவளரும். ஆகையால் இது நூல் + ஆம் + படை. படை = படரும் தன்மைத்து.

நூலாம்பூச்சி *nūl-ām-pūcci,* பெ. (n.) சிலந்திப் பூச்சி (வின்.); spider.

[நூல் + ஆம் + பூச்சி]



நூலாமணக்கு *nūlāmaṇakku,* பெ.(n.) காட்டாமணக்கு; physic nut - parging nut - Jatropha curcus. (சா.அக.).

[நூல் + ஆமணக்கு]

நூலாமாலை *nūl-ā-mālai,* பெ. (n.) சூழ்ச்சி, உத்தி (தந்திரம்) (R.); craft, artifice

[நூல் + ஆ – (எ.ம.இ.நி.) + மாலை]

நூலாய்வோர் *nūl-āyvōr,* பெ. (n.) நூலாராய் வோர் (வின்.); critics, reviewers of books.

[நூல் + ஆய்வோர்]

நூலார் *nūlār,* பெ. (n.) நூல் பல கற்றோர்; learned persons. *"வடித்த நூலார்"* (நாலடி,163). *'நூலாருள் நூல்வல்லான் ஆகுதல் வேலாருள்' வென்றி வினையுரைப்பான் பண்பு."* (குறள்,683.). *"மொழிந்தார் முதுநூலார் முன்பு"* (சிறுபஞ்.72.).

[நூல் → நூலார்]

நூலாயம் *nūl-āyam,* பெ. (n.) சிறுவரிவகை; a tax. *'திருமுகபேடிக்கு இவ்வூர் கைக்கோளர் பேரால் நூலாயம்'* (தெ.க.தொ.7:855).

[நூல் + ஆயம் – நூலாயம் = நூலிழை நெய்யும் கைக்கோளரிடம் பெறும் சிறு வரி]

நூலான் *nūlāṉ,* பெ. (n.) நூலாங்குருத்து பார்க்க; see *nūlāṅ-guruttu.* (சா.அக.)

நூலான்பிரண்டை *nūlāṉ-piraṇḍai,* பெ. (n.) புளியம்பிரண்டை; hairy wild vine, Vitis setosa. (சா.அக.)

நூலான்புடை *nūlāṉ-puḍai,* பெ. (n.) நூலாம் படை பார்க்க; see *nūlām-paḍai,* (சா.அக.).

[நூலாம்படை → நூலான்புடை.]

நூலான்பூச்சி *nūlaṉ-pūcci,* பெ. (n.) நூலாம்பூச்சி பார்க்க; see *nūlām-pūcci.* (சா.அக.).

[நூலாம்பூச்சி → நூலான்பூச்சி.]

நூலித்தொடக்கி *nūli-t-toḍakki,* பெ. (n.) கொப்பூழ்க்கொடி; umbilical cord. (சா.அக.)

நூலில்லாமாலை *nūl-illā-mālai,* பெ. (n.) கழுத்தணிவகை (நாஞ்.); a neck, ornament.

[நூல் + இல் + ஆ (எ.ம.இ.நி.) + மாலை] நூலில் கோக்கப்படாத கழுத்துமாலை.

நூலிலை *nūl-ilai,* பெ. (n.) நெட்டை நாரத்தை (L.); cherry nutmeg.

நூலிழ–த்தல் *nūl-iḻa-,* 3செ.கு.வி.(v.i.) கைம்பெண்ணாதல் (விதவையாதல்); to become a widow as losing the wedding string. "*நூற்றுவர்தம் பெண்டிரு மெய்தி நூலிழப்ப*" (திவ்.பெரியதிரு.2.3:6).

[நூல் + இழ–.த்தல். மங்கல நாண் இழத்தல்]

நூலிழந்தாள் *nūl-iḻandāḷ,* பெ. (n.) கணவனை இழந்த கைம்பெண்; widow.

[நூல் + இழந்தாள். நூல் = மங்கலநாணில் கோத்த தாலி. தாலியிழந்தவள், கைம்பெண்.]

நூலிழை[1]–த்தல் *nūl-iḻai-,* 4செ.கு.வி.(v.i.) **1.** கதிரிலுள்ள நூலையெடுத்துச் சுற்றுதல் (வின்.); to reel yarn; to disentangle yarn from the skein and wind it on the reel; to unwind yarn. "நீல முண்ட நூலிழை வண்ணம்" (பெருங். இலாவாண 9:88). **2.** நூல்நூற்றல் (யாழ்.அக.); to spin thread.

[நூல் + இழை–த்தல்]

நூலிழை[2] *nūl-iḻai,* பெ. (n.) ஒரிழை நூல் (வின்.); single thread.

[நூல் + இழை]

நூலிழைமரம் *nūl-iḻai-maram,* பெ. (n.) நகுதாளிலை; common cherry nutmeg, Polyaltria cerasolides. (சா.அக.).

[நூல் + இழை + மரம். நூலிழை தரும் மரம்]

நூலிழையில் *nūl-iḻaiyil,* வி.எ.(adv.) மயிரிழையில்; by a hair's breedth; narrowly. ***ஏதத்திலிருந்து நூலிழையில் உயிர்தப்பினார். கால்பந்தாட்டத்தில் இறுதிநேரத்தில் நூலிழையில் வெற்றி பெற்றான்.***

[நூல் + இழையில்]

நூலுண்டை *nūl-uṇḍai,* பெ. (n.) **1.** நூல் சுற்றிய உண்டை; ball of thread or yarn. **2.** நெய்தற்குரிய நூல் சுற்றிய குற்றி (வின்.); weaver's bobbin with the yarn.

தெ. நூலுண்ட

[நூல் + உண்டை]

நூலுத்தி *nūl-utti,* பெ. (n.) உத்தி (துந்திரவுத்தி) (வின்.); devices adopted in standard literary works.

[நூல் + உத்தி]

நூலுதறு–தல் *nūl-udaṟu-,* 5செ.குன்றாவி. (v.t.) நூலிழைகளுக்கிடையே பிணைப்பு ஏற்படாமல் இருக்க நூலைக் கிட்டிமரத்தில் போட்டுப் பிழிந்து உதறுதல் (நெசவு); thread shaking.

மறுவ. நூலைத்தட்டுதல், நூல்தட்டுதல்.

[நூல் + உதறு–.தல்]

நூலுரைப்போர் *nūl-uraippōr,* பெ.(n.) ஆசிரியர்(திவா.); teacher.

[நூல் + உரைப்போர் = நூலைப்பற்றியும், நூலில் உள்ள கருத்துகளைப் பற்றியும் விரிவாகக் கூறுபவர்.]

நூலுறிஞ்சி *nūl-uriñji,* பெ. (n.) **1.** நெய்வோன் (வின்.); weaver, a term of contempt. **2.** நெய்வோர் கருவியினொன்று (யாழ்.அக.); a weaving implement.

[நூல் + உறிஞ்சி]

நூலெச்சம் *nūl-eccam,* பெ. (n.) **1.** நூலுரைவகை (நன்.20, மயிலை); a kind of commentary. **2.** நூலின் இறுதிப்பகுதி, நூலின் இறுதியில் அமையும் ஒழிபியல், எச்சவியல் போன்றவை; end of the book.

[நூல் + எச்சம்]

நூலெடு–த்தல் *nūl-edu-,* 4செ.கு.வி.(v.i.) **1.** நூலை விலைக்கு வாங்குதல்; to buy thread. **2.** நூலைச் சிக்கெடுத்தல்; to disentangle a thread.

[நூல் + எடு–த்தல்.]

நூலெற்று–தல் *nūl-erru-,* 5செ.குன்றாவி.(v.t.) மரத்தின் நேர்மையறிய நூலால் தெறித்து அடையாளக் குறியிடுதல்; to snap a carpenter's line for marking a board.

[நூல் + எற்று–தல்.]

நூலேணி *nūl-ēṇi,* பெ.(n.) **1.** நூற்கயிற்றா லமைந்த ஏணி; ladder made of threads. "*மென்னூலேணி...கச்சினர்*" (மதுரைக்.640). **2.** பாய்மரத்து ஏணி (யாழ்ப்.); shrouds of a vessel. **3.** கடல் மீன் வகை; a kind of sea-fish purplish, Lutijanus linealatus.

[நூல் + ஏணி]

இரு நீண்ட முறுக்குக் கயிறுகளுக்கு இடையே மரத்துண்டோ முறுக்குக் கயிறோ படிகளாக அமைக்கப்பட்ட ஏணி.



நூலோட்டு–தல் *nūl-ōṭṭu-,* 5செ.குன்றாவி.(v.t.) பெருந்தையலிடுதல்; to tack, stitch loosely, baste.

[நூல் + ஓட்டு–தல்.]

தைத்தல் என்பது நெருக்கமாகத் துன்னூசி செலுத்தலையும், ஓட்டுதல் என்பது கோணூசியால் கோணி போன்றவற்றை இடைவெளி கொடுத்துச் செலுத்தலையும் குறிக்கும்.

நூலோடுதல் *nūl-ōḍutal,* பெ. (n.) நெசவுப்பா வோடுகை (வின்.); warping for the loom.

[நூல் + ஓடுதல். ஓடுதல் – த.வி. ஓட்டுதல் – பி.வி.]

நூலோர் *nūlōr,* பெ. (n.) **1.** நூலாசிரியர்; authors. "*எப்பா னூலோர்க்குந் துணிவு*" (குறள்,533). **2.** கற்றோர்; learned men. "*மேலோராயினு நூலோராயினும்*" (சிலப்.11:180). "*பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை*" (குறள்,322). **3.** அமைச்சர்கள் (பிங்.); ministers. **4.** பார்ப்பார் (திவா.); Brahmins.

[நூல் → நூலோர்]

நூவன் *nūvaṉ,* பெ.(n.) குறவன் (சிவக்.பிரபந். பக்.279); person belonging to the Kuṟava caste.

[நுல் → நூல் → நூவன்]

நூவு[1]-தல் *nūvu-,* 5செ.குன்றாவி.(v.t.) **1.** நீரை முன்இரைத்துப் பாய்ச்சுதல்; to irrigate, water. "*இடாக் கொண்டு நூவி*" (திருமந்.2878). **2.** திரியைத் தூண்டுதல்; raise or draw out the wick so that it may burn bright.

நூவு[2] *nūvu,* பெ. (n.) **1.** எள்(பிங்.); sesame.

தெ. நூவு

[நுல்(சிறுமை) → நூல் → நூ→நூவு. நூ=எள். எள் மிகச் சிறிய கூலமாதலால், நூ(நூல்) எனப் பெயர் பெற்றது. எள்ளளவும், எள்ளத்தனையும், எட்டுணையும் என்னும் வழக்குகளை நோக்குக. (வே.க.)]

நூவுநெய் *nūvu-ney,* பெ. (n.) எள்நெய் (நல்லெண்ணெய்); gingelly oil.

தெ. நூனெ

[நூவு + நெய். நூவு = எள். நூவு நெய் = எள்ளினின்று எடுக்கும் நெய். முதன்முதல் தோன்றியது ஆவின் அல்லது எருமையின் நெய். எள்ளிலிருந்து எடுக்கப்பட்ட நெய் எண்ணெய் (எள்நெய்) எனப்பட்டது. அது பின்னர் மாட்டுநெய் தவிரப் பிறநெய்வகைகட்கெல்லாம் பொதுப் பெயரான பின், நல் என்னும் அடைபெற்றது (வே.க.நுல்[1]). எண்ணெய் பொதுப்பெயர் ஆனதால் எள் எண்ணெய் என்றும் கூறலாம். ஒ.நோ. ஆண் + பிள்ளை → ஆம்பிள பிள்ளை.]

நூழி *nūḻi,* பெ. (n.) நூழில் பார்க்க; see *nūḻil.* (சா.அக.).

நூழில்[1] *nūḻil,* பெ. (n.) **1.** கொன்று குவிக்கை; slaughter, massacre, carnage. "*ஒள்வாள் வீசிய நூழிலும்*" (தொல்.பொருள்.72). **2.** வீரனொருவன் பகை மன்னர் படையைக் கொன்று தன் வேலைத் திரித்து ஆடுதலைக் கூறும் புறத்துறை (பு.வெ.7:15); theme in which a victorious warrior dances waving his spear after having slain his enemies. **3.** மிடைந்த போர்; thick of a fight. "*நூழி றலைக்கொள்ள*" (பரிபா.9:49). **4.** பொருள் கருதி வழிபறிப்பார் மக்களைக் கொன்று குவிக்குமிடம்; place where footpads heap up the bodies of persons slain by them. "*நூழிலு மிழுக்கும்*" (குறிஞ்சிப்.258). **5.** குவிவு (பிங்.); heap, pile. **6.** கொடிப் பிணக்கு (குறிஞ்சிப்.258,உரை); thicket of creeprs. **7.** கொடி வகை; a fragrant creeper. "*நூழில் விரையாற் கமழும் விறன்மலை*" (பு.வெ.12.பெண்பாற்.16). **8.** கொடிக் கொற்றான் (பிங்.); a parasitic leafless plant. **9.** குழியுள்ள செக்கு (அக.நி.); oil-press. **10.** திரை (அக.நி.); wave, billows. **11.** யானை (சூடா.); elephant. **12.** துளை; hole, opening. "*செம்ப ணூழில் வீழு முதிரநீர்*" (திருவிளை.பன்றிமுலை.20). **13.** குழி; hollow.

[நுல்(துளை) → நுள் → நுழு → நூழ் → நூழில் (வே.க.)]

நூழில்² *nūḻil,* பெ. (n.) கரந்து செல்லும்வழி; subterranean passage. "*ஈண்டி யோடின நூழில்புக்கேகின சிலவே*" (திருவிளை. பரிநரி.19.).

[நூழில்¹ → நூழில்²]

நூழிலர் *nūḻilar,* பெ. (n.) செக்கார், வாணியர் (அக.நி.); oil-mongers.

[நூழில்¹ → நூழிலர். நூழில் = செக்கு, செக்கோட்டி எண்ணெய் எடுக்கும் வாணியன்]

நூழிலாட்டு¹–தல் *nūḻil-āṭṭu-,* 5செ.குன்றாவி. (v.t.) செக்காட்டுவதுபோல் கொன்று குவித்தல்; to slay in heaps. "*நுகம்படக் கடந்து நூழிலாட்டி*" (மல்லபடு.87).

[நூழில்¹ + ஆட்டு–தல், நூழில் = கொல்லுகை, கொன்று குவிக்கை]

செக்காடும்போது எள்நசுங்கி எண்ணெயும், புண்ணாக்கும் வேறாகிப் போவதுபோல், போரில் உயிரும், மெய்யும் தனித்தனியாக்குதல்.

நூழிலாட்டு² *nūḻil-āṭṭu,* பெ. (n.) 1. செக்காட்டுவதுபோல் கொன்று குவிக்கை; killing in heaps, massacre, carnage. "*வேழப் பழனத்து நூழிலாட்டு*" (மதுரைக்.257). "*பாழி பயிற்றி நூழிலாட்டவும்*" (பெருங்.மகத.20:42) 2. வீரனொருவன் தன் மெய்யில் தாக்கிய வேலைப் பறித்துப் பகைவர் மேலோச்சியதைக் கூறும் புறத்துறை (பு.வெ.7:16); theme in which a warrior draws out a spear thrust into his body and attacks his enemy with it.

[நூழில் = கொல்லுவது, அழிப்பது, கொன்று குவிப்பது. நூழில் + ஆட்டு]

நூழை¹ *nūḻai,* பெ. (n.) 1. சிறுவாயில் (திவா.); postern. "*குறும்பி னூழையும்*" (பு.வெ.1:7, கொளு.). "*நுழை நுழையும் பொழுதின் தாழாது*" (நற்.98.). "*மாழை மானோக்கின் மடமொழி நூழை*" (கைந்நிலை,59). 2. துளை; chink, hole, bore. "*நூழைக் கைம்மலைக் கடங்கலுழ் சேனையை*" (கம்பரா.எழுச்.13). 3. பலகணி (திவா.); a kind of lattice-window. 4. குகை; cave. "*புலிசிங்க மொடு கரடிநுழை நூழை கொண்ட கானமலை*" (தாயு.சச்சிதா.6)

[நுல் (துளை) → நுள் → நுழு → நுழை → நூழை]

நூழை² *nūḻai,* பெ.(n.) நுண்மை (பிங்.); acuteness, fineness, minuteness.

[நுல்(நுண்மை, சிறுமை) → நுள் → நுழு → நுழை → நூழை(வே.க.)]

நூழைவாயில் *nūḻai-vāyil,* பெ.(n.) சுருங்கைவழி (பிங்.); subterranean passage.

ம. நூழ வாயில்

[நூழை¹ + வாயில்]

நூற்கண்டு *nūṟ-kaṇḍu,* பெ. (n.) நூற்பந்து; ball of thread.

[நூல் + கண்டு]

நூற்கயிறு *nūṟ-kayiṟu,* பெ. (n.) நூலால் திரிக்கப்பட்ட கயிறு; string.

[நூல் + கயிறு]

நூற்கழி *nūṟ-kaḻi,* பெ. (n.) 1. நூற்சுருட்டு(வின்.); skein of thread. 2. நூல்சுற்றியகழி; reel of thread. "*செந்நூற் கழி*" (கலித்.103:30).

[நூல் + கழி]

நூற்கிடக்கை *nūṟ-kiḍakkai,* பெ. (n.) நூல் ஒழுங்கு (சாத்திரவிதி); rules or injunctions of the Šastras. "*அந்தண ருரை நூற்கிடக் கையில்*" (சிலப்.15:70).

[நூல் + கிடக்கை]

நூற்குச்சு *nūṟ-kuccu,* பெ.(n.) பருத்தி நூலாலான குஞ்சம் (வின்.); tassel of cotton thread.

[நூல் + குச்சு. குஞ்சம் → குஞ்சு → குச்சு]

நூற்குஞ்சம் *nūṟ-kuñjam,* பெ. (n.) 1. புடைவை அகலத்தின் அரைக்காற் பாகம்; a measure in the width of cloth = 120 threads of the warp. 2. நூற்சுருள்; skein. 3. பருத்தி நூலாலான குஞ்சம்; tassel of cotton thread.

[நூல் + குஞ்சம்]

நூற்குண்டு *nūṟ-kuṇḍu,* பெ.(n.) கட்டடம் கட்டும் வேலை போன்றவற்றில் அதன் செங்குத்தான அமைப்பைச் சரிபார்க்கப் பயன்படுத்தும் நீண்ட உறுதியான நூலின் ஒரு முனையில் சிறு மரக்கட்டையும் மறுமுனையில் ஒரு மாழை (உலோகக்) குண்டையும் உடைய தொழில் கருவி; plump-line.

[நூல் + குண்டு]



நூற்கும்கதிர் *nūṟkum-kadir,* பெ. (n.) பஞ்சில் இருந்து நூல் நூற்கும் கதிர்; spindle.



நூற்குற்றம் *nūr-kuṟṟam,* பெ. (n.) குன்றக்கூறல், மிகைபடக்கூறல், கூறியது கூறல், மாறு கொளக் கூறல், வழூஉச் சொற் புணர்த்தல், மயங்கவைத்தல், வெற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல், சென்று தேய்ந்திறுதல், நின்றுபயனின்மை, என்ற பத்துவகைப்பட்ட நூலின்கண் அமையலாகாக் குற்றங்கள் (நன்.12); faults or defects in a treatise, ten in number, viz. kuṉṟa-k-kūṟal, migaipaḍa-k-kūṟal, kūṟiyadu-kūṟal, māṟukoḷa-k-kūṟal, valūuccoṟ-puṇarttal, mayaṅga-vaittal, veṟṟeṉa-t- toḍuttal, maṟṟoṉṟu-virittal, šeṉṟuteyntṟutal, niṉṟupayaṉ-iṉmai.

"*குன்றக் கூறல் மிகைபடக் கூறல்*
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று
விரித்தல்
சென்று தேய்ந் திறுத னின்றுபய னின்மை
என்றிவை யீரைங் குற்ற நூற்கே." (நன்.12)

[நூல் + குற்றம்]

நூற்சரடு *nūṟ-caraḍu,* பெ. (n.) நூலானியன்ற சரடு; cotton thread, used for stringing beads, as dist. fr.poṟ-caraḍu.

[நூல் + சரடு. சரடு = முறுக்குநூல்.]

நூற்சார்பு *nūṟ-cārbu,* பெ. (n.) **1.** நூலொன்றி னாற் கற்பிக்கப்பெறுங் கொள்கை; doctrines inculcated in a treatise. **2.** ஒரு சார் சமயத்தார்க்குச் சிறப்பாகவுரிய கொள்கை முறைகள்; the peculiar doctrines or observances of a sect.

[நூல் + சார்பு]

நூற்சிலும்பை *nūṟ-cilumbai,* பெ. (n.) புண்களுக்குக் கட்டவுதவும் மென்மையான பஞ்சு; licenscraped into a soft substance - Lint. It is used for dressing wounds and sores. (சா.அக.).

[நூல் + சிலும்பு + ஐ.]

நூற்சுருணை *nūṟ-curuṇai,* பெ. (n.) *நூற்சுருள்* (உ.வ.) பார்க்க; see *nūṟ-curuḷ.*

[நூல் + சுருணை. சுருள் → சுருண் → சுருணை.]

நூற்சுருள் *nūṟ-curuḷ,* பெ. (n.) நூற்சுருட்டு (வின்.); skein or dew of thread.

[நூல் + சுருள். சுருள் + து = சுருட்டு. ஒ.நோ. இருள் + து = இருட்டு]

நூற்பகந்தரம் *nūṟ-pagandaram,* பெ. (n.) பகந்திர நோய்வகை (வின்.); venereal ulcer on the peritoneum.

[நூல் + பகந்தரம்]

நூற்படுகு *nūṟ-paḍugu,* பெ. (n.) நூற்பாவு (வின்.); weaver's warp.

[நூல் + படுகு]

நூற்படுபுலவன் *nūṟ-paḍu-pulavaṉ,* பெ. (n.) நூல் இயற்றும் புலவன்; composing as a poem. *"நூற்படு புலவன் சொன் நுண்பொரு ளுழைந்தி யானும்"* (சீவக.554.).

[நூல் + படு + புலவன். பாடு → படு.]

நூற்படை *nūṟ-paḍai,* பெ. (n.) நூற்பாவு (யாழ்ப்.); warp.

மறுவ. நூற்படுகு

[நூல் + படை]

நூற்பதம் *nūṟ-badam,* பெ. (n.) மெழுகுபதம்; elastic or wax stage. (சா.அக.).

[நூல் + பதம்]

நூற்பந்து *nūṟ-pandu,* பெ. (n.) **1.** நூற்சுருட்டு (உ.வ.); ball of thread. **2.** நூலாலான விளை யாட்டுப் பந்து; play-ball made of thread.

[நூல் + பந்து. பம் + து–பந்து = துள்ளுவது.]

நூற்பயன் *nūṟ-payaṉ,* பெ. (n.) நூலானெய்தும் பயன்பாடு; benifit of treatise. *"அறம்பொரு ளின்பம் வீடடைதல் நூற்பயனே"* (நன்.10.).

[நூல் + பயன்.]

நூற்பழக்கம் *nūṟ-paḻakkam,* பெ. (n.) கல்விப்பயிற்சி (யாழ்.அக.); book-learning.

[நூல் + பழக்கம். பழகு → பழக்கம்.]

நூற்பா *nūṟ-pā,* பெ. (n.) **1.** *நூற்பாவகவல்* பார்க்க; see *nūṟ-pā-v-agaval. "ஈசுரபாரதி நூற் பாவாற் பாடிய"* (பல்பொருட்சூடாமணி, பாயி.).

2. தறியிற் பிணைக்கும் பாவு; warp, in weaving.

[நூல் + பா. பாவு → பா.]

நூற்பாலை *nūṟpālai,* பெ. (n.) 1. பஞ்சிலிருந்து நூலை நூற்கும் தொழிற்சாலை; spinning mill. 2. நெசவாலை; weaving mill.

[நூற்பு + ஆலை]

நூற்பாவகவல் *nūṟ-pā-v-agaval,* பெ. (n.) இலக்கணம் முதலியன அமைதற்குரிய அகவல் வகை (திவா.); a kind of agaval metre, adapted to treatises of instruction.

[நூற்பா + அகவல்]

அகவற்பா என்பது மயிலின் ஓசைபோல் ஒலியைத்தரும் பாடல்களை இயற்ற உதவும் யாப்பு வகை. இது ஆசிரியப்பா எனவும் கூறப்படும்.

நூற்பாவை *nūṟ-pāvai,* பெ. (n.) நெசவுப் படைமரம் (இ.வ.); beam of a loom.

[நூல் + பாவை. பாவு + ஐ–பாவை.]

நூற்புணர்ப்பு *nūṟ-puṇarppu,* பெ. (n.) **நூலுத்தி** பார்க்க; see *nūlutti.* '*அது விரித்துத் தொகுத்த லென்னும் நூற்புணர்ப்புப்பட வைத்தவாறு*' (தொல்.சொல்.205, இளம்). '*இது யோக விபாகம் என்னும் நூற் புணர்ப்பு*' (தொல். சொல்.1, சேனா.).

[நூல்+ புணர்ப்பு]

நூற்புழு *nūṟ-pul̤u,* பெ. (n.) நூலைப் போன்ற புழு; thread worm. (சா.அக.).

[நூல் + புழு]



நூற்புறத்திணை *nūṟ-puṟattiṇai,* பெ. (n.) தோன்றியத் தாலமைந்த (ஆகமத்தாலமைந்த) துணிபுரை (தொன்.வி.); proof from treatises of established authority.

[நூல் + புறத்திணை]

நூற்பூச்சி *nūṟpūcci,* பெ. (n.) 1. ஒருவகைக் குடற்பூச்சி; thread worm. 2. சிலந்தி; spider.

[நூல் + பூச்சி]

நூலால் (வீடு) கூடுகட்டிக் கொள்ளும் பூச்சி, சிலந்தி.

நூற்பொருள் *nūṟ-porul̤,* பெ. (n.) 1. நூலிற் கூறப்படும் பொருள்; subjects treated of or doctrines inculcated in, a treatise. "*நூற்பொருள் யாதென*" (மணிமே.27:109). 2. நூலட்டவணை; table of contents.

[நூல் + பொருள்]

நூற்றந்தாதி *nūṟṟandādi,* பெ. (n.) ஈறுமுதலி (அந்தாதி)த் தொடையாகப் பாடப்படும் நூறு வெண்பா அல்லது 100 கலித்துறை கொண்ட சிற்றிலக்கிய வகை (இலக்.வி.842); a poem consisting of hundred veṇbā or kali-t-tuṟai in andādi-t-toḍai.

[நூறு + அந்தாதி]

நூற்றல்[1] *nūṟṟal,* தொ.பெ.(vbl.n.) செய்யுளி யற்றுதல்; composing as a poem. "*நொய்ய சொன் னூற்க லுற்றேன்*" (கம்பரா.சிறப்.5)

[நூல்தல் → நூற்றல்]

நூற்றல்[2] *nūṟṟal,* பெ. (n.) **1.** பருத்தி, பட்டு, ஆட்டு மயிர் அல்லது செயற்கை இழைகளை ஒன்றோடொன்று சேர்த்து, முறுக்கு ஏற்றி நூலை உண்டாக்குவது; spining tread. "*நிலவு நூற்றன்ன கவரி*" (கூர்மபு.தக்கவமி .36). 2. நெரித்துருட்டுவது (கூர்மபு.பதிக.31, உரை); tread with twiste.

[நுல் → நூல் → நூல்தல் → நூற்றல் =பஞ்சிழை யுண்டாக்குதல் (வே.க.)]

கலைகள் பலவற்றுள் நூற்றல் ஒன்று. பல ஆண்டுகள் வரை கதிரால் (தக்களி) நூல் நூற்றனர். பின் (இறாற்று+இன்+அம்) இராட்டினத்தால் நூல் நூற்றனர். இம்முறையில் அதிகம் நூல் கிடைக்காததால், எந்திரமுறையில் நூல் நூற்கும் வழியைக் காண முனைந்தனர். 1550ல் நூற்கும் சக்கரம் (spinning wheel) இங்கிலாந்தில் கண்டு பிடிக்கப்பட்டது. 1764ல் நூற்கும் கதிர் (spinning jenny) கண்டு பிடிக்கப்பட்டது. ஒரே நேரத்தில் 16 கதிர்களில் (தக்களி) நூல் நூற்க இந்த எந்திரம் பயன்பட்டது. இந்த முறையில் தடித்த நூலே நூற்க முடிந்தது. மெல்லிய நூல் நூற்க முடியவில்லை. 1769ல் Richar Arkwright என்பவர் நூற்கும் சட்டகம் (spinning frame) கண்டுபிடித்தார். 1779ல் மியூல் நூற்கும் எந்திரம் (Mule spinner) கண்டுபிடித்தார். இதில் 48 கதிர்கள் உண்டு. இதன் மூலம் மெல்லிய நூல் நூற்க முடிந்தது.

நூற்றாண்டு *nūṟṟāṇḍu,* பெ. (n.) நூறாண்டுகள் கொண்ட காலவளவு; century. 1900 முதல் 1999 வரை இருபதாம் நூற்றாண்டு என்று கூறப்படும்.

E.siecle; G.jahrhunder; It.secolo.

[நூறு + ஆண்டு]

நூற்றாண்டுமண்டபம் *nūṟṟāṇḍu-maṇḍabam,* பெ.(n.) ஒரு நிறுவனமோ, ஆட்சியோ நூறு ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் கட்டப்பட்ட மண்டபம்; centenary hall. *பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபத்தில் அமைச்சரவை பதவி ஏற்கிறது.*

[நூற்றாண்டு + மண்டபம்.]

நூற்றாண்டுவிழா *nūṟṟāṇḍu-viḻā,* பெ. (n.) நூறு ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் கொண்டாடும் விழா; the centenary. *பாவாணரின் நூற்றாண்டு விழாவில் அவரது நூல்கள் வெளியிடப் பட்டன.*

[நூறு + ஆண்டு + விழா]

நூற்றார் *nūṟṟār,* பெ. (n.) நெசவு வாரு (நாடா)க்குள் வைக்கும் நூல் சுற்றிய சிறு குச்சி (வின்.); weaver's bobbin.

ம. நூல்தார்

[நூல் + தார்]

நூற்றிதழ்த்தாமரை *nūṟṟidaḻ-t-tāmarai,* பெ. (n.) நூறு இதழ்களையுடைய தாமரைவகை; a kind of lotus having hundred petals. "*நூற்றிதழ்த் தாமரைப் பூச்சினை நீக்கும்*" (ஐங்குறு.20.2.).

[நூறு + இதழ் + தாமரை]

நூற்றுக்கதிபதி *nūṟṟukkadipadi,* பெ. (n.) நூறுகாலாள் கொண்ட படைக்குத்தலைவன்; captain of 100 men, centurian.

[நூறு + கு + அதிபதி – நூற்றுக்கதிபதி]

நூற்றுநிறை *nūṟṟu-niṟai,* பெ. (n.) நூறுபலம் (திவா.); hundred palam.

[நூறு + நிறை]

நூற்றுலாமண்டபம் *nūṟṟulā-maṇḍabam,* பெ. (n.) நூறடி கொண்ட, உலாவுதற்குரிய, அமுது செய்யும் மண்டபம்; a large dinning-hall which provides for a walking space of 100 ft. "*நுண்டுகிற் றிரைகள் சேர்ந்த நூற்று லாமண்டபம்*" (சீவக.2734).

[நூறு + உலா + மண்டபம்]

நூற்றுவர் *nūṟṟuvar,* பெ. (n.) குருமரபின் துரியோதனன் முதலானோர்; Kaurava princes, as numbering 100. "*நூற்றுவர்பால்... தூதுநடந்தானை*" (சிலப்.ஆய்ச்.படர்க்கை.3). "*மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனை*" (கலித்.52.). "*நூற்றுவர் தோழியர் போற்றியல் கூற*" (பெருங்.உஞ்சைக்.38:229.).

ம. நூற்றவர்.

[நூறு → நூற்றுவர்]

நூற்றுவரைக்கொல்லி *nūṟṟuvarai-k-kolli,* பெ. (n.) நூறுபேரை ஒருங்கே கொல்லும் பொறிவகை; a machine capable of killing 100 men at a time. "*நூற்றுவரைக் கொல்லி யோடு நூக்கியெறிபொறியும்*" (சீவக.101).

ம. நூற்றிக்கொல்லி.

[நூற்றுவர் + கொல்லி. ஒ.நோ. சேர்ந்தாரைச் கொல்லி – தீ.]

நூற்றெட்டுபநிடதம் *nūṟṟeṭṭupaniḍadam,* பெ. (n.) மறைநூலின் (வேதத்தின்) ஒருபகுதியாகிய 108 அறிவுக் (ஞானம்) காண்டம் (உபநிடதம்); the 108 Upanisads.

[நூறு + எட்டு + Skt. உபநிடதம்.]

மறையின் அறிவுப்பகுதிகள் (உப நிடதங்கள்) 108ம் நான்கு மறைகளிலும் கலந்து காணப்படுகின்றன. முதல் மறையாகிய இருக்கு மறை நூலில் 10ம், இரண்டாம் மறை நூலாகிய யசூரில் 51–ம், மூன்றாவதாகிய சாம மறையில் 16–ம், இறுதி மறைநூலாகிய அதர்வனத்தில் 31–ம் ஆக அமைந்துள்ளது.

நூற்றைக்கிழங்கு *nūṟṟai-k-kiḻaṅgu,* பெ. (n.) நூறை 2, (மலைபடு.515, உரை) பார்க்க; see *nūṟai,* 2.

[நூறை + கிழங்கு – நூற்றைக்கிழங்கு]

நூறங்கிழங்கு *nūṟaṅ-giḻaṅgu,* பெ. (n.) நூறை, 2 (L.) பார்க்க; see *nūṟai,* 2.

ம. நூறந்கிலங்கு.

[நூறை + கிழங்கு]

நூறல் *nūṟal,* தொ.பெ. (vbl.n) அழித்தல்; to destroy. "*சேனைவேடர் மேலடர்ந்து சீறியம்பு நூறினார்*" (பெரியபு. கண்ண. 78).

[நுல்(நுண்மை) → நுள் → நுறு → நூறு → நூறல் = பொடியாக்குதல் போல் அழித்தல். (வே.க.)]

நூறன்கிழங்கு *nūṟaṉ-kiḻaṅgu,* பெ. (n.) நூறங்கிழங்கு பார்க்க; see *nūṟaṅ-kiḻaṅgu.* (சா.அக.)

[நூறங்கிழங்கு → நூறன்கிழங்கு]

நூறாண்டுப்போர் *nūṟāṇḍu-p-pōr,* பெ. (n.) நூறு ஆண்டுகள் நடைபெற்ற போர்; hundred year's war.

[நூறு + ஆண்டு + போர்]

கி.பி.1338 முதல் 1453 வரை இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் விட்டுவிட்டு நடை பெற்றபோர். 1328ல்

பிரெஞ்சு மன்னன் நான்காம் சார்லசு ஆண் வாரிசு இல்லாமல் இறந்தார். இங்கிலாந்து மன்னர் மூன்றாம் எட்வர்டு தாம் சார்லசின் சகோதரியின் புதல்வர் என்ற முறையில் உரிமை கொண்டாடினார். ஆனால், பிரஞ்சு நாட்டு மக்கள் வால்வா பிலிப்பைத் தங்கள் அரசனாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். இதனால் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் போர் ஏற்பட்டது. இறுதியில் 1453ல் போர் முடிந்தது. பிரெஞ்சுக்காரர்களே வெற்றி பெற்றனர். இப்போரில் ஆர்க்நகர சோன் (Joan of Arc) என்ற இடையர்குலப் பெண் பிரெஞ்சுப் படைக்குத் தலைமை தாங்கி வெற்றி மேல் வெற்றியைத் தேடித் தந்தாள்.

நூறாண்டுமூலி *nūṟāṇḍu-mūli,* பெ. (n.) பசியெடுக்காதிருக்க வேண்டி நூறாண்டுக் கொருமுறை உட்கொள்ளுமோர் மூலிகை; an unknown herb taken by šiddhar once in 100 years to keep them off from hunger. (சா.அக.).

[நூற்றாண்டு → நூறாண்டு + மூலி.

மூலிகை → மூலி–கடைக்குறை.]

நூறாண்டுவேம்பு *nūṟāṇḍu-vēmbu,* பெ. (n.) நூறு ஆண்டு வாழ்ந்த வேப்பமரம்; இதன் பட்டை மருத்துவத்தில் பயன்படுகிறது; margoso tree of 100 years old. Its bark is considered to be a rejuvenating drug. (சா.அக.).

[நூறாண்டு + வேம்பு]

நூறாயிரம் *nūṟāyiram,* பெ. (n.) ஒரு நூறு ஆயிரம் (இலட்சம்); one hundred thousand, lakh. "*நூறாயிர முன்வரூஉங் காலை*" (தொல்.எழுத்து.471). "*பன்னூறாயிரம் விலங்கின் றொகுதியும்*" (மணிமே. 28:226).

[நூறு[3] + ஆயிரம்]

நூறி *nūṟi,* கு.வி.எ. (adv.) **1.** அறைந்து கொண்டு; to strike, beat. "*முலைபொலியாக முருப்பநூறி*" (புறநா.25). **2.** வெட்டி; to cut down. "*அருஞ்சமந் ததைய நூறி*" (புறநா.93.). "*அகப்பா அழிய நூறிச் செம்பியன்*" (நற். 14). "*அம்புடைக் கையர் அரண் பல நூறி*" (அகநா. 69). "*பரவை யெழுச்சிப் பக்கமு முன்னும் வெருவரத் தாக்கி வீழ நூறி*" (பெருங். உஞ்சைக். 48:33, 34).

[நூறு → நூறி.]

நூறிசா *nūṟiśā,* பெ. (n.) சுக்குநாறிப்புல்; nura oil-plant, Andropogon schoenanthus.

நூறு[1]–தல் *nūṟu-,* 5செ.குன்றாவி.(v.t.) **1.** அழித்தல்; to destroy, kill. "*பழம்பகை தவ நூறுவா யென*" (சீவக.324). "*நுந்தநுந்த முறைமுறை நூறினான்*" (கம்பரா. நாகபாச. 113). **2.** அறைதல், அறைந்து கொள்ளுதல்; to strike, beat, as one's breast. "*முலைபொலி யாக முருப்ப நூறி*" (புறநா.25). **3.** துணித்தல், வெட்டுதல்; to cut down butcher. "*யானை அருஞ்சமந் ததைய நூறி*" (புறநா.93). **4.** நெரித்தல்; to crush. "*கரும்பினைக் கண்டகர நூறி*" (நாலடி,156). **5.** தூளாக்குதல், பொடியாக்குதல்; to pulverise, reduce to powder. "*அரண்பல நூறி*" (அகநா.69). **6.** இடித்தல் (பு.வெ.6:26,உரை); to demolish. **7.** வளைந்து கொள்ளுதல்; to surround. "*நதிவெள்ள நூறுகென*" (தக்கயாகப்.652). **8.** துரத்துதல்; to drive-out, expel. "*காரிரு ளிரிய நூறி*" (ஞானா.67).

தெ. நூறு; **ம.** நூறு, நூறுக.

க. நூறு; **குட.** நூரி; **து.** நுரியுநி;

கோத. நுச்; **துட.** நூச்; **கொலா.** நொர்ப்;

பர். நூகொல்; **கோண்.** நோராநா;

குவி. நுய்யிலி; **பிரா.** நுசிங்.

[நுல்(நுண்மை) → நுள் → நுறு → நூறு → நூறு–தல் = பொடியாக்குதல் போல் அழித்தல் (வே.க.)]

நூறு² *nūṟu,* பெ. (n.) 1. இடித்த மா, பொடி, தூள் முதலியன; powder; flour; dust. *"நூறொடு குழீஇயின கூவை"* (மலைபடு.137). 2. சுண்ணாம்பு; lime. *"நீடுகொடி யிலையினர் கோடுசுடு நூற்றினர்"* (மதுரைக்.401).

ம. நூறு; து. நூத்ர.

[நுல் → நுள் → நுறு → நூறு (வே.க.)]

நூறு³ *nūṟu,* பெ. (n.) நூறு என்ற எண்; hundred. *"நூறென் கிளவி ஒன்று முதல் ஒன்பாற்கு ஈறுசினை ஒழிய இனவொற்று மிகுமே"* (தொல். எழுத்து.472). *"பலவுநூ றடுக்கினை யினைபேங்கி யழுதனை"* (கலித். 122). *"நூறுபத் தடுக்கி எட்டுக் கடை நிறுத்த"* (சிலம்பு. 3). *"பன்னூ றடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்"*. (புறநா. 62). *"ஒன்றெய்தி நூறிழுக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்"* (குறள், 932). *நூறு ஆண்டு ஆகிலும் கல்வியை நோக்கு* (பழ.). *நூறு குற்றம் ஆறு பிழை பொறுக்க வேண்டும்* (பழ.). *நூறு நாள் ஓதீஆறுநாள் விடத்தீரும்* (பழ.) *நூற்றுக்குமேல் ஊற்று, ஆயிரத்துக்கு மேல் ஆற்றுப் பெருக்கு* (பழ.). *நூற்றுக்கு ஒரு பேச்சு ஆயிரத்துக்கு ஒரு தலை அசைப்பு* (பழ.). *நூற்றைக் கெடுத்தது குறுணி* (பழ.). *நூறு கிளிகளுக்கு ஒரேவாய் = அது என்ன? – வாழைப்பூ.* (விடுகதை).

ம., க., தெ. நூறு; கோத. நூர்; துட. நூர்; குட. நூரி; து. நாத; கோண். நூர்.

Skt. satha; Gk. ekaton; L. centum; G.hundert; E. hundred.

[நுல் → நுள் → நுறு → நூறு. நூறு = பத்தின்பத்து மடங்கைக் குறிக்கும் எண்.]

நூறு எண்ண முடியாத துகள்களைக் கொண்டிருத் தலால், அதன் பெயர் பத்திற்கு மேற்பட்ட முதற் பேரெண்ணைக் குறித்தது. (வே.க. நுல்¹.)

நூறுகோடி *nūṟu-kōḍi,* பெ. (n.) 1. பதினாயிரம் இலக்கம் கொண்ட (இலட்சங்கொண்ட) எண்; one hundred crores = 1000 millions. *"நூறு கோடி பிரமர்க ணொந்தினார்"* (தேவா.1218,3). 2. நூறுமுனைகளையுடை மரக்காழ்க் கூர்ங்கருவி (வச்சிராயுதம்); Indra's thunderbolt, as having hundred points. *"நூறுகோடி யங்கை யேந்தி"* (சேதுபு.சீதை.22).

[நூறு³ + கோடி]

நூறுபுள்ளி நண்டு *nūṟu-puḷḷi-naṇḍu,* பெ. (n.) ஒருவகைக் கடல் நண்டு; a kind of sea crab, Neptunus sanguinolentus.

[நூறு + புள்ளி + நண்டு.]

நூறும்புகு–தல் *nūṟum-pugu-,* 5செ.கு.வி. (v.i.) நூறாண்டு வாழ்தல்; to live a hundred years, used in wishing a person long life. *'நூறும் புகுவா னென்று வாழ்த்தி'* (சீவக.2043,உரை).

[நூறு + உம் + புகு – நூறும் புகு → நூறும்புகு–தல்.]

நூறை *nūṟai,* பெ. (n.) 1. நான்கடிக்கு மேல் வளர்வதும் பழுப்பு நிறமுள்ளதுமான மலங்குமீன் (திவா.); an eel, brownish upwards of 4ft. in length. *"நூறையும் வராலும்"* (அரிச்.பு.மீட்சி.56). 2. வள்ளிக் கிழங்கு வகை; Fiji yam. *"காஅய்க் கொண்ட நுகமருள் நூறை"* (மலைபடு.515).

நூன் *nūṉ,* பெ. (n.) முன்னிலை ஒருமைப் பெயராகிய நீன்; you.

மரா. நூன்.

[நுன் → நூன்]

திரவிடம்போல அத்துணை மர பியலுறவுறாது செய்மைப்பட்ட பிற மொழிகள்கூட, சில பல தமிழ்ச் சொற்களையும் நெறிமுறைகளையுங் கொண்டிருப் பதுடன், மொழிகட்கெல்லாம் அடிப்படையான சொல்வரிசையைச் சேர்ந்த மூவிடப் பெயர்கட்கும் தமி ழ்ச்சொற்களையே அல்லது அவற்றின் திரிபையே கொண்டுள்ளன. தமிழ் மூவிடப் பெயர்களுள் அல்லது அவற்றின் திரிபுகளுள் ஒன்றேனும் இல்லாத அல்லது வழங்காத மொழியே உலகிலில்லை என்று உறுதியாய்ச் சொல்லலாம்.

எ—கா:

நூன், நூம், நீன், என்பன பழந்தமிழ் முன்னிலைப் பெயர்கள். இவற்றின் னகரவீறு ஒருமையையும் மகரவீறு பன்மையையுங் குறிக்கும். இவற்றுள், நீன் என்னுஞ் சொல் இன்றும் தென்னாட்டு வழக்கிலுள்ளது. நூன் நூம் என்பன இருவகை வழக்கும் அறினும், அவற்றின் வேற்றுமைத் திரிபான நுன் நும் என்னும் அடிகள் இன்றும் செய்யுள் வழக்கிலுள்ளன. நீன் என்னுஞ் சொல்லின் கடைக்குறையான நீ என்பது இருவகை வழக்கிலும் உள்ளது.

நூன் என்பது 'தூ', 'து', 'தௌ', 'த்வம்', என்றும்: நூம் என்பது 'தும்', 'யூ', 'யூயம்' என்றும் ஆரியத்தில் வழங்குகின்றன.

நூன் – நூ – தூ – து – தௌ – த்வம். நூம் – தூம் – தும். ந – த. போலி.

நூம் – யூம் – யூ; யூம் – யூயம். ந – ய, போலி.

நீ என்பது சீன மொழியில் 'நி' எனக் குறுகி வழங்குகின்றது; நிமென் என்பது இதன் பன்மை. பொர்னு என்னும் ஆப்பிரிக்க மொழியில் 'நி' என்பதே முன்னிலை யொருமைப் பெயர்.

சில பழஞ் சித்திய மொழிகளில் நீ என்னும் பெயர் தமிழிற் போன்றே சிறிதும் திரியாமல் வழங்கிவந்தது.

ஆத்திரேலிய மொழிகளின் முன்னிலை யொருமை 'நின்ன', 'ஙின்னீ' 'ஙிந்தெ', என்பன: இருமை 'நிவ', 'நூர' என்பன. பன்மை 'நிமெதூ' என்பது.

இங்ஙனமே, ஏனை யிடப்பெயர்களும் இயல்பு வடிவில் அல்லது திரிபுவடிவில் ஏறத்தாழ எல்லா மொழி கட்கும் பொதுவாகவுள்ளன.

நூன்மடந்தை *nūṉ-maḍandai,* பெ. (n.) கலைமகள் (சரஸ்வதி) (பிங்.); Šarasvadi, as the Goddess of sciences.

[நூல் + மடந்தை]

நூன்மலைவு *nūṉ-malaivu,* பெ. (n.) செய்யுட் குற்றங்களுளொன்று; a defect in composition.

[நூல் + மலைவு]

நூன்மாடம் *nūṉ-māḍam,* பெ. (n.) நூல்வெண் *மாடம்* பார்க்க; see *nūl-veṇmāḍam.* *"தறிமிசைக் கொளீஇய செறிநூன் மாடமொடு"* (பெருங். உஞ்சைக்.57:24).

[நூல் + மாடம்]

நூன்முகம் *nūṉ-mugam,* பெ. (n.) **1.** பாயிரம் (திவா.); preface, introduction. "முகவுரை பதிகமணிந்துரை நூன்முகம் புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்" (நன். 1). **2.** நூலின் தொடக்கம்; opening or beginning of a treatise. *"இந்நூன் முகத்து உரைக்கப் படுவதாகிய சிறப்புப் பாயிரம்"* (சி.போ.ப.பக்.35, சுவாமிநா.). **3.** நூற்றுறை (யாழ்.அக.); scope or contents of any treatise.

[நூல் + முகம்]

நூன்முடிவு *nūṉ-muḍivu,* பெ. (n.) 1. நூலின் உட்பகுதியாய் முடியும் உறுப்பு (திவா.); section of a treatise. 2. நூலின் நோக்கம் (வின்.); object of a treatise. 3. நூலின் இறுதி; concluding portion of a work.

[நூல் + முடிவு]

நூனம்[1] *nuṉam,* பெ. (n.) குறைவு; defect, blemish. "*கவுரிதனை வணங்கிடா நூனத்தாலே*" (அருணகிரிபு. அருந்தவ.).

நூனம்[2] *nuṉam,* பெ. (n.) உறுதி; (சூடா.) certainty.

நூனயம் *nūṉayam,* பெ. (n.) 1. நூலின் அழகு; excellences of a treatise. 2. கல்விநயம் (வின்.); advantage or pleasure of learning.

[நூல் + நயம். நயம் = அழகு.]

நூனாதிக்கம் *nūṉādikkam,* பெ. (n.) 1. குறைவு; deficiency. 2. நிறைவு; completion. 3. குறை சொல்லுங் குணம் (வின்); finical criticism.

[நூனம் + ஆதிக்கம்]

நூனாயம் *nūṉāyam,* பெ. (n.). 1. பிழை; fault. 2. சூது (வின்.); trick.

*[நூனம் = குறைவு, குற்றம்.
நூனம் + ஆயம்]*

நூனாழி *nūṉāḻi* பெ. (n.) நெசவுவாரு (நாடா) (திவா.); weaver's shuttle.

[நூல் + நாழி]

நூனாழிகை *nūṉāḻigai,* பெ. (n.) **நூனாழி** (சீவக.3019) பார்க்க; *see nūṉāḻi.*

[நூல் + நாழிகை. நாழி → நாழிகை]

நூனெறி *nūṉeṟi,* பெ. (n.) நூல் கூறும் வழிகள்; the way of treatise. "*நூனெறி வகையி னோக்கி*" (சீவக.374).

[நூல் + நெறி]

நெ *ne,* பெ. (n.) தமிழ் நெடுங்கணக்கில் 'ந்' என்னும் மெய்யெழுத்தும், 'எ' என்னும் உயிர் எழுத்தும் சேர்ந்த உயிர் மெய் எழுத்து; the compound of ந் + எ.

[ந் + எ – நெ]

தமிழ் நெடுங்கணக்கின் எட்டாவதாகிய நகரஉயிர்மெய் வரிசையில் ஏழாவது எழுத்து.

நெக்கல்[1] *nekkal,* பெ. (n.) 1. தளர்ந்த நிலை (வின்.); that which is relaxed. 2. அழுகல் (யாழ்ப்.); anything rotten or decayed. 3. அளிந்த பழம்; over ripe-fruit.

[நெகு → நெக்கல். நெகிழ்தல் = சுழலுதல், கரைதல், மனமிரங்குதல். ஒ.நோ: நகு → நக்கல்]

நெக்கல்[2] *nekkal,* பெ. (n.) 1. உருகுகை; melt. "*நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே*" (திருநாவுக்.தேவாரம்). 2. கரைகை; dissolve.

[நெகு → நெக்கல்]

நெக்கினி *nekkiṉi,* பெ. (n.) ஒருவகை மரம்; a kind of tree.

நெக்கு[1]–தல் *nekku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கிளப்புதல்; to raise a thing by a lever. *பாறையைக் கம்பியால் நெக்கித் தள்ளினான்.* 2. துரத்தியடித்தல்; to chase away in battle. *காவலர்கள் கூட்டத்தைத் தடியால் நெக்கினார்கள்.*

[எக்கு → நெக்கு → நெக்கு–தல். எக்குதல்= உயர்த்துதல், மேலே செல்ல வீசுதல்.]

நெக்கு[2]–தல் *nekku-,* 5செ.குன்றாவி. (v.t.) 1. கூட்டம் நெருக்குதல் (உ.வ.); to press, push. *தொடர்வண்டி பயணச்சீட்டுக்கு மக்கள்கூட்டம் நெக்கியது.* 2. ஏனத்தில் உள்ள நீரை முழுவதுமாக அலசிக் (கோலிக்) கொட்டுதல்; to throw water out of a vessel with spoon, etc.

[நெருக்கு → நெக்கு → நெக்கு–தல்.]

நெக்கு[3]–தல் *nekku-,* 5செ.கு.வி. (v.i.) தள்ளல், நெருக்குதல்; pressing. (சா.அக.) *விழாமேடையில் இருந்து அவரை நெக்கித் தள்ளிவிட்டனர்.*

[நெருக்கு → நெக்கு → நெக்கு–தல்.]

நெக்கு[4] *nekku,* பெ. (n.) தள்ளு; push, thrust. *அவனை ஒரு நெக்கு நெக்கினான்* (உ.வ.).

[நெருக்கு → நெக்கு]

நெக்கு[5] *nekku,* பெ. (n.) 1. நெகிழ்ச்சி (வின்.); being soaked, as the ground after rain; relaxing, dissolving. *இந்த மழையால் வீட்டின் மேல்தளம் நெக்கு விட்டுள்ளது.* 2. உடைந்து விள்ளுகை (யாழ்.அக.); being broken to pieces. *விழா மேடை நெக்கு விட்டுள்ளது.*

[நெகு → (நெகிழ்) → நெக்கு]

நெக்குடை–தல் *nekkuḍai-,* 2 செ.கு.வி. (v.i.) 1. நெகிழ்ந்துருகல்; warning as from love. *நண்பர் கதையைக் கேட்டதும் இவர் நெக்குடைந்துவிட்டார்.* 2. மனமுடைதல்; dejected in mind. (சா.அக.). *துன்பச்செய்தியால் அவர் மனம் நெக்குடைந்து போயிற்று.*

மறுவ. நெக்குருகுதல்

[நெக்கு + உடை – நெக்குடை → நெக்குடை–தல்.]

நெக்குண்டி *nekkuṇḍi,* பெ. (n.) வெண்ணொச்சி; white nochy, Vitex negundo. (சா.அக.).

நெக்குருகு–தல் *nekkurugu-,* 5செ.கு.வி. (v.i.) அன்பால் நெஞ்சம் இளகுதல்; to melt, as the heart in love. "*நெஞ்ச நெக்குருகும்*" (திருக்கோ.192). *கடவுள் வணக்கப் பாடலை நெக்குருகப் பாடினார். பாடலைக் கேட்டு நெஞ்சம் நெக்குருகி நின்றார்.*

[நெகு → நெக்கு + உருகு –தல். நெக்குருகுதல் = மனம் நெகிழ்தல், உருகுதல்.]

நெக்குரோதம் *nekkurōdam,* பெ. (n.) ஆலமரம்; baniyan tree - Ficus bengalensis. (சா.அக.).

நெக்குவிடு[1]–தல் *nekku-viḍu-,* 20செ.கு.வி. (v.i.) 1. பிளவுபடுதல்; to be broken, cracked. "*நெட்டிருப்புப் பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும்*" (நல்வழி.33). 2. பொருத்துவாய் விடுதல்; to part at the joint, as wood-work.

[நெகு → நெக்கு + விடு–தல்.]

நெக்குவிடு²—தல் *nekku-viḍu-*, 20செ.கு.வி. (v.i.) காதலால் மனந் தளர்தல்; going or getting dejected as from love. *அவள் சொன்ன சொல்லைக் கேட்டதும் நண்பன் மனம் நெக்குவிட்டுப் போயிற்று.* (சா.அக.).

[நெக்கு + விடு—தல்.]

நெகல் *negal*, தொ.பெ. (vbl.n.) **1.** பழுத்தல், கனிதல்; ripening. **2.** உடைதல்; breaking, opening. (சா.அக.).

[நெகு + அல் — நெகல். அல் லீற்றுத் தொழிற்பெயர்]

நெகவரை—த்தல் *nega-v-arai-*, 4 செ.குன்றாவி. (v.t.) மாவாக அரைத்தல்; to grind very fine.

[நெகு + அரை — நெகவரை → நெகவரை—த்தல்]

நெகிடி *negiḍi*, பெ. (n.) நெருப்புக்குவை; fire lighted to give warmth or keep off wild beasts. "*மதயானை... நெகிடிக்கெனப் பெரிய கட்டை மிகவேந்தி*" (தாயு.மௌனகுரு.7).

தெ. நெகடி

[நெகிழ்² → நெகிடி]

பொருட்களை நெகிழவைக்கும் இயல்புடையது நெருப்பு.

நெகிழ்¹—தல் *negiḻ-*, 2செ.கு.வி. (v.i.) **1.** பிணைப்புத் தளர்தல்; to become loose. "*கவவுக்கைந் நெகிழ்ந்தமை போற்றி*" (அகநா.26). "*நெகிழ்ந்து சோர் பூந்துகி ளோக்கி நோக்கியே*" (சீவக. 1004). *வேட்டி நெகிழ்ந்து விடாதிருக்க வார்ப்பட்டையைக் கட்டிக் கொண்டார். கட்டு நெகிழ்ந்திருந்ததால் மாடு ஓடிவிட்டது.* **2.** நழுவுதல்; to slip off, as a garment. "*எல்வளை நெகிழ்போ டும்மே*" (ஐங்குறு.20). *திருகாணி கழன்று காதிலிருந்து காதணி நெகிழ்ந்து கீழே, விழுந்து விட்டது.* "*கோடீரிலங்குவளை நெகிழ நாடொறும்*" (குறுந். 11.). **3.** நிலைகுலைதல்; to be injured, ruined. "*நாளினு நெகிழ்போடு நலனுட னிலையுமோ*" (கலித்.17). **4.** பூ மலர்தல்; to expand, blossom. "*காவியுங் குவளையு நெகிழ்ந்து*" (சூளா.நாட்.5). **5.** குழைதல் (சூடா.); to become soft and mashy, as overboiled rice; to lack cohesion, as earth wet by rain. **6.** இளகுதல்; to melt. "*சேவடி நோக்கி விரும்பியுண் ணெகிழ*" (கூர்மபு. பிரமவிஷ்ணு.16). **7.** மனமிரங்குதல் (வின்.); to relent, as the heart in pity. *அவரின் கெஞ்சலில் நெகிழ்ந்து உதவி செய்ய வந்தார். எனக்கு யாருமில்லை என்று கூறும்போதே குரல் நெகிழ்ந்துவிட்டது.* **8.** மெலிதல்; to grow lean and weak. "*மென்றோ ணெகிழ விடல்*" (கலித்.86). "*வேய்மருள் பணைத்தோ ணெகிழச் சேய்நாட்டு*" (அகநா. 1:8). "*நீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே*" (அகநா. 82:18). **9.** வெட்டுதல் முதலியவற்றிற்கு ஏற்றதாதல்(வின்.); to give way, yield, as to the axe in cutting. **10.** கண்ணீர் முதலியன பொசிதல் (வின்.); to exude, flow out, as tears from the eyes as milk from the breast. **11.** பொடியாதல் (வின்.); to be reduced to powder.

[நெகு → நெகிழ் → நெகிழ்—தல்.]

துன்பத்தால் மனம் நெகிழ்ந்து துயரக்கண்ணீர் வடித்தலும், இன்பத்தால் நெகிழ்ந்து பேரின்பக் (ஆனந்த) கண்ணீர் வடித்தலும் மாந்தர் பண்பு.

நெகிழ்²—தல் *negiḻ-*, 2செ.குன்றாவி. (v.t.) நீங்குதல் (வின்.); to forsake.

[நெகு → நெகிழ் → நெகிழ்—தல்.]

நெகிழ்³–த்தல் *negil-*, 4செ.குன்றாவி. (v.t.) 1. தளர்த்துதல்; to make loose, to relax. "*செறிவளை நெகிழ்த்தோன்*" (ஐங்குறு.199). 2. மலர்த்துதல்; to cause to expand or open, as a blossom. 3. பிரித்தல்; to separate, detach. "*மும்மலங்க ளென்னும் வல்லிய மாமனெ கிழ்த்து*" (மருதூரந்.91). 4. நசுக்குதல் (வின்.); to crush, bruise. 5. எய்தல்; to discharge as an arrow. "*தொடை நெகிழ்த்தலில்*" (கம்பரா.கும்பகர்ணன்.215).

[நெகு → நெகிழ் → நெகிழ்–தல்.]

நெகிழ்கறியமுது *negil-kari-y-amudu*, பெ. (n.) குழம்பு (மாலியம்); curry broth.

[நெகிழ் + கறி + அமுது]

நெகிழ்ச்சி[1] *negilcci*, பெ. (n.) 1. தளர்ச்சி, தளர்கை(வின்.); loosening, slackening. "*நோயும் நெகிழ்ச்சியும் வீடச் சிறந்த*" (நற். 82:1). 2. மன மிரங்குகை; tenderness of feeling. "*அவன் பக்கலிலே நெகிழ்ச்சி யில்லை*" (ஈடு.9.1:3). ***கணவனின் அன்பான பேச்சைக் கேட்டு மனைவி நெகிழ்ச்சி அடைந்தாள்.***

[நெகிழ் → நெகிழ்ச்சி.
நெகிழ்தல் = தளர்தல்.]

நெகிழ்ச்சி[2] *negilcci*, பெ. (n.) காதில் வரும் புண்கட்டி (குஞ்சை); abscess in the ear.

[நெகிழ் → நெகிழ்ச்சி.]

நெகிழ்த்து–தல் *negilttu-*, 5செ.கு.வி. (v.i.) 1. அவிழ்த்தல்; untie, unbind. 2. உருக்கல்; to melt. 3. நீக்கல்; to removal. 4. நசுக்கல்; crush, bruise. 5. பிரித்தல்; detach. 6. மலர்த்தல்; to cause to expand or open as a blossom. 7. ஆடை அணிந்திருப்பதில் அல்லது பிடிப்பில் உள்ள இறுக்கத்தை தளர்த்துதல்; lossen a knot, etc. ***இடுப்பு வாரப்பட்டையை நெகிழ்த்திவிட்டுக் கொண்டு சாப்பிட்டார்.***

[நெகிழ் → நெகிழ்த்து → நெகிழ்த்து–தல்.]

நெகிழ்ந்துபோ–தல் *negilndu-pō-*, 8 செ.கு.வி. (v.i.) *நெகிழ்தல்* பார்க்க; see *negil-*

[நெகிழ் → நெகிழ்ந்து + போ–தல்.]

நெகிழ்வு *negilvu*, பெ. (n.) 1. குறைவு; deficiency. 2. தளர்வு; loose. 3. பிரிவு; loosening. 4. மலருகை; unfold. 5. விட்டு நீங்குகை; left.

[நெகிழ் → நெகிழ்வு.]

நெகிழம்[1] *negilam*, பெ. (n.) *நெகிழி*[1] (வின்.) பார்க்க; see *negili.*

[நெகிழ் → நெகிழம்.]

†**நெகிழம்**[2] *negilam*, பெ. (n.) நெகிழும் தன்மையுள்ள பொருள்; plastic.

[நெகிழ் → நெகிழம். படைத். பாவாணர்]

நெகிழவரை–த்தல் *negila-v-arai-*, 4செ.குன்றாவி. (v.t.) நொய்மையாகவும், இளகும் படியாகவும் அரைத்தல்; grinding minutely so as to become loose and soft as medicine. (சா.அக.).

[நெகிழ் + அரை–த்தல்.]

நெகிழவாட்டு–தல் *negil̠a-v-āṭṭu-*, 5செ.குன்றாவி. (v.t.) *நெகிழவரை–த்தல்* பார்க்க; see negil̠a-v-ari-, (சா.அக.)

[நெகிழ் + ஆட்டு–தல். ஆட்டுதல் = ஆட்டி அரைத்தல்]

நெகிழி[1] *negil̠i*, பெ. (n.) காற் சிலம்பு(வின்.); tinkling foot-rings.

[ஞெகிழி → (நெகிழ்) → நெகிழி. ஞெகிழி = சிலம்பு.]

நெகிழி[2] *negil̠i*, பெ. (n.) நெருப்பு (அக.நி.); fire.

[ஞெகிழி = நெருப்பு. ஞெகிழி → நெகிழி]

நெகிழிசை *negil̠išai*, பெ. (n.) வல்லெழுத்து வராது மாற்றினவெழுத்தி னொன்றான் முடியுஞ் செய்யுள்; a kind of verse. *நெகிழிசை என்பது வல்லினம் விரவாது ஓரினத்தெழுத்தானே நெகிழத் தொடுப்பது* (தண்டி. பொது. 15 உரை).

[நெகிழ் + இசை]

எ.டு:

"பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"
(சம்பந்தர்தேவாரம்)

நெகிழியல்பொருள் *negil̠-iyal-poruḷ*, பெ. (n.) நீர்த்தன்மையுடைய பண்டம்; fluid. எ.டு. எண் நெய், வெண் நெய்.

[நெகிழ் + இயல் + பொருள்.]

நெகிழு–தல் *negil̠u-*, 5செ.கு.வி. (v.i.) *நெகிழ்–தல்* பார்க்க; see *negil̠-*.

[நெகிழ் – தல் → நெகிழு–தல்.]

நெகிளம்[1] *negiḷam*, பெ. (n.) *நெகிழி*[1] பார்க்க; see *negil̠i*[1].

[ஞெகிழம் → நெகிளம்]

நெகிளம்[2] *negiḷam*, பெ. (n.) இரும்பு; iron; soft iron. (சா.அக.).

[நெகிழ் → நெகிளம் = நெகிழக்கூடிய இரும்பு, தேனிரும்பு.]

நெகு–தல் *negu-*, 6செ.கு.வி. (v.i.) 1. கழலுதல்; to slip off. "*எனவளை நெக விருந்தேனை*" (திவ்.பெரியதி.8.5:9). 2. மனமிரங்குதல்; to relent, as the heart. 3. காதலால் உருகுதல்; to melt. "*என்பு நெகப் பிரிந்தோள்*" (தொல்.பொருள்.114). "*நெகுமன்பில்லை*" (திருவாச. திருச்சதக. 60.). 4. கரைதல்; to become soft, relaxed, loosened, soaked and ready to break. 5. பொடியாதல்(வின்.); to be ground well, macerated. 6. கெடுதல்; to be ruined, scattered, broken. "*மாறு படமலைந் தாய்ப் படை நெக்கது*" (சீவக.426). 7. வருந்துதல்; to suffer, to be distressed. "*இனிச்செயல் யாவதென வுள நெக்கார்*" (காஞ்சிப்பு.கயிலா.30).

கோத. நெக்; **தெ.** நெவ்வ

[நுல் (நோதல்) → நுள் → நொள் → நெள் → நெழு → நெகு → நெகு–தல் (வே.க.)]

நெச்சடி *neccaḍi*, பெ. (n.) *நெச்சி* (சங்.அக.) பார்க்க; see *necci*.

நெச்சி *necci*, பெ. (n.) கடுக்காய் (மலை.); gallnut.

நெசப்பாக்கம் *nešappākkam,* பெ. (n.) காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Kāñjipuram district.

[நெசவு + பாக்கம். நெசவுத் தொழில் மிகுதியாய் நடைபெறும் ஊர். நெயவு → நெசவு. ஒ.நோ. தோயை → தோசை]

நெசவாலை *neša-v-ālai,* பெ. (n.) துணி நெய்யும் ஆலை, தொழிற் கூடம்; weaving mill or factory.

[நெசவு + ஆலை]

நெசவாளர் *neša-v-āḷar,* பெ. (n.) துணி நெய்பவர்; weaver.

[நெசவு + ஆளர்.]

நெசவாளி *neša-v-āḷi,* பெ. (n.) **நெசவாளர்** பார்க்க; see *neša-v-āḷar.*

[நெய் → நெயவு → நெசவு. நெசவு + ஆளி. ஆள் + இ]

நெசவு *nešavu,* பெ. (n.) **1.** நெய்தற்றொழில்; weaving, act of weaving. *உழவும் நெசவும் இந்தியாவின் இரு கண்கள். பாய் நெசவு இவ்வூரில் அதிகம்.* **2.** நெசவின் இழை யமைப்பு(வின்.); texture, intertexture, web. *துணியின் நிறமும், நெசவும் அருமையிலும் அருமை.*

ம. நெய்க; *க.* நெயி; *தெ.* நேத.

[நெய் → நெயவு → நெசவு = தறியின் மூலம் நீள வாக்கிலும் குறுக்கு வாக்கிலும் நூலைச் செலுத்தி துணி நெய்யும் தொழில்.]

நெசவு : பயிரிகளின் (தாவரங்களின்) நார்களைப் பின்னி அதை உடைகளாகப் பயன்படுத்தப் புதிய கற்காலத்திலேயே மக்கள் கற்றனர். இதுவே நெசவின் தொடக்கம் எனலாம். பண்டைய எகிப்தியர் நார்நெசவுக் கலையில் வல்லவர்களாக இருந்தனர். கி.மு.2000ல் சீனர்கள் பட்டு நெய்ய வழி கண்டுபிடித்தனர். கிட்டத்தட்ட அதே காலத்தில் பருத்தி நூலைக் கொண்டு துணி நெய்ய இந்தியரும் கற்றனர்.

துணியின் நீள் வாட்டத்தில் ஓடும் நூல், பாவு நூல் (Warp) எனப்படும். குறுக்கு வாட்டத்தில் ஓடும் நூல், ஊடு நூல் (Weft) எனப்படும். பாவு நூலும் ஊடு நூலும் ஒன்றோடொன்று முறைப்படி பின்னுமாறு செய்வது நெசவு ஆகும். துணியை நெய்வதற்குப் பயன்படும் கருவி தறி எனப்படும்.

நூற்ற நூலைக் கொண்டு பாவுபோடுதல் நெசவில் முதற்படியாகும். கைத்தறி நெசவு முறையில், பாவுக்குப் பசைபோடுவது (sizing) உட்படப் பாவு போடுதல் கையினாலேயே செய்யப்படும். நெய்யும் போது நூல் அறாமல் இருக்கச் செய்யவே பசை போடுகிறார்கள். பாவுபோட, எந்திரங்களும் இருக்கின்றன. இழைகளை முறுக்கேற்றி, ஈறிழை நூலாக்கிய பின் அந்நூலைக் கொண்டு பாவுபோட்டால் பசைபோட வேண்டியதில்லை. ஊடு நூலைத் தார்க்குச்சியில் திட்டமான அளவு 'கண்டு' கண்டாகச் சுற்றி ஓடங்களில் (Shuttle) பயன்படுத்துவர்.

நெசவில் மூன்று வினைகள் முதன்மை யானவை. கையினாலோ, எந்திரத்தாலோ செய்த பாவு நூலைத் தறியிலேற்றிப் பாவு நூல் முனைகளை யகற்றுவதால் உண்டாகும் கூடு (shed) வழியே ஊடு நூல் உள்ள ஓடத்தை ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் செலுத்தி, இடையில் கூட்டிலகப்பட்ட ஊடு நூலைப் படத்தால் அடித்து நெசவு நெய்வர். இவ்வாறு ஊடு நூலை ஒவ்வொன்றாகச் செலுத்தி, நன்கு அடித்து நெருக்கமாக நெய்தால் நல்ல துணி கிடைக்கும்.

கைத்தறியில் மேசைத்தறி, குழித்தறி எனப் பலவகையுண்டு. ஓடத்தை கையினால் வீசுவதற்குப் பதிலாகக் கையினால் ஒரு கயிற்றைப் பிடித்திழுத்தால் ஓடம் தானாகவே ஒருபுறமிருந்து மறுபுறம் பறந்து செல்லுமாறு அமைத்துள்ளனர். இவ்வகை ஓடம் கண்டு பிடிக்கப்பட்டுப் பயனுக்கு வந்ததால் அகலமான துணி நெய்யவும், கைத்தறியில் வேகமாக நெசவு நெய்து துணிகளை உருவாக்கவும் முடிந்தது. "உடை பெயர்த் துடுத்தல்" என்பது தொல்காப்பியம் (மெய்.14). பருத்தி நெசவு முதன்முதல் இந்தியாவில்தான் செய்யப்பட்ட தென்றும், அங்கிருந்தே மேனாடுகளுக்குப் பரவிய தென்றும் வயவர் சாண்மார்சல் கூறுகிறார்

பண்டைக்கால வரலாற்றாசிரிய ரெல்லாம். மேனாடுகள் இந்தியாவினின்றும் இறக்குமதி செய்த

பொருள்களுள், துணி ஒன்றாகத் தவறாது குறிப்பிடுகின்றனர். 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை, இந்தியா வினின்றே மேனாடு கட்குத் துணி ஏற்றுமதியானமை, பின்வருங் குறிப் பினாலறியலாம்.

"தற்கால இந்தியாவின் வறுமைக்கு மற்றொரு பெருங்காரணம், ஐரோப்பாவில் பொறிவினைத் தோற்றத்தினாலும், திருந்திய முறைச் செய்பொருள் வினையின் பரவலினாலும் ஏற்பட்ட கைத்தொழில் தேவைக்குறைவே. ஐரோப்பா, இந்தியரின் சொந்தத் துறைகளில், இன்னும், எண்ணுக்கெட்டாத தொன்று தொட்டு எவற்றுக்கு அவர்களைச் சார்ந்திருந்தோமோ அவையும், அவர்களுக்கே விதப்பா யுரியவுமான கைத்தொழில்களிலும் செய்பொருள் வினைகளிலும், அவர்களை வெல்லக் கற்றுக் கொண்டதினால், உண்மையில் இனி யொருபோதும் எதற்கும் இந்தியாவைச் சார்ந்திருப்பதில்லை. உண்மையில் கருமங்கள் (காரியங்கள்) தலைகீழாய் மாறிவிட்டன. இவ்வெளிப்பாடு இந்தியாவை முற்றிலும் கெடுத்துவிடுவதாக அச்சுறுத்துகின்றது. ஐரோப்பாவிற்குத் திரும்புவதற்குச் சற்று முன்பே, கைத்தொழில் செய்யும் கூற்றங்களிற் சிலவற்றினூடு வழிச் சென்றேன். அங்குப் பரவியிருந்த பாழ்நிலைக்கு ஏதும் ஒப்பாகாது. வேலையறை களெல்லாம் சாத்தப்பட்டிருந்தன. அங்கே வாழும் இலக்கக்கணக்கான நெசவுத்தொழின் மக்கள் பசியால் மடிந்து கொண்டிருந்தனர். நாட்டிலுள்ள முன்றவற்றெண்ணம் (prejudice) பற்றி, அவர்கள் அவமானப்பட்டன்றிப் பிற தொழிலையும் மேற்கொள்ள முடியாது. முந்திய காலத்தில் நூல்நூற்றுத் தங்கள் குடும்பத்தைக் காத்து வந்த, கணக்கற்ற கைம்பெண்களும் பிற பெண்டிரும் வேலையிழந்து பிழைப்பற்றிருந்ததைக் கண்டேன். யான் எங்குச் சென்றாலும் ஒரே துன்பத்தோற்றம் எனக்கு எதிரே நின்றது" என்று 18ஆம் நூற்றாண்டில் மைசூர் நாட்டில் விடையூழியம் செய்த அப்பே டுபாய்ஸ் (Abbe Dubois) கூறுகின்றார். (Hindu Manners, Customs and Ceremonies, Ch. VI). கிரேக்க நாட்டு அறிஞர்கள் தமிழ்நாட்டினின்று மெல்லிய துணிகள் கணையாழிக்குள் திணிக்கப்பட்டுப் பெரு வாரியாக வருவதைத் தம் நாட்டு அரண்மனை மகளிர் வாங்குவதாகக் குறை கூறினார்களாம். பண்டைக் காலத்திற் பெண்டிர் நூல் நூற்றமையை நக்கீரர், கபிலர், பவணந்தி முதலியோருங் கூறியுள்ளனர். 'பருத்திப் பெண்டு' என்று புறநானூறு (125, 326) கூறும்.

"நூலினும் மயிரினும் நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து
நறுமடி செறிந்த வறுவை வீதியும்"

(சிலப்.14:205–7)

என்று இளங்கோவடிகள் கூறுவதால், பண்டைத் தமிழர் நெசவின் பெருமை விளங்கும்.

"மயிரினும்" என்பதற்கு *"எலிமயிரினாலும்"* என்று பொருள் கூறியுள்ளார் அடியார்க்கு நல்லார். மயிர் நிறைந்த ஒருவகை மலையெலி பண்டைத் தமிழ் நாட்டிலிருந்த தென்பதும், அதன் மயிரால் சிறந்த கம்பளம் நெய்யப்பட்ட தென்பதும்.

"புகழ்வரைச் சென்னிமேற் பூசையிற் பெரியன
பவளமே யனையன பன்மயிர்ப் பேரெலி"
(1898)

"செந்நெ ருப்புணுஞ் செவ்வெ லிம்மயி
ரந்நெ ருப்பள வாய்பொற் கம்பலம்" (2686)

என்று சிந்தாமணி கூறுவதா லறியப்படும். பலவகைத் துணிகள் பண்டைத் தமிழ்நாட்டில் நெய்யப்பட்டமை,

"துகில் (ஆடை): கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக்கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி" என 36 வகையென்று அடியார்க்குநல்லார் (சிலப். 14:108) கூறுவதினின் றறியலாம்.

"ஆவி யன்ன வவிர்நூற் கலிங்கம்" (பெரும்பாண்.469) என்பதினாலும், பாலாடைக்கும் பஞ்சாடைக்கும் ஆடையென்னும் பொதுப்பெயர் இருத்த லாலும், பாம்பு கழற்றிய மீந்தோல் சட்டையெனப் படுதலாலும், இக்காலத்திற் சூழ்ச்சியப் பொறியால் நெய்யும் நொய்ய ஆடை வகைகள் போன்றே, அக்காலத்திற் கைத்தறியால் தமிழர் நெய்து வந்தனர் என்பதறியப்படும். நெசவுபற்றிச் சில தமிழ்ச் சொற்கள் மேலையாரிய மொழிகளில் வழங்குகின்றன.

பன்னல் = பருத்தி. L. *punnus*, cotton, It. *panno*, cloth. கொட்டை = பஞ்சு. Ar. qutun, It. cotone, Fr. coton, E. cotton. கொட்டை நூற்றல் என்னும் வழக்கை நோக்குக. பருத்திக் காயினின்று கொட்டுவது கொட்டை. வேட்டி = ஆடை. L. vestis, Skt. வஸ்த்ர, E. vesture.

வெட்டுவது வேட்டி. ஒ.நோ: துணிப்பது துணி. அறுப்பது அறுவை. வேட்டியை வேஷ்டி என்று தமிழரே தவறாய் வழங்குகின்றனர். இது இன்னும் வடமொழிக்குட் புகவில்லை.

"*தடுக்கப் பழையவொரு வேட்டி யுண்டு*" என்று பட்டினத்தார் கூறுதல் காண்க. (திருத்தில்லை.17).

சேலை = (சீலை) நீண்ட அல்லது அகன்ற துணி. A.S. segel, E.Sail.

தச்சு = L. *texo*, E.*texture*, anything woven. தை + சு – தைச்சு – தச்சு. தச்சு = தைப்பு. தச்சு என்னும் பெயர் சரியானபடி நெசவுக் குரியதேனும், மரங்கொல்வேலைக்கு வழங்கி வருகின்றது. அதிலும் தைப்புத் தொழிலுள்ளமையின், வண்டியைத் தைக்க வேண்டும் என்று தச்சர் கூறும் வழக்கை நோக்குக. தைத்தல் பல வறுப்புகளை ஒன்றாயிணைத்தல். நெசவில் நூல்கள் ஒன்றாயிணைக்கப்படலும், தச்சில் வண்டியாயின் குறடு, ஆரை, சூட்டு என்னும் உறுப்புகளும், பெட்டி நாற்காலியாயின் பலகைகளும் கால்களும் ஒன்றாயிணைக் கப்படலும் காண்க.

நெசவுக்கலை *neṡavu-k-kalai,* பெ. (n.) பண்டைய கலைகளுள் ஒன்றான நெசவு; kind of ancient art weaving.

[நெசவு + கலை]

குளிர், வெப்பம், வெயில் முதலிய வற்றிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள மனிதன் விலங்குகளின் தோலை ஆடையாகப் பழங்காலத்தில் அணிந்தான். பின்னர் இலைகளையும், புல்லையும், நார்களையும் பின்னி ஆடையாகப் பயன்படுத்தக் கற்றான். இதுவே நெசவுக்கலையின் தொடக்கம் ஆகும்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பருத்தியிலிருந்து பஞ்சு எடுத்து, நூல் நூற்றுத் துணி நெய்யும் நெசவுக்கலை இந்தியாவில் தோன்றியது. திரிமணையில் பருத்தியை அரைத்துப் பஞ்சு வேறு கொட்டை வேறாகப் பிரித்துக் கையினால் நூல் நூற்றுக் கைத்தறியில் துணி நெய்து இந்தியர் நெசவுக் கலையை வளர்த்தனர். ஆட்டு மயிரைவிடச் சிறந்தவகை இழையை அளிக்கும் ஒருவகைச் செடிஇந்தியாவிலிருப்பதாகவும், அச்செடியிலிருந்து பெறப்படும் நாரினால் செய்த துணியை இந்தியர் பயன்படுத்து வதாகவும் 2,300 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய நூலில் கிரோடட்டசு (Herodotus) குறிப்பிடுகிறார். மிகவும் மெல்லிய மதிலின் துணி முதல் பாய்மரத்தில் பாயாகப் பயன்படும் தடித்த துணி வரையில் உள்ள பலவகையான துணிகளும் இந்தியாவில் செய்யப்பட்டன என்றும் அவர் கூறுகின்றார்.

வெளிநாட்டிலிருந்து இந்தியாவைப் பார்வையிட வந்த பயணிகள் (யாத்திரிகர்கள்) இந்தியர் பயன்படுத்திய துணி வகைகளைப் பற்றியும், சாளரங்களில் பயன்படுத்திய திரைகளைப் பற்றியும், போர்வைகள், கூடாரங்கள் பற்றியும் வியந்து கூறுகின்றனர். நெசவுக்கலையில் முதன் முதல் முன்னேறிய நாடு இந்தியா. இராட்டினம், கைத்தறி, முதலிய கருவிகளை யமைத்து நெசவுக் கலையை இந்தியர் வளர்த்தனர்.

நெசவுக்கலை இந்தியாவில் இருந்து சீனா பாரசீகம், எகிப்து முதலிய நாடுகளுக்குப் பரவியது. 10ஆம் நூற்றாண்டில் சீனாவிலும், 14ஆம் நூற்றாண்டில் இத்தாலியிலும், 17ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவிலும் இக்கலை பரவியது. 5000 ஆண்டுகட்குமுற்பட்ட மொகஞ்சதரோ நாகரிகக் காலத்திலேயே இந்தியாவில் நெசவுக்கலை இருந்ததாகத் தெரிகிறது. மொகஞ்சதரோவில் பளிங்காலும், சங்கினாலும், களிமண்ணாலும் செய்யப்பட்ட கதிர்கள் வீடுகள் பலவற்றில் கிடைத்துள்ளன. மறைகளிலும் (வேதங்கள்) நெசவு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மறைகளிலும் தொன்மங்களிலும் (புராணங்கள்) கடவுள் மெல்லிய ஆடைகளை அணிந்திருப்பதாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. பாரதம், இராமாயணம் போன்ற மறவனப்புகளில் (இதிகாசங்களில்) பருத்தி, கம்பளி, பட்டுத்துணி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கோயில்களிலும் குகைகளிலும் காணப்படும் ஓவியங்கள் பண்டைக்கால முதலே இந்தியாவில்நெசவுக்கலை முன்னேறி யிருந்ததைக் காட்டுகின்றன.

நெசவுக்காரர் *neṡavu-k-kārar,* பெ. (n.) *நெசவுக்காரன்* பார்க்க; *see neṡavu-k-kāraṉ.*

[நெசவு + காரர். காரன் → காரர்.]

நெசவுக்காரன் *nešavu-k-kāraṉ,* பெ. (n.) நெய்வோன் (உ.வ.); weaver.

[நெசவு + காரன்.

காரன் பின்னொட்டு இணைவது பிற்கால வடிவம்.

நெயவு → நெசவு + ஆளன் – நெசவாளன்.

நெசவு + காரன் – நெசவுக்காரன்

ஒ.நோ. செல்வன் = பணக்காரன்

அய்யன் + காரன் – அய்யங்காரன் → அய்யங்கார் *]*

நெசவுக்கூலி *nešavu-k-kūli,* பெ. (n.) நெய்த நூலிற்கு, துணிக்குக் கிடைக்கும் கூலி; wage for the weaved thread or cloth.

[நெசவு + கூலி]

பழங்காலத்தில் கூலமே சம்பளமாகத் தரப்பட்டுப் பின் காசு தரும் காலம் வந்துள்ளது. பொதுவுடைமை நாடுகளில் முன்பு கூலியாக அடையாள அட்டை தரப்பட்டுப் பிறகு பணம் தரும் பழக்கம் வந்ததாக வரலாறு கூறுகிறது.

நெஞ்சகம் *neñjagam,* பெ. (n.) மனம்; mind, heart. "*நெஞ்சக நைந்து நினைமினாடொறும்*" (தேவா.1173,1). "*அஞ்செவி நிறைத்து நெஞ்சகங் குளிர்பித்து*" (மணிமே.5:64).

[நெஞ்சு + அகம்]

இக்கால் உளவியலில் மூளை நடுவில் உள்ள 12 சோடி நரம்புகளில் 6 சோடி நரம்புகள் வலப்புறத்தில் அன்பு (மனம்) இயங்கவும், 6 சோடி நரம்புகள் இடபுறத்தில் அறிவு இயங்கவும் அமைந்துள்ளனவாகக் கூறப்படுகிறது. (மருத்துவக் களஞ்சியம்1). ஆயின் அக்காலத்தில் இன்பத்தாலும், துன்பத்தாலும் அரத்த ஓட்டம் மிகுதல் பற்றி மார்பில் மனவுணர்வு இருப்பதாகக் கருதப்பட்டுள்ளது

நெஞ்சடித்தல் *neñjaḍittal,* பெ. (n.) அச்சம் முதலியவற்றால் நெஞ்சாங்குலை (இதயம்) படபடக்கை; palpitation of the heart, as in fear.

[நெஞ்சு + அடித்தல். நெஞ்சாங்குலையின் இயக்கம் *]*

நெஞ்சடை–த்தல் *neñjaḍai-,* 4செ.கு.வி.(v.i.) 1. மூச்சுத் திணறுதல்; to suffocate. 2. தொண்டை அடைத்தல்; obstruction of throat as bronchitis. *அந்தச் செய்தியைக் கேட்டதும் அவனுக்கு நெஞ்சடைப்பது போலாயிற்று.*

[நெஞ்சு + அடை–த்தல்.]

நெஞ்சடைத்தல் *neñjaḍaittal,* பெ. (n.) மார்படைப்பு (இ.வ.); suffocation, obstruction in the chest.

[நெஞ்சு + அடைத்தல்]

நெஞ்சடைப்பான் *neñjaḍai-p-pāṉ,* பெ. (n.) 1. மாட்டுநோய் வகை; (மாட்டுவா.63); a kind of disease affecting cattle. 2. காய்ச்சல் நோய் வகை; (C.E.M.248); anthrax fever. 3. நுரையீரல் அழற்சியால் வரும் நெஞ்சடைப்பு நோய்; obstruction of chest as from inflammation of lungs. *நெஞ்சடைப்பான் நோயால் அவதிப்படுகிறான்.* (சா.அக.).

[நெஞ்சு + அடைப்பான்]

நெஞ்சடைப்பு[1] *neñjaḍaippu,* பெ. (n.) 1. மார்படைப்பு; obstruction in the chest. 2. மூச்சுத்திணறுகை; suffocation.

[நெஞ்சு + அடைப்பு]

நெஞ்சடைப்பு[2] *neñjaḍaippu,* பெ. (n.) பொதிபரியாமற் செய்யும் பயிர் நோய் (Rd.); blight affecting the seed-pod of growing. paddy.

[நெஞ்சு + அடைப்பு]

நெஞ்சடைவாதம் *neñjaḍai-vādam,* பெ. (n.) மூச்சுவிட முடியாதபடி மார்பை அடைக்கு மோர் வளி நோய். இது குலை (இதய) நோயால் நேரிட்டு மயக்கம், தொண்டைவலி முதலிய குணங்களைக் காட்டும்; a disease marked by paroxysmal throraxic pain with suffocation and syncope due to disease of the heart-Angina pectoris. (சா.அக.).

[நெஞ்சு + அடை + வாதம். Skt.வாதம் → த. வளிநோய்]

நெஞ்சம் *neñjam,* பெ.(n.) 1. மனம்;mind. "*தாமுடையநெஞ்சந் துணையல்வழி*" (குறள்,1299). "*நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்டு*" (அகநா2:12). "*மம்மர் நெஞ்சத்தெம்மனோர்க் கொருதலை*" (புறநா.53:7). "*அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே*" (குறுந்.40:5). "*மையல் நெஞ்சமொடு வயந்த மாலையும்*" (மணிமே.2:74). "*நெஞ்சமே மிஃதென்னை நின்மதி*" (அருட்பா.154:1). "*நெஞ்சேயுகந்த துணையெனக்கு*" (அருட்பா. 249:1). "*நெஞ்சங்கலங்கி நிறையாற்றுப் படுத்து நின்றார்*" (சீவக.1664). *நெஞ்சம் இந்த நிகழ்வை மறக்காது.* 2. அன்பு; love. "*முகம்நக் நட்பது நட்பன்று நெஞ்சகத் தகநக நட்பது நட்பு*" (குறள்,786).

ம. நெஞ்சு; *கோத.* நஞ்ச்; *துட.* நிச்; *குட.* நெஞ்ஞி; *கூ.* நிஞ்ச; *குவி.* லிஞ்ச.

[நெஞ்சு → நெஞ்சம் = உணர்வுகளின் உந்து விசைக் குருதியின் இருப் பிடமான நெஞ்சாம் குலை.]

நெஞ்சமுக்கம் *neñjamukkam,* பெ. (n.) தூக்கத்தில் மார்பை ஒருவர் அமுக்குவது போற் றோன்றி, அதனால் மூச்சுவிட முடியாமல் அச்சம், மயக்கம் முதலிய குணங்கள் உண்டாகும் நிலை; a feeling of oppression or suffocation during sleep accompanied by stupefying influence and intense anxiety, fear, horror etc.,- Night-mare. (சா.அக.).

மறுவ. அமுக்குப் பிசாசம்.

[நெஞ்சு + அமுக்கம்]

நெஞ்சழி[1]–தல் *neñjaḻi-,* 2 செ.கு.வி. (v.i.) 1. மனம் நிலை குலைதல்; to be unstrung, to be overwhelmed, as the heart with sarrow or fear. "*நெஞ்சழிவானை*"(கம்பரா. நிகும்பலை.11). 2. மதி மயங்குதல்; to lose consciousness, as from drunkenness; to faint, as from fear. 3. தன்னடக்கங் கெடுதல்; to lose self - control; to be overcome, as with lust.

[நெஞ்சு + அழி–தல்.]

நெஞ்சழி[2]–தல் *neñjaḻi-,*2 செ.கு.வி. (v.i.) ஏங்குதல்; pining, languishing. (சா.அக.).

[நெஞ்சு + அழி–தல்.]

நெஞ்சழுத்தம் *neñjaḻuttam,* பெ. (n.) 1. மன இறுக்கம்; hard heartedness. *அவனுக்கு நெஞ்சழுத்தம் அதிகம்; அதனால்தான் கொஞ்சங்கூட இரக்கம் யார் மீதும் காட்டுவதில்லை.* 2. நெஞ்சுறுதி; firmness of mind. *எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் இந்தக்காரியம் செய்வாய். எதற்கும் கலங்காத நெஞ்சழுத்தக்காரன். அவனுக்கு நெஞ்சழுத்தம் அதிகம்.*

[நெஞ்சு + அழுத்தம். பிறரைப் பற்றி அல்லது விளைவைப்பற்றிக் கவலையோ இரக்கமோ இல்லாத இறுக்கம்]

நெஞ்சறிசுட்டு *neñjaṟi-šuṭṭu,* பெ. (n.) சொல்லாற்குறியாது, மனத்திலுள்ள பொருளைக் குறிக்க வருஞ்சுட்டு (கலித். 140, உரை); a demonstrative term that is explicable only with a reference to the writer's or speaker's mind.

[நெஞ்சு + அறி + சுட்டு.]

நெஞ்சறிவிளக்கம் *neñjaṟiviḷakkam,* பெ. (n.) ஒரு நூல்; a book.

நெஞ்சறை[1] *neñjaṟai,* பெ. (n.) மார்பினுள்ளிடம் (C.E.M.); chest, thorax.

[நெஞ்சு + அறை]

கழுத்திற்கும் வயிற்றிற்கும் இடை யேயுள்ள பெட்டியைப் போன்ற பகுதி. இதற்குள் மூச்சுக்கருவி (நுரையீரல்); அரத்தோட்டக் கருவி (இதயம்) முதலிய உறுப்புக்கள் அமையப் பெற்றுள்ளன. அவைகள் பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு எலும்புகளாலும் முருந்துகளாலும் ஆக்கப் பட்டவை. இப்பெட்டி மேலே ஒடுக்கமாகவும், கீழே பருத்தும் இருக்கும். இப்பெட்டியின் முன்பக்கம் விலா முருந்தும், நெஞ்செலும்பும் இருக்கும்; பின்பக்கம் முதுகெலும்பு களும் பக்க விலா வெலும்புகளும் இருக்கும். (சா.அக.).



நெஞ்சறைக்குழி *neñjaṟai-k-kuḻi,* பெ. (n.) நெஞ்சுக்கூடு, மார்பிற்குள்ளிருக்கும் குழி; throaxic cavity, chest cavity, Venter medius. (சா.அக.).

[நெஞ்சறை + குழி.]

நெஞ்சறைசவ்வு *neñjaṟai-šavvu,* பெ. (n.) நுரையீரலைச் சூழ்ந்து மூடியுள்ள மெல்லிய தோல் (சவ்வு). இது நெஞ்சறையின் சுவருக்கு உள்ளுறையாகும்; the membrane lining the walls of the thoraxor chest, Pleara. (சா.அக.).

[நெஞ்சறை + சவ்வு. சவ்வு = மெல்லிய தோல்.]

நெஞ்சறைச்சுவர் *neñjaṟai-c-cuvar,* பெ. (n.) மார்பினுட்புறமுள்ள நான்கு பக்கச் சுவர்; the four sides called walls of the chest - Thoraxic wall. (சா.அக.).

[நெஞ்சறை + சுவர். சுவர் = தசையாலான சுவர் போன்ற அமைப்பு]

நெஞ்சறைப்புடைப்பு *neñjaṟai-p-puḍaippu,* பெ.(n.) மார்பின் நடுவில் புடைத்துக் காணும் பகுதி; bulging of the chest like a barrel. (சா.அக.).

[நெஞ்சறை + புடைப்பு]

நெஞ்சறைவலி *neñjaṟai-vali,* பெ. (n.) மார்பின் சுவருக்குக் காணும் வலி; pain in the chest wall - Thorocalgia. (சா.அக.)

[நெஞ்சறை + வலி. நெஞ்சறைத் தசையில் ஏற்படும் நோய்]

நெஞ்சன் *neñjaṉ,* பெ. (n.) 1. துணிவுடையோன்; bold, daring person. 2. செருக்குள்ளவன்; arrogant person.

[நெஞ்சு → நெஞ்சன்]

இன்பத்திலும், துன்பத்திலும் குருதியோட்டம் கூடுதல் ஆதலின் நெஞ்சுக்குள் நினைவோட்டம் இருப்பதாகவும், துணிவூட்டம் பெறுவதாகவும் பழங் காலத்தே நினைத்தனர்.

நெஞ்சாங்கட்டை *neñjāṅ-gaṭṭai,* பெ. (n.) 1. மார்பின் நடுவே முன்பக்கமாகக் காணப்படும் தட்டையான எலும்பு, மார்பெலும்பு; breast-bone. 2. எரியூட்டலில் பிணத்தின் நெஞ்சுப்பக்கமாக வைக்குங் கட்டை; log placed near the breast of a corpse in cremation. 3. கெடுதலான கருத்துரை (ஆலோசனை); conspiracy.

[நெஞ்சு + ஆம் + கட்டை]

நெஞ்சாங்குலை *neñjāṅgulai,* பெ. (n.) 1. மார்பு (வின்.); chest, breast. 2. இதயம் (இ.வ.); heart, 3. ஈரற்குலை (யாழ். அக); viscera, entrails. *நேற்று முதல் நெஞ்சாங்குலையை வலிக்கி(ற)து என்று பையன் சொல்லிக் கொண்டிருக்கிறான்.* 4. மார்புக்குழி (யாழ்ப்.); pit of the stomach.

[நெஞ்சு + ஆம் + குலை.]

நெஞ்சாங்குழி *neñjāṅ-guḻi,* பெ. (n.) தொண்டைக்குழி (வின்.); நெஞ்சுக்கும் வயிற்றுக்கும் இடைப்பட்ட நடுக்குழி; pit of the throat.

[நெஞ்சு + ஆம் + குழி.]

நெஞ்சாங்குற்றி *neñjāṅ-guṟṟi,* பெ. (n.) நெஞ்சாங்கட்டை பார்க்க; *see neñjan-gaṭṭai.*

[நெஞ்சு + ஆம் + குற்றி. குற்றி = எலும்பு, கட்டை.]

நெஞ்சாங்கொழுந்து *neñjāṅ-goḻundu,* பெ. (n.) நெஞ்சாங்குலை, 3. (மாட்டுவா.91.) பார்க்க; *see neñjāṅ - gulai, 3.*

[நெஞ்சு + ஆம் + கொழுந்து. கொழுந்து = இலை. இலைபோல் அகன்றிருக்கும் ஈரல்குலை. இது துண்டிக்கப்பட்டாலும் வளரும் தன்மையுடையது]

நெஞ்சார *neñjāra,* கு.வி.எ. (adv.) மனமார; wilfully. on purpose. "*நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்*" (உலகநீதி.2).

[நெஞ்சு + ஆர - நெஞ்சார. ஆர = நிறைய. மனமார வாழ்த்துதல். காலார நடத்தல்.]

நெஞ்சாரல் *neñjāral,* (பெ.) (n.) துன்பம், துயரம், sorrow, grief. தந்தை இறந்ததை எண்ணி எண்ணி நெஞ்சாராமல் புலம்புகின்றான்.

[நெஞ்சு + ஆரல்.]

நெஞ்சாறல் *neñjāṟal,* பெ. (n.) *நெஞ்சாரல்* பார்க்க; see neñjāral. "*இங்ஙனே கிடந்து நெஞ்சாறற் பட*" (ஈ.டு, 2. 3:4).

[நெஞ்சாரல் → நெஞ்சாறல். ர → ற திரிபு. ஒ.நோ. திரன் → திறன்.]

நெஞ்சு + ஆறல் எனப்பிரிப்பின் மனம் ஆறிய நிலையில் துன்பமற்ற நிலை குறிக்கப்படும். நெஞ்சாரல் என இடையின 'ர' கரம் நிற்பின் துயரம் மனம் முழுதும் நிரம்பி நிற்றலைக் குறிக்கும். சென்னைப் பல்கலைக்கழக அகர முதலியில் நெஞ்சாரல் என்னும் சொல் இடம் பெறவில்லை.

நெஞ்சிடி *neñjiḍi,* பெ. (n.) அச்சம் (பயம்), நோய் முதலியவைகளால் ஏற்படும் நெஞ்சின் துடிப்பு; palpitation of the heart as from fear disease etc. (சா.அக.).

[நெஞ்சு + இடி. இடி = நெஞ்சின் துடிப்பு]

நெஞ்சிடித்தல் *neñjiḍittal,* பெ. (n.) அச்சத்தால் இதயந்துடிக்கை (வின்.); throbbing of the heart from fear.

[நெஞ்சு + இடித்தல்]

நெஞ்சிலேதெண்டல் *neñjil-ē-deṇḍal,* பெ. (n.) நெஞ்சுநோவுகை (வின்.) ;affection of the breast, as by wind, spasm or cramp.

[நெஞ்சு + இல் + ஏ + தெண்டல்]

தெண்டல் = நரம்பு வலித்தல். நெஞ்சுப்பகுதியில்நரம்பு முதலியவற்றால் ஏற்படும் நோய்.

நெஞ்சிற்கட்டு—தல் *neñji-ṟ-kaṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) மார்பில் சளி கட்டுதல்; accumulation of phlegm in the chest. (சா.அக.).

[நெஞ்சில் + கட்டு—தல். மார்புப்பகுதியில் சளி இறுகித்தங்கி விடுதல்]

நெஞ்சிற்கட்டை *neñji-ṟ-kaṭṭai,* பெ. (n.) மார்பில் கட்டை போட்டது போல் சளி அடைத்துக் கொள்கை; feeling of obstruction in the chest due to accumulation of phlegm in the passage of respiration. (சா.அக.).

[நெஞ்சில் + கட்டை. சளியானது இறுகிக் கட்டியாகி மார்பில் தங்கிவிடுதல்]

நெஞ்சிற்கல் *neñjiṟkal,* பெ. (n.) 1. கவலை; anxiety. 2. துன்பம்; distress.

[நெஞ்சில் + கல். கல்நெருடல் போல் வலிமை மிகுந்த துன்பம் ஏற்படும்போது இருக்கும் நிலை]

நெஞ்சிற்கல்போட்டதுபோலிருத்தல் *neñjiṟ-kal-pōṭṭadu-pōliruttal,* பெ. (n.) ஊதை (வாயு)யினால் மார்பில் கல்போட்டது போல் கனதியாய் அடைத்துக் கொண்டு மூச்சுவிட முடியாமல் துன்புறுகை; a feeling of oppression in the chest as if a stone like lump rising or seated within the throrax. It is ascribed to the action of deranged vāyu. (சா.அக.).

[நெஞ்சில் + கல் + போட்டது + போல் + இருத்தல்]

நெஞ்சிற்பாரம் *neñjiṟ-pāram,* பெ. (n.) 1. தாங்க முடியாத சுமை; burdon or weight of responsibility oppressing the heart. 2. துயரம்; sorrow, grief.

[நெஞ்சு → நெஞ்சில் + பாரம்]

நெஞ்சின் மேல் சுமை ஏற்றியது போல் அதிகமான பொறுப்புகளாலும், துன்பத்தினாலும் அடையும் நிலை.

நெஞ்சிற்புகைதல் *neñjiṟ-pugaidal,* பெ. (n.) தொண்டைப் புகைச்சல்; irritation of the throat. (சா.அக.).

[நெஞ்சில் + புகைதல்.]

நெஞ்சினோவு *neñjiṉōvu,* பெ. (n.) நெஞ்சுநோவு பார்க்க; see *neñju-nōvu.*

[நெஞ்சில் + நோவு.]

நெஞ்சு *neñju,* பெ. (n.) 1. அன்பு செய்யும் மனம்; mind, conscience. "*தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்*" (குறள், 293.). "*மென் றோள் பெறனசைஇச் சென்றவென் னெஞ்சே*" (அகநா.9:26). "*நெஞ்சிருள் கூர நிகர்த்துமேல் விட்ட*" (சிலப் 6:10). "*சிதைந்த நெஞ்சிற் சித்திரா பதிதான்*" (மணிமே.பதி.35). *நெஞ்சு அறியப் பொய் சொல்லலாமோ? (பழ.). நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் இல்லை (பழ.).* 2. மனதிற்கிருப்பிடமானநெஞ்சாங்குலை (இதயம்); heart. *நெஞ்சு வலியால் துடிக்கிறார்.* 3. நெஞ்சாங்குலையுள்ள மார்பு; breast,

bosom, chest. *"தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ"* (தொல்.எழுத்து.83). *குழந்தையை நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.* **4.** நடு; centre, heart of a thing. *"குன்றினெஞ்சு பகவெறிந்த வஞ்சுடர் நெடுவேல்"* (குறுந்.1). *"இஞ்சியாக நெஞ்சுபோழ்ந்து"* (சிந்தா.நாம.114). **5.** திடாரிக்கம்; உறுதி; bravery, courage. *"நெஞ்சுளோ ரஞ்சும் வித்தை"* (திருவாலவா. 35:17). **6.** திண்ணக்கம் (இ.வ.); audacity, venturesomeness. **7.** தொண்டை; throat. *"படிறர் சொல்லெனக் கடுநெஞ் சிறைப்ப"* (கல்லா.16:6). **8.** மனச்சான்று; conscience. *"நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை"* (கொன்றை.54).

ம. நெஞ்சு; *கோத.* நஞ்ச்; *துட.* நிசு; *குட.* நெஞ்ஞி; *கூ.* நிஞ்ச; *குவி.* லிந்ச.

[நெய் → நெய்வு → நெய்ஞ்சு → நெஞ்சு (வே.க.) நெஞ்சு = கழுத்துக்குக் கீழும் வயிற்றுக்கு மேலும் உள்ள மார்புப் பகுதி.]

நெஞ்சுக்கட்டு *neñju-k-kaṭṭu,* பெ. (n.) **நெஞ்சுச் சளி** பார்க்க (உ.வ.); see *neñju-c-caḷi.*

[நெஞ்சு + கட்டு.]

நெஞ்சுக்கண்டரை *neñju-k-kaṇḍarai,* பெ. (n.) சிவப்பு அரத்தம் ஓடும் பெரிய குழாய்; aorta.

[நெஞ்சு + கண்டரை. கண்டரை = மூலநாடி; நல்ல அரத்தம் இதயத்திலிருந்து வெளியேறும் குழல்]

நெஞ்சுக்கபக்கட்டு *neñju-k-kaba-k-kaṭṭu,* பெ. (n.) *நெஞ்சுக்கட்டு* பார்க்க; see *neñju-k-kaṭṭu,* (சா.அக.).

[நெஞ்சு + Skt. கபம் + கட்டு]

நெஞ்சுக்கரகரப்பு *neñju-k-karakarappu,* பெ. (n.) **1.** மார்பில் ஏற்படும் ஓர் உணர்ச்சி; feeling, of a peculiar stimulating or inflammatory sensation in the chest. **2.** தொண்டை கரகரப்பு; irritation of the throat. (சா.அக.).

[நெஞ்சு + கரகரப்பு. கரகரப்பு = ஓர் உணர்வு]

நெஞ்சுக்கல் *neñju-k-kal,* பெ. (n.) மனத்தை உறுத்துவது (நாஞ்.); that which oppresses the mind.

[நெஞ்சு + கல்]

கல்போன்ற சுமை அல்லது துன்பம் மனத்தை உறுத்துவது.

நெஞ்சுக்குத்து¹-தல் *neñju-k-kuttu-,* 5செ.கு.வி. (v.i.) அன்னசத்து (அன்னரசம்) கேடுறுவதனால் வளி (வாயு) கோளாறடைந்து நெஞ்சில் பித்த சளியோடு சேர்ந்து மூச்சுவிடமுடியாது குத்தலுடன் துன்புறுதல்; a disease which the deranged bodily vayu aggrevated by the vitiated chyle and incarcerated in the region of the chest through the action of the other deranged humours as pitha and kapha there by giving rise to pin prick pain in the chest with difficulty of respiration. (சா.அக.)

[நெஞ்சு + குத்து. குத்து = ஊசி முதலியவற்றால் குத்துவது போன்ற வலி]

நெஞ்சுக்குத்து² *neñju-k-kuttu,* பெ. (n.) மார்பு வலி (உ.வ.); pain in the chest.

[நெஞ்சு + குத்து.]

நெஞ்சுக்குமட்டல் *neñju-k-kumaṭṭal,* பெ. (n.) தொண்டை குமட்டல்; nausia in the throat making an effort to vomit, retching. (சா.அக.)

[நெஞ்சு + குமட்டல். குமட்டல் = கக்கல் (வாந்தி) வருதல்; நிறைய உண்டதால் தெவிட்டல்; கக்குதல்]

நெஞ்சுக்குரிய *neñju-k-kuriya,* பெ.எ. (adj.) மார்பிற்குரிய; pertaining to the chest - Pectoral.

[நெஞ்சு + கு + உரிய]

நெஞ்சுக்குழி *neñju-k-kuḻi* பெ. (n.) மார்பின் பள்ளம்; pit of the stomach scrobiculous, Cordis Anticardium. (சா.அக.).

[நெஞ்சு + குழி. குழி = பள்ளம், வயிறு]

நெஞ்சுக்குறுகுறுப்பு *neñju-k-kuṟu-kuṟuppu,* பெ.(n.) **1.** மார்பில் சளி பிடிப்பால் ஏற்படும் கொறுகொறுப்பு ஒலி; respiratory sound heard in the chest-role. **2.** மூச்சுக் குழாயிலேற்படும் ஒலி; crackling sound heard or produced in the trachea (wind pipe) or the bronchus, Bronchial. **3.** இதயக் குறுகுறுப்பு; unnatural sound heard over the region of the heart. It may be hereditary or otherwise-Murmur. (சா.அக.)

[நெஞ்சு + குறுகுறுப்பு. குறுகுறுப்பு = ஒலிக்குறிப்பு.]

நெஞ்சுக்கூடு *neñju-k-kūḍu,* பெ. (n.) வயிற்றிற்கு மேலும் கழுத்திற்குக் கீழும் உள்ள உடற்பகுதி; thorax.

[நெஞ்சு + கூடு]

நெஞ்சுக்கோழை *neñju-k-kōḻai,* பெ. (n.) *நெஞ்சுச்சளி* பார்க்க (யாழ்.அக.); see *neñju-c-caḷi.*

[நெஞ்சு + கோழை. நெஞ்சிலே உண்டாகும் சளி. கோழை = குழகுழப்பான சளி.]

நெஞ்சுகரித்தல் *neñju-karittal,* பெ. (n.) **1.** உணவு மிகுதி முதலியவற்றால் உவட்டல்(வாந்தி)யுண்டாகும்படித் தொண்டை கரகரக்கை (வின்.); nausea, as from eating to excess or from eating acids or sweets. **2.** பொறாமை கொள்ளுகை (நெல்லை); enviousness.

[நெஞ்சு + கரித்தல்]

கரித்தல் = உறுத்தல். செரியாமையால் தொண்டையில் ஏற்படும் உறுத்தல்.

நெஞ்சுகரிப்பு *neñju-karippu,* பெ. (n.) **நெஞ்சுகரித்தல்** பார்க்க; *see neñju-karittal.*

[நெஞ்சு + கரிப்பு. கரிப்பு = கரகரப்பு உணர்வு]

நெஞ்சுகல—த்தல் *neñju-kala-,* 3செ.கு.வி. (v.i.) **1.** ஒருவரோடு கலந்துரையாடுதல்; to consult. **2.** மனமொன்றுபடுதல்; to agree, to be of one mind.

[நெஞ்சு + கல—த்தல்.]

நெஞ்சுகாய்தல் *neñju-kāydal,* பெ. (n.) **1.** நெஞ்சு வறளுகை (வின்.); becoming dry, as the breast in disease, causing thirst. **2.** மனஞ்சோர்கை; fainting, as the heart through sorrow or fear.

[நெஞ்சு + காய்தல்.காய்தல் = தாகத்தால் நெஞ்சு வரளுதல்; துன்பத்தால் மனம் சோர்தல்.]

நெஞ்சுச்சளி *neñju-c-caḷi,* பெ. (n.) நெஞ்சிற் கோழை உண்டாக்கும் நோய்; bronchitis, Bronchial catarah.

[நெஞ்சு + சளி]

நெஞ்சுத்தடிமன் *neñju-t-taḍimaṉ,* பெ. (n.) மார்புச்சளி; acute bronchitis attended with constant cough. (சா.அக.).

[நெஞ்சு + தடிமன்.
தடிமன் = சளி]

நெஞ்சுத்தடுமம் *neñju-t-taḍumam,* பெ. (n.) *நெஞ்சுச்சளி* (இ.வ.) பார்க்க; see *neñju-c-caḷi*

[நெஞ்சு + தடுமம். தடுமம் = நீர்க்கோர்வை (சலதோடம்). தடுமம் = கட்டிச்சளி]

நெஞ்சுத்தடுமல் *neñju-t-taḍumal,* பெ. (n.) நெஞ்சுச்சளி (நெல்லை) பார்க்க; see *neñju-c-caḷi.*

[நெஞ்சு + தடுமல்.
தடுமல் = நீர்க்கோவை (சலதோடம்).]

நெஞ்சுத்தடுமன் *neñju-t-taḍumaṉ,* பெ. (n.) நெஞ்சுச்சளி (நெல்லை) பார்க்க; see *neñju-c-caḷi.*

[நெஞ்சு + தடுமன்.

தடுமன் = நீர்க்கோவை (சலதோடம்).]

மார்பில் சளி இறங்கி, அதிகமான புகைச்சலோடு இருமலை உண்டாக்கும் நீர்க்கோவை நோய்.

நெஞ்சுத்திடுக்கம் *neñju-t-tiḍukkam,* பெ. (n.) மன நடுக்கம் (நாஞ்.); trembling of the heart. ***அச்செய்தியைக் கேட்டதும் நெஞ்சுத் திடுக்கென்றது.***

[நெஞ்சு + திடுக்கம். திடுக்கு + அம்– திடுக்கம் = திடுக்கிடுதல்]

நெஞ்சுத்திடுக்கிடு–தல் *neñju-t-taḍukkiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) அச்சத்தால் மார்பு துடித்தல்; agitation of mind through fear or disease. (சா.அக.) ***அந்த ஏதத்தை (விபத்தை)க் கண்டதும் நெஞ்சுத்திடுக்கிட்டது.***

[நெஞ்சு + திடுக்கிடு–தல்]

நெஞ்சுதட்டு–தல் *neñju-taṭṭu-,* 5செ.கு.வி. (v.i.) **1.** அறை கூவுதல்; to pat one's breast in defiance, as a challenge. **2.** தற்பெருமை கூறி மார்பு தட்டுதல்; to pat the breast in boast.

[நெஞ்சு + தட்டு–தல்]

இவ்வழக்கம் போரின் போது காணப்படும். பகையாளியை நோக்கி மார்தட்டும் வழக்கம், குடும்ப, குலச்சண்டைகளிலும் இன்றும் காணப்படுகிறது.

நெஞ்சுத்துடிப்பு *neñju-t-tuḍippu,* பெ. (n.) இதயமடிக்கை; palpitation of the heart.

[நெஞ்சு + துடிப்பு]

இதயம் = நெஞ்சாங்குலை.
நெஞ்சாங்குலையின் இயக்கம், துடிப்பு.

நெஞ்சுத்துணிகரம் *neñju-t-tuṇikaram,* பெ. (n.) நெஞ்சுத் துணிவு பார்க்க; see *neñju-t-tuṇivu.*

[நெஞ்சு + துணிகரம்.
துணிகரம் = மிகுதுணிவு. ஒ.நோ. பயங்கரம்.]

நெஞ்சுத்துணிவு *neñju-t-tuṇivu,* பெ. (n.) மன வலிமை (உ.வ.); boldness of heart, bravery, intrepidity. *அவளுக்கு நெஞ்சுத் துணிவு அதிகம்.*

[நெஞ்சு + துணிவு.]

நெஞ்சுதுடித்தல் *neñju-tuḍittal,* பெ. (n.) **1.** இதயந்துடிக்கை; throbbing of the heart. *மனிதனின் ஒரு நிமய நெஞ்சு துடிப்பு 72 முதல் 76 வரை இருக்கும்.* **2.** இரக்கப்படுகை; sympathising with one in affliction. *இரக்கமற்ற அவன் செயலைப் பார்த்து நெஞ்சு துடிக்கிறது.*

[நெஞ்சு + துடித்தல்.
துடித்தல் = நெஞ்சின் இயக்கம்]

நெஞ்சுதுடிப்புக்கேடு *neñju-tuḍippu-k-kēḍu,* பெ. (n.) மார்பின் துடிப்புக் கோளாறு; irregularity or lack of rhythum in the heart's action - Arrhythmia cordis. (சா.அக.).

[நெஞ்சு + துடிப்பு + கேடு.]

மார்புத் துடிப்பில் ஏற்படும் இயக்க வேறுபாடு. துடிப்பு எண்ணளவு கூடியோ குறைந்தோ இருக்கும்.

நெஞ்சுநாளம் *neñju-nāḷam,* பெ. (n.) **1.** மார்பிலோடும் நாளம்; veins in the region of the chest. **2.** இதய நாளம்; cardiac veins. **3.** நுரையீரல் நாளம்; veins of the lungs - Pulmonary veins. (சா.அக.).

[நெஞ்சு + நாளம்]

நெஞ்சுநெஞ்சென்றுகுத்து—தல் *neñju-neñjeṉṟu-kuttu-,* 5செ.கு.வி. (v.i.) இழவு நிகழ்வின் போது விரல் நுனிகளால் மார்பிற் குத்திக் கொள்ளுதல் (வின்.); to strike the breast repeatedly with the tips of the fingers in bewailing the dead. *இழவு வீட்டில் அவள் தன் மார்பில் நெஞ்சு நெஞ்சென்று குத்திக் கொண்டாள்.*

[நெஞ்சு + நெஞ்சு + என்று + குத்து—தல்]

நெஞ்சுநேர்தல் *neñju-nērdal,* பெ. (n.) நெஞ்சிளைக்கை; emaciation of chest. (சா.அக.).

[நெஞ்சு + நேர்தல்]

நோயின் காரணமாக நெஞ்சு இளைத்தல்.

நெஞ்சுநோ *neñju-nō,* பெ. (n.) நெஞ்சுக்குத்து (வின்.) பார்க்க; see *neñju-k-kuttu.*

மறுவ. நெஞ்சுநோவு, நெஞ்சுநோய்.

[நெஞ்சு + நோ. நோவு → நோ]
நெஞ்சின் கண் ஏற்படும் குத்தல் நோய்:

நெஞ்சுநோய் *neñju-nōy,* பெ. (n.) மார்பு நோய்; diseases in general of the chest.

மறுவ. நெஞ்சகநோய்

[நெஞ்சு + நோய்.]

மார்பின் கண் ஏற்படும் அனைத்து நோய்களும் நெஞ்சு நோய் என்று அழைக்கப்படும்.

தாம்பரத்தில் உள்ள மாரடைப்பு நோய் நீக்கும் மருத்துவமனைக்கு நெஞ்சக நோய் மருத்துவமனை என்பது பெயர்.

நெஞ்சுநோவு *neñju-nōvu,* பெ. (n.) **1.** நெஞ்சுக்குத்து பார்க்க; see *neñju-k-kuttu. நெஞ்சு நோவால் துயரப்படுகிறாள்.* **2.** மனத் துயர்; grief. *நெஞ்சு நோவு அவளை வதைக்கிறது.*

[நெஞ்சு + நோவு]

நெஞ்சுப்பள்ளம் *neñju-p-pallam,* பெ. (n.) மார்புக்குழி (வின்.); pit of the stomach. *அவனுக்கு நெஞ்சுப் பள்ளம் அதிகம்.*

[நெஞ்சு + பள்ளம்]

நெஞ்சுப்புண் *neñju-p-puṇ,* பெ. (n.) தொண்டையில் ஏற்படும் புண் (M.L.); sore throat. *நெஞ்சுப்புண்ணால் அவனால் சரியாகச் சாப்பிட முடியவில்லை.*

[நெஞ்சு + புண்]

தொண்டையில் இருந்து இரைப்பை வரை உண்டாகும்புண்.

நெஞ்சுபக்கிடுதல் *neñju-pakkiḍudal,* பெ. (n.) மனத்தில் திடுமென அச்சம் முதலியன தாக்குகை (வின்.); being struck with sudden fear or grief. *அவன் கூறிய செய்தியைக் கேட்டதும் நெஞ்சு பக்கென்றாயிற்று. அந்த ஏதத்தை (விபத்தை)க் கண்டதும் நெஞ்சுபக் கிட்டது.*

[நெஞ்சு + பக்கிடுதல்]

நெஞ்சுபதறு—தல் *neñju-padaṟu-,* 5செ.கு.வி. (v.i.) மனம் நடுக்குறுதல்; to be agitated in mind. **அவன் செய்த செயலைப் பார்த்ததும் நெஞ்சு பதறுகிறது.**

[நெஞ்சு + பதறு—தல்.]

நெஞ்சுபுகைதல் *neñju-pugaidal,* பெ. (n.) கோழையின்றி இருமுகை (நெல்லை); dry cough. *அவள் இரவு முழுமையும் நெஞ்சு புகைச்சலால் துன்பப்பட்டாள்.*

[நெஞ்சு + புகைதல்]

நெஞ்சுபுண்ணா—தல் *neñju-puṇṇā-,* 6 செ.கு.வி. (v.i.) 1. மனம் வருந்துதல்; to be distressed or wounded at heart. *"காயகற்பந்தேடி நெஞ்சு புண்ணாவர்"* (தாயு.பரிபூரணா.10). *அவன் பேசிய பேச்சைக் கேட்டு நெஞ்சு புண்ணாகிறது.* 2. தொண்டை புண்ணாதல் (வின்.); to have sore throat. *கார மிகுதியால் நெஞ்சு புண்ணாகிறது.*

[நெஞ்சு + புண்ணா—தல்.]

நெஞ்சாங்குலையில் அன்பு இருப் பதாகவும், மூளையில் அறிவு இருப்பதாகவும் அறிவியல் வெளிச்சம் பரவிய 200 ஆண்டுகளுக்குமுன் உலகமொழிகள் அனைத்திலும் இலக்கியங்கள் இயம்புகின்றன. இக்கால் மூளையின் வலப்புறம் அன்புநரம்பு என்றும் இடப்புறம் அறிவு நரம்பென்றும் மருத்துவ அறிவியல் கூறுகின்றது.

நெஞ்சுமருந்து *neñju-marundu,* பெ. (n.) மார்பு, நுரையீரல் முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் மருந்து; medicine for complaints of the heart and lungs - Pectoral.

[நெஞ்சு + மருந்து]

நெஞ்சுரப்பு *neñjurappu,* பெ. (n.) நெஞ்சுரம், 1 பார்க்க; see *neñjuram,* 1. *"நெஞ்சுரப் போ வெனக்கிங் கினியா ருவமை யுரைப்பதற்கே"* (தனிப்பா.1, 140:32).

[நெஞ்சு + உரப்பு]

நெஞ்சுரம் *neñjuram,* பெ. (n.) 1. மனக்கடுமை (உ.வ.); hard heartedness. 2. மனவலிமை; boldness, courage. *கும்பகன்னன் நெஞ்சுரம் மிக்கவன். எவ்வளவு துன்பத்திலும் தன்நெஞ்சுரத்தை மட்டும் விட்டுக் கொடுக்காத மனிதர் இவர்.* 3. தடித்தனம் (உ.வ.); audacity. **நெஞ்சுரம் அதிகம் இருப்பதால் தான் யாரையும் மதிக்காமல் அடிதடியே தொழிலாக வைத்திருக்கிறான்.**

[நெஞ்சு + உரம் – நெஞ்சுரம் = எதற்கும் கலங்காத, எதையும் எதிர் கொள்ளத் தயங்காத மனவலிமை.]

நெஞ்சுருகு–தல் *neñjurugu-*, 5செ.கு.வி. (v.i.) மனமிளகுதல்; to melt, as heart. *"நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்குஞ் சோரும்"* (திவ். திருநெடுந்.12). *தேர்வில் வெற்றி பெற வேண்டும் என இறைவனை நெஞ்சுருகி வேண்டிக் கொண்டான்.*

[நெஞ்சு + உருகு –தல்
உருகுதல் = வெப்பத்தல் இளகுதல், மனநெகிழ்தல், மெலிதல்]

நெஞ்சுலர்–தல் *neñjular-*, 2செ.கு.வி. (v.i.) மார்புவற்றல்; dryness of the chest. (சா.அக.).

[நெஞ்சு + உலர்–தல்
உலர்தல் = காய்தல், வாடுதல்.
"உலர்ந்து போனே னுடையானே"
(திருவாச. 32:1)]

நாவறட்சி முதலிய கரணியங்களால் நெஞ்சுலர்தல்.

நெஞ்சுவட்டு–தல் *neñjuvattu-*, 5செ.கு.வி. (v.i.) குமட்டுதல்(வின்.); to feel nausea; to be sea-sick. *உண்ட உணவை நெஞ்சுவட்டி குமட்டல் செய்தான்.*

[நெஞ்சு + உவட்டு–தல்
உவட்டுதல் = குமட்டுதல்.]

நெஞ்சுவலி *neñju-vali*, பெ. (n.) **நெஞ்சுக்குத்து** பார்க்க (வின்.); see *neñju-k-kuttu.*

[நெஞ்சு + வலி]

நெஞ்சுவலியுறுத்தி *neñju-valiyurutti*, பெ. (n.) நெஞ்சாங்குலையை வலிமைப்படுத்தும் மருந்து; cordiac tonic. (சா.அக.).

[நெஞ்சு + வலியுறுத்தி. இ–சொல்லாக்க ஈறு. வலியுறுத்தி = வலுவை உண்டாக்குவது, மருந்து.]

நெஞ்சுவற்றல் *neñju-varral*, பெ. (n.) வறட்சியினால் நெஞ்சில் குழிவிழல்; pit of the stomach, depression of the chest through dryness. (சா.அக.).

[நெஞ்சு + வற்றல். வற்றல் = வடிகை, வறளுகை, நீர்வடிவதால் ஏற்படும் பள்ளம்]

நெஞ்சுவறட்சி *neñju-varatci*, பெ. (n.) **நெஞ்சுபுகைதல்** (வின்.) பார்க்க; see *neñju-pugaidal.*

[நெஞ்சு + வறட்சி. வறட்சி = நீர்ப்பசை யறுகை, உடல்வெப்பம், உடலை மெலியச் செய்யும் நோய்.]

நெஞ்சுவிடுதூது *neñju-vidu-tūdu*, பெ. (n.) **1.** மனத்தைக் காதலர்பால் தூது விடுவதாக அதனை முன்னிலைப் படுத்திக் கூறும் இலக்கிய வகை; a kind of poem in which the heart is personified and sent as a messenger to one's beloved. **2.** மெய்கண்ட (சாத்திரங்களில்) நூல்களில் ஒன்றும், உமாபதி சிவாசாரியார் இயற்றியதுமான சிவக் கொண்முடிபு (சைவ சித்தாந்த) நூல்; a treatise of the šaiva šiddhanda philosophy by Umapati-šivā-cāriyar, one of 14 Meykanda-cāttiram.

[நெஞ்சு + விடு + தூது]

நெஞ்சுவிடு தூது : தூது நூல்களுள் ஒன்று. உள்ளத்தைக் காதலர் பால் தூது விடுவதாக அதனை முன்னிலைப்படுத்திக் கூறும் சிறு நூல். அகத்துறைச் செய்யுட்களில் ஒன்றாக முன்னர்த் தனிச் செய்யுளாக இருந்தது. பிற்காலத்தில் ஒரே நூலாயிற்று.

சிவ கொண்முடிபு நூல்கள் பதினான்குள் நெஞ்சுவிடுதூது 12ஆம் நூலாக அமைகிறது. இந்நூல் நெஞ்சைத்தூதாக அனுப்பியது பற்றிக் கூறுகிறது. மன்னன் ஒருவன் மற்றோர் மன்னனுக்கு ஒருவர்

வாயிலாகத் தூது சொல்லியனுப்புவது பண்டைக்காலம் முதல் இருந்து வந்த பழக்கமாகும். அதியமான் என்ற அரசன் தொண்டைமான் என்பவனுக்கு ஒளவையாரைத் தூது அனுப்பிய செய்தி புறநானூற்றால் தெரியவருகிறது. போர் முதலிய கரணியங்களுக்காக அரசர்களிடையே இருந்த இந்தப்பழக்கம், இலக்கியத்தில் கற்பனையாக அமையும் போது சிலவகை வடிவம் பெற்றது. புலவர் பிசிராந்தையார் பாண்டிய நாட்டுப்புலவர். அவரின் நண்பன் சோழநாட்டு அரசன் கோப்பெருஞ்சோழன். சோழனைப் பாராட்டிப் பாட வேண்டும் என்று விரும்பிய புலவர் வடக்கே சோழநாட்டை நோக்கிப் பறந்த ஓர் அன்னப்பறவையை நோக்கிக் கற்பனையாகப் பாடியுள்ளார். இவ்வாறு பேசாத பறவை விலங்குகளையும், உயிரில்லாத முகில், காற்று, முதலியவற்றையும் தூது அனுப்புவதாகக் கற்பனை செய்து பாடுவதாய் காதல் பாட்டுகளில் மிகுதியாகக் காணப்படுகிறது. பழந்தமிழ் இலக்கியமாகிய கழக(சங்க)ப் பாடல்களிலேயே இத்தகைய காதல் தூது அமைந்த பாட்டுகள் சில உள்ளன. காதல் துறையில் அமைந்த பாட்டுகளை ஒட்டிப் பிற்காலத்துப் பத்திமை இலக்கியத்திலும், கடவுளிடம் தூது அனுப்பும் முறையில் ஆழ்வார் நாயன்மார்கள் பல பாடல்கள் பாடியுள்ளனர். தேவாரத்திலும், திருவாசகத்திலும், நாலாயிரத் தெய்வப் பனுவலிலும் உள்ள அந்தத் தூதுப் பாடல்கள் பத்திமைச்சுவை நிரம்பி உருக்கமாக அமைந்துள்ளன. குயில், அன்றில், புறா, வண்டு, கிளி, நாரை, முதலிய பறவைகள் பத்திமையாளரின் தூது பற்றிய கற்பனைக்குப் பயன்பட்டுள்ளன.

பெரிய பாவியங்களிலும் காதலர்கள் தூது அனுப்புவதாகப் பாடும் பகுதிகள் உள்ளன. உமாபதி சிவாச்சாரியார் என்னும் சிவ சமயத்துச் சான்றோர் தம்நெஞ்சையே தூது அனுப்புவதாகப் பாடியது 'நெஞ்சுவிடு தூது' என்னும் நூல்.

தூது இருவகைப்படும். அகப்பொருள் பற்றியது, புறப்பொருள் பற்றியது. நெஞ்சு விடு தூது ஆன்மீகம் பற்றிக் கூறுவதால் புறப்பொருள் பற்றியது.

தூது இலக்கணம்

நற்குடியில் பிறந்தவனாகவும், அனைத்துக்கலைகளையும் அறிந்தவனாகவும், கண் சிமிட்டுதல் முதலிய சாடைகள், சிட்டிகைப் போடுதல் முதலிய செய்கைகள் இவற்றினைக் கண்டறிபவனாகவும், பொருள் விருப்பில்லாதவனாகவும், திறமையுடைய வனாகவும், நற்குலத்தில் பிறந்தவனாகவும் இருப்பவன் தூதனாவான். அத்தூதன் அனைவரையும் நேசிப்பவனாகவும் அன்புள்ள வனாகவும், நினைவாற்றல் உள்ளவனாகவும், உலக நடப்பு அறிந்தவனாகவும், உடல் வலிமை உள்ளவனாகவும், பயமில்லாதவனாகவும், பல மொழிகளைப் பேசுபவனாகவும், பகைவர் இடத்தில் மறைந்து சென்று அவன் செய்கை, எண்ணம், அவன் படையின் எண்ணம், வலிமை, ஆசை இவைகளை அறிபவனாகவும், பகைவனிடம் சென்று அவன் செய்கைகளை அறியுமிடத்துத் தனக்குத் தீங்குநேராது தப்பித்துக் கொள்பவனாகவும் இருத்தல் வேண்டும். இவ்வகைத்தூதன், தான் வகுத்துக் கூறுவான், கூறியது கூறுவான் என இருவகைப்படுவான். பின்னும் வேற்றரசர் பால் சென்று பேசும் பொழுது தன் செயல்களைத் தொகுத்துச் சொல்லி அவனுக்கு ஆகாத செயல்களை அறிவிக்கும் இடத்துக் கொடுஞ்சொற்களை நீக்கி, நகை விளைக்கும் சொற்களைக் கூறியும், தான் எடுத்த செயலைப் பகைவர் மனங்கொளக்கூறி அவர் சினங்கொளினும் அஞ்சாது காலத்தோடு பொருந்த அது முடிக்கத்தக்க வழி அறிபவனும், பகைவரிடம் செல்லுங்காலம், சென்றகாலம், செல்லும் இடம் அறிந்து தாம் கூறப்போம் செய்தியை முன்னே உசாவியறிந்து உரைப்பவனும், பகையரசரது அமைச்சர்களைத் தம் வயமாக்கும் வன்மை உடையவனும் தூது கூறத்தக்கவனாவான். (மநு.)

வள்ளுவர் தூதுபற்றி ஒரு அதிகாரமே பாடியுள்ளார் (69)

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்துஅவாம்
பண்புடைமை தூதுஉரைப்பான் பண்பு" (குறள், 681)

" அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூது
உரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று" (குறள், 682)

"நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு" (குறள்,683)

"அறிவுஉரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு" (குறள்.684)

''தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது" (குறள், 685)

"கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவதாம் தூது" (குறள்,686)

"கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை" (குறள், 687)

"தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு" (குறள்,688)

*"விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்"* (குறள்,689)

*"இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது"* (குறள்,690)

தூது விடுக்கும் வாயில்களாகத் தொல்காப்பியம் கூறுவது:

*"ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் நுதலிய நெறியால் சொல்லுந
போலவும் கேட்குந போலவும் சொல்லியாங்கு
அமையும் என்மனார் புலவர்"*
(தொல். பொருள். செய்யுள். 198)

உமாபதி சிவம் (சிவாச்சாரியார்) திருவரலாறு:

உமாபதி சிவம் தில்லைவாழ் அந்தணரில் ஒருவர். இவர் காலம் கி.பி. பதினான்காம் நூற்றாண்டு என்பர். இவர் தில்லைச் சிற்றம்பலத்தின்கண் திகழும் அம்மை அம்பலவாணரைப் பூசை செய்யும் உரிமை யுடையவர். இவர் ஒருநாள் பூசை முடித்துப் பல்லக்கில் ஊர்ந்து குடை, கொடி, சின்னம், பகல் விளக்கு, முதலிய சிறப்புகள் முன்னே வர வந்து கொண்டிருந்தனர். அப்பொழுது சந்தான ஆசாரியர் நால்வருள் மூன்றாம் நிலையினராய் உள்ள மறைஞான சம்பந்தர் தெருவினில் நின்று கொண்டிருந்தார். அவர் இவர்தம் செலவினைக் கண்டு "பட்ட கட்டையிற் பகல்குருடு போகுது பாரீர்" என்று பகர்ந்தருளினர். அஃதாவது பட்ட மரத்தாலாகியது, பல்லக்கு. அதன்மேற் செல்பவன் பகலில் தீப்பந்தத்தின் துணைகொண்டு செல்லுவதால் பகல் குருடு என்பதாம். எல்லாரும் இரவில் விளக்கின் துணையினை வேண்டுவர்; இவர் பகலிலும் விளக்கின் துணையினை வேண்டுபவர்; இவர் பகலிலும் விளக்கின் துணை வேண்டுவதால் பகல் குருடு எனப்பட்டார்.

இதனைச் செவியுற்றதும் உமாபதி சிவம் பல்லக்கினின்றுங் கீழிறங்கினார். நடுக் கத்துடன் மறைஞான சம்பந்தர் திருவடியில் வீழ்ந்து வணங்கினார். தன்னை ஆட்கொண்டருளும்படி முறையிட்டார். ஆசிரியரும் இவர் தம் செவ்வி முதிர்வு நோக்கி ஏற்றருளினார். ஆசிரியர் முன்னே செல்ல இவரும் நீங்கா நிழல்போல் ஓங்கிய அன்பாற் பாங்குறப் பின் தொடர்ந்தார். ஆசிரியர் கைக்கோளர் தெருவிற் சென்றார். அவர்கள் நெசவுக்காக வைத்திருந்த கஞ்சியை வார்த்தனர். ஆசிரியரும் இருகையும் ஏற்று மகிழ்வொடு பருகினார். உமாபதி சிவனாரும் ஆசிரியர் முழங்கை வழியாக ஒழுகும் எச்சிற் கஞ்சியை மிக்க காதலொடுங் கை ஏற்றுப் பருகினார்.

ஆசிரியரும் சிவதீக்கை புரிந்து ஆதி மந்திரம் எனப்படும், அருந் தமிழ் மந்திரம் அஞ்செழுத்தைச் செவியறியுறூஉ எனப்படும் அறிவுரை புரிந்தருளினர். பல்லக்கை விடுத்தலும் நடந்து தொடர்தலும் ஆகிய இரண்டானும் எனது எனப்படும் உடைமை உடற்பற்றுகள் நீங்கின. எச்சில் மயங்கி அறிவுரை கேட்டு அடிமையாயினமையின் யான் எனப்படும் அகப்பற்று நீங்கிற்று. பின் *"சிவஞான போதம்"* எனப்படும் தனித் தமிழ் மெய் கண்ட நூலை அருளினார். பின் தம் ஆசிரியர் அருளிய "சிவஞான சித்தியாரை"யும் விளக்கியருளினார். இவ்விரு பெரு நூல்களையும் முறையே உயிரும் உடம்புமாகக் கொண்டுள்ளது, சிவக் கொண்முடிபு (சித்தாந்தச் சைவ நன்னெறி) என்று தலைமேற் கொண்டார்; கொண்டு ஓதினார். ஓதி "இவ்விரண்டு நூல்களையும் விரும்பி நோக்கிக், கருத்திலுறை திருவருளும் இறைவன் நூலும் கலந்து பொது உண்மையென" வகுத்துச் *"சிவப்பிரகாசம்"* என்னும் கொண்முடிபு (சித்தாந்த) நூலை அருளினார். இஃது அந் நன்னெறிக்கு உரை போன்றாகும்.

இந்நிலையில் தில்லைவாழந்தணர்கள், இவர் தனித்தமிழ் மெய்கண்ட சந்தானத்தைக் குருவாகக் கொண்டு திகழ்ந்தமையானும், *"சிவப்பிரகாசம்"* என்னும் தனித்தமிழ்ப் புடைநூல் இயற்றினமையானும் தங்கள் மரபுக்குப் புறம்பென நீக்கினர். இவரும் கொற்றவன்குடியில் திருமடம் அமைத்து வீற்றிருந்தருளினார். நன் மாணவர் பலர்க்கும் மெய்கண்ட நூல்களை நவின்றருளினார். திருமுறை வழியாக நாள்வழி பாடும் சிறப்பு வழிபாடும் புரிந்து வந்தார்.

அம்பலக் கூத்தனை அகந்தழீஇ ஒழுகுமிவர் தமக்குரிய பூசைமுறை வந்ததும், கால்நடையாக மாணவர் பலர் புடைசூழப் பொன்னம்பலம் வந்தார். வந்ததும், ஆங்குள்ள அந்தணர் இவரை மறுத்து விட்டார். இவரும் திருமடம் திரும்பினார். அந்தணரில் ஒருவர் பூசைபுரியத் தொடங்கினார். முதற்கண் செய்யப்படும் உடையவர் பூசைக்குரிய அழகிய சிற்றம்பலம் உடையாரைப் பேழையைத் திறந்து பார்த்தனர். அங்குக் காணப் பெறவில்லை. பெரிதும் நடுங்கினர். அருளொலியாக "உமாபதி சிவம் வந்தால் காணப்பெறும்" என ஒரு மொழி எழுந்தது. எல்லாரும் உமாபதி சிவத்தினிடம் வந்து அடிதொழுது வணங்கிப் பெரிதும் வேண்டினர். அவரும் வந்தார். அழகிய சிற்றம்பல முடையாரும் காணப்பெற்றார். முறைப்படி

திருமுறை வாயிலாக வழிபாடும் இயற்றி மீண்டனர்.

தில்லைமா நகரில் '*பெற்றான் சாம்பான்*' என்னும் நற்றவப் பேறுடையார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவப்பேறு எய்துங் காதலால் சிவத்தொண்டு புரிய உன்னினார். தாமும் மனைவியும் காட்டிற் சென்று விறகொடித்துக் கொண்டு வருவார். தம் சுமையைக் கூத்தப்பெருமான் திருமடைப் பள்ளிக்கு நல்குவார். மனைவியார் தம் சுமையை விற்று வந்து வாழ்க்கைக்குப் பயன்படுத்துவார். இவ்வாறு தொண்டு பல நாள் நிகழ்ந்து கொண்டிருந்தது. ஒருநாள் அம்பலவாணர் வெளிப்பட்டருளினார்; சாம்பனார்பால் செந்தமிழ்ச் சீட்டு ஒன்று அருளினார். அது வருமாறு:

"அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை"

இதனைப் பெற்ற அவர் அந்நாள் முதல் தம் விறகுத் தொண்டைத் திருமடத்துக்குப் புரிந்து வந்தார். இது "*படமாடுங் கோயிலைவிட, நடமாடுங் கோயில் சிறப்புடைத்து*" என்பதை நினைவுறுத்துவதாகும். பல நாள் செய்த தொண்டின் பின் ஒருநாள் மழை மி குதியால் தொண்டு முட்டுப்பட்டது. அதனால் திருமடத்தில் சமையல் தொண்டு சுணங்க நேர்ந்தது. இதனால் உமாபதி சிவனார்க்கு இச்செய்தி எட்டியது. அவர் சாம்பானாரைத் தம்முன் கொண்டுவரப் பணித்தா

மறுநாள் சாம்பனார் இரண்டு விறகுச் சுமையுடன் திருமடம் வந்தார். அடியவர்கள் திருவாணைவழிச் சாம்பனாரை முதல்வர் திருமுன் கொண்டு வந்து நிறுத்தினர். தொண்டனாரும் திருச்சீட்டை வைத்து வணங்கினார். முதல்வரும் சீட்டை உச்சி மேற்கொண்டு சிவதீக்கை புரிந்தருளினர். தீக்கைச் சிறப்பால் திருவருளின் துணையால் "*பெற்றான் சாம்பனாரும்*" உடனே திருவடிப்பேறெய்தினார்.

இதனை உணர்ந்த சாம்பனாரின் மனைவியார் தெளிவு பெறாமல் அரசன்பாற் சென்று முறையிட்டார். அரசன் சிறிதும் ஐயுறவு கொண்டிலன். எனினும் அம்மையாரைத் தெளிவிக்கும் பொருட்டு அவரை உடனழைத்துக் கொண்டு முதல்வர்பால் வந்தனன். வந்து முதல்வரை வணங்கி அவரைத் தெளிவிக்கும் பொருட்டு இப்பொழுதொன்று இயற்றியருளும்படி வேண்டினர். முதல்வரும் அங்குள்ளாரை நோக்கினார். எவரும் செவ்விவாய்ந்தவராகக் காணப்படவில்லை. எனினும் தாம் வழிபடும் உடையவர்க்கு ஆட்டுந் திருமஞ்சனநீர் பாய்ந்து அதனால் வளர்ந்து அடியவர் திருவமுதுக்குக் காய் நல்குந் தன்மையிலிருந்தது முள்ளிச் செடி. அதனை உணர்ந்து அச்செடியினுக்கு அப்பொழுதே சிவதீக்கை புரிந்தருளினார். அச்செடி பலருங்காண வானிலிருந்து வந்த வானூர்தியிலேறி மேலே சென்றது. யாவரும் தொழுதனர். அரசனுங் களிகூர்ந்தனன், அம்மையாரும் உள்ளந்தெளிந்து உவகையுற்று முதல்வர் அடிதொழுது சென்றார்.

பின்னொருநாள் அம்பலவாணர் திருவிழா வந்தது. உமாபதி சிவனாரை அழையாமல் கொடி ஏற்ற முயன்றனர். பலர் கூடி இழுத்தும் கொடி ஏறிய பாடில்லை. அனைவரும் வருந்தினர். அப்பொழுதும் முன்பு போலவே அருளொலி உண்டாயது. அம்மொழி "உமாபதி சிவனார் வந்தால், கொடி ஏறும்" என்பதாம். எல்லோரும் சென்று உமாபதி சிவனாரைத் தொழுது அழைத்து வந்தனர். அவர் வந்ததும் கொடிக்கவி பாடியருளினர். அப்பொழுது அனைவருங் களிகூரக் கொடிதானாகவே ஏறி நிலை நின்றது. இதனால் திருவருள் உலகுக்கு உணர்த்தும் ஒரு பெரும் உண்மை யொன்றுண்டு. அஃதாவது: தமிழகத்துத் திருக்கோவில்கள் அனைத்திலும் நாள் விழாச் சிறப்புவிழா முதலிய எல்லாம் தனித்தமிழால் நிகழ்த்த வேண்டுமென்பதே. அதற்கென அருளால் அமைந்தனவே நால்வர் நற்றமிழ் மந்திரமும், திருமூலர் திருமந்திரமும் இவற்றோடிணைந்த ஏனைத் திருமுறைகளுமாம். இதுகொண்டே உமாபதிசிவனார் ஆற்றிய வழிபாடனைத்தும் திருமுறை வாயிலாக வென்பது துணியலாம். அம்மட்டுமன்றி உமாபதி சிவனார் மூவர் தேவாரத்தினின்றும் தொண்ணூற்று ஒன்பது திருப்பாடல்களைத் திரட்டிப் "*பதிமுதுநிலை*" முதலாக "*அணைந்தோர்தன்மை*" முடிவாகப் பத்துத் தலைப்புக்கள் அமைத்துத் "*தேவார அருண் முறைத்திரட்டு*" என்னும் பெயருடன் ஒரு நூல் வெளியிட்டுள்ளார். இத்திரட்டு நூல் முப்பொருளுண்மை தெளிவிக்கும் ஒப்பரிய நூலாகும்.

இம்முதல்வர் 1. சிவப்பிரகாசம், 2. திருவருட் பயன், 3. வினாவெண்பா, 4. போற்றிப் பஃறொடை, 5. கொடிக்கவி, 6. நெஞ்சுவிடுதூது, 7. உண்மை நெறிவிளக்கம், 8. சங்கற்ப நிராகரணம் என எட்டுக் கொண்முடிபு (சித்தாந்த) நூல்களை அருளியுள்ளார். இவை மட்டுமன்றிக் 'கோயிற்புராணம், திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் புராணம்' என மூன்று நூல்களும் அருளியுள்ளார். இம்முதல்வர் ஒரு நெய்ம்மீ ன் எட்டாம் (சித்திரை அத்த) நாளில் சிவபெருமான் திருவடியில் இரண்டறக் கலந்து பேரின்பப் பெருவாழ்வு எய்தினரென்ப.

நெஞ்சுவிடுதூது கலிவெண்பாவால் 130 கண்ணிகளால் ஆனது. கொண்முடிபு சிவனியத்தின் 96 கூறுபாடுகள் அண்டம் பற்றியும், பிண்டம் பற்றியும் கூறப்படுவது மரபு. அம்மரபுக் கருத்துகளை வெளியாக்கும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது. இருமை (துவிதம்) பற்றிய கொண்முடிபு சிவனியத்துக்கு, மெய்கண்ட சிவம் இயற்றிய சிவஞான போதம் முதல் நூலாகவும், அருள் நந்திசிவம் வகுத்து எழுதிய சிவஞானசித்தியார் வழிநூலாகவும், உமாபதி சிவம் பகுத்து எழுதிய சிவப்பிரகாசம் சார்பு நூலாகவும் உள்ளன.

இந்நூலாசிரியர் உமாபதி சிவம் தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா, இன்று தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா என்று முதிர்ச்சியுறக் குறிக்கின்றார். அவர் எழுதிய எட்டு அடிப்படை (சாத்திர) நூல்களில் இஃது ஒரு தொகுப்பு நூலாக உள்ளது. தூது நூல்களின் இலக்கிய உத்தியாகிய, வேறு பொருட்டுத்தகுதியின்றி இஃதொன்றே வாய்ப்பு மிக்கது என்பது இதில் குறைச்சுவையுடையதாக உள்ளது. எனினும் சுவையான சொற்கொண்ட அடிகள் பல இந்நூலில் காணப்படுகின்றன.

"மெய்யர்க்கு மெய்யன் வினைக்கு வினை
யாயினான் பொய்யர்க்குப் பொய்யாய
பொய்யினான்–ஐயன் படநாகம் பூண்ட பரமன் பசுவின்
இடமாய் நிறைந்த இறைவன்" (கண்ணி.7,8)

"வெளியில் வெளியில் வெளியன் வெளியில்
ஒளியில் ஒளியில் ஒளியன் – ஒளியில்
அளியில் அளியில் அளியன் அளியில்
அளவில் அளவில்அளவன்" (கண்ணி. 33, 34).

நெஞ்சுவிரணம் *neñju-v-iraṇam*, பெ. (n.) 1. நெஞ்சுப்புண்; inflammation of the lungs. 2. தொண்டைப்புண் (இதற்கு நெரியாசிப் பாற்செடியின் பிசினைச் சீலைத் துணியில் பூசிக் கொளுத்தி அப்புகையை இழுக்கத் தொண்டைப்புண் ஆறும்); sore throat. (styrax liguidus is smeared on a piece of cloth and burnt. Its smoke, when inhaled, cures sore throat). (சா.அக.).

[நெஞ்சு + Skt. விரணம். விரணம் → இரணம் = காயம், புண்.]

நெஞ்சுள் *neñjuḷ*, பெ. (n.) உள்ளம் (மனம்) (நன்.228, மயிலை); mind.

[நெஞ்சு + உள்–நெஞ்சுள்]

தலைக்குள் இருந்த அறிவைப் பழங்காலத்தில் அரத்தத்துடிப்பு பற்றி மார்புள் இருந்ததாய்ப் பொருள் செய்யப்படுவது பழமையே. அப்பொருளில் இது வழங்குவதை உணர்வதோடு, எதிர்காலத்தில் மண்டையில் இருப்பதான அறிவியல் கருத்து பரவ வேண்டும்.

நெஞ்சுளு–த்தல் *neñjuḷu-*, 4 செ.கு.வி.(v.i.) மனமுறிதல்; to be broken - hearted, dispirited. "*நெஞ்சு ளுக்கின னெனச் சிறிது நின்று நினையா*" (கம்பரா.விராத.25).

[நெஞ்சு + உளு–த்தல்.]

நெஞ்சுளுத்தல் : நெஞ்சாங்குழி உள்வாங்கி யொடிதல்.

நெஞ்சுறைப்பு *neñjuṟaippu*, பெ. (n.) 1. மனக் கடுமை (இ.வ.); hard-heartedness. 2. துணிவு (வின்.); boldness of heart, intrepidity. *எதிரியை நெஞ்சுறைப்புடன் எதிர்த்துத் தாக்கினான்.*

[நெஞ்சு + உறைப்பு. உரைப்பு = காரம், கொடுமை, தாக்குகை]

வற்றல் குழம்பில் உறைப்பு மிகுதியால் நெஞ்சுப்பகுதியில் காரமிகுதலும் நெஞ்சுறைப்பு எனப்படும்.

உறைப்பு என்னும் பண்புப்பெயர் விதந்து சுட்டுவது காரத்தையே. உறைக்கும் பொருளைச் சுள்ளென்றிருக்கிறது என்பர். காரத்தை எரிச்சல் என்று கூறுவர். இதனால் உறைத்தலைச் சுடுதலோடொப்பக் கொண்டமை புலனாம். உறைப்பு பார்க்க.

நெஞ்சூன்றி *neñjūṉṟi*, பெ. (n.) நெஞ்செலும்பு ஒரு பக்கம் வளைந்து மறுபக்கம்

மிதந்திருப்பது (யாழ்.அக.); that which is bent on one side with a corresponding elevation on the reverse of breast - bone.

[நெஞ்சு + ஊன்று – நெஞ்சூன்று → நெஞ்சூன்றி]

நெஞ்செதிர் *neñjedir,* வி.எ. (adv.) நேரெதிரில்; directly in front. "*பெண்களை நெஞ்செதிராகவே கண்டால்*" (வள்ளி.கதை.MS). *உனக்குத் துணிவிருந்தால் என் நெஞ்செதிரே சொல் பார்க்கலாம். நெஞ்செதிரில் வந்து நிற்காதே.*

[நெஞ்சு + எதிர்]

நெஞ்செரி–தல் *neñjeri-,* 2 செ.கு.வி. (v.i.) 1. சினத்தால் மனங் கொதித்தல்; to burn with anger. "*தத்துவ மிலியென்று நெஞ்செரிந்து வாசகத்தழித்துன்னை வைதிடாமே*" (திவ்.நாய்ச்.1:3). 2. பொறாமைப் படுதல் (உ.வ.); to feel envy, to be jealous. *அவன் வளர்ச்சியைக் கண்டு நெஞ்செரிந்தான்.*

[நெஞ்சு + எரி–.தல்]

நெஞ்செரிச்சல் *neñjericcal,* பெ. (n.) 1. மார்பெரிச்சல்; burning sensation in the chest as from disease. 2. நெஞ்சாங்குலை (இதய) எரிச்சல்; heart burn. 3. வயிற்றெரிச்சல்; a burning sensations in the oesophagus. 4. புளித்தேப்பம் முதலியவற்றால் ஏற்படும் வயிறெறிச்சல் அல்லது நெஞ்செரிச்சல்; burning sensation in the stomach with sour eructations due to acid dysepsia - Pyrosis. (சா.அக.).

[நெஞ்சு + எரிச்சல். செரியாமை போன்றவற்றால் வயிறு, மார்புப் பகுதியில் உணரப்படும் எரிச்சல்.]

நெஞ்செரிப்பு[1] *neñjerippu,* பெ. (n.) நெஞ்செரிச்சல் பார்க்க; see *neñjericcal* (சா.அக.).

[நெஞ்சு + எரிப்பு.]

நெஞ்செரிப்பு[2] *neñjerippu,* பெ. (n.) பொறாமை; jealous.

[நெஞ்சு + எரிப்பு.]

நெஞ்செரிவு *neñjerivu,* பெ. (n.) நெஞ்செரிச்சல் பார்க்க; see *neñjericcal.* (சா.அக.).

[நெஞ்சு + எரிவு.]

நெஞ்செலும்பு *neñjelumbu,* பெ. (n.) நெஞ்சறையின் முன்பக்க நடுவில் வாள் போன்ற, ஒடுங்கிய தகட்டெலும்பு; dagger like flat bone in the middle front of the chest - sternum. (சா.அக.) *சரியான உணவின்மையால் நெஞ்செலும்பெல்லாம் வெளியே தெரிகின்றன. ஆட்டின் நெஞ்செலும் பெடுத்துக் குழம்பு வைத்தால் உடல் நலத்துக்கு நல்லது.*

[நெஞ்சு + எலும்பு]

நெஞ்செலும்புசூப்பு *neñjelumbu-šūppu,* பெ.(n.) ஆட்டின் நெஞ்செலும்பைக் கொண்டு வைக்கப்படும் வெஞ்சாறு; goat soup.

[நெஞ்சு + எலும்பு + சூப். E.soup → த.சூப்பு = வெஞ்சாறு.]

வெள்ளாட்டின் நெஞ்செலும்பைக் கொண்டு வெஞ்சாறு (soup) செய்வார்கள். இஃது உடல் நலத்திற்கு உதவும். ஆட்டுக்கால், கோழிக்கால், நண்டு முதலியவற்றாலும் வெஞ்சாறு செய்யப் படுகிறது. அனைத்தும் உடல்நலத்திற்கு உதவுபவையே.

நெஞ்சைப்பிடி–த்தல் *neñjai-p-piḍi-*, 4செ.குன்றாவி.(v.t.) கழுத்தைப் பிடித்தல் (வின்.); to take by the throat. *கடனைக் கட்டாததால் நெஞ்சைப் பிடித்துத் தள்ளினான்.*

[நெஞ்சு + ஐ + பிடி–த்தல். ஐ – இரண்டாம் வேற்றுமை உருபு.]

நெஞ்சைப்பிள–த்தல் *neñjai-p-piḷa-*, 3செ.குன்றாவி.(v.t.) துயரம் முதலியன மனத்தை வருத்துதல்; to break one's heart, as grief. *நண்பன் சொன்ன இறப்புச் செய்தி நெஞ்சைப் பிளப்பது போல் இருந்தது.*

[நெஞ்சு + ஐ + பிள–த்தல். ஐ –இரண்டாம் வேற்றுமை உருபு. பிளத்தல் – இரண்டு கூறாக்குதல். கூறாக்குவது போன்று துன்பத்தால் வருந்துதல்.]

நெஞ்சைப்புகவாள் *neñjai-p-pugavāḷ*, பெ. (n.) கருநாய்; black dog. (சா.அக.).

நெஞ்சில் புகும் வாள் போல் கரு நாய்க்கத்தல் இருத்தல் பற்றி எழுந்த பெயர்.

நெஞ்சொடுகிளத்தல் *neñjoḍu-kiḷattal*, பெ.(n.) தலைவனோ தலைவியோ தன் நெஞ்சொடு சொல்லுதலாகிய அகப்பொருட்டுறை; theme of rebuking one's heart for going after one's unresponsive lover.

[நெஞ்சு + ஒடு + கிளத்தல். ஒடு → ஒடு.

கிளத்தல் = எடுத்துச்சொல்லுதல், சிறப்பாக மொழிதல்]

ஆற்றாமை மீதூரத் தனக்கு ஒருபற்றுக்கோடும் காணாத தலைமகள் தன் நெஞ்சொடு செயல்திறன் அறியாது சொல்லுதல். இஃது உறுப்புகள் தம் நலன் அழிந்த வழி நிகழும் தன்மைத்து. இது திருக்குறளில் 125ஆம் அதிகாரமாக அமையும் அகப்பொருட்டுறை.

எடு: "*உள்ளத்தார் காத லவர்ஆக உள்ளிநீ யாருழைச் சேறியென் நெஞ்சு*" (குறள், 1249).

"*கொடிபாடித் தேர்பாடித் கொய்தண்டார் மாறன்*
முடிபாடி முத்தாரம் பாடித் – தொடி யுலக்கை
கைம்மனையில் ஓச்சப் பெறுவேனோ யானுமோர்
அம்மனைக் காவல் உளேன்" (முத்தொள். 34).

"*பொன்னார் சடையோன் புலியூர் புகழாரெனப் புரிநோய்*
என்னா லறிவில்லை யானொன் றுரைக்கிலன் வந்தயலார்
சொன்னா ரெனுமித் தூரிசு துன் னாமைத் துணை மனனே
என்னாழ் துயர்வல்லை யேற்சொல்லு நீர்மை யினிவர்க்கே" (திருக்கோ. 89 மேற்கோள்).

சென்னைப் பல்கலைக்கழக அகர முதலி நெஞ்சொடுகிளத்தல், நெஞ் சொடுபுலத்தல் இரண்டும் ஒன்றெனக் காட்டுகிறது. ஆனால் கிளத்தல் என்பது சொல்லுதலையும், புலத்தல் என்பது ஊடுதலையும் குறிக்கும். எனவே இரண்டு சொல்லும் வேறுவேறானவை.

நெஞ்சொடுபுலத்தல் *neñjoḍu-pulattal*, பெ. (n.) அன்பற்ற காதலரிடஞ் செல்லும் மனத்தொடு புலந்து தலைவனேனும் தலைவியேனும் கூறும் அகத்துறை (குறள்,130, அதி.); theme of rebuking one's heart for going after one's unresponsive lover.

[நெஞ்சு + ஒடு + புலத்தல். ஒடு → ஒடு. புலத்தல் = மனம், வேறுபடுதல், துன்புறுதல், வெறுத்தல், அறிவுறுத்தல். ஒடு – மூன்றாம் வேற்றுமை உருபு.]

இது திருக்குறளில் 130ஆம் அதிகாரமாக அமையும் அகப்பொருட்டுறை. கரணியம் உண்டாய வழியும் புலக்க (அறிவுறுத்த)க் கருதாது புணர்ச்சி விதும்புகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தலும் (மனம் வேறுபடுதலும்), தலைமகன் புலத்தலும் (மனம் வேறுபடுதலும்) ஆம்.

"அவர்நெஞ்சு அவர்க்குஆதல் கண்டும்
எவன்நெஞ்சே
நீஎமக்கு ஆகா தது" (குறள், 1291).
"பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்றார் இருவர் அவருள்ளும்
பொன்னோடை நன்றென்றாள் நல்லளே
பொன்னோடைக்
கியானைநன் றென்றாளும் அந்நிலையள் யானை
எருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார் நன் றென்றேன் தீயேன்"
(முத்தொள். 58).

இரண்டு எடுத்துக்காட்டுகளும் தலைமகள் புலத்தலைச்சாரும்.

"ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என் செய்கேன் –தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன் பெருந்துறையான்
தானென்பார் ஆரொருவர் தாழ்ந்து"
(திருவாச. திருவெண்பா. 2).

இது தலைமகன் புலத்தலுக்கு எடுத்துக்காட்டு.

நெஞ்சோர்மம் *neñjōrmam,* பெ.(n.) நெஞ்சுத் துணிவு (வின்.); boldness, intrepidity.

[நெஞ்சு + ஓர்மம். ஓர்மம் = துணிவு, ஒட்டுமை, திடம். ஓர்மம் → ஓரிமை]

மனம் ஒன்றுபட்டு நின்றால் துணிவு வருவது இயல்பு

நெட்டங்கம் *neṭṭaṅgam,* பெ. (n.) 1. செருக்கு; pride, haughtiness. *அவனை நெட்டங்க முடைக்கிறான்* (உ.வ.). 2. செருக்கினாற் பழித்துரைக்கும் மொழி; words of insolent consure. *"பொட்டான தேவர்களும் நெட்டங்கம் படிப்பாரே"* (இராமநா.உயுத்.82).

[நெடு → நெட்டு + Skt. அங்கம். நெட்டு = செருக்கு]

நெட்டநெடியது *neṭṭa-neḍiyadu,* பெ.(n.) வெகு நீளமானது; lengthy.

[நெடு → நெட்டு → நெட்ட → நெடியது]

நெட்டநெடுமை *neṭṭa-neḍumai,* பெ. (n.) மிகு நீளம்; great length, excessive tallness or height. *'அட்டம் வளராது நெட்ட நெடுமை கொண்டன'.* (தக்கயாகப்.406,உரை). *நெட்ட நெடு மரம்.*

[நெட்டை → நெட்ட + நெடுமை]

நெட்டப்பிரமட்டை *neṭṭa-p-piramaṭṭai,* பெ. (n.) பேய் மிரட்டி; devil frightener - Anisomeles, malabarica. (சா.அக.).

நெட்டம்[1] *neṭṭam,* பெ. (n.) 1. நெடுமை; tallness, length. 2. செங்குத்து; per pendicularity.

ம. நீட்டெண; **கோத.** நெடெந்;

க. நெட்டகெ, நெட்டாந, நெட்டாநெ;

து. நெட்டகெ; **தெ.** நிட்ட, நிட்ர, நிட்ரமு, நெட்ரமு; **பர்.** டிட்ட; **மரா.** நீட்.

[நெடு → நெட்டு → நெட்டம்]

நெட்டம்[2] *neṭṭam,* பெ. (n.) 1. மிளகு (மலை.); black pepper. 2. வெள்ளை மிளகு white pepper. (சா.அக.)

நெடுதாக உறைப்பு தருதலின் மிளகிற்கு அமைந்த பெயர் ஆதல் அறிக.

நெட்டாங்கு *neṭṭāṅgu,* பெ. (n.) 1. நீளவாட்டு; lengthiness. 2. **நெட்டங்கம்** பார்க்க; see *neṭṭaṅgam.* 3. அழகு காட்டுகை; mimicry.

[நெடு → நெட்டு → நெட்டாங்கு. நெடு + ஆங்கு.]

நெட்டாங்குவீடு *nettāngu-vīdu,* பெ.(n.) உத்திரத்திற் குறுக்குச் சட்டமின்றி இருபுறமும் இறங்கிய கூரை கொண்ட வீடு (C.G.); house with a slanting roof supported by a wooden post, but without trusses, standing erect on a beam. *எங்கள் முன்னோர்கள் நெட்டாங்கு வீட்டில் வாழ்ந்தனர். இப்போது நெட்டாங்கு வீடுகள் கட்டப்படுவது இல்லை.*

[நெட்டாங்கு + வீடு]



நெட்டாநாராட்டி *nettā-nārātti,* பெ. (n.) நெடுநார் அல்லது நூலிலை; long fibre plant, Polyalthia cerasoicles. (சா.அக.).

[நெடு → நெட்டு + ஆம்–நெட்டாம் + நார் + ஆட்டி]

நெட்டாயம் *nettāyam,* பெ. (n.) 1. நெட்டுக் குத்தாகச் செங்கலை அடுக்குகை(வின்.); stretchers, piling up bricks, perpendicularly or upright opp-to-kattāyam. *நெட்டாயமாக சுவர் எழுப்பினான். வீட்டுச் சுவர் எல்லாம் நெட்டாய முறையில் இருக்கும்.* 2. நீளம்; length.

ம. நெட்டாயம்

[நெடு → நெட்டு → நெட்டாயம்]

நெட்டாயத்திற்கு எதிர் கட்டாயம்.

கட்டாயம் = குறுக்காகச் செங்கல்லை அடுக்கிச் சுவர் கட்டும் முறை.



நெட்டாவில் *nettāvil,* பெ. (n.) பட்டையை உரித்து ஆடையாக அணியப்பயன்பட்ட மரவகை; bark tree-Antiaris toxicaria so called from the usefulness of the bark for making a fibre coat in olden days as a protection against cold. (சா.அக.).

பழங்காலத்தில் வெப்பம், குளிர் போன்றவற்றினின்று தன்னைக் காத்துக் கொள்ள மரத்திலிருந்து பட்டையை உரித்து ஆடைபோல் அணிந்தான் மனிதன். மரப்பட்டை மட்டுமல்லாமல் இலை, தழை, புல் போன்ற பலவற்றையும் ஆடையாக அணிந்தனர். ஆடையாக அணியப் பட்டை எடுக்கப் பயன்பட்ட மரம் – நெட்டாவில்.

போர்க்குப் போகுமுன்னரே வில் வளைத்து நாண்கட்டப் படும். எப்போதும் கட்டி வைத்திருந்தால் விற்கம்பு வளைந்து விறைப்பு நீங்கி விடும். அதுபோல் ஆடையாகக் கட்டும் மரப்பட்டைகள் காயும் வரைவிட்டு வைத்திருப்பதால் வந்தபெயர் போலும்.

நெட்டாள் *nettāl,* பெ. (n.) வரிவகை (தெ.க.தொ.7,489); tax.

[நெடு → ஆள்]

நெட்டாள் : வெட்டி என்னும் தற்காலிகப் பணியாள் போன்றதொரு வேலையாள். ஊர்ப் பொது வேலைகளைச் செய்வதற்கென்று அமர்த்தப்பட்டு, சிறிதே ஊதியமும் சோறும் பெறுவார். அவர்களிடம் வாங்கப்பட்ட வரி. (கல்.அக.).

நெட்டி[1] *netti,* பெ. (n.) **1.** உடற் பொருத்து; joints of the body. **2.** எலும்பு (அ.நி.); bone. **3.** சுடக்கு (வின்.); cracking noise of the finger- joints. **4.** சோம்பல் (நாமதீப.711); idleness, laziness.

தெ. நெடிக.

[நெடு → நெட்டி.]

நெட்டி[2] *netti,* பெ. (n.) **1.** இறகு போன்ற இலைகளையுடைய தண்ணீரில் மிதக்கும் ஒருவகைப் பயிரி (தாவரம்); pith plant. **2.** ஒப்பனைப் பொருள்கள் செய்யப்பயன்படும், நெட்டியின் தண்டுப் பகுதி; cork-like stalk of the pith plant. *நெட்டி மாலை ஒன்று வாங்கி வா.* **3.** புல்வகை; a kind of grass.

வகைகள் : 1. கொடி நெட்டி, 2. கோரை நெட்டி, 3. பூ நெட்டி, 4. வயல் நெட்டி, 5. மூங்கில் நெட்டி, 6. பெரு நெட்டி, 7. நெரி நெட்டி (சம்பம்புல்), 8. நறுக்கு நெட்டி, 9. ஆற்று நெட்டி. (சா.அக.).

நெட்டி : ஒரு சிறு செடி. நெட்டியினத்தில் பலவகை இருந்தாலும் இந்தியாவில் இரண்டு வகை நெட்டிகளே காணப்படுகின்றன. ஒரு வகை ஆற்று நெட்டி. இது வங்காளம், அசாம், தென்னிந்தியா போன்ற இடங்களில் காணப்படுகிறது. பொதுவாகச் சதுப்பான இடங்களிலும், நீர் தேங்கியுள்ள பகுதிகளிலும், மடுக்களிலும், ஓடைகளிலும், குளம், ஏரி, ஆறு ஆகியவற்றின் ஓரங்களிலும் இதைப் பார்க்கலாம். இதன் தண்டு 6 அடி முதல் 10 அடி வரை நீரில் மிதந்து கொண்டு வளரும்; கிளைகள் மிகச் சிலவே உண்டாகும்; இலைகள் தொட்டால் சுருங்கிக் கொள்ளும் இயல்பின; பூக்கள் மஞ்சள் நிறமுடையன. இதன் தண்டைத் துண்டுதுண்டாக வெட்டிக் காயவைத்துப் பயன்படுத்துவார்கள். நெட்டியானது வெப்பம் உட்புகுந்து செல்லாத காப்பீடு (insulating) பொருள். இதிலிருந்து வெயில் மறைக்கும் தொப்பி செய்வார்கள். பொம்மை, பூ, தோரணம், மாலை, விளையாட்டு பொருகள் செய்வார்கள். நீந்துதற்குரிய ஆடைகளும், நீரில் உயிர் காப்புக்குரிய பட்டிகளும் (Life belts) செய்வார்கள். புட்டிகளுக்கு அடைப்பான் செய்யவும் இது உதவும்.

இந்தியாவிலுள்ள மற்றொரு நெட்டி இனம் தக்கை என்பது. இது கடினமான நெட்டி வகை. இதன் தண்டு தடிப்பாக வளராது மெல்லியதாக வளரும். இச்செடியில் பல கிளைகள் இருக்கும். இதுவும் வங்காளம், அசாம், தென்னிந்தியா போன்றவிடங்களில் வளரும். இந்நெட்டி வகை ஆற்று நெட்டியை நோக்க மட்டமானதே. இருந்தாலும் இதிலிருந்தும் தொப்பிகள் செய்யப்படுகின்றன.

நெட்டி[3] *netti,* பெ. (n.) மீனின் வயிற்றுக்குள் இருக்கும் காற்றுப்பை; fish air sac part.

மறுவ. பாளை.

நெட்டி எடுப்பதுபோல் ஒலிவரும் காற்றுப்பை. ஆயின் நீருக்குள் வெளிப்படும் காற்று ஓசையற்றே இருக்கும்.

நெட்டிக்கோரை *netti-k-kōrai,* பெ. (n.) கோரைப்புல் வகை (மூ.அ.); a kind of sedge.

[நெட்டி[2] + கோரை. நீளமான கோரைவகை.]

நெட்டிச்செடி *netti-c-cedi,* பெ. (n.) தக்கைச் செடி; pith plant - Aeschynomens aspera.

மறுவ. கொக்கேரி, ஆற்று நெட்டி, சடைச்செடி, கிடைச்சி (சா.அக.)

[நெட்டி + செடி. நெட்டி[2] பார்க்க.]

இரண்டு ஆண்டில் காய்த்துவிடக் கூடிய செடி; இது நீரில் மிதக்கும் கிளைகள் வாய்ந்தது. இதன் இலைகள் இறகைப் போன்றது. சிற்றிலைகள் பல காணப்படும். பூக்கள் இரண்டு இதழ்களைக் கொண்டது. பூக்காம்பும் இலைக்காம்பும் மொசு மொசுப்பாயிருக்கும். பூக்கள் மஞ்சள், வெள்ளை முதலிய பல நிறம் கொண்டவை. இதன் இலையைக் கீரையாக உண்ணலாம்.

நெட்டிசை *nettišai,* பெ. (n.) மண்டிலப்பாவின் (விருத்தத்தின்) நெடிய ஓசை (சந்தம்) (வின்.); long metre in *viruttam* verse, opp. to *kurrišai.*

[நெடு + இசை]

எ—டு.

"*ஏறுமயில் ஏறிவிளை யாடும் முகம் ஒன்றே*
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே"
(திருப்புகழ்)

இது நெடிய ஓசை (சந்தம்) உள்ள எண்சீர் மண்டிலப்பா. "*இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்*" இது குற்றிசைக்கு (சந்தத்திற்கு) எடுத்துக்காட்டு.

நெட்டிடை *neṭṭiḍai*, பெ. (n.) நெடுந் தொலைவு; long distance. "*நீங்கினன் றன்பதி நெட்டிடை யாயினும்*" (மணிமே.3:41). "*நீல மாக்கடல் நெட்டிடை யன்றியும்*" (மணிமே. 8: 17). "*நெட்டிடை நெறிகளும் நிகரில் கானமும்*" (சீவக. 1216).

[நெடு + இடை. இடை = தொலைவு]

நெட்டித்தள் ளு—தல் *neṭṭi-t-taḷḷu-*, 5 செ.கு.வி.(v.i.) ஒருவரை அல்லது ஒன்றினை விசையோடு கைகளால் தள்ளுதல்; to push violently. *திருடனைக் காவலாளி நெட்டித் தள்ளினான்; பையனை நாள்தோறும் நெட்டித் தள்ளாத குறையாகப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பவேண்டியிருக்கிறது.*

[நெட்டி^{1} + தள்ளு—தல்.]

நெட்டிப்புல் *neṭṭi-p-pul*, பெ. (n.) அயிரி என்ற புல்வகை (வின்.); a long grass.

மறுவ. நெட்டிக்கோரை

[நெட்டி + புல்]

நெட்டிப்பூ *neṭṭippū*, பெ. (n.) கிடைச்சி பூ; pith - flower.

[நெட்டி^{2} + பூ]

நெட்டிப்பொரி *neṭṭi-p-pori*, பெ. (n.) நெட்டிப் பூ மாலை (வின்.); garland made of pith-flowers.

[நெட்டி^{2} + பொரி. பொரி = பூ]

நெட்டிமாலை *neṭṭi-mālai*, பெ. (n.) *நெட்டிப் பொரி* பார்க்க; see *neṭṭi-p-pori*.

[நெட்டி^{2} + மாலை]

நெட்டிமுட்டி *neṭṭimuṭṭi*, பெ. (n.) செடி வகை (பரி.அக.); a plant.

[நெட்டி^{2} + முட்டி]

நெட்டியாகவும்,முட்டியாகவும் கிளைகளைக் கொண்ட செடிவகை.

நெட்டிமுறி—த்தல் *neṭṭi-muri-*, 4செ.கு.வி.(v.i.) 1. சோம்பல் முறித்தல்; to stretch onself. *படுக்கையில் இருந்து நெட்டி முறித்துக் கொண்டே எழுந்தான்.* 2. மடக்கிய அல்லது நீட்டிய விரல்களை அழுத்தி ஒலியுண்டாகு மாறு செய்தல், சொடுக்குப் போடுதல்; make a sharp crackling sound by pressing a finger. "*விளக்கு வைத்த நேரத்தில் நெட்டி முறிக்காதே*" என்று பாட்டி திட்டினாள்.

[நெட்டி + முறி — த்தல்.
நெட்டி^{1} = சோம்பல்]

நெட்டிமையார் *neṭṭimaiyār*, பெ. (n.) கழகக் காலப் புலவர்; a Šangam poet.

இவர், நீண்ட இமைகளையுடையவர் என்னுங் காரணியம் கருதி இப்பெயர் பெற்றிருக்கலாம். இவர் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் புறநானூற்றில் (9,12,15) பாடியுள்ளார். இவர் பாடல்களால் பகைவர் அரண்களை அழித்து அவை இருந்த இடத்தைக் கழுதை பூட்டி உழுது பாழ்படுத்தும் வழக்கம் அக்காலத்து இருந்தது என்பதும், முதுகுடுமி ஒன் வேள்வியல்லாத நெய்ம்மலி (ஆகுதி பொங்கும்) வேள்வி வேட்டனன் என்பதும் புலப்படுகின்றது.

"பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
அறனே மற்றிது விறன்மாண் குடுமி
இன்னா வாகப் பிறர்மண்கொண்
டினிய செய்திநன் னார்வலர் முகத்தே."
(புறநா.12)

[நெடு → நெட்டு → நெட்டி + இமை + ஆர்]

நெட்டியிடுக்கி *netti-y-idukki,* பெ.(n.) தக்கையைக் குழையினின்று விடுவிக்கும் ஒருவகைக் கருவி; cork screw. (சா.அக.)

[நெட்டி[2] = தக்கை. நெட்டி + இடுக்கி]

நெட்டியெடு–த்தல் *netti-y-edu-,* 4 செ.குன்றாவி. (v.t.) **1.** சொடுக்கெடுத்தல்; to crack the fingers, knuckles or toes. *விரல்களை நெட்டியெடுத்து விடு.* **2.** வருத்துதல்; to oppress, exact heavy work. *வேலை இன்று நெட்டி யெடுத்து விட்டது. உடம்பு நெட்டியெடுக்க வேலை செய்து கூலி கேட்டால் சீற்றம் கொள்ளலாமா?*

மறுவ. சொடுக்கெடுத்தல்

[நெட்டி[1] + எடு–த்தல்.]

நெட்டில் *nettil,* பெ. (n.) மூங்கில் (மலை.); bamboo.

து. நெடிறு (ஒருவகைப் புல்)

[நெடு → நெட்டு → நெட்டில். நீண்டு வளரும் மூங்கில்.]

நெட்டிலிங்கம் *nettilingam,* பெ. (n.) மரவகை (மூ.அ.); Indian mast tree.

மறுவ. அசோகமரம்

நெட்டிலிங்கம் : இதை அசோகமரம் என்றும் கூறுவதுண்டு. நகரங்களில் பூங்காக்களிலும், சாலைகளிலும் இதை வைப்பதுண்டு. இம்மரம் இலங்கையில் இருந்து இந்தியாவுக்குக் கொண்டு வந்து வளர்க்கப்பட்டதாகத் தோன்றுகிறது. இதன் கிளைகள் குட்டையானவை; இலைகள் மிகுதி, இலைகளின் விளிம்புகள் அலை அலையாய் இருக்கும்; இதன் காய்கள் கொத்துக் கொத்தாய் இருக்கும்; பூக்கள் குறுகிய மஞ்சரித்தண்டின் நுனியில் குடை மஞ்சரியாக இருக்கும். இதன் இலைகளை மாவிலைகளுடன் சேர்த்து வீடு, கோயில் முதலானவற்றில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளில் தோரணமாகக்கட்டுவர்.

குடும்பம் – Annonaceae
இனம் – polyalthia longifolia.

நெட்டிலிங்கு *nettilingu,* பெ. (n.) **நெட்டிலிங்கம்** (சங்.அக.) பார்க்க; see *nettilingam.*

நெட்டிலிங்கு–அம் சாரியை கெட்டது.

நெட்டிவாங்கு–தல் *netti-vāngu-,* 5 செ. குன்றாவி.(v.t.) **நெட்டியெடு–த்தல்** பார்க்க; see *nettiyedu-.* இந்த வேலை *நெட்டி வாங்குகின்றது.*

[நெட்டி + வாங்கு–தல்.]

நெட்டிவேலை *netti-vēlai,* பெ. (n.) நெட்டியாற் செய்த ஒப்பனை வேலை; ornamental pith-work.

[நெட்டி[2] + வேலை]

நெட்டு[1]–தல் *nettu-,* 5செ.குன்றாவி.(v.t.) **1.** தள்ளுதல் (உ.வ.); to thrust, push. *கம்பால் ஒரு நெட்டு நெட்டு.* **2.** ஒன்றில் தாக்குதல் (வின்.); to strike, as a stone or ball. **3.** மிக வுண்ணுதல் (வின்.); to eat or drink to excess, used in contempt. *சாப்பாட்டை ஒரு நெட்டு நெட்டினான்.*

தெ. நெட்டு

[நீள் → நெள் → நெடு → நெட்டு → நெட்டு–தல்]

நெட்டு² *nettu,* பெ. (n.) 1. தள்ளுகை; pushing, thrusting. *கழியால் நெட்டினான்.* 2. தாக்குகை; striking, skipping as a stone or ball.

[நெட்டு¹ → நெட்டு²]

நெட்டு³ *nettu,* பெ. (n.) 1. நெடுமை; length, tallness. *அவன் நெட்டு விட்டிருக்கிறான் (இ.வ.) அவன் நெட்டு நெடுமரமாய் வளர்ந்திருக்கிறான்.* 2. நெடுந்தொலைவு; long distance. "*நெட்டிலே யலை யாமல்*" (தாயு.மலைவளர்.2), 3. அகலம்; extent as of the breadth of a pial. 4. ஒரிடத்திற்குப் போய்த் திரும்பும் தடவை (வின்.); times, number, turn, as in going, and coming. 5. உப்பு மேடை (C.G.); platform for the storage of salt. 6. காம்பு (யாழ்ப்.); stalk, peduncle. 7. செருக்கு; pride. "*நெட்டது செய்ய லாகாது காணும்*" (இராமநா.உயுத்.23). 8. குலை (வின்.); bunch, cluster.

[நீள் → நெள் → நெடு → நெட்டு. (மு.தா.)]

நெட்டுக்கட்டு-தல் *nettu-k-kattu-,* 5செ.கு.வி. (v.i.) குலை தள்ளுதல் (யாழ்.அக.); to shoot forth in clusters as fruits.

[நெட்டு³ + கட்டு-தல். கட்டுதல் = பிணைத்தல், காய்களைப் பிணைத்து வெளித்தள்ளுதல்.]

நெட்டுக்கண்பலகை *nettu-k-kan-palagai,* பெ. (n) மண் தாங்கிப் பலகை (C.E.M); lintel.

[நெட்டு + கண் + பலகை. நெட்டு = அகலம்]

நெட்டுக்குத்தலாக *nettu-k-kuttalāga,* பெ.எ.(adj.) செங்குத்தாக, நேராக; in a vertical position, vertically. *கைக்கழியை வயலில் நெட்டுக்குத்தாக நட்டான். ஈட்டி அவன் உடம்பில் நெட்டுக்குத்தலாகப் பாய்ந்தது.*

[நெட்டு³ + குத்தலாக. குத்து + அல் = குத்தல் → குத்தலாக]

நெட்டுக்குத்து *nettu-k-kuttu,* பெ. (n.) செங்குத்து (இ.வ.); perpendicularity.

[நெட்டு³ + குத்து. குத்து = செங்குத்து]

நேரடியாக நிமிர்த்து நடப்படுவதை நெட்டுக்குத்தாக நட்டதாய்ச் சொல்வார்கள்.

நெட்டுகா *nettukā,* பெ. (n.) ஒரு வகை உகாமரம்; sack tree - Salvadora persica. (சா.அக.).

[நெடு → நெட்டு + உகா. நீளமாக வளரும் மரவகை.]

நெட்டுடை-த்தல் *nettudai-,* 4செ.குன்றாவி. (v.t.) செருக்கையடக்குதல் (உ.வ.); to put down or break one's pride. *அந்தச் சண்டையில் அவன் நெட்டுடைந்தது.* (உ.வ.)

[நெட்டு + உடை-த்தல். உடைத்தல் = வலியடக்குதல், வலி அழித்தல்]

நெட்டுயிர்¹-த்தல் *nettuyir-,* 4செ.கு.வி. (v.i.) பெருமூச்சுவிடுதல்; to sigh, fetch a deep breath. "*நெட்டுயிர்த்துத் தட்டழிந்துளறுவார்*" (தாயு.பரிபூரண.3). *எப்போதும் நெட்டுயிர்க் கின்றான். நீண்ட அமைதிக்குப் பின்னர் ஒரு நெட்டுயிர்ப்பு மட்டுமே வெளிவந்தது.*

[நெடு → நெட்டு + உயிர்-தல். உயிர்த்தல் = மூச்சு விடுதல்]

நெட்டுயிர்[2] *nettuyir,* பெ. (n.) உயிர் நெடில்; long vowel. "*நெட்டுயிர் காரமும்..... பெறும்*" (நன்.126).

[நெட்டு + உயிர்]

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு உயிரெழுத்தும் நெட்டுயிர் (உயிர் நெடில்).

நெட்டுயிர்ப்பு nettuyirppu, பெ. (n.) பெருமூச்சு, நீண்ட மூச்சு; sighing, deep breath as induced by pain or grief. "*நெட்டுயிர்ப் போடுற்ற பிணம்*" (நீதிநெறி.78). *குழந்தை நெட்டுயிர்ப்பு செய்கின்றது. நீண்ட நேர அமைதிக்குப் பின்னர் ஒரு நெட்டுயிர்ப்பு மட்டுமே விடையாக வந்தது.*

[நெடு → நெட்டு + உயிர்ப்பு]

நெட்டுயிர்ப்புவீங்கு—தல் nettuyirppu-vīngu-, 5செ.கு.வி. (v.i.) **நெட்டுயிர்—த்தல்** பார்க்க; see *nettuyir-*.

[நெட்டுயிர்ப்பு + வீங்கு—தல். பெருமூச்சு விடுதல்]

நெட்டுயிர்ப்பெறி—தல் nettuyirpperi-, 2 செ.கு.வி. (v.i.) **நெட்டுயிர்[1]-த்தல்** பார்க்க; see *nettuyir[1]-*.

[நெடு + உயிர்ப்பு – நெட்டுயிர்ப்பு + எறி—தல். பெருமூச்சு விடுதல்.]

நெட்டுரு *netturu,* பெ. (n.) மனப்பாடம் (உ.வ.); rote-learning. *மனப்பாடச் செய்யுள் முழுவதையும் நெட்டுரு செய்து விட்டாள்: விடையை மட்டுமல்ல, கேள்வியையும் நெட்டுருச் செய்யும் மாணவர்களும் இருக்கிறார்கள்.*

[நெடு + உரு]

நெட்டுருப்படுத்து—தல் *netturu-p-padu-,* 5செ.குன்றாவி. (v.t.) *நெட்டுருப்பண்ணு—தல்* பார்க்க; see *netturu-p-pannu-*.

மறுவ. நெட்டுருப்பண்ணு.

[நெட்டுரு + படுத்து—தல்]

பழந்தமிழில் அசையும் சீரும், நெட்டுருப் படுத்த வாய்ப்பாயிற்று. எ.கா. எம்மை மறந்தாரை யாம் மறக்க மாட்டேமால்? (சிலப். – கானல் வரி)

நெட்டுருப்பண்ணு—தல் *netturu-p-pannu-,* 5செ.குன்றாவி.(v.t.) மனப்பாடம் செய்தல் (உ.வ.); to learn by rote. *பாடத்தை அப்படியே நெட்டுருப் பண்ணும் மாணவரும் உள்ளனர்.*

[நெட்டுரு + பண்ணு—தல் = மனப்பாடம் செய்தல்]

நன்கு படியும்படிப் படித்தால் நெட்டுருப் பண்ணியது சாகும் வரை நினைவில் நிற்பதால் அறிவு நரம்புகளில் நெடிய உருக்கொள்ளுதல் இயல்பு.

நெட்டுருப்போடு—தல் *netturu-p-pōdu-,* 19செ.குன்றாவி. (v.t.) *நெட்டுருப்பண்ணு—தல்* பார்க்க; see *netturu-pannu-*.

[நெட்டுரு + போடு—தல்.]

இலக்கணத்து எதுகையும் மோனையும் நெட்டுருப் போட வாய்ப்புச் செய்தன. எ.கா.
மலையிடைப் பிறவா மணியே என்கோ?
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?
(சிலப்.—மனையறம்)

இக்கால் இப்பயிற்சியும் சொற்பயிற்சியும்
இல்லாததார் புதுக்கவிதை (புதுப்பா)
எழுதுகிறார்கள்.

நெட்டுலிங்கம் *nettulingam,* பெ. (n.) **நெட்டிலிங்கு** பார்க்க; see *nettilingu.* (சா.அக.).

[நெட்டிலிங்கு → நெட்டுலிங்கம்]

நெட்டுலை *nettulai,* பெ. (n.) விடாச் சமையல்; incessant cooking. "*நெட்டுலைக் கழுநீர்*" (கம்பரா.நாட்டு.26). *வடலூர் இராமலிங்கர் சபையில் நெட்டுலை எப்போதும் எரிந்து கொண்டிருக்கும்.*

[நெடு + உலை]

திருமண வீடுகளில் கொல்லைப் புறத்தில் மண்வெட்டியால் வெட்டப்பட்ட நீண்ட அடுப்பில் வைக்கப்படும் குண்டான், அண்டான் உலைகளும் ஆம்.

நெட்டுவட்டி *nettu-vatti,* பெ. (n.) இயல்பான (சாதாரண) வட்டி (இ.வ.); simple interest.

[நெடு + வட்டி]

நெடுங்காலம் தவணைதந்து பெறும் வட்டியைக் குறிக்கும். நெடிய விழுக்காடோ, நெட்டித் தள்ளி அச்சுறுத்தியோ பெறும் வட்டியாயின் கடுவட்டியைக் குறிக்கும்.

நெட்டுவிடு-தல் *nettuvidu-,* 20செ.கு.வி. (v.i.) நெட்டையாதல் (நெல்லை); to grow tall.

[நெட்டு + விடு-தல்.]

நெட்டூத்தி *nettūtti,* பெ. (n.) நெட்டூதி (யாழ்.அக.) பார்க்க; see *nettūdi.*

[நெட்டு + ஊத்தி. தோன்றல் திரிபு.]

நெட்டூதி *nettūdi,* பெ. (n.) 1. ஒரு வகைச் சங்கு(வின்.); a long spiral conch. 2. எக்காளம்; trumpet, a kind of cornet.

[நெட்டு + ஊதி. ஊது → ஊதி]

இடைவிடாது நீண்ட ஓசையைக் கொடுக்கும் சங்கு வகை.

நெட்டெழுத்து[1] *netteluttu,* பெ. (n.) 1. இரண்டு மாத்திரை அளவு கொண்ட உயிரெழுத்து; long vowel. "*நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே*" (தொல்.எழுத்து.41). 2. பெயர் முழுமையும் அடங்கிய கையெழுத்து; signature in full, autograph.

[நெடு → நெட்டு + எழுத்து]

நீரும் நீரும் சேர்ந்தாற் போலக் குற்றெழுத்து இரண்டொத்து நின்று நீண்டிசைப்பது நெட்டெழுத்து (உ.சொ.க.)

நெட்டெழுத்து[2] *netteluttu,* பெ. (n.) 1. ஆவணம் (பத்திர) முதலியன எழுதுகை; document writing. "*ஆவணத்தின்... நெட்டெழுத்துக்கூலி*" (பஞ்ச.திருமுக.1584). 2. ஆவணத்தின் (பத்திரத்தின்) உடல் (யாழ்.அக.); the body of a document or letter.

[நெட்டு + எழுத்து. நெட்டு = நெடுமை]

நெட்டெழுத்து[3] *netteluttu,* பெ. (n.) தொலைவு (தூரம்) பார்வை நோய் (சாலேசரம்) (இ.வ.); long-sight. *அவனுக்கு நெட்டெழுத்து வந்துவிட்டது. நாற்பது அகவைக்குப்பின் நெட்டெழுத்து வரும்.*

[நெடு → நெட்டு + எழுத்து]

அருகில் உள்ளவற்றைப் பார்க்க முடியாத பார்வைக்குறை நோய். இவர்களால் தொலைவில் உள்ளவற்றை மட்டுமே தெளிவாகப் பார்க்க இயலும்.

நெட்டெழுத்துக்காரன் *netteluttu-k-kāran,* பெ. (n.) ஆவண (பத்திர) மெழுதுவோன் (வின்.); document-writer. *ஆவணம் எழுத நெட்டெழுத்துக் காரனைக் கூட்டிவா.*

[நெட்டெழுத்து[2] + காரன்]

நெட்டெழும்பல் *nettelumbal,* பெ. (n.) காரமெழும்பல்; rising of strong pungent smell as from medicine or drugs when grinding. (சா.அக.).

[நெட்டு + எழும்பல். நெட்டு = காரம்]

நெட்டை[1] *nettai,* பெ. (n.) 1. நெடுமை, மிக்கவுயரம்; tallness. "*நெட்டைக் குயவற்கு*" (திருப்பு.1038). "*ஒட்டல்வாய் நெட்டைப் பேய்கள்*" (திருவிளை.இந்திரன்பழி.43). "*நெட்டை மரங்களென நின்று புலம்பினார் பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ*" (பாஞ்சாலி சபதம், பாரதியார்). *நெட்டைப் பனைமரம், நெட்டை நெடுமரம்.* 2. படை வகை (பதிற்றுப்.42:3 உரை); a kind of weapon. 3. முழுவெலும்புக்கூடு (சது.); skeleton.

ம. நெடுக்கம்; து. நெட்டனெ; தெ. நிமர.

[நெடு → நெட்டை]

நெட்டை[2] *nettai,* பெ. (n.) பிணம் (பாண்டி.); carcass.

[நெடு → நெட்டை]

பிணமான மாந்தர் உடல் வளையாமல் நெட்டையாய்க் கிடக்கும். இடுகாட்டில் இவ்வாறு புதைக்கப்படுவதாலும், சுடுகாட்டில் நெருப்பு வைக்கப்பட்ட பிணம், நரம்பியல் நோயாளியாயின் மடித்தெழும் அப்போது வெட்டிச்சாய்த்து நெட்டை யாக்குவதாலும் நெட்டை என்றாயிற்று.

நெட்டை[3] *nettai,* பெ. (n.) 1. மெய்க்குற்றம் ஐந்தனுள் ஒன்றான சோம்பல் முறிக்கை (பிங்.); stretching oneself, one of five mey-k-kurram. 2. சொடுக்கு விடுகை (வின்.) ; cracking the finger-joints.

[நெட்டி → நெட்டை]

மெய்க்குற்றங்கள் : 1. கொட்டாவி, 2. நெட்டை, 3. குறுகுறுப்பு (குறட்டை), 4. கூன் கிடை, 5. நட்டுவிழல் (தலைசாய்கை).

நெட்டைக்கங்காளம் *nettai-k-kangālam,* பெ. (n.) நெட்டையெலும்பு, பொருத்தெலும்பு; joints of the body. (சா.அக.).

[நெட்டை + கங்காளம். கங்காளம் = தசை கழிந்த உடலின் எலும்புக்கூடு, எலும்பு]

நெட்டைக்குத்து *nettai-k-kuttu,* பெ. (n.) நெட்டுக் குத்து (இ.வ.) பார்க்க; see *nettu-k-kuttu.*

[நெட்டை + குத்து. நெட்டு → நெட்டை]

நெட்டைக்கேழ்வரகு *nettai-k-kēl-varagu,* பெ. (n.) கேழ்வரகு வகை; a kind of ragi.

[நெட்டை (= நீண்டது) + கேழ்வரகு. ஐந்து மாதத்தில் விளையும் கேழ்வரகு வகை]

நெட்டைக்கோரை *nettai-k-kōrai,* பெ. (n.) நீண்ட கோரை வகை; tall koray.

[நெட்டை + கோரை. நெட்டை = உயரம், நீளம்]

நெட்டைநாரத்தை *nettai-nārattai,* பெ. (n.) மரவகை (L.); a kind of cherry nutmeg.

[நெட்டை + நாரத்தை]

நாரத்தை → நாரந்தை என்ற சொல்லைக் கிரேக்கம், இலத்தின் Norange என்று எடுத்தன. அவற்றின் வழிவந்த ஆங்கிலம் Orange எனக் கொண்டது என்பது பாவாணர் கருத்து.

நெட்டைப்பேய்மருட்டி *nettai-p-pēy-marutti,* பெ. (n.) இரட்டைப் பேய் மருட்டி; Malabarical mint-Anisomeles malabarica. (சா.அக.).

[நெட்டை + பேய்மருட்டி. வெதுப்படக்கி என்னுஞ்செடி வகை.]

நெட்டையன் *nettaiyan,* பெ. (n.) நெடியவன் (உ.வ.); tall man.

க. நீடியன்

[நெட்டை → நெட்டையன்]

நெட்டைவாங்கு-தல் *nettai-vāngu-*, 5செ.கு.வி. (v.i.) நெட்டிமுறி-த்தல் பார்க்க; see *netti-muri-*. (சா.அக.).

[நெட்டை + வாங்கு-தல். நெட்டு + இ- நெட்டி, நெட்டு + ஐ-நெட்டை.]

நெட்டோடை *nettōdai*, பெ. (n.) நீண்டவோடை; long brook.

[நெடு → நெட்டு + ஓடை]

நெட்டோலை¹ *nettōlai*, பெ. (n.) திருமுகம்; epistle, message. "*அமணர் தங்கள்பாற் செல்லவிட்டனன் கட்டி நெட்டோலை*" (திருவாலவா.26:2).

[நெடு + ஓலை]

பெரும்பாலும் பனை ஓலையாலும் சிறுபான்மை தாழை மடல், தாமரை இலை போன்றவற்றாலும் முடங்கல் எழுதப்பட்டது. இன்று பலவகையிலும் செய்திகள் அனுப்பப்படுகின்றன. மன்னர்களே அன்றிக் காதலர்களும் திருமுகம் அனுப்புவர்.

மாதவி தாழை மடலில் பித்திகை மொக்கால் மடல் எழுதி கோவலனுக்கு அனுப்பியதாகச் சிலம்பதிகாரம் கூறுகிறது. "*முதிர்பூந்தாழை முடங்கல் வெண்தோட்டு ... ... அயலது பித்திகைக் கொழு முகை ஆணி கைக்கொண்டு*" (சிலப்.8:49,54).

நெட்டோலை² *nettōlai*, பெ. (n.) பனை ஓலைப்பாய் (பறியோலை); mat of plaited palmyra-leaf. "*நெட்டோலைச் சயனத்தார்*" (நூற்றெட்டுத். திருப்புகழ்.95). "*நெட்டோலை வாசியா நின்றான் நெடுமரம்*" (ஔவையார்).

[நெடு → நெட்டு + ஓலை. நெடு அகலத்தைக் குறிக்கும்.]

பனையோலையிலும், தென்னைஓலையிலும் கூரையும், பாயும், தடுக்கும் அமைக்கப்பட்டன. கோரையால் பாய் முடைதலும் உண்டு.

நெடநெடெனல் *neda-nedenal*, பெ. (n.) மரம் முதலியன முறிந்து விழும் ஒலிக்குறிப்பு (சூடா.); onom. expr. signifying crashing sound, as of a falling tree. *வேப்பமரம் நெடநெடென முறிந்து விழுந்தது.*

[நெடு → நெட → நெடநெட + எனல் நெடநெடெனல் = ஈரடுக்கொலிக் குறிப்பு. இரட்டைக்கிளவி.]

நெடலை *nedalai*, பெ. (n.) நாரை வகை (நற்.211,உரை); a kind of stork bird.

[நெடு → நெட → நெடலை]

நெடி¹-த்தல் *nedi-*, 4செ.கு.வி. (v.i.) 1. பொழுது நீட்டித்தல்; to make delay. "*நெடியா தளிமின்*" (சிலப்.16:21). 2. காலந் தாழ்த்தல் ; to delay in time.

[நெடு → நெடி → நெடி - த்தல்.]

நெடி² *nedi*, பெ. (n.) 1. மிளகாய் முதலியன கமறல் நாற்றம்; pungent odour causing a choking sensation, as of fried chillies. *மிளகாய் கருகும் நெடி அடிக்கிறது.* 2. காரம் (இ.வ.); strong pungent smell. *சாத்தூர் மிளகாய்க்கு நெடி மிகுதி.* 3. கெட்ட நாற்றம்; stench. *சாக்கடையில் நெடி மிகுதியாகி விட்டது, எடுக்கவேண்டும்.* 4. மருந்தின் காரல் மணம்; the pungent smell of medicinal drugs or medicine. *மருத்துவமனை நெடி தாங்க முடியவில்லை.*

க. நீடி.

[நெடி = முகர்வதற்கு ஏற்றதாக இல்லாத மணம்.]

நெடி³ *nedi*, பெ. (n.) சிள்வண்டு; cricket. "*நெடிபடு கானத்து*" (பு.வெ.1:3). "*நெடிக்கடிய வெங்கானடுங்கிட*" (வேதாரணியபு.சோரச்.45:8).

மறுவ. சிள்வீடு, சிள்ளீடு.

[நுல் → நுள் → நெள் → நெடி.]

நெடிசு *neḍiśu,* பெ. (n.) நெடிது; long. *அவன் கால்சட்டை நெடிசு. நெடிசா வளர்ந்திருக்கிறான்.*

[நெடு → நெடிசு]

நெடித்தற்பொழுது *neḍittaṟ-poḻudu,* பெ.(n.) காலத்தாழ்வு (தாமதம்) (திவா.); delay, procrastination.

[நெடி → நெடித்தல் + பொழுது]

நெடிது[1] *neḍidu,* வி.எ.(adv.) காலத்தாழ்வாக; to delay time. "*நெடிது வந்தன்றா னெடுந்தகை தேரே*" (புறநா.296).

[நெடு → நெடி → நெடிது]

நெடிது[2] *neḍidu,* பெ. (n.) நெடுங்காலம்; long time, long period. "*அற்றால் அளவு அறிந்து உண்க அஃதுடம்பு பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு.*" (குறள்,943).

[நெடு → நெடி → நெடிது]

நெடிதுயிர்–த்தல் *neḍiduyir-,* 4செ.கு.வி. (v.i.) நெட்டுயிர்–த்தல் பார்க்க; see *neṭṭuyir-.* "*உரோகிணி நினைவனணோக்கி நெடிதுயிரா*" (நெடுநல்.163).

[நெடு → நெடி → நெடிது + உயிர்–த்தல்.]

நெடிப்பினை *neḍi-p-piṉai,* பெ. (n.) வங்க மணல்; leadore. (சா.அக.).

நெடிப்பு *neḍippu,* பெ. (n.) 1. நெடுநேரம்; long time. "*நெடிப்புறச் சானமுற்றிருந்து*" (சேதுபு. பராவசு.37). 2. கால நீட்சி ; lengthening of time.

[நெடு → நெடி → நெடிப்பு]

நெடிய *neḍiya,* பெ.எ. (adj.) 1. நீளமான; long. *நெடிய தெரு; நெடிய விரல்கள்.* 2. உயரமான; tall, high. *நெட்ட நெடியமரம்; நெடிய வாயில்கள்.* 3. காலத்தால் நீண்ட; long in time. *நெடிய துயில்.*

[நெடு → நெடிய]

நெடியவட்டம் *neḍiya-vaṭṭam,* பெ.(n.) பெரிய கேடகம் (சூடா.); large shield. *போரில் நெடிய வட்டம் உடைந்து விட்டது.*

[நெடு → நெடிய + வட்டம். நெடு – அகலப் பொருளில் வந்தது.]

நெடியவன் *neḍiyavaṉ,* பெ. (n.) 1. நெட்டையன்; tall man. 2. திருமால்; Lord Vishṇu. "*நெடியவன் கேழலாகி*" (திருவாத.).

[நெடு → நெடி → நெடியவன்]

குறுவடிவில் (வாமனம்) மாவலி என்னும் மலைஞால மன்னனிடம் இரந்து நின்று, மூவடி மண் கேட்க, அவனிசைந்ததும் நெடுவடிவம் கொண்டு ஓரடியால் மண் அளந்து, இரண்டாம் அடியால் விண் அளந்து மூன்றாம் அடிக்கு இடம் கேட்டபோது தலை தாழ்த்தினான் என்பது தொன்மக்குறிப்பு (நெடியோன் பார்க்க.)

நெடியவாயன் *neḍiya-vāyaṉ,* பெ.(n.) மீன் வகை; a kind of fish. "*ஓவினெடிய வாயன்*" (பறாளை.பள்ளு.16).

[நெடு → நெடிய + வாயன்]

நெடியன் *neḍiyaṉ,* பெ.(n.) நெட்டையன்; a tall man.

க. நிடியன்

[நெடு → நெடி → நெடியன்]

நெடியா *neḍiyā,* பெ. (n.) குறட்டைச் செடி; round snake gourd - Trichosanthus palmata. (சா.அக.).

நெடியாமி *neḍiyāmi,* பெ. (n.) தென்னை; cocoanut tree - Cocos nucifera. (சா.அக.).

[நெடு → நெடி → நெடியாமி. நீண்டு உயர்ந்த தென்னை.]

நெடியான் *neḍiyāṉ,* பெ. (n.) நெட்டையன்; tall man. *"நெடியார் குறியாரை ஆற்றிலே தெரியலாம்"* (பழ.).

[நெடியவன் → நெடியான்]

நெடியோன்[1] *neḍiyōṉ,* பெ. (n.) **1.** நெட்டையானவன்; tall person. *இவனுக்கு அவன் நெடியோன்.* **2.** உலகை மூன்றடியால் அளந்த திருமால்; Vishṇu, as in His Trivikrama incarnation. *"செங்க ணெடியோ னின்ற வண்ணமும்"* (சிலப்.11:51). **3.** பெரியவன்; great person. *"முந்நீர் விழவி னெடியோன்"* (புறநா.9). *இந்த வீட்டுக்கு அவர்தான் நெடியோன்.* **4.** துளசி (மலை.); sacred basil. **5.** மூக்கிரட்டைப்புல் (மலை.); the pungent smell of medicinal spreading hogweed.

[நெடு → நெடி → நெடியோன்.]

திருமாலின் பத்துத் தோற்றரவுகளில் ஒன்று. மன்னர் மன்னன் மாவலியிடம் இரப்பதற்காக திருமால் குறுவடிவம் கொண்டு மூன்றடி மண் கேட்டு, மன்னன் தர பின் பேருருவம் கொண்டு விண்ணையும் மண்ணையும் ஈரடியால் அளந்து மூன்றவது அடிக்கு இடம் கேட்க மன்னன் தலையைக் காட்ட தலைமீது மூன்றாவது அடியை வைத்தார். திருமால் உலகை அளக்க கொண்ட நீண்ட வடிவே அவருக்கு நெடியோன் எனப் பெயர் ஏற்பட காரணியமாயிற்று.

அனுமனும், சிவனும் கூட நீண்ட வடிவம் எடுத்ததாகத் தொன்மக் கதைகள் வழங்குகின்றன. *"நெடியோன் குன்றம்"* என்று வடவேங்கட மலையைச் சிலப்பதிகாரம் குறிக்கிறது.

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும் தமிழ்வரம்பறுத்த தண்புனல் நன்னாட்டு" (சிலப்.8:12).

நெடியோன்[2] *neḍiyōṉ,* பெ. (n.) கழகக் கால பாண்டிய மன்னன்; Pandiya king.

இவன் கி.மு.3000 ஆம் ஆண்டில் குமரிநாடு, பெருவள நாடு, ஒளி நாடு முதலிய பகுதிகளைக் கைப்பற்றிப் பஃறுளி என்னும் ஆற்றை வெட்டி நாட்டை விரிவாக்கி வளப்படுத்தினான். (சி.பெ.அ.)

நெடியோன் குன்றம் *neḍiyōṉ-kuṉṟam,* பெ. (n.) திருவேங்கடமலை; Tirupadi, as Viṣṇu's hill. *"நெடியோன்குன்றமுந் தொடியோள் பௌவமுந் தமிழ் வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு"* (சிலப்.8:1,2)

[நெடியோன் + குன்றம்]

நெடில் *neḍil,* பெ. (n.) **1.** நீளம் (திவா.); length. **2.** நெட்டெழுத்து; long vowel, opp.to kuṟil. *"குறிலே நெடிலே குறிலிணை"* (தொல். பொருள்.315). **3.** மூங்கில் (பிங்.); bamboo. *"நெடில் படுத்த வெங்கானம்"* (பாரத.வேத்.10). **4.** மிக்கது; that which is great or excessive. *"நெடிற் கொடுங்கொலை"* (இரகு.தேனு.104). **5.** நீளமானது; long. **6.** பதினைந்து முதல் பதினேழெழுத்து வரை கொண்ட கட்டளை நெடிலடி; a kind of metrics. *"மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப"* (தொல். பொருள்.செய்.36). **7.** ஐஞ்சீரடி; line of five metrical feet. *"அளவடி நெடிலடி நாற்சீ ரைஞ்சீர்"* (யா.கா.24).

[நெடு → நெடில். குறிலை விட ஒரு மாத்திரை அளவு நீண்டு ஒலிக்கும் உயிரெழுத்து குறிலினது வேறுபாடே (விகாரமே) நெடில் (உ.சொ.க.)]

நெடில்தொடர் *nedil-todar,* பெ. (n.) *நெடிற்றொடர்* பார்க்க; see *nedirrodar.*

[நெடில் + தொடர்]

நெடில்தொடர்குற்றியலுகரம் *nedil-todar-kurriyal-ugaram,* பெ. (n.) **நெடிற்றொடர் குற்றியலுகரம்** பார்க்க; see *nedirrodar-kurriyal-ugaram.*

[நெடில் + தொடர் + குற்றியலுகரம்.]

நெடிலடி *nedil-adi,* பெ. (n.) ஐந்சீரான் வரும் அடி; line of five metrical feet. "*ஐயொருசீர் நிறைதரு பாத நெடிலடியாம்*" (யா.கா.12).

மறுவ. கட்டளை நெடிலடி

[நெடில் + அடி]

எ–டு : "மேக நாட்டிற்கும் விஞ்சையர் நாட்டிற்கும் விண்ணோர், மாக நாட்டிற்கும் மலரய னாட்டிற்கும் மற்றை, நாக நாட்டிற்கும் பாதல நாட்டிற்கும் நணுகிப்போக நாட்டிய பொன்மதில் ஆனதப் புரிசை".
(கந்தபுராணம்.)

"மூவைந்தெழுத்தே நெடிலடிக் களவே ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப" (தொல். பொருள். செய்.38). நெடிலடி பதினைந்தும், பதினாறும், பதினேழும் என மூன்று நிலம் பெறும். (தொல்.பொருள். செய்.38,இளம்.).

எ–டு :

"கெஞ்சுவ தில்லை பிறர்பால்; அவர்செய்
கேட்டினுக்கும்
அஞ்சுவ தில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவ தில்லை; எனவே தமிழர்
தோளெழுந்தால்
எஞ்சுவ தில்லை; புவியில் எவரும்
எதிர்நின்றே"
(பெருஞ்சித்திரனார்)

இது பதினைந்து எழுத்தாலாய நெடிலடி.

"தேன்வந்த வாயிதழ்ச் சேயிழை யாயிளஞ்
செவ்விநவ்வி
மான்வந்த வாள்விழி வஞ்சிக்கு நீதஞ்சை
வாணன்வெற்பில்
யான்வந்த வாசென் றியம்புதி யேலவர்
யாவரென்னாள்
தான்வந்த வாவுட னேநின்னை யாரத்
தழீஇக்கொளுமே"
(தஞ்சைவா.111)

இது பதினாறு எழுத்தாலாய நெடிலடி.

"புயலே சுமந்து பிறையே அணிந்து
பொருவிலுடன்
கயலே மணந்த கமல மலர்ந்தொரு
கற்பகத்தின்
அயலே பசும்பொற் கொடிநின்ற தால்
வெள்ளை அன்னஞ் செந்நெல்
வயலே தடம்பொய்கை சூழ்தஞ்சை
வாணன் மலையத்திலே"
(தஞ்சைவா.1)

இது 17 எழுத்தாலான நெடிலடி.

தொல்காப்பியர், குறளடி என்பது 4 எழுத்து முதல் ஆறு எழுத்து வரை இடங்கொண்டு வரும் என்றும், சிந்தடி ஏழு முதல் ஒன்பது எழுத்துவரையும், அளவடி பத்துமுதல் 14 எழுத்து வரையும், நெடிலடி 15 முதல் 17 எழுத்து வரையும், கழிநெடிலடி 18–20 எழுத்து வரையும் இடங்கொண்டு வரும் என்றார்.

ஒவ்வொரு சீரும் ஐந்தெழுத்தை மிகாது என்றும் கூறினர். இவ்வாறு எழுத்துகளை அளவாகத் தொல்காப்பியர் கூற யாப்பெருங்கலக் காரிகையோ இரண்டு சீர் குறளடி, மூன்று சிந்தடி, நான்கு அளவடி, ஐந்து நெடிலடி, ஆறுக்கு மேல் கழிநெடிலடி என்று சீர்கள் கணக்கில் அடியை வரையரை செய்கிறது.

"குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி நாலொருசீர்,
அறைதரு காலை அளவொடு நேரடி ஐயொருசீர்,
நிறைதரு பாத நெடிலடி யாநெடு மென்பணைத்தோள்,
கறைகெழு வேற்கணல் லாய்மிக்க பாதங் கழிநெடிலே"
(யா.கா.12)

நெடிலா *nedilā,* பெ. (n.) சம்பங்கோரைப்புல்; small sedge grass - Cyperus, rotundus. (சா.அக.).

நெடிலி *nedili,* பெ. (n.) **1.** கடற்பருந்து வகை (வின்.); a large sea-heron. **2.** புல்வகை (சங்.அக.); a kind of grass.

[நெடில் → நெடிலி. உருவத்தால் நீண்ட பருந்தையும் புல்லையும் குறித்தது.]

நெடிலெதுகை *nedil-edugai,* பெ. (n.) அடிதோறும் நெடிலெழுத்து எதுகையாய் வருவது; a kind of rhyme.

[நெடில் + எதுகை]

எ—டு :

"போமாறு தலையசைப்பீர்" என்று சொன்னான்
புதுமாறு தலைவேண்டும் ஒருவன் மீண்டும்
ஏமாறு தலையடைந்தால் இந்த நாட்டின், எழில்மாறும்;
புகழ்மாறும் என்றான்"

(பாண்டின் பரிசு—பாவேந்தர்).

"ஏடா லலங்கல் இலங்கிலை வேல்வெற்ப
ஏழுலகும்
வாடாமல் வந்தருள் வாணன்தென்
மாறையில் வல்லியன்னான்
சூடாள் குவளையு முல்லையஞ் சூட்டுஞ்
சுனையும்பந்தும்
ஆடாள் தனக்கென்கொ லோஅடி
யேன்சென் றறிவிப்பதே"

(தஞ்சைவா.110)

"கடாஅக் களிற்றின்மேல் கண்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்" (குறள்,1087).

"ஈவார்கண் என்உண்டாம் தோற்றம்
இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை" (குறள்,1059).

"யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

(குறள்,127).

"தேமா புளிமா கருவிளங் கூவிளஞ்
சீரகவற்
காமாங் கடைகாய் அடையின்வெண்
பாவிற்கந் தங்கனியா
வாமாண் கலையல்குல் மாதே வகுத்தவஞ்
சிக்குரிச்சீர்
நாமாண் புரைத்த அசைச்சீர்க் குதாரணம்
நாள்மலரே" (யா.கா.7).

"மாணார்க் கடந்த மறவெம்போர் மாறனைக்
காணாக்கா லாயிரமுஞ் சொல்லுவேன்—
கண்டக்காற்
பூணாகந் தாவென்று புல்லப் பெறுவேனோ
நாணோ டுடன்பிறந்த நான்"

(முத்தொள்.44).

"பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே"

(திருவாச.சிவபு.66—69).

"தாயாய் முலையைத் தருவானே தாரா
தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ நம்பி
இனித்தான் நல்குதியே
தாயே யென்றுன் தாளடைந்தேன் தயாநீ
யென்பா லில்லையே
நாயேன் அடிமை உடனாக ஆண்டாய்
நான்தான் வேண்டாவோ."
(திருவாச.ஆனந்தமாலை.5).

"பேராசை எனும் பிணியில் பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ?
வீரோ! முதுசூர் பட, வேல் எறியும்
சூரா! சுரலோக துரந்தரனே"

(கந்தரனுபூதி).

"மாலோன் மருகனை மன்றாடிமைந்தனை
வானவர்க்கு
மேலான தேவனை, மெய்ஞ்ஞான
தெய்வத்தை மேதினியில்
சேலார் வயல்பொழில் செங்கோடனைச்
சென்று கண்டுதொழ
நாலாயிரம் கண்படைத்திலனே அந்த
நான்முகனே"

(கந்தரலங்காரம்).

"பூவே மணமே சரணஞ் சரணம்
பொருளே யருளே சரணஞ் சரணம்
கோவே குகனே சரணஞ் சரணம்
குருவே திருவே சரணஞ் சரணம்
தேவே தெளிவே சரணஞ் சரணம்
சிவசண் முகனே சரணஞ் சரணம்
காவே தருவே சரணஞ் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம்"

(திருவருட்பா.)

"இரண்டாம் வழுவா எழுத்தொன்றின் எதுகை" என யாப்பெருங்கலக் காரிகை கூறும். இரண்டாமெழுத் தொன்றி வரத் தொடுப்பது எதுகை. அடிதோறும் முதற் கண் இரண்டாமெழுத் தொன்றிவரத் தொடுப்பது அடியெதுகை எனப்படும்.

எ—டு :

"நாணாக் கால் பெண்மை நலனழியும்
முன்னின்று
காணாக்கால் கைவளையுஞ் சோருமால்"

(முத்தொள்.28).

இரண்டாமெழுத்து ஒன்றிவரினும் முதலெழுத் தெல்லாம் தம்முள் ஒத்த அளவினவாய் வந்து நாணாக்கால் என்பதற்குக் காணாக்கால் என்பதல்லது கணாக்கால் என்பது எதுகையாகாது; நாணாக்கால் என்பதற்குக் காணாக்கால் என்பதே எதுகையாம். இது அடிஎதுகை.

ஓரடியில் உள்ள நான்கு சீர்க்கண் ஏற்படும் எதுகை வேறுபாடு (விகற்பம்):

1. இணை எதுகை : முதலிரு சீர்க்கண்ணும் எதுகை வரத்தொடுப்பது.

2. பொழிப்பெதுகை : முதற்சீர்க் கண்ணும் மூன்றாஞ் சீர்க்கண்ணும் எதுகை வரத்தொடுப்பது.

3. ஒரூஉ எதுகை : முதற்சீர்க்கண்ணும், இறுதிச் சீர்க்கண்ணும் எதுகை வரத்தொடுப்பது.

4. கூழை எதுகை : முதல் மூன்று சீர்க்கண்ணும் எதுகை வரத்தொடுப்பது.

5. மேற்கதுவாய்எதுகை : முதலயற் சீர்க்கணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் எதுகை வரத்தொடுப்பது.

6. கீழ்க்கதுவாய் எதுகை : ஈற்றயற்சீர்ககண் இன்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் எதுகை வரத் தொடுப்பது.

7. முற்று எதுகை : எல்லாச் சீர்க் கண்ணும் எதுகை வரத்தொடுப்பது.

எ–டு :

"பொன்னி னன்ன பொறிசுணங் கேந்திப்
(இணை எதுகை)
பன்னருங் கோங்கின் நன்னலங் கவற்றி
(பொழிப்பு)
மின்னவி ரொளிவடந் தாங்கி மன்னிய
(ஒரூஉ)
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி
(கூழை)
என்னையு மிடுக்கண் துன்னுவித்
தின்னடை (மேற்கதுவாய்)
அன்ன மென்பெடை போலப் பன்மலர்க்
(கீழ்க்கதுவாய்)
கன்னியம் புன்னை யின்னிழல் துன்னிய
(முற்று)
மயிலேய் சாய லவ் வாணுதல்
அயில்வேல் உண்கணெம் அறிவு
தொலைத் தனவே" (யா.கா.)

இப்பாடல் இணை எதுகை முதலிய ஏழு வேறுபாடும் (விகற்பமும்) வரத் தொடுக்கப்பட்டது.

நெடிற்றொடர் *nedirrodar,* பெ. (n.) நெட்டெழுத்தை யீற்றுக் கயலெழுத்தாகத் தொடர்ந்து வருங்குற்றுகரவீற்று மொழி (நன்.94); the letter which comes after the long vowel.

[நெடில் + தொடர்]

நெடிற்றொடர்க்குற்றியலுகரம் *nedirrodar-k-k-kurriyal-ugaram,* பெ. (n.) குற்றியலுகர வகைகளில் ஒன்று; a kind of *kurriyalukaram.*

[நெடில் + தொடர் + குற்றியலுகரம்]

நெடிற் கீழும், நெடிலொற்றின் கீழும், குறிலிணைக் கீழும், குறிலிணை யொற்றின் கீழும், குறினெடிற் கீழும், குறினெடி லொற்றின் கீழும் குற்றொற்றின் கீழும் என்றிவ் வேழிடத்தும் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து உகரம் வந்தால் அது குற்றியலுகர மென்று வழங்கப்படும்.

"நெடிலே குறிலிணை குறினெடி லென்றிவை
ஒற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென்
றேழ்குற் றுகரக் கிடனென மொழிப"

"எழுவகை இடத்துங் குற்றிய லுகரம்
வழுவின்றி வரூஉம் வல்லா றூர்ந்தே"

என்கிறது பல்காயம்.

எ–டு : நாகு–காசு–காடு–காது–காபு–காறு என நெடிற்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வரும்.

நெடிலொற்றின் கீழ் : நாக்கு–காச்சு–காட்டு–காத்து–காப்பு– காற்று.

குறிலிணைக்கீழ் : வரகு–முரசு–முருடு–மருது–துரபு–கவறு.

குறிலிணை ஒற்றின் கீழ் : அரக்கு–பொரிச்சு–தெருட்டு–குருத்து–பொருப்பு–சிரற்று.

குறில்நெடிற்கீழ் : அசோகு–பலாசு–மலாடு–கெடாது–புதாபு–விராது.

குறில்நெடில்ஒற்றின்கீழ் : தமாக்கு–தடாச்சு–பனாட்டு–கடாத்து–புதாப்பு–விராற்று.

குற்றொற்றின் கீழ் : அக்கு–கச்சு–கட்டு–கத்து–கப்பு–கற்று.

இது செய்யுளுக்குரிய யாப்புப் பற்றிய வரம்பாகும்.

குற்றியலுகரம் அறுவகைப்படும் எனத் தொல்காப்பியர் கூறுகின்றார். அவை, ஈரெழுத்தொரு மொழி, உயிர்த் தொடர்மொழி, இடைத்தொடர் மொழி, ஆய்தத்தொடர் மொழி, வன்றொடர் மொழி, மென்றொடர் மொழி.

"ஈரெழுத் தொருமொழி உயிர்த் தொடர்
இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர்
மென்றொடர்
ஆயிரு மூன்றே உகரங் குறுகிடன்"
(தொல்.எழுத்து.குற்றியலு.1)

எ–டு : ஈரெழுத்தொருமொழி : நாகு, காசு– காடு, காவு, காபு, சோறு.

உயிர்த்தொடர்மொழி : வரகு, பலாசு, முருடு, எருது, மரபு, கயிறு.

இடைத்தொடர்மொழி : செய்கு, கொய்சு, மார்பு, சால்பு, செய்து, செய்பு.

ஆய்தத்தொடர்மொழி : எஃகு, கஃசு, கஃடு, அஃது, கஃபு, சுஃறு.

வன்றொடர் மொழி : சுக்கு, கச்சு, பட்டு, பத்து, உப்பு, பற்று.

மென்றொடர் மொழி : கங்கு, பஞ்சு, வண்டு, பந்து, வம்பு, கன்று.

பல்காயம் கூறும் ஏழுவகைக் குற்று கரங்களில் தொல்காப்பியர் கூறும் ஆய்தத் தொடர் இடம் பெறவில்லை. நன்னூலார் தொல்காப்பியரைத் தொடர்ந்து குற்றியலு கரத்தை அறுவகைப் படுத்தினும், தொல்காப்பியர் ஈரெழுத் தொருமொழி என்று கூறுவதை நெடிற்றெடெர் குற்றியலுகரம் என வேறு பெயர் தருகின்றார்.

"நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடைத்
தொடர் மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே''
(நன்.96).

நன்னூலார் பகுப்பு : 1. நெடிற் றொடர்க் குற்றியலுகரம், 2. ஆய்தத்தொடர், 3. உயிர்த் தொடர், 4. வன்றொடர், 5. மென்றொடர், 6. இடைத்தொடர். எனவே ஈற்றலெழுத்தை நோக்கிக் குற்றியலுகரம் முப்பத்தாறாகும்.

எனவே குறுகி யொலிக்கும் உகரம் குற்றியலுகரம். அது ऋ ल என்னும் வடமொழி யெழுத்துகளில் உள்ளஉகரம்போல இகரத் திற்கும் உகரத்திற்கும் நடுவன தாயொலிக்கும்.

ஒரு சொல்லின் கடைசியில் வல்லின மெய்யின்மேல் ஏறிவரும் உகரம் குற்றியலுகரம். குற்றியலுகரம் வருஞ்சொல் ஈரெழுத்திற்குக் குறையாது; ஈரெழுத்தாயின் முதலெழுத்து நெடிலாயிருக்கும்; மூவெழுத்தும் அதற்கு மேலுமாயின் முதலில் எந்த எழுத்து இருப்பினும் சரியே.

குற்றியலுகரச்சொல் ஈற்றயல் (கடைசிக்கு முந்தின) எழுத்துப் பற்றி ஆறு தொடராக வகுக்கப்படும்.

எழுத்துக்கள் தொடர்ந்து நிற்றலின், சொற் தொடர் எனப்பட்டது.

உ–ம்

நெடிற்றொடர்க் குற்றியலுகரம் – ஆறு, காசு
ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் – எஃது,அஃது
உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் – வரகு, தராசு
வன்றொடர்க் குற்றியலுகரம் – பட்டு, சுக்கு
மென்றொடர்க் குற்றியலுகரம் – சங்கு, வண்டு
இடைத்தொடர்க் குற்றியலுகரம் – மார்பு, தெள்கு

ஆறு தொடர்களிலும் நெடிற்றொடரொன்றே ஈரெழுத்துள்ளது; ஏனையவைந்தும் மூவெழுத்தும் அதற்கு மேலுமுள்ளன.

நெடிற்றொடர்க்கும் உயிர்த்தொடர்க்கும் உயிரும் உயிர்மெய்யும் ஈற்றயலாக வரும்; ஆய்தத் தொடர்க்கு ஆய்தம் ஈற்றயலாக வரும். ஏனைத் தொடர்கட்கு மெய் ஈற்றயலாக வரும்.

உயிர்த்தொடரில் ஈற்றயலாய் வருவது உயிர்மெய்யேனும், அஃது உயிரும் மெய்யுமாகப் பகுக்கப்படும்போது, உயிரே ஈற்றயலாய் நிற்றலின் உயிர்தொட ரெனப்பட்டது.

நெடிற்றொடர்க்கும் உயிர்த்தொடர்க்கும் வேறுபாடு.

நெடிற்றொடர்	**உயிர்தொடர்**
1. ஈரெழுத்தாலாயது	மூவெழுத்திற்குக் குறையாதது.
2. நெடிலே ஈற்றயலாக வருவது	குறிலும் நெடிலும் ஈற்றயலாக வருவது.
3. உயிரும் உயிர்மெய்யும் ஈற்றயலாக வருவது.	உயிர்மெய்யே ஈற்றயலாக வருவது.

குற்றியலுகரம் ஈற்றயலெழுத்துப் பற்றி முப்பத்தாறாகக் கூறப்படும். ஆறு தொடர்களிலும் முறையே நெடிலேழும், ஆய்தமொன்றும், ஔகார மொழிந்த உயிர்பதினொன்றும், வல்லின மெய்யாறும் மெல்லினமெய்யாறும், வகரமொழிந்த இடையினமெய் ஐந்துமாக மொத்தம் முப்பத்தாறெழுத்துகள் ஈற்றயலாக வரும்.

குற்றியலுகர முற்றியலுகரங்கள் குற்றுகரம் முற்றுகரமெனவுங் கூறப்படும். (இயற்றமிழ் இலக்கணம் – பாவணர்.)

குற்றியலுகரம் உயிரீறு கொண்டே வரும் என்று பாவாணர் நிறுவுகின்றார்.

குற்றியலுகரம் உயிரீறே

"எழுத்தெனப் படுப,
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃ தென்ப;
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே"
(தொல்.1)

"அவைதாம்
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன" (தொல்.2)

என்றார் தொல்காப்பியர்.

இரண்டாம் நுற்பாவில், குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும் எனப் பிரித்துக் கூறாது "குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும்" என்று 'முப்பாற் புள்ளி' என்பது மூவெழுத்தையும் பொதுப்படத் தழுவுமாறு உம்மைத் தொகையாய்ச் சேர்த்துக் கூறியிருத்தலின், குற்றியலிகர குற்றிய லுகரங்களும் ஆய்தம் போலப் பண்டைக் காலத்திற் புள்ளி பெற்றன என்பதுணரப்படும்.

நூற்பாவில் 'முப்பாற்புள்ளி' என்பது, புள்ளி பெற்ற மூவெழுத்துகளையும் முப்புள்ளி வடிவான ஆய்தத்தையும் ஒருங்கே குறிப்பது "ஆமா கோனவ் வணையவும் பெறுமே" என்னும் நன்னூல் நூற்பாவின் 'ஆமா' என்பது போன்ற இரட்டுறலாகும்.

தொல்காப்பிய மரபியல் நூற்பா 110–ல் 'வாரா ததனான் வந்தது முடித்தல்' என்னும் உத்தியுரையில்,

"குற்றியலிகரத்தைப் புள்ளியென்றலும் ஆட்சியுங் குறியீடும் ஒருங்கு நிகழ்ந்தன வாகலின் அவையும் இனி வாராமையான் வந்துழி வந்துழி அவ்வாறு ஆண்டானென்பது, இனிப் புள்ளியென மேல் ஆள வாராததனைப் புள்ளியென்று ஆள்வனவற்றோடு மயங்கக் கூறுதலென்பது, 'அவைதாங் குற்றிய லிகரங் குற்றிய லுகர – மாய்த மென்ற – முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன' (தொல்–எழுத்து–நூன்.2) என்புழிக் குற்றியலிகரம், புள்ளியென்று யாண்டும் ஆள வாராமையானும் அதுதான் அவ்வழி வரவேண்டு தலானும் அங்ஙனம் புள்ளியென்று ஆள வருங் குற்றுகரத்தோடும் ஆய்தத்தோடும் உடன் கூறுதலாயிற்று. இங்ஙனம் உடன் கூறாக்காற் புள்ளியுங் குற்றிகரமுமெனச் நூற்பா (சூத்திரம்) பெறுதல் வேண்டுவ தாவான் செல்லுமென்பது" என்றுரைத்தார் பேராசிரியர்.

சிவஞான முனிவர் தம் தொல்காப்பிய முதல் நூற்பாவின் (சூத்திர) விருத்தியில்.

"*ஒரு மொழியைச் சார்ந்து வருமியல்பின்றித் தனித்தியங்கு மியல்பு தமக்கிலவென்றலின், அவை தம்மையே யெடுத்தோதிக் காட்டலாகாமையின், வரும் நூற்பாவான் (சூத்திரதான்) அவற்றிற்கு வேறுவேறு பெயரிட்டு*" "*அவைதாங் குற்றியலிகரங் குற்றியலுகர மாய்தம் என்றும், அம் மூன்றும் புள்ளி பெறுதல் பற்றிப் பொதுப் பெயராக முப்பாற் புள்ளியும்*" என்றும், அவை தனித் தெழுதப்படா வாயினும் மொழியொடு சார்த்தி யெழுதப்படுதலின் எழுத்தென்னுங் குறியீட்டிற் குரியவென்பார். 'எழுத்தோ ரன்ன' என்றும் ஓதினார் என்றார்.

நச்சினார்க்கினியரும், "*அவைதாம்... எழுத்தோ ரன்ன*" என்னும் சார்பெழுத்து நூற்பாவுரையின் இடையில்,

"*ஆய்தமென்ற ஓசைதான் அடுப்புக் கூட்டுப் போல மூன்று புள்ளி வடிவிற்றென்பது உணர்த்தற்கு ஆய்தமென்ற முப்பாற் புள்ளியுமென்றார். அதனை இக்காலத்தார் நடுவு வாங்கியிட் டெழுதுபவென்று இதற்கு வடிவு கூறினார். ஏனை யொற்றுகள்போல உயிரேறாது ஓசை விகாரமாய் நிற்பதொன்றாகலின், எழுத்தியல் தழா ஓசைகள் போலக் கொள்ளினுங் கொள்ளற்க என்றற்கு எழுத்தேயா மென்றார். இதனைப் புள்ளி வடிவிற்றெனவே ஏனை யெழுத்துகளெல்லாம் வரிவடிவின வாதல் பெற்றாம்*" என்று கூறினாரேனும், தொடக்கத்தில்,

"*அவைதாம்–மேற்சார்ந்து வருமெனப் பட்டவைதாம் குற்றியலிகரங் குற்றியலுகரம் ஆய்தமுமென்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளி வடிவுமாம்; எழுத்தோரன்ன – அவையும் முற்கூறிய முப்பதெழுத் தோடு ஒரு தன்மையாய் வழங்கும் என்றவாறு*" என்று மூவெழுத்தும் புள்ளிபெறுமென ஒரு தன்மைப்படவே உரைத்தார்.

மயிலைநாதர், "*தொல்லை வடிவின*" என்னும் நன்னூல் நூற்பா வுரைவில்,

"*ஆண்டு என்ற மிகையானே, தாது, ஏது என்றற் றொடக்கத்து ஆரிய மொழிகளும், எட்டு கொட்டு என்றற் றொடக்கத்துப் பொது மொழிகளும், குன்றியாது, நாடியாது எட்டியாண்டுளது என்றற் றொடக்கத்துப் புணர் மொழிப் பொருள் வேறுபாடுகளும், அறிதற் பொருட்டுக் குற்றுகரக் குற்றிகரங்களுக்கு மேற்புள்ளி கொடுப்பாரும் உளரெனக் கொள்க*" என்று உரைத்தனர்.

"குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் புள்ளி பெற்று நிற்கும்: என்னை?"

"குற்றிய லிகரமும் குற்றிய லுகரமு மற்றவை தாமே புள்ளி பெறுமே"

என்பது கழக சங்க யாப்பாகலின் என்பது யாப்பருங்கல விருத்தி (ப.27).

மேற்கூறியவற்றால், குற்றியலிகர குற்றிய லுகரங்கள் பண்டைக் காலத்தில் புள்ளியிட் டெழுதப்பட்டனவென்றும் அங்ஙனம் எழுதினது அவற்றின் ஒலிக்குறுக்கத்தையும் 'நாடியாது', 'எட்டியாண்டு' முதலிய புணர்மொழிப் பொருள் வேறுபாட்டையும் காட்டற்கு என்றும் அறியப்படும்.

'நாடியாது', 'எட்டியாண்டு' என்பன, நாடி யாது, எட்டி யாண்டு என்றும் பொருள் படுமாதலின், அவை நாடு + யாது, எட்டு + யாண்டு என்னும் புணர்மொழிகள் என்று காட்டற்குக் குற்றியலிகரத்தின்மேற் புள்ளியிடப் பட்டதென்க.

குற்றுகரத்தை மேற்சுன்னமிட்டுக் காட்டு வது இன்றும் மலையாள (சேர) நாட்டு வழக்கம். குற்றிகர குற்றுகரங்கள் புள்ளி பெறுமென்று நன்னூலிற் கூறப்படாமையால், 12ஆம் நூற்றாண்டிற்கு முன்பே இவ்வழக்கு, சோழ பாண்டிய நாடுகளில் ஒழிந்தது என்பதை அறியலாம். எகர ஏகாரங்கட்கும் ஒகர ஓகாரங்கட்கும் அவை சேர்ந்துள்ள உயிர் மெய்கட்கும் வரி வேறுபாடு தொல் காப்பியத்திலே கூறப்பட்டிருப்பினும் 17ஆம் நூற்றாண்டில் அவ்வெழுத்துகள் குறில் நெடில் வேறுபாடின்றி எழுதப் பட்டாற்போல, குற்றியலுகரமும் வேறுபாடின்றி யெழுதப்பட்ட தென்க.

ஒரு பொருள் குறுகின் அப்பொருளே யன்றி வேறுபொரு ளாகாது. அதன் குறுக்கம் அளவு வேறுபாடேயன்றிப் பொருள் வேறுபாடன்று. அதுபோல், குற்றியலுகரமும், முற்றியலுகரம்போல உயிரேயன்றி மெய்யாகாது, இதனாலேயே,

"இகரஉரகங்குறுகிநின்றன, விகார வகையாற் புணர்ச்சி வேறு படுதலின், இவற்றை இங்ஙனங் குறியிட்டாளுதல் எல்லார்க்கும் ஒப்ப முடிந்தது. சந்தனக்கோல் குறுகினால் பிரப்பங் கோலாகாது; அது போல உயிரது குறுக்கமும் உயிரேயாம். இவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும் பற்றி வேறோர் எழுத்தாக வேண்டினார்'' நச்சினார்க்கினியரும். பொருள் வேற்றுமை யென்றது பண்டைக் காலத்தில் கட்டு கொட்டு முதலிய சொற்கள் ஏவல் வினையாம் போது முற்றுகர வீறாயும் முதனிலைத் தொழிற்பெயராம் போது குற்றுகர வீறாயும், ஒலிக்கப்பட்டவை நோக்கி, "தருக்கு அணுக்கு என்பன வினைக்கண் வந்த முற்றுகரம்" (தொல்.36, உரை). *"காது கட்டு கத்து முறுக்கு தெருட்டு என்பன முற்றுகரமும் குற்றுகரமுமாய்ப் பொருள் வேறுபட்டு நின்றாற் போல"* (தொல்.68, உரை) என்று நச்சினார்க்கினியர் கூறுதல் காண்க. தொல்காப்பியர் தம் காலத்தில் குற்றுகரமும் மெய்போலப் புள்ளி பெற்றதனாலேயே, புணரியலில்.

"மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்"
(தொல்.104)

"குற்றிய லுகரமும் அற்றென மொழிப"
(தொல்.105)

என்று மாட்டேற்றிக் கூறினார்.

இம் மாட்டேற்றைக் கவனியாது. *"குற்றிய... மொழிப"*, என்னும் நூற்பாவிற்கு *"ஈற்றிற் குற்றிய லுகரமும் (புள்ளியீறு போல உயிரேற இடம் கொடுக்கும்) அத்தன்மைத்து என்று சொல்லுவர்'* என்று இளம்பூரணரும். *"ஈற்றுக் குற்றியலுகரமும், புள்ளியீறு போல உயிரேற இடம் கொடுக்கு மென்று கூறுவர் புலவர்"* என்று நச்சினார்க்கினியரும் உரை கூறுவது பொருந்தாது. *"அற்றென மொழிப"* என்னும் மாட்டேறு *"புள்ளியொடு நிலையல்"* என்பதையே தழுவுமாதலின் இவ் விருவரும் இங்ஙனம் உரைத்தற்கு இவர் காலத்திற்கு முன்பே குற்றியலுகரம் புள்ளி பெறும் வழக்கம் வீழ்ந்தமையே கரணியமாகும். இவர் கூறிய உரை இங்குப் பொருந்துமாயின் தொல்காப்பியர் நூன்மரபில்.

"மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையில்" (தொல். 15)

"எகர ஒகரத் தியற்கையும் அற்றே" (தொல். 16)

என்று கூறியவிடத்தும் பொருந்தல் வேண்டும்.

எகர ஒகரம் புள்ளியீறு போல உயிரேற இடங்கொடுத்த லின்மை யானும், *"எகர... அற்றே"* என்னும் நூற்பாவிற்கு *"எகர ஒகரங்களது இயல்பும் அவ்வாறு புள்ளி பெறும் இயல்பிற்று''* என்று இளம்பூரணரும், *"எகர ஒகரங்களின் நிலையும் மெய்போலப் புள்ளி பெறும் இயல்பிற்று''* என்று நச்சினார்க்கினியரும் உரை கூறுவதானும். *"குற்றிய... மொழிப''* என்னும் நூற்பாவிற்கும் குற்றுகரமும் மெய்போலப் புள்ளிபெறும் என்பதே உரையாகக் கோடல் பொருத்தமாம்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும், ஈற்றுக் குற்றியலுகரமும் புள்ளியீறு போல உயிரேற இடங்கொடுக்கு மென்று உரைத்தவிடத்தும், மாத்திரைக் குறுக்கத்தால் அங்ஙனம் இடங்கொடுக்கும்

என்னும் கருத்தினரே அன்றி மெய்யீறாய் இருத்தலால் இடங்கொடுக்கும் என்னும் கருத்தினரல்லர். "குற்றுகரத்திற்கு முன்னர் வந்த உயிரேறி முடிய அரை மாத்திரையாய் நிற்றலும். முற்றுகரத்திற்கு முன்னர் வந்த உயிரேறி முடியாமையும் தம்முள் வேற்றுமை" (தொல். 36, உரை) என்று நச்சினார்க்கினியர் கூறுதல் காண்க.

இனி, தொல்காப்பியர் கருத்தை நோக்கின், அவர் குற்றியலுகரத்தை மெய்யீறென்று கொண்டார் என்று கொள்ளுதற் எள்ளளவும் இடமில்லை. அவர்,

"குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்"

(தொல். 67)

எனக் குற்றியலுகரம் மொழி முதல் வருமென்றும் கூறினார். நுந்தை என்னும் சொல்லின் முதலில் (தொல்காப்பியர் கருத்தின்படி) உள்ள குற்றியலுகரம் மெய்யீறாயின், அச்சொல் ந்ந்தை என்று எழுதப்படல் வேண்டும். அங்ஙன மெழுதப்படாமையும், குற்றியலுகரத்தைத் தொல்காப்பியர் மெய்யென்று கொண்டிருப்பா ராயின், அது,

"பன்னீ ருயிரும் மொழிமுத லாகும்."
(தொல். 59)

"உயிர்மெய் அல்லன மொழிமுத லாகா"
(தொல். 60)

என்று அவர் கூறியவற்றோடு முரணுதலும் நோக்குக.

மேலும், ஒரே யுகரம் ஓரிடத்துக் குற்றுகரமாகவும் ஓரிடத்து முற்றுகரமாகவும் ஒலிக்கப்படும். அங்ஙனம் ஒலிக்கப்படு பவற்றுள் சிலவற்றிற்குக் குற்றுகர முற்றுகரப் பொருள் வேறுபாடுண்டு. சிலவற்றிற்கில்லை.

"முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅ
தப்பெயர் மருங்கின் நிலையிய லான"

(தொல்.68)

என்னும் நூற்பாவையும், அதன் உரையில்,

"காது கட்டு கத்து முருக்கு தெருட்டு என்பன முற்றுகரமும் குற்றுகர முமாய்ப் பொருள் வேறுபட்டு நின்றாற்போல, நுந்தை யென்று இதழ் குவித்து முற்றக் கூறியவிடத்தும் இதழ் குவியாமற் குறையக் கூறியவிடத்தும் ஒரு பொருளே தந்தவாறு காண்க. நுந்தாயென்பதோ வெனின், அஃது இதழ் குவித்தே கூறவேண்டுதலிற் குற்றுகரமன்று. இயலென்றதனான் இடமும் பற்றுக் கோடும் இரண்டடிற்கும் வேறுபாடின் றென்று கொள்க" என்று நச்சினார்க்கினியர் உரைத்திருப்பதையும் நோக்குக. இதனால், குற்றியலுகரம் மெய்யீறாயின் முற்றியலுகரமும் மெய்யீற்றாய் உகரம் என்னும் உயிரே தமிழுக்கில்லை யென்று பெறப்படுதலும் அங்ஙனமின்மையும் அறிக.

செய்யுளியலில், இருவகை யுகரமு மொன்றாகக் கொண்டே,

"இருவகை யுகரமோ டியைந்தவை வரினே
நேர்பும் நிரைபு மாகு மென்ப"
(தொல்.செய்.4)

என்றார் தொல்காப்பியர்.

இதன் உரையில், *"இருவகை யுகரமென்பன, குற்றுகர முற்றுகரங்கள், அவற்றோடு மேற்கூறிய நேரசையும் நிரையசையும் ஒருசொல் விழுக்காடுபட இயைந்து வரின் நிறுத்த முறையானே நேரசையோ டொன்றி வந்த குற்றுகரமும் அதனோடு ஒன்றிவந்த முற்றுகரமும் நேர்பசை யெனப்படும்; நிரைபசையோ டொன்றி வந்த குற்றுகரமும் அதனோடொன்றி வந்த முற்றுகரமும் நிரைபசை எனப்படும் என்றவாறு..."*

"முன்னர் நேரசை நான்கும் நிரையசை நான்குமென எண்வகையான் அசைகூறி அவற்றுப்பின் இருவகை யுகரமும் வருமெனவே, அவை குற்றுகரத்தோடு எட்டும் முற்றுகரத்தோடு எட்டுமாகப் பதினாறு எடுத்துக்காட்டுப் (உதாரணப்) பகுதியவாய்ச் சென்றதேனும், அவற்றுட் குற்றெழுத்துப் பின்வரும் உகரம் நேர்பசை யாகா தென்பது *"குறிலிணை யுகர மல்வழி யான"* (தொல்.செய்.4) என்புழிச் சொல்லுதும்; ஒழிந்தன குற்றுகர நேர்பசை மூன்றும் நிரைபசை நான்குமாயின. எ–டு: வண்டு, நாகு, காம்பு, வரகு, குரங்கு, மலாடு, மலாட்டு : இவை குற்றுகரம் அடுத்து நேர்பும் நிரைபும் வந்தவாறு" என்று உரைத்தார் பேராசிரியர். இதனால், குற்றுகரமும் முற்றுகரம் போல அலகு பெறுமென்றும் அசைக் குறுப்பாமென்றும் அறியப்படும்.

சொற்கள் இலக்கண முறையிலும் இலக்கிய முறையிலும் பல வகையாகத் திரிந்து, முன்பு முற்றுகர வீறாயிருந்தவை அல்லது உகரமல்லாத ஈறாயிருந்தவை பின்பு குற்றுகர வீறாகின்றன. அவ்வகைகளாவன:

1. தொழிற்பெயர் : முதனிலை திரிந்த தொழில் பெயர் :

எ–டு: படு → பாடு, சுடு → சூடு.

ஈறுபெற்ற தொழிற்பெயர் :

எ–டு : படி + பு – படிப்பு. முடி + சு – முடிச்சு.

2. வேற்றுமைப் பெயர் :

எ–டு : யான் + கு – எனக்கு, அவர் + கு – அவர்க்கு.

3. குறிப்பு வினைமுற்று :

எ—டு : தாள் + து – தாட்டு, கண் + து – கட்டு, பால் + து – பாற்று. அன் + து – அற்று.

4. பிறவினை : எ—டு : படு + து – படுத்து. நட + து – நடத்து, வாழ் + து – வாழ்த்து, பாய் + சு – பாய்ச்சு.

5. போலி : எ—டு : அடைவு → அடவு → அடகு.

6. சொல் திரிபு : எ—டு : திரும் → திரும்பு, பொருந் → பொருந்து, உரிஞ் → உரிஞ்சு, உடன் (உடல்) → உடம் → உடம்பு, பண் → பாண் → பாடு, குள் → கொள் → கோள் → கோண் → கோடு, ஒளி → ஒளிர் → ஒளிறு. போ → போது.

மேற்காட்டிய பாடு, படிப்பு, எனக்கு, தாட்டு, படுத்து முதலிய சொற்கள், குற்றுகர வீற்றை மெய்யீறாகக் கொள்ளின் பாட்ட், படிப்ப், எனக்க், தாட்ட், படுத்த் என்ற முதல் வடிவங்களினின்று தோன்றினவாக வன்றோ கொள்ளல் வேண்டும்! இஃது எத்துணைப் பேதமையாகும்! மேலும், ஆட்டு, பாட்டு, கலக்கு, விலக்கு முதலிய பிறவினைகளும் தொழிற்பெயர்களும் முதனிலை யீற்று வலியிரட்டியும் முதனிலை யிடைமெலி வலித்தும் முறையே ஆடு, பாடு, கலங்கு, விளங்கு என்னுஞ் சொற்களினின்று திரிந்திருக்கவும், அவற்றை ஆட்ட், பாட்ட், கலக்க், விளக்க் என்னும் வடிவங் களினின்று பிறந்தனவாகக் கொள்ளல் இளஞ்சிறாரும் எள்ளி நகையாடத் தக்க தொன்றன்றோ? ஒரு சில ஒலியடிச் சொற்களொழிந்த எல்லாச் சொற்களும் ஓரசையான வேர்ச் சொற்களினின்றே பிறந்தவை யாதலின், குற்றியலுகரத்தைமெய்யீறாகக் கொள் வாரெல்லாம் சொற்பிறப்பியலை எட்டுணையும் தாமறியாதிருத்தலைமுற்றுறக் காட்டுப வரேயாவர்.

குற்றுகரவீறு மெய்யீறாயின், அறுவகைக் குற்றியலுகரத் தொடர்களும் வல்லின மெய்யீற்றின வாதல் வேண்டும்.

"ஞணநம னயரல வழள என்னும்
அப்பதி னொன்றே புள்ளி யிறுதி"
(தொல்.78)

என்று தொல்காப்பியர் பிரிநிலை யேகாரங் கொடுத்துக் கூறினமையானும், குற்றுகரவீறு தமிழ்ச் சொல்லில் ஓரிடத்தும் மெய்யீறாக எழுதப்படாமை யானும், அஃதுண்மையன்மை வெள்ளிடைமலை.

கண் + யாது – கண்ணியாது என்பது போன்றே சுக்கு + யாது – சுக்கியாது என்று குற்றுகரமும் புணர்வதால், குற்றியலுகரத்தை மெய்யீறாகக் கொள்ளலாமே யெனின், கதவு + யாது – கதவியாது என்று முற்றுகரமும் அங்ஙனம் புணர்வதால் அதுவும் மெய்யீறாகக் கொள்ளப்பட்டு உகரவுயிரே தமி ழுக்கில்லை யென்றாகும் என்று கூறி விடுக்க. தொல்காப்பியர் மொழி மரபியலில்,

"உச்ச காரம் இருமொழிக் குரித்தே" (தொல்.75)

"உப்ப காரம் ஒன்றென மொழிப" (தொல்.76)

என்று வரையறுத்தது உசு முசு தபு என்னும் மூன்று முற்றுகர வீற்றுச் சொற்களையே யன்றிக் குற்றுகரவீற்றுச் சொற்களை யன்று. சு, பு என்னும் இரு முற்றுகர ஈறுகளைக் கொண்ட சொற்கள் எத்தனை என்று வரையறுப்பதே மேற்கூறிய நூற்பாக்களின் நோக்கம். கு, டு, து, று என்னும் நான்கு முற்றுகரவீற்றுச் சொற்களும் அறுவகைக் குற்றுகர வீற்றுச் சொற்களும் அளவிறந்தன வாதலின், அவற்றை வரையறுத்திலர் தொல்காப்பியர். இகு, உகு, செகு, தகு, தொகு, நகு, நெகு, பகு, புகு மிகு, வகு விகு எனக் குகரவீறும். அடு, இடு, உடு, எடு, ஒடு, கடு, கெடு, கொடு, சுடு தடு தொடு நடு நெடு நொடு படு பிடு மடு வடு விடு என டுகரவீறும் கொண்ட முற்றுகரவீற்றுச் சொற்கள் பெருந் தொகையினவாயும் எண் வரம்பு படாதனவாயு மிருத்தல் காண்க. பிற முற்றுகரவீற்றுச் சொற்களும் இங்ஙனமே, குற்றுகரவீற்றுச் சொற்களோ வெனின், அகராதிகளாலும் வரையறுக்கப்படாத பல்லாயிரக் கணக்கின.

மேற்கூறிய நூற்பாக்களின் உரையில்,

"உகரத்தோடு கூடிய சகாரம் இரண்டு மொழிக்கே ஈறாம் என்றவாறு"

எ—டு : உசு. இஃது உளுவின் பெயர். முசு, இது குரங்கினுள் ஒரு இனம், பசு என்பதோவெனின், அஃது ஆரியச் சிதைவு. கச்சு குச்சு என்றாற் போல்வன குற்றுகரம். உகரம் ஏறிய சகரம் இரு மொழிக்கு ஈறாமெனவே ஏனை உயிர்கள் ஏறிய சகரம் பன்மொழிக்கு ஈறாமாயிற்று." (தொல்.75, உரை) என்றும்,

"உகரத்தோடு கூடிய பகரம் ஒரு மொழிக்கல்லது பன்மொழிக்கு ஈறாகாதென்று கூறுவர் புலவர்."

"எ—டு : தபு என வரும்... உப்பு கப்பு என்றாற் போல்வன குற்றுகரம், உகரத்தோடு கூடிய பகரம் ஒன்றெனவே ஏனையுயிர்களோடு கூடிய பகரம் பன்மொழிக்கு ஈறாய்ப் பல பொருள் தருமென்றாராயிற்று" (தொல்.76, உரை) என்றும் நச்சினார்க்கினியர் கூறியிருத்தலை நோக்குக.

இதுகாறுங் கூறியவாற்றால், குற்றியலுகரம் உயிரீறே யென்றும், தொல்காப்பியர் ஓரிடத்தும்

குற்றியலுகரத்தை மெய்யீறாகக் கொண்டிலரென்றும் இயற்கையும் எளிமையும் தனிமையும் தாய்மையும் சான்ற தமிழியல்பை யறியாத ஆரியவழி யியலாரே தம் மொழியைப் போன்றே தமிழும் ஆரிய வழித்தென்று மயங்கி, தமிழை வடமொழி வழித்தாகக் காட்டக் கருதி அதற்கு முதற்படியாகக் குற்றுகர வீற்றை மெய்யீறாகக் கூறி யிடர்ப்பட்டுப் பின்பு அவ் விடர்ப்பாட்டினின்று நீங்கப் பண்டைத் தமிழ்ச் சொற்கள் வல்லின மெய்யிலும் இற்றனவென்றும், வலியிரட்டல் என ஒரு திரிவு முறையும் அரவு என ஒரு தொழிற்பெயர் ஈறு (விகுதி) இல்லையென்றும் சொல்லியல் நூலுக்கும் மொழிநூலுக்கும் முற்றும் மாறாகத் தத்தம் உளந் திரிந்தவாறே உரைப்பரென்றும் தெற்றெனத் தெரிந்து கொள்க.

குற்றியலுகரம் மெய்யீரே என்று பெரும்புலவர் வேங்கடராசுலு எழுதியதற்குப் பாவாணர், அஃது உயிரீறுதான் என்று மெய்ப்பிக்கும் கூறுகள்:

1. "*தொல்காப்பியர் கூறும் குற்றியலுகரத்துக்கும், நன்னூலார் கூறும் குற்றியலுகரத்துக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. குற்றியலுகரத்தின் தன்மைபற்றித் தொல்காப்பியர் கூறும் கருத்துகள் இயற்கையோடு இயைந்தனவாக இருக்க நன்னூலார் கூறும் கருத்துக்களோ இயற்கையோடு பொருந்தாதனவாய் இருக்கின்றன.*"

தொல்காப்பியர் கூறும் குற்றியலுகரத்திற்கும் நன்னூலார் கூறும் குற்றியலுகரத்திற்கும், பெரிதும் வேறுபாடில்லை. "*உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்.*" (164) என்று நன்னூலார் கூறியதே வேறுபட்டதும் வழுவுற்றதுமாகும். உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடாது; அதற்கு (உயிருக்கு) இடந்தந்து உள்ளேயே அல்லது உடனேயே நிற்கும்: பேய் கோட்பாட்டான் அல்லது தெய்வமேறினான் உயிர், முன்போல் உடனேயே நிற்கும்.

தொல்காப்பியர் குற்றியலுகரம் சொன் முதலிலும் வரும் என்று கூறிய கூற்றுதான் இயற்கைக்கும் உண்மைக்கும் முற்றும் மாறாகும். நன்னூலார் அங்ஙனம் கூறியிலர்.

> "*குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்*
> *ஒற்றி நகரமிசை நகரமொடு முதலும்*"
> (எழுத்து.67)

என்பது தொல்காப்பியம்.

சொன் முதலில் வரும் உகரத்தைக் குறுக்கியோ இதழ் குவியாதோ ஒலிக்கும் வழக்கம் தமிழருக்கு ஒரு காலத்தும் இல்லை. குற்றியலுகரத்தின் இயல்புகள் ஒலித்திரிபு ஒலிக்குறுக்கம் என இரண்டாகும். இவற்றுள் ஒலித்திரிபே மிக்கதாம். இதுபற்றிக் குற்றியலுகரத்திற்குச் "சாயும் உகரம்" (நன்.107). என்று நன்னூலார் பெயரிட்டது மிகப் பாராட்டத் தக்கதாகும். இகரத்திற்கும் உகரத்திற்கும் இடைப்பட்டதே குற்றியலுகரம் அல்லது சாயுமுகரம். அதன் அளபு துல்லியமாய் அரையென்பது பொருந்தாது. ஆயினும், குறுக்கங்களையெல்லாம் செம்பாகமாய்க் கொள்ளும் மரபுபற்றி, முற்றுகரத்திற் சரிபாதி குற்றுகரம் எனக் கொள்ளப் பெறும். உண்மையில் அஃது அரையளபினும் சற்றுக் கூடியதாகும்.

நுந்தை யென்பதின் மறுவடிவான உந்தை யென்னுஞ் சொல்லோ; உகப்பு, உங்கு, உச்சி, உஞ்சல், உணவு, உதவி, உப்பு, உம்பர், உயரம், உலக்கை, உவமை, உழவு, உள்ளம், உறவு, உன்னு முதலிய பிற உகர முதற் சொற்களோ; நுகர், நுங்கு, நுசுப்பு, நுடங்கு, நுணா, நுதல், நும்பி, நுரை, நுவல், நுழை, நுள்ளான், நுறுங்கு, நுனி முதலிய பிற நுகர முதற்சொற்களோ எல்லாம் முதலெழுத்து முற்றுகரமாயொலிக்கும் பொழுது, நுந்தை யென்னும் சொல் முதல் மட்டும் எங்ஙனம் குற்றுகரமா யொலிக்கும்? அங்ஙனம் ஒலிப்பார் இன்றொருவரும் இல்லையே! ஒரு கால் அவர் காலத்து ஆசிரியர் சிலர் அங்ஙனம் திரித்தொலித்தார் போலும்! தமிழர் அங்ஙனம் ஒலியாமை கண்டே அவரும்.

> "*முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅ*
> *தப்பெயர் மருங்கின் நிலையிய லான*"
> (எழுத்து. 68)

என்று அதற்கு விலக்குங் கூறியுள்ளார்.

இந்நூற்பாவுக்கு,

"*காது, கட்டு, கத்து, முருக்கு, தெருட்டு என்பன முற்றுகரமுங் குற்றுகரமுமாய்ப் பொருள் வேறுபட்டு நின்றாற் போல, நுந்தையென்று, இதழ் குவித்து முற்றக் கூறியவிடத்தும் இதழ் குவியாமற் குறையக் கூறிய விடத்தும் ஒரு பொருளே தந்தவாறு காண்க. நுந்தா யென்பதோவெனின், அஃது இதழ் குவித்தே கூறவேண்டுதலிற் குற்றுகரமன்று. இயலென்றதனான், இடமும் பற்றுக்கோடும் இரண்டிற்கும் வேறுபாடின்றென்று கொள்க. இதனானே மொழிக்கு முதலா மெழுத்துத் தொண்ணூற்று நான்கென்று உணர்க,*" என்பது நச்சினார்க்கினியர் விளக்கவுரை. இளம்பூரணர் கருத்தும் இதே.

காது, கட்டு, கத்து முதலியன ஏவல் வினையும் தொழிற்பெயருமாய்ப் பொருள் வேறுபடுவது, முற்றுகர குற்றுகர வேறுபாட்டினாலன்று; ஒலியழுத்த (Accent) இடவேறுபாட்டினாலேயே, ஏவல் வினையாய் நிற்கும் பொழுது ஈற்றசையிலும், தொழிற்பெயராய் நிற்கும்பொழுது முதலசையிலும், ஒலியழுத்தம் விழும். 'இதைக் கட்டு' என்று ஏவல் வினையாய் ஆளும்

பொழுது டுகரத்தின் மேலும், 'கட்டுக் கட்டாய்க் கட்டினான்' என்று வினைப் பெயராய் ஆளும்பொழுது ககரத்தின் மேலும், ஒலியழுத்தம் விழும். ஒலியழுத்தத்தினால் குற்றியலுகரம் இதழ் குவிந்தொலிக்கும் முற்றுகரமாகி விடாது. இதை ஒலித்துக் காண்க.

"*நுந்தாய் என்பதோவெனின், அஃது இதழ் குவித்தே கூற வேண்டுதலிற் குற்றுகரமன்று*" என்பது, நுந்தை என்பதும் அத்தகையதே யென்னும் கொள்கைக்கு ஒருவாறு துணைபுரிதல் காண்க.

நன்னூலார் குற்றியலுகர வியல்பைத் தொல்காப்பியரினும் நன்குணர்ந்தவராதலின், அதை மொழிமுதலெழுத்துகளுள் ஒன்றாகக் கொண்டிலர்.

நன்னூலுரையாசிரியர் மயிலைநாதர், "*குற்றியலுகர முறைப்பெயர் மருங்கின் ஒற்றிய நகர மிசை நகரமொடு முதலும்*" என, ஆசிரியர் தொல்காப்பியனார் இவ்வாறு குற்றியலுகரம் மொழிக்கு முதலாமென்றாரோ வெனின்,

"*நுந்தை யுகரங் குறுகி மொழிமுதற்கண் வந்த தெனினுயிர்மெய் யாமனைத்தும் – சந்திக் குயிர்முதலா வந்தணையும் மெய்ப்புணர்ச்சி யின்றி மயலணையும் என்றதனை மாற்று*"

இவற்றை விரித்துரைத்து விதியும் விலக்கும் அறிந்து கொள்க. என்று உரைத்திருத்தலை நன்கு ஆய்ந்து தெளிக.

2. "*நன்னூலார் மட்டுமல்லர். குற்றியலுகரம் பற்றிய தொல்காப்பிய நூற்பாக்களுக்கு உரைகண்ட இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோரும் ஓரளவுக்குத் தொல்காப்பியர் கருத்தை நன்கு விளக்கினும், பெருமளவுக்கு உண்மைக்குப் பொருந்தா உரைகளே கூறினர்.*"

நன்னூலார் கூற்றுகள், ஒன்று தவிர ஏனைய வெல்லாம் உண்மைக்குப் பொருந்தியவை யென்பது மேற்கூறப் பெற்றது. இனியும் கூறப்பெறும்.

பெரு என்னும் குறிப்புப் பெயரெச்சம் வல்லின மெய்ம்முதலொடு புணரும் பொழுதே, பெருங்கதை, பெருஞ்சோறு, பெருந்தலை, பெரும்பானை என மகரவொற்று மிகும்; உயிரொடு புணரின், பேரளவு, பேராவல், பேரீந்து, பேரூர் என அடி நீண்டே புணரும்.

பெருமை அளவு எனப் பண்புப் பெயரை நிலைச் சொல்லாக நிறுத்திப் புணர்ப்பதும் தவறு.

3. "*குற்றியலுகரம் தனிமொழி இறுதியில் நிற்கும்போது அரை மாத்திரை பெறும் என்பதும், அது மெய்யீறு போலப் புள்ளி பெற்றும் வருமொழி உயிரேற இடங் கொடுத்தும் நிற்கும் என்பதும், அரைமாத்திரை அளவுள்ள குற்றுகரம் இயல்பானதே என்பதும் இடமும் பற்றுக்கோடும் காரணமாக ஒரு மாத்திரை அளவுள்ள முற்றுகரம் குறுகி அரைமாத்திரையாக விகாரப்பட்டு நின்றது அன்று என்பதும், அஃது உயிரீறுமன்று; மெய்யீறுமன்று அவ்விரண்டின் வேறுபட்டதான சாரீறு என்பதும், தனிமொழி இறுதியில் அரை மாத்திரை பெற்று நிற்கும் குற்றுகரம் தொடர் மொழி இடைப்படும்போது ஒரு மாத்திரை பெறுகின்ற முற்றியலுகரமாக மாறிவிடும் என்பதும், ஆனால் நெறிவிலக்காக வருமொழி முதலில் உயிர் வரும்போது நிலைமொழி இறுதியில் நின்ற ஆறு தொடர்க் குற்றியலுகரமும், வருமொழி முதலில் வன்கணம் வருகின்றபோது நிலைமொழி இறுதியில் நின்ற வன்றொடர்க் குற்றியலுகரம் மட்டும் அரை மாத்திரை பெறும் முற்றுகரமாகவே நிற்கும்*" என்பதும் தொல்காப்பியர் கருத்துகளாகும்.

இவற்றுட் பல தொல்காப்பியர் கருத்துகளல்ல; புலவர் முதுகுன்றனா ருடையனவே. குற்றியலுகரமும், குற்றியலிகரமும் குறுகியொலிப்பவை யென்று காட்டுதற்கு அவற்றின்மேற் புள்ளியிடும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வந்திருக்கின்றது. இதைத் தொல்காப்பியர்,

"*அவற்றுள் மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்*"

(எழுத்து.104)

என்று நெறியிட்டபின்,

"*குற்றிய லுகரமும் அற்றென மொழிப*"
(எழுத்து.105)

என்று மாட்டெறிந்ததினாலும், நூற்றொடக்கத்திலேயே,

"*அவைதாம்*
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன"
(எழுத்து.2)

என்று சார்பெழுத்து மூன்றையும் "*முப்பாற் புள்ளி*" யெனத் தொகுத்துப் பொதுப்படக் கூறியதனாலும், அறியப்படும்.

"*முற்கூறிய இரண்டும் உம்மை தொக்கு நின்றன*" என்று நச்சினார்க்கினியரும். "*குற்றியலிகரமும் குற்றியலுகரமும் என்னும் எண்ணும்மை விகாரத்தால் தொக்கன*" என்று இளம்பூரணரும் உரைத்திருப்பது பொருந்தாது. உம்மை விரிந்து நிற்பினும் ஆசிரிய யாப்பு வழுவாமை யானும், விரிந்து நிற்பதே இன்னோசை பயத்தலானும், அவை உரையல்ல வென அறிக. உரையாயின், தொல்காப்பியம் முன்னொடு பின் முரண்படுதல் காண்க.

"தொல்லை வடிவின எல்லா வெழுத்துமாண்
டெய்தும் எகர ஒகரமெய்ப் புள்ளி" (நன்.43)

என்னும் நூற்பாவுரையில், *"ஆண்டு என்ற மிகையானே, தாது ஏது என்றற் றொடக்கத்து ஆரிய மொழிகளும், எட்டு கொட்டு என்றற் றொடக்கத்துப் பொதுமொழிகளும், குன்றியாது நாடியாது, எட்டியாண்டுளது என்றற் றொடக்கத்துப் புணர்மொழிப் பொருள் வேறுபாடுகளும் அறிதற் பொருட்டுக் குற்றுகரக் குற்றிகரங்களுக்கு மேற்புள்ளி கொடுப்பாரும் உளரெனக் கொள்க"* என்று மயிலைநாதர் அவர் காலத்தும் ஒரு சாராரிடை அவ் வழக்கமிருந்தாகக் கூறியிருப்பதும் காண்க.

இனி, பழஞ்சேரநாடான மலையாள நாட்டின் தென்பாகத்தார், குற்றியலுகரத்தின் மேற்புள்ளியிட்டு எழுதி வருவதும் இங்குக் கவனிக்கத் தக்கது.

இதனால், குற்றியலுகரம் புள்ளி பெறு மென்பதல்லது மெய்யீறென்பது பெறப்படாது. பெறப்படின், எகர ஒகர உயிர்களும் மெய்யெழுத் தென்றாகும்.

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்"
(தொல்.எழுத்து.15)

"எகர ஒகரத் தியற்கையும் அற்றே"
(தொல்.எழுத்து.16)

என்று தொல்காப்பியர் கூறுதல் காண்க.

குற்றியலுகரம் குறுகியும் சாய்ந்தும் ஒலித்தலினாலேயே, வருஞ் சொன் முதலுயிரேற இடங்கொடுக்கும்; அதன் மெய்த்தன்மையினாலன்று. குற்றியலுகரம் இருக்கும் எழுத்து உயிர் மெய்யாதலின், அது உயிரீ றென்பதை உணர்த்தற்கே.

"குற்றிய லுகரமும் அற்றென மொழிப"
(எழுத்து.105)

என மாட்டெறிந்த பின்,

"உயிர்மெய் யீறும் உயிரீற் றியற்றே"
(எழுத்து.106)

என அதையடுத்தே கூறினார் தொல்காப்பியர்.

குற்றிய லுகரமெல்லாம் திரிபெழுத்தே, அதனாலேயே அதனைச் சார்பெழுத்தென்றார் தொல்காப்பியர். சார்பென்பது பற்றுக்கோடே அது நிகழ்வது சொல்லிறுதியிலேயே, ஆதலால், இடமும் பற்றுக்கோடும் துணைக் கொண்டே குற்றியலுகரம் தோன்றும். அது தோன்றுமிடத்து முற்றியலுகரம் தோன்றாது. நெடுங்கணக்கில் உகரமே யன்றிக் குற்றியலுகரமில்லை. உகரஞ் சேர்ந்து கு,சு,டு,து,பு,று எனத் தனி யுயிர்மெய்கள் தோன்றுவது போல், குற்றியலுகரஞ் சேர்ந்து ஒரு தனி யுயிர்மெய்யுந் தோன்றாது. சொன் முதலிடையிலும், மெல்லின இடையின மெய்யூர்ந்தும் குற்றியலுகரம் தோன்றாது. ஆதலால், குற்றியலுகரம் இயல்பென்பது, நேர்நின்று காக்கை வெளிதென்பார் கூற்றே. அதற்குக் கட்கோளாறு அல்லது உட்கோளாறே கரணியமாகும்.

குற்றியலுகரத்தை நெடுங்கணக்கிற் சேர்த்துள்ள வடமொழியும், அதனை ரகர லகர மெய்களோடு சேர்த்தே ரு, லு என வழங்குகின்றது. குற்றியலுகரம் வடமொழியிலில்லை யென்று, பெரும்புலவர் வேங்கடராசுலு அவர்கள் தம் 'இலக்கணக் கட்டுரைகள்' என்னும் நூலிற் கூறியிருப்பது பொருந்தாது. வடமொழி பிற்காலத் திரிமொழியாதலின், சொல்லிடை நிகழும் அசையினைச் செயற்கை முறையிற் பிரித்தெடுத்து, தனி யெழுத்துகள் போற் காட்டி வருகின்றனர். அம், அ: என்பனவற்றிற்கு ஈதொக்கும். ரூ என்னும் நெடிலைக் குற்றுகர நீட்டமெனக் கொள்ளாது, சாயுமுகர நீட்டமெனக் கொள்ளல் வேண்டும்.

குற்றுகரம் தனிமொழி யிறுதியிற் போன்றே புணர்மொழியிடையும், குற்றுகரமாகவே நிற்கும். அதாவது, அரையளபாய்க் குறுகியும் இதழ் குவியாதும் ஒலிக்கும். அது புணர்மொழியிடை முற்றுகரமாய் மாறிவிடு மென்பது. குறளன் இருவரிடை நிற்பின் அளவனாய் விடுவான் என்பது போன்றதே. குற்றியலுகர இயல்பிற்கு எவ்வகையிலும் நெறியீட்டு விலக்கேயில்லை. வருஞ்சொன் முதலில் எவ்வெழுத்து வரினும், அதன் குற்றியலுகரத் தன்மை மாறாது. வலிமுதற் சொல் வருஞ்சொல்லாய் வரினோ, குற்றியலுகரம் மேலும் குன்றிக் கால் அளபாய் ஒலித்து நிற்கும். இது புலவர் முதுகுன்றனார் கொள்கைக்கு நேர்மாறாம்.

4. குற்றியலுகரம் அரை மாத்திரை பெறுமென்பதும், ஒரு மாத்திரை உள்ள உகரமே இடமும் பற்றுக்கோடும் காரணமாக அரை மாத்திரையாகக் குறுகி ஒலிக்கும் என்பதும், அவ்வாறு அரைமாத்திரையாகக் குறுகி யொலிப்பினும் அஃது உயிரீறே என்பதும், வருமொழி முதலில் உயிர் வரும்போது நிலைமொழி இறுதியில் உள்ள குற்றியலுகரம் மெய்யைவிட்டு ஓடும் என்பதுமே நன்னூலார் கருத்துகளாகும்."

இங்குக் கூறப்பட்டுள்ள நன்னூலார் கருத்துகளுள் குற்றியலுகரம் உயிர் முதல் வருமொழி முன் மெய்விட்டோடும் என்னும் ஒன்றே தவறான தாகும்.

"குற்றிய லுகரமும் அற்றென மொழிப'' (புணரியல்.3)

என்னும் தொல்காப்பிய நூற்பா உரையில்,

"இம் மாட்டேறு ஒரு புடைச்சேறல், புள்ளி பெறாமையின் அங்ஙனம் உயிரேறுங்காற் குற்றுகரங் கெட்டுப்போக நின்ற ஒற்றின்மேல் உயிரேறிற் றென்று கொள்ளற்க. 'நாகரிது' என்புழி முன்னர்க் குற்றுகர வோசையும் பின்னர் உயிரோசையும் பெற்று அவ்விரண்டுங் கூடி நின்றல்லது அப்பொரு ளுணர்த்த லாகாமையின், இஃது உயிரோடுங் கூடிநிற்கு மென்றார்." என்று நச்சினார்க்கினியர் கூறியது, அந் நூற்பாவிற்குப் பொருந்தாதேனும், குற்றியலுகரம் கெடாது நின்றே உயிரொடு புணரும் என்னும் உண்மையை உணர்த்துவது கவனிக் கத்தக்கது.

ஊணில்லை என்னும் புணர்மொழியில் நிலைமொழியீற்று ணகர மெய் எங்ஙனம் கெடாது நிற்கின்றதோ, அங்ஙனமே உறவில்லை, உலகில்லை என்பவற்றுள்ளும் முறையே முற்றுகரமும் குற்றுகரமும் கெடாதே நிற்கும். இதை ஒலித்துக் காணலாம். ஆயின், சற்று எஃகுச் செவிவேண்டும். உறவ், உலக் என்னும் சொல்லின்மை, உறவு இல்லை, உலகு இல்லை என்னும் பொருளுண்மையும் அத் தொடரிடை உகரங் கெடாமைக்குச் சான்றாம்.

"குற்றிய லுகரமும் அற்றென மொழிப"

என்னும் நூற்பாவிற்குக் குற்றியலுகரமும் மெய்யெழுத்துப் போற் புள்ளியிட் டெழுதப்படும் என்பதே போந்தவுரையாம். நச்சினார்க்கினியரது, வேண்டாது கூறலும் வேறொன்று கூறலுமாகும். 'புள்ளியோடு நிலையல்' என்பதற்கு உயிரேற இடங்கொடுத்தல் என்று அவர் பொருள் கொண்டதே அதற்குக் கரணியாகும்.

குற்றியலுகரத்தின் சாயுந்தன்மையும் குறுக்கமுமே ஏனையுயிரோ இடந்தருமென வுணர்க.

5. 'தனிமொழி' இறுதியில் அரை மாத்திரை பெறும் குற்றுகரத், தொடர் மொழி இடைப்படினும் அரை மாத்திரையே பெறும் என்பது நன்னூலார் கருத்து. ஆனால்,

"அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் நிலையும்'' (தொல்.குற்றி.3)

என்பது தொல்காப்பியம். *"அல்வழியைச் சொல்லு மிடத்தும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணும் ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் நிறைந்தே முற்றுகரமாகி நிற்கும்"* என்று இளம்பூரணர் இந் நூற்பாவிற்கு உரை யெழுதியுள்ளார். பேராசிரியரும் செய்யுளியல் 43 ஆம் நூற்பாவுரையில் இளம்பூரணர் கருத்தையே சார்ந்துரைத்துள்ளார். மேற்கூறிய நூற்பாவில் 'உகரம் நிறையும்' என்பதற்கு வேறாக *"உகரம் நிலையும்"* என்று பாடங் கொண்டு வேறுபட்ட பொருள் கூறினும், இதற்கு அடுத்த நூற்பாவுரையில் (குற்றியலுகரப் புணரியல்,4) இளம்பூரணர் கொண்ட *'நிறையும்'* என்ற பாடத்தையும், அவர் எழுதிய உரையினையும் எடுத்துக்காட்டி மறுக்காது போனமையும் இங்கு எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. செவி கருவியாக உணர்ந்து பார்க்கும்பொழுது, நாகு என்பதன் இறுதியில் வரும் குற்றுகரவோசை நாகுகடிது என்பதனுள் வாராது. ஓசை மிக்க ஒலிப்பது வெள்ளிடை மலையென விளங்கவும், நன்னூலார் முன்னூலாசிரியராகிய தொல்காப்பியரோடும், உரைகாரர்களோடும் தக்க காரணமின்றி மாறுபட்டுரைப்பது நமக்கு வியப்பாகவே உள்ளது."

சில செய்யுள்கட்கும் நூற்பாக்கட்குமுள்ள பாட வேறுபாடுகளுட் சிறந்ததைக் கண்டுபிடிப்பதே ஒரு சிறந்த புலமைத் திறனாகின்றது. பாட வேறுபாட்டினால் ஏற்படும் பொருள் வேறுபாடு ஆசிரியர் கருத்துக்கு நேர்மாறாகவும் நேர்ந்து விடுகின்றது.

மன்னார்குடி நகராட்சிக் குடிதண்ணீர் குழாயொன்றின் மீது, 'குடிதண்ணீர்க்கு மட்டும்' என்று எழுதப்பட்டிருக்க வேண்டிய தொடர். எழுதினான் தவற்றால் ககரவொற்று விடப்பட்டு, தகையாற்ற வந்தாரெல்லாம் தவறாகப் பொருள் கொண்டு தண்ணீர் குடியாதுபோக நேர்ந்தது.

"அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் நிறையும்"

என்னும் நூற்பா ஈற்றிலுள்ள *"நிறையும்"* என்னும் பாடத்தினும், *"நிலையும்"* என்னும் பாடமே சிறந்ததாகத் தெரிகின்றது. குற்றியலுகரம் மெய்யெழுத்துப் போல் அரையள பொலிக்குமென்றும் புள்ளி பெறுமென்றும் முன்னர்க் கூறப்பட்டதினால், புணர்ச்சியில் ஒரேவிடத்து மெய் கெடுதல் அல்லது திரிதல்போல் குற்றியலுகரமும் மெய்கெடுதலும் திரிதலுமுண்டோ வென்னும் ஐயம் நீக்குதற்கே எல்லா இறுதியும் உகரம் நிலையும்" எனக் கூற வேண்டியதாயிற்று.

இளம்பூரணர் இன்று எழுதப் பெற்றுள்ள தொல்காப்பிய வுரையாசிரியருள் முதல்வர். எத்துறையிலும் முதன்முதல் எழுதப் பெற்றது குறைபாடுள்ளதாகவே யிருக்கும். இளம்பூரணர் புலமை அவர் பெயருக்கேற்ப இளநிறைவு பெற்றதே யென்பது *"கொடிநிலை கந்தழி வள்ளி"* என்ற புறத்திணை நூற்பாவிற்கும் (33) *"பாங்கன் நிமித்தம் பன்னிரண் டென்ப"* என்னும் களவியல் நூற்பாவிற்கும் (13), அவர் கூறிய வுரையான் அறியப்படும். இளமையிலேயே நிறைவு பெற்றவர் என்பது அவர்க்கு ஏற்காது.

பேராசிரியரும் "*உகரம் நிறையும்*" என்று பாடங் கொள்ளத் தேவையில்லை. சிறுவர் சிலவகையிற் கணக்கிற் சேர்க்கப் பெற்றும் சிலவகையிற் சேர்க்கப் பெறாதும் போவதுபோல், குற்றியலுகரமும் சீர்நிலைக்கும் தளை வகைக்கும் எழுத்தெண்ணப் பெற்றும், ஐவகையடிகளின் பதினேழ் நிலைவகைக்கும் எழுத்தெண்ணப் பெறாதும், தொன்றுதொட்டு இயங்கி வந்திருக்கின்றது. தளைவகைக்கு எழுத்தெண்ணப் பெறாக்கால்.

"*முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்*
தகநக நட்பது நட்பு"

என்னும் குறளும்.

சீர்நிலைக்கு எழுத்தெண்ணப் பெறாக்கால்

"*முந்நீ ருண்டு முந்நீர்ப் பாயும்*"

என்னும் புறப்பாட்டடியும் வழுவாம்.

இனி, "*உகரம் நிறையும்*" என்னும் பாடத்தையே கொள்ளினும். குற்றுகரம் முற்றுகர மாகிவிடும் என்று பொருள் கொள்ளற்கிடமில்லை.

"*இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே*
கடப்பா டறிந்த புணரிய லான"

என்று முன்னர்ப் பொதுப்படக் கூறியதனால், புணர் மொழியகத்துக் குற்யிலுகரமெல்லாம் அரையளபினுங் குறுகிக் காலா யொலிக்குமோ வெனும் ஐயத்தை அகற்றுதற்கே. "*உகரம் நிறையும்*" எனக் கூறவேண்டிய தாயிற்றெனக் கொள்க.

குற்றியலுகரப் புணரியல் 4ஆம் நூற்பாவுரையில், "*முன்னின்ற சூத்திரத்து உகர நிறையுமென்று பாடமோதி, அதற்கு உகரம் அரை மாத்திரையில் சிறிது மிக்கு நிற்குமென்று பொருள் கூறி, இச் சூத்திரத்திற்குப் பழைய அரை மாத்திரை பெற்று நிற்குமென்று, கூறுவாரும் உளர்*" என்று நச்சினார்க்கினியர் கூறி அம்மட்டோடு விட்டொழிந்தது, இளம் பூரணருரையை மறுக்கவியலாமை பற்றியன்று மறுக்க வேண்டாமை பற்றியே யென்க.

நாகு என்னும் தனிச்சொல்லின் இறுதியில் வரும் குற்றுகரமே, நாகு கடிது என்னும் தொடர்ச்சொல்லின் இடையும் நேர்கின்றது. அது ஒலியளவில் ஒருகாற் குன்றினும் குன்றுமே யொழியக் கூடுவதிலை. இதுவே தமிழரின் இயல்பான ஒலிப்பாம். இதற்கு மாறாக நீட்டியொலிப்பது வேண்டுமென்று செய்வதாகவோ வேற்று மொழியாரின் தொடர்பால் நேர்ந்ததாகவோதான் இருத்தல் வேண்டும். அல்லாக்கால் செவிப்புலக் கோளாற்றின் விளைவாயிருக்கலாம்.

தொடர்ச்சொல்லிடைக் குற்றியலுகரம் ஒலிமிக் கொலிப்பது வெள்ளிடை மலையென விளங்குவதாகப் புலவர் முதுகுன்றனார் கூறியிருப்பது நமக்கு வியப்பாகவே யிருக்கின்றது. வெள்ளிடை மலையென்னும் தொடரைப் பன்மொழித் தொடர் வகைகளுள் ஒன்றான அடையடுத்த பெயர்ச் சொற்றொடராகக் கொள்ளாது, அடையடுத்த எழுவாய்த் தொடராகக் கொண்டு ஒன்றுமில்லாத வெள்ளிடையே மலைபோல் உருக்கொண்டு தோன்றுவதாகப் பொருள் கொள்வதே இவ்விடத்திற்குப் பொருத்தமாம்.

6. "*குற்றியலுகரம் என்பதற்குக் குறிதாகிய இயல்பினையுடைய உகரம் என்பது பொருள். எவ்வாறு அகரம் தன்னியல்பில் நிற்பினும், தன்னைக் காட்டிலும் நெடிய ஓசையை உடைய ஆகாரத்தை நோக்கக் குறுகிய ஓசையுடைமையால் குற்றெழுத்து எனப்பட்டதோ, அவ்வாறே அரை மாத்திரை அளவுள்ள, விகாரப்படாத இயல்பான குற்றியலுகரமும் தன்னின் நெடிதாகிய ஒரு மாத்திரையுள்ள முற்றுகரத்தை நோக்கக் குறுகிய ஓசையுடைமையால் குற்றியலுகரம் எனப்பட்டதே தவிர, முற்றுகரம் இடமும் பற்றுக்கோடும் காரணமாகக் குறுகி ஒலித்ததால் அன்று.*"

இதில் தன்முரணும் விடாப்பிடியுறழும் (விதண்டாவாதமும்) திரிபுணர்ச்சியும் விளங்கித் தோன்றுகின்றன. ஆகாரத்தை நோக்க அகரம் குறுகிக் குறிலெனப்பட்டாற் போன்று முற்றுகரத்தை நோக்கக் குற்றுகரம் குறுகிக் குற்றியலுகரம் எனப்பட்ட தென்று கூறியவரே, இயல்பானதும் திரிபுறாததும் இடமும் பற்றுக்கோடும் அற்றதுமான ஓர் அரையளபுகரம் அந்தரத்தில் தனியாக நிற்பதாக ஒரு மயக்கக் காட்சி காண்கிறார். இடமும் பற்றுக்கோடு மற்று முற்றுகரம்போல் இயல்பான உகரம் எந்த நெடுங் கணக்கில் உள்ளது? குற்றியலிகரம் எங்ஙனம் முற்றியலிகரத்தின் திரிபோ, அங்ஙனமே குற்றியலுகரமும் முற்றியலுகரத்தின் திரிபாகவன்றோ உளது! சொல்லிறுதியாகிய இடமும் வல்லின மெய்யாகிய பற்றுக்கோடு மில்லாத குற்றியலுகரம் எத்தமிழில் எந்நூலில் வழங்குகின்றது? அதை யாருக்கேனும் புலவர் முதுகுன்றனார் காட்டவொன்னுமோ? முற்றும் வழுவான ஒரு கருத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு. அதற்கேற்ப நூற்பாக்கட் கெல்லாம் உரைதிரித்துக் கூறுவது ஒல்வதொன்றோ? ஒருவர் தெளிந்த நிலையில் தம் தவற்றை உணரலாம். மயக்க நிலையில் எவ்வாறு உணர்தல் கூடும்? அந்நிலையில் அவர் கூறுவதெல்லாம் பொருளுள்ள தாகுமோ? ஏரண முறைப்படி சான்று காட்டித் தம் கொள்கையை நிறுவாது, தம்மொடு மாறுபடுவாரை நோக்கி, "இடமும் பற்றுக்கோடும் காரணமாகவே ஒரு மாத்திரை அளவுள்ள முற்றுகரம் குறுகி விகாரப்பட்டு அரை மாத்திரை யாயிற்று என்று சாதிப்பார் பலருளர்" என்று கூறி என் பயன்?

7. *"அவர் கூறும் காரணம் உண்மையாயின், இரண்டு மாத்திரை யளவுள்ள ஐகாரமும் ஔகாரமும், மொழியகத்து வேறு எழுத்துகளின் சாா்பால் ஒன்றரை மாத்திரையாகவும் ஒரு மாத்திரையாகவும் குறுகி யொலிக்கும் பொழுது ஐகாரக்குறுக்கம் எனவும் ஔகாரக் குறுக்கம் எனவும், அரை மாத்திரை அளவுள்ள மகரம் மொழியகத்து வேறு எழுத்துகளின் சார்பால் கால் மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும்போது மகரக்குறுக்கம் எனவும் பெயர் தந்த தொல்லாசிரியர் இச் சார்பெழுத்துக்கும் உகரக் குறுக்கம் என்றன்றோ பெயர் தந்திருக்க வேண்டும். அவ்வாறு அவர் பெயர் கூறக் காணோமே!"*

உயிரெழுத்துகள் பன்னிரண்டனுள், ஐ ஔ என்னும் இரண்டும் பிந்தி ஏற்பட்ட புணரொலிகள் (Diphthongs). அதனாலேயே, அவை தனியொலி களான பிற, நெடில்கள்போல் காரச்சாரியை பெறாது கான் சாரியை சிறப்பாகப் பெற்றன. அவற்றிற்குக் காரச் சாரியையும் கொடுப்பது பிற்கால வழக்கு. குறிலுக்குக் கரமும் நெடிலுக்குக் காரமும் கொடுக்க வேண்டியதே நெறியாயினும், குறிலுக்கும் காரச்சாரியைக் கொடுப்பர் பிற்காலத்தார். இது வடமொழியைப் பின்பற்றின தவறான வழக்காகும். குற்றியலுகரமும் குற்றியலிகரமும் முந்தியே தோன்றியவை யாதலாலும், ஒழுங்குபட்டவை யாதலாலும், குறுகி இயல்கின்ற உகரம் என்றும் குறுகி இயல்கின்ற இகரமென்றும், பெயர் பெற்றன. இனிக் குறுகிய இயல்புள்ள இகர உகரம் என்றுமாம்.

"அகர இகரம் ஐகாரம் ஆகும்" (மொழி.21)

"அகர உகரம் ஔகாரம் ஆகும்" (மொழி.22)

என்று கூறிய தொல்காப்பியரே.

"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

என்றும்,

"அகரத் திம்பர் வகரப் புள்ளியும்
ஔவென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

என்றும்,

"ஓரள பாகும் இடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னான" (மொழி.24)

என்றும், கூறியுள்ளார்.

ஐகாரம் அய் என்றும் ஔகாரம் அவ் என்றும் ஒலிக்கும்போதே, ஒன்றரையளபினவாகக் குறுகிவிடுகின்றன. இனி, இடையன், சடையன் போன்ற சொற்களின் இடையில், டகர ஐகான் டகரம் போல் ஒலித்து ஓரளபினதாகவும் குறுகிவிடுகின்றது.

ஐகார ஔகாரக் குறுக்கங்களைக் கூறும்பொழுதும்,

"அரையளவு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகும் தெரியும் காலை" (நூன்.13)

என்று மகரக் குறுக்கத்தைக் கூறும்பொழுதும் அளபு குறுகுமென்றே கூறிச் செல்கின்றார் தொல்காப்பியர். இவற்றிற்கெல்லாம் குறுக்கமென்று பெயர் கொடுத்துச் சார்பெழுத்தாகக் காட்டியவர் நன்னூலாரே.

போலும், மருளும் என்னும் சொற்கள் போன்ம் மருண்ம் எனச் சிதைந்த நிலையிலேயே, அவற்றின் ஈற்று மகரமெய் குறுகியொலிக்கின்றது. வரும் வண்ணக்கன் என்னும் தொடரையும் பிரித்து, வரும் என்னும் நிலைமொழியை முந்திய அடியிறுதியிலும் வண்ணக்கன் என்னும் சொல்லைப் பிந்திய அடிமுதலிலும் நிறுத்திவிடின் மகரக்குறுக்கத்திற்கு இடமில்லை. இங்ஙனமே ஐகாரம் வரும் சொல்லையும் அசை பிரித்து வெவ்வேறு சீரிலும் அடியிலும் நிறுத்திவிடின், ஓரளபாகக் குறுகாது. குற்றியலுகர குற்றியலிகரங்களையோ இங்ஙனம் பிரித்து நிறுத்த முடியாது. ஆகவே, இகர வுகரம் முந்தித் தோன்றியவை என்பது மட்டுமன்றி, குற்றியலிகர குற்றியலுகரங்கள் ஒழுங்குபட்டவையாயு மிருக்கின்றன.

மேலும், குற்றியலுகர குற்றியலிகரங்கள் முந்தி அறியப்பட்டதினால் அப்பெயர் பெற்றனவென்றும், பிந்தி யறியப்பட்டவை யெல்லாம் குறுக்கமென வேறு வகையிற் பெயர் பெற்றன என்னும் கொள்வதில் யாதொரு இழுக்குமில்லை யென்றும், பெயர் வேறுபாட்டைக் குற்றியலுகரம் திரிபெழுத்தன்றெனக் கூறுவதற்குச் சான்றாகக் கொள்வது பொருந்தா தென்றும், கூறி விடுக்க.

7. (வேறு விளக்கம்) *"இடமும் பற்றுக்கோடும் காரணமாகவே ஒரு மாத்திரை அளவுள்ள முற்றுகரம் குறுகி விகாரப்பட்டு அரை மாத்திரையாயிற்று, என்று சாதிப்பாரும் பலருளர். அவர் கூறும் காரணம் உண்மையாயின் இரண்டு மாத்திரையளவுள்ள ஐகாரமும் ஔகாரமும், மொழியகத்து வேறு எழுத்துகளின் சாா்பால் ஒன்றரை மாத்திரையாகவும் ஒரு மாத்திரையாகவும் குறுகி ஒலிக்கும்போது ஐகாரக் குறுக்கம் எனவும் ஔகாரக் குறுக்கம் எனவும், அரை அளவுள்ள மகரம் மொழியகத்து வேறு எழுத்துகளின் சார்பால் கால் மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும்போது மகரக் குறுக்கம் எனவும் பெயர்தந்த தொல்லாசிரியர் இச்சார்பெழுத்துக்கும் உகரக் குறுக்கம் என்றன்றோ பெயர் தந்திருக்க வேண்டும். அவ்வாறு அவர் பெயர் கூறக் காணோமே!"*

ஐகார ஔகாரங்கள் முதன்முதலாகத் தமிழ் நெடுங்கணக்குத் தோன்றியபோதே பிறவுயிர்களோடு தோன்றிய தனியுயிர்களல்ல; சற்றுப் பிந்தியமைந்த புணரொலிகள் (Diphthongs).

"அகர இகரம் ஐகார மாகும்" (மொழி.54)

"அகர உகரம் ஔகார மாகும்" (மொழி.55)

"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்'
(மொழி.56)

"அகரத் திம்பர் வகரப் புள்ளியும்
ஔஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

என்னும் நூற்பாக்களே இதை வலியுறுத்தும்.

"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்...தோன்றும்"

"அகரத் திம்பர் வகரப் புள்ளியும்...தோன்றும்"

என்னும் நூற்பாக்கட்கிசையச் சில சொற்களும் தோன்றியுள்ளன.

வள் = கூர்மை, வள்(வய்) – வை = கூர்மை

அள் = செறிவு, வன்மை, பெருமை (மிகுதி).

அள் – (அய்–ஐ) = பெருமை, பெரியோன், தலைவன், தந்தை, ஆசிரியன், அரசன்.

பொள்–பொய்–(பய்) பை = துளையுள்ளது, குழிவானது, உள்ளீடற்றது.

பள்–(பய்)–பயம்பு = பள்ளம், குழி.

அம்மை – அவ்வை=தாய், பாட்டி, ஒ.நோ: செம்மை – செவ்வை.

அவ்வை – ஔவை.

வாவல் = சிறகால் வாவிச் செல்வது, வாவுதல்= தாவுதல்.

வாவல் – வவ்வால் – வௌவால். பெரு வௌவால் வாவிப் பறப்பதையே எங்கும் காண்க.

முதற் காலத்தில் தோன்றிய தனியொலி நெடில்கட்குக் காரச்சாரியைக் கொடுக்கப்பட்டது. பிற்காலத்தில் தோன்றிய புணரொலி நெடில்கட்கோ அதனின்றும் வேறான 'கான்' சாரியை கொடுக்கப் பெற்றது. புணரொலி நெடில்களையும் ஐகாரம் ஔகாரம் எனக் கூறுவது, வடமொழி வழக்கைப் பின்பற்றிக் குறில்களையும், அகாரம் இகாரம் எனக் காரச்சாரியைக் கொடுத்துக் கூறும் ஒருசார் தவற்று வழக்காகும்.

முந்தித் தோன்றிய தனியொலி நெடில்கட்கும், பிந்தித் தோன்றிய புணரொலி நெடில்கட்கும் வெவ்வேறு சொல்லாற் சாரியை யமைந்தது போன்றே, முன்னூலாசிரியர் கண்ட சார்பெழுத்துகட்கும் பின்னூலாசிரியர் கூறிய எழுத்துக் குறுக்கங்கட்கும் வெவ்வேறு சொல்லாற் பெயரமைந்தன என அறிக.

மேலும், குற்றியலுகரம் போல் ஐகார ஔகாரக் குறுக்கங்கள் புணர்ச்சி வேற்றுமைப் படாமையின், சார்பெழுத்துத் தன்மையைப் பெற்றனவாகா. ஆய்தம் என்பது மெல்லிய ககரமான ஒரு நுண்ணொலி. ஆய்தம் = நுணுக்கம்.

"ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"
(உரி.32)

என்று தொல்காப்பியங் கூறுதல் காண்க.

சார்பெழுத்துகளென்று தொல்காப்பியங் கூறும் மூன்றனுள், இரண்டு உயிரெழுத்துகளும், ஒன்று மெய்யெழுத்துமாகும், உயிரெழுத்துகள் அளவிற் குன்றியது மட்டுமன்றி, ஒலியிலும் வேறுபட்டவை. மெய்யெழுத்தான ஆய்தம் ஒலியில் மட்டும் வேறுபட்டது; அளபிற் குன்றியதன்று. அது ககரத்திற் கின்மானதென்பது, அஃகேனம் என்னும் பெயரினாலேயே அறியப்படும். அஃது ஏனச் சாரியை பெறும்போது வேறெம் மெய்யோடும் புணராமை காண்க.

குற்றியலுகர குற்றியலிகரங்கள்: முற்றியலுகர முற்றியலிகரங்கள் போல் பதினெண் மெய்யொடும் கூடி வருவனவல்ல. ஆய்தம் ஒருயிரொடும் கூடி வருவதன்று. ஐகார ஔகாரங்கள் குறுகுவது இடம் பற்றியே யன்றிப் பற்றுக்கோடும் சார்பும் பற்றியன்று. மகரக் குறுக்கம் 'போலும்', 'மருளும்' என்பன போன்ற சொற்களின் ஈற்றயல் உகரக் கேட்டினாலும், வருஞ்சொன் முதல் வகரத்தினாலுமே, நிகழும்; வருஞ்சொன் முதல் உயிரேறின் உகரம் கெட்டு மகரக் குறுக்கம் நீங்கிவிடும்.

எ–டு : போன்ம் + என்று = போன்மென்று.

இத்தகைய வேறுபாடும் சிறப்பியல்பும் நோக்கியே, முதனூலார் சார்பெழுத்து மூன்றே யெனக் கொண்டார். அதையே பல்லாயிரம் ஆண்டிற்குப் பிற்பட்ட தொல்காப்பியரும் தழுவிக் கூறினர். எழுத்துகளின் தகையும் தொகையும் பெயரும் அளவும் கூறும் எழுத்ததிகார முதலியலுக்கு நூன்மரபு என்று அவர் பெயரிட்டிருப்பதையும்,

"எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே".

என்று வழிநூன் முறையிற் கூறியிருப்பதையும், கூர்ந்து நோக்குக.

8. *"அன்றியும், ஒரு மாத்திரை அளவுள்ள முற்றுகரமே குறுகி அரை மாத்திரையாக ஒலிப்பதாயின் நன்னூலார் போலத் தொல்காப்பியரும்".*

"நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம் அஃகும்"

என்றன்றோ கூறியிருப்பர். அவர் அங்ஙனம் கூறிற்றிலரே! குற்றியலுகரம் தனி நெடிலுக்குப் பின்னரும், தொடர்மொழி இறுதியிலும் வரும் வல்லொற்றை ஊர்ந்து வரும் என்றுதானே கூறியுள்ளார்.

"நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே" (மொழி.3)

முன்னூலாசிரியர் இவ்வாறு தெளிவுறக் கூற, காரணமின்றி நன்னூலார் அவரோடு முரணுவானேன்?"

குற்றியலுகரம் குறுகியவியல்புடைய தென்பதும், அது நிற்குஞ் சொல் ஈற்றயலெழுத்துப் பற்றி அறுவகைப்பட்ட தென்பதும், தொல்காப்பியர் கூறிய கூற்றுகளே! நன்னூலாரும் இங்ஙனம் கூறியது அவரை முற்றும் தழுவியே.

"ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே"
(மொழிமரபு.12)

என்று தாம் வகுத்துக் கொண்டவாறே, தொல்காப்பியர் குற்றியலுகரச் சொற்களை ஈரெழுத் தொருமொழி, தொடர்மொழி என இரண்டாகப் பகுத்து,

"நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே"

என்று தொகுத்தும், பின்னர்க் குற்றியலுகரப் புணரியலில்,

"ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்
ஆயிரு மூன்றே உகரங் குறுகிடன்"

என்று அவ்விரு தொடரையும் ஆறாக விரித்தும், கூறியுள்ளார்.

"உகரங் குறுகிடன்" என்னும் தொல்காப்பியத் தொடரை "வன்மை யூர் உகரம் அஃகும்" என்னும் நன்னூற்றொடரும்: *"நெட்டெழுத் திம்பர்"* என்னும் தொல்காப்பியத் தொடரை *"நெடிற்றொடர்"* என்னும் நன்னூற் றொடரும்; முற்றும் ஒத்திருத்தல் காண்க. ஆகவே,

"நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே" (நன்.13)

என்று நன்னூலார் கூறியுள்ளது முற்றும் உண்மைக்கு ஒத்ததும் தொல்காப்பியத்தொடு இம்மியும் முரண்படாததுமாகும். ஓர் இலக்கணத்தைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கூறலே நூன்முறை யாதலின், தொல்காப்பியர் தம் நூலின் 1 ஆம், 36ஆம் 466ஆம் நூற்பாக்களில், முறையே, குற்றியலுகர வியல்பைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கூறினார் எனவறிக.

9. *"மேலும், இடமும் பற்றுக்கோடும் காரணமாக முற்றுகரம் குறுகி ஒலிப்பதாயின், காரணம் உள்வழியெல்லாம் காரியம் நிகழவேண்டுவது ஒருதலையாகலின் ஏது, தாது என்ற வடமொழிச் சொற்களில் உள்ள உகரமும் ஏற்ற இடமும் பற்றுக்கோடும் உடைமையின், குற்றியலுகரம் எனல் வேண்டும். ஆனால், அவ் வுகரம் முற்றுகரமாகவன்றோ உள்ளது. எனவே, இடமும் பற்றுக்கோடும் குற்றியலுகரம் வருவதற்குச் சார்பே தவிர, உகரம் குறுக்கம் பெறக் காரணங்கள் ஆகா.'*

இடமும் பற்றுக்கோடும் கரணியமாக முற்றுகரம் குறுகி யொலிக்கு மென்று இலக்கணியர் கூறியது. தமிழ்ச் சொற்களையே யன்றிப் பிறமொழிச் சொற்களை நோக்கியன்று.

மேலும், ஏது, தாது என்பவை வடசொற்கள் என்னும் பண்டைக் கொள்கை இனிச் செல்லாது. வடமொழி தேவமொழியென்றும், அது கடன்கொள்ளாதென்றும், அதிலுள்ள சொற்கள் யாவும் ஆரியச் சொற்களே யென்றும், குருட்டுத்தனமாக நம் முன்னோர் நம்பிய கருநாடகக் கொள்கை இன்று மொழி நூலாராய்ச்சியால் தகர்ந்து, வடசொற்களுள் ஐந்தி லிருபகுதி தென்சொல் என்னும் கொள்கை வலுத்து வருகின்றது.

ஏது, தாது என்னும் இரு சொற்களும் தென்சொல்லா என்பதை, சொற்பிறப்பியல், சொற்புணர்ச்சி என்னும் இரு கட்டளைக் கற்களில் உரைத்துக் காண்பாம்.

ஏது என்னும் சொற்கு வேர்ப்பொருள் ஏவுதல் அல்லது தூண்டுதல் ("Impulse") என்று, மானியர் உல்லியம்சு (Monier Williams) எனும் மேலைச் சமற்கிருதப் பேரறிஞர் தம் வடமொழி–ஆங்கில அகரமுதலியில் (Sankrit-English Dictionary) குறித்துள்ளார்.

கரணியம் ஒரு கருமஞ் செய்யத் தூண்டுவதாதலாலும், ஏவு என்னும் சொல்லின்

மூலமான 'ஏ' என்பதே ஏது என்னும் சொற்கும் மூலமாதலாலும், ஏது என்பது இடு என்னும் வினையொடு ஏதிடு எனப் புணர்ந்து ஏதீடு என்னும் வினைமுதல் நீண்ட தொழிற் பெயராதலாலும், இத் தொழிற்பெயர், *"கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு"* என்னும் தொல்காப்பிய அடியில் (பொருளியல்,13) ஆளப் பெற்றிருந்ததாலும், வடமொழிக்கு முந்தியது தென்மொழியாதலாலும், ஏது என்னும் சொல் தென் சொல்லே யென்று கொள்ளப் பெறும், அது குற்றியலுகரத்துடன் உயிரேறித் தென் மொழிப் புணர்ச்சி கொண்டதும், அதன் தென் சொற்றன்மை யினாலேயே என அறிக.

முத்து என்னும் தென் சொல் ஐயர் என்னும் சொல்லொடு புணரின் முத்தையர் என்றாவதே இயல்பாயினும் இக்காலத்துச் சிலர் அதை முற்றுகரமாக வொலித்து முத்துவையர் என்று புணர்ப்பது போன்றதே. *"ஏதுவின் உணர்த்தலும்"* என்னும் தொல்காப்பியத் தொடரும் (கற்பியல், 27) ஏதுவின் முடித்தல்" என்னும் நன்னூற்றொடரும் (14) என அறிக.

தாது என்னும் சொல்லின் வேர்ப்பொருள் நுறுங்கு அல்லது துாள் என்பதே.

ததைதல் = 1. சிதைதல். "சமந்ததைந்த வேல்" (பதிற்றுப். 70 : 3) 2. நுறுங்குதல்.

ததைந்தது தாது.

தாது = 1. நீறு, பொடி, (மதுரைக்.399,உரை)

2. பூந்தாது (பூஞ்சுண்ணம்)

"தாதுண் வண்டினம்" (மணிமே.4:20)

3. உடலின் எழுவகைக் கூறு (பிங்.)

4. விந்து (பிங்.)

வெயிலிற் காய்ந்து துாளாக உதிர்ந்துபோன சாணத்தைத் தாதெரு என்பது செய்யுள் வழக்கு.

"தாதெரு மறுகின் மூதா ராய்கண்" (அகநா.165)

தாதெரு பரந்து கிடக்கும் ஊர்ப்பொதுவிடம் தாதெரு மன்றம் எனப்படும்.

"தாதெரு மன்றத் தயர்வர் தழூஉ" (கலித்:103:61)

தாது + எரு = தாதெரு, இதுவும் தமிழிலக்கண நெறிப்பட்ட குற்றியலுகரப் புணர்ச்சியே.

சில குற்றியலுகர வீற்றுச் சொற்களை வடசொல்லென வழுப்படக் கொண்டு நீண்டகாலமாக இதழ்குவித் தொலிப்பதனாலேயே, அவை வடசொற்போல் தோன்றிவிடுகின்றன.

ஏதீடு, தாதெரு என்பன இலக்கணப் போலியான மரூஉக்களல்ல. அவை முதற்காலத்துத் தோன்றிய நெறிப்பட்ட புணர்ச்சிகளே. இக்காலத்தும், கிட்டிணன் (கிருட்டிணன்) என்னும் பெயரின் மரூஉவான கிட்டு என்பதையும் தம்பி என்பதன் கொச்சைத் திரிபான தம்பு என்பதையும் ஈற்றுகரத்தை இதழ் குவித்தொலித்தல் காண்க. அவற்றின் ஈற்றுகரங்களை முற்றுகரமாக ஒலித்தாலேயே, அவை, கிட்டுவை, கிட்டுவினால், கிட்டுவிற்கு எனவும், தம்புவை, தம்புவினால், தம்பிற்கு எனவும், வேற்றுமை ஏற்கின்றன. அவற்றை இலக்கண நெறிப்படி கிட்டை, கிட்டால், கிட்டிற்கு எனவும் தம்பை, தம்பால், தம்பிற்கு எனவும் வழக்கிற்கு மாறாக ஒலிப்பின், இன்னாவோசை தருதல் காண்க. இவ் விரண்டனுள், கிட்டு என்பதை வடசொற்றிரிபென வரைந்தொதுக்கினும், தம்பு என்பதை எங்ஙனம் தள்ளவியலும்?

ஆகவே, ஏது, தாது என்னும் சொற்களும், முற்றுகர வீறாக ஒலிக்கப்பட்டு வரும் நெடுங்கால வழக்கினாலேயே, வடசொற்றன்மை அல்லது வடசொற்போன்மை பெற்றுவிட்டனவென அறிக.

கருவி என்பது போன்ற கரணம் கருமம் என்னும் சொற்களும் தென்சொல்லாயிருப்பவும், கரணம் என்பதைக் கரண என்று ஈறுகெடுத்தும்; கருமம் என்பதைக் கர்மன் என்று வேறுபடுத்தும்; கரண என்பதை நீட்டிக் காரண என்றும் அதற்கேற்பக் கரு என்னும் முதனிலையினின்று கார்ய என்றும் வடவர் புதிதாய் வடசொல் ஆக்கிக்கொண்டது போன்றே, ஏது என்பதை ஹேது என்றும், தாது என்பதை dhatu என்றும் திரித்து ஆரிய மயமாக்கிக் கொண்டனர் என அறிக. (இலக்கணக்கட்டுரைகள் – பாவணர்.)

நெடின்மோனை *nedin-mōnai,* பெ. (n.) அடிதோறும் நெடில் முதலெழுத்து ஒத்து வருவது; a kind of alliteration.

[நெடில் + மோனை]

எட்டு : *"தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்*
தீவினை என்னும் செருக்கு" (குறள்,201)

"தோன்றின் புகழோடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" (குறள்,236)

"காணும்கால் காணேன் தவறாய; காணாக்கால்
காணேன் தவறல் லவை' (குறள்,1286).

"மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடை
மாயோன் இன்னுயிர்ப் புறத்திறுத் தன்றே'
(யா.கா.16 மேற்கோள்)

"மால்கரி காத்தளித்த மாலுடைய மாலைசூழ்
மால்வரைத்தோ ளாதரித்த மாலையார்–
மாலிருள் சூழ்
மாலையின் மால்கூட லார்ப்ப மதன்றொடுக்கு
மாலையின் வாளி மலர்" (தண்டி.–42, மேற்கோள்)

"கேட கங்கண வங்கையொ டுங்கிளர்
கேட கங்கள துணிந்து கிடந்தன
கேட கங்கி ளர்கின்ற களத்தநன்
கேட கங்கள் மறிந்து கிடந்தவே"
(கம்பரா.உத்த.3380)

"வாழிய சீரி ராமன் வாழிய சீதை கோமான்
வாழிய கௌசலேசை மணிவயி
றுதித்த வள்ளல்
வாழிய வாலிமார்பு மராமர மேழுஞ் சாய
வாழிய கணையொன் றேவுந் தசரதன் மதலை வாழி"
(கம்பரா.உத்த 4357)

"சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தமும் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியிற் சுடுமாறு போல
சூரியன் தோற்றமுன் அற்றமலங்களே"
(திருமந்திரம்)

"சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பதும் சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடம்
சோம்பர் கண்டார்ச் சுருதிக்கண் தூக்கமே"
(திருமந்திரம்)

"தூங்கிக் கண்டார் சிவலோகம் தம்உள்ளே
தூங்கிக் கண்டார் சிவயோகம் தம்உள்ளே
தூங்கிக் கண்டார் சிவபோகம் தம்உள்ளே
தூங்கிக் கண்டார் நிலை சொல்வ
தெவ்வாறே'
(திருமந்திரம்)

"தானே புலன் ஐந்தும் தன்வசம் ஆயிடும்
தானே புலன் ஐந்தும் தன்வசம் போயிடும்
தானே புலன் ஐந்தும் தன்னில் மடைமாறும்
தானே தனித்து எம்பிரான் தன்னைச்
சந்தித்தே"
(திருமந்திரம்)

"எழுவாய் எழுத்தொன்றின் மோனை" (யா.கா.16). அடிதோறும் சீர்தோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை. அடிதோறும முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடிமோனைத் தொடை எனப்படும். ஒரு அடியில் வரும் நான்குச் சீர்க்கண் வரும் மோனை வேறுபாடுகள் (விகற்பங்கள்): 1. இணைமோனை = முதலிரு சீர்க்கண் மோனை வரத் தொடுப்பது. 2. பொழிப்பு மோனை = முதலும் மூன்றாம் சீர்க்கண்ணும் மோனை வருவது. 3. ஒரூஉமோனை = முதல்சீர், நான்காம் சீரில் மோனை வருவது. 4. கூழைமோனை = முதல் மூன்று சீர்க்கண் மோனை வருவது. 5. மேற்கதுவாய் = முதல், மூன்று, நான்காம் சீரில் மோனை வரத் தொடுப்பது. 6. கீழ்க்கதுவாய் = முதல், இரண்டு, நான்காம் சீரில் மோனை வரத் தொடுப்பது. 7. முற்றுமோனை = நான்கு சீரிலும் மோனை வரத் தொடுப்பது.

"இருசீர் மிசையிணை யாகும் பொழிப்பிடை
யிட் டொ ரூஉ வாம்
இருசீ ரிடையிட்ட தீறிலி கூழை முதலிறுவாய்
வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை தீர்கதுவாய்
வருசீர் முழுவதும் ஒன்றின்முற் றாமென்ப
மற்றவையே" (யா.கா.19)

மோனை வேறுபாடுகளுக்கு (விகற்பம்) எடுத்துக்காட்டு:

அணிமலர் அசோகின் தளிர்நலங் கவற்றி
(இணைமோனை)

அரிகுரற் கிண்கிணி அரற்றுஞ் சீறடி
(பொழிப்பு மோனை)

அம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி
(ஒரூஉ மோனை)

அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்
(கூழைமோனை)

அரும்பிய கொங்கை அவ்வளை அமைந்தோள்
(மேற்கதுவாய்)

அவிர்மதி அனைய திருநுதல் அரிவை
(கீழ்க்கதுவாய்)

அயில்வேல் அனுக்கி அம்பலைத்து அமர்ந்த
(முற்றுமோனை)

கருங்கயல் நெடுங்க ணோக்கமென்
திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே

நெடினி *neḍiṉi*, பெ. (n.) பனை; palmyra - tree, Borassus filiformis. (சா.அக.).

[நெடு → நெடி → நெடினி = நீண்ட பனைமரம்.]

நெடு¹–த்தல் *neḍu-*, 4செ.கு.வி. (v.i.) **1.** காலம், பொழுது முதலியன நீளுதல்; to be long, as time. **2.** மழை முதலியன விடாது தொடர்தல்; to continue, as rain. *மழை நெடுநேரம் பெய்தது.* **3.** நெட்டையாதல்; to become tall. *நெடுக்க வளர்ந்து விட்டான்.*

[நீள் → நீடு → நெடு → நெடு–த்தல்.]

நெடு² *neḍu,* பெ. எ. (adj.) **1.** நீண்ட; long. "*வேனெடுங் கண்கள்*" (சீவக.1951). **2.** பெரிய; big. "*புரவல னெடுங்கடை குறுகிய வென்னிலை*" (பு.வெ.9:2, கொளு). **3.** பெருமை பெற்ற; great. "*நீங்கிய தாங்கு நெடுந்தெய்வந் தானெனன்*" (மணிமே.10:93). **4.** ஆழமான; deep. "*நெடும்புனலுள் வெல்லும் முதலை, அடும்புனலின் நீங்கின் அதனைப் பிற*" (குறள்,495). **5.** உயரமான; high. "*நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே*" (கம்பர் தனிப்பாடல்). **6.** மிகுந்த; much, excessive. "*நெடுமிடல்சாய*" (பதிற்றுப்.32:10). **7.** நீண்ட கால நெடும்பகை (உ.வ.); long cherished enmity. **8.** காலந் தாழ்க்கும்; delay. "*நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும் கெடுநீரார் காமக் கலன்*" (குறள்,605). **9.** புகழ்ச்சியான; praise. "*மாராயம் பெற்ற நெடுமொழி யானும்*" (தொல்.பொருள். புறத்.8).

கோத. நெற்ணெற்ண்; **துட.** நோற், நோறி; **க.** நிடு, நிட்டு; **து.** நிடி, நிடு, நிடுப்ப; **தெ.** நிடு, நிடுட, நிடிவி, நிடுபு.

[நுல்(நீட்சி) → நெல் → நெள் → நெடு (வே.க.)]

நெடுக்கம் *neḍukkam,* பெ. (n.) நெடுமை; extension.

ம. நெடுக்கம்

[நெடுகு → நெடுக்கு + அம்]

நெடுக்கு *neḍukku,* பெ. (n.) **1.** நீட்சி (இ.வ.); extension. **2.** நீளவாட்டு; length, as of a wall. *நெடுக்குச் சுவர்.*

[நெடு → நெடுக்கு]

நெடுக்குச்சுவர் *neḍukku-c-cuvar,* பெ. (n.) நீளவாட்டுச்சுவர் (வின்.); lengthwise wall, opp. to kuṟukku-c-cuvar. *வீட்டின் குறுக்கே நெடுக்குச் சுவர் கட்டவேண்டும்.*

[நெடுக்கு + சுவர்]

நெடுக்குமரம் *neḍukku-maram,* பெ. (n.) வாசற்கால் கதவுச்சட்டம் முதலியவற்றின் பக்கவடம் (இ.வ.); longitudinal frame, as of a door. *வாசக்காலுக்கு நெடுக்கு மரம் சார்த்த வேண்டும்.*

[நெடுக்கு + மரம்]

நெடுக *neḍuga,* வி.எ. (adv.) **1.** நீளமாக; lengthwise, longitudinally. *நெடுக வளர்ந்த மரம். ஊர்வலம் செல்லும் பாதை நெடுக மக்கள் நின்றிருந்தனர். காணாமல் போன குடையை வழி நெடுகத் தேடினான்.* **2.** நேராகத் தொடர்ந்து; straight on. *நெடுகப்போ.* **3.** முழுத் தொலைவும்; whole distance.

[நெடு → நெடுகு → நெடுக]

நெடுகதல் *neḍu-kadal,* பெ. (n.) **1.** இறப்பு; dying. **2.** உயருகை; heightening. **3.** நீளுகை; lengthening. **4.** காணாமற் போகை; disappearing. (சா.அக.).

[நெடு → நெடுகதல்]

நெடுகப்பிடி¹–த்தல் *neḍuga-p-piḍi-,* 4செ.கு.வி. (v.i.) **1.** மழை முதலியன விடாது தொடர்தல் (உ.வ.); to continue, as rain. *மழைவிடாது நெடுகப் பிடித்துக் கொண்டது.* **2.** தங்காமற் செல்லுதல் (வின்.); to pass on without stopping. *இந்த வண்டியை நெடுப் பிடித்துக் கொண்டு சென்று கொண்டே இரு.* **3.** மிகுகாலம் இல்லாதிருத்தல் (வின்.); to be long delayed, as rain. **4.** காலம் பிடித்தல் (வின்.); to occupy or take up time.

[நெடுக + பிடி–த்தல்.]

நெடுகப்பிடி[2]–த்தல் *neḍuga-p-piḍi-,* 4செ.குன்றாவி. (v.t.) **1.** நீளமாகப் பிடித்தல் (வின்.); to stretch or hold a thing at full length. **2.** பொருளை அழித்தல் (யாழ்ப்.); to waste away, as property. **3.** பேச்சு முதலியவற்றை விரித்தல் (வின்.); to protract, as speech, action. *மாநாட்டில் நெடுகப் பிடித்துத் தலைவர் உரை செய்தார்.*

[நெடுக + பிடி–த்தல்.]

நெடுகல் *neḍu-kal,* பெ. (n.) **1.** நீளுகை; growing long, lengthening. **2.** உயர்கை; souring in height. (சா.அக.).

[நெடுக → நெடுகல்]

நெடுகலும் *neḍugalum,* கு.வி.எ. (adv.) **1.** எப்பொழுதும் (உ.வ.); continually, constantly, all day long. **2.** நீளத்திலே; lengthwise. *வயலை நெடுகலும் அளந்தான்.* **3.** காலம் முழுவதும்; whole time. *நெடுகலும் களவாடியே வந்திருக்கின்றான்* (உ.வ.).

[நெடுக → நெடுகல் → நெடுகலும் (வே.க.)]

நெடுகவிடு–தல் *neḍuga-viḍu-,* 18 செ. குன்றாவி. (v.t.) **1.** நீளமாக விடுதல்; to let out, as a cord; to veer. *அந்தக் கயிற்றை நெடுகவிடு.* **2.** தள்ளி வைத்தல்(வின்.); to put off.

[நெடு → நெடுக + விடு–தல்.]

நெடுகிலும் *neḍugilum,* கு.வி.எ. (adv.) நெடுகலும் (உ.வ.) பார்க்க; see *neḍugalum. பாதை நெடுகிலும் படை குவிக்கப் பட்டிருந்தது.*

[நெடு → நெடுகிலும்]

நெடுகினகாரியம் *neḍugiṉa-kāriyam,* பெ. (n.) **1.** விடாவேலை; protracted, tedious, wearisome business. **2.** கடுமையான செயல்; desperate matter.

[நெடு → நெடுகின + காரியம். கரு → கார் → காரியம். கருத்தல் = செய்தல். காரியம் → வ. கார்ய.]

நெடுகு–தல் *neḍugu-,* 5செ.கு.வி. (v.i.) **1.** நீளுதல்; to extend, to be lengthened, to grow tall, high or long. "*உம்பர் பொதிர்த்திட நெடுகு மூக்க மானும்*" (குணிகைப்பு.நாட்.116). **2.** காலத் தாழ்வாதல்; to be protracted, delayed. **3.** காணாமற் போதல் (யாழ்ப்.); to run away, to disappear, as things lent or lost. **4.** சாதல் (யாழ்ப்.); to die. **5.** ஓங்கி வளர்தல்; grow in high. **6.** நீடித்தல்; lengthen time, distance, etc.

[நெடு → நெடுகு → நெடுகு–தல்(வே.க.)]

நெடுங்கடல் *neḍu-ṅ-gaḍal,* பெ. (n.) **1.** கரையடுத்த கடல் (யாழ்.அக.); the sea adjoining a shore. **2.** பெரிய கடல்; big sea. "*நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி தான்நல்கா தாகி விடின்*" (குறள்,17). *நெடுங்கடல் ஓடியும் நிலையே கல்வி* (பழ.).

[நெடு → நெடும் + கடல்]

நெடுங்கடலோடு–தல் *neḍu-ṅ-gaḍal-ōḍu-,* 5செ.கு.வி. (v.i.) கரையோரமாய்க் கப்பல் செல்லுதல் (வின்.); to coast, sail along the coast.

[நெடுங்கடல் + ஓடு–. ஓடுதல் = நீர் முதலியன ஓடுதல், பிளத்தல், நீங்குதல், கலம் செல்லுதல்.]

நெடுங்கடை *neḍu-ṅ-gaḍai,* பெ. (n.) 1. பெரிய வாயில்; lofty gateway. *"புரவல னெடுங்கடை குறுகிய வென்னிலை"* (பு.வெ.9:2, கொளு). *"நீணெடு வாயில் நெடுங்கடை கழிந்தாங்கு"* (சிலப்.10:8). *"நெடுங்கடை நிற்றலு மிலையே கடும்பகல்"* (புறநா.69:17). *"யாமஇரவின் நெடுங்கடை நின்று"* (அகநா.208:1). *"நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி"* (கலித்.79:21). 2. பால்கணி; portico.

[நெடும் + கடை. கடை = இடம், வாயில்]

நெடுங்கண் *neḍu-ṅ-gaṇ,* பெ. (n.) 1. தொலை(தூர) பார்வையுள்ள கண்; farsighted eye. *அவனுக்கு நெடுங்கண் வந்துவிட்டது.* 2. பின்னிய ஓலையின் நீண்ட கண்; long squares in braiding olas. *நெடுங்கண் ஓலை.* 3. நீண்ட மட்டையினி றுதியில் விரியும் பனையோலைப் பிரிவு; separation in the sections of the palmyra leaf far from the stem. 4. தேங்காயின் தாய்க்கண்; top most of the three eyes of a cocoanut. 5. நீண்ட விழி; long eye. *"விலங்குஅரி நெடுங்கண் ஞெகிழ்மதி"* (ஐங்குறு,200:3). *"அணிமலர் நெடுங்கண் ஆர்ந்தன பனியே"* (ஐங்குறு.208:5). *"வேம்பு நனையன்ன நெடுங்கணீர் ஞெண்டு'* (அகநா.176:8).

[நெடு + கண்]

நெடுங்கண்ணோலை *neḍu-ṅ-gaṇ-ṇ-ōlai,* பெ. (n.) மட்டையினின்றும் விரிதற்கு முன்னமே பிரிந்து செல்லும் பனையோலை (வின்.); palmyra leaf with the divisions extended before separation.

[நெடுங்கண் + ஓலை]

நெடுங்கண்பார்வை *neḍu-ṅ-gaṇ-pārvai,* பெ. (n.) நெடும்பார்வை (வின்.) பார்க்க; see *neḍum-pārvai.*

[நெடுங்கண் + பார்வை]

நெடுங்கண்விழு—தல் *neḍu-ṅ-gaṇ-viḻu-,* 2செ.கு.வி (v.i) ஓலை முடைதலில் பெருங்கண் உடையதாதல்; to form big eyes, in braiding olas. *கீற்று நெடுங்கண் விழுந்திருக்கிறது.* (யாழ்.அக.).

[நெடுங்கண் + விழு—தல்.]

நெடுங்கண்விழுதல் *neḍu-ṅ-gaṇ-viḻudal,* பெ. (n.) கன்னமொரு பக்கம் நெடுகி மறுபக்கந் தளர்ந்திருக்கை; one side cheek to be extend and other side to grow slack.

[நெடுங்கண் + விழுதல்]

நெடுங்கணக்கு *neḍu-ṅ-gaṇakku,* பெ. (n.) 1. அரிச்சுவடி (தொல்.எழுத்து.94, உரை); alphabet. *"ஓவறு நெடுங்கணக் கோதிடுஞ்சிறார்"* (சேதுபு.கந்தமா.75). *நெடுங்கணக்குப் பொத்தகம் ஒன்று வாங்கி வா.* 2. நெடுநாட்கணக்கு (வின்.); a long account or reckoning. *அவன் கணக்கு நெடுங்கணக்கு.* 3. வாராக் கடன் (வின்.); bad debt. *அவன் கடனை நெடுங்கணக்கில் வை.*

[நெடும் + கணக்கு. கணக்கு = எழுத்து.]

நெடுங்கணக்கு : கணக்கு என்னும் பலபொருளொரு சொல்லுக்கு இங்கு எழுத்தென்று பொருளாகும். நெடுங்கணக்கு என்பது தமி ழெழுத்துகளுக்கு வழங்கும் பெயர்.

தமிழெழுத்துகள் முதல், சார்பென இரு வகைப்படும். உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு ஆக முப்பதும் முதலெழுத்துகள். சார்பெழுத்துகள் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என மூன்றெனத் தொல்காப்பியம் கூறும். நன்னூல் உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என சார்பு எழுத்துப் பத்து வகையென்றும் இவற்றின் தொகை 369 என்றும் கூறும்.

உயிரெழுத்துத் தனித்தியங்கக்கூடியது. மெய்யெழுத்து உயிரின் துணை கொண்டே இயங்கும்.

"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" என்பர் தொல்காப்பியர். (தொல்.எழுத்து.46). உயிரெழுத்துகளில் குறுகிய ஓசையுடைய அ,இ,உ,எ,ஒ என்னும் ஐந்தும் குறில் எனப்பெறும். நீண்ட ஓசையை யுடைய ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ என்னும் ஏழும் நெடில் எனப்பெறும். மெய்யெழுத்துகளில் வல்லோசையுடைய க,ச,ட,த,ப,ற என்பவை வல்லெழுத்துகள். மெல்லோசையுடைய ங,ஞ,ண,ந,ம,ன என்பவை மெல்லெழுத்துகள். ய,ர,ல,வ,ழ,ள என்பவை இரண்டுமல்லா இடைநிகரன. ஆகையால், இடையெழுத்துகள் எனப்பெறும். முதலெழுத்துக் களாகிய இம்முப்பதும் ஒன்றையும் சாராமல் தாமே வழங்குவன.

குற்றியலிகரம், குற்றியலுகரம் என்பவை உயிரெழுத்தின் குறுக்கங்களே ஆகையால் சார் பெழுத்தெனப் பெற்றன. ஆய்தம் குற்றெழுத்துக்கும் உயிர்மெய் வல்லெழுத்துக்கும் நடுவே வரும் எழுத்தாகையால் சார்பெழுத்தெனப் பெற்றது. தொல்காப்பியர் கொள்ளாத மற்றைய சார்பெழுத்து களும் பயின்று வருதல் நோக்கி நன்னூலாசிரியரால் கொள்ளப் பெற்றன எனினும் அவை அத்துணைச் சிறப்படைய அல்ல.

உயிரெழுத்துச் சிறப்புக் கருதி முன் வைக்கப் பெற்றது. அவற்றுள்ளுங் குறிலது வேறுபாடே நெடிலாதலால் முதலிற் குறிலும் பிறகு நெடிலுமாக வைக்கப்பெற்றன. மெய்உயிரின் துணையால் இயங்குவதால், உயிருக்குப்பின் வைக்கப் பெற்றது. அவற்றுள், வலியார் மெலியார்க்கு முன் நிற்பது போல, வல்லெழுத்துக்கள் அவற்றிறிற்கினமான மெலலெழுத்துகளுக்கு முதலில் நின்றன. இவற்றைச் சார்ந்து வருவன ஆதலாற் சார்பெழுத்துகள் பின் வைக்கப்பெற்றன. (கலைக்களஞ்சியம்)

க் + அ = க–உயிர்மெய் உருவாதல் தமிழில் தொன்மையில் இருந்தமையும், கிரேக்க–இலத்தீன் இனமொழியான புரோகிருதம், சமற்கிருதம் தமிழைப் பார்த்து பெற்றமையும் பாவாணர் குறிக்கிறார். இன்னும் இந்தோ–ஐரோப்பிய மொழிகள் உயிர்மெய் இன்மையால் குழந்தையர் கற்கக்கடிதாதல் காண்க.

ஒரு மொழியிலுள்ள அரிவரி நிறைவுள்ள தில்லதென் றறிதற்கு, அம்மொழியிலுள்ள ஒலிகளையெல்லாம் குறித்தற்கு வரிகளுண்டா என்று காண்டல் வேண்டும். தமிழில் அதன் ஒலிகளையெல்லாம் குறித்தற்குப் போதிய வரிகளுண்டென்றே சொல்ல வேண்டும். மெய்யெழுத்துகளில் சிலவற்றிற்கு ஈரொலியும் சிலவற்றிற்கு மூவொலியு முள.

எ–டு: க – 1. க், க்கா K (வலிய ககரம்). 2. உலகு, அகம் என்னும் சொற்களில் மெல்லிய ககரம். ககரத்திற்கும் ஆய்தத்திற்கும் இடைத்தர ஒலி. 3. தங்கம் என்னும் சொல்லில் g போன்ற தொனிப்பொலி (voiced letter).

நகரத்தை யடுத்த ககரமெல்லாம் தொனித்தே ஒலிக்கும்.

ச – 1. ச், ச்ச ch (வலிய சகரம்). 2. சட்டி, சட்டை என்னும் சொற்களில் s போன்ற மெல்லிய ஒலி. 3. பசி, கசி என்னும் சொற்களில் s அல்லது ஸ போன்ற மெல்லிய ஒலி. 4. பஞ்சம் என்னும் சொல்லில் J போன்ற தொனிப்பொலி. ஞகரத்தை யடுத்த சகரமெல்லாம் தொனித்தே ஒலிக்கும்.

ஞ – 1. ஞ், ஏறத்தாழ ய்ங் போன்ற ஒலி 2. மஞ்சள் என்னும் சொல்லில் ṇj போன்ற ஒலி. ட–1, ட், ட்ட, ṭ போன்ற வல்லொலி 2. ட், ḍ போன்ற தொனிப்பொலி. டகரம் உயிர்மெய்யாய்த் தனித்து வரும்போதெல்லாம் தொனித்தே ஒலிக்கும்.

த – 1. த், த்த, t போன்ற வல்லொலி. தட்டை, தண்ணீர் முதலிய சொற்களிலுள்ள தகரமும் வலித்தே ஒலிக்கும். 2. விந்தை, மதி முதலிய சொற்களில் d போன்ற தொனிப்பொலி. நகர மெய்யை அடுத்துவரும் தகரமெல்லாம் தொனித்தே ஒலிக்கும்.

ப – 1. ப,ப், ப்ப. p வல்லொலி. 2. கம்பம், பண்பு, அன்பு, மரபு முதலிய சொற்களில் b போன்ற தொனிப்பொலி. ம், ண், ன் என்ற மெய்களை யடுத்துவரும் பகரம் தொனித்தே யொலிக்கும்.

ற – 1. ற, ற், வலிய றகரம் (Hard or trilled r) 2. ற்ற, t போன்ற வல்லொலி. 3. கன்று என்னும் சொல்லில் (candle என்னும் சொல்லிலுள்ள) d போன்ற மெல்லிய டகரம்.

னகரமெய்யை அடுத்து வரும் போதெல்லாம் றகரம் இங்ஙனமே ஒலிக்கும்.

றகரம் இரட்டிக்கும்போது இரண்டு மிசைந்து t போல ஒரே யொலியா யொலிக்கும்; னகர மெய்யை அடுத்துவரும்போது இரண்டு மிசைந்து. nd போல ஒலிக்கும். இதையறியாத ஆங்கிலரும், ஆங்கில வழித் தமிழறிஞரும், வெற்றி என்பதை வென்றி என்றும் வென்றி என்பதை வெற்றி என்றும் பிழைபட உச்சரிப்பர்.

எழுத்துகள் இடமும் சார்பும் பற்றிப் பற்பல வகைய ஒலிப்பதைக் குறித்தே.

"எடுத்தல் படுத்தல் நலிதல் லுழப்பின்
திரிபும் தத்தமிற் சிறிதுள வாகும்" (நன்.)

என்றார் பவணந்தியார். இங்ஙனம் ஒரெழுத்தே பற்பல வகையாக ஒலிக்கினும், எவ்விடத்தில் எவ்வொலியென் றறிய ஏதும் இடர்ப்பாடில்லை. ஏனென்றால் ஒவ்வோ ரொலியும் இயல்பாகவே இடமும் சார்பும்பற்றி வெவ்வேறொலியாய் ஒலிக்கின்றது. தமிழருள் எவர் பேசினும் இவ்வியல்பு மாறுவதின்று. பேசும்போது மட்டுமன்றி ஒரு நூலை வாசிக்கும்போதும் இவ்வியல்பு மாறுவதின்று. இதைக் கால்டுவெல் கண்காணியாரும் தமது ஒப்பியல் நூலிற் குறித்துள்ளார்.

இயல்பாகவும் எளிதாகவும் இருக்கிற தமிழ் மொழியைப் போன்றே. அதன் எழுத்து முறையும் இயல்பாகவும் எளிதாகவு மிருக்கவேண்டி நம் நுண்மாண் நுழைபுல முன்னை யாசிரியர் ஒரு வரியானேயே பல ஒலிகளைக் குறிப்பித்தனர். என்னே! அவர் அறிவின் மாண்பு!

இனி, தமிழிலுள்ள இசையும் குறிப்பும்பற்றிய பல்வகை யொலிகளையுங் குறிக்க வரியில்லை யென்னலாம்.

எ–டு : கும் கும் (gum gum) மதங்கத் (மிருதங்கத்) தொனி.

உஸ் – நாயை உஸ் காட்டல் அல்லது வேட்டை மேல் ஏவல்.

ஜல்ஜல் – தொடரி (சலங்கை) யொலி.

ஜம் – பெருமிதத் (கம்பீரத்) தோற்றக் குறிப்பு

இஸ்ஸஸ் – (ezzz) பாம்பு, வண்டு முதலியவற்றின் இரைச்சல்.

உஷ (ush-hush) அமைத்தற் குறிப்பு. இவையெல்லாம் எழுத்து முறைக் கேலாத புறவொலிகளாகக் கொண்டனரேயன்றி, பொருண் மொழிக்கு வேண்டும் எழுத்தொலி களாகக் கொண்டில ரென்க.

அற்றேல் பிற மொழிகளில் இவ்வொலிகளைக் கொண்டதென்னை யெனின், அவையெல்லாம் செயற்கை மொழிகளாதலின் அவற்றுக்குக் கொள்ளப்பட்டன வென்றும், அவற்றுள்ளும் முற்கு, வீளை, கனைப்பு, கத்து, அழுகை, தும்மல் முதலிய ஒலிகளையெல்லாம் குறிக்க வரியில்லை யென்றும், எல்லா ஒலிகளையும் குறிக்க வரியுள்ள மொழி உலகத்தில் ஒன்றுமேயில்லை யென்றும் கூறி விடுக்க.

எ, ஒ, ழ, ற என்ற ஒலிகள் வடமொழிக்கில்லை. ஆகையால் ஒட்டெலும்பு என்பதை ஓட்டேலும்பு என்றும், வாழைப்பழ வற்றல் என்பதை வாலபல வர்ரல் என்று மல்லவோ எழுத வேண்டும்?

ஞ, ண, ழ, ள என்ற ஒலிகள் ஆங்கிலத்திற் கில்லை. இவ்வொலிகள் வருகின்ற சொற்களை எங்ஙனம் ஆங்கிலத்தில் எழுத முடியும்? கண்ணியைக் கன்னியென்றும் மூளையை மூலையென்று மல்லவோ எழுத வேண்டும்?

ஆங்கிலத்தில் உள்ள f, z, zh முதலிய ஒலிகள் எத்துணையோ ஒலிகளையுடைய வடமொழிக்கும் இல்லையே! இங்ஙனம் ஒவ்வொரு மொழிக்கும் சில சிறப்பெழுத்துகளிருப்பதால், ஒரு மொழிச் சிறப்பெழுத்துச் சொற்களைப் பிறமொழியி லெழுத வொண்ணாதாகும். இதை யறியாத வடமொழி வாணன் ஒருவன். ஒரு தமிழனை நோக்கிச் சகஸ்திரதளாம்புஜம் என்பதைத் தமிழில் எழுதுக என்று பழித்தானாம். பின்பு வாழைப்பழ வற்றல் என்பதை வடமொழியில் எழுதுக என்று தமிழன் சொன்னதும் விழித்தானாம். ஆகையால் ஒரு மொழிச் சிறப்பெழுத்துச் சொற்களை இன்னொரு மொழியில் வேறுபாடின்றி (விகாரமின்றி) யெழுத வொண்ணா தென்றும், எல்லா மொழிச் சொற்களையும் தற்சமமாக எழுதும் மொழி உலகத்தே ஒன்று மில்லையென்றும் தெரிந்துகொள்க.

இதை யறியாதார் F தமிழில் இல்லையென்றும், ஐ தமிழிலில்லை யென்றும், இன்னோரன்ன எழுத்துக் களைப் புதிதாய்ச் சேர்த்தல் வேண்டுமென்றும் ஓல மிட்டுத் திரிவர். உலக முழுமைக்கும் பொதுமொழியாய் வந்து கொண்டிருக்கின்ற ஆங்கிலத்தில் ஏனைமொழிச் சிறப்பெழுத்துகளைச் சேர்க்கக் காரணமிருப்பினும், எவரேனும் ஞ, ண, ழ, ள எழுத்துகளை ஆங்கிலத்தில் சேர்க்க வேண்டு மென்று கூறின துண்டா? அன்றி, மிக நிறைவுள்ள தாகக் கருதப்படும் வடமொழி யரிவரியை இன்னும் நிறைவாக்க வேண்டி எ, ஒ, ழ, ற என்ற எழுத்துகளைச் சேர்க்க வேண்டுமென்று, எவரேனும் கூறினதுண்டா? இவரெல்லாம் அமைந்திருக்கவும் தமிழ்மட்டும் முனைந்து நிற்பதேன்? இதனானேயே பிறர்க்குத் தாய்மொழிப் பற்றுள தென்றும் தமிழர்க்கில தென்றும் விளங்குகின்றதே!

ஒரு மொழியின் அரிவரி அம் மொழி யொலிகட்கு மட்டும் அமைந்ததா? பிறமொழி யொலிகட்கும் அமைந்ததா? ஒருமொழி யரிவரியால் அம்மொழிச் சொற்களை மட்டும் எழுதாது, பிறமொழிச் சொற்களை எழுதி நகைப்பது பெரும் பேதைமை யாகும். ஒரு மொழிக்கு அதிலுள்ள ஒலிகளை யெல்லாம் குறிக்க வரியின்றெனின் அதுவே உண்மையான குறையாகும்.

தமிழில் ஒவ்வோரொலிக்கும் ஒவ்வொரு வரியுண்டு. உலகமொழிக ளெல்லாவற்றின் அரிவரிகளையும் ஒவ்வொன்றாய் உற்று நோக்கின், தமிழரிவரியே பிற மொழிகள் அழுக்கறுமாறு அத்தனை

நிரம்பினதும் வரம்பினதுமா யிருக்கின்றது. உயிரெழுத்துக்கள் பன்னிரண்டிற்கும் தனித்தனி வரியுள்ளது. குறில் குறிலாகவும் நெடில் நெடிலாகவும் உச்சரிக்கப் படும். மெய்யெழுத்துகள் எல்லா மொழிகட்கும் பொதுவாக இயற்கையான எளிய வொலிகள் பத்தொன்பதே. g ககரத்தின் பேதமும், s சகரத்தின் பேதமுமின்றித் தனியொலிக ளாகா.

ஆங்கிலத்தில் 5வரிகளால் 18 (20 Nesfield) உயிர்ஒலிகளைக் குறிப்பிடுகின்றனர். ஓரொலிக்குப் பல வரியும், ஒரு வரிக்குப் பல வொலியுமுள்ளன. C.g x (ks) w என்பன மிகை வரிகள். ங(ng), ஷ(sh), த(th), zh என்னும் ஒலிகளைக் குறிக்கத் தனி வரியில்லை, இணைவரி(digraph)களே.

அரபி மொழியில் ஏ, ய என்னும் ஈரொலிகட்கு ஒரே வரியும் ஒ, வ என்னும் ஈரொலிகட்கு ஒரே வரியும் உள்ளன.

தமிழில் ஒரு வரி பலவொலிப் பேதங்களைக் குறிப்பினும் அப்பேதங்கள் இடமும் சார்பும் பற்றி இயற்கையாலேயே தோன்றுவதால் வேண்டாத வரிகளைப் பெருக்கி நம்மை வருத்தியிலர் நம் முன்னோர்.

இனி, இசை விளி புலம்பல் ஆதியில், எழுத்துகள் எத்துணையும் நீண்டொலிப்பதைக் குறிக்கத் தமிழில் இருவகை யளபெடைகளுள. பிற மொழி கட்கிவையில்லை. வடமொழியில் உயிரளபெடையே யுண்டு; ஒற்றளபெடையில்லை.

தமிழில் வரிகள் எளிதாய் விளங்குமாறு வெவ்வேறு வடிவாயுள்ளன. ஔ என்பதிலுள்ள ள வடிவைச் சிறிதாயெழுதாதது அச்சுவார்ப்பார் குற்றமேயன்றி எழுத்தாசிரியர் குற்றமன்று. தெலுங்கு, அரபி, சமற்கிருதம் முதலிய மொழிகளில் மாணவர் மயங்குமாறு பல வரிகள் ஏறத்தாழ ஒரே வடிவா யுள்ளன.

தமிழ் வரிகள் ஆங்கில வரிகள்போல மிக நுண்ணிய (Diamond, Brilliant) வடிவிலு மெழுதப்படும். சமற்கிருதம், அரபி, தெலுங்கு முதலியவற்றின் வரிகள் அத்துணை நுணுக்கியெழுத இடந்தரா. இதனாலேயே சமற்கிருத வெழுத்துகளைக் கூட்டெழுத்து (சம்யுக்தாக்ஷரம்) களாக எழுதுவர்.

இனி, உயிரொலியும் மெய்யொலியும் உயிரும் மெய்யும் (life and body) கூடிய உயிர்மெய் (பிராணி) போல ஒன்றி ஒலிப்பது உயிர்மெய் வரிகளாற் குறிக்கப்பட்டது. உயிர், மெய், உயிர்மெய் முதலிய குறியீடுகள் தமிழரின் தத்துவவறிவை யுணர்த்தும். உயிர்மெய் வரிகளால் ஒலி நூலறிவும் வரிச்சுருக்கமும் பயனாம்.

தமிழ் அரிவரியில் உயிர் முன்னும் மெய் பின்னும் ஆய்தம் இடையும், உயிருள் குறில் முன்னும் நெடில் பின்னும், மெய்யுள் வலி முன்னும் மெலி பின்னும் இடை இடையும் வைக்கப்பட்டன.

உயிர்மெய் வரியும் எழுத்து முறையும் தமிழுக்கே சிறப்பாகும். இந்திய மொழிகட்கெல்லாம் இவை பிற்காலத்தே தமிழைப் பின்பற்றியேற்பட்டன. அரபி, கிப்ரு முதலிய சேமியக் (Semitic) கவைமொழிகள் எல்லாவற்றிற்கும், சமற்கிருத மொழிந்த ஆரியக் கவைமொழிகள் எல்லா வற்றிற்கும் இவையில்லை. எழுத்துகள் ஆங்கிலத்தில் போல உயிரும் மெய்யும் வேறு வேறு அடுத்தடுத் தெழுதப்படுவதுடன், அரிவரியில் உயிரும் மெய்யும் முறையின்றி மயங்கிக் கிடக்கும். ஆரியமும் சேமி யமுமாகிய மேலை மொழிகட்கெல்லாம் உயிர்மெய் வடிவும், எழுத்து முறையும் இல்லாதிருக்கவும், சமற்கிருதத்திற்குமட்டும் அவை எங்ஙனம் மிருந்திருத்தல் கூடும். சமற்கிருதத்திற்கு அவை இருந்தனவெனின், அதன் இனமாகிய செருமன், டச்சு, கிரேக்கு, இலத்தீன் முதலிய மொழிகட்கும், அவற்றை அடுத்து வழங்கும் சேமிய மொழிகட்கும் ஏன் அவையில்லை? வடமொழி ஆரியர் இந்தியாவிற்கு வந்தது கி.மு.3000. அவர் வருகைக்கு முன்னரே தமி ழில் எழுத்திருந்தது. அவ்வெழுத்துகள் உயிர்மெய் நீங்கலாக 31.

ஒலிமுறையினும் சொன்முறையினும் தமிழுக்கு அடுத்துள்ள கிரேக்க, இலத்தீன் மொழிகளில் முறையே எழுத்துகள் 24, 25; வடமொழியில் 48, இலத்தீன் எழுத்துகள் 24 என்றும், 23 என்றும் கணக்கிடுவதுமுண்டு. தமிழிலில்லாத சில செயற்கை யொலிகள் இலத்தீன், கிரேக்கு மொழிகளிலுள. ஆனால், அவற்றிற் பலவற்றிற்குத் தனி வரிகள் இல்லை. B,G. முதலிய தொனிப்பொலிகட்குத் தனி வரியுள. bh, gh முதலிய மூச்சொலி சேர்ந்த தொனிப்பொலிகட்குத் தனிவரியில்லை. சமற் கிருதத்தில் அவற்றிற்கெல்லாம் தனிவரி யுண்டு. அதோடு ஞ, ண முதலிய தமிழ் எழுத்து களும் சேர்க்கப்பட்டுள. மேலை மொழிகட்கும் தமிழுக்குமுள்ள எழுத்துகளிற் பெரும்பாலன வற்றிற்குத் தனிவரி யமைத்து வடமொழி யெழுத்துகளைப் பெருக்கிக் காட்டினார் வடமொழிவாணர். க, ச, ட, த, ப என்று தமிழ் முறையில் வல்லின மெய்யெழுத்து தொனிப்பதும், k, kh, g, gh என ஒவ்வொரு வல்லின மெய்யும் தொனிப்பதும், தொனியாததும், மூச்சொலி சேர்ந்ததும் சேராததுமாக நந்நான்காக உறழப்பட்டிருப்பதும், சமற்கிருதத்தின் செயற்கை யான எழுத்துப் பெருக்கைக் காட்டும்.

சமற்கிருதம், கிரேக்க இலத்தீன் மொழிகளின் திரிபு அல்லது வளர்ச்சி யென்பதற்குப் பல ஆதாரங் களுள. கிரேக்க இலத்தீன் மொழிகள் ஆரிய மொழிகளில் மிகப் பழைமையானவை. கிரேக்க இலத்தீன் எழுத்துகளினும் சமற்கிருத எழுத்துகள் மிகுதி. கிரேக்க இலத்தீனிலுள்ள பல சொற்கள் சமற்கிருதத்தில் மிகத் திரிந்துள்ளன. சமற்கிருதம் என்னும் பெயருக்கே நன்றாகச் செய்யப்பட்டது என்பது பொருள். உலகத்திலுள்ள மொழிகள் எல்லா வற்றினும் எழுத்துப் பெருக்கமும் செயற்கையொலிப் பெருக்கமுள்ளது சமற்கிருமொன்றே. அதனானேயே அது வழக்கற் றொழிந்தது.

வடமொழி யெழுத்துகளை 48 ஆகப் பெருக்கி யிருப்பினும், ஒலி முறைப்படி பார்ப்பின், அவற்றில் புணரொலிகள் அல்லது கூட்டெழுத்துகள் பலவாகும்.

'ரு', 'லு' என்பவை குற்றியலுகரம் சேர்ந்த ரகர லகரங்களாகும். 'ரூ' என்பது ரு என்பதன் நீட்டம். 'அம்' என்பது அம் என்னும் அசை. அகர உயிரும் மகரமெய்யும் சேர்ந்தது. இவை உயிர்மெய்களும் அசையுமாக இருந்தும் உயிரெழுத்துகளிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. எ, ஒ என்ற உயிர்கள் வடமொழிக்கில்லாதது ஒரு பெருங் குறையாகும்.

மெய்யெழுத்துகளில் ஐ வருக்கத்தில் h சேர்ந்த எழுத்து களெல்லாம் இரட்டை யெழுத்துகளாகும். சந்தியக்கரங்கள் சில தனியெழுத்துகள் போற் காட்டப்படும். இதனால் வடமொழி யெழுத்துப் பெருக்கினால் ஒரு சிறப்புமில்லை யென்க.

வடமொழி ஆரியர் இந்தியாவிற்கு வந்த பின்னரே உயிர்மெய் வரியும் எழுத்துமுறையும் வடமொழிக்கு ஏற்பட்டன. வடமொழி வரிகள் தென்மொழி வரிகளின் திரிபே என்பது இருமொழி வரிகளையும் ஒப்பு நோக்குவார்க்கு இனிது புலனாம். வடமொழி யரிவரி யேற்பட்ட பின் அதையொட்டி அதன் கிளைமொழிகட்கும் பின்பு தமிழ்க் கிளைமொழி கட்கும் அரிவரிகள் ஏற்பட்டன. இதனால் பார்சி அரபி வரிகளைக் கொண்ட இந்துத்தானி யொழிந்த ஏனை யிந்திய மொழிகட்கெல்லாம் உயிர்மெய் வரியும் எழுத்துமுறையும் ஏற்பட்டுள.

ஆதியில் ஏனைய மொழிகட்கெல்லா மில்லாது உயிர்மெய் வரிகள் தமிழுக் கிருந்ததினாலேயே, அதன் அரிவரி நீண்டு நெடுங்கணக்கெனப்பட்டது. ஏற்கெனவே நெடுங்கணக்கா யிருக்கும் அரிவரியை (செந்தமிழ்ப் புரவலர் உமாமகேசுவரம் பிள்ளைய வர்கள் கூறியபடி) இன்னும் நெடுங்கணக்காக்க நினைப்பது என்னே பேதைமை!

இனி, ஒரு மொழிக்கு நிரம்பின அரிவரி யிருப்பினும், பிறமொழிச் சொற்களை அதில் மொழி பெயர்க்கப் போதிய சொற்களுளவா என்று பார்த்தல் வேண்டும். இலவெனின் பிறமொழிச் சொற்களையும் பிறமொழி யெழுத்துகளையும் அதிற் புதிதாய்ச் சேர்க்க இடமுண்டு. தமிழில் எல்லாப் பொருள் களையும் வெளியிடத்தக்க எண்ணிறந்த சொற்களுள. ஆதலின் பிறமொழிச் சொற்களை யேனும் எழுத்துகளையேனும் புதிதாய்ச் சேர்க்க எட்டுணையும் இடமின்று. பொருள்களின் சிறப்புப் பெயர் (Proper Name) களே எழுத்துப் பெயர்ப்பிற்கும் (Transliteration) தற்பவத்திற்கும் இடமாகும். இதற்குப் பிறமொழி யெழுத்துகள் வேண்டுவவல்ல. தமிழில் இயன்றதுணை எழுதுதல் தகும். ஏதேனுங் குறையிருப்பின் அது எல்லா மொழிகட்கும் பொது வாகும். இதற்கென்றே தமிழிற் புத்தெழுத்துகளைச் சேர்ப்பின் தமிழின் தூய்மையும் இயல்பும் எளிமையும் இனிமையும் கெடும். அங்ஙனம் தமிழைக் கெடுத்து வழங்குவதினும், அதை விட்டுவிட்டு அயன் மொழியை வழங்குவதே சாலச் சிறந்ததாம். அதனாற் புத்தெழுத்துகளைத் தமிழிற் புகுத்த வேண்டும் என்னும் பொருந்தாக் கூற்றைப் புறத்தே விடுக்க.

–"*செந்தமிழ்ச் செல்வி*" நளி–பாவாணர் 1934

தமிழ் உலக முதல் உயர்தனிச் செம்மொழி. இவ் வுண்மையை முன்னமே ஒரு பழம்பெரும் புலவர் கண்டு,

"*ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி*
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னோர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்"

என்று தெள்ளத் தெளிவாகப் பாடிவைத்திருக் கின்றார். இது உண்மை நவிற்சியே யன்றி உயர்வு நவிற்சியன்று.

குமரிமுனைக்குத் தெற்கே மடகாசுக்கர்த் தீவுவரை பரவியிருந்த பழம்பாண்டி நாடான குமரிக்கண்டம் முழுதும் மூவேறு கடல்கோள்களால் முழுகிப் போனமையாலும், முதலிரு கழகப் பல்துறையிலக்கிய விலக்கணப் புலவியமனைத்தும் இயற்கையாலுஞ் செயற்கையாலும் அழியுண்ட மையாலும், தமிழின் தொன்மையை ஆழ்ந்த மொழியாராய்ச்சியின்றி அறியவியலாவாறு, மொழியொழிந்த பிற சான்றுகளெல்லாம் முற்றும் இறந்து பட்டன என்பதை, இற்றைத் தமிழ்ப் புலவர் முதற்கண் அறிதல் வேண்டும். ஆகவே, தொல்பொருட் கலை (Archaeology), ஆரியர் வருகைக்கு முற்பட்ட பழந்தமி ழக வரலாற்றிற்குப் பயன்படா தென்பதைத் தமிழ்நாட்டு வரலாற்றுத் துறைத் தலைவரும் கல்வெட்டுத் துறைத் தலைவரும் தொல் பொருளாராய்ச்சித் துறைத் தலைவரும் அறிதல் வேண்டும்.

தமிழ் தென்னாட்டு மொழியா நண்ணிலக் கடற்கரை மொழியா என்றும், குமரிநில மொழியா இற்றைநில மொழியா என்றும், திரவிட மொழிகட்குத் தாயா உடன்பிறப்பா என்றும், ஆரிய மொழிக் குடும்பத்திற்கு மூலமாக வுள்ளதா இல்லதா என்றும், தமிழன் பிறந்தகமும் மாந்தன் பிறந்தகமும் ஒன்றா வேறா என்றும், மொழி நூல் வரலாறு மாந்தனூல் ஆகிய முத்துறையிலும், நடுநிலை யுடனும், பொறுமையுடனும் நீண்டகால ஆராய்ச்சி செய்தாலன்றி, தமிழின் தொன்மை முன்மை தாய்மை தலைமை முதலிய தன்மைகளை முற்றும் அறியமுடியாது.

தொல்காப்பியம், முதலிரு கழகமும் இருந்த பழம் பாண்டிநாடு முழுதும் முழுகிய பின்பும், ஆரியப் பூசாரியர் தென்னாடு வந்து ஆரியச் சொற்களும் கருத்துகளும் தமிழிலக்கியத்திற் புகத் தொடங்கிய பின்பும், வைகை மதுரையும் கடைக்கழகமும் தோன்றுமுன் கி.மு.7 ஆம் நூற்றாண்டில், பாண்டியன் வயப்பட்ட தென் சேர நாட்டில் தோன்றிய பன்மாண் சார்பிற் சார்பான தொகுப்பு நூலாதலின், அதனையே முதனூலாகக் கொண்டு அது தோன்றிய காலமே தமிழிலக்கியப் பொற்காலமென்று கூறுவது, ஒரு பெருங்கோவிலின் திருவுண்ணாழிகையையும் இடை மண்டபத்தையும் முகமண்டபத்தையும் பாராது, கொடிக்கம்பத்தடியிலுள்ள சிற்றுருவத்தையே கோயிற் படிமையாகக் கருதித் தொழுவது போன்றதே.

"செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்"

என்று பனம்பாரனார் கூறியதும்:

"எழுத்தெனப் படுப..............முப்பஃ தென்ப"

என்று எழுத்ததிகாரத் தொடக்கத்திலும்,

"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே"

என்று சொல்லதிகாரத் தொடக்கத்திலும்,

"கைக்கிளை முதலா.........எழுதிணை யென்ப"

"அகத்திணை மருங்கின் அரில்தபவுணர்ந்தோர்

....

திறம்படக் கிளப்பின்"

"நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே"

"மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்"

என்று முறையே பொருளதிகார அகத்திணையியல் புறத்திணையியல் செய்யுளியல் மரபியல் தொடக்கத்திலும், கூறியதோடு, நூல் நெடுகிலும் செய்யுளியல் மரபியல் தொடக்கத்திலும், கூறியதோடு, நூல் நெடுகலும் "என்மனார் புலவர்", "என மொழிப", "வரையார்", "என்ப உணருமோரே", "என்ப சிறந்திசி னோரே", "என்மனார் புலமை யோரே", "எனமொழிப உணர்ந்திசி னோரே", "கிளப்ப", "என்றிசி னோரே" என்றும் பிறவாறும் அடிக்கடி இடையிடை தொல்காப்பியர் கூறிச் செல்வதும்: தொல்காப்பியம் தொகுப்பு நூலேயன்றிப் புதிய வகுப்பு நூலன்று என்பதைத் தெளிவாகக் காட்டும்.

மேலும், தொல்காப்பியம் நன்னூலும் அட்டாத்யாயீ என்னும் பாணினீயமும் போல எழுத்துஞ் சொல்லும் மட்டுங் கூறாது. தமிழுக்கே சிறப்பாகவுள்ள யாப்பணி யுட்கொண்ட தொல்வரவுப் பொருளி லக்கணமுங் கூறுதலின், அதனாலும் அது தொல்காப்பியர் புதுப்படைப் பன்றென்பது வெள்ளிடை மலையாம். வடசொற் கலப்பும் சில ஆரியக் கொள்கைகளும் பற்றிய கூற்றுகளே தொல் காப்பியரின் புதுச் சேர்க்கையாகும். இதை யறியாத சில தமிழாசிரியர், தொல்காப்பியர் தாமே தமிழ் எழுத்திலக்கணத்தைத் திறம்பட வகுத்துக் கூறியதாக அவரைப் போற்றியுரைத்துத் தம் ஆராய்ச்சி யின்மையைப் புலப்படுத்துவர்.

பொருளிலக்கண மரபு குமரிநிலைத் தமிழரின் திணைநிலை வாழ்க்கைச் செய்திகளைப் போற்றிக் காத்துவருவதால், அவ்வகையிலேயே தொல்காப்பியம் பழந்தமிழ் வரலாற்றாராய்ச்சிக்குப் பயன் படுவதாகின்றது. இங்ஙனமே, புறநானூறு, கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறப்பொருள் வெண்பாமாலை முதலிய சில பாத்தொகை களிலும் வனப்புகளிலும் இலக்கண நூல்களிலும் உள்ள குறிப்புகளும் பயன்படுகின்றன.

ஆராய்ச்சி யென்பது எல்லாருஞ் செய்யக்கூடிய எளியசெயலன்று. மதிநுட்பம், பரந்தகல்வி, நடுநிலை, அஞ்சாமை, தன்னலமின்மை, மெய்யறி யவா என்னும் ஆறும் ஆராய்ச்சியாளர்க்கு இன்றியமையாத பண்புகளாகும்.

உலகத்திலுள்ள மூவாயிரம் மொழிகளுள், தமிழைப் போன்று அடிமுதல் முடிவரை தருக்கப் பொருளாக விருப்பது வேறொன்றுமில்லை. பண்டை ஆரியர் பூசாரியர், தம் போன்றே தம் வழியினரும் காலமெல்லாம் தமிழரை அடிப்படுத்தி மேனத்தாக வாழ்தற் பொருட்டு, தம்மை நிலத் தேவரென்றும் தமிழ் வழிப்பட்ட தம் இலக்கிய மொழியைத் தேவமொழியென்றும் கூறி மூவேந்தரையும் ஏமாற்றித் தமிழரே தம் இனத்தைப் பகைக்கவும் தம் மொழியைப் புறக்கணிக்கவும் குமுகாயத் துறையிலும் இலக்கியத் துறையிலும் வழிவகுத்து வைத்திருக்கின்றனர்.

பிறமொழி யெழுத்துகள்

எகிபதிய சுமேரிய நாகரிகத் தோற்றம் கி.மு.3000 ஆண்டுகட்கு முற்பட்டது. எகிபதிய எழுத்து முதற்கண் படவெழுத்து (Pictograph); பின்னர்க் கருத்தெழுத்து (Ideograph or logograph).

சுமேரிய நாகரிக வழிப்பட்ட சேமிய வெழுத்து முதற்கண் அசையெழுத்து (Syllabary கி.மு.2000); பின்னர் ஒலியெழுத்து (Alphabet கி.மு.1500).

கிரேக்கர் சேமிய ஒலியெழுத்தைப் பினீசிய (Phoenician) வணிகர் வாயிலாகக் கற்றுத் தமக்கேற்றவாறு திருத்திக்கொண்டதாகச் சொல்லப் படுகின்றது. கிரேக்க எழுத்தினின்று இலத்தீன் எழுத்தும். இலத்தீன் எழுத்தினின்று ஆங்கிலம் முதலிய பிற ஐரோப்பிய மொழி யெழுத்துகளும் அமைந்துள்ளன.

கிரேக்க எழுத்துகள் அல்பா (Alpha), பேற்றா (Beta) என்று தொடங்குவதால், அவ் வண்ணமலை 'அல்பாபேற்று' (Alphabet) எனப் பெயர் பெற்றது. இது தமிழில் உலக வழக்கில் 'அஅன்ன ஆவன்னா' (அ, ஆ, அவ்வா) என்று வழங்குவது போன்றது.

கிரேக்க வண்ணமாலை முதற்கண்

A (short and long) B, G, D, E (short), W, Z, E (long), TH. I (short and long), K,L,M,N,X,O (short), P,R,S, T,U (short and long), PH, KH, PS, O (long) என்னும் 25 எழுத்துகளைக் கொண்டிருந்தது. பின்னர்த் திகம்மா (Digamma) என்னும் W நீக்கப்பட்டது.

இலத்தீன் வண்ணமாலை, முதற்கண்

a, b, c, d, e, f, g, h, i, k, l, m, n, o, p, q, r, s, t, u, x என்னும் 21 எழுத்துகளைக் கொண்டிருந்தது. பின்னர் j, v, y, z என்னும் 4 எழுத்துகள் சேர்க்கப்பட்டன.

கிரேக்க எழுத்துகளுட் பலவற்றின் வடிவம் வேறு. அவற்றை இங்குக் காட்டலாகாமையால் ஆங்கில வடிவிற் குறிக்கப்பட்டுள்ளன.

சீன எழுத்து கி.மு.1000 ஆண்டுகட்கு முற்பட்டது. அது 4000 கருத்தெழுத்துகளைக் கொண்டது.

சப்பானியர் கி.பி.5ஆம் 6ஆம் நூற்றாண்டுகளில் சீனக் கருத்தெழுத்துகளைக் கடன் கொண்டனர். அவை ஐயாயிரமாகப் பெருகி ஈராயிரமாகக் குறைக்கப்பட்டுள்ளன. சொற்களின் முதனிலை களைக் குறிக்கக் கருத்தெழுத்துகளும், ஈறுகளைக் குறிக்க 'இரகன' (Hiragana), 'கற்றகன' (Katakana) என்னும் இருவகை அசையெழுத்துகளும் கையாளப்படுகின்றன வென்றும், இதனால் சப்பானிய மாணவன் 1500 சீனக் கருத்தெழுத்துகளையும் (ஏறத்தாழ 100) இருவகை அசையெழுத்துகளையும் கற்க வேண்டியுள்ள தென்றும், பாடுமேர் (Bodmer) கூறுகின்றார். (The Loom of Languages, p.438).

அரபி யிலக்கியம் கி.பி.6 ஆம் நூற்றாண்டில் தொடங்கிற்று. அதன் எழுத்தும் அக்காலத்ததே. அது 28 எழுத்துகளைக் கொண்டது. அவற்றுள் ஒன்று அ (Fatha), இ (Kasra), உ (Damma) என்னும் முக் குறிற்கும் பொதுவான குறி. வகரவெழுத்து உகரத்தையும் யகரவெழுத்து இகரத்தையும் இடத்திற்கேற்ப உணர்த்தும். இருவேறு குறிகள் சேர்ந்து ஆ, ஈ, ஊ என்னும் நெடில்களைக் குறிக்கும். சில இணைப்பெழுத்துகளும் (Ligatures) உண்டு.

அரபிக்கு இனமான எபிரேய இலக்கியம் கி.மு.12 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. அது 22 எழுத்துகளைக் கொண்டது. உயிரொலிகளை யுணர்த்தும் முறையில் அது அரபியொத்ததே. அவ்விரு மொழிகளின் வண்ணமாலைகளும் வெவ்வேறு வடிவுகொண்டனவேனும், கிரேக்கத்தைப் போன்று கானானிய மூலப் பினீசிய வண்ணமாலையினின்று திரிந்தவையே.

தமிழின் தொன்மை

கி.மு.2000 ஆண்டுகட்கு முற்பட்ட ஊர் எனும் பாபிலோனிய நகரகழ்வில், கி.மு.3000 ஆண்டுகட்குமுன் சேரநாட்டினின்று ஏற்றுமதி செய்யப்பட்ட தேக்குமர உத்தரம் கண்டெடுக்கப் பட்டுளளது. ஊர் என்பது நகர் என்று பொருள்படும் அக்கேடியச் (Akkadian) சொல். அதுவே பண்டைத் தமி ழுகத்தில் மருதநில நகரைக் குறித்த பொதுச்சொல்.

அப் பாபிலோனிய நகரிற் பிறந்து வளர்ந்த ஆபிரகாமின் பெயர், அப்பன் என்னும் தமிழ்ச் சொல்லின் சிதைவான ஆப் என்பதை நிலைச் சொல்லாகக் கொண்டது. அவனே அரபியர்க்கும் இசரவேலர்க்கும் பொதுவான முன்னோன். அவன் காலத்தில் அவ் வீரினத்தாரும் தோன்றவே யில்லை. ஆகவே, அரபியும் எபிரேயமுமான அவர் மொழிகளுந் தோன்றவில்லை. ஆபிரகாம் பேசின மொழி அக்கேடியன்.

தமிழர் தோற்றமும் பரவலும்

குமரிநாட்டு மக்கள் தமிழின் வெவ்வேறு நிலையில் வெவ்வேறு திசை சென்று பரவியுள்ளனர். தமிழின் முச்சுட்டுகளினின்று தோன்றிய மூவிடப் பெயர்கள் ஒரு காலத்தில் குமரிநாட்டு மக்களொடு ஆத்திரேலியர்க்கும் சீனருக்கும் இருந்த உறவைக் காட்டுகின்றன. (கால்டுவெல் திரவிட ஒப்பியல் இலக்கணம், சென்னைப் பதிப்பு 361 ஆம் பக்கம்.)

எ–டு

தமிழ்	ஆத்திரேலியம்
ஏன், யான், நான்	nga, ngali, ngatsa, nganya
நீன், நீ	ninna, nginne, ngintoa, ningte
நீம், நீயிர், நீவிர், நீர்	nimedoo, nura, niwā, ngurle

தமிழ்	சீனம்
நான், நாம்	ngo wo; womēn
நீன், நீ, நீம்	ni, nimēn
தான், தாம்	ta, tamēn

நகரம் ஞகர மகரமாகவும், மகரம் வகரமாகவும், திரிதல் இயல்பே. தன்மைப் பன்மைப் பெயர் ஆங்கிலத்தில் we' என்றும் வடமொழியில் வயம் என்றும் திரிந்திருத்தல் காண்க.

'மேன்' (mēn) என்பது சீனத்தில் வகுப்பைக் குறிக்கும் தொகுதிப் பெயர். அது மன் என்னும் தென்சொல்லோடு தொடர்புடையதாயிருக்கலாம்.

மன் – மன்று – மந்து – மந்தை. மன்னுதல் = கூடுதல், மிகுதல், பெருத்தல்.

ஐம்பாற் படர்க்கைச் சுட்டுப் பெயர்கள் தோன்றுமுன் தான் தாம் என்பன படர்க்கைச் சுட்டுப் பெயர்களாகவே யிருந்தன.

பர் (Dr) (N.) இலாகோவாரி (Lahovary) தம் 'திரவிடத் தோற்றமும் மேற்கும்' (Dravidian Origins and the West) என்னும் ஒப்பியன் மொழி நூலில், தமிழொடு தொடர்புள்ள மேலையாசிய மேலையைரோப்பிய இடப் பெயர்கள், பூதப் பெயர்கள், மக்கட் பெயர்கள், உறவுப் பெயர்கள் பல்வகை உயிரினப் பெயர்கள், நிலைமைப் பெயர்கள், பல்வேறு வினைச்சொற்கள், பெயரெச்சங்கள் முதலிய நூற்றுக்கணக்கான சொற்களின் மூலத்தை அறியாது, அவற்றைத் தம் கொள்கைக்குச் சான்றுபோல் எடுத்துக் காட்டி, உண்மையில் தம் கொள்கையைத் தாமே மறுத்திருக்கின்றார்.

எ–டு : மல்=வளம், மல்–மல்லல்=வளம். "மல்லல் வளனே" (தொல்.உரி.7). மல்–மலை=இயற்கை வளம் மிக்கது. "வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே" (நன்.பாயி.28). இப்பொருளை மேலை மொழிகளிற் காண முடியாது. இங்ஙனமே ஏனையவும்.

Compare Cymri (Wales). ``It is stated that the original home of the Cymry, Cumri or Cymry was in Southern Hindustan the Southern extremity of which Cape Comorin, takes the name from the same root" - From a Historical Souvenir issued on the occasion of the meeting of the British Medical Association at Swanesa, - 1903-Editors.

A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Langauges, Third Edition, Introduction p., foot-note.

பேரா. V.R. இராமச்சந்திர தீட்சிதரின், Origin and Spread of the Tamils, Pre-Historic South India என்னும் வரலாற்று நூல்களைப் பார்க்க.

தமிழன் பிறந்தகமே மாந்தன் பிறந்தகம்

"ஏதேன் தோட்டத்தை (மாந்தன் பிறந்தகத்தை) மடகாசுக்கர்த் தீவின் பாங்கர்க் காணவேண்டும்" என்பது எக்கேல் (Ernest Haeckel) கூற்று. History of Creation.

கென்யாவிற் (Kenya) கண்டெடுக்கப்பட்ட மாந்தன் மண்டையோடு இதுவரை கண்டவற்றுள் மிகப் பழைமையானதாயிருக்கலாம் என்பது, இலீக்கி (Richard Leakey) என்னும் ஆங்கில மாந்தனூலா ராய்ச்சியாளர் கருத்து.

மடகாசுக்கர் மட்டத்திற் சற்றுக் கிழக்கே தள்ளியிருந்ததே தமிழன் பிறந்தகம்.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி."

(சிலப்.11:19–22)

தமிழ் எழுத்துத் தோற்றக் காலம்

தலைக்கழகத் தோற்றம் கி.மு.10,000 ஆண்டுகட்கு முந்தியது. அதற்குமுன் மூவதிகார இலக்கணமும் வகுக்கக் கால்நூற்றாண்டேனுஞ் சென்றிருத்தல் வேண்டும். இலக்கணத்திற்கு முன் பல்துறை இலக்கியம் தோன்ற அரை நூற்றாண்டு சென்றிருக்கும். அதற்குரிய எழுத்துத் தொகுதி அல்லது வண்ணமாலை, படவெழுத்து கருத்தெழுத்து, அசையெழுத்து, ஒலியெழுத்து என்னும் நால்நிலை கடந்து திருந்திய நிலைபெறக் கால் நூற்றாண்டாயிருக்கும்.

இலக்கிய விலக்கணப் புலவியல் பனையேட்டில் எழுத்தாணி கொண்டு சுழித்துக் கீச்சி எழுதப்பட்டது. ஏட்டின் இடப்பக்கம் (அடிப்பக்கம்) அகன்றும் வலப்பக்கம் (நுனிப்பக்கம்) சிறுத்தும் இருப்பதனால், இடம் வலமாக எழுதப்பட்டது. பட்டவன் பீடு கல்லிலும், வேந்தன் பட்டயம் கல்லிலும் செம்பிலும், பொறிக்கப்பட்டன, ஏட்டெழுத்து வளைகோடும் வெட்டெழுத்து நேர்கோடும் மிக்கிருப்பதே இயற்கை.

உயிரும் மெய்யும் மட்டும் உள்ள வண்ணமாலை குறுங்கணக்கு என்றும், உயிர்மெய்யொடுங் கூடியது

நெடுங்கணக்கு என்றும், பெயர் பெற்றன. பிறநாட்டு வண்ணமாலைகளெல்லாம் குறுங்கணக்கே. அதோடு உயிர், மெய், உயிர்மெய், குறில், நெடில், வலி, மெலி, இடை என்னும் வரிசையொழுங்கும் பிறப்பியல் முறையும் இல்லாது ஒன்றோடொன்று கலந்திருப்பன. உலகில் முதன்முதல் உயிர்மெய்யோடு கூடியதும்.

"எண்பெயர் முறைபிறப் புருவம் மாத்திரை
முதலீ றிடைநிலை போலியென் னகமும்
கிளவி புணர்ச்சி யெனுமிரு புறமும்." (நன்.)

ஆகப் பன்னிருவகையில் இலக்கணங் கொண்டதுமாகத் தோன்றியது தமிழ் நெடுங்கணக்கே.

இனி, 'அலெக், பேத்' என்றோ, 'அல்பா, பேற்றா' என்றோ, 'ஏ, பீ என்றோ சொல்லாது. குறிலுக்கு அன்ன என்னுஞ் சாரியையும் நெடிலுக்கு அன்னா என்னுஞ் சாரியையும் கொடுத்து 'அ அன்ன, ஆ அன்னா' என்று ஒலியியல் முறையிலேயே தமிழர் தம் சிறுவர்க்குத் தொன்றுதொட்டுப் பயிற்றி வந்ததும் சிறப்பாகக் கவனிக்கத்தக்கது.

வடமொழி திரவிட வண்ணமாலைகள்

கிரேக்கத்திற்கும் பழம் பாரசீகத்திற்கும் நெருங்கிய ஒரு மொழியைப் பேசிய வகுப்பார். எழுத்தும் எழுதப்பட்ட இலக்கியமுமின்றி, கன்றுகாலி மேய்க்கும் முல்லை நாகரிக நிலையில் கி.மு.2000 ஆண்டுகட்குப் பின் சிறுசிறு கூட்டமாக வட இந்தியா புகுந்து, சிந்துவெளியில் தங்கித் தம் சிறு தெய்வ வழுத்துகளை எழுதாக் கிளவியாகக் கொண்டிருந்து, தமிழரின் தலைமையான நாகரிகத்தைக் கண்டபின், அவர் மதங்களாகிய சிவனியத்தையும் மாலியத்தையும் தழுவி, தமிழ் நெடுங்கணக்கைப் பின்பற்றி வடமொழி வண்ணமாலையை அமைத்துத் தமிழிலக்கியத்தைத் தொடர்ந்து மொழி பெயர்க்கவும் தம் மேம்பாட்டை நாட்டுதற் கேற்றவாறு தொன்மங் (புராணங்)களைப் புனையவும் தலைப்பட்டனர்.

பிற்காலத்தில், வடமொழி வண்ணமாலையைப் பின்பற்றிப் பல திரவிட இனத்தாரும் தத்தமக் கேற்றவாறு வண்ணமாலை வகுத்துக் கொண்டனர்.

வடமொழி வண்ணமாலையின் பின்மை

1. வடமொழி காலத்தால் தமிழுக்குப் பல்லாயிரம் ஆண்டு பிந்தியது. தமிழ் திரிந்து திரவிடமாகித் திரவிடம் ஆரியமாக மாறியபின், அதன் ஒரு பகுதி வடஇந்தியப் பிராகிருதத்துடன் கலந்து வேதமொழியாயிற்று. அவ் வேதமொழி தமிழுடன் கலந்து சமற்கிருதந் தோன்றிற்று.

2. கிரேக்கத்தில் Th, Ph, Kh என்ற மூவெழுத்துகளே மூச்சொலியுடன் கூடியவை. சமற் கிருதத்தில் க ச ட த ப ஆகிய ஐந்து வல்லெழுத்து களும் மூச்சொலியுடனும் எடுப்பொலியுடனும் சேர்த்து, வலிப்பொலி, உரப்பொலி, எடுப்பொலி, கனைப்பொலி என நந்நான்காக வகுக்கப்பட்டுள்ளன.

3. ஆ, ஈ, ஊ (அ,இ,உ) ஆகிய மூன்றும் தமிழில் முதன்முதல் தோன்றிய சுட்டெழுத்துகள்.

ஆரியச் சுட்டுச் சொற்கட்கெல்லாம் மூலம் தமிழ்ச் சுட்டெழுத்துகளே. (கால்டுவெல் திரவிட ஒப்பியலிலக்கணம், சென்னைப் பதிப்பு, 421 மற்றும் 422ஆம் பக்கம்)

4. 'ரு', 'லு' என்பவை உயிரெழுத்துகளல்ல; குற்றியலுகரத்தொடு கூடிய ரகர லகர மெய்கள்.

5. கிரேக்கத்தில் க்ஸ் (ks, x) என்றுள்ள இணைமெய் வடமொழியில் க்ஷ் (க்ஷ, ksh) என்று வளர்ச்சியடைந்துள்ளது.

6. தமிழ் ஆய்தமே வடமொழி விஸர்க்கம்.

7. வண்ணமாலை வரிசையமைப்பிலும் உயிர்மெய் யமைப்பிலும், வடமொழி முற்றும் தமிழைப் பின்பற்றியதே.

8. அம், அ: என்று இறுதியிற் சேர்த்திருக்கும் இரண்டும் தனிக்குறிலை யடுத்த மெய்யான அசைகளே யன்றித் தனி யெழுத்துகளாகா; ஒரு போதும் தனி உயிர்களாகா.

எழுத்துகளை முத்திரைகளாகச் செய்து பதித்த காலத்தில் எழுது என்னும் சொல்லுக்கு அழுந்துதல், அழுத்துதல் பொருள்கள் தோன்றின. அழுந்ததுதல் – "இருவர் நெற்றியு மெழுதின சிலகணை" (பாரத.13:89) அழுத்துதல் – "தொழுது தாளினைச் செய்யபஞ் செழுதினும்" (பாரத.சம்பவ.8).

முந்து தமிழின் தொடக்கக் காலத்தில் படவெழுத்தும் (pictographic) அதனினின்றும் தலைக்கழகக் காலத்திய அசையெழுத்தும் (syllabic) அதனினின்றும் இரண்டாம் தமிழ்க்கழக இறுதிக்காலத்தில் முப்பது முதலெழுத்துகளாகிய மூலத்தமிழ் அகரநிரற்குறியீட்டு எழுத்துகளும் தோன்றியனவாகக் கொள்ளலாம்.

எழுத்துக்குள் உருவங்கள்:

உலகில் பேசப்படும் சற்றொப்ப 3000 மொழிகளுள் 198 மொழிகளே வரிவடிவங்கள் கொண்டுள்ளன. வரிவடிவங்கள்அனைத்தும் படவெழுத்துகளிலிருந்து உருவானவை. தமிழில் படவெழுத்துகள் இருந்தன என்பதற்கும், அவையே கருத்தெழுத்தாகவும் அசையெழுத்தாகவும் இன்றைய வரியெழுத்தாகவும் வளர்ந்தன என்பதற்கும், இலக்கணச் சான்றுகளும் கல்வெட்டுச் சான்றுகளும் கிடைத்துள்ளன.

எழுத்துக்களையும் உருவங்களையும் புடைப்புச் சிற்ப வடிவில் செதுக்கி (பள்ளமும் மேடுமாக) எழுதுவதற்குப் பயன்பட்ட மாவுக்கல்லுக்கு 'எழுதுகல்' என்றே பழங்காலத்தில் பெயரிருந்தது. சிந்துவெளி முத்திரைகள் பெரும்பாலும் மாவுக்கல்லால் செய்யப்பட்டவை.

தமிழ், தொடக்க காலத்தில் சீனம் எகுபது மொழிகளைப் போல் படவெழுத்துகளில் எழுதப்பட்டது என்பதற்கு 'எழுத்து' என்னும் சொல்லே சான்றாகின்றது. 'எழுதுதல்' பழங்காலத்தில் ஓவியம் வரைதலையே குறித்தது.

கடவுள் எழுதவோர் கல்தாரானெனின் என்னும் சிலப்பதிகார வரியில் எழுதுதல் ஓவியம் வரைதலையே குறித்தது. ஓவியந் தீட்டிய மண்டபம் 'எழுத்துநிலை மண்டபம்' எனப்பட்டது. பாறை, சுவர், துணி ஆகியவற்றின் மீது ஓவியம் வரைந்த கோலெழுத்துக் காலம் முந்தியது. உருவங்களைச் செதுக்கியும் கீறியும் வரைந்த கண்ணெழுத்துக் காலம் பிந்தியது. சிந்து வெளி நாகரிக அழிபாடுகளில் கண்ணெழுத்துகள் கிடைக்கின்றன. ஓவிய உருவெழுத்துகள் கிடைக்கவில்லை. பன்னிரண்டு உருவங்கள் மட்டும் படவெழுத்து முறையின் எச்சங்களாகச் சிந்துவெளி எழுத்துகளில் நிலைத்துள்ளன. இதிலிருந்து சிந்துவெளி நாகரிகக் காலத்துக்கு முன்பே தமிழில் படவெழுத்து முறை தோன்றி நிலவியது என அறியலாம்.

படங்களாக வரையப்பட்ட உருவ வடிவங்களே பிற்காலத்தில் எழுத்து வடிவங்களாக மாறியுள்ளன. இதன் வண்ணம், உலகில் எம்மொழி எழுத்தாயினும் ஒவ்வோர் எழுத்தும் ஓர் உருவத்தின் படத்தை உள்ளடக்கியிருக்கிறது. அந்த உருவம் கண்ணுக்குப் புலப்படும் நிலைத்திணை, இயங்குதிணைப் பொருள்களில் ஒன்றாயிருக்கும். செமித்திய மொழியில் எழுத்துகளின் பெயர்கள், உயிரிகள் அல்லது பொருள்களின் பெயர்களாகவே அமைந்திருப்பது இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. அம்மொழியில் 'B' என்னும் வடிவம் வீட்டைக் குறிக்கும். வீட்டின் வடிவமாக அமைந்திருக்கும் எழுத்தும், வீடு (Bethbeta) என்றே பெயரிடப்பட்டுள்ளது. கிரேக்கரும் செமித்தியரிடமிருந்து இதனைக் கடனாகப் பெற்றனர். இது மேலையாரிய மொழிகளில் 'பி' (B) எனக் குறுகியது. 'A' என்னும் ஆங்கிலவெழுத்து மாட்டின் தலையையும் கொம்பையும் குறிப்பது 'L' என்னும் ஒலிப்புக்குரிய 'எகுபதியே' எழுத்து முன்னாளில் 'படுத்திருக்கும் அரிமா' (Lion) வடிவமாக எழுதப்பட்டதும். எகுபதிய மொழியில் இதற்கு 'லியோ' என்று பெயர்.

பழந்தமிழிலும் எகுபதிய மொழியிலும் வல்லூறு (Flacon) வடிவமே அகர ஒலிப்பினைக் குறிப்பதாக இருந்தது. எகுபதிய மொழியில் இதற்கு 'ஆசோம்' என்று பெயர். எகுபதியர் 'நான்' எனப் பொருள்படும் சொல்லுக்கு மாந்தரின் இருகால் வடிவத்தைக் குறியீடாகக் குறித்தனர். சிந்துவெளி எழுத்து முறையில் இருகால் (II) வடிவம் 'நான்' என்னும் பொருளிலிருந்து பிறகு 'ந' என்னும் ஓசைக்குரிய அசையெழுத்துக் குறியீடாகி விட்டது. பின்னாளில் அது ஐரோப்பிய மொழிகளில் I என்ற எழுத்தாக மாறிவிட்டது. எகுபதியர், பொனீயிர், கிரேக்கர் ஆகிய மூவரும் 'D' என்ற எழுத்தை வீட்டின் கதவு வடிவமாக எழுதினர். தேனைக்குறிக்கும் 'Honey' என்னும் சொல்லின் முன்னெழுத்தான 'H' முதலில் தேன் கூட்டின் வடிவமாகவும், பின்னர் 'H' என்றும் எழுதப்பட்டது.

'M' என்னும் எழுத்து தொடக்கக் காலத்தில் ஆந்தையின் தலைவடிவமாக எழுதப்பட்டது. செமித்தியர், நீரின் அலை வடிவில் 'M' எழுத்தையும் மீன் வடிவத்தில் 'N' எழுத்தையும் எழுதினர். ஏனெனில் அம்மொழியில் 'மேம்' தண்ணீரையும், 'நூன்' மீனையும் குறித்தன. செமித்திய மொழியில் 'பே' வாய் எனப் பொருள்பட்டதால் 'P' எழுத்து வடிவம் வாயின் படமாக வரையப்பட்டது. பொனீசியர், எகுபதியர், கிரேக்கர் ஆகிய மூவரும் ஊசியின் துளை வடிவில் 'q' என்னும் எழுத்தை எழுதினர் 'U' என்பது இலத்தீன் மொழியின் 'V' சேர்ந்து 'W' ஆயிற்று. இது எகுபதிய மொழியில் 'பறவைக் குஞ்சின்' வடிவமாக எழுதப்பட்டது.

ஐரோப்பிய மொழிகள் கிரேக்கச் சொற்களைக் கடன் வாங்கிய பொழுது கிரேக்கத்தின் வாயிலாகச் செமித்திய எகுபதிய படவெழுத்துக்களின் சுருக்கமாகிய எழுத்தின் வரிவடிவங்கள் மேலையாரிய மொழிகளில் இடம்பெற்றன

சீனர் இதுகாறும் படவெழுத்துகளைப் பின்பற்றுகின்றனர். உலகப் பெருமொழிகளில் உள்ள அடிப்படைச் சொற்களின் எண்ணிக்கையை விட, சீன மொழியில் சொற்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் படவெழுத்துக்களின் எண்ணிக்கை மிகுதியாக இருக்கிறது. 40,000 படவெழுத்து களைக் கொண்ட சீனமொழி, சிந்துவெளித் தமிழைப்போல் அசையெழுத்து நிலையை யெய்தாததால், வரியெழுத்தாக வளர முடியவில்லை. ஆயின், தமிழ்மொழி எழுத்து வடிவின் நான்கு நிலைகளையும் படிப்படியாக வளர்த்துக் கொண்டிருக்கிறது.

தமிழின் உருவெழுத்து நிலை :

தமிழின் அனைத்து ஒலிப்புகளுக்கும் கூடாகவிருந்த உருவங்கள் சிந்துவெளி எழுத்துகளால்

புலனாகின்றன. சிந்துவெளி எழுத்தில் 12 உருவெழுத்துகள் உருவங் களையே தெளிவாகக் காட்டுகின்றன. ஏனையவை அவற்றுக்குரிய உரு வடிவமைப்பை உள்ளடக்கிய வரிவடிவங்களாக உள்ளன.

சிந்துவெளி எழுத்தில் அகரம் ஆணின் வடிவமாகவும், வல்லூறு என்னும் பறவை வடிவமாகவும் பிறகு வல்லூற்றின் இரு சிறகுகள் மட்டும் குறிப்பாகப் புலனாகும் வகையில் மேற்கோள் குறிபோன்றும் எழுதப்பட்டது. 'ஆகார' வடிவம் மாட்டின் தலையாக்வும், 'இ' கரம் ஆந்தையின் வடிவமாகவும், ஈகாரம் வண்டு, ஈ, தேனீ ஆகியவற்றின் வடிவமாகவும் 'உகரம்' காக்கையின் வடிவமாகவும், தளிரின் வடிவமாகவும் எழுதப்பட்டன என்று கருத இடந்தருகின்றது. எகரம் கோழியின் வடிவமாகவும், ஏணியின் வடிவமாகவும் 'ஏகாரம்' மான் அல்லது அம்பின் வடிவமாகவும் 'ஐ' கையின் வடிவமாகவும் 'ஒகாரம்' மயிலின் வடிவமாகவும் மயில் தோகையின் வடிவமாகவும் 'ஓகாரம்' யாழின் வடிவமாகவும் எழுதப் பட்டிருக்கலாம். ஐந்து குறில் எழுத்துகளும் ஐம்பறவைகளைக் (பஞ்சபட்சி) குறிப்பது உருவ எழுத்துகளைக் குறிப்பனவாகக் கருத இடந்தருகிறது.

தொன்முது தமிழில் 'க' கரம் கலயத்தின் வடிவமாகவும் 'சகரம்' சேல் மீனின் வடிவமாகவும் 'டகரம்' சதுர அல்லது நீள்சதுரத் துணியின் வடிவமாகவும் 'தகரம்' மழைத்தாரையின் வடிவமாகவும் ண, ன, ந, ஆகியன நாற்கால் விலங்கு, நான்கு கால்கள், நாய், நான் என்பவற்றின் குறியீடாகிய மாந்தனின் கால் அல்லது இருகோடுகள், தேன்கூடு போன்ற பலவடிவங்களாக இடந்தோறும் வேறுபடும் பாங்கினைக் கொண்டிருந்தன. 'பகரம்' கவித்து வைத்த மட்பாண்ட வடிவமாகவும் மகரம் மலை, மயில் ஆகியவற்றின் வடிவமாகவும் 'யகரம்' யா மரத்தின் வடிவமாகவும், 'லகரம்', 'செல்' (கறையான்) வடிவமாகவும் 'ழகரம்' தலைபருத்த புழுவின் வடிவமாகவும் 'ளகரம்' கரடியின் (உளியம்) வடிவமாகவும், தோலால் செய்த நீர்ப்பையின் வடிவமாகவும் 'றகரம்' ஆற்றின் வடிவமாகவும் எழுதப்பட்டன என்பதற்கு வரலாற்றுப் படிமுறைக்கு ஒத்த உருத்திரிபுகள் சான்றாகின்றன. மேற்கண்ட உருவங்களைச் சிந்துவெளி எழுத்துகளுடன் ஒப்பிட்டுக் காண்போர்க்கு இவ்வுண்மை தெற்றெனப் புலப்படும்.

தமிழி (தமிழ்ப்பிராமி) – தமிழ்ப் புலவர்களின் படைப்பு:

தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே தமிழ் எழுத்துகள் உயிரும் உடம்புமாக முப்பது என்று வரையறை செய்யப்பட்டன. இது யாரால் வரையறுக்கப்பட்டது, எக்காலத்தில் இது நிகழ்ந்தது. எங்கே முதன்முதல் செயற்பாடுற்றது என்னும் வினாக்களுக்கு விடைகாண்பது இன்றியமையாதது ஆகும்.

தொல்காப்பியர் தம் இலக்கண நூலை நூன்மரபு எனத் தொடங்கி மரபியலில் முடித்திருக்கிறார். "என்மனார், என்மனார் புலவர்" என்னும் கூற்றுகள் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளதால் தொல்காப்பியருக்கு வெகுகாலத்துக்கு முன்பே புலவர் பெருமக்கள் எழுத்துகளை உயிரெழுத்து மெய்யெழுத்து என வகைப்படுத்தியமை தெளிவாகிறது. தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்தி முப்பதாக்கியவர்கள் தமிழ்ப்புலவர்களே என்பதைத் தொல்காப்பியத்தால் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது.

தொல்காப்பியர் காலத்திய தமிழ் எழுத்துக்கு இக்காலத்தார் தமிழி என்று பெயரிட்டுள்ளனர். இதனை வடபுலத்தார் 'பிராமி' என்றனர்.

'பிரம்மம்' என்னும் சொல்லிலிருந்து 'பிராமி' என்னும் சொல் தோன்றியது. இதற்கு முதலாவது, தலைமையானது, அடிப்படையானது, மூலமானது, சிறந்தது என்று பொருள். பிரம முகூர்த்தம், பிரம குலம் (முதற்சாதி – பார்ப்பனச்சாதி), பிரமசரியம் (முதல் ஒழுகலாறு, பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சன்னியாசம் என்னும் நான்கு நிலைகளுள் முதல் ஆசிரமத்தைப் பின்பற்றுதல்) என்னும் சொற்களை நோக்குக.

பிராமி–முதலில் தோன்றிய எழுத்து என்பதே இதன் சரியான வேர்வழிப் பொருள், புலவர்களின் எழுத்து என்றிதனைக் கூறுவது வரலாற்றுப் பொருள். வரலாற்று ஆய்வாளரும் கல்வெட்டு வல்லுநருமான அறிஞர் பலர் Indian Paleography என்னும் நூலில் பிராமி என்பதற்குப் புலவர் எழுத்து என விளக்கம் தந்திருக்கின்றனர். இதிலிருந்து பிராமி எனப்படும் தமிழி எழுத்து தமிழ்க் கழகத்துப் புலவர்களால் புதிதாகத் திருத்தியமைக்கப்பட்டது எனத் தெரிகிறது. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியில் பிராமி என்பதற்கு சமற்கிருதத்திற்கு அமைக்கப்பட்ட எழுத்து எனத் தரப்பட்டுள்ள விளக்கம் முற்றிலும் தவறானது. சமற்கிருதம் எழுதப்படாத மொழி. அதை முதன் முதலில் எழுதத் தொடங்கியபோது தமிழ் மொழியினமைப்பை முற்றிலும் நோக்கி உயிரெழுத்து மெய்யெழுத்து என வகைப்படுத்திக் கொண்டனர். மேலையாரிய மொழிகளில் இத்தகைய வகைப்பாடு இல்லை.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகர் கல்வெட்டுகளில் காணப்பட்ட எழுத்துக்கு நாளடைவில், பிராமி எனப் பெயரிட்டனர். இது

முற்றிலும் தமிழுக்குரிய எழுத்து வடிவம் என்று அவர்களுக்குத் தெரியாது. பிராமி எழுத்து தமிழ், பிராகிருதம், பாலி ஆகிய மூன்று மொழிகளை எழுதுவதற்கு அக்காலத்தில் பயன்பட்ட பொது எழுத்து எனினும் இது தமிழுக்கென்றே அமைந்த மூல வரிவடிவம். பிராமி எழுத்தில் அமைந்த கல்வெட்டுகள் அசோகர் காலத்துக்கும் முன்னதாகத் தமிழகத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

பட்டிப்புரோலு அழகர்மலை, கொங்கர் புளியங்குளம் போன்ற இடங்களில் கி.மு. நான்காம், ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த பிராமி கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவற்றிற்குத் 'தமிழி எழுத்துகள்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் கிடைத்துள்ள கல்வெட்டுகளில் மிகவும் பழமையானவை தமிழ்நாட்டில் கிடைத்துள்ள பிராமி கல்வெட்டுகளே. இந்தியா முழுமைக்கும் ஒரே எழுத்து வடிவமாகக் கையாளப்பட்டது, பிராமி ஒன்றே. அது தெற்கிலிருந்து வடக்குப் பகுதிகளுக்குப் பரவியுள்ளது என்று உறுதிப்படுகிறது. பாலி பிராகிருத மொழிகள் வேறு எழுத்து அமைத்துக் கொள்ளவில்லை. சமற்கிருத மொழியினரும் வேறு வழியின்றி இதனையே எழுத்து வடிவாகக் கொள்ள நேர்ந்தது. வருக்க எழுத்துக்களை மட்டும் புதிதாகச் சேர்த்துக் கொண்டனர்.

இந்தியா முழுவதும் ஒரே எழுத்து வடிவமாகத் திகழ்ந்த இந்த எழுத்து வடிவத்தை 'பிராமி' என்று சொல்லாமல், 'தமிழ் எழுத்து' என்று சொல்வதே முறையானது என்று தொல்பொருள் ஆய்வுத்துறையில் ஓய்வு பெற்ற அதிகாரியும் தொல்லெழுத்து ஆய்வில் வல்லுநருமான அறிஞர் சீனிவாசன் வெளிப்படத் தெரிவித்துள்ளார்.

கி.மு. முதலிரு நூற்றாண்டுகளில் வாழ்ந்த சாதவாகன அரசர்களுள் வசிட்டி மகன் சதகன்னி வெளியிட்ட இருமொழி நாணயத்தில் ஒரு பக்கத்தில் தமிழிலும் மறுபக்கத்தில் பிராகிருத மொழியிலும் அவன் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இருமொழிக்கும் பிராமி எழுத்து வடிவம் ஒன்றாகவே உள்ளது. மௌரிய மன்னர்களுக்கு முன்பு மகத நாடாண்ட நந்தர் வெளியிட்ட காசுகளில் சிந்துவெளி எழுத்துகளில் நந்தன் எனப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு அருகில் நடந்த அகழ்வாய்வில் பேராசிரியர் இந்திரபாலர் கண்டெடுத்த முத்திரையொன்றில் 'தீவு கோ' என்னும் பெயர் மேலே சிந்துவெளி எழுத்திலும் கீழே பிராமி எழுத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மூன்று சான்றுகளிலிருந்து சிந்துவெளி எழுத்துக்குப் பிறகு பிராமி தோன்றியது என்பதும் ஈழத்தில் இருவகை எழுத்தும் (பழைய சிந்துவெளி எழுத்தும் புதிய தமிழி (பிராமி) எழுத்தும்) ஒரே காலத்தில் புழக்கத்தில் இருந்தன என்பதும் வெளிப்படுகின்றன. சிந்துவெளி எழுத்திலிருந்து பிராமி எழுத்து வளர்ந்திருக்கிறது என்பதை அறிஞர் பலரும் ஒப்புக் கொள்கின்றனர்.

பழைய சிந்துவெளி எழுத்து முறை உருவெழுத்திலிருந்து சுருக்கப் பெற்ற அசையெழுத்து. இது பொதுமக்களே கண்டறிந்த எழுத்து. இதனைத் திருத்தியமைக்கும் எண்ணம் கற்றவர்களிடையில்தான் தோன்ற முடியும். அதனையும் கல்வியில் சிறந்த புலவர் குழுவே செய்திருக்க முடியும். பாலி பிராகிருத மொழிகள் தோன்றுவதற்கு முன் எழுத்து வடிவிலிருந்த ஒரே மொழி தமிழ், தமிழ்ச் சங்கம் மதுரையில் நன்கு இயங்கிய காலத்தில் தமிழ்ப்புலவர்களே தமிழின் எழுத்து வடிவத்தை முப்பதாகத் திருத்திப்படைத்தனர் என்பதற்குப் பின்வரும் தொல்காப்பிய நூற்பாக்கள் சான்றாகின்றன.

"மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்"

(தொல்.எழுத்.15).

"எகர ஒகரத் தியற்கையும் அற்றே"

(தொல்.எழுத்.14).

இந்நூற்பாக்களிலிருந்து முன்பு தலைமேல் புள்ளி பெறாத எழுத்துகளைத் திருத்தியமைத்த பின் புள்ளி பெறலாயின என்று அறிய முடிகிறது. தமிழி எழுத்துகளுக்குத் தாயான சிந்துவெளி அசையெழுத்துகளும் உருவெழுத்துகளும் புள்ளி பெற வில்லை.

சிந்துவெளி அசையெழுத்தில் மெய்யெழுத்துக்கு என்று தனிக் குறியீடு இல்லை. உயிர் மெய்யெழுத்துக்கான ஒரே குறியீடு மெய்யிரட்டித்த மெய்ம்மயக்கத்துக்கும், உயிர்மெய்க்கும், மெய் யெழுத்துக்கும் ஆக மூன்று ஒலிப்புகளுக்கும் பொதுவான அசையெழுத்தாக இருந்தது.

க், க, க்க – இம்மூன்றுக்கும் ஒரே குறியீடு சிந்துவெளி எழுத்தில் காணப்படுகிறது. இது போன்றவையே ஏனையவும்.

குறில் நெடிலை மாத்திரை அளவுகோலால் வேறுபடுத்தியதால் முக்குறில்களைத் துணைக் குறியீடு சேர்த்து நெடிலாக்கியது போல எகர ஒகரக்குறியீடுகளை வேறுபடுத்த முடியவில்லை. புதிதாக வகுத்த இலக்கணக் கட்டமைப்பின் வண்ணம் இ + அ – ஏ, உ + அ – ஓ என இருவேறு குறில் இணைந்து தனி நெடில்களாகி அதன் பின்னர் அவற்றின் குறிலை எகர ஒகரக் குறில்களாக்கினர் என்னும் கருத்தின் வண்ணம் ஏகாரத்திற்கு 'இஅ'

இரண்டெழுத்தாக எழுதிக் காட்டாமல், 'ஏ' என ஒரே எழுத்தாக எழுதி அதன் தலைமேல் புள்ளியிட்டுக் குறிலாக்குவது (உயர்மெய் மேல் புள்ளியிட்டு 1/2 மாத்திரை மெய்யெழுத்தாகக் குறைந்தது போல) எளிதாகத் தெரிந்தது.

எழுத்துகளுக்கு 1/4 மாத்திரை முதல், இரு மாத்திரை வரை அளவு வகுத்த தமிழ்ப் புலவர்கள் இசைத்துறையில் வல்லவராய் இருந்திருத்தல் வேண்டும் என்பதும், பாடல்களுக்குத் தாளம் வகுத்துப் பண்ணமைக்கும் உத்திக்கு உதவும் பொருட்டே எழுத்துக்களைக் குறில் நெடில் எனவும், குற்றியலுகரம், குற்றியலிகரம், மகரக் குறுக்கம் எனவும், வல்லினம், மெல்லினம், இடையினம் எனவும் பிரித்தனர் என்பதும் தெரிகிறது.

சிந்துவெளி அசையெழுத்திலிருந்துதான் தமிழ் எழுத்துகள் வடிவமைக்கப்பட்டன என்பதற்குச் சான்றாகத் தமிழ் எழுத்துகளின் வண்ண மாலையில் முதலெழுத்துகள் முப்பதுடன் 216 உயிர்மெய்யெழுத்து களின் வடிவம் (எழுதும் வேறுபாடு கருதி) செயற்கைத் தேவையாக சேர்க்கப் பட்டிருக்கிறது.

உயிர்மெய் எழுத்து உண்மையில் எழுத்து என்னும் பெயருக்குப் பொருத்தமானதன்று உயிர்மெய் எழுத்தை 'அசையெழுத்து' என்று சொல்ல வேண்டுமேயன்றி எழுத்து எனக் கூறுவது தவறு.

உயிரெழுத்து மெய்யெழுத்து ஆகிய இரண்டே எழுத்து எனப்படும்.

1. உயிர் (அ,ஆ), மெய் (க்,ங்) – தமிழில் உள்ள முப்பது முதலெழுத்துகள் – Open syllable (வெளிப்படை எழுத்து) – Phoneme.

2. உயிர்மெய், க,ங – அகத்திணைந்த அசையெழுத்து – Closed syllable.

3. உயிர்மெய் – இல், உயிர்மெய் மெய்–கல் : புறத்திணைந்த அசையெழுத்து – Compound syllable.

மேற்காட்டப் பெற்ற மூவகை எழுத்தமைதிகளில் முதலாவதொன்றே எழுத்து எனப்படுவது, இறுதியிரண்டும் செய்யுளுக்கு உறுப்பாகும் அசைகள். இவற்றை அசையெழுத்து என்றே கூறுதல் வேண்டும். சிந்துவெளி முத்திரைகளில் பயின்றுள்ளவை அனைத்தும் அசையெழுத்துகளே. செய்யுளுக்கு உறுப்பாகும் அசையெழுத்துகளிலிருந்து முதலெழுத்து களாக வடிவமைத்துள்ளவர்கள் தமிழ்ப் புலவர்களாதலின் தமிழி எழுத்து பிற்கால மக்களால் புலவர் எழுத்து (பிராமி) என்றழைக்கப்பட்டது. வடபுலத்தாரால் முதலில் தோன்றிய எழுத்து என அறிமுகப் படுத்தப்பட்டது. தமிழி எழுத்தினை அடிப்படையாகக் கொண்டு சமண முனிவர்களும், பௌத்தர்களும் பல்வேறு மொழிகளுக்குப் புதிதாக எழுத்துகளை மாற்றி யமைத்துக் கொடுத்தனர். தேவநாகரி எழுத்தும் இவ்வாறு தோன்றிய புதிய எழுத்தமைதிகளுள் ஒன்றாகும். உயிரெழுத்து வேறுபாடுகளைக் குறிக்கும் அடையாளங்கள் ஏறத்தாழ இந்திய மொழிகளில் ஒரு சீராக அமைந்திருப்பதே இதற்குச் சான்றாகும். தமிழில் அமைந்தவாறே உயிரெழுத்து வேறுபாட்டுக்குறிகள் இந்திய மொழிகளில் அமைந்துள்ளன என்பதைப் பின்வரும் சான்றுகளால் ஒப்பிட்டுத் தெளியலாம்.

1. ஆகார நெடிலுக்கு மெய்யெழுத்தின் வலப்பக்கம் கோடிழுத்தல்.

2. இகர ஒலிப்புக்கு மெய்யெழுத்தின் தலைமேல் வலமாகக் கோடிடல்.

3. உகர ஒலிப்புக்கு மெய்யெழுத்தின் கீழ் அல்லது கீழ் வலத்தில் கோடிடல்.

4. எகர ஒகர ஒலிப்புகளுக்கு மெய்யெழுத்தின் இடது மேலாக அல்லது மேற்புறத்து இடது சாய்வாகக் கோடிழுத்தல்.

5. ஐகார ஔகார வேறுபாடுகளை மெய்யெழுத்தின் இடப்பக்கத்தில் அல்லது மேற்புறத்தில் குறியீட்டுக் கோடுகளால் புலப்படுதல்.

மேற்கண்ட உயிரெழுத்து வேறுபாட்டு ஒலிப்புக் குறியீடுகள் மெய்யெழுத்துடன் சேர்த்தெழுதும் முறை, சிந்துவெளி எழுத்துக்காலம் முதற் சிறப்பாகத் தமிழிலும், குறிப்பாக அனைத்து இந்திய மொழிகளிலும் பின்பற்றப்பட்டு வந்திருப்பது புலனாகிறது.

"ஔகார இறுவாய்ப்
பன்னீரெழுத்தும் உயிரென மொழிப" (தொல். எழுத்.8)

"னகார இறுவாய்ப்
பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப"
(தொல்.எழுத்.9)

மேற்கண்ட நூற்பாக்களில் 'உயிரென மொழிப' 'மெய்யென மொழிப' எனக் கூறப்பட்டிருப்பதிலிருந்து உயிரென்றும், மெய்யென்றும் வேறுபடுத்தும் இயல்பு அதற்கு முன்பிருந்த சிந்துவெளிக்கால எழுத்தில் அறவே இல்லை என்று தெரிகிறது.

"மெய்யோடியையினும் உயிரியல் திரியா" (தொல்.எழுத்.10) என்று தொல்காப்பியர் கூறுகிறார். இக்கருத்து சிந்துவெளி எழுத்தில் பின்பற்றப் படவில்லை. அவர்கள் மெய்க்கும் உயிர்மெய்க்கும் மெய்ம்மயக்கத்துக்கும் ஒரே எழுத்து வடிவத்தை (அசையெழுத்து)க் கொண்டிருந்தனர். அதிலிருந்து தமிழ்ப் புலவர்கள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பு தமிழ் எழுத்தை உயிர், மெய், உயிர்மெய் எனப் பாகுபடுத்தியதை அறிய முடிகிறது.

தமிழில் முதலெழுத்துகளைச் சீரமைத்தவர்கள் தொல்காப்பியர் காலத்துக்குச் சற்று முந்தியவர்களாக இருந்திருந்தால் அவர்களுடைய பெயரைத் தொல்காப்பியர் குறித்திருப்பார். சிந்துவெளி எழுத்தின் இறுதிக் காலம் கி.மு.1750 எனக் கூறப்படுகிறது. தொல்காப்பியரின் காலம் கி.மு.700. பிராகிருத மொழி வளர்ச்சியடைந்த காலம் கி.மு.1000. தொல்காப்பியர் குறிப்பிடும் வடசொல் என்பது பிராகிருதச் சொல்லே. இதில் பிராகிருத வடிவமுற்றுத் தமிழில் புகுந்த சமற்கிருதச் சொல்லும் அடங்கும். எனவே கி.மு.1000க்கும் 1750க்கும் இடைப்பட்ட காலத்தில் சற்றொப்பக் கி.மு.1500 ஆண்டளவில் சிந்துவெளி அசையெழுத்திலிருந்து தமிழ் முதலெழுத்துகள் 'தமிழி' வடிவம் பெற்றன எனக்கருத முடிகிறது.

பிராமி எழுத்துக்குத் தமிழர்கள் முன்பே பெயர் வைத்திருந்தார்களா என்பது அனைவரும் தொடுக்கும் வினா. சிந்துவெளி நாகரிகக் காலத்திலேயே தமிழ் எழுத்துக்குக் கண்ணெழுத்து (சிலம்பு.26:70) என்றும் கோலெழுத்து என்றும் பெயரிட்டிருந்தார்கள். எழுதப்படும் பரப்பில் கீறல் விழாமல் மையில் அல்லது வண்ணத்தில் தோய்த்து, தோல், துணி ஆகியவற்றின் மீது எழுதுவது கோலெழுத்து, எழுதப்படும். பரப்பில் கீறல் அல்லது பள்ளம் விழுமாறு குழித்து எழுதுவது கண்ணெழுத்து. தமிழைத் தவிர அக்காலத்தில் உள்நாட்டில் வேறெழுத்து முறையின்மையின் இதற்குத் தமிழ் எழுத்து என்று பெயரிட நேரவில்லை. தமிழர்கள் பெயரிடாததால் பிறமொழியாளர் பிராமி எனப் பெயரிட்டு வழங்கினர். தமிழினத்தார்க்குத் தனித்த பெயரில்லாதபோது பிறர் நம்மைத் திராவிடர் என அழைத்தது போன்றது இது. தமிழில் பிறமொழிச் சொல் புகுந்தால் நம் வரலாறே நமக்கு ஐயம் விளைவிக்கும் என்பதற்கு இது நல்ல சான்றாகும்.

உலக முழுவதும் முதுபண்டைக் காலத்தில் நிலவிய தொல்லெழுத்துகளைத் (epigraph) தொல்லெழுத்தியலார் ஆறுவகையாகப் பிரித்து ஆய்கின்றனர்.

1. படவெழுத்துமுறை : உருவப்படங்கள் அல்லது பொருள்களின் தெளிவான வெளிப்பாடு



2. கருத்தெழுத்து முறை : பொருளைக் குறித்த உன்னிப்புகள் கருத்தியலுருக்கள் ஆகியவற்றைப் புலப்படுத்தல் – குறியீடுகள் வாயிலாக.

வியப்பு
பெரிய... பெரிய மலை
சிறிய... சிறிய ஆறு
(இரண்டு கால்கள்) நான்

கருத்தெழுத்து முறை



3. ஒலிகொள்வடிவம் : ஒலியின் வரைகோட்டுக் குறியீடுகள். இவை மரபு வழிப்பட்ட கருத்துருக் களிலிருந்து பொருள்களுக்கு மாற்றாக வழங்கப்பட்ட ஒலிக் குறியீடுகள்; இன்னொரு வகையில் கூறினால் ஓவிய ஒலியெழுத்துப் புதிர், (அ) மீன்–மீனவன் – அரசன். கொடியில் மீன் சின்னம் உடையவன்.

ஓவிய எழுத்துப் புதிர் : (ஆ) சிறப்பும் குறிப்புப் பொருளும் உடைய எழுத்தாக்கம்–புதிய முறையில் விளக்குதல்.

ஓவிய எழுத்துப் புதிர்



4. சொற்குறியீடுகள் : முழுச் சொற்களுக்குக் குறியீடுகள் அமைத்தல்.



5. அசைநிலைக் குறியீடுகள் : சொல்லின் அசைகளோ கூறுகளோ குறியீடுகளாகக் காட்டப் பெறல்.



6. அகர நிரற் குறியீடுகள் : சொல்லாக் கத்திற்கு அடிப்படையான மூல ஒலியன்களைத் தனித்தனியாக எழுதிக் காட்டும் வரி வடிவம் அல்லது அடிப்படை எழுத்துகள் (உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள்).



அகர நிரற் குறியீடுகள்

பிராமி என்னும் தமிழி எழுத்து நேர்கோடுகளால் ஆகியது. இதனைச் சற்று வளைத்து எழுதிய வடிவமே வட்டெழுத்தாயிற்று. கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் சமணமுனிவர்களால் இந்தியாவில் பதினெட்டு மொழிகளுக்கும் பதினெட்டு வகை எழுத்துகள் உருப் பெற்றிருந்ததைச் சமவயங்க சுத்த என்னும் சமணநூல் குறிப்பிடுகிறது. கல்வெட்டு களைத் தொடக்கக் காலத்தில் பிராகிருத சமற்கிருத மொழிகளில் வெளியிட்ட பல்லவர் காலத்திலும் அதற்கடுத்த விசயநகர மன்னர் காலத்திலும் கிரந்த எழுத்து தோன்றியது. வடசொற்களைத் தமிழில் கலந்து எழுதும் ஒரே நோக்கத்திற்காகக் கிருத எழுத்துகள் புகுத்தப்பட்டன. இவை தமிழ்நாட்டில் தோன்றிய எழுத்துக்களில் ஆந்திர சாதவாகனவரை யடுத்து ஆட்சிக்கு வந்த இக்குவாகு மன்னர்கள் நாகார்ச்சுனா அமராவதி போன்ற இடங்களில் முதன்முதல் கிரந்த எழுத்தைப் பயன் படுத்தியிருக்கின்றனர். கிரந்த எழுத்து என்பதற்கு நூலில் எழுதப்பட்ட எழுத்து என்று பெயர். இதனைத் தமிழ் மக்கள் பயன்படுத்த வில்லை.

யாப்பருங்கல உரையில் (இறுதி நூற்பா விளக்கத்தில்),

"உருவே உணர்வே ஒலியே தனிமையென
இருவகை எழுத்தும் ஈரிரண் டாகும்"

என்ற உரையாசிரியர் மேற்கோள் காட்டியிருக்கிறார்.

உருவெழுத்து:
காணப்பட்ட உருவம் எல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவில் ஓவியன் கைவினை போல
எழுதப்படுவது உருவெழுத் தாகும்.

உணர்வெழுத்து :
கொண்டவோர் குறியால் கொண்ட வதனை
உண்டென் றுணர்வது உணர்வெழுத்தாகும்.

ஒலியெழுத்து
இசைப்படு புள்ளின் எழாஅல் போலச்
செவிப்புல னாவது ஒலியெழுத்தாகும்

தன்மையெழுத்து
முதற்கா ரணமும் துணைக்கா ரணமும்
துணைக்கா ரணத்தொடு தொடரிய வுணர்வும்
அவற்றொடு புணர்ந்த வகத்தெழு வளியின்
மிடற்றுப் பிறந்திசைப்பது தன்மையெழுத்தே.

நிகண்டாசிரியர்கள் காலத்தில் இந்நால்வகை எழுத்துகள் வடிவு, பெயர், தன்மை, முடிவு எழுத்துகளாகவும் வகைப்படுத்தப்பட்டன.

யாப்பருங்கல விருத்தியுரையில் பதினைந்து வகை எழுத்துகள் குறிப்பிடப்படுகின்றன.

1. ஆய எழுத்து : அ,க,ச,ட,த,ப,ய வணிக முத்திரை எழுத்து. ஆயம் – வரிப்பணம்.

2. ஓரை எழுத்து: அ,ச,ல,வ,ர,ங,ய

3. நாளெழுத்து: நளி (கார்த்திகை) முதலிய நாண்மீன் எழுத்துகள்.

4. தன்மையெழுத்து: பிறப்பியல்பு (சாதி) குறித்தல்.

5. நீட்டொலி எழுத்து (தூபம்): வேதம் ஓதுங்கால் நீட்டிப் படிக்கும் ஒலிக்குறியீடுகள்.

6. உக்கிரவெழுத்து (உச்சாடணம்): மந்திரக் குறியீடுகள்.

7. முத்திறவெழுத்து: சித்திரம் காருடம் முதலியன.

8. நால்வகையெழுத்து: பாகியல் முதலியன. (யானைப்பாகர் ஒலிப்புக் குறியீடு போல்வன).

9. நாற்கதியெழுத்து: புத்தேளிர், மாந்தர், அசுரர், நிரயர் (நரகர்) ஆகியோர்க்குரிய குறியீடுகள்.

10. ஒளியெழுத்து: கனிமம் (தாது) முதலிய மாழை (உலோகம்), எழுத்து, பச்சிலை பிழிந்துவிட் பின் எழுத்தின் வடிவங்கள் தெளிவாகப் புலப்படும்.

11. குறிப்பெழுத்து[1]: (சங்கேதம்): குறிப்பால்–பொருள் தருவன கலி முதலியனவும்.

12. குறிப்பெழுத்து[2]: குறிப்பால் பொருள் தரும் மாதடையம் முதலியனவும்.

13. பதின்மூன்றெழுத்து: பார்ப்பன வழக்காகிய வடமொழிச் சிறப்பெழுத்துக் குறியீடுகள்.

14. கட்டுரையெழுத்து: அகரநிரல் எழுத்து, வண்ணமாலை எழுத்து.

15. வடிவெழுத்து: வச்சிர முதலியன.

பௌத்தர்களும் கந்தருவ எழுத்து, நாகர் எழுத்து, இயக்கர் எழுத்து, கின்னரர் எழுத்து, கருடர் எழுத்து என ஐவகை எழுத்துகளாகக் குறிப்பிடுகின்றனர். காலப்போக்கில் திரிந்தனவும் பண்டு தொட்டே காக்கப்பட்டவையுமான எழுத்து வகைமைகளை இவை காட்டுகின்றன எனலாம். (எழுத்து[2] பார்க்க)

நெடுங்கணவாய் *neḍu-ṅ-gaṇavāy,* பெ. (n.) நீண்ட கணவாய் மீன்வகை (வின்.); a long cuttle fish.

[நெடு → நெடும் + கணவாய்]

நெடுங்கதை *neḍu-ṅ-gatai,* பெ. (n.)
1. பழங்கதை (யாழ்.அக.); ancient story. *அவனுடைய நெடுங்கதையைக் கேட்கவா வந்தேன்.* 2. புதினம்(நாவல்); novel.
3. நீண்டகதை; long story or short novel.

[நெடு → நெடும் + கதை]

பழங்காலத்தில் செய்யுளில் சொல்லப்பட்ட கதை இலக்கியம் பல.

மறவனப்பு (இதிகாசம்); வரலாறு 3/4 பங்கு; கற்பனை 1/4 பங்கு.

பாவியம் (காப்பியம்); வரலாறு 1/2 பங்கு; கற்பனை 1/2 பங்கு.

தொன்மம் (புராணம்); இயற்கை நிகழ்ச்சி 1/4 பங்கு; இயற்கையை மீறிய நிகழ்ச்சி 3/4 பங்கு.

சமற்கிருதத்தில் இராமாயணம், மகா பாரதம் இரண்டும் மறவனப்பாக உள்ளன. தமிழில் சிலப்பதிகாரம் மணிமேகலை மறவனப்புத் தன்மை கொண்டன. சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அயல்நாட்டுக்காரர் இமயத்தில் ஏறி நின்று நும் மொழியின் முதல் இலக்கியத்தைக் கொண்டு வாருங்கள் என்று கூறினால் இந்திய தேசிய 15 மொழியாளரும் இராமாயணம் அல்லது மகாபாரதம் மொழி பெயர்ப்பைத்தான் கொண்டு செல்வர். தமிழர் மட்டுமே சிலப்பதிகாரத்தைத் தனித்தன்மையோடு எடுத்துச் செல்ல இயலும் என்றார்.

தமிழில் ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறு காப்பியம் என்று சமணமதப்பாகுபாடு கூறினாலும் சீவக சிந்தாமணி, பெருங்கதை இரண்டு மட்டுமே சிறந்தவை. பெரியபுராணம் (திருத்தொண்டர் வரலாறு) தொண்டர்பற்றிய 64 உண்மைக்கதைகளும் திருவிளையாடற் புராணம் கடவுள் பற்றிய 64 கற்பனைக் கதைகளும் கொண்டவை.

வரலாற்றுப்புதினம் – 3/4 உண்மை 1/4 கற்பனை

உளவறி புதினம் – 1/4 உண்மை 3/4 கற்பனை

வாழ்வியல் புதினம் – 1/2 உண்மை 1/2 கற்பனை

இப்பாகுபாட்டை–

இளம்பூரணர் தம் உரையில்–

உள்ளோன் தலைவனாக இல்லது கூறல் (வரலாற்று நெடுங்கதை)

உள்ளோன் தலைவனாக உள்ளது கூறல் (செய்தித்தாள் நிகழ்ச்சி)

இல்லோன் தலைவனாக உள்ளது கூறல் (வாழ்வியல் நிகழ்ச்சி)

இல்லோன் தலைவனாக இல்லது கூறல் (உளவறி நெடுங்கதை)

சிறுகதை,நெடுங்கதைகளின் அடிப் படையாக, பலர் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளை ஒருவர் வாழ்வில் நடந்ததாகக் கூறுவது என்ற உரையாசிரியர் குறிப்பு மூலக்குறிப்பு.

நெடுங்கதை = சிறுகதை அல்லாத நீண்ட கதை. புதினம் (நாவல்) (Fiction) என்னும் புனைகதை இதழ்களில் வரும்போது தொடர்கதையாகும். தென்னை, பனைபோல் கிளைகள் இல்லாதது சிறுகதை என்றும், மா, பலா போலக் கிளைகள் உள்ளது, நெடுங்கதை என்றும் கூறுவர் திறனாய்வாளர். தொடர்வண்டியிலோ, பேருந்திலோ ஒரு நிறுத்தத்திலிருந்து அடுத்த நிறுத்த நிகழ்வு சிறுகதை என்றும், தொடக்கம் முதல் இறுதி வரை காண்பது நெடுங்கதை என்றும் கூறுவார்.

முதல் புதினங்கள் (நாவல்கள்)

சென்ற நூற்றாண்டில் 1876–இல் வேதநாயகம் பிள்ளை என்ற அறிஞர் முதல்முதலாகத் தமிழுக்குப் புதின (நாவல்) இலக்கியத்தை அளித்தார். அவர் மாவட்ட முறைமன்றத்தலைவராக (நீதிபதியாக) இருந்தவர்; ஆங்கிலம் அறிந்தவர்; ஆங்கிலேயருடன் தொடர்பு உடையவர். ஆங்கிலத்தில் புதின (நாவல்) இலக்கியம் வளர்ந்திருப்பதையும், அதைப் பொழுதுபோக்காகப் பலர் படித்துப் பயன்பெறுவதையும் உணர்ந்து, தமிழர்களும் அவ்வாறு படிக்க வாய்ப்புப் பெறவேண்டும் என்று கருதினார். அந்தக் காலத்தில் செய்யுள் நூல்கள் பல எழுதிப் புகழ் பெற்ற மீனாட்சி சுந்தரம் பிள்ளையுடன் நெருங்கிய தொடர்பு உடையவர்; தாமும் பாடல் பல இயற்றியவர். ஆனாலும், செய்யுள் நூல்களை எல்லாரும் படிக்க முடியாது என்பதை உணர்ந்து, உரைநடை வாயிலாக நல்ல கருத்துகளை உணர்த்த வேண்டும் என்ற ஆர்வம் கொண்டார். கதை கேட்கும் ஆர்வம் மக்களுக்கு இயல்பாக இருப்பதால், புதினங்கள் (நாவல்கள்) வாயிலாகத் தாம் உணர்த்த விரும்பியவற்றை உணர்த்த முன் வந்தார். பிரதாப முதலியார் சரித்திரம் (1876), சுகுணசுந்தரி (1887) என்னும் புதினங்களை (நாவல்களை) இயற்றினார். அவற்றில் பலவகை மாந்தர்களைப் படைத்தார்; பலவகை உணர்ச்சிகளை அமைத்தார்; பல அறகருத்துக்களைப் (நீதிகளைப்) புகட்டினார். தஞ்சை, திருச்சி மாவட்டங்களில், கிராமங்களிலும், நகரங்களிலும் தாம் பெற்ற நுகர்வுகளைக் (அனுபவங்களைக்) கொண்டு, குடும்பக் குமுதாய வாழ்க்கை நிலைகளைச் சொல்லோவியமாக்கிக் காட்டினார்.

பின்னர் எழுதிய புதினத்தை(நாவலை)விட, முதலில் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரமே இலக்கியத்தரம் உடையது. கதைத் தலைவன், தலைவி ஆகிய இருவரின் பெற்றோர்க்கு இடையே பூசலும் போராட்டமும் நடக்கின்றன. தலைவன் வீட்டைவிட்டு வெளியேறுகிறான். ஒரு வேட்டைக் காட்சியைக் காண்பதற்கு முயல்கிறான். பல இன்னல்களை அடைகிறான். பணக்கார உழவர் குடும்பத்துப் போராட்டங்களைக் கதை சுவையாக வளர்த்துச் செல்கிறது. இரண்டாம் புதினத்தில் (நாவலில்), கதைத் தலைவியை ஓர் அரசன் கவர்ந்து செல்கிறான். வழியில் கன்னி மாடத்தில் புகுந்து கொள்கிறாள் அவள். அரசன் தேடிக் கண்டுபிடிக்கிறான். அதற்குள் அந்த அரசனுடைய ஆட்சியை அமைச்சன் கைப்பற்ற முயல்கிறான். போராட்டங்கள் வளர்கின்றன. முதல் புதின கதை மாந்தர் (பாத்திரம்) ஒருவர் கதை கூறுவதாக அமைந்துள்ளது. இரண்டாவதில் ஆசிரியரே கதை சொல்கிறார். நகைச்சுவை நிரம்பியுள்ளது. அறக்கருத்துகள் நிரம்பியுள்ளன.

வேதநாயகம் பிள்ளை போலவே வேறு துறைகளில் தொழில் செய்து கொண்டே தமிழ் இலக்கியத்தை வளர்க்கப் பாடுபட்டோர் பலர். அவர்களுள் நடேச சாத்திரி (1859–1906) என்பவர் ஒருவர். திராவிட பழங் (பூர்வகாலக்) கதைகள், இடைக் (மத்திய) காலக் கதைகள் எனப் பழைய கதைகளைத் திரட்டி எழுத்தில் தந்தார். முத்திரராராட்சம் என்பதை வடமொழியி லிருந்து மொழிபெயர்த்து எழுதினார். ஆங்கிலத்தில் செகப்பிரியர் எழுதிய சில நாடகங்களை (Measure for Measure, Twelfth Night) தமிழில் கதையாக்கித் தந்தார். மாமி கொலுவிருக்கை, கோமளம் குமரியானது, திக்கற்ற இரு குழந்தைகள், மதிகெட்ட மனைவி என்பவை அவர் இயற்றிய கதை நூல்கள்.

வாழ்க்கையை உள்ளவாறு காட்டும் பாங்கு, நடப்பியல் (Realism) எனப்படுவதை முதல் முதலில் தமிழில் ராச(ஐ)ம் அய்யர் (1872–1898) எழுதிய ‘கமலாம்பாள் சரித்திரம்’ என்னும் புதினத்தில் காண்கிறோம். அதை அடுத்து, அதே பாங்கில் எழுதப்பட்டது மாதவையாவின் ‘பத்மாவதி சரித்திரம்’ வேதநாயகம் பிள்ளையின் நாவல்களுக்கும் இந்த இரண்டு நாவல்களுக்கும் இடையே இருபதாண்டுக் கால இடைவெளி இருக்கிறது. அப்போது புதினங்கள் தோன்றாமல் இல்லை; குருசாமி சர்மா எழுதிய ‘பிரேம கலாவதியம்’ முதலியன சில இருந்தன. ஆனால் அவை இலக்கியத் தரம் பெறவில்லை. ‘கமலாம்பாள் சரித்திரம்’ விவேகசிந்தாமணி என்னும் இதழில் 1893–95–இல் தொடர்கதையாக வந்து. 1896–இல் புத்தகமாக வெளியிடப்பட்டது. கிராம வாழ்க்கையும் சல்லிக்கட்டு என்னும் (எருதாட்டத்) திருவிழாவும் மற்றப் பழக்கவழக்கங்களும் அக்காலத்தில் இருந்தவாறே விளக்கப்பட்டுள்ளன. இளைஞரின் காதல் ஒருபுறமும், நடுவயதினரின் அன்பான குடும்ப வாழ்வு ஒருபுறமும்

இருந்து முரண்படுவதைத் தீட்டிக் காட்டியுள்ளார். அவர்க்கு அடுத்தாற்போல் புதினம் எழுதிய மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரம்' (1898) தெளிவான பாத்திரப் படைப்பு உடையது. அவருடைய சீர்திருத்த ஆர்வம் அதில் நன்கு புலப்படுகிறது. 'விசய மார்த்தாண்டன்', 'முத்து மீனாட்சி' (1903) என்னும் புதினங்களையும் அவர் இயற்றினார். பத்மாவதி சரித்திரத்தில் பல நிகழ்ச்சிகள் ஒன்றோடு ஒன்று பின்னிக் கிடக்கின்றன. ஒன்று மற்றொன்றினுக்குத் தொடக்கமாய் வளர்ந்து செல்லக் காண்கிறோம். பத்மாவதியின்மேல் அவளுடைய கணவனுக்கு ஏற்படும் ஐயமே நீண்ட சிக்கலாய் வளர்ந்து முடிகிறது. 'விசயமார்த்தாண்டம்' என்னும் கதையில் மறவர் சமுதாயமும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் வழக்கறிஞர்களும் முறைமன்ற அதிகாரிகளும் (நீதிபதி) பல கோணங்களில் காட்டப்படுகிறார்கள். 'முத்து மீனாட்சி' என்னும் புதினம் அவற்றைவிடப் புதுமை மிகுந்தது; புரட்சியானது. இளமையில் கணவனை இழந்த கைம்பெண் (விதவையானவள்) ஒருத்தி படும் துன்பங்களை அவளே எடுத்துரைக்கும் முறையில் (தன் வரலாறு என்ற போக்கில்) புதினம் அமைந்துள்ளது. இவற்றின் வாயிலாக மாதவையா, தமிழ்ப் புதினத் துறையில் உள்ளீடு (Content), வடிவு (form) ஆகிய இருவகையிலும் புதுமை வளர்த்தவர் எனலாம்.

மாதவையா (1872–1925) அரசாங்க வேலையிலிருந்து ஓய்வு பெற்றபின் 'பஞ்சாமிர்தம்' என்னும் இதழை நடத்தி அதில் பாடல் (கவிதை), சிறுகதை, இலக்கியத் திறனாய்வு, அரசியல் கட்டுரைகள் முதலியன வெளிவரச் செய்தார். 'கோணக் கோபாலன்' என்ற புனைபெயரில் தாமே பாடல் (கவிதை)களும் கட்டுரைகளும் எழுதிவந்தார். அவர்க்கு விருப்பமான குமுகாயச் (சமூகச்) சீர்திருத்தத் தொண்டுக்கு அந்த இதழ் ஒரு நல்ல கருவியாக இருந்தது. பழைய கண்மூடி வழக்கங்களை எதிர்த்துப் போராடினார். சிறுவர்கள் படிக்கக்கூடிய நடையில் பால ராமாயணம், பால விநோதக் கதைகள், தட்சிண சரித்திர வீரர் என்பன இயற்றினார். திருமலை சேதுபதி, பாரிசு(ஸ்)டர், பஞ்சநதம் என்பவை நாடகங்கள். செகப்பிரியரின் ஒதெல்லோ நாடகத்தைத் தமிழில் தந்தார். பொதுதர்ம சத்கீத மஞ்சரி, புதுமாதிரிக் கல்யாணப்பாடல் என்பன அவர் இயற்றிய பாடல் தொகுதிகள். ஆசாரச் சீர்திருத்தம் என்னும் நூல் அவருடைய சீர்திருத்த ஆர்வத்தைப் புலப்படுத்தும். அவர் இயற்றிய சிறுகதைகள் பல. அவை சிறுகதை வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்தவை; மூன்று தொகுதிகளாக, 'குசிகர் குட்டிக் கதைகள்' என்னும் பெயரால் வெளியாயின.

மாதவையாவுக்குப் பிறகு புதினத்(நாவல்) துறையில் மீண்டும் இடைவெளி ஏற்பட்டது. கல்வி பெருகி இலக்கியத் தரம் உள்ள கதைகளைப் பிறர் படைப்பதற்கு முன் ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார், பொன்னுசாமிப் பிள்ளை, கோதை நாயகி அம்மையார், ரங்கராசு முதலியோரின் பொழுதுபோக்குப் புதினங்களும் துப்பறியும் புதினங்களும் படிப்போர்க்கு விருந்தாக இருந்தன. அவற்றில் பெரும்பாலானவை, மேற்கு நாட்டாரின் துப்பறியும் புதினங்(நாவல்)களின் தழுவல்களாகவே இருந்தன. தமிழ்க் குமுதாயத்தின் படப்பிடிப்புக்களாக, கண்ணாடிகளாக, ஒரு சில மட்டுமே அமைந்தன.

காந்தியடிகளின் நெறியிலும் வாழ்விலும் தம் நெஞ்சைப் பறிகொடுத்து, இந்த நாட்டுக் கிராமங்களின் முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்ட கே.எசு. வெங்கடரமணி புதினத்துறையில் ஈடுபட்டார். முதலில் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுப் பிறகு தமிழில் தாமே எழுதிவெளியிட்டார். அவற்றில் தேசநலம் மேலோங்கி நிற்கக் காண்கிறோம். தமிழ்நாட்டுக் கிராம வாழ்க்கையை உள்ளவாறு உணர்ந்து, கிராம மக்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டும் முறையில் பல மாந்தர்களையும் நிகழ்ச்சிகளையும் அவற்றில் படைத்திருக்கிறார்.

கல்கி

தமிழ் இலக்கியத்தில் வரலாற்றுப் புதினங்களுக்கு ஒரு சிறப்பைத் தேடித் தந்தவர் 'கல்கி' என்ற புனைபெயர் கொண்ட இரா. கிருட்டிணமூர்த்தி (1899–1954). அவர் முதலில் 'ஆனந்தவிகடன்' என்னும் வார இதழுக்கும், பிறகு 'கல்கி' என்ற வார இதழுக்கும் ஆசிரியராக விளங்கியவர். அந்த இதழ்களில் அவர் எழுதிய தலையங்கங்களும் கட்டுரைகளும் அவருடைய எழுத்துத் திறமையில் மக்கள் ஈடுபாடுகொள்ளச் செய்தன. இசை, நாடகம், நாட்டியம், ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளைச் சுவைத்து மகிழும் உள்ளம் உடையவர் அவர். எதை எழுதினாலும் சுவை இல்லாமல் எழுத அறியாதவர். மக்கள் பேசும் தமிழின் நடையில் உள்ள உயிர்த்துடிப்பையும் வேகத்தையும் கண்டறிந்து, அவற்றைத் தம் எழுத்திற்கு நன்றாகப் பயன்படுத்தினார். தியாகபூமி, மகுடபதி, அலையோசை முதலான சமுதாய வாழ்வுபற்றிய புதினங்களும் எழுதினார். ஆயினும் வரலாற்றுப்புதின ஆசிரியர் என்ற வகையிலேயே அவர் பெரும் புகழ் பெற்றார்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் பல்லவ அரசர்களின் வரலாற்றையும் பிற்காலச் சோழர் வரலாற்றையும் நன்கு ஆராய்ந்து, அக்கால நாகரிகம், மக்கள் பழக்க வழக்கங்கள், மனநிலைகள் முதலியவற்றைத் தெளிவாக மனத்தில் இருத்திக்கொண்டு புதினங்களை

(நாவல்களை) எழுதினார். அந்த வரலாற்றுக் குறிப்புகள் கதை வடிவில் அமைவதற்காகத் தாமே சில கற்பனை மாந்தர்களைப் படைத்துச் சேர்த்தார். அவ்வாறு அவர் படைத்துத் தந்த மாந்தர்கள், இன்று தமிழ்ப்புதினங்கள் பயின்ற மக்களின் மனத்தில் நிலையாக வாழ்கிறார்கள். வரலாற்று நூல்களில் பல்லவ மன்னர்களையும் சோழ மன்னர்களையும்விட நிலைபேறு உடையவர்களாக அவர்கள் இன்று படிப்பவர்களின் நெஞ்சில் வாழ்கிறார்கள். அந்த அளவிற்குக் கல்கியின் கற்பனை, ஆற்றல் உடையதாக அமைந்தது. எடுத்துக் காட்டாக, தமிழ் நாட்டின் புகழ்பெற்ற சிற்பக் கலைக்கூடமாக விளங்கும் மாமல்லபுரத்தை (மகாபலிபுரத்தை)ச் சென்று பார்ப்பவர்கள், கல்கியின் 'சிவகாமியின் சபதம்' படித்தவர்களாக இருந்தால். அவர்கள் தவறாமல் ஆயனச் சிற்பியையும் அவருடைய மகள் சிவகாமியையும் நினைக்கிறார்கள். அவர்களை உண்மையாக வாழ்ந்த வரலாற்று மாந்தர்கள் என்று எண்ணி, மாமல்லபுரத்தில் அவர்கள் வாழ்ந்த இடங்களை நினைந்து வியந்து நிற்கிறார்கள். பல்லவ அரசர்களையும் மறந்து அந்தக் கற்பனை மாந்தர்களைப் பாராட்டிப் போற்றுகிறார்கள்.

வரலாற்றுப் புதினங்களைப் படிப்பவர்கள் ஏதோ பழங்காலத்து நிகழ்ச்சிகளைப் படிக்கிறோம் என்ற அளவில் மட்டும் உணர்வதில்லை; அந்தக் காலத்து நிகழ்ச்சிகளையே மனக்கண்ணில் கண்டு அவற்றில் ஒன்றி விடுகிறார்கள். கல்கி முதல் முதலில் எழுதிய வரலாற்றுப் புதினத்திலும் அந்தக் கற்பனையாற்றலும் கதை கூறம் திறனும் அவ்வளவு சிறப்பாக அமைந்துள்ளன. அந்த நூல் 'பார்த்திபன் கனவு' என்பது; மகேந்திர பல்லவன் (கி.பி.ஏழாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்தவன்) வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது அது. அடுத்த வரலாற்று நூல் 'சிவகாமியின் சபதம்' அதைவிட இருமடங்கானது. அதுவும் அந்தப் பல்லவர் வரலாற்றை ஒட்டியே உருவானது. அதுவே அவருடைய படைப்புகளில் மிகச் சிறந்தது என்பது பலருடைய கருத்து, அது ஒரு காப்பியத்தின் அளவுக்குத் தமிழிலக்கிய வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது. பதினொன்றாம் நூற்றாண்டில் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த பிற்காலச் சோழர்களில் இராசராசனின் வரலாற்றைக் கொண்டு அமைந்த புதினமாகிய 'பொன்னியின் செல்வன்' சிவகாமியின் சபதத்தைவிட இருமடங்கு வளர்ந்தது. அதன் கதையோட்டம் விறுவிறுப்பானது. திறமை மிகுந்த மாந்தர் பலர் அதில் படைக்கப் பட்டுள்ளார்கள். கற்பனைச் சுவையிலும் அது இணையற்றதாக உள்ளது. கதை நெடுகச் சோழப் பேரரசின் பெருமையும் வாழ்க்கையின் பெருஞ் சிக்கல்களும் விளக்கப்படுகின்றன.

சிவகாமியின் சபதத்தில் அவ்வளவு சிக்கல்கள் இல்லை. ஆயினும், சிவகாமி என்ற கலையரசி – சிற்பியின் மகள் – ஒருத்தியின் வளர்ச்சியும் போராட்டமும் இன்னலும் குறிக்கோளும் புதினத்தின் தரத்தை உயர்த்தப் போதுமானவைகளாக உள்ளன. நாட்டியக் கலையில் நிகரற்று விளங்கிய அவளுடைய கலைத் திறமை அரசியல் போராட்டங்களில் சிக்கி அல்லல் உறும்போது, கதையைப் படிப்பவர்களின் நெஞ்சம் துன்புற்றுத் துடிக்கிறது. ஆயினும் உயர்ந்தனவே எண்ணி உயர்ந்தனவே செய்து முடிக்கும் இவளுடைய வாழ்வு, படிப்பவர்களின் உள்ளத்தையும் உயர்த்தி விடுகிறது.

இக்கால புதின ஆசிரியர்கள்

1942–இல் நடைபெற்ற விடுதலைப் (சுதந்திரப்) போராட்டத்திற்கு வடிவு தந்து 'தியாகத் தழும்பு' என்ற புதினம் ஆக்கியவர் நாரணதுரைக் கண்ணன். 'பிரசண்ட விகடன்' ஆசிரியராக இருந்து அவர் புதிய படைப்புகளுக்கு வரவேற்பு அளித்தார். தரங்கிணி, கோகிலா, நடுத்தெரு நாராயணன் ஆகியவை அவருடைய கதைகள்.

விடுதலை இயக்கத்தைப் பின்னணியாக வைத்துப் புதினங்கள் எழுதிய மற்றோர் ஆசிரியர் 'அகிலன்'. நேதாசியின் விடுதலைப் படையை அமைத்து எழுதப்பட்ட அவருடைய புதினம் 'நெஞ்சின் அலைகள்'. மனிதப் பண்புகளையும் எழுத்தாளர்களின் போராட்டங்களையும் உணர்ச்சி கலந்த நடையில் விளக்கும் புதினம் 'பாவை விளக்கு'. பொருந்தாத திருமணத்திற்கு ஆட்பட்டு வருந்தும் ஒருத்தியை, 'சிநேகிதி'யில் சொல்லோவியமாக்கிக் காட்டுகிறார். அவளை விருப்பம்போல் வாழவிடுவதற்கு முடிவு எடுக்கிறார் அவளுடைய கணவர். 'சித்திரப்பாவை' என்னும் நாவலில், நாகரிகத்தின் குழப்பத்தையும் பணத்தின் ஆதிக்கத்தையும் அவை கலைஞனைத் தாக்கும் தன்மைகளையும் அகிலன் விளக்குகிறார். கட்டுப்பாடுகளைத் தகர்க்கும் ஒரு வீர நங்கையை அதில் படைத்திருக்கிறார். 'வேங்கையின் மைந்தன்' என்னும் அவருடைய வரலாற்றுப்புதினம், பதினொன்றாம் நூற்றாண்டில் விளங்கிய சோழப் பேரரசைப் பின்னணியாகக் கொண்டது. 'கயல்விழி' பாண்டியரின் ஆட்சியை விளக்குவது. 'வெற்றித் திருநகர்' விசயநகர ஆட்சியைப் பின்னணியாகக் கொண்ட வரலாற்றுப்புதினம். இவை எல்லாவற்றிலும் ஆற்றொழுக்கான நடையையும் கலைமெருகு பெற்ற வடிவத்தையும் காணலாம். அவர் பல நல்ல சிறுகதைகளையும் படைத்துள்ளார். அவற்றில் அவரது இயல்பான இனிய நடையையும் வடிவச் சிறப்பையும் காணலாம். அவர் படைத்துள்ள கதை மாந்தர்கள் பல

திறப்பட்டவர்கள். கதை நிகழ்ச்சிகள் ஆசிரியரின் முதிர்ந்த உலகப் பட்டறிவைக் (அனுபவத்தைக்) காட்டுவன.

பல்வேறு வகையான சூழ்நிலைகளையும் மாந்தர்களையும் படைத்து, மிகப் பல புதினங் (நாவல்)களை எழுதியவர் கோவி. மணிசேகரன். அவர் பல்வேறு சிறுகதைகளையும் படைத்துள்ளார். 'தவமோ தத்துவமோ' என்னும் நூலில் திரைப்பட உலகத்தில் புகழ் பெறுவோரைப் போற்றி மயங்கும் மயக்கத்தை, ஒரு பேராசிரியரின் மனைவியின் வாழ்வின் வாயிலாக அம்பலப்படுத்தியுள்ளார். அவருடைய வரலாற்றுப் புதினங்கள் சுவையாகக் கதை சொல்வதுடன், வரலாற்றுப் பின்னணியை நன்கு விளக்குவன. 'அக்கினிக் கோபம்', 'பீலிவளை', 'செம்பியன் செல்வி' என்ற வரலாற்றுப் புதினங்கள் இலக்கியத் தரம் உடையவை. அவருடைய நடையில் ஒருவகை மிடுக்கு உள்ளது.

'தேவன்' என்னும் புனைபெயருடைய மகாதேவன் எட்டுச் சமுதாயப் புதினங்களை எழுதினார். எல்லாம் ஆனந்தவிகடனில் தொடர்கதைகளாக வந்தவை. 'துப்பறியும் சாம்பு' தொடர்கதைகளாக வந்தவை. 'துப்பறியும் சாம்பு' படிப்பவர் பலர்க்கும் சுவை விருந்து அளித்தது. 'மிசுடர் வேதாந்தம்' என்பதே அவருடைய படைப்புகளில் முதன்மையானது. பத்திரிகை யுலகில் ஆசிரியர் பெற்ற பட்டறிவுகளை ஒரு கதைமாந்தன் வாயிலாகத் தருகிறார். நகைச்சுவையை நிரம்பத் தருபவர் அவர். நடுத்தரக் குடும்பத்தார் வீடு கட்டும் முயற்சியைச் சித்திரிப்பது 'ராசத்தின் மனோரதம்'. அவருடைய கதை மாந்தரில் பெரும்பான்மை யானவர்கள் நடுத்தர வகுப்பாரே. அவர்களின் கனவுகளையும் குறைகளையும் நன்றாக எடுத்துக்காட்டுவன அவருடைய புதினங்கள்.

வ.ரா. புதுமையிலும் சீர்திருத்தத்திலும் ஆர்வம் நிரம்பியவர்; பழைய கண்மூடித் தன்மைகளை எள்ளி நகையாடுபவர். அவருடைய 'கோதைத் தீவு' என்னும் புதினம் குறிப்பிடத்தக்கது. மு. வரதராசன், கு. ராசவேலு ஆகியோர் எழுதும் புதினங்களின் நடை பலருடைய உள்ளங்களைக் கவர்ந்தது. நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டே கதை பின்னி, படிப்பவர் உள்ளத்தில் புதிய உணர்ச்சிகளை ஊட்டும் புதினங்கள் அவர்களுடையவை. 'கள்ளோ காவியமோ', 'அகல்விளக்கு', 'கரித்துண்டு', 'கயமை', மு.வரதராசனின் நாவல்களில் குறிக்கத்தக்கவை. 'அழகு ஆடுகிறது', 'காதல் தூங்குகிறது', 'காந்தள் முள்', 'இளவேனில்', 'மகிழம் பூ' முதலியன கு.ராசவேலுவின் கற்பனைப் படைப்புகள்.

சிதம்பர சுப்பிரமணியம் எழுதிய 'இதயநாதம்' என்ற புதினத்தில் இசைக் கலைஞர் ஒருவன் நல்ல கதைமாந்தனாகப் (பாத்திரமாகப்) புதுவகையாகப் படைக்கப்படுகிறார். அவர் தம் உரிமையையும் மதிப்பையும் பலவகை இடையூறுகளிலிருந்து காத்துக் கொள்வதற்காகப் படும்பாடு அழகாக விளக்கப்படுகிறது.

க.நா.சுப்பிரமணியம்எழுதியுள்ள புதினங் களுக்குள்ளே 'ஒரு நாள்' என்பது குறிப்பிடத் தக்கது. உலகம் சுற்றி பட்டறிவு நிரம்பிய ஒருவன் தன் கிராமத்துக்குப் போய் அதுவரையில் பெற்றிராத விழிப்பைப் பெறுகிறான். அங்கே உலகம் அறியாமல் தன் மாமி நடத்தும் வாழ்க்கையே பொருளுடைய வாழ்க்கையாக அவனுக்குத் தோன்றுகிறது. 'பொய்த் தீவு' என்பதும் நல்ல படைப்பு ஆகும்.

எம்.வி.வெங்கடராமன் பல கற்பனைப் படைப்புகளைத் தந்துள்ளார். தேனீ என்ற ஒரு மாத இதழும் சிலகாலம் நடத்தி, தம் படைப்புகளை வெளியிட்டார். அவருடைய 'நித்ய கன்னி' ஒரு நீண்ட கதை. மகாபாரதத்துள் வரும் யயாதியின் மகள் திருமணம் செய்துகொண்டு குழந்தை பெற்ற பிறகு மறுபடியும் கன்னித்தன்மை பெறுமாறு வரம் பெற்றவள். அதனால் ஒருவரை விட்டு மற்றொருவரைத் திருமணம் செய்து கொள்ளும் வாய்ப்பு அவளுக்கு ஏற்படுகிறது. ஆனாலும் மனம் ஒன்று உள்ளதே; அது பழைய அன்பின் தொடர்பு முதலியவற்றை அப்படி எளிதில் மறந்துவிடல் இயலாது. அதனால் உருவாகும் சிக்கல்கள் இந்தக் கதையில் தீட்டப்படுகின்றன. மகாபாரத்தில் மிகச் சுருங்கிய அளவில் குறிப்பிடப்படும் ஒரு படைப்பு (பாத்திரம்) இவருடைய கற்பனையில் பெரிய அளவில் வளர்ந்து சிந்தனையைக் கவர்ந்து நிற்கக் காண்கிறோம்.

'நந்திபுரத்து நாயகி' என்பது 'விக்கிரமன்' தந்த வரலாற்றுப்புதினம். 'மகரயாழ் மங்கை', 'ஆலவாய் அழகன்', 'நாயகி நற்சோணை', 'நந்திவர்மன் காதலி', 'அருள்மொழி நங்கை', 'திருச்சிற்றம்பலம்' முதலியன செகசிற்பியன் படைத்த வரலாற்றுப் புதினங்கள். சில குமுதாய புதினங்களையும் பல சிறுகதைத் தொகுப்பு களையும் அளித்துள்ளவர் அவர். சிறுகதைகளில் இன்றைய ஏழை மக்களின் வாழ்க்கைப் போராட்டங்களுக்கு நன்கு வடிவு தந்துள்ளார். அவருடைய நேரிய நடையும் கலை மெருகும் புதினங்களுக்கு இலக்கியச் சிறப்புத் தருகின்றன.

'யவனராணி', 'கடல்புறா', 'மன்னன் மகள்', 'மலைவாசல்', 'சீவபூமி', 'கன்னிமாடம்', 'பல்லவ திலகம்' முதலிய பல வரலாற்றுப் புதினங்களின் ஆசிரியர் 'சாண்டில்யன்'. இவைதாளிகைகளில் (பத்திரிகைகளில்) தொடர்கதையாக வந்தவை. படிப்பவர்கள் ஆர்வத்துடன் நாடும் வகையில் சுவையை

மேன்மேலும் வளர்த்துக் கதை சொல்லும் திறன் உடையவர் அவர். பார்த்தசாரதி, பி.சி.கணேசன் முதலியோரும் வரலாற்றுப் புதினங்கள் எழுதித் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு உதவியவர்கள். அரு.ராமநாதனின் 'வீரபாண்டியன் மனைவி' என்பது குறிப்பிடத்தகுந்த வரலாற்றுக் கற்பனை.

இராதாமணாளனுடைய 'பொற்சிலை' சுவையுள்ள இலக்கியப் படைப்பாகும். டி.கே.சீனிவாசன் படைத்த 'ஆடும் மாடும்' கற்பனைச் சிறப்புடையது.

இளமைக்குப் பின் பெறும் காதலுணர்வுகளை எடுத்துக் காட்டுவது சாவியின் 'விசிறி வாழை'. பி.எம்.கண்ணன் நடப்பியல் முறையில் சில புதினங்களைப் படைத்துள்ளார். சோமு, இந்திரா பார்த்தசாரதி, நல்லபெருமாள், உமாசந்திரன், மாயாவி, செயகாந்தன் ஆகியோரின் படைப்புகள் இங்குப் பாராட்டுடன் குறிப்பிடத்தக்கவை.

தென் திருவாங்கூரில் தமிழர்கள் பேசும் பேச்சு மொழியில் கதை எழுதுபவர் கெப்சிபா சேசுதாசன். 'புத்தம் வீடு', 'டாக்டர் செல்லப்பா' என்பவை அவர்க்குப் புகழ் தேடித் தந்தன. கொங்குநாட்டுப் பேச்சுமொழியைக் கையாண்டு ஆர்.சண்முகசுந்தரம் எழுதிய கதைகள் 'பூவும் பிஞ்சும்', 'நாகம்மாள்', 'அழியாக் கோலம்' ஆகியவை. பூவை ஆறுமுகத்தின் 'தங்கச் சம்பா' என்ற நாவலும் வட்டார வாழ்வையும் பேச்சையும் அடிப்படையாகக் கொண்டது.

மதுரையில் நடைபெறும் சல்லிக்கட்டு என்னும் எருதாட்டத்தை வைத்து, சி.சு.செல்லப்பா 'வாடிவாசல்' என்னும் புதினத்தை திறம்பட எழுதியுள்ளார்.

இரகுநாதன் விறுவிறுப்பான நடையில் பொதுவுடைமைக் கருத்துகளை அமைத்து எழுதிய 'பஞ்சும் பசியும்' என்ற நூல் ஒரு புதுமையான படைப்பு. நீல. பத்மநாபன் மூன்ற தலைமுறைகளின் வாழ்வை ஓவியமாக்கிக் காட்டும் 'தலைமுறைகள்' என்ற புதினம் அமைப்பிலும் நடையிலும் புதுமை உடையது. வாழ்க்கை நிலைகள் எவ்வளவு வேகமாக மாறிவந்துள்ளன என்பதை அந்த நூல் காட்டுகிறது.

நா.பார்த்தசாரதி சுவையும் கருத்தும் சிறந்து விளங்கும் புதினங்களும் சிறுகதைகளும் கட்டுரைகளும் ஆகப் பலவகை இலக்கியம் அளித்தவர். 'குறிஞ்சி மலர்', 'பொன்விலங்கு' ஆகியப் புதினங்கள் இங்குக் குறிப்பிடத்தக்கவை. தமக்கென்று ஒரு கவர்ச்சியான நடையும் கட்டுக்கோப்பும் அமைத்துக் கொண்டு கற்பனைப் பரபரப்புடன் இலக்கியத் தொண்டு ஆற்றுபவர் அவர். அதை அடிப்படையாகக் கொண்டு அவர் புதுமைகள் பல படைத்துள்ளார்.

கிராம மக்கள் தம் நிலத்தின்மேல் எவ்வளவு பற்றும் பாசமும் வைத்துள்ளனர் என்பதைச் சங்கரராம் எழுதிய 'மண்ணாசை' எடுத்துரைக்கிறது.

ஆர்வி சுவையாகக் கற்பனைகளை அளிப்பவர். 'அணையா விளக்கு' என்னும் அவருடையப் புதினத்தில் குமூகச் சீர்திருத்தப் போக்கு உள்ளது. 'செங்கமலவல்லி' என்னும் அவருடைய சிறுகதைத் தொகுப்பைப் போலவே, இதுவும் எளிய நடையில் அமைந்தது.

புதினங்களும் இதழ் ஆசிரியர்களும்

முன்பெல்லாம் படித்தவர் சிலராகவே இருந்தனர். அந்தச் சிலர் எதையும் ஆழ்ந்து படிப்பவராக இருந்தனர். இப்போது படித்தவர் தொகை பல மடங்கு பெருகி வருகிறது. அந்தப் பலர்க்குள் பெரும்பாலோர் ஆழம் இல்லாமல் மேற்போக்காகப் படிப்பவர்களே. முன்பு, ஒரு நூல் எழுதப்பட்டால் படித்தவர்கள் அதைப் பாராட்ட வேண்டும் என்ற கவலை நூலாசிரியர்களுக்கு இருந்தது. அவர்களின் பாராட்டை எதிர்பார்த்த கவலை இருந்த படியால், அந்தக் கவலையோடு பொறுப்பு உணர்ந்து எழுதினார்கள். இப்போதும் அவ்வாறு பொறுப்பு உணர்ந்து எழுதுகிறவர்கள் சிலர் இருக்கிறார்கள். ஆனால் பலர் அவ்வாறு எழுதுவதில்லை; அவ்வாறு உணர்ந்து எழுதவேண்டிய கவலையும் அவர்களுக்கு இல்லை. படித்தவர் தொகை பெருகிவிட்ட இக்காலத்தில், ஆழ்ந்த சிந்தனை இல்லாமல் மேற்போக்காகப் படிக்கும் வெள்ளம் போன்ற கூட்டத்தில் ஏதேனும் ஒரு பகுதியாரின் ஆதரவு தமக்குக் கிடைத்தால் போதும் என்று அந்த எழுத்தாளர்கள் எண்ணுகிறார்கள். அந்த ஒரு பகுதியாரின் பாராட்டும் பணமும் தமக்குக் கிடைப்பதைக் கொண்டே அவர்கள் முன்னேற முடிகிறது; மேலும் மேலும் அவர்களின் ஆழம் இல்லாத–பண்படாத–சுவைக்கு ஏற்ற உணர்வை நூல்களில் தந்து எழுத்துலகத்தில் வளர்ச்சி பெற முடிகிறது. பலர் விரும்பிப் படிக்கும் எழுத்தாளர் யார் என்று ஆராய்ந்து இதழ்களின் ஆசிரியர்கள் தேடுகிறார்களே அல்லாமல், நடுநிலையாகவும் தரமாகவும் எழுதுகிற எழுத்தாளர் யார் என்று தேடுவதில்லை. ஆகவே, பத்திரிகையுலகத்திலும் முன்கூறிய எழுத்தாளர்கள் செல்வாக்குப் பெற முடிகிறது. அவர்களின் வெற்றிக்கு உரிய காரணம் இதுதான் என்று மற்றவர்கள் உணர்ந்து பின்பற்றுகிறார்கள். வாழ்க்கையில் எழுத்தாளர்களுக்கு ஏமாற்றம் மிகுதி; நிலையான வருவாய் இல்லாத காரணத்தால் வறுமையின் தாக்குதலும் மிகுதி. ஏமாற்றத்தாலும் வறுமையாலும் வாடிய எழுத்தாளர்கள், எப்படியாவது பணம் வந்தால் போதும் என்ற துணிச்சலான மனநிலை வந்தபோது, கவலை

இல்லாமல் ஏமாந்த மக்களை ஏய்த்து மயங்கும் போக்கை நேரே நாடுகிறார்கள். எதையாவது எப்படியாவது எழுதுவது என்ற பான்மையில் கதை நூல்கள் சில வெளிவருவதற்கு இதுதான் காரணம். பதைப்பில் (அவசரத்தில்) படைக்கப்பட்ட அவர்களின் எழுத்துகளில் சில, கலைவடிவம் பெற்றுவிடுதல் உண்டு. முதலில் எப்படியாவது தாளி (பத்திரி) கையுலகில் இடம் பெறவேண்டும் என்று முயன்று எழுதிப் புகழ் பெற்ற எழுத்தாளர் சிலர், புகழ் வளர்ந்தபின் பழைய தவறான முறையைக் கைவிட்டுப் பண்பட்ட—சிந்தனை வளம் உள்ள—படைப்புகளைத் தந்து நல்ல எழுத்தாளர்களாய் விளங்குவதும் உண்டு. அவர்கள் பிறகு கவர்ச்சியைப் பொருட்டுபடுத்தாமல் கலைத் தரத்தையே பெரிதாகக் கொண்டு தம் போக்கை மாற்றிக் கொள்கிறார்கள். அவர்கள் பாராட்டுக்கு உரியவர்கள். – (தமிழிலக்கிய வரலாறு–மு.வ.)

புதினத்தின் தன்மையும், இலக்கணமும்

உரைநடைப் பழமை

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் புதினங்கள் இன்று வரையுங் கூடத் தக்க இடம் பெற்றன என்று கூற இயலாது. பல காரணங்களால் பழங்காலத்தில் உரைநடை நன்கு வளர்ச்சியடையவில்லை. சிலப்பதிகாரம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று கூறப் பெறுவதற்கேற்பச் சில பக்கங்களை உரைநடையில் கொண்டு விளங்குகிறது, என்றாலும் அவை ஆசிரியப்பாவை நீட்டி எழுதியன போல காணப்படுகின்றனவே அன்றி உரைநடையாக இல்லை. அக்காலத்தில் உரைச்செய்யுள் என்று இலக்கணம் பேசுகிறதாகலின் ஏதேனும் உரைநூல்கள் இருந்திருத்தல் வேண்டும். ஆனால், அவை மறைந்தொழிந்தன.

முதன்முதலாக நாம் காணும் உரைநடைப் பகுதி இறையனார் களவியல் உரையேயாகும். அதனையடுத்தும் உரையாசிரியர்களுடைய உரைநடையையே காண்கிறோம். ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே முத்தமிழ் வழக்கொழிந்து 'இயல் தமிழ்' மட்டும் வளர்ச்சியடையலாயிற்று, என்றாலும் அதனுள் ஒரு பகுதியாகிய உரைநடை வளரவில்லை. ஆகவே உரைநடையால் அமையும் சிறு கதைகளும், புதினங்களும் இம்மொழியில் இல்லா தொழிந்தன. இடைக்காலத்தில் வழக்கொழிந்த இவ்வுரைநடை இலக்கியம் தொல்காப்பியனார் காலத்தில் பெருவழக்கினதாய் இருந்திருக்கும் போலும். இல்லாவிடில்.

பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின்று எழுந்த கிளவி யானும்
பொருளொடு புணாரப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்
என்று
உரைவகை நடையே நான்கென மொழிப
(தொல்.செய்யுளில், 171)

என்று இதற்கெனத் தனியே அவர் இலக்கணம் வகுத்திரார். அவரது இலக்கணத்தையும் அதற்கு உரை கண்டவர்கள் கூறியதையும் உற்றுநோக்கின் சில அரிய உண்மைகள் தெற்றெனப் புலனாகும். பாவின்று எழுந்த கிளவி என்று ஆசிரியர் குறிப்பதே, உரைநடைநூல் என்றும், 'பொருளொடு புணராப் பொய்ம் மொழி' என்பதே, பொய்ப்புதினம் என்றும் 'பொருளொடு புணர்ந்த நகைமொழி' என்பதே, புதினம் என்றும் இன்று நம்மால் வழங்கப் பெறுகின்றன. தொல்காப்பியனார் இங்ஙனம் நால்வகையாகப் பிரித்து இலக்கணங்கண்ட இப்பெரும் பிரிவினுள் ஒன்றுகூட பெருவழக்காக இருந்திருப்பின் அன்றித் தொல்காப்பியனார் இலக்கணம் கூறி இரார். எனவே, பிற்காலத்தார் தம் அரிய செல்வங்களைப் போற்றிப் பாதுகாவாமல் விட்டதாலும், இருந்தவற்றையும் ஆடிப்பெருக்கு வெள்ளத்தில் விட்டதாலும், இத்தகைய நூல்கள் அழிந்தன என்றே கொள்ளல் வேண்டும். இத்துணைவளம் நிறைந்த ஒரு மொழியில், இத்துணைக் கவிதை இலக்கியம் நிறைந்த ஒரு மொழியில், உரைநடை இல்லாதிருக்க முடியாது.

புதினந்தோன்றக் காரணம்

உரைநடையுள் ஒன்றாகிய புதினம் என்பது தோன்ற ஒரு சீரிய காரணம் உண்டு. உலகிடை வாழும் மனிதன் மனத்தைக் கவர்ந்த பலவற்றுள் முக்கியமானது எதுவெனில் அவனைப்போன்ற மற்றைய மனிதர்களின் வாழ்க்கையேதான். மக்களின் மனத்தில் தோன்றும் உணர்ச்சிகள், போராட்டங்கள் முதலியவையே இப்புதினங்கள் முகிழ்க்கத் தக்க நிலைக்களங்களாயின. பிறமனிதர்களுடைய வாழ்க்கைப் போராட்டத்தில் ஒருவன் ஈடுபாடுகொள்ளும் இயல்பே சிறந்த இலக்கியங்கள் தோன்றக் காரணமாயின. ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வகை இலக்கியம் சிறப்புடன் தோன்றக் காரணமாயிருந்தது, மேற்கூறிய இயல்பயோகும். கோவலன் கண்ணகி வாழ்க்கைப் போராட்டத்தில் இளங்கோ கொண்ட பற்றுத்தான் சிலப்பதிகாரமாக உருக் கொண்டது. ஒன்பதாம் நூற்றாண்டில் தமிழ் நாடுந் தமிழரும் எவ்வாறு இருந்தார்கள் என்று தெரிய வேண்டுமாயின் கம்பநாடனுடைய பாவியத்தில் (காப்பியத்தில்) உள்ள 'வரைக்காட்சிப் படலம்'. 'பூக்கொய்படலம்' முதலியவற்றில் பரக்கக் காணலாம்.

இங்ஙனம் மக்கள் வாழ்க்கையைப் எடுத்துக் காட்டும் (பிரதி பலிக்கும்) இலக்கியங்களுள் புதினமும்

ஒன்று இதே போலப் பணி செய்ய நாடகம் என்ற ஒன்றும் உளதாயினும் ஆடு களம், உடைகள், நடிப்புத்திறம் முதலிய பலவற்றின் உதவி கொண்டே நாடகஞ் சிறக்கிறது. புதினம் அவ்வாறன்று, அது சிறக்க வேண்டிய அனைத்து உறுப்புக்களும் அதனிடமே உள்ளன. எனவே நாடகத்தைப் பார்க்கிலும் புதினம் சிறப்படையக் காரணம் இருக்கிறது.

புதின உறுப்புக்கள்

சிறந்த புதினத்திற்கு இன்றியமையாத உறுப்புக்களாக சூழ்ச்சி, மிக்க கதைமாந்தர்கள் (பாத்திரங்கள்) உரையாடல், காலம், இடம், நடை, வெளிப்படையாகவோ குறிப்பாகவோ காட்டப் பெற்றுள்ள வாழ்க்கைத் தத்துவம் என்பனவற்றைக் கூறலாம். இவை அனைத்தும் ஒரே அளவாகவோ அனைத்துமோ இருந்து தீரல்வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. ஒவ்வொன்று மிக்கும் குறைந்தும் இருப்பினும் தவறு இல்லை.

பிண்டம்

புதினத்தில் பிண்டம் என்பதே அதன் உட்பொருளாகும். இப்பிண்டம் என்பது எத்தகைய கதை மேற்கொள்ளப் பெறுகிறதோ அதற்கேற்றபடி தோன்றுவதாகும். வாழ்க்கையில் காணப் பெறும் ஆழமான உணர்ச்சிகள், போராட்டங்கள் இவைகளை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் புதினங்களே மிக்க சிறப்புடையன. தமிழ் மொழியளவில் தோன்றியனவும் தோன்றுகின்றனவும் ஆகிய புதினங்கள் பெரும்பாலும் இக்குறைபாடு உடையன. சென்ற பத்து ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான புதினங்கள் தமிழ்மொழியில் தோன்றியுள்ளன. ஆனால், சிலவே நம் நினைவில் அழியாத இடம் பெற்றுள்ளன. வடுவூர் துரைசாமி அவர்கள் எழுதிய எத்தனையோ புதினங்கள் உண்டு. இவை அனைத்தும் ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை ஆனது' போல வேறு சிறந்த புதினங்கள் தோன்றாமையின் அப்பெயர் தாங்கி நிலவின. ஒன்றாவது பெயருக்குப் பொருத்தமுடையதன்று. வங்க எழுத்தாளர்களான சரத் சந்திரர், பங்கிம் சந்திரர், மராட்டிய எழுத்தாளர் காண்டேகர் போன்றவர்கள் புதினங்கள் மொழி பெயர்ப்பிலுங் கூடத் துடிப்புடன் நிலவுவதற்கும் தமிழர்களால் தமிழ்மொழியில் எழுதப் பெற்ற புதினங்கள் உயிரின்றி உலவுவதற்கும் காரணம் இப்பிண்டம் நன்கு அமைக்கப்படாமையேயாகும். வாழ்க்கையில் மேலாகக் காணப்பெறும் உணர்ச்சிகளைக் கொண்டு தீட்டப்பெறும் புதினங்கள் நீண்ட நாட்கள் நிலைபெறா, இவ்வாறு கூறுவதால் பொது நிலை (சாதாரண) மக்கள் பற்றிப் புதினங்கள் தோன்றலாகாதுபோலும் என்று நினைந்துவிட வேண்டா. பொதுநிலை (சாதாரண)மனிதனின் எளிமையான வாழ்க்கையை அடித்தளமாகக் கொண்டு தோன்றும் புதினமும் சிறந்ததாக இருக்கலாம். பேரரசர்களைப் பற்றியும் ஒரு குமுதாயத்தைப் பற்றியும் எழும் புதினங்கள் சிறப்பற்றும் போகலாம். இவை சிறப்படைவது அவற்றைக் கையாள்வோன் வன்மையைப் பொறுத்ததேயாம். சுருங்கக் கூறுமிடத்து ஒரு புதினம் சிறப்படைவது, கீழ்க்கண்ட பகுதிகள் அதில் அமையும் பொழுதேயாம். அதன் அடிப்படை ஆழமாகவும், அகலமாகவும் நம்முடைய ஆழ்ந்த எண்ணங்களைத் தூண்டுவதாகவும் மனித குமுதாயத்தின் பொதுக் கருத்தைக் கவருவதாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு அமையாதன வெல்லாம் புதினங்கள் அல்ல என்று கடுமையான முடிபுகூறத் தேவை இல்லை. ஆனால், அவை சிறந்தவை அல்ல என்று கூறலாம். புதினம் தோன்றுவதன் கருத்து, படிப்போர்க்கு மகிழ்ச்சி உண்டாக்குவதே யாகலின் இத்தகைய அடிப்படையில் அமையாமலும் ஒரு நூல் மகிழ்ச்சி தரக்கூடுமாயின் அதுவும் ஏற்றுக் கொள்ளற்பாலதே யாகும். இத்தகைய நூலில் முன்னர்க் கூறி பல பண்புகளில் யாதானும் ஒன்று மிக்கிருந்து மற்றைய குறைபாடுகளைப் போக்கு மாயின் நன்று.

புதினமும் வாழ்க்கையும்

புதினம் சிறக்கும் பல பண்புகளில் சிறந்த மற்றொன்று; அது வாழ்க்கையை உள்ளவாறு கூறுவதாய் அமைதல் வேண்டும். புதினம் கட்டுக் கதைதானே என்ற எண்ணத்தால் இன்றைய எழுத்தாளர்கள் எதனையும் நுழைக்கத்தக்க இடமாக அதனைக் கருதுகின்றனர். இதைவிடப் பெருந் தவறு ஒன்றுமில்லை. வாழ்க்கையின் எந்தப் பகுதியைப் புதினம் கூற எடுத்துக்கொண்டாலும் அப்பகுதியைப் பற்றிய மெய்ம்மையைக் கூறவேண்டும். அதாவது அப்பகுதியை ஆசிரியன் நன்கு அறிந்து அதில் நன்கு பழகி இருத்தல் வேண்டும். ஆசிரியனுக்குப் பழக்கமும் பட்டறிவும் இல்லாத வாழ்க்கைப்பகுதியை எழுதத் தொடங்கினால் விளைவது மயக்கமேயாகும். இங்ஙனம் அவன் கூறும் பகுதி அவன் நேரடி பட்டறிவில் பெறுகிறதாயிருப்பின் அவன் கூற்று கற்போர் மனத்தைக் கவரும். இரண்டு விரல உயர அகலமுள்ள யானைகொம்பில் (தந்தத்தில்) தன் கைவேலையைக் காட்டும் ஒருவனும் கலைஞன்தான். நூறடி உயரம் உள்ள கோபுரத்தைச் சமைப்பவனும் கலைஞன்தான். இரண்டுவிரல அளவில் (பரிமாணத்தில்) வேலை செய்தமையின் ஒருவனைக் கலைஞன் அல்லன் என்று கூறிவிட முடியுமா? அதேபோலச் சில ஆசிரியர்கள் தமது குறைவான பட்டறிவை அடிப்படையாகக் கொண்டு குறைந்த மாந்தர்களைப் (பாத்திரங்களைப்) படைத்துக் கொண்டு எழுதுவர். ஆனால், அவற்றில் ஆழம் நிறைந்திருக்கு

மாகலின் ஒதுக்கி விடுதலாகாது. இதனினும் மாறுபட்டுத் தமது பரந்த உலகியலறிவின் துணை கொண்டு பல மாந்தர்களைப் (பாத்திரங்களை) அமைத்து எழுதுவம் உண்டு. நகரிலேயே பிறந்து வளர்ந்து கிராமக் காட்சியையே கண்டிராத ஒருவர் கிராமத்தை நிலைக்களமாகக் கொண்டு கதை எழுதுவதும் கப்பலில் ஏறி அறியாத ஒருவர் கப்பல் செலவு, இலண்டன் காட்சி முதலியனபற்றிக் கதை கதைப்பதும் இன்று நாம் காண்கின்ற ஒன்றாகும். தன் வாழ்க்கையையும் பட்டறிவையும் (அநுபவத்தையும்) கூர்ந்து நோக்குவதாயின் ஒவ்வொரு மனிதனும் குறைந்த அளவு ஒரு புதினமாவது எழுதித் தீரலாம் என்று மேலைநாட்டிலக்கியத் திறனாய்வர் கூறுகிறார்கள். ஆனால், பெரும்பாலோர் இவ்வாறு செய்யாமல் தமக்கு மிகவும் விருப்பமான ஓர் ஆசிரியரைப் பார்த்து நகல் செய்யத் தொடங்கி இறுதியில் தமக்கென ஒன்றும் இல்லாதவர் களாகிறார்கள். எல்லையற்ற கற்பனையின் துணையுடைய ஒரு சிலருக்கு இச்சட்டம் தேவை இல்லை. தாங்கள் காணாத காட்சியைக்கூடப் பிற அறிஞர் எழுதியவற்றைப் படித்த மாத்திரத்தில் தம் கற்பனையின் துணைகொண்டு இவர்கள் தம்முடைய சொந்த பட்டறிவாக்கிக் (அநுபவமாக்கிக்) கொள்கின்றனர். வேதநாயகம் பிள்ளை, மாதவையா போன்றவர்கள் இத்தொகுப்பில் சேர்ந்தவர்கள். இத்தகையவர்கள் தாம் கேட்ட அல்லது ஒருமுறை கண்ட ஒன்றை நமக்கு வர்ணிக்கத் தொடங்கினால், நாம் அதனுடன் அவர்கள் பலகாலம் பழகியவர்கள் போலும் என்று நினைக்க வேண்டியிருக்கும்.

புதினத்தில் சூழ்ச்சி

சூழ்ச்சி என்பது அடுத்தபடி நோக்கற்குரியது. சாதாரணமான ஒரு கதையைக் கூறுவதே ஒருவகை ஆற்றல் என்று கருதப்படும். வேறு எவ்வகையான ஆற்றலும் இல்லாதவரிடத்தும் கூடக் கதை சொல்லும் ஆற்றல் நிறைந்திருத்தல் உண்டு. சிலருடைய புதினங்களைப் படிக்கும்பொழுது கதை தங்கு தடையின்றிச் செல்வதைக் காண்கிறோம். ஏனைய அழகுகள் ஒன்றும் அங்கு இல்லாவிடினும் கதைப் போக்கு நன்கு அமைந்துவிடுகிறது. ஆனால், பிற அழகுகள் அனைத்தும் நிறைந்துள்ள சில புதினங்களில் கதைப் போக்குத் தடைப்பட்டும், வலிந்தும் செல்வதைக் காண்கிறோம். இத்தகையோர் புதினங்களில் இக்குறைபாட்டைப் போக்குவது அதன் கண் உள்ள ஏனைய அழகுகளேயாகும்.

இருவகையாற்றலும் நிறைந்துள்ள புதினங்களில் காணவேண்டிய பகுதியாகும். சூழ்ச்சி என்பது கூறவந்த கதையைக் கலைத்திறமையுடன் கூறியிருக்கிறாரா என்று பார்த்தல் வேண்டும். அதாவது கதையின் பல பகுதிகளை நன்கு ஆராய்ந்தால் குற்றங் குறைகள் காணப்படுகிறனவா? கதையின் பல பகுதிகளும் தம்முள் நன்கு பொருந்தி உள்ளனவா? என்பதேயாகும்: கதையின் கட்டுக்கோப்பில் இடையில் துண்டு விழாமல் இருத்தல்வேண்டும். முன்னுக்குப் பின் முரண் இல்லாது இருத்தல் வேண்டும். கதையின் பல பகுதிகளும் தம்முள் ஒவ்வோரளவு கொண்டு இறுதியில் ஒரு முழுத்தன்மை பெற்று விளங்கவேண்டும். கதையில் வரும் பல நிகழ்ச்சிகள் திடீரென்று குதிப்பது போல் இல்லாமல் நிகழவேண்டும். ஒரு நிகழ்ச்சியின் முடிவில் மற்றொரு நிகழ்ச்சியின் தோற்றம் கருக்கொண்டிருக்க வேண்டும். நிகழ்ச்சிகளின் போக்கு எவ்வளவு புதுமையுடை யதாகவும் இயற்கையின் இறந்ததாகவும் இருப்பினும் அதன் முடிவு நிகழ்ச்சிக்குப் பொருத்தமுடையதா யிருத்தல் வேண்டும். இந்நிகழ்ச்சிகளின் முடிவு இவ்வாறு இருத்தலே தகுதி என்று கூறும்படியாக அமைதல் வேண்டும். புதின முழுவதிலும் ஊடுருவி நிற்கும் இறுதி நிகழ்ச்சி அவல நிகழ்ச்சியோ அன்றி மகிழ்ச்சியோ தோன்றும்பொழுது இதுதான் நிகழவேண்டியது என்ற எண்ணத்தை உண்டாக்கல் வேண்டும். முன்னர் நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகளின் முடிவும் இதுவாகவேதான் இருக்கும் என்று கூறத் தக்க முறையில் இறுதி நிகழ்ச்சி அமைவதே 'சூழ்ச்சி' நன்கு அமைக்கப்பட்டிருத்தலின் அடையாளம்.

இருவகைச் சூழ்ச்சிகள்

இச்சூழ்ச்சி ஒரு புதினத்தில் கையாளும் முறையை வைத்துப் புதினங்களையே இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று உதிரிச் சூழ்ச்சி என்று கூறப் பெறும் இங்கு நிகழும் எல்லா நிகழ்ச்சிகளும் தம்முள் தொடர்புடையனவல்ல. தொடர்பற்ற இச் சம்பவங்கள் புதினத்தின் தலைவன் அல்லது தலைவி என்ற ஒருவருக்கு நிகழ்வதாலேயே அவை இங்கு இடம் பெறுகின்றன. இதன்கண் தலைவனுக்கு நிகழும் இறுதி நிகழ்ச்சி முன்னர் நடைபெற்ற சிறு நிகழ்ச்சிகளின் முத்தாய்ப்பு அன்று. தருக்க முறைப்படி அவை இம்முடி பைத் தந்தன என்று கூறல் இயலாது. இத்தகைய நூலில் தனி நிகழ்ச்சிகள் எவ்வளவு அழகுடன் விளங்கினும் இவை அனைத்தும் சேர்த்துத் தருகிற முழுத் தன்மை ஒன்றும் இல்லை.

இதற்கு மறுதலையாய் அமைந்தது ஒட்டுச் சூழ்ச்சிப் புதினம் என்பதாகும். இத்தகைய புதினத்தின் நிகழ்ச்சிகள் ஒன்றையொன்று ஒட்டி வருவதுடன் ஒன்றின் முடிபு மற்றொன்றாய்த் திகழும். இத்தகைய புதினம் இயற்றுபவர்கள் தம் நூலை முற்றிலும் மனத்தில் வாங்கிக் கொண்டு ஒவ்வொரு

நிகழ்ச்சிக்கும் தக்க இடந்தந்து அமைப்பைச் செய்யவேண்டும். இதில் வருகிற மாந்தர் (பாத்திரங்)கட்குக்கூடத் தக்க இடமும், தோன்றும் காலமும் அமைத்தல் வேண்டும். ஆனால், இத்தகைய ஒட்டுச் சூழ்ச்சிப் புதினத்தில் ஒரு இடைஞ்சல் உண்டு. எதிர்பாரா நிகழ்ச்சிகள் மிகுதியான இடத்தை இதிற் பெற்றுவிடும். எதிர்பாரா மனிதர்கள் எதிர்பாராத இடங்களில் வந்து புதிரைத் தீர்த்துவிட முனைவார்கள். எங்கோ ஒரிரு இடங்களில் இது நிகழின் சரி. கதையைக் கொண்டு செலுத்தவேண்டிய கடப்பாட்டிற்காக இதனை அதிகம் கையாண்டால் வெறுப்புத் தட்டிவிடும்.

இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்துப் புதினங்களை இங்குக் குறிப்பிட்டாலும் நல்ல புதினங்கள் அனைத்தும் இவ் இரண்டு முறையையும் மேற்கொண்டுதான் நடைபெறும். இக்கொள்கை கட்கெல்லாம் எடுத்துக்காட்டுகள் தர முடியுமாயினும் அவரவர் விருப்பு வெறுப்புக் காரணமாக அவை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. ஆகலின், எடுத்துகாட்டுகள் தரப்படவில்லை. புதினங்களின் ஏனைய உறுப்புக்களை அடுத்துக் காண்போம்.

கதைமாந்தர்கள்

புதினத்தின் உறுப்புக்களில் அடுத்து நோக்கவேண்டியது கதைமாந்தர்களாகும். புதினத்தில் வரும் கதைமாந்தர்கள், நடமாடித் திரியலாம்; பேசலாம். ஆனால் அவை பல சமயங்களில் உயிருடன் நம்போல் இருப்பதாக நாம் நினைக்க முடிவதில்லை. காரணம் அம்மாந்தர்கள் நம் கற்பனையில் சென்று பொருந்துவதில்லை. சிறந்த புதினத்தில் படைக்கப் பெறும் மாந்தர்கள் நாம் வாழும் உலகில் நம்மைப் போல் தலைநிமிர்ந்து நடப்பவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் ஒரு கற்பனைக் கதையில் தோன்றும் மாந்தர்கள் என்பதை மறந்து நாம் அவர்களிடத்தில் அன்பு காட்டவும், வெறுப்புக் காட்டவும் கூடியவர்களாயிருத்தல் வேண்டும். நம்மைப் போல் இயல்புடையவர்களைக் கதாசிரியன் படைத்தால்தானே நாம் அவர்களுடைய நலம், துக்கங்களில் பங்கு கொள்ள முடியும். இயற்கையின் இறந்த இயல்புடைய மாந்தர்களாயின் அவர்களிடத்து நாம் எவ்வாறு ஊடாட முடியும்? என்றெல்லாம் வினாக்கள் தோன்றுவது இயல்பு. உண்மையைக் கூறப் போனால் எவ்வகையான மாந்தர்களாயினும் அவர்களிடம் நாம் விருப்பு வெறுப்புக்கள் கொள்ளும்படி படைத்தால் அவன் சிறந்த ஆசிரியனாகக் கருதப்படுவான். வேறு வகையில் கூறுமிடத்து அவன் படைக்கும் மாந்தர்கள் நம்மைப் போல் எலும்பும், தோலும் அரத்தமுங் கொண்டு இவ்வுலகில் உலாவும் மக்களாக அமைதல் வேண்டும். மனித இயல்பற்ற பூதங்கள், பேய்கள், பிசாசுகள் கொண்டு கதை நீட்டினாலும் அவற்றின் நடையுடைகளைப் படிக்கும் பொழுது நாம் சரி! பிசாசுகள் அப்படித்தானே செய்யும் என்று கூறத்தக்க முறையில் அமைதல் நன்று.

கதைமாந்தர்கள் (பாத்திரம்) படைக்கும் முறை

சிற்சில புதினங்களில் இத்தகைய மாந்தர்களை நாம் சந்திக்கிறோம். 'பிரதாப முதலியார்', 'ஞானாம்பாள்' முதலிய பாத்திரங்கள் இவ்வினத்தைச் சேர்ந்தவர்கள். இப்புதின ஆசிரியர்கள் எவ்வாறு இத்தகைய மாந்தர்களைப் படைக்கிறார்கள் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? அவர்களுடைய வழி துறைகள் தெரிந்தால் ஏனையோரும் அம்மாதிரி படைக்க ஏதுவாகலாம். ஆனால் இது இயலுவதில்லை. இத்தகைய படைப்புக்களைப் படைக்கும் கலைஞர்கள் ஏனையோர் போல முயன்று இம்மாந்தர்களைப் படைப்பதில்லை. அக் கலைஞர்கட்கே இம்மாந்தர்கள் எப்பொழுது தங்கள் மனத்தில் அல்லது கற்பனையில் கருக்கொண்டன என்று தெரியாதாம். தீர்ந்த சிந்தனை என்ற தலைவனும் ஆழ்ந்த 'கற்பனை' என்ற தலைவியும் சேரும்பொழுது தோன்றும் 'படைப்புக்களாகும்' இத்தகைய பாத்திரங்கள். இத்தலைவனும் தலைவியும் சேர்வதற்குரிய நிலைக்களமாக ஆசிரியன் அமைகிறான். எனவே இப்படைப்புகள் எங்ஙனந் தோன்றுகின்றன என்று அவனே அறிய முடிவதில்லை. தேக்கரே என்ற மேனாட்டுப் புதின ஆசிரியர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார். "என்னுடைய கதையில் தோன்றும் மாந்தர்களின்மேல் நான் ஆட்சி செலுத்துவதில்லை. அதற்கு மறுதலையாக அம்மாந்தர்களே என்னை ஆளுகின்றன. அவைகள் எங்கு வேண்டுமோ அங்கு என்னைச் செலுத்துகின்றன. அம்மாந்தர்களின் உரையாடலிற்கூட யான் பங்கு கொள்வதில்லை. பல நேரங்களில் ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்த பின்னரும், ஓர் உரையாடல் நிகழ்ந்த பின்னரும் யானே அது நிகழ்ந்த முறையைக் கண்டு இறும்பூது எய்வதுண்டு". இவ்வாறு தம்முடைய புதினங்கள் பற்றிக் கூறக் கூடிய ஆசிரியர்கள் நம் நாட்டில் எத்தனை பேர் உண்டு? இயந்திரசாலையில் உற்பத்தியாவதுபோல நூல்களையும் கதைகளையும் காலையில் ஒன்று மாலையில் ஒன்றும் உற்பத்தி செய்யும் நம் புதின ஆசிரியர்கள் தலைகூர்ந்து இதனைக் கவனித்தல் வேண்டும். ஆண்டுக்கொன்று எழுதினாலும் யானைக்குட்டிபோல் உள்ள புதினங்கள் தோன்றட்டும். பன்றிக்குட்டிபோல் பல நமக்குத் தேவை இல்லை. கற்பனைத் திறத்தால் மாந்தர்களைப் படைக்கும் ஆசிரியர்கள் அமரத்துவம் வாய்ந்த கலைஞர்கள். முயற்சியாலும், வெறும் அறிவின் உதவியாலும் மாந்தர்களைத் தோற்றுவிக்கும் ஆசிரியர்கள் இயந்திரசாலைகளே அன்றிக் கலைஞர்கள் ஆகார். முன்னையோர் படைத்த

மாந்தர்க்களை நாம் எளிதில் ஆராய இயலாது. மனித மனத்தைப் போல இம்மாந்தர்களும் புதிர் நிரம்பியனவராக இருப்பர். ஆனால் இரண்டாவது வகையாரால் தோற்றுவிக்கப் படும் மாந்தர்கள், அறிவினால் அலசிப் பார்த்து, உண்மை கண்டுவிடக் கூடியனவராக அமைவர். முதல் வகையில் அறிவு மட்டும் வேலை செய்து பயனில்லை. அறிவு, பட்டறிவு, உணர்ச்சி என்ற மூன்றுஞ் சேர்ந்து அம்மாந்தர்கள் படைக்கப் பெற்றிருத்தலின் இம்மூன்றின் உதவி கொண்டே அவற்றை ஆயமுடியும்.

இருபெரு முறைகள்

புதின ஆசிரியன் தன் மாந்தர்களின் குணநலங்களையும் செயல்களையும் விளக்க இருபெரும் முறைகளைக் கையாளலாம். ஒன்று நேரடி முறை; மற்றொன்று நாடக முறை. நேரடிமுறை என்பதில் ஆசிரியன் படர்க்கையில் நின்று தன் மாந்தர்களைச் செயல் செய்ய விடுத்து அதன் கருத்துக்களையும் அம்மாந்தர்களின் உணர்ச்சி, தூண்டுதல், எண்ணம் முதலியவற்றையும் தானே எடுத்துக் கூறுகிறான். அம்மாந்தர்கள் மேல் முடிபும் தானே கூறிவிடுகிறான். இதனை அடுத்த முறையாகிய நாடக முறையில் ஆசிரியன் நேரடியாக ஒன்றுஞ் செய்வதில்லை. அதற்குப் பதிலாக அவனால் படைக்கப்பட்ட மாந்தர்களே ஒன்றை ஒன்று ஆய்கின்றன. இரு மாந்தர்கட்கு இடையே நடக்கும் உரையாடல்களே இருவருடைய பண்புகளையும் செயல், மனம், எண்ணம் முதலியவற்றையும் விளக்கு வனவாயிருக்கும். இம்முறையில் ஆசிரியன் நேரடியாகக் கூறவேண்டியது அநேகமாக ஒன்றுமில்லை. ஒவ்வொரு புதின ஆசிரியரும் இவ் விரண்டு முறைகளில் ஒன்றைப் பெரும்பான்மையாகக் கையாள்வர் பெரும்பாண்மையாக என்று தான் கூறல்வேண்டும் ஏன் எனில் முற்றிலும் பிறிதொரு முறைக்கலப்பின்றி ஓர் ஆசிரியர் ஒரு முறையைக் கையாள்வது கடினம். இவ்விரு முறைகளும் மேனாட்டு இலக்கியங்களில் நிரம்பப் பயில்கின்றனவேனும், இவற்றுள் இரண்டாவது முறையையே தற்காலத் திறனாய்வாளர் அதிகம் போற்றுகின்றனர். மேனாட்டாரும் விரும்பி எழுதிவரும் மறைமுக முறையிலுங்கூட ஒரோவழி நேரடிமுறைப் புகாமல் இல்லை. இப்புகுதலால் பெற்ற நன்மை யாதெனில் ஆசிரியன் மாந்தர்களின் நடுவே புகுந்து தனது கருத்தை வெளியிடுதலாம். மறைமுக முறை முற்றிலும் நாடகத்திற்காகவே ஏற்பட்டது. ஆனால் இம்முறையைக் கயைாளும் புதினம், தனக்குள்ள தனிச்சிறப்பால் முன்னர்க் கூறியதுபோல் நேரடி முறையிலும் கொஞ்சம் தொட்டுக் கொள்வதால் ஒரு சிறப்பை அடைகிறது. இச்சிறப்பாவது ஒரோ வழி ஆசிரியன் நேரடியாகத் தனது மாந்தர்களின் செயல்கள் பண்பாட்டை விளக்க அவர்கள் உரையாடல் பயன்படுகிறது என்று கூறினோமன்றோ? அவற்றோடு நில்லாமல் ஆசிரியனும் அவர்கள் மனக்கருத்தை விளக்குகிறான்.

உலகியலறிவு

எத்துணைச் சிறந்த கலைஞனாயினும் கதைமாந்தர் படைப்பின் பொழுது அவனுக்கு வேண்டிய இன்றியமையாத உறுப்புகளுள் ஒன்று நிறைந்த உலகியலறிவு. எந்தச் சூழ்நிலையில் அவன் மாந்தர்களைப் படைக்க விரும்புகிறானோ அந்தச் சூழ்நிலைப் பற்றிய முழு அறிவும் அவனுக்கு வேண்டும். அதாவது உலகத்தில் அந்தச் சூழ்நிலை எங்குக் காணப்படுகிறதோ அங்கு அவன் பழகி இருத்தல் வேண்டும். இன்றேல் அவன் மாந்தர்கள் நிலத்தில் கிடக்கும் மீன்போல் தவிக்க நேரிடும். சில கலைஞர்களின் பொதுவானதும் பரந்து விரிந்ததுமான உலகியல் அறிவு காரணமாக அவர்கள் சூழ்நிலைப் படைப்பு அவர்கள் பழகாததாக இருப்பினும் மெய்ம்மையுடையதாக அமைவதும் உண்டு.

கலைஞனின் விருப்பு வெறுப்பு

சிறந்த கலைஞனுக்கும்கூட விருப்பு வெறுப்புக்கள் உண்டு என்பதை மறந்துவிடுதல் ஆகாது. ஆகவே அவன் படைக்கும் எல்லா மாந்தர்களும் குறிக்கோள் தன்மை பெற்று இலங்கும் என்று கூறல் இயலாது. சிற்சில பண்பாடுகள் அவனுக்குப் பிடிக்காத தாகவும் அமையலாம். அத்தகைய படைப்புக்களில் அம்மாந்தர்கட்கு உரிய பொதுத்தன்மை காணப்படுமேயன்றி ஆழ்ந்து காண வேண்டிய பண்புகள் நன்கு அமைவதில்லை.

கதைமாந்தர் (பாத்திரம்) சிறந்த புதினம்

இதுகாறும் மாந்தர்கள் பற்றித் தனியாகவும் சூழ்ச்சி பற்றித் தனியாகவும் கூறப்பெற்றன. ஆனால் இவை இரண்டும் ஒன்றுபட்டுப் பொருந்தி நடப்பின் புதினஞ் சிறக்காது. தமிழ்மொழியளவில் உள்ள புதினங்களை நோக்குமிடத்துச் சூழ்ச்சியை அடிப்படையாகக் கொண்ட புதினங்களே மலிந்துள்ளன. மாந்தர்கள் கொண்டு புதினங்கள் அமைக்கப்படும் இயல்பு இன்னும் தமிழ்நாட்டிற்கு நன்கு அமையவில்லை. பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் இத்துறையில் முதல் முயற்சி செய்து, 'செந்தாமரை' என்றதொரு புதினம் அமைத்தார். ஆனால், அவரே மேற்கொண்டு இம்முறையைக் கையாளவில்லை. இதன் காரணத்தைத் தேடி நீண்டதூரஞ் செல்ல வேண்டியதில்லை. நாட்டில் இத்தகைய புதினங்கட்கு நிறைந்த வரவேற்பு இல்லை. காரணம் என்ன? இவற்றை நுகர நல்ல பயிற்சியும், ஒரு முகப்பட்ட

மனநிலையும் வேண்டும். செயற்கை உலகில் சிக்கிச் சிந்தனையை இழந்து தவிக்கும் மக்கட் சமுதாயம் அச்சிந்தனையைத் தூண்டும் எதனையும் விரும்புவதில்லை. திடீர் நிகழ்ச்சிகள் நிறைந்துள்ள உலகில் வாழும் மக்கள் மாறிமாறி நடைபெறும் நிகழ்ச்சிகள் நிறைந்த புதினத்தையே பெரிதும் விரும்புகின்றனர். ஆனால், உலக இலக்கியங்களை, சிறப்பாக ஆங்கில இலக்கியத்தைப் பார்த்தால் உண்மை வேறு வகையாக இருக்கக் காணலாம். நாள் ஒன்றுக்குப் பத்துப் புதினம் வரை வெளியிடப்படும் அம்மொழியிற்கூட நிலைத்து நிற்பவை ஒருசிலவே. பழமை பெற்றனவாய் 'டிக்கன்ஸ்' 'தேக்கரே' 'ஸ்காட்' போன்றவர்களுடைய புதினங்கள் தம் சிறப்பில் ஒரு சிறிதுங் குறையாமல் நிலவுகின்றன. அவை அனைத்தையும் ஆராயும்பொழுது. அவை முழுதும் கதைமாந்தர்களால் சிறப்புப் பெற்ற புதினங்கள் என்பது விளங்கும். இத்தகைய சிறந்த புதினங்களிலிருந்து சில உண்மைகள் அறியப்படவேண்டும்.

மாறாப் பண்பு

சிறந்த புதினங்களில் கதைமாந்தர்களும் சூழ்ச்சியும் தம்முள் நன்கு தொடர்பு கொண்டிருக்கும், கதைமாந்தரும், சூழ்ச்சியும் ஒன்றற்கொன்று இன்றியமையாதவையாக அமைதல் வேண்டும். அம்மாந்தர்களைப் பிரித்துவிட்டால் அச்சூழ்ச்சி பயனற்றுப் போய்விடும் என்ற நிலையில் அமைவதே சிறந்த புதினம். மட்டமான சூழ்ச்சி நிறைந்த புதினங்களில் தோன்றும் மாந்தர்கள், உயிருள்ள மாந்தர்களாக இராமல் பொம்மைகளாக உலாவுதல் காண்டற்குரியது. 'ஸ்காட்' என்ற சிறந்த புதின எழுத்தாளர் ஒவ்வோர் ஆசிரியனும் புதிய நிகழ்ச்சியை நுழைக்கும்பொழுது அது நுழைக்கப்பட வேண்டிய காரணத்தைக் கற்போர் மனங்கொள்ளுமாறு காட்டல் வேண்டும் என்றும் கூறுவது அறிதற்குரியது. ஒவ்வொரு மாந்தரும் ஒரு செயலில் மேற்கொள்ளும் பொழுது, 'சரி! இப்பண்பிற்கு இச்செயல் இந்நேரத்தில் ஏற்றதுதான்' என்ற எண்ணம் தோன்றவேண்டும். புதிய ஒரு நிகழ்ச்சியைத் தோற்றுவித்தற்காக ஒரு மாந்தரை அதன் பண்பிற்கு மாறாக ஒரு செயலைச் செய்யுமாறு செய்வது புதின ஆசிரியனின் வன்மைக் குறைவையே வெளியிடும். எனவே ஒரு கதைமாந்தன் என்ன பண்புடன் முதலிலிருந்து காட்டப் பெறுகிறதோ அதற்கு மாறான ஒரு செயலைச் செய்யுமாறு செய்வது தகாது. இங்ஙனம் அமைக்கப் பெறுகிற புதினந்தான் சூழ்ச்சியும் கதைமாந்தரும் நன்கு அமைக்கப் பெற்ற புதினமாகும்.

இதனையடுத்துப் புதினம் சிறப்படைவது உரையாடலாலாகும். புதினத்திலேயே மிக்க மகிழ்ச்சியை அளிக்கும் பகுதி உரையாடல் என்பதை ஆசிரியர்கள் பலர் மறந்து விடுகின்றனர். புதின ஆசிரியன் நாடகத் தன்மையை எட்டிப் பிடிப்பது இப்பகுதியில்தான். எனவே இதன் சிறப்பைப் பற்றி அதிகம் கூறத் தேவை இல்லை. இதன் சிறப்பு அதிகரிக்க அதிகரிக்க இதனைப் பயன்படுத்துவதில் உள்ள துன்பமும் அதிகமாகிறது. உரையாடல் கேவலம் பொருளற்ற வார்த்தைக் கோவையாகவும், அடுக்குமொழி ஒப்பனையா(அலங்காரமா)கவும் இருத்தலில் பயன் இல்லை. அதுவும் புதினத்தில் அவ்வாறு இருத்தல் பெருந் தவறு.

> "பயனிலசொல் பாராட்டு வானை மகன்எனல்
> மக்கட் பதடி எனல்" (குறள்,186).

என்ற உண்மையை மறக்க வேண்டாம். உரையாடல் புதினத்தில் தோன்றும் பல மாந்தர்களுடைய மனம், பண்பு, குறிக்கோள், உணர்ச்சிகள் முதலியவற்றை நமக்கு எடுத்துக் காட்டும் கண்ணாடி. சிறந்த ஆசிரியன் கையில் இவ்வுரையாடல் சிறந்த பயனை அளிக்கும். கேவலம் சொல் ஒப்பனை(அலங்காரப்) புல்லியர்கள் இதன் அருமைப்பாட்டை அறிவதும், அறிவிப்பதும் கடினம். ஆங்கிலமொழிப் புதினங்களில் அதிகம் பயிலப் பெறுவது நகைச்சுவை என்பது. புதினம் கற்பவர்கட்குப் பாரமாக இராமல் இன்பந்தர இச்சுவை பயன்படுவது மட்டுமன்றி மற்றொரு பெரிய செயலையும் செய்ய உதவுகிறது. சமுதாயத்தில் காணப் பெறும் குறைபாடுகளை எடுத்துக்காட்டி அதைத் திருத்த வேண்டிய கடப்பாடு புதின ஆசிரியனுக்கும் உண்டு. இத்தகைய செயலை நேரடியாக அவன் செய்யப் புகுந்தால் அதனை யாரும் விரும்பி ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே தீமையை ஓட்டவும், சமுதாயக் குறைகளை எடுத்துக் காட்டிடவும் நகைச்சுவை பொருந்திய உரையாடலை ஆசிரியன் கையாள்கிறான். ஆனால் நகைச்சுவை என்பது இருபுறமும் கூர்மையுடைய கருவியாகும். ஆசிரியன் தக்க முறையில் இதனைப் பயன்படுத்தவில்லையாயின் இதனால் அவனுக்குக் கெட்ட பெயர்தான் மிஞ்சும். தாழ்ந்த நகைச்சுவை விளையுமாறு உரையாடல் செய்வதும், பிறர் மனம் நோகுமாறு நகைச்சுவையைக் கையாள்வதும் சிறந்த கலைஞன் செய்யாதவை.

புதினத்தில் நடைபெறும் ஒவ்வோர் உரையாடலும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ கதையை நடத்திச் செல்லுதல், கதைமாந்தர்களின் பண்பை விளக்கல் என்ற இரண்டில் ஒன்றைச் செய்ய வேண்டும். இவை இரண்டையுஞ் செய்யாத உரையாடல் பயனற்றது. அரசியல் விளம்பரம், சமூக சீர்திருத்தச் சொற்பொழிவு. மூடநம்பிக்கைகளைப் பற்றிய சொற்போர் முதலியவற்றிற்குப் புதினத்தில் இடமில்லை.

சூழ்நிலைக்கேற்ற நடை

மேலும் உரையாடல் நல்ல நடையில் அமைதல் வேண்டும். அதாவது பேசுபவன் நிலைக்கு ஏற்ற நடையாக இருத்தல் வேண்டும். வாழ்க்கையில் நாம் நடத்தும் உரையாடலை அப்படியே படிப்பதானால் அது சுவையற்று இருக்கும். ஆனால் அதற்கு மறுதலையாகக் கடினமான சொற்கள் நிறைந்த உரைநடையானாலும் அதே பயன்தான் விளையும். இவை இரண்டிற்கும் இடைப்பட்ட தன்மையில் உரையாடல் அமையவேண்டும். புதின ஆசிரியன் மிகவும் கவனிக்க வேண்டிய பகுதிகளுள் இதுவும் ஒன்று. பேசுபவன் பண்புக்கு ஏற்ற உரையாடல் அமையவேண்டும். எல்லையற்ற உணர்ச்சிப் பெருக்கில் இலக்கணமாக ஒருவன் பேச ஆரம்பித்தால் படிப்போர்க்கு அவ்வுணர்ச்சி தோன்றாமல் இருப்பது ஒருபுறமிருக்க அதற்கு மறுதலையான நகைச்சுவை தோன்றுதலுங் கூடும். எனவே ஆசிரியன் உரையாடலை அமைக்கும் பொழுது பேசுபவன், பேசப்படுபவன், பேசும் சூழ்நிலையில் வெளிப்படுத்தப் படும் உணர்ச்சி, நிலைக்களம், சூழ்நிலை முதலியவற்றை மனத்துட் கொண்டுதான் அமைத்தல் வேண்டும்.

இவற்றை அடுத்துக் கவனிக்கப்பட வேண்டியன சூழ்நிலை, கொள்கை முதலியனவாம்.

சூழ்நிலை அமைப்பு

புதினத்தின் பல்வேறு உறுப்புக்களுள் சூழ்நிலை அமைப்பு என்பதும் ஒன்று. அதாவது புதினம் கூறும் செயல்கள் நடைபெறும் காலமும் இடமும் ஆகும். இப்பகுதியில்தான் மக்கள் வாழ்க்கை, அவர்கள் பழக்க வழக்கங்கள் முதலியன இடம் பெறுகின்றன. இப்பரந்த உலகில் வாழும் மக்கட் கூட்டம் பல்வேறுபட்ட பண்பாடுகளுடன் கூடியது. எந்த இடத்தில் கதை நடைபெறுவதாகக் கூறப்படுகிறதோ அதற்கு ஏற்றபடியே இச்சூழ்நிலை அமைக்கப்படல் வேண்டும். 'தேசங்கள் தோறும் மொழிகள் வேறு' என்ற பழமொழி நிறைந்த குறிக்கோளை உடையது. இன்னும் கூறப் போனால் ஒரே மொழி பேசும் பல்வேறு பகுதியினருள்ளும் பழக்க வழக்கங்கள் தெரியாதவர் புதினத்தில் சூழ்நிலை அமைப்பது பெருந் தவறாக முடியும். யாழ்ப்பாணத்தார்களும். திருநெல்வேலி மக்களும், சென்னையார்களும் தமிழே பேசினும் இவர்கள் எண்ணங்கள், பண்பாடுகள் முதலியன பெரிதும் வேறுபட்டு இருக்கக் காணலாம். எனவே சூழ்நிலையை அமைக்கும் புதின ஆசிரியன் இதில் அதிகக் கவனஞ்செலுத்தல் வேண்டும். கிராமங்களில் செயல் நடைபெறுவதாகக் கூறவந்த ஒரு புதின ஆசிரியன் பழைய தல தொன்ம முறையில் மாட மாளிகைகளையும், கூடகோபுரங்களையும் வருணிக்கப் புகுதல் எவ்வளவு தவறு!

இருவகை அமைப்பு

சூழ்நிலை அமைப்பை நன்கு அறிந்த புதின ஆசிரியன் இருவகை அமைப்புக்களை மேற்கொள்ளலாம். ஒன்று, சமுதாய அடிப்படையில் நிகழ்வது. மற்றொன்று இயற்கை யமைப்பு அடிப்படையில் நிகழ்வது. இவ்வகைப் பிரிவினைகள் திறனாராய்ச்சியிலும், மேலை நாட்டுப் புதினங்களிலும் காணப் பெறுகின்றனவே தவிரத் தமிழ்நாட்டில், தமிழ் மொழியில் தோன்றிய புதினங்களில் இப் பாகுபாட்டைக் காண்பது கடினம், தமிழர் சமுதாயத்தையும், பண்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை என்று கூறத்தக்க புதினங்கள் இருக்கின்றனவா என்பது ஐயத்திற்கிடமானதே. இதுதான் இல்லை என்றாலும் அவ்வினத்தாரின் ஓரிரு பண்பாட்டையேனும் எடுத்து விளக்கக் கூடிய புதினங்கள் உண்டா என்றால் அவையும் விரல்விட்டு எண்ணத் தகுந்தனவாகவே உள்ளன. மேலே கூறிய இரண்டு குறிக்கோள்களையும் கொண்டு ஒரு புதினம் செய்தல் என்பது மிகக் கடினமானதே. ஆனால் இவ்வகையில் யாரேனும் முயன்று அதில் தோற்றுப்போனாலும் அது வரவேற்றற்குரியது.

> "கான முயலெய்த அம்பினில் யானை
> பிழைத்தவேல் ஏந்தல் இனிது" (குறள், 772.)

என்ற பேருண்மையைத் தமிழ்ப் புதின எழுத்தாளர்கள் நினைவில் கொள்வது நலம். ஒரே புதினத்தில் இவை அனைத்தும் இடம் பெறாவிடினும் ஒரே ஆசிரியர் இயற்றிய பல புதினங்களில் இவை இருப்பினும் நலமே.

குமுகாய அடிப்படையில் உள்ள தொல்லை

இம்முறையில் உள்ள கடினம் கருதிப் போலும் மேலைநாட்டில் கூட இத்தகையோர் எண்ணிக்கை குறைந்துவிட்டது. தற்காலம் சிறப்புப் பெறுவது ஒவ்வொரு பகுதியை எடுத்துக்கொண்டு விரிக்கும் புதினமே யாகும். போர் வீரனுடைய வாழ்க்கை, மாலுமி வாழ்க்கை, மிகப் பெருஞ் செல்வன், நடுத்தரமனிதன், ஏழை முதலானவர்கள் வாழ்க்கைகளை எடுத்துக் கொண்டு புதினம் செய்யும் முறை மேலைநாட்டு இன்றைய இலக்கியங்களில் பல்கியுள்ளன. இம்முறை ஓரளவு தமிழ்ப் புதினங்களிலும் இடம் பெறினும் இன்னும் நன்கு சிறக்கவில்லை. இந்திய நாட்டில் சற்று முன்னாள் வரை தலைவிரித்தாடின. சிற்றரசர்கள் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எத்தனையோ புதினங்கள் பெரும்பாலும் பணக்காரர்களைத் திட்டுவதும், தொழிலாளியைப் போற்றுவதும் தம் கடமையாகக் கொண்டு உள்ளன. செல்வர்களின் வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டக்கூடிய புதினங்கள், அவர்கள் மனநிலையை வெளியிடும் புதினங்கள் என்று கூறத்தக்க நிலையில்

ஒன்று இல்லை. காரணம் என்ன? புதின ஆசிரியர்கள் கூர்ந்து நோக்கும் இயல்புடையவராய் இல்லாமையே ஆகும். தான் எந்தப் பகுதியை எழுதினும் ஆசிரியன் அதனைக் கூர்ந்து நோக்கி அதனிடம் காணாதனவெல்லாம் காண்டல் வேண்டும். இவ்வாறு கூறுவதால் இல்லாத பொய்களையெல்லாம் எழுத வேண்டும் என்பது கருத்தில்லை. ஏனையோர் கண்டும், உட்பொருள் அறியாமல் இருப்பவற்றின் பொருளை இவ்வாசிரியன் அறிந்து உண்மை கூறவேண்டும் என்பதே கருத்தாகும்.

தற்கால நிலை

ஒரு காலத்தில் அரசர்களைப் பற்றிக் கூறுவதே கதை என்றிருந்ததுபோகத் தற்காலத்தில் இனப் போராட்டம், காதல் என்பவை இருப்பதே கதை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. பொதுநிலை (சாதாரண) மனிதன் ஒருவனுடைய அன்றாட வாழ்க்கையைக்கூட ஒரு புதினத்திற்கு அடிப்படையாக்கலாம் என்பதை நம்மவர் நினைப்பதில்லை. எளியவர் வாழ்க்கையில் நடைபெறும் அன்றாடப் போராட்டங்களும்கூடச் சிறந்த கலைஞன் கையில் சிறந்த கலையாக முகிழ்க்க முடியும். நாம் அன்றாடம் பார்த்துப் பழகும் சூழ்நிலையில் கதைகள் அமைப்பதும் சிறந்த ஒன்றுதான். ஒரு சூழ்நிலையில் தோன்றி வளர்ந்த ஒருவன் முற்றிலும் மாறான மற்றோர் சூழ்நிலையில் வாழும்படிச் செய்து அதில்தோன்றும் அழகுகளையும் புதினங்கள் எடுத்துக் காட்டலாம். இம்முறைகளில் எவை கையாளப்படினும், ஒரு சமுதாயத்தின் ஒரு பகுதியைப் பற்றி மட்டும் கூறும் புதினம் கீழே தரப்பட்டுள்ள ஒரு சட்டத்தை மட்டும் மறவாமல் இருத்தல் வேண்டும். கதைமாந்தரின் குணங்கள் சூழ்நிலையைப் பொறுத்தே இருக்கும் என்ற சட்டமே அதுவாகும். இப்பகுதி சிறப்படையும் புதினமே சிறந்தது என்று கூறப்படும். தஞ்சாவூரிலுள்ள ஒரு பெரிய நிலக்கிழாரும் சென்னையிலுள்ள ஆலை முதலாளியும் பணக்காரர் என்ற பொதுப் பெயரினுள் அடங்குவரேனும் இருவருக்கும் பண்புகள் வேறுபடும். இதனை விரிப்பதே சூழ்நிலை எனப்படும். புதின ஆசிரியன் இதனை நன்கு அறிந்தே தனது கதையை நடத்திச் செல்ல வேண்டும்.

வரலாற்றுப் புதினம்

வரலாறுகளை அடிப்படையாகக் கொண்டு எழும் ஒரு வகைப் புதினங்களும் வேற்றுமொழி இலக்கியங்களில் உண்டு. ஆனால், நம்முடைய தாய்மொழியில் இதுவும் போதிய அளவு இல்லை. இவ்வகைப் புதினங்களில் ஓரளவு ஆசிரியனுடைய உரிமை (சுதந்திரம்) கட்டுப்படுத்தப் பெறுகிறது. நடைபெற்ற நிகழ்வுகள் ஆசிரியனுடைய விருப்பம்போல் நடைபெறுவதில்லை. எனவே அவற்றை வைத்துக் கொண்டுதான் அவன் வேண்டிய அளவு பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். வரலாற்றிற்கு மாறாகப் போகாமலும், கலைச்சுவை குறையாமலும் இருக்கவேண்டிய இக்கட்டான நிலை இவ்வகைப் புதினம் இயற்றும் ஆசிரியனுக்கு உண்டு.

புதினமும் வாழ்க்கையும்

இதனையும் அடுத்துப் புதினத்தில் காணவேண்டிய இயல்பு ஒன்று உண்டு. புதின ஆசிரியன் வாழ்க்கையைப் பற்றிக் கொண்டுள்ள எண்ணமே அதுவாகும். எத்தகைய மனிதனும் உலக வாழ்க்கைபற்றி ஒரு உட்பொருளை (தத்துவம்) கருதியிருப்பான். நாடகத்தைப் போலப் புதினமும் நேரடியாக வாழ்க்கையைப் படம் பிடிப்பதுதான். மக்களுடைய எண்ணங்கள், உணர்ச்சிகள் முதலியவைதாமே நாடகத்திலும், புதினத்திலும் இடம் பெறுகின்றன? வாழ்க்கையில் காணப் பெறுகிற இவற்றை வைத்துக் கொண்டு ஆசிரியன் புதினம் இயற்றுகிறான். ஆதலின் எங்கேயாவது ஓரிடத்தில் வாழ்க்கையைப் பற்றி அவன் என்ன நினைக்கிறான் என்பதைக் கூறித்தானே ஆகவேண்டும்? வாழ்க்கையைப் பற்றிய அவன் கருத்துக்களை வெளியிட அவன் இயற்றும் புதினம் கருவியன்று; என்றாலும் அதிலேயே கிடந்து உழலும் ஒருவனுடைய மனத்தில் மேலே கூறியவைகள் ஓரிரண்டு ஆழமான பட்டறிவு (அநுபவங்)களை உண்டாக்காமல் இருப்பதில்லை. அவ்வாறு உண்டாக்கி இருப்பின் மகிழ்ச்சி, துயரம், உணர்ச்சி என்பவற்றைப் பற்றி அல்லது வாழ்க்கையைப் பற்றி அவன் கொண்டுள்ள எண்ணம் வாய்ப்பு வரும்பொழுது வெளிவரத் தானே செய்யும்?

ஆசிரியன் கொள்கை

வாழ்க்கையின் உண்மையைப் பொருளைப் பேசச் சிறந்த இடமே புதினமா என்று கேட்கப்படலாம். இல்லை என்பதே விடை. என்றாலும் உலகில் ஒரு புதினங்கூட, அது புதினம் என்ற பெயருக்கு உரியதாக இருந்தால், இவ்வுண்மை பேசாமல் இல்லை. காரணம் என்ன? வாழ்க்கையைத்தான் புதினம் பேசுகிறது. வாழ்க்கையில் தோன்றும் பட்டறிவைத் தான் புதினம் பேசுகிறது. எனவே, வாழ்க்கையிலும், பட்டறிவிலும் தோன்றும் உண்மை அதில் இடம்பெறுதல் வியப்பன்று அல்லவா? மேலும், சிறந்த எழுத்தாளர் அனைவரும் தீர்ந்த சிந்தனையாளர்கள் அல்லவா? அவர்களுடைய சிந்தனையாகிய உலையில் உலகில் நடைபெறும் செயல்கள் சென்று வீழ்கின்றன. மேலும் அவர்கள் கூர்ந்து நோக்கும் இயல்பினர். நடைபெறும் செயலின் அடியில் இருக்கும் மனித மனத்தை அவர்கள் ஆய்ந்து இதுதான் உலகியல் என்ற முடிவுக்கு வருகின்றனர். இம்முடிவிலிருந்து வாழ்க்கையைப் பற்றி அவர்கள் கூறும் தத்துவம் செம்மையுடையதாக இருக்கும்

என்பதில் ஐயம் ஒன்றும் இல்லை. இத்தகையவர்கள் கண்ட இவ்வுண்மைகள் அவர்களுடைய புதினங்களில் இடம் பெறுதல் இயற்கை. சிலர் இயற்றிய புதினங்களில் முந்திரிக் கொட்டைபோல இவ்வுண்மை வெளியில் நீட்டிக் கொண்டிருத்தலும் உண்டு. சிறந்த ஆசிரியர்களுடைய நூல்களில் இவ்வுண்மை உள்ளே மறைந்து இருத்தலும் உண்டு.

உட்பொருள் (அ) உண்மை (தத்துவம்) வெளியீடுமுறை

இத்தகைய உட்பொருளை ஆசிரியன் எவ்வாறு நமக்குத் தருகிறான்? அவன் என்ன உட்பொருளைத் தரவேண்டும் என்று நினைக்கிறானோ அதற்கேற்ற கதைமாந்தர்களையும், சூழ்நிலையையும் செயல்களையும் ஏற்படுத்திக்கொண்டு கதையை நடத்திச் செல்லுமுகமாகவே இதனைப் பெற வைத்தல் ஒரு முறையாகும். நாடக ஆசிரியன் தன் மாந்தர்களின் செயல்கள், பேச்சுகள் என்ற இரண்டின் துணை கொண்டே இதனைச் செய்ய முடியும். ஆனால், புதின ஆசிரியனுக்கு மற்றொரு சிறந்த கருவி (சாதனம்) என்னவெனில் நேரடியாக அவனுடைய கருத்தைக் கூற ஏந்துகள் (வசதி) உண்டு என்பதேயாகும். புதினத்தில் கூறப்பெறும் உட்பொருளை (தத்துவத்தை) அளவிட இரண்டு அளவுகள் உண்டு. முதலாவது அதனுடைய உண்மைத் தன்மை; இரண்டாவது அதனுடைய நல்லியல்பு. வாழ்க்கையில் உண்மை என்பது யாது? நாம் காணக் கூடியவற்றையே உண்மை என்று கூறிப் பழகிவிட்டோம். எனவே, நம் பட்டறிவிற்கு அப்பாற்பட்டவற்றைப் புதினங்கூறி அதிலிருந்து ஒரு வாழ்க்கை உண்மையை கற்பித்து இருப்பின் அதனைப் பொய் என்று தள்ளிவிடுகிறோம். இது தவறு. நம் பட்டறிவிற்கு அப்பாற்பட்டது உண்மையற்றது அன்று. அது மெய்யா என்று வேண்டுமானால் கேட்கலாமே தவிர உண்மையா என்று கேட்பது தவறு. எனவே, புதினம் உண்மையைக் கூறவேண்டுமே தவிர, மெய்ம்மை கூறவேண்டிய இன்றியமையாமை இல்லை. மெய்ம்மை கூறும் நூல்கள் கலைகள் அல்ல; உண்மை கூறும் கலை நூல்களில் மெய்ம்மை இருக்க வேண்டும் என்ற கடப்பாடு இல்லை.

நல்லியல்பு இருக்கும் அல்லது போதிக்கும் தன்மை உள்ளதே சிறப்புப் புதினம். வாழ்க்கையில் இருப்பதை அப்படியே கூறவேண்டும். அதுவே மெய்ம்மை என்று கூறும் சிலர் நல்லியல்பை மறந்து புதினம் இயற்றுகின்றனர். ஆனால், உலக மொழிகளில் நிலைபெற்ற புதினங்களை ஆராய்ந்தால் இவ்வுண்மை வெளிப்படும். (ஜான் அடிங்டன் சைமன்ஸ்) என்ற பெரியார் கூறிய சொற்றொடர் நினைவிற்குக் கொணர்தற்குரியது. "உலக இலக்கியங்களை ஆராய்ந்தால் ஓர் உண்மை வெளிப்படுகிறது. மனித மனத்தின் ஆழத்தில் உள்ள தற்காப்பு உணர்ச்சி நல்லியல்பு இல்லாத இலக்கியங்களை உதறித் தள்ளிவிடுகிறது" என்பதே அது. (இலக்கியக் கலை அ.ச.ஞா.)

நெடுங்கதைவிடு-தல் *neḍu-ṅ-gatai-viḍu-,* 18செ.குன்றாவி (v.t.) காலத்தாழ்வு செய்தல் (வின்.); to put off from day to day.

[நெடுங்கதை + விடு-தல்.]

நெடுங்கப்பற்று-தல் *neḍuṅga-p-paṟṟu-,* 5செ.குன்றாவி. (v.t.) இறுகப் பிடித்தல்; to grasp firmly. '*கண்ட இரை நெடுங்கப் பற்றி விழுங்கிய பாம்புபோல்*' (நீலகேசி, 308, உரை).

[நெருங்கு → நெடுங்கு + பற்று-தல்.]

நெடுங்கம்பு *neḍu-ṅ-gambu,* பெ. (n.) கம்புப் பயிர் வகை (விவசா.4); a kind of bulrush millet.

[நெடு → நெடும் + கம்பு. நீண்டகம்புப் பயிர் வகை]

நெடுங்கயிற்றில்விடு-தல் *neḍu-ṅ-gayiṟṟil-viḍu-,* 18செ.குன்றாவி. (v.t.) 1. நாட்கடத்துதல் (யாழ்.அக.); to delay procrastinate. 2. நீண்ட கயிற்றில் குழந்தையர் உருளைகளை விட்டு விளையாடுதல்; a kind of children game.

[நெடுங்கயிறு + விடு-தல்.]

நெடுங்கயிறு *neḍu-ṅ-gayiṟu,* பெ. (n.) 1. நீளமான கயிறு; long rope. *கிணற்றுக்கு நெடுங்கயிறு ஒன்று வாங்கிவா.* 2. நீண்ட வலை; large net. "*கமலக் கண்ணென்னு நெடுங்கயிறு படுத்தி*" (திவ்.நாய்ச்.14:4). "*நெடுங்கயிறு வலந்த குறுங்க ணவ்வலை*" (அகநா.30:1). 3. பெருந்தாழ்வு (தாமதம்) (வின்.); long delay.

[நெடு → நெடும் + கயிறு. கள் → கய் → கயில் → கயிறு. கள் = கட்டுதல், பிணைத்தல்.]

நெடுங்கரை *nedu-ṅ-garai,* பெ. (n.) நீண்ட கரை; long bank. "*நெடுங்கரை யிருந்த குறுங்கா லன்னத்து*" (குறுந். 304:5).

[நெடு → நெடும் + கரை. கரு → கரை. → கரு = மேடு, உயரம்.]

நெடுங்கல்நின்றமன்றம் *nedu-ṅ-gal-ninṟa-manṟam,* பெ. (n.) காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள ஐந்து மன்றங்களில் ஒன்று; one among the five halls at Kāviripōm-paṭṭinam-in Tamilnadu. "*நிழல்கால் நெடுங்கல் நின்ற மன்றமும்*" (சிலப்.5:127).

[நெடுங்கல் + நின்ற + மன்றம்]

ஐந்து மன்றங்கள்: காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்த வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் நின்ற மன்றம், பூதசதுக்கம், பாவை மன்றம்

சிலப்பதிகாரம் கூறும் 5 மன்றங்கள் பற்றிய செய்தி:

அயல் நாட்டிலிருந்து வந்த புதியோர், தம் பெயர் எழுதிய அடையாள எழுத்தினை இலச்சினையாக அமைத்த, பல எண்களையுடைய பொதிகள் பண்டசாலை வாயிலில் குவிந்திருந்தன. வலிய தாழ் இட்ட கதவுகளையுடைய அரணாகிய காவலையும், அவற்றிற்கு உரிமையுடையோர் காத்திருக்கும் காவலையும் அவை நீங்கியிருந்தன. ஆயினும் அவற்றைக் களவாடுவோர் உளராயின், அவர் கழுத்து வலிக்கப் பொதியைத் தலையில் ஏற்றி வைத்துச் சுமக்கச் செய்து ஊரைச் சுற்றி வரச் செய்யும், அங்குள்ள பூதம். அவர்க்கு அதைவிட வேறு தண்டனை தருவதில்லை. எனவே இக்கடும் துன்பத்தை யெண்ணிக் களவை மனத்தால் நினைக்கவும் யாரும் அஞ்சுவர். வெளியான இடத்தில் இத்தகைய பூதம் தங்கியுள்ள வெள்ளிடை மன்றம் ஒன்று புகாரில் இருந்தது.

கூனர், குறளர் (குள்ளர்), ஊமையர், செவிடர், உடல் அழுகும் தொழு நோயாளர் ஆகியோர் முழுகி நீராடிய அளவிலே பழுதில்லாத நல்ல தோற்றத்தைப் பெற்று வலம் செய்து தொழுது நீங்குதற்குரிய பொய்கையினையுடைய 'இலஞ்சி மன்றம்' ஒன்றும் அப்புகாரில் இருந்தது.

வஞ்சனையாகச் சிலர் மருந்து தர உண்டு பித்தேறினாரும், நஞ்சை உண்டு நடுங்குதுயர் உற்றாரும், அழலும் விடத்தையுடைய பாம்பின் கூரிய பற்கள் அழுந்தக் கடியுண்டாரும், பிதுங்கிய கண்ணையுடைய பேயால் கடுந் துன்ப முற்றாரும், சுற்றி வந்து தொழுத உடனே அவர்தம் துன்பமெலாம் நீக்குகின்ற, ஒளி சொரியும் நெடிய கல் நாட்டி நிற்கும் 'நெடுங்கல் மன்றம்' ஒன்றும் அப்புகாரில் இருந்தது.

அரசனது செங்கோலாட்சி சிறிது மாறுபடினும், அறங்கூறும் அவையில் அறமு(நீதி)ரைப்போர், அற(நீதி) நூலுக்கு மாறுபட ஒருபால் சார்ந்து அறம்(நீதி) உரைக்கினும், நாவால் ஒன்றும் கூறாது துன்பக் கண்ணீர் சொரிந்து அழும் பாவை நிற்கும் 'பாவை மன்றம்' ஒன்றும் அப்புகாரில் இருந்தது.

வாழ்க்கையின் உண்மைத் தன்மையை உணர்ந்த மேலோரால் போற்றிப் புகழப்படும் அந்த ஐவகைப்பட்ட மன்றங்களிலும் மக்கள் அரிய பலியிட்டு வழிபட்டனர்.

வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப்
பல்பொதிக்
கடைமுக வாயிலும் கருந்தாழ்க் காவலும்
உடையோர் காவலும் ஒரீஇய வாகிக்
கட்போ ருளரெனிற் கடுப்பத் தலையேற்றிக்
கொட்பி னல்லது கொடுத்தல் ஈயாது
உள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமும்
கூனும் குறளும் ஊமும் செவிடும்
அழுகுமெய் யாளரும் முழுகினர் ஆடிப்
பழுதில் காட்சி நன்னிறம் பெற்று

வலஞ்செயாக் கழியும் இலஞ்சி மன்றமும்
வஞ்சம் உண்டு மயற்பகை யுற்றோர்
நஞ்சம் உண்டு நடுங்குதுயர் உற்றோர்
அழல்வாய் நாகத் தாரெயி றழுந்தினர்
கழல்கண் கூளிக் கடுநவைப் பட்டோர்

சுழல வந்து தொழுத்துயர் நீங்கும்
நிழல்கால் நெடுங்கல் நின்ற மன்றமும்
தவமறைந் தொழுகும் தன்மை யிலாளர்
அவமறைந் தொழுகும் அலவற் பெண்டிர்
அறைபோகு அமைச்சர் பிறர்மனை நயப்போர்

பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக்
காதம் நான்கும் கடுங்குர லெடுப்பிப்
பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்
அரைசுகோல் கோடினும் அறங்கூறு
அவையத்து

உரைநூல் கோடி ஒரு திறம் பற்றினும்
நாவொடு நவிலாது நவைநீர் உகுத்துப்
பாவைநின் றழூஉம் பாவை மன்றமும்
மெய்வகை யுணர்ந்த விழுமியோர் ஏத்தும்
ஐவகை மன்றத்தும் அரும்பலி உறீஇ
(சிலப்.5:111–140)

நெடுங்கல்மன்றம் *neḍuṅgal-maṉṟam,* பெ. (n.) **நெடுங்கல் நின்ற மன்றம்** பார்க்க; see *neḍuṅgal-niṉṟa-maṉṟam.*

[நெடுங்கல் + மன்றம்]

நெடுங்கழுத்தன் *neḍu-ṅ-gaḻuttaṉ,* பெ. (n.) **1.** நீண்ட கழுத்துள்ள ஒட்டகம் (பிங்.); camel. **2.** நீண்ட கழுத்துள்ள கோவேறு கழுதை (சூடா.); mule.

[நெடு → நெடும் + கழுத்தன்]

நெடுங்கழுத்துப் பரணர் *neḍuṅ-gaḻuttu-p-paraṇar,* பெ. (n.) *நெடுங்களத்துப்பரணர்* பார்க்க; see *neḍu-ṅ-gaḷattu-p-paraṇar.*

நெடுங்களத்துப்பரணர் *neḍuṅ-gaḷattu-p-paraṇar,* பெ. (n.) கழகக் காலப் புறநானூற்றுப் புலவர்; a šangam poet.

[நெடு → நெடும் + களத்து + பரணர்]

திருச்சிராப்பள்ளிக்குக் கிழக்கே காவிரியின் தென்கரையில் உள்ள நெடுங்களம் என்னும் ஊரினர். பரணறென்ற பெயருடைய சான்றோர் ஒருவர் இருத்தலால் அவரின் வேறுபடுத்தி அறிதற்குப் பண்டையோர் இவரது ஊராகிய நெடுங்களத்தைச் சேர்த்து நெடுங்களத்துப்பரணர் என்று வழங்கினர். ஏடுகளில் நெடுங்களத்து என்பது நெடுங்கழத்து எனப் பிழைபட்டுப் பின்னர் நெடுங்கழுத்தெனத் திரித்ததன் மேலும் திரிபடைவதாயிற்று. இவர் நெடிய கழுத்தையுடையராதல் பற்றி நெடுங்கழுத்துப் பரணர் என்று உறுப்புப் பற்றி பெயர் பெற்றனர் எனக் கூறினர். போருக்குச் செல்பவர் வெள்ளுடையுடுத்திச் செல்வது அக்கால வழக்கம் என்பது இவரது பாடலால் (புறநா.291) அறிய முடிகிறது.

"சிறாஅஅர் துடியர் பாடுவன் மகா அஅர்
தூவெள் ளறுவை மாயோற் குறுகி
இரும்புட் பூசல் ஓம்புமின் யானும்
விளரிக் கொட்பின் வெண்ணரி கடிகுவென்
என்போற் பெருவிதுப் புறுக வேந்தே
கொன்னுஞ் சாதல் வெய்யோற்குத் தன்றலை
மணிமருண் மாலை சூட்டி அவன்றலை
ஒருகாழ் மாலை தான்மலைந் தனனே" (புறநா.291)

இவ்வொரு பாடல் மட்டுமே இவர் பாடியதாகக் காணப்படுகிறது.

நெடுங்களம் *neḍu-ṅ-gaḷam,* பெ. (n.) திருச்சி மாவட்டத்து ஊர்; a village in Trichy district. *"நிழலார் சோலை நெடுங்களத்து நிலாயநித்த மணாளன்"* – (அப்பர்)

[நெடும் + களம். நெடும் = பரந்த. களம் = செழிப்பு. சோலைகள் நிறைந்து செழிப்புற்ற ஊர். இன்று திருநாட்டாங்குளம், திருநாட்டான்குளம் என வழங்குகிறது.]

"தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணாது பெட்டப்பிணமென்று பேரிட்டுக் – காட்டி எடுங்கள் அத்தா என்னா முன் ஏழைமட நெஞ்சே நெடுங்களத்தார் பாதம் நினை" – (சேத்திரக் கோவை வெண்பா).

நெடுங்காலம் *neḍu-ṅ-gālam,* பெ. (n.) நீண்ட காலம்; long time.

[நெடும் + காலம்]

நெடுங்காலி *neḍu-ṅ-gāli,* பெ. (n.) கால் நீண்ட ஆன் (பசு) (யாழ்ப்.); long legged cow.

[நெடும் + காலி]

நெடுங்கிடை *neḍu-ṅ-giḍai,* பெ. (n.) **1.** நோயால் நீண்ட நாட்கள் படுக்கையிற் கிடக்கை (உ.வ.); being bed-ridden for a long time, as from a disease. ***கால்கை வராமல் நெடுங்கிடையாய்க் கிடக்கின்றான்.*** **2.** **நெடுஞ் சாண்கிடை** பார்க்க; see *neḍu-ñ-jāṇgiḍai.* ***நெடுங்கிடையாய் வணங்கினான்.***

[நெடும் + கிடை]

நெடுங்கிள்ளி *neḍu-ṅ-giḷḷi,* பெ. (n.) கழகக் காலச் சோழ மன்னன்; a Chola king in šaṅgam age.

கோவூர்க்கிழாரால் பாடப்பட்டவன் (புறநா. 44,45,47). இவன் தம்பி (எதிரி) உரையூரிலிருந்த நலங்கிள்ளி என்னும் சோழன். நெடுங் கிள்ளிக்கு ஆவூரும் உறையூரும் சொந்தமாக இருந்தன. நலங்கிள்ளி ஆவூரை முற்றுகையிட்ட போது நெடுங்கிள்ளி அவனுடன் போரிடவியலா தென்று மதிலை அடைத்துப் பதுங்கிக் கிடந்தான். இந்நிலை நெடுங்கிள்ளிக்கு இழிவெனக் கூறிக்கோவூர் கிழார் இவனை இடித்துரைத்தார் (புறநா.44). இவனுக்குக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளியெனவும் பெயரிருப்பதால் இவன் காரியாறு என்னும் இடத்தில் இறந்திருக்கவேண்டும்.

"இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மதி பெறாஅ
திருந்து அரை நோன் வெளில் வருந்த ஒற்றி
நிலமிசைப் புரளுங் கைய வெய்து உயிர்த்து
அலமரல் யானை உரும்என முழங்கவும்
பாலில் குழவி அலறவும் மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும் நீரில்
வினைபுனை நல்லில் இனைகூஉக் கேட்பவும்
இன்னாது அம்ம, ஈங்கு இனிது இருத்தல்
துன்னருந் துப்பின் வயமான் தோன்றல்
அறவை ஆயின் நினதுஎனத் திறத்தல்
மறவை ஆயின் போரொடு திறத்தல்
அறவையும் மறவையும் அல்லையாகத்
திறவாது அடைத்த திண் நிலைக் கதவின்
நீள்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத்தக உடைத்து இது காணுங்காலே"
(புறநா.44)

நெடுங்கு *neḍuṅgu,* பெ. (n.) நெடுக்கு பார்க்க; see *neḍukku. சந்து நெடுங்கிலே போகிறது.*

[நெடுக்கு → நெடுங்கு]

நெடுங்குடர் *neḍu-ṅ-guḍar,* பெ. (n.) மணிக்குடல் (யாழ்.அக.); the small intestines.

[நெடு → நெடும் + குடர். குடல் → குடர். ஒ. நோ. பந்தல் → பந்தர்.]

நெடுங்குயில் *neḍu-ṅ-guyil,* பெ. (n.) சாவு; death. (சா.அக.).

[நெடுந்துயில் → நெடுங்குயில்]

நெடுங்குரல் *neḍu-ṅ-gural,* பெ. (n.) விடாத பெருங்குரல் (வின்.); long protracted cry, as in wailing, loud continued call. *"குறுநரி நெடுங்குரற் கூவிளி கேட்டு"* (சிலப்.10:23). *"நின்றெறி பலியின் நெடுங்குர லோதையும்"* (மணிமே.7:85).

[நெடு → நெடும் + குரல்]

நெடுங்குரல்பாய்ச்சு-தல் *neḍu-ṅ-gural-pāyccu-,* 5 செ.கு.வி. (v.i.) நீண்ட ஓசையிடுதல்; to make a long protracted noise, as in bemoaning. *நெடுங் குரல் பாய்ச்சி அழுதாள்.*

[நெடுங்குரல் + பாய்ச்சு-தல்.]

நெடுங்குரலன் *neḍu-ṅ-guralaṉ,* பெ. (n.) பெருங் குரலுடைய கழுதை (பஞ்சதந்.); ass. as braying loudly.

[நெடு → நெடும் + குரலன்.]

நெடுங்குல்லா *neḍu-ṅ-gullā,* பெ. (n.) நீண்ட குல்லா (வின்.); high cap.

[நெடு → நெடும் + குல்லா]

நெடுங்குளம் *neḍu-ṅ-guḷam,* பெ. (n.) பாண்டி நாட்டிலுள்ள ஊர்; a village in Pāndi Nāḍu.

நெடியகுளம் உள்ள ஊர் ஆகலாம்.

[நெடு → நெடும் + குளம்]

நெடுங்குளிசம் *neḍu-ṅ-guḷišam,* பெ. (n.) கற்பரிபாடாணம்; a kind of native arsenic. (சா.அக.).

நெடுங்கூவிளி *neḍu-ṅ-gūviḷi,* பெ. (n.) யானை முழங்குவது போன்ற பெருமுழக்கம்; loud noise, as of an elephant. *"நிறையழியானை நெடுங் கூவிளியும்"* (மணிமே.7:67).

[நெடு → நெடும் + கூ + விளி.]

யானை நெடிதாகக் கூவி விளிப்பது போன்ற பேரோசை.

நெடுங்கேடு *neḍu-ṅ-gēḍu,* பெ. (n.) தீராக்கேடு (யாழ்.அக.); endless ruin. *அவனுக்கு அந்தச் செயலால் நெடுங்கேடு விளைந்தது.*

[நெடு → நெடும் + கேடு.]

நெடுங்கை[1] *neḍu-ṅ-gai,* பெ. (n.) 1. நீண்ட கையையுடைய யானை; elephant, as having a long trunk. *"நெடுங்கைப் பிணத்திடை நின்றான்" (பு.வெ.7:13). "கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி" (அகநா.63:14). "ஓய்களி றெடுத்த நோயுடை நெடுங்கை" (அகநா.111:8).* 2. முழந்தாள் தொடும் தடக்கை கொண்டவன்; a man having a long hand.

[நெடு → நெடும் + கை.]

நெடுங்கைநீட்டு *neḍu-ṅ-gai-nīṭṭu,* பெ. (n.) மிகு தொலைவு (அதிதூரம்); long distance. *"நித்ய விபூதியிலே நெடுங்கைநீட்டாக இருந்தாயாகில்"* (ஈடு, 5. 7:1).

[நெடுங்கை + நீட்டு]

நெடுங்கையன் *neḍu-ṅ-gaiyaṉ,* பெ. (n.) யானை; elephant from its long trunk. *"ஓய்களி றெடுத்த நோயுடை நெடுங்கை"* (அகநா. 111:8). *"கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி"* (அகநா. 63:4).

[நெடு–மை + கையன்]

நெடுங்கைவன்மான் *neḍuṅgai-vaṉmāṉ,* பெ. (n.) யானை; an elephant. *"நெடுங்கை வன்மான் கடும்பகை யுழந்த"* (குறுந். 141:4).

[நெடுங்கை + வன் + மான்]

நெடுங்கைவேண்மான் *neḍu-ṅ-gai-vēṇmāṉ,* பெ. (n.) சோழ நாட்டு மன்னன் பெருஞ்சாத்தன் என்பானின் பட்டப்பெயர்; title, honorific name to Chola king peruñ-sāttaṉ. *"நெடுங்கை வேண்மானருங்கடிப் பிடவூர்"* (புறநா. 395:20).

[நெடுங்கை + வேண்மான்]

பிடவூர் எனப் பெயரியதோரூர் இதனைச் சோழநாட்டுப் பிடவூர் என்று பண்டையோர் குறித்துள்ளனர். தொண்டைநாட்டுப் பிடவூர், "மணவிற் கோட்டத்துப் புரிசைநாட்டுப் பிடவூர்" (A.R. No. 68 of 1923) என்றும், சோழநாட்டுப் பிடவூர். "பிடவூர் நாட்டுப் பிடவூர்" (A.R.No. 139 of 1930–31) என்றும் கல்வெட்டுகளிற் காணப் படுகின்றன. இப்பிடவூர்க்குரியராய் வாழ்ந்த வேளாண் மக்களின் குடி முதல்வன் பிடவூர் கிழானாவன். இவனும் இவனைச் சேர்ந்தோரும் அந்நாளில் வேந்தர்க்கு மண்டிலமாக்களும் தண்டத் தலைவருமாய்த் துணைபுரிந்தனர். மூவேந்தர்க்கு மகட்கொடை நேரும் சிறப்பும் இவர்கட்கு உண்டு. இவர்கள் வேளிரெனப்படு தலுமுண்டு. பிடவூர் வேளிர்குடி வழிவழியாக வந்து இடைக் காலத்தும் சிறந்திருந்தது. கல் வெட்டுகளுள் "பிடவூர் நாட்டுப் பிடவூர் வேள்" என்பானொருவன் (A.R. No. 139 of 1930–31) காணப்படுவதே இதற்குச் சான்று பகருகின்றது. இது நிற்க. இப்பிடவூர் உறையூர்க்குக் கிழக்கில் உளது. பெருஞ் சாத்தன் இப்பிடவூர் கிழான் மகனாவான். இவன் நெடுங்கைவேண்மான் எனவும் வழங்கப் படுவன். (புறநா.395.உரை).

நெடுங்கொடி *neḍu-ṅ-goḍi,* பெ. (n.) நீண்ட கொடி; a long flag. "*நெடுங்கொடி நிழன்மதி நெற்றி தைவர*" (சீவக. 54). "*நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்*" (நற். 45:4). "*மங்கல நெடுங்கொடி வானுற எடுத்து*" (சிலப். 5:146).

[நெடும் + கொடி]

நெடுங்கொடி காசு *neḍu-ṅ-goḍi-kāšu,* பெ. (n.) நெடிய கொடியின் குறி (இலச்சினை) பொறிக்கப்பட்ட காசு; a coin. "*இம்மண்டபத்துக்கு நெடுங்கொடி காசு சிகை இருபத்து நாலு கோடி காசு சிகை இழிந்தருளி*" (தெ.க.தொ.12:129).

[நெடுங்கொடி + காசு]

கி.பி.12ஆம் நூற்றாண்டில் சோழ மண்டலத்தில் மக்கள் வாழ்க்கைக்குரிய பொருளியல் உதவித் தொகையாக இக்காசு வழங்கப்பட்டது. (கல்.அக.)

நெடுங்கொடி முல்லை *neḍu-ṅ-goḍi-mullai,* பெ. (n.) நீண்ட கொடி முல்லை; a long running jasmine. "*நெடுங்கொடி முல்லை யொடு தளவமலர் உதிர*" (ஐங்குறு 422:1).

[நெடுங்கொடி + முல்லை.]

நெடுங்கோடிச்சுவர் *neḍu-ṅ-gōḍi-c-cuvar,* பெ. (n.) *நெடுக்குச்சுவர்* (C.G.) பார்க்க; see *neḍukku-c-cuvar.*

[நெடும் + கோடு + இ + சுவர். நீள வாட்டில் கட்டப்பட்ட சுவர்.]

நெடுங்கோடு *neḍu-ṅ-gōḍu,* பெ. (n.) நீண்ட கோடு, வரி; a long dividing or describing line. "*நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி*" (நற். 59:2).

[நெடும் + கோடு]

நெடுங்கோணி *neḍu-ṅ-gōṇi,* பெ. (n.) ஒட்டகம் (சங்.அக.); camel.

[நெடும் + கோணி. கொள் → கோண் → கோணி.]

நீண்ட வளைவான உடலமைப்பையுடைய விலங்கு, ஒட்டகம்.

நெடுஞ்சட்டை *neḍu-ñ-jaṭṭai,* பெ. (n.) நீண்ட அங்கி (வின்.); long coat, gown, cloak.

[நெடும் + சட்டை. உடல் முழுமையும் அணியும் ஒரே நீண்ட சட்டை]

நெடுஞ்சம்பா *neḍu-ñ-jambā,* பெ. (n.) சம்பா நெல் வகை (நாமதீப.352, உரை); a kind of Cambā paddy.

[நெடும் + சம்பா]

நெடுஞ்சாங்கிடை *neḍu-ñ-jāṅ-giḍai,* பெ. (n.) *நெடுஞ்சாண்கிடை* (உ.வ.) பார்க்க; see *neḍu-ñ-jāṇ-giḍai.*

[நெடுஞ்சாண் + கிடை → நெடுஞ்சாங்கிடை]

நெடுஞ்சடையன் பராந்தகன் *neḍu-ñ-jaḍaiyaṉ-parāndagaṉ,* பெ. (n.) புகழ்பெற்ற சோழ மன்னன்; a famous Chola king.

இவன் அரிகேசரி பராங்குசனுடைய மகன். சடையவர்மன் என்பது இவனுக்கு ஒன்றுவிட்டு வரும் மரபுப் பட்டம். தென்னவானவன், சீவரன், புனப்பூழியன், மருதபாலன் முதலிய சிறப்புப் பெயர்களைக் கொண்டவன். இவன் பெண்ணாகடத்தில் பல்லவர்களை வென்றான். வேணாட்டரசன் ஆய்வேளைப் போரில் புறங்கண்டான் எனத் தெரிகிறது. இவன் காஞ்சியில் திருமாலுக்குக் கோயில் கட்டினான் என்றும், மாலியக் குரவர் பெரியாழ்வார் இவன் காலத்தவர் என்றும் அறிய முடிகிறது.

[நெடும் + சடையன் + பராந்தகன். மாறுகொள்வதும் சடைதலும் போர்ப்பயிற்சி பற்றிய சொற்கள்]

நெடுஞ்சாண் *neḍu-ñ-jāṇ,* பெ. (n.) *நெடுஞ்சாண் கிடை* (வின்.) பார்க்க; see *neḍu-ñ-jāṇ-kiḍai.*

நெடுஞ்சாண்கட்டை *neḍu-ñ-jāṇ-kaṭṭai,* பெ. (n.) **நெடுஞ்சாண்கிடை** (வின்.) பார்க்க; see *neḍu-ñ-jāṇ-kiḍai.*

[நெடுஞ்சாண் + கட்டை. கட்டைபோல் நிலத்தில் கிடத்தல்]

நெடுஞ்சாண்கிடை *neḍu-ñ-jāṇ-kiḍai,* பெ. (n.) உடல் முழுவதும் நிலத்தில் படும்படிக் கிடக்கை (வின்.); lying on the ground at full length.

[நெடுஞ்சாண் + கிடை]

'எண்சாண் உடம்பு' என்னும் வழக்கால் முழுவுடல் படியும் வணக்கத்திற்கு இப்பெயர் வந்தது.



நெடுஞ்சாண்கிடையாக *neḍu-ñ-jāṇ-kiḍaiyāga,* பெ. (n.) வணங்கும் போது உடல் முழுமையும் தரையில் படும்படியாக; prostrating at full length. நெடுஞ்சாண் கிடையாக விழுந்து தாய், தந்தையை வணங்குதல் வேண்டும்.

[நெடுஞ்சாண் + கிடையாக]

நெடுஞ்சாணை *neḍu-ñ-jāṇai,* பெ.(n.) **நெடுஞ்சாண்கிடை** (யாழ்.அக.) பார்க்க; see *neḍu-ñ-jāṇ-kiḍai.*

[நெடுஞ்சாண் → நெடுஞ்சாணை]

நெடுஞ்சாரை *neḍu-ñ-jārai,* பெ. (n.) சாரைப் பாம்பு வகை; a king of rat-snake

[நெடும் + சாரை. சாரை = சரசர வென்று செல்வதால் பெற்ற பெயர்]



நெடுஞ்சால் *neḍu-ñ-jāl,* பெ. (n.) **நெடுஞ்சாலுழவு** பார்க்க; see *neḍu-ñ-jāl-uḻavu.* ***"ஊன்கிழித்தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்"*** (அகநா. 194:4).

[நெடும் + சால்]

நெடுஞ்சாலுழவு *neḍu-ñ-jāl-uḻavu,* பெ. (n.) நீட்டுப் போக்குழவு (வின்.); ploughing lengthwise.

[நெடும் + சால் + உழவு. நீள வாட்டத்தில் உழும் உழவு.]

நெடுஞ்சாலை *neḍu-ñ-jālai,* பெ. (n.) அரசுத்துறையின் நேரடிக் கண்காணிப்பில் (பராமரிப்பில்) இருக்கும் முதன்மையான (பிரதான) பொதுச்சாலை; highway. ***இந்த வேலை அரசின் நெடுஞ்சாலைத்துறை செய்தது.***

[நெடும் + சாலை]

நெடுஞ்சிமை *neḍu-ñ-jimai,* பெ. (n.) நெடிய குவடு; நீண்ட மலையுச்சி; a long mound, hillock. summit of mountain. ***"முயலுநர் முற்றா ஏற்றரு நெடுஞ்சிமை"*** (அகநா. 322:13).

[நெடும் + சிமை. சிமை = மலையுச்சி.]

நெடுஞ்சினை *nedu-ñ-jiṉai,* பெ. (n.) நீண்ட அல்லது நெடிய (மரத்தின்) கிளை; a long branch of tree. *"நெடுஞ்சினைப் புன்னைக் கடுஞ்சூல் வெண்குருகு"* (நற். 31:10). *"பொரிதாள் ஓமை வளிபொரு நெடுஞ்சினை"* (குறுந். 79:2). *"கடுஞ்சூல் வயாவிற் கமர்ந்து நெடுஞ்சினை"* (கலித். 40:27).

[நெடும் + சினை. சினை = கிளை, கோடு]

நெடுஞ்சீர்வண்ணம் *nedu-ñ-jīr-vaṇṇam,* பெ. (n.) நெடிய ஓசையுடைய நெட்டெழுத்துக்கள் பயின்று வரும் ஒலி (சந்தம்); a rhythm effected by having only long syllabes. *"நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்"* (தொல். பொருள். செய். 218).

[நெடும் + சீர் + வண்ணம்]

எ.கா.

ஏறுமயில் ஏறிவிளையாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசலம்அ மர்ந்தபெரு மானே
(திருப்புகழ்)

நெடுஞ்சுடர் *nedu-ñ-judar,* பெ. (n.) நெடிய கொழுந் தினையுடைய நெருப்பு; a long flame fire. *"பாயிருள் அறநீக்கும் நோய்தபு நெடுஞ்சுடர்"* (கலித். 137:20). *"நெடுஞ்சுடர் விளக்கம் நோக்கி வந்து நம்"* (அகநா. 88:6). *"நிவந்தபள்ளி நெடுஞ்சுடர் விளக்கத்து"* (அகநா. 93:14).

[நெடும் + சுடர். நீண்ட தீச்சுவாலையை யுடைய நெருப்பு]

நெடுஞ்சுருட்டை *nedu-ñ-juruṭṭai,* பெ. (n.) சுருட்டைப் பாம்பு வகை (M.M.) ; a variety of Echis carninata, long carpet-snake.

[நெடும் + சுருட்டை. சுருட்டை = சுருண்ட வடிவில் (இருக்கையில்) இருக்கும் பாம்பு. இஃது ஓடும் போது நீண்டு கொள்ளும் தன்மையது.]



நெடுஞ்சுரை *nedu-ñ-jurai,* பெ. (n.) சுரைக்கொடி; bottle gourd creeper - Calabash or calabash-cucumber- lagenaria vulgaris. (சா.அக.).

[நெடும் + சுரை. சுரை = உட்டுளை, உட்டுளையுள்ள காய்.]



நெடுஞ்சுவர் *nedu-ñ-juvar,* பெ. (n.) நெடிய சுவர்; a long wall. *"ஓவுறழ் நெடுஞ்சுவர் நாள்*

பல வெழுதி" (பதிற்று. 68:17). *"நாளிழை நெடுஞ்சுவர் நோக்கி நோயுழந்து"* (அகநா. 16:4). *"நெடுஞ்சுவர் நல்லில் புலம்பக் கடைகழிந்து"* (புறநா. 373:11). "படுங்கொல் வாழி நெடுஞ் சுவர்ப்பல்லி". (நற்.69:3)

[நெடும் + சுவர்]

நெடுஞ்சுழி *nedu-ñ-juḷi,* பெ. (n.) ஆற்றின்கண் ஏற்படும் நீர்ச்சுழி; whirling as water. *"நெடுஞ்சுழி நித்தம் மண்ணுநள் போல"* (அகநா. 62:10).

[நெடும் + சுழி. சுழி = சுழன்று காணப்படுவது]

நெடுஞ்சுனை *nedu-ñ-juṉai,* பெ. (n.) நீண்ட ஆழமான நீர்ச் சுனை; a long reservoir of water on a mountain, a hill tank. *"குண்டுநீர் நெடுஞ்சுனை நோக்கிக் கவிழ்ந்து"* (நற். 151:10). *"குன்றக நெடுஞ்சுனைக் குவளை போல"* (ஐங்குறு. 500:2).

[நெடும் + சுனை. சுனை = மலைஊற்று]

நெடுஞ்சூடு *nedu-ñ-jūdu,* பெ. (n.) அதிகமான வெப்பம்; a long heat; warmth burn or scald. *"நெய்யுறப் பொரித்த குய்யுடை நெடுஞ்சூடு"* (புறநா. 397:13).

[சுள் → சுர் → சுடு → சூடு. சூடு = அதிக வெப்பம்]

நெடுஞ்செழியன் *nedu-ñ-jeḷiyaṉ,* பெ. (n.) **1.** சிலப்பதிகாரக் காலத்து அரசனும் கோவலனைக் கொல்வித்தவனுமான பாண்டிய அரசன் (சிலப்.23,கட்டுரை); the Pāṇḍya king who caused the death of Kōvalaṉ, as related in Silappadikāram. **2.** மதுரைக் காஞ்சி முதலியவற்றில் புகழப்பட்டவனும் தலையாலங் கானத்துச் செருவென்ற வனுமாகிய பாண்டியன்; the Pāṇda king of Talai-y-ālaṅkāṉ-am fame, celebrated in Maturai-k-kañci and other poems.

[நெடும் + செழியன்]

நெடுஞ்செழியன் இருவர் ஆவர். ஒருவன் சிலப்பதிகாரத்தில் வரும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் மற்றவன் தலையாலங் கானத்துச் செரு வென்றவன்.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்: இவன் சேரன் செங்குட்டுவன் காலத்திருந்த பாண்டியமன்னன் வடநாட்டு ஆரிய மன்னர்களை வென்றவன். தான் ஆராயாமல் அளித்த தீர்ப்புக்கு அஞ்சி மனைவியுடன் உயிர்விட்டவன். இவனே அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டிய நெடுஞ்செழியன். இவன் வீரனும் புலவனுமாவான். இவன் பாடிய பாட்டு புறநானூற்றில் காணப்படுகிறது.

"உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்
ஒரு குடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட்படுமே"

(புறநா.183).

தலையாலங்கானத்துச் செருவென்றவன் : பாண்டிய மன்னன், கல்வி கேள்வியில் சிறந்தவன். சிறந்த வீரமுள்ளவன், செய்யுள் இயற்றும் திறமுடையவன், மாங்குடி மருதனாரால் புகழப்பட்டவன், இளமையிலேயே அரசுரிமையைக் கைக் கொண்டு ஆட்சி புரிந்தவன். சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையும் சோழன் இராச சூயம் வேட்ட பெருநற் கிள்ளியும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்னும் வேளிர் ஐவரும் இந்நெடுஞ்செழியனை இகழ்ந்து கூறிப் பாண்டிய நாட்டைக் கைப்பற்றக் கருதி மதுரையை முற்றுகையிட்டார்கள். நெடுஞ்செழியன் சினமிகுந்து "நகுதக்கனரே" (புறநா.72) என்ற செய்யுளால் வஞ்சினங் கூறிப் போருக்கெழுந்து உழிஞைசூடிப் போர் செய்யத் தொடங்கினான். (புறநா.79). எழுவரையும் வென்றான் (புறநா.76). தோற்ற எழுவரும்

ஓடிச் சென்று சோழ நாட்டிற் புகும்போதும் இவன் விடாதுபின் தொடர்ந்து சென்று தலையாலங்கானத்து மறித்து நின்று பெரும் போர் நடத்தி வெற்றி பெற்றான். இடைக்குன்றூர்க் கிழாரால் பாடல் பெற்றவன். இவன் பாடிய புறப்பாடல்:

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய புலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே" (புறநா.72).

நெடுஞ்சேரலாதன் *neḍu-ñ-jēral-ādaṉ,* பெ. (n.) கழக (சங்க)க்கால இலக்கியங்களில் ஒன்றான பதிற்றுப்பத்தினுள் இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன்; the Sērā king, celebrated in the second section of Padiṟṟu-p-pattu.

[நெடுமை + சேரல் + ஆதன்]

சாரல் என்பதன் திரிபு சேரல்> சேரன் எனச் சிலர் கூறுவர். ஆயின் 'சேர்ப்பன்' என்று துறைமுகத்தலைவனைக் கருப்பொருள் பட்டியலில் நம்பியகப் பொருள் சேர்ப்பதால், சேர்ப்பு, சேரல் என்பன துறைமுகத்தைக் குறிக்கும். அதன்வழி சேரல் > சேரன். சேரல் + அம் = சேரலம் > கேரளம் திரிபு பெற்றிருத்தல் அறியலாம்.

நெடுஞ்சேரலாதன்

இவனை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், குடவர்கோமான் நெடுஞ்சேரலாதன் என்பர். இவன் உதியஞ்சேரல் என்னும் வேந்தனுக்கு வெளியன் வேண்மான் மகள் நல்லினியிடம் பிறந்தவன். இவன் இமயம் வரையிற் படையெடுத்துச் சென்று, அம் மலையிலே தன் கொடியை நாட்டினான் (எழுதினான்) என்பதினால், இவனை இமயவரம்பன் என்பர். இவன் தமிழகம் முழுமையையும் ஆண்டான். யவன அரசரைப் போரிற் பிடித்து, அவர்கள் கையைப் பின்கட்டாகக் கட்டி, நெய்யை அவர்கள் தலையிற் பெய்து கொணர்ந்தான் என்றும், மாற்று அரசரிடம் விலையுயர்ந்த அணிகளையும் வயிரங்களையும் திறையாகப் பெற்று, அவற்றைத் தன் வஞ்சியிலுள்ளார்க்குக் கொடுத்தான் என்றும் பதிற்றுப்பத்துக் கூறுகிறது.

இவனுக்கு நற்சோணையிடம் பிறந்த மக்கள் செங்குட்டுவனும் இளங்கோவடிகளும் ஆவர். இவனுடைய மற்றொரு மனைவியான பதுமன் மகளுக்குப் பிறந்த மக்கள் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனு மாவர்.

சேரலாதனைக் குமட்டூர் கண்ணனார் என்னும் புலவர் பாடிய பத்துச் செய்யுட்கள் பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தாக அமைந்துள்ளது. இவன் குமட்டூர்க் கண்ணனார்க்கு உம்பற்காடு என்னும் பகுதியில் 500 ஊர்கள் கொடுத்ததாகவும், தென்னாட்டு வருவாயில் ஒரு பகுதியும் அளித்த தாகவும் 58 ஆண்டுகள் அரசாண்டதாகவும் பதிற்றுப்பத்தின் பதிகம் கூறுகிறது.

"மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மான் நல்லினி யீன்றமகன்
அமைவர லருவி யிமையம் விற்பொறித்
திமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோ னிறீஇத் தகைசால் சிறப்பொடு
பேரிசை மரபி னாரியர் வணக்கி
நெய்தலைப் பெய்து கைபிற் கொளீஇ
அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறன் மூதூர்த் தந்துபிறர்க் குதவி
அமையார்த் தேய்த்த அணங்குடை நோன்றாள்
இமைய வரம்பன் நெடுஞ்சேர லாதன்"
(பதிற்றுப். இரண்டாம். பதி.).

நெடுஞ்சேவிகம் *neḍu-ñ-jēvigam,* பெ. (n.) பனைமரம்; palmyra tree-Borassus flabellifer. (சா.அக.)

நெடுஞ்சொல் *neḍu-ñ-jol,* பெ. (n.) புகழ், புகழ்ச்சொல் (கீர்த்தி) (வின்.) ; fame, renown.

[நெடும் + சொல்]

நெடுத்தல் *neḍuttal,* பெ. (n.) நீண்டுவளர்கை; growing tall. (சா.அக.).

மறுவ. நெடுநெடுத்தல்

[நெடு → நெடுத்தல்]

நெடுந்தகை *neḍu-n-dagai,* பெ. (n.) 1. பெரிய மேம்பாடுள்ளவன்; person of great worth. *"நேராரம் பூண்ட நெடுந்தகை"* (பு.வெ.3:11). *"நெடுந்தகை நின்று நோக்க நீள் கடற் பிறந்த கோல"* (சீவக. 1290). *"நீறுபட்டே யொளி காட்டும் பொன் மேனி நெடுந்த கையே"* (திருவாசக. நீத்தல். 11.). 2. பெரிய நிலையை யுடையவன்; person of great status. *"மொய்யிணர்ப் பூப்பெய் தெரியல் நெடுந்தகை"* (பு.வெ. 4:19). 3. அளத்தற்கரிய தன்மையை யுடையவன்; person of great quality. *"வெய்ய அடுந்திறல் ஆழி அரவணை யாய் என்றும் நெடுந்தகை நின்னையே யாம்"* (பு.வெ. 9:3).

[நெடு → நெடும் + தகை. தகை = தகைமையானவன், உயர்ந்தவன்]

நெடுந்தகைமை *neḍu-n-dagaimai,* பெ. (n.) மேம்பாடு, பெருந்தகைமை; greatness, nobility.

[நெடும் + தகைமை. தகைமை = தகுதி, பெருமை, குணம், மதிப்பு, அழகு, ஒழுங்கு]

நெடுந்தட்டு *neḍu-n-daṭṭu,* பெ.(n.) 1. வானில் பறக்கவிடும் தாள்பட்டவகை (வின்.); a kind of paper-kite. *பையன்கள் மாடியில் நின்று நெடுந்தட்டு விடுகின்றனர்.* 2. பொறுக்க முடியாதது; that which is unendurable. *"ருசியுடை யாரிழக்கை நெடுந்தட்டு"* (திவ்.திருப்பா.5, வியா.பக்.88).

[நெடும் + தட்டு. தட்டு = தட்டு போன்ற பட்டம்.]

நெடுந்தாயம் *neḍu-n-dāyam,* பெ. (n.) அடுத்து ஆடும்படி விழுந்தாயம் (வின்.); a winning cast of dice, as giving the right to throw again.

[நெடும் + தாயம். தாயம் = கவறுருட்ட விழும் ஒன்று என்னும் எண். ஒன்று விழுந்தால்தான் காயை இறக்கி விளையாட்டைத் தொடரமுடியும். ஐந்து, ஆறு, பன்னிரண்டு எண் விழுந்தால் மறுபடி ஆட்டம் உண்டு.]

நெடுந்தாழ்ப்பாள் *neḍu-n-dāḻppāḷ,* பெ. (n.) கதவுக்கிடும் கணையமரம் (வின்.); long wooden bar for a door.

[நெடும் + தாழ்ப்பாள். கதவுக்குத் தடையாக குறுக்கேயிடும் மரம்]

நெடுந்துயில் *neḍu-n-duyil,* பெ. (n.) 1. நீண்ட தூக்கம்; long sleep. *பையன் வேலை செய்த களைப்பால் நெடுந்துயில் கொண்டுவிட்டான்.* 2. இறப்பு (யாழ்.அக.); death. *தாத்தா நெடுந்துயில் கொண்டு நீண்ட நேரம் ஆயிற்று.*

[நெடும் + துயில். துயில் = தூக்கம், சாவு]

நெடுந்துருத்தி *neḍu-n-durutti,* பெ. (n.) நீளமான நீர்வீசுங் கருவி வகை (சீவக.86, உரை); a long squirt. *தோட்டத்துக்கு நீர்ப்பாய்ச்ச வேண்டும், ஒரு நெடுந்துருத்தி வாங்கி வா.*

[நெடும் + துருத்தி. துருத்தி = நீர்விசுங் கருவி, தோற்பை, தோல்]

நெடுந்தூக்கு *neḍu-n-dūkku,* பெ. (n.) தூக்கு ஏழனுள் எழுசீர் கொண்டது (சிலப்.3:16,

அரும்); a measure of time, composed of seven šīr, one of seven *tūkku.*

[நெடும் + தூக்கு. தூக்கு = செய்யுள், பாக்களைத் துணித்து நிறுக்குஞ் செய்யுளுறுப்பு; இசை, தாளம், இரண்டு மாத்திரைக் காலம்]

செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிவுத்தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத் தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கு என்னும் எழுவகைத் தாளத்தில் (தூக்கில்) ஒன்று இரண்டு மாத்திரைக்காலம் ஓசையுடையது.

எ-டு.

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினா லிளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோரென்
நேருறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளா யேழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே யிளைத்தேன்"
(அருட்பா. 203)

"வானுறு மதியை யடைந்ததுன் தட்பம்
மறிகடல் புகுந்ததுன் பெருமை
கானுறு புலியை யடைந்ததுன் சீற்றங்
கற்பக மடைந்ததுன் கொடைகள்
தேனுறு மலரா ளரியிடம் புகுந்தாள்
செந்தழ லடைந்ததுன் மேனி
யானு மென்கலியு மெவ்விடம் புகுவோம்
நந்தியே யெந்தை பிரானே!"
(நந்தி. கலம்,22)

"கடல்கலவு நிலயமிசை மகளிரகல்
குறிபினொரு
கடலைவழி வளுவளென வருமனிதரைக்
கடவுள்சுத ரெனுமிழிவு புரைவொரு
குறைவிழிவு
கழறவழி யெவளவுமில் கடவுண்மகனாய்
மிடன்மகிமை யொளிவடிவ மிளிரவெளி
வருமுருகை
விகிர்தமற வெனதுமன நினைநிலைமையால்
நடலைகெட வவலநசை யுழலைகெட
விதலைகெட
நவிலரிய பரமசுக மதையடைவனே"
(குமரகுரு. பா. 56:1)

"பைந்துளவ மவுலியும யனுமிமைய வருநறிய
பனிமலர்கள் கொடுபுசனை புரிபவளர்தே
உய்ந்திடவுள் கிருடிகண லுபநிடத மவுனமுள
ருயர் மகிமை யுடையவர்க ணினைவிலுளகோ
ஐந்துமுக னுருவினிட மிளிரமலை
முருகனெனு
மருளிறையென் மனமதனி லுளளினியரோ
நைந்தொழியு மறமுழுது முதியமல வலியழிவு
நடுவுடைய நமனுருமும் வருவதிலையே"
(குமரகுரு. பா, 56:4)

"ஆறுதலை வைத்தமுடி நீணிலவெ
றிப்பவெமை
யாளுடைய பச்சை மயிலோ
டீறுமுத லற்றமது ராபுரியி லுற்றபர
மேசரொரு சற்று முணரார்
நீறுபடு துட்டமதன் வேறுருவெ டுத்தலரி
னீள்சிலைகு னித்து வழிதே
னூறுகணை தொட்டு வெளி
யேசமர்வி ளைப்பதுமென்
னூழ்வினைப லித்த துவுமே"
(மதுரைக்கலம். 19)

நெடுந்தூரம் *neḍu-n-dūram,* பெ. (n.) நீண்டதொலைவு; great distance, long way. ***நெடுந்தூரம் நடந்த களைப்பால் கண்ணயர்ந்து விட்டான்.***

[நெடும் + தூரம். Skt. தூர > த - தூரம் = தொலைவு]

நெடுந்தெய்வம் *neḍu-n-deyvam,* பெ. (n.) பெருமையும் புகழும் வாய்ந்த தெய்வம்; great deity. *"நீங்கிய தாங்கு நெடுந்தெய்வந் தானெனன்"* (மணிமே.10:93). ***நெடுந்தெய்வக் கோயிலுக்குச் சென்று வந்தால் தீராத துன்பம் எல்லாம் தீரும்.***

[நெடும் + தெய்வம்]

நெடுந்தெரு *neḍu-n-deru,* பெ. (n.) 1. அங்காடிகள் நிறைந்த தெரு; bazaar street. ***நெடுந்தெருவில்தான் ஒரு கடை வைக்க வேண்டும்.*** 2. பெரியதெரு; main street, high road. *நெடுந்தெருவில் தான் அவன் வீடு உள்ளது.* *"பொன்னெடுந்தெரு விடை"* (கம்பரா. நகர்நீங்கு. 187).

[நெடும் + தெரு]

நெடுந்தொகை *neḍu-n-dogai,* பெ. (n.) நெடுந்தொகை நானூறு (பன்னிருபா.159) பார்க்க; see *neḍu-n-dogai-nāṉūṟu.*

[நெடும் + தொகை. தொகை = தொகுத்த நூல்]

நெடுந்தொகைநானூறு *neḍu-n-dogai-nāṉūṟu,* பெ. (n.) நானூறு, நீண்ட பாடல்களைக் கொண்ட அகநானூறு (இறை,1, பக்.5); the poem Aganāṉūṟu, as being a collection of 400 lengthy stanzas.

மறுவ. அகநானூறு

[நெடுந்தொகை + நானூறு]

குறுந்தொகை 4 முதல் 8 அடிவரையும் நற்றிணை (நட்டினை) 9 முதல் 12 அடிவரையும் அமைந்த பாடல் கொண்டவை. அகநானூறு 13 முதல் 31 அடிவரை வருவதால் நெடுந்தொகை என்று பெயர் பெற்றது. அகநாறூற்றுக்கு மேல் குறிஞ்சிப்பாட்டு 103 அடி முதலாக மதுரைக்காஞ்சி 753 அடிவரை அமைந்தவைப் பத்துப்பாட்டு ஆயின.

நெடுந்தொகை நானூறு என்னும் அகநானூறு:

'அகம்' என்ற பெயரமைந்த பழைய இலக்கிய நூல் இஃது ஒன்றேயாகும். இது பல்வேறு புலவர்களால் இயற்றப்பட்ட நானூறு பாடல்களைக் கொண்டது. மதுரை உப்பூரி குடிக்கிழார் மகனார் உருத்திரசன்மனார் இப்பாடல்களைத் தொகுத்தார். கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். சிவ பெருமானைப் பற்றிய பாடல் இது. அகநானூறு, அகம் பற்றிய எட்டுத்தொகை நூல்களில் நீட்சி உடையதாகையால் 'நெடுந்தொகை' எனவும் வழங்குகிறது. அகநானூறு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் பகுதியான களிற்றி யானை நிரை, முதல் நூற்றிருபது பாடல்களைக் கொண்டது. அடுத்த பகுதியான மணிமிடைப் பவளம், அடுத்த நூற்றெண்பது பாடல்களைக் கொண்டது. இறுதிப் பகுதியான நித்திலக் கோவை, இறுதி நூறு பாடல்களைக் கொண்டது. பாடிய புலவர் நூற்று நாற்பத்தைவர். சிற்றெல்லையாக 13 அடிகளையும், பேரெல்லை யாக 31 அடிகளையும் இந்நூல் கொண்டுள்ளது. இந்நூலைத் தொகுப்பித்தோன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. அகநானூற்றுப் பாடல்கள் ஓர் ஒழுங்கு முறையினை அடிப்படையாகக் கொண்டே கோக்கப்பட்டுள்ளன.

1, 3, 5, 7, 9 முதலான ஒற்றை எண்பெற்ற பாடல்கள் பாலைத் திணையாகவும், 2, 8, 12 முதலான (இரண்டும் எட்டுமான) எண் பெற்றவை குறிஞ்சித் திணையாகவும், 14 என நான்கை ஒட்டிய எண் பெற்றவை முல்லைத் திணையாகவும், 6, 16 முதலான ஆறு எண் பெற்றவை மருதத் திணையாகவும், 10, 20 எனப் பத்துகளாலாய எண் பெற்றவை நெய்தல் திணையாகவும் கோக்கப்பட்டுள்ளன.

பல அழகிய அகப்பாடல்களைக் கொண்டது அகநானூறு.

குழந்தையின் அழகினை வருணனை முகத்தான் கழகக் காலப் புலவர் பின் வருமாறு இனிதுற வடித்திருக்கக் காணலாம்.

"நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி அயலிதழ் புரையும்
மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப்
புதல்வன்" – (அகம் 9)

'செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி
இன்றுவால் உரைமோ சென்றிசினோர்
திறத்து என
இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென
மழலை இன்சொல் பயிற்றும்
நாணுடை அரிவை........................' –
(அகநா. 34)

போன்ற பகுதிகள் இலக்கிய வானில் இணையற்று எஞ்ஞான்றும் ஒளிவீசித் திகழ்கின்றன. இவை முதல் பகுதியான களிற்றி யானை நிரையில் உள்ளவை.

தித்தன், நன்னன், பிட்டன், பண்ணன், கோசர், மோரியர், பாரி, காரி, கொடித்தேர்ச் செழியன், அத்தி, கங்கன், கட்டி, புல்லி முதலியவர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை நாம் அகநானூற்றில் காண்கிறோம். மக்கட் பேற்றின் சிறப்பினைச் சில பாடல்கள் எடுத்தியம்புகின்றன. ஐந்து நிலங்களின் வண்ணனை பொருத்தமுற, அழகுற, படிப்பவர் மனத்திரையில் காட்சிகளை விரிக்கின்ற அளவுக்குப் படம் தீட்டிக் காட்டப்படுகின்றன. நல்ல உவமைகளும், உள்ளுறைப் பொருள்களும் ஆங்காங்கே விரவி வரக் காண்கிறோம். புலவர்கள் ஒருவர்பால் மற்றொருவர் கொண்ட மதிப்பினைக் கண்டு வியக்கிறோம்! குடவோலை மூலம் நாட்டுக்கு வேண்டிய நல்லவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை ஓர் அகப்பாடல் விளக்குகிறது. ஆதிமந்தியார் என்னும் பெண்பாற்புலவர் பேதுற்று அலைந்த காட்சியை ஒரு புலவர் குறிப்பிடுகிறார். திருமணம் அக் காலத்தில் எவ்வாறு நிகழ்ந்தது என்பதை நாம் அறிய

வேண்டுமானால், அகநானூற்றில் அமைந்துள்ள நல்லாவூர் கிழாரின் பாடலையே நாட வேண்டியுள்ளது. இவ்வாறு பல வகைச் சிறப்புகளையும் கொண்டு திகழ்கிறது அகநானூறு என்னும் நெடுந்தொகை நானூறு.

நெடுந்தோட்டி *neḍu-n-dōṭṭi,* பெ. (n.) பெரிய துறட்டி (அங்குசம்) (சீவக.1835, உரை); a large goad.

[நெடும் + தோட்டி. தோட்டி = துறட்டி, கூரிய கருவி]



நெடுநல்வாடை *neḍu-nal-vāḍai,* பெ. (n.) தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மேல் நக்கீரனாராற் பாடப்பட்டதும் கழக (சங்க) இலக்கியமான பத்துப்பாட்டினுள் ஏழாவதுமான பாட்டு; the seventh ode of Pattu-p-pāṭṭu by Nakkiraṉār, celebrating Neḍu-ñ-jeḻiyaṉ of Talaiyālaṅ gāṉam fame.

[நெடும் + நல்வாடை. நீண்ட நல்வாடை]

நெடுநல்வாடை

இது 'கோல நெடுநல்வாடை' என்று சிறப்பிக்கப் பெறும் எட்டுத்தொகை நூல்; 188 அடிகளைக் கொண்டது; ஆசிரியப் பாவால் அமைந்தது; பகைமேற் சென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு அவ்வருத்தம் நீங்கும் பொருட்டு அவன் பகையை வென்று விரைவில் வருவானாக என்று கொற்றவையைப் பரவும் பெண் கூறுவதாக உள்ளது.

நெடுநல்வாடை என்பது நெடிதாகிய வாடை என விரியும். தலைவனைப் பிரிந்து வருந்தி வாடும் தலைவிக்கு ஒரு பொழுது ஓரூழியைப்போல் நெடிதாகிய வாடையாகவும், அரசன் இன்பத்தில் மனமற்று வேற்றுப்புலத்துப் போந்திருந்த இருப்பு அவனுக்கு வெற்றியைத் தரும் ஆகலின் அவனுக்கு நல்லது ஆகிய வாடையாகவும் ஆனமையின் 'நெடுநல்வாடை' எனப் பெற்றது.

நெடுநல்வாடை, சுட்டி ஒருவர்ப் பெயர் கொள்ளாமையின் அகப்பொருளாமேனும், "வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்" என வேந்தனது அடையாளப் பூவாகிய வேம்பைக் கூறினமையின் அகம் ஆகாது புறனே யாயிற்று; கூதிர்ப்பாசறை கூறுதலின் வாகைத்திணை யாயிற்று; கொற்றவை நிலை கூறுதலின் வஞ்சியின் தொடர்புண்டு. நெடுநல்வாடையின் 188 அடிகளில் முதல் எழுபத்திரண்டடிகளில் கூதிர்காலத்தியல்பும், அடுத்து நாற்பத்திரண்டடிகளில் கோயிலும், கோயிலுள் ஆடவர் குறுகா அருங்கடி வைப்புகளும், அவற்றுள் தலைவியிருக்கும் இல்லமும், அடுத்த இருபத்தோரடிகளில் தலைவி யமர்ந்திருக்கும் யானையின் கொம்பாலாகிய (தந்தக்) கட்டிலும் சேக்கையும், அடுத்த 31 அடிகளில் தலைவி வருத்தத்துடன் இருக்கும் இயல்பும், பின் இரண்டடிகளில் கொற்றவையை வேண்டிக் கோடலும், இறுதியிலுள்ள இருபதடிகளில் தலைவன் பாசறை யிருப்பும் கூறப்பெற்றுள்ளன.

இப்பாடலில் தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் இயல்பு, பாசறையில் இருந்த மன்னனின் திறமும் சிறப்பாகக் கூறப்படுகிறது. மற்றும் கூதிர்க்காலத்தில் குளிர் மிகுதியால் ஆக்கள் கன்றுக்குப் பால் கொடாமல் உதைக்கும்; இடையர்கள் குளிர்ச்சி மிகுதியால் கையை நெருப்பிலே காய்ச்சி அதிற் கொண்ட வெம்மையைக் கன்னத்தில் படுத்துவர்.

"ஆரந்தாங்கிய அலர் முலையாகத்து, பின்னமை நெடுவீழ் தாழ"-என்ற அடிகளில் நெடுவீழ் என்பதற்கு 'நெடியதாலி' என்று நச்சினார்க்கினியர் பொருள் தருவதால், தாலிகட்டும் மரபு இருந்தது அறியப்படும். வீழ் என்பதை மயில் என்பாரும் உளர்.

"தாம்வீழ்வார் மென்தோல் துயிலின் இனிது கொல்" (குறள், 1103). இக்குறளில் 'வீழ்' என்பது விரும்பற் பொருளில் வந்துள்ளது காண்க. விரும்பத்தக்கவை மயிலும், தாலியுமாகலாம்.

அரச மாளிகையைப்பற்றிய செய்திகள் கூறப் படுகின்றன. மாளிகையின் கதவுகளில் துருப்பிடிக் காதபடி சாதிலிங்கம் பூசப் பெற்ற இருப்புக் கதவுகள்

பொருத்தப்பட்டிருக்கும் நிலாமுற்றம் உண்டு. யவனர் இயற்றிய தொழில் மாட்சிமைப்பட்ட பாவை விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும். தலைவி பள்ளி கொள்ளும் யானை மருப்பாலான கட்டில், வாயில் நிலை, கதவம், முதலியவற்றின் நுட்பமமைந்த தொழிற்றிறங்களால் அக்காலத்துத் தொழில் திறனை அறியலாம். அன்றியும் அக்காலத்து மக்களின் வானநூற் புலமையையும் மனை நூற் புலமையையும் இந்நூல் தெள்ளிதின் விளக்கும்.

விலங்குகள் மேயுந்தொழிலை மறந்தன; மரத்திலுள்ள பறவைகள் கீழே வீழ்ந்தன; ஆக்கள் கன்றை உதைத்துக் கடிந்தன; குன்றையுங் குளிர்விக்கும் நடுயாமத்தில் முசுண்டைக்கொடியும் பீர்க்கும் தூறுகள் தோறும் மலர்ந்தன; கொக்குக்களும் நாரைகளும் ஈரமணலி லிருந்து கவரும்படி கயல் மீ ன்கள், அற்ற நீரில் எதிரே வந்தன; மேகங்கள் சிறிய துளிகளைத் தூற்றின; வயல்களில் நெற்கதிர்கள் வளைந்தன; கமுகமரங் களிற் பாக்குகள்முற்றின; பொழில்களில் மழைத்துளி கள் மாறமல் வீழ்ந்தன; மாடங்கள் உயர்ந்த ஊர் களிலுள்ள வீதிகளில் முறுக்குண்ட உடம்பினராகிய மாக்கள் கள்ளையுண்டு களித்து மழைத்துளிக்கு அஞ்சாமல் திரிந்தார்கள்; அழகிய கையையுடைய மகளிர் பூந்தட்டிலே இட்டு வைத்த பிச்சி மலர்கள் அலர்ந்தன; அவற்றின் அலர்ச்சியால் மாலைக் காலத்தின் வருகையை அம்மகளிர் அறிந்து விளக்கையேற்றி நெல்லையும் மலரையும் தூவித் தெய்வத்தைத் தொழுது மாலைக்காலத்தைக் கொண்டாடினார்கள்; வீட்டில் இருக்கும் புறாச்சேவல் பெடைகளோடு மன்றங்களிற்சென்று இரைதேடி உண்ணாமல் இரவும் பகலும் மயங்கிக் கொடுங்கையைத் தாங்கும் பலகைகளில் இருந்தன; சந்தனம் முதலியவற்றை அரைப்பதற்காக வடநாட்டிலுள்ளாரிடமிருந்து பெற்ற சந்தனக்கல்லும் தென்றிசையிற்பெற்ற சந்தனக் கட்டையும் பயனற்றுக் கிடந்தன; மகளிர் தம் கூந்தலில் மாலைகளை முடியாமல் சில மலர்களை மட்டும் வைத்து முடிக்க விரும்பிக் கூந்தலைப் புலர்த்துதற்கு அகிற்புகையை உண்டாக்கினர்; விசிறிகள் உறைகளிலே இடப்பெற்றுச் சிலந்தி கூடு கட்டும்படி முளையிலே தூங்கின; உயர்ந்த மாடங்களின் மேல்நிலையில் வேனிற்காலத்தில் தென்றல் வரும் சாளரங்களின் கதவுகள் தாழிட்டுக்கிடந்தன. எங்கும் மழைத் தூளி தூற்றப்படுவதனால் எல்லோரும் தண்ணீரை அருந்தாமல் தூபமுட்டியிலுள்ள நெருப்பின் வெம்மையை நுகர்ந்தனர்; ஆடல் மகளிர் பாடுதற்காகக் குளிர்ச்சியால் நிலைகுலைந்த யாழ் நரம்பைத் தம் மார்பிற்றடவி அங்குள்ள வெப்பத் தினால் பண்ணை முறைப்பட நிறுத்தினர்; கணவரைப் பிரிந்த மகளிர் வருந்தினர்; மழை நிறைந்தது; இவ்வாறு கூதிர்க்காலம் நிலை பெற்றது.

தலைவியிருக்கும் இவ்வரண்மனை, நல்ல வேளையிற் சிற்பநூலறிந்தார் நூலைப்பிடித்துத் திசைகளைக் குறித்துக்கொண்டு அத்திசைகளிலுள்ள தெய்வங்களையும் ஆராய்ந்தறிந்து பெரிய அரசருக்குத் தக மனையை வகுத்து அமைத்த மதிலையுடையது; பருத்த இரும்பாலே கட்டிச் சாதிலிங்கத்தைப் பூசி இரட்டைக் கதவு களையமைத்து, உத்தரக் கற்கவியிலே குவளைப்பூக்களும் பெண்யானைகளுமாகிய சித்திரங் களையமைத்து, கைத்தொழில்வல்ல தச்சன் இயைத்தனாற் குற்றமற்று விளங்குவனவும், சிறுகடுகை யப்பிநெய்யையணிந்த நெடியநிலையினை யுடையனவும், கொடியோடுயானை புகத்தக்க உயர்ச்சியை யுடையனவுமாகிய வாயில்களையுடையது; திருமகள் நிலைபெற்ற சிறப்பினையுடையது; மணல்பரந்த முற்றத்தையும் கவரிமான், அன்னம் என்பன திரியும் வாசல்முன் பினையும் உடையது. அங்கே, குதிரைகள் புல்லுணவைக் குதட்டும் ஓசையோடே நிலாமுற்றத்திலிருந்து வந்துவிழும் மழைநீர்த்தாரையின் ஓசையும் கலந்து மலையின் ஆரவாரம்போல ஒலிக்கும். இதனுள்ளேயுள்ள அந்தப்புரத்தில் சிலமகளிர் யவனர் இயற்றிய பாவைவிளக்கில் நிறைய நெய்யைச் சொரிந்து விளக்கு ஒளிமழுங்கும்போதெல்லாம் நெய்யை வார்த்துத் தூண்டி இருள்நீங்கச் செய்வார்கள். அவ்விடம் பாண்டியனன்றிப் பிற ஆண்மக்கள் அணுகாத காவலையுடையது; மலைகளைப் போன்ற உயர்ச்சியையும் இந்திரவில்லைப்போன்ற கொடி களையும் நீலமணியைப்போன்ற கருமை யையுடைய திரண்ட தூண்களையும் கொண்டுள்ளது; செம்பினாற் பண்ணினாலொத்த சுவர்களில் ஒருகொடி எழுதப்பெற்றது. அதனுள் தலைவி ஒரு பெரிய வட்டக்கட்டிலிற் படுத்திருக் கின்றாள். அக்கட்டில், நாற்பது அகவை (பிராயத்தை)யுடையதும் போரிற் பொருதுபட்டதுமாகிய யானையின் கொம்பை வெட்டிக் கனமும் செம்மையும் ஒப்பத் தச்சன் உளியாலே இயற்றி இலைத்தொழிலை இடையே அமைத்த திரண்ட குடங்களையும் உள்ளிப்புட்டிலைப்போன்ற அடியினையும் உடையது. அதில் முத்தையுடைய சாளரங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. புலிவடிவம் பொறித்த பூத்தொழிலை யுடைய கச்சுக்கள் இடமறையும்படி கட்டப்பட்டிருக் கின்றன. நிறம் ஊட்டப்பெற்ற பலசேணங்களை விரவவைத்து மான்வேட்டம் எழுதி முல்லை முதலிய மலர்களை நிரைத்து மெல்லிதாக விரித்த படுக்கை இடப்பட்டிருக்கிறது; அதன்மேல் அன்னத்தின் தூவியைப் பரப்பி அணைகளையிட்டுவைத்துத் துகில்களில் தூயவற்றை விரித்த பாயலில் அவள் இருக்கின்றனள். முன்பு முத்துமாலையை அணிந்திருந்த அவளுடைய மார்பில் தாலி

நாணொன்றுமே தாழ்ந்திருக்கிறது; தன் கணவன் பிரிந்தமையினால் நெற்றியினிடத்து உலறிக்கிடந்த சிலவாகிய அளகத்தையும், குழைகளைக் களைந்து தாளுருவியை அழுத்தினகாதையும் உடையவளாய், பொன்னாலாகிய தொடியை அணிந்திருந்த கைகளிற் சங்குவளையை அணிந்து, காப்பு நாணைக்கட்டிக் கொண்டு, முடக்கென்னும் விரற்செறியை (மோதிரத்தை)யும் பூத்தொழிலையுடைய ஆடை உடுக்கப் பெற்றிருந்த இடையில் மாசேறி விளங்கிய நூற்புடைவையையும் உடையளாய் வண்ணங் கொண்டெழுதாத சித்திரத்தைப் போலத் தோன்று கின்றனள். அழகிய மகளிர் துயிலச் செய்தற்கு எண்ணித் தன் அடியை மெல்ல வருடவும், செவிலியர்கள் குறியவும் நெடியவுமாகிய பொய்யும் மெய்யுங்கலந்த மொழிகளைப் பலகாற் சொல்லி, "இப்பொழுதே நின்காதலர் வருவார்" எனக்கூறவும் அவள் மனம் பொருந்தாளாயினுள்; மிக வருந்து கின்றாள்; கட்டிலின் மேற்கட்டியில் எழுதியுள்ள பன்னிரண்டு ஓரைகளில் (ராசிகளில்), சந்திரனோடு உள்ள உரோகிணியைப் பார்த்துத் தானும் அவ்வாறு தன் கணவனோடு இருக்கப் பெறாமையை நினைந்து நெட்டுயிர்ப்புக் கொண்டு கண்ணில் துளித்த நீர்த்துளிகளைத் தன்கைவிரலாற் கடைக்கண்களிற் சேர்த்தித் தெறித்துத் தனிமையாய் இருக்கின்றாள். இத்தகைய அன்புடைய தலைவிக்குத் தீதாயிருக்கின்றன ஆற்றுதற்கரிய துன்ப நினைவு தீரும்படி தலைவன் வருவானாக.

பாசறையிலுள்ள தலைவன் போர்க்களத்தே துதிக்கைகள் நிலத்திற் புரளும்படி களிறுகளைக் கொன்ற வீரருடைய விழுப்புண்ணைக் காணக்கருதித் தானிருக்கும் இடத்திற்குப் புறம்பே வந்து வாடைக்காற்று அடிக்குந்தோறும் விளக்கிலெரிகின்ற சுடர்கள் தென்றிசை நோக்கிச் சாய்ந்த தலையினை யுடையன வாய் எரியா நிற்க வேப்பமாலையைத் தலையிற் கட்டிய வேலோடே முன்னேசெல்கின்ற சேனாபதிவீரர்களைமுறையே தனக்குக்காட்டிக் கொண்டுவரத் தன் தோளினின்றும் நழுவி வீழ்கின்ற உடையை இடப்பக்கத்தே தழுவிக்கொண்டு வாளையுடைய வீரனது தோளில் வலக்கையை வைத்தவனாகி முகமலர்ச்சியோடு வந்து மாலையையுடைய கொற்றக்குடை மழைத்துளியை மறைக்க நடுயாமத்திலும் படுத்துறங்காமற் சில வீரர்களோடு புண்பட்ட வீரர்களைப் பார்த்துத் திரியா நிற்பான். அத்தகைய வேந்தன் பாசறையிடத்திலிருந்து பலரோடு செய்யும் போர்த்தொழில் அவனுக்கு வெற்றியைக் கொடுத்து இப்பொழுதே முடிவதாக. (உ.வே.சா.)

"வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோற் கோவலர்
ஏறுடை யினநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள்கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயன் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்."

(நெடுநல்.1–12)

நெடுநாக்கு *neḍu-nākku,* பெ. (n.) மங்கல் நிறமுள்ள கடல்மீன் வகை; sea - fish, brownish.

[நெடும் + நாக்கு. நீண்ட நாக்கும் மங்கலான நிறமும் உடைய கடல் மீன்வகை]



நெடுநாக்குப்பூச்சி *neḍu-nākku-p-pūcci,* பெ. (n.) நாக்குப்பூச்சி வகை (M.L.) ; round nematoid intestinal worm.

[நெடும் + நாக்குப்பூச்சி. நீண்ட நாக்குப்பூச்சி வகை]

நெடுநாட்சுரம் *neḍu-nāṭśuram,* பெ. (n.) நீண்ட நாளாகத் தொடரும் காய்ச்சல்; long continued fever chronic fever. (சா.அக.).

[நெடுநாள் + சுரம்]

நெடுநாட்டு *nedu-nāttu,* பெ. (n.) ஒருவகைப் பெரு மரம் (L.) ; Tranvancore lance wood.

மறுவ. கானக்கைதை

நெடுநாட்பழக்கம் *nedu-nāt-palakkam,* பெ. (n.) *நெடும்பழக்கம்* (உ.வ.) பார்க்க; see *nedu-m-palakkam.*

[நெடு + நாள் + பழக்கம்]

நெடுநார் *nedu-nār,* பெ. (n.) ஒருவகைக் காப்பிச் செடி; a kind of dooduga, Polyalthia coffeeoides. (சா.அக.).

[நெடு + நார்]

நெடுநாரை[1] *nedu-nārai,* பெ. (n.) செந்நாரை; a kind of red stork.

[நெடும் + நாரை]

நெடுநாரை[2] *nedu-nārai,* பெ.(n.) **1.** பெரிய மர வகை (L.); fragrant cherry-nutmeg, Polyalthia fragrans. **2.** மரவகை; Wynaad coffee cherry-nutmeg, Polyalthia coffeeoides.

மறுவ. கோடாஞ்சி

[நெடும் + நாரை. நாரை = நாரை போல் வெண்மையான பெரிய மரவகை.]

நெடுநாவை *nedu-nāvai,* பெ. (n.) கலப்பையின் நீண்டகொழு(வின்.); long ploughshare. *கலப்பைக்கு நெடுநாவைப் போட வேண்டும்.*

மறுவ. கலப்பைக்கொழு.

[நெடு + நாவை. நா → நாவை = கலப்பையின் கொழு நுனி.]

நெடுநாள் *nedu-nāḷ,* பெ. (n.) நெடுங்காலம் (யாழ்.அக.); long time. *நண்பனைப் பார்த்து நெடுநாள் ஆகிவிட்டது. நெடுநாள் கழித்து ஊருக்கு வந்துள்ளான்.*

மறுவ. நீண்டநாள்.

[நெடு + நாள்]

நெடுநிகழ்ச்சி *nedu-nigalcci,* பெ. (n.) நீண்டகாலம்; long period, long duration of time, opp. to kuru-nigalcci. "*மேலுங் கற்பத் தின்னெடு நிகழ்ச்சியும்*" (மணிமே.27:192).

மறுவ. நெடுங்காலம்

[நெடும் + நிகழ்ச்சி]

நெடுநிரை *nedu-nerai,* பெ. (n.) நீண்ட அணிவகுப்பு; a long battle array. "*நிலனுற நிமிர்தானை நெடுநிரை நிவப்பன்ன*" (பரிபா.7:7).

[நெடும் + நிரை. நிரை = வரிசை]

நெடுநீட்டு *nedu-nīttu,* பெ.(n.) **1.** மிகு தொலைவு; long distance. *நெடுநீட்டு நடந்து போக வேண்டும்.* **2.** வெகுநீளம்; great length. *நெடுநீட்டுப் பாதை. நெடுநீட்டுச் சுவர்.*

[நெடும் + நீட்டு. நீட்டு = நீளம்]

நெடுநீர் *nedu-nir,* பெ. (n.) **1.** அகலமான கடல் (வின்.); sea, as wide. **2.** நீட்டித்துச் செய்யும் இயல்பு; dilatoriness, disposition to procrastinate. "*நெடுநீர் மறவி மடிதுயி னான்கும்*" (குறள்,605).

[நெடும் + நீர். அகலமான கடலை குறித்த நெடுநீர் என்னும் சொல் காலம் நீட்டித்துச் செய்யும் இயல்பையும் குறித்தது.]

நெடுநீலி *neḍu-nīli,* பெ.(n.) **1.** செந்தாழை; false kateerah - Sterenlia urens. **2.** சிவப்புத் தாழை; fragrant screwpine - Pandanus odoratissinus. (சா.அக.).

நெடுநீளம் *neḍu-nīḷam,* பெ. (n.) நேர்நீளம்; straight length.

[நெடும் + நீளம்.]

நெடுநெடு—த்தல் *neḍu-neḍu-,* 4செ.கு.வி. (v.i.) *நெடுநெடுகு—*பார்க்க; *see neḍu-nedugu.*

[நெடு + நெடு—நெடுநெடு → நெடுநெடு—த்தல்]

நெடுநெடுகு—தல் *neḍu-neḍugu-,* 5செ.கு.வி. (v.i.) மிக நீண்டு அல்லது உயர்ந்து இருத்தல் (யாழ்ப்.); to be very long, tall or high. *மரம் நெடுநெடுகென வளர்ந்துள்ளது.*

[நெடு + நெடுகு → நெடுநெடுகு—தல்]

நெடுநெடுவென்று *neḍu-neḍu-v-eṉṟu,* வி.எ. (adv.) குறிப்பிடத்தக்க அளவுக்கு உயரமாக; very tall. *ஒரு மாதத்திற்குள் செடி நெடு நெடுவென்று வளர்ந்து விட்டது.*

[நெடு + நெடு + என்று]

நெடுநெடெனல்[1] *neḍu-neḍeṉal,* பெ.(n.) *நெடநெடெனல்* (திவா.) பார்க்க; see *neḍa-neḍeṉal.*

[நெடநெடெனல் → நெடுநெடெனல்.]

நெடுநெடெனல்[2] *neḍu-neḍeṉal,* பெ.(n.) வளர்ச்சிக் குறிப்பு; expr. signifying tall growth. *நெடுநெடென பையன் வளர்ந்து விட்டான்.*

[நெடு + நெடு + எனல்]

நெடுநேரம் *neḍu-nēram,* பெ. (n.) மிகுநேரம்; long time.

[நெடும் + நேரம்]

நெடுநோக்கு *neḍu-nōkku,* பெ.(n.) வருங்காலத்தில் ஏற்படக்கூடிய நலனைக் கருத்தில் கொண்ட கணிப்பு; farsightedness. *அரசியல் திட்டங்கள் நெடுநோக்குடன் தீட்டப்பட வேண்டும்.*

[நெடும் + நோக்கு — நெடுநோக்கு = தொலைநோக்கு]

நெடுப்பம் *neḍuppam,* பெ. (n.) நீளம், நீட்சி(வின்.); length, height.

தெ. நிடுப்பு; **ம.** நெடுப்பு.

[நெடு → நெடுப்பு → நெடுப்பம்]

நெடுப்பிணை *neḍuppiṇai,* பெ. (n.) வங்க மணல் (யாழ்.அக.); oxide of lead.

மறுவ. ஈயமணல்

நெடுப்பு *neḍuppu,* பெ. (n.) நீளிப்பு; long.

[நெடு → நெடுப்பு]

நெடும் *neḍum,* பெ.எ.(adj.) காலம் அல்லது நீளத்தைக் குறித்து வரும் நீண்ட; long in time and length. *நெடுந்தொலைவு நடக்க வேண்டி இருக்கும். நெடுங்காலத்துக்கு முந்திய கதை. நெடும் பகலுக்கும் சாயுங்காலம் உண்டு* (பழ.)

[நெடு → நெடும்]

நெடும்பகை *neḍu-m-pagai,* பெ. (n.) நீண்ட காலமாயுள்ள பகை (உ.வ.); long-cherished

enmity. *அந்தக்குடும்பத்துக்கும் இந்தக் குடும்பத்துக்கும் நெடும்பகையுள்ளது.*

ம. நெடும்பக

[நெடும் + பகை]

நெடும்பயணம் *neḍu-m-bayaṇam,* பெ. (n.) **1.** நீண்ட தொலைவு செல்லுகை; long journey or voyage. *அமெரிக்காவுக்கு நெடும்பயணம் சென்று வந்தார்.* **2.** இறப்பு; death. *அவன் தாத்தா நேற்று நெடும்பயணம் சென்று விட்டார்.*

[நெடும் + பயணம். பயணம் = செலவு]

நெடும்பல்லியத்தனார் *neḍu-m-palliyattaṉār,* பெ. (n.) கழகக் காலப்புலவர்; a Saṅgam poet.

[நெடும் + பல் + இயம் + அத்து + அன் + ஆர்]

இயம் என்பது இசைக் கருவிகளைக் குறிக்கும். இவர் பல இசைக் கருவிகளை இசைப்பதில் உள்ள வல்லமைப் பற்றி இப்பெயர் பெற்றார் போலும். இவர் தம் செய்யுளில், *"நல்யாழாகுளி பதலையொடு சுருக்கிச் சொல்லாமோ"* (புறநா.64) என்று கூறுவதும் இதனை வற்புறுத்தும். குறுந்தொகையில் (குறுந்.203) உள்ள இவர் பாடிய செய்யுளைப் பாடியவர் *'நெடும் பல்லியத்தை'* எனவும் பாட வேறுபாடுள்ளது. இவர் பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடியுள்ளார்.

"மலையிடை யிட்ட நாட்டரு மல்லர்
மரந்தலை தோன்றா ஊரரும் அல்லர்
கண்ணிற் காண நண்ணுவழி இருந்தும்
கடவுள் நண்ணிய பாலோர் போல
ஒரீஇ யொழுகும் என்னைக்குப்
பரியலென் மன்யான் பண்டொரு காலே"
(குறுந்.203)

இப்பாடலில் தலைவியினது தூய தன்மையினால் பரத்தைமையுடைய தலைவன்; அதிலிருந்து நீங்கி ஒழுகுவதற்கு முனிவரது தூய்மையைக் கண்டு தூய்மை யில்லாதார் அஞ்சி விலகி யொழுகுவதை இவர் உவமையாகக் கூறியுள்ளார்.

இவர் பாடிய புறநானூற்றுப் பாடல்:

"நல்யா ழாகுளி பதலையொடு சுருக்கிச்
சொல்லா மோதில் சில்வளை விறலி
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
விசும்பா டெருவை பசுந்தடி தடுப்பப்
பகைப்புல் மரீஇய தகைப்பெருஞ் சிறப்பிற்
குடுமிக் கோமாற் கண்டு
நெடுநீர்ப் புற்றை நீத்தனம் வரற்கே"
(புறநா.64)

நெடும் பல்லியத்தன் என்னும் பெயர் ஆண்பாற்கும் நெடும்பல்லியத்தை யென்பது பெண்பாற்கும் வழங்கும். இப்பாட்டின் முதலடியில் யாழ், ஆகுளி, பதலை, யெனப் பல்லியங்களைத் தொகுத்துக் கூறுதலின் இவர் நெடும்பல்லியத்தனார் ஆயினாரெனக் கருதுவோரும் உளர்.

நெடும் பல்லியத்தை *neḍu-m-palliyattai,* பெ. (n.) கழகப் காலப் பெண்பாற் புலவர்; a woman poet in Saṅgam age.

இவர் பெயரைக் கொண்டு, பல இசைக்கருவிகளிற் பயிற்சியுடையவர் எனத் தெரிகிறது. நெடும் பல்லியத்தனார் என்னும் ஆண்பாற் புலவரும் உண்டு. தலைவி தலைவனுக்கு அரியளா யிருத்தற்கு மூன்றாம் பிறை, கண்டு தொழுவோர்க்கு அரிய தாயிருத்தலை உவமை கூறியுள்ளார். இவர் பாடியது குறுந்தொகை.178.

"அயிரை பரந்த அந்தண் பழனத்து
ஏந்தெழில் மலர தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கிவள்
இடைமுலைக் கிடந்தும் நடுங்கல் ஆனீர்
தொழுதுகாண் பிறையிற் றோன்றி யாம்நுமக்கு
அரியமாகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே"
(குறுந்.178)

நெடும்பழக்கம் *neḍu-m-baḻakkam,* பெ. (n.) **1.** நீண்ட வழக்கம் (அனுபவம்); extensive practice, wide experience. *அறிவியல் துறையில் அவருக்கு நெடும் பழக்கம் உண்டு.* **2.** நீடித்த நட்பு; long acquaintance. *அவர் குடும்பத்துக்கும் இவர் குடும்பத்துக்கும் நெடும் பழக்கம் உள்ளது.*

[நெடும் + பழக்கம். பழக்கம் = பயிற்சி, ஒழுக்கம்.]

நெடும்பழி *neḍu-m-baḻi,* பெ. (n.) அழியாத பழி (கம்பரா.அகலிகை.77); lasting disgrace. *அந்தச் செயலைச் செய்ததால் அவருக்கு நெடும்பழி வந்து சேர்ந்தது. வாலியைக் மறைந்து நின்று கொன்றதால் இராமனுக்கு நெடும்பழி வந்தது.*

[நெடும் + பழி. பழி = பழிச்சொல், வசவு, இகழ்ச்சி]

நெடும்பா *neḍumbā,* பெ. (n.) ஆடாதோடை (மலை.); Malabar nut.



நெடும்பாடு *neḍu-m-bāḍu,* பெ. (n.) பெருங்குறைவு; serious defect. *"ஏகாவலியிலே ஒரு ரத்னங் குறைந்தாலும் நெடும் பாடாயிருக்கும்"* (திவ்.திருப்பா.30, வியா.). *சாப்பாட்டுக்கே நாளும் நெடும்பாடாயிருக்கு.* (உ.வ.)

[நெடும் + பாடு. பாடு = துன்பம், குறைவு]

நெடும்பாதிரி *neḍu-m-pādiri,* பெ. (n.) நீண்ட பாதிரி மரம்; a tall fragrant trempt tree-Stereopermum chelonoides. (சா.அக.).

[நெடு → நெடும் + பாதிரி]

நெடும்பார்வை *neḍu-m-bārvai,* பெ. (n.) நீண்ட தொலைவு பார்க்கும் ஆற்றல் (வின்.); capacity to see a long distance. *அவனுக்கு நெடும்பார்வை உண்டு.*

[நெடு → நெடும் + பார்வை. பார்வை = பார்க்கும் ஆற்றல்]

நெடும்புகழ் *neḍu-m-pugaḻ,* பெ. (n.) பெரும்புகழ்; great fame.

[நெடு → நெடும் + புகழ்]

நெடும்புடல் *neḍu-m-puḍal,* பெ. (n.) நீண்ட புடலங்காய்; snake gourd (சா.அக.)

[நெடு → நெடும் + புடல். புழல் → புடல் ஒ.நோ. கீழ்த்திசை → கீட்டிசை.]

நெடும்புயம் *neḍu-m-puyam,* பெ.(n.) செந்நாவிக் கிழங்கு; red aconite root. (சா.அக.).

நெடும்புரிவிடு—தல் *neḍu-m-buri-viḍu,-* 20 செ.கு.வி.(v.i.) 1. நாட்கடத்துதல்; to put off from day to day. *கடனைக் கொடுக்காமல் நெடும்புரி விட்டுக் கொண்டே இருக்கிறான்.* 2. பொய் புனைந்து சொல்லுதல்; to tell a false story, to give a false excuse. *நெடும்புரி விடுவதில் அவன் பெரிய ஆள்.*

[நெடு → நெடும் + புரி + விடு. புரிவிடுதல் = கயிறு திரிக்கப் புரியை முறுக்குவது போல் பொய்யைப் புனைந்து கூறுதல்]

நெடும்புழு *neḍu-m-puḻu,* பெ.(n.) புழுவால் பயிரில் விழும் (பூச்சி) நோய்வகை (நாஞ்.); a disease of crops, due to worms.

[நெடு → நெடும் + புழு]

நெடும்பொழுது *neḍu-m-poḻudu,* பெ. (n.) நெடுநேரம்; long time.

[நெடு → நெடும் + பொழுது.]

நெடும்போக்கு *nedu-m-bōkku,* பெ. (n.) திரும்பிவரும் நோக்கம் இல்லாத செலவு (இ.வ.); going away for good, never to return. ***வீட்டில் சண்டைபோட்டுக் கொண்டு பையன் நெடும்போக்குப் போய்விட்டான்.***

[நெடும் + போக்கு]

நெடுமடல் *nedu-madal,* பெ. (n.) திருநீறு வைக்கும் ஏன (பாத்திர) வகை (தெ.க. தொ.2,419); a (metallic) vessel for sacred ashes.

[நெடும் + மடல். நீண்ட ஏன வகை]

நெடுமடை *nedu-madai,* பெ. (n.) வெள்ளத் தடுப்பு அணை; flood-gate.

[நெடும் + மடை]

நெடுமணம் *nedu-manam,* பெ. (n.) ஒருவகைச் செய்நஞ்சு (இரசித பாடாணம்); a kind of prepared arsenic, a mineral poison of silver. (சா.அக.).

[நெடும் + மணம்]

நெடுமணி *nedu-mani,* பெ. (n.) நீண்டமணி; a long bell. ***"நெடுமணி யூபத் திட்ட தவழ் நடையாமை நீணீர்"*** (சீவக.2878).

[நெடும் + மணி]

நெடுமழை *nedu-malai,* பெ. (n.) பெரு மழை; heavy rain.

[நெடும் + மழை]

நெடுமன் *neduman,* பெ. (n.) 1. நீண்டது (இ.வ.); long. 2. நீண்ட பாம்பு (யாழ்.அக.); long snake.

[நெடு → நெடுமன்]

நெடுமாந்தடி *nedu-mā-n-dadi,* பெ. (n.) 1. நீளமான கழி; a long stick or staff. 2. பயனற்றவன்; a good for nothing fellow. ***ஆள் தான் நெடுமாந்தடி போல் வளர்ந்திருக்கிறானே ஒழிய, எந்த வேலைக்கும் பயன்படமாட்டான்.***

[நெடும் + மா + தடி]

நெடுமால் *nedu-māl,* பெ. (n.) உலகை மூவடியால் அளந்த திருமால்(பிங்.); Viṣṇu. ***"நெடுமாற் கடிமை செய்வேன்போல்"*** (திவ்.திருவாய்.8.10:1).

[நெடும் + மால். மால் = திருமால்]

நெடுமாறன் *nedu-māṟan,* பெ. (n.) நெடுமாறனாயனார் பார்க்க; see *nedu-māṟa-nāyaṉār.*

மறுவ. நெல்வேலி வென்ற நெடுமாறன்

நெடுமாறனாயனார் *nedu-māṟa-nāyanār,* பெ. (n.) திருஞானசம்பந்தர் காலத்தவரும் பாண்டியவரசரும் நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவருமான சிவனடியார் (பெரியபு.நின்றசீர்.1); a conozied Śaiva saint, Pāṇḍiyaṉ king and contemporary of Tiru-ñāṉa-šambanda-mūrtti-nāyaṉār, one of 63.

மறுவ. நின்றசீர் நெடுமாறன்.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டிய மன்னர். 63 நாயன்மார்களில் ஒருவர். இவர் முதலில் சமணமதத்தில் இருந்தார். இவர் மனைவி மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் செய்த முயற்சியால் திருஞானசம்பந்தரிடம் ஈடுபட்டுச் சிவசமயத்தைத் தழுவினார். இவர் கூன்முதுக ராயிருந்து சம்பந்தர் அளித்த திருநீறு பெற்றுக் கூன் நிமிர்ந்து நெடுமாறனானார். இறையனாரகப் பொருளுரையில் காட்டப்படும் கோவையில் காணப்பெறும் அரிகேசரி இவரே யென்பர் ஆய்வாளர்கள். சேரர்களையும், குறுநில மன்னர்களான பரவர் முதலானோரையும் பாழி, செந்நிலம், நெல்வேலி முதலிய இடங்களில் வெற்றிக் கொண்டாரென்றும், ஒரு பகலிலேயே சோழருடைய உறையூரைக்

கைப்பற்றினாரென்றும் இறையனாரகப் பொருளுரை கூறும். "நிறைகொண்ட சிந்தையால், நெல்வேலி வென்ற நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்" என்று திருத்தொண்டத் தொகை இவரைப் போற்றுகின்றது. இவர் ஆட்சிக்காலத்தில் தான் சீனப் பயணி கியூன்சாங் (யுவாங்சுவாங்) என்பவர் பாண்டிய நாட்டிற்கு வந்தார் என்றும், இம்மன்னரின் தந்தையின் பெயர் செழியன்சேந்தன் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

நெடுமான்கெளிறு *neḍumāṉ-keḷiṟu,* பெ.(n.) மீன் வகை ; a kind of fish, Arius dussumieri.

[நெடு + மான் + கெளிறு]

கெளிற்று மீன் என்பது தஞ்சை மாவட்ட வழக்கு.

நெடுமானஞ்சி *neḍumaṉañji,* பெ. (n.) கடையெழுவள்ளல்களுள் ஒருவனான (அதியமான்) அஞ்சி; Adiyamāṉ Añji, a munificant Chief of the šangam age.

மறுவ. அதியமான் நெடுமானஞ்சி

[நெடுமான் + அஞ்சி. அச்சன் → அச்சி → அஞ்சி]

இவன் தகடூரை ஆண்டவன். அதியர் மரபினனாதலின் அதியமான் எனவும் கூறப்பெறுவான். இயற்பெயர் அஞ்சி என்பது போலும். "*ஆர்கலி நறவினதியர் கோமான், போரடு திருவிற் பொலந்தாரஞ்சி*" (புறநா.91) என்பதாலும் இவன் இயற்பெயரை அறியலாம். குதிரை மலைக்குத் தலைவன். வேற்று நாட்டிலிருந்து கரும்பைக் கொண்டு வந்து இந்நாட்டில் பரவச் செய்தவர்கள் இவ்வஞ்சியின் முன்னோர்களே (புறநா.99). இவன் மாற்றாருக்கு அஞ்சித் தன்னினத்தோடு காட்டில் ஒளிந்திருந்தனன் என்பதை "சினமிகு முன்பின் வயமானஞ்சி யினங்கொண்டொளிக்கு மஞ்சுவரு கவலை" (அகநா.115) என்பதால் அறியலாம். அஞ்சி யொளிந்ததனால் அஞ்சியெனப்பட்டான் என்பாரும் உளர். ஔவைக்குச் சாவாமருந்தாகிய நெல்லிக் கனிதந்து புகழடைந்தான். இவன் மகன் பொகுட் டெழினி யாவான். அஞ்சி புலவர்களுக்கு வரையாது வழங்கும் வள்ளலாக விளங்கியவன். இவன் கொடைத் தன்மையை ஔவையார் பல பாடல்களில் பாடுகிறார். தருமபுரி என்னும் தகடூரை இவன் தலைநகராக் கொண்டு ஆண்டான். இவன் சேரர்க்குரியனாய் அவர்க்குரிய கண்ணியுந் தாரும் தனக்குரியவாகக் கொண்டான். மழவர் கூட்டத்துக்கும் இவனே தலைவன்; அதனால் இவன் மழவர் பெருமகன் எனப்பட்டான்.

நெடுமி *neḍumi,* பெ. (n.) **1.** நெடியவள் (யாழ்ப்.); tall-woman. ***நெடுமி வந்தாள்.*** **2.** ஓங்கி நீளமாக வளர்ந்த மரம் (யாழ்ப்.); tall tree, as palm-tree. **3.** மழை (யாழ்.அக.); rain.

[நெடு → நெடுமி]

நெடுமிசை *neḍu-mišai,* பெ. (n.) உச்சி; top, highest point. "*மராஅத்து நெடுமிசை*" (கலித்.36:2).

[நெடு + மிசை. மிசை = உயர்ச்சி, மேலிடம்]

நெடுமிடல் *neḍu-miḍal,* பெ. (n.) **1.** வலிமை மிக்கவன்; very strong man. **2.** அதியமான் நெடுமானஞ்சியின் இயற்பெயர்; proper name of Adiyamāṉ-neḍumāṉañji. "*அடுபோர்க் கொற்றவ நெடுமிடல் சாய்*" (பதிற்றுப்.32:10).

[நெடும் + மிடல். மிடல் = வலி, வலிமை]

நெடுமுரல் *neḍu-mural,* பெ. (n.) நீண்ட குழல் போன்ற மீன் வகை; a kind of pipe-fish.

[நெடு + முரல். முரல் = மீன் வகை]



நெடுமுழக்கச்சை *neḍu-muḻa-k-kaccai,* பெ. (n.) 72 முழம் (36 கஜம்) அல்லது அதற்கு மேற்பட்ட கச்சைத் துணி (யாழ்ப்.); a long cloth of thirty-six yards or more to a piece.

[நெடு + முழம் + கச்சை. கச்சை = நீளமான புதுத்துணி]

நெடுமுழம் *neḍu-muḻam,* பெ. (n.) புடைவை வகை (யாழ்.அக.); a kind of saree.

[நெடும் + முழம்]

நெடுமூக்கு *neḍu-mūkku,* பெ.(n.) 1. யானையின் துதிக்கை; elephant's trunk, as a long nose. *"நெடு மூக்கிற் கரியினுரி மூடிக்கொண்டார்"* (தேவா.1232,8). 2. நீண்டமூக்குடைய காக்கை; crow.

[நெடும் + மூக்கு. நீண்ட மூக்காகிய யானையின் துதிக்கை]



நெடுமூச்சு *neḍu-mūccu,* பெ. (n.) பெருமூச்சு; a long breath.

[நெடும் + மூச்சு]

நெடுமூச்செறி[1]-தல் *neḍu-mūcceṟi-,* 2செ.கு.வி.(v.i.) மேல் மூச்சு வாங்குதல் (உ.வ.); to pant, gasp.

[நெடும் + மூச்சு + எறி. நீண்ட மூச்சு விடுதல்]

நெடுமூச்செறி[2]-தல் *neḍu-mūcceṟi-,* 2செ.கு.வி.(v.i.) வலியால் நீண்ட மூச்சு விடல்; breathing with pain, heaving; panting. (சா.அக.).

[நெடும் + மூச்செறி-தல்.]

நெடுமை[1] *neḍumai,* பெ.(n.) 1. நீளம்; length, extension. *"குறுமையு நெடுமையும் அளவிற் கோடலின்"* (தொல்.எழுத்து.50). 2. உயரம்; tallness, height, as of a person or tree. *"நெடுமையா லுலகேழு மளந்தாய்"* (திவ்.பெரியாழ்.5.1:4). 3. காலம் முதலியவற்றின் நீட்சி (இ.வ.); continuation; protraction. 4. பெருமை (சீவக.1951, உரை); greatness. *"நெடுங்குவலய முங்கைக் கொண்டு"* (கோயிற்பு.இரணிய.13). 5. அளவின்மை (குறள்,17); boundlessness, excessiveness. 6. ஆழம் (குறள்,495); depth. 7. கொடுமை (கம்பரா.சம்பாதி.5); cruelty. 8. பெண்டிர் தலைமயிர் (திவா.); woman's hair.

ம. நெடு; **தெ.** நிடு

[நெடு → நெடுமை]

நெடுமை[2] *neḍumai,* பெ.(n.) நெட்டெழுத்து; long vowel. *"நெடுமையுந் தீர்க்கமு நெடிற் பெயர்"* (பேரகத்.15).

[நெடு → நெடுமை]

நெடுமொழி *neḍu-moḻi,* பெ. (n.) 1. புகழ்ந்து கூறும் சொல்; eulogy, encomium, praise. *"மாராயம் பெற்ற நெடுமொழியானும்"* (தொல்.பொருள்.63). *படைக்கு நெடுமொழி கூறி வாழ்த்தினான் மன்னன்.* 2. தன்மேம் பாட்டுரை (திவா.); boast, as of a victorious hero. *"நெடுமொழி மறந்த சிறுபேராளர்"* (புறநா.178)). 3. வஞ்சினம்; vow. *"தலைத்தாணெடுமொழி தன்னொடு புணர்த்தலும்"* (தொல்.பொருள்.60). 4. நெடுமொழி யலங்காரம்

(மாறனலங்.212) பார்க்க; see *nedu-moli-y-alaṅgāram*. **5.** தொல்பழங்கதை (சிலப்.14:49, உரை); purānic story. **6.** யாவரும் அறிந்த செய்தி (சிலப்.14:49, அரும்); well-known fact.

[நெடும் + மொழி]

நெடுமொழிகூறு—தல் *nedu-moli-kūru-*, 5செ.குன்றாவி.(v.t.) புகழ்ந்துபேசுதல்; to praise. "*நீர்த்தன் றிதுவென நெடுமொழி கூறி*" (சிலப்.23:115).

[நெடுமொழி + கூறு—தல்.]

நெடுமொழியலங்காரம் *nedu-moli-y-alaṅgāram*, பெ. (n.) போரில் வீரனொருவன் தனக்கு இணையில்லை யென்று மேம்படுத் துரைக்கும் அணி (மாறனலங்.212); a figure of speech in which a warrior boasts that he has no equal in war.

[நெடுமொழி + அலங்காரம். Skt.alam-kāra→ த. அலங்காரம் = அணி]

நெடுமொழிவஞ்சி *nedu-moli-vañji*, பெ. (n.) வீரனொருவன் பகைவர் சேனையை நெருங்கித் தன் ஆண்மையைத் தானே உயர்த்திக் கூறும் புறத்துறை (பு.வெ.3:12); theme of a warrior approaching his enemy and boasting about his prowess.

[நெடுமொழி + வஞ்சி. வஞ்சி = வஞ்சினம் கூறும் புறத்துறை. "ஒன்னாதார் படை கெழுமித் தன்னாண்மை எடுத்துரைத் தன்று" (பு.வெ.3:12).]

நெடுவசி *nedu-vasi*, பெ. (n.) போர் வீரனது புண்ணைத் தைத்தலால் உண்டாகும் ஊசித் தழும்பு; scar of stitches in sewing up a warrior's wound. "*நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்*" (பதிற்று.42)

[நெடு + வசி. வசி = ஊசி, ஊசித் தழும்பு]

நெடுவட்டம் *nedu-vattam*, பெ. (n.) நீளவாக்கில் அமைந்த வட்டம்(வின்); spheroid-, ellipse. *நெடுவட்டம் ஒன்று வரைந்து கொடு.*

ம. நெடுவட்டம்

[நெடும் + வட்டம்]

நெடுவட்டி *nedu-vatti*, பெ.(n.) **நெட்டுவட்டி** (நெல்லை) பார்க்க; see *nettu-vatti*.

[நெடும் + வட்டி]

நெடுவரி *nedu-vari*, பெ.(n.) நீண்ட வரிசை அல்லது ஒழுங்கு; long row or line. "*வான் பறைக் குருகி னெடுவரி பொற்ப*" (பதிற்றுப்.83:2).

[நெடும் + வரி. வரி = வரிசை, ஒழுங்கு]

நெடுவரை *nedu-varai*, பெ.(n.) உயர்ந்த மலை; a high mountain. "*நெடுவரை யருவி யாடிச் சந்தன நிவந்த சோலை*" (சீவக.2815).

[நெடு + வரை. வரை = மலை, கோடு, ஒழுங்கு, குன்று, பக்க மலை]

நெடுவல் *neduval*, பெ.(n.) நெடிய ஆள் (யாழ்.அக); tall person.

[நெடு → நெடுவல் = உயரமானவன்]

நெடுவழி *nedu-vali*, பெ.(n.) **நெடுஞ்சாலை** பார்க்க; see *neduñjālai*.

[நெடும் + வழி]

நெடுவாசி *nedu-vāsi*, பெ. (n.) பெரும் வேறுபாடு; vast difference. "*த்ரவ்ய வைஷம்யத்தால் தோஷமும் நெடுவாசிப் பட்டிருக்கும்*" (திவ்.திருமாலை.16:62).

தெ. நிடுவாசி.

[நெடும் + வாசி. வாசி = வேறுபாடு]

நெடுவாய் *neḍu-vāy,* பெ.(n.) உள்ளான்மீன்; a sea - fish.

[நெடும் + வாய். நீண்டவாயையுடைய மீன் வகை]

நெடுவாலன் *neḍu-vālaṉ,* பெ. (n.) **1.** கயிறு (யாழ்ப்.); rope. **2.** குரங்கு; money.

[நெடும் + வால் + அன்]

நெடுவாலி *neḍu-vāli,* பெ.(n.) உடும்பு (நாஞ்.); iguana.

[நெடும் + வால் + இ. நீண்டவாலை யுடைய உடும்பு. இ—சொல்லாக்க ஈறு.]

நெடுவாலிக்கோங்கு *neḍu-vāli-k-kōṅgu,* பெ.(n.) **நெடுவாற் கோங்கு** பார்க்க; see *neḍu-vāṟ-kōṅgu.*

[நெடுவாலி + கோங்கு, கோங்கு = மரவகை]

நெடுவாலியூடகம் *neḍu-vāli-y-ūḍagam,* பெ.(n.) **நெடுவாலூடகம்** பார்க்க; see *neḍu-vāl-ūḍagam.*

நெடுவாலூடகம் *neḍu-vāl-ūḍagam,* பெ.(n.) **8** விரலம் நீளம் வளர்வதும் வெண்மை நிறமுடையதுமான கடல்மீன் வகை; sea-fish, silvery, attaining **8** inch in length, Gerres filamentosus. "*செப்பலியுற்ற நெடுவாலூடகம்*" (பறாளை.பள்ளு.75).

[நெடும் + வாலூடகம். வாலூடகம் = நீண்ட வெண்மையான கடல்மீன்]

நெடுவாற்கோங்கு *neḍu-vāṟ-kōṅgu,* பெ. (n.) கோங்கு மரவகை; dipterocarp dammar, Hopea racophlaea.

[நெடும் + வால்கோங்கு]

நெடுவாற்றிரளி *neḍu-vāṟṟiraḷi,* பெ.(n.) வெண்ணிறமுள்ள கடல்மீன் வகை (வின்.); sea-fish, silvery, Gerres oyena.

[நெடும் + வாற்றிரளி. வாற்றிரளி = வெண்மையான நீண்ட கடல்மீன்]

நெடுவாறி *neḍu-vāṟi,* பெ. (n.) நாய்ப்பாகல்; dog carolah-Mimordica hispida, alias. Bryonia mysorensis. (சா.அக.).

நெடுவிரல் *neḍu-viral,* பெ.(n.) **1.** நாய்ப்பாகல் (மலை.); bryony. **2.** ஆடாதோடை (சங்.அக); Malabar nut. **3.** நீண்ட விரல்; long finger.

[நெடும் + விரல். விரல்போன்று நீண்ட நாய்ப்பாகலும், ஆடாதோடையும் நெடுவிரல் எனப்பட்டது]

நெடுவிரியன் *neḍu-viriyaṉ,* பெ.(n.) விரியன் பாம்பு வகை (M.M.);long viper.

[நெடும் + விரியன். நீண்ட விரியன் பாம்புவகை]

நெடுவீடு *neḍu-vīḍu,* பெ.(n.) துறக்கவுலகம்; salvation. "*அழகுகூடு நெடுவீடுற*" (மாறனலங்.299,உதா.811).

[நெடும் + வீடு. நீண்ட தொலைவில் உள்ள துறக்கவுலகம்]

நெடுவெண்ணிலவினார் *neḍu-veṇṇilaviṉār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a šaṅgam poet.

[நெடு + வெண் + நிலவு + இன் + ஆர்]

களவொழுக்கத்திலே இரவுக் குறிக்கண் வருந் தலைவனுக்கு இடையூறாக உள்ள நிலவை "*நெடு வெண்ணிலவே*" என்று விளித்துப்பாடியதால், "*நெடுவெண்ணிலவினார்*" என்ற பெயர் பெற்றார் என்பர். இவர் பாடியதாக குறுந்தொகை **47** ஆம்பாடல் காணப்படுகிறது.

"கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண்ணிலவே" (குறுந்.47)

நெடுவெண்பாட்டு *neḍu-veṇ-pāṭṭu,* பெ. (n.) ஐந்தடி சிறுமையும் பன்னீரடிப் பெருமையும் உடைய வெண்பாவகை; stanza in veṇbā metre, consisting of 5 to 12 lines. "*நெடுவெண் பாட்டே முந்நால் அடித்தே*" (தொல்.பொருள். செய்.156).

[நெடு + வெண்பாட்டு. வெண்பாட்டு = வெண்பாவகை]

நெடுவெண்பாட்டு – அளவின் நெடிய பாட்டு ஐந்து முதல் பன்னிரண்டடிக்குள் வருவதை பஃறொடை வெண்பா என்றும் அதன்மேல் வரும் அடிப்பாடல் கலிவெண்பா எனவும் கூறுவர்.

ஐந்தடியாலான நெடுவெண்பாட்டு:

"*ஆர்ப்பெழுந்த ஞாட்பினுள் ஆள்ஆன் எதிர்த்தோடித்
தாக்கி எறிதர வீழ்தரும் ஒண்குருதி
கார்த்திகைச் சாற்றில் கழிவிளக்கைப் போன்றனவே
போர்க்கொடித் தானைப் பொருபுனல் நீர்நாடன்
ஆர்த்தமர் அட்ட களத்து*" (களவழி,17)

ஆறடியாலான நெடுவெண்பாட்டு:

"*பன்மாடக் கூடல் மதுரை நெடுந் தெருவில்
என்னோடு நின்றா ரிருவர் அவருள்ளும்
பொன்னோடை நன்றென்றாள் நல்லளே பொன்னோடைக்
கியானைநன் றென்றாளும் அந்நிலையள் யானை
எருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன்*" (முத்தொள்.58)

ஏழடியாலான நெடுவெண்பாட்டு:

"*வையக மெல்லாங் கழனியா–வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள்–செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு–வான்கரும்பின்
சாறேஅந் நாட்டுத் தலையூர்கள்–சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெலாங்–கட்டியுள்
தானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம்*" (யா.கா.26,மேற்.)

சென்னைப் பல்கலைக் கழக அகர முதலியில் நெடுவெண்பாட்டு என்பதற்கு "ஏழடிச் சிறுமையும் பன்னீரடிப் பெருமையும் உடைய வெண்பாவகை" என்று பொருளெழுதியுள்ளது. இதற்கு மேற்கோளாகத் தொல்காப்பியம் பொருளதிகாரம், செய்யுளியல்

"*நெடுவெண் பாட்டே முந்நால் அடித்தே
குறுவெண் பாட்டின் அளவெழு சீரே*"

என்ற நூற்பாவை (156)க் காட்டியுள்ளது.

இந்நூற்பா வெண்பாவின் அடியளவு பற்றிக் கூறுகிறது. வெண்பா, பன்னீரடிப் பெருமையும் எழுசீர் சிறுமையும் உடைத்து என்பது பொருள். எழுசீரான் அமைவது குறள் வெண்பா. நெடுவெண்பாட்டு என்பது பன்னீரடி பெருமையும் ஐஞ்சீரடி சிறுமையும் உடையதாக அமையும். குறள் வெண்பா இரண்டடியாயும் நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா போன்றவை நன் நான்கடியாகவும் அமையும். நான்கடியின் மிக்க பலவடியான்வரின் பஃறொடை வெண்பா எனப்படும். எனவே நான்கடியின் மிக்கு பன்னீரடி வரையுள்ள வெண்பா நெடுவெண்பாட்டு வகையாகும்.

நெடுவெள்ளூசி *neḍu-veḷ-ḷ-ūsi,* பெ.(n.) 1. புண், காயம் போன்றவற்றைத் தைக்கும் ஊசி; surgical needle for stitching wounds. "*கயமூழ்கிச் சிரல் பெயர்ந்தன்ன நெடுவெள்ளூசி*" (பதிற்றுப்.42). 2. நெட்டை என்னும் கருவி (பதிற்று.42:3, உரை); a kind of weapon.

[நெடும் + வெள்ளூசி. வெள்ளூசி = மருத்துவர் புண்களைத் தைக்கும் ஊசி]

நெடுவேட்டுவன் *neḍu-vēṭṭuvaṉ,* பெ.(n.) கோடை மலைப் பகுதியை ஆண்ட கடைக் கழக மன்னன்; a king ruled Kōdaimalai.

கடிய நெடுவேட்டுவன் என்பது இவனது முழுப் பெயர். கடியம் என்பது நெடுவேட்டுவன் ஊர். இது கோடைக்கானல் என்று இன்று வழங்கும் கோடைமலைச் சாரலில் உள்ளது. கோடைமலையை ஆண்டவன்.

இவன் தன்னைத் துணை வேண்டி யவர்க்குப் பெரும்புகலாகி, ஆதரவு நல்குபவன், பகைத்துப் பொரக் கருதுவாரை அவர் வலியறுத்துக் கருத்தழிவிக்கும் காட்டாண் மையுடையவன். கொடை வண்மையால் இவன் பால் பரிசிலர்கட்கு மிக்க தொடர்புண்டு. அதனால் கடலுக்குச் சென்ற முகில், நீர் பெற்றன்றி வாராதவாறு போல, இந்நெடு வேட்டுவனைக் காணும் பரிசிலர் இவனது கொடை நலத்தைப் பெற்றன்றிப் பெயர்ந்து போகாரென்னும் பெருமை இவனுக்குப் பிறங்கியிருந்தது.

இவனைப் பெருந்தலைச் சாத்தனார் பாடியுள்ளார். (புறநா.205).

"முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின் றீதல் யாம் வேண்டலமே
விறற்சினந் தணிந்த விரைபரிப் புரவி
உறுவர் செல்சார் வாகிச் செறுவர்
தாளுளந் தபுத்த வாண்மிகு தானை
வெள்வீ வேலிக் கோடைப் பொருத
சிறியவும் பெரியவும் புழைகெட விலங்கிய
மான்கணந் தொலைச்சிய கடுவிசைக்
கத நாய்
நோன் சிலை வேட்டுவ நோயிலை யாகுக
ஆர்கலி யாணர்த் தரீஇய கால்வீழ்த்துக்
கடல்வயிற் குழீஇய வண்ணலங் கொண்மூ
நீரின்று பெயரா வாங்குத் தேரொ
டொளிறுமருப் பேந்திய செம்மற்
களிறின்று பெயரல் பரிசிலர் கடும்பே"
(புறநா.205)

நெடுவேர் *nedu-vēr,* பெ. (n.) சாயமிடப் பயன்படும் பூடுவகை (மலை.); Indian maddar.

[நெடு + வேர். நீண்டவேர்]

நெடுவேள்குன்றம் *nedu-vel-kunram,* பெ. (n.) சோழ நாட்டிலுள்ள திருச்செங்குன்று; a hill in Chola country.

[நெடு + வேள் + குன்றம்]

நெண்டு[1]–தல் *nendu-,* 5செ.கு.வி.(v.i.) **1.** எதிர்க்களித்தல் (யாழ்ப்.); to rise upon the stomach, keck. **2.** நொண்டுதல்; to limp. *"நெண்டிக்கொண்டே"* (தேவா.743.8).

[நுல்(துளை) → நுள் → நொள் →நொண்டு → நெண்டு → நெண்டு–தல்,(வே.க)]

நெண்டு[2]–தல் *nendu-,* 5செ.குன்றாவி.(v.t.) தோண்டுதல் (நாமதீப.737); to dig.

[நொண்டு → நெண்டு–தல்]

நெத்தகர் *nettakar,* பெ. (n.) நெல்லுடன் முளைக்கும் களை வகை (யாழ்.அக.); a weed that grows with paddy. வயலில் நெத்தகர் அதிகமாகி விட்டது.

[நெல் + தகர். நெல் விளைவைத் தகர்க்கும் களை]

நெத்தப்பலகை *netta-p-palagai,* பெ. (n.) சூதாடும்பலகை; dice-board. *"நெத்தப் பலகையை எடுத்து நிறுத்தினாற் போன்ற... குறளனே"* (கலித்.94, உரை).

க. நெத்தபலகெ

[நெட்டு + பலகை–நெட்டுப் பலகை → நெத்தப்பலகை]

சூதாட்டம் ஆடுவதற்காக கோடுகள் வரையப்பட்ட பலகை.



நெத்தம் *nettam,* பெ. (n.) அரத்தம்; blood.

[அரத்தம் → இரத்தம் → நெத்தம். ஒ.நோ. நிரம்ப → நொம்ப]

நெத்தல் *nettal,* பெ. (n.) **நெய்த்தோலி** பார்க்க; see *ney-t-tōli.* (சா.அக.).

நெத்தமண்டலி *netta-mandali,* பெ. (n.) தேள்வகை (சங்.அக); a scorpion.

[நெத்தம் + மண்டலி. அரத்தம் போன்று சிவந்து காணப்படும் தேள் வகை. அரத்த மண்டலி → நெத்த மண்டலி.]

நெத்தலி *nettali,* பெ. (n.) **நெய்த்தோலி** பார்க்க; see *ney-t-tōli.*

[நெத்தல் → நெத்தலி.]

நெத்தி *netti,* பெ. (n.) மீன் நீந்துதற்குக் கரணியமான மிதவைப் பை (மீனவ.); swimming bladder of a fish.

[நத்தி → நெத்தி. நத்தி = மீனின் மிதவைப்பை]

நெத்தியடி *netti-y-adi,* பெ.(n.) செயலிழக்கச் செய்யும் தாக்குதல் அல்லது பாதிப்பு; crushing defeat. தேர்தலில் எதிர்க்கட்சி பெற்ற வெற்றி ஆளுங்கட்சிக்கு நெத்தியடியாக இருந்தது.

[நெற்றி → நெத்தி + அடி. நெற்றியில் அடித்தால் ஏற்படும் வலி போன்றது]

நெத்தில் *nettil,* பெ. (n.) **நெய்த்தோலி** பார்க்க; see *ney-t-tōli.* (சா.அக.).

நெத்திலி *nettili,* பெ.(n.) **நெய்த்தோலி** பார்க்க; see *ney-t-tōli.*

தெ. நெத்தெலு.

[நெய்த்தோலி → நெத்திலி. வெள்ளை நிறத்தில் இருக்கும் ஒருவகைச் சிறிய கடல் மீன்]

நெத்திலிப்பொடி *nettili-p-podi,* பெ. (n.) **1.** நெய்த்தோலிக் கருவாடு (வின்.); anchovy salted and dried. **2.** சிறு நெய்த்தோலி மீன்; small anchovy fish.

[நெத்திலி + பொடி]

நெத்து *nettu,* பெ. (n.) **நெற்று** பார்க்க; see *neṟṟu.*

[நெற்று → நெத்து (பே.வ.)]

நெத்திலிவலை *nettili-valai,* பெ. (n.) நெய்த்தோலி மீன் பிடிக்கும் வலை; anchovy fishing net.

[நெத்திலி + வகை]

நெத்திலி மீனுக்காகவே சிறப்பாகச் செய்யப்படும் வலை. இதில் வலைக்கண் மிகச்சிறியது. இவ்வலை 5 அடி அகலம் 5 அடி நீளம் கொண்டதாய் இருக்கும்.



நெதி¹ *nedi,* பெ. (n.) **1.** செல்வம்; treasure. "*விழுநெதி பெறினும்*" (நற்.16). **2.** முத்து; pearl. "*நெதிசொரி சங்க மேந்தி*" (சூளா.அரசி.308)

[நெல் → நெதி. பழங்காலத்தில் கூலியாக நெல் முதலிய கூலங்களே கொடுக்கப்பட்டது. நெல் வயல் அதிகமுள்ளவன் செல்வந்தனாக மதிக்கப்பட்டான். எனவே நெல் → நெதி என்றாயிற்று. பின் நெதி → நிதியாயிற்று.]

நெதி² *nedi,* பெ. (n.) தேனிப்பு, ஊழ்கம், உள்ளொடுக்கம் (தியானம்); meditation. "*தப்பாம னெதிபண்ண*" (தத்துவப்.262).

[நுல் → நெல் → நெதி. நெதி → நிதி = செல்வம்.]

நெதியம் *nediyam,* பெ.(n.) செல்வம்; wealth riches. "*நெதிய மென்னுள்*" (தேவா.556,5).

[நெதி → நெதியம்]

நெதியாளன் *nedi-y-āḷan,* பெ. (n.) குபேரன்; Kubēran. "*நெதியாளன் றோழனை*" (தேவா.688,7)

[நெதி → நெதி + ஆளன்]

நெதுட்டி *neduṭṭi,* பெ. (n.) மருது; mardah tree, Terminalia alata. (சா.அக.).

நெம்பாணி[1] *nembāṇi,* பெ.(n.) வண்டியில் பயன்படும் ஆணி; a kind of nail used in cart.

[வண்டிப்பழு வில் தைக்கும் ஆணி வகை. நெம்பு + ஆணி.]

நெம்பாணி[2] *nembāṇi,* பெ.(n.) நெம்பப் பயன்படும் ஆணி; a nail use to lift out.

[நெம்பு + ஆணி]

நெம்பு[1]**—தல்** *nembu-,* 5செ.குன்றாவி.(v.t.) 1. கழி அல்லது கருவியை ஒரு பொருளின் அடியிற் செலுத்தி மேலே உயரும்படி கிளப்புதல்; to lift with a leaver. *பாறையின் அடியிற் கம்பியைச் செலுத்தி ஒரே நெம்பில் கல்லைப் பெயர்த்து விட்டான்.* 2. உடைத்துத் திறத்தல்; to force open. *தாழ்ப்பாளை ஒரு நெம்பில் உடைத்து விட்டான்.*

[எம்பு—தல் → நெம்பு—தல்]

நெம்பு[2] *nembu,* பெ. (n.) 1. மேலெழுப்புகை; lifting with a lever. 2. இருபக்கமும் கூர்மையுடைய இணைப்பாணி (கட்டிட.நாமா); joining dowel or nail. 3. ஓடாணி (தெ.க.தொ.2,172); pins for jewels. 4. ஏணிப் பழு (வின்.); rung or round of a ladder. 5. ஏற்றத்தின் மடலாணி (வின்.); ribs joining together the two beams of a well-sweep, serving also as steps for the man who treads it. 6. நெம்புதடி (வின்.) பார்க்க; see *nembu-taḍi.* 7. விலா எலும்பு, (வின்.); ribs இன்று நெம்பு கழிய வேலை செய்தான்.

ம. நும்பு; தெ. நெம்மு.

[எம்பு → நெம்பு]

நெம்புகோல் *nembu-kōl,* பெ. (n.) ஒரு பொருளினை உயர்த்தவோ நகர்த்தவோ பயன்படும், ஒரு புள்ளியை மூலமாகக் கொண்டு இயக்கப் பயன்படும் கம்பி அல்லது கருவி; the lever. *ஒரு நெம்புகோல் இருந்தால் இந்தக் கல்லை நகர்த்தலாம். ஒரு பெரிய நெம்புகோல் கிடைத்தால் நான் உலகை நகர்த்திக் காட்டுவேன் என்று ஐசக் நியூட்டன் கூறியுள்ளார்.*

[நெம்பு + கோல்]

நெம்புத்தடி *nembu-t-taḍi,* பெ.(n.) **நெம்புதடி** (வின்.) பார்க்க; see *nembu-taḍi.*

[நெம்பு + அடி.]

நெம்புதடி *nembu-taḍi,* பெ.(n.) பொருளைக் கிளப்ப அதனடியில் செலுத்துங்கோல் (வின்.); lever, in mechanics. நெம்புதடி கொண்டு கட்டையைப் புரட்டினான்.

[நெம்பு + தடி]

நெமம் *nemam,* பெ. (n.) **நெமிசந்தனா** பார்க்க; see *nemiśandāṉa.* (சா.அக.)

நெமமீன் *nemamīṉ,* பெ. (n.) மூட்டுவலியை உண்டாக்குமோர் வகை மீன்; a kind of fish causing rheumatisum. (சா.அக.).

நெமிசந்தனா *nemiśandaṉā,* பெ. (n.) அரத்த வேங்கை மரம்; red kino tree - Pterocarpus marsupium (acuminata) (சா.அக.).

நெமிரல் *nemiral,* பெ.(n.) சோறு (அக.நி.); rice.

[நிமிரல் → நெமிரல். நிமிரல் = சோறு (நற்.258). அரிசி சோறாகும்போது அதன் வடிவம் மாறி நிமிர்கிறது.]

நெய்¹–தல் *ney-,* 1செ.குன்றாவி.(v.t.) 1. துணி, பாய் முதலியவற்றை உருவாக்கு வதற்காகத் தறியில் நீளவாட்டில் நூலையோ, கோரையையோ செலுத்திக் குறுக்குவாட்டில் கோத்துப் பின்னுதல், நூலை ஆடையாகச் செய்தல்; to weave, as clothes. "*நெய்யு நுண்ணூல்*" (சீவக.3019). *நெய்து கொண்டிருக்கும் பொழுது நெய்கிறதை விட்டு நினைத்துக் கொண்டானாம் கைக்கோளன்* (பழ.). *நெய்கிறவனுக்கு ஏன் குரங்குக் குட்டி?* (பழ.). 2. தொடுத்தல்; to string, to link together. "*நெய்தவை தூக்க*" (பரிபா.19:80).

ம. நெய்க; **தெ.** நேயு; **க.** நேய், நேயி, நெய்யு; கோத. நெச் (nec); துட, நிச் (nic); **குட.** நெய் (ne·y); **து.** நெயுநி; **கூ.** நெப; **குவி.** நெநை (nen'nai); **குரு.** எஸ்நா (essnā); **மா.** எசெ (ese = to plait).

[நுள் → நெள் → நெய் → நெய்–தல், நுள்ளுதல் = அடைதல், பொருந்துதல், செறிதல் (து.ம.)]

நெய்² *ney,* பெ. (n.) 1. ஆவின் அல்லது எருமையின் வெண்ணெயை உருக்கி உண்டாக்கும் பொருள்; ghee, clarified butter. "*நீர்நாண நெய்வழங்கியும்*" (புறநா.166:21). '*நெய்க்குடத்தில் எறும்பு மொய்த்தது போல*' (பழ.). '*நெய்யை உருக்கித் தயிரைப் பெருக்கிச் சாப்பிடவேண்டும்*' (பழ.). '*நெய்க்குடம் உடைந்தால் நாய்க்கு விருந்து*' (பழ.). "*நெய்யுண்ணோம் பாலுண்ணோம்.......... தீக்குறளை சென்றோதோம்*" (திருப்பாவை). 2. வெண்ணெய்; butter. "*நெய்குடை தயிரி னுரையொடும்*" (பரிபா.16:3). 3. ஒட்டும் நீர்ப்பொருள் (எண்ணெய்); oil. "*நெய்யணி மயக்கம்*" (தொல்.பொருள்.கற்பு.5). 4. புழுகுநெய்; civet. "*மையிருங் கூந்த னெய்யணி மறப்ப*" (சிலப்.4:56). 5. நெய்போல் ஒட்டுந்தேன்; honey. "*நெய்க்கண் ணிறாஅல்*" (கலித்.42). 6. நெய்போலுறையும் அரத்தம்; blood. "*நெய்யரி பற்றிய நீரெலாம்*" (நீர்நிறக்.51). 7. நெய்யாய் உருகும் கொழுப்பு, (நிணம்); grease, fat. "*நெய்யுண்டு*" (கல்லா.71). 8. உளம் ஒட்டும் நட்பு; friendship, love. "*நெய்பொதி நெஞ்சின் மன்னா*" (சீவக.3049). 9. 14 ஆம் விண்மீனாகிய நெய்ம்மீன் (சித்திரை) (சூடா.); the 14th nakṣatra.

ம.,க. நெய்; **தெ.** நெய்யி; **வ.** ஸ்நிஹ்–ஸ்நேஹ; **கோத.** நாய் (nay=ghee); **துட.** நீய்; **கொலா., கட., பா., நா.** நெய்; **கூ.** நீசு (niju); **குவி.** நீயூ (nīyū); **குரு.** நேத (nēta=grease, fat); **மா.** நெ்ய.

[நுல்(பொருந்தல்) → நுள் → நெள் → நெய்]

நெய்ப் பொருளெல்லாவற்றுள்ளும் ஆவின் அல்லது எருமையின் நெய் ஊட்டமான உணவிற்குரியதாய்த் தலைசிறந்ததாதலால், நெய்யென்னும் பொதுப் பெயரையே சிறப்புப் பெயராகக் கொண்டது.

முதன்முதலாக எள்ளின் நெய்யைக் குறித்த எண்ணெய் என்னும் சொல், மிகப் பெருவழக்காய் வழங்கியதால் நாளடைவில் தன் சிறப்புப் பொருளை இழந்து, நெய்யல்லாத நெய்ப் பொருள்களின் பொதுப்பெயராயிற்று. அதனால், தன் பழம்பொருளைக் குறித்தற்கு 'நல்' என்னும் அடை பெற்றது. இதனால்,

நெய்க்கு அடுத்துச் சிறந்தது நல்லெண்ணெய் என்பது பெறப்படும். *“வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு”* என்பது பழமொழி. (வே.க.நூல்.6)

புரைகுற்றிய பாலைக் கடைவதினா லுண்டாகிய பசையுள்ள பொருளே வெண்ணெய். இவ்வெண்ணெயைத் தண்ணீர் போக உருக்கி வடிகட்டியதே நெய்யெனப்படும். நல்ல நெய் கெட்டுப்போகாமல் நெடு நாளிருக்கும். தேன் நாச்சுவையும், சந்தனம், மோப்பச்சுவையும் கொண்டவை. நெய் இருவகை சுவையும் பொருந்தியது. இது பொதுவாக எருமை அல்லது ஆவின் பாலிலிருந்து எடுக்கப்படும். இதனை உண்ண உடம்பிற்குக் குளிர்ச்சியையும் வலுவையும் உண்டாக்கும். இது மனநோய் (பைத்தியம்), காக்கைவலி, வயிறு வீக்கம் முதலியவற்றைக் குணப்படுத்தும், நினைவாற்றலை உண்டாக்கும், கண் பார்வையைத் தெளிவு படுத்தி உடம்பில் இருக்கும் நஞ்சைப் போக்கும். (சா.அக.)

வகைகள் : **1.** ஆவின் நெய், **2.** கருப்பு ஆவின் நெய், **3.** எருமைநெய், **4.** வெள்ளாட்டு நெய். **5.** செம்மறியாட்டு நெய், **6.** பள்ளையாட்டு நெய், **7.** குறும்பாட்டு நெய், **8.** கலப்பு நெய், **9.** ஒட்டக நெய், **10.** பன்றி நெய், **11.** உடும்பு நெய், **12.** காக்கை நெய்.

சாம்பசிவம் மருத்துவ அகரமுதலி கீழ்கண்ட நெய்வகைகளைக் கூறுகிறது.

உயிரிகளின் நெய்வகைகள் : **1.** ஆவின் நெய் – இருமல், வயிற்று வலி, பித்தவிக்கல், புண், தாகம், மூலம் இவைகளுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

2. கருப்பு ஆவின்நெய் – கண், புருவம், நெற்றி, தலை முதலியவற்றின் நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.
3. எருமை நெய் – இதை உண்ண அறிவு குன்றும், கண்ணொளி மங்கும், கரப்பான் உண்டாகும்.
4. வெள்ளாட்டு நெய்–சளித்தொல்லைக்கும், பத்தியத்திற்கும் மருந்தாகப் பயன் படுகிறது.
5. செம்மறியாட்டு நெய் – இதை உண்ணச் சளிநோய் (கபநோய்) உண்டாகும்.
6. பள்ளையாட்டு நெய் – பித்தநோய்க்கு மருந்தாகப் பயன்படுகிறது.
7. குறும்பாட்டு நெய் – வளியால் (வாயு) உண்டாகும் நோய்கள் வரும்.
8. கலப்பு நெய் – இதை உண்ண உடம்பின் சூடு குறையும், பலமுண்டாகும்.
9. ஒட்டக நெய் – நீரிழிவு நோய்க்கும், பித்தத்திற்கும் மருந்து.
10. பன்றிநெய் – மூலம், மூத்திர(சிறுநீரக)க்கடுப்பு இவைகளுக்கு மருந்தாகிறது.
11. உடும்பு நெய் – அரத்தக் கழிச்சல் நோய்க்கு மருந்து.
12. காக்கை நெய் – காமாலை நோய்க்கு மருந்து.
13. ஆமை நெய் – அரத்த மூலம் நீங்கும்.
14. ஓணான் நெய் – பின்னிசிவு நீங்கும் (convulsions)
15. கரடி நெய் – மூட்டு வலி, பாத வெடிப்பு இவைகளுக்கு இது மருந்து.
16. மீன் நெய் – மாலைக்கண், இளைப்பு நோய் இவைகளுக்கு மருந்தாகிறது.

பயிரிகளின் நெய்:

17. ஆமணக்குநெய் – வயிற்றுவலி (குன்மம்), குடலேற்றம், உடலெரிவு, கண்ணெரிவு இவைகளுக்கு மருந்து.
18. சிற்றாமணக்கு நெய் – உடலுக்கு மருந்துகளினால் உண்டாகும் வெப்பம், மூல வெப்பம் ஆகியவற்றை நீக்கும்.
19. எள்நெய் – உடல் ஆற்றல் குறைவு (தேக பலவீனம்), கண்காது நோய், தலைச்சூடு போன்றவற்றுக்கு இது மருந்தாகிறது.
20. வேப்பெண்ணெய் – புண், சொரி, சிரங்கு இவைகளைக் குணமாக்கும் மருந்து.
21. இலுப்பெண்ணெய் – கரப்பான், கடி, நஞ்சு, சிரங்கு இவைகளுக்கு மருந்து.
22. புங்கெண்ணெய் – சொறி, சிரங்கு, வெடிப்புகளுக்கு இந்நெய்யைத் தடவ குணமாகும்.
23. வாதுமைநெய் – உடல் சூடு நீங்கும்.
24. புன்னைநெய் – முன்னிசிவு, பின்னிசிவு, வலிப்பு நீங்க இது பயன்படுகிறது.
25. தேங்காயெண்ணெய் – தீப்புண், படர்தாமரை, சிரங்கு இவைகளுக்கு மருந்து.
26. கடுகுநெய் – அரத்தக் கொதிப்பு, குட்டம், மூளை, மூலம், சூலை முதலிய நோய்களுக்கு மருந்தாகிறது.
27. நீரடிமுத்து நெய் – சொறி, சிரங்கு, பெருநோய், தோல் நோய்கள் நீங்கும்.

மருந்தாகப் பயன்படும் மேலும் பல நெய் வகைகள்.

28. ஆவாரை நெய்
29. கொன்றை நெய்
30. நாவல் நெய்
31. பொன்னாங்காணிநெய்
32. கடுக்காய் நெய்

33. வில்வ நெய்
34. அவுரி நெய்
35. அறுகம்வேர் நெய்
36. சமுத்திரா பழநெய்
37. கண்டங்கத்திரிநெய்
38. தூதுவளை நெய்
39. முலைப்பால்நெய்
40. சுக்கு நெய்
41. பிரமி நெய்
42. வல்லாரை நெய்
43. சதாவேரிநெய்
44. புளியாரைநெய்
45. பூசணிநெய்
46. சோம்பு நெய்
47. கருவாப்பட்டை நெய்
48. வெற்றிலைப் பூ நெய்
49. நாரத்தை நெய்
50. எலுமிச்சை நெய்
51. ஆளி விதை நெய்
52. கையாப்புடை நெய்
53. கற்பூர நெய்
54. நாட்டு அக்ரோட் நெய்
55. சீமைச்சோம்பு நெய்
56. இலவங்க எண்ணெய்
57. கொத்தமல்லி எண்ணெய்
58. பருத்திக்கொட்டை நெய்
59. திப்பிலி நெய்
60. புன்னை நெய்
61. ஓம நெய்
62. நீலகிரி எண்ணெய்
63. மாசிப்பத்திரி நெய்
64. கரிசாலை நெய்
65. சதகுப்பை நெய்
66. முசுமுசுக்கை நெய்
67. சேரங்கொட்டை நெய்
68. தேற்றாங் கொட்டை நெய்

நெய்³–த்தல் *ney-*, 4செ.கு.வி.(v.i.) **1.** பளபளத்தல்; to be glossy, polished. *"நீண்டு குழன்று நெய்த்திருண்டு"* (கம்பரா. உருக்காட்டு.57). **2.** ஒட்டும் நீர்ப்பொருளாக உருகும் கொழுப்பு வைத்தல், கொழுத்தல்; to be fleshy, fat, plump. *"நெய்த்த மீன்"* (வின்.). **3.** ஒட்டும் பசைத்தன்மை யுடையதாயிருத்தல் (வின்.); to become greasy, unctuous or sticky. **4.** ஒட்டுதல்; to stick, to affix.

[நுல்(பொருந்தல்) → நுள் → நெள் → நெய் → நெய்–த்தல் (வே.க.)]

நெய்⁴ *ney,* பெ. (n.) சாந்துடன் சேர்ந்து இறுகப் பிடித்துக் கொள்ளுதற்குரிய கருப்புக் கட்டி முதலியன; cementing substance. *"மணலும் நீருங்கூட வரைத்த சாந்திற் கருப்புக் கட்டியாகிய நெய் அளவினவாறு போல"* (நீலகேசி, 310 உரை).

[நெய்² → நெய்⁴]

நெய்க்கடம்பு *ney-k-kaḍambu,* பெ. (n.) நாய்க்கடம்பு; bastard cedar of Palghat- Hymenodictyon excelsusm. (சா.அக.).

மறுவ. வெள்ளைக் கடம்பு.

[நெய் + கடம்பு]

நெய்க்கடல் *ney-k-kaḍal,* பெ. (n.) ஏழுகடலுள் நெய்மயமாகிய கடல்; the ocean of ghee, one of ēḻu-kaḍal.

[நெய் + கடல்]

நெய்க்கடுகு *ney-k-kaḍugu,* பெ.(n.) **1.** வெண்ணெய் உருக்கிக் காய்ச்சியெடுக்கும் போது அடியில் நிற்கும் வண்டல்; the sediment deposited at the bottom during melting of butter into ghee. **2.** அகத்தியர் வல்லாதி 600–ல் சொல்லியிருக்கும் முறைப்படி ஆவின் நெய்யை மற்ற மருந்துச் சரக்குகளோடு சேர்த்துக் காய்ச்சி வடித்த

மருந்து நெய். இது வயிற்றில் ஏற்படும் நோய்களுக்கு மருந்தாகிறது; a medicated oil prepared with cow's ghee as chief ingredient along with other drugs according to the process laid down in Agastyar Vallathy 600. It is prescribed for all diseases of the stomach. (சா.அக.).

[நெய் + கடுகு. கடுகு = வண்டல்]

நெய்க்கியாழம் *ney-k-kiyāḻam,* பெ. (n.) ஆவின் நெய்யுடன் மற்ற கடைச்சரக்குகளைச் சேர்த்துச் செய்யும் மருந்து; medicated oil in common prepared from cow's ghee mixed with other bazaar drugs. (சா.அக.).

[நெய் + கியாழம். கியாழம் = காய்ச்சிய மருந்து குடிநீர்]

நெய்க்கிழி *ney-k-kḻi,* பெ. (n.) எண்ணெய் தோய்த்த சீலைத்துண்டு; bandage soaked in oil. "*நெய்க்கிழி வைக்கப்பட்டார்*" (சீவக.818).

[நெய் + கிழி. கிழி = கிழிந்த துணி]

நெய்க்குரணி[1] *neykkuraṇi,* பெ. (n.) அழிஞ்சில்; sage-leaved alangium.

நெய்க்குரணி[2] *ney-k-kuraṇi,* பெ. (n.) ஐங்கோல எண்ணெய் (ஐந்து மாதத்திய தலைப்பிண்டத்தினின்று வடிக்கும் நெய்மம்); a medicinal oil extracted from the first born fetus five months old. (சா.அக.).

நெய்க்குழம்பு *ney-k-kuḻambu,* பெ.(n.) **1.** நெய்விட்டுத் தாளித்த குழம்பு; thick broth seasoned with ghee. **2.** இறுகிய நெய்; thick ghee.

[நெய் + குழம்பு]

நெய்க்குறி *ney-k-kuṟi,* பெ. (n.) தேரையர் செய்த ஒரு மருத்துவ நூல்; a medical Tamil treatise by Theraiyer which treats about the examination of urine and their indications. (சா.அக.).

[நெய் + குறி]

நெய்க்குறிநீர்க்குறி *ney-k-kuṟi-nīr-k-kuṟi,* பெ. (n.) நெய்யில் சிறுநீரைக் (மூத்திரத்தைக்) கலந்து செய்யும் ஆராய்ச்சி (சோதனை); examining the urine by testing if in ghee.

[நெய்க்குறி + நீர்க்குறி]

நெய்க்குறிநூல் *ney-k-kuṟi-nūl,* பெ. (n.) எண்ணெய் விட்டு சிறுநீர் (மூத்திரத்) தேர்வு செய்வதைக் கூறுவதும், தேரையர் இயற்றியதுமான நூல்; a treatise by Tēraiyar on the test of urine by means of oil.

[நெய் + குறி + நூல்]

நெய்க்கொட்டான் *ney-k-koṭṭāṉ,* பெ. (n.) பூவந்தி (மலை.); soap-nut.

மறுவ. நெய்க்கொட்டை.

[நெய் + கொட்டான்]

நெய்க்கொட்டான்விதை *ney-k-koṭṭāṉ-vidai,* பெ. (n.) பூவந்திக்கொட்டை; soap nut. (சா.அக.).

[நெய்க்கொட்டான் + விதை]

நெய்க்கொட்டை *ney-k-koṭṭai,* பெ. (n.) **1.** மரவகை (மலை.); soap-nut, Sapindus trifoliatus. **2.** மரவகை; butterfly soap-nut, Harpullia cupanoides.

[நெய் + கொட்டை. நெய் போல் பளபளப்பான கொட்டையுடைய மரம்]

நெய்ச்சசிகரி *ney-c-cašikari,* பெ. (n.) சீமைத் தக்காளி; Europe brinjal, tomato, Hycopersicum esculentum (சா.அக.).

நெய்ச்சட்டி *ney-c-catti,* பெ. (n.) 1. செங்கழுநீர் (மலை.); purple Indian water-lily. 2. கீரைவகை (சங்.அக.); a kind of greens. 3. பவளக் குன்றிமணி (மலை.); crab's eye.

மறுவ : செங்கழுநீர்.

இச்செடி ஆண்டிற்கு ஒரு முறை வளர்ந்து ஒயும். இலை நீண்டு நான்கு மூலையுடையதாய் இருக்கும்; பூவிதழ் ஊதா நிறமுடையது; வங்காளம், கொரநாடு, மலையாளம் ஆகிய பகுதிகளில் வளர்கிறது. இதைக் குடிநீராக்கிக் காய்ச்சலுக்குக் கொடுக்கலாம்; உடற்சூட்டை இது தணிக்கும். பசி, அழகு இவைகளை உண்டாகும். வாந்தி, அழற்சி இவைகளைப் போக்கும். இதன் பூ கண் சிவப்பை மாற்றும்; காமாலை, கைகால்எரிச்சல், கண்ணோய்கள் முதலியன நீங்கும். (சா.அக.).

நெய்ச்சட்டிக்கீரை *ney-c-catti-k-kirai,* பெ. (n.) வேப்பெண்ணெயை நெய்யாகச் செய்யும் (சீதேவியார்) செங்கழுநீர் கீரை; a kind of waterlily, Nymphae odorata or Grewia orbiculata. It converts margose oil into ghee. (சா.அக.).

[நெய்ச்சட்டி + கீரை]

நெய்ச்சாதம் *ney-c-cādam,* பெ. (n.) நெய்ச்சோறு; ghee rice.

[நெய் + சாதம்]

சாதம் என்பதற்கு வேர் வடமொழியிலில்லை. அரிசி சதசதவென்று கொதிபெற்று மலர்வதால் சாதம் தமிழ்ச் சொல்லே.

நெய்ச்சாரிகம் *ney-c-cārigam,* பெ. (n.) அரத்த வேங்கை மரம்; red kino tree, Pterocarpus marsupium (சா.அக.).

நெய்ச்சி[1] *neycci,* பெ. (n.) எண்ணெய்ச்சிக்கு; oil-sediment. (சா.அக.).

[நெய் → நெய்ச்சி. நெய் + சி(க்கு).]

சிக்கு என்பதில் முதலெழுத்து நின்று பிற இரண்டும் நீங்கின.

நெய்ச்சி[2] *neycci,* பெ. (n.) நெய்யால் செய்த பண்ணியம் (பலகாரம்); ghee preparation of sweet confection.

[நெய் → நெய்ச்சி]

நெய்ச்சிக்கு *ney-c-cikku,* பெ. (n.) 1. நெய் குடலில் தங்குதலினா லுண்டாகும் செரிமானத் தடை; indigestion caused by ghee. 2. நெய்யைப் பூசிக்கொள்வதனா லுண்டாம் நாற்றம் (இ.வ.); rancid smell caused by smearing one's body with ghee.

[நெய் + சிக்கு. சிக்கு = சிக்கிக் கொள்ளுகை, தடை செய்கை, எண்ணெய்ச்சிக்கு, சிக்கு நாற்றம்]

நெய்ச்சிக்குபேதி *ney-c-cikku-pedi,* பெ. (n.) சிக்குப்பட்ட நெய்யை உட்கொள்வதனால் ஏற்படும் கழிச்சல்; purging due to taking rancid ghee in food. (சா.அக.).

[நெய்ச்சிக்கு + Skt. பேதி]

நெய்ச்சிக்குபோக்கி *ney-c-cikku-pökki,* பெ. (n.) சிகைக்காய் (சீயக்காய்); soap-nut. (சா.அக.).

[நெய்ச்சிக்கு + போக்கி]

நெய்ச்சிட்டி *ney-c-citti,* பெ. (n.) 1. காட்டுச் சீரகம்; wild cumin. 2. மரவகை; round sage-leaved Indian linden. 3. பவளக் குன்றிமணி (மலை.); crab's eye.

நெய்ச்சிட்டிக்கிழங்கு *ney-c-ciṭṭi-k-kiḻaṅgu,* பெ. (n.) செங்கழுநீர்க்கிழங்கு; bulb of Nymphae odorata. (சா.அக.).

[நெய்ச்சிட்டி + கிழங்கு]

நெய்ச்சிந்தி *ney-c-cindi,* பெ. (n.) பேய்க்கடலை; bitter Bengal gram - Cicer genus. (சா.அக.).

நெய்ச்சீலா *ney-c-cīla,* பெ. (n.) விலையும் சுவையும் மிகுதியான சீலா மீன் வகை; a kind of šīla fish. (க.ப.அ).

நெய்ச்சீவிகம் *ney-c-cīvigam,* பெ. (n.) **நெய்ச்சிந்தி** பார்க்க; see *ney-c-cindi.* (சா.அக.)

நெய்ச்சுட்டி *ney-c-cuṭṭi,* பெ. (n.) கீரை வகை (வின்.); a kind of greens.

[நெய்ச்சட்டி → நெய்ச்சுட்டி]

நெய்ச்சுண்டு *ney-c-cuṇḍu,* பெ. (n.) 1. கலயத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் நெய் (வின்.); small quantity of ghee sticking to a pot. 2. நெய்யளக்க உதவுஞ் சிறிய அளவுக்கருவி (தஞ்சை); small vessel for measuring ghee.

[நெய் + சுண்டு. சுண்டு = ஒரு சிற்றளவு. காய்ச்சும்போது ஏனத்தின் அடியில் தங்குவது]

நெய்சாயம் *ney-šāyam,* பெ. (n.) மெருகெண்ணெய்; varnish.

[நெய் + சாயம். சாயம் = வண்ணம்]

நெய்த்தானம் *ney-t-tāṉam,* பெ. (n.) தஞ்சை மாவட்ட வூர்; a village in Tanjore district.

இவ்வூர் திருநெய்த்தானம் என்று முன் அடை பெற்று இன்று தில்லைத் தானம் என்று வழங்குகிறது. இவ்வூரை அப்பர் ***"நிலா வெண்மதி யுரிஞ்ச நீண்டமாட நிறைவயல் சூழ் நெய்த்தானம்"*** எனவும்,

சம்பந்தர்,

"அறையும் புனல்வரு காவிரி யலை சேர் வடகரைமேல் நிறையும் புனை மடவார் பயில் நெய்த்தானமெனீரே" எனவும் புகழ்ந்து பாடுகின்றனர். முதலில் கோவில் பெயராக இருந்து பின் ஊர்ப்பெயராக மாறி இருக்கலாம்.

[நெய் + தானம். கோயிலில் விளக்கெரிக்க நெய் அதிகமாக வழங்கிய ஊராக இருக்கும்.]

நெய்த்திருக்கை *ney-t-tirukkai,* பெ. (n.) திருக்கை மீன் வகை (வின்.); a kind of thorn-back fish.

[நெய் + திருக்கை. நெய் மிகுந்திருக்கும் மீன் வகை]

நெய்த்துடுப்பு *ney-t-tuḍuppu,* பெ.(n.) 1. வேள்விகளில் பயன்படுத்தும் நெய்க்கரண்டி (திவா.); spatula, used especially in Vēdic sacrifices. 2. தீவட்டிக்காரர் பயன்படுத்தும் எண்ணெய்க்கலம்; vessel for oil used by torch bearers.

[நெய் + துடுப்பு. துடுப்பு = சட்டுவம், அகப்பை, கரண்டி]

நெய்த்தோர்[1] *neyttōr,* பெ. (n.) நெய்ப்பதமுள்ள அல்லது நெய்போலுறையும் அரத்தம்; blood. ***"நெய்த்தோரிடையறா தொழுகுங் கோட்டு"*** (நைடதம்.போர்புர்.21). ***"நெய்த்தோர் வாய... குருளை"*** (நற்.2).

க. நெத் + தரு; **தெ.** நெத்துரு; **துட.** நெத்ஸ்; **கோத.** நெத்ர் (netr); **குட.** நெத்த; **து.** நெத்தரு; **கொலா.** நெத்ரு; **நா.** நெத்துரு; **பர்.** நெதிர்; **கட.** நெத்துர்; **கோண.** நத்துர்; **கூ.** நெகுதரி; **குவி.** நெதொரி; **பிரா.** திதர்.

[நெய்+துவர் → நெய்த்தோர். துவர் = சிவப்பு, அரத்தம்.]

நெய்த்தோர்[2] *neyttōr,* பெ. (n.) ஒதியமரம் (வைத்தியபரி); Indian ash tree.

நெய்த்தோலி *ney-t-tōli,* பெ. (n.) வெண்ணிற முள்ள சிறிய கடல் மீன் வகை (பதார்த்த.938); anchovy, silvery, Engraulis indicus.

[நெய் + தோலி. நெய்போல் பளபளப்பும் வெண்மையும் உடைய மீன் வகை.]

தீவக்குறை இந்தியாவின் கிழக்கு, மேற்கு ஆகிய இரண்டு கடற்கரைகளிலும் காணப்படும் சிறுமீன்கள். இவை மெல்லிய உடலினையும் கூரிய முகத்தையும் உடையன. தலைமுதல் வால் வரை வெள்ளி போன்று பளபளப்பான பட்டை ஒன்றிருக்கும். மேற்குக் கடற்கரைப்பகுதியில் ஆண்டுதோறும் இம்மீன் அதிகம் பிடிக்கப் படுகிறது. சுறவ மாதம் முதல் கடக (சனவரி முதல் சூன்) மாதம் வரை இம்மீன்கள் அதிகம் பிடிக்கப்படுகின்றன. இம்மீனை கருவாடாகச் செய்து சேமித்து வைப்பர். இம்மீன்கள் கரையருகேயே வாழும் இயல்புடையது.



நெய்தல்[1] *neydal,* பெ. (n.) **1.** வெள்ளாம்பல்; white Indian water-lily. "*பல்லிதழ் நீலமொடு நெய்த னிகர்க்கும்*" (ஐங்குறு.2) (திவா.). **2.** கருங்குவளைமலர்; blue nelumbo. "*காஞ்சி மணிக்குலைக் கட்கமழ் நெய்தல்*" (குறிஞ்சிப்.84). **3.** செங்கழுநீர்க்கிழங்கு (சங்.அக.); tuber of red Indian water-lily.

ம. நெய்தல்; **து.** நைதிலெ; **க.** நெய்தல்.

[நெய் → நெய்தல் = வறண்ட கோடைக் காலத்தும் குளநிலத்தோ டொட்டியிருக்கும் கொடி வகை.

"........அக்குளத்திற் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே ஒட்டி யுறுவார் உறவு" (மூதுரை,17)]

நெய்தல்[2] *neydal,* பெ. (n.) **1.** கடலும் கடல் சார்ந்த இடமும்; maritime tract. "*எற்பாடு நெய்த லாதல் மெய்பெறத் தோன்றும்*" (தொல்.பொருள்.8). **2.** நெய்தற்றிணையின் உரிப்பொருளாகிய இரங்கல்; sorrow of lovers due to separation, assigned by poetic convention to the maritime tract. "*நெய்தல் சான்ற வளம்பல*" (மதுரைக்.325). **3.** சாப்பறை; funeral drum. "*ஓரினெய்தல் கறங்க*" (புறநா.194). **4.** ஒரு பேரெண்; a big number. "*நெய்தலுங் குவளையும்*" (பரிபா.2:13)

ம., க. நெய்தல்.

[நெய் → நெய்தல் = நெய்தல் கொடி வளரும் கடற்கரை (வே.க.)]

நெய்தல் தத்தனார் *neydal-tattaṉar,* பெ. (n.) **நெய்தற்றத்தனார்** பார்க்க; see *neydaṟṟattaṉār.*

[நெய்தல் + தத்தனார்]

தத்தனார் என்பது இயற்பெயர். நெய்தலைப் பாடுவதில் வல்ல வராயிருந்ததால் நெய்தல் தத்தனார் என்று பெயர் வந்திருக்கலாம். நற்றிணையில் இவர் பாடிய பாட்டு நெய்தல் நிலத்தைப் புனைந்த துரைக்கிறது.

நெய்தல்நிலம் *neydal-nilam,* பெ. (n.) கடலோரப் பகுதி; sea coast countries maritime tract. (சா.அக.).

[நெய்தல் + நிலம்]

பழந்தமிழ்நாட்டில் நிலத்தியல்பைக் கொண்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை என ஐவகையாக நிலத்தைப் பிரித்தனர். இவற்றுள் கடலும் கடல் சார்ந்த பகுதிகளும் நெய்தல் எனப்படும். இந்நிலப்பகுதியில் நெய்தல் மலர் நிறைந்திருப்பதைக் கொண்டு இப்பெயர் வந்ததென்பர். இரங்கலும் இரங்கல் (நிமித்தமுமாகிய) குறியுமாகிய ஒழுக்கம் பற்றி இப்பெயர் வந்த தென்பாரும் உண்டு.

நெய்தல் நிலத்தலைவன் சேர்ப்பன், புலம்பன்; தலைவி பரத்தி, நுளைச்சி. இந்நிலமக்கள் பரதர், பரத்தியர், நுளையர், நுளைச்சியர், அளவர், அளத்தியர், வலையர், வலைச்சியர், என்று அழைக்கப்படுவர். இவர்களின் கடவுள் மழைக்கடவுளான வருணன். "*வருணன் மேய பெருமணலுலகம்*" என்பர் தொல்காப்பியர். இந்நிலமக்கள் உப்பையும் மீனையும் விற்றுக் கிடைக்கும் உணவுப் பொருளைக் கொண்டு வாழ்வர். இவர்களின் தொழில், மீன் பிடித்தலும், உப்பு விளைத்தலும், மீனைக் காயவைத்தலும், பறவைகளை யோட்டுதலும், கடலாடுதலும், தெப்பம் விடுதலும் ஆகும். இவர்கள் மீன்கோட் பறை, பம்பை, விளரியாழ் என்னும் இசைக் கருவிகளைப் பயன்படுத்துவர்; செவ்வழி என்னும் பண்ணை இசைப்பர். இங்குள்ள விலங்குகள் உப்பு மூட்டைகளைச் சுமக்கும் பகடும், கடற்சுறாவும், முதலையுமாகும். பறவைகள் அன்னமும் அன்றிலும். தாழை, நீர்முள்ளி, அடம்பு, புன்னை, ஞாழல் என்னும் மலர்களை இம்மக்கள் அணிவர். இவர்களுக்கு உவர் நீர்க்கேணியிலிருந்தும், மணற்கேணி யிலிருந்தும் நீர் கிடைக்கும். இவர்களின் ஊர் பேரூர், பட்டினம், சிற்றூர், பாக்கம் எனப்பெறும்.

காதலரைப் பிரிந்தவர்கள் தனிமை பொறாமல் இரங்கலும் அதற்குரிய குறியும் இந்நிலத்துக் குரிய அகவொழுக்கமென அகப்பொருளி லக்கணம் கூறும். புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடலென்னும் எல்லா அகவொழுக்கமும் எல்லா நிலத்திற்கும் உரியவை யெனினும், இந்நிலத்திற்கு இரக்கமே அகவொழுக்கமெனக் கூறுவது புலனெறிவழக்க மென்பர். இக்கரணியம்பற்றியே பிற்பகலாகிய எற்பாடு எனும் சிறு பொழுது இந்நிலத்திற்குரிய தென்பர். இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி யென்னும் பெரும் பொழுதுகள் ஆறும் இந்நிலத்திற் குரியனவே.

தன்வலிமையே பொருளாக வந்த வேந்தனை, மற்றொரு மன்னன் சென்று தடுத்துப் பொருவதாகிய தும்பைத் திணை இந்நிலத்திற்குரிய புறவொழுக்கம், மணல் பரந்த வெளியுங் களர்நிலமும் போர் செய் வதற்குத் தக்க சிறந்த இடமெனக் கொண்டு இத்திணை யிந்நிலத்திற் சிறந்த தென்பர்.

நெய்தல்திணை *neydal-tiṇai,* பெ. (n.) நெய்தல் நிலம்; coastal region.

[நெய்தல் + திணை.
திணை = ஒழுக்கம், நிலம்]

நெய்தல்தெய்வம் *neydal-teyvam,* பெ. (n.) வாரணன், மழைக்கடவுள் (வருணன்); Varuṇaṉ.

[நெய்தல் + தெய்வம்]

நெய்தல் தெய்வம் : நெய்தல் நில மக்கள், கடலில் மீன்பிடித்தும், உப்பு விளைவித்தும், முத்தும் பவழமுங் குளித்தும், நீர் வாணிகஞ் செய்தும், கடலாலேயே வாழ்ந்ததனால், தம் தெய்வத்தைக் கடல் தெய்வமாகவே கொண்டு, அதற்கு வாரணன் என்று பெயரிட்டனர்.

வள் → வர் → வார் → வார்தல் = வளைதல். வார் + அணம் = வாரணம். நிலத்தை வளைந்து அல்லது சூழ்ந்து இருப்பதால், கடல் வாரணம் எனப்பட்டது. வலம்புரியும் இடம்புரியுமான சங்கு வாரணம் எனப் பெயர் பெற்றதும், உள் வளைந்திருப்பதனாலேயே. வாரணம் → வாரணன் = கடலோன். வாரணன் → வ. வருண.

தொல்காப்பியர் ஆரியம் தமிழகத்தில் வேரூன்றிய காலத்தவராதலின், வருணன் என்று வடசொல் வடிவிற் குறித்தார்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"
(தொல்பொருள்.அகத்.5)

இந்திய வாரியிலும், அமைதி (Pacific) வாரியிலும் பெரியதும் வலியதும் கொடியதுமான மீன் சுறாவாதலால், அதன் முதுகந் தண்டை வாரணன்

சின்னமாக நட்டு, நெய்தல் வாணரான பரதவர் வணங்கியும் விழாவெடுத்தும் வந்தனர்.

"சினைச் சுறவின் கோடுநட்டு
மனைச் சேர்த்திய வல்லணங்கினால்
மடற்றாழை மலர் மலைந்தும்
பிணர்ப்பெண்ணைப் பிழிமாந்தியும்
புன்றலை யிரும்பரதவர்
பைந்தழைமா மகளிரொடு
பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லா
துவவுமடிந் துண்டாடியும்
புலவுமணற் பூங்கானல்
மாமலை யணைந்த கொண்மூப் போலவும்
தாய்முலை தழுவிய குழவிபோலவும்
தேறுநீர்ப் புணரியோ டியாறுதலை
மணக்கும்
மலியோதத் தொலிகூடற்
தீதுநீங்கக் கடலாடியும்" (பட்டினப்.86–99)

நெய்தல்நிலத் தலைவன் *neydal-nila-t-talaivaṉ,* பெ. (n.) சேர்ப்பன்; chief of maritime tract.

[நெய்தல் + நிலம் + தலைவன். நெய்தல் நிலத் தலைவனின் பெயர்]

நெய்தல் நிலநீர் *neydal-nila-nīr,* பெ. (n.) உவர்நீர்; brackish water.

[நெய்தல் + நிலநீர். நெய்தல் நிலத்திற்குரிய நீர்]

நெய்தல்நிலவூர் *neydal-nila-v-ūr,* பெ. (n.) பாக்கம்; Pākkam, the sea side village.

[நெய்தல் + நிலவூர்]

நெய்தல்நிலப்பறவை *neydal-nila-p-paṟavai,* பெ. (n.) கடல் காக்கை; a kind of sea-bird.

[நெய்தல் + நிலப்பறவை. நெய்தல் நிலமான கடற்பகுதியில் காணப்படும் பறவை]

நெய்தல்நிலப்பறை *neydal-nila-p-paṟai,* பெ. (n.) பம்பை (பிங்.); tabour coarse.

[நெய்தல் + நிலப்பறை. கடலும் கடல் சார்ந்த நிலமான நெய்தல் நிலத்து முழங்கும் பறை]



நெய்தல்நிலப்பெண் *neydal-nila-p-peṇ,* பெ. (n.) மீனவப் பெண், நுளைச்சி (பிங்.); a fisher-woman.

[நெய்தல் + நிலப்பெண்]

நெய்தல்நிலமரம் *neydal-nila-maram,* பெ. (n.)

1. அடம்புமரம்; a fragrant flowering tree.
2. கோங்குமரம்; red cotton tree.
3. தாழைமரம்; screw pine tree.
4. புன்னைமரம்; Indian beech tree.
5. முள்ளிச்செடி; thorny plant.

[நெய்தல் + நிலம் + மரம். நெய்தல் நிலத்து வளரும் மரஞ்செடி கொடிகள்.]

நெய்தல்நிலத்தொழில் *neydal-nila-t-toḻil,* பெ. (n.) **1.** மீன்பிடிக்கை; fishing. **2.** உப்பு விளைவிக்கை; salt plantation.

[நெய்தல் + நிலம் + தொழில். நெய்தல் நிலமக்கள் செய்யும் தொழில்.]

நெய்தல்பூண்டோன் *neydal-pūṇḍōṉ,* பெ. (n.) நெய்தல் மாலையணிந்த ஐயனார்

என்னும் ஊர்த் தெய்வம் (நாமதீப.43); a village deity, as wearing a garland of neydal.

[நெய்தல் + பூண்டோன். பூண்டோன் = அணிந்தவன்.]

நெய்தல்யாழ் *neydal-yāḻ*, பெ. (n.) நெய்தல் நிலப் பெரும்பண்களுள் ஒன்று (திவா.); a primary melody-type of neydal tract.

[நெய்தல் + யாழ். நெய்தல் நிலமக்கள் இசைக்கும் யாழ்.]

நெய்தல்யாழ்த்திறம் *neydal-yāḻ-t-tiṟam*, பெ. (n.) நெய்தல் நிலப்பண் வகை (திவா.); a secondary melody-type-of the neydal class.

[நெய்தல் + யாழ்த்திறம். யாழ்த்திறம் = இசைப்பண்]

நெய்தல்வாயில் *neydal-vāyil*, பெ.(n.) திருவள்ளுவர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் உள்ள ஊர்; a village in Thiruvalluvar Dt., Ponnēri taluk.

[நெய்தல் + வாயில்]

நெய்தல் நிலத்துக்கு இவ்வூர் வாயிலாக அமைவதாலும் நெய்தல் வாயில் எனப்பெயர் பெற்றது. நெய்தல் வாயில் மருவி நெய்தல் வாயல் என்று வழங்குகிறது.

நெய்தல்விளைவு *neydal-viḷaivu*, பெ. (n.) **1.** உப்பு; common salt. **2.** மீன்; fish. **3.** கடலில் மூழ்கிக் கிடைக்கும் பொருள்களான பவளம், முத்து முதலியன; substances obtained from the sea such as coral, pearl amber etc. (சா.அக.).

மறுவ. கடல்படுபொருள்கள்.

[நெய்தல் + விளைவு]

நெய்தலாம்பல் *neydal-āmbal*, பெ.(n.) ஒருவகை நீர்ச்செடி (M.M.588); fringed water-lily, Limnanthemum cristatum.

[நெய்தல் + ஆம்பல். நெய்தல் நிலத்து வளரும் ஆம்பல் செடி.]

நெய்தற்கருப்பொருள் *neydaṟ-karupporuḷ*, பெ.(n.) நெய்தல் நிலக் கருப்பொருள்; growing, ripening grain in Neydal land.

[நெய்தல் + கருப்பொருள்]

தெய்வம், தலைவர், மாக்கள், புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணா, பறை, யாழ், பண், தொழில் முதலிய பதினான்கும் நெய்தல் நிலக் கருப் பொருள்கள். *"ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள் விலங்கு ஊர் நீர் பூ மரம் உணாப்பறை யாழ்பண் தொழிலெனக் கரு ஈ ரெழுவகைத் தாகும்"* (நம்பியகப்.19).

நெய்தலின் கருப்பொருள்கள்

தெய்வம்	:	வாரணன் (வருணன்)
தலைவன்	:	சேர்ப்பன், புலம்பன்
மக்கள்	:	பரத்தி, நுளைச்சி, நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர்.
புள்	:	கடற்காக்கை
விலங்கு	:	சுறவம்
ஊர்	:	பாக்கம், பட்டினம்
நீர்	:	உவர் நீர்க்கேணி
பூ	:	நெய்தல், முண்டகம், கைதை, அடம்பு
மரம்	:	புன்னை, ஞாழல்
உணவு	:	மீன், உப்பு இவைகள் விற்றுப் பெறுவன
பறை	:	மீன்கோட்பறை, நாவாய், பம்பை
யாழ்	:	விளரியாழ்.
பண்	:	செவ்வழிப்பண்
தொழில்	:	மீன் உப்புப்படுத்தல் (கருவாடாக்கல்) மீனை

உணங்கவைத்தல், விற்றல்,
மீனை உணக்கல், புல்
ஒப்பல் நெடுங்கடல் ஆடல்.

"வருணன் சேர்ப்பன் விரிதிரைப் புலம்பன்
பரும அல்குல் பரத்தி நுளைச்சி
நுளையர் நுளைச்சியர் பரதர் பரத்தியர்
அளவர் அளத்தியர் அலைகடற் காக்கை
சுறவம் பாக்கம் பெறலரும் பட்டினம்
உவர்நீர்க் கேணி கவர்நீர் நெய்தல்
கண்டகக் கைதை முண்டகம் அடம்பு
கண்டல் புன்னை வண்டிமிர் ஞாழல்
புலவு மீன்உப்பு விலைகளிற் பெற்றன
நளிமீன் கோட்பறை நாவாய்ப் பம்பை
விளரியாழ் செவ்வழி மீன் உப்புப்படுத்தல்
உணங்கவை விற்றல்மீன் உணக்கல்புள் ஒப்பல்
நெடுங்கடல் ஆடல் நெய்தற்கருப் பொருளே"
(நம்பியகப்.24)

நெய்தற்கார்க்கியர் *neydar-kārkkiyar,* பெ. (n.) கழகக் காலப் புலவர்; Sangam poet.

[நெய்தல் + கார்க்கியர்]

கார்க்கியர் என்பது இவரின் இயற்பெயர். நெய்தல் திணையைப் பற்றி இவரது பாடல்கள் அமைவதால் நெய்தற்கார்க்கியர் எனப்பட்டார். 'மணிப்பூ முண்டகத்தின் வேறாய் மணிமருள் நெய்தலை மணப்பூ என வழங்கிக் காட்டி யதனால் இவர் நெய்தற்கார்க்கியர் எனப் பட்டனர் ஆவார்' என ஊகிப்பாருமுளர். நெய்தல் நிலத்தின் கழியிலுள்ள நீலப்பூக்கள் கூம்புவதும், கடல்வளி வீசுவதும் ஊதைக் காற்றுத் துன்பத்தை உண்டாக்குவதும், தலைவன் மணியொலிக்கத் தேரிலேறிக் கடற்கரை வழியாக வருவதும் இவர் பாடல் களில் சொல்லப்படுகின்றன. இவர் குறுந் தொகையில்.55, 212 ஆகிய பாடல்களைப் பாடியுள்ளார்.

"மார்கழி மணிப்பூக் கூம்பத் தூத்திரைப் பொங்குபிதிர்த் துவலையொடு மங்குல் தைஇக் கையற வந்த தைவரல் ஊதையொடு இன்னா வுறையுட் டாகும் சின்னாட் டம்மவிச் சிறுநல்லூரே" (குறுந்.55).

"கொண்கன் ஊர்ந்த கொடுஞ்சி நெடுந்தேர்
தெண்கட லடைகரைத் தெளிமணி யொலிப்பக்
காணவந்து நாணப் பெயரும்
அளிதோ தானே காமம்
விளிவது மன்ற நோகோ யானே"
(குறுந்.212).

நெய்தற்கிழங்கு *neydar-kilangu,* பெ. (n.) ஆம்பற்கிழங்கு; the tuberous roots of white Indian water lily, Nymphae pubescens alias N.stellata. (சா.அக.).

[நெய்தல் + கிழங்கு]

இக்கிழங்கை அவித்துச் சருக்கரையிட்டுச் சாப்பிட உடம்பிற்குக் குளிர்ச்சி ஏற்படும். பித்த எரிச்சல், அரத்தக் கழிச்சல் நீங்கும்.

நெய்தற்சாய்த்துய்த்தஆவூர்கிழார் *neydar-cāyttuytta-āvūr-kilār,* பெ. (n.) கடைக்கழகக் காலத்து வாழ்ந்த ஒரு புலவர்; Sangam poet.

வேளாண்குலத்தவர். தலை மகனைத் தோழி வரைவு கடாவுவதாகச் செய்துள்ள இவரது அகப்பாடல் படிப்போர்க்கு இன்பம் தருவதாக அமைந்துள்ளது. இப்பாடலால் "மிக்க வேட்கை யுடையவரேனும் சான்றோர் பழியோடு வரும் இன்பத்தை விரும்பார், புகழோடு வரும் இன்பத்தையே விரும்புவர்" என்னும் நெறி விளக்கப்படுகிறது. இவ்வொரு பாட்டு மட்டுமே இவர் பாடியதாகக் காணப்படுகிறது.

"கூனல் எண்கின் குறுநடைத் தொழுதி
சிதலை செய்த செந்நிலைப் புற்றின்
மண்புனை நெடுங்கோ டுடைய வாங்கி
இரைநசைஇப் பரிக்கும் அரைநாட் கங்குல்
ஈன்றணி வயவுப்பிணப் பசித்தென மறப்புலி
ஒளிறேந்து மருப்பின் களிறட்டுக் குழுமும்
பனியிருஞ் சோலை எமியம் என்னாய்
தீங்கு செய் தனையே ஈங்குவந் தோயே
நாளிடைப் படினென் தோழி வாழாள்
தோளிடை முயக்க நீயும் வெய்யை
கழியாக் காதலர் ஆயினும் சான்றோர்
பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்
வரையின் எவனோ வான்தோய் வெற்ப
கணக்கலை இகுக்குங் கறியிவர் சிலம்பின்
மணப்பருங் காமம் புணர்ந்தமை அறியார்
தொன்றியல் மரபின் மன்றல் அயரப்
பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி
நொதுமல் விருந்தினம் போலவிவள்
புதுநாண் ஒடுக்கமும் காண்குவம் யாமே"
(அகநா.112)

நெய்தற்பறை *neydar-parai,* பெ. (n.) 1. நெய்தல் நிலத்து மக்கள் முழக்கும்

மீன்கோட் பறை, நாவாய் பறை (நம்பியகப்.24); drum peculiar to maritime tracts. 2. சாப்பறை (குறள்,1115, உரை); funeral drum.

[நெய்தல் + பறை. பறை = கொட்டிசைக் கருவி.]

நெய்தற்றத்தனார் *neydaṟṟattaṉār,* பெ. (n.) கடைக் கழகக் காலப் புலவர்; šaṅgam poet.

[நெய்தல் + தத்தனார்]

இவர் குடிக்கிழார் மகனார் நெய்தற்றத்தனார் எனவும் அழைக்கப்பட்டார். கொடியூர் கிழார் மகனார் நெய்தற்றத்தனார் எனவும் கூறப்படுகிறார் (அகநா.243). இவர் அகநா.243, நற்.49,130 ஆகிய பாடல்களைப் பாடியுள்ளார். இவரது இயற்பெயர் தத்தன். நெய்தலையும், பாலையையும் பாடுவதில் வல்லவர். நீ படும் துன்பத்தைத் தலைமகன் ஊருக்குச்சென்று அவன் அறிந்து கொள்ளும்படி கூறுவோம் என்று தோழி தலை மகளை நோக்கிக் கூறியதாக இவரது பாடல் காணப்படுகிறது.

"படுதிரை கொழீஇய பானிற எக்கர்த்
தொடியோர் மடிந்தெனத் துறைபுலம் பின்றே
முடிவலை முகந்த முடங்கிறாப் பாவைப்
படுபுள் ளோப்பலிற் பகன்மாய்ந் தன்றே
கோட்டுமீன் எறிந்த உவகையர் வேட்டமடிந்து
எமரும் அல்கினர் ஏமார்ந் தனமெனச்
சென்றுநாம் அறியின் எவனோ தோழி
மன்றப் புன்னை மாச்சினை நறுவீ
முன்றிற் றாழையொடு கமழுந்
தென்கடற் சேர்ப்பன்வாழ் சிறுநல் ஊர்க்கே"
(நற்.49).

இதுநெய்தற்றிணைப் பாடல்.

"அவரை ஆய்மலர் உதிரத் துவரின
வாங்குதுளைத் துகிரின் ஈங்கை பூப்ப
இறங்குபோ தவிழ்ந்த ஈர்ம்புதற் பகன்றை
கறங்குநுண் துவலையின் ஊருழை யணியப்
பெயனீர் புதுவரல் தவிரச் சினைநேர்பு பீள்விரிந்
திறைஞ்சிய பிறங்குகதிர்க் கழனி
நெல்லொலி பாசவல் துழைஇக் கல்லெனக்
கடிதுவந் திறுத்த கண்ணில் வாடை
நெடிதுவந் தனையென நில்லா தேகிப்
பலபுலந் துறையயுந் துணையில் வாழ்க்கை
நம்வலத் தன்மை கூறி யவர்நிலை
அறியு மாயின் நன்றுமன் தில்ல
பனிவார் கண்ணே மாகி யினியது
நமக்கே யெவ்வம் ஆகின்று
அனைத்தாற் றோழிநந் தொல்வினைப் பயனே"
(அகநா.243).

இது பாலைத் திணைப்பாடல்.

நெய்தனிலநீர் *neydaṉila-nīr,* பெ. (n.) உவரி நீர்; salt water. (சா.அக.).

[நெய்தல் + நிலம் + 'நீர்]

நெய்தனிலப்பறவை *neydaṉila-p-paṟavai,* பெ. (n.) கடற் காக்கை (நம்பியகப்.24); sea crow.

[நெய்தல் + நிலம் + பறவை]

நெய்தனிலமக்கள் *neydaṉila-makkaḷ,* பெ. (n.) கடற்கரைப் பகுதியில் வாழும் மக்கள் நுளையன், நுளைச்சி (நம்பியகப்.24); people living in the maritime coastal tract.

[நெய்தல் + நிலம் + மக்கள்]

நெய்தாங்கி *ney-tāṅgi,* பெ. (n.) விளக்கு வகை (I.M.P.S.A.402); a lamp.

[நெய் + தாங்கி. நெய்யூற்றி எரிக்கும் விளக்குவகை]

நெய்தை *neydai,* பெ. (n.) பெருமை (பிங்.); greatness, dignity, importance.

[நெய்–³ → நெய்தை]

நெய்நெட்டி *ney-neṭṭi,* பெ. (n.) சம்பங்கோரை (சங்.அக); elephant grass.

[நெய் + நெட்டி. நெட்டி = கோரைவகை. நெய்போல் பளபளப்பான சம்பங்கோரை]

நெய்ப்பசை *ney-p-pašai,* பெ. (n.) எண்ணெய்ப் பசை; oilness, greasiness. (சா.அக.)

[நெய் + பசை]

நெய்ப்பந்தம் *ney-p-pandam,* பெ. (n.) 1. நெய்யூற்றி எரிக்கும் பந்தம்; torch burning ghee. 2. இறந்தவரின் உடலுக்குக் கொள்ளி வைப்பதற்காக நெய்யில் நனைத்த தீப்பந்தம்; torch fed with ghee used for lighting funeral pyre. 3. இறந்தவரின் உடலைச் சுற்றி பேரன், பேர்த்திகள் பிடிக்கும் நெய்யில் நனைத்த பந்தம்; torch fed with ghee holding grand son and grand daughter at the time of funeral. *தாத்தாவின் சாவில் பேரன்பேத்திகள் நெய்ப் பந்தம் பிடித்தல் மரபு.*

[நெய் + பந்தம். பந்தம் = தீவட்டி, தீத்திரள்]

நெய்ப்பயிறு *ney-p-payaru,* பெ.(n.) சிறுதுவரை; small leaved ebony, Diosphyros microphylla. (சா.அக.).

நெய்ப்பரி *ney-p-pari,* பெ.(n.) பன்னாடை; the web at the bottom of the palmyra tree the fiber covering about the base of palmyra tree. (சா.அக.).

[நெய்யரி → நெய்ப்பரி]

நெய்ப்பற்று *ney-p-parru,* பெ. (n.) 1. நெய்யின் ஒட்டுந்தன்மை; greasiness, stickiness of ghee. *இத்தின்பண்டத்தில் நெய்ப்பற்று மிகுந்ததுள்ளது.* 2. கொழுப்பு; fat corpulence.

[நெய் + பற்று. பற்று = பசை]

நெய்ப்பாகம் *ney-p-pāgam,* பெ.(n.) நெய்யினால் செய்யும் பண்டங்கள்; ghee preparations. (சா.அக.).

[நெய் + பாகம்]

நெய்ப்பான *ney-p-pāna,* கு.பெ.எ.(adj.) கொழுத்த; filled with fat, fatty.

[நெய் → நெய்ப்பான]

நெய்ப்பிடி *ney-p-pidi,* பெ. (n.) நெய்ப்பற்று (வின்.) பார்க்க; see *ney-p-parru.*

[நெய் + பிடி]

நெய்ப்பிடிப்பு *ney-p-pidippu,* பெ. (n.) நெய்ப்பற்று (வின்.) பார்க்க; see *ney-p-parru. சர்க்கரைப் பொங்கலில் நெய் பிடிப்பு மிகுதி.*

[நெய் + பிடிப்பு]

நெய்ப்பிரியக்காய்ச்சு—தல் *ney-p-piriya-k-kāyccu-,* 5செ.குன்றாவி.(v.t.) எண்ணெய் வெளிவரும்படி காய்ச்சுதல்; boiling down till the material which is boiled gives out or sheds all its oil contents. (சா.அக.)

[நெய் + பிரிய + காய்ச்சு—தல்]

நெய்ப்பிலி *neyppili,* பெ.(n.) ஒரு வகை மாணிக்கக் குற்றம்; flaw in a ruby. "*சந்தை நெய்ப்பிலி யெனத் தகுபதினாறும்*" (கல்லா.97).

[நெய்ப்பு + இலி. நெய்ப்பு இல்லாத மாணிக்கம். நெய்ப்பு = பளபளப்பு]

நெய்ப்பீர்க்கு *ney-p-pīrkku,* பெ.(n.) நுரைப்பீர்க்கு (மலை.); oil-giving luffa.

[நெய் + பீர்க்கு]

நெய்ப்பு[1] *neyppu,* பெ. (n.) 1. நெய்ப்பத முடைத்தாயிருக்கை (திருக்கோ.56,உரை); unctuousness, oiliness. *இனிப்பில் நெய்ப்புத்*

தன்மை அதிகம். **2.** பளபளப்பு (சீவக.**169.** உரை); shining appearance, gloss, polish. **3.** கொழுப்பு (வின்.); fatness, plumpness. **4.** சீழ் (வின்.); pus, matter.

[நெய் → நெய்ப்பு. நெய் = பளபளப்பு]

நெய்ப்பு[2] *neyppu,* பெ. (n.) **1.** சிதல்; white ant. **2.** புல்லாமணக்கு; creeping castor plant, Sebastiana chamaclea. (சா.அக.).

[நெய் → நெய்ப்பு]

நெய்ப்புச்சுவரி *neyppu-c-cuvari,* பெ. (n.) மான் செவிக்கள்ளி (சங்.அக.); spurge.

[நெய்ப்பு + சுவரி. சுவறுதல் = வற்றுதல், உறிஞ்சப்படுதல். சுவறு → சுவரி.]

நெய்ப்புள்ள *neyppuḷḷa,* பெ.எ. (adj.) **1.** கொழுப்புள்ள; unctuous. **2.** எண்ணெய்ப் பசையுள்ள; oleaginous. (சா.அக.).

[நெய் → நெய்ப்பு + உள்ள]

நெய்ம்மிதி *ney-m-midi,* பெ.(n.) *நெய்ம்மி திகவளம்* பார்க்க; see *ney-m-midi-kavaḷam.* "*நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மதி பெறாஅ*" (புறநா.**44**).

[நெய் + மிதி]

நெய்ம்மிதிகவளம் *ney-m-midi-kavaḷam,* பெ.(n.) குதிரை, யானைக்குக் கொடுக்க நெய்கலந்து மிதித்துத் திரட்டப்பட்ட உணவு; food for elephants and horses, rolled into balls after mixing it with ghee and trampling it with foot. "*நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளம்*" (பெரும்பாண்.**394**)

[நெய்ம்மிதி + கவளம். கவளம் = உணவுத்திரள்]

நெய்ம்மீன் *ney-m-mīn,* பெ. (n.) **1.** பதினான்காம் விண்மீன் (சித்திரை); the 14th nakṣatra. **2.** வெள்ளிறால் மீன் (வின்.); white prawn.

[நெய் + மீன். நெய்யின் தன்மை கொண்ட மீன்.]

நெய்மரம் *ney-maram,* பெ. (n.) நெய்யைப் போல் உறையும் எண்ணெய் உள்ள வெண்ணெய் மரம்; name given to several tress, the fruit or bark which yields a solid oily or fatty substance such as Mowah butter, Cokum butter, Cocoa butter etc.

மறுவ. வெண்ணெய் மரம்

[நெய் + மரம்]

நெய்முட்டை *ney-muṭṭai,* பெ.(n.) நெய் யெடுக்குங் கரண்டி; spoon for taking ghee. "*நெய்முட்டை யொன்று வெள்ளி எண்பத்தேழு கழஞ்சு*" (தெ.க.தொ.**2:418**).

[நெய் + முட்டை. முட்டை = சிறுகரண்டி]

இங்கு முட்டி எடுப்பதால் முட்டை என்பது கரண்டி என்ற பொருளில் வந்தது.

நெய்யடிசில் *ney-y-aḍišil,* பெ. (n.) நெய் கலந்த சோறு; rice food mixed cow's ghee. (சா.அக.).

மறுவ. நெய்ச்சோறு.

[நெய் + அடிசில்]

நெய்யணி *ney-y-aṇi,* பெ. (n.) மகப்பேற்றின் பிறகு குழந்தைக்குச் செய்யும் மங்கல நீராட்டுச் சடங்கு; the ceremonial oil-bath taken after the birth of a child. "*கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி நயந்த கிழவனை*"

(தொல்.பொருள்.147). *"மையாடிய தடங்கண்ண ளொரு நன் மகவுயிர்த்து நெய்யாடினள்"* (வெங்கைக்கோவை,360).

[நெய் + அணி. எண்ணெய் கலந்த நீரால் குழந்தையைக் குளிப்பாட்டும் விழா.]

நெய்யரி *ney-y-ari,* பெ. (n.) தென்னை, பனை முதலிய மரங்களில் மட்டைகளை மரத்தோடு பிணைக்கும் வலைபோன்ற பகுதி, பன்னாடை; the fibrous covering about the base of the palmyra or cocoanut stalk. *"அன்னமாவே மண்ணொடுகிளியே யில்லிக்குடமா டெருமை நெய்யரி அன்னார்"* (நன்.38).

[நெய் + அரி. அரி = பனங்கருக்கு]

நெய்யல் *neyyal,* பெ. (n.) நெசவு செய்கை; weaving.

[நெய் → நெய்யல்]

நெய்யற்கயிறு *neyyar-kayiru,* பெ. (n.) நெசவு செய்யும் நெய்வார் கருவியுளொன்று (யாழ்.அக.); a weaver's implement.

[நெய்யல்+ கயிறு. நெய்வதற்குப் பயன்படும் கயிறு]



நெய்யன்னம் *ney-y-annam,* பெ. (n.) நெய்யடிசில் பார்க்க; see *ney-y-adišil.* (சா.அக.).

[நெய் + அன்னம்]

நெய்யாட்டல் *ney-y-āttal,* பெ. (n.) வெண்ணெய் திரட்டல்; collecting butter. (சா.அக.).

[நெய் + ஆட்டல். நெய் என்ற சொல் வெள் + நெய் = வெண்ணெய், எள் + நெய் = எண்ணெய் என்னும் பொருளில் வருவது வழக்கம்.]

நெய்யாட்டு *ney-y-āttu,* பெ. (n.) நெய்யாடல் பார்க்க; see *ney-y-ādal.* (சா.அக.).

[நெய் + ஆட்டு]

நெய்யாடல் *ney-y-ādal,* பெ. (n.) **1.** திருவிழாக் காலங்களில் மங்கலமாக ஆடும் எண்ணெய் முழுக்கு; oil bath. *"இவளைத் தோற்பித்ததுக்கு நெய்யாடல் போற்றுகிறபடி"* (ஈடு, 7.3:1). **2. நெய்யணி** பார்க்க; see *ney-y-ani.*

[நெய் + ஆடல். ஆடல் = நீராடல். அல்– ஈற்றுத் தொழிற் பெயர்.]

நெய்யாடு–தல் *ney-y-ādu-,* 5செ.கு.வி. (v.i.) **1.** எண்ணெய்த் தேய்த்து மங்கல நீராடல்; to take oil-bath, on festive occasions. *"அண்டர் மிண்டிப்புகுந்து நெய்யாடினார்"* (திவ். பெரியாழ்.1.1:5). **2.** நெய்பூசுதல்; to anoint. *நெய்யாடிய வேல்.*

[நெய் + ஆடு. ஆடுதல் = நெய் முதலியன பூசி நீராடுதல். இது தல்லீற்றுத் தொழிற் பெயராகவும் வரும்.]

நெய்யுண்டை *ney-y-undai,* பெ. (n.) நெய் கலந்த சோற்றுத் திரள் (இ.வ.); ball of food mixed with ghee. *கோயிலில் நெய்யுண்டை கொடுத்தார்கள்.*

[நெய் + உண்டை. உண்டை = சோற்றுத் திரள், கவளம். உருண்டை → உண்டைஇடைக்குறை.]

நெய்யுண்ணி *ney-y-uṇṇi,* பெ. (n.) கொடி வகை, ஐவிரலி; ghee eater from its medicinal property, creeper known as bryony, Bryonia laciniosa. (சா.அக.).

நெய்யுருண்டை *ney-y-uruṇḍai,* பெ. (n.) **நெய்யுண்டை** (இ.வ.) பார்க்க; see *ney-y-uṇḍai.*

[நெய் + உருண்டை]

நெய்யுலை *ney-y-ulai,* பெ.(n.) உணவு சமைத்தற்காக நெய் காய்ச்சுகின்ற உலை; pot of ghee heated for cooking. "*நெய்யுலை சொரிந்த மையூ னோசை*" (புறநா.261)

[நெய் + உலை. உலை = நெருப்புள்ள அடுப்பு]

நெய்யேற்று—தல் *ney-y-ēṟṟu-,* 5செ.கு.வி.(v.i.) அருகம்புல்லை நெய்யிற் தோய்த்து மணமக்கள் தலையில் மகளிர் வாழ்த்தித் தடவுதல்; to bless a bride and bridegroom by stroking their heads with quitch grass soaked in ghee. "*மன்னுவாய் திருவோ டென்று வாழ்த்திநெய் யேற்றினாரே*" (சீவக.2417).

[நெய் + ஏற்று. ஏற்றுதல் = வாழ்த்துதல்]

நெய்வண்ணவோவியம் *ney-vaṇṇa-v-ōviyam,* பெ. (n.) எண்ணெயில் வண்ணங் களைக் கரைத்து வரைந்த ஓவியம்; oil painting.

[நெய் + வண்ணம் + ஓவியம்]

ஓவியக்கலை சிறந்த நிலையை அடைய நெய்வண்ண முறை முதற் கரணியமாக இருந்தது. இம்முறையைப் பெல்சிய நாட்டு பிளாண்டர் (flanders) பகுதியைச் சேர்ந்த யான் வான் ஐக் (Jan Van Eyck 1389–1440) என்பவர் கண்டுபிடித்தார். இவருக்கு முன்பு வண்ணங்களைக் குழைக்க முட்டைக் கருவையோ, தண்ணீரையோ பயன்படுத்தினர். இவருடைய முயற்சியால் ஆளிவிதை போன்ற விதைகளின் எண்ணெய் பயன்படும் என்பது தெரிய வந்தது. எண்ணெயில் கரைத்துத் தீட்டப் பெறும் ஓவியங்கள் ஒளிபெற விளங்குவதோடு தண்ணீர்பட்டால் அழி வதில்லை.

மற்ற முறைகளில் ஓவியத்தை வரைந்த பிறகு அதன்மேல் வேறு வண்ணங்களைத் தீட்டிப் படத்தை மாற்ற முடியாது; மாற்றவும் கூடாது. ஆனால், நெய்வண்ணங்களைப் பலவாறு, பலநாள், பலமாதம், பல ஆண்டுங்கூட வண்ணந் தீட்டிக் கொண்டி ருக்கலாம்.

நெய்வார் *neyvār,* பெ. (n.) நெசவு செய்பவர் (யாழ்.அக.); the caste of weavers.

க. நேயுவவரு

[நெய்[1] → நெய்வு + ஆர்]

நெய்வான்மீன் *ney-vāṉ-mīṉ,* பெ.(n.) 14 ஆம் விண்மீன் (சித்திரை); (திவா.) the 14th *nakṣatra.*

மறுவ. நெய்ம்மீன்.

[நெய் + வான்மீன். விண்ணில் உள்ள 27 நாண்மீன் தொகுதிகளுள் ஒன்று.]

நெய்விலை *ney-vilai,* பெ. (n.) வரிவகை (தெ.க.தொ.2, 352); a tax.

[நெய் + விலை. சாந்துடன் சேர்ந்து இறுகப் பிடித்துக் கொள்ளும் நெய் போன்ற பொருளுக்கு வாங்கப்பட்ட வரியாகலாம்.]

நெய்விழா *ney-viḻā,* பெ. (n.) **நெய்யாடல்** பார்க்க; see *ney-y-āḍal.* "*உலகெலா முவகை நெய்விழாப் பரம்பின்*" (கம்பரா.மருத்து.106).

[நெய் + விழா. நெய்யால் குளிப்பாட்டும் விழா.]

நெய்விழுது *ney-viḻudu,* பெ.(n.) **1.** உறைந்த நெய்; congealed ghee. **2.** புதிதாகத் திரண்ட வெண்ணெய் (வின்.); butter freshly prepared from cream.

[நெய் + விழுது. விழுது = வெண்ணெய், நீர்விட்டரைத்துத் திரட்டியது]

நெய்விளக்கு[1] *ney-viḷakku,* பெ. (n.) **1.** கோயில்களில் நெய்யூற்றி யெரிக்கும் விளக்கு; lamp fed with ghee. ***கோயிலில் நெய்விளக்கு வைத்தால் ஊழ் வினை அகலும் என்பது பழமை நம்பிக்கை.*** **2.** தெய்வத்துக்கு முன் ஏற்றும் மாவிளக்கு (இ.வ.); lamp of dough burnt with ghee before an idol. ***நெய் விளக்குப் போட நேர்ந்து கொண்டேன்.***

[நெய் + விளக்கு]



நெய்விளக்கு[2] *ney-viḷakku,* பெ. (n.) நாகை மாவட்டம் திருமறைக்காடு வட்டத்தில் உள்ள ஊர்; a village in Thirumaṟaikkāḍu taluk, Nāgapaṭṭiṉam district.

திருமறைக்காட்டுக் கோயிலில் விளக்கு எரிப்பதற்காக இவ்வூர்ப் பகுதியில் இலுப்பை மரங்கள் வளர்க்கப்பட்டன. அதற்காகவே இப்பகுதி மானியமாக வழங்கப்பட்டது. விளக்கெரிக்க நெய் கொடுக்கும் ஊராகையால் நெய் விளக்கு எனப்பட்டது.

நெய்வு *neyvu,* பெ. (n.) நெசவு (உ.வ.); weaving. ***நூலை நெய்வு செய்ய வேண்டும். நெய்வுக்கு ஆள்வேண்டும்.***

[நெய்[1] → நெய்வு]

நெய்வெட்டி *ney-veṭṭi,* பெ. (n.) **1.** பழுப்பு நிறமுள்ள கடல் மீன் வகை; mud-skipper, olive-brown, *Periophthalmus koelreuteri.* **2.** ஒன்பது விரலம் வளரக் கூடியதும் பழுப்பு நிறமுள்ளதுமான கடல் மீன் வகை; mud-skipper, brownish, attaining **9** inch in length, Periophthalmus schlosseri.

[நெய் + வெட்டி. நெய்யின் மணமும், எண்ணெய்ப் பசையுமுடைய மீன் வகை]



நெய்வேலி *neyvēli,* பெ. (n.) தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள நகரம்; a town in Cuddalore district.

தமிழ்நாட்டில் பழுப்பு நிலக்கரி கிடைக்கும் இடம். இந்நிலக்கரியைப் பயன்படுத்தி அனல் மின்சாரம் இங்குச் செய்யப்படுகிறது. நிலநடுக்கத்தில் நிலத்துள் புதைந்த காடு சில்லாயிரம் ஆண்டுகளில் வெட்டப்படின் பழுப்பு நிலக்கரியும், பல்லாயிரம் ஆண்டுகள் கழித்து வெட்டப்படின் கருப்பு நிலக்கரியும், ஓரிலக்கம் ஆண்டு சென்ற பின் வெட்டி எடுக்கப்படின் வயிரமும் கிடைக்கும் என்பது நிலவியல் ஆய்வுக் குறிப்பு.

'வேலி' என்பது நிலவளவைப் பெயர்களுள் ஒன்று. சில இடங்களில் நெல் விளையும் கழனியையும் 'வேலி' என்னும் சொல் குறிக்கிறது. (நெல் வயல்கள் நிறைந்த இடத்தில் அமைந்த ஊராகையால் நெல்வேலி எனப் பெயர் பெற்று பின் நெய்வேலி ஆயிற்று எனலாம்.)

நெய்வை—த்தல் *ney-vai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மருந்து நெய் செய்தல்; (இ.வ.); to make medicated ghee. 2. கொழுப்பேறுதல் (யாழ்.அக.); to become fat. *உடம்பில் நெய் வைத்து விட்டது.*

[நெய் + வை—த்தல்.]

நெர்க்குண்டி *nerkkuṇḍi,* பெ. (n.) நொச்சி மரம் (மலை.); chaste tree.

நெரடு¹—தல் *neraḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *நெருடு—தல்* பார்க்க; see *neruḍu-.*

[நெருடு—தல் → நெரடு—தல்.]

நெரடு²—தல் *neraḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. கடினமாதல்; to be rough, hard. *தரை நெரடுது.* 2. தட்டுப்படுதல் (வின்.); to be halting. *அந்தப்பாட்டில் இரண்டிடங்கள் நெரடுகின்றன. நாவில் ஏதோ நெரடுது.*

[நெருடு → நெரடு—தல்]

நெரடு³ *neraḍu,* பெ. (n.) *நெருடு* பார்க்க; see *neruḍu.*

[நெருடு + நெரடு.]

நெரலைத்தாளி *neralai-t-tāḷi,* பெ. (n.) தாளிக்கொடி வகை; a kind of hedge bind weed, Ipomaea genus. (சா.அக.).

நெரளைதாளி *neraḷai-tāḷi,* பெ. (n.) மரவகை (பாண்டி) ; a tree, Antidesma alexiteria.

நெரி¹—தல் *neri-,* 2 செ.கு.வி. (v.i.) 1. நெருங்கியுரசி நொறுங்குதல்; to be crushed, broken, smashed; to crack. "*தலை பத்து நெரியக் காலாற் றொட்டானை*" (தேவா.17,7). 2. நிலை கெடுதல் (சூடா.); to be routed. 3. நெருங்குதல்; to be crowded together. "*நெரிமுகைக் காந்தள்*" (பரிபா.14:13). 4. வளைதல்; to arch, curve, bend. "*புருவம் நெரிந்தேற*" (திவ்.பெரியாழ்.3.6:2). 5. நசுங்குதல்; to crack. "செழும் பரம்பு தோறும் படிந்து நெரிந்தவே" (அரிச்ச. நாட்டுச்.34).

ம. நெரியுக

[நுல்(பொருந்தல்) → நுள் → நெள் → நெரு → நெரி → நெரி—தல் (மு.தா). நெரிதல் = நெருங்குதல், உரசுதல், நசுங்குதல், வளைதல். இது தன்வினைவடிவம்.]

நெரி²—த்தல் *neri-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. நொறுக்குதல்; to break to pieces. 2. நசுக்குதல்; to crush, press, squeeze. "*கழை நெரித்து வீழ்த்த சாறு*" (சேதுபு. திருநாட்.78). "*வளைக்கரநெரித்து*" (திருவிளை. விருத்த 34.). *பொதுகூட்ட நெரிசலில் சிக்கிக் காலை இழந்து விட்டான்.* 3. கையால் கூலம் (தவச) முதலியவற்றை நிமிண்டுதல் (வின்.); to rub or crush with the hand, as ears of grain. *கம்பங் கதிரைக் கையால் நெரித்துத் தின்றான். "கம்பங் கதிரைக் கண்டாலும் கை நிக்காது அம்மான் மகளைக் கண்டாலும் வாய் நிக்காது"* (பழ.). 4. துன்பம் முதலியவற்றால் மகளிர் கைவிரல்களை அழுத்திச் சேர்த்தல்; to break the knuckles, as women in distress. "*கையைக் கையினெரிக்கும்*" (கம்பரா. நகர்நீங்கு.11). 5. கைவிரல்களைச் சுடக்குதல்; to crack, as the fingers. *கால் விரல்களைச் கொஞ்சம் நெரித்து விடு.* 6. நிலைகெடச் செய்தல் (திவா.); to rout. 7. திறமையாய் நடத்துதல் (வின்.); to acquit oneself creditably. 8. நெருங்குதல்; to approach. "*ஊரிப்பூம் பழன நெரித்து*" (புறநா.249). 9. குவித்தல் (இ.வ.); to crowd together. 10. இறுக்கி அழுத்துதல்; strangle throtile. *நான் தான் அவர் விரலை நெரித்து ஒடித்தேன்.*

[நெரி¹— → நெரி²—. இது பிறவினை வடிவம்.]

நெரி³ *neri,* பெ. (n.) **1.** நெரிவு; crack, bruise, smash. **2.** புடைவையின் கொய்சகம் (யாழ்.அக.); close and short plaits of cloth in wearing. **3.** சொரசொரப்பு; roughness. *"நெரிபுறத்தடற்று வாளும்"* (சீவக.2517).

[நெரி¹ → நெரி³]

நெரி⁴ *neri,* பெ. (n.) **1.** புண்புறப்பாடு முதலியவற்றால் கைகாற் சந்துகளில் உண்டாகும் புடைப்பு; temporary swelling in joints due to boil, etc. *இந்தக் காயத்தின் கரணியமாகக் தொடையில் நெரிகட்டி யிருக்கிறது. "தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனைமரத்தில் நெரி கட்டுமா" (பழ.).* **2.** நோய்வகை; debility.

[நெறி → நெரி]

நெரிக்கோரை *neri-k-kōrai,* பெ. (n.) கோரைவகை (இ.வ.); a kind of sedge.

[நெரி¹ + கோரை. கோரை = புல்வகை.]

நெரிகட்டி *neri-katti,* பெ. (n.) *நெறிக்கட்டி* பார்க்க; see *neṟi-k-katti.*

[நெரி → நெரிகட்டி. புண் முதலியவற்றில் உள்ள நோயை உண்டாக்கும் பூச்சிகள், நுண்ணுயிரிகள் (கிருமிகள்) உடலில் பரவாமல் தடுப்பதற்காக அவற்றின் அருகில் உள்ள நிணநீர் முடிச்சு வீக்கம் அடைதல்]

நெரிகட்டிசுரம் *neri-katti-šuram,* பெ. (n.) *நெறிக்கட்டிச் சுவரம்* பார்க்க; see *neṟi-k-katti-šuvaram.*

[நெறிக்கட்டிச்சுவரம் → நெரிகட்டிசுரம்]

நெரிகுரல்படு—தல் *neri-kural-padu-,* 20செ.கு.வி. (v.i.) குழந்தைகட்கு குற்றம், தீட்டு (தோஷம்) முதலியவைகளால் குரல் கம்முதல்; affection of throat through cold, sore throat in children due to planetary influence. (சா.அக.).

[நெரிகுரல் + படு—தல்]

நெரிகொட்டை *neri-kottai,* பெ. (n.) நறுக்கிய பாக்கு (யாழ்ப்.); crumpled areca nuts.

[நெரி + கொட்டை. நெரித்தல் = நொறுக் குதல். கொட்டை = பாக்குக் கொட்டை]

நெரிசம் *nerišam,* பெ. (n.) ஈட்டி (இ.வ.); spear.

நெரிசல்¹ *nerišal,* பெ. (n.) **1.** நெரிந்தது; anything broken or cracked. **2.** நெருக்கமாக இருக்கும் கூட்டம்; the state of being overcrowed, as of a place. *கடற்கரைக் கூட்டத்தில் நெரிசல் மிகுதி. தலைவரின் இறுதி ஊர்வல நெரிசலில் பலர் மாண்டனர். கோயில் திருவிழா நெரிசலில் பலருக்குப் புண் ஏற்பட்டது.* **3.** மனவேறுபாடு; misunderstanding.

[நெரி¹ → நெரியல் → நெரிசல்]

ஓரிடத்தில் அளவுக்கு அதிகமாக மக்கள் அல்லது ஊர்திகள் குவிவதால் ஏற்படும் தேக்கநிலை.

நெரிசல்² *nerišal,* பெ. (n.) **1.** கண்ணோவு வகை (இ.வ.); corneal ulcer. **2.** பசலை நோய் (நாமதீப்.585); dull colour of the skin.

[நெரி → நெரிசல். நெரிதல் = நிலை கெடுதல்.]

நெரிஞ்சகத்தி *neriñjakatti,* பெ. (n.) நெரிஞ்சியிலை; leaf of caltrops - Ground burnut, Tribulus terrestris-leaf of. (சா.அக.).

நெரிஞ்சி *neriñji,* பெ. (n.) *நெருஞ்சி* (உ.வ.) பார்க்க; see *neruñji.*

[நெரி→ நெரிஞ்சி. நெரிதல் = நொறுங்குதல்]

நெருஞ்சியை சாம்பசிவம் மருத்துவ அகர முதலி நெரிஞ்சி என்றே வழங்குகிறது. நெரிஞ்சி என்பது பேச்சு வழக்கு.

நெரிஞ்சிக்கீரை *neriñji-k-kīrai,* பெ. (n.) நெருஞ்சியிலை; leaves of small caltrops. (சா.அக.).

[நெரிஞ்சி + கீரை]

நெரிஞ்சிமுள் *neriñji-muḷ,* பெ. (n.) நெருஞ்சிக்கொடியின் முள்; leaves of small caltrops. (சா.அக.).

[நெரிஞ்சி + முள்]



நெரிஞ்சில் *neriñjil,* பெ. (n.) *நெருஞ்சில்* பார்க்க; see; *neruñjil.* (சா.அக.).

[நெருஞ்சில் + நெரிஞ்சில்]

நெரிநெட்டி *neri-neṭṭi,* பெ. (n.) சம்பங்கோரை (மலை.); elephant-grass.

[நெரி + நெட்டி. நெட்டி = கோரை வகை. நெருங்கி வளரும் கோரை வகை.]

நெரிநெட்டிவாங்கு—தல் *neri-neṭṭi-vāṅgu-,* 5செ.கு.வி.(v.i.) நெட்டியை முறித்தல்; to be arduous exhausting. *வேலை நெரிநெட்டி வாங்குகிறது.*

[நெரி³ + நெட்டிவாங்கு—தல்]

நெரிநேவி *neri-nēvi,* பெ. (n.) *நெரிநெட்டி* பார்க்க; see *neri-neṭṭi* (சா.அக.).

நெரிபிடி—த்தல் *neri-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) கொய்சகம் வைத்தல் (யாழ்.அக.); to plait one's cloth in wearing. *நெரிபிடித்துச் சேலை கட்டக் கற்றுக் கொள்.*

[நெரி³ + பிடி—த்தல்]

நெரிபுருவம் *neri-puruvam,* பெ. (n.) கண் புருவம்; eye-brow

[நெரி + புருவம்.]

நெரிபுலம் *neri-pulam,* பெ. (n.) கண் புருவம்; eye-brow (சா.அக.).

[நெரி + புலம்.]

நெரிபூசம் *neri-pūšam,* பெ. (n.) சொக்காங் கீரை; a kind of grans. (சா.அக.).

மறுவ. சொக்காக்கீரை

நெரிமடு—தல் *neri-maḍu-,* 4 செ.கு.வி. (v.i.) நசுங்குதல்; be crumpled. *திருவிழாக் கூட்டத்தில் நெரிமடுபட்டு வெளியே வருவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.*

[நெரி + மடு—தல். மடுதல் – தன்வினை. மடுத்தல் – பிறவினை.]

நெரிமீட்டான் *neri-miṯṭāṉ,* பெ. (n.) புண்ணை ஆற்றும் ஒருவகைப் பூடு(வின்.); a herb the root of which is used for curing bruises.

[நெரி¹ + மீட்டான்]

நெரியரிசிப்பால் *neri-y-ariši-p-pāl,* பெ. (n.) *நெரியாசிப்பாற்செடி* (M.M. **856**) பார்க்க; *see neriyāši-p-pāṟ-ceḍi.*

[நெரி + அரிசி + பால். நெரியாசி → நெரியரிசி + பால்]

நெரியல் *neriyal,* பெ. (n.) மிளகு; black pepper. "*நெரியற் புணர்ப்பொறை தாங்கிய... கழுதை*" (பெரும்பாண்.78).

[மிரியல் → நெரியல்.மிரியல் = மிளகு]

உறைப்புமிக்க மிளகைத் தேள் கடி போன்ற சிறு நச்சு இறங்க சிலர் அரிசியோடு கலந்து உண்பர். வெறும் மிளகை மிகுதியாய் உண்டால் குரலில் மாற்றம் ஏற்படும்.

நெரியாசம்¹ *neriyašam,* பெ. (n.) நறும்புகை யுண்டாக்குதற்குரிய பண்டத்தொகுதி ஆறனுள் ஒன்றான, நெரியாசிப்பால் மரத்தின் பிசின்; juice of Java storax.

[நிரியாசம் → நெரியாசம். நிரியாசம் = ஒருவகை மணப்பிசின்]

நறும்புகை யெழுப்பப் பயன்படும் பொருள்கள்: நேர்கட்டி, செந்தேன், நிரியாசம், கர்ப்பூரம், ஆரம், அகில். "நேர்கட்டி செந்தேன், நிரியாசம், பச்சிலை ஆரம் அகிலு றுப்போராறு" என்பர் அடியார்க்கு நல்லார் (சிலப். 5:14). "நேர்கட்டி செந்தேன் நிரியாசங் கப்பூரம் ஆர மகிலுறுப்போ ரைந்து" (சீவக.534.) என்று நச்சினார்க்கினியர் கூறுவார்.

நெரியாசம்² *neriyāšam,* பெ.(n.) எரிகாசு, காசுக்கட்டி; a kind of perfuming ingredient (சா.அக.).

நெரியாசி *neriyāši,* பெ.(n.) *நெரியாசிப்பால்²* பார்க்க; see *neriyāši-p-pāl.*

நெரியாசிப்பால்¹ *neriyāši-p-pāl,* பெ. (n.) ஒருவகைப் பெருமரம் (M.M. **856**); Java storax, Altingia excelsa.

நெரியாசிப்பால்² *neriyāši-p-pāl,* பெ. (n.) **1.** நெரியாசிப்பாற் செடியின் பட்டையினின்று வடிக்கும் ஒருவகைப் பாற்பிசின்; Indian storax, Liquid amber orientale. It is a milk resin collected from the bark of the gigantic tree. It is also known as Indian silaurus. (சா.அக.) **2.** ஒருவகை மரம்; Indian storax tree, Liquidambar orientale.

இப்பிசின் உடம்பின் வெப்பத்தைப் போக்கும், தலைநோய், தும்மல், இசிவு முதலியவற்றையும் குணமாக்கும் என்பது பழைய மருத்துவக் குறிப்பு.

[நெரியாசி + பால்.]

சென்னைப் பல்கலைக் கழக அகரமுதலி நெரியாசிப்பால் நெரியாசிப்பாற் செடி என இரண்டாக காட்டும் மரவகையைச் சாம்பசிவம் மருத்துவ அகரமுதலி ஒன்றாக ஒரே மரவகை யாகக் காட்டுகிறது. சென்னை பல்கலைக் கழக அகரமுதலி Java storax, Altingia excelsa என்பதைப் பெருமரம் என்றும், Indian storax, Liquid amber orientole என்பதை நீண்ட மரவகை என்றும் கூறுகிறது. ஆனால் சாம்பசிவம் மருத்துவ அகரமுதலி Java storax என்பதைக் கூறவில்லை. Indian storax-Altangia excelsa alias liquid amber altingis என்று இரண்டு பயிரியல் பெயர்களையும் ஒன்றாகவே காட்டுகிறது.

நெரியாசிப்பாலெண்ணெய் *neriyāši-p-pāleṇṇey,* பெ.(n.) *நெரியாசிப் பாற்செடி* பார்க்க; see *neriyāši-p-pāṟceḍi.* (சா.அக.).

நெரியாசிப்பாற்செடி *neriyāši-p-pāṟceḍi,* பெ. (n.) நீண்ட மரவகை, நெரியாசிப் பால் மரம்; Indian storax tree, Liquidambar orientale.

இது செடி என்னும் பெயரிலுள்ள ஒரு மரம். இது அறுபது முதல் 100 அடி வரை உயரமான மரம். இதன் இலையின் இருபுறமும் மொசுமொசுப்பாய் அல்லது இலையின் அடிப்பாகத்தின் நரம்புகளில் இழைகள் பொருந்தியிருக்கும். இதன் பட்டை கசப்பு, உறைப்பு குணமுடையது; மணமுடையது; குத்தினால் பால் வரும். இதன் பாலினின்று வடிக்கும் எண்ணெய் மருத்துவ குண முடையது. (சா.அக.).

நெரிவருணச்சுக்கிரன் *neri-varuṇa-c-cukkiraṉ,* பெ.(n.) கருவிழியில் சிவந்த புள்ளியை உண்டாக்கும் ஒருவகைக் கண்ணோய்; a red flesh growth in the black of the eye. (சா.அக.).

நெரிவிடம் *neri-viḍam,* பெ. (n.) கலப்பைக் கிழங்கு; plough root, Gloriosa superba. (சா.அக.)

நெரிவிளா *neriviḷā,* பெ. (n.) நிலவாகை; Indian senna, Tinneveely senna, Senna indica alias cassia lanceolata alias c.elongata. (சா.அக.)

நெரிவு *nerivu,* பெ. (n.) **1.** சொடுக்கு; cracking. *விரல்களில் நெரிவு எடுப்பதில் இவன் வல்லவன்* **2.** நசுக்குகை; pressing, crushing. **3.** பகை (வின்.); variance, discord, disunion.

[நெரி[1] → நெரிவு]

நெருக்கட்டியெனல் *neru-k-kaṭṭi-y-eṉal,* பெ. (n.) **1.** எதிர்பாராது வருதற்குறிப்பு; onom. expr-signifying suddenness, abruptness. **2.** விரைவுக்குறிப்பு; promptness, quickness. **3.** ஒடிதற்குறிப்பு; sudden breaking, as of a stick. **4.** ஒலியுடன் திடீரென விழுதற்குறிப்பு (வின்.); falling suddenly with a crash.

[நெருக்கடி → நெருக்கட்டி + எனல்]

நெருக்கடம் *nerukkaḍam,* பெ. (n.) நெருக்கம், (இ.வ.); நெருக்கியழுத்தும் நிலை; pressure. *வாழ்க்கையில் ஒரு நெருக்கடமும் இல்லை.*

தெ. நெக்கடமு

[நெருக்கு → நெருக்கடம்]

நெருக்கடி *nerukkaḍi,* பெ. (n.) **1.** நெருக்கம் (இ.வ.); pressure. *நெருக்கடியில் வந்து பணம் கேட்டான். கடன் நெருக்கடி.* **2.** இக்கட்டான நேரம்; busy time; time of preoccupation, critical time. *இந்தியாவுக்கு இது நெருக்கடியான நேரம்.* **3.** போக்குவரவு ஊர்திகள், மக்கள் போக வர இயங்க இடம் போதாத நிலை; want of space. **4.** தேவையான பொருட்கள் கிடைக்காத நிலை, பற்றாக்குறை; financial squeeze or straits. *பணநெருக்கடி.* **5.** நெருக்கும் மக்கட் கூட்டம்; overcrowed of people. **6.** சடுத்த நிலை; urgency. **7.** வறுமைத்தொல்லை; poverty. **8.** கடுந்துன்ப நிலை; difficulty.

[நெருக்கு → நெருக்கடி]

நெருக்கடிநிலை *nerukkaḍi-nilai,* பெ.(n.) உள்நாட்டுப்போர், கலகம் முதலானவை ஏற்படுகின்ற நேரத்தில் அரசு கூடுதல் அதிகாரங்களை மேற்கொண்டு செயல்பட வேண்டிய நிலை; state of emergency in a country. (சா.அக.).

[நெருக்கடி + நிலை]

நெருக்கம் *nerukkam,* பெ. (n.) **1.** இடைவெளியில்லாத செறிவு (பிங்.); denseness, crowded state. **2.** ஒடுக்கம்; narrowness, straitness, tightness. *நெருக்கமான பாதை.* **3.** வேலைக்கடினம், வேலையினால் ஏற்படும் துன்பம் (உ.வ.); pressure of business,

closeness of application. **4.** இடைவிடாமை; frequency, constancy. *பணம் வேண்டு மென்று நெருக்கமாய் வந்து கேட்டான். அவனுக்கு அருகில் நெருக்கமாக உட்கார்ந்து கொண்டான்.* **5.** *விரைவு;* urgency. *திருமணம் நெருக்கத்தில் நடந்ததால் உனக்கு அழைப்பிதழ் அனுப்ப இயலவில்லை.* **6.** துன்பம்; distress, trouble. **7.** வலுக்கட்டாயம் **(உ.வ.)**; complusion, restraint. **8.** கொடுமை **(வின்.)**; oppression, tyranny. **9.** நோய் முதலியவற்றின் கடுமை; severity, as of the times, the weather or an epidemic. **10.** கையிறுக்கம்; closefistedness. **11.** நெருக்கமான உறவுகள், அண்மை, nearness, closeness. **12.** இறுதிக் காலம், (இறப்பு வாயில்); approach of death. **13.** நெருங்கிய பழக்கம்; closeness, intimacy. *நெருக்கமான் உறவினர்களை மட்டுமே திருமணத்திற்கு அழைத்தான்.* **14.** குறைந்த வேறுபாடு, மிகுந்த ஒற்றுமை; affinity, closeness. *தமிழும், மலையாளமும் நெருக்கமான தொடர்புடைய மொழிகள். நாட்டியத்திற்கும் இசைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.*

[நெருக்கு → நெருக்கம்]

நெருக்கமான *nerukkamāṉa,* **பெ.** (n.) **1.** செறிவான; dense. **2.** இறுக்கமாக இணைக்கப்பட்ட; compact.

[நெருக்கம் + ஆன – நெருக்கமான.]

நெருக்கல்[1] *nerukkal,* **தொ.பொ.** (vbl.n.) *நெருங்கு–தல்* பார்க்க; see *nerikku-.*

நெருக்கல்[2] *nerukkal,* **தொ.பொ.**(vbl.n.) நெருக்குதல்; to press hard. "நேரடர்ந்து நெருக்கலின்" **(அரிச்சந். நகரச்.3.).**

[நெருக்கு → நெருக்கல்]

நெருக்கவாரம் *nerukka-vāram,* **பெ.** (n.) **1.** வறுமை (தரித்திரம்); destitution. **2.** நெருக்கம்; be close together.

நெருக்கிக்கூறு–தல் *nerukki-k-kūru-,* 5 **செ.குன்றாவி.** (v.t.) இடித்துச் சொல்லுதல்; to rebuke.

[நெருக்கு → நெருக்கி + கூறு–தல்]

நெருக்கிடை *nerukkiḍai,* **பெ.** (n.) *நெருக்கடி* பார்க்க; see *nerukkaḍi.*

[நெருங்கு → நெருக்கு + இடை – நெருக்கிடை]

நெருக்கித்தள்ளு–தல் *nerukki-t-taḷḷu-,* **5செ.கு.வி.** (v.i.) முட்டி மோதுதல்; to knock against.

[நெருக்கி + தள்ளு–தல்.]

நெருக்கித்தாக்கு–தல் *nerukki-t-tākku-,* **5 செ.கு.வி.** (v.i.) சூழ்ந்துகொண்டு தாக்குதல்; to beset. **(ந.அக.)**

நெருக்கிப்பார்–த்தல் *nerukki-p-pār-,* **4 செ.கு.வி.** (v.i.) **1.** வற்புறுத்துதல்; to press. *நெருக்கிப் பார்த்துக் கடனைக்கேள்.* **2.** முயற்சி யெடுத்தல் **(வின்.)**; to try, take pains. *தேர்வுக்கு எவ்வளவோ நெருக்கிப் பார்த்தேன்; இருந்தாலும் மதிப்பெண் குறைவு தான்.*

[நெருக்கு + இ + பார்–த்தல்]

நெருக்கிப்பிடி[1]–த்தல் *nerukki-p-piḍi-,* **4செ.குன்றாவி.** (v.t.) **1.** தொடர்ந்து பற்றுதல்; to come in close pursuit of, to press hard, to overtake. *கையை நெருக்கிப் பிடித்துக்*

கொண்டு செல். **2.** செட்டாக இருந்து மிச்சம் பிடித்தல் (உ.வ.); to save by economy.

[நெருக்கு+ இ + பிடி –த்தல்]

நெருக்கிப்பிடி²–த்தல் *nerukki-p-piḍi-*, **4**செ.கு.வி.(v.i.) மிகுதியாக வுண்ணுதல் (வின்.); to eat too fast or too much, used in burlesque. *சாப்பாட்டை இன்று நெருக்கிப் பிடித்தேன்.*

[நெருக்கு+ இ + பிடி –த்தல்]

நெருக்கு¹–தல் *nerukku-*, **5** செ.குன்றாவி. (v.t.) **1.** செறியச் செய்தல்; to put close, to set thick. *நெருக்கி யம்முடி நின்றிசை வானவர் (தேவா.927,5).* **2.** சுருக்குதல்; to circumscribe, contract. **3.** ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளுதல்; to press hard, exert pressure upon. *மரமுமலையும்... சென்று நெருக்கலால் (கம்பரா.முதற்போர்.10). கூட்டமில்லா விட்டாலும் நெருக்கித் தள்ளுகின்றனர்.* **4.** நசுக்குதல் (தேவா.1117,9); to squeeze, bruise, mash.**5.** வருந்துதல் (பு.வெ.11, பெண்பாற்.8,உரை); to oppress, persecute, distress. **6.** வருத்திக் கேட்டல்; to urge, importune, solicit earnestly, as a creditor. *கடன் கொடுத்தவர்கள் நெருக்குகின்றனர்* **7.** அமுக்குதல்; to choke, smother, throttle. **8.** கட்டாயப் படுத்துதல் (பலவந்தம் பண்ணுதல்); to compel, force, coerce. **9.** தாக்குதல் (வின்.); to attack, assail, assault.

[நெருங்கு –தல் → நெருக்கு –தல். பிறவினை வடிவம்.]

நெருக்கு²–தல் *nerukku-*, **5** செ.கு.வி. (v.i.) **1.** விடாப்பிடியாயிருத்தல்; to be frequent persevere. **2.** உரத்தல்; to rage, prevail, as famine; to be severe, as epidemics; to be abundant, as rain.

[நெருங்கு –தல் → நெருக்கு –தல். பிறவினை வடிவம்]

நெருக்கு³–தல் *nerukku-*, **5**செ.குன்றாவி.(v.t.) **1.** ஆலை, செக்கு முதலியவற்றிலிட்டு ஆட்டுதல்; to press, as in a mill, to crush. *"நல்ல கரும்பு நெருக்கிச் சாறுதிரட்டி வட்டாகச் செய்த அக்காரமும்"* (திவ். பெரியாழ்.2.9:7, வியா.பக்.468). **2.** குறிப்பிட்ட ஒரு செயலைச் செய்யும்படி வலியுறுத்துதல்; வற்புறுத்துதல்; pressurize. *வாங்கிய கடனைத் திருப்பித் தரும்படி நெருக்குகின்றனர். உடனே வேலையை முடிக்கச் சொல்லி நெருக்கினார்கள்.*

[நெருங்கு –தல் → நெருக்கு –தல் பிறவினை வடிவம்]

நெருக்கு⁴ *nerrukku*, பெ. (n.) *நெருக்கம்* (பு.வெ.11, பெண்பாற்.8, உரை) பார்க்க; see *nerukkam.*

[நெருங்கு → நெருக்கு]

நெருக்கு⁵ *nerukku*, பெ. (n.) வள்ளத்தின் உள்ளுறுப்பு (மீனவ); canoe's part. (க.ப.அ.)

வள்ளம் = மீன்பிடிபடகு

நெருக்குவாரம் *nerukkuvāram*, பெ.(n.) *நெருக்கடி* (யாழ்ப்.) பார்க்க; *see nerukkaḍi.*

[நெருக்கு + வாரம்]

நெருக்கெனல் *nerukkeṉal*, பெ. (n.) விரைவுக் குறிப்பு (வின்.); expr. of suddenness, promptness.

[நெருக்கு + எனல்]

நெருங்கப்பிசைதல் *neruṅga-p-piśaidal,* பெ.(n.) அழுத்திப் பிசைதல்; squeezing by pressing hard with force. (சா.அக.).

[நெருங்கு + பிசைதல் → நெருங்கப்பிசைதல். பிசைதல்– தல் ஈற்றுத்தொழிற்பெயர்]

நெருங்கல் *neruṅgal,* பெ. (n.) **1.** செறிவு (திவா.); throng, press. **2.** கண்டிப்புச் சொல் (வின்.); reprimand.

[நெருங்கு + அல். அல்– தொ.பெ.]

நெருங்கவியலாத *neruṅga-v-iyalāda,* பெ.எ. (adj.) அருகில் சென்றிட முடியாத; difficult to meet or reach.

[நெருங்கு → நெருங்க + இயலாத]

நெருங்கிக்கூறு–தல் *neruṅgi-k-kūṟu-,* 5செ.கு.வி.(v.i.) மறுதலித்தல்; to rebuke. (ந.அக.)

[நெருங்கு → நெருங்கி + கூறு–தல்]

நெருங்கித்தழுவு–தல் *neruṅgi-t-taḻuvu-,* 5செ.கு.வி.(v.i.) மிக அருகில் சென்று அணைத்தல்; to snuggle. (சா.அக.).

[நெருங்கு → நெருங்கி + தழுவு–தல்]

நெருங்கிய *neruṅgiya,* பெ.எ.(adj.) உறவு, நட்பு, தொடர்பு முதலியவற்றால் நெருக்கமான; close, intimate. *நெருங்கிய உறவினர், நெருங்கிய நண்பர், நெருங்கியத் தொடர்புடைய மொழிகள்.*

[நெருங்கு → நெருங்கி → நெருங்கிய]

நெருங்கியநாடி *neruṅgiya-nāḍi,* பெ.(n.) படபடப்பாகத்துடிக்கும் நாடி; frequent pulse. (சா.அக.).

[நெருங்கிய + நாடி.]

நெருங்கு¹–தல் *neruṅgu-,* 5செ.கு.வி.(v.i.) **1.** அண்மையாதல்; to be near, approximate. *பேருந்து நெருங்கி வந்து விட்டது, மாட்டு வண்டியை ஒதுக்கி ஒட்டு.* **2.** செறிதல்; to be close together, to crowd. "*நெருங்கு மடியார்களு நீயுநின்று*" (திருவாச.21:7). **3.** நெருங்கிய வுறவாதல்; to be close, as relationship, connection. *நெருங்கின சுற்றத்தான்.* **4.** ஒடுக்கமாதல்; to be confined, narrow, as a road or doorway. **5.** நசுங்குதல் (வின்.); to be pressed, compressed, squeezed. **6.** தொடர்தல்; to be frequent. *என்னிடம் நெருங்கி வருபவன்.* **7.** முனைப் பாதல் (திவா.); to be vehement, to prevail, as disease, famine, wild beasts, robbers. **8.** நிகழ்ச்சி அல்லது ஒன்றைச் செய்வதற்குரிய நேரம் விரைந்து வருதல், விரைவாதல்; to be urgent. *கடமை (காரியம்) நெருங்குகிறது.* விளக்கணி விழா (தீபாவளி) *நெருங்கி விட்டது.* **9.** மிதூர்தல் (திவா.); to increase; to grow excessive; to be overwhelming.

[நுல்(பொருந்தல்) → நுள் → நிள் → நிர் → நெர் → நெரு → நெருங்கு → நெருங்கு–தல் (வே.க.)]

நெருங்கு²–தல் *neruṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** கிட்டுதல், அணுகுதல்; to approach; to go near. "*பொய்கைகளை நெருங்க*" (புறநா.249, உரை). *அந்தக் கட்சியின் ஊர்வலம் கடற்கரையை நெருங்கியது.* **2.** இடித்துக் கூறுதல்; to rebuke. "*கிழவனை நெருங்கி யிழைத்து*" (தொல்.பொருள்.150). **3.** சினத்தல்; to be angry with. "*மகப்பழித்து நெருங்கலும்*" (தொல்.பொருள்.147). **4.** உறவில், கொள்கையில் வேற்றுமை குறைந்து ஒற்றுமைப்படுதல்; come closer in understanding etc. *எதிரும் புதிருமாக இருந்த நண்பர்கள் நெருங்கி வருகின்றனர். எதிரும் புதிருமாக இருந்த கட்சிகள் தேர்தல் நேரத்தில் உறவுகொள்ள நெருங்கி வருகின்றன.*

[நெருங்கு–¹ → நெருங்கு–²]

நெருஞ்சி *neruñji,* பெ. (n.) முட்கள் நிறைந்த காய்களையும், மஞ்சள் நிறப் பூக்களையும், சிறுசிறு இலைகளையும் கொண்ட, கொத்தாகத் தரையில் படர்ந்து வளரக்கூடிய செடி வகை; cow's thorn, a small prostrate herb, Tribulusterrestris. *"நெருஞ்சிக் காடுறு கடுநெறியாக"* (பதிற்றுப்.26). *நெருஞ்சி முள் தைத்தாலும் குனிந்துதான் பிடுங்க வேண்டும்.* (பழ.)

நெருஞ்சி : இது ஒரு முட்செடி, ஒன்றை ஒன்று பற்றி நிற்கும். இலைகள் நேர் நேராகச் சிறகைப் போன்றது. இலைக்காம்பு இலையைவிடக் குட்டையானது. பூக்கள் கிளைகளினின்று பிரிந்து சிறு காம்புகளின் மேல் நிற்கும். உள்ளிதழ் 5 பிரிவுகளாயிருக்கும். இலைகள் அகலமாகவும் நான்கு மூலையாகவும் இருக்கும். காய்கள் சிறியவை, முள்ளுள்ளது; பூக்கள் பெரியன, மஞ்சள் நிறமுடையது; ஆண்டு முழுதும் பூக்கும். எங்கும் காணப்படும்; குளம், குட்டை, வாய்க்கால் எங்கும் காணப்படும்.

இதன் காய், இலை, வேர் இவைகள் மருந்தாகப் பயன்படுகின்றன. நீரை வெளிப்படுத்தும்; பாண்டு, வெள்ளை முதலியவற்றைக் குணப்படுத்தும். இதன் கொம்புகளை மோரில் போட்டு அதனைத் தடிப்பாக்குவர். காய்கள் முள்ளுள்ளதால் நடப்போர்க்குத் துன்பம் தரும். துணிகளில் ஒட்டிக் கொண்டு குத்தும்.

இது உலகம் முழுவதும் காணப்படும் செடி; தரையின் மேல் படிந்து, பல கிளைகள் விட்டு படர்ந்து வளரும். ஒரு கணுவில் வளரும் இரண்டு கூட்டிலைகளில் ஒன்று பெரியதாகவும், ஒன்று சிறியதாகவும் இருக்கும். அடுத்த கணுவில் பெரிய இலை இருந்த பக்கம் சிறிய இலையும், சிறிய இலை இருந்த பக்கம் பெரிய இலையுமாக மாறி இருக்கும். இப்படியே கிளை நெடுகிலும் இருக்கும். இதனால் இலைகள் ஒன்றை யொன்று மறைக்காமல் எல்லாம் ஞாயிற்றின் ஒளியை முற்றிலும் ஏற்கக் கூடும். பூக்கள் இலை கக்கங்களில் தனித்து (solitary) உண்டாகும். இதன் கனி கடலை அளவினது; கனியின் முதுகுப்புறத்தில் முட்கள் இருக்கும்; இதுகாலில் குத்தும் இயல்புடையது; அதனால் தரைத் தொந்தரவு என்ற பெயரும் உண்டு.

வகைகள் : 1. ஆணை நெருஞ்சில், 2. செப்பு நெருஞ்சில், 3. சிறுநெருஞ்சில், 4. கருநெருஞ்சில், 5. கொடி நெருஞ்சில், 6. பெரு நெருஞ்சில் (சா.அக.).

சிறுநீர் தொடர்பான நோய்களுக்கு நெருஞ்சி மருந்தாகிறது என்பது சித்தமருத்துவக்குறிப்பு.



நெருஞ்சிப்பச்சை *neruñji-p-paccai,* பெ. (n.) *நெருஞ்சி* பார்க்க; *see neruñji.* (சா.அக.).

நெருஞ்சிப்பாகல் *neruñji-p-pāgal,* பெ. (n.) மிதி பாகல்; a kind of balsam pear.

[நெருஞ்சி + பாகல். நெருஞ்சிமுள் போன்ற (மேல்பகுதி) தோற்ற முடையபாகல்]

நெருஞ்சிப்பூ *neruñji-p-pū,* பெ. (n.) ஓரணிகலன் (கல்.); an ornament.

[நெருஞ்சி + பூ. நெருஞ்சிமுள் போல தோற்றமுடைய அணிகலன். இஃது உவமையாகுபெயர்]

நெருஞ்சிப்பூச் செயல் *neruñji-p-pū-c-ceyal,* பெ. (n.) நெற்றிப் பட்டையின் தொங்கல் வகை (தெ.க.தொ.2,163); a neruñji-shaped pendant of a frontlet.

[நெருஞ்சி + பூச்செயல். நெருஞ்சிப்பூ போல் அழகு செய்யப்பட்ட தொங்கல் வகை.]

நெருஞ்சில் *neruñjil,* பெ. (n.) *நெருஞ்சி* பார்க்க; *see neruñji. "நெறியைப் படைத்தா னெருஞ்சில் படைத்தான்"* (திருமந்.1617.).

[நெருஞ்சி → நெருஞ்சில்]

நெருஞ்சின்முள் *neruñjiṉ-muḷ,* பெ. (n.) படைக்கல வகை (சூடா.); a weapon.

[நெருஞ்சில் + முள். நெருஞ்சி முள்போல் குத்தும் படைக்கலன். இஃது உவமைத் தொகை.]

நெருஞ்சி முள்போல் வடிவமும், வலிமையும் உடைய படைக்கலக் கருவியாகக் கொள்ளலாம்.

நெருட்டுக்கருத்து *neruṭṭu-k-karuttu,* பெ. (n.) 1. கருகலான கருத்து; abstruse notion. 2. கருகலான பொருள்; abstruse meaning, as of a passage.

[நெருடு → நெருட்டு + கருத்து. நெருடு = கருகலானது, கரடுமுருடானது, வஞ்சமானது.]

நெருட்டுப்புத்தி *neruṭṭu-p-putti,* பெ. (n.) 1. கரவு (வஞ்சக) நெஞ்சம்; guileful disposition. 2. கோணலறிவு; perverted intellect.

[நெருடு → நெருட்டு + புத்தி. நெருடு = ஏய்ப்பு (வஞ்சனை). Skt. buddhi → த.புத்தி = அறிவு]

நெருடல்¹ *neruḍal,* பெ. (n.) 1. தன்னுடைய தவறான செய்கை அல்லது கரணியம் (காரணம்) புரியாத பிறருடைய செயல் பாட்டினால் மனதில் உண்டாகும் நிகழ்வு; the troubled feelings resulting from one's guilty conscience or one's inability to figure out something. ***இராமன் வாலியை ஏன் மறைந்து நின்று கொன்றான் என்ற நெருடல் மனதில் இருந்து கொண்டே இருந்தது. இக்கட்டான நேரத்தில் நண்பனுக்கு உதவமுடியவில்லையே என்ற நெருடல் மனதில் இருந்து கொண்டே இருக்கிறது.*** 2. ஒத்துக் கொள்ளத் தயக்கம் ஏற்படுத்தும் சிறு வேறுபாடு; uneasy feeling caused by unevenness. ***கதையில் ஒரே ஒரு இடத்தில் தான் நெருடல்; தேர்வில் ஓர் இடத்தில் நெருடல் ஏற்பட்டது.***

[நெருடு → நெருடல்]

நெருடல்² *neruḍal,* பெ. (n.) ஒத்துக் கொள்ளத் தயங்கும் நிலையை உண்டாக்கும் சிறு வேறுபாடு; an uneasy feeling caused by unevenness.

[நெருடு → நெருடல்]

நெருடன் *neruḍaṉ,* பெ. (n.) 1. ஏய்ப்பவன் (வஞ்சகன்) (வின்.); deceitful, scheming man. 2. கெட்டிக்காரன் (இ.வ.); clever man.

[நெருடு → நெருடன். நெருடு = வஞ்சனை]

நெருடி *neruḍi,* பெ. (n.) 1. ஏய்ப்பவள் (வஞ்சகி); deceitful, scheming. 2. கெட்டிக்காரி; clever woman.

[நெருடன் (ஆ.பா.) → நெருடி(பெ.பா)]

நெருடு¹-தல் *neruḍu-,* 5செ.குன்றாவி.(v.t.) 1. நிமிண்டுதல்; to roll in the hand; to rub gently with the fingers. "*ஒருகை யாலொரு முலைமுக நெருடா*" (திவ்.பெருமாள்.7:7). ***முள்ளை நெருடிக் கொண்டே இருக்காதே குத்தி விடும்.*** 2. நிமிண்டிஇழை பொருத்துதல்; to roll two broken ends of yarn between the fingers and join them. "*இழை நக்கி நூனெருடு மேழை அறிவேனோ*" (தமிழ்நா.19). 3. திரித்தல்; to twist. "*அருமைப் பழைய மொழியைத் திருடி நெருடிக் கவிபாடி*" (திருப்பு.265). ***நூலைக் கொஞ்சம் நெருடிக் கொடு.*** 4. கை, கால் ஆகியவற்றால் தடவுதல் (வின்,); to feel with the hand. ***மாட்டின்***

நெருஞ்சில்



நெல்லிக்காய்



நொச்சி

முதுகை நெருடிக் கொண்டிராதே. **5.** ஏய்த்தல், (வஞ்சித்தல்) (யாழ்ப்.); to deceive, cheat. **6.** ஒன்றின் மீது சிறிய பொருள் அல்லது சமபரப்பு அழுத்தி உராசுதல்; have an uneasy sensation. *காலில் முள் நெருடுகிறது. உள்ளங்கையில் ஏதோ நெருடுகிறது; பிடுங்க வேண்டும்.* **7.** ஒத்துக் கொள்ளத தயக்கம் ஏற்படும் வகையில் சிறிது வேறுபடுதல்; feel uneasy because something is uneven. *கட்டுரையின் நான்காம் பத்தி கொஞ்சம் நெருடுகிறது.*

[நுல் → நுள் → நிள் → நிர் → நெர் → நெரு → நெருடு → நெருடு–தல்]

நெருடு² *nerudu,* பெ. (n.) **1.** நிமிண்டுகை; rubbing with the fingers. **2.** இழை பொருத்துகை; twisting two ends of yarn between the fingers and joining them. **3.** தடவுகை; feeling with the hands. **4.** ஆடையிற் பிதிர்ந்தெழும் நூல் முடிச்சு (வின்.); knots in a cloth from the joinings of the yarn. **5.** கருகலானது; that which is knotty or abstruse, as a passage. *இச்சொற்றொடர் நெருடு.* **6.** கரடான சொல்லுடையது; that which is ragged, as style. இப்பாட்டின் நடை நெருடு. **7.** கரடுமுரடானது; that which is rough, as a road. இச்சாலை கரடுமுரடானது. **8.** ஏய்ப்பு (வஞ்சனை) (யாழ்ப்.); guile, deceit, intrigue.

க., து. நரடு.

[நெருடு¹ → நெருடு²]

நெருணாகம் *nerunāgam,* பெ.(n.) சவ்வரிசி; sago. (சா.அக.).

நெருதலைநாள் *neru-talai-nāl,* பெ. (n.) நேற்று (திருக்கோ.21, துறை விளக்கம்); yesterday.

[நெருநலைநாள் → நெருதலைநாள்]

நெருநல் *nerunal,* பெ. (n.) கு.வி.எ. (adv.) நேற்று; yesterday. "*நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும் பெருமை உடைத்துஇவ் வுலகு*" (குறள்,336).

ம. இந்நாளே; **கோத.** நெர்; **துட.** ஈநெர்; **க.** நிந்நெ; **குட.** நிந்நாந்தீ; **தெ.** நிந்நா; **கோண்.** நிந்நே; **பிரா.** தரோ.

[நெருநாள் → நெருநல்]

நெருநலைநாள் *nerunalai-nāl,* பெ. (n.) கு.வி.எ.(adv.) *நெருநல்* (திருக்கோ.21 துறை விளக்கம்) பார்க்க; *see nerunal.*

[நெருநல் → நெருநலை + நாள்]

நெருநற்று *nerunarru,* பெ. (n.) கு.வி.எ. (adv.) *நெருநல்* பார்க்க; *see nerunal.* "*நெருநற்றுச் சென்றாரெம் காதலர் யாமும் எழுநாளேம் மேனி பசந்து*" (குறள்,1278).

[நெருநல் → நெருநற்று]

நெருநாள் *neru-nāl,* பெ. (n.) நேற்று; நெருங்கியநாள்; yesterday.

[நுல்(பொருந்தல்) → நுள் → நிள் → நிர் → நெர் → நெரு → நெருநாள் (வே.க.)]

நெருநெரு–த்தல் *neruneru-,* 4செ.கு.வி.(v.i.) **1.** திடீரென வயிறு முதலியன வலித்தல்; to feel sudden pain, as in the stomach. **2.** திடீரென ஒடிதல்; to snap off suddenly, as a stick.

நெருநெருப்பு *neruneruppu,* பெ.(n.) **1.** வயிற்றுவலி (வின்.); pain in the abdomen; internal pain. **2.** பேறுகாலத்து உண்டாகும்

இடுப்புவலி (வின்.); early labour-pain. **3.** விரைவு; quickness, suddenness. *செயல் நெருநெருப்பாய் நடக்கிறது (இவ.).*

[நெருநெரு → நெருநெருப்பு]

நெருநெரெனல் *nerunerenal,* பெ. (n.) **1.** திடீரென வயிறு வலித்தற் குறிப்பு; onom. expr. of sudden pain in the stomach. **2.** திடீரெனற் குறிப்பு; suddenness. *நெருநெரென்று முள்ளேறி* விட்டது. **3.** நெரிதற் குறிப்பு; crashing sound. *நெருநெரென்று முறிந்தது.*

நெருநை *nerunai,* பெ.(n.) & கு.வி.எ.(adv) *நெருநல்* பார்க்க; see *neruanl.* *"நெருநையி னின்றுநன்று"* (கலித்.91). *"நெருநைப் புணர்ந் தோர் புது நலம் வெளவி"* (நற்.360:3). *"எஃகுடை எழில்நலத் தொருத்தியொடு நெருநை"* (அகநா.116:9).

க. நிருனெ

[நெருநல் → நெருநை]

நெருப்பன் *neruppan,* பெ. (n.) **1.** கடுஞ்சின முடையோன்; angry man. **2.** கலகக்காரன்; incendiary; firebrand. **3.** பொல்லாதவன்; dangerous man.

[நெருப்பு + அன். நெருப்புப் போன்ற குணமுடையவன்.]

நெருப்பாறு *neruppāru,* பெ.(n.) நெருப்பு மலையிலிருந்தோடுங் குழம்பு (வின்.); lava.

[நெருப்பு + ஆறு]

இது பெரும்பாலும் எரிமலை வெடித்து அதிலிருந்து ஓடும் நெருப்புக்குழம்பைக் குறிக்கும்.

நெருப்பி[1] *neruppi,* பெ.(n.) **1.** கடுஞ்சின முடையாள்; angry woman. **2.** கலகக்காரி; firebrand. **3.** பொல்லாதவள்; dangerous woman.

[நெருப்பன்(ஆ.பா.) → நெருப்பி(பெ.பா.). நெருப்பு + இ]

நெருப்பி[2] *neruppi,* பெ. (n.) கலைச் செம்பு; superior kind of pure copper. (சா.அக.).

[நெருப்பு → நெருப்பி.]

செம்பு நெருப்புப் போன்ற நிறத்தில் உள்ளதால் பெற்ற பெயராகலாம்.

நெருப்பிடல் *neruppidal,* பெ. (n.) **1.** புடமெரித்தல்; to set up a conflagration of fire for calcining medicines. **2.** பிணம் சுடுதல்; to set fire to the corpse. (சா.அக.)

[நெருப்பு + இடல். நெருப்பில் இடுதல்]

நெருப்பிடுகலம் *neruppidu-kalam,* பெ. (n.) **நெடுப்புச்சட்டி** (பிங்.) பார்க்க; see *neruppu-c-catti.*

[நெருப்பு + இடு + கலம். நெருப்பு வைக்கும் ஏனம்.]

நெருப்பு[1] *neruppu,* பெ. (n.) **1.** தீ; fire. *"நெருப்புச்சினந் தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை"* (புறநா.125). *"நெருப்பெழும்படிப் பிசைந்து"* (கூர்மபு.தக்கன்வேள்.36). *நெருப்பில்லாமல் புகை வருமா* (பழ.). *நெருப்பைக் கண்டு மிதித்தாலும் சுடும்; காணாமல் மிதித்தாலும் சுடும்* (பழ.). *நெருப்பில் ஈ மொய்க்குமா* (பழ.). *நெருப்பு என்றால் வாய் வேகுமா.* (பழ.). *நெருப்பைத் தலைகீழாய்ப் பிடித்தாலும் அதன் சுடர் கீழாகுமா* (பழ.). **2.** இடி; thunderbolt. *"அண்டமுகடு நெருப்பறாது"* (இலக்.வி. 655.உதா).

3. உடற்சூடு; feverishness, abnormal heat of the body. 4. சின முதலியவற்றின் கடுமை (வின்.); strong feelings, as great grief, envy, jealousy, anger. 5. *நெருப்புத்துண்டம்* (உ.வ.) பார்க்க; see *neruppu-t-tuṇḍam*.

தெ. நிப்பு; அரபி. நார்; கொலா. நிப்க; மா. நரெ.

1. *[நுல்(துளை) → நொல்→ நெல் → நெலி → நெலி-தல் = கடைதல். நெல் → நெர் → நெரு →நெருப்பு = மூங்கில் ஒன்றோ டொன்று உரசிப் பற்றும் தீ (வே.க.நுல்[2])]*

2. *[நுல்(ஒளி) → நெல்→ நெரு → நெருப்பு = உரசிப் பற்றும் தீ (வே.க.நுல்[3])]*

நெருப்புப் பற்றிய 'சுள்' அடிச்சொற்கள்

உ-உல்-உல. உலத்தல் = எரிதல், காய்தல். உல-உலவை = காய்ந்த மரக்கிளை. "*இலைதீந்த வுலவையால்*" (கலித்.11).

உல-உலர். உலர்தல் = காய்தல்.

உலர்-உலறு. உலறுதல் = காய்தல், சினத்தல், வற்றுதல்.

உல-உலை = 1. நெருப்புள்ள அடுப்பு. 2. கொல்லன் அடுப்பு. 3. சோறு சமைக்கக் கொதிக்க வைக்கும் நீர்.

உல்-அல்-அன்று → அன்றுதல் = எரிதல், சினத்தல், பகைத்தல்.

அல்-அன்-அனல் = நெருப்பு. அனலுதல் = எரிதல்.

அனல்-அனலி = 1. நெருப்பு. 2. கதிரவன்.

அனல்-அனலம் = நெருப்பு. அனலம்-வ. அநல.

அனலம்-அனலன் =நெருப்புத் தெய்வம்.

உல்-உள்-ஒள்-ஒண்மை = 1. நெருப்பின் தன்மையான விளக்கம். 2. உள்ளொளி, நல்லறிவு. 3. இயற்கையழகு 4. நன்மை.

ஒள்-ஒளி = 1. நெருப்பின் விளக்கம். 2. ஒளிபோல் விளங்கும் புகழ். 3. உள்ளொளி.

ஒளி-ஒளிர். ஒளிர்தல் = விளங்குதல்.

ஒளிர்-ஒளிறு. ஒளிறுதல் = விளங்குதல்.

ஒள்-ஒள்ளிய = ஒளியுள்ள, அறிவு மிக்க, நல்ல அழகிய.

ஒள்ளியன் = அறிவுடையோன். ஒள்ளியோன் = விளக்கம் மிக்க வெள்ளிக்கோள்.

ஒளி = 1. ஒளியுள்ள 2. அழகிய. ஒள் + தொடி - ஒண்டொடி = விளங்கும் வளைய லணிந்த பெண். ஒள் + நுதல் - ஒண்ணுதல் = விளங்கும் நெற்றியுடைய பெண்.

ஒள் + பு = ஒண்பு-ஒட்பு-ஒட்பம் = அறிவு. "*கல்லாதா னொட்பங் கழியநன் றாயினும்*" (குறள்,404).

உள்-அள்-அழ-அழல் = 1. நெருப்பு. 2. வெப்பம். 3. எரிவு. 4. நரகம். 5. துளங்கொளி (கேட்டை) 6. செவ்வாய் 7. சினம்.

அழலவன் = 1. தீத்தெய்வம் 2. கதிரவன் 3. செவ்வாய்.

அழலுதல் = 1. எரிதல் 2. விளங்குதல். 3. காந்துதல் 4. சினத்தல்.

அழல்-அழற்று (பி.வி.), அழற்றுதல் = எரித்தல், வெம்மை செய்தல்.

அழல்-அழறு-அளறு = நிரயம்(நரகம்).

"அண்ணாத்தல் செய்யா தளறு" என்னுங் குறளடியில் (255) 'அளறு' என்னும் சொல் ஏட்டுப் பிழையாகவும் இருக்கலாம்.

"பூரியர்கள் ஆழும் அளறு" என்னுங் குளறடி (919) சேற்று வடிவான நிரய(நரக) வகையென்று கொள்ள இடந்தரினும், நிரயம் (நரகம்) நெருப்புலக மென்றே பொதுவாகக் கொள்ளப்படுவதனாலும், அழல், எரி முதலிய பெயர்கள் அதற்குண்மையாலும், ஊற்றளவிலேயே நெருப்புத் துன்புறுத்துவதனாலும், அழறு என்னுஞ் சொல்லே அளறு என மருவிற்றென்றோ, ஏட்டுப் பிழையாக நேர்ந்ததென்றோ கொள்வது பொருத்தமானதே.

அழல்-அழலி = நெருப்பு. அழலித்தல் = எரிச்சல்.

அழல்-அழலை = தொண்டைக் கரகரப்பு.

அழல்-அழன்-அழனம் = 1. நெருப்பு 2. வெம்மை.

"அழனம்மை நீக்குவிக்கும்" என்னும் தேவார (1225:4) அடியிலுள்ள 'அழனம்மை' என்னுந் தொடரை, அழன் + நம்மை என்றும் பிரிக்கலாம்.

அழன்-அழனி. ஒ.நோ : அழல்-அழலி, களன்-கழனி.

அழ–அக–அகை. அகைதல்=எரிதல். "அகையெரி யானாது" (கலித்.139:26). ஒ.நோ.:மழ–மக.

அழனி–அகனி–வ. அக்நி (agni) -L. ignis. இதற்கு யாசுகர் (Yaskar) தம் நிருத்தத்திற் (Nirukta) கூறியிருக்கும் வேர்ப்பொருட் கரணியங்கள் முற்றும் பொருந்தாப் பொய்த்தல் என்பதை அங்கு நோக்கிக் காண்க. புதுச்சேரி அரவிந்தர் தவநிலைய இருக்குவேதப் பதிப்பு அகோ (ago) என்று மூலங்காட்டுவதும், முற்றும் தவறாம். இது சமற்கிருதத்தில் அஜ் என்றே நிற்கும்.

உள்–உண்–உண்ணம்=வெப்பம். "உண்ண வண்ணத் தொளிநஞ்ச முண்டு" (தேவா.510:6).

உண்ணம்–வ.உஷ்ண. மராத். ஊன்.

உண்–உண– உணத்தல்=காய்தல். மிளகாய் உணந்துவிட்டது (உ.வ.). உணந்த மிளகாய் (உ.வ.) = மிளகாய் வற்றல்.

உண–உணத்து (பி.வி.)– உணத்துதல் = 1. காயப் போடுதல், நெல்லை உணத்தினார் (உ.வ.). 2. உடம்பை மெலிவித்தல் அல்லது வற்ற வைத்தல். "மெய்யுணத்தலும்" (தைலவ. தைல.110).

உண–உணங்கு– உணங்குதல் = நெல் முதலியன காய்தல். "உணங்குணாக்கவரும்" (பட்டினப்.22). "தினைவிளைத்தார் முற்றந் தினையுணங்கும்" (தமிழ்நா.154). 2. மெலிதல். "ஊட லுணங்க விடுவாரோடு" (குறள்,1310). 3. வாடுதல். "உணங்கிய சிந்தையீர்" (கந்தபு.மோன.21). 4. சுருங்குதல். "உணங்கரும் புகழ்" (காஞ்சிப்பு.நாட்டுப்.1).

உணங்கு–உணங்கல் = 1. உலர்த்திய கூலம். "உணங்கல் கெடக் கழுதை யுதடாட்டங் கண்டென் பயன்" (திவ்.திருவாய், 4.6:7). 2. வற்றல். "வெள்ளென் புணங்கலும்" (மணிமே.16:67). 3. உலர்ந்த பூ (பிங்.).

உணங்கு–உணக்கு (பி.வி.)–உணக்குதல் = உலர்த்துதல். "தொடிப்புழுதி கஃசா வுணக்கின்" (குறள், 1037).

உணக்கு–உணக்கம் = வாட்டம்.

ம. உணக்கம்; க. ஒணகிலு(g); து. ஒணகெலு.

உணக்கு = வாட்டம். "உணக்கி லாததோர் வித்து" (திருவாச.30:1).

"உல்–உர்–உரு– உருத்தல் = 1. அழலுதல். "ஆக முருப்ப நூறி" (புறநா.25:10). 2. பெருஞ்சினங் கொள்ளுதல். "ஒரு பகலெல்லா முருத் தெழுந்து" (கலித்.39:23).

உரு–உருத்திரம் = பெருஞ்சினம். உருத்திரம்–வ. ருத்ர. 'திரம்' ஒரு தொழிற் பண்பீறு. ஒ.நோ: மாத்தல் = அளத்தல்.

மா + திரம் = மாத்திரம் (அளவு). அவன் எனக்கு எம்மாத்திரம்? என்னும் வழக்கை நோக்குக. மானம் (மா + அனம்) என்னும் அளவுப் பொதுப் பெயரையும், மா, அரைமா, ஒருமா, இருமா, மாகாணி முதலிய அளவுச் சிறப்புப் பெயர்களையும், மேலை வ.ஆ. மாவட்டத்தில் படி என்னும் முகத்தலளவைப் பெயர் மானம் என்று வழங்குதலையும் நோக்குக. மாத்தல் என்னும் வினைச்சொல் பண்டே வழக்கிறந்தது. திரம் – திரை. மா + திரை = மாத்திரை = அளவு, எழுத்தொலிக்குங் கால அளவு, உண்ணும் மருந்தளவு.

சினம் தீயொத்தலால், தீப் பற்றிய சொற்களெல்லாம் சினத்தையுங் குறிக்கும்.

உருத்திரம் – வ. ரௌத்ர (raudar) = வெகுளி

ஒ.நோ. E. wrath, n.anger, O.E. wrreththu, AS. and ON. wraedo, ME. wrathe.

E. wroth, adj. angry. OE. wrath, OS. wreth, OHG.reid, ON.reithr.

கீற்றும் (Skeat) கிளேனும் (Klein) இச்சொற்களை reid (twristed) என்னும் மூலத்தினின்று திரிக்கின்றனர். இது தென்சொல்லை அறியாமையாலும் இருக்கலாம்.

உரு – உரும் – உருமம் = 1. வெப்பம், 2. வெப்பம் மிக்க நண்பகல்.

உரும் – உருமி– உருமித்தல் = வெப்பமாதல், புழுங்குதல்.

உரும் – உரும்பு = 1. கொதிப்பு, 2. வெகுளி. "உரும்பில் கூற்றத் தன்னநின்" (பதிற்றுப்.26:13).

உரும்பு – உருப்பு = 1. வெப்பம். "கனமிசை யுருப்பிறக் கனைதுளி சிதறென" (கலித்.16:7). 2. சினத்தீ. "உருப்பற நிரப்பினை யாதலின்" (பதிற்றுப்.50:16). 3. கொடுமை. "உரும்பில் சுற்றமோடு" (பெரும்பாண்.447).

உருப்பு – உருப்பம் = 1. வெப்பம். "கனலும்... உருப்பமெழ" (அரிச்சந்.பு.விவா.104). 2. சினம்.

உரு – உருகு– உருகுதல் = 1. வெப்பத்தால் இளகுதல். 2. மனம் நெகிழ்தல்.

உருகு – உருக்கம் = 1. இளக்கம். 2. மன நெகிழ்ச்சி, இரக்கம்.

உருகு – உருக்கு(பி.வி.)–உருக்கு = உருக்கிய இரும்பு. உருக்குதல் = 1. இளக்குதல், 2. வாட்டுதல், மெலிவித்தல்.

உருக்கு – உருக்கன் = உடம்பை வாட்டும் நோய்.

உருக்கு – உருக்கி = 1. மாழை வகைகளை உருக்குபவன். 2. உடம்பை உருக்கும் நோய்.

உருக்காங்கல் = உருகிப் போன செங்கல்.

உல் – சுல் – சுல்லி = 1. அடுப்பு (திவா.). 2. மடைப்பள்ளி. (இலக்.அக.). சுல்லி – வ.சுல்லீ (c). சுல் – சுள்– சுள்ளெனல் = வெயில் காய்தற் குறிப்பு, உறைத்தற் குறிப்பு. சுள் = கருவாடு (காய்ந்த மீன்). "சுள்ளினைக் கறித்தனர்" (கந்தபு.அசமுகி நகர்.18).

சுள் – சுள்ளம் = சினம் (வின்.)

சுள்ளம் – சுள்ளகம் – சுள்ளக்கம் = 1. சினம் (யாழ்.அக.). 2. வேர்க்குரு (சங்.அக.). சுள்ளக்கம் – வ.க்ஷுல்லக.

சுள்ளக்காய் = மிளகாய். உறைப்புச்சுவை சுடுதல்போன்றிருத்தலின், சுடுதற்கருத்தினின்று உறைப்புக் கருத்துத் தோன்றும்.

ஒ.நோ.E.hot = of high temperature, pungent.

சுள் – சுள்ளி = காய்ந்த குச்சு. சுள் – சுள்ளை = செங்கல் சுடுமிடம். சுள்ளை – சூளை.

சுள் – சுளுந்து = தீவட்டி, பந்தம் எரிக்கும் மரக்கழி.

சுள் – சுள்கு – சுட்கு – சுட்குதல் = காய்தல், வற்றுதல்(வின்.).

ஒ.நோ.: வெள்கு – வெட்கு – வெட்கம்.

சுட்கு – சுட்கம் = 1. வறட்சி, 2. வறண்டது. 3. உடம்பை வாட்டும் ஒரு நோய். 4. பணம் முதலிய பொருட்குறைவு. 5. இவறன்மை (கஞ்சத்தனம்). சுட்கஞ் செய்யாதே (உ.வ.)

சுட்க தருக்கம் = வீண் சொற்போர்.

சுட்கு – சுக்கு– சுக்குதல் = உலர்தல் (நாஞ்.).

சுக்கு = காய்ந்த இஞ்சி. சுள் – வ.சுஷ் (to dry.)

ஒ.நோ: உள்(ஒள்)–வ.உஷ்(to burn)–உஷா = ஒளி தோன்றும் விடியற்காலம்.

சுக்கு– வ.சுஷ்க.

சுக்கு – சுக்கான் = 1. சுண்ணாம்புக்கல், 2. உருக்குச் செங்கல்.

சுக்கு = காய்ந்தது, வறண்டது, பயனற்றது.

சுட்கம்–சுக்கம் = 1. வறட்சி, 2. கஞ்சத்தனம்.

சுக்கஞ்செட்டி–கடுஞ்செட்டுள்ளவன்.

சுள்–சுள்பு–சுட்பு–சுப்பு–சுப்பி = சுள்ளி. சுள்ளிசுப்பி என்பது மரபிணைச் சொல்.

சுப்பெனல் = ஈரமுள்ளது காய்தல் அல்லது வறண்ட நிலம் நீரை உள்ளிழுத்தற் குறிப்பு.

சுள்–சுண்–சுண்ணம் = 1. காளவாயிற் சுட்டகல். 2. அக்கல்லை நீற்றின நீறு. 3. நீறு. 4. நறும்பொடி. 5. பூந்தாது.

சுண்ணம் – சுண்ணம்பு – சுண்ணாம்பு = 1. சுட்ட சுண்ணாம்புக்கல். 2. நீற்றின சுண்ணாம்பு.

சுண்ணக்கல் = சுக்கான்கல் (யாழ்.அக.)

சுண்ணம்–சுண்ணகம் = விழா நாள்களில் மக்கள்மேல் தூவும் நறும்பொடி.

சுள்–சுண்டு– சுண்டுதல் = (செ.கு.வி.) 1. நீர் வற்றுதல். 2. வாடுதல், சுருங்குதல். அச்செய்தி கேட்டவுடன் அவன் முகஞ் சுண்டிப் போயிற்று (உ.வ.)–(செ.குன்றாவி.) நீர் வற்றக் காய்ச்சுதல் அல்லது அவித்தல். இன்றைக்குக் கடலைச் சுண்டினார்கள் (உ.வ.)

சுண்டு–சுண்டல் = 1. நீர் முற்றும் வற்ற அவித்த கடலைப் பயறு. 2. சுண்டற்கறி.

சுண்டு–சுண்டான் = சிறு பிள்ளைகள் விளையாட்டாகக் கொளுத்தும் கொள்ளிக்குச்சு.

சுண்டு–சுண்டி = 1. சுக்கு (காய்ந்த இஞ்சி). 2. தொட்டாற் சுருங்கி, தொட்டாற் சிணுங்கி, தொட்டால் வாடி என்னும் பூண்டு.

சுண்டி (சுக்கு)–வ.சுண்டி(th). இது வடமொழியிற் 'சுண்ட்டி' என வலித்தொலிக்கும்.

சுண்டி–சுண்டில் = தொட்டாற்சுருங்கி, வாடினது சுருங்கும்.

சுள்–சுடு–சுடுவல் = வெதும்பும் அரத்தம் (திவா.)

சுடுவல்–சுடுவன் = வெதும்பும் அரத்தம் (பிங்.)

சுடுவான் = மரக்கலச் சமையலறை.

சுடு → சுடல் → சுடலை = சுடுகாடு.

சுடு–சுடர்–சுடரோன் (சுடரவன்) = கதிரவன்.

சுடு–சூடு.

சுல்–சுர்–சுரீர் + எனல் = 1. நெருப்புச் சுடும்

குறிப்பு. 2. தழலிற்படும் நீர் சுண்டும் குறிப்பு.

சுர்–சுரம் = 1. காய்ச்சல், 2. சுடும் பாலைநிலம். "சுரமென மொழியினும்" (தொல்.பொருள்.216).

சுரம் (காய்ச்சல்)–வ.ஜ்வர.

சுர்–சூர் = 1. நெருப்பு. 2. கதிரவன். "சூர்புக வரியது... ...தொன்மதில்" (கம்பரா.கவந்த.21).

சூர்–சூரன் = 1. நெருப்பு (பிங்.). 2. கதிரவன் (பிங்.). "காதற் சூரனை யனைய சூரா" (பாரத. பதினேழாம்.49).

சூரன்–வ.ஸூர(sūra) – ஸூர்ய(sūrya)

சூர் என்னும் சொல்லிற்கு, அச்சம், கொடுமை, உறைப்பு, மிளகு முதலிய பொருள்களிருப்பதும், அதைத்தென்சொல் லெனத் தெரிவிக்கும்.

சுள் (சுல்–சொல்)– L.sol, sun; Icel. sol; OE., ON.sol; Dan., Swed. sol; E.sol; Goth, soule; Lith, soule; Lett, soule; Ir. sūl; Russ, solntse; W.haul (for saul); Co.heuul, hau; Bret. heol, sun.

girasol, parasol, rosolio, turnsole என்னும் கூட்டுச் சொற்களின் இரண்டாம் உறுப்புகள், கதிரவனைக் குறிப்பனவே.

solar என்பது sol என்பதன் குறிப்புப் (adj.) பெயரெச்ச வடிவம்.

சகர (ஸகர) முதல் ஹகர முதலாகத் திரிதல் இயல்பே.

சிந்து–பார. ஹிந்து, L.sex (E.six)-Gk. hex.

(சுல்–சுன். சொன்–சன்). E.sun; ME. sonne; OE. sunne; ON., OS., OHG. sunna; MDu. sonne; Du.zon; G.sonne; Goth. sunna=sun.

இவற்றிற்கெல்லாம் ஸூ (sū), ஸௌ (sau) என்பன உய்த்துணர்வு மூலமாகக் காட்டப் படுகின்றன. மேலையாரியர் தமிழின் தொன்மை, முன்மை, தென்மைத் தன்மைகளை அறியாமையால் இங்ஙனங் கூறுகின்றனர்; அல்லது கொள்கின்றனர். இவற்றிற்கெல்லாம் சுல் என்னும் தென்சொல்லே அடிமூலம்.

சுல்–சொல் = நெருப்புப் போல் அல்லது பொன்போல் விளங்கித் தோன்றும் நெல்.

"சடைச்செந்நெல் பொன்விளைக்குந் தன்னாடு" என்று நளவெண்பா (சுயம்வர.68) கூறுதலையும், பொன்விளைந்த களத்தூர் என்னும் வழக்கையும் நோக்குக. நெல் என்னும் பெயரும் இப்பொருட் கரணியம் (காரணம்) கொண்டதே.

நில்–நில–நிலா–நிலவு. நிலத்தல் = ஒளிர்தல், விளங்குதல். நில்–நெல்.

சொல்–சொலி–சொலித்தல் = 1. எரிதல். "நாப்பண் அழல் சொலிப்பதாகவுன்னி" (பிரபோத.44:15). 2. ஒளிர்தல். "மானமென் றுரைப்ப தெழுந்துமேற் சொலித்து வருவது போன்றும்' (பிரபோத. 11:1).

சொலி–ஜொலி–வ.ஜ்வலி என்று திரிந்துள்ளது. ஜ்வல் என்பதை மூலமாகக் காட்டுவர் வடமொழியாளர். இது செயற்கை மூலம்.

சொலித்தல் வினைச்சொல் ஆளப்பட்ட முன்னூல்கள் வழக்கிறந்தமையால், பின்னூலினின்று மேற்கொள் காட்டப்பட்டது.

சொல்–சொன்–சொன்னம் = விளங்கும் நிறப்பொன் (திவா.). "சொன்னதானப் பயனெனச் சொல்லுவர்" (கம்பரா.சிறப்பு).

சொன்னம்–வ.ஸுவர்ண = நன்னிறமுள்ளது, தங்கம். இது பொருந்தப் பொய்த்தலான சொற்றிரிப்பு.

இனி, சூர் என்பதையே cur என்று திரித்து, சூர்ண (curna) என்னுஞ் சொல்லைத் தோற்றுவித்தனர்.

சூர் (cur) = எரி (to burn). சூர்ண–த. சூரணம் = நீறு, பொடி.

சூரணம்–சூரணி. சூரணித்தல் = நீற்றுதல், பொடி செய்தல்.

ஒ.நோ = சுள்–சுள்ளம்–சுண்ணம். சுள்ளல் = எரிதல் (வழக்கிறந்த வினைச்சொல்).

இனி, சுள் என்னும் அடி போன்றே குள், துள், நுள், புள், முள் என்னும் வழியடிகளும் உள் என்னும் மூல அடியினின்று திரிந்து, நெருப்புப் பற்றிய பல்வேறு சொற்களைப் பிறப்பிக்கும்.

நெருப்பு : நெருப்பு பழங்காலத்தில் 1. கடைதல், 2. அறுத்தல், 3. தேய்த்தல், 4. அடித்தல் – என்ற நான்கு முறைகளில் உண்டாக்கப்பட்டது.

மட்பாண்டம் செய்யத் தெரிவதற்கு முன்பே மக்கள் நெருப்பின் பயனை அறிந்திருந்தனர்.

1. நெருப்புக் கடைதல் : மரத்தைக் கடைந்தோ, அறுத்தோ, தேய்த்தோ, நெருப்பை உண்டாக்கு வதற்குக் கடினமரத்துண்டு ஒன்றும், மென்மையான மரத்துண்டு ஒன்றும் இருக்கும். கடின மரத்துண்டில் சிறு குழியிருக்கும். மென்மை மரத்துண்டு ஒரு

நீண்ட குச்சியாக இருக்கும். கடினத்துண்டைத் தரையில் அசையாதபடி வைத்துக் கொண்டு, குச்சியை அதன் குழியில் நட்டுக் கையால் தயிர் மத்தைக் கடைவதுபோல் கடைந்தால் அதனால் பிரியும் மரத்தூளில் நெருப்புப் பற்றிக் கொள்கிறது. இந்த நெருப்புக்கடை மத்து இப்போது இலங்கையில் வெட்டர் (veddas) களிடம் காணப்படுகிறது. தென்னிந்தியாவில் ஆதிக்குடிகளான நாயாடிகள், ஏனாதிகள், கணிகர்கள் இதைப் பயன்படுத்துகின்றனர். படகர்களும் தொதவர்களும் மத்தைக் கையால் கடையாமல் கயிறு கொண்டு கடைவர்.

2. அறுப்புமுறை : ஒரு மூங்கில் நீளமான பள்ளம் செய்து, அதைத் தரையில் அசையாதபடி வைத்துக்கொண்டு, மூங்கிலின் குறுக்கேயுள்ள பள்ளங்களில் மற்றொரு மூங்கிலைப் பலமுறை ஓட்டித் தேய்ப்பர். ஒருவரே செய்வதுமுண்டு; அல்லது ஒருவர் தரை மூங்கிலை அழுத்திக் கொள்வர், மற்றொருவர் தேய்ப்பர். மலையாளப் பணியர்கள் இம்முறையைப் பயன் படுத்துகின்றனர்.

3. தேய்ப்புமுறை : ஒரு மரத்தில் V வடிவமான பள்ளம் வெட்டி வைத்துக் கொண்டு, ஆப்புப் போன்ற உருவமுடைய மற்றொரு மரத்துண்டால் அதில் பலமுறை தேய்த்தால், அப்போது பிரியும் மரத்தூள் நெருப்புப் பற்றி எரியும். இதற்கு நீர்ப்பருத்தி மரம் என்னும் மரத்தையே பயன்படுத்துவது வழக்கம். இம்முறை ஆப்பிரிக்கா, அமெரிக்கா, தென்கிழக்கு ஆசியத் தீவுகள் முதலியவற்றில் காணப்படுகிறது.

4. அடித்தல் முறை : இம்முறையில் இரண்டு இரும்புக் கட்டிகளைப் (Iron pyrites) பயன்படுத்துவர். ஒன்றைக் கொண்டு மற்றதை அடித்தும், தீக்கல்லை எஃகு கொண்டு அடித்தும் நெருப்பை உண்டாக்குவர். இது தமிழ் நாட்டில் சிக்கிமுக்கிக் கல் முறை எனப்படும். தீக்கல் எஃகு முறையானது எசுக்கிமோக்கள், அமெரிக்க இந்தியர்கள், செஞ்சுக்கள் ஆகியோரிடம் காணப்படும்.

இவ்வாறு கடையும்போதும், தேய்க்கும் போதும், அறுக்கும்போதும் தீப்பற்றவைக்கப் பனை நாரைப் பயன்படுத்துவர். தீக்குச்சி செய்யப் பெறும் காலம் வரை சிக்கிமுக்கிக் கல் முறையே வழக்கிலிருந்தது.

தென்கிழக்கு ஆசியாவில் மலேயா, பர்மா, போர்னியோ ஆகிய இடங்களிலுள்ள சில வகை ஆதிக்குடிகள் மற்றொரு முறையைப் பயன்படுத்தினர். இது தண்டுமுறை எனப்படும். இம்முறையில், ஒரு குழலின் அடிமுனை மூடியிருக்கும். திறந்துள்ள மேல்முனை வழியே ஒரு தண்டு இறுக்கமாகப் பொருந்தியிருக்கும். குழலின் அடிப்பக்கமுள்ள சிறு பள்ளத்தில் தீப்பற்றியை வைத்துக்கொண்டு தண்டைப் பலமாக அடித்தால் குழாயிலுள்ள காற்று அழுத்தப்படும். அப்போது நெருப்பு உண்டாகும். உடனே தண்டை வெளியே எடுத்துவிட்டு நெருப்பைப் பயன்படுத்துவர்.

நெருப்புப் பற்றிய பழமொழிகள்

நெருப்பிலே (நெருப்பை) ஈ மொய்க்குமா?

நெருப்பிருக்கிற காட்டை நம்பினாலும் நீரிருக்கிற காட்டை நம்பக்கூடாது.

நெருப்பிலும் பொல்லாச் செருப்பு.

நெருப்பிலே நெய் விட்டதுபோல்.

நெருப்பிலே புழு பற்றுமா?

நெருப்பிலே போட்டாலும் நெஞ்சு வேகாது.

நெருப்பிலே புழுப்போலத் துடிக்கிறது.

நெருப்பினும் பொல்லாது கருப்பின் வாதை.

நெருப்பு ஆறும் மயிர்ப் பாலமும்.

நெருப்பு இல்லாமல் நீள் புகை எழும்புமா?

நெருப்பு என்றால் வாய் வெந்து போமா?

நெருப்பு சிறிது என்று முன்றானையில் முடியலாமா?

நெருப்பு நின்ற காட்டிலே ஏதாவது நிற்கும் நீர் நின்ற காட்டில் ஒன்றும் நிற்காது.

நெருப்புப் பந்தம் கட்டிக் கொண்டு நிற்கிறான்.

நெருப்பைக் கண்டு மிதித்தாலும் சுடும் காணாமல் மிதித்தாலும் சுடும்.

நெருப்பைச் சார்ந்த யாவும் அதன் நிறமாகும்.

நெருப்புப் பந்தலிலே மெழுகுப் பதுமை ஆடுமா?

நெருப்பைத் தலைகிழாகப் பிடித்தாலும் சுவாலை கீழாகுமா?

நெருப்பை மடியிலே கட்டிக் கொண்டிருக்கிறாள்.

நெருப்பை மடியிலே முடிகிறதா?

நெருப்பு[2] *neruppu,* பெ. (n.) **1.** கத்தூரி மான்; musk. **2.** வெடியுப்பு; nitre. (சா.அக.).

நிறத்தால் பெற்ற பெயர்

நெருப்பு[3] *neruppu,* பெ. (n.) **1.** கத்தூரி மான்; musk. **2.** வெடியுப்பு; nitre. (சா.அக.).

நிறத்தால் பெற்ற பெயர்.

நெருப்புக்கட்டை *neruppu-k-kaṭṭai,* பெ. (n.) தீக்கொள்ளி (வின்.); fire brand.

[நெருப்பு + கட்டை]

நெருப்புக்கண் *neruppu-k-kaṇ,* பெ.(n.) **1.** கொள்ளிக்கண் (திட்டிவிழுங்கண்); evil eye. **2.** அனற்பொறி பறக்குங்கண்; fiery eye. **3.** பொறாமைக்கண்; envious eye. **4.** சிவனின் நெற்றிக்கண்; frontal eye of a Šiva.

[நெருப்பு + கண்]

நெருப்புக்கல் *neruppu-k-kal,* பெ. (n.) **1.** தீத்தட்டிக்கல் (வின்.); flint. **2.** காடிக்காரம் (யாழ்.அக.); nitrate of silver.

[நெருப்பு + கல்]

நெருப்புக்காடு *neruppu-k-kāḍu,* பெ.(n.) **1.** பெருநெருப்பு; conflagration. **2.** கடுவெயில்; scorching, hot sun. **3.** கடுஞ்சினம்; intense anger, fury or rage.

[நெருப்பு + காடு. காடு = மிகுதி]தால் பெற்ற பெயர்.

நெருப்புக்கட்டை *neruppu-k-kaṭṭai,* பெ. (n.) தீக்கொள்ளி (வின்.); fire brand.

[நெருப்பு + கட்டை]

நெருப்புக்கண் *neruppu-k-kaṇ,* பெ.(n.) **1.** கொள்ளிக்கண் (திட்டிவிழுங்கண்); evil eye. **2.** அனற்பொறி பறக்குங்கண்; fiery eye. **3.** பொறாமைக்கண்; envious eye. **4.** சிவனின் நெற்றிக்கண்; frontal eye of a Šiva.

[நெருப்பு + கண்]

நெருப்புக்கல் *neruppu-k-kal,* பெ. (n.) **1.** தீத்தட்டிக்கல் (வின்.); flint. **2.** காடிக்காரம் (யாழ்.அக.); nitrate of silver.

[நெருப்பு + கல்]

நெருப்புக்காடு *neruppu-k-kāḍu,* பெ. (n.) **1.** பெருநெருப்பு; conflagration. **2.** கடுவெயில்; scorching, hot sun. **3.** கடுஞ்சினம்; intense anger, fury or rage.

[நெருப்பு + காடு. காடு = மிகுதி]

நெருப்புக்காலி *neruppu-k-kāli,* பெ. (n.) ஒருவகைச் சிலந்திப் பூச்சி; a kind of spider. (சா.அக.).

[நெருப்பு + காலி. நெருப்பு வண்ணக்கால்களையுடைய பூச்சி]

நெருப்புக்காறாதகல் *neruppukkāṟāta-kal,* பெ.(n.) நெருப்பில் உருகாத செங்கல் வகை (C.E.M.); fire-brick.

[நெருப்பு + ஆறு + ஆ + கல். ஆ –எ.ம.இ. நிலை. நெருப்பிலும் உருகாத செங்கல் வகை]

நெருப்புக்கிரை *neruppu-k-k-irai,* பெ. (n.) **1.** பிணம்; dead. **2.** நீர்; water. (சா.அக.)

[நெருப்பு + கு + இரை. நெருப்புக்கு இரையாகும் பொருட்கள்]

நெருப்புக்குச்சி *neruppu-k-kucci,* பெ. (n.) தீக்குச்சி; match. *நெருப்புக் குச்சியைக் கொளுத்து.*

[நெருப்பு + குச்சி. நெருப்பையுண்டாக்கும் குச்சி.]



நெருப்புக்குள்ளுப்பு *neruppu-k-kuḷ-ḷ-uppu,* பெ. (n.) வளையலுப்பு; glass gall-Febvitri. (சா.அக.).

நெருப்புக்கொப்புளம் *neruppu-k-koppuḷam,* பெ.(n.) தீப்புண்; burns. (சா.அக.).

[நெருப்பு + கொப்புளம். நெருப்புப்பட்டதால் ஏற்பட்ட கொப்புளம்.]

நெருப்புக்கொள்ளி *neruppu-k-koḷḷi,* பெ. (n.) 1. தீக்கொள்ளி; firebrand. 2. கெட்டவன்; atrociously wicked man. 3. கலக்காரன்; incendiary, firebrand. 4. தேள்கடி; scorpion sting.

[நெருப்பு + கொள்ளி. கொள்ளி = 1. கொள்ளிக்கட்டை, 2. கலகமூட்டுபவன், 3. கெட்ட குணமுள்ளவன்]

நெருப்புக்கொளுத்து[1]–தல் *neruppu-k-koḷuttu-,* 5செ.கு.வி.(v.i.) 1. தீமூட்டுதல் (வின்.) அடுப்பில் தீ மூட்டுதல்; to kindle of fire, as in an oven. 2. கடுவெயி லெரித்தல் (உ.வ.); to be hot, scorching, as the sun. 3. கடுமையாதல் (வின்.); to be very severe, as showing anger in reproof. 4. தீமை செய்தல் (வின்.); to do injustice; to tyrannise. 5. கலகமூட்டுதல் (உ.வ.); to foment or instigate a quarrel.

[நெருப்பு + கொளுத்து + தல்]

நெருப்புக்கொளுத்து[2]–தல் *neruppu-k-koḷuttu-,* 5செ.குன்றாவி.(v.t.) தீக்கொளுத்துதல். (உ.வ.); to set fire to.

[நெருப்பு + கொளுத்து–தல்.]

நெருப்புக்கோழி *neruppu-k-kōḻi,* பெ. (n.) 1. நீண்ட காலும், கழுத்தும் சிறிய தலையும் பறக்கப் பயன்படாத பெரிய சிறகுகளும் கொண்ட தீத்தணலை விழுங்கும் கோழிவகை; ostrich, as eating embers. 2. நெருப்புப் போன்று சிவந்த தொண்டையையுடைய வான்கோழி (வின்.); Turkey-cock, as having fire-red throat.

[நெருப்பு + கோழி]



நெருப்புக்கோழி : இது பறவைகளில் பெரியது; நிமிர்ந்திருக்கும்போது ஆறு அடி முதல் எட்டு அடி உயரமிருக்கும். அரேபியாவிலும், தென்னாப்பிரிக் காவிலும் இதனைக் காணலாம்; பறக்க முடியாது; காலில் இரண்டே விரல்கள் உண்டு. முட்டை இட்டு அடை காக்கும்; ஆண்டுக்கு ஒரு முறையே முட்டையிடும்; முட்டை பெரியது. இதன் கழுத்திலும் தொடைகளிலும் இறகுகளில்லாத படியால் அப்பாகங்கள் நெருப்புப் போல் சிவப்பாயிருக்கும். இஃது உண்ணும் உணவைச் செரிப்பிக்க வேண்டிக் கற்களையும் ஆணிகளையும் விழுங்கும் தன்மையது.

நெருப்புச்சட்டி *neruppu-c-cāṭṭi,* பெ.(n.) கணப்புச் சட்டி; firepan.

[நெருப்பு + சட்டி. நெருப்புவைக்கும் சட்டி]

நெருப்புச்சயநீர் *neruppu-c-cayanīr,* பெ.(n.) **நெருப்புத் தண்ணீர்** (யாழ்.அக.) பார்க்க; see *neruppu-t-taṇṇīr.*

[நெருப்பு + சயநீர். சயநீர் = சுண்ணாம்பு, எரியுப்பு (நவச்சாரமும்) கலந்த நீர். செய் + நீர் – செயநீர் → சயநீர்.]

நெருப்புச்சாணை *neruppu-c-cāṇai,* பெ. (n.) சாணைக்கல் வகை (யாழ்.அக.); a kind of grindstone.

[நெருப்பு + சாணை. சாணை → சாணைக்கல் = படைக்கலன் முதலிய கருவிகளைக் கூர்மை யாக்கும் கல்.]

நெருப்புச்சூடு *neruppu-c-cūḍu,* பெ.(n.) தீப்பட்ட புண் (M.L.); burns and scalds.

[நெருப்பு + சூடு. சுடு → சூடு. சுட்டதால் ஏற்பட்டபுண்.]

நெருப்புச்செயநீர் *neruppu-c-ceyanīr,* பெ.(n.) **நெருப்புச் சயநீர்** பார்க்க; see *neruppu-c-cayanīr.*

நெருப்புத்தண்ணீர்[1] *neruppu-t-taṇṇīr,* பெ.(n.) வெடியுப்பு சாரம் (அமிலம்) (வின்.); nitric acid.

[நெருப்பு + தண்ணீர். எரியுப்பு நீர்.]

நெருப்புத்தண்ணீர்[2] *neruppu-t-taṇṇīr,* பெ.(n.) **1.** தீநீர்; distilled water. **2.** கொதி நீர்; boiling water. **3.** நீராவி; steam. **4.** மிதமிஞ்சிய குளிர்நீர்; extremely chill water. (சா.அக.).

[நெருப்பு + தண்ணீர்.]

நெருப்புத்தணல் *neruppu-t-taṇal,* பெ. (n.) கட்டை நெருப்பு (உ.வ.); live coal.

[நெருப்பு + தணல். நெருப்புத் துண்டம்.]

நெருப்புத்தழல் *neruppu-t-taḻal,* பெ.(n.) **நெருப்புத் தணல்** (யாழ்.அக.) பார்க்க; see *neruppu-t-taṇal.*

[நெருப்பு + தழல். தழல் = கனிந்த நெருப்பு, நெருப்பு]

நெருப்புத்தள்ளி *neruppu-t-taḷḷi,* பெ.(n.) நெருப்புத் தள்ளுமொரு இரும்புக் கருவி (கட்டட.நாமா.40); poker.

[நெருப்பு + தள்ளி. தள்ளி = தள்ளு வதற்குப் பயன்படும் குச்சி, கருவி. நெருப்பைத் தள்ளும் கோல்.]

நெருப்புத்திராவகம் *neruppu-t-tirāvagam,* பெ.(n.) **நெருப்புத் தண்ணீர்** (வின்.) பார்க்க; see *neruppu-t-taṇṇīr.*

[நெருப்பு + திராவகம். Skt.drava → த. திரவம் → திராவகம். திராவகம் = செய்நீர், சாரம்.]

நெருப்புத்துண்டம் *neruppu-t-tuṇḍam,* பெ. (n.) ஒழுக்கத்தில் ஒரு போதும் தவறாதவ-ன்-ள் (உ.வ.); a strict observer of moral and religious principles. *அவள் ஒரு நெருப்புத் துண்டம். அவளிடம் யாரும் விளையாட முடியாது.*

[நெருப்பு + துண்டம். நெருப்புத் துண்டு போல் தீயதை அழிப்பவன்-ள். தவறு செய்யாத, தவறுகள் நெருங்க முடியாதவன்-ள்]

நெருப்புத்தூண் *neruppu-t-tūṉ,* **பெ.**(n.) அடர்ந்து, உயர்ந் தெரியுந் தீப்பிழம்பு (**வின்.**); pillar of fire.

[நெருப்பு + தூண். தூண்போல் உயர்ந்து அடர்ந்து காணப்படும் தீப்பிழம்பு]

நெருப்புப்பட்டபுண் *neruppu-p-paṭṭa-puṇ,* **பெ.**(n.) **1.** தீப்புண்; burns. **2.** நான்கு வகையான தீச்சுட்ட புண் (**1.** நிறமாற்றுப்புண், **2.** கொப்புளப் புண், **3.** தீய்ந்த புண், **4.** அழிபுண்); the four kinds of or degrees of burns viz., **1.** with change of a colour. **2.** one accompained by blister. **3.** black without much pain. **4.** sloughing wound. (**சா.அக.**).

[நெருப்பு + பட்ட + புண்]

நெருப்புப்படு-தல் *neruppu-p-paḍu-,* **20செ.கு.வி.**(v.i.) **1.** நெருப்பால் அழிதல்; to be consumed by fire. *நெருப்புப்பட்டு துணி ஓட்டையாகி விட்டது.* **2.** கடுங்கோடையால் வருந்துதல்; to be consumed with drought. **3.** தெய்வத்தண்டனை முதலியவற்றால் அழிதல் (**வின்.**); to be destroyed, as by divine retribution. *கண்ணகியின் கடுஞ்சினத்தால் நெருப்புப் பட்டு மதுரை அழிந்தது.* **4.** முறையற்ற அரசனின் ஆட்சியால் துன்புறுதல் (**வின்.**); to suffer oppression, injustice, as from a wicked ruler. **5.** விலை முதலியன மிகுதியாதல்; to be abnormal as prices.

[நெருப்பு + படு-தல். நெருப்புப்படுவதால் ஏற்படும் அழிவைப் போல், துன்பத்தைப்போல், கடுங்கோடையும், முறையற்ற அரசனும், விலை ஏற்றமும், மக்களை வாட்டும் தன்மையான வாதலால் நெருப்புப் படுதல் என்ற சொல்லுக்கு மேற்கண்ட பொருள்கள் அமைந்தன.]

நெருப்புப்பற்று-தல் *neruppu-p-paṟṟu-,* **5செ.கு.வி.** (v.i.) *நெருப்புப்பிடி-த்தல்* பார்க்க; see *neruppu-p-piḍi-. வீடு நெருப்புப் பற்றிக் கொண்டது.*

[நெருப்பு + பற்று-தல். பற்றுதல் = பற்றிக் கொள்ளுதல்.]

நெருப்புப்பறக்குஞ்சுரம் *neruppu-p-paṟakkuñjuram,* **பெ.**(n.) சூடும் வலியுமுள்ள காய்ச்சல் நோய்; fever accompanied by excessive heat and burning sensation, Ardent thermal fever. (**சா.அக.**).

[நெருப்பு + பறக்கும் + சுரம்]

நெருப்புப்பிடி-த்தல் *neruppu-p-piḍi-,* **4செ.கு.வி.**(v.i.) தீப்பற்றி யெரிதல் (**உ.வ.**); to catch fire.

[நெருப்பு + பிடி-த்தல்.]

நெருப்புப்புண் *neruppu-p-puṇ,* **பெ.**(n.) **நெருப்புச் சூடு** (**பைஷஜ.**) பார்க்க; see *neruppu-c-cūḍu.*

[நெருப்பு + புண்]

நெருப்புப்பூ-த்தல் *neruppu-p-pū-,* **6செ.கு.வி.**(v.i.) நீறுபூத்தல் (**இ.வ.**); to smoulder, as live charcoal.

[நெருப்பு + பூ-த்தல். நெருப்பின் மேல் சாம்பல் படிந்திருத்தல்]

நெருப்புப்பெட்டி *neruppu-p-peṭṭi,* **பெ.** (n.) தீப்பெட்டி; match box. *நெருப்புப் பெட்டி ஒன்று வாங்கி வா.*

[நெருப்பு + பெட்டி. நெருப்புக் குச்சிகள் வைக்கும் பெட்டி.]



நெருப்புப்பொறி *neruppu-p-poṟi,* பெ. (n.) தீப்பொறி (வின்.); sparks of fire.

[நெருப்பு + பொறி. நெருப்பில் இருந்து கிளம்பும் பொறி.]

நெருப்புமணத்தல் *neruppu-maṇattal,* பெ. (n.) புகை நாற்றம் (வின்.); smell of fire, fumigation.

[நெருப்பு + மணத்தல்]

நெருப்புமரம் *neruppu-maram,* பெ.(n.) தில்லைமரம்; Tillai-tree. (சா.அக.).

[நெருப்பு + மரம். இம்மரம் மிகவும் வெப்பமானது. இதன் நிழல் அல்லது புகை பட்டாலும் கண் குருடாகும். நெருப்புப் போல் வெப்பமானதால் இம்மரம் நெருப்பு மரம் எனப்பட்டது.]

நெருப்புமழை *neruppu-maḻai,* பெ.(n.) ஊழிக் காலத்தில் நீல வண்ணமுகில் பொழியுந் தீமழை (வின்.); rain of fire from the nīla-varṇam clouds, at the universal dissolution.

[நெருப்பு + மழை. உலக அழிவுக் காலத்தில் பெய்யும் நெருப்பாலாகிய மழை.]

நெருப்புமூட்டு – தல் *neruppu-mūṭṭu-,* 5செ.கு.வி.(v.i.) **1.** தீப்பற்ற வைத்தல்; to kindle fire. *நெருப்பு மூட்டிக் குளிர் காய்ந்தான்.* **2.** கலகம் உண்டாக்குதல் (உ.வ.); to arouse a disturbance, to instigate a quarrel. *வீட்டில் நெருப்பு மூட்டி விட்டான். இனி அமைதியைக் காணமுடியாது.*

[நெருப்பு + மூட்டு. நெருப்பை யுண்டாக்கி உணவு சமைத்தலும் உண்டு. நெருப்பை உண்டாக்கிப் பொருள்களை அழித்தலும் உண்டு. அழித்தல் பொருளில் கலகம் உண்டாக்குதல் வந்தது. அஃது அமைதியை அழித்தல் என்பதாம்.]

நெருப்புமூலி *neruppu-mūli,* பெ. (n.) **1.** தீச்சுட்டது போல் எரிச்சலையுண்டாக்கும் ஓர்பூடு, கொடிவேலி; a drug causing burning sensation - lead wort - Plumbago zeylanica. **2.** மிக்க சூட்டை யுண்டாக்கும் மூலி; drug causing intense heat in the system. **3.** கொப்புள மெழுப்பும் மூலி; drug causing blisters. **4.** ஒளி (சோதி)ப்புல்; burning bush. (சா.அக.).

[நெருப்பு + மூலி. நெருப்புச் சூட்டைப் போல் எரிச்சலையுண்டாக்கும் பூடு.]

நெருப்புமேனி *neruppu-mēṉi,* பெ.(n.) நெருப்பைப்போல் சிவந்த உடம்பு; red body as bright as fire. (சா.அக.).

[நெருப்பு + மேனி. நெருப்பைப் போன்ற நிறமுடைய உடம்பு]

நெருப்புவண்டு *neruppu-vaṇḍu,* பெ.(n.) கடித்தால் கொப்புள மெழுப்பும் வண்டு; telini fly canth arides raising blisters. (சா.அக.).

[நெருப்பு + வண்டு. நெருப்பு வண்ண வண்டு.]

நெருப்புவண்ணம் *neruppu-vaṇṇam,* பெ. (n.) சிவந்த நிறம்; red colour.

[நெருப்பு + வண்ணம்]

நெருப்புவிரணம் *neruppu-v-iraṇam,* பெ. (n.) *நெருப்புப் புண்* பார்க்க; see *neruppu-p-puṇ.* (சா.அக.).

[நெருப்பு + Skt-விரணம்]

நெருப்புவிழுங்கி *neruppu-viḻuṅgi,* பெ. (n.) நெருப்புக் கோழி; astrich. (சா.அக.).

[நெருப்பு + விழுங்கி. நெருப்பை உணவாக உட்கொள்ளும் பறவை.]

நெருப்புவிழுங்குகோழி *neruppu-viḻuṅgu-kōḻi,* பெ.(n.) *நெருப்புக் கோழி* (வின்.) பார்க்க; see *neruppu-k-kōḻi.*

[நெருப்பு + விழுங்கு + கோழி. தீத்தணலையே உணவாக உட்கொள்ளும் கோழி.]

நெருப்புவிழுதல் *neruppu-viḻudal,* பெ. (n.) **1.** தீப்பொறி பறக்கை (வின்.); flying of sparks, as from fire-wood, flint or grindstone. **2.** தணலுண்டாகை (உ.வ.); formation of live embers as in an oven. *அடுப்பில் நெருப்பு விழுந்துவிட்டது. இனி விரைவில் சமைக்கலாம்.* **3.** கூரைமேல் தீத்திரள் விழுகை; falling of balls of fire over roofs. **4.** முறைகேடு (அநீதி) முதலியவற்றால் அழிகை; destruction, as by injustice of famine. **5.** நெருப்பினா லழிகை (யாழ்.அக.); being consumed by fire. *நெருப்பு விழுந்து துணி எரிந்து விட்டது.* **5.** தன்னிலை யழிகை (வின்.); discomfiture, disheartenment.

[நெருப்பு + விழுதல். நெருப்புப் பொறி பறந்து, துணி, வீடு முதலியவற்றை அழிப்பது போல் முறையற்ற வழியில் நடப்பவனையும் அழிக்கும். தன்னிலையில் இருந்து மாறியவனையும் அழிக்கும் என்பதையும் இச்சொல் காட்டுகிறது.]

நெருப்பெறும்பு *nerupperumbu,* பெ. (n.) கடித்த விடத்து நெருப்புப்பட்டது போல வலியுண்டாக்கும் ஒருவகைச் சிவப்புச் சிற்றெறும்பு (இ.வ.); a kind of small red ant whose bite is very painful. *நெருப்பெறும்பு கடித்தால் வலி பொறுக்க முடியாது.*

[நெருப்பு + எறும்பு. நெருப்புப் போன்ற சிவப்பு நிறமுடைய எறும்பு.]

நெருப்போடு *neruppōḍu,* பெ.(n.) தட்டார் வேலைக்குரிய நெருப்புச் சட்டி (உ.வ.); chafing dish, used by goldsmith.

[நெருப்பு + ஓடு. ஓடு = சட்டி. தட்டார் பொன்னைச் சுட்டெடுக்கப் பயன்படும் உமியும் நெருப்பும் உள்ள சட்டி.]



நெருமதங்கைக்குறியான் *nerumadaṅgai-k-kuṟiyāṉ,* பெ. (n.) வெட்டிவேர்; cuscus root, Andropogon aromaticus. (சா.அக.).

நெருமு-தல் *nerumu-,* 5செ.குன்றாவி. (&) செ.கு.வி. (v.t. & v.i) **1.** பல்லைக் கடித்தல்; to

grind the teeth, gnash. **2.** பல்லாற் கடித்தல்; to bruise, crush between the teeth.

[நருமு—தல் → நெருமு—தல். நெருமு-தல் = பல்கலைக் கடித்தல்.]

நெருள் *neru!,* பெ. (n.) திணுங்கிய மக்கட் திரள், மக்கட் கூட்டம் (இ.வ.); dense crowd of people. *"யானை போகிற போக்கைப் பார், பார்க்கப் போகிற நெருளைப் பார்"* (பழ.).

[நுல்→ நுள்→ நிள் → நிர் → நெர் → நெரு → நெருள்]

நெரேலெனல் *nerēl-eṉal,* பெ. (n.) விரைவுக் குறிப்பு (திவா.); expr. of suddenness.

நெல்[1] *nel,* பெ. (n.) **1.** உணவுக்குப் பயன்படும் அரிசியைத் தரும் பயிர் வகை; rice plant. *"நெடுங்கதிர் நெல்லின் நாண்மேய லாரும்"* (ஐங்குறு.95). *"நெல்லும் உயிரன்றே நீருமுயிரன்றே மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"* (புறநா.184). *"நெல்லுக் கிரைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம், நானிலத்தில் நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை* (ஔவையார்). **2.** நெல்மணி; grain of paddy. *"நெல்லும் பொரியும்"* (மணிமே.6:95). **3.** உணவு; food. *"நெல்லுண்ட நெஞ்சிற் கோர் நோய்"* (திரிகடு.79). **4.** எட்டு எள்ளளவு கொண்ட நீட்டலளவை (சிலப்.3:100, உரை); standard of linear measures = 8 sesame seeds. **5.** வாகை (அக.நி.); siris. *"நெல்லினா லலக்குங் காலு நிரப்பினான்"* (கம்பரா.ஒற்றுக்கே.11).

ம., க., கோத. நெல்; **துட.** நெசு; **குட.** நெல்லீ

[நுல்(ஒளி) → நெல் = பொன் போல் விளங்கும் தவசம் (கூலம்). "சடைச் செந்நெல் பொன் விளைக்குந் தன்னாடு" (நள.68). "பொன் விளைந்த களத்தூர்" என்னுந் தொடர்களை நோக்கு. நெல்லிற்குச் சொல் என்னும் பெயர் தோன்றியதும் இக்கரணியம் பற்றியே. சுல் → சுல்லி = அடுப்பு, மடைப்பள்ளி. சுல் → சுள் → சுடு → சுடர். சுல் → சொல் → சொலி → சொலித்தல் = எரிதல், விளங்குதல். சொலி → வ.ஜ்வல். நெற்கஞ்சி, நெற்சோறு, நெற்பொரி என்னும் கூட்டுச் சொற்களில் நெல் என்பது நெல்லரிசியைக் குறிக்கும்.]

'நெல்' புல்வகையைச் சேர்ந்த பயிர். இது உலகிலுள்ள எறும்பு முதல் யானை யீறாக உள்ள அனைத்து விலங்குகளுக்கும் உணவாகவுள்ளது. இது நன்செய், புன்செய் நிலங்களில் விளையும் பயிர். இவ்வகை நெற்கள் உருவ வேறுபாட்டினும், உரிசை வேறுபாட்டினும் பலவகைப்படும். இந்தியாவில் 100க்கு மேற்பட்ட வகை நெற்கள் கிடைக்கின்றன. இவற்றின் நிறம் பொன்மை, வெண்மை. இதன் தாயகம் தென்னிந்தியா. இந்தியா, சீனா, பர்மா, சப்பான் போன்ற நாடுகளில் அதிகமாகப் பயிர் செய்யப்படுகிறது.

பெரும்பாலார் உழவைக் கொண்டே எல்லா செல்வங்களையும் பெற்றனர். அரசனும் உழவரிடம் பெற்ற வரியாலேயே அரசாண்டான்.

இவ்வகைப் பெருமை பெற்ற நெல்லின் வகைகள்:

1. அரிக்கிராவி, **2.**அரியான், **3.** அருஞ்சோதி, **4.** அழகியவாணன், **5.** அறுபதாம் குறுவை – 60 நாளில் விளையும் பயிர், **6.** அன்னதானக் குறுவை – மூன்று மாதப் பயிர். **7.** அன்னதானச் சம்பா, **8.** அனுமந்தச் சம்பா, **9.** ஆடிக்கோடை – ஆடியில் அறுவடையாகும் நெல். **10.** ஆவாரம் பூச்சம்பா, **11.** ஆனைக் கொம்பன், **12.** இராசன்னம் – உயர்ந்த நெல் வகை, **13.** இராமன் சம்பா, **14.** இருப்பைப் பூச்சம்பா, **15.** இளங்கார் – இறங்குமோட்டான், **16.** ஈசுரக்கோவை, **17.** ஈர்க்குச் சம்பா, **18.** உருண்டைக்கார் – 4 மாதப் பயிர், **19.** உருண்டைச் சம்பா – 5 மாதப் பயிர், **20.** ஊசிச்சம்பா, **21.** ஒட்டன், **22.** கட்டிச்சம்பா –4 மாதங்களில் பயிராகும் நெல், **23.** கடப்பநெல் – கறுங்குறுவை நெல் மூன்றுமாதப் பயிர், **24.** கடம்பநெல், **25.** கந்தசாலி – உயர்ந்த நெல்வகை, **26.** கந்தபத்தம், **27.** கம்பஞ்சம்பா, **28.** கமுகம் பூச்சம்பா, **29.** கருங்குறுவை, **30.** கருடன் சம்பா, **31.** கருணை வெள்ளை,

32. கல்மணவாரி—4 மாதப்பயிர், 33. கல்லுண்டைச் சம்பா—6 மாதப்பயிர், 34. கலவஞ்சம்பா (சிறுமணிநெல்)— 6 மாதப்பயிர், 35. கலிங்கஞ்சம்பா— 4 அல்லது 5 மாதப்பயிர், 36. கலிவிராயன், 37. கவரிச்சம்பா—5 மாதப்பயிர், 38. கற்றாழைச்சம்பா, 39. கறுத்தகார்—5 மாதப் பயிர், 40. கறுப்பன்—மூன்று மாதப்பயிர், 41. கனகச் சம்பா—உயர்ந்த நெல்வகை. 42. காடைக்கழுத்தன்—5 மாதப்பயிர், 43. காடைச் சம்பா, 44. கார்த்திகைச்சம்பா, 45. கார் நெல், 46. காலிங்கராயன் சம்பா, 47. காளான் சம்பா, 48. கிச்சடி சம்பா, 49. குங்குமச்சம்பா, 50. குடப்பட்சி, 51. குடுப்புக்கார், 52. குண்டுச்சம்பா, 53. குத்தாளை—மானாவாரி நெல், 54. குதிரைவாலிச் சம்பா, 55. கும்பாளைச் சம்பா, 56. குருவிக்கார், 57. குருவிவாலன், 58. குலவாழை—7 அல்லது 8 மாதங்களில் அறுவடையாகும் சம்பா நெல், 59. குழியடிச்சான், 60. குளவாழை—குளக்கசிவு நீரில் பயிராகும் நெல்வகை, 61. குறுவைநெல், 62. குறுஞ்சம்பா, 63. குன்றிமணிச்சம்பா— செந்நிறநெல், 64. கூர்க்கருப்பன்—உயர்ந்த நெல் வகை, 65. கூரன், 66. கைவளைச்சம்பா, 67. கோடைச் சம்பா, 68. சடைச்செந்நெல்—சம்பா வகை நெல், 69. சண்டிக்கார்—கார் நெல்வகை, 70. சம்பாநெல், 71. சரப்பாளிச் சம்பா, 72. சரை நெல், 73. சவர் நாயகம், 74. சாரலி, 75. சித்திரைக் கடப்பு, 76. சித்திரைக் கார், 77. சித்திரைக் காலி, 78. சித்திரையன், 79. சிரசுத கோப்பு, 80. சிலுவைக் கடப்பு – கடப்பநெல் வகை, 81. சிவப்புக் குத்தாளை, 82. சிவப்புச் சிறுமணியான், 83. சிவப்புச் சிறு முறியன், 84. சிவப்பு மிளகுச் சம்பா, 85. சிறுகிட்டாஞ்சி, 86. சிறுகுரும்பை, 87. சிறு குறுவை, 88. சிறுபாளைச் சம்பா, 89. சிறுமணிச்சம்பா, 90. சின்னச்சம்பா, 91. சீரகச் சம்பா, 92. சீரங்கி, 93. சீவன்சம்பா, 94. சீனட்டி, 95. சீனநெல், 96. சுகதாசுச்சம்பா, 97. சுத்தல் சம்பா, 98. சுருணை வெள்ளை, 99. செங்கண்ணி, 100. செங்கணிக்கார், 101. செங்கணிக் குறுவை, 102. செங்கலதை, 103. செஞ்சம்பா, 104. செத்துவிருப்பா நெல், 105. செம்பவளச் சம்பா, 106. செம்பாளை, 107. செம்மிளகிச்சம்பா, 108. செருப்பளிச் சம்பா, 109. செருமலை யரியன், 110. சேமாளைச் சம்பா, 111. சேரலி, 112. சொளி குரும்பை, 113. தங்கச் சம்பா, 114. தட்டார வெள்ளை, 115. திருவரங்கம்—திருவரங்கம் பகுதியில் பயிராவது, 116. தில்லை—சிதம்பரம் பகுதியில் பயிராவது, 117. துய்யமல்லிச் சம்பா, 118. துலுக்கடுவன், 119. துவரன்சம்பா—தென்னெல், 120. தோட்டச் சம்பா, 121. நயேந்திரப் பாலை, 122. நரியன் சம்பா, 123. நரையான், 124. நவரப் புஞ்சை, 125. நவரை, 126. நாவல் நெல், 127. நீலச் சம்பா (நீர்பாய்ச்சல் இல்லாமல் விளைவது), 128. நேத்திரப்பள்ளி, 129. பங்களாச்சம்பா, 130. பஞ்ச பாலை, 131. பரக்கொடை, 132. பரவழச் சம்பா, 133. பலான் சம்பா, 134. பலுக்கினியன், 135. பழனிச்சம்பா, 136. பள்ளக்கருக்காய், 137. பாலன் சம்பா, 138. பிச்சைவாரி, 139. பிசானம், 140. பிசினி, 141. புட்டரிசிநெல், 142. புழுகுச் சம்பா, 143. புளங்கல், 144. புனுகுச் சம்பா, 145. பூம்பாளை, 146. பெங்காளம், 147. பெரிய சம்பா, 148. பொங்கற்சம்பா, 149. பொச்சாலி, 150. பொன்கம்பி, 151. மடங்கல், 152. மடுவிழுங்கி, 153. மணக்கத்தைநெல், 154. மணிச்சம்பா, 155. மல்லிகைச்சம்பா, 156. மலைகுலுக்கி, 157. மானாவாரி, 158. மிளகுச்சம்பா, 159. முட்டைக்கார், 160. மைக்கண், 161. மைச்சம்பா, 162. மோசணம், 163. வரிச்சம்பா, 164. வளைதடிச்சம்பா, 165. வாடைச்சம்பா, 166. வாலான் (குதிரைவாலன்), 167. வெண்ணெல், 168. வெள்ளைக்கார், 169. வெள்ளை மிளகுச் சம்பா.

நெய்பயிருக்கு ஏற்ற எருவகை : எருக்கிலை, கொழுஞ்சி, அவிரி, ஆவிரை, வேப்பிலை, நொச்சி, வாகை, பூவரசு, புங்கு, வாதநாராயணன் இலைகளும், ஆமணக்கு, வேம்பு, வேர்க்கடலை, இருப்பை, புங்கு, புன்னை முதலான பிண்ணாக்குகளும் போடலாம். நிலத்தில் களர் இருந்தால் பாச்சான், பிரண்டை, பனையோலைகளைப் போட்டு மிதித்து அதிகத் தண்ணீர் கட்டினால் களர் எடுபட்டுப்போம். ஆவின் எருவைப் போட்டால் சோறு சுவையாக இருக்கும்.

நெய்பயிருக்கு தக்க நிலம்: நெற்பயிரானது அதிகத் தண்ணீருள்ள இடங்களிலெல்லாம் மிகுதியாக விளையக் கூடினும் களிமண், செம்மண், ஆற்றோரம், மணல்படுக்கை, மிச்சரமண் முதலானவையே இப்பயிருக்கு ஏற்றவை.

நெற்பயிருக்கு வேண்டிய உழவு : "நெல்லுக்கு நான்குழவு" என்னும் பழமொழி நம் நாட்டாருக்குத் தெரிந்த செய்தி. நெல் தொன்றுதொட்டுச் சேற்றில் விளையும் பயிராகையால் இதற்குப் புழுதியுழவு கூடாது. மேலும், மண்மட்க வேண்டியதைக் கருதி நான்கு நாள் விட்டு, விட்டு உழுதல் வேண்டும்.

நெற்பயிரின் வேர் ஒரு விரலம் (அங்குலம்) வளர்ந்து பரவும் தன்மையுடையதாதலால் உழவுக்குத் தக்கபடி பயிர் செழித்து வளரும்.

நெற்பயிர் : இது புன்செய், நன்செய் நிலங்களில் பயிரிடப்படுவது. நிலத்தை நன்றாய்யுழுது புழுதியாக்கி உலர்த்தி நன்றாகக் காய்ந்த விதைகளைப் புழுதியில் விதைப்பர். இது புழுதி கால் பயிர். கழனியை உழுது நீர்ப்பாய்ச்சி எருத்தழை முதலியன போட்டு அவை நன்றாயழுகிய பின் பறம்படித்து நாற்றுக்களைத் தொலைவாக நட்டுப் பயிரிடுவது நடவு. இது நன்செய் பயிர்.

நெல் பற்றிய பழமொழிகள்

நெல் எடுக்கவும் புல் எடுக்கவும் ஆச்சோ?

நெல்லும் உப்பும் பிசைந்து உண்ணக் கூடுமா?

நெல்லுவகை எண்ணினாலும் பள்ளி வகை எண்ண முடியாது.

நெல் இருக்கப் பொன், எள் இருக்க மண்.

நெல்லால் அடித்தால் கல்லால் அடிப்பான்.

நெல்லுக்கடை மாடு கன்று போடட்டும்.

நெல்லுக் காய்க்கிற மரம் கேட்டவன் போல. நெல்லுக் குத்துகிறவனுக்குக் கல்லுப் பரீட்சை தெரியுமா?

நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாயும்.

நெல்லுக்குள்ளே அரிசி.

நெல் விளைகிற நிலமும் தெரியாது, நிலாக் காய்கிற இடமும் தெரியாது.

நெல்² *nel,* பெ. (n.) 1. நெல்லி; Indian gooseberry. 2. கீழாநெல்லி; a small plant with slender green main branches - Phyllanthus niruri. (சா.அக.).

[நெல்லி → நெல். கடைக்குறை]

நெல்காரிகம் *nel-kārigam,* பெ. (n.) கருங்குறுவையரிசி; red rice with black hush. (சா.அக.).

[நெல் + கார் + இகம் – நெல்காரிகம்= காரரிசி, கருங்குறுவையரிசி.]

நெல்குத்து–தல் *nel-kuttu-,* 5செ.குன்றாவி. (v.t.) நெல்லை உரலிலிட்டு உலக்கையால் குத்தி அரிசியாக்குதல்; to pound paddy in a mortar.

[நெல் + குத்து–தல்]

நெல்லறைக்கும் ஆலை வருவதற்கு முன் நெல்லை உரலிலிட்டு உலக்கைக் கொண்டு கையால் குத்தியே அரிசி எடுத்துச் சமைத்து உண்டனர். இவ்வாறு எடுக்கப்படும் அரிசியில் உயிர்ச்சத்துகள் அதிகம் இருக்கும் என்பர் அறிவியலாளர்கள்.

நெல்குற்றுச்சாலை *nel-kuṟṟu-c-cālai,* பெ.(n.) கோவிலில் படையலுக்கு வேண்டிய நெல்லைக் குத்தி அரிசியாக்கும் தொழில் நடக்கும் இடம்; the place where the paddy is pounded.

[நெல் + குற்று + சாலை. குத்து → குற்று. சாலை = இடம்]

திருக்கோயில்களில் திருவமுது படைக்கத் தேவைப்படும் அரிசிக்குரிய நெல்லைத் தூய்மையுடன் குத்தி அரிசியாக்கித் தரும் தொழில் நிகழும் இடம். இதனை 'நெற்குறுசாலை' என்றும் கல்வெட்டுக்களில் காணலாம். நெற்குறு சாலை பார்க்க. குறு → குற்று (கல்.அக.).

நெற்குறுசாலை *neṟkuṟu-šālai,* பெ. (n.) நெல்லைக் குத்தி அரிசியாக்கும் இடம்; a hall is alloted to pound the paddy.

"*உடையார் திருவொற்றியூருடைய நாயனார்க்கு நெற்குறுசாலைக்கு நெற்குற்றக் கொண்டு விட்ட பெரிய நாச்சியையும் இவள் மகள் மாரியையும்*" (தெ.க.தொ.4:558).

[நெல்குத்தும் சாலை → நெல்குற்றுச் சாலை → நெற்குறுசாலை.]

திருக்கோயில்களில் திருவமுதுக்குரிய நெல்லை நாள்தோறும் அளவுப்படி குத்தி அரிசியாக்கித் தரும் தொழிற்சாலை. இச்சாலையில் நெல் குற்றுதற்கு நிலையாகப் பெண்கள் அமர்த்தப் பெறுதல் வழக்காம். (கல்.அக.).

நெல்மணி *nel-maṇi,* பெ.(n.) நெல்; paddy seed. (சா.அக.).

[நெல் + மணி]

நெல்முளைக்கிருமி *nel-muḷai-k-kirumi,* பெ.(n.) சளியால் (சிலேட்டுமத்தால்) இரைப்பையில் தோன்றி உள்ளாகவே உலாவும் ஒருவகைப் பூச்சி; a very small worm or organism found to be moving about in the stomach, the existence of which is due to phlegmatic causes. (சா.அக.).

[நெல் + முளை + Skt. கிருமி]

நெல்முறி *nel-muṟi,* பெ. (n.) 1. சரிக்குச்சரி விளைவில் இருந்து (மாசூலிலிருந்து) வரிநெல்லைத் திட்டப்படுத்தி அவ்வவ் வாண்டு நடப்பு விலையாற் பணமாக்கிச் செலுத்தி வந்த வரி (R.T.); a system of assessment in Tanjore under which each village was assessed with a definite quantiy of grain calculated on the average produce of past years and convertible into money rent at the current market price in each year. 2. நெல்லுமுறி பார்க்க; see *nellu-muṟi.*

[நெல் + முறி. முறி = ஆவணம், பற்றுச் சீட்டு. முறிதல் = தன்மை மாறுதல், முற்றுதல்]

நெல்லடை *nel-l-aḍai,* பெ. (n.) பத்திலொரு பங்காய் நெல்லாகச் செலுத்தும் அரசிறை (யாழ்ப்.); tithe of paddy given as revenue.

[நெல் + அடை. அடை = நிலவரி]

நெல்லம்புல் *nel-l-am-bul,* பெ.(n.) வைக்கோல் (வின்.); rice - straw.

க. நெல்லுகுல்லு

[நெல் → நெல்லம் + புல்.]

நெல்லரி *nel-l-ari,* பெ. (n.) அரியப்பட்ட கைப்பிடியளவான நெற்கதிர்; sheaf of rice-corn.

[நெல் + அரி. அரி = கைப்பிடிக் கதிர், கதிர்க் குவியல்.]

நெல்லரிகிணை *nel-l-ari-kiṇai,* பெ.(n.) மருதநிலப் பறை வகை (இறை. களவி.1:18); harvest drum of the agricultural tract.

[நெல்லரி + கிணை. கிணை = மருதநிலப் பறை.]

நெல்லரிசி *nellariśi,* பெ.(n.) நெல்குத்திய அரிசி; rice from husked paddy. (சா.அக.).

[நெல் + அரிசி.]

நெல்லவல் *nellaval,* பெ. (n.) அரிசியவல்; pounded flat rice (flaked rice) obtained from fried paddy. (சா.அக.).

[நெல் + அவல். நெல்லை அவித்து நசுக்கி இடித்துப் பெறும்பொருள்.]

உள்ளத்தில் பள்ளம் விழுவதை அவலம் என்பர். அவல் + அம். அவித்த நெல்லை பள்ளமாய் இடித்துப் பெறுவதால் அவல் என்று பெயர். கவலை ஏற்றம் என்பது பள்ளநீர் ஏற்றுவது பற்றி வருவது போல் கவல் + ஐ மனக்கவலை குறிக்கும்.

நெல்லளவு *nellaḷavu,* பெ. (n.) நெல்லின் எடையளவு; paddy grain weight. (சா.அக.).

[நெல் + அளவு]

நெல்லாயம் *nel-l-āyam,* பெ. (n.) நெல்லாகக் கொடுக்கும் அரசிறை; revenue paid in paddy. "*நாற்பாக் கெல்லைக்கும் உட்பட்ட கடமையும் பாடிகாவலும் சாரிகையும் வெட்டிவரி கொள்வரியும் உட்பட்ட எப்பேற்பட்ட நெல்லாயங்களும்*" (தெ.க.தொ.4.648).

[நெல் + ஆயம். ஆயம் = வரி, வருவாய், குடியிறை, கடமை]

நெல்லாயம் : அரசு நெல்லாகப் பெறும் வரி. தவசங்களை ஒரு இடத்திலிருந்து

மற்றோரிடத்திற்குச் சாலை வழியாகக் கொண்டு செல்லுங் காலத்தில் அதற்குரிய வரியை நெல்லாக அரசு பெறுவது. (கல்.அக.).

நெல்லானி *nellāṉi,* பெ. (n.) வம்மி மரவகை (L.); guinea peach.

நெல்லி *nelli,* பெ. (n.) **1.** மரவகை; emblic myrobalan. *"சிறியிலை நெல்லி"* (ஐங்குறு.334). *உள்ளங்கை நெல்லிக்கனி.* **2.** திரிபலை யிலொன்றான நெல்லிக்காய் (பதார்த்த.672); fruit of emblic myrobalan. *நெல்லிக்காய் ஊறுகாய் உடலுக்கு நல்லது.*

ம., க., து., குட., தெ. நெல்லி; **பர்.** நெல்ல; **கோண்.** நல்லி, நெல்லி.

மறுவ. காட்டு நெல்லி, தோப்பு நெல்லி, ஆமலகம், தாத்திரி.

இது இரட்டை விதையிலைப் பயிரிகளில் ஆமணக்குக் குடும்பத்தைச் சார்ந்தது. இந்தியாவிலும், இலங்கை, மலேயா. மலேயாத் தீவுகள், சீனா ஆசிய நாடுகளிலும் உள்ளது. இது தானாகவும் வளரும். மக்கள் பயிர் வைப்பதும் உண்டு. இஃது ஒரு சிறு அல்லது நடுத்தர மரம். மரம் கோணலாகவும் நெருடுள்ளதாகவும் இருக்கும். இதன் பட்டை சாம்பல் நிறமாக அல்லது வெளுப்பான பழுப்பு நிறமாக இருக்கும்.

இதன் இலைகள், பார்வைக்குக் கூட்டிலைகள் போலத் தோன்றும். உண்மையில் கூட்டிலைகளாகத் தோன்றுபவை சிறிய கிளைகள். அக்கிளைகளிலே மிகச் சிறிய தனியிலைகள் மாற்றொழுங்கில் பொருந்தியிருக்கும். இதன் பூக்கள் ஒரு பாலின. ஆண் பூ, பெண் பூ இரண்டும் ஒரே மரத்தில் ஒவ்வொரு சிறு கிளையிலும் உண்டு. பூக்கள் மிகச் சிறியவை. எளிதில் உதிர்ந்து விடும். இதன் கனி உள்ளோட்டுச் சதைக் கனி. ஏறக்குறைய உருண்டையாக இருக்கும். நெடுக்கில் பள்ளமான வரிகள் காணப்படும். ஆறு பிரிவுகளாக இருக்கும், பச்சையாக அல்லது சிறிது மஞ்சள் கலந்ததாக அல்லது சிவப்புச் சாயையுடையதாக இருக்கும். கனியின் சதை துவர்ப்பாகவும், கசப்பாகவும், புளிப்பாகவும், இனிப்பாகவும் இருக்கும்.

இம்மரம் கோடையில் பூக்கும். கனிகள் அடுத்த குளிர்காலத்தில் முதிரும். கனியைப் பச்சையாகவும் உண்ணலாம், சமைப்பதும் உண்டு. மிகுதியும் ஊறுகாய் போடுவார்கள். இதில் சத்துப் பொருள்கள் மிகுதியும் உண்டு.

நெல்லிக்கனி நாட்டு மருத்துவத்தில் பெரிதும் சிறந்த பொருள். இது துவர்ப்பி; குளிர்ச்சியை யுண்டாக்கி, மலமிளக்கி, சிறுநீர்ப் பெருக்கியாகவும் செயல்படும்.

இம்மரம் எங்கும் வளரும் தன்மைத்து; கோணலாக இருக்கும். மனித உடலைப் போல் கனமுள்ளதாய் இருக்கும். பூக்கும் மரவகையைச் சார்ந்தது, இலைக்காம்பு நீளமானது. காய்கள் உருண்டையாக சதைப் பற்று மிக்கு இருக்கும். கொட்டை முக்கோண வடிவுள்ளது. பூக்கள் சிறியவை, பச்சை கலந்த மஞ்சள் நிறமுள்ளவை. மேழம் (சித்திரை) முதல் நளி (கார்த்திகை) வரை பூக்கும். இதன் காய் குளிர்ச்சிக்காகவும், பித்தத்தைப் போக்கவும் பயன்படுகிறது. இம்மரத்தின் இலை, பூ, பட்டை, காய் அனைத்தும் மருந்தாகப் பயன்படுகிறது. இதன் காயை வற்றல் செய்தும் பயன்படுத்துவர்.

நெல்லி வகைகள் : 1. நில நெல்லி, 2. தோப்பு நெல்லி, 3. காட்டு நெல்லி, 4. கரு நெல்லி, 5. கொடி நெல்லி, 6. சீமை நெல்லி, 7. அரு நெல்லி, 8. செந்நெல்லி, 9. மேலா நெல்லி (கருநெல்லி). 10. கீழாநெல்லி, 11. நீர்நெல்லி (கருநெல்லி), 12. சிறுநெல்லி (அருநெல்லி), 13. வெண்ணெல்லி. (சா.அக.).



நெல்லிக்கந்தகம் *nelli-k-kandagam,* பெ. (n.) **நெல்லிக்காய்க் கந்தகம்** பார்க்க; see *nelli-k-kāy-k-kandagam.* (சா.அக.).

நெல்லிக்கா *nellikkā,* பெ. (n.) தஞ்சை மாவட்டவூர்; a village in Tanjore district.

சம்பந்தர் பாடல் பெற்றவூர், நெல்லி மரங்கள் அடர்ந்து பூங்கா போல ஆனமை பற்றி அமைந்த பெயர்.

நெல்லிக்காய் *nelli-k-kāy,* பெ.(n.) தின்றபின் நீர் குடித்தால் இனிப்புச் சுவை தரும் பச்சை நிறச் சிறிய உருண்டை வடிவக் (நெல்லி மரத்தின்) காய்; the fruit of Indian goose berry - Emblica myrobalan. (சா.அக.).

[நெல்லி + காய்]

மஞ்சள் நிறமும் சதைப்பற்றும் மிக்க காய். இது புளிப்பும், துவர்ப்பும் உடையது. இக்காயை வடையாகவும், பச்சடியாகவும், துவையலாகவும் செய்து சாப்பிட குமட்டல் (வாந்தி), தலை சுற்றல், சளி, முதலிய நோய்கள் நீங்கும். இதன் வற்றல் சூடு, பித்த மயக்கம், ஒக்காளம் முதலிய நோய்கள் நீங்கும். பச்சை நெல்லிக்காயை அரைத்துத் தொப்புளின் கீழ்த் தடவ நீர்க்கட்டு உடையும். (சா.அக.).



நெல்லிக்காய்த்தயிலம் *nelli-k-kāy-t-tayilam,* பெ.(n.) **நெல்லிக்காயெண்ணெய்** பார்க்க; see *nelli-k-kāy-eṇṇey.* (சா.அக.).

[நெல்லிக்காய் + தயிலம்]

நெல்லிக்காய்க்கந்தகம் *nelli-k-kāy-k-kandagam,* பெ.(n.) கந்தக வகை (வின்.); a kind of Sulphur.

[நெல்லி + காய் + கந்தகம். கந்தகம் = வெடி மருந்து. தீக்குச்சி செய்யப் பயன்படும் கார நெடியுள்ள மஞ்சள் நிறக் கனிமப்பொருள்.]

நெல்லிக் காயைப் போல் மஞ்சள் நிறமான கந்தகம். இது படிகாரத்தைப்போல் துண்டு துண்டுகளாகக் கிடைக்கும். மற்ற கந்தகங்களை விடத் தூய்மையானது. இது குட்டம், வல்லைக்கட்டி, வயிற்றுவலி, பெண்ணோய் முதலியவற்றிற்கு மருந்தாகப் பயன்படுகிறது. (சா.அக.).

நெல்லிக்காய்க்குண்டு *nelli-k-kāy-kuṇḍu,* பெ.(n.) **நெல்லிக்காய்மணி** (வின்.) பார்க்க; see *nelli-k-kāy-maṇi.*

நெல்லிக்காய்சர்பத் *nelli-k-kāy-šarpad,* பெ.(n.) பச்சை நெல்லிக் காயினின்று செய்யும், சருக்கரைப்பாகு சேர்த்த ஒரு குடிநீர். இது உடம்பிற்குக் குளிர்ச்சியைத் தருவதோடு சிறுநீரை (மூத்திரத்தை)ப் போக்கும்; the shrup prepared from fresh fruit, it is a cooling drink which is said to have diuretic effect. *நெல்லிக்காய் சுவைநீர் (சர்பத்) சாப்பிட்டால் உடல் சூடு தணியும்.* (சா.அக.).

[நெல்லிக்காய் + சர்பத்]

Skt. சர்பத்து → த. குடிப்பு, குடிநீர்.

நெல்லிக்காய்ச்சாறு *nelli-k-kāy-c-cāṟu,* பெ.(n.) பச்சை நெல்லிகாயினின்று பிழிந்த சாறு. இது மலத்தை இளக்கிச் சிறுநீரை (மூத்திரத்தை)ப் போக்கும் குணமுள்ளது; குளிர்ச்சியையும் தரும்; juice extracted from emblic myrobalam. It is a laxative and diuretic. (சா.அக.). *நெல்லிக்காய்ச்சாறு குளிர்ச்சியைத் தரும்.*

[நெல்லிக்காய் + சாறு]

நெல்லிக்காய்த் துவையல் *nelli-k-kāy-t-tuvaiyal,* பெ.(n.) பச்சை நெல்லிக்காயை அடுப்புக் கும்பியில் செருகி, நீர்வற்றிய பின் கொட்டை நீக்கி அத்துடன் கொத்த மல்லியிலை, கொப்பரைத்தேங்காய், வெங்காயம்,

பூண்டு, உப்பு, பச்சை மிளகாய் முதலியவற்றைத் திட்டப்படிச் சேர்த்து, பழச்சாறு விட்டரைத்துச் செய்யும் துவையல்; condiment paste of emblic myrobalan. It is a paste prepared in the kitchen in the following manner. The fruit is burried in the hot ashes of the oven and taken out after sometime when the water is completely dried out. The nut is removed and to the pulp is added corriander leaves, dried cocoanut, onion, garlic, common salt, green chillies etc., and ground into a paste with the juice of lime or lemon. *நெல்லிக்காய் துவையல் சாப்பிட்டால் பசியைத் தூண்டும், சூட்டைத் தணிக்கும், பித்தம் குறையும்.* (சா.அக.).

[நெல்லி + காய் + துவையல்]

நெல்லிக்காய்ப்பற்று *nelli-k-kāy-p-paṟṟu,* பெ.(n.) கொட்டை நீக்கிய பச்சை நெல்லிக்காயை அரைத்துப் போடும் பற்று. தொப்புளின் கீழ்பற்றுப் போட சிறுநீர்ப்பை (மூத்திரப்பை) அழற்சி நீங்கும்; a paste of Indian gooseberry after removing the nut is a useful external application over the public region in irritability or inflammation of the bladder. *நெல்லிக்காய்ப்பற்று சிறுநீர் (மூத்திர) நோயைப் போக்கும்.* (சா.அக.).

[நெல்லிக்காய் + பற்று]

நெல்லிக்காய்மணி *nelli-k-kāy-maṇi,* பெ. (n.) நெல்லிக்காய் போன்ற மணிகளாலமைந்த கழுத்தணி (வின்.); gold beads of a necklace in the form of nelli fruit.

[நெல்லி + காய் + மணி. மணி = கழுத்தணி, அணிகலன்.]

நெல்லிக்காய்முத்து *nelli-k-kāy-muttu,* பெ.(n.) கழுத்தணி வகை (தெ.க.தொ.8,59); a kind of necklace.

[நெல்லிக்காய் + முத்து. நெல்லிக்காய் போன்ற உருக்களைக் கோத்த கழுத்தணி]

நெல்லிக்காய்முறப்பா *nelli-k-kāy-muṟappā,* பெ.(n.) நெல்லிக்காயைக் கொட்டை நீக்கித் தறித்துத் தேனிலிட்டு ஊறவைக்கும் உ(யு)னானி மருத்துவமுறை. இதனால் காய்ச்சல், தாகம் நீங்கும்; a Unani medical preparation in which the fresh emblic myrobalan is deprived of its nut and then cut in small pieces and preserved in honey the whole fruit is also preserved in honey. *நெல்லிக்காய்முறப்பா நா வறட்சியை நீக்கும்.* (சா.அக.).

[நெல்லிக்காய் + முறப்பா]

நெல்லிக்காய்மூட்டை *nelli-k-kāy-mūṭṭai,* பெ.(n.) ஒற்றுமையற்றவர்; a body of persons wanting in solidarity. *கலவரத்தால் நெல்லிக்காய் மூட்டை சிதறியது போல் கூட்டம் கலைந்து ஓடியது.*

[நெல்லி + காய் + மூட்டை. மூட்டை = பொதி, உள்ளே பண்டம் வைத்துக் கட்டப்பட்ட கட்டு. நெல்லிக்காயை மூட்டையாக் கட்டினாலும் அவைகள் ஒன்றாகாது. தனித் தனியாகவே இருக்கும். அதுபோல ஒற்றுமை யற்றவர்கள் கூட்டமாக இருந்தாலும், அவர்களுள் ஒற்றுமை இல்லை. நெல்லிக்காய் கொட்டியதும் சிதறி ஓடுவதுபோல் ஒற்றுமை இல்லாமல் சிதறி ஓடுவர்.]

நெல்லிக்காயடை *nelli-k-kāyaḍai,* பெ. (n.) பச்சை நெல்லிக்காயைக் கொட்டை நீக்கி அரைத்து அடையாகத் தட்டிக் காய வைத்தது; a thin round cake prepared by grinding the pulp of the fresh Indian goose berry and making it like a cake and drying it under

the sun. *நெல்லிக்காயடை உடலுக்கு நல்லது, தலைச் சுற்றல், உவட்டல் (வாந்தி) நீங்கும்.* (சா.அக.).

[நெல்லிக்காய் + அடை]

நெல்லிக்காயரிட்டம் *nelli-k-kāyariṭṭam,* பெ. (n.) நெல்லிக்காய்ச் சாற்றுடன் தேன், திப்பிலி, சருக்கரை சேர்த்துக் கொதிக்க வைத்துச் சாடியில் ஊற்றிச் சில நாள் புளிக்க வைத்து எடுக்கும் மருந்து. இது காமாலை, வயிற்று வலி, இருமல் முதலியவற்றைக் குணமாக்கும்; fermented liquor of emblic myrobalan is prepared as follows, fresh juice of the fruit mixed with 1/8 quantity of honey, powdered long pepper and sugar is boiled sufficiently for a while and than allowed to ferment in an earthern jar. It is prescribed for jaundice, dyspepsia, indigestion, cough etc. (சா.அக.).

[நெல்லிக்காய் + அரிட்டம். அரிட்டம் = கள், புளிப்பேறிய நீர்]

நெல்லிக்காயூறுகாய் *nelli-k-kāyūṟu-kāy,* பெ.(n.) பச்சை நெல்லிக்காயை உப்பிலிட்டு ஊறப் போட்டு, அல்லது முழுக்காயோடு உப்பும், சாந்தும் (மசாலையும்) சேர்த்து நல்லெண்ணெயில் ஊறப்போட்டு பதப்படுத்தி செய்யும் ஊறுகாய்; pickle of emblic myrobalan simply soaked in common salt and condiments added to it and preserved in gingelly oil. The fruits may be preserved with the common salt only. *நெல்லிக் காயூறுகாய், தலைச்சுற்றல் வாந்தி, சளி போன்றவற்றைக் குணபடுத்தும்.* (சா.அக.).

[நெல்லிக்காய் + ஊறுகாய்]

நெல்லிக்காயெண்ணெய் *nelli-k-kāyeṇṇey,* பெ.(n.) நெல்லிக்காய்ச் சாற்றுடன் மற்ற கடைச்சரக்குகளை முறைப்படி கலந்து காய்ச்சி வடித்த எண்ணெய்; medicated oil prepared with the juice of emblic myrobalan as the chief ingredient with other bazaar drugs added to it and then boiled down as per rules laid down. *நெல்லிக்கா யெண்ணெய் தலைமயிர் வளர உதவும்.* (சா.அக.).

[நெல்லிக்காய் + எண்ணெய்]

நெல்லிக்காயெழுத்தாணி *nelli-k-kāy-eḻuttāṇi,* பெ.(n.) எழுத்தாணி வகை (வின்.); a kind of iron style, with head like nelli fruit.

[நெல்லிக்காய் + எழுத்தாணி. தலைப்பகுதி நெல்லிக்காய் போல் உருண்டை வடிவான எழுதும் ஆணி, எழுதுகோல்.]

நெல்லிக்குப்பம் *nelli-k-kuppam,* பெ.(n.) தென்னிந்தியாவில் தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்தில் கடலூருக்கு அருகில் உள்ள ஊர்; a village in Cuddalore district near in Cuddalore. சருக்கரைத் தொழிற் சாலை உள்ள ஊர்.

[நெல்லி + குப்பம். நெல்லி மரங்கள் நிறைந்த ஊராக இருந்திருக்கும்.]

நெல்லிச்சாந்து *nelli-c-cāndu,* பெ.(n.) காய்ந்த நெல்லியின் அரைத்த விழுது; paste of dried nelli fruit. "*வியன்காய் நெல்லிச் சாந் தரைத்து*" (சீவக.2692).

[நெல்லி + சாந்து. சாந்து = அரைத்த கூழ் போன்ற பொருள், விழுது.]

நெல்லிச்சாறு *nelli-c-cāṟu,* பெ. (n.) நெல்லிக்காய்ச் சாறு பார்க்க; see *nelli-k-kāy-c-cāṟu,* (சா.அக.).

[நெல்லி + சாறு]

நெல்லிச்சி *nellicci,* பெ. (n.) வரிக் கூத்து வகை (சிலப்.3:13, அரும்.); a masquerade dance.

[நெல்லி + சி]

நெல்லிக்காய் உருள்தல் போல் பெண்கள் ஆடும் கூத்தாகலாம்.

நெல்லிடை *nellidai,* பெ. (n.) நெல்லினளவு; the weight of a paddy grain. *ஒரு நெல்லிடை அளவு மருந்து கொடுத்தால் நோய் நீங்கி விடும்.* (சா.அக.).

[நெல் + எடை – நெல்லெடை → நெல்லிடை. நெல்லெடை பார்க்க.]

நெல்லித்தாளி *nelli-t-tāḷi,* பெ. (n.) செம்பை; sesban, Coronilla sesban. (சா.அக.).

நெல்லித்துத்தி *nelli-t-tutti,* பெ. (n.) ஒருவகைப் பூடு (யாழ்.அக.); a kind of plant.

நெல்லிப்பசை *nelli-p-pašai,* பெ.(n.) நெல்லிக்காய்ப் பற்று பார்க்க; see *nelli-k-kāy-p-paṟṟu.* (சா.அக.).

[நெல்லி + பசை]

நெல்லிப்பருப்பு[1] *nelli-p-paruppu,* பெ. (n.) நெல்லிக் கொட்டையின் பருப்பு; the kernel inside the nut of emblic myrobalan. (சா.அக.).

[நெல்லி + பருப்பு]

நெல்லிப்பருப்பு[2] *nelli-p-paruppu,* பெ. (n.) நெல்லி முள்ளி (இ.வ.) பார்க்க; see *nelli-muḷḷi.*

நெல்லிப்பூ *nelli-p-pū,* பெ. (n.) நெல்லி மரத்தின் பூ. இது வெப்பத்தைத் தணித்து மலத்தை இளக்கும்; flowers of emblic myrobalan. They are refrigerent and aperient. *நெல்லிப்பூ சாப்பிடு, மலத்தை இளக்கும்.* (சா.அக.).

[நெல்லி + பூ]

நெல்லிமாதிகம் *nelli-mādigam,* பெ. (n.) நெல்லிப்பட்டை; the bark of Indian gooseberry tree, Emlica officinalis. (சா.அக.)

நெல்லிமுள்ளி *nelli-muḷḷi,* பெ. (n.) காய்ந்த நெல்லித் தோல் (பதார்த்த.976); dried flesh of the emblic myrobalan.

[நெல்லி + முள்ளி. முள்ளி = தோல், வற்றிய தோல்.]

நெல்லிமுள்ளிலேகியம் *nelli-muḷḷi-lēgiyam,* பெ.(n.) நெரு நெல்லி வற்றலைக் கொண்டு செய்யும் இளகியம். இது காமாலை, பித்த நோய், சோகை முதலியவற்றைக் குணமாக்கும்; an electuary prepared with the dried fruits of emblic myrobalan as the chief ingredient as per process laid down in Agastiya Vallathi. It is said to cure dropy anaemia etc. (சா.அக.)

[நெல்லி + முள்ளி + இளகியம்]

நெல்லிமுளி *nelli-muḷi,* பெ.(n.) நெல்லி முள்ளி(வின்.) பார்க்க; see *nelli-muḷḷi.*

[நெல்லி + முளி. முளி = வற்றிய தோல். முள்ளி → முளி – இடைக்குறை.]

நெல்லிலக்கம் *nel-l-ilakkam,* பெ. (n.) நெல் அளவு வாய்ப்பாடு (M.M.) ; reckoning by grains instead of abstract figures, opp. to. poṉ-ṉ-illakkam.

[நெல் + இலக்கம். முகத்தலளவு வாய்ப்பாடு. இலக்கம் = எண், எண்குறி, வாய்ப்பாடு.]

நெல்லிலக்கவுட்பிரிவு

1 செவிடு	4 மரக்கால்
2 செவிடு	(1 தூணி)
3 செவிடு	5 மரக்கால்
4 செவிடு	6 மரக்கால்
ஆழாக்கு	7 மரக்கால்
(5 செவிடு)	8 மரக்கால்
உழக்கு	(இருதூணி)
மூவாழக்கு	9 மரக்கால்
உரி (1/2 படி)	10 மரக்கால்
மூவுழக்கு	11 மரக்கால்
7 ஆழாக்கு	12 மரக்கால்
1 படி	(1 கலம்)
1 மரக்கால்	13 மரக்கால்
(8 படி)	14 மரக்கால்
பதக்கு	15 மரக்கால்
(2 குறுணி)	16 மரக்கால்
முக்குறுணி	20 மரக்கால்

(கணக்கதி.பக்.20)

நெல்லிலாச்சம் *nel-l-ilāccam,* பெ. (n.) புன்செய் நில அளவுவகை (வின்.); a land measure for dry-fields.

[நெல் + இல் + இலாச்சம். இலாச்சம் = நில அளவுவகை. நெல் விளையாத புன்செய் நில அளவு வகை. இல் – எதிர்மறை இடைநிலை]

நெல்லிவட்டு *nelli-vaṭṭu,* பெ. (n.) நெல்லிக் காயாகிய விளையாட்டுக் கருவி வகை; game-pieces of nelli fruits. *"கல்லாச் சிறாஅர் நெல்லிவட்டாடும்"* (நற்.3).

[நெல்லி + வட்டு. வட்டு = விளையாட்டுக் கருவி வகை]

நெல்லிவற்றல் *nelli-vaṟṟal,* பெ. (n.) காய வைத்த நெல்லிக்காய். இது ஒரு கடைச் சரக்கு. இதில் துவர்ப்பு நீர் அதிக அளவில் இருப்பதால் அரத்த ஒழுக்குக் குணமாகும். இதைத் தண்ணீரில் ஊறப் போட்டு வைத்து அத்தண்ணீரை இறுத்துக் கண்ணோய்க்குப் பயன்படுத்தலாம்; the dried fruit of emblic myrobalan. It is a bazaar drug containing a large proportion of gallic acid and is therefore very useful in haemorrhage. It is immersed in water for a whole night and the infusion so obtained is used as collyrium in opthalmia. (சா.அக.).

[நெல்லி + வற்றல்]

துயில் நீங்கியவுடன் அதிகாலையில் நெல்லி வற்றல், தான்றி, கடுக்காய் ஊறியநீரில் சூடத்தைக் கரைத்துக் கண்ணைக் கழுவுவது தென்னாட்டுப் பழக்கம்.

நெல்லிவேர் *nelli-vēr,* பெ.(n.) நெல்லி மரத்தின் வேர்; root of emblica officinelis. (சா.அக.).

[நெல்லி + வேர்]

நெல்லிற்புதை–த்தல் *nelliṟpudai-,* 4 செ. குன்றாவி. (v.t.) நெல்லுக்குள் சில பொருட்களை அல்லது மருந்துகளைப் புதைத்து வைத்தல்; preserving by burying under the heap of paddy for sometime by generally for forty days. *மருந்தை நெல்லிற் புதைத்து 40 நாள் சென்ற பின் சாப்பிட நோய் குணமாகும்.* (சா.அக.).

[நெல் + இல் + புதை–த்தல்.]

நெல்லினூர் *nelli-ṉūr,* பெ. (n.) சாலியூர்; a village name. *"சீர்சான்றவுயர் நெல்லி னூர் கொண்டவுயர் கொற்றவ"* (மதுரை.87,88).

[நெல் + இன் + ஊர்]

சாலி = நெல். சாலி + ஊர். சாலியூர் நெல் அதிகமாக விளைந்த ஊராகலாம். சாலியூர் என்பது மதுரைக் காஞ்சியில் நெல்லினூர் என்று வந்துள்ளது.

நெல்லு *nellu,* பெ. (n.) நெல் பார்க்க; see *nel.* "*நெல்லு நீள்வயல்*" (தேவா.466,7). *நெல்லுச் சோறு, நெல்லுமூட்டை.*

[நெல் + உ – நெல்லு (பே.வ.). உ –சாரியை]

நெல்லுக்கட்டு–தல் *nelliu-k-kaṭṭu-,* 5செ.கு.வி.(v.i.) **நெல்லுப்பிடி–1** பார்க்க; see *nellu-p-piḍi-1.*

[நெல் → நெல்லு + கட்டு. கட்டுதல் = கட்டி வைத்தல். நெல் → நெல்லு – பேச்சு வழக்கு.]

நெல்லுப்பருத்தி *nellu-p-parutti,* பெ. (n.) பருத்தி வகை (M.E.R.1915, P.107); a kind of cotton.

[நெல் → நெல்லு + பருத்தி]

நெல்லுப்பிடி–த்தல் *nellu-p-piḍi-,* 4செ.கு.வி. (v.i.) **1.** நெல்லைக் கட்டி வைத்தல் (வின்.); to lay up paddy in store. *மூட்டையில் நெல்லைப் பிடித்து அடுக்கி வைக்க வேண்டும்.* **2.** நெல்லை மிகுதியாக விலைக்கு வாங்குதல்; to buy paddy in large quantities for sale. *நெல்லுப்பிடித்து வாணிகம் செய்து முன்னேறியவன் இவன்.*

[நெல் → நெல்லு + பிடி. பிடித்தல் = விலைக்கு வாங்குதல், மூட்டையில் பிடித்தல்.]

நெல்லுப்புல் *nellu-p-pul,* பெ. (n.) சாமை (M.M.); little millet.

[நெல் → நெல்லு + புல். புல் = புன்செய் தவசம், புல்லரிசி. நெற்பயிரைப் போல் தோன்றும் சாமை வகை.]

நெல்லுப்புல்லு *nellu-p-pullu,* பெ. (n.) **1.** உணவு தவச வகைகள்; edible grains. *நிலத்தில் நெல்லுபுல்லு ஏதாச்சம் போட்டியா?* **2.** ஒருவகைப் புஞ்செய்ப் பயிர், குதிரை வாலி (A); poor-man's millet.

[நெல்லு + புல்லு. நெல் → நெல்லு (பே.வ.) புல் → புல்லு (பே.வ.). நெல் = நன்செய்ப் பயிர். புல் = புன்செய்ப்பயிர்.]

நெல்லுப்பொரி *nellu-p-pori,* பெ. (n.) **நெற்பொரி** பார்க்க; see *neṟpori.*

நெல்லுமா *nellu-mā,* பெ.(n.) நென்மா (நாநார்த்த.2,உரை); rice flour.

[நெல் + மா. மா = மாவு]

நெல்லுமுறி *nellu-muṟi,* பெ. (n.) முற்றின நெற்பயிர் (வின்.); ripe paddy crop.

[நெல் → நெல்லு + முறி. முறி = இளமைத் தன்மை மாறி முதிர்ந்த பயிர்.]

நெல்லுறை *nellu-l-uṟai,* பெ. (n.) **1.** அளந்த நெல்லளவைக் குறிக்க இடும் பிடிநெல் (தஞ்சை); handful of paddy put down as a mark in measuring. **2.** நெற்கதிர்; a receptacle for paddy.

[நெல் + உறை. உறை = ஓரளவு, அளவுக் குறி, பண்டம் பெய்யும் கூடு, குதிர்]

நெல்லூர்ப்புதுமாடை *nellūr-p-pudumāḍai,* பெ. (n.) காசுவகை (M.E.R.116 of 1929–39); a coin.

[நெல்லூர் + புதுமாடை. புதுமாடை = புதிய காசு. நெல்லூர்ப் பகுதியில் புதிதாக வழங்கிய காசாகலாம். மாடு = செல்வம். "மாடல்ல மற்றை யவை" (குறள்,400).]

நெல்லூர்மாடை *nellūr-māḍai,* பெ. (n.) காசுவகை (M.E.R.356 of 1919B); a coin.

[நெல்லூர் + மாடை. மாடை = காசு வகை. நெல்லூர்ப் பகுதியில் வழங்கிய காசுவகை.]

நெல்லெடை *nel-l-eḍai,* பெ.(n.) பொன் நிறுக்க வுதவுஞ் சிறிய எடை வகை ; weight of a grain of paddy, used as a unit in weighing gold. ஒரு நெல்லெடை = ஒரு வீசம் (கணக்கதி.பக்.23).

[நெல் + எடை.]

நெல், நிறுத்தல் அளவு, நீட்டலளவு, முகத்தலளவு ஆகியவற்றிற்கு மூலப் பொருளாக அமைந்துள்ளது. 360 நெல் = 1 செவிடு; 5 செவிடு = ஒரு ஆழாக்கு. இது முகத்தலளவை. 8 எள்ளு = 1 நெல்லு, 8 நெல்லு = 1 விரற்கிடை – இது நீட்டளவை. (கணக்கதி.பக். 21,22).

நெல்லை *nellai,* பெ. (n.) 1. திருநெல்வேலி எனும் நகரம்; Tinnaveli town. "*பரங்கிரி மதுரை நெல்லைத் திருநகர்*" (குற்றா.தல. திருமால்.32). 2. திருநெல்வேலி மாவட்டம்; Tinnavēli district. ***நெல்லை மாவட்ட வழக்குச் சொற்கள்.***

[நெல்வேலி → நெல்லை. இதுமரூஉ. ஒ.நோ. தஞ்சாவூர் → தஞ்சை]

நெல்லைநாதர் *nellai-nādar,* பெ.(n.) 18 ஆம் நூற்றாண்டில் சிவராத்திரிப்புராணம் பாடிய புலவர்; author of Sivarāttiri-p-purāṇam in 18th century.

நெல்லையப்ப கவிராச பண்டாரம் *nellai-y-āppa-kavirāša-panḍāram,* பெ.(n.) திருமலை யமகவந்தாதி பாடிய புலவர், 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; author of Tirumalai Yamagavandati in 19th century.

தகப்பனார் முத்துக் குமாரசாமிக் கவிராசர், சொந்தவூர் திருநெல்வேலி. வாழ்ந்த காலம் 1832–1905. கவிராச நெல்லையப்ப பிள்ளை என்பது இவரின் மற்றொரு பெயராகும். இவர் மு.ரா. கந்தசாமிக் கவிராயர், மு.ரா.அருணாசலாக் கவிராயர், கல்போத்துப் பிச்சுவையர், மேலகரம் சுப்பிரமணியக் கவிராயர் முதலியவர்களிடம் கல்வி பயின்றவர். சந்திவிநாயகர் பதிகம், சந்திவிநாயகர் இரட்டை மணிமாலை, சுப்பிரமணியர் தோத்திரம், சுப்பிரமணியர் பதிகம், பழனியாண்டவர் தோத்திரம், சோமசுந்தரரேசர் பதிகம், சுதர்ம சாரசங்கிரகம், கால்நடை மருத்துவ நூல், சந்தத் தமிழ்ப் பத்து ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

நெல்லையப்ப கவிராயர் *nellai-y-appa-kavirāyar,* பெ. (n.) திருநெல்வேலித் தலபுராணம் பாடிய புலவர்; 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; author of Thirunelvēli-t-talapurāṇam in 19th century.

மறுவ. நெல்லையப்ப பிள்ளை

நெல்லையப்ப பிள்ளை¹ *nellai-y-appa-piḷḷai,* பெ.(n.) திருநெல்வேலியைச் சேர்ந்த புலவர்; a poet in Tinnavēli.

சங்கரமூர்த்திப் பிள்ளையின் மகனாவார். இவர் பள்ளிக் கல்வியைப் பயின்று முடிந்த பின் தக்கார்பால் தமிழ்க் கல்வியினைக் கற்றார். இவர் திருநெல்வேலிப் புராணம் என்ற நூலினைப் பாடியுள்ளார். இந்நூலை இறைவன் அடியவர் வேடத்தில் வந்து இவரிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்கப் பாடப் பெற்றதாக ஒரு கதை வழங்குகிறது. இந்நூலினை, ஆசிரியர் நீலகண்ட சாத்திரி என்ற புலவரிடம் வடமொழி மான்மியத்தைப் பெற்றுத் தக்கார் பால் அதன் பொருளறிந்து தமிழில் இயற்றியுள்ளார். இப்புராணத்தில் 120 சருக்கங்களும் 6892 செய்யுட்களும் உள்ளன. நைமிசாரணியச் சிறப்பு, நகரச் சிறப்பு, அகத்தியர் வரவு, தக்கன் வேள்வி, திருநீற்றுப் பெருமை, ஐந்தெழுத்துப் பெருமை, சிவபூசை பெருமை, தொண்டர்கள் பெருமை, மகளிர் இலக்கணம், ஆசாரம், இல்லறம், துறவறம் முதலிய சிறப்புக்களும் பல வரலாற்றுச் செய்திகளும் உள்ளன.

நெல்லையப்ப பிள்ளை² *nellai-y-appa-piḷḷai,* பெ.(n.) *நெல்லையப்பகவிராயர்* பார்க்க; see *nellai-yappa-kavirāyar.*

இவர் திருநெல்வேலித் தலபுராணம், திருமலை சுப்பிரமணியர் தோத்திரம், தென் பழநியாண்டவர் தோத்திரம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

நெல்லையப்ப பிள்ளை[3] *nellai-y-appa-pillai,* பெ.(n.) திருநெல்வேலியைச் சேர்ந்த புலவர்; a poet in Tinnavēli.

திருநெல்வேலிக்கு அருகேயுள்ள மாறாந்தை என்ற ஊரைச் சேர்ந்தவர். இவர் இளங்கலை வரை கல்வி கற்று வட்டாட்சியராகப் பணியாற்றியவர். தமிழ் நூல்களையும், சிவசமய நூல்களையும் கற்றுப் புலமை பெற்றவர். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திலும், தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்திலும் தலைவராகப் பணியாற்றியவர். 'செந்தமிழ்' இதழாசிரியர் குழுவிலும் பணியாற்றிப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். சிவகெண் முடிவைப் (சைவ சித்தாந்தைப்) பரப்பும் பணியில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தவர். திருக்குறளில் அமைந்துள்ள சிவசமய உண்மைகள் குறித்து ஆய்ந்து சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். அருள் முறைத் திரட்டு உரை, திருவாசகத் திரட்டு உரை போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

நெல்லையப்பர் *nellai-y-appar,* பெ. (n.) பாண்டிய நாட்டைச் சேர்ந்த புலவர்; a poet in Pāṇḍianāḍu.

இவர் பாண்டிய நாட்டில் வீரவநல்லூர் என்னும் ஊரைச் சேர்ந்தவர். மேலைக் கொழுந்து மாமலைக் குமரன் பிள்ளைத் தமிழ், சுதந்திரப் பரணி, மகாத்மா காந்தியடிகள் வரலாறு, பழனியாண்டவர் பாராயணத்திரட்டு, எடப்பாடி ஆறுமுகசாமி கலம்பகம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

நெல்லொட்டு *nel-l-oṭṭu,* பெ. (n.) நெற்பயிரின் அறுத்த தாள் (வின்.); rice stubble.

[நெல் + ஒட்டு. ஒட்டு = கதிர் அறுத்த தாள்.]

நெல்வட்டி *nel-vaṭṭi,* பெ. (n.) நெல்லாகக் கொடுக்கும் வட்டி; interest paid in paddy.

[நெல் + வட்டி. வட்டி = பணத்தைப் பிறர் பயன்படுத்தியதற்காக உடையான் பெறும் ஊதியம்]

தொகை வட்டியைவிடச் சிற்றூர்களில் தரும் நெல்வட்டி முறை பல மடங்கு பயன் உள்ளது.

நெல்வரகு *nel-varagu,* பெ. (n.) பூடுவகை (A.); silt grass, Paspalum distichum.

[நெல் + வரகு. வரகு = புன்செய்ப் பயிர். நெற்பயிர் போல் தோற்றமளிக்கும் வரகுப் பயிர்.]

நெல்வரி *nel-vari,* பெ. (n.) நெல் விற்பனை செய்பவரிடம் பெறும் வரி வகை; paddy tax.

[நெல் + வரி. நெல் விற்பவரிடம் நெல்லாகவே பெறும் வரி. (கல்.அக.)]

நெல்வால் *nel-vāl,* பெ. (n.) நென்மணியுடன் சேர்ந்த சிறு தாள்; beard or awn of paddy grain. "*ஒருநெல்வா லூன்ற வருந்து முடம்பிதனை மகிழாது*" (தேவா.934,6).

[நெல் + வால். நென்மணியுடன் ஒட்டி யிருக்கும் வால் போன்ற பகுதி]

நெல்வாற்பூச்சி *nel-vāṟ-pūcci,* பெ. (n.) வயிற்றில் இருக்கும் குடற்பூச்சி வகை (M.L.); threadworm, pinworm.

மறுவ. நூற்புழு, ஊசிப்புழு.

[நெல்வால் + பூச்சி. நெல்வால் போல் தோற்ற மளிக்கும் குடற்பூச்சி வகை]

நெல்வெண்ணெய் *nelveṇṇai,* பெ. (n.) கடலூர் வட்டத்தில் அமைந்துள்ள ஊர்; a village in Cuddalore district. இவ்வூர் இன்று நெய்வெண்ணை என அழைக்கப்படுகிறது. சம்பந்தர் பாடல் பெற்றவூர். "நிச்சலும் மடியவர் தொழுதெழு நெல்வெணெய்''; "நிரைவிரி தொல்புகழ் நெல்வெணெய் மேவிய கரைவிரி கோவணத்தீரே"; "நீர்மல்கு தொல்புகழ் நெல்வெணெய்''; "நீடிளம்

பொழிலணி நெல்வெணெய்''; நெல், வெண்ணெய் என்பதைக் கொண்டு இவ்வூரின் பெயர் அமைந்திருக்கலாம்.

நெல்வேலி *nel-vēli,* பெ. (n.) திருநெல்வேலி நகரம்; Tinnevēlly town.

தேவாரப் பாடல் பெற்ற 108 ஊர்களும் 'திரு' அடி பெற்றன. அவற்றுள் இஃது ஒன்று.

நெலி–தல் *neli-,* 2செ.கு.வி.(v.i.) கடைதல்; to churn.

மறுவ. ஞெலிதல்.

[நுல் (துளை) → நொல் → நெல் → நெலி → நெலி–தல் (வே.க.)]

நெழில் *neḻil,* பெ.(n.) கொடிக்கொற்றான்; green thread creeper, Cassytha filiformis. (சா.அக.)

நெள்ளல் *neḷḷal,* பெ.(n.) 1. பள்ளம்; pit. 2. குழிவு; hollowness.

[நுல்(துளை) → நுள் → நொள் → நெள் நெள்ளல்(வே.க.)]

நெளி¹–தல் *neḷi-,* 2செ.கு.வி.(v.i.) 1. புழு, பாம்பு முதலியவை வளைந்து நகர்தல்; to crawl. *நெளிந்து நெளிந்து பாம்பு சென்றது. கத்திரிக்காயில் புழு நெளிந்தது.* 2. சுருளுதல்; to bend, roll in. "*நெளிதிரைக் கடலுலகெலாம்*" (சீகாளத்.பு. நக்கீ.43). *அவனுக்கு நெளி மயிர்* 3. குழிதல்; to be hollow. "*நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத் தட்டோர்*" (புறநா.18). 4. வெட்கத்தால் நேராக நிற்காமல் உடல் வளைதல்; to wriggle, writhe. "*சேட னெளிதரப் பெயர்வார்*" (கந்தபு. கயமுகனுற்.46). *உடலை நெளித்து நெளித்து நடக்கின்றான். விடை சொல்லத் தெரியாமல் நெளிகிறான். அவன் பொறுமை யிழந்து நெளிகிறான்.* 5. வருந்துதல்; to suffer. "*பொய்யாச் செந்நா நெளிய வேத்திப் பாடுப*" (புறநா.168). 6. குலைதல்; to be put into confusion, to be routed. "*அனைய படைநெளிய*" (கம்பரா. மூலபல.159). 7. அதுங்குதல்; to be dented, bent out of shape, as vessels. 8. மிகுதியாதல்; to swarm, abound, as children. *அவனுக்குக் குழந்தைகள் மிகுதியாக நெளிந்து கொண்டிருக்கின்றன.* 9. ஏனம் முதலியவை அடிபட்டுப் பள்ளமாதல்; get dented, buckle. *குடம் கிழே விழுந்து நெளிந்து விட்டது.* 10. புரளுதல்; to roll over; to tumble over. "*நெளிய ராக்குருளை*" (திருவிளை.இந்திரன் பழிதீ,73).

[நுள்(வளைவு) → நெள் → நெளி = வளைவு (முதா.) நெளி → நெளிதல்.]

நெளி²–த்தல் *neḷi-,* 4செ.குன்றாவி.(v.t.) 1. வளைத்தல்; to cause to bend, to be inclined, to be crumpled; to twist. *உடம்பை எத்தனை நெளி நெளிக்கிறான்.* 2. கோணுதல்; to wriggle or distort the body in walking, commonly in affectation. *சாலை நெளிந்து செல்லுகிறது. உடலை நெளித்து நெளித்து ஆடிய பாம்பு நடனம் அருமை.* 3. அசைத்தல்; to shake "*தண்டொன்று... நெளிப்பது*" (கம்பரா.பிரமாத்.113). 4. வேலையைக் குழப்புதல்; to shirk work. 5. ஏனம் முதலியவற்றில் நெளிவு ஏற்படுத்துதல்; cause a dent. *குடத்தின் வாய்ப் பகுதியைத் தட்டி நெளித்து விட்டாள்.*

[நெளி¹ → நெளி²]

நெளி³–த்தல் *neḷi-,* 4செ.குன்றாவி.(v.t.) செருக்குறுதல் (வின்.); to make affected gestures in pride or contempt, to be insolent.

நெளி⁴ *neḷi,* பெ. (n.) வளைந்த விரலணி வகை; a kind of ring, as having a peculiar

curve. "*அலங்கார நெளியிட்ட கையைக்காட்டாய்*" (குற்றா.குற.66:2). *நெளி கணையாழி (மோதிரம்) அணிந்தவள்.*

[நுள் → நெள் → நெளி = வளைவு, வளைந்த அணி (மு.தா.)]

நெளிச்சல் *nel̤iccal,* பெ. (n.) **நெளியல் (வின்.)** பார்க்க; *see nel̤iyal.*

[நெளி → நெளிச்சல்]

நெளிச்சலன் *nel̤iccalan̠,* பெ.(n.) **நெளியலன்** (யாழ்.அக) பார்க்க; *see nel̤iyalan̠.*

[நெளிச்சல் = வளைவு. நெளிச்சல் + அன் – நெளிச்சலன் = கூனன்.]

நெளிசம் *nel̤išam,* பெ.(n.) தங்கரளி; exile oleander, *Tecoma staus.* (சா.அக.).

நெளிசல் *nel̤išal,* பெ. (n.) **நெளிச்சல் (இ.வ.)** பார்க்க; *see nel̤iccal.*

[நெளிசு + அல்]

நெளித்தகுண்டி *nel̤itta-kuṇḍi,* பெ.(n.) குந்து புறம் (பிட்டம்) பின்பக்கம் மிகுதியாக வளைந்து காணப்படுவது; projecting buttocks. (சா.அக.)

[நெளித்த + குண்டி. குண்டி = குந்துபுறம் (பிட்டம்).]

நெளிதம் *nel̤idam,* பெ.(n.) **1.** சிறுமை, புன்மை; insignificance. **2.** இலேசு; lightness, ease.

[நெளி[1] → நெளிதம்]

நெளிப்பு *nel̤ippu,* பெ. (n.) **1.** செருக்கு (கருவம்) முதலியவற்றால் செய்யும் உடலசைவு (அங்கசேட்டை) (உ.வ.); affected gestures of the body, as of a vain person. **2.** இறுமாப்பு (யாழ்.அக.); pride. *அவனுக்கு என்னதான் இருந்தாலும், இந்த நெளிப்பு ஆகாது.* **3.** ஏளனம் (பரிகாசம்) (யாழ்.அக.); ridicule. **4.** துன்பம் (அருட்பா,4, பிள்ளைப்பெரு,25); trouble, affliction.

[நெளி[3] + பு]

நெளிப்புக்காட்டு–தல் *nel̤ippu-k-kāṭṭu-,* 5செ.கு.வி.(v.i.) செருக்கு முதலியவற்றால் உடலை ஆட்டிக் கொள்ளுதல்; to make affected gestures. *எத்தனைச் செல்வ மிருந்தாலும் இத்தனை நெளிப்புக் காட்டக் கூடாது.*

[நெளிப்பு = செருக்கு, இறுமாப்பு. நெளிப்பு + காட்டு–தல்]

நெளிப்புக்காரன் *nel̤ippu-k-kāran̠,* பெ. (n.) பகட்டு ஆரவாரக்காரன் (வின்.); vain person, fop.

[நெளிப்பு + காரன் – நெளிப்புக்காரன். நெளிப்பு = செருக்கு, இறுமாப்பு]

நெளிப்புப்பேசு–தல் *nel̤ippu-p-pēšu-.* 5செ.கு.வி.(v.i.) ஏளனமாகப் பேசுதல் (வின்.); to speak contemptuously. *யாரையும் பார்த்து நெளிப்புப் பேசாதே, உனக்கும் அந்நிலை ஏற்படும்.*

[நெளிப்பு = ஏளனம். நெளிப்பு + பேசு–தல்.]

நெளிமோதிரம் *nel̤i-mōdiram,* பெ.(n.) *நெளி[4]* பார்க்க (வின்.); *see nel̤i[4]*

[நெளி[4] + மோதிரம். மோதிரம் = கணையாழி]

நெளியல் *neḷiyal,* பெ. (n.) 1. வளைவு; crookedness, deformity. 2. வளைந்தது; anything bent or warped.

[நெளி[1] + அல் – நெளியல். அல்லீற்றுத் தொழிற் பெயர்]

நெளியலன் *neḷiyalaṉ,* பெ. (n.) கூனன் (யாழ்ப்.); humpback.

[நெளியல் = வளைவு, வளைந்தது. நெளி + அல் + அன் – நெளியலன்.]

அல்–இடைநிலையாக எதிர்மறைப் பொருளிலும் சாரியையாக உடன்பாட்டுப் பொருளிலும் வரும். ஈண்டு உடன்பாட்டுப் பொருளில் வந்துள்ளது. "பயனில் சொல் பாராட்டுவானை மகனெனல் மக்கட் பதடி எனல்" (திருக்குறள்) அல்முதலது எதிர்மறை; பின்னது உடன்பாடு.

நெளியலி *neḷiyali,* பெ. (n.) கூனி (வின்.); humpback.

[நெளியலன் (ஆ.பா.) → நெளியலி (பெ.பா.)]

நெளியலெடு–த்தல் *neḷiyal-eḍu-,* 4செ.குன்றாவி.(v.t.) கோணல் நீக்குதல்; to repair a bend.

[நெளியல் + எடு–த்தல். நெளியல் = கோணல். எடுத்தல் = நீக்குதல்.]

நெளியன் *neḷiyaṉ,* பெ. (n.) 1. இரண்டடி நீளம் வளர்வதும் சாம்பல் நிறமுள்ளதுமான கடல் மீன்வகை; shark, grey, attaining 2ft.in length. 2. பயிரை அழிக்கும் புழுவகை (இ.வ.); a worm blighting crops.

[நெளிதல் = வளைந்து நகருதல். நெளி[1] → நெளியன்]

நெளிர்[1]–தல் *neḷir-,* 2செ.கு.வி.(v.i.) ஓசையிடுதல் (பிங்.); to make noise.

நெளிர்[2] *neḷir,* பெ. (n.) எடுத்தலோசை (பிங்.); voice at a high pitch, high tone.

பூஉ–எனவிற்போன் கூவுவது

நெளிவண்ணச்சேலை *neḷi-vaṇṇa-c-cēlai,* பெ.(n.) புடவை வகை (பஞ்ச.திருமுக.1160); a kind of saree.

[நெளி + வண்ணம் + சேலை. இடையிடையே கோடுவந்த வண்ணச் சேலை வகை.]

நெளிவு[1] *neḷivu,* பெ. (n.) 1. வளைகை; crawling, writhing. *வாழ்க்கை அமைதியாக இருக்க வேண்டுமானால் கொஞ்சமாவது நெளிவு சுளிவு தேவை.* 2. துன்பம்; suffering. "*நெளிவுண்டாக் கருதாதே*" (தேவா.29,3). *வாணிகத்தால் அவனுக்கு நெளிவில்லை.* 3. இணங்குகை; bending, yielding. 4. கமுக்கம் (மர்மம்); ins and outs, real nature. *அவன் வாழ்வில் ஏதோ நெளிவு ஒன்று இருக்கிறது.* 5. வளைந்த விரலணி வகை (நெல்லை); a kind of ring, as having a peculiar curve. *என்தங்கை மகளுக்கு நெளி (கணயாழி) மோதிரம் ஒன்று வாங்கிக் கொடுத்தேன்.* 6. உள் மடங்கிப்பின் நேராகும் இடத்தில் உள்ள வளைவு; bend, curve. *சாலை வளைவோ நெளிவோ இல்லாமல் நேராக இருந்தது.* 7. கூந்தலின் சுருளான நிலை; curl. அவனுக்கு *கூந்தல் சுருள் சுருளாக இருந்தது. அவனுக்கு கருகருவென்ற நெளிவே இல்லாத முடி.* 8. ஏனம் முதலியவற்றில் அடிபட்டதால் ஏற்படும் வடிவக்குறைவு; dent is a vessel. *ஏனத்தின் நெளிவைத் தட்டிச் சரியாக்கு.*

[நெளிதல் = வளைதல், வருந்துதல் நெளி[1] → நெளிவு]

நெளிவு[2] *neḷivu,* பெ. (n.) செருக்கு, இறுமாப்பு; pride. *இப்போதெல்லாம் அவன் நெளிவோடு நடந்து கொள்கின்றான்.*

[நெளித்தல் = செருக்குறுதல் நெளி[3] → நெளிவு]

நெளிவுசுளிவு *neḷivu-šuḷivu,* பெ. (n.) 1. கமுக்கம் (மர்மம்) (உ.வ.); ins and outs, real nature. *நெளிவு சுளிவோடு பேசவேண்டும்.* 2. ஏற்றத்தாழ்வு (இ.வ.); excess and deficiency. 3. வாங்குதல், விற்றல் போன்றவற்றில் விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நிலை; ins and outs of a business, learning or knowing the ropes. *ஒரே ஆண்டில் வரவு செலவில் நெளிவு சுளிவுகளைத் தெரிந்து கொண்டான்.*

[நெளிவு = வளைவு, வளைகை. நெளிவு + சுளிவு. சுளிவு = சினம். நிலைமைக் கேற்ப வளைந்து கொடுத்தும், சினப்பட்டும் செயலை முடித்துக் கொள்வது.]

நெளிவெடு[1]–த்தல் *neḷiveḍu-,* 5செ.குன்றாவி. (v.t.) வளைவு நீக்குதல் (உ.வ.); to mend anything bent or warped, to correct an irregularity. *இந்த ஏனத்தை நெளிவெடுத்துக் கொடு.*

[நெளிவு + எடு–த்தல்]

நெளிவெடு[2]–த்தல் *neḷiveḍu-,* 4செ.கு.வி. (v.i.) நெளி கணையாழி (மோதிரம்) முதலியவற்றில் வளைவை உண்டாக்குதல் (வின்.); to make the flexure as to a neḷi ring.

[நெளிவு + எடு–த்தல். எடுத்தல் = உண்டாக்குதல்]

நெளுநெளு–த்தல் *neḷu-neḷu-,* 4செ.கு.வி. (v.i.) 1. நெகிழ்தல்; to become soft. 2. குழைதல்; to mash.

[நுள் → நொள் → நெள் → நெளு → நெளுநெளு → நெளுநெளு–த்தல் (முதா.)]

நெற்கடமை *neṟ-kaḍamai,* பெ. (n.) *நெல்வரி* பார்க்க; *see nel-vari.*

[நெல் + கடமை – நெற்கடமை = நெல் விற்பவரிடம் வாங்கும் வரி. இது நெல்லாகவே பெறப்படும். கடம் = கடமை, முறைமை. கடு → கடன் → கடம். கடு = விரைவு, விரைந்து செய்தல். கடன் = விரைந்து செய்யத்தக்க பணி. கடமை = விரைந்து கட்டாயம் செய்ய வேண்டியபணி.]

நெற்கடை[1] *neṟkaḍai,* பெ. (n.) ஒரு நெல்லளவு கொண்ட இடம்; space occupied by a paddy. *இந்தச் சொத்திலிருந்து நெற்கடை அளவு இடம் கூட உனக்குக் கிடைக்காது.* (சா.அக.)

[நெல் + கடை. கடை = இடம்.]

நெற்கடை[2] *neṟkaḍai,* பெ. (n.) பத்தொன்பதாம் விண்மீனாகிய குருகு (மூலம்) (அக.நி.); the 19th naksatra.

நெற்கணக்கு *neṟ-kaṇakku,* பெ. (n.) நெல்லளவை வாய்பாடு (யாழ்.அக.); table of dry measure for paddy. *இப்போதைய வாய்பாட்டுநூலில் நெற்கணக்கு வாய்பாடு இல்லை.*

[நெல் + கணக்கு. குள் → கள் → கண் → கண → கணகு → கணக்கு = அளவு, எண், தொகை, கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் முதலிய

அளவீடு. அதற்கொரு கணக்கில்லை, கணக்கு வழக்கற்றுக் கிடக்கிறது என்னுந்தொடர்களில், கணக்கு என்னுஞ் சொல் அளவைக் குறித்தல்காண்க. நெல் தமிழ்நாட்டில் முகத்தலளவைக்கும், நிறுத்தல் அளவைக்கும் அடிப்படைப் பொருளாக இருந்திருக்கின்றது.]

முகத்தலளவை

360 நெல் = 1 செவிடு (செவி+இடு)
5 செவிடு = 1 ஆழாக்கு (அரை உழக்கு → ஆழாக்கு)
2 ஆழாக்கு = 1 உழக்கு
2 உழக்கு = 1 உரி
3 உழக்கு = மூவுழக்கு
2 உரி = 1 நாழி
8 நாழி (படி) = 1 குறுணி (மரக்கால்)
2 குறுணி = 1 பதக்கு
3 குறுணி = 1 முக்குறுணி
2 பதக்கு (4 குறுணி) = 1 தூணி
2 தூணி = 8 குறுணி (குறு + உணி)
3 தூணி = 1 கலம்
5 மரக்கால் = 1 பறை
80 பறை அல்லது 400 மரக்கால் = 1 கரிசை

நிறுத்தலளவை

1 நெல்லெடை = 1 வீசம் (வீசு+அம்)
2 வீசம் = 1 பிளவு
2 பிளவு = 1 குன்றிமணி
2 குன்றிமணி = 1 மஞ்சாடி (மஞ்சு+ஆடி)
2 மஞ்சாடி =1 பணவெடை

5 மஞ்சாடி = 1 கழஞ்சு
2 கழஞ்சு = 1 கஃசு (1/4 பலம்)

4கஃசு = 1 பலம்
100 பலம் = 1 தூக்கு
2 தூக்கு = 1 துலாம்
32 துலாம் = 1 பாரம்
2 துலாம் = 1 பிசு
32 குன்றிமணி = 1 வாரகனெடை
9 வராகனெடை = 1 ஒஞ்சை
9 ஒஞ்சை = 1 சேர்
16 மஞ்சாடி = 1 வாரகனெடை
9 பணவெடை = 1 பூவராகன்
10 பணவெடை = 1 கழஞ்சு
10 பணவெடை = 1/8 ரவை மஞ்சாடி = 1 கழஞ்சு பழகம்
10 1/2 மாத்துடையது = தங்கம்
3 1/2 மாத்துடையது = வராகன்
1/16 வராகனெடை= 1ரதி(பச்சை.)

பழந்தமிழ்நாட்டில் இதே முகத்தல், நிறுத்தல் அளவைகளைக் கொண்டு அனைத்து வகைக் கூலங்களும் அளக்கப்பட்டன.

நெற்கணக்குப் போலவே குதிரைக் கணக்கு, ஓணான் கணக்கு, யானைக் கணக்கு, அடிகணக்கு, வெற்றிலைக் கணக்கு, நெல்விற்பனைக்கணக்கு பால்கணக்கு, முத்துக்கணக்கு, களவுகணக்கு, எண்ணெய்க் கணக்கு, மிளகுகணக்கு, பலகாரந் தின்ற கணக்கு மாம்பழக்கணக்கு, விளம்பழக் கணக்கு, கற்பூரக் கணக்குப் போன்றவை களும் இருந்தன. (கணக்கதிகாரம்).

நெற்கழி *ner-kali,* பெ. (n.) நெல் சாகுபடி யாதற்கேற்ற ஒருவகைநிலம் (யாழ்.அக.); a kind of soil fit for paddy cultivation. *அவன் பாகமாக நெற்கழி நாலுகாணி வந்தது.*

[நெல் + கழி. கழி = நிலம். கழிமுகம் = உப்பங்கழியை ஒட்டிய நிலப்பரப்பு, நன்செய்நிலப்பகுதி, நீர்நிற்கும் நிலப்பரப்பு.]

நெற்களஞ்சியம் *ner-kalañjiyam,* பெ. (n.) 1. நெல்லிட்டு வைக்கும் புரை (உ. வ.); granary for paddy. *பழங்கால வீடுகளில் நெற்களஞ்சியம் இருக்கும்.* 2. நெல் அதிகம் விளையும் இடம்; place where paddy is cultivated in abundance. *தஞ்சை மாவட்டம் தமிழகத்தின் நெற்களஞ்சியம்.*

[நெல் + களஞ்சியம். களஞ்சியம் = தவசம் சேமித்து வைக்கும் இடம், கலம், கருவூலம், சரக்கறை, பண்டசாலை. குறைந்தளவு நெல்லைச் சேமிக்குமிடத்தை குழுமை என்றும் அழைப்பர். கலைபற்றிய செய்திகள் சேமித்து வைக்கும் இடம், பொத்தகக் கலைக்களஞ்சியம் எனப்படும். சொற்கள் பற்றிய விரிவான

விளக்கங்கள் அனைத்து மொழிகளிலும் தொகுக்கப்பட்டுக் கலைக்களஞ்சியம் வெளியிடப்பட்டு வருகிறது.]

நெற்கனம் *ner̲kaṉam,* பெ. (n.) நெற்பருமன்; as thick as paddy. (சா.அக.) *நென்மணி பருத்து இருந்தால் திடமான நல்ல நெல் என்று அழைப்பர்.*

[நெல் + கனம்.]

நெற்காணி *ner̲-kāṇi,* பெ. (n.) நெல் விளையும் நிலம் (யாழ்.அக.); land in which paddy is cultivated. *புன்செய்க்காணி நாலும் நெற்காணி ஒன்றும் அவன் பங்குக்கு வந்தன.*

[நெல் + காணி. காணி = நிலம். "ஊரிலேன் காணியில்லை" (திவ். திருமாலை. 29). காணி என்பது நில அளவைப் பெயராகவும், கீழ்வாய் இலக்க எண்ணாகவும் இருக்கின்றது. காணி = 400 குழி. காணி = 1/80]

நெற்காரிகம் *ner̲kārigam,* பெ. (n.) கருங்குறுவை; red rice having husk. (சா.அக.).

[நெல் + காரிகம். தோல் மெல்லிய கருமை படர்ந்து காவிநிறமுடைய அரிசியைக் கொண்டிருக்கும் நெல்வகை. இது மூன்று மாதப்பயிர்.]

நெற்கிடை *ner̲-kiḍai,* பெ. (n.) ஒரு நெல்லளவு கொண்ட இடம் (இ.வ.); space, as much as to hold a grain of paddy. *அவனுக்கு ஒரு நெற்கிடை இடம் கூடக் கொடுக்க முடியாது.*

[நெற்கு + இடை. ஒரு நெல்லின் இடைப்பட்ட பாகம்; நெல் + கு – நெற்கு]

நெற்குண்டி *ner̲kuṇḍi,* பெ. (n.) 1. வெண்ணொச்சி; white notchi- Vitex negundo. 2. தாமரைக் கிழங்கு; lotus root. 3. கருநொச்சி; black variety of five leaved chaste tree-Vitex negundo. (சா.அக.).

மறுவ. நிர்க்குண்டி.

நெற்குணம் *ner-kuṇam,* பெ. (n.) **நெற்குன்றம்** பார்க்க; see *ner̲kuṉr̲am.*

[குன்றம் என்பது குன்னம் எனவும் குணம் எனவும் தமிழ்நாட்டில் மருவி வழங்கும். ஒன்று என்னும் சொல் ஒன்னு என்றும் ஒண்ணு என்றும் பேச்சுத்தமிழில் வழங்குதல் காண்க. குன்றம், குன்னம் என்றாகி குணம் எனக் குறுகி, நெற்குணம் என வழங்குகிறது.]

நெற்குத்தகை *ner̲-kuttagai,* பெ. (n.) நெற்பாட்டத்துக்கு அடைக்குங் குத்தகை; lease of land in which paddy is payable as rent. *நிலத்தை நெற்குத்தகைக்கு விட்டு விட்டான்.*

[நெல் + குத்தகை. குல் + தகை – குத்தகை = குறுகிய கால ஒப்பந்தம். உரிமையாளரோ நிருவாகமோ ஒருவருக்கு நுதர்தல் உரிமையை அளித்துத் தன் பங்கைத் தவசமாகவோ பணமாகவோ பெற்றுக்கொள்ளும் சட்டவழியான ஒப்பந்தம். நெற்குத்தகை = நெல்லைக் குத்தகைப் பொருளாகப் பெறுதல்.]

நெற்குழி *ner̲-kuḻi,* பெ. (n.) நெல்லிட்டு வைக்கும் நிலவறை (வின்.); under-ground pit for paddy. *வீட்டில் நெற்குழி ஒன்று அமைக்க வேண்டும்.*

[நெல் + குழி. குழி = பள்ளம், கிடங்கு. நெற்குழி = நெல்லைச்சேமித்து வைக்க நிலத்தில் அமைக்கப்பட்ட நிலவறை.]

நெற்குழியிலிடு—தல் *ner̠-kul̠iyil-iḍu-,* 18 செ. குன்றாவி. (v.t.) **நெல்லிற்புதை-த்தல்** பார்க்க; see *nellir̠pudai-.* (சா.அக.).

[நெல் + குழியில் + இடு—தல்]

நெற்குறி *ner̠-kur̠i,* பெ. (n.) நெல்லைக் கொண்டு கட்டுவிச்சி கூறும் கணியம் (திருக்கோ. 285, துறைவிளக்கம்); fortune-telling by kur̠ava women by means of paddy. *நெற்குறி கேட்டு வந்தான்.*

[நெல் + குறி. குறி = குறிப்பு, முன்னறிந்து கூறும் குறிப்பு.]

நெற்குறுசாலை *ner̠-kur̠u-šālai,* பெ. (n.) நெல்லைக்குத்துமிடம் (தெ.க.தொ. 4, 188); place where paddy is husked.

[நெல் + குறு + சாலை. குற்று → (குத்து) → குறு. சாலை = இடம்.]

நெற்குறுவை *ner̠kur̠uvai,* பெ. (n.) **நெற்காரிகம்** பார்க்க; see *ner̠kārigam.* (சா.அக.).

[நெல் + குறுவை. குறுவை = குறுகிய காலப்பயிர்.]

மூன்றுமாத நெற்பயிரைக்குறுவை என்றும் ஆறுமாத நெற்பயிரைச் சம்பா என்றும் கூறுவது தஞ்சைமாவட்ட வழக்கு.

நெற்குன்றம் *ner̠-kun̠r̠am,* பெ. (n.) **1.** வந்தவாசி வட்டத்தில் உள்ள ஊர்; a village in Vandavāši taluk. **2.** திருக்கோவிலூர் வட்டத்தில் உள்ள ஊர்; a village in Tirukkōvilūr taluk. **3.** சென்னைக்கருகில் கோயம்பேட்டை அடுத்துள்ள ஊர்; a village near in Chennai.

[குன்றின் பெயர் கொண்ட ஊர்கள் தமிழ்நாட்டில் சில உண்டு. திருப்பரங் குன்றம், திருக்கழுக்குன்றம், நெற்குன்றம், செங்குன்றம். நெல் + குன்றம். நெல் அதிகம் விளையும் இடமாகவும் கொள்ளலாம். நல்→நெல் + குன்றம் = நல்ல குன்று அமைந்த இடமாகவும் கொள்ள முடியும்.]

நெற்குன்றவாணர் *ner̠-kun̠r̠a-vāṇar,* பெ. (n.) ஒட்டக்கூத்தர் காலத்துத் தமிழ்ப்புலவர்; a Tamil poet lived in Oṭṭakkūttar period.

[நெற்குன்றம் + வாணர். வாணன் → வாணர். வாழ்நன் → வாணன் = ஊர்க்காக வாழ்பவன்]

இவர் புலவராக இருந்ததோடு வள்ளலாகவும் இருந்திருக்கிறார். நம்பிகாளி என்னும் புலவருக்குப் பொருள் கொடுத்ததோடு அவர் புலமைக்கு அடிமைப்பட்டேனென்று சிறப்புக் கவியுங் கொடுத்தவரென்று தமிழ்நாவலர் சரிதை கூறும். இவர் திருப்புகலூர் சிவன் மேல் அந்தாதி நூலொன்றும் பாடியுள்ளார். அந்நூலின் இறுதியில் '*களப்பாளன் நெற்குன்ற வாணன்*' என்ற குறிப்பிருப்பதால் இவர் களப்பாள மரபினர் என்பது தெரிகின்றது. திருப்புகலூர்ச் சிவன் கோயிற் கல்வெட் டொன்றில், 'நெற்குன்றங் கிழார் அரையன் கருவுணாயகரான களப்பாள ராஜர் செய்வித்த சாலை' என்று குறிப் பிட்டிருப்பது நெற்குன்ற வாணரை யேயாம் என்று சாசனத்தமிழ்க் கவி சரிதம் கருதுகிறது. இங்குக் குறித்த நெற்குன்றம் காஞ்சிமாவட்டத் (செங்கல் பட்டு மாவட்டம்) தில் சென்னைக் கருகில் உள்ளது.

நெற்கூடு *ner̠-kūḍu,* பெ. (n.) **நெற்களஞ்சியம்** (புறநா.148,உரை) பார்க்க; see *ner̠-kaḷañjiyam.* *நெற்கூடு ஒன்று செய்ய வேண்டும்.*

[நெல் + கூடு. நெற்கூடு = நெல்லைக் கொட்டி வைக்கக் கூடுவடிவில் செய்யப்பட்ட அமைப்பு]

நெற்கூர் *neṟ-kūr,* பெ. (n.) **நெல்வால்** பார்க்க; (யாழ். அக.); see *nel-vāl.*

[நெல் + கூர். கூர் = கூர்மை, கூர்மையான நுனி, நெல்மணியோடு சேர்ந்த சிறிய தாள், கதிர்கூர். கூர்க்கருப்பன் என்றொரு நெல்வகை உண்டு.]

நெற்சப்பி *neṟ-cappi,* பெ. (n.) புல்வகை (யாழ்ப்.); a kind of grass. *வயல் முழுமையும் நெற்சப்பி நிறைந்துவிட்டது.*

[நெல் + சப்பி. சப்பி = பதர், புல். நெல்பயிரைக் கெடுக்கும் புல் வகை]

நெற்சம்பளம் *neṟ-cambaḷam,* பெ. (n.) நெல்லாகப் பெறுங்கூலி; salary paid in paddy. "*பணம் வேறு நெற்சம்பளம் வேறு பற்றி*" (சரவண. பணவிடு.120)

[நெல் + சம்பளம். சம்பளம் = கூலி. சம்பா + அளம் → சம்பளம் மருதநிலத்தில் சம்பாநெல்லும், நெய்தல்நிலத்தில் அளத்துப் பொருளாகிய மீனும், உப்பும் கூலியாகத்தரப்படுதலின் சம்பளம் என்ற சொல் உருவானதாகப் பாவாணர் கருதுகிறார். (சொ.ஆ.க.).]

நெற்சிறுதாலி *neṟ-ciṟu-tāli,* பெ. (n.) தாலிவகை; a kind of marriage badge. "*நெற்சிறு தாலி நிரல்கிடந்திலங்க*" (பெருங். வத்தவ. 16:29).

[நெல் + சிறுதாலி.]

சிறுதாலி = சிறிய தாலி வகை. சிறுதாலி = 1. கணவன் வாழ்நாள் வரை மகளிர் கழுத்தில் கயிற்றுடன் எப்பொழுதுமுள்ள தாலி. 2. வைப்பாட்டிக்குக் கொடுக்கும் தாலி. சிறுதாலிக்கட்டும் மரபு கைக் கோளரினத்தில் காணப்படுகிறது. திருமணத்திற்கிசையாத மாமன்மகள் அல்லது அத்தை மகளை விரும்பின ஒருவன், அவள் தன்னை மணம்புரியும் படி தாலியையேனும் துணியையேனும் தூங்கும்போது அவள் கழுத்திற் கட்டுவது, சிறுதாலிகட்டுதல் எனப்படும்.

நெற்சிறுதாலி = மணவுறுதிவிழாவில் கணவர் பெயர் குறித்த ஓலையைக் காதில் தென்புற மகளிர் அணிந்தது போல வயற்புற ஊர் மகளிர் கழுத்தில் பொன்தாலி அணிவிப்பதற்கு முன் நெல் முடிச்சிட்ட தாலி கட்டப்பட்டது என்று அறிக.

நெற்சூடு *neṟ-cūḍu,* பெ. (n.) கடாவடிபடாத நெற்கதிர்த்தொகுதி; stack of unthreshed sheaves of paddy. "*நெற்சூடு மிதித்திடும்*" (ஏரெழு. 55). *இன்று வயலில் நெற்சூடு தூக்க வேணும்.*

[நெல் + சூடு. சூடு = பிணையல் விடாத அரிக்கட்டு]

நெற்செய்-தல் *neṟ-cey-,* 1. செ.கு.வி. (v.i.) நெற் பயிரிடுதல்; to cultivate paddy. "*நெற் செய்யப் புற்றேய்ந்தாற்போல*" (பழ. 53)

[நெல் + செய். செய்தல் = பயிர்செய்தல், உண்டாக்குதல்]

நெற்சேர் *neṟ-cēr,* பெ. (n.) நெல்லை வைப்பதற்கு வைக்கோற்றாளையும் புரியையுங் கொண்டு அமைந்த குதிர் (இ.வ.); strawbin or granary for storing paddy. *வீட்டில் இரண்டு நெற்சேர் உண்டு.*

[நெல் + சேர். சேர் = வைக்கோற் புரியால் அமைந்த நெற்குதிர்]

நெற்சோளம் *neṟcōḷam,* பெ. (n.) இருங்குசோளம்; a kind of maize, redmillet-Holcus saccharatus.

[நெல் + சோளம். நெல்போன்ற வண்ண முடைய சோளம்]

நெற்பரப்பு *ner̠-parappu,* பெ. (n.) பன்னிரண்டு குழியுள்ள ஒருவகை நிலவளவு (வின்.); a kind of land measure = 12 kul̠i.

[நெல் + பரப்பு. பரப்பு = இடவிரிவு, ஒருவகை நிலவளவு]

நெற்பழம் *ner̠-pal̠am,* பெ. (n.) 1. அடுத்துவரும் விளைவின் குறைவைக் குறிப்பிக்கும் கறுப்புவிழுந்த தவசப் பழம்; matured grain marked with black spots, indicative of the next crop being scanty. 2. நல்விளைவின் குறியாக முற்றி வெடிக்கும் நென்மணி (யாழ்ப்.); rice grains bursting from rankness, indicative of a good crop. 3. மழை மிகுதியாவதால் ஏற்படும் நெல்லின் நோய் (நெல்லை); a disease affecting paddy, due to excessive rains.

[நெல் + பழம்]

நெற்பாசினி *ner̠-pāšin̠i,* பெ. (n.) சுணை வெண்டை; bendy (ladies finger) covered with rough hairs as opposed to smooth bendy. (சா.அக.)

நெற்பிரமாணம் *ner̠piramāṇam,* பெ. (n.) எட்டு எள்கொண்ட நெல்லளவு; size of paddy which is equivalent to that of 8 seasamum seeds.

[நெல் + Skt. பிரமாணம்.]

நெற்பு *ner̠pu,* பெ. (n.) 1. சீழ்; pus. 2. மெலிவு; weakness lankiness.

[நுல் + நெல்→ நெள்→ நெற்பு. நெள் →நெளிவு.]

நெற்புகொள்ளல் *ner̠pu-koḷḷal,* பெ. (n.) 1. சீழ் கொள்ளல்; the process or state of suppurating or producing pus as in a wound or abscess. 2. அம்மைப்பால் கொள்ளல்; pustules containing pus as in small pox. (சா.அக.).

[நெற்பு + கொள்ளல். நெற்பு = சீழ்.]

நெற்புடம் *ner̠-puḍam,* பெ. (n.) சில மருந்துகளை நெற்குவையுட் புகுத்திச் சூடேற்றிப் பதப்படுத்தும் முறை (தைலவ.தைல. 46, உரை); method of warming certain medicines by inserting them into a heap of paddy.

[நெல் + புடம். புடம் = மருந்துகளைப் பதஞ்செய்யும் முறை.]

நெற்புல் *ner̠-pul,* பெ. (n.) குறத்திப்பாசி (M.M.668); Job's tears.

[நெ ல் + புல். நெல் போல் தோற்ற மளிப்பதும், வெண்மையும் உருட்சியுமான காய்களையுடையதுமான புல்வகை.]

நெற்பொரி *ner̠-pori,* பெ. (n.) வறுப்பதால் விரிந்து மலரும் அரிசி (பு.வெ. 3:5, உரை); popped paddy.

[நெல் + பொரி. பொரி = பொரித்த நெல் முதலியன.]

நெற்பொரிக்கஞ்சி *ner̠pori-k-kañji,* பெ. (n.) நெற்பொரியினால் மலர்ந்த அரிசியைக் கொண்டு காய்ச்சும் கஞ்சி. இது பசியை நீக்கிக் களைப்பைப் போக்கும். வயிற்றுச் சிக்கலையும், மார்பு நோயையும் குணப்படுத்தும்; the boiled conjee prepared

from the expanded rice of the fried paddy is very useful for debilitated patients. It is easily digestible and affords much relief to patients tired of hunger. (சா.அக.).

[நெற்பொரி + கஞ்சி]

நெற்பொரிக்கஞ்சி எளிதில் செரிமான மாகி நோயையும் குணப் படுத்தும் தன்மை வாய்ந்தது.

நெற்பொரிமாக்காடி *neṟpori-mākkāḍi,* பெ. (n.) நெற்பொரியை மாவாக அரைத்துத் தண்ணீரில் கரைத்துப் புளிக்க வைத்த காடி; a fermented liquor prepared out of a solution of expanded rice flour. (சா.அக.).

[நெற்பொரி + மாக்காடி.]

மாக்காடி = மாவைத் தண்ணீரில் கரைத்துப் புளிக்கவைத்தது.

நெற்பொரியுருண்டை *neṟpori-y-uruṇḍai,* பெ. (n.) நெற்பொரியை வெல்லப் பாகிலிட்டுப் பிடித்தவுருண்டை; ball of a expanded rice of fried paddy mixed with jaggery syrup. (சா.அக.).

மறுவ. பொரியுருண்டை.

[நெற்பொரி + உருண்டை.]

நெற்போர் *neṟpōr,* பெ. (n.) கடாவடி அடிக்காத வைக்கோற் போர் (பிரபுலிங். மாயை. உற்.15); large stack of half-thrashed sheaves of paddy.

[நெல் + போர். போர் = கதிர் வைக்கோல் களின் குவியல். நெற்குவை (சூடா.)]

"மாடுகட்டிப் போர் அடித்ததால் மாளாது செந்நெல் என்று யானைகட்டிப் போர் அடிக்கும் அழகான தென்மதுரை" (நாட்புற.) போர் என்பது சண்டையைக் குறிப்பது. பொரு → போர் என்று உணர்க. பொருந்துதல் என்னும் தொழிற்பெயரின் பகுதி. பொரு → போர் என வைக்கோல் போரையும் படைக்களப் போரையும் நடிப்புக் காட்சியையும் குறித்து வருதல் அறிக.

நெற்போலாகி *neṟpōlāgi,* பெ. (n.) மூக்கறட்டை; cat's jasmine - Boerhaeia repens alias B. diandra. (சா.அக.).

நெற்றகர் *neṟṟakar,* பெ. (n.) புன்செய்த் தவச வகை (இ.வ.) a dry grain.

[நெற்று + அகர். அகம் → அகர் நெற்றிய மணிகள் கொண்ட புன்செய்த் தவசங்கள்]

நெற்றம் *neṟṟam,* பெ. (n.) நெற்று பார்க்க; see *neṟṟu. "உழிஞ்சிற்றாறு சினைவிளைந்த நெற்றம்"* (அகநா. 151:9). *"செல்வளி தூக்கலின் இலைதீர் நெற்றம் கல்லிழி அருவியின் ஒல்லென ஒலிக்கும்"* (நற். 107).

[நெற்று → நெற்றம்.]

நெற்றலன் *neṟṟalaṉ,* பெ. (n.) மெலிந்துணங்கி யவன் (யாழ்.அக.); emaciated man.

[நெற்று + நெற்றலன். நெற்று = முதிர்ந்து காய்ந்த காய். நெற்றலன் = முதிர்ந்து காய்ந்த காய்போலானவன், மெலிந்தவன், நெற்று + அல் + அன்.]

நெற்றலி *neṟṟali,* பெ. (n.) நெய்த்தோலி (யாழ். அக.) பார்க்க; see *ney-t-tōli.*

[நெய்த்தோலி → நெற்றலி.]

நெற்றி[1] *neṟṟi,* பெ. (n.) 1. தலைமுடிக்குக் கீழும் புருவங்கட்கு மேலுமுள்ள முகத்தின் பகுதி; நுதல்; forehead. *"கண்சுமந்த நெற்றிக்கடவுள் கலிமதுரை"* (திருவாச. 8:8). *"மறங்கொள் சேரி மாறுபொரு செருவின் மாறா துற்ற வடுப்படுநெற்றி"* (மதுரைக்.594,595). *"நெய்துடிந்தட்ட விளரூன் அம்புகை எறிந்த*

நெற்றிச் சிறுநுண் பல்வியர் பொறித்த குறுநடைக் கூட்டம் வேண்டுவோரே" (நற்.41). *"தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்"* (குறுந்.107). *"நெற்றி விழியா நிறைத்திலக மிட்டாளே"* (பரிபா. 11:99). *"சுடர்விரிந் தன்ன சுரிநெற்றிக்காரி விடரியங் கண்ணிப் பொதுவனைச் சாடிக்குடர் சொரியக் குத்திக் குலைப்பதன் தோற்றங்காண்"* (கலித்.101). *"நெற்றிச்சிவலை நிறையழித்தான் நீண் மார்பில்"* (கலித்.104). *"வள்ளுருள் நேமியான் வாய்வைத்த வளைபோலத் தெள்ளிதின் விளங்குஞ் சுரி நெற்றிக் காரியும்"* (கலித்.105). *"எல்லித் தங்கிக் குடுமி நெற்றி நெடுமரச் சேவல் தலைக்குரல் விடியல் போகி"* (அகநா. 87). *"மகர நெற்றி வான்றோய் புரிசைச் சிகரந் தோன்றாச் சேணுயர் நல்லில்"* (அகநா. 181). *"குடுமிநெற்றி நெடுமாத் தோகை"* (அகநா. 194). *"தளிர்புரை கொடிற்றிற் செறிமயிர் எருத்திற் கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ அன்ன நெற்றிச் சேவல் அற்றம் பார்க்கும்"* (அகநா. 367). *"பருத்திப் பெண்டின் சிறு தீ விளக்கத்துக் கவிர்ப் பூ நெற்றிச் சேவலின் தணியும் அருமிளை இருக்கை"* (புறநா. 326). *"கானல் மேய்ந்து வியன் புலத்து அல்கும் புல்வாய் இரலை நெற்றி அன்ன"* (புறநா. 374). *"கயலெழுதிய இமய நெற்றியின் அயலெழுதிய புலியும் வில்லும்"* (சிலப். 17:1). *"நெற்றிச் செகிலை யடர்த்தாற் குரியவிப் பொற்றொடி மாதராள் தோள்"* (சிலப். 17–கொளு.–2). *"மாலை நெற்றி வான்பிறைக் கோட்டு"* (மணிமே. 19:19). 2. முன்பகுதி; front. *"நிடதத்தி னெற்றி"* (கம்பரா. மருத்து.17). 3. உச்சி; top. *"கமுகினெற்றிப் பூமாண்ட தீந்தேன் றொடை"* (சீவக.31). *"நீளுறு மேருவி னெற்றிமுற்றிய"* (கம்பரா. சடாயுகாண்.7). 4. வானம்; sky. *"நெறிந்தன மாசுண நெற்றியே"* (தக்கயாகப். 524). 5. கட்டடத்தின் மேனிலை முகப்பு; front side of the storey of a building, facade. 6. தண்டிகை முதலியவற்றின் தலைப்பு (வின்.); end or extremity of a board, timber etc. 7. மரத்திலிருந்து கிளைகள் பிரிகின்ற இடம் (வின்.); the upper part of the trunk of a tree where it branches off. 8. முன்னணி, முன்படை; van of an army. *"நெற்றியி லரக்கர் பதிசெல்ல"* (கம்பரா. ஒற்றுக்கேள்வி. 6). *"தனியனெற்றி யிற்சார்வலென்றனன்"* (கந்தபு. அசுரர்யா. 3.) 9. தலை; head. *"முகிற்றழீஇயசும்பறாத நெற்றிய"* (சீவக. நாமக.71). 10. முகம்; face. *"சோலை நெற்றியிற்றொடுத்த"* (கூர்மபு. அட்ட. 18).

ம. நெற்றி; **க.,தெ.,து.** நெத்தி; துட. நித்தி; **கோத.** நெக் (nec); **குட.** நெத்தி; **கொலா.** நெத்தி; **நா.** நெத்தி; **கோண்.** நேக் (nēc); **மா.** நெபெ.

[நுல்(முன்மை) → நொல் → நெல் → நெறி → நெற்றி.]

நெற்றி[2] *neṟṟi,* பெ. (n.) முயற்சி; effort. "நெற்றி அல்பமாய்ப் பலம் கனக்கப்பெறுமதிறே" (ஈ.டு,9.1:4).

[நெற்று + இ. எண்ணம் நெற்றாகியதும் முயற்சி தொடங்கும்.]

நெற்றி[3] *neṟṟi,* பெ. (n.) நடு; middle. *"காலை நெற்றியி லகிலமுஞ்சுடு கனலிகுறைபட"* (தக்கயாகப். 334).

நெற்றிக்கட்டு *neṟṟi-k-kaṭṭu,* பெ. (n.) மாதரணிகின்ற தலைமாலை (கலித்.66, உரை); a garland worn on forehead by woman.

[நெற்றி[1]+கட்டு. நெற்றியைச்சுற்றி அணியும் மாலை.]

நெற்றிக்கண் *neṟṟi-k-kaṇ,* பெ. (n.) சிவனின் மூன்றாங் கண்; நுதல்விழி; Śiva's eye in the forehead. 2. உத்தர மட்டத்திலிருந்து ஓட்டு முகப்புவரையில் முக்கோணமாக அமைக்கும் சுவர் (கட்ட. நாமா.); gable. 3. மொட்டைமச்சுக் கட்டடத்தில் துலாக் கட்டைகளின் இடைவெளிப் பகுதி (இ.வ).; the interspaces between the joists of a terraced building.

[நெற்றி[1] + கண்]

நெற்றிக்கண்ணன் *neṟṟi-k-kaṇṇaṉ,* சிவன்; Šiva, as having an eye in the forehead.

[நெற்றி + கண்+அன்.அன்–ஆண்பால் ஒருமை. நெற்றியில் மூன்றாங் கண்ணுடைய சிவன்.]

நெற்றிக்கல் *neṟṟi-k-kal,* பெ. (n.) கட்டட வளைவின் (கமான்) நடுவில் வைக்கும் முகப்புக்கல்; key-stone.

[நெற்றி+கல். கட்டடத்தின் முகப்பாகிய நெற்றிபோன்ற பகுதியில் வைக்கும் கல்]

நெற்றிக்கயிறு *neṟṟi-k-kayiṟu,* பெ. (n.) நெற்றியில் கட்டும் கயிறு; a rope tied around the head.

[நெற்றி + கயிறு.]

கால்நடைகளின் நெற்றியில் கட்டும் கயிறு. சிறுவர்களும் நெற்றியில் ஒப்பனைக்காக வண்ணக்கயிறு கட்டிக்கொள்வர். நெற்றியில் கட்டுங்கயிறு, மண்டைக்கயிறு.



நெற்றிக்கிடு–தல் *neṟṟikkiḍu-,* 18 செ. குன்றாவி. & 20செ.கு.வி. (v.t.&v.i.) நெற்றியில் திருநீறு, திருமண் முதலியவற்றால் குறியிடுதல்; to put sectarian marks on the forehead. *நாள்தோறும் நெற்றிக்கிட்டுக் கொண்டுதான் வெளியில் செல்வார்.*

[நெற்றிக்கு+இடு–தல்.]

சிவனியர்கள் நெற்றியில் திருநீற்றால் கிடையாக மூன்றுபட்டைகளும், மாலியர்கள் செங்குத்தாக வெண்மண்ணாலும், காவியாலும் மூன்று கோடுகளும் இட்டுக்கொள்வர். இக்கால அரசியல்கட்சிகள் வேட்டிக்கரையில் வண்ணக்கோடு காட்டுவது நெற்றிக்கிடுதலின் மாற்றமே.

நெற்றிக்குறி *neṟṟi-k-kuṟi,* பெ. (n.) நெற்றியிலிடும் குங்குமம் முதலியன (சூடா.); the sectarian marks put on the forehead.

[நெற்றி + குறி.]

சமய அடிப்படையில் நெற்றியில் குறியிட்டுக் கொள்வது இந்தியரின் வழக்கம். சிவனை வணங்குபவர்கள் நெற்றியில் திருநீற்றால் முப்பட்டை இட்டுக் கொள்வர். உடலில் மார்பு, கை, வயிறு போன்ற பகுதிகளிலும் குறியிட்டுக்கொள்வர். திருமாலை வணங்கும் மாலியர்கள், வெண்மண், செம்மண் போன்றவற்றால் நெற்றி, மார்பு, கை போன்ற இடங்களில் மூன்று செங்குத்துக்கோடுகளால் ஆன குறியிட்டுக்கொள்வர். பெண்கள் நெற்றியில் குங்குமம் (சிவப்பு) அணிவர் கைம்பெண்கள் திருநீறு அணிவர்.



நெற்றிக்கை *neṟṟi-k-kai,* பெ. (n.) முன்படை; van of an army. *"இவற்றுக்கெல்லாம் நாம் நெற்றிக் கையன்றோ"* (ஈடு, 7. 7:7) **2.** மேற்கூரை தாங்கும் எதிர்க் கைமரம் (வின்.); couple or chevron of a roof.

[நெற்றி+கை. நெற்றி போன்று மேற் கூரையைத் தாங்கும் (கைபோன்ற) மரம்.]

நெற்றிச்சிட்டி *neṟṟi-c-ciṭṭi,* பெ. (n.) *நெற்றிச்சுட்டி,* 2 பார்க்க; see *neṟṟi-c-cuṭṭi,* 2.

[நெற்றி + சிட்டி. சுட்டி → சிட்டி.]

நெற்றிச்சுட்டி *neṟṟi-c-cuṭṭi,* பெ. (n.) 1. மகளிரும் குழந்தைகளும் அணியும் நுதலணிவகை; an ornament worn on the forehead by women and children. *மகளுக்கு நெற்றிச்சுட்டி வாங்கி வந்தார்.* 2. விலங்கின் நெற்றி வெள்ளை; blaze on the forehead of an animal. *நெற்றிச்சுட்டி உள்ள மாட்டைப் பிடித்து வா.*

[நெற்றி+சுட்டி. சூட்டி → சுட்டி = நெற்றியணி. விலங்குகளுக்கு இருக்கும் வெண் சுழி, நெற்றிப்பட்டம். நெற்றிச்சுட்டி = பெண்கள் தலையில் அணிந்து வகிடுவழியாக நெற்றியில் தொங்கவிட்டுக் கொள்ளும் சங்கிலியோடு கூடிய வில்லை. இதைத் திவாக நிகண்டு சுடிகை எனக்குறிக்கிறது.]



நெற்றிச்சலங்கை *neṟṟi-c-calaṅgai,* பெ. (n.) நெற்றியில் கட்டப்படும் சிறு மணிகளின் தொகுப்பு; tinny bells tied around the head.

[நெற்றி + சலங்கை. சதங்கை → சலங்கை.]

நெற்றிச்சுழி *neṟṟi-c-cuḻi,* பெ. (n.) விலங்கின் நெற்றியிலுள்ள மயிர்ச்சுழி; hair-curl on the forehead of an ox or horse.

[நெற்றி + சுழி. சுழி = மயிர்ச்சுழி. மாட்டைச் சுழி பார்த்து வாங்க வேண்டும்.]

நெற்றிச்சூட்டு *neṟṟi-c-cūṭṭu,* பெ. (n.) மகளிரணியும் நுதலணிவகை (சீவக. 484, உரை); an ornament for a woman's forehead.

[நெற்றி+சூட்டு. சுட்டி → சூட்டி → சூட்டு = பெண்கட்குரிய நுதலணி.]

நெற்றித்தலம் *neṟṟi-t-talam,* பெ. (n.) நெற்றியின் பகுதி; the region of forehead.

[நெற்றி + தலம். தடம் = இடம். தடம் → தளம் → தலம்.]

நெற்றித்திலகம் *neṟṟi-t-tilagam,* பெ. (n.) நுதற்பொட்டு; mark on the forehead, as of sandal or vermilion.

[நெற்றி+திலகம். Skt. tilaka → த. திலகம் = நெற்றிப்பொட்டு.]

நெற்றித்திலதம் *neṟṟi-t-tiladam,* பெ. (n.) *நெற்றித்திலகம்* (வின்.) பார்க்க; see *nēṟṟi-t-tilagam.*

[நெற்றி+திலதம். Skt. tilaka → த. திலகம் → திலதம் = நெற்றிப்பொட்டு தில(த)ம் என்பது எள்ளைக்குறிக்கும். பழங்காலத்தில் எள்ளை நெற்றியில் எண்ணெய்க்கசிந்து ஒட்டுமாறு அழுத்தி இட்டுக்கொண்டனர்.]

நெற்றிநாளம் *neṟṟi-nāḷam,* பெ. (n.) நெற்றியின் நடுவேயோடும் இரண்டுநாளம்; a pair of veins which rundown the middle line of forehead - Frontal vein. (சா.அக.).

[நெற்றி + நாளம். நாளம் → நாடி]

நெற்றிப்பட்டம்[1] *neṟṟi-p-paṭṭam,* பெ. (n.) நுதலிலணியும் பட்டம் (வின்.); thin plate of metal worn on the forehead, as an ornament or badge of distinction. "*முன்னோ னெடுந்துளைக் கைப்பிடித்தேறி நெற்றிப்பட்டத் துலவி*" (சேதுபு. கடவுள்வா. 5).

[நெற்றி + பட்டம். பட்டம் = சிறப்புக்கு அறிகுறியாக நெற்றியிலணியும் பொற்றகடு, மாதர் நுதலணி, பட்டையான துண்டு.]

நெற்றிப்பட்டம்[2] *neṟṟi-p-paṭṭam,* பெ. (n.) திருமணத்தின் போது பெண்ணுக்குத் தாய்மாமன் முறையினர் நெற்றியில் கட்டும் தங்கத்தினாலான சிறிய (நீண்ட) தகடு ; a thin gold plate worn on the forehead by maternal uncle.

மறுவ. நெத்திப்பட்டம்.

[நெற்றி + பட்டம்.]

மாமன் முறையாளர் தமக்கை மகளுக்கோ தங்கை மகளுக்கோ திருமணத்தின் போது கட்டும் (பட்டம்) பொற்காசு.

தாய்மாமனால் கட்டப்படுவது அம்மான் பட்டம் எனவும், நாத்திகளால் கட்டப்படுவது நாத்திப்பட்டமெனவும், மாமியால் கட்டப்படுவது மாமிப்பட்டமெனவும், பெயர்பெறும். பட்டம் பொற்காசுகளாகவும் இருக்கும். தமிழர் திருமண விழாவில் இஃது ஒரு முதன்மையான நிகழ்வு

நெற்றிப்பற்று *neṟṟi-p-paṟṟu,* பெ. (n.) தலைவலி, மண்டைக்குத்தல் முதலிய நோய்களுக்கு நெற்றியில் போடும் மருந்துப்பற்று; an ointment, or liniment or paste applied to forehead in cases of headache cold, neuralgia and other nervous effections. (சா. அக.) *கிராமங்களில் தலைவலிக்குச் சூடான கேழ்வரகுக் கூழை நெற்றிப்பற்றிடுவார்கள்.*

[நெற்றி + பற்று. பற்று = பசை, கட்டு, மருந்துப்பூச்சு.]

உடலில் ஏற்படும் வெப்பத்தைத் தணிக்க, நெற்றியில் மஞ்சள், சுண்ணாம்பு, பச்சிலை, கூழ்வகைகள், மருந்துவகைகள் முதலியவற்றால் பற்றிடுவது பழைய வழக்கம்.

நெற்றிப்பால் *neṟṟi-p-pāl,* பெ. (n.) வெப்பத்தைக் குறைக்க நெற்றியில் பற்றுப் போடும் முலைப்பால்; women's breast milk as a liniment to the forehead. It is reduces the temperature. (சா.அக.).

[நெற்றி+பால்.]

காய்ச்சலின் கடுமையைக் குறைக்க முலைப்பாலைத் துணியில் நனைத்து நெற்றியில் போட்டுப் போட்டு எடுப்பர். இவ்வாறு செய்வதால் காய்ச்சலின் கடுமை குறையும் என்பர்.

நெற்றிப்புருவம் *neṟṟi-p-puruvam,* பெ. (n.) கண்புருவம்; eye-brow.

[நெற்றி + புருவம். நெற்றியில் இருக்கும் (கண்) புருவம்]

நெற்றிப்பொட்டு *neṟṟi-p-poṭṭu,* பெ. (n.) **1.** நெற்றி ஓரத்திற்கும் காதிற்கும் இடையே உள்ள பகுதி; temple of the forehead. *நெற்றிப் பொட்டில் அடித்ததால் இறந்துவிட்டான்.* **2.** நெற்றியில் வைக்கும் பொட்டு; mark on the forehead, as of sandal or vermilion.

[நெற்றி + பொட்டு. பொட்டு = 1. நெற்றியில் வைக்கும் பொட்டு. 2. பொன்னால் செய்த ஒரு வகைத்தாலி. 3. ஒருவகை அணி. பொட்டுமணி சிறுபெண்கள் கழுத்தில் அணிவர். 4. கன்னத்தின் மேல் இணைப்பு.]

இசைவேளாளர் குடும்பப் பெண்டிரைக் கோவிலுக்கு நேர்ந்துவிட, பொற் காசை நெற்றியில் பொட்டாகக்கட்டி ஆடல், பாடல் வளர்ச்சிக்கு விடுவர்.

நெற்றிமாலை *neṟṟi-mālai,* பெ. (n.) நெற்றிக்கட்டு (வின்.) பார்க்க; see *neṟṟi-k-kaṭṭu.*

[நெற்றி + மாலை. மாலை= மகளிர் அணியும் தொங்கல் தலைமாலை.]

நெற்றிமுட்டு *neṟṟi-muṭṭu,* பெ. (n.) 1. நேர்சுருக்குவழி; short, direct course or way. **நெற்றிமுட்டு வழியாக விரைந்து வந்தான்.** 2. நெற்றிக்கை, 2 பார்க்க; see *neṟṟi-k-kai.* 3. கைமரத்தினடி; lower end of a rafter. 4. திடீரென ஒருவரையொருவர் இடித்துச் சந்திக்கை (இ.வ.); sudden meeting of two persons face to face.

[நெற்றி + முட்டு. முட்டு = தடை, குறைவு, முட்டிக்கொள்வது]

நெற்றிமூஞ்சி *neṟṟi-mūñji,* பெ. (n.) நெற்றிக்கண், 2. பார்க்க; see *neṟṟi-k-kaṇ,2.*

[நெற்றி + மூஞ்சி. மூஞ்சி =முகம், உடலுக்கு முகம் அமைந்துள்ளதைப் போல் கட்டடத்திலிருந்து ஓட்டுமுகப்பு வரையில் முக்கோணமாக அமைக்கும் சுவர்.]

மூக்கும் வாயும் அமைந்த பகுதியை மூஞ்சி (மூஞ்சி + உறு = மூஞ்சுறு) என்றும், தாடையைச் சேர்த்து முகரை என்றும், முழுமையை முகம் என்றும் கூறும் போக்கு பேச்சுவழக்கில் உள்ளது.

நெற்றியிற்கல்வை—த்தல் *neṟṟiyiṟ-kal-val-,* 4 செ.குன்றாவி.(v.t.) நெற்றியிற் கல்லேற்றித் தண்டித்தல் (வின்.); to torture by placing a stone weight on the forehead, as a punishment.

[நெற்யில் + கல்வை—த்தல்.]

சேரன் செங்குட்டுவன் கனக விசயர் தலையில் கல்லேற்றிக் கொண்டு வந்து கண்ணகிக்குக் கோயில் கட்டினான். நெற்றியில் கல்லேற்றித்தண்டித்தல் என்பதில் நெற்றி என்பது தலையையும் குறித்திருக்கலாம். தலையிலோ நெற்றியிலோ கல்லை வைத்துத் தண்டிக்கும் பழக்கம் சிலப்பதிகாரக் காலத்திற்கு முன்பிருந்தே தமிழ்நாட்டில் இருந்திருக்கிறது.

"வடபே ரிமயத்து வான்றரு சிறப்பிற்
கடவுட் பத்தினிக் கற்கால் கொண்டபின்
சினவேன் முன்பிற் செருவெங் கோலத்துக்
கனக விசயர்தங் கதிர்முடியேற்றி"
(சிலப்.27:1–4).

நெற்றியுதயம் *neṟṟi-y-udayam,* பெ. (n.) பிள்ளைப்பேற்றின் போது முதலில் வெளிவரும் நெற்றியின் நிலை; presentation of forehead in delivery.

[நெற்றி + Skt. உதயம் = த. தோற்றம்.]

நெற்றியெலும்பு *neṟṟi-y-elumbu,* பெ.(n.) நெற்றியிலுள்ள எலும்பு; bones of the forehead-Osfrontis.

மறுவ: நெற்றியோடு

[நெற்றி + எலும்பு]

எலும்பு : முதுகெலும்புள்ளவற்றின் மென்மையான தசை, நரம்பு முதலிய இழைமங்களுக்கும் (திசுக்களுக்கும்), மூளை, கண், இதயம் போன்ற உறுப்புகளுக்கும் பற்றுக்கோடாகவும், பாதுகாப்பாகவும் உள்ள உறுதியான அகச்சட்டகம். மனித உடலில் 206 எலும்புகள் உள்ளன.

உருவமைப்பைக் கொண்டு எலும்புகள், நீண்ட எலும்பு, குட்டை எலும்பு, தட்டை எலும்பு, வளைவு எலும்பு என நான்குவகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கை, கால்களில் உள்ளவை நீண்ட எலும்புகள்; மணிக்கட்டு, கணுக்கால்களில் உள்ளவை குட்டை எலும்புகள். தோள்பட்டை எலும்பு, இடுப்பு எலும்பு, மண்டை எலும்புகள் தட்டை எலும்புகள். முதுகெலும்பிலுள்ள முள்ளெலும்புகளும் vertebral தலையிலுள்ள சில எலும்புகளும் வளைவு எலும்புகள்.

மனித உடலில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை 206.

1. முதுகெலும்புத்தொடர் – 26.
2. தலையெலும்புகள் – 29

3. விலா எலும்புகள், மார்பெலும்பு – 25
4. கை எலும்புகள் – 64
5. கால் எலும்புகள் – 62.

தலையில் மண்டை, முகம் என இரு பகுதிகள் உண்டு. இவற்றில் நெற்றி எலும்பு ஒன்றும், சல்லடை எலும்பு ஒன்றும், ஆப்பு எலும்பு ஒன்றும், மண்டைப்பக்க எலும்பு இரண்டும், பின் மண்டை எலும்பு ஒன்றும், மூக்கு எலும்பு இரண்டும், பொட்டு எலும்பு இரண்டும், கீழ்மூக்குச் சங்கெலும்பு இரண்டும், கொழுவெலும்பு ஒன்றும், மேல்தாடையெலும்பு இரண்டும், கன்னவெலும்பு இரண்டும், கீழ்த்தாடையெலும்பு ஒன்றும் என இருபத்திரண்டு எலும்புகள் உள்ளன. கீழ்த்தாடை எலும்பைத்தவிர அனைத்து எலும்புகளும் அசையாமலும் பிரியாமலும் இணைக்கப்பட்டுள்ளன.

முதுகுத்தண்டு, எலும்புக்கூட்டின் அச்சாகும். உடலில் உள்ள மற்ற எல்லா எலும்புகளும் நேரிடையாகவோ வேறு எலும்புகளின் வழியாகவோ இதனுடன் இணைந்திருக்கின்றன. இதில் 25 எலும்புகள் உள்ளன. முதுகெலும்பின் மேற்புறத்தில் 24 தனி முள்ளெலும்புகள் உள்ளன. கழுத்தில் ஏழு முள்ளெலும்புகள் உள்ளன.

மார்புப் பகுதியில் 12 முள்ளெலும்புகள் உள்ளன. மார்பின் இருபுறமுள்ள விலா எலும்புகள் அவற்றோடு பொருந்தியுள்ளன. 12 இணைப்பழுவெலும்புகளில், முதல் ஏழு இணைகள் முன்மார்பிலுள்ள குருத்தெலும்புடன் பொருந்தியுள்ளன. எட்டாம் பழுக்குருத்தெலும்பு ஏழாம் பழுக்குருத்தெலும்புடனும், 9 ஆவது எட்டுடனும், பத்தாவது ஒன்பதாவதுடனும் சேர்த்துள்ளன. 11, 12 ஆம் பழுவெலும்புகள் மட்டும் சேராமல் மிதக்கும் பழுவெலும்புகளாக உள்ளன. அனைத்தும் ஒரு கூண்டு போல் அமைந்துள்ளன. இக்கூண்டினில் (இதயம்) நெஞ்சாங்குலை நுரையீரல் போன்றவை காப்பாக வைக்கப்பட்டுள்ளன.

தோள்முதல் முழங்கை வரையில் மேற்கை எலும்பு ஒன்றும், முன்கைப்பெருவிரல் பக்கமாக ஆரை எலும்பும், சிறுவிரல் பக்கமாக முழங்கை எலும்பும், மணிக்கட்டில் எட்டுச் சிறு எலும்புகளும், உள்ளங்கையில் ஐந்து நீண்ட எலும்புகளும், பெருவிரலில் இரண்டும், மற்ற விரல்கள் ஒவ்வொன்றிலும் மூன்றும் என முப்பது எலும்புகள் கையில் உள்ளன.

தொடை எலும்பு உடலில் உள்ள மற்ற எலும்புகளை விடப்பெரியது. கணுக்காலில் ஏழும், பாதத்தில் ஐந்தும், விரல்களில் 14 உம் என இருபத்தாறு எலும்புகள் உள்ளன.

நெற்றியோடு *neṟṟi-y-ōḍu,* பெ. (n.) நெற்றியெலும்பு ; frontal bone

[நெற்றி + ஓடு. ஓடு = எலும்பு, நெற்றியெலும்பு]

நெற்றிலி *neṟṟili,* பெ. (n.) **நெய்த்தோலி (இ.வ.)** பார்க்க; see *ney-t-tōli.*

[நெய்த்தோலி → நெற்றிலி.]

நெற்றிலிவலை *neṟṟili-valai,* பெ. (n.) சிறுமீன்களைப் பிடிக்க உதவும் வலை; a kind of net for catching small fish.

[நெற்றிலி + வலை. வலை = உயிரிகளை அகப்படுத்தும், பிடிக்கப் பயன்படும் வலை. நெய்த்தோலி மீன்கள் மட்டுமின்றி வேறு மீன்களையும் பிடிக்க இவ்வலை பயன்படுகிறது.]

நெற்று¹–தல் *neṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. மோதுதல்; to thrust, dash. ***என்னைச் சுவரில் நெற்றினான்.*** 2. இலக்கில் தட்டுதல் (வின்.); to strike a mark, as with balls. 3. இடறுதல்; to stumble.

தெ.நெட்டு; **கோண்.**நத்தாநா; **குட.**நேட்ட. (nēṭṭ)

[எற்று – தல் → நெற்று – தல். எற்றுதல் = மோதுதல், எறிதல், அடித்தல்]

நெற்று²–தல் *neṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பெறுதல் (பாண்டி.); to attain as an end.

நெற்று³–தல் *neṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) முதிர்தல்; to mature, ripen.

[நெறி¹–தல். → நெற்று–தல்.]

நெற்று⁴ *neṟṟu*, பெ. (n.) 1. தேங்காய் முதலியவற்றின் முதிர்ந்து காய்ந்த காய்; a dried, mature seed or nut. *"வாகை வெண்ணெற் றொலிக்கும்"* (குறுந். 7). *தேங்காய், நெற்றுகாயாகப் பார்த்து வாங்கிவா. "நெற்று விளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்"* (குறுந். 39). *"அத்த வாகை அமலை வால் நெற்று"* (குறுந். 369). *"வாடல் உழிஞ்சில் விளை நெற்று அந்துணர் ஆடுகளப் பறையின் அரிப்பன வொலிப்ப"* (அகநா.45). *"சிள்வீடு கறங்கும் சிறிஇலை வேலத்து ஊழ்உறு விளைநெற்று உதிரக் காழியர் கவ்வைப் பரப்பின் வெவ் உவர்ப்பு ஒழியக் களரி பரந்த"* (அகநா. 89). *"ஒள்ளிணர்ச் சுடர்ப்பூங் கொன்றை ஊழுறு விளை நெற்று அறை மிசைத் தாஅம் அத்தம் நீளிடை"* (அகநா.115). *"பெருநீர் மேவல் தண்ணடை எருமை இரு மருப்பு உறழும் நெடுமாண் நெற்றின் பைம் பயறு உதிர்த்த கோதின் கோல் அணை"* (புறநா. 297). *"முற்றற் சிறு மந்தி முற்பட்ட தந்தையை நெற்றுக் கண்டன்ன விரலான் ஞெமிர்த்திட்டுக் குற்றிப் பறிக்கும் மலைநாட"* (நாலடி. 237). 2. நெறிப்பு (இலக். அக.); stiffness. 3. உலர்ந்த பழம்; dry-fruit *"நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற"* (கந்தரல. 58).

[நெறி → நெறு → நெறு¹ → நெற்று. 1. மீண்டும் முளைப்பதற் குரிய அளவில் முற்றிய காய். 2. வேர்க்கடலை போன்றதின்முதிர்வு. 3. தேங்காய், பீர்க்கு முதலியவற்றின் காய் முதிர்ச்சி. 4. உலர்ந்த பழம்]

நெற்றுக்குவிடு—தல் *neṟṟukku-viḍu-*, 18. செ. குன்றாவி. (v.t.) மரஞ்செடிகளில் காயை விதைக்காக முதிர்ந்துலரவிடுதல் (வின்.); to let nuts and berries to mature and run to seed. *முருங்கைக்காய் நான்கை நெற்றுக்கு விட்டுவை.*

[நெற்று → நெற்றுக்கு + விடுதல்.]

விதை எடுப்பதற்காக பறிக்காமல் மரத்திலேயே விட்டு வைத்தல். இப்படி விடப்படும் காய் நன்கு முற்றி பழுத்து விளைந்து நல்ல விதையைக் கொடுக்கும். விதைக்காய், விதை நெல்லு என்ற உலக வழக்கும் உண்டு. அவரை, வெண்டை, கொத்தவரை, முருங்கை, பீர்க்கு, சுரை போன்றவை நெற்றுக்கு விடும் காய் வகைகளில் சில.

நெற்றுப்படு—தல் *neṟṟu-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.), கறிக்குதவாதபடி காய் முற்றிப் போதல் (வின்.); to become too ripe for use in cooking. *அவரைக்காய் நெற்றுப் பட்டுவிட்டது.*

[நெற்று + படு—தல்]

நெற்றெடு¹—த்தல் *neṟṟeḍu-*, 4. செ. குன்றாவி. (v.t.), நெற்றையுதிர்த்து விதையெடுத்தல் (வின்.); to shell dried beans for seed.

[நெற்று + எடு—தல்]

அவரை, முருங்கை, கொத்தவரை, பீர்க்கு, சுரை போன்றவற்றின் நெற்றை உதிர்த்து விதை எடுத்தல்.

நெற்றெடு²—த்தல் *neṟṟeḍu-*, 4 செ.கு.வி. (v.i.), விதை சேர்த்து வைத்தல் (இ.வ.); to collect seeds. *அவரையின் நெற்றெடுத்து வைத்தான்.*

[நெற்று + எடு—த்தல்]

நெறதழநாவி *neṟadaḻa-nāvi*, பெ. (n.) அலரி; oleander. (சா.அக.).

நெறநெறெனல் *neṟa-neṟeṉal*, பெ. (n.) ஓர்ஒலிக்குறிப்பு; onm. expr. of grinding or gnashing the teeth. *"நிகரறுமுரகன் முடிநெறநெறென"* (திருப்போ. சந். பெருங். 2:6). *பல்லை நெறநெறென கடித்தான்.* 2. மென்மையற்றிருத்தற் குறிப்பு; expr. signifying roughness or coarseness. *மா நெறநெறென்றிருக்கிறது.*

[நெறநெற + எனல். ஈரடுக்கு ஒலிக்குறிப்பு]

நெறி[1]–தல் *neṟi-,* 2 செ. கு. வி. (v.i.) மயிர் குழற்சியாதல்; to be wavy, curly, as the hair of a person. "*நெறிந்தகருங் குழல்மடவாய்*" (திவ். பெரியாழ். 3. 10:1).

[நெரி → நெறி → நெறி – தல் = வளைதல், நொறுங்குதல், நிலைகெடுதல், நெருங்குதல்]

நெறி[2]–த்தல் *neṟi-,* 4 செ. குன்றாவி. (v.t.) 1. புறவித ழொடித்தல்; to strip a flower of its calyx. "*மலர் வாங்கி நெறித்து*" (கலித்.76). 2. சினத்தால் நெற்றியைச்சுருக்கிப் புருவத்தை வளைத்தல்; to contract, as the brow in anger. "*நெறித்த நெற்றியர்*" (கம்பரா. கரன்வதை.43). *புருவத்தை நெறித்து என்னைப் பார்த்தார். 3. நிமிர்த்துதல்;* to prick up, as the ears. *காதை நெறித்தான்.* 4. கையாற் பிடித்து விடுதல் (கலித்.32) to press firmly with the hand. 5. இரண்டு கைவிரல்களையும் கோத்துச் சொடுக்கு ஓசை கேட்க வைத்தல்; to crack the fingers. "*நீ நாசமாய்ப்போ*" *என்று கைவிரல்களை நெறித்துச் வசவு (சாபம்) சொன்னான்.*

து. நெசிபுநி

[நெறி[1] → நெறி[2]]

நெறி[3]–த்தல் *neṟi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. முறுக்காயிருத்தல் (இ.வ.); to be stiff. 2. மயிர்சுருளல், மயிர் குழலுதல்; to curl in ringlets, as hair. "*நெறித்திட்ட மென்கூழை*" (திவ். பெரியதி. 10. 6: 8). "*நெறிசுரிபூங்குழல்*" (யா.கா.செய்.3). 3. நெளித்தல்; to cause to bend.

[நெறி[1] → நெறி[3] –த்தல்.]

நெறி[4]–த்தல் *neṟi-,* 4 செ. குன்றாவி. (v.t.) நோக்குதல் (நீலகேசி, 53,உரை); to look.

[நெறி[1] → நெறி[4] –த்தல்.]

நெறி[5] *neṟi,* பெ. (n.) 1. முடக்கம், வளைவு; bend, curve, turning, as of a road. "*நெறிகொள் வரிக்குடர்*" (புறநா. 160). 2. சுருள்; curliness of hair. "*குறுநெறிக் கொண்ட கூந்தல்*" (பெரும்பாண். 162). 3. கருமணல், அறல்; black sand. "நெறிமருப்பெருமை" (சீவக. நாமக. 15). 4. வழி, way, road, path. "*கல்வரையு முண்டா நெறி*" (நாலடி, 154). "*ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி உளப்பட மூன்றே மொழி நிலை தோன்றிய நெறியே*" (தொல். எழுத்து. 45). "*கோடியர் தலைவ கொண்ட தறிந அறியாமையின் நெறிதிரிந் தொராஅ தாற்றெதிர்ப் படுதலு நோற்றதன் பயனே*" (பொருந.57,59). "*நூனெறி மரபிற் பண்ணி யானாது*" (சிறுபாண்.230). "*பல்லெருத்துமணர் பதிபோகு நெடுநெறி எல்லிடைக் கழியுநர்க் கேமமாக*" (பொரும்பா.65,66). "*படுத்து வைத்தன்ன பாறை மருங்கின் எடுத்து நிறுத் தன்ன விட்டருஞ் சிறுநெறி*" (மலைபடு.15,16). "*நெடுநெறிச் சகடம் மணல் மடுத்து உரறும் ஓசை*" (நற்.4). "*புலிபார்த்துறையும் புல்லதர்ச் சிறுநெறி*" (நற்.29). "*பல்லா நெடுநெறிக் ககன்று வந்தென*" (குறுந்.64). "*இறையுற வோங்கிய நெறியயல் மராஅத்த*" (குறுந்.92). "*கல்லுடை நெடுநெறி போழ்ந்து சுரனறுப்ப*" (பதிற்றுப்.19:2). "*நெறிகெட விலங்கிய நீயிரிச்சுர மறிதலு மறிதிரோ வென்னுநர்ப் பெறினே*" (அகநா.8). "*யறு நீ ரம்பியி னெறிமுத லுணங்கு*" (அகநா.29). "*நாஅல் வேத நெறி திரியினும்*" (புறநா. 3). "*அறநெறி முதற்றே அரசின் கொற்றம்*" (புறநா.55). "*காம நெறிபடருங் கண்ணினார்க் கில்லையே ஏம நெறிபடரு மாறு*" (நாலடி,13). "*ஒழிந்தாரைப் போற்றி நெறிநின்மின் இற்றிதன் பண்பென்று சாற்றுங்கொல் சாலச் சிரித்து*" (நாலடி,49). "*நூனெறி மரபின் அரங்கம் அளக்குங் கோலள விருபத்து நால்விரலாக*" (சிலப்.3:99,100). "*குயிலுவமாக்கள் நெறிப்பட நிற்ப*" (சிலப்.3:130). "*தீநெறிப் படரா நெஞ்சினை யாகுமதி*" (மணிமே.5:29). "*பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார்*" (குறள்,6).

"நின்றிடைவிடாது நெறிசென்றுற நெருக்கி" (கம்பரா. மந்திரப். 55).

ம., க. நெறி.

[நெறி[1] → நெறி[5]]

நெறி: குணம் அல்லது பண்பணிகளின் தொகுதியை நெறி அல்லது மார்க்கம் என்பர். தண்டியாசிரியர் செய்யுள் நெறி இரண்டென்று கூறுவார். அவை வைதருப்பம், கவுடம் என்பன. வைதருப்பம் = விதர்ப்பநாட்டுமொழிநடை (நெறி). கவுடம் = கவுடநாட்டு மொழிநடை. இந்நெறியை முறைமை (ரீதி) என்று வாமனகாரிகை முதலிய வடநூல்கள் கூறும்.

நெறி என்பது, சொல்லும் பொருளும் நோக்கிய தொரு வரையறை. அது செய்யுள் நடையென்று குறிப்பர். வீரசோழியமும் தண்டியலங்காரமும் வைதருப்பம், கவுடம் என்னும் இரண்டை உரைத்து, வை தருப்பத்தையே சிறந்ததாகக் கருதின. அதற்குரிய குணங்கள் பத்து.

"மெய்பெறு மரபின் விரித்தசெய் யுட்கு
வைதருப் பம்மே கௌடம் என்றாங்கு
எய்திய நெறிதாம் இருவகைப் படுமே" (தண்டி. 18) என்பது தண்டி யலங்காரம்.

மாறனலங்காரத்தார் மூன்று நெறி கொண்டார். அவை வைதருப்பம், கவுடம், பாஞ்சாலம் என்பன. வாமனரும் இம் மூன்றைக் கூறினார். வாமனருடைய காலம் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். (some aspects of literary criticism in Sanskrit, p.29).

மாறனலங்கார ஆசிரியர் 16–ஆம் நூற்றாண்டினர். ஆதலின், வாமனர் நூலைப் பின்பற்றியே மாறனலங்கார நூலாசிரியர் நெறி மூன்று வகுத்தனர் என்று கொள்ளலாம்.

தமிழ் விடு தூது நூலின் ஆசிரியர் நெறி நான்கு என்றனர். "நல்ல நெறி, நாலே விதையா". 9–ஆம் நூற்றாண்டில் வாழ்ந் திருந்த, ருத்திரர் என்ற ஆசிரியர் இயற்றிய வடமொழி அணியிலக்கணத்தில் வைதருப்பி, கௌடி, பாஞ்சாலி, இலாடீயம் என்னும் நான்கு நெறிகள் கூறப்படுகின்றன. அக்கினி புராணத்திலும் இந்நான்கு நெறிகளும் காணப்படும். போசன் இயற்றிய சரசுவதி கண்டாபரணத்தில் மேற்கூறிய நான்கு நெறி யோடு மாகதி, அவந்திகா என்ற இரண்டும் சேர்த்து ஆறாகக் கூறப்படுகின்றன.

வாமனர் இந்நெறிகளுக்கு உறுப்புகளாக இருப்பவை குண அணிகள் என்றும், அவைகளில் ஒவ்வொன்றும் சொல்லின் குணம், பொருளின் குணம் என இருவகை ஆகும் என்றும் கூறுவர். நெறிகளைப் பற்றி மாறனங்கார நூலாசிரியர், அவை ஒவ்வொரு நாட்டிலும் வழங்கும் முறைபற்றிப் பெயர் பெற்றன என்பர்.

"மன்னியபேர் யாப்பிற்கு வைதருப்பம் வான்கவுடம்,
பன்னியபாஞ் சாலம் எனப்பகுத்து – மி
ன்னிடையாய், நன்னூன் முழுதுணர்ந்தோர்
நாட்டகத்து நாட்டலுறீஇ, முன்னூலுட் கண்ட நெறி
மூன்று" (மாறனலங்.77).

உரையாசிரியர்கள் நெறியைப் பாகம் என்ற சொல்லாலும் குறிப்பர். மெல்லென்ற விழுமிய இனிய மொழியும் மெல்லென்ற விழுமிய இனிய அறம் முதலிய நாற்பொருளும் பொருந்துவன வைதருப்ப பாகம் (நெறி) என்றும், விழுமிய சொற்கடினமும் பொருட் கடினமும் தோய்ந்து அரிய நடைத்தாய்ப் புலவனாற் கூறப்படுவது கவுட பாகம் (நெறி) என்றும், மென்மையும் கடினமுமாகிய வைதருப்ப கவுடங்களோடு கூடாதே இடைநிலைப்பட்டனவாம். இனிய சொல்லாலும் பொருளாலும் தடையின்றி நடைபெற்று ஒழுகுவது பாஞ்சாலம் என்றும் கூறுவர்.

அவ்வந் நெறியாலே பாடும் கவிகளுக்கு அந்நெறியினாலே பெயர் வழங்கும். ஒட்டக் கூத்தர் கவுடப்புலவர் என்று கூறப்படுதல் காண்க. நெறிகளில் வைதருப்ப நெறியே யாவராலும் விரும்பி ஏற்றுக் கொள்ளக்கூடியது. (தமிழ்க்காப்பியங்கள், கி.வா.செ.).

நெறி[6] *neṟi,* பெ. (n.) **1.** சமயம் (கம்பரா. கோலங்.12); religion. **2.** சமயக் கொள்கைக் காகவோ தனி மனித ஒழுக்கத்துக்காகவோ ஏற்படுத்தப்பட்ட முறை (விதி); precept, rule, principle. *"நாஅல் வேத நெறிதிரியினும்"* (புறநா. 2). *இறுதிவரை சிவ நெறியைக் கடைப்பிடித்தார்* **3.** நல்லொழுக்கம்; path of virtue, righteousness. *நெறிதப்புவார்க்கு அறிவிப்பது வீண் (பழ.)* **4.** செய்யுணடை; style of poetic composition. *"எய்திய நெறி"* (தண்டி. 12). **5.** குலம்; line, lineage. *"மதிநெறி மாதை வேட்பான்"* (திருவாலவா. 4:24) **6.** சூழ்ச்சி (உபாயம்); method; means. *"நெறி காட்டி நீக்குதியோ"* (திவ்.இயற்.பெரியதி. 6). **7.** கோயில் (யாழ்.அக.); temple. **8.** வீடுபேறு (அக.நி.); salvation. **9.** மனநிலை (வின்.); state

of mind, temper. **10.** ஆணை, ஆளுகை; rule, sovereignty. *"குடபுல வரசர்கணெறி செய்து"* (திருவிளை. அன்னக்குழி. 20). **11.** குதிரை முதலியவற்றின்நடை; pace, as of a horse. *"நெறியைந்து மோங்க"* (திருவாலவா. 28:34). **12.** வரிசை (வின்); order, row, series. **13.** அறம், முறைமை (நீதி) (சூடா.); justice.

ம., க. நெறி.

நெறி[7] *neṟi,* பெ. (n.) நெறிக்கட்டி (உ.வ.); inflammation of the gland. "தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் நெறி கட்டினது போல" (பழ.).

[நெரி → நெறி. இது ர– றகரப் பிழைத்திரிபு]

கை கால்களில் காயங்கள் உண்டானால் தொடையிடுக்கிலும், அக்குளிலும் எழும் கட்டி போன்ற அமைப்பு.

நெறி[8] *neṟi,* பெ. (n.) **1.** தாழ்ப்பாள் (கட்டட. நாமா.); bolt, staple. **2.** மண்டைக்குழி (வின்.); temples. **3.** புறவித ழொடிக்கை; stripping flower of its calyx. *"முழுநெறிப்பகைத் தழை"* (அகநா.156).

[நெரி → நெறி]

நெறிக்கட்டி *neṟi-k-kaṭṭi,* பெ. (n.) புண் கட்டிக்காக உடற்சந்துகளிலுண்டாகும் புடைப்பு (M.L); inflammation of the lymphatic gland.

[நெரி → நெறி + கட்டி.]

உடலில் உண்டாகும் புண், கட்டி போன்ற வற்றின் கரணியாமாக தோள்மடிப்பு தொடைச் சந்துகளில் உண்டாகும் கட்டி போன்ற அமைப்பு.

நெறிக்கட்டிக்காய்ச்சல் *neṟi-k-kaṭṭi-k-kāyccal,* பெ. (n.) புண் அல்லது கட்டி அல்லது யானைக்கால் நோய் அல்லது யானைப் பிடுக்கு நோய் காண்பதற்கு முன், இரண்டு அக்குள் அல்லது இரண்டு தொடைச்சந்திலும் கட்டி ஏற்படுவதால் உண்டாகும் காய்ச்சல்; filarial fever; fever accompanying the swelling of the lymphaglands. *நெறிக்கட்டிக் காய்ச்சலால் நேற்றுமுழுவதும் துன்பப்பட்டான்.*

[நெறிக்கட்டி + காய்ச்சல்.]

நெறிக்கட்டிச்சுரம் *neṟi-k-kaṭṭi-c-curam,* பெ. (n.) *நெறிக்கட்டிக் காய்ச்சல்* பார்க்க; see *neṟi-k-kaṭṭi-k-kāyccal.*

[நெறி + கட்டி + சுரம்.]

நெறிக்கட்டிவீக்கம் *neṟi-k-kaṭṭi-vīkkam,* பெ. (n.) **நெறிக்கட்டி** (M.L): பார்க்க; see *neṟi-k-kaṭṭi.*

[நெரிக்கட்டி → நெறிக்கட்டி + வீக்கம்.]

நெறிக்கட்டு *neṟi-k-kaṭṭu,* பெ. (n.) **நெறிக்கட்டி** (M.L): பார்க்க; see *neṟi-k-kaṭṭi.*

[நெரி[2] → நெறி + கட்டு.]

நெறிக்கல் *neṟi-k-kal,* பெ. (n.) சுக்காங்கல் (யாழ்.அக.); kunkur.

[நெறி[2] + கல்.]

நெறிக்காய்ச்சல் *neṟi-k-kāyccal,* பெ. (n.) **நெறிக்கட்டிக்காய்ச்சல்** பார்க்க; see *neṟi-k-kaṭṭi-k-kāyccal.*

[நெறி[2] + காய்ச்சல்.]

நெறிக்கோரை *neṟi-k-kōrai,* பெ. (n.) *நெரிக்கோரை* (வின்.) பார்க்க; see *neri-k-kōrai.*

[நெறி + கோரை.]

நெறிகட்டி *neṟi-kaṭṭi,* பெ. (n.) *நெறிக்கட்டி* (M.L): பார்க்க; see *neṟi-k-kaṭṭi.*

[நெறி² + கட்டி.]

நெறிகாட்டுநாதர் *neṟi-kaṭṭu-nādar,* பெ. (n.) திருக்கூடலையாற்றூர் இறைவன்பெயர்; a god in Thirukkūḍalai-y-āṟṟūr.

[நெறி (=வழி) + காட்டு + நாதர்]

திருக்கூடலையாற்றூர் என்பது திருப்புறம்பயம், திருமுது குன்றம் இடையில் உள்ள ஊர். தேவாரப் பாடல் பெற்ற தலம். இங்குள்ள இறைவன் பெயர் நெறிகாட்டு நாதர் திருஞானசம்பந்தர் திருப்புறம் பியத்திலிருந்து திருமுது குன்றத்துக்குச் செல்கையில் எதிரில் மறையவர் கோலத்தில் வந்த இறைவனை அறியாது திருமுது குன்றத்துக்கு வழி கேட்க இறைவனும் *"இவ்வழி திருக்கூடலை யாற்றூருக்குச் செல்கிறது"* என்றுகூறி வழி (நெறி) காட்டித் தாமும் ஊரெல்லை வரை சென்று மறைந்தார் என்பர். இதனால் இவ்வூரில் உள்ள இறைவர்க்கு இப்பெயர் வந்தது. (சி.பெ.அ.)

நெறிகேடன் *neṟi-kēḍaṉ,* பெ. (n.) நெறிகெட்டவன்; the person having immoral qualities.

[நெறி+ கேடன். கேடு → கேடன்.]

[நல்வழியில் வாழ்வை அமைத்துக் கொள்ளாதவன்.]

நெறிகேடு *neṟi-kēḍu,* பெ. (n.) 1. முறைகேடு (அநீதி); injustice. 2. தீயொழுக்கம்; immorality.

[நெறி⁴ + கேடு.]

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்" (குறள். 131.) பெண்ணுக்குப் கற்புப் போல ஆணுக்கு ஒழுக்கம் உயிர்போல் காக்க வேண்டும். காவாவிடின் உயிர்போம்; எய்ப்பு (எய்ட்ஸ்) நோய்வருமென்று அறிக.

நெறிசெய்–தல் *neṟi-šey-,* 1 செ. குன்றாவி. (v.t.) 1. நல்வழிப் படுத்துதல்; to lead in righteous path. *"நெறிசெய்தருளி... என்னை"* (திருவாச. 13:8). 2. ஆளுதல், to reign, sway. "குடபுல வரசர்க ணெறி செய்து" (திருவிளை. அன்னக்குழி. 20)

[நெறி⁴ + செய்–தல்.]

நெறித்தழை *neṟi-t-taḻai,* பெ. (n.) தழை ஆடை; leaf cloth, foliage cloth. *"கொடுங்கழை நிவந்த நெடுங்கால் நெய்தல் அம்பகை நெறித்தழை அணிபெறத் தைஇ"* (நற். 96). *"அயவெள் ளாம்பல் அம்பகை நெறித்தழை"* (குறுந்.293).

[நெறி+ தழை. நெறிதல்=அடர்தல், நெருங்குதல்.]

நூலாடைக்கு முன்னர் மாந்தர்இலை, தழைகளை முறையாக முன்பின் திறவாமல் இருக்கும்படி கட்டிய ஆடை என்றுணர்க.

நெறிதவறிநட–த்தல் *neṟi-tavaṟi-naḍa-,* 3 செ. கு. வி. (v.i.) முறை தவறி நடத்தல்; to behave badly. *நெறி தவறி நடந்தால் வாழ்வில் முன்னேற முடியாது.*

[நெறிதவறி + நட –த்தல்]

வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டிய வழியில் அல்லாமல் முறைதவறிய வழியில் நடத்தல். நெறி தவறாமல் முறையான வழியில் நடப்பதால் அடையும் பயனைத் திருவள்ளுவர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும், தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள், 50). என்று கூறுகிறார்.

நெறிதவறிய நடத்தை *neṟi-tavaṟiya-naḍattai,* பெ. (n.) தவறான நடத்தை; mis-conduct. செங்கோல் நெறி தவறிய நடத்தையால் நெடுஞ்செழியன் தானே இறந்தான்.

[நெறிதவறிய+ நடத்தை. முறையற்ற ஒழுக்கத்தை மேற்கொண்டு நடத்தல்.]

பசி, காமம் என்னும் இயற்கைப் பண்புகளுக்கு உரிய தீர்வுகளை அடையும் நடைதவறும் குறுக்குவழி, நடத்தை.

நெறிநீர் *neṟi-nīr,* பெ. (n.) கடல்; sea. "*நெறிநீர் வளையும் நிழனித்திலமும்*" (சீவக. 1522).

[நெறி¹+ நீர்.]

உலகக்கோளத்தில் 70 விழுக்காடு பரப்பில் தேங்கியுள்ள கடல், அலையடித்தாலும் கரைகடவாது, நெறியோடு நிற்றல் காண்க. காற்றழுத்த மண்டிலத்தால் புயல் வருங்கால் நீர்கடத்தல் நெறி (விதி) விலக்கு.

நெறிநெட்டி *neṟi-neṭṭi,* பெ. (n.) *நெரி நெட்டி* (உ.வ.) பார்க்க; see *neri-neṭṭi.*

[நெரிநெட்டி → நெறிநெட்டி.]

நெறிநெட்டிக்கோரை *neṟi-neṭṭi-k-kōṟai,* பெ. (n.) *நெரிக்கோரை* (சங்.அக.) பார்க்க; see *neri-k-kōrai.*

[நெறி + நெட்டிக்கோரை. கோரைவகை.]

நெறிப்படு-தல் *neṟi-p-paḍu-,* 20 செ. கு. வி. (v.i.) 1. ஒழுங்கு படுதல்; to be put in order; to be kept within bounds. "நெறிப்படச் சுவலசைஇ" (கலித்.9). "*மற்றவர் குறிப்பிற் கண்டிசின் யானே நெறிப்பட வேலும் இலங்கிலை துடைப்ப*" (நற்.177). "*நெறிபடு கூழைக் கார்முதிர்பு இருந்த வெறி கமழ் கொண்ட நாற்றமுஞ் சிறிய*" (நற்.368). "*கைவள் ளோரி கானந் தீண்டி எறிவளி கமழும் நெறிபடு கூந்தல்*" (குறுந். 199:4). "*நெறிபடு மருப்பி னிருங்கண் மூரியொடு வளை தலைமாத்த தாழ்கரும் பாசவர்*" (பதிற் 67:15). *நெறிப்பட பொருள்களை வைக்க வேண்டும்.* 2. நல்லொழுக்கத்தில் நிலைபெறுதல்; to be established in a good moral or religious course. 3. ஒன்றன் வழிப்படுதல்; to follow one's lead. *யாற்றுப் பெருக்கின் நெறிப்பட்ட புணை.* 4. உள்ளடங்குதல்; to come under one's power or control.

[நெறி + படு—தல். படுதல்=அகப்படுதல், நிலைபெறுதல், ஒழுங்காதல் இது தன்வினை.]

நெறிப்படுத்து-தல் *neṟi-p-paḍuttu-,* 5 செ.கு.வி. (v.i.) வழிமுறைக்கு உட்படுத்துதல்; operate in a particular way.

[நெறி + படுத்து—தல். இதுபிறவினை]

நெறிப்பிறழ்வு *neṟi-p-piṟalvu,* பெ. (n.) கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க முறையில் இருந்து மாறுகை; delinquency.

[நெறி + பிறழ்வு. நிற்க வேண்டிய, கடை பிடித்து நடக்க வேண்டிய முறையினின்று தவறுகை.]

முற்காலத்தில் நெறிப்பிறழ்வு என்பது அறவழிதவறி நடக்கும் நடத்தை என்றும், அதற்குச் செய்ய வேண்டியது தண்டனை தருவது ஒன்றே என்றும் கருதப்பட்டு வந்தது. நாளடைவில் பலவகைக் கரணியங்கள் அறியப்பட்டன. இந்தக் கரணியங்களை மரபு நிலையின (Heridatary) என்றும், சூழ்நிலையின (Environmental) என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இவை யிரண்டும் ஒன்றொடுஒன்று தொடர்புடையன. ஒன்றையொன்று மாற்றுவன.

சூழ்நிலையில் வீட்டுநிலைமை, பாட சாலையில் கற்றவை, அக்கம்பக்கத்து நிலைமை, பொருளியல் நிலைமை, கற்கும் விளையாட்டுகள், சேரும் நண்பர்கள் ஆகியவை அடங்கும்.

வறுமையும் நெறிப்பிறழ்வுக்கு ஒரு முதன்மைக் கரணியம். வறியவர் வீட்டுக் குழந்தைத் திருடவாய்ப்பிருக்கிறது.

ஆளுமை பற்றிய நெறிப்பிறழ்வு கரணியம் இருவகைப்படும். உடல்பற்றியவை; உள்ளம் பற்றியவை.

உடல்பற்றியவையின் குடிவழியில் (பாரம்பரியம்), உடற் குறைகள், சுரப்புக்களின் குறைகள் என்பன அடங்கும். இவற்றால் மட்டுமே நெறிப்பிறழ்வு உண்டாகிவிடும் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் நல்ல இயல்புகள் இல்லாதபோது இவை மிகுந்த முதன்மையான கரணியங்களாக ஆகிவிடுகின்றன.

உள்ளம் பற்றியவை என்பன உள்ளத்தில் உண்டாகும் முரண்பாடுகளும், அவற்றால் உருவாகும் ஆளுமைப் பண்புகளுமாம். மனிதனுக்குப் பாதுகாவல், அன்பு, மதிப்பு, போன்ற பல தேவைகள் உள்ளன. அவற்றை முழுமை செய்யாவிடில் அவை முழுமையாக வேறுவழிகளைத் தேடும்.

ஆளுமைப்பண்பும் (personality) முதன்மை யானது. ஆளுமைப்பண்பை உளவியலார் புறமுகன் (extrovert) என்றும், அகமுகன் (introvert) என்றும் இருகூறாகப் பிரிந்துள்ளனர். புறமுகன் உரத்தகுரலில் வெளிப்படையாகப்பேசி, நண்பரோடு சேர்ந்து இயங்கி, ஊரில் இன்ப நிகழ்ச்சியோ, துன்ப நிகழ்ச்சியோ நடந்தால் பங்கேற்பான். அகமுகன் இப்பண்புகளுக்கு மாறானவனாக இருப்பான். இருவரும் தம் பண்பில் வழிமாறினால் நெறிப்பிறழ்வே குடும்பத்திலும், சூழ்நிலை யிலும் ஏற்படும் குறைகளால் ஆளுமை வளர்ச்சிக்குத் தடை உண்டாகுமாயினும் நெறிப்பிறழ்வு தோன்றும்.

நெறிப்பிறழ்வைத் தடுப்பதற்குப் பெற்றோர்கள் தக்க கல்வி தருவது இன்றியமையாததாகும். எந்த வகையிலும் நெறிப்பிறழ்வு உண்டாகாமல் தடுப்பது குமுகாயத்தின் முதற் கடமையாகும். நெறிப்பிறழ்வு உண்டாவதன் கரணியத்தைக் கண்டுபிடித்து அதை நீக்குவதற்கேற்ற செயல்களைச் செய்தல் வேண்டும்.

நெறிப்பு¹ *neṟippu,* பெ. (n.) **1.** புருவத்தை வளைக்கை; knitting of the brows. "*பேரண்ட மனைத்தும் புருவச்சிறு நெறிப்பாற் குமைக்கும் பெருமான்*" (விநாயகபு. 33:13). **2.** நிமிர்ந்திருக்கை; standing erect; bristling, stiffness. **3.** செருக்குக் கொள்கை (அகங்ரிக்கை) (வின்.); insolence, haughtiness.

[நெறி² → நெறிப்பு.]

நெறிப்பு² *neṟippu,* பெ. (n.) **1.** சிலிர்ப்பு; sprouting. **2.** முரிப்பு; break; (சா.அக.) **3.** பெண்டிரின் மயிர் நெறிப்பு; curl and woman's hair.

[நெறி → நெறிப்பு.]

நெறிபடு-தல் *neṟi-paḍu-,* 20 செ. கு. வி. (v.i.) நெருங்குதல்; to be close together. "*எறிவளி கமழு நெறிபடு கூந்தல்*" (குறுந். 199). "*நெறிபடு மருப்பி னிருங்கண் மூரியொடு*" (பதிற்றுப். 67:15). "*நெறிபடு கூழைக் கார்முதிர்பு இருந்த*" (நற்.368).

[நெறி¹ + படு-தல்]

நெறிபு *neṟibu,* பெ. (n.) நெறிப்பு² பார்க்க; see *neṟippu.* "*சிறுபுறம் புதைய நெறிபு தாழ்ந் தனகொல்*" (அகநா.117:14)

[நெறிப்பு → நெறிபு-இஃது இடைக்குறை]

நெறிபொறி *neṟi-poṟi,* பெ. (n.) முனைப்புச்செயற்பாடு; intense activity. *வேலையின் நெறிபொறி* (நெல்லை).

[நெறி² + பொறி]

நெறிமணல் *neṟi-maṇal,* பெ. (n.) **1.** கருமணல்; black sand. "*நெறி மணலேடினர் செல்லச் சொல் லேற்று*" (பரிபா.20:43) **2.** நுண்மணல்; fine sand.

[நெறி + மணல்.]

நெறிமயிர் *neṟi-mayir,* பெ. (n.) சிலிர்த்தமயிர்; hair standing on ends. (சா.அக.).

[நெறி + மயிர்.]

நெறிமருப்பு *neṟi-maruppu,* பெ. (n.) எருமை மான் முதலியவற்றின் முடங்கின கொம்பு;

curved horn. *"நெறிமருப் பெருமை"* (ஐங்குறு.91:1). *"துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை அரிமலர் ஆம்பல் மேய்ந்த நெறிமருப்பு, ஈர்ந்தண் எருமைச் சுவல்படு முதுபோத்து"* (அகநா.316:2)

[நெறி[1]+மருப்பு. மருப்பு=கொம்பு. கலைமான் என்னும் ஆண்மான் நெறிமருப்பு உடையது.]

நெறிமாணவையம் *neṟi-māṇ-avaiyam*, பெ. (n.) அறத்தைத் தெளியவுணர்ந்த ஒழுக்கத்தில் சிறந்த அவைக்களம்; assembly of gracious persons. *"அறமறக் கண்ட நெறிமா ணவையத்து"* (புறநா.224)

[நெறிமாண்+அவையம். நெறிமான் → நெறிமாண். நெறிமாண்=அறங்கூறும் அவை]

நெறிமாறு—தல் *neṟi-māṟu-*, 5 செ.கு.வி. (v.i.) வழிதப்புதல்; to lose one's way. *"நொந்து நெறிமாறி வந்த விருந்தும்"* (திரிகடு.69).

[நெறி[4]+மாறு—. மாறுதல்=வேறுபடுதல், நீங்குதல்]

நெறிமான் *neṟi-māṉ*, பெ. (n.) அறங்கூறுவோன் (நீதிமான்) (யாழ். அக.) ; person of integrity, just man. *நெறிமான் வரும்வரை கூட்டம் கலையாது காத்திருந்தது.*

[நெறி + மான். ஆன், ஆர் போல மான், மார் ஒருமை பன்மைக்கு ஆதல் காண்க.]

நெறிமுதல் *neṟi-mudal*, பெ. எ. (adj.) வழியின் கண்ணே உள்ள; way side. *"குறுநடை பலவுள் ளலமே நெறிமுதல் கடற்றிற் கலித்த முடச்சினை வெட்சி"* (குறுந்.209). *"நீர்மருங் கறியாது நேர்மருங் கோடி யறுநீ ரம்பியி னெறிமுத லுணங்கு"* (அகநா. 29:18). *"பரலவல் படுநீர் மாந்தித் துணையோ டிரலை நன்மா னெறிமுத லுகளும்"* (குறுந். 250:2).

[நெறி + முதல். நெறி = வழி.]

நெறிமுறை *neṟi-muṟai*, பெ. (n.) செயற்படும் போது பின்பற்றுவதற்கென வகுக்கப்பட்ட வழிமுறை; proper method. *சாலை நெறிமுறையைக் கடைப்பிடித்து வண்டியை ஓட்டவேண்டும். ஆய்வு நெறி முறைகள்.*

[நெறி + முறை. நெறி = வழி]

நெறிமுறைமை *neṟi-muṟaimai*, பெ. (n.) அறவழி (நியாயவழி) (வின்.); rules of propriety, rectitude or equity.

[நெறி[4]+முறைமை.]

நெறிமை *neṟimai*, பெ. (n.) 1. முறை (விதி); rule. *"நிதியினை.... நெறிமையால் நினைய வல்லார்"* (திவ். திருக்குறுந். 1). *"நெறிமையினான்காய் வருநிரையசையே"* (யா.கா.உறுப்.2, உரை) 2. நன்னெறி; rectitude, honesty. 3. வழக்கு; usage, literary usage. *"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேற் பொற்புடை நெறிமை இன்மை யான"*. (தொல். பொருள். 35).

[நெறி → நெறிமை]

நெறியரு நீள்சுரம் *neṟi-y-aru-nīḷ-šuram*, பெ. (n.) கடத்தற்கரிய பாலை நிலம்; desert. *"சிறுபுன் புறவொடு சிற்றெழால் சீறும் நெறியரு நீள்சுரத்(து) அல்குவர் கொல் தோழி"* (தி. மொ. 15).

[நெறி +அரு+நீள்சுரம். அரு=அரியதான. நீள்சுரம்=நீண்டபாலை நிலம்].

நெறியிலார் *neṟiyilār,* பெ. (n.) 1. கீழ்மக்கள்; lowmen; persons inferior in status. 2. கேடர், ruined, miserable men.

[நெறி + இலார். இல்லார் → இலார்.]

நெறியாணங்கை *neṟiyāṇaṅgai,* பெ. (n.) சிறியாணங்கைச்செடி; a species of small milkwort, Polygala glabra. (சா.அக.).

[நெறியாள் + நங்கை; சிறியாள் + நங்கை. நங்கைச்செடி].

நெறியாள்கை *neṟi-y-āḷgai,* பெ. (n.) நாடகம், திரைப்படம் போன்றவற்றின் இயக்கம்; direction of a film, drama, etc.

[நெறி +ஆள்கை. ஆள்கை = ஆட்சிச்செய்வது, ஆளுவது, இயக்குவது.]

நெறியாளர் *neṟi-y-āḷar,* பெ. (n.) 1. ஆய்வு மாணவர்களுக்கு வழிகாட்டும் ஆசிரியர்; guide for one's doctorial dissertation. *முனைவர் பட்டத்திற்குச் சரியான நெறியாளர் அமையவேண்டும்.* 2. நாடக, திரைப்பட இயக்குநர்; drama, film director. *இந்த நாடகத்தின் பொருளாளரும் நெறியாளரும் ஒருவரே.*

[நெறி → நெறியாளர்.]

நெறியிருங்கதுப்பு *neṟi-y-iruṅgaduppu,* பெ. (n.) நெறிப்பினையுடைய கரிய கூந்தல்; long, flowing tresses of a woman. *"நெறியிருங் கதுப்பொடு பெருந்தோணீவி"* (குறுந். 190). *"நுண்ணறல் கடுக்கு நெறியிருங் கதுப்பினென் பேதை"* (அகநா. 35). *"நெறியிருங் கதுப்பும் நீண்ட தோளும்"* (நற். 387).

[நெறி + இரும் + கதுப்பு. நெறி = வளைவு, சுருள். இரும் = இருண்ட, கரிய. கதுப்பு = கூந்தல், தலைமயிர்.]

நெறியிலார் *neṟi-yilār,* பெ. (n.) நல்லொழுக்க மில்லாதவர் (உரி.நி.); lawless or immoral persons.

[நெறி +இல்+ஆர். இல் –எதிர்மறை இடைநிலை. 'ஆர்'–உயர்வுப்பன்மை]

நெறியிலி *neṟi-y-ili,* பெ. (n.) கெட்ட வழியில் நடப்போன்; vicious man.

[நெறி +இலி. நெறிமுறையில்லாதவன். ஒ. நோ. அறிவு + இலி = அறிவிலி]

நெறியுரை *neṟi-y-urai,* பெ. (n.) அறவுரை; motto.

[நெறி +உரை.]

நெறியோன் *neṟiyōṉ,* பெ. (n.) பெரியோன் (அக.நி); great, noble- minded man.

[நெறி → நெறியோன்.]

நெறியோன் இயல்பு :

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்". (குறள், 314).
"இன்னாசெய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு." (குறள், 987).

நெறிவிடம் *neṟi-viḍam,* பெ. (n.) 1. கொடிய நஞ்சு; virulent poison. 2. நஞ்சற்ற நாபிக்கிழங்கு; non-poisonous aconite root-Delphinium denudatum. (சா.அக.).

[நெறி + Skt.விடம். = த. நஞ்சு.]

நெறிவிலக்கல் *neṟi-vilakkal,* பெ. (n.) வழியின் ஏதமுணர்த்தி இரவில் அவ்வழியே தலைவியிடம் வருதல் தகாதெனத் தோழி தலைவனை விலக்கும் அகத்துறை (மாறனலங். 101, உரை, பக்.148); theme in which the hero

is pointed out the danger of the way he treads during night in meeting the heroine clandestinely and is dissuaded by the maid from that course.

[நெறி +விலக்கல். நெறி = வழி. விலக்கல் = நீக்கல், தடுத்தல்.]

நெறு *ne<u>r</u>u,* பெ. (n.) ஓசை (அக.நி.); sound, noise.

நெறுக்கிடல் *ne<u>r</u>ukkiḍal,* பெ. (n.) நெறுக்கென்று ஒடிகை (யாழ்ப்.); snapping.

[நெறு →நெறுக்கு + இடல். நெறு = ஓசை. நெறுக்கென்று ஓசை கேட்கும்படி ஒடிதல். நெருக்கு → நெறுக்கு – பிழைவழக்கு.]

நெறுக்கெனல் *ne<u>r</u>ukke<u>n</u>al,* பெ. (n.) ஒடிதல், முறிதல் முதலியவற்றால் உண்டாம் ஒலிக் குறிப்பு; onom. expr. signifying snapping sound. "*கயிலையைப் பற்றிய கையுமெய்யும் நெறுக்கென்றிற*" (தேவா. 587.10).

[நெறு → நெறுக்கு + எனல்]

நெறுநெறு–த்தல் *ne<u>r</u>u-ne<u>r</u>u-,* 4 செ. கு. வி. (v.i.) 1. பல்லைக் கடித்தல்; to nash one's teeth. *அச்சமிகுதியால் நெறு நெறுவென்று பல்லைக் கடித்தான்.* 2. ஒலிபடப் பிளவுறுதல்; to snap, as a stick in breaking. *முருங்கைமரம் நெறுநெறுவென முறிந்தது.* 3. உறுமுதல்; to growl, rumble. 4. நெரிந்தொலித்தல்; to sound as the biting of a hard, brittle or crispy substance.

[நெறு = ஓசை. நெறு + நெறு – நெறுநெறு → நெறுநெறு–த்தல்.]

நெறுநெறெனல் *ne<u>r</u>une<u>r</u>e<u>n</u>al,* பெ. (n.) 1. ஓசைக்குறிப்பு; crashing sound. "*நெறுநெ றெனக்கொடு நிலவறையிற்புக நெடியவன்*" (பாரத. கிருட்டிண. 191). 2. முறிதற் குறிப்பு; snapping or breaking sound. "*அசுர நிறைகளவை நெறுநெறென வெறிய*" (திவ்.பெரியதி 5.10:4).

[நெறுநெறு + எனல்]

நெறுமு–தல் *ne<u>r</u>umu-,* 5 செ. கு. வி. (v.i.) & செ.குன்றாவி. (v.t.) நெருமு–(யாழ்.அக.) பார்க்க; see *nerumu-.*

[நறுமு → நெறுமு. நறுமு = பல்லால்கடித்தல், பல்லைக்கடித்தல்.]

நென்பு *ne<u>n</u>bu,* பெ. (n.) 1. ஏணிப்பழு (யாழ்ப்.); rung of a ladder. 2. ஆப்பு (யாழ்.அக.); wooden pin.

[நெம்பு = ஏணிப்பழு. நெம்பு → நென்பு]

நென்புடவை *ne<u>n</u>-puḍavai,* பெ. (n.) மெல்லிய ஆடைவகை; a kind of fine cloth. "*நென்புடவை பொதி ஒன்றுக்குக் காசு இருபதும்*" (தெ.க.தொ. 8, 233).

[மென்மை + புடவை– மென்புடவை → நென்புடவை. ம → ந – திரிபு; முப்பது → நுப்பது.]

நென்மணி *ne<u>n</u>-maṇi,* பெ. (n.) நெல்லின் தவசம்; grain of paddy. 2. குறத்திப் பாசி (A); Job's tears. 3. அரைக் குன்றிமணி கொண்ட சிறிய எடை; goldsmith's weight = 1/2 ku<u>nr</u>imaṇi = 3/8 grain. 4. மங்கல அரிசி (அட்சதை); rice mixed with turmeric. "நென்மணி நீட்டுவாரும்" (இரகு.குறைகூறு.5).

[நெல்+மணி. மணி=அரிசி, அரிசிமணி.]

நென்மா *nen-mā,* பெ. (n.) அரிசிமாவு (திவா.); rice flour. "*நென்மா நீரிற் குழைத்து*" (காஞ்சிப்பு. தான்றோ. 4).

[நெல்+மா. நெல் அரிசியை அரைத்தமாவு.]

ஈண்டுநெல் ஆகுபெயராக அரிசியைக் குறிக்கும்.

நென்மெலி *nenmeli,* பெ. (n.) திருமால் கோயிலுள்ள இடம்; (திவ்.2.9:8); a shrine of Thirumal.

நென்னல் *nennal,* பெ. (n.) & வி.எ. (adv.) முன்னாள்; yesterday.

"*அன்னந் துணையோ டாடக் கண்டு நென்னல் நோக்கி நின்றா ரொருவர் நென்னல் நோக்கி நின்றா ரவர்தம் பொன்னேர் சுணங்கிற் போவா ரல்லர்*".

(சிலப். 7, பாட். 45).

"*அம்மவாழிதோழி நென்னல் ஓங்குதிரை வெண்மணல் உடைக்கும் துறைவன்*" (ஐங்குறு. 113).

[நெருநல் → நென்னல்.]

ஒ.நோ. திருநின்றவூர்→தின்னனூர் – வழக்குத்திரிபு.

நென்னேற்று *nennerru,* பெ. (n.) & வி.எ. (adv.) நென்னல் பார்க்க; see *nennal.* "*காலைப் பிடிக்கா நின்ற நென்னேற்றும்*" (திவ். திருப்பா.16, வியா.158).

[நெருநல் → நென்னல் → நென்னற்று → நென்னேற்று.]

[நெருநல் → நெருநற்று → நென்னேற்று → நேற்று.]

நே¹ *nē,* பெ. (n.) நகரமெய்யும் ஏகார உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'n' and 'ē'

[ந் + ஏ–நே.]

நே² *nē,* பெ. (n.) 1. அன்பு; love. 2. ஈரம்; compassion, mercy, grace. "*நேமி யுய்த்த நேஎ நெஞ்சிற் றவிரா வீசைக் கவுரியர் மருக*" (புறநா. 3).

[நுள் → நெள் → நெய் → நே = அன்பு, ஈரம் (வ. மொ. வ). நுள் = இளமை, மென்மை, நட்பு]

மொழிமூலர் தேவநேயப்பாவாணர் தமிழர் அனைவர் பெயரும் தமிழாய் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துவார். அவர் பிறந்தநாள் வேண்டுகோளாக இதையே வைத்துள்ளார். ஆயின் தமிழர் பெயர்கள் சமற்கிருதமாகவும் முன்னெழுத்து intial ஆங்கிலமாகவும் உள்ள வழு என்று நீங்குமோ. பாவாணரின் '*தேவநேசன்*' என்னும் இயற்பெயர் வடசொல் என்று சிலர் கூறியபோது விளக்கிய கட்டுரையில் தீ → தே + நெய் → நே(யம்) என்று விளக்கியுள்ளார்.

நேக¹ *nēga,* வி. எ. (adv.) மிகப்பொடியாக; very minutely. '*மாவை நேகஅரைத்து வை*'. (வின்.)

[நெகு → நேக. நெகுதல் = பொடியாதல்]

[நொய் → நொய்வு → நேய்வு → நேவு → நேவாக → நே(வா)க– என்று இடைக்குறையாக வந்திருக்க வாய்ப்புண்டு]

நேக² *nēga,* வி.எ. (adv.) நுண்மையாக நேர்மையாக; fine state, as in grinding. நேக வரைத்தல். (சா.அக.).

[நேக¹ → நேக²]

நே(ரா)க என்பதன் இடைக்குறை

நேகல் *nēgal,* பெ. (n.) ஒருவகைப் பொடிமணல்; (G.TP.D.i. 175); fine, flinty sand.

[நெகு → நேக → நேகல். நெகுதல் = பொடியாதல். நேக = பொடியாக. நேக → நேகல் = பொடிமணல்]

[நொய் → நெய் → நே(வா)கல்.]

நேகவரை–த்தல் *nēga-v-ari-,* 4.செ. கு. வி. (v.i.) நன்றாகத் தூளாகும்படி அரைத்தல்; reducing to dust or fine powder when grinding, pulverising, machined into a pulp.

[நொய் → நோ →நே(ஆ) க +அரை–த்தல்.]

நேசக்குழு *nēšakkuḻu,* பெ. (n.) ஒத்த கருத்துடைய கூட்டணி; confederacy.

[நேயம் → நேசம் + குழு. ஒ.நோ. தோயை → தோசை]

நேசகன் *nēšagaṉ,* பெ. (n.) வண்ணான் (யாழ்.அக.); washerman.

[நேயம் → நேசம் + அகன் = நேசகன். துணியை ஈரமாக்கிவெளுப்பவன்]

திருமணவிழாவிற்குச் செல்வார்க்கு உரிய நாளில் கொண்டு வந்து ஆடைகளைத்தந்தால் நேயம் உண்டாகும்.

நேசத்தி *nēšatti,* பெ. (n.) பேய்க்கடலை; bengal gram. (சா.அக.).

[நேயம் → நேசம் + அத்து + இ]

பெருங்கடலையை வறுத்துண்ணும் போதும், அவித்து உண்ணும் போதும் சுவை வேறுபடுதலின் நேசத்துக்கு உரியதாகும்.

நேசநாடுகள் *nēša-nāḍugaḷ,* பெ. (n.) உலகப் போரில் இணைந்து போராடிய இங்கிலாந்து, அமெரிக்கா, உருசியா முதலிய நாடுகள்; allied nations as opposed to axis countries.

[நேயம் → நேசம் + நாடுகள். ஒ.நோ நெயவு → நெசவு]

நேசநாயனார் *nēša-nāyaṉār,* பெ. (n.) பாராட்டிக்கூறப்பெறும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர்; one of 63cononized šaiva saints in Periyapurāṉam.

[நேயன் → நேசன் + நாயனார். நாயகனார் → நாயனார்]

இவரின் ஊர் காம்பிலி; சாலியர் குலத்தினர்; சிவனடியார்; சிவனடி யார்களை வழிபடும் இயல்பினர் சிவனடியார்களுக்கு உடை செய்து கொடுத்துத் தொண்டு புரிந்தவர்.

நேசம் *nēšam,* பெ. (n.) 1. அன்பு, இணக்கம்; love, affection, piety. "*நேசமுடைய வடியவர்கள்*" (திருவாச.9:4). கணவன் மனைவியிடம் நேசமில்லாமல் வாழ்கிறார். 2. ஆர்வம்; desire, as for learning. "*வரும் பொருளுணரு நேசமாசறு தயிலம் வாக்கி*" (இராகு. இரகுவு.38). 3. தகுதி; suitability. "*பூச்சியின் வாயினூல் பட்டென்று பூசைக்கு நேசமாகும்*" (குமரே. சத.59). 4. விருப்பம்; appetite. "*நேசமும் வைத்தனையோ*" (திருவாச. திருவெ.2)

ம. நேசம்

[நேயம் → நேசம். நேயம் = அன்பு. ஒ.நோ. வாயகம் → வாசகம்]

நேசமாக்கு–தல் *nēšam-ākku-,* 5செ.கு.வி. (v.i) ஒன்று கூடுதல்; to ally.

[நேயம் → நேயம் + ஆக்கு–தல்.]

நேசமில்லாத *nēšam-iḷḷāda,* பெ.எ (adj.) 1. அன்பில்லாத; lacking in love. *சிலர் நட்பு நேசமில்லாத நட்பு.* 2. கனிவில்லாத; affectionless.

[நேசம் + இல்லாத.]

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" (குறள்,788). இன்பத்திலும் துன்பத்திலும் பங்கேற்காதார் நட்பு(நேய) நேசமற்றது.

நேசயம் *nēšayam,* பெ. (n.) நிலப்பனை; ground palm, Curculigo orchioides.

நேசர் *nēšar,* பெ. (n.) *நேசன்* பார்க்க; see *nēšaṉ.* *"செய்ய சிவநேசர்தாம் வைகறையிலெழுந்து"* (சிவரக.நந்திநமனு.15)

[நேசம் → நேசர்]

நேசல் *nēšal,* பெ. (n.) பொடிமணல்; fine sand. (சா.அக.).

[நேக → (நேகசல்) → நேசல். நேக = மிகப்பொடியாக]

நேசன் *nēšaṉ,* பெ. (n.) 1. நண்பன்; friend, ally. *"நேச ரிதங்கூற"* (நள. காப்பு). 2. கடவுளடியார் (பத்தன்); votary, devotee; *"சிவநேசர்தாம் வைகறையி லெழுந்து"* (சிவரக. நந்தி. நம. 15).

[நேயம் = அன்பு. நேயம் → நேசம் → நேசன்]

நேசானுசாரி *nēšāṉušāri,* பெ. (n.) உண்மையாய் நடப்பவன்; faithful adherent. *"துறவு மார்க்கத்தி னிச்சைபோல நேசானுசாரியாய் விவகரிப்பேன்"* (தாயு. பரிபூரணா. 1)

[நேசம் + அனுசாரி. நேயம் → நேசம். Skt. anu-sārin → த. அனுசாரி = பின்பற்றுபவன், அடியான்]

நேசி[1]–த்தல் *nēši-,* 4.செ. குன்றாவி. (v.t.) 1. அன்புவைத்தல்; விரும்புதல் to love. *"நேசிக்குஞ் சிந்தை"* (தாயு. உடல்பொய். 32). *"நேசித்தரு நூான் முறை"* (சேதுபு.சங்கர.84) *அனைத்து உயிர்களையும் நேசிக்க வேண்டும். அம்பிகாபதி அமராவதியை உயிருக்குயிராய் நேசித்தான்.* 2.காதலித்தல்; to love of the opposite sex. 3. ஆர்வங் கொள்ளுதல்; to affect. *"நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்"* (தாயு. பரிபூர).

[நேசம் → நேசி → நேசி–த்தல்.]

நேசி[2] *nēši,* பெ. (n.) 1. அன்புடையவள் (யாழ்.அக.), காதலி; female friend. 2. அன்பன்; friend,companion, husband, lover.

[நேசம்+இ– நேசி. இல்லாளி–என்பதில் ஆண், பெண் குறிக்கும் ஈறாய் வந்த இகர ஈறு போன்றது இது. நேசி[2] – love – *முன்னிலை ஏவல்]*

நேசிப்பு *nēšippu,* பெ. (n.) அன்பு; love.

[நேசம் + இ + பு.]

நேட்டகாதுவரப்பி *nēṭṭakāduvarappi,* பெ. (n.), இலவம்பிசின்; gum of silk cotton tree, Bombax malabarica. (சா.அக.).

[நேட்டகாது+வரப்பி= வரு+அப்பி–வரப்பி. வரப்பி=பிசின்,மரத்திலிருந்து வந்து அப்பும் (ஒட்டும்) தன்மையுடையது]

நேட்டம் *nēṭṭam,* பெ. (n.), ஈட்டியபொருள் (நாஞ்); acquired properity.

[நேடு → நேட்டம். நேடுதல் = தேடுதல், ஈட்டுதல் (சம்பாதித்தல்)]

நேடன் *nēḍaṉ,* பெ. (n.), நாவல் மரம்; jaumoon tree, Eugenia jambolina.

[நேடு + அன். நேடுதல் = தேடுதல். பழங்களில் தேடி பறித்து உண்ணும் பழம். அன் = சொல்லாக்க ஈறு.]

நேடி *nēḍi,* பெ. (n.), மூங்கில் (மலை.); bamboo.

[நுல் = துளை. நுல் → நுள் → நள் → நாள் → நாளம் = உட்டுளை, உட்டுளைப் பொருள், தண்டு. நாளம் → நாளி = உட்டுளையுள்ள மூங்கில். நாளி → நாடி → நேடி = மூங்கில். (வே.க.)]

நேடு–தல் *nēḍu-,* 5.செ. குன்றாவி. (v.t.), 1. தேடுதல்; to seek, look out for. *"கொண்டவனிருப்ப மற்றோர் .... வேலினானை நேடிய நெடுங்கணாளும்"* (சீவக. 252). *"நெறிமணனேடினர் செல்லச் சொல் லேற்று"* (பரிபா. 20:43). *"சினகரமொருவிப் போகுவான் வழிகணேடினேன்"* (பிரமோத்.4:11). 2. பொருளீட்டுதல் (நாஞ்.); to earn. 3. விரும்புதல் (யாழ். அக.); to desire, wish. 4. எண்ணுதல்; to consider, think, lay to heart. *"சூரபன் மனிளவறன் முடிவுநேடி"* (கந்தபு. அசுரேந். 65). 5. இலக்காகக் கொள்ளுதல் (வின்.); to aim at, pursue.

ம.நேடுக; க.நிட்டிசு; குட.நேட்.

[நோண்டு → நேண்டு → நேடு → நேடு–தல். நோண்டுதல் = தோண்டித் தேடுதல் (வே. க). ஒ. நோ. தோண்டு → தேண்டு → தேடு → தேடு–தல்]

நேத்தி[1] *nētti,* பெ. (n.), நேர்த்தி; beauty. *நேத்தியான பொருள்.* (சா.அக.).

[நேர்த்தி → நேத்தி (பே. வ.) – இடைக்குறை]

நேத்தி[2] *nētti,* பெ. (n.), துத்தம்; vitriol. (சா.அக.).

நேத்தி[3] *nētti,* பெ. (n.), நெற்றி; forehead.

[நெற்றி → நெத்தி → நேத்தி. இருமடித்திரிபு.]

நேந்தாடுபாவை *nēndāḍu-pāvai,* பெ. (n.), சேந்தாடுபாவை; an unknown plant šēndāḍupāvai. (சா.அக.),

[நேர்ந்து + ஆடு + பாவை]

நேந்திரப்பள்ளி *nēndirappaḷḷi,* பெ. (n.), நெல்லின் வகை (நாமதீப. 351); a kind of paddy.

[நேந்திரப்பள்ளி என்னும் இடத்தில் சிறப்பாக விளையும் நெல்லாகலாம்]

நேந்திரம் *nēndiram,* பெ. (n.), ஒருவகை வாழை; இது மேற்குக் கடற்கரைப்பகுதிகளில் விளையும்; a kind of plantain tree grown in the Western coast. Chips prepared out of it are very tasty, ripe fruits are also eaten. (சா.அக.).

ம. நேந்த்ரவாழ; து. நேந்த்ரபாரே

நேந்துநிரவிப்போ–தல் *nēndu-niravi-p-pō-,* 8 செ. கு. வி. (v.i.), சற்று ஏறக்குறைய இருந்தாலும் சரிக் கட்டிக் கொண்டு போதல்; to rectify, correct, redress, to adjust, indemnify, reimburse.

[நே(ர்)ந்து + நிரவி + போ–தல்]

மனமொத்துக் கூட இருப்பதைக் குறைவாக இருப்பதில் இட்டு சரி செய்துபோவது நேந்து நிரவிப் போதலாகும். நேந்து போதல் = குறைதல், மெலிதல். நிரவுதல் = இருப்பதிலிருந்து குறைவதற்குப் போடுதல்.

நேபம் *nēbam,* பெ. (n.), **1.** கண்ணீர்; tears. **2.** தண்ணீர்; ordinary water. (சா.அக.).

நேபாலிகை *nēpāligai,* பெ. (n.), ஒருவகை நஞ்சு (பாடாணம்) (மூ. அ.); a kind of poison.

நேபாளக்கரும்பு *nēpāḷa-k-karumbu,* பெ. (n.), நேபாள நாட்டில் விளையும் கரும்பு; sugar-cane grown in Nepal.

[நேபாளம் + கரும்பு]

புறநானூற்றில் ஔவையார் அதியமானைப் பற்றிப்பாடிய பாடலில் 'கரும்பிவண் தந்தும்' என்று குறிக்கின்றார். கரும்பு சீனத்திலிருந்து கொணர்ந்ததாக வரலாற்றாய்வாளர் கூறுவர். அதுநேபாளம் வழியே வந்ததால் அமைந்த பெயராகலாம்.

நேபாளங்கொட்டை *nēpāḷaṅ-goṭṭai,* பெ. (n.), நேர்வாளங்கொட்டை; croton seed or nut. (சா.அக.).

[நேர்வாளம் → நேபாளம் + கொட்டை.]

நேபாளசம் *nēpāḷašam,* பெ. (n.), நேபாளத்தில் கிடைக்கும் ஒரு வகைக்களிம்பேறிய செம்பு; a kind of impure copper probably found in Napal. (சா.அக.).

[நேபாளம் + (செம்பு) → சம்]

நேபாளம்[1] *nēpāḷam,* பெ. (n.), ஐம்பத்தாறு நாட்டுளொன்று; the kingdom of Nepal one of 56 tešam.

நேபாளம்[2] *nepāḷam,* பெ. (n.), *நேர்வாளம்* (மலை.) பார்க்க; see *nērvāḷam.*

நேபாளம்[3] *nēpāḷam,* பெ. (n.), சீமையாமணக்கு; Nepal castrol plant, Balios permum montana alias croton polyandrum. (சா.அக.).

சீமை ஆமணக்கு நேபாளப் பயிர்போலும்

நேபாளவேம்பு *nēpāḷa-vēmbu,* பெ. (n.), நேபாளத்தில் விளையும் வேப்பமரம்; margosa tree of Nepal. (சா.அக.).

[நேபாளம் + வேம்பு]

நேபாளி *nēpāḷi,* பெ. (n.), **1.** நேபாள நாட்டு மக்கள்; people in Nepal. **2.** இருவாட்சி; a kind of Jasmine, Jasminum sambae. (சா.அக.).

[நேபாளம் + இ. 'இ' சொல்லாக்க ஈறு]

நேம் *nēm,* பெ. (n.), அன்பு; love.

[நேயம் → நேம். ஒ.நோ. தேயம் → தேஅம் → தேம்.]

நேம்பு–தல் *nēmbu-,* **5.**செ. குன்றாவி. (v.t.), கொழித்தல்(வின்.); to winnow.

தெ. நேமு; **ம.** நேம்புக; **கோண்.** ஏமாநா; **கூய்.** ஏம்ப; **குரு.** நாபநா.

[நோம்பு → நேம்பு. நோம்பு – தல். தவசங்களைக் கற்களில் இருந்து கொழித்துப் பிரித்தல்]

நேமநாற்சுகம் *nēmanāṟcugam,* பெ. (n.), கரும்பு அகரம் என்னும் மருந்துவகை; a bazaar drug. (சா.அக.).

நேமி[1] *nēmi,* பெ. (n.), 1. வட்டம் (திவா.); circle. 2. தேருருளை; wheel of a chariot. *"குன்றிழி அருவியின் வெண்டேர் முடுக இளம்பிறையன்ன விளங்குசுடர் நேமி"* (குறுந். 189). *"ஆரஞ் சூழ்ந்த வாயில் வாய் நேமி யொடு"* (சிறுபாண். 253). *"வன்பால் முரம்பின் நேமி அதிர"* (நற்.394:5). 3. சக்கர ஆய்தம்; discus. *''திண்பூஞ் சுடர்நுதி நேமியஞ் செல்வர்''* (திவ். இயற். திருவிருத். 9). *"நனந்தலையுலகம் வளைஇ நேமியொடு"* (முல்லை.1). 4. செங்கோலாழி (ஆணைச் சக்கரம்); wheel of sovereignty. *"ஏம முரசம் இழுமென முழங்க நேமி உய்த்த நேஎ நெஞ்சின்''* (புறநா. 3). 5. சக்கரவாள மலைத்தொடர்; mythical range of mountains. *"நேமிமுதல் தொல்லிசையமையும் புலவராய், புரைத்த புனைநெடுங்குன்றம்"* (பரிபா. 15:3, 4). *"நேர்கொ ணெடுவரை நேமியிற்றொடுத்த"* (மலைபாடு. 238). 6. சக்கரம் போன்ற நிலவுலகம் (திவா.); earth. 7. உலகைச் சூழ்ந்தகடல் (திவா.); sea, ocean. *"நேமியிற் செல்லு நெய்க்கணிறாஅல்"* (மலைபடு. 525.) 8. விரற்செறி (பிங்.); ring. 9. சக்கரவாகப் பறவை; cakra bird. *"பொலஞ்சூட்டு நேமி வாண்முகஞ் துமிப்ப''* (குறுந். 227). 10. சக்கரப் படையுடைய திருமால்; Tirumāl, as wielding the discus. *"நேமியோ குலிசியோ நெடுங் கணிச்சியோ"* (கம்பரா. பிணிவீட் 70). 11. சமணத் தலைவர் இருபத்து நால்வருள் ஒருவர்; an Arhat, one of 24 Tirttaṅkarar. *"நிகரி னேமிதனீணகா"* (சீவக. 912).

நேமி[2] *nēmi,* பெ. (n.), தேர்செய்யப் பயன்படும் மரவகை. இதிலிருந்து சிவப்புத் துவர்ப்புப் பிசின் எடுக்கப்படும்; chariot tree gives astringent red gum. (சா.அக.).

நேமிச்சந்திரன் *nēmi-c-candiraṉ,* பெ. (n.), சமணத்தலைவர் இருபத்து நால்வரில் ஒருவர்; an Arhat, one of 24 Tirttaṅkarar.

[நேமி + சந்திரன்.]

நேமிசந்தனா *nēmi-šandaṉā,* பெ. (n.), வேங்கை மரம் (மலை.); Indian kino tree.

[நேமி + சந்தனம். சந்தனம் → சந்தனா]

நேமிசாரம் *nēmi-šāram,* பெ. (n.), காந்தாரியுப்பு (சத்திசாரம்); an acrid salt. (சா.அக.).

[நேமி + சாரம். சாரம் = உப்பு]

நேமிநாதம் *nēminādam,* பெ. (n.), குணவீரபண்டிதர் இயற்றிய ஒரு தமிழ்நூல்; a treatise on Tamil grammar by Kuṉa-vīra-paṇḍidar.

"தொல்காப்பியக் கடலிற் சொற்றீ பச்சுற்றளக்கப்
பல்காற் கொண்டோடும் பட வெண்பா—
பல்கோட்டுக்
கோமி காமற்புலனை வெல்லுங்குணவீர
நேமிநாதத்தினெறி' (நேமிநாதம்)

தமிழ் இலக்கணநூல்களில் ஒன்று. குணவீர பண்டிதர் என்னும் சமண ஆசிரியரால் நேமிநாதர் என்னும் தீர்த்தங்கரர் பெயரால் செய்யப்பெற்றது. இந்நூல் திரிபுவன தேவன் என்னும் குலோத்துங்கன் காலத்தில் செய்யப்பெற்ற தென இந்நூற் பாயிரவுரையால் அறியலாம்.

இந்நூல், தொல்காப்பியர் கூறிய எழுத்துக்கும் சொல்லுக்குமான இலக் கணத்தைச் சுருக்கிக் கூறுகிறது இதன் முதல்நூல் தொலகாப்பியம். முதல்நூலை நோக்க இது மிகச்சிறுநூலாதலின் சின்னூல் என்றும் வழங்கப்பெறுகிறது. இது வெண்பாவால் ஆனநூல்.

நூல் அமைப்பு: முதலில் அருகக் கடவுளை வாழ்த்தி, அவையடக்கங் கூறிய இரண்டு செய்யுட்களாற் பாயிரம் அமைந்துள்ளது. எழுத்ததிகாரம் 24 செய்யுட்களாலும், சொல்லதிகாரம் 71 செய்யுட்களாலும் அமைந்துள்ளது. எழுத்ததி காரத்தில் இயல் வரையில்லை. சொல்லதிகாரம் தொல் காப்பியத்தைப் போலவே ஒன்பதியல்களைக் கொண் டுள்ளது. தொல்காப்பிய இயல்களின் பெயர்களே சிறிய மாற்றங்களுடன் அமைந்துள்ளன.

தொல்காப்பியம் படிக்கும் முன், சின்னூலாகிய இதனைப் படிக்கும் வழக்கம் முற்காலத்தில் இருந்ததென்பது தெரிகிறது. இந்நூலுக்குப் பின்பே நன்னூல் தோன்றியது. பெயர் தெரியாத ஒருவரின் சிறந்த உரை ஒன்று இந்நூலுக்கு உள்ளது. இவ்வுரை

கருத்துரை, பொழிப்புரை, எடுத்துக்காட்டு, வினாவிடை, விளக்கம் ஆகியயாவுங் கொண்ட விருத்தியுரையாகக் கிடைக்கின்றது. இவ்வுரையில் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சீவகசிந்தாமணி, மணிமேகலை, பதினெண் கீழ்க்கணக்கு முதலிய நூல்களினின்றும் மேற்கோள்கள் வந்துள்ளன.

நேமிநாதன் *nēminādaṉ,* பெ. (n.) அருகதேவன் (சூடா.); Arhat.

சமணத் தலைவர்கள் (தீர்த்தங்கரர்) 24–ல் இருபத்திரண்டாமவராவர். இவரைத் துவாரகையை ஆண்ட கண்ணபிரானுக்குத் (தாயாதி மகனாரான) தமையன் முறையினர் என்பர், சமணர்கள். இவர் பெயரால் குணவீரபண்டிதர் 'நேமிநாதம்' என்னும் தமி ழிலக்கணநூல் செய்தார்.

இவருக்குத் தமிழ் நாட்டிற்பல இடங்களிற் கோயில்களிருந்தன. அவற்றுள் மயிலா(ர்)ப் பூரில் இருந்த கோயில், கடலோரத்தில் இருந்ததனாற் கடலில் மூழ்கிவிடும் என்றெண்ணி அப்புறப்படுத்தப் பெற்றது. தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள மேல்சித்தாமூரில் சமணக் கோயில் இருக்கிறது என்று தென்னார்க்காடு மாவட்ட அரசிதழில் 367 ஆம்பக்கத்தில் குறிக்கப் பட்டுள்ளது. மயிலா(ர்)ப்பூரில் நேமிநாதருக்குக் கோயிலிருந்த தென்பதைத் திருநூற்றந்தாதி, நேமி நாதர் பதிகம் என்னும் இரண்டு நூல்களும், நேமி நாதப் பாயிரவுரையும் வலியுறுத்துகின்றன.

மயிலா(ர்)ப்பூரிற் கோயில்கொண்ட நேமிநாதருக்கு மயிலைநாத ரென்னும் பெயரும் உண்டு. இப்பெயரையே நன்னூலுக்கு உரையெழுதிய மயிலைநாதரும் கொண்டிருந்தார். திருநூற்றந்தாதி பாடிய அவிரோதியாழ்வாரென்பவர் மயிலை நேமிநாதர் மேல் 'திருவெம்பாவை' ஒன்றும் எழுதியிருக்கிறார். இந்நூல் இப்போதும் மார்கழித்திங்களிற் படிக்கப் பெறுகிறது.

நேமிப்புள் *nēmi-p-puḷ,* பெ. (n.), சக்கரவாகப்பறவை (சூடா.); cakara bird.

[நேமி + புள். நேமி = சக்கரம்]

நேமியங்கனி *nēmiyaṅgaṉi,* பெ. (n.), திராட்சை; grapes, Vities vinifera. (சா.அக.).

[நேமி + அம் + கனி. திராட்சை என்னும் கொடிமுந்திரிப் பழங்கள் கோளவடிவில் இருப்பதால் நேமியங்கனி எனப்பட்டது. கருஞ்சாற்றுப்பருகலைக் 'கோனா' என்பதும் தமிழாதல் இதன் வழிக் காண்க.]

நேமியஞ்செல்வன் *nēmiyañ-jelvaṉ,* பெ. (n.), மன்னர்மன்னன் (சக்கரவர்த்தி); emperor. "*வையநின்னடி நிழலின் வைகி நேமியஞ் செல்வனாகி*" (சீவக. 2417).

[நேமி = வட்டம், சக்கரப்படை, உலகம், கடல். நேமி + அம் + செல்வன். = உலகை யாளும், மன்னர்களுக்கெல்லாம் மன்னன்.]

நேமியம் *nēmiyam,* பெ. (n.), நிலப்பனை; ground palm, Curculigo orchioides. (சா.அக.).

[நேமி + அம். நேமி = நிலம், வட்டமான நிலவுலகம்]

நேமியான் *nēmiyāṉ,* பெ. (n.), சக்கரப் படையையுடைய திருமால்; Visṇu, as wielding the discus. "*வள்ளுரு ணேமியான் வாய்வைத்த வளைபோல*" (கலித். 105).

[நேமி → நேமியான்]

நேமியோர் *nēmiyōr,* பெ. (n.), செங்கோலாழி (ஆணைச் சக்கரம்) யையுடைய அரசர்; king. "*நிலந்தவவுருட்டிய நேமியோரும்*" (புறநா. 270:3).

[நேமி → நேமியோர். நேமி = ஆணைச் சக்கரம்.]

நேமியோன் *nēmiyōṉ,* பெ. (n.), நேமியான் பார்க்க; see *nēmiyāṉ.* "*நீனிறவுருவி னேமி யோனுமென்*" (புறநா. 58:15).

[நேமியான் → நேமியோன்]

நேயம்[1] *nēyam,* பெ. (n.), **1.** அன்பு; love, affection. "*நேயத்தாய் நென்ன லென்னைப் புணர்ந்து*" (திருக்கோ. 39). "நன்னேயமுடன் பூசிப்போர்" (சிவரக.நந்திநமனு.14). **2.** இறைப்பற்று; piety, devotion. "*நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி*" (திருவாச. 1:13). **3.** நெய் (பிங்.); ghee. **4.** எண்ணெய் (பிங்.). oil. **5.** நன்மை(யாழ். அக.); good, benefit.

பிரா.நேஅம்; வ. ஸ்நேஹ.

[நுள் → (நெள்) → நெய் → நேய் → நேயம். (வே.க.) = நெய்போல் ஒட்டும் குணமாகிய அன்பு. ஒ. நோ. பசை → பாசம் = அன்பு. நீரம் → ஈரம் = அன்பு. நெள்→ நெய் → நே → நேயம்(வ.மொ.வ.). நேயம் → நேசம் → நேசன் (மு. தா.). நுல் = இளமை, மென்மை. நுல் → நுள் → நண்பு→ நட்பு. (நுள்) → நள் → (நய்) நய → நயத்தல் = அன்பு செய்தல்]

வடவர்காட்டும் ஸ்நிஹ் (ஒட்டு) என்னும் மூலம், நெய் என்னும் தென்சொற்றிரிபே. snow என்னும் ஆங்கிலச் சொல் ஸ்நேஹ என்பதனோடு தொடர்புள்ள தாயின், அதற்கும் தென்சொல்லே அடிமூலமாக இருத்தல் வேண்டும். (த.ம.)

நேயம்[2] *nēyam,* பெ. (n.) நிலப்பனை (மலை.); a plant common in sandy situations.

[நேமியம் → நேயம். நேமி + அம் → நேமியம். மி–இடைக்குறை. நே+(ய்) அம் –நேயம்]

நேயர் *nēyar,* பெ. (n.), **1.** வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை விரும்புபவர்; radio listeners; television viewer. *நேயர்விருப்பம் கேட்டால் மனத்துக்கு ஆறுதல் கிடைக்கும். "வணக்கம் நேயர்களே" என்று கூறிவிட்டு நிகழ்ச்சியைத் தொடங்கினார் அறிவிப்பாளர்.* **2.** தாளிகை (பத்திரிகை) களை விரும் பிப்படிப்பவர்; reader of magazine.

[நேயம்[1] → நேயர்]

நேயவை *nēyavai,* பெ. (n.), இடுதிரை (அக. நி.); curtain.

[நெய் → நேயவை. நெய் = நெய்தல்]

நேயா *nēyā,* பெ. (n.), **1.** நேயமரம்; a kind of tree. **2.** பெருமருந்து கொடிவகை; Indian birth wort, Aristolochia indica. (சா.அக)

நேர்[1]**–தல்** *nēr-,* 2.செ. கு. வி. (v.i.), **1.** பொருந்துதல்; to be fit or appropriate. "*நேரத் தோன்று மெழுத்தின் சாரியை*" (தொல். எழுத்து. 134). **2.** நிரம்புதல்; to be complete. "*நேரத் தோன்றும் பலரறி சொல்லே*" (தொல். சொல். 7). **3.** இவ்வாறு செய்யவேண்டும் என்ற நோக்கமில்லாமல் நிகழ்தல்; to happen, occur, transpire. *இது காலத்தால் நேர்ந்தது. கோவில் திருவிழாவில் கலவரம் ஏற்படாமல் இருக்க வலுத்தகாவல் போடப்பட்டுள்ளது. அழைப்பிதழ் அச்சிடுவதில் ஒரு சிறு தவறு நேர்ந்துவிட்டது.* **4.** எதிர்ப்படுதல்; to appear, come to view. "*பொழிலோவொன்று நேர்ந்ததுவே*" (வெங்கைக்கோ. 321). **5.** இளைத்துப்போதல்; to grow thin, lean; to be emaciated. *உடம்பு நேர்ந்துபோய் விட்டது.* **6.** மென்மையாதல்; to be soft; to yield to the touch. "*ஐந்து நேர்ந்தே*" (காசிக. சிவ. அக். 18).

குட. நேர் (to come to view.).

[நுல்(பொருந்தல்) → நுள் → நிள் → நிர் → நெர் → நேர் → நேர்–தல்]

நேர்[2]**–தல்** *nēr-,* 2.செ. குன்றாவி. (v.t.), **1.** எதிர்தல்; to meet. "*வேந்தன்றனை நேர்ந்து காண்பானா*" (இரகு. தசரதன். 21). **2.** நெருங்குதல்; to approach, come near to. "*வெங்கரி.... வீரவாகுத் தலைவனை நேர்ந்து சொல்லும்*" (கந்தபு. தருமகோப. 71). **3.** தீண்டுதல்; to seize, take hold of.

"*குழலித்திங்கட் கோனேர்ந்தாங்கு*" (பெரும்பாண். 384). **4.** பெறுதல்; to obtain. "*நிலையிலா நீர்மை யாக்க நேர்ந்துழி*" (சேதுபு.திருநாட்.21). **5.** கொடுத்தல்; to grant, bestow. "*கரவாளை நேர்ந்தானிடம் போலும்*" (தேவா. 111, 8). **6.** உடன்படுதல்; to agree, consent. "*அழும்பில் வேளுரைப்ப நிறையருந்தானை வேந்தனு நேர்ந்து*" (சிலப். 25:178). "*நெருப்பிலா விடத்துப்புகையிலை யெனனோ*" (மணிமே.29:102) "*மகிழ்வுனாங்கவை நேரா*" (கூர்ம.அரியய.8) **7.** ஒத்தல்; to resemble, equal. "*கைவலிளையர் நேர்கை நிரப்ப*" (பதிற்றுப் 48:8). "*நெல்லினேரே வெண்கலுப்பென*" (அகநா 140:7). "*கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற் கலக்குண்டு*" (திருவாச. 5: 27). **8.** உறுதிசெய்தல்; to resolve, vow, take vow. "*நற்றார்கலவே மென நேர்ந்தும்*" (பு. வெ. 12, பெண்பாற். 7). **9.** அமர்த்துதல் (நியமித்தல்) (வின்); to appoint, designate, appropriate, assign. **10.** தண்டனைக்குட்படுத்துதல் (வின்.); to consign, doom. **11.** வேண்டுதல் (அக. நி.); to entreat, pray. **12.** சொல்லுதல்; to say; to speak. "*சீர்ச்சடகோபன் நேர்தலாயிரத்து*" (திவ். திருவாய். 1.8:11). **13.** கடவுளிடம் வேண்டுதலுக்காக (பிரார்த்தனைக்காக) வைத்தல்; பொருத்தனை பண்ணுதல்; to appropriate, as an offering to God; to consecrate, dedicate. "*தடாவில் வெண்ணெய் வாய் நேர்ந்து பராவி வைத்தேன்*" (திவ். நாய்ச். 9:6). "செவிமறை நேர்மின்னு நுண்பொறி வெள்ளை" (கலித்.101:27). *பழனிக்குத் காவடி எடுக்க நேர்ந்து கொண்டான் (உ. வ.).* **14.** எதிர்த்தல்; to oppose, resist, encounter, attack. "*அமர்கோள் நேரிகந்து ஆர்எயில் கடக்கும் பெரும்பல் யானைக்குட்டுவன்*" (பதிற்றுப். 29:13, 14). "*தானையை நேர்ந்து கொன்று*" (கம்பரா. மூலபல. 57). **15.** அறுத்தல்; to cut off, sever. "*ஓராதான் பொன்முடி யொன்பதோ டொன்றையும் நேரா*" (திவ். பெரியாழ். 3. 9: 10).

க. நேர்; **ம.** நேருக; **கோத.** நெர் (opposite), நேர் (to come to view); **து.** நெரியுநி, நெரெவுநி (to assemble); **தெ.** நேர்சு (to learn).

[நுல்(பொருந்தல்) → நுள் → நிள் → நிர் → நெர் → நேர் → நேர்—தல்]

நேர்³—த்தல் *nēr-,* **4.**செ. குன்றாவி. (v.t.), **1.** ஒத்தல்; to resemble, equal. "*திண்ணறி வாளரை நேர்ப்பார் யார்*" (நாலடி, 27). "*கைவலிளையர் நேர்கை நிரப்ப*" (பதிற்றுப். 48:8). "*நிறைமதி வாண்முகத்து நேர்கயற்கண் செய்த*" (சிலப். 7:8). "*பொன்னே ரனையாய் புகுந்தது கேளாய்*" (மணிமே. 2:16) **2.** எதிர்த்தல்; to oppose, attack. "*நேர்த் தின்னா மற்றவர் செய்தக்கால்*" (நாலடி, 67).

[நேர்² → நேர்³—. இது பிறவினை வடிவம்.]

நேர்⁴ *nēr,* பெ. (n.), செய்ய, செய்யும்படி ஆகிய வடிவங்களின்பின் ஒருசெயல் நிகழ்ந்தது தற்செயலாக அல்லது சூழ்நிலையின் கரணியமாக என்பதை உணர்த்தும் துணை வினை; after the infinitive or future relative participle (paḍi) used to express the sense of 'happen to' 'be forced to'. *அஞ்சல் வந்ததால் உடனே புறப்பட்டு வரநேர்ந்தது. வழியில் அவரைப் பார்க்கும்படி நேர்ந்தது.*

[நேர்¹ → நேர்⁴]

நேர்⁵ *nēr,* பெ. (n.), **1.** வளைவு அல்லது விலகல் எதுவும் இல்லாதது, செவ்வை; straightness, directness. *நேர்வகிடு; நேராக நில். நேரா நோன்பு சீர் ஆகாது (பழ.).* "*முழங்குகட றந்த விளங்குகதிர் முத்தம் அரம்போழ்ந் தறுத்த கண்ணே ரிலங்குவளை*" (மதுரைக். 315,316). "*நேர்சீர் சுருக்கிக்காய கலப்பையிர்*" (மலைபடு. 13). "*ஒண்ணுதல் மகளிர் ஓங்கு கழிக்குற்ற கண்நேர் ஒப்பின்*

கமழ்நறு நெய்தல்" (நற். 283). 2. அறம் (நீதி); rightness, justness, impartiality. *அவன் நேர்பட நடவாதவன். நேர்படஒழுகு* (பழ.). "*புரையில் நுண்ணோர் எல்வளை நெகிழ்த் தோன்குன்றத்து*" (நற்.236). 3. நல்லொழுக்கம்; morality, virtue, honesty. 4. திருந்திய தன்மை; refinement, nicety. "*நேரிழையாய்*" (திருவாச. 7:2). 5. மாறுபாடு (யாப். வி. 57:222); opposition. 6. உடன்பாடு (திவா.); agreement, consent, settlement. 7. *நேர்விடை* பார்க்க; see *nēr-viḍai.* "*சுட்டு மறைநேர்*" (நன். 386). 8. நிலைப்பாடு (யாப். வி. 58, உரை); firmness. 9. முன்; front. 10. உயிர் அல்லது உயிர் மெய் தனித்த நேரசை (தொல். பொருள். 315); a metrical syllable consisting of a short or long letter, singly or followed by a consonant. "*குறிலே நெடிலே குறிவினை குறினெடில் ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி நேரும் நிரையும் என்றிசின் பெயரே*" (தொல். பொருள். செய். 3). "*குறிலே நெடிலே குறலிணை குறிலிணையேனைக் குறினெடிலே நெறியே வரினு நிரைந்தொற றடுப்பினும் நேர்நிரை யென்றறிவே*" (யா. கா. 5)

ம. நேர்; க. நேர்; குட. நேரீ (truth, fact); து. நேரே.

[நேர்[1] → நேர்[5]]

நேர்[6] *nēr,* பெ. (n.), 1. நீளம்(சூடா.); length, extension. 2. பொருந்திய வரிசை (வின்.); row, series, regularity. 3. பாதி(திவா.); half, moiety. 4. நுண்மை; minuteness, smallness, fineness, slenderness. "*துடிகொ ணேரிடையாள்*" (திருவாச. 29:5). 5. செலவு (கதி) (வின்.); tendency, course, direction. 6. ஊர்த்துவநிலை; verticality. "*நேரவிரும் புண்டரர்க் கருள்வான்*" (அஷ்டப். திருவேங்கடத்தந். 6). 7. தனிமை (திவா.); solitariness, solitude. 8. நிகர்; equal. *பாவேந்தர் தமிழை உயிருக்கு நேர் என்று கூறினார்.* "*நெல்லி னேரே வெண்கலுப்பென*" (அகநா. 140:7). "*நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது தாரித் திருத்தல் தகுதி*" (நாலடி, 72). "*கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ் களைகட்டதனொடு நேர்*" (குறள், 550). 9. நேரடி; direct. இஃது என் நேர் விருப்பம்.

ம, க. நேர்; தெ. நேரு; து. நேரெ.

[நேர்[1] → நேர்[6]]

நேர்[7] *nēr,* பெ. (n.), 1. கொடை (சூடா.); gift. 2. மிகுதி (திவா.); excess, excessiveness. 3. வலிமை; strength. "*நேர் மரப்பலகையும்*" (சீவக. 2218). 4. உவமை; comparison, similarity. "*தன்னே ரில்லோன்*" (திருவாச. 3:30). "தன்னேரில்லாத சிவன்றனை" (சிவரக.நந்திகேசுரநமனுக்கு.14). 5. மென்மை; soft. "*பிணங்குநேர் ஐம்பாலோர் பெண்கொண்டதுவே*" (சிலப். 7:13). "*நேரிமலர் நிறைசுனை உறையுஞ்*" (அகநா. 198:16).

[நேர்[1] → நேர்[7]]

நேர்[8] *nēr,* பெ. (n.), திருச்சுற்று; manner. "*இந்நேரிலே தந்தம் பிள்ளைகள் தாய்மார் பக்கலிலே அழுது சென்றால் தரிப்பார்களோ*" (திவ். பெரியாழ். 2. 2:3 வியா. பக். 253)

[நேர்[1] → நேர்[8]]

நேர்க்கச்சாங்காத்து *nērkkccāṅgāttu,* பெ. (n.), நேர் தென்திசையிலிருந்து வடதிசை நோக்கி வீசும் கடற்காற்று (மீனவ.); a kind of wind blowing south to north. (க. ப. அ.)

[நேர்[1] + கச்சான் + காத்து. காற்று → காத்து; கச்சான் = கடற்கரை.]

நேர்கட்டி *nēr-kaṭṭi,* பெ. (n.), ஒருவகை மணப்பொருள்; a kind of frankincense. *'நேர்கட்டி செந்தே னிரியாசங் கற்பூரம், ஆர மகிலுறுப்போ ராறு'* (சீவக. 534. உரை).

[நேர்¹ + கட்டி. கட்டி = இறுகிய மணப் பொருள்]

நேர்கட்டு—தல் *nēr-kaṭṭu-,* 5.செ. குன்றாவி. (v.t.), சரிகட்டுதல் (யாழ். அக.); to settle amicably. *எடைகுறைந்ததற்கு வேறு பொருள்களைப் போட்டு நேர்கட்டினான்.*

[நேர் + கட்டு—தல்.]

நேர்கட்டை *nēr+kaṭṭai,* பெ. (n.), நெட்டி; solah pith. (சா.அக.).

நேர்கடன்¹ *nēr-kaḍaṉ,* பெ. (n.), *நேர்த்திக் கடன்* (யாழ். அக.) பார்க்க; see *nērtti-k-kaḍaṉ.*

[நேர் + கடன் -நேர்கடன் = இறை வனுக்கு நேர்ந்து கொள்ளும் வேண்டு தலை வினைத்தொகை வடிவம்]

நேர்கடன்² *ner-kaḍaṉ,* பெ. (n.), நேரில் வட்டிகேட்டு வாங்கும் கடன்; a kind of debt.

[நேர் + கடன்.]

சிலர்சிறுவட்டிக்குவாங்கிப் பெருவட்டிக்குக் கொடுப்பர். ஆதலால் அவ்வாறான சுற்றுக்கடன் அன்றி வட்டி குறைத்து வாங்கும் நேர்கடனை இது குறிக்கும். வேற்றுமைத் தொகை வடிவம்.

நேர்காட்டு¹—தல் *nēr-kāṭṭu-,* 5.செ. குன்றாவி. (v.t.), **1.** எதிர்த்தல்; to face, look forward. **2.** ஒரு திசையை நோக்கிச் செலுத்துதல்; to aim at, direct towards. **3.** வரிசையாக வைத்தல்; to put or lay down in a straight or direct posture. **4.** முன் காட்டுதல்; to expose, as to beasts of prey. **5.** நீர்க்கால் மாற்றுதல்; to lead the water in a channel for irrigation. **6.** ஏர் நடத்துதல்; to lead a team at ploughing.

[நேர் + காட்டு—தல் .நேர் = வரிசை]

முகத்துக்கு எதிர்முகமாகப் பேசுவது எதிர்த்தலாகவும், ஒருதிசையில் வரிசையாகப் போவது ஏற்றலாகவும் அமைதல் காண்க.

நேர்காட்டு²—தல் *nēr-kāṭṭu-,* 5.செ. குன்றாவி. (v.t.), **1.** கொல்லுதல்; to kill, murder. **2.** மரம் முதலியவற்றைச் சரியாகப் பிளத்தற்கு வெட்டிக்காட்டுதல்; to make the first gash or cleft down a tree for splitting. **3.** இறக்குந் தறுவாயில் இருத்தல்; to lay out a person about to breathe his last. **4.** விழுங்குதல்; to swallow.

[நேர் + காட்டு— தல்.]

கொலைக்காகக் குத்துவாளைப் பகைவன் உடம்பில் செலுத்தும்போது மேல் நோக்கியோ கீழ்நோக்கியோ நேரே இழுத்தல் அறிக.

நேர்காட்டு³—தல் *nēr-kāṭṭu-,* 5.செ. கு. வி. (v.i.), நீட்டிநிமிர்ந்து படுத்தல் (வின்.); to stretch oneself at length in lying down to sleep.

[நேர் + காட்டு—தல்.]

நேர்காணல் *nēr-kāṇal,* பெ. (n.), நேர்முகத்தேர்வு; interview.

[நேர்¹ + காணல்.]

அஞ்சலில் வந்தவிண்ணப்பம் கண்டு ஆளைக்குறித்த நாளில் வருவித்து சான்றிதழ்களும் சொற்கள் ஊன்றிதழ் களும் கொண்டு மனத்திறம் காணும் தேர்வு.

நேர்காற்று *nēr-kāṟṟu,* பெ. (n.), பயனுள்ள (உதவியான) காற்று (வின்.); favourable wind.

[நேர் + காற்று]

நேர்கூட்டல் *nēr-kūṭṭal,* பெ. (n.), சமன் சேர்க்கை; adding equal quantity. (சா. அக.)

[நேர் + கூட்டல். கூட்டல் = கூடுகை, இணைகை.]

நேர்க்கூட்டல் என ஒற்று மிகுந்தும், மிகாமலும் உறழ்ச்சி (விகற்பம்) ஆகவரும்.

நேர்கூறு *nēr-kūṟu,* பெ. (n.), சரிபாகம்(வின்.); equal shares.

[நேர் + கூறு. கூறு = பங்கு.]

நேர்கொடுநேரே *nēr-koḍu-nērē,* கு. வி. எ. (adv.), வெளிப்படையாக; directly, openly. "*அதுதான் நேர் கொடுநேரே கிடையாமையாலே நேர்கொடு நேரே சொல்லவும் மாட்டாரே*" (ஈடு, 1.7:3)

[நேர் + கொ(ண்)டுநேரே]

நேர்கொண்டகாத்து *nēr-koṇḍa-kāttu,* பெ. (n.), நேர்கிழக்குத் திசையிலிருந்து மேற்குத்திசை நோக்கி வீசுங்காற்று (மீனவ.); a kind of wind blowing east to west.

[நேர் + கொண்டல் + காத்து. கொண்டல் = கிழக்கு. காற்று → காத்து]

குணக்கு என்னும் கிழக்குத்திசையில் இருந்து வீசும் காற்று கொண்டல் எனப்படும். ஒ.நோ.தென்திசைக்காற்று தென்றல்.

நேர்கோடு *nēr-kōḍu,* பெ. (n.), வளையாத கோடு; straight line.

[நேர் + கோடு.கோடு = வரி(line)]

நேர்கோடைக்காத்து *nēr-kōḍai-k-kāttu,* பெ. (n.), நேர்மேற்குத் திசையிலிருந்து கிழக்குத் திசை நோக்கி வீசுங்காற்று (மீனவ.); a kind of wind blowing west to east.

[நேர் + கோடை + காத்து. காற்று → காத்து]

குடகு திசை என்னும் மேற்குத் திசையிலிருந்து வீசும் காற்று கோடைக் காற்று எனப்படும். ஒ.நோ. வடக்குத் திசையிலிருந்துவீசும் காற்று வாடைக் காற்று என்று அழைக்கப்படும்.

நேர்கோணக்கருவி *nēr-kōṇa-k-karuvi,* பெ. (n.), மூலை மட்டப்பலகை (பாண்டி.); mason's rule.

[நேர் + கோணம் + கருவி]



நேர் கோணம் *nēr-kōṇam,* பெ. (n.), ஒன்றுக்கொன்று செங்குத்தான கோடுகளின் இடையேயுள்ள கோணம் (பாண்டி.); right angle.

[நேர் + கோணம். கோணம் = மூலை]

நேர்ச்சி[1] *nērcci,* பெ. (n.) **1.** போக்கு (வின்.); tendency, direction. **2.** தகுதி (வின்.); adaptation, fitness, appropriateness. **3.** உடன்பாடு (சம்மதம்) (வின்.); consent, agreement, harmony. **4.** கடவுளுக்கு வேண்டிக்கொள்கை (பிரதிக்கினை) (வின்.);

vow. 5. நட்பு; friendliness, amity, love. *"கொடை பகை நேர்ச்சி"* (நன். 298). 6. சிறப்பு; excellence, elegance. 7. நிகழ்ச்சி; event, function.

[நேர்¹ + ச் + சி. 'சி' தொ.பெ.ஈறு.]

†நேர்ச்சி² *nērcci,* பெ. (n.), கருதிச் செய்யப்படாத செயல்; accident.

[நேர் + ச் + சி. 'சி' தொ.பெ.ஈறு. எதிர்பாராது நிகழும் செயல் நேரிடி, ஊறு, இடமோதல் என்ற வேறு பெயர்களும் உண்டு. விபத்து என்னும் சமற்கிருதச் சொல்லுக்குப் பாவாணர் படைத்த சொல் 'நேர்ச்சி' என்பதாகும்.]

நேர்ச்சிக்கடன் *nērcci-k-kaḍaṉ,* பெ. (n.), *நேர்த்திக்கடன்* (வின்.) பார்க்க; see *nertti-k-kaḍaṉ.* *நேர்ச்சிக்கடன் ஒன்று மிச்சமிருக்கிறது; உடனே செய்து விட வேண்டும்.*

[நேர்த்தி → நேர்ச்சி + கடன். ஒ.நோ. பிய்த்து எடுத்தல் → பிச்சுயெடுத்தல்.]

நேர்ச்சிக்கடா *nērcci-k-kaḍā,* பெ. (n.), வேண்டுதலுக்கென நேர்ந்து விட்ட ஆட்டுக்கடா. (நாஞ்.); ram; intended as a vow-offering to a deity.

[நேர்த்தி → நேர்ச்சி + கடா.கடு + ஆ – கடா. கடுத்தல் = விரைவாக ஓடுதல் கடா = விரைவாக ஓடும்கடா.]



நேர்ச்சை *nērccai,* பெ. (n.), *நேர்த்திக்கடன்* (நாஞ்.) பார்க்க; see *nērtti-k-kaḍaṉ.* கோயிலுக்கு நேர்ச்சை செய்யப் போக வேண்டும்

[நேர்ச்சி → நேர்ச்சை]

நேர்சீர் *nēr-šīr,* பெ. (n.) 1. ஒழுங்கு (யாழ்ப்.); due order, proper condition, propriety. 2. மனவொற்றுமை (யாழ்ப்.); amitableness. 3. தகுதிக்கேற்ப நடக்கை; adaptability. **நேர்சீராகப் போக வேண்டும்.**

[நேர்+ சீர். சீர் = அழகு, நன்மை, தலைமை, புகழ், மதிப்பு, இயல்பு, நேர்மை, ஒழுங்கு.]

நேர்சொல்(லு)–தல் *nēr-šol(lu)-,* 13 செ.கு.வி. (v.i.) ஆணை (சத்தியம்) கூறுதல்; to promise.

[நேர்+ சொல்(லு)–தல்.]

நேர்சோழகம் *nēr-šoḻagam,* பெ. (n.) நேராக வீசுந்தென்றற்காற்று (வின்.); wind direct from the south.

[நேர்+ சோழகம் .சோழகம் = தென்றிசையில் இருந்து வீசுங்காற்று.]

தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களாகிய சோழநாட்டிலிருந்து தொண்டை நாட்டுக்கு வீசும் காற்று தெற்குக் காற்றென்னும் தென்றல்.
திசை கூறாமல் நாடு கூறும் வழக்கும் உண்டு. ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்றுதேகுறி–மலையாள மின்னல் ஈழ மின்னல் சூழமின்னுதே (முக்கூடற்).

நேர்ஞ்சங்கிலி *nēr-ñ-jaṅgili,* பெ. (n.) கழுத்திலணியும், வேலைப்பாடுடன் கூடிய தொடரி (சங்கிலி) (சிலப். 6: 99, உரை); a necklace of exquisite workmanship

[நேர்+ சங்கிலி. = நேர்ஞ்சங்கிலி. ஒ.நோ. புளி + சோறு = புளிஞ்சோறு.]

நேர்த்தம் *nērttam,* பெ. (n.) **1.** நட்பு; friendship. **2.** உடன்பாடு; agreement.

[நேர் → நேர்த்தம். (வே.க.).]

[நேர்த்து + அம்.]

நேர்த்தரவு *nēr-t-taravu,* பெ. (n.) செய்த குற்றத்தைப் பொறுத்தோம் என்று நேரிற் கூறும் ஆணை; pardon granted by one's master in person. *"பொறுத்தோ மென்று நேர்த்தரவு கொடுத்தபின்பு"* (ஈடு, 5. 4: 5). *"அபராதத்துக்கு நேர்த்தரவு கொடுக்கும் முறுவலிறே"* (திவ். திருநெடுந். 18, வியா. 142)

[நேர்+ தரவு. தரவு = தருகை, ஆணை. தரவு என்னும் சொல் கலிப்பாவின் முதல் உறுப்புக்குப் பெயராக இருந்து இக்கால் முனைவர் ஆய்வேடுகளில் (new arraivals) *தரவு என்னும் பொருளில் புதிய வரவுகள் குறிக்கப்படுகின்றன.]*

நேர்த்தி *nērtti,* பெ. (n.) **1.** சிறப்பு; excellence, elegance. *'பாடின கவியின் நேர்த்தி இது'* (ஈடு, **3. 9: 4**). *அவர் கதை சொல்லும் நேர்த்தி சிறந்தது.* **2.** திருத்தமுள்ளது; that which is correct, equitable or just. **3.** *நேர்த்திக்கடன்* பார்க்க; see *nērtti-k-kaḍaṉ.* **4.** முயற்சி; effort, labour. *'பெறுகிறபேற்றின் கனத்தையும் இவனுடைய நேர்த்தியில் அல்பதையையும் பார்த்து'* (ஈடு, **3. 3: 6**). **5.** பொருத்தனை, கடனுக்கு நேர்ந்துகொள்கை; vow. **6.** நேரான நிலை; straight. **7.** திருந்திய நிலை; correctness, perfectness.

[நேர் → நேர்த்தி = ஒன்றின் தோற்றத்தில், அமைப்பில், செயலில் வெளிப்படும் சீர், ஒழுங்கு, அழகு முதலியவை வாய்ந்த சிறப்பான தன்மை.]

நேர்த்திக்கடன் *nērtti-k-kaḍaṉ,* பெ. (n.) **1.** கடவுளிடம் நேர்ந்து கொள்ளும் வேண்டுகோள்; vow made to a deity. *நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதாக வேண்டிக் கொண்டார்.* **2.** தெய்வத்திடம் வேண்டுகோளுக்காக வைத்த பொருள்; offering in fulfilment of a vow. *கோயிலுக்குச் சென்று நேர்த்திக்கடனை முடிக்க வேண்டும்.*

[நேர்த்தி + கடன். கடம் → கடன்.]

கடவுளுக்கு வேண்டிக் கொள்வதை "நேர்ந்து கொள்ளுதல்" என்று சொல்வார்கள். அந்த வேண்டுகோளை முடிக்கும் வரை அதை ஒரு கடனாகவே நினைப்பார்கள். திடுதிப்பென்று, நோய்வாய் பட்டுச் சாகும் தறுவாயில் கூடத்தன் மக்களிடம் *"இன்ன கோயிலுக்கு இன்னது செய்வதாக நேர்ந்து கொண்டிருக்கிறேன். அந்த நேர்த்திக்கடனைச் செய்து விடுங்கள்"* என்று கூறுவார்கள். நேர்த்திக்குமுன் ஒட்டாக, செய்ந்நேர்த்தி என்றுவரும் போது கலைத்திறனையும், சீர்செய்ந் நேர்த்தி (சீர்செனத்தி) என்பது மணமான மகளுக்குத் தந்தைதரும் வேலைப்பாடு மிக்க பொருள்களையும் குறிக்கும்.

நேர்த்திக்குறிப்பு *nērtti-k-kuṟippu,* பெ. (n.) செயல்தவறாமை; unfailing.

[நேர்த்தி = சிறப்பு, நேருதல். நேர்த்தி + குறிப்பு]

நேர்தப்பு-தல் *nēr-tappu-,* 5 செ.கு.வி. (v.i.) நேர்மை தவறுதல்; to deviate from the path of justice or righteousness. *நடுவர் நேர்தப்பிப் பேசியதால் அவன் வாழ்வு அழிந்தது.*

[நேர் + தப்பு – தல் நேர் = நேர்மை, முறைமை]

நேர்தரவு *nēr-taravu,* பெ. (n.) *நேர்த்தரவு* பார்க்க; see *nēr-t-taravu. "தம் பொறையாகிற நேர்தரவை"* (ஈடு, **1.4:7**).

[நேர்த்தரவு → நேர்தரவு]

நேர்தவம் *nēr-tavam,* பெ. (n.) வாய்க்காற் சடைச்சி; a kind of pith plant found near channels. (சா.அக.).

[நேர் + தவம். தவம் = காடு, வயற்காடு, வயற்காடுகளில் (வாய்க்கால்) காணப்படும் செடி.]

வளர்ச்சிக்கு நீண்டநாள் எடுத்துக் கொண்டு, ஒற்றைக்காலால் நிற்றல்போல் தோன்றுவதால் செடி, தவப்பெயர் பெறுகிறது.

நேர்திறம் *nēr-tiram,* பெ. (n.) *நோதிறம்* (அக.நி.) பார்க்க; see *nōdiram.*

[நோதிறம் → நேர்திறம்]

நேர்ந்தபடி *nērnda-padi,* கு.வி.எ. (adv.) **1.** தொடர்பின்றி; at random. **2.** விரும்பியபடி; at pleasure. **3.** முன்னறிவின்றி; rashly, thoughtlessly, heedlessly.

[நேர் → நேர்ந்த + படி. படி = தன்மை]

நேர்ந்தபடி நிகழ்வதில் தொடர்பின்றியும், விரும்பியபடியும், முன்னறிவின்றியும் நடத்தல் காணலாம்.

நேர்ந்தபாடு *nērnda-pādu,* கு.வி.எ. (adv.) நேர்ந்தபடி,1 பார்க்க, (யாழ்ப்.) see *nērnda-padi,*1.

[நேர் → நேர்ந்த + பாடு. பாடு = நிலைமை, முறைமை, நுகர்ச்சி]

நேர்ந்தபார் *nērnda-pār,* கு.வி.எ. (adv.) **நேர்ந்தபடி,1** பார்க்க (யாழ்ப்.); see *nērnda-padi,*1.

[நேர்ந்தபடி → நேர்ந்தபார்.]

நேர்ந்தபோக்கு *nērnda-pōkku,* பெ. (n.) விடாப்பிடி (பிடிவாதம்) (வின்.); rashness, precipitancy.

[நேர் → நேர்ந்த + போக்கு. போக்கு = வழி, நடை.]

நேர்ந்தவாக்கில் *nērnda-vākkil,* வி. எ. (adv.) தொடர்பின்றி; at random. **2.** விருப்பப்படி; at pleasure.

[நேர் → நேர்ந்த + வாக்கில். வகு → வாகு → வாக்கில்]

நேர்ந்தவாக்கு *nērnda-vākku,* பெ. (n.) நேர்ந்த போக்கு (வின்.); rashness.

[நேர் → நேர்ந்த + வாக்கு. வகு → வாக்கு = ஒழுங்கு]

நேர்ந்தார் *nērndār,* பெ. (n.) நண்பர் (பிங்.); friends.

[நேர்[5] → நேர்ந்தார்]

உறவினர் சார்ந்தாராகவும் நண்பர் நேர்ந்தாராகவும் அமைதல் காண்க.

நேர்ந்துகட்டு—தல் *nērndu-kattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வேண்டுதலுக்காகக் காப்புக் கட்டுதல்; to make a vow and tie a thread in token of it on the thing vowed. *கையில் நூலைத் தெய்வத்துக்கு நேர்ந்து கட்டிக் கொண்டான்.*

[நேர் → நேர்ந்து + கட்டு—தல்.]

நேர்ந்துகொள்(ளு)—தல் *nērndu-kol-,* 16 செ. குன்றாவி. (v.t.) கடவுளிடம் வேண்டுதல் செய்து கொள்ளுதல்; to take vow. *தலைவலி நின்றால் மொட்டை போடுவதாக நேர்ந்து கொண்டான். வயிற்று வலி குணமானால் கடவுளுக்கு ஆடு வெட்டுவதாக நேர்ந்து கொண்டான்.*

[நேர் → நேர்ந்து + கொள்(ளு)—தல்.]

நேர்ந்து கொள்ளுதல் = விரும்பிய செயல் நடந்தால் கடவுளுக்குக் காணிக்கையாக இன்னதைச் செய்வேன் என்று கூறி வேண்டிக் கொள்ளுதல்.

நேர்ந்துபோ—தல் *nērndu-pō-,* 8 செ.கு.வி. (v.i.) 1. நிகழ்தல் (சம்பவித்தல்); to happen. *கல்லூரிக்கு அருகிலே வீடு நேர்ந்து போச்சு. அவன் மாட்டு வண்டியில் வருவதும் இவன் நடந்து வருவதும் ஒரே நேரத்தில் நேர்ந்து போயின.* 2. மெலிதல் (வின்.); to grow thin, wither, as a limb.

[நேர் → நேர்ந்து + போ—தல்.]

நேர்ந்துவிடு[1]—தல் *nērndu-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) தெய்வத்துக்கு வேண்டுதல் செய்வதற்காக விலங்கு முதலியவற்றைக் கோயிலுக்கு விடுதல்; to offer or consecrate to a deity by a vow, as an animal. *கோயிலுக்கு நேர்ந்துவிட்ட கடா இது.*

[நேர் → நேர்ந்து + விடு—தல்.]

நேர்ந்துவிடு[2]—தல் *nērndu-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) மெலிதல்; to grow thin, wither, as a limb. நோயால் உடல் நேர்ந்து போயிற்று.

[நேர் → நேர்ந்து + விடு—தல்.]

நேர்ந்துவை—த்தல் *nērndu-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) நேர்ந்து விடுதல் பார்க்க; see *nērndu-viḍu-.* *கடவுளுக்குப் படையலிடத் தேங்காயை நேர்ந்து வைத்தான்.*

[நேர் → நேர்ந்து + வை—த்தல்.]

நேர்நஞ்சு *nēr-nañju,* பெ. (n.) கன்மத மென்னும் மருந்துச் சரக்கு (சங்.அக.); rock alum.

நேர்நிர—த்தல் *nēr-nira,* 3 செ.கு.வி. (v.i.) சமமாய் நிற்றல்; to stand equal. *"குன்றொடு நேர்நிரந்து"* (பரிபா. 18:5)

[நேர் + நிர—த்தல். நிரத்தல் = நிரலாக நிற்றல்.]

நேர்நில்—தல் (நேர்நிற்றல்) *nēr-nil-,* 14 செ.கு.வி. (v.i.) 1. எதிர்நிற்றல், முன்னால் நிற்றல்; to stand directly opposite or in front. *'ஆறு கிண்ணக மெடுத்தால் நேர்நின்ற மரங்கள் பறியுண்டுபோய்க் கடலிலே புகும்'* (ஈடு, 1.1:1 அவ.) 2. ஒழுங்காய் நிற்றல்; to stand in a line.

[நேர் + நில்—தல். நில்—தல் = நிற்றல்]

நேர்நிலைவஞ்சி *nēr-nilai-vañji,* பெ. (n.) சமநிலை வஞ்சி (தொல். பொருள். செய்.41); a kind of *vañji* stanza.

மறுவ. சமநிலை வஞ்சி

[நேர் + நிலைவஞ்சி. இரண்டு சீர்களை உடையதாய், ஒவ்வொருசீரும் ஆறு எழுத்துகள் கொண்டதாய் வருவது நேர்நிலை வஞ்சி. "நேர்நிலை வஞ்சிக்கு ஆறும் ஆகும்" (தொல்.பொருள்.செய்.41)] எ—டு: "மலைப்பொழிந்தநீர் கடற் பரப்பவும்" (பட்டினப்.127)

நேர்நிறை *nēr-niṟai,* பெ. (n.) 1. சமமான சுமை (சரிபாரம்); equal weight. 2. அறம், முறைமை; impartiality, justice. 3. கற்பு; chastity.

[நேர் + நிறை]

நேர்நெட்டி *nēr-neṭṭi,* பெ. (n.) பூடுவகை (சங்.அக.); a plant.

[நேர் + நெட்டி. நேராக வளரும் பூடுவகை]

நேர்ப்பம் *nērppam,* பெ. (n.) 1. இயற்கை மூலம் (பிரகிருதி) (ஈடு, 8.1:6); primordial matter. 2. திறமை (சாமர்த்தியம்); skill, ability. *"சுழற்றிய நேர்ப்பம் இருந்தபடி"* (திவ். இயற். திருவிருத். 51, வியா.).

[நேர் → நேர்ப்பு + அம்.]

நேர்ப்பிசின் *nērppišiṉ*, பெ. (n.) ஒருவகை அரத்தைச் செடி (M.M. 94); false, zedoary, Koempferia rotunda.

[நேர் + பிசின்.]

நேர்ப்பிசின்: பூவின் மணம், அழகு இவைகளுக்காகத் தோட்டங்களில் பயிர் செய்யப்படும் செடி. இதன் இலைகள் பெரியன. வேர் உட்டுளையுள்ளது. பூக்கள் நெருக்கமாக இருக்கும்; வெண்மையும் ஊதாவும் கலந்த நிறம், மேழ (சித்திரை) மாதத்தில் பூக்கும். இதன் வேர் இஞ்சியின் மணத்தையுடையது. இச்செடியை அரைத்துப் புண்ணுக்குத் தடவ வீக்கங் குறையும், புண் ஆறும். (சா.அக.).

நேர்நில்–தல் (நேர்நிற்றல்) *nērppu*, பெ. (n.) *நேர்த்தி* பார்க்க; see *nērtti*.

[நேர்[1] → நேர்ப்பு]

நேர்ப்பு[2] *nērppu*, பெ. (n.) ஒத்தது (பரிபா.); similarity. (த.சொ.அக.)

[(நிகர்) → நேர் → நேர்ப்பு.]

நேர்பசை *nērpašai*, பெ. (n.) குற்றுகர முற்றுகரங்களோடு இயைந்து வரும் நேரசை (தொல். பொருள். செய்.4, உரை.); nēr-ašai with 'u' or shortened 'u' added at its end.

[நேர்[1] → நேர்பு + அசை]

நேர்பு, நிரைபு என்று தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டவை பிற்காலத்தில் காசு, பிறப்பு ஆயின.

எ.டு.

"*சிறப்பொடு பூசனை செல்லாது; வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு*" (குறள்,18). ஈண்டு– நேர் + நேர். குற்றுகரத்தால் அமைந்த நேர்பசை.

"*இறந்த வெகுளியின் தீதே; சிறந்த உவகை மகிழ்ச்சியின் சோர்வு*" (குறள்,531). சோர்வு– நேர் + நேர். முற்றுகரத்தால் அமைந்த நேர்பசை.

நேர்படல் *nērpaḍal*, தொ.பெ. (vbl.n.) **நேர்படு–தல்** பார்க்க. see *nēr-paḍu-*.

[நேர் + படல்.]

அல்லீற்றுத்தொழிற்பெயர்

நேர்படு[1]–தல் *nēr-paḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) 1. சந்தித்தல் (வின்.); to meet; to be in conjunction with, as planets. 2. நன்கு கற்றல், பயிலுதல்; to learn well. "*இவை பத்தும் நேர்பட்டார்*" (திவ். திருவாய். 8.9:11). 3. உடன் படல்; to agree, assent. 4. கிடைத்தல்; to be obtained. "*இல்லார்க்குக் கிழியீடு நேர்பட்டாலென*" (திருவிளை. விருத்த.14)

[நேர் + படு–தல். படுதல் = தோன்றுதல், சந்தித்தல். தல்லீற்றுத்தொழிற்பெயர்.]

நேர்படு[2]–தல் *nēr-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. நிகழ்தல் (சம்பவித்தல்); to occur. 2. ஏற்புடையதாதல்; to be appropriate, worthy. 3. வாய்த்தல்; to fall in one's way. "*கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டு*" (திருவாச. 40.9). 4. காணப்படுதல்; to appear. "*நேர்பட்ட நிரை மூவுலகுக்கும்*" (*திவ். திருவாய். 8.9:11*). 5. எதிர்ப்படுதல்; to come in front, meet. "*வஞ்சி நேர்பட்ட காலையில்*" (தனிப்பா. 1, 146:46). 6. நட்பாதல் (வின்.); to be in harmony or on good terms. 7. ஒழுங்குபடுதல்; to be in order. "*ஒன்றொ டொன்று நேர்படாம லோடு நாய்கள்*" (பெரியபு. கண்ணப். 69).

[நேர் + படு–தல். படுதல் = நிகழ்தல், தோன்றுதல். இது தன் வினைவடிவம்.]

நேர்படுத்து–தல் *nēr-paḍuttu-*, பெ. (n.) 1 **நேர்பிடி–த்தல்**, (உ.வ) பார்க்க; see *nēr-piḍi-*, *வீட்டுக்கு வந்ததும் பொருள்களை நேர்படுத்தவே நேரம் சரியாயிருந்தது.* 2. நலம் பெறச் செய்தல் (சுகப்படுத்துதல்); to cure,

remedy. 3. **நேர்பண்ணு–தல்** பார்க்க; see *nēr-paṇṇu-.*

[நேர் + படுத்து – தல். இச்சொல் பிற வினை வடிவம்.]

நேர்பண்ணு[1]–தல் *nēr-paṇṇu-,* 5 செ. குன்றாவி. (v.t.) 1. ஒழுங்குபடுத்துதல்; to make even. *வீட்டுப் பொருள்களை நேர்பண்ணி வைக்க வேண்டும்.* 2. ஒன்றுபடுத்துதல்; to reconcile, unite.

[நேர்[1] + பண்ணு – தல். பண்ணுதல் = செய்தல்.]

நேர்பண்ணு[2]–தல் *nēr-paṇṇu-,* 5 செ.கு.வி. (v.i.) ஆணையிடுதல்; to take oath, swear.

[நேர் + பண்ணு – தல். பண்ணுதல் = செய்தல், ஆணையிடுதல்]

நேர்பாடு *nēr-pāḍu,* பெ. (n.) 1. தற்செயலான நிகழ்ச்சி; chance occurrence. '*காட்டகத்து விழுப்பொருள் எடுத்துக் கொண்டாற் போன்ற தொரு நேர்பாடன்று*' (புறநா. 70, உரை). 2. வழிவகை (உபாயம்); means, method. "*தங்கணிடந்தப்பிற் காணுநேர்பா டெண்ணு வார்*" (பெரியபு. கண்ணப். 182). 3. உடன்பாடு, இயைபு (வின்.); consent, compliance. 4. முறைமை, அறம் (நீதி); justice. "*கோணே நேர்பாடாயிருந்தான்*" (பாரத. சூது. 227). 5. நீளம் (திவா.); length. 6. *நேர்த்திக்கடன்* (இ.வ.) பார்க்க; *nērtti-k-kaḍaṉ.*

[நேர் + பாடு. பாடு = நிகழ்ச்சி, முறைமை]

நேர்பாடுசீர்பாடு *nērpāḍu-šīrpāḍu,* பெ. (n.) *நேர்சீர்* (இ.வ.) பார்க்க; see *nēr-šīr.*

[நேர்பாடு + சீர்பாடு. சீர்பாடு = மேம்பாடு]

நேர்பாடுசொற்பாடு *nēr-pāḍu-šoṟ-pāḍu,* பெ. (n.) வாய்ச்சொல்பலிக்கை (வின்.); accidental fulfilment of words or predictions spoken at randon.

[நேர்பாடு + சொற்பாடு. சொற்பாடு = உடன்படிக்கை]

சொற்பாடு நேர்பாடு – முன்பின்னாக நின்றுபொருள்தருகிறது.

நேர்பிடி[1]–த்தல் *nēr-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. நேர்வழி செலுத்துதல்; to lead through a straight course. 2. முடிவுக்குக் கொண்டுவருதல்; to bring to a successful issue, as an untoward business. 3. சரிப்படுத்துதல்; to mend, rectify, to adjust; to accomplish properly. 4. அமைதிப் படுத்துதல்; to reconcile; to bring to an agreement, as contending parties.

[நேர் + பிடி – த்தல். பிடித்தல் = வயப் படுத்துதல், அகப்படுத்துதல், மேற்கொள் ளுதல்.]

நேர்பிடி[2]–த்தல் *nēr-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. நலமாதல் (சுகமாதல்); to be cured, as a disease. *உடம்பு நோயிலிருந்து நேர்பிடிக்க நாளாகும்.* 2. சாதல்; to terminate by death.

[நேர் + பிடி – த்தல். பிடித்தல் = அடங்குதல், செலவாதல், நலமாதல்]

நேர்பு *nērpu,* பெ. (n.) 1. *நேர்பசை* பார்க்க; see *nēr-pašai.* "*நேர்புநிரைபு மாகுமென்ப*" (தொல்.பொருள். செய்.4). 2. நீளம் (சூடா.); length. 3. எழுச்சி (சது.); rising. 4. சந்திப்பு (வின்.); meeting. 5. நிகழ்ச்சி (வின்.); occurence, happening. 6. போக்கு (வின்.); tendency, course.

[நேர்[1] → நேர்பு.]

நேர்போ—தல் *nēr-pō-,* 8 செ.கு.வி. (v.i.) 1. இணங்குதல்; to yield, agree. 2. குணமாதல்; to be cured. 3. சரியாய்ப் போதல்; to become all right.

[நேர் + போ—தல். போதல் = செல்லுதல், நீங்குதல்]

நேர்ம்புணை *nēr-m-puṇai,* பெ. (n.) மெல்லிய தெப்பம்; light raft. "*நீரணிமாடவாவி நேர்ம்புணை நிறைத்து*" (சீவக. 2654).

[நேர் + ம் + புணை. புணை = தெப்பம், மரக்கலம், மூங்கில்]

நேர்மாறு *nēr-māṟu,* பெ. (n.) சொல்லுவதற்கு முற்றும் எதிரானது; just opposite. *குணத்தில் அவன் மனைவி அவனுக்கு நேர்மாறு.* நான் *சொல்லுவதற்கு நேர்மாறாக எதையாவது சொல்லாதே. எதிர்பார்த்தலுக்கு நேர்மாறாக உன் செயல் அமைகிறது.*

[நேர் + மாறு]

நேர்முகத்தேர்வு *nēr-muga-t-tērvu,* பெ. (n.) வேலைக்கோ, படிப்புக்கோ விண்ணப்பம் செய்தவரின் தகுதியை வாய்மொழியாகக் கேள்விகள் கேட்டு அறியும் தேர்வு; interview. *முதல்வகுப்புச் சான்றிதழ்கள் கொண்டு சென்றாலும் நேர்முகத் தேர்வில் தோற்றுவிட்டான்.*

[நேர்முகம் + தேர்வு]

நேர்முகம் *nēr-mugam,* பெ. (n.) 1. எதிர்முகம் (யாழ்.அக.); front. 2. ஒருவரை நேரடியாகச் சந்தித்து நிகழ்த்தும் (பேட்டி) தேர்வு; interview. *பெயர்பெற்ற எழுத்தாளரின் நேர்முகப் பேட்டியை இன்று தொலைக்காட்சியில் ஒலி பரப்புகின்றனர்.* 3. நேருக்கு நேர் நிகழ்த்துவது; நேரடி கண்காணிப்பில் இயங்குவது; direct; face to face. *அவரை நேர்முகமாகப் பார்த்து விட்டால் எல்லாம் சரியாகிவிடும். தீவிரவாதிகள் நேர்முகமாகப் போரிட மாட்டார்கள்.* 4. உடன்பாடு; agreement, assent.

[நேர் + முகம். முகத்துக்கு நேர் பேசுவது]

நேர்முகவர்ணனை *nēr-muga-varṇaṉai,* பெ. (n.) விழா, விளையாட்டு போன்ற வற்றினை நேரிடையாகப் பார்த்து வானொலி, தொலைக்காட்சியில் உடனுக்குடன் தருகின்ற விளக்கம்; live, running commentary.

[நேர்முகம் + வர்ணனை. வண்ணனை → வர்ணனை.]

பண்பின் கூறுகள் நான்கென்று இலக்கண நூல்கள் கூறும். வண்ணம், வடிவம், தன்மை, அளவு. இவற்றுள் 'வண்ணத்தின்' என்றுதொல்காப்பியநூற்பா கையாண்ட பழஞ்சொல் இடைக்காலத்தில் 'வர்ண' என்று வடமொழியாளரால் கையாளப் பட்டது. அண்ணா(மலை) → அர்ணா. (அருணா – சலம் என்பது போல).

நேர்முகவரி *nēr-muga-vari,* பெ. (n.) சொத்துவரி, வருமானவரி போன்றவற்றைத் தனியாள் அல்லது ஒரு அமைப்பு போன்றவை நேரிடையாகச் செலுத்திட வேண்டியவரி; direct tax.

[நேர்முகம் + வரி.]

அரசு வணிகரிடம் பெறுவது நேர்முக வரி. வணிகர் மக்களிடம் பெறுவது மறைமுகவரி.

நேர்முகவுதவியாளர் *nēr-muga-v-udaviyāḷar,* பெ. (n.) அமைச்சர், மேலதிகாரி போன்றோருக்கு நிகழ்வுகளை வரிசைப் படுத்துதல், பார்வையாளர்கள் சந்திப்பை முறைப்படுத்துதல்போன்ற பணிகளைச் செய்திடும் உதவியாளர்; personel assistant to a minister, a higher officer, etc.

[நேர்முகம் + உதவி+ஆளர்.]

நேர்முட்டுச்செடிச்சி *nēr-muṭṭu-c-ceḍicci,* பெ. (n.) பேய்த்தும்மை; bitter laucas. (சா.அக.).

[நேர் + முட்டு + செடி + சி.]

நேர்மை[1] *nērmai,* பெ. (n.) 1. செம்மை; straightness, directness. *"முக்கணிறை நேர்மையாய்க் கைக்கொண்டு போதிப்பதாச்சு"* (தாயு.சுகவா.9). 2. உண்மை (வின்.); faith fulness, fidelity, honesty. **இந்தச் செயலில் அவன் நேர்மையாய் நடந்து கொண்டான்.** 3. முறைமை (நீதி); impartiality; justness, propriety. 4. அறம்; morality, virtue. 5.நுண்மை (ஐங்குறு.அரும்.); fineness, thinness, minuteness. 6. திருத்தம் (வின்.); accuracy, exactness, correctness. 7. சமம் (சீவக.835); equality; uniformity. 8. இசைவு (யாழ்.அக.); harmony, agreement. 9. நன்னிலை; good condition. **அந்தக் குடும்பம் நேர்மையோடு இருக்கிறது.** 10. இணக்கம்; friendship, familiarity. *அவனுக்குமிவனுக்கும் நேர்மையில்லை.*

[நேர்[1] → நேர்மை. தன் நலத்துக்காக பொய் சொல்லுதல், ஏமாற்றுதல் போன்ற முறைகளைக் கையாளாத உண்மை நிலை; உண்மையைச் சொல்லி வெளிப்படையாக நடந்துகொள்ளும் தன்மை.]

நேர்மை[2] *nērmai,* பெ. (n.) நிகழ்வு, நிகழ்ச்சி (சம்பவம்); occurence. *"இதுகண் டிந்நேர்மை புதிதென்றதிசயித்தான்"* (மகாராசாதுறவு,111).

[நேர் → நேர்வு → நேர்மை]

நேர்வழி *nēr-vaḻi,* பெ. (n.) 1. ஓரிடத்தைச் சென்றடையும் நேரான பாதை; straight road, direct course. 2. நல்லொழுக்கம்; upright conduct.

[நேர் + வழி.]

நேர்வளம் *nēr-vaḷam,* பெ. (n.) 1. செவ்வழி யாழ்த்திறம்; a secondary melody-type of *mullai* class. 2. பாலையாழ்த்திறம்; secondary melody-type of *pālai* class.

[நேர் + வளம். வளம் = செழுமை, செல்வம், பயன்.]

நேர்வளாந்தான் *nēr-vaḷāndāṉ,* பெ. (n.) சுக்கு; dried ginger. (சா.அக.).

நேர்வா—தல்(நேர்வருதல்) *nēr-vā-,* 18 செ.கு.வி (v.i.) & 15 செ.குன்றாவி. (v.t.) ஒத்துவருதல்; to resemble. *"கலிநீர் தில்லைவானவ னோர்வருமே"* (திருக்கோ.85).

[நேர் + வா—தல். வா—தல் = வருதல்]

நேர்வாக்கில் *nēr-vākkil,* பெ. (n.) 1. நேராக; straight. *நேர்வாக்கில் வகிடெடுத்து சீவு.* 2. நேராகப் பார்த்தபடி; frontal view. *நேர்வாக்கில் எடுத்தபடம். நேர்வாக்கில் படுத்துக்கொள்.*

[நேர் + வாகு + இல் – நேர்வாக்கில்.]

நேர்வாடைக்காத்து *nēr-vāḍai-k-kāttu,* பெ. (n.) நேர்வடதிசையிலிருந்து தென்திசை நோக்கி வீசும்காற்று(மீனவ.); a kind of wind blowing North to South

[நேர் + வாடை + (காற்று →) காத்து.]

நேர்வாய்க்கட்டளை *nēr-vāy-k-kaṭṭaḷai,* பெ. (n.) மாளிகையின் மேல் மாடத்திலுள்ள பலகணி; window in an upper storey,as of a palace. *"தென்வளிதரூஉ நேர்வாய்க் கட்டளை திரியாது"* (நெடுநல்.62).

[நேர் + வாய் + கட்டளை]



நேர்வாளஎண்ணெய் *nērvāḷa-eṇṇey,* பெ. (n.) நேர்வாளப்பருப்பினின்று வடிக்கும் எண்ணெய்; croton oil extracted from croton seeds.

[நேர்வாளம் + எண்ணெய்.]

இவ்எண்ணெய் சிறுநீரை அதிகமாக உண்டாக்கப்பயன்படுகிறது. கழிச்சலை உண்டாக்கும். தோலைச்சிவப்பாக்கி எரிச்சலைத் தரும். இவ்எண்ணெய் குடற்சிக்கல், பாண்டு, தோல் நோய், கீல்மூட்டுவலி, நரம்பிழுப்பு, நீர்க்கோவை, உடல்வலி இவைகளுக்கு மருந்தாகிறது. இவ்வெண்ணெய்யைத் தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் போன்றவற்றுடன் கலந்தே பயன்படுத்த வேண்டும். தனியே தடவினால் எரிச்சல், கொப்புளம் உண்டாகும். (சா.அக.).

நேர்வாளக்கொட்டை *nēr-vāḷa-k-koṭṭai,* பெ. (n.) நேர்வாளப்பருப்பின் கொட்டை; croton seed or nut (சா.அக.).

[நேர் + வாளம் + கொட்டை]

நேர்வாளபூசுதைலம் *nērvāḷa-pūšu-tailam,* பெ. (n.) மேற்பூச்சு மருந்தாகப் பயன்படும் நேர்வாள எண்ணெய்; oil extracted from croton seed. it is used as liniment. (சா.அக.).

[நேர்வாளம் + பூசு + Skt. *தைலம். பூச்சு → பூசு]*

நேர்வாளம் *nērvāḷam,* பெ. (n.) **1.** சிறுமரவகை (பதார்த்த.1063); true croton oil plant, Croton tiglium. **2. நேர்வாளமரம்;** பார்க்க; see *nērvāḷa-maram.*

ம.நேர்வாளம்; **க.**நேபாள; **தெ.**நேபாளமு.

[நேபாளம் → நேர்வாளம். நேபாளத்திலிருந்து வந்த மரம்]

நேர்வாளமரம் *nērvāḷa-maram,* பெ. (n.) நேர்வாளக் கொட்டை தரும் ஒரு சிறிய மரவகை; croton seed plant-Croton tiglium.

மறுவ. வாளம், நேபாளம்

[நேர்வாளம் + மரம்.]

இதன்கிளைகள் பக்கவாட்டில் பரவியதாகக் காணப்படும். இலைகள் மாறிமாறி அண்டவடிவாயும், கோணங்கள் வாய்ந்தும், வழவழப்பாயுமிருக்கும். இதன் கொழுந்து மொசுமொசுப்பாயிருக்கும். இம்மரத்தின் பூவில் ஆண்பூ மேலாகவும் பெண்பூ கீழாகவும் இருக்கும். விதையின் வெளிப்பக்கம்ஓடு அமைந்திருக்கும். இதன் பூக்கள் மஞ்சளாகவும் சிறியதாகவும் இருக்கும். மேழ (சித்திரை) மாதம், ஆடவை (வைகாசி) மாதங்களில் பூக்கும். இதன் விதை, இலை முதலியவை மருந்தாகப் பயன்படுகின்றன. இது நேபாளத்தில் இருந்து மிகுதியாக வருவதால் நேபாளம் → நேர்வாளம் எனப்பெயர் பெற்றது. (சா.அக.).

இரட்டைவிதையிலைப் பயிர். இலையுதிராச் சிறுமரம். இது வங்காளம், அசாம், தென்னிந்தியா, மியான்மர்(பர்மா), இலங்கை மலேயா தீவுகள் ஆகிய



இடங்களில் வளருகிறது. இதன் விதை, ஆமணக்கு விதை போலிருக்கும். கொட்டைக்குள் இருக்கும் முளைசூழ் தசைச் செம்பழுப்பு நிறமானது. இதிலிருந்து எடுக்கும் எண்ணெய், மிகக் கொடிய கழிச்சல் மருந்து. இம்மருந்தை அதிகமாகக்கொடுத்தால் இறப்பு ஏற்படும். இந்த எண்ணெய் பழுப்பு அல்லது வெளுப்பான மஞ்சள் நிறமாக இருப்பதுடன் ஒருவகை நாற்றமுடனும் இருக்கும். பெரும்பாலும் இக்காலத்தில் இதனை மனிதர்களுக்குக் கழிச்சல் மருந்தாகப் பயன்படுத்துவதில்லை. கால் நடைகளுக்கே மிகுதியும் பயன் படுத்தப்படுகிறது.

நேர்வாளமுத்து *nērvāḷa-muttu,* பெ. (n.) நேர்வாளவிதை; true croton seeds.

[நேர்வாளம் + முத்து. முத்து = விதை. ஒ.நோ. ஆமணக்குக் கொட்டை முத்து எண்ணெய்.]

நேர்வான் *nērvāṉ,* பெ. (n.) பதினான்காம் விண்மீன், நெய்ம்மீன் (சித்திரை) (பிங்.252); the 14th nakāṣtra.

நேர்வானிகம் *nērvāṉigam,* பெ. (n.) புரசமரம்; battle of plassey tree,Butea frondosa. (சா.அக.).

நேர்விடை *nēr-viḍai,* பெ. (n.) **1.** உடன்பாட்டை நேரே குறிக்கும் விடை (நன். 386,உரை); affirmative answer. **2.** நேராகச் சொல்லும் விடை; direct, straight answer.

[நேர் + விடை.]

நேர்வு *nērvu,* பெ. (n.) **1.** நிகழ்ச்சி (வின்.); happening. **2.** உடன்பாடு (யாழ்.அக.); consent. **3.** கொடுக்கை; giving. "*நாள் நாகம் நாறும் நனைகுழலாள் நல்கித்தன் பூணாகம் நேர்வளவும் போக்காது*" (தி.மா.16). **4.** வேண்டுகை (வின்.); soliciting. **5.** எதிர்கை; opposing. "*வஞ்ச னிராமனை நேர்வுறா*" (கம்பரா.இராவணன் வதை.183). **6.** பொருகை (வின்.); fighting. **7.** சரிந்து விழுகை (யாழ்.அக.); dropping.

[நேர்[1]→ நேர்வு.]

நேர *nēra,* இடை. (part.) ஓர் உவமவுருபு; a particle of comparison, "*போல மறுப்ப ஒப்பக் காய்த்த நேர வியர்ப்ப நளிய நந்த என்று*" (தொல்.பொருள். உவம.16).

[நிகர → நேர. நேர்[1]→நேர.]

நேரக்களி *nērakkaḷi,* பெ. (n.) **நௌரக்களி** பார்க்க; see *naurakkaḷi.* (சா.அக.).

நேரக்குலம் *nēra-k-kulam,* பெ. (n.) **நேர காலம், 2,3** (நெல்லை) பார்க்க; see *nēra-kālam,***2,3.**

[நேரம் + குலம். காலம்→ கலம் → குலம்]

நேரகாலம் *nēra-kālam,* பெ. (n.) **1.** ஏற்றகாலம்; right time, suitable time. **2.** பிறப்பியத்தின் (சாதகத்தின்) படி கெடுதியான காலம் (யாழ்ப்.); dangerous or critical time, as determined from one's horoscope. **3.** ஊழ் (விதி) காலம் (வின்.); special time when fate exercises its influence, commonly evil. **4.** தற்காலம் (யாழ்.அக.); present time.

[நேரம்[1]+ காலம்]

நேரங்கடத்து-தல் *nēraṅ-gaḍattu-,* 5செ.கு.வி. (v.i.) **1.** காலம் போக்குதல் (வின்.); to while away one's time. *தூங்குவது போல் நடித்து நேரங்கடத்திக்கொண்டிருக்கிறான்.* **2.** வேலையில் மந்தமாயிருத்தல் (உ.வ.); to be

slow in work. *மதுரை வந்தியின் கூலியாளாக வந்த சொக்கேசர் வேலை செய்யாமல் நேரங்கடத்திக்கொண்டிருந்தார்.*

[நேரம் + கடத்து–தல். கடத்துதல் = போக்குதல், செலுத்துதல், குழப்புதல்]

நேரங்காட்டி *nēraṅ-gāṭṭi,* பெ. (n.) சூரியகாந்திச் செடி; sunflower plant-Helianthus indicus. (சா.அக.).

[நேரம் + காட்டி. கதிரவன் செல்லும் திசை நோக்கித் திரும்பி நேரத்தைக் காட்டும் செடி.]

மணிப்பொறி இல்லாத பழங்காலத்தே மன்னர் மாளிகையில் மேற்குவளையினின்று கிழக்குவளைக்கு நீர் சொட்டவிட்டு அறியும் நாழிகை காட்டிகள் இருப்பினும், மக்கள் கதிரவனைக் கண்டுணரக் கண்கூசும்போது நேரம் அறியச் சூரிய காந்திப்பூ பயன்பட்டது அறிக.

நேரங்கெட்டநேரத்தில் *nēraṅ-geṭṭa-nērattil,* வி.எ. (adv.) நேரம் கழித்து; at an ungodly hour. **நேரங்கெட்ட நேரத்தில் வீட்டுக்கு வராதே. நேரங்கெட்ட நேரத்தில் சாப்பிடாதே.**

[நேரம் + கெட்டநேரத்தில்]

நேரம் கெட்ட நேரத்தில் வீட்டிற்கு வருபவர் கதவைத்தட்டுவதனால், உழைத்து அயர்ந்து உறங்கிக் கொண்டிருப்போர்க்குத் தூக்கங் கலையும், தொல்லைவரும். சூடுஆறிய உணவு சுவை குன்றியிருக்கும் என்பதனால் இத்தொடர் அமைந்ததென்க.

நேரங்கெட்டநேரம் *nēraṅ-geṭṭa-nēram,* பெ. (n.) **1.** தகுதியற்ற காலம்; unseasonable hour, as for visiting or eating. *நேரங்கெட்ட நேரத்தில் சொந்தக்காரர்கள் வந்து விட்டனர்.* **2.** பேய்கள் உலவுவதாகக் கருதப்படும் காலமல்லாக்காலம்; unpropitious time, as midday or dusk, when demons are supposed to be abroad. *நேரங் கெட்டநேரத்தில் வீட்டுக்கு வராமல் நேரத்தோடு வந்துவிடு.*

[நேரம் + கெட்ட நேரம்]

உறவினர் வந்தால் உணவு ஏற்பாட்டுத் துயர் உண்டாகும். தனிமையும், இருண்மையும் பேய் அச்சம் உண்டாகும்.

நேரசை *nēr-asai,* பெ. (n.) குறிலும் நெடிலும் தனித்தேனும் ஒற்றடுத்தேனும் வரும் அசைவகை (யாப்.வி.6.); a metrical syllable consisting of a short or long letter, singly or followed by a consonant. "*நெடில்குறிறனியே நின்றுமொற்றடுத்தும் நடைபெறுநேரசை நால்வகையானே*" (யாப்.வி.6).

[நேர் + அசை.]

எ.டு: ஆழி, வெள், வேல்,
ஆ–ழி– வெள் – வேல்

"குறிலே நெடிலே........

நெறியே வரினும் நிரைந்தொற் றடுப் பினும்
நேர்...." (யா.கா.5)

"குறிலே நெடிலே..... ஒற்றொடு
வருதலொடு மெய்ப்பட நாடி நேரும்"
(தொல்.பொருள்.செய்.3)

நேரசை, நிரையசை பிரிப்பு தமிழில் யாப்போசைக்கு அடிப்படை. தனி நேர்க்கு நாள் என்றும், நேர்நேர்க்குத் தேமா என்றும், நேர்நேர், நேர்–க்கு தேமாங்காய் என்றும், நேர்நேர்நேர்நேர் நான்கிற்குத் தேமாந்தண்பூ என்றும் வாய்பாடு கூறுவது வழக்கம். நேர்க்கு இணையாக வடமொழியில் 'லகு' என்றும் நிரைக்குக் குருவென்றும் வழங்குவர்.

நேரஞ்சாய்–தல் *nēraṉ-jāy-,* 1செ.கு.வி. (v.i.) பொழுதிறங்குதல் (இ.வ.); to draw towards evening, decline, as the day. *நேரஞ் சாயும் பொழுது வீட்டுக்குவா.*

[நேரம்[1] + சாய்–தல்.]

நேரஞ்செல்(லு)–தல் *nēraṅ-jel(lu)-*, 13செ.கு.வி. (v.i.) **1.** நீண்ட காலம் பிடித்தல்; to take a long time, as a work. **2.** காலத் தாழ்வாதல் (வின்.); to be protracted or delayed; to become late.

[நேரம்¹ + செல்(லு)–தல்.]

நேரடம் *nēraḍam*, பெ. (n.) நாவல்; jaumoon, Eugenia jambolina. (சா.அக.).

நேரடி¹ *nēr-aḍi*, பெ. (n.) ஐந்துவகை செய்யுளடிகளில் நாற்சீரால் வருவது; a line of four metrical feet, one of five kinds of aḍi. *"பத்தெழுத் தென்ப நேரடிக் களவே ஒத்த நாலெழுத்து ஒற்றலங் கடையே"* (தொல்.1295). *"நாலொருசீர்அறை தருகாலையளவொடு நேரடி"* (யா.கா.12).

[நேர்+ அடி.]

ஐந்துவகைஅடிகள்: குறளடி, சிந்தடி,நேரடி, நெடிலடி, கழிநெடிலடி.

குறளடி: இரண்டு சீரால் ஆகியது.

எ.டு. "திரைத்த சாலிகை
நிரைத்த போனிரந்
திரைப்ப தேன்களே
விரைக்கொள் மாலையாய்" (யா.கா.13 மேற்கோள்)

"வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவறா வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவி னீணெய்தல்
பூச்சாம்பும் புலத்தாங்கண்
காய்ச்செந்நெற் கதிரருந்தும்
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழற் றுயில்வதியும்" (பட்டினப். 5–15)

சிந்தடி: மூன்று சீரான் ஆகியது.

எ.டு. இருது வேற்றமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடங் கையினாய்"

(சூளா.சீய.170)

"சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயின்
நீல வுண்கண் இவள்வாழுமே"

(யா.கா.46 மேற்கோள்)

"கயலெழுதிய விமய நெற்றியின்
அயலெழுதிய புலியும் வில்லும்
நாவலந் தண்பொழின் மன்னர்
ஏவல் கேட்பப் பாரர சாண்ட" (சிலப்.17:1)

நேரடி: நேரடி எனினும் அளவடி எனினும் ஒக்கும். நாற்சீரால் அமையும் அடி

எ.டு:

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"(குறுந்.18)

"சூரல் பம்பிய சிறுகால் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரலை யெனினே யானஞ் சுவலே
சாரல் நாட நீவர லாறே"(யா.கா.34, மேற்கொள்)

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி
பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ
கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமே லவன்வயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ"

(சிலப். 17–பாட்டு 1,2,3)

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த வாரமு மகிலும்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிரும்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
ஈழத் துணவுங் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவு நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்"

(பட்டின.185–193)

"முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ அடிவ யிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே"

(பட்டினத். பொது. அன்னை.8)

நெடிலடி: ஐந்து சீரான் அமையும் அடி.

"வேதத்தி னுட்பொருள் மண்ணாசை
மங்கையை விட்டுவிடப்
போதித்த வன்மொழி கேட்டிலை யோசெய்த
புண்ணியத்தால்
ஆதித்தன் சந்திரன் போலே வெளிச்சம்
தாம்பொழுது
காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே"

(பட்டினத். பொது. 11)

"கடையவ னேனைக் கருணையி னால்கலந்
தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல்
வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி ரானென்னைத்
தாங்கிக் கொள்ளே" (திருவாச. நீத்தல்.1)

"நாளென் செயும்வினை தானென் செயுமெனை
நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
செயுங்கும ரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும்
சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து
தோன்றிடினே." (கந்தரலங்காரம்)

"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச்செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ்நூல் விரித்தோனை
விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில்
வாகனனைச்
சார்ந்துணைப் போதும் மறவாதவர்க்கு
ஒருதாழ்வு இல்லையே".
(கந்தரலங்காரம்)

"மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை
வானவர்க்கு
மேலான தேவனே மெய்ஞ்ஞான தெய்வத்தை
மேதினியில்
சேலார் வயல்பொழில் செங்கோடனைச் சென்று
கண்டுதொழ
நாலாயிரம் கண்படைத் திலனே அந்த
நான்முகனே".

(கந்தரலங்காரம்)

கழிநெடிலடி: ஐந்துசீரின் மிக்குவருவது.
அறுசீர்:

"தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளை
கண்விழித்து நோக்க
தெண்திரை எழினி காட்ட தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும்
மாதோ" (கம்பரா.பால.36)

"முத்து வடஞ்சேர் முகிழ்முலை மேல்
முயங்குங் கொழுநர் மணிச்செவ்வாய்
வைத்த பவள வடம்புனைவீர்
மணிப்பொற் கபாடம் திறமினோ"
(கலிங்.கடை.30)

"கலவிக் களியின் மயக்கத்தாற்
கலைபோய் அகலக் கலைமதியின்
நிலவைத் துகிலென் றெடுத்துடுப்பீர்
நீள்பொற் கபாடந் திறமினோ."

(கலிங்.கடை.34)

எழுசீர் கழிநெடிலடி:

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினா லிளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோரென்
நேருறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளா யேழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே யிளைத்தேன்."
(அருட்பா.)

எண்சீர் கழிநெடிலடி:

"கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்கு
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறைஉறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே"
(திருவாச. திருப்பள்ளி.3)

நேரடி[2] *nēr-aḍi,* பெ. (n.) **1.** மற்றொன்றின் மூலம் அல்லாத பங்கேற்பு, இடையில் எதுவும் குறுக்கிடாத பங்கேற்பு; direct.(without any intervention of or mediation of someone or

something.) *கலவரத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபட்டவருக்குத் தண்டனை உண்டு.* 2. நேருக்கு நேர்; நேர்முகம்; face to face. ***இந்தத் தேர்தலில் மூன்று தொகுதிகளில் நேரடிப் போட்டி இருக்கும். கேட்ட கேள்விக்கு நேரடியாகப் பதிலைச் சொல்லுங்கள்.*** 3. கோயில் விழா, விளையாட்டுகள் முதலியவை ஒலிபரப்பாகும் போது அல்லது நடைபெறும் இடத்திலிருந்து உடனடியாக அனுப்பப்படுவது; live broadcasting. *மின் தடைகாரணமாக நேரடி ஒளிபரப்பில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.* 4. போக்குவரத்துப்பற்றிக் கூறும்போது இடையில் நிறுத்தங்கள் இல்லாமல் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மட்டும் என்று அமைவது; with reference to public transport through. *விழாவுக்கு என்று ஐந்து பேருந்துகள் நேரடிப்போக்குவரத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் நேரடிப்போக்குவரத்து உண்டு.*

[நேர் → நேரடி]

நேரந்தப்பு–தல் *nēran-tappu-*, 5செ.கு.வி. (v.i.) காலந்தவறுதல்; to be untimely or out of time. *நேரந்தப்பி விதைத்ததால் பயிர் சரியாக விளையவில்லை.*

[நேரம் + தப்பு–தல். தப்புதல் = தவறுதல்.]

நேரப்பட *nēra-p-paḍa*, கு.வி.எ. (adv.) காலத்தாழ்வாய் (தாமதமாய்) (வின்.); late.

[நேரம்¹ + பட.]

நேரப்பலன் *nēra-p-palaṉ*, பெ. (n.) செயல் தொடங்கப்பட்ட வேளையின் பயன் (நாஞ்.); astrological effect of the time when a work is commenced.

[நேரம் + பலன்.]

நேரப்போக்கு *nēra-p-pōkku*, பெ. (n.) பொழுது போக்குகை; pastime. "*வெற்றுநேரப் போக்காய்ப் புகல் விநோதமுமன்று*" (இரட்சணிய.பக்.2).

[நேரம் + போக்கு.]

நேரபாரமறி–தல் *nēra-pāram-aṟi-*, 2செ.கு.வி. (v.i.) அடக்க வொழுக்கமறிதல் (இ.வ.); to pay regard to modesty or propriety.

[நேரம் + பாரம் + அறி–தல்.]

நேரம்¹ *nēram*, பெ. (n.) 1. வினை நேருங்காலப் பகுதி; time. "*நேரம் பார்த்து நெடுந்தகைக் குரிசிலை மீட்டிடம் பெற்று*" (பெருங். உஞ்சைக்.57:74). *நேரங் காலம் பார்த்து வேலையைத்துவங்க வேண்டும்.* 2. தக்க சமையம்; வேளை (தருணம்), பொழுது (திருக்கோ.290, துறைவிளக்கம்); opportunity, season. "ஆண்டொருபத்துடனாறு நிரம்பிய தந்நேரம்" (சேதுபு.துத்தம்.14.). *கொடுப்பினைக்கும் நேரம் வாய்க்க வேண்டும்.* 3. இருசாமங்கொண்ட அரைநாள்; பகலிற் பாதியாகிய காலவளவு (திவா.); a measure of the day = 2 šāmam = 1/2 pagal = about six hours. 4. மணி; hour. ***குறித்த நேரத்தில் வந்து விடுவேன்.*** 5. இத்தனை மணியெனக் கணக்கிடும் காலவளவு; length of time. ***ஒருவர்குறைந்தது எட்டு மணிநேரமாவது தூங்கவேண்டும்.***

*ம.*நேரம்; *இ.* தேர்.
குட. நெர; *து.* நேர்டே

[நேர் → நேரம்]

நேரம்² *nēram*, பெ. (n.) 1. குற்றம்; guilt, fault. 2. தண்டம் (அபராதம்); fine.

தெ.நேரமு.

[நேர்வு → நேர் + அம்]

நேத்திரப்பூண்டு

நேர்வாளம்

நேரம்தவறாத *nēram-davaṟāda,* பெ. எ (adj.) காலம் தவறிடாத; punctual.

[நேரம் + தவறாத.]

நேரம்பெற *nēram-peṟa,* வி.எ. (adv.) விரைவாக (நெல்லை); early.

[நேரம்¹ + பெற.]

நேரல் *nēral,* பெ. (n.) **நேர்வு (திவா.)** பார்க்க; see *nērvu.*

[நேர் → நேரல்.]

நேரல்லார் *nēr-allār,* பெ. (n.) கீழோர்; inferiors, vulgar people. ***"நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால்"*** (நாலடி,72).

[நேர் + அல்லார். நேர்மையாக நடக்காத கீழோர்]

நேரலன்¹ *nēr-alaṉ,* பெ. (n.) பகைவன் (திவா.); enemy.

[நேர் + அல் + அன். அல் – எதிர்மறை இடைநிலை. அன் – ஆண்பால் ஒருமை ஈறு.]

நேரலன்² *nēralaṉ,* பெ. (n.) 1. நேர்மையானவன்; impartial, just person. 2. வளையாதது, நேரானது, நிறுதிட்டமானது (யாழ்ப்.); that which is straight or erect.

[நேரல் → நேரலன். நேர்¹ → நேரல்]

நேராக *nēr-āka,* கு.வி.எ. (adv.) 1. பிறர் மூலமாகவன்றித் தானே; directly in person. ***தானே நேராக ஈடுபட்டான்.*** 2. தெளிவாக (பிரத்தியட்சமாக); before one's eyes, in sight. 3. உண்மையாய்; honestly, straight for wardly. 4. முழுமையும்; completely. *'அகவாயிலுள்ளது நேராகப் போனவாறே'* (ஈடு, 4.4:10). 5. புறப்பட்ட விடத்திலிருந்து வேறு எங்கும் செல்லாமல்; straight from. ***நேராகப் பள்ளிக்குச் செல்லுதல் வேண்டும். பள்ளிக்கூடம் விட்டதும் நேராக வீட்டுக்கு வா.*** 5.வளையாமல், திரும்பாமல் காட்டிய வழியிலேயே; straight a head. ***வலப்புறம் சென்று நேராகப்போனால் ஊர்வரும். இந்த வழியே நேராகச் சென்றால் குளத்தை யடையலாம்.***

[நேர் → நேராக]

நேராதார் *nērādār,* பெ. (n.) பகைவர் enemies. ***"நேராதார் வளநாட்டை"*** (பு.வெ.3:14, கொளு). ***"நீர் முற்றி மதில் பொரூஉம் பகையல்லால் நேராதார்"*** (கலித்.67:4).

[நேர்¹+ ஆ + த் + ஆர்– நேராதார். ஆ–எ.ம.இ.நி. த்– சந்தி. ஆர்–பலர் பால் ஈறு.]

நேரார் *nērār,* பெ. (n.) **நேராதார்** பார்க்க; see *nērādār. "நிதியந் திறையளந்தார் நேராரும்"* (பு.வெ.3:10). "நேரார் நேரு நீணிதி துஞ்சுந் நிறைகோயில்" (சீவக.1635). ***"நேரார் தம்மைக் கொலைகண்டு மகிழாமல்" (பாரத. கிருட்டிணன்.தூ.11).***

[நேர் → நேரார். எதிர்மறை இடைநிலை குன்றியது.]

நேராளி *nēr-āḷi,* பெ. (n.) நேர்மையுள்ளவன் (யாழ்.அக.); upright, honest person.

[நேர் + ஆளி. ஆள் → ஆளி. ஒ.நோ. போர் + ஆளி = போராளி.]

நேரி[1] *nēri,* பெ. (n.) தமிழ்நாட்டிலுள்ளதும் சோழர்க்குரியதுமான ஒருமலை (பதிற்றுப்.40); a hill in the Tamil country belonging to the Chōḷās. "**நேரி வெற்பன்**" (சூடா.2:16)

[நேர் + இ. இ.சொல்லாக்க ஈறு செங்குத்தாக நிற்கும் மலை.]

இம்மலையால் சோழனை நேரியன் என்று பழைய நூல்கள் கூறுகின்றன. "*நீரிமிழ் சிலம்பின் நேரியோன்*" (பதிற்றுப்.40). "*பாடுசால் நெடுவரைக் கல்லுயர் நேரிப்பொருநன்*" (பதிற்றுப்.67). உறையூரின் தெற்கு வாயிலில் உள்ள ஓர் ஊரை நேரிவாயில் என்று சிலப்பதிகாரம் (28:117) கூறுகிறது. இங்குச் சேரன் செங்குட்டுவன் தன் மைத்துனனான சோழனுக்குப் பரிந்து ஒன்பது மன்னரை வென்றான் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது. "*ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை நேரிவாயில் நிலைச்செரு வென்று*" (சிலப்.28:116,117).

†**நேரி[2]** *nēri,* பெ. (n.) மக்களாட்சி முறையில் தங்களின் அரசைத் தாங்களே தேர்ந்தெடுக்க மக்களில் குறிப்பிட்ட அகவைக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் உள்ள அடிப்படை உரிமை; மேற்குறிப்பிட்ட உரிமையைக் காட்டும் முத்திரைக் குத்தப்படும் சீட்டு; Vote(s). *எங்கள் தொகுதியில் ஐம்பது விழுக்காடு நேரிகள் பதிவாகியது. தேர்தல் முடிந்து இரண்டுநாள்கள் கழித்து நேரிகள் எண்ணப்படும்.*

[நேர் + இ. (படைத்.பாவாணர்.)]

நேரிசம் *nēriśam,* பெ. (n.) எறிபடை; javelin. "*மாகடைக்க ணேரிசத்தான் மறைக்களிற்றை மதமடக்கி*" (குற்றா.தல. தருமசாமி.74). 2. அம்புவகை (யாழ்.அக.); a kind of arrow.

[நேர் + இசம். இயம் → இசம் = நேராகச் செல்லும் படைக்கருவி]

நேரிசை *nēr-iśi,* பெ. (n.) 1. நேரிசைவெண்பா (இலக்.வி.729) பார்க்க; see *nēriśai-veṇbā.* 2. பண்வகை (இராகவகை); a melody. "*நேரிசையாக வறுபதமுரன்று*" (தேவா.85,3).

[நேர் → நேரிசை.]

இரண்டாம் அடியில் மூன்றாம் சீருக்கு அடுத்துத் தனிச் சொல்லாகவரும் முறையில் சிறுகோடு இட்டு இரண்டடி எதுகையோடு ஒத்துவருவதைக் குறிக்கும். எதுகை ஒவ்வாமல் வரின் இன்னிசை என்று கூறப்படும்.

"கொடிமதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்
முடியிடறித் தேய்த்த நகமும் –பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை
நின்றதே
கல்லார்தோள் கிள்ளி களிறு."
(முத்தொள்.72)

நேரிசைச்சிந்தியல்வெண்பா *nēr-iśai-c-cindiyal-veṇbā,* பெ. (n.) இரண்டாம் அடியில் தனிச்சொல்பெற்று வரும் சிந்தியல்வெண்பா வகை; a species of śindiyal-veṇbā with a detached foot at the end of the second line. "*நேரிசை இன்னிசைபோல நடந்தடிமூன்றின் வந்தால் நேரிசை இன்னிசை சிந்திய லாகும்*" (யா.கா.28).

[நேரிசை + சிந்தியல்வெண்பா. சிந்தியல் வெண்பா. = இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று மூன்றடியாய் இருவி கற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் அமையும் வெண்பா வகை.]

எ.டு.

"நற்கொற்ற வாயில் நறுங்குவளைத்
தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப்புடைத்தாளே பொற்றேரான்
மாலைநல் வாயில் மகள்" (யா.கா.28.மேற்.)

"அறிந்தானை ஏத்தி யறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செல்வ னுரைப்ப–சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு."
(யா.கா.28.மேற்.)

நேரிசையாசிரியப்பா *nēr-iśai-y-āśiriya-p-pā,* பெ. (n.) ஈற்றயலடி முச்சீராய் வரும்

ஆசிரியப்பா வகைகளில் ஒன்று; a kind of *āśiriya-p-pā* in which the penultimate line has three feet. *"ஈற்றதன் அயலடி ஒருசீர் குறைய நிற்பது நேரிசை ஆசிரியம்மே."* (அவிநயம்).

[நேரிசை + ஆசிரியப்பா. ஆசிரியப்பா: நான்குபாவகைகளில் ஒன்று. நான்கு பாவகைகள்: வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா]

எ.டு:

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே; சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கு நாடனொடு நட்பே"
(குறுந்.3)

"வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க் காடவர் உயிரென
நமக்குரைத் தோருந் தாமே
அழாஅல் தோழி அழுங்குவர் செல்வே"
(குறுந்:135)

"நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
என்றும் என்றோள் பிரிபறி யலரே
தாமரைத் தண்டா தூதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி
நறுநுதல் பசத்த லஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்பறி யலரே"
(நற்.1)

நேரிசையொத்தாழிசைக்கலிப்பா *nēr-iśai-y-ottāḻiśai-k-kali-p-pā*, பெ. (n.) தரவொன்றும் தாழிசை மூன்றும் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்றுவருங் கலிப்பா; a kind of *Kalippā*, having one *taravu*, three *tāḻiśai*, one detached foot and *śuridagam*. *'தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொற் சுரிதகமாய் நிரலொன்றி னேரிசை யொத்தாழிசைக்கலி"* *(யா.கா.38).*

[நேரிசை + ஒத்தாழிசை + கலிப்பா.]

ஒத்தாழிசைக்கலிப்பா மூன்று வகைப்படும். அவையாவன: நேரிசையொத்தாழிசைக்கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக்கலிப்பா. வண்ணக ஒத்தாழிசைக்கலிப்பா, நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா, தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்ற நான்கு உறுப்போடும்; அம்போதரங்கயொத் தாழிசைக் கலிப்பா, தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்ற ஐந்து உறுப்போடும்; வண்ணகவொத் தாழிசைக்கலிப்பா தரவு, தாழிசை, வண்ணகம் (அராகம்), அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்போடும் வரும்.

முன் ஒரு தரவு வந்து, அதன் பின்பு மூன்று தாழிசைவந்து, அதன் பின் ஒரு தனிச்சொல் வந்து, அதன்பின் ஆசிரியத்தானாவது, வெண்பாவானாவது ஒரு சுரிதக உறுப்புப் பெற்று வருவது நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா. (யா.கா.38).

தரவு எனினும், எருத்தம் எனினும் ஒக்கும்; தாழிசை எனினும், இடைநிலைப்பாட்டு எனினும் ஒக்கும்; தனிச்சொல் எனினும், விட்டிசை எனினும், கூன் எனினும், தனிநிலை எனினும் ஒக்கும்; சுரிதகம் எனினும், அடக்கியல் எனினும், வாரம் எனினும், வைப்பு எனினும் , போக்கியல் எனினும் ஒக்கும்.

ஆசிரியச் சுரிதகத்தால் அமைந்த நேரிசை யொத்தாழிசைக் கலிப்பாவிற்கு எடுத்துக்காட்டு

(1.) "வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே
றுய்த்திரிந்து
தோணெடுந் தகைதுறந்து துன்பங்கூர்
பசப்பினவாய்ப்
பூணொடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல்
வலிப்பவோ.

இது தரவு.

சூருடைய கடுங்கடங்கள் சொலற்கரிய
வென்பவாற்
பீருடைய நலந்தொலையப் பிரிவாரரோ
பெரியவரே,
சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய
வென்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ
நலமிலரே
சிலம்படைந்த வெங்கானஞ் சீரிலவே
யென்பவாற்
புலம்படைந்து நலந்தொலையப் போவாரோ
பொருளிலரே.

இவை மூன்றுந் தாழிசை.
எனவாங்கு.

இது தனிச்சொல்.

அருளெனு மிலராய்ப் பொருள் வயிற்
பிரிவோர்பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடு தானையிற்
பொலிந்தே."

இது சுரிதகம்.

இது தரவு மூன்றடியாய்த், தாழிசை மூன்றும் இரண்டிரண்டடியாய்த், தனிச்சொற்பெற்று, மூன்றடி ஆசிரியச் சுரிதகத்தாலிற்ற நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா.

இதனை மயேச்சுரர்,

"தரவொன் றாகித் தாழிசை மூன்றாய்த்
தனிச்சொற் கிடந்து சுரிதகந் தழுவ
வைத்த மரபின தொத்தா ழிசைக்கலி"
எனவும், காக்கைபாடினியார்

"தரவு தாழிசை தனிச்சொற் சுரிதகம்
எனுநான் குறுப்பின தொத்தா ழிசைக்கலி"
எனவும் கூறுகின்றார். (யா.கா.38 உரை.)
எடுத்துக்காட்டு (2)

"எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற
முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா
நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை
யந்தணீர்
வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ
ரிவ்விடை
என்மக ளொருத்தியும் பிறண்மக
னொருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்னா ரிருவரைக் காணிரோ பெரும
காணே மல்லேங் கண்டனங் கடத்திடை
யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவர றாயிர்நீர் போறிர்;
பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா
மென்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே;

சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதா மென்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங்
கனையளே;
ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யுஞ்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே;
எனவாங்கு,
இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலை பிரியா வாறுமற் றதுவே"(கலித்.9)

இது தரவு பதினோறடியாய், தாழிசை மூன்றும் மூன்றடியாய், தனிச்சொல் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் அமைந்த நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா.

வெள்ளைச் சுரிதகத்தால் அமைந்த நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கு எடுத்துக்காட்டு.

"முத்தொடு மணிதயங்கு முக்குடைக்கீழ்
முனைவனே
எத்திசையும் பல்லுயிர்க ளின்புற வினிதிருந்து
பத்துறு திசையனைத்தும் பகைபசி பிணிநீங்க
உத்தமர்க டொழுதேத்த வொளிர்வரைபோற்
செலவினாய்

இது தரவு.

எள்ளனைத்து மிடரின்றி யெழின்மாண்ட
பொன்னெயில்
உள்ளிருந்த வுன்னையே வுறுதுணையென்
றடைந்தோரை
வெள்ளில்சேர் வியன்காட்டு ளுறைகென்றல்
விழுமிதோ.
குணங்களின் வரம்பிகந்து கூடிய
பன்னிரண்டு
கணங்களும்வந் தடியேத்தக் காதலித்துன்
னடைந்தோரைப்
பிணம்பிறங்கு பெருங்காட்டு ளுறைகென்
றல்பெருமையோ
விடத்தகைய வினைநீக்கி வெள்வளைக்கைச்
செந்துவர்வாய்
மடத்தகைய மயிலனையார் வணங்கநின்
னடைந்தோரைத்
தடத்தகைய காடுறைக வென்பதுநின்
றகுதியோ.
இவை மூன்றுந் தாழிசை.
எனவாங்கு
எனைத் துணையை யாயினு மாகமற் றுன்கட்
டினைத்துணையுந் தீயவை யின்மையிற் சேர்துய்
வினைத்தொகையை வீட்டுக வென்று."

இது சுரிதகம்.

இது தரவு நான்கடியாய், தாழிசை மூன்றும் மும்மூன்றடியாய், தனிச்சொல் பெற்று மூன்றடி வெள்ளைச் சுரிதகத்தால் அமைந்த நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா. (யா.கா.38 உரை.)

நேரிசை வெண்பா *nēr-iśai-veṇbā,* பெ. (n.)

செய்யுளின் இரண்டாமடி யீற்றில் தனிச்சொற் பெற்றுவரும் வெண்பா வகை; a kind of veṇbā having a detached foot at the end of the second line.

[நேரிசை + வெண்பா.]

இரண்டு குறள் வெண்பாவாய் நடுவு முதற்றொடைக் கேற்ற தனிச்சொல்லால் அடி நிரம்பிச், செப்பலோசை வழுவாது முதலிரண்டடியும் ஒரு விகற்பமாய்க் கடையிரண்டடியும் மற்றொரு விகற்பமாய் வரினும், நான்கடியும் ஒரு விகற்பமாய் வரினும் இருகுறள் நேரிசை வெண்பா அல்லது நேரிசை வெண்பா எனப்படும்.

எ—டு:

"தடமண்டு தாமரையின் றாதா டலவன்
இடமண்டிச் செல்வதனைக் கண்டு—
பெடைஞெண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந் தூழி
நடாயினா னூர்" (யா.கா.24 மேற்கோள்)

இது இரண்டு குறள் வெண்பாவாய், நடுவுமுதற் றொடைக்கேற்ற தனிச்சொல்லான் அடிநிரம்பிச், செப்பலோசை வழுவாது இரண்டு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பா.

"அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு—தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென்
செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு"

இது இரண்டு குறள் வெண்பாவாய், நடுவு முதற்றொடைக்கேற்ற தனிச்சொல்லான் அடிநிரம்பிச், செப்பலோசை வழுவாது ஒருவிகற்பத்தான் வந்த நேரிசைவெண்பா.

முதற் குறட்பாவினோடு தனிச்சொல் இடைவேறுபட்டு விட்டிசைப்பின், ஒற்றுமைப் படாத மாழைகளை (உலோகங்களை) ஒற்றுமைப்படப் பற்றாசிட்டு விளக்கினாற்போல முதற் குறட்பாவினிறுதிக்கண் ஒன்றும் இரண்டும் அசைகூட்டி உச்சரிக்கப்பட்டு இரண்டு விகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் வருவனவுமுள; அவை ஆசிடை நேரிசை வெண்பா வெனப்படும்.

"தாமரையின் றாதாடித் தண்டுவலைச்
சேறளைந்து
தாமரையின் நாற்றமே தானாறுந்—தாமரைபோற்
கண்ணான் முகத்தான் கரதலத்தான்
சேவடியன்
கண்ணார்வஞ் செய்யுங் கருத்து" (யா.கா.24.மேற்)

இது முதற் குறட்பாவின் இறுதிக் கண் ஈரசையான், ஆசிட்டு இரண்டு விகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பா.

"கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா—ஒருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமேல் அஃதென்ப
பட்டினம் பெற்ற காலம்" (நாலடி,அறிவு.10).

இது முதற் குறட்பாவின் இறுதிக்கண் ஓரசையான் ஆசிட்டு இரண்டு விகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பா.

"ஆர்த்த வறிவின ராண்டிளைய ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப—
மூத்தொறூஉந்
தீத்தொழிலே கன்றித் திரிதந்
தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார்"
(நாலடி, கயமை1).

இது முதற்குறட்பாவின் இறுதிக்கண் ஓரசையான் ஆசிட்டு ஒருவிகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பா.

"வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான்
யானுமவன்
வஞ்சியா னென்பதனால் வாய்நேர்ந்தேன்
வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும்
வஞ்சித்தான் வஞ்சியாய்
வஞ்சியார் கோ" (யா.கா.24 மேற்.)

இது முதற்குறட்பாவின் இறுதிக் கண் ஈரசையான் ஆசிட்டு ஒருவிற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பா.

நேரிசைவெண்பாவிற்கு மேலும் சில எடுத்துக் காட்டுகள்:

"பிறர்மனை கள்களவு சூது கொலையோடு
அறனறிந்தார் இவ்வைந்தும் நோக்கார்—
திறனிலர் என்(று)
என்னப் படுவதூஉம் அன்றி நிரயத்துச்
செல்வழி உய்த்திடுத லால்". (ஆச்சார.37)

"நாணாக்கால் பெண்மை நலனழியும்
முன்னின்று
காணாக்கால் கைவளையுஞ் சோருமால் —
காணேனான்
வண்டெவ்வந் தீர்தார் வயமான் வழுதியைக்
கண்டெவ்வந் தீர்வதோர் ஆறு" (முத்தொள்.28).

"தோற்ற மழிவுமருள் சூர்நோய் வரைப்பிலதா
யாற்ற லறிவுண்மை யாய்த்தூய்தாய்ப் — போற்று
மளவ ருளத்தளவா யான்றவறங் கோடா
துளது விடாப் பொருளா கும்." (சேந். செ.2)

"இறையே தமையா ளடிகளென வெண்ணார்
கறையே யொழியார் களிகொன் – மிறையேசெய்
தின்ன றருமளறே யெய்துபுபன் னாளுழல்வ
ரென்னு மறைபொய் யிலை. (சேந். செ.4)

"நோக்கி விழிகளிப்ப நுண்செவிகேட் டுக்களிப்ப
நாக்கிழமை சொற்று நனிகளிப்ப – நீக்க
நினைந்தெனெஞ் சங்களிப்ப நீமஞ்ஞை வந்துட்
களிந்தழைதெள் ளின்பக் கடால்" (சேந்.செ.16)

"கண்ணாளர் போற்றுமெண் கண்ணாற்கு மாலுக்கு
மண்ணா மலைப்பெயரா ளற்கந்தா – டண்ணார்
பெருக்கி யருள்புரிந்த பெய்கழற்சே யிந்நாள்
வெருக்கொ ளெனக்குமருள் வீடு." (சேந்.செ.30)

நேரிடு—தல் *nēr-iḍu-*, 20 செ.கு.வி (v.i.) **1.** பொருந்துதல்; to be fit or appropriate. **2.** எதிர்ப்படுதல்; to appear, come to view. *'நீண்ட மதகரிமுன் னேரிட்டு"* (கொண்டல்விடு.374). **3.** கைகூடுதல் (வின்.); to succeed, prove successful, come to hand.

[நேர் → நேரிடு—தல்.]

நேரிடை *nēriḍai*, பெ. (n.) *நேரடி* பார்க்க; see nēraḍi.

நேரிய *nēriya*, பெ. எ (adj.) சீரிய; சிறந்த; excellent; of high order or quality. நேரிய ஆராய்ச்சி.

[நேர் → நேரிய.]

நேரியது[1] *nēriyadu*, பெ. (n.) ஒருவகை நல்லாடை (நாஞ்.); a kind of fine cloth.

[நேரியல் → நேரியது.]

நேரியது[2] *nēriyadu*, பெ. (n.) நேரானது; anything straight, true, exact. *நெல்லுக்கு நேரியது புல்* (உ.வ.)

[நேர் → நேரியது.]

நேரியர் *nēriyar*, பெ. (n.) **1.** வாக்காளர்; voter. **2.** நேர்மையானவர்; honesty person. **3.** நேரியன் பார்க்க; see *nēriyaṉ.*

[நேரி → நேரியர்.]

நேரியல்[1] *nēr-iyal*, பெ. (n.) ஒருவகை நேர்த்தியான மேலாடை (நெல்லை); a kind of fine cloth worn over the shoulders.

ம. நேரியல்.

[நேர் → நேரியல் = தோளில் போட்டுக் கொள்ளும் துணி; ஆடை.]

நேரியல்[2] *nēriyal*, பெ. (n.) மிளகு; black papper, Pipernigrum. (சா.அக.).

நேரியன்[1] *nēriyaṉ*, பெ. (n.) நேரி வெற்புக்குரிய (நேரி குன்றுக்குரிய) சோழமன்னன் (திவா.); the Chōḷā king, as lord of the Nēri hill.

[நேரி → நேரியன்.]

நேரியன்[2] *nēriyaṉ*, பெ. (n.) **1.** நுண்ணறி வுள்ளவன் (வின்.); a man of subtle intellect. **2.** அணுவுக்கு அணுவாயிருப்பவன்; the most subtle Being. "*நேரியனுமாய்ப் பரியனுமாய்*" (சி.சி.8:28).

[நேர்[1] → நேரியன்]

நேரில் *nēril*, வி.எ (adv.) **1.** மற்றொருவரின் மூலமாகவோ கடிதத்தின் மூலமாகவோ இல்லாமல் குறிப்பிட்டவரிடம் அல்லது குறிப்பிட்ட இடத்தில் தானே; in person. *தலைவரை நேரில் பார்த்துத் தன் குறைகளைக் கூறினான். இந்தத் திட்டத்தில் சேர விரும்புவோர் அலுவலகத்துக்கு நேரில் வரவும்*

2. பார்த்தல், கேட்டல், குறித்து வருகையில் தன் கண்களால் அல்லது காதால்; தானே சான்றாக; with one's own eyes or ears; personally. *அண்ணாவை நான் நேரில் பார்க்கவில்லை. அவர் நடித்ததை நான் நேரில் பார்த்தேன்.*

[நேர் → நேரில்.]

நேரிவெற்பன் *nēri-veṟpaṉ,* பெ. (n.) *நேரியன்*[1] (திவா.) பார்க்க; see *nēriyaṉ*[1].

[நேரி + வெற்பன். நேரிமலைக்குரியவன்.]

நேரிழை *nēr-iḻai,* பெ. (n.) 1. அழகிய, நேர்த்தியான அணிகலன் அணிந்த பெண்; lady, as adorned with fine jewels. "*நேரிழையாய் நேரிழையீர்*" (திருவாச.7:2). "*யாரா குவர்கொ றாமே நேரிழை*" (புறநா. 337:20). "*தேர்தர வந்த நேரிழை மகளிர்*" (அகநா.336:11). "நெடிய நீடினம் நேரிழை மறந்தே" (ஐங்குறு. 484:4). "வாராய் பாண நகுகம் நேரிழை" (நற்.370:1).

[நேர்[1] *+ இழை. பொருத்தமான அணிகலன் அணிந்த பெண்.]*

நேரிளமிகுதி *nēriḷa-migudi,* பெ. (n.) வெறுமை (சூனியம்); non entity. nothingness. (சா.அக.).

[நேர் + இள + மிகுதி. இளநீர்க்கு முன்பு குறும்பை எனக்கூறுதல்போல் நேரிளமைக்கு முந்தைய மிக்குநிலை வெறுமையாகிறது.]

நேரிறை[1] *nēr-iṟai,* பெ. (n.) *நேர்விடை,1* பார்க்க; see *nēr-viḍai,*1.

[நேர் + இறை. இறை = விடை.]

நேரிறை[2] *nēr-iṟai,* பெ. (n.) *நேரியன்*[1] (திவா.) பார்க்க; see *nēriyaṉ*[1]

[நேரி + இறை. நேரி = மலை. இறை = அரசன். நேரிமலை அரசன், சோழன்.]

நேரீனம் *nēr-īṉam,* பெ. (n.) உண்மை தவறுகை (யாழ்ப்.); dis-honesty, unfairness; unfaithfulness.

[நேர் + ஈனம். நேர்மையில் இருந்து மாறுபடுதல்; நேர்மையில் குறைபடுதல், நம்பிக்கையின்மை.]

நேருக்குச்சீர் *nērukku-c-cīr,* பெ. (n.) *நேர்சீர்* (யாழ்.அக.) பார்க்க; see *nēr-šir.*

நேருக்குநேர் *nērukku-nēr,* வி.எ. (adv.) நேராகச் சந்தித்து, நேரில் போய்ப் பார்த்து; personally; face to face. *என்னை நேருக்கு நேர்பார்த்துப் பேசு.* பல மாணவர்களுடன் நேருக்குநேர் பேசியே இந்த முடிவுக்கு வந்தேன்

[நேர் → நேருக்கு + நேர்.]

நேருக்குநேர்வழி *nērukku-nēr-vaḻi,* பெ. (n.) குறுக்குவழி (உ.வ.); shortcut.

[நேர் → நேருக்கு + நேர்வழி.]

நேருக்கு நேரானது குறுக்காவது காண்க.

நேருக்குநேராக *nērukku-nērāga,* வி.எ (adv.) நேராக[1] பார்க்க; see *nērāga*[1].

நேருக்குநேராய்நில்–தல் (நேருக்கு நேராய் நிற்றல்) *nērukku-nērāy-nil-,* 14 செ.கு.வி. (v.i.) 1. சரிநேராதல்; to be exactly straight or direct. *என்னுடன் உன்னால் நேருக்கு*

நேராய் நிற்க முடியுமா? **2.** நேரெதிராயிருத்தல்; to be exactly opposite. **3.** பிறனொருவன் தன்னிடம் நடந்து கொள்வதுபோலத் தானும் நடந்து கொள்ளுதல்; to behave or conduct oneself towards a person exactly in conformity with his behaviour.

[நேர் → நேருக்கு + நேராய் + நில்–தல்.]

நேருக்குப்போ–தல் *nērukku-p-pō-,* **8** செ.கு.வி. (v.i.) **1.** நேராக முன்செல்லுதல்; to go straight. **2.** சேர்ந்து வரிசையாய்ப் போதல்; to go abreast.

[நேர் → நேருக்கு + போ–தல்.]

நேருக்குவா–தல்(நேருக்குவருதல்) *nērukku-vā-,* **18** செ.கு.வி. (v.i.) இணங்கி வருதல்; to come to terms, yield.

[நேர் → நேருக்கு + வா–தல்.]

நேரே *nērē,* வி.எ. (adv.) *நேராக* பார்க்க; see *nērāga.*

[நேர் + எ]

நேரேடம் *nēr-ēḍam,* பெ. (n.) *நேரேடு* (பிங்.); பார்க்க; see *nēr-ēḍu.*

நேரேடு *nēr-ēḍu,* பெ. (n.) நாவல் (சூடா.); jaumoon plum.

தெ. நேரேடு.

நேரொ–த்தல் *nēr-o-,* **4**செ.கு.வி. (v.i.) **1.** இணையாயிருத்தல்; to be a match, to be similar. **2.** மாறுபாடின்றி யிருத்தல்; to be unchanging. "*நிழன்மரம்போ னேரொப்பத் தாங்கி*"(நாலடி,202). **3.** மிகப்பொருந்தியிருத்தல்; to be exactly suited, as a wife to her husband. **'*அவனுக்கு நேரொவ்வாதிருக்கிறேனோ ஒத்திருக்கிறேனோ*'** **(குருபரம்.31,ஆறா.).**

[நேர்[1] + ஒ–த்தல்.]

நேரொத்தூமம் *nērottūmam,* பெ. (n.) குருந்தக்கல்; a variety of corundum, Emery. **(சா.அக.).**

நேரொன்றாசிரியத்தளை *nēronrāširiya-taḷai,* பெ. (n.) ஆசிரிய உரிச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையொடு நேராய் ஒன்றுவது(யா.கா.10 உரை;) metrical connection between any two adjoining šir where the last syllable of the preceding and the first syllable of the succeeding šir of nēr.

"*உள்ளார் கொல்லோ தோழி, முள்ளுடை
அலங்குகுலை ஈந்தின் சிலம்பிபொதி
செங்காய்
துகில் பொதி பவளம் ஏய்க்கும்
அகில்படு கள்ளியங் காடிறந் தோரே*"(யா.கா.11. மேற்.).

[நேர் + ஒன்று + ஆசிரியத்தளை]

ஆசிரியப்பாவில் ஒரு சீரின் ஈற்றுச்சீர் 'நேர்' என்ற அசையில் நிற்க, வருஞ் சீரின் முதற்சீர் நேர் அசையாகவே இருந்தால் அது நேரொன்று ஆசிரியத் தளை என்று வழங்கப்படும்.

நேரோடம் *nērōḍam,* பெ. (n.) *நேரேடு* (மலை.) பார்க்க; see *nērēḍu.*

[நேர் + (ஏடு→) ஓடு + அம்]

நேரோடல் *nēr-ōḍal,* பெ. (n.) குதிரையின் நேரோட்டம் (திவா.); straight forward trotting of a horse.

[நேர் + ஓடல்.]

நேளி *nēḷi,* பெ. (n.) தாமரை (அக.நி.); lotus.

[நளி → நேளி. நளி = அகலம்; அகன்ற பெரிய மலர்; பெருமை மிக்க மலர்]

நேற்றி *nē<u>r</u><u>r</u>i,* பெ. (n.) *நேற்று* பார்க்க; see *nē<u>r</u><u>r</u>u.*

[நேற்று → நேற்றி → நேத்து – உ.வ. ஒ.நோ. எண்ணூற்றுமூன்று → எண்ணூற்றிமூன்று. என்பத்துநான்கு → எண்பத்திநான்கு.]

நேற்று *nē<u>r</u><u>r</u>u,* வி.எ. (adv.) 1. நிகழும் நாளுக்கு முதனாள்; yesterday. *"என் செய்தாய் நேற்றிரா முற்றும்"* (குலோத். கோ.298). *நேற்றைப் பொழுது (நன். உயீரீற்றுப. 35உரை). நேற்று என்ன செய்தாய்? நேற்று வந்த மொட்டைச்சி நெய்வார்த்து உண்ணச் சிணுங்குகிறாள் (பழ.). நேற்று வந்தானாம் குடி அவன் தலையில் விழுந்த தாம் இடி (பழ.).* 2. சற்று முன் காலத்தில்; lately, recently. *நேற்றுப்பிறந்த பையன்.*

ம. நேற்று; க. நென்னெ; தெ. நின்னெ

[நுல் (பொருந்தல்) → நுள் → நிள் → நெள் → நெரு → நெருநல். நெருநற்று → நேற்று. (வே.க.)]

நேற்றுமுந்தாநாள் *nē<u>r</u><u>r</u>u-mundā-nāḷ,* வி.எ. (adv.) அண்மைக் காலத்தில் (நெல்லை); during the recent past. *நேற்று முந்தாநாள் செய்த வேலை.* 2. நேற்றைக்கு முந்திய நாள்; (அதாவது இந்நாளிலிருந்து மூன்று நாளுக்கு முன்); day before yesterday.

[நேற்று + முந்து + ஆம் + நாள்.]

நேற்றைக்கு *nē<u>r</u><u>r</u>aikku,* வி.எ (adv.) *நேற்று* பார்க்க; see *nē<u>r</u><u>r</u>u.*

[நேற்று → நேற்றைக்கு]

நேற்றைய *nē<u>r</u><u>r</u>aiya,* பெ.எ. (adj.) 1. நேற்று நடந்த; yesterday's event, etc. *நேற்றைய கூத்து நன்றாயிருந்தது.* 2. கடந்த காலத்திலிருந்த; of the past. *நேற்றைய மனிதர்களைப் போல் நாமும் இருக்கக்கூடாது.*

[நேற்று → நேற்றைய]

நேற்றையதினம் *nē<u>r</u><u>r</u>aiya-di<u>n</u>am,* பெ. (n.) & வி.எ. (adv.) நெருநல்; yesterday.

[நேற்று → நேற்றைய + தினம். Skt. dina *→ த.தினம்]*

நேறிட்டதாகை *nē<u>r</u>iṭṭa-tāgai,* பெ. (n.) கரிசலாங்கண்ணி; eclipse plant-Eclipta prostata. (சா.அக.).

நேறுகுழை *nē<u>r</u>u-kuḻai,* பெ. (n.) வச்சிரக்கல் (வைரம்); diamond. (சா.அக.).

நை¹ *nai,* நகரமெய்யும் ஐகார உயிரும் சேர்ந்த உயிர்மெய் எழுத்து; the compound of 'n' and 'ai.'

[ந் + ஐ – நை]

உயிர் மெய் எழுத்து வடிவம் தமிழிலிருந்து வடமொழி பெற்றது. ஆங்கிலம் அரைவளர்ச்சி நிலையிலேயே அசை (sylable) *மொழியாக உள்ளது. அதனால்தான் தமிழ்க்குழந்தைகள் எழுத்துக்கூட்டலுக்கு இடர்ப்படுகிறார்கள். நைனா என்ற பெயரை* Nai Na *என்ற உயிர் மெய்க்கட்டமிட்டுக் கற்பித்தால் எளிதாய்ப் பயில்வர்.*

நை²–தல் *nai-,* 2 செ.கு.வி. (v.i.) 1. நசுங்குதல்; to be crushed, bruised. 2. தளர்தல்; to droop, languish, faint.

"இடைநைவது கண்டு" (திருக்கோ.134). **3.** வாடுதல் (வின்.); to fade. **4.** மனம் வருந்துதல்; to be wounded in one's feelings; to be distressed. *"நைந்து சாமவர்க்கே"* (திருநூற்.43). **5.** இரங்குதல்; to feel pity. *"நீ நல்காமையி னைவரச் சாஅய்"* (புறநா.146). **6.**சுருங்குதல்;to a dwindle, decrease.*"நையாத வாயுளுஞ் செல்வமும்"* (அருட்பா.5பொது. 2). *நண்பன் குடும்பம் வறுமையில் மிகவும் நைந்துவிட்டது.* **7.** தனக்கே உரிய மாத்திரை அளவில் குறைதல்; to be shortened in quantity, as a vowel. *"வன்மைமே லுகர முறுவது நையும்"* (வீரசோ. சந்தி.2). **8.** நிலைகெடுதல்; to be injured. spoiled, over- ripe, as fruits; to be frayed. worn out, as cloth *மாம்பழம் பழுத்து நைந்து போச்சு.* **9.** கெடுதல் (வின்.); to waste away, perish. **10.** இற்றுப்போய் நூல்நூலாகப் பிரிதல்; to frayed; became threadbare. *அவர் உடல் நைந்த பழைய துணிபோல் கிடந்தது.* **11.** துன்பம்; sadness. **12.** தன்வயப்படாமை (அவசமாதல்); to forget oneself;to lose command of oneself. "அரிவை நைய" (சீவக.492).

[நொய் → நை. ஒ.நோ. பொய் (உட்டுளை) → பை.நை → நைதல்.(வே.க) இது தன்வினை வடிவம்.]

நை³–த்தல் *nai-*, 4 செ.குன்றாவி. (v.t.) **1.** நசுக்குதல்; to crush. **2.** அழித்தல்; to destroy.*"வேலேகுறும்படைந்த வரண்கடந்தவர் நறுங்கள்ளி னாடுநைத்தலின்"* (புறநா.97). **3.** எரித்தல்; to burn. *"ஒள்ளெரி நைப்ப வுடம்பு மாய்ந்தது"* (புறநா.240).

[நொய் → நை. இது பிறவினை வடிவம்]

நை⁴ *nai*, இடை. (int.) இகழ்ச்சிக்குறிப்பு (வின்.); expr.signifying disdain or mockery.

நைக்காட்டு–தல் *nai-k-kāṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) கேலி காட்டுதல் (யாழ்ப்.); to ridicule, make one a laughing stock.

[நை⁴ + காட்டு–தல்.]

நைகரம் *naikaram*, பெ. (n.) **1.** துன்பம்; anxiety, care, distress. *"நைகர மொழிந்து"* (விநாயகபு.57:18). **2.** குறைவு; deficiency. *"நைகர மிலாவன்பி னங்கையார்"* (பெரியபு. அரிவாட்.12).

[நை² → நைகரம்.]

நைகொதி *nai-kodi*, பெ. (n.) அரைகுறையான கொதிப்புள்ளது (யாழ்ப்.); being half-boiled; being insufficiently or badly boiled.

[நை² + கொதி.]

நைச்சாந்து *nai-c-cāndu*, பெ. (n.) கைக்கு மெதுவாம்படி நன்றாயரைக்கப்பட்ட சுண்ணாம்பு (சுன்னக்கரை); well-ground mortar, fine plaster.

[நை² + சாந்து]

நைச்சி *naicci*, பெ. (n.) **1.** காக்கை (அக.நி.); crow. **2.** பாம்பு வகை (யாழ்.அக.); a kind of snake.

[நைசியம்² → நைச்சி. நைசியம் = காக்கை]

நைச்சிகம் *naiccigam*, பெ. (n.) *நைச்சியம்* (இ.வ.) பார்க்க; see *naicciyam.*

[நைச்சியம்→ நைச்சிகம்]

நைச்சியம் *naicciyam*, பெ. (n.) **1.** தாழ்மை; humility. *"செய்கின்ற நைச்சியத்தைச்*

சிந்தித்து" (திருவாய்.நூற்.16). 2. தாழ்வு, கயமை, இழிவு; lowness, meanness, baseness. 3. தன்வயப்படுத்துகை (உ.வ.); winning over to one's side.

[நை[2] → நைச்சியம் = எதிரியைத் தன்வழியில் திருப்ப, எதிரியின் மனத்தில் மகிழ்ச்சியூட்டும் படிப் பேசுதல்]

நைச்சியம்பண்ணு—தல் *naicciyam-paṇṇu-*, 5 செ.குன்றாவி. (v.t.) தன்வயப்படுத்துதல் (உ.வ.); to win over to one's side.

[நைச்சியம் + பண்ணு—தல்.]

நைசல்[1] *naišal,* பெ. (n.) நோய் (யாழ்.அக.); disease.

[நைதல் → நைசல். த—ச திரிபு. தசை → சதை.]

நைசல்[2] *naišal,* பெ. (n.) காக்கை; crow.

[நசை → நைசல்.]

ஒரு காக்கைக்கு உணவு வைத்தால் பத்துக் காக்கைகளை அழைப்பதும் இறந்துவிட்டால் நூறு காக்கைகளை அழைப்பதும் ஆன நசை கொண்டது காக்கை இனம்.

"காக்கை கரவாக் கரைந்துண்ணும் ஆக்கமும் அன்னநீ ரார்க்கே உள" (குறள், 527).

நைசிகம்[1] *naišigam,* பெ. (n.) *நைசியம்[1]* (வின்.) பார்க்க; see *naišiyam.*

[நைசியம் → நைசிகம்]

நைசிகம்[2] *naišigam,* பெ. (n.) *நைசியம்[2]* (வின்.) பார்க்க; see *naišiyam[2]*.

[நைசியம் → நைசிகம்]

நைசிகரவேம்பு *naišikara-vēmbu,* பெ. (n.) சூரத்து நிலவேம்பு; Surat chiretta. (சா.அக.).

நைசியம்[1] *naišiyam,* பெ. (n.) மூக்கில் விடும் சொட்டு மருந்து (சங்.அக.); medicine inhaled by the nose.

[நை → நைசியம். நைவாக = துளித்துளியாக விடும் சொட்டுமருந்து]

நைசியம்[2] *naišiyam,* பெ. (n.) காக்கை (சது.); crow.

[நைசல் → நைசியம்]

நைசிரவம் *naiširavam,* பெ. (n.) துவரை; red gram, Cajanus indicus. (சா.அக.).

நைடதம்[1] *naiḍadam,* பெ. (n.) வடமொழி நூலை (நைஷதம்) மூலமாகக் கொண்டு அதிவீரராமபாண்டியன் இயற்றிய தமிழ்க் காப்பியம்; a poem in Tamil by Adivīrarāmā-pāṇḍiyaṉ, adapted from Sri Harṣha's Naisadha.

[நிடதம் → நைடதம்.]

நைடதம் ஒரு தமிழ்க் காப்பியம். நிடதநாட்டு மன்னன் நளனுடைய கதையைக் கூறுவதால் நைடதம் எனப் பெயர் பெற்றது. நளனைப் பற்றியக் குறிப்பு, சிலப்பதிகாரத்தில் காணப்படுவதால் நளன்கதை தமிழ்நாட்டில் நீண்டநாட்களாக வழங்கி வந்தமை புலனாகும்.

நைடதம், வடமொழியில் கர்ச புலவர் இயற்றிய '*நைச(ஷ)தம்*' என்னும் வனப்பின் (காப்பியத்தின்) மொழி பெயர்ப்பு. வடமொழி நூலின் சுவை குன்றாமல் அதிவீரராம பாண்டியர் மொழி பெயர்த்துள்ளார் என்று இருமொழியிலும் இந்த நூல்களைக் கற்றோர் கூறுகின்றனர். இந்நூலின் முதலில் நிடத நாட்டின் வளமும் மாவிந்த நகரத்தின் சிறப்பும் (நாட்டுப்படலம், நகரப்படலம் என்ற படலங்களிற்) கூறப் பெற்றுப் பின்னர் அன்னத்தைக் கண்ணுற்ற படலம் முதலாக அரசாட்சிப் படலம் ஈறாக இருப்பதாறு படலங்களால்

1173 செய்யுட்களில் நளன்கதை கூறப்பெறுகிறது. *'நைடதம் புலவர்க்கவுடதம்'* என்று வழங்கும் சிறப்புரைக் கேற்ப. இந்நூல் புலவர்களின் அறிவுக்கு விருந்தாய்க் கற்பனைக் கருவூலமாக விளங்குகிறது. இந்நூலில் சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் மணிமேகலை முதலிய பழைய தமிழ் நூல்களின் கருத்துக்களும் சொற்றொடர்களும் விரவியுள்ளன.

இந்நூலின் தனிச்சிறப்பு, அன்னம் தமயந்தியிடம் நளனுக்காகத் தூது சென்ற பகுதியைக் கூறுவது. இதை அன்னத்தைத் தூதுவிட்ட படலத்திற் காணலாம். தூதரின் இலக்கணத்திற்கு இலக்கியமாக அன்னம் விளங்கும்படி இந்நூலாசிரியர் அமைத்திருப்பது பாராட்டத் தக்கது. இந்நூலில் தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறாகப் பெண்பாற் கைக்கிளை வந்துள்ளது.

"அமிழ்தினை முனிந்து சாரல் அருவிதாழ் மலயமீன்ற தமிழினம் இனிய தீஞ்சொற் றையல்" (சுயம்வரப்படலம்.140) எனக் கலைமகள் தமயந்தியை விளக்குங் கூற்றாக கூறியிருப்பதைக் கொண்டு இந்நூலாசிரியர் தமிழின் சுவையிலே ஊறியவ ரென்பதை அறியலாம்.

இந்நூல் காதலின் சிறப்பையும் சூதின் கெடுதியையும் நன்கு விளக்குகிறது. இந்நூலிலுள்ள செய்யுட்கள் மிக்க கடுமையும், மிக்க எளிமையுமின்றிச் செம்பாகமான நடையையுடையன.

இந்நூலை இயற்றியவர், பாண்டிய மன்னர்களில் ஒருவரான அதிவீரராம பாண்டியர். இவர் சிவனிடம் மிகுந்த அன்பு கொண்டவர். காசிக்காண்டம், திருக் கருவையந்தாதி முதலிய நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

நறுந்தொகை அல்லது வெற்றிவேற்கை என்னும் குழந்தை இலக்கியமும் படைத்துள்ளார்.

"கற்கை நன்றே, கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே."

என்பது அந்நூலில் வரும் பொன்வரி.

நைதிகை *naidigai,* பெ. (n.) 1. ஊசிமல்லிகை (பிங்.); eared jasmine. 2. முல்லைக் கொடி; smooth jasmine, Jasminum trichotomum.

நைதெனல் *naidenal,* பெ. (n.) 1. இரக்கக் குறிப்பு (யாழ்.அக.); expr.signifying pity, sympathy. 2. மெலிதற் குறிப்பு (சது.); expr.signifying thiness. 3. மனநோதற் குறிப்பு (வின்.); expr.signifying grief.

[நை → நைது + எனல்]

நைந்தசோறு *nainda-šoṟu,* பெ. (n.) பதனழிந்த சோறு; stale cooked rice; rotton cooked rice. (சா.அக.).

[நை → நைந்த + சோறு. நை → நைதல்= குழைதல், வாடல்]

நைந்தபழம் *nainda-paḻam,* பெ. (n.) கனிந்து இளகிய பழம்; over riped fruit. (சா.அக.).

[நை → நைந்த + பழம். நை → நைதல் = இளகுதல், பதனழிதல்]

நைந்தான் *naindāṉ,* பெ. (n.) மெலிந்தான்; weak person.

[நை² → நைந்தான்]

நைந்திகை *naindigai,* பெ. (n.) முல்லை மலர் (மலை.); trichotomus-flowering smooth jasmine.

[நைதிகை = ஊசிமல்லிகை. நைதிகை → நைந்திகை.]

நைந்து *naindu,* வி.எ. (adv.) மனமிரங்கி; pity.

"நைந்துள்ளி யுகுவது போலுமென் னெஞ்சு" (கலித்.33:16).

[நை → நைந்து. நை + து]

நைந்தோ *naindō,* பெ. (n.) பள்ளர் இனமக்கள் தம் தலைவரை அழைக்குஞ் சொல் (இ.வ.); an expression used by Paḷḷars in villages in addressing masters.

[நைந்தை = தலைவன். நைந்தை → நைதோ.]

தன்வாழ்வுக்கும், பின் தலைமுறைக்கும் பாடுபட்டவனைப் பாட்டன் என்று கூறுவதுபோல், உழைத்து நைந்து போன தந்தையை நைந்தை என அழைக்கும் மரபு இருந்தது.

நைநையெனல் *nai-nai-y-eṉal,* பெ. (n.) **1.** இகழ்ச்சிக்குறிப்பு; expr. signifying contempt. *நைநையென்று அவனைத் திட்டிக்கொண்டேஇருக்கின்றான்.* **2.** குழந்தை விடாது அழுது தொந்தரவு செய்தல் குறிப்பு; expr. signifying fretting cry, puling as of children. *வயிற்றுவலியால் குழந்தை நைநையென அழுதுகொண்டே இருக்கிறது.*

[நை² + நை – நைநை + எனல். நய் → நை]

நைப்பாசை *naippāšai,* பெ. (n.) நிறைவேறாது எனத்தெரிந்தும் அது எப்படியாவது நிறைவேறிடாதா என்ற எதிர்பார்ப்பு; fond hope.

[நம்பு + ஆசை – நம்பாசை → நப்பாசை → நய்ப்பாசை → நைப்பாசை.]

நைப்பாளை *nai-p-pāḷai,* பெ. (n.) ஆடு தின்னாப் பாளை; ulcer plant, *Aristolochia bracteata.* (சா.அக.).

நைப்பு *naippu,* பெ. (n.) ஈரப்பசை; moisture. *தரை நைப்பாய் இருக்கிறது; கீழே உட்காராதே*

[நசிப்பு → நைப்பு.]

நைப்பூதிகம் *naippūdigam,* பெ. (n.) சூலி மரம்; toon tree, *Cedula toona.*

நைப்பூலிகம் *naippūligam,* பெ. (n.) காரைச் செடி; thorny webera-can rhium parviflorum. (சா.அக.)

நைபடு–தல் *nai-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) நசுக்கப்படுதல்; to be crushed.

[நய் → நை + படு–தல்.]

நைபத்தியம் *naipattiyam,* பெ. (n.) நடிப்பவன் கொள்ளும் வேடம் (இலக். அக.); costume of an actor.

[நை(ப்)பு + அத்து + இயம். ஈரங் கலந்த மாவைப்பூசி (அரிதாரம்) நடிப்பவன் கொள்ளும் வேடம்]

நைபவர் *naipavar,* பெ. (n.) **1.** வறியவர்; pauper. **2.** நிலைமை தாழ்ந்தவர்; cheap person. *"நைபவ ரெனினும் நொய்ய வுரை யேல்"* (கொன்றை. 56).

[நய்பு + அவர் – நய்பவர் → நைபவர்]

நைபாரிசம் *naipārišam,* பெ. (n.) செங்கரும்பு: red sugar-cane. (சா.அக.).

[நைபார் + இசம். ஈரப்பசையுடைய கரும்பு]

நைபாலி¹ *naipāli,* பெ. (n.) அடுக்குமல்லிகை (மலை.); double jasmine.

நைபாலி² *naipāli,* பெ. (n.) **1.** சிவந்த செய் நஞ்சு (பாடாணம்); red arsenic. **2.** சீர்பந்த செய் நஞ்சு (பாடாணம்); a prepared poison. **3.** நீலம்; blue. (சா.அக.).

நைபாலிகம் *naipāligam,* பெ. (n.) **1.** செம்பு; copper. **2.** பித்தளை (யாழ்.அக.); brass.

நைபானி *naipāṉi*, பெ. (n.) நைபாலி[1] (சங்.அக.) பார்க்க *see naipāli*[1].

[நைபாலி → நைபானி]

நைமாமிசம் *naimāmišam*, பெ. (n.) வெங்காயப் பூடு; onion plant, Allium cepa. (சா.அக.).

நைமிசாரண்யம் *naimi-šaraṇiyam*, பெ. (n.) பனிமலைக்கு அருகில் உள்ள காடு; a forest near Himalaya mountains.

[நேமி → நைமி + சாரண்யம். நேமி = சக்கரம்.]

இருடிகள் தாங்கள் தவமியற்றுதற்கு ஏதுவான நல்ல இடம் அருளுக என நான்முகனிடம் வேண்ட நான்முகன் ஆய்ந்து தருப்பையொன்றை எடுத்து நேமி (சக்கரம்) போற்செய்து அதனை உருட்டி இதன்பின் செல்க, இது எவ்விடத்து நிற்குமோ அந்த இடமே தவமியற்றுதற்கு ஏதுவான இடம் எனச் சொல்ல, அதன்படியே நேமி நின்ற இடமாதலால் இதற்கு இப்பெயர் வந்தது என்பர்.

நையத்தட்டு–தல் *naiya-t-taṭṭu-*, 5 செ. குன்றாவி. (v.t.) தூளாகும்படி தட்டுதல்; striking to make into powder. (சா.அக.)

[நை → நைய + தட்டு–தல்.]

நையநருக்கு–தல் *naiya-narukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) **நையநறுக்கு–தல்** பார்க்க; see *naiya-naṟukku-*. *அவனை நைய நருக்கி விட்டார்கள்.*

[நொய் → நை → நைய + நருக்கு–தல். நறுக்கு → நருக்கு.]

நையநறுக்கு–தல் *naiya-naṟukku-*, 5 செ. குன்றாவி. (v.t.) **1.** பொடியாக்குதல்; to pulverise, comminute. **2.** **நையப்புடை–பார்க்க**; *see naiya-p-puḍai*. (சா.அக.).

[நொய் → நை → நைய + நறுக்கு–தல்.]

நையநறுங்கத்தட்டு–தல் *naiya-naṟuṅga-t-taṭṭu-* 5 செ.குன்றாவி. (v.t.) மிக நொறுங்கச் சதைத்தல்; to pulverise.

[நை → நைய + நறுங்க + தட்டு–தல்.]

நையப்பாடு–தல் *naiya-p-pāḍu-*, 5 செ.குன்றாவி. (v.t.) பல்லைக்காட்டிக் கெஞ்சுதல் (இ.வ.); to cringe.

மறுவ. நையம் பாடுதல்

[நை[2] → நைய + பாடு–தல்.]

நையப்புடை–த்தல் *naiya-p-puḍai-*, 4 செ.குன்றாவி. (v.t.) **1.** உடம்பு தளர நன்றாக அடித்தல்; to belabour, thrash soundly. *திருடனை விரட்டிப்பிடித்து நையப்புடைத்துக் காவலில் வைத்தனர். ஆசிரியர் மாணவனைப் பிரம்பால் ஆறுமுறை நையப் புடைத்ததால் கை புடைத்துக் கொண்டது.* **2.** மொத்தையாக்குதல்; to beat into a pulpy mass, Mashing.

[நொய் → நை → நைய + புடை–த்தல்.]

நையம்[1] *naiyam*, பெ. (n.) **நைசியம்[1]** (யாழ்.அக.) பார்க்க; *see naišiyam*[1].

மறுவ. நச்சியம்.

[நைசியம்[1] → நையம்]

நையம்[2] *naiyam*, பெ. (n.) **நைசியம்[2]** (யாழ்.அக.) பார்க்க; *see naišiyam*[2].

[நைசியம்[2] → நையம்.]

நையம்பாடு–தல் *naiyam-pāḍu-*, 5. செ.கு.வி. (v.i.) **நையப்பாடு–தல்** (இ.வ.) பார்க்க; *see naiya-p-pāḍu-*.

[நையப்பாடு–தல் → நையம்பாடு–தல்.]

நையமசிதல் *naiya-mašidal,* பெ. (n.) நன்றாய் அரைபடுகை; grinding to fineness. (சா.அக.).

[நை → நைய + மசிதல்]

நையல் *naiyal-,* பெ. (n.) **1.** மெலியச் செய்யும் நோய்; emaciating disease. **2.** அம்மை நோய்; small-pox.

[நை^{2} → நையல்.]

நையவேகல் *naiya-vēgal,* பெ. (n.) சோறு முதலியன குழைகை; becoming soft by over boiling. *சோறு நையவெந்து போச்சு.*

[நை → நைய + வேகல்]

நையாடல் *naiyāḍal,* பெ. (n.) எண்ணெய் விளையாட்டு (திவ். திருப்பா. 4 வியா.); oil bath.

[நெய் → நை + ஆடல்.]

நையாண்டி *naiyāṇḍi,* பெ. (n.) **1.** நாடோடிப் பாட்டுவகை; a kind of papular song. *"இரண்டு நையாண்டி பாடினான்"* (திருவாலவா. 54:23). **2.** கேலி; scoff, ridicule, mockery, sarcasm. *யாரையும் நையாண்டி செய்யாதே* **3.** சிரிப்புச் சொல் (வின்.); jest, drollery.

ம. நையாண்டு.

[நை^{4} → நையாண்டி = குறையை அல்லது தவற்றைச் சிரிக்கத்தகுந்ததாக ஆக்கும் பேச்சு அல்லது செயல்.]

[நகை + ஆண்டி –நகையாண்டி → நையாண்டி.]

நையாண்டிமேளம் *naiyāṇḍi-mēḷam,* பெ. (n.) நாட்டுப்புறக் கலைகளான கரகம், காவடி முதலியவற்றுக்கு இசைக்கப் படும் ஒருவகை இசைக் கருவி; an ensemble of musical instruments.

[நையாண்டி + மேளம்]

உறுமிமேள வகை. பேரிசை (பாண்டு) இசைக்காரர் போன்று ஒன்றே போல உடை உடுத்தி, மேளம் இசைப்பார்கள். பாடல்கள் கருநாடக இசையாக மட்டும் இல்லாமல் பலவகைப் பாடல்களையும் பாடுவார்கள்; ஆடுவார்கள்.

நையாண்டிப்புலவர் *naiyāṇḍi-p-pulavar,* பெ. (n.) 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்; Tamil poet lived in 19th century.

இவர் இராமச்சந்திர கவிராயர் காலத்து வாழ்ந்தவர்; தொண்டை நாட்டினர். இவர் பள்ளிகொண்டான் என்னும் பரதவன்மீது

"வள்ளி கொண்டான் மயிலேறிக் கொண்டான்
மதிபோலு மலை
வெள்ளி கொண்டான் விடையேறிக் கொண்டான்
விண்ணவர்க்கமுதம்
துள்ளி கொண்டான் சுபசோபனஞ் சேர்
பள்ளி கொண்டான் புகழேறிக் கொண்டா
னென்று பார்க்கவென்றே"

என்று புகழ்பாடிப் பரிசு பெற்றவர்.

நைலம் *nailam,* பெ. (n.) கடற்பாசி மருந்து (M.L.); iodine.

[நீலம் → நைலம்.]

நைவரு–தல் *nai-varu-,* 18 செ.கு.வி.(v.i.) நைவா–தல் பார்க்க; see *naivā-*.

[நைவா–தல் → நைவரு–தல்]

நைவளம் *naiyalam,* பெ. (n.) **1.** பாலைப் பண்வகை; a secondary melody-type of the

Pālai class. *"நைவளம் பழுநிய பாலை வல்லோன்"* (குறிஞ்சிப். 146.). **2.** குறிஞ்சி யாழ்த்திற வகை (பிங்.); a secondary melody-type of the kuṟiñji class. **3.** தாளத்தையுடைய பாட்டு; a kind of musical song. *"நைவளம் பூத்த நரம்பியை சீர்ப் பொய் வளம்"* (பரிபா. 18:20).

நைவனம் *naivaṉam,* பெ. (n.) **1.** நடனம்; dancing. **2.** வீரன்; warrior, hero.

நைவா–தல் (நைவருதல்) *nai-vā-,* 18 செ.கு.வி. (v.i.) **1.** வருந்துதல்; to be distressed. *"நைவாரா வாயமக டோள்"* (கலித். 103: 66). **2.** இரங்குதல்; to pity; to be merciful. *"நல்காமையினைவரச் சாஅய்"* (புறநா. 146).

[நை[4] + வா–தல்.]

நைவு *naivu,* பெ. (n.) **1.** வாடினது; anything injured or spoiled. **2.** மிகப் பழுத்தது; over-ripenness. **3.** வருந்துகை; suffering. **4.** நோய்; disease. *"நாளு நைவகன்ற"* (தைலவ. தைல. பாயி. 1.).

[நை[4] → நைவு]

நொ[1] *no,* நகர மெய்யும் ஒகர உயிரும் சேர்ந்து பிறந்த உயிர் மெய் எழுத்து; the compound of 'n' and 'o'.

[ந் + ஒ - நொ]

நொ[2] *no,* பெ. (n.) **1.** துன்பம் (தொல். எழுத்து. 72); pain, distress, suffering. *"நொவ்வுற லெய்தி"* (கந்பு. திருவவ. 39.). **2.** நோய் (வின்.); disease, sickness.

ம., க. நோ
[நோ → நொ. ஓரெழுத்து ஒருமொழி.]

நொ[3] *no,* பெ. (n.) மெத்தெனப் பறக்கும் பறவையினம்; a kind of flying bird softly, gently. *"தாஅ வஞ்சிறை நொப்பறை வாவல்"* (குறுந். 172:1).

நொ[4] *no,* பெ. (n.) நொய்மை (திவா.); lightness, slenderness. *"நொப்புணை வலியா"* (பெருங். உஞ்சைக். 53: 3).

ம. நொச்சு; **க., தெ., து.** நுசி;
[நோ → நொ.]

நொ[5]–தல் *no-,* 17 செ.கு.வி.(v.i.) & 16 செ.குன்றாவி. (v.t.) துன்புறுதல்; to suffer. *"நொக்கொற்றா"* (தொல். எழுத்து. 72, உரை). *'நொப்போவெள வுரிஞ்"* (நன். 137).

[நோ → நொ → நொ – தல்]

நொக்கட்டா *nokkaṭṭā,* பெ. (n.) நொக்கொட்டா பார்க்க; *see nokkoṭṭā.* (சா.அக.).

மறுவ. இலக்கோட்டிப் பழம்

நொக்கல் *nokkal,* பெ. (n.) தின்பண்டவகை; a kind of sweetmeat. *"நொக்கல் பால் கோவா"* (பஞ்ச. திருமுக. 1837).

நொக்காங்குலை *nokkāṉ-gulai,* பெ. (n.) நுங்குக்குலை; bunch of young palmyra fruits. (சா.அக.).

[நுங்குக்குலை → நொக்காங்குலை (உ.வ.)]

நொக்கு[1]–தல் *nokku-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** உண்ணுவதால் குறையச் செய்தல்; to reduce by eating, as the quantity of grain. *"பன்றி தினைப் புனத்தை நொக்குகை யினாலே"* (மலைபடு. 103, உரை). **2.** அடித்தல்;

to beat. *"சுக்குமாந்தடி கொண்டு நொக்கி விடுவான்"* (நந்த. கீர்த்.). **3.** மிகுதியாகத் திட்டுதல் (இ.வ.); to abuse violently.

[நுல் (துளை) → நுள் → நுழு → நுகு → நொகு → நொக்கு → நொக்கு–தல். (வே.க.)]

நொக்கு² *nokku,* பெ. (n.) வெடிப்பு (யாழ்.அக.); fissure, cleft.

[நுல் (துளை) → நுள் → நுழு → நுகு → நொகு → நொக்கு]

நொக்கென *nokkena,* வி.எ. (adv.) உடனே; instantly; immediately. *"நொக்கெனக் கண்ணன் கழல்க ணினை மினோ"* (திவ். திருவாய். **4. 1:3**).

[நொக்கு + என.]

நொக்கொட்டா *nokkoṭṭā,* பெ. (n.) மரவகை(L.); Chinese medlar, *Eriobotrya japonica.*

நொங்கு¹–தல் *nongu-,* **5** செ.குன்றாவி. (v.t.) விழுங்குதல்; to swallow. *"திங்களிரு நொங்க"* (தேவா. **1157, 3**).

ம. நொங்ஙு

[நுல் (துளை) → நுள் → நுழு → நுகு → நுங்கு → நொங்கு → நொங்கு–தல்]

நொங்கு²–தல் *nongu-,* **5** செ.கு.வி. (v.i.) மெலிதல்; to become weak and emaciated. *"அங்கமு நொங்குதே"* (கணம் கிருஷ்ணையர். **1:2**).

[நுல் = மென்மை, சிறுமை, நுண்மை. நுல் → நுள் → நுளு → நுழு→ நுகு → நுங்கு → நொங்கு → நொங்கு –தல் (வே.க)]

நொங்கு³ *nongu,* பெ. (n.) பனை நுங்கு; pulpy kernel of a tender palmyra fruit.

[நுங்கு → நொங்கு]

நொச்சி¹ *nocci,* பெ. (n.) **1.** வெண்ணொச்சி; five-leaved chaste tree. *"நொச்சி மாமலர் நிறத்தன"* (சீவக. **2163**). **2.** கருநொச்சி; three-leaved chaste tree. **3.** **நொச்சித்திணை** பார்க்க; *see nocci-t-tiṇai. "நொச்சிப்படலம்"* (பு.வெ. **5**). *"உட்கா தெதிரூன்றல் காஞ்சி யெயில் காத்தல் நொச்சி அதுவளைத்த லாகும் உழிஞை"* (பழம்பாடல்). **4.** எயில் காக்கும் வீரர் சூடிய நொச்சிப்பூவைப் புகழும் புறத்துறை (பு.வெ. **5:1**, கொளு); a minor theme eulogising the *nocci* garland worn by the warriors defending a fort. **5.** எயில் காவல்; defence of a fort. *"அகத்தோன் வீழ்ந்த நொச்சி"* (தொல். பொருள். **68**). **6.** மதில்; surrounding wall, fortress. *"நொச்சிகாத் ததிகோர னோன்மையி னவணிருந்தான்"* (தணிகைப்பு.சீபரி. **342**). *"உறையூர் நொச்சி யொருபுடையொ துங்கி"* (சிலப். **10:242**). **7.**சிற்றூர் (சூடா.); village, hamlet. *நொச்சிக்காடு.*

ம. நொச்சி; **க., து.** நெக்கி; **தெ.** நொச்சிலி.

நொச்சி² *nocci,* பெ. (n.) மருத்துவக் குணங்கொண்ட ஒரு மருந்து மரம்; a kind of medicial plant.

மறுவ: சிந்துவாரம், ஐந்திலை நொச்சி.

நொச்சி ஒரு சிறிய மரம். இதன் இலைகள் 5 பிரிவாக நீண்ட காம்புகளுடன் இருக்கும். இதன் பூக்கள் சிறியவை, நீலநிற முடையவை. ஆண்டு முழுமையும் பூக்கும். இந்தியாவில் எங்கும் பரவியுள்ளது. நாட்டு மருத்துவத்தில் அதிகம் பயன்படுகிறது. கட்டிகளைக் கரைக்க இதன் இலைகள் மிகவும் பயன்படுகின்றன. இதன் இலையைத் தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்து ஆவிபிடிக்க, நீர்க்கோவை நீங்கும். பல்வலி, இருமல், நீரேற்றம், இரைப்பு, காய்ச்சல்

முதலியவற்றிற்கு இதன் இலைகள் மருந்தாகின்றன. இதன் வேர்ப்பட்டையும் மருத்துவக் குணம் கொண்டது. பூவும், இலைக்காம்பும் அரத்தப் போக்கைக் கட்டுப் படுத்தும். சாம்பசிவம் மருத்துவ அகரமுதலி கூறும் நொச்சி வகைகள்:

1. ஆற்று நொச்சி
2. ஐந்திலை நொச்சி
3. கருநொச்சி
4. காட்டுநொச்சி
5. சிறுநொச்சி
6. நீர்நொச்சி
7. மயிலடி நொச்சி
8. மலை நொச்சி
9. மூவிலை நொச்சி
10. வயல் நொச்சி
11. வெண்ணொச்சி (சா.அக.).

நொச்சி³ *nocci,* பெ. (n.) 1. சதகுப்பை (மருந்துப் பூடு); dill, Anethum rowa 2. பதினெண் மூலிகைகளிலொன்று; one of the eighteen drugs. (சா.அக.).

நொச்சிக்கசங்கு *nocci-k-kaśangu,* பெ. (n.) கூடைகள் முடைய உதவும் நொச்சியின் சிறுகுச்சி (இ.வ.); stalks of nocci used in making plaited baskets.

[நொச்சி + கசங்கு. கசங்கு = கூடை முடையப் பயன்படும் சிறுகுச்சி]

நொச்சிக்குப்பம் *nocci-k-kuppam,* பெ. (n.) சென்னை மாவட்ட ஊர்; a village in Chennai district.

[நொச்சி + குப்பம்.]

நெய்தல் நிலமக்கள் வலையர் என்றும், செம்படவர் என்றும் பரதவர் என்றும் வழங்கப் பெறுவர். அன்னார் வாழுமிடம் குப்பம் என்னும் பெயரால் குறிக்கப்படும். சென்னையைச் சேர்ந்த கடற்கரையில் பல குப்பங்கள் உண்டு. காட்டுக்குப்பம், கருங்குடிக்குப்பம், நடுக்குப்பம் சோலைக் குப்பம், குயில் குப்பம், நொச்சிக் குப்பம் போன்றவை பரதவர் வாழுமிடங்களே.

நொச்சித்திணை *nocci-t-tiṇai,* பெ. (n.) நொச்சி மாலைசூடி வீரர்கள் எயில்காத்தலைக் கூறும் புறத்திணை (பு.வெ. 5, கொளு); major theme describing the defence of a fort by warriors wearing nocci garlands.

[நொச்சி + திணை. திணை = ஒழுக்கம், புற ஒழுக்கம்]

நொச்சிநியமங்கிழார் *nocci-niyamaṅ-giḻār,* பெ. (n.) கழகக்காலத் தமிழ்ப்புலவர்; Sangam poet.

மறுவ. நொச்சி நீயக்கிழார்.

[நொச்சிநியமம் + கிழார்]

நொச்சிநியமம் ஊர்ப்பெயர். இன்று நொச்சியம் என்று வழுங்குகிறது. வேளாண் மரபிரனர் வாழும் ஊர். புறநானூறு (293), அகநானூறு (52), நற்றிணை (17, 208, 209) ஆகியவற்றில் இவரது பாடல்கள் காணப்படுகின்றது.

நகர்ப்புறத்தே போர் நிகழும் காலத்தே, அரண் சூழ்ந்த நகரிலிருந்த நெடுமனை யொன்றிற்கு இவர் சென்று அங்கே இருந்து மறக்குடி மகளிரின் செயல் நலங்களைக் காணும் பேறு பெற்றார். தானை வீரரும் தானைத் தலைவரும் வாழும் வழியே வருகையில் பூ விற்கும் மகளிர் அத்தெருவில் வராது வேறு தெருக்களை நோக்கிச் செல்வது கண்டார். ஒரு வீரனது மனைக்குச் சென்று அவன்மனையாளைக் கண்டு சொல்லாடுங்கால் தாம் கண்ட இக்காட்சியைத் தெரிவித் தார். மறக்குடிமகளாகிய அவள், சான்றோரே! வள்ளுவன் யானை மேலிருந்து தனது தண்ணுமையை ஒலித்து, அரணுக்குப் புறத்தே முற்றி நிற்கும் பகைவரை யெறிதற்குச் செல்லும் வீரர்க்குக் காஞ்சிப்பூ உரியதாதலால், அதனைச் சென்று பெறுமாறு பணிப்பன். அவ்வொலி ஈண்டு மனையிடத்துள்ளார் செவியிற் கேட்குமாறு ஒலிக்கின்றது. போர்ப்பறை கேட்ட அளவிலே புறப்பட்டுச் செல்லற் பாலராகிய வீரருள் நாணமி ல்லாதார் சிலர் இப்பூக்கோள் குறித்த தண்ணுமையொலி கேட்கு மளவும் மனையில் இருப்பர். அவரை விரைய வருமாறு அழைப்பதும் அதன் கருத்தாகும். இத் தண்ணுமை யொலி கேட்டபின் பூவிலைப் பெண்டு, போர்தொடங்கி விட்டது; இனி ஆடவர் மனைக்கண் இரார்; அதனால் இம்மகளிர் நம்பால் பூக்கள் வாங்க மாட்டார் என்று

கருதி பிறர் மனைக்கண் செல்கின்றனர்; அளியள் என்று பூவிலைப் பெண்டின் பொருட்டு இரங்குவான்போல எடுத்துரைத்தாள். இது கேட்ட நொச்சி நியமங்கிழார் வியப்புமிகக் கொண்டு அவள் கூற்றுப் பொருளாகப் பாடிய பாட்டு:

"நிறப்படைக் கொல்கா யானை மேலோன்
குறும்பர்க் கெறியு மேவற் றண்ணுமை
நாணுடை மாக்கட் கிரங்கு மாயின்
எம்மினும் பேரெழி லிழந்து வினையெனப்
பிறர்மனை புகுவள் கொல்லோ
அளிய டானே பூவிலைப் பெண்டே"
(புறநா. 293.)

அகநானூற்றில் இவர் பாடிய பாடல் சிறப்புடையது. காட்டில் குறமகளிர் வேங்கைப் பூவைப் பறிக்கமுடியாமல் புலிபுலியென இரைச்சலிடுவதும், அதைக் கேட்ட குறவர் வில்லேந்தி ஓடிவருவதும், அவர்களைக் கொண்டு இம் மகளிர் தாம் வேண்டும் பூவைப் பெறுவதும் இவர்பாட்டில் அழகுறக்குறிக்கப் படுகின்றன. அப்பாடல்:

"வலந்த வள்ளி மரனோங்கு சாரற்
கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப்
பொன்னேர் புதுமலர் வேண்டிய குறமகள்
இன்னா விசைய பூசல் பயிற்றலின்
ஏகல் அடுக்கத் திருளளைச் சிலம்பின்
ஆகொள் வயப்புலி யாகுமஃ தெனத்தம்
மலைகெழு சீறூர் புலம்பக் கல்லெனச்
சிலையுடை யிடத்தர் போதரு நாடன்
நெஞ்சமர் வியன்மார் புடைத்தென அன்னைக்கு
அறிவிப் பேங்கொல் அறிவியேங் கொல்லென
இருபாற் பட்ட சூழ்ச்சி ஒருபாற்
சேர்ந்தன்று வாழி தோழி யாக்கை
இன்னுயிர் கழிவ தாயினும் நின்மகள்
ஆய்மலர் உண்கண் பசலை
காம நோயெனச் செப்பா தீமே" (அகநா. 52).

மனை வாழ்வில் தலைவன் பிரிந்த விடத்து வேறு பட்டாற்றாத தலைமகட்குத் தோழி, தலைவன் அன்புநிலையை எடுத்தோதி ஆற்றுவிக்கும் திறம் இவரால் மிக்க நயமுறப் பாடப் பெறுகின்றது. களவின்கண் தலைவி அறத்தொடு நிற்கும் விரகும், வேண்டு மிடத்து வழங்கும் முன்னிலைப் புறமொழியும் இலக்கிய இன்ப ஊற்றாக உள்ளன.

"விறல் சாய் விளங்கிழை நெகிழ விம்மி
அறல்போல் தெள்மணி இடைமுலை நனைப்ப
விளிவிலா கலுழுங் கண்ணொடு பெரிதழிந்து
எவனினைபு வாடுதி சுடர்நுதற் குறுமகள்
செல்வர் அல்லர்நங் காதலர் செலினும்
நோன்மார் அல்லர் நோயே மற்றவர்
கொன்னு நம்பும் குரையர் தாமே
சிறந்த அன்பினர் சாயலும் உரியர்
பிரிந்த நம்மினும் இரங்கி அரும்பொருள்
முடியா தாயினும் வருவர் அதன்றலை
இன்றுணைப் பிரிந்தோர் நாடித்
தருவது போலுமிப் பெருமழைக் குரலே"
(நற். 208)

நொச்சிநியமம் *nocci-niyamam,* பெ. (n.) ஊர்ப்பெயர்; a village name.

நொச்சிநியமம், தெய்வநலம் பெற்ற ஊர்களில் ஒன்று. நொச்சிநியமங் கிழார் என்ற புலவர் வாழ்ந்த ஊர். நியமம் என்பது கோவிலைக் குறிக்கும். இப்போது இவ்வூர் நொச்சியம் என்று வழங்குகிறது. இப்பெயருடைய ஊர்கள் பல இருந்ததால், நொச்சிவேலி சூழ்ந்து பிறவற்றின் வேறுபடுதலின், இந்நியமம் 'நொச்சி நியமம்' எனப்பட்டது. இவ்வூர் திருச்சிராப் பள்ளியிலிருந்து முசிறிக்குச் செல்லும் வழியில் உத்தமர் கோயிலுக்கு அண்மையில் உள்ளது.

நொச்சிமாலை *nocci-mālai,* பெ. (n.) வீரர்கள் மதில் காத்தலைச் சிறப்பித்துக் கூறும் இலக்கிய வகை (யாழ்.அக.); a poem describing the defence of a fort.

[நொச்சி + மாலை. நொச்சி மலர் மாலையைச் சூடிய வீரர்கள் எயிலைக் காத்தலைக் கூறும் இலக்கியவகை]

'புறத்தூன்றிய மாற்றார்க் கோடலின்றி நொச்சிப் பூமாலை சூடித்தன் மதில்காக்குந் திறங் கூறுமொரு இலக்கிய வகை'
(தொன்னூல்.283.உரை)

நொச்சியம் *nocciyam,* பெ. (n.) நொச்சிநியமம் பார்க்க; *see nocci-niyamam.*

[நொச்சிநியமம் → நொச்சியம்]

நொச்சில் *noccil,* பெ. (n.) கருநொச்சி (பதார்த்த. 507); willow-leaved genderussa.

[நொச்சு → நொச்சில்]

நொச்சுலம் *nocculam,* பெ. (n.) முல்லை; cared jasmine, Jasminum angustifloium. (சா.அக.).

நொச்சுளி *nocculi,* பெ. (n.) ஆவிற்புங்கு; a variety of pungu, Dalbergia genus. (சா.அக.). ஒருவகைப் புங்கன்மரம்.

நொசநொச—த்தல் *noša-noša-,* 4 செ.கு.வி. (v.i.) சோறுங்கஞ்சியும் கட்டுவிட்டு நொந்து போதல்; to spoil, as of boiled rice etc.

[நுள் (குலைதல்) → நொள் → நொள → நொச → நொசநொச—த்தல் (மு.தா.)]

நொசநொசவெனல் *noša-noša-v-eṉal,* தொ.பெ. (vbl.n.) சோறு நொந்துபோன நிலையடைகை; mashed rice.

[நொச + நொச + எனல்.]

நொசி[1]—தல் *noši-,* 2 செ.கு.வி. (v.i.) 1. நுண்மையாதல்; to be thin, slender, minute, as unable to bear a weight. *'நொசி மருங்குல்'* (தொல்.சொல். 368, இளம்பூ.). 2. செயற்கு அருமையாதல் to be difficult of observance, as a vow. *"நோற்றுணல் வாழ்க்கை நொசிதவத்தீர்"* (சிலப். 19: 223). 3. வருந்துதல் (சங்.அக.); to be in pain; to suffer. 4. வளைதல்; to bend; to be slanting. *"நொசிந்த நோக்கினன்"* (சீவக. 2010).

[நுல் (நோதல்) → நுள் → நொள் → நொய் → (நொயி) → நொசி → நொசி—தல். நுல் = நுண்மை, இளமை, மென்மை. நுல் → நுள் → நுளு → நுசு → நுசி → நொசி → நொசி—தல் (வே.க.)]

நொசி[2]—தல் *noši-,* 2 செ.கு.வி. (v.i.) 1. நைதல்; to be frayed, worn out; as cloth. *'நொசிந்த துகில்'* (தொல்.சொல். 330, உரை.). 2. குறைவுறுதல், to be insufficient, deficient. *"நொசிவிலாத பூசனை"* (விநாயகபு. 36:37)

[நொய் → நொசு → நொசி → நொசி—தல் (வே.க)]

நொசி[3]—த்தல் *noši-,* 4 செ.குன்றாவி. (v.t.) வருந்துதல்; to distress, afflict. *"நொசித்த வெம்முலை"* (சீவக. 654).

[நுல் (நோதல்) → நுள் → நொள் → நொள்ளாப்பு = வருத்தம். நொள் → நொய் → (நொயி) நொசி → நொசி—த்தல் (வே.க)]

நொசி[4] *noši-,* பெ. (n.) நுண்மை (அக.நி.); slenderness; fineness.

[நுல் (நுண்மை,சிறுமை) → நுள் → நுளு → நுசு → நுசி → நொசி]

நொசிகம் *nošigam,* பெ. (n.) வெண்சீந்தில்; moon creepper, Tinosphora Cordifolia. (சா.அக.).

நொசிப்பு[1] *nošippu,* பெ. (n.) கல்லறை; intense contemplation. *"நொசிப்பி னேழுறு முனிவர் நனியுணர்ந்து"* (பரிபா. 5: 37).

[நொசி[2] → நொசிப்பு.]

நொசிப்பு[2] *nošippu,* பெ. (n.) மனதை ஒருவழிப்படுத்துகை; concentration of mind (சா.அக.).

[நொசி → நொசிப்பு]

நொசியிடை *noši-y-idai,* பெ. (n.) நுட்பமான இடுப்பு; slender waist. (சா.அக.)

[நொசி + இடை. நொசி = வருத்தம் தரும் மெல்லிய இடை, நுண்ணிடை.]

நொசிவு[1] *nošivu,* பெ. (n.) **1.** நுண்மை (தொல். சொல். உரி. 76); slenderness; fineness. **2.** நொய்ம்மை; lightness.

[நுல் = நுண்மை, மென்மை, இளமை. நுல் → நுள் → நுளு → நுசு → நுசி → நொசி → நொசிவு (வே.க.)]

நொசிவு[2] *nošivu,* பெ. (n.) **1.** வருத்தம் (சூடா.); suffering. **2.** வளைந்த நிலை; state of being bent. *"நொசிவுடை வில்லின்"* (பதிற்றுப். 45:3).

[நுல் (நோதல்) → நுள் → நொள் → நொய் → (நொயி) → நொசி → நொசிவு (வே.க. நுல் [4])]

நொட்டக்கை *nottakkai,* பெ. (n.) **நொட்டாங்கை** (நெல்லை) பார்க்க; *see nottāngai.*

மறுவ. ஒரட்டுக்கை.

நொட்டங்கை *nottangai,* பெ. (n.) *நொட்டாங்கை* பார்க்க; *see nottāngai.*

நொட்டாங்கை *nottāngai,* பெ. (n.) இடது கை; left hand. *நொட்டாங் கையால் செய்யும் வேலை சிறக்காது.*

மறுவ. ஒரட்டாங்கை.

இடது கையைப் பீச்சாங்கை என்றும், நொட்டாங்கை என்றும் கூறுவது வழக்கம். நொட்டை என்றால் குறைவானது. இடதுகை பெரும்பாலோருக்குப் பலமான செய்கை களுக்குப் பயன்படாது. நல்ல செயல்களை அக்கையால் செய்ய விடமாட்டார்கள். பலவீனமான கை என்பதால் நொட்டாங்கை என்றும், மலங்கழுவப்பயன் படுவதால் பீச்சாங்கை என்றும் பெயர் பெற்றது.

[ஒரட்டுக்கை = இடதுகை. ஒரட்டுக்கை → ஒரட்டாங்கை → நொரட்டாங்கை → நொட்டாங்கை]

நொட்டு[1]**-தல்** *nottu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** ஏமாற்றுதல்; to cheat. **2.** புணர்தல்; to cohabit with.

[நுள் (துளை) → நொள் → நொட்டு → நொட்டு-தல் இஃது ஓர் இழிவழக்கு. துளைத்தல் பொருள் குற்றப் பொருளில் வந்துள்ளது]

நொட்டு[2] *nottu,* பெ. (n.) புணர்ச்சி; cohabitation.

[நுள்(துளை) → நொள் → நொட்டு. (இழிவழக்கு.)]

நொட்டுச்சொல் *nottu-c-col,* பெ. (n.) **நொட்டைச்சொல்** பார்க்க; see *nottai-c-col.*

[நொட்டைச் சொல் → நொட்டுச் சொல்]

நொட்டை[1] *nottai,* பெ. (n.) சுவை மிகுதியால் அண்ணத்தில் நாவைச் சேர்த்துக் கொட்டுகை; smack, as a sign of keen relish or anticipation. ***என்ன அந்தப் பழத்தைக் கண்டு நொட்டை யிடுகிறாய்?***

க. லொட்டெ,

ஒலிக்குறிப்புச் சொல்.

நொட்டை[2] *nottai,* பெ. (n.) குற்றம்; fault.

[நுள் (துளை) → நொள் → நொட்டை (மு.தா.). துளையுள்ள சில பொருள்கள் குற்றமுள்ளனவாகக் கருதப்படுவதால் துளைப் பெயர் குற்றத்தைக் குறிக்கும். உள் → ஒள் → (ஒட்டை) → ஒட்டை = குற்றம். சுள் → (சொள்) → சொட்டு → சொட்டை = குற்றம்]

நொட்டைச்சொல் *nottai-c-col,* பெ. (n.) குறைச்சொல்; fault-finding words. *நொட்டைச் சொல் சொல்லாதே* (உ.வ.)

மறுவ. நொண்டச்சொல்.

[நொட்டை² + சொல்]

நொட்டைவிடு–தல் *nottai-vidu-,* 20 செ.கு.வி. (v.i.) உண்டு முடித்த பின் பொந்திகை (திருப்தி) யைக் காட்டும் முறையாக நாக்கால் கொட்டி ஒலி எழுப்புதல்; utter a sound expressive of relish after a good meal; smack one's lips. *வயிறு முட்டச்சாப்பிட்டு நொட்டை விட்டாயிற்று.*

[நொட்டை + விடு–தல்.]

நொடி¹–த்தல் *nodi-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** நொடிசொல்(லு)–தல் பார்க்க; *see nodi-šol-.* *"பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு"* (கலித். 89). **2.** உறுப்பை ஆட்டுதல், சைகைக் காட்டுதல்; to gesticulate, use action, in speaking. *இறால் நொடிக்கிறது போல நொடிக்கிறான்* (வின்.). **3.** பால் முதலியன சுரத்தல்; to collect, as milk in the udder of a cow. *பால் இன்னும் நொடிக்க வில்லை* (யாழ்ப்.). **4.** வணிகத்தில் இழப்படைதல் (நட்டமடைதல்); to break down completely, as a concern. *வணிகம் நொடித்துப் போயிற்று.* **5.** சக்கரம் முதலியன கட்டுக் குலைதல்; to break, snap, as a wheel. *விழிப்பாயிரு! சக்கரம் நொடிக்கும்* (வின்.). **6.** நடக்கும் போது கால்சிறிது வளைதல்; to bend slightly, as the legs in walking. *கால் நொடித்துக் கொண்டது.* **7.** ஒடித்தல்; to break. *குச்சியை நொடிக்கிற மாதிரி விரலை நொடித்துவிடுவேன்.* **8.** சாய்த்தல்; to tilt. *வலக்கைப்பக்கம் கொஞ்சம் நொடி.* **9.** ஒப்புதல் இல்லை என்பதைத் தெரிவிக்க தலையை ஒரு பக்கமாகத் திருப்பித் தோள்பட்டையில் இடித்தல்; to turn one's head and hit the chin on the shoulder as a gesture of disapproval. *கேட்டதற்குப்பதில் சொல்லாமல் கழுத்தை நொடித்து விட்டுப் போய்விட்டான்.* **10.** செல்வ நிலை தாழ்ந்து வறுமையடைதல்; to impoverish. **11.** பொடியாகுதல்; to broken to pieces. **12.** நிலை கெடுதல்; to destroy, to ravish.

ம. நொடிக்க; **க., து.** நுடி; **தெ.** நொடி.

[நுள் (வளைவு) → (நொள்) → நொடி → நொடி–த்தல் (மு.தா.)]

நொடி²–த்தல் *nodi-,* 4 செ.குன்றாவி. (v.t.) **1.** சொல்லுதல் (திவா.); to say, tell, speak, declare. *சும்மா நொடிக்காதே! கொஞ்சம் வாயை மூடு.* [**க.** நுடி; **தெ.** நொடுகு]. **2.** சைகையால் அழைத்தல்; to call by signs. *"நெஞ்சைத் தன்பக்கலிலே நொடித்துக் கொண்டு"* (ஈடு, 5. 3: 7). **3.** மனத்தாங்கல் உண்டாம்படிக் கோள் சொல்லுதல் (வின்.); to insinuate so as to stir up ill-will. [**தெ.** நொடுச்சு]. **4.** பழித்தல்; to make unfavourable allusions; to use sarcasm. *"தாயுந்தமரு நொடிக்கின்றார்"* (அருட்பா, 3, ஆற்றாக்காத. 11). **5.** கட்டை விரலையும் நடு விரலையும் சேர்த்துச் சொடக்குதல்; to snap, as with the thumb and the middle finger. *"நொடிப்பதோ ரளவில்"* (திவ். திருமாலை, 43). **6.** அழித்தல் (பிங்.); to destroy, annihilate, reduce to primitive elements or atoms. *"நோக்காது நோக்கி நொடித்தன்றே"* (சி. போ. 1:4)

ம. நொடிக்க; **க., து.** நுடி; **தெ.** நொடி.

[நொடி¹ → நொடி–. → நொடி²–த்தல். இது பிறவினை.]

நொடி[3]–தல் *noḍi-,* 2 செ.குன்றாவி. (v.t.) சொல்லுதல்; to say, tell, speak, declare. ***"சென்றது நொடியவும் விடாஅன்"*** (மலைபடு. 545).

ம. நொடிக்க; **க., து.** நுடி; **தெ.** நொடி.

[நொடி[1] → நொடி[3] → நொடி–தல் இது தன்வினை.]

நொடி[4]–தல் *noḍi-,* 2 செ.கு.வி. (v.i.) 1. ஒடிதல் (நெல்லை); to break. *பந்தல் கால் நொடிந்து கீழே விழுந்து விட்டது.* 2. மனம்தளர்தல்; to be broken. *அப்பாவை இழந்தபின் அவன் மிகவும் நொடிந்துவிட்டான்.* 3. பொடியாகுதல்; to broken to pieces.

[நொடி[1] → நொடி[4] –தல்.]

நொடி[5] *noḍi,* பெ. (n.) 1. நோய் என்பதோடு இணைந்துவரும் சொல்; word, phrase, language, speech. *"புதல்வரை மருட்டும் பொய்ந்நொடி பகரவும்"* (பெருங். உஞ்சைக். 33: 72). 2. முதுமொழி; wise saying. **"பிசியு நொடியும்"** (பெருங். உஞ்சைக். 33:175). 3. புதிர் (சூடா.); riddle, enigma. 4. கதை; story. 5. செய்யுள்; stanza. ***"சடகோப னொடியாயிரத் திப்பத்தும்"*** (திவ். திருவாய். 10. 5:11)

ம., தெ. நொடி.

[நொடி[1] → நொடி[5]]

நொடி[6] *noḍi,* பெ. (n.) 1. ஓசை; noise. *"அமைக்கண் விடுநொடி"* (அகநா. 47). 2. கையின் கட்டை விரலையும் நடுவிரலையும் தெறித்து உண்டாகும் ஒலி; crack or snap, as of the thumb and the middle finger. 3. கண்ணை இமைப்பதற்கு அல்லது விரலை நொடிப்பதற்கு ஆகும் நேரம் போன்ற மிகக் குறைவான நேரம்; instant, as the time-measure of the snap of the finger. ***"கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை"*** (தொல். எழுத்து. 7). *நொடிப் பொழுதில் வந்துவிடு.* *"நொடிப்போதும் வீணிடேல்"* (பழ). 4. நோய்த் துன்பம்; ailment. *நோய் நொடியின்றி வாழ வேண்டும்.* 5. வினாடி; second. *அறுபது நொடி ஒரு நிமயம்* (நிமிடம்).

ம., தெ. நொடி.

[நுள் → (நொள்) → நொடி. (மு.தா.)]

நொடி[7] *noḍi,* பெ. (n.) வண்டிப் பாதையிலேற்பட்ட குழிப்பள்ளம்; ruggedness. of road, rut. *பாதை நொடியாயிருக்கிறது.* *(உ.வ.)*

[நுல் (துளை) → நுள் → நொள் → நொடு → நொடி. (வே.க.)]

நொடி[8] *noḍi,* பெ. (n.) 1. பொடி; powder. 2. புழுதி; dust.

[நுள் → நொள் → நொடி. (சு.வி.)]

நொடிக்கதை *noḍi-k-kaḍai,* பெ. (n.) விடுகதை (வின்.); riddle in the form of a story.

[நொடி = புதிர், விடுகதை. நொடி[6] + கதை]

நொடிசிரங்கு *noḍi-śirangu,* பெ. (n.) சொறி சிரங்கு (M.L.); itch, scabies.

[நொடி[6] + சிரங்கு. சிரங்கு = புண்]

நொடிசொல்(லு)–தல் *noḍi-šol(lu)-,* 13 செ.கு.வி. (v.i.) 1. புதுச்செய்தி கூறுதல்; to speak of strange things. *'பேய் நொடி சொன்னாற் போல'* (கலித். 89, உரை). 2. விடுகதை சொல்லுதல் (வின்.); to propose riddles, set conundrums. 3. பகடி செய்தல் (வின்.); to crack jokes.

[நொடி[5] + சொல்(லு)–தல்]

நொடித்தான்மலை *nodittāṉ-malai,* பெ. (n.) அழித்தல் தொழிலைச் செய்யும் சிவனின் பனிமலை (பிங்.); Mount Kailāsa, as belonging to Šiva the Destroyer. *"நொடித் தான்மலை யுத்தமனே"* (தேவா. 1166, 1.)

[நொடி² → நொடித்தான்+மலை. நொடி = அழித்தல். அழித்தல் தொழில் செய்யும் சிவன் இருக்கும் பனிமலை.]

இராவணன் இசையில் சிவன் மயங்கி இருந்தபோது பனி (கயிலாய) மலையை இராவணன் அடியோடு கையால் பெயர்த்ததாகவும், சிவன் கால்விரலால் மலையை அழுத்தி கைகளை நசுக்கியதாகவும் ஒரு தொன்மைக் கதையுண்டு.

நொடித்துப்போ—தல் *nodittu-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) நிலை குலைதல்; to become straitened in circumstances; to become a bankrupt. *அந்தச் செல்வந்தர் நொடித்துப் போனார். தொழில் நொடித்துப் போனதற்கு அவரே காரணம். நல்லாவாழ்ந்தார், இப்போது நொடித்துப் போனார்.*

[நொடி² → நொடித்து + போ—தல். நொடித்துப்போதல் = வருமானம் அல்லது பொருள் இல்லாமல் ஒருவரின் குடும்பம், வாழ்க்கை, தொழில் சீர்குலைதல்]

நொடிப்பவித்திரம் *nodi-p-pavittiram,* பெ. (n.) ஆசனத்தில் புரைவைத்துப் புண்ணுண் டாக்கும் நோய்வகை; fistula in ano, piles.

[நொடி⁶ + பவித்திரம். Skt. பகந்தர → த. பவித்திரம் = புண்நோய்]

நொடிப்பவுந்திரம் *nodi-p-pavundiram,* பெ. (n.) ஆண்குறிக்கு அருகில் உண்டாம் கட்டிவகை (M.L.); urinary fistula.

[நொடி⁶ + பவுந்திரம். Skt. பகந்தர → த. பவுந்திரம்]

நொடிப்பு *nodippu,* பெ. (n.) கணப்பொழுது; instant momemt. *"நொடிப்பின் மாத்திரை நூற்றுவில் லேகுவ"* (சீவக. 1773).

[நொடி⁶ + நொடிப்பு]

நொடிபயிற்று—தல் *nodi-payiṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பேச்சுக் கற்பித்தல்; to teach to speak, as to a baby. *'நொடிபயிற்றுவாள்'* (சீவக. 363, உரை).

[நொடி⁵ + பயிற்று—தல்.]

நொடிபயிற்றுவாள் *nodi-payiṟṟuvāḷ,* பெ. (n.) தாயர் ஐவரில் ஒருவர் (சிலப். 16:85 அரும்.); a kind of mother.

[நொடி + பயிற்றுவாள்.]

ஆட்டுவாள், ஊட்டுவாள், ஓலுறுத்துவாள், நொடி பயிற்றுவாள், கைத்தாய் எனத்தாயர் ஐவர் ஆவர். (சிலப். அரும். பக்—429)

நொடிபாராட்டு—தல் *nodi-pārāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) விடுகதை சொல்லுதல் (யாழ்.அக.); to propose riddle, set conundrums.

[நொடி⁵ + பாராட்டு—தல். நொடி = விடுகதை]

நொடிபோக்கு—தல் *nodi-pōkku-,* 5 செ.கு.வி. (v.i.) தாளத்திற்கேற்பக் கையை நொடித்தல்; to snap the fingers in marking time. *"அசை யுஞ்சீரு மளந்து நொடிபோக்கி"* (பெருங். வத்தவ 5:5)

[நொடி⁶ + போக்கு—தல்.]

நொடியவிழ்—த்தல் *nodi-y-aviḻ-,* 4 செ.கு.வி. (v.i.) பிதிர் (புதிர்) விடுத்தல்; to solve a riddle or conundrum.

[நொடி + அவிழ்—த்தல். நொடி = புதிர். அவிழ்த்தல் = விடுவித்தல், புதிரை விடுவித்தல்]

நொடியாதிப்பூடு *nodiyādippūdu,* பெ. (n.) கொத்தான்; air creeper. (சா.அக.).

நொடிவரை *nodi-varai,* வி.எ. (adv.) விரைவில்; in a moment; in a shorttime. *"செந்நெறி போய்ப் புகுமி னொடிவரையே"* (திருநூற். 33)

[நொடி⁶ + வரை. நொடிப் பொழுதிற்குள்]

நொடிவிடு—தல் *nodi-vidu-,* 18 செ.குன்றாவி. (v.t.) சொடுக்குதல்; to snap, as with the thumb and the middle finger. *"நொடிவிடுவன்ன காய் விடு கள்ளி"* (நற். 314)

[நொடி² + விடு—தல்.]

நொடிவிழு—தல் *nodi-vilu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. வண்டிப்பாதையில் குழிப்பள்ளம் விழுதல்; to be full of cross-ruts, as a road. *நொடியிருக்கும், வண்டியைப் பார்த்து ஓட்டு.* 2. கோணலாதல். (வின்.); to become crooked.

[நொடி + விழு—தல்]

நொடிவேதை *nodi-vedai,* பெ. (n.) நொடிப் பொழுதில் அதாவது சிறிய கால அளவில் செய்யும் மாயக் கலை (வாத வித்தை); transonuling metals into gold in a minute time with in a short time. (சா.அக.).

[நொடி + வேதை. வ.வித்தை → த. வேதை]

நொடு—த்தல் *nodu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. விலை சொல்லி விற்றல்; to sell. *"மீனொடுத்து நெற்குவைஇ"* (புறநா. 343). *"பசுமீன் நொடுத்த வெண்ணெல் மாத்தயிர் மிதி"* (அகநா. 340: 15). 2. சொல்லுதல்; to tell.

[நுள் → நொள் → நொடு → நொடு—த்தல். (சு.வி. 45)]

நொடுக்குநொடுக்கெனல் *nodukku-nodukkenal,* பெ. (n.) 1 தட்டுதலால் உண்டாம் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying, slight tapping or knocking noise. 2. நடக்கும் போது பாதக்குறட்டில் உண்டாகும் ஒலிக்குறிப்பு; clacking, as of wooden sandals in walking. 3. அலப்பற்குறிப்பு; talking fast, chattering. 4. படபடத்தற்குறிப்பு; being fidgety, restless, rude.

[நொடுக்கு+ நொடுக்கெனல்.]

நொடுநொடு—த்தல் *nodu-nodu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. துடித்தல்; to be fidgety, restless, 2. துடுக்காயிருத்தல்; to be rude, mischievous roguish. *நொடுநொடுத்த பிள்ளை.*

[(நுள்) → நொடு → நொடுநொடு → நொடுநொடு—த்தல் (மு.தா.)]

நொடுநொடெனல் *nodu-nodenal,* பெ. (n.) 1. படபடப்புக்குறிப்பு; expr. signifying restlessness. 2. துடுக்காயிருத்தற் குறிப்பு; rudeness.

[நொடுநொடு → நொடுநொடெனல்]

நொடை *nodai,* பெ. (n.) 1. விலை; price. *"பிழிநொடை கொடுக்கும்"* (பதிற்றுப். 30:12). *"பறிப்புறத்து இட்ட பால் நொடை இடையன்"* (நற். 142:4). *"உமணர் தந்த உப்புநொடை நெல்லின்* (நற். 254:6). *"புறவாயாற் புனல் பாயிற்...........நொடை நறவின்"* (புறநா. 352:8). *"நறவு நொடை தொலைச்சி"* (பெரும்பா. 140.).

2. விற்பனை; selling, sale. *"கண்ணொடை யாட்டியர்"* (சிலப். 5:24). 3. விற்பனைப் பொருள், பல பண்டம்; merchandise. *"நொடை நவில் மகடூஉக் கடைகெழு விளக்கமும்"* (சிலப். 6: 139).

[நொடு → நொடை]

நொடைநவில் மகடூஉ *nodai-navil-magadūu,* பெ. (n.) பல பண் டமும் விற்கும் மகளிர்; merchandise girl, sales girl. *"நொடை நவில் மகடூஉக் கடைகெழு விளக்கமும்"* (சிலப். 6:139).

[நொடை + நவில் + மகடூஉ. மகள் + து– மகடூஉ –அளபெடுத்தது.]

நொடையாட்டியர் *nodai-y-āṭṭiyar,* பெ. (n.) விலைகூறிவிற்கும் மகளிர்; sales girl. *"காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்"* (சிலப். 5:24).

[நொடை + ஆட்டியர். ஆளன் (ஆ.பா.) x ஆட்டியர் (பெ.பா.)]

நொடைமை *nodaimai,* பெ. (n.) விலை; price. *"அருங்க ணொடைமை தீர்ந்தபின்"* (பதிற்றுப். 68:11).

[நொடை → நொடைமை = விலைகூவும் பண்பு.]

நொண்டங்காய் *nondaṅgāy,* பெ. (n.) 1. புளியங்காயின் பிஞ்சு; tender fruit of tamarind. 2. புளியின் செங்காய்; tamarind fruit almost ripe.

[நொண்டு + அம் + காய்]

பிஞ்சும், அரைக்காயும் பழம்ஆதற்கு நொண்டித்தாவும் பருவத்தனபற்றி வந்தபெயர் என்க.

நொண்டித்தாவுதல் என்பது ஈண்டு செங்காயில் வளைந்திருந்து பழமாகும்போது நிமிரும் இயல்பைக் குறித்து.

நொண்டபிடிச்சவேலை *nonda-pidicca-vēlai,* பெ. (n.) பல வகை இடையூறுகளும், சிக்கலும் ஏற்பட்டு, வேலை மிகவும் சுணங்குதல்; work speed is so delayed due to hinderance and obstackle.

மறுவ. நொண்டல்வேலை

[நொண்டி பிடித்தல் → நொண்டிபிடிச்சல் + வேலை → நொண்ட பிடிச்ச வேலை = வேலை ஒழுங்காக விரைவாக நடக்காமல் நொண்டி (சுணங்கி) நடப்பது போன்ற தன்மை.]

நொண்டல்[1] *nondal,* பெ. (n.) நொண்டுகை (உ.வ.); limping.

[நொள் → நொண்டு → நொண்டல். நொள்→ நோள்→ நோண்டு = உடலில் நோண்டப்பட்டமுடம்நடக்கும் போது மண்ணை நோண்டுவது போல நடத்தல்.]

நொண்டல்[2] *nondal,* பெ. (n.) நுகர்கை (திவா.); experiencing, as pleasure or pain.

[நுல் → நுள் → நொள் → நொண்டல்]

நொண்டி[1] *nondi,* பெ. (n.) 1. முடமான ஆள் அல்லது விலங்கு; lame person or creature. *அவனும் நொண்டி, அவன் குதிரையும் நொண்டி. நொண்டி நொண்டி நடப்பானேன் கண்டதற்கு எல்லாம் பறப்பானேன். (பழ.) நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு (பழ.).* 2. முடம்; crippled condition, as of the leg or arm. *நொண்டிக்கை.* 3. பொய்க்காலால் நடிப்போன் (யாழ்ப்.); person who dances on stilts. 4. *நொண்டி நாடகம்* பார்க்க; *see nondi-nādagam.*

[நொண்டு. → நொண்டி. கால் அல்லது கை செயற்படாத குறை; ஊனம்; முடம்.]



நொண்டி[2] *nondi,* பெ. (n.) நொண்டியடித்துக் கொண்டு சென்று எதிர் அணியினரைத் தொடும் விளையாட்டு; the game of hopping with folded leg.

[நொண்டு → நொண்டி]

இது பகல், இரவு இரண்டு பொழுதுகளிலும் விளையாடும் விளையாட்டு.

ஆடிடமும், பொழுதும், ஆடுவாரும் : நொண்டி என்பது, பொட்டலிலும் திறந்த வெளி நிலத்திலும், பெரும்பாலும் சிறுவரும் சிறுபான்மை சிறுமியரும், பகலிலும் நிலவிரவிலும் விளையாடும் விளையாட்டு.

ஆடு கருவி : ஆடுவார் தொகைக் கேற்ப நிலத்திற் கீறப்பட்ட ஒருபெருவட்டமே இவ்வாட்டத்தின் கருவியாம்.

ஆடுமுறை : இருவருக்குக் குறையாத சிலரும் பலரும் சமத் தொகையவான இரு கட்சிகளாய்ப் பிரித்துக் கொள்ளல் வேண்டும். இருவர்க்கு மேற்பட்டவராயின் உத்திகட்டிப் பிரிந்து கொள்வர்.

மரபான முறைகளுள் ஒன்றன்படி துணிந்து கொண்டு ஒரு கட்சியார் வட்டத்திற் குள்ளிறங்குவர். மறு கட்சியார் வெளி நின்று கொண்டு, ஒவ்வொரு வராய் ஒவ்வொருமுறை வட்டத்திற்குள் நொண்டி அடித்துச் சென்று, உள் நிற்பாருள் ஒருவரையோ பலரையோ எல்லாரையுமோ தொடமுயல்வர். தொடப்பட்டவர் உடனே வெளிவந்துவிடல் வேண்டும். உள்நிற்பார் அனைவரும், தம்மை நொண்டியடிப் பவர் தொடாதவாறு, வட்டத்திற்குள் அங்கு மிங்கும் ஓடித்திரிவர். அங்ஙனம் ஓடும் போது கோட்டை மிதிப்பினும், கோட்டிற்கு வெளியே கால் வைப்பினும், உடனே வெளிவந்துவிடல் வேண்டும். நொண்டியடிப்பார் களைத்துப் போயின் கோட்டிற்கு வெளியே சென்று காலூன்றல் வேண்டும். ஒருமுறை வெளியே சென்றபின், காலுன்றாக்காலும், மீண்டும் உள்ளே வரல் கூடாது. நொண்டியடிப்பவர் வட்டத்திற்குள்ளும் கோட்டின் மேலும் காலூன்றினும், கோட்டை மிதிக்கினும், அவர் தொலைவதோடு, அவராலும் (அவர் பிந்தினவராயின்) அவருக்கு முந்தினவராலும் தொடப்பட்டு வெளியேறியுள்ள அத்துணைப் பேரும் உடனே உள்ளே வந்துவிடுவர். மீண்டும் அவரைத் தொடுதல் வேண்டும். ஒருவர் நொண்டியடித்து முடிந்த பின், இன்னொருவர் நொண்டியடிப்பர். வெளி நிற்கும் கட்சியாருள், முதலிலோ இடையிலோ இறுதியிலோ நொண்டியடிப்பவர் ஒருவரே உள்நிற்பார் எல்லாரையும் தொட்டு விடுவதுமுண்டு; ஒவ்வொருவரும் ஒவ்வொரு வரைத் தொடுவதுமுண்டு; இடையிட்டு ஒரோவொருவர் ஒருவரையோ பலரையோ தொடுவதுமுண்டு; ஒருவரும் ஒருவரையும் தொடாதிருப்பது முண்டு. இங்ஙனம், உள் நிற்கும் கட்சியாருள் ஒருவரே வெளியேறியிருத்தலும், சிலரோ பலரோ வெளியேறியிருத்தலும், அனைவரும் வெளியேறியிருத்தலும், அனைவரும் வெளியேறா திருத்தலும், ஆகிய நால்வகை நிலைமை ஏற்படக்கூடும்.

வெளி நிற்கும் கட்சியாரும் அனை வரும் நொண்டியடித்து முடிந்தபின், அல்லது உள்நிற்கும் கட்சியாருள் அனைவரும் தொடப்பட்டபின், ஓர் ஆட்டம் முடியும்.

ஆட்ட வெற்றி : உள்நிற்பார் அனை வரும் தொடப்பட்டு விடின் வெளிநிற்பார்க்கும், அங்ஙனமி ன்றி ஒருவர் எஞ்சியிருப்பினும் உள் நிற்பார்க்கும், வெற்றியாம்.

ஆட்டத் தொடர்ச்சி : ஒருமுறையாடிய பின், மீண்டும் ஒருமுறையோ பல முறையோ ஆட நேரமும் விருப்பமுமிருப்பின், அங்ஙனஞ் செய்வர். முந்திய ஆட்டத்தில் வென்ற கட்சியாரே பிந்திய ஆட்டத்திலும் உள்நிற்பர். உள் நிற்பதே இனியதாகக் கருதப்படும்.

ஆட்டத் தோற்றம் : இவ் விளையாட்டுப் போர்வினையினின்று தோன்றியதாகும். போர்க் களத்தில் ஒரு கால் வெட்டுண்ட மறவன் மறுகாலால் நொண்டியடித்துச் சென்றே, தான் பட்டு வீழுந்துணையும், பகைவரை வெட்டி வீழ்த்துவதுண்டு. இம் மற வினையை நடித்துக்காட்டும் முகமாகவே இவ் விளையாட்டுத் தோன்றிற்று.

குறைத்தலைகள் கூத்தாடுவதும் தலையைக் கையிலேந்தி நிற்பதும் போன்ற மறவினைகளை நோக்கும் போது, ஒரு காற் குறைகள் நொண்டிச் சென்று நூழிலாட்டுவது வியப்பன்று.

கள்வனொருவன் படையிலுள்ள குதிரை யொன்றைத் திருட முயன்று கால் தறியுண்டபின் நல்வழிப்பட்ட செய்தியைச் சிந்துச் செய்யுளாற் புனைந்து கூறும் நொண்டி நாடகம் என்னும் நாடக நூல்வகையும் உளது. 'சீதக்காதி நொண்டி நாடகம்' இதற்கோர் எடுத்துக்காட்டாம். இந் நாடகச் செய்தி மேற்கூறிய போர் வினைச் செய்தியின் வேறாம்.

ஆட்டத்தின் பயன் : ஒரு கால் நோய்ப் பட்டும் வெட்டுண்டும் நடக்கவி யலாதபோது மறு காலால் நொண்டியடித்து வேண்டுமிடஞ் செல்வதற்கான பயிற்சியை, இவ் விளையாட்டு அளிக்கும்.

நொண்டிக்கால் *nondi-k-kāl,* பெ. (n.) **1.** முடக்கால்; lame foot or leg. **2.** பொய்க் கால்; stilts.

[நொண்டி + கால்]

நொண்டிகட்டு-தல் *nondi-kattu-,* 5 செ.குன்றாவி.(v.t.) பொய்க்கால் கட்டுதல் (வின்.); to tie on stilts.

[நொண்டி + கட்டு-தல். நொண்டி கட்டுதல் = பொய்க்கால் கட்டி நடத்தல்.]

நொண்டிச்சமாதானம் *nondi-c-camādānam,* பெ.(n.) நடைபெற்று முடிந்த நிகழ்வு ஒன்றுக்குக் காட்டப்படும் வலுவில்லாத கரணியம்; a lame excuse. ***இந்த நொண்டிச் சமாதானம் (அமைதி) எல்லாம் வேண்டாம் உண்மை யைச் சொல்லு.*** மறுவ. நொண்டிச்சாக்கு

[நொண்டி + சமாதானம்]

நொண்டிச்சாக்கு *nondi-c-cākku,* பெ.(n.) *நொண்டிச்சமாதானம்* பார்க்க; *see nondi-c-camādānam.* ***வீட்டுப்பாடம் ஏன் எழுதவில்லை என்று கேட்டால் தூவல் (பேனா) இல்லை என்று நொண்டிச் சாக்குச் சொல்லுகிறான். நொண்டிக்குதிரைக்குச் சறுக்கினது சாக்கு (பழ.)***

[நொண்டி + சாக்கு – நொண்டிச் சாக்கு = தப்பித்துக் கொள்ள ஏதாவது கரணியம் காட்டுதல். சார்த்து → சாட்டு → சாக்கு. 'நொண்டிக்குச் சறுக்கினது தான் சாக்கு'. பிறவியிலே நொண்டி யானவன் என்றோ சறுக்கி விழுந்ததைச் சாக்காகச் சொல்லுவது போல.]

நொண்டிச்சிந்து *nondi-c-cindu,* பெ. (n.) *நொண்டி நாடகம்* பார்க்க; *see nondi-nādagam.*

[நொண்டி + சிந்து. சிந்து = ஒருவகை யாப்பு ஒலி.]

நொண்டிச்சிந்து: சந்தப்பாடல்களின் (கவியின்) வகைகளில் இதுவும் ஒன்று. இதன் முதலடியில் இரண்டு அல்லது மூன்று சீர்களும் ஒரு தனிச் சீரும் இரண்டாவது அடியில் நான்கு சீர்களுமாக மாறி மாறி வரும். நொண்டி நாடகம் பெரும்பாலும் இந்தச் சிந்து யாப்பு வகையில் இயற்றப் படுவதால் இதற்கு நொண்டிச் சிந்து என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

திருமலை நாயக்கர் மன்னனின் அவைக்களப்புலவராக வாழ்ந்த இராமப்பையன் என்பவரால் முதன்முதலில் நொண்டிச்சிந்து எனும் சந்தப்பாடல்(க்கவி) வகையை நொண்டியை கதை மாந்தராகக் கொண்டு படைத்தமையால் இப்பெயர் பெற்றது என்பது ஒரு சாரார் கருத்து.

'சிந்து' என்னும் யாப்பு வகைக்கு இன்னது தான் இலக்கணம் என்று தொல்காப்பியம், நன்னூல், காரிகை போன்றவற்றில் காணப் படவில்லை. சிந்தடி

என்பது மூன்றடி என்று மட்டும் காணப்படுகிறது. சிந்தியல் வெண்பா மூன்றடியாய் வரும். *'சிந்து'* என்னும் யாப்பு வகைக்குப் புலவர் திரு. த.ச. தமிழனார் அவர்கள் தம்முடைய யாப்பு நூலில் (பக். 108, 109) இலக்கணம் கூறுகின்றார்.

"முதலடிச் சீர்களும் தனிச்சொல் அன்றி மறியடிச் சீர்களும் எண்ணொத் திருப்பின் சமனிலைச் சிந்தாம்; ஒன்றின்மற் றொன்றுசீர் மிகுநிலை யாயின் வியனிலைச் சிந்தாம்"

(யாப்புநூல், 135.)

முதலடியில் உள்ள சீர்களும், தனிச்சொல் பெற்று மடங்கி வரும் மற்றைய அடிச்சீர்களும் ஒத்த எண்ணிக்கை உடையதாயின் 'சமனிலைச் சிந்து' எனவும், ஓரடியை விட மற்றோர் அடியின் சீர் மிகுந்து இருந்தால் 'வியனிலைச் சிந்து' எனவும் அமையும்.

சமனிலைச்சிந்து

"செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே – எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே".

"காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ் கண்டதோர் வையை பொருனைநதி – யென மேவிய யாறு பலவோடத் – திரு மேனி செழித்த தமிழ்நாடு".

வியனிலைச் சிந்து

"தீராத விளையாட்டுப் பிள்ளை – கண்ணன் தெருவிலே பெண்களுக்கோயாத தொல்லை தின்னப் பழங்கொண்டு தருவான் – பாதி தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான். என்னப்பன் என்னையன் என்றால் –அதனை எச்சிற்படுத்திக் கடித்துக் கொடுப்பான்".

நொண்டிச்சிந்து போலவே கும்மிச் சிந்து, காவடிச்சிந்து, வண்டிக்காரன் சிந்து எனப்பலவும் உண்டு.

நொண்டித்தனம் *nondi-t-tanam,* பெ.(n.) **1.** முடம்; lameness. **2.** ஒரு காலைப் பின்புறம் தூக்கிக் கொண்டு மறு காலால் உந்தி உந்தி எதிர்க் கட்சியில் ஒருவனைப் பிடிக்குஞ் சிறுவர் விளையாட்டு வகை; a children's game in which one member has to top on one leg and catch one of his opponents. **3.** ஆட்டத்தில் புரட்டுச் சொல்லுகை (இ.வ.); false statement in a game.

[நொண்டி + தனம்]

நொண்டிநாடகம் *nondi-nādagam,* பெ. (n.) கள்வனொருவன் படையிலுள்ள குதிரை யொன்றைத் திருட முயன்ற போது கால்தறியுண்டு பின் நல்வழிபெற்ற செய்தியைச் சிந்துச் செய்யுளாற் புனைந்து கூறும் நாடக நூல்; a comic poem in šindu verse in which a thief is represented as having lost his leg in the act of stealing a horse from amidst an army and reforming himself after wards..

ம. நொண்டி நாடகம்

[நொண்டி + நாடகம்]

கி.பி. 17, 18ஆம் நூற்றாண்டுகளில் பாளையக்காரர்கள் ஆட்சி தென்னாட்டில் நடைபெற்றபோது அவர்களை அண்டிப் பிழைக்க வந்த புலவர்களாலே பாடப்பட்டு வந்த ஒருவகை நாடக இலக்கியம் நொண்டி நாடகம். பண்டைத் தமிழ் இலக்கியத்தில் இது தோன்றியிராமற் போனாலும், நாடக மேடையில், ஒருவனே நடிகனாகவும், பாடகனாகவும் இருந்து நடித்து வந்த வரிக்கூத்து என்பது இதன் மூலமாக இருக்கலாம். வரிக்கூத்துக்கள் தொண்ணூற்று மூன்றனுள் ஒன்றாகச் சிந்து என்ற பாவினத்தில் இது வளர்ந்திருக்கலாம். இது நாடோடிப் பாடலைப் போலப் பாடப்பட்டு தாழ்ந்த மக்களும் எளிதில் சுவைக்குந் தன்மையுடையதாகப் பாடப்பட்டு இடையிடையே இதற்கு உதவி புரிந்த பாளையக்காரர்களின் புகழுரைகளைக் கொண்டதாக இயற்றப்பட்டது.

நொண்டி நாடகத்தின் கதைத் தலைவன் கூத்தின் மேடையில் தோன்றி அவனுடைய வரலாற்றை அவனே கூறிப் பாடி நடித்துக் காட்சி தருவான். நொண்டி நாடகங்கள் தமிழ் நாட்டில் பல தோன்றியிருக்கின்றன. எல்லாவற்றிலும் அடிப்படையான கதை ஒன்றே தான். திருட்டுத் தொழிலில் பழகின ஒருவன் தன் தொழிலுக்காகப் பல ஊர்களுக்குச் செல் கின்றான். ஒரூரில் விலைமகள் மீது ஆசை கொண்டு அவளுடைய காமவலையிற் சிக்கிப் பொருள் முழுவதும் தந்து விடுகிறான். அவளுடைய தூண்டுதலின் பேரில்

பொருளீட்ட மீண்டும் செல்கின்றான். பலமுறை திருடிப் பொருள் தந்தும் காமவலையிலிருந்து அவன் மீள முடியவில்லை. அப்போது பாளையம் இறங்கியிருந்த ஒரு படைத் தலைவனுடைய குதிரைச்சாலையிற் புகுந்து மாறுவேடத்தில் ஒரு குதிரையைத் திருடுகிறான். காவலர்கள் அவனைப்பிடித்துக் கொள்கிறார்கள். தப்பிப்போக முயன்ற போது பட்ட இடர்களுக்கு அளவே இல்லை. படைத்தலைவனிடம் கொண்டுப் போகப்பட்ட போது அவன் கேட்ட வசவுகளுக்கு அளவில்லை. தலைவன் முற்றும் ஆய்ந்து மாறுகை, மாறுகால் வாங்கி விடும்படி தண்டிக்கிறான். கொல்லனால் கை கால் வாங்கப்படுகையில் அளவற்ற துன்பம் அடைகிறான். இரக்கம் காட்டுவாரின்றி அரத்த வெள்ளத்தில் கிடக்கும் போது அருளாளர் ஒருவர் வந்து மருந்து தருகின்றார். அவர் கூறிய நன்மொழிகளால் நற்குணத்தனாகி, அவர் காட்டிய ஒரு தலத்திற்குச் சென்று கடவுளை நெஞ்சுருகப் பாடி வழிபாடு செய்கிறான். பிழையைப் பொறுத்து நல்வழி காட்ட வேண்டுகிறான். வியப்புறும் வகையில் காலும் கையும் வளர்கின்றன. சான்றோன் ஆகின்றான். இறைவழிபாட்டில் நின்று அன்பன் ஆகின்றான்.

இதுதான் நொண்டி நாடகத்தின் அடிப்படை வரலாறு. இந்நாடகம் பெரும்பாலும் நொண்டிச் சிந்து என்ற பாவினத்தின் இடையிடையே வெண்பா, விருத்தம் முதலிய செய்யுட்களைக் கொண்டதாக இயற்றப்படும். இது நாட்டு மக்கள் கேட்கையில் நெஞ்சு உருகும் வகையில் வழக்குச் சொற்கள், நாட்டுப் பழக்க வழக்க செய்திகள் சேர்க்கப்பட்டு இயற்றப்படுவது. மேடையில் ஆடுகிறவன் காலைக் கட்டிக் கொண்டு நொண்டி நொண்டி ஆடுவதால் இதனை 'ஒற்றைக்கால் நாடகம்' என்றும் கூறுவார்கள்.

சிறந்த நொண்டி நாடகங்கள் : இராமப் பையன் நொண்டி நாடகம் திருச்செந்தூர் நொண்டி நாடகம், சீதக்காதி நொண்டி நாடகம், சாத்தூர் நொண்டி நாடகம், குளத்தூர் ஐயன் நொண்டி நாடகம், திருமலை நொண்டி நாடகம், பழநி நொண்டி நாடகம், திருக்கச்சூர் நொண்டி நாடகம், போன்றன.

நொண்டிப்பாரி *noṇḍi-p-pāri,* பெ. (n.) **நொண்டி**² பார்க்க; see noṇḍi²

[நொண்டி + பாரி. பாரி = பரவலாக விளையாடுதல்]

நொண்டியடி—த்தல் *noṇḍi-y-aḍi-,* **4** செ.கு.வி. (v.i.) **1.** நொண்டி விளையாடுதல்; to play the game of *noṇḍi. **நொண்டியடிக்கப் போறேன்.*** **2.** ஆட்டத்தில் புரட்டுச் சொல்லுதல்; to utter falsehood in a game. ***விளையாட்டில் அவன் நொண்டியடிக்கிறான்.*** **3.** சோறு முதலியன இன்மையால் வருந்துதல்; to suffer from want, as of food. ***வாழ்க்கையை நடத்த முடியாமல் நொண்டியடிக்கிறான்.***

[நொண்டி + அடி—த்தல்.]

நொண்டியடிக்கை *noṇḍi-y-aḍikkai,* பெ. (n.) ஆட்டத்தில் புரட்டுச் சொல்லுகை; false statement in a game.

[நொண்டி + அடிக்கை]

நொண்டு²—தல் *noṇḍu-* 5 செ.கு.வி. (v.i.) முகத்தல்; drawing water. ***"குடங்கை யினொண்டு கொள்ளவுங் கூடும்" (சிலப். 10:85). "இரும்பிணர்த் தடக்கை நீட்டி நீர்நொண்டு" (நற்.186:2).***

[நுள் (துளைத்தல்) → நொள் → நொண்டு → நொண்டு —தல்=மொள்ளுதல், முகத்தல்]

நொணநாட்டியம் *noṇa-nāṭṭiyam,* பெ. (n.) *நொறு நாட்டியம் பார்க்க; see noṟu-nāṭṭiyam.*

நொணநொணவெனல் *noṇa-noṇa-v-eṉal,* பெ.(n.) **1.** மூக்காற் பேசுதற் குறிப்பு; expr. signifying the sound of speaking through the nose. **2.** தொந்தரவு செய்தற் குறிப்பு; expr. signifying teasing.

[நொண + நொண —நொண நொண + எனல்]

நொத்து *nottu,* பெ. (n.) தடை செய்கை (வின்); hindering, preventing, frustrating.

[நொப்பு → நொத்து]

நொதல் *nodal,* தொ. பெ.(vbl. n.) சோறு நொந்து போதல்; to be spoiled as boiled rice.

[நொய் → நொ → நொதல் (வே.க)]

நொதி[1]–த்தல் *nodi-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** புளித்த மாவு முதலியன பொங்குதல் (வின்.); to ferment, effervesce, turn sour, as liquid-food; to bubble up slowly, as water over a gentle fire. **2.** சீழ் பிடித்தல் (வின்.); to fester, suppurate. **3.** ஈரமாதல் (இ.வ.); to be damp. **4.** நீர் முதலியவற்றில் ஊறிப் போதல் (வின்.); to be soaked; to be macerated. **5.** நுரைத்தல் (வின்.); to foam, froth, spume, sparkle as spirituous liquors.

[நுல் → நுள் → நொள் → நொடு → நொது → நொதி → நொதி–த்தல்]

நொதித்தல்

கொடி முந்திரிச் சாறு மதுவாக மாறுவதும், தவசங்களின் சருக்கரைப் பொருள்கள் சாராயமாக மாறுவதும் இதையொத்த இன்னும் மாற்றங்களும் நொதித்தல் என்ற பெயரால் குறிக்கப்பட்டன; Diastase, zymase போன்ற பொருள்களின் உதவியால் சில கரிமப் பொருள்கள் தம்மினும் எளிய அமைப்புள்ள வேறு பொருள்களாக மாறும் எல்லா விளைவுகளும் இவ்வாறு அழைக்கப் படுகின்றன. இவ்விளைவுகளுக்குக் கரணியமான பொருள்கள் நொதிவிப்பான்கள் (ferments) எனப்படும்.

இவ்விளைவிற்குக் கரணியமான பொருள்கள் இருவகைப்படும். இவை ஈ(ஸ்)ட்டுகளும், நுண்ணுயிர் பாக்ட்டீரியாவும் ஆகும். கரிமப் பொருள்களான இவற்றில் நைட்ர(ஜ)னும் இருக்கும். மிகச் சிறு அளவில் இருந்தாலும் இவை இவ்விளைவைப் பேரளவில் நிகழ்த்தும் திறமை உள்ளவை. உயிருள்ள பொருள்களான இவை வளர்ச்சியும் இனப்பெருக்கமும் உடையவை. ஈ(ஸ்)ட்டில் பல (என்சைம்கள்) கரிமப்பொருள்கள் உள்ளன. உயிர்ப் பொருள்களில் பல்வேறு மாற்றங்களைத் தூண்டும் இக் கரிமப் பொருள்களே நொதித்தல் விளைவை நிகழ்த்தும் கரணியாக உள்ளன.

நொதி[2] *nodi,* பெ. (n.) **1.** புளித்த காடி போன்றவை; ferment. **2.** உயிரினங்களின் உடம்பில் வேதியியல் மாற்றங்களை உண்டாக்கிடும் (கிரியா) ஊக்கியாகச் செயல்படும் குறிப்பிட்ட உயிரணுக்களின் சுரப்பு; enzyme.

[நுல் (நெகிழ்ச்சி) → நுள் → நொள் → நொடு → நொது → நொதி]

நொதி[3] *nodi,* பெ. (n.) அருவருக்கத்தக்க சேறு (சூடா.); mud, mire, slough. ***நொதியில் கால்வைக்காமல் பார்த்து நட.***

[நுல் (நெகிழ்ச்சி) → நுள் → நொள் → நொளில் = சேறு. நொள் → நொடு → நொது → நொதி = சேறு (வே.க.)]

நொதிவாயு *nodi-vāyu,* பெ.(n.) சேற்றுக் குழம்பிலிருந்து எழும் காற்று; the carbon hydrogen gas rising in swamphy or boggy places - Marsh gas. (சா.அக.).

[நொதி + Skt. வாயு.]

நொது–த்தல் *nodu-,* **4.** செ.குன்றாவி. (v.t.) **1.** அழிதல் (திவா); to put out, quench, extinguish. **2.** தளர்தல் to relax, to be soft. "நொதிப்பில் வன்சிறை புகுத்துமின்" (தணிகைப்பு. வீராட்.44).

[நுல் (நெகிழ்ச்சி) → நுள் → நொள் → நொடு → நொது → நொது–த்தல் (வே.க.)]

நொதுக்கல் *nodukkal,* பெ. (n.) இளக்கமுள்ளது (யாழ்.அக.); that which is soft.

[நொதுத்தல் = தளர்தல். நொது → நொதுக்கல்]

நொதுக்குநொதுக்கெனல் *nodukku-nodukkeṉal,* பெ. (n.) சூட்டினால் மலம் சிறிது சிறிதாக வெளியேறுதற் குறிப்பு; expr. signifying frequent passing of stools. *வயிறு நொதுக்கு நொதுக்கென்று போகிறது. குழந்தை நொதுக்கு நொதுக்கென்று கழிகிறது.*

[நொது → நொதுக்கு + நொதுக்கு + எனல்]

நொதுநொது—த்தல் *nodu-nodu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. குழைதல்; to be soft, as rice overboiled. 2. சீழ்கட்டுதல் (வின்.) to fester, suppurate. 3. ஈரமாதல்; to be damp. 4. நுரைத்தல் (வின்.); to foam, froth, spume, sparkle, as spirituous liquors.

[நொது + நொது—த்தல்]

நொதுநொதெனல் *nodu-nodeṉal-,* பெ. (n.) புளித்தமா முதலியன பொங்குதற் குறிப்பு; expr. signifying fermentation. 2. நெகிழ்தற் குறிப்பு; softness, slushy condition. *இட்டளி மாவு நொது நொதெனவாகி விட்டது.*

[நொது + நொது + எனல்]

நொதுமல் *nodumal,* பெ. (n.) 1. புறக்கணிப்பு (உதாசீனம்); indifference, neutrality. *'பகைநொதுமல் நண்பென்னும் மூன்று பகுதியினும்'* (குறள், 12, அதி. அவ.). 2. அன்பிலார் கூற்று; world of an indifferent person. *"நொதுமன் மொழியல்"* (அகநா. 39). 3. மென்மை; smoothness, as of a fine cloth. *"நெதுமல் பெற்றிடு நுண்டுகில்"* (கந்தபு. திருவி. 122).

[நொது → நொதுமல்]

நொதுமலர் *nodumalar,* பெ. (n.) அயலார்; strangers. *"நொதுமலர் வந்தவாறென்னோ வென்பர்"* (திருக்கோ. 275). *"உள்ளி நொதும லேர்புரை தெள்ளி தின்"* (நற். 11:3). *"அழாஅ தீமோ நொதுமலர் தலையே"* (நற். 13:2).

[நொதுமல் → நொதுமலர்]

நட்பும் பகையும் இல்லாதவரை நொதுமலர் என்பது பழந்தமிழ் வழக்கு.

நொதுமலாட்டி *nodu-malāṭṭi,* பெ.(n.) ஏதிலாட்டியாகிய பூவிலை மடந்தை; பூவிற்கும் பெண்; flower selling woman. *"புதுமலர் தெருவுதொறு நுவலும் நொதுமலாட்டிக்கு நோமென் நெஞ்சே"* (நற். 118:11).

[நொதுமல் + ஆட்டி. ஆட்சி = பெண் (திவா). ஆட்சி → ஆட்டி]

நொதுமலாளர் *nodumal-āḷar,* பெ. (n.) 1. நொதுமலர் பார்க்க; see *nodumalar. "நொதுமலாளர் கொள்ளா ரிவையே"* (ஐங்குறு. 187). 2. குறளை கூறுவார்; backbiters, slanderers. *"நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது"* (புறநா. 35)

[நொதுமல் → நொதுமலாளர்]

நொதுமலாளன் *nodumal-āḷaṉ,* பெ. (n.) நொதுமலர் பார்க்க; see *nodumalar. "நொதுமலாள னெஞ்சறப் பெற்றவென்"* (அகநா. 17:8). *"நொதுமலாளன் கதுமெனத் தாக்கலின்"* (நற். 50:5)

[நொதுமல் → நொதுமலாளன்]

நொதுமெனல் *nodum-eṉal,* பெ.(n.) விரைவுக்குறிப்பு (இ.வ.); expr. signifying speed on hastiness.

நொந்தகைமை *nodagaimai,* பெ.(n.) **1.** நோய்; disease. **2.** வலிவின்மை; weakness. **3.** வறுமை (யாழ்ப்.); poverty.

[நோ + தகைமை . நோந்தகைமை → நொந்தகைமை. தகைமை = நிலைமை, தகுதி, குணம்]

நொந்தசோறு *noda-šoṟu,* பெ. (n.) பதமிழந்த சோறு; rotten cooked rice, Stale rice. (சா.அக.).

[நொந்து → நொந்தல் + சோறு. நொந்துதல் = அழிதல்.]

நொந்தபுண் *nonda-puṇ,* பெ. (n.) அழிந்தபுண்; rotten sore sloughing wound (சா.அக.).

[நொந்து → நொந்த + புண்] நொந்துதல் = அழிதல்.

நொந்தல் *nondal,* பெ. (n.) **1.** வலிவிமின்மை; weakness. **2.** வறுமை; poverty

[நொந்துதல் → நொந்தல்]

நொந்தலை[1] *nondalai,* பெ. (n.) **1.** வலிமைக் குறைவு (பலவீனம்); weakness. **2.** வறுமை; straitened circustances, poverty

[நொய் → நொ → நொந்தலை]

நொந்தலை[2] *nondalai,* பெ. (n.) தீமுறிப்பூடு; an unknown plant suspending the action of fire. (சா.அக.).

நொந்தலைமை *nondalaimai,* பெ. (n.) *நொந்தை* (யாழ்ப்.) பார்க்க; see *nondai.*

[நொந்தலை → நொந்தலைமை]

நொந்தன்னம் *nondaṉṉam,* பெ. (n.) நீர்விடாமையால் பதனழிந்த சோறு (பதார்த்த. 1459); cooked rice spoiled by being kept dry.

[நொந்து → நொந்தல் + அன்னம் நொந்தன்னம். அன்னம் = உணவு, சோறு]

நொந்தாகிரி *nondā-kiri,* பெ. (n.) **1.** சூரியகாந்தி; sun flower,Helianthus indicus alias H.annuus. **2.** பாதிரிமரம்; trumpet flower tree, Stereospermum chelonoides. (சா.அக.).

நொந்தார்[1] *nondār,* பெ. (n.) பகைவர்; enimies. *"நொந்தார்க் கடந்தான்"* (சீவக. 2564).

[நோ → நொ → நொந்தார்.]

நொந்தார்[2] *nondār,* பெ. (n.) வருந்துபவர்; sorrower. *"நொந்தார் செயக்கிடந்தது இல்"* (திரிகடுகம். 67:4).

[நொந்து→ நொந்தார்.]

நொந்தாவிளக்கு *nondā-viḷakku,* பெ. (n) *நுந்தா விளக்கு* (தெ.க.தொ.1,114) பார்க்க; see *nundā-viḷakku.*

[நொந்து + ஆ + விளக்கு. ஆ – எ.ம. இடைநிலை. நுந்து → நொந்து → நொந்துதல் = தூண்டுதல்]

நொந்திரா *nondirā,* பெ. (n.) கச்சந்திராய்; Indian Chickenced - Mollugo parviflora. (சா.அக.).

நொந்தீவார் *nondīvār,* பெ. (n.) வெறுப்பார்; disliker. "நோதக்காயென நின்னை நொந்தீவாரில் வழி" (கலித். 73).

[நொந்து → நொந்தீவார்]

நொந்து¹–தல் *nondu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. அழிதல்; to perish. *"நூறு கோடி பிரமர் கணொந்தினார்"* (தேவா. 1218, 3). 2. பதனழிதல்; to become spoilt. 3. வருந்துதல்; to suffer; to afflict. 4. வறுமை; penury.

க. நொந்து.

[நொது → நொந்து → நொந்து–தல். நொதுத்தல் = அழிதல்]

நொந்த கண் இருக்க நோகாக் கண்ணுக்கு மருந்து (பழ.). நொந்து அறியாதவர் செந்தமிழ் கற்றோர். (பழ.)

நொந்து²–தல் *nondu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தூண்டுதல்; to trim. "நொந்தாத செந்தீ" (பதினோ. காரை. திருவிரட். 13).

[நுந்துதல் = தூண்டுதல். உந்து → நுந்து → நொந்து → நொந்து–தல்]

நொந்துகொள்(ளு)–தல் *nondu-kol(lu)-,* 16 செ.கு.வி. (v.i.) 1. வருத்தப்படுதல்; regret one self. *"தண்புனற் பூசலல்லது நொந்து"* (புறநா. 42:7). *தெரியாமல் உன்னை நம்பினேனே! என்று நொந்து கொண்டான்.* 2. குறைபட்டுக் கொள்ளுதல்; curse one self. *என்னபடித்து என்ன பயன் வேலை கிடைக்கவில்லையே என்று நொந்து கொண்டான்.* 3. குறை கூறுதல்; charge, blame. *நீ சரியாகப் படிக்காததற்கு ஆசிரியரை ஏன் நொந்து கொள்கிறாய்.*

[நொந்து + கொள்(ளு)–தல்]

நொந்துபோ¹–தல் *nondu-pō-,* 8 செ.கு.வி. (v.i.) 1. நிலை கெடுதல் (வின்.); to be impoverished to be reduced in circumstances. 2. பதனழிதல்; to become spoild. *'காற்றில்லாமல் நொந்து போன பழவகைகளை'* (மதி.களா. 2, 49)

[நோ → நொந்து + போ–தல்]

நொப்பம் *noppam,* பெ. (n.) திறமை (சாமர்த்தியம்); skill, ability. *"அந்நொப்ப மேகொல் பிறிதே கொல்"* (கம்பரா. நாகபா. 253)

[நொய்ப்பம் → நொப்பம்]

நொப்பு¹–தல் *noppu-,* 5 செ.குன்றாவி. (v.t) தடுத்தல் (M.M); to hinder.

நொப்பு² *noppu,* பெ. (n.) 1. தடைசெய்கை (வின்.); hindering, preventing, frustrating. 2. குட்டி, பால் குடியாதவாறு ஆட்டின் முலைக்காம்பில் சுற்றும் ஓலை அல்லது துணி. (வின்.); strip of ola or cloth wound round the dugs of a goat to prevent the kids from sucking. 3. வெள்ளப் பெருக்கில் வரும் செத்தை அழுக்கு முதலியன; debris of a flood.

நொப்புநுரை *noppu-nurai,* பெ. (n.) காய்ச்சும் பொழுது ஏற்படும் நுரை; the impurities arising on the top surface when boiling a solution. (சா.அக.).

[நொப்பு + நுரை]
காய்ச்சும் ஏனம் நிரம்பி வழியும் போது வரும் நுரை.

நொம்பலம் *nombalam,* பெ. (n.) துன்பம் (இ.வ.); distress. *உன்னோடு பெரிய நொம்பலமாப் போச்சு* (பே.வ.)

ம. நொம்பலம்

[நொ → நொம்பு → நொம்பலம்]

நொம்பு—தல் *nombu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *நோம்பு* - பார்க்க; see *nōmbu-.*

[நோம்பு → நொம்பு → நொம்பு—தல்.]

நொய் *noy,* பெ. (n.) 1. குறுநொய் (திவா.); grits, groats. 2. இலேசு (சூடா.); brittleness, fragility, delicateness. 3. மென்மை (வின்.); softness, lightness. 4. நுன்மை (வின்.); smallness, minuteness. *அரிசி நொய்மையாகிவிட்டது* 5. பன்னீர்; rose water. 6. தவிடு; bran.

[நுல் → நுள் → நொள் → நொய் = நொறுங்கிய கூலம். நுல் = நுண்மை, மென்மை, சிறுமை, நொய்ம்மை]

நொய்தல் *noydal,* பெ. (n.) நுண்மை (சது.); minuteness, fineness.

[நொய் + தல் – நொய்தல். தல் ஈற்றுத் தொழிற்பெயர்]

நொய்தாக்கல் *noy-tākkal,* பெ. (n.) நுண்மையாக்குதல்; reducing to fine particles making subtle; subtilising.

[நொய் → நொய்து + ஆக்கல்]

நொய்து *noydu,* பெ. (n.) 1. கனமில்லாது இலேசானது; that which is light. *"விண்ணினொய்தாய்"* (ஞானவா. வீதக. 76). *"நொய்தாந் திரணத்தின் நொய்தாகும் வெண்பஞ்சின்"* (நீதிவெண்பா. 8). 2. மெல்லியது; that which is soft. *துணி மிகவும் நொய்து.* 3. இழிவானது; that which is poor, mean. *"நொய்தி னொய்ய சொல்"* (கம்பரா. பாயி. 5). 4. விரைவு; quickness. *தலைவர் உரை மிகவும் நொய்தாயிருந்தது. "ஆயிழை நொய்தி னுரைபொரு ளுண்டெனின்"* (சீவக. 1767). *"கொடியவே தாளமெல்லா நொய் தினிற் செற்றான்"* (சேதுபு. வேதாள.98)

[நொய் → நொய்து]

நொய்துகம் *noydugam,* பெ. (n.) நரிவழுக்கைச் செடி; diabetis plant, Graliola monieri. (சா.அக.).

நொய்தெனல் *noydenal,* பெ. (n.) விரைவுக்குறிப்பு (திவா.); expr. signifying quickness, briskness, nimbleness. *பறவை நொய்தெனப் பறந்தது.*

[நொய் → நொய்து + எனல் – நொய்தெனல். கனமற்றவை விரைவாகச் செல்லும்]

நொய்ப்பம் *noyppam,* பெ. (n.) 1. திறமை; skill, ability. *"மரக்கலம் அலையாதபடி கடைந்த நொய்ப்பம்"* (திவ். திருப்பா. 30, வியா. 254). 2. இலேசு (வின்.); delicateness, tenderness. *இந்த வேட்டி மிகவும் நொய்ப்பமாக இருக்கு.*

[நுள் (மென்மை, கூர்மை) → நொள் → நொய் → நொய்ப்பு → நொய்ப்பம்]

நொய்ப்புக்கொட்டு—தல் *noyppu-k-kottu-,* 5 செ.கு.வி. (v.i.) ஆட்டு முலையினின்று பால் சுரந்து வடியும் படி விரலால் அழுத்துதல் (வின்.); to thump the udder of a goat while milking to make the milk flow.

[நொப்பு → நொய்ப்பு + கொட்டு—தல்]

நொய்ம்மீன் *noy-m-mīn,* பெ. (n.) மணல் நிறமுள்ள ஆற்றுமீன் வகை (பிங்.); fresh-water fish, sandy in colour, Lepidocepha -lichthys thermalis.

[நுல் = மென்மை. நுல் → நுள் → நொய் + மீன் – நொய்ம்மீன் = மென்மையான, பளபளப்புடன் கூடிய சிறிய மீன்]

நொய்ம்மை *noymmai,* பெ. (n.) **1.** தளர்ச்சி (யாழ்.அக.); looseness. **2.** உறுதியின்மை; flimsiness, weakness, futility, as of arguments. **3.** கனமின்மை; lightness. *"மெய்ம்மை சீர்மை நொய்ம்மை வடிவம்"* (மணிமே. 27:254). *நீரில் நீந்தும் போது உடல் நொய்ம்மையாக இருக்கும்.* **4.** மென்மை; softness, slenderness. *சிறு குழந்தையின் கை நொய்ம்மையாக இருக்கும்.* **5.** மனத்திடமின்மை; weakness of mind, pusillanimity, effeminacy, cowardice. **6.** மனவுருக்கம் (வின்.); tender-heartedness, sensibility, delicacy of feeling, quick perception of an injury or affront. **7.** வறுமை (யாழ்.அக.); poverty, indigence. **8.** நுண்மை, சிறுமை; minuteness, thinness, smallness. **9.** இழிவு (நாலடி, 41); triviality, insignificance. meanness. **10.** நேர்த்தி; niceness, fineness in workman-ship. **11.** குற்றம் (வின்.); injuriousness, offensiveness, as of language.

[நுல் = நெகிழ்ச்சி, சிறுமை, மென்மை. நுல் → நுள் → நொள் → நொய்.

ஒ.நோ: தொள் → தொய்.

நொய் → நொய்மை (வேக.)]

நொய்ய[1] *noyya,* பெ. எ. (adj.) **1.** மென்மையான; soft, tender. *"அனிச்சப் போதி னதிகமு நொய்ய"* (கம்பரா. கோலங். 14). **2.** வலியற்ற; weak. *நொய்ய புத்தி. நொய்ய உடம்பு.* **3.** சிறுமையான; small, mean, poor. *"நொய்தி னொய்ய சொல்"* (கம்பரா. பாயி. 5). **4.** வசையான (வின்); lampoon. *நொய்ய சொற் பெறாதவன்* **5.** நுட்பமான; minute. *"பல்கல நொய்ய மெய்யணிந்து"* (சீவக. 991).

[நொய் → நொய்ய = சிறிய, அற்ப. சின்ன என்பதை நொய்ய என்பது குடந்தை வழக்கு.]

நொய்ய[2] *noyya,* வி.எ. (adv.) கடுமையாக; severely. *அவனை நொய்யப் புடைத்தான்'*

[நை[2] → நைய → நொய்ய]

நொய்யசொல் *noyya-šol,* பெ. (n.) வசைச்சொல்; reproach, contumely. *'நொய்ய சொற் பொறாதவன்'* (வின்.)

[நொய் → நொய்ய[1] + சொல். நொய்ய = இழிவான வசையான]

நொய்யது *noy-y-adu,* பெ. (n.) சிறியது; small. "நோக்கார் கொல் நொய்யதோர் புக்கிலை" (நாலடி,41:2)

[நொய் → நொய்து → நொய்யது = இலேசானது, மென்மையானது, சிறியது, இழிவானது.]

நொய்யம்மை *noy-y-ammai,* பெ. (n.) அம்மை வகை; measles.

[நொய் + அம்மை]

பெரியம்மை அணுக்கள் இந்தியாவில் ஒழிக்கப்பட்டன. சின்னம்மை வகைகள் உள்ளவற்றுள் ஒன்று இஃது ஆகலாம்.

நொய்யரிசி *noy-y-ariši,* பெ. (n.) குறு நொய்; grits. groats. *நொய்யரிசி கொதி தாங்காது (பழ.). நொய்யரிசி கொதி பொறுக்குமா (பழ.)*

[நொய் + அரிசி]

நொய்யலாறு *noyyal-āṟu,* பெ. (n.) கொங்கு நாட்டில் (கோவை பகுதி) உள்ள வெள்ளி

மலையில் தோன்றி காவிரியில் கலக்கும் ஒரு சிற்றாறு; a river in Kovai district.

[நொய்யல் + ஆறு]

நொய்யவன் *noyyavan,* பெ. (n.) 1. வறியவன்; the pauper. 2. எளியவன்; humble man. 3. வலுவிழந்தவன்; weak person. 4. புல்லன்; ignorant person. *"நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவர்"* (கொன்றை. 57)

[நுள் (எளிமை, சிறுமை) → நொள் → நொய் → நொய்யவன் (மு.தா.)]

நொய்யார் *noy-y-ār,* பெ. (n.) விலைமகளிர்; prostitute, solewomen. *"நொய்யார் நுவலும் பழி நிற்பத் தம்மொடு"* (கலித்.25:16). *"குலந்தனில் நொய்யார் சைவ தீக்கை கொண்டிடினும்"* (அருணகிரி. பு. வலம்புரி.72).

[நொய் + ஆர். நொய்யது = இழிவு, சிறியது. ஆர் = பன்மை விகுதி]

நொய்யெனல் *noy-y-enal,* பெ. (n.) நுண்மைக் குறிப்பு; expr. signifying lightness, thinness, slenderness, insignificance.

[நொய் + எனல்]

நொய்வு *noyvu,* பெ. (n.) 1. நொய்ம்மை (திவா.) பார்க்க; *see noymmai. "சிறியரென்றிகழ்ந்து நொய்வு செய்வன செய்யல்"* (கம்ப.கிட்கிந். அரசிய.32). 2. மனவருத்தம்; distress of mind. *"நொந்தவர் நொய்வு தீர்க்க"* (கம்பரா. வேலேற்ற. 42).

[நுள் (நோதல்) → நொள் → நொய் → நொய்வு. (மு.தா.)]

நொரநாட்டியம் *noranāṭṭiyam,* பெ. (n.) நொறு நாட்டியம் (நெல்லை); fastidiousness.

[நொறுநாட்டியம் → நொரநாட்டியம்]

சிறு குழந்தைகள் ஒரு பொருளுக்காக அடம்பிடித்தலை நொண நாட்டியம் என்பர். நொறுக்குத்தீனி என்பதுபோல் சிறிதுசிறிதாக அழுது அடம்பிடித்தல் பற்றி நொறுநாட்டியம் நொணநாட்டியம் என்று வழங்கலாம்.

நொரு *noru,* பெ. (n.) 1. முதிர்ந்த பயிரின் அடியில் அல்லது கணுவில் தோன்றும் இளங்கதிர்; after-shoot from the roots of rice, millet, etc., after the main stalk has come to maturity. 2. காய்ப்பு மாறினபின் அரும்பும் பிஞ்சு; small after-fruits, as of pumpkin plants. 3. சிறு பிஞ்சு; small fruit.

[நுரு → நொரு. நுரு = இளம்பிஞ்சு, அறுத்த தாளில் விடும் தளிர்]

நொருக்காய் *noru-k-kāy,* பெ. (n.) காய்ப்பு மாறின பின் அரும்பும் பிஞ்சு (யாழ்ப்.); small after - fruits, as of pumpkin plants.

மறுவ. குருக்காய்.

[நொரு + காய். நொரு = சிறுபிஞ்சு. நொருக்காய், நொருப்பிஞ்சு என்பன யாழ்ப்பாண வழக்கு]

நொருக்கு-தல் *norukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) நொறுக்கு - பார்க்க; *see noṟukku-.*

[நொருங்கு → நொருக்கு]

நொருகை *norukai,* பெ. (n.) நொறுவை (வின்.) பார்க்க; *see noṟuvai.*

[நொறுவை → நொருகை. று → ரு - திரிபு]

நொருங்கவிடி—த்தல் *norunga-v-iḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) பொடியாக்குதல்; pounding so as to become powder or small particles. (சா.அக.).

[நொருங்கு → நொருங்க + இடி —த்தல்]

நொருங்கு—தல் *norungu-,* 5 செ.கு.வி. (v.i.) நொறுங்கு—தல் பார்க்க; see *noṟungu-.*

நொருச்சி *norucci,* பெ. (n.) காட்டுத் துளசி; wild basil, Ocimum adscendens. (சா.அக.).

நொருநொரு—த்தல் *noru-noru-,* 4 செ.கு.வி. (v.i.) *நொறுநொறு* — பார்க்க; *see noṟunoṟu.*

நொருநொரெனல் *noru-noreṉal,* பெ. (n.) *நொறுநொறெனல்* — பார்க்க; *see noṟu-noṟeṉal.*

[நொருநொரு + எனல்]

நொருப்பிஞ்சு *noru-p-piñju,* பெ. (n,) *நொரு,* 2 (யாழ்ப்.) பார்க்க; see *noru,* 2.

[நொரு + பிஞ்சு. நொரு = சிறுபிஞ்சு. நொருக்காய், நொருப்பிஞ்சு என்பன யாழ்ப்பாண வழக்கு]

நொருப்பிடி—த்தல் *noru-p-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) காய்ப்பு மாறின பின் மீண்டும் பிஞ்சு வைத்தல் (யாழ்ப்.); to form an after-shoot.

[நொரு = பிஞ்சு. நொரு + பிடி —த்தல்]

நொருவல் *noruval,* பெ. (n.) *நொறுவல்* பார்க்க; *see noṟuval.*

[நொறுவல் → நொருவல். று → ரு — திரிபு]

நொலை *nolai,* பெ. (n.) *நொலையல்* (பிங்.) பார்க்க; *see nolaiyal.*

[நுல் (துளை) → நொல் → நொலை = உட்டுளையுள்ள அப்ப வகை. (வே.க.)]

நொலையல் *nolaiyal,* பெ. (n.) பூரிகையென்னும் அப்பவகை. (பிங்.); a kind of unleavened cake.

[நுல் (துளை) → நொல் → நொலை → நொலையல் (வே.க.)]

நொவ்வல் *novval,* பெ. (n.) 1. துன்பம், வருத்தம்; mental anguish, sadness. *"மையற் பொண்டிர்க்கு நொவ்வலாக வாடிய பின்னும்"* (அகநா. 96). 2. நோவு; pain.

[நொவ்வு² → நொவ்வல். நொவ்வு = வருத்தம்]

நொவ்வி *novvi,* பெ. (n.) 1. தளர்வு; droop. 2. நொய்மை; meanness. 3. நோய்; disease. 4. துன்பம்; distress.

[நோ → நொ → நொவ்வி]

நொவ்விதாக *novvitāga,* வி.எ. (adv.) விரைவாக; rapidly, quickly. *"தேர் நொவ்விதாகச் சென்றீக"* (ஐந். ஐம். 10)

[நொவ்வு² → நொவ்விதாக நொவ்வு = விரைவு. நொவ்விது + அக]

நொவ்வியார் *novviyār,* பெ. (n.) கீழ் மக்கள்; dishonest person, rogue. *"நோக்குமின் என்றிகழ்ந்து நொவ்வியார் கைவிடுதல்"* (பழமொழி, 208:2).

[நொவ்வு → நொவ்வியார். நொவ்வு = மெலிதல், நோதல், இழிவாதல்]

நொவ்வு¹—தல் *novvu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மெலிதல்; to become thin, slender,

emaciated. *“நொவ்விடை மடந்தை”* (கம்பரா. காட்சி. 54). 2. நோதல் (யாழ்ப்.); to ache, pain. 3. துன்புறுதல்; to afflict, to pester. 4. வருந்துதல்; to suffer.

[நொ → நொவ்வு → நொவ்வு – தல்.]

நொவ்வு² *novvu,* பெ. (n.) 1. மெலிவு; thinness. 2. உடையுந் தன்மை; brittleness. 3. வாட்டம்; emaciation, drooping, fading. 4. வருத்தம் (வின்.); pain, ailment. 5. விரைவு; rapidly, quickness. *நொவ்வுப் பறைவாவல்.* 6. நோவு; disease.

[நொ → நொய்வு → நொவ்வு]

நொவ்வெனல் *nov-v-enal,* பெ. (n.) விரைவுக் குறிப்பு; expr. signifying haste or quickness.

[நொவ்வு + எனல் - நொவ்வெனல். நொவ்வு = விரைவு]

நொழுந்து–தல் *nolundu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நுழைத்தல்; to insert, thrust. *தலையை நொழுந்தி. (ஈடு, 1:3 பிர.)*

[நுல் → நுள் → நொள் → நொழு → நொழுந்து → நொழுந்து–தல்.]

நொள்¹(ளு)–தல் *nol-,* 10 செ.குன்றாவி. (v.t.) மொள்ளுதல், முகத்தல்; to bale out, as water, to measure out, as grain. “குடங்கையில் னொண்டு கொள்ளவுங் கூடும்”. (சிலப். 10: 85)

தெ. நொல்லு (to level, collect); பர். ஒல்க்(olc); கூய். நெல்ப; குரு. நொல்ல்நா (nollnā); மா. லொலெ.

[நுல் (துளை) → நொள் → நொள்(ளு)–தல் (வே.க.). மொள்ளுதல் நீர்ப்பொருளையும், முகத்தல் கூலம் போன்ற பொருளையும் குறிக்கும். மொள்ளுதல், முகத்தல், விழுங்குதல் அனைத்தும் துளைத்தலினின்றே விரியும். முள் → மொள் → நொள் = விழுங்குதல், (சு.வி. 45)]

நொள்²(ளு)–தல் *nol-,* 10 செ.குன்றாவி. (v.t.) விழுங்குதல்; (திவா); to swallow,, devour.

ம. நுண; க.நொண; தெ.நொல்லு; குரு. நுல்க்நா.

[நொள்¹ – → நொள்² –]

நொள்³ *nol,* பெ. (n.) துளைபோன்ற வாய்; mouth.

[முள் → மொள் → நொள். ஒ.நோ. நோரு. (தெ.) = வாய். (சு.வி. 45)]

நொள்கு¹–தல் *nolku-,* 5 செ. குன்றாவி. (v.t.) *நொள்,* 1 (யாழ்.அக.) பார்க்க; see *nol-*.1.

[நொள்¹ → நொள்கு → நொள்கு–தல்]

நொள்கு²–தல் *nolku-,* 5 செ. கு.வி. (v.i.) 1. சுருங்குதல்; to contract, as thread. *‘நூல் நொள்கிற்று’* (நன். 454, மயிலை.). 2. இளைத்தல் (யாழ்.அக.); to languish, become tired.

[நுல் (நெகிழ்வு) → நுள் → நொள் → நொள்கு → நொள்கு–தல்]

நொள்கெனல் *nolkenal,* பெ. (n.) அச்சக்குறிப்பு (வின்.); expr. signifying terror.

[நொள்கு + எனல்]

நொள்ளல்[1] *nollal,* பெ. (n.) **1.** பார்வையற்றுக் கண்குழிந்த நிலை (வின்.); the state of being blind and sunken-eyed. **2.** குழிவு; hallowness.

[நுல் (துளை) → நுள் → நொள்→ நொள்ளல் (வே. க.).]

நொள்ளல்[2] *nollal,* பெ. (n.) நுளம்பு (திவா.); gnat.

[நுல் → நுள் →நுள்ளல்→ நொள்ளல்= சிறியஉலங்கு (நுளம்பு). நுல்=சிறுமை, கூர்மை.(வே. க.)]

நொள்ளாப்பு *nollāppu,* பெ. (n.) வருத்தம் (நெல்லை); pain, grievance.

[நுல் (நோதல்) → நுள் → நொள் → நொள்ளாப்பு. (வே. க.)]

நொள்ளை[1] *nollai,* பெ. (n.) **1.** குருடு; blindness. *"நொள்ளை நாகில்"* (திருவிளை. பரிநரி.14). **2.** நாகரவண்டு (சூடா.); green beetle. **3.** விலங்குவகை; a beast. *"உள்ளூன் வாடிய சுரிமூக்கு நொள்ளை"* (அகநா. 53:2)

க. நொள்ளை.

[நுல் (துளை) → நுள் → நொள் → நொள்ளை = கண் குழிந்த குருடு (வே. க.).]

நொள்ளை[2] *nollai,* பெ. (n.) கைக்குழந்தை (நெல்லை); infant, baby.

[நுல் = சிறுமை. நுல் → நுள் → நொள் → நொள்ளை (வே. க.)]

நொள்ளைக்கண் *nollai-k-kaṇ,* பெ. (n.) பார்வை மாறிய கண்; blind eyes.

[நொள்ளை + கண்]

நொள்ளைப்பயல் *nollai-p-payal,* பெ. (n.) இழிந்தவன், எளியன்; insignificant person. *நொள்ளைப் பயலுக்கு நோப்பாளமேன்"* (ஆதியூரவதானி)

[நொள்ளை + பயல்]

நொள்ளைமடையன் *nollai-maḍaiyaṇ,* பெ. (n.) பார்வையற்ற கொக்குவகை (M.M.); blind heron.

மறுவ. நொள்ளை மடையான்.

[நொள்ளை + மடையன். மடையன் = பறவைவகை, கொக்குவகை]

நொளநொள–த்தல் *noḷa-noḷa-,*4 செ.கு.வி. (v.i.) **1.** குழைதல்; to become soft from over-ripeness; to be mashy. **2.** வழுவழுப்பாதல்; to be sleek and smooth, as a snake or a leech.

[நுல் (நெகிழ்ச்சி) → நுள் → நொள் → நொள → நொளநொளு–த்தல்.]

துளைக்கப்பட்ட பொருள்கள் உளுத்த மரம் போற்கட்டு விட்டுப் போவதனாலும், கையினாலும் கோலினாலும் எளிதாய்த் துளைக்கப்படும் அல்லது ஊடுருவப்படும் பொருள்களெல்லாம், நீருங் கூழும் போல் நெகிழ்ச்சிப் பொருள்களாகவே யிருப்பதனாலும், துளைத்தற் கருத்தினின்று நெகிழ்ச்சி அல்லது தளர்ச்சிக் கருத்துத் தோன்றும். (வே.க. நுல்[5]).

நொளம்பர் *noḷambar,* பெ. (n.) பல்லவமன்னர் வகையினர் (I.M.P.ct. 167); a division of Pallavas.

நொளம்பபாடி *noḷamba-pāḍi,* பெ. (n.) நொளம்பவாடி பார்க்க; see *noḷamba-vāḍi.*

நொளம்பவாடி *noḷamba-vāḍi,* பெ. (n.) நொளம்பர் ஆண்ட நாடு (கல்.); the country ruled by Noḷamber.

மறுவ. நுளம்பபாடி (மெய்க்கீர்த்தி)

[நொளம்பர் + வாடி. வாடி = நாடு, பகுதி.]

நொளில் *nol̤il,* அருவருக்கத்தக்க சேறு (பிங்.); mire in a repulsive condition.

[நுல் (நெகிழ்ச்சி) → நுள் → நொள் → நொளில்.
ஒ.நோ. தொள் → தொள்ளி = சேறு.
தொள்ளி → தொளி = சேறு. (வே.க.)]

நொளுக்கல் *nol̤ukkal,* பெ. (n.) 1. முற்றாத நிலை; immature condition, as of areca-nuts. 2. இளம்பாக்கு; tender, immature areca-nuts. *குடந்தை வெற்றிலைக்குக் கூட்டுச்சேரும் பாக்கு நொளுக்கலாக இருக்கலாமா?*

[நொள்கு² → நொளுக்கல்]

நொளுநொளெனல் *nol̤u-nol̤enal-,* பெ. (n.) குழைதற் குறிப்பு; onom. expr. signifying mashy state.

[நொளு + நொளு + எனல்]

நொளுப்பு *nol̤uppu,* பெ. (n.) வேலையில் குழப்புகை (வின்.); shirking work; shinking from duty.

[நுல்(நெகிழ்ச்சி) → நுள் → நொள் → நொளு → நொளுப்பு.(வே.க.)]

நொளுவல் *nol̤uval,* பெ. (n.) *நொளுக்கல்* (யாழ்ப்.) பார்க்க; see *nol̤ukkal.*

[நுல் = இளமை, மென்மை, சிறுமை. நுல் → நுள் → நுளு → நொளு → நொளுவல் (வே.க.)]

நொளைதாளி *nol̤aitāl̤i,* பெ. (n.) பெரிய மரவகை; heart stipuled larger Chinese laurel, Antidesma bunius.

ம. நுலிதாலி

நொற்பம்¹ *nol̤u-nol̤u-,* 4 செ.கு.வி. (v.i.) *நொளநொள* பார்க்க; see *nol̤a-nol̤a-.*

[நுல்(நெகிழ்ச்சி) → நுள் → நொள் → நொளு → நொளுநொளு–த்தல் = நெகிழ்தல், குழைதல்]

நொற்பம்² *nor̤pam,* பெ. (n.) 1. நுட்பம்; minuteness. "நொற்பமான வேலை" (வின்.). 2. எளிமை; insignificance. "*நொற்பவுலகத்தவர் நோய் தீர்த்து*" (பஞ்ச.திருமுக.611).

[நுல் = நுண்மை, எளிமை. நுல் → நொல் → நொற்பு → நொற்பம் (வே.க.)]

நொற்பன் *nor̤pan,* பெ. (n.) 1. சிறியன்; mean person. 2. எளியன்; humble person.

[நொற்பம் → நொற்பன்,
நொற்பம் = எளிமை, நுட்பம்]

நொறிதல் *nor̤idal,* பெ. (n.) விரைவு; quickness.

[நொறில் → நொறிதல்]

நொறில் *nor̤il,* பெ. (n.) 1. விரைவு (சூடா.); quickness, speed. "*நொறில்பரிர் தேர்*" (நைடத.போர்புரி.3). 2. நுடக்கம்; suppleness, pliability. "*நொறிலியற் புரவி யதியர் கோமான்*" (தொல்.சொல். 396,உரை). 3. ஒடுக்கம் (பிங்.); shutting, closing, contracting. 4. *நொளில்* பார்க்க; see *nol̤il.* "*செருநில நொறிற் செந்நீரினுள்*" (சூளா.அரசி.274).

நொறுக்கரிசி *nor̤ukkariśi,* பெ. (n.) 1. உரலிட்டு நெல்லைக்குத்தும்போது நொறுங்கிய அரிசி; rice broken in pounding. 2. அரைவேக்காட்டுச் சோறு (வின்.); half boiled rice.

மறுவ. நொய்யரிசி.

[நொறுங்கு → நொறுக்கு + அரிசி.]

நொறுக்கல்நெல் *noṟukkal-nel,* பெ. (n.) அறுப்புக் காலத்து மழையாற் பதர்த்த நெல்; paddy wet and softened by rain during harvest.

[நொறுங்கு → நொறுக்கு → நொறுக்கல் + நெல்.]

நொறுக்கித்தள்ளு–தல் *neṟukki-t-taḷḷu-,* 5.செ.குன்றாவி. (v.t.) **1.** நன்றாயடித்தல்; to beat soundly. **2.** மிகத்திட்டுதல்; to abuse roundly. **3.** நற்றிறங்காட்டுதல்; to exhibit great ability, as in eloquence or music. **4.** செய்வ தருமை என்ற செயலைச் சிறப்பாகச் செய்தல்; to well with apparent case smash. *பேச்சுப் போட்டியில் கலந்துக்கொள்ளப் பயப்பட்டாயே. இப்போது எப்படி ! நொறுக்கித் தள்ளிவிட்டாய்.*

[நொறுக்கு + தள்ளு – தல்]

நொறுக்கு[1]–தல் *noṟukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** சிறுசிறுபகுதிகள் ஆகுமாறு உடைத்தல்; பொடியாக்குதல்; to break, crack, crush, smash to pieces. *செங்கல்லை நொறுக்கிக் கொடு.* **2.** அரத்தக்காயம் பண்ணுதல்; to bruise. **3.** நையப்புடைத்தல்; to beat soundly. "*வீரரை நொறுக்கி*" (திருப்பு.574.). *சண்டையில் எதிரியை நொறுக்கிவிட்டான்.* **4.** மிகுதியாய் உண்ணுதல்; to eat in large quantities. *பந்தியில் ஒரு நொறுக்கு நொறுக்கிவிட்டான்* (உ.வ.)

க. நுர்கு (g).

[நொறுங்கு → நொறுக்கு → நொறுக்கு – தல். இது பிறவினை வடிவம்]

நொறுக்கு[2] *noṟukku,* பெ. (n.) **1.** பொடியாக்குகை; crushing. **2.** நன்றாயடிக்கை; beating soundly, thrashing. *சண்டையில் எதிரியை நொறுக்கு நொறுக்கு என்று நொறுக்கி விட்டான்.*

க. நுர்கு

[நொறுங்கு → நொறுக்கு.]

நொறுக்குச்சக்கந்தம் *noṟukku-c-cakkandam,* பெ. (n.) கேலிப்பேச்சு; ஏளனம்; mockery, jeering.

[நொறுக்கு + சக்கந்தம். சக்கந்தம் = பகடி,கேலி.]

நொறுக்குத்தீனி *noṟukku-t-tīṉi,* பெ. (n.) உணவாக அல்லாமல் அவ்வப்போது தின்னும் முறுக்கு, சீடை,கடலை போன்ற தின்பண்டம்; small eats.

[நொறுக்கு + தீனி.]

நொறுக்குவெள்ளி *noṟukku-veḷḷi,* பெ. (n.) தங்கத்தோடு சேர்த்து உருக்கி மட்டப் பொன்னாகச் செய்விக்கும் ஒருவகை (இரசாயன) வெள்ளி; a chemical silver used for mixing with gold so as to get an inferior gold. (சா.அக.).

[நொறுக்கு + வெள்ளி.]

நொறுகை *noṟukai,* பெ. (n.) **நொறுவை** (இ.வ.). பார்க்க; see *noṟuvai*

[நொறுவை → நொறுகை.]

நொறுங்கு[1]–தல் *noṟuṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** உடைந்து சிறுசிறு பகுதியாதல்; பொடியாதல்; to be broken, crushed, smashed to pieces. *கற்கள் பட்டதினால் கண்ணாடிகள் நொறுங்கின. நொறுங்கத் தின்றார்க்கு நூறு வயது (பழ.). மனம்*

நொறுங்குண்டது. மனம் நொறுங்குதல் போல் வருந்துதல். (உ.வ.) 2. பின்னிரங்குதல்; to be broken down in spirit, to become contrite. *நொறுங்குண்ட மனம்* (வின்.).

[நுல் →நுள்→ நுறு →நொறு → நொறுங்கு → நொறுங்கு–தல். இது தன்வினை வடிவம்.]

நொறுங்கு[2] *noṟuṅgu,* பெ. (n.) 1. நொய் (சூடா.); broken grain, grits. 2. தூள்; powder. *"நொறுங்காய்க் கூடியிட்டன கொடுமுடித் துறுகற்கள்"* (சூளா.சீய. 145). 3. நுண்மை (வின்.); minuteness smallness.

[நுல் → நுள் → நுறு → நொறு → நொறுங்கு. நுல் = நுண்மை, சிறுமை.]

நொறுங்குண்டமனம் *noṟuṅ-guṇḍa-maṉam,* பெ. (n.) பின்னிரங்கும் மனம் (கிறித்.); contrite spirit, wounded mind.

[நொறுங்கு + உண்ட + மனம்.]

உண்ட என்பது இங்கு உள்வாங்குதல் என்னும் பொருளில் வந்தது. ஔவையார் மன்னன் வீட்டு மணவிழாவிற்குச் சென்ற போது *"நெருக்குண்டேன்; அடியுண்டேன்; பிடியுண்டேன்; கோலுண்டிலேன்"* என்று கூறியது காண்க.

நொறுநாட்டியம் *noṟu-nāṭṭiyam,* பெ. (n.) 1. பொருட்படுத்தத்தகாத மிகச் சிறு குற்றங்களைக் கூறுந்தன்மை (இ.வ.); meticulosity, over-scrupulousness. 2. விறலுஞ் சுவையுந் தோன்ற நடிக்கும் நுண்வினை நடனம்; a kind of dance. 3. துப்புரவு, சுவை, ஒழுக்கம் முதலியவற்றில் அளவிற்கு மிஞ்சிக் கவனஞ் செலுத்துகை; to take too much of purity flavor and behavier.

[நொறு + நாட்டியம். நடி→ நடம் → நட்டம். வ. நாட்ய (நாட்ய →நாட்டியம்).]

மிக நுட்பமான அவிநயங்களுடன் நடனஞ் செய்தல் நொறுநாட்டியம் எனப்படும். வேண்டாத நுண்ணிய வினைகளைச் செய்யும் ஒருவனை *'நொறுநாட்டியம் பிடித்தவன்'* என்பர் (சொ.ஆ.க–12). முதற்பொருளாய்ச்சிறுகுறையும் மூன்றாம் பொருளாய் மிகு சுவையும் தாழ்வாக்கி, இரண்டாம் பொருளாய நாட்டியத்திறம் 'நொறு'–நடனம், இசைபற்றிய சிறிய எல்லைவரை ஆடப்படுதலின் சிறப்புடைத் தாகிறது.

நொறுநொறு–த்தல் *noṟu-noṟu-,* 4 செ.கு.வி. (v.i.) உடையுந் தன்மையாதல் (வின்.); to be brittle, fragile, crisp, as biscuit.

[நொறு + நொறு – நொறுநொறு → நொறுநொறு –த்தல்]

நொறுவல் *noṟuval,* பெ. (n.) *நொறுவை* பார்க்க; *see noṟuvai.*

[நொறுவை → நொறுவல்]

நொறுநொறெனல் *noṟu-noṟeṉal,* பெ. (n.) நொறுங்குதற்குறிப்பு; onom. expr.signifying brittleness or crispness.

[நொறு + நொறு + எனல்.]

நொறுவை *noṟuvai,* பெ. (n.) பல்லால் நொறுக்கித் தின்னும் சிற்றுண்டி (வின்.); dainties, things of luxury.

[நுல்→ நுள் → நுறு → நொறு → நொறுவை. (வே.க.)]

நொறுவைக்கள்ளன் *noṟvai-k-kaḷḷaṉ,* பெ. (n.) வீண்செலவு செய்வோன் (வின்.); extravagant man.

[நொறுவை + கள்ளன்.]

மறைவாக, கள்ளத்தனமாக நொறுவை உணவுண்ணச் செலவிடுபவனைக் குறிக்கும்.

நொறுவைக்கள்ளி *noruvai-k-kalli,* பெ. (n.) வீண்செலவு செய்பவள் (வின்.); extravagant woman.

[நொறுவைக்கள்ளன் → நொறுவைக்கள்ளி.]

மறைவாக, கள்ளத்தனமாக நொறுவை உணவுண்ணச் செலவிடும் பெண்ணைக் குறிக்கும்.

நொறுவைப்பண்டம் *noruvai-p-pandam,* பெ. (n.) சிற்றுண்டி (வின்.); dainties.

[நொறுவை + பண்டம்]

நொன்றி *nonri,* பெ. (n.) மான் (சங்.அக.); deer.

[நொல் (→ நொள்) → நொன் + றி நொள் → நொளுந்துதல் = மறைதல் பொருளில் வருவது. புலிபோன்றவல் விலங்குகளை காணுங்கால் புதரில் மறையும் பண்பு பற்றியதாகலாம்.]

நொன்னை *nonnai,* பெ. (n.) **1.** நையாண்டி; mimicking, mocking. **2.** ஏளனம்; taunt, ridicule, sarcasm.

[நொல் + நை. சொல்லில் மறைந்து வரும் நகைச் சுவையைக் குறிக்கும்.]

அதியமானிடமிருந்து தொண்டைமானுக்குத் தூது சென்ற ஔவை நெய் தோய்ந்த புதியபோர்க் கருவிகளைப் பார்த்து, அதியமானிடம் இருப்பது குருதி தோய்ந்த கருவிகள் என்று கூறுவதாகும்.

நோ¹ *nō.* நகரமெய்யும் ஓகார உயிரும் சேர்ந்து பிறந்த உயிர்மெய் எழுத்து; the compound of 'n' and 'o'.

[ந் + ஓ – நோ. இஃது ஒரெழுத்து ஒரு சொல்லாகவும் (ஒருமொழியாகவும்) வரும்.]

நோ²–தல் *nō-,* 17 செ.கு.வி. (v.i.) **1.** நோவுண்டாதல்; to feel pain ache, suffer, smart. *கால் நொந்தது.* **2.** வருந்துதல்; to be grieved, distressed in mind; to feal. "ஊரன்மீ தீப்பறக்க நொந்தேனும் யானே" (நாலடி,389). "*நோதல் எவன்மற்று நொந்தார்என்று அஃது அறியும் காதலர் இல்லா வழி*" (குறள்,1308). **3.** துன்பத்தைச் சொல்லுதல்; to complain. "*நோவற்க நொந்த தறியார்க்கு*" (குறள்,877). **4.** சமைத்த வுண்டி பதனழிதல்; to be injured, bruished, as a plant, fruit; to be spoiled, as boiled rice. "*நொந்தன்னம்*" (பதார்த்த.1459). *சோறு நொந்துபோய் விட்டது.* (உ.வ.). **5.** வறுமைப்படுதல்; to be impoverished; to grow poor. *நொந்த குடி.* **6.** துன்பப்படுதல்; to suffer. **7.** மெலிதல்; to lean. **8.** நொய்ய தாகுதல்; to light. **9.** தளர்தல்; to loose.

ம.நோ(க); க.நோ; **தெ.**நொச்சு, நொகுலு; **கோத.** நொவு; **துட.** நு; **து.** நோபுனி; **கொலா.** ஒய் (wound); **நா(ச).** ஒய் (to be painfuful); **பர்.** நொவ்; **கட.** நொய் (to be painful); **கோண்.** நொய்யாநா; **கூ.** நோவ; **குவி.** நோகி; **குரு.** நுஞ்ச்நா; **மா.** நுந்சே.

[நுள் → நொள் → நொய் → நோய் → நோ → நோ–தல்(சு.வி.40). நுள் = சிறுமை, மென்மை,துன்பம்]

வறுமையும் நோய் போன்ற துன்பமாகக் கருதப்படுவதால், நோய் நொடி யென்றும், நோவு நொடி என்றும் இணைத்துச் சொல்வது மரபு.

நோ³–தல் *nō-,* **15** செ.குன்றாவி. (v.t.) வெறுத்தல்; to hate. ***"ஏதிலரை நோவதெவன்"*** **(நீதிநெறி.25).**

[நோய்¹ → நோ → நோ–தல்.]

நோ⁴ *nō,* பெ. (n.) **1.** வலி; aching, pain, smart. **2.** துன்பம்; distress, grief. *"திறன் அல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து அறன் அல்ல செய்யாமை நன்று"* (குறள்,157). **3.** நோய் (வின்.); illness. **4.** சிதைவு (வின்.); injury, bruise, as in the body, a tree, a fruit. **5.** நலிவு, வலிமைகுறைவு; weakness, infirmity.

[நோய்¹ → நோ.]

நோக்க *nōkka,* இடை. (part.) ஒர் உவம உருபு (தொல்.பொருள்.286, உரை); a particle denoting comparison. ***"அன்ன ஆங்க மான இறப்ப என்ன உறழத் தகைய நோக்கொடு கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்"*** **(தொல். பொருள். உவம.12).**

[நோக்கு → நோக்க.]

நோக்கட்டாமரம் *nōkkaṭṭā-maram,* பெ. (n.) இலகோட்டா (L.) மரவகை; loquat.

[நோக்கு + எட்டா + மரம்.
மிக உயர்ந்த மரம்.]

நோக்கப்பண்ணல் *nōkkappaṇṇal,* பெ. (n.) **1.** வலியுண்டாகச்செய்கை; causing pain. **2.** துன்பப்படுத்துகை; causing distress. **(சா.அக.).**

[நோவப்பண்ணல் → நோகப்பண்ணல்→ நோக்கப்பண்ணல் (உ.வ.)]

நோக்கப்பண்ணல் என்றே வழக்கில் இருப்பின் அது பார்ப்பித்தல் என்னும் பொருளும் தரும் குழப்பம் உளது.

நோக்கம்¹ *nōkkam,* பெ. (n.) **1.** கண்(திவா.); eye. **2.** பார்வை; eyesight, look, gaze, glance, view. ***"கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கம்"*** **(குறள்,1092).** ***"நோக்கத் தொதுங்கு (பழ.). நோக்க நோக்குவ நோக்காமுன் நோக்குவன்"*** **(பழ.). 3.** கோள் (கிரக) நோக்கு; aspects of a planet. **4.** தோற்றம்; appearance, expression, cast of countenance.

[நோக்கு → நோக்கம்.]

நோக்கம்² *nōkkam,* பெ. (n.) **1.** உயர்ச்சி (வின்.); height, elevation. **2.** அழகு; beauty, attractiveness. *"மருணோக்க மடிந்தாங்கே மயல்கூர் கிற்பான் மன்னோ"* **(கலித்.10).** ***"யாவர்க்கு நோக்கலாப் பெண்ணினோக்கு டையாள்"*** **(கம்பரா. கர.6). 3.** காவல் (யாழ்.அக.); watch. **4.** இலக்கு, கருத்து; design, object, intention, aim, motive. ***நீ அப்படிச் செய்வதற்கு நோக்கமென்ன? ஆதரவற்றவர்க்கு உதவுவதே எங்கள் நோக்கம்.*** **5.** அறிவு; sense, intelligence. *"மருளிகொண்ட மடநோக்கம்"* **(கலித்.14).** *"நுண்ணி தினுணர் தனுமைந்த நோக்கில்"* (மதுரைக்.517). **6.** கவனம்; attention, observation. ***படிப்பில் நோக்கமாயிரு.*** **7.** விருப்பம் (யாழ்.அக.); desire. **8.** குறிப்பு; indication, sign. ***வானம் மழை நோக்கமாயிருக்கிறது.***

ம. நோக்கம்

[நோக்கு → நோக்கம். = ஒருபொருளின் மேல் உள்ள நாட்டம்]

நோக்கர் *nōkkar,* பெ. (n.) **நோக்கன்** பார்க்க; see *nōkkaṉ.*

[நோக்கன் → நோக்கர்.]

நோக்கர்கள் *nōkkarkaḷ,* பெ. (n.) வருங்காலத்தில் நடக்கவிருப்பதை முன்னரே கூறக்கூடிய அளவுக்கு ஒரு துறையில்

நிகழ்வதை ஆழ்ந்து கவனிப்பவர்கள்; observers. *வரும் ஒலிம்பிக்கில் இந்தியா பல தங்கப்பதக்கங்களைப் பெறும் என்று விளையாட்டு நோக்கர்கள் கூறுகின்றனர். வரும் பொதுத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு வெற்றிவாய்ப்புக் குறைவு என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.*

[நோக்கு → நோக்கர் + கள்.]

நோக்கலங்காரம் *nokkalangāram,* பெ. (n.) தற்குறிப்பேற்றம் (வீரசோ.அலங்.25); a figure of speech.

[நோக்கு + அலங்காரம். நோக்கு = பார்வை. Skt. *அலம்கார →* த. *அலங்காரம் = அணிவகை..]*

நோக்கன் *nokkan,* பெ. (n.) **1.** இன (சாதி) வகை (E.T.v, **416**); a caste **2.** கழைக்கூத்தன் (வின்.); pole-dancer, mountebank.

நோக்கனோக்கம் *nōkkanōkkam,* பெ. (n.) மனத்தால் நோக்கும் நோக்கம்; discernment, as seeing through the mind's eye. "*நோக்க னோக்க மவ்விரண்டன் மருங்கி னேதுவு மாகும்*" (தொல்.சொல்.93).

[நோக்கு + அல் + நோக்கம். நோக்கு = பார்வை. கண்ணால் அன்றி மனத்தால் நோக்கும் பார்வை என்று பொருள்படும்.*]*

நோக்காச்சாவி *nōkkā-c-cāvi,* பெ. (n.) *நுகக்காற்சாவி* (நாஞ்.) பார்க்க; see *nugakkār-cāvi.*

நோக்காடு *nōkkādu,* பெ. (n.) **1.** நோவு, வலி; pain, pang, agony. **2.** அரச (இராச) நோக்காடு (வின்.); pangs of child-birth. **3.**நோய்; sickness, disease. *'கண்ணோக் காடாம்'* (பணவிடு.300). *கொள்ளையா நோக்காடா?* (உ.வ.). **4.** மனநோய் (வின்.); mental worry. **5.** வறுமை (யாழ்ப்.); reduced circumstances, poverty.

[நோ + காடு → நோக்காடு. கடு → காடு. கடுகுதல் = மிகுதல்.]

நோக்காமை *nōkkāmai,* எ.ம.வி. (n.v.) பார்க்காமை; பார்க்காத தன்மை; நோக்குதல் என்பதன் எதிர்மறைவினை. have not seen, have not look. "*குறிக்கொண்டு நோக் காமை அல்லாமல் ஒருகண் சிறக் கணித்தாள் போல நகும்*" (குறள்,1095).

[நோக்கு + ஆ + மை. 'ஆ'–எதிர்மறை. 'மை'–பண்பு ஈறு (விகுதி).]

நோக்கால் *nōkkāl,* பெ. (n.) நுகக்கால் (நெல்லை); yoke.

[நுகக்கால் → நோக்கால்]

நோக்காலுரை–த்தல் *nōkkāl-urai-,* 4 செ.கு.வி. (v.i.) பார்வையால் உணர்த்துதல்; to communicate by mere look, as a guru. "*குறுமுனிக்குத் தமிழ் நோக்கா லுரைத்த வாறும்*" (திருவாலவா. பதிகம்.3).

[நோக்கு → நோக்கால் + உரை–த்தல்.]

நோக்கி *nōkki,* வி.எ. (adv.) **1.** குறிப்பிட்ட ஒன்றை அல்லது ஒருவரை இலக்காகக் கொண்டு; towards; in the direction of. *ஏவுகணை விண்ணை நோக்கிப் பாய்ந்தது. ஓசை வந்த திசையை நோக்கி ஓடினாள். அவன் காட்டை நோக்கி நடந்தான்.* **2.** பார்த்து; to see. "*நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள் யாப்பினுள் அட்டிய நீர்*" (குறள்,1093).

எபிரேயம். நோக்கக்.

[நோக்கு → நோக்கி.]

நோக்கிமாடை *nōkkimāḍai,* பெ. (n.) காசு (நாணய)வகை; a coin. "*பண்டாரத்தில் ஒடுக்கின நோக்கி மாடை ஒன்றும்*" (தெ.க.தொ.4,293).

[நோக்கு + மாடை. மாடு + ஐ– மாடை = காசுவகை.]

நோக்கர்களால், ஆய்ந்து நோக்கப்பட்ட செல்வம். மாடு = செல்வம்

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை". (குறள்,400).

நோக்கியநோக்கம் *nōkkiya-nōkkam,* பெ. (n.) கண்களால் நோக்குகை (தொல்.சொல்.89, இளம்பூ.); seeing through the eyes.

[நோக்கு + இ + அ – நோக்கிய + நோக்கம். 'இ'–சாரியை. 'அ' பெயரெச்ச ஈறு.]

நோக்கு¹–தல் *nōkku-,* 5செ.குன்றாவி. (v.t.) 1. கூர்ந்து பார்த்தல்; to see, look at, behold, view. "*நோக்கினாள் நோக்கெதிர்நோக்குதல்*" (குறள்,1082). "*நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றா*" (தொல்.சொல்.வேற்று.11). *எத்திசையில் நோக்கினும் பச்சைப் பசேலென்ற வயலைக்காணமுடிகிறது. அவள்தலை நிமிர்ந்து என்னை நோக்கினாள்.* "*யான் நோக்கும் காலை நிலன் நோக்கும் நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும்*" (குறள்,1094). 2. சிறப்பாய்க் கருதுதல்; to consider, reflect. "*அறனோக்கி யாற்றுங்கொல் வையம்*" (குறள்,189). "*ஒன்று நோக்கலருன் வலியோங்கறனின்று நோக்கி நிறுத்து நினைப்பினர்*" (கம்பரா. கரன்.5). 3. கவனித்தல்; to regard, pay attention to. "*நச்சாமை நோக்காமை நன்று*" (ஏலாதி,12). *கட்டுரை ஆசிரியரின் மொழிநடையை நோக்கும்போது என்னதோன்றுகிறது?* 4. கவனித்துத் திருத்துதல்; to arrange, put in order. "*புனையிழை நோக்கியும்*" (கலித்.76). 5. காத்தல்; to keep product, save. "*நோக்காது நோக்கி*" (சி.போ. 1:4, வெண்.பக்.79). 6. கவனித்துச் செய்தல்; to do, perform. "*இவற்றை மும்மைசேர் யாண்டு நோக்கு*" (திருவாலவா.34:15). 7. ஒத்தல்; to resemble. "*இந்துநோக்கிய நுதலியை*" (கம்பரா.சூர்ப்ப.96). 8. ஒப்பிட்டுப் பார்த்தல்; to compare. *அவனை நோக்க இவன் நல்லவன்.* 9. படித்தல்; to read. "*இறைவன் கொண்டாங்கது நோக்குமே*" (சீவக.2586). 10. விரும்புதல் (யாழ்.அக.); to desire. 11. அணுகுதல்; approach. *எந்தச் செய்தியையும் பொறுமையாக நோக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். அறிவியல் அடிப்படையில் இப்பாடலை நோக்குவோம்.*

ம. நோக்குக; க. நோடு, இ. தேக்.

[நுல் (=கூர்மை)→ நுள் → நொள் →நோள்→ நோட்கு →நோக்கு →நோக்கு –தல் (வே.க.)]

[நொள் → நொழு → (நொழுகு)→ நோக்கு →நோக்கு–தல் (சு.வி.45)]

நோக்கு²–தல் *nōkku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கண்காணித்தல்; to supervise. '*இம்மடம் நோக்கும் திருமேனிக்கு*' (தெ.க.தொ4,17). 2. நுழைந்து பார்த்தல்; to peep in or into; to put the head in and look. 3. நுட்பமாய்ப் பார்த்தல்; to see minute. 4. அகக்கண்ணால் பார்த்தல்; to see inner eyes.

[நோக்கு¹–தல் → நோக்கு²–தல்.]

நோக்கு³ *nōkku,* பெ. (n.) 1. நோக்குங் கண்; looking eye. "*மலர்ந்த நோக்கின்*" (பதிற்றுப்.65:7). 2. கருத்தோடு கூடிய பார்வை; கண்ணோட்டம்; look, sight; point of view. "*செல்வர் சிறுநோக்கு நோக்குங்கால்*" (நாலடி,298). *உலகநோக்கு அவர்கவிதையில் இல்லை.* "*கண்களவு கொள்ளும் சிறுநோக்கம்*

காமத்தில் செம்பாகம் அன்று பெரிது'' (குறள்,1092). *''யான்நோக்கும் காலை நிலன்நோக்கும்; நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும்''* (குறள்,1094). 3. சிறப்பாகப் பார்த்தற்கேற்ற அழகு; beauty. *"நோயிகந்து நோக்கு விளங்க"* (மதுரைக்.13). 4. சிறந்த கருத்து; meaning, intention, *"நூலவர்நோக்கு"* (திரிகடு,29). 5. கூரிய அறிவு; knowledge, *"நுழைந்த நோக்கிற்கண்ணுள் வினைஞர்"* (மதுரைக். 517). 6. சிறப்பாகக் கருதற்கேற்ற பெருமை; greatness. *"நோக்கிழந்தனர் வானவரெங்களால்''* (கம்பரா.கும்பக.328). 7. சிறந்தநடை; mode, style. *"சொன்னோக்கும் பொருணோக்கும்"* (அட்டப். திருவரங்கக். தனியன்,2). 8. வேடிக்கை கூத்துகளுள் ஒன்று; a kind of dance. *நோக்கத்தொதுங்கு* (பழ.). *நோக்கநோக்குவ நோக்காமுன் நோக்குவன்* (பழ). 9. நோக்கம்; objective; goal. **ஆய்வின் நோக்கைப் பொறுத்தே அதன் போக்கும் அமையும்**

ம. நோக்கு; இ. தேக்.

[நுல் (=கூர்மை, நுண்மை, இளமை) → நுள் → நொள் → நோள் → நோட்கு → நோக்கு. ஒ.நோ. கொள் → கொள்கு → கொட்கு → கொக்கு = வளைந்த கழுத்துள்ள பறவை (வே.க.)]

[முள் → மொள் → நொள் → (நொழு) → (நொழுகு) → நோக்கு = நுழைந்துபார்த்தல், நுட்பமாய்ப்பார்த்தல், அகக்கண்ணால் பார்த்தல் (சு.வி.45)]

நோக்கு⁴ *nōkku,* பெ. (n.) ஓசை முதலியவற்றால் கேட்பாரை மீட்டுத் தன்னை நோக்கச் செய்யும் செய்யுளுறுப்பு (தொல்.பொருள்.செய்.103); attractive grace, an element of poetic art.

[நோக்கு³ → நோக்கு⁴ = கூர்ந்து நோக்கிச் சிறப்புப் பொருள் காணுமாறு அமைக்கும் எழுத்துஞ்சொல்லுமான செய்யுளுறுப்பு. "மாத்திரை முதலா அடிநிலை காறும் நோக்குதற் காரணம் நோக்கெனப்படுமே" (தொல்.பொருள். செய்.103).]

நோக்கு என்பது, மாத்திரை முதலாகிய உறுப்புகளைக்கேட்போர்க்கு நோக்குப்படச் செய்தல்.

யாதானும் ஒன்றைத் தொடுக்குங் காலத்துக் கருதிய பொருளை முடிக்குங்காறும் பிறிதுநோக்காது அது தன்னையே நோக்கி நிற்கும் நிலை... ஓரடிக்கண்ணும் பலவடிக் கண்ணும் நோக்குதல் கொள்க. இஃது ஒரு நோக்காக ஓடுதலும் பல நோக்காக ஓடுதலும் இடையிட்டு நோக்குதலும் கொள்க. (தொல்.செய்.100 இளம்). மாத்திரை முதலிய உறுப்புக்களைக் கேட்போர்க்கு நோக்குப்படச் செய்தல் (தொல்.பொருள்.313 பேரா.). மாத்திரை முதலிய உறுப்புகளை யுடைத்தாய்க் கேட்போர்க்கு நோக்குப்படச் செய்தல் (தொல்,பொருள். செய்.1,நச்.). மாத்திரை முதலாக நிரம்பும் அடிகளாலாய தொடையுடையவாஞ் செய்யுள் நடந்த அடி எத்துணையவாயினும் அவை முடி யுங்காறும் வெள்ளைமையும் பிள்ளை மையுமின்றி வந்த சொற்றொடர் கேட்டோர் மறித்து நோக்கிப் பயன் கொள்வதோர் கருவியாகிய யாப்புக்கூறு (மாறனலங்காரம்).

நோக்கு⁵ *nokku,* இடை. (part.) ஓர்உவமவுருபு (தொல்.பொருள்.287); a particle of comparison

நோக்குடைப்பொருள் *nōkkuḍai-p-poruḷ,* பெ. (n.) 1. குறிப்புப் பொருள்; suggested meaning. 2. கருதற் சொற்களாலமைந்த சுவையுடைப் பொருள் (வின்.); interesting matter expressed in obscure language.

[நோக்கு + உடைப்பொருள். உடைப்பொருள் = உடைமைப்பொருள்.]

நோக்குநோக்கி *nōkku-kōkki,* பெ. (n.) ஆள்வாடைத்தட்டிச்செடி; an unknown plant. (சா.அக.).

நோக்குவவெல்லாமவையேபோறல் *nōkkuva-v-ellām-avaiyē-pōṟal,* பெ. (n.) துன்பநிலை (அவத்தை) பத்தனுள் பார்ப்பன வெல்லாம் தான் கருதிய தலைவியின் உருவாகவே தலைவற்குத் தோன்றும் நிலை (நம்பியகப்.36, உரை); the state of mind of a lover when every object of his sight painfully reminds him of the multifarious charms of his sweetheart, one of ten avattai.

[நோக்கு → நோக்குவ + எல்லாம் + அவையே போறல்.]

துன்பநிலை (அவத்தை) பத்து:

"காட்சி முதலாச் சாக்காடு ஈறாக் காட்டிய பத்தும்" (நம்பியகப்.36).

காட்சி, வேட்கை, ஒருதலையுள்ளுதல், மெலிதல், ஆக்கஞ்செப்பல், நாணுவரை இறத்தல், நோக்குவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்பன பத்துவகைத் துன்பநிலை (நம்பியகப்.36, உரை).

நோக்குவித்தை *nōkku-viṭṭai,* பெ. (n.) கண்கட்டும் கலை (வித்தை); conjuring trick, jugglery, "*நோக்குவித்தை காட்டுநரை*" (திருவாலவா.49:18).

[நோக்கு + வித்தை. Skt. வித்யா → த.வித்தை (விச்சை.) வித்தை = கல்வி, கலை]

நோக்கெதிர்நோக்கு—தல் *nōkkedir-nōkku-,* 5 செ.கு.வி. (v.i.) தலைவன் நோக்கியவிடத்து தலைவி எதிர் நோக்குதல்; to gaze into another's eye, as lovers. "*நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு தானைக் கொண்டன்ன துடைத்து*" (குறள்,1082)

[நோக்கு + எதிர் + நோக்கு—தல்.]

நோகாது *nōkādu,* வி.எ. (adv.) *நோகாமல்* பார்க்க; see *nōkāmal.* *"நோகாது உணர்வோர் கல்வியை நோற்பார்"* (பழ.).

[நோ → நோகாது.]

நோகாமல் *nōkāmal,* வி.எ. (adv.) வலிக்காமல்; without painful. *கை, கால் நோகாமல் பொருளீட்ட முடியுமா?. உடம்பு நோகாமல் உட்கார்ந்து சாப்பிடமுடியுமா? நோகாமல் அடிக்கிறேன் ஓயாமல் அழு.* (பழ.) நோகாமல் நோன்புகும்பிட முடியுமா?

[நோ → நோகாமல்.]

நோகு—தல் *nōku-,* 5செ.கு.வி. (v.i.) வருந்துதல்; மனம் புண்படுதல்; get hurt of feelings, distressed in mind. *அவன் மனம் நோகும்படி நடந்து கொள்ளாதே. உன் பண்பற்ற பேச்சும் செயலும் அவரை நோகச்செய்து விட்டது.*

[நோ → நோகு—தல்.]

நோங்கு—தல் *nōṅgu-,* 5செ.கு.வி. (v.i.) வீட்டுத்திசை நோக்கி விருப்பொடு பார்த்தல்; to desire look.

[நோக்கு—தல்(= பார்த்தல்) → நோங்கு—தல்.]

நோச்சோளம் *nōccōḷam,* பெ. (n.) வெண்சோளம்; white maize. (சா.அக.).

நோசரிகம் *nōšarigam,* பெ. (n.) நித்தக்கத்தரி; long brinjal, Solaman melongena. (சா.அக.).

நோசல் *nōšal,* பெ. (n.) நோவு (வின்.); sickness, pain.

[நோதல் → நோசல்]

நோசிதம் *nōśidam,* பெ. (n.) கொடிக்குறிஞ்சா; small Indian ipecacunha, Gymnema sylvestris. (சா.அக.).

நோஞ்சல் *nōñjal,* பெ. (n.) மெலிவு; emaciation.

[நோய் → நோய்ஞ்சல் → நோஞ்சல்.]

நோஞ்சான் *nōñjāṉ,* பெ. (n.) நோய் முதலியவற்றால் மெலிந்தவன் (நெல்லை); feeble, invalid person. ***சத்துணவு இல்லாத நோஞ்சான் குழந்தைகள். நேஞ்சான் மாடு.***

[நோய் → நோய்ஞ்சான் → நோஞ்சான்= உடல்வலிமையற்று மெலிந்து காணப்படு பவன்.]

நோஞ்சி *nōñji,* பெ. (n.) *நோஞ்சான்* (சங்.அக.) பார்க்க; see *nōñjāṉ.*

நோட்டக்காரன் *nōṭṭa.k-kāraṉ,* பெ. (n.) காசாயும் வண்ணக்கன்; shroff. "*நோட்டக்காரர் நெஞ்சடையக் கூப்பிடுவது*" (பணவிடு.182). **2.** காசு, மணிகள் (நாணயம், இரத்தினம்) முதலியவற்றின் குணங்களையறிந்தவன் (இ.வ.); expert in appraising coins, gems etc.

ம.நோட்டக்காரன்; **க.** நோட்டகார (g)

[நோட்டம் → நோட்டக்காரன் = காசு, பொன்,மணி ஆய்வோன். வண்ணக்கன்.]

நோட்டம்[1] *nōṭṭam,* பெ. (n.) **1.** தட்டிப்பார்த்தல் முதலிய முறைகளைக் கொண்டு புரியும் பொன் வெள்ளிக்காசு பண ஆய்வு; examination of coins; assaying. **2.** பொன்மணி முதலியவற்றின் ஆய்வு; scrutiny of gems, precious metals, etc. **3.** விலைமதிப்பு; value, ***அதன் நோட்ட மறியான்*** (வின்.). **4.** மதிப்பு (வின்.); criticism, as by a rival artist or workman. **5.** போட்டி; competition. ***நோட்டத்திலே விலை வைத்துவிட்டார்கள்*** (வின்.). **6.** வெல்ல முயல்கை; attempt at wit; endeavour to excel, hinder or baffle another in speech. '*வார்த்தை நோட்டத்தில் என்னபலன்*' (வின்.). **7.** மதிப்பிடும் அல்லது தெரிந்து கொள்ளும் நோக்கம் கொண்ட பார்வை; searching glance. ***தலைவர் மேடை ஏறியவுடன் கூட்டத்தை ஒருநோட்டம் விட்டார். பொருள் விற்கும் சாக்கில்வந்து திருடப்போகிற வீட்டை ஒரு நோட்டம் விட்டான்.***

ம. நோட்டம்; **கு.** நோட்ட; **கோத.** நொட் (examine); **க.** நோடு; **து.** நோட.

[நுல் → நுள் → நொள் → நோள் → நோடு நோட்டம் (வே.க.) = ஆய்வு, ஆராய்ச்சி]

நோட்டம்² *nōṭṭam,* பெ. (n.) கணக்கு; account. "*நோட்டத்திற் செல்லெழுதி*" (சரவண. பணவிடு.84).

[நோட்டம்¹ → நோட்டம்²]

நோட்டம்பார்¹–த்தல் *nōṭṭam-pār-,* 4செ.குன்றாவி. (v.t.) **1.** தகுதியறிதல் (யாழ்.அக.); to consider the fitness of. **2.** விலை மதிப்பறிதல் (வின்.); to appraise. **3.** நிலைமையாய்தல்; to consider one's condition, state. **4.** வேவு பார்த்தல்; to spy.

[நோட்டம் + பார்–த்தல்.]

நோட்டம்பார்²–த்தல் *nōṭṭam-pār-,* 4 செ.கு.வி. (v.i.) மிகக் கண்டிப்பாயிருத்தல் (வின்.); to be too strict in dealings.

[நோட்டம் + பார்–த்தல்.]

நோட்டம்பார்த்தல் : எடுத்துக் கொண்ட மாழைக் கலவையிலே உள்ள மாழைகளின் (உலோகங்களின்) அளவை மதிப்பிடுவது நோட்டம் பார்த்தல் எனப்படும். சுரங்கங்களில் கிடைக்கும் மூலப்பொருள்களில் எந்த வகை மாழை எந்த அளவில் உள்ளது என மதிப்பிட்டு, அம் மூலங்களை (தாதுக்களை) வெட்டி யெடுப்பது நன்மைபயக்குமா என ஆராய்ந்து முடிவு செய்ய நோட்டம் பார்த்தல் மிகவும் பயன்படுகிறது. காசுகள், நகைகள் முதலியன செய்யப்பயன்படும் விலையுயர்ந்த தங்கம் போன்ற மாழைகளின் கட்டிகள் தூய்மையானவையா என ஆராயவும் இது பயன் படுகிறது. மாழைக் (உலோகக்) கலவைகளின் குறைகளைக் கண்டு ஆராயவும் பயன்படுகிறது. ஆராயவேண்டிய மாழை (உலோகம்) எதுவோ அதைப்பொறுத்து, நோட்டம் பார்க்கப் பலமுறைகள் வழக்கத்தில் இருக்கின்றன. ஆனால், பொதுவாக இருமுறைகள் உண்டு. அவை; **1.** உலர்முறை (dry process). **2.** ஈரமுறை (wet-process). மூலங்களில் உள்ள மாழை வகைகளை உருக்கிப்பின் பிரிப்பது உலர்முறை. மூலங்களில் உள்ள மாழைகளை வேதியியல் (இரசாயன) முறையில் பிரித்தல் ஈரமுறை.

நோட்டம்பேசு–தல் *nōṭṭam-pēšu-,* 5செ.கு.வி. (v.i.) பிறர் தன் சொல்லுக்கு உட்படும்படிப் பேசுதல் (யாழ்.அக.); to overcome by skilful speech.

[நோட்டம் + பேசு–தல்.]

நோட்டன் *nōṭṭaṉ,* பெ. (n.) *நோட்டக்காரன்* பார்க்க; *see nōṭṭakkāraṉ.*

[நோட்டம் → நோட்டன்]

நோடாலம் *nōḍālam,* பெ. (n.) **1.** களிப்பு,உவப்பு (உல்லாசம்); jocularity, pleasantry. **2.** ஏளனம்; mockery. **3.** நனிநாகரிகம்; fastidiousness. **4.** புதுமை (யாழ்.அக.); newness.

[நடலம் → நாடலம் → நோடலம். நடலம் = மிகு நாகரிகம், ஏளனம், இகழ்ச்சி.]

நோடு–தல் *nōḍu-,* 5செ.கு.வி. (v.i.) **1.** ஆராய்ந்து பார்த்தல்; to research. **2.** கவனித்தல்; to take care of.

க. நோடு, F.,L. notum, to know; E.note.

[நுல் (= நுண்மை) → நுள் → நொள் → நோள் → நோடு → நோடு–தல் (இவ்வினை இன்று வழக்கற்றது) = தேடுதல், ஆய்தல் ஆராய்தல், பார்த்தல் (மு.தா.)]

நோண்டு–தல் *nōṇḍu-,* 5செ.குன்றாவி. (v.t.) **1.** விரல்,குச்சிபோன்றவற்றால் கிளறுதல் (பிங்.); to stir, dig up, grub up, root out. *புண்ணை நோண்டாதே? நிலத்தை நோண்டிக் கொண்டிருக்கிறான்.* **2.** முகத்தல் (திவா.); to bale out, scoop out. **3.** குடைந்தெடுத்தல்; to pick off, as a scab of an ulcer; to pick out, as wax from the ear. *காதை நோண்டாதே.* **4.** துருவிவினவுதல் (வின்.); to enquire minutely, endeavour to draw out by repeated questions, pump one. *'நோண்டிநோண்டிக் கேட்கிறான்'* (வின்.). **5.** சிறுகத் திருடுதல் (வின்.); to pilfer. **6.** பயிரைக் கிள்ளுதல் (யாழ்ப்.); to pluck, as cars of grain. **7.** ஒரு தொழிலைச் சிறிதுசிறிதாகச் செய்தல்; to do a thing little by little. *ஏன் நோண்டிக் கொண்டிருக்கிறாய்* (வின்.). **8.** தேவையற்ற ஒன்றைச் செய்தல்; to rummage about. *எதையாவது நோண்டிக் கொண்டிருப்பதே தொழிலாப்போச்சு.* **9.** தோண்டுதல்; to dig. *கண்ணை நோண்டிவிடுவேன். கிழங்கை நோண்டி யெடுத்து விட்டான்* (உ.வ.).

ம. நோண்டுக; **து.** நோடட்ருநி.

[நுல்(துளை) → நுள் → நொள் → நோள் → நோண்டு → நோண்டு–தல் (வே.க.)]

நோணாவட்டம் *nōṇāvaṭṭam,* பெ. (n.) *நொறுநாட்டியம்* (இ.வ.) பார்க்க; see *noṟu-nāṭṭiyam.*

நோணாவட்டியம் *nōṇā-vaṭṭiyam,* வி.எ. (adv.) நன்றாய் (தூத்துக்குடி வழக்கு); well, prudently, wisely.

நோதக்க *nōdakka,* கு.வி.எ. (adv.) வருந்தத்தக்கனவற்றை; grieved, distressed. "*பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க; நோதக்க நட்டார் செயின்*" (குறள், 805).

[நோ → நோதக்க. நோ = துன்பம், வருத்தம்.]

நோதல்¹ *nōdal,* தொ.பெ. (vbl.n.) 1. பூடு முதலியவற்றுக்கு வருங்கேடு; disease affecting trees or plants. 2. எழுத்து முதலியவற்றின் மழுங்கல்; obliteration or other defect in a marked line, letter, figure or painting. 3. சாயஞ்சிதறுகை; spreading of dye in a cloth beyond the intended line. 4. ஏழைமை; poverty.

[நோ → நோதல்]

நோதல்² *nōdal,* பெ. (n.) 1. துன்புறல்; to suffer. 2. நொந்து சொல்லுதல்; to be injured speech.

[நோ → நோதல்]

நோதலை *nōdalai,* பெ. (n.) *நோதல்,* 1,4 (யாழ்ப்.) பார்க்க; see *nodal, 1,4.*

[நோதல் → நோதலை]

நோதளை *nōdaḷai,* பெ. (n.) பிராய்முட்டி; Ceylon pavonia, Poania zeylanica. (சா.அக.).

நோதிறம் *nōdiṟam,* பெ. (n.) முல்லை, பாலைக்குரிய துன்பப்பண் வகை (பிங்.); a melody type of the *mullai* and the *pālai* classes, sung in distress. "*பாண்வாய்வண்டு நோதிறம்பாட*" (சிலப்.4:75).

[நோ → நோதிறம்.]

நோப்படு-தல் *nōppaḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. காயப்படுதல்; sustaining injury, being injured. 2. நோயினால் துன்பப்படுதல்; suffering from pain or disease. (சா.அக.).

[நோ + படு-தல். நோ = துன்பம்.]

நோப்பாளம் *nōppāḷam,* பெ. (n.) 1. சினம்; irritation, anger, offence. *உள்ளதைச் சொன்னால் நொள்ளைக்கண்ணிக்கு நோப் பாளம்* (பழ.). 2. வருத்தம்; suffering.

[நோ → நோப்பு → நோப்பாளம் (வே.க.)]

நோபித்திரினி *nōpittiriṉi,* பெ. (n.) 1. நோய்; disease. 2. நலக்கேடு; bad health. (சா.அக.).

நோம்பு¹-தல் *nōmbu-,* 5செ.குன்றாவி. (v.t.) கொழித்துப் பிரித்தல்; to separate by winnowing, as stones from rice.

[நேம்பு → நோம்பு-தல்.
நேம்புதல் = கொழித்துப்பிரித்தல்.]

நோம்பு² *nōmbu,* பெ. (n.) *நோன்பு* (உ.வ.) பார்க்க; *see nōṉbu.*

[நோன்பு → நோம்பு.]

நோம்புக்கடன் *nōmbu-k-kaḍaṉ,* பெ. (n.) நேர்ச்சிக் கடன்; vow.

[நோன்பு → நோம்பு + கடன்.]

நோம்புக்கயிறு *nōmbu-k-kayiṟu,* பெ. (n.) காப்புநாண்; a sacred string.

[நோன்பு → நோம்பு + கயிறு. நோம்பன்று கட்டிக் கொள்ளும் காப்புக்கயிறு.]

நோம்புமுடி *nōmbu-muḍi,* பெ. (n.) நோம்புமுடிச்சு பார்க்க; *see nōmbu-muḍiccu.*

[நோன்பு² + முடி. முடி = முடிந்து கொள்ளும் பொருள்.]

நோம்புமுடிச்சு *nōmbu-muḍiccu,* பெ. (n.) தாலிச்சரட்டில்கோக்கப்பட்ட குழாய்போன்ற பொன்னுருக்கள்; a pair of cylindrical pieces of gold worn on the string containing the marriage badge.

[நோன்பு² + முடிச்சு.]

நோம்புவலி *nōmbu-vali,* பெ. (n.) குதிரை வாலிப்பூடு; a family of plants resembling horse tail, as horse tail, grass, Panicum brizoides, horse tail, millet, Panicumerticillatum. (சா.அக.).

நோம்புவிரலி *nōmbu-virali,* பெ. (n.) மஞ்சள்கொத்து; turmeric plant: (சா.அக.).

நோம்பூகயம் *nōmbū-kayam,* பெ. (n.) நிலப்பூசினிச் செடி; giant potato; earth pumkin, Gpomaea digitata. (சா.அக.).

நோம்பூரிகம் *nōmbūrigam,* பெ. (n.) சருக்கரைப்பூசனி; yellowpumpkin, Cucurbita pepo. (சா.அக.).

நோய்¹ *nōy,* பெ. (n.) **1.** மனிதனின், விலங்கின், பயிரின் உடல் நல பாதிப்பு; பிணி; malady, distemper, ailment, sickness, disease. "*நோயிகந்து நோக்குவிளங்க*" (மதுரைக்.13). *நோயைத் தக்க நேரத்தில் தடுக்காததால் விளைச்சல் பாதித்து விட்டது.* "*காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் இந் நோய்*" (குறள்,1227). *நோய் கொண்டார் பேய் கொண்டார்.* (பழ.) **2.** துயரம் (பிங்.); sorrow, grief. **3.** துன்பம்; affliction, trouble, "*அதிரவருவதோர் நோய்*" (குறள்,429). **4.** குற்றம்; fault. "*பகலென்னும் பண்பின்மை பாரிக்கும்நோய்*" (குறள்,851). **5.** அச்சம்; dread, fear. "*நோயுடை நுடங்குசூர்*" (பரிபா.5:4.). **6.** நோவு (வின்.); ache, pain, smart. "*நோவு ஒரு பக்கம் இருக்கச் சூடு ஒரு பக்கம் போட்டாற் போல*" (பழ.). "நோய்க்கிடங் கொடேல்" (பழ.).

ம. நோயி.

[நுல்(நோதல்) → நுள் → நொள் → நோள் → நோய் (வே.க.)]

நோய்²–த்தல் *nōy-,* 4செ.கு.வி. (v.i.) **1.** பிணியால் வருந்துதல்; to be or become sickly or diseased. **2.** நோயால் மெலிதல்; to be broken in constitution; to be debilitated. **3.** மரம்,பயிர் வாடுதல்; to wither, as trees, crops. **4.** நிலம் சாரமற்றுப்போதல்; to become poor or worn out, as lands.

[நோய்¹ → நோய்²–த்தல்]

நோய்³–தல் *nōy-,* 2செ.கு.வி (v.i.) நோய்² பார்க்க; *see nōy.² பயிர் நோய்ந்து போய்விட்டது.* (நெல்லை)

[நோய்¹ → நோய்³–தல்]

நோய்க்குணக்குறி *nōy-k-kuṇa-k-kuṟi,* பெ. (n.) நோய்க்குறி (பாண்டி) பார்க்க; *see nōy-k-kuṟi.*

[நோய்[1] *+ குணம் + குறி.]*

நோய்க்குறி *nōy-k-kuṟi,* பெ. (n.) நோயின் அடையாளம் (பாண்டி); symptom of a disease.

[நோய்[1] *+ குறி.]*

நோய்க்கூறுபாடு *nōy-k-kūṟupāḍu,* பெ. (n.) நோய்க்குறி (பாண்டி) பார்க்க; *see noy-k-kuṟi.*

[நோய்[1] *+ கூறுபாடு.]*

நோய்காடேறுதல் *nōy-kāḍēṟudal,* பெ. (n.) சாக்காட்டி னிறுதியில் நோய் விட்டு அகலுகை; the disappearance of disease on the approach of death.

[நோய்[1] *+ காடேறுதல்.*
காடேறுதல் = விட்டு நீங்குதல்.]

நோய்ச்சல் *nōyccal,* பெ. (n.) நோய்வாய்ப் படுகை; being sickly. **2.** **நோய்ஞ்சல்** (வின்.) பார்க்க; *see nōyñjal.*

[நோய்[1] *→ நோய்ச்சல்.]*

நோய்ஞ்சல் *nōyñjal,* பெ. (n.) **1.** மெலிந்தவன்–ள்–து; sickly, emaciated person or animal. *"நோய்ஞ்சற் பூனை மத்தை நக்குமாபோலே"* (பழ.). *"நோய்த்த புலி ஆகிலும் மாட்டுக்கு வலிது."* (பழ.). **2.** நோய் (யாழ்.அக.); disease.

[நோய்[1] *→ நோய்ஞ்சல்.]*

நோய்ஞ்சலன் *nōyñjalaṉ,* பெ. (n.) **நோயாளி** (வின்.) பார்க்க; *see nōyāḷi.*

[நோய்ஞ்சு + அல் + அன். ஈண்டுவரும் அல் உடன்பாட்டுப் பொருளில் வரும் சாரியை; அன்–ஆண்பால்விகுதி]

நோய்ஞ்சான் *nōyñjāṉ,* பெ. (n.) மெலிந்தவன்; person emaciated by disease.

[நுல் (மெலிதல்) → நுள் → நொள் → நோள் → நோய் → நோய்ந்தான் → நோய்ஞ்சான். (மு.தா.)]

நோய்ஞ்சி *nōyñji,* பெ. (n.) *நோயாளி* (வின்.) பார்க்க; *see nōyāḷi.*

[நோய்[1] *→ நோய்ஞ்சி]*

நோய்ஞ்சியன் *nōyñjiyaṉ,* பெ. (n.) *நோயாளி* (வின்.) பார்க்க; *see nōyāḷi.*

[நோய் → நோய்ஞ்சி + அன். 'அன்' ஆண்பால் ஈறு]

நோய்த்த *noytta,* கு.பெ.எ. (adj.) நோய் கொண்ட; being affected with disease marked with sickness. sickly. **(சா.அக.).**

[நோய்[1] *+ த் + த. 'த்' இடைநிலை; 'த'– பெயரெச்ச ஈறு]*

நோய்த்திடம் *nōy-t-tiḍam,* பெ. (n.) **1.** பிணியின் வலிமை; strength of a disease. **2.** நோயின் உண்மை; reality of disease. **(சா.அக.).**

[நோய்[1] *+ திடம். திடம் = வன்மை.]*

நோய்த்தொற்று *nōy-t-toṟṟu,* பெ. (n.) உடலில் நுண்ணுயிரிகளால் (பாக்டீரியா) உண்டா வதும், நுண்ணுயிரிகள் உண்டாக்கும் நஞ்சுகளால் உண்டாவதுமான நோய்; infection.

[நோய்[1] *+ தொற்று]*

நோய்தடுக்கி *noy-tadukki,* பெ. (n.) நோய் வராமல் தடுக்குமருந்து; preventie remedies as vaccine; medicines preveting disease-Prophylactics. (சா.அக.).

[நோய்[1] + தடுக்கி.]

நோய்தெறி–த்தல் *nōy-deri-,* 4 செ.கு.வி. (v.i.) பிணி நீங்குதல்; getting rid of disease being free from disease. (சா.அக.).

[நோய்[1] + தெறி–த்தல். தெறித்தல் = நீங்குதல்.]

நோய்நாடு–தல் *nōy-nōḍu-,* 5செ.குன்றாவி. (v.t.) நோய் இன்னது என்று கண்டுபிடித்தல்; diagnosis. *"நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்"* (குறள்,948)

[நோய்[1] + நாடு–தல்]

நோயாளியைப் பார்த்தவுடன் அவருக்கு என்னென்ன தொந்தரவுகள் என்று அறிந்துகொண்டு, அதிலிருந்து ஒவ்வொரு நோயாக விலக்கிக் கொண்டே வந்து, எந்தநோயின் தன்மையும் அவர் சொல்லும் தொந்தரவும் ஒத்து வருகின்றனவோ அந்த நோயே அவருக்கு இருக்கலாம் என்ற உறுதி செய்வது நோய் நாடலாகும்.

எடுத்துக்காட்டாக வயிற்றுவலி என்றால், வயிற்றில் புண்ணாக இருக்கலாம்; குடலில் புண்ணாக இருக்கலாம்; ஈரலைச் சேர்ந்த நோயாக இருக்கலாம்; இதய நோயாகவும் இருக்கலாம். சாப்பிட்ட உடனே அல்லது சாப்பிட்டு ஒரு மணி அல்லது இரண்டுமணி நேரத்திற்குள்ளேயே வயிற்று வலி வந்தால் அது வயிற்றுப் புண்ணாகவோ, அல்லது குடற்புண்ணாகவோ தான் இருக்கவேண்டும். ஏனெனில் மற்ற உறுப்புக்களின் நோய், உணவால் அதிகப்படுவதில்லை. மற்றும் வாந்தி எடுத்தவுடன் வலி அடங்கிவிடுகிறது என்றால் குடல்நோய் என்றே கூறவேண்டும். அதிலும் காரப்பொடி சாப்பிட்டால் வலி ஏற்படவில்லை என்றால் இந்த ஊகம் உறுதிப்படுகிறது. ஆனால், நோய்க் கூற்றைக் கண்டுபிடிப்பதற்கு நோயாளியின் தொந்தரவுகள் என்னென்ன என்று அறிந்து கொள்ள வேண்டும். அதோடு நோய் எப்போது ஏற்பட்டது, நோய் எவ்வளவு நாட்களாக இருந்து வருகிறது, என்ன பண்டுவத்தால் குணம் ஏற்படுகிறது என்றும், எந்தெந்த மருந்துகளால் நோய் அதிகமாய்த் தோன்றுகிறது என்றும் அறிந்து கொள்ளவேண்டும். நோயாளி தன்னுடைய உடம்பின் நிலையைப் பற்றிச் சொல்லி நிறுத்திய பிறகு, ஆய்வு செய்யவேண்டும். நோயாளியின் தொல்லை என்னவாக இருந்தாலும் உடல் முழுமையும் ஆய்வு செய்வதே நல்லது.

நோய்நொடி *nōy-noḍi,* பெ. (n.) 1. *பிணியும் துன்பமும்;* disease with its sufferings. *(சா.அக.). நோய் நொடி இல்லா உடம்போடு வாழவேண்டும். குழந்தைக்கு நோய் நொடி வராமல் வளர்க்கவேண்டும். நோய் நொடி இல்லா வாழ்வு வேண்டும் என்று கடவுளிடம் வேண்டினேன்.* 2. நோயும் நோயின் பாதிப்பும்; illness and its effect. *வறுமையில் நோய் நொடிவந்தால் யார் உதவுவார்கள்.*

[நோய்[1] + நொடி. மரபுத்தொடர்]

நோய்ப்பாடியார் *nōy-p-pāḍiyār,* பெ. (n.) கழகக் காலப்புலவர்; a poet in Sangam age.

மறுவ. நொய்ப்பாடியார்.

[நோய்[1] + பாடியார்]

இவர்தம் பாடலில் பிரிந்தோருறும் நோயை நன்கு புலப்படுத்துவதால் இப்பெயர் பெற்றார் எனலாம். பாலை நிலவழியிலே பரற்கற்கள் நிலம்படும் மின்மினிபோலப் பரந்திமைக்கும் எனப் புனைந்துரைத்துள்ளார். இவர் செய்யுளில் நடுகற்குப் பீலிசூட்டும் வழக்கமும். நடுகல்லின் அருகிலே அவ்வீரன் பிடித்திருந்த வேல் முதலியவற்றை வைக்கும் வழக்கமும் காணப்பெறுகின்றன. (அகநா.67).

"யானெவன் செய்கோ தோழி பொறிவரி
வானம் வாழ்த்திப் பாடவும் அருளாது
உறைதுறந் தெழிலி நீங்கலிற் பறையுடன் மரம்புல்
லென்ற முரம்புயர் நனந்தலை அரம்போழ் நுதிய
வாளி அம்பின் நிரம்பா நோக்கின் நிரையம்
கொண்மார் நெல்லி நீளிடை எல்லி மண்டி
நல்லமர்க் கடந்த நாணுடை மறவர் பெயரும்
பீடும் எழுதி அதர்தொறும் பீலி சூட்டிய
பிறங்குநிலை நடுகல் வேலூன்று பலகை
வேற்றுமுனை கடுக்கும் மொழிபெயர் தேஎத்
தருமார் மன்னர் கழிப்பிணிக் கறைத்தோல்
நிரைகண் டன்ன உவலிடு பதுக்கை ஆளுகு
பறந்தலை உருவில் பேஎய் ஊராத் தேரொடு
நிலம்படு மின்மினி போலப் பலவுடன் இலங்குபரல்
இமைக்கும் என்பநம் நலந்துறந்து உறைநர்
சென்ற ஆறே" (அக.67)

நோய்பாடியார் *nōy-pāḍiyār,* பெ. (n.) நோய்ப்பாடியார் பார்க்க; *nōy-p-pāḍiyār.*

நோய்புகலும்பாண்டம் *nōy-pugaḷum-pāṇḍam,* பெ. (n.) நோய், பிணிபுகும் உடம்பு; body liable to disease. (சா.அக.).

[நோய்[1] + புகலும் + பாண்டம். பாண்டம் = உடம்பு.]

நோய்ப்பால *nōy-p-pāla,* பெ. (n.) துன்புறுத்தும் திறத்தனவாகிய குற்றங்கள்; offence, cruel offence. *"தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால தன்னை யடல்வேண்டா தான்" (குறள்,206)*

நோய்ப்பூச்சி *nōy-p-pūcci,* பெ. (n.) நோயை உண்டாக்கும் புழு; organisms which cause disease-germ; bacillus. (சா.அக.). *குழந்தைக்கு வயிற்றில் நோய்ப்பூச்சி இருக்கிறது; மருந்து கொடுக்கவேண்டும்.*

[நோய்[1] + பூச்சி; பூச்சி = நோயை உண்டாக்கும் புழு.]

நோய்போக்கு—தல் *nōy-pōkku-,* 5 செ. குன்றாவி. (v.t.) நோயைப் போக்கிக் குணமாக்குதல்; to cure the disease through medical treatment. *இந்த மருத்துவர் நோயைப் போக்குவதில் வல்லவர்.*

[நோய்[1] + போக்கு—தல்]

நோய்மக்களித்தல் *nōy-makkaḷittal,* பெ. (n.) நோய் திரும்புதல்; relapse of disease. (சா.அக.).

[நோய் + மக்களித்தல்.]

நோய்மருந்தளவு *nōy-marundaḷavu,* பெ. (n.) சாப்பிடும் மருந்தளவைக் குறிக்கும் தேரையர் செய்த ஒரு தமிழ் மருத்துவ நூல்; a Tamil medical work by Theraiyar on prescriptions and administration of remedies. 2. நோய்க்கு ஏற்றவாறு கொடுக்கும் மருந்தளவு; preportion of medicine determined according to the nature of and requirement for a particular disease, Prescription. (சா.அக.).

[நோய் + மருந்து + அளவு.]

நோய்முகன் *nōy-mugaṉ,* பெ. (n.) காரி கோள் (சனி) (தைலவ.தைல.); Saturn.

[நோய் + முகன். நோய் தரும் காரி கோள் துன்பத்தையும் தருவது.]

காரிக்கோள் துன்பத்தைத் தருவது என்னும் கருத்தினால், அது நோய்முகன் எனப்பட்டது. ஆயின், இடைக்காலத்தில் தமிழ் பகைவர் காரி என்னும் தென்சொல்லை வழக்கு வீழ்த்தி *'சனி'* என்னும் வடசொல்லைப் புகுத்தியதால் *'சனியன்'* என்னும் சொல் வழங்கத் தலைப்பட்டது. தமிழர் அனைவரும் இனி நோய்முகன் என்னும் சொல்லையே *'சனியன்'* என்பதற்குத் தலைமாறாக வழங்குக—பாவாணர் (வே.க.நூல்4).

நோய்மும்முரம் *nōy-mummuram,* பெ. (n.) திடீரென ஏற்படும் நோயின் கடுமை; sudden recurrence or intensification of symptoms, Paroxysm. (சா.அக.).

[நோய் + மும்மரம். முன்பு + உரம்— மும்முரம்.]

நோய்முறி—தல் *nōy-muṟi-,* 4செ.கு.வி. (v.i.) நோய் உடம்பிலிருந்து நீங்குதல்; the separation of a disease from the system after its being over powdered. (சா.அக.).

[நோய் + முறி—தல்]

நோயறு—தல் *nōy-y-aṟu-,* 18செ.குன்றாவி. (v.t.) நோய் நீங்குதல்; to cure a disease. *"நோயற்ற வாழ்வே வாழ்வு; குறையற்ற*

செல்வமே செல்வம்" (பழ.). *நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்* (பழ.).

[நோய் + அறு–தல்]

நோய்யெதிர் ஆற்றல் *nōy-y-edir-āṟṟal,* பெ. (n.) நோயை உண்டாக்கும் நுண்ணுயிரிகளால் நோய் உண்டாகாதவாறு உடலில் உள்ள எதிர்க்கும் ஆற்றல்; immunity.

[நோய் + எதிர் + ஆற்றல்]

நோய்யெதிர் ஆற்றல் என்பது ஒவ்வொரு நோய்க்கும் தனித்தனி. நோயை உண்டாக்கும் நுண்ணுயிரிகள் பலவகைப் படும். ஆதலால் ஒருவர் ஒரு நோய்க்கு எதிராற்றல் உடையவராகவும், வேறு ஒரு நோய்க்கு உட்படுபவராகவும் இருக்கலாம். அம்மை நோயை எதிர்க்கும் ஆற்றல் உடையவராக இருந்தாலும், ஈளைநோயை எதிர்க்கும் ஆற்றலில்லாதவராகவும் இருக்கலாம்.

நோய்யெதிர் ஆற்றல் இயற்கை, செயற்கை என இருவகைப்படும். இயற்கை யென்பது பிறக்கும் போதே உடலில் அமையும் எதிர்ஆற்றல்.

செயற்கையென்பது பிறந்தபின் உடலில் அமைவது. நோய் வருமுன்பே, செயற்கை முறைகளால், அதாவது கொல்லப்பட்ட அல்லது ஆற்றல் இழந்த நுண்ணுயிரிகளைக் கொண்டு உண்டாக்கப்பட்ட நோய்ப்பாலை உடலில் ஏற்றி அரத்தத்தில் எதிர்ப்பொருள்களைத் தோற்றுவித்தல். இந்த எதிர்ப்பொருள்களும் நோய் நீங்கிய பின்னரும் உடலில் தங்கியிருந்து எதிர்ஆற்றலைத் தருவதாக அமையும்.

நோய்வரப்பண்ணு–தல் *nōy-vara-p-paṇṇu-,* 5செ.கு.வி. (v.i.) **1.** நோயை உண்டாக்குதல்; to cause a disease as is done in animals for observing the effect of medicine. **2.** நோய்க்கிடங்கொடுத்தல்; accomodating disease by intemperate habits. (சா.அக.).

[நோய் + வரப்பண்ணு–தல்]

நோய்வன்மை *nōy-vaṉmai,* பெ. (n.) நோயின் கொடுமை; severity of a disease. (சா.அக.).

[நோய் + வன்மை. வன்மை = வலிமை, கொடுமை.]

நோய்வாய்ப்படு–தல் *nōy-vāy-p-paḍu-,* 18செ.குன்றாவி.(v.t.) *நோயினால் தாக்கப் படுதல்;* to fall ill. *நோய்வாய்ப்பட்ட உடம்பு.* நண்பர் *நோய்வாய் பட்டிருந்தபோது சென்று பார்த்தேன்.*

[நோய் + வாய் + படு–தல்]

நோய்விழலாய்ப்போ–தல் *nōy-viḻalāy-p-pō,* 8 செ.கு.வி.(v.i.)நோய் பயனற்றுப்போதல்; diseases being rendered inert of inactive. (சா.அக.).

[நோய் + விழலாய்ப்போ–தல்]

நோய்விழுதல் *nōy-viḻudal,* பெ. (n.) செடிகளில் நோய்பிடிக்கை; infection, as of plants.

[நோய் + விழுதல்.நோய் உண்டாகுதல்.]

நோயகலல் *nōyakalal,* பெ. (n.) உடம்பினின்று நோய் நீங்கல்; getting cured or free from diseases, Disappearance of the disease from the body. (சா.அக.).

[நோய் + அகலல்.]

நோயணுகல் *nōyaṇugal,* பெ. (n.) நோயில் விழுகை; falling ill, getting struck by disease. *அவனுக்கு நோயணுகலால் வேலை செய்ய முடியவில்லை.*

[நோய் + அணுகல்.]

நோயணுகாவிதி *nōy-aṇugā-vidi,* பெ. (n.) தேரையர் இயற்றிய ஒரு மருத்துவநூல்; a treatise an hygiene by Tēraiyar.

[நோய் + அணுகா + விதி.நோய்களுக்கு மருந்து கூறும் முறையையுரைக்கும் நூல்.]

நோயற்றவுடம்பு *nōyaṟṟa-v-uḍambu,* பெ. (n.) நலமுள்ள உடம்பு; healthy body. (சா.அக.).

[நோய் + அற்ற + உடம்பு.]

நோயறை *nōyaṟai,* பெ. (n.) நோயாளிகள் இருக்கும் அறை; patient's room. (சா.அக.). *நோயறைபக்கம் ஒலியை அதிகப்படுத்தாதே.*

[நோய் + அறை.]

நோயாளி *nōy-āḷi,* பெ. (n.) நோயால் தாக்கப்பட்டவன்; sick person, patient, invalid. *மருத்துவர் நோயாளியைக் கவனிக்கச் சென்றுவிட்டார். "நோயாளிக்கு ஆசை காட்டிச் சொன்னாற் போல" (பழ.). "நோயாளி விதியாளி ஆனால் பரிகாரி பேராளி ஆவான்" (பழ.). "நோயாளிக்குத் தெரியும் நோயின் வருத்தம்" (பழ.)*

[நோய் → நோயாளி.]

நோயாளிசாலை *nōyāḷi-šālai,* பெ. (n.) நோவாளி மடம் (பாண்டி.) பார்க்க; *see nōvāḷi-maḍam.*

[நோய் + ஆளி + சாலை. சாலை = இடம் ஒநோ. பாடசாலை]

நோயியல் *nōy-iyal,* பெ. (n.) நோயின் கரணியங்களையம், அவை செய்யும் உடலியல், உடலமைப்பியல் பற்றிய மாறுதல்களையும் ஆராயும் மருத்துவஇயல்; pathology.

[நோய் + இயல்]

நோயாளிக்கு மருத்துவம் செய்ய விரும்பும் மருத்துவர் முதலில் நோயை ஆராய்ந்து கண்டு பிடிக்கவேண்டும். என்னநோய் வந்துள்ளது என காண வேண்டுமாயின் மருத்துவர்க்கு, எல்லா நோய்களுக்குமுரிய அறிகுறிகள் தெரிந்திருக்க வேண்டும். இந்த அறிவைப் பெறுவதற்கு உடல் எவ்வாறு அமைந்துளது என்று கூறும் உடலமைப்பியலையும், உடல் எவ்வாறு வேலை செய்கிறது என்று கூறும் உடலியலையும் அவர் நன்கு அறிந்திருக்க வேண்டும். அதன்பின் நோய் எவ்வாறு உடம்பில் மாறுதல்களை உண்டாக்குகிறது என்பதை நாடவேண்டும் என்பதே நோயியலாகும்.

நோயிரட்டித்தல் *nōy-iraṭṭittal,* பெ. (n.) 1. நோய் மறுபடியும் ஏற்படுகை; relapse of a disease. 2. நோய்சிக்குண்டு அதிகமாகை; complication of a disease. 3. நோய் கடுமையாகை; disease getting virulent. (சா.அக.).

[நோய் + இரட்டித்தல்.]

நோயிருத்தி *nōy-irutti,* பெ. (n.) நோயை நிலைக்கச் செய்யும் மூலிகை; any plant or drug rendering a disease chronic or lingering (சா.அக.).

[நோய் + இருத்தி.]

நோயிலக்கணம் *nōy-ilakkaṇam,* பெ. (n.) 1. நோயைப்பற்றிய குணபாடம்; that branch of medical science which treats of classification of disease, Nosology. 2. நோயின் அறிகுறியைப் பற்றிச் சொல்லும் நூல்; that branch of science which treats of symptoms, Symptamatology. 3. நோய் குறி; the characteristic symptoms of a disease. (சா.அக.).

[நோய் + இலக்கணம்.]

நோயில்நாடி *noyil-nāḍi,* பெ. (n.) மூன்று நாடியும் (இடைகலை, பிங்கலை, சுழிமுனை) தன் மாத்திரையில் குறையாது உடம்பின் நோயின்மையைக் காட்டும் நாடி நடைகள்; the regular pulse beat in respect of the three humours without any deviation or varied changes a clear indication of healthy body. (சா.அக.).

[நோய் + இல் + நாடி]

நோயின்சாரம் *nōyiṉ-šāram,* பெ. (n.) நோயைப்பற்றிய ஒரு நூல்; a treatise on diseases.

*[நோய் + இன் + சாரம்
சாறு + அம் = சாறம் → சாரம்]*

நோயுள்ளதீட்டு *nōy-u!!a-tīṭṭu,* பெ. (n.) நோவோடு கூடிய மாதவிலக்கு (M.L.); painful menstruation, Dysmenorrhoea.

[நோய் + உள்ள + தீட்டு.வலியுடன் கூடிய மாத விலக்கு. தீற்று → தீட்டு. தீற்றுதல் = கழுவுதல்]

நோயுறு—தல் *nōy-uṟu-,* 18செ.குன்றாவி. (v.t.) **நோய்வாய்ப்படு—தல்** பார்க்க; *see nōy-vāy-p-paḍu-.*

[நோய் + உறு—தல்]

நோயெச்சம் *nōy-eccam,* பெ. (n.) நோயின் எச்சம் (வின்.); remnants of a disease.

[நோய் + எச்சம்.]

நோல்[1]—தல்(நோற்றல்) *nōl-,* 10செ.குன்றாவி. (v.t.) 1. பொறுத்தல்; to endure, suffer patiently, as hunger. "*உண்ணாது நோற்பார் பெரியர்*" (குறள்,160). 2. மேற்கொள்ளல்; to practise, *மறவாமே நோற்பதொன் றுண்டு* (குமர.பிர.நீதிநெறி.20). 3. வலிமை; strength. "*நோக்கியெ திருறநின்ற நோலாரும்படை வியந்தே*" (அருணகிரிபு. அருந்தவ.125)

நோல்[2]—தல் *nol-,* 17செ.கு.வி. (v.i.) 1. தவஞ்செய்தல்; to do penance, practice, austerities. "*நோற்றோ ருறைவது*" (மணிமே.17:65) 2. நோன்பை மேற்கொள்ளுதல்; to observe a religious fast. *பாவை நோன்பு நோற்றாள்.*

தெ.நேட்சு; க.நோன்; ம.நோல்க.

நோல்[3] *nōl,* பெ. (n.) சடங்கு (கிரியை); a means of attaining salvation. "*நோக்கினைய நோலினையு முடைத்தாமால்*" (சிவதரு. சிவஞானபோ.18).

நோலாகிதம் *nōlāgidam,* பெ. (n.) திருநீற்றுப்பச்சை; holy ashes leaf, Ocimum basilicum. (சா.அக.).

நோலாதவர் *nōlādavar,* பெ. (n.) தவஞ் செய்யாதார்; one who does not having penance.; "*இலர்பல ராகிய காரணம் நோற்பார் சிலர்பலர் நோலா தவர்*" (குறள்,270).

[நோல் → நோலாதவர் நோல் = தவம்செய்தல். ஆ —எதிர்மறை இடைநிலை.]

நோலாதார் *nōlādār,* பெ. (n.) பொறாமைக் காரர்கள்; jealous persons.

[நோலுதல் = பொறுத்தல். நோல் + ஆ + த் + ஆர்.]

நோலாமை *nōlāmai,* பெ. (n.) 1. செய்த தீவினைக்கு வருந்தாமை (R.C.); un-repentance. 2. பொறாமை; jealous. "*நோலாமையினால் மேலானது போம்*" (பழ.).

[நோல் + ஆ + மை]

நோலாவலை *nōlāvalai,* பெ. (n.) மீன்பிடிக்கும் வலைவகை (அபி.சிந்.1017); a kind of fishing net.

நோலிகம் *nōligam,* பெ. (n.) நின்றிடந் தீயஞ்சான் என்னும் குருவிச்சை (புல்லுருவி); honey suckle mistletoe, Loranthuselasticus. (சா.அக.).

நோலை *nōlai,* பெ. (n.) **1.** எள்ளுருண்டை; sesame ball. "*புழுக்கலு நோலையும்*" (சிலப்.5:68, அரும்.). **2.** எட்கசிவு; a preparation of sesame seed. "*அணங்குடை நோலை*" (பு.வெ.3:40)

[நுல் → நூல் (எள்) → நோல் → நோலை (வே.க.)]

நோவல் *nōval,* பெ. (n.) அப்பம் (அக.நி.); bread.

நோவறை *novaṟai,* பெ. (n.) **நோயறை** பார்க்க; *see nōyaṟai.* (சா.அக.).

[நோ + அறை]

நோவாளி *nōvāḷi,* பெ. (n.) **1. நோயாளி** (வின்.) பார்க்க; *see nōyāḷi.* **2.** ஏழை (யாழ்.அக.); poor man.

[நோவு + ஆளி. நோவு = வலி, துன்பம், வறுமை]

நோவாளிமடம் *nōvāḷi-maḍam,* பெ. (n.) மருத்துவ மனை (பாண்டி); hospital.

[நோவாளி + மடம்.]

நோவு *nōvu,* பெ. (n.) **1.** வலி; pain, hurt, anguish. *உடல் நோவு குறைய வெந்நீரில் குளிக்க வேண்டும்.* **2.** துன்பம் (திவா.); mental anguish. **3.** நோய்; disease. *உடம்புக்கு ஏதாவது நோவா? நோவு ஒருபக்கம் இருக்கச் சூடு ஒருபக்கம் போட்டாற்போல* (பழ.) **4.** மகப்பேற்று நோய்; ஈன்வலி; labour pains. "*ஈன்றக்கா னோவும்*" (நாலடி, 201). *நோவு எடுத்து வெகு நேரமாகியும் குழந்தைபிறக்க வில்லை.* **5.** இரக்கம்; pity. '*தாம் நோவுபடா நிற்பர்*' (ஈடு). **6.** மஞ்சள் (வைத்தியபரிபா); turmeric

ம., க., து. நோவு

[நோ → நோவு.]

நோவுங்கால் *nōvuṅgāl,* பெ. (n.) முடவாட்டுக் கால்; lame leg of a sheep. (சா.அக.).

[நோ + உம் + கால்]

நோவுசாத்து-தல் *nōvu-šāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) பெரியோர் நோய்வாய்ப்படுதல்; to suffer from disease, as eminent religious persons. "*யமுனைத் துறைவர் திருமேனியிலே நோவுசாத்திக் கொண்டிருக்க*" (குருபரம்.241).

[நோவு + சாத்து-தல். சாத்துதல் = நோயால் தாக்கப்படுதல்.]

நோவுநொடி *nōvu-noḍi,* பெ. (n.) **நோய் நொடி** பார்க்க; *see nōy-noḍi.*

[நோவு + நொடி – மரபுத்தொடர்.]

நோவுபோக்கி *nōvu-pōkki,* பெ. (n.) நேர்வாளம்; croton seed, purging nut so called of its eliminiating certain diseases from the system. (சா.அக.).

[நோ → நோவு + போக்கி. நோ = வலி, துன்பம்,நோய். நொ, து ஓரெழுத்து ஒருமொழி என்பது நன்னூல் கருத்தாகும்]

நோவுவாங்கல் *nōvu-vāṅgal,* பெ. (n.) வலிதீர்தல்; ceasing of pain. (சா.அக.).

[நோவு + வாங்கல்.நோவு = நோய்.]

நோவெடுத்தல் *nōveḍuttal,* பெ. (n.) மகப்பேற்றுவலி உண்டாகை; commencement of labour pains.

[நோவு + எடுத்தல். வலி எடுத்தல்]

நோழிகை *nōḻigai,* பெ. (n.) நெசவுநூலின் தாறு (வின்.); wearer's clew of yarn.

[நாழிகை → நோழிகை
நாழிகை = நாடா]

நோளை *noḷai,* பெ. (n.) நோய்நிலை; பிணியுண்டநிலை; sickly condition, used in compound words. *நோளை உடம்பு* **(வின்.)**

[நுல் (நோதல்) → நுள் → நொள் →
நோள் → நோளை (வே.க.) ஒ.நோ.
நோள் → நோய், மாள் → மாய்]

நோற்கிற்பவர் *nōṟkiṟpavar,* பெ. (n.) 1. பொறுப்பவர்; endured person. "*துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா யின்னாச்சொ னோற்கிற் பவர்*" (குறள்,159). 2. தவஞ்செய்யவல்லார்; ascetics. "*சுடச்சுடரும் பொன்போலொளி விடுந் துன்பஞ்சுடச்சுட நோற்கிற் பவர்*" (குறள்.267)

[நோல் → நோற்கிற்பவர்.
நோல்தல் = பொறுத்தல்]

நோற்பார் *nōṟpār,* பெ. (n.) தவஞ்செய்வார்; ascetics, those who practise religious austerities. *"நோற்பாரினோன்மை யுடைத்து"* ***(குறள்,48).***

[நோல்² → நோற்பார். நோல் = தவஞ்செய்தல்]

நோற்பாள் *nōṟpāḷ,* பெ. (n.) சமணமதப் பெண்துறவி (சூடா.); a female ascetic.

[நோல்² → நோற்பாள்.]

நோற்பு *nōṟpu,* பெ. (n.) 1. பொறுமை (வின்.); bearing, endurance. 2. தவஞ் செய்கை; performing penance.

[நோல் → நோற்பு.]

நோறு *nōṟu,* பெ. (n.) வாய் (இ.வ.); mouth. *நோறைமூடிக்கொண்டிரு.*

தெ. நோறு.

[நோல் + து]

நோன்¹–தல் (நோன்றல்) *nōṉ-,* 7செ.குன்றாவி. (v.t.) 1. பொறுத்தல்; to endure, bear. "*பழையன் பட்டெனக் கண்டது நோனானாகி*" (அகநா.44). *அவன்மகன் சிறுதீமையைத் தாங்காத நோனாவாக இருக்கிறான்* 2. தள்ளுதல் (திவா.); to reject. 3. நிலைநிறுத்துதல் (பிங்.); to establish. 4. துறத்தல்; to renounce, as secular things.

க. நோன்

[நோல்¹ → நோன்]

நோன்²–தல் *nōṉ-,* 13செ.கு.வி. (v.i.) தவஞ்செய்தல்; to practise austerities.

[நோல்² → நோன்]

நோன்பி *nōṉbi,* பெ. (n.) உணவுட்கொள்ளா திருப்போன்; ascetic, strict observer of austerities. *"வெந்திற னோன்பிகள் விழுமங் கொள்ளவும்"* (மணிமே.3:75)

[நோன்பு + இ]

நோன்பிரு—த்தல் *nōṉbiru-,* 3 செ.கு.வி. (v.i.) உணவு உட்கொள்ளாதிருத்தல்; to observe ceremonial fasting.

[நோன்பு + இரு—த்தல்]

நோன்பு *nōṉbu,* பெ. (n.) **1.** ஆன்மாவின் தூய்மைக்காக ஒரிருவேளை அல்லது நாள் முழுமையும் உண்ணாதிருக்கை; ceremonial fasting, abstinence from food. *"பூவனந் தடம் வகுத்து நோன்புமுறை போற்றி"* (சேதுபு. பாவநா.19). *"நோன்பு என்பது கொன்று தின்னாமை"* (பழ.). **2.** தவம்; penance, religious austerity. *"மாயிரு நோன்பினை யியற்றி"* (கந்தபு. தக்கன்மக.5) (சூடா.)

ம. நோன்பு; க., து. நோம்பு.

[நோன் → நோன்பு = உண்ணும் உணவு வேளையைக் குறைத்தோ சில எளிய உணவை மட்டும் உண்டோ இறைவனை நினைத்துச் செய்யும் வழிபாடு.]

நோன்புதுற—த்தல் *nōṉbu-dura-,* 3 செ.கு.வி. (v.i.) உண்ணாநோன்பை நிறுத்துதல் (யாழ் அக.); to end the ceremonial fasting.

[நோன்பு + துற—த்தல்]

நோன்புநோல்—தல் (நோன்பு நோற்றல்) *nōṉbu-nōl-,* 17 செ.கு.வி. (v.i.) *நோன்பு பிடி—* (இ.வ.) பார்க்க; *see nōṉby-piḍi-.*

[நோன்பு + நோல்—தல்]

நோன்புபிடி—த்தல் *nōṉbu-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) உண்ணாதிருக்கையை மேற்கொள்ளல்; to observe a fast.

[நோன்பு +பிடி—த்தல். நோன்பைக் கடைப்பிடித்து மேற்கொள்ளுதல்.]

நோன்புயர்—தல் *nōṉbuyar-,* 2, செ.கு.வி. (v.i.) *நோன்புதுற—த்தல்* (கலித்.129:17,உரை) பார்க்க; *see nōṉbu-dura-.*

[நோன்பு + உயர்—தல். நோன்பை முடித்துக் கொள்ளுதல்.]

நோன்பென்றபெண் *nōṉ-penra-pen,* பெ. (n.) நோன்பு; vow. (சா.அக.).

நோன்மார் *nōṉ-mār,* பெ. (n.) நோன்பு மேற்கொள்பவர்; to do penance. *"ஆன்றடங்கறிஞர் செறிந்தனர் நோன்மார்"* (மதுரைக்.481.).

நோன்மை *nōṉmai,* பெ. (n.) **1.** பொறுமை; bearing, endurance, as of affliction; tolerance. *"மிகுசிறப்பின் வருத்தமு நோன்மையும்" (பு.வெ. 10: 6, கொளு).* **2.** வலிமை (பெரும்பாண்.68); vigour, strength, force, might. "நுவன்றிலேன் மனிதனோன்மை" (கம்பரா. நாகபா.288). **3.** பெருமை; greatness. *"நுந்தமாமக னோன்மை"* (பிரபுலிங். வசவண். வந்த. 23). **4.** தவம்; penance.

[நோன் → நோன்மை.]

நோன்றல் *nōṉṟal,* பெ. (n.) பொறுத்தல்; patience, endurance, "*பேதையார் சொன்னோன்றல்*" (கலித்.133). "*உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறு கண் செய்யாமை*" (குறள்.261)

[நோன் → நோன்றல்.]

நோனாது *nōṉādu,* பெ. (n.) ஆற்றாது, பொறாது; inability to bear. "சிறுமை நோனாது" (குறிஞ்சிப்.157)

[நோல் → நோன் → நோனாது.]

நோனாமை *nōṉāmai,* பெ. (n.) 1. தவஞ் செய்யாமை (அக.நி.); non-performance of religious austerities. 2. பொறுமையின்மை (பிங்.); non-endurance. 3. அழுக்காறு (திவா.); envy, grudge.

[நோன் + ஆ + மை. 'ஆ' எ.மறை இடைநிலை. 'மை' பண்புப்பெயர் ஈறு.]

நோனார் *nōṉār,* பெ. (n.) 1. ஆற்றாதார்; incapable persons. "*நோனா ருட்கு மூவகை நிலையும்*" (தொல். பொருள்.72). 2. பகைவர் (பிங்.); enemies. 3. தவமில்லாதவர் (அக.நி.); those who neglect religious duties.

[நோன் + ஆ + ஆர். ஆ –எதிர்மறை இடைநிலை]

நோனாவட்டம் *nōṉāvaṭṭam,* பெ. (n.) *நொறு நாட்டியம்* பார்க்க; *see noṟu-nāṭṭiyam.*

நோனி *nōṉi,* பெ. (n.) பெண்குறி; pudendum muliebre.

[நுல்(துளை) → நொல் → நோல் → நோலி → நோனி.நோனி → வ. யோனி.வடவர் இச்சொற்கு 'யு' என்பதை வேராகக் காட்டுவது பொருந்தாது–வே.க.நுல்[2]]

நௌ[1] *nau,* நகர மெய்யும் ஔகார உயிரும் சேர்ந்த உயிர்மெய் எழுத்து; the compound of 'n' and 'au'.

[ந் + ஔ–நௌ.]

நௌ[2] *nau,* பெ. (n.) மரக்கலம் (சூடா.); boat, ship.

நௌகதாரி *naukadāri,* பெ. (n.) செங்கத்தரி; orbicular, Capparia pedunculosa. (சா.அக.).

இதன் பட்டையும் மற்ற பாகங்களும் மருந்திற்குதவும்.

நௌகாகிதம் *naukākidam,* பெ. (n.) சூரை; jackal, jujubi, Ziziphus napeca alias z-oenaplia. (சா.அக.).

நௌகாசரை *nau-kāšarai,* பெ. (n.) எட்டிமரம்; nuxvomica tree, Strychnine nuxvomica. (சா.அக.).

நௌகாபத்திரி *naukāpattiri,* பெ. (n.) சாதிபத்திரி; mace, Myristica fragrams. (சா.அக.).

நௌபத்தோமம் *naupattōmam,* பெ. (n.) குரோசாணி ஓமம்; Khorassan ajwaun common hennane, Hyoscyamus niger. (சா.அக.).

நௌபந்திகை *naupandigai,* பெ. (n.) மோகனத்தி என்னும் ஒருவகை வாழை; a species of plantain tree, Musapara disiaca genus. (சா.அக.).

நௌபுல்லுருவி *nau-pulluruvi,* பெ. (n.) ஒருவகைப்புல்லுருவி; a kind of parasitic plant, Loranthus genus.

[நௌ + புல் + உருவி]

நௌலி *nauli,* பெ. (n.) *நௌபுல்லுருவி* பார்க்க; *see nau-pulluruvi.*

நௌவி *nauvi,* பெ. (n.) மான்; deer, *"பெருங்கவின் பெற்ற சிறுதலை நௌவி"* (மதுரைக். 275).

[நவ்வி = மான். நவ்வி → நௌவி.]

நௌவுகி *nauuvki,* பெ. (n.) சூரத்து நிலாவவரை; Sūrat senna, foreign senna, Cassia acutifolia. (சா.அக.).

நௌவுகு *nauuvku,* பெ. (n.) கையாந்தகரை; eclipse plant, Ecliptaprosrata. (சா.அக.).

நௌளகு *nauḷagu,* பெ. (n.) சிறு சூழ்ந்துக் குச்சி; a small or medium torch tree, small jungle geranium, Ixora parviflora. (சா.அக.).

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ஆறாம் மடலம் - முதல் பாகம்

பெ - பௌ

Vol. VI-Part -III

முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.

அரசு செயலாளர்,

தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட

இயக்கக வெளியீடு

2005

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ஆறாம் மடலம் - மூன்றாம் பாகம்

பெ - பௌ

Vol. VI- Part - III

முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.

அரசு செயலாளர்,

தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு

2005

முதற் பதிப்பு : 2005

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. VI, Part - III

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு
Government of Tamilnadu

விலை : உருபா 400/–

குறியீட்டெண் : Colon No. P.J1-J, 314"K.M4

வெளியிட்டோர் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

அச்சீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை 600 113.

நூல் கிடைக்குமிடம் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை – 600 113.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி
A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE
VOL. VI- PART III

ஆறாம் மடலம் - மூன்றாம் பாகம்
(பெ - பௌ)

பதிப்புக் குழு
முனைவர் திரு.பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

கூர்ந்தாய்வாளர்
புலவர் இறைக்குருவனார்

தொகுப்பாளர்கள்
திரு.முத்து.பிச்சை
முனைவர் மு.கண்ணன்
முனைவர் பா.வெற்றிச்செல்வன்
முனைவர் ச.செந்திலாண்டவன்
முனைவர் இரா.கு.ஆல்துரை
திரு.கா.இளமுருகு (பகுதிப் பொறுப்பாளர்)
திரு.ச.கி.கணேசன் (ஓவியர்)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

ஜெ ஜெயலலிதா
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை–600 009.

நாள்........26.12.2005

அணிந்துரை

'வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி தமிழ்!' அந்த வண்டமிழ், 'ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி இசை கொண்டு வாழ' ஏற்ற பணிகளை ஆற்றி வருகிறது எனது அரசு.

தமிழ்நாடு அரசு, தமிழ் நாடும் அரசாக விளங்குகின்றது. இந்திய அரசின் ஆட்சி மொழியாகத் தமிழை ஆக்கவும், இணையற்ற தமிழ் மறையாம் திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக ஆக்கவும், ஒல்லும் வகையான் ஓயாது முயன்று வருகிறது தமிழ்நாடு அரசு. 'முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையதாய் விளங்கும் நம் தமிழ், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய்' விளங்க வேண்டும் என்ற விழைவோடு, முத்தமிழோடு நான்காம் தமிழாக அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தி, அதனை மழலையர் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை, மாணவ மாணவியர் கற்க ஏற்பாடு செய்தேன்.

உயர்தனிச் செம்மொழியாம் தமிழின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதுடன் நில்லாது, தமிழ் வளர்த்த சான்றோர்கள் நினைவைப் போற்றும் வகையில் விழாக்கள் எடுத்தும், நினைவிடங்கள் அமைத்தும், அவர்தம் நூல்களைப் பொது உடைமையாக்கியும் சிறப்பித்து வருகிறது எனது அரசு. அந்த வகையிலே, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவைக் கொண்டாடி மகிழ்ந்ததுடன், அவரது நினைவை என்றென்றும் போற்றிப் பாராட்டிடும் வகையில் மதுரை மாநகரில் மணி மண்டபம் உருவாக்கிடவும் முனைந்துள்ளது.

தமிழ் மொழியின் தனிப் பெரும் வளர்ச்சி குறித்த கவிஞர்களின் கனவுகள் நனவாக்கப்பட வேண்டும் என்பது என் விருப்பம்

''வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளி உறுத்தும் படங்களோடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்''

என்ற பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் கனவு மெய்ப்படும் விதத்தில், தமிழ் மொழியின் சொல் வளத்தைப் பெருக்க 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி' (A Comprehensive Etymological Dictionary of Tamil Language) நூல்களை உருவாக்கும் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் சார்பாக கடந்த 2002–ஆம் ஆண்டு வரை ஆறு பகுதிகள் மட்டுமே வெளியிடப்பட்டிருந்தன. 2002–2003–ஆம் ஆண்டில், சட்டமன்றப் பேரவையில், எஞ்சிய 25 பகுதிகள் நான்காண்டுகளில் தொகுத்து முடிக்கப் பெறும் என்ற அரசின் அறிவிப்பினைத் தொடர்ந்து, தொய்வுற்றிருந்த அகரமுதலித் திட்டத்திற்குப் புத்துயிர் ஊட்டி, போதுமான நிதியுதவியும் வழங்கி, பணிகள் முடுக்கிவிடப்பட்டதன் விளைவாய், ஆண்டுக்கு ஆறு பகுதிகள் என்ற முறையில், முதற்கட்டமாகத் தொகுத்து அச்சிட்டு முடிக்கப்பட்ட 'ச' மற்றும் 'த' வரிசைச் சொற்களின் 6 பகுதிகள் அண்மையில் 9.8.2005 அன்று என்னால் வெளியிடப்பெற்றன. அதனைத் தொடர்ந்து இரண்டாவது கட்டமாக 'ந' மற்றும் 'ப' வரிசை சொற்களில், 6 பகுதிகள் தொகுத்து முடிக்கப்பட்டு அச்சிடப்பட்டு அவை தற்போது வெளியிடப்படுவதை அறிந்து பெரு மகிழ்வு அடைகிறேன்.

'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிப்' பணி சீரிய பணி. அந்தச் சீரிய பணியில் ஈடுபட்டு செந்தமிழைச் செழுந்தமிழாய் ஆக்கிவரும் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

தமிழ் வாழ்க ! தமிழ்ப் பணி வளர்க !

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
டாக்டர் செல்வி ஜெ ஜெயலலிதா



தமிழ்நாடு அரசு

சி.வி.சண்முகம்
கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை

"தமிழுண்டு தமிழ் மக்களுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு"
– (பாவேந்தர்)

மிகப் பழங் காலந்தொட்டு மொழி பற்றிய ஆய்வு இருந்து வந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் உள்ளன என்பர் மொழியாராய்ச்சியாளர்கள். தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள் பண்டைக் காலத்தில் கொண்டிருந்த மொழி பற்றிய தெளிவான அறிவினைத் தெற்றெனத் தெரிவிப்பனவாக இருப்பதைக் காணலாம். மொழியானது மாறும் தன்மை கொண்டது; பழமையான மொழிக் கூறுகளில் சில அழிவதும் புதியதாக சில தோன்றுவதும் மொழி வழக்கில் இயல்பு என்பர் அறிஞர் பெருமக்கள்.

தமிழ் மொழியைப் பொறுத்தவரை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான இடைவெளியில் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை மறுக்கவியலாது. பழைய சொற்கள் சில வழக்கொழிந்துள்ளன. புதிய சொற்கள் பல உருவாகியுள்ளன. புதிய கண்டுபிடிப்புகளையும், புதுப்புனைவுகளையும் வெளிப்படுத்த புதுச் சொற்கள் தேவை. இது மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாய் அமையும் என்பதில் ஐயமில்லை.

ஞாலத் தொன்மொழிகளுள் தாய்மையும், தலைமையும், தகைமையும் கொண்டது நம் தமிழ்மொழியாகும். தமிழின் தூய்மையையும், மாண்பையும், தனித்தியங்கும் ஆற்றலையும், இயற்கைச் சிறப்பையும் இனிமையையும், எளிமையையும் விரிவாக எடுத்துக்காட்டி நிலைநாட்டிய பெருமை 'மொழிஞாயிறு' தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு உண்டு. சொற்களை அகழ்வாய்வு செய்வதன்வழி மொழிக்கு அகழ்வாய்வு என்ற துறையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்திய பெருமை அவரைச் சாரும்.

அத்தகைய மாபெரும் அறிஞர் காட்டியுள்ள நெறிமுறைகளை அடியொற்றி செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி பகுதிகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. அண்மையில் 'ச'கரம் மற்றும் 'த'கரம் வரிசையில் 6 பகுதிகள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின்

திருக்கரங்களினால் வெளியிடப்பெற்றுள்ளன. அதனைத் தொடர்ந்து தற்போது 'ந'கரம் மற்றும் 'ப'கரம் வரிசையில் 6 பகுதிகள் வெளியிடப் பெறுகின்றன என்பதையறிந்து மகிழ்கிறேன். இந்த சீரியத் திட்டத்திற்கு அனைத்து வகையிலும் பேராக்கமும், பேராதரவும் நல்கி வரும் நம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி 'அம்மா' அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே, ஏன் ஆசியக் கண்டத்திலேயே தலைசிறந்து விளங்கும், தன்னிகரில்லாத் தங்கத் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சிக் காலம் பொற்காலம் என்று மேனாட்டரும் புகழ்பாடுகின்றனர். சோதனைகளை முறியடித்து, சாதனைக்கு மேல் சாதனைப் படைத்து, வெற்றிக் கொடி நாட்டி வரும் மாண்புமிகு முதலமைச்சர் 'அம்மா' அவர்களின் சாதனைகள் நீண்டு தொடரும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி வெளியீடுகள் வருவதில் அரும்பங்காற்றிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் பொறுப்பு இயக்குநராகப் பதவி வகிக்கும் தமிழ் வளர்ச்சிப் பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசு செயலாளர் முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப., அவர்களுக்கும், நூல்களை உருவாக்குவதற்கு அயராதுழைத்த அகரமுதலித் திட்ட இயக்ககப் பணியாளர்களுக்கும் என் மனமுவந்த பாராட்டுக்கள்.

சி.வி.சண்முகம்

சென்னை.

முனைவர்.பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி – பண்பாடு
(ம) அறநிலையத் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்,

பதிப்புரை

மொழி வளர்ச்சியின் அளவுகோல் அகரமுதலி எனில், அது மிகவும் பொருந்தும். ஒரு மொழியில் வெளிவந்துள்ள அகரமுதலிகள், அம்மொழி எந்தெந்தத் துறையில் சொல்வளம் பெற்றுள்ளது என்பதைக் காட்டும் வரலாற்றுப் பெட்டகமாகும். ஒரு மொழியின் சொல்வளத்தைத் தெரிந்து கொள்ளவும், சொற்களின் பொருள் வீச்சைத் துல்லியமாகப் புரிந்து கொள்ளவும் அகரமுதலி உதவுகிறது எனில், அது மிகையன்று.

செந்தமிழின் தொன்மையையும், பழமையையும் பறைசாற்றும் நோக்கில், தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தற்போது ஆறாம் மடலம்–மூன்றாம் பாகத்தை (பெ–பௌ) வெளியிடுகின்றது. இந்நூல் பேரகரமுதலி வெளியீடுகள் வரிசையில் பதினெட்டாவது பகுதியாகும்.

செந்தமிழ் மீட்பர் தேவநேயப் பாவாணர் அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில், வேர்ச்சொல் நெறிமுறைக்கு மெருகூட்டும் சொற்கள் இந்நூலில் அழகுறக் காட்டப்பட்டுள்ளன. சான்றாக, பேசு என்ற சொல்லுக்கான மூலத்தைக் காட்டும் வகையைக் காணலாம்.

பொள் – துளை
பொள்ளுதல் – துளைத்தல்
பொள் → பொய் (ஒ.நோ.) தொள் → தொய்

பொய்தல் – 1. துளைபடுதல்
2. துளையினின்று ஒழுகுதல்

பொய் → பெய் 1. மேலினின்று ஒழுகுதல்
2. வார்த்தல்
3. சிறுநீர் கழித்தல்

பெய் → பேய் (மழை பேய்ந்தும் கெட்டது
மழை ஓய்ந்தும் கெட்டது – வழக்கு)

பேய் → பேயு → பேசு (ஒ.நோ.) தேய் → தேயு → தேசு

பேசுதல் – வான் நீரை ஒழுக விடுவது போன்று வாய்ச்சொல்லை ஒழுகவிடுதல்.

பெய்தல் என்ற சொல்லுக்கு 16 வகைப் பொருள்களும் அவற்றிற்குரிய இலக்கிய மேற்கோள்களும் இந்தத் தொகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

பொத்தகம் என்ற சொல்லுக்கு பொரு → பொருத்து → பொருத்தகம் → பொத்தகம் என்று பாவாணர் நெறிப்படி சொற்பிறப்பியல் கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பொருள் என்ற சொல்லுக்கு 27 வகையான பொருள் விளக்கங்களும் மேற்கோள்களும் காட்டப்பட்டுள்ளன.

பொறி என்ற சொல்லுக்கு 32 வகையான பொருள் விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அடுத்து, *'பேறு'* என்ற சொல்லுக்கு 14 வகைப் பொருள் விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பேறு என்னும் சொல் புகல், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் ஆகிய பதினாறு வகைப்பட்ட செல்வங்களைக் குறிப்பதையும் காணலாம்.

போதல் என்ற சொல்லுக்கு மட்டும் 27 வகை நேர்வினைப் பொருள்களும், துணை வினைப் பொருள்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்பது தொல்காப்பியம். தமிழிலும் பலசொற்களைக் கண்ட அல்லது கேட்டமட்டில் அவற்றின் வேர்ப்பொருளைக் காணமுடியாது. சில சொற்களில் விளங்கித் தோன்றும்; சிலவற்றில் மறைந்து நிற்கும். மறைந்து நிற்பவற்றை ஆய்ந்து காண வேண்டும். அதனால் தான் *"மொழிப் பொருட்காரணம் விழிப்பத் தோன்றா"* என்றார் தொல்காப்பியர். தமிழ் வரலாற்றையும், தமிழர் வரலாற்றையும் ஆழ்ந்தாய்ந்து தமிழ் மொழியே உலகின் முதன்மொழி என்று நிறுவிக் காட்டிய பாவாணரின் தமிழ்த் தொண்டு என்றென்றும் போற்றப்பெறும் என்பதில் ஐயமில்லை.

பேரகரமுதலி எஞ்சிய பகுதிகள் யாவும் திட்டமிட்டவாறு வெளிவருதற்குச் செயலூக்கம் அளித்துவரும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களுக்கு இத்துறையின் பொறுப்பு இயக்குநர் என்ற முறையில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் ஆணையின் வண்ணம் நல்லாதரவு நல்கும் **மாண்புமிகு கல்வி அமைச்சர்** அவர்களுக்கும் மேலான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் வெளிவர அயராதுழைத்த தொகுப்பாளர் (பகுதிப் பொறுப்பாளர்), பதிப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர்கள் மற்றும் திட்டப் பணியாளர்கள் / அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை

–07–2005

(பு.ஏ. இராமையா)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

பெ

பெ pe, பெ. (n.) தமிழ் நெடுங்கணக்கில் 'ப்' என்ற மெய்யும் 'எ' என்ற உயிர்க்குறிலும் சேர்ந்து உருவான உயிர்மெய்யெழுத்து; the compound of, `p' and, `a'

[ப் + எ = பெ]

பெங்கு peṅgu, பெ. (n.) ஒருவகைக் கள் (மூ.அ.); a kind of toddy.

பெட்டகங்கொட்டு—தல் peṭṭagaṅ- koṭṭu-, பெ. (n.) மணப்பெண்ணுக்கு வரிசை யெடுத்துச் செல்லும் போது கைதட்டி மங்கலவொலி எழுப்புதல்; to clap the hands in applause when presents are carried in procession to a bride.

[பெட்டகம் + கொட்டு–,தல்]

பெட்டகத்துத்தி peṭṭaga-t-tutti, பெ. (n.) வெண்டைவகை; (மலை) musk-mallow.

[பெட்டகம் + துத்தி]

பெட்டகநூல் peeṭṭaga-nūl, பெ. (n.) வழிகாட்டுப்பொத்தகம்; source-book.

[பெட்டகம் + நூல்]

பெட்டகப்பெட்டி peṭṭaga-p-peṭṭi, பெ. (n.) மரம் அல்லது இரும்பாலாகிய பெரும் பேழை; safe or treasure-chest made either of wood or iron.

[பெட்டகம் + பெட்டி]

பெட்டகம் peṭṭagam, பெ. (n.) **1.** பெட்டி; chest, box. *'ஆங்கிலங்கு மளப்பரும் பெட்டகம்'* (திருவாலவா;27:22.) **2.** மணப்பெண்ணுக்கு வரிசைகள் கொண்டு செல்லும் பெட்டி; a box in which presents to the beride are carried in procession.

[பிள் → பெள் → பெட்டி → பெட்டகம்]
(வே.க.110)

பெட்டல் peṭṭgal, பெ. (n.) **1.** விருப்பம்; (திவா). desire, longin. *'பிரித்தலும் பெட்டலும்'* (தொல்.கற்பு. 6). **2.** காதலித்தல்; loving. *'பிறன் பொருளாட் பெட்டொழுகும் பேதைமை'* (குறள்.141). **3.** செய்ய விரும்புதல்; desire to do. *'பெட்டவை செய்யார்'* (இனி. நாற். 23).

[பிள் → பெள் = பெள் + தல் = பெட்டல்]
(வே. க. 88)

பெட்டன் peṭṭaṉ, பெ. (n.) பொய்யன்; liar, deceiful person. *'பெட்டனாகிலுந் திருவடிப் பிழையேன்,'* (தேவா. 1110, 2).

[பெட்டு → பெட்டன்]

பெட்டார் peṭṭār, பெ. (n.) **1.** நண்பர்; friends. (சூடா). **2.** விரும்பியவர்; lovers. *'பேணாது பெட்டார்'* (குறள் 1178).

[பெள் → பெட்டார்]

பெட்டி[1] peṭṭi, பெ. (n.) **1.** பண்டங்களை வைத்துக் காக்கவுதவும் மூடியுள்ள கலம்; chest, trunk, coffer. **2.** கூடை (வின்.); basket, flower-basket. **3.** தொடர்வண்டி முதலியவற்றின் அறை; compartment, as in a railway carriage. **4.** வண்டியோட்டுபவன் உட்காரும் இடம்; driver's seat in a carriage. **5.** வண்டியில் உட்காருமிடத்திற்கு அடியில் சிறுபொருள்கள் வைப்பதற்கான இடம்; fixed box under the seat in a carriage. **6.** சான்றாளி; witness box. **7.** சுண்ணாம்பு முதலியன அளக்கும் முகத் தலளவை; a measure of capacity, as in measuring lime.

[பிள் → பெள் → பெட்டி]



பெட்டி[2] peṭṭi, பெ. (n.) நெல்வகை; a kind of paddy.

பெட்டிக் கோரை peṭṭi-k-kōrai, பெ. (n.) கோரை வகை; a glalbrous rush-like sedge.

[பெட்டி + கோரை]

பெட்டிகரிபிலை pieṭṭi-karipilai, பெ. (n.) நெல்வகை; a kind of paddy.

பெட்டிப்பல்லக்கு peṭṭi-p-pallakku, பெ. (n.) பெட்டியின் உருவில் அமைந்த பல்லக்கு வகை; box-like-palanguin.

[பெட்டி + பல்லக்கு]



பெட்டிபோடு—தல்[1] peṭṭi-pōḍu-, செ.கு.வி. (v.i.) ஒத்திசை, இசைத்தல் (இக்.வு.); to play on the harmoniam. "பெட்டி போடுகிற பையன் இன்னும் வரவில்லையா?" (உ.வ.)

[பெட்டி + போடுதல்]

பெட்டிபோடு—தல்[2] peṭṭi-pōḍu-, செ.கு.வி. (v.i.) சூடேறிய மாழைப்பெட்டியால் துணியின் சுருக்கம் நீங்கத் தேய்த்து மடித்து வைத்தல்; inoning.

[பெட்டி + போடு—,]

பெட்டிமோதிரம் petti-mōdiram, பெ. (n.) மோதிர வகை (புதுவை.); a kind of ring.

[பெட்டி + மோதிரம்]

பெட்டியடி peṭṭi-y-adi, பெ. (n.) பண வரவு செலவு செய்யுங் கணக்கப் பிள்ளை; cashkeeper.

[பெள் → பெட்டி → பெட்டியடி]

பெட்டியிழைப்புளி petti-y-ilaippuli, பெ. (n.) இழைப்புளி வகை; (கட்டட. நாமா. 39) panel plane.

[பெட்டி + இழைப்புளி]



பெட்டிலிக்குழல் pettili-k-kulalr, பெ. (n.) *சுங்குத்தான் குழல்* பார்க்க; see *sunguttan kulal.*

[பெட்டிலி + குழல்]

பெட்டிவண்டி petti-vandi, பெ. (n.) வண்டி வகை; bullock-coach.

[பெட்டி + வண்டி]

பெட்டிவரிசை petti-varišai, பெ. (n.) மணப்பெண் புகுந்தவீடு செல்லும்போது கொண்டு செல்லும் வரிசை; presents taken by a bride when she goes to her bridegroom's house.

[பெட்டி + வரிசை]

பெட்டிவாணம் petti-vānam, பெ. (n.) பெட்டியினின்று பல உருவங்களில் வெளிப் படும் வாணவகை; fire works in the shap of a case from which various figures are liberated, one after another.

[பெட்டி + வாணம்]

பெட்டு pettu, பெ. (n.) 1. பொய் (பிங்); lie, false- hood. *'மானுடம் போன்று பெட்டினை யுரைப்போர்'* (பதினொ. கோபப்பிர). 2. மயக்குச்சொல்; delusive word. *'கயவர் சொல்லும் பெட்டைக் கெடுக்கும்'* (திவ். இராமாநுச நூற். 93).

[பெள் → பெட்டல் → பெட்டு]
(வே. க. 89)

பெட்டெனல் pettendal, பெ (n.) விரைவுக்குறிப்பு; expr. signi fying. quickness. *'ஏகுதிர் பெட்டென்று'* (காஞ்சிப்பு. நாடு. 21)

ம. பெட்டெந்நு

[பெட்டு + எனல்]

பெட்டை[1] pettai, பெ. (n.) 1. விலங்கு புட்கள் இவற்றின் பெண்பால் (தொல். பொ. 607/8); female of animals and birds. 2. பெண்; woman, girl. *"ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை பெட்டை யென்னும் பெயர்க் கொடைக் குரிய"* (தொல். மரபு. 53). *"புள்ளும் உரிய அப்பெயர்க் கென்ப."* (தொல். மரபு. 54).

ம., தெ. பெட்ட.

[பெள் → பெட்டை] (வே. க. 89)

பெட்டை[2] pettai, பெ. (n.) 1. குருடு; blindness 2. குறைவு (யாழ்ப்.); imperfection.

[பெள் → பெட்டை]

பெட்டைக்கட்டு pettai-k-kattu, பெ. (n.) தளர்ந்த முடிச்சு (யாழ்ப்.); loose knot, not badly tide.

[பெள் → பெட்டை + கட்டு]
(வே. க. 89)

பெட்டைக்கடல் peṭṭaik-k-kaṭal, பெ. (n.) ஆழமற்ற கடல்; shallow sea.

[பெள் → பெட்டை + கடல்]

பெட்டைக்கண் peṭṭai-k-kaṉ, பெ. (n.) 1. குறையுடய கண் (வின்.); defective eye. 2. மாறு கண்; squint eye. 3. சிறுகண்; small-eye. 4. தேங்காயின் மட்டையிலுள்ள துளையில்லாக் கண்கள்; the two false eyes of a coconut.

[பெள் → பெட்டை + கண்]

பெட்டைக்காடு peṭṭai-k-kāḍu, பெ. (n.) விளைவற்ற நிலம்; barren tract of land.

[பெள் → பெட்டை = காடு]

பெட்டைக்குஞ்சு peṭṭai-k-kuñju, பெ. (n.) *பெட்டைக் கோழி* பார்க்க; see *peṭṭai-k-kōḻi.*

[பெட்டை + குஞ்சு]

பெட்டைக் கோழி peṭṭai-k-kōḻi, பெ. (n.) இளம் பெண்கோழி; Pullet, moorhen.

[பெட்டை + கோழி]



பெட்டைமாறி[1] peṭṭai-mari, பெ. (n.) 1. கெட்ட வொழுக்க முடையவளின் கணவன்; cuckold. 2. ஆண் தன்மையுள்ள பெண்; masculine woman, Nirago.

[பெள் → பெட்டை → மாறி]

பெட்டைமாறி[2] peṭṭai-māṟi, பெ. (n.) மனைவி தீயவொழுக்கத்தைக் கண்டும் காணாதவன் போலிருப்பவன்; man who winks at wife's in fidelity.

[பெள் → பெட்டை + மாறி]

பெட்டை முடிச்சு peṭṭai-muḍiccu, பெ. (n.) *பெட்டைக் கட்டு* பார்க்க; see *peṭṭai-k-kaṭṭu.*

[பெள் → பெட்டை + முடிச்சு]

பெட்டையன் peṭṭaiyaṉ, பெ. (n.) 1. அலி; hermaphrodite, eunuch. 2. ஆண்மையற்றவன்; effeminate man.

[பெள் → பெட்டை + அன்]

பெட்ப pietpa, பெ. (n.) மிக; much, exceedingy. '*பெட்ப நகுகின்றது*' (சீவக. 1662).

[பெள் → பெட்ப]

பெட்பு[1] peṭpu, பெ. (n.) 1. விருப்பம்; desire. (சூடா) '*குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்*' (தொல். களவு. 11). '*பெட்புறும்*' (கம்பரா. மூலபல. 135). 2. பேணுகை; cherishing, regard. '*பெட்ட வாயில் பெற் றிரவு வலியுறுப்பினும்*' (தொல். களவு. 11). 3. அன்பு (சூடா); love. 4. பெருமை (சூடா); greatness. 5. தன்மை; nature.

[பிள் → பெள். பெள் + பு → பெட்பு] (வே. க. 88)

பெட்பு² petpu, பெ. (n.) பாதுகாப்பு; (தொல். சொல். 338). protection.

[பிள் + பெள். பெள் + பு = பெட்பு]
(வே. க. 88)

பெடம் pedam, பெ. (n.) மிகுதி (அக. நி.); much.

தெ. பெத்த.

[பெள் → பெடம்]

பெடை petai, பெ. (n.) புட்களின் பெண் பால்; female of birds. (தெல். பொ. 609) '*பேடையும் பெடையும் நாடின் ஒன்றும்*' (தொ. மரபு. 55) "*செந்தயைலன்றில் இறவினன்ன கொடுவாய்ப் பெடையொடு*" (குறுந். 160).

ம. பெட, க. ஹேட்டே.

[பெள் + பெட்டை + பெடை]
(வே. க. 88)

பெடைமாறி pedai-māṟi, பெ. (n.) பெட்டை மாறி (வின்.) பார்க்க; see peṭṭaimāṟi.

[பெடை + மாறி]

பெண் peṇ, பெ. (n.) 1. பெண் பாலினம்; womankind. "*பெண்ணே பெருமையுடைத்து*" (குறள். 907). "*பெண்ணும் பிணாவும் மக்கட்குரிய*" (தொல். மரபு. 90). 2. மகள்; daughter. "*இந்திரன் பெண்ணை*" (கந்தபு. திருப்ப. 35). 3. சிறுமி; girl. 4. மணமகள்; bride. '*பெண்கோ ளொழுக்கம் கண்கொள நோக்கி*' (அகநா. 112). 5. மனைவி; wife. "*பெண்ணீற் றுற்றென*" (புறநா. 82). 6. விலங்கு நிலைத் திணைகளின் பெடை (திவா); female of animals and plants. 7. பெண்டன்மை; womanish ness.

ம. பெண். க. பெண், ஹெண்ணு.

[பெள் + பெண்]
(வே.க.90)



பெண்கட்டு–தல் peṇ-kaṭṭu, செ.கு.வி. (v.i.) *பெண்கொள்* பார்க்க; see *peṇkoḷ*.

[பெள் + பெண் + கட்டு–தல்]

பெண்கரு peṇ-karu, பெ. (n.) சினை முட்டை; ovum.

[பெள் → பெண் + கரு → பெண்கரு]
(வே. க. 90)

பெண்கலை peṇ-kalai, பெ. (n.) வண்ணப் பாவின் பிற்பகுதி (வின்.) ; latter half of a vaṇṇam verse.

[பெள் → பெண் → பெண்கலை]

பெண்கிரகம் peṇ-kiragam, பெ. (n.) கதிரவனைச் சுற்றிச் செல்லும் திங்கள், வெள்ளியாகிய பெண்பாற் கோள்கள். female, planet, as moom and venus.

[பெள் → பெண் + Skt. graha. *த. கிரகம்]*

பெண்குணம் peṇ-kuṇam, பெ. (n.) *மகடூஉக் குணம்* பார்க்க. see *magaḍūū-k-kuṇam.*

[பெண் + குணம்]

பெண்குமைஞ்சான் peṇ-kumaiñjaṉ, பெ. (n.) சுராலைத் தூள்(சாம்பிராணி) (சங்.அக.); benzin.

[பெள் → பெண் → பெண்குமைஞ்சான்]

பெண்குறி peṇkuri, பெ. (n.) அல்குல்; pedendum muliebre.

[பெள் → பெண் + குறி]

பெண்கேள்–தல் peṇ-kēḷ, செ.குன்றாவி. (v.t.). திருமணஞ்செய்து கொடுக்கும்படி பெற்றோரிடம் மகட் கேட்டல்; to ask the parents of a girl to give her in marriage. "தஞ்சாவூரிலிருந்து பெண் கேட்டு வந்திருக்கிறார்கள்."

[பெள் → பெண் + கேள் –,]

பெண்கை peṇ-kai, பெ. (n.) பெண்பாற் செயல் குறிக்கும் நளிநயக்கை. (சிலப். 3, 18. உரை); gesture of hands representing the action of women.

[பெள் → பெண் → பெண்கை]

பெண்கொடி peṇ-koḍi, பெ. (n.) மெல்லியலான பெண்; woman, tender as a vine. *'ஓர் பெண் கொடியை வதை செய்தான்'* (திவ். நாய்ச். 8:9).

[பெள் → பெண் + கொடி]

பெண்கொடு–த்தல் peṇ-koḍu, பெ. (n.) பெண்ணைத் திருமணஞ் செய்து கொடுத்தல்; to give a girl in marriage. "என் மாமன் எனக்குப் பெண்கொடுக்கமறுக்கிறான்."

[பெள் → பெண் கொடு–த்தல்]

பெண்கொடுத்தமாமன் peṇ-koḍutta-māmaṉ, பெ. (n.) ஒருவனுடைய மனைவியின் தந்தை; a man's father-in-law, dist fr. tāy-māmaṉ.

[பெண் + கொடுத்த + மாமன்]

மாமன் என்னுஞ் சொல் அம்மானையுங் குறிக்கலானமையின் அதனின்று வேறுபடுத்தும் பொருட்டுப் பெண் கொடுத்த என்னும் அடைமொழி சேர்ந்தது.

பெண்கொலை peṇ-kolai, பெ. (n.) பெண்ணைக் கொலை செய்தல்; murder of a women. *'பெண் கொலை புரிந்த நன்னன் போல'* (குறுந். 292)

[பெள் → பெண் + கொலை]

பெண்கொள்(ளு)–தல் peṇ-koḷ, செ.கு.வி. (v.i.) பெண்ணைத் திருமணஞ்செய்தல்; to marry or take a wife. *'பேய் கொண்டாலுங் கொள்ளலாம் பெண் கொள்ளலாகாதே'* (சிவப். பிர. வரலாறு. பக். 19).

[பெள் → பெண் + கொள்(ளு)–தல்]

பெண்கோலம் peṇ-kōlam, பெ. (n.) 1. மகளிர் பூணுங் கோலம்; female attire or costume. 2. பெண் புனைவு (வேடம்) (வின்.); female part or disguise.

[பெண் + கோலம்]

பெண்கோள் peṇ-kōḷ, பெ. (n.) பெண்ணை மணம்புரிந்து உறவுசெய்து கொள்கை; entering into alliance with another family by marrying a girl. "*பெண் கோளொழுக்கத்தி னொத்து மறுத்தல் பற்றி*" (தொல். பொ. 79, உரை). 2. *பெண் கிரகம்* (நாமதீப்.101) பார்க்க; see *peṇ-kiragam.*

[பெண் + கோள்]

பெண்சக்கரவர்த்தி peṇ-cakkaravartti, பெ. (n.) 1. பேரரசி; empress; *'பெண் சக்கரவர்த்தி யுடனெய்திய பள்ளியினி தெழுந்து'* (விக்கிரம. உலா. 80). 2. *பெண்ணாயகம்* பார்க்க; see *peṇ-nāyagam.*

[பெண் + Skt. cakravarti. *த. சக்ரவர்த்தி]*

பெண்சகோதரம் peṇ-šagōdaran, பெ. (n.) உடன்பிறந்தாள்; sister.

[பெண் + Skt. sahōdara. *த.சகோதரம்]*

பெண்சந்ததி peṇ-šandadi, பெ. (n.) 1. பெண் குழந்தை; female issue. 2. பெண் பிறங்கடை; female heir.

[பெண் + Skt. santati. *த.சந்ததி]*

பெண்சரக்கு peṇ-šarakku, பெ. (n.) படிக்காரம், பழப்புளி, காடி முதலிய புளிப்புள்ள சரக்குகள் (மூ.அ); any acid which a readily combines with an alkali or base, as paḍikkāram, paḻa-p-puli, kāḍi dist. fr.āṉ-šarakku.

[பெண் + சரக்கு]

பெண்சனம் peṇ-šaṉam, பெ. (n.) மகளிர் கூட்டம்; womanfolk. *'தண்கோசம்பிப் பெண்சன நோக்கி'* (பெருங்.நரவாண.9, 34).

[பெண் + Skt. jana. *த. சனம்]*

பெண்சாதி peṇ-šadi, பெ. (n.) 1. பெண்பாலர்; woman kind. *'குணச் சிறப்பால் உலகத்துப் பெண்சாதி விருப்பமுற்ற...மகளிர்.'* (மதுரைக். 555, உரை). 2. மனைவி; wife. *'உன்தன் வீட்டுப் பெண் சாதிக்காக'* (இராமநா. அயோத்.8).

[பெள் → பெண்+ சாதி]

பெண்சாவி peṇ-šāvi, பெ. (n.) துளையுள்ள தாழ்க்கோல் ; tubular key bored key.

*[பெள் → பெண்.*Port.cāvi. *த.சாவி]*



பெண்சிரட்டை peṇ-širaṭṭai, பெ. (n.) கண்ணுள்ள கொட்டாங்கச்சி (நெல்லை.); the outer shell of that half of a broken cocount containing its eye.

[பெள் → பெண் → பெண்சிரட்டை]



பெண்சினை peṇ-šiṉai, பெ. (n.) *பெண்கரு* பார்க்க; see *peṇkaru.*

[பெண் + சினை]

பெண்சீக்கு peṇ-šīkku, பெ. (n.) தகாப்புணர்ச்சி யால் வரும் பாலியல் நோய்; venereal disease.

[பெண் + E.sick *> த. சீக்கு]*

பெண்சோடினை peṇ-šōḍiṉai, பெ. (n.) 1. நாடகத்திற் கொள்ளும் பெண் கோலம்; female attire for the stage. 2. மணப் பெண்ணை ஒப்பனை செய்தல்; decoration of a women, as a bride.

[பெள் → பெண் + சோடினை]

சோடனை
சுவடி → சோடி → சோடினை = ஒப்பனை.

பெண்டகம் peṇḍagam, பெ. (n.) *பெண்டகன்* பார்க்க, see *peṇḍagaṉ.*

[பெள் → பெண் → பெண்டு →பெண்டகம்] (வே.க.பக்.90)

பெண்டகன் peṇḍagaṉ, பெ. (n.) அலி (பிங்.); hermaphrodite, eunuch.

க. ஹெண்ணுக.

[பெள் → பெண் → பெண்டு →பெண்டகம்] (வே.க.90)

பெண்டகை peṇḍagai, பெ. (n.) *பெண்டகைமை* பார்க்க; see peṇḍagaimai.

[பெண் + தகை → பெண்டகை]

பெண்டகைமை peṇḍagaimai, பெ. (n.) பெண்மைக் குணம்; womanliness.

[பெண் + தகைமை]

பெண்டன் peṇḍaṉ, பெ. (n.) *பெண்டகன்* பார்க்க; see *peṇḍagaṉ.*

ம. பெண்டி, க. பெண்ட், கெண்ட, தெ. பெண்ட்டி.

[பெண்டு → பெண்டன் = பேடி (திவா.)] (வே.க. பக். 92)

பெண்டாட்டி peṇḍaṭṭi, பெ. (n.) 1. பெண்; woman. *'செல்லப் பெண்டாட்டி நீ'* (திவ். திருப்பா. 11). *"ஒரு பெண்டாட்டி தமரொடு கலாய்த்து"* (இறை. கள.1, உரை). 2. மனைவி; wife. *'கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி'* (திடுகடு. 96). 3. வேலைக் காரி; woman servant. (s.i.i. 11. 483).

க. ஹெண்டத்தி

[பெண்டு + ஆள் → பெண்டாட்டி]

பெண்டாளு–தல் peṇḍālu, செ.குன்றாவி. (v.t.) மனைவியாக நுகர்தல்; to have as wife.

தெ. பெண்ட்லாடு.

[பெண்டு + ஆள்]

பெண்டிழந்தான் சுழி peṇṭiḻantāṉ-euḻi, பெ. (n.) தன்னை உடையவனது மனைவியை இழக்கச் செய்வதாகக் கருதப்படும் மாட்டுச் சுழிவகை (மாட்டுவா. 22).; unlucky mark in cattle in the form of a line across the back, indicating that the owner will lose his wife.

[பெண்டு + இழந்தான் + சுழி]

பெண்டு peṇḍu, பெ. (n.) 1. பெண்; woman. *"ஒரு பெண்டா லிதய முருகினை யாயின்"* (வெங்கைக்கோ. 47). 2. மனைவி; wife. *"வனை நல முடையளோ மகிழ்நின் பெண்டே"* (ஐங்குறு. 57).

ம. பெண்டி, க. பெண்ட, ஹெண்ட, தெ. பெண்ட்டி

[பெண் → பெண்டு] (வே.க.92)

பெண்டுக்கஞ்சி peṇḍukkañji, பெ. (n.) ஆண்மையற்றவன்; effeminate-man.

[பெண்டுக்கு + அஞ்சி]

பெண்டுக்குமேய்க்கி peṇḍukku-mēykki, பெ. (n.) **1.** பெண் கொண்ட வீட்டைச் சேர்ந்து தன் மனைவியின். ஆடுகளை மேய்க்கும் இடையர் இனத்தவன்; a division of a itaiyar who tend the sheep of their wives and observe matriarchal customs. **2.** மனைவிக்குக் கீழடங்கி நடப்பவன்; henpecked husband.

[பெண்டு + மேய்க்கி]

பெண்டுகட்டு-தல் peṇḍu-kaṭṭu, செ.குன்றாவி. (v.t.) தகாத சேர்க்கை குறித்துப் பழிகூறுதல் (வின்.); to attribrute criminal intimacy with a person of the opposite sex.

[பெண்டு + கட்டு-தல்]

பெண்டுகம் peṇḍugam, பெ. (n.) *கழற்சி* பார்க்க (மலை); see *kaḻaṟci.*

[பெண் → பெண்டு → பெண்டுகம்]

பெண்டுகள்சட்டி peṇḍugal-šaṭṭi, பெ. (n.) **1.** பெண்கொண்ட வீட்டைச் சேர்ந்து தன் மனைவியின் ஆடுகளை மேய்க்கும் இடையர்; a division of itḍaiyar who tend the sheep of their wives and observe matriarchal customs. **2.** மனைவிக்குக் கீழடங்கி நடப்பவன்; henpecked husband.

[பெண்→பெண்டு – பெண்டுகள் + சட்டி]

(வே.க.92)
பெண்டு = பேடி

பெண்டு பிள்ளை peṇḍu-piḷḷai, பெ. (n.) மனைவி குழந்தைகள் அடங்கிய குடும்பம்; family, as consisting of wife and children.

[பெண்டு + பிள்ளை]

பெண்டுருவன் peṇṭururan, பெ. (n.) திருமால் (நாம. தீப. 50); thirumāl, as having assumed the form of mogiṉi.

[பெண் → பெண்டு + வரு → பெண்டுருவன்]

பெண்டுவசட்டி peṇḍuva-šaṭṭi, பெ. (n.) *பெண்டுகள் சட்டி* பார்க்க; see *peṇḍugal caṭṭi.*

[பெண்டுகள் + சட்டி → பெண்டுவசட்டி]

பெண்டுவை-த்தல் peṇḍu-vai, செ.குன்றா.வி. (v.t.) வைப்பாட்டியாகக் கொள்ளுதல்; to keep as concubine. *'நீரிவளைப் பெண்டுவைத்துக் கொள்ளும்'* (தெய்வச், விறலிவிடு. 292).

[பெண்டு + வை-த்தல்]

பெண்டைக்காய் peṇḍai-k-kāy, பெ. (n.) வெண்டைக் காய்; lady's finger.

[பெண்டை + காய்]

பெண்டை மரக்கால் peṇḍai-marakkāl, பெ. (n.) இரண்டரைப்படி கொள்ளும் தவச வளவை; containing two and a half paḍi.

[இரண்டரை → ரெண்டரை → பெண்டரை → பெண்டை + மரக்கால்]

பெண்ணடி peṇ-n-aḍi, பெ. (n.) பெண்பிறங்கடை; female child for heir. *"ஒரு பெண்ணடி தன் காணிக்குத் தேடக் கருத்தாகி"* (விறலிவிடு. 152).

[பெண் + அடி]

பெண்ணரசி peṇ-ṇ-arašì, பெ. (n.) 1. ஆட்சிபுரியும் பெண்; queen consort. *'தன்னரசளித்த பெண்ணரசி'* (திருவிளை. பாயி. 11). 2. அழகிற் சிறந்தவள்; queenly woman.

[பெண் + அரிசி பெண்ணரசி]

பெண்ணரசு peṇ-ṇ-arašu, பெ. (n.) 1. *பெண்ணரசி* பார்க்க; see *peṇ-ṇ-arašì.* 2. குடும்பத்தில் பெண் ஆளுமை; petticoat government.

[பெண் + அரசு → பெண்ணரசு]

பெண்ணருங்கலம் peṇ-ṇ-aruṅgalam, பெ. (n.) பெண்களிற் சிறந்தவள்; a gen among woman, as an ornament. *"பெண்ணருங்கலத்தொடு பிணைந்த பொருள்"* (சீவக. 198)

[பெண் + அருங்கலம்]

பெண்ணலம் peṇṇalam, பெ. (n.) 1. பெண்மைக்குணம்; womanliness. 2. பெண்ணின் அழகு, முதலியன; womanly grace. 3. பெண்ணின்பம்; enjoyment with a woman. *"பெண்ணலங் காதலிற் பேயுமாயினான்"* (சீவக. 2010).

[பெண் + நலம்]

பெண்ணலி peṇ-ṇ-ali, பெ. (n.) பெண் தன்மை மிக்க அலி; hermaphrodite with feminine characteristies predominating. (தொல். பொருள். 605. உரை)

[பெண் + அலி]

–பெண் ஆண் அல்லாதவன்–ன் அலி. அல்→அலி

பெண்ணழைத்தல் peṇ-ṇ-aḷaittal, பெ. (n.) திருமணத்திற்கு முன் மணமகளை மணமகன் வீட்டுக்கு அழைத்தல்; welcoming a bride at the bride groom's house just before wedding. 2. திருமணம் செய்து கொள்ளுதல் (யாழ்.அக.); marriage.

[பெண் + அழைத்தல்]

பெண்ணன் peṇṇaṉ, பெ. (n.) ஆண்மையற்ற (வீரமற்றவன்); effeminate man.

[பெள் + பெண் + பெண்ணன்]
(வே.க.91)

பெண்ணாசி pen-ṉāši, பெ. (n.) இல்லிமூக்கு (நாஞ்.); bleeding nose.

[பெள் + நாசி]

பெண்ணாசை peṇ-ṇ-āšai, பெ. (n.) பெண் மீது பற்று; love of woman.

[பெண் + ஆசை]

skt.nāsika. *த. நாசி*

பெண்ணாட்சி peṇ-ṇ-āṭci, பெ. (n.) பெண்ணாளுமை; woman personality.

[பெண் + ஆட்சி]

பெண்ணாடை peṇ-ṇ-āḍai, பெ. (n.) *பெண்ணுடை* பார்க்க; see *peṇ-ṇ-uḍai.*

[பெண் + ஆடை]

பெண்ணாண் peṇ-ṇ-aṉ, பெ. (n.) கணவன் மனைவியர்; (தம்பதிகள்)(நாமதீப. 176); husband and wife.

[பெள் → பெண் + ஆண்]
(வே.க.91)

பெண்ணாய்ப்பிறந்தவள் peṇ-ṇ-āy-p-pirandanaḷ, பெ. (n.) பெண்(நெல்லை); woman.

[பெண் + ஆய் + பிறந்தவள்]

பெண்ணாயகம் peṇ-ṇāyagam, பெ. (n.) பெண்களுக்குள் அரசி; queen among woman.

[பெண் + நாயகம்]

பெண்ணாள்[1] peṇ-ṇ-āḷ, பெ. (n.) நடவு முதலிய பயிர் வேலை செய்யும் உழத்தி; female farm-labourer.

மறுவ. நடவார்ன்

[பெண் + ஆள்]

பெண்ணாள்[2] peṇ-ṇ-āḷ, பெ. (n.) பெண்கோள் (வின்.); female naksatra, as kārttigai, Tiruvādirai etc.

[பெண் + நாள் → பெண்ணாள்]

பெண்ணாளுமை peṇ-ṇ-āṭci, பெ. (n.) *பெண்ணாட்சி* பார்க்க; see *peṇ-ṇ-āṭci.*

[பெண் + ஆளுமை]

பெண்ணாறு peṇ-ṇ-āṟu, பெ. (n.) கிழக்கு நோக்கியோடும் ஆறு; eastward flowing river, opp, to āṉ-āṟu. '*ஆணாறு பெண்ணாறு ஒன்றின்றிக்கே*' (ஈடு, 4, 4, ப்ர).

[பெண் + ஆறு]

பெண்ணியல்பு peṇ-iyalpu, பெ. (n.) பெண்மை; womanish.

[பெண் + இயல்பு]

பெண்ணிராசி peṇ-ṇ-rāši, பெ. (n.) ஏழுவகை இராசிகள் (மங்கனே. 2, 15, உரை); female or even signs of the zodioc.

[பெண் + இராசி]

(skt. rāsi → த. இராசி)

பெண்ணினம் peṇ-ṇ-iṉam, பெ. (n.) மகளிர்; womankind.

[பெண் + இனம்]

பெண்ணீர்மை peṇṇīrmai, பெ. (n.) பெண்மைக் குணம்; womanliness. '*பெண்ணீர்மை கற்பழியா வாற்றால்*' (நல்வழி. 16).

[பெண் + நீர்மை]

பெண்ணுடம்பு peṇ-ṇ-udambu, பெ. (n.) பெண் குறி (வின்.); redendum muliebre.

[பெண் + உடம்பு]

பெண்ணுரிமை pēṇ-ṇ-urimai, பெ. (n.) ஆணுக்கு நிகராகக் குமுகாயத்தில் சொத்துரிமை முதற்கொண்டு அனைத்து நிலையிலும் சம உரிமை அளித்தல்; woman's right.

[பெண் + உரிமை]

பெண்விடுதலை pēṇ-viḍudalai, பெ. (n.) *பெண்ணுரிமை* பார்க்க; see *peṇ-ṇ-urimai.*

[பெண் + விடுதலை]

பெண்ணுலகு peṇ-ṇ-ulagu, பெ. (n.) பெண்கள் மாத்திரமே வாழுவதாக் கருதப்படும் தீவு; an island said to be solely in habited by women. '*பெண்ணுல கேய்ப்ப*' (பெருங். உஞ்சைக். 42, 181)

[பெண் + உலகு]

பெண்ணுழைப்பு peṇ-ṇ-nulaippu, பெ. (n.) *பெண்பாடு* பார்க்க; see *peṇ pāṭu.*

[பெண் + உழைப்பு]

பெண்ணுடை peṇ-ṇ-uḍai, பெ. (n.) பெண்டிர்க்குரிய ஆடை (இ.வ.); female attire.

[பெண் + உடை]

பெண்ணுறுப்பு *peṇ-ṇ-uṟuppu,* பெ. (n.) 1. பெண்ணுக்குரிய உறுப்புகள்; limb or part of a body, peculiar to women. 2. *பெண்ணுடம்பு* பார்க்க; see *peṇṇuḍambu.* 3. *பெண்குறி* பார்க்க; see *peṇ-kuṟi.*

[பெண் + உறுப்பு]

பெண்ணெடு–த்தல் *peṇ-ṇ-eḍu,* செ.குன்றாவி. (v.t.) திருமணஞ் செய்தல்; to marry, chosse as a bride. '*நீ எங்கே பெண்ணெடுத்தாய்?*'

[பெண் + எடு–,த்தல்]

பெண்ணெழுத்து *peṇ-ṇ-eḻuttu,* பெ. (n.) 1. உயிர்மெய் (பிங்.); compound letter or vowelconsonant in Tamil orthography. 2. நெட்டெழுத்து; (வெண்பாப். முதன்மொ.6) long vowel;

[பெண் + எழுத்து]

பெண்ணை *peṇṇai,* பெ. (n.) 1. பனை; palmyra-palm. '*மன்றப் பெண்ணைவாங்கு மடற் குடம்பை*' (நற். 303) 2. *பெண் மரம்* (மூ.அ) பார்க்க; see *peṇmaram.* 3. நீர்முள்ளி; (மலை) water-thorn. 4. வடபெண்ணை தென்பெண்ணையாறுகள்; rivers, north pennaiyaru, south penniyaru '*பெண்ணையம் படப்பை நாடுகிழவோயே*' (புறநா.126) பெண்ணையெனுநதியாறுகடந்து; (கலிங்.354)

[பெள் → பெண் → பெண்ணை]

பெண்ணை வாயன் *peṇṇai-vāyaṉ,* பெ. (n.) 1. *பெண்வாயன்* பார்க்க; see *peṇ-vāyaṉ* 2. அலி; hermaphrodite.

பெண்தண்டு *peṇ-taṇḍu,* பெ. (n.) இடக்காது (வின்); small gristly protuberance of the left ear, dist.frāṇ-taṇḍu

மாந்தர்தம் உடலில் வலப்புறம் ஆண்டன்மையும் இடப்புறம் பெண்டன்மையும் உள்ளது என்னுங் கருத்துப்பற்றி இடக்காது பெண் தொண்டு எனப்பட்டது போலும். தொண்டு– தொளை.

[பெண் + தொண்டு → தண்டு]

பெண்தன்மை *pēṟn-taṉmai,* பெ. (n.) *பெண்மயம்*[1] பார்க்க, see *peṇmayam*[1]

[பெண் + தன்மை]

பெண்தானையான் *peṇ-tāṉaiyāṉ,* பெ. (n.) காமன் அல்லது பெண் படையான் (நாமதீப.58); kama, as having women for hisarmy.

[பெண் + தானையான்]

பெண்பருவம் *pen-paruvam,* பெ. (n.) *மகளிர் பருவம்* பார்க்க; see *maglir paruvam.*stages in the life of a woman. (பிங்.)

[பெண் + பருவம்]

பெண்பள்ளி *pen-palli,* பெ. (n.) பெண் துறவிகள்தங்குமிடம்;nunnery. '*இம்மனையும் இக்கிணறும்* பெண்பள்ளி யாவதாகவும்' (s.i.i.vii, **24.**)

[பெண் + பள்ளி]

பெண்பழி *pen-p-pali,* பெ. (n.) **1.** பெண் கொலைப் பழி; crime of killing a woman. '*இனையதோர்*' பெண்பழியை யாரேற்றார். (திருவிளை.பழியஞ்.**12**) **2.**பெண்ணைவருத்தல் அல்லது கட்டாயப்படுத்துவதால் உண்டாகும் பழி(வின்); guilt of harassing or forcing a woman.

[பெண் + பழி]

பெண்பனை *pen-panai,* பெ. (n.) காய்க்கும் பனை; (தொல்.பொ. **558**, உரை). palmyra, as bearing fruit.

[பெண் + பனை]

பெண்பாடு *pen-pādu,* பெ.(n.) பெண்பிள்ளை யினுழைப்பு; efforts or industry of the female members of a family. '*ஆண்பாடு பெண்பாடு பட்டு அந்த வேலை முடிந்தது*'

[பெண் + பாடு]

பெண்பாத்தி *pen-pātti,* பெ. (n.) உப்பளத்தில் உப்பு நீரைச் சுண்டவிடும் பாத்திவகை; condenser in salt-pans dist. fr.āṉ-pātti.

[வெண் → பெண் + பாத்தி]

பெண்பார்-த்தல் *pen-par,* செ.கு.வி. (v.i.) திருமணத்திற்கு மணமகளைத் தேர்ந் தெடுத்தல்; to choose a bride.

[பெண் + பார்]

பெண்பால் *pen-pāl,* பெ. (n.) **1.** ஐம்பால்களுள் ஒன்று; (நன்.**262**) feminine gender, one of ai-m-bāl, q.v. **2.** பெண்ணினம்; female sex. '*ஒரு பெண்பாலேன்*' (சீவக. **1662**)

[பெண் + பால்]

பெண்பாலெழுத்து *pen-pal-eluttu,* பெ. (n.) *பெண்ணெழுத்து* பார்க்க; see *pen-n-e ittu.* (இலக்.வி.**773**, உரை).

[பெண்பால் + எழுத்து]

பெண்பாவம் *pen-pavam,* பெ (n.) *பெண்பழி* (வின்) பார்க்க; see *penpali.*

[பெண் + பாவம்]

பெண்பாற் பருவம் *pen-par-paruvam,* பெ. (n.) மகளிர் பருவம்; stages in the life of a woman.

[பெண்பால் + பருவம்]

பெண்பாற் பிள்ளைக்கவி *pen-par-pillai-k-kavi,* பெ. (n.) பெண்பாற் பிள்ளைத் தமிழ் பார்க்க; (இலக்.வி.**807**, உரை.)

[பெண்பால் + பிள்ளை + skt-kavi. த.கவி]

பெண்பாற் பிள்ளைத்தமிழ் *pen-par-pillait-tamil,* பெ. (n.) ஆண்பால், பெண்பால்ஆகிய இரண்டிற்கும்பொதுவாயுள்ளபருவங்களோடு, பெண்பாற்கே சிறப்பாக உரிய கழங்குப்

பருவம், அல்லது நீராடற் பருவம், அம்மானைப் பருவம், ஊசற் பருவங்களைச் சேர்த்துப் பெண் தெய்வத்தை அல்லது சிறப்புடைய பெண்பாலைப் புனைந்து பாடும் பிள்ளைத்தமிழ் வகை; a poem descrbing the different stages in the child hood of a goddess or heroine an consisting of seven sections common.

[பெண்பால் + பிள்ளை + தமிழ்]

பெண்பாற்பிள்ளைப்பாட்டு *pen-par-pillai-p-pattu,* பெ. (n.) *பெண்பாற் பிள்ளைத் தமிழ்* பார்க்க; (பிங்.).

[பெண்பால் + பிள்ளை + பாட்டு]

பெண்பிடி–த்தல் *peṇ-piḍi,* செ.குன்றாவி. (v.t.) கூத்தியாகக் கொள்ளுதல் (யாழ்.அக); to keepaconcubine.

[பெண் + பிடி]

பெண்பிள்ளை *peṇ-piḷḷai-cikku,* பெ. (n.) **1.** பெண் குழந்தை; female infant, girl, **2.** மகளிர்; woman; *'நாயகப் பெண் பிள்ளாய்'* (திவ்.திருப்பா.7) **3.** மனைவி; wife.

[பெண் + பிள்ளை]

பெண்பிள்ளைசீக்கு *peṇ-piḷḷai-cīkku,* பெ. (n.) *பெண்சீக்கு* (M.L.) பார்க்க; see *peṇcīkku.*

[பெண்பிள்ளை+ E. Sick → த.சீக்கு]

பெண்பிள்ளை வியாதி *peṇ-piḷḷai-viyādi,* பெ. (n.) *பெண்சீக்கு* (M.L.) பார்க்க; see *pen-cikku.*

[பெண்பிள்ளை + skt vyādhi. *த.வியாதி]*

பெண்பிற–த்தல் *peṇ-piṟa,* செ.கு.வி. (v.i.) பெண்பிறவியெடுத்தல்; to be born a woman. *'வல்வினையேன்பெண்பிறந்தே'* (திவ்.திருவாய். 5,4,3.).

[பெண் + பிற–,]

பெண்பிறந்தார் *peṇ-piṟancdār,* பெ. (n.) பெண்டிர்; woman. *"பெண் பிறந்தா ரெய்தும் பெருந்துயர்"* (திவ்.திருவாய்.5,4,4)

[பெண் + பிறந்தார்]

பெண்பிறப்பு *peṇ-piṟappu,* பெ. (n.) பெண்ணாகப் பிறத்தல்; being born a woman. *"பெண்பிறப்புந்தோழியினிதென'* (சீவக.1297)

[பெண் + பிறப்பு]

பெண்புத்தி *peṇ-putti,* பெ.(n.) பெண்டிர்க்குரிய அறிவு; woman's wit, used in contempt. *'பெண்புத்தி பின்புத்தி.*

[பெண் + skt-buddhi. *த.புத்தி]*

பெண்பூக்கதிர் *peṇ-pū-k-kadir,* பெ. (n.) செடி மரம் முதலியவற்றிற் காயாக மாறும் பூங்கொத்து(இ.வ.); pistillate cluster.

[பெண் + பூக்கதிர்]

பெண்பெண்டாட்டி *peṇ-peṇḍāṭṭi,* பெ. (n.) பெண், woman. ஒரு பெண் பெண்டாட்டி ஆணுடை யுடுத்து; (ஈடு,6,2,ப்ர.)

[பெண் + பெண்டாட்டி]

பெண்பெருமாள் *peṇ-perumāḷ,* பெ. (n.) பெண்ணரசி; queen, queenly woman. *'பெண் பெருமாளந்தப்புரப் பெருமாள்'*(மூவருலா: இராசராச. 80.)

[பெண் + பெருமாள்]

பெண்போகம் *peṇ-pōgam,* பெ. (n.) **1.** எட்டுத் துய்ப்புகளில் (அட்ட போகங்களில் ஒன்றான சிற்றின்பந் துய்க்கை; sexual onfoyment with a woman, one of aštā-pōkam, q.v. (w.). **2.** முப்பத்திரண்டறங்களுள் பெண்ணின் பந்துய்க்கப் பிறனுக்கு உதவும் அறம் (பிங்.); aiding a man to obtain sexual enjoyment one of muppattiraṇḍadṟm.

[பெண் + skt. bhōga. *த.போகம்]*

பெண்மகவு *peṉ-magavu,* பெ. (n.) பெண்குழந்தை; woman-child.

[பெண் + மகவு]

பெண்மகள் *peṇ-magaḷ,* பெ. (n.) **1.** பெண்; woman. **2.** பெண் மகவு; girl-child.

[பெண் +மகள்]

பெண்மகன் *peṇ-magaṉ,* பெ. (n.) புறத்துப் போய் விளையாடும் பேதைப் பருவத்துப் மெண்மகள் (தொல்.சொல். **164.** சேனா.); girl child which has attained the stage of playing in the neighbourhood.

[பெண் + மகன்]

'பெண்மகன்' என்னும் மாறோக்கத்தார் (சொற்கை) வழக்கு, பெட்டைப்பசன் என்னும் ஆம்பூர் வட்டத்தார் வழக்குப்போன்றது.

பெண்மயக்கம் *peṇ-mayakkam,*பெ.(n.) பெண்மேற் கொள்ளும் காதல் (வின்); falling in love with a woman.

[பெண் + மயக்கம்]

பெண்மயம் *peṇ-mayam,*பெ.(n.) **1.** பெண் தன்மை; womanliness, feminine nature. *'பெண்மயமோ பெரிதே'* (சீவக. **228.**) **2.** பெண்டிர்திரள்; crowd of women. *'அங்கே பெண்மயமாயிருக்கிறது, போகமுடிய வில்லை.'*

[பெரும் + மயம்]

பெண்மயல் *peṉ-mayal,*பெ.(n.) *பெண்மயக்கம்.* (வின்.) பார்க்க; *peṉ-mayakkkam.*

[பெண் + மயல்]

பெண்மயிர் *peṉ-mayir,* பெ. (n.) பெண்ணின் கூந்தல் (பிங்.); tresses, woman's lock of hair.

[பெண் + மயிர்]



பெண்மரம் *peṉ-maram,* பெ. (n.) **1.** புறக்காழுள்ள மரம் (பிங்.); endogenous tree. **2.** காய்க்கும் மரம் அல்லது செடி (வின்); female tree or plant.

[பெண் + மரம்]

பெண்மாயம் *peṉ-māyam,* பெ. (n.) *பெண்வலை* (வின்.) பார்க்க; *peṉ-valai.*

[பெண் + மாயம்]

பெண்மாறி *peṇ-māxṟi,* பெ. (n.) பெண்டிர் பலரிடம் மாறிமாறிக் காதல் கொள்பவர் (வின்.) a man who if fickle in his love.

[பெண் + மாறி]

பெண்மூச்சு *pen-mūccu,* பெ. (n.) விடாப்பிடி; ஒட்டாரம் (யாழ்.அக.); obstinacy, as a feminine trait.

[பெண் + மூச்சு]

பெண்மை[1] *penmai,* பெ. (n.) தாய்மை; woman hood.

[பெண் + மை]

பெண்மை[2] *penmai,* பெ. (n.) **1.** *பெண் பிறப்பு* பார்க்க; see *penpirappu.* '*பெண்மைக்கு இரதியென*' (பாரத.திரௌபதிமாலை.39) **2.** பெண்ணுக்குரிய நலம்; feminine grace. '*காணியைப் பெண்மைக் கெல்லாம்*' (கம்பரா. மீட்சி.46) **3.** பெண்ணின்தன்மை; womanliness, gentleness, womanishness. '*பெண்மையு மிலளாகி யழுதலு மழூஉம்*' (கலித், 147.) **4.** பெண்ணின்பம்; sexual enjoyment with a woman; '*பிறனியலாள் பெண்மை நயவாதவன்*' (குறள். 147.) **5.** அமைதித்தன்மை; modesty '*பெண்மை நாண்வனப்புச் சாயல்* ' (சீவக. 356.); **6.** நிறை; self-restraint, natural to a woman '*பிறையெனு நுதலவள் பெண்மை யென்படும்*' (கம்பரா. மிதிலைப். 40.)

[பெண் + மை]

மை பண்புப் பெயரீ ஈறு.

பெண்வசம்பு *pen-vašambu,* பெ. (n.) பிசிறில்லாத வசம்பு; sweet flag without bristles.

[பெண் + வசம்பு]

பெண்வலை *pen-valai,* பெ. (n.) பெண்டிர் செய்யும் ஈர்ப்புச் செயல்; toils of a woman. '*பெண்வலைப் படாதவர்*' (சீவக. 78.)

[பெண் + வலை]

பெண்வழி *pen-vali,* பெ. (n.) **1.** பெண்ணினமாக உரிமையிறங்குதற்குரிய பிறங்கடை வரிசை; female line, as in inheritance matriarchy. **2.** *பெண்வழிச் சுற்றம்* (யாழ்.அக.); பார்க்க, see *pen-vali-c-curram.*

[பெண் + வழி]

வழி = குடிவழி.

மக்களுக்குத் தலைமுறைதலைமுறையாய் உரிமைதொடர்ந்துவரும்வழி, தந்தைவழி தாய்வழி அல்லது மகன்வழி மகள்வழி என இரண்டாம், இவற்றுள் தாய் வழியே பழந்தமிழ் நாட்டில் வழங்கி வந்த தென்பதற்கு, தாயம் என்னும் வழக்கே சான்றாம். தாய்வழிப்பெறுவது தாயம். தந்தைவழி அல்லது மகன்வழி ஆண்வழியும்தாய்வழிஅல்லது மகள்வழி பெண்வழியும் ஆகும். ஆத்திரேலியோ என்னுந்தென்கண்டத்தில் பெண் வழியுரிமை இருந்து வருவதாகச் சொல்லப் படுகின்றது.

பெண்வழிச் சுற்றம் *pen-vali-c-curram,* பெ. (n.) பெண்ணினமாக வரும் உறவு (யாழ்.அக.); relation in the female line.

[பெண்வழி + சுற்றம்]

பெண்வழிச் சேறல் *pen-vali-c-ceral,* பெ. (n.) காமப் பேராசையில் மனைவி விருப்பப்படியே ஒழுகுகை (குறள். அதி. 91.); being led by wife. being under wife's influence.

[பெண்வழி + சேறல்]

செல்தல்→சேறல்

பெண்வாயன் *pen-vāyan,* பெ. (n.) பெண்டிர் போற் சளசளவென்று பேசுவோன் (இ.வ.); man who talks lika a woman.

[பெண் + வாயன்]

பெண்வாரிசு *pen-vārišu,* பெ. (n.) *பெண்வழி* பார்க்க; see *pervali.*

[பெண் + u. wāris. *த.வாரிசு]*

பெண்வியாதி *pen-viyādi,* பெ. (n.) *பெண்சீக்கு* (M.L) பார்க்க; see *pen-cikku.*

[பெண் + skt vyādhi. *த.வியாதி]*

பெண்விளக்கு *pen-vilakku,* பெ. (n.) 1. பெண்களிற்சிறந்தவள்;woman conspicuous for virtue and other excellences. '*பெண் விளக்காகிய பெறலரும் பேதாய்*' (பெருங். இலாவாண. 18, 79) 2. பாவை விளக்கு (இ.வ.); damsel shaped standard of a lamp.

[பெண் + விளக்கு]

பெண்வீட்டார் *pen-vīttār,* பெ. (n.) மணமகளைச் சேர்ந்த உறவாடிகள்; parents and other relatives of a bride, bride's party.

[பெண் + வீட்டார்]

பெண்வை–த்தல் *pen-vai-,* செ.குன்றாவி. (v.t.), வைப்பாட்டியாகக் கொள்ளுதல் (நெல்லை); to keep as conbine.

[பெண் + வை–]

பெத்தகாலம் *petta-kālam,* பெ. (n.) ஆதன் (ஆன்மா) பாசத்திற்கு உட்பட்ட காலம்; period during which a soul is in bondage of mummalam. மலத்தினால்மறைப்புண்டு கிடக்கும் அப் பெத்த காலத்து' (சி.போ. பா. 2, 2. பக். 63, சுவாமிநா.)

[பற்று → பத்து → பெத்து → பெத்தம் + காலம்]

பெத்ததசை *pentta-tašai,* பெ. (n.) ஆதனின் பாசபந்தத்திற்கு உட்பட்ட நிலை (யாழ்.அக.); condition of the soul subject to the bondage of mummalam.

[பற்று → பத்து → பெத்து + தசை]

பெத்தம் *pettam,* பெ. (n.) 1. கட்டு; bond, tie, ligature. 2. ஆதனின் பாசபந்தம் bondage of the soul, connection of & the soul with mummalan; '*பெத்தமொடு முத்தியும்*' (தாயு. ஆனந்த. 5.) 3. சேர்மானம் (யழ்.அக.); thing added.

[பற்று → பத்து → பெத்து → பெத்தம்]

பெத்தமுத்தி *petta-mutti,* பெ. (n.) 1. பந்தமும் வீடும்; bondage and liberation of souls. 2. ஒன்றுகை (இலய) (யாழ்.அக.); salvation by absorption in to God-head.

[பெத்தம் + முத்தி]

பெத்தமூலம் *petta-mūlam,* பெ. (n.) சிறுவழுதுணை,1.(சங்.அக.)பார்க்க; širuvaluduṇai nightshade Indian.

[பெத்தம் + மூலம்]

பெத்தர் *pettar,* பெ. (n.) பாசபந்தமுள்ள உயிர்கள்; souls bondage.

[பெத்து → பெத்தர்]

பெத்தல் *pettal,* பெ. (n.) *பெருங்குரும்பை* (மலை.) பார்க்க; *bow-string hemp.*

[பெத்து → பெத்தல்]

பெத்தான்மா *pettāṉmā,* பெ. (n.) பாசபந்தமுள்ள உயிர்; soul in bondage. '*முத்தியின்கட் பெத்தான்மாவை*' (சி.சி. 11,6.)

[பெத்து + ஆன்மா]

skt ātmā. *ஆத்மா த. ஆன்மா*

பெத்தி *petti,* பெ. (n.) *சிறுவழுதுணை* 1. (மலை); பார்க்க see *šiṟu vāḻuduṇai* indian nightshade.

[பெத்து → பெத்தி]

பெத்து *pettu,* பெ. (n.) பெத்தம் பார்க்க; see pettam. '*பெத்தின்றியைந்து தொழிலானும்*' (விநாயகபு. 82,47)

[பற்று → பத்து → பெத்து]

பெதரிக்களம் *pedarikkaḷam,* பெ. (n.) *எட்டி*[1] பார்க்க (சங்.அக.); strychinōe tree.

[பெதரி + களம்]

பெதிகாரம் *pedikgāram,* பெ. (n.) படிக்காரம் (சங்.அக.); alum.

[படிகாரம் → பெடிகாரம் → பெதிகாரம்]

பெதும்பை *pedumabi,* பெ. (n.) 1. எட்டு முதல் பதினொரு அகவை வரையுள்ள பெண் (இலக். வி. 860.); girl between the ages of 8 and. 11. 2. பெண் (திவா.); woman.

[பேது – பெது – பெதும்மை]

பெந்தகம் *pendagam,* பெ. (n.) 1. கட்டு; tie. 2. அடைமானம்; simple mortage.

[பற்று → பத்து → பந்து → பெந்து → பெந்தகம்]

பெந்தம் *pendam,* பெ. (n.) 1. கட்டு (வின்); bond- age. 2. தொடர்பு; (மாறனலங். 281, உரை. பக்.477.) relation, conection

[பெந்தகம் → பெந்தம்]

பெந்தர் *pendar,* பெ. (n.) *பெத்தர்* பார்க்க. see *pettar.* (யாழ்.அக.).

[பெத்தர் – பெந்தர்]

பெந்தனம் *pendaṉam,* பெ. (n.) *பெந்தம்.* (யாழ். அக.) பார்க்க; see *pendam.*

[பெந்தம் – பெந்தனம்]

பெந்தி–த்தல் *pendi-,* செ.குன்றாவி. (v.t.) 1. *பந்தி* பார்க்க;see*pandi.* 2. சித்திரப்பாக்களில் எழுத்துகளை அடைத்தல்; to confine, as letters of a stanza with in the figure of a particular shape.'*சக்கரத்தினுள் அக்கரந் தடுமாறப் பெந்திப்பது*' (மாறனலங். 281, உரை. பக்.477.)

[பந்து → பெந்தி]

பெந்து *pendu,* பெ. (n.) *பந்து*[1] பார்க்க; end *pandu*[1].

[பந்து → பெந்து]

பெந்தை *pendai,* பெ. (n.) 1. அருவருப்பாய்ப் பருத்தது; monstrosity. 2. கலப்பையின் ஓருறுப்பு; a part of a ploughshare.

[பெத்தை → பெந்தை
பெரிது → பெர்த்து → பெத்து→ பெத்தை]

பெந்தைக்கயிறு *pendai-k-kayiṟu,* பெ. (n.) **1.** நன்றாய்த் திரிக்காத கயிறு; rope not neatly twisted. **2.** கொழுவுள்ள கட்டையைக் கலப்பையோடிணைக்குங் கயிறு; rope that binds the parts of a phoughshare.

[பெந்தை + கயிறு]



பெந்தைவிழி *pendai-viḻi,* பெ. (n.) **1.** உருண்டை விழி; goggle-eyes. **2.** அச்சத்தால் கண் மருண்டு பார்க்கை; staring or rolling of the eyes, as in bewilderment.

[பேம் → பேந்தை → பெந்தை + விழி]

பெம்மான் *pemmāṉ,* பெ. (n.) **1.** இறைவன்; god. *'பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே'* (தேவா.61,1.) **2.** பெரியோன்(வின்); great man.

[பெருமகன் → பெருமான் → பெம்மான்]

பெய்¹–தல் *pey-,* செ.கு.வி. (v.i.) *1. மேனின்று பொழிதல்;* to rain, fall, as dew or hail. *'பெய்யெனப் பெய்யு மழை'* (குறள்.55.)

பொய் → பெய். பெய்தல்= துளைவழி நீர் ஒழுகுதல் போல முகிலினின்று மழை ஒழுகுதல். (வே.க.3; 126)

பெய்²–தல் pey-, செ.குன்றாவி. (v.t.) **2.** பொழிதல்; to pour down, pour into. *'பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்'* (புறநா.115.) **3.** கலமுதலியவற்றில் இடுதல்; to put, place, lay, put into serve up, as food in a dish. *'உலைப்பெய் தடுவது போலுந்துயர்'* (நாலடி.14.). **4.** எறிந்து போகவிடுதல்; to throw out, throw aside *'பார்த்துமிப் பெய்யிலென்'* (நாலடி.26.). **5.** இடைச் செருகுதல்; to insert, interpolate as in a text. **6.** கொடுத்தல்; to give, confer *'உயிர்க்கு....வீடுபேறாக்கம் பெய்தானை'* (தேவா.975,7.) **7.** அமைத்தல்; to make; to settle, appoint *'பிரான் பெய்த காவு கண்டீர்... மூவுலகே'.* (திவ். திருவாய்.6,3,5.) **8.** பரப்புதல்; to spread. *'தருமணல் தாழப்பெய்து'* (கலித்.114.) **9.** புகவிடுதல்; to discharge. *'கருந்தலை யடுக்கலி னணைகள்.... பெருங்கடலிடைப் பெய்து'* (கம்பரா. கும்ப. 248.) **10.** எழுதுதல்; to writedraw, *'பெய்கரும் பீர்க்கவும் வல்லன்'* (கலித்.143.). **11.** அணிதல்; to put on, as harness; to wear, as jewells, cloths, flowers. *'மைந்தர் தண்டார் மகளிர் பெய்யவும்'* (பரிபா.20,21.). **12.** பயன்படுத்தல்; to bring into play; to use. *'பெய்திறனெல்லாம் பெய்து பேசினேன்'* (கம்பரா. கும்ப.169.) **13.** கட்டுதல்; to tie, faster. *'புணர்நார்ப் பெய்த புனைவின் கண்ணி'* (பெரும்.பாண். 218). **14.** சிறுநீர் முதலியன ஒழுகவிடுதல் (கொ.வ.).; to discharge, as urine; to shed, as tears. **15.** தூவுதல்; to strew, scatter, as flowers. **16.** பங்கிடுதல் (திவா.) to distribute **16.** செறித்தல் (பிங்.). to crowd, being close together. *'பெய்ம்மணி யேயதேர்'* (கம்பரா. நாக பாச. 128)

ம. பெய்யுக

[பொய் → பெய்]

பெய்கலம் *pey-kalam,* பெ.(n.) ஏனம்; pot or vessel.

[பெய் + கலம்.]

பெய்தளத்தல் *peydaḷattal,* பெ. (n.) படியால் அளக்கும் அளவை வகை; (தொல். எழுத்.7, உரை.) measuring by a vessel of standard capacity.

[பெய் – பெய்து + அளத்தல் – 'தல் தொ.பெ.ஈறு]

பெய்துரை *peydurai,* பெ. (n) **1.** இடைப்பெய்து உரைப்பது; insertion, interpolation. **2.** பாயிரம் (பிங்.)preface, introduction.

[பெய் – பெய்து + உரை]

பெய்வளை *pey - vaḷai,* பெ.(n) பெண்பால்; lady, as wearing bracelets. *'பேதை பெருந்தோளி பெய்வளா யென்னும்'* (நாலடி. 47.).

[பெய் + வளை]

பெயர் *peyar,* பெ.(n) **1.** பெயர்; name, appellation, designation, epithet. *'மறவர் பெயரும் பீடுமெழுதி'* (அகநா. 67.). **2.** புகழ்; reputation. renown, celebrity, fame. *'பெரும் பெயர் மீளி'* (கலித். 17.) **3.** பெருமை (சூடா.); greatness. **4.** ஆள் person; எத்தனை பெயர் வந்தார்கள்? **5.** வடிவு; shape, form. *'கூந்த லென்னும் பெயரொடு'* (பரிபா. 3,31.) **6.** பொருள்; property, substance *'பெற்ற பெரும்பெயர் பலர்கை யிரீஇய'* (பதிற்றுப்.90,23.) **7.** பொருளிலக்கணங் கூறு நூல்; treatise dealing with poruḷ *'சொற்பெயர் நாட்டங் கேள்வி'* (பதிற்றுப். 21,1.) **8.** இதன் பொருட்டு; alleged cause, pretext. *'திருவிழா வென்பதோர் பெயரால்'* (காஞ்சிப்பு. நகர. 70.). **9.** சூளுரை; vow *'பொருவேமெனப் பெயர் கொடுத்து'* (பட்டினப். 289.) **10.** பெயர்ச்சொல் (தொல்.எழுத். 180.) பார்க்க. (gram.) **11.** முதல் வேற்றுமை; (gram.) nominative case. *'அவைதாம் பெயர் ஐ யொடுகு'* (தொல். சொல். 64.).

தெ. பேரு; **க.** பேசர்; **ம.** பேயர்; **து.** புதேரு; **பட.** ஹெசரு.

[பெய் – பெயர்]

பெயர்—தல் *peyar-,* செ.கு.வி. (v.i.) **1.** போதல் (திவா.); to move, leave, stir, rise, depart. *'திசை யெங்கணும் பெயர்ந்தான்'* (கம்பரா. நிகும்பலை. 101.). **2.** பிறழ்தல்; to turn about, shift, veer. *'நிலம் பெயரினும் நின்சொற் பெயரல்'* (புறநா.3.). **3.** மீளுதல்; to return, come back. *'சூழ்ந்த நிரை பெயரல்'* (பு.வெ.1,10.) **4.** மாறுதல்; to vary, change. *'ஆ ணெனத் தோன்றி யலியெனப் பெயர்ந்து'* (திருவாச. 3,134.) **5.** சிதைவுறுதல்; to fall into ruins. *'கட்டடம் பெயர்ந்து போயிற்று'* **6.** இணைப்பு நெகிழ்தல்; to grow loose; to be detached. *'தளம் பெயர்ந்து விட்டது'* **7.** கூத்தாடுதல் (பிங்.); to dance. **8.** சலித்தல்; to shake. *'பெயரும்.... பிதற்றும்'* (கம்பரா.சூர்ப்ப. 98.). **9.** அசையிடுதல்; to chew the cud. *'விளையா விளங்கணாற மெல்குபு பெயரா'* (சிறுபாண். 45.) **10.** இடம் விட்டு மாறுதல் (வின்.); to be displaced. dislocated. **11.** பிரிதல்; to be separated; to stand aside நிலம் பெயர்ந்துறைதல் (தொல். தோ பொ. 169.). **12.** கிளர்தல்; to be agitated *'ஓதநீரிற் பெயர்பு பொங்க'* (புறநா. 22.). **13.** தேய்தல்; to be rupped (w.) **14.** பணம் நடமாடுதல்; to pass from hand to hand., as currency. *'அந்த ஊர் எப்பொழும் பணம் பெயரக்கூடியது'* **15.** தண்டப்படுதல் (வசூலாதல்); to be collected, as money or debt. *'ஆயிர உருபா பெயர்ந்தது'*

[பெய் – பெயர்]

பெயர்³–த்தல் *peyar-,* செ.குன்றாவி. (v.t.) 1. போக்குதல்; to remove, displace, dislodge, dislocate, unseat. *'உடைமை மயலாகும் மற்றும் பெயர்த்து'* (குறள். 344.) 2. நிலைமாறச் செய்தல்; to dispel; to shake from its basis. *'சூறை மாருதத் தெறியது வளியிற் கொட்கப் பெயர்க்கும் குழகன்'* (திருவாச .3,12.) 3. அப்புறப்படுத்துதல்; to drive away, as foes; to remove from one place to another, as cattle. *'தென்னவற் பெயரிய.... தொன்முதுகடவுள்'* (மதுரைக். 40.) 4. திருப்பிப் போடுதல் (யாழ். அக.); to turn over, as a cake 5. பிடுங்குதல்; to uproot, as a plant; to force open, as a door. 6. கெடுத்தல்; to blow up; to blast; to ruin. *'பிணம் பிறங்கப் பெயர்த்திட்டன்று'* (பு. வெ. 1,10.) 7. ஒடுக்கிக் கொள்ளுதல்; to absorb, gather into one's self. *'பல்லுருவம் பெயர்த்துநீ'* (கலித். கடவுள்.). 8. பிரித்தல்; to separate. *'நாணடப் ரெயர்த்தனமக்குமாங் கொல்லாது'* (கலித். 47.) 9. மீட்டுதல்; to redeem, save, recover. *'நல்வளைத் தோளியைப் பெயர்க்கும் விச்சையின்'* (பெருங். வத்தவ. 6,40.). 10. தண்டுதல் (வசூலித்தல்) to collect, realise. *'நூறு உருவா பெயர்த்தேன்'* 11. செலுத்துதல்; to lead, push, drive. *'இனிய சொல்லி யின்னாங்குப் பெயர்ப்பது'* (கலித். 14.). 12. விடுத்தல்; to discharge. *'வெஞ்சரம்.... இராகவன் சிலை நின்று பெயர்த்தான்'* (கம்பரா. முதற்.228.)

[பெயர்தல் (த.வி.) – பெயர்த்தல் (பி.வி.)]

'த்' பிறவினையாக்க உருபு.

பெயர்க்கணக்கு *peyar-k-kaṇakku,* பெ. (n.) 1. பங்கீடு(வின்); distribution of shares. (n.) 2. பேரேடு(இ.வ.); ledger.

[பெயர் + கணக்கு]

பெயர்க்கு *peyarkku,* வி.அ. (adv.) பெயர் மாத்திரையாய்; nominally; for form's sake. *'பெயர்க்கு மாத்திரம் அவன் அரசன்'*

[பெயர் – பெயர்க்கு.]

பெயர்ச்சி¹ *peyarcci,* பெ. (n.) இடமாறுகை; shifting, moving. காரி(சனி)ப் பெயர்ச்சி அடுத்த திங்கள் நிகழும் (உ.வ)

[பெயர்² – பெயர்த்தி – பெயர்ச்சி.]

பெயர்ச்சி² *peyarcci,* பெ.(n.) இடமாற்றுகை; removal, displacement, dislocation.

[பெயர்³ – பெயர்ச்சி.]

பெயர்ச்சூத்திரம் *peyar-c-cūttiram,* பெ. (n.) *பெயர் நூற்பா* பார்க்க; see *peyar nūṟpā*

[பெயர் + சூத்திரம்.]

skt. sūtra > *த சூத்திரம்.*

பெயர்ச்செவ்வெண் *peyar-c-cevveṇ,* பெ. (n.) பெயர்களில் எண்ணிடைச் சொல் தொக்கு விட்டிசைத்து வருந்தொடர் (நன். 428.); (gram.) a series of nowns with the connecting conjunction understood there being a pause between the nowns in utterance. dist. fr. u mmai-t-tokai.

[பெயர் + செவ்வெண்.]

பெயர்ச்சொல் *peyar-c-col.,* பெ. (n.) நால்வகைச் சொற்களுள் பொருளைக் குறிக்க வழங்குச்சொல்; (gram.) noun or pronoun, one of four parts of speech.

[பெயர் + சொல்.]

பெயர்த்தி[1] *peyartt,* பெ. (n.) **1.** மக்கள் வயிற்றுப் பெண்; grand-daughter, as bearing the same name as her grandmother **2.** பாட்டி(யாழ்ப்.); grandmother.

[பெயர் → பெயர்த்தி]

பெயரன் (ஆ.பா.) → பெயர்த்தி (பெ.பா) 'தி' (பெ.பா.ஈறு)

பெயர்த்தி[2] *peyartti,* பெ. (n.) கோள் முதலிய வற்றின் பெயர்ச்சி; movement, as of a planet from one irāši to another. '*சனிப் பெயர்ச்சி*'.

[பெயர்[2] – பெயர்த்தி.]

பெயர்த்திரிசொல் *peyar-t-tiri-šol,* பெ.(n.) **1.** திரிந்து வழங்கும் பெயர்ச் சொல்.(சீவக. **1774,** உரை.); altered or changed form of a noun. **2.** தம்பொருளை அரிதில் விளக்கும் பெயர்ச் சொல் (நன். **272,** உரை.); archaic or classical noun.

[பெயர் + திரிசொல்.]

பெயர்த்து *peyarttu,* வி.எ (adv.) *பெயர்த்தும்* பார்க்க, see *peyarttum.* '*பெயர்த் தொற்றும்*' (கலித். **103.**)

[பெயர் – பெயர்த்து.]

பெயர்த்துக் கொடுக்கும் வலி *peyarttu-k-kodukkum-vali,* பெ.(n.) பேறுகால வலிக்குமுன் சிறிது சிறிதாக வலிக்கும் நோவு(இ.வ.); preliminary labour pains due to movements of the foetus.

[பெயர்த்து + கொடுக்கும் + வலி]

பெயர்த்துநடு – தல் *peyarttu-nadu,* செ.குன்றாவி. (v.t.) நாற்றுப்பிடுங்கி நடுதல்; to transplant.

[பெயர்த்து + நடு]

பெயர்த்தும் *peyarttum,* வி.எ. (adv.) பின்னும்; again, in return. '*ஞாயிறு பெயர்த்து நின்.... குடகடற் குளிக்கும்*' (புறநா. **2.**)

[பெயர் → பெயர்த்தும்]

பெயர்த்துரை *peyar-t-t-urai,* பெ.(n.) திரும்பக் கூறுதல்; repetition. (குறள், **944,**உரை.)

[பெயர்த்து + உரை]

பெயர்த்தெழுது – தல் *peyartteludu,* செ.குன்றாவி. (v.t.) **1.** படியெடுத்தல்(வின்); to copy, transcribe. **2.** மொழிபெயர்த்தல்(இ.வ.); to translate from one language to another.

[பெயர் → பெயர்த்து + எழுது]

பெயர்திறம் *peyar-tiram,* பெ. (n.) முல்லை யாழ்த்திறவகை(பிங்.); (mus.) an ancient secondary melody-type of mullai-class.

[பெயர் – திறம்]

பெயர்ந்து *peyarndu,* வி.எ. (adv.) **1.** மறுபடியும்; again. '*பெயர்ந்தொரு சிகரந்தேடின்*' (கம்பரா. கும்பகருண.**184**) **2.** பிற்பாடு; presently, afterwards. '*பெயர்ந்துவா*'.

[பெயர் → பெயர்ந்து]

பெயர் நூற்பா *peyarnūṟpā,* பெ. (n.) குறி நூற்பா (குறிச்சூத்திரம்)(யாப்.வி.பாயி.பக்.11) (இலக்) nūṟpa dealing with technical terms.

[பெயர் + நூற்பா]

பெயர்நேரிசை *peyar-nērišai,* பெ. (n.) சிற்றிலக்கியவகை தொண்ணூற்றாறனுள் பாட்டுடைத் தலைவன் பெயர் சார்ந்து வர50, 70 அல்லது 90 நேரிசை வெண்பாக்களால் இயற்றப்படும் சிற்றிலக்கிய வகை (இலக்.வி. 830.); a poem of 50, 70 or 90 stanzas of nēršai venbā, each mentioning the name of a patron or hero, one of 96 šiṟṟilakkiyam. q.v;

[பெயர் + நேரிசை]

பெயர்ப்பகுதி *peyar-p-pagudi,* பெ.(n.) பகுசொல்லில் பெயராகிய பகுதி; (gram.) nominal base of a derivative word.

[பெயர் + பகுதி]

பெயர்ப்படு—த்தல் *peyar-p-paḍu,* செ. குன்றா வி. (v.t.) பேரிடுதல்; to name after. '*மூதூர் நின் பெயர்ப்படுத்தேன்*' (மணிமே.பதி. 31.).

[பெயர் + படு—,]

பெயர்ப்பு *peyarppu,* **1.** பெயரச் செய்கை; shifting, eradication. **2.** மொழிபெயர்ப்பு; (இ.வ.) translation.

[பெயர் — பெயர்ப்பு]

'பு' (சொல்லாக்க ஈறு)

பெயர் படை—த்தல் *peyar-paḍai,* செ.கு.வி. (v.i.) பேர்படைத்தல்; to become famous.

[பெயர் + படை]

பெயர்பாதி *peyar-pādi,* பெ. (n.) சரிபாதி; (கொ.வ.) exact half.

[பெயர் + பாதி]

பகுதி – பாதி

பெயர்புறம் *peyar-puṟam,* பெ. (n.) புறங் கொடுக்கை; retreating '*பெயர்புறத் தார்த்து*' (புறநா.35.)

[பெயர்[2] + புறம்]

பெயர்ப்போலி *peyar-p-pōli,* பெ. (n.) உரிச்சொல்வகை (தொல்.சொல்.297,சேனா); word partaking of the nature of a noun.

[பெயர் + போலி]

பெயர்பொறி—த்தல் *peyar-poṟi-,* செ.குன்றாவி. (v.t.) புகழை நிலைநிறுத்துதல்; to be distinguished. '*பெயர் பொறிக்கும் பேராண்மையில்லாக் கடை*' (நாலடி.199)

[பெயர் + பொறி]

பெயர்போ—தல் *peyar-pō,* பெ. (n.) செ.கு.வி. (v.i.) புகழ்பெறுதல்; to be renowned, celebrated famous.

[பெயர் + போ]

பெயர்வழி[1] *peyar-vaḻi,* பெ. (n.) **1.** ஆள்; individual. **2.** தலைமுறை; genealogy (w.)

[பெயர் + வழி]

பெயர்வழி[2] *peyarvaḻi,* பெ.(n.) பொருளட்டவணை; list, catalogue

[பெயர் + வழி]

பெயர் வேற்றுமை *peyar-vēṟṟumai,* பெ.(n.) முதல் வேற்றுமை; (gram) nominative case. ***'அவ்வாறும் பெயர் வேற்றுமைப் பயனிலையாம்'*** (தொல். சொல். 66, சேனா.)

மறுவ. எழுவாய் வேற்றுமை

[பெயர் – வேற்றுமை]

வேற்றுமை = பொருள் வேற்றுமை செய்வன. (நன். 261) பெயர் வேற்றுமை என்பது ஒரு சொற்றொடறின் எழுவாய் இது என்று உணர்த்துவதாகும். எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை. உருபேற்றல் பெயர்க்கு இலக்கணமாகும். பெயர் வேற்றுமை பயனிலை கொள்ளாத வழியும் பெயர் வேற்றுமையேயாகும்.

பெயரகராதி *peyar-agarādi,* பெ.(n.) சதுரகராதியில் சொற்பொருளை விளக்கும் பகுதி; first section of Beschi's cadur-agarādi, containing homonyms.

[பெயர் – அகராதி]

பெயரட்டவணை *peyar-aṭṭavaṇai,* பெ. (n.) பெயர்ப்பட்டியல்(இ.வ.); index of names.

[பெயர் + அட்டவணை]

பெயரடி[1]–த்தல் *peyar-adi-,* செ.குன்றாவி. (v.t.) ஒருவன் பெயரைப் பதிவுப் புத்த கத்தினின்று நீக்குதல்; to score out a name, as from a roll or register. (தற்.) "மாணவர் ஐவர் சம்பளம் கட்டாமையால் பெயரடித்துவிட்டடார்கள்"

[பெயர் – அடி]

பெயரடி[2] *peyar-aḍi,* பெ. (n.) *பெயர்ப்பகுதி.* பார்க்க; see *peyar-p-pagudi*

[பெயர் + அடி]

அடி = முதலானது, பகுசொல்லிற் பெயராகிய பகுதி.

பெயரப்பெயர *peyara-p-peyara,* வி.எ. (adv.) மீண்டும் மீண்டும்; again, and again, ***'பெயரப் பெயரப் பார்த்தான்'*** (யாழ்ப்.)

[பெயர்[2] – அ + பெயர் + அ]

'அ' வினையெச்ச ஈறு

பெயரன் *peyaraṉ,* பெ.(n.) பெயரையுடைவன்; one who beavis a name. ***'எந்தை பெயரனை'*** (கலித். 81) **2.** மகன் அல்லது மகளிடம் பிறந்த பெயரன்; grandson, as bearing the grandfather's name. ***'தனிக் காதலைப் பெயரனை'*** (கம்பரா. அதிகாய.117.) **3.** பாட்டன் (யாழ்ப்); grandfather.

ஒருவனுக்கு மகனின் மகன் பேரன் எனப்படுவான். பெயரன் என்பது பேரன் என மருவிற்று. பாட்டன் பெயரைப் பேரனுக்கிடுவது பண்டை வழக்கமாதலால், பேரனுக்கு அப்பெயராயிற்று. சிலர் பாட்டனையும் பேரன் அல்லது பேரனார் என்பர், அரசகேசரி, பரகேசரி, எனற பட்டங்கள், பிற்காலச் சோழர்க்கு ஒன்றுவிட்டு வழங்கியதும் இம்முறை பற்றியே. (வே.கட்.26)

[பேரன் → பெயரன்]

பெயர் → பெயரன்= (முதற்காலத்திற் பாட்டன் பெயரைப் பெற்றுவந்த) மகன்மகன் (வே.க.127)

பெயராயிரு–த்தல் *peyarāy-iru-,* செ.கு.வி. (v.i.) **1.** புகழுண்டாதல்; to be famous, celebrated **2.** வெளிப்பாடு; to be rumoured, to be noised abroad.

[பெயர் + ஆய் + இரு]

பெயராளி *peyar-āḷi,* பெ. (n.) புகழ்மிக்கவன் (யாழ்.அக.); person of great celebrity.

[பெயர் + ஆள் + இ]

பெயரிடுதல் *peyar-iḍu-,* செ.கு.வி. (v.i.) பெயர் சூட்டுதல்; to give a name; to perfrom the rite of naming a child. "பெயரிடுதல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டியதில்லை."

[பெயர் + இடு]

பெயரிடை நிலை *peyar-iḍai-nilai,* பெ.(n.) பெயரின் முதனிலை இறுதிநிலை கட்கு இடைநிற்கும் எழுத்து (நன். 141, உரை.); (gram.) medial letter between the root and suffix of a noun as ñ in ariñan.

[பெயர் + இடைநிலை]

பெயரிய *peyariya,* பெ.எ. (adv.) 1. பெயர்பெற்ற; having a name. *'இருபாற் பெயரிய.... மூதூர்'* (புறநா. 202.) 2. பெயரால் அழைத்த; of calling by name. *'கோவெனப் பெயரிய காலை'* (புறநா. 152.)

[பெயர் – பெயரிய]

பெயரியல் *peyar-iyal,* பெ. (n.) சொல்லதி காரத்திற் பெயர்ச்சொல்லிலக்கணங் கூறும் பகுதி (தொல்.); (gram.) chapter on nouns.

[பெயர் + இயல்]

பெயரியற்சொல் *peyar-iyar-col,* பெ. (n.) தன் பொருளை இயல்பில் விளக்கும் பெயர்ச்சொல் (நன். 269); noun that naturally suggests its meaning.

[பெயர் + இயல் + சொல்]

பெயரிரவல் *peyar-iraval,* பெ. (n.) உடைமைக்கு உரியவர் பெயரை மறைத்து உரியரல்லாதார் பேரால் நடத்தும் நடவடிக்கை; benami transaction.

[பெயர் + இரவல்]

பெயரின்மை *peyar-inmai,* பெ. (n.) இறைவனெண்குணத்தொன்றான சொல்லமுடியாத தன்மை(பிங்.); namelessness, one of iraivan-en-guṇam. q.v.

[பெயர் + இன்மை]

பெயரின்னிசை *peyar-innišai,* பெ. (n.) சிற்றிலக்கிய வகை தொண்ணூற் றாறனுள் பாட்டுடைத் தலைவன் பெயர் சார்ந்துவர 50, 70 அல்லது 90 இன்னிசை வெண்பாக்களால் இயற்றப்படும் சிற்றிலக்கிய வகை. (இலக். வி. 825.) (சது.); a poem of 50, 70 to 90 stangas of innišsi-veṇbā each mentioning the name of a patron or hero, one of 96 širrilakkiyam.

[பெயர் + இன்னிசை]

பெயருரிச்சொல் *peyar-uri-c-col,* பெ. (n.) பெயர்ச்சொல்லைத் தழுவிவரும் சொல்(இ.வ.); adjective, as qualifying a noun.

[பெயர் + உரிச்சொல்]

பெயரூர் *peyar-ūr,* பெ. (n.) பெயரும் பிறந்தவிடமும்(வின்); name and native place.

[பெயர் + ஊர்].

பெயரெச்சம் *peyar-eccam,* பெ. (n.) பெயர்கொண்டு முடியும் வினைக்குறை (நன். 340.); பெயரை எச்சமாக உடையது. relative participle, as requiring a noun to complete the sense.

[பெயர் + எச்சம்]

பெயரெஞ்சுகிளவி *peyar-eñju-kiḷavi,* பெ. (n.) *பெயரெச்சம்* (தொல். சொல். 238.) பார்க்க; see *peyar-eccam*

[பெயர் + எஞ்சு + கிளவி]

பெயரெடு–த்தல் *peyar-edu-,* செ.கு.வி. (v.i.) **1.** பெயர் பெறுதல்; to get a name. **2.** *பெயரடி* பார்க்க; see *peyar-adi*

[பெயர் + எடு]

பெயரெழுத்து *peyar-eluttu,* பெ. (n.) எழுத்து வகை(பிங்.); a kind of letter.

[பெயர் + எழுத்து]

பெயரேடு *peyar-ēdu,* பெ. (n.) பேரேடு(நாஞ்.); ledger.

[பெயர் + ஏடு]

பெயல். *peyal,* பெ. (n.) **1.** பொழிகை; showering *'ஒல்லாது வானம் பெயல்'* (குறள். **559.**) **2.** மறை; rain *'மன்னவ னாட்ட பெயலும் விளையுளுந் தொக்கு'* (குறள். **545.**) **3.** மழைத்துளி (திவா.); rain drop. **4.** முகில்; cloud. *'பெயறுளி முகிலென'* (கலித். **56.**)

[பெய் – பெயல்]

பெயலை *peyalai,* பெ. (n.) மழை(சது.); rain "பெயலை பொய்த்தால் பெருந்தீங்கு" (இ.வ)

[பெய் → பெயல் → பெயலை]

பெயாதனம் *peyādanam,* பெ. (n.) வேங்கை (மலை.) பார்க்க; East India Kino.

பெரட்டு *perattu,* பெ. (n.) புரட்டு; deception. *'பெரட்டும் உருட்டும் வேதனை செய்வதும்'* (கனம் கிருஷ்ணையர், கீர்த்.**21.**).

[புரட்டு → பெரட்டு]

பெரி *peri,* பெ. (n.) சிறுநாகப்பூ; iron-wood of ceylon

பெரிசு *perišu,* பெ. (n.) *பெரியது* (யாழ்.அக.) பார்க்க; see *periyadu*

[பெரியது– பெரிது – பெரிசு] (கொ.வ.)

பெரிது[1] *peridu,* பெ. (n.) பெரியது; that which is great big or large. *'நன்மை கடலிற் பெரிது'* (குறள். **103.**)

[பெரியது– பெரிது]

பெரிது[2] *peridu* வி.அ. (adv.) மிகவும்; greatly. *'கலங்குவன் பெரிதென'* (கலித்.**27.**)

[பெரியது– பெரிது]

பெரிய *periya,* பெ.அ. (adf.) **1.** பெரிதான large, great. *'பெரிய மேருவரையே சிலையா மலைவுற்றார்'* (தேவா. **1114.9.**) **2.** மூத்த; elder. *'பெரிய தாயார்'* **3.** இன்றியமையாத; important, great. *'பெரிய செயல்'* **4.** நல்ல; noble. பெரிய நடை.

[பெரு(மை) பெரி – ய]

பெரியகம்பு *periya kambu,* பெ. (n.) கம்புப் பயிர்வகை; large bulrush millet, pennisetum typhoideum.

[பெரிய + கம்பு]



பெரியகரடி *periya-karadi,* பெ. (n.) எழுமுனிமண்டலம்; the great bear, (pond.)

[பெரிய + கரடி]

பெரியகருப்பன் *periya-karuppaṉ,* பெ. (n.) ஒரு சிற்றூர்த் தெய்வம்(இ.வ.); a village deity.

[பெரிய + கருப்பன்]

பெரியகாட்டுச்சாதி *periya-kāṭṭu-c-cādi,* பெ. (n.) காட்டுச் சாதி(M.M.887); malabar nutmeg.

[பெரிய + காட்டுச்சாதி. skt jāti. *த.சாதி]*

பெரியகாடை *periya-kāḏai,* பெ. (n.) காடை வகை(M.M. 75); common quail, coturnix communis.

[பெரிய + காடை]



பெரியகிளி *periya-kiḷi,* பெ. (n.) கிளிவகை; large indian parakeet, palacornis nepalensis.

[பெரிய + கிளி]

பெரியகுடி *periya-kuḏi,* பெ. (n.) *பெரிய குடியானவன்* பார்க்க; see *periya kuḏiyāṉavaṉ*

[பெரிய + குடி]

பெரியகுடியானவன் *periya-kuḏiyāṉavaṉ,* பெ. (n.) **1.** தலைமை வேளாளன்; biggest tenant or cultivator in a village. **2.** சிற்றூரின் பெருஞ்செல்வர்; mirasdār.

[பெரிய + குடியானவன்]

பெரியகுணம் *periya-guṇam,* பெ. (n.) **1.** உயந்தபண்பு; nobility, liberal disposition, magnanimity, **2.** உலகப் பற்றின்மை(வின்) superiority or indifference to worldly greatness, honours or pleasure.

[பெரிய + குணம்]

பெரியகை *periya-kai,* பெ. (n.) **1.** தாராளமான கை(யாழ்.அக.); liberal or bountiful hand. **2.** பணக்காரன்(இ.வ.); wealthy person **3.** சாய்கால் மிக்க ஆட்சி(வின்); influential party.

[பெரிய + கை]

பெரியகோயில் *periya-koyil,* பெ. (n.) திருவரங்கம்; Thiruvarangam *'நஞ்சேவகனார். மருவிய பெரியகோயில்'* (திவ். திருமாலை,11.) **2.** தஞ்சைப் பெரியகோயில்; Tanjore bigtemple.

[பெரிய + கோயில்]



பெரியசம்பா *periya-šambā,* பெ. (n.) ஆறுமாதத்திற் பயிராகும் சம்பா நெல்வகை (விவசாய.1); a kind of šambā paddy, maturing in six months.

பெரியசீயர் *periya-šiyar,* பெ. (n.) மணவாள மாமுனிகள்; an ācārya of the teṉkāli sri vaisṉavar.

[பெரிய + சீயர்]

skt.jiyar-**த.**சீயர்

பெரிய சேரான் *periya-cērāṉ,* பெ. (n.) தேன் சேரான்(யாழ்ப்.) glabrous marting-nut.

[பெரிய + சேரான்]

பெரிய தக்காளி *periya-takkāḷi,* பெ. (n.) தக்காளி வகை(M.M.**365**.); indian winter-cherry, physalus peruuiana.

[பெரிய + தக்காளி]

பெரிய தகப்பன் *periya-tagappaṉ,* பெ. (n.) **1.** தந்தையின் மூத்தஉடன்பிறந்தான்; father's elder brother. **2.** தாயின் மூத்த உடன் பிறந்தாளின் கணவன்; husband of mother's elder sister.

மறுவ. பெரியப்பன்

[பெரிய + தகப்பன்]

பெரியதகரை *periya-tagarai,* பெ. (n.) மரவகை(m.m. **155**.); West Indian bead tree.

[பெரிய + தகரை]

பெரியதட்டு *periya-taṭṭu,* பெ. (n.) கப்பலின் மேற்பகுதியான தளம்(naut.); deck.

[பெரிய + தட்டு]

பெரியதம்பிரான் *periya-tambirāṉ,* பெ. (n.) **1.** தம்பிரானுள் தலைவர்(வின்); chief among the non-brahmin saiva ascetics of a mutt. **2.** வண்ணார் முதலியோர் வணங்கும் சிவ திருமேனி; a form of siva, worshipped by washerman and others **3.** அங்காளம்மை(துஞ்.); a form of goddess Durgā.

[பெரிய + தம்பிரான்]

பெரியதலை *periya-talai,* பெ. (n.) பெரியவன்(கொ.வ.); a prominent person

[பெரிய + தலை]

பெரியதனக்காரன் *periya-daṉa-k-kāraṉ,* **1.** சிற்றூர் மணியக்காரன்(R.T.) village headman. **2.** சாதித் தலைவன்(இ.வ.); hereditary headman of a caste. **3.** சிற்றூரில் நில உடைமையாளர்; mirāsdār, chief landholder in a village.

[பெரியதனம் → பெரியதனக்காரன்]

பெரியதனம் *periya-daṉam,* பெ. (n.) **1.** பெருமை (வின்.); dignity, honour. **2.** மேட்டிமை (வின்.); pride, arrogance, haughtiness **3.** மேற்பார்வை (வின்.); superintendence **4.** பார்க்க, *பெரியதனக்காரன்* (கொ.வ.) see *periyataṉakkāraṉ.*

[பெரிய + தனம்]

தனம் = தன்மை

பெரியதாக்கு—தல் *periyadākku-,* செ.குன்றாவி. (v.t.). **1.** வளர்த்தல்; to cause to grow. இளங்கன்றைப் பெரியதாக்கும் பொறுப்பு இவருடையதானது(உ.வ.) **2.** பலவாக்கு; to mulfity. **3.** பருமனாக்கு; to cause to in create, big.

க. பெர்சிசு, பெச்சிசு

[பெரியது + ஆக்கு]

ஆகு. (த.வி.) – ஆக்கு(பி.வி)

பெரியதாய் *pariya-tāy,* பெ. (n.) 1. தாயின் மூத்த உடன் பிறந்தாள்; mother's elder sister; 2. தந்தையின் மூத்த உடன் பிறந்தான் மனைவி; wife of father's elder brother.

மறுவ. பெரியம்மா

[பெரிய + தாய்]

பெரியதாயி *pariya-tāyi,* பெ. (n.) ஒரு சிற்றூர்த் தேவதை;(G. SM. D. I. i, 120.) a village goddess.

[பெரியதாய் → பெரியதாயி]

பெரியதிருநாள் *pariya-tiru-nāḷ,* பெ. (n.) ஆண்டுதோறும் நடக்கும் பெரிய திருவிழா; (ஈடு. 10,4,10.); the important annual festival in a temple.

[பெரிய + திருநாள்]

பெரியதிருமடல் *periya-tirumaḏal,* பெ. (n.) நாலாயிரத்தெய்வப்பனுவலில் திருமங்கையாழ்வார் இயற்றிய சிற்றிலக்கிய வகை; a poem in divviya-p-pirabandam by Tirumaṅgai-y-āḷvār.

[பெரிய + திருமடல்]

பெரியதிருமொழி *pariya-tirumoḻi,* பெ. (n.) நாலாயிரத்தெய்வப்பனுவில் திருமங்கை யாழ்வார் இயற்றிய சிற்றிலக்கிய (பிரபந்த)வகை; a poem in Tivya-p-pirabandam, by Tirumaṅgai-y-āḷvār.

[பெரிய + திருமொழி]

பெரியதிருவடி *periya-tiru-v-aḏi,* பெ. (n.) கருடாழ்வார்(ஈடு,1,4,6); Garuḍa, dist. fr. ciṟiya-tiru-v-aḏi.

[பெரிய + திருவடி]

பெரியதிருவந்தாதி *periya-tiru-v-andādi;* பெ. (n.) நாலாயிரத் தெய்வப் பனுவில் வெண்பாக்காளால் ஈறுதொடங்கியாக நம்மாழ்வார் இயற்றிய சிற்றிலக்கியவகை; a poem in veṉbā in Tivviya-p-pirabandam by Nammāḻvār.

[பெரிய + திரு + skt.anta + ādi.த.அந்தாதி]

பெரியதிருவோலக்கம் *periya-tiru-v-ōlakkam,* பெ. (n.) அடியாரது பெருங்குழு (வைண); a large assemble of devotees, as in front of a deity.

[பெரிய + திரு + ஓலக்கம்]

பெரியதெள்ளுக்காய் *periyateḷḷukkāy,* பெ. (n.) அவரைக்கொடி வகை(m.m. 238); hegro bean cowitch,

[பெரிய + தெள்ளுக்காய்]

பெரியதேவர் *periyatēvar,* பெ. (n.) 1. ஆளும் அரசனுக்கு முன் ஆண்ட அரசன்; (கல்); the predecessor of a ruling king. 2. நந்திதேவர்; the sacred bull Nandi.

[பெரிய + தேவர்]

பெரியநங்கை *periyan-naṅgai,* பெ. (n.) *பெரியா நங்கை* (மூ.அ.) பார்க்க; see *periyā naṅgai.*

[பெரிய + நங்கை]

பெரியநடை *pariya-naḏai,* பெ. (n.) நல்லொழுக்கம்; noble courše of conduct.

[பெரிய + நடை]

பெரியநம்பி *periyanambi,* பெ. (n.) இராமாநு சரின் ஆசிரியர்களுள் ஒருவர்; (அஷ்டப். ஊச. 18); vaiṢṉava ācārya, precepor of Rāmānuja.

[பெரிய + நம்பி]

பெரியநறுவிலி *periyanaṟuvili,* பெ. (n.) மரவகை(M.M.802); large sebesten, m.tr., cordia obliqua.

[பெரிய + நறுவிலி]

பெரியநாள் *periya-nāḷ,* பெ. (n.) திருநாள்; festival day.

[பெரிய + நாள்.]

பெரியநோவு *periya-nōvu,* பெ. (n.) கால் நடைகட்கு வரும் வெக்கை நோய் (கால். வி.53); rinderpest, cattleplague.

[பெரிய + நோவு]

பெரியப்பச்சி *periyappacci,* பெ. (n.), *பெரியப்பன்* பார்க்க; see *periyappaṉ;*

[பெரிய + அப்பச்சி]

பெரியப்பன் → பெரியப்பச்சி

பெரியப்பன் *periyappaṉ,* பெ. (n.), தகப்பனுடன் பிறந்த மூத்தவன்; senior paternal uncle; 2. தாயின் தமக்கை கணவன்; mother's elder slster's hustand.

[பெரிய + அப்பன்]

பெரியப்பா *periyappā,* பெ. (n.), *பெரியப்பன்* பார்க்க; see *periyappaṉ.*

[பெரியப்பன் - பெரியப்பா. (வி.)]

பெரியபடி *periya paḍi,* பெ. (n.), நிலைத்த கொள்ளளவுள்ள படி; a standand measure of capaciy.

[பெரிய + படி]

பெரிய பணம் *periya paṇam,* பெ. (n.), 1. கால் உருவா மதிப்புக் கொண்ட காசு (G. Sm. D.l.i. 293); a coin of the value of querter rupee. 2. இரண்டரை 'அணா' மதிப்புக் கொண்ட காசுவகை. (C. G. 154); big fanam = 2 1/2 annas.

[பெரிய + பணம்]

பெரிய பிராட்டி *periya pirāṭṭi,* பெ. (n.), திருமகள்; lakshmi, as chief consort of viṣ̌ṇu. பெரிய பிராட்டியார் பக்கல் போலே (ஈடு,10,10,6)

[பெரிய + பிராட்டி]

பெரிய பிள்ளை *periya piḷḷai,* பெ. (n.), ஊர் அல்லது குடும்பத்திற்குத் தலைமையாக மதிக்கப்பட்டவன் (இட.வ.), aged man of a village or a family, held in respect.

[பெரிய + பிள்ளை]

பெரிய புராணம் *periya-purāṇam,* பெ. (n.), நாயன்மார் அறுபத்து மூவர் வரலாறு குறித்துச் சேக்கிழாரால் பாடப்பட்ட நூல்; a hagiologic poem containing the lives of the sixty. three Nāyaṉmār, by cēkkiḻār.

[பெரிய + skṭ, purāṇa. த.புராணம்]

பெரியபுலு *periya - pulu,* பெ. (n.), நூறு(யாழ்ப்.); cant for hundred, as a large ten.

[பெரிய + பல்து (பத்து) → பலு → புலு]

பெரியபுனுகுப் பூனை *periya puṉugu-p-pūṉai,* பெ. (n.), புனுகுப் பூனை வகை; large civet cat, viverra zebettia.

[பெரிய + புனுகுப் பூனை]

பெரிய பூளை *periya-pūḷai,* பெ. (n.), செடி வகை(m.m. 702); large poolay, m. sh. aerna javanica.

[பெரிய + பூளை]

பெரிய பெயர் *periya peyar,* பெ. (n.), பெரும் புகழ்(வின்); great fame, celebrity;

[பெரிய + பெயர்]

பெரிய பெருமாள் *periya perumāḷ,* பெ. (n.), 1. திருவரங்கத்துத் திருமால்; god at srire Tiru-v-araṅgam. பெரிய பெருமாளரங்க ராடிரூசல் (அஷ்டப். ஊசல். 2. பேரரசன்; (s.l.l. ii. 155) paramount soverign, emperor. பெரியபெருமாள் படிமை ஒன்று.

[பெரிய + பெருமாள்]

பெரிய பேச்சு *periya pēccu,* பெ. (n.), நல்ல பேச்சு; agreat, noble nord, 2. நீண்ட உரையாடல்; long discussion.

க. பெர்மாது.

[பெரிய + பேச்சு]

பெரிய பொருள் *periya poruḷ,* பெ. (n.), பரம்பொருள் (பரப்பிரமம்); Brahma, as the supreme being. "ஞானவானந்தமாம் பெரிய பொருளைப் பணிகுவாம்" (தாயு. திருவருள். பரசிவ. 2)

[பெரிய + பொருள்]

பெரியம்மா *periyammā,* பெ. (n.), *பெரியம்மாள்* பார்க்க; see *periyammāḷ.*

[பெரிய + அம்மா]

பெரியம்மாள் *periyammāḷ,* பெ. (n.), 1. தகப்பனுடன் பிறந்த மூத்தோனின் மனைவி; senior paternal uncle's wife. 2. தாயின் தமக்கை; mother'seldersister. 3. வீட்டுத்தலைவி (இ.வ.); the elder 4. lady or mistress of a house.

[பெரிய + அம்மாள்]

பெரியம்மான் *periyammāṉ,* பெ. (n.), 1. தாயுடன் பிறந்த மூத்தவன்; eldest of mother's brother's. 2. தந்தையினுடைய தமக்கையின் கணவன்; father's elder sister's husband.

[பெரிய + அம்மான்]

பெரியம்மான் பச்சரிசி *periyammāṉ-paccarisi,* பெ. (n.), செடி வகை (M.M. 27); pillbearing shrge, small herb.

[பெரியம்மான் + பச்சரிசி]

நிலத்தை யொட்டிப் படரும் அம்மான் பச்சரிசிச் செடிவகையுளொன்று.

பெரியம்மை *periyammai,* பெ. (n.), 1. *பெரியம்மாள்* (சொ.வ.) பார்க்க; see *periyammāḷ.* 2. அம்மை நோய் வகை (சொ.வ.); small-pox, personifed as a deity. 3. மூதேவி; goddens of misfortuse. மட்டில் பெரியம்மை வாகனமே (தனிப்பா. i, 96, 17).

[பெரிய + அம்மை]

பெரியமரம் *periya-maram,* பெ. (n.), கடலோடிகளின் பெரிய கட்டுமரம்; a large catamaran.

க. பேர்மர

[பெரிய + மரம்]

பெரிய மனசு *periya manašu,* பெ. (n.), *பெரிய மனம்* பார்க்க; *periya-manam.*

[பெரிய + மனம் → மனசு]

பெரியமனம் *periya-manam,* பெ. (n.) 1. நன்மனம்; noble mind, magnanimity. 2. தொடர்பு பற்றாதும் கைம்மாறு கருதாதும் எல்லா உயிர்கள் மேலும் இயல்பாகச் செல்லும் இரக்க உணர்வு – அருள் (இ.வ.); favour.

[பெரிய + மனம்]

பெரிய மனிதன் *periya manidan,* பெ. (n.), 1. மேன்மையாளன்; great man. 2. செல்வமும் சாய்காலு முள்ளவன்; wealthy, influential man. 3. உயர்ந்த நிலையிலுள்ளவன்; man of position, official or otherwise. 4. அகவை முதிர்ந்தோன்; aged man. 5. வண்ணாரினத் தலைவன்(E.T.VII. 317); head man of a caste, as of washerman.

[பெரிய + skṭ-Manu-ša→ *மனுஷ்யா→ த. மனிதன்]*

பெரிய பெண் *periyapen,* பெ. (n.), 1. அகவை முதிர்ந்தவள்; aged woman. 2. தகுந்த நிலையிலுள்ளவள்; influential woman; woman of position. 3. பருவமடைந்தவள்; a girl who attainded puberty.

[பெரிய + பெண்]

பெரியமனுசி *periyamanusi,* பெ. (n.), *பெரிய பெண்* பார்க்க; see *periya pen.*

[பெரிய + skṭ. Mānusi- *மனுஷி → த. மனுசி]*

பெரியமனுசியா–தல் *periyamanuriyā,* செ.கு.வி. (n.),. பார்க்க; see *periyaḷāvalatal.*

[பெரிய + skṭ-Manusi-*மனுஷி → த. மனுசி + ஆ]*

பெரியமாவிலிங்கம் *periya-māviliṅgam,* பெ. (n.), மாவிலிங்க வகை; a species of garlic pear.

[பெரிய + மாவிலிங்கம்]

பெரிய முப்பழம் *periya-muppāḻam,* பெ. (n.), பாட்டின் மரபு கூறும் ஒரு பழைய நூல் (யாப். வி. பக். 516); an ancient treatise on poetics, not now extant.

[பெரிய + முப்பழம்]

பெரிய மூக்கிரட்டை *periya mukkiraṭṭai,* பெ. (n.), மூக்குத்திக்கொடிவகை(ட.) pointed-leaved hogweed.

[பெரிய + மூக்கிரட்டை]

பெரியமூளை *periya mūḷai,* பெ. (n.), மூளையின் மேற்பாகம் (இங். வை. 27); cerebrum, fore.brain. 2. அறிவாற்றல் மிக்கவன்; a person of great intellect.

[பெரிய + மூளை]

பெரியமேளம் *periya-mēḷam,* பெ. (n.), **1.** நாகசுரம் முதலிய பெரிய இசைக் கருவிகள் கொண்டு வாசிக்கப்டும் மேளம்; music of big instruments, like clarionet, pipe drum and cymbals, dist cinna-mēḷam. **2.** பெரும் படியாய்ச் செய்வது; anything done on a large scale. அவர் வேலைகளெல்லாம் பெரிய மேளம்.

[பெரிய + மேளம்]

பெரியர் *periyar,* பெ. (n.), *பெரியார்* பார்க்க; see *periyār.* "சான்றோர் பெரியராக் கொள்வது கோள்" (நாலடி. **165)**

[பெரியார் - பெரியர்]

பெரியலவங்கப்பட்டை *periyalavaṅga-p-paṭṭai,* பெ. (n.), மரவகை; cassia cinnamon.

[பெரிய + இலவங்கப்பட்டை]

பெரியவசூரி *periyavaśūri,* பெ. (n.), **1.** *பெரியம்மை* பார்க்க; see *periyammai.*

[பெரிய + வைசூலி→ வைசூரி→ வசூரி]

பெரியவடி *periya-v-aḍi,* பெ. (n.), நீண்டவடி; a long foot.

க. பேரடி

[பெரிய + அடி]

பெரியவர் *periyavar,* பெ. (n.), **1.** உயர்ந்தோர்; the great. பெரியவர் கேண்மை பிறை போல... நந்தும் (நாலடி. **125) 2.** முதியவர்; the aged. **3.** முன்னோர்; ancestors. எங்கள் பெரியவர் தேடிவைத்த சொத்து.

[பெருமை → பெரியோர் → பெரியவர்]

பெரிய வரகு *periya varagu,* பெ. (n.), வரகு வகை(Rd.M.); a large species of common millet.

[பெரிய + வரகு]

பெரிய வராடி *periya vārāḍi,* பெ. (n.), பாலையாழ்த்திற வகை (பிங்.); a secondary medody - type of the pālai class.

[பெரிய + வராடி]

பெரிய வவசரம் *periya v-avaśaram,* பெ. (n.), உச்சிக் காலத்தில் கோயில் திருமேணிக்குப் படைக்கும் படையல்; noon meal offered before the chiefdeity in a temple.

[பெரிய +skt. avasara. த.அவசரம்]

பெரியவள் *periyavaḷ,* பெ. (n.), **1.** அகவை முதிர்ந்தவள்; elderly woman. **2.** பூப்பெய்தியவள்; a girl who has attained puberty.

[பெரிய + (அ)வள்]

பெரியவளா—தல் *periyavaḷ-ā-,* செ. கு. வி. (v.i.), பூப்பெய்துதல்; to attain pubery, as a girl.

[பெரியவள் + ஆ –, → பெரியவளாதல்]

பெரியவன் *periyavaṉ,* பெ. (n.), **1.** உரிய அகவை அடைந்தவன்; grown-up man. **2.** மூத்தோன்; senior, elder. "தம்பியை நோக்கிப்பெரியவன்.... என்றான்" (கம்பரா.சித்திர.**57.) 3.** பெரிய நிலையிலுள்ள வன்; bigwig.

[பெரிய + (அ)வன்]

க. பெர்மக

பெரியவாகை *periyavāgai,* பெ. (n.), *காட்டுவாகை,* பார்க்க; see *kāttu-vāgai.*

[பெரிய + வாகை]

பெரியவாச்சான்பிள்ளை *periya-v-āccāṉpiḷḷi,* பெ. (n.), கி.பி. 13 ஆம் நூற்றாண்டி னரும் நாலாயிரத் தெய்வப் பனுவலுக்கு உரையும் மற்றும் பல நூல்களும் இயற்றியவருமான ஒரு மாலிய ஆசிரியர் (உபதேசரத். 46); a vaišṇava ācārya, author of many works, and commentator of Tivya-p-pirpandam.

[பெரிய + ஆசான் + பிள்ளை]

பெரியவாத்தி *periya-v-ātti,* பெ. (n.), சிவப்புமந்தாரை; purple variegated mountain ebony.

பெரியவாய்[1] *periya-vāy,* பெ. (n.), அலப்பு வாயன்; one who talks loudly and boisterously.

மறுவ. *அகலவாய்*

[பெரிய + வாய்]

பெரியவாய்[2] *periyavāy,* பெ. (n.), மரவகை; half-spur, flowered nutmeg.

[பெரிய + வாய்]

பெரியவாள் *periya-vāḷ,* பெ. (n.), ஈர்வாள்; pit saw.

[பெரிய + வாள்]

பெரியவீட்டுக்காரன் *periya viṭṭu-k-kāraṉ,* பெ. (n.), 1. செல்வமுடையவன்; big or wealthy man. 2. பறையன்; a man of pariya caste.

[பெரிய + வீட்டுக்காரன்]

பெரியவுடையநாயனார் *periya-v-udaiyaāyaṉār,* பெ. (n.), தஞ்சைக் கோயில் இறைவன்; god bṛhadisvara of the Tanjore.

[பெரிய + உடைய + நாயனார்]

பெரியவுடையார் *periya-u-ḏaiyār,* பெ. (n.), சடாயு; (திவ். இயற். திருவிருத். 18. வயா) jaḏāyu.

[பெரிய + உடையார்]

பெரியவெண்ணம் *periya-v-eṉṉam.* பெ. (n.), 1. உயர்ந்த சிந்தை; nobleaspiration, great conception. 2. வீண் பெருமை; high conceit, assumption.

[பெரிய + எண்ணம்]

பெரிய வெள்ளிக்கிழமை *periya-veḷḷi-k-k-kiḻamai.* பெ. (n.), ஏசுபெருமான் குறுக்கில் (சிலுவையில்) அறைந்து கொல்லப்பட்ட நாளின் ஆண்டுக் கொண்டாட்டம்; (கிறித்) good friday, the anniversary of the day on which jesus christ was crucified.

[பெரிய + வெள்ளிக்கிழமை]

பெரியாண்டவர் *periyāṉḏavar,* பெ. (n.), ஒரு தெய்வம்; a deity.

[பெரிய + ஆண்டவர்]

பெரியாணங்கை *periyāṉangai,* பெ. (n.), *பெரியா நங்கை* பார்க்க; see *periyā nangai.*

[பெரியாள் + நங்கை]

பெரியாத்தாள் *periyāttāḷ,* பெ. (n.), *பெரியம்மாள்* பார்க்க; see *periyammāḷ.*

[பெரிய + ஆத்தாள்]

ஆத்தாள் = தாய்

பெரியாத்தை *periyāttai,* பெ. (n.), *பெரியம்மாள்* பார்க்க; see *periyammāḷ.*

[பெரியாத்தாள் - பெரியாத்தை]

பெரியாநங்கை *periyā-naṅgai,* பெ. (n.), செடி வகை (பதார்த்த.544); large milkwort.

[பெரிய + நங்கை]

பெரியாம்பல் *periyāmbal,* பெ. (n.), அல்லி; water lilly.

[பெரிய + ஆம்பல்]

பெரியாய்ச்சி *periyācci,* பெ. (n.), *பெரியம்மாள்* பார்க்க; see *periyammāḷ.*

[பெரிய + ஆய் → ஆய்= தாய் ஆய்ச்சி]

பெரியாயி *periyāyi,* பெ. (n.), *பெரியம்மாள்* பார்க்க; see *periammāḷ.*

[பெரிய + ஆய் → ஆயி]

பெரியார்[1] *periyār,* பெ. (n.), **1.** மூத்தோர்; the aged. **2.** சிறந்தோர்; the great. "பெரியார் பெருமை சிறுதகைமை" (நாலடி. 170) **3.** அறிவர்; saints, sags. பெரியாரும் பணித்தார் (குறள், 381 பரி. அவ.) **4.** அரசர்; kings. "பெரியார் மனையகத்தும்....வணங்கார் குரவரையுங் கண்டால்" (ஆசாரக். 73).

க. பிரியர். : **பட.** கிரிய

[பெருமை → பெரியார்]

பெரியார்[2] *periyār,* பெ. (n.), திராவிட கழகத்தின் தனிப்பெருந்தலைவர். தன்மான இயக்க நிறுவனர்; சமய மூடநம்பிக்கைகளைச் சாடிய பகுத்தறிவுச் சிந்தனையாளர்; the great leader of Dravidar kazhagam and founder of self-respect. one who regects common ideas about religion.

[பெருமை → பெரியார்]



பெரியாழ்வார் *periyāḻvār,* பெ. (n.), ஆழ்வார் பதின்மருள் ஒருவர்; a vairdava saint and hymnist, one of ten āḻvār. பட்டடர்பிரான் பெற்றான் பெரியாழ்வா ரென்னும் பெயர் (உப தேசரத். 18.)

[பெரிய + ஆழ்வார்]

பெரியோர் *periyōr,* பெ. (n.), *பெரியார்*[1] பார்க்க; see *periyār.* "பெரியோர் கண்டு கைவிட்ட மயல் (நாலடி." 43.) (திவா.)

[பெரியார் → பெரியோர்]

பெரியோர்பெருமான் *periyōr perumāṉ,* பெ. (n.), நான்முகன்; brahmā, as lord of sages. "மேலைப் பெரியோர் பெருமான் படைத்தான்" (சீவக. 2066.)

[பெரியோர் + பெருமான்]

பெரியோன் *periyōn,* பெ. (n.), உயர்ந்தோன்; great man. கருணையினாற் பெரியோ னொருவன் (திருவாச. 44, 2) 2. கடவுள்; god as the great. "பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்" (சிலப். 5, 169)

[பெரியன் - பெரியோன்]

பெரு–த்தல் *peru-,* செ.கு.வி (v.i.), 1. பருத்தல்; to grow thick, large, stout. 2. மிகுதல்; to become numerous. "கரடியாதி பெருத்த " (விநாயகபு.)

ம. பெருகுக; தெ. பெருகு.

[பல் → பரு → பெரு]

பெருக்க *perukka,* வி. எ. (adv.), மிகுதியாய்; greaty, intensely. ஏன் நீ பேராசை கொண்டு பெருக்கத் தவிக்கிறாய் (இட.வ.).

பெரு - பெருக்க

'அ' வி. எ. ஈறு.

பெருக்கம் *perukkam,* பெ. (n.), 1. வளர்ச்சி; increase, augmentation. 2. மிகுதி; multipliciy, plentiulness, abundancea "உண்மைப் பெருக்கமாந் திறமை." (திருவாச. 42, 7) 3.செல்வம். prosperity, opulenec, wealth. பெருக்கம் பெருமித "நீர்த்து" (குறள். 431). 4. வெள்ளம்; flood, deluge. "புதுப்பெருக்கம் போல" (நாலடி. 354) 5. நிறைவு; fulness, perfection . "பெருக்கத்து மதிதழுவி" (விநாயகபு) 6. நீடிப்பு; long continuance, as of the tāli' worn by a married woman. அவள் தாலிப் பெருக்கமா யிருக்கிறாள்.

[பெரு → பெருகு → பெருக்கம்]

பெருக்கம் பண்ணுதல் *perukkam paṇṇu,* செ. குன்றா.வி. (v.t.) களத்துப் பரவிய நெல்லைக் கையாற் கூட்டுதல்(யாழ்ப்.) to glean grains scattered on the threshing - floor.

[பெருக்கம் + பண்ணு]

பெருக்கமரம் *perukka-maram,* பெ. (n.), *பப்பரப்புளி* (L.) பார்க்க; see *papparappuḷi.*

[பெருக்கம் + மரம்]

பெருக்கல் *perukkal,* பெ. (n.), 1. குப்பை கூட்டுகை; sweeping. 2. ஓர் எண்ணை மற்றோர் எண்ணாற் சுட்டிய மடங்கு அதிகப்படுத்துகை; multiplication. 3. மேம் படுத்துகை; improving, making prosperous. "பின்யானிவனைப் பெருக்கலு முற்றனென்" (பெருங். உஞ்சைக், 37, 200)

[பெருக்கு + அல்]

'அல்' தொ. பெ. ஈறு)

பெருக்கல் வாய்பாடு *perukkal vāypāḍu,* பெ. (n.) எண்களைப் பெருக்குவதாலுண்டாம் தொகையைக் காட்டும் வாய்பாடு (கணக்); multiplication table. இரண்டாம் வகுப்பில் பெருக்கல் வாய்பாடு கற்பிக்கப்படுகிறது.

[பெருக்கல் + வாய்பாடு]

பெருக்கலங்காரம் *perukkalaṅgāram,* பெ. (n.), வியப்பணி (அதிசய வணி); (rhet.). (வீரசோ. அலங். 25, உரை) hyperbole.

[பெருக்கல் + அலங்காரம்]

(skt. alankāra *த. அலங்காரம்)*

பெருக்கற்கணக்கு *perukkar-kanakku,* பெ. (n.), *பெருக்கல்,* பார்க்க; see *parukkal* (arith.)

[பெருக்கல் + கணக்கு]

பெருக்கன் *perukkan,* பெ. (n.), பரும்படியானது (வின்); that which is coarse.

[பெருக்கு → பெருக்கன்]

பெருக்காச்சவட்டு *perukkāccavattū,* பெ. (n.), கவனமின்மை; indifference. (யாழ். அக.) 2. வெறுப்பு; dislike.

[பெருக்கு + ஆ + சவட்டு]

பெருக்காலட்டை *perukkāl-attai,* பெ. (n.), அட்டைவகை (இ.வ.); a kind of leech.

[பெரு(மை) + கால் + அட்டை]

பெருக்காளர் *perukkālar,* பெ. (n.), 1. சிறப்புடையோர்; grandees, noblemen. 2. கடை நிலையர் (சூத்திரர்); (பிங்) men of the sūdra caste.

[பெருக்கு + ஆள் + அர்]

பெருக்காறு *perukkāru.* பெ. (n.), பெருகியோடும் ஆறு; river in floods. செல்வமோ பெருக்காறு போலாம். (குமரே. ச. 67.)

[பெருக்கு + ஆறு]

பெருக்கி *perukki,* பெ. (n.), வித்தமிழ்து (விந்து); (சங். அக.); semen virile.

[பெருக்கு → பெருக்கி.]

'இ' வினைமுதல்குறித்த ஈறு.

பெருக்கிவிடு-தல் *perukki-vidu-,* செ.கு.வி. (v.i.), ஓடி விடுதல்; to run away.

பெருகு (த. வி.) - பெருக்கு (பி. வி.)

பெருக்குதல் = அகலுதல், நீங்குதல், தொலைவாதல், ஓடுதல்.

[பெருகு → பெருக்கு → பெருக்கி + விடு- தல்]

பெருக்கு¹-தல் *perukku,* செ. குன்றாவி. (v.t.), 1. விரியச் செய்தல்; to cause to increase or abound; to make greater. "வாரி பெருக்கி" (குறள். 512) 2. நீர் நிரப்புதல்; to fill, to cause to swell and overflow. வாய்க்காலால் ஏரியைப் பெருக்க வேண்டும். (உ. வ.) 3. மோர் முதலியற்றை நீர் கலந்து பெருகச் செய்தல்; to dilute with water, as buttermilk, "நீர் சுருக்கி மோர் பெருக்கி" (பதார்த்த. 1498) 4. குப்பை கூட்டுதல்; to sweep. 5. ஓர் எண்ணை மற்றோர் எண்ணாற் கூட்டிய மடங்கு அதிகப்படுத்துதல் (கணக்); to mulitply.

தெ. பெருக; க. பெர்சிசு; ம. பெருக்குக.

[பல் → பரு - பெரு → பெருகு → பெருக்கு]

பெருக்கு (பி. வி),

பெருக்கு² *perukku,* பெ. (n.), 1. வெள்ளம்; flood, inundation. "ஆற்றுப்பெருக்கற்று" (நல்வழி. 9) 2. கடல் நீரேற்றம்; ebb of the tide. 3. குருதியோட்டத்தின் மிகுதி; height of the circulation of the blood which is supposed to ebb and flodaily like the tide.

4. மிகுதி (வின்); influx, like the wealth. **5.** *பெருக்கற்கணக்கு;* (யாழ். அக.) பார்க்க; see *perukkarkenakku.* **6.** *பெருக்குத் தொகை* பார்க்க; see *perukku-t-togai.* **7.** *பப்பரப்புளி* (மலை) பார்க்க; see *papparapuli,* baobab.

[பெருகு + பெருக்கு]

பெருக்குக் கணக்கு *perukku-k-kanakku,* பெ. (n.), *பெருக்கற்கணக்கு* (யாழ். அக.) பார்க்க; see *perukkar-kankku.*

[பெருக்கு + கணக்கு]

பெருக்குத் தொகை *perukku-t-togai,* பெ. (n.), இரண்டு எண்களைப் பெருக்கியதாற் கூடிய தொகை(கணக்); product.

[பெருக்கு + தொகை]

பெருக்குமாறு perukku - māruபெ.(n.) விளக்குமாறு (இ.வ.);broom.

[பெருக்கு + மிலாறு→ மாறு]

பெருக்குமெண் *perukkumen,* பெ. (n.), மற்றொன்றைப் பெருக்குதற்கு உரிய எண் (கணக்.); multiplier.

[பெருக்கு(ம்) + எண்]

பெருக்குரல் *perukkural,* பெ. (n.), பாடுகையில் தோன்றும் வெடித்த குரல்; cracked voice (mus.) (திருவாலவா. 57,26)

[பெரு(மை) + குரல்]

பெருக்கு வேளை *perukku-vēlai,* பெ. (n.), **1.** கடலின் நீரேற்றக் காலம்; time of the flow of tide. **2.** உடலில் குருதியோட்டம் மிகுந்த காலம்; time of the day when the circulation of the blood is at its height. **3.** உச்சிப்போது (யாழ். அக.); midday.

[பெருக்கு + வேளை]

பெருகு = விரைவு, பெருகிய நிலை, உயர் நிலை.

பெருக்கெடு—த்தல் *perukkedu,* செ. கு. வி. (v.i.), வெள்ளம் அதிகமாதல்; to flood, as a river; to ebb, a tide.

[பெருக்கு + எடு.,]

பெருக *peruga,* வி.எ.*(adv)* நிரம்ப; abundantly, prosperously. 'பெருக வாழ்.'

[பெருகு - பெருக.]

'அ' வி. எ. ஈறு

பெருகல் *perugal,* பெ. (n.), மிகுதி; (பிங்.) abundance.

[பெருகு + அல்]

பெருகளர்வா *peru-galarvā,* பெ. (n.), மரவகைm.m.; large tooth brushtree.

[பெருகு + அளர்வா.]

பெருகளற்று வட்டம் *perugalarru - vattam,* பெ. (n.), *பெருங்களிற்று வட்டம்* (பிங்.*ms.)* பார்க்க; see *perungalrru-vattam.*

[பெரு + களிற்று + வட்டம்]

பெருகியல் *perugiyal,* பெ. (n.), சாதிப்பெரும் பண் நான்கனுள் ஒன்று(கந்தபு. சூரனர. 23); a class of primary melody, types, one of four šādi-p-perum-pan. (mus.)

[பெருகு + இயல்.]

பெருகியன் மருதம் *perugiyaṉ-marudam,* பெ. (n.), பண் வகை (சிலப். 8,39.) a primary melody-type

[பெருகியல் + மருதம்]

பெருகிலை *perukilai,* பெரு.(n.) *வெள்ளைக் கண்ணி* (L.); Pink. tinted heart leaved glory tree.

பெருகு—தல் *perugu,* செ. கு. வி. (v.i.), **1.** அளவு மிகுதல்; to increase in numbers, multiply, spread to abound. **2.** நிறைதல்; (சூடா.); to become full; to be perfected. **3.** நீர் மிகுந்தெழுதல்; to rise, swell, to over flow, as water பெருகு மதவேழம் (திவ். இயற். 2,75) **4.** மேம்படுதல்; to be increased, augmented or enlarged, to grow great, prosper. "பண்பிலார் கேண்மை பெருகலிற் குன்ற லினிது" (குறள். 811) **5.** முதிர்தல்; to come to maturity, as embryo. "பெருகுசூலிளம்பிடிக்கு" (கம்பரா. சித்திர. 10) **6.** வளர்தல்; to grow தளிபெருகுந் தண்சினைய (பரிபா. 8,91). **7.** ஆக்கந்தருதல் (வின்.); to bring prosperity, **8.** தாலி அற்று வீழ்தல்(கொ.வ.); to snap, as the thread of the marriage badge, used euphemistically. **9.** கேடுறுதல், (தொல். சொல். 17 உரை) (திருக்கோ. 218. உரை); to be injured, ruined, used euphemistically. **10.** விளக்கணைதல்; (நேமி . சொல்.10. உரை); to be put out or extinguished, used euphemistically.

க. பெர்சு

[பல் -பரு - பெரு - பெருகு.]

பெருகு[2] *perugu,* பெ. (n.), தயிர்; (பிங்.) curdled milk.

தெ. பெருகு.

[பெரு → பெருகு]

பெருகு[3] *perugu,* பெ. (n.) அணிகல வகை; (அக.நி); an ornament.

[பெரு → பெருகு]

பெருகுசாதி *peruguśādi,* பெ. (n.), பண்ணியற்றிற வகைகளுள் ஒன்று;(mus.) (சிலப். 13, 110–12, உரை); a sub-variety, of paṉṉiyaṟṟiram

[பெருகு + சாதி]

பெருங்கட்டி *peru-ṅkaṭṭi,* பெ. (n.), பிளவை; abscess.

[பெரும் + கட்டி]

பெருங்கட்டு *peru-n-kaṭṭu,* பெ. (n.), பெருஞ்சரக்கு மூட்டை; large bundle.

[பெரும் + கட்டு]

பெருங்கட்டுக்கொடி *peru-ṅ-kaṭṭu-k-kodi,* பெ. (n.), பாலுள்ள கொடிவகை; (பதார்த்த. 325) a milcy creeper.

[பெரும் + காட்டுக்கொடி]

பெருங்கடப்பு *peruṅgaḍappu,* பெ. (n.), கடப்ப நெல் வகை(A.); a kind of paddy

[பெரும் + கடப்பு]

பெருங்கடமை *perun-gadamai,* பெ. (n.), பெரும்பொறுப்பு; duty

[பெரும் + கடமை]

பெருங்கடி *peru-ṅ-kadi,* பெ. (n.), படை நோய் வகை (யாழ். அக.); singworm.

[பெரும் + கடி]

பெருங்கடுகு *peru-ṅ-kadugu,* பெ. (n.),கடுகு வகை(இ.வ.); a kind of mustard.

[பெரும் + கடுகு]

பெருங்கடிந்துரை *peru-n-katindurai,* பெ. (n.), *பெருங்கண்டனம்;* reproachful language.

[பெரும் + கடிந்துரை]

பெருங்கடை *peru-in-kaḍai,* பெ. (n.), பெரிய கடைவீதி; big bazaar street.

[பெரும் + கடை]

பெருங்கண்டனம் *peru-n-Kantanam,* பெ. (n.), பெருங்கடிந்துரை பார்க்க.see Perunkatinturai

[பெரும் + கண்டனம்]

பெருங்கண்ணாடி விரியன் *peru-ṅ-kaṇṇāḍi- viriya,* பெ. (n.), பாம்புவகை(M.M); large glass viper

[பெரும் + கண்ணாடி + விரியன்]



பெருங்கண்ணி *peruñ-kanni,* பெ. (n.), பொறிவலை; toils.

[பெரும் + கண்ணி]

பெருங்கணக்கு *peru-ṅ- kaṇakku* பெ. (n.), **1.** பெருந்தொகை; large amount. **2.** பெரும் படியானது; that which is on a large scale. **3.** இறுமாப்பு; arrogance. அவர் பெருங் கணக்கிலே பேசுகிறார்.

[பெரும் + கணக்கு]

பெருங்கணி *peru-ṅ-kaṇi,* பெ. (n.), தலைமைக் கணியன்; chief astrologer. "ஆசான் பெருங் கணி யறக்களத் தந்தணர்" (சிலப். 22, 8)

[பெரிய + கணி]

பெருங்கத்தரிசால் *peru-ṅ-kattari-šāl,* பெ. (n.) கிளை விளக்குத்தண்டு (புதுவை.) candelanra.

பெருங்கதை *peru-ṅ-kadai,* பெ (n.) **1.** நீண்டகதை; Very long story **2.** மிகவும் அறிந்த செய்தி(வின்); general report, thing well known. **3.** பிள்ளையார் கதைப்படலத்தில்

இறுதிப்படிப்பு(யாழ்ப்.); last reading of Pillaiyār-kadai, in a temple. **4.** உதயணன் வரலாறு பற்றியதும் பிருகத்து கதையைத் தழுவிய மைந்ததும் கொங்கு வேளிராற் பாடப் பெற்றதுமான தமிழிலக்கியம்; a Tamil poem by Kongu-Vēl containing the story of Udayaṇaṉ being an adoption of Brhatkata.

[பெரும் + கதை.]

பெருங்கம்பு *peru-ṅ-kambu,* பெ (n.) **1.** கம்புப்பயிர்வகை; large bulrush millet, pennistam.

[பெரும் + கம்பு]

பெருங்கமுக்கம் *peru-m-kamukkam,* பெ. (n.) *பெருமந்தணம்* பார்க்க; see *purumandanam.*

[பெரும் + கமுக்கம்]

பெருங்கரப்பான் *peru-ṅ-karappān,* பெ (n.) **1.** கரப்பான் வகை (தஞ்.சர.iii,**92**); a kind of eruption.

பெருங்கரம் *peru-ṅ-karam,* ஸ(n) கோவேறு கழுதை; *mule.* *"பெருங்கரத்துருவு பெற்றனன்"* (சேதுபு. பாவநா,**24**).

[பெரும் + கரம்]

பெருங்கரணை *peruṅ-karaṇai,* பெ.(n) *பெருங்கழலைப்* பார்க்க; *see peru-ṅ-kalalai.*

[பெரும் + கரணை]

பெருங்கல்வம் *perun-kalvam,* பெ. (n) பெரிய உரல்; (குழியம்மி); *big mortar*

[பெரும் + கல்வம்]

பெருங்கலக்கம் *Peruṅ-kalakkam, orr (n)(* மனஉலைவு; *lack of peace.*

[பெரும் + கலக்கம்]

பெருங்கலக்குறுத்து—தல் *peru-ṅ-kala-kuruttu-.* செ.குன்றாவி (v.t.) பெரிய குழப்பமுண்டுபண்ணுதல்; to create a big commotion or uproar. *'கொடித்தேர் வீதியும் பீடிகைத் தெருவும் பெருங்கலக்குறுத்தாங்கு'* (மணிமே.**4.38**).

[பெரும் + கலக்குறுத்து.]

பெருங்கலகம் *peruṅ-kalagam,* பெ. (n) பெரும்பூசல்; disorder. dispute

[பெரும் + கலகம்]

பெருங்கலம் *peru-ṅ-kaiam,*-பெ. (n.) ஆயிரம் நரம்புடைய பேரியாழ்; a large lute having, 1,000 strips. *'ஓங்கிய பெருங்கலந் தருக்கிய வுதயணன்'* (பெருங். இலாவாண.**1.74**).

[பெரும் + கலம்]



பெருங்கலித்தொகை *peru-ṅ-kali-t-togai-* பெ. (n.) இறந்துபட்ட இடைக்கழகத்து நூல்களுள் ஒன்று; a Tamil treatise of iḍai-c-saṅgaṅ not extant. *"இருங்கலி கடிந்த பெருங் கலித் தொகையொடு"* (சிலப். உரைப்பா. பக்.**7** அடிக்குறிப்பு).

[பெரும் + கலித்தொகை]

பெருங்கலையன் *peru-ṅ-kalaiyaṉ,* பெ. (n.) நெல்வகை (யாழ்.அக.); a kind of paddy.

[பெரும் + கலையன்]

பெருங்கவர்ச்சி *peru-ṅgavarchi,* பெ. (n) ஈர்ப்பாற்றல்; attraction.

[பெரும் + கவர்ச்சி]

பெருங்கவி *peru-ṅ-gavi,* பெ. (n.) **1.** பாவலர்; a kind of poetical compo[illegible] அகலப்பா பாடவல்லவன் (**யாப்.வி.பக்.513**); a poet skilled in composing Agalappā.

[பெரும் + Skt.kavi. *த. கவி]*

பெருங்கழலை *peruṅ-kaḻalai,* பெ. *(n)* பெருங்கழலைக்கட்டி; *bigwart.*

[பெரும் + கழலை]

பெருங்கள்ளி *peruṅ-kaḷḷi,* பெ. (n.) **1.** சிறுமரவகை; white frangipani, s.tr., plumeria alba. **2.** ஈழத்தலரி; pagoda tree.

[பெரும் + கள்ளி]

பெருங்களிப்பு *peru-n-kalippu,* பெ. (n.) பெருமகிழ்ச்சி; great pleasure.

[பெரும் + களிப்பு]

பெருங்களன்செய்—தல் *peru-ṅ-kaḷaṉšey-,* செ.குன்றாவி. (v.t.) தெய்வத்தன்மைக்குரிய இடமாக அணியம் செய்தல்; to cleanse a ground and consecrate it. *'உளம் பெருங்களன் செய்ததுமிலை'* (திருவாச.5,35.)

[பெரும் + களன் + செய்]

பெருங்களா *pēru-ṅ-kaḷā,* பெ. (n.) மரவகை; large Bengal currant, s.tr., carissa carandas

[பெரும் + களா]

பெருங்களிற்றுவட்டம் *peru-ṅ-kaḷiṟṟu-vaṭṭam,* பெ. (n.) எழுநிரயத்தொன்று (பிங்.); a hell, one of eḷu-nirayam.

[பெருகளற்றுவட்டம் → பெருங்களிற்று வட்டம். பெருகு+அளறு + வட்டம் = பெருகளற்றுவட்டம்]

பெருங்கற்றாழை *peruṅ-kaṟṟāḷai,* பெ. (n.) கற்றாழை வகை; a kind of aloe. (நாஞ்.).

[பெரும் + கற்றாழை]



பெருங்கறி *peru-ṅ-kaṟi,* பெ. (n.) பெருங் கூட்டத்திற்குப் படைக்கச் செய்யப்படும் கறிவகை; (இ.வ.) curry specially prepared for supplying a large number of people.

[பெரும் + கறி]

பெருங்கறையான் *peru-ṅ-karaiyān,* பெ. (n.) தாய்க்கறையான் பார்க்க; see tāy-k-karaiyān queen-ant found in every nest of termites.

மறுவ. சிதல்

[பெரும் + கறையான் கறை + ஆன்]

பெருங்காக்கை பாடினியம் *peru-ṅ-kākkai-pāḍiṉiyam,* பெ. (n.) பெருங்காக்கை பாடினியார் இயற்றிய யாப்பிலக்கண நூல் (வின்.); a treatise on prosody by peru-ṅ-kākkai-p-pi-niyār, not extant.

[பெரும் + காக்கைபாடினியம்]

பெருங்காசிக்கம்பு *peru-ṅ-kāši-k-kambu,* பெ. (n.) காசிக்கம்பு (G.Sm.D.I.i,219) பார்க்க; see kāši-k-kambu. a variety of kambu. (g.sm.d.i.i,219);

[பெரும் + காசிக்கம்பு]

பெருங்காஞ்சி *peru-ṅ-kāñji,* பெ. (n.) **1.** ஒவ்வொருவரையும் கூற்றம் அணுகு மென்று சான்றோர் கூறுதலைப் பற்றிச் சொல்லும் புறத்துறைவகை (தொல்.பொ. 79,உரை.); (purap.) theme descrribing the teaching of the wise men about the transitoriness of life. **2.** வீரர் படைமுகத்துத் தம் ஆற்றல் தோற்று வித்தலைக்கூறும் புறத்துறைவகை. (பு.வெ.4,6.) (purap.) theme describing the exhibition by warriors of their prowess on the field of battle.

[பெரும் + காஞ்சி]

பெருங்காஞ்சொறி *peru-ṅ-kāñjoṟi,* பெ. (n.) *காஞ்சொறி* (பாதார்த்த.486.); பார்க்க; see *kāñjoṟi.* climbing nettle.

[பெரும் + காஞ்சொறி]

பெருங்காடு *peru-ṅ-kāḍu,* பெ. (n.) பெரிய புதர்க்காடு extensive jungle. (பிங்.); **2.** சுடுகாடு; burning-ground. '*பெருங்காட்டுப் பண்ணிய.......ஈமம்*' (புறநா.246.)

[பெரும் + காடு]

பெருங்காடுதரிசு *peru-ṅ-kāḍu-tariḍšu,* பெ. (n.) பெருங்காற்றரிசு பார்க்க; see peru-ṅ-kāṟṟarišu. (வின்.)

[பெருங்காடு + தரிசு]

(u.tar த. தரிசு)

பெருங்காந்தாரி *peru-ṅ-kāndāri,* பெ. (n.) மிளகுவகை (நாஞ்); a kind of pepper.

[பெரும் + காந்தாரி]

பெருங்காப்பியம் *peru-ṅ-kappiyam,* பெ. (n.) **96** சிற்றிலக்கியங்களுள், தன்னி கரில்லாத தலைவனைப் பற்றியதாய் நாற்பொருள் பயப்ப, நாடுநகர் முதலியவற்றைச் சிறப்பித்துப் பாடப்பெறும் தொடர்நிலைச் செய்யுள் வகை. (தண்டி.பொது.7.); epic poem dealing with the story of a peerless hero, explaining the four purusārttam and describing the excellencess of the country, city, etc.,

[பெரும் + skt. kāvya. காவ்யம் → த. காவியம்]

பெருங்காயம் *peru-ṅ-kāyam,* பெ. (n.) **1.** மரவகை; asafoetida **2.** ஒருவகை மரப்பிசின் (பிங்.) commercial resinous product of ferula; '*பெருங்காயத்தினது குழம்பைப் பூசி*' (சீவக.788,உரை.) **3.** *பெருஞ்சீரகம்* பார்க்க; see *peru-ñ-giragam.*

[பெரும் + காயம்]

பெருங்காயா *peru-ṅ-kāya,* பெ. (n.) **1.** காயாவகை; common ovate-leaved tree bilberry, s.tr., Edeule memeeylon, **2.** சிறுமரவகை; oblong cordate-leaved tree bilberry, s.tr. memecylon malabaricum.

[பெரும் + காயா]

பெருங்கார் *peru-ṅ-kār,* பெ. (n.) நெல்வகை (A.); a kind of paddy.

[பெரும் + கார்]

பெருங்காராமணி *peru-ṅ-kārāmaṇi,* பெ. (n.) காராமணிவகை (வின்.); a kind of gram

[பெரும் + காராமணி]

பெருங்காரை *peru-ṅ-kārai,* பெ. (n.) **1.** ஒருவகைச் சிறுமரம்; grey emeticnut, s.tr., randia ulignosa **2.** காரைமீன்வகை; a large species of kārai fish.

[பெரும் + காரை]

பெருங்கால் *peru-ṅ-kāl,* பெ.(n.) **1.** யானைக்கால்(வின்.); elephantiasis **2.** பெரிய வாய்க்கால் major channel.

[பெரும் + கால்]

பெருங்கால்[2] *peru-ṅ-kāl,* பெ. (n.) பெருங்காற்று பார்க்க, see peru-ṅ-kāṟṟu. '*பெருங்காலெறிய*' (திருக்கருவை.பதிற்றுப்.) (வின்.)

[பெரும் + கால்]

பெருங்காற்பிடி–த்தல் *peru-ṅ-kāṟpiḍi-,* செ.குன்றாவி. (v.t.) கால் திமிர்ப்பட்டுப் போதல்(நாஞ்.); to have one's feet benumbed.

[பெருங்கால் + பிடி]

பெருங்காற்றரிசு *peru-ṅ-kāṟṟarišu,* பெ. (n.) பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பயிரிடப்படாத நிலம் (W.G.); land left waste for more than fifteen years.

[பெரும் + கால் + ù.tar. த. தரிசு]

பெருங்காற்று *peru-ṅ-kāṟṟu,* பெ. (n.) புயற்காற்று; storm, gale.

[பெரும் + காற்று கால் – காற்று]

பெருங்கிடை[1] *peru-ṅ-kiḍai,* பெ. (n.) நெட்டிவகை; a large species of sola pith.

[பெரும் + கிடை]

பெருங்கிடை[2] *peru-ṅ-kiḍai,* பெ. (n.) நோயால் நெடுங்காலம் படுக்கையிற் கிடக்கை; continued illness.

[பெரும் + கிட – கிடை]

பெருங்கிரந்தி *peru-ṅ-kirandi,* பெ. (n.) **1.** வயிற்றுநோய் வகை (வின்.); affection of the mesenteric gland mesenterit glands. **2.** *பெருங்கிருமி* (இ.வ.) பார்க்க; see *peru-ṅ-kirumi*

[பெரும் + skt.granthi. த. கிரந்தி]

பெருங்கிராமம் *peru-ṅ-kirāmam,* பெ. (n.) ஐந்நூறு குடியுள்ள ஊர் (சூடா.); major village, having 500 families.

[பெரும் + skt.grāma. கிராமம்]

பெருங்கிருமி *peru-ṅ-kirumi,* பெ. (n.) வயிற்றுப்புழுப்போன்றதோ ருயிரி ; a parasitic mematoid-worm Ascaris lumbricoides.

[பெரும் + *skṭ.kṟmi.* த. கிருமி]

பெருங்கில்லி *peru-ṅ-killi,* பெ.(n) பெருங்கிட்டிப்புள்; *bigtipcat*

[பெரும் + கில்லி]

கில்லி = கிட்டிப்புள்

பெருங்கிழங்கு *peru-ṅ-kiḻaṅgu,* பெ. (n.) பெருமருந்து (மலை.) Indian birthwort.

[பெரும் + கிழங்கு]

பெருங்கிழமை *peru-ṅ-kiḻamai,* பெ. (n.) **1.** முழுவுரிமை (அக.நி.) entire or sole right, absolute title. **2.** மிகுநேயம் (அக.நி.). close friendship or intimacy.

[பெரும் + கிழமை]

பெருங்கிளர்ச்சி *pērun-kiḷarcci,* பெ. (n.) பெருங்கொந்தளிப்பு; *tumult.*

[பெரும் + கிளர்ச்சி]

பெருங்கிளிச்சல் *peru-ṅ-kiḷiccal,* பெ. (n.) நீலநிறமுள்ள கடல்மீன் வகை; a sea-fish, bluish, caesio chrysozona.

[பெரும் + கிளிச்சல்]

பெருங்கிளுவை *peru-ṅ-kiluvai,* பெ. (n.) கிளுவை (வின்.) பார்க்க; see kiḷuvai hill lalsam tree.

[பெரும் + கிளுவை]

பெருங்கிளை *peru-ṅ-kiḷai,* பெ. (n.) பரந்த சுற்றத்தாருடைய குடும்பம்; wide circle of relations.

[பெரும் + கிளை]

பெருங்கிளையார் *peru-ṅ-kilaiyar,* பெ. (n.) பள்ளர் வகையினர் (திருச்சி.வழ.); a subdivision of the paḷḷar caste.

பெருங்கீரை *peru-ṅ-kirai,* பெ. (n.) கீரைவகை (வின்.) a species of greens.

[பெரும் + கீரை]

பெருங்கீழ்வட்டம் *peru-ṅ-kiḻ-vaṭṭam,* பெ. (n.) ஏழுநிரயங் களுளொன்று hell (பிங்.), one of eḻu-naragam, q.v.

[பெரும் + கீழ் + வட்டம்]

பெருங்கீற்று ரூபாய் *peruṅ-kiṟṟu-rūbāy,* பெ. (n.) பழைய காசுவகை (சரவண. பணவிடு.63); an ancient.coin.

[பெரும் + கீற்று ரூபாய். E. Rupee த. ரூபாய்]

பெருங்குட்டம் *peru-ṅ-guṭṭam,* பெ. (n.) குட்டநோய் வகை; (இராசவைத்.) leprosy.

[பெரும் + குட்டம்]

பெருங்குடல் *peru-ṅ-kuḍal,* பெ. (n.) குடற் பிரிவு. (M.L.) large intestine, colon.

[பெரும் + குடல்]



பெருங்குடி[1] *peru-ṅ-kuḍi,* பெ. (n.) நில வுடைமையான்; land lord. (colas, ii,389.)

[பெரும் + குடி]

பெருங்குடி[2] *peru-ṅ-kuḍi,* பெ. (n.) 1. உயர்குடி; noble family 2. பெருங்குடிவாணிகர் பார்க்க; see peruṅguḍivāṇigar "விளங்கு பெருங்கு மாசாத்துவாணிகன்" (சிலப்.20,57–8)

[பெரும் + குடி]

பெருங்குடியர் *peru-ṅ-kuḍiyar,* பெ. (n.) பெருங்குடி வாணிகர் (சீவக.1756.உரை.) பார்க்க; see peru-n-kuḍi vāṇigar.

[பெருங்குடி → பெருங்குடியார்]

பெருங்குடியாட்டம் *peru-ṅ-kuḍi-y-aṭṭam,* பெ. (n.) நாட்டாண்மை; village headship "நடுவில் பெருங்குடியாட்டமும் என்னென்பது தான்" (ஈடு,3,5,6.)

[பெருங்குடி + ஆட்டம்]

ஆட்டம் = ஒரு சொல்லாக்க ஈறு.

பெருங்குடிவாணிகர் *peru-ṅ-kuḍi-vāṇigar,* பெ. (n.) வணிகருள் ஒரு பிரிவினர்; an ancient caste of merchants. '*பெருங்குடி வாணிகன் பெருமடமகளே*' (சிலப்.2,76.)

[பெருங்குடி + வாணிகர்]

பெருங்குப்பை *peru-ṅ-kuppai,* பெ. (n.) *பெரும்புழுதி* பார்க்க; see *perum puḻudi.*

[பெரும் + குப்பை]

பெருங்குமிழ் *peru-ṅ-kumiḻ,* பெ. (n.) மரவகை (பதார்த்த.215.) coomb teak.

[பெரும் + குமிழ்]

பெருங்குயம் *peru-ṅ-kuyam,* பெ. (n.) குயவர்க்கு அரசரளிக்கும் பட்டப்பெயர்; an ancient title, conferred on potters. '*குலாலற் கேற்பப் பெருங்குய மருளி*' (பெருங். வத்தவ.9,48.)

[பெரும் + குயம்]

பெருங்குரல் *peru-n-kural,* பெ. (n.) பேரொலி; great tone.

[பெரும் + குரல்]

பெருங்குருகு *peru-ṅ-kurugu,* பெ. (n.) 1. யானையுண்குரு (பிங்.); a fabulous bird. 2. தலைக்கழகத்து வழங்கிய ஓர் இசைத் தமிழ் நூல் (சிலப்.உரைப்பா.) a treatise on music of the talai-c-caṅgam, not now extant.

[பெரும் + குருகு]

பெரிய புளியாரை

பெருங் குரும்பை

பேய் அத்தி

பேராமுட்டி

பெருங்குருந்து *peru-ṅ-kurudu,* பெ. (n.) காட்டெலுமிச்சை (L.) பார்க்க; காட்டெலு மிச்சை indian wild-line.

[பெரும் + குருந்து]

பெருங்குரும்பை[1] *peruṅ-kurumbai,* பெ. (n.) சிறுசெடிவகை; bowstring hemp, stemless plant.

[பெரும் + குரும்பை]

பெருங்குரும்பை[2] *peru-ṅ-kurumbai,* பெ. (n.) **1.** கோட்டம்; costum. **2.** பூலாங்கிழங்கு; long zedoary.

பெருங்குவியல் *perun-kuviyal,* பெ. (n.) குப்பைமேடு; large heap.

[பெரும் + குவியல் → குவியல்]

பெருங்குழப்பம் *pērun-gulappam,* பெ. (n.) பெருங்குளறுபடி; great confusion.

[பெரும் + குழப்பம்]

பெருங்குழி *peru-ṅ-kuḻi,* பெ. (n.) **1.** பெரிய பள்ளம்; large pit. **2.** கடல்; sea. *'துன்பப் பெருங்குழிக்கே'* (திருநூற்.20.) **3.** முழு எண்களின் சதுரவாய்பாடு (arith.) squaring of integral numbers. opp. to ciṟu-kuḻi. **4.** முக்கால் குறுக்கம் கொண்ட நிலவளவு; superficial measure. 3/4 acre.

[பெரும் + குழி]

பெருங்குழுவைந்து *peru-ṅ-kuḻu-v-aindu,* பெ. (n.) ஐம்பெருங்குழு (திவா.) பார்க்க; see ai-m-peruṅkuḻu the five cheif officers of a king.

[பெரும் + குழு + ஐந்து]

பெருங்குளவி *peru-ṅ-guḷavi,* பெ. (n.) குளவிவகை (யாழ்.அக.); a kind of wasp.

[பெருங் + குளவி]

பெருங்குற்றம் *pērun-guttam,* பெ. (n.) பெருந்தவறு; serious crime.

[பெரும் + குற்றம்]

பெருங்குறட்டை *peru-ṅ-kuraṭṭai,* பெ. (n.) காக்கணங்கொவ்வை mussel-shell creeper. (மலை.); **2.** பெருமருந்து indian birthwort. (சங்.அக.).

[பெரும் + குறட்டை]

பெருங்குறட்டை[2] *peru-ṅ-kuṟaṭṭai,* பெ. (n.) தூக்கத்தில் விடும் உரத்த குறட்டை; noisy snoring.

[பெரும் + குறட்டை]

பெருங்குறடு *peru-ṅ-kuṟadu,* பெ. (n.) விறகு முதலியன பிளப்பதற்காக அடியில் வைக்குந் தாங்குகட்டை (பிங்.) large block of wood, used as a support in hewing wood etc.

[பெரும் + குறடு]

பெருங்குறவை *peru-ṅ-kuṟavai,* பெ. (n.) **1.** பசுமை நிறமுள்ளதும் **13** விரலம்வரை வளர்வதும் நல்ல தண்ணீரில் வாழ்வதுமான மீன்வகை; murrel, a fresh-water fish, greenish, attaining **13** in. in length,

ophiocepha lusgacha. **2.** 8விரலம்வரை வளர்வதும் பசுமை நிறமுள்ளதும் நல்ல தண்ணீரில் வாழ்வதுமான மீன்வகை; a fresh-water fish, greenish, attaining **8** in. in lergth. liscognatlius lamta.

[பெரும் + குறவை]

பெருங்குறி *peru-ṅ-kuṟi,* பெ. (n.) *பெருங் குறிச்சபை* பார்க்க; see *peru-ṅ-kuri-c-cavvai.* (s.i.i.iv.**32.**)

[பெரும் + குறி]

பெருங்குறிச்சபை *peru-ṅ-kuṟi-c-cabai,* பெ. (n.) ஊர்ப் பேரவை; the great assembly of a village (or) town.

[பெருங்குறி + சபை]

பெருங்குறிஞ்சா *peru-ṅ-kuṟiñjā,* பெ. (n.) *பெருங்குறிஞ்சி* பார்க்க; see *peru-ṅ-kuriñji.*

[பெரும் + குறிஞ்சா]

பெருங்குறிஞ்சி *peru-ṅ-kuruñji,* பெ. (n.) **1.** கொடிவகை; a species of scammony swallowwart, **2.** பூடுவகை (பிங்.); a species of conehead, m.sh., strobilanthes consangwineus typica. **3.** குறிஞ்சிப்பாட்டு; a poem. *'கபிலர் பாடிய பெருங்குறிஞ்சியினும்'* (பரிபா.**19,77**,உரை.)

[பெரும் + குறிஞ்சி]

பெருங்குறிமகாசபை *peru-ṅ-kuṟi,* பெ. (n.) *பெருங்குறியவை* (i.m.p.tj.**1123.**) பார்க்க; see *peru-ṅ-kuri-y-avai.*

[பெருங்குறி + மகாசபை]

த. மா> skt.mahā

பெருங்குறியவையே அதன் சிறப்புநோக்கி பெருங்குறி மகாசபை என வழங்கப் பெற்றுள்ளது. இதனைத் தமிழில் பெருங்குறிப் பேரவை என்று வழங்கலாம்.

பெருங்குறியவை *peru-ṅ-kuṟi-y-avai,* பெ. (n.) ஊர்ப்பெருஞ்சபை; the great assembly of a village or town.

[பெருங்குறி + அவை]

பெருங்குறைபாடு *peruṅguraipatu,* பெ. (n.) பெருந்தீங்கு; bigdraw back.

[பெரும் + குறைபாடு]

பெருங்குன்றூர் கிழார் *peru-ṅ-kuṉṟūr-kiḻār,* பெ. (n.) பதிற்றுப் பத்தில் ஒன்பதாம் பத்தைப் பாடியர் புலவர்; the author of the ninth decade of patiṟṟu-p-pattu.

[பெருங்குன்றூர் + கிழார்]

பெருங்கூட்டணி *peru-n-kuttani,* பெ. (n.) பல அரசியல் கட்சிகளின் கூட்டு நடவடிக்கை; common all of some political party.

[பெரும் + கூட்டணி]

பெருங்கூட்டம் *perū-n-kuttam,* பெ. (n.) திரளான கூட்டம்; mass metting.

[பெரும் + கூட்டம்]

பெருங்கூட்டாளி *peru-ṅ-kuttali,* பெ. (n.) சிறந்த நண்பன்; good friend.

[பெரும் + கூட்டாளி]

பெருங்கை *peru-ṅ-kai,* பெ. (n.) **1.** பெரியகை பார்க்க; see periya-kai. **(வின்.)2.** யானை; elephant, as having a long trunk. 'பெருங்கைத் தொழுதியின்' **(பதிற்றுப்.76.6.)**

[பெரும் + கை]

பெருங்கைக்காரன் *peru-ṅ-kaik-k-āraṉ,* பெ. (n.) பெருஞ்செல்வம் படைத்தவன்; wealthily person.

[பெரும் + கைக்காரன்]

பெருங்கையால் *peru-ṅ-kai-y-āl,* பெ. (n.) பகன்றை **(சிலப்.13, 157,உரை.)** a plant.

[பெருங்கை + அல்]

பெருங்கொச்சை *pēru-ṅ-koccai,* பெ. (n.) இழிஞன்; mean fellow.

[பெரும் + கொச்சை]

பெருங்கொடி *peru-ṅ-koḍi,* பெ. (n.) **1.** பதாகை (பிங்.); large flag. **2.** பறக்கவிடும் பெரும்பட்டம் **(வின்.)** large paper kite

[பெரும் + கொடி]

பெருங்கொடை *peru-ṅ-koḍai,* பெ. (n.) எல்லோர்க்கும் ஏராளமாகக் கொடுக்கை; endow with gift.

[பெரும் + கொடை]

பெருங்கொண்டலாத்தி *peru-ṅ-koṇḍalātti,* பெ. (n.) பறவைவகை(F.); hoopoe, upupa epops.

[பெரும் + கொண்டை + உலாத்தி]



பெருங்கொண்டையார் *peru-ṅ-koṇḍaiyār,* பெ. (n.) தென்னாட்டு மாலியப் (வைணவ) பார்ப்பனரில் ஒரு வகுப்பினர்; a sect of vaisnava brahmins in the south, as from pēṇukoṇḍa.

[பெரும் + கொண்டையார்]

பெருங்கொத்தரம் *peru-ṅ-kottaram,* பெ. (n.) அரவகை; rough file, wood rasp.

[பெரும் + கொத்து + அரம்]

பெருங்கொந்தளிப்பு *pērun-kontalippu,* பெ. (n.) *பெருங்கிளர்ச்சி* பார்க்க. see *peru-ṅ-kiḷarcci.*

[பெரும் + கொந்தளிப்பு]

பெருங்கொம்மட்டி *peru-ṅ-kommaṭṭi,* பெ. (n.) கொம்மட்டிவகை (நாஞ்.); a kind of cucumber.

[பெரும் + கொம்மட்டி]

பெருங்கொய்சகம் *pēru-koycagam,* பெ. (n.) பெருஞ்கொச்சகம்; big pucker.

[பெரும் + கொய்சகம்]

கொய்சகம் → கொச்சகம்

பெருங்கொள்ளை *pērun-kollai,* பெ. (n.) *பெருந்திருட்டு* பார்க்க; see *peruntittru.*

[பெரும் + கொள்ளை]

பெருங்கொன்றை *peru-ṅ-koṉṟai,* பெ. (n.) கொன்றைவகை; a species of unarmed brasiletto. **2.** ஊதை(வாத) நாராயணம்; creamy peacock flower.

[பெரும் + கொன்றை]

பெருங்கோட்டான் *peru-ṅ-kōṭṭāṉ,* பெ. (n.) ஆந்தைவகை (பிங்.); a kind of large owl.

[பெரும் + கோட்டான் கோடு = மரக்கிளை கோடு – கோட்டான் = மரக்கொம்பில் இருப்பது]



பெருங்கோடணை *peru-ṅ-kōḍaṇai,* பெ. (n.) ஒருகட் பறைவகை; kettle-drum.

[பெரும் + கோடணை]

த. கோடணை > skt. ghōsaṇā

பெருங்கோநங்கை *peru-ṅ-ko-naṅgai,* பெ. (n.) பெருங்கோப் பெண்டு பார்க்க; see Peru-ṅ-kō-p-peṇḍu. *'பெருங்கோ நங்கை பெட்பவேறிய.....இளம்பிடி'* (பெருங். உஞ்சைக்.40,30.)

[பெருங்கோ + நங்கை]

பெருங்கோப்பெண்டு *peru-ṅ-kō-p-peṇḍu,* பெ. (n.) பட்டத்து அரசி; chief queen *'பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்தனள்'* (சிலப்.25,86.)

[பெருங்கோ + பெண்டு]

பெருங்கோபம் *pērun-kovam,* பெ. (n.) கடுஞ்சினம்; violent anger.

[பெரும் + கோபம்]

(skt. kopa → த.போகம்)

பெருங்கோரை *peru-ṅ-kōrai,* பெ. (n.) **1.** பூடுவகை (C.E.M.); spikenard herb. **2.** பாய்க்கோரை வகை; a kind of sedge used for matting.

[பெரும் + கோரை]

பெருங்கோழியவரை *peru-ṅ-kōli-y-avarai,* பெ. (n.) கொடிவகை (A.); a small climber along the banks of tidal creeks and rivers.

[பெருங் + அவரை]



பெருங்கோழை *pērun-kolai,* பெ. (n.) வீரமற்றவன்; big - slobber.

[பெரும் + கோழை]

பெருங்கோள் *perun-kol,* பெ. (n.) பெரிய வான் கோள்; big planet.

[பெரும் + கோள்]

பெருங்கௌசிகனார் *peru-ṅ-kaušigaṉār,* பெ. (n.) பத்துப் பாட்டினுள் ஒன்றான மலைபடுகடாமியற்றிய ஆசிரியர்; a poet, author of Malaipaḍu-kiaḍām, one of pattu-p-pāttu, q.v.

[பெரும் + கௌசிகனார்]

பெருச்சாளி *peruccāḷi,* பெ. (n.) பெருத்த எலி (பிங்.); bandicoot bandicota mala barica, as a large rat. '*இறைவன் பெருச்சாளியைக் கடவீ*' (விநாயகபு.59,15.)

ம. பெரிச்சாலி

[பெருத்த + எலி] பெருத்தஎலி – பெருச்சாளி]



பெருஞ்சங்கு *pērun-cankul,* பெ. (n.) பெரியசங்கு; big conch.

[பெரும் + சங்கு]

பெருஞ்சச்சரவு *pērun-cacharavu,* பெ. (n.) பெரும்பூசல்; big contention.

[பெரும் + சச்சரவு]

பெருஞ்சகுனம் *pērun-jagunam,* பெ. (n.) பெருநிமித்தம்; big omen.

[பெரும் + சகுனம்]

(skt. šakuna → த. சகுனம்)

பெருஞ்சரக்கு *peru-ñ-carakku,* பெ. (n.) பேரளவாக விற்கப்படும் பருத்திவிதை பாக்குப்போன்ற பண்டம்(G.Tp.Di.177.); goods sold in large quantities, as cotton seeds, areca-nuts, etc.

[பெரும் + சரக்கு]

பெருஞ்சள்ளை *perun-callai,* பெ. (n.) பெருந்தொல்லை; nuisance.

[பெரும் + சள்ளை]

பெருஞ்சவளம் *peru-ñ-javaḷam,* பெ. (n.) குந்தப்படைவகை (பிங்.) large-sized dart or lance, dist. fr. ciṟucavaḷam.

[பெரும் + சவளம்]

பெருஞ்சன்னல் *pērun-cannel,* பெ. (n.) பெரும்பலகணி; big-window.

[பெரும் + சன்னல்]

(port. janella → த. சன்னல்)

பெருஞ்சாட்டை *pērun-sattai,* பெ. (n.) பெருங்கசை; big-whip.

[பெரும் + சாட்டை]

பெருஞ்சாண்நடவு *peru-ñ-cāṇ-naḍavu,* பெ. (n.) நாற்றை விலகநடுகை (இ.வ.); mode of transplantation in which the seedlings are planted with large interspaces

[பெருஞ்சாண் + நடவு]

பெருஞ்சாந்தி *peru-ñ-šāndi,* பெ. (n.) கோயிற் பெரிய திருவிழாவின் முடிவில் நடக்கும் பெரிய (அபிடேகம்) திருமுழுக்காட்டு; mahabhi sēkam at the end of the chief festival in a temple. '*கபாலீச்சரமமர்ந்தான் பெருஞ்சாந்தி காணாதே போதியோ?*" (தேவா.1119,10.)

[பெரும் + சாந்தி]

skt. šanti. த. சாந்தி

பெருஞ்சாமம் *peru-ñ-cāmam,* பெ. (n.) ஏழரை நாழிகை கொண்ட காலவளவை(வின்.); a period of three hours.

[பெரும் + யாமம் → சாமம்]

பெருஞ்சாமரை *perun-jamarai,* பெ. (n.) ஈயோட்டும் மயிர்க்குச்சம்; chowry.

[பெரும் + சாமரை]

பெருஞ்சாய் *peru-ñ-cāy,* பெ. (n.) பேராற்றல்; great strength. '*சாயாப் பெருஞ்சாய்கெட*' (கம்பரா.நாக.21.)

[பெரும் + சாய்]

பெருஞ்சாலை *pērun-salai,* பெ.(n.) பேரொழுங்கை (அகலச் சாலை); broadway.

[பெரும் + சாலை]

பெருஞ்சாவு *peru-ñ-cāvu,* பெ. (n.) அகவையில் முதிர்ந்தோரது இறப்பு; death in old age.

[பெரும் + சாவு சா—சாவு]

பெருஞ்சிந்தனை *pērun-cintanai,* பெ. (n.) கடுஞ்சிந்தனை; exlogitation.

[பெரும் + சிந்தனை]

பெருஞ்சிரங்கு *peru-ñ-cirangu,* பெ. (n.) சொறிவகை(M.L.); scalries itch.

[பெரும் + சிரங்கு]

பெருஞ்சிவிங்கி *peru-ñ-civingi,* பெ. (n.) *சிறுத்தை,* பார்க்க; see *šiṟuttai. panthor.*

[பெரும் + சிவிங்கி]

பெருஞ்சிறப்பு *peru-ñ-ciṟappu,* பெ. (n.) **1.** பெரும் மதிப்புரவு; high honours. **2.** உயர்ந்த கொண்டாட்டநேரம்; grand festive occasion.

[பெருமை + சிறப்பு]

பெருஞ்சின்னி *peru-ñ-ciṉṉi,* பெ. (n.) செடிவகை (பதார்த்த.535.); a species of birth-leaved acalypha.

[பெரும் + சின்னி]

பெருஞ்சீரகம் *peru-ñ-ciragam,* பெ. (n.) **1.** சோம்பு; common anise, **2.** பெருஞ்சீரக செடிவகை(L.); chinese anise,plant with aromatic seeds.

[பெரும் + சீரகம்]

உலகில் முதன்முதற் சிறந்த முறையிற் சமையல் தொடங்கியதும் அதற்குச் சீரகத்தைப் பயன்படுத்தியதும் தமிழகமே (வ.வர.155)

பெருஞ்சுவர் *peru-n-cuvar,* பெ. (n.) நீளமான சுவர்; long wall. **1.** சீனநாட்டில் உள்ள பெருஞ்சுவர் உலகத்தின் நீளமான சுவராகும்.

[பெரும் + சுவர்]

பெருஞ்சூட்டு *peru-ñ-cūṭṭu,* பெ. (n.) தலையணிவகை (பிங்.); a kind of head ornament.

[பெரும் + சூட்டு சூடு–சூட்டு]

பெருஞ்சூழ்ச்சி *peru-ñ-cuñcci,* பெ. (n.) பெரும் ஏமாற்றுவேலை; do fraud.

[பெரும் + சூழ்ச்சி]

பெருஞ்சூறாவளி *perun-curāvali,* பெ. (n.) பெருஞ்சுழல் காற்று; violent storm.

[பெரும் + சூறாவளி]

பெருஞ்சூனியம் *peru-ñ-cūṉiyam,* பெ. (n.) பெருவசியம்; pishogue.

[பெரும் + SKṭ. ūnya *த. சூனியம்]*

பெருஞ்செக்கு[1] *peru-ñ-cekku,* பெ. (n.) பெருஞ்செக்காலை; big oil-press.

[பெரும் + செக்கு]

பெருஞ்செக்கு[2] *peru-ñ-cekku,* பெ. (n.) **24**வது விண்மீன்; the **24**th nak-satra. (திவா.)

[பெரும் + செக்கு]

பெருஞ்செங்கார் *peru-ñ-ceṅgār,* பெ. (n.) நெல்வகை (A.); a kind of paddy

[பெரும் + செம்(மை) + கார்]

பெருஞ்செய் *peru-ñ-cey,* பெ. (n.) மேம்பாடுள்ள செயல்; great dead. '*பெருஞ்செய் யாடவர்*' (புறநா.**199.**)

[பெரும் + செய்]

பெருஞ்செய்யாளன் *peru-ñ-cey-āḷaṉ,* பெ. (n.) பெரிய வீரச்செயலுள்ளவன்; a man of great deeds. '*எஃகுளங்கிழிய. ...... அருங்கட னிறுத்த பெருஞ்செய்யாளன்*' (புறநா.**282.**)

[பெருஞ்செய் + ஆளன்]

பெருஞ்செய்யான் *peru-ñ-ceyyāṉ,* பெ. (n.) தேள்வகை (யாழ்.அக.); a kind of scorpion. **2.** பெரும்பூரான் (சங்.அக.) பார்க்க; see peru-m-pūrāṉ.

[பெரும் + செய்யான்]

பெருஞ்செருப்படி *peru-ñ-ceruppaḍi,* பெ. (n.) பூடுவகை (வின்.); a plant, croton plicatum.

[பெரும் + செருப்படை → செருப்படி]

பெருஞ்சேரலிரும்பொறை *peru-ñ-cēral-irum-porai,* பெ. (n.) பதிற்றுப் பத்தனுள் எட்டாம் பத்தினாற் புகழப்பட்ட சேரன்; a cēra king, the hero of the eighth decad of padiṟṟu-pattu.

[பெருஞ்சேரல் + இரும்பொறை]

பெருஞ்சேனை *peruñ-sanai,* பெ. (n.) பெரும்படை; large army.

[பெரும் + சொல்]

பெருஞ்சொல் *peru-ñ-col,* பெ. (n.) பலரறிசொல் (திவா.); word known to many.

[பெரும் + சொல்]

பெருஞ்சொறி *peru-ñ-cori,* பெ. (n.) தவளைச் சொறி; a kind of eruption.

[பெரும் + சொறி]

பெருஞ்சொறிக்குட்டம் *peru-ñ-cori-k-kuṭṭam,* பெ. (n.) கொடியகுட்டநோய்வகை; a virulent form of leprosy.

[பெருஞ்சொறி + குட்டம்]

பெருஞ்சோதனை *peru-n-cōtanai,* பெ. (n.) ஆராய்ந்து தேடுதல்; act of searching.

[பெரும்+ சோதனை]

(skt.. šōdhana → த. சோதனை)

பெருஞ்சோலி *peru-ñ-cōli,* பெ. (n.) வெள்ளைக்கடம்பு; bridal couch plant.

[பெரும் + சோலி]

பெருஞ்சோழி *perun-cōli,* பெ. (n.) பெரும்சிப்பி; bigcowry.

[பெரும் + சோழி]

பெருஞ்சோற்றுநிலை *peru-ñ-jōṟṟu-nilai,* பெ. (n.) போர்மேற்கொண்ட அரசன் படையாளர்க்கு உண்டியளித்து முகமன் செய்தலைக்கூறும் புறத்துறை (purap.); theme of a king giving feast to his soldiers on the eve of battle. *'பிண்டமேய பெருஞ்சோற்று நிலையும்'* (தொல்.பொ.63.)

[பெருஞ்சோற்று + நிலை]

பெருஞ்சோற்றுவஞ்சி *peru-ñ-cōṟṟu-vañji,* பெ. (n.) *பெருஞ்சோற்றுநிலை,* பார்க்க; see *peru-ñ-cōṟṟu-nilai.* சோற்றுநிலை. *'பின்றாச் சிறப்பிற்பெருஞ்சோற்று வஞ்சியும்'* (சிலப். 25,144.)

[பெருஞ்சோற்று + வஞ்சி]

பெருஞ்சோறு *peru-ñ-ñ-cōṟu,* பெ. (n.) 1. அரசன்தன் படைத்தலைவர்க்கு அளிக்கும் பேருணவு; sumptuous feast given by a king to the generals of his army. *'உதியஞ் சேரல் பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை'* (அகநா.233.) 2. 2ஆம் விண் மீன். (திவா.); the second naksatra.

[பெரும் + சோறு]

பெருந்தக்காளி *peru-n-takkāḷi,* பெ. (n.) தக்காளி வகை(L.); Indian winter-cherry, psysalis peruiana

[பெரும் + தக்காளி]

பெருந்தகரை *peru-n-tagarai,* பெ. (n.) ஒருவகைச் சிறுமரம்(L.); west Indian bead tree, s.tr., leucaena glauca.

[பெரும் + தகரை]

பெருந்தகளி *peru-n-tagaḷi,* பெ. (n.) பலமுகங்களையுடையவிளக்கு; multifaced oil-lamp.

[பெரும் + தகழி→தகளி]

பெருந்தகை *peru-n-tagai,* பெ. (n.) 1. பெருமையுள்ளவ–ன்–ள்; noble-minded person. *'பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை'* (நெடுநல்.106.) 2. பெருந்தன்மை பார்க்க, 3. மிக்க அழகு; great beauty. *'பெயர்ந்தான் பெருந்தகையினான்'* (பு.வெ.6,30.)

[பெருமை + தகை]

பெருந்தடிமல் *peru-n-taḍimal,* பெ. (n.) ஒருவகைச் சுரநோய்(M.L.); influenza.

[பெரும் + தடிமல் தடிமன்—தடிமல்]

பெருந்தண்வாழ்க்கை *peru-n-taṇ-vāḻkkai,* பெ. (n.) நல்லறப்பெருமை கொண்ட இல்லற வாழ்க்கை; high dignity noble life. "விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்" (சிலம்பு. மனை.86.)

[பெருமை + தண் + வாழ்க்கை]

பெருந்தரம் *peru-n-taram,* பெ. (n.) 1. பேரலுவல்பணிவகை; a high office ஸ்ரீராஜராஜதேவர் பெருந்தரம்.....சேனாபதி மும்மடி சோழப் ரம்மாராயன்" (s.i.i.ii,161,3.) 2. தாராளமனம்(கொ.வ.) liberal mindedness.

[பெரும் + தரம்]

பெருந்தரா *peru-n-tarā,* பெ.(n.) *பெருந்தரம்,* 2. பார்க்க; இ.வ., கொ.வ.; see *peru-n-taram.*

[பெரும் + தரம்→தரா]

பெருந்தலை *peru-n-dalai,* பெ. (n.) தலைமைக்காரன்; head man. (இ.வ.)

[பெரும் + தலை]

பெருந்தலைக்கறையான் *peru-n-talai-k-kaṟaiyāṉ,* பெ. (n.) கறையான் வகை(வின்); large-headed white ant.

[பெருந்தலை + கறையான்]

பெருந்தலைத்திமிங்கிலம் *peru-n-talai-t-timiṅgilam,* பெ. (n.) திமிங்கிலவகை(M.M.); sperm whale, Euphysetes macrocephalus, as having a huge head.

[பெருந் + தலை + திமிங்கிலம்]

பெருந்தவறு *peru-n-tavaru,* பெ. (n.) பெருங்குற்றம்; gross-offence.

[பெரும் + தவறு]

பெருந்தன்மை *peru-n-taṉmai,* பெ. (n.) 1. மேம்பாடு; high dignity, noble character 2. செருக்கு (அகந்தை) (யாழ்.அக.) selfconceit. 3. இறைமை; god-hood, 4. வள்ளன்மை; generosity.

[பெரும் + தன்மை]

பெருந்தன்மையாளர் *pērun-daṉmaiyalar,* பெ. (n.) நற்பண்பாளர்; gentleman.

[பெரும்தன்மை + ஆளர்]

பெருந்தனம் *peru-n-taṉam,* பெ. (n.) 1. சோழரது அரசாங்க பணிகளிலொன்று; an office of the state under cōḷa government . ஸ்ரீராஜராஜதேவர் பெருந்தனம் மும்மடி சோழ போசன் (s.i.i.ii,222.) 2. கணிகையரில் ஒரு பிரிவினர்(சிலப்,14,167, உரை.); a class of dancing-girls.

[பெரும் + தனம்]

பெருந்தாதை *peru-n-tādai,* பெ. (n.) *பெரியப்பன்* பார்க்க; see *periyappaṉ* . '*பெருந்தாதை சொல்லால்......அவனிகாப்ப*' (பாகவத.1. தன்மபுத்திர.41.)

[பெரும் + தாதை]

பெருந்தாய் *peru-n-tāy,* பெ. (n.) *பெரிய தாயார்* பார்க்க; see *periyatāyār.* *'பெருந்தாயுழைப்புகுந்தான்'* (உபதேசகா. சிவவிரத.259.)

[பெரும் + தாய்]

பெருந்தாரா *peru-n-tārā,* பெ. (n.) வாத்து வகை(வின்); goose, auser auser.

[பெரும் + தாரா]



பெருந்தாழை *peru-n-dāḻai,* பெ. (n.) *சீமைக்கற்றாழை*(L.) பார்க்க; see *šīmai-R-Raṟṟāḻai,* giant mexican lily,

[பெரும் + தாழை]

பெருந்தாளி[1] *peru-n-tāḷi,* பெ. (n.) *பெருந்தகளி*(இ.வ.) பார்க்க; see *peru-n-tagaḷi.*

[பெரும் + தகளி→தாளி]

பெருந்தாளி[2] *peru-n-tāḷi,* பெ. (n.) தாளிச் செடிவகை(வின்); a large climber.

[பெரும் + தாளி]

பெருந்தானம் *peru-n-tāṉam,* பெ. (n.) நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, உதடு, பல் தலையாகிய ஒலியெழும் எட்டு உறுப்புகள் (சிலப்.3,26,உரை.); parts of the body, from which speech proceds, eight in humber, viz., neñju, miḍaṟu, nākku, mūkku, aṇṇākku, udaḍu-pal, talai.

[பெரும் + skt tana. *த.தானம்]*

பெருந்திகிரி *peru-n-tigiri,* பெ. (n.) எல்லைச் சக்கரவாளத்துக்கும் அப்பாலுள்ள சக்கரவாளமலை; a mythical range of mountain cakkaravāḷam. *'பெருந்திகிரி வெற்புடையவே'* (துக்கயாகப்.403.)

[பெரும் + திகிரி]

பெருந்திசை *peru-n-tišai,* பெ. (n.) **1.** வடக்கு முதலிய முதன்மையான திசை; any of the four cardinal points **2.** நீண்ட நிலப்பரப்புள்ள திக்கு; a direction in which the land area is extensive. *'வடதிசை பெருந்திசை யாகலின்'* (சிலப்.5,94, உரை.)

[பெரும் + திசை]

பெருந்திட்டம் *perun-tittam,* பெ. (n.) வரைவுத்திட்டம்; great plan.

[பெரும் + திட்டம்]

பெருந்திணை *peru-n-tiṇai,* பெ. (n.) அகத்திணையேழனுள் ஒன்றானதும் ஒத்த தன்மைல்லாதவளுடனாவது நெறிமுறை மாறாக வாவது, தன்னைவிட அகவையில் முதிர்ந்தவ ளோடாவது, மனம் ஒவ்வாதவளோடாவது கூடும் காதல்; (akap.) improper love, as when it is in violation of customary rules or when the woman is older than the man or is of a different caste or does not consent, one of serven aga-t-tiṇai. q.v. "கைக்கிளை முதலாப் பெருந்திணையிறவாய்" (தொல்.பொருள்.1)

"பெரும்பகுதி மக்கள் மணமுறைகளுள் பெரும்பாலனவற்றைத் தன்னுள் அடக்கி நிற்பதால், பொருந்தாக்காமம் பெருந்திணை எனப்பட்டது. கவர்வு மணங்களும், இயற்கைக்கு மாறான எல்லாப் புணர்ச்சி வகைகளும் பெருந்திணையே: காதலொடு பொருந்தாமையும் நெறியொடு பொருந்தாமையும் பற்றி, பெருந்திணை பொருந்தாக்காமம் எனப்பட்டது." (த.தி.பக்.16)

[பெரும் + திணை]

பெருந்திரட்டு *peru-n-tiraṭṭu,* பெ. (n.) தத்துவராயர் தொகுத்த மறைமுடிபு (வேதாந்த) நூல்; the larger religious anthology compiled by tattuvarāyar, dist.fr,kurṟu-n-tir!!u.

[பெரும் + திரட்டு]

பெருந்திராய் *peru-n-tirāy,* பெ. (n.) பூடுவகை(M.M.); Indian chickweed, s.sh., mouugo spergula

[பெரும் + திராய்]

பெருந்திருக்கை *peru-n-tirukkai,* பெ. (n.) திருக்கைமீன் வகை; sting-ray, reddish brown, attaining 6 ft. across and 3 ft. in length, pteroplatea micrura.

[பெரும் + திருக்கை]

பெருந்திருட்டு *perun-tiruttu,* பெ. (n.) பெருங்கொள்ளை; great steal.

[பெரும் + திருட்டு]

பெருந்திருப்பாவாடை *peru-n-tiru-p-āvāḍai,* பெ. (n.) *பெருந்திருவமிழ்து*(ஈடு.); பார்க்க see *peru-n-tiru-v-amirdu.*

[பெரும் + திரு+பாவாடை]

பெருந்திருவமிர்து *peru-n-tiru-v-amirdu,* பெ. (n.) *பெருந்திருவமிழ்து* பார்க்க; see *peru-n-tiru -v-amiḻdu.*

[பெரும் + திரு + அமிர்து. அமிழ்து → அமிர்து]

பெருந்திருவமிழ்து *peru-n-tiru-v-amiḻdu,* பெ. (n.) இறைவனுக்குப் படைக்கும் பெரும்படையல் (நிவேதனம்); food offered to God in a large scale *'திருவிழா எழுந்தருளுகைக்கும் பெருந்திருவமிழ்து செய்து அருளுகைக்கும்'* (s.i.i.v,365.)

[பெரும் + திரு + அமிழ்து]

பெருந்திருவி *peru-n-tiruvi,* பெ. (n.) பெருஞ்செல்வமுள்ளவள்; wealthy lady. *'பெருந்திருவியார் மகள்கொல்'* (சீவக.1969.)

[பெரும் + திருவி திரு + இ = திருவி திரு = செல்வம் 'இ'–பெ.ப.ஈறு]

பெருந்திரைப்பு *pērun-tirappu,* பெ. (n.) பெருங்கொய்சகம்; (கொசவம்) big pucker.

[பெரும் + திரைப்பு]

பெருந்தில்லை *peru-n-tillai,* பெ. (n.) தில்லைமரவகை(யாழ்.அக.); a kind of tillai tree.

[பெரும் + தில்லை]

பெருந்திவசம் *peru-n-tivašam,* பெ. (n.) தலைத்திவசம்(இ.வ.); first annual ceremony of a decessed person.

[பெரும் + திவசம்]

பெருந்திறனாளர் *pēru-n-tiraṉālar,* பெ. (n.) பெருவல்லுநர்; great expert.

[பெரும் + திறனாளர்]

பெருந்தீங்கு *pērun-tingu,* பெ. (n.) பேரிடர்; risk.

[பெரும் + தீங்கு]

பெருந்தீக்கோல் *pērun-tikkol,* பெ. (n.) பெருஞ்சூட்டுக்கோல்; big pocker.

[பெரும் + தீக்கோல்]

பெருந்தீக்குறி *pērun-tikkuri,* பெ. (n.) பெருந்தீநிமித்தம்; great knell.

[பெரும் + தீக்குறி]

பெருந்தீவட்டி *peru-n-devatte,* பெ. (n.) பெருந்தீப்பந்தவிளக்கு; Portable light

[பெரும் + தீவட்டி]

பெருந்தீவு *peru-a-tivu,* பெ. (n.) எழுதீவு; the seven continents. (பிங்.)

[பெரும் + தீவு]

பெருந்தீனிக்காரன் *peru-n-tīṉi-k-kāṟaṉ,* பேருண்டியாளன்; glutton.

[பெரும் + தீனி +காரன்.] உடையவனைக் குறிக்கும் ஈறு காரன்

பெருந்துக்கம் *peru-n-tukkam,* பெ. (n.) மனச்சோர்வு; sadness.

[பெரும் + துக்கம்]

(skt. duhkha → *த. துக்கம்)*

பெருந்துத்தி *peru-n-tutti,* பெ. (n.) **1.** செடிவகை; common evening mallow. m.sh., abutilon Indicum **2.** துத்திச்செடிவகை; wrinkled leaved evening mallow, m.sh., abutilon cesiaticum.

[பெரும் + துத்தி]



பெருந்தும்பை *peru-n-tumbai,* பெ. (n.) தும்பைவகை; large species of white dead-nettle, leucas aphalotes.

[பெரும் + தும்பை]

பெருந்துருத்தி *peru-n-turutti,* பெ. (n.) நீர் வீசுங்கருவிவகை(சூடா.) ; a kind of syringe.

[பெரும் + துருத்தி]

பெருந்துளசி *peru-n-tuḷaši,* பெ. (n.) துளசி வகை; large basil, l.sh., ocimum gratissimum.

[பெரும் + துளசி]

பெருந்துறை *peru-n-tuṟai,* பெ. (n.) **1.** பெரியதுறைமுகம்; large seaport. *'பெருந்துறை மருங்கிற் பெயராது'* **(சிலப்.13,178.)** **2.** திருப்பெருந்துறை பார்க்க; Avuḍaiyārkoil. *'சீரார் பெருந்துறை நந்தேவன்'* **(திருவாச.1,15.)**

[பெரும் + துறை]

பெருந்துன்பம் *peru-n-tunpam,* பெ. (n.) பெருந்துன்பம்; deep distress.

[பெரும் + துன்பம்]

பெருந்தூறு *peru-n-tūṟu,* பெ. (n.) பெரும்புதர்(சூடா.); large bush, underwood.

[பெரும் + தூறு]

பெருந்தெரு *peru-n-teru,* பெ. (n.) நகரின் முதன்மைத் தெரு; main street *'நகரியிற் பெருந்தெருவிலே விலைக்கு விற்பாரை'* **(சிலப்.3,165–9,உரை.)**

[பெரும் + தெரு]

பெருந்தேக்கு *peru-n-tēkku,* பெ. (n.) தேக்கு(சங்.அக.); teak wood.

[பெரும் + தேக்கு]

பெருந்தேட்டம் *peru-n-tattam,* பெ. (n.) நுணுக்கத்தேடுதல்; act of searching.

[பெரும் +தேட்டம்]

பெருந்தேட்கொடுக்கு *Peru-n-tēṭ-koḍukku,* பெ. (n.) தேட்கொடுக்கி வகை **(பதார்த்த.264)**; a large species of Indian turnsole.

[பெரும் + தேட் கொடுக்கு]

பெருந்தேவபாணி *Peru-n-dēva-bāṇi* பெ. (n.) **1.** கடவுளரை வாழ்த்தும் இசைப்பாவகை **(சிலப்.6.35. உரை)**; a kind of song in praise of gods, opp. to ciṟu-dēva- bāṇi **2.** பதினோராந் திருமுறையைச் சார்ந்ததும் நக்கீரதேவர் இயற்றியதுமான ஒரு சிற்றிலக்கியம்; a poem in praise of siva in padinōrān- tirumuṟai by Nakkera-dvar

[பெரும் + தேவபாணி]

பெருந்தேவன் *Peru-n-dēvaṉ,* பெ. (n.) தலைமைத் தெய்வம்; the Supreme Deity. *'உலகேழும் விழுங்கி யுமிழ்ந்திட்ட பெருந்தேவன்'* **(திவ்.திருவாய்.4,6,4.)**

[பெரும் + தேவன்]

பெருந்தேவனார் *Peru-n-dēvaṉār,* பெ. (n.) **1.** பாரதம் பாடிய கழகக் காலப் புலவர்; **(தொல்.பொ.72, உரை.பக்.231.)** a sangam poet, author of Tamil Bhāradam **2.** ஒன்பதாம் நூற்றாண்டில் பாரதவெண்பா பாடிய புலவர்; the author of pārada-veṇbā, 9th c **3.** பதினோராம் நூற்றாண்டினரான வீரசோழியவுரைகாரர்; the author of the commentary on vira-sōḻiyam, **11**th c

[பெரும் + தேவன்+ஆர்+'ஆ' (உ.ப.ஈறு)]

பெருந்தேவி *peru-n-dēvi,* பெ. (n.) பட்டத்து அரசி chie queen *'பாண்டியன் பெருந்தேவி வாழ்கென'* **(சிலப்.20.21.)**

[பெரும் + தேவி+ தேவன் – (ஆ,பா.)– தேவி (பெ.பா)]

பெருந்தேன் *peru-n-tēṉ,* பெ. (n.) **1.** தேனீக்கள் கட்டும் தேன்; honey secreted by bees *'குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந் தேனிழைக்கும்'* (குறுந்.2.) **2.** பெருந்தேனீ பார்க்க; *peru-n-tēṉ, 'பெருந்தேன் கண்படு வரையின்'* **(குறுந்.273)**

[பெரும் + தேன்]

பெருந்தேனீ *peru-n-tēṉi,* பெ. (n.) பெரிய தேனீவகை; (வின்.) large sized honey bee

[பெரும் + தேன் + a]

பெருந்தையலிடு—தல் *peru-n-taiyal-iḍu,* செ.குன்றா.வி (v.i.) நன்றாகத் தைப்பதற்கு முன் பெரும்படியாக நூலையோட்டுதல்; to stich a running shtch; to tack

[பெரும் + தையல் + இடு]'இடு' (துவி)]

பெருந்தொகை *peru-togai,* பெ. (n.) பெருந்திரள் பார்க்க; see peruntiral.

[பெரும் + தொகை]

பெருந்தொடர் *peru-n-toḍar,* பெ. (n.) எழுவாய் பயனிலை முடிந்த கிளவியம் (வாக்கியம்) சிலவற்றைப் பிணைத்து நடக்குந் தொடர்ந்த கிளவிபம் (தொல். சொல்.42, சேனா.); compound or complex

[பெரும் + தொடர்]

பெருந்தொடை *peran-toḍai,* பெ. (n.) 1. தொடையின் மேற்பகுதி; upper part of the thigh; thick part of the thigh *'வெள்ளம் பெருந்தொடை வரை வந்தது'* 2. இடுப்பு (இ.வ.); hip

[பெரும் + தொடை]

பெருந்தொப்பி *perun-toppi,* பெ. (n.) பெரிய கவிப்பு; top-hat.

[பெரும் + U. topi. *த. தொப்பி.]*

பெருந்தொல்லை *perun-tollai,* பெ. (n.) பெருந்துன்பம்; great nuisance.

[பெரும் + தொல்லை]

பெருந்தொழுகை *peru-n-tulukai* பெ. (n.) பெருமிறைத்தொழுகை; mass prayer.

[பெரும் + தொழுகை]

பெருந்தோல்வி *peru-tolvi,* பெ. (n.) படுதோல்வி; heavy fall.

[பெரும் + தொழுகை]

பெருநகரத்தார் *peru-nagarattār,* பெ. (n.) வணிகர்(I.M.P.Tj.142.); merchants.

[பெரு + நகரம்+ 'அத்து' சாரியை] ஆர்

பெருநகர் *peru-nagar,* பெ. (n.) மக்கள் தொகை மிக்க தலைமை மாநகரம்; Metro politan city

[பெரும் + நகர்]

பெருநகை *peru-nagai,* பெ. (n.) 1. பெருஞ்சிரிப்பு (பிங்); broad laugh laughter ridialous 2. பேரிகழ்ச்சி; being highly ridicuilous *'ஊரவர்க் கெல்லாம் பெருநகையாகி'* (கலித்.45.)

[பெரு + நகை]

பெருநடை *peru-naḍai,* பெ. (n.) 1. விரைந்த செலவு; fast walk' as of bullocks 2. புறக்கூத்துக்குரிய ஆடல்களுள் ஒன்று (சிலப்.3,16,உரை.); a mode of dancing. 3.உயர்ந்தவொழுக்கும் (சங்.அக); excellent conduct

[பெரு + நடை]

பெருநந்தியாவட்டம் *peru-nandiyā-vaṭṭam,* பெ. (n.) பெரு நந்தியாவட்டை பார்க்க; see perunantiyāvattai.

[பெரு(மை) + நந்தியாவட்டம்]

பெருநந்தியாவட்டை *peru-nandiyāvaṭṭai,* பெ. (n.) அடுக்கு நந்தியாவட்டம் பார்க்க;see adukku- nandiya vattam East Indian rosebay

[பெரு(மை) + நந்தியாவட்டம் நந்தியாவட்டம் –நந்தியாவட்டை]

பெருநம்பி *peru-nambi,* பெ. (n.) 1. இளவரசற்க்குரிய பட்டப்பெயர்; title of a royal prince *'பெருநம்பியாக வென்றான்'* (சீவக.2913.) 2. அரசர்க்குரிய மதிப்புரவு (விபவமெல்லாம்) பெறும் அமைச்சர் பட்டம்; title of a minister to whom royal honours are shown *'பெருநம்பி குலச்சிறை'* (தேவா.737,4)

[பெரு + நம்பி]

பெருநம்பிகள் *peru-nambigal,* பெ. (n.) கடிகைமாக்கள் (பிங்) பார்க்க; Radigai-mākkaḷ. panegyrists

[பெரு + நம்பிகள்] 'கள்' (ப.பா.ஈறு)

பெருநரிவெங்காயம் *peru-nariveṅgāyam,* பெ. (n.) செடிவகை(A); poison lily, s.sh crinum asiaticum. (a)

[பெரு + நரிவெங்காயம்]

பெருநல்குரவு *peru-nalgravu,* பெ. (n.) பெருவறுமை, பார்க்க; see peruvarumai.

[பெரு + நல்குரவு]

நல்குரவு = வறுமை

பெருநறளை *peru-neṟaḷai,* பெ.(n.) நீண்ட கொடிவகை; wolly heart vine (l) (செ.அக.)

[பெரு + நறளை]

பெருநறுவிலி *peru-neṟuvili,* பெ. (n.) 1. மரவகை; large sebesten, m.tr, cordia oblifua pypica 2. நறுவிலிவகை; a kind of felted leaved selerge sebesten, s.tr. cordia fulvasa (செ.அக.)

[பெரு + நறுவிலி]

பெருநாட்டம் *peru-nattam,* பெ. (n.) பெருவிருப்பம்; aspiration.

[பெரு + நாட்டம்]

பெருநாடி *peru-nāḍi,* பெ. (n.) மூல அடிப்படையான குருதிக்குழய், இரத்தக்குழாய் (M.L); aorta

[பெரு + நாடி]

பெருநாணல் *peru-nāṇal,* பெ. (n.) நாணல் வகை(m.m.509); dog bamboo,i.sh.) phragmites rox burghi

[பெரு + நாணல்]

பெருநாத்திகர் *perum-nathigar,* பெ. (n.) பகுத்தறிவாளர் (இன்மைக்கொள்கையர்); altheist.

[பெரும் + நாத்திகர்]

(skt. nāstikan → *த. நாத்திகர்)*

பெருநாரை *peru-nārai,* பெ. (n.) 1. நாரைவகை (பிங்); cyrus crane, Grus antigone 2.தலைக்கழகத்து வழங்கிய இசைநூல்களுள் ஒன்று (சிலப்.உரைப்பா.) ஒன்று a treatise on music, of the first saṅgam, not now extant.

[பெரு + நாரை]



பெருநாவல் *perunāval,* பெ. (n.) நாவல்வகை; (மலை) East Indian rose-apple

[பெரு + நாவல்]

பெருநாள் *peru-nāl,* பெ.(n.) 1. திருநாள்; festival, festive occasion *'ஒருபெரு நாளான் மணவணி காண'* (சிலப்.1,41.) 2. 27ஆவது விண்மீன் (சூடா.); the 27th naksatra 3. ஒரு முகம்மதியப் பண்டிகை; day of breaking the fast and enjoyment of the feast of Id. ul. Fitr. 4. நெடுங்காலம்; long period of time. *'பெருநா டெரிகின்றிலர்..... உனை'* (கம்பரா. இரணிய. 106.)

[பெரு + நாள்]

பெருநாளிகம் *peru-nāljgam,* பெ. (n.) நெருப்பை (அக்கினியை) வெளியிட்டழிக்கும் ஒருவகைத் தகரி (சுக்கிரநீதி,329.); a destrtuctive mechanisam, resembling a gun.

[பெரு + நாளிகம்]

பெருநாளிருக்கை *peru-nāl- irukkai,* பெ.(n.) அரசனது சிறப்பு நாளோலக்கம் (சிலப்.23.56.); great durbar of a king. *'திருநிலை பெற்ற பெருநாளிருக்கை'*

[பெருநாள் + இருக்கை]

பெருநான்கெல்லை *peru-nāṉgellai,* பெ.(n.) 1. சிற்றூர் அல்லது நிலத்தாக்கின் பேரெல்லை; bowndary, as of a village or block of land. opp.to ciru-nāṉgellai 2. எல்லை; boundary *'இப்பெருநான் கெல்லைக்குட்பட்ட இவ்வரைமா நிலமும்'* (s.i.i.iii.45.)

[பெரு + நான்கு+எல்லை]

பெருநிந்தை *peru-nintai,* பெ. (n.) பெருமிழிவு; great insult.

[பெரு + நிந்தை]

(skt. nindū - *நிந்தை)*

பெருநிரவி *peru-niravi,* பெ. (n.) கூட்டம்; (யாழ்.அக) gatherng

[பெரு + நிரவி]

பெருநிலம் *peru-nilam,* பெ.(n.) 1. நிலவுலகம்; earth. *'பெருநில முழுதாளும் பெருமகன்'* (சிலப்.1,31.) ;highest heaven *'அருளொடு பெருநில மளிக்கும்'* (திவ்,பெரியதி.1,1,9.)

[பெரு + நிலம் நில்–நிலம்]

பெருநிலை *peru-nilai,* பெ.(n.) (ஈடு,3,7,2 அரும்); 1. ஒருபக்கம் சார்தல் (பட்சபாதம்); partiality. 2. சான்று (சாட்சி); testimony 3. விடாப்பிடி; perseverance

[பெரு + நிலை]

பெருநிலைநில்—தல் (பெருநிலைநிற்றல்) *peru-nilai-nil,* செ.கு.வி(v.i.) உதவிசெய்தல்; to render assistance. *'உன்கிருததிரிமத்துக்குப் பெருநிலை நிற்பார்க்கன்றோ தெரிவது'* (ஈடு,6,2,5.) 2. சான்று சொல்லுதல்; to give testimony to accomplish,do.(ஈடு,3,7,2, அரும்);

[பெரு + நிலை + நில்]

பெருநீர் *peru-nir,* பெ. (n.) 1. கடல்; ocean,sea, *'பெருநீர் போகுமிரியன் மாக்களொடு'* (சிலப்,6,112.) 2. பெருநீர் முறை பார்க்க; see peru-nīr-muṟai

[பெருமை + நீர்]

பெருநீர்முறை *peru-nīr-muṟai,* பெ. (n.) மழைக்காலத்துப் பாய்ச்சல் முறையின்றித் தாராளமாக ஓடும் நீர்ப்பெருக்கு; water allowed to flow without any restraint or regulation during the rainy season (C.G)

[பெருநீர் + முறை]

பெருநூல் *peru-nul,* பெ.(n.) பெரிய நூல்; large book.

[பெரும் + நூல்]

பெருநெஞ்சு *peru-nēñju,* பெ(n.) 1. செருக்கு (அகம்பாவம்)(வின்.); pride 2.மனவுறுதி (தைரியம்); courage *'அஞ்சாப் பெருநெஞ்சுள்ளவன்'*

[பெரு—மை + நெஞ்சு]

பெருநெருஞ்சி *peru-nēruñji,* பெ. (n.) ஒருவகைச்செடி; a stout- stemmed herb with spiny fruits and slimy leaves.

[பெரு + நெருஞ்சி]

பெருநெல் *peru-nel,* பெ. (n.) 1. மட்டநெல்; carse paddy 2. நெல்வகை(வின்); a kind of paddy, longer in growing than other kinds

[பெரு + நெல்]

பெருநெறி *peru-neṟi,* பெ(n.) 1. பெருவழி; royal road, trunk road 2. வீடுபேறு; the path of salvation *'பேயனாகிலும் பெருநெறி காட்டாய்'* (திருவாச. 23,7.)

[பெருமை + நெறி]

பெருநையல் *peru-naiyal,* பெ. (n.) 1. பெருவியாதி நோய்[1] பார்க்க; see peru-nōy 2. அம்மை (வைசூரி) (வின்.); small pox

[பெரு + நையல்]

பெருநோக்காடு *peru-nōkkāḍu,* பெ. (n.) பெரு நோய்[1](வியாதி)(M.C) பார்க்க; see peru-nōy

[பெரு + நோக்காடு]

பெருநோய்[1] peru- nōy[1], பெ. (n.) குட்டநோய்; leprosy

மறுவ. தொழுநோய்

[பெரு + நோய்]

பெருநோய்[2] *peru-nōy,* பெ. (n.) மாட்டுநோய் வகை; (மாட்டுவா.105.) rinder - pest

[பெரு + நோய்]

பெருநோன்பு *peru-nonbu,* பெ. (n.) உண்ணாநிலை; abstinence from good.

[பெரு + நோன்பு]

பெருப்பம் *peruppam,* பெ. (n.) பருமன்; bigness, thickness

[பல்–பரு–பெரு, பெரு – பெருப்பம்]

பெருப்பி–த்தல் *peruppi-,* செ.குன்றாவி (v.t.)
1. பெரிதாக்குதல்; to magnify, enlarge.
2. புனைந்து கூறுதல்; to exaggerate

[பெரு–பெருப்பி (காரணவினை) 'பி' (கா.வி.ஈறு)]

பெருப்பு *peruppu-,* பெ. (n.) பெருக்கை; becomming large, being stout. *'பணையே பிழைத்தல் பெருப்புமாகும்'* (தொல்.சொல்.339.)

[பெரு–பெருப்பு 'பு' (சொ.ஆ.ஈறு)]

பெரும்பசலை *peru-m-pašalai,* பெ. (n.) கொடிவகை(A.); large-flowered purslane, portulaca quadrifida.

[பெரு+பசலை பசளை–பசலை விழ–வழலை–வயலை–பசளை]



பெரும்பசளி *perum-pašaḷai,* பெ. (n.) பெரும்பசலை பார்க்க (இ.வ.) ; see perum-pašalai

[பெரும்+பசளி] வயலை–பசலை–பசள

பெரும்பசிரி *peru-m-paširi-,* பெ. (n.) கீரைவகை; (மூ.அ) a kind of greens

பெரும்பஞ்சமூலம் *peru-m-pañjamūlam,* பெ. (n.) வில்வம்,வாகை,பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி என்ற ஐந்து மரங்களின் வேர்களைக் கொண்டு செய்த கூட்டுமருந்து (யாழ்.அக); compound medicine of the roots of five trees, viz., vilvam, vāgai, peru-ṅ-kumiḻ, taḻutāḻai, pādiri.

[பெரும்+பஞ்ச+மூலம் skt.pañcan-த.பஞ்ச மூலம்=வேர்]

பெரும்பஞ்சை *peru-m-panjai,* பெ. (n.) பெருவறுமை பார்க்க. see peruvarumai

[பெரும்+பஞ்சை]

பெரும்படி[1] *peru-m-paḍi,* பெ. (n.) உயர்தரம்; grandeur.

[பெருமை+படி]

பெரும்படி[2] *peru-m-paḍi,* பெ. (n.) முருடு; coarseness, roughness **2.** தோராயம் rough calculation **3.** பருமன்; thickness, stoutness **4.** பெரும்போக்கு; liberal scale **5.** செருக்கு (அகந்தை) (இ.வ.); arrongance

[பெரும்+படி+படி= முரட்டு, தடிமன், செருக்கு]

பெரும்படை *peru-m-paḍai,* பெ. (n.) **1.** பெரிய தானை; large army **2.** இறந்த வீரன் புகழை நடுகல்லிற் பொறிப்பதைக் குறிக்கும் புறத்துறை (தொல்.பொ.60); (purap) theme describing the exploits of a hero and inscribing them on a naḍu-kal. **3.** தெய்வமாகிய நடுகற்குப் பெருஞ்சிறப்புப் படைத்தலைக்கூறும் புறத்துறை (தொல்.பொ.60,

உரை.); (purap.) theme describing the gift of valuable offerings to a nadu-gal.

[பெரும்+படை]

பெரும்பண் *peru-m-paṇ,* பெ. (n.) பதினாறு தலைமைப் பண்கள். பாலையாழ், செந்து, மண்டலியாழ், பௌரி, மருதயாழ், தேவதாளி, நிருபதுங்கராகம், நாகராகம், குறிஞ்சியாழ், ஆசாரி, சாயவேளார் கொல்லி, கின்னராகம், செவ்வழி,மௌசாளி, சீராகம், சந்தி (பிங்.) group of sixteen main melogy-types viz. pālaiyāḻ, sendu, maṇḍaliyāḻ, panri, marudayāḻ, dēvatāḻi,nirupaturiga rāgam, nāgarāgam, kuṟiñjiyāḻ, āḻāri, sāyavēḷār, kolli, kiṉṉarāgam, sevvaḻi, manrāli,širāgam, sandi.

[பெரும் + பண்]

பெரும்பணி *peru-m-paṇi,* பெ. (n.) கிடைத்தற்கரியது; that which is dear or scarce *'அவை தன்னை இவன் தான் லபித்தானாகை பெரும்பணியிறே'* (திவ்.பெரியதி.3,5,4, உரை.)

[பெரும் + பணி]

பெரும்பத்து *peru-m-pattu,* பெ. (n.) *பெரும்பற்று* பார்க்க (W.G.); see *peru-m-paṟṟu*

[பெரும் + பத்து பற்று – பத்து பற்று = வயல், நிலம்]

பெரும்பதி *peru-m-padi,* பெ. (n.) மருங்கிலூர் சூழ்பதி (வின்.); town surrounded by villages (w) *"போயோர் பெரும்பதியுட் பட்டேம்"* (சிலப்.9; 46)

[பெரும் +பதி]

பெரும்பயறு *peru-m-payaẓu,* பெ. (n.) காராமணி; chowlee-bean. *'அரிகாற் பெரும்பயறு நிறைக்குழூர'* (ஐங்குறு.47.)

[பெரும் + பயறு]

பெரும்பராக்கு *peru-m-parākku,* பெ. (n.) உன்னிப்பாயிராமை (வின்.); carelessness, negligence, supineness

[பெரும் + பராக்கு skt.parāk- க.பராக்கு= கவனமின்மை]

பெரும்பருந்து *peru-m-parundu,* பெ.(n.) *பெரும்புள்*(யாழ்.அக); பார்க்க see *peru-m-puḷ*

[பெரும் + பருந்து]



பெரும்பருவம் *perum-paruvam,* பெ. (n.) ஈரம் மிகுந்திருப்பதால் உழுவதற்குத் தகுதியற்ற நிலம் (நாஞ்.); land unfit for ploughing owing to its being exceedingly moist.nā.

[பெரும் + பருவம்]

த. பருவம் → skt.parvan

பெரும்பற்றப்புலியூர் *peru-m-parra-p-puliyūr,* பெ. (n.) தில்லை (சிதம்பரம்); chidambaram *'பெரும்பற்றப் புலியூரானை'* (தேவா.12,1.)

[பெரும் + பற்றப்புலியூர்]

பெரும்பற்றப்புலியூர்நம்பி *peru-m-parra-p-puliyūr-nambi,* பெ. (n.) திருவால வாயுடையார் திருவிளையாடல் தொன்ம (புராண) நூலாசிரியர்; the author of Tiru-v- ālavāyu ḍaiyar-Tiruviḷai yaḍar tonmam

[பெரும் பற்றப்புலியூர் + நம்பி]

பெரும்பற்று *peru-m-parru,* பெ. (n.) அரசுக்கு உரிமையானநிலம்; (T.A.S; land, the proprietary right which lies in the hands of the government.

[பெரும் +பற்று]

[பெரும் +பறவை]

பெரும்பறை *peru-m-parai,* பெ. (n.) தோற்கருவிவகை; (சிலப்,3,2,உரை,பக்.106) a kind of large drum.

[பெரும் + பறை]



பெரும்பறையன் *peru-m-paraiyan,* பெ. (n.) பறையர் இனத்துள் ஒரு பிரிவு (பஞ்சம சாதி வகை) (M.M.654.); a sub sect of paraiyas

[பெரும் + பறையன்]

பெரும்பனசை *peru-m-panašai,* பெ. (n.) பெரும்பனையன்(வின்.) பார்க்க ; see peru-m panayan.

[பெரும் + பனசை]

பெரும்பனையன் *peru-m-panaiyan,* பெ. (n.) அம்மைநோய் (வைசூரி)வகை (வின்.) ; a virulent kind of small-pox with large pustules

[பெரும் + பனையன் பனை–பனையன்= கொடுவாரிநோய்]

பெரும்பாடி காவல் *perum-pādi-kāval,* பெ. (n.) தலைமைக்காவலன் (M.E.R. 407 of 1921);chief watchman

[பெரும் + பாடிகாவல்]

பெரும்பாடு *peru-m-pāḍu,* பெ. (n.) 1. பேருழைப்பு; great effort great suffering, strain 2. வீட்டுவிலக்குக் குருதியிறைப்பு நோய்; excessice menstruation menorrhagia 3. கருப்பக்குறைப்பு; profuse bleeding from the womb, metrorrhagia (இ.வ)

[பெரும் + பாடு]

பெரும்பாண் *peru-m-pāṇ,* பெ. (n.) பெரும்பாணர் பார்க்க; see peru-m pāṇar. *'பெரும்பாணிருக்கையும்'* (மதுரைக்.342.)

[பெரும் + பாண்]

பெரும்பாணர் *peru-m-pāṇar,* பெ. (n.) யாழ் வாசிக்கும் பாணர்குல வகையார்; a division of pāṇar caste. *'அருட்பெரும் பாணனாரை'* (பெரியபு.திருநீலகண்டயாழ்ப்.3.)

[பெரும் + பாணர்]

பெரும்பாணாற்றுப்படை *peru-m-pāṇāṟṟu-p-paḍai,* பெ. (n.) பத்துப்பாட்டினுள் ஒன்றானதும் தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியதுமான ஆற்றுப்படை வகை; a poem in praise of Toṇḍaimāṉ-iḷantiraiyaṉ, by kaḍiyalūr uruttiraṅgaṇṇaṉār, included in Pattu-p-pāṭṭu.

[பெரும்பாண் + ஆற்றுப்படை]

பெரும்பாந்தள் *peru-m-pāndaḷ,* பெ. (n.) பெரும்பாம்பு (வின்) பார்க்க; see *peru-mpāmbu.*

[பெரும் + பாந்தள்]

பெரும்பாம்பு *peru-m-pāmbu,* பெ. (n.) பெரிய பாம்பு; large snake. *பேழ்வாய்க் கிளர் பெரும் பாம்பினோடும்* (சீவக.2298). (திவா.)

[பெரும் + பாம்பு]

பெரும்பாலார் *peru-m-pālār,* பெ. (n.) மிகுதியான எண்ணிக்கையினவர்; the majority.

[பெரும் + பாலார்]

பெரும்பாலும் *peru-m-pāl-um,* பெ. எ. (adv) பெரும்பகுதி அளவு; for the most part, mostly, generally, commonly, customarily. பயிலுறவுற்றபடி பெரும்பாலுமிப் பெருந்திருநகர் படைப்பான் (கம்பரா.நகர.4.)

[பெரும் + பால் + உம்.]

பெரும்பாலை *peru-m-pālai,* பெ. (n.) பெரும் பண்வகை (சிலப். பக். 454.); (mus.) a major melody-type.

[பெரும் + பாலை]

பெரும்பாவி *peru-m-pāvi,* பெ. (n.) கொடுந் தீவினையாளன்; great sinner, sad dog.

[பெரும் + பாவி]

skt. pāpin › த. பாவி

பெரும்பாழ் *peru-m-pāḻ,* பெ. (n.) 1. மூல முதல் (பிரகிருதி); primordial matter. *'சூழ்ந்தகன் றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும் பாழேயோ'* (திவ். திருவாய். 10, 10, 10.) 2. பெருவெளி (திவா.) barren tract. 3. முற்று மழிவு; complete ruin.

[பெரும் + பாழ்]

பெரும்பாழ் செய்–தல் *peru-m-pāḻ-šey,* செ.குன்றாவி. (v.t.) முழுதும் அழித்தல்; to devastate entirely. *'பெரும்பாழ் செய்து மமையான்'* (பட்டினப். 270.)

[பெரும் + பாழ்செய்]

பெரும்பாழ்வெளி *peru-m-pāḻ-veḷi,* பெ. (n.) 1. *பெரும்பாழ்* 1, 2. பார்க்க; see *peru-m-pāḻ* 2. உச்சிக்குமேற் பன்னிரண்டு விரலங்கட்கு மேலுள்ளதாகக் கருதப்படுமிடம் (யாழ்.அக.); a mystic centre in the human body.

[பெரும் + பாழ்வெளி]

பெரும்பாற்சொற்றி *peru-m-pāṟ-coṟṟi,* பெ. (n.) பாற்சொற்றி வகை (வின்); a plant, aster acantha.

[பெரும் + பாற்சொற்றி]

பெரும்பான்மை[1] *peru-m-pāṉmai,* பெ. (n.) புகழுரை; praise. *'தலை மகளைப்பெரும் பான்மை கூறி'* (திருக்கோ. 164, உரை.)

[பெரும் + பான்மை]

பெரும்பான்மை[2] *peru-m-pāṉmai,* பெ.எ. (adv.) பெரும்பாலும்; for the most part, usually. *'பெரும்பான்மையு மறிதற் கரிதாட் விதி'* (இறை. 3 பாட்டு. 50.)

[பெரும் + பான்மை]

பெரும்பானை மோர் *peru-m-pāṉai-mor,* பெ. (n.) நீருணவு (நீராகாரம்); (இ.வ.) rice-water.

[பெரும் + பானை + மோர்]

பெரும்பிடி *peru-m-piḍi,* பெ. (n.) 1. கட்டாயப் படுத்திப் பெறுகை (வசூல்); exaction (w.) 2. ஒட்டாரம் (பிடிவாதம்); obstinacy. (இ.வ.)

[பெரும் + பிடி]

பெரும்பிண்ணாக்குக் கீரை *peru-m-piṇṇākku-k-kīrai,* பெ. (n.) கீரை வகை(M.M.); jews- mallow m.sh., corchorus olitorious.

[பெரும் + பிண்ணாக்குக் கீரை]

பெரும்பிரண்டை *peru-m-piraṇḍai,* பெ (n.) 1. பிரண்டை வகை; a large kind of square-stalked vine. 2. கொடிவகை (L.); leafless vanilla m.cl., vanilla wightiana

[பெரும் + பிரண்டை]



பெரும்பிலா *peru-m-pilā,* பெ. (n.) பொன்னா விரை (யாழ்.அக.) fetid cassia.

பெரும்பிழுக்கை *peru-m-piḻukkai,* பெ. (n.) வரிக் கூத்துவகை (சிலப். 3, 12, பக். 88.); a kind of masquerade dance.

[பெரும் + பிழுக்கை]

பெரும்பிளவை *peru-m-piḷavai,* பெ. (n.) அரசபிளவை; carbuncle, anthrax.

[பெரும் + பிளவை]

பெரும்பிறிது *peru-m-piṟidu,* பெ. (n.) இறப்பு; death, as a great change. *'பெரும்பிறி தின்மையி னிலேனு மல்லேன்'* (நற். 381.)

[பெரும் + பிறிது]

பெரும்பீர்க்கு *peru-m-pīrkku,* பெ. (n.) பீர்க்கு வகை; (பிங்.) a kind of sponge - gourd.

[பெரும் + பீர்க்கு]

பெரும்பீளை *peru-m-pīḷai,* பெ. (n.) *பெரும் பூளை* பார்க்க. see *peru-m pūḷai.* (பதார்த்த. 275.)

[பெரும் + பீளை]

பூளை – பீளை

பெரும்புகழ் *perum-pugal,* பெ. (n.) பெரும் பாராட்டு; high praise.

[பெரும் + புகழ்]

பெரும்புதர் *peru-m-putar,* பெ. (n.) பெரும் புதர்; shrub, big bushy plant.

[பெரும் + புதர்]

பெரும்புயல்¹ *peru-m-puyal,* பெ. (n.) **1.** பெருங்காற்று; violent storm.

[பெரும் + புயல்.]

பெரும்புயல்² *peru-m-puyal,* பெ. (n.) *பெரும் பெயல்* (பிங்.) பார்க்க *see perum peyal*

[பெரும் + புயல்]

பெரும்புலர்காலை *peru-m-pular kālai,* பெ. (n.) பொழுது புலர்தற்கு முன்னுள்ள விடியற்காலம்; early hours of the morning. *'பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி'* (தேவா. **523, 4.**)

[பெரும் + புலர்காலை]

பெரும்புலர்விடியல் *perum-pular-vidiyal,* பெ. (n.) பெரும்புலர் காலை பார்க்க; see peru-m-pular-kālai. *'பெரும்புலர் விடியலு மாலை'* (குறுந். **234.**)

[பெரும் + புலர் + விடியல்]

பெரும்புலால் *peru-m-pulāl,* பெ. (n.) பெருமீன்; large fish. (யாழ்.அக.)

[பெரும் + புலால்]

பெரும்புலி *peru-m-puli,* பெ. (n.) வேங்கைப் புலி; tiger, felis tigris.

[பெரும் + புலி]

மறுவ: கடுவா

பெரும்புழுதி *peru-m-Puḻudhi,* பெ. (n.) பெருங்குப்பை; loose soil.

[பெரும் + புழுதி]

பெரும்புள் *peru-m-puḷ,* பெ. (n.) **1.** பெருங் கோட்டான் (பிங்.); rock-horned owl, bubo bengaleusis. **2.** எட்டுக்காலுள்ள பெரிய பறவை (நிகண்டு); fabulous eight-legged bird.

[பெரும் + புள்]

பெரும்புள்ளி *peru-m-puḷḷi,* பெ. (n.) பெரும்பணக்காரர்; (நிலக்கிழார்) feudal superior lord.

[பெரும் + புள்ளி]

பெரும்புறக்கடல் *peru-m-puṟa-k-kaḍal,* பெ. (n.) சக்கர வாளமாலையைச் சூழ்ந்துள்ள கடல்; outermost circumambient ocean beyond cakkaravāḷam. *'பெரும்புறக் கடலை யடலேற்றினை'* (திவ். பெரியதி. **7, 10, 1.**)

[பெரும் + புறக்கடல்]

பெரும்புறம் *peru-m-puṟam,* பெ. (n.) பெருவெளி; outermost space. *'வாயிலின் பெரும்புறத் துய்த்தனர்'* (கம்பரா. இரணிய. **81.**)

[பெரும் + புறம்]

பெரும்பூ *peru-m-pū,* பெ. (n.) நிலத்தின் ஆண்டு (வருட) வருவாய்; the annual agricultural produce. *'ஒன்பதாவது பெரும்பூ முதலிட்டு'* (s.i.i.v, 107.)

[பெரும் + பூ]

பெரும்பூசணி *peru-m-pūšaṇi,* பெ. (n.) சாம்பற் பூசணி. ash-gourd.

[பெரும் + பூசணி]

பூ + சுணை – பூசுணை – பூசணி



பெரும்பூண் *peru-m-pūṇ,* பெ. (n.) மார்பிற் பூணும் பேரணி; a big jewel worn on the chest. *'பெரும்பூண் மன்னவன்'* (பு.வெ. 10.)

[பெரும் + பூண்]

பெரும்பூம்பாதிரி *peru-m-pū-m-pādiri,* பெ. (n.) (L.) ஆட்டுக்கொம்பொதி பார்க்க; see ātti-k-kombodi long-leaved trumpet-tree. (l.)

[பெரும் + பூம்பாதிரி]

பெரும்பூரான் *peru-m-pūraṉ,* பெ. (n.) பூரான் வகை (சங்.அக.); a kind of centipede.

[பெரும் + பூரான்]

பெரும்பூழை *peru-m-pūḻai,* பெ. (n.) கதவிலிடும் வாயில் (யாழ்.அக.) wicket.

[பெரும் + புழை]

[புழை – பூழை]

பெரும்பூளை *peru-m-pūḷai,* பெ. (n.) செடி வகை; javanese wool plant m.sh., acrua javanica. (பட்டினப். 244, உரை.)

[பெரும் + பூளை]

பெரும்பெயர் *peru-m-peyar,* பெ. (n.) 1. பெரும்புகழ்; renown. *'பெரும்பெயர்ப் பெண்டிர்க்கு'* (சிலப். 28, 208.) 2. வீடு. (மோட்சம்) final emancipation. *'அரும்பெறன் மரபிற் பெருபெயர் முருக'* (திருமுரு. 269.)

[பெரும் + பெயர்]

பெரும்பெயர்ப்பொருள் *peru-m-peyar-p-poruḷ,* பெ. (n.) *பெரும்பொருள்* பார்க்க, see *perumporuḷ. 'பெரும் பெயர்ப் பொருளிற் காணப்படுவதாகிய சிறப்பியல்பு'* (சி.போ.சிற்.பாயி.)

[பெரும் + பெயர்ப்பொருள்]

பெரும்பெயருலகம் *peru-m-peyar-ulagam,* பெ. (n.) விண்ணுலகம் heaven. *'பெரும்பெயருலகம் பெறீஇயரோ வன்னை'* (குறுந், 83.)

[பெரும் + பெயருலகம்]

பெரும்பெயல் *peru-m-peyal,* பெ. (n.) கனத்த மழை; heavyrain. *'பெரும் பெயல் பொழிந்த சிறுபுன்மாலை'* (முல்லைப். 6.)

[பெரும் + பெயல்]

பெய் – பெயல்

பெரும்பேச்சாளர் *peru-m-pēccalar,* பெ. (n.) சிறந்த பேச்சாளர்; great oraterar.

[பெரும் + பேச்சாளர்]

பெரும்பேச்சு *peru-m-pēccu,* பெ. (n.) **1.** பெரிய வெறும்பேச்சு; wide rumour. **2.** அலப் பற்பேச்சு; incessant talk, loquacity, **3.** புகழ்; fame. ***'பெற்றுடையான் பெரும் பேச்சுடையான்'*** **(தேவா. 1106, 5.)**

[பெரும் + பேச்சு]

பெரும்பேது *peru-m-pēdu,* பெ. (n.) **1.** பெரும் பித்து; excessive modness or distress, as in love. ***'பெரும் பேதுறுதல் களைமதி'*** **(கலித். 21.)** **2.** சாக்காடு; death, as the great distress. ***'வெந்திறற் கூற்றம் பெரும்பேதுறுப்ப'*** **(புறநா. 238, 10.)**

[பெரும் + பேது]

பெரும்பொங்கல் *peru-m-pongal,* பெ. (n.) **1.** சுறவ(தை)ப் பொங்கல், a festival (w.) **2.** சிற்றூர்த் தேவதைக்கு ஊராரிடும் பொங்கல்; offering of pangal to a village deity by the villagers in common. **(யாழ்.அக.)**

[பெரும் + பொங்கல்]

பெரும்பொய் *perum-pōy,* பெ. (n.) கட்டுக்கதை; untruth.

[பெரும் + பொய்]

பெரும்பொருள் *peru-m-poruḷ,* பெ. (n.) **1.** சிறப்புடைய பொருள்; a thing of great value. 'பெரும்பொரு ணீதிச் செங்கோற் பெருமகன்' **(சீவக.2534.)** **2.** அறம்; virtue . **(மணிமே.19,160, உரை.)** **3.** அறிவு; wisdom. 'பெருந்தவர் தம்மாற் பெரும்பொரு ளெய்த' **(மணிமே–19,160.)** **4.** பேரின்பவீடு (மோட்சம்); salvation 'பெரும்பொருளையுடையமுருக' **(திருமுரு. 269,உரை.)** **5.** அகப்பொருள் பற்றியதோர் நூல் **(சீவக.187,உரை.)**; a treatise on aga-p-poruḷ.

[பெரும் + பொருள்]

பெரும்பொருள் விளக்கம் *peru-m-poruḷ viḷakkam,* பெ. (n.) ஒரு அறநூல் (புறத்திரட்டு); a poem on morals.

[பெரும் பொருள் + விளக்கம்]

பெரும்பொழுது *peru-m-poḻudu,* பெ. (n.) கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் பருவங்கள் **(நம்பிய கப்.11)**; seasons of the year, of which there are six, viz., kār,kūdir, muṉ-paṉi. piṉ-paṉi, iḷa-vēṉil, muḷuvēṉil, dist. fr.ciṟu-podudu. ***(நம்பியகப் - II).***

[பெரும் + பொழுது]

பெரும்பொன்படு–தல் *peru-m-poṉpaḍu,* செ.கு.வி. (v.i.) தோற்றப் பொலிவுண்டாதல்; to be charming in appearance. ***'தொய்யிலெழுதி யிறுத்த பெரும்பொன் படுகம்'*** **(கலித்.64.)**

[பெரும் + பொன்படு –,]

பெரும்போக்கு *peru-m-pōkku,* பெ. (n.) **1.** பெருந்தன்மை; brood-mindedness, liberality. **2.** சாக்காடு; death.

[பெரும் + போக்கு]

போ–போகு–போக்கு.

போக்கு = போதல், வழி, நடை, பழக்கம், முடிவு.

பெரும்போகம் *peru-m-pōgam,* பெ. (n.) **1.** மிகுந்த விளைவு (கொ.வ.); bumper crop. **2.** பேரின்பம்; supreme bliss. *'பெரும்போகம் பின்னும் புதிதாய்'* (திருக்கோ.9.)

[பெரும் + போகம் →பூ→ பூகம்→போகம்]

பெரும்பற்று *perum-parttu,* பெ. (n.) மிகுந்த ஆசை; thick attachment.

[பெரும் + பற்று]

பெரும் போட்டி *perum-pōtti,* பெ. (n.) கடும் போட்டி; sever contest.

[பெரும் + போட்டி]

பெருமக்கள் *peru-makkaḷ,* பெ. (n.) **1.** பெரியோர்; the great *'பெருமக்களுள்ள வர்தம் பெருமானை'* (திவ்.திருவாய்.3,7,5.) **2.** ஊரலுவல் (காரியங்களை) மேற்பார்வை செய்யும் சவைப் பெரியோர்; members of a village assembly, as great men. *'ஸம்வத்ஸர வாரியப் பெருமக்கள்'* (s.i.i.iii,9.)

[பெரு + மக்கள்]

பெருமகன்[1] *peru-magaṉ,* பெ. (n.) நிலக்கிழார்; lord.

[பெரு + மகன்]

பெருமகன்[2] *peru-magaṉ,* பெ. (n.) **1.** உயர்பண்பாளர் (பிங்.);. great man **2.** தலைவன்; chief *'வயவர் பெருமகன்'* (பெரும்பாண்.101.) **3.** அரசன்; king. *'வெண்குடைப் பெருமகன் கோயிலுள்'* (சீவக.183.) **4.** அருகதேவன்; arhat. 'பெருமகன் றிருமொழி' (சிலப்.10,47.)

[பெரு + மகன்]

பெருமகிழ்ச்சி *peru-makilcci,* பெ. (n.) பெருவகை; great joy.

[பெரும் + மகிழ்ச்சி]

பெருமகிழ்ச்சிமாலை *peru-magilcci-mālai,* பெ. (n.) **96** வகைச் சிற்றிலக்கியங்களுள் கற்புடைப் பெண்டிர் பெருமையைக் கூறும் நூல்வகை(சது); a panegyric in which the greatness of chaste women is described one of **96** šiṟṟilakkiyams, q.v.

[பெரு + மகிழ்ச்சி + மாலை.]

பெருமங்கலம் *peru-maṅgalam,* பெ. (n.) **1.** நன்னிகழ்ச்சி; auspicious festival. **2.** வாழ்த்துப் பாடல்; benedictory song. *'பெரு மங்கலம் பாடுவார்'* (சீவக.308, உரை.) **3.** அரசன் தன் பிறந்த நாளில் குடிகட்கு அருள் செய்வதைக் கூறும் புறத்துறை; (purap.) theme of a king rolbed in white on this birth day and bestowing powers on his subjects. *'பிறந்தநாள்வயிற் பெருமங்கலமும்'* (தொல். பொ.91.) **4. 96** வகைப் சிற்றிலக்கியங்களுள் அரசனது பிறந்த நாண் மங்கலத்தைக் கூறும் நூல் (சது.); poem descrilling the celebration of a king's birthday, one of **96** šiṟṟilakkiyams. q.v

[பெரு + மங்கலம்]

மங்கு–மங்கல்–மஞ்சல் = மங்கலான நிறம், அந்நிறக்கிழங்கு (மஞ்சள்) மஞ்சல்–மஞ்சள்.

மங்கல்–மங்கலம் மஞ்சளால் அல்லது மஞ்சள் நீரால் குறிக்கப்பெறும் நன்னிலைமை. திருமணம், திருமணத்தாலி, மங்கலநிகழ்ச்சி, மங்கலச் சின்னம், மங்கலவழக்கு, நன்மை, (வட.வர. 213.)

பெருமஞ்சாடி *peru-mañjāḍi,* பெ. (n.) 1. *ஆனைத் தெல்லு*(நாஞ்) பார்க்க; see *āṉai-t-tellu.* a climber.

[பெரு + மஞ்சாடி]

பெருமஞ்சிகன் *peru-mañjigaṉ,* பெ. (n.) மயிர்வினைஞன் (நாவிதன்)(தி.வா.); barber. '*பெருமஞ்சிகனுக்கு.... கூந்தற் கருமம்*' (சீகாளத்.பு. விடசங்க.66.)

[பெரு + மஞ்சிகன்]

பெருமடை *peru-maḍai,* பெ. (n.) தெய்வங்களுக்கிடும் சோற்றுப்படையல்; food offering to a deity. '*வளமிகு சிறப்பிற்றெய்வப் பெருமடை கொடுத்து*' (பெரியபு.கண்ணப்.19.).

[பெரு + மடை]

மடு–மடை

பெருமடிப்பு *peru-maḍippu,* பெ. (n.) கொய்சகம் (திரைப்பு); pucker.

[பெரும் + மடிப்பு]

பெருமணம் *peru-maṇam,* பெ.(n.) திருமணம்; marriage. '*பெருமணம் பண்ணி யறத்தினிற் கொண்ட*' (கலித். 96,36.)

[பெரு + மணம்]

மணத்தல் = கலத்தல், இருவர் மனம் ஒன்று கூடுதல்

மண → மணம் = திருமணம்

பெருமணல்வட்டம் *peru-maṇal-vaṭṭam,* பெ. (n.) ஏழு நிரயத்தொன்று. (பிங்.) a hell of sand, one of elu-naraam, q.v.

[பெரு + மணல்வட்டம்]

பெருமத்தளி *peru-matttaḷi,* பெ. (n.) முழவம்(திவ்.திருப்பள்ளி.9. வ்யா); akind of drum.

[பெரும் + மத்தளி(மத்தளி= வாச்சியவகை]

பெருமதிப்பன் *peru-madippaṉ,* பெ. (n.) அதிக விலைபெற்ற பொருள்(ஈ.டு.). precious or valuable object.

[பெரு + மதிப்பன்]

பெருமந்தனம் *peru-m-manḍātanam,* பெ. (n.) இன்றியமையாத கமுக்கச் செய்தி; top-secreat.

[பெரும் + மந்தனம்]

பெருமந்தாரை *peru-mandārai,* பெ. (n.) *செம்மந்தாரை* பார்க்க; see -*mandārai,*purple variegated mountain ebony.

[பெரு + மந்தாரை]

பெருமரம் *peru-maram,* பெ. (n.) 1. மரவகை; toothed-leaved tree of heaven, 1. tr., ailan thus excels. 2. பீநாறி(மலை.); fetid tree 3. பெருங்கள்ளி; white frangipani.

ம. பெருமரம்

[பெரு + மரம்]

பெருமருந்து *peru-marundu,* பெ. (n.) கொடிவகை (பதார்த்த. 269) Indian birthwort, m.cl. aristolochia indica.

ம. பெருமருந்து

[பெரு + மருந்து]

பெருமல்லிகை *peru-malligai,* பெ. (n.) கொடிவகை (மூ.அ.); single-flowered Arabian jasmine, m.cl. jasmin sambac-heyneana.

[பெரு + மல்லிகை]

பெருமலம் *perumalam,* பெ. (n.) புன்கு, (சங்.அக.) indian beech.

[பெரு + மலம்]

பெருமலரி *perum-alari,* பெ. (n.) பெருங்கள்ளி; white frangipani.

[பெரும் + அலரி.]



பெருமலை *peru-malai,* பெ. (n.) மாமலை(மேரு);(பிங்) Mt. Meru.

[பெரு + மலை.]

பெருமலைகலக்கி *perumalai-kalakki,* பெ. (n.) பூடுவகை(வின்.); peacock-tailed Adiantum, adiantum caudatum. (w.)

[பெரு + மலைகலக்கி.]

பெருமழை *peru-maḻai,* பெ. (n.) கனத்த மழை; heavy. rain.

[பெரு + மழை]

பெருமறைநூல் *perumari-nul,* பெ. (n.) அறநூல்; book of charity. "தமிழர்களின் பெருமறைநூல் திருக்குறளாகும்."

[பெரும் + மறை +நூல்]

பெருமனமுரிவு *perumanamurivu,* பெ. (n.) பெருமனக் கசப்பு; great disappoint.

[பெரும் + மனம் + முரிவு]

பெருமா *peru-mā,* பெ. (n.) யானை; elephant.

[பெரு + மா.]

பெருமாக்கோதையார் *peru-mā-k-kōdaiyār,* பெ. (n.) சேரமான் பெருமாள் நாயனாரின் பிள்ளைப் பருவத்துப் பெயர்; name of saint cēramāṉ perumāḷ-nāyaṉār. given to him by his parents. 'அரனரு ளாற்பிறந்தார் பெருமாக் கோதையார்' (பெரியபு.சேரமான்.5)

[பெரு + மா + கோதையார்.]

ஈண்டுப் பெரு, மா எனு மீரடையும் ஒரே பொருளினவாய் அமைந்துள்ளமை காண்க. இவ்வடைகள் சிறப்புத்தன்மையை உணர்த்தும் ஒரு பொருட் பன்மொழிகள்.

பெருமாட்டி *perumāṭṭi,* பெ. (n.) தலைவி (திவா.) lady, mistress, princess. (செ.அக.)

[பெரு மான் (ஆ.பா.) – பெருமாட்டி (பெ.பா.)]

ஆளன் (ஆ) ஆட்டி (பெ) ஒ. நோ. திருவாளன் திருவாட்டி.

பெருமை + ஆட்டி = பெருமாட்டி

பெருமாந்தம் *peru-māndam,* பெ. (n.) குழந்தைநோய்வகை; a disease of children.

[பெரு + மாந்தம்]

மொத்து–மந்து–மந்து–மந்தம்.

மந்தம்–மாந்தம்=செரியாமையாற் குழந்தைகட் குண்டாகும் நோய்.

பெருமாப்பு *perum-āppu,* பெ. (n.) ஆப்புத்தள்ளி (புதுவை) பார்க்க; see āppu - t-taḷḷi.

பெரும் + ஆப்பு

பெருமாமிசம் *peru-māmicam,* பெ. (n.) மாட்டுக் கறி (இ.வ.); beef.

[பெரு + SKṭ. māmsa. *த. மாமிசம்.]*

பெருமாள் *perumāḷ,* பெ. (n.) 1. பெருமையிற் சிறந்தவ–ன்–ள்; person of eminence. 'பாண்பெருமாள்' (திவ். இராமானுச.11.) 2. சேரர் பட்டப்பெயர்; title of cēra king 3. திருமால்; Tiru-maī 4. கடவுள் (திருப்பு.); god.

ம. பெருமாள்

[பெரும் + ஆள்.]

பெருமாள்கோயில் *perumāḷ-koil,* பெ. (n.) 1. திருமால் கோயில் Tirumāl temple. 2. சின்ன காஞ்சிபுரம்; little conjeevaram (vaisṇ)

[பெருமாள் + கோயில்.]

பெருமாள்கோயில் மாடு *perumāḷ-kōil-māḍu,* பெ. (n.) திருமால் கோயில் எருது; temple bull. 2. உடம்பு கொழுத்தவன்(கொ.வ.); fat man.

[பெருமாள் கோவில் + மாடு.]

பெருமாள்திருமொழி *perumāḷ-tirumoḻi,* பெ. (n.) நாலயிரத் தெய்வப் பனுவலில் குலசேகராழ்வார் இயற்றிய பாடற்றொகுதி; the poems of kulacēekarāḻvār, collected in divya-p-pirapandam.

[பெருமாள் + திருமொழி]

பெருமாள்மாடு *perumāḷmāḍu,* பெ. (n.) ஊர் ஊராய்த் திரியும் இரப்பாளிகள் தெருவில் ஆட்டங் காட்டப் பழக்கியதும் புனைவு செய்யப் பெற்றதுமான எருது, Performing bull adovned with cowries etc., belonging to wandering medicants (E.T.Vi.194);

[பெருமாள் + மாடு.]

பெருமான் *perumāṉ,* பெ. (n.) 1. பெருமையிற் சிறந்தோன்; (பிங்.); nobleman, great person. 2. அரசன் (திவா.) king. 3. மூத்தோன் (திவா.); elder; elder brother. 4. கடவுள் (திவா.) god, as sīva, visṇu. *'பெருமானுரை பிடித்தேம்'* (கம்பரா. நிகும்பலை. 143.) 5. பெருமாட்டி; lady. *'தங்கா விருப்பிற் றம்பெருமான்'* (சீவக.2608.)

[பெருமகன் + பெருமான்.]

பெருமானடிகள் *perumāṉ-aḍigal,* பெ. (n.) 1. இறைவன்; divine being, a term of reverence *'பெரிய விடைமேல் வருவாரெம் பெருமா னடிகளே'* (தேவா.528,1.) *'வல்லத்துத் திருத்தீக்காலிப் பெருமானடிகளுக்கு'* (s.i.i.iii, 95.) 2. அரசர் தலைவர் பட்டப்பெயர்(கல்.); a title of kings and chieftains.

[பெருமான் + அடிகள்.]

பெருமிடறு செய்–தல் *peru-miḍaṟu-šey-,* செ.கு.வி. (v.i.) உரத்தழுதல்; to cry aloud; *'விழுந்து பெருமிடறு செய்து ஆர்த்தராய்க் கூப்பிட்டு'* (குருபரம். 537.)

[பெருமி + டறு செய்,.]

பெருமிதச் செயல் *perumida-c-cayal,* பெ. (n) நற்செயல்; *good deed*

[பெருமை + மிதம் + செயல்.]

பெருமிதச் செய்கை *perumida-c-cikai,* பெ. (n) *பெருமிதச் செயல்* பார்க்க; *see perumidaccayal.*

[பெருமை + மிதம் + செய்கை.]

பெருமிதம் *peru-midam,* பெ. (n.) 1. பேரெல்லை (தொல்.பொ.257. உரை); maximum limit, 2. மேம்பாடு; greatness. *'பெருக்கம் பெருமித நீர்த்து'* (குறள்.431.) 3. தருக்கு; pride, arrogance. *'பெருமை பெருமித மின்மை'* (குறள்.979.) 5. எண்வகை மெய்ப்பாடுகளுள் கல்வி முதலிய பெருமைகளில் மேம்படுகை; consciousness of one's greatness, one of eitht mey-p-pāḍu. q.v. *'கல்வி தறுக ணிசைமை கொடையெனச் சொல்லப்பட்ட பெருமித நான்கே'* (தொல்.பொ.57.)

[பெரு(மை) → பெருமிதம்]

பெருமிதத்தன்மை *pērumida-tanmai,* பெ. (n.) பெருந்தன்மை; dignity.

[பெருமிதம் + தன்மை]

பெருமித வாழ்க்கை *perumida-valkkai,* பெ. (n.) துன்ப நிலையிலும் மேம்பட்ட வாழ்க்கை வாழ்தல்; dignity life.

[பெருமிதம் + வாழ்க்கை]

பெருமிழலைக்குறும்பநாயனார் *peru-miḻalai-k-kurumba nāyaṉār,* பெ. (n.) நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவர் (பெரியபு); a cannized šaiva saint, one of 63.

[பெருமிழலை + குறும்ப நாயனார்]

பெருமிளகி *peru-miḷagi,* பெ. (A.) நெல்வகை(a.); a kind of paddy

[பெருமை + இளகி]

பெருமீன் *peru-min,* பெ. (n.) யானைமீன் (திவா); a kind of large fish.

[பெரு + மீன்]



பெருமுசுட்டை *peru-mušuṭṭai,* பெ. (n.) **1.** கொடிவகை; many - flowered bindweed l clo i pornea staphylina. **2.** முசுட்டை வகை; malabar convolvulus. l.cl., i. pomaea malabārica.

[பெரு + முசுட்டை]

பெருமுட்டை *peru-muṭṭai,* பெ. (n.) பெருமரம் (மலை.); see perumaram.

[பெரு + முட்டை]

பெருமுத்தரையர் *peru-muttaraiyar,* பெ. (n.) கொடையாற்சிறந்த பண்டைச் சிற்றரசருள் ஒருவகையார்; a dynasty of chieftains of former days, renowned for their liberality. 'பெருமுத்தரையர் பெரிதுவந் தீயும் கருணைச் சோறு' (நாலடி,200.)

[பெரு + முத்தரையர்]

பெருமுதலி *peru-mudali,* பெ. (n.) தலைவன்; chief. '*எங்கண் முன்பெருமுதலி யல்லையோ*' (பெரியபு. கண்ணப். 117.)

[பெரு + முதலி]

பெருமுதியன் *peru-mudiyaṉ,* பெ. (n.) கோயில் அதிகாரிகளு ளொருவன்(T.A.S.iii 106); a temple official

பெருமுயற்சி *peru-muyarcci,* பெ. (n.) பேருழைப்பு; hard work.

[பெரும் + முயற்சி]

பெருமுளை *peru-muḷai,* பெ. (n.) இசைப்பாட்டு வகை (சிலப்.10,131,உரை.) ; a song.

[பெரு + முளை]

பெருமுன்னறிவு *pēru-munarivu,* பெ. (n.) முன்னறிதிறம்; fore thought.

[பெரும் + முன்னறிவு]

பெருமுனைப்பு *peru-munaippu,* பெ. (n.) பெருமுயற்சி பார்க்க; see perumuyarcci.

[பெரும் + முனைப்பு]

பெருமூங்கில் *peru-mūṅgil,* பெ. (n.) மூங்கில் மரவகை. (குறிஞ்சிப்.65, உரை.) large bamboo, 1. tr. bambusa arundinaca.

[பெரு + மூங்கில்]

பெருமூச்சு *peru-mūccu,* பெ. (n.) நெட்டுயிர்ப்பு; sigh, long breath. '*பெருமூச்செழ விம்மின னிருந்தான்*' (பிரபோத. 37,6.)

[பெரு + மூச்சு]

பெருமூச்சுவிடு–தல் *peru-mūccu-viḍu-,* செ.கு.வி. (v.i.) பெரிதாக மூச்சுவிடுதல்(வின்.); to heave a sigh.

[பெருமூச்சு + விடு.,]

பெருமூச்செறி–தல் *peru-mūcceṟi-,* செ.குன்றா.வி. (v.t.) *பெருமூச்சு விடு–தல்* பார்க்க; see *perumūccuviḍu-.*

[பெருமூச்சு + எறி.,]

பெருமூத்திரம் *peru-muttram,* பெ. (n.) நீரிழிவு நோய் (இராசவைத்.54.) diabeter

[பெரு + மூத்திரம் மோள் + திரம் – மோத்திரம்–மூத்திரம்]

பெருமை *perumai,* பெ. (n.) **1.** பருமை; bigness, largeness, **2.** மாட்சிமை; greatness, dignnity, excellence, eminernce, nobleness, grandeur. '*பெருமையுந் தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு*' (குறள்.974.); **3.** மிகுதி abundance, excess. '*இன்றில்லை யென்னும் பெருமை யுடைத்து*' (குறள்.336.) (திவா.). **4.** வல்லமை; power, might **5.** சீர்த்தி; celebrity, renown. **6.** செருக்கு; pride, vanity, haughtiness, '*அவன் பெருமையடிக்கிறான்*' 6. 7. அருமை; dearness, difficulty, (சீவக.1709, உரை.)

க. பெர்மை

[பல்–பரு–பெரு, பெரு–பெருமை. பெருமைக்கருத்து திரட்சிக் கருத்தின் வழிப்பட்ட பருமைக் கருத்தினின்றே தோன்றியுள்ளது. மதிப்பிற்கும் புகழிற்கும் ஏதுவான அறிவாற்றலதிகார செல் வங்களின் பருமையே பெருமை.]

பெருமைக்குணம் *perumai-k-kunam,* பெ. (n.) *பெருமைப்பண்பு* பார்க்க; see *perumaippanpu*

[பெருமை + குணம்]

பெருமைப்பண்பு *perumai-p-panpu,* பெ. (n.) மாட்சிமைக்குணம்; noble character.

[பெருமை + பண்பு]

பெருமைப்பாடு *perumai-p-pāḍu,* பெ. (n.) *பெருமை,***6.** பார்க்க; see *perumai*

[பெருமை + பாடு படு–பாடு]

பெருமைப்பெண் *perumai-p-peṇ,* பெ. (n.) உரிமைச் சுற்றத்திலன்றிப்புறம்பே செல்வநோக்கித் தெரிந்தெடுக்கப்பட்ட மணப்பெண் (இ.வ.); bride chosen from a renowned or wealthy family, dist.fr. urimai-p-peṇ.

[பெருமை + பெண் பெருமை = மதிப்பு, செல்வம், வளமை.]

உறவுமுறை பற்றி மணத்தற்குரியவள் உரிமைப்பெண் என்றும் செல்வநிலை பற்றி மணத்தற்கு ஏற்றவள் பெருமைப் பெண் கூறுப.

பெருமெண்ணிக்கை *peru-menikgai,* பெ. (n.) பெருமளவு எண்ணிக்கை; large number.

[பெரும் + எண்ணிக்கை]

பெருவங்கியம் *peru-vaṅgiyam,* பெ. (n.) யானைத் துதிக்கை போலும் வடிவுள்ள இசைக்குழல் (புறநா.152, உரை.); long wind instrument shaped like an elephant's trunk.

[பெரு + வங்கியம்]

பெருவசியம் *peru-viciyam,* பெ. (n.) பெருங்கவர்ச்சி; pishogue.

[பெரும் + வசியம்]

பெருவஞ்சி *peru-vañji,* பெ. (n.) பகைவர் நாட்டை எரிகொளுத்துவதைக் கூறும் புறத்துறை. (பு.வெ.3,22.) (purap.) theme describing the setting fire to an enemy's country

[பெரு + வஞ்சி]

பெருவட்டம் *peru-vaṭṭam,* பெ. (n.) காட்டுமர வகை (வின்.); a kind of jungle tree.

[பெரு + வட்டம்]

பெருவண்டு *peru-vaṇḍu,* பெ. (n.) பறக்கும் தன்மை கொண்ட ஒருவகைக்குளவி; kind of flying insect of which the common kind has a narrow waist.

[பெரும் + வண்டு]



பெருவண்ணம் *peru-vaṉṉam,* பெ. (n.) இசைவகை. (பெரியபு.ஆனாய.28.) (mus.) a variety of melody-type.

[பெரு + வண்ணம்]

பெருவண்ணான் *peru-vaṉṉāṉ,* பெ. (n.) வண்ணாரச் சாதி வகை; an important division of the vaṉṉāṉ caste.

[பெரு + வண்ணான்.]

பெருவண்மை *peru-vaṇmai,* பெ. (n.) 1. பெருங்கொடை; generosity or munificence 2. அம்பெய்தற்குரிய நால்வகை இலக்குகளுள் பெரியதாகிய இலக்கு; a large or wide target for an arrow, one of four ilakku, q.v.

[பெரு + வண்மை.]

பெருவயிறு *peru-vayiṟu,* பெ. (n.) 1. பருத்த வயிறு; pot-belly, paunch 2. நீர்க்கோவை; dropsy; ascitis '*பெருவயிறு வயிறுவலி படுவன்வர்*' (திருப்பு.790.)

க. பெர் பசிறு. ம. பெருவயரு.

[பெரு + வயிறு]

பெருவர் *peruvar,* பெ. (n.) பெருமையுடையவர்; great persons. '*பெருவரா யுறையு நீர்மையர்*' (தேவா.852,9.)

[பெரு – பெருவர்]

பெருவரகு *peru-varagu,* பெ. (n.) வரகுவகை (விவசா.4); a kind of common millet .

பெருவருத்தம் *peru-varuttam,* பெ. (n.) பெருந்துன்பம்; sadness.

[பெரும் + வருத்தம்]

பெருவரை *peru-varai,* பெ. (n.) பெருமலை; Mt. Mēru, '*சிறந்த பெருவரையுடனும்*' (சிவதரு.கோபுர.30.)

[பெரு + வரை]

பெருவரைமீன் *peru-vari,* பெ. (n.) *அறிசா* (சங்.அக.) பார்க்க; see *ariśā a fish*

பெருவல்லுநர் *pēru-vallunar,* பெ. (n.) பெருந்திறனாளர்; expert.

[பெரும் + வல்லுநர்]

பெருவலி *peru-vali,* பெ. (n.) 1. மிகு வலிமை யுடையது; that which is very strong or powerful. '*ஊழிற் பெருவலி யாவுள*' (குறள்.380.) 2. பெருநோவு; (யாழ்.அக.) excessive pain.

[பெரு + வலி]

பெருவலிப்பு *pēru-valippu,* பெ. (n.) இசிவு நோய்; convulsion.

[பெரும் + வலிப்பு]

பெருவலிமை *pēru-valimai,* பெ. (n.) மிகுந்தஆற்றல்; greatstrength.

[பெரும் + வலிமை]

பெருவலை *peru-valai,* பெ. (n.) கடலில் மீ ன் பிடிப்பவர் பயன்படுத்தும் பெரிய வலை வகை (இ.வ.) ; a large sized net used by fishermen in the seas.

[பெரு + வலை]

பெருவழக்கு[1] *peru-vaḻakku,* பெ. (n.) **1.** பலரும் கையாளும் முறை; largely prevalent custom or usage. **2.** எல்லா விடத்திலும் நிறைந்திருத்தல்; omnipresence; *'எங்கணும் பெருவழக்காய்'* (தாயு.திருவருள், விலாச.1.)

[பெரு + வழக்கு]

பெருவழி *peru-vaḻi,* பெ. (n.) **1.** பெரும்பாதை (திவா.); highroad, trunk road. பெருவழி நாவற் கனியினு மௌியள்" (திவ். பெரியதி. 10,9,5) **2.** வீடுபேறு; Path of salvation. "கருவழி யாக்குங் கணக்கையறுத்துப் பெருவழி யாக்கும்" (திருமந். 1374) ம. பெருவழி

[பெரு + வழி]

பெருவழக்கு[2] *peru-vaḻakku,* பெ. (n.) பொதுநெறி; common method.

[பெரு + வழக்கு]

பெருவள்ளி *peru-vaḷḷi,* பெ. (n.) **1.** வள்ளி வகை. (பதார்த்த.437.) cultivated yam, m.cl. dioscorea sativa. (பதார்த்த.437.) **2.** ஒருவகைக் கிழங்குக் கொடி; ping-stalked yam, m.cl.dioscorea alata.

[பெரு + வள்ளி]

பெருவளவாய் *peru-vaḷa-vāy,* பெ. (n.) பேராற்றுக்கால்; big channel. "நாட்டுக்குப் பாயும் பெருவளவாயும்" (S.I.I.ii.54)

பெருவளி *peru-vaḷi,* பெ. (n.) சூறாவளி (சண்டமாருதம்); storm; hurricane *'பெண்ணையந் தோட்டம் பெருவளி புக்கற்றே'* (களவழி.24.)

[பெரு + வளி]

பெருவளைப்பு *peruvaippu,* பெ. (n.) பெரிய காவல்; utmost vigilence, extreme care. *'சிறுமுதுக்குறைவிதானே பெருவளைப்பிட்டுக் காத்த கற்பு'* (சீவக.2077.)

[பெரு + வளை→வளைப்பு]

பெருவறுமை *pēru-varumai,* பெ. (n.) பெருநல்குரவு; greatpoverty.

[பெரும் + வறுமை]

பெருவனம் *peru-vaṉam,* பெ. (n.) கடல்; sea. *'செறிந்த பன்மணிப்பெருவனம்'* (கம்பரா.முதற். 246.)

[பெரு + வனம்]

[பெ + SKṭ Vana. *த. வனம்]*

பெருவாகை *peru-vāgai,* பெ. (n.) **1.** வாகை மரம்; siris, **1.** tr., Albizzia lebbek. **2.** வேலிப் பருத்தி (மலை.) ; stinking swallow wort.

[பெரு + வாகை]

பெருவாடை *peru-vāḍai,* பெ. (n.) பெருவளி பார்க்க; see peruvaḷi யுற்ற மரங்களி னடுக்க மெய்தா' (கம்பரா.மாயாசீ.59.)

[பெரு + வாடை வட(க்கு)—வாடை]

பெருவாய்மலர் *peru-vāy-malar,* பெ. (n.) இருவாட்சி; tuscan jasmine '*பெருவாய் மலரொடு பசும்பிடி மகிழ்ந்து*' (பதிற்றுப்.81,25.)

[பெரு + வாய்மலர்]

பெருவாயன்[1] *peru-vāyan,* பெ. (n.) 1. அலப்பு பவன்; chatterbox. 2. கழுதை (பாலவா.); donkey.

[பெரு + வாயன் வாய்–வாயன்]

பெருவாயன்[2] *peru-vāyan* பெ. (n.) 1. கடகப்பெட்டி (இ.வ.); basket 2. பெருமத்தளி (திவ். திருப்பள்ளி. 9, வ்யா) பார்க்க; *peru-mattali*

பெரு + வாயன்

பெருவாயில் *peru-vāyil,* பெ. (n.) கோபுரம்; tower. (திவா.)

[பெரு + வாயில் வாய்→வாயில்]

பெருவாயின்முள்ளியார் *peru-vāyin-mulliyār,* பெ. (n.) ஆசாரக்கோவை இயற்றிய புலவர்; a poet, the author of ācāra-k-kōvai.

[பெருவாயின் + முள்ளியார்]

பெருவார்த்தை *peru-vārttai,* பெ. (n.) பெருமையுடைய உரை; great word; notable utterence. '*மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டு சித்தர் கேட்டிருப்பர்*' (திவ்.நாய்ச்.11,10.)

[பெரு + வார்த்தை]

skt.vārttā > த. வார்த்தை

பெருவாரல்வலை *peru-vāral-valai,* பெ. (n.) மீன் பிடிக்கும் பெரிய வலைவகை (சிலப்.14,173,அரும்.); a large fishing net.

[பெரு + வாரல்+வலை]

பெருவாரி[1] *peru-vāri,* பெ. (n.) 1. பெரு வெள்ளம்; great flood. '*தாமறையிறை வீழ்த்த பெருவாரி*' (பரிபா.9,4.) 2. மிகுதி; abundancee, large numbers.

[பெரு + வாரி]

பெருவாரி[2] *peru-vāri,* பெ. (n.) 1. பரவல் நோய்; cpidemie, pestilence. 2. கொள்ளை நோய் வகை; bubonic plague.

[பெரு + வாரி. வாரு–வாரி]

பெருவாரிக்காய்ச்சல் *peruvāri-k-kāyccal,* பெ. (n.) *பெருவாரி*[2] , 2 பார்க்க; *see peru-vāri.*

[பெருவாரி + காய்ச்சல்]

பெருவாழ்வு[1] *peru-vālvu,* பெ. (n.) 1. நிரம்பிய பேறு; great prosperity '*சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வும்*' (திருப்பு.195.) 2. பேரின்பம்; (திருப்பு.751.) heavenly bliss.

[பெரு + வாழ்வு வாழ்–வு= வாழ்வு 'வு'– தொ. பெ. ஈறு.]

பெருவாழ்வு[2] *peru-vālvu,* பெ. (n.) நல்வாழ்வு; well-being.

[பெருமை + வாழ்வு]

பெருவாழைப்பூ *peru-vāḻai-p-pū,* பெ. (n.) புடைவை வகை; a kind of saree. (இ.வ.)

[பெரு + வாழைப்பூ]

பெருவிடை[1] *peru-viḍai,* பெ. (n.) பெருவிளக்கவிடை; large answer.

[பெரும் + விடை]

பெருவிடை[2] *peru-vidai,* பெ. (n.) இறப்பு; death,. as taking final leave.

[பெரு + விடை]

பெருவியாதி *peru-viyādi,* பெ.(n.) பெருநோய்[2] பார்க்க; see *perunōy[2]* ***'சயரோகம் பெருவியாதி'*** **(கடம்ப.4. இலீலா.115.)**

[பெரு + SKṭ-Vyādhi. த. வியாதி.]

பெருவிரல் *peru-viral,* பெ. (n.) **1.** கட்டைவிரல்; thumb or big toe. **2.** நெல் எட்டுக்கொண்ட நீட்டலளவைவகை (**சிலப்.3.100,உரை.**); a lineal measure of the length of a thumb = eight nēl.

[பெரு + விரல்]



பெருவிரியன் *peru-viriyan,* பெ. (n.) விரியன் பாம்பு வகை; russell's viper.

[பெரு + விரியன்]



பெருவிருந்து[1] *peru-virundu,* பெ. (n.) சிறப்பு விருந்து; great feast.

[பெரு + விருந்து]

பெருவிருந்து[2] *peru-virundu,* பெ. (n.) ஊர் விருந்து (இ.வ.); caste-dinner, public feast.

[பெரு + விருந்து]

பெருவிருப்பம் *peru-viruppam,* பெ. (n.) பேராவல்; earnestdesire.

[பெரும் + விருப்பம்]

பெருவிலை *peru-vilai,* பெ. (n.) மிக்கவிலை; great worth; high price. ***'பெருவிலை யாரத்தோடு' (கம்பரா. விடை. 119.)***

[பெரு + விலை]

பெருவிலையர் *peru-vilaiyar,* பெ. (n.) பெருந்தகையர்; eminent person.

[பெருமை + விலையர்]

பெருவிலையன் *peru-vilaiyan,* பெ. (n.) மிக்கவிலை பெறுவது; a thing of high value. '*பெருவிலையனான ரத்னத்தை*' (திவ். பெரியதி. 2, 7, 6. வ்யா.)

[பெருவிலை → பெருவிலையன்]

பெருவிழா *peru-viḻā,* பெ. (n.) பெரிய திருவிழா; great festival; '*தேவர்கோற் கெடுத்த பெருவிழா*' (*மணி, மே. 3, 34–5*)

[பெரு + விழா]

பெருவிளா *peru-viḷā,* பெ. (n.) மரவகை; tooth brush true

[பெரு + விளா]

பெருவிறல் *peru-viṟal,* பெ. (n.) **1.** மிகுவலி; great power. 'பெருவிரல் வேந்தன்' (பெருங். உஞ்சைக்.39,40) **2.** பெருவிறலாளி (தொல். சொல்.57,உரை பார்க்க **3.** *முருகக்கடவுள்; skanda.* 'ஆலமர் செல்வனணிசால் பெருவிறல்' (கலித்.81,9)

[பெரு + விறல்]

பெருவிறலாளி *peru-viṟal-āḷi,* பெ. (n.) மிக்க வலிமையுடையவன் very strong or powerful man '*பெருவிறலாளி யென்ன*' (பெரியபு. இயற்பகை.17.)

[பெரு + விறல்+ஆள் → ஆளி]

பெருவிறைச்சி *peru-viraicci,* பெ. (n.) மாட்டிறைச்சி; beef.

[பெரு + இறைச்சி]

பெருவினைத்திறம் *peru-vinittiram,* பெ. (n.) வினையாண்மைத்திறம்; will-power.

[பெரும் + வினைத்திறம்]

பெருவினையம் *pēru-viniyam.* பெ. (n.) செய்வினை; witchcraft.

[பெரும் + வினையம்]

பெருவீடு *peru-vidu* பெ. (n.) பிற்பகலில் மாடுகளை மேய விடுகை;letting out cattle in the afternoon, for grazing "சிறுவீடன்றியே பெருவீடும் விடும்படியாய்" (திவ். திருப்பள்ளி. 4, வ்யா.)

[பெரு + வீடு]

பெருவு–தல் *peruvu-,* செ.கு.வி. (v.i.) தூக்கத்தில் அச்சத்தாற் பிதற்றுதல்(வின்.); to talk in sleep.

[வெருவு – பெருவு]

பெருவெக்கை *peru-vekkai,* பெ. (n.) மாட்டு நோய்வகை (மாட்டுவா.108); a kind of cattle disease. பெருவெதுப்பு பார்க்க; see peruveduppu.

[பெரு + வெக்கை]

பெருவெதுப்பு *peru-veduppu,* பெ. (n.) மாட்டு நோய்வகை (மாட்டுவா.156); a kind of cattle disease.

[பெரு + வெதுப்பு]

வெதும்பு – வெதுப்பு

பெருவெழுத்து *peru-v-eḻuttu,* பெ. (n.) 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்து (பஞ்சாக்கர) மந்திரத்திற் சிவபெருமானைக் குறிக்கும் 'சி' என்ற எழுத்து; letter 'ši' in the incantation namašivāya indicating šiva. '*பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்தும்*' (கொடிக்.4)

[பெரு + எழுத்து]

பெருவெள்ளம்[1] *peru-vellam,* பெ. (n.) ஊழிப்பெருவெள்ளம்; the deinge. "உண்ணாத பெருவெள்ளம் உண்ணாமல் தான் விழுங்கி உய்யக் கொண்ட கண்ணாளன்" (திவ். பெரியதி. 2,6,7)

[பெரும் + வெள்ளம்]

பெருவெள்ளம்[2] *peru-vellam,* பெ. (n.) பெருமழையால் உண்டாகும் வெள்ளப் பெருக்கு; flood of a river caused by heavy rains.

[பெரும் + வெள்ளம்]

பெருவெளி *peru-veḷi,* பெ. (n.) **1.** விரிந்த வெளியிடம்; open space. '*துவாத சாந்தப் பெருவெளியில்*' (குமர. பிர. மீனாட். பிள்ளை. 42.) **2.** திறந்தவெளி; the ethereal expanse. **3.** வாலறிவு; (phil.) pure intelligence.

[பெரு + வெளி]

பெருவெளிச்சம் *pēru-veliccam,* பெ. (n.) பொலிவுச்சுடரொளி; brightness.

[பெரும் + வெளிச்சம்]

பெருவேம்பு *peru-vēmbu,* பெ. (n.) மலை வேம்பு (மூ.அ) பார்க்க; see peru-vēmbu persian lilac.

[பெரு + வேம்பு]

பெருவேளை *peru-vēḷai,* பெ. (n.) நாய்வேளை; a sticky plant that grows best in sandly places.

[பெரு + வேளை]

பெல்லம் *pellam,* பெ. (n.) *வெல்லம்* (இ.வ.) பார்க்க; see *vellam.*

க., பட பெல்ல

[வெல்லம் – பெல்லம்]

பெல்லி[1] *pelli,* பெ. (n.) துறட்டின் முனைக் கொக்கி(யாழ்ப்.); hook tied to the end of a pole.

தெ. பெல்ல
பிளந்த வாயையுடைய கருவி

பில் → பிள் → புள் → புல் → பெல் → → பெல்லி 'இ' வினைமுதலீறு

பெல்லி[2] *pelli,* பெ. (n.) சூனியவித்தை; witchcraft, magic. அவளைப் பில்லி அடித்துவிட்டது. (w.)

Sinh. *pilli*

[பில்லி → பெல்லி]

பெள்[1]–தல் (பெட்டல்) *peḷ-,* செ.குன்றாவி. (v.t.) **1.** விரும்புதல்; to desire. '*பிரித்தலும் பெட்டலும்*' (தொல்.பொ.147.) **2.** காதலித்தல்; to love. '*பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை*' (குறள்.141.) **3.** நினைத்தல்; to intend. '*பெட்டவைசெய்யார்*' (இனி.நாற்.23.)

[பிள் → பெள் + தல் – பெட்டல்]

பெள்[2]–தல் (பெட்டல்) செ.கு.வி. (v.i.) மிகுதல்; to be immoderate '*வெண்டிங்கள் பெட்ப நகுகின்றது*' (சீவக.1662.)

[பிள் → பெள் + தல் – பெட்டல்]

பெள்³–தல் (பெட்டல்) *peḷ-*, செ.குன்றாவி.(v.t.) காப்பாற்றுதல்; to protect. 'பெட்டல் என்பது புறந்தருதல்' (தொல். சொல். 332, இளம்பூ)

[பிள் → பெள் + தல் → பெட்டல்]

பெற்றதகப்பன் *peṟṟa-tagappaṉ*, பெ. (n.) தந்தை; father.

பெற்றதகப்பன் என்பது செஞ்ஞாயிறு என்பது போன்றது. பெற்ற என்பது இனமில்அடைமொழி.

[பெற்ற + தகப்பன்]

பெற்றதாய் *peṟṟa-tāy*, பெ. (n.) பெற்றெடுத்த தாய்; own mother. '*பெற்றதாய் நீயே*' (திவ்.இயற்.பெரியதிருவந்.5.)

பேணிவளர்ப்பவளாகிய செவிலியும் தாய் எனப்படுதலின் 'பெற்ற தாய்' என்பதில் உள்ள பெற்ற என்பது இன அடையாம்.

[பெற்ற + தாய்]

பெற்றபிள்ளை *peṟṟa-piḷḷai*, பெ. (n.) சொந்த மக–ன்–ள்; own child. '*தாமரையோன் பெற்ற பிள்ளையை*' (திருக்கோ.129.)

[பெற்ற + பிள்ளை]

பிள்ளை= தாய் வயிற்றிலிருந்து பிரிந்தது

பெற்றம் *peṟṟam*, பெ. (n.) 1. பெருமை; greatness. 'பெற்றமாளிகை (திவ்.பெரிய.10,1,10.) 2. காற்று; wind, air. '*பெற்றம் பெற்றவன்*' (பாரத.வாரணா.11.) 3. மாடு (தொல்.பொ.594.); bull or cow. 4. எருமை (தொல். சொல்.408, உரை.); buffalo. 5. விடையோரை; tauras of the zodiac.

[பெறு (பேறு) பெற்று–பெற்றம்]

பெற்றவர் *peṟṟavar*, பெ. (n.) பெற்றோர் பார்க்க; see peṟṟōr '*பித்தர் போற் பின்றொடர்ந்தனர் பெற்றவர்*' (பிரபுலிங். வசவண்.3.)

[பெற்ற + அவர்]

பெற்றவன் *peṟṟavaṉ*, பெ. (n.) தகப்பன்; father. '*பெற்றவ னாளித்த மோலி யிளையவன் பெற*' (கம்பரா.விபீட.136.)

[பெற்ற + அவன்]

பெற்றார் *peṟṟār*, பெ. (n.) பெற்றோர் பார்க்க; see peṟṟōr பெற்றார். '*பெற்றார் தளைகழல*' (திவ்.இயற்.1,20.)

[பெற்றோர் → பெற்றார்.]

பெற்றான் *peṟṟāṉ*, பெ. (n.) பெற்றவன் பார்க்க; see peṟṟavaṉ 2. கணவன்; husband. '*பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர்*' (குறள்.58.)

[பெறு → பெற்றான்]

பெற்றி *peṟṟi*, பெ. (n.) 1. இயல்பு; nature: natural property. '*பெற்றி பிழையா தொருநடையாகுவர் சான்றோர்*' (நாலடி.343.) 2. தன்மை; character, quality. 'உறாஅமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்' (குறள்.442.) 3. வகை; method, manner, order. '*அப்பெயர் புணர்ந்த பெற்றியும்*' (காசிக.பஞ்சநத.1.) 4. செயன்முறை; course of action '*மாருதி வடித்துச் சொன்ன பெற்றியே பெற்றி*'

(கம்பரா.விபீடண.108.) 5. பெருமை; greatness, esteem (திருக்கோ.373, உரை.) 6. நிகழ்ச்சி; event, occurrence. *'உற்றபெற்றி யுணர்த்துவாம்'* (கம்பரா. கைகேசி.63.) 7. பேறு; acquisition, boon *'யோகத்தின் பெற்றியாலே'* (கம்பரா. சவரி.8.) 8. நோன்பு (விரதம்); fasting. *'பெறுகதில் லம்மவிவ் வூருமோர் பெற்றி'* (சிலப்.குன்றக்.)

[பெறு → பெற்றி]

பெற்றிமை *perrimai,* பெ. (n.) 1. பெற்றி, 5. பார்க்க; see perri. பெற்ற மேறுதல் பெற்றி மையோ' (தேவா.488,10.) 2. செய்யவேண்டு முறை; conduct, behaviour. *'பெற்றிமை யொன்றறியாத தக்கனது'* (தேவா.622,6.) 3. சாதி; class, division. *'பேதாய் திதியாகும் பெற்றிமையின்'* (சி.போ.1,1,1.)

[பெற்றி – பெற்றிமை]

பெற்று *perru,* பெ. (n.) 1. பெருக்கம் (தொல்.சொல்.305) bigness, greatness. 2. அடுக்கு; pile. (தொல்.சொல்.305,உரை.) 3. சாய்கால்; influence. *'அவன் பக்கற் பெற்றுடையரா யிருப்பர்களிறே'* (ஈடு,6,10,2.) 4. எருது; bill 'பெற்றொன் றேறி' (தேவா.428,8.)

[பெறு–பெற்று]

பெற்றோர் *perrōr,* பெ. (n.) சிறந்த பேறுபெற்ற தாய் தந்தையர்; parents.

[பெறு–பெற்ற+அவர் பெற்றவர்–பெற்றோர்.]

பெறங்கவலை *peraṅkavalai,* பெ. (n.) *பெருங்கண்வலை.* பார்க்க; see *peru-ṅ-kaṇvalai.* (இ.வ.)

[பெருங்கண்வலை–பெறங்கவலை]

பெறாப்பேறு *perā-p-pēru,* பெ. (n.) கிடைத்தற்கரிய பேறு; rare luck or fortune. *'பெறாப்பேறு பெற்று வைத்து'* (பெரியபு. குங்கிலி.11.)

[பெறு + ஆ + பேறு]

'ஆ' எ. ம. இ. நி.

பெறால் *perāl,* பெ. (n.) மீன்முதுகிற் புள்ளி; (இ.வ.) spots on the back of a fish.

பெறு–தல்[1] *peru,* செ.குன்றாவி. (v.t.) 1. அடைதல்; to get, obtain, secure, possess, "கையுறப் பெற்றக்கால்" (நாலடி. 5.) 2. பேறுயிர்த்தல்; To bring forth, bear, as childran. *'பெற்றாளொருபிள்ளையென் மனையாட்டி'* (தனிப்பா. i, 235, 1.) 3. பிறப்பித்தல்; to be get, generate. *'தான் பெற்ற புதல்வன்'* (நாலடி. 197). 4. அறிதல்; to know, *'எல்லா யாம் பெற்றேம்'* (பரிபா. 8, 83.) பெறு[2]–தல், peru செ.கு.வி. (v.i.) விலைத்தகுதியுடையதாதல்; to be worth; to be worthy of; to fetch a price. *'அப்பண்டம் அவ்வளவு பெறுமா?"*

[பெறு → பெறுதல்]

பெறுக்கல் *perukkal,* பெ. (n.) அரிசி; rice. *'முறியாப் பெறுக்கன் முப்பழம்'* (பதினொ. திருவிடை. வை.16.

[பெறு–பெறுக்கு–பெறுக்கல்]

பெறுக்கு–தல் *perukku,* செ.குன்றா.வி. (v.t.) பொறுக்குதல்; to gather pickup, as stones. பெறுக்கினர் சிலைகளைப் பெருஞ் சினத்தராய் (பிரபுலிங். சித்தரா. 21)

[பொறுக்கு–பெறுக்கு;]

பெறுத்து–தல் *peruttu,* செ.குன்றா.வி. (v.t.) அடைவித்தல்; to cause to obtain. '*நிலைபெறுத்தலும் நீக்கலும்*' (கம்பரா. பாயி.1) 2. உண்ணுதல்; to eat. '*அவற்றைப் பெறுத்திப் போந்தான்*' (திவ். பெரியாழ். 2,9,9).

[பெறு–பெறுத்து]

பெறுமானம் *peru-mānam,* பெ. (n.) 1. மதிப்பு; value. '*அந்த ஆயிரம் பொன் பெறுமானமுள்ளது.*' 2. கடன் தீர்க்கும் தகுதி; solvency. அவன் பெறுமானமுள்ள புள்ளி

[பெறு + மானம் (சொ.ஆ.ஈறு)]

பெறுதி *perudi,* பெ. (n.) 1. ஊதியம்; Gain, profit. '*பெறுதி விரும்பினை யாகுவை*' (மணி.மே 25, 115) 2. அடையத்தகும் பொருள்; that which is sought to be got or reached; goal. '*மறைகளினிநு தியிடவரிய பெறுதியை*' (திருப்பு. 928). 3. *பெறுமதி* பார்க்க,

[பெறு–பெறுதி]

பெறுமதி *perumadi,* பெ. (n.) 1. தகுதி; worth, value. 2. திறமை; ability. 3. உறுதி; Validity, security. 4. பரிசு; prize, reward.

[பெறு–பெறுமதி
மதி (சொ.ஆ.ஈறு).]

பெறுமாதம் *peru-mādam,* பெ. (n.) பேறுகாலம்; the month of parturition.

[பெறு + மாதம்]

பெறுமுரி *peru-muri,* பெ. (n.) சம்பளம்; *wages,* "பரிசுரத்தார் பெறுமுரியாகப் பெற்று" (S. I. I. iii, 30)

பென்னம்பெரிய *pennam periya,* பெ.எ. (adf.) மிகப்பெரிய; Very large.

[சின்னஞ்சிறிய xபென்னம்பெரிய]

பென்னம்பெருத்த *pennam-perutta,* பெ. (adf.) பென்னம்பெரிய; பார்க்க; see pennam periya.

[சின்னஞ்சிறுத்த xபென்னம்பெருத்த]

பென்னாங்கொட்டை *pennānkottai,* பெ. (n.) பேன்கொட்டை. cocculus indicus. பார்க்க; see pen-Kottai.

[பென்+ ஆம் + கொட்டை]

பெறுவது கொள்வார் *peruvadu-kolvār,* பெ. (n.) விலைமகளிர்; prostitutes. '*பெறுவது கொள்வாரும் கள்வரும் நேர்*' (குறள், 813.)

[பெறுவது + கொள்வார்ன]

பென்னை *pennai,* பெ. (n.) யானை (சங்.அக.); elephant.

பே¹ *pē,* தமிழ் நெடுங்கணக்கில் 'ப்' என்ற மெய்யெழுத்தும், 'ஏ' என்ற உயிர்நெடிலும் சேர்ந்து வருவது உயிர்மெய் எழுத்து; the compound of p and ē.

[ப் + ஏ = பே]

பே² *pē,* பெ. (n.) அச்சம்; fear. பே முதிர் கடவுள்" (குறுந்.87) அச்சத்தை உணர்த்தும் பேம்–ஒலிக்குறிப்புச் சொல்

[பேம் → பே]

பே³ *pē,* பெ. (n.) **1.** நுரை(பிங்); foam. seum, froth '*பேஎநாறுந் தாழ்நீர்ப் பனிச்சுனை*" (இறை.7, உரை)**2.** மஞ்சு (வின்.) cloud

பே⁴ *pē,* இடை. (part.) இல்லை என்னும் பொருள்தரும் சொல்; **(வின்.)** a prefix meaning no

பேஎம் *pēem,* பெ. (n.) *பே²(திவா)* பார்க்க; *see pē².*

[பேம் → பேஎம்]

பேக்கலாண்டி *pēkkal-āmdi,* பெ. (n.) மூடன்;(இ.வ) simpleton, foolishfellow.

u.bevakif

[பே → பேக்கு → பேக்கலாண்டி]

பேக்கு–பேக்கலாண்டி பே–அச்சம், வெறுமை பே–பேக்கு அறிவிலி.

பேகணி–த்தல் *pēgani,* செ.கு.வி. (v.i.) **1.** குழப்பமுறுதல் ; to be distressed. *இழக்கப்புகா நின்றா யென்று பேகணியா நின்றேன்*" (ஈடு,9,4,3,)**2.** நிறம் வேறுபடுதல் to change colour; to become pallid '*பேகணித்துப்பிற்காலித்துப் போகக்கவ்வ அக்கினி*' (திவ்.பெரியதி.2,4,2,. வ்யா)

[பேழ்கணி–பேகணி]

பேகணிப்பு *pēgaṇippu,* பெ. (n.) **1.** துன்பம் (துக்கம்) (ஈடு, **9, 6, 6**); sorrow, distress. **2.** நிறம் வேறுபடுகை; (திவ். பெரியதி. **2, 4, 2.**வ்யா.அரும்.) becoming pallid.

[பேழ்கணி – பேகணி – பேகணிப்பு,]

'பு'. சொ.ஆ.ஈறு.

பேகம்¹ *pēgam,* பெ. (n.) தவளை (பிங்.); frog.

skt.bhēka

[பேஎம் – பேகம்]

'பே' ஒலிக்குறிப்பு



பேகன்¹ *pēgan,* பெ. (n.) ஆண் தவளை. (யாழ்.அக.); male of the frog.

[பேஎம் – பேகம் – பேகன்]

பேகன்² *pēgan,* பெ. (n.) கடைவள்ளல்கள் எழுவருள் ஒருவன்; a liberal chief, one of seven kadai-vaḷḷalgaḷ. '*பெருங்கன் னாடன் பேகனும்*' (சிறுபாண். 87)

[பாகன் → பேகன்]

பேகி *pēgi,* பெ. (n.) பெண்தவளை (யாழ்.அக.); female frog.

[பேஎம் – பேகன்] (ஆ.பா.) – பேகி (பெ.பா)

பேச்சடைப்பு *pēccaḍaippu,* பெ. (n.) பேச முடியாமற் செய்யும் நோய்;(M.L) loss of voice, aphonia.

[பேச்சு + அடைப்பு]

பேச்சல் *pēccal,* பெ. (n.) பேசுகை (யாழ்.அக.); speaking.

[பேசு → பேசல் → பேச்சல்]

'அல்' தொ.பெ.ஈறு.

பேச்சழி–தல் *pēccaḻi-,* செ.கு.வி. (v.i.) சொன்ன சொல் தவறுதல் (யாழ்.அக.); to fail to keep one's word.

[பேச்சு + அழி–]

பேச்சற்றவன் *pēccaṟṟavaṉ,* பெ. (n.) **1.** பேசமாட்டாதவன் (யாழ்.அக.); one who is speechless or dumb. **2.** பேசா நோன்பு (மௌன விரதம்) பூண்டவன்; one who has taken a vow of silence. **3.** உறுதிமொழி தவறுபவன்(வின்.); one who fails in his word.

[பேச்சு + அற்றவன்]

பேச்சுறுதி *pēccuṟudi,* பெ. (n.) ஒப்பந்தத்தில் முடிவான பேச்சு (யாழ்.அக.); decision in bargaining.

[பேச்சு + உறுதி]

பேச்சாட்டுத்துணை *pēccāṭṭu-t-tuṇai,* பெ. (n.) பேச்சுக்குத் துணையானவன் (யாழ்.அக.); companion, as one to talk with.

[பேச்சு + பேச்சாடு → பேச்சாட்டு

பேச்சாட்டு + துணை]

ஆடு → ஆட்டு

பேச்சாடுதுணை *pēccāḍu-tuṇai,* பெ. (n.) பேச்சாட்டுத் துணை (இ.வ.); பார்க்க. *see pēccāṭṭu-t-tuṇai.*

[பேச்சாடு + துணை]

'ஆடு'(து.வி.)

பேச்சாளர் *pēccaḷar,* பெ. (n.) சொற்பொழிவாளர்; skilful orator.

[பேச்சு + ஆளர்]

பேச்சாளி *pēccaḷi,* பெ. (n.) **1.** சொல் வன்மையுள்ளவன்; good speaker. **2.** சொல்லுறு தியுள்ளவன்; a man who keeps his word.

[பேச்சு + ஆள்→ ஆளி]

ஆளி → 'இ' வினைமுதலீறு

பேச்சாற்றல் *pēccarrtal,* பெ. (n.) மேடைப் பேச்சுத்திறம்; skilful oration 'திரு.வி.க. பேச்சாற்றல் வாய்ந்தவர்'

[பேச்சு + ஆற்றல்]

பேச்சி *pēcci,* பெ. (n.) *பேய்ச்சி* பார்க்க; see *pēycci.*

[பேய்ச்சி – பேச்சி]

பேச்சி² *pēcci,* பெ. (n.) *பேயத்தி* பார்க்க; see *pēyatti.*

[பேயத்தி – பேச்சி]

பேச்சு *pēccu,* பெ. (n.) **1.** பேசுகை; speaking. *'பேரமளிப் பேச்செலாம்'* (பாரத. அருச்சுனன்றவ. 63) **2.** மொழி; speech, language. **3.** புகழ்(வின்.); praise. (w.) **4.** உரையாடல்(கொ.வ.); conversation, talk. **5.** செய்தி; errand, message, verbal communication, report. **6.** பொய்ச்செய்தி; rumour. **7.** சொல்; word utterence. *'பேயர்தாம் பேசுமப் பேச்சை'* (திவ். பெரியதி. 9, 7, 7) **8.** கட்டுரை; discourse, harangue. *'பிண்டியும் போதியும் பேணுவார் பேச்சினை'* (தேவா. 83, 10)

[பேசு – பேச்சு]

பேச்சுக்காரன் *pēccu-k-kāraṉ,* பெ. (n.) **1.** சொல்வன்மையுடையவன் (வின்.); good speaker. **2.** வாயாடி; talkative man.

[பேச்சு + காரன்]

பேச்சுக்கிடம் *pēccukkiḍam,* பெ. (n.) **1.** பேசுமுரிமை; liberty of speech. **2.** பழிக்குக் கரணியம்; occasion or room for slander. 'முறைப்படி அவருக்குச் செய்தி தெரிவிக்காதது பேச்சுக்கு இடமாகி விட்டது.

[பேச்சுக்கு – இடம்]

பேச்சுக் குற்றம் *pēccu-k-kuṟṟam,* பெ. (n.) சொற்குற்றம்; defect in speech.

[பேச்சு + குற்றம்]

பேச்சுக்கொடு—த்தல் *pēccu-k-koḍ.,* செ.கு.வி. (v.i.) **1.** மந்தணமறியச் சொல்லாடுதல் (வின்.); to speak with one in order to obtain secrets to sound (w.) **2.** பேச்சு நீடித்தல் (யாழ்.அக.); to prolong one's talk. **3.** பொழுது போக்காகச் சொல்லாடுதல் (இ.வ.); to keep oneself engaged by talking with.

[பேச்சு + கொடு]

கொடு (து.வி.)

பேச்சுத்தட்டு—தல் *pēccu-t-taṭṭu,* செ.கு.வி. (v.i.) **1.** சொல் தடுமாறுதல்; to stammer, stutter; to hesitate **2.** சொன்னசொல் தவறுதல்; to break one's word. **3.** பிறர் கூற்றை மறுத்தல்; to go against the expressed wishes of a person.

[பேச்சு + தட்டு]

பேச்சுத்தடித்தல் *pēccu-t-taḍittal,* பெ. (n.) சொல் கடுமையாகை (கொ.வ.) ; growing hot in speech.

[பேச்சு + தடித்தல்]

தடி → தடித்தல்.

'அல்' தொ.பெ.ஈறு

பேச்சுத்தடுமாறு—தல் *pēccu-t-taḍumāṟu-,* செ.கு.வி. (v.i.) **1.** சொல் குழறுதல்; to be confused, puzzeled or disconcerted in speaking (w.) **2.** உறுதிமொழி தவறுதல் (இ.வ.) ; to break one's word.

[பேச்சு + தடுமாறு]

பேச்சுத்தப்பு—தல் *pēccu-t-tappu-,* செ.கு.வி. (v.i.) பேச்சழி பார்க்க; see pēccaḻi.

[பேச்சு + தப்பு—]

பேச்சுத்தாராளம் *pēccu-t-tārāḷam,* பெ. (n.) **1.** வெறும் வாய்ச்சொல் (இ.வ.); empty speech, speech not followed by action. **2.** சொல்வன்மை (வின்.) fluency of speech, eloquence. **3.** உரையாடற் றிறம் (வின்.); ability in conversation, politeness in address.

[பேச்சு + தாராளம்]

பேச்சுத்திராணி *pēccu-t-tirāṇi,* பெ. (n.) பேச்சுத்தாராளம் (வின்.); **2.** பார்க்க; see pēccu-t-tārāḷam.

[பேச்சு + திறன் → திறனி → திராணி]

பேச்சுத்துணை *pēccu-t-tuṇai,* பெ. (n.) பேசிப் பொழுது போக்குதற்குத் துணையாக இருக்கும் ஆள் (கொ.வ.); companion, as one to speak with.

[பேச்சு + துணை]

பேச்சுநிதானம் *pēccu-nidāṉam,* பெ. (n.) பேச்சுறுதி. (இ.வ.) பார்க்க; see pēccurudi.

[பேச்சு + Skt nādāna.*த. நிதானம்]*

பேச்சுப்பிடுங்கு—தல் *pēccu-p-piḍuṅgu,* செ.கு.வி. (v.i.) சொல்லாடி மந்தணத்தை யறிதல்(வின்.); to fish out secrets from another's talk; to pump cleverly.

[பேச்சு + பிடுங்கு]

பேச்சுமூச்சில்லாமை *pēccu-mūccillāmai,* பெ. (n.) **1.** அமைதி; absence of activity, quietness. *'பேச்சு மூச்சில்லாத பேரின்ம வெள்ளமுற்று'* (தாயு. எந்நாட். ஆனந்த. 1) **2.** அடங்கி யிருக்கை (இ.வ.); quiet submission.

[பேச்சு + மூச்சு + இல்லாமை]
பேச்சு + மூச்சு. எதுகை நோக்கி இரட்டித்து வந்த மரபிணை மொழி]

பேச்சுமூச்சு *pēccu-muccu,* உயிருள்ள தென்பதைக் காட்டும் பேச்சும் மூச்சும் (வின்.) signs of life, as speech and breath.

[பேச்சு+ மூச்சு]

மரபு இணைமொழி.

பேச்சு வல்லபம் *pēccu-vallabam,* பெ. (n.) *பேச்சுத்திராணி* (வின்.) பார்க்க; see *pēccu-t-tirāṇi*

[பேச்சு+ வல்லபம்.
வல்லவம்→ வல்லபம்]

பேச்சுவளர்—த்தல் *pēccu-valar-,* செ.கு.வி. (v.i.) பேச்சுக்கொடு (யாழ்.அக.) பார்க்க ; see pēccuvaḷar

[பேச்சு+ வளர்]

பேச்சுவளர்தல் *pēccu-vaḷardal,* பெ (n.) **1.** நீண்டஉரையாடல் ;prolonged speech or conversation **2.** வாய்ச்சண்டையில் வசவு மிகுகை ;growing abusive in quarrel.

[பேச்சு+ வளர்தல்]

'தல்' [தொ.பெ.ஈறு]

பேச்சுவாயன் *pēccu-vāyaṉ,* பெ. (n.) வாயாடி (யாழ்.அக); talkative person.

[பேச்சு + வாயன்]

பேச்சுவார்த்தை *pēccu-vārttai,* பெ. (n.) **1.** உரையாடல்; talk **2.** நட்பு; amicable or speaking terms **3.** மறுத்துரைத்தல் (யாழ்.அக); dispute.

[பேச்சு+ SKṭ. Vārttā. *த. வார்த்தை]*

பேச்சுறுதி *pēccuṟdi,* பெ. (n.) உறுதிமொழியை நிறைவேற்றுந்தன்மை; faithfulness to one's word

[பேச்சு + உறுதி]

பேச்சைமடி—த்தல் *pēccai-maḍi,* செ.கு.வி (v.i.) **1.** சொன்ன சொல் மாறுதல் (வின்.); to eduivocate. **2.** வீண் தருக்கம் பேசுதல் (கொ.வ.); to argue perversely

[பேச்சு→பேச்சை+மடி]

மடி=மறுத்தல்,தவறுதல்,மாறுதல்

பேச்சோடுதுணை *pēccōḍu-tuṇai,* பெ. (n.) பேச்சாட்டுத்துணை பார்க்க; see pēccāṭṭu-t-tuṇai. *"திருவாருக்குப் போகிறேன் பேச்சோடு துணையாய் நீயும் வருகிறாயா?"*

[பேச்சாடு→பேச்சோடு+துணை]

பேசகம்[1] *pēsagam,* பெ. (n.) (யாழ்.அக) **1.** ஆந்தை; owl. **2.** மஞ்சு; clould **3.** யானை வாலினடி; the roof of elephan'ts tail **4.** யானை வாலின் நுனி; tip of elephant's tail



பேசகம்[2] *pēšagam,* பெ. (n.) வாயில் (யாழ்.அக); gate

[பேழகம்→ பேசகம்]

பேசகி *pēcagi,* பெ. (n.) யானை (சங்.அக); elephant

[பேழ்→ பேழகி→பேசகி]



பேசங்கை *pēcarigai,* பெ. (n.) மலங்கழிக்கை; going to stool dist fr.aṟpa-carikai (இ.வ)

பேசல் *pēšal,* பெ (n.) **1.** பேசுகை; talking, speaking, *'பேசிற்றே பேசலல்லால்'* (திவ்.திருமாலை.25) **2.** வஞ்சின் முடிக்கை; fulfilling one's vow. *'வாளினாற் பேசலல்லால்'* (சீவக.257)

[பேசு+அல்] *(தொ.பெ.ஈறு)*

பேசலாத்தி *pēšalātti,* பெ. (n.) இராப்பாலை (A); a garden tree with smooth grey bark

பேசாத பேச்சு *pēcāda-pēccu,* பெ. (n.) 1. தகுதியற்ற சொல்; improper talk 2. வெறுப்பூட்டும் சொல்; indecent or obscene talk

[பேசாத + (எ.ம.பெ.எ) + பேச்சு]

பேசாதிரு–த்தல் *pesādiru.,* செ.கு.வி செயலற்றிருத்தல்; to keep quiet. வாத்யங்கள் வாய்த்தால் கூத்தாடுவாருடம்பு பேசாதிராதிறே" (திவ். பெரியதி. 1,2,1, வ்யா. பக். 59)

[பேசு → பேசாது+இரு.]

'ஆ' எ. ம. இ.

பேசாமடந்தை *pēša-madandai,* பெ. (n.) வாய் வாளாமை பூண்ட பெண் (கொ.வ); reticent, silent women

[பேசு → பேசா + மடந்தை]

('ஆ' எ.ம.இ.நி.)

பேசாமை *pēšāmai,* பெ. (n.) வாய்வாளாமை (மௌனம்); silence, as observed by ascetics. *'அருட்பெற்றோர்கள் பெற்ற பெருமை......... பேசாமை யாகுமெனவே'* (தாயு.பரிபூரண.2.)

[பேசு → பேசாமை]

'ஆ' எ. ம. இ.

'மை' ப.பெ.ஈறு.

பேசார் *pēšār,* பெ. (n.) ஊமைகள்; the dumb. *'பேணாமாக்கள் பேசார் பிணித்தோர்'* (மணி மே.28.223)

[பேசு→ பேசார்] 'ஆ' (எ.ம.இடநில) *'ர்'* (ப.பா.ஈறு)

பேசாவழக்கு *pēšā-vaḻakku,* பெ. (n.) பயனற்ற வழக்கு(C.G.); a naseless or vexatious suit

[பேசு + ஆ (எ.ம.இ.நி.) + வழக்கு]

பேசாவெழுத்து *pēšā -v-eḻuttu,* பெ. (n.) *'நமசிவாய'* என்ற ஐந்தெழுத்து (ஐந்க்கர) மந்திரத்திற் சிவபெருமானைக் குறிக்கும் *'சி'* என்ற எழுத்து. பேசுமெழுத்துடனே பேசாவெழுத்தினையும்

[பேசு + ஆ (எ.ம.இ.நி) + எழுத்து]

பேசி *pēši,* பெ. (n.) (யாழ்.அக)1. சதை; muscle. 2.நரம்பு; tendon. 3. பூமொட்டு; bud 4. இடியேறு; thunderbolt 5. முட்டை; egg

பேசுவது போல் உள் நிலையை வெளிப்படுத்துவனவும் பேசி எனப்பட்டன.

பேசு[1]–தல் *pēšu,* செ.கு.வி (v.i) 1. சொல்லாடுதல்; to talk, speak. 2. வஞ்சினமுடித்தல்; to fulfil a vow. *'வாளினாற் பேசலல்லால்'* (சீவக.259) 3. வீணை நரம்பு முதலியன இசைத்தல்; to sound, as a lute string *'கையாழ் (பிடில்) நரம்பு (தந்தி) நன்றாகப் பேசவில்லை'* 4. நாடி முதலியன துடித்தல்; to feat, as the pulse. *'கையில் பித்தநாடி பேசவில்லை'* 5. உரக்கப்பேசுதல்; to make noise, to roar. *'தரங்கநீர் பேசிலும்'* (திவ்.பெரியதி.8,2,7,)

பேசு²–தல் *pēšu-,* செ.குன்றாவி. (v.t) 1.சொல்லுதல்; to tell, say. *'வாயினாற் பேசறேற்றேன்'* (சீவக.257) 2.பலமுறை சொல்லுதல்; to repeat manytimes. *'ஈன்றுழாய் மாயனையே பேசியே'* (திவ்.இயற். பெரியதி.38) 3. போற்றுதல் to praise. *'பேசாத நாளெல்லாம் பிறவாநாளே'* (தேவா.12,1) செயலைப்பேசிமுடிவு செய்தல்; to deal, bargain negotiate verbally,as a business. 4. வைதல்; to abuse, vilify.

பேசுமெழுத்து *pēšu-m-eḻuttu,* பெ. (n.) நமசிவாய என்னும் ஐந்தெழுத்தில் ஆற்றலை உணர்த்தும் *'வ'* என்றவெழுத்து; the letter 'va' in the incantation 'namašivāya; indicating siva- sakti. வைகரிவாக்கு; *'பேசுமெழுத்துடனே'* (கொடிக்.4) 2. articulate utterance *'ஊமையெழுத்தொடுபேசு மெழுத்துறின்'* (திருமந்.2158)

[பேசு + எழுத்து]

பேசுலம் *pēšulam,* பெ. (n.) செடிவகை (இ.வ.); a plant - Arum colocasia

பேசுலி *pēšuli,* பெ. (n.) *பேசுலம்* (இ.வ.) பார்க்க; *see pēšulan.*

பேசுவாய் *pecuvāy,* பெ. (n.) வாயடிப்பவன்; talkative person

[பேசு + வாய்]

பேசுவாயன் *pēšu-vāyan,* பெ. (n.) 1. பரிந்து பேசுவோன்; intercessor. வாயாடி; talkative person

[பேசு + வாயன்]

பேடகம்² *pēḍgam,* பெ. (n.) பண்டைக்காலத்து வழங்கிய ஒருவகைத்துகில் (சிலப்.14,108,உரை); a garment of ancient times

பேடணம் *pēḍaṇam,* பெ. (n.) 1. பொடி செய்கை; grinding,pulverising 2.திரிகைக்கல்; grinding - stone.



பேடன் *pētḍan,* பெ. (n.) ஆண்தன்மை மிகுந்த அலி; hermaphrodite with male characteristics predominating.
பேடன் வந்தான் (நன்.263,உரை)

[பேடு → பேடன்]

பெண்மைவிட்டு ஆண்மை அவாவுப்பேடு ஆண்பால்.

பேடா *pēḍā,* தெப்பம்; raft float

[பேடு → பேடா]

பேடாடல் *pēḍātḍal,* பெ. (n.) *பேடு²* (சிலப்.3,14, உரை, பக்.90). பார்க்க; see *pēdu*

[பேடு + ஆடல்]

பேடாப்போ–தல் *pēḍa-p-pō* செ.கு.வி. (v.i.) உலாவப்போதல்; to walk for recreation.

[பேடு + ஆ + போ]

பேடி[1] *pēḍi,* **பெ.** (n.) **1.** பெண்தன்மை மிகுந்த அலி; hermphrodite with female charactristics predominating. *'பெண்ணவா யாணிழந்த பேடி'* (நாலடி.251) **2.** ஆண்மை யின்மை; impotence. **3.** நடுவிரல்; middle-finger *'சுட்டுப்பேடி'* (சிலப்.3,18 உரை, மேற்கோள்,பக்.95); **4.** அச்சம்; fear.

[பேடு → பேடி]

பேடி[2]–த்தல் *pēḍi,* செ.குன்றாவி. (v.i.) அஞ்சுதல்; to be afraid.

[பே →பேடு → பேடி]

பேடி[3] *pēḍi,* பெ. (n.) விலங்கு (C.G.); fetters.

[பேடு → பேடி]

பேடிகை *pēḍigai,* பெ. (n.) *1. கூடை; (யாழ்.அக)* basket. *2. உறை; (அக.நி.)* cover.

[பேடு → பேடிகை]

பேடிசங்காட்டு–தல் *pēḍišaṅ - kāṭṭu.,* செ.கு.வி. (v.i.) **1.** மாய்மாலஞ்செய்தல்; to play the hypocrite **2.** போலிவேலை செய்தல்; to counterfeit a work

[பேடிசம் → காட்டு–தல்]

பேடிசம் *peticam,* **பெ.** (n.) மாய்மாலம் (யாழ்.அக); imposition, deception

[பேடு → பேடியம் → பேடிசம்]

பேடிசெய்–தல் *pēḍi-šey,* செ.குன்றாவி (v.t.) விலங்கிடுதல்; to handcuff

[பேடி +செய்–தல்]

பேடியாடல் *pēḍi-y-āḍal,* **பெ.** (n.) பேடு[2] பார்க்க; see *pēḍu.* காமனாடிய பேடியாடலும் (சிலப்.6,57)

[பேடி +ஆடல்]

பேடியெழுத்து *pēḍi-y-leuttu,* பெ. (n.) ஆய்த வெழுத்து (வின்.); the letter 'ஃ'as neither male nor female

[பேடி +எழுத்து]

பேடு *pēḍu,* பெ. (n.) **1.** பெண்பால்; female sex *'பேடலியாணர் போலும்'* (தேவா.249,1) **2.** பெண் பறவை; female of birds *'பேடுஞ் சேவலும்'* (மலைபடு.141,உரை) **3.** சிறுமை; smallness (பிங்) **4.** ஒருசார் விலங்குகளின் பெண்; female of certain quadrupeds. *'தெய்வமாக வைத்த எருமையாகிய பேட்டின் கொம்போடே' (கலித்.114. உரை)* **5.** சிற்றூர்; small town, village. **6.** நடுவிரல்; the middle fonger *'சுட்டும் பேடும்'* (சிலப்.3,18,உரை) **7.** உள்ளீடின்றிப் பயனற்றது; what is unproductive, useless or kernelless *'இந்தந் தேங்காய் பேடு'*(உ.வ) **8.** *பேடி[1]* **1.**பார்க்க **9.** கூத்துப் பதினொன்றனுள் ஒன்றானதும் வாணனால் சிறையிடப்பெற்ற தன்மகன் அநிருத்தனைச்சிறைமீட்டுப்பிரத்தியுமானன் ஆடியதுமான கூத்து; dance of piratiyumnaṉ when he relelased his son Aniruttaṉ from the prison of vāṇaṉ, one of 11 kuttu.g.r

[பெள் → பேடு]

பேடுமூஞ்சி *pēḍu-mūñji,* பெ (n.) பெண்முகம் (யாழ்.அக) ; feminine face

[பேடு +மூஞ்சி]

பேடை *petai,* பெ. (n.) பறவையின் பெண்பால் (பிங்.); female of birds , hen *'மிழற்றேன்மின் குயிற்பேடைகாள்'* (திவ்.திருவாய்.9,5,1)

ம. பேட. க. ஹேடே

[பெள் → பேடு → பேடை]

பேடை² *pēḍai,* பெ. (n.) கூடை (யாழ்.அக); basket

[பெள் + பேடை]

பேண் *pen,* பெ. (n.) **1.** புறந்தரல் (தொல்.சொல்.**338**); protection **2.** விருப்பம் (தொல்,சொல்.**338**); desire **3.** *பேண்மரம்* (வின்.) பார்க்க; *see pēn-maram*

[பெல் → பெண் → பேண்]

பேண்மரம் *pēṇ-maram,* பெ. (n.) துலாத்தாங்கு மரம் (வின்.); the stand of a picottah

[பேண் +மரம்]

பேணகம் *pēṇagam,* பெ. (n.) பணிகாரவகை (வின்.); a kind of pastry.

[பேண் +அகம் → பேணகம்]

பேணம் *pēṇam,* பெ. (n.) **1.** மதிப்பு; tenderness, recard, esteem. **2.** பதனம்; care, caution. **3.** பேணுகை; nurture, fostering.

[பேண் → பேணம்]

பேணரவு *pēṇaravu,* பெ. (n.) பேணல் பார்க்க; see pē*ṇ*al

[பேண் → பேணரவு]

பேணல் *pēṇal,* பெ. (n.) **1.** பேணுகை; nurturing, fostering. **2.** மிகுவிருப்பம்; intense desire. **3.** கருதுகை (அரு.நி); thinking **4.** மிகுகை (அரு.நி); increasing.

[பேண் → பேணல்]

பேணலர் *pēṇalar,* பெ. (n.) பகைவர்; foes.

[பேண் +அல்+ அர்]

('அல்' எ. ம. இ. நி)

பேணாமாக்கள் *pēṇā-mākkaḷ,* பெ. (n.) எதிரிகள்; helpless, friendless persons *"பேணாமாக்கள் பேசார் பிணித்தோர்* (மணிமே.**28,223**)

[பேண் +ஆ +மாக்கள்]

'அல்' எ. ம. இ. நி.

பேணாமை *pēṇāmai,* பெ (n.) பகைமை; enmity. *"பேணாமை பேணப் படும்* (குறள்.**866**)

[பேண் +ஆ +மை]

('அல்' எ. ம. இ. நி)

பேணார் *pēṇār,* பெ. (n.) பகைவர்; foes. *பேணா ரகநாட்டு'* (பு.வெ.**3,4.**)

[பேணு +ஆ+அர்]

('அல்' எ. ம. இ. நி)

பேணி *pēṇi,* பெ. (n.) பணியாரம் (இந்துபாக); a kind of sweet meat

[பண் → பணி → பேணி]

பேணியார் *pēṇiyār,* பெ. (n.) விரும்பப் பட்டோர்; lovers. *"பேணியார் பெட்ப செயின்'* (குறள்.**1257**)

[பேண் + பேணி + ஆர்]

பேணிவளர்த்தல் *pēnivalartal,* பெ. (n.) பாதுகாத்து வளர்த்தல்; help to grow.

[பேணி + வளர்த்தல்]

பேணுகை *pēnukai,* பெ. (n.) பேணி வளர்த்தல் பார்க்க;

[பேண் → பேணுகை]

பேணு—தல் *pēṇu,* செ.குன்றாவி (v.i.) 1.போற்றுதல்; to treat tenderly, to cherish. *"தந்தை தாய்ப்பேண்"* (ஆத்தி சூ.) 2. போற்றி காத்தல்; to protect. *"பேணித் தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்"* (புறநா.9) 3. மதித்தல்; to regard,esteem,value. *"குன்று.... தெய்வம் பேணித்திசை தொழுதனிர் சென்மின்"* (பரிபா.15,48) (திவா) 4. விரும்புதல்; disire. *'பேணான்வெகுளி'* (குறள்.526) 5. ஒப்புரவு; to treat courteously. *'பிறர் தன்னைப் பேணுங்கா ணாணலும்'* (திரிகடு.6) 6. வழிப்படுதல்; to worship. *'அமரர்ப் பேணியும்'* (பட்டினப்.200) 7. பொருட் படுத்துதல்; to care for,mind *"துவலைத் தண்டுளி பேணார்"* (நெடுநல்.34) 8. கழுவாய் செய்தல்; to attend carefully, talk particular car of. *'பாணியுந்தூக்கு நடையும் பெயராமை பேணி'* (பு.வெ.12,ஒழிபு.19)9. ஒப்பனை செய்தல்; to adorn. *'பேணி நிறுத் தாரணி'* (கலித்.104) 10. கருதுதல் (திவா); to purpose, intend. 11. குறித்தல் (சூடா); to mark out 12. உட்கொள்ளுதல்; to take in , swallow. "விளங்கு பொறக்லத்தில் விரும்புவன பேணி" (சிறுபாண். 244) 13. அறிதல்; to know. *'பேணாதொருத்தி பேதுற'* (பரிபா.7,67). 14. ஒத்தல்; to resemble *'பெருநறாப் பேணியவே கூர்நறா வார்ந்தவள் கண்'* (பரிபா.7,63).

[பேண் → பேணு]

பேணுநர் *pēṇunar,* பெ. (n.) போற்றிக்காப்போர்; guardians. *'பெண்டிர் கொல்லோ பேணுநர் கொல்லோ'* (மணிமே.14;47)

[பேணு → பேணுநர்]

பேத்தல் *pēttal,* பெ. (n.) பிதற்றுமொழி; incoherent talk; meaningless speech.

[பிதற்று → பேத்து → பேத்தல்]

பேத்தி[1] *pētti,* பெ. (n.) பேர்த்தி; grand - daughter *'பேத்திமாருண்டு பண்ணும்'* (பணவிடு.255)

[பேர்→ பேத்தி]

பேத்தி[2] *pētti,* பெ. (n.) பேயத்தி; corr of

[பேயத்தி→ பேத்தி]

பேத்து—தல் *pēttu,* செ.குன்றா.வி (v.i.) *பிதற்று(கொ.வ.)* பார்க்க; *see pētattu*

[பிதற்று → பேத்து]

பேத்துவம் *pēttuvam,* பெ. (n.) 1. அமுதம்; nectar 2. நெய்; chee. (சங்.அக)

[பேத்து → பேத்துவம்]

பேத்தை *pēttai,* பெ. (n.) 1. மீன்வகை; globe-fish, genus, tetrodon 2. 9 விரலம் வளர்வதும் பழுப்புநிறம் உள்ளதுமான மீன்வகை; globe-fish, brown, attaining 9 in. in length, Tetrodon nigro punctatus. 3. பற்பேத்தை (யாழ்.அக); பார்க்க gum boil 4. வயிற்றுவீக்கம் (யாழ்.அக); bloated belly

[பேத்து → பேத்தை]



பேதறு–த்தல் *pēdaṟu,* செ.குன்றாவி (v.i.) கலக்கமொழித்தல்; to clear doubt. *'மாருதி வந்துன்னைப்பேதறுத்து'* (கம்பரா.மீட்சி.166)

[பேது + அறு → பேதறு]

பேதிக்கிழங்கு *pēdi-k-kiḻaṅgu,* பெ. (n.) 1. கொடிவகை; jalap, m.le Impomaea Purga. (சா.அக.)

பேது[1] *pēdu,* பெ. (n.) 1. மயக்கம்; bewilderment, confusion, consternation. *'நல்லவை பேதுறார் கேட்டல்'* (இனி. நாற். 9.) 2. பித்துப் பிடித்தல்; delirium, mental derangement. *'சாயலாடான் பேது கண்டு'* (சீவக. 1744.) 4. அறிவின்மை; ignorane. *'பிழை யென்னாய் பேதுறீஇ'* (பு.வெ. 11, கைக்கிளை. பெண். 8.)

skt. bhēda. க. பேது

[பித்து→பேத்து → பேது]

பேதுறவு *pēduṟavu,* பெ. (n.) 1. மயக்கம்; bewilderment, mental derargement, mental. *'பேணிலா தவர் பேதுற வோட்டினோம்'* (தேவா. 497, 10.) 2. துன்பம் (சங்.அக.); distress.

[பேதுறு → பேதுறவு]

பேதுறு–தல் *pēduṟu-,* செ.கு.வி. (v.i.) 1. மயங்குதல்; to be bewilered. *'பேதுறுகின்ற போன்ற பெருமழைக் கண்கள்'* (சீவக.2544.) 2. பித்துப் பிடித்தல் (வின்.); to become insane. 3. வருந்துதல்; to be distressed. *'பேதுற்ற விதனைக் கண்டு'* (பரிபா. 18, 12.) 4. அறியா திருத்தல் (பு. வெ. 11, கைக்கிளை. பெண். 8.); to be ignorant.

[பேது + உறு → பேதுறு–தல்]

பேதுறு–த்தல் *pēduṟu,* செ.குன்றாவி. (v.t.) வருத்துதல்; to cause distress. *'உயிரைப் பேதுறுத்து'* (சீவக. 2766.)

பேதுறு → பேதுறுத்தல். (கா.விளை.)

[பேது + உறு]

பேதை *pēdai,* பெ. (n.) 1. அறிவிலி (பிங்.); simpleton, ignorant person, dolt. *'பிள்ளைமை விளம்பினாய் பேதை நீயெனா'* (கம்பரா. யுத். மந்திரப். 72.) *'மடிமடிக் கொண்டொழுகும் பேதை'* (குறள்.603) 2. பெண்; woman, as simple minded. *'பசந்தது பைந்தொடிப் பேதை நுதல்'* (குறள். 1238.) 3. பாலை நிலப் பெண்; (இறை. 1, 18.) woman of desort tract. 4. மகளிர் பருவம் ஏழனுள் ஐந்து வயது முதல் ஏழு அகவை வரையுள்ள பருவத்துப் பெண் (பிங்.); girl between theages of five and seven. 5. வறியவன் (பிங்.); poor person. 6. கள் (சது.); toddy, vinous liquor. 7. அலி (பிங்.); hermaphrodite.

தெ. அம்பேத

[பேது – பேதை]

பேதைப்படு–த்தல் *pēdai-p-paḍu-,* செ.குன்றாவி. வி. (v.t.) மடமையாக்குதல்; to make foolish. *'பேதைப் படுக்கு மிழவூழ்'* (குறள். 372.)

[பேதை + படு]

பேதைப்பருவம் *pēdai-p-paruvam,* பெ. (n.) அறியாப் பருவம்; age of innocence.

[பேதை + பருவம்]

பேதைப்புத்தி *pēdai-p-putti,* பெ. (n.) ஏமாளி; weak intellect; folly, credulity, indiscretion. (w.)

[பேதை + SKṭ. nuddhi. *த. புத்தி]*

பேதைப்பெண் *pēdai-p-peṇ,* பெ. (n.) இளம்பெண்; young lady.

[பேதை + பெண்]

பேதைமை *pēdaimai,* பெ. (n.) மடமை; folly, ignorance, credulouse ness. *'பேதைமை யன்ற தறிவு'* (நாலடி. 249.)

[பேதை – பேதைமை]

மை. ப. பெ. ஈறு

பேதைபாதம் *pēnda-pādam,*பெ. (n.) பெண் தெய்வத் திருவுருவின் காலில் அணியும் அணிவகை;an ornament for the log of an idol. "திருக்கழற் கீழிடும் பேதைபாதமும்" (S.I.I.viii,39)

[பேதை + பாதம்]

பேதமை *pēndamai,* பெ. (n.) உய்த்துணராமை (தொல். பொ. 248, இளம்பூ); lack of discernment.

[பேதை→ பேதமை]

பேந்தவலை *pēnda-valai,* பெ. (n.) கண்கள் சிறியவாகப் பின்னிய வலை (இ.வ.); small-eyed net. (loc.)

பேந்தவிழி–த்தல் *pēnda-viḻi-,* செ.கு.வி. (v.i.) மருண்டு விழித்தல் (கொ.வ.) ; to stare, roll the eyes in bewilder ment.

[பே → பேந்து → பேந்த + விழி]

பேந்து–தல் *pēndu-,* செ.கு.வி. (v.i.) மருளுதல்; to be bewildered. *'பேந்திப் பேந்தி விழிக்கிறான்'*

[பே – பேந்து]

பேம் *pēm,* பெ. (n.) அச்சம்; fear, dread, terror. *'பேந்தரு பேய்வனம்'* (சீவக. 1181.)

[பே² → பேம்]

பேய்¹ *pēy,* பெ. (n.) 1. அச்சுறுத்தும் ஆவி; devil, goblin, fiend. *'சுழலு மழல்விழிக் கொள்ளிவாய்ப் பேய்'* (பதினொ. மூத்த. 1.) 2. காட்டுத்தன்மை (வின்.); wildness, as of vegetation 3. தீமை (வின்.); evil. (w.) 4. வெறி; madness, as of a dog; frenzy.

[பே – பேய்]

பேய்² *pēy,* பெ. (n.) இல்லை யென்னும் பொருன் கொண்ட சொல் (அக.நி.); a term meaning 'no'.

[பே⁴ – பேய்]

பேய்க்கஞ்சான் *pēykkañjāṉ,* பெ. (n.) சாணாக்கியப் பூண்டிலுள்ள பூச்சிவகை (சங்.அக.); a worm infesting cāṇākki-p-pūṇḍu.

பேய்க்கடம்பை *pēy-k-kaḍambai,* பெ. (n.) மரவகை(L.); a tree

[பேய்[1] + கடம்பை]

பேய்க்கடுக்காய் *pēy-k-kaḍukkāy,* பெ. (n.) **1.** பெரிய மரவகை; crape myrtle, **2.** பூமருது, **1.** பார்க்க; see *pūmarudu.*

[பேய் + கடுக்காய்]

பேய்க்கண் *pēy-k-kaṉ,* பெ. (n.) **1.** சுழல்விழி; rolling eyes, as of a demoniac. **2.** அஞ்சத் தக்க விழி; frightful eyes, as of a devil.

[பேய் + கண்]

பேய்க்கண்டல் *pēy-k-kaṇḍal,* பெ. (n.) சிறுமர வகை (வின்.); simple cymed mangrove

[பேய் + கண்டல்]

பேய்க்கருங்காலி *pēy-k-karuṅgāli,* பெ. (n.) கருங்காலிவகை (L.); tamarind like cutch, m.tr.,

[பேய் + கருங்காலி]

[கருங்கால் – கருங்காலி]

பேய்க்கரும்பு *pēy-k-karumbu,* பெ. (n.) நாணல் வகை (A.); kaus, a large and coarse grass

[பேய் + கரும்பு]

பேய்க்களா *pēy-k-kaḷā,* பெ. (n.) களாவகை (மலை.); a species of whortleberry.

[பேய் + களா]

பேய்க்கற்றாழை *pēy-k-kāṟṟāḻai,* பெ. (n.) காட்டுக் கற்றாழை (பதார்த்த. **369.**) பார்க்க; kāṭṭu-k-kaṟṟaḻai. century-plant.

[பேய் + கற்றாழை]

பேய்க்கனவு *pēy-k-kāṉavu,* பெ. (n.) தீக்கனவு; night mare.

[பேய் + கனவு]

பேய்க்கனி *pēy-k-kaṉi,* பெ. (n.) பேயன் வாழை (தைலவ. தைல. **113.**); பார்க்க *see pēyaṉvāḻai.*

[பேய் + கனி]



பேய்க்காஞ்சி *pēy-k-kāñji,* பெ. (n.) புண்பட்ட வீரனைக் கங்குல் யாமத்துப் பேய் காத்தமை கூறும் புறத்துறை (தொல். பொ. **79.**); (purap.) theme describing the protection of a wounded warrior by a demon during night.

[பேய் + காஞ்சி]

பேய்க்காடு *pēy-k-kāḍu,* பெ. (n.) பேய் வதியுங் கானகம் (வின்.); haunted jungle

[பேய் + காடு]

பேய்க்காலெறும்பு *pēy-k-kāleṟmbu,* பெ. (n.) எறும்புவகை (வின்.); a kind of small black ant with long feet.

[பேய்க்கால் + எறும்பு]

பேய்க்காளான் *pēy-k-kāḷāṉ,* பெ. (n.) காளான் வகை (யாழ்.அக.); toadstool, fungi.

[பேய் + காளான்]

பேய்க்காற்று *pēykkāṟṟu,* பெ. (n.) சுழல் காற்று; whirlwind.

ம. பேய்க்காத்து

[பேய் + காற்று]

பேய்க்குணம் *pēy-k-kuṇam,* பெ. (n.) அருவருக் கத்தக்க தீக்குணம்; bad, unsociable, peevish disposition.

[பேய் + குணம்]

பேய்க்கும்மட்டி *pēy-k-kummaṭṭi,* பெ. (n.) பேய்க் கொம்மட்டி (யாழ்.அக.) பார்க்க; see pēy-k-kommaṭṭi.

[பேய்க்கொம்மட்டி – பேய்க்கும்மட்டி]

பேய்க்குரவை *pēy-k-kuravai,* பெ. (n.) போருக்குச் செல்லும் அரசன் செலுத்தும் தேர்க்கு முன்னும் பின்னும் பேய் ஆடுவதைக் கூறும் புறத்துறை (பு. வெ. 7, 19.); (puṟap.) theme describing the dance of demons both in front and in rear of a chariot led by a warrior-king.

[பேய் + குரவை]

பேய்க்குருந்து *pēy-k-kurundu,* பெ. (n.) மர வகை; raceme-flowered wild lime.

[பேய் + குருந்து]

பேய்க்குறை *pēy-k-kuṟai,* பெ. (n.) சினம் கொண்டு பேய் செய்யுங் கேடு; evil or disaster, resulting from the malice of an unpropitiated devil.

[பேய் + குறை]

பேய்க்குன்றி *pēy-k-kuṉṟi,* பெ. (n.) குன்றி வகை (யாழ்.அக.); a kind of crab's-eye.

[பேய் + குன்றி]

பேய்க்கூண்டு *pēy-k-kūṇḍu,* பெ. (n.) செய்வினை பயிற்றுமிடம் (வின்.); place where the black arts are taught.

[பேய் + கூண்டு]

பேய்க்கூத்து *pēy-k-kūttu,* பெ. (n.) **1.** பேயாட்டம்; devil dance. **2.** குழப்பம்; confusion.

[பேய் + கூத்து]

பேய்க்கொடை *pēy-k-koḍai,* பெ. (n.) வாரியிறைக்கும் ஈகை; lavish and indiscriminate giving.

[பேய் + கொடை]

பேய்க்கொம்மட்டி *pēy-k-kommaṭṭi,* பெ. (n.) கொடி வகை (யாழ்.அக.); colocynth.

[பேய் + கொம்மட்டி]

பேய்க்கோட்டாலை *pēy-k-kōṭṭālai,* பெ. (n.) **1.** *பேய்க் கோளாறு* பார்க்க; see *pēy-k-kōḷāṟu.* **2.** *பேய்க்குறை*(வின்.) பார்க்க; see *pēy-k-kuṟai.*

[பேய் + கொள்தல் → கோடல் → கோட்டாலை]

பேய்க்கோட்டி *pēy-k-kōṭṭi,* பெ. (n.) **1.** *பேய்க் கோளாறு* பார்க்க; see *pēy-k-kōḷāṟu.* **2.** *பேய்த்தனம்* பார்க்க; see *pēy-t-taṉam.*

[பேய் + கோட்டி]

கொள் → கோள் → கோட்டி

பேய்க்கோயில் *pēy-k-kōyil,* பெ. (n.) பேய் உறையும் சிறு கோயில் (M.M. **681.**); devil temple.

[பேய் + கோயில்]

பேய்க்கோலம் *pēy-k-kōlam,* பெ. (n.) **1.** பேயின் வடிவம்; devil-like appearance. என் பணிந்த பேய்க் கோலம் (பதினொ. அற்புதத்திரு. **29.**) **2.** அழகிழந்த (அவ) தோற்றம்; appearance of wretchedness. "ஒண்டொடியிப் பேய்க் கோலங் கொண்டு" (பிரபுலிங். அக்க. துற. **55.**)

[பேய் + கோலம்]

பேய்க்கோள் *pēy-k-kōḷ,* பெ. (n.) பேய் பிடிக்கை; demoniac possession.

[பேய் + கோள்]

கொள் → கோள்

பேய்க்கோளாறு *pēy-k-kōḷāṟu,* பெ. (n.) பேய் பிடித்தலாலுண்டான இயல்பல்லாச் செய்கை; violent actions of a demoniac, as whirling the head.

[பேய் + கோளாறு]

பேய்க்காண்(ணு)–தல் *pēy-kāṇ,* செ.கு.வி. (v.i.) பேய் பிடித்தல்; to be possessed. 'பேய் கண்டாற் போல்' (திருக்கோ. **84,** உரை)

[பேய் + காண்.,]

பேய்ச்சக்காலெறும்பு *pēycca-k-kāl-eṟumbu,* பெ. (n.) பேய்க்காலெறும்பு பார்க்க; see pēy-k-kālerumbu.

[பேய்க்காலெறும்பு – பேய்ச்சக்காலெறும்பு]

பேய்ச்சத்தம் *pēy-c-cattam,* பெ. (n.) பேரொலி (வின்.); hideous noise, as of a devil.

[பேய் + SKṭ.sabda. *த. சத்தம்]*

பேய்ச்சாளை *pēy-c-cāḷai,* பெ. (n.) கருநிறச் சாளைமீன்வகை (வின்.); interior cāḷai fish.

[பேய் + சாளை]



பேய்ச்சி *pēy-cci,* பெ. (n.) **1.**பெண்பேய்; demoness. "பேய்ச்சி பாலுண்ட பிரான்" (திவ்.இயற்.**3.28**) **2.** பேய் பிடித்தவள்; woman under possession of a demon

[பேயன்– பேய்ச்சி(பெ.பா)]

பேய்ச்சீந்தில் *pēy-c.cīndil,* பெ. (n.) ஒருவகைச் செடி (ஆகாசகருடன்); (சங்.அக) a climbing chrub

[பேய்+ சீந்தில்]

பேய்ச்சீயக்காய் *pēy-c.ciyakkāy,* பெ. (n.) கொடிவகை;copius narrow- leaved soap-pod

[பேய்+ சீயக்காய் சீக்காய் → சீயக்காய்]

பேய்ச்சுண்டை *pēy-c-cuṇḍai* பெ. (n.) மலைச்சுண்டை; (M.M. 829) prickly nightshade.

[பேய் + சுண்டை]

பேய்ச்சுரை *pēy-c-curai,* பெ. (n.) சுரை வகை; wild melon. 'கைப்பறா பேய்ச்சுரையின் காய்' (நாலடி.**116**)

[பேய் + சுரை]

பேய்ச்செயல் *pēy-c-cayal,* பெ. (n.) தீ நடத்தை; devilisim., black magic.

[பேய் + செயல்]

பேய்ச்சேட்டை *pēy-c-cēṭṭai,* பெ. (n.) *பேய்க் கோளாறு* பார்க்க; see *pēy-k-kōḷāru.*

[பேய் + சேட்டை]

பேய்ச்சொறி *pēy-c-coṛi,* பெ. (n.) **1.** பெருஞ்சொறி வகை; itch, scabies. **2.** சிரங்குவகை; nettle rash, urticaria.

[பேய் + சொறி]

பேய்த்தக்காளி *pēy-t-takkāḷi,* பெ. (n.) சீமைத் தக்காளி (வின்.) பார்க்க šīmai-t-takkāli; tomato.(w)

[பேய் + தக்காளி]

பேய்த்தண்ணீர் *pēy-t-taṇṇīr,* பெ. (n.) சாராயம் (வின்.); ardent spirits. (w)

[பேய் + தண்ணீர்]

பேய்த்தத்து *pēy-t-tattu,* பெ. (n.) சிரங்கு வகை; (M.L) nettle rash, urticaria.

[பேய் + தத்து]

பேய்த்தனம் *pēy-t-taṉam,* பெ. (n.) **1.** முட்டாள்தனம்; fiendishness, ferocious ness, devilishness. 'இந்தப் பேய்த்தனமேன்' (தாயு. பாயப்புலி. **23**) **2.** பித்து; madness. **3.** புல்லறிவு (சங்.அக.); foolishness.

[பேய் + தனம்]

பேய்த்.தாரை *pēy-t-tārai,* பெ. (n.) ஊதுகருவி வகை; a large trumpet.

[பேய் + தாரை]



பேய்த்தி *pēytti,* பெ. (n.) பேய்ச்சி; demoness"சிறுபேய் பெரும்பேய்த்தியைச் சென்றுபற்றும்" (நீலகேசி.**8**)

பேய்த்திமிட்டி *pēy-t-timiṭṭi,* பெ. (n.) பேய்க் கொம்மட்டி (சங்.அக.) பார்க்க; see pēy-k-kommaṭṭi.

[பேய்க்கொம்மட்டி – பேய்த்திமிட்டி]

பேய்த்தும்பை *pēy-t-tumbai,* பெ. (n.)
1. காசித்தும்பை; (M.M. 911); flower tumhai.
2. *பேய் மருட்டி* M.M. பார்க்க; see *pēymaruṭṭi.*

[பேய் + தும்மை]

பேய்த்தும்மட்டி *pēy-t-tummaṭṭi,* பெ. (n.) 1. *பேய்க் கொம்மட்டி* (சங்.அக.) பார்க்க; *see pēy-k-kommaṭṭi.* 2. *பேய்ச்சுரை* பார்க்க; *see pēy-c-curai.*

[பேய் + தும்மட்டி]

பேய்த்தேர் *pēy-t-tēr,* பெ. (n.) கானனீர்; mirage. பேய்த் தேர்ப்பின் குடங்கொண்டு நீர்க்குச் செல்வார். (தேவா. 1145, 10)

[பேய் + தேர்]

பேய்நடம் *pēy-naḍam,* பெ. (n.) வெறியாட்டு (திவா.); dancing under the influence of a demon.

[பேய் + நடம்]

பேய்நரி *pēy-nari,* பெ. (n.) வெறிபிடித்த நரி;rabid fox. "பேய்நாய் பேய்நரி முதலியவற்றின் கடிகளுக்கு" (குஞ். சர. iii 102)

[பேய்+நரி]

பேய்நவரை *pēy-navarai,* பெ. (n.) நான்கு விரலம் வளர்வதும் பழுப்புப் புள்ளியும் வெள்ளை நிறமுடையதுமான நவரை மீன்வகை; red mullet, silvery, spotted with brown, attaining 4 in. in length.

[பேய் + நவரை]



பேய்நாய் *pēynāy,* பெ. (n.) வெறி பிடித்த நாய்; (M.L.) rabid dog.

[பேய் + நாய்]

பேய்நாய்க்கடி *pēy-nāy-k-kaḍi,* பெ. (n.) பேய் நாய்க்கடிச் சன்னி (M.L.) பார்க்க; see pēynāy-k-kaḍic-caṉṉi.

[பேய் + நாய்க்+ கடி]

பேய்நாய்க்கடி சன்னி *pēnāy-k-kaḍisaṉṉi,* பெ. (n.) வெறிநாய்க்கடியால் உண்டாகும் சன்னிவகை; ;(M.L.) hydrophobia.

[பேய் + நாய்க்கடி + சன்னி]

(skt. janni. த. சன்னி.)

பேய்நிலை *pēy-nilai,* பெ. (n.) எண்வகை மணத்துள் (பைசாசம்) ஒன்று (இறை. 1, 22); a form of marriage.

[பேய் + நிலை]

பேய்ப்பசலை *pēy-p-pasalai,* பெ. (n.) *பேய்ப்பசளை* (மூ.அ.) பார்க்க; *see pēy-p-pašaḷai.*

[பேய்ப்பசளை – பேய்ப்பசலை]

பேய்ப்பசளை *pēy-p-paša!ai,* பெ. (n.) பசலை வகை (மூ.அ.); a wild species of purslane, porfulaca.

[பேய் + பசளை]

பேய்ப்பந்து *pēy-p-pan̄du,* பெ. (n.) எறிவாற்பந்து விளையாட்டு; (இ.வ.) game of throw-ball.

[பேய் + பந்து]

பேய்ப்பயல் *pēy-p-payal,* பெ. (n.) வெறுக்கத்தக் கோன்; (சண்டாளன்) devilish fellow.

[பேய் + பயல்]

பேய்ப்பலவன் *pēy-p-palavan̲,* பெ. (n.) படுவன் கீரை; (மலை) a kind of greens.

[பேய் + பலவன்]

பேய்ப்பலா *pēy-p-palā,* பெ. (n.) *காட்டுப் பலா;* (L) பார்க்க; *jungle jack.*

[பேய் + பலா]

பேய்ப்பள்ளி *pēy-p-paḷḷi,* பெ. (n.) ***பேய்க் கூண்டு*** (வின்.) பார்க்க; see *pēy-k-kūṇḍu.*

[பேய் + பள்ளி]

பேய்ப்பாகல் *pēy-p-pāgal, பழுபாகல்* (M.M). பார்க்க; see *paḻu-pāgal.* prickly carolaho

[பேய் + பாகல்]

பேய்ப்பாட்டு *pēy-p-pāṭṭu,* பெ. (n.) 1.பேய்க்குப் பாடும் பாடல் (வின்.); song in praise of devils 2. பெருங்குரலிற்பாடும் பாட்டு (இ.வ); loud song 3. வசைமொழி ; abuse

[பேய் + பாட்டு]

பேய்ப்பாதிரை *pēy-p-pādirai,* பெ. (n.) பாதிரிவகை (நாநார்த்த.263); a variety of pādiri plant

[பேய் + பாதிரை]

பேய்ப்பாலை *pēy-p-pālai,* பெ. (n.) ***நச்சறுப்பான்;*** (சங்.அக) பார்க்க; *naccaruppān.* Indian ipecacuanha

[பேய் + பாலை]

பேய்ப்பாற்சொற்றி *pēy-p-pār̲-corr̲i,* பெ. (n.) நீர்ப்பூடுவகை (சங்.அக); an aquatic plant

[பேய் + பாற் சொற்றி]

பேய்ப்பிடி *pēy-p-piḍi,* பெ. (n.) 1. விடாப்பிடி; vicelike grip 2. *பேய் மருட்டி*(சங்.அக) பார்க்க; see *pēy-maruṭṭi*

[பேய் + பிடி]

பேய்ப்பிரம்பு *pēy-p-pirambu,* பெ. (n.) பிரம்பு வகை (யாழ்.அக); a kind of rattan.

[பேய் + பிரம்பு]

பேய்ப்பிள்ளை *pēy-p-piḷḷai,* பெ. (n.) 1. அடங்காப் பையன்; disobedient, intractable child 2. அறிவிலாத பிள்ளை; foolish child

[பேய் + பிள்ளை]

பேய்ப்பீர்க்கு *pēy-p-pīrkku,* பெ. (n.) 1. கொடி வகை; bitter luffa. ***'சுரையொடு பேய்ப்பீர்க்குஞ் சுமந்த'*** 2. பீர்க்குவகை (M.M. 438); snake luffa,

[பேய் + பீர்க்கு]

பேய்ப்புடல் *pēy-p-puḍal,* பெ. (n.) பூடுவகை (பதார்த்த.354.); wild snake gourd

[பேய் + புடல்]

பேய்ப்புடோல் *pēy-p-pudōl,* பெ. (n.) *பேய்ப்புடல்* (இ.வ.) பார்க்க; see *pēy-p-pudal.*

பேய்ப்புத்தி *pēy-p-putti,* பெ. (n.) அறிவின்மை (வின்.); imprudence,folly rashness

[பேய் + SKṭ. nuddhi. *த. புத்தி]*

பேய்ப்புகையிலை *pēy-pugaiyilai,* பெ. (n.) காட்டுப்புகையிலை (சித். அக.); a kind of tobacco.

[பேய் + புகையிலை]

பேய்ப்புல் *pēy-p-pul,* பெ. (n.) ஒட்டுப்புல் (பதார்த்த.378); sticking grass.

[பேய் + புல்]

பேய்ப்பூலா *pēy-p-pūlā,* பெ. (n.) செடிவகை; buck - torn

[பேய் + பூலா]

பேய்ப்பெண் *pēy-p-peṇ,* பெ. (n.) அறிவில்லாத பெண்; foolish girl *'பேச்சரவங் கேட்டிலையோ பேய்ப் பெண்ணே'* (திவ்.திருப்பா.7.)

[பேய் + பெண்]

பேய்ப்போக்கு *pēy-p-pōkku,* பெ. (n) ஒழுங்கற்ற ஒழுக்கம், irregular, absurd conduct. (w.)

[பேய்+போக்கு]

பேய்பிடித்தல் *pēy-piḍittal,* பெ. (n.) பேயால் பற்றப் படுதல்; being possessed by a devil; obsession.

[பேய் + பிடித்தல்]

பேய்மருட்டி *pēy-Maruṭṭi,* பெ. (n.) செடிவகை(பதார்த்த. 243.); malabar catamint, s.sr; anisomeles malabarica.

[பேய் + மருட்டி]

பேய்மழை *pēy-Malai,* பெ. (n.) பெருமழை; Heavy fall of rain.

[பேய் + மழை]

பேய்மனம் *pēy-Maṇam,* பெ. (n.) **1.** அறிவற்ற மனம்; distracted, foolish mind. **'*என்பேய் மனமால் கொண்டதே*'** (திருநூற்.1.) **2.** இழிந்த மனம்(வின்); vile heart, carnal mind.

[பேய் + மனம்]

பேய்மாடி *pēy-mādi,* பெ. (n.) *புளிநறளை* (மலை.) பார்க்க; see *puḷinaraḷai.*

[பேய் + மாடி]

பேய்மிரட்டி *pēy-miraṭṭi,* பெ. (n.) (மூ.அ.) **1.** *பேய்மருட்டி* பார்க்க; see *pēy maruṭṭi.* **2.** *கிலுகிலுப்பை* பார்க்க; *see kilukiluppai* species of rattle work.

[பேய்மருட்டி → பேய் மிரட்டி]

பேய்மிளகாய் *pēy-miḷagāy,* பெ. (n.) சீமைப் பச்சை மிளகாய் (A.); cayenne peper.

[பேய்+மிளகாய்]

பேய்முகம் *pēy-mugam,* பெ. (n.) பேய்மூஞ்சி (வின்); hideuns face.

[பேய்+முகம்]

பேய்முசுட்டை *pēy-mušuttai,* பெ. (n.) 1. *சமுத்திரப்பாலை* (வின்) பார்க்க; see *samullira-t-pālai* elephant creeper. 2. கொடிவகை. malabar creeper. 3. ஒருவகைச் சொறிசிரங்கு (இ.வ.); nettle rash, urticaria.

[பேய்+முசுட்டை]

பேய்முசுட்டைக்கடி *pēy-mušuṭṭai k-kaḍi,* பெ. (n.) உடம்பிற் செந்நிறப் புள்ளிவிழும் நோய்வகை (M.L.); purpura, a disease marked by livid spots on the skin.

[பேய்முசுட்டை + கடி]

பேய்முல்லை *pēy-mullai,* பெ. (n.) *பேய்முசுட்டை* (சங்.அக.) பார்க்க; see *Peymusuttai.*

பேய்முன்னை *pēy-munnai,* பெ. (n.) 1. மரவகை; charcoal tree. 2. சமுத்திரப்பாலை; elephant creeper. (l.)

[பேய்+முன்னை]

பேய்மூஞ்சி *pēy-mūñci,* பெ. (n.) ஒழுங்கற்ற முகம் (கோரமுகம்.) (வின்); hideous face.

[பேய் + மூஞ்சி]

பேய்மை *pēymai,* பெ. (n.) பேயின் தன்மை; devilishness. '*பேய்மையாக்குமிப் பேதை தமைக்கள்வனொடுடனாய்*' (வீரசோ.யாப்.5, உரை.)

[பேய் + மை 'மை' ப.பெ.ஈறு]

பேய்முள்ளி *pēy-mullli,* பெ. (n.) காட்டு முள்ளி (சித்.அக.); Wild thorny plant.

[பேய் + மூஞ்சி]

பேய்வரகு *pēy-varagu,* பெ. (n.) காட்டுவரகு (சித்.அக.); Wild ragi.

பேய்வழிபாடு *pēy-valipādu,* பெ. (n.) பேயை வழிபடுதல்; devil-worship.

[பேய் + வழிபாடு]

பேய்வாதுமை *pēy-vādumai,* பெ. (n.) வாதுமை வகை (இ.வ.); Wild almond.

பேய்விட்டாட்டு-தல் *pēy-viṭṭāṭṭu,* செ. குன்றாவி. (v.t.) *பேயாட்டு* (வின்) பார்க்க; see *pēyāṭṭu.*

[பேய் + விட்டு + ஆட்டு]

பேய்வித்தை *pēy-vittai,* பெ. (n.) சல்லியம்; witchcraft. (w)

[பேய் + வித்தை]

பேய்வெருட்டி *pēy-verutti,* பெ. (n.) *பேய்மருட்டி* (நாமதீப.344) பார்க்க; see *pēy-marutti*

[பேய் + மருட்டி –பேய்வெருட்டி]

பேயகத்தி *pēy-agatti,* பெ. (n.) *சீமையகத்தி*(L) பார்க்க; see *cimai-y-agathi* large feat letted aglandular senna.

[பேய் + அகத்தி]

பேயத்தி *pēy-atti,* பெ. (n.) அத்திவகை (L.); devil fig, s.tr., ficus hispida.

[பேய் + அத்தி]

பேயம் *pēyam,* பெ. (n.) நீர் முதலியன போன்ற பருகலுணவு (சங்.அக.); food taken in by drinking or sipping, as water, milk, etc.

[பெய்–பேய்–பேயம்]

பேயம்பழம் *pēyampalam,* பெ. (n.) பேயன் வாழையின் பழம் (இ.வ.); fruit of pēyan-vālai.

[பாயம் → பேய் → பேயன் + பழம்]

பேயம்மையார் *pēy-ammaiyār,* பெ. (n.) *பேயார்* (யாப்.வி.) பார்க்க; see *pēyār.*

[பேய் + அம்மையார்]

பேயமன்று *pēya-manru,* பெ. (n.) மதுக்குடிக்குமிடம்; liquor-saloon. *'பேயமன்றினினின்று பிறங்கெரி'* (கம்பரா. இலங்கையெரி 14.)

[பேயம் + மன்று]

பேயருளாந்தை *pēy-arulāndai,* பெ. (n.) *பாலையுடைச்சி* (L.)பார்க்க; see *pālai-y-uticci,* indian calosanthes.

பேயவரை *pēy-avarai,* பெ. (n.) *கோழியவரை*1. பார்க்க; see *kōli-y-avari,* sword-bean. 2. பொன்னாவிரை fetid cassia.

[பேய் + அவரை]

பேயன்[1] *pēyan,* பெ. (n.) 1. பேய்பிடித்தவன்; demomac. 2. பித்தன் (பைத்தியக் காரன்); madman *'பேயனாகிலும் பெருநெறிகாட்டாய்'* (திருவாச. 23,7.)

[பேய் + அன் 'அன்' ஆ,பா.ஈறு]

பேயன்[2] *pēyan,* பெ. (n.) *பேயன்வாழை* (பதார்த்த.727.) பார்க்க; see *pēyanvālai.*

[பாயம்→ பேயம்→ பேயன்]

பேயன்வாழை *pēyan-vālai,* பெ. (n.) வாழை வகை; a kind of banana,

[பாயம்→ பேயம்→ பேயன் + வாழை]

பேயனார் *pēyanār,* பெ. (n.) ஐங்குறுநூற்றின் ஐந்தாம் நூறாகிய முல்லைத்திணையைப் பாடிய பழைய புலவர்; an ancient poet, author of the fifth hundred in Inguru-nūru.

[பேய + அன் + 'ஆர்' 'ஆர்' உயர்வுப் பன்மை ஈறு]

பேயாட்டம் *pēy-āttam,* பெ. (n.) பேய்க்கூத்து; devil dance. 2. பேய்த்தன்மை; fiendishness ferociousness. 3. கலக்கம்; confusion, disorder.

[பேய் + ஆட்டம்]

ஆடு–ஆட்டம்

பேயாட்டி *pēy-āṭṭi,* பெ. (n.) 1. மருளேறு வருவித்துக் குறிசொல்லச் செய்வோன்(வின்); one who makes a person possessed and causes him to utter oracles 2. *பேயோட்டி,* (சங்.அக.) 1. பார்க்க; see *pēyōṭṭi.*

[பேயாடி → பேயாட்டி]

பேயாட்டு—தல் *pēy-āṭṭu-,* செ.குன்றாவி. (v.t.) 1. குறிசொல்லுதற்குப் மருளோறச் செய்தல் (வின்); to cause a person to be possessed for making him utter oracles 2. *பேயோட்டு* (இ.வ.). பார்க்க; see *pēyōṭṭu*

[பேய் + ஆட்டு]

பேயாடி *pēy-āḍi,* பெ. (n.) 1. வெறியாடுபவன் (இ.வ.); a person under demoniac possession. 2. *பேயாட்டி* (வின்) பார்க்க; see *pēyāṭṭi.*3. *பேயோட்டி* (வின்) பார்க்க; see *pēyōṭṭi.*

[பேய் + ஆடி]

பேயாடு—தல் *pēy-ḍu,* செ.குவி. (v.i.) பேய்பிடித்தாடுதல் (வின்); to whirl the head through demoniac possession.

[பேய் + ஆடு]

பேயாமணக்கு *pēy-āmaṇakku,* பெ. (n.) ஆமணக்குவகை(L.); red physic nut,

[பேய் + ஆமணக்கு]

பேயார் *pēyār,* பெ. (n.) பேயாழ்வார் பார்க்க; see pēyāḻvār '*பொய்கையார் பூதத்தார் பேயார்*' (உபதேசரத்.4.) 2. *காரைக்காலம்மையார்* பார்க்க; *Rārairrāḷ-ammaiyār.* a canonized saiva saint, '*பேயார்க்கு மடியேன்*' (தேவா.737.4.)

[பேய் — பேயார் 'ஆர்' உயர்வுப்பன்மை ஈறு.]

பேயாரால் *pēyārāl,* பெ. (n.) இரண்டடி நீளத்துக்கு மேல் வளர்வதும் மங்கல் (கபில) நிறமுடையதுமான நன்னீர் மீன்வகை; eel, rich brown, attaining more than 2ft. in length.

[பேய் + ஆரால் → ஆரால்]



பேயாவாரை *pēyāvārai,* பெ. (n.) *பேயாவிரை* (இங்.வை.) பார்க்க; see *pēyāvirai.*

[பேய் + ஆவாரை ஆவிரை—ஆவாரை]

பேயாவிரை *pēy-āvirai,* பெ. (n.) செடிவகை; negro coffee.

[பேய் + ஆவிரை]

பேயாழ்வார் *pēyāḷvār,* பெ. (n.) நாலாயிரத் தெய்வப்பனுவில் இயற்பாவைச் சார்ந்த மூன்றாந்திருவந்தாதி இயற்றியவரும் ஆழ்வார் பதின்மருள் ஒருவருமான பெரியார் (உபதேசாத்.6.); a vaisṇava saint, author of the third Tiru.v-andādi of iyarpā,in Nālāyira-p.pirapandam.

[பேய் + ஆழ்வார்]

பேயிரதம் *pēy-iradam,* பெ. (n.) *பேய்த்தேர்* (இலக்.அக.) பார்க்க; see *pēy-t-tēr.*

[பேய் + skt. rasa. த. இரதம்]

பேயீடு *pēy-īḍu,* பெ. (n.) பேயின் தொந்தரவால் உண்டாவதாகக் கருதப்படும் பிள்ளைநோய்; a disease of children, attributed to the influence of evil spirtis, '*புள்ளீட்டுக்கும் பேயீட்டுக்கும் பிழைக்கப்பெற்றதென்கிறார்*' (திவ்.பெரியாழ். 2,5,9,வ்யா.பக்.343.)

பேயுடுப்பை *pēy-uḍuppai,* பெ. (n.) செடிவகை; (விவசா.6.); a plant.

பேயுமிதல் *pēyumidal,* பெ. (n.) பேய் முதலியன ஒருவன் அரத்தத்தை உறிஞ்சியுண்டு கொல்லுகை (j.) sucking the blood of a person either killing or greatly injuring him, as a denil or vampire.

[பேய் + உமிழ்தல் → உமிதல்.]

பேயுள்ளி *pēy-uḷḷi,* பெ. (n.) நரிவெங்காயம்(வின்); indian squill.

[பேய் + உள்ளி]

பேயூடம் *pēyūḍam,* பெ. (n.) அமிழ்தம்; nectar. 2. சீம்பால்; beestings. 3. வெண்ணெய்; (யாழ்.அக) butter.

skt. pēyūsa

பேயூமத்தை *pēyūmattai,* பெ. (n.) *மருளூமத்தை* (மலை.) பார்க்க; see *maruḷ-ūmathai.* cockle.bur.

[பேய் + ஊமத்தை]

பேயெரி–த்தல் *pēyeri,* பெ. (n.) மந்திரத்தாற் பேயை எரித்துப் போக்குதல்; to burn out a devil by magic.

[பேய் + எரி]

பேயெள் *pēyeḷ,* பெ. (n.) *காட்டெள்,* 2. (A) பார்க்க; see *kāttel,* wild sesame.

[பேய் + எள்]

பேயேற்று–தல் *pēy-ēṟṟu,* செ.கு.வி (v.i.) *பேயையுருவேற்று* (வின்) பார்க்க; see *pēyaiy uru-v-ēṟṟu.* (w.)

[பேய் + ஏற்று]

பேயையுருவேற்று–தல் *pēyai-y-uru-v-ēṟṟu,* செ.கு.வி. (v.i.) ஒருவனைப் பேய்பிடிக்கச் செய்தல் (வின்); to cause a dene to possess a person.

[பேய் + ஐ + உரு + ஏற்று]

பேயொலி *pēyoli,* பெ. (n.) பெருங்கூப்பாடு; hideous noise, as of a devil.

[பேய் + ஒலி]

பேயோட்டி *pēyōṭṭi,* பெ. (n.) 1. பேயை ஓட்டுவோன்; exorcist. (loc.) 2. மரவகை (யாழ்.அக.); a tree.

[பேய் + ஓட்டி]

பேயோட்டு–தல் *pēyōṭṭu,* செ.குன்றாவி. (v.t.) பேயை மந்திரத்தால் வெளியேற்றுதல்; to exorcise.

[பேய் + ஓட்டு]

பேயோடாடி *pēyōḍāḍi,* பெ. (n.) பேயுடன் ஆடுபவன், சிவன் (பிங்.); siva, as ḍancing with devils.

[பேய் + ஓடு + ஆடு + இ]

'இ' வினைமுதலீறு

பேயோணான் *pēyōṉāṉ,* பெ. (n.) ஓந்தி வகை (வின்); large bloodsucker.

[பேய் + ஓணான்]

பேர்[1]–தல் *pēr,* செ.கு.வி. (v.i.) **1.** சிதைதல்; to become loose, to be detached. கட்டடம் பேர்ந்து போயிற்று **2.** பிரிதல்; to separate. "உமையோ டென்றும் பேரானை" (தேவா.872,5) **3.** போதல்; to depart, go away. "பேர்ந்தும் பெயர்ந்தும்" (திவ்.திருவாய்.5,3,3) **4.** அழிதல்; to be annihilated. "பேர்கின்ற தாகும் பிறப்பு" (அறநெறி. 169.) **5.** பிறழ்தல்; to flop, as a fish. "கெண்டைக் குலம்....பேர்கின்றவே" (திருவிருத்.11.) **6.** அசைதல்; to move. பேருங் கற்றைக் கவரி (கம்பரா.முதற்.98.) **7.** குறைதல்; to lesser, diminish. "பேராச் சிறப்பின்" (தொல்.பொ.102.) **8.** பின் வாங்குதல்; to draw back, retreat, as a warrior. "பொருதகர் தாக்கற்குப் பேருந்த கைத்து" (குறள்.486) **9.** முறைபிறழ்தல்; to go out of order. "வினையைப் பேராம லூட்டும் பிரான்" (சி.போ.2,2.) **10.** நிலைமாறுதல்; to change. பேதிப்பன"நீயவை பேர்கிலையால்" (கம்பரா. இரணிய.110)

[பெயர்–பேர்]

பேர்[2]–த்தல் *pēr,* செ.குன்றாவி. (v.t.) **1.** இடம்விட்டு நீக்குதல்; to change, remove. "என்றவனைப் பேர்த்திங்ஙன் மீட்டுத் தருவாய்" (சிலப்.9,38.) **2.** அழித்தல்; to destroy, annihilate. **3.** புரட்டுதல்; to turn over. "வன்கழுகு பேர்த்திட்டுக் கொத்தும்" (நாலடி.48) **4.** முறித்தல்; to break. "பேர்த்தனை மாசகடம் பிள்ளையாய்" (திவ்.இயற்,2,10) **5.** மாற்றுதல்; to alter, distort.

[பெயர்–பேர் பேர்த்தல் (காரண வினை)]

பேர்[3] *pēr,* பெ. (n.) **1.** ஒருவருக்கோ அல்லது ஒரு பொருளுக்கோ இடும் பெயர்; name "பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்" (நாலடி.175) **2.** ஆள்; per son, individual. "அயற்பேரைக் காய்தி" (கம்பரா.சரபங்.30) **3.** உயிரி; living thing "விசும்பிற் செல்வதோர் பேர் செலாது". (கம்பரா. நாகபா.156.) **4.** புகழ்; praise, fame. "பேர் பரந்த பிரமாபுர மேவிய பெம்மான்" (தேவா,62,3) **5.** மிகக்குறைந்த அளவுள்ளது; that which is nominal; mere name or pretest. 'ஒரு பேர்காணும் வேண்டுவது.' (ஈடு.9,3,1)

தெ. பேரு; க. பெசர்; ம. பேர்; பட; கெசரு

[பெயர் → பேர்]

பேர்[4] *pēr,* பெ. (n.) பெருமை (அக.நி.); largeness

[பல் – பரு–பெரு பெரு–பேர்]

பேர்க்கடமை *pēr-k-kaḍamai,* பெ. (n.) ஆள்வரிவகை (I.M.P.Cg.529.); a tax on individuals.

பேர்க்குடி *pēr-k-kuḍi,* பெ. (n.) அடிமை; slave 'உன் பேர்க்குடியாக இருக்கிறேன்'. (திருநெல்லை.)

[பெயர் → பேர் + குடி]

பேர்கெட்டவன் *pēr-keṭṭavaṉ,* பெ. (n.) கயவன் (இ.வ.); rogue, scoundral.

[பெயர்கெட்டவன் → பேர்கெட்டவன்]

பேர்கேட்டவன் *pērkēṭṭavaṉ,* பெ. (n.) நாடறிந்தவன் (நெல்லை); a well-known person.

[பேர் + கேட்டவன்]

பேர்கொடு–த்தல் *pēr koḍu,* செ.கு.வி. (v.i.) 1. புகழ்தருதல்(கொ.வ.); to give a good name, to bring credit. 2. குறிப்புப் பெயரிடுதல்(கொ.வ.); to nick name. (colleq.) 3. ஒருகுறிக்கோளுக்காகச் சூளேற்றி (ஞானஸ்நானம் செய்து) பெயரிடுதல்; to baptise, as giving a name to a child.

[பேர் + கொடு]

பேர்சொல்லாதது *pēš-ollādadu,* பெ. (n.) இரவில் பேர் வழங்கத்தகாத வசம்பு, ஊசி முதலிய பொருள்கள்; particular thing not named at night, as sweet flag, needle etc. 2. அக்கி(இ.வ.); herpes.

[பேர் + சொல்லாதது.]

பேர்சொல்லாதவன் *pēršollādavaṉ,* பெ. (n.) முடிதிருத்துவோன்(இ.வ.); barber, as not to be named at night.

[பேர் + சொல்லாதவன்]

பேர்சொல்(லு–)–தல் *pērsol,* செ.குன்றாவி. (v.t.) ஒருவரது புகழைத் தாங்கிநிறுத்துதல் to hold one's fame.

[பேர் + சொல்(லு)]

பேர்அட்டவணை *pēraṭṭavaṇai,* பெ. (n.) பெயர்ப்பட்டியல்; index of names.

[பேர் + அட்டவணை]

பேர்த்தி *pērtti,* பெ. (n.) மகனது அல்லது மகளது மகள்; grand-daughter, 2. பாட்டி(இ.வ.); grandmother.

[பெயர்த்தி–பேர்த்தி பேரன் (ஆ.பா. பெயர்த்தி (பெ.பா.)]

பேர்த்து *pērttu,* வி.எ. (adv.) 1. பேர்த்தும் பார்க்க; see pērttum. “ஒருதலையாப் பேர்த்துள்ள வேண்டா பிறப்பு” (குறள்.357) 2. மாற்றாக; in return. “பேர்த்து நாய் கௌவினா ரீங்கில்லை” (நாலடி.70)

[பெயர்த்து–பேர்த்து]

பேர்த்தும் *pērttum,* வி.எ. (adv.) மறுபடியும்; again. ‘பின்னைப் பழம்பொருட்கும் பேர்த்துமப் பெற்றியனே’ (திருவாச. 7,9)

[பேர்த்து → பேர்த்தும்]

பேர்ந்தும் *pērndaum,* வி.எ. (adv.) *பேர்த்தும்* பார்க்க; see *pērttum.*

பேர்படை–த்தல் *pēr-paḍai,* செ.கு.வி. (v.i.) *பேர்பெறுதல்* பார்க்க; see *pēr-peṟu.* “பேர்படைத்த விசையனுடன்” (பாரத. கிருட்டிண.1.)

[பெயர்–பேர் + படை –,]

பேர்பாதி *pēr-pādi,* பெ. (n.) சரிபாதி; exactly half. just half.

[பேர் + பாதி]

ஒகோ. செம்பாதி

பேர்பெறு–தல் *pēr-peṟu,* செ.கு.வி. (v.i.) 1. பெயர் கொள்ளுதல்; to bear a name. “மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர் பெற்ற” (நாலடி.59) 2. புகழ்பெறுதல்; to be famous.

[பேர் + பெறு–தல்]

பேர்மகிழ் *pērmagiḻ,* பெ. (n.) பெருமகிழ்ச்சி; great mirth. "பேர்மகிழ் செய்யும் பெருநறா" (பரிபா.7,63.)

[பெயர்–பேர் + மகிழ்]

பேர்வாசி[1] *pēr-vāši,* பெ. (n.) பேர்மட்டுமுள்ளது; being only nominal. 'பேர்வாசியே யாம்படி நாம் புண்னிமைத்த இருவகைப்பட்ட தர்மங்களையும் போக்குவார்'(A.டு.1,6,9) 2. ஒருவன் பெயரைக் குழந்தைக்கிடுவதால் அதற்குண்டாவதாகக் கருதும் குணம்(கொ.வ.); mcharacterintics believed to be aquired by a child being named of to a person.

பேர்வாசி[2] *pēr-vāši,* பெ. (n.) செம்பாதி; exaitly half.

பேர்மல்லி *pērmalli,* பெ. (n.) *கஞ்சாங்கோரை,* பார்க்க; (சங்.அக.), see *kañjaṅ-kōrai,* white basil.

பேர்வரி *pēr-vari,* பெ. (n.) *ஆள்வரி(தல்)* பார்க்க; see *āḷ-vari.*

பேர்வழி *pērvaḻi,* பெ. (n.) 1. பெயர்ப்பட்டி (கொ.வ.) list of names, roll, register. 2. மரபுவழி; genealogy. 3. ஆள்; person, individual. அந்தப் பேர்வழி யார்?

[பேர் + வழி]

பேர்வழிப்பட்டோலை *pērvaḻi-paṭṭōlai,* பெ. (n.) 1. பேரேடு; ledger. 2. பேர் பெயர்ப்பட்டியலின் நிரல்; index of names.

[பேர்வழி + பட்டோலை]

பேர்வை[1]**த்தல்** *pēr vai,* செ.குன்றாவி. (v.t.) 1. பெயரிடுதல்; to charister, to name. 2. குறிப்புப்பெயரிடுதல்; to nickname.

[பேர் + வை 'வை' (து.வி.)]

பேர்வைத்தல்[2] *pērvaittal,* பெ. (n.) 1. பெயரிடும் சடங்கு; ceremony of namingachild. 2. குறிப்புப் பெயரிடுகை; nicknaming.

[பேர் + வைத்தல்]

பேரகத்தி *pēragatti,* பெ. (n.) சிறியமரவகை; (யாழ்.அக.) west indian sesban.

[பெரு→ பேர் + அகத்தி]

பேரகத்தியம் *pēr-agattiyam,* பெ. (n.) அகத்தியமுனிவர் இயற்றியதாகக் கூறப் படுவதும் இறந்துபட்டதுமான இலக்கண நூல்; a grammar, attributed to Agastya, not now extant.

[பெரு→ பேர் + அகத்தியம்]

பேரகலம் *pērar-akalam,* பெ. (n.) பெருமகலம்; broadness.

[பெரு→ பேர் + அகலம்]

பேரச்சம் *pēr-atcham,* பெ. (n.) பெருந்திகில்; extreme fear.

[பெரு→ பேர் + அச்சம்]

பேரசம் *pērašam,* பெ. (n.) அகன்ற சதுப்பு நிலம்; large swap.

[பெரு→ பேர் + அசம். அயம்–அசம்]

பேரட்டிக்கீரை *pēraṭṭi-k-kcrai,* பெ. (n.) பெரும்பிண்ணாக்குக் கீரை(m.m.); see perum-piṇṇākku-k-kirai, jews-mallow.

[புரட்டிக்கீரை–பேரட்டிக்கீரை.]

பேரடம் *pēraḍam,* பெ. (n.) வெண்ணொச்சி (மூ.அ.); five-leaved chaste tree.

பேரடி–த்தல் *pēr-aḍi,* செ.குன்றாவி. (v.t.) பேரைப்பதிவுப் புத்தகத்தினின்று நீக்குதல்; to remove a name from a register.

[பேர் + அடி –,]

பேரடிபடு[1]–தல் *pēr-aḍipaḍu,* செ.குன்றாவி. (v.t.) எங்கும் பேசப்படுதல்; to talk about, famous. கு"ஊழல் முறையீட்டில் அமைச்சர் பேர் அடிபடுகிறது"

[பேர் + அடிபடு]

பேரடிபடுதல்[2] *pēr-aḍipaḍudal,* பெ. (n.) எங்கும் பேசப்படுகை; being talked about; being famous.

[பேர் + அடிபடுதல்]

பேரண்டம்[1] *pēr-aṇḍam,* பெ. (n.) 1. வியனுலகு (சங்.அக.); universe. 2. மண்டையோடு (சங்.அக.); skill. 3. மூளை (சங்.அக.); brain.

[பெரு→பேர் +அண்டம்]

(skt. aṇḍa → *த. அண்டம்)*

பேரண்டம்[2] *pēr-aṇḍam,* பெ. (n.) நரி (யாழ்.அக.); fox



பேரணி[1] *pēr-aṇi,* பெ. (n.) 1. படையின் பின்னணி (பிங்.); the rear of an army. *'பேரணியி னின்ற பெருங்களிறுகள்'* (சீவக.277, உரை.) 2. நடுப்படை; maind body or centre of an army. 3. *பேரணிகலம்* (பிங்.); பார்க்க 4. கிம்புரி; ornamental ring put on the tusks of elephants and other animals. *'பேரணி யிலங்கொளி மருப்பிற் களிறும்'* (பரிபா.13,35.)

[பல்→பரு→பெரு பெரு→பேர்+அணி]

பேரணி[2] *pēr-aṇi,* பெ. (n.) ஒருங்கு திரளுதல்; assembly of an organisation.

[பல் + பரு + பெரு + பேர் + அணி]

பேரணிகலம் *pēr-aṇi-kalam,* பெ. (n.) பெரும்பதக்கம்; a big ornament worn on the chest. *'பேரணிகல மணிந்த முலையாரும்'* (சீவக.2340,உரை.)

[பெரு→பேர் + அணிகலம்]

பேரணை *pēr-aṇai,* பெ. (n.) 1. பெரிய அணைக்கட்டு; big dam. 2. பெருந்தடை; great obstacle. *'சீர்த்த பேரணை தன்னையும் சிந்தின'* (கம்பரா.முதற்போர்.13.)

[பெரு → பேர் + அணை]

பேரத்தி *pēr-atti,* பெ. (n.) நரிமுள்ளிச்செடி; indian night shade.

பேரதிர்ச்சி *pērathircci,* பெ. (n.) பெருந்திகில்; great shock

[பெரு→பேர் + அதிர்ச்சி]

பேரநீதி *pēra-nithi,* பெ. (n.) பெருஅநீதி; great injustice.

[பெரு→பேர் + skt a-niti. *த.அநீதி]*

பேரப்பன் *pēr-appaṉ,* பெ. (n.) தந்தையின் தமையன்(s.i.i.ii,94,20.); father's elder brother.

[பேர் + அப்பன்]

பேரப்பிள்ளை *pēra-p-piḷḷai,* பெ. (n.) *பேரன்,* பார்க்க; see *pēraṉ.*

[பேரன் + பிள்ளை]

பேரம்[1] *pēram,* பெ. (n.) **1.** விற்பனை sale, trade. **2.** ஒப்பந்தத்திற்கு முன்பேசும் விலைப்பேச்சு; bargaining higgling and haggling. 'பேரஞ் சொல்லாமற் சரியாக சொல்லு **3.** அருவிலை; high value.

skt. bēra. தெ. பேரமு; க.பேர

[பெயரம்–பேரம்]

பேரம்[2] *pēram,* பெ. (n.) **1.** வடிவம் (நன். 273,மயிலை.); form, shape. **2.** உடம்பு; body. **3.** (விக்கிரகம்) திருவுருவச்சிலை; idol. ***'உத்சவ பேரம்'***

[பேர்→பேரம்]

பேரம்பலம் *pēr-ambalam,* பெ. (n.) தில்லைத் திருக்கோயிலிலுள்ள பெருமன்றம்; sacred hall in chidambaram. ***'சேயவன் திருப்பேரம்பலம்'*** (பெரியபு. பாயி.8.)

[பெரு→ பேர் + அம்பலம்]

பேரம்பேசுதல் *pēram-pēšudal,* பெ. (n.) *பேரம்*[1] பார்க்க, see *pēram*[1]

[பேரம் + பேசுதல்]

பேரமட்டி *pēramaaṭṭi,* பெ. (n.) *பேராமுட்டி.* பார்க்க; see *pērāmuṭṭi* (யாழ்.அக.)

[பேராமுட்டி,–பேரமட்டி]

பேரமுட்டி *pēramutti,* பெ. (n.) *பேராமுட்டி* பார்க்க; see *pērāmuṭṭi* (யாழ்.அக.)

[பேராமுட்டி – பேரமுட்டி]

பேரரசன் *pēr-arašaṉ,* பெ. (n.) பேரரசை ஆளும் மன்னன்; மாமன்னன்; emperor.

[பேர்+ அரசன்]

பேரரசு *pēr-arašu,* பெ. (n.) பல நாடுகளைக் கொண்ட பரந்த நிலப்பரப்பைத் தன் நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டு ஆட்சி நடத்தும் அரசு; empire.

[பேர்+ அரசு]

பேரரத்தை *pēr-arattai,* பெ. (n.) மருந்துச் செடிவகை,(பதார்த்த.984.) big galangal.

[பெரு → பேர்– அரத்தை]

பேரவை *per-avai,* பெ. (n.) **1.** சட்டமன்றம்; legislature assembly. **2.** குறிப்பிட்ட ஒரு தரப்பினர் தங்களுக்காக ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பு: forum, union. மாணவர் பேரவை, தொழிற்சங்கம் பேரவை.

பேரவைத்தலைவர் *pēr-avai-t-talaivar,* பெ. (n.) மக்களவை, மாநிலங்களவை, சட்டமன்றம் ஆகியவற்றில் அவை நடவடிக்கைகளை நடுவர் போல் இருந்து நடத்திடும் பொறுப்புவகிப்பவர்; speake of the parliament or the state legislative assembly.

[பேரவை + தலைவர்]

பேரருவி *pēr-aruvi,* பெ. (n.) பெரிய அருவி; (சூடா.) huge waterfall

[பெரு→ பேர் + அருவி]

பேரருளாளன் *pēr-aru!-āḷaṉ,* பெ. (n.) **1.** மிக்க இரக்கமுள்ளவன்; most gracious one, as god *'பேரருளாளர் போலும்'* (தேவா.439,1.) **2.** சின்ன காஞ்சீபுரத்திற் கோயில் கொண்டுள்ள திருமால் (குருபரம்.170.); visṇu, as worshipped at little conjeevaram.

[பெரு→ பேர் + அருளாளன்]

பேரருளுடைமை *pēr-aruḷ-uḍaimai,* பெ. (n.) சிவனெண் குணத்துள் ஒன்றாகிய மிகுந்த அருளையுடைமை(குறள்,9,உரை.) being of boundless grace, one of šivaṉ-eṇ-guṇam, q.v.

[பெரு→ பேர் + அருளுடைமை]

பேரலை *pēr-alai,* பெ. (n.) கடலின் தோன்றும் பெரிய அலை; ground-swell.

[பெரு→ பேர் + அலை]

பேரவ்வை *pēr-avvai,* பெ. (n.) பெரியதாய்(தல்); elder maternal aunt.

[பெரு→ பேர் + அவ்வை]

பேரவரை *pēr-avarai,* பெ. (n.) அவரை வகை(வின்); a large species of Egyption bean

[பெரு→ பேர்+ அவரை]

பேரவியல் *pēr-aviyal,* பெ. (n.) பெரும்பொங்கல்:(யாழ்ப்.) cooking rice on a large scale, as for a company of religious mendicants.

[பெரு→ பேர் + அவியல்]

பேரழகு *pēralaku,* பெ. (n.) பொலிவான அழகு; good looking.

[பெரு→ பேர் + அழகு]

பேரழை–த்தல் *pēr-aḻai,* செ.கு.வி. (v.i.) வருகைக் கணக்கெடுத்தல்(புதுவை); to take the roll-call or attendance.

[பேர் + அழை–,]

பேரளவு *pēr-aḷavu,* பெ. (n.) **1.** பேரறிவு; great wisdom. *'பேரளவுடைய அர்ஜுனன்'* (ஈடு,2,8,6.) **2.** பெருஞ்சிறப்பு; great respect. *'ஆர்புனை வேந்தற்கப் பேரளவியற்றி'* (மணிமே.5,116.) **3.** பெருமளவு; large quantity.

[பெரு→பேர் + அளவு]

பேரறம் *pēraram,* பெ. (n.) *பேய்க்கொடை* பார்க்க; see *peykkodai.*

[பெரு→பேர் + அறம்]

பேரருவி

பேரறிவாளன் *pēr-arivāḷaṉ,* பெ. (n.) உயர்ந்த அறிவுடையவன்;person of mature under standing, wise man. '*உலகவாம் பேரறி வாளன் திரு*' (குறள்,215.)

[பெரு→பேர் + அறிவாளன்]

பேரறநூல் *pērara-nul,* பெ. (n.) திருமறைநூல்; moral instruction look. திருக்குறள் இனம், மொழிபாகுபாடின்றி அனைவருக்கும் பொதுவான பேரற நூலாகும்.

[பெரு→பேர் + அறநூல்]

பேரறநெறி *perara-neeri,* பெ. (n.) நயன்மைநெறி; moralethics.திருக்குறள் அனைத்து மொழியினர்க்கும் நயன்மை கூறும் அற நூலாகும்.

[பேரறம் + நெறி]

பேரறிவு[1] *pēr-arivu,* பெ. (n.) தீமை செய்தார்க்கும் தீமை செய்யாதிருக்கும் நல்லறிவு; good-sense. **2.** அறிவினுள் எல்லாந் தலையென்பதீயசெறுவார்க்கும் செய்யாவிடல்.(கு.203).

[பெரு→பேர்+ அறிவு]

பேரறிவு[2] *pēr-arivu,* பெ. (n.) **1.** பகுத்தறிவு; sense of discrimnation. **2.** நூலறிவு; divine knowledge; spiritual knowledge **3.** மூதறிவு; uncommon mental powers, high mental attainments; great wisdom. '*தம்பேரறிவு தோன்ற நல்லந்துவனார் செய்யுட்செய்தார்*' (கலித்.142,உரை.)

[பெரு→பேர் + அறிவு]

பேரறிவுத்திறம் *pērarivu-t-tiram,* பெ. (n.) பகுத்தறிவுத்திறம்; knowledge of common sense.

[பேரறிவு + திறம்]

பேரறுகு *pēr-arugu,* பெ. (n.) அறுகுவகை(வின்); elephant bermuda grass.

[பெரு→பேர் + அறுகு]

பேரன் *pēraṉ,* பெ. (n.) **1.** மகன் அல்லது மகளின் மகன்; grandson, as bearing the grandfather's name. **2.** பாட்டன்; grandfather '*உங்கள் பேரனார்தந் தேசுடை யெழுத்தே யாகில்*' (பெரியபு.தடுத்தாட்.60.)

[பெயரன்–பேரன்]

பேராசிரியர்[1] *pēr-āśiriyar,* பெ. (n.) தொல்காப்பியத்திற்கும் திருக்கோவையார்க்கும் உரையிட்ட ஆசிரியர்; a commentator of Tolkāppiyam and Tiru-k-kōvaiyār.

[பெரு→பேர் + ஆசிரியர்]

பேராசிரியர்[2] *pēr-āśiriyar,* பெ. (n.) பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் பணியாற்றும் உயர்நிலைப் பதிவுபெற்ற ஆசிரியர்; professor. தேவநேயப்பாவாணர் சேலம் நகராண்மைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். (உ.வ.)

[பெரு(மை)→பேர் + ஆசிரியர்]

பேராசிரியை *per-āsiriyai,* பெ. (n.) பெண் பேராசிரியர்; women professor.

பேராசிரியன் ஆ.பா
பேராசிரியை பெ.பா.

பேராசை *pēr-ācai,* பெ. (n.) 1. பெருவிருப்பம்; intense desire. *'பேராசை வாரியனை'* (திருவாச.8,2.) 2. மிக்க பொருளாசை; avarice, *'பேராசைக் காரனைப் பெரும்புளுகன் வெல்லுவான்'*

[பெரு → பேர் + ஆசை]

பேராசைக்காரன் *pērašai-k-kāraṉ,* பெ. (n.) பொருளாசை கொண்டவன்; avarice perspm.

"பேராசைக் காரனடா பார்ப்பான்"

[பேராசை + காரன்]

'காரன்' வினைமுதணர்த்தும் ஆண்பாலீறு

பேராட்டி *pēr-aṭṭi,* பெ. (n.) பெருமையுடையவள்; lady of ominence. *'பேராட்டி சீராட்டும் பிள்ளையார்'* (கோயிற்பு.பாயி.7.)

[பெரு→பேர் + ஆட்டி]

'ஆட்டி' பெ. பா. ஈறு.

பேராண்டி *pēr-āṇḍi,* பெ. (n.) பேரன்; grandson

[பேர் → பேரன் → பேரான் → பேராண்டி]

பேராண்டு *pēr-āṅḍu,* பெ. (n.) அறுபது ஆண்டு (வருடங்) கொண்ட காலம் (வின்); jupiter cycle of 60 years.

[பெரு – பேர், பேர் + ஆண்டு]

'யாண்டு → ஆண்டு

பேராண்முல்லை *pēr-āṇ-mullai,* பெ (n.) சினமிக்க மன்னன் போர்க்களத்தைக் கைக் கொண்டதைக் கூறும் புறத்துறை;(பு.வெ.8,26.) (purap) theme describing a wrathful king becomming master of the situation in a battle- field.

[பெரு →பேர்+ ஆண் + முல்லை]

பேராண்மை[1] *pēr-āṇmai,* பெ. (n.) விளைத்திறம்(வல்லமை); manly strenth.

[பெரு → பேர் + ஆண்மை]

பேராண்மை[2] *pēr-āṇmai,* பெ. (n.) 1. மிக்க வீரம்; great valour or prowess; heroism. 'போரண்மை என்ப தறுகண்' (குறள் 773) 2. மானம்; honour. "பேராண்மை வேண்டுபவர்" (குறள்,962) 3. அரிய வீரச் செயல்(திவா); heroic exploit, feat of arms.

[பெரு→பேர்+ஆண்மை]

பேராண்வஞ்சி *pēr-āṇ-vañji,* பெ. (n.) பகைவர் பொரும் செருவைத்தொலைத்த தலைமை யையுடைய வீரர்க்குப் பெரிதுங் கொடுத்தலைக் கூறும் புறத்துறை;(பு.வெ.3,9.) theme describing gifts made to soldiers who put the enemy's army to rout.

[பெரு→பேர் + ஆண் + வஞ்சி]

பேராத்தி *pēr-ātti,* பெ. (n.) *தும்பை*[1] பார்க்க;(சங்.அக) see *tumbai*[1] white dead nettlce.

[பேர்+ஆத்தி.]

பேராந்தை *pēr-āṇdai,* பெ. (n.) 1. நிலாமுகிப்புள் (பிங்); greek partridge. 2. ஆந்தைவகை; rock-horned owl. *'மலையின்கட் பேராந்தை யோடு கூடி யொலிக்கும்'* (புறநா.170,உரை)

[பெரு →பேர்+ஆந்தை]

பேராப்பணம் *pērāppaṇam,* பெ. (n.) 1. கணக்கின் விடை; solution of a mathematical problem 2. தீர்ந்த முடிவு; net result 3. நிகர ஊதியம் (லாபம்); net profit

[பெயர் →பேர்+ஆ+பணம்] 'ஆ' எதிர்மறை இடைநிலை



பேரலை

பேராபத்து *pērāpattu,* பெ. (n.) பெருமிடர்; great misfortune.

[பெரும் + skt.a-pad. *த.ஆபத்து]*

பேராமட்டி *pērā-matti,* பெ. (n.) *பேராமுட்டி* பார்க்க;(யாழ்.அக) see *pērāmutti*

[பேராமுட்டி– பேராமட்டி]

பேராமணக்கு *pēr-āmaṇakku,* பெ. (n.) *ஆமணக்கு;*(மூ.அ) castor plant. பார்க்க; see *āmaṇakku.*

[பெரு–பேர்+ஆமணக்கு]

பேராமல்லி *pēr-ā-malli,* பெ. (n.) **1.** *பேராமல் லிகை*(வின்) பார்க்க; see *pērāmalligai* **2.** கொத்த மல்லிவகை;(மூ.அ) a kind of coriander.

[பெரு–பேர்+ஆ+மல்லி]

பேராமல்லிகை *pēr-ā-malligai,* பெ. (n.) **1.**பெருமல்லிகை; single flowered a rabian jasmine.

[பெரு → பேர்+ஆ + மல்லிகை]

பேராமுட்டி *pēr-ā-mutti,* பெ. (n.) **1.** செடிவகை (பதார்த்த.**469**) ; pink-tinged white sticky mallow

[பெருமை + ஆ + முட்டி]

பேராயம் *pēr-āyam,* பெ. (n.) *எண்பேராயம்* (திவா)பார்க்க; see *eṇpērāyam,* the eight groups of retinues.

[பெரு →பேர்+ஆயம்]

பேராயிரம் *pēr-āyiram,* பெ. (n.) இறைவனுக் குள்ள ஆயிரம் பெயர்கள்(தேவா.**896.5**); the thousand names of any particular deity.

[பேர் + ஆயிரம்]

பேரார்வம் *pēr-arvam,* பெ. (n.) மிகுவிருப்பம்; burning desire.

[பெரு → பேர் + ஆர்வம்]

பேராரம் *pēr-āram,* பெ. (n.) முத்தாலான அணிகலவகை; a large necklace of pearls. *'நிலவுவீசு பேரார நிபுடமாலை'* (தக்கயாகப்.**106.**)

[பெருபேர் + ஆரம்]

பேராரால் *pēr-āral,* பெ. (n.) இரண்டடிநீளம் வளர்வதும் பழுப்பு நிறமுள்ளதுமான மீன்வகை (பதார்த்த.**919**); thorny backed eel, rich brown, attaining more than **2**ft.in.length

[பெரு →பேர் + ஆரல்→ஆரால்]



பேராலவட்டம் *pēr-ālavaṭṭam,* பெ. (n.) பெரியவிசிறிவகை; a large, ornamental, circular fan. (பிங்.) (சீவக.**1906,** உரை)

[பேர்+ஆலவட்டம்]

பேராவல் *pēraval,* பெ. (n.) வேணவா; earnest desire.

[பெரும்+ஆவல்]

பேராளன் *pēr-āḷaṉ,* பெ. (n.) 1. பெருமையுடையவன்; renowned personage. *'உம்பராளும் பேராளன்'* (திவ்.பெரியதி,7,4,4.) 2. பல பெயர்களைப் பெற்றவன்; one who bears several names. "பேராளன் பேரோதும் பெரியோரை'' (திவ். திருநெடுந்.20) 3. 5ஆவது விண்மீன் (பிங்); the fifth makṣatra 4. 4ஆவது விண்மீன்;(சூடா) nakṣatra

[பேர்+ஆளன்]

பேராளி *pēr-āḷi,* பெ. (n.) 1. ஒருவன் பெயரைக் கொண்டவன்–வள்; namesake 2. புகழ் வாய்ந்தவன்–வள்(யாழ்.அக); famous person.

[பேர்+ஆளி]

'இ' வினைமுதலீறு

பேராற்றல் *pērār-artal,* பெ. (n.) போரிடும் ஆற்றல்; superior skill great power.

[பெருமை + ஆற்றல் → பேராற்றல்]

பேராறு *pēr-āṟu,* பெ. (n.) 1. மலையிற் பிறந்து கடலில் நேரே கலக்கும் நீரோட்டம்; river rising in a mountain and emptying into a sea. 2. மேல்கடலிற் கலக்கும் ஓர் ஆறு; a river flowing west-wards from the western ghats. *'அரசன் பேராற்றங் கரையினின்று போந்து'* (சிலப்.25, 180, அரும்.) 3. கிருட்டிணா நதி; the river krishā "நிறைந்து வரும் பேராறு மிழிந்து" (கலிங்.355)

[பெரு→பேர்+ ஆறு]

பேரானந்தம் *pēr-āṉandam,* பெ. (n.) மேலான மகிழ்ச்சி (பரமானந்தம்); supreme bliss. *'பற்றிய பேரானந்தம் பாடுதுங் காணம்மானாய்'* (திருவாச.8,28)

[பெருமை + skt.ā-nanda. த.ஆனந்தம்]

பேரி[1] *pēri,* பெ. (n.) 1.முரசு; kettle-drum. *'சங்குபேரி முழங்கிய தானையே'* (கம்பரா.எழுச்.28) 2. பறை(வின்);drum

[பெரு→பேர் → பேரி]



பேரிகை *pērigai,* பெ (n.) *பேரி*[1] (சிலப்.3.27.உரை) பார்க்க; see *perī*[2]

skt bhērikā

[பேரி + பேரிகை]

'இகை' சொல்லாக்க ஈறு

பேரிசு *pērigai,* பெ (n.) 1. கணக்கின் மொத்தத்தொகை; sum or aggregate of an account. 2. ஊரார் கட்டும் மொத்தவரி; total amount of a revenue assessment.

[பெரு→பேரி → பேரிசு]

பேரிசை *pēr-iśai,* பெ. (n.) 1. பெரும்புகழ்; great renown. *'பேரிசை நன்னன்'*

(மதுரைக்.618) 2. கடைச்சங்கத்து வழங்கிய ஓர் இசை நூல் (இறை.5 உரை); a treatise on music, of the last saṇgam, not now extant.

[பெரு → பேர்+ இசை]

பேரிடர் *pēritar,* பெ. (n.) பெருந்துன்பம்; great trouble.

[பெரு → பேர் + இடர்]

பேரிடு–தல் *pēir-iḍu-,* செ.கு.வி. (v.i.) பெயரிடு–தல் பார்க்க; see peyariḍu '*மானிட சாதியின் பேரிடு மாதர்காள்*'. (திவ்.பெரியாழ்.4,6,2)

[பெயிரிடு – தல் → பேரிடு – தல்]

பேரியம் *pēriyam-,* பெ. (n.) *பேரி*[1] பார்க்க; see *pēri* '*பேரியங்கண் முருடாகுளி*'. (கம்பரா. இராவ.தானை.12.)

[பெரு → பேர் + இயம்]

பேரியல் *pēr-iyal,* பெ. (n.) பெருந்தன்மை; noble character.'*தில்லைப் பேரியலூரார்*'. (திருக்கோ.311.)

[பெரு → பேர் + இயல்]

பேரியல்பு *pēr-iyalpu,* பெ. (n.) கெழுதகைமை; good manner.

[பெரு → பேர் + இயல்பு]

பேரிரக்கம் *pēr-irakkam,* பெ. (n.) கழிவிரக்கம்; repentance.

[பெரு → பேர் + இரக்கம்]

பேரியற் காஞ்சி *pēr-iyar̤-kāñji,* பெ. (n.) கேட்டினியல்புகளைப் புலவர் எடுத்துக் கூறுந்துறைவகை (திவா); theme in which a poet describes the nature of evil

[பெரு→பேர் + இ+காஞ்சி]

பேரியாழ் *pēriyāl,* பெ. (n.) 1. நால்வகை யாழ்களுள் இருபத்தொரு நரம்புள்ளது (சிலப்.3,26.உரை); a lute of r̤ā strings, one of four yāḷ.

[பெரு→பேர்+யாழ்]

பேரியாறு *pēr-i-yār̤u,* பெ. (n.) 1. *பேராறு*1,2 பார்க்க; see *pērwnār̤u*1,2 2. கங்கைப் பேரியாற்று (சிலப்.28,121) பெருமலை விலங்கிய பேரியாற்றடைகரை (சிலப்.25,22).

[பெரு→பேர்+யாறு]

பேரிரவல் *pēriraval,* பெ. (n.) மாற்றுப் பெயரில் இலங்குதல்; benami transaction (loc)

[பெயர்→பேர் + இரவல்]

பேரிரைச்சல் *pērai-chal,* பெ. (n.) பெருங்கூச்சல்; uproar.

[பெரு→ பேர்+ இரைச்சல்]

பேரிருக்கை *pērirukkai,* பெ. (n.) *தோணா முகம்*(வின்) பார்க்க; see *tōṇāmugam,*town surrounded by a moat

[பெரு – பேர் + இருக்கை]

பேரிரைப்பை *pēriraippai,* பெ. (n.) அசை போடும் விலங்குகளின் மேல் வயிறு(கால்.வி.); first stomach of ruminants, rumen

[பெரு → பேர் + இரைப்பை]

பேரிரையான் *pēr-iraiyān,* பெ. (n.) மிகுதியாக உண்போன்; glutton. *'நிற்குங் கழிபே ரிரையான்க ணோய்'* (குறள்.946)

[பெரு →பேர் + இரையான்]

பேரில் *pēri,* இடை (prep.) 1. மீது; on, about. அவன் பேரில் குற்றமில்லை. 2. பிறகு; after. அவன் சொன்னதன்பேரில் வந்தான்

[பேர் → பேரில் 'இல்' (ஐந்தாம்வே.2. 62.2)]

பேரிலக்கம் *pērilakkam,* பெ. (n.) பின்னமல்லாத முழுவெண்; integer,whole number.

[பெரு→பேர் + இலக்கம்]

பேரிழப்பு *pērilappu,* பெ. (n.) மிகுந்த இழப்பு; great loss better loose.

[பெரும் → பேர்+இழப்பு → பேரிழப்பு]

பேரிழவு *pērilavu,* பெ. (n.) 1. மிகுந்த இழப்பு; great calamity. 2. தொல்லை (கொ.வ.); worry, bother.

[பெரு→பேர் + இழவு]

பேரிளம் பெண் *pērilam,pen* பெ. (n.) 1. எழுவகைப் பருவ மகளிருள் முப்பத்திரண்டு அகவைக்கு மேல் நாற்பது அகவை வரையுள்ள பெண் (பிங்); women between the ages of 32 and 40. 2. முப்பதுக்கு மேல் ஐம்பத்தைந்து வரை அகவையுள்ள பெண் (கொக்கோ.); women between the ages of 30 and 55.

[பெரு → பேர் + இளம் + பெண்]

பேரிளமை *pērilamai,* பெ. (n.) 1. இளமை தொடக்கம்; early period of youthfulness. "அணைந்த பேரிளமையாலே தனை நனிமதித்து" (திருவாலவா.13.15) 2. இளமை–முதுமை இடைப்பட்ட அகவை;middle age. "நகரத்தோமும் பேரிளமையோமும்" (s.I.I.i.65)

[பெரு→பேர் + இளமை]

பேரின்பம் *pērinbam,* பெ. (n.) 1. மேலான இன்பம் (பிங்); supreme bliess "அளவில் பேரின்பத் தடியரோ டிருந்தமை" (திவ். திருவாய். 10.3.11) 2. வீட்டின்பம்; heavenly bliss, salvation. "பேரின்பத் தோங்கும்..... நாதப்பறை" (திருவாச.198).

[பெரு→பேர்+இன்பம்]

பேரின்ப வாழ்வு *pērinba vālvu,* பெ. (n.) வீட்டுலக வாழ்வு; blissful life. "நம்முடனாம் பேரின்ப வாழ்வு சேர்வார்" (குஞ்சிப்பு.தழுவ.65)

[பேரின்பம் + வாழ்வு]

பேரீகம் *pērigam,* பெ (n.) 1. வட்டத்திருப்பி (மலை); Indian pareira 2. பிரண்டை(சங்.அக.) square. stalked vine.

பேரீச்சு *pēriccu,* பெ. (n.) *பேரீந்து*(பதார்த்த.525) பார்க்க; see *pērindu*

[பேரீந்து – பேரீச்சு]

பேரீஞ்சு *pērinju,* பெ. (n.) *பேரீந்து* பார்க்க; see *pērindu*

[பேரீந்து – பேரீஞ்சு]

பேரீந்து *pērindu,* பெ. (n.) ஈந்துவகை(சூடா.); date.palm

[பெரு→பேர் + ஈந்து]

பேரு[1] *pēru,* பெ. (n.) சிற்றூரில் நீர்பாய்ச்சு வோனுக்குக் கொடுக்கும் வரி(R.T); a fee paid to a person authorised to distribute water for irrigation

[பெரு – பேரு]

பேரு[2] *pēru,* பெ. (n.) **1.** கடல்; sea, ocean **2.** ஞாயிறு; sun **3.** தீ; fire **4.** பொன்மலை (யாழ்.அக.); Mt.Mēru.

skt. pēru

[பெரு – பேரு]

பேருண்டி *pēr-uṇḍi,* பெ. (n.) **1.** மிகுதியாயுட் கொள்ளும் உணவு (பிங்); gluttony. **2.** ஒரு நாளிற் கொள்ளும்இன்றியமையா உணவு; principal meal.

[பெரு→ பேர் + உண்டி]

பேருண்டிக்கலம் *pērunti-k-kalam,* பெ. (n.) பெருஞ்சமையல் ஏனம்; a big cooking vessel.

[பேருண்டி +கலம்]

பேருண்டிக்காரன் *pērunti-k-karan,* பெ. (n.) *பேருண்டியாளன்* பார்க்க; see *peruntiyalan.*

[பேருண்டி +காரன்]

பேருண்டியாளன் *pēr-uṇḍi-y-āḷaṉ,* பெ. (n.) மிகவுண்போன்;glutton.

[பேருண்டி + ஆளன்]

பேருண்டிவேட்கை *pērunti-vetkai,* பெ. (n.) பெருந்தீனி வேட்கை; voracity of appentite.

[பேருண்டி + வேட்கை]

பேருதவி *pērudavi,* பெ. (n.) பெருநன்றி; help in dire distress, great farour. "பேருதவிக் கைமாறா" (திவ்.திருவாய்.8,1,10)

[பெரு → பேர் + உதவி]

பேருபகாரம் *pērubakāram,* பெ. (n.) *பேருதவி* பார்க்க; see *pēr-udavi.*

[பெரு → பேர்+ skṭ. upa- kāra. த. உபகாரம்]

பேருவகை *pēruvagai,* பெ. (n.) பெருமகிழ்ச்சி; great joy.

[பெரும் → பேர் + உவகை]

பேருமரி *pēr-umari,* பெ. (n.) வழலையும்(சோப்பும்) கண்ணாடியுஞ் செய்ய உதவும் உமரிவகை;(யாழ்.அக.) a plant that yiedls a coarse kind of barilla for soap and glass.

[பெரு → பேர் + உமரி]

பேருயிர் *pēr-uyir,* பெ. (n.) **1.** கடவுள்; god, as Supreme Being. '*உண்டுமிழ்ந்தளந்த பேருயிரேயோ*" (திவ்.திருவாய்8.1.5) **2.** பெருங்காற்று;(தைலவ.தைல) boisterous wind

[பெரு → பேர் + உயிர்]

பேருரியோன் *pēruuriyōṉ,* பெ. (n.) தோல்வினைஞன்; cobbeer (தைலவ.தைல)

[பெரு→பேர் +உரி→உரியோன்]

பேருறக்கம் *pēr-urakkam,* பெ (n.) 1. பெருந்தூக்கம்; sound sleep. *'ஈதென்ன பேருறக்கம்'* (திவ்.திருப்பா.12) 2. இறப்பு; death. "உறங்கினார் பேருறக்கங் கொண்டார்" (அருட்பா.1.நெஞ்சறி. 477).

[பேர் +உறக்கம்]

பேரூர் *pēr-ūr,* பெ. (n.) 1. நகரம்; city *'காவலன் பேரூர் கனையெரி யூட்டிய'* (மணிமே.2,54) 2. மருத நிலத்தூர் (இறை.கள.1,19); large town in an agricultural tract. 3. கோயம்புத்தூர் மாவட்டத்து அமைந்த சிவன் கோயில் a siva shrine in coimbatore District *கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர்'* (பெரியபு. ஏயர்கோன்.88)

[பெரும் + ஊர் → பேரூர்]

பேரூர்ப்புராணம் *pērūr.p.purāṇam,* பெ. (n.) கோயம்புத்தூர் மாவட்டத்திள்ள பேரூர்ச் சிறப்பைப் பற்றிக் கச்சியப்ப முனிவரியற்றிய தொன்மம்; a purāṇam in verse on pērūr in coimbatore district, by kacciyappa . muṉivar.

[பேரூர் + புராணம்]

பேருழைப்பு *pērulaippu,* பெ. (n.) பெரும்பாடு; great strain.

[பெரு→ பேர் + உழைப்பு]

பேருள்ளம் *pēr-ullam,* பெ. (n.) பெருந்தகைப்பண்பு; charity mind.

[பெரு→ பேர் + ஊக்கம்]

பேரெடு–த்தல்[1] *pēr-eḍu,* செ.கு.வி (v.i.) புகழ்பெறுதல்; to become famous.

[பெரு→பேர் +எடு–,]

பேரெடு–த்தல்[2] *pēreḍu,* செ.குன்றாவி (v.i.) பட்டியலிலிருந்து பெயரை நீக்கி விடுதல்; to strike off the roll

[பெயர் + எடு–,]

பேரெண் *pēr-ṉen,* பெ. (n.) 1. பெருந்தொகை; high number 2. நாற்சீர் ஈரடியாய் வரும் அம்போதரங்கவுறுப்பு வகை (காரிகை, செய்.10 உரை); (pros.) a variety of ambōdaraṅgam consisting of double line of four feet each.

[பெரு→ பேர்+ எண்]

பேரெல்லை *pēr-ellai,* பெ. (n.) செய்யுளின் அடிப் பெருமைக்கு அமைந்த வரையறை; maximum limit, as of the number of lines in a verse, opp. to ciṟṟellai

[பெரு→ பேர்+ எல்லை]

பேரெல்லைவெண்பா *pēr-ellai-veṇbā,* பெ. (n.) எட்டடி வெண்பா(யாழ்.அக); a veṇba having eight lines.

[பேரெல்லை + வெண்பா]

பேரெலி *pēreli,* பெ. (n.) பெரிய எலிவகை; a kind of large rat பன்மயிர்ப்பேரெலி (சீவக. 1898)

க.பேரிலி

[பெரு→ பேர் + எலி]

பேரெலுமிச்சை *pērelumiccai,* பெ. (n.) எலுமிச்சை வகை; citron lemon.

[பெரு→ பேர் + எலுமிச்சை]

பேரெள் *pērel,* பெ. (n.) எள்வகை; a species of large sesame.

[பெரு→ பேர்+ எள்]

பேரேடு *pērēḍu,* பெ. (n.) பேர்வழி இனக்கணக்கு; ledger.

[பெரு → பேர் + ஏடு]

பேரேலம் *pērēlam,* பெ. (n.) ஏலவகை; great cardamom.

[பெரு → பேர் + ஏலம்]

பேரேற்ற பண்டாரம் *pērḍērrāpaṇram,* பெ. (n.) தமிழ்ச் சிவனிய வேளாளருக்குத் திருவாங்கூர் அரசர் வழங்கும் பட்டப்பெயர்(நாஞ்); a title conferred by the Travancore kinds on the Tamil šaiva vēḷāḷas

[பேர் + ஏற்ற + பண்டாரம்]

பேரை *pērai,* பெ. (n.) நீர்(அக.நி); water.

பேரொலி *pēroli,* பெ. (n.) பெருங்கூச்சல்; loud noice.

[பெரு→ பேர் + ஒலி]

பேரொளி *pēroḷi,* பெ. (n.) 1. மிகுந்த ஒளி; great light, lustre. "பேரொளியேசேர்வன" (திருவிருத்.14) 2. ஞாயிறு; sun 3. திங்கள்; moon. "பேரொளியைக் கூடி யரவங் கொள்ளுநாள்" (சைவச பொது.13) 4. கடவுள் god, as the supreme light. "சித்தாந்தப் பேரொளியை" (தாயு,பொருள்.2)

[பெரு → பேர் + ஒளி]

பேல்¹(லு)–தல் *pēl-,* செ.குன்றா.வி. (v.t.) செ.கு.வி. (v.i.) *பேள்* பார்க்க; *see pēḷ.*

[பீர் → பீல் → பேல்]

பேல்¹ *pēl,* பெ. (n.) விரைவு; speed, swiftness.

[பீர் → பீல் → பேல்]

பேல்² *pēl,* பெ. (n.) கால் நரம்பில் உண்டை கட்டும் குதிரை நோய்வகை; a horse-desease characterised by tumour in the leg. (அசுவசா. 117.)

பேலகம் *pēlakam,* பெ. (n.) தெப்பம்; (யாழ்.அக.) boat.

[பேல் → பேலகம்]

பேலம் *pēlam,* பெ. (n.) 1. விதை; testicle. 2. சிறுபங்கு; small portion or share. 3. போகை; going.

பேலவம் *pēlavam,* பெ. (n.) மெல்லியது; softness. (யாழ்.அக.)

பேலி *pēli,* பெ. (n.) குதிரை; *horse.* (சங்.அக.)

[பீல் → பேல் →பேலி]

பேலிகை *pēligai,* பெ. (n.) பேளிகை (சங்.அக.) பார்க்க; see pēligai.

[பேல் → பேலிகை]

பேழ் *pēl,* பெ. (n.) பெருமை (பிங்.); largeness, rastness

[பிள் → (பெல்) → பேழ்]
மு.தா. (பக்.216)

பேழ்கணி–த்தல் *pēḻkaṇi,* செ.கு.வி (v.i.) **1.** அஞ்சுதல்; to be afraid. "*உமையானவள் பேழ்கணிக்க..... விடமுண்டதென்னே*". (தேவா.**444,1**) **2.** கண்மூடுதல்; to close one's eyes, as in sleep. "பேழ்கணித்து.... துயில் கொண்டார்" (பெரியபு. திருநாவுக்.**275**) **3.** மருண்டு விழித்தல்; to stare in fear. '*பிற்பானின்று பேழ் கணித்தால்*' (திருவாச.**45,7**) **4.** *பேகணி* பார்க்க; see *pēlaṇi.*

[பேழ் + கணி]

பேழ்வாய் *pēḻ-vāy,* பெ. (n.) பெரியவாய்; large mouth. '*பிறழ்பற் பேழ்வாய்.... பேய் மகள்*'. (திருமுரு.**47**.)

[பெள்→ பேள்→ பேழ் + வாய்]
பேழ்வாய்= அகன்றவாய். மு.தா. (பக்–261)

பேழி *pēḻi,* பெ. (n.) புடைவை; saree (அக.நி)

[பிள் → பிளி → பேழி]

பேழை[1] *pēḻai,* பெ. (n.) பெருமை; largeness. '*பேழைவார் சடை*' (தேவா.**853,6**)

[பேழ் + ஐ]

பேழை[2] *pēḻai,* பெ. (n.) **1.** பெட்டி; chest, box, coffer, ark. **2.** கூடை(வின்.); basket.

[பேழ் + பேழை]

பேழைமரம் *pēḻai-maram,* பெ. (n.) பெரிய மரவகை; carey's myrtle-bloom.

[பேழை + மரம்]

பேள்(ளு)தல் *pēl,* செ.கு.வி. (v.i.) மலங்கழித்தல்; to ease oneself.

[பேல் → பேள்]

பேளிகை *pēlikai,* பெ. (n.) உண்டெஞ்சிய எச்சில் (பிங்.) ; food left on the plate ofter eating.

[பேழ் → பேள் → பேளிகை]

பேறக்காசி *pēṟakkāši,* பெ. (n.) நாய்முள்ளி (சங்.அக.); Indian nighshade.

பேறு *pēṟu,* பெ. (n.) **1.** பெறுகை; receiving, obtaining. '*மக்கட் பேறு*' (குறள்.**61**) **2.** அடையத்தக்கது; anything worth obtaining. 'விழுப்பேற்றி னஃதொப்ப தில்' (குறள்,**162**) **3.** ஊதியம் (பிங்.) ; profit, gain. **4.** அருட்கொடை (வின்.); boon, blessing. **5.** நன்கொடை; gift, prize, reward. **6.** பயன்; advantage, benefit, result **7.** தகுதி (வின்.); worth, merit, desert.**8.** மகப்பெறுகை; childbirth. **9.** முகத்தலளவையில் ஒன்றைக் குறிக்கும் சொல்; term meaning 'one' in measuring out grains. (தைலவ.தைல.) **10.** புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் ஆகிய பதினாறு வகைப்பட்ட செல்வம் (அபி.சிந்); acquisition, of which there are **16,** viz, pugaḻ, kalvi, veṟṟi, nan-makkḷ, poṉ, nel,nallūḻ, nugarcci, arrivu, aḻagu, perumai, iḷamai, tuṇivu, nōy-iṇmai, vāḻnāḷ **11.** செல்வம் (யாழ்.அக.); wealth. **12.** நல்லூழ் (யாழ்.அக.); good fortune.

13. நிலப்பயன்வகை(G.Tn.D.I.**189**); a kind of land tenure. **14.** இரை; prey, food. *'பேற்றொடாழ் புனன் மூழ்கியெழுந்திடும்புள்"* (இரகு.திக்குவி.**62.**)

[பெறு → பேறு]

பேறுகாலம் *pēṟu-kālam,* பெ. (n.) மகப் பெறுங்காலம்; time of parturition or delivery.

[பேறு + காலம்]

பேன் *pēṉ,* பெ. (n.) தலை முடியிலுண்டாகும் சிற்றுயிரி; louse; pediculi. "*ஈரும் பேனுமி ருந்திறை கூடி*" (பொருந.**79**)

பேன்குத்து-தல் *pēṉ-kuttu,* செ.கு.வி. (v.i.) பேனை நசுக்குதல்(வின்.); to crackor crush lice

[பேன் + குத்து-தல்]

பேன்கொட்டை *pēṉ-koṭṭai,* பெ. (n.) *காக்காய் கொல்லி* பார்க்க; see *kākkāy-kolli.* cocculus - indicus.

பேனம் *pēnam,* பெ. (n.) நுரை; froth, foam, *'பேன வெண்குடையவாய'* (கம்பரா. பிரமாத்.**145**)

பேனவாகி *pēnavāki,* பெ. (n.) இடி; thunder. (யாழ்.அக.)

பேனன் *pēṉaṉ,* பெ. (n.) **1.** கதிரவன்; sun **2.** திங்கள்; moon. (யாழ்.அக.)

பை[1] *pai,* தமிழ்நெடுங்கணக்கில் 'ப்' என்ற மெய்யும் 'ஐ' என்ற உயிரும் சேர்ந்து உருவான உயிர்மெய் எழுத்து; the compound of 'ப்' and 'ஐ'

[ப் + ஐ = பை]

பை[2] *pai,* பெ. (n.) **1.** பசுமை (பிங்.); greeness, freshness. **2.** நிறம் (வின்.); colour **3.** இளமை; youth. *'பைதீர் பாணரொடு'* (மலைபடு.**40**) **4.** அழகு; (திவா.) beauty. *'பைவண்ண மணிக்கூடந்தனில்'* (பாரத. கிருட்டிணன்.**33**) **5.** உடல்வலி; strength, vigour, *'நும் பைதீர் கடும் பொடு'* (பெரும் பாண்.**103**)

[பசு → (பசி) → (பயி) → பை → பை] மு.தா. (பக்.45)

பை[3]-த்தல் *pai,* செ.கு.வி. (v.i.) **1.** பசுமை யாதல்; to become green or greenish. (சூடா.) **2.** விளங்குதல்; to look bright *'பைத்த சோதி'* (தக்கயாகப்.**467**)

[பசு → (பசி) → (பயி) → பை → பை] மு.தா. (பக்.45)

பை[4] *pai,* பெ. (n.) **1.** துணிதோல் முதலிய வற்றால் அமைந்த கொள்கலம்; sack, purse, satchel. "*தோற்பையுணின்று ......கூத்தன் புறப்பட்டக் கால்*" (நாலடி.**26**) **2.** பாம்புப்படம்; hood of a cobra. *'அரவம்.....பைவிரித்தென'.* (மணிமே.**20, 1054**) **3.** சிறுநீர்ப்பை முதலிய உடலுள்ளுறுப்பு; bladder, duct, pouch, as in animal bodies. **4. 500** அல்லது **1000** உரூபா. இரண்டு பை அந்தப் பாவலர் பெற்றார் (உ.வ.)

பை⁵–த்தல் *pai,* பெ. (n.) **1.** விரித்தல்; to spread the hood, as a bobra. *'பைத்த பாம்பின் நத்தி யேப்ப'* (பெருந.**69**) **2.** சினங்கொள்ளல்(பிங்.); to be angry **3.** பொங்குதல்; to be tumultuous, as the sea. *'பைத்தாவத் திரை சிந்திய... நித்திலம்* (சீவக.**1766.**) **4.** மிகுதல் (அக.நி.); to be excessive. *'பைத்தபல் பீடை'* (விநாயகபு.**73,36**)

[பை → பை–த்தல்]

பைக்கம் *paikkam,* பெ. (n.) *பயிக்கம்(வின்.)* பார்க்க, *see payekkam.*

[பயிக்கம் → பைக்கம்]

பைக்கலம் *pai-k-kalam,* பெ. (n.) பச்சைக் குப்பி; green flask. கள்ளினிரும் பைக்கலம். (மதுரைக்.**228.**)

[பை + கலம்]

பைகிரி *paikiri,* பெ. (n.) நாய்; dog (சங்.அக.)

பைகோமட்டம் *paikō-maṭṭam,* பெ. (n.) மட்டக்குதிரைச் சாதிவகை; pegu pony. *'பைகோ மட்டங்களாக'* (பிரதாப.விலா.**18**)

பைகோவைச்சிவப்பு *paikōvai-c-civappu,* பெ. (n.) ஒரு வகைச் சிவப்பு மணி; pegu ruby.

பைங்கண் *pai-k-kaṇ,* பெ. (n.)**1.** குளிர்ந்த கண்; tender eye. *'பைங்கண்ணன் புன் மயிரன்'* (இறை.**1**.பக்.**7**) **2.** பசியவுடம்பு; tenderbody. *'பைங்கண் மாஅல்'* (பரிபா.**3,82**) **3.** சினத்தால் பசிய கண்; eye fuming with anger. (பரிபா.**5,27**) **4.** பச்சென்ற விடம்; fresh, green spot. ''பைங்கட் புனத்த பைங்கூழ்.'' (குமர.பிர.நீதிநெறி.**61**)

[பை + கண்]

பைங்கிளி *pai-ṅ-kiḷi,* பெ. (n.) **1.** பச்சைக்கிளி; parrot with green plumage *'பைங்கிளிப் பாய்கலை....கொற்றவை.'* (பு.வெ.**1,20.**) **2.** அழகிய இளம் பெண்; young, beautiful lady.

[பை + கிளி]

பைங்கால் நிலம் *pai-ṅ-kāl-nilam,* பெ. (n.) நன்செய்நிலம்; wet field. "பைங்கால் நிலத்தைப் பருமரக் காடென்று" (சரவண. பணவிடு.**142**

[பைங்கால் + நிலம்]

பைங்கிணறு *pai-ṅ-kiṉaṟu,* பெ. (n.) குட்டை (S.I.I.vii,**41**); small pond.

[பை + கிணறு]

பைங்குலைத்தாரு *pain-kulaitaru,* பெ. (n.) இளநீர்க்குலை; cluster of tender coconet. *'பத்திபட நிறைத்த பைங்குலைத் தாரும்* (பெருங்.**2;2:176**).

[பை + குலை + தாறு]



பைங்குழி *pai-n-kuli,* பெ. (n.) கருத்தங்கும் இடம்; womb. (பிங்.)

[பை + குழி]

பைங்கூதாளம் *painku-talam,* பெ. (n.) பசிய தூதுவளை; green climbing bringan. *"பைங்கூ தாளமும் வெண்பூஞ்சள்ளியும்"* (பெருங்.2:12:22)

[பை + கூதாளம்]

பைங்கூழ் *pai-ṅ-kūl,* பெ. (n.) 1. இளம்பயிர்; tender crops. *'பைங்கூழ் களைகட் டதனெடு நேர்'* (குறள்.550) 2. விளைநிலம்' cultivated land. *'உமிழ்வோ டிருபுலனுஞ் சோரார்'* (ஆசாரக்.33) 3. நோய்; (சது.) disease.

[பை + கூழ்]

பைங்கூன் *painkūn,* பெ. (n.) *காவட்டம் புல்;(சங்.அக.)*பார்க்க; see *kāvatham-pul citronella grass.*

[பை + கூன்]

பைங்கேழ்க்கலிங்கம் *painkel, k-kalinkam,* பெ.(n.) பசியநிற ஆடை; green cloth *"பைங்கேழ்க் கலிங்கமும் பட்டுத் தூசும்'* (பெருங்.1:42:207).

[பை + கேழ் + கலிங்கம்]

பைங்கேழ்த்தாமம் *painkel-t-tamam,* பெ. (n.) பசிய நிறமுடைய மாலை; green garland *'பைங்கேழ்த் தாமம் பக்கம் வளைகு'* (பெருங்.2:16:145).

[பை + கேழ் + தாமம்]

பைங்கொடி *pai-ṅ-kodi,* பெ. (n.) 1. பச்சிலைக் கொடிவகை; a fragrant creeper, *'பைங்கொடி நறைக்காய்'* (திருமுரு.190) 2. பெண்; woman.

[பை + கொடி]

பைசந்தி *pai-šandi,* பெ. (n.) *பைங்குழி* பார்க்க (பிங்.); *see painkuli.*

[பை + சந்து → பைசந்தி]

பைசாரம் *paicāram,* பெ. (n.) இருப்பிட வட்டாரம்; locality. *'கச்சிப்பேட்டுக் கீழைப் பைசாரத்து'.*

[பிசாரம் → பைசாரம்]

பைசு *paicu,* பெ. (n.) பால்; milk. (சா.அக.)

[பிசு → பைசு]

பைசுனம் *paicuṇam,* பெ. (n.) 1. கருசத்தனம்; miserliness, niggardliness. 2. புறங்கூறுகை; backbiting. (சங்.அக.)

[பிசுனம்→ பைசுனம்]

பைஞ்சாய் *pai-ñ-cāy,* பெ. (n.) *பஞ்சாய்*[1] பார்க்க; *see pañjāy* *'பைஞ்சாய்ப் பாவை யீன்றனென் யானே'* (ஐங்குறு.155)

[பை + சாய்]

பைஞ்சேறு *pai-ñ-cēru,* பெ. (n.) சாணம்; cowdung, as greenish. *'பைந்சேறு மெழுகிய படிவ நன்னகர்'* (பெரும்பாண்.298)

[பை + சேறு]

பைஞ்ஞிணம் *pai-ñ-ñiṇam,* பெ. (n.) புதிய இறைச்சி: fresh meat. '*பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் ளமலை*' (புறநா.177)

[பை + நிணம் → ஞிணம் → பைஞ்ஞிணம்]

பைஞ்ஞீல் *pai-ñ-ñīl,* பெ. (n.) *பைஞ்ஞீலம்* (திவா) பார்க்க; *see pai-ñ-ñilam.*

[பைஞ்ஞீலம் → பைஞ்ஞீல்]

பைஞ்ஞீலம்[1] *pai-ñ-ñilam,* பெ. (n.) *பைஞ்ஞீலம்* (சூடா.) பார்க்க; see *pai-ñ-nilam*

பைஞ்ஞீலம்[2] **1.** பசியநீலம்; greenish sapphire (யாழ்.அக.) **2.** வாழைவகை; a bpecies of plantain.

[பை + ஞீலம்]

பைஞ்ஞீலி *pai-ñ-ñili,* பெ. (n.) பைஞ்ஞிலம் பார்க்க, see pain-nilam. (பிங்.)

[பை + ஞிலி]

பைத்தம் *paittam,* பெ. (n.) **1.** கிறுக்கு; Insanity, mania, craziness. **2.** மூடத்தனம்; folly.

[பித்தம் → பைத்தம்]

பைத்தல் *pait-t-tal,* பெ. (n.) **1.** பசுமை; *green* **2.** சினம்; *angry*

[பை → பைத்தல்]

பைதலங்கடும்பு *paitalam-katumpu,* பெ. (n.) பசி துன்பமுடைய சுற்றம்; neighbour who has hungry, "*விருந்தலும் உண்டென பைதலங்கடும்பே*" (புறநா.139).

[பை + தலம் + கடும்பு]

பைத்து *paittu,* பெ. (n.) பைது[1] பார்க்க; (திவா.) see paidu.

[பசுமைத்து → பைத்து]

பைதல் *paidal,* பெ. (n.) **1.** இளையது; that which is young or small. '*பைதல் வெண்பிறை*' (தேவா.628,5) "*சிறுகிளிப் பைதலே*' (திவ்.திருவாய்,9,5,6) **2.** சிறுவன்; boy. '*பைதலை யித்தனை பொழுது கொண் டிருப்பதோ*' (கம்பரா. பிணிவீட். 2) **3.** துன்பம்; sorrow, affliction. '*பைத லுழுப்ப தெவன்*' (குறள்.1172) **4.** குளிர்; cold, chilliness. "*பனிப்படு பைதல்*" (பரிபா.11,75)

[பை→ பைதல்]

பைதா *paidā,* பெ. (n.) வண்டிச்சக்கரம்; wheel of a cart.

[வை → வையா → வைதா → பைதா]



பைதாவடை—த்தல் *paidā-v-adai,* செ.கு.வி. (v.i.) வண்டிச்சக்கரத்தை அச்சில் கோத்தல்(நாஞ்); to fit the weel in the axle of acart.

[பைதா + அடை —த்தல்]

பைதாவரைத்தல் *paida-v-araidal,* பெ. (n.) வண்டிக்கூட்டில் சக்கரம் உரசுகை; rubbing of the weel against the body of the cart.

[பைதா + அரைத்தல்]

பைதிரம் *paitiram,* பெ. (n.) நாடு; country, district. *'வளனறு பைதிரம்'* (பதிற்றுப்.19,18)

[பை → பைதிரம்]

பைது *paidu,* பெ. (n.) **1.** பசுமை; greenness, freshness. *'நிலம் பைதற்ற புலங்கெடு காலையும்'* (பதிற்றுப்.23) **2.** ஈரம்; moisture, dampness. *'நிலம் பைதறச் செல்கதிர் ஞாயிறு செயிர் சினஞ் சொரிதலின்'* (கலித்.20)

[பை → பைது]

பைந்தார் *pai-n-tār,* பெ. (n.) செவ்விமாலை; garland of fresh flowers, *'பனிமலர்ப் பைந்தார்'* (பு.வெ.9,1)

[பை + தார்]

பைந்தினை *pai-n-tiṉai,* பெ. (n.) **1.** தினை (பிங்.) பார்க்க; *seetinai.* italian millet. **2.** கருந்தினை (மலை.) பார்க்க, see *karu-n-tiṉai,* black Intalian millet.

[பை + தினை]

பைந்து *paindu,* பெ. (n.) பந்து; ball. *'தன்மலர் நறுபைந் தூழறிந் துருட்டா'* (பெருங்.மகத.8,64)

பைந்தொடி *pai-n-todi,* பெ. (n.) **1.** பொன் வளையல்; golden bracelet. "பைந்தொடி சோரும்" (குறள்.1234) **2.** பெண்; with golden bracelet. "உடம்பா டெனவறி பைந்தொடியே" (வீரசோ.யாப்.18)

[பை + தொடி]

பைந்நாகம் *pai-n-nāgam,* பெ. (n.) **1.** நாகப்பாம்பு; cobra, as hooded. *'பைந்நாகப் பாய்சுருட்டிக்கொள்'* (பெருந்தொ.1875) **2.** பன்னாங்கு பார்க்க, see pananku top-cover, as of a palanquin. *'திருப்பல்லக்குப் பைந்நாக முதலானவை'* (கோயிலொ.94)

[பை + நாகம்]

பைப்பய *pai-p-paya,* கு.வி.எ. (adv.) மெல்லமெல்ல; slowly, softly, gently. *'காமம் பைப்பயக் கழிய'* (சீவக.2760)

[பையப்பைய → பைப்பய]

பைய *pai-ya,* கு.வி.எ. (adv.) மெல்ல;by degrees slowly; softly, gently. "பைய நகும்" (குறள். 1098)

பைபீலம் *paipilam,* பெ. (n.) எறும்பு; ant. (யாழ்.அக.)

பைபீலிகை *paipilikai,* பெ. (n.) எறும்பு; ant. (யாழ்.அக.)

பைம்பல் *paimpal,* பெ. (n.) **1.** பம்பல்[3]பார்க்க, joviality. **2.** *பம்பல்[4]* பார்க்க, *luxuriance.*

[பம்பல் → பைம்பல்]

பைம்பூண் *pai-m-pūṉ,* பெ. (n.) பசும்பொன்னாற் செய்யப்பட்ட அணி; ornament made of fine gold. *'பைம்பூ ணடல் வேந்தன்'* (பு.வெ.8,1)

[பை + பூண்]

பைம்பொன் *pai-m-pon,* பெ. (n.) **1.** பசும்பொன்; fine gold. ‘*பைம்பொன் செய்ஞ்ஞுரும்*’ (மணிமே.28,36) **2.** மேருமலை; mt. meru. (அக.நி.)

[பை + பொன்]

பைம்மறி—த்தல் *pai-m-mari,* செ.குன்றாவி. (v.t.) **1.** உட்புறத்தை வெளிப் புறமாகத் திருப்புதல்; to turn a thing inside out, as a bag. ‘*பைம்மறியாப் பார்க்கப் படும்*’ (நாலடி.42) **2.** பையின் வாயை மூடுதல்; to close the mouth of a bag. ‘*பைம்மறித் தியற்றியன்ன .... குரம்பை*’ (தேவா.632,8)

[பை + மறி—]

பைம்மை[1] *paimmai,* பெ. (n.) பசுமை; greenness, green colour. (திவா.)

[பை + பைம்மை]

பைம்மை[2] *paimmai,* பெ. (n.) கன்னிமடத்தில் சேர்ந்து றையும் பெண்துறவி;

[பை +அம்மை]

பைமறி *pai-mari,* பெ. (n.) பையின் உட்புறத்தை வெளிப்புறமாகத் திருப்புகை; (மணிமே.அரும்.பக்.504) turning a bag inside out;

[பை + மறி]

பைமாசு *paimāsu,* பெ. (n.) 19–ஆம் நூற்றாண்டில் ஆங்கில அரசால் இந்தியாவில் செய்யப்பட்ட நிலவளவு; land measurement made early in the nineteenth centurey by the british in india.

பைமாத்தார் *paimattar,* பெ. (n.) நிலஅளவு செய்யும் ஊழியர்; surveyor.

பைமை[1] *paimai,* பெ. (n.) *பைம்மை*[1] பார்க்க, see *paimmai* (w.)

[பை + பைமை]

பைமை[2] *paimai,* பெ. (n.) *பைம்மை*[2] பார்க்க, see *paimmai2* (w.)

பைய *paiya,* கு.வி.எ. (adv.) மெல்ல; by degrees, slowly, softly. ‘*பையநகும்*’ (குறள்.1098)

[பை + பைய]

பையம் *paiyam,* பெ. (n.) **1.** கூடை; basket. **2.** *கோரை* பார்க்க; see *kōrai,* sedge.

[வையம் → பையம்]

வையம் = வட்டமானது.

பையர *pai-y-ara,* பெ. (n.) *பையரவு* பார்க்க; see *pai-y-aravu.* ‘*பையர விழுங்கப்பட்ட.... மதியம்*’ (சீவக.1540)

[பை +அர]

பையரவு *pai-y-aravu,* பெ. (n.) நச்சுப் பையையுடைய நாகம்; hooded, cobra, ‘*பையர வலகுலார்த முள்ளமும் பளிங்கும்போல*’ (கம்பரா.மிதிலை.16)

[பை +அரவு]

பையல் *paiyal,* பெ. (n.) **1.** சிறுவன்; boy, little, fellow. ‘*அளிய னம்பைய லென்னார்*’ (திவ்.திருமாலை.37) **2.** தகுதியற்றவன்;

unworthy, mean fellow. *'அப்பையல் அதுதனக்கு எளிவரவாக நினைத்திருக்குமே'* (ஈடு,3,6,ப்ர.)

[பை → பையல்] மு.தா.பக்.45

பையன் *paiyan,* பெ. (n.) **1.** *பையல்*[1] பார்க்க, see *paiyal*[1], **2.** மகன் (கொ.வ.); son.

[பை → பையல் → பையன்]

பையா-த்தல் *paiyā.,* செ.கு.வி. (v.i.) **1.** வருந்துதல்; to be distressed, to suffer pain. *'அரவம் வைகிக்கேட்டுப் பையாந்திசினே',* (நற்.144) **2.** அச்சந் தோற்றுதல்; to show signs of fear. *'பையாக்க விழிக்கத் தொடங்கினான்'* (ஈடு,5,10,3).

[பை → பையா → பையாத்தல்] மு.தா.

பையாப்பு *paiyāppu,* பெ. (n.) துன்பம்; distress, suffering. அதனால் *'பையாப்புற்ற நம்முடைய சுற்றத்தை'* (புறநா.221,உரை.) *'பையாப் போடு பசிகாட்டி'* (கலிங்.557)

[பை → பையா → பையாப்பு]

பையுள் *paiyuḷ,* பெ. (n.) **1.** நோய்; (தொல்.சொல்.341) disease. **2.** துன்பம்; (திவா.) suffering *'மெல்லிய நெஞ்சு பையுள் துர'* (கலித்.137,8) **3.** சிறுமை (சூடா.); poverty, adversity. **4.** மயக்கம்; (திருக்கோ. 19, உரை.) confusion

[பை → பையுள்]

பையெனல் *pai-y-eṉal,* பெ. (n.) **1.** மெதுவாதற்குறிப்பு; being slow or gentle. *'கையிற் சுட்டிப் பையென வெண்ணி'* (புறநா.257) **2.** ஒளிமழுங்குதற்குறிப்பு; being dim, dull. *'பாடுநர் கடும்பும் பையென் றனவே'* (புறநா.238) **3.** வருந்தற் குறிப்பு; being distressed. "பையென்ற நெஞ்சத்தேம்" (கலித்.118)

[பை + எனல்]

பையோடதி *pai-y-ōḍadi,* பெ. (n.) பச்சைக் கொடி; (தைலவ.தைல.) green creeper.

பையோலை *pai-y-ōlai,* பெ. (n.) பச்சோலை; green ola. *'பனைப் பையோலை'* (திருவாலவா.27,68)

[பை + ஓலை]

பைரவமாத்திரை *pairava-māttirai,* பெ. (n.) ஒருவகை மருந்துக்குளிகை (பதார்த்த.1209); a medicinal pill.

பைரவரசம் *pairava-rašam,* பெ. (n.) இதளியகூட்டிச் செய்யும் மருந்துவகை; a medicine prepared with mercury.

பைரி[1] *pairi,* பெ. (n.) இராசாளி வகை; peregrine falcon.

[வைரி → பைரி]

பைவாதல் *[பைவருதம்] pai-vā-,* செ.கு.வி. (v.i.) துன்புறுத்தல்; to be distressed "பைவருங் கேளிரும் பதியும் கதறமெய் விரும்போது" கந்தரலங்.84

பொ[1] *po,* தமிழ் நெடுங்கணக்கில் '*ப்*' என்ற மெய்யெழுத்தும், '*ஒ*' என்ற உயிரெழுத்தும் சேர்ந்து உண்டான உயிர்மெய்யெழுத்து; the compound of ப் and ஒ.

[ப் + ஒ = பொ]

பொ[2]–த்தல் *po,* செ.குன்றாவி. (v.t.) **1.** துளைத்தல்; to perforate, puncture, make a hole or opening. ***"பொத்த நூற்கல்லும்" (நாலடி.376)***

பொ[3]–த்தல் செ.கு.வி. (V.i.) கொப்புளித்தல்; to be blistered தீப்பட்டுக் கை பொத்தது **(உ.வ.).**

பொக்கசம் *pokkašam,* பெ. (n.) *பொக்கிசம்* பார்க்க; see *pokkišam*

பொக்கசவைப்பு *pokkaša-vaippu,* பெ. (n.) புதைந்து கிடைக்கும் செல்வம் (திரவியம்) (யாழ்.அக); treasure trove, hidden treasure

[பொக்கசம் + வைப்பு]

பொக்கணந்தூக்கி *Pokkaṇa-n-tūkki,*பெ. (n.) 1. சுரைக்கொடி வகை (சங்.அக); a kind of curai plant. 2. *முடக்கொற்றான்* (மாட்டுவா.142) பார்க்க; see *muḍakkoṟṟāṉ.*

[பொக்கணம் + தூக்கி]

பொக்கணப்பிச்சி *pokkaṇa-p-picci,* பெ. (n.) *முடக்கொற்றான்*; ballon-vine. (மலை) பார்க்க; see *muḍakkoṟṟāṉ.*

[பொக்கணம் + பிடிச்சி]

பொக்கணம் *pokkaṇam,* பெ. (n) **1.** சோழியப்பை; beggar's bag, wallet, ***'சுத்திய பொக்கணத்து.... கோலத்தினீர்'*** **(திருக்கோ.242) 2.** பெருமருந்து; **(மலை)** பார்க்க; see *peru - marundu* indian birthwort.

தெ. பொக்கணமு. க.ம. பொக்கணம்

பொக்கணி *pokkaṇi,* பெ. (n.) 1. தவசம் முதலியன குத்தும் உரல்; rice mortar. 2. விரிந்த தொப்புள் (யாழ்ப்.); large,open navel. 3. நீர்மக்கலம் (யாழ்.அக); a kind of drinking vessel.



பொக்கணை *pokkaṇai,* பெ. (n.) 1. மரம் கல் முதலியவற்றிலுள்ள பொந்து; hole in a tree,stone or ground,cleft ina rock. 2. ***பொக்கணி,1*** பார்க்க; see *pokkaṇi*

[பொக்கணி → பொக்கணை]

பொக்கம் *pokkam,* பெ. (n.) 1. பொய்; lie,false hood. '*பொக்கம் பலயேசி*' **(தேவா.326,7) 2.**

வஞ்சகம்; deceit, *'பொய்யும் பொக்கமும் போக்கி'* (தேவா.1210,4) **3.** குற்றம்; fault. *'பொன்னங் கழல்பரவாப் பொக்கமும் பொக்கமே'.* (தேவா.1017,1)

[பொக்கு → பொக்கம்]

பொக்கணவன் *Pokkaṇavan* பெ. (n.) சிவபெருமான் (தஞ்.சர.i,79); siva.

[பொக்கணம்→ பொக்கணவன்]

பொக்கிப்பரு *Pokki-p-paru,* பெ. (n.) செவிப்புண் வகை (பரராச.i.134); a kind of boil in the ear

பொக்கம்[2] *Pokkam,* பெ. (n.) **1.** மிகுதி; abundance. *'செறியிருட் பொக்க மெண்ணீர்'* (திருக்கோ.382) **2.** உயரம்; eminence, height **3.** பொலிவு; (பிங்.) bloom, splendour, *'புடைபரந்து பொக்கம்பரப்பி'* (பதினொ.ஆளு. திருவுலா) **4.** அச்சம்; awe. *'நீ எனக்குப் பொக்கங்காட்ட வேண்டாம்'*

[பொங்கு → பொக்கம்]

பொக்கல் *pokkal,* பெ. (n.) பொக்கை பார்க்க. see pokkai.

[பொய் → பொக்கல்]

பொக்கல்வாய் *pokkaḷ-vāy,* பெ. (n.) *பொக்கை வாய்* பார்க்க; see *pokkaḷvay.*

பொக்களம் *pokkalam,* பெ. (n.) *பொக்குளம்* பார்க்க; see *pokkuḷam.*

பொக்கன் *pokkan,* பெ. (n.) தோற்றப் பொலிவுள்ளவன்; man of fine appearance, handsome man. *'துடியிடையாள் துணை முலைக்குச் சேர்வதாகும் பொக்கான்காண்'* (தேவா,619,2)

[பொக்கம் → பொக்கன்]

பொக்கிப்பயல் *pokki-p-payal,* பெ. (n.) தறிதலை; (உ.வ.) vagabond.

[பொறுக்கி → பொக்கிப்பயல்]

பொக்கிப்பரு **1.** கருவூலம், treasury. **2.** கருவூலப்பணி office of a treasurer. "பொக்கிசம் முத்திருளப்பபிள்ளை" (I.M.P.Rd.)

பொக்கிப் பிளவை *Pokki-p-piḷavai,* பெ. (n.) பிளவை வகை (பரராச.i.49); a kind of carbuncle

பொக்கிப்போ—தல் *pokki-p-pō,* செ.கு.வி. (v.i) **1.** கொப்புளமுண்டாதல்; to be blistered, scalded. **2.** புண்கட்டியுண்டாதல்; to breakout with boils.

[பொக்கு + போ]

பொக்கிலவணம் *pokki-lavaṇam,* பெ. (n.) **1.** உப்புவகை; (யாழ்.அக) a kind of salt.

பொக்கினதுப்பி *pokkiṉatuppi,* பெ. (n.) *பெருமருந்து,* பார்க்க; see *peru-marundu.* Indian birthwort. (சங்.அக)

பொக்கு—தல் *pokku-,* செ.குன்றாவி. (v.t) கொப்புளங்கொள்ளுதல்; to be blistered' *'உடம்பெல்லாம் பொக்கிவிட்டது.'*

[பொருக்கு → பொக்கு—தல்]

பொக்கு² *pokku,* பெ. (n.) **1.** மரப்பொந்து; (பிங்) hollow in a tree. **2.** குற்றம்; (திவா) defect, fault, blemish *'பொக்குப்பை'* (திருப்பு.432). **30** உள்ளீடு முற்றாத தவசம்; imperfectly matured grain. **4.** தவச நொறுங்கு; grit.

[பொல் → பொக்கு]



பொக்கு³ *pokku,* பெ. (n.) பொருக்கு (வின்.); flake, scale.

[பொருக்கு → பொக்கு]

பொக்குப்பொக்கெனல் *pokku-p-pokkenal,* பெ. (n.)

1. ஒலிக்குறிப்பு; chewing noisily,as a toothless person.*'அவன் பொக்குப் பொக்குன்று சாப்பிடுகிறான்.'* (உ.வ)

2. விரைவுக்குறிப்பு (வின்.); being in haste.

"பொக்குப் பொக்கென்று வேலையைப் பார்!"

3. தீக்கொழுந்து விட்டுவிட்டெரிதற் குறிப்பு; flickering of flame.

[பொக்கு + பொக்கு + எனல்]

பொக்குமல்லி *pokkumalli,* பெ. (n.) பூச்செடி (இக்.வ); a flowering plant.

[பொக்கு +மல்லி]

பொக்குமுத்து *pokku-muttu,* பெ. (n.) சூதுமுத்து (இ.வ.); false pearl.

[பொக்கு +முத்து]

பொக்குவாய் *pokku-vay,* பெ. (n.) **1.** பொக்கைவாய் பார்க்க; (யாழ்.அக) see pokkaivāy.

[பொக்கு + வாய்]

பொக்குள் *pokkul,* பெ. (n.) கொப்பூழ்; navel.

க. பொக்குள்

[கொப்புள் → பொக்குள்]

பொக்குளம் *Pokkuḷam,* பெ. (n) கொப்புளம்; (சங்.அக) boil.

க.பொக்குழி ம.பொக்குலி

[கொப்புளம் → பொக்குளம்]

இடமாற்று (ஒ.நோ.) தசை > சதை

பொக்குளி-த்தல் *pokkuḷi,* செகு.வி. (v.i.) கொப்புளங்கிளம்புதல் (யாழ்ப்); to rize in blisters.

[கொப்புளி → பொக்குளி]

பொக்குளிப்பான் *pokkḷippāṉ,* பெ. (n.) அம்மைநோய் வகை; measles.

[கொப்புளிப்பான் → பொக்குளிப்பான்]

பொக்கெனல் *pokkeṉal,* பெ. (n.) விரைவுக் குறிப்பு; abruptness "பொக்கெனக் கொடுபோய்" (பாரத. வார.131)

[பொக்கு + எனல்]

பொக்கை *pokkai,* பெ. (n.) 1. சிறுதுளை; little hole, crack. 2. மூளியாயிருக்கை; having a part deformed, dented or broken 3. நோய் முதலியவற்றின் நொறுங்கு; grit. 4. குற்றம்; fault, blemish. "நீடுபொக்கையிற் பிறவியைப் பழித்து." (தேவா.242,10)

[பொ → பொக்கை]

பொக்கை² *pokkai,* பெ. (n.) மோர்க்கூழ் (இ.வ.); porridge.

[புற்கை → பொக்கை]

பொக்கைப்பல் *pokkai-p-pal,* பெ. (n) ஓட்டை யான பல்வரிசை; a row of teeth with gaps.

[பொக்கை + பல்]



பொக்கைவாய் *pokkai-vāy,* பெ. (n.) பற்போன வாய்; toothless mouth. *'பொக்கை வாயாக்கினார் சூரியனை,'* (தனிப்பா.ii,25, 56)

[பொக்கை + வாய்]

பொகடி *pogaḍi,* பெ. (n.) மகளிர் காதணி வகை; a kind of ear-ornament, *'காதிற் பொகடி யொருசோ டொழிய்'* (விறலிவிடு,830) *க.புகடி.*

[பூடி → பொகடி]

பொகில் *pokil,* பெ. (n.) அரும்பு; bud, *'பொகில் பிடித்தலருஞ்சந்தப் பொதும்பர்'* (இரகு. குசனயோ. 63)

[போகில் + பொகில்]

பொகு-த்தல் *poguttal* செ.குன்றாவி (v.t) ஓட்டை செய்தல் (யாழ்.அக); to make a hole.

[பொ → பொகு]

பொகுட்டு *poguṭṭu,* பெ. (n.) 1. கலங்கல் நீரில் எழும் குமிழி; bubble formed in turbit water."திரை நுரைமென் பொகுட்டு... அரிவை" (பரிபா.11,27) 2. தாமரை அல்லது கோங்கின் பூவிலுள்ள கொட்டை (நன்.387, மயிலை); pericarp of the lotus or common caung flower. "அரும்பொகுட் டனைத்தே யண்ணல் கோயில்" (பரிபா.பக்.174) 3. மலை (கிங்); mountain

பொகுவல் *poguval,* பெ. (n.) பறவைவகை; a bird. *'செவிசெஞ் சேவலும் பொகுவலும்'* (புறநா.238)

[பொகு + பொகுதல்]

பொங்கடி *poṅgaḍi,* பெ. (n.) 1. யானை; elephant. *'பொங்கடி படிகயம்'* (அகநா,44) 2. அரிமா (நிகண்டு) lion;

[பொங்கு+அடி]

பொங்கத்தம் ponkattam, பெ. (n.) *பொங்கத்தம் பொங்கோ* பார்க்க; *'கலிநன்றி புகன்ற பொங்கத்தங் கொண்டு'* (திவ்.பெரியதி.10,2,10)

பொங்கத்தம்பொங்கு pongattam-pongu, பெ. (n.) *பொங்கத்தம் பொங்கோ* பார்க்க; see pongattam pongō, 'அந்தச் சப்தானுகாரம் பொங்கத்தம் பொங்கு என்கிற இது' (திவ்.பெரியதி.10,2,1,வ்யா.)

பொங்கத்தம்பொங்கோ pongattam-pongu, பெ. (n.) போரில் தோற்றவர் ஆடிக் கொண்டு கூறும் அடைக்கலக் குரல் (திவ்.பெரியதி,10,2); exclamation of surrender by defeated warriors with a particular kind of dance.

பொங்கம் pongam, பெ. (n.) 1. மிகுதி; increase, abundance. 2. மகிழ்ச்சி (வின்.); exultation, joy (ய) 3. ஒழுங்கு; accuracy, regularity. *'பொங்கமாய்ப் படிந்தது'*. (இன்.வ) 4. நெற்றி; (யாழ்.அக) forehead. 5. பொங்கர்,4 (சங்.அக) பார்க்க; 6. நறுமணம்; (சங்.அக). fragrance. 7. பொலிவு; bloom, splendour *'பூடணமும் பொங்கமும்'* (பணவிடு.365)

தெ. பொங்கு

[பொங்கு → பொங்கம்]

பொங்கர் pongar, பெ. (n.) 1. மரக்கொம்பு; branch of a tree. *'வேங்கை யிருஞ்சினைப் பொங்கர்'* (மதுரைக்.296) 2. மலை; (பிங்) hill, mountain. 3. சோலை; (சிலப்,10,69,உரை) grove 4. இலவு (பிங்); red-flowered silk cotton tree. 5. வாடற்பூ; faded flower. *'தாதுசோர் பொங்கர்'* (சிலப்.10,69)

[பொங்கு → பொங்கர்]

பொங்கல் *pongal,* பெ. (n.) 1. பொங்குகை; boiling, bubbling, leaping. 2. கடுஞ்சினம்; violent anger. 3. மிளகு, சீரகம், உப்பு, நெய் முதலியன கலந்து அட்ட பொங்கல்; a preparation of boiled rice seasoned with salt, pepper, cumin seeds and ghee. *'பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து'* 4. ஞாயிறு சுறவ வோரையிற் செல்லும் நாளான சுறவ(தை)த்திங்கள் முதல் நாளன்று ஞாயிறுபோற்றி வழிபட்டு அதற்குப் பொங்கல் படையலிட்டுச் செய்யும் திருவிழா; solar festival; when the sun enters Carpricorn and Takes a northward course, being the first day of the month tai, when Pongal is prepared as an offering. 5. உயர்ச்சி (சூடா); height. 6. பருமை; largeness. *'பொங்கல் வெம்முலைகள்'* (சீவக.2805) 7. மிகுதி; (பிங்) fulness,excess 8. கள்; toddy. *'பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து'* (சிலப்.69, அரும்) 9. பொலிவு; (பிங்) bloom, splendour.

க. பொங்கலு

[பொங்கு → பொங்கல்]



பொங்கல் வரிசை *pongal-variśai,* பெ. (n.) 1. திருமணம் முடித்த பெண்களுக்குப் பெற்றோர் பொங்கல் விழாவையொட்டிச் செய்யும் சீர் வரிசை; present sent to a married woman by her parents on pongal day. 2. பெரியோர்க்குப் பொங்கல் நாளில்

செய்யும் பரிசு; present sent to a superior on poṅgal day.

[பொங்கல் + வரிசை]

பொங்கல்வை¹–த்தல் *poṅgal-vai,* செ.கு.வி (v.i) தெய்வத்துக்குப் பொங்கற் சோறு சமைத்தல்; to boil rice for offering to a deity.

பொங்கல்வை²–த்தல் *poṅgal-vai,* செ.குன்றாவி. v.t அழித்தல்; to injure,destory.

[பொங்கல் + வை]

பொங்கலாடு–தல் *poṅgal-āḍu,* செ.கு.வி (v.i) பஞ்சுபோலப் பரவியெழுதல்; to rise sponge-like,as silk cotton. '*பெய்து புறந்தந்து பொங்கலாடி*' (பதிற்றுப்,55,14).

[பொங்கல்+ஆடு]

பொங்கலாண்டி *poṅgal-āṇḍi,* பெ (n.) *பொங்கலாள்* (வின்.) பார்க்க; see *poṅgal-ḷal.*

[பொங்கல்+ஆண்டி]

பொங்கலாள் *poṅgal-āḷ,* பெ (n.) **1.** சமையற் காரன்; cook. **2.** தானே சமைத்துத் தனியே உண்போன்; one who cooks his own food and lives by himself.

மறுவ. பொங்கலாண்டி

[பொங்கல் + ஆள்]

பொங்கலிடு–தல் *poṅgal-iḍu,* செ. குன்றா.வி (v.i) *பொங்கல்வை 1* பார்க்க; see *poṅgalvai.*

[பொங்கல் + இடுதல்]

பொங்கலோ பொங்கல் *pongalo-ponkgal,* பெ. (n.) பொங்கல் விழாவில் பானையிற் பால் பொங்கும் போதும், மாட்டுப் பொங்கலில் மாட்டை ஓட்டி விடும் போதும் மகிழ்சியுடன் கூறும் ஓர் ஆரவாரச்சொல்; loud exclamation of joy on the occasion of boiling milk for pongal or of starting a bull in māṭṭu-p-poṅgal.

[பொங்கலோ + பொங்கல்]

பொங்கழி *poṅgaḻi,* பெ. (n.) தூற்றாப்பொலி; unsifted paddy on the threshing-floor. '*பொங்கழி யாலைப் புகையொடும் பரந்து*' (சிலப்.10,151)

பொங்கற்காரன் *poṅgaṟ-kāraṉ,* பெ. (n.) *பொங்கலாள்* பார்க்க; see *poṅgal!*

பொங்கற்சாதம் *poṅgaṟ-cādam,* பெ. (n.) **1.** *பொங்கல்,3* பார்க்க; see *poṅgal.* **2.** கஞ்சி சுவறும்படி சமைத்த சோறு; boiled rice with the water not strained off, but left to steep.

[பொங்கல் + சாதம்]

பொங்கற்படி *poṅgaṟ-padi,* பெ. (n.) **1.** சுறவ(தை)ப் பொங்கலன்று கொடுக்கும் அன்பளிப்பு; money-presents given on the poṅgal day.

[பொங்கல்+படி]

பொங்கற்பண்டிகை *ponkar-paṇḍigai,* பெ (n.) தமிழ் மக்கள் ஆண்டுதோறும் சுறவ (தை) மாதம் முதல் நாளில் பொங்கலிட்டுக் கொண்டாடும் விழா; poṅgal festival.

[பொங்கல் + பண்டிகை]

பொங்கல் பண்டிகை என்பது உழவர் திருநாள். அறுவடையான பின், புதிரி என்னும் புது நெல்லைச் சமைத்து நன்றியறிவுடன் வழிபடு தெய்வத்திற்குப் படைத்துண்பதே பொங்கல். நீர்வளம் மிகுந்த பாங்கரில் முப்பூ விளையும். (பூவென்பது வெள்ளாமை.) நீர் வளமில்லா இடங்களில் மாரி நீர்த்தேக்கத்தால் ஒரு வெள்ளாமைதான் விளைக்க முடியும். ஆகவே, சிலை (மார்கழி) அல்லது சுறவை (தை) மாத அறுவடையே நாடெங்கும் நிகழும். ஆதலால், தைப்பொங்கல் பெரும் பொங்கல் எனப்பெறும்.

செந்நெற் பச்சரிசியைப் பெரும்பாலும் தவிடு போக்காமல் சரி நீர் வைத்துச் சமைத்து, பருப்புக்குழம்புடன் உண்பது பொங்கல் மரபு. "*பருப்புக் கேட்கும் பச்சரிசிச் சோறு, செருப்புக் கேட்கும் சித்திரை மாத வெயில்!*" என்பது பழமொழி. பொங்கற் பானையில் உலை பொங்கி வந்தவுடன் சிறிது வழிய விடுவது பொங்கல் அடையாளமாகக் கருதப் பெறும், இதுவே உழுதுண்பார் பொங்கல்.

அக்காரடலை (சருக்கரைப் பொங்கல்) அக்காரவடிசில் (சருக்கரை நெய்ப்பொங்கல்) நெய்ப்பொங்கல், மிளகுப்பொங்கல், வெண் பொங்கல் முதலிய சுவைமிக்க பொங்கல் வகைகளெல்லாம் உழுவித் துண்பாரும் செல்வருமான பிறர் பொங்கல். பால் பொங்க வைப்பது இடையர் பொங்கல். சல்லிக் கட்டென்றும் மஞ்சு விரட்டென்றும் மாடு விடுதல் என்றும் நடைபெற்றுவருவது பண்டை முல்லைநில வழக்கம் (ஏறுதழுவல்).

திணை நிலைக் காலத்தில் உழவர் வழிபட்ட தெய்வம் விண்ணோர் தலைவனான வேந்தன் (இந்திரன்) திணைமயக்கம் ஏற்பட்ட பின், பாலை நிலத் தெய்வமான காளியும் நடுகல் தெய்வங்களும் வழிபடு தெய்வங் களாயின. சிவநெறியும் திருமால் நெறியுமான பெருமதங்கள் தோன்றிய பின், உழுவித் துண்பார்தம் கொள்கைப்படி சிவனையோ திருமாலையோ வழிபட்டு வருகின்றனர்.

ஆங்கிலக் கல்வியினாலும், நயன்மை (நீதிக்கட்சி) ஆட்சியினாலும், தமிழரிடையே மறுமலர்ச்சி யுண்டாயிருப்பதால் பொங்கல் பெருநாள் ஒரு நாட்டினத் திருநாளாகத் தமிழரனைவராலும் ஒருவகைப் புத்துணர்ச்சியு டன் இன்று கொண்டாடப்பட்டு வருகின்றது. பிராமணர் பொங்கலைச் சங்கராந்தி என்பர்.

பொங்கல் உழவர்க்கே சிறப்பாக வுரிய பெரும் பண்டிகையாயினும் அரசியலாரும் உழவரல்லாத பிற பொது மக்களும் இப் பெருநாளைக் கொண்டாடி உழவரை ஊக்குவதுடன்; நன்றியறிவாகவும் தந்நலங் கருதியும், நிலமுள்ள ஏழையுழவர்க்குக் கடனடைக்கவும் குலவெருதுகள் வாங்கவும் பொருளுதவியும், பொறியியற் கருவிகள், நல்விதைகள், வல்லுரங்கள் முதலியன இலவசமாக வழங்கியும்; நிலமில்லாத வுழவர்க்கு அவற்றோடு நிலமும் வழங்கியும் பெரு நிலக்கிழவரும் சிறுநிலக்கிழவரும் 'நிலமில்லா வுழவருமாகிய முத்திறத்தார்க்கும் புதிய அறிவியல் முறைகளைக் கற்பித்தும்; உழைப்பினால் பெருவிளைவு காட்டுபவர் பண்ணையாராயின் (மிராசுதார்) பட்டம் சின்னம் சலுகை முதலியவற்றாலும் எளியவராயின் நன்கொடையினாலும் சிறப்பித்தும்; சூத்திரன் என்னும் சிற்றிழிவையும் தீண்டாதான் என்னும் பேரிழிவையும் அடியோ டகற்றியும்; எதிர்கால வுழவராவது தாய்மொழிச் செய்தித்தாளைப் படித்துத் தம் அறிவைப் பெருக்கிக் கொள்ளுமாறு, இலவசக் கட்டாயத் துவக்கக் கல்வியை விரைந்தேற்படுத்தியும்; உணவுப் பொருள் விளைவுப் பெருக்க இயக்கத்தை ஓங்கச் செய்வாராக.

"*பகடு நடந்த கூழ்*" என்று நாலடியார் கூறியபடி, உழவுத் தொழிற்குதவும் எருது களையும், பிந்தி யுதவக்கூடிய கன்று களையும், பாலுணவளிக்கும் பெற்றங்களையும் (பசுக்களையும்) போதிய ஊட்டங் கொடுத்தும் மிகைவேலை வாங்காதும், நோய் மருத்துவஞ் செய்தும், உடையவர் பேணுமாறு கருத்தாய்க் கவனித்தும்; பேணாதவரைத் தண்டித்தும்; கால்நடைப் பண்ணைகளை ஆங்காங்கு ஏற்படுத்தியும்; அரசியலார் உழவுத் தொழிலை ஊக்குவாராக.

உழவர் வாழ்க! உழவெருதுகள் வாழ்க!

—பாவாணர்

பொங்கற்பருக்கை *pongar-parukkai,* பெ. (n.) பொங்கலன்று புதிதாக அறுத்துக்குத்திச் சமைத்த பச்சரிசிச்சோறு; food of raw rice cooked on the pongal day. '*பொங்கற் பருக்கை பூராப் பிடியோ?*'

[பொங்கல் + பருக்கை]

பொங்கற்பானை ponkar-pānai, பெ. (n.) 1. சுறவ(தை)ப்பொங்கற்குப் பயன்படுத்தும் புதுப்பானை; new mud-pot used to boil rice for the pongal feast. 2. வயிறு பெருத்தவன்; pot-belly.

[பொங்கல்+பானை]



பொங்காரம் pongāram, பெ. (n.) 1. பொங்குகை (யாழ்.அக); increase, overflow. 2. மிகுதுயரம்.(வின்.); sadness, grief, sorrow 3. சீற்றம்; Anger. "பூசலைப் பார்த்துப் பழைய பொங்காரந் தீராமல்" (தெய்வச். விறலிவிடு.479) 4. வளையளுப்பு (இ.வ); glass-gall.

[பொங்கு+பொங்காரம்]

பொங்கித்தெளித்தல் pongi-t-telittal, பெ. (n.) வீட்டுக்கூரையில் ஆந்தை தங்கியதற்குக் கழுவாயாகப் பொங்கலிட்டுப் பாற்கஞ்சியை வீட்டில் தெளிக்குஞ்சடங்கு (யாழ்ப்.); purificatory ceremony of boling rice in milk and sprinkling the house with the soup, because an owl has alighted on the roof.

[பொங்கி + தெளித்தல்]

பொங்கிவழி–தல் pongi-vali, செ.கு.வி (v.i) 1.சோறு முதலியன கொதித்துப் புறத்துவடிதல்; to boil over,as rice or milk. 2. செல்வம் பெருகுதல்; to abound to overflowing,as wealth.

[பொங்கு + வழி]

பொங்கு–தல் *pongu,* செ.கு.வி (v.i.) 1. காய்ந்து கொதித்தல்; to boil up, bubble up by heat. 2. கொந்தளித்தல்; to foam and rage, as the sea. '*பொங்குநீர் ஞாலம்*' (நாலடி.72). 3. மிகுதல் (பங்); to increase '*மகிழ்ச்சி பொங்கி*' (காசிக.சயிலே.23). 4. பருத்தல்; to expand. swell, as with joy. '*வன் கொங்கை பொங்க*' (திருவாச.9,8) 5. மேற்கிளர்தல்; to shoot up. '*நெய்ம்மலி யாவுதி பொங்க*' (புறநா.15) 6. ஊக்கம் கொள்ளுதல்; to be elated, spirited. '*போர்த்தோழில் வேட்கை பூண்டு பொங்கினார்*' (கம்பரா.படைத்.1) 7. வைகுளுதல்; to burust in anger.'*பொங்கி மறத்திடை மான மேற்கொண்டு*' (பு.வெ.5,6) 8.செருக்குதல்; to be haughty. '*பொங்குதலின்றிப் புரையோர் நாணிப்பண்*' (தொல்.பொ. 426) 9. நுரைத்தெழுதல்; to ferment, effer vesce. '*தோசைமா கள்ளு முதலியன பொங்கும்*' 10. விளங்குதல்; to bebright, attractive. '*பொங்குவெண்ணுலு பொடியணி மார்பிற் பொலிவித்து*' (தேவா.876,2) 11. மயிர் சிலிர்த்தல்; to stand on end,as hair or mane. '*எரிமயிர் பொங்க*' (திவ்.திருப்பா.23) 12. வீங்குதல்; to be swollen,as a boil or sore. '*பதைத்தடி பொங்கு நங்காய்*' (திருக்கோ.228) 13.விரைதல்; to be swift, rapid. '*பொங்குநடை*

....*விடையாமவரூர்தி* (தேவா.535,2) **14.** துள்ளுதல்; to jump, leap. *'ஏழை யிரும்புகர் பொங்க'* (கலித்.107) **15.** கண் சூடுகொள்ளுதல்; to be inflamed, as eyes. **16.** உயர்தல் (பிங்); to rise, grow high. **17.** செழித்தல்; to a bound, flourish; to be fruitful. **18.** ஒலித்தல்; to sound, roar, to cook. *'பொங்கின சிலம்புகள்'* (கம்பரா.உண்டாட். 63)

தெ.க.பொங்கு. ம.பொங்குக.

[பொங்கு → பொங்குதல்]

பொங்கு² *poṅku-,* செ.குன்றாவி.(v.t.) சமைத்தல்(கொ.வ.); to cook.

பொங்கு³ *poṅgu-,* பெ. (n.) **1.** செல்வச் செழிப்பு; prosperity. *'உன்பொங்கு குங்க'* (யாழ்ப்.) **2.** நற்பேறு; goodluck, fortunte *'பொட்டைப்பயலுக்கு இந்தப் பொங்கு விளையுமோ'* (ஆதியூரவதானி,38)

பொங்குகாலம் *poṅgu-kālam,* பெ. (n) பொங்குங்காலம் பார்க்க, see poṅgun-kālam. *'பொங்குகாலந்தழைக்கும்'* (குமரே.சத.48)

[பொங்கு + காலம்]

பொங்குகிறவன் *poṅgukiravaṉ,* பெ. (n.) சமையற்காரன் cook.

[பொங்கு + கிறு + அ + அன்]

பொங்குங்காலம் *poṅgu-ṅ-kālam,* பெ. (n.) செழிப்புக்காலம்; period of waxing prosperity, opp. to maṅgu-ṅ-kālam. *'பொங்குங்காலம் புளி பூக்கும், மங்குங்காலம் மா காய்க்கும்'*

[பொங்கும் + காலம்]

பொங்குசனி *poṅgu-šaṉi,* பெ. (n.) வாழ்நாள் இரண்டாமுறை வரும் ஏழரையாண்டுச்சனி; the second period in a person's life of ēḻavai-y-āṇḍu-c-caṉi.

[பொங்கு + SKṭ. sani. *த. சனி]*

பொங்குநீர்க்கிணறு *poṉkuneer-k-lomari,* பெ. (n.)இயல்பாக நீர்ப்பெருக்கு பொங்கி மேலெழும்பி, நிலத்தில் வழிந்தோடும் ஆழ்துளைக்கிணறு.

[பொங்கு + நீர்+கிணறு]

பொங்குமுட்டி *poṅgu-muṭṭi,* பெ. (n.) சமையற்பானை; pot for boiling rice.

[பொங்கு + முட்டி]

பொங்கோலம் *poṅgōlam,* பெ. (n.) குழந்தைநலங் கருதி வேண்டுதல் கட்டும் வித்துக்களையுடைய மரம்; child's amulet tree.

[பொங்கு+கோலம்]

பொச்சக்கயிறு *pocca-k-kayiṟu,* பெ. (n.) கொச்சக்கயிறு; rope made of cocoanut fibre (உ.வ)

[பொச்சம்+கயிறு]

பொச்சடி *poccaḍi,* பெ. (n.) வெறுநாக்கு அடிக்கை; smacking the lips, as in eating or in token of aversion or contempt.

[பொய் → பொச்சடி]

பொச்சம் *poccam,* பெ. (n.) **1.** குற்றம்; fault, defect, moral evil. *'பொச்சமில் போகமும்'* (காஞ்சிப்பு.திருநெறி.2) **2.** பொய்; lie, falsehood. *'பொச்சமி லன்பும்'* (திருவிளை.நாட்டுப்.31)

3. அவா; greediness, avidity. 4. தேங்காய் மட்டை (யாழ்ப்.); fibrous husk of cocoanut. 5. உணவு; (யாழ்.அக) food

[பொக்கம் → பொச்சம்]

பொச்சரிப்பு *poccari-p-pu,* பெ. (n.) *பொறாமை* பார்க்க; see *poramai.* (தஞ்சை.வழக்கு)

[பொச்சு → அரிப்பு]

பொச்சா—த்தல் *poccā,* செ.குன்றா.வி. (v.t) 1,மறத்தல்; to forget. *'புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க'* (குறள்.719) 2. இகழ்தல்; to deride, ridicule *'கொடையளிக்கட் பொச்சாவார்'* (ஆசாரக்.67)

பொச்சாப்பன் *poccāppaṉ,* பெ. (n.) மறதியுள்ளவன்; forgetful person, *'மடிமானி பொச்சாப்பன்'* (தொல்.எழுத்.சிறப்புப்.பக்.4)

[பொச்சாப்பு → பொச்சாப்பன்]

பொச்சாப்பு *poccāppu,* பெ. (n.) 1. மறதி; forgetfulness, *'பொச்சாப்புக் கொல்லும் புகழை'* (குறள்.532) 2. பொல்லாங்கு (வின்.); badness, evil, wickedness(ய.) 3. குற்றம் (பிங்.); fault, 4. உறுதியின்றி மனநெகிழ்ந்திருக்கை; instability of mind. *'வன்சொல் பொச்சாப்பு'* (தொல்.பொ. 279)

[பொச்சா → பொச்சாப்பு]

பொச்சாலி poccāli, பெ. (n.) சாலிநெல்வகை (வின்.); a kind of cāli paddy.

[பொச்சா → பொச்சாலி]

பொச்சு¹ poccu, பெ. (n.) 1. see பொச்சம்' 2. பழத்தின் சேதமடைந்த பகுதி; blighted part, as in jack-fruits, mangoes, etc., 3. see பொச்சம், 4 (யாழ்ப்.) பார்க்க;(பிங்.) see poccam.

[பொச்சம் → பொச்சு]

பொச்சு² poccu, பெ. (n.) 1. பெண்குறி மயிர்; crines mulbrifries pudendi, 2. பெண்குறி; pudendum muliebre. 3. எருவாய் (வின்.); anus (ய) 4. மயிர்க்கொத்து (வின்.); quantity of hair,

க. பொச்சு

பொச்செரிப்பு pocceripppu, பெ. (n.) பொறாமை; jealousy.

[பொச்சு → எரிப்பு]

பொச்சை¹ poccai, பெ. (n.) 1. காடு; forest, copse. *'பொச்சையிடை......வெட்டுங்கொலை வேடர்'* (திருப்பு.7) 2. கரிகாடு (பிங்.); burnt jungle (பங்) 3. சிறுமலை (சூடா); hillock. 4. மலை (திவா.) hill mountain. 5.புழுக்கூடு; nest of insects. 'பொச்சையிற் கையிடாதே' (வின்.)

[பொற்றை → பொச்சை]

பொச்சை² *poccai,* பெ. (n.) குற்றம்; fault. *'பொச்சையர் கடனனி பொருமல் கொள்வதே'* (கந்தர்.தருமகோ.19)

[பொச்சம் → பொச்சை]

பொச்சை³ *poccai,* பெ. (n.) தொப்பை வயிறு; paunch, pot-belly. *'பொக்கையிட்டுப்பாந்தமாக வவன் வளர்ந்து'* (ஆதியூரவதானி.8)

தெ. பொட்ச. க. பொஜ்ஜெ



பொசி¹–தல் *poši,* செ.கு.வி, (v.i) 1. கசிதல்; to ooze out, percolate.'*நெல்லுக் கிறைத்த நீர் ...புல்லுக்கு மாங்கே பொசியுமாம்*' (மூதுரை.10) 2. வடிதல் (வின்.); to flow freely, as tears, milk, stream. (ய.) 3. செய்தி வெளியாதல்; (பாரத. அருச்சுனன்றவ.40) to leak out,as a report or secret. 4. மனமுருகுதல் (வின்.); to melt, be softened,as the heart in benevolence.

[பொசி → பொசி–தல்]

பொசி² *poši,* பெ. (n.) 1. கசிவது; that which oozes. 2. ஊனீர்; secretion in the body. '*பொசியினான் மிடைந்து புழுப்பொதிந்த உடம்பு*' (தேவா.812,6)

பொசி³ *poši,* பெ. (n.) துத்தம் (சங்.அக); sulphate of copper or zing.

பொசி⁴–த்தல் *poši,* செ.குன்றா.வி. (v.t) 1. உட்கொள்ளுதல்; to eat, feed on. '*நின்மாலியாந் தீர்த்தம் புசியாதிருந்துமிலோம்*' (சிவரக. தேவர்முறை.12) 2. வினைப்பயன் எதிர்கொள்ளுதல்; to experince, as the fruits of past actions.

[புசி → பொசி]

பொசிக்கை *pocikkai,* பெ. (n.) கால்நடைகளுக்கு வரும் ஒருவகைக் காய்ச்சல்; malarial fever affecting cattle.

[பொசுக்கு → பொசிக்கை]

பொசிவு *pošivu,* பெ. (n.) 1. நெகிழ்வு; ductility. '*பொசிவுறு பசும்பொன்*' (கம்பரா, ஊர்தேடு.99) 2. கசிவு (வின்.); oozing,issuing gently.

[பொசி → பொசிவு]

பொசுக்கு¹–தல் *pocikku,* செ.குன்றாவி. (v.i) 1. சாம்பலாக எரித்தல்; to burn to ashes. 2. வெதுப்புதல்; to scorch,burn,as the sun. 3. தீயில் வாட்டுதல்; to singe, toast. 4. துன்பப்படுத்துல்; to persecute, afflict.

[பொசுங்கு → பொசுக்கு]

பொசுக்கு²–தல் *pošukku,* செ.குன்றாவி. (v.i) மலக்காற்றுவிடுதல் (வின்.); to break wind.

பொசுக்குநோவு *pošukku-nõvu,* பெ. (n.) ஆட்டுநோய்வகை(C.E.M); a disease of sheep and goats.

[பொசுக்கு → நோவு]

பொசுக்கெனல் *pošukkeṉal,* பெ. (n.) விரைவுக்குறிப்பு; suddenness,quickness.

[பொசுக்கு + எனல்]

பொசுங்கல் *pošuṅgal,* பெ, (n.) 1. கருகினது; that which is signed,scorched or burnt. 2. மந்தன்; one who speaks or acts with hesitation. 3. வலுவற்றவன்; weak,

insignificant person. 4. சிறுதூற்றல்; slight drizzling. *'மழை உறைத்துப் பெய்யவில்லை, பொசுங்கலாயிருக்கிறது'.*

[பொசுங்கு–பொசுங்கல்]

பொசுங்கு[1]–தல் *pošungu,* செ.கு.வி, (v.i) 1. எரிக்கப்படுதல்; to burn,to be consumed,as hair,paper. 2. காய்தல்; to be scorched slightly,as grain. 3. வாட்டப்படுதல் (வின்.); to be signed, toasted. 4.அழிவுறுதல்; to be ruined. 'அந்தக் குடும்பம் பொசுங்கிவிட்டது.'

[பொசு → பொசுங்கு]

பொசுங்கு[2]–தல் *pošungu,* செ.கு.வி. (v.i) இணங்குதல்; to be united,to agree. *'இருவருக்கும் பொசுங்காது'*

பொசுபொசு–த்தல் *pošu-pošu-,* செ.கு.வி. (v.i) 1. கமுக்கம் பேசுதல்(யாழ்.அக); to whisper,murmur in secret. 2. மெதுவாகக் கசிதல்; (யாழ்.அக) to ooze out slowly. 3. எரிச்சலுண்டாகும்படி அடிக்கடி பேசுதல்; to be unfortunate. 4. மழைதுளித்தல் (சங்.அக); to drizzle.

பொசுபொசுப்பு *pošu-pošuppu,* பெ. (n.) அடிக்கடி நெருக்கிக் கேட்கும் தொந்தரவு; being importunate. "அவர் பொசு பொசுப்புத் தாங்க முடியவில்லை."

[பொசுபொசு+பு]

பொசுபொசெனல் *pošu-pošenal,* பெ. (n.) 1. எளிதில் எரிதற்குறிப்பு; being burnt easily. 2. இலேசாய்ப் பெய்தற்குறிப்பு;raining slighly 3.விரைவுக்குறிப்பு being sudden,as the explosion of a gun.

பொட்டல் *ponju,* செ.கு.வி. (v.i) செழித்தல்; to prosper, thrive. *'மாடு கன்று பொஞ்சாது'.*

[பொங்கு → பொஞ்சு]

பொஞ்சு[2]–தல் *ponju,* செ.கு.வி. (v.i.) பொசுங்கு[2]பார்க்க; see pošungu.

[பொசுங்கு → பொஞ்சு]

பொட்ட *potta,* கு.வி.எ, (adv) விரைவாக; suddenly, swiftly. *'பொட்ட வல்லுயிர் போவதன் முன்னம்'* (தேவா.20,26) 2. முழுதும்; entirely. *'பொட்டத்துற்றி மாரிப்பகை புணர்த்த'* (திவ்.பொரியாழ்.3,5,1)

பொட்டகத்துத்தி *pottaga-t-tutti,* பெ, (n.) காட்டுக்கத்தூரிச்செடி; muskmallo.

[பொட்டல் → துத்தி]

பொட்டகத்தூரி *potta-katturi,* பெ,(n.) *பொட்டகத் துத்தி* பார்க்க; see *irattuga-t-tutti*

[பொட்டல் → கத்தூரி]

பொட்டச்சி pottacci, பெ. (n.) பெண்; women, used in contempt.

[பெள் → பேடு → பேடை → பெட்டை → பெட்டைச்சி → பொட்டச்சி]

'சி' – பெண்பாலீறு

பொட்டணம் *pottanam,* பெ. (n.) 1. சிறுமூட்டை; small bundle, parcel. 2. ஒத்தடமிடும் சீலைப்பந்து; bundle of drugs, leaves, etc. tied in a piece of cloth and used in fomentation.

தெ. பொட்டணமு. க. பொட்டண.

[பொட்டலம் → பொட்டணம்]

பொட்டணம் போடு–தல் *poṭṭaṇam-pōḍu.,* செ.கு.வி. (v.i) ஒத்தடமிடுதல்; to apply fomentation.

[பொட்டணம் + போடு–,]



பொட்டணமொற்று–தல் *poṭṭaṇam-oṟṟu-,* *பொட்டணம்* (வின்.) போடு பார்க்க; see *pottanam-pōḍu*

[பொட்டணம் + ஒற்று–தல்]

பொட்டணி *poṭṭaṇi,* பெ. (n.) *பொட்டணம்* பார்க்க; see *poṭṭaṇam.*

[பொட்டணம் + பொட்டணி]

பொட்டரி–த்தல் *poṭṭari,* செ.குன்றா.வி. (v.t) ஆடையைப் பூச்சியரித்தல் (வின்.); to fret a garment, as moths.

[பொட்டு+அரி]

பொட்டல் *poṭṭal,* பெ. (n.) **1.** பாழிடம்; barren or aride tract, waste land, 'பூமி சில பொட்டலற (தாயு.எந்நாட்.1242) **2.** திறந்த வெளியிடம்; open space. *'அந்திக்கடைப் பொட்டல்', 'கோவலன் பொட்டல்'.* **3.** தலை வழுக்கை (இ.வ.); baldness.

[பொட்டு → பொட்டல்]

பொட்டல்வெளி *pottal-veli* பெ. (n.)மேய்ச்சல் புல்வெளி; grass land, moor land.

[பொட்டல்+வெளி]

பொட்டலஅஞ்சல் *poṭṭala-ancal,* பெ. (n.) சிப்ப அஞ்சல் parcel post

[பொட்டலம்+அஞ்சல்]

பொட்டலம் *poṭṭalam.* பெ. (n.) *பொட்டணம்,1* பார்க்க; see *poṭṭaṇam.*

பொட்டளி *poṭṭali.* பெ. (n.) *பொட்டணம்*1 (யாழ்.அக) பார்க்க; see *pottanam.*

பொட்டி[1]–த்தல் *poṭṭi.* செ.கு.வி. (v.i) திறத்தல்; to open. *'கடிதக்கட்டைப் பொட்டித்துப் பார்த்தான்'.*

[பொள் → பொட்டு → பொட்டி]

பொட்டி[2] *poṭṭi.* பெ. (n.) விலைமகள்; prostitute. *'பொட்டியாளாசை கொஞ்ச மட்டினிலே மாறாது'.* (கவிகுஞ்.3)

[பெட்டை → (பெட்டி) → பொட்டி]

பொட்டி[3] *poṭṭi.* பெ. (n.) **1.** கதவுகளில் அமைந்த வேலை வகை; see *poṭṭippu.* **2.** பெட்டி; box.

[பெட்டி → பொட்டி]

பொட்டிப்பிழைப்புளி *poṭṭippailaippuli,* பெ. (n.) ஒருவகைத் தச்சுக்கருவி(C.E.M.); panel-plane.

[பொட்டிப்பு + இழைப்புளி]



பொட்டிப்புக்கதவு *pottippu-k-kadavu,* பெ. (n.) கதவுவகை(C.E.M.); panel door,

[பொட்டிப்பு+கதவு]

பொட்டிமகன் *potti-magan,* பெ. (n.) 1. கணிகையின் மகன்; prostitute's son. 2. கெட்டிக்காரன் (வின்.); a clever fellow,used in contemt *'செக்காரப் பொட்டி மக்கள் வாசல் வழிப்போகோமே'* (தனிப்பா.i,142,39)

[பொட்டி + மகன்]

பொட்டில் *pottil,* பெ. (n.) ஊர்வலம் முதலியவற்றில் வெடியோசை செய்யுங்கருவி (வின்.); machine with pistolets to make a cracking noise in a procession.

[பொட்டு → பொட்டில்]

பொட்டில்சுடு–தல் *pottil-cutu,* செ.கு.வி. (v.i) நெற்றியின் பக்கத்துக்குறியில் கைத் துமுக்கியாற் சுடுதல் (வின்.); to fire a pistol (ய.)

[பொட்டில் + சுடு]

பொட்டிலம் *pottilam,* பெ. (n.) *பொட்டணம்* 1, (யாழ்.அக) பார்க்க; see *pottanam1*

பொட்டிலி *pottili,* பெ. (n.) *பொட்டில்* (வின்.) பார்க்க; see *pottil.*

[பொட்டு → பொட்டிலி]

பொட்டிலுப்பு *pottil-uppu,* பெ. (n.) வெடியுப்பு; saltpetre,nitrate of potash

க. பெட்டலுப்பு

[பொட்டில் + உப்பு]

பொட்டு[1] *pottu,* பெ. (n.) 1. நெற்றியிலிடும் வட்டக்குறி; round mark, red white or black, worn on the forehead. *'பொட்டணியா ணுதல்'* (திருக்கோ. 303) 2. பொன்னாற் செய்த ஒருவகைத்தாலி; gold ornament in the shape of small metal cups strung together and worn round the neck. *'அரக்கியர் கட்டிய பொட்டுகள் தொட்டறுபட்டிடும்'* (இராமநா.சுந். 18.) 3. ஒருவகையணி; a kind of jewel. *'திருக்கைப்பொட்டு'* (S.I.I. ii, 16.) 4. கன்னத்தின் மேற்பொருத்து; temple of the head. 5. சிறுமை; trifle. 'பொட்டான வேர்களும்' (இராமநா.) 6. வட்டவடிவான குறி; dot, spot, mark 7. துளி; drop. மழை ஒரு பொட்டுக்கூட விழவில்லை. 8. புழு; worm (பிங்) 9. பூச்சிவகை; moth. பொட்டரித்த ஆடை 10. *பொட்டுப்பூச்சி* (வின்.) பார்க்க; 11. ஒன்று என்னும் எண்ணைக் குறிக்கும் புள்ளி; dot, representing one 12. தகுதியின்றிப் பிறரை ஏமாற்றிப் பெறும் நன்மதிப்பு (வின்.); repute or esteem obtained by imposing on others. 13. நுழைவழி (வின்.); hole or opening to creep through; as in a hedge.

தெ.க. பொட்டு

[பொள் + து = பொட்டு]

பொட்டு² *pottu,* பெ. (n.) **1.** உழுந்து முதலிய தவசங்களின் தோலோடு கூடிய சிறுதுகள்; chaft; husk with particles of grain. **2.** பொடி; dust. 'குலக்கிரி பொட்டெழ' (திருப்பு. 740) **3.** பொடுகு; dandruff '*அவன் தலை பொட்டெழுந்தி ருக்கிறது*'.

[பொற்று → பொட்டு]

பொட்டு³–தல் *pottu,* பெ. (n.) செ.கு.வி. (v.i.) வெடித்தல்; (இ.வ.) to burst.

பொட்டுக்கட்டுதல் *pottu-k-kattutal,* பெ. (n.) தேவகணிகையாக கோயிற்குரிமையாக்கும் பெண்ணுக்குத் தாலிகட்டுஞ் சடங்கு; ceremony of dedicating a dancing girl to a temple by tying the marriage badge round her neck.

[பொட்டு + கட்டுதல்]

பொட்டுக்கம்பு *pottu-k-kambu,* பெ. (n.) 1. கம்புவகை(A.); a kind of bulrush - millet.

[பொட்டு + கம்பு]

பொட்டுக்கருகல்மணி *pottu-k-karugal mani,* பெ. (n.) கறுப்பு மணிகள் கோத்த ஒரு வகைத்தாலி; string of black beads and discs, worn by girls and women, used by Telugus as a marriage badge also.

[பொட்டு + கருகல் + மணி]

பொட்டுக்கறிவள்ளி *pottu-k-karivalli;* பெ. (n.) *செவ்வள்ளி* (L.) பார்க்க; see *cevvalli.* purple yam. tred

[பொட்டு + கறிவள்ளி]

பொட்டுக்காரை *pottu-k-kārai,* பெ. (n.) 1. காரைமீன் வகை (வின்.); a kind of fish.

[பொட்டு + காதை]

பொட்டுக்காறை *pottu-k-kārai,* பெ. (n.) மகளிர் கழுத்தணிவகை; a kind of neck-ornament, '*பொட்டுக்காறை யெந்த ஈளுவன் வீட்டில் இருக்குதோ*' (விறலிவிடு. 701.)



பொட்டுக்குத்து–தல் *pottu-k-kuttu,* பெ. (n.) பச்சைகுத்துதல்; the tattoo with a kind of vegetable extract.

[பொட்டு + குத்துதல்]



பொட்டுக்குலை–தல் *pottu-k-kulai,* பெ. (n.) செ.கு.வி. (v.i.) மதிப்பிழத்தல் (யாழ்.அக.) to lose honour or esteem.

[பொட்டு + குலை–தல்]

பொட்டுக்குற்று–தல் *pottu-k-kurru-,* பெ. (n.) செ.கு.வி. (v.i.) பார்க்க; பொட்டுக்குத்து; (யாழ்.அக.)

[பொட்டு + குற்று—தல்]

பொட்டுக்கேடு *pottu-k-kēdu,* பெ. (n.) தகாத பெருமதிப்பை யிழக்கை (வின்.); loss of ill-deserved reputation.

[பொட்டு + கேடு]

பொட்டுத்தாமரை pottu-t-tā-marai, பெ. (n.) *கண்டு பாரங்கி* பார்க்க; indian lotus croton.

தெ.ம. புட்டத்தாமர. க. பொட்டதாவர.

பொட்டுத்தாலி *pottu-t-tāli,* பெ. (n.) பொட்டு வடிவான மங்கல நாண்; marriage badge with dises or small cups strung together.

[பொட்டு + தாலி]



பொட்டுத்துவரை pottu-t-tuvarai, பெ. (n.) மரவகை (L.) ; anaimalai calaminder-wood, m.tr.,

[பொட்டு + துவரை]

பொட்டுப்பூச்சி *pottu-p-pūcci,* பெ. (n) சிலந்திப்பூச்சி வகை (வின்.); small round bodied venomous spider with long legs.

[பொட்டு + பூச்சி]



பொட்டுப்பொட்டெனல் *pottu-p-pottenal,* பெ.(n) ஒலிக்குறிப்பு வகை; expr. signifying sound of an thing dropping down.

[பொட்டுப்பொட்டு + எனல்]

பொட்டுப்பொடி *pottu-p-podi,* பெ. (n.) சிறுபண்டம்; knick-knack '*அவன் பொட்டுப் பொடிகளையெல்லாம் அள்ளிக்கொண்டு போய் விட்டான்*' (இ.வ.)

[பொட்டு + பொடி]

பொட்டுவெடி *pottu-vedi,* பொட்டுப் போன்ற வடிவமைப்புக் கொண்ட சிறுபட்டாசு வகை.

பொட்டெழுத—தல் *pottelu,* பெ. (n.) அழிவுறுதல்; to be ruined; to crumble to dust. '*ஒளித்திட்ட சூர் பொட்டெழுக்குத்தும் ராவுத்த*'. (திருப்பு. 724).

[பொட்டு + எழு—தல்]

பொட்டெனல் *pottenal,* பெ. (n.) விரைவுக் குறிப்பு; expr. signifying quickness, suddenness, agility. '*பொட்டெனவே யயோத்திப்பட்டணமெல்லாம் வந்து*'. (இராமநா. அயோத்.12.)

[பொட்டு + எனல்]

பொட்டை[1] *pottai,* பெ. (n.) 1. குருடு; blindness. *'கண்பொட்டையாயினும் அம்பட்டனான்'.* (தனிப்பா.1, 171, 23.) 2. கண்ணொளி மழுக்கம்; blear-sight

[பொல் → பொள் → பொற்று → பொத்து → பொத்தை → பொட்டை]

உள்ளீடற்றது—பயனற்றது.

பொட்டை[3] *pottai,* பெ. (n) சூதாடுவோர் குழூஉக்குறி; a cant in gambling. *'அடியிது பொட்டையீதென்பர்'* (கந்தபு. கயமுகனுற். 168.)

[பொள் → பொற்று → பொத்தை → பொட்டை]

பொட்டைக்கண் *pottai-k-kan,* பெ. (n.) குருட்டுவிழி; blind eye

[பொட்டை + கண்]

பொட்டைச்சி[1] *pottaicci,* பெ. (n.) பார்க்க, பொட்டச்சி.

[பெட்டை → பொட்டை → பொட்டைச்சி]

'சி' பெண்பாலீறு

பொட்டைச்சி[2] *pottaicci,* பெ. (n.) ferm of *பொட்டையன்,* 2. (வின்.) பார்க்க; see *pottaiyan*

[பெட்டைச்சி → பொட்டைச்சி]

பொட்டையன்[1] *pottaiyan,* பெ. (n.) குருடன்; blind man; "பொட்டையாய் புகலாய்," (தனிப்பா. 171,23.).

[பொட்டை → பொட்டையன்]

பொட்டையன்[2] *pottaiyan,* பெ. (n.) பெண்வழிச் செல்லும் ஆடவன்; henpecked husband

[பெட்டையன் → பொட்டையன்]

பொடி—தல்[1] *podi-,* பெ. (n.) செ.கு.வி. 1. தூளாதல்; to be broken to pieces, as rice; to become pulverised; *'சிரம்பொடிந்து சிந்தவே'* (கம்பரா. மூலபல. 93) 2. தீய்தல்; to be blighted, as grain. *'பொறாதார் தங்கண் பொடிவதெவன்'* (கலித்.105.) 3. ஒளி மழுங்குதல்; to lose brightness. *'கண்ணெலாம் பொடிந்தலற'* (தேவா. 805.8.) 4. கெடுதல் (வின்.); to perish; to be destroyed (w.) 5. சினங்கொள்ளுதல்; to be angry. *'தன் கைகால் தப்புச் செய்ததென்று பொடிய விரகுண்டோ'* (திவ். திருப்பா. 28. உரை.பக்.244)

பொடி[2]—த்தல் *podi-,* செ.குன்றா.வி. (v.t.) 1. கண்டித்தல்; to rebuke, check. *'பொடிகிற தாய்மாரைக்குறித்து'* (ஈடு, 7, 3, 4.) 2. வெறுத்தல்; to despise, dislike. *'பொடிந்த நின் செவ்வி காட்டெனு'* (புறநா. 160.)

பொடி[3]—த்தல் *podi-,* செ.குன்றாவி. (v.t.) 1. துகளாக்குதல்; to pulverises reduce to dust or powder. 'எழுமலை பொடித்த.... வள்ளிதுணைக் கேள்வன் (கல்லா 1.) 2. கெடுத்தல்; to spoil, destroy. *'அது கண்பொடித்த நாள்'* (கம்பரா. காட்சி. 28.) 3. தோற்றுவித்தல்; to produce

பொடி[4]—த்தல் *podi-,* செ.கு.வி. (v.t.) 1. அரும்புதல்; to spring up, shoot, rise. *'முலைபொடியா'* (திருக்கோ. 104) 2. தோன்றுதல்; to appear; *'ஊன்றலைப் பொடித்தாங்கனைய செஞ்சூட்டின்'* (சீவக. 2106.) 3. விளங்குதல்; to shine *'இரவி கோடி .... பொடித்து'* (சூடா. 5, 1.) 4. வியரரும்புதல்; to bedew; to ooze out, as perspiration. *'புள்ளிவியர் பொடிப்ப'* (பதினொ. திருவிடைம. 16). 5. புளகித்தல்; to horripillate. *'பொடித்தன வுரோமராசியே'* (கம்பரா. உண்டாட்டு. 36.) 6. பொடியாதல்; to be pulverised. *'பூழையோடே பொடித்து'* (கம்பரா. எதிர்கோ. 10.)

பொடி[3] *podi-,* பெ. (n) 1. தூள்; (powder) *'வாசநறும் பொடி'* (பெருங்.மகத. 17,160.) 2. புழுதி (பிங்.); dust. *'பொடியாடிக்கிடப்பதோ'* (சிலப் 19,481) 3. பூந்தாது; pollen of flowers. 4. மூக்குத்தூள்; snuff. *'பொடிக்கடி நாசித் துளையிலே புகுத்தி'* (அருட்பா, vi. அவாவறு12) 5. சொக்குப்பொடி (வின்.); magical powder. 6. மாழைகளைப் பற்ற வைக்கும் பொடி; solder metallic cement; 7. சாம்பல்; ash *'பொடியழல்'* (கலித்: 85.2) 8. திருநீறு. (திவா.); sacred ashes. (மெய்சேர். பொடியர்' (தேவா. 46,5.) 9. சிறிய துண்டு; anything small or minute; particle; fragment. 10. சிறியது; that which is small. 11. சிறுமணி (கொ.வ.); small gem. 12. சிறு பிள்ளை (யாழ்ப்.); little child.

பொடிக்காசு *podi-k-kāšu,* பெ.(n) கைக்கூலி; bribe "நானாவித இமிசை செய்து பொடிக்காசு வாங்குகிறாமிதங் காண்க"(தாசில்தால் நா. பக்90)

[பொடி → காசு]

பொடிச்சல்லி *podi-c-calli,* பெ. (n.) 1. கட்டட வேலைக்காக உடைத்த கருங்கல் அல்லது செங்கற் சிறு துண்டு; (C.E.M.); small bits of brick or stone. used for concrete.

[பொடி + சல்லி]

பொடிச்சிரங்கு *podi-c-ciraingu,* பெ.(n.) சொறிசிரங்கு வகை; (itch, scabies, running scall, eczema.

[பொடி + சிரங்கு]

பொடிச்சிலை *podi-c-cilai,* பெ. (n.) மஞ்சணிறமுள்ள கல்வகை. (மூ.அ.); (a yellow mineral.

[பொடி + சிலை]

பொடிசு *podišu,* பெ. (n.) 1. சிறியது; (particle, grain, as of sand; fragment; anything small. 2. *பொடிச்சி.* (இ.வ.) பார்க்க; see *Podicci.* 3. கணிகைச்சிறுமி ; young courtezan.

[பொடி → பொடிசு]

பொடித்தடை *podi-t-tadai,* பெ. (n.) *பொடிப் பட்டை.* (இ.வ.) பார்க்க; see *podi-p-pattai.*

[பொடி + தடை]

பொடித்தரை *podi-t-tarai,* பெ. (n.) பொடி மிகுதியான நிலம். (சிலப் 3, 96, உரை.); a variety of soil which is dusty.

[பொடி + தரை]

பொடித்தூவல் *podi-t-tūval,* பெ. (n) ஒரு வகை மரக்கறியுணவு (கொ.வ.) ; a kind of vegetable curry

[பொடி + தூவல்]

பொடிதூவு–தல் *podi-tūvu.,* செ.கு.வி. (v.i.) மரக்கறியில் மாப்பொடி கலத்தல் (கொ.வ.); to sprinkle rice-flour in preparing vegetable curry.

[பொடி + தூவு–தல்]

பொடிநகை *podi-nagai,* பெ. (n) மட்டப்பொடி அதிகமாகச் சேர்த்துச் செய்யப்பட்ட அணிகலன் (இ.வ.); jewel or ornament, with inferior alloy used largely in soldering or in setting precious stones.

[பொடி + நகை]

பொடிப்பட்டை *podi-p-pattai,* பெ. (n) மூக்குத்தூள் வைக்கும் வாழைப் பட்டைக் கூடு; dried rind, as of plantain folded for keeping snuff.

[பொடி + பட்டை]

பொடிப்பருவம் *podi-p-paruvam,* பெ. (n) நீர்பாய்ச்சாது புழுதியில் நெல் விதைப்பதற்குச் செய்யும் பக்குவம்; preparation of nanjai, in dry condition for sowing paddy.

[பொடி + பருவம்]

பொடிப்பாடு *podi-p-pādu,* பெ. (n) நகைகளில் மிகுதியாகப் பொன்பொடி சேர்க்கை(நாஞ்.); excessive use of solder in making ornaments

[பொடி + பாடு]

பொடிப்பு *podippu,* பெ. (n) 1. புளகம்; horripillation. *'முற்றுடல் பொடிப்புக் கொள்ள'* (கந்தபு.மேருப்.4.) 2. *பொடுகு,* 1. (இ.வ.). பார்க்க; see *podugu.*

[பொடி → பொடிப்பு]

பொடிப்போடு–தல் *podi-p-pōdu,* செ.கு.வி. (v.i) மூக்குள் புகையிலைத் தூளிடுதல்; to take snuff. 2. மாயப்பொடியிடுதல்; to cast magical powders on one.

[பொடி + போடு–தல்]

பொடிபடு–தல் *podi-padu,* செ.கு.வி. (v.i) உடைபடுதல்; to be broken, crushed. *'கரை பொடிபடப் புடைத்ததை யன்றே'* (அரிச்பு. மீட்சி 14.)

[பொடி + படு–தல்]

பொடிப்பண்ணு–தல் *podi-pannu,* செ.குன்றாவி. (v.t.) 1. தூளாக்குதல்; to pulverise 2. துண்டித்தல். (சங்.அ.க.); to cut in two.

[பொடி + பண்ணுதல்]

பொடிபொட்டு *podi-pottu,* பெ(n.). 1. சிறியது; anything small 2. பதரானது; that which is like chaff

[பொடி + பொள் + து]

மரபு இணைமொழி

பொடிமட்டை *podi-mattai,* பெ (n.). மூக்குத் தூள் வைக்கும் வாழைப்பட்டைக் கூடு; dried rind, as of plantain folded for keeping snuff. "சவடால் பொடிமட்டை தட்டிவிட்டால் வெறும் மட்டை" (உ.வ.)

[பொடி + பட்டை → மட்டை]

பொடிமரம் *podi-maram,* பெ (n.). பொடிப் பருவத்தில் உதவும் உழவுக்கருவி வகை(இ.வ.); an instrument used in ploughing a dry nañjai

[பொடி+மரம் → பொடிமரம்]

பொடியம்மை *podi-y-ammai,* பெ(n.). அம்மைவகை(வின்.); measles.

[பொடி + அம்மை]

பொடியல் *podiyal,* பெ(n.). இரும்பில் துளை போடுங் கம்மக்கருவி; punching pin.

மறுவ. 'பொடியிர்'

[பொடி → பொடியல்]

பொடியன் *podiyan,* பெ(n.). 1. சிறுவன்(யாழ்ப்.); boy. 2. புல்லன்; insignificant person. *'காமப்பொடி யரிற் பொடியேன்'* (அருட்பா,vi, ஆற்றாமை. 10.)

[பொடி → பொடியன்]

பொடியா–தல் *podi-y-ā-,* செ.கு.வி. (v.i.). அழிதல்; to perish *'பொய்யும் பொடியாகா தென்செய்கேன்'* (திருவாச. 47.1.)

[பொடி + ஆதல்]

பொடியாடி *podi-y-ādi,* பெ(n.). சிவபிரான்; siva as smearing ashes. '*விடையாய் பொடியாடீ*' (திருவாச 25.5.)

[பொடி + ஆடி]

பொடியாணி *podi-y-āṇi,* பெ. (n.). சிற்றாணி(C.E.M.); tack nail

[பொடி + ஆணி]



பொடியிழைப்புளி *podi-y-iḻaippuḷi,* பெ (n.). 1. சிற்றிழைப்புளி (கட்டட. நாமா. 39.); a small plane.

[பொடி + இழைப்பு + உளி]

பொடியுழவு *podi-y-uḻavu,* பெ(n.). புழுதிக்காலுழவு; dry ploughing dist. fr. toḻi-y-uḻavu.

[பொடி + உழவு]

பொடிவரகு *podi-varagu,* பெ. (n.). 1. தினை வகை (வின்.); paddy-field grass.

[பொடி + வரகு]

பொடிவிதை *podi-vidai,* பெ(n.). *புழுதிக்கால் விதைப்பு,* (இ.வ.) பார்க்க; see *puḻudi-k-kāl-vidaippu.*

[பொடி + விதை]

பொடிவிளக்கணம் *podi-viḷakkaṇam,* பெ. (n.). *பொடிவிளக்கம்* (யாழ்.அக.) பார்க்க; see *podi-vilakkam*

பொடிவிளக்கம் *podi-viḷakkam,* பெ. (n.). பொன்நகையில் அதிகப் பொடி சேர்த்து இணைக்கை; soldering an ornament with a large quantity of alloy.

[பொடி → பொடிவிளக்கம்]

பொடிவு *podivu,* பெ(n.). 1. சிதைவு; anything broken. 2. வசவு; cursing.

[பொடி → பொடிவு]

பொடிவெட்டி *podi-veṭṭiu,* பெ. (n.). தட்டாருடைய பொன்கம்பி வெட்டும் கத்தரிக்கோல்(வின்.); goldsmith's shears or scissors.

[பொடி + வெட்டி]



பொடிவை-த்தல் *podi-vai-,* செ.கு.வி. (v.i.). 1. மாழைகளைப் பற்ற வைத்தல்; to solder with metallic powder. 2. சூழ்ச்சியாகப் பேசுதல் (கொ.வ.).; to speak cunningly or decritfully 3. கோட்சொல்லுதல் (இ.வ.); to calumniate, slander.

[பொடி + வை-த்தல்]

பொடிவைத்தூது–தல் *podi-vaittūdu-,* **செ.கு.வி.** (v.i.). *பொடிவை* **1.(வின்.)** பார்க்க; see *podi-vai-,*

[பொடிவைத்து + ஊது]

பொடுக்கு *podukku,* பெ. (n.). மனக்கறுவு; grudge.

பொடுக்கெனல் *podukkenal,* பெ. (n.). ஓர் ஒலிக்குறிப்பு; onam. expr. signifying (a) breaking suddenly, as of cords. (b) விரைவுக்குறிப்பு; suddenness, quickness. '*சீவன் பொடுக்கென்று போயிற்று.*'

[பொடுக்கு + எனல்]

பொடுகு *podugu,* பெ. (n.). **1.** தலைச்சுண்டு; scurf, dandruff, scall on the head **2.** சிறுமை; smallness. '*பொடுகுப்பனங்காய்*' **3.** பூடுவகை; a shunb (யாழ்.அக.).

[பொடிகு + பொடுகு]

பொடுகுக்காய் *podugu-k-kāy,* பெ. (n.). **1.** சிறுகாய் (இ.வ.).; small unripefelt or bery

[பொடுகு + காய்]

பொடுதலை *podutalai,* பெ. (n.). பூடுவகை (பதார்த்த. **351.**); wild long pepper,



பொடுதலை *podudalai,* பெ. (n.). *பொடுதலை.* (நாம.தீப **323.**) பார்க்க; see *podutalai*

பொடுபொடு–த்தல் *podu-podu-,* **செ.கு.வி.** (v.i.). **1.** வெடித்தல்; to snap, as cords. **2.** துளித்தல்; to spatter, drizzle, **3.** குறைதல்(வின்.); to be scanty, hardly sufficient **4.** விரைவாய் பேசுதல்(வின்.); to speak **5.** வயிறிரைதல்; to wamble, as the bowels, **6.** கல் முதலியன ஒலியுடன் விழுதல்; to fall, as stones one after another

பொடுபொடெனல் *podu-podenal,* பெ. (n.). (a) ஓர் ஒலிக்குறிப்பு; onaom expr. signifying snapping of cords, drizzling of rain, falling of fruits or stones one after another.b) **2.** விரைந்து பேசற்குறிப்பு; rattling in speaking

[பொடுபொடு + எனல்]

பொண்டுதல் *pondu,* செ.கு.வி. கெட்டுப்போதல்(யாழ்ப்.); to grow bad deteriorate

பொத்தகம் *pottagam,* பெ. (n.). **1.** சித்திரப்படாம் (தி.வா.); painted cloth. **2.** புத்தகம்; book '*நிறைநூற் பொத்தகம் நெடுமணையேற்றி*' (பெருங் உஞ்சைக். **34, 26.**) **3.** நிலக்கணக்கு; land register. 'பொத்தகப்படிகுழி' (S.I.I. iii, **80**)

[பொருத்து → பொத்து → பொத்தகம்]

பொத்தகம்² *pottagam,* பெ. (n.). மயிலிறகு (பாலவா. **1012.**); feather of the peacock.

[பொத்து → பொத்தகம்]



பொத்தப்பி *pottappi,* பெ. (n.). தொண்டை மண்டலத்து வேங்கடக் கோட்டத்தைச் சார்ந்ததும் காளத்தியைச் சூழ்ந்ததுமான நாடு; the country around kālahasti, part of vēṉgaḍa-k-koṭṭam, in Tondai-maṇḍalam. 'கண்ணப்பர் திருநாடென்பர்.... பொத்தப்பி நாடு' (பெரியபு. கண்ணப்ப. 1.) (செந்.29, 147.)

பொத்தம் பொது *poṭṭam-podu,* பெ. (n.). பொது (வின்.); generality

[பொது + அம் + பொது]

பொத்தாம் பொது *pottam-podu,* பெ. (n.). பொது ; generality

[பொத்தம்பொது → பொத்தாம்பொது]

பொத்தர் *pottar,* பெ. (n.) பொத்தல் பார்க்க; see pottal.

[பொத்து → பொத்தர்]

பொத்தல் *pottal,* பெ. (n.) 1. துளை; hole. 2. கடன்; debt 3. குற்றம்; fault defect 4. கிழிசல்; tear.

க.பொத்தரெ. ம.பொத்து. து.பொட்ரெ

[பொத்து → பொத்தல்]

பொத்தலடை–த்தல் *pottal-aḍai,* பெ. (n.) செ.கு.வி(v.i.) 1. சுவர் கூரை முதலியவற்றிலுள்ள ஓட்டையை அடைத்தல்; to stop holes, as in a wall or roof 2. கடன் தீர்த்தல் கொ,வ; to pay off debts 3. குற்றத்தை மறைத்தல்; to cover a fault with excuses.

[பொத்தல் + அடை]

பொத்தலூசி *pottal-ūci,* பெ. (n.) *பொடியல்* (யாழ்.அக) பார்க்க; see *potiyal.*

[பொத்தல் + ஊசி]

பொத்தற்சுரை *pottar-curai,* பெ. (n.) ஒன்றுக்கும் உதவாதவன் (இ.வ); useless person

[பொத்தல் + சுரை]

பொத்தாறு *pottāṟu,* பெ. (n.) *பொத்தாறுகட்டை* (யாழ்.அக) பார்க்க; see *pottāṟu-k-kaṭṭai,*

[பொருத்து → பொத்து+ஆறு]

பொத்தாறுகட்டை *pottāṟu-k-kaṭṭai,* பெ. (n.) ஏர்க்கால்(வின்.); shaft of the plough

[பொத்தாறு + கட்டை]



பொத்தான் *pottāṉ,* பெ. (n.) சட்டையையுடலில் இட்டு மூடுவதருற்கு உதவும் பொருள்; button ‹fr.bouton ‹e

[பொருத்து → பொருத்தான் → பொத்தான் 'ஆன்' உடைமைப் பொருளீறு]

பொத்தான்கட்டை *pottāṉ-kaṭṭai,* பெ. (n.) சுவரில் ஆணி முதலியன அடிக்கப் பதிக்கும் மரக்கட்டை (கட்டடநாமா); wooden plug in a wall for fastening nails, etc.

[பொத்தான் + கட்டை]

பொத்தானட்டிகை *pottāṉ-aṭṭigai,* பெ. (n.) கழுத்தணி வகை (இ.வ); a kind of necklet

[பொத்தான் + அட்டிகை]

பொத்தி *potti,* பெ. (n.) **1.** ***பொத்தித்தோத்தி*** பார்க்க; **2.** சீலை(சங்.அக) cloth **3.** மடல்விரியா வாழைப்பூ(யாழ்ப்.); un blown flower of the plantain **4.** சோளக்கதிர்; ear of cōlam in sheath. **5.** தவசக்கதிர்(வின்.) ear of grain in sheath **6.** கன்மணி வகை; a kind of gem. '*மாணிக்கம் எழுபதும் பொத்திநாற்பத் தொன்பதும்*' (s.i.i.iii,**143**) **7.** தோலுரியாத பனங்கிழங்கு, tender palmyra root with unpeeled rind **8.** ஓர் உயிரின விதைப்பை; scrotum **9.** ஒரு பழைய சோழநகர்; ā an old cōld town. '*பொத்தியாண்ட பெருஞ் சோழனையும்*' (பதிற்றுப் **9.** பதி) **10.** வரால்; murrel. '*மத்தியுஞ் சிறுபொத்தியும்*' (குருகூர்ப்பள்ளு)

[பொத்து → பொத்தி]

பொத்தி² *potti,* பெ. (n.) பொது(வின்.); generality

[பொத்து → பொத்தி]

பொத்திக்கரப்பான் *potti-k-karappāṉ,* கரப்பான் வகை; an eruption that spreads on the body of a child

[பொத்தி + கரப்பான்]

பொத்திக்காளான் *potti-k-kāḷāṉ,* பெ. (n.) காளான் வகை(யாழ்.அக); a kind of mushroom

[பொத்தி + காளான்]



பொத்திக்கோரை *potti-k-kōrai,* பெ. (n.) கோரைவகை(வின்.); a kind of sedge

[பொத்தி + கோரை]

பொத்தித்தானம் *potti-t-tāṉam,* பெ. (n.) *பொத்தி¹,* **8** வின் பார்க்க; see *potti*

[பொத்தி + தானம்]

பொத்தித்தோவத்தி *potti-t-tōvatti* பெ. (n.) நார்மடி,(வின்.) garment of fitres

[பொத்தி + தோள் அந்தி → தோள்வந்தி → தோவத்தி]

பொத்தித்தள்ளு–தல் *potti-t-taḷḷu-,* செ.கு.வி. (v.i.) வாழை முதலியன குலை போடுதல் (யாழ்.அக), to shoot binches of flowers, as plantant

[பொத்தி + தள்ளு –தல்]

பொத்திப்பிடி—த்தல் *potti-p-piḍi-,* செ.குன்றா.வி. (v.t.) உள்ளங்கைக்குட்பற்றுதல்; to hold in the closed fist; to clasp

[பொத்தி + பிடி]

பொத்தியாட்டம் *potti-āṭṭam,* பெ. (n.) கண்ணாம்பொத்தியாட்டம்; game where blind folded person tries to catch others.

[பொத்தி + ஆட்டம்]

பொத்திரம் *pottiram,* பெ. (n.) எறிபடை; missile weapon. *'பொத்திரம் பாய்ந்து மாய்ந்தீர்'* (சேதுபு. சங்கரபாண்டி.41.)

[பொள் + திறம் → திரம்]

பொத்திலம் *pottilam,* பெ. (n.) மரப்பொந்து; hole in a tree. *'பொத்திலத் துறையு மாந்தை'* (சீவக.1395.)

[பொந்து + இல்லம் → பொத்திலம்]

பொத்திவை—த்தல் *potti -vai-,* செ.குன்றா.வி 1. மறைத்தல்; to conceal 2. பாதுகாப்புப் படுத்துதல் to keep safe

[பொத்தர் – பொத்திவைத்தல்]

பொத்து—தல் *pottu-,* செ.குன்றாவி. (v.t) 1. புதைத்தல் (பிங்) to bury *'மண்ணிடைக் கடிது பொத்துதல்'* (கம்பரா. விராதன்வதை. 43) 2. வாய், கண், காது முதலியவற்றை மூடுதல்; to cover, close as the mouth, eyes or ears with the fingers or otherwise. *'தன் செவித் தொளையிருகைகளாற் பொத்தி'* (கம்பரா. இரணிய. 22) 3. விரல் மடக்கி உள்ளங்கையை மூடுதல் (இ.வ.) to close the fingers together 4. தைத்து மூட்டுதல்; to mend, patch, botch as baskets an bags. 5. தைத்தல்; to stitch. *'இலையைப் பொத்திப்போடு'* 6. மறைத்தல்; to hide, conceal *'செம்பால் .. கிளர்படி பொத்தின'* (கம்பரா.கரன்வதை. 100) 7. அடித்தல்; to beat, *'அவனை நன்றாய்ப் பொத்திவிட்டார்கள்'*. 8. தீ மூட்டுதல்; to light, as a fire. *'கனையெரி பொத்தி'* (மணிமே. 2,42) 9. மாலை கட்டுதல்; to tie, string together, as a wreath. *'மறுகண்ணியும் பொத்தி'* (ஈடு. 1, 3, 1). 10. கற்பனை செய்தல்; to invent, imagine இல்லாத தெய்வம் பொத்தித்தம் *'மயிர் பறிக்குஞ்சமணர்'* (தேவா. 65. 8,7.)

பொத்து[2]—தல் *pottu-,* செ.கு.வி. (v.t) 1. கலத்தல்; to mix, *'நெஞ்சம் பொத்தி'* (பு.வெ. 11, ஆண்பால், 4.) 2. நிறைதல்; to be filled. *'வான்மேற் பொத்தினகுழு'*. (கம்பரா. கரன்வதை, 100.).

க.ம. பொத்து

பொத்து[2] pottu, பெ. (n.) 1. மூடுகை; covering, stopping closing up. 2. அடைப்பு; 3. பொத்தல்; *'அருச்சுனன் அம்பினால் பலபொத்துப் பொத்தினான்'* 4. பொந்து. hole, rat-hole, small cavity, hollow in a tree. (பிங்.) *'முதுமரப் பொத்தில்'* (புறநா.364,11.). 5. வயிறு; stornach. *'பொத்தடைப் பான் பொருட்டால் மையல் கொண்டீர்'* (தேவா.188,6.) 6. தவறு; fault, defect, blemish. *'பொத்தினண் பிற்பொத்தியொடு'* (புறநா.212.) 7. தீயொழுக்கம்; evil; crime; immorality (w.) 8. பொய்; falsehood, lie. *'புல்லறிவு கொண்டு பல பொத்து மொழி புத்தர்'* (திருவாத.பு. புத்தரை.77.) 9. பல்லி; lizard. (பிங்.);

[புல் → பொல் → பொத்து]

பொத்துக்கடி *Pottu-k-kaḍi,* பெ. (n,) 1. படர்தாமரை; ringworm. 2. கரப்பான் வகை; eczema. 3. அண்டவிதை; scrotum.

[பொட்டு → பொத்து+கடி]

பொத்துப்படு—தல் *Pottu-p-padu*, செ.கு.வி. (v.i.) **1.** தவறுதல்; to fail, **2.** நோக்கம் கைகூடாது தீமை பயத்தல்; to miscarry and result in evil. *'பலர்நின்று போற்றினும் பொத்துப் படும்'* (குறள்.**468.**)

[புல் → பொல் → பொத்து+

படு → பொத்துப்படு]

பொத்துப்பாய் *Pottu-p-pāy*, கரடுமுருடான பாய். rough or coarse mat. (யாழ்.அக.)

[பொத்து + பாய்]

பொத்துப் பொத்தெனல் *Pottu-p-potteṉal*, பெ. (n.) **1.** ஒலிக்குறிப்பு வகை; onom. expr. signifying a falling with a thud, as of heavy fruits. **2.** தடித்திருத்தற் குறிப்பு; plumpress. *'குழந்தை பொத்துப்பொத்தென்று இருக்கிறது.'*

[பொத்து + பொத்து + எனல்]

பொத்துமான் *Pottu-māṉ*, பெ. (n.) மான்வகை(யாழ்ப்.); a kind of deer. (j.)

[பொத்து + மான்]

பொத்தெனல் *Potteṉal*, பெ. (n.) ஓர் ஒலிக் குறிப்பு; onom. expr. signifying falling with a thud.

[பொத்து + எனல்]

பொத்தை[1] *Pottai*, பெ. (n.) பருமையானது(கொ.வ.); anything large, or bulky.

தெ. பொத்து க.பொஜ்ஜ

[பொத்து → பொத்தை]

பொத்தை[2] *Pottai*, பெ. (n.) **1.** பொத்தல் பார்க்க; *'பொத்தை யூன்சுவர்'* (திருவாச.**26,7.**). **2.** உடம்பு; body. *'உடம்பு அழுக்குப்பேணும் பொத்தையே போற்றி'* (தேவா.**996,1.**).

[பொது → பொத்து → பொத்தை]

வே.க *(பக்.79)*

பொத்தை[3] *Pottai*, பெ. (n.) *பேத்தை,***1.** பார்க்க; see *pettai*

[பொத்து → பொத்தை]

பொத்தைக்கால் *Pottai-k-kāl*, பெ. (n.) யானைக்கால்; elephantiasis.

[பொத்தை + கால்]



பொத்தைச்சி *Pottaicci*, பெ. (n.) தடித்தவள் (யாழ்.அக.); stout woman.

[பொத்தையன் → பொத்தைச்சி]

பொத்தையன் *Pottaiyaṉ*, பெ. (n.) தடித்தவன். stout man.

[பொத்தை + அன்]

பொதரவண்ணான் *Podara-vaṉṉāṉ*, பெ. (n.) *இராப்பாடி* பார்க்க; see *Irāpādi.*

[பொதி → பொதிரை → பொதிரை+ வண்ணான்]

பொதரையன் *Podaraiyan*, பெ. (n.) *பொதர வண்ணான்* பார்க்க; see *podara-vaṇṇāṉ*

[பொதி → பொதிரை → பொதிரையன்]

பொதி[1]-தல் *Podi-*, செ.கு.வி. (v.i.) 1. நிறைதல்; to be full, as in leaning '*மிக்ககனம் பொதிந்த நூல்*" (நாலடி,341.).

பொதி[2]-தல் *Podi-*, 1. சேமித்தல்; to store up, treasure up, '*பொன்போற் பொதிந்து*' (குறள்,155.) 2. உள்ளடக்குதல்; to contain, hold. '*செழுந்தேனும் பொதிந்து*' (திருக்கோ.46.) 3. மறைத்தல்; to hide, conceal, cover up. '*தூண்டிலினுட் பொதிந்த தேரையும்*' (திரிகடு.24.) 4. பிணித்தல்; to tie up, as a bundle (w.) 5. கடைப்பிடித்தல்; to maintain follow, act up to. '*யானிகழ்த்து நீதியைப் பொதிவதுன்கடன்*' (விநாயகபு.4,1.).

[பொத்து → பொத்தி → பொதி]

பொதி[3] *Podi*, பெ. (n.) 1. நிறைவு; fullness, perfection, '*பொதித்தே ணுகர்ந்தகலும்*' (தஞ்சைவா. 290.) 2. மூட்டை; pack, bundle; load, as for a beast; parcel tied in a cloth. '*கண்ணெழுத்துப்படுத்த.....பொதி*' (சிலப்.5,112.) 3. பலபண்டம் (திவா.); miscellanceous goods. 4. செல்வம். (திவா.); treasuse. 5. சொற்பயன், (திவா.); meaning of a word. 6. ஒருவகை நிறையளவு; pack-load, a measure of weight varying with the locality. 7. 3 அல்லது 4 கன அடியுள்ள நீர்மப் பொருளளவு வகை; a liquid measure of 3or4c.ft. 8. 2640 சதுரஅடிகொண்ட நிலவளவு வகை(M.M.); a superficial measure of land, 2,640. sq.yards. 9. பிணிப்பு; tie, fastening, '*மலர்ப்பொதிய விழ்த்து*' (காசிக.நாரத.5) 10. கட்டுச்சோறு (பிங்.); boiled rice tied up for a journey; viaticum. 11. தொகுதி; collection. '*பெய்கணைப் பொதிகளாலே வளர்ந்தது பிறந்தகோபம்*' (கம்பரா.நாகபா.114.) 12. அரும்பு; flower bud. '*கமலப் பொதியினை நகுவன புணர்முலை*' (கம்பரா. நாட்.44.) 13. கொத்து; cluster. '*அம்பொதித்தோரை*' (மலைபடு.121.) 14. முளை; tender shoots, as of paddy. '*பசும்பொதித் தேறல்*' (மலைபடு.463.) 15. உடல்; body '*பொதியே சுமந்துழல்வீர்*' (தேவா.1154.9.). 16. தவிடு (பிங்.); bran. 17. கரிகாடு (பிங்.); burnt jungle. 18. மூங்கில் முதலியவற்றின் பட்டை; bark, as of bamboos. '*பையங்கழை பொதிகளைந் தன்ன*' (புறநா.253.) 19. குடையோலை (திவா.); ola basket used as a cup in eating and drinking. 20. ஆவு முதலியவற்றின் மடி(C.G.); vadder. 21. பருமன்; stoutness. ஆள்பொதியாயிருக்கிறான் (உ.வ.) 22. ஓலைக்குடை (சது.); umbrella made of palm leaves.

[பொது → பொதி]

வே.க. பக்.78

பொதி[3] *Podi*, பெ. (n.) 1. *பொதியில்* பார்க்க; 1. '*மன்றும் பொதியினு மாமயில்சேர் தஞ்சை வாணன்*' (தஞ்சைவா.34.). 2. *பொதியம்* பார்க்க; see *podiyam*'*பொதிமா முனிவ*' (சிவதரு. பாவ.23.)

[பொது → பொதி]

பொதி[4] *Podi*, பெ. (n.) காய்ந்த நன்செய்; dry state of wet land. tinn.

[புழுதி → பொதி]

பொதிகரம் *Podi-karam,* பெ. (n.) காரமருந்து; caustic. "பொதிகாரமிட்ட புண்போல்" (சரவண. பணவிடு.109)

[பொதி + கரம்]

பொதிக்காரன் *Podi-k-kāraṉ,* பெ. (n.) *பொதிகாரன்* பார்க்க; *Podi-k-kāraṉ*

[பொதி + காரன்]

பொதிகாரன் *Podi-kāraṉ,* பெ. (n.) பொதி யெருதுக்காரன்; person who use pack-oxen.

[பொதி + காரன்]

பொதிகெளிறு *Podi-keḷiṟu,* பெ. (n.) கடல்மீன்வகை (J.N.); a seafish

[பொதி + கெளிறு]

பொதியப்பத்துண்டு *Poti-appatuntu,* பெ. (n.) பழக்கூட்டுப் பண்ணியத்துண்டு; tartlet.

[பொதி + அப்பம் + துண்டு]

பொதியப்பம் *Pōdi-appam,* பெ. (n.) பழங்கள் உட்பொதிந்த பண்ணியம்; tartlet.

[பொதி + அப்பம்]

பொதிகை *Podigai,* பெ. (n.) *பொதியம்* பார்க்க; see *podiyam.*

[பொதி → பொதிகை] வே.க. (பக்.78)

பொதிகைநிகண்டு *Podigai-nigaṇḍu,* கல்லிடைக் குறிச்சியிலிருந்த சுவாமி கவிராயரால்' இயற்றப்பெற்ற தமிழ்ச் சொற்பொருள் நூல்; a tamil lexicon

[பொதிகை +Skt. nighantu.த. நிகண்டு]

பொதிச்சோறு *podi-c-cōṟu,* பெ. (n.) *பொதிசோறு* பார்க்க; see *podi-šōṟu,*

[பொதி + சோறு]

பொதிசோறு podi-šōṟu, பெ. (n.) *பொதி², 10.* (திவா.) பார்க்க; *'சால மிகப்பசித்தீர் இப்பொதிசோறு தருகின்றேன்'.* (பெரியபு. ஏயர்கோன் 159.)

(பொதி + சோறு)

பொதிந்துவை-த்தல் *podinduvai-,* செ.குன்றா.வி. (v.t). இடைவிடாது மனத்துட் கொள்ளுதல் (யாழ்.அக.); to keep always in memory."பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து" (திருக் 155)

[பொதிந்து + வை]

பொதிப்பருவம் *podi-p-paruvam,* பெ. (n.) நெற்கதிரிற் பால் பிடிக்கும் பருவம்(இ.வ.); stage in the growth of paddy when the grain is in the milk.

[பொதி + பருவம்]

பொதிப்போதா *podi-p-pōda,* பெ. (n.) பெருநாரை. (அக. நி.); a large heron.

[பொதி + போதா]

பொதிமாடு *podi-māḍu,* பெ. (n.) மூட்டை சுமக்கும் எருது (வின்.); pack bull.

[பொதி + மாடு]

பொதிமுருங்குநோய் *podi-muruṅgu-nōy,* பெ. (n.) சோளப்பயிர் நோய்வகை; a disease affecting cōlam crop. 2. மாட்டுநோய் வகை; a cattle disease.

[பொதி + முருங்கு + நோய்]

பொதியப்பொருப்பன் *podiya-p-poruppaṉ,* பெ. (n.) பாண்டியன். (தி.வா.); pandya king, as lord of mt. potiyam.

[பொதியம் + பொருப்பன்]

பொதியம் *podiyam,* பெ. (n.) பாண்டிய நாட்டிலுள்ளதும் அகத்திய முனிவர் இருப்பிடமாகக் கருதப்படுவதுமான மலை; a mountain in pandya country, famed as the abode of Agattiyar. *'பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்றே'* (புறநா.2)

[பொதி → பொதியம்]

'அம்' பெருமைப் பொருள் பின்னொட்டு

பொதியவிழ்[1]–தல் *podi-y-aviḻ-,* செ.கு.வி. (v.i.) அரும்பு முறுக்கவிழ்தல்; to blossom out, unfold. *'பொதியவிழ் மாலை வீழ்ந்து'* (சீவக. 1447)

[பொதி + அவிழ்]

பொதியவிழ்–த்தல் *podi-y-aviḻ-,* செ.குன்றா.வி. (v.t.) தன் வரலாறு விரித்தல் (இ.வ.) to begin one's tale; lit, to open one's bag. (பையை அவிழ்த்தல்)

[பொதி + அவிழ் → அவிழ்த்தல்]

பொதியவெற்பன் *podiya-verpaṉ,* பெ. (n.) *பொதியப் பொருப்பன்.* (சூடா.) பார்க்க; see *podiya-p-poruppaṉ*

[பொதியம் +வெற்பன்]

பொதியறு–த்தல் *podi-y-aṟu-,* செ.கு.வி. (v.i.) பணத்தைக் கவர்தல்; to extort money. *'கணிகையரே போன்றிருந்து பொதியறுக்கும் புத்தன்'* (நீலகேசி குண்டல. 74.).

[பொதி + அறு]

பொதியறை *podi-y-aṟai,* பெ. (n.) காற்றோட்டமில்லாத கீழறை; underground room without air-holes. *'பொதியறைப் பட்டோர் போன்றுளம் வருந்தி'* (மணிமே. 4, 105.)

[பொதி + அறை]

பொதியன் *podyaṉ,* பெ. (n.) அகத்தியமுனிவர் (யாழ்.அக.); sage agastya

[பொதியம் → பொதியன்]

பொதியன்கெளிறு *podiyaṉ-keḷiṟu,* பெ. (n.) மீன்வகை; a kind of fish *'பொதியன் கெளிறு வவ்வால்'* (பறாளை. பள்ளு.16)

[பொதி → பொதியன் → கெளிறு]



பொதியனாபி *podiyaṉābi,* பெ. (n.) மயிர் (சங்.அக.); hair.

பொதியில் *poti-y-il,* பெ. (n.) **1.** அம்பலம்; public hall. *'தமனியப் பொதியிலும்' (மணிமே. 28, 66)* **2.** *பொதியம். பார்க்க; 'ஆஅய் மழை தவழ் பொதியில்' (குறுந். 84.)*

[பொது + இல் → பொதியில்]

பொதியுறை *poti-urai,* பெ. (n.) மருந்துறை; capsule.

[பொதி + உரை]

பொதியெருது *potiy-erutu,* பெ. (n.) *பொதிமாடு.* (தனிப்பா. ii, 283, 487.) பார்க்க; *podimadu*

[பொதி + எருது]

பொதிர்[1]–தல் *podir-,* செ.கு.வி. (v.i.) 1. வீங்குதல்; to swell. *'புனைதார் பொர நொந்து பொதிர்ந்த வென'* (சீவக. 1380.) 2. மிகுதல் (வின்.); to increase, abount (w) 3. நடுங்குதல்; to tremble. *'சிரம்பொதிர்ந் தமர ரஞ்ச'* (கம்பரா. பிரமாத். 13) 4. அஞ்சுதல் (தி.வா.) to be afraid.

[பொதி → பொதிர் →பொதிர்தல்]

(வே.க.பக்.78)

பொதிர்[2]–த்தல் *podir-,* செ.குன்றாவி. 1. குத்துதல்; to pierce (v.t.) *'கழை பொதிர்ப்பத் தேன் சொரிந்து'* (சீவக. 2778) 2. முரித்தல்; to break, break off *'கவண்கலான் வார்பணை பொதிர்த்தும்' (துணிகைப்பு. நாட்டுப். 41.)*

பொதிர்[3]–த்தல் *podir-,*செ.கு.வி. (v.i) பருத்தல்; to well, increase in size, became large. 'பொதிர்த்த முலையிடை' (பரிபா. 21, 25.)

[பொதி→பொதி→பொதிர்தல்]
(வே.க.பக்.79)

பொதிர் *podir-,* பெ. (n.) *பொதிர்வு1* பார்க்க; *'மெய்பொதி ரெறிந்துவிம்ம்'.* (சூளா. அரசி. 10)

[பொதிர் → பொதிர்]

பொதிர்ப்பு *podirppu,* பெ. (n.) *பொதிர்வு* (திவா.) பார்க்க; *see podirvu*

[பொதிர் → பொதிர் → பொதிர்ப்பு]

பொதிர்வு *podirvu,* பெ. (n.) நடுக்கம், trembling. *'எல்லாவுலகும் பொதிர்வுற'* (கம்பரா. வாலிவ. 30) 2. அச்சம். (சங்.அக.); fear, dread.

[பொதிர் → பொதிர்வு]

பொதிரெறி–தல் *podir-eri,* செ.கு.வி. (v.i.) நடுங்குதல்; to tremble. *'நண்ணோர் பொதிரெறிய வார்த்தான்'.* (கம்பரா. அதிகா. 100)

[பொதிர் + எறி → தல்]

பொதிவு *podivu,* பெ. (n.) பொதியாகக் கட்டுகை (யாழ். அக.) 2. ஒற்றுமை *'அந்த சகோதரர்க்குள் பொதிவுண்';* (இ.வ.) union.

[பொதி → பொதிவு]

பொதிவை–த்தல் *podi-vai-,* செ.கு.வி. (v.i) 1. புதையல் வைத்தல்; to keep a treasure underground. *'பூதலத்திலேதான் பொதிவைத் திரப்பவர்போல்'* (கூளப்ப. காதல். 6). 2. நெற்பயிர் முதலியன காய்பிடிக்கும் பருவமாதல் (நெல்லை); to be big with grains, as standing crop.

[பொதி + வை]

பொதின்பொதினெனல் *podin-podinenal,* பெ. (n.) ஈரடுக்கொலிக்குறிப்பு(வின்.) (யாழ்.அக.) onom. expr. of a recurring sound.

[பொதின் + பொதின் + எனல்]

பொதீர்பொதீரெனல் *poïr-poïr-enal,* பெ. (n.) விழுதல், அடித்தல், முதலிவற்றின் ஈரடுக் கொலிக்குறிப்பு(வின்.) onom. expr. of a recurring sound of falling, as fruits, blows, etc.

[பொதீர் + பொதீர் + எனல்]

பொது—தல் *potu-,* செ.கு.வி. (v.i.) துளைபடுதல்; to be perforated. *'மரம் பொதச்சரந்துரந்து'* (திவ். திருச்சந். 73)

பொது—த்தல் *podu-,* செ.குன்றாவி.(v.t.) **1.** துளைத்தல்; to bore. *'புட்கள் பொதுத்த புலால் வெண்டலை'* (பதினொ. மூத்த. 3.) **2.** முள் முதலியன பாய்தல்; to pierce, prick. *'கப்பணம் கால்களைப் பொதுக்கும்படி'* (மதுரைக் 598, உரை.)

[பொது → பொது—த்தல்]

பொது[3] *potu,* பெ. (n.) **1.** பொதுமையானது. 'that which is common or shared by many; generality, opp. to cirappu. *'பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்'* (குறள், 528.) **2.** சிறப்பின்மை; lack of distinction. *'பொதுக் கொண்ட... வதுவை'.* (கலித். 66). **3.** இயல்பானது; that which is ordinary or general. ÊĻaOO *'பொதுவின் மண்ணுயிர்க் குலங்களும்'* (கம்பரா. வருணனை. 30.) **4.** வழக்கமானது; that which is usual or natural. *'உரை பொதுவே'* (கம்பரா. முதற். 172.) **5.** நடுவுநிலை. neutrality. *'அவன் எந்தப் பக்கத்திலும் சேராது பொதுவாயிருக்கிறான்'* **6.** ஒப்பு; likeness, equality. *'ஒன்றொடு பொதுப்படா வுயர் புயத்தினான்'* (கம்பரா. நாகபாச. 75.) **7.** குறிப்பான பொருளின்மை; (கொ.வ.) vagueness. **8.** வெளிப்படையானது; that which is public **9.** மன்று; public place, assembly. *'பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை'* (புறநா. 89) **10.** தில்லையம்பலம்; the hall in the temple at chidambaram *'கோலமார் தருப் பொதுவினில் வருகென'* (திருவாச. 2, 128.)

[புது→ பொது]

வே.க. (பக்.78)

ம. பொது. தெ.பொது (பொத்து)

பொதுஅறிவு *pōdu-arivu,* பெ. (n.) *பகுத்தறிவு (நல்லறிவு);* common sense

[பொது + அறிவு]

பொதுஒப்புமை *pōtu-oppumai,* பெ. (n.) *பொதுச்சாயல்* பார்க்க; see *pōtu-c-calai*

[பொது + ஒப்புமை]

பொதுஊழியர் *pōtu-uliyar,* பெ. (n.) அரசுப்பணியாளர்; government servent

[பொது + ஊழியர்]

பொதுஒழுகலாறு *pōtu-olunkalaru,* பெ. (n.) பொது நடத்தைமுறை; common behaviour

[பொது + ஒழுகலாறு]

பொதுஒழுங்கை *pōtu-olunkai,* பெ, (n.) *பொதுச்சாலை* பார்க்க; see *pōdu-c-calai*

[பொது + ஒழுங்கை]

பொதுக்கணக்கு *pōtu-k-kanakku,* பெ. (n.) பொது வரவு – செலவுக்கணக்கு; statement of debits and credits.

[பொது + கணக்கு]

பொதுக்கணக்கர் *pōtu-k-kanakkar,* பெ. (n.) பொது வரவுசெலவுக் கணக்காளர்; common Accountant.

[பொது + கணக்கர்]

பொதுக்கட்டு—தல் *podu-k-kaṭṭu-,* செ. குன்றா.வி. (v.t.) நடுநிலையாளரிடம் தருக்கப் பொருளை ஒப்படைத்தல் (கொ.வ.); to deposit by mutual consent, as with a mediator or panchāyat.

[பொது + கட்டு]

பொதுக்கருத்து *pōdu-k-karuttu,* பெ. (n.) பொதுநலக்கருத்து; common welfare idea.

[பொது + கருத்து]

பொதுக்காரியம் *podu-k-kāriyam,* பெ. (n.) குமுகாய நலத்துக்கேற்ற செயல்(கொ.வ.); matter concerning a community or the general public.

[பொது + காரியம்]

(skt. kārya - த. காரியம்)

பொதுக்கு—தல் *podukku-,* செ.குன்றா.வி. (v.t.) 1. விலக்குதல்; to omit, leave out. 2. மறைத்தல்; to conceal. 'விழிவேல் பாய்ந்து பொதுக்கிடம் விடாதென்னாகம் புகுந்து' (இரகு. கடிமண. 49.) 3. கவர்தல்; to embezzle.

[பதுக்கு → பொதுக்கு]

பொதுக்கு² — தல் *potukku-,* செ.குன்றா.வி. (v.t.) புகையிற் பழுக்க வைத்தல்; to riper fruits by funigation. *'வாழைக்காய்களைக் கனியாகுமாறு இலை முதலியன இட்டுப் பொதுக்குகிறார்கள்'* (இ.வ.)

[பொதி → பொதுக்கு]

பொதுக்கு³ *podukku* பெ. (n.) 1. விலக்கு; omission. *'பொதுக்கற வுரைக்குமது'* (இரகு. மீட்சி. 18.) 2. ஒதுக்கு (சங்.அக.); secluded place. 3. மறைப்பு (சங்.அக.); concealment.

[பொதி → பொதுக்கு]

பொதுக்குணம் *potu-k-kuṉam,* பெ. (n.) *பொதுத்தன்மை* பார்க்க; see potu-t-*taṉmai*

[பொது + குணம்]

பொதுக்குழு *pōdu-k-kuḻu,* பெ. (n.) 1. பொதுத்திட்டமிடல் குழு; group of common estimate. 2. ஓர் அமைப்பின் உறுப்பினர் கூட்டம்; General body of an organization.

[பொது + குழு]

பொதுக்கூட்டம் *pōdu-k-kuttam,* பெ. (n.) ஒரு குறிப்பிட்ட கருத்தை மக்களிடையே எடுத்துச் சொல்லப் பொது இடத்தில் நிகழ்த்தப் பெறும் மேடைப்பேச்சு, mass meeting. public meeting.

[பொது + கூட்டம்]

பொதுக்கெனல்¹ *podukkeṉal,* பெ. (n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom expr. of (a) sudden noise. (b) நெகிழ்தற் குறிப்பு; yielding to pressure.

[பொதுக்கு + எனல்]

பொதுக்கெனல்² *podukkeṉal,* பெ. (n.) ஞெரேரெனல் (அக்நா. 39. உரை); onom expr of suddeness

பொதுக்கை *podu-k-kai,* பெ. (n.) பல கூத்துக்கும் பொதுவான நளிநயக்கை வகை;

(சிலப். 3,18. உரை.); (nātya); a gesture of hand common to different kinds of dances.

[பொது + கை]

பொதுக்கோ *podukkō-,* இ.சொல். *int,* சடக்கென;hurriedly or suddenly. *'புள்ளிதுவென்று பொதுக்கோவாய் கீண்டிட்ட'* (திவ். பெரியாழ். 2, 5, 4.)

[பொதுக்கு → பொதுக்கோ]

பொதுக்கோட்பாடு *pōtu-k-kotpatu,* பெ. (n.) பொதுநெறிமுறை; general principle.

[பொது + கோட்பாடு]

பொதுங்கு—தல் *podungu-,* செ.கு.வி. (v.i.) வருந்துதல்; to suffer. "*பொதுங்கிய வைவரை*" (திருமந். 2914.)

[பொசுங்கு → பொதுங்கு]

பொதுச்சட்டம் *pōtu-c-cattam,* பெ. (n.) பொதுநெறிமுறை; general rule.

[பொது + சட்டம்]

பொதுச்சதுக்கம் *pōtu-c-catukkam,* பெ. (n.) நகரின் நடுவில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தெருக்கள் சந்திப்பதால் ஏற்படும் பரந்த வெளியிடம்.open space in the middle of the town formed by the meeting of two or more streets.

[பொது + சதுக்கம்]

பொதுச்சாயல் *pōtu-c-cayal,* பெ. (n.) பொது ஒப்புமை; common resemplance.

[பொது + சாயல்]

பொதுச்சாலை *pōtu-c-calai,* பெ. (n,) பொது ஒழுங்கை; common road.

[பொது + சாலை]

பொதுச்சீர் *podu-c-cir,* பெ. (n,) நாலசை யாலாகிய வஞ்சிப்பாவில்' வரக்கூடியனவும், தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்பவற்றோடு தண்ணிழல், தண்பூ நறும்பூ,நறுநிழல் என்பவற்றைத் தனித்தனிச் சேர்ப்பதனால் தோன்றுவனவுமான 16 சீர்கள் (காரிகை. உறுப். 5); (pros) vañji; feet of four syllables peculiar to vaṉci, verse, of which there areāūs , the formulas being formed by adding to tēma, puḷimā, karuviḷam, kūviḷam, each of the terms taṉṉiḷal, taṉpū, naṟumpu,naṟuniḷal.

[பொது + சீர்]

பொதுச்சூத்திரம் *podu-c-cūttiram,* பெ. (n.) பொதுவான இலக்கணங் கூறும் (சூத்திரம்) நூற்பா; (gram) aphorism stating a general rule.

[பொது + SKṭ. sūtra. *த.சூத்திரம்]*

பொதுச்செய்தி *pōtu-c-cithi,* பெ. (n,) பொது நடப்புச் செய்தி; common topic.

[பொது + செய்தி]

பொதுச்செலவு podu-c-celavu, பெ. (n.) **1.** காவல்முதலியவற்றிற்குநில உரிமையாளர் களத்திற் செலவிடும் தவசம்(R.T); general charges in kind met by land-owners on the threshing-floor. **2.** பொதுப் பணத்திலிருந்து ஊரார் முதலியோர் செலவிடுந்தொகை; expenses met from a common fund, as of a villages.

[பொது + செலவு]

பொதுச்சொத்து potu-c-cottu, பெ. (n.) 1. பொது நன்மை, வேளாண்மைக்குத் தகுதியின்மை முதலிய காரணங்களினால் தீர்வை குறிக்கப்படாமலும், பயிரிடாமலும் விடப்பட்ட நிலம்; land exempt from assessment, either because it is set aside for communal purposes or because it is uncultivable (M.N.A.D-ā,rōḏ) 2. பொட்டல்காடு, dry land. *"அந்திக்கடைப் பொட்டல்" "பூமி சில பொட்டலற்" (தாயு.எந்நாட்.1242) 3. பலருக்குப் பொதுவான இடம்,* common property. *புறம்போக்கு – வரண்ட வெற்று நிலம்.*

[பொது + சொத்து]

பொதுச்சொம் podu-c-com, பெ. (n.) பொதுப்படையான சொத்து; (யாழ்.அக) common property.

[பொது + சொம்]

பொதுச்சொல் podu-c-col, பெ. (n.) 1. எல்லாரும் அறிந்த சொல்; word in general use. 2. இருதிணைகட்கும் பொதுவாகிய சொல்; (Gram) word common to both the tiṇai. '*ஒன்றொழி பொதுச்சொல்*' (நன்.269) 3. உலகம் பலர்க்கும் பொது என்ற சொல்; world inplying common possession, as of the world. '*போகம் வேண்டிப் பொதுச் சொற் பொறாஅது*' (புறநா.8) 4. படலம் முதலிய நூற்பகுதிக்குத் தலைப்பாக இடும்சொல்; general heading '*பொதுச் சொற்றானே படர்வது படலம்*' (சூடா)

[பொது + சொல்]

பொதுசனம் podu-šaṉam, பெ. (n.) 1. பொது மக்கள்; the public. 2. நடுநிலையாளர்கள்; arbitrators.

[பொது + skṭ.Jana. *த.சனம்]*

பொதுஞானம் podu-ñāṉam, பெ. (n.) பொது அறிவு; differentiated knowledge. '*பொது ஞானம் வந்தணுகி*' (கோயிற்பு. இரணிய.38)

[பொது + pkṭ.ñāna.skṭ.jñāna. *த. ஞானம்]*

பொதுத்தன்மை podu-t-taṉmai, பெ. (n.) 1. நடுவுநிலைமை; neutrality. 2. பெரும்பாலும் காணப்படும்குணம்; commonness, generality. 3. உவமான உவமேயங்களில் அமைந்துள்ள பொதுவான இயல்பு (அணியி.1); attribute common to uvamāṉam and unamēyam, as redness to coral and to the lips.

[பொது + தன்மை]

பொதுத்திட்டம் potu-t-titam, பொ. (n.) பொது மதிப்பீடு; common plan.

[பொது + தேர்தல்]

பொதுத்திணை podu-t-tiṇai, பெ. (n.) இரு திணைகட்கும் பொதுச்சொல்(வின்); word, common to both the tiṇai.

[பொது + திணை]

பொதுத்துறை podu-t-tuṟai, பொ. (n.) *பொதுநிறுவனம்* பார்க்க; see *podu-niṟuvaṉam.*

[பொது + துறை]

பொதுத்தேர்தல் podu-t-tērdal, பொ. (n.) நாடாளுமன்றம்–சட்டமன்றம் ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க 18–அகவை நிரம்பிய ஆண்–பெண் அனைவரிடமும் நேரி(vote) பெறுவதற்கான தேர்தல்; act of choosing by vote, general election.

[பொது + தேர்தல்]

பொதுத்தேர்வு pōdu-t-tērvu, பொ. (n.) மாணவர்களின் திறமையறிய நடத்தப்படும் தேர்வு; publicexamination.

[பொது + தேர்வு]

பொதுத்தோற்றம் potu-t-totram, பொ. (n.) நேர்த்தியான தோற்றம்; get-up, general appearance.

[பொது + தோற்றம்]

பொதுநடுவர் podu-naḍuvar, பெ. (n.) நடுநிலையாளர் (யாழ்.அக); arbitrators.

[பொது + நடுவர்]

பொதுநலத்தார் podu-nalattār, பெ. (n.) பொதுமகளிர்; prostitutes. '*பொதுநலத்தார் புன்னலந் தோயார்*' (குறள்.915)

[பொது + நலம் → நலத்தார்]

பொதுநலப்பண்பு pōtu-nalappanpu, பெ. (n.) பொதுநலம் பேணும் பண்பு; common weal.

[பொதுநலம் + பண்பு]

பொதுநலம் podu-nalam, பெ. (n.) **1.** *பொது நன்மை* பார்க்க; see *podu nanmai* **2.** பொருள் கொடுப்பார் பெறுஞ்சிற்றின்பம்(குறள்.915); sexual enjoyment avail able for hire.

[பொது + நலம்]

பொதுநன்மை podu-naṉmai, பெ. (n.) பொதுமக்களுக்கு உற்ற நன்மை; common weal, public good.

[பொது + நன்மை]

பொதுநாயகம் podu-nāyagam, பெ. (n.) எல்லாவற்றிற்குந் தலைமை; universal severeignty. "பொதுநாயகம் பாவித்து இறுமாந்து"(திவ்.பெரியாழ்.4,9.4)

பொதுநிலம் potu-nilam, பெ. (n.) **1.** பலருக்குப் பொதுவானநிலம்; land held in joint ownership. **2.** குமுகாய நன்மைக்காகச் சிற்றூர்களில் பயிரிடாது விடப்பட்ட நிலம்; land left uncultivated in a villege for communal purposes.

[பொது + நிலம்]

பொதுநிறம் podu-niṟam, பெ. (n.) **1.** மாநிறம்(வின்); complexion between fair and black, as an indefinite middling colour.

[பொது + நிறம்]

பொதுநிறுவனம் poṟu-niduvaṉam, பெ. (n.) அரசின் பொது வெளியீடு மற்றும் ஊர்திகள் செயலொழுங்குத்துறை; public department.

[பொது + நிறுவனம்]

பொதுநீக்கு—தல் podu-nīkku, செ.குன்றா.வி. (v.t.) **1.** பொதுமையை விடுத்தல்; to avoid generality. '*பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க்கென்றும் பெருந்துணையை*' தேவா. 13,5) **2.** தனக்கே உரிமையாக்குதல்; to make one's own.

[பொது + நீக்கு]

பொதுநீங்குவமை podu-nīṅguramai, பெ. (n.) **1.** *இயைபின்மையணி*(தண்டி.30,23) பார்க்க; see *iyaibiṉmai-y-aṇi* a figure of speech.

[பொது + நீங்கு + உவமை]

பொதுநூல் pōdu-nūl, பெ. (n.) எல்லாப் பிரிவினருக்கும் பொதுவான நூல்; அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலில் உலக மாந்தரினம் அனைவரும் வியந்து ஏற்கும் அறநெறி, பொருளாக்கம், வாழ்வியல் ஒழுகலாறு ஆகிய மெய்ப்பொருள் உண்மைகளை உள்ளடக்கிய திருக்குறள் குறிப்பிடத்தக்கது. treatise on fundamental principles acceptable to all religionists.

[பொது + நூல்]

பொதுநெறி podu-neṟi, பெ. (n.) யாவரும் செல்லும் வழி; common way. '*உயிர்போகு பொதுநெறி*' (சிலப்.28,173)

[பொது + நெறி]

பொதுநோக்கு podu-nōkku, பெ. (n.) 1. எல்லாரையும் ஒப்ப நோக்குகை; impartial regard, as of a king. '*பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே*' (புறநா. 121) 2. மாறுபாடான பார்வை; indifferent look '*ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்*' (குறள்.1099) 3. பகுத்தறிவு;common sense. '*எம்மி டத்தேயமைந்துள்ளஅறிவின் அகலத்தளவாகப் பொதுநோக்காக நோக்கி*' (பிரபஞ்சவி. 20)

[பொது+நோக்கு]

பொதுநோக்கம் pōtu-nōkkam, பெ. (n.) பொதுநலப் பார்வை; public intrest.

[பொது + நோக்கம்]

பொதுப்பங்கு pōtu-p-panku, பெ. (n.) *பொதுச்சொத்து* பார்க்க; see *potuccottu.*

[பொது + பங்கு]

பொதுப்படு—தல் podu-p-paḍu, செ.கு.வி. (v.i.) 1. பொதுவாதல்; to be general '*பொதுப்படக் கூறி வாடியயுழுங்கல்*' (திருக்கோ. 354) 2. ஒப்பாதல்; to agree. '*பொன்னொடே பொருவினல்ல தொன்றொடு பொதுப்படாவுயர் புயத்தினான்.*' (கம்பரா. நாகபாச. 75)

[பொது + படு–,]

பொதுப்படை podu-p-paḍai, பெ. (n.) பொதுவானது; that which is common.

[பொது + பொதுப்படு → படை]

பொதுப்பட்டியல் potu-p-patiyal, பெ. (n.) பொதுவான பட்டியல்; common list.

[பொது + பட்டியல்]

பொதுப்பண் podu-p-paṉ, பெ. (n.) இரவும் பகலும் பாடற்கு உரியபண்(சங்.அக); musical mode fit to be sung during both day and night.

[பொது + பண்]

பொதுப்பண்பு potu-p-panpu, பெ. (n.) பொதுநலன்; common charactor.

[பொது + பண்பு]

பொதுப்பணம் podu-p-paṇam, பெ. (n.) பொதுவான தொகை; common fund.

[பொது + பணம்]

பொதுப்பணி potu-p-pani, பெ. (n.) அறப்பணி சார்ந்த பொது நலப்பணி; public welfare work.

[பொது + பணி]

பொதுப்பணித்துறை podu-p-paṇi-t-tuṟai, பெ. (n.) சாலைப்போக்குவரத்து; நீர்நிலைகள், அரசுக்குச்சொந்தமானகட்டடங்கள் முதலியவற்றைப் பேணுகை; Public Works Department.

[பொதுப் + பணித்துறை]

பொதுப்பாதை potu-p-patai, பெ. (n.) பொதுவழி; common road.

[பொது + பாதை]

பொதுப்பால் pōdu-p-pāl, பெ. (n.) ஆண்–பெண் இரண்டும் குறிக்கும் பொதுப் பால்; common gender.

[பொது + பால்]

பொதுப்பாயிரம் podu-p-pāyiram, பெ. (n.) நூலியல்பு, நுவல்வோன்திறம், நுவலுந்திறன், கொள்வோன்கூற்று, கோடற்கூற்று ஆகியவற்றைப் பற்றிக் கூறும் முன்னுரை; general preface dealing with the nature of treatises, and authors, the method of teaching students and the method of study, opp. to ciṟappu-p-pāyiram. "எல்லா நூற்குமிலை பொதுப்பாயிரம்" (நன்.2)

[சிறப்பு + பாயிரம்]

பொதுப்பெண் podu-p-peṇ, பெ. (n.) *பொது மகள்*[1](சூடா) பார்க்க; see *podu-magaḷ.*

[பொது + பெண்]

பொதுப்பெண்டு potu-p-pentu, பெ. (n.) *பொதுமகள்*[1] பார்க்க; see *podu-magaḷ* *'பொதுப்பெண்டி ரல்குற்புனை மேகலை'* (கம்பரா.வரைக்கா.76)

[பொது+பெண்டு]

பொதுப்பெயர் podu-p-peyar, பெ. (n.) 1. பல பொருட்குப் பொதுவாகிய பெயர்(நன். 62. உரை); generic name, opp. to cirappu-p-peyar 2. இருதிணைக்கும் அல்லது அஃறிணை இருபாற்கும் பொதுவாகவரும் பெயர்(நன்.281–282); noun common to both tiṇai, or both numbers in aṟṟinai

[பொது+பெயர்]

பொதுப்பேச்சு podu-p-pēccu, பெ. (n.) 1. பொதுப்படையான சொல்; indefinite language or talk. 2. ஈர்ப்பாற்றல் வாய்ந்த பேச்சு(வின்); ambiguous talk.

[பொது+பேச்சு]

பொதுப்பொல்லாங்கு potu-p-pollanku, பெ. (n.) *பொல்லாங்கு* பார்க்க; see *pollanku.*

[பொது + பொல்லாங்கு]

பொதுபொதெனல் podu-podeṉal, பெ. (n.) 1. வர வர மிகுதியாதற்குறிப்பு(சங்.அக); gradual increase 2. ஆடை முதலியன அழுத்தமின்மைக்குறிப்பு; softness, as of texture. 3. ஈரத்தால் நனைந்திருந்தற் குறிப்பு(வின்); yielding to pressure on account of dampness, as a wall.

[பொது + பொது + எனல்]

பொதும்பர் podumbar, பெ. (n.) 1. மரம் செறிந்த இடம்; thick grove. *'பொழிலின் வியன் பொதும்பரின்'* (திருக்கோ. 39) 2. இளமரக்கா; park, pleasure garden. "வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்" (பெரும்பாண். 374) 3. *பொதும்பு*[1](சங்.அக); பார்க்க; see *podumbu*[1].

[பொதும்பு+ அர்]

பொதும்பல் podumbal, பெ. (n.) பொதுவருவாய்(J.N.); general income.

பொதும்பு podumbu, பெ. (n.) 1. சோலை; grove. *'காந்தளம் பொதும்பில்'* (அகநா. 18) 2. குறுங்காடு; shrubbly jungle. *'முல்லையம் பொதும்பின்'* (சீவக.3042) 3. மரப்பொந்து(பிங்); hole, hollow in a tree. 4. குழி; pit. *'பொதும்பினில் வீழ்ந்து வழுக்கி'* (திவ். பெரியாழ். 5,2,7) 5. குகை; cave. மேருவின் பொதும்பில்' (கம்பரா.மீட்சிப்.325)

[பொது → பொதும்பு]



பொதுமக்கள் podu-makkal, பெ. (n.) 1. பொதுவகைமக்கள்; the general public. 2. சிறப்பில்லாத மக்கள்; ordinary men, men of ordinary intellect. *'புலமிக்க வரைப் புலமை தெரிதல்...பொதுமக்கட் காகாதே'* (பழமொ.5)

[பொது + மக்கள்]

பொதுமகள் podu-magal, பெ. (n.) 1. பரத்தை(பிங்); whore, harlot. *'பொது மகளாப் புதல்வரி தாம்'* (கோயிற்பு.பதஞ்ச.26) 2. இடைக்குலப் பெண்; shepherdess. பொது மகளி ரெல்லாரும்....புக்கார் பொதுவரோடு (கலித்.101)

[பொது + மகள்]

பொதுமடந்தை podu-madandai, பெ. (n.) 1. *பொதுமகள்* பார்க்க; see *podumagal*. *'பொது மடந்தையர் தமக்கும்....புதுமையல்ல'* (பாரத. கிருட்டிண. 128)

[பொது + மடந்தை]

பொதுமத்தியம் podu-mattiyam, பெ. (n.) 1. பொதுவானது (யாழ்.அக); that which is common or general.

[பொது + skt.madhyama.த.மத்தியம்]

பொதுமதிப்பீடு podu-madippīdu, பெ. (n.) பொதுக்கணிப்பு; common estimate.

[பொது + மதிப்பீடு]

பொதுமருத்துவம் potu-marutuvam, பெ. (n.) பொதுபண்டுவம்; common treatment.

[பொது + மருத்துவம்]

பொதுமருத்துவமனை podumarutuvamanai, பெ. (n.) பொதுவகைப் பண்டுவத்திற்கான மருத்துவ மனை; general hospital.

[பொது + மருத்துவமனை]

பொதுமறை podu-marai, பெ. (n.) பொது அற நூல்; (ஒழுக்கவியல்) மொழி, சமயம், இனம், நாடு முதலான சார்புகளின்றி மக்கட்குலம் முழுமைக்கும் பொதுவான அறநெறிகளை வகுத்துரைப்பதால், திருக்குறளை அறிஞர் உலகம் பொதுமறை எனப் போற்றுகிறது,

[பொது + மறை]

பொதுமனப்பாங்கு potu-manappanku, பெ. (n.) பரந்தமனப்பாங்கு; broad minded.

[பொது + மனப்பாங்கு]

பொதுமனிதன் podu- manidan, பெ. (n.) **1.** நடு நிலையாளர்(வின்), mediator (W) **2.** ஒரு பக்கமும் சாராதவன், dis-interested person.

[பொது + skt.manu-ja. த.மனிதன் *]*

பொதுமுதல் podu-mudal, பெ. (n.) கூட்டுவணிகத்தின் முதலீடு, Joint Stock.

[பொது + k.mudal. *த. முதல்]*

பொதுமை podumai, பெ. (n.) **1.** இயல்பானது; ordinariness; superficiality *'பொதுமை பார்க்கின்'* (கம்பரா, மாயாசீ. 71) **2.** பொதுவுடைமை, Common property. *'பூவின் மேலிருந்த தெய்வத்தை யாலும் பொதுமை யுற்றாள்'* (கம்பரா, மாயாசனக.62)**3.**நன்மை; goodness. *'புரிகின்ற காரியத்தின் பொதுமை நோக்கி'* (கம்பரா, மருத்து. 29)

[*பொது → பொதுமை*]

'மை' பண்புப் பெயரீறு

பொதுமை உருவரை pōtumai-uruvarai, பெ. (n.) முன்மாதிரி வரைபடம்; common desin.

[பொதுமை + உருவரை]

பொதுமொழி podu-moḻi, பெ. (n.) **1.** சிறப்பில்லாச் சொல், word or speech not worthy of any regard, platitude. *'ஏதின்மாக்கள் பொதுமொழி கொள்ளாது'* (புறநா.58) **2.** குறிப்பான பொருளில்லாத சொல், indefinite speech, vague genetal expression. **3.** பொதுப் படையான சொல் (நன்); term of general application. **4.** பிரியாது நின்ற விடத்து ஒரு பொருளும் பிரிந்தவிடத்து வேறு பொருளும் பயக்கும் சொல் (நன். 260); a word, dearing in a compound a meaning different from its ordinary sense. **5.** பொதுச்சொல்,³பார்க்க *'பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளும்'* (கலித்: 68) (பிங்) **6.** *பொதுச்சொல்*⁴ பார்க்க; see *podu-c-col.* ³ *'பொதுமொழி படரின்'* (நன். 17)

[பொது + மொழி]

பொதுவசனம் podu-vašaṉam, பெ. (n.) **1.** ஊரில் வழங்கும் சொல், common saying; rumour. **2.** பலபொருள் தரும் ஒரு சொல் அல்லதுதொடர்(வின்); ra word, phase or sentence of more than one meaning(w) **3.** *பொதுமொழி,* 2,3(வின்) பார்க்க; see *podu-mōḻi.*

[பொது + வசனம்]

(skt. Vasana த. வசனம்)

பொதுவர் poduvar, பெ. (n.) **1.** இடையர்; herdsmen 'புன்பொதுவர் வழிபொன்ற'; (பட்டினப் 281). **2.** நடுநிலையாளர்; mediators. **3.** பொதுமகளிர்; Prostitutes. *'பொதுவர் பொலி மறுகும்'* (மணிமே. 28, 51).

[பொது + அர் → பொதுவர்]

பொதுவறிவு podu-v-aṟivu பெ. (n.) **1.** உலக நடப்புகளைப்பற்றியவறிவு; General knowledge *'பொதுவறி விகழ்ந்து புலமுறு மாதவன்'* (மணிமே. 1984)

[பொது + அறிவு]

பொதுவறு—தல் podu-v-aṟu-, செ.கு.வி. (v.i.) ஒருவனுக்கே யுரியதாதல்; to become exclusively one's own. *'பொலங்கிளளர் மானந்தானே பொதுவறக் கொடுப்பென்'* (கம்பரா. மாயாச 51)

[பொது + அறு]

பொதுவறு சிறப்பு podu-v-aṟu-širappu, பெ. (n.) தனக்கேயுரிய சிறப்பு; exclusive quality, special characteristic '*பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்*' (சிலப். 1, 16)

[பொதுவறு + சிறப்பு]

பொதுவனுமானம் podu-v-aṉumāṉam, பெ. (n.) ஒன்று உள்ளது கொண்டுஅதனுடன் காணப்படும் வேறொன்று உளது என்று கொள்ளும் கருதலளவை வகை (சி.போ 1. பாண்டிப்.); (log) inference of the existence of a thing by the presense of a concomitant, conisdered not wholly conclusive but only probable and consistant, opp to ciṟappaṉu- māṉam,

[பொது + skṭ.anumāna- *த.அனுமானம்]*

பொதுவாக podu-v-āga, (வி.எ.) (adv) 1. ஒன்றைச் சிறப்பித்துக் கூறாமல், generally, commonly. 2. நடுவுநிலையாக; impartially.

[பொது + ஆக → பொதுவாக]

பொதுவாய்பாடு potu-vaipatu, பெ. (n.) பொதுக்கணிப்பேடு; common tables.

[பொது + வாய்பாடு]

பொதுவாள் podu-v-āḷ, பெ. (n.) 1. *பொது மாந்தன்* பார்க்க; see *podu-manidaṉ*. 2. கோயில் மேற்பார்வைப் பணி செய்யும் மலையாள சாதியினார்; a caste in malabār whose hereditary occupation is temple management. '*பொதுவாள்கையில் நீரோட்டி*' (T.A.S. iv, 9)

[பொது + ஆள்]

பொதுவிதி podu-vidi, பெ. (n.) பொதுவான இலக்கணம் (பொருள் 166, உரை); (gram) general rule.

[பொது + skṭ.vidhi. த. *விதி]*

பொதுவியர் poduviyar, பெ. (n.) இடைச்சியர் (சூடா), (திருக்கோ 136, உரை) wormen of the shephered tribe.

[பொதுவர் → பொதுவியர்]

பொதுவியல் podu-v-iyal, பெ. (n.) 1. பலவற்றிற்குப் பொதுவாகவுள்ள குணம் (சி.போ 1,4); general attribute, common characteristics. 2. உவமானவுவமேயங் களுக்குள்ள இயல்பான தன்மை; (rhet) attribute common to vuamāṉam and vuamēyam 3. பொதுவிலக்கண முணர்த்தும் நூற்பகுதி (நன்); section of grammar dealing with general principles. 4. வேத்தியற்கு வேறான கூத்துவகை (சிலப் 14, 148), a dance, opp to vēttiyal.

[பொது + இயல்]

பொதுவில் podu-v-il, பெ. (n.) அம்பலம் (அக.நி); public hall '*பெருங்கண நாதர் போற்றிப் பொதுவினின்றாடும்*' (பெரியபு திருமலைக்கு 10)

பொதுவிலக்கணம் podu-v-ilakkaṉam, பெ. (n.) சிறப்பாகவின்றிப் பலவற்றுக்கும் பொதுவாகக் கூறும் நெறி (நன் 62 உரை) (gram) common or general rule.

[பொது + இலக்கணம்]

பொதுவிலே விடு—தல் poduvilē-viḍu-, பெ. (n.) 1. ஒரு பொருளை எல்லோர்க்கும் பயன்படும் படி அமர்த்தல்; to let things to be enjoyed in common. 2. பொருளைப் பாதுகாவாது விடுதல்; (இ.வ.); to leave things uncared for.

பொதுவுடைமை pōdu-udaimai, பெ. (n.) பொதுமை; Common Property.

[பொது + உடைமை]

பணநாட்டமின்றி, எல்லாரும் தத்தமக்கியன்ற பணியைச் செய்து, எல்லாப் பொருள்களையும் ஒத்த உரிமையோடு பயன்படுத்தி ஒற்றுமையாக வாழும்குடும்பஅல்லது கூட்டுக் குடும்ப வாழ்க்கையே பொதுவுடைமை (ம.வி.(அ).வ.கூ.)

பொதுவெழுத்து podu-v-eluttu, பெ.(n.), ஆரியந் தமிழ்களுக்குப் பொதுவாயுள்ள எழுத்து. (நன். 150); (gram) letter common to both tamil and sanskrit.

[பொது + எழுத்து]

பொதுவை poduvai, பெ.(n.), பொதுமகள், 1. பார்க்க, *'பொதுவைய ரகம் புகுந்து'* (திருப்பு. 129.)

[பொது → பொதுவை]

பொதுளகரம் podu-ḷagaram, பெ. (n.) தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான 'ள' என்ற எழுத்து; the tamil letter 'ḷ' as being common to tamil and sanskrit, dist fr. ciṟappu-ḷagaram

பொதுளு—தல் poduḷu-, செ.கு.வி. (v.i.), 1. நெருங்குதல் (சூடா); to be thick, close or crowded. *'சிகையனல் பொதுளியல்'* (கம்பரா. இந்திரசித்து 20) 2. நிறைதல்; to be possessed of, filled. *'ஞானங் குணங்கல்வி நூல் பொதுளி'* (அரிசமய. பரகால. 7.) 3. தழைத்தல்; to be luxuriant; to prosper thrive. *'இருள்படப் பொதுளிய'* (திருமுரு. 10.)

தெ. பொத. க. பொதெ.

[பொது → பொதுளு]

பொதை podai, பெ.(n.), செடி(C.G); bush.

தெ. பொத. க. பொதெ.

[பொது → பொதை]

பொந்தந் தடி pondantaḍi, பெ.(n.), பெருந்தடி (நெல்லை); a big club.

[மொந்தை → மொந்தம் → பொந்தம் + தடி]

பொந்தர்[1] pondar, பெ. (n.), பொந்து; hole, (இ.வ.) hollow.

[பொந்து → பொந்தர்]

பொந்தர்[2] pondar, பெ.(n.), ஒருவகை நீர்ப்புள்(வின்); a water bird.

[பொந்து → மொந்தர்]

பொந்தி pondi, பெ.(n.), 1. உடம்பு; body. *'சோற்றினால் வளர்த்த பொந்தி'* (திருப்பு. 731.) 2. பருமை (சங்.அக.); stoutness 3. மரத்தினாற் செய்த வாள்(வின்); wooden sword.

[பொந்து → பொந்தி]

பொந்திக்கை pondikkai, பெ. (n.), பொருந்துகை; union.

[பொருந்து → பொருந்திக்கை]

பொந்திகை pondigai, பெ.(n.), மனநிறைவு, (இ.வ.) self satisfaction.

[பொருந்து → பொந்திகை]

பொந்திகைச் சுற்றுலா pontikai-c-cutrula, பெ. (n.) இன்பச் சுற்றுலா; act of enjoying.

[பொந்திகை + சுற்றுலா]

பொந்திகையுலா pontikai-ulla, பெ. (n.) இன்பச்சிற்றுலா; picnic, trip for pleasure.

[பொந்திகை + உலா]

பொந்து pondu, பெ. (n.) **1.** மரப்பொந்து; hole, recess, hollow in a tree. '*ஆனந்தத் தேனிருந்த பொந்தை*' (திருவாச. **13, 2**) **2.** எலி முதலியவற்றின் வளை; hole in the ground, as of rat or snake. **3.** பல்லி (பிங்.); lizard.

தெ.பொந்த

[பொத்து → பொந்து]

பொந்துக்கோரை pondu-k-kōrai, பெ.(n.), கோரை வகை(வின்); a sedge.

[பொந்து + கோரை]

பொந்துத்தேன் pondu-t-tēṉ, பெ. (n.), மரப்பொந்து முதலியவற்றில் வைக்கப்பட்ட தேன்(வின்); honey gathered in the hollow of a tree, crevice, etc.

[பொந்து + தேன்]

பொந்தை pondai, பெ. (n.), **1.** சீலையோட்டை; rent in a cloth. **2.** உடம்பு;body. **3.** மயிர்ச்சிக்கு; stickness of hair. '*மயிர் பொந்தையாகவிருக்கிறது*'.

க. பொந்தெ.

[பொந்து → பொந்தை]

பொந்தைக்கோல் pondai-k-kōl, பெ. (n.), *பொந்தையக்கோல்.* பார்க்க; see *ponta-yakkol.*

[பொந்தை + கோல்]

பொந்தையக்கோல் pondaiya-k-kōl, பெ. (n.) பூண்கட்டின தடி(வின்); staff with a ferule.

[பொந்தை + கோல்]



பொம்மக்காதேவி pommakkā-dēvi, பெ.(n.), தொட்டியருடைய குல தெய்வமும் மாயக் கலையினர் வணங்குவதுமாகிய ஒரு தேவதை; (E.T. IV, **189.**); patron deity of the tōttiya caste, worshipped also by jugglers.

[பொம்(மை) → (இ)யக்காதேவி]

பொம்மல்[1] pommal, பெ. (n.) பொலிவு; fine appearance.'*ஒளிர்பொன்னனைய பொம்மனிறம்*' (கம்பரா. உருக்கா. **68**) **2.** மிகுதி (திவா.); abundance, copiousness. '*புகுந்த வவ்விருளின் பொம்மல்*' (இரகு. இலவண. **55.**) **3.** பருமன்; size, thickness,

plumpness. '*பொம்மல் வனமுலை*' (சீவக. 2717.) 4. கூட்டம்; multitude, as of stars. "பொலிந்தன உடுவின் பொம்மல்" (கந்தபு. காசிபன்புல. 28.) 5. சோறு; boiled rice. '*இறடிப் பொம்மல் பெறுகுவீர்*' (மலைபடு. 169.) (பிங்.) 6. மகிழ்ச்சி; exultation. '*போய்வருங் கரும முற்றிற் றென்பதோர் பொம்மல் பொங்க*' (கம்பரா. திருவடி. 3.)

[பெரு → பெருமு → பொருமு → பொம்மல்]

பொம்மல்² pommal, பெ.(n.), பொம்மை; puppet, effigy. '*பொம்மலாட்டுவிக்கும் தோலுருப் போல்*' (விறலிவிடு.)

[போன்மை → பொம்மை → பொம்மல்]

பொம்மலாட்டம் pommal-āṭṭam, பெ.(n.), பொம்மையை வைத்து ஆட்டும் நாடகம்; puppet show. 2. மாயம்; disguise, deceptive appearance. '*பொம்மலாட்டமென்றேயிரு*' (பட்டினத். பொது.21)

[பொம்மல் + ஆட்டம்]

பொம்மலி pommali, பெ. (n.), பருத்தவள் (யாழ்.அக.) stout woman.

[பொம்மல் → பொம்மலி]

பொம்மன் pommaṉ, பெ.(n.), யாரோ ஒருவன்(வின்); some one, used in contempt. "*பேரெலாம் பொம்மன் திம்மன்*" (தனிப்,)

தெ.பொம்மடி.

[பொம்மல் → பொம்மன்]

பொம்மியம்மன் pommi-y-ammaṉ, பெ. (n.), சிறுதெய்வங்களிலொன்று(இ.வ.); a minor deity.

[பொம்மி + அம்மன்]

பொம்மு-தல் pommu-, செ.கு.வி. 1. பொலிதல்; to excel in appearance. 2. மிகுதல்; to swell. '*அதிர்குரல் பொம்ம*' (பாரத. பதினான். 112).

[பொருமு → பொம்மு–,]

பொம்மெனல் pom-m-eṉal, பெ.(n.), ஒரொலிக்குறிப்பு (பிங்.); tinkling sound. '*பொம்மென் பரிபுரம்*' (பாரத. அருச்சுனன்றீர். 9.) (b) விரைவுக்குறிப்பு; being sudden or rapid. '*மாதர் பொம்மெனப் புகுந்து*' (கம்பரா. உலாவியல்.1.) (c) அடர்ச்சிக் குறிப்பு; being thick or crowded. '*பொம்மெனிருள்வாய்*' (திருக்கோ. 395.)

[பொம் + எனல்]

பொம்மை¹ pommai, பெ. (n.) பாவை; puppet, effigy.

க. பொம்பெ.

[போன்மை → பொம்மை]

பொம்மை² pommai, பெ.(n.), 1. பிட்டம்; buttocks. '*அவன் நடக்கும்போது பொம்மை யாடுகிறது.*' (இ.வ.) 2. கைப்பிடிசுவர்(வின்); breastwork, parapet.

[பொம்மு → பொம்மை]

பொம்மைவாய் *pommai-vāy*, பெ. (n.), தடித்த வாய் கிண்டற் பெயர்; a nickname, used in contempt.

[பொம்மை² + வாய்]

பொய்[1] – தல் *poy,* செ.கு.வி. (v.i), **1.** பிடுங்கப்படுதல்; to be pulled out, torn off. *'பொய்த குத்தின.... புண்'* (கம்பரா. கிங்கர. 50) **2.** துளைக்கப்படுதல்; to be hollowed. *'பொய்தகடொன்று பொருந்தி'* (கம்பரா.பஞ்ச. 49)

[புய் → பொய்]

பொய்[2] – தல் poy செ.குன்றா.வி. (v.t). வீழ்த்துதல்; to fell, throw down. *'அவை பார் சோரப் பொய்தான்'* (கம்பரா . அட்ச. 33)

[புய் → பொய்]

பொய்[3] *poy,* பெ. (n.) **1.** பொய்க்கூற்று; falsehood, falsity. "பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ." (குறள். 938) **2.** மருட்சித் தோற்றம்; illusion of the world, deceptive appearance. **3.** போலியானது(வின்); sham, that which is counterfeit or false. **4.** நிலையாமை; instability *'புற்புதமே யன்ன பொய்க்குடி வாழ்க்கையை'* (திருநூற். 3) **5.** உட்டுளை; tubbularity, hole. *'பொய்பொரு முடங்குகை'* (சிலப் 15, 50) **6.** மரப்பொந்து(பிங்.); hollow or recess in a tree. **7.** செயற்கையானது; that which is artificial, as poy-k-kāl. **8.** சிறு சிராய் (வின்); small slinter.

தெ. பொல்லு க. புசி. ம.பொய்
[புய் → பொய்]

பொய்[4] – த்தல் *poy,* செ.கு.வி. (v.i.) **1.** தவறுதல்; to fail, as a prediction or omen; to deceive hope, as clouds. *'விண்ணின்று பொய்ப்பின்'* (குறள். 13) **2.** தம் செயலினின்று பின்வாங்குதல்; to prove false. "பொய்த்தோர் வில்லிகள் போவாராம்." (கம்பரா. சூளா. 41) **3.** கெடுதல்; to go to ruin. *'பொருளென்னும் பொய்யா விளக்கம்'* (குறள். 753)

பொய்[5] – த்தல் poy-, செ.குன்றாவி. (v.t.) **1.** பொய்யாகப் பேசுதல்; to lie, utter falsehood to make false pretences. *'தன்னெஞ் சறிவது பொய்யற்க.'* (குறள். 293) **2.** வஞ்சித்தல்; to deceive, cheat. *'நின்றோடிப் பொய்த்தல்'* (நாலடி. 111)

[பொய் → பொய்–த்தல்]

பொய்க்க *poykka,* கு.வி.எ. (adv.) **1.** பொய்பட; falsely, not in earnest. *'அங்கையாகிய அழகிய தலத்தால் பொய்க்கத் தட்டின வளவிலே'* (சீவக. 1834, உரை). **2.** மெதுவாய்; slowly. *'பொய்க்க அடியிட்டுக் கொண்டு போனபடி'* (ஈ.டு. 5, 10, 4)

[பொய் → பொய்க்க]

பொய்க்கடி *poy-k-kadi,* பெ. (n.) **1.** கால் நடைகள் நுனிப்புல் மேய்கை; browsing. **2.** தீங்கு விளைக்காத கடி; harmless, playful bite, as of a dog.

[பொய் + கடி]

பொய்க்கண் *poy-k-kaṉ,* பெ. (n.) **1.** போலிக் கண்; artificial eye. **2.** கண்ணருகு(வின்); part near the eye. **3.** கண்மண்டை(யாழ்.அக); bones forming the eye-socket.

[பொய் + கண்]

பொய்க்கண்டிப்பு *pōy-k-kantippu,* பெ. (n.) பொய்யாகக் கண்டித்தல்; false rebake.

[பொய் + கண்டிப்பு]

பொய்க்கண்ணி *poy-k-kaṉṉi,* பெ. (n.) *பொய்ப்பூ* (யாழ்.அக.) பார்க்க; see *poy-p-pū.*

[பொய் + கண்ணி]

பொய்க்கண்ணீர் *pōy-k-kanneer,* பெ. (n.) போலியாக அழுதல்; முதலைக்கண்ணீர்; crocodile tears.

[பொய் + கண்ணீர்]

பொய்க்கணிப்பு *pōy-k-kanippu,* பெ. (n.) தவறான மதிப்பீடு; false calculation.

[பொய் + கணிப்பு]

பொய்க்கதை *poy-k-kadai,* பெ. (n.) **1.** கட்டி விடப்பட்ட செய்தி; fib. **2.** கட்டுக்கதை; fiction.

[பொய் + கதை]

பொய்க்கரணியம் *poy-k-karaniyam,* பெ. (n.) பொய்யானகரணியம்(காரணம்); false reasoning.

[பொய் + கரணியம்]

பொய்க்கரி *poy-k-kari,* பெ. (n.) *பொய்ச்சான்று* பார்க்க; see *poy-cāṭcci.* *'பொய்க்கரிபோகன்மின்'* (சிலப். 30.192)

[பொய் + கரி]

பொய்க்கரிமாக்கள் *poy-k-kari-mākkaḷ,* பெ. (n.) பொய்ச்சான்று கூறுபவர்; false witnesses. *'பொய்க்கரிமாக்கள் புறங்கூற்றாளர்.'* (சிலப். 5, 131, பி – ம்)

[பொய்க்கரி + மாக்கள்]

பொய்க்கரியாளர் *poy-k-kari-y-āḷar,* பெ. (n.) *பொய்க்கரிமாக்கள்* பார்க்க, see *Poy-k-kari-mākkaḷ.* *'பொய்க்கரியாளர் புறங்கூற்றாளர்.'* (சிலப். 5, 131)

[பொய்க்கரி + ஆளர்]

பொய்க்காய்வு *poy-k-kāyvu,* பெ. (n.) வெறுப்பது போன்ற நடிப்பு; " பொய்க்காய்வு காய்தியென் நெஞ்சு" (குறள்.1246); temporary estrangement.

[பொய் + காய்→காய்வு]

பொய்க்காரணம் *pōy-k-karanam,* பெ. (n.) *பொய்க்கரணியம்* பார்க்க; see *Pōy-k-karaniyam.*

[பொய் + காரணம்]

பொய்க்கால் *poy-k-kāl,* பெ. (n.) **1.** விளையாட்டில் கால்களால் ஏறிச்செலுத்தும் கழி; stilt. *'அந்தரமாய் பொய்க்காலிலாடும் வித்தை.'* (நெல்விடு. 358) **2.** காலுக்கு மாற்றாக மரத்தால் அமைத்துக் கட்டப்பட்ட போலிக்கால்; wooden leg.

[பொய் + கால்]

பொய்க்காற்குதிரை *poy-k-kāṟ-kudirai,* பெ. (n.) ஊர்ந்து செல்வது போல் உள்ளிருந்து மாந்தன் ஆட்டும் மரக்குதிரை; wooden rider and horse, played by a man hiding inside.

[பொய்க்கால் + குதிரை]

பொய்க்கிணறு *poy-k-kiṉaṟu,* பெ. (n.) யானை முதலியவற்றை அகப்படுத்தும் படுகுழி; false well or pit, as a trap for elephants.

[பொய் + கிணறு]

பொய்க்கிளை *poy-k-kiḷai,* பெ. (n.) பலாமரத்திலுண்டாம் பிஞ்சு பிடியா முளை(யாழ்.அக.); false sprout, as in Jack-trees.

[பொய் + கிளை]

பொய்க்குரல் *poy-k-kural,* பெ. (n.) போலியோசை(வின்); feigned or counterfeit voise.

[பொய் + குரல்]

பொய்க்குழி *poy-k-kuḻi,* பெ. (n.) **1.** பார்வைக்கு மூடியது போன்றிருந்து கால் வைத்தால் உள்ளே ஆழ்த்தும் குழி; covered pit giving a flase notion of safety **2.** கோலி விளையாட்டில் தனியே விடப்பட்ட குழி(இ.வ.); a pit set apart without using, in playing marbles. **3.** நாற்று நட்ட குழி(யாழ்.அக.); Prepared pit where seedlings are grown before runs plantation.

[பொய் + குழி]

பொய்க்குற்றம் *poy-k-kurttam,* பெ. (n.) போலிக்குற்றச்சாட்டு; slander.

[பொய் + குற்றம்]

பொய்க்குற்றச்சாட்டு *poy-k-kurtacattu,* பெ. (n.) *பொய்க்குற்றம்* பார்க்க; see *pōli-k-kurttam.*

[பொய் + குற்றம் + சாட்டு]

பொய்க்கூடு *poy-k-kūḍu,* பெ. (n.) **1.** உடல்; (யாழ்.அக.) body

[பொய் + கூடு]

பொய்க்கூற்று *pōy-k-kurttu,* பெ. (n.) நேர்மையில்லா உரை; false statement.

[பொய் + கூற்று]

பொய்க்கை *poy-k-kai,* பெ. (n.) மீன் வகை(வின்); a kind of fish.

[பொய் + கை]

பொய்க்கையொப்பம் *pōy-k-kaiyoppam,* பெ. (n.) போலிக்கையெழுத்து; fraud signature.

[பொய் + கையொப்பம்]

பொய்க்கொண்டை *poy-k-koṇḍai,* பெ. (n.) நெட்டியால் செய்யப்பட்ட கொண்டை வகை; (சிலப். 5, 34 உரை) a kind of pithwork forming a frame for ha(ri) dressing.

[பொய் + கொண்டை]

பொய்க்கோலம் *poy-k-kōlam,* பெ. (n.) **1.** இயற்கையுருவை மறைக்கும் மாறுகோலம்; false or assumed appearance, disguise. *'பொய்க்கோலஞ்செய்ய வொழியுமே'* (நாலடி.43) **2.** படிற்றொழுக்கம்(வின்); hypocrisy.

[பொய் + கோலம்]

பொய்மதிப்பீடு *pōy-matipitu,* பெ. (n.) *பொய்க்கணிப்பு* பார்க்க; see *poykkanippu.*

[பொய் + மதிப்பீடு]

பொய்கை[1] *poygai,* பெ. (n.) **1.** இயற்கையிலுண்டான நீர்நிலை; natural spring or pond. *'வாவியும் பொய்கையுங் கண்டீர்.'* (சீவக.337) **2.** நீர்நிலை; tank. *"பொய்கைவாயிற் புனல்பொரு புதவின்"* (பதிற்றுப். 27) **3.** பொய்கையார்,1 பார்க்க; *'களவழிப்பா முன்செய்தபொய்கை'* (தொல்.பொ.91) **4.** பொய்கையாழ்வார் பார்க்க; *'பொய்கை பூதம் பேய்'* (பிர.போத. 11, 9)

[பொய் → பொய்கை]

பொய்கை² *poygai,* பெ. (n.) கோட்டான்; a kind of owl. (யாழ்.அக.)

பொய்கையார் *poygaiyār,* பெ. (n.) 1. களவழி நாற்பது இயற்றிய ஆசிரியர்; an ancient poet, author of kaḷavali-nāṟpadu. (புறநா. 48). 2. *பொய்கையாழ்வார்* பார்க்க; see *poygai-y-āḻvār. 'பொய்கையார் பூதத்தார் பேயார்'* (உபதேசரத். 4)

[பொய்கை + ஆர்]

பொய்கையாழ்வார் *poygai-y-āḻvār,* பெ. (n.) காஞ்சிபுரத்தில் ஒரு பொய்கையில் தோன்றியவரும், ஆழ்வார் பதின்மருள் ஒருவருமான திருமாலடியார்; a vaiṣṇava saint, born at a tank in conjeevaram, one of the ten āḻvār.

[பொய்கை + ஆழ்வார்]

பொய்க்கோலம் *pōy-k-kolam,* பெ. (n.) புனைவு செய்யப்பட்ட தோற்றம்; false appearance.

[பொய் + கோலம்]

பொய்ச்சத்தம் *poy-c-cattam,* பெ. (n.) *பொய்க்குரல்*(வின்) பார்க்க; see *poy-k-kural.*

[பொய் + skṭ.sālada. *த.சத்தம்]*

பொய்ச்சத்தியம் *poy-c-cattiyam,* பெ. (n.) *பொய்யாணை*(வின்) பார்க்க; see *poy-y-āṇai.*

[பொய் + skṭ.satya. *த.சத்தியம்]*

பொய்ச்சாக்கு *pōy-c-cākku,* பெ. (n.) நொண்டிச்சாக்கு; lame execuse.

[பொய் + சாக்கு]

பொய்ச்சா—த்தல் *poyccā,* செ.குன்றா.வி. (v.t) மறத்தல் (வின்); to forget.

[பொய்ச்சா → பொய்ச்சா—த்தல்]

பொய்ச்சாட்சி *poy-c-cāṭci,* பெ. (n.) 1. உண்மைக்கு மாறான சான்று; false testimony. *'பொய்ச்சாட்சி சொல்லும் பதர்'* (குமரே. சத. 28) 2. பொய்ச்சாட்சிக்காரன்; false witness.

[பொய் + skṭ.sākṣin. *த.சாட்சி]*

பொய்ச்சாட்சியம் *poy-c-cāṭciyam,* பெ. (n.) *பொய்ச்சாட்சி,* பார்க்க; see *poy-c-cāṭci.*

[பொய் + skṭ.sākṣya. *த.சாட்சியம்]*

பொய்ச்சான்று *poy-c-cāṉṟu,* பெ. (n.) *பொய்ச்சாட்சி* பார்க்க; see *poy-c-cāṭci*

[பொய் + சான்று]

பொய்ச்சான்றேறு—தல் *poy-c-cāṉṟēṟu,* செ.குன்றா.வி.(v.t) பொய்ச்சான்று சொல்லுதல்; to give false evidence. *'வஞ்சித்துப் பொய்ச்சான்றேறுவாரும்'* (சிலப். 5, 128, உரை)

[பொய்ச்சான்று + ஏறு]

பொய்ச்சிரிப்பு *pōy-c-cirippu,* பெ. (n.) *பொய்ப்புன்னகை* பார்க்க; see *poy-punnakai.*

[பொய் + சிரிப்பு]

பொய்ச்சீத்தை *poy-c-cīttai,* பெ. (n.) பொய்யே பேசும் கீழ்மகன்; (தொல்.சொல். 57, உரை) low-born liar.

[பொய் + சீத்தை]

பொய்ச்சீப்பு *poy-c-cīppu,* பெ. (n.) வாழைக்குலையிற்றோன்றியழியும் நுனிச்சீப்பு(வின்); the last row of blossoms that forms on the bunch of a plantain and perishes.

[பொய் + சீப்பு]



பொய்ச்சு *poyccu,* பெ. (n.) பழத்தின் குற்றம்(வின்); flaw, defect, as in a fruit.

[பொய் → பொய்ச்சு]

பொய்ச்சுற்றம் *poy-c-cuṟṟam,* பெ. (n.) அன்பற்ற சுற்றம்; kinship without natural love.

[பொய் + சுற்றம்]

பொய்ச்சுற்றம் பேசு—தல் *poy-c-cuṟṟam-pēšu-,* செ.கு.வி.(v.i) இணக்கமின்றி உறவு கொண்டாடுதல்; to claim kinship without real love. *'குருபாண்டவர்க் காயங்கொர் பொய்ச்சுற்றம் பேசி"* (திவ். பெரியாழ். 5, 3, 4)

[பொய்ச்சுற்றம் + பேசு]

பொய்ச்சூள் *poy-c-cūḷ* பெ. (n.), பொய்யாணை; false oath. *'பொய்ச்சூளா ளென்ப தறியேன் யான்'* (பரிபா, 12, 63)

[பொய் + சூள்]

பொய்செய்—தல் *poy-šeyt-,* செ.கு.வி. (v.i.), உண்மையற்று ஒழுகுதல்; to prove false. 'கார்யத்தில் வந்தால் மெய் செய்வரைப் போலே பொய் செய்து தலைக்கட்டும்' (ஈடு.10,4,5,)

பொய்ச்செய்தி *pōy-c-cithi,* பெ. (n.), நம்பகத்தன்மையற்ற பொய்யான செய்தி; romour.

[பொய் + செய்தி]

பொய்சொல்லி *poy-šolli,* பெ. (n.) பொய் சொல்லுபவன்—ள் (வின்); liar.

[பொய் + சொல்லி]

'இ' வி. மு. ஈறு.

பொய்த்தலை *poy-t-talai,* பெ. (n.), கன்னமிடுவோர் கன்னத்துளை வழியாய் உட்செலுத்தும் போலிக் கை(வின்); mask or false head on a pole, pushed by thieves through a hole made in the wall of a house to ascertain whether the inmates are vigilant or not.

[பொய் + தலை]

பொய்த்தூக்கம் *poy-t-tūkkam,* பெ. (n.), 1. குறையுறக்கம்(வின்); unsound sleep. (w.) 2. *பொய்யுறக்கம்,*1 பார்க்க; see *poy-y-urakkam.*

[பொய் + தூக்கம்]

பொய்த்தேர் *poy-t-tēr,* பெ. (n.), 1. பேய்த் தேர்; (நாமதீப. 414) mirage. 2. பிண மின்றித் தனியே வீதியில் வரும் வெறுந்தேர்; dummy bier carried in a funeral procession.

[பொய் + தேர்]

பொய்த்தோற்றம் *poy-t-tōṟṟam,* பெ. (n.) போலித்தோற்றம்; false show.

[பொய் + தோற்றம்

பொய்தல் *poydal,* பெ. (n.), **1.** மகளிர் விளையாட்டு; woman's game. 'பொய்த லாய மொடு' **(சிலப்.6,151) 2.** சிற்றில்; house of sand made by children in play. *'பொய்தணி வண்டிமிர் மணற்கோடு'* **(பரிபா.20,23) 3.** மகளிர் கூட்டம்;(சூடா) company of women.

[பொய் → பொய்தல்]

பொய்ந்நாட்டு *poy-n-nāṭṭu,* பெ. (n.), பொய்யாக நாட்டிக்கொள்ளப்பட்டது; that which is made falsely. "பொய்ந்நாட்டேனும்" **(சீவக.1637)**

[பொய் + நீர்]

பொய்ந்நீர் *poy-n-nīr,* பெ. (n.), *பொய்த்தேர்1* **(யாழ்.அக.)** பார்க்க; see *poy-t-tōr1*

[பொய் + நீர்]

பொய்ந்நெறி *poy-n-neṟi,* பெ. (n.), தீயவழி; false path, evil way. *'பொய்ந்நெறி நீக்கிய வதிசயம்'* **(திருவாச. 26 10).**

[பொய் + நெறி]

பொய்ப்பத்திரம் *poy-p-pattiram,* பெ. (n.), போலிஆவணம்(வின்); false document.

[பொய் + skt.patra. த.பத்திரம்]

பொய்ப்பாடு *Poy-p-pāḍu,* பெ. (n.) **1.** தவறுகை; failure, futility. **2.** பொய்படுகை; proving falses.

[பொய் + 'மாடு' சொல்லாக்காறு→பாடு]

பொய்ப்பார் *Poy-p-pār,* பெ. (n.) இளகலான நிலப்பகுதி **(வின்.)**; unstable stratum, as found in digging well.

[பொய் + பார்]

பொய்ப்பிஞ்சு *Poy-p-pinju,* பெ. (n.) காயாகாமல் வெம்பியுதிரும் இளங்காய் **(யாழ்ப்.)**; tander fruit that appears early in a plant and drops down without ripening

[பொய் + பிஞ்சு]

பொய்ப்பு *Poyppu,* பெ. (n.) உண்மையற்றது; falsification, deception. *'பொய்ப்பற யாரும் போற்ற'* **(திருவாலவா. 56, 4)**

[பொய் → பொய்ப்பு]

பொய்ப்புன்னகை *Pōy-p-punnakai,* பெ. (n.) போலிச் சிரிப்பு; false laugh.

[பொய் + புன்னகை]

பொய்ப்பூ *Poy-p-pū,* பெ. (n.) காய்பிடிக்காது உதிரும் முதற்பூ **(சங்.அக)**; the first flower of a plant which drorps down without developing.

[பொய் +பூ]

பொய்ப்பேச்சு *Pōy-p-paccu,* பெ. (n.) பாசாங்குப் பேச்சு; meaningless talk.

[பொய் + பேச்சு]

பொய்ப்பொருள் *Poy-p-poruḷ,* பெ. (n.) எக்காலத்து மில்லாத பொருள்; thing which is non-existent.

[பொய் + பொருள்]

பொய்படு–தல் *Poy-paḍu-,* செ.கு.வி. (v.i.) **1.** பொய்யாதல்; to prove false. **2.** பயன் விளையாது அழிந்திடுதல்; to fail of purpose. *'பொய்படு மொன்றோ'* **(குறள், 836)**

[பொய் + படுதல்]

பொய்ம்மணல் *Poy-m-maṇal,* பெ. (n.) புதை மணல் (கொ.வ.); quicksand.

[பொய் + மணல்]

பொய்முகம் *Pōy-m-mugām,* பெ. (n.) வஞ்ச முகம்; false-face.

[பொய் + முகம்]

பொய்ம்மூக்கு *Poy-m-mūkku,* பெ. (n.) **1.** மூக்கின் கீழுள்ள உறுப்பு(வின்.); bottom of the nose (W) **2.** மேல் மூக்கு; top of the nostril. **3.** போலிமூக்கு; artificial nose.

[பொய் + மூக்கு]

பொய்ம்மை *Poymmai,* பெ. (n.) **1.** பொய்; false hood, lie. *'பொய்ம்மையும் வாய்மை யிடத்த'* (குறள், 292) **2.** மாயம்; unreality, illusion. **3.** போலி; that which is counterfeit or antificial

[பொய் → பொய்ம்மை]

'மை' ப. பெ. ஈறு.

பொய்ம்மையாளர் *Poymmai-y-āḷar,* பெ. (n.) பொய்யர்; liars, persons given to false hood or duplicity *'பொய்ம்மையாளரைப் பாடாதே'* (தேவா. 647, 1)

[பொய்ம்மை + ஆளர்]

பொய்ம்மையுத்தரம் *Poymmai-y-uttaram,* பெ. (n.) வழக்காளியின் பேச்சை எதிர் வழக்காளி மறுத்துரைக்கை (சுக்கிர நீதி, 270); statement by the defendant contesting the plaintiff's statement.

[பொய்மை + உத்தரம்]

பொய்யடி *Poy-y-aḍi,* பெ. (n.) **1.** போலியடி; playful stroke proving light or harmless. **2.** பொய்யால் பிறரை வஞ்சிக்கை; deceiving by false words. **3.** அச்சுறுத்துகை terrifying

[பொய்+அடி]

பொய்யடிமை *Poy-y-aḍimai,* பெ. (n.) போலிப் பத்தி; insincere devotion to God. *'பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்'* (தேவா. 737, 7)

[பொய் + அடிமை]

பொய்யடிமையில்லாதபுலவர் *Poy-y-aḍimai-y-illāda-pulavar,* பெ. (n.) சிவபெருமானை வழிபடும் கழகப் புலவர்களான தொகையடியார் (பதினோ. திருத்தொண்டர் திருவந். 49); poets of the last sangam who congecrated their lives to the worship of šiva, one of togai-y-aḍiyār, q.v.

[பொய்யடிமை + இல்லாத புலவர்]

பொய்யம்பு *Poy-y-ambu,* பெ. (n.) விளை யாட்டம்பு; sham arrow, discharged in play or mock flight. *'வேடுவனாய்ப் பொய்யம் பெய்து'* (தேவா.149)

[பொய் + அம்பு]

பொய்யவியல் செய்—தல் *Poy-y-aviyalšey,* செ.குன்றாவி. (v.t.) புழுக்குதல்; to pārboil

[பொய் + அவியல் + செய் —]

பொய்யறுகல் *Poy-y-aṟu-kal,* பெ. (n.) பாதி வெந்த செங்கல் (C.G.); brick partiality barrt.

[பொய் + அறுகல்]

பொய்யறை *Poy-y-axai,* பெ. (n.) 1. பெட்டகத்தின் மறைவறை; பொய்க்குழி ; secret compartment in a box or safe. 2. *'பொய்யறைப் படுத்து'* (சிலப். 10, 70) பார்க்க;

[பொய் + அறை]

பொய்யன் *Poyyan,* பெ. (n.) பொய்பேசுபவன்; liar. *'பொய்யர் கண்டீர் வாழ்க்கையாளர்'* (தேவா, 88, 6)

க. புசிக.

[பொய் + அன்]

பொய்யாடல் *Poy-y-āḍal,* பெ. (n.) வினையமில்லாத சிறுபிள்ளைகள் விளையாட்டு; innocent sport, as of children. *'பொய்யாடலாடும் புணர்ப்பின்'* (பரிபா. 11, 89)

[பொய் + ஆடல்]

பொய்யாணை *Poy-y-āṉai,* பெ. (n.) பொய்யாகச் செய்யும் உறுதிமொழி (யாழ்.அக); false oath, perjury.

[பொய் + ஆணை]

பொய்யாப்புள் *Poyyā-p-puḷ,* பெ. (n.) பறவை வகை (சூடா.); rail, water-fowl.

[பொய் + ஆ + புள்]

'ஆ' எ. ம. இ. நி.

பொய்யாமை *Poyyāmai,* பெ. (n.) பொய் சொல்லாமை; being truthful. *'பொய்யாமை யன்ன புகழில்லை'* (குறள், 296) 2. நடுநிலைமை; impartiality *'பொய்யாமை நுவலுநின் செங்கோல்'* (கலித். 99)

[பொய் + ஆ + மை → பொய்யாமை]

'ஆ' எ. ம. இ. நி. 'மை'. ப. பெ. ஈறு.

பொய்யாமொழி *Poy-y-ā-moḻi,* பெ. (n.) 1. மெய்யுரை; never-failing word, true word. 2. மறைநூல்; sacred scriptures of the hindus, as the vēdas and the gamās. *'பொய்யா மொழியா லந்தணர் போற்றும் புத்தூரில்'* (தேவா. 612, 10) 3. திருக்குறள்; the kuṟaḷ. *'திருவள்ளுவர் மொழிந்த பொய்யா மொழிக்கும்'* (வள்ளுவமா. 23) 4. தஞ்சைவாணன் கோவை யியற்றிய புலவர் (தமிழ்நா.); a poet, author of lañjaiṉ-vāṇaṉ - kōvai.

[பொய் + ஆ + மொழி]

'ஆ' எ. ம. இ. நி.

பொய்யாறு *Poy-y-āṟu,* பெ. (n.) *பொய்ந்நெறி* பார்க்க; see *Poy-n-neṟi,* *'பொய்யாற் றொழுக்கங் கொண்டு'* (மணிமே. 23,22)

[பொய் + ஆறு]

பொய்யிகந்தோர் *Poy-y-igandōr,* பெ. (n.) முனிவர் (உரி.நி); sages.

[பொய் + இகந்தோர்]

பொய்யிடை *Poy-y-iḍai,* பெ. (n.) நுண்ணிய இடை; slender waist. *'வார்முலை பொறாத பொய்யிடை நைய'* (கம்பரா. ஊர்தே. 104)

[பொய் + இடை]

பொய்யில்புலவன் *Poy-y-il-pulavaṉ,* பெ. (n.) 1. மெய்யறிவன்; man of true wisdom. *'பொய்யில் புலவர் புரிந்துறையு மேலுலகம்'* (பு.வெ. 10,4) 2. திருவள்ளுவர்; Tiruvaḷḷuvar. *'பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப் பொய்யில் புலவன்'* (மணிமே. 22, 61.)

[பொய் + இல் + புலவன்]

பொய்யுகம் *Poy-y-ugam,* பெ. (n.) கடையூழி (கலியுகம்); kaliyuga. *'நாலாம் பொய்யுகம்'* (திருவிளை. இரசவாத. 30)

[பொய் + Skt. yuga.த.யுகம்]

பொய்யுரம் *Poy-y-uram,* பெ. (n.) மயக்க அறிவு; illusory knowledge. *'பொய்யுரமுறு நிருவிகற்ப வுரு'* (வேதா. சூ. 67)

[பொய் + உரம்]

பொய்யுறக்கம் *Poy-y-uṟakkam,* பெ. (n.) 1. கள்ளத் தூக்கம்; pretanded sleep. *'மடவாள் போந்தனையும் பொய்யுறக்கம்.... உறங்கி'* (திவ். இயற். சிறிய. ம.31) 2. பொய்த்தூக்கம், (வின்.) பார்க்க; 1. Poy-t-ukkam

[பொய் + உறக்கம்]

பொய்யுறக்கு *Poy-y-uṟakku,* பெ. (n.) *பொய்யுறக்கம்* பார்க்க; see *Poy-y-urakkam* *'அமளி மேலாப் பொய்யுறக் குறங்கு வானை'* (கம்பரா. ஊர்ய தே. 213)

[பொய் + உறக்கு]

பொய்யுறங்கு—தல் *Poy-y-uṟangu-,* செ.கு.வி. (v.i.) உறங்குவது போல் நடித்தல்; to pretend to sleep. *'புனையிழை யொருமயில் பொய்யுறங்குவாள்'* (கம்பரா. உண்டா. 64)

[பொய் + உறங்கு –,]

பொய்யொழுக்கம் *Pōy-yolukkam,* பெ. (n.) தீய நடத்தை; immoral ethics (conduct)

[பொய் + ஒழுக்கம்]

பொய்யொழுகலாறு *Pōy-yolukalaru,* பெ. (n.) *பொய்யொழுக்கம்* பார்க்க; see *poyyolukkam.*

[பொய் + ஒழுகலாறு]

ஒழுகலாறு = நடத்தை

பொய்வளைவு *Poy-vaḷaivu,* பெ. (n.) மேலே வளைவுகட்டுதற்காக இடும் முட்டுவளைவு (C.E.M.); scaffold for an arch.

[பொய் + வளைவு]

பொய்வாழ்வு *Poy-vāḻvu,* பெ. (n.) 1. நிலையற்ற வாழ்க்கை; transitori ness of human life. 2. போலியொழுக்கமுள்ள வாழ்க்கை; a life of duplicity.

[பொய் + வாழ்வு]

பொய்வெட்டு *Poy-veṭṭu,* பெ. (n.) (காசின் குற்றவகை (சரவண. பணவிடு. 67); a defect in coins

[பொய் + வட்டு →வெட்டு]

பொரி—தல் *Pori-,* செ.கு.வி. (v.i.) 1. பொரி யாதல்; to be parched, baked. *'செந்தீ யினிடைப் பொரிந்து தெறித்த பொரிபோல'* (பிரபுலிங். பிரபுதே. 54) 2. வறுபடுதல்(வின்); to be roasted, fried, as grain. 3. தீய்தல்; to be blackened by fire, singed, scorched or burnt by the sun. *'பொரிந்தன கலவைகள்'* (கம்பரா. மிதிலைக் காட்.50) 4. விரைவாகப் பேசுதல்(கொ.வ.); to speak fluently. 5. அலப்புதல்(வின்); to blab. 6. உப்பு முதலியன தரையிற்பூத்தல்(வின்); to form, as a thin stratum or layer of salt. 7. படிதல்; togather, as a coat of dust on the body.

8. மெல்லென ஒலித்தல்(வின்); to crack, pop, make slight reports, as musketry **9.** வாணப்பொரி மிகுந்து சொரிதல்; to throw out sparks, as Roman candle or a whirling firebrand. *'பொரிந்தோடின ..... கருங் கோளரிக் கிளையான் விடு சரமே'.* (கம்பரா. நிகும்பலைய. **112.**) **10.** பொருக்குவெடித்தல் (யாழ்.அக.) to be dried up and shrivelled as the skin.

[பல் → பர் → பரி → பொரி]

க. புரி

பொரி²–த்தல் *Pori-,* செ.குன்றா.வி. (v.t.) **1.** பொரியச் செய்தல்; to fry *'நெய்யுறப் பொரித்த'* (புறநா. **397.**) **2.** வறுத்தல்; to parch, toast, as grain. **3.** கிழங்கு சுடுதல்(வின்); to bake after roasting on live coals, as yams. **4.** அடைகாத்துக் குஞ்சையுண்டாக்குதல்; to hatch, as birds. **5.** போக்குதல்; to disperse, remove. *'அல்லைப் பொரிக்கு மதிக்குடை நிழற்ற'* (தணிகைப்பு. வள்ளி. **122**) **6.** தீய்த்தல்; to burn, scorch, as the sun. *'வெயில் பொரிக்கிறது'* **7.** புளியில்லாமற் சமைத்தல்; to cook without tamarind. *'பொரித்தகுழம்பு'* **8.** குறைந்தவிலைக்கு விற்றல் (யாழ்.அக.); to sell at a low price.

[பொரி → பொரி–த்தல்]

பொரி³ *Pori,* பெ. (n.) **1.** பொரிக்கப் பட்டது; a fry, anything fried. **2.** பொரிகறி; fried curry. *'நேர்நிறை பொரியுங் குய்யும் வறைகளும்'* (சீவக. **2971.**) **3.** பொரிந்த நெல் முதலியன; parched grain or pulse. *'பொரிப்பூம்புன்கின்'*ள(நற்.**9.**) **4.** கரிந்தகாடு (வின்); jungle burnt **5.** எருமைக் கன்று (நன். **387**, மயிலை.); calf of buffalo. **6.** நன்றாகச் சமைக்காத சோறு(இ.வ.); badly cooked food.

[பல் → பர் → பரி → பொரி]

க. புரி. ம. பொரி

பொரிக்கஞ்சி *Pori-k-kañci,* பெ. (n.) பொரிமாவாற் செய்த கஞ்சி(பதார்த்த. **1581.**) ; gruel made of the flour of parched grain.

[பொரி + கஞ்சி]

பொரிக்குழைப்பிண்டி *Pori-k-kulai-p-pinḍi,* பெ. (n.) பண்ணியாரவகை (இராசவைத். **139**); a kind of cake.

[பொரி + குழை + பிண்டி]

பொரிகடலை *Pori-kaḍalai,* பெ. (n.) உப்பும் மஞ்சளுந்தூவி வறுத்த கடலைத் தின்பண்டம்; (கொ.வ.) parched bengal gram seasoned with turmeric and salt.

[பொரி + கடலை]

பொரிகரப்பான் *Pori-karappāṉ,* பெ. (n.) ஒருவகைச் சிரங்கு; running scall, eczema.

[பொரி + கரப்பான்]

பொரிகறி *Pori-kaṟi,* பெ. (n.) புளியிடாமற் சமைத்த கறிவகை; (s.i.i. ii, **127, 19.**) seasoned curry prepared without tamarind.

[பொரி + கறி]

பொரிகாரம் *Pori-kāram,* பெ. (n.) **1.** வெங்காரம்(வின்); borax. **2.** படிக்காரம் (சங்.அக.); alum

[பொரி + காரம்]

பொரிகொள்ளு *Pori-kollu,* பெ. (n.) காணத்தை வறுத்துச் செய்த சிற்றுண்டி வகை(இ.வ.); a kind of broth prepared without tamarind.

[பொரி + கொள்ளு]

பொரிச்சாற்றமுது *Pori-c-cārramudu,* பெ. (n.) புளியில்லாமல் ஆக்கிய மிளகுநீர்; a kind of mulligatawny prepared without tamarind.

[பொரி + சாற்றஅமுது]

பொரிசிந்து–தல் *Pori-šindu-,* செ.கு.வி. (v.i.) *பொரிதூவு* (வின்) பார்க்க; see *pori-tūru.*

[பொரி + சிந்துதல்]

பொரிதூவு–தல் *Pori-tūvu-,* செ.கு.வி. (v.i.) பிணச்சடங்கு முதலியவற்றில் நெற்பொரியை வாரியிறைத்தல்(வின்); to ceatter parched rice, as at a funeral.

[பொரி + தூவு]

பொரிப்பூண்டு *Pori-p-pūṇḍu,* பெ. (n.) **1.** *கரப்பான்பூடு* (பதார்த்த **279.**) பார்க்க; see *karappāṇ-pūḍu.* a thorny shrub. **2.** *நீர்முள்ளி* (மலை.) பார்க்க,

[பொரி + பூண்டு]

பொரிபுறந்தடவு–தல் *Pori-puran-taḍavu-,* செ.கு.வி. (v.i.) உட்குறையை மறைத்து வெளியே மினுங்கச் செய்தல்; to cover up defects. *'நீங்கள் பொரிபுறந் தடவி வருந்திச் சேமஞ்சாத்தி வைத்து'* (ஈடு, **4, 10, 2).**

[பொரி + புறந்தடவு–,]

பொரிபொரி–த்தல் *Pori-pori-,* செ.கு.வி. (v.i.) ஓயாது விரைந்து பேசுதல்; to chatter; to speak rapidly and incessantly. (இ.வ.)

[பொரி + பொரி]

பொரிபொரிச்சான் *Pori-poriccāṉ,* பெ. (n.) அழுத்தினால் சுடக்கோசையிட்டு வெடிக்கும் காய்களையுடைய ஒருவகைச் செடி(வின்); a plant whose unripe seeds burst with a cracking noise when pressed.

[பொரிபொரி + ஆன்]

பொரிபொரியெனல் *Pori-pori-y-eṉal,* பெ. (n.) **1.** வசைபொழிதற் குறிப்பு; onom. expr. of ascolding. **2.** விரைந்து பேசற்குறிப்பு(கொ.வ.); rapid speaking.

[பொரிபொரி + எனல்]

பொரிபோடுதல் *Pori-pōḍudal-,* பெ. (n.) திருமணக் காலத்தில் ஓமத்தீயில் நெற் பொரியை யிடுகை; throwing parched grain into the sacrificial fire, as in a marriage.

[பொரி + போடுதல்]

பொரிமலர் *Pori-malar,* பெ. (n.) புன்கு, **1.** (மலை.); பார்க்க, indian beech.

[பொரி + மலர்]

பொரிமா *Pori-mā,* பெ. (n.) வறுத்த அரிசியின் மா; flour of parched rice. *'பொரிமாவை மெச்சின பொக்கைவாயன்'*

[பொரி → பொரிமா]

பொரிமாச்சிந்தி *Pori-ıлā-c-cindi,* பெ. (n.) *பொரிமாத் தட்டி* (யாழ்.அக.) பார்க்க; see *pori-ma-t-laṭṭi.*

[பொரிமா + சிந்தி]

பொரிமாத்தட்டி *Pori-ma-t-taṭṭi,* பெ. (n.) வீணெண்ணமுள்ளவன் (யாழ்.அக.); one who builds castles in the air.

[பொரிமா + தட்டி]

பொரிமாத்திரளை *Porima-t-tiraḷai,* பெ. (n.) *பொரிவிளாங்காய்* (யாழ்.அக.) பார்க்க; see *pori-viḷaṅkay.*

[பொரிமா + திரளை]

பொரிமாதூவு—தல் *Pori-mā-tūvu,* செ.கு.வி. (v.i.) பொரிமாவைக் கறியில் தூவிப் பக்குவஞ் செய்தல்(வின்); to season by sprinkling flour of parched rice on certain curries.

[பொரிமா + தூவு]

பொரியரிசி *Pori-y-ariši,* பெ. (n.) வறுத்த அரிசி(வின்); parched rice.

[பொரி + அரிசி]

பொரியரிசியேப்பம் *Pori-y-arici-y-ēppam,* பெ. (n.) புளிச்சேப்பம்.(இ.வ.) belching on account of indigestion.

[பொரியரிசி + ஏப்பம்]

பொரியரை *Pori-y-arai,* பெ. (n.) மரத்தின் பொரிந்த அடிப்பகுதி; rough, cracked surface of the trunk of trees. *'பொரியரை ஞாழல்'* (சீவக. 515)

[பொரி + அரை]

பொரியல் *Poriyal,* பெ. (n.) 1. பொரிகை; frying. 2. பொரித்த உணவு; fried food fry. *'கோழிப்பெடையினாற்சமைத்த பொரியலோடு'* (பெரும்பாண். 256. உரை.)

[பொரி → பொரியல்]

பொரியல்கரியல் *Poriyal-kariyal,* பெ. (n.) பல்வகையான பொரித்த வுணவு(வின்); different kinds of fried food.

[பொரியல் + கறியல்]

பொரியுண்டை[1] *Pori-y-uṇḍai,* பெ. (n.) *பொரியுருண்டை* பார்க்க; see *pori-y-uṇḍai.*

[பொரி + உண்டை]

பொரியுருண்டை[2] *Pori-y-uruṇḍai,* பெ. (n.) நெற்பொரியைப்பாகிட்டுத்திரட்டிய உருண்டை. (பதார்த்த. 1423.); a ball of sweetmeat made of fried rice and molasses.

[பொரி + உருண்டை]

பொரிவாணம் *Pori-vāṇam,* பெ. (n.) ஒருவகை வேடிக்கைவாணம்(இ.வ.); rocket which explodes and throws out star-like sparks.

[பொரி + வாணம்]

பொரிவாயன் *Pori-vāyaṉ,* பெ. (n.) கடல்மீன் வகை(J.N.); a sea fish, white attaining seven inches in length.

பொரிவிளங்காய் *Pori-viḷankāy,* பெ. (n.) *பொரிவிளாங்காய்*(வின்) பார்க்க; see *pori-vilaṅkay.*

[பொரி + விளங்காய்]

பொரிவிளாங்காய் *Pori-viḷāṅkāy,* பெ. (n.) சிறுபயற்றுமாவோடு சருக்கரை சேர்த்துச் செய்த விளங்காய் போல் உருண்டையான பணியாரம்(வின்); a ball of sweet meat made of green-gram flour and sugar.

[பொரி + விளாங்காய்]

பொரிவு *Porivu,* பெ. (n.) 1. மாணிக்கக் குற்றவகை; a flaw in rubies. *'இறுகுதல் கருகுதல் பொரிவே',* (திருவாலவா. 25, 14.) 2. பச்சைமணிக் குற்றம் எட்டனுள் ஒன்று. (சிலப். 14, 184. உரை.); a flaw in emeralds, one of eight maragada-k-kuṟṟam.

[பொரி → பொரிவு]

பொரு¹–தல் *poru-,* செ.கு.வி. (v.i.) 1. போர் செய்தல்; to fight, contend in warfare, engage in battle. *'ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழிய'* (புறநா. 2.) 2. சூதாடுதல்; to play games of chance. *'போது போகுமாறிருந்து பொருதும்'* (பாரத. சூது. 169.) 3. மாறுபடுதல்; to compete, viewith, strive against. *'கண்பொர விளங்கு.... குடை'* (புறநா. 35.) 4. வீசுதல்; to blow, as the wind. *'குரூஉப்புகை பிசிரக் கால்பொர'* (பதிற்றுப். 15, 6.)

பொரு²–தல் *poru-,* செ.குன்றா.வி. (v.t.) 1. தடவுதல்; to play, as a lute. *'வீணைபொரு தொழிலும்'* (சீவக. 1795) 2. கடைதல்; to churn. *'ஒற்றைக்கிரி மத்தைப் பொருது'* (திருப்பு. 1.) 3. ஒப்பாதல்; to resemble. *'மலையெத்தனை அத்தனை.... பொருகிற்பன'* (கம்பரா. அதிகா. 150.) 4. தாக்குதல்; to come in collision with, dash against, as waves. *'பொருபுனறரூஉம்'* (சிறுபாண். 118.) 5. முட்டுதல்; to reach, extend. *'விண்பொரு புகழ்'* (புறநா. 11.) 6. பொருந்துதல்; to join, unite, combine. *'பொய்பொரு முடங்குகை'* (சிலப். 15, 50.) 7. பெருக்குதல்; (math.) to multiply. *'அவற்றைப் பொருளாதியாறினானும் பொர'* (நன். 269, மயிலை.) க. போர்

பொரு³ *poru,* பெ. (n.) 1. உவமை simile (பிங்.) 2. ஒப்பு; equality. *'பொருவாகப் புக்கிருப்பார்'* (தேவா. 780, 11.) 3. எதிர்த்தடை; obstacle. *'ஆறுசமயங்கட் கொல்லாம் பொருவாகி நின்றானவன்'* (திவ். திருவாய். 9, 4, 8.)

பொருக்க *porukka,* விஎ adv. விரைவாக; speedily.

[பொருக்கெனல் → பொருக்க]

பொருக்கற்றுப்போ–தல் *porukkaṟṟu-p-pō-,* செ.கு.வி. (v.i.) நன்றாகவிந்து போதல்(வின்.); to be quite extinguished

[பொருக்கு + அறு + போ]

பொருக்காங்கட்டி *porukkāṉ-kaṭṭi,* பெ. (n.) 1. மண்ணாங்கட்டி; dried clod of earth. 2. அரத்தம் முதலியன உறைவதாலுண்டாம் கட்டி; clot.

[பொருக்கு + கட்டி → பொருக்காங்கட்டி]

பொருக்கு¹ *porukku,* பெ. (n.) 1. பருக்கை; grain of boiled rice. *'காக்கைக்குச் சோற்றிலோர் பொருக்குங் கொடுக்க நேர்ந்திடா'* (அருட்பா. vi, ஆற்றாமை, 3, 1.) 2. சேறுமுதலியன உலரும் போது மேலே காய்ந்தெழும்பும் ஏடு; flake, skin, thin layer that peels off, scale. *'பூசுகந்தம் தனத்திற் பொரிந்தது.... பொருக்கெழும்பி'* (தனிப்பா.i, 381, 27.) 3. மரப்பட்டை; bark. *'வெள்ளி லோத்திரத்தின் பூம்பொருக் கரைத்த சாந்து'* (சீவக. 622.) 4. *பொருக்கு மண்* (யாழ்.அக.) பார்க்க; see *Porukku-maṉ*

[பல் → பரு → பருக்கு → பொருக்கு]

பொருக்கு² *pōrukku,* பெ. (n.) பல்ஊத்தை; tartar. 2. சொறிசிரங்கு; crust

[பல் → பரு → பருக்கு → பொருக்கு]

பொருக்குமண் *porukku-man,* பெ. (n.) செதிளாய்ப் பேர்ந்த மண் (வின்.); flake which rises on parched ground.

[பொருக்கு + மண்]

பொருக்கெனல் *porukkenal,* பெ. (n.) விரைவுக் குறிப்பு; onom. expr, signifying swiftness or quickness. *'பொருக்கென வீடணா புகறியாலென்றான்'* (கம்பரா. கும்பகர்ண. **112.**)

[பொருக்கு + எனல்]

பொருகளம் *poru-kaḷam,* பெ. (n.) போர்க்களம் (சூடா); field of battle. *'பொருகளம் புகுந்தார்'* (கம்பரா. படைத். **67.**)

[பொரு+களம்]

பொருகு *porugu,* பெ. (n.) சோறு (திவா.); boiled rice

[பொருக்கு → பொருகு]

பொருட்காட்சி *poruṭ-kātchi,* பெ. (n.) பொருள்களின் கண்காட்சி; Exibaition.

[பொருள் + காட்சி]

பொருட்குற்றம் *poruṭ-k-kuṟṟam,* பெ. (n.) செய்யுளின் பொருளில் உண்டாம் பிழை (rhet.) impropriety or blemish in the meaning of a verse. *'சொற்குற்றமின்று வேறு பொருட் குற்ற மென்றான்'* (திருவிளை. தருமி. **103.**)

[பொருள் + குற்றம்]

பொருட்குன்று *poruṭ-kunṟu,* பெ. (n.) பொன்(மேரு)மலை; mt. mēru, as of gold. *'அரும்பலியனைத்து மீயினதுபொருட் குன்று கண்டீர்'* (சீவக. **2926.**)

[பொருள் + குன்று]

பொருட்கை *poruṭ-kai,* பெ. (n.) பாடற்பொருள் பொருந்தக் காட்டும் நளிநயக்கை (சிலப். **3, 18,** உரை) (nāṭaya.); gesture revealing the meaning of a verse.

[பொருள் + கை]



பொருட்சார்பு *poruṭ-cārbu,* பெ. (n.) பொருளிடத்துற்ற ஆசை; attachment to wordlly things. *'உயிர்ச் சார்பு பொருட்சார்பிற் பற்றடங்கலும் விடுமாகில்'* (திருக்களிற்றுப். **39,** உரை.)

[பொருள் + சார்பு]

பொருட்சிதைவு *poruṭ-cidaivu,* பெ. (n.)
1. சொத்து இழப்பு; injury, loss of property.
2. சொல் கால வேறுபாட்டாற் கருத்தில் மாறுகை(வின்.); change in the meaning of a word in course of time. (w.)
3. *பொருட்குற்றம்* பார்க்க; see *Poruṭ-kuṟṟam*

[பொருள் + சிதைவு]

பொருட்சிறப்பணி *poruṭ-ciṟappaṇi,* பெ. (n.) *பொருளணி* பார்க்க; (யாழ்.அக.) (rhet.) a class of figure of speech relating to sense.

[பொருள் + சிறப்பு + அணி]

பொருட்சுருக்கம் *porul-curukkam,* பெ. (n.) கருத்துச்சுருக்கம்; synopsis.

[பொருள் + சுருக்கம்]

பொருட்சுவை *poruṭ-cuvai,* பெ. (n.) செய்யுட் பொருளின் சுவை (ரசம்) (யாழ்.அக.) beauty of ideas, as in a verse.

[பொருள் + சுவை]

பொருட்செல்வம் *poruṭ-celvam,* பெ. (n.) (திரவிய சம்பத்து) பொருளாகிய செல்வம்; meterial wealth. *'பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள'* (குறள், 241.)

[பொருள் + செல்வம்]

பொருட்செல்வி *poruṭ-celvi,* பெ. (n.) *பொருளின் செல்வி* (வின்.) பார்க்க; *poruliṉ-šelvi*

[பொருள் + செல்வி]

பொருட்சேதம் *poruṭ-cētam,* பெ. (n.) *பொருட்சிதைவு,* 1. (யாழ்.அக.) பார்க்க; see *Poruṭ-šidavu*

[பொருள் + சேதம்]

பொருட்டன்மை *poruṭṭaṉmai,* பெ. (n.) பொருளின்கணுள்ள உருவ இயல்புகளை உள்ளவாறு புனைந்து கூறும் அணிவகை. (தண்டி. 28.); (rhet.) description of the form of any person or thing.

[பொருள் + தன்மை]

பொருட்டால் *poruṭṭāl,* வி.எ. adv. *பொருட்டு* பார்க்க; see *Poruṭṭu 'வென்றிப் பொருட்டால்... கன்றிக் கறுத் தெழுந்து'* (நாலடி, 315.)

[பொருட்டு → பொருட்டால்]

பொருட்டிரிபு *poruṭṭiribu,* பெ. (n.) ஒரு சொல்லில் அல்லது சொற்றொடரிலுள்ள பொருள் மாறுபாடு(வின்.); change in the meaning of words and expressions according to the manner in which they are read.

[பொருள் + திரிபு]

பொருட்டு[1] *poruṭṭu,* பெ. (n.) **1.** காரணம் (பிங்.); cause. **2.** மதிப்புக்குரியது; matter of importance, thing of weight. *'அது ஒரு பொருட்டில்லை'* –

பொருட்டு[2] *poruṭṭu,*(adv.) நிமித்தமாக; to, for the sake of, in order to, to the end that on account of, with, by, through. *'வேளாண்மை செய்தற் பொருட்டு'* (குறள், 81.)

பொருட்டொடர் நிலைச் செய்யுள் *poruṭṭoḍar-nilai-c-ceyyuḷ,* பெ. (n.) இலக்கியம் (சிலப். உரைப்பாயிரம்.) (rhet.) narrative or epic poem.

[பொருள் + தொடர்நிலை + செய்யுள்]

பொருட்படு—தல் *poruṭ-paḍu-,* செ.கு.வி. (v.i.) பயன்படுதல் (யாழ்.அக.); to be useful.

[பொருள் + படு—தல்]

பொருட்படுத்து—தல் *poruṭ-paḍuttu-,* செ.குன்றா.வி. (v.t.) மதித்தல்; to esteem, make important. *'நாய்மேற் றவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த'* (திருவாச. 10, 20.)

[பொருள் + படுத்து]

பொருட்பால் *porut-pāl,* பெ. (n.) முப்பால்களுள் பொருளைப்பற்றிக் கூறும் நூற்பகுதி (குறள்.); wealth, as a topic treated in works, like kural, Nāladi, etc.,

[பொருள் + பால்]

பொருட்டொடர்பு *porut-todarbu,* பெ. (n.) பொருளினியைபு(வின்.); fitness in regard to meaning or subject-matter

[பொருள் + தொடர்பு]

பொருட்பிறிதின் கிழமை *porut-piridin-kilamai,* பெ. (n.) ஒரு பொருளுக்குத் தன்னினும் வேறானதனோடு உள்ள உரிமை (சங்.அக.); (gram.) separable relation of two different objects.

[பொருள் + பிறிதின்கிழமை]

பொருட்பின்வருநிலை *porut-pin-varunilai,* பெ. (n.) முன்வந்த பொருளே பின்னும் பலவிடங்களில் வரும் அணி (தண்டி, 41, உரை.) (rhet.) repeating the same idea in different forms of expression.

[பொருள் + பின்வருநிலை]

பொருட்பெண்டிர் *porut-pendir,* பெ. (n.) விலைமாதர்; harlots. *'பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்'* (குறள், 913.)

[பொருள் + பெண்டிர்]

பொருட்பெயர் *porut-peyer,* பெ. (n.) 1. பொருளடியாகப் பிறந்த பெயர்ச் சொல்; (நன். 132.); noun derived from the name of a concreate object. 2. ஒரு பொருளுக்கு உரியபெயர்; name of a thing.

[பொருள் + பெயர்]

பொருட்பெற்றி *porut-perri,* பெ. (n.) மெய்ம்மை (குறள்.34.அதி.அவதா.); essential or underlying truth, reality.

[பொருள் + பெற்றி]

பொருண் மயக்கம் *porun-mayakkam,* பெ. (n.) தன் பொருளிற் றீராது பிறி தொன்றன் பொருளின் கண்ணும் உருபு வருகை use of a particular case ending appropriate to the sense intended, though different from the proper grammatical case ending. (பி.வி. 15, உரை) (gram.)

[பொருள் + மயக்கம்]

பொருண்மன்னன் *porun-mannan,* பெ. (n.) செல்வக்கிழவன் (குபேரன்); kubēra, as king of wealth. *'பொருண் மன்னனைப் பற்றிப் புட்பகங் கொண்ட மருண் மன்னனை யெற்றி'* (தேவா. 748, 11.)

[பொருள் + மன்னன்]

பொருண்முடிவு *porun-mudivu,* பெ. (n.) 1. செய்தி முடிவு; termination of a topic. 2. முடிந்த கருத்து; substance of a discourse. 3. பயனிலை(வின்.); predicatcm, as completing the sense. 4. பொருள் முற்றிய சொற்றொடர்(வின்.); complete sentence.

[பொருள் + முடிவு]

பொருண்முரணணி *porun-muran-ani,* பெ. (n.) பொருள் முரண்படத் தொடுக்கும் அணிவகை (யாழ்.அக.); antithesis.

[பொருள் + முரணணி]

பொருண்மை *poruṇmai,* பெ. (n.) **1.** கருத்துப் பொருள்; meaning, purport or subject-matter of a work. *'போதயோகின் பொருண்மையைக் காட்டுழி'* (கந்தபு. மேருப். 66.) 2. *பொருணிலை,*1 (தொல். சொல். 236, சேனா) பார்க்க; *porunilai,*

[பொருள் + மை]

பொருண்மொழி *poruṇ-moḻi,* பெ. (n.) **1.** மெய்யுரை சொல்; truthful utterance. *'பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன் மின்'* (சிலப், 30, 192) **2.** உச்சரிப்பு மந்திரம்; (சிலப். 10, 100, அரும்.) mantra, incantation.

[பொருள் + மொழி]

பொருண் மொழிக்காஞ்சி *poruṇ-moḻi-k-kāñji,* பெ. (n.) **1.** உயிர்க்கு இம்மை மறுமைகளில் உறுதி தரும் பொருளை ஒருவனுக்குக் கூறுதல் பற்றிய புறத்துறை (புறநா. 24, துறைவிளக்கம்.); theme describing the principle of conduct that ensure happiness in this life and the life to come. **2.** முனிவர் தாம் தெளிந்த மெய்ப்பொருளை விரும்பிக் கூறுதல் பற்றிய புறத்துறை (பு.வெ.10,காஞ்சிப்.)3; theme of sages describing the basic truths of their experience.

[பொருண்மொழி + காஞ்சி]

பொருணயம் *poruṇayam,* பெ. (n.) நூலின் கருத்து நயம்; excellence of ideas in a work. opp. to coṉṉayam

[பொருள் + நயம்]

பொருணான்கு *poruṇāṉgu,* பெ. (n.) அறம், பொருள், இன்பம், வீடு என நால்வகைப்பட்ட உறுதிப்பொருள்; Objective worthy of human pursuit foru in number viz aṟam, poruḷ, inbam viḍu

பொருணி *poruṇi,* பெ. (n.) கள்(வின்.); toddy, fermented liquor

[புளிநீர் → புளிநி → பொளிநி → பொருணி]

பொருணிலை *porunilai,* பெ. (n.) **1.** பொருளின் றன்மை; quality, nature. *'எதிர் மறுத்து மொழியினும் பொருணிலை திரியா'* (தொல். சொல். 107.) **2.** *பொருண் முடிவு,* **3.** (யாழ்.அக.) பார்க்க; see *poruṇ-mudivu*

[பொருள் + நிலை]

பொருணூல் *poruṇūl,* பெ. (n.) **1.** அகப் பொருளைப் பற்றிய நூல்; treatise on the characteristies of love poetry. *'ஓங்கிய பொருணூ லன்பி னைந்திணையென் றெடுத்த'* (திருவாலவா. 15, 12) **2.** பொருளியல்; (பெருங். உஞ்சைக். 34, 91) economics. *'பொருணூலாயும் புலவோர்'*

[பொருள் + நூல்]

பொருத்தக்கடுதாசி *porutta-k-kaḍutāśi,* பெ. (n.) திருமணம் முதலிய செய்திகள் குறித்த ஒப்பந்த முறி(வின்.); written contract, as in a marrigage.

[பொருத்தம் + கடுதாசி]

[கடிதம் → கடிதத்தாள் → கடிதாசி]

பொருத்தச்சக்கரம் *porutta-c-cakkaram,* பெ. (n.) மணமக்களின் விண்மீன் பொருத்தம் பார்க்கும் சக்கரம்(வின்.); diagram to ascertain the agreement between the naksatras of the bride and bridegroom.

[பொருத்தம் + சக்கரம்]



பொருத்தச்சீட்டு *porutta-c-cīṭṭu,* பெ. (n.) *பொருத்தக் கடுதாசி*(வின்.) பார்க்க; see porutta kadutaši.

[பொருத்தம் + சீட்டு]

பொருத்தச்சுவடி *porutta-c-cuvaḍi,* பெ. (n.) தச்சநூல் (நாஞ்.); treatise on carpentry

[பொருத்தம் + சுவடி]

பொருத்தம் *poruttam,* பெ. (n.) **1.** பொருந்துகை; fitting, adaptation. **2.** தகுதி; propriety. *'பொய் முகங் காட்டிக் கரத்தல் பொருத்தமன்று'* (திருக்கோ.356) **3.** இணக்கம்; harmony, concord. அவனுக்குமிவனுக்கும் எப்போதும் பொருத்தமிலைலை. **4.** உடன்படிக்கை(வின்.); agrement, contract **5.** மணமக்களின் பொருத்தவிணக்கம்(வின்.); favourableness or agreement of heroscopes of the two parties to the married. **6.** மனநிறைவு (வின்.); satisfaction **7.** சரிபார்க்கை; verifying. **8.** நோயைத் தடுக்க நஞ்சினைத் தோலுட் செலுத்துகை; innoculation.

[பொருந்து → பொருத்தம்]

பொருத்தம் பார்–த்தல் *poruttam-pār,* செ.குன்றா.வி. (v.t.) மணமகன் மணமகளின் திருமணப் பொருத்தம் பார்த்தல்; to examine the agreement of horoscopes of a bride and bridegroom.

[பொருத்தம் + பார் –,]

பொருத்தனை[2] *poruttaṉai,* பெ. (n.) *பொருத்தம்* **1.**(யாழ்.அக) பார்க்க; see *poruttam*[1]

[பொருத்தம் → பொருத்தனை]

பொருத்தினை *poruttiṉai,* பெ. (n.) *பொருத்தனை*[1] (யாழ்.அக) பார்க்க; see *poruttaṉai*

[பொருத்தனை → பொருத்தனை]

பொருத்து[1]–தல் *poruttu,* செ.குன்றா.வி. (v.t.) **1.** பொருந்தச்செய்தல்; to fit, adapt. *'சந்துகள் புல்லறப் பொருத்துவ தொன்று'* (கம்பரா. மருத்துமலை. **90**) **2.** உடன்படுத்துல்; to induce consent. *'பொருடரும்படி யின்று பொருத்தி'* (அரிச். பு. வஞ்ச. **8**) **3.** கூட்டுதல்; to cause to agree, to reconcile. *'பிரிந்தார் பொருத்தலும் வல்ல தமைச்சு'* (குறள், **633.**) **4.** வேலைக்கமர்த்துதல்(வின்.); to engage for labour. **5.** அமையச் செய்தல்(வின்.); to brig over, as to a party or an opinion. **6.** இரு பொருள்களை இசைத்தல்;(பிங்.) to join together, knit, unite. **7.** விளக்கேற்றுதல்; to kindle. **8.** போர் மூட்டுதல்; to stir up, as to a fight. *'வாரணம் பொருத்து வாரும்'* (கம்பரா. நாட்டுப். **16.**)

[பொருந்து → பொருத்து]

பொருத்து² *poruttu,* பெ. (n.) 1. இணைப்பு(வின்.); joining junction. 2. உடல் மூட்டு; joint, suture of bones in the body. *'பொருத்தெலாங் கட்டு விட்டு'* (பணவிடு. 298.) 3. மரத்தின் இணைப்பு; joining, in carpentry. 4. மரக்கணு; knot of a plant. 5. ஒன்று சேர்க்கை; uniting. *'பொருத்துறு பொரு ளுண்டாமோ'* (கம்பரா. கும்பகர்ண. 157) 6. ஒப்பந்தம்(வின்.); agreement 7. கன்னப்பொட்டு; temple of the head.

[பொருந்து → பொருத்து]

பொருத்துவிடு-தல் *poruttu-vidu,* செ.கு.வி. (v.i.) 1. உடன் மூட்டுப் பிசகுதல்; to be dislocated, disjoined. 2. இணக்கமறுதல்; to become separate.

[பொருத்து + விடு-தல்]

பொருத்துவேலை *poruttu-vēlai,* பெ. (n.) மரத்தின் இணைப்பு வேலை(வின்.); joinery

[பொருத்து + வேலை]

பொருத்தோலை *poruttōlai,* பெ. (n.) 1. *பொருத்தக் கடுதாசி* (யாழ்.அக.) பார்க்க; 2. கூரைமோடு பொருத்திக் கட்டும் ஓலை(நாஞ்.); plaited palm leaves over the ridge of a roof.

[பொருத்து + ஓலை]



பொருதல் *porudal,* பெ. (n.) 1. போர்; war, (சூடா) fight. 2. தும்பை; (மலை.) white dead nettle

[பொரு → பொருதல்]

பொருதவை-த்தல் *poruda-vai,* செ.குன்றா. வி. (v.t.) பற்றவைத்தல்(வின்.); to engraft, to solder, to join (w.)

[பொருத + வை-]

பொருது¹-தல் *porudu,* செ.கு.வி. (v.i.) 1. ஒன்றுதல்; (யாழ்.அக.) to be joined, combined. united with. 2. போர் செய்தல்; to fight, contend.

[புல் → பொல் → பொர் → பொரு.]

பொருது²-தல் *porudu,* செ.குன்றா.வி (v.t.) இணைத்தல் (சங்.அக.); to join together, unite.

[பொரு → பொருது]

பொருந்(நு)-தல் *porun-,* செ.கு.வி. (v.i.) 1. பொருந்துதல் (நன்.137); to be suitable. 2. உடன்படுதல் (வின்.); to agree consent.

[பொருந்து → பொருந்]

பொருந்தநதி *porunda-nadi,* பெ. (n.) அமராவதியாறு; (யாழ்.அக.) the river Amrāvadi

[பொருந்தம் + நதி]

(skt.madi → த. நதி)

பொருந்தம் *porundam,* பெ. (n.) *பொருநை* (பிங்.) பார்க்க; see *porunai*

[பொருந்து → பொருந்தம்]

பொருந்தர் *poruntar,* பெ. (n.) **1.** நெய்வோர் (வின்.); weavers, as joining threads (w.). **2.** கூடை முதலியன முடைவோர் (சூடா.); makers of mats and baskets.

[பொருத்தர் → பொருந்தர்]

பொருந்தலன் *porundalan,* பெ. (n.) பகைவன்; foe, enemy. *'பொருந்தலனாகம் புள்ளுவந் தேற'* (திவ். பெரியதி. **10, 9, 8)**

[பொருந்து + அல் + அன்]

'அல்' எ.ம.இ.

பொருந்தவிடு–தல் *porunda-vidu-,* செ.குன்றா.வி (v.t.) இணக்குவித்தல்; to reconcile. *'இரண்டு தலைக்கும் உறவாய்ப் பொருந்தவிடச் சென்று'* (ஈடு. **4, 6, 1.)**

[பொருந்து + விடு]

பொருந்தாக்காமம் *porundā-k-kāmam,* பெ. (n.) *பொருந்திணை* பார்க்க; see *peruntiṇai.* (நம்பியகப். **5.)**

[பொருந்து + ஆ + காமம்]

'ஆ' எ.ம.இ.

பொருந்தாமை *porundāmai,* பெ. (n.) **1.** இணக்கமின்மை; disagreement, incongruity. **2.** வெறுப்பு (யாழ்.அக.); hartred, disgust

[பொருந்து + ஆ + மை]

'ஆ' எ.ம.இ.

பொருந்தார் *porundār,* பெ. (n.) பகைவர்; enemies. *'பொருந்தார் கைவேல் நுதிபோல் பரல்பாய'* (திவ்.பெருமாள். **9, 5.)**

[பொருந்து + ஆ + ர்]

'ஆ' எ.ம.இ. புணர்ந்து கெட்டது.

'ர்' ப.பா. ஈறு.

பொருந்திக்கொடு–தல் *porundi-k-kodu.,* செ.குன்றா. வி. (v.t.) ஒப்பந்தத்தின் மேல் வேலை யிடுதல்(வின்.); to give a work on contract.

[பொருந்தி + கொடு]

பொருந்திவாங்கு–தல் *porundi-vāngu-,* செ.குன்றா.வி. (v.t.) மனமிசைந்து விலைக்கு வாங்குதல்(வின்.); to purchase after having agreed about the price.

[பொருந்து → வாங்கு–,]

பொருந்திவிடு–தல் *porundi-vidu,* செ.கு.வி. (v.i.) **1.** ஒடிந்த எலும்பு முதலியன கூடுதல்; to join, as broken bones. **2.** ஒப்பந்தமாதல்; to be stipulated.

[பொருந்தி + விடு]

பொருந்து[1]–தல் *porundu-,* செ.கு.வி. (v.i.) **1.** மனம் இசைவாதல்; to agree, consent. *'கொணர் குவா யெனப் பொருந்தினன்'* (கம்பரா. மருத்து. **85.) 2.** தகுதியாதல்; to be suitable, proper. **3.** அமைதல்; to abide. *'அறநெறி பொருந்த'* (கம்பரா. விபீடண. **43) 4.** உடன்படுதல்; to make a contract, an agreement. **5.** நெருங்குதல்; to come into close. *'பொருந்தவந் துற்ற போரில்'* (கம்பரா. கும்பகருண. **13) 6.** நிகழ்வித்தல்; to occur happen. *'புண்ணியம் பொருந்திற்று'* (கம்பரா. கும்பகருண. **131) 7.** நிறைவேறுதல்; to be constituted, made. *'பூதமைந்தினும் பொருந்திய வுருவினாற் புரளான்'* (கம்பரா. இரணிய. **18.)**

க.பொருது

பொருந்து²–தல் *porundu,* செ.குன்றா.வி. (v.t.) **1.** கலத்தல்; to combine with. *'பண்பொருந்த விசைபாடும்'* (தேவா. **268, 5**) **2.** அடைதல்; to reach. *'வந்தடி பொருந்தி முந்தை நிற்பின்'* (புறநா. **10**) **3.** அளவளாவுதல்; to associate cordially. *'மணிமேகலை... பொருந்தின ளென்னும் பான்மைக் கட்டுரை'* (மணிமே. **23,46.**)

[பொரு → பொருந்து–தல்]

பொருந்துமாறு *porundum-āṟu,* பெ. (n.) பகுத்தறிவு உத்தி (அல்லது) கோட்பாடு; ratiocination. *'பொருந்து மாற்றானும் புலாலுண்டல் இழிந்ததென்பது'* (குறள், **257,** உரை)

[பொருந்து + ஆறு]

பொருநராற்றுப்படை *porunar-āṟṟu-p-paḍai,* பெ. (n.) சோழன் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடியதும் பத்துப் பாட்டினுள் ஒன்றுமான ஆற்றுப்படைநூல்; a poem an cōḻaṉ karikāṟ-peruvaḷattāṉ in pattu-p-pāṭṭu by muḍa-t-tāma-k-kaṇṇiyār.

[பொருநர் + ஆற்றுப்படை]

பொருநல் *porunal,* பெ. (n.) பொருநையாறு; the river porunai, *'பொருநல் வடகரை வள்டொலை வில்லி மங்கலம்'* (திவ். திருவாய். **6, 5, 8**)

[பொருநை → பொருநல்]

பொருநன்¹ *porunaṉ,* பெ. (n.) **1.** வீரன்; warrior, hero. *'பாலறிமரபிற் பொருநர் கண்ணும்'* (தொல். பொருள். **74**) **2.** திண்ணியன்; strong, robust, valiant man. **3.** அரசன்; king. *'அறந்துஞ் சுறந்தைப் பொருநனை'* (புறநா. **58.**) **4.** குறிஞ்சி நிலத்தலைவன்(பிங்.); chief of a hilly tract **5.** படைத்தலைவன்; commander of an army, general. (பிங்) **6.** உவமிக்கப்படுவோன்; one who is the standard of comparison. *'போர்மிகு பொருந'* (திருமுரு. **276.**) **7.** தலைவன் (பிங்.); leader **8.** பகைவன்; foe, enemy. *'பொருநரைப் பொறா.... பஞ்சவ ரோறே'* (புறநா. **58.**)

[பொரு → பொருநன்]

பொருநன்² *porunan,* பெ. (n.) **1.** ஏர்க்களத் தேனும் போர்க்களத்தேனும் சென்றுபாடும் கூத்தன்; (தொல். பொ. **91.** உரை) one who dances and sings on the battle field and on the threshing-floor. **2.** கூத்தன்; actor, dancer. *'பண்ணிமை யடைத்த பலகட் பொருநர் பாடல்'* (கம்பரா. ஊர். **162.**)

[பொரு → பொருநன்]

பொருநாறு *porunāṟu,* பெ. (n.) *பொருநராற்றுப் படை* பார்க்க; see *porunar-āṟṟu-p-paḍai* *'முருகு பொருநாறு பாணிரண்டு'* (பத்துப் பாட்டு, தனிப்பா.)

[பொருநர் + ஆறு → பொருநன்]

[பொருநராறு → பொருநாறு]

பொருநை *porunai,* பெ. (n.) **1.** தாமிரபரணி; the river tāmiraparani. "குமரி பொன்னி வகை பொருநை நல்லாறு" (குமர. பிர. மீனா. பிள். **11**) **2.** *ஆன் பொருநை* (திவா) பார்க்க; see *āṉporunai.* a river in the cera country. (திவா.)

[பொரு → பொருநை]

பொருநைத்துறைவன் *porunai-t-turaivan,* பெ. (n.) 1. சேரன் (பிங்.); cēra king, as lord of the An porunai river. 2. பாண்டியன்; pandya king, as lord of the Tāmiraparaṇi river. *'பொருநைத் துறைவன் பொற்பாவாய் புது நீராடி யருளுகவே'* (குமர. பிர. மீனா. பிள். 88.)

[பொருநை + துறைவன்]

பொருப்பரையன் *poruppariyan,* பெ. (n.) பனி (இமய) மலை; the himālayas, as king of hills. *'பொருப்பரையன் மடப்பாவை'* (நந்திக். பாயி.)

[பொருப்பு + அரையன்]

பொருப்பன் *poruppan,* பெ. (n.) 1. குறிஞ்சி நிலத்தலைவன்; chief of a hilly tract. 2. குறிஞ்சி நிலவேடன்; hunder of the hills. *'வேலுடைப் பொருப்பாங்குணர்வுற'* (கந்தபு. கடவுள்வா.12) 3. பாண்டியன்(கலித்.36); (பொதியமலைக் குரியவன்) pandya king, as lord of podiyam 4. மலைக்குரியவன்; lord of a hill. *'பொருப்பனைப் புனலாளொடு புன்சடை அருப்பனை'* (தேவா. 781, 9) 5. பனிமலை (இமயமலை); the Himalayas. பொருப்பன் மங்கைபங்கனை (தேவா. 1188, 6)

[பொருப்பு → பொருப்பன்]

பொருப்பு *poruppu,* பெ. (n.) 1. மலை; mountain. *'வரைத்தா ளருவிப் பொருப்பின்'* (மதுரைக். 42.) 2. பக்கமலை; spur of a range of hills. *'சாரற் பொருப்பிடத்தே'* (திருக்கோ. 293.)

[பல் → பரு → பொரு → பொருப்பு]

பொருப்பெறிந்தான் *porupperindān,* பெ. (n.) முருகக் கடவுள் (உரி.நி.); skanda, as one who pierced the kraunca hill with his spear.

[பொருப்பு + எறிந்தான்]

பொருபுவி *poru-puvi,* பெ. (n.) 1. போர்க்களம்; battle-field 2. பாலை நிலம்; desert tract.

[பொரு + skt. Ihuvi. *த. புவி.]*

பொரு பொரு—த்தல் *poru-poru-,* செ.கு.வி. (v.i.) 1. அறத்தீய்தல்; to be liable to crumbling from too much frying. 2. முணுமுணுத்தல்: to mutter in dissatisfaction.

[பொருபொரெனல் → பொருபொரு]

பொருபொருப்பான் *poruporuppān,* பெ. (n.) மரவகை (யாழ்.அக.); a kind of tree.

பொருபொரெனல் *poru-porenal,* பெ. (n.) 1. தீய்த்தற்குறிப்பு; crumbling. 2. முணுமுணுத் தற்குறிப்பு; muttering.

[பொருபொரு + எனல்]

பொரும்பி *porumbi,* பெ. (n.) ஆவிரை வகை (மலை); a kind of senna.

பொரும்பிலா வேர் *porumbilāvēr,* பெ. (n.) 1. மலை வேர்; a hill-plant. 2. வட்டத் திருப்பி; rattle wort.

பொருமல் *porumal,* பெ. (n.) 1. அச்சம்; fear. *'பொச்சையர் கடனனி பொருமல் கொள்வதே'* (கந்தபு. தருமகோ. 19.) 2. துன்பம்; trouble. *'போயதெம் பொரும லென்னா'* (கம்பரா. திருவவ. 25) 3. அழாது விம்முகை; sobbing. "உயிர் போக்கிப் போக்கி யுழக்கும் பொருமலான்" (கம்பரா. மீட்சி. 208)

4. வயிற்றுப் பொருமல் (பதார்த்த. 1358); flatulence, wind in the stomach. 5. பூரிப்பு; plumpness *'புந்தி யோங்கு மூவகைப் பொருமலோ'* (கம்பரா. மீட்சி. 22.) 6. பொறாமை; jealousy. அவன் பேரில் அவனுக்குப் பொருமல் அதிகம்.

[பொருமு → பொருமல்]

பொருமல்² *porumal,* பெ. (n.) பொருமை யின்மை; impatience."பொருமலை நானெங்கே யுடக்குவேன்"(தெய்வச். விறலிவிடு.239)

[பொருமு → பொருமல்]

'இ' பெ.பா. ஈறு.

பொருமலி *porumali,* பெ. (n.) தடித்தவள்; fat woman

[பொருமல் → பொருமலி]

பொருமிநாதம் *porumi-nādam,* பெ. (n.) பூரம் (சங்.அக.); calomel.

பொருமு-தல் *porumu,* செ.கு.வி. (v.i.) 1. துன்புறுதல்; to be distressed. *'பூசலுண்டாமெனப் பொருமா'* (கம்பரா. காட்சி. 18) 2. விம்மியழுதல்; to choke with crying, sob. *'போர்வலான் றடுப்பவும் பொருமி விம்மி னான்'* (கம்பரா. தைலமாட்டு. 41) 3. உப்புதல்; to be bloated, as the body from wind or disease. 4. பூரித்தல்; to be puffed up, as from elation. *'பேருவகை மீக்கொண்டு பொருமினான்'* (உபதேசகா. விபூதி. 100.) 5. ஈரித்துப் பருத்தல்; to swell, to become soaked, as tile, new pot or sponge 6. பொறாமைப்படுதல்; to be jealous, envious.

[பொரு → பொருமு]

பொருமுகவெழினி *poru-mugu-v-elini,* பெ. (n.) அரங்கின் இரண்டு வலத்தூணிடத்தும் பொருந்திய உருவுதிரை (சிலப். 3, 109); curtain between the pillars to the right of the stage.

[பொரு + முகம் + எழினி]

பொருவ *poruva,* பெ. (n.) இடை. part. ஓர் உவமைச் சொல் (தொல். பொ. 289); a term of comparison.

[பொருவு → பொருவ]

பொருவாய் *poruvāy,* பெ. (n.) கடல் மீன் வகை(வின்.); anchovy, blackish.

பொருவாய்க் கற்றலை *poruvāy-k-karralai,* பெ. (n.) *ஆனைவாயன் கற்றலை* பார்க்க; see *anaivāyan-karralai* a sea-fish.

[பொருவாய் + கற்றலை]



பொருவிலி *poruvili,* பெ. (n.) 1. ஒப்பிலி; one without equal. 2. சிவபிரான் (சங்.அக.); siva.

[பொருவு + இல்+இ]

'இ' ஒ. ஈறு

பொருவு¹–தல் *poruvu,* செ.குன்றா.வி. (v.t.) 1. ஒத்தல்; to equal, compare. *'உன்னைப் பொருவு முனிவோர்'* (கந்தபு. திருக்கல். 55) 2. உராய்தல்; to rub. *'விற்கொணான் பொருவுதோள்'* (கம்பரா. நிந்தனை. 52)

பொருவு¹–தல் *poruvu,* செ.கு.வி. (v.i.) 1. நேர்தல்; to happen. *'போன்றன வினய தன்மை பொருவியது'* (கம்பரா. இரணிய. 152)

[பொரு → பொருவு]

பொருவு³ *poruvu,* பெ. (n.) ஒப்பு; resemblance, comparison. *'பொருவற்றா ளென்மகள்'* (திவ். திருநெடுந். 19.)

[பொரு → பொருவு]

பொருவுசாரம் *poruvu-šāram,* பெ. (n.) பொறாமை (இ.வ.); envy, jealousy.

[பொருமு + விசாரம்]

[பொருவிசாரம் → பொருவுசாரம்]

Skt. Vicāra → த. விசாரம்

பொருள் *poruḷ,* பெ. (n.) 1. பருப்பொருள்; material substance, entity. "விளங்கிய பொருள்க டம்மைப் பொய்வகை யின்றித் தேறல்" (சீவக. 1436) 2. சொற்பொருள்(சூடா.); meaning, as of a word. 3. செய்தி; matter. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் (குறள், 423) 4. உண்மைக்கருத்து; true object. வேதங் கண்ணிய பொருளெலாம் (கம்பரா. இரணிய. 1) 5. செயல்; object, affair. "ஒருபொருள் சொல்லுவ துடையேன்" (கலித். 8) 6. மெய்மைநெறி; essential principle, நவையறு நன்பொரு ளுரைமினோ (மணிமே. பதி, 87) 7. மெய்மை; reality. *'பொருள்சேர் புகழ்புரிந்தார்'* (குறள், 5) 8. நன்கு மதிக்கப்படுவது; that which is important or moment. *'பொருளே மன்ற பொருளே'* (குறுந். 174) 9. கல்வி; learning. 10. அறிவு knowledge; ' (பெரியபு. நமிநந். 10.) policy, belief. *பொய்யு மெய்யுமா மென்னும் பொருண் மேற் கொள்ளும் புரை நெறியார்'* 11. அறம்; virtue. *'துறத்தல் பொருளாமோ'* (சீவக. 2960) 12. பயன்; reselt. *'மெய்ப் பொருள் காண்ப தறிவு'* (குறள், 423) 13. வீடுபேறு; final bliss. *'புகலூர் புகழப் பொருளாகுமே'* (தேவா.640,8) 14. இறைவன்; god. *'பொருளு மான்மாவுங் காட்டி'* (குமர. பிர.கந்தர்கலி. 27) 15. செல்வம்; wealth. *'பெரும் பொருள் வைத்தீர் வழங்குமின்'* (நாலடி. 6.) 16. பலபண்டம்(சூடா); provision, stores. 17. பொன்; (சூடா) gold. 18. மகன்; (பிங்) son. *'தாரகனைப் பொருது பொன்று வித்தபொருளினை முன்படைத்து கந்த புனிதன்'* (தேவா. 622, 9) 19. சுணங்கு; beauty-spot, as on woman's breast. *'போகமும் பொருளுமீன்றபுணர்முலைத் தடங்கள்'* (சீவக. 460) 20. உவமேயம்; the thing compared in a simile. *'பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்'* (தொல். பொ. 284.) 21. *உறுதி*,4 பார்க்க; see *uṟudi* *'அறம் பொருளின்பம் வீடென்னும் நான்கு பொருளினும்'* (திருக்கோ. 1, 2000) 22. மறுதலைப் பொருளுணர்வு; deduction or conclusion from premises given, inference from circumstances. *'அபாவம் பொருளொப்பு'* (சி.சி. அளைவ, 1, மறைஞா) 23. அகமும் புறமுமாகிய திணைப்பொருள்; affairs of life, as topics of poetry, in two classes, viz., agam, puṟam. 24. பொருளாட்சி; science of political economy. *'ஞாலத் தறம் பொருள் கண்டார்க ணில்'* (குறள். 141) 25. தலைமை (யாழ்.அக.); headship, leadership. 26. கொள்கை; doctrine. பொய்யு மெய்யுமா

மென்னும் பொருண்மேற்கொள்ளும் புரை நெறியார். (பெரியபு. நமிநந். 10) 27. தந்திரம்; stratagem, device. 'விரிக்க முயல்வார் புணர்ந்த பொருளாமிது' (கம்பரா. சடாயு.155)

க. பொருளு. ம.பொருள். து.பொருலு.

[புல் → பொல் → (பொர்) → பொருள்]

பொருள்கோள் *poru!-kō!,* பெ. (n.) 1. ஆற்று நீர் மொழி மாற்று நிரனிறை, விற்பூட்டு தாப்பிசை அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு அடிமறிமாற்று என எண் வகையாகச் செய்யுட்குப் பொருள் கொள்ளும் முறை; modes of construing verses, of which there are eight, viz., yāṟṟu-nīr, moḻi-māṟṟu, niraniṟai, viṟ-pūṭṭu, tāppišai, aḷai-maṟi-pāppu, koṇḍu-kuṭṭu, aḍimaṟi-māṟṟu. 2. ஒருவகைத் திருமண முறை; a kind of marriage.

[பொருள் + கோள்]

பொருள்செய்¹–தல் *poru!-šey,* செ.குன்றா.வி. (v.t.) 1. மதித்தல்; to treat with regard, esteem highly. நான் உன்னைப் பொருள் செய்வேன்

பொருள்செய்²–தல் *poru!-šey,* செ.குன்றா.வி. (v.i.)செல்வந் தேடுதல்; to acquire wealth. *'பொருள் செய்வார்க்கு மஃதிடம்'* (சீவக. 77)

[பொருள் + செய்]

பொருள்செய்வோர் *porul-ceyvōr,* பெ. (n.) வணிகர் (உரி.நி.); vaisyas, as merchants.

[பொருள் + செய்வோர்]

பொருள்புரிநூல் *poru!-puri-nūl,*பெ. (n.) பொருள் நூல்; Treatise on Polity (பெருங். உஞ்சைக்.32,1.)

[பொருள் + புரி+ நூல்]

பொருள்வகை *poru!-vagai,* பெ. (n.) *பொருள்கோள்* (நம்பியகப். 211.) பார்க்க; see *poru!-kō!*

[பொருள் + வகை]

பொருள்வயிற்பிரிவு *poru!-vayir-pirivu,* பெ. (n.) பொருள்தேடற் காரணம் பற்றித் தலைவியைத் தலைவன் பிரிகை (திருக்கோ. 332, அவ); separation of a lover from his beloved, in pursuit of wealth.

[பொருள் + வயின் + பிரிவு]

பொருள்வழு *porul-vaḻu,* பெ. (n.) செய்யுட் குற்றங்ககளு ளொன்று (யாப். வி. 525); a defect in versification.

[பொருள் + வழு]

பொருள்விலையாட்டி *porul-vilaiyātti,* பெ. (n.) விலைமாது; prostitute. *'வருணக்காப்பிலள் பொருள் விலையாட்டி யென்று'* (மணிமே. 5, 87.)

[பொருள் + விலையாட்டி]

பொருள்விளங்கவைத்தல் *poru!-vi!aṅga-vaittal,* பெ. (n.) பொருள் எளிதில் விளங்கு மாறு செய்யுள் முதலியவற்றை அமைக்கை(வின்.); perspicuity, charity of expression

[பொருள் + விளங்கவைத்தல்]

பொருள்வீடு *porul-vidu,* பெ. (n.) பொருளிற் பற்றறுகை (யாழ்.அக.); non-attachment to worldly goods.

[பொருள் + வீடு]

பொருளகராதி *porul-agarādi,* பெ. (n.) சதுரகராதியில் ஒருபொருட் பல்பெயர் கூறும் பகுதி (வின்.); dictionary of synonyous words, one of the four sections of cadur-agarādi

[பொருள் + அகராதி]

பொருளட்டவணை *porul-attavanai,* பெ. (n.) நூல் முதலியவற்றின் உள்ளடக்கச் செய்திக் குறிப்பு; table of contents.

[பொருள் + அட்டவணை]

பொருளடக்கம் *porul-atakkam,* பெ. (n.) *பொருளட்டவணை* பார்க்க; see *porul-attavanai*

[பொருள் + அடக்கம்]

பொருளணி *porul-ani,* பெ. (n.) பொருளமைவு பேச்சுத்திறன்; a class of figure of speech relating to sense, opp. to col-l-ani. *'பொருளணியியல்'* (தண்டி)

[பொருள் + அணி]

பொருளதிகாரம் *porul-adigāram,* பெ. (n.) **1.** அகப்பொருளிலக்கண நூல்; treatise on agapporul. அரசன் பொருளதிகார மின்மையிற் கவல்கின்றான், (இறை. **1,** உரை) **2.** அகம் புறம் முதலியவற்றைக் கூறும் தொல்காப்பியத்தின் மூன்றாம் பகுதி; the third division of Tolkāppiyam, treating of agam, puram, etc. **3.** அறிவார்ந்த செய்திகளை யெல்லாம் விரித்துப் பொருணான்கினையும் கூறும் நூற்பகுதி(வின்.); that part of ethics which treats of porunāngu, embracing all kinds of knowledge and practice

[பொருள் + அதிகாரம்]

பொருளந்தாதி *porul-andādi,* பெ. (n.) *பொருளிசையந்தாதி* பார்க்க. see *porul-īšai-andādi.*

[பொருள் +SKt. anta + ādi. த. அந்தாதி]

பொருளற்றபேச்சு *porul-artapeccu,* பெ. (n.) கொச்சைப்பேச்சு; meaningless talk.

[பொருள் + அற்ற + பேச்சு]

பொருளறை *porul-arai,* பெ. (n.) கருவூல அறை; treasury. *"பெரும் பொருளறையுட்பட்ட ஆணிப்பொன்"* (திருவாலவா.**35,24**)

[பொருள் + அறை]

பொருளன் *porulan,* பெ. (n.) பரம்பொருள்; ultimate reality. *'பொருளன் புனிதன்'* (சிலப். 10, 174.)

[பொருள் → பொருளன்]

பொருளாக்கம் *pōrul-akkam,* பெ. (n.) பொருள்தேடுதல்; earn money.

[பொருள் + ஆக்கம்]

பொருளாகுபெயர் *porul-āgupeyar,* பெ. (n.) முதற்பொருளின் பெயர் அதன் சினைக்காகும் ஆகுபெயர் (நன். **290**); metonymy, where the whole is put for its part.

[பொருள் + ஆகுபெயர்]

பொருளாசை *poruḷ-āši,* பெ. (n.) பணம் முதலானவற்றின் மீதான நசை; covetousness, avarice.

[பொருள் + ஆசை]

பொருளாள் *poruḷ-āḷ,* பெ. (n.) இல்லாள் (மனைவி); wife, as one's property. *'பிறன் பொருளாட் பெட்டொழுகும் பேதைமை'* (குறள், 141.)

[பொருள் + ஆள்]

'ஆள்' பெண்பாலீறு.

கணவனின் பெருமைக்குக் கரணியமாய் இருத்தலின் மனைவி பொருளாள் எனப்பட்டாள். 'பொருளல்லவற்றைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள்' எனுங்குறட்பா ஈண்டு நோக்கற்பாற்று.

பொருளாளர் *porul-ālar,* பெ. (n.) காசாளர்; cashier.

[பொருள் + ஆள்+அர்]

பொருளானந்தம் *poruḷ-āṉandam,* பெ. (n.) இறைச்சியினும் புகழ்ச்சியினும், உவமையினும் பிறவற்றினும் ஊறுபயப்பப் பாடும் 'ஆனந்தக் குற்றம்' (யாப். வி. பக், 519) a defect in composition of iṟaicci, eulogy, simile, etc.,

*[பொருள் +*SKṭ. anta-ādi. *த. ஆனந்தம்]*

பொருளிசையந்தாதி *poruḷ-išai-y-andādi,* பெ. (n.) ஓசையாலன்றிப் பொருளால் வரும் ஈறு தொடங்கித் தொடை(ஈடு. 1, 6, 2, ஜீ); variety of andadi-t-toḍai in which the repetition of the ending is confined to mere sense and has no reference to word or sound, opp. to iyal-icai-y-andādi.

[பொருளிசை + அந்தாதி]

[SKṭ. anta+ādi. *த. அந்தாதி]*

பொருளியல் *poruḷiyal,* பெ. (n.) அகப்பொருள் பாடலடங்கிய ஒரு நூல் (களவியற்.); ananthology of poems on agapporuḷ.

[பொருள் + இயல்]

பொருளியல்புரைத்தல் *poruḷ-iyalburaittal,* பெ. (n.) எடுத்துக்கொண்ட பொருளின் இயல்பை உரைத்தல்; indication of the subject matter of a treatise.

[பொருள் + இயல்பு+ உரைத்தல்]

பொருளிலக்கணம் *poruḷ-ilakkaṇam,* பெ. (n.) அகம் புறம் முதலியவற்றைக் கூறும் இலக்கண நூல்(வின்.); grammar dealing with agam, puṟam, etc.

[பொருள் + இலக்கணம்]

பொருளின்செல்வி *poruliṉ-šelvi,* பெ. (n.) திருமகள் (பிங்.); lakshmi, as goddess of wealth.

[பொருள் → பொருளின்+ செல்வி]

பொருளின்பம் *poruḷ-iṉbam,* பெ. (n.) பொருட்சுவை பார்க்க; see *poruṭ-cuvai.* (இலக். வி. 635, உரை.)

[பொருள் + இன்பம்]

பொல்லாங்கன் *pollāṅgaṉ,* பெ. (n.) குறும்புக்காரன் (யாழ்.அக.); misehievous person.

[பொல்லாங்கு → பொல்லாங்கன்]

பொல்லாங்குக்காரன் *pollānku-k-karan,* பெ. (n.) தீங்கிழைப்பவன்; bad egg, ill-wisher.

[பொல்லாங்கு+காரன்]

'காரன்' உடைமை பற்றிய ஆண்பாவீறு.

பொல்லாங்கெண்ணம் *pōllanku-ennam,* பெ. (n.) தீயஎண்ணம்; ill - will.

[பொல்லாங்கு+எண்ணம்]

பொல்லாங்குச் செயல் *pōllanku-c-cayal,* பெ. (n.) கெடுசெயல்; mal practice

[பொல்லாங்கு + செயல்]

பொல்லாங்குத்திட்டு *pōllanku-t-tittu,* பெ. (n.) வசைமொழி; evil-speaking

[பொல்லாங்கு + திட்டு]

பொல்லாங்குத்தீக்குறி *pōllanku-t-tikkuri,* பெ. (n.) பொல்லாங்குஅறிகுறி; fore boding

[பொல்லாங்கு + அறிகுறி]

பொல்லாச்செயல் *pōlla-c-cayal,* பெ. (n.) *பொல்லாங்குசெயல்* பார்க்க; see *pollanku-c-cayal*

[பொல்லாங்கு + செயல்]

பொல்லாதவன் *pōllatavan,* பெ. (n.) தீங்காளன்; (போக்கிரி) rascal

[பொல்லாங்கு + செயல்]

பொருளுபதை poru!-ubadai, பெ. (n.) அமைச்சர் முதலியோரை அரசன் தெரிந்தெடுத் தற்குரியதேர்திறம் நான்கனுள் வேற்றரசனிடம் அதிகப்பொருள் பெறலாமென்று கூறுவித்துத் தேர்வு செய்யும் முறை (குறள்,501,உரை); testing a minister;s or officer's loyalty by throwing him into circumstances in which he is tempted by tales of prospective prosperity under another sovereign, one of four ubadai, q.v.

[பொருள் +Skt. upa.dhā- *த.உபதை]*

பொருளுரை poru!-urai, பெ. (n.) **1.** மெய்யுரை; truthful or unfailing word *'பொய்யுரையே யன்று பொருளுரையே'* **(சிலப்,9,18.). 2.** பயனுடைய சொல்; useful word or speech. "ஓர் பொருளுரை கேளிதென்றான்" **(சிவக.1123)3.** புகழுரை; reputation *பொருளுரையிழந்து.....நாணுத் துறந்தேன்'* **(மணிமே.2,40.) 4.** மந்திரம்; mantra *'பொருளுரை பெற்று வந்தான்'* **(சீவக.1723.)**

[பொருள் + உரை]

பொருளுரையாளர் porul-urai-y-ā!ar, பெ. (n.) சான்றோர்; wise men, sages. *'பொருளுரையாளர் நச்சுக் கொன்றேற்கு'* **(சிலப்.16,65)**

[பொருளுரை+ ஆளர்]

பொருளுவமை poru!-uvamai, பெ. (n.) பொருளின் தன்மையை உவமித்துக் கூறும் அணிவகை **(யாழ்.அக.)**; (rhet) a kind of simile in which the qualities of two things are compared.

பொருனை porunai, பெ. (n.) *பொருநை* பார்க்க; see *porunai.* *'அலைதீர்ப் பொருனை நதிமுகத்தும்'* **(திருவாலவா. திருநாட்டுச்.9).**

[பொருநை → பொருனை]

பொரேரெனல் porēr-eṉal, பெ. (n.) சடுதிக்குறிப்பு; onom. expr. signifying suddenness. *'வண்டு பொரேரென வெழ'* (பரிபா.பக்.166,30.)

[பொரேர் + எனல்]

பொல் pol, பெ. (n.) *பொல்லு²* பார்க்க; see *pollu²*

க.பொல்

[புல் → பொல்]

பொல்லது polladu, பெ. (n.) *பொல்லாது*(வின்) பார்க்க; see *pollādu*. *'நல்லது பொல்லது'*.

[பொல்லாது → பொல்லது]

பொல்லம் pollam, பெ. (n.) **1.** தைக்கை (திவா.); stitching **2.** இணைக்கை (பிங்.); joining as in tailoring or in carpentry. **3.** சேர்த்துத் தைக்க உதவும் சிறுதுண்டு (யாழ்ப்.); piece, division, strip, used in patch work.

[புல் → பொல் → பொல்லம்]

பொல்லம்பொத்து—தல் pollam,pottu-, செ.குன்றாவி. (v.t.) கிழிந்த துணியின் இரண்டு தலையையுங்கூட்டித் தைத்தல்; to sew together, as two pieces of cloth. *'பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை'* (பொருந.8.)

[பொல்லம் + பொத்து—,]

பொல்லர் pollar, பெ. (n.) **1.** தையற்காரர் (பிங்.); tailors, as sewers. **2.** தோல்வினைஞர்; leather workers, shoe makers.

[புல் → பொல் → பொல்லர்]

பொல்லா pollā, பெ.எ (adj.) **1.** தீமையான; bad, vicious, evil, wicked. *'பொல்லாக் கனாக்கண்டார்'* (சீவக.2173.) **2.** கடுமையான; severe, intense. *'பொல்லாத மருந்து'*

க. பொல்ல. ம. பொல்லா

[புல் → பொல் → பொல் + ஆ]

'ஆ' – எ.ம.இ.

பொல்லாக்காட்சி pollā-k-kāṭci, பெ. (n.) மயக்கவறிவு; confused knowledge, bewilderment. *'வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்று'* (மணிமே.30,71.)

[பொல் + ஆ + காட்சி]

'ஆ'– எ.ம.இ.

பொல்லாக்காலம் pollā-k-kālam, பெ. (n.) கெட்டகாலம்; evil or inpropities time.

[பொல் + ஆ + காலம்]

'ஆ'– எ. ம.இ.

பொல்லாக் குறும்பு pollā-k-kuṟumbu, பெ. (n.) தீமையுடைய சிற்றரண்; dangerous small port. *'பொல்லாக் குறும்பும் போகுதற் கருமையின்'* (பெருங். 1:54:50)

[பொல் + ஆ + குறும்பு]

'ஆ' – எ.ம.இ.

பொல்லாங்கு pollāṅgu,பெ. (n) 1. தீது; evil, vice, vileness. *'பொல்லாங்கென்பவையெல்லாந் தவிர்'* (கொன்றைவே.) 2. குற்றம் (பிங்.) defect, fault. *'மாணவகன் பொல்லாங்குரைக்க'* (பெரியபு. சண்டேசுர.40.), 3. ஈனம் (யாழ்.அக.); deficiency, degradation. 4. கேடு(வின்); ruin, injury, destruction. 5. மறதி (சூடா.); forgetfulness.

[பொல்லா → பொல்லாங்கு]

பொல்லாங்குச்சொல் pōlanku-c-col, பெ. (n.) தீமொழி; evil word.

[பொல்லாங்கு + சொல்]

பொல்லாச்சாம்பற்றரை pollā-c-cāmparrarai, பெ. (n.) கட்டடத்திற்குத் தகுதியில்லாத தரைவகை; building purposes. *'உவர்த்தரை ஈளைத்தரை பொல்லாச்சாம்பற்றரை'* (சிலப்.3,94, உரை, பக்.114.).

[பொல்+ ஆ + சாம்பல் + தரை]

'ஆ' – எ.ம.இ.

பொல்லாத்தனம் pollā-t-taṉam, பெ. (n.) தீமை விளைவிக்கும் குணம்; wickedness. *'என்னிடமே உன் பொல்லாத்தனத்தைக் காட்டுகிறாயே!"*

[பொல் + ஆ + தனம்]

'ஆ' – எ.ம.இ.

பொல்லாத pollāda பெ.எ. (adj.) *பொல்லா* பார்க்க; see *pollā*. *'பொல்லாத சமணரொடு'* (தேவா.412,10.).

[பொல் → பொல்லாத]

பொல்+ஆ+த்+அ.
'ஆ' எ.ம.இ.
'த்'– இ.கா. இடைநிலை
'அ'– பெ.எ. ஈறு.

பொல்லாதகிரமம் pollāda-kiramam, பெ. (n.) தீயதொழில்; evil dealing.

[பொல் → பொல்லாத +skt.grāma. த.கிரமம்]

பொல்லாதவன் pollādavaṉ, பெ. (n.) 1. தீயவன்; bad, wicked man. 2. கடுமையானவன் rude, rough man.

[பொல் → பொல்லாதவன்]

பொல்லாது[1] pollādu, பெ. (n.) தீயது; vice, evil. *'பெடையொடுபுணர்வுவிரும்பல் பொல்லாதெனவும்'* (பெருங்.மகத.2,168.)

[பொல் → பொல்லாது]

பொல்லது[2] pollādu, பெ. (n.) உடல் முதலியன கேடுற்றநிலை; emaciation; thinness,as of body; spoilt condition. "நீஇப்படிப் பொல்லாதயிருப்பானேனென்ன, நாம் நோயாய்க் கிடந்தோம் கண்டீரேயென்று" (சங்கற்பநி. 205,உரை,)

பொல்லாநிலம்[1] pollā-nilam, பெ. (n.) சேற்றுநிலம் (பிங்.); land full of mire.

[பொல் → பொல்லா + நிலம்]

பொல்லாநிலம்[2] pollā-nilam, பெ. (n.) இடுகாடு; cremation ground. "உங்களைப் பொல்லா நிலத்திலேயிடுவதற்கு முன்னம்" (திவ். திருப்பல். பு, வ்யா. பக். 50)

பொல்லாப்பு[1] pollāppu, பெ. (n.) 1. *பொல்லாங்கு*(வின்) பார்க்க; see *pollāṅgu*, 1,2. 2. மனக்குறை; grievance *'பொல்லாப்பென் மேலுண்டோ மன்மதா'* (குற்றா. குற.33.) 3. துன்பம்; trouble. *'ஒருவன் தனக்குப் பொல்லாப்பு வேண்டின்'* (நான்மணி, 17,உரை.)

[பொல் → பொல்லாப்பு]

பொல்லாப்பு² pollāppu, பெ. (n.) *மறுப்பு;* bobjection. *"இக்சாணிக்குப் பொல்லாப்புச் சொல்லில்" (புதுக். கல். 327)*

பொல்லாமணி pollā-maṇi, பெ. (n.) **1.** துளையிடப் பெறாத மணி; gem which has not been bored. **2.** குற்றமற்ற மணி(வின்); flawless gem **3.** மாசற்ற பரம்பொருள்; god, as immaculate. *'என் பொல்லா மணியைப் புணர்ந்தே'* (திருவாச.**271.**)

[பொல் → பொல்லா + மணி]

பொல்லாமை pollāmai, பெ. (n.) **1.** தீது; evil, ill, vileness. 2. குற்றம்; fault, defect. *'வீணை பொல்லாமை.....இது'* (சீவக.**717.**).

[பொல் → பொல்லா → பொல்லாமை]

பொல்லாவாறு pollā-v-āṟu, பெ. (n.) தீச்செயல்; evil course of conduct. *'பொல்லாவாறு செயப்புரியாது'* (தேவா.**602,7.**)

[பொல் → பொல்லா+ஆறு → பொல்லாவாறு]

பொல்லான்¹ pollāṉ, பெ. (n.) **1.** தீயவன்; wicked man. *'வேடரென்னும் பொல்லார்க்கு'* (வெங்கைக்கோ.**101.**) **2.** அறிவிலி; ignorant person. *'பேதைநீ பெரிதும் பொல்லாய்'* (சீவக.**269.**)

[பொல் → பொல்லா → பொல்லான்]

பொல்லான்² pollāṉ, பெ. (n.) குதிரைவகை; a species of horse. *'மயிர்வரி நீலான் பொல்லான்'* (திருவாலவா.**28,69.**)

[பொல் → பொல்லா → பொல்லான்]

பொல்லு-தல் pollu-, செ.குன்றா.வி (v.t.) *பொள்ளு* பார்க்க; *'பொல்லாப் பிள்ளையார்'* see *poḷḷu.*

[புல் → பொல் → பொல்லு]

பொல்லு² pollu, பெ. (n.) பதர்(வின்); empty glume or husk of grain.

[புல் → பொல் → பொல்லு]

பொல்லு³ pollu, பெ. (n.) **1.** தடி(யாழ்.அக.); walking stick; cane **2.** ஊன்றுகோல், prop.

[புல் → பொல் → பொல்லு]



பொலங்கலம் polaṅ-kalam, பெ. (n.) பொன்னணிகலன்; gold jewel. *'பொலங்கலநந்த'* (ஐங்குறு.**316.**)

[புல் → பொல் → பொலம் + கலம்]

பொலங்கா polaṅ-kā, பெ. (n.) இந்திரனுடைய சோலை; grove of indra. *'அரும்பொலங் காவைந்தால்'* (தக்கயாகப்.**71.**)

[பொலம் + கா]

பொலந்தும்பை polan-tumpai, பெ. (n.) பொன்னானியன்ற தும்பை; Tumpai-which made by gold. *'பொலந்தும்பைக் கழற்பாண்டிற்* (புறநா.**97**)

[பொலம் + தும்பை]

பொல்பொலவெனல் pola-pola-v-eṉal, பெ. (n.) (அ)பொறுபொலெனல்(அகசந்.உ.); Expr. singnifying crumbling, as of earth. (ஆ) நெகிழ்ந்திருத்தற் குறிப்பு(தஞ்சை); looseness.

பொலம்¹ polam, பெ. (n.) **1.** பொன்; gold. *'பொலம்பூண் வேந்தர்'* (பதிற்றுப்.64) **2.** அழகு(திவா.); beauty, fairness. *'பொலந்தேர்ப் பொறைய'* (பதிற்றுப்.84,6.) **3.** அணிகலம் jewel. **4.** பொன்னிறம்(வின்); gold colour.

[புல் → பொல் → பொலம்]

பொலம்² polam, பெ. (n.) பொல்லாங்கு(வின்); badness, evil.

[பொல் → பொல்லாம்(→ பொல்லாங்கு பொல்லாம் → பொல்லாப்பு. பொல்லாம் →) பொலம்]

பொலம்புள் polam-puḷ, பெ. (n.), *பொன்வாய்ப்புள்* பார்க்க; see *peṉvāy-p-puḷ* *'கயல்கொள் பொலம்புள்'* (பெருங்.வத்தவ.2,69.) kingfisher.

[பொலம்¹ + புள்]

பொலன் polaṉ, பெ. (n.) *பொலம்¹* பார்க்க; see *polam¹* *'பொலன் கழற்காற்பொடி'* (கம்பரா.குலமுறை.29.)

[பொலம்¹ → பொலன்]

பொழக்கடை pōlakkatay, பெ. (n.) கொல்லைப்புறம்; backyard.

[புழைக்கடை → பொழக்கடை]

பொலன்காலா *polaṉ-kālā,* பெ. (n.) ஆறடி நீளம் வளரக் கூடியதும், மின்னும் பசிய நிறமுள்ளதுமான கடல் மீன்வகை; mango - fish, silvery green, attaining **6** ft. in length, polynemus tetradactylus.

[பொலன் + காலா]



பொலா *pola,* பெ. (n.) ஊன்; flesh.

[புலால்→ பொலா]

பொலி¹-தல் *poli-,* செ.கு.வி. (v.i.) **1.** செழித்தல்; to flourish, prosper, thrive. *'பொலியு மால்வரை'* (தேவா. 236, 8) **2.** பெருகுதல்(வின்); to be enlarged; to appear grand, as from dress; to swell in size, as rice in boiling; to grow full **3.** மிகுதல்; to abound, increase. *'கழுநீர் பொலிந்த கண்ணகன் பொய்கை'* (மதுரைக். 171.) **4.** விளங்குதல்; to bloom, as the countenance; to shine. *'மார்பில்....... பொலிந்த சாந்தமொடு'* (பதிற்றுப். 88, 30.) **5.** சிறத்தல்; to be high, great or celebrated. *'பொலிந்த வருந்தவத்தோற்கே'* (புறநா.1.) **6.** மங்கலமாதல்; to be auspicious or fortunate. *'பொலிக பொலிக பொலிக'* (திவ். திருவாய். 5, 2, 1) (யாழ்ப்.) **7.** நீடுவாழ்தல்; to live long and prosperously, used as a benediction. *'வழிவழி சிறந்து பொலிமின்'* (தொல். பொ. 422.) **8.** நிகழ்தல்; to occur. *'பொலிந்த தாமினிது போரென லொடும்'* (கம்பரா. தானை காண். 2).

[புல்→ பொல் → பொலி]

பொலி²—தல் *poli-,* செ. குன்றாவி. (v.t) புணர்தல்; to cover, as bull or ram; to capulate. *'பொலிகாளை'*

[புல் → பொல் → பொலி]

பொலி² *poli,* பெ. (n.) **1.** தூற்றாநெற்குவியல். (யாழ்ப்.); heap of unwinnowed grain. **2.** தூற்றியநெல் winnowed paddy. **3.** விளைவின் அளவு; out-turn. *'அந்த வயல் என்ன பொலி காணும்?'* **4.** தவசமாகக் (தானியம்) கொடுக்கும் வட்டி, (இ.வ.) interest paid in kind. **5.** களத்தில் நெல்லளக்கும் போது முதல் மரக்காலுக்கு மங்கலமாக வழங்கும் பெயர்; (இ.வ.) a term for the first marakkāl, of grain measured at the threshing floor. **6.** முடிதிருத்துவோன் கொங்கு வேளாளரில் இறந்தவரெலும்பை மூன்றா நாள் நீரிலிட்டுப் பசுமரத்திற்கு பால்வார்க்கும் போது வழங்கும் நற்சொல் (G.TP.D.I.105); exclamation by a barber on the third day of a funeral, as he pours milk at the foot of a green tree after throwing the bones of the deceased in water, a custom among the kongu vēḷāḷās. **7.** புணர்ச்சி; covering, as of animals (கொ.வ.)

[புல் → பொல் → பொலி

பொலிஎருது *pōli-earutu,* பெ. (n.) *பொலியெருது* பார்க்க; see *poliearutu.*

[பொலி + எருது]

பொலிக்கட்டை *poli-k-kaṭṭai,* பெ. (n.) பொலியெருதுகளைக் கட்டும் மரக்கட்டை (யாழ்.அக.); stock to which the leading ox in threshing is tied.

[பொலி + கட்டை]



பொலிக்கந்து *poli-k-kandu,* பெ. (n.) தூற்றியபின் களத்திற் கிடக்கும் நெற் கலந்த பதர்(வின்); chaff containing some grain, left on the threshing-floor after winnowing.

[பொலி + கந்து = பதர்]

பொலிக்குறிப்பு *poli-k-kuṟippu,* பெ. (n.) கதிரடித்துக் குவித்த நெற்பட்டடைக் கணக்கு(R.T.); memorandum of the heaps of corn on a threshing-floor.

[பொலி + குறிப்பு]

பொலிக்கெடி *poli-k-keḍi,* பெ. (n.) வைக்கோல் (யாழ்.அக.); straw.

[பொலி + கெடி]

பொலிகடா *poli-kaḍā,* பெ. (n.) **1.** *பொலியெருது* (வின்) பார்க்க; see *poli-y-erudu.* **2.** பொலியாடு; ram or he-goat kept for covering (w.) **3.** தன்மனம் போனபடி திரியும் தடியன்(இ.வ.); rake, reckless person who leads a loose life.

[பொலி + கடா]

பொலிகாளை *poli-kāḷai,* பெ.(n.) *பொலியெருது* பார்க்க; **1.** see *polikāḷai.*

[பொலி + காளை]

பொலிகூறு—தல் *poli-kūṟu-,* செ.கு.வி. (v.i.) அறுவடை முடிவிற் களத்தே மகிழ்ச்சிக் குறியாகவும் பண்ணையார்க்கு வாழ்த்தாகவும் பாடிப் பொலியோ பொலி என்று கூவுதல்(வின்.); to shout poli-y-ō-poli in joy and as a blessing to a landlord when the year's harvest is over.

[பொலி + கூறு—தல்]

பொலிகை *poligai,* பெ. (n.) *பொலிசை*(s.i.i. iii, **55, 8.**) பார்க்க; see *polišai.*

[பொலிசை → பொலிகை]

பொலிச்சல் *policcal,* பெ. (n.) புணர்ச்சி;(இ.வ.) covering, especially among animals.

பொலிச்சற்காளை *policcaṟ-kāḷai,* பெ. (n.) *பொலியெருது,*1 பார்க்க; see *poli-y-erudu,*

[பொலிச்சல் + காளை]

பொலிசை *polisai,* பெ. (n.) **1.** ஊதியம்; gain, profit. *'பொன் பெற்ற பொலிசை பெற்றார் பிணையனார்'* (சீவக. **2546.**) **2.** வட்டி; interest, especially in kind. *'பொலிசைக்குக் கொண்ட ஊரும்'* (s.i.i. ii, **82.**)

[பொலி → பொலிசை]

பொலிசையூட்டு—தல் *polišai-y-ūṭṭu-,* செ.கு.வி. (v.i.) வட்டி செலுத்துதல்; to pay interest.

[பொலிசை + ஊட்டு—]

பொலிசையூட்டு *polišai-y-ūṭṭu,* பெ. (n.) வட்டி பெறுகை; earning interest. *'பொலிசை யூட்டுக்கு .... வைத்த காசு'* (s.i.i. **11, 121.**)

[பொலிசை + ஊட்டு]

பொலிதள்ளி *poli-taḷḷi,* பெ. (n.) களத்திலே நெல்லை அளக்கும்போது அதனைக் குவித்துத் தரும் சிற்றூர் ஆள்(இ.வ.); village servant who assists in measuring paddy, especially by shoving it within easy reach of the marakkāl.

[பொலி + தள் → தள்ளி]

'இ' வி. மு. ஈறு.

பொலிதூற்று—தல் *poli-tūṟṟu-,* செ. குன்றாவி. (v.t.) களத்தில் நெல்லைப் பதர்போகக் காற்றில் தூற்றுதல்; to separate grains from chaff by winnowing.

[பொலி + தூற்று—]

பொலிநடையன் *poli-nadaiyaṉ,* பெ. (n.) *பொலியெருது,* **2.** (யாழ்.அக.) பார்க்க; see *poli-y-erudu.*

பொலிப்பாட்டு *poli-p-pāṭṭu,* பெ. (n.) **1.** அறுவடைமுடிவிற் களத்தே தலைவனை வாழ்த்தி உழவர் பாடும் பாட்டு (இ.வ.); song sung by farmers in the threshing floor in praise of the landlord at the end of a harvest. **2.** கடுமையான வசை; strong invective. *'பொலிப்பாட்டுப் பாடப் புகுந்தாள்'.* (விறலி விடு. **785.**)

[பொலி + பாட்டு]

பொலிப்பாடு *polippādu,* பெ. (n.) *பொலிகடா,* 2. பார்க்க; see *poli-kaḍā. 'பொலிப்பாட்டைப் போலே புறப்பட்டாள்'* (விறலிவிடு. 785.)

[பொலிப்பு + ஆடு → பொலிப்பாடு]

பொலிப்பாய் *polippāy,* வி.எ. *(adv.)* மெதுவாய் (இ.வ.); gently.

[பொலிப்பு+ஆ –,]

பொலிப்பு *polippu,* பெ. (n.) புணர்ச்சி; act of covering, especially by a bull.

[பொல் → பொலி → பொலிப்பு]

பொலிப்புக்கடா *polippu-k-kaḍā,* பெ. (n.) *பொலிகடா,* 1. பார்க்க; see *poli-kaḍā,1 'பொலிப்புக் கடாவின் கொழுப்பு'* (விறலிவிடு. 632.)

[பொலி → பொலிப்பு + கடா]

பொலிபாடுதல் *poli-pāḍudal,* பெ. (n.) 1. களத்திற் சூடடிக்கும் போது உழவர் பாட்டுப்பாடுகை (சிலப். 10, 137, உரை.); singing by farmers in the threshing- floor when cattle are being led to tread the sheaves 2. பொலிப்பாட்டுப் பாடுகை (இ.வ.); singing of poli-p-pāṭṭu.

[பொலி + பாடுதல்]

பொலிபொலியெனல் *poli-poli-y-eṉal,* பெ. (n.) சூட்டடியிற் பிணையல் மாடுகளை ஒட்டும் போது உழவரிடும் ஒலிக்குறிப்பு (வின்.); redupl.of பொலி + expression shouted to urge bullocks in treading out grain.

[பொலி பொலி + எனல்]

பொலிமதம் *polimatam,* பெ. (n.) 1. நண்டு; crab. 2. ஆண்குறி; penis.

பொலிமுறைநாகு *poli-muṟai-nāgu,* பெ. (n.) பொலியக்கூடிய பக்குவமுள்ள கிடாரி (S.I.I.iv.102); heifer fit for covering.

[பொலி+ முறை + நாகு]

பொலியளவு *poli-y-aḷavu,* பெ. (n.) களத்திற் சூடடித்தவுடன் தாராளமாக அளக்கும் நெல்லளவு; over measure, liberal measuring of grain.on a threshing floor.

[பொலி + அளவு]

பொலியாடு *pōli-atu,* பெ. (n.) *பொலிகடா* பார்க்க; see *polikata*

[பொலி + ஆடு]

பொலியூட்டு *poli-y-ūṭṭu,* பெ. (n.) *பொலிசையூட்டு* (s.i.i.iii, 84, 88.) பார்க்க; see *policaiyōṭṭu*

[பொலி + ஊட்டு]

பொலியெருது *poli-y-erudu,* பெ. (n.) 1. ஆக்களைச் சினையாக்குதற் பொருட்டு வளர்க்கப்படும் காளை (பிங்.); bull kept for covering. *'கொடிய பொலியெருதை யிருமூக்கிலும் கயிறொன்று கோத்து'* (அறப். சத. 42) 2. களத்துப் பிணையல் மாடுகளில் முதற்செல்லுங்கடா (வின்); the leading ox in treading out grain on a threshing - floor. (w.) 3. உழவுக்காளை; breeding bull

[பொலி + எருது]



பொலிவீசு–தல் *poli-visu-,* செ.குன்றாவி. (v.t.) களத்தில் நெல்லைப் பதர்போக வீசுதல் (இ.வ.); to winnow the heap of grain on a threshing floor.

[பொலி + வீசு–]

பொலிவீடு *polivīḍu,* பெ. (n.) கோயிற் செலவு கட்கு விடப்படும் சிற்றூர்; village given as an endowment for temple expenses. 'பொலி வீடாகப் ..... புத்தூர் என்கிற கிராமத்தை ஸமர்ப்பித்தான்' (கோயிலொ. 125.)

[பொலி + வீடு → விடு]

பொலிவு *polivu-,* பெ. (n.) 1. முகமலர்ச்சி; brightness or bloom of countennance. 2. தோற்றப் பொலிவு; grandness of appearance, as from dress. *'கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்'* (திருவாச. 2, 30) 3. அழகு (அக.நி.); beauty, splendour, lustre. *'பொன்னரைச் சீரையின் பொலிவும் நோக்கினான்'* (கம்பரா. நகர்நீங்கு. 162.) 4. செழிப்பு; prosperity. 5. பருமை (வின்.); largeness 6. மிகுதி (அக.நி.); fullness, abundance, copiousness. *'புண்ணியந்தோன்றி மேன்மேல் வளர்வதன் பொலிவு போல்வார்'* (பெரியபு. கண்ணப்ப. 42) 7. எழுச்சி (பிங்.); height, loftiness. 8. பொன் (அக.நி.); gold. 9. வெறுந்தோற்றம்(யாழ்ப்.); speciousness, plausibility, (j.) 10. புணர்ச்சி (கொ.வ.); covering, among. animals.

[பொல் + பொலி + பொலிவு]

பொலிவு மங்கலம் *polivu - maṅgalam,* பெ. (n.) மன்னவன் மகிழப் பிறந்த ஆண் குழந்தையைப் பலரும் கொண்டாடுதலைக் கூறும் புறத்துறை (பு.வெ.9, 23.) (puṟap.) theme describing the public celebrations on the birth of a prince.

[பொலிவு + மங்கலம்]

பொலிவேடு *polivēḍu,* பெ. (n.) *பொலிவீடு* பார்க்க; see *polivīdu 'கொடியாலத்தைப் பொலிவேட்டுக் கிராமமாகச் சமர்ப்பித்தான்'* (கோயிலொ. 125.)

[பொலிவீடு → பொலிவேடு]

பொலிவொழுங்கு *pōli-oluku,* பெ. (n.) செவ்வொழுங்கு; good order.

[பொலிவு + ஒழுங்கு]

பொலுகு–தல் *polugu-,* செ.கு.வி. (v.i.) 1. அதிகப்படுதல்; to increast, enlarge, as a sore; to spread, as an eruption. 2. நீரொழுகுதல் (சங்.அக.) to flow, drip, as water.

தெ. பொலசு

[பொலி + பொலிகு + பொலுகு]

பொலுபொனல் *polu-polenal,* பெ. (n.) (அ) உதிர்தற்குறிப்பு; onom ecpr signifying falling loosely or quickly. (ஆ) நொறுங்கற்குறிப்பு; crumbling, as of earth.

[பொலுபொலு + எனல்]

பொழி¹–தல் *poḻi,* செ.குன்றாவி. (v.t.) **1.** பெய்தல்; to pour forth, shower, as rain. *'கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்'* (புறநா.203) **2.** மிகச் செலுத்துதல்; to discharge in abundance. *'இளங்கோளரி பொழிந்தான்'* (கம்பரா.நிகும்பலை.118) **3.** தாராளமாய்க் கொடுத்தல் (சுடா.); to give liberally. **4.** தட்டுத் தடங்கலின்றிப் பேசுதல்; to pour forth a torrent of eloquence. *'அவன் அவையில் நின்று பொழிகிறான்'*

[பொய் → பொயி→ பொழி]

பொழி²–தல் *poḻi,* செ.கு.வி. (v.i.) **1.** நிறைந்தொழுகுதல்; to flow, overflow. *'புரப்போன் பாத்திரம் பொழிந்தூண் சுரந்து'* (மணிமே.14,49) **2.** நிறைதல்; to abound, as wealth. *'பொழிமணித் தண்டூண்'* (பெருங். உஞ்சைக். 47,110) **3.** தங்குதல்; to settle, rest, as a cloud on a mounatain. *'தளிமழை பொழியுந் தன்பரங் குன்றில்'* (மதுரைக் 263)

[பொய் → பொயி→ பொழி]

பொழி³ *poḻi,* பெ.(n.) **1.** வயல்வரம்பு (இ.வ.); ridge. **2.** எல்லை (இ.வ.); boundary, limit. **3.** கடலுக்கும் கழிநீர்நிலைக்கும் இடையிலுள்ள சிறுகரை (நாஞ்.); a small strip of land between sea and lagoon. (nāñ.) **4.** கணு; joint. *'பொற்குடம் பொருந்திய பொழியமை மணித்தூண்'* (பெருங்.உஞ்சைக்.48,47.) **5.** உரிக்கப்பட்டது; that which is peeled off, as fifre or rind. *'பெரும்பொழி வெண்ணார்'* (அகநா.83.) தெ.ம. பொலி

[பொலி + பொழி + பொழில் + பொழி]

பொழிகணை *poḻi-kaṇai,* பெ. (n.) தொடர்ந்து எய்கின்ற அம்பு; pour down or shaft. *'கலிப்பிணிக் கறைத்தோல் பொழிகணை உதைப்பு'* (அகநா.24)

[பொழி + கணை]

பொழிப்பு *poḻippu,* பெ.(n.) **1.** *பொழிப்புரை* பார்க்க; see *poḻippurai.* *'பொழிப்பகல நுட்ப நூலெச்சம்'* (நாலடி,319). **2.** நூற்பதிகம்; argument of a poem or treatise. *'சுந்தரர் விளையாடற்குச் சொல்லிய தமிழ்ப்பொழிப் பாம்'* (திருவாலவா.பதிகம்.11.) **3.** குறிப்பு; clue, hint, short direction. *'பொழிப்புக் காட்டினான்'* (w.). **4.** ஊகித்தல்; inference from appearances or circumstances **5.** *பொழிப்புத் தொடை* பார்க்க; see *poḻippu-t-toḍḍai.* *'பொழிப்பு மொரூஉவுஞ் செந்தொடை மரபும்'* (தொல்.பொ.402.)

[புல் → பொல் → பொலி (திரள்) → பொழி → பொழிப்பு]

பொழிப்புத்திரட்டு–தல் *poḻippu-t-tiraṭṭu-,* செ.கு.வி. (v.i.) பிண்டப் பொருள் கூறுதல்; to give the substance, as of a passage. *'கருத்துரைத்துக் கண்ணழித்துப் பொழிப்புத் திரட்டியகலங்கூறல்'* (இறை.கள.1,13.)

[பொழிப்பு + திரட்டு–தல்]

பொழிப்புத்தொடை *poḻippu-t-toḍai,* பெ.(n.) அளவடியுள் முதற்சீர்க்கண்ணும் மூன்றாஞ் சீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது; (இலக்.வி.723.) (pros.) versification in which there is mōṉai, etc. in the first and third feet of a four-foot line.

[பொழிப்பு + தொடை]

பொழிப்புப்பொழிப்பாய்ப் பேசு–தல் *polippu-p-polippāy-p-pēšu-,* செ.குன்றாவி (v.t.) **1.** வசைப்பொருள் உள்ளடங்கப் பேசுதல்; to speak sarcastically. **2.** சுருங்கக் கூறுதல் (வின்.); to give a brief outline

[பொழிப்பு →பொழிப்பாய் + பேசு]

பொழிப்புரை *polippurai,* பெ. (n.) பொருளைத் திரட்டிக் கூறும் உரை. (பிங்.); a commentry which paraphrases a text or summarises, its substance.

[பொழிப்பு + உரை]

பொழில் *polil,* பெ.(n.) **1.** பெருமை; (பிங்.) greatness, largencess. **2.** சோலை. (பிங்.); park, grove, forest. ***'காவதப் பொழிற் கப்புறம்'*** (கம்பரா. வனம்புகு. 32) **3.** பூந்தோட்டம் (திவா.); flower garden; pleasure-gārden. ***'அணிமலர்ப் பூம்பொழிலகவயின்'*** (மணிமே.பதி.38.) **4.** மண்ணுலகம்; earth. ***'பொழில் காவலன்'*** (பு.வெ.6,6.) **5.** உலகம்; world ***'நல்கித்தான் காத்தளிக்கம் பொழிலேழும்'*** (திவ்.திருவாய், 1,4,5.) **6.** நாடு (சூடா.); country, district. **7.** நாட்டின் கூறு; division of a country. ***'நாவலந்தண்பொழில்'*** (பெரும்பாண்.465.)

[புல்→ பொல் → பொலி → பொழி + பொழில்]

பொழிலகம் *polilakam,* பெ. (n.) *பொழில்,* 3.பார்க்க; see *polilakam.* ***'அணிமலர் பூம்பொழிலகவையின்'*** (மணி.பதி.38.)

[பொழில் + அகம்]

பொழிவு *polivu,* பெ. (n.) **1.** பொழிகை; flowing; raining. ***'பொழிவொழியாப் பூஞ்சோலை'*** (பெரியபு. திருநாளைப்.3) **2.** நிறை (வின்.); afflubence. **3.** பெருகுதல் (வின்.); increase, as of revenue. **4.** ஊதியம்; profit, advantage.

[பொழி + பொழிவு]

பொழிற்பாயல் *polirpāyal,* பெ. (n.) சோலையிடத்துப் படுக்கை; bed in park. ***'ஆராக் காம மலர்பொழிற் பாயல்'*** (பரிபா.8.40.)

[பொழில் + பாயல்]

பொழுசாய்–தல் *polu-šāy-,* பெ. (n.) பொழுது சாய்தல்; Sunset.

[பொழுது → பொழு+ சாய்–,தல்]

பொழுதறுதி[1] *poludarudi,* பெ. (n.) கதிரவன் மறையும் வேளை; time of sunset

பொழுதறுதி[2] *poludarudi,* (adv.) முழுநாளும், (கொ.வ.) whole day. ***'பொழுதறுதி வேலை செய்ததேன்'***

[பொழுது + அறுதி]

பொழுதிருக்க *poludirukka,* வி.எ. (adv.) கதிரவன் மறைவதற்கு முன்; just before sunset, while it is still day. ***'பொழுதிருக்க வந்தேன்'***

[பொழுது +இரு → இருக்க]

பொழுதிற்கூடல் *poludir-kūḍal,* பெ. (n.) *பொழுதொடுபுணர்தல்* (சூடா.) பார்க்க; see *polutodupūnartal.*

[பொழுது → பொழுதில் + கூடல்]

பொழுதிறங்கு—தல் *poludirangudal-,* பெ. (n.) கதிரவன் மறையும்நேரம்; sunset.

[பொழுது + இறங்குதல்]

பொழுது *poludu,* பெ. (n.) **1.** காலம்; time. *'இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது'* (குறள்,481.) **2.** தக்கசமயம்; oppurtunity. **3.** வாழ்நாள்; lifetime *'பொழுதளந்தறியும் பொய்யா....காண்கையர்'* (முல்லைப்.55.) **4.** கணம்; moment of time. *'ஒருபொழுதும் வாழ்வ தறியார்'* (குறள்,337.) **5.** சிறுபொழுது பெரும்பொழுதுகள்; (சிலப்.பதிக.உரை.)division of time, of two kinds; viz., ciru-poludu, peru-m-polutu. **6.** கதிரவன் (பிங்.); sun *'பொழுது போய்ப் பட்டபின்றை'* (சீவக.1747.)

[போது + போழ்து + பொழுது]

பொழுதுகட்டுதல் *poludu-kattudal,* பெ. (n.) மழைக்குறியாக முகிலால் கதிரவன் மறைப்புண்ணுகை; cloudy sky, as a sign of rain.

[பொழுது + கட்டுதல்]

பொழுதுகண்டிரங்கல் *poludu-kandirangal,* பெ. (n.) பிரிவாற்றாத தலைவி மாலைப் பொழுதுகண்டு வருந்துகை (குறள்,அதி,123.) (akap.) theme describing the pining of a maiden at eventide for her absent lover.

[பொழுது + கண்டு + இரங்கல்]

பொழுது காணுதல் *poludu-kānudal,* பெ. (n.) **1.** *பொழுது புறப்படுதல்* (வின்.); பார்க்க; (w.) see *poludu-purappadudal.* **2.** சாலம் போதியதாகை; sufficiency of time.

[பொழுது + காணுதல்]

பொழுதுசாய்தல் *poludu-šāydal,* பெ. (n.) ***பொழுதிறங்குதல்.*** பார்க்க, see *poludu-irangudal*

[பொழுது + சாய்தல்]

பொழுதுசோறுசாப்பிடு—தல் *poludu-šōru-šāppidu-,* செ.கு.வி. (v.i.) கதிரவன் மறையுமுன் உண்ணுதல்; to take food before sunset. *'ஞாயிற்றுக்கிழமையாதலால் பொழுது சோறு சாப்பிட்டேன்'* (நாஞ்.)

[பொழுது + சோறு + சாப்பிடு—]

பொழுதுதயம் *polududayam,* பெ. (n.) கதிரவன் தோற்றம்; rising of the sun.

[பொழுது + உதயம்]

Skt. udaya→த. உதய

பொழுதுதாழ்த்து—தல் *poludu-tālttu,* செ.கு.வி. (v.i.) **1.** காலம் நீட்டித்தல்; to be late, behind time. **2.** காலம் போக்குதல் (யாழ்ப்.); to while away time.

[பொழுது + தாழ்த்து—]

பொழுதுதிரும்பல் *poludu-tirumbal,* பெ. (n.) கதிரவன் உச்சியினின்று சாய்கை; the sun's passing beyond the meridian

[பொழுது + திரும்பல்]

பொழுதுதிரும்பி *poludu-tirumbi,* பெ. (n.) பொழுதுவணங்கி; sun flower plant.

[பொழுது + திரும்பி]

பொழுதுபடுதல் *poludu-padutal,* பெ. (n.) *பொழுதிறங்குதல்* பார்க்க; see *poludirangudal.*

[பொழுது + படுதல்]

பொழுதுபுகுதல் *poludu-pugudal,* பெ. (n.) *பொழுதிறங்குதல்* பார்க்க; see *poludirangudal.*

[பொழுது + புகுதல்]

பொழுதுபுறப்படுதெல் *polutu-purappadutal,* பெ. (n.) கதிரவன் தோற்றுதல்; sunrise.

[பொழுது + புறப்படு]

பொழுதுபூதல் *poludu-pūdal,* பெ. (n.) பொழுதுபுகுதல்; Sunset.

[பொழுது + புகுதல் → பூதல்]

பொழுதுபோக்கு–தல் *poludu-pōkku,* செ.கு.வி. (v.i.) **1.** காலங்கழித்தல்; to pass away time. spend time in recreation. **2.** சோம்பிக் கழித்தல் (யாழ்ப்.); to idle, while away.

[பொழுது + போக்கு–,தல்]

பொழுதுபோக்கு² *polutu-pōkku,* பெ. (n.) **1.** காலங் கழிக்கை; spending of time. *'நிற்பரவுபூசையினும் பொழுதுபோக்கெனக் கருள் புரிவாய்'* (சிவப்.பிரபந். சோண.29.). **2.** இளைப்பாறும் பொருட்டு விளையாடுகை; recreation.

[பொழுது + போக்கு]

பொழுதுபோக்குப்பேச்சு *pōlutu-pōkku-p-patchu,* பெ. (n.) சிற்றுரையாடல்; trival talk.

[பொழுது + போக்கு + பேச்சு]

பொழுதுபோதல் *poludu-pōdal,* பெ. (n.) **1.** *பொழுதிறங்குதல்* பார்க்க; see poludirangudal. **2.** காலங்கழிக்கை; whiling away time.

[பொழுது + போதல்]

பொழுதுமறை poludu-marai, பெ. (n.) மாலை; evening. *'புட்டகந்தன்னைப் பொழுதுமறை புக்கும்'* (பெருங்.2:9:26.)

[பொழுது + மறை]

பொழுதுவணங்கி poludu-vanangi, பெ. (n.) *சூரியகாந்தி* பார்க்க; see suriyakānti sunflower.

[பொழுது + வணங்கி]

பொழுதுவிடிதல் poludu-vididal, பெ. (n.) *பொழுது விடியல்* பார்க்க; see poludu-viddyal

[பொழுது + விடிதல்]

பொழுதுவிடியல் poludu-vidiyal, பெ. (n.) விடியற்; break of day,

[பொழுது + விடியல்]



பொழுதுவிடு–தல் polutu-vidu-, செ.கு.வி. (v.i.) *பொழுது போக்கு–,* (யாழ்.அக.) பார்க்க; see *polutu-pōkku.*

[பொழுது + விடுதல்]

பொழுதூர்தல் poḻudūrdal, பெ. (n.) சாயுங்காலமாகை (இ.வ.); becoming dusk.

[பொழுது + ஊர்தல்]

பொழுதேறுதல் *poḻudērudal,* பெ. (n.) காலங்கழிகை; elapsing of time.

[பொழுது + ஏறுதல்]

பொழுதொடுபுணர்தல் *poḻutoḍu-puṇardal,* பெ. (n.) வணிகர் குணங்கள் எட்டனுள் செயல்களைக் காலத்திற் கேற்பக்கொண்டு நடத்துகை. (பிங்.); adapting oneself to the times, one of eight virtues of the merchant-caste.

[பொழுது → பொழுதொடு → புணர்தல்]

பொழுதோடு *poḻudōḍu,* (adv.) **1.** மறையுமுன்; just before sunset. **2.** தகுதியான காலத்தில்; in time.

[பொழுது → பொழுதோடு]

பொள்[1] *poḷ,* பெ. (n.) உட்டொளை (பிங்.); hole.

[புல் → பொல் → பொள்]

பொள்[2] *poḷ,* பெ. (n.) *பொள்ளெனல்* (திவா.) பார்க்க; see *poḷḷeṉal.*

[பொள் → பொள்ளெனல்]

பொள்ளல் *poḷḷal,* பெ. (n.) **1.** துளைக்கை; boring a hole. **2.** பொளிகை; chiselling, as a stone. **3.** துளை; hole, rent, fissure, puncture. '*பொள்ளலாக்கை யகத்தில்*' (தேவா.262,5.) **4.** மரப்பொந்து. hollow in a tree. (பிங்.); **5.**அம்மைவடு; pocks, in small - pox. **6.** அப்பவகை. pastry. (பிங்.); **7.** கொப்புளம்; blister, swelling **8.** குற்றம்; failure, fault, defect, as a puncture '*காரியம் பொள்ளலாய்ப் போயிற்று*'

[புல் → பொல் → பொள் → பொள்ளல்]

பொள்ளாமணி *poḷḷāmaṇi,* பெ. (n.) *பொல்லா மணி.* பார்க்க; see *pollāmaṇi*

[பொள் + ஆ + மணி]

'ஆ'–எ.ம.இ.

பொள்ளு[1]–தல் *poḷḷu,* செ.குன்றாவி. (v.t.) **1.** துளைத்தல்; to bore make a hole. **2.** பொளிதல்(வின்.); to hew, chisel

பொள்ளு[2]–தல் *poḷḷu,*செ.கு.வி. (v.i) **1.** கொப்புளம் உண்டாதல்; to blister, to sell. '*எண்ணெய்ச்சுடர்,விழுந்து கை பொள்ளி விட்டது*' **2.** கிழிதல் (வின்.); to be rent or torn,

[பொள் → பொள்ளு → பொள்ளுதல்]

பொள்ளெனல் *poḷ-ḷ-eṉal,* பெ. (n.) விரைவுக்குறிப்பு; onom expr.signifying suddenness. '*தன்னகல மெல்லாம் பொள்ளென வியர்த்து*' (சீவக.256.)

[பொள் + எனல்]

பொள்ளை *poḷḷai,* பெ. (n.) தொளை; hole. '*பொள்ளைக்கரத்த போதகத்தின்*' (திவ்.பெரியதி.5,1,2.)

[பொள் → பொள்ளை]

பொளி¹–தல் *poḷi-,* செ.குன்றாவி. (v.t.) 1. உளியாற் கொத்துதல்; to chisel, pick. '*கல்பொளிந்தன்ன*' (மதுரைக்.482.) 2. பிளத்தல்; to split, as a stone. '*பொளிந்து திண்சிலை*' (விநாயகபு.22,43.) 3. இடித்தல்; to beat so as to break; to dig. '*கற்றரையைப் பொளிந்து பண்ணின கிடங்கினையுடைய*' (மதுரைக்.730, உரை) 4. துளைசெய்தல் (வின்.); to make holes, to open, puncture, as a blister.

பொளி²–தல் *poḷi-,*–செ.கு.வி. (v.i.) 1. ஓட்டையாதல்; to be perforated punctured. '*கண்டவிடமெங்கும் பொளிந்து*' (ஈடு, 4,1,1.) 2. பள்ளாமதல் (இ.வ.); to become dented

[பொள் → பொளி → பொளிதல்]

பொளி³–த்தல் *poḷi-,* செ.குன்றா.வி. (v.t.) 1. துளைசெய்தல்; to bore, perforate, puncture. '*மாடத்தாங்கட் சாளரம் பொளித்த கால்போகுபெருவழி*' (மணிமே.4,52.) 2. கிழித்தல்; to tear into strips, as fibre. '*களிறு..... ஆச்சாவைப் பிளந்து அந்நாரைப் பொளித்து*' (தொல்.பொ.231,உரை).

[பொள் → பொளி → பொளி-]

பொளி⁴ *poḷi,* பெ. (n.) 1. உளியாலிட்ட துளை; hole made with a chisel; mortise. 2. மண்வெட்டியின் வெட்டு (யாழ்.அக.); depression left in the earth by a hoe or shovel. 3. பாய்முடைவதற்கு வகிர்ந்து வைக்கும் ஒலை; strip of ola, prepared for braiding into mats. '*சிறுபொளிப்பாய்*' (nāñ). 4. *பொளிமண்* பார்க்க; see *poḷimaṉ*

[பொள் → பொளி]

பொளி⁵ *poḷi,* பெ. (n.) *பொழி* பார்க்க; see *poḻi* '*பொளியை வெட்டி இரண்டு தளையும் ஒன்றாக்கினான்*'

[பொலி → பொழில் → பொழி → பொளி]

பொளிமண் *poḷi-maṉ,* பெ. (n.) மண்வெட்டியாற் புல்லோடு சேர்த்தெடுத்த வரப்புமண் (வின்.); hoe-full or shorel-full of earth, piece of turf.

[பொளி + மண்]

பொளிரேகை *poḷi-rēgai,* பெ. (n.) பார்க்க, *பொளிவாய்* பார்க்க; see *poḷivāy.*

[பொளி → SKṭ. rekhā. த.பொளிவு]

பொளிவாய் *poḷi-vāy,* பெ. (n.) உளிமுதலிய கருவியால் வெட்டப்பட்டகாடி(இ.வ.); groove; hollow cut by a tool; mortise.

[பொளி + வாய்]

பொளிவு *poḷivu,* பெ. (n.) பொளிகை (வின்.); picking, as a millstone; chiselling, hewing.

[பொளி → பொளிவு]

பொற்கசை *poṟ-kasai,* பெ. (n.) பொன்கம்பி. (யாழ்.அக.); gold wire.

[பொள் + கசை]

பொற்கட்டி *poṟ-kaṭṭi,* பெ. (n.) தங்கக்கட்டி; nugget, ingot of gold. '*காய்ச்சச் சுடர் விடும் பொற்கட்டிபோல்*' (தாயு.பராபர.354.)

[பொன் + கட்டி]

பொற்கடுக்காய் *por-kadukkāy,* **பெ.** (n.) பொன்னிறமான மஞ்சள் கடுக்காய்; yellow gall nut.

[பொன் + கடுக்காய்]

பொற்கண் *por-kan,* **பெ.** (n.) பொன்னால் செய்யப்பட்ட கண்; golden eye.

நேர்த்திக் கடனுக்காகத் தெய்வத் திருமேணிக்கு அணிவிக்கச் செய்யப்படும் கண்ணடக்கம்.

[பொன் + கண்]

பொற்கண்டை *por-kanndai,* **பெ.** (n.) *பொற்கெண்டை* (யாழ்.அக.) பார்க்க; see *por-kandai*

[பொன் + கெண்டை → கண்டை]

பொற்கண்ணி *por-kanni,* **பெ.** (n.) பொன்னாங்கண்ணி; sessile plant-Illecebrm sessile.

பொற்கணக்கு *por-kanakku,* **பெ.** (n.) பொன்னிறையளவு(வின்.); table of weights for precious metals; troy weight

[பொன் + கணக்கு]

பொற்கம்பி *por-kambi,* **பெ.** (n.) தங்கக் கம்பி; gold wire. "*பொற் கம்பியினை யொத்த.... நரம்பினது*" (சிறுபாண். 34, உரை.)

[பொன் + கம்பி]

பொற்கரை *por-karai,* **பெ.** (n.) பொன்னிழை; gold lace."போர்த்திய பொற்கரைவெண் பட்டு" (த.வ.)

[பொன் + கரை]

பொற்கலசம் *por-kalaśam,* **பெ.** (n.) **1.** கோபுரம் முதலியவற்றின் மேல் வைக்கும் பொன்னாலாகிய கும்பம்; pot-shaped finial of gold, as an ornament on a tower. **2.** பொன்ஏனம் (கிறித்.); golden vial, golden vessel.

[பொன் + கலசம்]

பொற்கலம் *por-kalam,* **பெ.** (n.) **1.** பொன் ஏனம்; golden vessel "*பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்*" (நாலடி, 206) **2.** பொன்னாலியன்ற அணிகலன்; Golden ornament.

[பொன் + கலம்]

பொற்கலன் *porkalan,* **பெ.** (n.) *பொற்கலம்,* பார்க்க see *por-kalam.* "*பொன்னிற் பிறிதாகிய பொற்கலனே*" (கம்பரா. இரணிய. 112)

[பொன் + கலன்]

பொற்கலனிருக்கை *por-kalan-irukkai,* **பெ.** (n.) *பொற்பண்டாரம்* (பிங்.) பார்க்க; see *porpandāram.*

[பொன் + கலன் + இருக்கை]

பொற்கலியாணம் *por-kaliyānam,* **பெ.** (n.) மணநாள் தொடங்கி ஐம்பதாண்டு முடிந்தவன்று கணவனும் மனைவியும் கொண்டாடும் சடங்கு (கிறித்.); Golden jubilee of a wedding.

[பொன் + கலியாணம்]

பொற்காசுகம் *por-kāśugam,* **பெ.** (n.) கொள்ளுக்கொடி; horse-gram creeper.

[பொன் + காசுகம்]

பொற்காசு *por̤-kāśu,* பெ. (n.) **1.** பொன்னால் செய்யப்பட்ட பணம் (திவா.); gold Coin. **2.** *கொள்* (மலை.) பார்க்க; see *kol̤* Horse-gram.

[பொன் + காசு]

பொற்காப்பு *por̤-kāppu,* பெ. (n.) பொன்னால் செய்யப்பட்ட வளை; gold bangle, braselet. '*பொற்காப்புக்கு ஆசைப்பட்டுப் புலியின் கையில் அகப்பட்டது போல்*' (பழ.)

[பொன் + காப்பு]

பொற்காரை *por̤-kārai,* பெ. (n.) பொன்னாலியன்ற கழுத்தணிவகை (சங்.அக.); a gold necklet.

[பொன் + காரை]

பொற்கிடுகு *por̤-kiḍugu,* பெ. (n.) பொன்னாலாகிய மேற்றட்டி; a roof which made by gold. 'பொற்கிடுகு செறிந்த போர்வை முற்றி' (பெருங்.1:34:135)

[பொன் + கிடுகு]

பொற்கிழி *por̤-kil̤i,* பெ. (n.) சீலையின் முடிந்த தங்கக் காசுப்பொதி; gold or gold coins tied up in a piece of cloth. "*கையுறை வேலானீந்த பொற்கிழி*" (திருவிளை தருமிக். 81.)

[பொன் + கிழி]

பொற்குறு சுண்ணம் *por̤kuru-sunnam,* பெ. (n.) பொற்பொடி; powder of gold '*முத்து மணியும் பொற்குறு சுண்ணமும்*' (பெருங்.1:42:92)

பொற்கூடம் *por̤-kūdam,* பெ. (n.) ஏமகூடம்; a mountain to the north of the Himālayas. '*பொற்கூடஞ் சென்றுறுதி*' (கம்பரா. மருத்து.24.)

[பொன் + கூடம்]

பொற்கெண்டை *por̤-kendai,* பெ. (n.) *பொற்சரிகை.* (யாழ்.அக.) பார்க்க; see *por̤-carigai*

[பொன் + கெண்டை]

பொற்கெனல்[1] *por̤-kenal,* பெ. (n.) பொன்னிறமுடையதாதற் குறிப்பு; expr. of being or becoming golden in colour. '*பன்மலர் பொற்கெனும் பரிசு*' (தணிகைப்பு. நகர. 37.)

[பொன் → பொற்கு + எனல்]

பொற்கெனல்[2] *por̤-kenal,* பெ. (n.) விரைவுக்குறிப்பு; onom expr of suddenness. '*பொற்கென் றெழுந்து முத்தந்தந்து*' (கனம் கிருஷ்ணையர்.கீர்த்.17)

[பொருக்கெனல்→ பொற்கெனல்]

பொற்கைப் பாண்டியன் *por̤-kai-p-paṇḍiyan̤,* பெ. (n.) இரவில் பார்ப்பனி யொருத்தியின் வீட்டுக் கதவைத் தட்டிப் போந்த குற்றத்திற்காகத் தன் கை குறைத்து, அக்கைக்குப் பகரமாகப் பொற்கை பூண்ட பாண்டிய வேந்தன் (தொல். பொ. 89, இளம்பூ.) a pandiyan̤, who is said to have punished himself for knocking at the door of a Brahmin woman's house during his nightly rounds by cutting off his hand and obtained a golden hand instead.

[பொன் + கை + பாண்டியன்]

பொற்கொல்லன் *por-kollan,* பெ. (n.) பொன் செய் கொல்லன் பார்க்க; see *pon-šey-kollan.* '*பொற்கொல்லராயிர வரைக் கொன்று*' (சிலப்.பதி. உரைபெறு கட்டுரை, 1)

[பொன் + கொல்லன்]

பொற்கோபிதம் *por-kopbidam,* பெ. (n.) மஞ்சள் வெற்றிலை; yellow betel leaf tree bearing yellow fragrant flowers.

பொற்கோயில் *por-kōil,* பெ. (n.) பொன்னால் வேயப்பட்டகோயில். (அமிரிதசரசு கோயில்); temple which has golden roof.

[பொன் + கோயில்]

பொற்கோள் *por-kōl,* பெ. (n.) வியாழக்கோள்; the planet jupiter '*எரிபசும் பொற்கோள் வந்து*' (திருவிளை. உக்கிரதிருவவ.11.)

[பொன் + கோள்]

பொற்சபை *por-cabai,* பெ. (n.) தில்லையிலுள்ள பொன்னம்பலம். (சங்.அக.) The Golden Hall at chidambaram.

[பொன் + →சுவை→ சபை]

பொற்சரக்கு *por-carakku,* பெ. (n.) உயர்ந்த பண்டம்; goods of the highest quality, valuable as gold.

[பொன் + சரக்கு]

பொற்சரடு *por-caradu,* பெ. (n.) பொற்கம்பியாற் பின்னிய கழுத்தணி வகை (இ.வ.); necklace made by plaiting gold threads.

[பொன் + சரடு]

பொற்சரிகை *por-carigai,* பெ. (n.) ஆடைக்கரை முதலியவற்றிற் சேர்க்கப்படும் பொன்னாலமைந்த இழை; Gold thread, gold fringe "*செம்பொற்சரிகை வேலையிட்டு*" (தனிப்பா.1,260)

[பொன் + U.zari. த. சரிகை]

பொற்சாமம் *por-cāmam,* பெ. (n.) கொன்றை; a cassia.

பொற்சாயல் *porcāyal,* பெ. (n.) உடம்பின் பொன்மேனி; glittering body.

[பொன் + சாயல்]

பொற்சிலை *por-cilai,* பெ. (n.) 1. பொன்னாலான படிமை; golden image. 2. பொன்மயமான மலை; mt. Mēru, as golden. (மகாமேரு)

[பொன் + சிலை]

பொற்சின்னம் *por-cinnam,* பெ. (n.) போர்க்குச் செல்லும் வீரர் வாயிலிட்டுக் கொள்ளும் பொற்றுண்டு. (சீவக.2303, உரை.) small piece of gold put by warriors in their mouths when going to war.

[பொன் + சின்னம்]

பொற்சீந்தில் *por-cintil,* பெ. (n.) 1. நற்சீந்தில்(M.M.); a superior kind of gulancha. 2. சீந்தில்வகை (L.); woolly heart-leaved moon-seed, m.d.

[பொன் + சீந்தில்]

பொற்சுண்ணம் *por-cuṇṇam,* பெ. (n.) 1. விழாக்களில் மக்கள் உடலின்மீது தூவப்படும் நறுமணப்பொடி (திருவாச.9.1.); perfumed powder strewn upon persons on great occasions. 2. உடம்பில் அப்பிக் கொள்ளுதற்கு உரிய பொற்றூள்; gold dust used in smearing the body for adornment. *'பைம் பொற்சுண்ண மிலங்கமெய்ம் முழுதுமப்பி'* (சீவக. 2189.)

[பொன் + சுண்ணம்]

பொற்சூட்டு *por-cūṭṭu,* பெ. (n.) நெற்றிப்பட்டம்; a golden plate worn on the forehead. *'செம்பொற் சூட்டொடு கண்ணி..... அருளி'* (சீவக. 2569.)

[பொன் + சூட்டு]

பொற்ப[1] *poṟpa,* வி.எ. (adv.) பொலிவுபெற, beautifully, elegantly. *'திருமணி.... சென்னி பொற்ப'* (திருமுரு.85)

பொற்ப[2] *poṟpa,* இடை. (part.) ஓர் உவமச் சொல்; a term of comparison. *'மதியம் பொற்ப மலர்த்த வாண்முகம்'* (தொல். பொ.286, உரை.)

பொற்படி *por-paḍi,* பெ. (n.) பொன்னுலகம்; svarga, as the golden world. *'நற்றிறம் புரிந்தோர் பொற்படி யெய்தலும்'* (சிலப்.30,136.).

[பொன் + படி]

பொற்படை *por-paḍai,* பெ. (n.) குதிரை, யானை முதலியவற்றின் மேலீடு; golden trappings, as of a horse or elephant. *'வேழமிரு நூறும்.... புனைசெம் பொற்படையே யணிந்து'* (சீவக.2174.)

[பொன் + படை]

பொற்பண்டாரம் *por-paṇḍāram,* பெ. (n.) பொன்னும் பொற்கலங்களும் வைக்கும் கருவூலம், (பிங்.); treasury of jewels and gold.

[பொன் + பண்டாரம்]

பொற்பணிதி *por-paṇidi,* பெ. (n.) பொன்னணி(வின்.); jewel of gold.

[பொன் + பணி → பணிதி]

'தி' சொல்லாக்க ஈறு

பொற்பலகை *por-palagai,* பெ. (n.) வழிபாட்டுக்குரிய தெய்வ உருவங்களை எடுத்துச் செல்லுதற்குரிய ஒப்பமைப்பலகை; ornamental plank for carrying idols. *'பொற்பலகை யேறிவந்து பூங்கோயி லெய்தினான்'* (சிவக். பிரபந். தஞ்சைப் பெருவுடையாருலா.312.)

[பொன் + பலகை]

பொற்பாதம் *por-pādam,* பெ. (n.) திருவடி; gold like foot of a great person, a term used in reverence *'தரணி நிவந்தளிப்ப நீட்டிய பொற்பாதம்'* (திவ்.இயற்.2,78)

[பொன் +பாதம்]

பொற்பாவை *por-pāvai,* பெ. (n.) 1. பொன்னாலான படிமை; golden puppet. 2. அழகிய பெண்; beautiful woman. *'நன்மலர் மேற் பொற்பாவாய்'* (நாலடி,266.)

[பொன் + பாவை]

பொற்பாளம் *por-pāḷam,* பெ. (n.) பெரிய பொற்கட்டி(வின்.); bar of gold, bullion.

[பொன் + பாளம்]

பொற்பாளை *poṟ-pāḷai,* பெ. (n.) நெல்வகை (குருகூர்ப்.58); a kind of paddy.

பொற்பி-த்தல் *poṟpi-,* செ.குன்றாவி. (v.t.) ஒப்பனை செய்தல் (அலங்கரித்தல்); to beautify, adorn. *'சுருளோதி சிகழிகையாகப் பொற்பித்தார்'* (பிரமோத். 9,19.)

[பொன் + பு = பொற்பு → பொற்பி]

'பு' சொல்லாக்க ஈறு

பொற்பிதிர் poṟ-pidir, பெ. (n.) பசலை; beauty spots on a woman's person. *'பொற்பிதி ரணிந்து வீங்கும் புணர்முலை'* (கூர்மபு அநுக்.6.)

[பொன் + பிதிர்]

பொற்பிரகாசம் *poṟ-pirakasam,* பெ. (n.) *பொன்மயம்,* (யாழ்.அக.) பார்க்க; see *ponmayam*

[பொன் + Skt. pra-Kāsa. *த.பிரகாசம்]*

பொற்பின்னல் *poṟ-pinnal,* பெ. (n.) பொற்கம்பியாற் பின்னிய அரைஞாண்; waist-band woven of gold threads. *'திருவரையில் சாத்தின பொற்பின்னலும்'* (திவ். பெரியாழ். 1,7,3,வ்யா. பக்.142)

[பொன் + பின்னல்]

பொற்பு *poṟpu,* பெ. (n.) 1. அழகு; (பிங்.) beauty, gracefulness elegance. *'பொற்புடை யரக்கி* (கம்பரா.சூர்ப்ப.68.) 2. ஒப்பனை (பிங்.); decoration; embellishment 3. பொலிவு; magnificence, excellence *'மகடூஉ மடன்மேற் பொற்புடை நெறிமை யின்மையான'* (தொல்.பொ.35.) 4. மிகுதி. (திவா.); abundance, plenty. *'புண்ணின் பொற்பை'* (ஞானா.43,8.) 5. தன்மை; nature, quality, *'அகமலரின் வைத்துப் போற்றும் பொற்பினார்'* (பெரியபு.பெருமிழ.3.)

[பொன் + பு = பொற்பு]

'பு' சொல்லாக்க ஈறு

பொற்புவி *poṟ-puvi,* பெ. (n.) *பொற்படி* பார்க்க; see *poṟpaḍi. 'சரபங்கனினிதேறப் பொற்புவி கொடுத்த புகழ் போற்றிடுதும்'* (சேதுபு. இராமனருச்.63.)

[பொன் + Skt. bhuvi. *த.புவி]*

பொற்புறுத்து-தல் *poṟ-puruttu-,* செ.குன்றா.வி. (v.t.) ஒப்பனைசெய்தல் (பிங்.) to adorn.

[பொற்பு + உறுத்து-]

பொற்பூ[1] *poṟ-pū,* பெ. (n.) 1. *தங்கப்பூ* பார்க்க; see *tanga-p-pū* golden flower. 2. பாணர்க்கு அரசர் சூடவளிக்கும் தாமரையுருவான பொன்னணி வகை. (பொருந.159,கீழ்க்குறிப்பு.); grnamental lotus flower, made of gold and presented to a bard by a king.

[பொன் + பூ]

பொற்பூ[1] *poṟ-pū,* பெ. (n.) பழைய வரிவகை (M.E.R. 217 of 1927-8) an ancient tax

பொற்பூச்சு *poṟ-pūccu,* பெ. (n.) பொற்குழம்பு பூசுகை(வின்.); gilding. 2. பொன்னின் அரக்கு; gold foil.

[பொன் + பூச்சு]

பொற்பூண் *por-pōn,* பெ. (n.) பொன்னால் செய்யப்பட்ட அணி; golden ornament, jewel.

[பொன் + பூண்]

பொற்பூணூல் *por-pūṇūl,* பெ. (n.) பொன்னாலான பூணூல் (இ.வ.) ; sacred thread of gold, used as an ornament.

[பொன் + பூணூல்]

பொற்பொது *por-podu,* பெ. (n.) *பொற்சபை,* பார்க்க; see *porcabai* '*பொருவிடைப்பாகர் மன்னும்பொற்பொதுவதனுட் புக்கார்*' (பெரியபு.இயற்பகை. 34.).

[பொன் + பொது]

பொற்ற *porra,* பெ. (n.) 1. பொன்னாலாகிய; golden. '*பொற்ற மாளிகை*' (விநாயகபு.75,126.) 2. சிறந்த; good, excelent, fine. '*பொற்ற சுண்ணமெனப் புகழ்ந்தார்*' (சீவக.885.)

[பொல் → பொற்ற]

பொற்றகடு *porragaḍu,* பெ. (n.) 1. *பொற்சின்னம்* பார்க்க; see *porcinnam* '*பொற்றகடு தம்வாயுளிட்டு*' (சீவக.778,உரை.) 2. பொன்னின் மெருகுத்தாள் (இ.வ.); gold foil.

[பொன் + தகடு]

பொற்றட்டம் *porrattam,* பெ. (n.) பொன்னாலாகிய தட்டுப் போன்ற பூ; golden broad petalled. '*வண்பொற் றட்டமலர்ந்த வாதலின்*'

[பொன் + தட்டு → தட்டம்]

பொற்றட்டான் *porrattāṉ,* பெ. (n.) பொன்செய்கொல்லன்(வின்.); goldsmith.

மறுவ. பொற்கொல்லன்

[பொன் + தட்டான்]

பொற்றலை *porralai,* பெ. (n.) *பொற்றலைக் கையாந்தகரை* (பதார்த்த.) பார்க்க; see *porrlai-k-kaiyāndagarai.*

[பொன் + தலை]

பொற்றலைக்கரிப்பான் பெ. (n.) *porralai-k-karippāṉ, பொற்றலைக்கையாந்தகரை.* (சங்.அக.) பார்க்க; see *porrlai-k-kaiyāndagarai.*

[பொற் + தலை + கரிப்பான்]

பொற்றலைக்கையாந்தகரை *porralaikkay āntakarai,* பெ. (n.) மருந்துப்பூடு வகை; ceylon verbesina, m.cl. (பதார்த்த.361.)

[பொற்றலை + கையாந்தகரை]

பொற்றாது *porrādu,* பெ. (n.) பொற்றலைக் *கையாந்தகரை* (மலை.) பார்க்க; see *porralai-k-kayantakarai*

[பொன் + தாது]

பொற்றாப்பு *porrāppu,* பெ. (n.) மயிலாப்பூர்த் திருக்கோயிலில் நடைபெறும் ஊஞ்சல் திருவிழா. a festival in the šiva shrine at Mylapore '*கபாலீச்சரமமர்ந்தான் பொற்றாப்புக் காணாதே போதியோ*' (தேவா.1119,8.).

[பொன் + தாம்பு]

பொற்றாமரை *porrāmarai,* பெ. (n.) 1. பொன்வண்ணமுளரி; golden lotus, as of svarge. '*பொற்றாமரை யடியே போற்றும் பொருள் கேளாய்*' (திவ். திருப்பா. 29) 2. மதுரைக் கோயில் முதலிய திருவிடங்களில் உள்ள பொய்கை; sacred tank, as in the temple at Maduri. '*தலைச் சதி பொற்றாமரை*'

(தேவா. 435, 10) **3.** பொற்பூ பார்க்க; see por-pū *'பைம் பொற்றாமரை பாணர்ச்சூட்டி'* (பதிற்றுப். 48)

[பொன் + தாமரை]

பொற்றாரை *porrārai,* பெ. (n.) *பெற்றோரை* (சீவக. 2132, பி–ம்) பார்க்க; see *porrōrai.*

[பொன் + தாரை]

பொற்றாலம் *porrālam,* பெ. (n.) *பொற்படி* பார்க்க; see *por-paḍi. 'பொற்றாலத்தமரர்'* (சேதுபு. திருநாட். 14)

[பொன் + தாலம்]

பொற்றாலி *porrāli,* பெ. (n.) மங்கல அணி; marriage badge of gold.

[பொன் + தாலி]



பொற்றாவல்லி *porrāvalli,* பெ. (n.) *சீந்தில்* (சங்.அக.) பார்க்க; see *cindil*

பொற்றி *porri,* பெ. (n.) *எருமைப்பாற் சொற்றி* (மூ.அ) பார்க்க; see *erumaippār-corri,* a species of the plant rucllia.

பொற்றேகராசன் *porrēga-rāšan,* பெ. (n.) பொற்றலைக் கையாந்தகரை (தைலவ. தைல.) பார்க்க; see porralai-k-kaiyāntakarai

[பொன் + Skt. dōha. த.இராசன்]

பெற்றேரை *porrērai,* பெ. (n.) பொற்றோரை (சீவக. 2132, பி. ம்) பார்க்க; see porrorai

[பொன் + தோரை → தேரை]

பொற்றை *porrai,* பெ. (n.) **1.** சிறுமலை; hillock, mound. *'பொற்றைமால் வரைகளோ வென் புயநெடும் பொருப்பு மம்மா'* (கம்பரா. இலங்கைகாண். 22) **2.** கற்பாறை; (திவ். திருச்சந். 52, வ்யா) rock. **3.** மலை; mountain. *'பொற்றையுற் றெடுத்தான்'* (தேவா. 1218, 10) **4.** சிறுதூறு (அக.நி); bush, low jungle. (அரு.நி) **5.** காடு;(திவ். திருச்சந்த 52, வியா) forest. **6.** கரிகாடு; burnt jungle.

[பொறை → பொற்றை]

பொற்றொட்டி *porroṭṭi,* பெ. (n.) கொடிய நஞ்சு வகை (வின்.); arsenic

பொற்றொடி *porroḍi,* பெ. (n.) **1.** பொன்னாலாகிய தோள்வளை; golden bracelet. *'பொற்றொடித் தோட் பையரவல்குன் மடந்தை நல்லீர்'* (திருவாச. 9, 12) **2.** பெண் (பொன் தோள் வளை அணிந்தவள்); woman, as wearing golden bracelets. *'பிரியல மென்றுரைத்த பொற்றொடியும்'* (நாலடி. 376)

[பொன் + தொடி]

பொற்றோரை *poṟṟōrai,* பெ. (n.) இடையிலே அணியும் பொன்வடம்; thread-like waist ornament, made of gold. *'அல்குற் பொற்றோரை மின்ன'* (சீவக. 2132)

[பொன் + தோரை]



பொறாமை *poṟāmai,* பெ. (n.) 1. அழுக்காறு; envy, grudge, jealously. *'இப் பொறாமையும் பொறைக்கு மறுதலையாகலின்'* (குறள், 17, ஆம்அதி. முன்னுரை) 2. பொறுமையின்மை; impatience. *'பொறாமையுஞ் சிறிது தோன்ற'* (கம்பரா. கிங்கரர்.2) 3. பொருமல்; sobbing.

ம. பொரய்ம.

[பொறு + ஆ(எ.ம.இ.)–மை பண். பெ.ஈறு]

பொறி¹–தல் *poṟi,* செ.கு.வி. (v.i.) 1. பறிதல் (யாழ்ப்.); to snap, spring, as a trap, etc. 2. தீச்சுடர் சிதறுதல்;to throw out sparks. *'பொறிந்தெழு கண்ணினன்'* (கம்பரா. கும்ப. 254) 3. சறுக்குதல் (யாழ்.அக); to slip, slide, as the foot. 4. சரிதல் (வின்.); to be sloping or aslant 5. விழப்புகுதல் (வின்.); to be ready to fall on one, as an occusation. 6. கலைதல் (வின்.); to fail

பொறி²–த்தல் *poṟi,* செ.குன்றா.வி. (v.t.) 1. முத்திரையிடுதல்; to impress, stamp. *'கெண்டையொடு பொறித்த குடுமியவாக'* (புறநா. 58) 2. எழுதுதல் (பிங்); to write. *'தொய்யில் பொறித்த வனமுலை'* (கலித். 93) 3. சித்திரித்தல்; to sketch, paint. *'பொறித்த வாழையின் கனியினை'* (பிரபுலிங். வசவண். 19) 4. தெறித்தல்; to bespatter. "முலைத்தடஞ் சேதகம் பொறிப்ப." (சீவக. 46) 5. கலைத்தல் (வின்.); frustrate.

[பொளி → பொறி]

பொறித்தல் *poṟi,*செ.கு.வி. (v.i.) 1. *பொறி¹* – பார்க்க. see *poṟi¹* 2. *பொறி!2* பார்க்க. *'நெருப்பிடை யிடை பொறித்தெழ'* (கம்பரா. வருண. 32) 3. அழுந்துதல்; to be impressed or imprinted. "புலவியுட் பொறித்த புண்" (கலித். 71, 11)

[பொளி → பொறி]

பொறி³ *poṟi,* பெ. (n.) 1. வரி; stripe, as of a tiger. *'பொறி யுழுவை'* 2. கைவரி; (பிங்.) line on the palm 3. புள்ளி; spot, as on an elephants forehead; dot, point. *'பொறிய மடமான்'* (கலித். 13, 3) 4. தழும்பு; mark, impression. *'நல்லா ரிளமுலைப் பொறியும்'* (சீவக. 2190) 5. அடையாளம் (அடையாளம்); sign, token. (w) 6. எழுத்து; letter, writing. 7. இலச்சினை; seal, signet. "கோண்மாக் குயின்ற சேண் விளங்கு தொடுபொறி" (புறநா. 58) 8. விருது; badge, insignia. "வெல்பொறியு நாடுங் கொடுத் தளித்தான்" (பு. வெ. 7, 2) 9. உடலுறுப்பு அடையாளம்; auspicious mark on one's body. *'பூமியை யாடற்கொத்த பொறியினன்'* (சீவக. 1339) 10. வண்டு; bee. *'பொறிகலந்த பொழில்'* (தேவா. 638) 11. பீலி; peacock's tail, as spotted. "பல்பொறி மஞ்ஞை" (திருமுரு. 122) 12. தேமல்; beauty-spot on the body of a person. 13. படிமை; form,

image. எந்திரப் பொறியினிற்ப (கமபரா. கும்ப. 5) **14.** ஊழ்; fate. *'அவை பொறியின் வகைவண்ணம்'* (சீவக. 848) **15.** கன்னப் பொருத்து; temple of the head. **16.** மூட்டுவாய்; joint. *'பொறி புனை வினைப் பொலங்கோதை'* (பரிபா. 11, 64) **17.** மெய்; வாய், கண், மூக்கு, செவி என்ற ஐவகைப் புலன்கள்; organs of sense, of which there are five, viz., mey, vāy, kaṇ, mūkku, cevi *'பொறிவாயி லைந்தவித்தான்'* (குறள், 6) **18.** ஆண்குறி; male organ. **19.** மனம்; mind. *'துள்ளும் பொறியின் னிலை சோதனை தான்'* (கம்பரா. இரணிய. 105) **20.** அறிவு; wisdom, knowledge. *'பூரண மோதிலும் பொறியிலீர்'* (தேவா. 1203, 6) **21.** அனற்றுகள்; spark, scintilation. *'கூடும் வெம்பொறிச்'* கொடுங்கனல்' (கம்பரா. வருணனை. 22) **22.** ஒளி; brightness. *'பொறிவரிப் புகர்முகம்'* (பெரும்பாண். 448) **23.** சூழ்ச்சியம்; machine, trap. *'வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய'* (புறநா. 19) **24.** மதிலுறுப்பு (பிங்.); figure or engine on wall. **25.** மரக்கலம்; dhoney. (பிங்) **26.** தந்திரம்; stratagem. "பொறியிற் பலமாயந் தரும்" (கம்பரா. சூர்ப்ப. 139) **27.** நெற்றிப் பட்டம்; diadem. "வேந்தன் பெயராற் பொறியும் பெற்றான்" (சீவக. 1792) **28.** திருமகள்; (திவா.) lakshmi. **29.** செல்வம்; riches, wealth. *'பொறிகொடு நாணற்ற போழ்தே'* (நான்மணி. 45) **30.** பொலிவு; (பிங்)splendour. **31.** ஊழ்வினைப் பயன்; good karma. *'பொறியறு நெஞ்சத் திறைமுறை பிழைத்தோன்'* (சிலப். 20, 25) **32.** திரட்சி; roundness, rotundity. *'முசுண்டைப் பொறிப்புற வான்பூ'* (நெடுநல். 13)

[புல்→ பொல் → பொறி]

பொறிஎக்கி *poriekki,* பெ. (n.) இயந்திர ஆற்றலுள்ள நீர்வாங்கு குழாய்; power driven pump.

[பொறி + எக்கி]

பொறிக்கல் *pori-k-kal,* பெ. (n.) சிலை நாகக்கல்; a kind of stone. **2.** சுக்கான்கல்; kunkur.

[பொறி + கல்]

பொறிக்காளான் *pori-k-kālān,* பெ. (n.) பேய்க்காளான்; a variety of mushroon.

பொறிக்கேதனம் *pori-k-kēdanam,* பெ. (n.) மூகைப்புல்; a variety of grass.

பொறிகடலை *pori-katalai,* பெ. (n.) **1.** சிறு கடலை; bengal gram. **2.** பொரித்த கடலை; fried bengal gram.

[பொரி→பொறி + கடலை]

பொறி கலங்கு–தல் *pori-kalangu,* செ.கு.வி. (v.i.) அறிவு மயங்குதல்; to be confused and bewildered in one's senses. *'புலனைந்தும் பொறி கலங்கி நெறிமயங்கி'* (தேவா. 278, 1)

[பொறி + கலங்கு]

பொறி சிதறு–தல் *pori-šdaru,* செ.கு.வி. (v.i.) **1.** தீப்பொறி பறத்தல்; to fly out, as sparks, **2.** *பொறி கலங்கு–*, பார்க்க; see *pori-kalangu*

[பொறி + சிதறு–,]

பொறித்தாழ் *porittāl,* பெ. (n.) இயந்திரத் தாழ்க்கோல்; machine bar. 'பொன்செய் பேழையோரு பொறிதாழ் நீங்கி' (பெருந்.1:32:77)

பொறிதட்டு—தல் *pori-taṭṭu-,* செ.கு.வி. (v.i.) 1. அறிவு கலங்குதல்; to flash, as eyes from a blow. 2. வழுக்குதல்; to slide, as the feet.

[பொறி + தட்டு–,]

பொறிதொலை—த்தல் *pori-tolai-,* செ.கு.வி. (v.i.) ஒரு செயலை மனமின்றித் தீராக் கடமையாக முடித்தல்; to do any work, as a matter of duty.

[பொறி + தொலை –,]

பொறிநீர் *porinir,* பெ. (n.) விழியம் ; semen.

மறுவ. வித்தமிழ்து

[பொறி + நீர்]

பொறிப்பாவை *porippāvai,* பெ. (n.) இயந்திரப் பாவை; machine dall. "பெரும்பொறிப் பாவை மருங்கி னிறீஇ" (பெருங். 1:58:61)

[பொறி + பாவை]

பொறிப்பு *porippu,* பெ. (n.) 1. பறிகை (வின்.); snapping. 2. எழுதுகை (இ.வ.); writing, drawing.

[பொறி → பொறிப்பு]

பொறிப்பேழை *porippēḻai,* பெ. (n.) சூழ்ச்சியத்தையுடைய பெட்டி; machine box. 'பெரும்பொறிப் பேழை இவையெனக் கூறிக்' (பெருங்.1:40:239)

[பொறி + பேழை]

பொறிபறத்தல் *pori-parattal,* பெ. (n.) 1. தீப்பொறி சிதறுகை; flying of sparks. "நீரிடை நிமிர்பொறி பறக்க" (கம்பரா. சேது. 11) 2. தீப்பறக்கப் பார்க்கை (வின்.); flaming of the eyes, as in anger.

[பொறி + பறத்தல்]

பொறிமயிர் *porimayir,* பெ. (n.) புள்ளிகளையுடைய மயிர்; spot on the hair. 'பொறிமயிர் எருத்தில் குறுநடைப் பெடை' (குறுந்.154)

[பொறி + மயிர்]

பொறிமுதல் *pori-mudal,* பெ. (n.) உயிர்; soul, as superior to the senses. (பொறியங்களின் தலைவன்) (சீவக).

[பொறி + முதல்]

பொறியமலம் *pori-y-amalam,* பெ. (n.) புங்க மரம்; (சங்.அக) indian beech.

[பொறி + அமலம்]

பொறியமைப்பு *poriyamaippu,* பெ. (n.) கருவி அமைந்திருக்கும் நிலை; Device.

[பொறி + அமைப்பு]

பொறியரை *pori-y-arai,* பெ. (n.) *சிறுபுள்ளடி* பார்க்க; see *śirupulladi* a species of tick-trefoil (சங்.அக.)

[பொறி + அரை]



பொறியற்றார் *po̱ri-y-a̱r̠r̠ār,* பெ. (n.) *பொறியிலார்* (திவா.) பார்க்க; see *por̠-y-ilār*

[பொறி + அற்றார்]

பொறியறை *po̱ri-y-a̱rai,* பெ. (n.) 1. *பொறியிலி* 1 (தொல். சொல். 57, உரை) பார்க்க; see *po̱ri-y-ili* 2. திருவிலி; one devoid of luck. *'பொய்வழங்கி வாழும் பொறியறையும்'* (திரிகடு. 15)

[பொறி + அறு → அறை]

பொறியார்–த்தல் *po̱ri-y-ār-,* செ.கு.வி. (v.i.) *பொறிதட்டு 1* (யாழ்.அக) பார்க்க; see *po̱ritaṭṭu*

[பொறி + ஆர் –,]

பொறியிலார் *po̱ri-y-ilār,* பெ. (n.) கீழோர் (சூடா); the base, the vulgar.

[பொறி + இலார்]

பொறியிலி *po̱ri-y-ili,* பெ. (n.) 1. அறிவற்றவ–ன்–ள்; ignorant, senseless person. *'பறிதலைப் பொறியிலிச் சமணர்'* (திருப்பு. 259) 2. உறுப்புக் குறையுடையவ–ன்–ள்; deformed person. *'கைகான் முடங்கு பொறியிலி'* (பிரபுலிங். துதிகதி, 1) 3. நற்பேறில்லாதவ–ன்–ள்(வின்.); unfortunate person.

[பொறி + இலி]

பொறியேற்று–தல் *po̱ri-y-ēr̠r̠u,* செ.கு.வி. (v.i.) *பொறிவை* (யாழ்.அக) பார்க்க; see *po̱rivai.*

[பொறி + ஏற்று]

பொறியொற்றோலை *po̱ri-y-or̠r̠ōlai,* பெ. (n.) முத்திரையிட்ட ஓலைக்கடிதம்; letter in cadjan leaf, impressed with a seal. *'அமைதியாளரைப் பொறியொற் றோலையோ டறியப் போக்கி'* (பெருங். நரவாண. 7, 71)

[பொறி + ஒற்று + ஓலை]

பொறிவரித்தவிசு *po̱rivarittavišu,* பெ. (n.) புலித்தோல் இறக்கை; seat which made by skin of tiger. *'பொறிவரித் தவிசிற் பொன்னிறப் பலகை'* (பெருங்.2:17:83)

[பொறி + வரி+தவிசு]

பொறிவாயில் *po̱ri-vāyil,* பெ. (n.) புலன் (திவா);organ of sense. *'பொறிவாயி லைந்தவித்தான்'* (குறள், 6)

[பொறி + வாயில்]

பொறிவாயிற் காட்சி *po̱ri-vāyir̠-kāṭci,* பெ. (n.) புலன்களால் அறியுமறிவு; perception of the senses with the aid of mental faculties.

[பொறிவாயில் + காட்சி]

பொறிவிரியன் *po̱rviriyan,* பெ. (n.) ஒருவகை விரியன் பாம்பு, variety of snake.

[பொறி + விரியன்]

பொறிவு *po̱rivu,* பெ. (n.) 1. சறுக்கல்; sloping, sliding. 2. பறிகை; snapping.

[பொறி → பொறிவு]

பொறிவை–த்தல் *po̱ri-vai,* செ.கு.வி. (v.i.) எலி முதலிய உயிரிகளைப் பிடிக்க வைக்கும் கிட்டி, வலை முதலியன (வின்.); to set a

trap. "எலித் தொல்லை தங்கமுடியவில்லை இன்று பொறி வைக்க வேண்டும்."

[பொறி + வை –,]

பொறு¹–த்தல் *poṟu,* செ.குன்றா.வி. (v.t.) **1.** சுமத்தல்; to bear, sustain. *'இசையிலா யாக்கை பொறுத்த நிலம்'* (குறள், **239**) **2.** தாங்குதல்; to bear with. *'ஆலத்து .... நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்கு'* (புறநா. **58**) **3.** அணிதல்; to put on, wear. *'அம்மணி பொறித்திரென் றறைந்தான்'* (உபதேசகா. உருத்திராக். **44**) **4.** இளக்காரம் கொடுத்தல் (வின்.); to indulge, allow. **5.** மன்னித்தல்; to excuse, forgive. *'தம்மை யிகழ்ந்தமைதாம் பொறுப்ப தன்றி'* (நாலடி, **58**) **6.** ஏற்றமை; to endure, suffer. *'பொறுக்கிலேனுடல் போக்கிடங் காணேன்'* (திருவாச. **23, 6**) **7.** பொறுப்பேற்றல்; to take responsibility. **8.** தள்ளிப் போடுதல்; postpone. **9.** உவமையாகப் பெறுதல்; to be similar. "உலம் பொறுக்கலாத தோளாய்" (சீவக. **402**)

[புல் → பொல் → பொறு]

பொறு¹–த்தல் *poṟu,* செ.கு.வி. (v.i.) **1.** அடக்கமாய் இருத்தல்; to be patient. **2.** பேச்சு முதலியவற்றின் இடையே நின்று கொள்ளுதல்; to stop, wait, as in speaking or in eating; to desist. **3.** விலை கொள்ளுதல்; to coast, as an article; to be spent or expended on. **4.** தோணிதட்டிப் போதல்; to run aground, as a vessel; to strand. **5.** மாட்டிக் கொள்ளுதல்; to become fixed, jammed, wedged in. **6.** பொறுப்பாதல் (வின்.); responsibility.

[புல் → பொல் → பொறு]

பொறுக்கவை–த்தல் *poṟukka-vai-,* செ.குன்றாவி. (v.t.) **1.** சாரவைத்தல்; to place, lean against. **2.** தோணி தட்டச் செய்தல்; to run aground, as a vessel, **3.** பொறுப்பாதல்; to impose a duty or expense upon. **4.** மிகுபார மேற்றுதல்; to overload. **5.** ஏற்றமையும் படி செய்தல்; to cause to bear.

[பொறு → பொறுக்கவை]

பொறுக்குவிதை *poṟkkuvidai,* பெ. (n.) செம்மைப்படுத்தப்பட்ட விதை; improved seed.

[பொறுக்கு + விதை]

பொறுக்கி *poṟukki,* பெ. (n.) *பொறுக்கித் தின்னி* (கொவ.) பார்க்க; see *poṟukki-t-tiṉṉi.*

[பொறுக்கு → பொறுக்கி]

'இ' வி.மு ஈறு.

பொறுக்கித் தின்னி *poṟukki-t-tiṉṉi,* பெ. (n.) **1.** இங்கும் அங்குமாகப் பொறுக்கித் தின்னும் வறிய–ன்–ள்; one who picks up, gathers, gets his food here and there; one despicably poor. **2.** கஞ்சன்; niggardly person.

[பொறுக்கி → தின்னி]

பொறுக்குசீட்டு *poṟukku-c-cittu,* பெ. (n.) திருவுளச்சீட்டு (ஆகம்). lottery.

[பொறுக்கு+சீட்டு]

பொறுக்கு–தல் *poṟukku-,* செ.குன்றாவி. அங்கும் இங்கும் சிதறிய பொருளைத் தெரிந்தெடுத்தல்; to pick up here and there, glean; to pick out from mass, select.

[பொறுக்கு → பொறுக்குதல்]

பொறுத்துப்போ[1]–தல் *poṟuttu-p-pō-,* செ.குன்றாவி. (v.t.) **1.** தோணிகட்டுதல்; to ran aground. **2.** மாட்டிக்கொள்ளுதல்; to be stuck or jammed in.

[பொறுத்து → பொறுத்து+போ]

பொறுத்துப்போ[2]–தல் *poṟuttu-p-pō-,* செ.குன்றாவி. (v.i.) தொடர்ந்து பொறுத்தல்; to continue toterate.

[பொறுத்து+போ]

பொறுதி *poṟudi,* பெ. (n.) **1.** பொறுமை; patience, forbearance. '*மிகவும் பொறுதியுள்ள வன்*' **2.** குற்றம் பாராட்டாமை(வின்.) ; pardon, forgiveness. **3.** இளக்காரம் (யாழ்ப்.); indulgence, levity **4.** ஒய்வு (யாழ்ப்.); suspension of business. **5.** சுணக்கம் (யாழ்ப்.); slowness, delibration, delay

[பொறு → பொறுதி]

பொறுப்பற்றவன் *poṟuppaṟṟavaṉ,* பெ. (n.) **1.** பொறுப்பு ஏற்காதவன் (கொ.வ.); irresponsible person. **2.** பொறுமையற்றவன்; impatient man **3.** உதவியற்றவன்; one destitute of help.

[பொறுப்பு + அற்றவன்]

பொறுப்பாளி *poṟuppāḷi,* பெ. (n.) பொறுப்பானவன்; responsible person.

[பொறுப்பு + ஆளி]

'ஆளி' வினைமுதலீறு.

பொறுப்பி–த்தல் *poṟuppi-,* செ.குன்றா.வி. (v.t.) **1.** சுமத்துதல்; to cause to rest on. **2.** *பொறுப்புக்கட்டு–,* **1.** பார்க்க; see *poṟuppu-k-kaṭṭu* **3.** முட்டுக் கொடுத்தல்; to prop; to sustain **4.** பொறுக்குமாறு செய்தல்; to cause to bear. '*திருவடியைப் பொறுப்பிக்கு மவர் தன் சொல்வழி வருமவரைப் பொறுப்பிக்கச் சொல்ல வேண்டாவிறே*' (அட்டாதச. முமுட்சுப்.) **5.** பாதுகாத்தல் (இ.வ.); to maintain.

[பொறு → பொறுப்பி–த்தல்]

பொறுப்பு *poṟuppu,* பெ. (n.) **1.** பாரம்; stress, pressure, burden. **2.** முட்டு (வின்.); prop, support, stay. **3.** உறுதி; duty, responsibility. **4.** இன்றியமையாமை; importance. **5.** தகுதி; weight of character. **6.** பொறுமை; patience, forbearance. **7.** வரி (இ.வ.); tax.

[பொறு → பொறுப்பு]

பொறுப்புக்கட்டு–தல் *poṟuppu-k-kaṭṭu-,* செ. குன்றாவி.(v.t.) **1.** உறுதியளிக்கச் செய்தல்; to put responsibility on. **2.** ஈடுகாட்டுதல்; to tender as security. **3.** முற்றுவித்தல் (வின்.); to accomplish

பொறுப்புக்காரன் *poṟuppu-k-kāraṉ,* பெ. (n.) *பொறுப்பாளி.*(யாழ்.அக.) பார்க்க; see *poṟuppāḷi*

[பொறுப்பு + காரன்]

'காரன்' உடையவனைக் குறிக்கும் ஈறு.

பொறுப்புடைமை *pōruppu-utamai,* பெ. (n.) கடமைப்பொறுப்பு; oblication

[பொறுப்பு + உடமை]

பொறுமி *poṟumi,* பெ. (n.) அவுரி போன்ற இலையும் சிவந்த சிறுபூவுமுடைய பூடுவகை;

a red-flowered plant with indigo like leaf and bean-like fruit.

பொறுமை *porumai,* பெ. (n.) **1.** அடக்கம்; meekness, self-control **2.** பொறை; patience, endurance, tolerance, forbearance.

[பொறு → பொறுமை]

'மை' ப. பெ. ஈறு

பொறுமைக்காரன் *porumai-k-kāran,* பெ. (n.) சாந்தமுள்ளவன் (வின்.); patient man.

[பொறுமை + காரன்]
'காரன்' உடையவனைக் குறிக்கும் ஈறு.

பொறுமைசாலி *porumai-cāli,* பெ. (n.) *பொறுமைக்காரன்* பார்க்க; see *porumāi-k-kāran.*

[பொறுமை + சாலி]

'சாலி' உடைமைப் பொருளீறு.

ஒ.நோ. திறமைசாலி, பாக்கியசாலி

பொறுவாஞ்சேறு *poruvāñcēru,* பெ. (n.) கடல் சேற்றின் வகை; a kind of sea mud.

பொறை *porai,* பெ. (n.) **1.** சிறுகுன்று; small hill, hillock, 'அறையும் *பொறையு மணந்த தலைய'* (புறநா. **118.**) **2.** மலை; mountain '*நெடும் பொறை மிசைய குறுங்காற் கொன்றை*' (ஐங்குறு. **430.**) **3.** சுமை. (திவா.); burden, load, '*குழையு மிழையும் பொறையா*' (கலித். **90.**) **4.** கனம்; weight, heaviness. '*பொறை தந்தன காசொளிர் பூண்*' (கம்பரா. அதிகா. **40.**) **5.** நிலவுலகு (பிங்.); earth. '*பொறைதரத் திரண்டதாரு*' (இரகு. தசரதன்சாப. **50.**) **6.** பொறுமை; patience, forbearance '*வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை*' (குறள், **153.**) **7.** அடக்கம் calmness, meekness. '*அருந்ததி முதலிய மகளிராடுதல் புரிந்தனர்* பொறையு நாணு நீங்கினார்.' (கம்பரா. மீட்சி. **88**); **8.** கருப்பம். (சூடா.) pregnancy. **9.** வலிமை; strength. '*போதகாதிபன் முதலை வாயிடைப் பொறை தளர்ந்து*' (பாரத. வேந்திரகீய.)

[பொறு → பொறை]

பொறைநிலை *porainilai,* பெ. (n.) மனத்தை ஒருவழிப்படுத்துதல் (தாரணை.வ.); (concentrated atention in yogic meditation.

[பொறை + நிலை]

பொறைநோய் *porainōy,* பெ. (n.) கருப்பத் துன்பமாகிய நோய்; pain of pregnancy.

[பொறை + நோய்]

பொறைமண் *poraiman,* பெ. (n.) **1.** செத்தை முதலியவற்றின் கலவையான வளம் நிறைந்த மண்; loamy soil. **2.** செங்கல் செய்வதற்கான களிமண்; clay used for making bricks.

[பொறை + மண்]

பொறைமலி *poraimali,* பெ. (n.) சுமைமிக்க; heavy lord. 'பொறைமலி கழுதை நெடுமிரை தழீஇய' (அகநா.**89.**)

பொறைமை *poraimai,* பெ. (n.) *பொறை,* **6.** பார்க்க; '*நின்னெஞ்சங்கொண்ட பொறைமை காணிய*' (பெருங்.உஞ்சைக்.**36,84.**)

[பொறு → பொறை → பொறைமை]

பொறையன் *poraiyan,* பெ. (n.) **1.** சுமப்பவன்; sustainer, bearer '*புன்னிலைப் பவத்துக்*

கெல்லாந் தானொரு பொறையனாகி (உபதேசகா. சிவபுண்.344.) 2. சேரன்; cēra king, as lord of the mountainous region in the Tamil country. *'யானைக் கடுமான் பொறைய'* (புறநா.53.) 3. பொறுமைக்கும் பொறைக்கும் சிறந்த தருமன். Dharmapatra, the eldest of the pāndavās as embodiment of patience. (சூடா.);

[பொறு → பொறை → பொறையன்]

பொறையாட்டி *por̲ai-y-āṭṭi,* பெ. (n.) 1. பொறுமை யுள்ளவள்; patient woman. *'சுருங்கும் மருங்குற் பெரும்பொறை யாட்டியை'* (திருக்கோ.353.) 2. காவுகொடுக்கும் பூசாரிப் பெண்; priestess who offers kāvu. *'கானப்பலி நேர்கடவுட் பொறையாட்டி வந்தாள்'* (பெரியபு. கண்ணப்.65.)

[பொறை + ஆட்டி]

பொறையாளன் *por̲ai-y-āḷan̲,* பெ. (n.) *பொறையன்* (பிங்.) பார்க்க; see *por̲aiyan̲*3.

[பொறை + ஆளன்]

பொறையாற்று-தல் *por̲ai-y-ār̲r̲u-,* பெ. (n.) பொறுத்தல்; (கம்பரா.உருக்.11.); to bear with patience.

[பொறை + ஆற்று → பொறையாற்று-தல்]

பொறையிருந்தாற்று-தல் *por̲ai-y-irundār̲r̲u,* செ.குன்றாவி. (v.t.) துன்பம் பொறுத்தலைக் கடைப்பிடித்தல்; to bear with patience.*" பொறையிருந்தாற்றியென் னுயிரும் போற்றினேன்"* (கம்பரா. சுந்தர. உருக்காட்டு.11)

[பொறை + இரு → இருந்து + ஆற்றுதல்]

பொறையிலான் *por̲ai-y-ilān̲,* பெ. (n.) பொறுமையில்லாதவன்; impatient person. 2. வேடன் (சூடா.); savage; forester, hunter.

[பொறை + இல்+ஆ]

'இல்' எ. ம. இடைநிலை

பொறையுடைமை *por̲ai-y-ḍaimai,* பெ. (n.) நெஞ்சுரம் (மனத்திண்மை); vitality. 'நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறை யுடைமை போற்றி ஒழுகப் படும்' (குறள்.154)

[பொறை + உடைமை]

பொறையுயிர்-த்தல் *por̲ai-y-uyir-,* செ.குன்றா.வி. (v.t.) 1. இளைப்பாறும்படி சுமையிறக்குதல்; to disburden and rest. *'துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி'* (பொருந,239.) 2. மகப்பேறு; to be delivered of a child. *'பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டில்'* (நன்.269,உரை,)

[பொறை + உயிர்த்தல்]

பொன் *pon̲,* பெ. (n.) 1. செம்பொன் (சாதரூபம்), கிளிச்சிறை, ஆடகம், நாவலம் என நான்குவகைப்பட்ட தங்கம்; gold of which there are four kinds, viz., cātarūpam, kiḷiccir̲ai, āḍagam, campunatam. *'பொன்னுந்துகிரும் முத்தும்'* (புறநா.218.) 2. மாழை (பிங்.); metal செம்பொன், வெண்பொன், கரும்பொன் 3. இரும்பு; iron. *'தூண்டிற் பொன் மீன் விழுங்கியற்று'* (குறள், 931.) 4. செல்வம்; wealth. *'பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்'*(நள.கலி தொடர்.68.) 5. அணிகலன்; ornament. *'கடலுடுத்த காரிகை பொன்னணிந்திருந் தென'* (சீவக.1250.) 6. திருநாண்; marriage badge. *'பொன்னைக் கொணர்ந்து.... நீபொன் புனைந்ததுவே* (தஞ்சைவா.359.) 7. தங்ககாசு;a

gold coin, 8. *பொன்மலை*, 1, பார்க்க; see *ponmālai*,1 ஆணிப்பொன்வில்லி (குமர.பிர.மீனாட்.பிள்.63.) 9. பொலிவு; grandeur, magnificence. *'பொன்னார் வயற்பூம் புகலி'* (தேவா.72,2.) 10. பசலை; sallowness of complexion from love sickness. *'வயங்கு—பொன்னீன்றமுலையினாளே'* (சீவக.1530.) 11. பேரொளி(வின்.); lustre, splendour, brilliance 12. அழகு (பிங்.); beauty, eleganece, comeliness. *'பொன் புனைந்த கழலடியோன்'* (பு.வெ.7,2, கொளு) 13. ஏற்றம்; preciousness, excellence, rarity. *'பொன்னிறை சுருங்காா்'* (சீவக.2380). 14. திருமகள்; lasksmi, the Goddess of fortune. *'பொன்றுஞ்சு மார்பன்'* (சீவக.14.) 15. வியாழன்; jupiter *'பொன்னெடு வெள்ளியும்..... இருக்கை யீயவே'* (கம்பரா.மாரீச.16.) 16. கதிரவன்; sun. *'உடலுயிரும் பொன்விழியு மெனும் புணர்ப்பு'* (மணிமே.6,145.) 17. பெண் குறி (பிங்.); pudendem muliebre.

பொன்கண் *pon-kan,* பெ. (n.) 1. சிவந்த உடம்பு; reddish body. *'பொன்கட் பச்சை பைங்கண் மாஅல்'* (பரிபா.3:82.) 2. *பொற்கண்* பார்க்க; see *porkan.*

[பொன் + கண்]

பொன்காண்(ணு)—தல் *pon-kān-,* செ.கு.வி (v.t.) மாற்றுக்காணுதல்; to lest the quality of gold. *"பொன் காண்பார்களாகவும்"* (S.I.I.vi.149.)

[பொன் + காண்—,]

பொன்குற்றம் *pon-kurram,* பெ. (n.) திரை; களிம்பு; the defects of gold; verdigiris.

[பொன் + குற்றம்]

பொன்கோலம் *pon-kōlam,* பெ. (n.) 'புத்திரசீவி' எனப்படும் மரம்; child's amulet tree. (l.)

பொன்ஞாண் *pon-ñān,* பெ. (n.) பொற்கொடி; gold chain. *'பின்னுறு பொன்ஞான் பெருந்தொடர் கோத்த்'* (பெருங்,1:46:177.)

[பொன் + ஞாண்]

பொன்செய்—தல் *pon-cey-,* பெ. (n.) நல்ல செயல் செய்தல்; to do a good deed. *'கேட்டீமின் பொன்செய் தேன்'* (கலித்.143.)

[பொன் + செய்—]

பொன்செய்கொல்லன் *pon-cey-kollan,* பெ. (n.) தட்டான்; goldsmith. *'பொன்செய் கொல்லனி னினிய தெளிர்ப்பி'* (நற்.394.)

[பொன் + செய் + கொல்லன்]

பொன்செய்புலவன் *pon-cey-pulavan,* பெ. (n.) 1. பொன்செய் கொல்லன் பார்க்க; see pon-cey-kollan. 2. பொன்னரிப்போன்; gatherer of gold, as from mines. (சிலப்.5,31.அரும்.)

[பொன் + செய் + புலவன்]

பொன்ஞெகிழி *pon-ñekili,* பெ. (n.) அரிபெய்சிலம்பு. gold anklet with beads inside for tinkling (திவா.);

[பொன் +ஞெகிழி]

பொன்துகள் *pon-tukal,* பெ. (n.) தங்கத்தூள் (பொடி); gold-dust.

[பொன் +துகள்]

பொன்நூற்புழு *ponnōṟpuḻu,* பெ. (n.) நீண்டுருண்ட வடிவுடைய பொன்னிறமான புழுவகை; golden nematode

[பொன் + நூல் + புடு]

பொன்படு—தல் *pon-padu-,* பெ. (v.i.) தோற்றப்பொலிவுறுதல்; to appear bright. *'தொய்யிலெழுதியிறுத்த பெரும்பொன் படுகம்' (கலித்.64.)'*

[பொன் + படு—.]

பொன்பத்தன் *pon-pattan,* பெ. (n.) ***பொன்செய் கொல்லன்.*** பார்க்க; see *pon-cey-kollan.* (கொ.வ.)

[பொன் + பத்தன்]

பொன்பற்றியூர்ப்புத்தமித்திரனார் *pon-pṟṟiyūrp-puttamittiranār,* பெ. (n.) வீரசோழியம் என்னும் இலக்கண நூல் செய்த புலவர்; a authour of the veracoliyam.

பொன்பாதிரி *pon-pātiri,* பெ. (n.) மரவகை; fragrant trumpet-flower.

[பொன் + பாதிரி]

பொன்பாவை *pon-pāvai,* பெ. (n.) திருமகள்; Laxsmi. *'பொன்பாவை கேள்வர்'* (திவ்.இயற்.4,59.)

[பொன் + பாவை]

பொன்புனை—தல் *pon-puṇai-,* செ.குன்றா. வி. (v.t.) திருமங்கலியம் பூட்டி மணத்தல்; to marry, as tying the tāli. *'நுங்கேண்முன்னர் நீ பொன் புனைந்ததுவே'* (தஞ்சைவா.359.)

[பொன் + புனை]

பொன்பூண்(ணு)தல் *pon-pūn-,* செ.கு.வி. (v.i.) அணிகலன் அணிதல்; to wear gold ornaments.

[பொன் + பூண் → பூணுதல்]

பொன்பெயரோன் *pon-peyarōn,* பெ. (n.) பொன்னன் இரணிய கசிபு; hiraṇyakaśipu, as gold coloured. *'பொன்பெயரோன் மார்பிடந்த வீங்கோத வண்ணர்'* (திவ்.இயற்.1,23.)

[பொன் + பெயர் → பெயரோன்]

பொன்மணல் *pon-maṇal,* பெ. (n.) பொற்றுகள் கொண்ட மணல்; sand containing gold; gold ore. (w.)

[பொன் + மணல்]

பொன்மணி *pon-maṇi,* பெ. (n.) 1. பொன்னாலாகிய உருண்டைமணி; gold bead. 2. பொன்மணியாலான அணிவகை; necklace of gold beads. *'பொன்மணி யொலிப்ப'* (திவ்.பெரியதி.1,7,1.)

[பொன் + மணி]

பொன்மணியார் *pon-maṇiyār,* பெ. (n.) கழகக்காலப்புலவர். a sankam poet. (குறுந்.391);

[பொன் + மணி → மணியார்]

பொன்மணை *pon-maṇai,* பெ. (n.) பொற் பலகை; low golden seat. *'நன்கை நடுவட் பொன்மணை யேற்றிப்'* (பெருங் 1:42:107.)

[பொன் + மணை]

பொன்மயம் *pon̲-mayam,* பெ. (n.) பொன்னிற மான பளபளப்பு ; golden lustre. (w.)

[பொன் + மயம்]

பொன்மயிற்கொன்றை *pon̲-mayir̲-k-kon̲r̲ai,* பெ. (n.) கொன்றை வகை,; a kind of indian labarman. (சங்.அக.)

[பொன் + மயில் + கொன்றை]

பொன்மரம் *pon-maram,* பெ. (n.) துறக்கத் திலுள்ள (சொர்க்கத்திலுள்ள) பொன் மயமான மரம். golden tree, in suarga. (சீவக.3122.)

[பொன் + மரம்]

பொன்மலை *pon̲-malai,* பெ. (n.) 1. தங்க மயமானமலை (மேரு) mt. mēru as golden.(பிங்.); '*பொன்மலைக் கடவுள்*' (திருவிளை. மேருவை.39.) 2. பனி (இமய)மலை. (பிங்.); the Himalayās '*பொன்மலைப் புலிநின் றோங்க*' (பெரியபு.எறிபத்த.2.) 3. மேற்றிசை மலை; western-hill where the sunsets. '*பொன்மலை சுடர்சேர*' (கலித்.126.) 4. முப்புரங்களுள் ஒன்று; one of three arieal castles destroyed by šiva (பிங்.). 5. திருச்சிராப்பள்ளிலுள்ள தாயுமானவர் மலை (வின்.); the rock in Tricirāppaḷḷi.

[பொன் + மலை]

பொன்மலைவல்லி *pon̲-malai-valli,* பெ. (n.) மலைமகள் (பார்வதி); goddess pārvati '*புரிவு செய்தனள் பொன்மலைவல்லி*' (பெரியபு. திருக்குறிப்பு.56.)

[பொன்மலை + வல்லி]

பொன்மழை *pon̲-maḷai,* பெ. (n.) *பொன்மாரி,* 1.; பார்க்க; see *pon̲māri,* 1 (w)

[பொன் + மழை]

பொன்மாசை *pon̲-mācai,* பெ. (n.) பொன்னா லாகிய ஒருவகைக்காசு; gold coin. '*கன பொன்மாசை காண வேந்தி*' (பருங். 1:36:76)

[பொன் + மாழை → மாசை]

பொன்மாரி *pon̲-māri,* பெ. (n.) *1.* தங்கமழை*;* shower of gold"*நன்நீரது தவிர்துப் பென்மாரியாகப் பொழி* (தமிழ்நா. 52) 2. *குதிரைச் சாதிவகை;* A kind of horse. "*நாயன வஞ்சனம் பொன்மாரி*" (திருவாலவா.28,69)

பொன்மாலை *pon̲-mālai,* பெ. (n.) *பொன்னரிமாலை* பார்க்க; see *pon̲-narimālai.* '*பொன் மாலை யலங்கலோ மரம் புலம்ப*' (சீவக. 349.)

[பொன் + மாலை]

பொன்மாளிகை *pon̲-mālgai,* பெ. (n.) அரண்மனையில்அரசன்தங்கும் ஆடகமாடம்; golden palace. '*பொன்மாளிகைத் துஞ்சின தேவராக*' (s.i.i.ii, 70)

[பொன் + மாளிகை]

பொன்மீன் *pon̲-min̲,* பெ. (n.) *பூமீன் கெண்டை* பார்க்க; (இ.வ.); see *pūmin̲-keṇdai.*

[பொன் + மீன்]

பொன்முசுட்டை *poṉ-mucuṭṭai,* பெ. (n.) 1. வட்டத்திருப்பி பார்க்க; kidney leaved moon seed. 2. செடிவகை; buckler-leaved moon-seed. 3. ஆடுதின்னாப் பாளை;பார்க்க, worm-killer. (l.) 4. *அரிவாண் முனைப் பூண்டு* பார்க்க; see *arivāṇmaṇaip-pūṇḍu.*

[பொன் + முசுட்டை]

பொன்முடி *pōṉ-muti,* பெ. (n.) பொன்மணிகளால் அணி செய்யப்பட்ட மகுடம்; srown net.

[பொன் + முடி]

பொன்முடியார் *poṉmufiyār,* பெ. (n.) கடைக்கழகப்புலவருள்ஒருவர் a poet of last sangam.;

பொன்முல்லை *poṉ-mullai,* பெ. (n.) பூச்செடி வகை; golden jasmine.

[பொன் + முல்லை]

பொன்முலாம் *poṉ-mulām,* பெ. (n.) பொன்பூச்சு; gilding. (w.)

[பொன் + முலாம்]

பொன்முளை *poṉ-muḷai,* பெ. (n.) பொற்காசின் முத்திரை; stamp on a gold coin.

[பொன் + முளை]

பொன்மூங்கில் *poṉ-mūṅkil,* பெ. (n.) திருவாங்கூரில் விளைவதும் முள்ளில்லாத் துமாகிய ஒருவகை மூங்கில் பொன்பூச்சு; thorn less bamboo of travancore-axytenanthera bourdillon.

[பொன் + மூங்கில்]

பொன்மெழுகு *poṉ-meḷuku,* பெ. (n.) பொன்னுரை எடுக்கும் மெழுகு; a kind of darkish wax used by goldsmiths in testing the fineness of gold.

[பொன் + மெழுகு]

பொன்மேனிச்சி *poṉ-mani-c-ci,* பெ. (n.) பேய்க்கடலை; a bitter wild gram.

[பொன் + மேனி → மேனிச்சி]

'இ' உடைமைப்பொருள் பெயரீறு.

பொன்மை *poṉmai,* பெ. (n.) பொன்னிறம் (திவா.) colour of gold. *'குயம்பொன்மை மாமலராகக் குலவின'* (தேவா. 251, 8.)

[பொன் → பொன்மை]

'மை' ப. பெ. ஈறு.

பொன்வண்டு *poṉ-vaṇḍu,* பெ. (n.) பொன்னிறமுள்ள வண்டுவகை; gold coloured beetle. *'போந்ததென் னெஞ்சென்னும் பொன்வண்டு'* (திவ். இராமானுச. 100)

[பொன் + வண்டு]



பொன்வண்ணக் காரிளை *poṉ-vaṇṇa-k-kāriḷai,* பெ. (n.) கந்தகம் sulphur.(சங்.அக.)

[பொன் + வண்ணம் + காரிளை]

பொன்வண்ணக் குறிஞ்சி *poṉ-vaṇṇa-k-kuṟiñchi,* பெ. (n.) பொன்னிற பூவுள்ள மருதோன்றி; hanna

[பொன் + வண்ணம் + குறிஞ்சி]

பொன்வண்ணத்தந்தாதி *poṉ-vaṇṇa-ttantāti,* பெ. (n.) பதினோராந் திருமுறையுள் இடம் பெற்றுள்ளதும் சேரமான் பெருமாள்நாயனார் இயற்றியதுமான சிற்றிலக்கியம்; a poem in patinorān-tirumurai, by cēramāṉ-perumaḷ nāyaṉār.

[பொன் + வண்ணம் → வண்ணத்து +அந்தாதி]

skṭ. anta + ādi → *த.அந்தாதி]*

பொன்வரி *poṉ-vari,* பெ. (n.) பழைய வரிவகை; an ancient tax (i.m.p.cg. **861.)**

[பொன் + வரி]

பொன்வரிமாடை *poṉ-vari-mādai,* பெ. (n.) *பொன்வரி* பார்க்க,; see *poṉvari* (i.m.p.cg. **861.)**

[பொன்வரி + மாடை]

பொன்வரை *poṉ-varai,* பெ. (n.)
1. *பொன்மலை,* **1. 3.** பார்க்க; see *poṉmalai*
2. *பொன் மலை,* **2.** பார்க்க; see *poṉmalai,* **2** *'புண்டரிகம் பொன்வரைமே லேற்றி'* (பெரியபு. ஏனாதி. **1.)**

[பொன் + வரை]

பொன்வறுகல் *poṉ-vaṟukal,* பெ. (n.) பொன்னிறமாக வறுத்தல்; to fry till it attains gold colour or red colour.

[பொன் + வறுகல்]

பொன்வாணிகர் *poṉ-vāṇikar,* பெ. (n.) தங்க வணிகர்கள்; dealers in gold. *'பொற்பேதத்தைப் பகுத்தறியும் பொன்வாணிகர்'* (சிலப். **14, 204,** உரை)

[பொன் + வாணிகர்]

பொன்வாய்ப்புள் *poṉ-vāy-ppuḷ,* பெ. (n.) சிச்சிலிக்குருவி (பிங்.); king-fisher.

[பொன் + வாய் + புள்]

பொன்வானம் *poṉ-vānam,* பெ. (n.) குடசம் (பித்தளை) மலை. hill of brass.(யாழ்.அக.);

[பொன் + வானம்]

பொன்வித்து *poṉ-vittu,* பெ. (n.) ஈயமணல் sand containing lead (சங்.அக.);

[பொன் + வித்து]

பொன்வில்லி *poṉ-villi,* பெ. (n.) சிவபிரான்; siva as having mēru, as bow. [பொன் மலையை (மேருவை) வில்லாக உடையவன்] *'ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்கவல்லி'* (குமர. பிர. மீனாட். பிர். **63)**

[பொன் + வில் → வில்லி]

'இ' உடைமைப் பொருள் பெயரீறு.

பொன்விலை *poṉ-vilai,* பெ. (n.) ஏற்றமான விலை; very high price, as of gold.

[பொன் + விலை]

பொன்விலைப் பாவையர் *poṉ-vilai-p-pāvayar,* பெ. (n.) *பொன் விலை மகளிர்* பார்க்க; *see poṉ-vilai-magalir,* *'பொன் விலைப் பாவையர் மனமும் போன்றதே'* (கம்பரா. தாடகை. **15)**

[பொன் + விலை + பாவையர்]

பொன்விலை மகளிர் *poṉ-vilai-magaḷir,* பெ. (n.) பரத்தை; prostitutes.

பொன்விழா *poṉ-vilā,* பெ. (n.) ஐம்பதாம் ஆண்டுக் கொண்டாட்டம்; golden Jubilee. (இக்.வ.)

[பொன் + விழா]

பொன்விளைவிடம் *poṉ-viḷaividam,* பெ. (n.) பொன் உண்டாகுமிடம்; gold mine

[பொன் + விளைவு + இடம்]

பொன்வினை செய்வோர் *poṉ-vinai-ceyvōr,* பெ. (n.) *பொன் வினைமாக்கள்* பார்க்க; see *poṉvinaimākkaḷ*

[பொன் + வினை+செய்வோர்]

பொன்வினை மாக்கள் *poṉ-viṉal-mākkal,* பெ. (n.) தட்டார் goldsmiths. (சூடா.);

[பொன் வினை + மாக்கள்]

பொன்வீ *poṉvi,* பெ. (n.) பொன்னிறமான மலர்; golden colour flower. 'பொன்வீ ஞாழலோடும் புன்னைவரிக்கும்' (அகநா.70.). 'பொன்வீ மணியரும் பினவே' (ஐங்குறு.201.)

[பொன் + வீ]

பொன்வெட்டு *poṉ-veṭṭu,* பெ. (n.) *பொன்வெட்டுவாய்* பார்க்க; (இ.வ.); *see poṉ-veṭṭuvāy*

[பொன் + வெட்டு]

பொன்வெட்டுவாய் *poṉ-veṭṭu-vāy,* பெ. (n.) பேச்சு முதலியவற்றில் நேர்மை; exactness, as in correctness of speech etc., as cut-gold. (இ.வ.)

[பொன் + வெட்டு + வாய்]

பொன்றக் கெடுதல் *poṉṟa-k-kedu,* செ.கு.வி. (v.i.) முற்றவும் அழிதல்; to be absolutely, ruined, *'பொன்றக் கெடாப் பொருள்'* (மணி, 30, 223.)

[பொன்ற+கெடுதல்]

பொன்றல் *poṉṟl,* பெ. (n.) சாதல்; dying

[பொன்று → பொன்றல்]

பொன்றாவல்லி *poṉṟā-valli,* பெ. (n.) சீந்தில் பார்க்க, gulancha. (தைலவ. தைல.);

பொன்று–தல் *poṉṟu-,* செ.கு.வி. (v.i.) 1. அழிதல்; to perish, to be ruined. *'புகழல்லாற் பொன்றாது நிற்பதொன்றில்'* (குறள், 233.) 2. இறத்தல்; to die, *'மடமாக்கள் பொன்றிலென் பொன்றாக்காலென்'* (நாலடி, 323.) 3. தவறுதல்; to fail. *'பொன்றலில் பகழிக்கு'* (கம்பரா. வருண. 77) 4. பார்வை முதலியன குறைதல்; to be reduced; to become wearied or dim, as the eyes by great exertion.

[புல் (துளை) → பொல் + து → பொத்து → பொற்று → பொன்று]

பொன்றொடு–தல் *poṉṟodu-,* செ.குன்றா.வி. (v.t.) பொன்னைத் தொட்டுச் சூளுறுதல்; to adjure, take oath, touching a piece of gold. *'பொன் றொட்டேம் யாதுமும்மைப் போகொட்டோம்'* (சீவக. 2945.)

[பொன் + தொடுதல்]

பொன்னகர் *poṉṉakar,* பெ. (n.) 1. வானுலகம்; amarāvati, as the golden city. *'பொன்னகர்*

வறிதாப் போதுவர்' (மணி. 1, 41.) 2. சிவனுலகு; siva's heaven. *'புகுவதாவதும் போதரவில்லதும் பொன்னகர்'* (திருவாச. 5, 36.)

[பொன் + நகர்]

பொன்னகர்க்கிறைவன் *ponnakar-k-kiraivan,* பெ. (n.) வேந்தன் (இந்திரன்) indra, as lord of ponnakar. (பிங்.)

[பொன்னகர்க்கு + இறைவன்]

பொன்னகர்ச் செல்வன் *ponnakar-c-celvan,* பெ. (n.) *பொன்னகர்க்கிறைவன்* பார்க்க; *see ponnakar-c-celvan.*

[பொன்னகர் + செல்வன்]

பொன்னகரம் *ponnakaram,* பெ. (n.) பொன்னகர், 1 பார்க்க, *'பொன்னகரம் புக்கு'* (திவ். இயற். பெரியம. 20); *see ponnakar.*

[நகர் → நகரம்]

பொன்னங்கொட்டை *ponna-n-kottai,* பெ. (n.) பூவந்திக் கொட்டை; *soap nut-sapindus trifoliatus.*

[பொன் → பொன்னம் → கொட்டை]

பொன்னச்சேரான் *ponnaccēran,* பெ. (n.) சேங்கொட்டைவகை பார்க்க; glabrous marking-nut. (l.)

பொன்னசலம் *pon-n-acalam,* பெ. (n.) *பொன்மலை,* 1, 2, 3 பார்க்க; *see ponmalai.* 1,2,3.

[பொன் + அசலம்]

[Skt.a-cala → த. அசலம்]

பொன்னஞ்சிலம்பு *pon-n-an-cilampu,* பெ. (n.) *பொன்மலை,* 1, 2, 3.பார்க்க; *see ponmalai,* 1,2,3. *'அத்த மென்னும் பொன்னஞ் சிலம்பு கதிரோன் மறைதலும்'* (இறை. 18, பக், 142, மேற்கோள்.)

[பொன் + பொன்னம் + சிலம்பு]

பொன்னடர் *pon-n-adar,* பெ. (n.) தகட்டுப் பொன்; fine gold leaf. *'பசும் பொன்னட ராறு கோடி'* (சீவக. 1973)

[பொன் → அடர்]

பொன்னணி-தல் *pon-n-ani-,* செ.குன்றா.வி. (v.t.) *பொன்புனை* பார்க்க; *see, ponpunai* *'கன்னியன்னா டன்னைப் பொன்னணிவான்'* (இறை. 23, பக். 164. மேற்கோள்)

[பொன் → அணிதல்]

பொன்னத்துப் பெட்டி *ponnattu-p-petti,* பெ. (n.) திருமணத்தில் தாலி கூறைகள் எடுத்துச் செல்லும் பெட்டி; basket in which the tāli and wedding saree are carried in a marriage (j.)

[பொன் + பொன்னத்து + பெட்டி]

பொன்னப்பிரகம் *pon-nappirakam,* பெ. (n.) சாக்காய்பொன்வகை; (சங்.அக.) a kind of mica.

[பொன் → அப்பிரசம்]

[Skt.abhraka → த. அப்பிரகம்]

பொன்னம்பர் *pon-n-ampar,* பெ. (n.) ஒருவகை மணப் பண்டம்; a kind of amber. *'புழுகு பொன்னம்பர் பூவம்பர் பொங்கவே'* (திருக்காளத், 4. பஞ்சாக். 55) (செ.அக.)

[பொன் → அம்பர்]

பொன்னம்பல அடிகள் *ponnampala-adikal,* பெ. (n.) 1. 'கைவல்ய நவநீதம்' என்ற நூலுயும் பகவத் கீதைக்குச் சொற்பொருளு எழுதியுள்ளார்; the outhor of kaivalya-navanitam, 2. *'இரு சமய விளக்க சோதி''* என்ற நூலை எழுதியவர். காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர். an author of eru-samaya-vilakka-soti, in kanchipuram.

பொன்னம்பல சிவம் *ponnampala-sivam,* பெ. (n.) மறைவனத்திறை மாலை, தேசியகீதக் கொத்து, குமார விநாயகர் பதிகம் போன்ற நூல்களை இயற்றியவர். the author of poetry viz maraivanat-tiraimālai, tāciyakitak-kottu, etc.

பொன்னம்பலத்தார் *pon-n-ampala-ttār,* பெ. (n.) கைக்கோளர் சாதியைச் சார்ந்த இரந்துண்ணும் பிரிவினர். beggars attached to the kaikkōla caste.(e. t. iii. 35.);

[பொன்னம்பலம் →பொன்னம்பலத்தார்]

[பொன் + அம்பலத்தார்]

பொன்னம்பலதாசர் *pon-n-ampala-tācar,* பெ. (n.) *'தில்லை சிவகாம சௌந்திரி திருவிரட்டைமணிமாலை'* நூலை இயற்றியவர், the author of tillai-sivakama-sountari-tiruviratti-mani-malai

பொன்னம்பலம் *pon-n-ambalam,* 1. பொன்னாலமைந்த கூடம் golden hall (சிலப். பதிகம், 41, உரை), 2. தில்லையிலுள்ள பொற்சவை; the golden hall of chidambaram. *'பொன்னம் பலத்து மேவியாடல் புரியா நின்றவர்'* (பெரியபு. திருநாவுக். 175.)

[பொன் + அம்பலம்]

பொன்னம்பாளை pon-nam-bālai, பெ. (n.) நெல்வகை; a kind of paddy (a.)

[பொன் → பொன்னாம் + பாளை]

பொன்னம்மாள் ponnammāl, பெ. (n.) *'சிவானந்த சாரம்'* எனும் நூல் இயற்றியவர் the author ofsivānanta-sāram.

பொன்னரி[1] pon-n-ari, பெ. (n.) கிண்கிணி முதலியவற்றுளிடும் பொற்பரல்; bead of gold inside a thinking ornament. *'பொன்னரிய கிண்கிணியும்'* (சீவக.2921.)

[பொன் + அரி]

பொன்னரி[2]–த்தல் pon-n-ari-, செ.கு.வி. (v.i.) வேறு பொருள்களினின்றும் தங்கத்தைப் பிரித்தெடுத்தல்; to sift gold from other things (w.)

[பொன் + அரித்தல்]

பொன்னரிதாரம் pon-n-aritāram, பெ. (n.) அரிதாரவகை orpiment, a sulphide of arsenic. (பதார்த்த.1158.)

[பொன் + அரிதாரம்]

பொன்னரிமாலை pon-n-arimālai, பெ. (n.) கழுத்தணிவகை; a kind of gold necklace. *'தோளிற்றோன்றும் பொன்னரிமாலை'* (கம்பரா.மாயாசன.5.)

[பொன் + அரி + மாலை]

பொன்னரியமாலை pon-n-ariya-mālai, பெ. (n.) *பொன்னரி மாலை* பார்க்க; see *pon-n-ariyimalai* (யாழ்.அக.).

[பொன் + அரி → அரியம் + மாலை]

பொன்னலரி poṉ-ṉ-alari, பெ. (n.) 1. ஈழத்தலரி பார்க்க, (மூ.அ.); pagoda tree. 2. அலரிவகை; exile oleander (l.)

[பொன் + அலரி]

பொன்னவன் poṉṉavaṉ, செ.(n.) 1. பொன்போல் அருமையானவன்; one precious like gold. *'முன்னவனுலகுக்கு முழுமணிப் பொன்னவன்'* (தேவா.1069,8) 2. வியாழன்; jupiter, as the golden planet. 3. இரணியகசிபு, hiranya kasibu. (w.) 4. கனாநூலியற்றிய புலவர்; the author of kaṉāṉūl, a treatise on dreams.

[பொன் → பொன்னவன்]

பொன்னறுவிலி poṉṉaṟuvili, பெ. (n.) மரவகை; golden sebestan.

[பொன் + நறுவிலி]

பொன்னறை poṉ-ṉ-aṟai, பெ. (n.) 1. பொற்பேழை; golden chest *'பல்கலமேதகப் பெய்ததோர் பொன்னறைதான் கொடுத்தான்'* (சீவக.237.) 2. அரசன் தங்கும் எழில்மண்டபம்; king's apartments. *'பொன்னறையு ளின்னமளிப் பூவணையின் மேலோன்'* (சீவக.2035.) 3. கருவூலம்; place where treafure and jewels are kept. *'விளங்கு பொன்னறையுள் விழுநிதிப் பேழையுள்'* (பெருங்.உஞ்சைக்.38, 210.)

[பொன் + அறை]

பொன்னன் poṉṉaṉ, பெ. (n.) 1. பொன்னுடைய யோன்; one who has gold. (நன்.276,உரை.) 2. *பொன்னவன்,* 1 பார்க்க; see *poṉṉavan,* 1 *'என்ன .... அடியேன்றனமாகியபொன்னன்'* (தேவா.784,2.) 3. சிறியவன்; urchin, small boy. (w.) 4. அருகக் கடவுள்; arhat (w.) 5. *பொன்னவன்* 3 பார்க்க; see *poṉṉavan,* 3 *'பொன்னன் பைம்பூ ணெஞ்சிடந்து'* (திவ்.பெரியதி.3,4,4.)

பொன்னாகத்தான் poṉ-ṉ-ākattāṉ, பெ. (n.) *பொன்னவன்* 3 பார்க்க; see *poṉṉavan.* *'பொன்னாகத்தானை நக்கரியுருவமாகி நகங்கிளர்ந்திடந்து'* (திவ்.பெரியதி.5,9,5.)

[பொன் + ஆகத்தான்]

பொன்னாகனார் poṉṉākaṉār, பெ. (n.) கழகக்காலப் புலவர் குறுந்தொகையில் இவர் பாடல்கள் இடம்பெற்றுள்ளன; a sankam poet.

பொன்னாங்கண்ணி poṉ-ṉ-āṉ-kaṇṇi, பெ. (n.) 1. *பொன்னாங்காணி* பார்க்க; see *poṉ-ṉ-āṅkāṇi* (இ.வ.) 2. உணவுக்குப் பயன்படும் கீரை; a kind of green's *'கண்ணுக்கினிய பொன்னாங்கண்ணி'* (பழ.) பொன்னாங் கண்ணியைப் புளியிட்டு ஆக்கினால் உண்ணாப் பெண்ணும் உழக்கு உண்பாள் (பழ.)

[பொன்னாங்காணி → பொன்னாங்கண்ணி]



பொன்னாங்காணி poṉ-ṉ-āṅ-kāṇi, பெ. (n.) பூடுவகை a plant growing in damp places. (பதார்த்த.349.);

[பொன் + பொன்னாம் + காணி]

பொன்னாங்காணிச் சக்களத்தி poṉṉāṅ-kāṇi-c-cakkalatti, பெ. (n.) பொன்னாங்காணி போன்ற பூடுவகை; a plant resembling poṉṉaṅkāṇi.

பொன்னாங்காய் poṉ-ṉ-āṅ-kāy, பெ. (n.) *பொன்னாங்கொட்டை* பார்க்க; see *poṉ-nāṅkoṭṭai*.

[பொன் → பொன்னாம் + காய்]



பொன்னாங்கொட்டை poṉ-ṉ-āṅ-koṭṭai, பெ. (n.) பூவந்தி[1],**1** பார்க்க; (m.m.**843.**)

[பொன் → பொன்னாம் + கொட்டை]

பொன்னாசி[1] poṉṉāci, பெ. (n.) அரத்தம் வடியும் மூக்கு; bleeding nose.

[பொன் + skṭ. nāsikā. *த. நாசி]*

பொன்னாசி[2] *poṉ-ṉ-āci,* பெ. (n.) ஆண்குறி; penis. *'குழந்தை பொன்னாசியில் எறும்பு கடித்தது'*. (இ.வ.)

[பொன் + skṭ. nāsikā. *நாசி]*

பொன்னாசியுடைகை *poṉṉāci-y-uḍaikai,* பெ. (n.)மூக்கிலிருந்துகுருதிவடிகை; nose-bleed, epistaxis.

*[பொன் +*skṭ. nāsikā. *நாசி + உடைகை]*

பொன்னாசை *poṉ-ṉ-ācai,* பெ.(n.) பொருளில் வைக்கும் பற்று. desire of wealth, avarice.(கைவல்.தத்.1.)

[பொன் + ஆசை]

பொன்னாட்சி *poṉ-ṉ-āṭci,* பெ. (n.) வியாழக்கிழமை; thurs day, as the day presided over by jupiter. *'உரோகிணி யூர்ந்த வொளிமதி யொண் பொன்னாட்சி'* (சீவக.620.)

[பொன் + ஆட்சி]

பொன்னாடை *poṉ-ṉ-āḍai,* பெ. (n.) பொன்னிழை கொண்டு நெய்த துணி; gold coth; gold bordered silk cloth. *'பொன்னாடை புனைந்தானும்'* (கம்பரா.மாரீச.4.)

[பொன் + ஆடை]

பொன்னாந்தகரை *poṉ-ṉ-ān-takarai,* பெ. (n.) *பொன்னாவிரை* பார்க்க; see *poṉṉavirai* (பைஷஜ.)

[பொன் → பொன்னாம் + தகரை]

பொன்னாந்தட்டான் *poṉ-ṉ-ān-taṭṭāṉ,* பெ. (n.) நெஞ்சிடத்தே மஞ்சணிறம் வாய்ந்த ஒருவகைக்குருவி yellow-breasted thrush, as gold coloured. (பதார்த்த.900); **2.** தட்டாரப் பூச்சி பார்க்க; dragon-fly. (இ.வ.)

[பொன் → பொன்னாம் + தட்டான்]

பொடுதலை

பொன்னாவிரை

பேய் மிரட்டி



பொன்னாங்காணி



பொன்னாந்தலை *poṉ-ṉ-āṉ-talai,* பெ. (n.) வெண்ணிறமுள்ள கடல்மீன்; sea-bream, small sea-fish, whitish.

பொன்னாம்பழம் *poṉ-ṉām-paḻam,* பெ. (n.) நெய்க்கொட்டான்பார்க்க; soap-nut.(மலை.)

பொன்னாம்பூ *pon-ṉ-ām-pū,* பெ. (n.) *பொன்னாவிரை* பார்க்க; see *poṉṉāvirai.* (மலை.)

பொன்னாயகன் *poṉṉāyakaṉ,* பெ. (n.) நெல்வகை; a kind of paddy. *'கறுப்பன் சின்னட்டி பொன்னாயகன்'* (பறாளை.பள்ளு.23.)

[பொன் + நாயகன்]

பொன்னாவாரை *poṉ-ṉāvārai,* பெ. (n.) *பொன்னாவிரை* பார்க்க; see *poṉṉavirai.*

[பொன் + ஆவிரை → ஆவாரை]

பொன்னாவிரை *poṉ-ṉ-āvirai,* பெ. (n.) 1. செடிவகை; fetid cassia, (a.) 2. பேயாவிரை negro coffee (l) 3. மஞ்சட் கொன்றை; siamese tree senna. (k.r.).

[பொன் + ஆவிரை]

பொன்னி *poṉṉi,* பெ. (n.) 1. காவிரி. (திவா.) the kāvēri. *'பொன்னிவளம் பெருகும்'* (திவ்.பெரியதி.7,8,3.). 2. எட்டாம்பாட்டன்; ancestor of the 8th generation (j.) 3. *பொன்னாசி*¹ பார்க்க; see *poṟṟāci.*

[பொன் → பொன்னி]

'இ' உடைமைப்பொருள் பெயரீறு

பொன்னிக்குடமுடைதல் *ponni-k-kudamudaital,* பெ.(n.) *பொன்னாசியுடைகை* பார்க்க; (m.l.); see *poṟṟāciyuṭaikai.*

பொன்னிடம் *poṉ-ṉ-idam,* பெ. (n.) உச்சித்துளை; fontanells *'பொன்னிடந்தேறி'* (திருப்பு.586.)

[பொன் + இடம்]

பொன்னித்துறைவன் *poṉṉi-t-tuṟaivaṉ,* பெ. (n.) சோழன்; chōḻa king a lord of the vāvēri region. *'பொன்னித்துறைவனை வாழ்த்தினவே'* (கலிங்.581,புதுப்.)

[பொன்னி + துறைவன்]

பொன்னிநாடன் *poṉṉi-nādaṉ,* பெ. (n.) சோழன்;choḻa king.*'வண்டல்பாய் பொன்னிநாடனை'* (கலிங்.135.)

[பொன்னி + நாடன்]

பொன்னிநாடு *poṉṉi-nādu,* பெ. (n.) சோழநாடு; chōla country. *'தியாகமா விநோதன் தெய்வப் பொன்னி நாட்டு'* (கம்பரா.மருந்து.58.)

[பொன்னி + நாடு]

பொன்னிமிளை *ponnimiḷai,* பெ. (n.) தாதுப்பொருள் வகை; gold-coloured antimony.

[பொன் + நிமிளை]

பொன்னியாயி *ponni-y-āyi,* பெ. (n.) ஒரு சிற்றூர்த் தெய்வம்; (g.tp.d.1,89.). a village goddess.

[பொன்னி + ஆய் → ஆயி]

பொன்னியுடைதல் *ponni-y-udaital,* பெ. (n.) *பொன்னாசியுடைகை* பார்க்க (இ.வ.); see *porrāciyudaikai*

[பொன்னி + உடைதல்]

பொன்னிரேக்கு *pon-n-irēkku,* பெ. (n.) பொன்னிலைத் தகடு; gold-foil, gold-leaf. (இ.வ.)

[பொன் + ரேக்கு → இரேக்கு]

[U. rēk → *த. இரேக்கு]*

பொன்னிலக்கம் *pon-n-ilakkam,* பெ. (n.)
1. எண்வாய்பாடு; numberation table.
2. பொன்னிறை வாய்பாடு; table of gold weight. (m.m.)

[பொன் + இலக்கம்]

பொன்னிலம் *ponnilam,* பெ. (n.) பொன்னுலகம்; svarga, as the golden land. 'பொன்னஇலத் தெழுந்தோர்.......பூங்கொடி' (சீவக.1457)

[பொன் + நிலம்]

பொன்னிழை *pōn-nilai,* பெ. (n.) *பொற்சரிகை* பார்க்க; see *porcarikai.*

[பொன் +இழை]

பொன்னிற்பொதி—தல் *ponnir-poti-,* செ.குன்றா.வி.(v.t.)பொன்போலப் பேணிக்கொள்ளுதல்; to take great care of; to treasure. '*பொன்னிற் பொதிந்தேன்*' (சிலப்.16,13.)

[பொன் → பொன்னில் + பொதி—]

பொன்னிறமாட்சி *ponnira-mātci,* பெ. (n.) *பொன்னிமிளை* பார்க்க; (சங்.அக.) see *ponnrimilai.*

பொன்னிறத்தி *ponnratti,* பெ. (n.) கண்டங்கத்திரி; a thorny shrubsolanum jacquini.

பொன்னுக்காதி *ponnkkāti,* பெ. (n.) களிம்பற்ற செம்பு; copper purified which does not rust.

பொன்னுக்கு வீங்கி *ponnukku-vingi,* பெ. (n.) கூகைக்கட்டு; mumps, parotities, believed to be cured by wearing a gold ornament.

[பொன் → பொன்னுக்கு + வீங்கி]

பொன்னுச்சாமிக்கவிராயர் *ponnu-c-cami-k-kavirāyar,* பெ. (n.) காதற்பிரபந்தம் என்ற நூலின் ஆசிரியர்; an author of katarpirabantam.

பொன்னுச்சாமித்தேவர் *ponnu-c-camit-tāvar,* பெ. (n.) 'இராச மன்னார்கோயில்(குடி) தலபுராணம் இராசமன்னனார் அலங்காரக் கோவை' ஆகிய நூல்களை இயற்றியவர். the author of erāsamannār-koil-talapurānam and erāsamannār-alakāram-kōvai

பொன்னுச்சாமிப்பிள்ளை *poṉṉusamip-pillai,* பெ. (n.) 'கோடாங்கி மாலை' எனும் நூல் இயற்றியவர். the author of koṭānki-mālai.

பொன்னுடம்பு *poṉ-ṉ-udambu,* பெ. (n.) 1. தேவ உடம்பு; body of a divine being, as golden. *'தவத்துடம்பு நீங்கினார்.... பொன்னுடம்படைந்த தொப்பவே'* (சீவக.325.) 2. பெண்குறி; pudendum muliebre. (குஞ்.).

[பொன் + உடம்பு]

பொன்னுருக்கு—தல் *poṉ-ṉ-urukku-,* பெ. (n.) நற்காலத்தில் தாலிசெய்யப் பொன்னை உருக்கிவிடுதல்; to perform the ceremony of melting gold for the tāli at an auspicious time.

[பொன் + உருக்கு—]

பொன்னுருட்டு *poṉ-ṉ-uruṭṭu,* பெ. (n.) உருட்டாயமைத்த பொன்மோதிரம்; plain gold ring, hoop of gold. (w.)

[பொன் + உருட்டு]

பொன்னுரை *poṉ-ṉ-urai,* பெ. (n.) 1. உரைகல்லில் உரைத்த பொன்னின் தேய்மானம் streak of gold on a touchstone. *'பொன்னுரைகடுக்குந்திதலையர்'* (திருமுரு.145.). 2. ஒருவகை நெல்; a kind of paddy. (a.)

[பொன் + உரை]

பொன்னுலகம் *poṉ-ṉ-ulakam,* பெ. (n.) 1. வானுலகம்; suarga. *'பொன்னுலகத்துள்ள துப்புரவு'* (சீவக.527.) 2. (jaina) *பொன்னெயில் வட்டம்* பார்க்க; see *poṟṟeyil-vaṭṭam. 'பொன்னுலகத்துய்க்கு மூழ்வினை'* (சீவக.380.)

[பொன் + உலகம்]

பொன்னுலகாளி *poṉ-ṉ-ulakāḷi,* பெ. (n.) வேந்தன் (இந்திரன்) (பிங்.); indra.

[பொன் + உலகு + ஆளி]

ஆளி–'இ' உடைமைப்பெயரீறு

பொன்னுலகு *poṉ-ṉ-ulaku,* பெ. (n.) பொன்னுலகம் பார்க்க, *'பொன்னுலகாள'* (தேவா.293,16.)

[பொன் + உலகு]

பொன்னுறுமாலை *poṉ-ṉ-uṟumālai,* பெ. (n.) பொன்னிழை கலந்து நெய்த கைத்துண்டு வகை; a hand kerchief interwoven with gold. (w.)

[பொன் + உறு+மாலை]

பொன்னூசல் *poṉ-ṉ-ūcal,* பெ. (n.) பொன்னாலாகிய ஊஞ்சல்; golden swing. *'பொன்னூசலாடாமோ'* (திருவாச.16,1.)

[பொன் + ஊசல்]

பொன்னூமத்தை *poṉ-ṉ-ūmattai,* பெ. (n.) 1. செடிவகை. (பிங்.); purple stramony 2. செடி வகை; a species of zanthium orientale.

[பொன் + ஊமத்தை]

பொன்னூல் *ponnūl,* பெ. (n.) **1.** பொற்கம்பி. (s.i.i.ii,**156,42.**); gold wire. **2.** கழுத்தணிவகை; gold necklace of several strands. **3.** பொற்பூணூல்; golden sacred thread. *'புடையார் பொன்னூலினன்'* (திவ்.திருவாய். **3,7,4.**)

[பொன் + நூல்]

பொன்னெயில் *poṉ-ṉ-eyil,* பெ. (n.) *பொன்னெயில் வட்டம்* பார்க்க; see *ponneyil-vaṭṭam.* *'குபேரன் செய்த விருப்புறு பொன்னெயிற்குள்'* ..... ஆதிமூர்த்தி (சூடா.**4,1.**)

[பொன் + எயில்]

பொன்னெயில் வட்டம் *poṉ-ṉ-eyil-vaṭṭam,* பெ. (n.) பார்க்க, சமவசரணம். (jain) heavenlypavilion. *'பொன்னெயில் வட்டத்திற்கு செலுத்தும் ஊழ்வினை'* (சீவக.**380**,உரை,)

[பொன்னெயில் + வட்டம்]

பொன்னெயிற்கோன் *poṉ-ṉ-eyiṟ-kōṉ,* பெ. (n.) *பொன்னெயிநாதன்* பார்க்க; (சூடா.) see *poṉ-ṉ-eyiṟ-kōṉ.*

பொன்னெயினாதன் *poṉ-ṉ-eyinātaṉ,* பெ. (n.) அருகக் கடவுள். (திவா.) (jaina.) arhat, as lord of the camavacaranam.

[பொன்னெயில் +skt.nātha. *த.நாதன்]*

பொன்னெழுத்து *poṉ-ṉ-eḷuttu,* பெ. (n.) ஒருவகைத் துகில். a kind of cloth (சிலப்.**14,108**,உரை.).

[பொன் + எழுத்து]

பொன்னேர் *poṉ-ṉ-ēr,* பெ.(n.) **1.** பருவ காலத்தில் நல்லநாளில் முதன் முறையாக உழுங்கலப்பை; the plough used on an auspicious day for the first time in a season. *'பொன்னேர் பூட்டி நின்றோர்'* (சிலப்.**10,135**,உரை.) **2.** *பொன்னேர்க்கட்டு* பார்க்க; (இ.வ.) see *poṉ-n-ērkaṭṭu.*

[பொன் + ஏர்]

பொன்னேர்க்கட்டு *poṉ-ṉ-ērkaṭṭu,* பெ. (n.) பருவகாலத்தில் நல்ல நாளிற் செய்யும் முதலுழவு; first ploughing of a season on an auspicious day with appropriate ceremonies (w.)

[பொன்னேர் + கட்டு]

பொன்னேர்ப்பூட்டு *poṉ-ṉ-ē-p-pūṭṭ,* பெ. (n.) *பொன்னேர்க்கட்டு* பார்க்க; see *poṉ-ṉ-ērkaṭṭu* (w.)

[பொன்னேர் + பூட்டு]

பொன்னையசாமிகள் *poṉ-naiya-sāmikaḷ,* பெ. (n.) 'சதானந்த சதகம்' என்றநூலை இயற்றியவர்; the author of satānanta-satakam.

பொன்னையாபிள்ளை.க *ponnaiyāpillai. ka,* பெ. (n.) இசையில், தஞ்சைப்பெருவுடையான் பேரிசை ஆகிய நூல்களை இயற்றியவர்; the author of esaiyial, and tancai-p-peruvuṭaiyan-pērisai

பொன்னோர் *poṉṉōr,* பெ. (n.) தேவர்கள்; dēvās. (பெருங். இலாவாண.7,168, பாடபேதம்)

[பொன் → பொன்னோர்]

பொன்னோடை *poṉṉōdai,* பெ. (n.) பொன்னாற் செய்த நெற்றிப்பட்டம்; thin plat of gold worn on the forehead, as an ornament or badge of distinction. *'பொன்னோடை நன்றென்றாள் நல்லாளே'* (முத்தொ.58)

[பொன் + ஓடை]

பொன்னோதுவார்,சு *poṉṉōtuvār,su,* பெ. (n.) 'திருஞான சம்பந்த மூர்த்திநாயனார் புராண வசனம்' எனும் நூலை இயற்றியவர்; the author of tiruñana-sammanta-murtti-nayanār-purāna-vasanam.

பொன்னோலை *poṉ-ṉ-ōlai,* பெ. (n.) மகளிர் காதணி வகை; gold ear-ring for a woman. 'பொன்னோலை வட்டம் பொழிந்து மின்னுகுப் (சீவக.677.)

[பொன் + ஓலை]

பொனத்தி *poṉatti,* பெ. (n.) 1. நீல நிறமுள்ளதும் ஆறுஅடி வளர்ச்சியுடையதுமான ஆற்றுமீன் வகை; a river-fish, bluish, attaining 2. நீல நிறமுள்ள ஆற்றுமீன் வகை. a river-fish with long maxillary barbels, bluish.

போ¹ *pō,* தமிழ் நெடுங்கணக்கில் 'ப்' என்ற மெய்யெழுத்தும், 'ஓ'என்றநெட்டுயிரெழுத்தும் சேர்ந்து உண்டான உயிர்மெய்யெழுத்து; the compound of ப் and ஓ.

[ப்+ஓ =போ]

போ²—தல் *pō-,* செ.கு.வி. (v.i.) **1.** செல்லுதல்; to go, proceed; to go away, depart. *'மாமலர் கொய்ய... யானும் போவல்'* (மணிமே. 3, 83.) **2.** அடைதல்(வின்); to reach a destination (w.) **3.** உரியதாதல்(வின்); to belong **4.** பிறத்தல்; to be born. *'வணிகர் மரபிற் போந்தோன்'* (உபதேசகா. சிவபுண். 153) **5.** நீண்டு செல்லுதல்; to lie, pass through, as a path. *'தென்கரைக்கு நடுவாகப் போயின இடை கழி'* (T.A.S. i. 189) **6.** தகுதியாதல்; to be proper, admissible passable. *'அப்படிச் செய்யப் போகாது'(வின்)* **7.** நெடுமையாதல் (தொல். சொல். 317.); to become long; to be stretched out **8.** நேர்மையாதல்; to become straight. *'வார்தல் போகல்.... நேர்பு நெடுமையும் செய்யும் பொருள'* (தொல். சொல். 317); **9.** பரத்தல் to extend, spread *'விசும்பினு ஞாலத்தகத்தும் வளியே யெதிர்போம் பல்கதிர் ஞாயிற்றொளி'* (கலித். 144, 40.) **10** நிரம்புதல்; to be full. *'நலந்துறை போய நங்கை'* (சீவக. 2132) **11.** மேற்படுதல்; to exceed transcend. *'ஆயிர மல்ல போன'* (கம்பரா. மாயாசனக. 14.) **12.** ஓங்குதல்; to shoot up; to be tall. *'கள்ளிபோகிய களரியம் பறந்தலை'* (புறநா. 237.) **13.** நன்கு பயிலுதல்; to become expert in. *'முத்தமிழ்த் துறையின் முறை போகிய வுத்தமக் கவி'* (கம்பரா. சிறப்புப். 9.) **14.** கூடியதாதல்; to undergo, experience, to go through the process of. *'மூச்சுவிடப் போகவில்லை'* **15.** பிரிதல்; to separate . *'புலம்பப் போகாது'* (பரிபா. 11, 118)

16. ஒழிதல்; to cease. *'மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப'* (புறநா. 10) 17. நீங்குதல்; to leave, abandon. *'நூல்போன சங்கிலி'* (பதினொ. திருத். திருவந். 69.) 18. கழிதல்; to go by, pass over; to lapse. *'போய காலங்கள்'* (திவ். திருவாய். 2, 6, 10) 19. மறைதல், to vanish, disappear. 'ஒளியவன்.....தேரும் போயிற்று' (திவ்.பெரியதி. 8,6,6) 20. காணாமற் போதல்; to be missing; to be lost. *'போன பொருள் திரும்பாது'* 21. மாறுதல்(வின்); to change, as from one state to another (w.) 22. கழிக்கப் படுதல்; to be subtracted. *'ஆறிலே இரண்டு போக'* 23. வகுக்கப் படுதல்; to be diveded. *'நூறில் பன்னிரண்டு எட்டுத்தரம் போகும்'* 24. சாதல்; to perish, due *'தந்தையார்; போயினார் தாயரும் போயினார் தாமும் போவார்'* (தேவா. 692, 2) 25. முடிவாதல்; to be conclusive. *'இன்பமாவதே போந்த நெறி என்றிருந்தேன்'* (தாயு. சின்மயானந்த. 5.) 26. ஒலியடங்குதல்; to be hushed. *'முரசெலாம் போன'* (கம்பரா. முதற்போ. 232) 27. புணர்தல்; to cohabit. *'அவனோடு போனான்'*–

[ஊ → ஒ → போ → போ]

போ³–தல் pō-, aux. an aux. (a) தொடங்குவதைக் குறிக்கும் துணைவினை; expressing what is about to happen. *'அதைச் செய்யப் போகிறான்'* (b) emphasising the meaning of the main verb பகுதிப் பொருளையே வற்புறுத்தும் துணைவினை. *'தூங்கிப் போனான்'*

க. ஒரி. போகு ம. போ

[போ→போ – தல்]

போ⁴ *Pō,* இடை. part. ஓர் அசைநிலை (தொல்.சொல். 281.); an expletive.

போக்கடா *Pōkkaḍā,* பெ. (n.) வம்பன்; (இ.வ.) rowdy.

[போக்கு + கடா]

போக்கடி–த்தல் *Pōkkaḍi-,* செ.குன்றாவி. (v.t.) 1. இழத்தல்; to lose. *'கான் மாரீசன் என்றவரையும் போக்கடித்தேன்'* (இராமநா. உயுத். 44.) 2. வீணாக்குதல்(வின்); to waste (w.) 3. விலக்குதல்(வின்); to dispel, disperse, banish, chase away 4. போகச் செய்தல்(வின்); to cause to go.

[போ→போக்கு + அடி → போக்கடி]

போக்கடி² *Pōkkaḍi,* பெ. (n.) 1. இழக்கை(வின்); losing, loss. 2. பொருளாதரவு(வின்); pecuniary means. 3. தற்போக்கு; liberty of action. (w.) 4. கழுவாய்; remedy. *'போக்கடி யற்ற தசை'* (ஈடு, 9, 1, 2.) 5. காலக்கெடு; opportunity, scope. *'மேல் வார்த்தை சொல்கைக்கு ஒரு போக்கடியுமில்லை'* (ஈடு. 6, 2, 5.)

[போ→போக்கு + அடி → போக்கடி]

போக்கடிப்பான் *Pōkkaḍippāṉ,* பெ. (n.) ஒரு வசைச் சொல்; a curse, meaning 'loser'

[போக்கடி →போக்கடிப்பான்]

போக்கடியறு–தல் *Pōkkaḍi-y-aṟu,* செ.கு.வி. (v.i.) 1. புகலிடமில்லையாதல்; to lose one's means of livelihood. 2. செயலறுதல் (குருபரம், 342); to be helpless, to be laid prostrate.

[போக்கடி + அறு–,]

போக்கணங்கெட்டவன் *Pōkkanan-keṭṭavaṉ,* பெ. (n.) *போக்கறுவான்* (கொ.வ.) பார்க்க; see *pōkkaṟuvāṉ.*

[போக்கு → போக்கணம் + கெட்டவன்]

போக்கணம்[1] *Pōkkaṇam,* பெ. (n.) புகல்; refuge, way of escape.

[போக்கு → போக்கணம்]

அணம்—பெயரீறு

போக்கணம்[2] *Pōkkaṇam,* பெ. (n.) நாணம்(வின்) shame, sense of shame

[போக்கு + அணம்]

போக்கணம்[3] *Pōkkaṇam,* பெ. (n.) கட்டுச்சோறு; viaticem, food for journey.

[பொக்கணம் → போக்கணம்]

போக்கம் *Pōkkam,* பெ. (n.) பொலிவு(சூடா); beauty, splendour.

[பொக்கம் → போக்கம்]

போக்கறு[1]**—தல்** *Pōkkaṟu,* செ.கு.வி. (v.i.) 1. குற்றம் நீங்குதல்; to be faultless. "போக்கறுபனுவல்" (தொல். பாயி). 2. கதியறுதல்; to lose one's means of livelihood. *'போக்கற்றுச் செயல்மாண்டு நின்ற நிலை'* (ஈடு, 6, 10, 10)

[போக்கு + அறு—,]

போக்கறு[2]**—தல்** *Pōkkaṟu,* செ.குன்றாவி(v.t.) முட்டின்றிச் செய்தல்; to make no depault. கோயில் தேவைசாரம் சந்திராதித்தவரை போக்கறுப்பலனாகச்சிலாலேசை பன்னிக்கொடுத்தோம் (S.I.I.iv.102)கடமை தட்டுப்போக்கறுக்கபோணுமென்று மகாசபையோம் சம்மதித்து(S.I.I.viii,165)

[போக்கு + அறு—த்தல்]

போக்கறுதி *Pōkkaṟudi,* பெ.(n.) புகலின்மை; want of an alternative. 'முன்பு பலபடியுஞ் சொன்னதனையேபோக்கறுதிலாற் பின்புஞ் சொல்லுகின்றேன்' (நிலகேசி. 392, உரை)

[போக்கு + அறு → அறுதி]

போக்கறுவான் *Pōkkaṟuvvāṉ,* பெ. (n.) 1. போக்கிடமில்லாதவன்; one who has nothing to fall back upon; one who has no means of living; a destitute person. *'போக்கறுவான் வீட்டிற் புகுந்தான்'* (விறலிவிடு. 845)

[போக்கறு → போக்கறுவான்]

போக்கன் *Pōkkaṉ,* பெ. (n.) 1. வழிப்போக்கன்; wayfarer, traveller. 2. வெளிநாட்டுக்காரன்; foreigner. 3. பயனற்றவன்; worthless person. 4. கயவன்(வின்); mean fellow

க. போக ம. போக்கந

[போக்கு → போக்கன்]

போக்காட்டு—தல் *Pōkkāṭṭu-,* செ.குன்றாவி. (v.t.) 1. அனுப்பிவிடுதல்; to send away. 2. வேற்றிடம் போகுமாறு சாக்குச் சொல்லி விடுத்தல்; to send to another place or to a third person, excusing oneself.

[போக்கு → காட்டு—,]

போக்காடு¹ *Pōkkāḍu,* பெ. (n.) தீவினைகளைப் போக்கும் பொருட்டு காட்டெல்லையில் போகவிடப்படும் ஆட்டுக்கடா; scape goat.

[போக்கு → ஆடு]

போக்காடு² *Pōkkāḍu,* பெ. (n.) இறப்பு; death. (யாழ்.அக.)

[போ → போக்காடு]

போக்காளன் *Pōkkāḷan,* பெ. (n.) 1. இளமையில் இறந்தோன்; man who died a premature death. 2. பயனற்றவன்; worthless man.

[போக்கு + ஆள் + அன் → போக்காளன்]

போக்காளி *Pōkkāḷi,* பெ. (n.) 1. இளமையில் இறந்தவ–ன்–ள்; man or women who died a premature death. 2. ஒன்றுக்கும் உதவாதவ–ன்–ள்; workless person.

[போக்கு + ஆள் + இ → போக்காளி]

'இ' உடைமைப் பொருள் பெயரீறு

போக்கி *Pōkki,* வி.எ. (adv.) 1. *போக்கன்,*2 (யாழ்.அக.) பார்க்க; see *pōkkan.* 2. பின்பு; afterwards. *'இவை போக்கிச் சொல்லுதும்'* (தொல். பொ. 444, உரை) 3. தவிர; besides. *'கல்யாணகுண விசயமான இத்தனைப் போக்கிப் புறம் போயிற்றில்லை'* (ஈடு, 3, 1, 6)

[போக்கு → போக்கி]

போக்கிச் சொல்(லு)–தல் *Pōkki-crcol,* செ.கு.வி. (v.i.) பின்னர்க் கூறுதல்; to deal with, in a latter place. 'அவை இரண்டு திணைக்கும் விரவுவினை ஆதலாற் போக்கிச் சொல்லுதும்' (நேமி நா. 41, உரை.)

[போக்கு+ சொல்–,]

போக்கிடம் *Pōkkiḍam,* பெ. (n.) 1. ஒதுக்கிடம்; way of escape. 2. புகலிடம்; place of refuge. *'போக்கிடங் காணேன்'* (திருவாச. 23, 6)

[போக்கு → இடம்]

போக்கியல் *Pōkkiyal,* பெ. (n.) சுரிதகம் (வீரசோ. யாப். 11, உரை) ; last member of some kinds of kali-p-pā verse.

[போக்கு + இயல்]

போக்கிரி *Pōkkiri,* பெ. (n.) *போக்கிலி* பார்க்க; see *pōkkili.*

[போக்கு → போக்கிலி → போக்கிரி]

போக்கிரிசாக்கிரி *Pōkkiricākkiri,* பெ. (n.) *போக்கிலி*² (வின்) பார்க்க; see *pōkkili.*

[போக்கிரி + சாக்கிரி]

எதுகை நோக்கி வந்த மரபு இணைச்சொல்

போக்கிரித்தனம் *Pōkkiri-t-tanam,* பெ. (n.) பொல்லாச்செயல்; rascality.

[போக்கிரி + தனம்]

போக்கிலி *Pōkkili,* பெ. (n.) 1. கதியற்றவன்; one who has no refuge. (யாழ்.அக.) 2. கயவன்; (சங்.அக.) villain.

[போக்கு + இலி]

இல் + இ – இலி 'இ' உடைமைப் பொருள் பெயரீறு.

போக்கு[1]–தல் *Pōkku,* செ.குன்றாவி. (v.t.) **1.** போகச் செய்தல்; to sent, to cause to go. "பிள்ளையைப் போக்கினேன்" (திவ்.பெரியாழ். 3, 2, 1) **2.** செய்தல்; to discharge, pay, render. "வனத்துழாய்க் கணவர்க்கும் வணக்கம் போக்கினாள்" (கம்பரா. மீட்சிப். 84) **3.** செய்து முடித்தல்; to complete, finish. புரிய வேண்டுவ யாவையும் விதிமுறை போக்கி (உபதேசகா. சிவவிரத. 319) **4.** கொடுத்தல்; to give. *'கலன்களும் தூசும் போக்கினான்'* (கம்பரா. எழுச். 6) **5.** உணர்த்துதல்; inform, make known. *'கரிபோக்கினாள்'* (சீவக. 889) **6.** உட்புகுத்துதல்(வின்); to insert. **7.** கட்டுதல்; to bind. "ஏக்கழுத்து நாணாற் கரும்பினணை மென்றோள் போக்கிச் சிறைபிடித்தாள்". (பரிபா. 7, 56) **8.** மெலிவுறச் செய்தல்; to make lean. ஆக்கையைப் போக்கப் பெற்று (திருவாச. 6, 10) **9.** இல்லாமற் செய்தல்; to clear remove *'அழுக்கைப் போக்கினான்'* **10.** கழித்தல்; to pass or spend, as time. *'அவத்தமே வாழ்நாளைப் போக்குவார்'* (நாலடி. 327) **11.** அழித்தல்; to ruin, destroy, kill. ஆக்குதலளித்தல் போக்குதல். (சிவப். பிர. இஷ்ட நெடுங்கழி. 7)

[போ → போக்கு]

போக்கு[2]–தல் *Pōkku,* செ.குன்றாவி. (v.t.) கற்பித்தல்; to teach. 'ஆசார்யன் போக்கின வையேயாகிலும் சத்யந்நிதியிலே சொல்லக் கடவதல்ல' (திவ்.திருநெடுந்.13 வ்யா.)

[போ → போக்கு]

போக்கு[3] *Pōkku,* பெ. (n.) **1.** போகச்செய்கை; causing to go, letting out. **2.** வழி way, passage, exit, **3.** சுரங்கவழி(வின்); subterranean passage **4.** நடை(பிங்); walk, step, gait. **5.** மீட்சி; recovery. *'நாகம் போக்கறக் கொண்ட தேனும்'* (சீவக. 1285) **6.** புகல்; refuge. *'இலங்கை போக்கறவும்'* (கம்பரா. மாயாசனக. 83) **7.** இடம்; place. இது இந்தப்போக்கிலே கிடைக்குமா? **8.** நிலத்தியல்பு; character of land, as hilly sandy. மலைப்போக்கு, ஆற்றுப்போக்கு, **9.** மனச் சாய்வு; tendency, turn of mind, *'அவனைப் போக்குப் போல் விட்டுப் பிடிக்க வேண்டும்'* **10.** சாக்கு; excuse. **11.** பழக்கம் (யாழ்.அக.); habit **12.** நடைமுறை; manner, **13.** விருப்பம்; desire, **14.** பொலிவு; style. **15.** நீர்முதலியவற்றின் ஓட்டம்; flowilng, as of water or wind. "புணரியைப் போக்கற வடைத்தவாறும்" (கம்பரா. ஒற்றுக். 46) **16.** மலமுதலியன வெளிப்படுகை; euacuation. **17.** பறவை நூலில் ஆந்தையின் தொழிலால் குறிக்கப்படும் விளைவு(சூடா); prediction by the action of owl among pancapaksi **18.** கேடு; loss, ruin. போக்கு மதுவிளிந் தற்று (குறள். 332) **19.** செலவு; expense. **20.** இறப்பு; death. "போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே" (திருவாச. 1, 77) **21.** குற்றம்; fault, defect. போக்கறு பனுவல் (தொல். பாயி) **22.** கழிப்புக் கழிக்கை; ceremony of averting evil. **23.** மரக்கன்று;(பிங்) sapling

க. போக

[போ → போக்கு]

போக்கு[4] *Pōkku,* பெ. (n.) செல்லுகை; going, passing. *'குறும்பி னூழையும் வாயிலும் போக்கறவளைஇ'* (பு. வெ. 1, 7, கொளு)

[போ → போக்கு]

போக்கு[5] *Pōkku,* பெ. (n.) நடத்தை; conduct. *'அழகிதாயிருந்தது எம்முடைய போக்கு'* (ஈடு,1,4,7)

[போ → போக்கு]

போக்குக்கழி—த்தல் *Pōkku-k-kaḻi-,* செ.கு.வி. (v.i.) கண்ணேறு கழித்தல்; to dispel the effects of the evil eye.

[போக்கு + கழி—,]

போக்குக்காட்டு—தல் *Pōkku-k-kāṭṭu-,* செ.கு.வி. (v.i.) **1.** வழிகாட்டுதல்; to point out a way. **2.** சாக்குச் சொல்லுதல்; to give excuse. **3.** குறிப்புக் காட்டுதல்(வின்); to give an outline or clue, to suggest.

[போக்கு → காட்டு—,]

போக்குச்சாக்கு *Pōkku-c-cākku,* பெ. (n.) நொண்டிச்சாக்கு(வின்); lame excuse, pretence.

[போக்கு + சாக்கு]

போக்குச்சுற்றிப் போடு—தல் *Pōkku-c-cuṟṟi-p-pōḍu,* செ.கு.வி. (v.i.) *போக்குப் போடு*(வின்) பார்க்க; see *pōkku-p-pōḍu.*

[போக்கு + போக்கு + போடு]

போக்குச்செய்தல் *Pōkku-c-cey-* செ.குன்றாவி. (v.t.) விற்றல்; to sell. “போக்குச் செய்து பொன்வரக்காட்டுக”(கல்.)

[போக்கு + செய்—,]

போக்குச்சொல்(லு)—தல் *Pōkku-c-col,* செ.கு.வி. (v.i.) சாக்குக் காட்டுதல்; to make excuse.

[போக்கு + சொல்]

போக்குத்தெளிவு *Pōkku-t-teḷivu,* பெ. (n.) இறக்குந் தறுவாயில் உண்டாகும் நோய்த் தெளிவு; apparent abatement of disease just before death.

[போக்கு + தெளிவு]

போக்குநீக்கு[1] *Pōkku-nīkku,* பெ. (n.) **1.** போக்குவரத்து; going and coming. **2.** பாட்டை(வின்); thorough fare **3.** புகலிடம்; refuge. **4.** இடைவெளி(வின்); escape, opening. **5.** வழிமுறை(வின்); methed, way. **6.** பழக்கம்; (யாழ்.அக.) habit, practice.

[போக்கு + நீக்கு]

போக்குநீக்கு[2] *Pōkku-nīkku,* பெ. (n.) **1.** அன்பு கெழு நிலைமை(இ.வ.); amiability. **2.** ஈவிரக்கம்(கொ.வ.); kind heartedness.

[போக்கு + நீக்கு]

போக்குப்போடு—தல் *Pōkku-p-pōḍu,* செ.கு.வி. (v.i.) கண்ணேறு கழிக்க அல்லது பேய் விரட்ட உயிர்க்காவு கொடுத்தல்; to offer pali in an open or exposed place for dispelling demons or averting evil.

[போக்கு + போடு—,]

போக்குவண்டி *Pōkku-vaṇḍi,* பெ. (n.) **1.** வெறுமையாகத் திரும்பிச் செல்வதால் குறைந்த வாடகைக்குக் கிடைக்கும் வண்டி; return bandy, cart retuning empty after discharging its load and therefore available for a cheap fare. **2.** விரும்பிய இடத்திற்குச் சென்று கொண்டிருப்பதால் குறைந்த வாடகைக்குக் கிடைக்கும் வண்டி; carriage or cart going in the desired direction of its own accord and therefore available for a cheap fare.

[போக்கு + வண்டி]

போக்குவரத்து *Pōkku-varattu,* பெ. (n.) **1.** போதலும் வருதலும்; going and returning. *'புகுந்தே னென்கிற இது ஒரு போக்குவரத்து உண்டாயான்று'* (ஈடு, 6, 10, 10). **2.** ஊடாடுகை(வின்); familiar intercourse, frequent visiting, intercommunication **3.** விருந்தினர்(வின்); guests. **4.** வரவு செலவு; income and expenditure.

[போக்கு + வரத்து]

போக்குவரத்துக்கழகம் *Pōkku-varattu-kalagam,* பெ. (n.) செல்கையர் போக்குவரத்து நிறுவனம்; Public transport Department.

[போக்குவரத்து + கழகம்]

போக்குவரத்துத் துறை *Pōkku-varattu-turai,* பெ. (n.) ஆட்களையும் சரக்குகளையும் இடம் விட்டு இடம் கொண்டு செல்லும் ஊர்தி நிறுவனம்; Transport Department.

[போக்குவரத்து + துறை]

போக்குவரத்துநெரிசல் *Pōkku-varattu-nerical,* பெ. (n.) போக்குவரத்துத்தடை; hold up of traffic.

[போக்குவரத்து + நெரிசல்]

போக்குவரத்து மணியம் *Pōkku-varattu-maniyam,* பெ. (n.) விருந்தினரை வரவேற்று நலம் பாராட்டும் ஊழியர்; clerk deputed to attend on guests.

[போக்குவரத்து + மணியம்]

போக்குவரவு *Pōkku-varavu,* பெ. (n.) **1.** போக்குவரத்து பார்க்க **2.** பிறப்பிறப்பு; death and birth. *'போக்குவரவு புகிய'* (சி. போ. 2.) **3.** நிலவுரிமையை உறுதிப்படுத்தும் துறை அல்லது அலுவலகம்; settlement, a revenue term. *'போக்குவரவு கச்சேரி'* **4.** உரிமைப்பதிவு ஆவணம் மாறுகை; transfer of patta. நான் விலைக்கு வாங்கின நிலம் என்பேர்க்கு இன்னும் போக்கு வரவு ஆகவில்லை (நாஞ்.)

[போக்கு + வரவு]

போக்குவாக்கு *Pōkkuvākku,* பெ. (n.) **1.** பொலிவான தோற்றம்; good personal appearance. **2.** உடற்கட்டு; good build of body, said of a person.

[போக்கு + வாக்கு]

போக்குவிடு[1]–தல் *Pōkku-viḍu,* செ.கு.வி. (v.i.) **1.** நீர் போகவிடுதல்; to make a drain, on outlet, **2.** போக்குவை **1–** பார்க்க (w) **3.** வழிவிடுதல்; to provide a way or means of outlet.

போக்குவிடு[1]–தல் *Pōkku-viḍu,* செ.குன்றா.வி. (v.t.) **1.** செலவழித்தல்; to spend.

[போக்கு + விடு]

போக்குவீடு *Pōkku-vīḍu,* பெ. (n.) **1.** செல்லவிடுகை; sending away. **2.** சொற் செயல்களால் உணர்ச்சிக்கு வழிவிடுகை; outlet, as for one's feelings; giving vent. "பிராட்டியைக் கண்ட பிரீதிக்குப் போக்கு வீடாக" (திவ். திருமாலை. 1, வ்யா. பக். 11)

[போக்குவிடு → போக்குவீடு]

போக்குவை–த்தல் *Pōkku-vai-,* செ.கு.வி. (v.i.) **1.** கீழ்ச்சுரங்கம் அமைத்தல்; to make underground cellar for hiding treasure. **2.** செலவுக்கு வழிதேடுதல்; to find out ways of exlpenditure.

[போக்கு + வை]

போக *Pōga,* கு.வி.எ. (adv) **1.** தவிர; besides, excepting. *'போரிலிற்றவர்கள் போக மற்றவர் புறத்தி லோடியதும்'* (பிரபோத. 30, 59) **2.** பகுதிப் பொருளில் வரும் ஒரு துணைச் சொல்; an expletive of emphasis. நான் வரப்போக வேலை நடக்கவில்லை. (கொ.வ)

[போ → போக]

போக காரிகை *pōga-kārigai,* பெ. (n.) ஒரு (சிவனியக் கொண்முடிவு) நூல்; a treatise on siva siddhānda philosophy.

[போ + காரிகை]

போகடி¹–த்தல் *pōgaḍi,* செ.குன்றா.வி. (v.t.) *போக்கடி*(வின்) பார்க்க; see *pōkkaḍi*

[போக்கடி → போகடி]

போகடி² *pōgaḍi,* பெ. (n.) கொண்டிமாடு(வின்); மந்தையை விட்டுப்பிரிந்த மாடு stray cattle.

[போ → போகடி]

போகடிப் போக்கு *pōgaḍi-p-pōkku,* பெ. (n.) தற்செயல்; accident, casualness.

[போகடி + போக்கு]

போகடு¹ –தல் *pōgaḍu,* செ.குன்றா.வி. (v.t.) **1.** கழித்துவிடுதல்; to set aside, cast away. *'போகட்ட உடம்மையும்'* (சீவக. 951, உரை) **2.** போகவிடுதல்; to let go. *'போகெனப் போகடாய்'* (சீவக. 1365)

[போகவிடு- → போகடு-]

போகடு² –தல் *pōgaḍu,* செ.கு.வி. (v.i) **1.** விலகுதல்; to leave, escape. *'பொல்லாதது போகடும்'* (தேவா. 376. 4)

[போகவிடு- → போகடு-]

போகண்டன் *pōgaṇḍan,* பெ. (n.) ஐந்து அகவைக்கு மேல் பதினைந்து அகவைக்குட் பட்ட ஆண் மகவு(யாழ்.அக.); a male child between five and fifteen years.

போகநாதர் *pōga-nādar,* பெ. (n.) மருத்துவ நூல்கள் பலவற்றின் ஆசிரியரும் பதினெண் சித்தரி லொருவருமான முனிவர்; a mystic, author of several works on medicine, one of padineṇ-šiddar.

போகப்போக *pōga-p-pōga,* கு.வி.எ. (adv) காலம் செல்லச் செல்ல; as time goes on.

[போக + போக]

போகல் *pōgal,* பெ. (n.) **1.** உயர்வு(பிங்); rising **2.** நீளம்(சூடா); length.

[போகு → போகல்]

போகவிடு–தல் *pōga-viḍu,* செ.குன்றா.வி. (v.t.) நழுவ விடுதல்; to let go, allow to pass or slilp away, to abandon. *'போதித்த உண்மை யெங்கே போகவிட்டாய்'* (தாயு. உடல்பொய். 5)

[போ → போக + விடு–,]

போகாப்புல் *pōgā-p-pul,* பெ. (n.) செங்கழுநீர் போன்ற களைய முடியாத கொடிவகை; creeper that can not be rooted out,as ceṅgaḻunīr. *'போகாப் புல்லாகிய கழுநீர் முதலைப் பறித்து'* (சிலப். 10, 127, உரை)

[போ → போகு + ஆ + புல்]

போகாறு *pōgāṟu,* பெ. (n.) பொருளைச் செலவிடும் வழி; expenditure of money. *'கேடில்லை போகா றகலாக் கடை'* (குறள், 478)

[போ → போகு + ஆறு ன

போகி[1] *pōgi,* பெ. (n.) *போகிப்பண்டிகை* பார்க்க; see *pōgi-p-panṭṭigai.*

[போகு → போகி]

போகி[2] *pōki,* பெ. (n.) சிவிகை சுமப்போன்; palanquin-bearer.

க. போயி

போகி[3] *pōki,* பெ. (n.) *கார் போகி* (தைலவ. தைல.) பார்க்க; see *kār-pōgi.*

போகி கொளுத்தல் *pōgi-koḷuttal,* பெ. (n.) போகிப்பண்டிகை நாளில் முந்திய இரவில் பழைய பண்டங்களையும், பழந்துணிகளையும் நெருப்பி லிடுகை; burning of old clothes and leumber on the night of poki-pantikai

[போகி + கொளுத்தல்]

போகிப் பண்டிகை *pōki-p-pantikai,* பெ. (n.) பொங்கற் பண்டிகைக்கு முந்திய நாளிற் பழையன கழித்தும் இல்லம் புதுக்கியும் செய்யும் விழாத் தொடக்கம்; festival on the day before pōnkal.

[போகு → போகி+ பண்டிகை]

போகில் *pōgil,* பெ. (n.) **1.** பூவரும்பு(பிங்). flower bud. **2.** கொப்பூழ்(பிங்).; navel.**3.** பறவை; bird. *'ஆலம் போகிறனைத்தடுக்கும் வேனில்'* (ஐங்குறு. 303)

[புகு → (போகு) → போகில் → போகில்]



போகிவல்லபம் *pōgi-vallabam,* பெ. (n.) சந்தனம்(மலை); sandal wood.

[போகில் + வல்லபம்]

நறுமணம் பற்றிப் போகில் என்பது சந்தனத்தைக் குறித்ததாகலாம்

போகிவாசம் *pōgi-vāšam,* பெ. (n.) *போகிவல்லபம்* (சங்.அக.) பார்க்க; see *pōgi vallabam.*

[போகில் + வாசம்]

போகின்ற காலம் *pōgiṉṟa-kālam,* பெ. (n.) நிகழ் காலம்; present time. *'போகின்ற காலங்கள்'* (திவ். திருவாய். 2, 6, 10)

[போ → போகின்ற+ காலம்]

போகு—தல் *pōgu-,* செ.கு.வி. (v.i.) *போ* பார்க்க; see *pō.*

[போ → போகு]

போகுகாலம் *pōgu-kālam,* பெ. (n.) எதிர்காலம்; future tense. *'போய காலங்கள் போகு காலங்கள்'* (திவ். திருவாய், 2, 6, 10)

[போகு + காலம்]

போகுடி *pō-kuḍi,* பெ. (n.) **1.** ஊரைவிட்டுப் போய் விட்ட குடும்பம்; family that has left its native village. **2.** பிறங்கடை இல்லாமல் மறைந்து போனவனுடைய சொத்து; property left by a person who has disappeared without leaving any heirs or claimants.

[போகு + குடி]

போகுயர்–தல் *pōguyar,* செ.கு.வி. (v.i.) **1.** வளர்தல்; to grow, increase. *'போகுயர் நீள்கழை'* (சீவக. 1422) **2.** உயர்தல்; to be high, to rise upward. *'போகுயர் மதிய மேறி'* (சீவக. 705)

[போகு + உயர்]

போகூழ் *pōgūḻ,* பெ. (n.) தீவினைப்பயன் (தீயூழ்); fate that ordains loss. *'கைப்பொருள் போகூழாற் றோன்று மடி'* (குறள், 371)

[போகு + ஊழ்]

போகை *Pōgai,* பெ. (n.) செலவு; departure, going. *'போகைசேர் விடைகொண்டு'* (கந்தபு. சூரன்றண், 31)

தெ. போக. க. போகு

[போ → போகை]

போகொட்டு–தல் *Pōgoṭṭu,* செ.குன்றா.வி. (v.t.) போகவிடுதல்; to permit to go, allow to depart. *'யாமு நும்மைப் போகொட்டோம்'* (சீவக. 2045)

[போ → போக + ஒட்டு–,]

போங்கம் *Pōṅgam,* பெ. (n.) மஞ்சாடி மரவகை; (குறிஞ்சிப் .74) a veriety of redwood.

[போ → போக்கு → போங்கு → போங்கம்]

போங்காலம் *Pō-ṅ-kālam,* பெ. (n.) **1.** தீவினைப் பயன் விளைந்து துன்புறும் வேளை(வின்); time of adverse influences, when former evil deeds bear fruit, opp. to āṅkālam. **2.** இறப்புக் காலம் (வின்); time of death.

[போம்+ காலம்]

போங்கு *Pōṅgu,* பெ. (n.) *போக்கு*² (யாழ்.அக.) பார்க்க; see *pōkku*²

[போக்கு → போங்கு]

போசக்கை *Pōsa-k-kai,* பெ. (n.) **1.** போலித் தோற்றம்; deceptiveness of appearance. **2.** மேற் பூச்சு; superficialit. of character. **3.** மாயம்; counterfeit, sham, pretence or cover to save credit or hide poverty.

[பூசு → பூசுகை → போசகை → போசக்கை]

போசக்கை வேலை *Pōšakkai-vēlai,* பெ. (n.) போலி வலை(வின்); counterfeit, unsubstantial work.

[போசக்கை + வேலை]

போசிவல்லபம் *Pōšivallabam,* பெ. (n.) *போகிவல்லபம்*(சங்.அக) பார்க்க; see *pōgi-vallabam.*

போஞ்சான் *Pōñjāṉ,* பெ. (n.) நெல்வகை; a kind of paddy.

போஞ்சி *Pōñji,* பெ. (n.) **1.** கையணிவகை; a kind of wristlet. **2.** எலுமிச்சை பழச்சாறு; lime-juice and sugar.

க. போஞ்செ

போஞ்சிக்காய் *Pōñji-k-kāy,* பெ. (n.) அவரைக்காய்; field-bean.



போட்கன் *Pōṭkaṉ,* பெ. (n.) 1. பொய்யன்; liar. *'ஆராய்ந்தால் அதுதானும் போட்கன்'* (ஈடு. 8, 10, 1) 2. சுணைகேடன்; person deviod of shame or modesty. *'போட்கன் மிதித்த வடிப் பாட்டிற் பொடித்தான் கொணர்ந்து பூசீர்கள்'* (திவ். நாய்ச், 13, 6)

[புல் → பொல் → பொள் → போள் → போட்கன்]

போட்டடுப்பு *Pōṭṭaḍuppu,* பெ. (n.) *போடு*[4] (இ.வ.) பார்க்க; see *pōḍu* a kind of oven.

[போடு + அடுப்பு]

போட்டடை–த்தல் *Pōṭṭaḍai,* செ.குன்றா.வி. (v.t.) திணித்தல்; to stuff, cram, as food.

[போடு → போட்டு + அடை]

போட்டி *Pōtti,* பெ. (n.) 1. எதிரிடை; rivalry, emulation. *'தாட்டிகமுடன் வெகுபோட்டி போட்டிகளாக'* (இராமநா. உயுத், 15) 2. கேலி(யாழ்.அக); ridicule.

தெ. க. போடி

[புல் → பொல் → பொள் → (பொட்டி) → போட்டி]

போட்டி–சமன்மை; இகலுதல்.

போட்டி[2] *Pōtti,* பெ. (n.) பந்தயம்; contest.

போட்டிக்காரன் *Pōṭṭi-k-kāraṉ,* பெ. (n.) 1. எதிரி; rival. (w). 2. கேலிக்காரன்; one who ridicules or sneers. (யாழ்.அக)

[போட்டி + காரன்]

போட்டிக்கை *Pōṭṭikkai,* பெ. (n.) *போட்டி*(யின்) பார்க்க; see *pōṭṭi.*

[போட்டி → போட்டிகை → போட்டிக்கை]
'கை' தொ. பெ. ஈறு.

போட்டிவழக்கு *Pōṭṭi-vaḻakku,* பெ. (n.) இடையறா எதிர்வழக்கு(வின்); continual rivalry or dispute.

[போட்டி + வழக்கு]

போட்டுக் கொடு–த்தல் *Pōṭṭu-k-koḍu-,* செ.குன்றாவி. (v.t.) 1. கூடச் சேர்த்தளித்தல் (இ.வ.); to add, supplement. 2. பிறனுக்காகச் செய்தல்; to be for another, as a sum. 3. அடித்தல்(வின்); to slap, cuff 4. கோள்மூட்டுதல்; to tell tales. 'எழுத்தரை ஏவலன் தலைமையாசிரியரிடம் போட்டுக் கொடுத்தான்'

[போட்டு + கொடு–,]

போட்டுக்கொள்(ளு)–தல் *Pōṭṭu-k-koḷ-,* செ.குன்றாவி. (v.t.) 1. பூணுதல்(வின்); to wear. 2. ஏற்றுக் கொள்ளுதல்(கொ.வ.); to take upon oneself.

[போட்டு + கொள்–,]

போட்டுப்பொல்லாங்கு *Pōṭṭu-p-pollāṅgu,* பெ. (n.) 1. குற்றம்(யாழ்.அக); fault. 2. வசை; abuse.

[போட்டு + பொல்லாங்கு]

போட்டுமாறு—தல் *Pōṭṭu-māṟu,* செ.குன்றா.வி. (v.t.) **1.** குழப்புதல்; to confuse, to mix up. **2.** உழப்பிப் பேசுதல்; to equivocate.

[போட்டு + மாறு —,]

போட்டுவிடு—தல் *Pōṭṭu-viḍu-,* செ.குன்றா.வி. (v.t.) **1.** நழுவவிடுதல்; to drop. **2.** எறிதல்; to cast away. **3.** இழத்தல்; to lose **4.** கொன்று கைவிடுதல்; to leave, abandon, as an elephant, after killing its enemy. **5.** மேற்போதல்; to surpass, to ovevrcome

[போட்டு + விடு—,]

போட்டுவை—த்தல் *Pōṭṭu-vai-,* செ.குன்றா.வி. (v.t.) **1.** சேமித்துவைத்தல்; to lay up **2.** காலந் தாழ்த்துதல்; to delay. கடிதத்திற்கு மறுமொழி எழுதாமல் போட்டு வைத்திருக்கிறான்.

[போட்டு + வை]

போடகம் *Pōḍagam,* பெ. (n.) **1.** புண்(வின்); boil, tumour. **2.** அம்மைக் கொப்புளம் (சங்.அக); pock in small pox. **3.** கொப்புளிப்பான்;(சங்.அக) measles. **4.** அம்மை; small pox.

[போடு → போடகம்]

போடம்² *Pōḍam,* பெ. (n.) **1.** தகர்க்கை(சேதுபு. வேதா. 34, கீழ்க்குறிப்பு); slapping. **2.** சொல்லுக்கு அடிப்படையாய் வரும் பொருளை உணர்த்தவல்ல இசை(பி. வி. 18); eternal and imperceptible element of sounds and words and the real vehicle of the idea which flashes on the mind when a sound is uttered.

[போடு → *போடம்*]

போடி¹ *Pōḍi,* பெ. (n.) *சம்புநாவல்* (மூ.அ) பார்க்க; see *sambunāval.*

போடி² *Pōḍi,* பெ. (n.) *போட்டி*,1 (C.G.) பார்க்க; see *pōṭṭi.*

[போட்டி → போடி]

போடி³ *Pōṭi,* பெ. (n.) *போடியார்*(யாழ்ப்.) பார்க்க; see *pōḍiyar.*

[போடு → போடி]

'இ' வினைமுதல் ஈறு.

போடியார் *Pōḍiyār,* பெ. (n.) நிலக்கிழார்; landed proprietor.

[பாடி → போடி → போடியார்]

போடு¹—தல் *Pōṭu,* செ.குன்றா.வி. (v.t.) **1.** எறிதல்; to cast down, throw a short. distance, to cast away. *'பூத்த கடுக்கையைச் சிறிதும் போடா'* (இரகு. ஆற்று. 19) **2.** இடுதல்; to put, set in a position, lay. *'புல்லாயினு மொருபச்சிலை யாயினும் போட்டிறைஞ்சி'* (தாயு. பாயப்புலி. 31) **3.** தாழ்முதலியன இடுதல்; to fasten, as a bott. *'கதவு போட்டாயிற்றா?'* **4.** பூணுதல்; to put on, as ornaments. *'வயிரமாலை பொலியப் போட்டு'* (இரகு. இலவண. 40) **5.** ஈனுதல்; to bring forth, as animals, to put forth, yield, as fruit-tree. *'வாழை குலை போட்டது'* **6.** அச்சிட்டு வெளிப் படுத்துதல்; to bring out, to publish. *'புத்தகம் போட்டான்'* **7.** கணக்குச் செய்தல்; to work, as a sum. **8.** வரைதல்; to draw, as a figure. **9.** பரிமாறுதல்; to serve, to stamp, to teat, as a drum. *'செருப்பா லொருவன் போடானோ'* (தனிப்பா. 1, 41, 80) **10.** அடித்தல்; to strike, to stamp. **11.** விதைத்தல்; to sow,

plant, **12.** பயன்படுத்தல்; to use, as totacco. *'புகையிலை போடுகிறவன்'* **13.** கள்முதலியன குடித்தல்; to drink, as toddy. "அந்தத் தடியன் போட்டுக்கொண்டு வந்து வம்பு வளர்க்கிறான்." **14.** விடுத்தல்; to lose, to drop *'வீரமுங் களத்தே போட்டு'* (கம்பரா. கும்பக. 1) **15.** பணமுதலியன கட்டுதல்; to pay, invest. *'பணம் போட்டு வாங்கினான்'* **16.** பிரித்து இடுதல்; to cast, as lots, to allot. *'சீட்டுப் போடு'* செ.கு.வி. (v.i.) **1.** உண்டாதல்; to become, form, (w). **2.** ஒரு துணை வினை; anauxiliary verb. *'அவன் செய்து போட்டான்'*

[போ → போடு]

போடு² *Pōtu,* பெ. (n.) **1.** எடுப்பாயுள்ளது; anything striking or impressive as a speech. *'அவன் ஒரு போடு போட்டான், எல்லாரும் ஒடுங்கினார்கள்'* **2.** நற்பேறு; luck.

[போ → போடு]

போடு³ *Pōtu,* பெ. (n.) மொட்டை; taldness, shaven condition.

[மொட்டைபோடு → போடு]

போடு⁴ *Pōtu,* பெ. (n.) **1.** பொந்து; hole, opening, cleft, *'வயல் வரப்பில் போடு பாய்ந்திருப்பதால் பாய்ச்சின நீர் நிற்பதில்லை'* **2.** கோட்டையடுப்பு பார்க்க.

[புல் பொல் → பொள் → பொத்து பொட்டு → போடு]

போடு காடு *Pōtu-kātu,* பெ. (n.) மலைச் சார்வில் புன்செய் வேளாண்மை செய்யக் கூடிய நிலம்; land fit for raising dry crops on the hills (w)

[போடு + காடு]

போடுகால் *Pōtu-kāl,* பெ. (n.) தரிசுநிலத்தை முதல் முறையாக உழுது பயிரிடுகை; first cultivation in waste land.

[போடு + கால்]

போடுகால் நிலம் *Pōtukāl-nilam,* பெ. (n.) சிலகாலங்களில் மட்டும் பயிர் செய்யப்படும் நிலம்; land cultivated off and on and not annually.

[போடுகால் + நிலம்]

போடுகால் பாத்தியம் *Pōtukāl-pāttiyaam,* பெ. (n.) வெற்று நிலத்தை உழுது பயிர் செய்வதால் குடியானவனுக்கு நிலத்திலுண்டாம் உரிமை; customary right accruing to a farmer in an uncultivated waste brought by him under cultivation.

[போடுகால் + பாத்தியம்]

போடுகை *Pōtukai,* பெ. (n.) கப்பலோரத்துள்ள கைப்பிடி; bulwark.

[போடு → போடுகை]

போடுதடி *Pōtu-tati,* பெ. (n.) பயனற்றவன்; (எறிந்த தடி) lit, a stick thrown away, useless person. (w)

[போடு + தடி]

போடுதை *Pōtutai,* பெ. (n.) சுவரைக் காக்கும் மேற்கட்டு; coping on a wall

[போடு → போடுகை → போடுதை]

போடு பாய்–தல் *Pōtu-pāy,* செ.கு.வி. (v.i.) வயல் வரப்பில் வெடிப்புண்டாதல்; to have defts in ridges.

[போடு + பாய்]

போடுமண் *Pōtu-man,* பெ. (n.) புதிதாகக் கொணர்ந்து கொட்டிய மண்; loose earth freshly thrown.

[போடு + மண்]

போடுவான் *Pōtuvān,* பெ. (n.) தோசை முதலிய பணியாரத்தில் சேர்க்கும் உளுத்தமா; mashed black gram used in preparing rice-cajes.

[போடு → போடுவான்]

போத்தா[1]–தல்(போத்தருதல்) *pōttā,* செ.குன்றா.வி. (v.t.) 1. போய்க்கொண்டு வருதல்; to go and bring, to get, fetch. *'பரதவர் போத்தந்த பன்மீன்'* (தொல்.பொ.114, உரை). 2. உரிய சொல்லை வருவித்துரைத்தல்; to fill up, as an ellipsis in a sentence. 3. கொடுத்தனுப்புதல்; to send by messenger. "அமரர்கள் போத்தந்தார்" (திவ்.பெரியாழ். 1,3,4) 4. புறப்படவிடுதல்; to send out, to permit to go out. *'உன்னை....போத்தந்த நுமர்'* (கலித்,58,10).

போத்தா[2]–தல் *pōttā-,* செ.கு.வி. 1. போதலைச் செய்தல்; to go, proceed. *'நல்வாயிற் போத்தந்த பொழுதினான்',* கலித்.84,5.) 2. வெளிவருதல்; to get out, come out. *'போத்தந்து தாயர் தெருவிற் றவிர்ப்ப'* (கலித்.84,14)

[போ + தா → போத்தா–தல்]

போத்தி *pōtti,* பெ. (n.) 1. பாட்டன்; grand father 2. மலையாளக் கோயில் பூசாரி; brahman temple.priest in Malabar.

[போற்றி → போத்தி]

போத்திரி *pōttiri,* பெ. (n.) பன்றி(சூடா.); hog, pig.

[போத்தி → போத்திரி]



போத்து[1] *pōttu,* பெ. (n.) 1. பெற்றம், எருமை, புலி, மரை, புல்வாய் முதலிய விலங்கேற்றின் பொது(தொல்.பொருள்.597); male of animals, especialy, cattle, tigers, deer. 2. மயில் எழால் என்பவற்றின் ஆண்;(தொல்.பொ.598) male of peafowl, herons and some other birds. 3. முதலை, சுறாப்போன்ற நீர் வாழினத்து ஆண்; male of aguatic animals, as crocodile, etc. (தொல்.பொ.580) 4. ஓரறிவுயிரினிளமை. (தொல்.பொ.580) sapling 5. புதுக்கிளை; tender branch or shoot. of a tree. மரம் போத்து விட்டிருக்கிறது. 6. செம்போத்து(சங்.அக.) பார்க்க; sem pottu crow-pheasant.

[பொத்து → போத்து]

போத்து[2] *pōttu,* பெ. (n.) 1. பொந்து; hole, hollow. 2. விலங்கு துயிலிடம்; lair of a beast. 3. மனக்குற்றம்; vice, fault, as hollowness of mind. *'போத்தறார் புல்லறிவினார்'* (நாலடி,351)

[பொத்து → போத்து]

போத்துக்கால் *pōttu-k-kāl,* பெ. (n.) காம்பு;(தொல்.பொ.579,உரை) sugar-cane.

[போத்து + கால்]

போத்துராசா *pōttu-rāšā,* பெ. (n.) சோம்பேறி; indolent person, *'தடிப்போத்துராசா'*.

[போத்து + இராசா]

[த. அரசன் Skt. rajā த. இராசா]

போத்துவெடி–த்தல் *pōttu-vedi,* செ.கு.வி (v.i.) மரக்கிளை தோன்றுதல்(வின்); to sprout, as saplings.

[போத்து + வெடி –,]



போத *pōda,* கு.வி.எ. (adv.) **1.** போதுமானபடி; sufficiently. *'போதக்கொடுத்தான்'* **2.** செவ்வையாக; well, rightly. *'போதத் தன்செவித் தொளையிரு கைகளாற் பொத்தி'* (கம்பரா. இரணி.22.) **3.** விரைவாக; speedily. *'உய்ய வேண்டிலெழுபோத நெஞ்சே'* (தேவா.640,8)

[போது → போத]

போதக்கட்டை *pōda-k-kaṭṭai,* பெ. (n.) *போதிக்கட்டை* பார்க்க; see *podikkaṭṭai.*

[போதி + கட்டை → போதக்கட்டை]

போதகம்[1] *pōdagam,* பெ. (n.) **1.** இளமை; (பிங்.) youthfulness, infancy. **2.** யானைக் கன்று;(பிங்.) elephant calf. "வேழப்போதக மன்னவன் தாலோ" (திவ்.பெருமாள்,7,1) **3.** யானை; elephant. *'போதகமொன்று கன்றி'* (கம்பரா. விபீடண.113). **4.** விலங்கின் பிள்ளை (சூடா); youth of animals **5.** போத்து **1,4.** (பிங்.). பார்க்க

போதகம்[2] *pōdagam,* பெ. (n.) *பசளை*[3](மலை) பார்க்க; see *paša!ai*[3]

போதகம்[3] *pōtakam,* பெ. (n.) அப்பவகை;(பிங்.) a kind of sweetmeat.

[பொருத்து → பொத்து → போதகம்]

போதகம்[5] *pōdagam,* பெ. (n.) எட்டிமரம்(மலை.); strychnine tree.

போதந்து *pōdandu,* வி.எ. (part) ஒரு சொல் விழுக்காடு; an expletive, அது விலக்குப் பட்டது, *'ஈண்டுப் போதந்து'* (தொல்.சொல், 422, இளம்பூ.)

[போதா → போதந்து]

போதப்புறா *pōdā-p-puṟā,* பெ. (n.) புறாவகை(M.M); imperial pigeon.



போதம் *pōdam,* பெ. (n.) **1.** மரக்கலம்(திவா); ship, boat. *'போதங்கொ ணெடுந்தனிப் பொருவில் கூம்பொடு'* (கம்பரா.பள்ளிபடை.68)

2. 2ஆம் விண்மீன் (பிங்.); the second naksatra, 3. போதகம்1, 2 (அக.நி) பார்க்க. 4. மனைக்கட்டு (யாழ்.அக); house-site.



போதர *pōdara,* கு.வி.எ (adv.) அதிகமாக; abundantly, plentiful. '*போதரக் கனவிற் கண்டு*' (திவ்.திருக்குறுந்,4)

போதரவு[1] *pōdaravu,* பெ. (n.) **1.** போகை; passing, going. '*புகுவதாவதும் போதர வில்லதும்*' (திருவாச.5,36) **2.** செலுத்துகை; sending despatching **3.** கொண்டு வருகை(வின்.); bringing.

[போது → போதரவு]

போதரவு[2] *pōdaravu,* பெ. (n.) **1.** நயச்சொல்; respectfulness of language, blandishment. '*போதரவான சொல்*' **2.** நல்லுதவி; civility, urbanity. **3.** பொய்ப்புகழ்ச்சி; adulation, flattery. **4.** பேணுகை; using anything with care.

[போது → போதரவு]

போதலிப்பு *pōdalippu,* பெ. (n.) *போதரவு*[2] (யாழ்ப்.) பார்க்க; see *podaravu*[2]

[போது → போதலிப்பு]

போதலிமை *pōdalimai,* பெ. (n.) *போதரவு*[2] (யாழ்.அக.) பார்க்க; see *podaravu*[2]

[போது → போதலிமை]

போதவாகன் *pōda-vāgaṉ,* பெ. (n.) தோணியோட்டுபவன்(சங்.அக.); boatman.

போதா[1]**–தல்(போதருதல்)** *pōdā,* செ.கு.வி. (v.i.) **1.** செல்லுதல்; to go, pass. '*புறங்கடை போதரவிட்ட நுமரும்*' (கலித்.56). **2.** திரும்புதல்; to return. 'போதரும்போ தச்சம் (நாலடி,83) **3.** வருதல்; to come '*போதர் கண்டாயிங்கே போதர்கண்டாய்*' (திவ். பெரியாழ்.2,9,6) **4.** பெறப்படுதல்; to be inferred. '*ஆண்டிருந்து துய்ப்பரென்பது போதரும்*'. (திருக்கோ.1,உரை)

[போ + தா]

போதா[2]**–தல்** *pōdā,*செ.குன்றா.வி. (v.t.) **1.** கொண்டுபோதல்(பிங்.); to carry away. **2.** கொண்டுவருதல்(வின்.); to bring (w.) **3.** எதிர்கொண்டு போதல்(சூடா); to welcome, receive with courtesy.

[போ + தா]

போதா[2] *pōdā,* பெ. (n.) பெருநாரை (சிலப்.10,117,உரை); cyrus crane.

போதாக்காலம் *pōdā-k-kālam,* பெ. (n.) தீக்காலம்(வின்.); time of misfortune, evil days.

[போது + ஆ + காலம்]
'ஆ' – எ.ம.இ.நி.

போதாக்குறை *pōda-k-kuṟai,* பெ. (n.) *போதாக்குறைச்சல்* பார்க்க; see *pōda-k-kuṟaiccal.*

[போது + ஆ + குறை]

'ஆ' – எ.ம.இ.

போதாக்குறைக்கு *pōta-k-kuraikku,* வி.எ. (adv.) உள்ளவை போதாதென்று; as though not sufficient. *'போதாக்குறைக்குப் பிள்ளையும் பிறந்தது'*.

[போது + ஆ + குறை + கு]

'ஆ' – எ.ம.இ.

போதாக்குறைச்சல் *pōdā-k-kuṟaiccal,* பெ. (n.) அதிகப்படி(வின்.); supplement; addition to make up any deficiency.

[போது + ஆ + குறைச்சல்]

'ஆ' – எ.ம.இ.நி.

போதாதகாலம் *pōdāda-kālam,* பெ. (n.) *போதாக்காலம்* பார்க்க; see *podā-k-kalam.*

[போதாத + காலம்]

போதாமை *pōdāmai,* பெ. (n.) **1.** மனவொப் பின்மை; estrangement between persons. **2.** குறைவு; insufficiency, unfitness. **3.** பற்றாக்குறை; scarcitx.

[போது + ஆ + மை → போதாமை]

'ஆ' எ.ம.இ.நி

'மை' பண்புப்பெயரீறு.

போதி[1] *pōdi,* பெ. (n.) மலை (பிங்).; hill, mountain.



போதி[2] *pōti,* பெ. (n.) போதிகைக்கட்டை பார்க்க; see pōdigai-k-kaṭṭai *'இந்திர நீலக்கல்லுருத்தலை போதியது'* (திருவிளை,திருமண.64)

[போது→போதி]

போதிகை *pōdigai,* பெ. (n.) போதிகைக் கட்டை பார்க்க. "போதிகைத் தலத்து" (கம்பரா. நகரப்.25)

[போதி → போதிகை]

போதிகைக்கட்டை *pōdigai-k-kaṭṭai,* பெ. (n.) **1.** தூண்மேல் வைக்கும் தாங்குகட்டை; capital of a pillar. **2.** குறுந்தறி;(பிங்). stake.

[போதிகை + கட்டை]

போதிகைத்தூண் *pōdigai-t-tūṉ,* பெ. (n.) குறுந்தூண் (யாழ்.அக.); stout pillar.

[போதிகை + தூண்]



போதிய *Pōdiya,* பெ, எ, (adj.) போதுமான, போதிய அளவு; adequate, competent, suitable.

[போது → போதிய]

போதியகுடி *Pōdiyakuḍi,* பெ. (n.) பெரு மதிப்பிற்குறிய குடும்பம்(வின்.); respectable family. (w)

[போதிய + குடி]

போதியல் *Pōdiyal,* பெ,(n.) ***போதிகைப் பலகை*** (இ.வ.) பார்க்க; see *pōdigai-p-palagai*

போதியவன் *Pōdiyavān,* பெ. (n.) கண்ணிய வான்(யாழ்.அக); gentlemen, nobleman.

[போது → போதியவன்]

போதினன் *Pōtiṉaṉ,* பெ. (n.) நான்முகன் (தாமரைப் பூவில் இருப்பவன்); Brahama, as seated on the lotus. "திருமாலும் போதினனுந் தேவரும்" (சிவதரு. பாயி. 2)

[போது → போதினன்]

போது[1]–தல் *Pōdu,* செ.கு.வி. (v.i.) 1. போதியதாதல்; to be adequate, to suffice. "உலகமெலா முரல் போதா தென்றே" (திருவாச, 9, 6) 2. மதிக்கப்படுதல்(வின்.); to be respectable. 3. தகுதியாதல்; to be competent, fit, suitable.

போது[2]–தல் *Pōdu-,* செ.கு.வி. (v.i.) 1. செல்லுதல்; to go, pass. *'போது நான் வினைக்கேடன்'* (திருவாச, 5, 22) 2. ஒழுகுதல்; to conduct oneself, behave ***'அறனை அறிந்து போதுதல்... சான்ற வர்க்கெல்லாம் முறைமை'*** (கலித், 139, 2, உரை)

[போ → போது – தல்]

போது[3] *Pōdu,* பெ. (n.) 1. மலரும் பருவத்தரும்பு; flower bud ready to open"காலை பகலெல்லாம் போதாகி" (குறள்.1227); flower bud ready to open, 2. மலர் (திவா.) ; flower போதார் கூந்தல்" (பு.வெ.12,இருபாற்.5,கொளு.) 3. செல்வி (திருவிருத்.76, அரும்.பக்.389); freshness, beauty.

போது[4] *Pōdu,* பெ. (n.) 1. பொழுது 1, 2, 3, (சூடா) பார்க்க "போதுஞ் சென்றது குடபால்" (கம்பரா. வனம்புகு. 14)

போது[5] *Pōdu,*வி.எ. (adv). பொழுதில்; when, while, during the time that. ***'ஆட்கொண்ட போதே கொண்டிலையோ'*** (திருவாச. 33, 7)

ஒரி.க.போழ்து

[போ → போது]

போதுகட்டுதல் *Pōdu-kaṭṭudal,* பெ. (n.) **1.** காலை, மாலைகளில் முகில் சில நாழிகை வரை கதிரவனை மறைத்துக் கொண்டிருக்கை; hiding of the sun by clouds for some time in the morning and the evening. **2.** மழைபெய்வதற்கு அறிகுறியாய்க் காரிக்கிழமை (சனிக்கிழமை) மாலையும் அடுத்த நாட்காலையும் முகில் கதிரவனை மறைத்திருக்கை; hiding of the sun by clouds on a saturday evening and the next morning as indicative of heavy rain during the week.

[போது + கட்டுதல்]

போதுகாலம் *Pōdu-kālam,* பெ. (n.) பேறுகாலம்; time of childbirth.

[போது + காலம்]

போது செய்–தல் *Pōdu-šey-,* செ.கு.வி. (v.i.) **1.** பேரரும்பாதல்; to be ready to blossom, as a bud. **2.** மூடுதல்; to close. *'கண் போது செய்து'* (திவ். இயற். திருவிருத். 93) **3.** அலருதல் (வ்யா.) to blossom, (திவ். இயற். திருவிருத். 93) **4.** உண்ணுதல்; to eat. "வெண்ணெய் போது செய்தமரிய புனிதர்" (திவ். பெரியதி. 8, 7, 4) **5.** குரல் மாறுதல் (ஈடு, 2, 3, 7); to change, as voice on account of phlegm.

[போது + செய்–,]

போதுஞ்சாட்சி *Pōtu-ñ-cāṭci,* பெ. (n.) தகுதியான சாட்சி(வின்.); competent witness.

[போது + S.K.ṭ sāksi. *த. சாட்சி]*

போதுபடுதல் *Pōdu-paḍudal,* பெ. (n.) கதிரவன் மறைவு; sunset.

[போது + படுதல்]

போது போக்கு[1]–தல் *Pōdu-pōkku-,* செ.கு.வி. (v.i.) காலங்கழித்தல்; to spend time. *'புறனல ரவனுறப் போது போக்கி'* (கம்பரா. உருக்கா. 14)

[போது + போக்கு–,]

போதுபோக்கு[2] *Pōdu-pōkku,* பெ. (n.) **1.** காலங்கழிக்கை; passing of time. **2.** விளையாடி இளைப்பாறுகை; recreation. "போதுபோக்காகச் சில பிரபந்தங்களைப் பண்ணுவிக்கப் பார்த்தோம்." (ஈடு, 7, 9, ப்ர)

[போது + போக்கு]

போதுபோக்கு[3] *Pōdu-pōkku,* பெ. (n.) விளையாட்டு; play; past time. "தோளைக் கழித்துத் தலையைச் சரித்துப் போதுபோக்காக நின்று கொன்றபடி" (ஈடு.1,6,7)

[போது + போக்கு]

போதும் போதாதெனல் *Pōdum-pōdāadeṉal,* பெ. (n.) சிறிது குறைந்ததன் குறிப்பு; expr. of slight deficiency or insufficiency.

[போதும் + போதாது + எனல்]

போது வைகுதல் *Pōdu-vaigudal,* பெ. (n.) காலம் நீட்டிக்கை; being late. "அழுது செய்கைக்குப் போதுவைகிற்று." (ஈடு, 7, 10, 4)

[போது + வைகுதல்]

போதைப்புல் *Pōdai-p-pul,* பெ. (n.) **1.** கர்ப்பூரப்புல்(வின்.); lemon-grass. (w) **2.** *காவட்டம்புல்*(சங்.அக); பார்க்க; see *kāvaṭṭampul* citronella grass

[போதை + புல்]

போந்த *Pōnda,* பெ.எ. (adj.) **1.** தகுந்த; fit, suitable, proper, competent. *'போந்த மனிதன்'* (W) **2.** பழகின (வின்.); practised. **3.** தீர்மான மான; final, ultimate. *'உண்டுடுத் தின்பமாவதே போந்தநெறி'* (தாயு, சின்மயா. 5)

[போ → போந்த]

போந்தி *Pōnti,* பெ. (n.) **1.** வீக்கம்(யாழ்.அக); swelling. **2.** *போந்திக்கால்* பார்க்க; see *pōndi-k-kāl.*

தெ. போத

[போ → போந்தி]

போந்திக்கால் *Pōndi-k-kāl,* பெ. (n.) யானைக் கால்(வின்.); elephantiasis. (w.)

தெ.போதஹாலு

[பொந்தி → போந்தி → போந்திக்கால்]

போந்தி= வீக்கம்.தெ.போதாக்காலு.வே.க. (பக்.79.)



போந்தின் கண்ணிக்கோன் *Pōndin-kaṇṇi-k-kōṉ,* பெ. (n.) *போாந்தின்றாரோன்*(பிங்). பார்க்க;

[போந்து→ போந்தின் + கண்ணி + கோன்]

போந்தின்றாரோன் *Pōndinrāron,* பெ. (n.) சேரன்(சூடா.); cēra king, as decked with a garland of palmyra flowers. (பனம்பூமாலை யுடையவன்)

[போந்து → போந்தின் + தாரோன்]

போந்து *Pōndu,* பெ. (n.) **1.** போந்தை பார்க்க; see pōndai *'அவன் பொன் முடிமேற் போந்து கண்டான்'* (பெருந்தொகை. **690**) **2.** பல்லி; lizard.

[பொந்து → போந்து]

போந்தை *Pōntai,* பெ. (n.) **1.** பனை; palmyra palm. "போந்தை வேம்பே யாரென வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்" (தொல். பொ. **60**) **2.** இளம்பனை(திவா.); young palmyra. **3.** பனை(அனுட)நாள்; the 17th naksatra.

[போந்து → போந்தை]

போபடி *Pōpaḍi,* பெ. (n.) உருவொற்றுமை, (வின்.); trace

தெ.போபடி

[போல்+படி]

போபடிவிசாரி–த்தல் *Pōpadi-viśāri-,* செ.கு.வி. (v.i.) திருட்டைப் பற்றித் துப்பு உசாவுதல்(வின்.); to trace stolen property, to investigate about theft.

[போபடி + விசாரி]
[Skt. bicāri→த. விசாரி.]

போம் *Pōm,* இடை. (part.) ஓர் அசைச் சொல்(சது); an expletive.

[போ → போம்]

போம்பல் *Pōmbal,* பெ. (n.) நீர்க்கடம்பு(மலை.); water cadamba.

[போம் → போம்பல்]

போய்ப்பாடு *Pōy-p-pāḍu,* பெ. (n.) **1.** புகழ்; prise. "போய்ப்பாடுடைய நின்தந்தையும்" (திவ். பெரியாழ். 2, 3, 1). **2.** பெரிதாயிருக்கை; largeness. *'சங்கங்கள் போய்ப்பாடுடையனவே'* (திவ். திருப்பா. 26)

[போ → போய் + பாடு]

'பாடு' – தொ.பெ.ஈறு.

போய்வ—தல் *Pōy-vā.,* செ.கு.வி. (v.i.) போதல் (கொ.வ.); to go

போயகாலம் *Pōya-kālam,* பெ. (n.) போன காலம் பார்க்க; see poṉakālam.(திவ். திருவாய். 2, 6, 10)

[போ + காலம் → போயகாலம்]

போயி *Pōyi,* பெ. (n.) *போகி³* (வின்.) பார்க்க; see *pōgi³*

[போகி+ போயி]

போயிற்று *Pōyirru,* இடை. (part) ஓர் அசைநிலை(தொல். சொல். 425); an expletive. (தொல். சொல். 425)

[போ → போயிற்று]

போர்¹—த்தல் *Pōr-,* செ.குன்றா.வி. (v.t.) **1.** அணிதல்; to wear, put on. ஆரம் போர் திருமார்பை (கம்பரா. இராவணன்வதை. 240) **2.** மூடுதல்; to cloak, to hide. *'பெற்றம் புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று'* (குறள். 273) **3.** சூழ்தல்; to surround. "விண்ணோ ரெங்கோன் புடையிற் போர்த்தார்." (கந்தபு. சிங்கமு. 457)

[பொரு → போர்த்தல்]

போர்² *Pōr,* பெ. (n.) **1.** செறிந்து பொருந்துகை; joining fast together. "திண்போர்க் கதவம்" (மதுரைக். 354) **2.** கதிர் வைக்கோற் படப்பு; heap of unthreshed grain, straw. stack. "போரிடை யுறங்கு மன்னம்" (கம்பரா. நாட். 6) **3.** 24ஆவது விண்மீன் (பிங்.); the 24th naksatra. **5.** குவியல்; accumulation மரப்பொந்து (யாழ்ப்.); hollow of a tree.

[பொரு → போர்]

போர்³ *Pōr,* பெ. (n.) **1.** சண்டை; fight, battle, war. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் (குறள், 758) **2.** மற்போர்; wrestling. **3.** இகல்; rivalry, competition, "வீணைவாட் போர்க்கலாம்" (சீவக. 620)

[பொரு →போர்]

போர்⁴ *Pōr,* பெ. (n.) **1.** புகர்நிறம் (போர்க்காளை); towny colour. **2.** புள்ளி 'கரும்போர்க்காளை' (நாஞ்.); spot.

[புகர் → போர்]

போர்⁵ *Pōr,* பெ. (n.) பசுவின் சாணம் (யாழ்ப்.); cow-dung.

போர்க்கட்டு—தல் *Pōr-k-kattu,* செகுன்றா.வி. (v.t.) **1.** உள்ளுக்குள்ளே சரிப்படுத்துதல்; to adjust settle. **2.** மறைத்து அடக்கிக் கொள்ளுதல்; to hide. (யாழ்.அக.)

[போர் + கட்டு – தல்]

போர்க்கடம் *Pōr-k-kaḍam,* பெ. (n.) சண்டை செய்வதாகிய வீரர் கடமை; the duty of a warrior to fight in battle. "போர்க்கடம் பூண்ட பொருவலித் தடக்கையின்" (பெருங். உஞ்சைக். 53, 91)

[போர் + கடம்]

போர்க்கடா *Pōr-k-kaḍā,* பெ. (n.) சண்டைக்காக வளர்க்கப்படும் ஆட்டுக்கடா (கொ.வ.); fighting ram.

[போர் + கடா]



போர்க்கண் *Pōr-k-kaṇ,* பெ. (n.) போர்க்களம், பார்க்க; see pōr-k-kalam. "போர்க்கண் துணிபுனல்" (பரிபா. 6, 29)

[போர் + கண்]

போர்க்கதவு *Pōr-k-katavu,* பெ. (n.) 1. பலகைகளை இணைத்த கதவு; batten door. *'புலிப் பொறிப் போர்க்கதவின்'* (பட்டினப். 40) 2. இரட்டைக் கதவு (சிலப். அரும். அகராதி.); folding doors, as joined.

[போர் + கதவு]

போர்க்கருவி *Pōr-k-karuvi,* பெ. (n.) படைக்கலம்; weapon of war.

[போர் + கருவி]

போர்க்கப்பல் *Pōr-k-kappal,* பெ. (n.) போர்க்கலம்; war-ship.

[போர் + கப்பல்]

போர்க்கவசம் *Pōr-k-kavašam,* பெ. (n.) போர்த்தற்காப்புக் கருவிகள்; apparatus for defence.

[போர் + கவசம்]

போர்க்களத் தொழிதல் *Pōr-k-kaḷattoḻidal,* பெ. (n.) போரிற் புறங்கொடாது வீரன் பூசற்களரியிலே பட்டதைக்கூறும் புறத்துறை (பு. வெ. 2, 6, தலைப்பு); theme describing a warrior fighting to the last on the battle field without retreating.

[போர்க்களம் + தொழிதல்]

போர்க்களம் *Pōr-k-kalam,* பெ. (n.) போரிடு மிடம் (பிங்.); field of battle *'போர்க்களம் பாடும் பொருநன்'* (பொருந. 57, உரை)

[போர் + களம்]

போர்க்களரி *Pōr-k-kaḷari,* பெ. (n.) போர்க்களம் பார்க்க; see por-k-kalam. 'போர்க் களரியிலே விழுந்தான்' (பு. வெ. 2, 6, உரை)

[போர் + களரி]

போர்க்களப்படை *Por-k-kalappatai,* பெ. (n.) போர்ப்படை; army.

[போர் + களம் + படை]

போர்க்களவீரன் *Pōr-k-kalaveran,* பெ. (n.) போர்வீரன் பார்க்க. see porveeran.

[போர் + களம் + வீரன்]

போர்க்காளை *Pōr-k-kāḷai,* பெ. (n.) உடலிற் புள்ளியமைந்த எருது; bullock with sports on the body.

[புகர்→போர் + காளை]

போர்க்குதிரை *Pōr-kutirai,* பெ. (n.) போர்களக் குதிரை; war-horse.

[போர் + குதிரை]

போர்க்குரல் *Pōr-k-kural,* பெ. (n.) *போர்முழக்கம்* பார்க்க; see *pōrmulakkam.*

[போர் + குரல்]

போர்க்குறிப்பு *Pōr-k-kuṟippu,* பெ. (n.) அரிக் கட்டுக்களின் கணக்கு; account of corn stalks cut.

[போர் + குறிப்பு]

போர்க்கெழுவஞ்சி *Pōrkkeḻu-vañji,* பெ. (n.) வஞ்சிமாலை சூடி போருக்குப் புறப்படும் வீரரைப் புகழும் சிற்றிலக்கியவகை(வின்.); panegyric on an army marching to battle, the warriors being decked with wreaths of vañji flowers.

[போர்க்கு+எழு + வஞ்சி]

போர்க்கோலம் *Pōr-k-kōlam,* பெ. (n.) போரணி பூணுகை; military accoutrements, martial costume. ***'போர்க்கோல நீக்கி.... முலையார் மண்ணுறுப்ப வாடி'*** (சீவக. 2352)

[போர் + கோலம்]

போர் கல–த்தல் *Pōr-kala-,* செ.கு.வி. (v.i.) போர்புரிதல்(வின்.); to engage in a battle.

[போர் + கல–த்தல்]

போர்ச்சேவகன் *Pōr-c-cēvagaṉ,* பெ. (n.) படை வீரன்; soldier.

[போர் + S.K.ṭ. sēvaka. *த.சேவகன்]*

போர்ச்சேவல் *Pōr-c-cēval,* பெ. (n.) போர்ப் பந்தயத்துக்காக வளர்க்கப்படும் சேவல்; game-cock, fighting cock.

[போர் + சேவல்]



போர்ச்சேணை *Pōr-c-cēṉai,* பெ. (n.) *போர்ப் படை* பார்க்க; see *pōr-p-paḍai.*

[போர் + சேனை]

போர்த்தளவாடங்கள் *Por-t-taḷavādaṅgal, Por-t-talavatankal,* பெ. (n.) போர்க் கருவிகள்; military equipments.

[போர் + தளவாடங்கள்]

போர்த்திறன் *Pōr-t-taṉi-p-pūvai,* பெ. (n.) *போர்ச்சுயப் பாவை* பார்க்க; see *pōr-caya-p-pāvai.*

[போர் + திறன்]

போர்த்தினவு *Pōr-t-tiran,* பெ. (n.) போரிடும் திறமை; military skill.

[போர் +சேனை]

போர்த்துக்கட்டு–தல் *Pōrttu-k-kattu-,* செ.குன்றாவி. (v.t.) **1.** உள்ளுக்குள்ளே சரிப்படுத்துதல்; to adjust, settle. அடக்கிக் கொள்ளுதல்; to hide

[போர்த்து +கட்டு–,]

போர்த்துமூடு–தல் *pōrttu-mūḍu-,* செ.குன்றா.வி. (v.t.) *போர்த்துக்கட்டு* 2 (யாழ்.அக.) பார்க்க; see *pōrttu-k-kaṭṭu*

[போர்த்து + மூடு]

போர்த்தேங்காய் *pōṟ-t-tēṅkāy,* பெ. (n.) பந்தயத்துக்குரிய வலிய தேங்காய்; heard cocount used in game or contest of physical strength.

[போர் + தேங்காய்]

போர்நடிவடிக்கை *pōr-natavati-k-kai,* பெ. (n.) போர்நிலவரம்; state of warfare.

[போர் + நடிவடிக்கை]

போர்நாட்டம் *pōr-nattam,* பெ. (n.) போரிடும் ஆசை; war-disire.

[போர் + நாட்டம்]

போர்நிறம் *pōr-niṟam,* பெ. (n.) போர்ப்பொலிவு; fighting vigour. **'*போர்நிறப் புத்தி சேனன்*'** **(சீவக.789,உரை)**

[புகர் → போர் + நிறம்]

போர்நிறுத்தம் *pōr-niruttam,* பெ. (n.) இடைக்காலச் சண்டை நிறுத்தம்; armistice

[போர் + நிறுத்தம்]

போர்ப்படை *pōr-p-patai,* பெ. (n.) போரிடச் செல்லும் படை; force equipped for war.

[போர் + படை]

போர்ப்படைபட்டியல் *por-p-patai-patiyal,* பெ. (n.) போர்ப்படை விளக்கக்குறிப்பு; army list.

[போர் + படை + பட்டியல்]

போர்ப்பறை *pōr-p-paṟai* பெ. (n.) போர் முரசு; war-drum. "போர்ப்பறை முழங்கி யெங்கும்" **(சீவக.758)**

[போர் + பறை]

போர்ப்பிச்சை *pōr-p-piccai,* பெ. (n.) திருப்பணிக்காகக் களத்தில் தண்டப்படும் பழைய வரிவகை(G.Tn.D.I.**313**.); a tax collected in ancient times at the time of the harvest from the ryots for repairs to temples.

[போர் + பிச்சை]

Skt. lehiksā → *த.பிச்சை*

போர்ப்பு *pōrppu,* பெ. (n.) **1.** *போர்வை* பார்க்க; see *pōrvai* போர்ப்புறு முரசம் **(பதிற்றுப்.84,2)** **2.** நெற்போர்(பிங்.); heap of threshed paddy.

[போர் → போர்ப்பு]

போர்ப்பூ *por-p-pū,* பெ. (n.) போரில் வீரர் அணிந்து கொள்ளும் அடையாளப்பூ; flower for garland used by warriors when going to battle. '*போர்ப்பூவும் தார்ப்பூவும்*' (தொல்.பொ.**626**,உரை)

[போர் + பூ]

போர்ப்பை *pōrppai,* பெ. (n.) **1.** உழவுசாலின் உட்குழிவு; gurrow. **2.** களை கொட்டின் அடி (யாழ்.அக.); handle of a small hoe.

[போர் + பை]

போர்ப்பைக்காளை *pōrppai-k-kāḷai,* பெ. (n.) **1.** பொலியெருது; breeding bull. **2.** உழவுக்குரிய காளை (யாழ்.அக.); plough ox.

[புல் → பொல் → போல் → போர் → போர்ப்பை + காளை]



போர்ப்பையன் *pōrppaiyan,* பெ. (n.) *போர்ப்பைக் காளை* (யாழ்.அக.) பார்க்க; see *pōrppai-k-kālai*

[புல் → பொல் → போல் → போர் → போர்ப்பையன்]

போர்பு *pōrbu,* பெ. (n.) தவசப்போர்; grain heap. குன்றுகண் டன்ன நிலைப்பல் போர்பு (புறநா.**353**)

[போர் → போர்பு]

போர்போடு–தல் *pōr-pōḍu-,* செ.குன்றா.வி. (v.t.) தவச மணிகளைப் பிரித்தபின் வைக்கோலை மழையிற் கெடாத படி குவித்து மூடுதல் (யாழ்.அக.); to stack hay after threshing.

[போர் + போடு–தல்]

போர்மகள் *pōr-magaḷ,* பெ. (n.) வெற்றித்திருமகள்; goddess of victory. "போர்மகளை ......தழுவியகை பொறாமை கூர." (கம்பரா.இராவணன்வதை.**226**)

[போர் + மகள்]

போர்மடந்தை *pōr-maḍandai,* பெ. (n.) **1.** காளி; Durga, the goddess of war. **2.** வெற்றித் திருமகள்;(யாழ்.அக.) the goddess of valour.

[போர் + மடந்தை]

போர்மறவன் *pōr-maṟavaṉ,* பெ. (n.) *போர்வீரன்* பார்க்க; see *pōr-viran.*

[போர் + மறவன்]

போர்மாந்தம் *pōr-māndam,* பெ. (n.) குழந்தை நோய் வகை;(பாலவா.) a child's disease caused by visceral obstructions.

[பொருமு + மாந்தம்]

போர்முகம் *pōr-mugam,* பெ. (n.) **1.** போர்முனை; front, foremost line of battle. '*போர் முகத்தை யறியானைப் புலியே றென்றேன்*'. (தனிப்பா. 1, 275, 16). **2.** போர் முனைந்து நிகழுமிடம்; the place where battle rages the most. '*போர் முகந் தன்னினீ புறந்தந் தேகினால்*' (பாரத.நிரைமீட்.**70**)

[போர் + முகம்]

போர்முரசு *pōr-murašu,* பெ. (n.) *போர்ப் பறை,* பார்க்க; see *pōr-p-paṟai* '*போர் முரசெடி வெழுப்பொங்கி* (பாரத.நான்காம்.3)

[போர் + முரசு]

போர்முழக்கம் *pōr-mulakkam,* பெ. (n.) போர்க்குரல்; war-shout.

[போர் + முழக்கம்]

போர்முள் *pōr-muḷ,* பெ. (n.) சேவலின் முன்னங்கால் முள் (யாழ்.அக.); cock's claw.

[போர் + முள்]

போர்முனை *pōr-muṉai,* பெ. (n.) *போர்முகம்* (யாழ்.அக.) பார்க்க; see *pōrmugam.*

[போர் + முனை]

போர்மூட்டு–தல் *pōr-mūṭṭu,* செ.குன்றா.வி (v.t.) 1. சண்டை செய்யத்தூண்டுதல்;(யாழ்.அக.) to spur on to guarrel. 2. கோள்சொல்லிப் பிரித்தல்(இ.வ.); to creat mis-under. standing between.

[போர் + மூட்டு]

போர்மை *pōrmai,* பெ. (n.) இரக்கம் (நமதீப.608.); mercy, pity.

[ஒருமை→ போர்மை]

போர்வாங்கிவிடு–தல் *pōr-vāṅgi-viḍu,* செ.குன்றா.வி. (v.t.) சூடடிக்கத் தொடங்குதல்; to begin threshing of the grain.

[போர் + வாங்கிவிடு–,]

போர்வீரன் *pōr-vīraṉ,* பெ. (n.) போரிடும் வீரன்; soldier.

[போர் + வீரன்]

போர்வு *pōrvu,* பெ. (n.) *போர்பு* பார்க்க; see porbu. "கயலார் ரை போர்விற் சேக்கும்." (ஐங்குறு.9)

[போர் → போர்வு]

போர்வெறியர் *pōr-veṟiyar,* பெ. (n.) வெற்றுவீரம்பேசுபவர்; warmonger.

[போர் + வெறியர்]

போர்வை *pōrvai,* பெ. (n.) 1. மூடுகை (பிங்.); covering, wrapping 2. மேன் மூடுந்துணி(பிங்.); upper garment, cloak, blanket, rug, mantle. "யானையினுரிவைப் போர்வை" (கம்பரா.மிதிலை.150) 3. தோல்; (பிங்.) skin. 4. கவசம்; cocet of mail, corslet. '*புலிப்பொறிப் போர்வை நீக்கி* (சீவக.266). 5. வாள்முதலியவற்றின்உறை (சீவக.266,உரை); sheath, as of sword. 6. தேர்த்தட்டின் வெளிமறையப் பாவின பலகை; wooden cover of a temple-car. உள்ளரக் கெறிந்த வருக்குறு போர்வை. (சிறுபாண்.256)

தெ.போர்வ

[போர் → போர்வை]

போர்வைச்சீலை *pōrvai-c-cilai,* பெ. (n.) *போர்வை* 2 பார்க்க; see *pōrvai*

[போர்வை + சீலை]

போர *pōra,* வி.எ. (adv.) மிகவும் (ஈடு,4,7,ப்ர.); entirely, exceedingly.

[போரு → போர]

போரடி[1]–த்தல் *pōr-aḍi-,* செ.குன்றாவி.(v.t.) தலையடிக் கதிர்ப்போரினின்றும் தவசத்தை அடித்தெடுத்தல்; to thresh or beat out grain from straw.

[போர் + அடி–த்தல்]

போரடி[2]–த்தல் *pōr-aḍi-,* செ.கு.வி.(v.i.) தருக்கமிடுதல் (வின்.); to wrangle over.

[போர் + அடி–த்தல்]

போரடி[3] *pōr-aḍi-,* பெ.(n.) 1. தலையடிக் கதிர்ப்போரைக் கடாவிட்டு அடித்து நெல்லைப் பிரிக்கை; threshing. 2. நெற்களம்; threshing-floor. 3. தேங்காய் விளையாட்டு (யாழ்ப்.); playing with cocoanuts.

[போர் → போரடி]

போரப்பொலிய *pōra-p-polia,* கு.வி.எ.(adv.) முழுவதும்; fully, completely. *'இவன் இவனைப் போரப் பொலியச் சொல்லுங்காட்டில்'* (ஈடு,4,7,ப்ர.)

[போர + பொலிய]

போரன் *pōraṉ,* பெ.(n.) வைக்கோல் தட்டை (யாழ்ப்.); paddy silk.

[போர் → போரன்]

போராக்காலம் *pōrā-k-kālam,* பெ.(n.) *போதாக்காலம்* பார்க்க; see *pōdā-k-kālam.*

[போதா → போரா]

போராசை *pōr-āšai,* பெ.(n.) *போர்நாட்டம்* பார்க்க; see *pōr-nāṭṭam.*

[போர் + ஆசை]

போராட்டக்களம் *pōrāṭṭa-k-kaḷam,* பெ.(n.) போரிடுமிடம்; armagedon (or) war field.

[போராட்டம் + களம்]

போராட்டம் *pōrāṭṭam,* பெ.(n.) 1. சண்டையிடுகை; fighting. *"மடந்தையர் சிற்றின்பமோ... பொன்னாட்டும் வந்ததென்றாற் போராட்டமல்லவோ"* (தாயு. எங்குநிறை.10). 2. சண்டை; combat, struggle. 3. போட்டி; competition, rivalry. 4. விடாமுயற்சி; contention, striving earnestly.

[போராடு → போராட்டம்]

போராடு–தல் *pōrāḍu-,* பெ.(n.) 1. பொருதல்; to fight, carry on war. *"பூமியைப் போராடியிரந்தோருந் தம்மதென்பார்"* (தாயு. பாராபர. 228). 2. தொந்தரவு படுதல்; to struggle. 3. பேரம் பேசுதல்; bargain (w.).

[போர் + ஆடு–தல்]

போரார்வம் *pōr-ārvam,* பெ.(n.) போரிடும் எண்ணம்; fighting spirit.

[போர் + ஆர்வம்]

போராற்றல் *pōr-āṟṟal,* பெ.(n.) போரிடும் ஆற்றல்; fighting capacity.

[போர் + ஆற்றல்]

போரான் *pōrāṉ,* பெ.(n.) குதிரைவகை; a kind of horse. *"உயர்கனவட்டம் போரான்"* (திருவாலவா.28,69).

போரி[1] *pōri,* பெ. (n.) பொருவோன்; egual, rival. (w.)

[போர் → போரி]

'இ' வினைமுதல் ஈறு

போரி[2] *pōri,* பெ. (n.) முருகன் வழிபாட்டு இடமான திருப்போரூர்; tiru-p-pōrūr sccred to god subrahmanya போரிவா ழூறுமா முகனே **(திருப்போ.சந்.9,1)**

[போரூர் → போரி]

போரிக்கட்டை *pōri-k-kattai,* பெ. (n.) *போதிகைக்கட்டை* பார்க்க; see *pori kattai.*

[போதி → போரி + கட்டை]

போரிகை *pōrikai,* பெ. (n.) *போதிகைக் கட்டை* பார்க்க; see *porikai.*

[போதிகை → போரிகை]

போரிடுதல் *pōritutal,* பெ. (n.) பொருதல்; one engaged in fight.

[போர் + இடுதல்]

போரிலேபோடு–தல் *pōril-ē-pōtu,* செ.குன்றா.வி. (v.t.) பயனற்றதாக்குதல்; to render useless.

[போர் → போரிலே → போடு]

போரிழப்பு *pōr-elappu,* பெ. (n.) போரினால் உண்டாகும் இழப்பு; loss of war.

[போர் + இழப்பு]

போருணர்ச்சி *pōr-unarchi,* பெ. (n.) போரிடும் மனப்பான்மை; fighting spirit.

[போர் + உணர்ச்சி]

போரு[1]–தல் *pōru,* செ.கு.வி. (v.i.) **1.** செல்லுதல்; to go on, proceed, to continue. நீர் ஆதரித்துக்கொண்டு போரும் **(குருபரம்.170). 2.** மீண்டுவருதல்; to return. **3.** எட்டுதல்; to reach. போரவிடாயெங்கள் பட்டை **(திவ்.நாய்ச்.3,7) 4.** பொருள் பெறப்படுதல்; to be understood, as a meaning. *'பிரத்தியகர்த்தவிசயமாயும் போருகையாலே'* **(ஈடு,1,1,2).**

[போது → போரு]

போரு[2]–தல் *pōru,* செ.கு.வி. (v.i.) **1.** போதியதாதல்; to be enough, sufficient. சிறு மானிடவரென்று எண்ணுகைக்குக் கூடப் பாற்றம் போராதபடியான நாம், **(திவ். திருநெடுந், 21, வ்யா. பக்.198)**

[போது → போரு–தல்]

போருதவி *pōr-utavi,* பெ. (n.) போர்வீரனுக்கு உதவிசெய்கை; succour rendered to a warrior. (w).

[போர் + உதவி]

போரூக்கம் *pōr-ukkam,* பெ. (n.) போரிடும் மனஎழுச்சி; fond of fighting.

[போர் + ஊக்கம்]

போரெதிர்–தல் *pōr-etir,* செ.கு.வி. (v.i.) போர்செய்தலை மேற்கொள்ளுதல்; to set out to fight. *'போரெதிந்தற்றா'* **(கலித்.89)**

[போர் + எதிர்–தல்]

போரேறு *pōr-ēru,* பெ. (n.) **1.** போர் செய்யவல்ல காளை; fighting bull போரேறொன் றுடையானு. மளகைக் கோனும் (திவ். பெரியதி. 2,10) **2.** போர்வீரன்; champion, hero.புட்குழியெம்போரேற்றை (திவ்.இயற்.பெரிய. ம,117) **3.** செவ்வாய் கோள்; the planet mars. (சது.)

[போர் + ஏறு]

போல்[1](லு)–தல் *pōl,* செ.குன்றா.வி. (v.t.) **1.** ஒத்தல்; to resemble, to be like. '*மக்களே போல்வர் கயவர்*' (குறள்,1071) **2.** இணை யொத்தல்; to egual, match.

[போ → போல்(லு)–தல்]

போல்[2] *pōl,* இ.சொல். (Part) **1.** ஓர் உவமவுருபு; a particle of comparison. சமன் செய்து சீர்தூக்குங் கோல்போலமைந்து (குறள்,118) **2.** ஓர்அசைச்சொல்; expletive. (திருக்கோ,222)

[போ → போல்]

போல்[2] *pōl,* பெ. (n.) **1.** உள்ளீடில்லாதது; hollow object. '***போல்வளை***'. **2.** பதர்; chaff. (w). **3.** பொய்; falsehood. (அரு.நி) **4.** மூங்கில்; bamboo. (மலை)

[புல் → பொல்→ போல்]

தெ. போலு

போல்[4] *pōl,* பெ. (n.) **1.** வெற்றி; victory, valour. பண்புணரார்மதின்மேல்போலனை (தேவா.381–1.) **2.** படை; neapon. (அரு.நி) **3.** வாள்; sword (அரு.நி.)

[போ → போல்]

போல்கட்டை *pōl-kattai,* பெ. (n.) போல்மரம் பார்க்க. see polmaram.

[போல் + கட்டை]

போல்சாவி *pōl-cāvi,* பெ. (n.) உட்டுளையுள்ள திறவுகோல்; tubularkey.

[போல் + .சாவி]

port. chiavi→ *த.சாவி*

போல்மரம் *pōl-maram,* பெ. (n.) வண்டியின் முன்புறத்துள்ள நீண்ட மரக்கட்டை; wooden shaftfitted to the fore-part of a vehicle.

[போல் + மரம்]



போல்மூங்கில் *pōl-munkil,* பெ. (n.) மூங்கில் வகை; hollow bamboo.

[போல் + மூங்கில்]

போல *pōla,* இ.சொல். (Part) ***போல்1***, **2** பார்க்க; see *pol*1,2. (தொல்.பொ.291)

[போல் → போல]

போலி *pōli,* பெ. (n.) **1.** ஒப்புடையவன் வள்–து; a person or thing that is egual, equi valent. தில்லை போலிதன் காதலனே

(திருக்கோ.303) தாமரை திருவடிகளுக்குப் போலியாயிருக்க. (ஈடு,1,4,ப்ர) 2. ஒப்பு; similarity.உவமப்போலி (தொல்.பொ.300,உரை) 3. சாயல்; imitation, semblance. (w). 4. கள்ளப்பொருள்; anything spurious, bcounterfeit. *'போலிநாணயம்'* 5. வஞ்சகம்; pretence, hypocrisy. 6. கேலி; jest. 7. போலியெழுத்து பார்க்க (நன்.122) 8. இலக்கணப்போலி பார்க்க. (நன்.238) 9. போலிப்பாசம்; sophism. *'பக்கப்போலியு மேதுப் போலியும்'* (மணி.29,145)

[போல் → போலி]

போலிஇரக்கம் *pōli-earkkam,* பெ. (n.) பொய்இரக்கம்; lips sympathy.

[போலி +இரக்கம்]

போலிக்குரல் *pōli-k-kural,* பெ. (n.) மாற்றுக்குரல்; false roar.

[போலி + குரல்]

போலிக்கையொப்பம் *pōli-k-kaiyōppam,* பெ. (n.) பொய்க்கையொப்பம்; forgery signature.

[போலி + கையொப்பம்]

போலிச்சமயம் *pōli-c-camayam,* பெ. (n.) பொய்யான மதம்; false religion.

[போலி + சமயம்]

போலிச்செய்தி *pōli-c-caithi,* பெ. (n.) பொய்ச்செய்தி; false news.

[போலி + செய்தி]

போலிநடிப்பு *pōli-natippu,* பெ. (n.) பாசாங்கு செய்தல்; hypocricy.

[போலி + நடிப்பு]

போலிச்சரக்கு *pōli-c-carakku,* பெ. (n.) 1. உண்மைச் சரக்கைப் போலச் செய்த பண்டம்; imitation goods or commodity, as not genuine. 2. வெளிப்பகட்டுள்ள பொருள்; showy goods, as appearing good.

[போலி + சரக்கு]

போலித்தகவல் *poli-t-talaval,* பெ. (n.) பொய்த்தகவல்; general talk of doultful accuracy.

[போலி + Aral.dakhl. த.தகவல்]

போலித்தனம் *pōli-t-tanam,* பெ. (n.) உண்மையல்லாத வெளித்தோற்றம்; imitation, disguise, show. (யாழ்.அக)

[போலி + தனம்]

போலித்திரை *pōli-t-tirai,* பெ. (n.) பொய்த்திரை; curtain.

[போலி + திரை]

போலித் தோற்றம் *pōli-t-tottam,* பெ. (n.) செயற்கைத் தோற்றம்; false appearance.

[போலி + தோற்றம்]

போலிநடை *poli-natai,* பெ. (n.) போலியான நடத்தை; trick of slyle.

[போலி + நடை]

போலிநியாயம் *pōli-niyāyam,* பெ. (n.) 1. பொய்க்காரணம்; false reasoning. 2. நியாயம் போல் காணப்படும் நியாயமற்றது; that which seems just bet is really unjust.

[போலி + skt. nyāya. *த.நியாயம்]*

போலிப்பாசம் *poli-p-pācam,* பெ. (n.) பொய்ப் பாசம்; sophism.

[போலி + பாசம்]

போலிப்பேச்சு *Poli-p-pechu,* பெ. (n.) பசுப்புப் பேச்சு; hypocritical speech.

[போலி + பேச்சு]

போலிமனிதன் *Pōli-manitan,* பெ. (n.) மக்கட்பண்பற்றவன்; brutish man (w)

[போலி + skt. manu-ja. *த.மனிதன்]*

போலிமை *Pōlimai,* பெ. (n.) *போலி*[2] பார்க்க. see *poli*[2] *'போலிமை கிரங்கி யுரைத்த பாசுரத்தாலே'* (திவ். திருவாய், ஈடு, 2, 1, 2, ப்ர. பண்ணீ)

[போலி → போலிமை]

போலிமொழி *Pōli-moli,* பெ. (n.) *இலக்கணப் போலி* பார்க்க; see *ilakkana poli* (நன். 238, மயிலை)

[போலி + மொழி]

போலியாள் *Pōli-y-āl,* பெ. (n.) 1. வெளி வேடக்காரன்; dissembler, pretender. (யாழ்.அக) 2. மேல் வாரியாக வேலை செய்பவன்; superficial person. (w.)

[போலி + ஆள்]

போலியிரக்கம் *Pōli-erakkam,* பெ. (n.) பொய்யாக இரக்கம் காட்டுதல்; lip's sympathy.

[போலி + இரக்கம்]

போலியெழுத்து *Pōli-y-eluttu,* பெ. (n.) 1. ஒரெழுத்துக்குப் பகரமாக அவ்வொலியில் அமையும் எழுத்து; syllatle or letter resembling another in sound, as அய் for ஐ, அய் for ஔ. 2. ஒரெழுத்துக்குப் பகரமாக வரும் எழுத்து; letter substituted for another different in sound, as in சாம்பர் for சாம்பல். (நன்.)

[போலி + எழுத்து]

போலிவாழ்க்கை *Pōli-valkkai,* பெ. (n.) பொய் வாழ்க்கை; false life.

[போலி + வாழ்க்கை]

போலிவீரம் *Pōli-veram,* பெ. (n.) பாசாங்கு வீரம்; lion's skin.

[போலி + வீரம்]

போலிவேடம் *Pōli-vedam,* பெ. (n.) போலி நடிப்பு; hypocricy.

[போலி + வேடம்]

Skt. Vēsa→*த.வேடம்*

போலிவேலை *Pōli-vēlai,* பெ. (n.) கள்ளத்தனமான வேலை; shoddy work; (யாழ்.அக)

[போலி + வேலை]

போலும் *Pōlum,* இ.சொல். (part) ஓர் அசைச் சொல்; an expletive. (நன். 441)

[போல் → போலும்]

போவி—த்தல் *Pōvi,* செ.குன்றா.வி. (v.t.) போக்குதல்; to cause to go, to lead. போவிப்பம் பாழினுடம்பை (நல்வழி, 19).

[போ + போவி—த்தல்]

போவு *Pōvu,* பெ. (n.) போகை; going. *'போவுண்ட தென்னினைய'* (கம்பரா. நாகபாச. 231)

[போ → போவு]

போவி—த்தல் *Pōvuvi,* செ.குன்றா.வி. (v.t.) *போவி* பார்க்க; see *pōvi.* (நன். 137, மயிலை)

[போ → போவு → போவுவி – த்தல்]

போழ்[1]—தல் *Pōl,* செ.கு.வி. (v.i.) 1. பிளவுபடுதல்; to be cleft, split. 2. பிரிவுபடுதல்; to be disunited. (w). செ.குன்றா.வி. (v.t) 1. பிளத்தல்; to split, cleave open. கல்லுடை நெடுநெறி போழ்ந்து சுரனறுப்ப (பதிற்றுப். 19, 2). 2. ஊடுருவிச் செல்லுதல்; to pass through, cross over. கடற்குட்டம்போழ்வர்கலவர் (நான்மணி. 18). 3. அழித்தல்; to dispel, to destroy. *'நீடிருள் போழு நிலைமைத்து'* (சீவக. 2118).

[புல் → பொல் → போழ்]

போழ்[2] *Pōl,* பெ. (n.) 1. பிளவு; cleft. போழ்படக் கிடந்த (கல்லா. முருக்க) 2. துண்டம்; piece. பசுங்காய்ப் போழொடு (பெரும்பாண், 307) 3. தோலால் அமைந்த வார்; leathe strap போழ் தூண்டுசி (புறநா. 82, 4). 4. தகடு; sheet. வெள்ளிப் போழ் விலங்கவைத் தனைய (சீவக. 70)

[புல்→பொல் → போழ்]

போழ்க்கமை *Pōlkkamai,* பெ. (n.) அடைவு கேடு; irregularity, disorder, ill-manners. (திவ். திருமாலை, 33, வ்யா, 110)

[போழ்க்கன் → போழ்க்கமை]

போழ்க்கன் *Pōlkkan,* பெ. (n.) அடைவு கேடன்; ill-mannerer person. பொய்யெல்லாம் பொதிந்து கொண்ட போழ்க்கனேன் (திவ். திருமாலை, 33)

[போழ் → போழ்க்கன்]

போழ்து *Pōltu,* பெ. (n.) 1. பொழுது பார்க்க. அழல் மண்டு போழ்தின் (நாலடி. 202) 2. நன்முகூர்த்தம்; auspicious time. *'இப்போழ்து போழ்தென் றதுவாய்ப்பக் கூறிய'* (கலித். 93)

[போது → போழ்து]

போழ்முகம் *Pōl-mukam,* பெ. (n.) பன்றி; hog. (பிங்.)

[போழ் + முகம்]

போழ்முகி *Pōl-muki,* பெ. (n.) போழ்முகம் பார்க்க. (நூமதீப. 220)

[போழ் + முகம் → முகி]

போழ்வாய் *Pōl-vāy,* பெ. (n.) 1. பிளந்த வாய்; open mouth. போழ்வாய வன்றிலும் (திவ். இலற். திருவிருத், 87). 2. பொக்கை வாய்; tooth less mouth. போழ் வாய்ச்சி கண்டுடம்பு பூரித்தாள் (விறலிவிடு. 195)

[போழ் + வாய்]

போழ்வு *Pōlvu,* பெ. (n.) பிளவு; cleft, fissure.

[போழ் → போழ்வு]

போழ்காலா *Pōla-kāla,* பெ. (n.) பளபளத்த பச்சை நிறமுள்ளதும் ஆறடிநீளம் வளர்வதுமான கடல் மீன்வகை; reseball, sea-fish, silvery green, attaining six feet and more in length. polynemus tetradactylus.

[போழ் → போழகாலா]



போழப்பெட்டி *Pōla-p-petti,* பெ. (n.) **1.** வண்ணங் கொடுத்த பனையோலைகளைக் கொண்டு பலவடிவமாக முடையப்படும் கூடை; palmyra basket of fancy shapes, cloured attractively. **2.** திருமணத்தின் போது மாப்பிள்ளை வீட்டார் மணமகள் வீட்டிற்குத் தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு முதலியன கொண்டு போகும் சாயவட்டி; lacguer plate containing cocoanuts, aarecanuts, betels and plantains carried to the bride's house by the bride-groom's party in a marriage.

[பிழா → பெட்டி → போழப்பெட்டி]

போழம் *Pōlam,* பெ. (n.) மாறுபடுஞ் சொல்; inconsistent word. ***'போழம் பலபேசி'*** **(தேவா. 1080, 11)**

[போல் → போழ் → போழம்]

போளம் *Pōlam,* பெ. (n.) நறுமணப் பண்டவகை; myrrh, aloes, gum-myrrh.

போளம்² *Pōlam,* பெ. (n.) ஒருவகைத் நிலைத்திணை; a plant. (மலை)

போளி *Pōli,* பெ. (n.) மூடன்; simpleton.

போற்றரவு *Pōṟṟaarvu,* பெ. (n.) பேணுகை; due regard, civility, (w.)

[போற்று → போற்றரவு]

போற்றலர் *Pōṟṟalar,* பெ. (n.) ***போற்றார்*** பார்க்க; see *porrar.*

[போற்று + அல் + அர்]
'அல்' எ. ம. இ. நி.

போற்றன் *pōṟṟan,* பெ. (n.) பாட்டன்; grand-father **(நாமதீப. 189)**

[போற்று + அன் → போற்றன்]

போற்றார் *Pōṟṟār,* பெ. (n.) பகைவர்; foes, enemies. ***'போற்றாப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்'*** (புறநா. 2)

[போற்று + ஆ + அர்]
'அல்' எ. ம. இ. நி.

போற்றி *Pōṟṟi,* பெ. (n.) **1.** புகழ்மொழி; praisse, applause, commendation (w) **2.** கோயிற் பூசை செய்யும் மலையாள நாட்டுப் பூசாரி; brahman temple-priest of malabar. (w). **3.** போத்தி¹ பார்க்க. செ.கு.வி (v.i) **1.** வழிபடு சொல் வகை; explamation of praise. ***'பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி'*** **(சிலப், 13,92)**

[போற்று → போற்றி]

போற்றி செய் –தல் *Pōrri-cey,* செ.குன்றா.வி. (v.t.) வழிபடுதல்; to praise, worship, adore. பரமனை...போற்றி செய்வேனே. (திருமந். 3.)

[போற்றி + செய்தல்]

போற்றிசை–த்தல் *Pōṟṟicai,* செ.குன்றா.வி. (v.t.) போற்றிசெய் பார்க்க. *'புறந்தருவார் போற்றிசைப்ப'* (பெருயபு. மானக்கஞ்சாற, 12)

[போற்று → போற்றிசை – த்தல்]

போற்றி சொல்(லு)–தல் *Pōrri-col,* செ.குன்றா.வி. (v.t.) *போற்றிசெய்* பார்க்க; see *porri-cey* (w).

[போற்றி + சொல்(லு)–தல்]

போற்றிப்பஃறொடை *Pōrri-p-pakrotai,* பெ. (n.) மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள் ஒன்றும் உமாபதிசிவம் இயற்றியதுமான சிவனியக் கொண்முடிபு நூல்; a text-book of the siva siddhanta philosophy by umāpati-civvācāriyar, one of 14 mey-kanta-cāttiram. q.v.

[போற்றி + பஃறொடை]

போற்றி பண்ணு–தல் *Pōṟṟi-paṉṉu,* செ.குன்றா.வி. (v.t) *போற்றிசெய்* பார்க்க; see *porri-cey.* (w).

[போற்றி + பண்ணு–தல்]

போற்றிப் பேணுதல் *Pōtri-penutal,* பெ.(n.) சீராட்டி வளர்த்தல்; cherishment.

[போற்றி + பேணுதல்]

போற்றிமை *Pōṟṟimai,* பெ. (n.) வணக்கம்; honour, reverence. (w).

[போற்றி → போற்றிமை]

போற்றியாதல் *Pōṟṟi-y-ātal,* பெ. (n.) இடுக்குகை; grasping or securing closely. (நாமதீப. 757.)

[பொத்து → பொற்று → பொற்றி போற்றி + ஆதல்]

போற்றீடு *Pōṟṟitu,* பெ. (n.) பாதுகாவல் வகை; a system of watching. *'போற்றீடு முதலிய பாதுகாவலும்'* (தொல். பொ. 171, உரை)

[போற்று + இடு → ஈடு]

போற்று[1]–தல் *Pōṟṟu,* செ.குன்றா.வி. (v.t.) 1. வழிபடுதல்; to praise, applaud. (பிங்.) போற்று மடியா ருண்ணின்று நகுவேன் (திருவாச. 5, 60) 2. வணங்குதல்; toworhsip(பிங்.) 3. பாதுகாத்தல்; to protect, keep with great care. போற்றினரியவை போற்றல். (குறள், 693) 4. வளர்த்தல்; to noursih (w.) 5. தீயவை தடுத்துக்காத்தல்; to guard against. புறஞ்சொற் போற்றுமின் (சிலப். 30, 188) 6. கடை பிடித்தல்; to adhere, hold fast to. புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் 7. விருந்தோம்பல்; to entertain, to treat. with regard. *'எம்மைப் போற்றவே'* (கம்பரா. அரசியல். 40) 8. விரும்புதல்; to desire. *'போற்றிக் கேண்மதி'* (பொருந. 60) 9. கருதுதல்; to conzider. பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின் (குறள், 537) 10. மனத்துக் கொள்ளுதல்; to under stand, to pay attention to. *'கொண்டானர் நிரை போற்றெனக் கூறினான்'*

(சீவக. 430). 11. கூட்டுதல்; to gather to gether. (பிங்).

[புல் → புகல் → புகற்று → போற்று]

போற்று[2] *Pōṟṟu,* பெ. (n.) 1. காப்பு; protection (சங்.அக). 2. பாராட்டி வழிபடு; praise, invocation. 3. புகழ்தல்; very high commendation. (யாழ்.அக.)

[புகல் → புகற்று → போற்று]

போற்றுநர் *Pōṟṟunar,* பெ. (n.) 1. சுற்றத்தார்; relatives, kinsmen. போற்றா ருயிரினும் போற்றுந ருயிரினும் (பரிபா. 4, 52) 2. ஒன்றுணர்வார்; those who understand. வேற்றுமை யின்றது போற்றுநர்ப் பெறினே (பரிபா. 4, 55)

[போற்று + போற்றுநர்]

போறை *Pōrai,* பெ. (n.) 1. பொந்து; hole, hollow in a tree. 2. கிணறு முதலியவற்றின் வங்கு; cavity in the side of a well. (w.)

[புரை→போரை → போறை]

போன் *Pōn,* பெ. (n.) 1. பொறி; trap (ஈடு, 2, 8, 4, ஜி) 2. மலைக் குகை; cave running into the side of a hill. 3. உலைக்கும் துருத்திக்கும் இடையில் சாய்வாகச் செல்லும் அடுப்புப் பாகம்; sloping cavity between the bellows and the over in a pōn-atuupu.

[புல்→போல் → போன்]

பௌ *Pau,* தமிழ் நெடுங்கணக்கில் 'ப்' என்ற என்ற மெய்யெழுத்தும் 'ஔ' என்ற உயிரெழுத்தும் சேர்ந்து உண்டான உயிர் மெய்யெழுத்து; the compound of ப் and ஔ. (செ.அக).

[ப் + ஔ → பௌ]

பௌரி *Pauri,* பெ. (n.) பெரும் பண் வகை; a musical mode, one of perum. pan, q.v.

பௌலுருவி *Pauluruvi,* பெ. (n.) மரஞ் செடிகளில் ஒட்டி வளரும் பூடுவகை; honey suckle mistletoe. ***"கீரைக்குப் புல்லுருவி கீழே முளைத்தாற் போல்"*** (இராமநா. அயோத். 20)

[புல்லுருவி → பௌலுருவி]

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ஆறாம் மடலம் —பாகம் 2—

பி — பூ

Vol. VI-Part -II

முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.

அரசு செயலாளர்,

தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட

இயக்கக வெளியீடு

2005

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 17

முதற் பதிப்பு : 2005

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. VI, Part - II

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு
Government of Tamilnadu

விலை : உருபா 400/–

குறியீட்டெண் : Colon No. P.J1-J, 314"K.M4

வெளியிட்டோர் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

அச்சீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை 600 113.

நூல் கிடைக்குமிடம் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை – 600 113.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி
A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE
VOL. VI- PART II

ஆறாம் மடலம் - இரண்டாம் பாகம்
(பி - பூ)

பதிப்புக் குழு
முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும்
அறநிலையத் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

கூர்ந்தாய்வாளர்
புலவர் இறைக்குருவனார்

தொகுப்பாளர்கள்
திரு.முத்து.பிச்சை
முனைவர் மு.கண்ணன்
முனைவர் பா.வெற்றிச்செல்வன்
முனைவர் ச.செந்திலாண்டவன்
முனைவர் இரா.கு.ஆல்துரை (பகுதிப் பொறுப்பாளர்)
திரு.கா.இளமுருகு
திரு.ச.கி.கணேசன் (ஓவியர்)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

ஜெ ஜெயலலிதா
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை–600 009.

நாள் 26.12.2005

அணிந்துரை

‘வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி தமிழ்!’ அந்த வண்டமிழ், ‘ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி இசை கொண்டு வாழ’ ஏற்ற பணிகளை ஆற்றி வருகிறது எனது அரசு.

தமிழ்நாடு அரசு, தமிழ் நாடும் அரசாக விளங்குகின்றது. இந்திய அரசின் ஆட்சி மொழியாகத் தமிழை ஆக்கவும், இணையற்ற தமிழ் மறையாம் திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக ஆக்கவும், ஒல்லும் வகையான் ஓயாது முயன்று வருகிறது தமிழ்நாடு அரசு. ‘முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையதாய் விளங்கும் நம் தமிழ், பின்னைப் புதுமைக்கும் போர்த்தும் அப்பெற்றியதாய்’ விளங்க வேண்டும் என்ற விழைவோடு, முத்தமிழோடு நான்காம் தமிழாக அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தி, அதனை மழலையர் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை, மாணவ மாணவியர் கற்க ஏற்பாடு செய்தேன்.

உயர்தனிச் செம்மொழியாம் தமிழின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதுடன் நில்லாது, தமிழ் வளர்த்த சான்றோர்கள் நினைவைப் போற்றும் வகையில் விழாக்கள் எடுத்தும், நினைவிடங்கள் அமைத்தும், அவர்தம் நூல்களைப் பொது உடைமையாக்கியும் சிறப்பித்து வருகிறது எனது அரசு. அந்த வகையிலே, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவைக் கொண்டாடி மகிழ்ந்ததுடன், அவரது நினைவை என்றென்றும் போற்றிப் பாராட்டிடும் வகையில் மதுரை மாநகரில் மணி மண்டபம் உருவாக்கிடவும் முனைந்துள்ளது.

தமிழ் மொழியின் தனிப் பெரும் வளர்ச்சி குறித்த கவிஞர்களின் கனவுகள் நனவாக்கப்பட வேண்டும் என்பது என் விருப்பம்

“வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளி உறுத்தும் படங்களோடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்”

என்ற பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் கனவு மெய்ப்படும் விதத்தில், தமிழ் மொழியின் சொல் வளத்தைப் பெருக்க ‘செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி’ (A Comprehensive Etymological Dictionary of Tamil Language) நூல்களை உருவாக்கும் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் சார்பாக கடந்த 2002–ஆம் ஆண்டு வரை ஆறு பகுதிகள் மட்டுமே வெளியிடப்பட்டிருந்தன. 2002–2003–ஆம் ஆண்டில், சட்டமன்றப் பேரவையில், எஞ்சிய 25 பகுதிகள் நான்காண்டுகளில் தொகுத்து முடிக்கப் பெறும் என்ற அரசின் அறிவிப்பினைத் தொடர்ந்து, தொய்வுற்றிருந்த அகரமுதலித் திட்டத்திற்குப் புத்துயிர் ஊட்டி, போதுமான நிதியுதவியும் வழங்கி, பணிகள் முடுக்கிவிடப்பட்டதன் விளைவாய், ஆண்டுக்கு ஆறு பகுதிகள் என்ற முறையில், முதற்கட்டமாகத் தொகுத்து அச்சிட்டு முடிக்கப்பட்ட ‘ச’ மற்றும் ‘த’ வரிசைச் சொற்களின் 6 பகுதிகள் அண்மையில் 9.8.2005 அன்று என்னால் வெளியிடப்பெற்றன. அதனைத் தொடர்ந்து இரண்டாவது கட்டமாக ‘ந’ மற்றும் ‘ப’ வரிசை சொற்களில், 6 பகுதிகள் தொகுத்து முடிக்கப்பட்டு அச்சிடப்பட்டு அவை தற்போது வெளியிடப்படுவதை அறிந்து பெரு மகிழ்வு அடைகிறேன்.

‘செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிப்’ பணி சீரிய பணி. அந்தச் சீரிய பணியில் ஈடுபட்டு செந்தமிழைச் செழுந்தமிழாய் ஆக்கிவரும் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

தமிழ் வாழ்க ! தமிழ்ப் பணி வளர்க !

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
டாக்டர் செல்வி ஜெ ஜெயலலிதா



தமிழ்நாடு அரசு

சி.வி.சண்முகம்
கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – **600 009.**

அணிந்துரை

"தமிழுண்டு தமிழ் மக்களுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு"
– (பாவேந்தர்)

மிகப் பழங் காலந்தொட்டு மொழி பற்றிய ஆய்வு இருந்து வந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் உள்ளன என்பர் மொழியாராய்ச்சியாளர்கள். தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள் பண்டைக் காலத்தில் கொண்டிருந்த மொழி பற்றிய தெளிவான அறிவினைத் தெற்றெனத் தெரிவிப்பனவாக இருப்பதைக் காணலாம். மொழியானது மாறும் தன்மை கொண்டது; பழமையான மொழிக் கூறுகளில் சில அழிவதும் புதியதாக சில தோன்றுவதும் மொழி வழக்கில் இயல்பு என்பர் அறிஞர் பெருமக்கள்.

தமிழ் மொழியைப் பொறுத்தவரை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான இடைவெளியில் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை மறுக்கவியலாது. பழைய சொற்கள் சில வழக்கொழிந்துள்ளன. புதிய சொற்கள் பல உருவாகியுள்ளன. புதிய கண்டுபிடிப்புகளையும், புதுப்புனைவுகளையும் வெளிப்படுத்த புதுச் சொற்கள் தேவை. இது மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாய் அமையும் என்பதில் ஐயமில்லை.

ஞாலத் தொன்மொழிகளுள் தாய்மையும், தலைமையும், தகைமையும் கொண்டது நம் தமிழ்மொழியாகும். தமிழின் தூய்மையையும், மாண்பையும், தனித்தியங்கும் ஆற்றலையும், இயற்கைச் சிறப்பையும் இனிமையையும், எளிமையையும் விரிவாக எடுத்துக்காட்டி நிலைநாட்டிய பெருமை 'மொழிஞாயிறு' தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு உண்டு. சொற்களை அகழ்வாய்வு செய்வதன்வழி மொழிக்கு அகழ்வாய்வு என்ற துறையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்திய பெருமை அவரைச் சாரும்.

அத்தகைய மாபெரும் அறிஞர் காட்டியுள்ள நெறிமுறைகளை அடியொற்றி செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி பகுதிகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. அண்மையில் 'ச'கரம் மற்றும் 'த'கரம் வரிசையில் **6** பகுதிகள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின்

திருக்கரங்களினால் வெளியிடப்பெற்றுள்ளன. அதனைத் தொடர்ந்து தற்போது 'ந'கரம் மற்றும் 'ப'கரம் வரிசையில் 6 பகுதிகள் வெளியிடப் பெறுகின்றன என்பதையறிந்து மகிழ்கிறேன். இந்த சீரியத் திட்டத்திற்கு அனைத்து வகையிலும் பேராக்கமும், பேராதரவும் நல்கி வரும் நம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி 'அம்மா' அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே, ஏன் ஆசியக் கண்டத்திலேயே தலைசிறந்து விளங்கும், தன்னிகரில்லாத் தங்கத் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சிக் காலம் பொற்காலம் என்று மேனாட்டரும் புகழ்பாடுகின்றனர். சோதனைகளை முறியடித்து, சாதனைக்கு மேல் சாதனைப் படைத்து, வெற்றிக் கொடி நாட்டி வரும் மாண்புமிகு முதலமைச்சர் 'அம்மா' அவர்களின் சாதனைகள் நீண்டு தொடரும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி வெளியீடுகள் வருவதில் அரும்பங்காற்றிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் பொறுப்பு இயக்குநராகப் பதவி வகிக்கும் தமிழ் வளர்ச்சிப் பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசு செயலாளர் முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப., அவர்களுக்கும், நூல்களை உருவாக்குவதற்கு அயராதுழைத்த அகரமுதலித் திட்ட இயக்ககப் பணியாளர்களுக்கும் என் மனமுவந்த பாராட்டுக்கள்.

சி.வி.சண்முகம் 8.11.13

சி.வி.சண்முகம்

சென்னை.

முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி–பண்பாடு (ம)
அறநிலையத் துறை மற்றும்
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்.

பதிப்புரை

சொல்லின் பொருளை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கும் புதிய படைப்புச் சொற்களை உருவாக்குவதற்கும், மொழியாராய்ச்சியாளர்களுக்கும், பிறமொழியாளர்களுக்கு மொழியைக் கற்பித்தலுக்கும் உலகில் உள்ள அனைத்து மொழிகளுக்கும் சொற்பிறப்பியல் அகரமுதலிகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஞாலத் தொன்மொழிகளுள் தாய்மையும், தலைமையும் கொண்டது நம் தமிழ்மொழியாகும். திராவிட மொழிகளுக்குத் தாயாகவும், வடமொழிக்கு மூலமாகவும் தொன்றுதொட்டே பாங்குடன் சிறந்தமொழி நம் நற்றமிழ் மொழியாகும். காலத்தால் முந்தியதும், இலக்கிய இலக்கணங்கள் நிரம்பப் பெற்றதுமான உயர்தனிச் செம்மொழிக்குச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி இல்லாத குறையைப் போக்குதற் பொருட்டு, **1974**–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரை இயக்குநராகக் கொண்டு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம் உருவாக்கப்பட்டது. மேலை நாட்டார் தங்கள் மொழியின் சொற்பிறப்பியல் அகர முதலியில் சொல்லின் பிறப்பை மட்டும் உணர்த்துவதே எல்லை என்று கருதி வந்தனர். ஆனால், பாவாணரின் சொல்லாய்வுப் பணியோ முற்றிலும் மாறுபட்டுச் சொல்லுக்குப் பொருள் என்ற நிலைமாறி, சொல்லுக்கு வேர் மூலம் காட்டுவதோடு மட்டுமின்றி எந்த வேரிலிருந்து எந்தச் சொல் பிறந்தது என்பதையும், பிறமொழியிலிருந்து கடன்பெற்ற சொல்லாக இருந்தால் எம்மொழிச் சொல், எவ்வாறு திரிந்தது என்பதையும், அச்சொல் அம்மொழியின் இனமொழிகளில் எவ்வாறு வழங்குகிறது என்பதையும், அச்சொல்லின் மறுவடிவங்கள் எவை என்பதையும், சொல்வடிவிலும், பொருள் வடிவிலும் எவ்வகைத் திரிபுகளையும், மாற்றங்களையும் அச்சொல் அடைந்துள்ளது என்பதையும் விரிவாக ஆராய்வதாகும்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் ஆறாம் மடல இரண்டாம் பகுதியாக வெளிவரும் இந்நூல் பேரகரமுதலி வெளியீடுகள் வரிசையில் பதினேழாவதாகும்.

தமிழ் மொழி வளர்ச்சியில் அதன் தொடக்க நிலையிலிருந்து இன்றைய வழக்குவரை அது கொண்டுள்ள பொருள் மாற்றப் படிநிலைகளை முறையாகச் சொல்வதற்கு முயல்கிறது இந்த அகரமுதலி. பொருள்மாற்றம் அல்லது சார்புப் பொருள் வளர்ச்சி கொள்ளல் ஆகியன சில முறையொழுங்கைத் தழுவி வந்துள்ளதைக் காணலாம். குறிப்பாக, கருத்தடிப்படையில் உருவான வேரிலிருந்து சொல் வளர்ந்து வரும் நிலையைக் காட்டி விளக்குவது இவ்வகரமுதலியின் சிறப்பியல்பாகும்.

எ–டு: 'புல்' பொருந்தற் கருத்துவேர். புல்லுதல் = பொருந்துதல், புணர்தல், கழுவுதல், வரவேற்றல், ஒத்தல், ஒட்டுதல், நட்புச் செய்தல். புல்→புல்லி→புலி = முன்னங் கால்களால் தழுவிப் பற்றும் வேங்கை அல்லது சிறுத்தை. புல் புருவம் = ஐம்பொறிகள் பொருள்களோடு பொருந்தி யறியும் அறிவு, பொறியுணர்வு, இலக்கணம், நூல், மறை நூல், தப்பு, பொருந்தியிருக்கும் நிலம், விளைநிலம். புலம் →புலவன் = அறிஞன், அறிவுள்ள பாவலன், தேவன், அறிவன் (புதன்) (வே.க.3, 62, 63).

ஒரு மொழியின் வளர்ச்சியையும் அதன் தனித்தன்மையையும் தெரிவிக்கும் துல்லிய அளவுகோலாக அகரமுதலி அமைகிறது. தமிழ், சொல்வளமிக்க மொழி. மொழி வளத்தைச் சொல்காட்டும். சொல்வளத்தால் மொழி வளரும். கருத்து வளர்ச்சியையும் பண்பாட்டு வளர்ச்சியையும் இவை காட்டி நிற்கின்றன. சொல்வளர்ச்சி சொற்பெருக்கத்தைக் குறிப்பதோடு, சொற்பொருளில் ஏற்படும் வளர்ச்சியையும் குறிக்கும். புதுப்பொருள், புதுக்கருத்து ஆகியவற்றை வெளிப்படுத்துவதன் மூலம் சொற்பெருக்கம் ஏற்படும். சொற்கள் பயன்பாட்டுச் சூழலுக்கேற்பப் புதுப்பொருளைப் பெறுகின்றன.

வித்தினின்று முளையும், மரத்தினின்று துளிரும், தாயினின்று சேயும் பிறத்தல் போல அடிப்படை வேரினின்று சொற்கள் பிறக்கின்றன. சொல்லாய்வு மிக நுட்பமான ஒன்று. சொல்லாய்வு மொழி வளத்தையும் சமுதாயப் பண்பாட்டு வரலாற்றையும் விளக்கும். சொல்லாய்வு சொல்லுக்குரிய மூலப் பொருளையும் அறியச் செய்யும். வேர்ச்சொல்லினின்று சொல்லின் அடிப்படைப் பொருள் பெறப்படுகிறது. சொற்கள் அடையும் பொருள் விரிவை அறியவும் சொல்லாய்வு துணைபுரிகிறது.

ஒரு சொல் புதியதாக ஒரு பொருளை ஏற்கும் போது, சில நேரங்களில் பழைய பொருளை இழந்து விடுகிறது. ஆனால், சொல்லின் பழைய பொருளுக்கும் புதுப்பொருளுக்கும் பெரிய முரண் ஒன்றும் இருக்காது. இவ்விரு பொருள்களும் வெவ்வேறு சூழலில் பயன்படுத்துவனவாக இருக்கும். இதுவுமில்லாமல், இவ்விரு பொருள்களினின்றும் மேலும் பல பொருள்கள் வளர்வதுமுண்டு.

எ–டு : புல்லுதல் = துளைத்தல், இவ்வினைச் சொல் வழக்கிறந்தது. புல், உட்டுளையுள்ள நிலத்திணை வகை, ஊனுண்ணா விலங்குணவான தாளுள்ள நிலைத்திணை வகை, உட்டுளையுள்ள பனை, பனைவடிவான நாள் (அனுடம்), உட்டுளையுள்ள தென்னை, உட்டுளையுள்ள மூங்கில் புல் போன்ற கம்பம் பயிர், புல்லரிசி (வே.க.3, 101).

முன்னோர் விட்டுச் சென்ற அறிவுக் கருவூலமாய் மொழி விளங்குகிறது. இன்றைய அறிவுச் செல்வத்தை வழித் தோன்றல்களுக்கு விட்டுச் செல்ல உதவிபுரிவதும் மொழி. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தனக்கென தனியான வாழ்வையும் வரலாற்றையும் வகுத்துக் கொண்டது. தமிழ் நீண்ட வரலாற்றையும் நெடிய இலக்கண வளமையும் கொண்டு உயர்தனிச் செம்மொழியாய் இறுமாந்து நிற்கிறது.

பேரகரமுதலி வெளியீடுகள் வெளிவருவதில் மிகுந்த அக்கறை கொண்டு பேரூக்கம் அளித்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அகரமுதலித் திட்டத்திற்கு அனைத்து வகையிலும், விழுமிய வண்ணம், எல்லா உதவிகளையும் செய்துவரும் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர அரும்பாடுபட்டு உழைத்த தொகுப்பாளர் (பகுதிப் பொறுப்பாளர்), பதிப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர்கள் மற்றும் திட்டப் பணியாளர்கள் ஆகியோருக்கு என் வாழ்த்துகளையும், நன்முறையில் அச்சிட்டுத் தந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு நன்றிகளையும் உரித்தாக்குகிறேன்.

16/8/2005

(பு.ஏ.இராமையா)

சென்னை

.07.2005

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

பி

பி[1] *pi,* மெய் '*ப்*' என்ற மெய்யெழுத்தும் 'இ'என்ற உயிரெழுத்தும் இணைந்த உயிர் மெய்(அசை)எழுத்து; the syllable formed by adding the short vowel 'i' to the consonant 'p'

[ப் + இ]

பி[2] *pi,* இடை. (part.) பிறவினை ஈறு(விகுதி) (வீரசோ. தாதுப்.6); a suffix of causative verbs.

எ–டு: காண்–காண்பி, உண்–உண்பி

பிக்கம்[1] *pikkam,* பெ. (n.) யானைக்கன்று, (யாழ்.அக); young of elephant.

[பிள் → பிள்ளை = குழந்தை. பிள் → பிள்கு → பிக்கு → பிக்கம் 'அம்' பெருமைப் பொருள் பின் னொட்டா தலால், இலக்கண நெறிப்படிப் பிக்கம் என்பது பெரிய விலங்கான யானைக் கன்றைக் குறித்தது]

pill-ai Tam. child; Tel. pilla, Kan. pille; Latin puell-us, puell-a. a boy, a girl; compare with pullus, the young of an animal (CGDFL.599)

த. பிக்கம்> Skt. pikka



பிக்கம்[2] *pikkam,* பெ. (n.) இருவேலி (சங்.அக.); cuscus grass.

பிக்கம்[3] *pikkam,* பெ. (n.) பின்காலின் சதைப்பகுதி (ஆந்.); the calf of the leg.

தெ. பிக்க.

[பின் → பிற்கு → பிக்கு → பிக்கம்]



பிக்கல்பிடுங்கல் *pikkal-piḍuṅgal,* பெ. (n.) தொல்லை, தொந்தரை (இ.வ.); trouble, worry.

அவளுக்குப் புகுந்த வீட்டில் பிக்கல் பிடுங்கல் இல்லை (உ.வ.).

க. பீகலாட (சண்டை, தொல்லை); தெ. பிக்கு (சூழ்ச்சி, வஞ்சகச்செயல்), பிகபிதலு (குழப்பம்)

[பிய் → பிக்கல். பிள் → பிடு → பிடுங்கல். *'பிக்கல் பிடுங்கல்'* மீமிசைப்பொருள் மரபிணைமொழி. தொடர்ந்து தரும் நச்சரிப்பையே இவ்வாட்சி குறிக்கிறது]

பிக்கலி *pikkali,* பெ. (n) அறுகு; a species of grass.

பிக்காகம் *pikkāgam,* பெ. (n) மாமரம்; mango tree.

பிக்கி *pikki,* பெ. (n) பழவகை; a kind of fruit.

கல்பிக்கி நாறிப்பிக்கி என பிக்கிப்பழத்தில் இருவகையுண்டு.

பிக்கிலி *pikkili,* பெ. (n) அறுகு; a species of grass.

பிக்கு[1]–தல் *pikku-,* 8 செ.குன்றாவி. (v.t.) சிறுதுண்டுகளாக்குதல் (சேரநா.); to break in to pieces.

ம. பிக்குக; தெ.பிகுலு, பிவுலு; கூ. பிஞ்ச.

[பிள் → பிள்கு → பிக்கு–,]

பிக்கு[2] *pikku,* பெ. (n.) 1. தொல்லை, சிக்கல், தடை (வின்.); trouble, intricacy, perplexity, hindrance. 2. பிசகு; fault, wrong, *'முனிவரு மேற்றுக் கொண்டாரிதைப் பிக்குச் சொல்லாமலே'* (குற்றா. குற.93,3). 3. குழப்பம் (வின்.); embrassment. 4. ஒவ்வாமை (யாழ்.அக.); unsuitability.

க.பிகலாட; தெ.பிக்கு

[பிள் → பிணை(கூட்டம்). பிள் → பிக்கு]

பிக்கு[3] *pikku,* பெ. (n.) புத்தத்துறவி; Buddha monk.

க. பிக்கு, பிச்சு

Pkt. bhikku, bhikṣu

[பிழா → பிடா → பிடவு → பிடகு → பிடகம் = வாய்விரிந்த பூந்தட்டு. பூக்கூடை. பூந்தட்டுப் போன்ற புத்தமறைப் பகுதி முப்(திரி)பிடகத்துள் ஒன்று. பிடகம் → பிடகன் = திரிபிடக ஆசிரியரான புத்தன் (பிங்). பிடகு → பிடக்கு = புத்தர் பிடக நூல் (வே.க.3.11.0) பிடக்கு → பிட்கு → பிக்கு = புத்த மறை நூலில் தேர்ச்சி பெற்ற துறவி.]

மா.வி.அக. (புத்தத்துறவி) இரந்துண்டு வாழும் தன்மையைக் கொண்டவர் என்னும் பொருளில் பிச்சையென்னும் சொல்லுடன் பொருத்திக் காட்டுகிறது. அவ்வாறாயினும் அது தமிழ்ப் பிச்சையடிப்படையில் அமைகிறது.

பிக்குணி *pikkuṇi,* பெ. (n.) புத்தப்பெண் துறவி; Buddha monk (female). *'பிக்குணிக் கோலத்துப் பெருந்தெரு வடைந்ததும்'* (மணிமே. 15, 58.).

Pkt. bhikkuni; Skt. bhikṣuni

[பிக்கு (ஆ.பா) – பிக்குணி(பெ.பா.)]

பிக்குப்பிசகு *pikku-p-piša̋gu,* பெ. (n.) *பிக்கல் பிடுங்கல்* பார்க்க (இ.வ.); see *pikkal piḍuṅgal.* மகளை மணம் செய்துகொடுப்பது பெற்றோர்க்குப் பிக்குப்பிசகாக இருக்கிறது. (உ.வ.)

[பிக்கு + பிசகு. பிக்கு = குற்றம், சிக்கல், பிசகு = தவறு, பிழை. 'பிக்குப் பிசகு' இனப்பொருள் மரபிணைமொழி.]

பிகபந்து *piga-pandu,* பெ. (n.) பிகவிருப்பம் பார்க்க; see *pigaviruppam.*

[பிகம் + பந்து.]

Skt. bandhu > **த.** பந்து

பிகம் *pigam,* பெ. (n.) குயில்; koel, cuckoo. '*சுகமும் பிகமும் மறை யோதும்*' (அழகர் கலம். 100).

ம. பிகம்; **க.** பிகலக்கி, பிக்குளிகெ (ஒருவகைப் பறவை); **தெ.** பிகிலி, பிகிலி (இனிமையாகப் பாடும் பறவைவகை)

[பிள் = இளமை, பசுமை, இனிமை. பிள் → பிக → பிகம் = இனிமையான ஓசையுடையது]

த.பிகம் > Skt. pika

பிகராகம் *piga-rāgam,* பெ. (n.) பிகவிருப்பம் (மலை.) பார்க்க; see pigaviruppam.

[பிக + ராகம். பிக = இனிய ஓசை. அராகம் → ராகம்]

த.அராகம் > Skt. *rāga*

பிகலி *pigali,* பெ. (n.) முள்ளி; a thorny shrub.

பிகவல்லபம் *piga-vallabam,* பெ. (n.) பிகவிருப்பம் பார்க்க; see piga-viruppam.

[பிகம் + வல்லபம்]

Skt. vallabha > **த.**வல்லபம்.

பிகவிருப்பம் *piga-viruppam,* பெ. (n.) குயிலின் விருப்பமான மாமரம் (மலை.); mango, the beloved of koel.

[பிகம் + விருப்பம்]

பிகன் *pigan,* பெ. (n.) படர்கொடிப் பசலை; a creeper.

பிகி¹-தல் *pigi -,* 4 செ.கு.வி. (v.i.) இறுகுதல்; to be hard knit. '*சரீரம் பிகிந்திருக்கும்*' (பைஷஜ. 235.).

க., **பட.** பிகி; **தெ.** பிகின்சு; **து.** பிகியுனி.

[பிள் → பிணை = இணைதல், கூடுதல். பிணைத்தல் = இறுகக்கட்டுதல். பிள் → பிகி-,]

பிகி² *pigi,* பெ. (n.) பெண்குயில்; the female of the bird - Indian cuckoo.

[பிகம் (குயில், ஆண்குயில்) – பிகி (பெண்குயில்). 'இ' பெ.பா.ஈறு.]

பிகு¹-த்தல் *pigu-,* 4 செ.கு.வி. (v.i.) ஊதை நோயின் இறுக்கத்தினால் உடம்பில் மாற்றம் ஏற்படுதல்; to feel tightness of the limbs of the body due to rheumatism.

[புல்லுதல் = இணைதல், பொருந்துதல். பில் → (பில்) → பிள் → பிகி. பிகிதல்= இறுகுதல். பிகி → பிகு. பிகுதல் = (உடலுறுப்பு) இறுக்கமடைதல்.]

பிகு² *pigu,* பெ. (n.) **1.** இறுக்கம்; tightness, hardness, rigidity. **2.** வலிமை (வின்.); force, strength. **3.** செருக்கு; arrogance, severity. '*அவன் வெகு பிகுவாயிருக்கிறான்*'.

4. எடுத்த குரல் (வின்.); strong voice, high pitch.

க., து. பிகி

[பிகி → பிகு.]

பிகுப்பட்டை *pigu-p-paṭṭai,* பெ. (n.) சேணக்கச்சு (வின்.); girth of a horse.

[பிகு + பட்டை. பிகுபட்டை = இறுகக் கட்டப்படுவது]

பிகுபண்ணு–தல் *pigu-paṇṇu-,* 12 செ.குன்றாவி. (v.t.) தன்னையருமைப்படுத்திக் கொள்ளுதல் (கொ.வ.); to make oneself too dear.

ம. பிகயுக

[பிகு + பண்ணு. 'பண்ணு' து.வி. பிகு = இறுக்கம், உறுதி, செருக்கு]

பிகுபந்து *pigupandu,* பெ. (n.) மாமரம்; mango tree.

[பிகம் + பந்து - பிகபந்து → பிகுபந்து = குயிலுக்கு இருப்பிடமளிக்கும் மரம்]

Skt. bandhu > த. பந்து.

பிகுவாயிரு–த்தல் *piguvāyiru-,* 3 செ.கு.வி. (v.i.) (முறுக்குண்ட கயிறு) விறைப்பாயிருத்தல்; to stiffen as of twisted twin.

[பிகுவாய் + இரு. 'இரு' து.வி.]

பிகுவு *piguvu,* பெ. (n.) 1. பிகு, 1, 2. பார்க்க. (வின்.); see pigu 1, 2. 2. ஓரளவு கொண்ட அவுரிக்கட்டு; bundle containing a definite quantity of indigo plants cut from the field. (C.G.)

தெ.பிகுவு; க. பிகுகு; து. பிகிபு

[பிகு → பிகுவு]

பிகுவேற்று–தல் *pigu-v-ēṟṟu-,* 8 செ.குன்றாவி. (v.t.) 1. இறுகச் செய்தல்; to make tight, tighten. 2. வளைத்தல். to bend, as a bow.

[பிகு + ஏற்று. ஏறு → ஏற்று–,]

பிங்கடமார்கட்டு–தல் *pingaḍa-mārkaṭṭu -,* 5 செ.குன்றாவி. (v.t.) *பின்கட்டு மாறுகட்டு –தல்* பார்க்க; see *piṉkaṭṭu māṟu kaṭṭu-.*

க. பிங்கடெ(பின்கடை)

[பின்கட்டுமாறுகட்டு → பிங்கடமார்கட்டு. (கொ.வ.)]

பிங்கதிருட்டி *pinga-tiruṭṭi,* பெ. (n.) அரிமா (சிங்கம்), பிங்க நிறமான கண்ணுடையது; lion, as being tawny-eyed.

[பிங்கம் + திருட்டி.புகர் → பிகர் → பிங்கர் → பிங்கம்]

த. பிங்கம் > Skt.pinga

Skt. drṣṭi > த. திருட்டி

பிங்கநிறம் *pinga-niṟam,* பெ. (n.) பழுப்பு மஞ்சள் நிறம்; tawny colour.

[பிங்கம் + நிறம்]

பிங்கம்[1] *pingam,* பெ. (n.) பொன்மை கலந்த சிவப்பு (வின்.); tawny colour.

Skt.pinga; L.ping.

[புகர் → பிகர் → பிங்கர் → பிங்கம்]

பிங்கம்² *pingam,* பெ. (n.) பழுபாகற் கொடி வகை; a climber.

[பிங்கம் = பழுப்பு மஞ்சள் நிறம். பிங்கம்¹ → பிங்கம் = பழுப்புநிறப் பாகற்கொடி]

பிங்கம்³ *pingam,* பெ. (n.) இளங்கன்று; young calf.

[பிஞ்சு = இளமையானது. பிஞ்சு → பிங்கு → பிங்கம்.]

pinga, a young animal. c.f.D.piñju, piḷḷē (KKED.XXI)



பிங்கலகேசி *pingalakēši,* பெ. (n.) இறந்து பட்ட ஓர் ஏரணநூல் (யாப்.வி.பக். 487,540); a polemic poem, not extant.

பிங்கலந்தை *pingalandai,* பெ. (n.) பிங்கல நிகண்டு பார்க்க (சூடா. சிறப்புப்.7.); see pingala nigaṇḍu.

[பிங்கலம் → பிங்கலந்தை.]

பிங்கலநிகண்டு *pingala-nigaṇḍu,* பெ. (n.) பிங்கல முனிவர் இயற்றிய நிகண்டு; a ancient Tamil Lexicon, named after the author.

[பிங்கலம் + நிகண்டு]

Skt.nighaṇṭu > த. நிகண்டு

பிங்கலம்¹ *pingalam,* பெ. (n.) **1.** பொன்னிறம் (திவா); gold colour, yellow. **2.** அரிதார நிறம்; tawny, reddish brown. **3.** பொன் (சூடா.); gold. **4.** வடக்கு (பிங்.); north. **5.** பிங்கல முனிவர் இயற்றிய நிகண்டு; an ancient Tamil lexicon named after the author. *'பிங்கல முதலா நல்லோருரிச் சொலின்'* (நன்.460).

க., து. *பிங்கல, பிங்கள*

[பிங்கம் → பிங்கலம்]

த. *பிங்கலம்* > Skt. *pingala.*

பிங்கலம்² *pingalam,* பெ. (n.) **1.** கீரி; mongoose. **2.** குரங்கு; monkey. **3.** பிங்கல மாழை பார்க்க; see pingala māḻai.

[பிங்கம் = பழுப்பு மஞ்சள் நிறம். பிங்கம் → பிங்கலம் = பழுப்பு வண்ணத்திலிருக்கும் கீரி, குரங்கு]



பிங்கலமாழை *pingalamāḻai,* பெ. (n.) குடவம் (பித்தளை); brass.

[பிங்கலம் + மாழை. மால் → மாழை]

பிங்கலமுனிவர் pingala-muṉivar, பெ. (n.) பிங்கல நிகண்டு என்னும் நூலின் ஆசிரியர் (பிங். பாயி.); the author of a nikaṇḍu named after him.

[பிங்கல(ம்) + முனிவர்]

பிங்கலன்[1] *pingalan*, பெ. (n.) **1.** செல்வக் கடவுள் (குபேரன்) (திவா.); Kubēra, the god of wealth. "*பிங்கலற்கும் கருகூலம் போலிருப்பர்*" (குற்றா. தல. நகரச்.35). **2.** *பிங்கல முனிவர்* பார்க்க; see *pingalamunivar.*

[பிங்கலம் → பிங்கலன்]

பிங்கலன்[2] *pingalan*, பெ. (n.) **1.** நெருப்பு; fire. **2.** ஞாயிறு; the sun. **3.** சிவபெருமான்; god Sivan.

து. *பிங்களெ.*

[பிங்கம் = பழுப்புமஞ்சள் நிறம். பிங்கம் → பிங்கலம் → பிங்கலன் = மஞ்சள் சுடரொளியைக் கொண்ட நெருப்பு, நெருப்பைப் போன்ற ஞாயிறு, ஞாயிற்றைப் போன்று எரிக்கும் நெற்றிக் கண்ணை யுடைய சிவன். 'அன்' உடைமை குறித்த ஈறு]

பிங்கலாதனம் *pingalādanam*, பெ. (n.) ஒக இருக்கை (யோகாசன) வகை (தத்துவப். 107.); a kind of yogic posture.

[பிங்கலம் + ஆதனம்]

Skt. āsana.> **த.** ஆதனம்

பிங்கலை[1] *pingalai*, பெ. (n.) **1.** பத்து (தச) நாடியுள் ஒன்று (சிலப்.3,26,உரை); a principal tubular vessel of the human body, one of tasa - nāḍi q-v. **2.** வலது மூக்கு வழியாய் வரும் மூச்சு (யாழ்.அக.); breath through the right nostril. **3.** ஆந்தை வகை (சூடா.); a kind of owl. **4.** எண்திசை யானைகளுள் (அட்டதிக்கசங்களுள்) தென்றிசையிலுள்ள வலப்புறத்துக்குரிய பெண்யானை; the female elephant, mate of Vāmanam guarding the southern point of the compass, **5.** மலைமகள் (பார்வதி) (யாழ்.அக.); Pārvadi.

க. *பிங்கள*

[பிங்கலை = மூச்சுவிடும் முந்நாடிகளுள் வலத்ததாகச் சொல்லப்பெறுவது (வ.வ.35)]

த. பிங்கலை > Skt. pinglā

பிங்கலை[2] *pingalai*, பெ.(n.) ஆந்தை; owl.

க. *பிங்கலெ;* Skt., Mar. pingalā

[பிங்கம் → பிங்கலம் → பிங்கலை]

பிங்கள் *pingaḷ*, பெ. (n.) குழந்தை; child.

[புள் → (பிள்) → பீள் = இளங்கதிர், இளமை. புள் → (பிள்) → பில் → பின் → பின்சு → பிஞ்சு = இளமையானது. பிஞ்சு → பிங்கு → பிங்கள் = இளையது, குழந்தை.]

பிங்களம் *pingaḷam*, பெ. (n.) **1.** *பிங்கலம்,* பார்க்க; see *pingalam,* **2.** களிம்பு (யாழ்.அக.); verdigris. **3.** ஏய்ப்பு(வஞ்சகம்) (வின்.); guile, deception, insincerity. **4.** பிரிவு (பேதம்) (யாழ்.அக.); separation.

[பிங்கலம் → பிங்களம்]

ஒ.நோ. மங்கலம் → மங்களம்

த. பிங்களம் > Skt. pingala.

பிங்களி[1]—த்தல் *pingaḷi-*, **14** செ.குன்றாவி (v.t) அருவருத்தல் (யாழ்.அக.); to loathe.

[பின்கழி → பிங்க்ளி–,]

பிங்களி²–த்தல் *pingaḷi-,* 4 செ.கு.வி (v.i) பின்வாங்குதல்; to retreat.

[பின்கழி → பிங்களி–,]

பிங்களை *pingaḷai,* பெ. (n.) *பிங்கலை,* **4.** பார்க்க (சது.); see *pingalai* **4.**

பிங்காசம் *pingāšam,* பெ. (n.) பொன்வகை; a kind of gold.

[பிங்கம் → பிங்காசம்]

பிங்காசி *pingāši,* பெ. (n.) அவுரி (சங்.அக.); indigo.

பிங்காளம் *pingāḷam,* பெ. (n.) ஒருவகைக் கலம்; a kind of metallic vessel. *'பிங்காளமொன்று நூற்று ஐம்பத்து ஐங்கழஞ்சு'* (S.I.I. ii,**422.**)

பிங்கி¹ *pingi,* பெ. (n.). வன்னி (சங்.அக.); Indian mesquit.

பிங்கு–தல் *pingu-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** பின்னால் செல்லுதல், அகலுதல், விலகுதல்; to go back, to retreat, to go away. **2.** தோல்வியுறுதல்; to fail. to be backing. (கருநா,)

மறுவ. பிந்துதல்

க. பிங்கு,பிஞ்சு; **பட.** கிங்கு (அழுந்துதல்)

[பின் → பின்கு → பிங்கு–,]

பிங்குசம் *pingušam,* பெ. (n.). தலைக் கோலம்(பிங்.);a head ornament *'மணிக்கருங்கதுப்பிற் காந்தட் பிங்குசம்'* (இரகு. நாட்டுப்.**50.**)

[பின்னு(தல்) + குயம் – பின்(னு)குயம் → பிங்குசம்]



பிச்சத்தேவர் *picca-t-tēvar,* பெ. (n.) சிவ பெருமான்; Lord Sivan. *'பிச்சத்தேவர் திருமேனியொன்று'* (S.I.I.ii. **142, 17**)

[பிச்சை ² + தேவர்]

பிச்சப்பழம் *picca-p-paḻam,* பெ. (n.) சருக்கரைக் கொம்மட்டிப் பழம் (வின்.); sweet water melon.

[பிச்சம் + பழம். பள் → பழு → பழம்]

பிச்சப்பூ *piccappū,* பெ. (n.) பிச்சி¹ பார்க்க; see picci¹.

[பிச்சி → பிச்ச + பூ. பொல் → பொலி → பொலிவு. பொல் → பூல் → பூ.]

பிச்சம் *piccam,* பெ. (n.) **1.** இறகு (அக.நி.); feather. **2.** ஆண்பால் மயிர்(பிங்.); man's hair-tuft. **3.** பீலிக்குஞ்சம்; bunch of peacock's feathers, used as a fan. *'கவரியுங் குடையும் பிச்சமும்'* (தேவா. **1134. 8.**) **4.** பீலிக்குஞ்சக் குடை (பிங்.); umbrella with crest of peacock's feathers. **5.** எஞ்சி நிற்பது; remnant. *'பிச்ச அமாவாசை'* (இ.வ.) **6.** நெற்றிக்குறி இடும் (தரிக்கும்) போது

தவறிவிழும் சிதைவு; the deviations in the drawing of sacred marks on the forehead. 7. எட்டி (மலை.); strychnine tree. 8. இருவேரி (மலை.); cascus grass.

தெ. பிஞ்ச

[புள் → பிள் → பீள் = இளங்கதிர், இளமை. புள் → பூள் → பூட்டை= இளங்கதிர். புள் → பிள் → பிய் → பிச்சு → பிச்சம் = மென்மையானது.]

த. *பிச்சம்* › Skt. piccha.

பிச்சமாவாசை *piccamāvāšai,* பெ. (n.). படையல் நாள் (தர்ப்பண தினம்) அல்லது காருவா(அமாவாசை)வின் இறுதிப் பாகத்தைக் கொண்ட நாள்; day having the unexpired portion of the new moon, when oblations are not offered to manes. Brāh.

[பிச்சம் +அமாவாசை]

Skt. amā -vāsyā › **த.** *அமாவாசை*

பிச்சரிசி *piccariši,* பெ. (n.). பிச்சையரிசி பார்க்க; see piccai-y-ariši.

[பிச்சை +அரிசி – பிச்சையரிசி → பிச்சரிசி. அரி → அரிசி.]

பிச்சன் *piccaṉ,* பெ. (n.) **1.** மனநலம் குன்றியவன் (பைத்தியக்காரன்); maniac, madman. '*பிச்சரங்கவரெனப் பிறருந் தூற்றவே*' (பிரபோத. **26. 70**). **2.** மருண்டவன்; one who is captivated, enamoured or fascinated. **3.** சிவன்; Šivaṉ. '*ஊர்ச்சுடுகாட்டெரிப் பிச்சன்*' (திருவாச. **6,49**).

ம. பிச்சன்; **க.** பெச்ச; **தெ.** பிச்சி; **பட.** புச்ச

[பே → பேம் = அச்சம். பேதல் = அஞ்சுதல். பேய் → பேயன் = பேய்பிடித்தவன். பே → பேது = பேய்பிடித்தாற் போன்ற மருள், மயக்கம், அறியாமை. பேது → பேத்து. பேத்துதல் = அஞ்சி உளறுதல், உளறுதல். பேத்து → பீத்து ஒ.நோ. தேஞ்சுவை → தீஞ்சுவை. பீத்துதல் = உளறுதல், தன்புகழ்ச்சியாய் உளறுதல். பீத்து → பித்து. ஒ.நோ. தீம் → தித்தி. பித்து = மயக்கம், மதிமயக்கம், மூளைக்கோளாறு, தலைக்கிறுக்கு, தலைச்சுற்றை உண்டாக்கும் நீர், அந்நீரைக்கொண்டவுறுப்பு, மயக்க நிலைப்பட்ட காதல் அல்லது அவா. பித்து → பித்தன் = கிறுக்கன், கழிபெருங் காதலன் அல்லது பற்றினன். பித்து → பிச்சு → பிச்சன் (மு.தா.9)]

பிச்சன்கோட்டகம் *piccaṉ - kōṭṭagam,* பெ. (n.) நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; a village in Nāgapaṭṭiṉam dt.

[பிச்சன்+கோட்டகம்]

பிச்சாடனம் *piccāḍaṉam,* பெ. (n.). இரப்பு; begging, mendicancy.

[பிச்சை + ஆடனம்]

பிச்சாடி *piccāḍi,* பெ. (n.). குதிரையின் பின்னங்காற் கயிறு (வின்.); tether for the hind feet of a horse, opp. to akāḍi.

[பின் → பின்பு. பின் → பின்று → பிந்து. பின்சு → பிச்சு → பிச்சாடி = பின், பின்னங்காற் கயிறு. ஒ.நோ. அகாடி = முன், குதிரையின் முன்னங்காற் கயிறு.]

பிச்சாவரக்கழி *piccāvara-k-kaḻi,* பெ. (n.). பரந்த நீர்ப்பரப்புடைய கழிமுகம்; a broad river mouth.

[பிச்சாவரம் + கழி]

பிச்சாவரம் *piccāvaram,* பெ. (n.). அடர்ந்த மரங்களுள்ள கடற்றுறை; a harbour.

[பிச்சன்புரம்→ பிச்சாபுரம் → பிச்சாவரம். 'பிச்சன்' சிவபெருமானைக் குறித்ததாக இருக்கலாம்.]

பிச்சி[1] *picci,* பெ. (n.) 1. சாதிமல்லிகைப்பூ (கொ.வ.); large flowered jasmine. ; 2. முல்லைப்பூ (பிங்.); trichotomous-flowering smooth jasmine. 3. சிறுசெண்பகம் (மலை.); canaga flower tree.

மறுவ. பித்தி, பித்திகம், பித்திகை
ம. பிச்சி, பிச்சிகம்

[பித்திகை → பித்தி → பிச்சி]

பிச்சி[2] *picci,* பெ. (n.) 1. பித்துப்பிடித்தவள்; crazy woman. '*பெயர்த்து மவனுக்கே பிச்சியானாள்*' (தேவா. 714, 7.). 2. பிச்சியார், 1. பார்க்க; see picciyār. 1. 3. ஒரு பெண் பேய்(யாழ்ப்.); a female devil.

ம. பிச்சு(மனநலம் குன்றிய தன்மை); **க.** பெச்சு, பச்சு, புச்சு (மனநலம் குன்றிய தன்மை.) **தெ.** பிச்சி; படீ. புச்சி

[பேத்து → பீத்து. பீத்து → பித்து → பித்தன் = கிறுக்கன், கழிபெருங்காதலன் அல்லது பற்றினன். பித்து → பிச்சு → பிச்சன்.(ஆ.பா) –பிச்சி (பெ.பா.)]

பிச்சி[3] *picci,* பெ. (n.) மனநலம் குன்றியவ–ன்–ள்.(பித்துப் பிடித்தவ–ன்–ள்) (இ.வ.); crazy person.

தெ. பிச்சி.

[பிச்சு → பிச்சி]

பிச்சி[4] *picci,* பெ. (n.) சருக்கரைக் கொம்மட்டி; sweet water-melon. (M.M. 372)

பிச்சி[5] *picci,* பெ. (n.) 1. இறகு; feather. 2. இந்தியா, தென்னமெரிக்கா, சிலி முதலான நிலப்பகுதிகளிற் பயிராகும் இலை; the leaf of a plant growing in South America, Chili and in parts of India.

[புள் → பிள் → பிய் → பிச்சு → பிச்சி]

பிச்சிகம் *piccigam,* பெ. (n.) குருவி (ஆந்.); a sparrow.

தெ. பிச்சிக, பிச்சுக

[பிள் → பிட்டு = சிறியது. பிள் → பிசு பிசுக்கு = சிறுதுண்டு. பிசு → பிச்சு → பிச்சுகம் → பிச்சிகம் = சிறு பறவை]



பிச்சிதைப்பீறிஇலை *piccidaippīṟi-ilai,* பெ. (n.) இதளிய(பாதரச)த்தைக் கட்டியாக்கும் இலை; the leaf of a plant to consolidate mercury.

[பிச்சிதைப்பீறி + இலை]

பிச்சிப்பயறு *picci-p-payaṟu,* பெ. (n.) நச்சு (துலுக்க)ப் பயறு; aconite leaved kidney bean.

[பிச்சி + பயறு]

பிச்சியார் *picciyār,* பெ. (n.) 1. சிவனிய (சைவ)த்தவப்பெண்; mendicant woman devotee of Šivaṉ. பிச்சியாரெனும் பேருமக்கிட்டதே' (குமர. பிர. மதுரைக்கலம்.32.). 2. சிவனிய (சைவ)த்தவப் பெண்ணாய் இரந்துண்ணும் ஒருத்தியைக் காமுகனொருவன் கண்டு விரும்புவதாகப் பாடும் கலம்பக வுறுப்பு; a characteristic theme of kalampagam wherein a lewd person is described as wooing a mendicant woman - devotee of Šivaṉ.

[பித்து → பித்தன் = கிறுக்கன். பித்து → பிச்சு → பிச்சன் = பித்துப்பிடித்தவன். பிச்சன் (ஆ.பா.) – பிச்சி (பெ.பா.). பிச்சி → பிச்சியார். 'ஆர்' உயர்வுப்பன்மையீறு]

பிச்சில்வாரி *piccilvāri,* பெ. (n.) வள்ளத்தில் கட்டப்பட்டிருக்கும் சிறிய பாய்மரத்தைத் தாங்கிநிற்கும் பலகை; supporting plank of a mast.

[பிச்சில் + வாரி. வார் → வாரி]

பிச்சிலபம் *piccilabam,* பெ. (n.) *பிச்சிலம்* பார்க்க; see *piccilam.*

[பிச்சிலம் → பிச்சிலபம்]

பிச்சிலம் *piccilam,* பெ. (n.) 1. குழம்பு; curry-broth. 2. ஈரம்; moisture, dampness. 3. கஞ்சி; conjee.

[பிசுபிசுத்தல் = பசைத்தன்மையாதல், ஈரத்தன்மையடைதல். பிசு → பிச்சு → பிச்சிலம்]

பிச்சிலா *piccilā,* பெ. (n.) இலவுமரம்; a tree.



பிச்சிலாபம் *piccilābam,* பெ. (n) காமாலையைப் போக்கும் இருள்விடுசெடி மூலிகை; a plant capable of curing jaundice.

பிச்சிலை *piccilai,* பெ. (n) 1. சாதி மல்லிகையிலை;leaf of jasminum grandiflorum. 2. பிச்சிப் பழக் கொடியின் இலை; leaf of water melon creeper.

[பிச்சி + இலை]

பிச்சிவேர் *picci vēr,* பெ. (n) சாதிமல்லிகை வேர்; root of jasminum grandiflorum.

[பிச்சி + வேர்]

பிச்சிற்கண்டா *piccirkaṇḍā,* பெ. (n.). சிறு பாய்மரம் நிற்குமிடம்; orifice in the rib of a doney through which the mast passes.

[பிச்சில் + கண்டா. குல் → குள் → கள் = முள். கள் → கண் → கண்டு → கண்டா = குத்தி உருவாக்கப்பட்ட துளை.]

பிச்சிற்பாய் *piccir pāy,* பெ. (n.). மரக் கலத்திற்குரிய சிறியபாய்; sail of boat.

[பிச்சில் + பாய்].

பிச்சீரல் *picciral,* பெ. (n) பித்தீரல் (இ.வ.); liver.

[பிச்சு + ஈரல். பித்து → பிச்சு]

பிச்சு¹ *piccu,* பெ. (n) **1.** பித்தநீர்; bile. *'புறாவின் பிச்சும்'* (கொக்கோ. **1,27.**). **2.** மனநலமின்மை (பைத்தியம்); madness, infatuation. *'பிச்செமை யேற்றிய பெரியோன்'* (திருவாச. **3, 107.**).

ம. பிச்சு; **க.** பெச்சு, பச்சு, புச்சு; **தெ.** பிச்சி, பிச்ச; பட. புச்சு; **கோத.** புச்; **துட.** பூச்(சினம்).

[பீத்து → பித்து = மயக்கம் மூளைக் கோளாறு, தலைக்கிறுக்கு, தலைச் சுற்றையுண்டாக்கும் நீர். பித்து → பித்தன் = கிறுக்கன். பித்து → பிச்சு.]

த. பித்தம் > Skt. pitta

பிச்சு² *piccu,* பெ. (n) **1.** மூளை; brain. **2.** எட்டி; nuxvomica.

பிச்சு³ *piccu,* பெ. (n) **1.** கண் அழுக்கு, பீளை (கருநா.); slimy impurities of the eye, rheum.

க. பிச்சு; **தெ.** புசி; **து.** புர்கு

Skt. piñjata, peñjūsa, peiñjūṣa

[பித்து → பிச்சு]

பிச்சுக்கொடி *piccu-k-koḍi,* பெ. (n) கொடிவகை; heptapleuram venulosum.

[பிச்சு + கொடி]

பிச்சுநெட்டி *piccu-neṭṭi,* பெ. (n) காய்ச்சல் (சுர)வகை; a kind of fever. (C.E.M.)

[பிச்சு + நெட்டி. பித்து → பிச்சு = தலைக் கிறுக்கு உண்டாக்கும் நோய். பிச்சு நெட்டி = தலைச்சுற்றை, மயக்கத்தை உண்டாக்கும் காய்ச்சல்.]

பிச்சுப்பிடுங்கல் *piccu-p-piḍuṅgal,* பெ. (n) *பிக்கல் பிடுங்கல்* (இ.வ.) பார்க்க; see *pikkal piḍuṅgal.*

[பிக்கல்பிடுங்கல் → பிச்சல்பிடுங்கல் → பிச்சுப்பிடுங்கல்]

பிச்சுப்பேய் *piccu-p-pēy,* பெ. (n) ஒரு சிறுதேவதை (வின்.); a minor devil.

[பிச்சு + பேய். பித்து → பிச்சு. பே → பேம். பே → பேய் = அஞ்சப்படும் ஆவி அல்லது தோற்றம்.]

பிச்சுப்பை *piccu-p-pai,* பெ. (n) *பித்தப்பை* (இ.வ.) பார்க்க; see *pitta-p-pai.*

[பித்தப்பை → பித்துப்பை → பிச்சுப்பை. புள் → பொள் → பொய் → (பய்) → பை]

பிச்சுலங்கல் *picculaṅgal,* பெ. (n) பித்து வழிதல்; over flowing of the gall.

[பித்து → பிச்சு + உலங்கல்]

பிச்சை¹ *piccai,* பெ. (n) *பிச்சி⁴* (வின்.)பார்க்க; see *picci⁴.*

[பிச்சி → பிச்சை]

பிச்சை² *piccai,* பெ. (n) **1.** வாழை (மலை.); plantain. **2.** நூக்கம்; sissoo wood. (M.M. **821.**)

பிச்சை³ *piccai,* பெ. (n) குறைவானது, அளவில் குறைபாடுடையது(கருநா.); shortness or deficiency in measure or weight.

ம. பிச்சை (சிறியது, குள்ளமானது,

முதிராதது); **க.** பிச்செ

[புல் → (பில்) → பின் → பின்னி = மிகச் சிறியது. புல் → பில் → பிள் → பிட்டு = சிறியது. பிள் → பில் → பிசுக்கு = சிறுதுண்டு(மு.தா.130). பிசு → பிச்சை = சிறியது, குறைவானது]

பிச்சை⁴ *piccai,* **பெ.** (n) **1.** இரப்போர்க்கிடும் உண்வு; alms, food or raw rice given as alms. '*ஐயமும் பிச்சையும்*' (திவ். திருப்பா.2.).**2.** கொடை (தருமம்) (வின்.); charity. பிச்சைச் சோற்றிலும் எச்சிற் சோறா? (பழ.),

மறுவ. ஐயம்

க. பிக்கெ; பிச்செ; **து.** பிக்ச், பிக், பிச்ச்; **பட.** பிச்செ.

[பிசு → பிச்சு → பிச்சை = சிறுமையுற இடுவது, கொடுப்பது]

த. பிச்சை > Skt. bhiksā,

பிச்சை³ பார்க்க

bhiksh என்னும் வடசொல் பங்கிட்டுக் கொள்ள விருப்பம், அல்லது பகுத்து எடுத்துக் கொள்ளுதல் என்னும் பொருளுடைய bhaj என்னும் அடியிலிருந்து பிறந்ததாக மா.வி. அகரமுதலி குறிக்கிறது. bhaj என்னும் அடியும் தமிழ் பகு என்னும் சொல்லின் திரிபாய் இருப்பதைக் காண்க.

பகுத்துக்கொள்ளுதல் உரிமை அல்லது நட்புப்பற்றிக் கொள்ளுதற்குப் பொருத்தமாய் இருக்கலாம் அல்லாமல் பிறரிடமிருந்து இரப்பதற்குப் பொருந்தி வராமையைக் கண்டுகொள்க.

இனி வெஃகு → bhiṣh (வ.வ.2.94) என்றுமாம்.

பிச்சை⁵ *piccai,* **பெ.** (n) **1.** கிலுகிலுப்பை; a plant whose fruit rattle. **2.** புண்ணீர்; fluid oozing from sores. **3.** பாக்கு; areca-nut.

பிச்சைக்காசு *piccai-k-kāšu,* **பெ.** (n) மிகச் சிறிய அளவு; a pittance, கொடுக்கிறது பத்து உருபாப் பிச்சைக்காசுக்கு நாள் முழுக்க வேலை வாங்கிவிடுகிறார் (உ.வ.).

[பிச்சை + காசு]

பிச்சைக்காய் *piccaikkāy,* **பெ.** (n) தட்பூசணி (தருப்பூசணி); water melon.

மறுவ. தண்ணீர்ப்பழம்

[பச்சைக்காய் → பிச்சைக்காய்]

தட்பூசணி உள்ளே செந்நிறமாய் இருப்பினும் அதன் புறத்தோற்றம் பச்சையாய் இருத்தலின் அது பச்சைக்காய் எனப்பட்டது.

ஒ.நோ: பச்சைவாழைப்பழம்.



பிச்சைக்காரன் *piccai-k-kāran̲,* **பெ.** (n) இரப்போன்; beggar, mendicant.

[பிச்சை + காரன்]

பிச்சைக்காரி *piccai-k-kāri,* **பெ.** (n) இரந்து பிழைப்பவள்; feminine of beggar.

[பிச்சை + காரி. காரன் (ஆ.பா) – காரி (பெ.பா.)]

பிச்சைச்சட்டி *piccai-c-caṭṭi,* பெ. (n) இரப்போர் கலம்; begging bowl. *'பிச்சைசட்டியில் சனியன் புகுந்தாற்போல்.'*

[பிச்சை + சட்டி.]

பிச்சைச்சோறு *piccai-c-cōṟu,* பெ. (n) கைப்பிடி அளவான உணவு(பிடியன்னம்) (இ.வ.); handful of food.

[புல் → பில் → பிள் → பிட்டு = சிறியது. பிள் → பிசு → பிசுக்கு = சிறுதுண்டு (மு.தா.130). பிசு → பிச்சை = சிறியது, கைப்பிடியளவு. சொல் = பொன்போற் பொலிவும் கூலமாகிய நெல். சொல் → சொன்றி → சோறு.]

பிச்சைத்தனம் *piccai-t-taṉam,* பெ. (n.) 1. இரக்குங்குணம் (வின்.); mendicancy. 2. இழிகுணம் (வின்.); meanness, beggarliness. 3. வறுமை(வின்.); poverty,indigence.

[பிச்சை + தனம்]

பிச்சைத்தேவன் *piccai-t-tēvaṉ,* பெ. (n.) சிவபெருமான் (இ.வ.); Sivaṉ as mendicant.

[பிச்சை + தேவன்]

பிச்சைநோவு *piccai-nōvu,* பெ. (n.) கால்நடை நோய் (வியாதி) வகை (கால்.வி.); rinder - pest, cattle plague.

பிச்சைப்படி *piccai-p-paḍi,* பெ. (n.) சிறு படிவகை (வின்.); a small - sized measure.

[பிச்சை + படி. புல் → (பில்) → பின் → பின்னி = மிகச்சிறியது. நன்னி பின்னி என்பது தஞ்சை வழக்கு. புல் → பில் → பிள் → பிட்டு = சிறியது. பிள் → பிசு → பிசுக்கு = சிறுதுண்டு (மு.தா.130) பிசு → பிச்சை = சிறியது. புள் → (பள்) → படு . படுதல் = தொடுதல், பொருந்துதல், ஒத்தல். படு → படி = ஒத்த அளவு, அளவு, முகத்தலளவு கருவி. (மு.தா. 202)]

பிச்சைப்பாத்திரம் *piccai-p-pāttiram,* பெ. (n.) *பிச்சைச் சட்டி* பார்க்க; see *piccai-c-caṭṭi.*

[பிச்சை + பாத்திரம்]

Skt. *pātra* > த. *பாத்திரம்.*

பிச்சையரிசி *piccai-y-ariśi,* பெ. (n.) பூணூல் திருமணத்தில் பூணூல் அணிந்ததும் மாணி (பிரமசாரி)க்கு நன்மங்கலி பிச்சையாக அளிக்கும் அரிசி; rice offered by a married woman to a Brahmin bachelor just after the investiture of the sacred thread.

[பிச்சை + அரிசி.]

பிச்சையெடு-த்தல் *piccai-y-eḍu,* 4 செ.கு.வி. (v.i.) இரந்து பெறுதல்; to beg. குழந்தைகளையும் பிச்சை யெடுக்க பயன்படுத்தும் கூட்டம் நாட்டில் இருக்கிறது.

க. பிக்கெ பேடு; **பட.** பிச்செ எத்து.

[பிச்சை + எடு-,]

பிச்சையோடு *piccai-y-ōḍu,* பெ. (n.) இரப்போர் கலம்; begging bowl.

[பிச்சை + ஓடு]

பிச்சைவாரி *piccai-vāri,* பெ. (n) நெல்வகை(செங்கை.); a kind of paddy.

பிசக்கு[1]—தல் *piššakku-,* 5 செ. குன்றாவி. (v.t.) **1.** அழுக்காக்குதல்(யாழ்ப்.); to soil. **2.** கசக்குதல்; to press between the fingers, squeeze, crush. '*பிசக்கி மோந்த தித்தனை யொழிய*' (திவ். திருநெடுந். 21, வ்யா. 163.).

க.பிசுகு, பிசுங்கு, கிதுகு, கிசகு, கிசிகு, கிசுகு; தெ. பிதுகு, பிசுகு; பட. பிசுகு

[பிசங்கு → பிசக்கு—,]

பிசக்கு[2] *piššakku,* பெ. (n.) *பிசகு 1, 2* (வின்.) பார்க்க; see *piššagu 1, 2.*

[பிசகு → பிசக்கு—,]

பிசகடி *piššagaḍi,* பெ. (n.) *பிசகு 4* (சங்.அக.) பார்க்க; see *piššagu.4*

[பிசகு + அடி]

பிசகு[1] — தல் *piššagu-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** தவறுதல்; to fail, err, blunder. '*கணை பிசகாத படி தொடுக்கிறேன்*' (இராமநா. கிஷ்கிந்'.5.). **2.** உறுப்புப் பிறழ்தல்; to be dislocated as a joint; to sprain. '*மூட்டையை வண்டியில் ஏற்றியபோது தோள்பட்டை பிசகிவிட்டது*' (உ.வ.). **3.** வழுக்கி விழுதல் (வின்.); to make a false step, trip. **4.** தடைப்படுதல் (வின்.); to be hindered.

கோத. பெச்க் (தவறு); **கொலா.** பெக் (தவறு)

[புள் → பிள். பிள்ளுதல் = பிளத்தல், துண்டுபடுதல், வேறுபடுதல். புள் → பிள் → பிய் → பியகு → பிசகு.]

பிசகு[2]—தல் *piššagu-,* **5.** செ.கு.வி. (v.i.) (பாட்டில்) ஓசைஒழுங்கு விலகி மாற்றம் அடைதல்; to miss a note or beat.

[பிய → பியகு → பிசகு]

பிசகு[3] *piššagu,* பெ. (n.) **1.** தவறு; failure, mistake, error, blunder, slip. 'ஏது கழிவு பிசகேதென்ன' (பணவிடு. 169.). **2.** ஒவ்வாமை (வின்.); variance, deviation. **3.** இடையூறு (வின்.); hindrance embarrassment. **4.** தடை (வின்.); objection.

[பிய → பியகு → பிசகு]

பிசகு[4] *piššagu,* பெ. (n.) ஒழுங்கைக் குலைக்கும் மாற்றம்; alteration; deviation. தாளப்பிசகு.

[பிய → பியகு → பிசகு]

பிசகுசொல்(லு)—தல் *piššagu-šol(lu)-,* **8** செ.குன்றாவி. (v.t.) **1.** தடைநிகழ்த்துதல் (வின்.); to take objection; to challenge. **2.** குற்றங்கூறுதல்; to find fault with, point out defects.

[பிசகு + சொல்—,]

பிசகுநாறு—தல் *piššagu-nāṟu-,* **5** செ.கு.வி. (v.i.) கேடுறுதல்; to be spoiled, damaged. '*கைதொட்டால் பிசகு நாறாதே இருக்கும்*' (திவ். திருமாலை. 17, வ்யா. பக்.66.).

[பிசகு + நாறு—,]

பிசங்கதை *piśaṅgadai,* பெ. (n.) வெண்மை; whiteness.

[புல் → பல் → பால் → வெண்மை. புல் → பில் → பியல் → பிசல் → பிசம் = வெண்மை. பிசம் → பிசங்கதை]

பிசங்கம் *piśaṅgam,* பெ. (n.) பொன்மை கலந்த சிவப்பு; yellowish red or tawny colour.

[பிசம் → பிசங்கம்]

பிசங்கல் *piśaṅgal ,* பெ. (n.) *பிசங்கற்சீலை* (யாழ்ப்.) பார்க்க; see *piśaṅgaṟcilai.*

[பிசங்கு → பிசங்கல். 'அல்'. தொ.பெ.ஈறு]

பிசங்கற்சீலை *piśaṅgaṟ-cilai,* பெ. (n.). அழுக்கடைந்த ஆடை (யாழ்ப்.); soiled, dirty cloth.

[பிசங்கல் + சீலை. பிசங்கு + அல். 'அல்' தொ.பெ.ஈறு. சீரை → சீலை]

பிசங்கு-தல் *piśaṅgu-,* 9 செ.குன்றாவி. (v.t.) அழுக்காதல் (யாழ்ப்.); to become dirty; to be soiled.

மறுவ. பண்டியாதல்

[பிசகு → பிசங்கு-,]

பிசண்டம் *piśaṇḍam,* பெ. (n.) **1.** விலங்கின் முதுகு; the back of a beast. **2.** வயிறு(வின்.); stomach.

[பின் → (பில்) → பிள் → பியல் = பிடர். பியல் → பிசல் = பின்புறம், திமில். பிசல்→ பிசள் → பிசண்டம்]

பிசண்டிலன் *piśaṇḍilaṉ,* பெ. (n.) பெருவயிறு படைத்தவன் (சங்.அக.); pot-bellied person.

[பிசண்டம் → பிசண்டிலன்]

பிசம்¹ *piśam,* பெ. (n.) தாமரைத் தண்டு (பிங்.); fiber of the lotus, lotus-stalk.

பிசம்² *piśam,* பெ. (n.) வெண்மை; whiteness.

[உல் → எல் → எலும்பு → என்பு. புல் → பல் → பால் = வெண்மை. புல் → பில் → பியல் → பிசல் → பிசம்]

பிசம்³ *piśam,* பெ. (n.) இறகு (சது.); feather, wing.

[புள் → பிள் → பிய் → பியம் → பிசம்]

பிசல் *piśal,* பெ. (n.) **1.** பிடர் (வின்.); nape of the neck. **2.** எருது முதலியவற்றின் திமில் (வின்.); hump as of an ox. **3.** தோள்; shoulder. *'மயிரெழுந்த பிசல்களும்'* (ஈடு. **3, 4, 5.**) .

[பின் → (பில்) → பிள் → பியல் = பிடர். பியல் → பிசல் = தலையின் பின்புறம், திமில், தோள்]

பிசவருத்தம் *piśavaruttam,* பெ. (n.) அழற்சியினால், கண்ணினது மேல் பட்டையில் வீக்கமேற்பட்டு, நீர் வடிந்துகொண்டிருக்குமோர் கண்ணோய்; an inflammatory swelling of the eye lid dotted with minute punctures which fluid oozes out.

[பிசம் + வருத்தம். பீளை → பீளம்→ பிளம் → பியம் → பிசம்]

பிசறிவை–த்தல் *piśaṟi-vai-,* 4 செ.கு.வி. (v.i.) ஒரு பொருளுடன் மற்றொரு பொருளைக் கிளறி வைத்தல்; to mix. மாட்டுக்குத் தவிடும் பிண்ணாக்கும் போட்டுப் பிசறி வைத்திருக் கிறேன் (உ.வ.).

[புல் → (பில்) → பிள் → பிய் → பியர் → பிசறு. பிள் → பியை → பிசை. பிசறு → பிசறி + வை. 'வை' து.வி.]

பிசறு–தல் *piśaṟu -,* 5 செ.குன்றாவி. (v.t.) கலத்தல்; to mingle, mix with the hand.

[புல் → (பொல்) → பொரு → பொருந் → பொருந்து. புள் → பிள் → விள். விள்ளுதல் = கலத்தல், விரும்புதல் (மு.தா.166, 167). புள் → பிள் → பிய → பிச → பிசறு–,]

பிசனம் *piśaṉam,* பெ. (n.) செஞ்சந்தனம் (மலை.); red sanders.

பிசனமம் *piśaṉamam,* பெ. (n.) காட்டுப் பழுபாகல்; wild bitter gourd.

பிசாகம் *piśāgam,* பெ. (n.) மலைநெல்; mountain paddy.

பிசாசக்கை *piśāśa-k-kai,* பெ. (n.) இணையாவினைக்கை வகை (சிலப். 3, 18, உரை); (nātya.) a hand-pose.

[பிசாசம் + கை]

பிசாசடித்தல் *piśāśaḍittal,* பெ. (n.) பேயால் தாக்கப் படுகை; being attacked by a devil.

மறுவ. பேயடித்தல், ஆவியடித்தல்

[பிசாசு + அடித்தல்]

பிசாசப்பிரியம் *piśāsappiriyam,* பெ. (n.) வேம்பு (மலை.); margosa.

மறுவ. கடிப்பகை

[பிசாசம் + பிரியம். புரியம் → பிரியம். பேய் விரும்பிக்குடிகொண்டிருப்பதாகக் கருதப்படும் வேப்ப மரம்]

பிசாசம் *piśāśam,* பெ. (n.) 1. *பிசாசு* (சூடா.) பார்க்க; see *piśāśu.* 2. பேய்க்கரும்பு (மலை.); kaus. 3. *பிசாசக்கை* (சிலப். 3, 18, உரை) பார்க்க; see *piśāśa-k-kai.*

தெ. பிசாசமு.

[பிசாசு → பிசாசம் = பேய், கரும்பு போல் சாயல் கொண்ட செடி.]

பிசாசர் *piśāśar,* பெ. (n.) பதினெண்கணத்துள் ஒரு சாரார்; a class of supernatural beings, one of padiṉeṇ-kaṇam, q.v. *'இயக்கர் விச்சாதரர் பிசாசர்'* (திருவாலவா. 6, 2.).

[பிசாசு → பிசாகர்; 'அர்' ப.பா.ஈறு]

பிசாசன் *piśāśaṉ,* பெ. (n.) 1. பேய் பிடித்தவன்; one possessed by an evil spirit. 2. தீக்குணமுள்ளவன்; person of an evil disposition.

[பிசாசு → பிசாசன்.]

பிசாசாடு–தல் *piśāśāḍu-,* 5 செ.கு.வி. (v.i.) பேய்பிடித்தாடுதல்; to be possessed by a devil.

[பிசாசு + ஆடு–,]

பிசாசி¹ *piśāśi,* பெ. (n.) சடாமாஞ்சி (மலை.); spikenard.

பிசாசி² *piśāśi,* பெ. (n.) பெண்பேய்; a she - demon. **2.** ஆண் பெண்வேறுபாடு இல்லாத ஆவி.; a male, female or neuter spirit.

தெ. பிசாசி

[பிசாசு → பிசாசி.]

பிசாசு *piśāśu,* பெ. (n.) பேய் (பிங்.); devil, goblin, spirit of malevolent character.

[பிள் → பிண் → பிணம் = கட்டுவிட்ட (decomposed) சவம் (வே.க.3,113) பிள் → பியம் → பிசம் → பிசசு → பிசாசு = பிணத்தினின்று உருவாவதாகக் கருதப்படுவது, பேய்.]

வேதத்தில் அசுரர், அரக்கர் ஆகியோருடன் ஒருங்குவைத்து குறிக்கப்பட்ட ஒரு பிரிவினர் என்றும் புலாலை விரும்பியுண்பவர்கள் அல்லது மஞ்சள் நிறமானவர்கள் என்னும் அடிப்படையில் பெயர் பெற்றிருக்கலாம் என்றும் சதுப்புநிலத்தில் எரியும் ஒளியை உருவகஞ் செய்யும் அடிப்படையில் தோன்றியிருக்கலாம் என்றும் மா.வி. அகரமுதலி குறிக்கிறது. புலால் உண்ணுதல் என்பது ஒரு வகுப்பாரை இப்பிரிவினராகக் கருதியபின் அவர்களது பழக்கமான புலால் உண்ணுதலை அப்பிரிவினர்க்குரிய பெயர்க்காரணமாகக் கொள்ளப்பட்டுள்ளதும் அதேபோல் அப்பிரிவினரின் நிறம் பெயர்க் கரணியத்திற்குக் கொள்ளப்பட்டுள்ளதும் வழிப்பொருள்களே அன்றி மூலக் கரணியங்களாக அமையா. சில மொழிகளை இழிந்தன எனக்குறிக்க பைசாசபாஷா எனக்குறிக்கப்படுவது இதனுடன் பொருத்திக்காணத்தக்கது. இறந்தவரின் ஆவியே பிசாசாகிறது எனக் கொள்வதே இச்சொல்லின் வேர்ப் பொருளாக அமைவதன் பொருத்தத்தைக் காணலாம்.

piśāci, pēshi, a she-demon, D.piṇa, pēne, pēy, pēyi, pē, pētu and hēde. For Sk. piyu, injurious as an Asura and phi, anger, passion;a wicked man, (KKED. xxix)

பிசாசுபிடித்தல் *piśāśu-piḍittal,* பெ. (n.) **1.** பேய்க்கோட்படுகை; being possessed by a devil. **2.** பேய்க்கு இருப்பிடமாகை; being haunted. '*பிசாசு பிடித்த நிலம்*' (G, Madu. D.I, 87.).

[பிசாசு + பிடித்தல்]

பிசாடி *piśāḍi,* பெ. (n.) *பிச்சாடி* பார்க்க (வின்.) see *piccāḍi.*

[பிச்சாடி → பிசாடி]

பிசாரம் *piśāram,* பெ. (n.) *பிசாசப் பிரியம்* (சங். அக.) பார்க்க; see *piśāśa-p-piriyam.*

[பிசாசப்பிரியம் → பிசாரம்]

பிசாவப்பிரியம் *piśāvappiriyam,* பெ. (n.) *பிசாசப் பிரியம்* (சங்.அக.) பார்க்க; see *piśāśa-p-piriyam.*

[பிசாசப்பிரியம் → பிசாவப்பிரியம்]

பிசான் *piśāṉ,* பெ. (n.) பிசுபிசுப்பு (யாழ்ப்.); matted condition, stickiness, as of hair.

[பிசு → பிசுபிசுத்தல் = பசைத் தன்மையாதல். பிசு → பிசான்]

பிசானம் *pišāṉam,* பெ. (n.) **1.** பசான் (இ.வ.); a kind of paddy. **2.** சுறவம்(தை), கும்பம் (மாசி) மாதங்களாகிய அறுவடைக் காலம்; a season of harvest about the period between February and March.

தெ. பிசானமு

[பசான் → பசானம் → பிசானம்]

பிசி[1] *piši,* பெ. (n.) **1.** பொய்; falsehood. **2.** உவமேயத்தை உவமானப் பொருளால் குறிப்பித்துக் கூறுவது (தொல். பொ. 488.); a kind of enigma in which an object is indicated by description of something resembling it. **3.** கேட்போர் அல்லது படிப்போர் விடையிறுக்கும் வகையில் மறைச் செய்தியை, விளக்கும் குறிப்புகளடங்கிய சொற்றொடர் அல்லது சிறுசெய்யுள், விடுகதை, பிதிர்; riddle, enigma, puzzle. *'பிசியு நொடியும் பிறர்வாய்க் கேட்டு'* (மணிமே. 22, 62.).

க. புசி

[புள் → பிள் → பிய் → (பியி) → பிசி = பிய்ப்பது போல் விடுக்கும் விடுகதை, வினாவை விடுவித்ததற்காக, ஒன்றை பெற மற்றொன்றை விடுவிப்பது, ஒன்றுக்காக மற்றொன்றைச் சொல்வது (பொய்). பிள் → பிடு → பிது → பிதிர் = விடுகதை (மு.தா. 262) 'பிதிர்' பார்க்க.]

எ–டு: அப்பன் சொறியன், ஆத்தாள் சடைச்சி, பிள்ளைகள் சருக்கரைக் கட்டிகள்.– விடை: பலாப்பழம்.

பிசி[2] *piši,* பெ. (n.) சோறு (பிங்.); boiled rice.

[புள் → புழு → புகு → புகா = சோறு. புகா → புகவு = உணவு. புள் → புசி → பொசி. பொசித்தல் = உண்ணுதல். (மு.தொ. 289) புள் → புசி → பிசி]

த. பிசி > Skt. bhissā

மா.வி. அகரமுதலி இச் சொற்கு வேர் மூலம் எதுவும் காட்டவில்லை.

பிசி[3] *piši,* பெ. (n.) பொன்; gold.

[புல் → (பூல்) → பூ = பொலிவு, அழகு, மலர். புல் → பில் → பிள் → பியி → பிசி.]

பிசிண்டம் *pišiṇḍam,* பெ. (n.) *பிசண்டம்* பார்க்க; see *pišaṇḍam.*

[பிசண்டம் → பிசிண்டம்]

பிசிதத்துளிர் *pišida-t-tuḷir,* பெ. (n.) வேப்பங்கொழுந்து; the tender leaves of neem tree.

[பிசதம் + துளிர்]

பிசிதம்[1] *pišidam,* பெ. (n.) சதகுப்பை; a drug, the dillor sowa.

பிசிதம்[2] *pišidam,* பெ. (n.) இறைச்சி; flesh, meat. *'பிசிதமுண்டுழலும்'* (கம்பரா. நாகபா. 97.).

தெ. பிச்சு (கொழுப்பு, பசை)

[பிசாசம் → பிசாதம் → பிசிதம்]

பிசிதம்[3] *pišidam,* பெ. (n.) **1.** வேம்பு(பிங்.); margosa. **2.** மலைவேம்பு (வின்.); Persian lilac.

[பிசு → பிசுதம் → பிசிதம்]

பிசிதம்[4] *pišidam,* பெ. (n.) **1.** நீறு (சாம்பல்) (பிங்.); ashes. **2.** திருநீறு (விபூதி); sacred ashes.

பிசிதவூணர் *pišida-v-ūṇar,* பெ. (n.) ஊன்தின்போர், அரக்கர் (சூடா.); Rāksasas believed to live on flesh.

[பிசிதம் + ஊணர். ஊண் → ஊணர்.]

பிசிதாசனார் *pišidāšaṉār,* பெ. (n.) *பிசதவூணர்* (திவா.) பார்க்க; see *pišida-v-ūṇar.*

மறுவ. அரக்கன்

[பிசிதவூணர் → பிசதாணர் → பிசிதாசனர்]

பிசிதாசி *pišidāši,* பெ. (n.) ஊனுண்ணி(புதுவை.); flesh eater.

[பிசிதவூணர் → பிசிதாணர் → பிசிதாசனர் → பிசிதாசி]

பிசிபடுமொழி *piši-paḍu-moḻi,* பெ. (n.) செய்யுட்குற்றங்களுளொன்று (யாப்.வி. 523,525); (poet.) a defect in versification.

[பிசி + படு + மொழி]

பிசிர்[1]-தல் *pišir-,* 3 செ.கு.வி. (v.i.) சிதறுதல்; to drizzle, sprinkle, as rain. *'அவ்வில் பிசிர'* (பதிற்றுப். 50,6)

ம. பிதர் (மழை); **து.** பிசுனி (ஒழுகுதல்)

[புள் → புரு → பிரு → பிருக்கு = சிறியது, சிறுதுண்டு. பிஞ்சும் பிருக்கும் என்பது வழக்கு. பிள் → பிட்டு = சிறியது. பிள் → பிசு → பிசுக்கு = சிறுதுண்டு (மு.தா.130) பிள் → பிசு → பிசுர் → பிசிர். பிசிர்தல் = துண்டு துண்டாக, துளிதுளியாகச் சிதறுதல்]

பிசிர்[2] *pišir-,* பெ. (n.) 1. நீர்த்துளி; rain drop, spray. *"வான் பிசிர்க்கருவியின்"* (ஐங்குறு. 461) 2. ஊற்றுநீர்; spring water. *'மலிரும் பிசிர்போல'* (பரிபா.6,83)

ம. பிதர்(மழை); து.பிசிபிசி (ஊறுதல்), பிசுனி (ஊறுதல், வடிதல்), பிசுனி (ஊறுதல்)

[பிது → பிதுங்கு. பிதுங்குதல் = உள்ளீடு வெளிப்படுதல், பிதுங்குதல். பிது → பிசு → பிசி → பிசிர் → பிசிர்தல் = துளியாகச்சிதறுதல் (வே.க.3.112)]

பிசிர்[3] *pišir-,* பெ. (n.) 1. சிம்பு; fibre, *'பிசிரொடு சுடு கிழங்கு நுகர்'* (புறநா. 225) 2. ஆடை முதலியவற்றிலெழும் சிம்பு(இ.வ.); frayed end of clothes.

தெ. பீசு (செடிகளின் நார்ப்பகுதி)

[பிள் → பிசு → பிசுர் → பிசிர்]

பிசிர்தட்டு-தல் *pišir-taṭṭu-,* 5 செ.கு.வி (v.i) 1. அடிப்படை (பண்ணோடு) இசையோடு இணையாமல், வாய்ப்பாட்டு அல்லது இசைக்கருவியிலே படும் ஏற்ற இறக்கம்; discordant note. பாடகரின் குரலில் பிசிர் தட்டியது, 2. மாழை அல்லது மர வேலைப் பாட்டில் போதிய மென்மை வராதபோது காணப்படும் சிறு சொரசொரப்பு அல்லது சிறாம்பு; frayed end,rough end.

[பிசிர் + தட்டு-. துள் → தள் → தட்டு.]

பிசிராந்தையார் *piširāndaiyār,* பெ. (n.) குமரி முனைக்கு அருகிலிருந்த பிசிரென்னும் ஊரில் வாழ்ந்த பெருஞ்செல்வர்; a wealthy man who lived in Pišir village, near Capekumari.

[பிசிர் + ஆந்தையார். கோப்பெருஞ் சோழனின் ஆருயிர் நண்பராய்த் திகழ்ந்து,

அவனுடன் வடக்கிருந்து உயிர் துறந்தவர். அகம்.308, புறம்.67,184,191,212, நற்றிணை 91 ஆம் எண்ணுள்ள பாக்களைப்பாடியவர். ஆதன் + தந்தை – ஆந்தை. 'ஆர்' உயர்வுப் பன்மையீறு.]

பிசில் *pišil,* பெ. (n.) *பிசி²* (அக.நி.) பார்க்க; see *piši²*.

[பிசி → பிசில்]

பிசிறு–தல் *pišiṟu-,* 5 செ.குன்றாவி. (v.t) *பிசறு–தல்* (இ.வ.) பார்க்க; see *pišaṟu-,*

[பிசறு → பிசிறு]

பிசிறுலாடு *pišiṟu-lāḍu,* பெ. (n.) பயற்றுமாவும் சருக்கரையும் கலந்து செய்யும்இனிப்புருண்டை(இவ.); a ball of sweetmeat, made of sugar and greengram flour.

[பயறு + லாடு – பயறுலாடு → பசறுலாடு → பிசிறுலாடு]

U.lāḍu > த. லாடு

பிசின் *pišiṉ,* பெ. (n.) **1.** வெட்டுக் குருத்து; (திவா.); saplings of a lopped tree. **2.** பிரம்பு. (பிங்.); rattan palm. **3.** மரத்திலிருந்து வடிந்து உறைந்த பால் (கொ.வ.); gum, exudation from certain trees. **4.** சுறாலை (சாம்பிராணி) (யாழ். அக.); benzoin. **5.** ஒட்டுகை (வின்.); stickiness, viscousness. **6.** பஞ்சி நூல்(வின்.); cotton thread.

['பிசுபிசு' பசைத்தன்மையாதலை உணர்த்தும் ஒலிக் குறிப்புச் சொல். பிசு → பிசின் = பசைத்தன்மை, பசைத்தன்மையுள்ள மரப்பால்]

பிசின்காபிகம் *pišiṉ-kābigam,* பெ. (n.) விளாம்பிசின்; resin of wood apple tree.

பிசின்தூள் *pišiṉtūḷ,* பெ. (n.) வேலம்பிசின்; gum acacia.

[பிசின் + தூள்]

பிசின்பட்டை *pišiṉ-paṭṭai,* பெ. (n.) **1.** மரவகை; common tallow laurel. **2.** மரவகை (பதார்த்த. 998.); common grey mango laurel.

[பிசின் + பட்டை]

பிசின்போலரை–த்தல் *pišiṉpōlarai-,* 4 செ.குன்றாவி. (v.t.) நன்றாக மசித்து அரைத்தல்; to grind well.

மறுவ. மைபோலரைத்தல்.

[பிசின் + போல் + அரை –. அர் → அரை]

பிசினம் *pišiṉam* பெ. (n.) **1.** *பிசுனம்* (பிங்.)1 பார்க்க; see *pišuṉam*1.**2.** *பிசுனம்* **2.** (வின்.) பார்க்க; see *pišuṉam.* 2

[பிசுனம் → பிசினம்]

பிசினரக்கு *pišiṉ-arakku,* பெ. (n.) செவ்வரக்கு; red lac.

[பிசின் + அரக்கு. அல் → அர் → அரம் = சிவப்பு. அரம் → அரன் = சிவன். அர் → அர → அரகு → அரக்கு = சிவப்பு, சிவந்த பொருள்]

பிசினரிசி *pišiṉ-arišī,* பெ. (n.) **1.** அசாம் நாட்டிலிருந்து வரும் பசையுள்ள செந்நிறவரிசி (வின்.); a kind of glutinous reddish rice, said

to be imported from Assam. **2.** சவ்வரிசி (வின்.); sago.

[பிசின் + அரிசி. அரி = சிறியது. அரி → அரிசி]

பிசினன் *piši<u>n</u>a<u>n</u>,* பெ. (n.) *பிசினாரி* (இட.வ.) பார்க்க; see *piši<u>n</u>āri.*

த. பிசினன் > Skt. pišuna

[பிசுனன் → பிசினன்]

பிசினாறி *piši<u>n</u>ā<u>r</u>i,* பெ. (n.) இவறன் (உலோபி) (வின்.); miser.

தெ. பிசினாரி.

[பிசு → பிசுகு. பிசுகுதல் = கஞ்சத்தனம் பண்ணுதல். பிசுனாரி → பிசுனாறி → பிசினாறி]

பிசினி[1] *piši<u>n</u>i,* பெ. (n.) இவறன் (உலோபி) (வின்.); niggard. **2.** இவறற்றன்மை (உலோபம்) (வின்.); miserliness, niggardliness. **3.** கோட் சொல்லுவோன் (யாழ்.அக.); tale - bearer.

தெ. பிசினி

[பிசு → பிசுனன் → பிசுனி]

பிசினி[2] *piši<u>n</u>i,* பெ. (n.) **1.** ஈரப்பற்றுள்ள மேட்டு நன்செய், புன்செய் நிலங்களில் விதைக்கப் படுவதும் நாலுமாதங்களில் விளைவதுமான நெல்வகை; a kind of paddy raised with seed sown dry on high level na<u>n</u>cey lands and on pu<u>n</u>cey lands having some moisture and maturing in four months. **2.** *பிசின்* **1** (யாழ்.அக.) பார்க்க; see *piši<u>n</u>-1*

[பிது → பிசு → பிசிர் = நீர்த்துளி, ஊற்றுநீர். பிசிர்தல் = துளியாகச் சிதறுதல் (வே.க.3,112) பிசிர் → பிசின் → பிசினி = ஈரப்பற்றுள்ள நிலத்தில் வளர்வது]

பிசினேறி[1] *piši<u>n</u>ē<u>r</u>i,* பெ. (n.) *பிசினாறி* (யாழ்.அக.) பார்க்க; see *piši<u>n</u>ā<u>r</u>i.*

[பிசினாறி → பிசினேறி.]

பிசினேறி[2] *piši<u>n</u>ē<u>r</u>i,* பெ. (n.) மரவகை. (சங்.அக.); a kind of tree.

[பிசின் + ஏறி. ஏறு → ஏறி.]

பிசு *pišu,* பெ. (n.) **1.** பருத்தி (மலை.); Indian cotton plant. **2.** குட்ட நோய் வகை (சாரங்க. 228); a kind of leprosy. **3.** 400 பலங்கொண்ட எடுத்தலளவை (வின்.); a measure of weight = 400 palam.

த. பிசு > Skt. picu

[பிது → பிசு → பிசிர் = நீர்த்துளி, ஊற்றுநீர். பிசிர்தல் = துளியாகச் சிதறுதல் (வே.க.3,112) பிது → பிசு = பிசிர் போன்றது, மென்மையானது. மா.வி. அகரமுதலி 'picu' வுக்கு வேர் காட்டவில்லை]

பிசுக்கர் *pišukkar,* பெ. (n.) தாழ்ந்த குணமுடையார் (அற்பர்.); meanminded persons. "*பேதவாதப் பிசுக்கரை*" (திருவிசைப். திருமாளி. 4, 5.).

மறுவ. புல்லர்.

[பிசுக்கு → பிசுக்கர்.]

பிசுக்காரம் *pišukkāram,* பெ. (n.) பெருமிதம்; (இ.வ.); assumption of superior airs.

[பிசுக்கு → பிசுக்காரம்.]

பிசுக்கி *pišukki,* பெ. (n.) சிறியோன்; mean minded person. போடா பிசுக்கி (உ.வ.).

மறுவ. புல்லன், சிறுமகன்.

[பிசு → பிசுகு → பிசுக்கு → பிசுக்கி. (வே.க. 3, 112, 113)]

பிசுக்கு[1] *pišikku,* பெ. (n.) இவறன்மை (உலோபம்); miserliness, niggardliness. **2.** பொருள் வாங்கிய பின் சிறிது கூடுதலாகப் போடும் பொருள் (குசர்); extra quantity on a purchase, allowed by a merchant to his customers. **3.** பசையுறு பொருள் (இ.வ.); sticky substance.

மறுவ. கொசுறு.

[பிசு → பிசுகு, பிசுகுதல் கடையிற் பண்டம் வாங்கிய பின், மேலும் ஒரு சிறிது விலையின்றிக் கேட்டல், கஞ்சத்தனம் பண்ணுதல். அவர் கால்துட்டுக்குப் பிசுகுகிறான் (உ.வ.) பிசு → பிசுகு → பிசுக்கு (வே.க. 3, 112)]

பிசுக்கு[2] *pišukku,* பெ. (n.) *பீர்க்கு* (யாழ்ப்.) பார்க்க; sponge - gourd.

பிசுக்கு[3] *pišukku,* பெ. (n.) பெருமிதம்; superior airs.

[பிசுகு → பிசுக்கு]

பிசுக்குப்பிசுக்கெனல் *pišukku-p-pišukkenal,* பெ. (n.) *பிசுக்கெனல்* பார்க்க; see *pišukkenal*

[பிசுக்கு + பிசுக்கு + எனல்]

பிசுக்குவியர்வை *pišukku-viyarvai,* பெ. (n.) ஒட்டுந்தன்மையுள்ள வியர்வை; clammy, perspiration.

[பிசு → பிசுக்கு + வியர்வை 'கு'. சொ.ஆ.ஈறு. வெய் → வெயர் → வெயர்வை → வியர்வை]

பிசுக்கெனல் *pišukkenal,* பெ. (n.) பசைத் தன்மையாதற் குறிப்பு; expr. signifying stickiness or viscosity.

[பிசுக்கு + எனல்]

பிசுக்கேறு-தல் *pišukkēru-,* 6 செ.கு.வி. (v.i.) **1.** *பிசுக்கொட்டு-தல்* பார்க்க; see *pišukkottu-,* **2.** வியர்த்தல்; to perspire.

[பிசு → பிசுக்கு + ஏறு-]

பிசுக்கொட்டல் *pišukkottal,* பெ. (n.) ஈரப்பசையாதல்; becoming viscous.

[பிசு → பிசுக்கு + ஒட்டல். ஒட்டு → ஒட்டல். 'அல்' தொ.பெ.ஈறு]

பிசுக்கொட்டு-தல் *pišukkottu-,* 5 செ.கு.வி. (v.i.) ஒட்டுந்தன்மையாதல் (யாழ்.அக.); to be sticky.

[பிசுக்கு + ஒட்டு-, அள் → அண் → அண்டு → ஒண்டு → ஒட்டு]

பிசுக்கொடி *pišukkodi,* பெ. (n.) கொடிவகை; a kind of hepta pleuram venulosum.

பிசுகம் *pišugam,* பெ. (n.) வேலிப்பருத்தி பார்க்க (தைலவ. தைல.); stinking swallow wart.

[பிசு → பிசுகம்]

பிசுகு¹–தல் *piśugu-,* 5 செ.கு.வி. (v.t.) தடுமாறுதல்; to sway from side to side, as a must elephant. '*மத்தகஜம்போலே பிசுகிப் பிற்காலித்து வருகிறபடி*' (திவ். திருமாலை 37, வ்யா. 121)

[பிது → பிசு → பிசிர்.பிசு → பிசுகு (வே.க. 3.112)]

பிசுகு²–தல் *piśugu-,* 5 செ.கு.வி. (v.t.) பண்டம் வாங்கிய பின் மேலும் கொஞ்சம் கொடுக்கும்படி கேட்டல். (இக்.வ.); to ask for gratuitous extra on a purchase 2. இவறன்மையாயிருத்தல் (உலோபஞ் செய்தல்); to be niggardly. அவன் தம்பிடிக்குப் பிசுகுகிறான்.

[பிது → பிசு → பிசிர்.பிசு → பிசுகு (வே.க. 3.112)]

பிசுகு³–தல் *piśugu-,* 5 செ.கு.வி. (v.i.) மந்தமாதல்; to be slow; as in gait '*போகாதே பிசுகிச் சுழியா நிற்குறே*' (ஈடு, 1, 4, 6)

[பிசுபிசு = ஈரப்பசை. பிசு → பிசுகு –,]

பிசுணம் *piśuṇam,* பெ. (n.), செங்கழுநீர்க் கொடி; purple Indian water-lily.

[பிசுபிசு = ஈரப்பசைக் காட்டும் ஒலி. பிசு → பிசுணம் = நீரில் வளரும் கொடி]

பிசுதாலம் *piśutālam,* பெ. (n.) *பிசுதூலம்* பார்க்க; see piśutūlam.

[பிசுதூலம் → பிசுதாலம்]

பிசுதூலம் *piśutūlam,* பெ. (n.), பருத்திச் செடி; cotton plant.

[பிசு + தூலம்]

பிசுதேரிகம் *piśutērigam,* பெ. (n.), சுனைப்புல்; a kind of grass with numerous hairs.

பிசுபிசு¹–த்தல் *piśupiśu-,* 11 செ.கு.வி. (v.i.), 1. பசைத்தன்மையாதல் (வின்.); to be moist, sticky; to be glutinous, viscous adhesive or oily. 2. மழை தூறிக் கொண்டிருத்தல்(இ.வ.); to drizzle, sprinde

தெ. பிசபிசலாடு, பிசுனு (பசை); து. பிசிபிசி (சகதி), பிசிபிசி (பசைத் தன்மை); பட. பிசிபிசி (அழுகற்குறிப்பு)

[பிசு + பிசு– பிசுபிசு என்பது பசையுள்ள பொருளைத்தொடும்பொழுது தோன்றும் ஒலி. பிசுபிசு → பிசுபிசுத்தல்]

பிசுபிசு²–த்தல் *piśu-piśu-,* 4 செ.கு.வி. (v.i.) போராட்டம், கதவடைப்பு முதலியன எதிர்பார்த்த விளைவினை ஏற்படுத்தாமல் போதல்; to fizzle out. போராட்டம் பிசுபிசுத்தது.

[பிசு பிசு– ஒலிக்குறிப்புச் சொல் பிசுபிசுத்தல் = பசைத் தன்மை யாதல், விறைப்புக் குன்றிபோதல், எதிர்பார்த்த பயன் விளையாமல் போதல்]

பிசுபிசுத்தவன் *piśupiśuttavaṉ,* பெ. (n.) 1. இவறன்(உலோபி)(வின்.); niggard. 2. மந்தன்; dull, stupid person.

[பிசு பிசு → பிசுபிசுத்தவன்]

பிசுபிசுப்பாதல் *piśupiśu-p-pādal,* பெ. (n.) ஒட்டுந்தன்மையாதல்; viscid-viscous.

[பிசுபிசுப்பு + ஆதல்]

பிசுபிசுப்பு *piśupiśuppu,* பெ. (n.) தொட்டால் ஒட்டிக் கொள்ளும் பசைத்தன்மை; stickiness

greasiness. பலாப்பழம் அரிந்ததனால் கையில் ஒரே பிசுபிசுப்பு(உ.வ.).

[பிசுபிசுத்தல் → பிசுபிசுப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

பிசுபிசெனல் *pišupišeṉal,* பெ. (n.) **1.** ஈரப்பற்றாதற் குறிப்பு; expr: signifying moistness as of a cloth. ஆடை காயாமல் பிசுபிசென்றிருக்கிறது. **2.** பசையாதற்குறிப்பு; expr: signifying stickiness. **3.** மழை தூறுதற் குறிப்பு; expr: signifying drizzling slightly.

[பிசுபிசு + எனல்]

பிசுமத்தம் *pišumattam,* பெ. (n.) *பிசுமந்தம் 1* (யாழ்.அக.) பார்க்க; see *pišumandam.1.*

[பிசுமந்தம் → பிசுமத்தம்]

பிசுமந்தச்சூரணம் *pišumanda-c-cūraṇam,* பெ. (n.) வேப்பிலைக்கட்டி (இ.வ.); a kind of condiment prepared from citran leaves, neem, etc.

[பிசுமந்தம் + சூரணம்]

Skt. srūraṇa > த.சூரணம்

பிசுமந்தம் *pišumandam,* பெ. (n.) **1.** வேம்பு (மலை); margosa. **2.** செங்கழுநீர் (மலை.); purple water-lily.

[பிசு + மந்தம்]

பிசுமர்த்தம் *pišumarttam,* பெ. (n.), ***பிசுமந்தம்,1*** (சூடா.) பார்க்க; see *pišumandam.* 1

பிசுலம் *pišulam,* பெ. (n.), **1.** பிஞ்சு; tender fruit. **2.** காட்டுப்புன்கு; wild pongamia.

[பிசு → பிசு → பிசுலம்]

பிசுனம் *pišuṉam,* பெ. (n.) **1.** கோட்சொல்லுகை (பிங்.); talkbearing, slander. **2.** இவறன்மை (உலோபம்) (வின்.); niggardliness. **3.** காக்கை (யாழ்.அக.); crow. **4.** குங்குமம் (நானார்த்த. 123.); saffron. **5.** மஞ்சள் (யாழ்.அக.); turmeric. **6.** பருத்தி (யாழ்.அக.); Indian cotton plant.

த. பிசுனம் > Skt. pišuna.

[பிசு → பிசுனம்]

பிசுனன்[1] *pišuṉaṉ,* பெ. (n.), **1.** பிசினாறி (சூடா.) பார்க்க; see pišiṉari. **2.** இவறன்மை (உலோபம்) (வின்.); niggardliness. **3.** பொய்யன். liar.

[பிசு → பிசுனன்]

பிசுனன்[2] *pišuṉaṉ,* பெ. (n.) **1.** குங்குமம் (நாநார்த்த. 123.); saffron. **2.** மஞ்சள் (யாழ்.அக.); turmeric. **3.** பருத்தி (யாழ்.அக.); Indian cotton plant.

பிசுனாரி *pišuṉāri,* பெ. (n.) செல்வம் சேர்க்கும் பொருட்டுத் தேவைகளையும் குறைத்து வாழ்பவன்; miser. அந்தப் பிசுனாரி பகல் உணவு உண்ணமாட்டான் (உ.வ.).

மறுவ. இவறன்மாலையன், கஞ்சன்.

[பிசு → பிசுகு → பிசுக்கு. பிசு → பிசுனன் → பிசுனாரி. 'ஆரி' ஓர் ஈறு. ஒ.நோ. தலையாரி, பூசாரி. கஞ்சப் பிசுனாரி என்று மேலும் ஒரு அடை கொடுத்து வழங்குவதும் உண்டு]

பிசுனாறி *pišuṉāṟi,* பெ. (n.) *பிசுனாரி* பார்க்க; see *pišuṉāri.*

[பிசுனாரி → பிசுனாறி]

பிசுனி *pišuṇi,* பெ. (n.), இவறன் (உலோபி) (வின்.); niggard.

[பிசு → பிசுனன் → பிசுனி]

பிசூகம் *pišūgam,* பெ. (n.) *பிசுகம்* (மலை.) பார்க்க; see *pišugam.*

பிசை–தல் *pišai-,* 4 செ.குன்றாவி. (v.t.) மா முதலியவற்றைச் சிறிதாக நீர்விட்டுக் கையால் நன்றாகத் துழாவுதல்; to work with the thumb and fingers in mixing, to knead. *"கல்லைப் பிசைந்து கனியாக்கி"* (திருவாச. 8,5) களிமண்ணால் இன்னும் சிறிது நீர் ஊற்றிப் பிசை (உ.வ.). பருப்புச் சோறு பிசைந்து குழந்தைக்கு ஊட்டினாள் (உ.வ.). 2. கையாற் பிசைதல்; to squeeze or mash between the palms; to crush and separate as kernels of grain from the ear. தினையைப் பிசைந்து கூலத்தைப் பிரி (உ.வ.). 3. கசக்குதல்; to rub, as the eyes. *"கண் பிசைந் தொருசே யின்னுங் கலுழினும்"* (பிரபுலிங். கைலாச.). கண்ணோய் சமயத்தில் கண்ணைப் பிசையாதே (உ.வ.). 4. தேய்த்தல்; to rub or apply on the skin, as soap. *"இழைதுகள் பிசைவார்"* (பரிபா. 10, 91). 5. உரசுதல்; to strike against one another, as two bamboo branches moving in the wind. *"ஒலிகழை பிசைந்த"* (அகநா. 39).

க., தெ. பிசுகு; **து.** பிசுகுனி, பீசுனி; **பர்.** பீச்; **கட.** பிசுகோல்ப்; **கோண்.** பிசுகானா; **குரு.** பிக்கானா; **கோத.** பிச்க் ; **பட.** பிசகு, பிசுகு.

[புள் → பொள் → பொளபொள. பொளபொளத்தல் = நெகிழ்தல், ஒழுகுதல். புள் → பிள் → பியை → பிசை. பிசைதல் = நெகிழச் செய்தல், குழைவாக்குதல், அழுத்தித் தேய்த்தல், தேய்த்தல்]

பிஞ்சடம் *piñjaḍam,* பெ. (n.) 1. பீளை; secretion from the eye. 2. பூளைப் பூ; slower of woolly caper.

[பிஞ்சு → பிஞ்சடம்]

பிஞ்சம்[1] *piñjam,* பெ. (n.) 1. இறகு (சூடா.); feather. 2. மயிற்றோகை; peacock's tail. *"தோகையதன் பிஞ்சம் போற் கூடுவதும்"* (தெய்வீகவுலா, 194). 3. சத்திக் கொடி (மலை.); a kind of creeper.

க. பிஞ்சிய, பிஞ்சு, பின்செ, பெஞ்செ, பெஞ்செய.

த. பிஞ்சம் > Skt. piñccha.

[புள் → பிள் → பீள் = இளங்கதிர், இளமை (மு.தா. 39) புள் → (பிள்) → பின் → பின்சு → பிஞ்சு = இளமை யானது, மெலிவானது.]

பிஞ்சம்[2] *piñjam,* பெ. (n.) 1. மூக்கிரட்டை; boerhaavia repens or B. diffusa 2. சத்திசாரணை; a medical herb.

பிஞ்சாய்ப்பழு–த்தல் *piñjāy-p-paḷu-,* 4செ.கு.வி. (v.i.) பிஞ்சிற்பழுத்தல் பார்க்க; see piñjiṟpaḷu *"பிஞ்சாய்ப்பழுத்தாளை யாண்டாளை"* (உபதேசரத். 24).

[பிஞ்சிற்பழுத்தல் → பிஞ்சாய்ப்பழுத்தல்]

பிஞ்சிற்பழு–த்தல் *piñjiṟpaḷu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. இளமையிலேயே முதிர்வடைதல்; to become prematurely mature or old. 2. இளமையில் அறிவு பெருகுதல்; to be precocious.

[பிஞ்சில் + பழு–. பிஞ்சிற் பழுத்தலை வெம்பல் என்பது உலக வழக்கு]

பிஞ்சு *piñju*, பெ. (n.) **1.** இளங்காய், காயின்தொடக்கநிலை (சூடா.); young, tender fruit. ஆகுங்காய் பிஞ்சிலே தெரியும் (பழ.); **2.** இளமையானது; that which is young and tender. "*மதியின் பிஞ்சைப் புரைநுதலாய்*" (தஞ்சைவா. **420**) **3.** அணியின் அரும்புக் கட்டடம்; small bud-shapped work in an ornament. பிஞ்சும் அரக்கும் உட்பட நிறை (S.I.I. ii, **162, 169**). **4.** கால்; quarter, one fourth. இணங்கற்பிஞ்சு.

மா. பிஞ்சு; **க.** பிஞ்சு, பிஞ்செ; **தெ.** பிந்திய, பிந்தெ.

[புள் → (பிள்) → பீள் = இளங்கதிர். இளமைப்பூட்டை = இளங்கதிர். பூட்டை → பீட்டை (மு.தா. 39) புள் → (பிள்) → பின் → (பின்சு) → பிஞ்சு]

காய்நிலைகள் நான்கு: தோன்றிய நிலை பிஞ்சு; சற்றுப்பருத்த நிலை பிருக்கு; முற்றும் பருத்த நிலை காய்; பழுத்த நிலை பழம்.

பிஞ்சுக்கட்டை *piñju-k-kaṭṭai*, பெ. (n.) தலையகன்ற தூண் (கட்டட. நாமா.); pilaster.

[பிஞ்சு + கட்டை. பிஞ்சு = இளமையானது, மெலிவானது, ஒல்லியானது. பிஞ்சுக் கட்டை = தண்டுப்பகுதி சிறுத்துக் காணப்படும் தூண்]

பிஞ்சுக்கடுக்கன் *piñju-k-kaḍukkaṉ*, பெ. (n.) அரும்பு வைத்த கடுக்கன்; a kind of ear ornament.

[பிஞ்சு + கடுக்கன்]

பிஞ்சுக்கடுக்காய் *piñju-k-kaḍu-k-kāy*, பெ. (n.) இளங்கடுக்காய்; the tender gallnut.

[பிஞ்சு + கடுக்காய். கடு + காய் – கடுக்காய்]

பிஞ்சுக்காட்டுமண் *piñju-k-kāṭṭumaṇ*, பெ. (n.) மேல்மட்டத்தில் மணற்பாங்காகவும், கீழ்ப்பகுதி களியாகவும் இருக்கும் நிலம்; the soil of sandy layer at top and clay layer at bottom.

[பிஞ்சு + காட்டு + மண். காடு → காட்டு]

பிஞ்சுகம் *piñjugam*, பெ. (n.) **1.** இறகு; feather. **2.** நாய்பாலைக்கொடி; a creeper.

[புள் → பிள் → பின் → பின்சு → பிஞ்சு → பிஞ்சுகம்]

பிஞ்சுநெல் *piñjunel*, பெ. (n.) கருக்காய்(வின்.); paddy-husk.

[பிஞ்சு + நெல். நில் → நெல் = பொன்போல் விளங்கும் கூலம்]

பிஞ்சுப்பிறை *piñju-p-piṟai*, பெ. (n.) இளம்பிறை (வின்.); crescent of the moon.

[பிஞ்சு + பிறை. புரு → புரி. புரிதல் = வளைதல். புரு → (புறு) → புறை → பிறை = வளைந்த நிலா]

பிஞ்சுப்பூ *piñjuppū*, பெ. (n.) இளஞ்சிறு காயோடு கூடிய மலர்; flower with very tender fruit.

[பிஞ்சு + பூ. பொல் → பொலி → பொலிவு . பொல் → பூல் → பூ]

பிஞ்சுவெள்ளரி *piñju-veḷḷari*, பெ. (n.) இளம் வெள்ளரிக்காய்; tender cucumber.

[பிஞ்சு + வெள்ளரி]

பிஞ்சுவெள்ளி *piñjuveḷḷi,* பெ. (n.) கால் உருபா; quarter of a rupee.

[பிஞ்சு + வெள்ளி]

பிஞ்செழுத்து *piñjeḻuttu,* பெ. (n.) ஐந்தெழுத்தில் (பஞ்சாக்கரத்தில்) ஆற்றலை (சக்தியை)க் குறிக்கும் 'வ' என்னும் எழுத்து; letter 'va' in pañcākkaram denoting Sakti. பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் (கொடிக். 4).

[பிஞ்சு + எழுத்து]

பிஞ்சேடம் *piñjēḍam,* பெ. (n.) *பிஞ்சடம்* பார்க்க; see *piñjaḍam.*

[பிஞ்சடம் → பிஞ்சேடம்]

பிஞ்சை[1] *piñjai,* பெ. (n.) மஞ்சள் (சங்.அக.); turmeric.

[பிங்கம் → பிஞ்சம் → பிஞ்சை]

பிஞ்சை[2] *piñjai,* பெ. (n.) *பிஞ்சு 1* (சங்.அக.) பார்க்க; see *piñju 1.*

[பிஞ்சு → பிஞ்சை]

பிஞ்சை[3] *piñjai,* பெ. (n.) பஞ்சு; cotton.

[பிஞ்சு → பிஞ்சை]

பிஞ்சைக்காடு *piñjai-k-kāḍu,* பெ. (n.) கரிசற்காடு; black soil tract.

மறுவ. கரிசல்நிலம்

[பிஞ்சை + காடு. கடு → காடு]

பிஞ்ஞகம் *piññagam,* பெ. (n.) மகளிர் தலைக்கோலம் (பிங்.); ornament worn by women.

[பிங்குசம் → பிஞ்சுகம் → பிஞ்ஞகம்]

பிஞ்ஞகன் *piññagaṉ,* பெ. (n.) சடையுடைய சிவன்: Sivaṉ with ornamental tuft. பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க (திருவாச.1,7).

[பிங்குசம் → பிஞ்சுகம் → பிஞ்ஞகம் → பிஞ்ஞகன்]

பிட்கு-தல் *piṭku-,* 5 செ.கு.வி. (v.i.) கத்துதல்; to make noise. ***"ஓரி கதித்தெங்கும் பிட்க"*** (பதினொ.திருவால. மூத்த. 3).

[உயிரிகளின் வாயொலிகளல்லாத மற்ற வொலிகளெல்லாம் பொருள்கள் ஒன்றை யொன்று தொடுவதினாலேயே அல்லது தாக்கு வதனாலேயே உண்டாகின்றன. (மு.தா.89). புல் = பொருந்தற்கருத்து வேர் (வேக.க.3,62) புல் → பில் → பிள் → பிட்கு]

பிட்சி *piṭci,* பெ. (n.) இருவாட்சி; a kind of jasmine.

[பிச்சி → பிட்சி]

பிட்டகம்[1] *piṭṭagam,* பெ. (n.) சிற்றுண்டிவகை (அக.நி.); a kind of pastry.

[புள் → பொள் → பொட்டு = சிறியது. பிள் → பிட்டு = பிண்டு, உதிரியான சிற்றுண்டி வகை. பிள் → பிட்டு → பிட்டகம்]

பிட்டகம்² *pittagam,* பெ. (n.) 1. பல்லழுக்கு; tooth dirt. 2. வெள்விழியில் வெண் புள்ளிகள் தோன்றும் கண்ணோய் வகை; an eye is covered with white specks or dots.

[புள் → புழுக்கை → பிழுக்கை. (புள்) → பிள் → (பிய்) → பீ. பிள் → பீள் → பீளை = கண்மலம் (மு.தொ. 262). பிள் → பிட்டு → பிட்டகம்]

பிட்டடி-த்தல் *pittadi-,* 4 செ.கு.வி. (v.i.) கால்கள் பிட்டத்திற்படக் குதித்தல்; to jump, kicking heels against posteriors. "*பேய்கள் குறுநரி சென்றணங்காடு கட்டிற் பிட்டடித்து*" (பதினொ. காரைக். மூத்ததிருப். 6).

[பிட்ட(ம்) + அடி-,]

பிட்டநடு *pitta-nadu,* பெ. (n.) உடம்பினிடையிலமைந்த மலவாய்ப் பகுதி; between the buttocks-inter gluteal.

[பிள் → பிட்டு → பிட்டம் + நடு]

பிட்டநோய் *pittanōy,* பெ. (n.) கண்ணோய் வகை; an eye disease.

[பிள் → (பீள்) → பீளை. பிள் → பிட்டு → பிட்ட + நோய். கண்மலம் வரும் நோய்]

பிட்டம்¹ *pittam,* பெ. (n.) 1. பின்பக்கம். (யாழ்.அக.); hinder part. 2. இடுப்பின் பூட்டு(சீவரட்.4); hip-joint. 3. எருவாயை ஒட்டியிருக்கும் திரண்ட சதைப் பகுதி குண்டி(இ.வ.); buttocks, posteriors. பிட்டத்தில் போடும் ஊசி அதிகமாக வலிக்காது (உ.வ.). 4. முதுகு (யாழ்.அக.); back. 5. பரப்பு (யாழ்.அக.); surface.

[புள் → புட்டி = குடுவை, குப்பி, குடுவை போன்ற பறவையுடம்பின் பிற்பகுதி. புட்டி → பிட்டி = பிட்டம். புட்டி → புட்டம் = குடுவை போறபுடைத்த மாந்தன் உடம்பின் பின்பக்கம். ஒ.நோ:குண்டு → குண்டி. புட்டம் → பிட்டம். (வ.வ.38)]

பிட்டம்² *pittam,* பெ. (n.) அரைத்தமா (சூடா.); flour.

[பிள் → பிள → பிட்டு = சிறியது. பிட்டு → பிட்டம் = சிறியதாக, மெல்லியதாக, அரைத்தமா]

பிட்டமேகம் *pitta-mēgam,* பெ. (n.) பால் அல்லது தயிர் போல் சிறுநீர் இறங்கும் மேக நோய்; a disease where in the urine passed is white milky or curdy.

[பிள் → பிட்டு → பிட்டம் + மேகம்]

பிட்டர் *pittar,* பெ. (n.) ஆடுதின்னாப்பாளை; a bitter creeper.



பிட்டலை *pittalai,* பெ. (n.) குழம்புவகை; (கொ.வ.); a kind of curry or sauce. இன்று எங்கள் வீட்டில் பாகக்காய் பிட்டலை.

[பிட்டு → பிட்டலை]

பிட்டவத்தி *piṭṭavatti,* பெ. (n.) *பிட்டவியல்* (யாழ்.அக.) பார்க்க; see *piṭṭaviyal.*

[பிட்டு + அவி– பிட்டவி → பிட்டவத்தி]

பிட்டவி–த்தல் *piṭṭavi-,* 4 செ.குன்றாவி. (v.t.) வாயகன்ற சட்டியில் விட்டு, வாய்க்குச் சீலை கட்டி, அதன்மேல் மருந்துச் சரக்கை வைத்துப் பிட்டைப் போல் வேக வைத்தல்; to heat substances in the steam in a special apparatus.

[பிட்டு + அவி–]

பிட்டவித்துப்பிழி–தல் *piṭṭavittuppiḻi-,* 2 செ.குன்றாவி. (v.t.) பிட்டவி–த்தல் பார்க்க; see piṭṭavi-,

[பிட்டவித்து + பிழி–,]

பிட்டவியல் *piṭṭaviyal,* பெ. (n.) **1.** பிட்டைப் போல் நீராவியால் வேகவைத்தல்; heating substances by steam. **2.** நீராவியில் வெந்த பணியார வகை (வின்.); meal-cake, cooked in steam.

[பிட்டு + அவியல். அவி → அவியல். 'அல்' தொ.பெ.ஈறு]

பிட்டாப்பூ *piṭṭāppū,* பெ. (n.) *பிட்டவியல்* பார்க்க; see *piṭṭaviyal.*

[பிட்டு + பூ – பிட்டுப்பூ → பிட்டாப்பூ]

பிட்டார்முகி *piṭṭār-mugi,* பெ. (n.) செந்நாயுருவி; red variety of achyranthes aspera.

பிட்டாவிசெய்–தல் *piṭṭāvi-šey-,* 1 செ.குன்றாவி. (v.t.) *பிட்டு செய்–தல்* பார்க்க; see *piṭṭu-šey-.*

[பிட்டு + ஆவி + செய்–,]

பிட்டி[1] *piṭṭi,* பெ. (n.) பருத்திருக்கை (நாமதீப. 79.); plumpness.

[பிட்டம்= எருவாயைச் சுற்றியிருக்கும் திரண்ட தசைப்பகுதி. பிட்டம் → பிட்டி]

பிட்டி[2] *piṭṭi,* பெ. (n.) **1.** சிறு கூடை(வின்.); small basket. **2.** குழந்தை நோய்வகை (இ.வ.); croup, a disease of children.

ம. வட்டி; க., தெ., து. புட்டி; கட. புட்டு

[புள் → புட்டி = உட்டுளையுள்ளது, ஒரு வகைக் கலம், சிறுபடி, குடுவை, குப்பி. (வ.வ.37) புட்டி → பிட்டி = சிறுகூடை]

பிட்டி[3] *piṭṭi,* பெ. (n.) *பிட்டம்*[1] (நெல்லை.) பார்க்க; see *piṭṭam.*

பட. பிட்டி

[புள் → புட்டி = உட்டுளையுள்ளது, ஒருவகைக் கலம், சிறுபடி, குடுவை, குப்பி, குடுவை போன்ற பறவையுடம்பின் பிற்பகுதி. புட்டி → பிட்டி கொழுத்த கோழிப்புட்டியை நெய்க்குடம் என்று கூறும் வழக்கை நோக்குக (வ.வ. 37, 38)]

பிட்டி[4] *piṭṭi,* பெ. (n.) *பீடு*[2] (இ.வ.) பார்க்க; see *pīḍu*[2].

பிட்டிகை *piṭṭigai,* பெ. (n.) இருவாட்சி மலர்; tuscan jasmine.

[பித்திகை → பிட்டிகை]

பிட்டு *piṭṭu,* பெ. (n.) **1.** சிற்றுண்டி வகை; a kind of confectionery. *'மதுரையிற் பிட்டமுது செய்தருளி'* (திருவாச. 13,16). **2.** தினைமா (வின்.); millet flour.

க. கிட்டு, பிட்டு, இட்டு; **தெ.** பிட்டு; பட.கிட்டு (மாவு, உணவு)

[புள் → புரு → பிரு → பிருக்கு = சிறியது, சிறுதுண்டு. பிஞ்சும் பிருக்கும் என்பது வழக்கு. புள் → பொள் → பொட்டு = சிறியது, சிற்றளவு. பொள் → பொடி. புள் → பிள் → பிட்டு = சிறியது (மு.தா.130) பிள் → பிட்டு = பிண்டு, உதிரியான சிற்றுண்டி வகை (வே.க.3,113)]

பிட்டுக்கருப்பட்டி *piṭṭu-k-karuppaṭṭi,* பெ. (n.) *பிட்டுக்கருப்புக்கட்டி* பார்க்க; see *piṭṭu-k-karuppu-k-kaṭṭi*

[பிட்டு + கருப்பட்டி. பிள் → பிட்டு = பிளந்தது, சிறியது. கருப்புக்கட்டி → கருப்பட்டி]

பிட்டுக்கருப்புக்கட்டி *piṭṭu-k-karuppu-k-kaṭṭi,* பெ. (n.) நாட்டிற் காய்ச்சும் பனஞ் சருக்கரைக் கட்டி; home made palm-sugar.

[பிட்டு + கருப்புக்கட்டி. பிள் → பிட்டு = சிறியது. பிட்டுக்கருப்புக்கட்டி = சிறு கருப்புக்கட்டி (மு.தா.130)]

பிட்டுக்காட்டு-தல் *piṭṭu-k-kāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** கூறுபடுத்தி விளக்கிச் சொல்லுதல்;. to explain analytically. **2.** மறை வெளிப்படுத்துதல்; to reveal, disclose.

[பிள் → பிட்டு = சிறியது. காண் (கு.வி.)– காட்டு (பி.வி.). பிட்டுக்காட்டுதல் = சிறிது சிறிதாகக்கூறுபடுத்திச்சொல்லுதல், விளக்கிச் சொல்லுதல்]

பிட்டுக்கொடு-த்தல் *piṭṭu-k-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) பிரித்துக் கொடுத்தல்; to divide and distribute. இட்டிலியைப் பிட்டுக் குழந்தைக்குக் கொடுத்தாள் (உ.வ.).

[பிட்டு + கொடு –, பிள் → பிடு. பிடுதல் = இரண்டாக அல்லது துண்டு துண்டாகப் பிளத்தல். பிள் → பிடு → பிட்டு + கொடு. பிட்டுக்கொடுத்தல் = பிரித்துக் கொடுத்தல்]

பிட்டுசெய்-தல் *piṭṭu-šey-,* செ. குன்றாவி. (v.t.) மருந்தை வேதுகட்டி அவித்தல்; to heat medicine by steam.

[பிட்டு + செய் –,]

பிட்டுத்திருப்பி *piṭṭu-t-tiruppi,* பெ. (n.) வட்டத் திருப்பி; velvet leaf.

[வட்டத்திருப்பி → பிட்டுத்திருப்பி]

பிட்டுத்திருவிழா *piṭṭu-t-tiru-viḻā,* பெ. (n.) வந்தி என்ற கிழவிக்காகக் கூலியாளாக வேலை செய்து சிவபெருமான் பிட்டுப் பெற்ற திருவிளையாடலைக் குறித்தற்கு மதுரையில் நடத்தப்படுந் திருவிழா; a festival in Madurai which commemorates Siva's receiving piṭṭu from an old lady named Vandi in lieu of labour rendered by him in disguise.

[பிட்டு + திருவிழா]

பிட்டுத்தோப்பு *piṭṭu-t-tōppu,* பெ. (n.) மதுரைக்கு வட மேற்கில் வையையாற்றின் தென்கரையிலுள்ள ஓரூர்; a village in Madurai Dt.

[பிட்டு + தோப்பு. பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல் விழா நடக்குமிடம்]

பிட்டுமார்க்கம் *piṭṭu-mārkkam*, பெ. (n.) பிட்டு செய்தல்; heating medicine by steam.

[பிட்டு +மார்க்கம்]

Skt. mārga > **த.** *மார்க்கம்.*

பிட்டுவம் *piṭṭuvam*, பெ. (n.) அரைக்கை (நாமதீப. 743); grinding.

[பிள் + பிட்டு = சிறியது. புள் → பொள் → பொட்டு = சிறியது, சிற்றளவு. பொள் → பொடி. பிட்டு → பிட்டுவம் = சிறியதாக்குதல், பொடியாக்குதல், அரைத்தல்]

பிட்டுவை—த்தல் *piṭṭu-vai-*, 4 செ. குன்றாவி. (v.t.). மறைக்கப் பட்டதை வெளிப்படையாக அல்லது விளக்கமாகச் சொல்லுதல்; to expose. முதலாளி செய்யும் அட்டூழியங்களைத் தொழிற்கழகக் தலைவர் மேடையில் பிட்டு வைத்தார்.

[புள் → பிள் → பிடு. = கையால் பிளத்தல். பிடு → பிட்டு + வை. பிட்டுவைத்தல் = சிறிது சிறிதாகப்பிளந்து வைத்தல், ஒவ்வொன்றாக வெளிப்படையாக்கல்.]

பிட்டை[1] *piṭṭai*, பெ. (n.) வீங்கின விதை (அண்டம்); enlarged testicles. (R)

[புட்டை → பிட்டை]

பிட்டை[2] *piṭṭai*, பெ. (n.) விலங்குகளின் மலம்; dung of animals.

து. பிட்ட், பிட்டெ (ஆடு, எலி முதலியவற்றின் மலம்)

[புள் → பில் → பேல். புள் → புழுக்கை → பிழுக்கை. புள் → பிள் → (பிய்) → பீ. பிள் → பீள் → பீளை → பூளை = கண் மலம். பிள் → (விள்) → விட்டு → விட்டை. பிள் → பிட்டு → பிட்டை (மு.தா.102). இனி விட்டை → பிட்டை என்றுமாம்.]

பிடக்கர் *piḍakkar*, பெ. (n.) ஒரு சார் குலத்தினர் (சாதியினர்); a tribe. *'பிடக்கர், குருக்கர் துருக்கர்களே'* (கலிங். 319.)

பிடக்கு[1] *piḍakku*, பெ. (n.) பிடகன்[2] பார்க்க (தைலவ. தைல.); see piḍagaṉ[2]

[பிடா → பிடகு → பிடகம். பிடகு → பிடக்கு]

பிடக்கு[2] *piḍakku*, பெ. (n.) புத்தரது பிடகநூல்; Buddhist scripture. *'பிடக்கே யுரை செய்வார்'* (தேவா. 245, 10)

து. பிடாரி, பிடரி, பிடார் (பிரம்புக்கூடை, மரப்பெட்டி)

[பிழா → பிழவு → பிடவு. பிடகு → பிடக்கு = பூந்தட்டுப் போன்ற புத்த மறைநூல், புத்த மறை (திரிபிடகம்) (வ.வ.41)]

த. பிழா. › Skt. piṭa.

பிடகசரம் *piḍagaśaram*, பெ. (n.) கட்டிச்சுரம்; tumour cause by fever.

[பிடகம்+சரம். பிடகம் = கொப்புளம். சுரம் → சரம்]

பிடகநெறி *piḍaganeṟi*, பெ. (n.) புத்தன் அருளிய முப்(திரி)பிடகம் காட்டும் வழி; path shown by Tiripiḍagam; a Buddhist scripture. பின்னர் பெரியோன் பிடகநெறி கடவாய் (மணிமே.26.66)

[பிடகம் + நெறி]

பிடகநோய் *pidaganōy,* பெ. (n.) ஆண்குறியில் கொப்புளங்களை யுருவாக்கும் பாலியல் நோய்; a venereal disease marked by small eruptions in the penis.

[பிடகம் + நோய். நுள் → நொள் → நோள் → நோய்]

பிடகம் *pidagam,* பெ. (n.) 1. கூடை; basket. 2. முப்பிடகம்; Buddhist scripture. *'பெரியோன் பிடகநெறி'* (மணிமே. 26,66) 3. நூல் (திவா.); treatise-4. கொப்புளம்; boil. *'வெம்பிடகப் பிணியால் மேனி வெடிப்புண்டு'* (திருக்காளத். பு.17,31.). 5. இரவல் (பிச்சை) (சது.); alms, charity.

து. பிடாரி, பிடரி, பிடார் (பிரம்புக்கூடை, மரப்பெட்டி)

[பிள் → பிளா → பிழா = வாயகன்ற ஓலைக் கொட்டான். பிழா → பிடா = வாயகன்ற நாப்பெட்டி. (மு. தா. 261). பிடா → பிடகு → பிடகம் = தட்டு, பெட்டி, பூந்தட்டுப்போன்ற புத்த மறைநூல், புத்தமறை (திரிபிடகம்)]

த. *பிடகம்* → Skt. piṭaka

piṭa, piṭaka, pēṭa, pēṭā, pēṭi, pēṭaka, pētika, a basket, a box. Gt. (p.520) derives pēṭa from Te.peṭṭu (i.e.T.pōḍu), to put, place, lay, and piṭa, piṭaka from D.piḍi, to hold. in Sk: the terms are derived from piṭ, to put together, to bring together, to accumulate (see s. puṭa no. *292*). The so-called Tbhs. are peṭṭi, peṭṭige, peṭṭiya, pēḍage, pēḷige, etc.,If.D.piḍī be the root, it is to be taken for all the Sk, terms, Te. peṭṭu being quite unnecessary. The Te. terms, however, s.D. peṇe, might be compared. (KKED, xxxiv)

பிடகன்[1] *pidagan,* பெ. (n.) புத்த (பிங்.); Buddha, author of tripiḍaka

[பிழா → பிழவு → பிடவு → பிடகு → பிடகம் = தட்டுக்கூடை, புத்தமறை (வ.வ.41) பிடகம் → பிடகன் = திரிபிடக ஆசிரியரான புத்தன் (வே.க.110) (திரி)பிடம்=முக்கூடை, புத்தமறைநூல்]

பிடகன்[2] *pidagan,* பெ. (n.) மருத்துவன் (பிங்.); doctor, physician. *'பிடகர் தம்மாற்றேள் வெங்கடுத்தீர் மருந்துதவி'* (சேதுபு. அனுமகு. 15.).

[பிடகம் → பிடகன்]

பிடகாரகம் *pidagāragam,* பெ. (n.) *பிடகம்*[2] பார்க்க; see *pidagam*[2]

[பிடகன் → பிடகாரகம்]

பிடகாரி *pidakāri,* பெ. (n.) நச்சு மருத்துவர் (வின்.); doctor who cures the effect of poison, toxicologist.

[பிடகம் → பிடகாரி.]

பிடகை *pidagai,* பெ. (n.) பூந்தட்டு; plate for holding flower. *'பிடகைப் பெய்த கமழ் நறும்பூவினர்'* (மதுரைக். 397).

[பிடகு → பிடகை (வ.வ.41)]

பிடங்கம் *pidangam,* பெ. (n.) பெருவெள்ளரி; a big variety of cucumber.

பிடங்கு *pidangu,* பெ. (n.) 1. கத்தியின் முதுகுப் புறம் (வின்.); back of a blade or knife. 2. வேட்டெஃகம் (துப்பாக்கி) முதலியவற்றின் அடிப்பாகம்; butt end, as of a musket; bottom, as of a basket

[பின் → பின்பு. பின் → பிற்பாடு (பின் + பாடு). பின் → பிணம் → பிறம் → பிறம்பு. பிறம் → பிடம் → பிடர் → பிடரி = தலையின் பின்புறம். பிடம் → பிடங்கு.]

பிடங்குநாறி *piḍaṅgu-nāṟi,* பெ. (n.) மரவகை; a kind of tree.

[பிடங்கு + நாறி. நாறு → நாறி]

பிடதி *piḍadi,* பெ. (n.) மல்லிகை வகை; jasminum humile.

பிடம்¹ *piḍam,* பெ. (n.) நீற்றுதல், புடமிடல்; calcination.

[புடம் → பிடம்]

பிடம்² *piḍam,* பெ. (n.) மரக்கால்; two measure.

[பிடு + அம்.]

பிடமூலிமூலம் *piḍamūli-mūlam,* பெ. (n.) இளமைப் பொலிவூட்டும் மருந்து; a rejuvenating herb.

[பிடம் + மூலி + மூலம்]

பிடயூதி *piḍa-y-ūdi,* பெ. (n.) *பிடதி* பார்க்க; see *piḍadi.*

[பிடதி → பிடயூதி]

பிடர் *piḍar,* பெ. (n.) 1. பின்கழுத்து; nape of the neck. *'யானை யிரும்பிடர்த் தலையிருந்து'* (புறநா. 3.). 2. *பிடார் 1.* பார்க்க; see *piḍār - 1* *'ஈசுவரத்வப் பிடராலன்றியே'* (ஈடு, 7,4,4.). *[பின் → பிணம் → பிறம் → பிறம்பு → பிறம்பத்தங்கால் = பின்னங்கால். பிறம் → பிடம் → பிடர் = தலையின் பின்புறம் (மு.தா.253)]*

பிடர்த்தலை *piḍar-t-talai,* பெ. (n.) *பிடர் 1* (பிங்.) பார்க்க; see *piḍar 1.*

க. பெடதலெ; பட. தெ̤டதலெ

[பிடர் + தலை]

பிடர்த்தலைமண்டை *piḍar-t-talai - maṇḍai,* பெ. (n.) தலையின் பின்புறம் உள்ள புறங் கழுத்துப்பகுதி; the portion of the skull which forms the hind part of the head.

[பிடர் + தலை + மண்டை. பிறம் → பிடம் → பிடர் = தலையின் பின்புறம். மொள் → மொண்டை → மண்டை = நீர் முகக்குங்கலம், இரப்போர் கலம், அது போன்ற தலையோடு, தலையின் மேற்பகுதி]

பிடர்ப்பிளவை *piḍar-p-piḷavai,* பெ. (n.) பின் கழுத்திலேற்படும் சிலந்திவகை; a kind of ulcer or carpuncle on the nape.

[பிடர் + பிளவை. பிள் → பிளவு = துண்டு பிள் → பிளவை. 'ஐ' பெ.ஆ.ஈ.று]

பிடரம்¹ *piḍaram,* பெ. (n.) கோரை வகை; a kind of sedge.

[பிள் → பிடர் + அம்]

பிடரம்² *piḍaram,* பெ. (n.) முகப்பரு; pimple of the face.

[பிள் → (பிள்) → பிண்டு → பிண்டம் = திரட்சி. பிள் → பிடர் → பிடரம் = திரண்டு காணப்படும் முகப்பரு]

பிடரி *piḍari*, பெ. (n.) பிடர் 1. (சது.) பார்க்க; see piḍar 1.

[பின் → பிற → பிறவு → பிறகு → பிறக்கு → பிறக்கிடுதல் = பின்னுக்குச் செல்லுதல். பின் → பினம் → பிறம் → பிறம்பு. பிறம் → பிடம் → பிடர் → பிடரி = தலையின் பின்புறம் (மு.தா. 293)]

பிடரிக்காம்பு *piḍari-k-kāmbu*, பெ. (n.), பூடு வகை (மலை.); a shrub.

[பிடரி + காம்பு]

பிடரிக்குழி *piḍarikkuḻi*, பெ. (n.) சுழிமுனை நாடியின் நெறி; path of the cuḻimuṉai nāḍi

[பிடரி + குழி. பிறம் → பிடம் → பிடர் → பிடரி. குள் → குழி]

பிடரிசன்னி *piḍari-šaṉṉi*, பெ. (n.), இசிவு நோய்; wryneck, torticollis. (M.L.)

[பிடரி + சன்னி]

பிடரிசிவு *piḍar-išivu*, பெ. (n.), நோய் வகை; neuralgia (M.L.)

[பிடரி + இசிவு]

பிடரிநாளம் *piḍarināḷam*, பெ. (n.) பின் கழுத்துப் பகுதி செல்லும் அரத்தக் குழாய்; jugular vein.

[பிடரி + நாளம். நுள் → நள் → நாள் → நாளம் = உட்டுளை, உட்டுளைப் பொருள்.]

பிடரிமுனைமுறித்தல் *piḍarimūṉai - muṟittal*, பெ. (n.) புறங்கழுத்து வலி; pain on the nape.

[பிடரி + முனை + முறித்தல்]

பிடரியஞ்சு *piḍariyañju*, பெ. (n.) கறி வேம்பு; curry leaf free.

பிடரியிசிவு *piḍari-y-išivu*, பெ. (n.) பின் கழுத்து வலியுடன் கூடிய தலைவலி; a disease of the head in which a violent pain is felt at the two nerves on the back side of the neck.

[பிடரி + இசிவு]

பிடரியிழுப்பு *piḍari-y-iḻuppu*, பெ. (n.) பிடரி வாங்கல் பார்க்க; see piḍarivāṅgal.

[பிடரி + இழுப்பு. இழு → இழுப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

பிடரியூதை *piḍariyūdai*, பெ. (n.) பிடரியில் இசிவை ஏற்படுத்தி உயிரை மாய்க்கும் ஊதை நோய்; a fatal disease cause of by wind humour which remaining in the head causes immense pain and convulsion of the nape.

[பிடரி + ஊதை]

பிடரிவாங்கல் *piḍarivāṅgal*, பெ. (n.) புறக்கழுத்து நரம்பிலுண்டாகும் இசிவு; convulsive pain in the back of the neck.

[பிடரி + வாங்கல். வங்கு → வாங்கு → வாங்கல். 'அல்' தொ. பெ. ஈறு]

பிடருரோமம் *piḍar-u-rōmam*, பெ. (n.), பின் கழுத்து மயிர்; mane.

[பிடர் + உரோமம்]

Skt. rōma > **த.** *உரோமம்.*

பிடரெண்பு *piḍar-eṉbu,* பெ. (n.) தலையின் பின்புறத்தெலும்பு; occipital bone.

[பிடர் + என்பு. எலும்பு → என்பு]

பிடல் *piḍal,* பெ. (n.) கதவு; door. *'உருள்பிட லொற்றி'* (பெருங். உஞ்சைக். 49,3.).

[படல் → பிடல்]

பிடலிகை *piḍaligai,* பெ. (n.) 1. பீடம்; raised seat. 2. காவு(பலி)பீடம்; altar.

[புள் → (பிள்) → பிண்டு → பிண்டம் = திரட்சி. பிள் → பிடு → பிடல் → பிடலிகை = திரண்ட மேடு]

பிடவம் *piḍavam,* பெ. (n.) 1. *பிடவு* பார்க்க; see *piḍavu. 'நுரை யெனப் பொருவுவ பிடவம்'* (கம்பரா. கார்கால. 47.). 2. மரக்கோடு (அக. நி.); branch of a tree.

[பிடவு → பிடவம்]

பிடவு[1] *piḍavu,* பெ. (n.) *பிடா* பார்க்க; see *piḍā. 'கிடத்திடைப் பிடவின்'* (பதிற்றுப். 66,17.).

[பிடா → பிடவு]

பிடவு[2] *piḍavu,* பெ. (n.) முள்பட்டை; a plant bearing white flowers.

[புறம் = மேற்பக்கம், பக்கம். புறம் → புறன் → (புறண்) → புறணி = மேற்புறம். புறம் → பிறம் → பிடம் → பிடவு]

பிடவு[3] *piḍavu,* பெ. (n.) முதுகு; back.

[பின் → பிறம் → பிடம் → பிடவு]

பிடவை *piḍavai,* பெ. (n.) சேலை; saree. *'போர்த்த பிடவையுமாய்'* (பணவிடு. 311.).

மறுவ. புட்டகம்

[புடை → புடைவை = சுற்றிக்கட்டும் ஆடை. புடைவை → புடவை = துணி, சேலை. புடவை → பிடவை]

பிடா[1] *piḍā,* பெ. (n.) குட்டிப்பிடவம் (தொல். எழுத். 229.); bedaly emetic-nut.

[பிழா → பிடா]

பிடா[2] *piḍā,* பெ. (n.) நார்ப்பெட்டி; wicker basket.

து. பிடாரி, பிடரி, பிடார்

[பிள் → பிளா → பிழா = வாயகன்ற ஒலைக்கொட்டான். பிழா → பிடா = வாயகன்ற நார்ப்பெட்டி (மு.தா.261)]

பிடாகை *piḍāgai,* பெ. (n.) உட்கிடையூர்; suburban hamlet. *'எங்களூர்க்குப் பிடாகை யாகப் பெற்ற ஊர்களில்'* (S.I.I. iii, 25).

பிடாகைநட—த்தல் *piḍāgai - naḍa-,* 5 செ.குன்றாவி. (v.t.) அரசனால் கொடையாகக் கொடுக்கப்பட்ட உட்கிடை நிலங்களை, ஊர் நிலக்கணக்குப்படி அளந்து பிடி யானையினை எல்லைகள் வழியே நடக்கச் செய்து, எல்லைகளை வரையறுத்தல்; to take procession through village boundry keeping the documents of donated lands given by king on female elephant. *"இவ்வானை மங்கலம் பிடிசூழ்ந்து பிடாகை நடக்கிற போது"* (ஆனைமங்கலச் செப்பேடு).

[பிடாகை + நட—,]

பிடாகைவலஞ்செய்–தல் *piḍāgaivalañcey-,* செ. குன்றாவி. (v.t.) கொடைபற்றிய கல்வெட்டு, செப்பேடு முதலானவற்றைப் பெண்யானையின் மீது வைத்துக், கொடைக்குரிய ஊர் அல்லது ஊரின் எல்லைகளை வலமாகச் சூழ்ந்து அறுதியிடுதல்; to take procession at village streets keeping the documents of donation on female elephant.

[பிடாகை + வலஞ்செய்–,]

பிடாங்கு *piḍāṅgu,* பெ. (n.) வெடி, வேட்டு; report of a gun.

[பிடு → பிடுகு → பிடுங்கு → பிடாங்கு = குழாய்வெடி (வேட்டு) (வே.க.3,111)]

பிடாச்செடி *piḍā-c-cedi,* பெ. (n.) *பிடா* பார்க்க; see *piḍā.*

[பிடா + செடி]

பிடாந்திரம் *piḍāndiram,* பெ. (n.) படாந்தரம் (யாழ்.அக.); gross falsehood.

[படாந்திரம் → பிடாந்திரம்]

பிடாபகம் *piḍābagam,* பெ. (n.) கண்களைச் சுற்றி இமையில் படாதவாறு பூசப் பெறுங் களிம்பு; an ointment which is applied round the eyes.

பிடாம் *piḍām,* பெ. (n.) போர்வை; cloth for wear; mantle. *"பிடாத்தை விழவிட்டு வடிவழகைக் காட்டியாயிற்று"* (ஈடு, 4,9,4).

[படாம் → பிடாம்]

பிடார் *piḍār,* பெ. (n.) 1. செருக்கு, இறுமாப்பு (கருவம்); pride, arrogance. ***'கங்கையைச் ஜடைமேலே அடக்கினே னென்றும் பிடாரைக் கொண்டு' (திவ். திருமாலை. 44, வ்யா. 142)*** 2. பெருமை; greatness.'ஈசுவரத்துவப் பிடாராலே' (ஈடு, 3,7,3).

[புல் → பொல் → பொலி. பொலிதல் = பெருகுதல். புல் → பல் → பரு → பெரு → பெருமை. புல் → புள் → பிள் பிடு → பிடர் → பிடார்]

பிடாரச்சொல் *piḍāra-c-col,* பெ. (n.) 1. மருத்துவக் குறியீட்டுச் சொல்; medical term. 2.புதுமையாய் உண்டாக்கிய சொல்; newly-coined word.

[பிடாரம் + சொல்]

பிடாரம் *piḍāram,* பெ. (n.) மருத்துவ நிகண்டு (யாழ். அக.); medical dictionary.

[பிடகம் → பிடாகம் → பிடாரம்]

பிடாரமுக்கி *piḍāramukki,* பெ. (n.) மருந்துச் செடி; a medicinal herb.

பிடாரர் *piḍārar,* பெ. (n.) தமிழிசையிற் சிறந்து விளங்குபவர், திருப்பதியம் முறையீடு (விண்ணப்பஞ்) செய்பவர்; well versed men in Tamil music and engaged in reciting eulogical song of a deity. *"உடையார் ஸ்ரீராஜராஜீஸ்வரம் உடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும்"* (தெ. கல். தொ. 2:3, கல், 65).

[பிடாரன் → பிடாரர்]

பிடாரவைத்தியன் *piḍāra-vaittiyaṉ,* பெ. (n.) பாம்பு நச்சு மருத்துவன்; snake doctor, one who cures snake-bites.

[பிடார + வைத்தியன்]

Skt. vaidya > **த.** வைத்தியன்

பிடாரன்[1] *piḍāraṉ,* பெ. (n.) **1.** பாம்பு பிடிப்போன்; snake-catcher. **2.** மருத்துவன் (யாழ்.அக.); doctor. **3.** குறவன் (யாழ். அக.); man of the Kuṟava caste.

ம. பிடாரன்

[பிடகம் → பிடகன் = மருத்துவன். பிடகம் → பிடாகம் → பிடாரம் → பிடாரன்]

பிடாரன்[2] *piḍāraṉ,* பெ. (n.) இசைகாரன்; a musician. *'பிடாரன் நாராயணன்'* (S.I.I. ii, 488).

[பிள் → பிடு → பிடர் → பிடார் → பிடாரன்]

பிடாரன்[3] *piḍāraṉ,* பெ. (n.) ஆசிரியன் (குரு); spiritual preceptor. *'திருக்கோடிகா சதாசிவப் பிடாரர்'* (M.E.R. 30 of 1930–31)

[புல் → பல் → பெரு → பெருமை. புல் → பில் → பிடு → பிடர் → பிடாரன்]

பிடாரி[1] *piḍāri,* பெ. (n.) ஒரு சிற்றூர்த் தேவதை,; a village goddess. *'காளி பிடாரி'* (திருப்பு. 1184).

ம. பிடாரி

[படம் + அரி → படாரி → பிடாரி = பாம்பையுடைவள்]

பிடாரி[2] *piḍāri,* பெ. (n.) ஊர்க்காவல் தெய்வத்தின் பெயரைப் பெற்றிருந்த பெண்டிர்; women christened the name of village guard deity. ***1.*** *"பிடாரி பொதுவகை ஊருடையாள்"* **(தெ.கல். தொ.17, கல்.32.). 2.** *"திருநலக் குன்றத்து திருமேற்றளி மாதேவர்க்கும் சீவிகத்துக்கும் சாலையூட்டாக சாத்தும் பிடாரி வைத்த பொன்–"* (தெ. கல். தொ.17 கல். 356.).

[பிடாரன் (ஆ.பா.) – பிடாரி (பெ.பா.)]

பிடாரிச்சி *piḍāricci,* பெ. (n.) குறத்தி (யாழ். அக.); woman of the Kuṟava caste.

[பிடாரன் (ஆ.பா) – பிடாரிச்சி (பெ.பா).]

பிடாரிபட்டி[1] *piḍāri-paṭṭi,* பெ. (n.) *பிடாரி விளாகம்* பார்க்க; see *piḍāri viḷāgam* (S.I.I. i, 90)

[பிடாரி + பட்டி]

பிடாரிபட்டி[2] *piḍāripaṭṭi,* பெ. (n.) *பிடாரி பாத்தி* பார்க்க; see *piḍāri-pātti.*

[பிடாரி + பட்டி]

பிடாரிபாத்தி *piḍāri-pātti,* பெ. (n.) சிற்றூர்ப் பெண் தெய்வமான காளி கோயில் நாள் வழிபாடு, திருவிழா முதலான செலவினங் கட்குரிய வருவாயாக, ஊரவையாரின் நிருவாகத்தின் கீழ் விடப்படும் இறையிலி நிலம்; tax free land offered for maintaing the expenditure on daily worship at Kāḷi temple. *"இவ்வூரில் முன்பு உண்டான தேவதானம் திருவிடையாட்டம் அய்யன் போகம் பிடாரி பாத்தி நீங்கலாக"* (தென். கல். தொ. 8. க. 210).

[பிடாரி + பாத்தி]

பிடாரிவிளாகம் *piḍāriviḷāgam,* பெ. (n.) பிடாரி கோயிலுக்கு விடப்பட்ட இறையிலிநிலம் (மானியம்); inam land granted to Piḍāri temple. (Pudu. insc. 333)

[பிடாரி + விளாகம். வளாகம் → விளாகம்]

பிடாரிவெளி *piḍāri-veḷi,* பெ. (n.) கொல்லை வெளி (இ.வ.); open space.

[பிடாரி + வெளி]

பிடாலகம் *piḍālagam,* பெ. (n.) மஞ்சள் நிறமுள்ள தாளக வைப்பு நஞ்சு; orpiment.

பிடாலம் *piḍālam,* பெ. (n.) காட்டுப்பூனை; wild cat.



பிடாலவணம் *piḍā-lavaṇam,* பெ. (n.) ஐவகையுப்பு(பஞ்சலவணம்)ளொன்று; (பதார்த்த. 1102.), bitnoben, a kind of salt, one pañca-lava-ṇam. q.v

பிடாவுப்பு *piḍā-v-uppu,* பெ. (n.) நீரிழிவு; நாவறட்சி, சிறுநீர்ப்போக்கு போன்றவற்றைப் போக்கும் வளையல் உப்பு; a kind of mineral salt capable of calcining zinc.

பிடி[1]—த்தல் *piḍi-,* 4. செ. குன்றாவி. (v.t.) 1. கைப்பற்றுதல்; to catch, grasp, seize, clutch. அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின் றேனை (திருவாச.5,27). 2. வயப்படுத்துதல்; to secure. அவனைப் பிடித்தால் இக்காரியம் கைகூடும். 3. அகப்படுத்துதல்; to capture, ensnare, entrap, catch. 4. கட்டுதல் (வின்.); to tie fasten. 5. புகலடைதல்; to take refuge in, depend on, cling to. உன்னை நான் பிடித்தேன் கொள் (திவ். திருவாய். 2,6,1). 6. அடைதல்; to obtain, take possession. 'பெருகிய செல்வநீ பிடி' (கம்பரா, கிளைகண்.23) 7. உட்கொள்ளுதல்; to contain, hold. *'அந்தப் பெட்டி இவ்வளவையும் பிடிக்கும்'.* 8. மேற் கொள்ளுதல்; to assume, as a form. *'விசுவரூபம் பிடித்தானே' (இராமநா. சுந்தர.19).* 9. தாங்குதல், to bear, carry, support. *'முட்டுக்கட்டை சுவரைப் பிடித்துக் கொண்டிருக்கிறது'.* 10. நிறுத்திக் கொள்ளுதல்; to keep back, deduct, detain with hold. *'வட்டியைப் பிடித்துக் கொள்'* 11. நிழற்படமெடுத்தல்; to take a photograph. 12. மெய்ப்பாடு (அபிநயம்) முதலியன செய்து காட்டுதல்; to expound, as by gesture, song, etc., 13. பற்றிக்கொள்ளுதல்; to take on, as a colour. சாயம் பிடிக்கவில்லை. 14. தெரிதல்; to grasp,understand, comprehend. ஆசிரியர் கற்பித்ததை மாணவர் பிடித்துக் கொள்வதில்லை. 15. விலைக்கு மொத்தமாகக் கொள்ளுதல்; to buy, purchase wholesale, as at a market. *'சந்தையில் தவசம் (தானியம்) பிடித்து வந்தான்'* (இ.வ.), 16. பொருத்துதல் (வின்.); to join in a continued row or series; to nail on; to line with; to face agarment.17. உறுதியாகக் கொள்ளுதல்; to hold fast, adhere to. *'பெருமானுரை பிடித்தேம்' (கம்பரா. நிகும். 143).* 18. குறிக்கொள்ளுதல்; to undertake. *'பிடித்தது முடிக்கவல்ல விச்சையர்'* (பிரபோத, 24, 52.). 19. விதை வாங்குதல்;

to geld. *'விதை பிடித்த மாடு.* **20.** அழுத்தித் தடவுதல்; to massage, rub. *'சற்று உடம்பைப் பிடி'.* **21.** பிடித்துக் கொள் பார்க்க; see piḍi-t-tu-k-koḷ. **22.** மூடிய கையளவு கொள்ளுதல். to make a handful. *'பிடித்தெருவும் வேண்டாது'* (குறள், 1037)

[பிள் + பிண்டு → பிண்டி → பிடி (வே.க. 3,81–83)]

பிடி[2]—த்தல் *piḍi-,* 2 செ.கு.வி. (v.i.) **1.** ஒட்டிக் கொள்ளுதல்; to stick, adhere, cling. **2.** விரும்புதல்; to be agreeable, attractive pleasing to the senses or mind. *'எனக்கு அவனைப் பிடிக்கவில்லை'.* **3.** ஏற்றதாதல்; to be suitable, adapted, conformable. *'அந்த ஊர் உடம்புக்குப் பிடிக்க வில்லை'.* **4.** செலவாதல்; to be required for expense. *'அந்த நகைக்கு நூறு ரூபா பிடிக்கும்'.* **5.** நிகழ்தல்; to take place, occur. *'மழை பிடிக்கும்'.* **6.** அடங்குதல்; to find room, go in. கூடையில் எத்தனை பழம் பிடிக்கும்.

[புள் → (பிள்) → பிண்டி → பிடி]

பிடி[3]—த்தல் *piḍi-,* 11செ. குன்றாவி. (v.t.) **1.** கையால் இறுக்கித் திரட்டுதல் அல்லது திரளை யாக்குதல்; to make ball with the hand. பொரிவிளங்காய் பிடிக்க வேண்டும். **2.** கையால் இறுக்கித் திரட்டிப் படிமையமைத்தல்; to make immage by pressing things with the hand. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது. (பழ). **3.** கையால் இறுக்கித் திரட்டுதல் போல் ஒன்றை இறுகப் பற்றுதல்; to hold, as of umbrella. 'குடை பிடித்தான்'. **4.** ஒன்று இன்னொன்றைப் பற்றுதல்; to catch, as of a cat a rat. பூனை எலியைப் பிடிக்கும், இன்றைக்கும் குளத்தில் மீன்பிடிக்கிறார்கள், ஓடுகிற மாட்டைப் பிடித்துக் கொண்டு வந்தான், ஊர்காவலர் குற்றவாளியைப் பிடித்துக் கொண்டார்கள், இந்தப் பிள்ளையைக் கொஞ்சநேரம் பிடி. **5.** கோணியைப் பிடித்து வாங்குதல், to buy, purchase thing to a gunny bag. திருநெல் வேலிக்கு அரிசி பிடிக்கப் போயிருக்கிறார்கள். **6.** விலைக்கு மொத்தமாகக் கொள்ளுதல்; to buy, purchase whole sale, as at market. சந்தையில் தவசம் பிடித்து வந்தான் (இ.வ.). **7.** கயிற்றைப்பிடித்து வாங்குதல்; to get animal by holding a rope which tied with it, as of cattle, dogs, etc., காங்கேயத்திலிருந்து ஒரு சோடி மாடு பிடித்து வந்திருக்கிறான். **8.** கலத்தில் நீர் கொள்ளுதல்; to fetch water in a vessel. குழாயில் நீர் பிடித்து வா. **9.** கழங்கு விளையாடுதல்; to play with molucca-beans in a girls game. தட்டாங்கல் பிடித்து விளையாடுகிறார்கள். ஒற்றையா இரட்டையா பிடிக்கலாமா?. **10.** பொருத்துதல் (வின்.); to join in a continued row or series, to nail on, to line with, to face a garment. நாற்காலிக் காலுக்கு வாங்கு பிடிக்க வேண்டும். **11.** சுளுக்குவிழுதல்; to contract, as a nerve or muscle by rheumatism or cramp. காலில் நரம்பு பிடித்துக் கொண்டிருக் கிறது. **12.** இறுக்க மாயிருத்தல்; to tight, as a dress, சட்டை முதுகிற் பிடிக்கிறது.

[பிள் → பிண்டு → பிண்டி → பிடி (வே.க. 3,81,83)]

பிடி[4]—த்தல் *piḍi-,* 7 செ.குன்றாவி (v.t.) மனத்திற்கிசைந்ததாதல்; to agreeable to mind.

[புல் → (புற்று) → பற்று. புள் → (பிள்) பிண்டி → பிண்டம் = திரட்சி. பிண்டித்தல் = கைக்குள் சோற்றை அல்லது மாவைத் திரட்டுதல். பிண்டி → பிடி. பிடித்தல் = கையால் பற்றுதல், மனத்தாற் பற்றுதல், மனத்திற்கு உகந்தது மனத்தாற் பற்றுதலாகும்]

பிடி[5] *pidi,* பெ. (n.) **1.** பற்றுகை; hold, clutch, pinch, seizure by the hand. **2.** மனத்திற் பதிகை; comprehension. **3.** நம்பிக்கை (வின்.); confidence, reliance, trust. **4.** மதக் கொள்கை (வின்.); religious belief opinion or tenet. **5.** கைமுட்டி; fist, closed-hand. **6.** மற்பிடி; catch, grip in wrestling. **7.** படைக்கலப் பிடி; handle, haft, hilt. *'தோல் கழியொடு பிடி செறிப்பவும்'* (புறநா. 98.). **8.** குதிரையின் வாய்க்கருவியிற் கோக்கும் குசை; rein. மத்தாட் பிடியொடு (நெடுநல்.178). **9.** வழிவகை (உபாயம்); means, device. *'பிடியாதொன்றுங் கண்டிலன்'* (விநாயகபு. 9,7.). **10.** உறுதி; firmness; stubbornness. *'ஓர் பிடியா நான் தொடர்ந்ததற்கு'* (இராமநா. உயுத்.). **11.** உதவி (இ.வ.); help, refuge, support. **12.** உள்ளங்கைப் பிடி அளவு; handful, small, quantity, *'தன் கேளைப் பிடி கடொறும் வேறாஞ் சுவை பெற வூட்டி'* (வெங்கைக்கோ. 377). **13.** பணியாரவகை (வின்.); a kind of cake. *'பிடிசுட்டுப் படைத்தல்'* **14.** நால்விரல் கொண்ட ஓர் அளவு; measure of length being the width of the hand. **15.** பேய்; devil. *'பெண்டிர் பிடிபோல'* (திருவுந்தி. 35.). **16.** மெய்ப்பாடு முதலியவற்றின் எடுப்பு; exposition, as by gesture, song,etc.,

ம., தெ., து. பிடி; **க.,** பட. கிடி; **கொலா** பிடியா (சிறுகட்டு); **குட.** புடி; **கோத.** பிரெ.

[பிண்டி → பிடி]

கைபிடித்தல் (கைக்கொள்ளுதல்), கைபிடி (கையிற் பெற்றுக் கொண்ட பொருள்), கைபிடிசுவர் முதலிய கூட்டுச் சொற்களும், அரிவாட்பிடி, அறுவாட் பிடி, உளிப்பிடி, கத்திப்பிடி, குடைப்பிடி, கொட்டுப்பிடி முதலிய பிடிவகைப் பெயர்களும், உடும்புப்பிடி, கடைப்பிடி, குரங்குப்பிடி, குருட்டுப்பிடி, விடாப்பிடி முதலிய பிடிப்புப் பெயர்களும் தோன்று தொட்டனவே (வே.க.3,85).

பிடிகல், பிடிகாசு, பிடிகாரன், பிடித்தராவி, பிடித் தாட்டிக் கழி, பிடிகொடு, பிடித்தபிடி, பிடிசீலை, பிடிதண்டம், பிடிநெல், பிடிபடு, பிடியரிசி, பிடிமண், பிடியாள், பிடிவிடு, முதலிய எத்துணையோ கூட்டுச் சொற்கள் தொன்று தொட்டு வழங்கிவரும் உலக வழக்காம் (வ.வ.2.36)

பிடி[6] *pidi,* பெ. (n.) பெண்யானை (தொல். பொ.606); female of elephant.

ம. பிடி, (பெண்ஒட்டகம், பெண்பன்றி); **க.** பிடி; **தெ.** பிடி (பெண்பால்விலங்கு) **கோத;** பிழிமாவ் (பெண்மான்)

[புள் → (பிள்) + (பிண்) → பிண → பிணா பிணவு → பிணவல் = விரும்பப்படும் பெண், விலங்கின் பெண். பிண் → பிணை = விருப்பம். பிள் → பிடி = பெண்யானை. (மு. தா. 168)]

Skt. pillakā, a female elephant

cf. D.piḍi (KKED. xxi)



பிடி[7] *pidi,* பெ. (n.) பெண் கவரி; female yak.

[புள் → பிள் → விள். விள்ளுதல் = கலத்தல், விரும்புதல். இவ்வினை இன்று வழக்கற்றது. புள் → (பிள்) → (பிண்) → பிண → பிணா → பிணவு→ பிணவல்= விரும்பப்படும் பெண். விலங்கின்பெண். பிண் → பிணை = விருப்பம். பிள் = பிடி பெண் யானை (மு.தா. 168), பெண் கவரி]

பிடி[8] *pidi,* பெ. (n.) ஒட்டகம்; camel.

[புள் → (பொண்டு) → போண்டா= உருண்டைப்பலகாரம். புள் → பிள் → பிடி = உருண்டுதிரண்ட விலங்கு]

பிடி[9] *pidi,* பெ. (n.) உலர்ந்தது (இ.வ.); dryness. *'பிடி விரை'*

தெ. படி

[புல் → புலர். புல் → பொல் → பொலு. பொலுபொலுத்தல் = நன்றாகக் காய்தல். புல் → புள் → பிள் → பிடி.]

பிடி[10] *pidi,* பெ. (n.) ஏலம் (மலை.); cardamom.

[புல் → புள் → பிள் → பிழம்பு = திரட்சி, வடிவு. பிள் → பிண்டு = திரட்சி. பிள் → பிடி = திரண்டது, திரண்ட ஏலம்]

பிடி[11] *pidi,* பெ. (n.) பிடிசீட்டாட்டத்தில் ஒரு முறை எடுக்கப்படுஞ் சீட்டு (கொ. வ.); a trick of cards, in card-playing.

[பிள் → பிண்டி → பிடி = ஒரு முறை கையால் (பற்றி) எடுக்கப்படுவது]

பிடிக்கட்டு *pidi-k-kattu,* பெ. (n.) பனையோலையின் சிறுகட்டு (வின்.); small bundle of palm leaves.

[பிடி + கட்டு. கள் → கட்டு]

பிடிக்கொம்பன் *pidi-k-komban,* பெ. (n.) சிறு கொம்புள்ள விலங்கு; short-horned beast.

[பிடி + கொம்பன். கொம்பு → கொம்பன். 'அன்' உடைமைக்குறித்த ஈறு]

பிடிக்கொழுக்கட்டை *pidi-k-kolu-k-kattai,* பெ. (n.) பணியார வகை; a kind of pastry.

[பிடி + கொழுக்கட்டை. உள்ளீடுவைத்துச் செய்யும் முழு (பூரண)க் கொழுக்கட்டை போலன்றி வெல்லம், அரிசிமாவு கலந்து கையால் பிடித்துவைத்து வேவுவிக்கும் கொழுக்கட்டை.]

பிடிகடா *pidikadā,* பெ. (n.) காயடிக்கப்பட்ட கடா; castrated bull.

[பிடி + கடா]

பிடிகம் *pidigam,* பெ. (n.) பிள்ளைக் கைவளை (திவா.); child's bracelet.

[பிடி → பிடிகம்]

பிடிகயிறு *pidi-kayiru,* பெ. (n.) மாடு கட்டுங் கழுத்துக் கயிறு (இ. வ.); rope used in tethering cattle.

[பிடி + கயிறு]



பிடிகருத்தொழில் *pidikaru-t-tolil,* பெ. (n.), அகத்தியர் நிகண்டில் கூறப்பட்ட மாயக்கல்வி (வித்தை)யுள்ளொன்றான கருவேலை; a black art mentioned in jāla nigandu complied by Agattiyar.

[பிடி + கரும் + தொழில். கள் → கர் → கரிது → கரிசு = இருமையானது, குற்றம். கள் → கர் → கரும் = கரிய, குற்றமுடைய, தீங்கு விளைவிக்கக்கூடியது]

பிடிகருமா *piḍikarumā,* பெ. (n.) *பிடிகருத் தொழில்* பார்க்க; see *piḍi karu-t-toḻil*

[பிடி + கருமா. கள் → கர் → கருமம். கருமம் → கருமா]

பிடிகல் *piḍi-kal,* பெ. (n.) குயவன் களரிக்கல் (இ. வ.); potter's stone.

[பிடி + கல்]

பிடிகாசு *piḍi-kāšu,* பெ. (n.) செலுத்தும் விலைப்பணத்தில் நற்(சுப)குறியாகக் கொடாமல் நிறுத்தி வைக்கும் சிறுதொகை (யாழ்ப்.); insignificant sum of money withheld on a purchase by the purchaser, considered auspicious.

[பிடி → காசு. குல் → குள் → கள் → காள் → காளம் = சுடுகை. காள் → காழ் → காசு.]

பிடிகாரன் *piḍi-kāraṉ,* பெ. (n.) **1.** மீன் பிடிப்பவன்; fisherman. **2.** வேட்டையாடுவோன், (யாழ். அக.); hunter

[பிடி + காரன்]

பிடிகிழங்கு *piḍi-kiḻaṅgu,* பெ. (n.) கிழங்கு வகை (மூ. அ.); a kind of yam.

[பிடி + கிழங்கு]

பிடிகுருவி *piḍi-kuruvi,* பெ. (n.), வெற்றிலை; betel leaf.

[பிடி + குருவி. கையில் வைத்த சுண்ணாம்பு தடவும் போது குருவியின் முடியரும்பிய முதுகை வருடுவது போன்றதால் வந்த பெயர்]

பிடிகூலி *piḍi-kūli,* பெ. (n.) தவசம் அளக்கும் போது மூட்டை பிடிப்பதற்குரிய கூலி (இ.வ.); wages in measuring grain.

[பிடி + கூலி. கூல் → கூலம். கூல் → கூலி]

பிடிகை¹ *piḍigai,* பெ. (n.) ஓர் இருக்கையுள்ள ஊர்தி வகை; a single seated conveyance *'கண்ணார் பிடிகையும்'* (பெருங். உஞ்சைக். 37,270.)

[பிள் → பிண்டு = திரட்சி. பிள் → பிடி → பிடிகை]

பிடிகை² *piḍigai,* பெ. (n.) **1.** நோவில்லாச் சிறுகட்டி; a small abscess without pain. **2.** மல்லிகை வகை; a kind of jasmine.

[புள் → (பிள்) → பிண்டு → பிண்டம் = திரட்சி. பிள் → பிடி → பிடிகை = திரண்டு காணப்படும் கட்டி, திரண்ட மலர்]

பிடிகொடு¹–த்தல் *piḍi-koḍu-,* 4 செ. கு. வி. (v.i.) **1.** தான் பிடிபடும்படி நிற்றல் (வின்.); to allow oneself to be caught. **2.** பேச்சு முதலியவற்றில் அகப்படுதல். to commit oneself, as in speaking.

[பிடி + கொடு–,]

பிடிகொடு²–த்தல் *piḍi-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) இழத்தல்; to lose, to be deprived of. *'களத்திரம் பிடி கொடுத்தான்'* (தத்துவப். 179, உரை.).

[பிடி + கொடு–.]

பிடிச்சராவி *piḍiccarāvi,* பெ. (n.) *பிடிச்சுராவி* பார்க்க; see *piḍiccurāvi.*

[பிடி → பிடிச்சு → பிடிச்சு + அராவி]

பிடிச்சவேர்ப்பங்கு *piḍicca-vēr-p-paṅgu,* பெ. (n.) *பிடித்தவேர்ப்பங்கு* பார்க்க; see *piḍitta-vēr-p-paṅgu.* (C.G)

[பிடித்த + வேர் + பங்கு – பிடித்தவேர்ப்பங்கு → பிடிச்ச வேர்ப்பங்கு]

பிடிச்சாட்டிக்கழி *piḍiccāṭṭi-k-kaḻi,* பெ. (n.), துலாவில் ஏறுவோர் கைப்பற்றாகப் பிடிக்கும் கழி (இ. வ.); hand-rail of a picotta serving as support.

[பிடி → பிடிச்ச + ஆட்டு + கழி]

பிடிச்சிற்றுளி *piḍi-c-ciṟṟuḷi,* பெ. (n.) சிற்றுளி வகை; mortise chisel. (C.E.M.)

[பிடி + சிற்றுளி]



பிடிச்சீலை *piḍi-c-cīlai,* பெ. (n.) சூடான ஏன(பாத்திர)ங்களையெடுக்கப் பயன்படுத்தும் கைப்பிடிதுணி (தைலவ. தைல.); piece of cloth used in handling hot vessels.

[பிடி + சீலை. சீரை → சீலை.]

பிடிச்சுராவி *piḍiccurāvi,* பெ. (n.) தச்சுக் கருவிகளுள் ஒன்று; bench-vice. (C.E.M.)

[பிடி → பிடிச்சு + அராவி. அராவு → அராவி]

பிடிச்சேரிப்பங்கு *piḍiccēri-p-paṅgu,* பெ. (n.) *பிடித்த வேர்ப்பங்கு* பார்க்க; see *piḍitta vēr-p-paṅgu.* (C.G)

[பிடித்தவேர்ப்பங்கு → பிடிச்சேரிப்பங்கு]

பிடிசாவல் *piḍi-šāval,* பெ. (n.) விதை நீக்கப்பட்ட சேவல்; capon. (Pond.)

[பிடி + சாவல். சேவல் → சாவல்]

பிடிசுட்டுப்படைத்தல் *piḍi-šuṭṭu-p-paḍaittal,* பெ.(n.) வீட்டுத் தெய்வத்திற்குப் பிடிப்பணியாரம் சுட்டுப் படைக்கும் (நிவேதிக்கும்) சடங்கு (வின்.); the ceremony of offering cakes to the household deity.

[பிடி + சுட்டு + படைத்தல்]

பிடிசுவர் *piḍi-šuvar,* பெ. (n.) கைப்பிடிச்சுவர் (இ. வ.); parapet wall.

[பிடி + சுவர்]

பிடிசுற்று–தல் *piḍi-šuṟṟu-,* 6 செ. கு. வி. (v.i.) வண்ணமூட்டிய வகை உணவு (சித்திரான்னங்)களைச் சுற்றி யெறிந்து மணமக்கட்குக் கண்ணேறு (திருட்டி)

கழித்தல்; to wave coloured boiled rice around the bride and bridegroom for averting the evil eye.

[பிடி + சுற்று—]

பிடிசூழ்தல் *piḍi-šūḻdal,* பெ. (n.), தானங் கொடுக்கும் நிலத்தின் எல்லையைக் காட்டப் பெண்யானையோடு செல்லுஞ் சடங்கு; the ceremony of indicating the boundary of a gift land by walking round it with a female elephant. (S.I.I.iii, **305.**)

[பிடி + சூழ்தல்]

பிடிசூழ்ந்துகல்நாட்டு—தல் *piḍi-šūḻndu-kal-nāṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) *பிடாகை நடத்—தல்* பார்க்க; see *piḍāgai - naḍa-.* *"மேல் வேம்ப நாட்டு நாட்டாரும் பிரம்ம தேயக் கிழவரும் நாலாபுரத்து ஊராரும் உடனின்று நிலம் அளந்து பிடிசூழ்ந்து கல்நாட்டி"* (சிவகாசிச் செப்பேடுகள்.)

[பிடி + சூழ்ந்து + கல் + நாட்டு—,]

பிடிசெம்பு *piḍi-šembu,* பெ. (n.) கைப்பிடியோடு கூடிய செப்பு ஏனம் (பாத்திரம்); a kind of metallic vessel with a handle.

[பிடி + செம்பு. சுல் → செல் → சேல் = செந்நிறக்கொண்டை மீன். செல் → செய் → செய் → செய்ம்மை → செம்மை = சிவப்பு. செம்மை → செம் → செம்பு = தாம்பரம், செம்பினாற் செய்த குடிநீர்க்கலம்.]

பிடிசோறு *piḍišōṟu,* பெ. (n.) கைப்பிடியளவுள்ள சோறு; a handful of cooked rice.

[பிடி + சோறு. சுல் → (சொல்) → சொலி= சொலித்தல் = விளங்குதல். சுல் → சொல். சொல் = பொன்போற் பொலியும் கூலமாகிய நெல். சொல் → சொன்றி → சோறு]

பிடித்தபிடி *piḍitta-piḍi,* பெ. (n.) **1.** கையினாற் கொண்டபிடி; grasp, hold. **2.** விடாப்பிடியான கொள்கை (வின்.); opinion firmly hold. **3.** விடாப்பிடியான குணம் (வின்.); obstinacy, stubbornness.

[பிடி → பிடித்த + பிடி]

பிடித்தம் *piḍittam,* பெ. (n.) **1.** கழிவு; with holding a part of payment deduction. *'சம்பளப் பிடித்தம்'.* **2.** சிக்கனம்; frugality, thrift. *'பிடித்த மாய்ச் செலவு செய்கிறான்'.* **3.** மனப் பொருத்தம்; amicableness; agreement. *'எனக்கும் அவனுக்கும் பிடித்தமில்லை'.* **4.** விருப்பம்; liking, relish. *'இனிப்புப் பண்டத்தில் எனக்குப் பிடித்தம் அதிகம்'*

க. கிடித; **து.** பிடித, பிட்த ...

[பிடி → பிடித்தம்]

பிடித்தம்செய்—தல் *piḍittam-šey-,* 1 செ. குன்றாவி. (v.t.) ஒன்றிற்கு ஏற்படுத்தப்பட்ட விலையில் குறிப்பிட்ட காரணங்களுக்காகச் சிறிய தொகையைக் கழித்தல்; to deduct effected in a sum at the time of payment. *"இந்த முறை தரமான அரிசியாக இல்லாததால் மூட்டை ஒன்றுக்குப் பத்து உரூபா பிடித்தம் செய்கிறார்கள்.*

[பிடி → பிடித்தம் + செய்—, 'செய்' து.வி.]

பிடித்தவேர்ப்பங்கு *piḍitta-vēr-p-paṅgu,* பெ. (n.) பண்ணை வேலையாளுக்குரிய விளைச்சல் பங்கு; share of the produce

given to farm labourer who contributes labour only, the owner supplying agricultural inplements, plough-cattle and seeds. (C.G).

[பிடி → பிடித்த + ஏர் + பங்கு]

பிடித்தாட்டு—தல் *piḍittāṭṭu-*, 5 செ. குன்றாவி. (v.t.) ஒன்றின்மேல் அதிகாரம் செலுத்துதல்; to obsess. அப்பழக்கம் அவனைப் பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது (உ.வ.)

[பிடித்து + ஆட்டு—. ஆடு - ஆட்டு]

பிடித்தாடி *piḍittāḍi*, பெ. (n.) பலகறை; cowry shell. *'பிடித்தாடியன்ன பிறழ்பற் பேயார'* (பு. வெ. 8,6)

[பிடி → பிடித்து + ஆடி. ஆடு → ஆடி]

பிடித்து[1] *piḍittu*, பெ. (n.) கைப்பிடிப் பொருள்; handful. *'பிடித்தெருவும் வேண்டாது'* (குறள், 1037.)

[பிடி → பிடித்து]

பிடித்து[2] *piḍittu*, வி.எ. (adv.) தொடங்கி; from, beginning with. *'என் பிறப்பே பிடித்து'* (ஈடு, 2, 1, 1.)

[பிடி → பிடித்து]

பிடித்துக்கொள்(ளு)—தல் *piḍittu-k-koḷ(ḷu)-*, 10 செ. குன்றாவி. (v.t.) சுளுக்குதல் (கொ.வ.); to contract, as a nerve or muscle by rheumatism or cramp.

[பிடி → பிடித்து + கொள்—]

பிடித்துணி *piḍi-t-tuṇi*, பெ. (n.) *பிடிச்சீலை* பார்க்க; see *piḍi-c-cīlai.*

[பிடி + துணி]

பிடித்துராவி *piḍitturāvi*, பெ. (n.) *பிடிச்சுராவி* பார்க்க; see *piḍiccurāvi.* (C.G.)

[பிடி → பிடித்து + அராவி]

பிடித்துவைத்தபிள்ளையார் *piḍittu-vaitta piḷḷaiyār*, பெ. (n.) இருக்கும் நிலையிலேயே அசைவற்று இருத்தல்; staying put. 'பிடித்து வைத்த பிள்ளையார் போல உட்கார்ந் திருக்கிறாயே! கொஞ்சம் கடைக்குப் போய் வரக்கூடாதா?'

[பிடித்துவைத்த + பிள்ளையார்]

பிடித்தைலம் *piḍi-t-tailam*, பெ. (n.) பிடிப்பு நோவுள்ள விடத்துத் தோலின் மீது தடவும் எண்ணெய் (தைலம்) (பைஷஜ.3.); liniment.

[பிடி + தைகலம்]

Skt. taila > த. தைலம்

பிடிதண்டம் *piḍi-taṇḍam*, பெ. (n.) காரண மில்லாமல் ஒருவனைப் பிடித்துத் துன்புறுத்துகை (வின்.); unjust seizure of an innocent person.

[பிடி + தண்டம். தள் → தண்டு → தண்டி. தண்டித்தல் = தடியாலடித்தல், தண்டனை செய்தல். தண்டி → தண்டம் = தண்டனம், தண்டனை.]

பிடிதம் *piḍidam*, பெ. (n.) இரவல் (பிச்சை) (திவா.); alms.

[பிடி → பிடிதம்]

பிடிதுணி *piḍi-tuṇi*, பெ. (n.) *பிடிச்சீலை* பார்க்க; see *piḍi-c-cīlai.*

[பிடி + துணி]

பிடிநாள் *piḍi-nāḷ*, பெ. (n.) நல்ல நாள்; auspicious day. *'பிடிநாள் பண்ணவிழ்தம்'* (இராசவைத். 71.).

[பிடி + நாள்]

பிடிநிலை *piḍi-nilai*, பெ. (n.) உறுதி (இ. வ.); firmness; resolve.

[பிடி + நிலை. நில் → நிலை]

பிடிநூக்கர் *piḍi-nūkkar*, பெ. (n.) *பிண்ணாக்கர்* பார்க்க; see *piṇṇākkar*.

பிடிநெல் *piḍi-nel*, பெ. (n.) அளக்கும் போது அளவு ஒன்றுக்கு ஒரு பிடியளவாக அளப்போர் எடுக்கும் உரிமை நெல் (வின்.); handful of paddy, taken by a person from each measure as his perquisite for measuring.

[பிடி + நெல். நுல் → நெல் = பொன்போல் விளங்கும் தவசம் (கூலம்)]

பிடிப்பி-த்தல் *piḍippi-*, 4. செ. குன்றாவி. (v.t.) விதையடித்தல்(வின்.); to geld. *'பிடிப்பித்த மாடு'.*

[பிடி → பிடிப்பி. 'பி' பி.வி.ஈறு]

பிடிப்பிச்சை *piḍi-p-piccai*, பெ. (n.) பிடியளவிடும் பிச்சை (வின்.); handful of rice given as alms.

[பிடி + பிச்சை]

பிடிப்பிட்டு *piḍi-p-piṭṭu*, பெ. (n.), சிற்றுண்டி வகை (வின்.); a kind of confectionary.

[பிடி + பிட்டு]

பிடிப்பு¹ *piḍippu*, பெ. (n.) **1.** ஒரு நிலையில் நிலைக்க பிடிபாடாக அமைவது, பற்றுகை; grasping, holding, seizure, catching. எவ்வகைப் பிடிப்பும் இல்லாமல் கம்பத்தின் மேல் நின்று சுழன்று ஆடினான் (உ.வ.), **2.** ஒட்டுகை; adhesion, sticking, glutinousness, cohesiveness. **3.** ஈடுபாடு, பற்று; attachment, involvement. குடும்பத்தின்மேல் பிடிப்பே இல்லாதவன் போல் நடந்து கொண்டான் (உ.வ.). **4.** பிடித்தம் பார்க்க; see piḍittam. **5.** கருத்து; idea. *'பிறர் செல்வமும் நம்பேறெனப் பிடிப்புள்ள வெம்மிடத்து'* (பிரபோத. 27,62), **6.** சேர்க்கப்பட்ட பொருள் (வின்.); money amassed, accumulation, encroachment. **7.** உறுதி; rigidness, pertinacity. **8.** பிணைப்பு; bond, tie. **9.** கைப்பிடி (இ.வ.); handle. **10.** உதவி, பயன்பாடு (வின்.); favour. ஒருவனுக்கு பிடிப்பாய்ப் பேசு. **11.** பிடிபாடு(ஆதாரம்); support.

ம. பிடிப்பு; **க.** பிடிபு

[புள் → (பிள்) → பிண் → பிடி → பிடிப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

பிடிப்பு² *piḍippu*, பெ. (n.) ஊதை நோயினாலுண்டாகும் மூட்டு அல்லது கைகாற் பிடிப்பு; rigidity of the joints from the effects of rheumatism, gonorrhocal, rheumatism, muscular cramps, contraction of nerves.

[புள் → (பிள்) → பிண் → பிடி. பிடித்தல் = பற்றுதல், அகப்படுத்துதல். பிடி → பிடிப்பு = மூட்டு உறுப்புகள் ஒன்றோடொன்று பற்றியிருப்பதைபோல் இயக்கம் குன்றிக் காணப்படும் நிலை, தசைகள் தம் இயல்புத்தன்மையில்லாமல் விறைப்பாய் இருக்கும் நிலை. 'பு' தொ. பெ. ஈறு]

பிடிப்புக்கேற்று–தல் *piḍippu-k-kēṟṟu-,* 5செ.குன்றாவி. (v.t.) சுற்றப்பட்ட பாவின் இழைகளைப் பன்னையிலுள்ள இழைகளுடனும் பின் அச்சிலும் ஏற்றுதல்; to load the thread of a warp to heddles as the reed.

[பிடிப்புக்கு + ஏற்று–,]

பிடிப்புவாதம் *piḍippu-vādam,* பெ. (n.) *பிடிப்பூதை* பார்க்க; see *piḍi-p-pūḍai.*

[பிடி → பிடிப்பு + வாதம்]

Skt. vāta › த. வாதம்.

பிடிப்பூதை *piḍippūdai,* பெ. (n.) ஊதை நோய் வகையு ளொன்று; rheumatism.

[பிடிப்பு + ஊதை]

பிடிபடு[1]–தல் *piḍi-paḍu,* 20 செ. குன்றாவி. (v.t.) 1. பிடிக்கப் படுதல்; to be caught, taken, seized. 2. புலப்படுதல்; to be grasped, understood, comprehended. *'நான் சொன்னது அவனுக்குப் பிடிபட வில்லை'* 3. அடைதல்; to attain, get. *'மருவினோர் குணம் பிடிபடல் வையகத் தியல்பே'* (காஞ்சிப்பு. நகரப். 74) 4. இணங்குதல்; to suit, to be suitable, to agree with.

[பிடி + படு. 'படு' து.வி]

பிடிபடு[2]–தல் *piḍi-paḍu-,* 20 செ. கு. வி (v.i.) அளவுக்கு அடங்குதல், கட்டுப்படுதல்; to be within bounds. தேர்வில் வெற்றி பெற்றுவிட்டோம் என்ற செய்தி கிடைத்ததும், அவனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை (உ.வ.)

[பிடி+ படு–.]

பிடிபந்தம் *piḍi-pandam,* பெ. (n.) தீப்பந்த வகை; a kind of flambeau (Pudu. Insc. 300)

[பிடி + பந்தம். பந்து → பந்தம். 'அம்' பெ.பொ.பி.]



பிடிபாடாகக்கொள்(ளு)–தல் *piḍipāḍāga-k-koḷ(ḷu)-,* 10 செ.குன்றாவி. (v.i.) உடைமைகட்குரிய ஆவணக்களரியில் சான்றாகக் கொள்ளுதல்; to document the weath. *'இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளுதல்'* (தெ. கல். தொ. 17. 202.)

[பிடிபாடு + ஆக + கொள்–.]

பிடிபாடு *piḍi-pāḍu,* பெ. (n.) 1. பிடிக்கப்பட்டது; draught, that which is caught. 2. சேர்க்கப் பட்டது; that which is amassed, as money. 3. சான்று; authority, official sanction. *'இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு'* (S.I.I: iii.475) 4. பற்று; affection, attachment.

[பிடி + பாடு. படு → பாடு. ஒ.நோ. கடு → காடு. இடிபடு → இடிபாடு]

பிடிபாடுதீட்டு *piḍipāḍu-tiṭṭu,* பெ. (n.) அடிப்படைச் சான்றாக எழுதித்தரும் உறுதிச் சீட்டு; contimation document. *"இம்மூவோம் பிடியாடு தீட்டுக் குடுத்த பாபிவது" (தெ. கல். தொ. 5. கல். 475).*

[பிடிபாடு + தீட்டு. தீற்று → தீட்டு]

பிடிபிடியெனல் *piḍi-piḍi-y-eṉal,* பெ. (n.) விரைவுக் குறிப்பு; expr. signifying haste. நேற்று என்னைப் பிடிபிடியென பிடித்து விட்டாள் (உ.வ.).

[பிடி + பிடி + எனல்]

பிடிபோடு—தல் *piḍi-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) கைப்பிடி பொருத்துதல்; to fix up handle. பட்டறைக்குப் போய் இந்த அறுவாளுக்குப் பிடிபோட்டுக் கொண்டு வரவேண்டும் (உ.வ.)

து. புடிகுத்துணி

[பிடி + போடு—,]

பிடிமானம் *piḍi-māṉam,* பெ. (n.) **1.** *பிடித்தம்* (யாழ். அக.) பார்க்க; see *piḍittam.* **2.** *பிடிப்பு—* **6,7.** (வின்.) பார்க்க; see *piḍippu* **6,7.** **3.** கைப்பிடி (இ. வ.); hilt, handle.

ம. பிடிமானம்

[பிடி + மானம். 'மானம்' தொழிற்பெயர் விகுதி, மானம் என்னுஞ்சொல் அளவு என்னும் பொருளை அடிப்படையாகக் கொண்டு ஒரு தொழிற்பெயர் ஈறாகவும் (விகுதியாகவும்) வரும். எ.டு: கட்டுமானம் = கட்டும் அளவு, கட்டடம். படிமானம் = படியும் அளவு, படிவு. அடைமானம், செரிமானம், சேர்மானம், தீர்மானம் முதலிய தொழிற்பெயர்களில், மானம் என்பது ஈறு (விகுதி) அளவாக நின்றது. (மு.தா. 203)]

பிடிமீசை *piḍi-mīšai,* பெ. (n.) கைப்பிடி யளவுள்ள மீசை வகை; moustache of seizable growth.

[பிடி + மீசை]

பிடிமொந்தை *piḍi-mondai,* பெ. (n.) ஏன (பாத்திர)வகை, கைப்பிடியுள்ள மண்சாடி; a kind of vessel.

[பிடி + மொந்தை. முள் → மொள் → மொண்டை → மொந்தை = கள் முகக்குங் கலம்.]

பிடியரிசி *piḍi-y-arišī,* பெ. (n.) இரப்பதற்காக இரப்பவருக்குக் கொடுப்பதற்காக எடுத்து வைக்கும் கைப்பிடியரிசி (வின்.); handful of rice set apart for alms.

க. ஹிடியக்கி

[பிடி + அரிசி. அரி → அரிசி]

பிடியரிசிக்கலயம் *piḍi-y-arišī-k-kalayam,* பெ. (n.) இரப்போர்க்குக் கொடுப்பதற்காகப் பிடியரிசியிடும் கலயம்; earther pot in which piḍiyarišī is deposited daily to be used as alms.

[பிடி + அரிசி + கலயம். குல் → கல் → கலம் → கலயம்]

பிடியரிசிக்குட்டான் *piḍi-arišī-kuṭṭāṉ,* பெ. (n.) நாள்தோறும் பிடியரிசியிடும் ஓலைக் குட்டான் வகை (வின்.); ola basket for piḍiyarišī.

[பிடி+அரிசி + குட்டான். குள் → குட்டு → குட்டம் = குறுமை, செய்யுளடிக் குறுமை. குட்டு → குட்டான் = சிறுபடப்பு, சிறிய ஓலைப் பெட்டி.]

பிடியல் *piḍiyal,* பெ. (n.) **1.** சிறு துகில் (பிங்.): small garment. **2.** நல்லாடை (யாழ். அக.); fine garment.

[பிடி → பிடியல்]

பிடியன்[1] *piḍiyaṉ,* பெ. (n.) குறித்த அளவாகப் பண்டங் கொள்ளத்தக்க பானை (வின்.); pot that will hold a given quantity.

[பிடி → பிடியன்]

பிடியன்[2] *piḍiyaṉ,* பெ. (n.) பெண் யானை; female elephant.

[பிள் → பிடி = பெண்யானை (மு.தா.168) பிடி → பிடியன்]

பிடியாட்டம் *piḍi-y-āṭṭam,* பெ. (n.), ஒரு வகைச் சீட்டாட்டம் (இ. வ.); cards.

து. பிடி (சீட்டு), பிடிகொப்புனி (சீட்டாடு)

[பிடி + ஆட்டம்]

பிடியாணை *piḍi-y-āṇai,* பெ. (n.) குற்றஞ் சாட்டப்பட்டவரை அல்லது வழக்கு (விசாரணை)க்கு முறை (நீதி)மன்றம் வர மறுப்பவரைச் சிறை (கைது)செய்ய அழைத்து வருமாறு காவல் துறைக்கு முறைமன்றம் பிறப்பிக்கும் ஆணை; warrant of arrest. கொலைக்குற்றம் செய்தவனை முறைமன்றம் பிடிக்கும்படி பிடியாணை பிறப்பித்தது.

[பிடி +ஆணை]

பிடியாப்பு *piḍiyāppu,* பெ. (n.) மேழியிலுள்ள கைப்பிடி; handle of the hoe.

[பிடி → பிடியாப்பு]

பிடியாள் *piḍi-y-āḷ,* பெ. (n.) **1.** பிடித்தடைக்கப் பட்டவன் (வின்.); person seized or taken into custody. **2.** அமஞ்சி (இலவச) வேலைக்காரன் (வின்.); workman pressed into service. **3.** கூலிக்காக அமர்த்தப்பட்டவன்; day labourer.

[பிடி + ஆள்]

பிடியானை *piḍiyāṉai,* பெ. (n.), *பிடி[6]* பார்க்க; see *piḍi[6]*.

க. பிடியானெ.

[பிடி + யானை.]

பிடியெழுத்தாணி *piḍi-y-eḻuttāṇi,* பெ. (n.) மடக்கெழுத்தாணி (வின்.); a kind of iron style.

[பிடி + எழுத்தாணி]

பிடிலம்மை *piḍilammai,* பெ. (n.) பொன்னுக்குவீங்கி; mumps.

[பிடி → பிடில்+ அம்மை]

பிடிலிகைவாரி *piḍiligai-vāri,* பெ. (n.) பீடத்தின் மீது பெறப்படும் காணிக்கை; offering at pedestal of a deity. ***"இப்பிடிலிகை வாரி கொண்டு மாணியிரண்டு கட்டுப் பணி செய்யக் கடவேனாகவும்"*** (தெ. கல். தொ.19. கல். 357.).

பிடிவாதக்காரன் *piḍivāda-k-kāraṉ,* பெ. (n.) தான் கொண்டதை விடாது வலியுறுத்துபவன்; obstinate, self willed person.

[பிடிவாதம் + காரன்]

பிடிவாதம் *piḍi-vādam,* பெ. (n.) **1.** கொண்டது விடாமை, தன் முரண்டு; obstinacy, pertinacity, stubbornness, perverseness. **2.** உறுதியுள்ள நிலை; firm determination.

தெ. பிடிவாதமு

[பிடி+ வாதம்]

பிடிவாதம்பிடி—த்தல் *piḍivadam piḍi-,* **4.** செ.கு.வி. (v.i.) தன்முரண்டு பிடித்தல்; to be obstinacy.

மறுவ. அடம்பிடித்தல், அடம் பண்ணுதல்

[பிடிவாதம் + பிடி –. 'பிடி'.து.வி.]

பிடிவாதி *piḍivādi,* பெ. (n.) *பிடிவாதக்காரன்* (வின்.) பார்க்க; see *piḍivādakkāraṉ.*

[பிடிவாதம் → பிடிவாதி]

பிடிவாள் *piḍivāḷ,* பெ. (n.) கைப்பிடியுள்ளவாள்; a kind of saw which consists handle.

து. பிடிபாள்

[பிடி + வாள். வள் → வாள் = வளைந்த வெட்டுக்கருவி]



பிடிவிடு–தல் *piḍi-viḍu-,* 20 செ. கு. வி. (v.i.) 1. கைப்பிடிப்பு விடுதல்; to let go one's hold or grasp. 2. பற்று (அபிமானம்) நீங்குதல்; to give up attachement of one's religious opinion or faith.

[பிடி + விடு–.]

பிடிவிளக்கு *piḍi-viḷakku,* பெ. (n.) விளக்கு வகை; a kind of lamp. *'ஸ்ரீபலிக்கு பிடி விளக்கு இரண்டும்'* (S.I.I.vii, **311.**)

[பிடி + விளக்கு. கோயிற்பூசையில் பயன் படுத்தும் கைப்பிடியோடு கூடிய விளக்கு]



பிடு–தல் *piḍu-,* 18 செ. குன்றாவி. (v.t.) இரண்டாக அல்லது துண்டு துண்டாகப் பிளத்தல்; to break into two or many pieces.

[புள் → பிள். பிள்ளுதல் = இரண்டாகவோ பலவாகவோ பிளந்து விடுதல், துண்டு படுதல். பிள் → பிள. பிளத்தல் = வெடித்தல், திறத்தல். பிள் → பிடு–, (வே. க.109–111)]

பிடுக்கு *piḍukku,* பெ. (n.) ஆணின் இனப்பெருக்கச் சுரப்பி உறுப்பு (பீசம்); testicle.

மறுவ. விதை.

ம. பிடுக்கு; **து.** பிட்டு

[புல் → புள் → பிள் → பிழம்பு = திரட்சி. பிள் → பிண்டு = திரட்சி (வே.க.3.81). புள் → பிள் → பிடு → பிடுகு = திரண்ட உறுப்பு. திரண்டு விதையைப் போன்றிருப்பதால் விதை எனப்பட்டது.]

பிடுகு *piḍugu,* பெ. (n.) இடி; thunderbolt. பெரும்பிடுகு. (S.I.I. ii,**341**)

ம., தெ. பிடுகு, பிட்கு; **பட.** குடுகு.

[பிள் → பிடு → பிடுகு = வாணம் வெடிப்பது போன்ற இடி (வே. க. 311)]

பிடுங்கல் *pidungal,* பெ. (n.) **1.** வலிந்து எடுக்கை; pulling out. **2.** பொருள்பறித்தல்; extortion. **3.** தொந்தரவு; annoyance, vexation. **4.** இடையூறு செய்பவ–ன்–ள், தொந்தரவு செய்பவ–ன்–ள்; troublesome person.

[பிடுங்கு → பிடுங்கல். 'அல்' தொ. பெ. ஈறு]

பிடுங்கி *pidungi* பெ. (n.) வலிந்து பிடுங்குபவன்; extractor.

[பிடு → பிடுங்கி. 'இ' வினைமுதலீறு]

பிடுங்கித்தின்னு–தல் *pidiungi-t-tinnu-,* 14 செ. குன்றாவி. (v.t.) **1.** கொத்தித் தின்னுதல்; to peck at. **2.** பறித்து (அபகரித்து) உண்ணுதல்; to live by extortion **3.** வருந்துதல்; to vex, annoy.

[பிள் → பிடு → பிடுங்கு → பிடுங்கி + தின்னு–,]

பிடுங்கியுண்ணி *pidungi-y-unni,* பெ. (n.) **1.** கவர்ந்து உண்பவன் (அபகரித்துண்பவன்); one who live by extortion. **2.** வருத்தி வாங்குபவன்; extortioner

மறுவ. ஒட்டுண்ணி.

[பிடுங்கி + உண்ணி. உண் → உண்ணி. 'இ' வினைமுதலீறு]

பிடுங்கிவிடு¹–தல் *pidungi-vidu-,* 20 செ.கு.வி. (v.i.) ஓடிப்போதல்; to run away. ***'அவன் எங்கே பிடுங்கி விட்டான்?'***

[பிடுங்கி + விடு–]

பிடுங்கிவிடு²–தல் *pidungi-vidu-,* **18** செ. குன்றாவி. (v.t.) *பிடுங்கிதின்(னு)–தல்* (இ. வ.) 3 பார்க்க; see *pidungi-t-tin(nu)-,*3

[பிள் → பிடு → பிடுங்கி. பிடுங்கி + விடு]

பிடுங்கீரை *pidungirai,* பெ. (n.) *பிடுங்குகீரை,* (வின்.) பார்க்க; see *pidungukirai.*

[பிடுங்குகீரை → பிடுங்கீரை]

பிடுங்கு¹–தல் *pidungu-,* 5 செ. குன்றாவி. (v.t.) **1.** பறித்தல். to pull out, pull off, pluck up, extract. *'மலை பிடுங்கினர்'* (கம்பரா. அகலி.23.) **2.** கவர்தல்(அபகரித்தல்); to extort, wrest. **3.** தடையை உடைத்துக் கொண்டு விரைந்து செல்லுதல்; to break through any obstruction and rush through with force, as a flood. *'ஆறு பிடுங்கிக் கொண்டு போகிறது'* **4.** கொத்துதல், to bite, peck, strike. **5.** கொட்டுதல்; to sting. **6.** வருத்துதல், to vex, annoy. ***'ஏன் என்னைப் பிடுங்குகிறாய்?'***

ம. பிடுங்குக

[பிள் → பிடு → பிடுகு = வானம் வெடிப்பது போன்ற இடி. பிடு → பிடுகு → பிடுங்கு. ஒ.நோ. OE.brecan; OS.brekan; OHG.brethan; Goth.brikan; E.break; L.frag, frang, fract. ***(வே.க.3.111)***]

பிடுங்கு²–தல் *pidungu-,* **5** செ. குன்றாவி. (v.t.) **1.** மிகுதியாதல்; to be rife. *'நோய் பிடுங்குகிறது'*. **2.** தொந்தரவு கொடுத்தல்; to give trouble. ***'கொசு பிடுங்குகிறது.'***

[பிள் → பிடு → பிடுங்கு]

பிடுங்குகீரை *piḍuṅgu-kīrai,* பெ. (n.) முளைக்கீரை (வின்.); young, edible greens.

[பிடுங்கு + கீரை]

பிடுங்குண்ணி *piḍuṅguṇṇi,* பெ. (n.) **1.** பிடுங்கப்பட்டவ-ன்-ள் (வின்.); one deprived of his means of livelihood by an extortioner. **2.** பிடுங்கியுண்ணி பார்க்க; see piḍuṅgiyuṇṇi. **3.** துன்புறுத்துவோன்; a teasing person, one who causes annoyance.

[பிடுங்கு + உண்ணி]

பிடை *piḍai.* பெ. (n.) மாழைகளை உருக்கும் கலம் (குகை) (வின்.); melting pot, crucible.

பிடையன் *piḍaiyaṉ,* பெ. (n.) *புடையன் பார்க்க;* see *puḍaiyaṉ.*

[புடையன் → பிடையன்]

பிண்டஅரிதளம் *piṇḍa - aridaḷam,* பெ. (n.) தாளக வைப்பு நஞ்சு; a form of yellow orpiment.

[பிண்டம் + அரிதளம். அரிதாரம் அரிதாலம் → அரிதாளம்→அரிதளம்.]

பிண்டக்கரு *piṇḍa-k-karu,* பெ. (n.) உருவற்ற கரு(வின்.); embryo, foetus

[பிண்டம் + கரு. குரு → கரு = சூல், முட்டை, குழவி, குட்டி]

பிண்டக்கருமம் *piṇḍa-k-karumam,* பெ. (n.) தென்புலத்தார்க்குப்பிண்டம் படைக்கும் சடங்கு; ceremony of offering balls of cooked rice to the manes.

[பிண்டம்+கருமம். புல் → புள் → பிள → பிழம்பு = திரட்சி, வடிவு. உடல். பிள் → பிண்டு = திரட்சி, உடம்பு. பிண்டு → பிண்டம் = திரளை, சோற்றுத் திரளை, உண்டை, தென்புலத்தார்க்குப் படைக்கும் சோற்றுண்டை.]

பிண்டக்கல் *piṇḍa-k-kal,* பெ. (n.) தொண்ணூறுநாள்முதல்150 நாள்களுக்குரிய கருவளர்ச்சி; foetus aged ninty to one hundred and fifty days.

[பிண்டம் + கல்]

பிண்டக்காப்பு *piṇḍa-k-kāppu,* பெ. (n.) சோறு (இ.வ.); food, boiled rice, used in contempt. *'பிண்டக் காப்புக்குத் தாளம் போடுகிறான்'.*

[பிண்டம் + காப்பு. கா → காப்பு]

பிண்டக்கிரியை *piṇḍa-k-kiriyai,* பெ. (n.) *பிண்டக் கருமம்* பார்க்க; see *pidṇa-k-karumam.*

[பிண்டம் + கிரியை]

Skt. *kriyā* > *த கிரியை*

பிண்டக்கோரை *piṇḍa-k-kōrai,* பெ. (n.) முதிராச் சூலின் தலை மயிர்; hairs on the head of the foetus.

[பிண்டம் + கோரை.]

பிண்டகம் *piṇḍagam,* பெ. (n.) நறும்புகை; fragrant smoke.

[புள் → (பிள்) → பிண்டு → பிண்டம்= திரட்சி (மு.தா.209). பிண்டம் → பிண்டகம் = திரண்ட சுறாலைக் கட்டி, அதனின்று வரும் நறும் புகை.]

பிண்டகருமம் *pinda-karumam,* பெ. (n.) *பிண்டக் கருமம்* (வின்.) பாக்க; see *pinda-k-karumam.*

[பிண்டம் + கருமம்]

பிண்டகலை —*pinda - kalai,* பெ. (n.) கதிர்க்கலை; the vital air passing through the right nostril which is essential for existence.

பிண்டகன் *pindagan,* பெ. (n.) முன்னோர்க்கு (பிதிரர்க்கு)ப் பிண்டமிட்டுச் சடங்கு செய்வோன் (வின்.); one who offers an oblation of cooked rice to the manes.

[பிண்டம் → பிண்டகன் = பிண்டம் படைப்போன் வே.க.3,82]

பிண்டகை *pindagai,* பெ. (n.) ஐவகை மணத்தியுள் (கஸ்தூரி) ஒன்று (பார்த்த. 1081.) hard musk, one of five kinds of kastūri, q.v.

[பிண்டம் → பிண்டகை]

பிண்டகோசம் *pinda-kōšam,* பெ. (n.) நறுமணப் பிசின்; fragrant resin.

[பிண்டம் + கோசம்]

பிண்டச்சரக்கு *pinda-c-carakku,* பெ. (n.) மருந்துச் சரக்கு; a medicinal drug.

[பிண்டம் + சரக்கு. சர் → சரகு → சரக்கு = காய்ந்தபண்டம், காய்ந்த வணிகப்பண்டம், வணிகப்பண்டம், மருந்துப்பண்டம்]

பிண்டச்சவுக்காரம் *pinda-c-cavukkāram,* பெ. (n.) ஐந்து வகைச் சுண்ணம், மூன்று வகை யுப்புச் சேர்த்துச் செய்யப்பட்ட சித்தர் குளிகை; a medicated pill prepared by five kinds of calcined powders and three kinds of salts by a process enumerated in Tamil Siddhar's medical science.

[பிண்டம் + சவர்க்காரம். சவர்க்காரம் → சவுக்காரம்]

பிண்டச்சாறு *pindā-c-cāru,* பெ. (n.) கடைச் சரக்குகளைக் கொண்டு சித்தர்களால் காய்ச்சப் பெறும் மருந்துச்சாறு; an essence prepared from the foetus and other medicines by Siddhars.

[பிண்டம் + சாறு]

பிண்டச்சிதைவு *pinda-c-cidaivu,* பெ. (n.) கருப்ப வழிவு; abortion.

[பிண்டம் + சிதைவு]

பிண்டச்சூம்பல் *pinda-c-cūmbal,* பெ. (n.), கருவளர்ச்சியடையாது மெலிந்து, நாளடைவில் மறைந்து போதல்; a trophy of a foetus in the womb, is one to the action of the deranged vāyu.

[பிண்டம் + சூம்பல். சும் → சும்பு → சூம்பு. சூம்புதல் = மெலிந்து வாடுதல். சூம்பு → சூம்பல். 'அல்' தொ. பெ. ஈறு]

பிண்டச்செயநீர் *pinda-c-ceyanīr,* பெ. (n.) கருவுப்பினின்று வடிக்கும் நீர்ம மருந்து; a medicinal liquid or acid obtained by a process from the foetus salt.

[பிண்டம் + செயநீர்]

பிண்டசம் *pindašam,* பெ. (n.) செவ்வந்தி; camonicle.

பிண்டசலனம் *pindašalanam,* பெ. (n.) கருவுற்றக் காலத்தில் வயிற்றில் காணும் கருவின் அசைவு; the recognisable movements of the foetus in the uterus.

[பிண்டம் + சலனம்.]

Skt. calana > த. சலனம்

பிண்டசூத்திரம் *pinda-šūttiram,* பெ. (n.) தலைமைப்பொருளைப் பொதுப்படக் கூறும் நூற்பா (சூத்திரம்) (நன்.20); šūtram mentioning a major topic in a general way.

[பிண்டம் + சூத்திரம்]

Skt. sūtra > த. சூத்திரம்

பிண்டத்தலை *pinda-t-talai,* பெ. (n.) கருவின் தலை; foetus head.

[பிண்டம் + தலை]

பிண்டத்தைலம் *pinda-t-tailam,* பெ. (n.) கடைச்சரக்குகளைச் சேர்த்துக் காய்ச்சும் மருந்து எண்ணெய் (தைலம்); a medicated oil prepared from the medicinal drugs.

[பிண்டம் + தைலம்]

Skt. taila > த. தைலம்

பிண்டத்தோற்றம் *pinda-t-tōrram,* பெ. (n.) கருக்கொள்ளுகை (கருவுற்பத்தி); conception.

[பிண்டம் + தோற்றம்.தோன்று → தோற்றம்]

பிண்டதன் *pindadan,* பெ. (n.) **1.** பங்காளி (தாயாதி.) (யாழ். அக.); agnate. **2.** உதவி செய்பவன்; benevolent person. **3.** சுற்றம்; kinsman.

[பிண்டம் → பிண்டதன்]

பிண்டதானம் *pinda-tānam,* பெ. (n.) பிண்டப்படைப்பு; offering balls of cooked rice to the manes.

க. பிண்டாதான.

[பிண்டம் + தானம். தள் → (தர்) → தரு தா → தானம்]

பிண்டநீர் *pinda-nir,* பெ. (n.) வெண்ணீர் (சுக்கிலம்) (சித். அக.); semon.

[பிண்டம் + நீர். நீள் → நீர்]

பிண்டப்படைப்பு *pinda-p-padaippu,* பெ. (n.) *பிண்டதானம்* பார்க்க; see *pinda tānam.*

[பிண்டம் + படைப்பு. படை → படைப்பு. 'பு' தொ. பெ. ஈறு.]

பிண்டப்பிரதானம் *pidna-p-piradānam,* பெ. (n.) *பிண்டதானம்* பார்க்க; see *pindatānam.*

[பிண்டம் + பிரதானம்]

Skt. pra > த. பிர

பிண்டப்பூநீறு *pinda-p-pūniru,* பெ. (n.) கருவின் மீது படிந்துள்ள மாவைப் போன்ற பொருள்; white coating found deposited on the body of the foetus.

[பிண்டம் + பூ + நீறு. நீற்று → நீறு]

பிண்டப்பை *pidna-p-pai,* பெ. (n.) சூலுற்றப்பின் கரு வளர்வதற்கும் பிறப்பு வரை இருப்பதற்குமான பெண்பால் உயிரிகளில் இருக்கும் உடலுறுப்பு. uterus, womb.

மறுவ. கருப்பை, சூற்பை.

[பிண்டம் + பை. புள் → பொள் → பொய் → பை.]

பிண்டப்பொருள் *piṇḍa-p-poruḷ,* பெ. (n.) கருத்து (வின்.); gist of a verse or passage.

[பிண்டம் + பொருள்]

பிண்டப்பொழிப்பு *piṇḍa-p-poḻippu,* பெ. (n.) *பிண்டவுரை* (சி. போ. பா. 1. பக், 26, சுவாமி நா.) பார்க்க; see *piṇḍavurai.*

[பிண்டம் + பொழிப்பு. பொழி → பொழிப்பு = திரட்டு.]

பிண்டபாகம் *piṇḍa-bāgam,* பெ. (n.) ஏழைக்கு அளிக்கும் நன்கொடை (பிச்சை) (அக. நி.); alms.

மறுவ. ஐயம். இரவல்

[பிண்டம் + பாகம். பகு → பாகு பாகம் = பகுக்கை, கூறு, பாதி, பிச்சை.]

பிண்டபாதம் *piṇḍa-pādam,* பெ. (n.) யானை; elephant.

[பிண்டம் + பாதம். திரண்டபாதத்தை யுடையது. பதி → பாதம்]

பிண்டபுட்பம் *piṇḍa-puṭpam,* பெ. (n.) 1. பிண்டி (மலை.); mast-tree. 2. செவ்வந்தி; gardechrysanthemum.

[பிண்டம் + புட்பம்]

Skt. puṣpa > த. புட்பம்.

பிண்டபுறக்கவசம் *piṇḍapuṟa-k-kavašam,* பெ. (n.) கருப்பையைச் சுற்றியுள்ள புறத்தோல்; outer membraneous covering of foetus chorion.

[பிண்டம் + புறம் + கவசம்]

பிண்டம்[1] *piṇḍam,* பெ. (n.) 1. உண்டை (பிங்.); anything globular or round, lump or mass, ball, globe. 2. உருவற்ற கரு; embryo, foetus. *'உறுப்பில் பிண்டமும்'* (புறநா. 28). 3. உடல்; body. *'உண்டி முதற்றே உணவின் பிண்டம்'* (புறநா. 18.) 4. சோற்றுத்திரள்; ball of boiled rice. *'பிண்டமேய பெருஞ்சோற்று நிலையும்'* (தொல். பொ. 63.) 5. மூதாதையர் (பிதிரர்) பொருட்டுக் கொடுக்கப்படும் சோற்றுண்டை; ball of cooked rice, offered to the manes at a funeral ceremony or šrāddha. 6. பல பொருள்களின் தொகுதி; collection, multitude, aggregate. *'பரிவு தபவெடுக்கும் பிண்ட நச்சின்'* (புறநா. 184.) 7. *பிண்டநூற்பா* (சூத்திரம்) (நன். 20) பார்க்க; see *piṇḍasūttiram.* 8. நூற்பா (சூத்திரம்), இயல், ஒத்து என்ற மூன்றுறுப்புக் கொண்ட நூல்; treatise with subdivisions of šūttiram, iyal, and ōttu. *'மூன்றுறுப்படக்கிய பிண்டத் தானும்'* (தொல். பொ. 480.)

க., து. பிண்ட; தெ. பிடெ, பிடெமு

[பொள் → பொழி. பொழிதல் → நிறைதல், பொழிதல் = திரட்டுதல். பொழிப்புரை = திரட்டுரை. பொழி = கணு. பொழி → பொழில் = பெருமை, சோலை, நாடு, ஞாலம், பொள் → பிள் → பிண்டு → பிண்டி → பிண்டம் (வ. வ. 236) புல் → பொல்லு = தடி. புள் → (பிள்) → பிண்டு → பிண்டம் = திரட்சி (மு.தா. 209)]

த, பிண்டம் > Skt. piṇḍa

பிண்டம் என்னும் தென்சொல், வடமொழி மரபின்படி ஈறுகெட்டுப் *'பிண்ட'* என இருக்கு வேதத்தில் நின்று, திரளை, உண்டை என்னும் பொருள்களைக் குறிக்கின்றது. அதனின்று, பிண்டத்வ, பிண்டக், பிண்டன முதலிய தனிச் சொற்களையும்; பிண்டகத்த, பிண்டகரண, பிண்டதர்க்க முதலிய கூட்டுச் சொற்களையும் ஏறத்தாழ எழுபது வரை திரித்துள்ளனர்.

ஆரியத்திற்குத் தமிழொடு அல்லது திரவிடத்தொடு தொடர்பில்லை யென்றும், சமஸ்கிருதம் ஏறத்தாழ ஐந்நூறு சொற்களை மட்டும் திரவிடத்தினின்று கடன் கொண்ட தென்றும், கூறும் பரோ என்னும் சமஸ்கிருதப் பேராசிரியர் கூட பிண்டம் என்னும் சொல் தென் சொல்லே யென்று தம் *'சமஸ்கிருதமொழி'* (Sanskrit language) என்னும் நூலிற் பின்வருமாறு குறித்திருத்தல் காண்க.

pinda, lump, clod: Ka petta, pette, pente,hente hende, clod, lump of earth; Te pedda, pell a id, pendali 'a lump or mass'; Ka., Te. pindu to squeeze together.

ஒ. நோ. பிழி. பிழிதல் = உள்ளிருக்கும் நீர்ப்பொருள் வடியுமாறு, ஒன்றை இறுக்கிப்பிடித்தல்.

பிண்டம் அல்லது பிண்டி என்பது வடசொல்லாயின், பிடி என்னும் வினைச் சொல்லும், அதன் நூற்றுக்கணக்கான திரி சொற்களும் கூட்டுச் சொற்களும் வடசொல்லாம். பிடி என்பது, குமரி நாட்டில் தோன்றிய அடிப்படைத் தமிழ்ச் சொற்களுள் ஒன்றாதலாலும், இருக்குவேதம் மிகப் பிற்காலத்ததாதலாலும், பிண்டம் அல்லது பிண்டி என்பது தென் சொல்லே யென்பது தெரிதரு தேற்றமாம். (வே. க. 3,85–86)

நூற்பா, ஒத்து, படலம் என்னும் மூன்று உறுப்புகளையும் பெற்றதால் பிண்டம்.

நூற்பா (சூத்திரம்) பலவுண்டாகி ஒத்தும் படலமும் இன்றாகி வரினும், ஒத்துப் பலவுண்டாகிப் படலமின்றிவரினும், படலம் பலவாகிவரினும் அதற்குப் பிண்டமென்றும் பெயராம். அவற்றுள் நூற்பாவாற் (சூத்திரத்தாற்) பிண்டமாயிற்று இறையனார் களவியல். ஒத்தினாற் பிண்டமாயிற்று பன்னிரு படலம். அதிகாரத்தாற்பிண்டமாயிற்று இந்நூலென்று (தொல்காப்பியம்) கொள்க. (இளம். தொல். செய்.165.) ''அண்டத்தில்உள்ளதை... பிண்டத்தில்கண்டாரடி குதம்பாய் பிண்டத்தில் கண்டாரடி (குதம்பைச் சித்தர்)''

பிண்டம்[2] *pindam,* பெ. (n.). **1.** கற்கண்டு; sugar candy. **2.** விலா; rib. **3.** வெண்ணெய்; butter. **4.** இறைச்சி; meat.

[புள் → (பிள்) → பிண்டு → பிண்டம் = திரட்சி, திரண்ட கற்கண்டு, திரண்டு வரும் வெண்ணெய், திரண்டிருக்கும் இறைச்சி, திரண்ட விலாப்புறம்]

பிண்டம்பிடி[1]–த்தல் *pindam-pidi-,* 4 செ. குன்றாவி. (v.t.) **1.** உண்டை யாக்குதல், உண்டை திரட்டுதல்; to ball, make in to a ball. **2.** படைத்தல் (வின்.); to create. **3.** உருச்சிதைத்து உருண்டையாக்குதல்; (இ. வ.); to crush, smash out of shape.

[பிண்டம் + பிடி –,]

பிண்டம்பிடி[2]–த்தல் *pindam-pidi-,* 4 செ. கு. வி. (v.i.) கரு உண்டாதல் (இ. வ.); to get into shape; to be conceived.

[பிண்டம் + பிடி –,]

பிண்டம்விழுதல் *pindam-viludal,* பெ. (n.) காய்விழுதல், கருச்சிதைதல்; abortion.

[பிண்டம் + விழுதல். 'தல்' தொ. பெ. ஈறு.]

பிண்டமளிக்கை *pindam-alikkai,* பெ. (n.) *பிண்டதானம்* பார்க்க; see *pindatānam.*

[பிண்டம் + அளிக்கை. அளி → அளிக்கை]

பிண்டமா *pindamā,* பெ. (n.) *பிண்டப்பூநீறு* பார்க்க; see *pinda-p-pūnīru.*

[பிண்டம் + மா]

பிண்டமாக்கரு *pinda-mā-k-karu,* பெ. (n.) *பிண்டப்பூநீறு* பார்க்க; see *pinda-p-.pūniṟu.*

[பிண்ட + மாக்கரு. மிக → மகம் → மா. குரு → கரு.]

பிண்டமாக்கு-தல் *pindam-ākku-,* 5 செ. குன்றாவி. (v.t.) ஒன்றாகச் சேர்த்தல்; to gather together.

க. பிண்டங்கெய்

[பிண்டம் + ஆக்கு. புள் → (பிள்) → பிண்டு → பிண்டம் = திரட்சி. ஆகு(த.வி.) – ஆக்கு (பி.வி.). பிண்டமாக்குதல் = திரளச்செய்தல், ஒன்றாகச் சேர்த்தல்]

பிண்டரோபணம் *pinda-rōbanam,* பெ. (n.) நாரத்தை; a tree citron.

பிண்டல் *pindal* பெ. (n.) கட்டி; clod. சோற்றை நண்டல் பிண்டலாக்கி விட்டான் (உ.வ).

[பிண்டம் = திரட்சி. பிண்டம் → பிண்டல் = திரண்ட கட்டி. நண்டல் பிண்டல் = கூழும்கட்டியுமாய் ஆக்கிய சோறு]

பிண்டவண்டரசம் *pinda-v-anda-rašam,* பெ. (n.) தூய்மையாக்கிய மருந்துச் சாறு; a medicinal liquid extract.

[பிண்டம் + அண்டம் + ரசம்]

Skt.rasa > **த.** ரசம்.

பிண்டவமைப்பு *pinda-v-amaippu,* பெ. (n.) கருவின் அமைப்பு; foetal structure.

[பிண்ட(ம்) + அமைப்பு. அமை → அமைப்பு. 'பு' தொ. பெ. ஈறு]

பிண்டவரத்தச்சுழற்சி *pinda-v-aratta-c-cularci,* பெ. (n.) கருவிலுள்ள அரத்தவோட்டம். foetal circulation.

[பிண்டம் + அரத்தம் + சுழற்சி. உல் → அல் → அல. அலத்தம் = சிவப்பு, சிவந்த பொருள். அலத்தம் → அரத்தம். சுள் → சுழி = வட்டம். சுள் → சுழ → சுழல். சுழலுதல் = வட்டமாகச் சுற்றுதல். சுழல் → சுழற்சி. 'சி' தொ. பெ. ஈறு]

பிண்டவாடை *pindavādai,* பெ. (n.) பெண்ணின் தலைக்கருவினாற் செய்யப்படும் மருந்து; a preparation from the first foetus of a woman.

[பிண்டம் + வாடை]

பிண்டவாயு *pindavāyu,* பெ. (n.) குழந்தைகட்குப் பிறவியிலேயே ஏற்படும் முடக்கு ஊதை நோய்; a paralytic affection to the child at birth due to injury-birth palsy.

[பிண்டம் + வாயு]

பிண்டவிருத்தி *pinda-virutti,* பெ. (n.) பதினாறாவது தூய்மை சடங்கினுள் குழந்தையின் உடல் வளர்ச்சிக்காகச் செய்யும் சடங்கு (திரவானைக். கோச் செங்.14); ceremony performed for the growth of a child's body, one of cōtaca-samskāram.

[பிண்டம் + விருத்தி]

Skt. vriddhi > **த.** விருத்தி.

பிண்டவுட்பவசம் *pinda-v-utpavašam,* பெ. (n.) கருவின் உள்பகுதியில் மூடியிருக்கும் மெல்லியதோல்; the inner membraneous covering of the foetus.

பிண்டவுப்பு *pinḍa-v-uppu,* பெ. (n.) கருவினின்று எடுக்கும் உப்புவகை; a salt extracted from the foetus of a woman.

[பிண்ட(ம்) + உப்பு]

பிண்டவுருவாதல் *pinḍa-v-uruvādal,* பெ. (n.) கருவுண்டாகை; conception,. formation of foetus.

[பிண்டம் + உருவாதல்]

பிண்டவுருவாதி *pinḍav-uruvādi,* பெ. (n.) கும்பகம்; suppression of breath.

இடது மூக்கு வழியாக இழுக்கும் காற்று இடங்கலை. வலது மூக்கு வழியாகஇழுக்கும் காற்று பிங்கலை. இரண்டுமூக்குகளும் இணையும் இடமான கும்பகத்திலிருந்து இழுக்கும் காற்று கும்பகம் எனப்படும்.

பிண்டவுரை *pinḍa-v-urai,* பெ. (n.) பொழிப்புரை (வின்.); paraphrase.

மறுவ. திரட்டுரை

[பிண்டம் + உரை]

பிண்டவெரு *pinḍa-v-eru,* பெ. (n.) அனைத்து மருந்துகட்குப் பயன்படுத்தும் சித்த மருத்துவ உப்பு; universal salt described in the Tamil Siddhar's medical science for use in medicine.

[பிண்ட + எரு]

பிண்டாகமூலம் *pinḍāga-mūlam,* பெ. (n.) தாமரை வளையம்; the coil of the lotus stalk.

பிண்டாண்டம் *pinḍānḍam,* பெ. (n.) பிண்டமும் அண்டமும் (வின்.); the body and the universe.

[பிண்டம் + அண்டம்]

Skt. anḍa > த. அண்டம்

பிண்டாப்பிரம் *pinḍāppiram,* பெ. (n.) ஆலங்கட்டி; hail stone.

பிண்டாயசம் *pinḍāyašam,* பெ. (n.) உருக்கு; steel.

[பிண்டம் + அயசம்]

Skt. ayas > த அயசம்

பிண்டாரம் *pinḍāram,* பெ. (n.) ஆற்றுப்பூவரசு; river portia tree.

பிண்டாரி *pinḍāri,* பெ. (n.) கொள்ளையடிப்போன் (வின்.); plunderer, marauder.

ம. பிண்டாரி

[பிண்டம் + ஆரி]

பிண்டாரிலிகம் *pinḍāriligam,* பெ. (n.) உடம்பிலுள்ள, அறுவகை இறையுணர் நிலைகளுள் ஒன்றான, மூலநிலை (மூலாதாரம்); one of the six mystic centres of the human body.

பிண்டாலு *pinḍālu,* பெ. (n.) உண்ணு வதற்குரிய கிழங்குவகையு ளொன்று, species of yam, cultivated for eating.

பிண்டி¹—த்தல் *pinḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. திரளையாக்குதல்; to make into a ball. *'பிண்டித்து வைத்த உண்டியை'* (தொல். பெ. 63, உரை.) 2. தொகுத்தல்; to sum up.

து. பிண்டிகட்டுனி (சிப்பம்கட்டு)

[புள் → (பிள்) → பிண்டி = கூட்டம் (மு. தா. 157). பிண்டு → பிண்டி. ஒ.நோ.கண்டு → கண்டி, துண்டு → துண்டி. பிண்டி → பிண்டித்தல் (வே.க.3,82,83]

த. பிண்டி > Skt. piṇḍ.

பிண்டி²—த்தல் *piṇḍi-,* 4 செ. கு. வி. (v.i.) திரளுதல்; to gather into shape. *'பிண்டித்துப் பெருகிற் றென்பார்'* (சீவக. 1276)

[புல் → புள் → பிள் → பிழம்பு = திரட்சி, வடிவு, உடல், பிள் பிண்டு ஒ. நோ. கள் → கண்டு; நள் → நண்டு சுள் → சுண்டு; வள் → வண்டு; பிண்டு → பிண்டி (வே. க. 3. 81. 82]

பிண்டி³ *piṇḍi,* பெ. (n.) **1.** நுண் பொடி; flour, meal, powder. *'செந்தினையின் வெண்பிண்டி'* (பதினோ. திருவீங். 44.) **2.** *பிண்ணாக்கு* (பிங்.) பார்க்க; see *piṇṇākku.*

தெ. பிண்டி; **து.** புண்டி.

[பிள் → பிண்டு → பிண்டி]

பிண்டி⁴ *piṇḍi,* பெ. (n.) **1.** வடிவம். (சிலப். 3,26, உரை); form. **2.** கூட்டம்; collection, multitude, class, quantity. **3.** கழை (புனர்பூசம்) (சூடா.); the seventh naksatra. **4.** இணையா வினைக்கை வகை (சிலப்,. 3,18, உரை); (nāṭya) a gesture with one hand.

து. பிண்டி

[பிள் → பிண்டு → பிண்டி. ஒ. நோ; கண்டு → கண்டி; துண்டு → துண்டி (வே.க.3.82) பிண்டி என்னும் தென்சொல் வடிவினின்று, பிண்டிக, பிண்டின், பிண்டீ முதலிய தனிச் சொற்களையும் 'பிண்டிதமூல்ய, பிண்டிதார்த்த, பிண்டீகரண, ஸபிண்டீகரண, பிண்டீபாவ (bh) *முதலிய கூட்டுச் சொற்களையும் ஏறத்தாழ முப்பது வரை திரித்துள்ளனர். (வே.க.3,85)]*

பிண்டி⁵ *piṇḍi,* பெ. (n.) செயலை (அசோகு) (பிங்.); Asoka tree.

[பிள் → பிண் → பிண்டி = கற்றையாக இலைகள் அடர்ந்து திரண்டிருக்கும் மரம்.]

பிண்டி⁶ *piṇḍi,* பெ. (n.) **1.** குந்திரிக்கம்; gum olibanum. **2.** கண்ணோய்க்குச் செய்யப்பெறும் மருத்துவமுறை; a treatment where by the medicine is ground into a paste and applied to the eyes in a lint.

பிண்டிக்கை *piṇḍi-k-kai,* பெ. (n.) பிண்டி⁴, (சிலப். 3, 18,20) பார்க்க; (nāṭya); see piṇḍi⁴.

[பிண்டி + கை]

பிண்டிகை *piṇḍgai,* பெ. (n.) **1.** இருக்கை, (ஆசனம்) (வின்.); seat, altar. **2.** வாய்க்குட் செலுத்தும் கடிவாளப்பகுதி; bit of a bridle. *'கண்டிரள் கலினமொரு பிண்டிகைக் கவ்வி'* (பெருங். உஞ்சைக். 48,11)

[பிண்டி → பிண்டிகை]

பிண்டித்துருவம் *piṇḍ-t-turuvam,* பெ. (n.) **1.** குங்கிலியமரம் (பதார்த்த.1120.); tripterocarp dammar. **2.** சால மரம்; bastard sal.

பிண்டிதகம் *piṇḍidagam,* பெ. (n.) **1.** தாளிக் கொடி; a climber. **2.** மருக்கொழுந்து; fragrant plant.

பிண்டிதம் *pindidam,* பெ. (n.) மருக்காரை (மலை.); emetic-nut.

பிண்டிப்பகவன் *pindi-p-pagavan,* பெ. (n.) அருகன் (சீவக. 957.); Arhat.

[பிண்டி + பகவன். பகு → பகல் → பகவு → பகவன் = பகுத்தளித்துக் காப்பவன், பலர்க்கும் படியளப்பவன், ஆண்டவன்]

பிண்டிபாலம் *pindipālam,* பெ. (n.) எறிபடைவகை; a missile. *'பிண்டி பாலத்தை யேந்தி'* (சீவக. 2269.)

[பிண்டி + பாலம். பிள் → பிண்டு → பிண்டி = தலையில் (கற்றையாகப்) பீலிகட்டப் பட்ட எறிபடை.]

பிண்டியார் *pindiyār,* பெ. (n.) அருகர் (சைனர்); Jains. போதியார் *'பிண்டியார்'* (திவ். பெரியதி. 9,7,9.)

[பிண்டி + ஆர்]

பிண்டியான் *pindiyān,* பெ. (n.) அருகக்கடவுள் (திருவிளை. மாயப்பசு. 5); Arhat.

[பிண்டி + ஆன். 'ஆன்' ஆ.பா.ஈறு]

பிண்டிவாகனம் *pindi-vāganam,* பெ. (n.) குந்துருக்க மரம்; salai tree.

பிண்டிவாமன் *pindivāman,* பெ. (n.) *பிண்டியான்* பார்க்க; see *pindiyān.*

[பிண்டியான் → பிண்டிவாமன்]

பிண்டிவாலம் *pindivālam,* பெ. (n.) *பிண்டிபாலம்* பார்க்க; see *pindipālam.*

[பிண்டிபாலம் → பிண்டிவாலம்]

பிண்டிவாளகம் *pindivālagam,* பெ. (n.) *பிண்டி வாளம்* (மலை.) பார்க்க; see *pindivālagam.*

[பிண்டிவாளம் → பிண்டிவாளகம்]

பிண்டிவாளம் *pindivālam,* பெ. (n.) பறங்கிச் சுறாலை (சாம்பிராணி); Indian olibanum.

[பிண்டி → பிண்டிவாளம்]

பிண்டீகரகவர்ச்சி *pindīgarakavarcci,* பெ. (n.) அணுத்திரள் கவர்ச்சி; attraction of cohesion.

[பிண்டீகரம் + கவர்ச்சி. கவர் → கவர்ச்சி]

பிண்டீகரணம் *pindīkaranam,* பெ. (n.) 1. உண்டையாகத் திரட்டுகை (வேதா. சூ. 77); ;making into a lump or ball. 2. திரட்டப்பட்டது (வின்.); collection, lump, ball, mass.

[பிண்டி → பிண்டீகரணம்]

பிண்டீகரம் *pindīgaram,* பெ. (n.) 1. ஒட்டிணைவாற்றல்; cohesion. 2. ஒன்று படுகை; cohere.

[பிள் → பிண்டி + ஆகரம்.]

Skt. ākara > **த.** ஆகரம்.

பிண்டீதகம் *pindīdagam,* பெ. (n.) *பிண்டிதகம்* 2. பார்க்க; see *pindidagam. 2.*

[பிண்டிதகம் → பிண்டீதகம்.]

பிண்டீரகம் *pindīragam,* பெ. (n.) மாதுளை; pomegranate.

பிண்ணாக்குக்கீரை



பிரமிய வழுக்கை



பிராயன்மரம்



பீச்சங்கு



புன்கு

பிண்டீரம் *pindiram,* பெ. (n.) 1. சாரமின்மை; juiceless. 2. ***பிண்டீரகம்*** பார்க்க; see *pindiragam.*

[பிண்டி → பிண்டீரம்]

பிண்டீரி *pindiri,* பெ. (n.) வல்லாரை (நாம. தீப. 330); Indian pennywort.

பிண்டு *pindu,* பெ. (n.) பிண்டம் 3. பார்க்க; see pindam. 3. *'பிண்டாலம் வித்தின்'* (திருமந். 3025).

[பில் → பொல்லு = தடி. பிள் → பிண்டி = நுண்பொடி, மா. புள் → (பிள்) → பிண்டு → பிண்டம் = திரட்சி]

பிண்டோதகம் *pindōdagam,* பெ. (n.) முன்னோர்க்கு(பிதிரர்க்கு)ப் பிண்டகாவு (பலி)உடன் எள்ளுக் கலந்த நீர்விடுசடங்கு. (புறநா. 9, உரை); ceremony of offering to the manes balls of cooked rice with water and sesame.

[பிண்டம் + உதகம்.]

Skt. udaka > **த.** உதகம்.

பிண்டோற்பத்தி *pindōrpatti,* பெ. (n.) *பிண்டவுருவாதல்* பார்க்க; see *pinda-v-uruvādal.*

[பிண்டம் + உற்பத்தி]

Skt. utpatti > **த.** உற்பத்தி.

பிண்ணாக்கு *pinnākku,* பெ. (n.) 1. இலுப்பை எள் முதலியவற்றின் எண்ணெய் நீங்கிய சக்கை; oil cake made of the residue of oil seeds. மாட்டுக்குப் பிண்ணாக்கு வைத்தால் அல்லவா நிறையப் பால்கறக்கும். நிலத்துக்கு அடியுரமாக வேப்பம் பிண்ணாக்குப் போடவேண்டும்(உ.வ.). 2. எள்ளுப் பிண்ணாக்கு (இ. வ.); oil cake of pressed sesame.

ம. பிண்ணாக்கு

[பிள் + நாக்கு - பிண்ணாக்கு = ஆட்டிய எட் பிண்டத்தின் நாக்குப் போன்ற பிளவு (வ. வ. 237)]

எள், இலுப்பை, வேம்பு முதலியவற்றின் விதைகளை எண்ணெயாட்டிய பின் எஞ்சிய சக்கை பிளவுபட்ட நாக்குப் போலிருப்பதால் பிண்ணாக்கு எனப்பட்டது (வே. க. 3,113)

த. பிண்ணாக்கு > Skt. piṇyākā.

பிண்ணாக்குக்கீரை *pinnākku-k-kirai,* பெ. (n.) பிண்ணாக்குப்பூண்டு பார்க்க (பதார்த்த. 606.); see pinnākku-p-pūndu.

[பிண்ணாக்கு + கீரை]

சிறுநீர்,மலம் சரிவரப் போவதற்கும், மேகத்தையும், வெட்டைச் சூட்டையும் தணிப்பதற்கும் பயன்படும் கீரை வகை;

பிண்ணாக்குச்சித்தர் *pinnākku-c-cittar,* பெ. (n.) மச்சமுனியின் குரு; a Šiddhar guru of Maccamuni.

[பிண்ணாக்கு + சித்தர். செ → செத்து சித்து → சித்தம் → சித்தர்]

பிண்ணாக்குச்செடி *pinnākku-c-cedi,* பெ. (n.) 1. *பிண்ணாக்குப் பூண்டு* பார்க்க; see *pinnākku-p-pūndu.* 2. பெரும் பிண்ணாக்குக் கீரை; wild jute. (M.M.).

[பிண்ணாக்கு + செடி. சென் → செழி → செடி]

பிண்ணாக்குப்பூண்டு *piṇṇākku-p-pūṇḍu,* பெ. (n.) **1.** ஒருவகைச் செடி; a herb, **2.** தவசுமுருங்கை; tranquebar gendarussa.

[பிண்ணாக்கு + பூண்டு. புள் → பூள் → பூண்டு]



பிண்ணாக்குமடையன் *piṇṇākku maḍaiyaṉ,* பெ. (n.) *பிண்ணாக்கு மூடன்* (வின்.) பார்க்க; see *piṇṇākku mūḍaṉ.*

[பிண்ணாக்கு + மடையன். மடம் → மடையன்]

பிண்ணாக்குமாடன் *piṇṇākku-māḍaṉ* பெ.(n.) *பிண்ணாக்கு மூடன்* (இ.வ.) பார்க்க; see *piṇṇākku mūḍaṉ.*

[பிண்ணாக்கு + மாடன். மூடன் → மாடன்]

பிண்ணாக்குமூடன் *piṇṇākku-mūḍaṉ,* பெ. (n.) முழுமூடன் (வின்.); idiot, stupid man, dolt.

[பிண்ணாக்கு + மூடன். எண்ணெய் ஆட்டியபின் பயனற்றுக் கிடக்கும் பிண்ணாக்குச் சக்கைபோல் ஒன்றுக்கும் உதவாதவன் என்னும் குறிப்புப்பட அறிவிலிக்குப் பிண்ணாக்கு ஒப்புப் பொருளாயிற்று.]

பிண்ணியாக்கம் *piṇṇiyākkam,* பெ. (n.) குந்துருக்க மரம்; salai tree.

பிணக்கட்டில் *piṇa-k-kaṭṭil,* பெ. (n.) பிணத்தைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப் பயன்படுத்தும் பச்சைமரத்தால் கட்டப்பட்ட கட்டில் (நானார்த்த. 257.); bier.

மறுவ. பாடை, கால்கழிகட்டில்

[பிணம் + கட்டில். கட்டு → கட்டில்]

பிணக்கம் *piṇakkam,* பெ. (n.) **1.** மாறுபாடு; disagreement, பாம்பு கங்கை பிணக்கந் தீர்த்து' (தேவா. 29,2) **2.** ஊடல் (கொ.வ.); sulks, bouderie. **3.** நெருக்கடி (வின்.); press of a crowd, pressure. **4.** பின்னுகை (வின்.); twisting, interlacing, plaiting.

[பிணங்கு → பிணக்கு → பிணக்கம். பிணங்குதல் பார்க்க]

பிணக்காடு *piṇa-k-kāḍu,* பெ. (n.) **1.** பிணத்தை எரிக்குமிடம் (திவா.); cremation-ground. **2.** போர்க்களம் (வின்.); battle field.

மறுவ. சுடுகாடு, சுடலை, பாழ்க்கோட்டம் இடுகாடு.

[பிணம் + காடு. கடு → காடு]

பிணக்கு[1]–தல் *piṇakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** கட்டுதல் (வின்.); to fasten. **2.** பின்னச் செய்தல்; to intertwine. ***'தார்தார் பிணக்குவார்'*** (பரிபா. 9, 45).

பிணக்கு² *piṇakku,* பெ. (n.) 1. பிணக்கம் பார்க்க; see piṇakkam *'பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான்'* (திருவாச. 30, 1.). 2. தூறு, புதர்க்காடு; thicket. *'திரண்ட பிணக்குச் சுற்றின காவற்காடு'* (பு.வெ. 5, 4 உரை.).

[பிணங்கு → பிணக்கு]

பிணக்கொழுப்பு *piṇa-k-koḻuppu,* பெ. (n.) பிணத்தினின்று எடுக்கப்பெறுங் கொழுப்பு; adipose tissue obtained from the corpses.

[பிணம் + கொழுப்பு. கொழு → கொழுப்பு]

பிணக்கோலம் *piṇa-k-kōlam,* பெ. (n.) 1. பிணத்தை அழகுபடுத்துகை (அணிசெய்தல்) (தேவா. 937, 7.); decoration of a corpse. 2. பிணம் போல் தோற்றுகை; haggard or cadaverous appearance, as of a corpse.

[பிணம் + கோலம்]

பிணங்கி *piṇaṅgi,* பெ. (n.) பூடுவகை. (குருகூர்ப். 45); a plant.

பிணங்கு–தல் *piṇaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மாறுபடுதல்; to be at variance. *'பிணங்கோ மெவரொடும்'* (திருநூற். 66). 2. ஊடுதல்; to be in the sulks. 3. செறிதல்; to be close, dense; *'பிணங்கு நேரைம்பால்'* (சிலப். 7,13). 4. பின்னுதல்; to be linked together, intertwined. *'பிணங்குநூன்மார்பன்'* (மணிமே. 6, 151.).

க. கெணகு

[பிள் → பிண் → பிணம் = கட்டுவிட்ட சவம். பிள் → பிணகு → பிணங்கு. இணங்கு என்னும் சொல்லிற்கு எதிராக, அதன் எதுகையாக அமைந்த சொல் பிணங்கு. (வே.க.3.113, 114)]

பிணச்சாயல் *piṇa-c-cāyal,* பெ. (n.) பிணத்தோற்றம்(வின்.); cadaverous appearance.

மறுவ. செத்தகளை, சவக்களை

[பிணம் + சாயல். சால் → சாய் → சாயல்]

பிணஞ்சுடல் *piṇañ-cuḍal,* பெ. (n.) சவத்தைக் கொளுத்தல்; burning the dead body.

[பிணம் + சுடல். சுள் → சுடு → சுடல்]

பிணஞ்சுடுகாளவாய் *piṇañ-cuḍu-kāḷavāy,* பெ. (n.) பிணத்தை எரித்தற்குச் சுண்ணாம்புக் காளவாய்போற் கட்டப்பட்ட கட்டடம் (இக்.வ.); incinerator.

[பிணம் + சுடு + காளவாய். குள் → (கள்) → காள் → காய். காய்தல் = எரிதல். காள் → காளம் → காளவாய் = சுண்ணாம்புக்கல் சுடுமிடம்.]

பிணத்தீனி *piṇattīṉi,* பெ. (n.) அளவுக்கதிகமான உணவு; enormous food stuff.

[பிணம் + தீனி. துல் → துன் → துற்று = உணவு. துற்றுதல் = உண்ணுதல். துற்று → துற்றி = உணவு. துன் → தின் → தீனி.]

பிணத்தீனிதின்னு–தல் *piṇattīṉi-tiṉṉu-,* 14.செ.குன்றாவி. (v.t.) குறிப்பிட்ட காலவளவின்றி, கண்ணில்கண்ட உணவை யெல்லாம், அளவின்றி உண்ணுதல்; to consume enormous food - stuff.

[பிணந்தீனி + தின்னு –, துல் → துன் → தின் → தின்னு.]

பிணத்தூக்கம் *piṇa-t-tūkkam,* பெ. (n.) நீண்ட உறக்கம், கடுந்துயில் (கொ.வ.); dead sleep.

மறுவ. ஆழ்துயில்

[பிணம் + தூக்கம். தூங்கு → (தூக்கு) → தூக்கம்]

பிணத்தைலம் *piṇa-t-tailam,* பெ. (n.) பிணக்கொழுப்பையுருக்கி யெடுத்த நெய்; the oil obtained by melting the adipose tissue of the corpse.

[பிணம் + தைலம்]

Skt, taila > த. **தைலம்.**

பிணத்தோற்றம் *piṇa-t-tōṟṟam,* பெ. (n.) *பிணச்சாயல்* பார்க்க; see *piṇa - c - cāyal.*

[பிணம் + தோற்றம்]

பிணந்தின்னி[1] *piṇan-tiṉṉi,* பெ. (n.) **1.** பிணத்தைத் தின்போன்; one who feeds on corpses. **2.** *பிணந்தின்னிப்பயல்* பார்க்க; see *piṇantiṉṉi-p-payal.*

மறுவ. நரவுண்ணி, அரக்கன்.

[பிணம் + தின்னி. தின்(னு) → தின்னி]

பிணந்தின்னி[2] *piṇan-tiṉṉi,* பெ. (n.) இறைச்சியைக் கரைக்கும் கனிமம்; a mineral capable of rendering flesh watery.

[பிணம் + தின்னி]

பிணந்தின்னிக்கழுகு *piṇantiṉṉi-k-kaḻugu,* பெ. (n.) பிணத்தையுணவாகக் கொள்ளும் கழுகு; vulture.

[பிணம் + தின்னி + கழுகு. குழு → கழு → கழுகு = பெரும்பறவை]



பிணந்தின்னிப்பயல் *piṇan-tiṉṉi-p-payal,* பெ. (n.) பிறரைத் துன்புறுத்துவோன்; rapacious person.

[பிணந்தின்னி + பயல்]

பிணந்தின்னிப்பிச்சி *piṇan-tiṉṉi-p-picci,* பெ. (n.) *பிணந்தின்னிப்பேய்* (வின்.) பார்க்க; see *piṇantiṉṉi-p-pēy.*

[பிணந்தின்னி + பிச்சி]

பிணந்தின்னிப்பூச்சி *piṇan-tiṉṉi-p-pūcci,* பெ. (n.) *பிணந்தின்னிப்பேய்* பார்க்க (குஞ்சை.); see *piṇan-tiṉṉi-p-pēy.*

[பிணந்தின்னிப்பேய் → பிணந்தின்னிப்பூச்சி]

பிணந்தின்னிப்பேய் *piṇan-tiṉṉi-p-pēy,* பெ. (n.) பிணந்தின்று வாழும் பேய்வகை (வின்.); devil that lives on corpses.

[பிணந்தின்னி + பேய். பே → பேம் = அச்சம். பேதல் = அஞ்சுதல். பே → பேய் = அஞ்சப்படும் ஆவி அல்லது தோற்றம்]

பிணந்தின்னிவெளவால் *piṇan-tiṉṉi-vauvāl,* பெ. (n.) பிணத்தைத் தின்னும் வெளவால்; vampire.

[பிணம் + தின்னி + வெளவால். வாவல் → வெளவால்]

பிணநாற்றம் *piṇa-nāṟṟām,* பெ. (n.) கொடிய வீச்சம் (பிணத்தின் முடைநாற்றம்); stench, as of a corpse.

க. கெணநாத

[பிணம் + நாற்றம்]

பிணநெஞ்சு *piṇa-neñju,* பெ. (n.) உணர்ச்சியற்ற மனம்; heart dead to all feeling. ***'துணையிலி பிணநெஞ்சே'*** (திருவாச. **5, 31.**).

[பிணம் + நெஞ்சு. நெய் → நெய்ஞ்சு → நெஞ்சு]

பிணநெய் *piṇa-ney,* பெ. (n.) பிணத்தினின்று கருவேலைக்கு எடுக்கப்படும் கொழுப்பு (வின்.); fat extracted from corpses, used in magic.

[பிணம் + நெய். நுள் → நொள் → நொள → நொளநொள. நொளநொளத்தல் = நெகிழ்தல். நொள் → நெள் → நெளு. நெளுத்தல் = நெகிழ்தல், குழைதல். நெள் → நெய்]

பிணம் *piṇam,* பெ. (n.) உயிரற்ற மனித உடல்; corpse, carcass. ***'ஏதில் பிணந் தழீஇயற்று'*** (குறள், **913.**) **2.** பேய் (பிங்.); devil, disembodied soul spirit.

மறுவ. சவம்

ம. பிணம்; **க.** பெண, கெண; **தெ.** பீனுகு, பீங்கு; **து.** புண; **கோத.** பெண்ம்; **துட.** ஈண்; **கட.** பீனிகை; **குவி.** பீலிங்கு; **பட.** கெண.

புள் → புய். புய்த்தல் = பிரித்தல். புள் → பிள் → (பிண்) → பிணி. பிணிதல் = இறத்தல். பிள் → பிண் → பிணம் = கட்டுவிட்ட (decomposed) *சவம். (சா → சாவு → சாவம் → சவம்) செத்த சவம், நாற்றப்பிணம் அல்லது பிணநாற்றம் என்னும் வழக்குகளை நோக்குக. (வே.க.3, 113)]*

pīšāci, pēshi, a she-demon. cf.D.piṇa, pēne, pēy, pēyi, s.pē, pētu, and hēdē. For Sk. piyu, injurious as an Asura, and phi, anger, passion; a wicked man, too see D. pē. (KKED xxix)

பிணம்பிடுங்கன் *piṇam-piḍuṅgaṉ,* பெ. (n.) கருங்கூளி; black vulture.

மறுவ. பிணந்தின்னிக்கழுகு

[பிணம் + பிடுங்கன்.]

பிணம்வீழ்களம் *piṇam-vīḻ-kaḷam,* பெ. (n.) சுடுகாடு; burning ghat.

[பிணம்வீழ் + களம். கள் → களம்]

பிணமனை *piṇamaṉai,* பெ. (n.) சிறிதுகாலம் பிணங்கள் வைத்திருக்கும் கட்டடம்; mortuary. நேர்ச்சியில் இறந்தவன் உடலை மருத்துவ மனையிலிருந்து வாங்கப் பிணமனையில் நாள் முழுக்கக் காக்கவேண்டியிருந்தது. (உ.வ.)

[பிணம் + மனை]

பிணமூஞ்சி *piṇa-mūñgi,* பெ. (n.) *பிணச் சாயல் (பிரேதச் சாயல்)* (கொ.வ.) பார்க்க; see *piṇa-c-cāyal.*

மறுவ. சாவுக்களை

[பிணம் + மூஞ்சி]

பிணர்[1] *piṇar,* பெ. (n.) **1.** சருச்சரை; roughness, unevenness, coarsences. ***'இரும்பிணர்த்துறுகல்'*** (குறுந். **13**)

[பிள் → பிள. பிளத்தல் = வெடித்தல். பிள பிளவு. பிள் → பிண் → பிணர் = மேற்பரப்பு மேடு பள்ளமாய் இருக்கும் நிலை]

பிணர்[2] *piṇar,* பெ. (n.) கோங்கிலவு (பிங்.); false tragacanth.

பிணரம் *piṇaram,* பெ. (n.) முரட்டுத்தன்மை; roughness.

[பிணர்[1] → பிணரம்]

பிணரா *piṇarā,* பெ. (n.) *பிணரம்* பார்க்க; see *piṇaram.*

[பிணரம் → பிணரா]

பிணவல் *piṇaval,* பெ. (n.) **1.** பெண்; female. **2.** பன்றி, மான், நாய் முதலியவற்றின் பெண் (தொல்.பொ. **614.**); female of the dog, pig, deer or yak.

[புள் → (பிள்) → (பிண்) → பிண → பிணா → பிணவு → பிணவல் = விரும்பப்படும் பெண்; விலங்கின் பெண். (மு.தா. 164)]

பிணவறை *piṇa-v-aṟai,* பெ. (n.) *பிணமனை* பார்க்க; see *piṇamaṉai.*

மறுவ. சவக்கிடங்கு

[பிணம் + அறை. அறு → அறை.]

பிணவறையன்[1] *piṇa-vaṟaiyaṉ,* பெ. (n.) அறிவில்லாச் சோம்பேறி (யாழ்ப்.); dull-headed, lazy person.

[பிணம் + அறையன். உயிரற்ற உடல்போல் சோம்பியிருத்தலைப்பற்றிச் சோம்பேறி பிணவறையன் எனப்பட்டான்.]

பிணவறையன்[2] *piṇa-v-aṟaiyaṉ,* பெ. (n.) பருத்தவுடம்புள்ளவ–ன்–ள்; a man with stout body.

மறுவ. குண்டன், குண்டச்சி.

[பிணம் + அறையன். 'ன்' உடைமை குறித்த ஈறு]

பிணவிறைப்பு *piṇa-v-iṟaippu,* பெ. (n.) இறந்த சிலமணிநேரத்தில், உடலில் ஏற்படும் கட்டிறுக்கம்; rigidity after death.

[பிணம் + விறைப்பு]

குருதியற்றுப் போவதால் பிணத்தை இருவரோ, நால்வரோ சுமக்கும் படியாகும். 'செத்தஆடு காற்பணம் சுமைகூலி முக்காற்பணம்' என்பது பழமொழி

பிணவு *piṇavu,* பெ. (n.) **1.** *பிணா 1,* பார்க்க; see *piṇā 1* *'சூரரிப் பிணவுகாக்க'* (குமர. பிர. மீனாட். பிள்ளை. காப். **9.**) **2.** பிணவல் (தொல். பொ. **613.**) பார்க்க; see piṇaval.

[புள் → பிள் → பிண் → பிணி → பிடி = பெண்யானை. பிண் → பிணா = பெண், பெண்டு. பிணா → பிணவு = பன்றி, புல்வாய், நாய், கரடி என்பவற்றின் பெண். (வே.க. 3,88)]

பிணவெடில் *piṇa-veḍil,* பெ. (n.) *பிணநாற்றம்* (யாழ்ப்.) பார்க்க; see *piṇanāṟṟam.*

மறுவ. செத்தவாடை, சவநாற்றம்

[பிணம் + வெடில்]

பிணன் *piṇaṉ,* பெ. (n.) *பிணம்* பார்க்க; see *piṇam.* *'பிணனார்ந்து பேய் வழங்கும்'* (பு. வெ. **10, 11**).

[பிணம் → பிணன்]

பிணா *piṇā,* பெ. (n.). **1.** பெண்; woman. (தொல். பொ. 616). **2.** *பிணவல்* (திவா.) பார்க்க; see *piṇaval.*

[புள் → (பிள்) → (பிண்) → பிண → பிணா = பெண், விலங்கின் பெண்]

பிணாரம் *piṇāram,* பெ. (n.) **1.** விலங்கின் பருமன் (யாழ்ப்.); bulkiness of beasts. **2.** பருமனுள்ளது (யாழ்.அக.); anything huge.

[புடை → புணை → பணை. பணைத்தல் = பருத்தல், செழித்தல். புணை → பிணை → (பிணரம்) → பிணாரம்.]

பிணி[1] – தல் *piṇi-,* 4 செ.கு.வி. (v.i.) வாழ்வு முடிதல்; to die. *'பிணிந்தார் பொடிகொண்டு மெய்பூச'* (தேவா. 946, 3.).

மறுவ. சாதல், இறத்தல், மரித்தல், மாண்டுபோதல்.

[புள் → பிள் → பிரி → பிரிவு. புள் → பிள் → பிண் → பிணி. பிணிதல் = உயிர்பிரிதல், இறத்தல்]

பிணி[2]–த்தல் *piṇi-,* 11 செ.குன்றாவி. (v.t.) **1.** சேர்த்துக் கட்டுதல்; to tie, fasten with ropes, fetter, link. *'பெரு வெளிற் பிணிமார்'* (மலைபடு. 326). **2.** வசப்படுத்துதல்; to win over, keep one spell-bound. *'கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்'* (குறள், 643.).

[புள் → (புண்) → புணர் → புணர்ச்சி. புணை → பிணை. பிணைதல் = புணர்ச்சி. புணித்தல் = சேர்த்துக் கட்டுதல். புள் → புண் → புணி → பிணி]

பிணி[3] *piṇi,* பெ. (n.) **1.** கட்டுகை; fastening, binding. *'பிணியுறு முரசம்'* (புறநா. 25). **2.** கட்டு; bond, link, tie. *'பிணி நெகிழ்பு'* (பரிபா. 3, 55). **3.** பற்று; attachment. *'பொருட்பிணிச் சென்று'* (அகநா. 27). **4.** பின்னல்; plait, twist. *'பிணிகொள் வார்க்குழல்'* (தேவா. 469, 3.). **5.** கட்டுநெகிழாமொட்டு, அரும்பு; bud. *'பிணிநிவந்த பாசடைத் தாமரை'* (கலித். 59). **6.** நெசவுத் தறியின் நூற்படை (யாழ்ப்.); higher or lower row of threads in a weaver's loom, raised or lowered to admit the shuttle.

[புள் → புணி → பிணி]

பிணி[4] *piṇi-,* பெ. (n.) **1.** நோய் அறிகுறியுடன் கூடிய உடல் நலிவு, உடல் நலக்கேடு, உடல் நலம் குன்றிய நிலை; an unhealthy state of body, a disorder, illness or ailment with distinctive symptoms, disease, malady, sickness. பிணிக்கு மருந்து பிறமன் (குறள், 1102). **2.** நோவு, இடர், துன்பம்; suffering, affliction. **3.** பசிப்பிணி; hunger.

மறுவ. நோய்சடவு.

[புள் → புண் → புணி. புணித்தல் = சேர்த்துக் கட்டுதல். புணி → பிணி = கட்டுகை, கட்டு, கட்டி நெருக்குவது போன்ற நோய் 'பிணித்தலையுடையது பிணியாயிற்று' (நச்.சீவ.2752 பசிப்பிணி மருத்துவன் பண்ணன் (புறம் – கிள்ளிவளவன்)]

பிணி[5] *piṇi,* பெ. (n.) **1.** சிறுதுயில் (பதிற்றுப். 50); nap. **2.** ஊதை, பித்தம், கோழை (பிங்.); the three humours of the body.

மறுவ. குட்டித்தூக்கம்

[பிள் → பிண்டி = நுண்பொடி. பிள் → பிண் → பிணி]

பிணிக்கி *piṇikki,* பெ. (n.) சூடம்; camphor.

பிணிக்குறை[1] *piṇi-k-kuṟai,* பெ. (n.) குழந்தைகட்கு நோயையுண்டாக்கும் பேய்க் கோள் (வின்.); attack of an evil spirit on a child, causing disease.

[பிணி + குறை]

பிணிக்குறை[2] *piṇi-k-kuṟai,* பெ. (n.) நோயின் குற்றம்; defects in sickness.

[பிணி + குறை]

பிணிகை *piṇigai,* பெ. (n.) கச்சு (சிந்தாமணி நிகண்டு); corset.

[பிணி = கட்டுகை, கட்டு. பிணி → பிணிகை = இறுக்கிக்கட்டும் கச்சு]

பிணித்தோர் *piṇittōr,* பெ. (n.) நோயுற்றவர்; diseased persons. ***'பிணித்தோர் படிவ நோன்பியர் பசி நோயுற்றோர்'*** (மணிமே. 28, 223.).

மறுவ. நலமில்லாதவர்

[பிணி → பிணித்தோர். நோயில் பிணிக்கப்பட்டார். ஈண்டு செயப்பாட்டுவினை செய்வினை வடிவில் வந்துள்ளது.]

பிணிதெறித்தல் *piṇi-teṟittal,* பெ. (n.) நோய் குணமாகத் தொடங்குகை (வின்.); remedial stage of a disease.

[பிணி + தெறித்தல்.]

பிணிநீக்கம் *piṇi-nikkam,* பெ. (n.) நோயகற்றும் மருத்துவத் தன்மை; cure.

[பிணி + நீக்கம். நீங்கு (த.வி.) – நீக்கு (பி.வி.) → நீக்கம்]

பிணிநீங்கு–தல் *piṇi-nīṅgu-,* 7 செ.கு.வி. (v.i.) நோயகலுதல்; to get cure as from disease.

[பிணி + நீங்கு –]

பிணிநீர்ப்பை *piṇinīr-p-pai,* பெ. (n.) விலங்குகள் அல்லது செடிகளில் சுரக்கும் நீர்மம் கொண்டுள்ள உட்குழிவான பை; cyst.

[பிணிநீர் + பை. புள் → பொள் → பொய் → (பய்) → பை.]

பிணிப்பு *piṇippu,* பெ. (n.) **1.** கட்டுகை; binding, linking. பிணிப்புறு பிறவியின் (மணிமே. **25,26**). **2.** கட்டு; tie, bondage. **3.** பற்று (அகநா. **27**,உரை); attachment, affection.

[பிணி → பிணிப்பு. 'பு' தொ. பெ. ஈறு]

பிணிப்பேய் *piṇippēy,* பெ. (n.) குழந்தை களைப் பிணிக்கும் பேய் (யாழ்ப்.); a devil which attacks children.

மறுவ. இருளடித்தல்

[பிணி + பேய்]

தனிமையிலோ, இருண்மையிலோ இருக்கும் குழந்தைகளுக்கு ஏற்படும் உளவியல் நோய்

பிணிமிதி–த்தல் *piṇi-midi-,* 4 செ. கு. வி. (v.i.) நெசவுப் பாவை மிதித்தல் (வின்.); to tread the loom, a weaver's technical word.

[புணிமிதி–த்தல் → பிணிமிதி–த்தல்]

பிணிமுகத்திரை *piṇi-mugattirai,* பெ. (n.) கலுழன்; kite.

மறுவ. கருடன்

[பிணி + முகம் + திரை. திரம் → திரை]

பிணிமுகம்[1] *piṇimugam,* பெ. (n.) **1.** மயில் (திருமுரு. 247,உரை)(பிங்.); peacock. **2.** அன்னம் (உரி. நி.); swan. **3.** பறவை (பிங்.); bird.

[பிணி + முகம்.பிணித்தல் = சேர்த்துக் கட்டுதல், வயப்படுத்துதல். பிணிமுகம் = வயப்படுத்தும் தன்மை கொண்ட அழகான முகத்தை யுடைய பறவை, விலங்கு. மூ → மூக்கு → முகம் = தலையின் முன்புறமான பகுதி. பிணி முகம், பணிமுக (phaṇimukha) என்னும் சொல்லிலிருந்து வந்ததாகக் காட்டி யுள்ளது செ.ப. அகரமுதலி. பணி, பாம்பு என்னும் பொருளுடையது என்றும் பாம்பை உண்ணக் கூடிய பறவை மயில் என்றும் மா.வி. அகரமுதலி பொருள் கூறுகிறது. எனினும் யானை என்னும் பொருளில் பிணிமுகம் அங்கு இருப்பதாகக் காட்டவில்லை. பிணிமுகம் அன்னம், பறவை ஆகிய பொருள் களையும் கொண்டிருப்பது அச்சொல் வயப்படுத்தும் பொருளடிப்படையிலேயே உருவாயிருத்தலைக் காட்டுகிறது.]

பிணிமுகம்[2] *piṇimugam,* பெ. (n.) முருகக் கடவுள் யானை; Murugan's elephant. "சேயுர் பிணிமுக மூர்ந்து" (பரிபா. 52).

மறுவ. ஆம்பல், உம்பல், உவா, ஓங்கல், கடமா, கம்பமா, கரி, கவலிமா, களிறு, கறையடி, குஞ்சரம், கும்பி, கைம்மலை, கைம்மா, சிந்துரம், தும்பி, நால்வாய், பகடு, புகர்முகம், புனழக்கை, பூட்கை, மதமா, வழுகை, வாரணம், வேழம். (த. வ. 285)

[பிணி + முகம். வயப்படுத்தும் வகையில் அழகான முகங் கொண்ட யானை].

பிணியகம் *piṇi-y-agam,* பெ. (n.) காவலிடம்; well-guarded place. 'பிறர் பிணியகத்திருந்து' (பட்டினப். 222).

[பிணி + அகம்]

பிணியன் *piṇiyaṉ,* பெ. (n.) ***பிணியாளி*** பார்க்க; see *piṇi-y-āḷi.* பிணியனேழை (நன். 39).

மறுவ. நோயாளி

[பிணி + அன். 'அன்' ஆ.பா.ஈறு.]

பிணியாளன் *piṇi-y-āḷaṉ,* பெ. (n.) ***பிணியாளி*** பார்க்க; *see piṇi-y-āḷi*

[பிணி + ஆளன்]

பிணியாளி *piṇi-y-āḷi,* பெ. (n.) நோய் வாய்ப்பட்டவன், நோயர், மருத்துவம் பார்த்துக்கொண்டிருப்பவர், மருத்துவரின் வாடிக்கையாளர் (வின்.); diseased man, patient.

மறுவ. நோயாளி, நோவுக்காரன்

[பிணி + ஆளி. ஆள் + இ – ஆளி. 'இ' உடைமைப் பொருளீறு]

பிணியுண்டா–தல் *piṇi-y-uṇḍā-,* 6 செ. கு. வி. (v.i.) நோய் ஏற்படுதல்; to get disease.

[பிணி + உண்டா–,]

பிணியுறு–தல் *piṇi-y-uṟu-,* 20 செ.கு.வி. (v.i.) நோயால் அழுந்துதல்; to get sick.

[பிணி + உறு–,]

பிணியுறுகை *piṇi-y-uṟugai,* பெ. (n.) நோயால் பிணிக்கப்படுகை; becoming ill.

மறுவ. நோயுறுதல்

[பிணி + உறுகை. உறு → உறுகை]

பிணியோலை *piṇi-y-ōlai,* பெ. (n.) பிள்ளைகளிடுப்பில் எழுதிக்கட்டும் காப்பு ஓலை (யாழ். அக.); ōla amulet tied to the waists of children.

[பிணி + ஓலை. பிணிவராமல் காக்கும் என்னும் நம்பிக்கையில் கட்டும் ஓலை]

பிணிவந்தடு–த்தல் *piṇivandaḍu-,* 4 செ.கு.வி. (v.i.) நோயினால் தாக்குறுதல்; to be attacked by disease.

[பிணி + வந்து + அடு–,]

பிணிவந்தெய்து–தல் *piṇivand-eydu-,* 15 செ. கு. வி. (n.) *பிணிவந்தடு–த்தல்* பார்க்க; see *piṇivandaḍu-,.*

[பிணி + வந்து + எய்து–,]

பிணிவீடு *piṇi-vīḍu,* பெ. (n.) இடையூறு நீங்குகை; escape from difficulties and distress. "பிணிவீடு பெறு மன்னவன் றொழிலே" (ஐங்குறு. 447).

[பிணி + வீடு. விடு → வீடு]

பிணுக்கன் *piṇukkaṉ,* பெ. (n.) மாறுபட்ட கொள்கையினன்; heretic. ஊதைப் பிணுக்கரை (திருவிசை. திருமாளி. 4,4).

[பிணங்கு → பிணக்கு → (பிணக்கன்) → பிணுக்கு → பிணுக்கன்]

பிணை¹–தல் *piṇai-,* 3 செ.கு.வி. (v.i.) 1. சேர்தல் ஒன்றுபடுதல், இணைதல்; to entwine, conjoin, unite. கழுநீர் பிணைந்தன்னவாகி (சீவக. 491). 2. செறிதல், நெருக்கமாதல்; to be crowded, together, dense. பிணையூப மெழுந்தாட (மதுரைக்.27). 3. புணர்தல்; to copulate. 'மங்கையர் தம்மொடும் பிணைந்து' (திருவாச. 41,6).

[புல் → புள் → புண் → புணர். புண் புணி → புணித்தல் = சேர்த்துக்கட்டுதல். புண் → புணை. புணைத்தல் = கட்டுதல் புணை → பிணை. (வே.க. 3,64,65)]

பிணை²–தல் *piṇai-,* 2 செ. குன்றாவி. (v.t.) *பிணை³–த்தல் 3* பார்க்க; see *piṇi³–, 3* "குரவை பிணைந்த வெங்கோவலன்" (திவ். பெரியதி. 1,8,4).

[புணை → பிணை–,]

பிணை³–த்தல் *piṇai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. இணைத்தல்; to join together, link, unite, couple, as rafters. "மின் பிணைத்தாலன கடையும்" (பதினொ. பட்டின. திருவேக. 35) 2. கட்டுதல், இணைத்துக் கட்டுதல்; to tie, bind, fasten. 3. கைகோத்தல்; to clasp each other's hands, as in dancing. "தழூஉப் பிணைபூஉ" (மதுரைக். 614).

[புள் → புண் → புணை. புணையல் = மாட்டுப்பிணைப்பு. புணையலடித்தல் = பிணைத்த கடாவிட்டுக் கதிரைப் புழக்குதல். புணை → பிணை–, (வே.க. 3,65)]

பிணை⁴ *piṇai,* பெ. (n.) 1. புறந்தருகை (தொல். சொல். 338); protecting with loving care. 2. விருப்பம் (தொல். சொல். 338, சேனா.); love, desire.

[பிணா → பிண → பிணை.(வே.க.3,88)]

பிணை[5] *pinai,* பெ. (n.) **1.** பொருத்து; joint in planks. இதையுங் கயிறும் பிணையுமிரிய (பரிபா. **10, 54**). **2.** கட்டு; tie, ligature, bandage. **3.** இணைக்கப் படுகை; being knit together. 'பிணையார மார்பம்' (பு. வெ. **12, 6**). **4.** பூ மாலை; flower garland. 'வெறி கொண்ட முல்லை பிணைமீது' (பெரியபு. கண்ணப். **57**). **5.** பொறுப்பாண்மை (உத்தரவாதம்); bail, security, guarantee, pledge. 'பிணைக் கொடுக்கிலும் போகவொட்டாரே' (திவ். பெரியாழ். **4,5,2**). **6.** உடன்பாடு (யாழ்.அக.); consent, agreement. **7.** களைகண் பேணுகை: relieving distress. 'பெட்டாங் கொழுகும் பிணையிலி' (நாள்மணி. **91**).

[புல் → புள் → புணை = கட்டு, விலங்கு, தெப்பம். புணை → பிணை. வே.க.3,65]

பிணை[6] *pinai,* பெ. (n.) **1.** விலங்கின் பெண் (பிங்.); female of animals. **2.** பெண்மான்; doe, hind, female deer. "பிணையேர் மடநோக்கும்" (குறள், **1089**).

[புள் → பிள் → பிண் → பிணி → பிடி = பெண்யானை. பிண் → பிணா = பெண், பெண்டு. பிணா → பிணவு = பன்றி, புல்வாய், நாய், கரடி என்பவற்றின் பெண். பிணா → பிண → பிணை = விருப்பம், விலங்கின் பெண், பெண்மான். (வே. க. 3, 88)]

பிணை[7] *pinai,* பெ. (n.) தெப்பம்; raft, boat. '*துயர்க் கடலை நீந்தும் பிணையே*' (மான்விடு. **52.**).

[புல் → புள் → புண் → புணி. புணித்தல் = சேர்த்துக்கட்டுதல். புண் → புணை. புணைத்தல் = கட்டுதல். புணை → பிணை = பிணைத்துக் கட்டி உருவாக்கப்பட்ட தெப்பம்.]

பிணைக்கட்டை[1] *pinai-k-kattai,* பெ. (n.) பதம் படுத்தும்போது பாவு தரைமட்டத்திற்கு மேலிருக்குமாறு தாங்கும் தாங்கி; weaver's instrument *which stands to keep the warp up.*

[பிணை + கட்டை. நான்கு கட்டைகள் குறுக்காக வைத்தும் மேல் நுனியில் அவற்றை இணைக்கும் வகையில் மற்றொன்று வைத்தும் பிணைக்கப் படுவது]

பிணைக்கட்டை[2] *pinai-k-kattai,* பெ. (n.) முன்னங்காலில் படும்படி கொண்டி மாட்டின் கழுத்தில் கட்டப்படும் கட்டை; log tied to the neck of stray cattle.

[பிணை + கட்டை. கழுத்தோடு பிணைக்கப்படும் கட்டை.]

பிணைக்கடுதாசி *pinai-k-kadudāši,* பெ. (n.) *பிணைச் சீட்டு* பார்க்க; see *pinai-c-cittu.*

[பிணை + கடுதாசி]

பிணைக்கி *pinaikki,* பெ. (n.) ஒன்றோடொன்று இணைக்கும் பொருள்; that which joins corresponding parts to each other.

[பிள் → பிண் → பிணை → பிணைக்கு]

பிணைகாரன் *pinaikāran,* பெ. (n.) பொறுப்பாண்மை (உத்தரவாதந்) தருவோன் (யாழ். அக.); surety.

[பிணை + காரன்]

பிணைகைதி *pinaikaidi,* பெ. (n.) பணத்திற்காகவோ வேறு கட்டாயத்திலோ பிடித்து வைக்கப்பட்டிருப்பவர்; person one who is forcibly taken as captive.

[பிணை + கைதி]

U. gaidi > **த. கைதி.**

பிணைச்சமாதிரி *piṇaiccamādiri,* பெ. (n.) இணைக்கப் பட்ட உத்தரம்; scarfed beam. (C.E.M.).

[பிணை → பிணைச்ச + மாதிரி]

பிணைச்சல் *piṇai-c-cal* பெ. (n.) கதவை நிலையோடு பொருத்தவுதவும் இரும்புப் பட்டை (யாழ்ப்.); hinge.

[பிணை → பிணைச்சல். 'சல்' தொ.பெ.ஈறு]

பிணைச்சீட்டு piṇaic-c-cīṭṭu, பெ. (n.) பொறுப்பாண்மை(உத்தரவாத)ஆவணம் (வின்.); bail bond, bond of recognisance.

[பிணை + சீட்டு. சுள் → (சுட்டு) → சிட்டு = சிறியது, சிறுகுருவி. சிட்டு → சீட்டு = ஓலை நறுக்கு, ஓலையில் எழுதப்பட்ட ஆவணம், ஆவணம்.]

பிணைச்சு piṇaiccu, பெ. (n.) புணர்ச்சி (பிங்.); copulation.

[பிண்ண → பிணைச்சு]

பிணைசொல்(லு)—தல் *piṇaišol(lu)-,* 5செ.கு.வி. (v.i.) பொருப்பாண்மை (உத்தரவாதம்) ஏற்றல் (வின்.); to stand surety, go bail.

[பிணை + சொல்—,]

பிணைத்தடி[1] *piṇai-t-taḍi,* பெ. (n.) பிணைக்கட்டை பார்க்க; piṇai-k-kaṭṭai.

[பிணை + தடி]

பிணைத்தடி[2] *piṇai-t-taḍi,* பெ. (n.) *பிணை கட்டை*[2] பார்க்க; see *piṇai-kaṭṭai*[2].

[பிணை + தடி]

பிணைத்தொகை *piṇai-t-togai,* பெ. (n.) பணய ஆளை (பணயக்கைதியை) விடுவிப்பதற்குக் கேட்கும் தொகை; ransom. வெளிநாட்டவரைக் கடத்திய கொடு முனைப்பாளிகள் பிணைத் தொகையாகக் கோடி உருவா கேட்டனர்.

[பிணை + தொகை]

பிணைப்படு—தல் *piṇai-p-paḍu-,* 20 செ. கு. வி. (v.i.) *பிணைபோ—தல்* பார்க்க; see *piṇaipō-,*

[பிணை + படு—, 'படு' து.வி.]

பிணைப்பணம் *piṇai-p-paṇam,* பெ. (n.) பிணைக்கான தொகை; money given as security, bail. குற்றவாளியை விடுவிப்பதற்குப் பிணைப்பணமாக உருவா 10,000 செலுத்துமாறு முறைமன்றம் பணித்தது (உ.வ.).

[பிணை + பணம். படம் → பணம்]

பிணைப்பு *piṇaippu,* பெ. (n.) நட்பு, உறவு, அன்பு முதலியவற்றால் ஏற்படும் நெருக்கம்; closeness; ties or bond (of affection) ஒருநாள்கூடப் பிரிந்திருக்க முடியாதபடி அவனோடு ஒரு பிணைப்பு ஏற்பட்டுவிட்டது (உ.வ.).

[பிணை → பிணைப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

பிணைப்பொருள் *piṇai-p-poruḷ,* பெ. (n.) பிணையப்பொருள் பார்க்க, see piṇaiya-p-poruḷ

[பிணை + பொருள்]

பிணைபடு—தல் *piṇai-paḍu-,* 20 செ. கு. வி. (v.i.) *பிணைபோ—தல்* (வின்.) பார்க்க; see *piṇaipō-,*

[பிணை + படு. 'படு' து.வி.]

பிணைபோ–தல் *piṇai-pō-,* 8, செ. கு. வி. (v.i.) பொறுப்பேற்றுக் கொள்ளுதல் (வின்.); to give securtiy, to go bail.

[பிணை + போ–, 'போ' து. வி.]

பிணைமாடு *piṇai-māḏu,* பெ. (n.) இணைக்கப்பட்ட எருதுகள்; a pair of oxen yoked together.

[பிணை + மாடு. புல் → புள் → புண் → புணை. புணைத்தல் = கட்டுதல். புணை → புணையல் = மாட்டுப்பிணைப்பு. புணை → பிணை]

பிணைமுறி *piṇaimuṟi,* பெ. (n.) *பிணைச் சீட்டு* பார்க்க; see piṇai-c-cīṭṭu.

[பிணை + முறி]

பிணையடி–த்தல் *piṇai-y-aḏi-,* 4. செ.குன்றாவி. (v.t.) சூட்டடிற்காக எருதுகளைப் பிணைத் தோட்டுதல்; to yoke oxen in a row and drive them for threshing corn.

மறுவ. புணைசல்விடுதல், கடாவிடுதல்

[பிணை + அடி. 'அடி' து. வி.]



பிணையத்தொகை *piṇaiya-t-togai,* பெ. (n.) ஒன்றுக்கு உறுதி கூறிக் கையெழுத்திட்டு, உறுதி கூறியவாறு நடக்காது போனால் தான் பொறுப்பேற்றுக் கட்டுவதாக ஒப்புக்கொண்ட தொகை; amount named in a bond of surety or security.

[பிணையம் + தொகை]

பிணையப்பொருள் *piṇaiya-p-poruḷ,* பெ. (n.) பிணையமாக வைக்கப்பட்ட பொருள்; pledged article

[பிணையம்+ பொருள்]

பிணையம் *piṇaiyam* பெ. (n.) பொறுப் பாண்மை (உத்தரவாதம்); bail, security, guarantee, pledge.

[பிணை → பிணையம்]

பிணையல் *piṇaiyal,* பெ. (n.) ஒன்று சேர்க்கை; joining together. "தாமரை யலரிணைப் பிணையல்" (பரிபா. 2,53). **2.** மலர்மாலை; flower garland. **3.** *பிணைமாடு* பார்க்க; see *piṇaimāḏu.* **4.** கதவின் இணைப்புக்குடுமி (வின்.); hinge. **5.** புணர்ச்சி; copulation. **6.** இணைக்கை; (nāṭya) gesture with both hands. "பிண்டியும் பிணையலும்" (சிலப், 3,18). 7. *பிணைக்கட்டை[1]* பார்க்க; see *piṇai-k-kaṭṭai[1]*. 8. *பிணைக்கட்டை[2]* பார்க்க; see *piṇai-k-kaṭṭai[2]*.

[பிணை → பிணையல். 'அல்' தொ. பெ. ஈறு]

பிணையற்கை *piṇaiyaṟ-kai,* பெ. (n.) *பிணையல், 6* (சிலப். பக். 710) பார்க்க; see *piṇaiyal 6.*

[பிணையல் + கை. பிணையல் = இரட்டைக்கை, இணைக்கை, பிணை யற்கை பதினைந்து வகைப்படும். (சிலம்பு அடி. 3:18)]

பிணையன்மாலை *piṇaiyan̠-mālai,* பெ. (n.) *பிணையல் 2* பார்க்க; see *piṇaiyal,2.* 'பித்திகைப் பிணையன் மாலை' (சீவக. 2177).

[பிணையல் + மாலை. முய → முயல்→ மயல் = மயக்கம். மயல் → மால் → மாலை = பல மலர்கள் கலக்குந் தொடை]

பிணையாள் *piṇai-y-āḷ,* பெ. (n.) *பிணைகாரன்* பார்க்க; see *piṇaikāran̠.*

[பிணை + ஆள்.]

பிணையாளன் *piṇai-y-āḷan̠,* பெ. (n.) *பிணைகாரன்* (யாழ்.அக.) பார்க்க; see *piṇaikāran̠.*

[பிணை + ஆளன்]

பிணையாளி *piṇai-y-āḷi,* பெ. (n.) *பிணை காரன்* (யாழ். அக.) பார்க்க; see *piṇaikāran̠.*

[பிணை + ஆளி]

பிணையிலி *piṇai-y-ili,* பெ. (n.) தக்கோராற் பேணப்படாதவ—ன்—ள்; uncared-for person. 'பெட்டாங் கொழுகும் பிணையிலி' (நான்மணி. 91)

மறுவ. ஏதிலி.

[பிணை + இலி. இல்லி → இலி]

பிணையெலி *piṇai-y-eli,* பெ. (n.) ஒருவகை எலி; a kind of rat.

[ஒருகா. பெண்எலி → பிணைஎலி ஒ.நோ. பிணைமான் (பெண்மான்)]

பிணையெலிக்கடி *piṇai-y-eli-k-kaḍi,* பெ. (n.) பிணையெலியின் நச்சுக்கடி; poisonous bite of the rat.

[பிணையெலி + கடி]

பிணையோட்டு—தல் *piṇi-y-ōṭṭu,* 5 செ. குன்றாவி (v.t.) *பிணையடி—த்தல்* பார்க்க; see *piṇai-y-aḍi-.*

மறுவ. புணைசல்விடுதல்

[பிணை + ஒட்டு—. ஒடு → ஒட்டு]

பிணைவு *piṇaivu,* பெ. (n.) புணர்ச்சி; coition.

[பிள் → பிண் → பிணை → பிணைவு. 'வு' பெ.ஆ.ஈறு]

பிணைவை—த்தல் *piṇai-vai-,* 18 செ. குன்றாவி. (v.t.) பிணையமாக வைத்தல்; to pledge.

[பிணை+ வை—,]

பித்தக்கக்கல் *pitta-k-kakkal,* பெ. (n.) பித்த மிகுதியினாலுண்டாகும் கக்கல் (வாந்தி); vomitting due to biliousnes.

[பித்தம் + கக்கல். கக்கு → கக்கல். 'அல்' தொ.பெ.ஈறு]

பித்தக்கட்டி *pitta-k-kaṭṭi,* பெ. (n.) ஈரற்குலை நோய் வகை (இ. வ.); a disease of the liver.

[பித்தம் + கட்டி. கள் → கட்டி]

பித்தக்கரடு *pitta-k-karaḍu,* பெ. (n.) உடலின் உள்ளுறுப்புக்களில் பித்தம் உறைவதாலேற் படும் கல் போன்ற தடிப்பு; biliary calculus.

[பித்தம் + கரடு. கர → கரண் → கரடு. ஒ.நோ: முர → முரண் → முரடு]

பித்தக்கரப்பன் *pitta-k-karappaṉ,* பெ. (n.) குழவிகட்கு, உடல் முழுவதிலும் அரிப்பை யுண்டாக்கி, அதன் விளைவாகத் தலைவலி, கக்கல்(வாந்தி) போன்றவற்றை யுண்டாக்கும் நோய்; a skin disease of the children characterised by excesssive itching of the skin, headache and vomiting.

[பித்தம் + கரப்பான். கர → கரப்பு → கரப்பான்]

பித்தக்கரப்பான் *pitta-k-karappāṉ,* பெ. (n.) மிகுவெப்பத்தின் விளைவாக நடுவயிற்றைக் கரைத்து உடலை வெம்பச் செய்து, இரு தொடைகளிலும் உளைச்சலையுண்டாக்கும் நோய்; a disease marked by bloating of the abdomen excessive heat in the body, heaviness and pain in the thighs.

[பித்தம் + கரப்பான்]

பித்தக்கல் *pitta-k-kal,* பெ. (n.), பித்தநீர் உறைவதனா லுண்டாகுங் கல்; gall stone.

க. பித்தகல்லு

[பித்தம் + கல். குல் → கல். பித்தப்பையில் உருவாகும் கல்லைப் போன்ற ஒருவகைப் பொருள்.]

பித்தக்கழிச்சல் *pitta-k-kaḻiccal,* பெ. (n.) உட்சுரங்காய்ந்து, உமிழ்நீர் சுரந்து உட்கொண்ட மருந்தின் விளைவால் வயிறு பொருமி, பலவாறாக மலங்கழியும் நோய்வகை; a disease characterised by different kinds of motion with bloated abdomen, salivation, thirst and fever.

[பித்தம் + கழிச்சல். கழி → கழிச்சல்]

பித்தக்கனல் *pitta-k-kaṉal,* பெ. (n.) மிகுதியான பித்தத்தினால் உடம்பிலேற்படும் எரிச்சல் அல்லது வெப்பம்; excessive warmth of the body caused by the aggravated condition of the bile humour.

மறுவ. பித்தக்காய்ச்சல், பித்தக்காங்கை, பித்தச்சுரம்; பித்தக்கொதி, பித்தச்சூடு.

[பித்தம் + கனல். குல் → குன் → கன் → கனல்.]

பித்தக்காங்கை *pitta-k-kāṅgai,* பெ. (n.) **1.** பித்தத்தால் உண்டாகுஞ் சூடு (கொ. வ.); heat caused by the over-secretion of bile. **2.** *பித்தக் கொதி* பார்க்க; see *pitta-k-kodi.*

[பித்தம் + காங்கை. காய் → காய்ங்கு → காங்கு → காங்கை]

பித்தக்காமாலை *pitta-k-kāmālai,* பெ. (n.) அரத்தத்தில், பித்தநீர் கலப்பதால், நாவறண்டும் உடம்புகொதித்தும், விழிநீர் மஞ்சளித்து மேற்படும் காமாலை நோய்; a disease marked by fever, yellow coloured tears, dryness of the skin fatigue etc.

க. பித்தகாமாலெ; **து.** பித்தகாமால், பித்தகாமாலெ

[பித்தம் + காமாலை]

பித்தக்காய்ச்சல் *pitta-k-kāyccal,* பெ. (n.) பித்தசுரம்; bilious fever.

[பித்தம் + காய்ச்சல். காய் → காய்ச்சல். 'அல்'. தொ. பெ. ஈறு]

பித்தக்காலம் *pitta-k-kālam,* பெ. (n.) மிகுதியான பித்தநீர் சுரப்பதற்கு ஆகுங் காலம்; the time when bile humour predominates.

[பித்தம் + காலம்]

பித்தக்கிராணி *pitta-k-kirāṇi,* பெ. (n.) அறுவகைக்கிரகணியுள் பித்தத்தாலுண்டாவது (யாழ். அக.); diarrhoea caused by bile, one of six 'kirakaṇi'.

[பித்தம் + கிராணி]

பித்தக்கினி *pittakkiṉi,* பெ. (n.) செங்கோள்; helleborus niger.

பித்தக்கிறுகிறுப்பு *pitta-k-kiṟukiṟuppu,* பெ. (n.) பித்தாதிக்கத்தில் வருந் தலைச்சுழற்சி; dizziness arising from biliousness. (M.L.)

[பித்தம் + கிறுகிறுப்பு]

பித்தக்கிறுப்பு *pitta-k-kiṟuppu,* பெ. (n.), பேருழைப்பு, தளர்ச்சி, மிகுபுணர்ச்சி போன்றவற்றால் மூளையிற் செல்லும் அரத்தவோட்டம், நிலைதடுமாறுவதாலேற்படும் மயக்கம்; giddiness caused by bilious affections due to diseases, weakness, sexual intercourse and other cause.

[பித்தம் + கிறுப்பு]

பித்தக்குடல்வாதம் *pitta-k-kuḍalvādam,* பெ. (n.) குடலிறக்கம்; hernia.

[பித்தம் + குடல் + வாதம்]

Skt. vāta > த. வாதம்

பித்தக்குழல் *pitta-k-kuḻal,* பெ. (n.) பித்தநீர் செல்லுங் குழாய்; bile duct.

[பித்தம் + குழல். குள் → குழை → குழல்]

பித்தக்குழலழற்சி *pitta-k-kuḻalaḻaṟci,* பெ. (n.) பித்தக் குழாயிலேற்படும் வீக்கம்; inflammation of the bile duct.

[பித்தம் + குழல் + அழற்சி. அழல் → அழற்சி]

பித்தக்குழற்றாபிதம் *pitta-k-kuḻaṟṟābidam,* பெ. (n.) *பித்தக்குழலழற்சி* பார்க்க; see *pittakkuḻalaḻaṟci.*

[பித்தம் + குழல் + தாபிதம்]

Skt. sthāpita > த. தாபிதம்

பித்தக்குற்றம் *pitta-k-kuṟṟam,* பெ. (n.) பித்த நீரின் மிகுதியால் உடம்பிலேற்படும் ஊறுபாடு; defects caused by biliousness in the system.

[பித்தம் + குற்றம்]

பித்தக்குறைவு *pitta-k-kuṟaivu,* பெ. (n.) பித்தநீர்க் குறைவாகச் சுரப்பதாலுண்டாகும் நோய்; lack of deficiency of bile.

[பித்தம் + குறைவு. குறை → குறைவு]

பித்தக்குன்மம் *pitta-k-kuṉmam,* பெ.(n.) வயிறு மந்தித்து, அதன் விளைவாக, நெஞ்செரிச்சல், வாய் நீரூறல், கக்கல் (வாந்தி) உண்டாக்கும் குன்ம நோய்; an ailment called pithaguṉmam(dyspepsia) marked by excessive perspiration, bitter taste, reeling of the head, nausea, excessive salyvation burning of the chest and dullness of appetite.

[பித்தம் + குன்மம்]

பித்தக்கொதி *pitta-k-kodi,* பெ. (n.) பித்தாதிக்கத்தால் உண்டாகும் காய்ச்சல் நிலை (யாழ்ப்.); feverish state of body arising from derangement of the bilious humour.

[பித்தம் + கொதி]

பித்தக்கோழை *pitta-k-kōḻai,* பெ. (n.) பித்தத்தோடு கலந்த கோழை (சிலேட்டும) நோய்; disease due to irregularities in phlegmatic and bilious humours.

[பித்தம் + கோழை]

பித்தக்கோழைச்சுரம் *pitta-k-kōḻai-c-curam,* பெ. (n.) பித்தந்தருஞ்சளியும் உடம்பில் மிகுதியாகச் சேர்வதாலேற்படும் காய்ச்சல்; fever caused by the combination of bile as phlegm.

[பித்தம் + கோழை + சுரம்]

பித்தக்கோளாறு *pitta-k-kōḷāṟu,* பெ. (n.) பித்தநீரின் மிகுதியால் உடம்பிலேற்படுஞ் சீர்குலைவு; bilious trouble due to body's disorder.

[பித்தம் + கோளாறு]

பித்தகண்டகம் *pitta-kaṇḍagam,* பெ. (n.) பித்தநீரினால் மூக்கிலேற்படுங் கொப்புள நோய்; ulcorative stomatitis.

[பித்தம் + கண்டகம்]

பித்தகணம் *pittakaṇam,* பெ. (n.) வெப்ப மிகுதியால், குழந்தைகட்கு ஏற்படும் கணநோய் வகையுளொன்று; a children's disease characterised by excessive heat in the body.

மறுவ. ஆமகணம், கணை

[பித்தம் + கணம்]

பித்தகதிப்பு *pittakadippu,* பெ. (n.) பித்த மிகுதி; cholorrhea.

[பித்தம் + கதிப்பு]

பித்தகபதொந்தம் *pitta kabatondam,* பெ. (n.) இருபங்குச் பித்தநீரும், ஒரு பங்குச் சளியும் சேர்வதாலேற்படும் நோய்; bile humour and phlegm humour joining together in the proportion of 2:1 and creating disease.

[பித்தம் + கபம் + தொந்தம்]

பித்தகபம் *pittakabam,* பெ. (n.) நெஞ்செல்லாம் புகைந்து, இருமலேற்பட்டு, சளிமிகுந்து, இளைப்பும் ஈளையுமுருவாகி அதன் விளைவாக நாவறட்சியைத் தோற்றுவிக்கும் கோழை நோய்; a disease marked by slight irrigation of the throat, cough nausea, dryness of the tongue and throat, fatigue and excess of phlegm.

[பித்தம் + கபம். கவம் → கபம்]

பித்தகாங்கை *pitta-kāṅgai,* பெ. (n.) பித்தக்காங்கை (வின்.) பார்க்க; see pitta-k-kāṅgai.

[பித்தம் + காங்கை]

பித்தகாசம்[1] *pitta-kāšam,* பெ. (n.) எலும்புருக்கி நோய் வகை (வின்.); a kind of asthma.

[பித்தம் + காசம்]

மிகுதியான பித்தநீரின் விளைவால் இந்நோய் ஏற்படுகிறது என சா.அக. குறிப்பிடுகிறது.

பித்தகாசம்[2] *pitta-kāšam,* பெ. (n.) வெள்ளை விழியில் நீர் படர்ந்து, விண் போன்ற நீலவண்ணத்தை யுண்டாக்கிக், கருவிழியில் உளுந்தளவு வெண்படலத்தை யுருவாக்கிக் கருமணியில் மஞ்சணிற நீர் சுரக்க வைக்கும் கண்ணோய்; an eye disease marked by

exudation of yellow fluid and white opaqueness of the pupil-cataract.

[பித்தம் + காசம்]

பித்தகாமாலை *pittakāmālai,* பெ. (n.) *பித்தக் காமாலை* (யாழ். அக.) பார்க்க; see *pitta-k-kāmālai.*

[பித்தம் + காமாலை]

பித்தகாரகம் *pitta-kāragam,* பெ. (n.) *பித்தக்காங்கை* (வின்.) பார்க்க; see *pitta-k-kāṅgai;*

[பித்தம் + காரகம்]

பித்தகாரி *pittakāri,* பெ. (n.) பித்தநீரை சுரக்கச் செய்யும் மருந்து; drug promoting the secretion or excretion of the bile.

மறுவ. பித்தநீர்பெருக்கி

[பித்தம் + காரி]

பித்தகாலம் *pittakālam,* பெ. (n.) **1.** உடலில் பித்தம் மிகுதியால் உண்டாகும் வாணாளின் நடுப்பருவம் (வின்.); middle stage of life when the bilious humour is predominant. **2.** காலை யிலும் மாலையிலும் பித்தமதிகப்படும் **7** மணி முதல் **9** மணி வரையிலுள்ள காலம் (வின்.); the 2nd and 3rd hour of day at night while bilious humour is predominant.

[பித்தம் + காலம். கோல் → கால் → காலம்]

பித்தகுன்மம் *pitta-kuṉmam,* பெ. (n.), *பித்தக்குன்மம்* பார்க்க; see *pitta-k-kuṉmam.*

[பித்தம் + குன்மம்]

பித்தகோடாரித்தைலம் *pittakōḍāri-t-tailam,* பெ. (n.), கண்ணோய், வாந்தி, மயக்கம் நெஞ்செரிவு போன்றவற்றைப் போக்கும் மருந்தெண்ணெய்; a medicated oil cures eye diseases vomiting, giddiness, burning in the chest and dryness of the body.

[பித்த கேடாரி + தைலம்]

Skt. tāila > *த.தைலம்.*

பித்தகோபம் *pitta-kōbam,* பெ. (n.), புளி, மிளகாய் முதலியவற்றை மிகுதியும் உண்பதால் உடலில் உண்டாம் பித்தாதிக்கம்; over-secretion or vitiation of bile on account of excessive use of tamarind, chillies etc, in food.

[பித்தம் + கோபம்]

பித்தகோரி *pittakōri,* பெ. (n.) புகையிலை; tobacco.

[புத்கம் + கோரி. கோரு → கோரி]

பித்தங்கழட்டி *pittaṅkaḻaṭṭi,* பெ. (n.), மிகுதியான பித்தத்தை வெளிப்படுத்தும் மருந்து; drug promoting the secretion or excretion of bile.

மறுவ. பித்தநீர் பெருக்கி, பித்தகாரி

[பித்தம் + கழட்டி. கழற்றி → கழட்டி]

பித்தச்சுவரி *pittaccuvari,* பெ. (n.), *பித்தசோகைக் காமாலை* பார்க்க; see *pittaśōgai-k-kāmālai.*

[பித்தம் + சுவரி]

பித்தச்சுழற்சி *pitta-c-cularci,* பெ. (n.), *பித்தக் கிறுகிறுப்பு* (பைஷஜ. உந.) பார்க்க; see *pitta kirukiruppu.*

[பித்தம் + சுழற்சி]

பித்தச்சூடு *pitta-c-cūḍu,* பெ. (n.), *பித்தக்காங்கை* (வின்.) பார்க்க; see *pitta-k-kāngai.*

[பித்தம் + சூடு]

பித்தசத்தி *pitta-šatti,* பெ. (n.), பித்த நீரைக்கக்கல் (வாந்தி) செய்கை. (இராசவைத். பக். 124.); vomitting of bile.

[பித்தம் + சத்தி]

பித்தசத்து *pitta-šattu,* பெ. (n.), அழிஞ்சில் மரவகை; a kind of tree.

பித்தசம்[1] *pittašam,* பெ. (n.), மிகுபித்த நீரா லேற்படுஞ் சீர்குலைவு; that which is due to deranged bile humour.

[பித்தம் → பித்தசம்]

பித்தசம்[2] *pittašam,* பெ. (n.), நவமணிக் குற்றத் தொன்று; a flaw in the nine gems.

பித்தசமனாக்கி *pittašamanākki,* பெ. (n.), சிற்றிஞ்சு; a small species of palm.

பித்தசமனி *pittašamani,* பெ. (n.), மாஞ்ச ரோகணி; pimperual.

பித்தசயம் *pittašayam,* பெ. (n.), அளவிற்கதிகமான பித்தநீரின் விளைவால் உடம்பிற் சூடேறி, கைகால் எரிச்சலுற்றுக் கடுத்து, கோழையும் இருமலையு முண்டாக்கும் ஈளை நோய்; bilious consumption marked by temperature, burning of hands and feet buring during micturation, nausea, fatigue cough with expectoration.

[பித்தம் + சயம்]

பித்தசரீரம் *pitta-šarīram,* பெ. (n.), பித்தாதிக்கமுள்ள உடம்பு; state of the body in which the bilious humour prepondrates.

[பித்தம் + சரீரம்.]

Skt. šarīa > த. சரீரம்

பித்தசாந்தி *pitta-šānti,* பெ. (n.), **1.** பித்தந்தணிக்கு மருந்து; medicine for biliousness. **2.** பொன்னாங் காணி (மலை.); plant growing in damp places.

[பித்த + சாந்தி]

பித்தசிலேட்டுமசுரம் *pittašilēṭṭumašuram,* பெ. (n.) பித்தநீருஞ் சளியும் உடம்பில் மிகுதியாகச் சேர்வதாலேற்படுங் காய்ச்சல்; fever caused by the combinafion of bile and phlegm.

[பித்தம் + சிலேட்டுமம் + சுரம்]

பித்தசிலேட்டுமம் *pitta-šilēṭṭumam,* பெ. (n.), *பித்தசிலேற்பனம்* (யாழ்.அக.); see *pittašilērpanam.*

[பித்தம் + சீலேட்டுமம்]

பித்தசிலேட்டுமவக்கினி *pittašilēṭṭuma-v-akkini,* பெ. (n.), ஆடா தோடை; a plant Malabar winter cherry.

பித்தசிலேட்டுமாதிசாரம் *pittaśilēṭṭumādiśāram,* பெ. (n.), பித்தத்தினால் தோன்றும் வயிற்றுப் போக்கு; diarrhoea caused by vitiated by combination of bile. and phlegm humours

[பித்தம் + சிலேட்டுமம் + ஆதிசாரம்]

பித்தசிலேட்டுவிசர்ப்பி *pitta-śilēṭṭu-viśarppi,* பெ. (n.), நுணாக்காய் வடிவில் தோலிலேற்படும் புண்; a skin disease.

மறுவ. பங்கவிசர்ப்பி.

[பித்தம் + சிலேட்டுமம் + விசர்ப்பி]

பித்தசிலேற்பனம் *pitta-śilērpanam,* பெ. (n.) பித்தத்தோடு கலந்த கோழை (சிலேட்டுமநோய்.) (யாழ். அக.); disease due to irregularities in phlegmatic and bilious humours.

[பித்தம் + சிலேற்பனம்]

பித்தசீதளம் *pittaśidaḷam,* பெ. (n.), பித்தநீரின் மிகுதியால் கோழையுடன் கூடிய ஈளையையுருவாக்கும் நோய்; disease due to irregularities in phlegmatic cough nausea and bilious humours.

மறுவ. பித்தகபம்

[பித்தம் + சீதளம்]

பித்தசுரசமனி *pittaśuraśamaṉi,* பெ. (n.), பித்தசுரத்தை நீக்கும் பெருங்காஞ் சொறி; a twiner large climbing nettle-alleviates the pitta fever.

[பித்தசுரம் + சமனி]

பித்தசுரநாசினி *pitta-śuranāśiṉi,* பெ. (n.), பித்தக்காய்ச்சலைப் போக்கும் கோரைக்கிழங்கு; root of coray, destroyer of the pittafever.

[பித்தசுரம் + நாசினி]

பித்தசுரம் *pitta-śuram,* பெ. (n.), ***பித்தக் காய்ச்சல்*** (கொ. வ.) பார்க்க; see *pitta-k-kāyccal.*

க. பித்தவர

[பித்தம் + சுரம்]

பித்தசூலை *pitta-śūlai,* பெ. (n.), அளவிற் கதிகமாக வளி தங்குவதால், உடம்பில் வெப்பம் மிகுதியாகி தலைவலித்து வெப்பம் மிகுதியாகி, நாக்குவறண்டு நீர் மஞ்சளித்து, பொருத்துகள் மோது கட்டிகள் அசையவொட்டாதபடி துன்புறுத்துஞ் சூலை நோய் வகை; thirst and burning sensation in the body attended with an excruciating pain-colic.

[பித்தம் + சூலை]

பித்தசூலைக்கட்டு *pittaśūlai-k-kaṭṭu,* பெ. (n.) ***பித்தசூலை*** பார்க்க; see *pittaśūlai.*

[பித்தம் + சூலை + கட்டு]

பித்தசோகை *pilta-śōgai,* பெ. (n.), உடம்பு, வெளுத்து, கடித்து முகம், கண் முதலானவை வெளுத்து, நெஞ்சு பதைத்து அடிவயிறு விம்மிப் புடைத்து, இதன் விளைவால் நாக்கு சுவை (உருசி) யற்று உதடு மஞ்சளித்துக் கைகால் ஒய்ந்து, சிறுநீர் மிக வெளுத்திறங்கும் (ஒருவகை சோகை) நோய்வகை; a disease-a kind of anaemia in which the body and the eyes are rendered pale, abdomen body swollen tongue tasteless, lips yellow and limbs weak.

[பித்தம் + சோகை]

பித்தசோகைக்காமாலை *pittašōgai-k-kāmālai,* பெ. (n.), குழந்தைகளைத் துன்புறுத்துங் காமாலை நோய் வகை; a kind of jaundice due to excess of bilious secretions in the system mixing up in the circulation of blood.

[பித்தம் + சோகை + காமாலை]

பித்தட்சயம் *pittaṭšayam,* பெ. (n.) *பித்தசயம்* பார்க்க; see *pittašayam.*

[பித்தம் + சயம்]

பித்தத்தடிப்பு *pitta-t-taḍippu,* பெ. (n.) பித்தத் தழும்பு (இ.வ.) பார்க்க; see pitta-t-taḻumbu.

[பித்தம் + தடிப்பு]

பித்தத்தடைநோய் *pitta-t-taḍainōy,* பெ. (n.) பித்தந் தடை படுவதினா லேற்படும் ஈரல் நோய்; a disease of the liver due to retention of the bile duct from obstruction.

[பித்தம் + தடை + நோய்]

பித்தத்தத்து *pitta-t-tattu,* பெ. (n.), பித்தத்தழுப்பு பார்க்க; see pitta-t-taḻumbu.

[பித்தம் + தத்து]

பித்தத்தலைவலி *pitta-t-talaivali,* பெ. (n.), கடுஞ் சினம், அளவிறந்த பித்தமி வற்றாலேற்படும் தலைநோவு; a violent and aching pain in the head, accompanied by a sense of scorching vapour being emitted from the nostrills.

[பித்தம் + தலைவலி]

பித்தத்தழும்பு *pitta-t-taḻumbu,* பெ. (n.), சொறிவகை. (இ.வ); nettle rash, urticaria.

[பித்தம் + தழும்பு]

பித்தத்தாரைத்தாபிதம் *pittattārai-t-tābidam,* பெ. (n.) *பித்தக்குழலற்சி* பார்க்க; see *pittakkuḻalaṟci.*

[பித்தத்தாரை + தாபிதம்]

பித்தத்தாரைப்புற்று *pittattārai-p-puṟṟu,* பெ. (n.) பித்தக் குழாயி லுண்டாகும் புரையோடிய புண்; cancer of bile duct.

[பித்தத்தாரை + புற்று. புல் → புற்று]

பித்தத்தானம் *pittattāṉam,* பெ. (n.) கொப்பூழுக்கும் கழுத்துக்கும் இடைப்பட்ட பகுதி; the region of bilious humour in the body from navel to neck.

[பித்தம் + தானம்]

பித்ததாகம் *pittatāgam,* பெ. (n.) பித்த மிகுதியினால் உண்டாகும் நீர்வேட்கை; thirst due to bilious affections.

[பித்தம் + தாகம்]

பித்ததாகைவிரணம் *pitta-tāgai-viraṇam,* பெ. (n.), சீழ்ஒழுகை, மிகுவலி, தூக்கமின்மை போன்றவற்றை யுண்டாக்கும் அறையாப்புக் கட்டி நோய்; bubo marked by exudation of blood and pus, pain, nausea loss of sleep ect.

[பித்தம் + தாகை + விரணம்]

பித்ததாரை *pittatārai,* பெ. (n.) *பித்தக் குழல்* பார்க்க; see *pitta-k-kulal.*

[பித்தம் + தாரை]

பித்ததிஞ்சம் *pittatiñjam,* பெ. (n.) சுண்டைக்காய்; fruit of solanum torvum.

பித்ததிமிரம் *pittatimiram,* பெ. (n.) கண்ணோய் வகையு ளொன்று; an eye discase.

பித்ததேகக்கூறு *pittadēgakkūṟu,* பெ. (n.) பித்தஞ்செறிந்த உடம்பின் மெய்நிலைக்கூறு; bilious temperament.

[பித்தம் + தேகம் + கூறு.]

பித்ததேகம் *pitta-tēgam,* பெ. (n.) பித்தவுடம்பு; bilious body.

[பித்தம் + தேகம்]

Skt. dēha › **த.**தேகம்

பித்ததோசம் *pitta-tōšam,* பெ. (n.) *பித்தக் குற்றம்* பார்க்க; see *pitta-k-kuṟṟam,*

[பித்தம் + தோஷம்]

Skt. dōṣa › **த.**தோசம்

பித்தநரை *pittanarai,* பெ. (n.) வெப்பமிகுதி, அளவிறந்த பித்தம், இவற்றின் விளைவால் இளம்பருவத்திற்றோன்றும் வெளுத்த முடி; premature greyness of the hair, caused by excess of heat.

[பித்தம் + நரை]

பித்தநாசம் *pittanāšam,* பெ. (n.) முள்வெள்ளரி; a fruit, a variety of cucumber.

மறுவ. பித்தமகம்

பித்தநாசினி *pittanāšini,* பெ. (n.) **1.** சீரகம்; cumin seed. **2.** ஆன் மணத்தி; bezoar.

[பித்தம் + நாசினி]

பித்தநாடி *pitta-nāḍi,* பெ. (n.) நாடிமூன்றனுள் பித்தநிலையைக் குறிப்பது; pulse indicating bilious humour, one of three nāṭi.

க., தெ. பித்த நாடி

[பித்தம் + நாடி]

பித்தநிவாரணி *pittanivāraṇi,* பெ. (n.) பித்தத்தை வெளிப்படுத்தும் மருந்து; medicine or drug which increases the flow of bile.

[பித்தம் + நிவாரணி]

Skt.ni-vāraṇa › **த.** நிவாரணம் → நிவாரணி

பித்தநிறம் *pittaniṟam,* பெ. (n.) பித்தநீரின் இயற்கை வண்ணம்; biliary pigment.

[பித்தம் + நிறம்]

பித்தநீர்[1] *pitta nīr,* பெ. (n.) பித்தத்தினா லேற்பட்ட நீர்; fluid secreted owing to bilious affections.

[பித்தம் + நீர்]

பித்தநீர்[2] *pitta-nīr,* பெ. (n.) பித்தநீரிலுள்ள வளி நீர்மத்திரள்; gastric juice.

[பித்தம் + நீர்]

பித்தநீர்வாந்தி *pittanīrvāndi,* பெ. (n.) பித்தக்கக்கல் பார்க்க; see pitta-k-kakkal.

[பித்தநீர் + வாந்தி]

Skt.vānti > த.வாந்தி.

பித்தநோய் *pitta-nōy,* பெ. (n.) *பித்தக்காமாலை* பார்க்க; see *pitta-k-kāmālai.* (M.L.)

[பித்தம் + நோய்]

பித்தப்பிரமியமேகம் *pittappiramiyamēgam,* பெ. (n.) கற்றாழைச் சாற்றின் நிறத்தை யொத்த மணத்துடன், அளவிற்கதிகமாகச் சிறுநீர் வெளிப்படும் சருக்கரை நோய்வகை; a kind of diabetes with copious discharge of urine.

பித்தப்பிரமேகம் *pittappiramēgam,* பெ. (n.) உடம்பு, கை, கால், மூட்டுகளில் குத்தலுடன் வலியை யேற்படுத்தும் நோய்வகை; a disease pricking pain in the joints, arms and legs while the body slowly turn black.

[பித்தம் + பிரமேகம்]

பித்தப்பிளப்பு *pitta-p-piḷappu,* பெ. (n.), பித்தவெடி பார்க்க; see pittāveḍi. அவர் ஸ்ரீபாதம் பித்தப் பிளப்பா யிருக்கையாலே (ஈடு, 2, 6, 2, ஜீ.).

[பித்தம் + பிளப்பு]

பித்தப்பீனிசம் *pittappīnišam,* பெ. (n.) புலால் நாற்றத்துடன் கூடிய மஞ்சட் கோழையை மூக்கினின்று ஒழுகச்செய்யும் மூக்கடைப்பு; a type of catarrh marked by a hot, yellowish secretion with rotten smell from the nostrils.

[பித்தம் + பீனசம்]

பித்தப்புடல் *pitta-p-puḍal,* பெ. (n.) 1. புடல்வகை; a species of snake-gourd, trichosanthes colubrina. 2. தும்பை வகை; a species of toombay, trichosdesma zeylanicum.

[பித்தம் + புடல்]

பித்தப்பை *pitta-p-pai,* பெ. (n.) பித்தநீர் தங்கும் உடலுறுப்பு; gall bladder.

தெ. பித்தகோசமு.

[பித்தம் + பை. பொள் → பொய் → (பய்) → பை]

பித்தப்பைக்கல் *pilta-p-paikkaḷ,* பெ. (n.) பித்தப்பையில் விளையுங் கல்போன்ற கடும் பொருள்; gall stone.

[பித்தப்பை + கல்]

பித்தப்பைத்தியம் *pitta-p-paittiyam,* பெ. (n.) மிகுதியான பித்தத்தினா லேற்பட்ட மனக்கோட்டம்; lunacy or (Insanity) caused by excitement of bilious humour.

[பித்தம் + பைத்தியம்]

பித்தப்பையழற்சி *pittappai-y-aḻarci,* பெ. (n.) பித்தப்பையிலேற்பட்டுள்ள வீக்கம்; inflammation of gall bladder.

[பித்தப்பை + அழற்சி]

பித்தபத்திரம் *piltapattiram,* பெ. (n.) சீரகம்; cumin seed.

[பித்தம் + பத்திரம்]

பித்தபாண்டு *pitta-pāṇḍu,* பெ. (n.) *பித்தபாண்டுரு*[1] (வின்.) பார்க்க; see *pittapāṇḍuru*[1].

[பித்தம் + பாண்டு]

பித்தபாண்டுசூலை *pittapāṇḍušūlai,* பெ. (n.) வயிறும், தொடையும் வீங்கி, பொருத்துகளில் ஊதை வலியை யுண்டாக்குஞ் சூலை நோய்; a kind of rheumatic pain due to bilious affection.

[பித்தபாண்டு + சூலை]

பித்தபாண்டுரம் *pitta-pāṇḍuram,* பெ. (n.) *பித்தபாண்டுரு*[1] பார்க்க; see *pitta pāṇḍuru*[1].

[பித்தம் + பாண்டுரம்]

பித்தபாண்டுரு[1] *pitta-pāṇḍuru,* பெ. (n.) இளைப்பை யுண்டாக்கும் காமாலை வகை (வின்.); sallow kind of jaundice, inducing langour.

[பித்தம் + பாண்டுரு]

பித்தபாண்டுரு[2] *pittapāṇḍuru,* பெ. (n.) செவ்வள்ளிக் கிழங்கு; red sweet potato.

பித்தபாணி *pittapāṇi,* பெ. (n.), பனை, மாமரங்களின் பிசின்; gum of the mango or palmyra tree.

பித்தம்[1] *pittam,* பெ. (n.) **1.** ஈரலினின்று தோன்றும் நீர்வகை; bile, gall. பித்தம் பத்துவிதம் (பழ.). **2.** பித்தமென்னும் பிணிக்கூறு; bilious humour. *'வாத பித்தகபமென... வலித்தனர்'* (உத்தரரா. அரக்கர்பிற. 31.). **3.** மயக்கம் (சூடா.); bewilderment, delirium. **4.** மனக்கோளாறு (பைத்தியம்); lunacy, madness. *'பெருந்துறையான் பித்தவடிவு கொண்டு'* (திருவாச. 13, 19.).

ம. பித்தம்: க., பட. பித்த: தெ. பித்தமு.

[பே → பேம் = அச்சம்.பேதல் = அஞ்சுதல். பே → பேய் = அஞ்சப்படும் ஆவி அல்லது தோற்றம். பேய்தல் = அஞ்சுதல். பேயப்பேய விழிக்கிறான் என்பது உலகவழக்கு. பேய் → பேயன் = பேய்பிடித்தவன், பேயாடி, பேய் பிடித்தவனைப் போன்ற பித்தன், பித்தனைப் போன்ற மூடன்.

பே → பேக்கு = பேதை, மூடன். பேக்கு → பேக்கன். பேக்கு → பேக்கல். பேக்கல் + ஆண்டி. பேக்கலாண்டி.

பே → பேது = பேய்பிடித்தாற் போன்றமருள், மயக்கம், அறியாமை. பேது + உறு = பேதுறு.

பேதுறுதல் = மயங்குதல். பேது → பேதை = மூடன், அறிவிலி, வெள்ளை (கள்ளமிலி). பேதை → ஏதை.

பேது → பேத்து. பேத்துதல் = அஞ்சி உளறுதல், உளறுதல்.

பேத்து → பேந்து. பேந்துதல் = அஞ்சுதல், பேந்தப் பேந்த விழிக்கிறான் என்பது உலக வழக்கு.

பேந்து = பேய். பேந்து → பேந்தான் = பேய்ப்பந்து என்னும் விளையாட்டு.

பேத்து → பீத்து. ஒ.நோ. தேஞ்சுவை → தீஞ்சுவை. பீத்துதல் = உளறுதல், தற்புகழ்ச்சியாய் உளறுதல்.

பீத்து → பித்து ஒ.நோ. தீம் → தித்தி.

பித்து = மயக்கம், மதிமயக்கம், மூளைக் கோளாறு, தலைக்கிறுக்கு, தலைச்சுற்றை

யுண்டாக்கும் நீர் (bile) அந்நீரைக் கொண்டவுறுப்பு (gall-bladder)மயக்க நிலைப்பட்ட காதல் அல்லது அவா.

பித்த → பித்தன் = கிறுக்கன், கழிபெருங்காதலன் அல்லது பற்றினன். பித்து - பிச்சு - பிச்சன்.

பித்து → பித்தம் = பித்து நீர், பித்த நாடி, பித்த நீர்மிக்கநோய் அந்நோயால் உண்டாகும் தலைச்சுற்று, மூளைக் கோளாறு, மயக்கம், மயக்கக்காதல் (மு.தா.8,9)

பித்து → பித்தம். பிதற்று → பேத்து → பித்து = பிதற்றுநிலை. அந்நிலைநாடி, அறிவுமயக்கம்,மயக்கிற்குக் காரணமான கைப்புநீர், அந் நீர் சுரக்கும் உறுப்பு

மா. வி. அ. "etym. unknown" *என்று கூறுதல் காண்க. பித்த என்னுஞ் சொல்லினின்று பைத்ய என்னுஞ் சொல்லைத் திரித்துள்ளனர் வடவர் (வ.வ.2,37)]*

பித்தம்² *pittam,* பெ. (n.) மிளகு (பதார்த்த/1309.); pepper.

பித்தம்³ *pittam,* பெ. (n.) பித்தல் (தஞ்சை.)1 பார்க்க; see pittal-1

பித்தம்கட்டியம்சம் *pittam-katti-y-amšam,* பெ. (n.) உடம்பிலுள்ள அரத்தத்திலும், பித்தநீரிலுங் கலந்துள்ள கட்டியான கொழுப்புச் சத்து; cholestrol.

[பித்தம் + கட்டி + அம்சம்]

பித்தம்பிடி—த்தல் *pittam-pidi-,* 5. செ. கு. வி. (v.i.), மனக்கோட்டங் கொள்ளல்; to become mad.

[பித்தம் + பிடி —,]

பித்தம்போக்கி *pittam pōkki,* பெ. (n.) பித்தத்தை வெளியேற்றிச் சமப்படுத்தும் மருந்து; medicine or drug that expels bile.

[பித்தம் + போக்கி. போக்கு→ போக்கி. 'இ' வினை முதலீறு]

பித்தம்வெடுவெடு—த்தல் *pittamveduvedu,* 5. செ.கு.வி (v.i.) பித்தம் பிடி—த்தல் பார்க்க; see pittam pidi-,.

[பித்தம் + வெடுவெடு—,]

பித்தமகம் *pittamagam,* பெ. (n.) முள்வெள்ளரிக் கொடி (சூடா.); kakri-melon.

பித்தமதநோய் *pittamada-nōy,* பெ. (n.) கடுஞ்சினத்தையுருவாக்கும் நோய்; a disease marked by excessive anger.

[பித்தமதம் + நோய்]

பித்தமயக்கம் *pitta-mayakkam,* பெ. (n.) 1. தலைக்கிறுகிறுப்பு; giddiness, dizziness, vertigo. 2. மயக்க நோய்; delirium.

[பித்தம் + மயக்கம்]

பித்தமருந்து *pitta-marundu,* பெ. (n.) பித்த நோய்க் கெதிரான மருந்து; medicine for bile.

[பித்தம் + மருந்து]

பித்தமலமிளக்கி *pittamalam-iḷakki,* பெ. (n.) மலத்தை இளகச் செய்து பித்தத்தையுமுடன் சேர்த்து வெளி யேற்றும் மருந்து; cholagogue purgative.

மறுவ. பித்தக் கருக்கம்.

[பித்தம் + மலம் + இளக்கி. இளக்கு → இளக்கி]

பித்தமாந்தம் *pitta-māndam,* பெ. (n.) பித்தமிகுதியினா லேற்படும் செரியாமை யெனும் மந்த நோய்; a kind of indigestion due to excess of bile.

[பித்தம் + மாந்தம்]

பித்தமாலை *pittamālai,* பெ. (n.) குழந்தைகட் கேற்படும் பித்த நோய் வகை; infantile disease.

[பித்தம் + மாலை]

பித்தமிகுதி *pittamigudi,* பெ. (n.) பித்த மேலீடு பார்க்க; see pittamēlīḍu.

[பித்தம் + மிகுதி. மிகு → மிகுதி]

பித்தமிகப்பு *pittamigappu,* பெ. (n.) பித்தம் அதிகமாக உண்டாகை; excessive secretion of bile.(M.L.)

[பித்தம் + மிகப்பு]

பித்தமுறிமாதர் *pittamuṟimādar,* பெ. (n.) எலுமிச்சம் பழம்; lime fruit.

பித்தமூத்திரம் *pittamūttiram,* பெ. (n.) உடம்பில் வெப்ப மிகுதியாலுண்டாகும் வண்ணச் சிறுநீர்; dark yellow or reddish urine indicating the excitement of bilious humour and heat in the system.

[பித்தம் + மூத்திரம். முள் → (மொள்) → மோள். மோளுதல் = சிறுநீர் விடுதல். மோள் + திரம் → (மோட்டிரம்) → மோத்திரம் → மூத்திரம்]

பித்தமூர்ச்சை *pittamūrccai,* பெ. (n.) மிகுதியான பித்தத்தினால் ஏற்படும் மயக்கம்; swooning arising from bilious causes.

[பித்தம் + மூர்ச்சை.]

Skt. mūrch > **த.** மூர்ச்சை

பித்தமேலீடு *pittamēlīḍu,* பெ. (n.) *பித்த மிகப்பு* பார்க்க; see *pittamigappu.* (M. L.)

[பித்தம் + மேலீடு. மேல் + இடு - மேலிடு → மேலீடு]

பித்தமேறு–தல் *pittam-ēṟu,* செ.குவி. (v.i.)
1. பித்தம் மிகுதியாதல்; to be bilious.
2. மிகு சினம் கொள்ளுதல்; to be enraged. அவன் பித்தமேறிப் பேசுகிறான் **(உ.வ.)**

க.பித்தவேறு; **து.**பித்தஏறுனி, பித்தகெதருனி

[பித்தம் + ஏறு–,]

பித்தயனாசி *pittayaṉāśi,* பெ. (n.) இதிரக் கிழங்கு; wild elepheant yam.

மறுவ. காட்டுக்கருணை, சேனைக் கிழங்கு

பித்தர்வாசம் *pittarvāšam,* பெ. (n.) பித்தர் காப்பகம், மனப்பிறழச்சியோர் மருத்துவ மனை; bedlam, lunatic asylum.

[பித்தர் + வாசம். பித்து → பித்தர். வசி → வாசம்]

பித்தரசரோகணி *pittarašа-rōgaṇi,* பெ. (n.) *பித்தரோகணி* பார்க்க; see *pittarōgaṇi.*

[பித்தம் + ரச + ரோகணி]

பித்தரூட்சை *pittarūṭcai,* பெ. (n.) பித்த நோய் வகையுளொன்று; a kind of pitta disease.

பித்தரோகணி *pittarōgaṇi,* பெ. (n.) குடலைத்தூய்மைப் படுத்தும் கடுகு ரோகணி; a purgative drug.

[பித்தம் + ரோகணி]

Skt. rōhiṉi > **த.** ரோகிணி

பித்தரோகம்[1] *pittarōgam,* பெ. (n.) மயக்கம்; giddiness.

க. பித்தரோக

[பித்தம் + ரோகம்.]

Skt. rōha > **த.** ரோகம்

பித்தரோகம்[2] *pittarōgam,* பெ. (n.) *பித்த நோய்* (பைஷஜ.) பார்க்க; see *pittanōy.*

[பித்தம் + ரோகம்]

Skt. rōga > **த.** ரோகம்

பித்தரோசனம் *pitta-rōšaṉam,* பெ. (n.) பூவரசு (சங்.அக.); portia tree.

[பித்தம் + ரோசனம்]

பித்தல்[1] *pittal,* பெ. (n.), **1.** மண்வெட்டிக்கழுத்து (வின்.); neck of a hoe. **2.** கரை (இ. வ.); bund of a tank.

[பொருத்துதல் = பொருந்தச் செய்தல். பொருத்து = இணைப்பு. பொருத்து → பொத்து → பொத்தான். பொத்து → பொத்தல் → பித்தல்]

பித்தல்[2] *pittal,* பெ. (n.) நினைவு மாறுபட்டுக் குழறுகை (சங். அக.); babbling incoherently in delirium.

[பித்து → பித்தம் = பித்துநீர், பித்தநாடி, பித்தநீர் மிக்க நோய், அந்நோயால் உண்டாகும் தலைச்சுற்று. மூளைக் கோளாறு. பித்தம் → பித்தல் (மு. தா. 9,10)]

பித்தல்மண்வெட்டி *pittal maṇvetti,* பெ. (n.) மண்வெட்டி வகை (வின்.); hoe with a neck.

[பித்தல் + மண்வெட்டி]

பித்தலம் *pittalam,* பெ. (n.) அரசமரம்; ficus religiosa.

பித்தலாட்டக்காரன் *pittalāṭṭa-k-kāraṉ,* பெ. (n.) ஏமாற்றுபவன்; humbug.

[பித்தலாட்டம் + காரன்]

பித்தலாட்டம் *pittal-āṭṭam,* பெ. (n.) வஞ்சனை, குறும்புச்செயல் ஏமாற்றுகை; deception, fraud, trickery, lying, defrauding.

மறுவ. ஏய்ப்பு

ம. பித்தலாட்டம்; **க.** பித்தலாட, பிதலாட; **தெ.** பிதலாடமு, பித்தலாடகமு; **து.** பிகிலாட

[பித்து → பித்தன் = கிறுக்கன். பித்து → பித்தம், = பித்து நீர். பித்தம் → பித்தல். பித்தல் + ஆட்டம்–பித்தலாட்டம் = மாறாட்டம், ஏமாற்றம். (மு.தா. 9,10)]

பித்தளையை ஆடகம் (பொன்) ஆகக் காட்டி ஏமாற்றுதல் என்னும் அடிப்படையில் பிறந்த சொல் பித்தலாட்டம் என்று செ.ப. அகர முதலி வலிந்து பொருள் கூறுகிறது. பித்தமேறி ஒன்றை வெறொன்றாகக் கருதுதல், அதுபோல் பிறரை ஏமாற்றுதல் என்று பொருள் கொள்வது இயல்பாய் அமைதலைக் காண்க.

பித்தலாடகம் *pittalāḍagam,* பெ. (n.) *பித்தலாட்டம்* பார்க்க; see *pittalāṭṭam.* (C.G.)

[பித்தலாட்டம் → பித்தலாடகம்]

பித்தலை *pittalai,* பெ. (n.) பெண்நோய் வகையுளொன்று; a kind of vaginal disease.

பித்தவயிற்றுவலி *pittavayiṟṟuvali,* பெ. (n.) மிகையான பித்தத்தினால் வயிற்றில் வீக்கமுண்டாகியதனாலேற்படுங் கடும் வயிற்று நோவு; biliary colic.

[பித்தம் + வயிற்று + வலி]

பித்தவரத்தம் *pitta-v-arattam,* பெ. (n.) பித்த நிறஞ் செறிந்த அரத்த நோய்; a disease brought about by the excited bile pigments in the blood.

[பித்தம் + அரத்தம்]

பித்தவரம் *pittavaram,* பெ. (n.) பலா வீழி மருந்துச் செடி; a straggling medicinal shrub.

பித்தவருசி *pitta-v-aruši,* பெ. (n.) *பித்தவரோசகம்* பார்க்க; see *pitta-v-arōšagam.*

பித்தவரோசகம் *pitta-v-arōšagam,* பெ. (n.) பித்தத்தினல் நா சுவையறியாமை (பைஷஜ.); nausea.

[பித்தம் + அரோசகம்]

பித்தவறட்சி *pittavaraṭci,* பெ. (n.) தலை கனத்து தாது கெட்டு உடம்பைத் தீப்போல் எரிக்கும் பித்த நோய் வகை; a bilious disease marked by heaviness of the head, burning of sensation of the whole body.

[பித்தம் + வறட்சி. வறள் → வறட்சி]

பித்தவறட்சிகரப்பான் *pittavaraṭcikarppāṉ,* பெ. (n.) உடம்பு முழுவதும் அரிப்புண்டாக்கிக், கொப்புளங்களையேற்படுத்துந் தோல் நோய்; a skin disease with itching eruptions and marked by swimming of the head.

[பித்தவறட்சி + கரப்பான். கர → கரப்பான்]

பித்தவாதசுரம் *pitta-vāda-šuram,* பெ. (n.) பித்தக் கூறும் ஊதை(வாத)க் கூறும் கலந்துவரும் முறைச்சுரம் (கொ. வ.); enteric fever, intermittent fever, pyrexia of uncertain origin, enterites.

[பித்தம் + வாதம் + சுரம். சுள் → சுர் → சுரம்.]

Skt. vāta > **த.** வாதம்.

பித்தவாந்தி *pittavāndi,* பெ. (n.) *பித்தக்கக்கல்* பார்க்க; see *pitta-k-kakkal.*

[பித்தம் + வாந்தி.]

Skt. vānti > **த.** வாந்தி

பித்தவாயு *pitta-vāyu,* பெ. (n.) **1.** வயிற்று (குன்ம)நோய் வகை; chronic dyspepsia. (M.L.) **2.** கிறுகிறுப்பு; நோய்வகை (இ. வ.); giddiness. **3.** ஈரல் நோய் வகை (இ. வ.); inflammation of the liver, hepatitis.

[பித்தம் + வாயு]

பித்தவிக்கல் *pittavikkal,* பெ. (n.) பித்த மிகுதியால் நாவறட்சியுண்டாகி, அதனா லேற்படும் விக்கல்; hiccup due the dryness.

[பித்த(ம்) + விக்கல். விக்கு → விக்கல்]

பித்தவிசிவு *pitta-v-iśivu,* பெ. (n.) உடம்பு வெந்து, புருவம் நெளிந்து கண்ணும் வாயுங் கோணுந் தன்மையை யுண்டாகும் இசிவு நோய்; a kind of delirium attended with nervous affections and marked by pain in the body, paralysis of the face.

[பித்தம் + இசிவு]

பித்தவித்திருதி *pittavittirudi,* பெ. (n.) மிகுதியான பித்தத்தினாலேற்படுஞ் சீழ்ப் பிடிப்புடன் கூடிய கழலைக்கட்டி; abscess due to bile humour.

[பித்தம் + வித்திருதி]

பித்தவியல்பு *pitta-v-iyalbu,* பெ. (n.) பித்தநீரின் இயற்கைத் தன்மைகள்; the character of bile phlegm.

[பித்தம் + இயல்பு]

மஞ்சள் அல்லது பச்சை நிறமாகவும் எரித்தபின் கசப்புடன் கூடிய நெடியுடனும், சிலநேரங்களில் புளிப்புச் சுவையுடனும் இருக்கும். பித்தம் உந்தி முதல் கழுத்துவரைப் பரவி உடலைக் காக்கும் தன்மையது. பித்தம் குடலில் செரிமானம் ஆன உணவுக்கூழை அரத்தமாக்கி நுண் அரத்தக் குழாய்களிலும் செல்லும் வகையில் நீர்மையுடையதாக்கும். கண்களுக்குப் பார்வையையும் மூளைக்கு அறிவையும் தரும். உணவின் இறுதி நிலையான உணவுக்கூழை உருமாற்றி ஆண்களுக்கு விந்துவையும் ,பெண்களுக்குக் கரு முட்டையையும் உருவாக்கும். உயிர்ப் பொருளாக மாற்றும், உடல் வளர்ச்சிக்கு உதவி வலிமை கொடுக்கும். தசை நார்களில் (tissue) ஊன்மை (metabolism) ஆக்கத்தையும் ஊன்மச் சிதைவையும் ஏற்படுத்தும். இச்செயல் பாட்டால் ஏற்படும் வெப்பம் பித்தத்தினால் உண்டாவதே என்பது பெரும்பாலோர் கருத்து. செரிமானத் திற்குப் பெரிதும் உதவும் முதன்மையான இயக்கியான இந்நீர் கல்லீரலிலுள்ள பித்தப்பையில் சுரக்கிறது. இது ஆற்றல் வாய்ந்தது. வெது வெதுப்பான நீர்மமான இது இயல்பு நிலையில் செந்நீல நிறமாகவும் நோயுற்ற காலத்தில் மஞ்சள் நிறமாகவும் இருக்கும். இது உணவுப் பாதையிலுள்ள கொழுப்புப் பொருட் களைக் கொழுப்பு புளிம (அமில)ங்களாக மாற்றும். பித்தம் கண்புரை, மூட்டுவலி, நீர்க்கட்டு, சிறுநீர் நோய் ஆகியவற்றைக் குணப் படுத்தும் என்று சா.அக. குறிப்பிடுகிறது.

பித்தவிரி *pittaviri,* பெ. (n.) ***பித்தவெடி*** **(இ. வ.)** பார்க்க; see *pittavedi.*

[பித்தம் + விரி]

பித்தவிரிவு *pitta-virivu,* பெ. (n.) ***பித்தவெடி*** **(இ. வ.)** பார்க்க; see *pittavedi.*

[பித்தம் + விரிவு. விரி → விரிவு]

பித்தவீடு *pittavīdu.* பெ. (n.) பித்தம் உடலில் தங்கியிருக்கும் இடம்; bilious duct in body.

[பித்தம் + வீடு]

பித்தவுக்கிலிட்டம் *pitta-v-ukkiliṭṭam,* பெ. (n.) மிகுதியான பித்தத்தின் விளைவாக வயிற்றிலேற்படும் அழற்சி; inflammation of the stomach due to excessive bile humour.

[பித்தம் + உக்கிலிட்டம்]

பித்தவுடம்பு *pitta-v-udambu,* பெ. (n.) அளவிறந்த பித்தநீர் சுரக்கும் உடம்பு; a body in which bile humour in the system supervenes..

[பித்தம் + உடம்பு]

பித்தவுபரி *pitta-v-ubari,* பெ. (n.) பித்தநீரினால் நெஞ்சாங்குலையி லேற்படும் எரிச்சல்; a disease marked by excessive, burning sensation in the heart.

[பித்தம் + உபரி]

பித்தவூதை *pitta-v-ūdai,* பெ. (n.) மலம், சிறுநீர் போன்றவை, நிறங்கெட்டு, மனந்தடுமாறி, வயிறு வீங்கி கால் ஓய்ச்சல் காணும் நோய்; a disease marked by swelling of the abdomen loss of intelligence and change in the colour of feaces and urine.

[பித்தம் + ஊதை]

பித்தவூறல் *pittavūṟal,* பெ. (n.) பித்தநீரின் மிகுதியால் உடம்பிலேற்படும் அரிப்பு; itching caused by bile.

[பித்தம் + ஊறல். ஊறு + ஊறல்]

பித்தவெட்டை *pitta-veṭṭai,* பெ. (n.) பித்த மிகுதியால் உண்டாம் நோய்வகை (கொ. வ.); a kind of disease due to excess of bile.

[பித்தம் + வெட்டை. முள் → முளி. முளிதல் = எரிதல். முள் → வெள் → வெட்டை = உடம்பிலுள்ள சூட்டுவகை]

பித்தவெடி *pitta-veḍi,* பெ. (n.) பித்தத்தினால் காலில் உண்டாகும் பிளப்பு (கொ. வ.); cracks in the skin of the feet, fissures.

[பித்தம் + வெடி.]

பித்தவெடிப்பு *pitta-veḍippu,* பெ. (n.) *பித்தவெடி* (வின்.) பார்க்க; see *pitta-veḍi.*

[பித்தம் + வெடிப்பு. வெடி + வெடிப்பு. 'பு' சொ. ஆ. ஈறு]

பித்தவெண்குட்டம் *pittaveṇ-kuṭṭam.* பெ. (n.) செந்தாமரைப் பூவிதழ்போற் சிவந்த, வெளுப்பாகப்பரவி, எரிச்சலையுண்டாக்கி, மயிர்களையுதிரச் செய்யும் ஒருநோய் வகை; a skin disease marked by rosy white patches accompanied by burning sensation and hairs fall out.

[பித்தம் + வெண்குட்டம்]

பித்தவெயில் *pitta-veyil,* பெ. (n.) காலைவெயில்; morning sun., believed to induce biliousness.

[பித்தம் + வெயில். முள் → வெள் → வெய் வெய்யில் → வெயில்]

பித்தவெரிச்சல் *pitta-v-ericcal,* பெ. (n.) பித்தநீரின் மிகுதியால், உடம்பின் பல்வேறு பகுதிகளிலேற்படும் எரியுணர்வு; burning sensation caused in several parts of the body due to excess of bile in the system.

மறுவ. பித்தமேலீடு, பித்தாதிக்கம், பித்தெறிவு.

[பித்தம் + எரிச்சல். எரி → எரிச்சல்]

பித்தவெரிவு *pitta-v-erivu,* பெ. (n.) பித்தத்தால் எரிச்சலுண்டாக்கும் நோய்வகை; chronic gastritis. (M.L.)

[பித்தம் + எரிவு. எரி → எரிவு. 'வு' சொ. ஆ. ஈறு. உல் → எல் → எரி]

பித்தவெள்ளம் *pittaveḷḷam,* பெ. (n.) *பித்தாதிக்கம்* பார்க்க; see *pittādikkam.*

மறுவ. பித்தமேலீடு.

[பித்தம் + வெள்ளம்]

பித்தவெறி *pittaveṟi,* பெ. (n.) **1.** மனப்பிறழ்ச்சி; madness. **2.** மயக்கம்; delirium.

[பித்தம் + வெறி]

பித்தவேகம் *pittavēgam,* பெ. (n.) *பித்தவொழுக்கு;* flow of bile.

[பித்தம் + வேகம்]

பித்தளம் *pittaḷam,* பெ. (n.) சுண்டைக்காய்; a shrub turkey berry.

பித்தளைக்காசுமீன் *pittaḷḷai-k-kāšumīṉ,* பெ. (n.) நன்னீரில் வாழும் சிறுமீன் வகை; a small freshwater-fish, etroplus maculatus.

பித்தளைமலை *pittaḷai-malai,* பெ. (n.) செம்புத்தாதுள்ள மலை (வின்.); mountain containing copper ore.

பித்தளையளகம் *pittaḷai-y-aḷagam,* பெ. (n.) *பித்தலாட்டம்* (வின்.) பார்க்க; see *pittalāṭṭam.*

[பித்தலாட்டம் → பித்தலாடகம் → பித்தளையளகம்]

பித்தன் *pittaṉ,* பெ. (n.) **1.** மனக்கோளாறுடையவன் (பைத்தியக்காரன்); crazy man, mad man. *'மருந்திற்றணியாத பித்தனென்று'* (நாலடி, 340.) 2. மூடன்; fool, idiot. *'இவை பிதற்றும் பித்தரிற் பேதையாரில்'* (நாலடி. 2) **3.** சிவபெருமான்; Šivaṉ. *'பித்தா பிறைசூடி'* **4.** திருடன் (அக. நி.); thief, robber.

து. பித்தப்பெ

[பேது → பேத்து. பேத்துதல் = அஞ்சி உளறுதல், உளறுதல். பேத்து → பீத்து → பித்து. பித்து = மயக்கம், மதிமயக்கம், மூளைக்கோளாறு, தலைக் கிறுக்கு. பித்து → பித்தன் = கிறுக்கன். (மு. தா. 9)அறிவிலி, கிறுக்கன் போல் இயங்கிய சிவன்]

பித்தனாசனி *pittaṉāšaṉi,* பெ. (n.) முசுமுசுக்கைக் கொடி; a climber bristly bryouia.

பித்தாக்கினி *pittākkiṉi,* பெ. (n.) சருக்கரை; sugar.

[பித்தம் + அக்கினி]

பித்தாசயப்பை *pittāšayappai,* பெ. (n.) *பித்தப்பை* பார்க்க; see *pitta-p-pai.*

மறுவ. பித்தாசயம், பித்துப்பை.

[பித்தம் + ஆசயப்பை]

பித்தாசயம் *pittāšayam,* பெ. (n.) *பித்தப்பை* பார்க்க; see *pitta-p-pai.* (C.G.)

[பித்தம் + ஆசயம்]

Skt. ā-šaya > **த.** ஆசயம்

பித்தாசயவரத்தப்பெருக்கு *pittāsaya-v-arattapperukku,* பெ. (n.) ஈரற்குலையிலேற்படும் அளவுமீறிய அரத்தப் பெருக்கு; congestion of liver.

[பித்தாசயம் + அரத்தப் பெருக்கு]

பித்தாசயவலி *pittāšayavali,* பெ. (n.) பித்தப்பையிலுண்டாகும் நோவு; hepatic colic.

[பித்தசயம் + வலி]

பித்தாசயவழற்சி *pittāšaya-v-aḻarci,* பெ. (n.) பித்தப் பையிலேற்படும் வீக்கம்; hepatitis.

[பித்தசயம் + வழற்சி]

பித்தாதிக்கம் *pittādikkam,* பெ. (n.) பித்தம் மிகுதியாக உண்டாகை (வின்.); excessive secretion of bile.

[பித்தம் + ஆதிக்கம். ஆதி → ஆதிக்கம்]

த. ஆதிக்கம் › Skt. ādhikya.

பித்தாதிகநோய் *pittādiganōy,* பெ. (n.) *பித்தாதிகம்* பார்க்க; see *pittādigam.*

[பித்தாதிகம் + நோய்]

பித்தாதிகம் *pittādigam,* பெ. (n.) **1.** பித்த மிகுதியினாலேற்படும் மயக்கம்; biliousness. **2.** தலை இருப்பு; vertigo.

[பித்தம் + அதிகம்.]

பித்தாதிகாசம் *pittādikāšam,* பெ. (n.) பித்த மிகுதி; excess of secretion of bile in the system.

[பித்தம் + ஆதிகாசம்]

பித்தாதிகாரம் *pittādikāram,* பெ. (n.) *பித்தாதிகம்* (யாழ். அக.) பார்க்க; see *pittādikam.*

[பித்தம் + அதிகாரம். அதிகாரம் → ஆதிகாரம்]

பித்தாதிசாரம் *pittādišāram,* பெ. (n.) மயக்கம், வயிற்றெரிவு, வலி, கக்கல், (வாந்தி), நாவறட்சி, போன்றவற்றையுண்டாக்கும் பித்தாதிக்கநோய்; a disease caused by excited bile, thirst pain and burning sensation in the stomach, vomiting, giddiness etc.,

[பித்தம் + ஆதிசாரம்]

பித்தாதிமந்தம் *pittādimandam,* பெ. (n.) கண்களைக் காய்ச்சிய இருப்புச் சட்டியைப் போற் சிவக்கச் செய்யுங் கண்ணோய் வகை; an eye disease in which the blood streaked eye is attended with secretion and a sensation there in of being burnt with fire.

[பித்தாதி + மந்தம்]

பித்தாந்தம் *pittāndam,* பெ. (n.) பெரும் பித்தம்; too much of bile.

[பித்தம் + அந்தம்]

பித்தாந்தலைக்கொட்டி *pittāntalaikkoṭṭi,* பெ. (n.) கிலுகிலுப்பை (வின்.); a shrub.

பித்தாரி *pittāri,* பெ. (n.) இதிரக் கிழங்கு; the wild yam root.

மறுவ. காட்டுக் கரணை.

பித்தாவரணம் *pittāvaraṇam,* பெ. (n.) *பித்தாரி* பார்க்க; see *pittāri.*

[பித்தம் + ஆவரணம்]

பித்தான் *pittāṉ,* பெ. (n.) சட்டை முதலியவற்றை மாட்டிக்கொள்ளுதற்குரிய குமிழ் (கொ. வ.); button.

[புல் → பொல் → பொரு → பொருந் → பொருந்து → பொருத்து. புல் → (பூள்) → பூண் → பூட்டு. புள் → பொள் → பொட்டு = நெற்றியெலும்புப்பொருத்து. பொத்துதல் = மூட்டுதல், பொல்லம்

பொத்துதல் என்னும் வழக்கைக் காண்க. (மு. தா. 188, 189) பொத்து → பொத்தான் = மூட்டுவதற்குப் பயன்படும் பொருள். பொத்தான் → பித்தான். பொத்தான் → Fr. bouton: E. button]

பித்தி[1] *pitti,* பெ. (n.) **1.** சுவர்; wall. *'பித்தி தன்னிடை..... பொறித்த சத்தபோடி மந்திரம்'* (விநாயகபு, 79, 35) **2.** பங்கு (சங். அக.); part.

[பின் → பின்பு. பின் → பிற்கு. பின் → பிறவு → பிறகு → பிறவு → பிறகு→ பிற்கு. புறம் →பிறவு→பிறகு = முதுகு. பிறகு → பிறக்கு = முதுகு.பின் → பிந்தி → பித்தி = முதுகு, முதுகுபோல் நேராக இருக்கும் சுவர். ஒ.நோ.சுவல் =பிடர், தோட்கட்டு, முதுகு. சுவல் → சுவர்]

த. பித்தி > Skt. bhitti.

பித்தி[2] *pitti,* பெ. (n.) ***பித்தம்,1*** **(வின்.)** பார்க்க; see *pittam* 1

[பித்தம் + பித்தி]

பித்தி[3] *pitti,* பெ. (n.) பின்பக்கம் **(வின்.);** back, hind part.

[இன் → இனி = இனிமேல், பின்பு. இன் → இன்னும் = இதற்கு மேலும். பின் → பின்னும் → பின்னர். பின் → பின்னே. பின் → பின்பு. பின் → பின்று → பிந்து (மு.தா.293) பிந்து → பிந்தி → பித்தி]

பித்தி[4] *pitti,* பெ. (n.) ***பித்திகம் 1,*** பார்க்க; see *pittigam* 1. *'பல்லிதழ்ப்பத்தி பித்தி'* (மேருமந். **1059).**

[பின் → பிணம் → பிறம் → பிறம்பு. பிறம்பத் தங்கால் = பின்னங்கால். பிறம் → பிடம் → பிடர் = பின்கழுத்து. பிடர் → பிடரி = தலையின் பின்புறம். பிடர் → பிடர்த்தி → பித்தி = தலையில் வளரும் முடி, முடியைப் போன்று கொத்தாக இருக்கும் சாதிமல்லிகை, சிறுசெண்பகம்]

பித்தி[5] *pitti* பெ. (n.) கிறுக்கி (பைத்தியக்காரி); crazy woman. *'பித்தியாய் முழுக்கேடு பேசினாயகாயோ'* (நீலகேசி, **2 ,3)**

மறுவ. கோட்டிக்காரி (நெல்லை.)

[பித்தன் (ஆ. பா) – பித்தி (பெ. பா.)]

பித்தி[6] *pitti,* பெ. (n.) **1.** உடம்பிலுள்ள குழாய்ப்பகுதி யல்லது உறுப்பிற் கருகிலுள்ள பகுதி; wall of the tube or other organs of the body. **2.** அறுகு; a grass.

பித்திக்காயம் *pittikkāyam,* பெ. (n.) மண்டையோட்டின் உச்சிப்பகுதியெலும்பி லேற்பட்ட காயம்; wound of parietes.

[பித்தி + காயம்]

பித்திகம் *pittigam,* பெ. (n.) **1.** *பித்திகை,* 3 (குறிஞ்சிப் **89.)** பார்க்க; see *pittigai.* 3 **2.** *பித்திகை,* **4 (திவா.)** பார்க்க; see *pittigai.* **4** *'மாரிப் பித்தித் தீரிதழலரி* **(நற். 314.)**

[பித்தி → பித்திகம்]

பித்திகாமார்ச்சாலநியாயம் *pittikā-mārccāla-niyāyam,* பெ. (n.) மதின்மேற்பூனை எப்பக்கத்துக் குதிக்குமென்பது அறியப்படாமை போல ஒரு செய்தி எவ்வாறு முடிவெடுக்கப் படும் என்பதை அறியலாகா நெறி **(வின்.);** the nyāya of cat on a wall illustrating the uncer-

tainty of mind of a person just before making a decision.

[பித்தி → பித்திகை + மார்ச்சாலநியாயம்]

Skt. mārjāla > **த.** மார்ச்சாலம்

Skt. nyāya > **த.** நியாயம்

பித்திகை[1] *pittigai,* பெ. (n.) **1.** சுவர்(பிங்.); wall. *'பித்திகை மாடப் பெருந்தெரு'* (திருவிளை. நகரங். **39.**) **2.** அண்டச்சுவர் (பிங்.); wall of the universe. **3.** சாதிமல்லிகை (பிங்.); large flowered jasmine. **4.** சிறுசெண்பகம் (பிங்.); cananga-flower tree.

[பித்தி → பித்திகை]

பித்திகை[2] *pittigai,* பெ. (n.) **1.** கருமுகை; a shrub with small flowers. **2.** *பித்தி*[5] பார்க்க; see pitti[5].

பித்திகைமேடு *pittigai-mēḍu,* பெ. (n.) பித்திகையெலும்பின் மேற்புறத்திற் குவிப்பாயுள்ள பகுதி; parietal eminence.

[பித்திகை + மேடு]

பித்திகையென்பு *pittigai-y-eṉbu,* பெ. (n.) மண்டையோட்டின் இருபக்கத்து எலும்பு; parietal bone of the cranium.

[பித்திகை + என்பு. எலும்பு → என்பு]

பித்திப்பழம் *pittippaḻam,* பெ. (n.) வெண்காரவுள்ளி; white onion.

பித்திரா *pittirā,* பெ. (n.) வன்னிமரம்; a tree.

பித்தீரல் *pittīral,* பெ. (n.) பித்த நீருண்டாகும் உடலுறுப்பு; liver.

[பித்து + ஈரல்]

பித்து *pittu,* பெ. (n.) **1.** பித்தநீர்; bile, gall. *'குருவளர் பித்து மாகதமென்று'* (திருவாலவா. **25, 10.**) **2.** மனக்கோளாறு (பைத்தியம்); delirium, derangement, madness. பித்தொடு மயங்கி (தேவா.475,10) **3.** அறியாமை; ignorance foolishness *'பித்துறு முகமுமுய்ய'* (துணிகைபு வீராட். 77) **4.** மிக்க ஈடுபாடு; excessive zeal, infatuation. *'உள்ளம் வெம்போர் பித்தேறின னென்ன'* (கம்பரா. நாகபா. **23.**)

க. பித்து

[பேது → பேத்து. பேத்துதல் = அஞ்சி உளறுதல், உளறுதல், பேத்து → பீத்து. பீத்துதல் = உளறுதல், தற்புகழ்ச்சியாய் உளறுதல். பீத்து → பித்து. பித்து = மூளைக் கோளாறு, தலைச்சுற்றை உண்டாகும் நீர், அதனால் ஏற்படும் அறிவுக்கேடு, மயக்கம், மயக்கக் காதல்(மு.தா. 9)]

பித்துக்குளி[1] *pittu-k-kuḷi,* பெ. (n.) *பித்துக் கொள்ளி* பார்க்க; see pittu-k-koḷḷi.

[பித்து + குளி. கொள் + இ – கொள்ளி - கொளி → குளி]

ஒ.நோ: ஏமாங்குளி, பயந்தாங்குளி.

கன்னடத்தில் அஞ்சுகுளி (அஞ்சும் இயல்புடையவன்), ஆடுங்குளி (ஆடும் இயல்புடையவன்), சாலங்குளி (கடன் வைக்கும் இயல்புடையவன்), லஞ்சங்குளி (கையூட்டுப் பெறும் இயல்புடையவன்) போன்ற சொற்களில் ஆட்சி பெற்ற 'குளி'யைக் கிட்டல் கன்னட அகரமுதலி சொல்லாக்க ஈறாகக் காட்டியுள்ளது.

பித்துக்குளி² *pittukkuḷi,* பெ. (n.) ஓர் ஊர்ப்பெயர்; a village.

பித்துக்கொண்டாடு–தல் *pittu-k-koṇḍāḍu-,* 6 செ.கு.வி. (v.i.) கிறுக்கனைப் போற் செயலாற்றுதல் (காரியஞ்செய்தல்) (வின்.); to act or behave like a madcap.

[பித்து + கொண்டாடு–,]

பித்துக்கொள்ளி *pittu-k-koḷḷi,* பெ. (n.) 1. கிறுக்கன், கிறுக்கி (பைத்தியம் பிடித்தவ–ன்–ள்) (கொ. வ.); madcap. 2. அஞ்சும் தன்மை புடையவ–ன்–ள்; faint hearted person.

[பித்து + கொள்ளி. கொள் → கொள்ளி]

பித்துப்பிடி–த்தல் *pittu-p-piḍi-,* 4 செ. கு. வி. (v.i.) கிறுக்குப் பிடித்தல் (பைத்தியமாதல்); to become mad, crazy.

[பித்து + பிடி –,]

பித்துப்பிடித்தவன் *pittu-p-piḍittavaṉ,* பெ. (n.) மனநலம் குன்றியவன்; crazy man.

[பித்து + பிடித்தவன்]

பித்துப்பை *pittu-p-pai,* பெ. (n.) *பித்தப்பை* (வின்.) பார்க்க; see *pitta-p-pai.*

[பித்தப்பை → பித்துப்பை]

பித்துரியானம் *pitturiyāṉam,* பெ. (n.) இடது மூக்குத்துளை(நாசி)வழியாய் ஓடும் மூச்சு; left nostril through which vital air passes.

பித்தெரிவு *pitterivu,* பெ. (n.) *பித்தவெரிச்சல்* பார்க்க; see *pitta-v-ericcal.*

[பித்து + எரிவு. எரி → எரிவு]

பித்தேறி *pittēṟi,* பெ. (n.) கிறுக்கன், கிறுக்கி, (வின்.); crazy person.

[பித்து + ஏறி. ஏறு → ஏறி]

பித்தேறு–தல் *pittēṟu-,* 5 செ.கு.வி. (v.i.) மூளைக் கோட்டம் (பிறழ்ச்சி) உண்டாதல்; to get mad.

[பித்து + ஏறு–,]

பித்தை *pittai,* பெ. (n.) மக்கள் தலைமயிர்; lock of hair. '*நீடிரும் பித்தை பொலியச் சூட்டி*' (பெரும்பாண். 482).

மறுவ. உளை, நவிர், குடுமி, ஓரி, குழல், கார், குஞ்சி, தளை, பங்கி.

[பித்தி⁴ → பித்தை]

பித்தோன்மத்தம் *pittōṉmattam,* பெ. (n.) மிகக்கடுமையான மூளைக்கோட்டம்; devil madness.

[பித்தம் + உன்மத்தம்]

பித்தோன்மாதம் *pittōṉmādam,* பெ. (n.) பித்துவெறி (பைஷஜ. 286.); madness, craziness.

[பித்தம் + உன்மாதம்]

Skt. uṉ-māda › த. உன்மாதம்

பிதக்கு–தல் *pidakku-,* 15 செ. கு. வி. (v.i.) நசுங்குதல்; to be squeezed or crushed. 'நீண்முடி பிதக்கவூன்றிய' (தேவா. 802, 11.).

[பிள் → பிடு → பிடுங்கு. பிடுங்குதல் = பெயர்த்தல், பறித்தல். பிடு → (பிது) → பிதுங்கு → பிதுக்கு → பிதுக்கம். பிதுங்குதல் = பெயர்தல், பெயர்ந்து வெளிவெருதல். (மு. தா. 261) பிதுங்கு (த.வி.) - பிதுக்கு (பி.வி.) பிதுக்கு → பிதக்கு]

பிதகம் *pidagam,* பெ. (n.) இடி (யாழ். அக.). thunder bolt.

[பிள் → பிடு → பிடுகு = வானம் வெடிப்பது போன்ற இடி (வே.க.3.111) பிடுகு → பிதுகு → பிதகம்]

த. பிதகம் > Skt. bhidaka

பிதரண்டம் *pidarandam,* பெ. (n.) ஊமத்தை; thorn-apple.

பிதரம் *pidaram,* பெ. (n.), **1.** பிளவு, வெடிப்பு; split. **2.** நாணல்; a weed.

[பிள் → பிடு. பிடுதல் = இரண்டாக அல்லது துண்டு துண்டாகப் பிளத்தல். பிடு → பிது → பிதுரம் → பிதரம்]

பிதரிசனம் *pidarišanam,* பெ. (n.) எட்டி மரம்; a tree.

பிதலாபம் *pidalābam,* பெ. (n.) சிவதை வேர்; turpeth root.

பிதவி *pidavi,* பெ. (n.) **1.** அடிமை; devoted servant. (இ.வ.) **2.** கீழ்வேலைக்காரன் (வின்.); menial servant. **3.** வேண்டுநர் (மனுதார்); petitioner.

பிதளை *pidaḷai,* பெ. (n.) எண்ணெய் ஏனம் (பாத்திரம்) (யாழ். அக.); vessel for oil.

பிதற்றர் *pidarrar,* பெ. (n.) பிதற்றுவோர்; babblers, bluffers. '***பின்னருஞ்சிலருண்டோ பிதற்றரே***' (திருவாலவா. **34, 19.**).

[பிதற்று → பிதற்றர்]

பிதற்றல் *pidarral,* பெ. (n.) வாய் பிதற்றல்; blabbering as a result of delirium.

[பிதற்று → பிதற்றல்]

பிதற்று[1]–தல் *pidarru-,* **5** செ. குன்றாவி. (v.t.) **1.** அறிவின்றிக் குழறுதல்; to chatter, babble, prate. இவை பிதற்றுங்கல்லாப் புன்மாக்கள்' (நாலடி, 45) **2.** இசிவு நோய் அவதியால் (அவசத்தால்) விடாது பேசுதல். to rave, as delirious person. 'ஓர்நாண் முற்றும் பிதற்றினானே' (சீவக. **1082**).

[பித்து = மயக்கம், தலைக்கிறுக்கு. பித்து → பிதற்று. பிதற்றுதல் = உளறுதல் (மு. தா. 10)]

பிதற்று[2] *pidarru,* பெ. (n.), அறிவின்றிக் குழறுகை (சூடா.); foolish talk, chatter, babble, incoherent talk. '***பித்தனா னென்னும் பிதற்றொழிவதென்நாளோ***' (தாயு. எந்நாட். **1120.**).

[பித்து → பிதற்று]

பிதா *pidā,* பெ. (n.) பெருநாரை (பிங்.); cyrus crane.

பிதாநாழி *pidānāḻi,* பெ. (n.) பழைய வரிகை; an ancient tax (S.I.I. ii, **531**,n.).

பிதாபுட்பி *pitāputpi,* பெ. (n.) பேராமுட்டி; pavouia odorata.

பிதாரி *pidāri,* பெ. (n.) பேராமல்லி; a species of jasmine.

பிதாரிகை *pidārigai,* பெ. (n.) நிலப்பூசனிக் கிழங்கு வடிவுள்ள பால்வினைக் கட்டி; a hard round abscess as large as a full grown gourd.

பிதானி *pidāṉi,* பெ. (n.) செம்முள்ளி; red thorny herb.

பிதி *pidi,* பெ. (n.) இடி(யாழ்.அக.); thunder.

[பிள் → பிடு → பிடுகு = இடி. பிள் → பிடு → பிதி]

பிதிகம் *pidigam,* பெ. (n.) பெருங்குரும்பை (மலை.); species of bow-string hemp

பிதிர்[1]—தல் *pidir-,* 4 செ.கு.வி. (v.i.) 1. உதிர்தல்; to be separated into small particles; to fall to powder. *'பிதிர்ந்து போயின பிறங்கல்க ளேழும்'* (கந்தபு. யுத்தகாண். முதனாட். 50.). 2. சிதறுதல்; to become scattered. *'பிதிர்ந்தெழுந்தார்த்த பொடிக்குழீகுகி* (கம்பரா. பிரமாத். 100). 3. கிழிதல் (வின்.); to be torn. *"சீலை பிதிர்ந்து போயிற்று'* 4. பரத்தல்; to spread. பிதிரொளித் தவிசின் (தணிகைப்பு. வீராட்.78). 5. மனங்கலங்குதல்; to be bewildered. *'பிதிரு மனமிலேன்'* (திவ். இயற். நான் மு. 84.).

[புள் → பிள் → பிரி → பிரிவு → பிரிவினை. பிள் → பிடு → பிடுங்கு. பிடுங்குதல் = பெயர்த்தல், பறித்தல். பிடு → (பிது) → பிதுங்கு → பிதுக்கு → பிதுக்கம். பிதுங்குதல் = பெயர்தல், பெயர்ந்து வெளிவருதல். (பிது) → பிதிர். பிதிர்தர் = பெயர்தல், (மு, தா. 261)]

பிதிர்[2]—த்தல் *pidir-,* 11 செ. கு. வி. (v.t.) உதிர்த்தல்; to scatter, spread.

[(பிது) → பிதிர். பிதிர்தல் → பிதிர்த்தல்]

பிதிர்[3] *pidir,* பெ. (n.) பூந்தாது (பிங்.); pollen of a flower. 2. பொடி(பிங்.); powder. 3. திவலை (பிங்.); drop of water. 4. துண்டம்; piece. 'மதிப்பிதிர்க் கண்ணியீர்' (தேவா. 599, 4). 5. பொறி; spark. *'கொல்லனெறிபோற் பிதிரின்'* (நற். 13). 6. காலநுட்பம், (பிங்.); moment of time. 7. கைந்நொடி (வின்.); snap of the finger.

[புள் → பிள் → பிடு. பிடுதல் = கையாற் பிளத்தல். பிள் → பிளவு = துண்டு. பிடு → பிது → பிதிர். பிதிர்தல் = பிண்டு உதிர்தல் (மு.தா. 259) பிதிர் = உதிரும் மகரந்தம், சிதறிப் பரவும் நீர்த் திவலை, துண்டு, பொறி, சிறுகாலவளவு, கைந்நொடி]

பிதிர்[4] *pidir,* பெ. (n.) 1. விடுகதை; conundrum, puzzle. 2. *'கதைகளும் பிதிர்களு மொழிவார்'* (கம்பரா. ஊர்தேடு. 139.). 3. வியப்புச் செயல்; acts of wonder. *'பின்னார்தான் செய்யும் பிதிர்'* (திவ். இயற். நான்மு. 83.). 4 . சேறு; mud. *'மருப்பிற் பிதிர்படவுழக்கி'* (கல்லா. 62, 10.).

[புள் → பிள் → பிய் → (பியி) → பிசி = பிய்ப்பதுபோல் விடுக்கும் விடுகதை. பிள் → பிடு → பிது → பிதிர் = விடுகதை. (மு. தா. 262)]

பிதிர்போக்கு—தல் *pidir-pōkku-*, 5 செ. குன்றாவி. (v.t.) ஊட்டுதற்கு முன்முலைப்பாலின் முதற்றிவலைகளை வெளியேற்றுதல்; to press out milk before suckling the child. '*உண்ணா முலைப்பால் பிதிர் போக்க*' (அரிசமய. பராங்குச. பக். 92.).

[பிதிர்[3] + போக்கு—,]

பிதிரம் *pidiram*, பெ. (n.) இடி (யாழ்.அக.); thunderbolt.

[பிள் → பிடு → பிடுகு = இடி. பிள் → பிடு → பிதி → பிதிரம்]

பிதிரா *pidirā*, பெ. (n.) *பிதிகம்* பார்க்க; see *piḍigam*.

பிதிராதகம் *pidirādagam*, பெ. (n.) சுண்டைக்காய்; turkey berry.

பிதிலி *pidili*, பெ. (n.) பிதளை (தஞ்சை.); oil-vessel.

பிது *pidu*, பெ. (n.) பெருமை; greatness. '*பிதுமதி வழிநின்று*' (திருவிசைப் திருமாளி 2, 6.)

[புல் → பில் → பிரு → பெரு → பெருமை (மு.தா.217). புல்→ பல் → பது → பிது]

பிதுக்கம் *pidukkam*, பெ. (n.) 1. பிதுங்குகை; protruding,projecting. 2. பிதுக்கப்பட்டது (வின்.); protuberance. 3. கட்டடத்தில் பிதுங்கி யிருக்கும் பாகம் (கட்டட. நாமா. 14.); offset. 4. விதை வீக்கம் (அண்டவாதம்) (இ.வ.); hernia.

[பிள் → பிடு → பிடுங்கு. பிடுங்குதல் = பெயர்தல்,பறித்தல். பிடு → (பிது) → பிதுங்கு → பிதுக்கு → பிதுக்கம் (மு. தா. 261)]

பிதுக்கு[1]—தல் *pidukku-*, 5 செ. குன்றாவி. (v.t.) 1. பிதுங்கச் செய்தல்; to press out, squeege out, as pus or pulp, to express. "பீட்பிதுக்கி" (நாலடி. 20). 2. உப்பும்படி செய்தல் (வின்.); to blow up, as a bladder, to puff out, as the cheeks.

க. கிதுக்கு; தெ. பிதுகு; பட. பிசுக்கு

[புள் → பிள் → பிடு → பிடுங்கு. பிடுங்குதல் = பெயர்த்தல், பறித்தல். பிடு → (பிது) → பிதுங்கு → பிதுக்கு. (மு. தா. 261)]

பிதுக்கு[2] *pidukku*, பெ. (n.) பிதுங்கச் செய்கை (கொ. வ.); squeezing out, pressing out.

[பிதுக்கு—தல்→ பிதுக்கு]

பிதுக்குப்பருப்பு *pidukku-p-paruppu*, பெ. (n.) நீரில் ஊறவைத்துத் தோலைப் பிதுக்கும் தன்மையுடன் காணப்படும் பருப்பு; cereals that require soaking to remove its scales

[பிதுக்கு + பருப்பு]

பிதுக்கை *pidukkai*, பெ. (n.) உள்ளீடு வெளிப்படுகை; bulging.

[பிது → பிதுங்கு → பிதுக்கம் → பிதுக்கை]

பிதுங்கல் *pidungal*, பெ. (n.) வெளிவரக் காணல்; protruding of bulging as in swelling or abscess.

[பிது → பிதுங்கு → பிதுங்கல். 'அல்' தொ. பெ. ஈறு]

பிதுங்கு–தல் *pidungu-,* 5 செ. கு. வி. (v.i.) 1. அமுக்குதலால் உள்ளீடு வெளிக் கிளம்புதல்; to protrude, bulge, shoot out, gush out, to be expressed. "கதிர் முடியுங் கண்ணும் பிதுங்க வூன்றி" (தேவா. 56, 10). 2. சுவரிற் செங்கல் வெளிநீண்டிருத்தல்; to jut out beyond the plumb-line, as bricks in a wall. 3. ஒலித்தல் (வின்.); to sound.

[புள் → பிள் → பிரிவு → பிரிவினை. பிள் → பிடு → பிடுங்கு. பிடுங்குதல் = பெயர்த்தல், பறித்தல். பிடு → (பிது) → பிதுங்கு. பிதுங்குதல் = பெயர்தல், பெயர்ந்து வெளிவருதல் (மு. தா. 261)]

பிதுர்க்கத்தரி *pidur-k-kattari,* பெ. (n.) முள்கத்தரி; thorny brinjal.

பிதுர்ரோகணி *pidur-rōgaṇi,* பெ. (n.) கடைச்சரக்கு மருந்து; a bazaar drug.

பிதுரேகமாசி *pidurēgamāši,* பெ. (n.) நாரை; a bird-heron.

பிந்ததாகு *pindadāgu,* பெ. (n.) தேவதாரு மரம்; a kind of pine tree.

பிந்தபாலம் *pindapālam,* பெ. (n.) *பிண்டி பாலம்* பார்க்க (யாழ். அக.); see *piṇḍi pālam.*

[பிண்டிபாலம் → பிண்டபாலம் → பிந்தபாலம்]

பிந்திய *pindiya,* பெ.அ. (adi.) *பிந்தைய* பார்க்க; see *pindaiya*.

[பின் → பிந்து → பிந்திய]

பிந்தியகாலம்[1] *pindiya-kālam,* பெ. (n.) முதுமைக் காலம்; old age.

[பிந்திய + காலம்]

பிந்தியாகாலம்[2] *pindiyā-kālam,* பெ. (n.) சாயுங்காலம் (யாழ். அக); evening.

[பிந்து → பிந்தியா + காலம்]

பிந்தினதாரம் *pindiṉadāram,* பெ. (n.) முதன் மனைவிக்குப் பின் மணஞ் செய்து கொண்ட மனைவி; wife other then the first.

[பிந்து → பிந்தின + தாரம்]

Skt. dhārin > த. தாரம்

பிந்து–தல் *pindu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. பின்னால் செல்லுதல், பின்னாதல்; to go behind, to be behind, to fall in the rear. 2. கீழாழல்; to go down, as in a class, to happen subsequently. 3. பிறப்பு, தோற்றம் ஆகியவற்றில் காலத்தால் பிந்தியதாதல்; to be subsequent in time, birth or origin. 4. தாழ்தல்; to be inferior in rank, etc., 5. விரைவு குறைதல்; to be backward, tardy, slow to loiter, delay, lag, to lose time, as a clock or watch. பிந்து காவினர் (கம்பரா. கிங்கர. 55).

[பின் → பின்னம் → பின்னர். பின் → பின்னே. பின் → பின்பு. பின் → பின்று → பிந்து (மு. தா. 293)]

பிந்துகு *pindugu,* பெ. (n.) மருந்துப் பருப்பு வகை; a nut, Unani drug.

பிந்தைய *pindaiya,* பெ.அ. (adj.) (காலத்தால்) பிந்திய; later (in time). அவரின் பிந்தைய படைப்புகள் எளிய நடையில் இருக்கின்றன. (உ.வ.).

[பின் → பிந்து → பிந்தைய]

பிந்துமதி *pindu-madi,* பெ. (n.) யாப்பு வகை (யாப். வி.); (poet.) a kind of verse.

பிப்பரமரம் *pippara-maram,* பெ. (n.) கிணற்றில் நின்று நீரிறைப்பதற்காக அதனுட் குறுக்காக வைக்கப்படும் மரம் (இ. வ.); plank across a well for standing on, while bailing water.

பிப்பலம்² *pippalam,* பெ. (n.) புல்வகை; a kind of grass.

பிப்பலி¹ *pippali,* பெ. (n.), திப்பலி (மலை); long pepper.

க., து. பிப்பலி

[திப்பிலி → பிப்பிலி→பிப்பலி]

pippali, long Gt. (p. 519) takes the word to be pippala and explains it by 'great, excellent fruit'. D. piri being great. Upon this derivation not much dependence can be placed. A. D. term of pippali is tippali. if this could be the original form, D. tin, irritation, might be thought of, in which case however the leading idea could scarcely have been taste with which tin does not appear to be connected (KKED. xxiv).

பிப்பலி² *pippali,* பெ. (n.) ஆனை நெருஞ்சில்; thorny shrub.

பிப்பாலசம் *pippālašam,* பெ. (n.) ஆனையறுகு வகை; species of grass.

பிப்பிரியம் *pippiriyam,* பெ. (n.) நீர்க்கடம்பு மரம்; a tree-water kaḍamba.

பிப்பிலிகை *pippiligai,* பெ. (n.) *பிப்பலம்* பார்க்க; see *pippalam.*

மறுவ. பிப்பிலம்

பிப்பிலிசிகரி *pippilišigari,* பெ. (n.) நாயுருவிச் செடி; a herb-achyranthes aspear.

பிப்பிலிமூலம் *pippilimūlam,* பெ. (n.) மருந்திற்குப் பயன்படும் திப்பலி வேர்; long pepper root, used for medicinal purpose.

[பிப்பிலி + மூலம். திப்பிலி → பிப்பிலி]

பிப்பிலியத்தி *pippili-y-atti,* பெ. (n.) 1. பெருநெருஞ்சில்; a large thistle. 2. நெருஞ்சிற் கொடி; a small creeper.

மறுவ. யானை நெருஞ்சில்

பிப்பீலிகம் *pippīligam,* பெ. (n.) பொன்; gold.

பிய்¹—தல் *piy-,* 4 செ. கு. வி. (v.i.) 1. கிழிதல்; to be tattered, torn off, torn into bits as leaf or cake. 2. பிரிந்து போதல்; to be drawn apart, loosened, parted, separated. 3. பஞ்சு முதலியன பன்னப்படுதல் (வின்.); to be carded, as cotton. 4. ஊடறுதல் (யாழ்ப்.); to be torn open, as hedge. 5. சிதைவுறுதல்; to be put to rout, as an army.

[புள் → புய்.புய்த்தல் = பிரித்தல், பிடுங்குதல். புய் → பிய். (மு. தா. 261)]

பிய்²—த்தல் *piy-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கிழித்தல் (வின்.); to rip, tear, pluck off, rend. 2. வேறாகுமாறு பிரித்தல்; to separate into parts. 3. பஞ்சு முதலியன பன்னுதல்; to card or pick cotton. 4. இலை முதலியவற்றைச் சிதைத்தல்; to break in pieces, as thin cakes or wafers; to tear into small bits, as paper or leaves. 5. பிடுங்குதல்; to pluck, break or pinch off, pull out. பேயு "நாயும வருடலம் பிய்த்துத் தின்ன" (உத்தாரா. திருவோல. 24). 6. ஊடறுத்தல் (யாழ்ப்.); to break through a hedge. 7. வருத்துதல்; to disturb, trouble.

[புள் → புய். புய்த்தல் = பிரித்தல், பிடுங்குதல். புய் → பிய். (மு. தா. 261)]

பிய்த்துக்காட்டு—தல் *piyttu-k-kāṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) விளங்கும்படி தனித்தனி யெடுத்துக்காட்டிச் சொல்லுதல், to explain, analyse.

[பிய் → பிய்த்து + காட்டு–,]

பிய்வேலம் *piyvēlam,* பெ. (n.) பீக்கருவேல மரம், மரவகையுளொன்று; black babul tree.

பியந்தை *piyandai,* பெ. (n.) மருதப்பண் வகை (சூடா); a melody type of marudam class.

பியந்தைக்காந்தாரம் *piyandai-k-kāndāram,* பெ. (n.) மருதப்பண் வகை(தேவா.); a melody-type of marudam class.

[பியந்தை + காந்தாரம்]

பியர் *piyar,* பெ. (n.) பெயர்; name, appellation, designation, epithet.

ம. பியர்

[பெயர் → பியர். (கொ. வ.). பிள் → பிய் → பெய் → பெயல். பெய் → பெயர்]

பியல் *piyal,* பெ. (n.) பிடர்; nape of the neck. "புலித்தோல் பியற்கு மிட்டு" (தேவா. 186, 4).

க. பெகல், தெகலு; து. புகெலு, புகெலு,புக்கெல்; கோத. பெய்ள், பெய்ல்; கூ. பகொரி; குரு. பக்ரா.

[பின் → பின்பு. பின் → பின்னு → பிந்து. (மு.தா.293) பின் → (பிந்) → பிய் → பியல்]

பியாரம் *piyāram,* பெ. (n.) ஆடுதின்னாப் பாளை (சங். அக.); worm-killer.

பிரக்கெந்தம் *pirakkendam,* பெ. (n.) *பியாரம்* (சங். அக.) பார்க்க; see *piyāram.*

பிரகுடி *pirakuḍi,* பெ. (n.) காட்டுமல்லிகை (மூ. அ.); wild jasmine.

பிரசாரம்² *piraśāram,* பெ. (n.) வேங்கை (மலை); East Indian tino.

பிரசாலம் *piraśalam,* பெ. (n.) வீணைத்தண்டு (யாழ். அக.); the neck of the viṇai.

பிரசுரம் *piraśuram,* பெ. (n.) மிகுதி (இலக். அக.); immenseness.

பிரட்டம்¹ *piraṭṭam,* பெ. (n.) முதன்மையானது. (யாழ். அக.); that which is best or foremost.

பிரட்டம்[2] *pirattam,* பெ. (n.) பொரித்தது (யாழ். அக.); that which is fried.

மறுவ. வறுவல், பிரட்டல்

[புரள் → புரட்டு. புரட்டுதல் = ஒன்றைத் திருப்புதல். புரட்டு → புரட்டி. தோசை புரட்டி = தோசை திருப்பி. புரட்டு → புரட்டல் = புரட்டிச் சமைக்குங்கறி (மு.தா.231). புரட்டல் → புரட்டல் → புரட்டம்]

பிரட்டம்[3] *pirattam,* பெ. (n.) தள்ளுண்டது (யாழ். அக.); that which is fallen or cast away.

[புரள் → புரட்டு → புரட்டம் → பிரட்டம்]

பிரட்டம்[4] *pirattam,* பெ. (n.) பொரிக்கறி; fried vegetables.

மறுவ. பொரித்த கூட்டு

[புரள் → புரட்டு → புரட்டம் → பிரட்டம்]

பிரட்டல் *pirattal,* பெ. (n.) *புரட்டல்* பார்க்க; see *purattal.*

[புரள் → புரட்டு → புரட்டல் = குழம்புங் கூட்டுமின்றிக் கட்டியாகச் சமைத்த கறி வகை. (வே. க.3, 94). புரட்டல் → பிரட்டல்]

பிரட்டன்[1] *pirattan,* பெ. (n.) நெறியினின்று வழுவினவன்; one who has strayed from virtue. '*பிரட்டரைக் காணா கண்*' (திருவிசை. திருமாளி. 4, 3.),; (S.I.I.iii.66)

[புள் → புரு → புரள். புரள்தல் = சொல் மாறுதல். புரள் → புரட்டு → புரட்டன். (மு. தா. 234.) புரட்டன் → பிரட்டன்]

பிரட்டன்[2] *pirattan,* பெ. (n.) ஏமாற்றுக்காரன் (கொ.வ.); deceitful person.

[புரள் → புரட்டு → பிரட்டன். புரட்டன் → பிரட்டன்]

பிரட்டி *piratti,* பெ. (n.) *பிரட்டை* பார்க்க; see *pirattai.*

[பிரண்டை → பிரட்டை → பிரட்டி]

பிரட்டிக்கீரை *pirattikkīrai,* பெ. (n.) வயிற்றுளைச்சலுக்குப் பயன்படும் கீரை; a leaf used for drysenteric complaints.

[புரட்டிக்கீரை → பிரட்டிக்கீரை]

பிரட்டு *pirattu,* பெ. (n.) புரட்டு; deceit.

மறுவ. வஞ்சகம், ஏய்ப்பு ஏமாற்று

ம. பிரட்டு
[புரள் → புரட்டு → பிரட்டு = ஒன்றைப் புரட்டி அதன்வெளிப் பக்கத்தை மறைத்து அடிப்பக்கத்தைக் காட்டுவதுபோல் உண்மையை மறைத்துப் பொய்யை உண்மையாகக் காட்டுகை.]

பிரட்டுக்கல் *pirattukkal,* பெ. (n.) மஞ்சள் நிற புள்ளிகளையுடைய மட்டமான வயிரக்கல்; one of the inferior varieties of diamonds with yellow specks.

[புல் → புர் → புரள் → புரளி = பொய், வஞ்சனை. புரள் → புரட்டு. புரட்டுதல் = சொற்பொருள்திரித்தல், வஞ்சித்தல். (வே. க. 3.94) புரட்டு → பிரட்டு + கல்]

பிரட்டுங்கல் *pirattuṅkal,* பெ. (n.) பேரோசினை; a mineral.

பிரட்டுருட்டு *piraṭṭuruṭṭu,* பெ. (n.) பெரும் ஏமாற்றம் (மோசம்); deception. ***'பிரட்டுருட்டிலே யடிக்குங் கொள்ளை'*** **(சரவண. பணவிடு. 89.)**

பட. உருட்டுபெரட்டு

[பிரட்டு + உருட்டு. பு ரள் → பு ரட்டு → பிரட்டு. உருள் → உருட்டு]

எதுகை நோக்கிவந்த மரபிணை மொழி

பிரட்டை[1] *piraṭṭai,* பெ. (n.) **1.** எலிக்காது; rat's ear greens. **2.** ***பிரண்டை*** **(வின்.)** பார்க்க; see *piraṇḍai.*

[பிரண்டை → பிரட்டை]

பிரட்டை[2] *piraṭṭai,* பெ. (n.) மருந்து செடி; a herbal plant.

*[புரள் → புரண்டை → பிரண்டை = திருகலான கொடிவகை. **(வே.க.3,94.)** புரள் → புரட்டு → புரட்டை → பிரட்டை]*

பிரட்டை[3] *piraṭṭai,* பெ. (n.) திங்கள் தோறும் மகளிர்க்கு உண்டாகும் அரத்தப் போக்கு; menses.

*[புரள் → புரட்டு. புரட்டுதல் = உருட்டுதல், உண்டபின் வயிற்றிற் கோளாறு நேர்தல். வயிற்றைப் புரட்டுகிறது **(உ. வ.) (வே. க. 3, 94)** புரட்டு → புரட்டை → பிரட்டை]*

பிரட்டைக்கீரை *piraṭṭai-k-kiirai,* பெ. (n.) பார்க்க, பெரட்டிக் கீரை (இ. வ.); jewsmallow.

[பிரட்டை + கீரை]

பிரடை *piraḍai,* பெ. (n.) **1.** யாழ் முலியவற்றின் முறுக்காணி (வின்.); plug of a lute. **2.** முறுக்காணி வில்லை (கொ.வ); screw-nut.

க. பிரடெ: **தெ.** பிரட

*[புள் → புரு → புரள் → புரளை → புரடை → பிரடை. **(மு. தா. 242.)**]*

பிரண்டை *piraṇḍai,* பெ. (n.) கொடி வகை; square-stalked vine,

ம. பிரண்ட, பிரண்டி, பரண்ட

*[புரு → புரி = முறுக்குண்டநூல், கயிறு. புரிதல் = முறுகுதல். புரு → புரள் → புரண்டை → பிரண்டை = புரண்டிருக்கும் அல்லது முறுக்குண்டிருக்கும் கொடி **(மு. தா. 242)**]*



பிரணயகலகம் *piraṇaya-kalagam,* பெ. (n.) ஊடல்; bouderie.

பிரத்தம் *pirattam,* பெ. (n.) எதிர்பாரா இடையூறு, பேரிடர், இடுக்கண் விழுமம் **(பிரமாதம்.) (துக்கயாகப். 435.)**; mishap, danger, calamity.

பிரததி *piratati,* பெ. (n.) படர்கொடி **(உரி. நி.)**; climber, creeping plant.

பிரப்பங்கிழங்கு *pirappan-kilangu,* பெ. (n.) கிழங்கு வகை; tuber of cyperus.

[பிரம்பு → பிரப்பு + கிழங்கு]

பிரப்பங்குச்சி *pirappankucci,* பெ. (n.) *பிரம்புக்கழி* பார்க்க; see *pirambu-k-kali.*

[பிரப்பம் + குச்சி]

பிரப்பங்கூடை *pirappan-kūdai,* பெ. (n.) பிரம்பினாற் செய்த கூடை; rattan basket.

[பிரம்பு → பிரப்பு + கூடை]

பிரப்பங்கோரை *pirappan-kōrai,* பெ. (n.) கோரை வகை; a sedge, scirpus.

[பிரம்பு → பிரப்பு + கோரை]

பிரப்பம்பழம் *pirappam-palam,* பெ. (n.) பிரம்படி (பிரம்பின் பழம்); lit., the fruit of the cane, beating.

[பிரம்பு → பிரப்பு + பழம்]

பிரப்பம்பாய் *pirappam-pāy,* பெ. (n.) பிரம்பினாற் செய்த பாய்; rattan mat.

[பிரம்பு → பிரப்பு + பாய். பா → பாய் = பரந்த தடுக்கு]

பிரப்பரம் *pirapparam,* பெ. (n.) ஒருவகை உருண்டையான அரம்; round file, tapering towards the end.

[பிரம்பு → பிரப்பு + அரம். உர் → அர் → அரம்]



பிரப்பரிசி *pirappariši,* பெ. (n.) *பிரப்பு,1* பார்க்க; see *pirappu1.*

[பிரப்பு + அரிசி. அரி → அரிசி]

பிரப்பன் *pirappan,* பெ. (n.) பூவத்தி; longan, (L.).

பிரப்பு *pirappu,* பெ. (n.) **1.** குறுணிமேனி கொள்கலங்களிற் பரப்பிவைக்கும் படையல் பொருள்(பிங்.); food of various kinds or rice placed before a deity in receptacles of the capacity of a kuruṇi. '*பல் பிரப்பிரீஇ*' (திருமுரு. **234.**) **2.** குறுணியளவான பொருளைக் கொள்ளும் ஏனம்(பாத்திரம்) (பெருங். உஞ்சைக் குறிப்புரை, பக். **523.**); a vessel of the capacity of a kuruṇi.

[பரம்பு → பிரம்பு → பிரப்பு = பிரப்பினால் முடையப்பட்ட கூடை, அக்கூடையின் அளவு, அவ்வளவை ஒத்த ஏனம்.]

பிரம்படி *pirampadi,* பெ. (n.) பிரம்பினால் அடிக்கும் தண்டனை வகை; beating with a cane, a mode of punishment. பிரம்படிக்கு அஞ்சி பள்ளிக்குச் செல்லவில்லை.

[பிரம்பு + அடி. அள் → அண் → அடு → அடி]

பிரம்மதண்டி


பிரை சாகோடகா


பிரண்டை


பீனாரி சங்கன் குப்பி

பிரம்படிக்காரர் *pirampaḍi-k-kārar,* பெ. (n.) பிரம்பு கொண்டு தண்டிக்கும் அரசின் ஏவலாளர்; men entrusted by a king with the duty of caning offenders. '*வெய்ய சொல்லுடைப் பிரம்படிக்காரரை விடுத்தான்*' (திருவாலவா. 28, 3.)

[பிரம்படி + காரர்]

பிரம்பம் *pirambam,* பெ. (n.) கொவ்வை (அக.நி.); common creeper of the hedges.

பிரம்பு *pirambu,* பெ. (n.) 1. நீண்ட ஒல்லியான தண்டுப்பகுதியைக் கொண்டதும் பனை வகையைச் சார்ந்ததுமான கொடிவகை; rattan. 2. கொடிவகை; switchy rattan. 3. மூங்கில் (அரு. நி. 397.); bamboo. 4. *பிரப்பு* 2 (பிங்.) பார்க்க; see *pirappu*-2. 5. *பிரப்பரிசி*(அக. நி.) பார்க்க; ; see *prapparisi.* 6. கடல் (அக. நி.); sea. 7. நெய் (அக. நி.); ghee. 8. தேர்முட்டி (பிங்.); raised platform with steps, giving access to a temple car. 9. வரம்பு (சது.); ridge in the field. செய்வரம்பு திருத்தா ரேற்றிசைவரம்பு திருந்தாதே.

மறுவ. சூரல், வாஞ்சி, வேத்திரம்

ம. பெரம்பு, புரம்பு, புனம்பு; க., து. பெத்த; தெ. ப்ரேமு, ப்ரப்ப, ப்ரப்பிலி; பட. பெத்து

[பரம்பு → பிரம்பு]

பிரம்புக்கழி *pirambu-k-kaḻi,* பெ. (n.) பிரம்புக்கோல்; rattan stick

[பரம்பு + கழி]

பிரம்புக்கொன்றை *pirambu-k-konṟai,* பெ. (n.) கொன்றை மரவகை; siamese, tree

[பிரம்பு + கொன்றை]

பிரம்புக்கோல் *pirambu-k-kōl,* பெ. (n.) *பிரம்புக்கழி* பார்க்க; see *pirambu-k-kaḻi.*

[பிரம்பு + கோல்]

பிரம்புகட்டு – தல் *pirampukaṭṭu-,* 2. செ.குன்றாவி. (v.t.) ஏனங்(பாத்திரங்) களுக்கு விளிம்பிலே வளையங்கட்டுதல்; to fit up with a rim, as a vessel. '*விளிம்பு பிரம்பு கட்டின வட்டிலில்*' (சீவக. 2100, வரை)

[பிரம்பு + கட்டு–, கள் → கட்டு]

பிரம்புத்தடுக்கு *pirambu-t-taḍukku,* பெ. (n.) பிரம்பினாற் செய்த தட்டி; rattan-blinds (C.E.M.)

[பிரம்பு + தடுக்கு. தள் → தடு → தடை. தடு → தடுப்பு. தடுதடுக்கு = சிறுதட்டி போன்றபாய்]

பிரம்புப்பனை *pirambu-p-paṉai,* பெ. (n.) *பிரம்புக்கழி* பார்க்க; see *pirambu-k-kaḻi.*

[பிரம்பு + பனை.]

பிரம்புப்பின்னல் *pirambu-p-piṉṉal,* பெ. (n.) தட்டிவகை (புதுவை.); a kind of screen.

[பிரம்பு + பின்னல். பின்னு → பின்னல். 'அல்' தொ. பெ. ஈறு. 'பின்னல்' என்னும் தொழிற்பெயர் பின்னப்பட்ட பொருளுக்கு ஆகிவந்துள்ளது.]

பிரம்புரி *pirampuri,* பெ. (n.) ஒரு வகை நெல்; a kind of paddy. '*பெரிய செந்நெற் பிரம்புரி கெந்தசாலி*' (தேவா. 700, 7.)

பிரமதண்டி *piramataṇḍi,* பெ. (n.) பேயத்தி (நாமதீப. 325); devil fig.

பிரவிடை *piraviḍai,* பெ. (n.) *பிரவுடை* (சங்.அக.) பார்க்க; see *piravuḍai.*

[பிரவுடை → பிரவிடை]

பிரவுடை *piravuḍai,* பெ. (n.) 1. பக்குவமான பெண் (நாமதீப். 181.); adolescant girl. 2. 31 அகவை முதல் 55 அகவை முடியவுள்ள பெண்பாற் பருவம்; stage of growth of a woman between her thirty first and fifty-fifth year. "தரித்தவாலை தருணை பிரவுடை விருத்தையாகும் வியன்பருவங்களின்" (கந்தபு. இந்திரபுரி. 33).

[புல் → பொல்லு = தடி. புள் → (பிள்) → பிண்டு → பிண்டம் = திரட்சி. புல் → புர → பிர + உடை - பிரவுடை = திரண்ட பருவத்தினள், அத்திரட்சி நீடித்திருக்கக் கூடிய பருவம்]

பிரவையாடு *piravai-y-āḍu,* பெ. (n.) ஆடுவகை (எங்களூர், 168.); a kind of goat.

[புருவை → பிரவை + ஆடு]

பிரள்(ளு)–தல் *piraḷ(ḷu)-,* 2 செ. கு. வி. (v.i.) *புரள்–தல்* (கொ. வ.) பார்க்க; see *puraḷ-,*

[புரள் → பிரள்–,]

பிரளி[1] *piraḷi,* பெ. (n.) *புரளி* பார்க்க; see *puraḷi.*

[புரளி → பிரளி]

பிரளி[2] *piraḷi* பெ. (n.) குழந்தை நோய் வகை; a children's disease.

[புரள் → பிரள் → பிரளி (வேக.3, 95)]

பிரற்றல் *piraṟṟal,* பெ. (n.) எடுத்தலோசை (பிங்.); loud tone.

[பிரற்று → பிரற்றல்]

பிரற்று–தல் *piraṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) உரத்து ஒலியெழுப்புதல்; to utter in a loud and emphatic tone. "பிரற்றி யேங்கினர் சிலர்" (அரி.சமய. பரகா. 38.).

[உரறுதல் = உரத்து முழங்குதல். உரறு → அரறு = பேரொலி செய்தல். உரறு → (இரறு) → பிரறு → பிரற்று.]

பிரா *pirā,* பெ. (n.) முசுமுசுக்கை; bristly bryony. (M.M.)

பிராங்குடி *pirāṅguḍi,* பெ. (n.) திருவாரூர் மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tiruvārūr dt.

[பிரான் + குடி]

பிராட்டி *pirāṭṭi,* பெ. (n.) 1. தலைவி; lady, mistress. முல்லைப் பிராட்டி (திவ். நாய்ச். 10, 4). 2. தேவி; goddess. 'எம் பிராட்டி திருவடிமேற் பொன்னஞ் சிலம்பிற் சிலம்பி' (திருவாச. 7, 16).

[புல் → பல் → பரு → பெரு → பெருமை பெரு → பெருமான். பெருமான் (ஆ. பா.) – பெருமாட்டி (பெ. பா.). பெருமாட்டி → பிராட்டி]

பிராமுட்டி *pirāmuṭṭi,* பெ. (n.) புறாமுட்டி (சங்.அக.); parrakeet-bur.

[புறாமுட்டி → பிராமுட்டி]

பிராய் *pirāy,* பெ. (n.) மரவகை; paper tree.

பிராறு *pirāṟu,* பெ. (n.) **1.** நிறைபுனல் (திவா.); full river or tank. **2.** நீரூர் பாதை (நாமதீப. **534.**); water course.

[பெருகு + ஆறு - பெருகாறு → பிராறு]

பிரான் *pirāṉ,* பெ. (n.) **1.** தலைவன்; Lord, king, chief, master. *'கோவணம் பூணுமேனும் பிரானென்பர்'* (தேவா. **640, 7.**) **2.** கடவுள்; god. *'பிரான் பெருநிலங் கீண்டவன்'* (திவ். திருவாய். **1, 7, 6.**) **3.** சிவபெருமான் (சது.); Šivaṉ.

ம. பிரான்

[புல் → பல் → பரு → பெரு → பெருமை. பெரு → பெருமான் → பிரான்.]

பிரான்மலை *pirāṉ-malai,* பெ. (n.) பாண்டி நாட்டிலுள்ள சிவத்தலங்களுள் ஒன்று; an ancient Šivaṉ shrine in pāṇḍya country.

[பிரான் + மலை. பெரு → பெருமான் → பிரான்]

பிரி¹–தல் *piri-,* **3** செ. கு. வி. (v.i.) **1.** கட்டவிழ்தல்; to become disjoined or parted, unfastended; **2.** பகுக்கப் படுதல்; to be split, as words into parts. *'பிரிப்பப் பிரியா'* (தொல். சொல். **410.**) **3.** தொடர்பறுதல்; to dissociate. கருத்தடிப்படையில் பிரிந்தோர் பலர் உண்டு (உ.வ.) **4.** வேறுபடுதல்; to vary, as pāl; to disagree, as person. *'உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசைக்கும்'* (தொல். சொல். **4.**) **5.** முறுக்கவிழ்தல்; to be untwisted, as a rope, to be ripped or loosened as a seam or texture. **6.** வகைப்படுதல்; to be classified, analysed. *'இருதிணைப் பிரிந்த வைம்பாற் கிளவிக்கும்'* (தொல். சொல். **10**) **7.** தண்டுதல் (வசூலித்தல்) (கொ.வ.); to collect, realise,as a sum of money. *'அவனிடமிருந்து ஒன்றும் பிரியாது'*

ம. பிரியுக; **க.** பிரி.

[புல் → பி ல் → (வில்) → விலகு → விலக்கம். விலகு → விலங்கு. விலங்குதல் → விலகுதல். புள் → புய். புய்த்தல் → பிரித்தல். பிடுங்குதல். புய் → பிய். பிய் → (பெய்) → பெயர் → பெயர்தல் = பிரிதல். விலகுதல். புள் → பிள் → பிரி (மு. தா. 261) பிளந்த பொருள் வேறாகப்பிரியும்.*]*

pir-i, to divide; also pōḻ, to cleave, and pāl, a portion Comp. Sans. phal-a, to divide; but especially the Latin par-s, a portion; also portio, from the suppositi-tious root por-o or par-o, to apportion, to divide. The Greek por-ō, in the sense of im-parting is doubtless an allied word. (CGDFL. **599**)

பிரி²–தல் *piri-,* **3** செ.குன்றாவி. (v.t.) **1.** விட்டுவிலகுதல்; to part, separate, diverge to quit, depart. *'உவப்பத் தலைக் கூடி யுள்ளப் பிரிதல்'* (குறள். **394.**). **2.** நினைத்தல்; to think of, contemplate. *'யாண்டும் பிரியாது'* (ஆசாரக். **21.**)

ம. பிரிக்க; **கோத.** பிர்ய்

[புள் → பிள் → பிரி (மு. தா. 261)]

பிரி³–த்தல் *piri-,* **11** செ.குன்றாவி. (v.t.) **1.** பிரியச் செய்தல்; to separate, dis-unite, sever; *'பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்'*

(குறள், 187.). 2. வகுத்தல்; (math.) to divide. 3. பகுத்தல்; to split, as words into parts. '*பிரிப்பப்பிரியா*' (தொல். சொல். 410.). 4. முறுக்கவிழ்த்தல்; to untwist, unite, disentangle. 5. புதிர் முதலியவற்றை விடுத்தல்; to solve, unravel, as a riddle; '*இந்தப் பிதிரைப் பிரிக்கவேண்டும்*' 6. கட்டவிழ்த்தல்; to pull to pieces, dismantle, as the thatch of a roof. 7. பங்கிடுதல்; to distribute, portion out.

ம. பிரியுக; க. பிரி, கிரி; கோத. பிர்ச்

[புள் → பிள் → பிரி (மு. தா. 261)]

பிரி⁴ *piri,* பெ. (n.) புரி; twist, strand, wisp.

ம., தெ.புரி; க.புரி, கிரி

[புரி → பிரி]

பிரி⁵ *piri,* பெ. (n.) வெருகு (மலை.); a plant with large leaf, long rooted arum.

மறுவ. மெருகங்கிழங்குச் செடி.

[புரி → பிரி]

பிரிக்கம் *pirikkam,* பெ. (n.) ஒருவகை மருந்துச் செடி; a kind of medicinal herb.

பிரிகதிர்ப்படு-தல் *piri-kadir-p-paḍu-,* 17 செ. கு. வி. (v.i.) கேடுறுதல்; to be scattered, destroyed. '*ஒன்றும் பிரிகதிர்ப் படாமே*'ரக்ஷித்த நம் கண்ணன்' (ஈடு, 2, 2, 1.)

[பிரி + கதிர் + படு–'படு',து.வி]

பிரிகை *pirigai,* பெ. (n.) தொடர்பறுந்த நிலை; isolation.

[பிரி → பிரிகை. 'கை' தொ. பெ. ஈறு]

பிரிச்சல் *piriccal,* பெ. (n.) *பிரிசல்²,* (யாழ். அக.) பார்க்க; see *piriśal².*

[பிரி → பிரிச்சல். 'அல்' தொ. பெ. ஈறு]

பிரிசம் *piriśam,* பெ. (n.) பொருளின் அருமை (வின்.); scarcity, dearth.

[பிரியம் → பிரிசம்]

பிரிசல்¹ *piriśal,* பெ. (n.) *பிரிசம்* (வின்.) பார்க்க; see *piriśam.*

பிரிசல்² *piriśal,* பெ. (n.) 1. பாகம்; (கொ. வ.); division, partition. 2. பிரிந்து கிடக்கும் நிலை (இ. வ.); thread bare or tattered condition.

க. பிரிசு, பிரிசு, பிறிசு, பிறிசு (வேறு வேறாக்கு, தனித்தனியாக்கு)

[பிரி → பிரிசல். 'சல்' தொ. பெ. ஈறு]

பிரிசாரம் *piriśāram,* பெ. (n.) 1. தன்னைப் பாசப் பொருளாகக் காட்டிக் கொள்ளுகை (இ. வ.); making oneself dear; 2. வற்புறுத்துகை (வின்.); urging vehemently.

[பிரியம் + சாரம்]

பிரிசாலம் *piriśālam,* பெ. (n.) *பிரிசாரம் 2* (வின்) பார்க்க; see *piriśāram 2.*

[பிரிசாரம் → பிரிசாலம்]

பிரிசாலம்பிடி—த்தல் *piriśālam piḍi-,* 4 செ. குன்றாவி. (v.t.) வற்புறுத்துதல் (வின்.); to urge vehemently, trouble.

[பிரிசாலம் + பிடி—, 'பிடி' து. வி.]

பிரிசை *piriśai,* பெ. (n.) நாகப்பித்து; pērilāḻam.

பிரிஞ்சான் *piriñjāṉ,* பெ. (n.) ஒரு வகைமீன்; a kind of fish.

பிரித்தாளு—தல் *piritt āḷu-,* 10 செ. குன்றாவி. (v.t.) ஒன்றாக இருப்போரிடையே பிரிவை உருவாக்கி அதனின்று பயன்பெறுதல்; to divide and rule. வெள்ளையர் இந்தியமக்களிடையே பிரித்தாளும் உத்தியைக்கொண்டு ஆண்டனர் (உ.வ.).

[பிரி → பிரித்து + ஆள்—,]

பிரித்துக்கொடு—த்தல் *pirittu-k-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) கூறுகளாக்கிக் கொடுத்தல்; to partition. 'பாகத்தைப் பிரித்துக் கொடுவென அவன் கேட்டான்' (உ.வ.)

[பிரி → பிரித்து + கொடு—, 'கொடு' து.வி.]

பிரித்துணர்—தல் *pirittuṇar-,* 3 செ. குன்றாவி. (v.t.) வேறுபாடு கண்டறிதல், வேறுபடுத்தியுணர்தல்; to discriminate. உணர்வாளர்களையும் போலியர்களையும் முதலில் பிரித்துணர வேண்டும். (உ.வ.)

[பிரி → பிரித்து + உணர்—,]

பிரித்துவை—த்தல் *pirittu-vai-,* 4 செ. குன்றாவி (v.t.) தனித்தனியாக்கிவைத்தல்; to separate into portions. சண்டையிடும் மாடுகளைப் பிரித்து வைக்க வேண்டும் (உ.வ.)

க. பிரிதிடு, கிரிதிடு.

[பிரி → பிரித்து + வை—]

பிரித்தெடு—த்தல் *pirittedu-,* 4 செ. குன்றாவி. (v.t.) சாறு முதலியவற்றைப் பிழிந்தெடுத்தல்; to obtain juice etc. 2. தேர்ந்தெடுத்தல்; to select by separate things. சுவையான பழங்களை முதலில் பிரித்தெடுக்க வேண்டும். (உ.வ.)

[பிரித்து + எடு—,]

பிரிதல் *piridal,* பெ. (n.) உரிப்பொருள் ஐந்தனுள் பாலைத் திணைக்குரிய தலைவன் தலைவியை நீங்கியிருக்கை (தொல். பொ. 14); (agap.) theme of separation of a lover from his lady-love, appropriate to pālai-t-tiṇai, one of five uri-p-poruḷ.

[பிரி → பிரிதல். 'தல்' தொ. பெ. ஈறு]

பிரிதற்கண் *piridaṟkaṇ,* பெ. (n.) கண்ணோய் வகை; an eye disease.

[பிரிதல் + கண்]

பிரிதாள் *piritāḷ,* பெ. (n.) *புலிகட்டை* பார்க்க; see *pulikaṭṭai*

[புரிதாள் → பிரிதாள்]

பிரிதிகி *piridigi,* பெ. (n.) வழுதலை; brinjal plant.

மறுவ. வழுதுணங்காய், கத்தரிக்காய்

பிரிதிரை *piritirai,* பெ. (n.) ஈரலுக்கும், குடலுக்கும், நடுவேயுள்ள சவ்வு, இடையீட்டுச் சவ்வுத்திரை; diaphram.

[பிரி + திரை]

பிரிதிவுநீர் *piridivu-nīr,* பெ. (n.) தண்ணீர் விட்டான் கிழங்கு; water root.

பிரிந்திசை *pirindišai,* பெ. (n.) செய்யுளோசை வகை; a rhythm in verse.

[பிரி → பிரிந்து + இசை]

பிரிந்திசைக்குறள் *pirindišai-k-kuṟaḷ,* பெ. (n.) ஒத்தாழிசைக் கலியுறுப்பினுள் ஒன்றாகிய அம்போதரங்கம் (வீரசோ. பாய். 11, உரை); (poet.) ambōdaraṅgam, one of the seven members of ottāḻišai-k-kalippā.

[பிரிந்திசை + குறள்]

பிரிந்திசைத்துள்ளல் *pirindišai-t-tuḷḷal;* பெ. (n.) பலதளையும் விரவிவரும் கலிப்பா வோசை வகை (காரிகை. செய். 1); (poet.) a kind of rhythm peculiar to kali verse.

[பிரிந்திசை + துள்ளல். துள் → துள்ளல். 'அல்' தொ. பெ. ஈறு]

பிரிந்திசைத்தூங்கல் *pirindišai-t-tūṅgal,* பெ. (n.) பலதளையும் விரவிவரும் வஞ்சிப்பா வோசை வகை (காரிகை. செய். 1, உரை); (poet.) a kind of rhythm peculiar to vañji verse.

[பிரிந்திசை + தூங்கல். தூங்கு → தூங்கல். 'அல்' தொ.பெ.ஈறு]

பிரிந்துபோ-தல் *pirinidu pō-,* செ.கு.வி. (v.i.) சேர்ந்திருக்கும் நிலையிலிருந்து அல்லது உறவுகொண்டிருக்கும் நிலையிலிருந்து விலகுதல்; to be separate to go away (in different directions), to disperse. நண்பர்களைப்பிரிந்து போனதால் ஏற்பட்ட தொல்லை மிகுதி (உ.வ.)

[பிரி → பிரிந்து + போ-, 'போ'. து.வி.]

பிரிநிலை *pirinilai,* பெ. (n.) வேறுபடுத்திக் காட்டும் நிலை (தொல். சொல். 258, உரை); (gram.) exclusion.

[பிரி + நிலை.]

பிரிநிலைநவிற்சியணி *pirinilai-naviṟci-y-aṇi,* பெ. (n.) பெயர்ச்சொற்களுக்கு உறுப்பாற்றல் மற்றொரு பொருளைத் தந்து உரைப்பாதாகிய அணி வகை (அணியி. 97.); (rhet.) a figure of speech in which a noun is given it etymological sense.

[பிரிநிலை + நவிற்சி + அணி. அண் → அணி]

பிரிநிலையெச்சம் *pirinilai-y-eccam,* பெ. (n.) 1. பிரிக்கப்பட்ட பொருள் விளங்க கூறப் பெறாமல் எஞ்சி நிற்கும் தொடரியம் (வாக்கியம்) (தொல். சொல். 431, சேனா.); (gram.) a sentence in which sense of exclusion is implied. 2. தொடரிய (வாக்கிய)த்தில் கூறப்படாது எஞ்சி நிற்குஞ்சொல் (தொல். சொல். 423, தெய்வச்.); (gram.) word or words that are implied in a sentence.

[பிரிநிலை + எச்சம்]

பிரிநிலையேகாரம் *pirinilai-y-ēgāram,* பெ. (n.) பிரிநிலையை உணர்த்தும் ஏகாரம்; suffix having the force of disjunction.

[பிரி + நிலை + ஏ + காரம். பலவற்றுள் ஒன்று பிரிப்பது (இறை.உ)]

பிரிப்பு *pirippu,* பெ. (n.) 1. பிரிவு; separation, division. 2. வேறுபாடு; estrangement. 'மணப்பிரிப் பொன்றின்று' (நாலடி. 189).

[பிரி → பிரிப்பு. 'பு' தொ. பெ. ஈறு]

பிரிப்புச்சுவர் *pirippu-c-cuvar,* பெ. (n.) பிரிவினைச்சுவர்; partition wall, divide wall.

மறுவ. தடுப்புச் சுவர்

[பிரிப்பு + சுவர். சுவல் → சுவர்]

பிரிப்புத்தொகை *pirippu-t-togai,* பெ. (n.) பங்குமான (வீத)ப்படி கிடைக்குந் தொகை (புதுவை.); dividend.

[பிரிப்பு + தொகை. பிரி → பிரிப்பு. தொகு → தொகை]

பிரிபு *piribu,* பெ. (n.) பிரிவு பார்க்க; see pirivu. "என்று மென்றோள் பிரிபறி பலரே"(இலக். வி. 580, உரை)

[பிரி → பிரிவு → பிரிபு]

பிரிபொருட்சொற்றொடர் *piriporuṭ corroḍar,* பெ. (n.) ஒன்றாத பொருளையுடைய தொடராலாகிய பா வழு (இலக். வி. 691.); (rhet.) incoherent combination of words in a poem, considered a blemish.

[பிரிபொருள் + சொற்றொடர்]

பிரிபொருட்டொடர்மொழி *piriporuṭṭoḍarmoḻi,* பெ. (n.) செய்யுட்குற்றங்களுள் ஒன்று. (யாழ். வி. 525); (poet.) defect in versification.

[பிரிபொருள் + தொடர் + மொழி]

பிரிமணை *pirimaṇai,* பெ. (n.) பாண்டம் வைக்கும் மணை; a circular ring made of straw for keeping pots on.

[புல் → புர் = முறுக்கு, சுருள். புரி → புரிக்கூடு = வைக்கோற்புரி, நெற்கூடு. புரி → புரிமணை → வைக்கோற்புரி வளையம் (வே. க. 3, 95, 96) புரிமணை → பிரிமணை]

பிரிமுருக்கு *pirimurukku,* பெ. (n.) வலம்புரிக் கொடி; a creeper.

[புல் → புர் → புரி.புரிதல் = வளைதல், சுருள். புரி + முறுக்கு - புரிமுறுக்கு = முறுக்குவளையல் (வே. க. 3, 96) புரி → பிரி ஒ. நோ. புரண்டை → பிரண்டை. புரிமுறுக்கு → பிரிமுருக்கு]

பிரிமொழிச்சிலேடை *piri-moḻi-c-cilēḍai,* பெ. (n.) பிரிக்கப்பட்டுப் பலபொருள் பயக்குஞ் சொற்றொடர் (தண்டி. 75, உரை); (rhet.) a phrase or sentence in which a šilēḍai is brought out by dividing it into different words, one of two šilēḍai.

[பிரி + மொழி + சிலேடை]

'தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய
எள்ளா வரிமானிடர் மிகுப்ப—உள்வாழ்தேம்
சிந்துந் தகைமைத்தே யெங்கோன்
றிருவுள்ளம் நந்துந் தொழில் புரிந்தார்
நாடு'

இது சோழனுடைய மனங்களிக்கும்படி நடந்தோருடைய நாட்டிற்கும், அவன் மனம் வெறுக்கும்படி நடந்தோருடைய நாட்டிற்கும் சிலேடை

பிரியக்கடைபண்ணு—தல் *piriya-k-kaḍai-paṇṇu-,* 6 செ.குன்றாவி. (v.t.) தன்னுடையதை அருமைப் பண்டமாக்கிக் கூறுதல் (இ. வ.); to exaggerate the value of a thing, as in a bargain. அவன் பிரியக்கடை பண்ணுகிறான்.

[பிரியம் + கடை + பண்ணு—,]

பிரியகம் *piriyagam,* பெ. (n.) **1.** கடம்பு (மலை); sea side Indian oak. **2.** வேங்கை (சங். அக.); Indian kino tree.

பிரியங்காட்டு–தல் *piriyaṅ-kāṭṭu-,* 7 செ. கு. வி. (v.i.) அன்பு வெளிப்படுத்தல்; to express love or fondness.

[பிரியம் + காட்டு–, காண்(கு.வி.) – காட்டு (பி. வி.)]

பிரியங்கு *piriyaṅgu,* பெ. (n.) ஞாழல் (நாமதீப. 322); a shrub.

பிரியசத்தியம் *piriya-šattiyam,* பெ. (n.) இனிய உரையாடல் (யாழ். அக.); delightful conversation.

[பிரியம் + சத்தியம்]

Skt. satya > **த.** சத்தியம்

பிரியசந்தேசம் *piriyašandēšam,* பெ. (n.) சண்பகம் (சங். அக.); champak.

பிரியதத்தம் *piriyatattam,* பெ. (n.) *பிரிய தத்தமந்திரம்* (வின்.) பார்க்க; see *piriya tatta mandiram.*

[பிரியம் + தத்தம்]

பிரியதத்தமந்திரம் *piriyatattamandiram,* பெ. (n.) கத்தோலிக்கக் கிறித்தவர் வழங்கும் மந்திரவகை; ave mary, a devotional recitation. (R.C.)

[பிரியதத்தம் + மந்திரம்]

பிரியதரிசி *piriyadariši,* பெ. (n.) புத்தருள் ஒருவர் (மணிமே. 30, 14, குறிப்பு); a Buddha.

[பிரியம் + தரிசி]

Skt. darsin > **த.** தரிசி

பிரியதரிசினி *piriyadarišiṉi,* பெ. (n.) வன்னி (சங்.அக.); Indian mesquit tree.

பிரியநாயகி *piriyanāyagi,* பெ. (n.) அன்புள்ள மனைவி; beloved wife.

[பிரியம் + நாயகி.]

பிரியப்படுத்து–தல் *piriya-p-paḍuttu-,* 8 செ. குன்றாவி. (v.t.) **1.** மகிழ்வித்தல்; to please, gladden. **2.** முகமன் (இச்சகம்) பேசுதல் (வின்.); to humour, soothe, flatter. **3.** பிரியக்கடை பண்ணு–தல் (வின்.) பார்க்க; see piriya-k-kaḍai-paṇṇu-,

[பிரியம் + படுத்து–,]

பிரியம் *piriyam,* பெ. (n.) **1.** விருப்பம்; pleasure, delight, acceptableness. **2.** கவர்ச்சி; attraction. **3.** அன்பு, நேசிப்பு; love, fondness. **4.** நேயம், பெருவிருப்பு; partiality, endearment. **5.** பண்டங்களின் பெறலருமை; scarcity, dearth. opp. to cavaḍam. **6.** விரும்பிய பொருள்; thing desired. பிரியம் பல விரும்படி (அரிச்பு. பாயி.1)

மறுவ. நேசம்

[புல் → புர் → புரி. புரிதல் = விரும்புதல் புரி → பரி = அன்பு. (வே.க.3.87) பரி → பிரி → பிரியம்]

பிரியம்பண்ணு—தல் *piriyam-paṇṇu-*, 6 செ. குன்றாவி. (v.t.) 1. *பிரியப்படுத்து³—தல்* பார்க்க; see *piriya-p-paḍuttu³-*, 2. மேம் படுத்திக் கொள்ளுதல்; to give one self airs. 'பிரியம் பண்ணிக் கொள்வது மேரையோ' (கவிகுஞ்.)

[பிரியம் + பண்ணு—, பண் + உ -பண்ணு. 'உ' ஒலித்துணையுயிர்]

பிரியலர் *piriyalar*, பெ. (n.) (ஒருவரை யொருவர் பிரியாத) நண்பர்; friends, as persons who would not be separated.

[பிரி + அல் + அர். 'அல்' எ. ம. இடைநிலை. 'அர்' ப. பா. ஈறு]

பிரியவசனம் *piriyavašanam*, பெ. (n.) இன்ப மான சொல்; sweet, pleasant words.

[பிரியம் + வசனம்.]

Skt. vacana > **த.** வசனம்

பிரியன் *piriyan*, பெ. (n.) 1. அன்புள்ளவன்; one who loves. பிரியரா மடியவர்க் கணியர் (தேவா. 558, 9) 2. கணவன்; beloved husband. 'பிரியன் பிரியை யென்றாயினம்' (தனிப்பா.)

[பிரியம் → பிரியன். 'ன்' ஆ. பா. ஈறு]

பிரியாணங்கை *piriyāṇaṅgai*, பெ. (n.) பெரியாநங்கை செடிவகை; large milkwort.

[பெரியாநங்கை → பெரியாணங்கை → பிரியாணங்கை (கொ.வ.)]

பிரியாதசத்து *piriyāda šattu*, பெ. (n.) கந்தகம்; blue vitriol.

பிரியாநங்கை *piriyā-naṅgai*, பெ. (n.) பூநீறு முதலானவற்றினின்று செய்யப்படும் மாழையுப்பு; a kind of prepared salt.

பிரியாம்பு *piri-y-āmbu*, பெ. (n.) மாமரம்; mango tree.

பிரியாயீடு *piriyā-y-īḍu*, பெ. (n.) இடுமருந்து; drug administered secretly with food or drink in order to win over a person, a philter portion stealthily administered.

மறுவ. வசிய மருந்து

[பிரியா + ஈடு. இடு → ஈடு]

பிரியார்கணப்பூ *piriyār-kaṇappū*, பெ. (n.) *பிரியாயீடு* பார்க்க; see *piriyā-y-īḍu.*

பிரியாவிடை *piriyā-viḍai*, பெ. (n.) உள்ளம் பிரியாதே விடைபெறுகை; leave taking, farewell. '*பிரியா விடை கொண்டு*' (அருட்பா, vi, குடும்ப. முயற்சி, 37)

[பிரி' + ஆ + விடை. விடு → விடை. 'ஆ' எ. ம. இடை நிலை]

பிரியாவுடையாள் *piriyā-v-uḍaiyāḷ*, பெ. (n.) மலைமகள் (பார்வதிதேவி) (சிவபெருமானைப் பிரியாதவள்); goddess Pārvadi, as insepa-rable from Sivan.

[பிரி + ஆ + உடையாள். 'ஆ' எ.ம. இடைநிலை]

பிரியாளம் *piriyāḷam*, பெ. (n.) மரல் (நாமதீப. 331.); bow string hemp.

பிரியுமிடம் *piriyumidam,* பெ. (n.) தனித்தனியாக விலகும் இடம்; a place of separation or division, parting.

[பிரி → பிரியும் + இடம்]

பிரிவச்சம் *piri-v-accam,* பெ. (n.) பிரிவதற்குக் கொள்ளும் வெரு (அச்சம்); fear for separation.

[பிரிவு+ அச்சம். அஞ்சு → அச்சு → அச்சம். தான் பிரிவு அஞ்சிற்றும் பிரிவச்சம்; அஞ்சுவித்ததும் பிரிவச்சம் (இறை.உ.)]

பிரிவரும்புள். *pirivarum-puḷ,* பெ. (n.) இருதலைப்புள்; a bird. '*பிரிவரும் புள்ளி னொருமையினொட்டி*' (பெருங். இலாவாண. 14, 66)

[பிரிவு + அரு + புள்.]

பிரிவனை *pirivaṉai,* பெ. (n.) வகுத்தற் கணக்கு (யாழ். அக.); division, partition.

[பிரி → பிரிவனை]

பிரிவாற்றாமை *pirivaṟṟāmai,* பெ. (n.) தலைவன் பிரிவைத் தலைவி பொறுக்க முடியாமை (குறள், 116, அதி.); impatience, of separation, as of lovers.

[பிரிவு + ஆற்று + ஆ. + மை 'ஆ' எ. ம. இடைநிலை]

பிரிவாற்று–தல் *pirivāṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.i.) தலைவன் பிரிவினைத்தாங்கியிருதல்; to bear patiently the separation of lovers.

[பிரிவு + ஆற்று–,]

பிரிவிலசைநிலை *pirivil-aśainilai,* பெ. (n.), தனியே வழங்காது இரட்டித்தே நிற்கும் அசைநிலை (தொல். சொல். 280, சேனா.); expletives used in pairs, as āga āga.

[பிரிவு + இல் + அசைநிலை. 'இல்' எ. ம. இடைநிலை]

பிரிவினை[1] *piriviṉai,* பெ. (n.) கூறுகளாகப் பிரிகை, பிரிக்கப்பட்ட கூறு; partition. நாட்டுப்பிரிவினை(உ.வ).

[பிரி → பிரிவு → பிரிவினை(மு.தா.261)]

பிரிவினை[2] *piriviṉai,* பெ. (n.) *பிரிவு, 1, 3, 4, 8,* (கொ.வ.) பார்க்க; see *pirivu. 1,3,4,8*

[பிரி → பிரிவு → பிரிவினை(மு.தா.261)]

பிரிவினைக்காரர் *piriviṉaik-kārar,* பெ. (n.) *பிரிவினையாளர்* பார்க்க; see *piriviṉai-y-āḷar.*

[பிரிவினை + காரர்.]

பிரிவினையாளர் *piriviṉai-y-āḷar,* பெ. (n.) பிரிந்து செல்வதைக் களைகண்ணாளர் (ஆதரிப்பவர்); separatist.

[பிரிவினை+ ஆளர்.]

பிரிவினைவாதம் *piriviṉai vādam,* பெ. (n.) இனம்,மதம், மொழி போன்ற அடிப்படையில் (நாட்டை) தனித்தனியாகப்பிரிக்க வேண்டும் என்ற போக்கு; separatism, secessionism.

[பிரிவினை + வாதம்.]

Skt.vāda › த. வாதம்

பிரிவினைவாதி *piriviṉai vādi,* பெ. (n.) *பிரிவினையாளர்* பார்க்க; see *piriviṉai-y-āḷar*

பிரிவினைவாதிகள் உலகம் முழுவதும் பெருகிவருகின்றனர் (உ.வ.)

[பிரிவினை + வாதி.]

Skt. vādi > த. வாதி

பிரிவு[1] *pirivu,* பெ. (n.), 1.பிரிகை; separation severance. *'இன்னாமரீஇஇப்பின்னைப் பிரிவு'* (நாலடி,220); 2. வகுத்தற்கணக்கு; (arith.) division. 3. பாகம்; partition 4. ஒற்றுமையின்மை (யாழ்.அக); disunion disagreement, dissension. 5. பகுதி; section chapter, as of a book; paragraph. 6. அவிழ்கை; lossening,ripping, parting. 7. மூலமதத்தின் வேறுபட்ட உள்வேறுபாடு (உட்பேதம்) (வின்.); secession, schism. 8. வேறுபாடு; distinction, difference, இடையீடு gap interspace. *'பிரிவில வரையாா்'* (தொல்.சொல். 460).

ம. பிரிவு; கோத. பிர்ய்வ் (பிரிந்திருக்குமிடம்)

[புள்→ புள்→ பிரி→ பிரிவு (மு.தா.261) 'வு' பெயராக்க ஈறு .]

பிரிவு[2] *pirivu,* பெ. (n.) இறப்பு (மரணம்); death. *"கேள்வற் கூனமும் பிரிவும் அஞ்சி"* (சீவக.1530.)

[பிரி → பிரிவு.]

பிரிவு[3] *pirivu,* பெ. (n.) வெறுப்பு; vexation.

[பிரி → பிரிவு.]

பிரிவுக்கட்டை *pirivu-k-kaṭṭai,* பெ. (n.) நீரோட்டத்தைப்பிரிக்கும் மதகு; division dam. (C. E. M.).

[பிரிவு + கட்டை. கள் → கட்டை.]

பிரிவுக்கோடு *pirivu-k-kōḍu,* பெ. (n.) பிரிக்குங்கோடு; a dividing line, parting.

[பிரிவு + கோடு–,]

பிரிவுத்துயர் *pirivu-t-tuyar,* பெ. (n.) பிரிவால் ஏற்படும் துன்பம்; agony caused by separation.

[பிரிவு + துயர்.]

பிரிவுநிலை *pirivu nilai,* பெ. (n.) வேறுபடுத்திக் காட்டுகின்ற தன்மை; differenciating character.

[பிரிவு + நிலை.]

பிரிவுப்பாணி *pirivuppāṇi,* பெ. (n.) வலம்புரிக்கொடி; a creeper.

[புரி → புரிமுகம் = சங்கு, நத்தை, சங்கு. வலம்புரிச்சங்கு = வலப்புறமாக வளைந்த சங்கு. புரி → பிரி. புரிவுப்பாணி → பிரிவுப்பாணி.]

பிரிவுபச்சாரம் *pirivubaccāram,* பெ. (n.) பிரிந்து செல்லும் நேரம் நல்வாழ்த்து வாழ்த்தி வழியனுப்பும் வழி; farewell. ஓய்வுபெற்ற நீதிபதிக்குப் பிரிவுபச்சாரம் நடத்தினர் (உ.வ.).

[பிரிவு + உபச்சாரம்.]

Skt. upacāra > த. உபச்சாரம்.

பிரிவுபோடு—தல் *pirivu-pōḍu-,* 20 செ. கு. வி. (v.i.) 1. கொடுக்க வேண்டிய தொகையை ஆளுக்கு இவ்வளவு என்று பகுத்துக் கொள்ளுதல்; to levy contribution. 2. ஏலச்சீட்டு முதலியவற்றிற்குக் கிடைக்கும் மேல்வரும்படியைப் பங்கிட்டுக் கொள்ளுதல்; to divide, as profits, discount.

[பிரிவு + போடு–,]

பிருக்கம் *pirukkam,* பெ. (n.) சிறுநீரகம்; kidney.

[பிள்→ பிடு→ பிடுங்கு. பிடு→ (பிது) பிதுங்கு → பிதுக்கு→ பிதுக்கம் = பெயர்ந்து வெளிவரும் பகுதி, விதை வீக்கம். பிதுக்கம் → பிருக்கம்.]

பிருக்கவேதனை *pirukka-vēdaṉai,* பெ. (n.) சிறுநீரகத்திலேற்படும் வலி; kidney pain.

[பிருக்கம் + வேதனை.]

Skt. vēdanā > **த.** வேதனை

பிருக்கரம் *pirukkaram,* பெ. (n.) சிறுநீரக வீக்கம்; nephritis.

[பிதுக்கு → பிதுக்கம் → பிருக்கம் = சிறுநீரகம். பிருக்கம் → பிருக்கரம். 'பிருக்கம்' பார்க்க.]

பிருகு *pirugu,* பெ. (n.) பனை முதலியவற்றின் முற்றாக் கிழங்கு (யாழ்ப்.); immature edible root, especially to palmyra.

[*புள்* → (பிள்) → பீள் = இளங்கதிர், இளமை. பூட்டை = இளங்கதிர். பூட்டை → பீட்டை. பிள் → பிர் → பிரு → பிருகு. '*குள்*' என்னும் தோன்றற் கருத்து வேரிலிருந்து குள் → குருகு = குருத்து (குருத்து → குருந்து = தென்னை, பனை முதலியவற்றின் இளவிலை, குரு → குரும்பு → குரும்மை = தென்னை, பனை முதலியவற்றின் பிஞ்சு) என்னும் இளமைக் கருத்துச் சொல் தோன்றியது போல் '*புள்*' என்னும் தோன்றற் கருதிலிருந்து '*பிருகு*' என்னும் இளமைக் கருத்துச் சொல் பிறந்ததென்க.]

பிருகுடி *pirukuḍi,* பெ. (n.) **1.** புருவம்; eye brow. **2.** புருவநெரிப்பு; arching of the brows.

[புள் → புரு → புருவம் = வளைந்த கண்பட்டை. → புரு → புரி. புரிதல் = வளைதல். புரு → (புறு) → புறை → பிறை = வளைந்த நிலா. புள் → புரு → பிரு → பிருகு + ஒடி – பிருகொடி → பிருகுடி.]

பிருங்கவரச்சூரணம் *piruṅgavara-c-cūraṇam,* பெ. (n.) கரிசலாங் கண்ணி திரிபாலாதி இவ்விரண்டின் பொடிகளைச் சேர்த்துச் செய்யப்படும் ஆயுள்வேத மருந்து; powder prepared with that of eclipse plant as chief ingredient.

பிருங்கனி *piruṅgaṉi,* பெ. (n.) நிலப்பனை; black musale.

பிருங்காவரசத்தைலம் *piruṅgā-varaša-t-tailam,* பெ. (n.) கரிசலாங்கண்ணி எண்ணெய் (தைலம்); medicated oil prepared with the juice of eclipse plant.

பிருட்டம்[1] *piruṭṭam,* பெ. (n.) **1.** பின் பக்கம் (யாழ். அக.); hinder part. **2.** இடுப்பின் பூட்டு (சீவரட். 4); hip-joint. **3.** குண்டி (இ. வ.); buttocks, posteriors. **4.** முதுகு (யாழ். அக.); back. **5.** பரப்பு (யாழ். அக.); surface.

[பின் → பினம் → பிறம். பிறம் → பிடம் → பிடர் → பிடரி = தலையின் பின்புறம். பிடம் → பிட்டம் = பின்புறம், பின்புறத்தின் கடை அல்லது அடிப்பகுதி (குண்டி). பிட்டம் → பிருட்டம்]

த. பிருட்டம் > Skt. pṛṣṭha.

பிருட்டம்² *piruṭṭam,* பெ. (n.) அரைத்த மா (சங். அக.); flour.

[புள் → புரு → பிரு → பிருக்கு → சிறியது, சிறு துண்டு. பிள் → பிட்டு → சிறியது. பிட்டு → பிட்டம் → பிருட்டம் = நுண்மையான மா.]

த. பிருட்டம் › Skt. piṣṭa.

பிருடை¹ *piruḍai,* பெ. (n.) **1.** யாழ் முதலியவற்றின் முறுக்காணி (வின்.); tuning key of a lute string. **2.** அடைக்குந் தக்கை (கொ. வ.); cork. **3.** சுழலாணி (சங். அக.); screw.

க., தெ. பிரடெ

[புள் → புரு → புரள் → புரளை → புரடை → பிரடை → பிருடை = யாழ் முறுக்காணி (மு. தா. 242)]

பிருடை² *piruḍai,* பெ. (n.) **1.** பொய்ச் செய்தி (கொ. வ.); false rumour, lie. **2.** போலி நடிப்பு; that which is hollow, empty show.

க. புருடை; **தெ.** புருட

[புள் → புரு → புரள் → புரளை → புரடை → பிரடை → பிருடை = முறுக்காணி, திரித்துக் கூறும் பொய், பொய்யாக இயங்கும் போலி நடிப்பு.]

பிருத்திரி *piruttiri,* பெ. (n.) தண்ணீர் மீட்டான்; water root.

பிருது *pirudu,* பெ. (n.) விருது (வின்.); banner, insignia.

க., தெ. பிருதி

[விருது → பிருது.]

பிருந்திகா *pirundigā,* பெ. (n.) தணக்கு; whirling nut.

பிருந்தை *pirundai,* பெ. (n.) நாணற் கரும்பின் சாறு; the juice obtained from reed.

பிருவு *piruvu,* பெ. (n.) சினைபடும் பக்குவமுள்ள ஆடு; goat matured to conceive

[புருவு → பிருவு.]

பிரை¹ *pirai,* பெ. (n.) உறைமோர்; fermented butter-milk used for curdling milk, curdling agent. '*பிறைசேர் பாலின்*' (திருவாச. **21, 5.**);.

[(புள்) → புளி = புளித்துப் பொங்குவது. புளி → புளிச்சி = புளிச்சை. (புள்) → (புர) → புரை → பிரை = புளித்தமோர், பாலைப் புளிக்க வைக்கும் மோர். (மு. தா. 63).]

பிரை² *pirai,* பெ. (n.) **1.** பாதி; half. '*பிரைக்காற்சின்னி*' (வின்.) **2.** பயன்; usefulness, fruitfulness. '*கற்குங் கல்வியின் பிரையுளது*' (கம்பரா. இரணிய. **57.**).

[பிள் → பிரி → பிரை.]

பிரை³ *pirai,* பெ. (n.) **1.** பந்தலிட்ட இடம்; shed. **2.** தொழிற்சாலை; factory (G. Tn. D. I, **410.**).

[புரை → பிரை.]

பிரை⁴ *pirai,* பெ. (n.) சுவரின் மாடம் (தென். இந். க்ஷேத். பக். **83.**); small niche in a wall.

[புரை → பிரை.]

பிரைக்கபாடம் *pirai-k-kabāḏam,* பெ. (n.) சிறுகதவு; small door.

[பிரை + கபாடம்.]

Skt. kapāṭa > **த.** கபாடம்.

பிரைக்கல் *piraikkal,* பெ. (n.) செம்பாறைக்கல்; red rock.

பிரைக்காற்சின்னி *pirai-k-kāṟciṉṉi,* பெ. (n.) அரைக்காற்படி (யாழ். அக.); one eight of a measure.

[பிரை + கால் + சின்னி. பிள் → பிரி → பிரை = பாதி. பிரைக்கால் = கால் பகுதியில் பாதி, அரைக்கால். சில் → சின் → சின்னி = சிறியது, (சிறிய) முகத்தலளவைக் கருவி.]

பிரைக்கூற்று—தல் *pirai-k-kụ-ūṟṟu-,* **5.** செ. குன்றாவி. (v.t.) பிரை குத்து—தல் பார்க்க; see pirai kuttu-.

மறுவ. தோய்ச்சல், உறை ஊத்துதல்.

[பிரை + கு + ஊற்று—,]

பிரைகுத்து—தல் *pirai-kuttu-,* **5.** செ. கு. வி. (v.i.) உறைமோர் குத்துதல்; to curdle milk.

[பிரை + குத்து—,]

பிரைமரம் *pirai-maram,* பெ. (n.) மரவகை; a tree, the juice of whose leaves curdles milk.

[பிரை + மரம்.]

பிரைமோர் *piraimōr,* பெ. (n.), பால் தயிராவதற்கு ஊற்றும் மோர்; butter milk used for curdling milk. பிரைகுத்துவதற்குப் பனிகாலத்தில் சற்று மிகுதியாகப் பிரைமோர் ஊற்ற வேண்டும்.

மறுவ. உறைமோர்.

[புரை → பிரை + மோர்.]

பில்கு—தல் *pilgu-,* **5.** செ. கு. வி. (v.i.) **1.** சிறுதுவலை வீசுதல்; to drip, as dew. '*நெடுங்கண் பில்கி*' (சீவக. 1256); **2.** பொசிதல்; to exude, as honey from flowers. '*பில்குதேனுடை நறுமலர்*' (தேவா. 556, 1.) **3.** கொப்பளித்தல்; to gargle, spit. **4.** வழிதல்; to flow. '*கணங்களுடற்குருதி பில்கியோட*' (கவர்பு. அந்தகா. 32.).

[புல் → புள் → பூறு. பூறுதல் = துளைத்தல். பூறு → பீறு. பீறுதல் = துளைத்தல், பிளத்தல். புல்→புள்→பிள்→ பிடு. பிடுதல் = துண்டு துண்டாகப் பிளத்தல். பிடு → பிடுகு → பிடுங்கு. பிடு→பிது→பிதிர் = திவலை (வே.க. 3 101, 112.) பிள் → பிள்கு → பில்கு.]

பில்லங்கம் *pillaṅgam,* பெ. (n.) **1.** குரங்கு; monkey. **2.** தவளை; frog.

பில்லங்குத்து—தல் *pillaṅ-kuttu-,* **4.** செ. கு. வி. (v.i.) கண்படலமுரித்தல் (வின்.); to remove film from the eye.

[பில்லம் + குத்து—,]

பில்லங்குழல் *pillaṅ-guḻal,* பெ. (n.) *புல்லாங்குழல்* (வின்.) பார்க்க; see *pullāṅ guḻal.*

[புல்லாங்குழல் → பில்லங்குழல்.]

பில்லங்குழி *pillaṅkuḻi,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tañjāvūr. dt.

[பில்லம் + குழி.]

பில்லணை *pillaṇai,* பெ. (n.) *பில்லாணி* பார்க்க; see *pillāṇi.*

தெ. பில்லாணி, பில்லாடி.

[பில்லாணி → பில்லணை.]

பில்லநோய் *pilla nōy,* பெ. (n.) மிகுசளி பித்தம் முதலியவற்றால் கண்ணிமையினுள் ஏற்படும் நோய்; an eye disease caused by phlegmatic and bilious disorders in the system.

[பில்லம் + நோய்]

பில்லபஞ்சம் *pillapañjam,* பெ. (n.) எலிப்பயறு; kind of gram.

பில்லம் *pillam,* பெ. (n.) கண்ணிமைபுருவ முழுமையும் நீர் கட்டித்திரண்டு திகழும் கண்ணோய்; a disease of the eye lid.

பில்லரிஞ்சான் *pil-l-ariñjāṉ,* பெ. (n.) ஓரடி வளர்வதும் வெண்ணிறமுள்ளதுமான நன்னீர் மீன்வகை; a fresh water fish, silvery, attaining 1 ft. in length, cirrhina reba.

பில்லரோகம் *pillarōgam,* பெ. (n.) *பில்லநோய்* பார்க்க; see *pillanōy.*

[பில்லம் + ரோகம்.]

Skt. rōha › **த.** ரோகம்.

பில்லாங்குழல் *pillāṅ guḻal,* பெ. (n.) *புல்லாங்குழல்* (வின்.) பார்க்க; see *pullāṅ guḻal.*

[புல்லாங்குழல் → பில்லாங்குழல்.]

பில்லாச்சிவல்லி *pillāccivalli,* பெ. (n.) ஆனைப்பிச்சான் (வின்.); a plant.

பில்லாஞ்சி *pillāñji,* பெ. (n.) கருப்பு நிறமுள்ள குத்துச் செடி; black honey shrub.

பில்லாணி *pillāṇi,* பெ. (n.) கால்விரல்களில் மகளிர் அணியும் மிஞ்சி (இ. வ.); silver ring worn by women on their fourth toes.

மறுவ. பில்லாடி.

தெ. பில்லாணி, பில்லாடி.

[பில் → பிலம் = துளை. பில் → பில்லணி = துளையுள்ள அணிகலன். பில்லணி → பில்லாணி.]

பில்லார்க்குச்சி *pillār kucci,* பெ. (n.) பில்லு அச்சின் கசடு நீக்க உதவுவது; weavers brush which helps to remove the fault.

[புல் → பில் → பில்லு = புல்லினாற் செய்யப்பட்டது. பில் → பில்லார் + குச்சி.]

பில்லி¹ *pilli,* பெ. (n.), பூனை (அக. நி.); cat.

க., தெ., கொலா., நா. பில்லி;
பர். பிலெய்.

[பிள்ளை → பில்லி]

பில்லி² *pilli,* பெ. (n.) 1. செய்வினை, சூனியக்கலை (சூனியவித்தை); sorcery, witchcraft, magic. 2. சூனியக்காரர் ஏவும் தீயதேவதை (வின்.); demon in the service of sorcerers. அவனைப்பில்லி அடித்துவிட்டது.

கோத. பிள்ய், புள்ய் (எருமைகளுக்கு துடவர் வைக்கும் செய்வினை, குரும்பர் செய்வினை); **துட.** பில்ய்; **பட.** பில்லி.

[புல் → புர் → புரை = உட்டுளை, உட்டுளைப்பொருள். புல் → புள் → பிள்

→ பிர் → பிரி → பிரிவு = விலகல். புல் → பில் → பில்லி → வளர்ச்சியை விலகச் செய்வது, கேடு விளைவிப்பது, விளங்காமற்போகச் செய்வது.]

பில்லிக்காரன் *pillikkāraṉ*, பெ. (n.) செய்வினை (மாய்மாலம்) செய்பவன்; a sorcerer.

[பில்லி + காரன்.]

பில்லிக்குராயன் *pillikkurāyaṉ*, பெ. (n.) இலாமிச்சை; cuscus-grass.

[புல் → பில் → பில்லு + கு + ராயன். அரையன் → ராயன். புல்லுக்குத்தலைவன்]

பில்லிசாரிகை *pillišārigai*, பெ. (n.) நரிகொள்ளை மரம்; a tree.

பில்லிசூனியம் *pillišūṉiyam*, பெ. (n.) 1. செய்வினை, சூனியக்கலை (சூனியவித்தை), (கடம்ப. பு. இலீலா. 150); witchcraft. 2. *பில்லிப்படை* பார்க்க; see *pilli-p-paḍai.*

[பில்லி + சூனியம்.]

Skt. šūnya> *த.* சூனியம்

பில்லிசூனியமெடு–த்தல் *pilli-šūṉiy meḍu-*, 4செ.கு.வி. (v.i.) ஒருவன் கெடுதிக்கு வைக்கப்பட்ட சூனியத்தைக் கண்டுபிடித்துச் சிதைத்தல்; to discover and destroy maleficent articles used against a person in witchcraft.

[பில்லிசூனியம் + எடு–.]

பில்லிஞ்சன் *pilliñjaṉ*, பெ. (n.) 1. ஏழு விரலம் (அங்குலம்) வளர்வதும் பழுப்பு நிறமுள்ளதுமான கடல்மீன் வகை; a sea fish, brownish attaining 7in, in length. 2. சீலா; a sea- fish.

பில்லிப்படை *pilli-p-paḍai*, பெ. (n.) செய்வினைக்கலையில் பயன்படுத்தும் கருப் பொருள்கள்; maleficent articles used in witchcraft.

[பில்லி + படை.]

பில்லிப்பன்னா *pilli-p-paṉṉā*, பெ. (n.) பதினாறு விரலம் வளர்வதும் சாம்பல் நிறமுள்ளதுமான கடல் மீன்வகை; a sea-fish, greyish, attaining 16 in, in length.

பில்லிப்பாறை *pilli-p-pāṟai*, பெ. (n.) மூன்றடி வளர்வதும் பொன்னிறமுள்ளதுமான மீன்வகை; horse mackerel, golden, attaining 3ft. in length.

பில்லிபிச்சு *pillipiccu*, பெ. (n.) காட்டுமரவகை (காடர் வழக்கு); fetid holly.

ம. பில்லிபிச்சு.

பில்லியடி–த்தல் *pilli-y-aḍi-*, 4. செ. கு. வி. (n.) பேய் பிடித்தல்; to be possessed by a demon.

மறுவ. ஆவிபிடித்தல்.

[பில்லி + அடி–,]

பில்லியத்தி *pilliyatti*, பெ. (n.) *பெருநெருஞ்சி* (மலை.); a *stout stemmed herb.*

பில்லியெடு–த்தல் *pilli-y-eḍu-*, 4 செ.கு.வி. (v.i.) கேடுசூழ்தற்காகப்பாழ் செய்வினை வைத்ததை மந்திர ஆற்றலால் (சக்தியால்)

நீக்குதல்; to discover and remove the magical articles laid in with craft to do harm.

[பில்லி + எடு–,]

பில்லிவெட்டு *pillivettu*, பெ. (n.) கண்ணோய் வகை; a kind of eye-disease.

பில்லிவை–த்தல் *pilli vai-*, 4 செ.கு.வி. (v.i.) **1.** ஏவலினால் தீங்கு செய்தல். to bewitch one. **2.** சூழ்வினை செய்தல் (சூனியம் வைத்தல்); to place magical materials to injure one.

[பில்லி + வை–,]

பில்லு[1] *pillu*, பெ. (n.) **1.** புல் (இ. வ.); grass. **2.** நெசவுப்பாவைச் செம்மை செய்யுங் கருவிவகை; weaver's brush.

[புல் → பில் → பில்லு. புல்லால் செய்யப்பட்டது.]

பில்லுதள்ளு–தல்[1] *pillu tallu-*, 6 செ.குன்றாவி. (v.t.) *பில்லோட்டு–தல்* பார்க்க; see *pillōttu-*

[பில்(லு) + தள்ளு–,]

பில்லுநோவு *pillu nōvu-*, பெ. (n.) புல் மேய்தலால் ஆடுகளுக்கு வரும் நோய்; disease that acquire due to crazing.

[புல் → பில் → பில்(லு) + நோவு–,]

பில்லுளி *pilluḷi*, பெ. (n.) புல்லுருவி (இ. வ.) பார்க்க; see *pulluruvi*.

[புல்லுருவி → பில்லுருவி → பில்லுளி.]

பில்லூர் *pillūr-*, பெ. (n.) திருவாரூர் மாவட்டத்திலுள்ள ஊர் ; a village in Tiruvārūr dt.

[பில் + ஊர். புல் → பில்.]

பில்லேற்பவர் *pillērpavar-*, பெ. (n.) நெசவில் பொரப்பாவுக்குக் கஞ்சி போட்டுத்தரும் சிற்றாள்; servant engaged for applying starch to the warp in weaving.

[பில் + ஏற்பவர். புல் → பில்.]

பில்லை[1] *pillai*, பெ. (n.) **1.** திரண்டுருண்டது; that which is sound, as a patch of sandal paste. **2.** வில்லை; a tablet or tabloid. **3.** ஆணியின் திருகுவரை; nut of a screw (C.G). **4.** ஏவலர் (சேவகர்) முதலியோர் அணியும் வில்லை; badge, as of a peon. **5.** சதுர ஓடு (இ. வ.); square title. **6.** தலையிலணியும் அணிவகை; a head ornament.

த. பில்லை > U.billa.

[புல் → புர் → புரி. புரிதல் = வளைதல். புரி = சுருள்.
புல் → புள் → பள் → பண்டு
→ பண்டி = சக்கரம், வண்டி (வே. க. 3, 94, 98). புல் → பில் → பில்லை = வட்டமானது, உருண்டையானது.]

பில்லை[2] *pillai*, பெ. (n.) மங்கிய மஞ்சள் நிறம்; dull yellow.

[புல்லை → பில்லை.]

பில்லைச்சவான் *pillai-c-cavāṉ*, பெ. (n.), *பில்லைச் சேவகன்* பார்க்க; see *pillai-c-cēvagaṉ*.

[பில்லைச்சேவகன் → பில்லைச் சவான்.]

பில்லைச்சேவகன் *pillai-c-cēvagaṉ,* பெ. (n.) வில்லையணிந்த சேவகன்; peon with a badge, liveried peon.

[பில்லை + சேவகன்.]

Skt. Sēvaka > த.சேவகன்

பில்லைதட்டு-தல் *pillai taṭṭu-,* 5 செ. கு. வி. (v.i.) பொதி குளிகை செய்தல்; to make tablets.

[பில்லை + தட்டு-,]

பில்லைமருது *pillai-marudu,* பெ. (n.) பெருமரவகை; paniculate winged myrobalan.

ம. புல்லமருது.

[வெள்ளைமருது → பிள்ளைமருது பில்லைமருது.]

பில்லைமிளகி *pillai-miḷagi,* பெ. (n.), நெல்வகை (விவசா. 1); a kind of paddy maturing in six months.

[புல்லை → பில்லை + மிளகி.]

பில்லோட்டு-தல் *pil-l-ōṭṭu-,* 12 செ.குன்றாவி. (v.t.), கஞ்சியிட்ட இழை மென்மையாக விருத்தற்பொருட்டு எண்ணெய் போட்டுச் சீர் செய்தல்; to make soft by applying oil to starch thread.

[பில்(லு) + ஒட்டு. ஒடு(த.வி.) –ஒட்டு (பி.வி.).]

பில-த்தல் *pila-,* 11. செ. கு. வி. (v.i.), வலத்தல் (பலத்தல்); to strengthen, justify confirm. *'உமக்கது பிலப்பதன்றே'* (உபதேசகா. சிவத்துரோ. 98.).

[வலு → பலு → பில-,]

பிலக்கச்செய்-தல் *pilakka-c-cey-,* 1 செ. குன்றாவி. (v.t.) 1. காற்றுப் புகாதபடி கெட்டியாய் இறுகச் செய்தல்; to solidify to make hard. 2. காற்றுப் புகாதபடி சீலை மண் செய்தல்; to lute with earth and cloth.

[பில → பிலக்க + செய்-,]

பிலகரி *pilakari,* பெ. (n.) பண் (இராக.) வகை; a musical mode.

தெ. பிலகரி.

பிலகாரி *pilakāri,* பெ. (n.) பெருச்சாளி (சங்.அக.); bandicoot.

[பிலம் + காரி. பிலம் = வளை, பிலகாரி வளையுள் இருப்பது, வளையையுடையது.]

த. பிலகாரி > Skt. bila-kārin.

பிலச்சம் *pilaccam,* பெ. (n.) கருஞ்சீரகம்; black cumin seed.

பிலசம்[1] *pilašam,* பெ. (n.) 1. *கருஞ்சீரகம்* (சங். அக.); *black cumin.* 2. பெருஞ்சீரகம்; anise.

பிலசம்[2] *pilašam,* பெ. (n.) பற்காயம்; injury caused by bite.

பிலத்துவாரம் *pilattuvāram,* பெ. (n.) 1. நீண்டுசெல்லும் சுருங்கை, கீழுலகம் செல்லும் வழி(வின்); passage through the earth to the nether region. 2. நிலவறை (வின்.); mine, pit, abyss.

[பிலம் + துவாரம்.]

Skt. dvāra > த. துவாரம்.

பிலபிலெனல் *pila-pilenal,* பெ. (n.) **1.** இலை முதலியன உதிர்தற் குறிப்பு; onom. expr. signifying the rustling sound of dry leaves while falling down. **2.** மக்கள் கூட்டத்தின் ஒலிக்குறிப்பு; roaring of a multitude.

[பிலபில + எனல்.]

பிலம் *pilam,* பெ. (n.) **1.** கீழுலகம் (பாதாளம்); nether region. 'தரணி யெல்லாம் பிலமுகத்தே புகப்பாய்ந்து' (திருவாச. 12, 17) **2.** அளை (குகை) (பிங்.); cave, cavern. **3.** கீழறை (பிங்.); subterranean room or passage. 'உடைய பிலந்தலைப்பட்டது போலாதே' (நாலடி, 160). **4.** எலி முதலியவற்றின் வளை; hole, as of a rat or snake.

[புள் → பிள் → விடு → விடர் = குகை. புள் → புழை → புடை → புடங்கு. புல் → (பில்) → பிலம் = நிலக்குகை (மு.தா. 274) .]

த. பிலம் > Skt. bila.

பிலம்பி *pilambi,* பெ. (n.) புளிச்சைக்காய் (சங்.அக.); bilimbi-tree.

பிலவசியம் *pilavaśiyam,* பெ. (n.) பெருங்கோணம் அல்லது பெருகோணுக் கிழங்கு; root taber.

பிலவயம் *pilavayam,* பெ. (n.) மரவள்ளிக் கிழங்கு; root taber.

[பிலம் → பிலவயம் = நிலத்தடியில் வளர்வது.]

பிலவு *pilavu,* பெ. (n.) பலா (கொ.வ.); jack tree.

[பலா → பிலா → பிலவு.]

பிலா *pilā,* பெ. (n.) பலா (கொ.வ.); jack-tree.

[பலா → பிலா. புல் → பல் → பலா = பரும் பழமரம்.]

பிலாக்கணம் *pilākkaṇam,* பெ. (n.) இறந்தவர் பொருட்டு மகளிர் அழும் புலம்பற் பாடல்; song of lamentation by women in a house of mourning. பிலாக்கணம் பாடாதே (உ.வ.).

மறுவ. ஒப்பாரி.

பிலாக்காய்க்கொத்துமணி *pilākkāy-k-kottu-maṇi,* பெ. (n.) பரதவப்பெண்டிர் பூணும் கழுத்தணிவகை; a kind of necklace worn by Parava women. (பரவர் வழக்கு).

[பிலா + காய் + கொத்து + மணி.]



பிலாக்கு *pilākku,* பெ. (n.) பில்லாக்கு போன்ற மூக்கில் தொங்கவிடும் ஓரணி; a kind of nose-pendant.

பிலாக்கொட்டைத்தயிலம் *pilākkoṭṭaitta yilam,* பெ. (n.) பலாக்கொட்டை எண்ணெய் (தயிலம்); oil extracted from the seeds of jack fruit.

[பலா → பிலா + கொட்டை + தயிலம்]

Skt. taila > **த.** தயிலம்.

பிலாச்சை *pilāccai,* பெ. (n.) 1. மீன் வகை; puff-fish 2. ஒன்பது விரலம் வளர்வதும் பழுப்பு நிறமுள்ளதுமான கடற்றவளை வகை (சங்.அக.); sea frog, brownish attaining 9 in. in length.

பிலாச்சை மீன் *pilāccai-mīṉ,* பெ. (n.) நச்சு மீன்; poisonous fish.

[பிலாச்சை + மீன்.]

பிலாத்தி *pilātti,* பெ. (n.) மரவகை; a tree.

பிலாளகம் *pilāḷagam,* பெ. (n.) புழுகுச்சட்டம் (தைலவ. தைல. 53); ventricle or sac of the civet cat in which the perfume is generated.

பிலாறு *pilāṟu,* பெ. (n.) நீர் நிரம்பிய குளம் முதலியன (வின்.); a full reservoir.

[பெருகு + ஆறு – பெருகாறு → பிராறு → பிலாறு .]

பிலி[1] *pili,* பெ. (n.) பூனைக் காஞ்சொறி (தைலவ. தைல.103); a kind of nettle.

[பில்லி = பூனை. பில்லி → பிலி.]

பிலி[2] *pili,* பெ. (n.) திப்பிலி; long-pepper.

[திப்பிலி → பிலி.]

பிலிக்குடியன் *pilikkuḍiyaṉ,* பெ. (n.) எலுமிச்சை; lime.

பிலிஞ்சி[1] *piliñji,* பெ. (n.) *பிலிம்பி* (வின்.) பார்க்க; see *pilimbi.*

பிலிஞ்சி[2] *piliñji,* பெ. (n.) மரவகை; a tree.

பிலிபிலியெனல் *pili-pili-eṉal,* பெ. (n.) 1. ஒலியோடு கூட்டங் கூடுதற் குறிப்பு; onom.expr. signifying, the noises of a gathering crowd. 2. வாயால் அடுக்குதற் குறிப்பு; blustering.

[பிலிபிலி + எனல்.]

பிலிம்பி *pilimbi,* பெ. (n.) *புளிச்சைக்காய்* (வின்.) பார்க்க; *puḷccaikkāy.*

பிலிமூலம் *pilimūlam,* பெ. (n.) திப்பிலி மூலம்; root of long pepper.

[பிலி + மூலம்.]

பிலிற்று–தல் *piliṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தூவுதல் (பிங்.); to drizzle, drop, sprinkle. *'நன்னீர் பிலிற்றும் வாய்க் குளிர் கொள் சாந்தாற்றி'* (சீவக. 1673.). 2. வெளிவிடுதல்; to let out, as milk from the udder, to spill. *'செருத்த றீம்பால் பிலிற்ற'* (அகநா. 14.) 3. கொப்பளித்தல் (வின்.); to gargle.

[புல் → பில் → பிலிற்று. பிலிற்றுதல் = சிந்துதல், பீச்சுதல் (மு.தா.262.).]

பிலீக்கச்சோகை *pilīkka-c-cōgai,* பெ. (n.) மண்ணீரல் வீக்கத்தினாலேற்படுஞ் சோகை; anaemia caused by the enlargement of the spleen.

[பிலீகம்+ சோகை.]

பிலீகத்தாபம் *pilīga-t-tābam,* பெ. (n.) மண்ணீரலில் ஏற்படும் வீக்கம்; inflammation of spleen.

[பிலீகம் + தாபம்.]

பிலீகநாளம் *piliga nāḷam,* பெ. (n.) மண்ணீரல் நாடி; spleenic vein.

[பிலீகம் + நாளம்.]

பிலீகம் *piligam,* பெ. (n.) மண்ணீரல் (இங்.வை.42); spleen.

[புல் → (பில்) → பிலம் = நிலக்குகை (மு.தா.274) புல் → பில் → பிலிகம் → பிலீகம்.]

த. பிலீகம்> Skt.plihan.

பிலுக்கன் *pilukkaṉ,* பெ. (n.) பகட்டுக்காரன்; fop, coxcomb, dandy.

[பிலுக்கு → பிலுக்கன்.]

பிலுக்கி *pilukki,* பெ. (n.) பகட்டுக்காரி (திருப்பு. 623.); a showy woman, coquette.

மறுவ. பசப்புக்காரி.

[பிலுக்கன் (ஆ.பா.) - பிலுக்கி (பெ.பா.) 'இ' பெ.பா.ஈறு.]

பிலுக்கு *pilukku,* பெ. (n.) பகட்டு; foppishness, ostentation, coquetry. ***'பிலுக்குஞ்சுகிப்பும்'*** (பணவிடு. 165.).

தெ. பெலுகு.

[புல் → பொல் → பொலி. பொலிதல் = செழித்தல். புல் → பில் → பிலுக்கு = பொலிவினை வெளிக்காட்டும் தன்மை. தளுக்குதல் = ஒளிவிடுதல், மின்னுதல், துலங்குதல். தளுக்கு = மினுக்கு. தளுக்கு → தலுக்கு. 'தலுக்கு பிலுக்கு' மரபிணைமொழி.]

பிலுக்கு—தல் *pilukku-,* 5. செ.கு.வி. (v.t.) பகட்டுதல்; to dress ostentationly; and show oneself off to act the dandy strat. ***'பிலுக்குஞ் சம்பளநாதர்'*** (திருப்பு. 22.).

தெ. பெல்லின்சு.

[புல் → பில் → பிலுக்கு–,]

பிலுகம் *pilugam,* பெ. (n.) செங்குன்றி மரம்; a twiner abrus precatorius with red flowers and red seeds.

பிலுபிலுவெனல் *pilu-pilu-v-eṉal,* பெ. (n.) 1. *பிலபிலெனல்* பார்க்க; see *pilapileṉal* 2. *பிலிபிலியெனல்* பார்க்க; see *pilipiliyeṉal.*

[பிலுபிலு + எனல்.]

பிலுனி *piluṉi,* பெ. (n.) பெருங்குரும்பை; bowstring hemp.

பிவாயம் *pivāyam,* பெ. (n.) சோறு சமைத்த மிடாக்களுக்கு இடும் திருநீறு (புண்டரம்) (தக்கயாகப். 750. உரை.); mark of sacred ashes put on a cooking pot.

பிழக்கடை *piḻakkaḍai,* பெ. (n.) *புழக்கடை* பார்க்க; see *puḻaikkaḍai.*

மறுவ. புறக்கடை, கொல்லைப்புறம், புறவாசல், பொரவடை.

[புழைக்கடை → பிழக்கடை]

பிழக்கடைநடை *piḻakkaḍai-naḍai,* பெ. (n.) வீட்டின் பின்புறத்துள்ள நடைவழி; gangway in the back part of the house.

[புழைக்கடை → பிழக்கடை + நடை.]

பிழக்கு *pilakku,* பெ. (n.) பிழை; wrong, injustice. *'பிழக்குடைய விராவணனை'* (திவ். பெரியாழ். 4,8,5.) *'வழக்கே யெனிற் பிழக்கே'* (தேவா. 1154, 4.).

[பிழை → பிழைக்கு → பிழக்கு.]

பிழம்பு¹ *pilambu,* பெ. (n.) 1. திரட்சி; aggregate, mass; column or pillar, as of fire. *'கடுந்தழற் பிழம்பன்ன'* (திருவாச 39–7.) உணர்ச்சிப் பிழம்பானாள் (உ.வ.) 2. வடிவு; form. *'உண்மை யுணர்த்தி பிழம்புணர்த்தப் படாதன'* (இறை. 1 பக். 15) 3. உடல்; body. *'பிழம்பு நனியுலர்த்தல்'* (தொல். பொ. 75, உரை.).

மறுவ. உண்டை, குவவு, கொம்மை, பந்தம், புஞ்சம், கேடு, முண்டம், கணை, வட்டு, முத்தை, துறுமல், சோகம், சேர்வு, மாழை, தொழுதி, பூகம், பிண்டம்.

[புல் → பொல்லு = தடி. புள் → (பிள்) பிண்டு → பிண்டம் = திரட்சி. புள் → (பிள்) → பிழ → பிழம்பு = திரண்டது, திரண்ட வடிவம், வடிவம் பெற்ற உடல்.]

பிழம்பு² *pilambu,* பெ. (n.) கொடுமை; wicked ness. *'பிழம்பு பேசும் பிட்டர்'* (திருவிசை. திருமாளி 4, 2.).

[பிழை → பிழைப்பு → பிழம்பு.]

பிழம்புநனியுலர்த்தல் *pilambu-nani-y-ularttal,* பெ. (n.) முறைமையின் (நியமத்தின்) உறுப்பாகிய உடலைவருத்துதல் (காயக் கிலேசம்) (தொல். பொ. 75, உரை.); (yōga) mortification of the body,physical austerities forming part of niyamam.

[பிழம்பு + நனி + உலர்த்தல். உலர்த்தல் = (உடலை) வாட்டி வதக்குதல்.]

பிழம்புநனிவெறுத்தல் *pilambu-nani veruttal,* பெ. (n.) *பிழம்பு நனியுலர்த்தல்* (சிலப். 14, 11, உரை.) பார்க்க; see *pilambu naniyularttal.*

[பிழம்பு + நனி + வெறுத்தல்.]

பிழற்பெய்மண்டை *pilar-pey-mandai,* பெ. (n.) நீரூற்றும் ஈமச்சட்டி; earthen basin for sprinkling water, used in cremation. *'அழுற்பெய் குழிசியும் பிழற்பெய் மண்டையும்'* (மணிமே. 6,92.).

மறுவ. நீர்ச்சட்டி.

[புழல் → பிழல் + பெய் + மண்டை. புள் → புழை → பூழை = துளை, கணவாய். புள் → புழு → புழல். பிள் → பிள் → பெய். முள் → மொள் → மொண்டை → மொந்தை = கள் முகக்குங்கலம். மொண்டை → மண்டை = நீர் முகக்குங்கலம்.]

பிழா *pilā,* பெ. (n.) 1. தட்டுப் பிழா; round wicker basket. *'மலர்வாய்ப் பிழாவிற் புலரவாற்றி'* (பெரும்பாண். 276.) 2. இறை கூடை; baling basket. *'ஓங்கு நீர்ப் பிழாவும்'* (சிலப். 10, 111.) 3. கொள்கலம் (வின்.); large vessel receptacle.

[பிள் → பிளா → பிழா = வாயகன்ற ஓலைக் கொட்டான். (மு.தா.261).]

பிழார் *pilār,* பெ. (n.) *பிழா* பார்க்க (சூடா.); see *pilā.*

[பிழா → பிழார்.]

பிழி¹–தல் *pili-,* 4. செ.குன்றாவி. (v.t.) 1. சொரிதல்; to shed, pour, as rain. *'நெடுங்கார் கிடந்து படும்புனல் பிழியும்'* (கல்லா. 19, 23.) 2. கையால் இறுக்கிச் சாறு

வெளியேறச் செய்தல்; to squeeze,express, press out with the hands. *'பிழிந்து கொள் வனைய பெண்மைப் பெய்வளைத் தோளி'* (சீவக. 1496.).

ம. பிழியுக; **க.** பிழி, பிளி, கிளி, கிழி

தெ. பிடுசு; **து.** பிண்டுனி (திருகுதல், முறுக்குதல்), புண்டுனி (ஈரமான ஆடையைப் பிழிதல், பழம் முதலியற்றின் சாற்றைப் பிழிதல்; **கோத.** இண்ட் (ஆடையைப்பிழிதல்); **குட.** புண்ட்; **கொலா.** பீண்ட், பிண்ட்; **நா.** பீண்ட் (பால்கறத்தல்); **கட.** பீச் (பால்கறத்தல்); **கூய்.** பிரிப; **குவி.** பீசலி (பால்கறத்தல்); **பிரா.** பிரிஞ்சிங்; **பட.** இண்டு (ஆடையைப் பிழிதல்)

[புள் → பிள் → பிய் → பெய் → பெயர். பிள் → பிழி (மு.தா.262, 263).]

பிழி²—தல் *pili-,* **3.** செ.கு.வி. (v.i.) வடிதல் (வின்.); to drip, as oil from hair; to exude, as juice from fruits.

ம. பிழியுக; **க.** பிழி; **தெ.** பிடுட்சு.

[புள் → பிள் → பிய் → பெய் → பெயல். பிள் → பிழி (மு.தா.262, 263).]

பிழி³ *pili,* பெ. (n.) கள் (திவா.); toddy, fermented liquor.

மறுவ. அரி, ஈழம், நறை, தெளிவு, தேறல், பிரசம்.

[புள் → புளி → புளித்துப் பொங்குவது. (புள்) → (புர) → புரை → பிரை = புளித்த மோர், பாலைப் புளிக்கவைக்கும் மோர் (மு.தா.63) புளி → பிளி → பிழி = புளிக்கவைத்த கள். ஒ.நோ. பொங்கு → பொங்கல் = கள். முள் → முண் → முண்டு → முண்டகம் = கள்.]

பிழிசாறு *piliśāṟu,* பெ. (n.) பழம் முதலியவற்றினின்று பிழிந்தெடுத்த சாறு; squash.

[பிழி + சாறு .]

பிழிஞன் *piliñaṉ-,* பெ. (n.) கள் விற்போன் (நாமதீப. 166.); toddy seller.

[பிழி → பிழிஞன்.]

பிழிந்தபூ *pilinda-pū,* பெ. (n.) தேங்காயைத் திருகி பாலெடுத்தபின் எஞ்சி இருக்கும் சக்கை, தேங்காய்ப்பூச் சக்கை (யாழ்ப்); residuum of the cocoanut kernel after the milk has been expressed dist. fr. ūṟṟā-p-pū.

[பிழி → பிழிந்த + பூ. தேங்காயைத் திருகிய நிலையில் அது பூப்போல் காணப்படுவதால் பூ எனப்பட்டது. அதனின்று பாலெடுத்த பின்னுள்ளதைக் குறிப்பிடுவதால் பிழிந்த என்ற பெயரெச்சம் சேர்க்கப்பட்டது.]

பிழிமருந்து *pili marundu,* பெ. (n.) மூக்கிலிடும் மருந்துச் சாறு; juice dropped into the nostril.

[பிழி + மருந்து.]

பிழியர் *piliyar,* பெ. (n.) கள்விற்போர் (சூடா.); toddy sellers.

[பிழி + அர். ப.பா.ஈறு.]

பிழியல்¹ *piliyal,* பெ. (n.) பிழி பார்க்க; see, *pili.* 'பிழியலு மிறுக' நீக்கி (சீவக. 1237.).

[பிள் → பிழி → பிழியல் (மு.தா. 263).]

பிழியல்² *piḻiyal,* பெ. (n.) தேன்; honey.

மறுவ. கள், சாறு, தேறல், பிரசம்.

[பிழி → பிழியல். 'தல்' தொ.பெ.ஈறு.]

பிழிவு *piḻivu,* பெ. (n.) கூந்தற் பனைத் தெளிவு; toddy extracted from talipot.

மறுவ. தெளிவு.

[பிழி → பிழிவு]

பிழுக்கை *piḻukkai,* பெ. (n.) **1.** ஆடு முதலியவற்றின் மலம்; dung of sheep, goats, rats, etc; *'பிழுக்கை வாரியும் பால் கொள்வர்' (தேவா. 1110,1)* **2.** ஒன்றுக்கும் உதவாதவ–ன்–ள் (இ.வ.); a worthless fellow. **3.** வேலைக்காரன்–காரி (குற்றேவலர்குற்றே, வல்புரிபவன்) (கொ.வ.); menial, servant. *"பிழுக்கை வேலை செய்வதற்கா இங்கு வந்தேன்."*

ம. பிழுக்க (எலி, பாம்பு ஆகியவற்றின் மலம்); **க.** பிழ்கெ, பிக்கெ (ஆடு, மான், எலி போன்றவற்றின் மலம்); **தெ.** பிடிக, பிடுக (எரிப்பதற்காகப் பயன்படுத்தும் வறட்டி); **பட.** இக்கெ.

[பிள் → பிற → பிறப்பு. (புல்) → (பில்) → பேல். (புள்) → பில் → (பிய்) → பீ. புள் → புழுக்கை → பிழுக்கை (மு.தா. 262) பிழுக்கையின் இழிதகவு ஒன்றுக்கும் உதவாதனுக்கும் வேலைக்காரனுக்கும் பொருத்தப்பட்டது.]

பிழுக்கைமாணி *piḻukkai-māṇi,* பெ. (n.) **1.** இளைஞன் (சிலப். 23, 88. அரும்.); a young piramacāri **2.** சிறுபிள்ளை (சிலப். 23, 88, அரும்.); small boy.

மறுவ. விடலை.

[பிழுக்கை + மாணி. முள் → மள் → மழ = இளமை. மள் → மண் → மணி = சிறியது. மணி → மாணி = குறள் வடிவம், சிறுவன்.]

பிழை¹–த்தல் *piḻai-,* **4.** செ.கு.வி. (v.i.) **1.** குற்றஞ் செய்தல்; to do wrong. *'அன்பிழைத்த மனத்தரசர்க்குநீ யென் பிழைத்தனை'* (கம்பரா.நகர்நீ.13). **2.** நடக்காது போதல்; to fail. *'பிழையா விளையுணா டாயிற்று'* (சிலப். 30, 1 95.). **4.** தவறிப் போதல்; to be missing, as a child; to be lost, as an article, *'பிழைத்த பிடியைக் காணாது'* (தேவா. 1026, 4.). **5.** உய்தல்; to be emancipated from sins and births; to obtain salvation. *'உறைதலிந்தத் தரணி யெல்லாங்கண்டு பிழைத்திடத்தான்'* (சிவரக, சிவதன்மா. 30.) **6.** துன்பத்தினின்று தப்புதல்; to escape, as from an evil or a danger. *'பிழைத்தொரீஇக் கூற்றங் குதித்துய்ந்தார்'* (நாலடி, 6.). **7.** உயிர் வாழ்தல்; to live, to survive. *'நின்பின்னே தொடர்ந்தேன் பிழையேன்'* (பிரபோத. 30, 19.). **8.** வாழ்க்கை நடத்துதல்; to get on in, life, subsist. எத்தனை நாள் இப்படிக்கடன் வாங்கி பிழைக்க முடியும் (உ.வ.).

ம. பிழெக்க.

[புள் → பிள். பிள்ளுதல் = துண்டு படுதல், மனம் வேறுபடுதல். பிள் → (பிழ்) → பிழை.]

பிழை²–த்தல் *piḻai-,* **4.** செ.குன்றா.வி. (v.t.) **1.** நீங்குதல்; to stop, cease. *'பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ'* (கம்பரா. நாட். 10) **2.** இலக்குத் தவறுதல்; to miss, as an arrow *'யானை பிழைத்த வேல்'* (குறள், 772).

[பிள் → (பிழ்) → பிழை .]

பிழை³–த்தல் *pil̠ai-,* 4செ.கு.வி. (v.i.) நோயினின்று விடுபடுதல்; to recover from disease.

[பிள் → (பிழ்) → பிழை.]

பிழை⁴ *pil̠ai-,* பெ. (n.) **1.** குற்றம்; misdemeanour, crime. *'தனபிழை பின்னூறிரங்கி விடும்'* (குறள், 535.) **2.** குறைவு; defect, want. *'ஓர்துணையிலாத பிழைநோக்கி'* (கம்பரா. உருக்காட். 112.) **3.** தவறு; mistake, error, inaccuracy. *'எழுத்துப் பிழை, சொற்பிழை'.*

ம. பிழ; கொலா. பிர்ச்.

[புள் → பிள் → பிழ் → பிழை.]

பிழைக்கை *pil̠aikkai,* பெ. (n.) உயிர் வாழ்க்கை; living.

[பிழை → பிழைக்கை. 'கை' தொ.பெ.ஈறு.]

பிழைகாண்(ணு)–தல் *pil̠aikāṇ(ṇu),* 6 செ. குன்றாவி. (v.t.) தவற்றைக்காணுதல்; to find fault. பிழை காணும் பார்வையிலேயே சிலர் செயற்பாடுகள் இருக்கின்றன (உ.வ.).

[பிழை + காண்க.]

பிழைகாயம் *pil̠ai-kāyam,* பெ. (n.) இறப்பை விளைக்காத படுபுண் (வின்.); wound that is not fatal.

[பிழை + காயம்]

பிழைகேடு *pil̠ai-kēḍu,* பெ. (n.) தவறு; mistake, *'பிள்ளைகால் வந்த பிழைகேடு'* (சித்திரகுப்த.79.)

[பிழை + கேடு. கெடு → கேடு]

பிழைசெய்–தல் *pil̠ai-šey-,* 1 செ.கு.வி. (v.i.) தவறு செய்தல்; to do mistake.

[பிழை + செய்–,]

பிழைதிருத்தம் *pil̠ai-tiruttam,* பெ. (n.) பிழையும் அதன் திருத்தமும் அடங்கிய பட்டியல்; list of errata et corrigenda.

[பிழை + திருத்தம்]

பிழைப்பி–த்தல் *pil̠aippi-,* 4 செ.குன்றாவி. (v.t) உயிர் பிழைக்கச் செய்தல்; to restore life.

ம. பிழெப்பிக்க

[பிழை → பிழைப்பி–, 'பி' பி.வி.ஈறு]

பிழைப்பிள்ளை *pil̠ai-p-piḷḷai,* பெ. (n.) கள்ளவுறவிற்பிறந்த பிள்ளை; illegitimate child.

[பிழை + பிள்ளை]

பிழைப்பு¹ *pil̠appu,* பெ. (n.) **1.** வாழ்க்கை; (wretched) life, subsistence, வெட்கம்கெட்ட பிழைப்பு என்று அலுத்துக் கொண்டார் (உ.வ.) **2.** வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளத் தேவையானவற்றை ஈட்டுதல்; livilihood, existence, பிழைப்புத்தேடி நகரத்திற்கு வருவோர் எண்ணிக்கை மிகுதி (உ.வ.)

[பிழை → பிழைப்பு]

பிழைப்பு² *pil̠appu,* பெ. (n.) **1.** குற்றம்; mistake,error, failure. **2.** தப்பியுய்கை (வின்.); escape **3.** உயிர்வாழ்வு; life *'சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பை'* (திருவாச.6,49.) **4.** கருச்சிதைவு (வின்.); miscarriage, abortion.

[பிழை → பிழைப்பு. 'பு' பெயராக்க ஈறு]

பிழைப்புக்காட்டு—தல் *pilaippu-k-kāṭṭu-,* 6 செ.கு.வி. (v.i.) வாழ்க்கைக்கு வழி காண்பித்தல் (கொ.வ.); to provide means of subsistence.

[பிழைப்பு + காட்டு—]

பிழைப்புத்தழைப்பு *pilaippu-t-talaippu,* பெ. (n.) உயிர்வாழ்மூலம்(வின்.); means of livelihood.

[பிழைப்பு + தழைப்பு]

பிழைப்பூட்டு—தல் *pilaippūṭṭu-,* **6.** செ. குன்றாவி. (v.t.) **1.** உயிர்ப்பித்தல்; to reanimate, resuscitate, restore to life. **2.** காப்பாற்றுதல்; to support, sustain, maintain.

[பிழைப்பு + ஊட்டு—, உண் - ஊட்டு]

பிழைபடு—தல் *pilaipaḍu-,* **20** செ.கு.வி. (v.i.) தவறு செய்தல்; to do mistake.

[பிழை + படு—,]

பிழைபாடு *pilai-pāḍu,* பெ. (n.) தவறுபடுகை; error, mistake *'பெருக நூலிற் பிழைபாடிலனே'* (நன்.42.)

[பிழை + பாடு. படு → பாடு. 'பாடு' சொ.ஆ.ஈறு]

பிழைபார்[1]—த்தல் *pilai-pār-,* **4.** செ.குன்றாவி. (v.t.) தவறுகளைத் திருத்துதல் (கொ.வ.); to correct errors;

[பிழை + பார்—,]

பிழைபார்[2]—த்தல் *pilai-pār-,* **4** செ.கு.வி. (v.i.) *பிழைபிடி—த்தல்* (கொ.வ.) பார்க்க; see *pilai-piḍi-,*

[பிழை + பார்—,]

பிழைபிடி—த்தல் *pilai-piḍi-,* **4.** செ.கு.வி. (v.i.) தவறு கண்டுபிடித்தல் (வின்.); to find fault.

[பிழை → பிடி—, பிண்டி → பிடி]

பிழைமணம் *pilai-maṇam,* பெ. (n.) ஒழுங்கற்ற திருமணம் அல்லது சேர்க்கை; illegal marriage or union, *'பெறுக நன்மணம் விடுபிழை மணமெனவே'* (சிலப்.24, பாட்டு மடை.பக்.518.) *'பழவினை பயத்தாற் பிழைமண மெய்திய'* (மணிமே.5,35.)

[பிழை + மணம். முள் → (மள்) → மண → மணம். மணத்தல் = கலத்தல்,கூடுதல்]

பிழைமொழி *pilai-moli,* பெ. (n.) குற்றமுள்ள சொல்; wrong, faulty word. *'பிழைமொழி செப்பினை'* (சிலப்.11,177.)

[பிழை + மொழி]

பிழைமோசம் *pilai-mōšam,* பெ. (n.) இக்கட்டு, இடையூறு; disaster. பேச்சுத் 'தள்ளிப்போனதினால் பிழைமோசம் வந்ததுவே.' (கோவ.க.91)

[பிழை + மோசம்]

Skt. mōṣa > **த.** மோசம்.

பிழையன் *pilaiyan,* பெ. (n.) தவறுள்ளது; that which has a flaw.

[பிழை → பிழையன். 'ன்' உடையானைக் குறித்துவந்து ஈறு]

பிழையாநன்மொழி *piḻaiyā naṉmoḻi,* பெ. (n.) நிறைவேற்றத் தவறலாகாத நல்லசொல்; promising word. 'பிழையாநன்மொழி தேறிய இவட்கே.' (நற். 10.9).

[பிழை + ஆ + நல் + மொழி 'ஆ' எ.ம. இடைநிலை]

பிள்(ளு)[1]–தல் *piḷ(ḷu)-,* 6. செ. கு. வி. (v.i.) 1. பிளவுண்டாதல்; to burst, open; to be rent or cut. 2. துண்டுபடுதல்; to be broken to pieces. '*அப்பளம் பிண்டுபோயிற்று*' 3. மனம் வேறுபடுதல்; to be at variance; to disagree. '*இருவர்க்கும் பிட்டுக்கொண்டது*'.

[புள் → பொள் → பொளி. பொளிதல் = வெட்டுதல், பிளத்தல். புள் → பிள் → பிடு. பிடுதல் = கையாற் பிளத்தல். புள் → பிள்(மு.தா.259) பிள்ளுதல் = பிளத்தல், பிளத்தலால் துண்டுபெடுதல், கருத்து வேறுபாடு காரணமாக மனம் வேறு படுதல்]

பிள்(ளு)[2]–தல் *piḷ(ḷu)-,* 6. செ. கு. வி. (v.i.) 1. விள்ளுதல், பிளவுறுதல் ; to cleave asunder, divide. '*அன்னை யடரும் பிட்டுப் பிட்டுண்டாய்*' (குமர. பிர. மதுரைக் கலம். 1.) 2. நொறுக்குதல்; to crush. '*முடியொரு பஃதவையுடனே பிட்டன்*' (தேவா. 883, 8.);

[புள் → பிள்]

பிள்[2] *piḷ,* பெ. (n.) 1. குழந்தை; child, infant. 2. பிள்ளைமை யழகு; tender beauty of a child. '*தன் பிள்ளழியாமே எதிரிகளை முடிக்கும்படி*' (திருவிருத். 14, வ்யா. பக். 94.)

[புள் → பிள் → பிற → பிறப்பு. புள் → பிள் → பீள் = இளங்கதிர், இளமை (மு. தா.39) புள் → புரு = குழந்தை. புள் → பிள் = பிள்ளை, பிள்ளைமையழகு. (மு.தா. 40, 41)]

பிள்ளாங்குழல் *piḷḷāṅ guḻal,* பெ. (n.) புல்லாங் குழல் பார்க்க; see *pullāṅ guḻal.*

[புல்லாங்குழல் → புள்ளாங்குழல் → பிள்ளாங்குழல்]

பிள்ளாண்டான் *piḷḷāṇḍāṉ,* பெ. (n.) பிள்ளையாண்டான் (இ.வ.) பார்க்க; see piḷḷaiyāṇḍāṉ, திருமணத்திற்கு அந்தப் பிள்ளாண்டான் ஒத்துக்கொள்ள வேண்டும்(உ.வ.)

[பிள்ளையாண்டான் → பிள்ளாண்டான்]

பிள்ளுவம் *piḷḷuvam,* பெ. (n.) யானை (அக. நி.); elephant.

பிள்ளை[1] *piḷḷai,* பெ. (n.), 1. குழந்தை; child, infant, offspring. '*பிள்ளையைத் தாயலறக் கோடலான்*' (நாலடி., 20.). 2. மகன்; son. '*எற்றுக்கென் பிள்ளையைப் போக்கினேன்*' (திவ். பெரியாழ். 3, 2, 2.) 3. இளைஞன்; youth, lad, boy. '*தன்னேராயிரம் பிள்ளைகளொடு தளர் நடையிட்டு வருவான்*' (திரு. பெரியாழ். 3, 1.1). 4. மகள்; daughter. 5. இளமை. tender, young age. '*பிள்ளைமாக்களிறு*' (கம்பரா. பள்ளி. 32). 6. சிறுமை; smallness littleness. '*பிள்ளைக்கொட்டை*' 7. குலம் (சாதி); caste. நீ என்ன பிள்ளை? 8. கோட்டில் வாழ் விலங்கின் இளமை (திவா.); young of arboreal animals, as the monkey. 9. நாயொழித்த விலங்கினிளமை; young of beasts except the dog. 10. பறப்பன, தவழ்வனவற்றினிளமை (தொல். பொ. 560, 561); young of birds, and certain reptiles,

as crocodlie, tortoise, etc., **11.** கரிக்குருவி; king crow. *'பிள்ளையுள் புகுந்தழித்ததாதலால்'* **(சீவக. 1584.) 12.** காகம் (சூடா.); crow. **13.** நெல்லும் புல்லும் ஒழிந்த ஓரறிவுயிரின் இளமைப் பெயர் (தொல். பொ. **579, 580);** young of ōr-aṟi-v-uyir, excepting 'nel' 'pul'. **14.** மாலிய ஆசிரியர்களின் சிறப்புப் பெயர்; title of certain ancient Vaiṣṇava Acāryās பிள்ளை லோகாசாரியர், தூப்புற் பிள்ளை. **15.** வயிரவன் (பிங்.); Bhairava. **16.** வேளாளர் பட்டப்பெயர்; a title of the Veḷḷāla caste. **17.** சங்கின் ஏறு **(பிங்.);** male conch. **18.**மரப்பாவை;doll*'சாய்தாட் பிள்ளை'* (கல்லா. **9). 19.** மக்கள், சிலவிலங்கு, சிலபறவை, சிலமரம் இவற்றின் பெயர்களோடு சேர்த்துச் சொல்லுஞ் சொல்; word suffix to the names of the persons and of some animals, birds and trees. பெண் பிள்ளை, கீரிப்பிள்ளை, கிளிப்பிள்ளை, தென்னம் பிள்ளை;

ம. பிள்ள; **க.** பிள்ளெ, பிள்ளு, த்லிள்ளு,

த்லிள்ளெ; **தெ., கொலா.** பில்ல ; **து.**

பிள்ளெ, புள்ளெ (பேரக்குழந்தை); **கோத.** பய்ள்; **துட.** பெள்கோப் (திருமணம் செய்து கொடுக்கப்பட வேண்டியவள்); **குட.** பள்ளெ; **நா.** பில்ல (பெண்மகள்); **கோண்.** பிலா; **குரு.** பெல்லோ; **மா.** பெலி (பெண்), பிலோ (பெண்செடி); **பிரா.** பிலோத (ஏழைப்பிள்ளை, சிறுகுழந்தை, ஏதிலி); **பர்.** பில்லகா.

Mar.pīl (நாய், பூனை, முயல் ஆகியவற்றின் குட்டி, சில பறவைகளின் குஞ்சு); H. pillā; Sinh. pilavā; Skt. pillikā (குஞ்சு)

[புள் → புரு = குழந்தை புள் → பிள் = பிள்ளை, பிள்ளைமையழகு. பிள் → பீள் → கரு, கருப்பைக் குழவி, இளமை. பிள் → பிள்ளை. (மு. தா. 40. 41.)]

மக்கள் இளமையை மகவு, குழவி, பிள்ளை என்று சொல்வதே மரபாயினும் கடைசிப் பிள்ளையைக் கடைக்குட்டி என்னும் வழக்குண்டு.

பிள்ளை என்னும் இளமைப் பெயர் ஏறத்தாழ எல்லாவுயிரினத்திலும் சென்றுவழங்கும். *'இருக்கும் பிள்ளை மூன்று, பறக்கும் பிள்ளை மூன்று'* என ஒரு சொலவடையுண்டு, ஆயின் இவ்வரம்பிறந்து பிள்ளைச் சொல் வழங்குவது தவறாம். (த. வ. 287, **288).**

பிள்ளைக்கற்றாழை, பிள்ளைக்கிணறு, பிள்ளைக் கட்டை, பிள்ளைத்தக்காளி, பிள்ளைப்பிறை, பிள்ளைப்பெட்டி, பிள்ளை விளாத்தி (குட்டிவிளாத்தி), முதலிய புணர்ப் பெயர்களால் பிள்ளை என்பது சிறுமையைக் குறிக்குமேனும், இது இளமைப் பெயரின் ஆட்சிவிரிவே என்றறிதல் வேண்டும். குட்டித் தொல்காப்பியம் என்பதில் குட்டி என்றும் அதுவே. (மு.தா.**130.)**

தமிழர் எல்லாரும் பொதுவாக அஃறிணையுயிரி களிடத்து அன்பு காட்டி வந்தனர். வீட்டில் வளர்ப்பனவும் மிகப் பயன்படுவனவும் கண்ணிற் கினியனவுமான நிலைத்திணை, ஒருயிர் பறவை முதலியவற்றைப் பிள்ளைகள் (தாவரம்) போன்றே பேணினர். அதனால் அவற்றின் இளமைக்குப் பிள்ளைப் பேறில்லாதவர்கள் பிள்ளைகளாகவே கருதி வளர்க்கும் வழக்கமும் ஏற்பட்டது. *'இருக்கும் பிள்ளை மூன்று, ஓடும் பிள்ளை மூன்று, பறக்கும் பிள்ளை மூன்று'* என்பது பழமொழி. தென்னம்பிள்ளை போன்றது இருக்கும் பிள்ளை; கீரிப்பிள்ளை போன்றது ஓடும் பிள்ளை; கிளிப்பிள்ளை போன்றது பறக்கும் பிள்ளை. (ப. தா. நா. ப. **168).**

piṅga, a young animal cf. D. pinju, piḷḷe (KKED xxi)

piḷḷi-ei; a child, Comp. Yarkand Tartar billa, a child. What is the origin of the Hindi pillā, a cub, a pup?(CGDFL.621)

piḷḷ-ei Tam.a child; Tel.pilla, Can, piḷḷe, Latin puell-us, puell-a, a boy, a girl; compare with pullus, the young of an animal. if the Latin word is derived from puer-ulus, it is probably unconnected with pill-ei. Perhaps a more reliable

affinity is that of fil-ius, a son, a daughter, supposed to mean literally a suckling (CGDFL.599)

பிள்ளை² *pi<u>ḷḷ</u>ai,* பெ. (n.) பிள்ளைப்புழு பார்க்க; see pi<u>ḷḷ</u>ai-p-pu<u>ḻ</u>u. *'பிறத்தலே தலைமையாயிற் பிள்ளைகளல்ல தென்னை'* (நீலகேசி 445).

[புள் → பிள் → பிள்ளை]

பிள்ளைக்கட்டி *pi<u>ḷḷ</u>ai-k-ka<u>ṭṭ</u>i,* பெ. (n.) இளங்கருப்பக் கட்டி (வின்.); foetus in an early stage of pregnancy.

[பிள்ளை + கட்டி. கள் → கட்டி = திரண்டது]

பிள்ளைக்கதவு *pi<u>ḷḷ</u>ai-k-kadavu,* பெ. (n.) கதவில் வைக்கப்படும் சிறு பலகணிக்கதவு; window within a door.

[பிள்ளை + கதவு.

புள் → பிள் → பிள்ளை = இளமை, குழந்தை. பிள்ளை இங்குக் குழந்தை போலுள்ள அல்லது சிறிய என்னும் பொருள் உணர்த்தும் அடைமொழி பெரும்பாலும் கோயில்களிலும் சிறைச் சாலைகளிலும் இக்கதவு இருக்கும்.*]*

பிள்ளைக்கவி *pi<u>ḷḷ</u>ai-k-kavi,* பெ. (n.) 1. பிள்ளைத்தமிழ் (இலக். வி. 805.) பார்க்க; see *pi<u>ḷḷ</u>aittami<u>ḻ</u>.* 2. முன்னோர் மொழிந்த சொன்னடை, பொருணடை கொண்டு பாப்புப்புனைவோன் (வெண்பாப். செய். 48.); a poet who composes poems in immitation of the standard works already existing in literature.

[பிள்ளை + கவி. பிள்ளை = இளமைப் பருவம், பழகும் நிலை]

பிள்ளைக்கற்றாழை *pi<u>ḷḷ</u>ai-k-ka<u>ṟṟ</u>ā<u>ḻ</u>ai,* பெ. (n.) கற்றாழை வகை (வின்.); a species of aloe.

[பிள்ளை + கற்றாழை. கல் + தாழை – கற்றாழை]

பிள்ளைக்காளி *pi<u>ḷḷ</u>ai-k-kā<u>ḷ</u>i,* பெ. (n.) செடிவகை; a kind of plant.

பிள்ளைக்கிணறு *pi<u>ḷḷ</u>ai-k-ki<u>ṇ</u>a<u>ṟ</u>u,* பெ. (n.) கிணற்றின் உள்ளூற்றுக் குழி (இ. வ.); small well or hole sunk within a well.

ம. பிள்ளைக்கிணறு.

[பிள்ளை + கிணறு. பிள்ளை = இளையது, சிறியது]

பிள்ளைக்கிரிச்சரம் *pi<u>ḷḷ</u>ai-k-kiriccaram,* பெ. (n.) *பிள்ளைக்கீரை* பார்க்க; see *pi<u>ḷḷ</u>ai-k-kīrai.*

பிள்ளைக்கீரை *pi<u>ḷḷ</u>ai-k-kīrai,* பெ. (n.) முளைக்கீரை; a greens.

பிள்ளைக்குறி *pi<u>ḷḷ</u>ai-k-ku<u>ṟ</u>i,* பெ. (n.), பெண்களுக்குக் கருப்பமுண்டாவதற்குரிய அடையாளம்; symptoms of conceivement.

[பிள்ளை + குறி]

பிள்ளைக்கெண்டை *pi<u>ḷḷ</u>ai-k-ke<u>ṇ</u>ḍai,* பெ. (n.) ஒருவகை மீன்; a kind of fish.

பிள்ளைக்கேங்கல் *pi<u>ḷḷ</u>aikk-ēngal,* பெ. (n.) மகப்பேற்றிற்காக நெடுங்காலம் காத்திருத்தல்; longing to have a child.

[பிள்ளைக்கு + ஏங்கல். ஏங்கு → ஏங்கல். 'அல்' தொ. பெ. ஈறு]

பிள்ளைக்கைவளை *pi||ai-k-kaiva|ai,* பெ. (n.), குழந்தைகள் அணியும் வளையல் வகை (திவா.); a kind of bracelet worn by children.

[பிள்ளை + கை + வளை. முள் → (மள்) → வள் → வளை = வட்டமான கையணி]

பிள்ளைக்கோசம் *pi||ai-k-kōšam,* பெ. (n.) நறுமணமுள்ள மருந்துச் செடி; a drug-costus.

பிள்ளைக்கோட்டை[1] *pi||ai-k-kōṭṭai,* பெ. (n.) பெரிய கோட்டையின் முகப்பிலுள்ள சிறுகோட்டை(வின்.); small fort at the entrance to a large fort.

[பிள்ளை + கோட்டை. பிள்ளை = இளமை, சிறியது. கோண் → கோடு → கோட்டை = மதிலரண் உள்ளது.]

பிள்ளைக்கோட்டை[2] *pi||ai-k-kōṭṭai,* பெ. (n.) தொடையிடுக்கிலுண்டாகும் கட்டி (யாழ். அக.); inguinal bubo.

மறுவ. அரையாப்பு

[பிள்ளை + கோட்டை. கொள் → கொட்டு → கொட்டம் → கோட்டம் → கோட்டை.]

ஈன் பொறிகளில் (ஜனனேந்திரியங்களில்) சூடு ஏற்பட்டு அங்கிருந்து அறையின் நிணநீர்க் கோளத்திற்குப் பரவுவதால் தொடையிடுக்கில் காணப்படும் ஒருவகைப் புண்.

பிள்ளைகரை—த்தல் *pi||ai-karai-,* 4 செ.கு.வி. (v.i.) கருச்சிதைத்தல்; to cause abortion.

[பிள்ளை + கரை. கரைத்தல் = நீக்குதல், அழித்தல்]

பிள்ளைகள்தனம் *pi||aiga|-tanam,* பெ. (n.) ஒரு குலத்தார் (சாதியார்); a sect of people. *'வலங்கை இடங்கை சிறுதனம், பிள்ளைகள் தனம் வடுகர் மலையாளர் பரிவாரக் கொந்தும்'.* (S.I.I.iv. **492.**)

[பிள்ளைகள் + தனம்]

பிள்ளைகாக்கும்பேதி *pi||ai-kākkum bēdi,* பெ. (n.) வலம்புரிக் கொடி; a creeper.

பிள்ளைகுட்டி *pillaikuṭṭi,* பெ. (n.) குழந்தை; child, பிள்ளைகுட்டி பெற்றால்தான் அவற்றை வளர்ப்பதிலுள்ள சிக்கல் தெரியும் (உ.வ.)

க. பிள்ளைபிசுக்கு,

[பிள்ளை + குட்டி. பிள்ளை = உயர் திணைக்குழவி, அதையொப்ப நினைக்கும் அஃறிணைக் குழவி. பிள்ளைகுட்டி இனப்பொருள் மரபிணைமொழி]

பிள்ளைகுட்டிக்காரன் *pi||ai-kuṭṭi-k-kāraṉ,* பெ. (n.), பெருங்குடும்பி (கொ.வ.); a man with a large family.

[பிள்ளை + குட்டி + காரன். 'பிள்ளைகுட்டி' மக்களை(குழந்தைகளை)க் குறிக்கும் மரபிணைமொழி]

பிள்ளைகுட்டிகள் *pi||ai-kuṭṭiga|,* பெ. (n.) குழந்தைகள் (கொ.வ.); children. பிள்ளைக் குட்டிகள் இல்லாதவருக்குப் பொறுப்புகள் குறைச்சல்தான் (உ.வ.)

[பிள்ளை + குட்டி + கள்]

பிள்ளைகூட்டு—தல் *pi||ai-kūṭṭu-,* 5செ. குன்றாவி. (v.t.) பிறர் ஆண்மகவைத் தன் மகனாக ஏற்றுக் கொள்ளுதல் (தத்தெடுத்தல்); to adopt a son.

[பிள்ளை + கூட்டு—, பிள்ளை = ஆண்மகன்]

பிள்ளைகொல்லி[1] *pillai-kolli,* பெ. (n.), 1. மழலைக் கொலை; infanticide. 2. குழந்தைநோய் வகை; a disease fatal to infants.

[பிள்ளை + கொல்லி. கொல் → கொல்லி = கொல்வது]

பிள்ளைகொல்லி[2] *pillaikolli,* பெ. (n.) பெருங்காய வகை; a kind of asafoetida.

பிள்ளைச்சாதிகள் *pillai-c-cādigal,* பெ. (n.), இளைஞர்; young people.

மறுவ. விடலை

[பிள்ளை + சாதிகள்]

பிள்ளைச்செடி *pillai-c-cedi,* பெ. (n.) மருந்துச் செடி; a herbal tree.

[பிள்ளை + செடி]

பிள்ளைச்சோமன் *pillai-c-cōman,* பெ. (n.), சிறுதுணிவகை(வின்.); a small cloth.

[பிள்ளை + சோமன்]

பிள்ளைச்சோறு *pillai-c-cōru,* பெ. (n.) சிறு குழவிகட்குரிய குழைந்த சோறு; overcooked rice for the child.

[பிள்ளை + சோறு]

பிள்ளைசாத்து-தல் *pillai-šāttu-,* 15 செ. கு. வி. (v.i.), நாற்றுக்காகத் தென்னை நெற்றுப் புதைத்தல்; to plant coconuts for transplantation.

[பிள்ளை + சாத்து-, பிள்ளை = தென்னம் பிள்ளை]

பிள்ளைத்தக்கல் *pillai-t-takkal,* பெ. (n.) கருவழியாதிருக்கை; retention of pregnancy.

[பிள்ளை + தக்கல். தக்கு → தக்கல். 'அல்' தொ. பெ. ஈறு]

பிள்ளைத்தக்காதிருத்தல் *pillai-t-takkādiruttal,* தொ. பெ. (vbl.n.), கருவழிதல்; miscarrying.

[பிள்ளை + தக்காது + இருத்தல்,]

பிள்ளைத்தக்காளி *pillai-t-takkāli,* பெ. (n.), தக்காளி வகை (யாழ். அக்.); small Indian winter cherry.

[பிள்ளை + தக்காளி. பிள்ளை = அளவில் சிறியது]

பிள்ளைத்தடம் *pillai-t-tadam,* பெ. (n.), மலைப்பாறைகளில் வெட்டிய காற்சுவடு (நாஞ்சில் வழக்கு); footprint in rocks.

[பிள்ளை + தடம்]

பிள்ளைத்தண்டு *pillai-t-tandu,* பெ. (n.), தெய்வத் திருவுருங்களைத் தூக்கிச் செல்ல உதவும் சிறுகொம்பு; a small-sized pole, used in carrying idols.

[பிள்ளை + தண்டு. பிள்ளை = சிறிய. துள் → தள் → தண் → தண்டு]

பிள்ளைத்தமிழ் *pillai-t-tamil,* பெ. (n.) ஆண்பாற் பிள்ளைத் தமிழ் பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைப் பட்டு, பிள்ளையின் பல பருவங்களைப் பற்றிக் கூறும் சிற்றிலக்கிய வகை; a poem describing the various stages of childhood of two kinds viz., āṇpāṟ-piḷḷai-t-tamiḻ, peṇpāṟ-piḷḷai-t-tamiḻ.

[பிள்ளை + தமிழ்]

பிள்ளைத்தனம் *piḷḷai-t-taṉam,* பெ. (n.) அகவை முதிர்ந்தும் அறிவு முதிராச் செயற்பாடு; boyishness, திருமணமாகியும் அவனது பிள்ளைத்தனம் இன்னும் போகவில்லை (உ.வ.)

[பிள்ளை + தனம்]

சிறுபிள்ளைத்தனம் என்று சிறு அடைகொடுத்துவழங்குதல் பெரும்பான்மை

பிள்ளைத்தாட்சிக்கொடி *piḷḷaittāṭci-k-koḍi,* பெ. (n.) கருப்பக்கொடி; veins appearing on the abdomen of pregnant woman.

[பிள்ளைத்தாய்ச்சிக்கொடி → பிள்ளைத் தாட்சிக் கொடி]

பிள்ளைத்தாய்ச்சி *piḷḷai-t-tāycci,* பெ. (n.) **1.** கருவுற்ற பெண் (இ.வ.); pregnant woman. **2.** கைக்குழந்தையையுடைய தாய் (இ.வ.); a woman having a babe-in-arms.

[பிள்ளை + தாய்ச்சி. தாய் → தாய்ச்சி]

பிள்ளைத்தாய்ச்சிநோய் *piḷḷai-t-tāycci-nōy,* பெ. (n.) கருவுற்ற மகளிர்க்குண்டாகும் கக்கல் (வாந்தி), மயக்கம், வயிற்றுப்போக்கு முதலான நோய்கள்; senses of vomiting, giddiness, dysentery etc. affecting pregnant women.

[பிள்ளைத்தாய்ச்சி + நோய்]

பிள்ளைத்தாலி *piḷḷai-t-tāli,* பெ. (n.) பரவரில் திருமணமாகாத சிறுமகளிர் பூணுங் கழுத்தணிவகை (பரவர் வழக்கு); necklace worn close to the neck by Parava girls before marriage.

[பிள்ளை + தாலி. ஞாலி → நாலி → தாலி]



பிள்ளைத்திருநாமம் *piḷḷai-t-tirunāmam,* பெ. (n.) **1.** இளமையிற் பெற்றோரிட்ட பெயர் (கொ.வ.); name bestowed in infancy by parents. **2.** தத்துவராயர் இயற்றிய நூல்; a poem by Tattuvarāyar.

[பிள்ளை + திரு + நாமம்]

Skt. nāma> **த.** நாமம்

பிள்ளைத்தூண் *piḷḷai-t-tūṇ,* பெ. (n.) தூண்மேலுள்ள சிறுதூண்; small pillar set over a large pillar.

க.பிள்ளெகாலு, கிள்ளெகால், கிள்ளெகாலு.

[பிள்ளை + தூண். பிள்ளை = சிறிய, சிறு. துள் → (தூள்) → தூண்]

பிள்ளைத்தெளிவு *piḷḷai-t-teḷivu,* பெ. (n.) பிள்ளைத் தன்மையுள்ள போர் வீரனொருவன் போரிற்பட்ட தன் புண்ணைப் பார்த்து மகிழ்ந்து கூத்தாடுதலைக் கூறும் புறத்துறை (பு.வெ.2, 8,); (puṟap.) theme describing the dance of a young warrior, exultant at the wounds he received in battle.

[பிள்ளை + தெளிவு. தெள்ளுதல் = தெளிவாதல். தெள் → தெளி. தெளிதல் = ஐயம் நீங்குதல்]

பிள்ளைத்தேங்காய் *piḷḷai-t-tēṅgāy,* பெ. (n.) தென்னை நெற்று (யாழ்ப்.); cocoanut, reserved for planting.

[பிள்ளை + தேங்காய். தெங்கங்காய் → தேங்காய்]



பிள்ளைத்தேள் *piḷḷai-t-tēḷ,* பெ. (n.) நச்சுப்பூச்சி வகை (வின்.); centipede.

[பிள்ளை + தேள்]

பிள்ளைத்தொண்டு *piḷḷai-t-toṇḍu,* பெ. (n.) புதல்வனைப் பெற விரும்புவள் நுழைந்து செல்லுங் கோயிற் கதவிலுள்ள துளை (துவாரம்) (நெல்லை.); opening in a temple door, believed to possess the power of conferring motherhood on a married women, if she passes through it.

[பிள்ளை + தொண்டு. துள் → தொள் → தொண்டு]

பிள்ளைத்தோம்பு *piḷḷai-t-tōmbu,* பெ. (n.) **1.** சிறுதுணி; a small piece of cloth. **2.** தூண்; finial.

[பிள்ளை + தோம்பு]

பிள்ளைத்தோழி[1] *piḷḷai-t-tōḻi,* பெ. (n.) பிள்ளைப் பேற்றில் இருக்கும் போது பெண்ணிற்கு வரக்கூடிய வயிற்றுநோய் வகை (இ.வ.); a disease generally affecting a woman in child-bed.

[பிள்ளை + தோழி]

பிள்ளைத்தோழி[2] *piḷḷai-t-tōḻi,* பெ. (n.) குழந்தை வளர்க்கும் செவிலி; foster-mother.

[பிள்ளை + தோழி]

பிள்ளைநஞ்சு *piḷḷai-nañju,* பெ. (n.) நச்சுக்கொடி; placenta. (M.L.)

[பிள்ளை + நஞ்சு]

பிள்ளைநிலை *piḷḷai-nilai,* பெ. (n.) போரிற் சென்றறியாத மறக்குடிச் சிறுவர் தாமே செய்யுந் தறுகணாண்மையைக் கூறும் புறத்துறை (தொல். பொ. 60); (purap.) theme describing the courageous spirit shown by wrriors' children though they have never been to a battle.

[பிள்ளை + நிலை]

பிள்ளைநோய் *piḷḷai-nōy,* பெ. (n.) குழந்தைக்கு ஏற்படும் சிறு பிணி; children's disease.

[பிள்ளை + நோய்]

பிள்ளைப்பட்சி *piḷḷai-p-paṭci,* பெ. (n.) கிளிப்பிள்ளை நரந்தம்பிள்ளை(மைனா), குயிற்பிள்ளை யென்றாற்போலப் பிள்ளைச் சொற் சேர்த்துக் கூறும் பறவைகள் (தக்கயாகப். 44, உரை); birds like parrots, cuckoos, etc, to which the term piḷḷai may be suffixed.

[பிள்ளை + பட்சி]

Skt. paṭsin > த. பட்சி

பிள்ளைப்பந்து *piḷḷai-p-pandu,* பெ. (n.) குழந்தைகளின் பந்து விளையாட்டுவகை; a game of ball played by children. (Parava.)

[பிள்ளை + பந்து]

பிள்ளைப்பரிகாரி *piḷḷai-p-parigāri,* பெ. (n.) மருத்துவச்சி; midwife.

[பிள்ளை + பரிகாரி]

Skt. pari-hārin > **த.** பரிகாரி.

பிள்ளைப்பருவம் *piḷḷai-p-paruvam,* பெ. (n.) **1.** சிறுமைப் பருவம்; boy-hood. **2.** குழந்தைப் பருவம்; child-hood.

[பிள்ளை + பருவம்]

பிள்ளைப்பன்மை *piḷḷai-p-paṉmai,* பெ. (n.) மக்கள் (சூடா.); children.

[பிள்ளை + பன்மை. பல் → பன் → பன்மை]

பெயருடன் 'கள்' போன்ற பன்மை ஈறுகள் சேர்த்துப்பன்மை படுத்துதல் இயல்பு. பன்மை ஈறுக்கு மாறாக இலக்கணக் குறியீட்டுப்பெயரைச் சேர்த்து வழங்கும் இடமுள்ளமையை இவ்வாட்சி காட்டுகிறது.

பிள்ளைப்பாட்டு *piḷḷai-p-pāṭṭu,* பெ. (n.) *பிள்ளைத்தமிழ்* (யாழ்.அக.) பார்க்க; see *piḷḷai-t-tamiḻ*

[பிள்ளை + பாட்டு. பாடு → பாட்டு]

பிள்ளைப்பால் *piḷḷai-p-pāl,* பெ. (n.) **1.** குழந்தைகளுக்கு இலவசமாக (தருமமாக) ஊற்றும் பால்; cow's milk distributed free for the use of infants. **2.** முலைப்பால்; mother's milk.

[பிள்ளை + பால்]

பிள்ளைப்பிணக்கு *piḷḷai-p-piṇakku,* பெ. (n.) குழந்தைகள் கொள்ளுஞ் சிறுசினம் (திவ். பெரியாழ். 2, 9, 2. வ்யா. பக். 456); childish petulance.

[பிள்ளை + பிணக்கு. பிண் → பிணகு → பிணங்கு → பிணக்கு]

பிள்ளைப்பிணி *piḷḷai-p-piṇi,* பெ. (n.) குழந்தை யிசிவு நோய்; infantile convulsions. (M.L.)

[பிள்ளை + பிணி. புள் → பிள் → (பிண்) → பிணி]

பிள்ளைப்பிறப்பு *piḷḷai-p-piṟappu,* பெ. (n.) குழந்தைப் பிறப்பு; child birth.

[பிள்ளை + பிறப்பு. பிள் → பிற → பிறப்பு]

பிள்ளைப்பிறை *piḷḷai-p-piṟai,* பெ. (n.) இளம் பிறை (சீவக. 2390, உரை); crescent moon.

[பிள்ளை + பிறை. பிள்ளை = சிறிய, இளைய. புரு → (புற) → புறை → பிறை = வளைந்த நிலா]

பிள்ளைப்புழு *piḷḷai-p-puḻu,* பெ. (n.) பிள்ளைப் பூச்சி; an insect. *'பிள்ளைப்புழு என்னும் பிராணிவிசேஷத்தை'* (நீலகேசி, 445, உரை)

[பிள்ளை + புழு. புள் → புழு]

பிள்ளைப்பூச்சி *pillai-p-pūcci,* பெ. (n.) சேற்றில் வாழும் பூச்சிவகை. gryllo-ṭalpa, a genus of insects, including crickets, which live in mud. *'கொட்டினால் தேள், கொட்டா விட்டால் பிள்ளைப்பூச்சி'*

[பிள்ளை + பூச்சி]



பிள்ளைப்பெட்டி *pillai-p-petti,* பெ. (n.) சிறுபெட்டி (இ.வ.); small box.

[பிள்ளை + பெட்டி. பிள்ளை = சிறு. பிள் → (பெள்) → பெட்டி]

பிள்ளைப்பெயர்ச்சி *pillai-p-peyarcci,* பெ. (n.) 1. பிள்ளைத் தன்மையுள்ள போர்வீர னொருவன் தீ நிமித்தங்களுக்கு அஞ்சாது போருக்குச் செல்வதையும் அதற்காக அரசன் அவனைப் புகழ்வதையும் கூறும் புறத்துறை (புறநா. 259.); (purap.) theme describilng the march in spite of evil omens, of a youthful warrior to battle and the meed of praise he receives from his king. 2. பிள்ளையாட்டு (தொல். பொ. 60, உரை) பார்க்க; see pillaiyāṭṭu.

[பிள்ளை + பெயர்ச்சி. பெயர் → பெயர்ச்சி]

பிள்ளைப்பெருமாள்கவிராயர் *pillai-p-perumālkavirāyar,* பெ. (n.) 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a poet of mineteenth century.

[பிள்ளை + பெருமாள் + கவிராயர்]

பிள்ளைப்பெருமாளையங்கார் *pillai-p-perumāl-aiyangār,* பெ. (n.) எண்வகைச் சிற்றிலக்கியம் (அட்டப் பிரபந்தம்) இயற்றிய ஆசிரியர்; the author of asṭa-pirapandam.

[பிள்ளை + பெருமாள் + ஐயங்கார்]

பிள்ளைப்பெற்றாள்தீட்டு *pillai-p-perrāl tittu,* பெ. (n.) பிள்ளை பிறத்தலால் நேரும் தீட்டு; ceremonial pollution attaching to the members of a household in connection with a child birth in their house.

[பிள்ளை + பெற்றாள் + தீட்டு]

பிள்ளைப்பேறறிந்தவள் *pillai-p-pērarindaval,* பெ. (n.) மருத்துவச்சி (வின்.); midwife.

[பிள்ளை + பேறு + அறிந்தவள்]

பிள்ளைப்பேறு *pillai-p-pēru,* பெ. (n.) 1. பிள்ளைப்பிறப்பு; child birth. ஊர்ப் புறங்களிலும் பிள்ளைப்பேறு மருத்துவ மனை உள்ளது (உ.வ.) 2. மக்கட்பேறு (வின்.); children, considered a blessing.

[பிள்ளை + பேறு. பெறு → பேறு (தொ.ஆகு.)]

பிள்ளைப்பேறுபார்—த்தல் *pillai-p-pēru-pār-,* 4 செ.குன்றாவி. (v.t.) மகப்பேறு பார்த்தல்; to attend to delivery.

[பிள்ளைப்பேறு + பார்—,]

பிள்ளைபிடிப்பவன் *piḷḷaipiḍippavaṉ*, பெ. (n.) குழந்தைகளைக் கடத்துபவன்; kidnapper of children.

[பிள்ளை + பிடிப்பவன்]

பிள்ளைபெற்றவீடு *piḷḷai-peṟṟa-vīḍu*, பெ. (n.) குழந்தை பிறந்ததனால் தீட்டுடைய வீடு (இ.வ.); house where a child is born, considered to be under pollution.

[பிள்ளை + பெற்ற + வீடு]

பிள்ளைபெறாதுமலடி *piḷḷai-p-peṟāda-malaḍi*, பெ. (n.) **1.** பிள்ளை பெறாதவள்; barren woman; **2.** இரக்கமற்றவள்(வின்.); merciless woman.

[பிள்ளை + பெறாத + மலடி. பிள்ளை பெறுவதும் குழந்தை வளர்ப்பதும் பெண்கள் மனத்தைப் பண்படுத்து மாகையால் பிள்ளை பெறாத மலடி பண்படாதமனத்தவளாக இருக்கக்கூடும் என்னும் நிலையில் உருவானதே இரக்கமற்றவள் என்னும் பொருள்]

பிள்ளைபெறாமலடி *piḷḷai-peṟā - malaḍi*, பெ. (n.) குழந்தை பெறாதவள்; barren woman.

[பிள்ளை + பெறா + மலடி. மலடு → மலடி. 'மலடி' என்னும் சொல்லே குழந்தைப்பெறாதவள் என்னும் பொருள் கொண்டது. அதற்குப் 'பிள்ளை பெறா" என்னும் அடை வந்தது மிகை]

பிள்ளைபெறு—தல் *piḷḷai-peṟu-*, 20 செ.கு.வி. (v.i.) குழந்தை பெறுதல்; to deliver child. பிள்ளைப் பெறுவதற்காக மருமகள் தாய்வீடு செல்ல தேவை இல்லை என்கின்றனர் இக்கால மாமியார்கள் (உ.வ.)

[பிள்ளை + பெறு—,]

பிள்ளைமகள் *piḷḷaimagaḷ*, பெ. (n.) தேங்காய்; cocoanut.

[பிள்ளை + மகள். பிள்ளை = தென்னம் பிள்ளை]

பிள்ளைமகனிளையோர் *piḷḷai-magaṉiḷaiyōr*, பெ. (n.) இளைஞர்; young person.

[பிள்ளை + மகன் + இளையோர்]

பிள்ளை மருது *piḷḷaimarudu*, பெ. (n.) வெண் மருது; a kind of tree.

[வெள்ளைமருது → பிள்ளைமருது. கருமருதை நோக்க வெளிர்நிறமாய் இருப்பது வெள்ளை மருது எனப்பட்டது. 'மருது' ஒருவகைமரம். இதில் கருமருது, செம்மருது, பிள்ளைமருது (வெள்ளை மருது) என்றாற்போல பலவகைகளுண்டு]

பிள்ளைமருந்து *piḷḷai-marundu*, பெ. (n.) வசம்பு (இ.வ.); sweet flag.

[பிள்ளை + மருந்து]

பிள்ளைமாபிரபு *piḷḷai-mā-pirabu*, பெ. (n.) பெருமையிற் சிறந்தோன்; nobleman, eminent person.

[பிள்ளை + மா + பிரபு]

Skt. prabhu > த. பிரபு

பிள்ளைமார் *piḷḷaimār*, பெ. (n.) **1.** வேளாளர்; people of the Vēḷāḷa caste. (G.Tn.D-I, 139) **2.** மேம்பாடுள்ளவர் (வின்.); respectable men, gentlemen.

[பிள்ளை + மார். 'மார்' ப.பா.ஈறு.]

பிள்ளைமாற்று *pillai-mārru,* பெ. (n.) கொணமணப் பிள்ளை (இ.வ.); a ceremony in marriage in which the bride presents the bridegroom with a doll.

[பிள்ளை + மாற்று. பிள்ளை = குழந்தை, குழந்தை போலுள்ள பொம்மை. மாறு → மாற்று]

பிள்ளைமுதலி *pillai-mudal,* பெ. (n.) வேளாளர் தலைவன்; head man of Vēlāla caste. (S.I.I. vii. **49**)

[பிள்ளை + முதலி. முதல் → முதலி]

பிள்ளைமுறல் *pillai-mural,* பெ. (n.) ஒருவகை மீன்; a kind of fish.



பிள்ளைமை[1] *pillaimai,* பெ. (n.) **1.** பிள்ளைத் தன்மை; childishness. *'அளவில் பிள்ளைமை யின்பத்தை'* (திவ். பெருமாள்.7,4.) **2.** இளமையிலுள்ள அறியாமை; childish innocence. *'பிள்ளைமை காதல் கூர'* (சீவக. **2529**).

[பிள்ளை + மை. 'மை' ப. பெ. ஈறு]

பிள்ளைமை[2] *pillaimai,* பெ. (n.) தலைச்சன் பிள்ளையினின்று எடுக்கும் மாயமை; a collyrium extracted or prepared from the first born child.

[பிள்ளை → பிள்ளைமை]

பிள்ளையன்[1] *pillaiyan,* பெ. (n.) வேளாளத் தலைவர் சிலர்க்கு வழங்குந் சிறப்புப் பெயர்; title of certain Vēlāla chieftains. *'வடமலையப்பப் பிள்ளையன்'*

[பிள்ளை → பிள்ளையன்]

பிள்ளையன்[2] *pillaiyan,* பெ. (n.) இளையோன்; youth. *'மேவா ருயிருணங்க மேன்முடித்த பிள்ளையன்'* (பு. வெ. **2, 8**)

[பிள்ளை → பிள்ளையன்]

பிள்ளையாட்டு *pillai-y-āttu,* பெ. (n.) வாளாற் பொருது மேம்பட்ட அரசிளங்குமரனைக் கண்டு அந்நாட்டிலுள்ளார் உவந்து பறை யொலிக்க அரசு கொடுத்தலைக் கூறும் புறத்துறை (தொல். பொ. **60**); (purap.) theme describing the citizens rejoicing at the valour of a victorious prince and bestowing the kingdom upon him to the accompaniment of drum.

[பிள்ளை + ஆட்டு. ஆடு → ஆட்டு]

பிள்ளையாண்டான் *pillai-y-āndān,* பெ. (n.) இளையோன்; youngman, youth, boy, lad. பிள்ளையாண்டான் வந்தால் எல்லாம் பார்த்துக்கொள்வான் (உ.வ.)

[பிள்ளை + ஆண்டான். ஆள் → ஆண்டு → ஆண்டான். ஆண்டை வீட்டுச் சிறுவன் ஒ.நோ; சின்ன முதலாளி]

பிள்ளையாண்டிரு-த்தல் *pillai-y-āndiru-,* **3** செ.கு.வி. (v.i.) கருவுற்றிருத்தல்; to be pregnant.

[பிள்ளை + ஆண்டு + இரு –, 'இரு' து.வி.]

பிள்ளையார் *pil̤l̤aiyār* பெ. (n.) **1.** மகன்; son, used honorifically. *'பிள்ளையார் அவதரிக்க'* (சீவக. 215, உரை) **2.** யானைமுகன் (விநாயகர்); Gaṇēsa. பிள்ளையாருக்கு அண்மை காலத்தில் ஆயிரக்கணக்கான கோயில்கள் கட்டப்பட்டுள்ளன (உ.வ.) **3.** முருகக் கடவுள்; Lord Murugan. *'பேராட்டி சீராட்டும் பிள்ளையார் கழல் போற்றி'* (கோயிற்பு. பாயி. 7) **4.** ஆளுடைய பிள்ளையார்; the child saint Sambandha mūrti. *'ஏகும் பெருங்காதல் பிள்ளையாரேற்று'* (பெரியபு. திருஞான. 947) **5.** பெருவயிறன் (கொ.வ.); man with a big belly, used in contempt. **6.** நூறு அல்லது ஆயிரத்தைக் குறிக்குங் குழூஉக் குறி. cant for 100 or 1000 *'ஏழு பிள்ளையார் நீர் இறைத்தேன், வீடுகட்ட ஐந்து பிள்ளையார் ஆயிற்று'*

ம. பிள்ளையார்; **து.** பிள்ளாரி

[பிள்ளை + ஆர். 'ஆர்' உயர்வுப பன்மை ஈறு]

பிள்ளையார்சதுர்த்தி *pil̤l̤aiyār-cadurtti,* பெ. (n.) பிள்ளையார் விழா பார்க்க; see pil̤l̤aiyār vil̤a.

[பிள்ளையார் + சதுர்த்தி]

Skt. caturthi > **த.** சதுர்த்தி

பிள்ளையார்சவுதி *pil̤l̤aiyār-cavuti,* பெ. (n.) *பிள்ளையார் விழா* பார்க்க; see *pil̤l̤aiyār vil̤a.*

[பிள்ளை + சவுதி. சதுர்த்தி → சவுதி]

பிள்ளையார்சுழி *pil̤l̤aiyār-cul̤i,* பெ. (n.) **1.** எழுதத் தொடங்குங்கால் மங்கலமாக வரையப்படும் 'உ' என்ற குறி; a propitiatory mark made at the commencement of any writing. **2.** செயல் தொடங்குவதைக் குறிப்பது; usage to denote the commencement of any work. கட்டடவேலைக்குப் பிள்ளையார்சுழி போட்டாய் விட்டதா? (உ.வ.)

[பிள்ளையார் + சுழி. சுள் → சுழி]

ஏதாவது ஒன்றை எழுதுவதற்குமுன் மேலும் கீழுமாகப் போட்ட இரு கோடுகள் பின்னர் ஒன்றோடொன்று இணைந்து 'உ' என்னும் எழுத்துப்போன்ற வடிவத்தைப் பெற்றது. ஓலையில் எழுத்தாணி கொண்டெழுதுங்கால் எழுத்தாணியின் எழுதும் திறத்தை அறியும் பொருட்டுப் போட்ட கோடுகள் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் பிள்ளையார் சுழி எனப்பட்டது. இதனை ஊமை எழுத்து என்றும் குறிப்பர்.

பிள்ளையார்நோன்பு *pil̤l̤aiyār-nōṉbu,* பெ. (n.) பிள்ளையார் விழாவுக்குக் கொள்ளும் நோன்பு (விநாயகசதுர்த்தி விரதம்); Vināyaga-cadurtti. **2.** பிள்ளையார் (விநாயக சதுர்த்தி) விழாவிற்கு விடும் மானியம்; provision for the celebration of Vināyaga-cadurtti (Pudu. insc. 399).

[பிள்ளையார் + நோன்பு]

பிள்ளையார்நோன்புத்தேவை *pil̤l̤aiyār-nōṉbu-t-tēvai,* பெ. (n.) *பிள்ளையார் நோன்பு 2.* பார்க்க; see *pillaiyār nōṉbu* 2 (S.I.I. vii. 458)

[பிள்ளையார் + நோன்பு + தேவை]

பிள்ளையார்நோன்புப்பச்சை *pillaiyār-nōṉbu-p-paccai,* பெ. (n.) *பிள்ளையார் நோன்பு* **2.** பார்க்க; see *pillaiyār nōṉbu* **2** (S.I.I. vii. **458**)

[பிள்ளையார் + நோன்பு + பச்சை]

பிள்ளையார்பந்து *pillaiyār-pandu,* பெ. (n.) கல்லை நிறுத்தி அதன்மேற் பந்தெறிந்து ஆடும் பிள்ளையார் விளையாட்டு வகை; game of setting up a brick on the ground as a target and trying to knock it down with a ball.

[பிள்ளையார் + பந்து]

பிள்ளையார்பூ, *pillaiyār-pū,* பெ. (n.) துலுக்க மல்லிகை; Indian periwinkle, garden-plant (K.R.).

[பிள்ளையார் + பூ. பிள்ளையாருக்குச் சாத்தும் பூ.*]*

பிள்ளையார்பையன் *pillaiyār-paiyaṉ,* பெ. (n.) தடித்துக்குள்ளமான பையன் (இ.வ.); a stout, short lad.

[பிள்ளையார் + பையன். பை → பையல் = இளைஞன், சிறுவன். பையல் → பையன்]

பிள்ளையார்மாடம் *pillaiyār-māḍam,* பெ. (n.) **1.** பிள்ளையாரை(கணேசரை) வைப்பதற்காகச் சுவரின் நடுவில் வைக்கும் புரை (இ.வ.); niche in the centre of a wall for setting up the image of Gaṇēša.

[பிள்ளையார் + மாடம்]

பிள்ளையார்விழா *pillaiyār viḻā,* பெ. (n.) பிள்ளையார்க்குத் திருவிழாச் செய்யும் மடங்கல் (சிராவண) மாதத்து வளர்பிறை நான்காம் நாள் (சுக்கில பட்சத்துச் சதுர்த்தி); the fourth titi of the bright half of the lungar month of cirāvanam, as sacred to Ganeṣa.

[பிள்ளையார் + விழா]

பிள்ளையார்வேடங்கொள்(ளு)-தல் *pillaiyār-vēḍaṅ kol (lu)-,* **16** செ.கு.வி. (v.i.) கருப்பமுண்டாயிருத்தல்; to conceive, to become pregnant.

[பிள்ளையார் + வேடம் + கொள்-, சூல் கொண்ட வயிறு பெருத்திருப்பது பிள்ளையார் பெருவயிறு போன்றிருப்பதன் தன்மையில் உண்டான சொல்லாட்சி.]

Skt. vēṣa > **த.** வேடம்.

பிள்ளையாரெறும்பு *pillaiyār-eṟumbu,* பெ. (n.) (கடித்து வலி ஏற்படுத்தாக) கறுப்புநிறமுடைய எறும்பு; a kind of harm-less black ant.

[பிள்ளையார் + எறும்பு]

பிள்ளையுண்டா-தல் *pillai-y-uṇḍā-,* **16.** செ.கு.வி. (v.i.) கருவுறுதல் (கொ.வ.); to be pregnant.

[பிள்ளையார் + உண்டா-, உள் → உண் → உண்டு + ஆ - உண்டா. 'ஆ(தல்)' து.வி]

பிள்ளையுண்டாயிரு-த்தல் *pillai-y-uṇḍāyiru-,* **3** செ.கு.வி. (v.i.) கருப்பிணியா யிருத்தல்; to be pregnant.

[பிள்ளையார் + உண்டாய் + இரு-, 'இரு' து.வி]

பிள்ளையெடு-த்தல் *pil̤l̤ai-y-eḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஆண்குழந்தையைத் தனதாக ஏற்றுக்கொள்ளுதல் (சுத்தெடுத்தல்); to adopt, as a son.

[பிள்ளை + எடு-. எ → எடு]

பிள்ளைலோகாசாரியர் *pil̤l̤ai-lōgāšāriyar,* பெ. (n.) அட்டாதச ரகசியம் என்னும் நூலை இயற்றியவரும் 14ஆம் நூற்றாண்டினருமாகிய மாலிய (வைணவ) ஆசிரியர்; a Vaiṇava Acārya, the author of asṭādasa-ragasiyam in 14th century.

[பிள்ளை + லோகாசாரியர்]

பிள்ளைவங்கு *pil̤l̤ai-vangu,* பெ. (n.) பாய்மரம் நிற்குங் குழி (யாழ்ப்); cavity or socket to hold the mast of a dhoney.

[பிள்ளை + வங்கு. வள் → (வண்) → வணங்கு → வாங்கு → வங்கு]

பிள்ளைவண்டு *pil̤l̤aivaṇḍu,* பெ. (n.) வண்டு வகையு ளொன்று; a kind of beetle.

[பிள்ளை + வண்டு]

பிள்ளைவலி *pil̤l̤ai-vali,* பெ. (n.) பிள்ளைப்பேற்றுத் துன்பம் (பிரசவவேதனை) (இ.வ.); labour, pains of childbirth.

மறுவ: இடுப்புவலி.

[பிள்ளை + வலி]

பிள்ளைவளர்-த்தல் *pil̤l̤ai val̤ar-,* 4 செ.கு.வி. (v.i.) குழந்தைகளை வளர்த்தல்; to rear children. பிள்ளை வளர்த்தலில் பெண்களின் பங்கு மேலானது (உ.வ.)

[பிள்ளை + வளர்-,]

பிள்ளைவளர்த்துக்கொள்(ளு)-தல் *pil̤l̤ai-val̤arttu-k-kol̤(l̤u)-,* 10 செ.குன்றாவி. (v.t.) *பிள்ளையெடு-த்தல்* பார்க்க; see *pil̤l̤ai-y-eḍu-,*

[பிள்ளை + வளர்த்து + கொள்-, 'கொள்' து.வி.]

பிள்ளைவளர்ப்பான் *pil̤l̤ai-val̤arppāṉ,* பெ. (n.) 1. வசம்பு; sweet flag. 2. சிற்றாமணக் கெண்ணெய்; castor-oil.

[பிள்ளை + வளர்ப்பான். வளர் → வளர்ப்பான். சிறு குழந்தைக்கு மருந்தாகப் பயன்படுவன பிள்ளை வளர்ப்பான் என பெயரிட்டழைக்கப் பட்டுள்ளன. பிள்ளை மருந்து பார்க்க]

பிள்ளைவளர்ப்பு *pil̤l̤ai val̤arppu,* பெ. (n.) குழந்தை வளர்ப்பு; child-rearing.

[பிள்ளை+ வளர்ப்பு. வளர் → வளர்ப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

பிள்ளைவாசி *pil̤l̤ai-vāši,* பெ. (n.) கொடி வகை; a kind of creeper.

பிள்ளைவிழுதல் *pil̤l̤ai-vil̤udal,* பெ. (n.) கருச்சிதைந்து வெளிப்படுகை. miscarriage, abortion.

[பிள்ளை + விழுதல். விழு → விழுதல். 'தல்' தொ.பெ.ஈறு]

பிள்ளைவீட்டார் *pil̤l̤ai-viṭṭār,* பெ. (n.) மாப்பிள்ளையைச் சார்ந்த உறவினர்கள் (கொ.வ.); relatives of the bridegroom.

[பிள்ளை + வீட்டார்.பிள்ளை = மாப்பிள்ளை. வீடு → வீட்டார் = வீட்டைச்சேர்ந்தவர்கள், உறவினர்]

பிள[1]–த்தல் *pil̤a-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** போழப்படுதல்; to be split, cleaved, rent, cracked. *'வேய்பிளந்துக்க வெண்டரளம்'* (கம்பரா. தாடகை. **8.**) **2.** பிரிவுபடுதல்; to be disunited. **3.** வெடிபடுதல் (வின்.); to be blasted, blown up. **4.** ஊடுருவப்படுதல் (வின்.); to be pierced penetrated. **5.** மனமுடைதல்; (வின்.); to be broken, as heart. நேற்றைய நேர்ச்சி(விபத்து) மனத்தைப் பிளந்தது (உ.வ.) **6.** திறந்திருத்தல்; to be open, as jaws or a wound; to gape. *'வாய் பிளந்துக்க'* (கம்பரா. தாடகை. **8.**)

[புள் → பூள் → பூறு. ஒ.நோ: கீள் → கீறு. பூறுதல் = துளைத்தல், கிழித்தல், கீறுதல். புள் → புள் → பிள். பிள்ளுதல் = இரண்டாகவோ பலவாகவோ பிளந்து விடுதல், துண்டு படுதல், மனம் வேறுபடுதல், நட்புப்பிரிதல். பிள் → பிள. (வே.க.3,108,109)]

பிள[2]–த்தல் *pil̤a-,* 4 செ.குன்றாவி. (v.t.) **1.** போழ்தல்; to split, cleave, rend, rive, to tear open. *'மலைகீழ்து பிளந்த சிங்கம்'* (திவ். திருவாய். **7, 4, 6.**) **2.** வெடிக்கச் செய்தல்; to blast, as rocks; to blow up. **3.** கட்டுக்குலைத்தல்; to part asunder; to break through, as an army. **4.** ஊடுருவுதல்; to pierce, penetrate, as a weapon. *'ஒண்டமுல் விண்பிளந் தோங்கி'* (திருவாச. **18, 8**) **5.** போக்குதல் (வின்.); to dissipate, disperse, as darkness or ignorance. **6.** பாகுபடுத்துதல்; to dissect, analyse. *'யாதும் பிளந்தறியும் பேராற்றலான்'* (சிறுபஞ். **58**) **7.** வெல்லுதல்; to overcome, as in a controversy. *'அவனைப் பேச்சிலே பிளந்து விட்டான்'*

[பிள் → பொள் → பொளி. பொளிதல் = வெட்டுதல், பிளத்தல். பொள் → போழ். போழ்தல் = பிளத்தல். போழ் = துண்டு. புள் → பிள் → பிடு. பிடுதல் = கையாற் பிளத்தல். பிள் → பிளவு = துண்டு. பிள் → பிள. பிளத்தலாவது ஒரு பொருளை ஒரே முறையில் வெட்டித் திறத்தல் அல்லது துணித்தல். தானாய்த்திறத்தலும் பிளத்தலே. மண்டைப் பிளத்தலை மண்டை திறத்தல் என்று கூறுவது வழக்கு (மு.தா. 259)]

பிள[3]–த்தல் *pil̤a-,* 3 செ.கு.வி. (v.i.) எலும்பில் வெடிப்புக் காணுதல்; to fracture.

[பி ள் → பி ள. பிள்ளுதல் = பிளந்துவிடுதல். பிள் → பிள (வே.க. 3, 109)]

பிளகு *pil̤agu,* பெ. (n.) **1.** *பிளவு,* **3** பார்க்க; see pil̤avu **3. 2.** கமுக வேர் (சங்.அக.); roots of areca-palm.

[பி ள் → பி ள வு → பி ள கு. 'வு' தொ.பெ.ஈறு]

பிளச்சு *pil̤accu,* பெ. (n.) பிளாச்சு பார்க்க; see pil̤āccu.

[பிளாச்சு → பிளச்சு (கொ.வ.)]

பிளத்தல் *pil̤attal,* பெ. (n.) வயிரக்குற்றங்களுள் ஒன்று (சிலப். **14, 180,** உரை); a flaw in diamonds.

[பிள → பிளத்தல். 'தல்'. தொ.பெ.ஈறு]

பிளந்துகட்டு–தல் *pil̤andu kaṭṭu,-* 5 செ. குன்றாவி. (v.t.) (பாராட்டும் வகையில்) அருமையாக அல்லது சிறப்பாகச்செய்தல்; to do extremely well. சின்னப்பையன் ஆங்கிலத்தில் பிளந்து கட்டிவிட்டான் (உ.வ.)

[பி ள → பி ள ந் து + க ட் டு –, கள் → கட்டு]

பிளப்பு *piḷappu,* பெ. (n.) **1.** பிளவு; crevice, cleft. **2.** வெடிப்பு (சங்.அக.); splitting.

[பிள → பிளப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

பிளப்புச்சீரகம் *piḷappu-c-cīragam,* பெ. (n.) சீமைச் சோம்பு (பதார்த்த. **1036**); caraway.

[பிளப்பு + சீரகம்]

பிளப்புமஞ்சள் *piḷappu-mañjaḷ,* பெ. (n.) துண்டாக்கப்பட்ட மஞ்சள்; split turmeric.

[பிள → பிளப்பு + மஞ்சள். மங்கு → மங்கல் → மஞ்சல் = மங்கலான நிறம். மஞ்சல் → மஞ்சள் = அந்நிறக் கிழங்கு]

பிளவு *piḷavu,* பெ. (n.) **1.** பிளந்திருப்பதால் ஏற்படும் இடைவெளி, விரிந்துண்டாகுந் சந்து; cleft, as of a rock; crevice, gap, fissure; slit, as of a nib. பாறைப்பிளவில் ஒரு பாம்பு பதுங்கியிருந்தது, சுவரில் சிறுபிளவு தெரிந்தது. (உ.வ.) **2.** (இருவர்க்கிடையே அல்லது ஒரு கட்சி போன்ற அமைப்பில் ஏற்படும்) பிரிவு; (in an organisation, etc.) split, disunion. கட்சியில் பிளவு. இரு நெருங்கிய நண்பர்களுக்கு இடையில் பிளவா? (உ.வ.) **3.** துண்டு; part, division, portion, piece, slice, section. *"பிளவு கொண்டமதி"* (பெரியபு. திருக்குறிப்புத். **17**) **4.** வெடிப்பு; splitting, bursting. **5.** வெட்டுப் பாக்கு; split areca nut. *'நறிய பிளவு வெள்ளிலை இவையுதவி'* (பிரமோத். **9, 25**) **6.** அரைக்குன்றிமணி யெடை (வின்.); half of a crab's eye used as a weight. **7.** பிரிந்திசைப்பு; (gram.) hiatus, break in utterence, as of words. *'இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்பட'* (தொல். சொல். **412**, சேனா) **8.** வெடியுப்பு (சங்.அக.); salt petre.

[பிள் → பிள → பிளவு. 'வு' தொ.பெ.ஈறு]

பிளவுப்பிறை *piḷavu-p-piṟai,* பெ. (n.) இளம்பிறை (வின்.); digit of the moon.

[பிளவு + பிறை. புரு → (புற) → புறை → பிறை = வளைந்த நிலா.]

பிளவுபடு—தல் *piḷavu paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) *பிளவுறு—தல்* பார்க்க; see *piḷavuṟu-,* ஒன்றாக இருந்த நண்பர்கள் இப்பொழுது பிளவுபட்டு போயினர் (உ.வ.)

[பிளவு + படு—, 'படு' து.வி.]

பிளவுபோடு—தல் *piḷavu-pōḍu,* 20 செ.கு.வி. (v.i.) வெற்றிலை பாக்கு போடுதல் (கொ.வ.); to chew betel.

[பிளவு + போடு—,]

பிளவுறு—தல் *piḷavuṟu-,* 20 செ.கு.வி. (v.i.) இரண்டாதல்; to be split. விடுதலைக்காகப் போராடிய கட்சிகளும் பிளவுற்றுபோயின (உ.வ.)

[பிளவு + உறு—,]

பிளவை *piḷavai,* பெ. (n.) **1.** பிளக்கப்பட்ட துண்டு; piece, slice. *'பைந்நிணப் பிளவை'* (மலைபடு. **176**) **2.** புண்கட்டி; boil, abscess, carbancle. **3.** பிளவைக் காய்ச்சல் பார்க்க; see *piḷavai-k-kāyccal.*

[பிள → பிளவை. 'வை' பெ.ஆ.ஈறு]

பிளவைக்காய்ச்சல் *piḷavai-k-kāyccal,* பெ. (n.) மாட்டு நோய் வகை; anthrax (M.M.658.)

[பிளவை + காய்ச்சல். காய் → காய்ச்சல்]

பிளவைகொல்லி *piḷavai-kolli,* பெ. (n.) பூடுவகை (பதார்த்த. 291); a species of the murdah plant.

[பிளவை+ கொல்லி. கொல் → கொல்லி = (பிளவையைக்) கொல்வது. 'இ' வி. முத. ஈறு]

பிளா *piḷā-,* பெ. (n.) *பிழா*(யாழ்ப்.)பார்க்க; see *piḻā.*

[பிள் → பிளா = வாயகன்ற ஓலைக் கொட்டான்]

பிளாச்சி *piḷācci,* பெ. (n.) *பிளாச்சு* (சங்.அக.) பார்க்க; see *piḷāccu.*

[பிளாச்சு → பிளாச்சி]

பிளாச்சு *piḷāccu,* பெ. (n.) 1. மூங்கில் முதலியவற்றின் நீளவாக்கில் பிளப்பட்ட பிளவு; bamboo split, lath. பிளாச்சுகளைக் கொண்டு படல் செய்யப்பட்டிருந்தது (உ.வ.) 2. பிளந்த விறகு; fire-wood. 3. பனங்கிழங்கின் பிளவு (யாழ்ப்.); slice of edible palmyra root.

[பிள் → பிள → பிளவு = வெடிப்பு, பிரிவு. பிள → பிளவை = பிளக்கப்பட்ட துண்டு. பிள → பிளாச்சு = கிழித்த மூங்கிற் பட்டி (வே.க.3,109)]

பிளாச்சுக்கட்டை *piḷāccu-k-kaṭṭai,* பெ. (n.) கவலைப் பாதையின் நடுவிலுள்ள மேலுருளை; wooden log kept to rest the pulling rope in 'kapila' water lift.

[பிள் → பொள் → பொளி.பொளிதல் = வெட்டுதல், பிளத்தல். புள் → பிள → பிளாச்சு. பிளாச்சு + கட்டை. கள் → கட்டை]



பிளி *piḷi,* பெ. (n.) 1. கள்; toddy. 2. அழிஞ்சில் மரம்; a tree.

[பிழி → பிளி]

பிளிகை *piḷigai,* பெ. (n.) இரைப்பையின் இடது பக்கமுள்ள மண்ணீரல்; an abdominal organ situated in the left hypochon driaregion.

பிளிகைத்தாபம் *piḷigai-t-tābam,* பெ. (n.) மண்ணீரலழற்சி; inflammation of spleen.

[பிளிகை + தாபம்]

பிளிச்சக்கீரை *piḷicca-k-kīrai,* பெ. (n.) *புளிச்சக்கீரை* பார்க்க; see *puḷicca-k-kīrai.*

[புளிச்சக்கீரை → பிளிச்சக்கீரை]

பிளிச்சி *piḷicci,* பெ. (n.) சீனக்காரம்; alum.

பிளிச்சிறுகீரை *piḷicciṟu-kīrai,* பெ. (n.) *புளிச்சிறுகீரை* பார்க்க; see *puḷicciṟukīrai.*

மறுவ. பிளிச்சை, புளிச்சை, புளியாரை

[புளிச்சிறுகீரை → பிளிச்சிறுகீரை]

பிளிச்சு *piḷiccu,* பெ. (n.) *பிளாச்சு 1* பார்க்க, (சீவக. 634, உரை); see *piḷāccu 1*

பிளிச்சை *piḷiccai,* பெ. (n.) *புளிச்சை* பார்க்க; see *puḷiccai.*

[புளிச்சை + பிளிச்சை]

பிளிச்சைக்கண் *piḷiccai-k-kaṇ,* பெ. (n.) புளிச்சைக் கண் (பாலவா); sore eye.

[புளிச்சை → பிளிச்சை + கண்]

பிளிப்பிச்சி *piḷippicci,* பெ. (n.) முடைநாற்ற முடைய செடி; foetid holly.

பிளிம்பி *piḷimbi,* பெ. (n.) புளிச்சக்காய் மரம்; bilimbi tree.

பிளிம்பிக்காய் *piḷimbikkāy,* பெ. (n.) புளிச்சைக்காய் வகை; fruit of bilimbi.

பிளிர்–த்தல் *piḷir-,* 11 செ.குன்றாவி. (v.t.) கொப்புளித்தல் (சூடா.); to gargle.

[புள் → பிள்→ பிரி → பிரிவு. புள் → பிள் → பிடு → பிது → பிதிர். பிதிர்தல் = பெயர்தல்,பிதுங்குதல். புள் → பிள் → பிளிர்]

பிளிரல் *piḷiral,* பெ. (n.) கிளைக்கை (திவா.); branching.

[புள் → பிய் → புய். புய்த்தல் = பிரித்தல், பிடுங்குதல். புள் → பிள் → பிரி → பிரிவு → பிரிவினை. புள் → பிள் → பிளிர் → பிளிரல். 'அல்' தொ.பெ.ஈறு]

பிளிற்று¹–தல் *piḷiṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ஆரவாரித்தல்; to make a roaring noise. *'கயக்களியூரிற் பிளிற்றிவிடும்'* (நான்மணி. 36); 2. வெகுளுதல்; to fret with anger. *'பிச்சை புக்குண்பான் பிளிற்றாமை முன்னினிதே'* (இனி. நாற். 40)

[பிளிறு → பிளிற்று–]

பிளிற்று²–தல் *piḷiṟṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கக்குதல்; to spit out, vomit. *'பிளிற்றினும்ப ரொழிந்தெயிறானஞ் செய்யுங்கோள்'* (சீவக. 1286.)

[பிலிற்று → பிளிற்று–,]

பிளிறல்¹ *piḷiṟal,* பெ. (n.) பேரோசை (பிங்.); great noise.

[பிளிறு → பிளிறல். 'அல்' தொ.பெ.ஈறு]

பிளிறல்² *piḷiṟal,* பெ. (n.) *பிளிரல்* (சூடா.) பார்க்க; see *piḷiral*

[பிளிர் → பிளிரல் → பிளிறல்]

பிளிறல்³ *piḷiṟal,* தொ. பெ. (vbl.n.) கீறிப்பார்த்தல்; tearing open.

[பிளிறு → பிளிறல் 'அல்' தொ.பெ.ஈறு]

பிளிறு¹–தல் *piḷiṟu-,* 5 செ.கு.வி. (v.i.) முழங்குதல்; to trumpet; to roar, as an elephant. *'பிளிறுவார் முரசின்'* (சீவக. 200)

[பிள் → பிள + பிளவு. பிள → பிளறு → பிளிறு = வாயை அகலத்திறந்து எழுப்பும் ஒலி, பேரொலி.]

பிளிறு²–தல் *piḷiṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கிண்டுதல்; to turn up, hoe up, as the soil.

பிளிறு³ *piḻiru,* பெ. (n.) பிளிறல்¹ பார்க்க; see prḷiral¹. *'பிளிறுதீர...... களிறு'* (தேவா. 1132, 4)

பிளீகநாளம் *piḷīga-nāḷam,* பெ. (n.) மண்ணீரல் நரம்பு; spleenic vein.

[பிளீகம் + நாளம்]

பிற்கட்டு *piṟ-kaṭṭu,* பெ. (n.) பாட்டின் இறுதியிலுள்ள நல்லோசை யமைதி; beautiful finale of a song. *'பிற்கட்டும் முன்முரணும் பின்முரணும்'* (விறலிவிடு.)

[பின் + கட்டு. கள் → கட்டு]

பிற்கழி-த்தல் *piṟkaḻi-,* 4 செ.கு.வி. (v.i.) வலியிழந்தோடுதல் (வின்.); to lose ground, as in battle.

[பிற்கு + அழி-. ஒழி → அழி.]

பிற்கார் *piṟ-kār,* பெ. (n.) மழைக்காலத்தின் பிற்பகுதியில் விளையும் நெற்பயிர்; a kind of paddy harvested in the latter part of the *kār*(rainy) season. (G.Sm.D.I.i;213)

[பின் + கார். கரு → கார்]

பிற்கால் *piṟ-kāl,* பெ. (n.) தம்பி (நிகண்டு, 219.); younger brother.

[பின் + கால். குல் → கல் → கால். கால் = கால்வழி, சரவடி, இனவழி. பிற்கால் = கால்வழியில் தனக்குப் பின்னோன், தம்பி. ஒ.நோ: தம் + பின் - தம்பின் → தம்பி.]

பிற்காலம் *piṟ-kālam,* பெ. (n.) நிகழ்கிற காலத்துக்கு அல்லது முன்னர் குறிப்பிட்ட காலத்துக்கு அடுத்து வருகிற காலம்; future, later time, வீணாகச் செலவழிக்கும் பணத்தைச் சேமித்துவைத்தால் பிற்காலத்தில் உதவுமே, பிற்காலத்தில் இந்த நடைமுறை மக்களிடையே இல்லாமல் போயிருக்கலாம், பிற்காலச் சோழர்கள். (உ.வ.)

[பின் + காலம். கோல் → கால்=கம்பு, பந்தலைத் தாங்கும் கம்பு, தூண், தூண் போன்ற உறுப்பு. கால்போல் நீண்டு செல்லும் பொருள்களெல்லாம் கால் எனப்படும். கால் → காற்று. கால் → காலம். கடந்த காலம் அல்லது இறந்த காலம் முற்காலம். முற்காலத்திற்குப் பின்னர் வருவது பிற்காலம் (எதிர்வரும் காலம்). இது முன், பின் என்னும் எதிரிடைச் சொல் அடிப்படையில் பொருத்தமே. எனினும் முற்காலத்திற்கும் பிற்காலத்திற்கும் இக்காலம் (நிகழ்காலம்) இடைநிற்பது, பிற்காலம் இக் காலத்திற்குப் பின் வருவது எனக் கொள்ளுதலின் பொருத்தப் பாட்டை வலியுறுத்துகிறது.]

பிற்காலி-த்தல் *piṟ-kāli-,* 4 செ.கு.வி. (v.i.) 1. பிற்படுதல்; to lag behind. *'விந்தியாரணியம் பிற்காலித்து'* (குருபரம். 227.) 2. பின் வாங்குதல்; to retreat, withdraw. *"பிரதி பட்சத்தைக் கண்டால் பிற்காலியாத தோள்வலியை யுடையவன்"* (திவ்.திருப்பா.18, பக்.169). 3. காலந்தாழ்த்தல்; to delay. *'திருவழுந்தூரில் பிற் காலித்து நிற்கக் கூடும்'* (திவ். திருநெடுந்.26, வ்யா. பக்.228.)

[பின் + காலி-, காலம் → காலித்தல். இது பின்னாக்க (backformation) முறையில் அமைந்தது]

பிற்கு¹ *piṟku,* பெ. (n.) பின் (அரு.நி. 647.); posteriority in time or place.

[பின் + கு. 'கு' சொல்லாக்க ஈறு]

பிற்கு² *pirku,* பெ. (n.) மழை (அரு.நி.); rain.

[பில்குதல் = தூறுதல், வழிதல், சிந்துதல். பில்கு → பிற்கு = பெய்யும் மழை]

பிற்குளம் *pir-kuḷam,* பெ. (n.) கடைக்குளம் (உத்திராடம்) (நாமதீப.110); the twenty-first nakṣatra.

[பின் + குளம்]

பிற்கூழை *pir-kūḻai,* பெ. (n.) வீட்டின் புழைக்கடை (இ.வ.); back yard of a house.

[பின் + கூழை. கடை → களை → கழை → குழை → கூழை]

பிற்கொழுங்கோல் *pirkoḻuṅ-kōl,* பெ. (n.) இருபத்தியாறாம் விண்மீன் (உத்தரட்டாதி) (பிங்.); the 26th nakṣatra.

[பின் + கொழுங்கோல்]

பிற்சரிவு *pir-šarivu,* பெ. (n.) பின்னேரம்; afternoon.

[பின் + சரிவு. சரி → சரிவு = ஞாயிற்றின் சரிவு]

பிற்சனி *pircaṉi,* பெ. (n.) மானேறு (உத்தரம்); the 12th naksatra. (நாமதீப.107.)

[பின் + சனி]

பிற்சாமம் *pircāmam,* பெ. (n.) இரவின் கடைச்சாமம்; the fourth and last watch of the night.

[பின் + சாமம். யாமம் → சாமம்]

பிற்சேர்க்கை *pircērkkai,* பெ. (n.) புத்தகம் அல்லது ஆவணத்திற்குக் கொடுக்கப்படும் தொடர்புடைய சேர்க்கைப்பகுதி; appendix, addendum.

[பின் + சேர்க்கை. சேர் + கை – சேர்க்கை. பெரும்பாலும் கொடுக்கப்படும் சேர்ப்புப் பகுதிகள் புத்தகத்தின் பின்பகுதியில் கொடுக்கப்படுவதுபற்றி இச்சொல்லாக்கம் வழக்கூன்றியுள்ளது.]

பிற்சேர்பு *pir-cērbu,* பெ. (n.) *பிற்சேர்க்கை* பார்க்க; see *pircērkkai.*

[பின் + சேர்பு. சேர் → சேர்பு]

பிற்பக்கம் *pir-pakkam,* பெ. (n.) **1.** பின்புறம்; back side **2.** தேய்பிறை; dark fortnight. (பரிபா.11,35,உரை.)

[பின் + பக்கம்]

பிற்பகல் *pir-pagal,* பெ. (n.) பகலின் பின்பகுதி நண்பகலுக்கும் மாலைக்கும் இடைப்பட்ட பொழுது; afternoon. '*தமக்கின்னா பிற்பகல் தாமேவரும்*' (குறள்,319.) பிற்பகல் இரண்டு மணிக்குத் தேர்வு தொடங்கும் (உ.வ.)

[பின் + பகல். பகு → பகல். காலை (6மணி)யிலிருந்து நண்பகல் (12மணி) வரைக்கான காலம் முற்பகல். நண்பகலிலிருந்து மாலை (6மணி) வரைக்கான காலம் பிற்பகல்]

பிற்பட்ட *pirpaṭṭa,* பெ. அ. (adj.) காலத்தில் பிந்திய; later. உலகில் உயிர்கள் தோன்றியதில் மக்கள் தோற்றம் பிற்பட்ட வளர்ச்சியாகும்.

[பின் + பட்ட. படு → பட்ட]

பிற்படு–தல் *pir-padu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. பின்னதாதல்; to be behind in time or place. '*பிற்படக்கிளவார்*' (தொல்.சொல்.286.). 2. பிந்துதல்; to slacken, delay, as in one's speed, speech, etc.

[பின் + படு–,]

பிற்படுத்தப்பட்டவகுப்பு *pirpaduttappatta vaguppu,* பெ. (n.) (அரசின் கணிப்பில்) கல்விக்கும் பொருளியல் முன்னேற்றத்துக்கும் சிறப்புக் கவனம் தேவை என்று குறிப்பிடப்பட்ட இனம்; communities identified by the government as needing special attention because of their economic and social backwardness, backward class or community. பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் கல்வியில் இடஒதுக்கீடு உண்டு (உ.வ.)

[பின் + படுத்தப்பட்ட + வகுப்பு]

பிற்படை *pir-padai,* பெ. (n.) கூழைப்படை (வின்.); rear of an army.

[பின் + படை]

பிற்பலம்[1] *pir-palam,* பெ. (n.) பிப்பலி (அரு.நி.662.); pippali.

பிற்பலம்[2] *pirpalam,* பெ. (n.) அரசு (அரு.நி.662.); pipal.

பிற்பாடர் *pirpādar,* பெ. (n.) பிற்பட்டவர்; persons living in later times. '*அக்காலத்துக்குப் பிற்பாடராய்*' (திவ். திருநெடுந்.26,பக்.228.).

[பிற்பட்டவர் → பிற்பாடர்]

பிற்பாடு[1] *pir-pādu,* பெ. (n.) பின்னிகழ்ச்சி; subsequent event. '*பிற்பாட்டுக்கு நொந்து*' (ஈடு,1,5,ப்ர).

[பின் + பாடு. படு → பாடு]

பிற்பாடு[2] *pirpādu,* வி.அ (adv.) 1. பின், பிறகு; afterwards. '*அதற் பிற்பாடு*' (மணிமே.12,78.). நீ போன பிற்பாடுதான் எனக்கு இந்த எண்ணம் வந்தது (உ.வ.). 2. பிற்காலத்தில்; later. ஐந்து ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கருத்து பிற்பாடு ஒரு கோட்பாடாக வளர்ந்தது. (உ.வ.).

[பின் + பாடு. படு → பாடு]

பிற்பாடு[3] *pir-pādu,* பெ. (n.) தரத்தில் குறைவுடையது; things of lesser value. '*இது பிற்பாடென்றார்*' (பெரியபு.திருஞான.568.) .

[பின் + பாடு. படு → பாடு]

பிற்பாடை *pirpādai,* பெ. (n.) மாட்டுக் குற்றவகை (மாட்டுவா.); a defect in cattle.

பிற்பாய் *pir-pāy,* பெ. (n.) கலிமி பாய் மரத்திலும் சலாய்களிலும் ஏற்றப்படும் பாய்கள்; after-sail, as on the mizzen mast and its stays. (M.Navi.)

[பின் + பாய்]

பிற்பிறவி *pirpiravi,* பெ. (n.) அழுக்கு; after birth secundines.

[பின் + பிறவி. பிற → பிறவி = குழந்தைப் பிறப்பிற்குப் பின்வரும் அழுக்கு*]*

பிற்புறணி *pir-purani,* பெ. (n.) பழிச்சொல், கோள் (அவதூறு) (இ.வ.); backbiting, scandal.

[பின் + புறணி]

பிற்போக்கு *piṟ-pōkku,* பெ. (n.) *பின்போக்கு* ***2,3,4.*** பார்க்க; see *piṉpōkku* ***2,3,4.***

[பின் + போக்கு. போ → போக்கு]

பிற்றடி *piṟṟaḍi,* பெ. (n.) பின்னடி (வின்.); latter part, as of a season.

[*பின் → பின்னடி →பிற்றடி. 'பின்னடி' பார்க்க*]

பிற்றல்¹ *piṟṟal,* பெ. (n.) பின்வாங்குகை(வின்.); retiring, retreating.

[பின் → பின்று → பிற்றல்]

பிற்றல்² *piṟṟal,* பெ. (n.) மண்வெட்டிக் கழுத்து (வின்.); the neck of a hoe.

[பித்தல் → பிற்றல்]

பிற்றி *piṟṟi,* பெ. (n.) பிந்திப் போனது (சங்.அக.); that which goes behind.

[பின் + தி– பிந்தி → பித்தி → பிற்றி]

பிற்றிகம் *piṟṟigam,* பெ. (n.) முள்ளி; thorny plant.

பிற்றை¹ *piṟṟai,* பெ. (n.) *பின்றை¹* (திவா.) பார்க்க; see *piṉṟai¹*.

[பின் → பின்றை → பிற்றை]

பிற்றை² *piṟṟai,* பெ.அ (adv.) *பின்றை²* (திவா.) பார்க்க; see *piṉṟai²*.

[பின் → பின்றை → பிற்றை]

பிற்றைநிலை *piṟṟai-nilai,* பெ. (n.) **1.** பிற்பட்ட நிலை; subsequent state. **2.** வழிபாட்டு நிலை; attitude of obedience. ***'பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே'.***

[பிற்றை + நிலை. நில் → நிலை]

பிற¹ *piṟa,* பெ. (n.) **1.** வேறுசில; the other, the rest. *'அன்ன பிறவும்'* **(தொல்.சொல்.57)** நான் கூறாத பிறவும் இவ்வறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. **2.** மேலும் இருக்கிற, மற்ற, ஏனைய; other. கட்டுரையின் பிறபகுதி களை இனிமேல்தான் தட்டச்சு செய்ய வேண்டும்.

ம. பிற

[பின் = திரும்ப, வேறு. பின்னும் = திரும்பவும். பின்னும் பின்னும் = திரும்பத்திரும்ப. பின்னொன்று = வேறொன்று. பின → பிற ***(மு.தா.294)*** *]*

பிற² *piṟa,* இடை. (part.) ஒர் அசைநிலை **(தொல்.சொல்.281.)**; an expletive or euphonic particle.

[பின் = திரும்ப, வேறு. பின்னும் = திரும்பவும். பின்னும் பின்னும் = திரும்பத்திரும்ப பின்னொன்று = வேறொன்று. பின → பிற ***(மு.தா.294)*** *]*

பிற²–த்தல் *piṟa-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** தோன்றுதல், பிறத்தல்; to be born, as children. *'ஆன்ற குடிப்பிறத்தல்'* **(குறள்,681.).** **2.** உருவாதல் **(தொல்.சொல்.115.)**; to be produced, as sound, to be expressed, as oil from seeds, to be derived from, as a word from root. ஒரு வேர்ச் சொல்லினின்று நூற்றுக் கணக்கான சொற்கள் பிறக்கின்றன, ஊழலுக்கு விடிவுகாலம் எப்பொழுது பிறக்குமோ தெரியாது **(உ.வ.).**

ம. பிறக்க; **தெ.** பெட்டு; **து.** பெத்பினி, பெத்துனி; **கோத.** பெர்; **கொலா.** பெட்; **நா.** பெட்ட

[பிள் → பிற. தாயும் பிள்ளையும் வேறுவேறு பிரிந்துவிடவேண்டும் என்று பேறுகாலத்திற் பெண்டிராற் கூறப்படுதல் காண்க. தாய் வயிற்றினின்று சேய் பிரிதலே பிறத்தலாம். (மு.தா.262) பிறத்தல் ஒன்றிலிருந்து உருவாவதைக் குறிப்பது போல் ஒலி உருவாவது, எண்ணெய் விதையினின்று எண்ணெய் எடுப்பது, வேர்ச்சொல்லிலிருந்து சொற்கள் உருவாவது போன்றனவும் பிறத்தல் என்னும் வினையால் குறிக்கப்பட்டன.]

peṟu- to obtain, to get or beget, to bear, to bring forth; verbal noun pēṟ-u, a brining forth or birth, a thing obtained or a benefit. piṟ-a, to be born, to proceed from, is doubtless a related word: and there is probably a relationship between these words (especially the later) and piṟa, other, piṟ-agu, after, puṟa-m, the exterior, and even poṟ-u, to bear or sustain. Comp. the Lat. par-io. pe-per-i, to bring forth, to acquire. Possibly the ultimate base of all these words is the Indo-European preposition pra, signifying progressive motion, expansion, excess etc; and the Zend form to this preposition fra, indicates the propriety of classing Latin fru-x with the other derivatives (CGDFL 600.)

பிறத்தல், பெறுதல் ஆகிய இரண்டு வினைகளையும் ஒரே அடியினின்று பிறந்தனவாகத் திராவிடச் சொற்பிறப்பு அகர முதலி கொள்கிறது. கால்டுவெல்லும் அக்கருத்தினரே. ‘பிள்’ என்னும் வேரினின்று வளர்ந்த பிறத்தல் தாயினின்று பிரிந்து வரும் வகையில் தோன்றியது. பெறுதல் என்னும் வினை பிள்ளைப் பேற்றைக் குறித்தாலும் அதன் அடிப்பொருள் ஒருபொருளை அடைதல் (பெறுதல்) என்பதாகும். பிரிந்து வருதல், பொருளை அடைதல் என்னும் பொருள்படும் சொற்கள் இரண்டும் பிறத்தலைக் குறித்தமையால் இவ்விரு சொற்களைத் தொடர்புடையன எனக்கொள்ள இடமளித்தது. ஆயினும் இவ்விரு சொற்களின் அடிப்பொருள்கள் வெவ்வேறானவை

பிறஇசிவு *piṟaiśivu,* பெ. (n.) இசிவு வகையுளொன்று; a kind of fits.

[பிற + இசிவு]

பிறக்கடி *piṟakkaḍi,* பெ. (n.) பின்வாங்கின அடி; backward step. ‘*பிறக்கடி யொதுங்காப் பூட்கை*’ (பதிற்றுப்.80,8.)

[பின் → பிற → பிறக்கு + அடி]

பிறக்கடியிடு–தல் *piṟakkaḍi-y-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) நிலைகெட்டோடுதல் (தொல்.பொ.60,உரை.); to beat a retreat.

[பிறக்கடி + இடு. பின் → பிற → பிறக்கு = பின்வாங்கும் நிலை. பிறக்கடி = பின்னுக்கு வைக்கும் அடி.]

பிறக்கணி–த்தல் *piṟakkaṇi-,* 11 செ.குன்றாவி. (v.t.) *புறக்கணி–த்தல்* (வின்.)பார்க்க; see *puṟakkaṇi-*

[புறம் = வெளி, வெளிப்பக்கம், புறப் பொருள். புறம் → புறவு → பிறகு = வெளிப்புறம், புறம்பானவன். புறகு → புறக்கு (மு.தா.295.) புறக்கு + அணி – புறக்கணி]

பிறக்கம்¹ *piṟakkam,* பெ. (n.) **1.** ஒளி; brightness, splendour. ‘*மாமணிப் பிறக்கம்*’ (திருவாச.3,124.). **2.** உயர்ச்சி; loftiness,

elevation. '*சிலம்புகளின் பிறக்கங் காணாய்*' (காஞ்சிப்பு.தழுவ.**26.**). **3.** குவியல்; heap '*பிணத்தின் பிறக்கம்*' (கம்பரா.நாகபா.**156.**)

[பிறங்கு → பிறக்கு → பிறக்கம்]

பிறக்கம்² *piṟakkam,* பெ. (n.) **1.** மரக்கிளை (திவா.); branch of a tree. **2.** மான்கொம்பு; horn of deer. **3.** அச்சம் (திவா.); awe, fear.

[பிள் → பிள → பிற → பிறங்கு = பிரிந்து செல்லும் மரக்கிளை, மரக்கிளை போல் பிரிந்து காணப்படும் மான்கொம்பு, மனவமைதியில் பிரிவுபட்ட அச்சவுணர்வு]

பிறக்கவியம் *piṟakkaviyam,* பெ. (n.) மயிலாருங்குருத்து; a tree.

பிறக்கிடு¹–தல் *piṟakkiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) **1.** பின்வாங்குதல்; to retreat. '*அடிபிறக்கிட் டோனையும் பெண் பெயரோனையும்*' (தொல்.பொ.**65**, உரை.). **2.** பின்னிகழ்தல்; to occur subsequently.

[பிறக்கு + இடு. பின் → பிற → பிறவு → பிறகு → பிறக்கு. பிறக்கிடுதல் = பின்னுக்குச் செல்லுதல் (மு.தா.293.) 'இடு' து.வி.]

பிறக்கிடு²–தல் *piṟakkiḍu-,* **17** செ.குன்றாவி. (v.t.) கொண்டையிலே முடித்தல் (வின்.); to fasten in one's hair. '*நீர் திரண்டன்ன கோதை பிறக்கிட்டு*' (மதுரைக்.**562.**).

[பிறக்கு + இடு–,]

பிறக்கீடு *piṟakkīḍu,* பெ. (n.) பின்னிடுகை; retreat '*அடிபிறக்கீடு மரிது*' (தொல்.பொ.**68.** மேற்கோள்)

[பின் → பிறவு → பிறக்கு. பிறக்கு → இடு – பிறக்கிடு → பிறக்கீடு. 'இடு' து.வி. இடு → ஈடு. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்]

பிறக்கு¹–தல் *piṟakku-,* **5** செ.குன்றாவி. (v.t.) அடுக்குதல்; to heap, pile up. '*சூடு கோடாகப் பிறக்கி*' (பொருந.**243.**)

பிறக்கு² *piṟakku,* பெ. (n.) **1.** பின்பு; back, rear, behind. '*துறை பிறக்கொழியப் போகி*' (பெரும்பாண்.**351.**) **2.** முதுகு(நிகண்டு); back **3.** குற்றம் (சூடா.); fault, blemish

[பின் → பிற → பிறவு → பிறக்கு (மு.தா. 293)]

பிறக்கு³ *piṟakku,* பெ.எ (adv.) வேறாக; differently '*நசை பிறக்கொழிய*' (சிலப்.**5,95.**)

[பிற → பிறக்கு]

பிறக்கு⁴ *piṟakku,* பெ. (n.) வாழ்வு (அக.நி.); living.

[பிற → பிறக்கு]

பிறகத்துக்கட்டை *piṟagattu-k-kaṭṭai,* பெ. (n.) கப்பல் மரவகை; stem post (naut.)

பிறகது *piṟagadu,* பெ. (n.) வெள்ளைக்கல் சுண்ணம்; quick lime.

பிறகரீகம் *piṟakarīgam,* பெ. (n.) அகில் (பிரகரிகம்) (மலை.); eagle wood.

[பிரகரிகம் → பிறகரீகம்]

பிறகருவி *pira karuvi,* பெ. (n.) உடம்பிற்குரிய 60 வகை உண்மை(தத்துவ)ப்பொருட்கள்; the sixty thattuvas of the body.

[பிற + கருவி]

பிறகள் *pirakal,* பெ. (n.) *பிற* பார்க்க; see *pira, 'பொய்ப் பொருள் பிறகள்'* (சீவக. 1595.).

[பிற → பிறகள்]

பிறகாலே *piragālē,* கு.வி.எ. (adv). பின்பு (வின்.); afterwards, after.

[பின் → பிற → பிறவு → பிறகு → பிறகாலே]

பிறகிடு¹–தல் *piragidu-,* 17 செ.குன்றாவி. (v.t.) பின்புறமாக அணிதல்; to wear, as an ornament, so as to hang at the back. *'பீலித் தழையைப் பிணைத்துப் பிறகிட்டு'* (திவ். பெரியாழ். 2, 6, 1.)

[பிறகு + இடு –,]

பிறகிடு²–தல் *piragidu-,* 20 செ. கு. வி. (v.i.) 1. தோற்றல்; to flee; to be defeated. *'சமரிற் பிறகிடு முதியரு மபயரும்'* (குமர. பிர. மீனாட். பிள். 38.). 2. கழிதல்; to be past, time or event. *'பிற்கிட்ட மாதம்'* 3. பின்வாங்குதல்; to back slide *'பிறகிடல் நின் பெருந்தகையோ'* (மனோன். v. iii, கொச்சகக் கலி.)

[பிறகு + இடு–,]

பிறகிபத்திகம் *piragipattigam,* பெ. (n.) அசோகு; a tree.

பிறகு¹ *piragu,* பெ. (n.) 1. பின்புறம் (அக.நி.); back, rear. 2. முதுகு; back. *'பிறகுங் குழலுங் கண்டபடி'* (திவ். திரு நெடுந். 21, வ்யா. 174.).

[பின் → பிற → பிறவு → பிறகு (மு.தா.293)]

பிறகு² *piragu,* கு.வி.எ (adv.) 1. பின்பு. (யாழ்.அக.); afterwards, after. தேர்வுக்காகப் படிக்கும் போது பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போடக் கூடாது (உ.வ.) 2. சற்றுப் பொறுத்து (சது.); presentlly, shortly. வேறொரு வேலை இருக்கிறது இதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் (உ.வ.) 3. பின்னோக்கி (வின்.); backward. 4. தாழ்வாக(வின்.); below, in an inferior position.

[பின் → பிற → பிறவு → பிறகு]

பிறகுகாட்டல் *piragukāttal,* பெ. (n.) புணர்ச்சிக்குடன்படாது பின்புறங்காட்டிப் படுக்கை (கொக்கோ. 4, 45.); (erot.) turning away from one's husband on bed, showing ill-humour.

[பின் → பிற → பிறவு → பிறகு + காட்டல். பிறகு = பின்புறம், முதுகு. காண் → காட்டு → காட்டல். 'அல்' தொ.பெ.ஈறு]

பிறகுகாண்(ணு)–தல் *piragu-kān(nu)-,* 16 செ.குன்றாவி. (v.t.) தோற்கடித்தல்; to defeat. *'காலையும் மனத்தையும் பிறகு காண்பது'* (கம்பரா. படைத். 33.).

[பின் → பிற → பிறவு → பிறகு + காண்,–]

பிறகுத்தம் *pirakuttam,* பெ. (n.) வஞ்சிக்கொடி. (சங்.அக.); rattan-palm.

பிறகுவாளி *piraguvāli,* பெ. (n.) பின்புறமாகச் சாத்தும் அணிவகை; ornament worn on the back. *'பின்பும் பிறகுவாளியுமான அழகை'* (ஈடு, 8, 8, 9.).

[பிறகு + ஆளி]

பிறங்கடை *pirangadai,* பெ. (n.) **1.** மகன் (சூடா.); son. *'பானுவின் நீள் பிறங்கடை'* (சேதுபு. சேதுவ. **9.**). **2.** வழித்தோன்றல் (பிங்.); descendant. *'முந்நீர்வண்ணன் பிறங்கடை'* (பெரும்பாண். **30.**). **3.** மருகன் (நாமதீப. **198.**); nephew. **4.** அயலிடம் (அக.நி.); strange place.

[பின் → பிற → பிறவு → பிறகு → பிறக்கு. பிறக்கு → பிறங்கு → பிறங்கடை = பின்னால் வரும் உரிமையாளன் (வாரிசு) (மு.தா. 283) பிறங்கு + அடை = ஒரு குலம் அழியாமல் விளங்குவதற்குக் காரணமாயுள்ளது (சு.வி. 18.)]

பிறங்கல்[1] *pirangal,* பெ. (n.) **1.** பெருமை (சூடா.); greatness. **2.** மிகுதி (பிங்.); abundance. **3.** உயர்ச்சி (பிங்.) (அகநா. **8,** உரை); height, eminence. **4.** நிறைவு (சூடா.); fullness. **5.** திரள்; pile, heap, mass. *'மென்றினைப் பிறங்கலும்'* (சீவக. **148.**). **6.** ஒளி (பிங்.); brightness, splendour. **7.** துறக்கம் (மோட்சம்) (அக.நி.); heaven. **8.** அரசன் (அக.நி.); king. **9.** ஒலி (சூடா.); sound.

[பிறங்கு → பிறங்கல். 'அல்' தொ.பெ.ஈறு]

பிறங்கல்[2] *pirangal,* பெ. (n.) **1.** மலை; hill, mountain. *'எண்மரும் பிறங்கல்'* (அகநா. **8.**). **2.** சிறுமலை (யாழ்.அக.); mound, hillock. **3.** கற்பாறை; rock. *'கதிர்ப் பிறங்கால வட்டம்'* (சூளா. மந்திர. **20.**).

[பிறங்கு → பிறங்கல். 'அல்' தொ.பெ.ஈறு]

பிறங்கி *pirangi,* பெ. (n.), கருநெல்லி; black Indian gooseberry.

பிறங்கியல் *pirangiyal,* பெ. (n.) முதுகாடு (யாழ்.அக.); cremation ground. **மறுவ.** சுடுகாடு

[பிற → பிறங்கு + இயல்]

பிறங்கு[1]**–தல்** *pirangu-,* 5 செ.கு.வி. (v.i.), **1.** விளங்குதல்; to shine, glitter, glisten. *'பிறங்கொளி சேர் விண்ணாகி'* (திருவாச. **7, 18.**). **2.** உயர்தல்; to be high, lofty, elevated. *'பிறங்குநிலை மாடத்து'* (புறநா. **69.**). **3.** சிறத்தல்; to be great, exalted, dignified. *'பெருமை பிறங்கிற் றுலகு'* (குறள், **23.**). **4.** மிகுதல்; to grow full, complete, abundant. *'பிறங்குநீர்ச் சேர்ப்பினும்'* (புறநா. **49.**). **5.** பெருகுதல்; to overflow, inundate. *'மாய்ப்பதோர் வெள்ளம் போலும்..... பிறங்கி வந்து'* (கலித். **146.**). **6.** செறிதல்; to be densely crowded, close together. *'பிணம் பிறங்கப் பெயர்த் திட்டன்று'* (பு.வெ. **1, 10.**). **7.** பெருத்தல்; to grow large in size. *'மேதியன்ன கல் பிறங்கியவின்'* (மலைபடு. **111.**) **8.** நிலைமாறுதல்; to change, move. *'மேல் பிறங்காப் பாண்டிலா'* (சீவக. **175.**). **9.** ஒலித்தல் (சங்.அக.); to sound.

[புள் → பள் → பள → பளபளப்பு. பள் → (பாள்) → பள்ளம் = பளபளப்பு. பள் → வாள் = ஒளி. புல் → (பூல்) → பூ = பொலிவு, அழகு, மலர். புல் → பொல் → பொலி → பொலிவு. (மு.தா, 135.) புள் → பிள் → பிற → பிறங்கு]

பிறங்கு[2] *pirangu,* பெ. (n.) விரலிறை (நிகண்டு); lines on the inside of the finger points.

[பிற → பிறங்கு]

பிறங்குநாறி *pirangunāri,* பெ. (n.) புறங்கை நாறி பார்க்க; see *purangai nāri.*

[புறங்கைநாறி → பிறங்குநாறி]

பிறச்சின்னை *piraccinnai,* பெ. (n.) மீன்வகையுளொன்று; a kind of fish.

பிறசாதனம் *piraśādānam,* பெ. (n.) தேக்கு (மலை.); teak.

பிறசாதிகம் *pira śādigam,* பெ. (n.) தக்கோலம்; cubeb pepper.

பிறசாதினி *piraśādini,* பெ. (n.) *பிறசாரணி* பார்க்க; see *pirasārani.*

> **மறுவ.** பிறசாரணி, பிறசாரினி, அம்மையார் கூந்தல்

பிறசாரணி *piraśārani,* பெ. (n.) கொடியார் கூந்தல்; a kind of spreading plant.

பிறசாரினி *piraśārini,* பெ. (n.) அம்மையார் கூந்தல் (மலை.); Sita's thread.

பிறசான்றோர் *pira śānrōr,* பெ. (n.) கழக (சங்க)ப் புலவரல்லாத புலவர் பெருமக்கள் (தொல். பொ. 487, உரை.); classic poets other than the sangam poets.

> *[பிற + சான்றோர். பின் → பிற. சாலுதல் = நிறைதல். சால → சான் → சான்றோர் = அறிவு நிறைந்தோர். கழகத்துப் புலவர்கள் அனைவரும் அறிவு நிறைந்தவர்கள். அவர்கள் மட்டுமன்றி அவர்களோடு ஒப்ப வைத்துப் பார்க்கும் தகைமை சான்ற புலவர் பெருமக்கள் பலர் இருந்திருக்கின்றனர் என்பதை இச்சொல்லாட்சி புலப்படுத்துகிறது]*

பிறத்தி *piratti,* பெ. (n.) வழுதலை; plant brinjal.

> **மறுவ.** கத்திரி.

பிறத்திப்பூரம் *pirattippūram,* பெ. (n.) நாயுருவி (சங்.அக.); a plant.

பிறத்தியார் *pirattiyār,* பெ. (n.) 2 பிறர்; others. அவர் பிறத்தியார் பணியில் தலையிட மாட்டார் (உ.வ.) 2. தன்குழுவுக்குப் புறம் பானவன் (அயலானவன்); one who belongs not to his group, outsider.

> *[பிற → பிறத்தியார்]*

பிறதகி *piratagi,* பெ. (n.) முள்ளி; Indian nightshade.

பிறதலை *pira-talai,* பெ. (n.) கப்பலின் பிற்பக்கம்; aft or after part of a ship.

> *[புறம் → பிறம் + தலை]*

பிறதனம் *piradanam,* பெ. (n.) கடுக்காய்; Indian gallnut.

> **மறுவ.** பிறதேமம், பிறதேசி.

பிறந்தகம் *pirandagam,* பெ. (n.) **1.** பிறந்த வீடு, குறிப்பாகப் பெண்களுக்குப் பிறந்த வீடு, புக்ககத்திற்கு எதிரானது; house or family in which one is born, the parental house, generally of women, opp. to pukkagam. *'பிறந்தகமும் மது'* (குமர.பிர. மீனாட். இரட். 20) **2.** மணமகனுக்கு மணமகள் வீட்டார் அளிக்கும் வரிசை (வின்.); gift received by a bridegroom from his bride's family. **3.** தலைக் குழந்தைக்குத் தாயைப் பெற்ற பாட்டி அளிக்கும் பரிசு (வின்.); gift to the first born child from its maternal grand mother.

> *[பிற → பிறந்த + அகம்]*

பிறந்தகோலம் *piṟanda kōlam,* பெ. (n.) **1.** ஆடையற்ற அம்மண நிலை, பிறந்த மேனி; stark nakedness. **2.** முழுதும் துறக்கை; renunciation.

[பிறந்த + கோலம்]



பிறந்தநாள் *piṟanda-nāḷ,* பெ. (n.) **1.** ஒருவர் பிறந்த நாள் (ஆண்டு, மாதம் ஆகியவற்றையும் உள்ளடக்கியது); the day on which one is born (inclusive of year a month.). *'பிறந்த நாடொட்டும்'* (மணிமே. **13, 53.**). **2.** ஒவ்வொரு ஆண்டும் வருகிற ஒருவரின் பிறந்த நாள்; birthday. பிறந்த நாளைக் கொண்டாடுவது நம் நாட்டு வழக்கமன்று **(உ.வ.)**. **3.** பிறந்த விண்மீன்; natal star. *'பிறந்தநாள் முன்னுவாநாள்'* (குற்றா. தல. கவற்சன. **14.**).

க. குட்டிகதின; **து.** புட்டிதின

[பிற → பிறந்த + நாள்]

பிறந்தமேனி *piṟanda-mēṉi,* பெ. (n.) **1.** பிறந்த கோலம் (கொ.வ.) பார்க்க; see piṟanda kōlam. **2.** மாசின்மை (வின்.); genuineness; spotless simplicity, as of a child.

[பிற → பிறந்த + மேனி]

பிறந்தவம் *piṟandavam,* பெ. (n.) பிறப்பு (சது.); birth, nativity.

[பிற → பிறந்த → பிறந்தவம்]

பிறந்தவழிக்கூறல் *piṟanda-vaḻi-k-kūṟal,* பெ. (n.) இடத்து நிகழ் பொருளை இடத்தாற் கூறும் ஆகுபெயர் வகை (தொல். சொல். **110,** தெய்வச்); a kind of metonymy. *"அவள் உடுத்தியிருந்தது காஞ்சிபுரம்"*

[பிற → பிறந்த + வழி + கூறல். கூறு → கூறல். 'அல்' தொ.பெ.ஈறு]

பிறந்தவீடு *piṟandavīḍu,* பெ. (n.) பிறந்தகம்; house or family in which one is born.

மறுவ. பிறந்த இல்லம்.

து. புட்டில்.

[பிற → பிறந்த + வீடு]

பிறந்தாள் *piṟandāḷ,* பெ. (n.) புறங்கால்; back of the leg.

[புறம் → பிறம் + தாள்]

பிறந்திளைத்தல் *piṟandiḷaittal,* தொ. பெ. (vbl.n.) பிறவி வெப்பத்தில் ஆதன் அழுந்துதல்; becoming tired of birth. *'...... எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்'*

[பிறந்து + இளைத்தல். பிற → பிறந்து. இளை → இளைத்தல். 'தல்' தொ.பெ. ஈறு]

பிறந்தை *piṟandai,* பெ. (n.) **1.** பிறவி; birth. *'பிறந்தை யினத்தின் மாண்டோ ரீடே'* (ஞானா, **39, 9.**). **2.** துன்பம்; distress. *'உடற்சுமக்கும்*

பிறந்தை நீங்கி' (சிவராத்.பு. கடவுள். 18.). 3. கரிசு (பாவம்) (அக.நி.); sin. 4. இயல்பு (சுபாவம்) (வின்.); nature, natural state. 5. பிறந்தகம்; birth place. *'வையாய்! நின் பிறந்தையாகிய மலையை விட்டு'* (பரிபா. 11, 43, உரை.).

[பிற → பிறந்தை = பிறவி, இனம் (genus) (மு.தா. 262)]

பிறநீக்கம் *pira-nikkam,* பெ. (n.) உடைமை மாற்றம் (பராதீனம்); alienation.

[பிற + நீக்கம். நீங்கு → நீக்கு → நீக்கம்]

பிறநீர்க்கண்டி *piranir-k-kandi,* பெ. (n.) *பிறநீர்க் கோவை* பார்க்க; see *piranir-k-kōvai.*

[பிற + நீர் + கண்டி]

பிறநீர்க்கொள்ளல் *pirnir-k-kollal,* தொ.பெ. (vbl.n.) *பிறநீர்க்கோவை* பார்க்க; see *piranir-k-kōvai.*

[பிற + நீர் + கொள்ளல். 'அல்'தொ.பெ. ஈறு]

பிறநீர்க்கோவை *piranir-k-kōvai,* பெ. (n.) உடம்பில் வெப்பம் மிகுந்து, நீர்க்கோவையுடன் வீக்கத்தையேற்படுத்தும் நோய்; a kind of disease.

[பிற + நீர் + கோவை]

பிறநூன்முடிந்ததுதானுடன்படுதல் *pira-nūn-mudindadutān-udanpadudal,* பெ. (n.) முப்பத்திரண்டு உத்திகளுள் பிற நூல்களின் முடிபுக்குத் தான் உடம்படும் உத்தி (நன்.15.); (gram.) acquiescence in the conclusions of a work other than one's own, one of 32 utti.

[பிறநூன்முடிந்தது + தான் + உடன்படுதல். 'தல்' தொ.பெ.ஈறு]

பிறநோய்ச்சுரம் *piranōy-c-curam,* பெ. (n.) நோய் முதலியவற்றா லுண்டாகும் வெப்புக் காய்ச்சல்; ague associated with other diseases.

[பிற + நோய்சுரம்]

பிறப்பார் *pirappār,* பெ. (n.) நாய்வேளை (மலை.); a sticky plant that grows best in sandy tracts.

பிறப்பாரி *pirappāri,* பெ. (n.) *பிறப்பார்* பார்க்க; see *pirappār.*

[பிறப்பார் → பிறப்பாரி]

பிறப்பி[1]-த்தல் *pirappi-,* 18 செ.குன்றாவி. (v.t.) கருப்பையினின்று குழந்தையை வெளிப் படுத்தல்; to cause to be born, to get the foetus out the womb.

[பிறப்பு → பிறப்பி-, 'பி' பி.வி.ஈறு]

பிறப்பி[2]-த்தல் *pirappi-,* 18 செ.குன்றாவி. (v.t.) நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றவகையில் ஆணை வெளியிடுதல்; to issue an order, to promulgate an ordinance. கலவரப்பகுதில் கண்டவுடன் சுடும்படி காவல்துறை ஆணை பிறப்பித்துள்ளது (உ.வ.).

[பிற → பிறப்பி-,]

பிறப்பிக்கை *pirappikkai,* பெ. (n.) உண்டாக்குகை; originate.

[பிற → பிறப்பி → பிறப்பிக்கை]

பிறப்பிடம் *pira-p-pidam,* பெ. (n.) பிறந்த இடம்; place of one's birth, place of origin. birth place. பிறப்பிடச் சான்றிதழ் வாங்கி வைக்க வேண்டும் (உ.வ.).

[பிற → பிறப்பு + இடம். 'ப்' தொ.பெ.ஈறு]

பிறப்பியம் *pirappiyam,* பெ. (n.) பிறப்புக் குறிப்பு (சாதகம்); horoscope. *"என் தமையனார் பிறப்பியம் பார்ப்பதற்காக வினைதீர்த்தான் கோயிலுக்குப் போயிருக் கிறார்"* (உ.வ.).

[பிறப்பு → பிறப்பியம். 'இயம்' ஓர் ஈறு.]

பிறப்பிலம் *pirappilam,* பெ. (n.) மருட்கற்றாழை வகை; a kind of aloe.

பிறப்பிலி *pirappili,* பெ. (n.) 1. கடவுள் (பிறப்பில்லாதவன்); god, as unborn. *'அறவன் பிறப்பிலி'* (திருமந். 1616.). 2. உடன் பிறப்பில்லாதவன் (வின்.); one without brother or sister.

[பிற → பிறப்பு + இலி. இல்லி → இலி = இல்லாதவன். 'இ' உடைமை குறித்த ஈறு.]

பிறப்பிற்குரிய *pirappirkuriya,* பெ.அ. (adj.) பிறப்பிற்கிடமான; generative as in organ.

[பிறப்பிற்கு + உரிய]

பிறப்பிறப்பறல் *pirappirapparal,* தொ.பெ. (vbl.n.) நரைதிரையற்ற சாவாமூவா உடம்பெய்தல்; attain salvation without having any rebirth.

[பிறப்பு + இறப்பு + அறல்.அறு → அறல். 'அல்' தொ.பெ.ஈறு]

பிறப்பிறப்பு *pirappirappu,* பெ. (n.) பிறப்பும் இறப்பும்; birth and death. *'பிறப் பிறப்பு மூப்புப் பிணி துறத்து'* (திவ். இயற். பெரியதி. 80.).

[பிற → பிறப்பு + இறப்பு. இற → இறப்பு. 'ப்' தொ.பெ.ஈறு]

சிலர் பிறப்பு இறப்பு என்னும் சொற்கள் முறையே பகரமெய்ச் சேர்க்கையும் அதன் நீக்கமும் பெற்றிருப்பதால் உயிர் உடம்பொடு கூடுதலையும் அதைவிட்டு நீங்குதலையும் குறிக்குமென்று கூறுவர். பிறப்பு என்பது 'பிள்' என்னும் வேரினின்றும் இறப்பு என்பது 'இறு' என்னும் வேரினின்றும் பிறந்திருப்பதாலும், பிணங்கு இணங்கு எனப் பிறவெதிர்ச் சொற்களும் பிறப்பு இறப்பு என்பவை போன்றே யமைந்திருப்பதாலும் அது போலிக் கூற்றென்க. (சொ.க. 32.).

பிறப்பு *pirappu,* பெ. (n.) 1. பிறத்தல்; birth, nativity. *'விழிப்பது போலும் பிறப்பு'* (குறள், 339.) 2. தோற்றம் (உற்பத்தி); origin, production. *'பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல'* (தொல்.எழுத். 83.). 3. இனம் (சாதி); order or class of beings including animals and vegetables, caste. *'இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்'* (குறள், 133.) 4. தொடக்கம்; beginning, commencement, as of a month, or a year. *'ஆண்டு(வருஷ)ப்பிறப்பு, மாசப் பிறப்பு'* 5. உடன் பிறந்தவர்(வின்.); brother or sister. 6. மகளிரணியும் முளைத்தாலி; necklace of small seed-like gold pieces. *'காசும் பிறப்புங் கலகலப்ப'* (திவ்.திருப்பா.7). 7. வெண்பாவின் இறுதியில் நிரையசை யொன்றுடன் உகரமான நேரசை கூடிவரும் வாய்பாடு (காரிகை, செய். 5.); (pros.) a formula of a foot of one nirai-y-ašai followed by a nēr-ašai ending in, occuring as the last foot of a veṇbā 8. அச்சம் (பிங்.); fear, alarm. 9. மயக்கம் (பிங்.); confusion, bewilderment.10. நெருக்கம் (பிங்.); closeness, thickness, denseness.

ம. பிறப்பு; **க.** புட்டு, குட்டு; **து.** புட்டு;**கோத.** பெர்ப்

[பிள் → பிற → பிறப்பு (மு.தா. 262) 'ப்' தொ.பெ.ஈறு]

பிறப்புச்சான்றிதழ் *piṟappu-c-cāṉṟidaḷ,* பெ. (n.) ஒருவரது பிறந்த நாள், பிறந்தவிடம், பெற்றோர், ஆகியவற்றைத் தெரிவிக்கும் ஆவணம்; birth certificate. பள்ளிக்குச் சேர்வதற்குப் பிறப்புச் சான்றிதழ் தேவை (உ.வ.).

[பிறப்பு + சான்றிதழ்]

பிறப்புத்தொந்தம் *piṟappu-t-tondam,* பெ. (n.) வழிவழியாய் ஒருவனுக்கு உண்டாகும் பண்புக் குற்றங்கள் (யாழ்ப்.); inherited characteristics.

[பிறப்பு + தொந்தம்]

Skt. dvandva > **த.** தொந்தம்

பிறப்புரிமை *piṟappurimai,* பெ. (n.) ஒருவருக்குப் பிறப்பால் வரும் சிறப்புரிமை; birth right. கல்வி பிறப்புரிமையாக வேண்டும் (உ.வ.).

[பிறப்பு + உரிமை]

பிறப்புவமப்போலி *piṟappuvamappōli,* பெ. (n.) அணிவகை (பாப்பா. 50.); (rhet.) a figure of speech.

[பிறப்பு + உவமைப்போலி]

பிறப்புவரிசை *piṟappu-varišai,* பெ. (n.) மக்கட்பிறவி வாய்ப்பதற்கு முன் ஆதன் அடையும் படிநிலைகள்; the considered stage of a soul prior to taking human birth.

[பிறப்பு + வரிசை]

திருவாசகத்திலுள்ள சிவபுராணத்தில் ஆதனின் படிமவளர்ச்சி ***"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப்..... பிறந்திளைத் தேன் எம்பெருமான்"*** எனவருகிறது.

பிறப்புவழி *piṟappu-vaḻi,* பெ. (n.) **1.** குடிவழி; family line, lineal descent. **2.** குடும்பவியற்கை; hereditary disposition.

மறுவ. சரவடி, கால்வழி

[பிற → பிறப்பு + வழி]

பிறப்புவாசி *piṟappu-vāši,* பெ. (n.) பிறவி இயல்பு (வின்.); that which is inherent innate or natural.

[பிற → பிறப்பு + வாசி]

பிறப்புறுப்புகள் *piṟa-p-puṟuppukaḷ,* பெ. (n.) குழந்தைப் பேற்றுக்கு உதவும் உறுப்புகள்; genitals.

[பிறப்பு + உறுப்புகள்]

பிறபொருள்வைப்பு *piṟa-poruḷ-vaippu,* பெ. (n.) வேற்றுப் பொருள் வைப்பு (வீரசோ. அலங். 11.); (rhet.) a figure of speech.

[பிற + பொருள் + வைப்பு. 'ப்' தொ.பெ.ஈறு]

பிறம்பத்தங்கால் *piṟambattaṅgāl,* பெ. (n.) பின்னங்கால்; hind leg

[பின் → பினம் → பிறம் → பிறம்பு (மு.தா.293) பிறம்பு + கால் –பிறம்பத் தங்கால்.]

பிறமுகம்பார்–த்தல் *piṟamugam-pār-,* 4.செ.கு.வி. (v.i.) 1.பிறர் உதவி வேண்டுதல்; to seek the favour of another. 2. ஒழுக்கங் குறைவாக நடத்தல் (விபசாரஞ்செய்தல்) (இ.வ); to commit adultery.

[பிறர் + முகம் + பார்–, பிறர்முகம் பார்த்தல், மாற்றார்(அயலார்) முகத்தைப் பார்த்தல் என்னும் நேரடிப் பொருளைக் கொண்டது. உதவிக்காவும்ஒழுக்கக்குறை செயலுக்காகவும் பிறரை நோக்கும் போது–, பிறர் முகத்தைப்பார்ப்பது இயல்பு. அதனால் அப்பொருள்கள் இக்கூட்டுச் சொல்லுக்கு ஆகி வந்துள்ளன]

பிறமூலம் *piṟa - mūlam,* பெ (n.) மலவாயிலில் தினவையுண்டாக்கு மூலநோய் வகை; a kind of piles.

[பிற + மூலம்]

பிறர் *piṟar,* பெ. (n.) அயலார்; outsiders, strangers. *"பிறர்க்கின்னாமுற்பகற் செய்யின்"* (குறள்,319).

[பின் → பின → பிற → பிறிது. பிற → பிறகு = வேறு. பிறம்→பிறன் = வேறொருவன், மற்றவன், அயலான் (மு.தா.294) பிறன்→ பிறர். 'ர்' ப.பா.ஈறு]

பிறர்துயர்காத்தல் piṟar- tuyar-kāttal, பெ. (n.) முப்பத்திரண்டறங்களுள் பிறர்க்கு வந்த துன்பத்தை நீக்குதல் (பிங்); helping others in their distress, redressing grievences, one of muppattiranḍaṟam'

[பிற → பிறர் + துயர் + காத்தல். கா → காத்தல். 'தல்' தொ.பெ.ஈறு]

பிறர்பொருட்டனுமானம் *piṟar-poruṭṭa ṉumāṉam,* பெ. (n.) *பிறர் பொருட்டுய்த் துணர்வு பார்க்க,* see *piṟar poruṭṭuytuṇārvu.*

[பிறர் + பொருட்டு + அனுமானம். பிறர் பொருட்டனுமானம் தன்பொருட்டனு மானத்திற்கு எதிரானது]

Skt. anumāna > த. அனுமானம்

பிறர்பொருட்டனுமானமிதி *piṟar-poruṭṭa ṉumāṉamiti,* பெ. (n.) பிறர் பொருள் உய்த்துணர்வி (அனுமானம்) னின்று பெறும் அறிவு; (log.) knowledge derived from piṟar poruṭṭaṉumāṉam.

[பிறர் + பொருட்டு + அனுமானமிதி]

பிறர்பொருட்டுய்த்துணர்வு *piṟarporuṭṭuyt tuṇarvu,* பெ. (n.) பிறரை ஒளிபெறச்செய்து கொள்ளும் உய்த்துணர்வு, தன் பொருட்டுய்த் துணர்விற்கு எதிரானது; inference employed to enlighten others opp. to taṉ poruṭṭuyttuṇarvu.

[பிறர் + பொருட்டு + உய்த்துணர்வு]

பிறர்மனைநய–த்தல் *piṟarmaṉai-naya-,* 3 செ.கு.வி. (v.i.) பிறன் மனையாளைப் புணர விரும்பல்; to love another's wife

[பிறர்மனை + நய–, பிறர்மனை =அயலார் மனைவி. நயத்தல் = விரும்புதல்]

பிறர்முகம்பார்–த்தல் *piṟarmugam pār-,* 3 செ.கு.வி (v.i.) *பிறன் மனைநய-த்தல்* பார்க்க; see *piṟar maṉai naya-,*

[பிறர்முகம் + பார்]

பிறரோகி *piṟarōgi* பெ (n.) வறட்சுண்டி; wormkiller, wildy climber.

பிறவடை *piṟavaḍai* பெ. (n.) கண்ணைச் சுற்றிலும் போடும் பற்று மருந்து; an external medicine intended to be applied round the eye.

[புறவடை → பிறவடை]

பிறவலி *piṟavali* பெ. (n.) கண்டதிப்பிலி; root of long pepper.

பிறவலிஇசிவு *piṟavali- iśivu,* பெ. (n.) சுரம் முதலியவற்றாலுண்டாகும் வலிப்பு நோய்; fever or delirium marked by convulsions

[பிறவலி + இசிவு]

பிறவன் *piṟavaṉ,* பெ. (n.) உடன்பிறந்தவன்; brother.

[பிள் → பிற → பிறவன்.'அன்'ஆ.பா.ஈறு]

பிறவாநெறி *piṟavā-neṟi,* பெ. (n.) வீடுபேறு; salvation, as facing one from birth. '*பிறவாநெறி தந்த பேரருளன்*' (திருமந்.1803.)

[பிள் → பிற + ஆ + நெறி. 'ஆ' எதிர்மறை இடைநிலை.]

பிறவி[1] *piṟavi,* பெ. (n.) **1.** பிறப்பு; birth. '*பிணிபிறவி கேடென்று*' (தேவா. 935,1.) **2.** பிறப்பு, 2,5. (வின்.) பார்க்க; see piṟappu 2,5 **3.** இயல்பு (கொ.வ.); natural disposition. **4.** மறுபிறவி; transmigration, subjection of the soul to births. '*பிறவிப்பெருங்கடல் நீந்துவர்*' (குறள்,10.)

ம. பிறவி.

[பிள் → பிற → பிறவி. 'வி' பெ.ஆ.ஈறு]

பிறவி[2] *piṟavi,* பெ. (n.) உடன்பிறந்தவள்; sister.

[பிள் → பிற → பிறவி. 'வி' பெ.பா.ஈறு]

பிறவிக்கடல் *piṟavi-k-kaḍal,* பெ. (n.) பிறவியாகிய பெருங்கடல்; occean of births '*புணைவன் பிறவிக்கடனீந்துவார்க்கே*' (திவ்.திருவாய்.2,8,1.)

[பிறவி + கடல். கட → கடல். மக்கட் பிறப்பைக் கடலாக உருவகம் படுத்தப் பட்டதனால் உருவான சொல்]

பிறவிக்கல் *piṟavikkal,* பெ. (n.) இயற்கையான கல்; natural stone.

[பிறவி + கல்]

பிறவிக்கற்பம் *piṟavi-k-kaṟpam,* பெ. (n.) உடல் நீடித்திருக்க உண்ணும் மருந்து; medicine for strengthening the body and prolonging life.

[பிறவி + கற்பம்]

பிறவிக்குணம் *piṟavi-k-kuṇam,* பெ. (n.) **1.** இயல்பு; natural disposition. **2.** முன்பிறவித் தாக்கத்தால் உண்டாங் குணம்; innate characteristics, due to the influence of previous births. '*நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம்*' (தனிப்பா,1,91,5)

[பிற → பிறவி + குணம். குள் → குண் → குணம்]

பிறவிக்குருடன் *piravi-k-kurudan,* பெ. (n.) பிறந்தது முதலே கண் தெரியாதவன்; one born blind.

[பிற → பிறவி + குருடன். குல் → குரு → குருள் → குருடு → குருடன். 'அன்' ஆ.பா.ஈறு]

பிறவிகளறவுரை *piravikalaravurai,* பெ. (n.) முற்பிறவியைக் கூறுகின்ற அறவோர் உரை (சீவக.2848,உரை.தலைப்பு); teacher's words revealing past births.

[பிற → பிறவி + களற + உரை]

பிறவிச்சீர்பந்தம் *piravi-c-cir-pandam,* பெ. (n.) சீர்பந்த செய்நஞ்சு(பாடாணம்) (வை.மூ.); a mineral poison.

பிறவிச்சு *piraviccu,* பெ. (n.) *புறவீச்சு* பார்க்க; see *puraviccu.*

[புறவீச்சு → பிறவிச்சு]

பிறவிச்சுஇசிவு *piraviccu isivu,* பெ. (n.) பிடரியில்தோன்றும் இசிவு நோய் வகை (வின்.); a disease of the nape tetanus.

[பிறவிச்சு + இசிவு]

பிறவிச்சுபாவம் *piravi-c-cubāvam,* பெ. (n.) *பிறவியியல்பு* (கொ.வ.) பார்க்க; see *piraviyiyalbu.*

[பிறவி + சுபாவம்]

Skt. sva-bhāva > த. சுபாவம்

பிறவிச்செய்ந்நஞ்சு *piravic-ceynnañju,* பெ. (n.) முப்பத்திரண்டு இயற்கைச் செய்ந் நஞ்சுகள்; mineral poison, especially arsenic in its natural state, of which there are 32 kinds.

[பிறவி + செய்ந்நஞ்சு. பிறவி = இயற்கை, இயல்பு.]

பிறவிசெய்ந்நஞ்சு (பாஷாணம்) 32 ஆவன.

1. மரமூலம்(அங்கிரமாதி) செய்ந்நஞ்சு, 2. மை(அஞ்சன) செய்ந்நஞ்சு, 3. நீர்க்கொள்ளி (அப்பிரக) செய்ந்நஞ்சு, 4. கல்பொடி(அவுபல) செய்ந்நஞ்சு, 5. இலிங்க செய்ந்நஞ்சு, 6. கந்தக செய்ந்நஞ்சு, 7. காட்டுத் தாளகம், 8. நண்டு (கர்க்கடக) செய்ந்நஞ்சு, 9. கற்பரி செய்ந்நஞ்சு, 10. கல் செய்ந்நஞ்சு, 11. காய்ச்சற் செய்ந்நஞ்சு, 12. காந்த செய்ந்நஞ்சு, 13. கார்முகிற் செய்ந்நஞ்சு, 14. குதிரைப்பல் செய்ந்நஞ்சு, 15. கோளக செய்ந்நஞ்சு, 16. அவுரம்(கௌரி) செய்ந்நஞ்சு, 17. சங்க செய்ந்நஞ்சு, 18. சரகாண்ட செய்ந்நஞ்சு, 19. சாலாங்க செய்ந்நஞ்சு, 20. குதிரைக்காலிரும்பு(இலாமத) செய்ந்நஞ்சு, 21. சீதாங்க செய்ந்நஞ்சு, 22. சீர்பந்த செய்ந்நஞ்சு,23. சூத செய்ந்நஞ்சு, 24. தகட்டரிதாரம் செய்ந்நஞ்சு, 25. தாலம்ப செய்ந்நஞ்சு, 26. துத்த செய்ந்நஞ்சு, 27. கொட்டி செய்ந்நஞ்சு, 28. பலண்டுறுக செய்ந்நஞ்சு, 29. பிறங்கி செய்ந்நஞ்சு, 30. மனோசிலை செய்ந்நஞ்சு, 31. மிருத செய்ந்நஞ்சு, 32. வென்றலி செய்ந்நஞ்சு.

பிறவிச்செல்வம் *piravi-c-celvam,* பெ. (n.) கருவிலேயுற்ற திரு; the state of being born with a silver spoon in one's mouth.

[பிற → பிறவி + செல்வம். பிறப்பில் இருக்கும் செல்வச் செழிப்பைக் குறிப்பது.]

பிறவிச்செவிடு *piravi-c-cevidu,* பெ. (n.) பிறந்தது முதலே காது கேளாதவன்; a born deaf.

க. கட்டுகிவுடு.

[பிறவி + செவிடு]

பிறவிடுதி *piṟa-viḍudi,* பெ. (n.) பிறவிடம் (பரஸ்தானம்) (யாழ்ப்.); staying at another's house before a journey.

[பிற(ர்) + விடுதி]

பிறவித்தங்கம் *piṟavi-t-taṅgam,* பெ. (n.) இயற்கையா யுண்டாகும் மாசறு பொன்; natural superior gold.

[பிறவி + தங்கம்]

பிறவித்தீட்டு *piṟavi-t-tīṭṭu,* பெ. (n.) குழந்தை பிறந்ததனால் உண்டாம் வாலாமை (யாழ்.அக.); pollution on child birth, among the family relations.

[பிறவி + தீட்டு]

பிறவித்துயர் *piṟavi-t-tuyar,* பெ. (n.) 1. பிறக்கையாகிய துன்பம்; the misery of births. '*பிறவித் துயரற*' (திவ். திருவாய்.1,7,1.). 2. பிறவன், பிறவி (சகோதர சகோதரி)களின் இறப்பால் உண்டாகும் துன்பம் (யாழ்.அக.); distress caused by bereavement of a brother or sister.

[பிறவி + துயர். பிறவி = பிறப்பு, உடன் பிறப்பு]

பிறவித்துவக்கு[1] *piṟavi-t-tuvakku,* பெ. (n.) பிறவியாலுண்டாம் உறவு; relationship by birth. '*அவளுக்குப் பிறவித் துவக்காலே நம்மவர்களென்று கண்ணோட்டம் பிறக்கும் ராக்ஷஸிகளும்*' (ரஹஸ்ய. 406.).

[பிறவி + துவக்கு]

பிறவித்துவக்கு[2] *piṟavi-t-tuvakku,* பெ. (n.) தொடர்ந்துவரும் பிறவியின் தொடர்ச்சி; continuity of birth.

[பிறவி + துவக்கு]

பிறவித்துவந்தம் *piṟavi-t-tuvandam,* பெ. (n.) *பிறவித் தொந்தம்* (வின்.) பார்க்க; see *piṟavi-t-tondam.*

[பிறவி + துவந்தம்]

Skt. dvandva> **த.** தொந்தம் → துவந்தம்

பிறவித்துழதி *piṟavi-t-tuḻadi,* பெ. (n.) பிறவித்துயர் பார்க்க; see piṟavi-t-tuyar. '*பிறவித் துழதி நீங்க*' (திவ்.திருவாய்.2,7,7.)

[பிறவி + துழதி]

பிறவித்தொடக்கு *piṟavi-t-toḍakku,* பெ. (n.) *பிறவித் துவக்கு*[1] பார்க்க; see *piṟavi-t-tuvakku*[1].

[பிறவி + தொடக்கு]

பிறவித்தொடர் *piṟavi-t-toḍar,* பெ. (n.) *பிறவித்துவக்கு*[1] பார்க்க; see *piṟavi-t-tuvakku*[1]

[பிறவி + தொடர்]

பிறவித்தொந்தம் *piṟavi-t-tondam,* பெ. (n.) பிறவியியல்பு (வின்.); congenital failings, as fretfulness, impatience.

[பிறவி + தொந்தம்]

Skt. dvandva> **த.** தொந்தம்

பிறவிநோக்கல் *piṟavi-nōkkal,* தொ.பெ. (vbl.n.) பிறவித் தொடங்கல்; about to be born.

[பிறவி + நோக்கல்]

பிறவிநோய் *piṟavi-nōy,* பெ. (n.) 1. பிறப்பிலுண்டான பிணி; congenital disease; 2. *பிறவித்துயர் 1* பார்க்க; see *piṟavi-t-tuyar 1.*

[பிறவி + நோய்]

பிறவிப்பயன் *piṟavi-p-payaṉ,* பெ. (n.) பிறப்பின் பயன்; object of one's birth; achievement in life.

[பிறவி + பயன்]

பிறவிப்பாடாணம் *piravi-p-pāḍāṇam,* பெ. (n.) *பிறவிச் செய்ந்நஞ்சு* பார்க்க; see *piṟavi-c-ceynañju.*

[பிறவி + பாடாணம்]

Skt. pāṣāṇa > த. பாடாணம்

பிறவிப்பொன் *piṟavi-p-poṉ,* பெ. (n.) இயற்கைப் பொன்; natural gold.

[பிறவி + பொன்]

பிறவிமயக்கு *piṟavi-mayakku,* பெ. (n.) தோன்றும் (உற்பத்தியாகும்) போதேயுள்ள மயக்கம்; natural allurements of life.

[பிறவி + மயக்கு. முயங்கு → மயங்கு → மயக்கு]

பிறவிமலடி *piravi-malaḍi,* பெ. (n.) மலடி (கொ.வ.); barren or sterile woman.

[பிறவி + மலடி. மலடு → மலடி. 'இ' பெ.பா.ஈறு]

பிறவிமலடு *piṟavi-malaḍu,* பெ. (n.) மகப்பேறு உண்டாகாமை; inborn barrenness.

[பிறவி + மலடு]

பிறவிமறு *piṟvimaṟu,* பெ. (n.) பிறந்த போதேயுள்ள மறு; moles and warts found from the birth.

[பிறவி + மறு]

பிறவிமூலம் *piṟavi-mūlam,* பெ. (n.) அரத்த மூலநோய்; congenital haemorrhoids.

[பிறவி + மூலம்]

பிறவியாசாரம் *piravi-y-āšāram,* பெ. (n.) பிறவியாரதம் (யாழ்ப்.) பார்க்க; see piṟaviyāradam.

[பிறவி + ஆசாரம்]

Skt. ācāra > த. ஆசாரம்

பிறவியாரதம் *piṟavi-y-āradam,* பெ. (n.) இயற்கையிலேயே புலாலுண்ணாதிருக்கை (யாழ்ப்.); abstinence from flesh eating from birth.

[பிறவி + ஆரதம்]

பிறவியியல்பு *piravi-y-iyalbu,* பெ. (n.) ஒருவரிடம் அல்லது ஒன்றிடம் அமைந்திருக்கும் அடிப்படை இயல்பு; natural disposition.

[பிற → பிறவி + இயல்பு.]

பிறவியொழி—த்தல் *pir̠avi-y-oḻi-,* 4 செ.கு.வி. (v.i.) பிறவித் தளையினின்று விடுதல்; to be free from rebirth.

[பிறவி + ஒழி—,பிற → பிறவி.]

பிறவிருத்தியா—தல் *pir̠avirutti yā-,* 6 செ.கு.வி. (v.i.) மலங்கழிதல்; to have motion.

[பிற + விருத்தி + ஆ—,]

Skt. vriddhi > **த.** விருத்தி

பிறவிவாசல் *pir̠avi-vāšal,* பெ. (n.) **1.** அல்குற் நுழைவு; osexternum. **2.** கருப்பை வழி; ostium vagina.

[பிறவி + வாசல். வாய் + இல்— வாயில் → வாசல்]

பிறவிவேர் *pir̠avi-vēr,* பெ. (n.) ஆசை; worldy attachments, considered. as the root of birth, 'ஆசையென்கிற பிறவிவேர்' (சீவக.409, உரை.)

[பிள் → பிற → பிறவி + வேர்]

பிறவினை[1] *pir̠a-vin̠ai,* பெ. (n.) பிறரைக் கொண்டு செய்விக்கச் செயலை யுணர்த்தும் வினை (தொல். எழுத். 76, இளம்பூ.); (gram.) causative verb, opp.to tan̠-vinai.

[பிற + வினை]

ஒரு வினை எழுவாயின் வினையாக இருப்பது தன்வினை என்றும் எழுவாயின் வினையாக இல்லாமலிருப்பது பிறவினை என்றும் மரபிலக்கணங்கள் பெயரிட்டுள்ளன. மரபிலக்கணங்கள் காண் என்பதைத் தன்வினை என்றும் காட்டு, காண்பி, காட்டுவி என்பனவற்றைப் பொதுவாகப் பிறவினை என்றும் கொள்ளும் (இலக்.கொத்து.71,73) தன் வினையிலிருந்து பிறவினை உருவாகும் முறைகளை **1.** து ஈற்றைச் சேர்த்தல் (நட-நடத்து, அமர்—அமர்த்து) **2.** மென் தொடர் குற்றுகர இறுதியை வன்தொடர்க் குற்றுகர இறுதியாக மாற்றுதல் (திரும்பு — திருப்பு, அடங்கு - அடக்கு) **3.** உயிர்த்தொடர் நெடிற்றொடர்க்குற்றுகர இறுதியை வன்றொடர்க்குற்றுகரமாக மாற்றுதல் (பழகு - பழக்கு, ஆடு —ஆட்டு, மாறு - மாற்று) **4.** விகுதி களையும் கால இடை நிலைகளையும் சேர்க்கும் போது க், த், ப் ஆகிய வல்லொற்றுகளை ஏற்பச் சேர்த்தல் (அழி - அழிக்க, ஒளி - ஒளிக்க) என்று நான்கு வகையாகப் பிரிப்பர். எவ்வாறாயினும் தமிழிலுள்ள எல்லா வினைகளும் 'வி' அல்லது 'பி' ஈற்றை ஏற்கவல்லன.

பிறவினை[2] *pir̠avin̠ai,* பெ. (n.) காமம். (அக.நி.); sexual desire.

[பிறவி → பிற + வினை]

பிறவு *pir̠avu,* பெ. (n.) *பிறவி* பார்க்க; see *piravi* பிறவினோடிறவுமானான் (தேவா.447,1)

[பிற → பிறவி → பிறவு]

பிறழ்-தல் *pir̠aḻ-,* 4 செ.கு.வி. (.v.i.) **1.** மாறுதல்; to vary, change in form, aspect, colour or quality. '*சிறுகா பெருகா முறை பிறழ்ந்து வாரா*' (நாலடி,110.) **2.** முறைகெடுதல்; to be irregular, misplaced, out of order. '*களிற்றுகிர்ப் பிறழ்பற்பேய்கள்*' (சீவக.804.). **3.** வாக்கு மாறுதல் (கொ.வ.); to break one's word. **4.** மாறுபட்டுக் கிடத்தல்; to lie in disorder. '*மயிலெருத்துறழணிமணி நிலத்துப் பிறழ*' (கலித்.103.) **5.** துள்ளுதல்; to flop, leap, as, fish. '*வயலாரல் பிறழ்நவும்*' (பதிற்றுப்.13.1.)

6. புடைபெயர்தல்; to move *'மாணெழி லுண்கண் பிறழுங் கயலாக'* (கலித்.98.). 7. பெயர்தல் (அக.நி.); to be dislodged, dislocated. 8. விளங்குதல்; to shine, glitter, to twinkle, *'ஒளி பிறழு நெடுஞ்சடை'* (கல்லா.54,11.) 9. முரிதல்; to break, as waves into foam. *'திரை பிறழிய விரும் பெளவத்து'* (பொருந.178.) 10. திகைத்தல்; to be perplexed *'பிறங்க லிடையிடைப் புக்குப் பிறழ்ந்து'* (பரிபா.19,59.) 11. நடுங்குதல் (சூடா.); to tremble; to be tremulous 12. இறந்துபடுதல்; to die. *'பிணிபுநீ விடல்சூழிற் பிறழ்தரு மிவளென்'* (கலித்.3.)

[புள் → புரு → புரள். புரள்தல் = சொல்மாறுதல். புரள் → புரளி = மெய்ம் மாற்று, பொய். புரள் → புரட்டு → புரட்டன். புரள் → புரட்சி. புரள் → பிறள் (மு.தா.234.). பிறள் → பிறழ்–,]

பிறழ்ச்சி *piṟalcci,* பெ. (n.) 1. மாறுகை; change, variation, alteration in form or quality. 2. ஒழுங்கின்மை; disarrangement, irregularity, disorder. 3. வாக்கு மாறுகை; breaking of a promise. 4. புடைபெயர்ச்சி; movement; 5. விளங்குகை; sheen, glitter. 6. நடுக்கம்; shivering, quaking, trembling.

[புரள் → பிரள் → பிறள் → பிறழ் → பிறழ்ச்சி. 'சி' தொ.பெ.ஈறு]

பிறழ்வு *piṟalvu,* பெ. (n.) *பிறழ்ச்சி* பார்க்க; see *piṟalcci.*

[பிறழ் → பிறழ்வு. 'வு' தொ.பெ.ஈறு]

பிறள் *piṟal,* பெ. (n.) மற்றவள்; another women, some other woman *'பிறள் குணமிவை'* (தொல்.பொ.234.).

[பிள் → பிற → பிறம் → பிறன். பிறன் (ஆ.பா.)– பிறள் (பெ.பா.). 'ள்' பெ.பா,ஈறு]

பிறளி *piṟali,* பெ. (n.) நோய்வகை (மாட்டுவா.); disease.

[புரள் → பிரள் → பிறளி]

பிறளியெண்ணெய் *piṟaḷi-y-eṇṇey,* பெ. (n.) குழந்தைகட்குக் கொடுக்கும் மலம்நீக்கி (விரேசன) மருந்தெண்ணெய் வகை (கொ.வ.); a medicinal oil used as purgative for children.

[பிறளி + எண்ணெய்.]

பிறன் *piṟaṉ,* பெ. (n.) 1. மற்றையான்; another man, some other man. *'பிறன் கடை நின்றாரிற் பேதையாரில்'* (குறள், 142.) 2. புதியவன்; stranger, alien. 3. அயலான் (வின்.); neighbour. 4. மனம் வேறுபட்டவன்; estranged person. *'பிறன் பெண்டிர்'* (கலித்.84.) 5. பகைஞன்; enemy *'பிறர் அகன்றலை நாடே'* (புறநா.7.).

[பின் → பிற → பிறிது → பிற → பிறகு = வேறு. பிறகு → பிறக்கு = வேறாக. பிறம் → பிறன் = வேறொருவன், மற்றவன் அயலான். 'ன்' ஆ.பா.ஈறு]

பிறன்கோட்கூறல் *piṟaṉ-kōṭ-kūṟal,* பெ. (n.) முப்பத்திரண்டு உத்திகளுள்பிறன்கொள் கையைக் கூறும் உத்தி (நன்.15); (gram.) quoting the opinion of another, one of 32 utti, q.v.

[பிறன் + கோள் + கூறல். 'அல்' தொ.பெ.ஈறு]

பிறன்பொருளாள் *piṟaṉ-poruḷāḷ,* பெ. (n.) பிறன்மனைவி; wife of another, considered

his property. *'பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை'* (குறள்,141.)

[பிறன் + பொருளாள். பொருள் + ஆள். *]*

பிறன்மனை *piṟaṉ-maṉai,* பெ. (n.) **1.** அயலான் வீடு; another's house **2.** அயலான் மனைவி; another's wife *'பிறன்மனை நோக்காத பேராண்மை'* (குறள்,148.)

[பிறன் + மனை. *]*

பிறனில் *piṟaṉ-il,* பெ. (n.) *பிறன்மனை* பார்க்க; see *piṟaṉmaṉai. 'பிறனில் புகல்'* (குறள்,144.) *'பிறனில் விழையாமை'* (குறள்,அதி.15.).

[பிறன் + இல். 'இல், மனை ஒருபொருட் பன்மொழி. வீட்டைக் குறிக்கும் இவ்விரு சொற்களும் வீட்டிலிருப்பவள் என்னும் அடிப்படையில் மனைவியைக் குறித் துள்ளது. மேலும் இச்சொற்கள் இல்லவள், இல்லாள், இல்லக்கிழத்தி, மனையாள், மனைக்கிழத்தி, மனையாட்டி, மனையோள் என்பன போன்று இதே பொருளில் வரும் பல சொற்களுக்கு அடிப்படையாய் இருக்கின்றன. *]*

பிறாக்காண்டம் *piṟākkāṇḍam,* பெ. (n.) சரகாண்ட செய்ந்நஞ்சு (பாஷாணம்) (யாழ்.அக.); a natural arsenic.

பிறாண்டு¹–தல் *piṟāṇḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) உகிர் (நகம்) முதலியவற்றால் கீறுதல்; to scratch, as with nails. பூனை வாலை இழுக்காதே அது பிறாண்டிவிடும் (உ.வ.).

[புள் → பொள் → பொளி. பொளித்தல் = கிழித்தல். புள் → (புறு) → பூறு → பீறு. பீறுதல் = நகத்தால் கீறுதல் (மு.தா.256.). புள் → (புறு) → பிறு → பிறாண்டு. *]*

பிறாண்டு² *piṟāṇḍu,* வி.அ. (adv.) பிற இடம்; elsewhere. தலைவன் ஆண்டும் பிறாண்டும் கூறுங்கூற்றும் (தொல்.பொ.41)

[பிற + ஆண்டு. 'ஆ' சேய்மைச் சுட்டு. *]*

பிறாண்டு³ *piṟāṇḍu,* பெ. (n.) கீறல், கீறுதடம், கீறுகோடு, உகிர்(நக)க்கீறு; scratch. *'ருஷபங்கள் காற்பிறாண்டு கொள்ளுதல்'* (திருவிருத். 7, அரும். பக். 61.).

[புள் → (புறு) → பிறு → பிறாண்டு.]

பிறாமுட்டி *piṟāmuṭṭi,* பெ. (n.) **1.** சாயவேர் (மலை.); Indian madder. **2.** சிற்றாமுட்டி (சங்.அக.); sticky mallow **3.** மயிர்மாணிக்கம் (சங்.அக.); sickle-leaf.

பிறால்சவ்வு *piṟāl šavvu,* பெ. (n.) மீனிறைச்சியின் இயற்கைப் பாளம்; flakes.

[பிறால் + சவ்வு.]

பிறாழாடம் *piṟāḻāḍam,* பெ. (n.) மூன்றெழுத்தி லொன்றாகிய சவ்வு; one of the three mystic letter named 'savvu'.

பிறி¹–தல் *piṟi-,* 4 செ.கு.வி., (v.i.) *பிரி¹–தல்* பார்க்க; see *piri-¹ 'பிறவிலாத வைந்தொழில்'* (காஞ்சிப்பு. இருபத், 185.).

[புள் → பிள் → பிரி → பிறி.]

பிறி²–த்தல் *piṟi-,* 11 செ.குன்றாவி. (v.t.) *பிரி²–தல்* பார்க்க; see *piri²–.*

[புள் → பிள் → பிரி → பிறி.]

பிறிகதிர்ப்படு—தல் *piṟi-kadir-p-paḍu,* 20 செ.கு.வி. (v.i.) 1. கெடுதல்; to be scattered; to be damaged. *'அவற்றில் ஒன்றும் பிறிகதிர்ப் படாதபடி'* (ஈடு. 1, 9,4.) 2. விட்டு நீங்குதல்; to be separated, excluded, lost. *'நித்திய சூரிகள் திரன் னின்றும் பிறிகதிர்ப் பட்டுப் போந்தார்'* (திவ். திருநெடுந். 20, வ்யா. 157.).

[பிரிகதிர்ப்படுதல் → பிறிகதிர்ப்படுதல். பிரிகதிர்ப்படு—தல் பார்க்க.]

பிறிதாகி *piṟidāgi,* பெ. (n.) 1. பெருநன்னாரி; bigger variety of sarasaparilla. 2. மாகாளி; the root of a twiner.

பிறிதின்கிழமை *piṟidiṉ,-kiḻamai,* பெ. (n.) ஒரு பொருளுக்கும் அதன் உருப்பாகாத (அங்கமாகாத) பிற பொருளுக்கும் உள்ள வேறுபாட்டுத் தொடர்பு; separable relation of a possessor and the thing possessed when the latter is not a limb or part of the former. *'தற்கிழமையும் பிறிதின் கிழமையும்'* (நன். 300.).

[பிறி → பிறிதின் + கிழமை.]

பிறிதினவிற்சி *piṟidiṉaviṟci,* பெ. (n.) கருதிய பொருளை அதற்குரிய நேர் வகையாற் கூறாது மற்றொருவகையாற் கூறும் அணிவகை (அணியி. 29.); (rhet.) figure of speech by which an idea is expressed not directly but in an indirect or roundabout way describing the consequences, involved.

[பிறிதின் + நவிற்சி.]

பிறிதினியைபுநீக்கியவிசேடணம் *piṟidiṉi-yaibu-nīkkiya-višēḍaṇam,* பெ. (n.) (இலக்.) சிறப்பு (விசேடியம்)தன்னினத்துப் பிற பொருளைக் குறிக்காது தடுக்கும் சிறப்புத்தன்மை (சீவக. 7, உரை); (gram.) restrictive epithet.

[பிறிதின் + இயைபு + நீக்கிய + விசேடணம். பிறி → பிறிதின். நீக்கு → நீக்கு → நீக்கிய .]

Skt. viṣēḍaṇa > த. விசேடணம்.

பிறிது *piṟidu,* பெ. (n.) வேறானது; other thing. *'தம்மொடு செல்வது பற்றியாங் கணும் தேரிற் பிறிதில்லை'* (நாலடி, 120.).

க. பெரது.

[பின் = திரும்ப, வேறு. பின்னொன்று = வேறொன்று. பின் → பிற → பிறகு = வேறு. பின → பிற → பிறிது = வேறானது. (மு.தா. 294.) 'து' ஒ.பா.ஈறு.]

பிறிதுசாபம் *piṟidu-šābam,* பெ. (n.) சாவமாற்று; release from a curse. *'கொண்டல் வாகனனுக் கன்பிற் கொடுத்தனன் பிறதுசாபம்'* (திருவாலவா. 1, 22.).

[பிறிது + சாபம். சாவித்தல் = கடுமையாகத் திட்டுதல். சாவி → சாவம் → சாபம்.]

பிறிதுபடுபாட்டு *piṟidu-paḍu-pāṭṭu,* பெ. (n.) ஒரு செய்யுளைத் தொடையும் அடியும் வேறுபட உரைத்தால் சொல்லும் பொருளும் வேறுபடாமற் பிறிதொருவகைச் செய்யுளாய் முடியும் மிறைக்கவி (மாறன. 291.); (rhet.) a stanza of particular metre so constructed as to be capable of being scanned into a stanza of different metre.

[பிறிது + படு + பாட்டு. பாடு → பாட்டு.]

பிறிதுபடுமொழி *piṟidu-paḍu-moḻi,* பெ. (n.) செய்யுட் குற்றத்தொன்று (யாப்.வி. 525.); (poet.) a defect in versification.

[பிறிது + படு + மொழி.]

பிறிதுமொழிதல் *piṟidu-moḻidal,* பெ. (n.) கருதிய பொருளை மறைத்து அதனைப் புலப்படுத்தற்கு அதுபோன்ற பிறிதொன்றனைக் கூறும் அணி (தண்டி. 51.); (rhet.) figure of speech in which the idea of a subject-matter is sought to be conveyed suggestively by the description of another subject-matter resembling it.

எ-டு: பீலிபெய்சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சாலமிகுத்துப்பெயின்

[பிறிது + மொழிதல். 'தல்' தொ.பெ.ஈறு.]

பிறிதுவிதி *piṟidu-vidi,* பெ. (n.) சிறப்பு விதி (வின்.); rule of exception, special rule.

[பிறிது + விதி. பிறிது = வேறானது, சிறப்பானது.]

Skt. vidhi > **த.** விதி.

பிறிதேகியம் *piṟitēgiyam,* பெ. (n.) பொன்முசுட்டை; a twiner.

பிறியகம் *piṟiyagam,* பெ. (n.) **1.** கடம்பு (மலை.); seaside Indian oak. **2.** ஞாழல்; peacock's crest. **3.** வேங்கை; East Indian kino.

பிறியம் *piṟiyam,* பெ. (n.) *பிரியம்* (யாழ்.அக.) பார்க்க; see *piriyam.*

[பிரியம் → பிறியம்.]

பிறியாநங்கை *piṟiyā-naṅgai,* பெ. (n.) வேப்பிலை நங்கை; a plant.

பிறியோலை *piṟi-y-ōlai,* பெ. (n.) இடையர் ஆடுகளைப் பிரித்தற்குதவும் ஓலைத்தட்டி (திணைமாலை. 113.); palm-leaf screen set between flocks of various shepherds.

[பிறி + ஓலை.]

பிறிவு *piṟivu,* பெ. (n.) *பிரிவு* பார்க்க; see *pirivu. 'பிறிவினை யறியா நிழலது போல'* (திருவாச. 4, 78.).

[பிரிவு → பிறிவு. 'வு' தொ.பெ.ஈறு.]

பிறுதானிகா *piṟudāṉikā,* பெ. (n.) கருங்கொடி; a kind of running plant that yields berries.

பிறுந்தம் *piṟundam,* பெ. (n.) வெற்றிலை வகை; one of the two chief varieties of betel.

பிறுமிநாசி *piṟumināśi,* பெ. (n.) தாமரைக் கிழங்கு; lotus root.

பிறை *piṟai,* பெ. (n.) **1.** இளந்திங்கள் (இளஞ் சந்திரன்); crescent moon, waxing moon *'பிறைமதி'* (குறை, 782.) **2.** பிறைவடிவமான மகளிர் தலையணிவகை ; a crescent shaped ornament, worn by women on the head. *'தண்ணம் பிறையும் தலை பெற நிறுத்துக'* (கல்லா. 14.) **3.** பிறைக்கை பார்க்க; see piṟaikkai (nāṭya.) **4.** ஞு, ஞூ, பூ முதலிய தமிழ் வடிவெழுத்துக்களின் கீழ்ப்பகுதி யாயுள்ள பிறைபோன்ற குறி; a crescent like loop forming part of certain Tamil letters.

மறுவ. வளர்பிறை,

ம. பிற; **க.** பெரெ; **கோத.** பெர்

[புள் → புரு → புருவம் = வளைந்த கண் பட்டை. புரு → புரி. புரிதல் = வளைதல். புரு → (புறு) → புறை → பிறை = வளைந்த நிலா (மு.தா. 228) பிறை = வளைந்த நிலா, பிறை போன்ற தோற்றமுடைய தலையணி, அது போன்றுள்ள எழுத்துகளின் கீழ் வளைவு.]

பிறைக்கபாடம் *pirai-k-kabāḍam,* பெ. (n.) உள்ளுறைச் சவ்வாலான நெஞ்சுப்பை (இதயம்)யின் முன் மடிப்பு; semilunar valve of the heart made of three cusps.

[பிறை + கபாடம்.]

Skt. kapāṭa > **த.** கபாடம்.

பிறைக்காய்ச்சல் *pirai-k-kāyccal,* பெ. (n.) திங்களுக்கொரு முறை வரும் காய்ச்சல் நோய் (கொ.வ.); intermittent fever occurring at monthly intervals.

[பிறை + காய்ச்சல். காய் → காய்ச்சு → காய்ச்சல். 'அல்' தொ.பெ.ஈறு. திங்களுக் கொருமுறை வரும் பிறைபோல திங்களுக் கொருமுறை வரும் காய்ச்சல் பிறைக்காய்ச்சல் எனப்பட்டது.]

பிறைக்கீறு *pirai-k-kīru,* பெ. (n.) *பிறைநிலா* (வின்.) பார்க்க; see *pirai nilā.*

[பிறை + கீறு. குள் → குறு → கிறு → கிறுக்கு. கிறுக்குதல் = கீறி வரைதல். கிறு → கீறு = வரி, கோடு. சிறு வரியைப் போல் காணப்படும் பிறை' பிறைக்கீறு எனப்பட்டது.]

பிறைக்குறி *pirai-k-kuri,* பெ. (n.) *பிறைக்கோடு*[1] பார்க்க; see *pirai-k-kōḍu*[1]. இணையான ஆங்கிலச்சொல்லைப் பிறைக் குறிக்குள் எழுது (உ.வ.).

[பிறை + குறி.]

பிறைக்கை *pirai-k-kai,* பெ. (n.) பெருவிரல் நீங்கிய விரல் நான்கும் ஒட்டி வளையப் பெருவிரலை மட்டும் விலக வைக்கும் இணையாவினைக்கை (சிலப். 3, 18, உரை.); (nātya.) a gesture in dancing keeping the four fingers curved and close together and the thumb separated from them and outstretched.

[பிறை + கை.]

பிறைக்கொழுந்து *pirai-k-kolundu,* பெ. (n.) இளம் பிறை; crescent *'நெடுஞ்சடைக் கிடந்த குறும்பிறைக் கொழுந்தும்'* (கல்லா. 15, 23.).

[பிறை + கொழுந்து.]

பிறைக்கோடு[1] *pirai-k-kōḍu,* பெ. (n.) எழுதும் பொழுது ஒன்றைப் பற்றிய குறிப்பான செய்தியை அதற்கு முன்னரோ அதற்குப் பின்னரோ தெரிவிக்கும் போது கொடுக்கும் இரு பக்கமும் மூடுதலாக அமையும் குறி; bracket.

[பிறை + கோடு.]

பிறைக்கோடு[2] *pirai-k-kōḍu,* பெ. (n.) பிறையின் நுனி; cusp of the crescent moon.

[பிறை + கோடு. குள் → கொள் → கோள் → கோண். கோணுதல் = சாய்தல். கோண் → கோடு. கோடுதல் = சாய்தல். வளைந்த பிறையின் நுனி பிறைக்கோடு எனப்பட்டது.]

பிறைச்சந்திரன் *pirai-c-candiran,* பெ. (n.) *பிறைநிலா* (கொ.வ.) பார்க்க; see *pirai-nilā.*

[பிறை + சந்திரன்.]

Skt. candra > **த.** சந்திரன்.

பிறைச்சவ்வு *piṟai-c-cavvu,* பெ. (n.) கண்ணிமைத் திரை; hymen.

[பிறை + சவ்வு.]

பிறைச்சிந்தாக்கு *piṟai-c-cindākku,* பெ. (n.) கழுத்தணி வகை (யாழ்ப்.); a kind of neck ornament.

[பிறை + சிந்தாக்கு. சிந்தாக்கு = அட்டிகை வகை.]

பிறைசூடி *piṟai-šūḍi,* பெ. (n.) சிவபெருமான்; (பிறையைத் தலையில் அணிபவன்); Šivaṉ, as wearing the crescent. *'பித்தா பிறைசூடி'* (தேவா. 100, 1.).

[பிறை + சூடி. சூடு → சூடி. சூடுதல் = தலையில் அல்லது கொண்டையில் அணிதல். 'இ' வினைமுதலீறு]

பிறைத்தலையம்பு *piṟai-t-talai-y-ambu,* பெ. (n.) பிறை வடிவத்தில் நுனியுடைய அம்பு; arrow with crescent-shaped head. *'பிறத் தலையம் பிற் சென்னி பெருநிலத் திடுவல்'* (சீவக. 1142.).

மறுவ. வாளி

[பிறை + தலை + அம்பு.]

பிறைதொழு–தல் *piṟai-toḻu-,* 1 செ.கு.வி. (v.i.) பிறை நிலாவை (சந்திரனை) வணங்குதல்; to worship the crescent moon. *'பிறை தொழுகென்றல்'* (திருக்கோ. 67.).

[பிறை + தொழு–,]

பிறைநாடி *piṟaināḍi,* பெ. (n.) அல்குல் வாயினிற் படிந்திருக்கும் மென்றோல்; nymphae, labia.

[பிறை + நாடி.]

பிறைநிலா *piṟai nilā,* பெ. (n.) மூன்றாம் பிறை; crescent moon, appearing on the third day after the new moon.

[பிறை + நிலா.]



பிறைப்பூண் *piṟai-p-pūṇ,* பெ. (n.) பிறைவடம் பார்க்க; see piṟai-vaḍam. *'பிறைப் பூணகாத்து பெருமகன்'* (பெருங். வத்தவ. 10, 25.).

[பிறை + பூண்.]

பிறைமலர் *piṟai-malar,* பெ. (n.) அகத்தி (சங்.அக.); West Indian pea-tree.

[பிறை + மலர்.]

பிறைமுகப்பணி *piṟai-muga-p-paṇi,* பெ. (n.) பிறைமுகம் போல அமைத்த அணி (திவ். பெரியாழ். 1, 5, 10 வ்யா. பக். 111.); an ornament.

[பிறை + முகப்பு + அணி. முகம் → முகப்பு.]

பிறைமுகவாளி *piṟai-muga-vāḷi,* பெ. (n.) *பிறைத்தலையம்பு* (சங்.அக.) பார்க்க; see *piṟai-t-talai-y-ambu.*

[பிறை + முகம் + வாளி.]

பிறையம்பு *piṟai-y-ambu,* பெ. (n.) *பிறைத் தலையம்பு* பார்க்க; see *pira-t-talaiyambu* *'பிறையம்பினெய்தான்'* (சீவக. 2320.).

[பிறை + அம்பு.]

பிறையிரும்பு *piṟai-y-irumbu,* பெ. (n.) அரிவாள்; sickle, as crescent shaped. *'தேய்பிறை யிரும்புதம் வலக்கை சேர்த்தினார்'* (சீவக. 55.).

[பிறை + இரும்பு.]



பிறைவடம் *piṟai-vaḍam,* பெ. (n.) திங்கள் மாலை (சந்திரஹாரம்); necklace of crescent shaped pendants. *'பிறைவடஞ் சூடி'* (சீவக. 171.).

[பிறை + வடம்.]

பிறைவடிவு *piṟai-vaḍivu,* பெ. (n.) வளை வுருவம் (வின்.); crescent form, arch,

[பிறை + வடிவு.]

பிறைவளை *piṟaivaḷai,* பெ. (n.) அரைவட்டம்; semicircular.

[பிறை + வளை. வள் → வளை.]

பிறைவாய்வாளி *piṟai-vāy-vāḷi,* பெ. (n.) *பிறைத்தலையம்பு* பார்க்க; see *piṟai-t-talai-y-ambu. 'பிறைவாய் வாளி நிறையுற வாங்கி விட்டான்'* (கம்பரா. இந்திரசித்துவதை. 57.).

[பிறை + வாய் + வாளி.]

பிறைவாயம்பு *piṟai-vāy-ambu,* பெ. (n.) *பிறைத்தலையம்பு* (சங்.அக.) பார்க்க; see *piṟai-t-talaiyambu.*

[பிறை + வாய் + அம்பு. உர் → அர் → அரம் → அரம்ப → அரம்பன். அரம்பு → அம்பு.]

பிறோகி *piṟōgi,* பெ. (n.) *பிறரோகி* (சங்.அக.) பார்க்க; see *piṟarōgi.*

[பிரரோகி → பிறோகி.]

பிறோசனம் *piṟōšaṉam,* பெ. (n.) புரசு (சங்.அக.); palas tree.

பிறோனிதம் *piṟōṉidam,* பெ. (n.) உப்புவகையுள் ளொன்று; a kind of salt.

பின்[1] *piṉ,* பெ. (n.) *பின்னல் 1* பார்க்க; see *piṉṉal 1 'பின்னொடு முடித்த மண்ணாமுச்சி'* (அகநா. 73.).

[புல் → (புல்) → பில் → பின்.]

பின்² *piṉ,* பெ. (n.) **1.** பின்பக்கம்; back, rear part *'கூந்தல் குலைந்து பின்வீழ'* (மணிமே. **8, 36.**) **2.** இடம் (பிங்.); place. **3.** கடை (பிங்.); end as in place or time **4.** பிந்தின காலம்; that which is subsequent on time. **5.** தம்பி (திவா.); younger brother.

[இன் → இனி = இனிமேல், பின்பு. இன் → இன்னும் = இதற்கு மேலும். இன் → பின்.]

பின்³ *piṉ,* கு.வி.எ. (adv.) பிறகு; after, afterwards, subsquently. *'பின்னாவதென்று பிடித்திரா'* (நாலடி, **5.**)

ம., கோத., துட. பின்; க. பின், பிம், கிம், கின்;

[இன் → பின்.]

பின்⁴ *piṉ,* இடை (part.) **1.** ஏழாம் வேற்றுமையுருபு (நன். **302.**); a suffix of the locative case. **2.** வினையெச்ச ஈறு களிலொன்று (தொல்.சொல். **231.**); a suffix indicating verbal participle.

[இல் → இன் → பின்.]

பின்கட்டு¹ *piṉ-kaṭṭu,* பெ. (n.) கைகளைப் பின்புறமாகச் சேர்த்துக் கட்டுகை; binding one's arms together at the back. *"திருடனைப் பிடித்துக் கையைப் பின் கட்டாகக் கட்டி நிறுத்தினர்"*

க. திங்கட்டு

[பின் + கட்டு–குள் → கள் → கட்டு]



பின்கட்டு² *piṉkaṭṭu,* பெ. (n.) வீட்டின் பின்புறக் கட்டடம்; rear apartment or back portion of a house. *"நெல் மூட்டைகளைப் பின்கட்டில் அடுக்க வேண்டும்"* (உ.வ.)

[பின் + கட்டு. கள் → கட்டு]

பின்கட்டுமாறுகட்டு–தல் *piṉ-kaṭṭu-māṟu-kaṭṭu-,* **5** செ. குன்றாவி. (v.t.) பின்புறமாகக் கைகளைச் சேர்த்துக் கட்டுதல்; to pinion, bind the arms of a person, of the back (C.G.)

க. திங்கட்டு முரிகட்டு.

[பின்கட்டு + மாறுகட்டு]

பின்கடைவாய்ப்பல் *piṉkaḍaivāy-p-pal,* பெ. (n.) பல்வரிசையில் கோடியில் இருக்கும் பல்; cheek-tooth.

[பின் + கடைவாய் + பல்]

பின்கதவு *piṉ-kadavu,* பெ. (n.) கொல்லைக் கதவு; back door. (C.E.M.)

[பின் → கதவு. கடவு → கதவு. கடவு = கடந்து செல்லும் வழி, வாயில். வீட்டின் பின்புறத்தில் அமைந்த வாயிற் கதவு, பின்கதவு]

பின்கரப்பான் *pinkarappān,* பெ. (n.) தோல்நோய் வகையு ளொன்று; a kind of skin disease.

[பின் + கரப்பான்]

பின்கலை *pinkalai,* பெ. (n.) பத்துவகை நாடியு ளொன்று; one of the ten 'nāḍis'.

பின்காட்டு—தல் *pin-kāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** முதுகுகாட்டுதல்; to turn back, go away, as in displeasure. **2.** தோற்றோடுதல்; to retreat. *'திக்கானை யெட்டும் பின்கட்டிய வாறும்'* (குலோத். கோ. 10.)

மறுவ. புறக்கிடு.

[பின்+காட்டு—,காண் (த.வி.)—காட்டு (பி.வி.). பின் → பிற்கு. பிறம் → பிறவு → பிறகு = முதுகு. பிறகு → பிறக்கு = முதுகு, முதுகு பின்புறமிருப்பதால் பின்மைப் பெயர் முதுகைக் குறித்தற்காயிற்று. பேசி உடன்பாட்டைத் தெரிவிப்பதற்கு நேர் நிற்றல் தேவை. இதற்கு நேர் மாறாக விருப்பமில்லாமல் செல்வது முதுகு தெரியுமாறுச் செல்வதால் பின்காட்டுதல் அதைக் குறித்தற்காயிற்று. போரில் தோற் றோடுவதும் பின் காட்டுவதே]

பின்கால் *pinkāl,* பெ. (n.) *பின்னங்கால்* பார்க்க; see *pinnaṅkāl.*

[பின் + கால்]



பின்குடுமி *pin-kuḍumi,* பெ. (n.) **1.** பின்பக்கமாக முடியுங் குடுமி; tuft of knotted hair at the back of a man's head, dist. fr. mun-kuḍumi. **2.** பின்புறத்துக் கன்றுக் குடுமி; cropped hair behind the tuft.

[பின் + குடுமி. குடு → குடுமி = முடி]

பின்குறிப்பு *pinkurippu,* பெ. (n.) **1.** கடிதத்தில் கையெழுத்திற்குப் பிறகு கவனிக்க வேண்டும் என்ற முறையில் எழுதப்படும் குறிப்பு; post script. பின்குறிப்பு என்று போட்டுக் கட்டாயம் வரவும் என்று எழுதியிருந்தார் (உ.வ.) **2.** (புத்தகம், அறிக்கைபோன்றவற்றின்) முடிவை அடுத்து இணைக்கப்படும் கூடுதல் செய்தி; additional note or notes. பின் குறிப்பாகப் பல செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன (உ.வ.)

[பின் + குறிப்பு]

பின்கூரை *pin-kūrai,* பெ. (n.) வீட்டின் கூரை (வின்.); sloping roof of the back portion of a house.

[பின் + கூரை]

பின்கொக்கி *pin-kokki,* பெ. (n.) கழுத்தணியின் கொக்கி (வின்.); hook of a necklace.

[பின் + கொக்கி]

பின்கொடு—த்தல் *pin-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) *பின்காட்டு—தல் 2* (யாழ்.அக.) பார்க்க; see *pin-kāṭṭu-2.*

[பின் + கொடு—]

பின்கொண்டை *pin-kondai,* பெ. (n.) *பின்குடுமி* (யாழ்.அக.) பார்க்க; see *pin kudumi.*

[பின் + கொண்டை]

பின்கோடி *pinkōdi,* பெ. (n.) பின்னோக்கிய நிலையில் மிகத்தொலைவு; hind most part

[பின் + கோடி. கோடு → கோடி]

பின்சந்ததி *pinšandadi,* பெ. (n.) பின்வரும் குடிவழி; descendant.

[பின் + சந்ததி]

பின்சந்து *pin-šandu,* பெ. (n.) **1.** இடுப்பின் பின்பக்கம்; back of the hips **2.** விலங்கின் இடுப்பு; hinder part or rump of a beast. **3.** தெருவின் பின்சந்து (வின்.); lane at the back of a row of houses in a street.

[பின் + சந்து. உம் → அம் → அந்து → சந்து]

பின்சரம் *pinšaram,* பெ. (n.) மஞ்சள் வண்ணக் கனிப்பொருள்; yellow orpiment.

பின்சரிவு *pin-šarivu,* பெ. (n.) பின்னேரம் (வின்.); afternoon.

[பின் + சரிவு. சரி → சரிவு = ஞாயிற்றின் சரிவு]

பின்சிகை *pin-šigai,* பெ. (n.) *பின்குடுமி, 1* (சங்.அக.) பார்க்க; see *pinkudumi 1.*

[பின் + சிகை]

Skt. šikhā > த. சிகை.

பின்சுரப்பு *pinšurappu,* பெ. (n.) கடைசியாகச் சுரக்கும் பால்; the last millk taken from the teat at any one milking as it is particularly rich in butter as compared fore milk.

[பின் + சுரப்பு. சுர → சுரப்பு]

பின்செல்(லு)–தல் *pin-šel(lu)-* 7, செ. குன்றாவி., செ.கு.வி (v. t.) & (v.i.) **1.** பின்தொடர்தல்; to follow obsequiously. *'தொழுதுண்டு பின்செல்பவர்'* (குறள், **1033.**) **2.** இணங்கி யொழுகுதல்; to conform to, **3.** வழிபடுதல்; to obey, submit, **4.** கெஞ்சுதல் (வின்.); to entreat, supplicate cringe.

[பின் + செல்–,]

பின்செல்லியர் *pinšelliyar,* பெ. (n.) பின்பற்று பவர், பின்பற்றி நடப்பவர்; follower. *"இன்று உலகெங்கும் பரவியுள்ள கிறித்துவ மதம் பன்னிரு பின்செல்லியரால் பரப்பப்பட்டதே".*

[பின் + செல்லியர்]

பின்தங்கியவகுப்பு *pintangiya-vaguppu,* பெ. (n.) பிற்படுத்தப்பட்ட வகுப்பு பார்க்க; see pirpadutta-p-patta-vaguppu.

[பின் + தங்கிய + வகுப்பு. வகு → வகுப்பு]

பின்தங்கு–தல் *pintangu-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** (கல்வி, பொருளியல் போன்றவற்றில்) நிறைவானது என்று கருதத்தகுந்த நிலையை எட்டமுடியாமலிருத்தல்; to lag behind. பொருளியலில் பின்தங்கிய மாவட்டங்களுக்குத் தனிக்கவனம் செலுத்த வேண்டும் (உ.வ.) **2.** (விளையாட்டில்) ஓர்அணி) தோல்விகாணும் நிலையில் இருத்தல்; to trail as in sports. "இடைவேளை வரை 2–3 என்ற கணக்கில் பின்தங்கியிருந்த அணி பிறகு வெற்றிபெற்று விட்டது". (உ.வ.)

து. பிரபூருனி.

[பின் + தங்கு–,]

பின்தட்டு *pin-tattu,* பெ. (n.) **1.** தோணியின் பின் பக்கம் **(வின்.)**; stern of a dhoney. **2.** தோணியின் பின்புறத்துக் குறுக்குக் கட்டை **(வின்.)**; short beam across the stern of dhoney. **3.** குதிரையின் பின்கட்டுவார் **(வின்.)**; back strap of a harness.

[பின் + தட்டு]

பின்தலை *pin-talai,* பெ. (n.) *பின்தட்டு, 1.* பார்க்க, **(வின்.)**; see *pin-tattu 1.*

[பின் + தலை]

பின்தளை *pin-talai,* பெ. (n.) பால்கறக்கும் போது மாட்டின் பின்னங்காலுக்கு இடும் கட்டு **(வின்.)**; strap for the hind legs of a cow when milking.

[பின் + தளை]



பின்தாங்கி *pin-tāngi,* பெ. (n.) சக்கரம் கழலாமைக்காக இடும் வளையம் **(வின்.)**; ring on the inside, holding a wheel in position.

[பின் + தாங்கி. தாங்கு → தாங்கி]

பின்திரும்பு—தல் *pin-tirumbu-,* **5.** செ.கு.வி. (v.i.) பின்பக்கமாகத் திரும்புதல், திரும்பிவருதல்; to turn back, to return. **து.** பிரபிசியுனி

[பின் + திரும்பு. திரு → திரும்பு]

பின்துடரி *pintudari,* பெ. (n.) பூண்டு வகை; a kind of plant.

பின்தொடர்—தல் *pintodar-,* **2** செ. குன்றாவி. (v.t.) *பின்றொடர்—தல்* பார்க்க; see *pinrodar-,* காவலர்கள் குற்றவாளியைப் பின்தொடர்ந்து பிடித்தனர் **(உ.வ.)**.

[பின் + தொடர்—,]

பின்பக்கம் *pin-pakkam,* பெ. (n.) **1.** பின்புறம்; back, rear. **2.** தேய்பிறை நாட்கள்; dark fort-night. **3.** பிற்பகுதி; later part, later stage.

[பின் + பக்கம்]

பின்பகல் *pin-pagal,* பெ. (n.) **1.** பகலின் பிற்பகுதி; afternoon. *'பின்பகலே யன்றியும் பேணா ரகநாட்டு நன்பகலும் கூகை நகும்'* **(பு. வெ. 3, 4.)**. **2.** அந்தி வேளை; evening. *'நன்பகல வணீத்தும் பின்பகற் பிறர்த்தேரும்'* **(கலித். 74.)** **3.** இரவு; night. **(இலக். வி. 606, உரை).**

[பின் + பகல். பகு → பகல்]

பின்பற்று—தல் *pin-parru-,* **5** செ.குன்றாவி. (v.t.) **1.** பின் செல்லுதல்; to follow. *'எமக்கிடு மெமக்கிடும் எனப் பின்பற்றியே'* **(திருவிளை. வளையல். 28.)**. **2.** பிரியப்படுதல்; to set one's heart on, love. *'அன்பற்றவரைப் பின்பற்றுவாருளரோ'* **(வெங்கைக்கோ.216.)**. **3.** போல செய்தல் **(அனுசரித்தல்.)**; to imitate, emulate. **4.** இணங்குதல்; to conform to.

[பின் + பற்று—,]

பின்பனி *piṉ-paṉi,* பெ. (n.) அறுவகைப் பருவங்களுள் இரவின் பிற்பகுதியில் பனி மிகுதியுடைய கும்பம், மீனம் (மாசி, பங்குனி) மாதங்கள் (தொல். பொ. 10.); the months māsi, and paṅguṉi, being the season in which dew falls during the latter part of the night, one of six paruvam, q.v. *'பின்பனி தானு முரித்தென மொழிப'* (தொல். பொ. 10.).

[பின் + பனி]

பின்பனிப்பருவம் *piṉ-paṉi-p-paruvam,* பெ. (n.) *பின்பனி* பார்க்க; see *piṉpaṉi.*

[பின்பனி + பருவம்]

பின்பாட்டு *piṉpāṭṭu* பெ. (n.) **1.** (பாடகருக்குப்) பின்னால் இருந்து உடன் பாடும் பாட்டு; vocal support to a singer. மேடையில் பாடகருக்குப் பின்னால் பின்பாட்டு பாடுபவர் அமர்ந்திருப்பார் (உ.வ.). **2.** (கலைஞருக்கு ஏற்ப)பின்புறம் இருந்து பாடும்பாட்டு; vocal accompaniment (to a performer) பின்பாட்டுப் பாடகர் அதிகம் பணம் கேட்கிறார் (உ.வ.) **3.** ஒருவன் சொன்னதையே பின்பற்றுகை (இ.வ.); servile imitation அரசியலில் பின்பாட்டு மிகுதி.

[பின் + பாட்டு. பாடு → பாட்டு]

பின்பிறந்தாள் *piṉ-piṟandāḷ,* பெ. (n.) **1.** தங்கை (கொ.வ.); sister. **2.** திருமகள் (இலக்குமி.) (சங்.அக.); Laksmi.

[பின் + பிறந்தாள். பிள் → பிற → பிறந்தாள். பின்பிறந்தாள் = தனக்குப் பின்னர்ப் பிறந்தாள், மூத்தாளுக்கு (மூதேவிக்கு)ப் பின் பிறந்தாள்]

பின்பிறந்தான் *piṉ-piṟandāṉ,* பெ. (n.) தம்பி; younger brother. *'எம்பெருமான் பின் பிறந்தாரிழைப்பரோ பிழைப்பென்றான்'* (கம்பரா. குகப். 30.).

[பின் + பிறந்தான். பிள் → பிற → பிறந்தான். 'ன்' ஆ.பா.ஈறு]

பின்பு[1] *piṉbu,* பெ. (n.) பின்னானது; that which is posterior in place or time. *'முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்'* (திருவாச. 22, 2.)

[பின் → பின்பு. 'பு' சொ.ஆ.ஈறு.]

பின்பு[2] *piṉbu,* கு.வி.எ. (adv.) பிறகு; after, afterwards, subsequently.

[பின் → பின்பு. 'பு' சொ.ஆ.ஈறு.]

பின்புத்தி *piṉ-putti,* பெ. (n.) **1.** அறிவுக் குறை (புத்தியீனம்); want of foresight, imprudence, indiscretion. பெண்புத்தி பின்புத்தி (பழ.) **2.** பின் எண்ணம் (பின்யோசனை); afterthought, doing things in haste and repenting at leisure.

து. பிரபுத்தி

[பின் + புத்தி 'எண்ணித்துணிக கருமம்' (குறள்.) அவ்வாறு இல்லாமல் செயலைச் செய்வதற்கு முன் அதன் விளைவுகளைப் பற்றி ஆராயாமல் செய்துவிட்டு பின்னர் வருந்துவது பின்புத்தி.]

பின்புறணி *piṉ-puṟaṇi,* பெ. (n.) கோள்; slander, speaking ill of a person in his absence.

[பின் + புறணி. பிறம் → புறம் → புறன். பிறக்கடை = வீட்டின் பின்பக்கம். புறங் கூறுதல் = பின்னாற் பழித்தல். புறன் → (புரனி) → புறணி = புறங் கூற்று (மு.தா. 294.)]

பின்புறம் *pin-puram,* பெ. (n.) பிற்பக்கம்; hind part, rear. வீட்டின் பின்புறம் தோட்டம் இருப்பது நல்லது (உ.வ.).

[பின் + புறம். பின் → பின → பிற → பிறிது. பிற → பிறகு = வேறு. பிறம் → புறம்]

பின்போக்கு *pin-pōkku,* பெ. (n.) 1. தொடர்ச்சி; uninterrupted succession, chain. *'பின்போக் கல்லது பொன்றக் கெடாதாய்'* (மணிமே.30,38.). **2.** வலியிழந்தநிலை; down fall, as of a people. **3.** அறிவு, குணம் முதலியவற்றிற் பிந்துகை; retrogresson; backward state; detrioration, as of one's abilities. **4.** முன்னேற்றங் குறியாது பழைய முறையிற் போகை; reaction. ஒற்றுமையைக்குலைக்கும் பின்போக்குச் செயல்களை மக்கள் எதிர்க்க வேண்டும்.

[பின் + போக்கு. போ → போக்கு]

பின்போடு—தல் *pin-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) காலந்தாழ்த்தல்; to put off, postpone, defer.

மறுவ. தள்ளிப்போடு—,

[பின் + போடு—,]

பின்மழை *pin-malai,* பெ. (n.) *பின்மாரி* பார்க்க; see *pinmāri.*

[பின் + மழை]

பின்மாரி *pin-māri,* பெ. (n.) **1.** காலந்தவறின மழை; belated rain-fall; **2.** மாரிக்காலத்தின் பிற்பகுதியிற் பெய்யும் மழை; rain during the latter part of the rainy season.

[பின் + மாரி]

பின்மாலை[1] *pin-mālai,* பெ. (n.) வைகறை; dawn. ***'பின் மாலையே திருவிளக்கேற்றி வைத்துத் தயிர் கடைவார்கள்'*** (ஈடு, **1, 3, 1,** ஜீ.)

[பின் + மாலை]

பின்மாலை[2] *pinmālai,* கு.வி.எ. (adv.) விடியற் காலையில்; in the early morning.

[பின் + மாலை]

பின்முடுகுவெண்பா *pin-muḍugu-veṇbā,* பெ. (n.) பின்னிரண்டடிகள் முடுகிச் செல்லும் வெண்பா வகை; (pros.) a kind of veṇbā verse which has a quick flowing rhythm in the last two lines.

[பின் + முடுகு + வெண்பா]

பின்முதுகு *pin-mudugu,* பெ. (n.) நெஞ்சு நோய்வகை; croup (M.L.).

[பின் + முதுகு]

பின்முரண் *pin-muraṇ,* பெ. (n.) இரண்டாஞ்சீரும் நான்காஞ்சீரும் மறுதலைப்பட வருந் தொடை (காரிகை, ஒழிபி, **5,** உரை.); (pros.) the meterials peculiarity in which words having opposite meanings occur in the second and fourth feet of a line of verse.

[பின் + முரண்]

பின்மூலம் *pin-mūlam,* பெ. (n.) சிற்றாமுட்டி (சங்.அக.); sticky mallow.



பின்மொழிநிலையல் *pin-moli-nilaiyal,* பெ. (n.) *'அடைகடல்'* என்ற தொடரிற்போல முதன் மொழியிற் பொருள் சிறந்து நிற்குந்தொடர் (தொல். சொல். 419, சேனா.); (gram.) a compound word, in which there is emphasis of meaning in the first member, as in aḍai-kaḍal.

[பின் + மொழி + நிலையல்]

பின்மோனை *pin-mōnai,* பெ. (n.) இரண்டாஞ்சீரிலும் இறுதிச் சீரிலும் வரும் மோனை (காரிகை, ஒழிபி. 5, உரை.); a kind of mōnai, in which the second foot and last foot of a line of verse alliterate.

[பின் + மோனை. முகனை → மோனை. ஒ.நோ. முகடு → மோடு]

பின்வயிறு *pin-vayiru,* பெ. (n.) ஒட்டின வயிறு (சென்னை.); lean stomach.

[பின் + வயிறு]

பின்வரவு *pin-varavu,* பெ. (n.) பின்னால் நேரப்போவது; future happening or event. *'பின்வர வறியாமல் சுதந்திரம் தொட்டார்'* (பாரதி. தேசீய. 42.).

[பின் + வரவு]

பின்வருநிலை *pin-varu-nilai,* பெ. (n.) முன் வந்துள்ள சொல்லும் பொருளும் தனித்தனியாயினுங் கூடியாயினும் பலவிடத்தும் பின்னும் வரும் அணிவகை (தண்டி, 40.); (rhet.) a figure of speech in which expressions or ideas or both are repeated.

[பின் + வருநிலை. வள் = வளைவு. வள் → வரு + நிலை = வருநிலை]

பின்வரும் *pinvarum,* பெ.அ. (adj.) அடுத்துவருகிற; following பின்வரும் ஆண்டுகளில் மழை குறைவாக இருக்கும் என்று கூறுகின்றனர் (உ.வ.).

[பின் + வரும்]

பின்வருமாறு *pinvarumāru,* வி.அ. (adv.) (எழுத்தில்) இதற்குப்பின் குறித்துள்ளதுபோல், கீழேகொடுக்கப்பட்டுள்ளதுபோல்; (in writting) as follows. இவ்வினாவிற்கான விடை பின்வருமாறு இருக்கவேண்டும் (உ.வ.).

[பின் + வருமாறு]

பின்வலி *pinvali,* பெ. (n.) மகப்பேற்றிற்கு அல்லது ஏனைய புண்களை அறுவை மருத்துவம் செய்தபின் ஏற்படும் நோய்; after pains as in delivery or operation.

[பின் + வலி]

பின்வளைந்தகருப்பை *pinvaḷainda karuppai,* பெ. (n.) இடம் பெயர்ந்த கருப்பை; retroverted uterus.

[பின்வளைந்த + கருப்பை]

பின்வளைவு *pinvaḷaivu,* பெ. (n.) பின் மடிப்பு; retroflexion.

[பின் + வளைவு. வள் → வளை → வளைவு]

பின்வாங்கு—தல் *pin-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** பின்போதல்; to recede, draw-back, retire. *'அஞ்சிப் பின்வாங்குமடி'* (நாலடி. **396.**). **2.** தோல்வியடைதல்; to re-treat, as in battle; to give way as in a contest. இரண்டு நாள் சண்டைக்குப்பின் பகைப்படை பின்வாங்கியது. (உ.வ.) **3.** ஒப்பந்தத்தினின்று நெகிழ்தல்; to with-draw backslide, as from a bargain or an engagement; பணியைச் செய்வதாக முன்னர் ஒப்புக்கொண்டனர். ஆனால் இப்பொழுது பின்வாங்குகின்றனர் (உ.வ.) **4.** நெறி தவறுதல் (கிறித்); to cease to live as a Christian.

[பின் + வாங்கு. வள் = வளைவு. வள் → வரு → வார் → வா → வாங்கு]

பின்வேலப்பதேசிகர் *pin-vēlappadēšigar,* பெ. (n.) பஞ்சாக்கரப் பஃறொடை இயற்றிய திருவாவடுதுறை யாதீனத்துத் தலைவர்; a head of the Tiru-v-āvaḍuturai-y-āḍiṉam, au-thor of pañcakkara-p-paḵ-ṟoḍai.

[பின் + வேலப்ப + தேசிகர்]

பின்றலை *piṉṟalai,* பெ. (n.) தலையின் பின்புறம்; back part of the head. *'செம்பொறப்பட்டம் பின்றலைக் கொளீஇ'* (பெருங். உஞ்சைக். **46, 235.**).

[பின் + தலை]

பின்றளை *piṉṟaḷai,* பெ. (n.) *பின்தளை* (யாழ்.அக.) பார்க்க; see *pintaḷai*

[பின் + தளை]

பின்றாலி *piṉṟāli,* பெ. (n.) முதுகு மறையத் தொங்குங் கழுத்தணிவகை; a kind of necklace hanging over the back. நவரத்தினங்களைக் கோத்து முதுகு மறைய விடும் பின்றாலி (சிலப். **6, 102,** அரும்.).

[பின் + தாலி. பின் = பின்புறம், முதுகு]

பின்றி *piṉṟi,* கு.வி.எ. (adv.) மீள்; again, besides. பின்றியும் பீடும் பெருகும் (தேவா. **65, 7**).

[பின் → பின்றி]

பின்று¹—தல் *piṉṟu-,* 5 செ.கு.வி (v.i.) **1.** பின்னிடுதல்; to retreat, fall behind. ஆற்றல் போகிப் பின்றினன் (கந்தபு. சிங்கமு. **175**). **2.** கீழ்ப்பட்டிருத்தல் (வின்.); to fall below, in rank or quality. **3.** மீளுதல்; to turn back. பெரும்படை தான்வரிற் பின்றி நீங்கிற் பழி (சீவக. **1827.**) **4.** தொலைவாதல்; to be far removed. மனையானவற்றுக் கறப்பின்றி (திருநூற். **81.**) **5.** ஒழுக்கம் முதலியவற்றிற் பிறழ்தல்; to go astray. செலவுதான் பின்றாது பேணும் புகழான்பின் (திணைமாலை. **87**) **6.** மாறுபடுதல்; to change, to revert பின்று மென்றாலு நம்பாற் புகழன்றிப் பிறிதுண்டாமோ (கம்பரா. விபீடண. **108**).

[பின் → பின்னம் → பின்னர். பின் → பின்னே. பின் → பின்பு. பின் → பின்று (மு.தா. 131)]

பின்று² *piṉṟu,* வி.எ. (adv.) பின்பு; afterwards. பின்று சுக்கிர வாரமென்றொரு பெரும் பெயராய் (உபதேசகா. சிவவிரத. **322.**).

க. பிந்து; **பட.** கிந்தெ.

...

[பின் → பின்று]

பின்றுடரி *pinṟuḍari,* பெ. (n.) நாயுருவி; a plant growing in hedges and thickets.



பின்றேர்க்குரவை *pinṟēr-k-kuravai,* பெ. (n.) தேர்வீரரை வென்ற அரசனுடைய தேரின் பின்னே நின்று கொற்றவையும் கூளிச் சுற்றமும் களித்தாடுதலைக் கூறும் புறத்துறை (தொல்.பொ. 76.); (purap.) theme of Koṟṟavai and her retine dancing in joy behind the chariot of a victorious king.

[பின் + தேர் + குரவை.தேர் = உயரமான ஊர்தி. குல் → (குல) → குலவை → குரவை = வட்டமாக நின்றாடுங் கூத்து]

பின்றை¹ *pinṟai,* பெ. (n.) பின்னைநாள் (பிங்.); next day, morrow.

[பின் → பின்றை]

பின்றை² *pinṟai,* வி.எ. (adv.) பின்பு; after, afterwards, subsequently. பாண்முற்றொழிந்த பின்றை (புறநா. 29.).

[பின் → பின்றை]

பின்றொடர்–தல் *pinṟoḍar-,* 2 செ.குன்றாவி. (v.t.) பின்பற்றுதல்; to follow, pursue.

[பின் + தொடர்–,]

பின்றொடரி *pinṟoḍari,* பெ. (n.) 1. தொடரிவகை; a stragglling shrub, in scrmb jungles. 2. திகைப்பூடு (யாழ்.அக.); a plant. 3. ஆடையொட்டி (சங்.அக.); a plant.

பின்றோன்றல் *pinṟōnṟal,* பெ. (n.) தம்பி (பிங்.); younger brother.

[பின் + தோன்றல். தோன்று → தோன்றல். 'அல்' தொ.பெ.ஈறு]

பின்னகம்¹ *pinnagam,* பெ. (n.) 1. பின்னப்பட்ட மயிர்; braided hair, as of a woman. பிடிக்கையன்ன பின்னகந் தீண்டி (அகநா. 9). 2. ஆண்பால் மயிர்முடி (பிங்.); hair-tuft of men.

[பின் → பின்னகம்]

பின்னகம்² *pinnagam,* பெ. (n.) 1. வேறுபாடு (யாழ்.அக.); estrangement, difference 2. கழிச்சல் (சங்.அக.); loose bowels.

[பின்னம்² → பின்னகம். பின் → பின்னம் = வேறுபாடு, மாறுபாடு]

பின்னகன்¹ *pinnagan,* பெ. (n.) வேறுபாடு செய்பவன் (யாழ்.அக.); who causes estrangement or difference.

[பின் → பின்னம் + அகன். அகம் → அகன். 'ன்' ஆ.பா.ஈறு]

பின்னகன்² *pinnagan,* பெ. (n.) வயிற்றுப் போக்கு; diarrhoea.

[பின்னகம்² → பின்னகன்]

பின்னகனம் *pinna-kanam,* பெ. (n.) ஒரு பின்னத்தை அது கொண்டு பெருக்கி வந்த தொகையை மீண்டும் அப்பின்னங் கொண்டே பெருக்குவது (யாழ்.அக.); (math.) cube of a fraction.

[பின்னம்¹ → பின்னகனம்]

பின்னகுடும்பம் *pinna-kudumbam,* பெ. (n.) பாகப் பிரிவினையான குடும்பம் (கொ.வ.); divided family.

[பின்னம் + குடும்பம். பில் → (பின்) → பின்னம் = சிறியது, பிரிக்கப்பட்டது. பின்னகுடும்பம் சொத்துப் பிரிவினை செய்யப்பட்ட குடும்பம்]

பின்னகுணனம் *pinna-kunanam,* பெ. (n.) ஒரு பின்னத்தை அது கொண்டே பெருக்குவது; (math.) square of a fraction.

[பின்னம் + குணனம்]

பின்னகோத்திரன் *pinna-kōttiran,* பெ. (n.) வேறு பிரிவினன் (கோத்திரத்தான்); one of a community but not belonging to the same gōtra, person of a different gōtra. (R.F.)

[பின்னம் + கோத்திரன்]

Skt. gōtrin > **த.** கோத்திரன்

பின்னங்கால் *pinnangāl,* பெ. (n.) **1.** விலங்கின் பின்புறத்துக்கால்; hind leg or foot of a beast. **2.** பாதத்தின் பின்புறம்; hind part of the foot.

[பின் + அம் + கால். குல் → கோல் = திரண்ட கம்பு. கோல் → கால் = கம்பு, தூண், தூண் போன்ற உறுப்பு. 'அம்' சாரியை. முன்னங்காலுக்கு எதிரானது பின்னங்கால்]

பின்னசங்கலனம் *pinnaśangalanam,* பெ. (n.) கீழ்வாயிலக்கக் கூட்டல் (வின்.); (arith.) addition of fractions.

[பின்னம் + சங்கலனம்]

Skt. sankalana > **த.** சங்கலனம்

பின்னசங்கலிதம் *pinna-śangalidam,* பெ. (n.) ***பின்ன சங்கலனம்*** (யாழ்.அக.) பார்க்க; see *pinna-śangalanam.*

[பின்னம் + சங்கலிதம்]

Skt. san-kalita > **த.** சங்கலிதம்

பின்னடி¹ *pinnadi,* பெ. (n.) **1.** பிற்பட்டது. latter part, that which is subsequent. **2.** கடைசி (யாழ்.அக.); that which is last. **3.** பின்புறம்; rear (R.). **4.** பின்சரவடி (யாழ்.அக.); descendant. **5.** வருங்காலம் (யாழ்.அக.); futurity, future time.

[பின் + அடி]

'பின்' (பின்மை) இடம் காலம் ஆகியற்றின் பின்மையைக் குறிக்கும். இடத்தின் பின்மை பிற்பட்டது, கடைசி, பின்சரவடி. காலத்தின் பின்மை வருங்காலம்.

பின்னடி² *pinnadi,* வி.எ. (adv.) உடனே (இ.வ.); immediately.

[பின் + அடி]

பின்னடை-தல் *pinnadai-,* 2 செ.கு.வி (v.i.). பின்தங்குதல்; to lag behind. தமிழ்ச்சுவையை

அறிந்தபின் 'தமிழ்ப்படிப்பதில் பின்னடைதல் இருக்காது (உ.வ.).

[பின் → அடை. அடு → அடை]

பின்னடைப்பன் *pinnadai-p-pan,* பெ. (n.) சிறுநீரைத் தடுக்கும் மாட்டு நோய் வகை (வின்.); disease of cattle causing obstruction of urine.

[பின் + அடைப்பன். அடைப்பன்= மாடுகளுக்குத் தொண்டையில் வரும் ஒரு வெக்கை நோய். பின் = பிற்பகுதி, பிட்டம்.]

பின்னடைப்பான் *pinnadaippān,* பெ. (n.) பசிநோயு ளொன்று; one of the disease caused by hunger.

[பின் + அடைப்பான்]

பின்னடைவு *pinnadaivu,* பெ. (n.) பின்தங்கும் நிலை; lagging behind. தமிழ்வளர்ச்சியில் பின்னடைவு ஏற்படக்கூடாது (உ.வ.)

[பின் + அடைவு. அடை → அடைவு]

பின்னணி *pinnani,* பெ. (n.) 1. பின் வரிசை; rear, rear rank. 2. பிற்படை (சூடா.); rear guard.

[பின் + அணி. அண் → அணி = வரிசை]

பின்னணிப்பாடகர் *pinnani-p-p* பெ. (n.) திரைப்படம், நாடகம் ஆகியவற்றில் தான் நேரடியாகத் தோன்றாமல் நடிகருக்காக அல்லது காட்சிக்காகப் பாடுபவர்; play back singer.

[பின்னணி + பாடகர்]

பின்னணியம் *pinnaniyam,* பெ. (n.) கப்பலின் பின்புறம்; (naut.) stern of a vessel.

[பின் + அணியம்]

பின்னணை *pinnanai,* பெ. (n.) 1. வீட்டுக் கொல்லை (வின்.); the back-yard of a house. 2. பின்பிறந்த குழந்தை அல்லது கன்று; later born child or calf, dist. fr. mun-n-anai.

[பின் + அணை. அள் → அண் → அண→ அணை. பின்னணை = வீட்டை (பின்பகுதியில்) அணைத்து(சேர்ந்து) இருப்பது, குழந்தை அல்லது கன்றை அணைத்து (தொடர்ந்து) பிறப்பது]

பின்னதுநிறுத்தல் *pinnadu-niruttal,* பெ. (n.) முப்பத்திரண்டுத்திகளுள் முன் வைக்க வேண்டியதைப் பின்னே வைக்கும் உத்திவகை (நன். 14.); (gram.) placing later what ought to come earlier in a treatise, one of 32 utti q.v.

[பின் → பின்னது + நிறுத்தல். நிறு → நிறுத்தல். 'அல்' தொ.பெ.ஈறு]

பின்னந்தண்டு *pinnantandu,* பெ. (n.) பின்புறமுள்ள காற்சீப்பு (யாழ்.அக.); hind part of a leg.

[பின் + அம் + தண்டு. துள் → தள் → தண்டு = திரண்டபகுதி]

பின்னந்தலை *pinnantalai,* பெ. (n.) 1. பின்புறம்; back of head, occiput 2. பிடர் (யாழ்.அக.); nape of the neck.

[பின் + அம் + தலை]

பின்னப்படுத்து-தல் *pinna-p-paduttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சிதறுவித்தல்; to break to pieces. பின்னப்படுத்தி நேமிவரையுடைத்தும் (இரகு. திக்குவி. 38.)

[பின்னம் + படுத்து–, படு → படுத்து]

பின்னப்பதம் *pinna-p-padam,* பெ. (n.) தொகாநிலையாய் நிற்கும் சொல் (சிவசம. பக். 43.); separate word, not forming part of a compound.

[பின்னம் + பதம்]

Skt. pada > **த.** பதம்

பின்னபாகாரம் *pinna-pāgāram,* பெ. (n.) கீழ்வாயிலக்கப் பிரிப்பு; (math.) division of fractions.

[பின்னம் + பாகாரம். பகு → பாகு → பாகாரம்]

பின்னபேதகம் *pinna-pēdagam,* பெ. (n.) *பின்ன பேதம்* (வின்.) பார்க்க; see *pinna-pēdam.*

[பின்னம் + பேதகம்]

Skt. bhēdaka > **த.** பேதகம்

பின்னபேதம் *pinna-pēdam,* பெ. (n.) **1.** நிறைவேற்றாமை; failure to fulfil a promise2. மாறுபாடு, பகை; difference, disgreement.

[பின்னம் + பேதம்]

Skt. bhēda > **த.** பேதம்

பின்னம்¹ *pinnam,* பெ. (n.) **1.** பிளவு (இலக்.அக.); cleavage, break, disunion. **2.** சிதைவு; break, tear. பின்னங்க ளுகிரிற் செய்து (கம்பரா. வரைக்காட்சி. 54.). **3.** கேடு; change for the horse, degeneracy, deterioration. **4.** கீழ்வாயிலக்கம்; (math.) fraction **5.** துகள், பொடி (சது.); dust, powder. **6.** பூந்துகள், பூந்தாது; pollen.

[பிள் → பிதிர். பில் → பின் → பின்னம் → பின்னி. பின்னம் = சிறியது, துண்டு, சிற்றெண். சின்னபின்னம் என்னும் வழக்கை நோக்குக. பின்னி = சிறியது. நன்னி பின்னி என்னும் தஞ்சை வழக்கை நோக்குக (சு.வி.16.)]

பின்னம்² *pinnam,* பெ. (n.) **1.** மாறுபாடு; opposition. பின்மை நெறிச் சமணரை (திருவாலவா. 38, 8.) **2.** வேறுபாடு (சூடா.); disagreement, variance, difference. **3.** வேறாந்தன்மை; distinctness, separateness. பின்னபின்னமாத் தருக்களிற் பிறங்கிய கழலின் (பாகவத. 1, மாயவனமிச, 20.) **4.** உறுப்புக் கோணல்; distortion, disfiguration, deformity. **5.** தடை (யாழ்.அக.); frustration, obstacle.

[பின் = திரும்ப, வேறு. பின்னும் = திரும்பவும். பின்னொன்று = வேறொன்று. பின → பிற → பிறிது. பிறம் → பிறன் = வேறொருவன், மற்றவன், அயலான் (மு.தா. 132.) பின் → பின்னம்]

த. பின்னம் > Skt. bhinna.

பின்னம்³ *pinnam,* வி.எ. (adv.) பின்னர்; after, afterwards. மள்ளர் பின்னந் தண்டஞ் செய்தனர் (திருவினை. பழியஞ்சி. 26.).

[பின் → பின்னே. பின் → பின்பு. பின் → பின்னம் (மு.தா. 131.)]

பின்னம்[4] *pinnam,* பெ. (n.), எலும்பு முறிவு; fracture.

[பில் → பின் → பின்னம் = சிறியது, பிளவுபட்டது]

பின்னம்[5] *pinnam,* பெ. (n.) பகுப்பு; division. (புதுவை.)

[பில் → (பில்) → பின்னி = மிகச்சிறியது. பில் → பின் → பின்னம் = சிறியது, துண்டு, சிற்றெண், படுக்கப்பட்டது, பகுப்பு]

பின்னர்[1] *pinnar,* கு.வி.எ. (adv.) பின்பு; after, afterwards, subsequently. *'பின்னரும் பீடழிக்கு நோயுள'* (நாலடி, 92.).

[பின் → பின்னம் → பின்னர் (மு.தா, 293)]

பின்னர்[2] *pinnar,* பெ. (n.) **1.** பின் தொடர்ந்து வருவோர்; those who come after, followers. *'களிமகன் பின்னரும்'* (மணி. 3, 103.). **2.** பிற்பட்டவன்; successor. *'மறைமுது முதல்வன் பின்னர் மேய'* (சிலப். வேட்.) *'முன்னோன் றன்னைப் பின்னைப் பின்னரியற்றி'* (சிலப். பதி. 1, உரை). **3.** தம்பி (மதுரைக். 40, உரை.); younger brother. **4.** இழிந்தவன் (சூத்திரர்) (பிங்.); the Sūdras.

[பின் → பின்னம் → பின்னர் (மு.தா. 293.)]

பின்னரை[1] *pin-n-arai,* பெ. (n.) விண்மீனின் பிற்பாதி; the latter half of a naksatra.

[பின் + அரை]

பின்னரை[2] *pinnarai,* பெ. (n.) சல்லடை (பிங்.); sieve.

[பின் + அறை – பின்னறை → பின்னரை. பில் → பின் → பின்னம் = சிறியது. பின் = சிறிய]

பின்னல்[1] *pinnal,* பெ. (n.) **1.** பின்னுகை; braiding, plaiting, matting, wreathing, twining. **2.** தொடர்ச்சி; series, succession, as of waves. *'பின்னற் றிரைமேற் றவழகின்ற பிள்ளைத் தென்றல்'* (கம்பரா, கடல்கா. 6.) **3.** பின்னப்பட்டது; web, weft, texture, lace. *'கொடிப் பின்னல் வாங்கி'* (கலித். 83, 9.) **4.** அரைஞாண்; waist-cord. *'பின்னல் துலங்கு மரசிலையும்'* (திவ்.பெரியாழ். 1, 7, 3.) **5.** சிக்கு entanglement, tangle. **6.** பின்னப்பட்ட முடி; plaited hair (of a woman) ஒற்றைப்பின்னலை எடுத்து முன்னால் விட்டுக்கொண்டாள். (உ.வ.). **7.** சடை (பிங்.); matted hair. *'பின்னலிலஞ்சியின் மூழ்குதிர்'* (சேதுபு. சடா. 6.) **8.** நூல இழை முதலியவை கொண்டு பின்னும் கைவேலை; knitting (work) தையல், பின்னல் எல்லாம் என் பெண்ணுக்குத் தெரியும் (உ.வ.) **9.** தவறு (யாழ்.அக.); mistake, error. **10.** பருத்தி (நாமதீப. 318.); cotton.

[புல் → (புன்) → பின் → பின்னல். 'அல்' தொ.பெ.ஈறு]

பின்னல்[2] *pinnal,* பெ. (n.) கடற்பாசி; edible seaweed.



பின்னல்கொடி *pin̲n̲al-koḍi,* பெ. (n.) கிளைகளின் தண்டே கொழுகொம்புகளிற் பின்னிக் கொண்டு வளருஞ் செடிவகை; twiners.

[பின்னல் + கொடி]

பின்னல்மோதிரம் *pin̲n̲al-mōdiram,* பெ. (n.) மோதிரவகை (வின்.); a kind of ring.

[பின்னல் + மோதிரம். முகம் + திரை → முகத்திரை → முத்திரை. முகத்திரம் → மோதிரம் = முத்திரையுள்ள விரலணி. பின்னல் அமைப்பில் அமைந்த மோதிரம் பின்னல் மோதிரம்]

பின்னல்வேலை *pin̲n̲al-vēlai,* பெ. (n.) பின்னியமைத்த வேலை; network; braiding, matting.

[பின் → பின்னல் + வேலை]

பின்னவர் *pin̲n̲avar,* பெ. (n.) 1. பிற்பட்டவர்; those who come after. 2. இழிகுலத்திரராகக் கருப்படுபவர் (சூத்திரர்) (சூடா.); the Sūdrās. **'கருமேதியும் பெற்றமும் பின்னவர் தெருக்காட்டும்'** (காஞ்சிப்பு, திருநகரே. 102.)

[பின் + அவர்]

பின்னவருக்கம் *pin̲n̲a-varukkam,* பெ. (n.) பின்னகுணனம் பார்க்க (யாழ்.அக.); see pin̲n̲a guṇan̲am.

[பின்னம் + வருக்கம்]

பின்னவள் *pin̲n̲avaḷ,* பெ. (n.) 1. அகவையில் குறைந்தவள், தங்கை; younger sister. 2. கடைசியாகப் பிறந்த மகள்; youngest daughter.

மறுவ. இளைச்சி.

தெ. பின்னி, பின்னம்ம (சித்தி)

[பின் + அவள்]

பின்னவன் *pin̲n̲avan̲,* பெ. (n.) 1. அகவையில் குறைந்தவன், தம்பி; younger brother. **'பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ?'** (கம்பரா. கைகேசி. 110.). 2. கடைசியாகப் பிறந்த மகன்; youngest son.

தெ. பின்னய்ய (சிற்றப்பன்)

[பின் + அவன். தனக்குப்பின் பிறந்தவன், பின்னர் பிறந்தார்களுள் கடைசியானவன்.]

பின்னளபெடை *pin̲-n̲-aḷabeḍai,* பெ. (n.) இரண்டாஞ்சீர்க் கண்ணும், நான்காஞ்சீர்க் கண்ணும் அளபெடை வரத் தொடுக்கும் தொடை (காரிகை, ஒழி.பி. 5, உரை.); mode of versification in which the second and fourth feet take aḷapeḍai.

[பின்னல் + அளபெடை. அளபு + எடை – அளபெடை. எடு → எடை. 'ஐ' தொ.பெ.ஈறு]

பின்னற்கொடி *pinnar-kodi,* பெ. (n.) 1. ஓணான் கொடி; a creeper. 2. பெருமுசுட்டை; many flowered bindweed.

[பின்னல் + கொடி]

பின்னற்கோலாட்டம் *pinnar-kōlāṭṭam,* பெ. (n.) தொங்கவிட்ட கயிறுகளைப் பின்னிக் கொண்டே ஆடும் கோலாட்டவகை; kōlāṭṭam in which suspended cords are plaited in an ingenious way.

[பின்னல் + கோலாட்டம். கோல் + ஆட்டம் – கோலாட்டம். ஆடு → ஆட்டம்]

பின்னற்சன்னல் *pinnar-cannal,* பெ. (n.) *பின்னற் பலகணி* (கட்டட.நாமா. 23.) பார்க்க; see *pinnal palagani.*

[பின்னல் + சன்னல்]

Port. janella > **த.** சன்னல்.

பின்னற்பலகணி *pinnarpalagaṇi,* பெ. (n.) வலைக் கதவுகளுடைய சாளரம்; window with meshed casements.

[பின்னல் + பலகணி. பல + கணி. கண் + இ – கணி]

பின்னற்பாம்பு *pinnar-pāmbu,* பெ. (n.) விலாங்கு மீன்; sea cel.

[பின்னல் + பாம்பு]



பின்னறிவு *pinnarivu,* பெ. (n.) பின்னால் நடப்பதை அறிகை; hind sight.

[பின் + அறிவு]

பின்னறுவடை *pin-n-aruvadai,* பெ. (n.) 1. பிற்பட்ட விளைவு; late harvest. 2. சுற்றி அறுவடையாக, நடுவில் அறுபடாது மிஞ்சிக் கிடப்பது (இ.வ.); that which remains unharvested after a general harvest.

[பின் + அறுவடை. அறு → அறுவு + அடை. 'அடை' ஓர்.ஈறு]

பின்னன் *pinnan,* பெ. (n.) (ஒருவனுக்குப்) பின்னர் பிறந்தவன்; younger brother. *'பின்னனை நடபொடு மற்றவற் காணும்'* (இரகு. அவதார. நீள். 3.),

மறுவ. இளவல், தம்பி.

தெ. பின்னவாடு.

[பின் + அன். 'அன்' ஆ.பா.ஈறு]

பின்னனை *pin-n-anai,* பெ. (n.) செவிலித் தாய் (பிங்.); foster-mother.

[பின் + அனை. அன்னை → அனை. அன்னைக்குப் பின்னானவள் பின்னனை]

பின்னா—தல் *pinnā-,* 6.செ.கு.வி. (v.i.) பின்நிலையடைதல், தோற்றல்; to lag behind to fallback, to be defeated.

து. பிரபூருணி

[பின் + ஆ –,]

பின்னாக *pin-nāga,* கு.வி.எ. (adv.) 1. பிற்பாடு; afterwards. 2. பின்பக்கமாக; behind. 3. மறுபடியும்; again. 4. மேலும் (வின்.); moreover, besides.

[பின் + ஆக]

பின்னாட்டு—தல் *pinnāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வழிநடத்தல்; to follow in the wake. *'ஈஸ்வரத வாபிமானம் பின்னாட்டாத படி யிருக்கை'* (திவ். பெரியதி. 1.1, 4, வ்யா. பக். 35.).

[பின் + நாட்டு—,]

பின்னாடி *pinnāḍi,* கு.வி.எ. (adv.), பின்பு; afterwards. வேலை முடிந்தபின் நான் பின்னாடி வருகிறேன், நீ முன்னாடி செல் (உ.வ.)

[பின் → பின்னால் → பின்னாடி]

பின்னாடிபேசு—தல் *pinnāḍi-pēšu-,* 5 செ.கு.வி. (v.i.) புறங்கூறுதல் (இ.வ.); to speak behind one's back, back-bite. பின்னாடி பேசும் வழக்கம் பொல்லாதது (உ.வ.).

[பின்னாடி + பேசு—]

பின்னாதாரம் *pin-n-ādāram,* பெ. (n.) மூலப்பகுதியினின்று நான்கு விரற்கடை மேலிருக்கும் உடம்பில் உட்பகுதி (சிலப். 3. 26, உரை.); (yoga.) a mystic centre of the human body, believed to be at a distance of four fingers above the 'mūlādāram'.

[பின் + ஆதாரம்]

பின்னாபின்னம் *pinnābinnam,* பெ. (n.) பின்னமும் அபின்னமுமாயிருப்பது (வாசுதேவ மனனம், பக். 52.); that which is both separate and inseparate.

[பின்னம் + அபின்னம்]

பின்னாரி *pinnāri,* பெ. (n.) முதுகின் கீழ்ப்புறம் (யாழ்.அக.); lower part of the back.

[பின் → பின்னாரி]

பின்னால் *pinnāl,* வி.அ. (adv.) 1. பின்பக்கமாக, தள்ளி, தொலைவில்; behind, after. பின்னால் வருபவர் வந்து சேரட்டும் (உ.வ.) 2. பிறகு: afterwards. வெள்ளையடித்தல் பணியைப் பின்னால் செய்து கொள்ளலாம் (உ.வ.).

[பின் → பின்னால்]

பின்னாலே *pinnālē,* கு.வி.எ. (adv.) பிற்பாடு; afterwards. இந்தப் பணியைப் பின்னாலே செய்யலாம்

[பின் → பின்னாலே]

பின்னாளில் *pinnāḷil,* வி.அ. (adv.) பிற்காலத்தில்; at a later time. பெரும்பாலும் உண்மை பின்னாளில் உணரப்படும் (உ.வ.).

[பின் + நாள் + இல்]

பின்னாற்செல்(லு)—தல் *pinnārcel(lu)-,* 13 செ.,கு.வி. (v.i.) *பின்னாற்போ—தல்* பார்க்க; see *pirnārpō-,.* செல்வர் பின்னால்செல்ல பலர் உள்ளனர் (உ.வ.).

[பின்னால் + செல்(லு)—]

பின்னாற்போ–தல் *pinnār-pō-,* 8 செ.கு.வி. (v.i.) பின்செல்லுதல்; to accompany, follow.

[பின் → பின்னால் + போ–,]

பின்னி *pinni,* பெ. (n.) **1.** தங்கை; younger sister. *'வசிட்ட முனி கற்பார்தரு பின்னியை'* (கோயிற்பு. வியாக். **23.**) **2.** சிறியதாய்; younger sister of one's mother.

[பின் → பின்னி. 'இ'. பெ.பா.ஈ.று]

பின்னிகழ்வு *pinnigalvu* பெ. (n.) ஒரு செயலின் விளைவு; result of an action. மழை பெய்ததன் பின்நிகழ்வாகப் புல் முளைத்தது. (உ.வ.)

[பின் + நிகழ்வு]

பின்னிசிப்பு *pinnišippu,* பெ. (n.) *பின்னிசிவு* பார்க்க; see *pinniśivu.*

[பின் + இசிப்பு. இசிவு → இசிப்பு]

பின்னிசிவு *pinniśivu,* பெ. (n.) உடம்பைப் பின்பக்கமாக வளையச் செய்யும் தம்பவாதம் (சீவரட். 165.); a kind of rheumatism in which the body is bent backwards.

[பின் + இசிவு]

பின்னிசீவு *pinniśīvu,* பெ. (n.) ஓணான் நெய்யினால் குணமாக்கப்படும் இசிவு நோய் வகை; the disease which gets cure by ghee prepared out of chameleon.

[பின் + இசிவு. இசிவு → இசீவு]

பின்னிடு[1]–தல் *pin-n-idu-,* 20 செ.கு.வி. (v.i.) **1.** பின்செல்லுதல்; to retire, fall back. **2.** பின்புறமாதல்; to get behind. **3.** தோற்றல் (பிங்.); to yield; to be defeated, as in a contest. **5.** தாக்கித்திரும்புதல் (வின்.); to recoil, rebound. **6.** காலத்தாழ்வாதல்; to be late. **7.** பின்வாங்குதல்; to retreat, resile from, withdraw.

[பின் + இடு–, 'இடு' து.வி.]

பின்னிடு[2]–தல் *pinnidu-,* 19 செ. குன்றாவி. (v.t.) பிற்படக் கடத்தல்; to leave behind, get across. *'சென்மசாகரந்தனைப் பின்னிடப் பெறலாம்'* (சிவரக, சிவனடி. 7.).

[பின் + இடு–, 'இடு' து. வி.]

பின்னிடை–தல் *pin-n-idai-,* 2 செ.கு.வி. (v.i.) பின்னிடுதல்; to flinch, fall back, retreat, yield.

[பின் + இடை. இடு → இடை]

பின்னிணைப்பு *pin-n-iṇaippu,* பெ. (n.) பிற்சேர்க்கை; appendix. ஆய்வுக்கட்டுரையில் பின்னிணைப்பு அமைவது நல்லது (உ.வ.)

[பின் + இணைப்பு]

பின்னிதம் *pinnidam,* பெ. (n.) *பின்னம்[1]* (வின்.); பார்க்க see *pinnam[1]*

[பின்னம் → பின்னிதம்]

பின்னிதம்பண்ணு[1]–தல் *pinnidampannu-,* 12 செ.குன்றாவி. (v.t.) புறக்கணித்தல் (அலட்சியம் செய்தல்); to treat with coldness.

[பின்னிதம் + பண்ணு–]

பின்னிதம்பண்ணு²—தல் *pinnidampannu-*, 5 செ.கு.வி. (v.i.) இணங்காதிருத்தல்; to be back ward or non-compliant.

[பின்னிதம் + பண்ணு—]

பின்னிப்பிணை—தல் *pinni-p-pinai-*, 2 செ.கு.வி. (v.i.) ஒன்று மற்றொன்றோடு நெருங்கி இருத்தல்; to be interlinked, be a part of, நாட்டுப்புறக்கலைகள் மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளன (உ.வ.)

[பின் → பின்னு → பின்னி + பிணை]

பின்னியாக்கம் *pinniyākkam*, பெ. (n.) குந்துருக்கம் (மலை.); Indian olibanum.

பின்னியாகம் *pinniyāgam*, பெ. (n.) *பின்னி யாக்கம்* பார்க்க; see *pinniyākkam.*

பின்னியாசம் *pinniyāšam*, பெ. (n.) பெருங் காயம் (சங்.அக.); asafoetida.

பின்னியைபு *pin-n-iyaibu*, பெ. (n.) இரண்டாஞ்சீர்க்கண்ணும், நான்காஞ் சீர்க்கண்ணும் இயைபுத் தொடை அமையத் தொடுப்பது (காரிகை. ஒழிபி. 5, உரை); (pros.) a mode of versification in which the second and fourth feet have 'iyaibu-t-todai'.

[பின் + இயைபு. இள் → (இய்) → இயை. இயைதல் = பொருந்துல், இணங்குதல். இயை → இயைவு → இயைபு]

பின்னிரக்கம் *pin-n-irakkam*, பெ. (n.) இரக்கத்தன்மை (பச்சாத்தாபம்); relenting; repentance.

[பின் + இரக்கம். இள் → இர் → இர → இரங்கு → இரக்கம்]

பின்னிரவு *pinniravu*, பெ. (n.) இரவுக் காலத்தின் பிற்பாதி; the late half of a night. தேர்வுநேரத்தில் பின்னிரவு வரை மாணவர் படிக்கின்றனர் (உ.வ.).

[பின் + இரவு.உல் → இல் → இர் → இரா → இரவு]

பின்னிருட்டு *pin-n-iruttu*, பெ. (n.) பின்னிருட்டுக் காலம் பார்க்க; see pinniruttu-k-kālam.

[பின் + இருட்டு. உல் → இல் → இரா → இரவு. இர் → இருள் → இருட்டு. (மு.தா. 179)]

பின்னிருட்டுக்காலம் *pin-n-iruttu-k-kālam*, பெ. (n.) வளர்பிறைக் காலம்; the bright fortnight.

[பின் + இருட்டு + காலம்]

பின்னிரை *pinnirai*, பெ. (n.) பின்வரிசை (யாழ்.அக.); back-row.

[பின் + நிரை]

பின்னிரோவம் *pinnirōvam*, பெ. (n.) முட்சுண்டை; thorny plant.

பின்னில்¹—தல் *pinnil-*, 14 செ.கு.வி. (v.t.) **1.** பிறகிடுதல்; to stand back; to be reluctant. **2.** இணங்குதல்; to yield, submit. ***'பின்னின்று தாயிரப்பக் கேளான்'*** (திவ். இயற். 2, 79.). **3.** இரந்து நிற்றல்; to beg humbly for a favour **4.** பின்செல்லுதல்; to wait on, follow. ***'பின்னின் றேவல் செய்கின்றேன்'*** (திருவாச. 21, 2.).

[பின் + நில்—,]

பின்னில்²—தல் *pinnil-,* 14 செ.குன்றாவி. (v.t.) மறுத்தல் (யாழ்.அக.); to refuse.

[பின் + நில்—,]

பின்னிலவு *pinnilavu,* பெ. (n.) 1. கரும் (அபர) பக்கத்தின் பிற்பகுதி; second half of the dark fortnight. 2. கரும்பக்கம் (அபரபக்கம்); (யாழ்.அக.); the dark fortnight.

[பின் + நிலவு]

பின்னிலை *pinnilai,* பெ. (n.) 1. குறை வேண்டுகை; seeking a redress. *'பின்னிலைத் தொன்றும்'* (தொல். பொ. 167.). 2. வழிபாடு; submitting reverently. 3. பிற்காலத்து வருவது; that is to come in the future. *'பின்னிலை முயற்சியிற் பெயர்த்தனந் தருதல்'* (பெருங். உஞ்சைக் 47, 144.). 4. பின்னேசென்று போர்புரிகை; fighting, chasing the enemy. 5. பின்தங்கி யிருக்கின்ற நிலை; state of being far beind to others. விளையாட்டுப் போட்டியில் பின்னிலை அடைவதை விளையாட்டு வீரர்கள் மானக் குறைவாகக் கருதுகின்றனர் (உ.வ.),

[பின் + நிலை]

பின்னிவா—தல் (பின்னிவருதல்) *pinnivā-,* 18 செ.கு.வி. (v.i.), நெருங்கி வருதல்; to come densely crowded or closely packed. *'பெருங்களிறு பின்னிவந் தடைந்தவே'* (சீவக. 277.),

[பின் → பின்னி + வா—,]

பின்னின்மை *pinninmai,* பெ. (n.) அழிவுபட்ட தன்மை; (log.) non-existance of a thing due to its annihilation. முன்னின்மையோடு பின்னின்மை யன்றி (வேதா. சூ. 35.).

[பின் + இன் + மை. 'மை' ப.பெ.ஈறு. இல் → இன்]

பின்னீர்க்கோவை *pinnīr-k-kōvai,* பெ. (n.) சளியடைப்பான நீர்க்குற்ற வகை (சீவரட். 275.); cold without expectoration.

[பின் + நீர்க்கோவை. நீர்க்கோவை = தடுமன்]

பின்னு¹—தல் *pinnu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கூந்தல், ஓலை முதலியற்றை மிடைந்திணைத்தல்; to plait, braid, lace, knit, weave, entwine, inter-weave. *'பின்னிவிட்ட பிடித் தடக்கை'* (சீவக. 1658.) சிறு கூடை பின்னுவதற்கு கூலியா? (உ.வ.) 2. பிணித்தல்; to bind, hold fast. *'பின்னிய தொடர்நீவி'* (கலித். 15, 18.). 3. தழுவுதல்; to embrace. *'பின்னிய காதலர்'* (கலித். 32, 15.). 4. கூறுதல் (சங்.அக.); to say, tell. 5. அடித்தல்; to beat.நேற்றுமுதலாளி அத்திருட்டுப்பயலைப் பின்னிவிட்டார் (உ.வ.). 6. (களைப்பு, தூக்கக்கலக்கம், குடிமயக்கம் போன்ற வற்றால் கால்கள்) ஒன்றோடு ஒன்று மோதி இடறுதல்; to falter, as of feet.குடிகாரன் கால்பின்னி விழுந்தான் (உ.வ.).

[பில் → பொல் → பொரு → பொருந்து → பொருத்து. புல் → (புன்) → பின். (மு.தா. 180) பின் + உ = பின்னு. 'உ' ஒலித்துணையுயிர்]

பின்னுகால் *pinnu-kāl,* பெ. (n.) மாட்டுக் குற்றவகை (மாட்டுவா. 18.); a defect in cattle.

[பின்(னு) + கால்]

பின்னுச்சி *pinnucci,* பெ. (n.) குழவி பிறக்குங்கால், அதன் தலைப்புறத்தே முக்கோண வடிவிற் காணப்படும் ஒரு சிறு குழி; a triangular space of the back of the

infants head where occipital and parictal bones meet.

[பின் + உச்சி]

பின்னுச்சித்தோற்றம் *pinnucci-t-tōrram,* பெ. (n.) கருப்பையில் பிறக்கவியலா நிலையில் குழவியிருப்பதைக் காட்டுமோர் குறி; presentation of occipits vertex.

[பின் + உச்சி + தோற்றம்]

பின்னும் *pin-n-um,* வி.எ. (adv.) **1.** மேலும்; moreover. **2.** மறுபடியும்; again.

[பின் = திரும்ப, வேறு. பின் + உம் – பின்னும் = திரும்பவும். பின்னும் பின்னும் திரும்பத் திரும்ப (மு.தா. 294)]

பின்னெதுகை *pin-n-edugai,* பெ. (n.) இரண்டாஞ் சீர்க் கண்ணும் நான்காஞ்சீர்க் கண்ணும் எதுகையமையத் தொடுப்பது (காரிகை. ஒழிபி. 5, உரை.); (pros.) a mode of versification in which the second and the fourth feet have 'edugai-t-todai'.

[பின் + எதுகை. எதிர்கை → எதிகை → எதுகை]

பின்னே *pinnē,* கு.வி.எ. (adv.), பிறகு, பின்பு; afterwards, later சாத்தனுக்குப் பின்னே சாத்தி வந்தாள்.

ம. பின்னே

[பின் → பின்னம் → பின்னர். பின் → பின்னே (மு.தா. 295)]

பின்னேரம் *pinnēram,* பெ. (n.) **1.** பிற்பகல் (கொ.வ.); afternoon. நேற்று பின்னேரத்தில் நன்றாக மழைபெய்தது (உ.வ.) **2.** சாயங்காலம்; evening.

[பின் + நேரம்]

பின்னை[1] *pinnai,* பெ. (n.) **1.** பின்[2] **4.** பார்க்க; see pin.[2] 4 ***'பின்னைப் புதுமைக்கும்'*** (திருவாச. 7, 9.) **2.** தங்கை (சூடா.); younger sister. ***'உலகமூன்றும் காவலோன் பின்னை'*** (கம்பரா. சூர்ப்ப. 29.) **3.** தம்பி(திவா.) ;younger brother ***'பின்னை தன்னுடனடுக்கலை'*** (கந்தபு. முதனாட்போ. 9.)

[பின் → பின்னை = தம்பி. பின் → பின்னவன் = தம்பி. பின் → பின்னவள் = தங்கை. பின் → பின்னனை = செவிலித்தாய். பின் → பின்னை]

பின்னை[2] *pinnai,* கு.வி.எ. (adv.) **1.** மேலும்; moreover, besides, furthermore; **2.** பிறகு (சூடா.); after, afterwards. ***'பின்னை.... அழிந்தேன்'*** (திருவாச. 44, 5.)

[பின் → பின்னே. பின் → பின்னை]

பின்னை[3] *pinnai,* பெ. (n.) **1.** நப்பின்னை; one of Krisnās consorts ***'பெய் வளைக்கையாள் நம்பின்னை'*** (சிலப். 17, பக், 144.).

[நப்பின்னை → பின்னை]

பின்னை[4] *pinnai,* பெ. (n.) தலைமயிர் (அக.நி.); hair.

[பில் → (புன்) → பின் → பின்னு → பின்னை. பின்னப்படுவது]

பின்னை[5] *pinnai,* பெ. (n.) புன்னை (வின்.); mast-wood.

க. பொன்னெ; தெ. பொன்ன; பட. ஹொன்னெ

[புன்னை → பின்னை]

த. புன்னை > Skt. punnāga

பின்னை⁶ *pinnai,* பெ. (n.) நாய்த்தேக்கு; a large timber tree (L.)

பின்னைக்கணம் *pinnai-k-kaṇam,* பெ. (n.) வருங்காலம்; the future. *'பின்னைக் கணத்துப் பிறப்பவனும்'* (மேருமந். 662.)

[பின் → பின்னை + கணம். கள் → கண் → கணம்]

பின்னைக்காயளவு *pinnaikkāyaḷavu,* பெ. (n.) புன்னைக்காயின் அளவு; as big as the fruit Alexandrain laural.

[பின்னைக்காய் + அளவு. புன்னைக்காய் → பின்னைக்காய்]

பின்னைகேள்வன் *pinnai-kēḷvan,* பெ. (n.) (பின்னைப் பெருமாட்டி (பிராட்டி)யின் மணாளன்) திருமால் (பிங்.); Tirumāl the husband of Pinnai.

[பின்னை + கேள்வன்]

பின்னைநாள் *pinnai-nāḷ,* பெ. (n.) **1.** மறுநாள்; next day. **2.** பின்னாள்; subsequent day.

[பின்னை + நாள். பின் → பின்னை]

பின்னைப்பூ *pinnaippū,* பெ. (n.) புன்னைப்பூ; flower of Alexandria laurel.

[புன்னைப்பூ → பின்னைப்பூ]

பின்னையெண்ணெய் *pinnaiyeṇṇey,* பெ. (n.) புன்னைக் காயிலிருந்து எடுக்கும் எண்ணெய்; oil extracted from th kernal of the fruit of Alexandrian laurel.

[பின்னை + எண்ணெய். புன்னை → பின்னை]

பின்னொட்டு *pinnoṭṭu,* பெ. (n.) (இலக்.) அடிச்சொல்லைத் தொடர்ந்து சேர்க்கப்படும் உருபு; suffix, postposition.

[பின் + ஒட்டு]

பின்னோக்காடு *pinnōkkāḍu,* பெ. (n.) மகப்பேற்றின் பின்னுள்ள வலி (வேதனை); after-pains. (C.E.M.)

[பின் + நோக்காடு. நொள் → நோள் → நோளை = பிணியுண்ட நிலை. நோள் → நோய் → நோ = நோய், துன்பம். நோ → நோவு = வலி. நோ → நோக்காடு. கடு → காடு = மிகுதி. ஒ.நோ. சாக்காடு]

பின்னோக்கி *pinnōkki,* பெ. (n.) வேலையில் கவனம் செலுத்தாமல் பின் வருவதிலேயே கண்ணா யிருப்பவன்; one who has no interest in his work but has an eye on what is to be got subsquently. *"பிள்ளையே..... பின்னோக்கி..... நூலை உரைத்தற்குரிமை யிலாதார்"* (அறிநெறி. 4.)

[பின் + நோக்கி. நோக்கு → நோக்கி. 'இ' வினைமுதலீறு]

பின்னோக்கு¹–தல் *pinnōkku-,* 5 செ.கு.வி. (v.i.) **1.** வருவதை யெதிர்பார்த்தல்; to have an eye on the consequences. *'சொல்லறக முன்னின்று பின்னோக்காச் சொல்'* (குறள், **184.**). **2.** பின்புறம் பார்த்தல்; to look back. **3.** பின்வாங்குதல்; to retreat, back side.

[பின் + நோக்கு–,]

பின்னோக்கு² *pinnōkku,* பெ. (n.) சென்ற காலத்தை எண்ணுகை; recalling the past.

[பின் + நோக்கு]

பின்னோடு *pinnōḍu,* கு.வி.எ. (adv.) *பின்னோடே* பார்க்க; see *pinnōḍē.*

[பின் → பின்னோடு]

பின்னோடே *pinnōḍē,* கு.வி.எ. (adv.) **1.** அடுத்து; presently, immedietly. **2.** பின்னால்; afterwards. **3.** பின்புறமாய்; behind.

[பின் → பின்பு. பின் → பின்னே. பின்→ பின்னோடே]

பின்னோன் *pinnōn,* பெ. (n.) **1.** பிற்பட்டவன்; one who comes after, follower. *'பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி'* (நன். **7.**) **2.** தம்பி; younger brother. *'பின்னோன் களத்திலாரம் இட்டணிந்தனன்'* (உபதேசகா. சிவவிரத. **369.**). **3.** இழிந்தவன் (சூத்திரன்) (யாழ்.அக.); Sūdra.

[பின் + ஓன்]

பினத்தல் *pinattal,* தொ.பெ. (vbl.n.) பிதற்றல்; raving.

[பிதற்று → பினற்று → பினத்து (மு.தா. 10) → பினத்தல் 'தல்' தொ.பெ.ஈறு]

பினத்து–தல் *pinattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *பினற்று–தல்* பார்க்க; see *pinarru-.*

[பித்து → பிதற்று. பிதற்றுதல் = உளறுதல். பிதற்று → பினற்று → பினத்து (மு.தா. 10.)]

பினாகபாணி *pināgapāṇi,* பெ. (n.) குங்கும வைப்பு நஞ்சு; a kind of arsenic.

பினாட்டு *pināṭṭu,* பெ. (n.) பனாட்டு (யாழ்ப்.); inspissated extract of palmyra fruit and sap.

[பனாட்டு → பினாட்டு]

பினாத்தல் *pināttal,* பெ. (n.) புலப்பம் (யாழ்ப்.); delirium.

[பினாத்து → பினாத்தல். 'அல்' தொ.பெ.ஈறு]

பினாத்து–தல் *pināttu,* 5 செ.குன்றாவி. (v.t.) நோய் நிலையில் உளறுதல்; to talk incoherently, as a patient in delirium.

[பித்து → பிதற்று. பிதற்றுதல் = உளறுதல். பிதற்று → பினற்று → பினாத்து (மு.தா. 10)]

பினுவபுட்பி *pinuvapuṭpi,* பெ. (n.) நேர்வாளம்; croton seed plant.

பீ[1] *pī,* 'ப்' என்ற மெய்யெழுத்தும் 'ஈ' என்ற மெய்யெழுத்தும் இணைந்த உயிர் மெய்(அசை)எழுத்து; the syllable formed by adding the long vowel 'ī' to the consonant. 'p'

[ப் + ஈ]

பீ[2] *pī,* பெ. (n.) குடலினின்று வெளிப் படுத்தப்படும் கழிவுப் பொருள் (நன். 178, உரை.); excrement, ordure, faeces.

மறுவ. மலம், பேல்

ம., க, பீ; *தெ.* பீயி.

[புல் → பில் → பேல். புள் → புழுக்கை → பிழுக்கை. புல் → பில் → (பிள்) → பீ (மு.தா. 102)]

பீ[3] *pī,* பெ. (n.) **1.** தொண்டி; bloody drop ordure tree (l.) **3.** பெருமரம்; toothed-leaved tree of heaven.

[புல் → பில் → (புள்) → பீ = குடலினின்று வெளிப்படும் கழிவுப்பொருள், அக்கழிவுப் பொருளின் நாற்றம் தரும் மரம்]

பீ[4] *pī,* பெ. (n.) அச்சம் (யாழ்.அக.); fear.

[பேபே என்பது அச்சக்குறிப்பு. பே = அச்சம். பே → பேம் = அச்சம். பே → பேய் = அச்சம், அஞ்சப்படும் ஆவி. பே → பீ (வ.வ. 42)]

பீக்கம் *pīkkam,* பெ. (n.) எட்டிக்கொட்டை (சங்.அக.); nux vomica

பீக்கருவேல் *pī-k-karu-vēl,* பெ. (n.) **1.** உடைவேல்; pea-podded black-babul. **2.** வேலமரவகை; pulpy-podded black babul,

[பீ + கருவேல்]

பீக்கலாட்டம் *pīkkalāṭṭam,* பெ. (n.) **1.** தடை (வின்.); impediment, hindrance. **2.** தொந்தரவு (வின்.); trouble

க. பீகலாட; **தெ.** பீகுலாட

[பீய் → பீய்க்கு → பீக்கு → பீக்கலாட்டம். பிய் = பிடுங்குதல், இழுத்தல். பிய் → பீய்.]

பீக்கலாத்தி *pīkkalātti,* பெ. (n.) *பீக்கிலாத்தி* (யாழ்.அக.) பார்க்க; see *pīkkilātti*

[பீக்கிலாத்தி → பீக்கலாத்தி]

பீக்காக்கை *pī-k-kākkai,* பெ. (n.) கருநிறமுள்ள ஒரு வகைப் பறவை; Nilgiri black bird. (M.M. 815)

[பீ² + காக்கை]



பீக்கார்த்திகை *pī-k-kārttigai,* பெ. (n.) திருக்கார்த்திகைக்கு அடுத்த நாள் (கொ.வ.); the day succeeding tiru-k-kārttigai.

[பின் + கார்த்திகை - பின்கார்த்திகை பீக்கார்த்திகை]

பீக்கிலாத்தி *pikkilātti,* பெ. (n.) சங்கங்குப்பி (மலை.); smooth volkameria.

[பீச்சுவிளாத்தி → பீக்கிலாத்தி]

பீக்குடல் *pī-k-kuḍal,* பெ. (n.) மலக்குடல்; the intestines.

[பீ² + குடல். குழல் → குடல்]

பீக்குருவி *pī-k-kuruvi,* பெ. (n.) பன்றிக்குருவி; white - headed babbler. (M.M. 815.)

[பீ² + குருவி. குள் → குரு → குருவி = சிறு பறவை]

பீக்குழி *pī-k-kuḻi,* பெ. (n.) பல்லாங்குழியில் இடுதற்குக் காயில்லாமையால் வெறுமையாக விடப்படுங்குழி (இ.வ.); pit in the pallāṅkuḻi left empty in the course of a game.

[பீ² + குழி. குள் → குழி]

பீக்கை¹ *pīkkai,* பெ. (n.) மெலியது (இலேசானது); that which is delicate or thin.

தெ. பீக.

[புல் → (பில்) → பின் → பின்னி = மிகச்சிறியது. புல் → பில் → பிள் → பீ → பீக்கை]

பீக்கை² *pīkkai,* பெ. (n.) பசளை² (சங்.அக.); purslane.

பீக்கை³ *pī-k-kai,* பெ. (n.) இடது கை (இ.வ.); left hand.

[பீ² + கை. பீயைக் கழுவுவதற்குப் பயன்படுத்தும் கை]

பீக்கொஞ்சி *pī-k-koñji,* பெ. (n.) செடிவகை; coromandel eugene myrtle. (A)

[பீ² + கொஞ்சி. கொழுஞ்சி → கொஞ்சி]

பீகசாரி *pīgaśāri,* பெ. (n.) இளைய பெண்; young woman.

பீகம்¹ *pīgam,* பெ. (n.) **1.** பூட்டு வகை; padlock. **2.** திறவு கோல்; key.

மறுவ. வீகம்

ம. வீக; **க.** பீக, பிய்யக; **தெ.** பீகம்; **து., குட.** பீக

[பிகிதல் = இறுகுதல்; பிகி → பீக = இறுகக் கட்டுவது, இறுக்கிப்பிடிப்பது, பூட்டு, பூட்டைத் திறக்கும் திறவு கோல்]

பீகம்² *pīgam,* பெ. (n.) சீரகம்; cumin seed.

பீகமுத்திரை *pīga - muttirai,* பெ. (n.) பூசை முடிந்த பின் கோயிற் கதவை யடைத்து இடும் முத்திரை (கோயிலொ. 96.); seal upon the door, especially of a temple.

க. பீகமுத்ர,

[பீகம் + முத்திரை. பீகம் = பூட்டு. பீகமுத்திரை = பூட்டிய பின் அல்லது பூட்டின் மேல் இடும் முத்திரை]

பீகரம் *pīkaram,* பெ. (n.) அச்சந் தரத்தக்கது; frightfulness.

[பீ = அச்சம். பீ³ → பீகரம்]

பீங்கான்மரம் *piṅgāṉ - maram,* பெ. (n.) நாட்டு வாதுமை; Indian almond. (A.)

பீச்சக்கை *picca-k-kai,* பெ. (n.) *பீச்சாங்கை* (இ.வ.) பார்க்க; see *piccāṅgai.*

[பீக்கை → பீச்சக்கை]

பீச்சகத்தி *piccagatti,* பெ. (n.) சிற்றகத்தி; common sesban.

பீச்சகம் *piccagam,* பெ. (n.) வரகு; a cereal.

பீச்சங்கு *pi-c-caṅgu,* பெ. (n.) தீய நாற்றமுடைய சங்கஞ் செடி; cleome.

[பீ + சங்கு]

பீச்சங்குழல் *piccaṅ-kuḻal,* பெ. (n.) பீச்சாங்குழல் பார்க்க; see piccāṅkuḻal.

[பீச்சாங்குழல் → பீச்சங்குழல்]

பீச்சல்[1] *piccal,* பெ. (n.) 1. வயிற்றுக் கழிச்சல் (கொ.வ.); looseness of the bowels, 2. பீச்சுகை; squriting, syringing.

[புல் → பில் → பிலிற்று. பிலிற்றுதல் = சிந்துதல். பில் → பீல் → பீர் = ஒரு பீச்சு. பீல் → பீற்று → பீச்சு. ஒ.நோ. கீற்று → கீச்சு (மு.தா.102) பீச்சு → பீச்சல்]

பீச்சல்[2] *piccal,* தொ.பெ. (vbl.n.) நீர் பாய்ச்சல்; syringing water.

[பீச்சு → பீச்சல். 'அல்' தொ.பெ.ஈறு]

பீச்சாக்கத்தி *piccā-k-katti,* பெ. (n.) 1. எழுத்தாணியமைந்த கைப்பிடியுள்ள கத்தி (யாழ்ப்.); combined pocket knife and iron style. 2. ஒருவகை நீண்ட கத்தி (இ.வ.); long country knife.

ம. பீச்சாங்கத்தி

[பீச்சு + கத்தி → பீச்சுக்கத்தி → பீச்சாக் கத்தி. பீல் → பீற்று → பீச்சு.பீச்சுதல் = நீர்ப்பொருளை மிக விரைவாக வெளியேற்றுதல். பீச்சுகத்தி = வேகமாக வீசும் வகையிலமைந்த (மெல்லிய) நீண்ட கத்தி. குத்து → குத்தி → கத்தி = குத்தி வெட்டும் அல்லது அறுக்கும் கருவி]



பீச்சாங்கட்டி *piccāṅ-kaṭṭi,* பெ. (n.) மாழை (உலோக)க் கட்டி (ஈடு. 5,1,ப்ர.ஜீ.); ore.

பீச்சாங்கத்தி *piccāṅ-katti,* பெ. (n.) *பீச்சாக்கத்தி* (யாழ்.அக.) பார்க்க; see *piccā-k-katti*

[பீச்சாக்கத்தி → பீச்சாங்கத்தி]

பீச்சாங்கால்தூசு *picccāṅ-kāl-dūšu,* பெ. (n.) மதிப்பற்ற நிலை.; humility,

[பீச்சாங்கால் + தூசு]

பீச்சாங்குழல் *piccāṅ-kuḻal,* பெ. (n.) நீர் முதலியன பீச்சுங்குழற் கருவி (கொ.வ.); syringe.

ம. பீச்சாங்குழல்.

[பீச்சு + குழல். குள் → குழை = துளை. குழை → குழல் = உட்டுளை யுள்ளது]

பீச்சாங்கை *piccāṅ-kai,* பெ. (n.) இடதுகை; left hand.

[பீ + கை –பீக்கை → பீச்சக்கை → பீச்சங்கை. 'பீக்கை' பார்க்க.]

பீச்சாங்கொள்ளி *piccāṅ-koḷḷi,* பெ. (n.) அஞ்சும் இயல்புடையவன் (பயந்தாங்கொள்ளி) (யாழ்.அக.); coward.

[பீ = அச்சம். பீ + அச்சம் – பீச்சம். (பீமிசைச் சொல்). பீச்சம் + கொள்ளி - பீச்சங் கொள்ளி → பீச்சாங்கொள்ளி. கொள் + இ – கொள்ளி]

பீச்சி[1] *picci,* பெ. (n.) *பீச்சாங்கொள்ளி* (இ.வ.) பார்க்க; see *piccāṅ-koḷḷi*

[பீ + அச்சம் – பீச்சம் → பீச்சி]

பீச்சி[2] *picci,* பெ. (n.) அத்தி வகையு ளொன்று; a kind of wild fig.

பீச்சிங்கி *picciṅgi,* பெ. (n.) மருந்தெண்ணெய்; a medicated oil.

பீச்சிப்பழம் *piccippaḻam,* பெ. (n.) தள்(துரிப்)பூசினிப் பழம்; water melon.

பீச்சிப்பூ *piccippū,* பெ. (n.) மல்லிகைப் பூ வகையு ளொன்று; a kind of jasmine.

பீச்சு[1]**–தல்** *piccu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** நீர்மப்பொருளைக் கருவிமூலம் வேகமாக வெளியேற்றுதல்; to squirt. **2.** பால்கறத்தல்; to milk, as a cow.

தெ. பீச்சுக.

[புல் → பில் → பிலிற்று. பிலிற்றுதல் = சிந்துதல்,பீச்சுதல். பில் → பீல் → பீர் = ஒருபீச்சு. பீல் → பீற்று → பீச்சு. ஒ.நோ.கீற்று → கீச்சு (மு.தா. 102)]

பீச்சு[2]**–தல்** *piccu-,*5 செ.கு.வி. (v.t.) கழிச்சல் (பேதி) ஆதல்; to purge, to have loose motions.

[பீல் → பீற்று → பீச்சு]

பீச்சு[3] *piccu,* பெ. (n.) பீச்சப்பட்டது; that which is discharged at one squirt, or squeeze. *'பிள்ளைப் பாலில் இரண்டு பீச்சுக்கொடு'* (உ.வ.)

[பீல் → பீற்று → பீச்சு (மு.தா. 102)]

பீச்சுக்குழல் *piccu-k-kuḻal,* பெ. (n.) *பீச்சாங்குழல்* பார்க்க; see *piccāṅkuḻal.*

[பீய் → பீய்ச்சு → பீச்சு + குழல்]

பீச்சுமருந்து *piccumarundu,* பெ. (n.) ஊசி குத்தி அரத்தத்திற்குள் செலுத்தும் மருந்து; injecting medicines through hypodermic syringe.

[பீச்சு + மருந்து. மரு → மருந்து]

பீச்சுவிளா *piccuviḷā,* பெ. (n.) *பீச்சுவிளாத்தி* பார்க்க; see *piccuviḷātti.*

[பீச்சு + விளா. விள → விளா]

பீச்சுவிளாத்தி *piccu-viḷātti,* பெ. (n.) சங்கங்குப்பி (மலை.); smooth volkameria. 2. விளாவகை (சங்.அக.); a kind of tree.

[பீச்சு + விளாத்தி. விள → விளா → விளவம். விளவம் → விளாத்தி]

பீச்சைக்கால் *piccai-k-kāl,* பெ. (n.) இடதுகால்; left leg.

[பீச்சை + கால். இடது கையில் 'பீ' கழுவும் செயல்பாடுபற்றிக் கைக்கு வந்த அடை பீச்சை (பீச்சாங்கை) இடது (கை) என்னும் பொருளில் நிலையூறிய பின் இடது காலைக் குறிப்பதற்கும் பீச்சை அடையாக வந்தது]

பீச்சைக்கை *piccai-k-kai,* பெ. (n.) *பீச்சாங்கை* பார்க்க; see *piccāṅ-gai.*

[பீச்சாங்கை → பீச்சைக்கை]

பீச்சைக்கைவாகு *piccai-k-kai vāgu,* பெ. (n.) இடது கைப்பழக்கம்; left handedness.

[பீ → பீச்சை + கை + வாகு]

பீசகம் *pišagam,* பெ. (n.) 1. வெட்பாலை மரம்; tellichery bark. 2. குழவியின் கைகளும் தலையும் மகப்பேற்றின் போது இடம் பிறழ்ந்து அல்குல் வாயிலை அடைக்கை; presentation of vertex with prolapse of hands.

[பிசகு → பிசகம் → பீசகம்]

பீசகவயம் *pišagavayam,* பெ. (n.) முயற்செவிக் கள்ளி; a kind of spurge.

பீசகோசம் *pišakōšam,* பெ. (n.) பூவில் விதையுள்ள இடம்; pericarp, seed-vessel in flowing plants.

[பீசம் + கோசம்]

பீசசிங்கி *pišašiṅgi,* பெ. (n.) மருந்தெண்ணெய்; a medicated oil.

பீசஞ்சம் *pišañjam,* பெ. (n.) தாமரை மணி; lotus beads.

பீசதபம் *pišatabam,* பெ. (n.) விரைவீக்கம்; orchitis.

பீசதாது *pišatādu,* பெ. (n.) நச்சுக் கட்டி வகையுளொன்று; a poisionous tumour.

பீசநீர்க்கட்டு *pišanīr-k-kaṭṭu,* பெ. (n.) விதை (அண்ட)வீக்கம்; hydrocele.

[பீசம் + நீர் + கட்டு. கள் → கட்டு]

பீசப்புல் *pišappul,* பெ. (n.) புல்வகை; a kind of grass.

மறுவ. பீசை

பீசப்பை *piša-p-pai,* பெ. (n.) 1. விதைப்பை; the skin covering the testicles. 2. உயிரணு தங்கும் பை; sac containing sperm.

[பீசம் + பை]

பீசம்[1] *pišam,* ெபா. (n.) 1. விதை (திவா.); seed. 2. மூலம்; cause,orgin, source. 3. விதை (அண்டம்); testicle 4. வெண்ணீர், விந்து (சுக்கிலம்) (வின்.); semen virile 5. பிறங்கடை (சந்தகி) (வின்.); offspring, progeny 6. ஒருமந்திரத்தின் சிறப்பியலான எழுத்து;

mystic letter or sylable which forms the essential part of a mantra. பீசங்கூடிய வகோரமந்திரம் (விநாயகபு. 80,687)

[வித்து → விது → பிது → பீதம் → பீசம். ஒ.நோ: வித்து → க. பித்து. bīja *என்னும் சொல்லிற்கு* vīhja *என்பதை வேராகக் காட்டியபின் அது* of doubtful origin *என்றுமா.வி.அகரமுதலி குறித்திருப்பதைக் காண்க.]*

பீசம்² *pīšam,* ொ. (n.) தாமரைத்தண்டு (திவா.); lotus stalk.

பீசம்வாங்கு-தல் *pīšam-vāṅgu-,* 5 செ. குன்றாவி. (v.t.) விதையடித்தல்; to castrate.

[பீசம் + வாங்கு-,]

பீசவாதம் *pīšavādam,* பெ. (n.) பீசவீக்கம் பார்க்க; see piša vīkkam

[பீசம் + வாதம்]

பீசவாயு *pīšavāyu,* பெ. (n.) பீச வீக்கம் பார்க்க; see piša vīkkam

[பீசம் + வாயு]

பீசவீக்கம் *pīša vīkkam,* பெ. (n.) **1.** அண்டவிதை நோய்வகை (பைஷஜ.); inflamation of the testicles; orchitis hydrocele. **2.** அண்ட நோய்வகை; inflamation of the epididymis, epididymitis.

[பீசம் + வீக்கம்]

பீசறாகண்டி *pīšaṟā-kaṇḍi,* பெ. (n.) காட்டாமணக்கு; common physic nut.

பீசாமலம் *pīšāmalam,* பெ. (n.) கொருக்காய்ப்புளி; a thorny tree.

பீசானி *pīšāṉi,* பெ. (n.) நச்சுப்பாலை; a plant of the species of pālai having poisonous quality.

பீசுகோலா *pīšu-kōlā,* பெ. (n.) வெளிறிய பச்சைநிறமுள்ளதும், ஓரடி நீளம் வளரக் கூடியதுமான சிறுமீன் வகை; a garfish, greenish grey, attaining 1 ft, in length,



பீசைப்புல் *pīšaippul,* பெ. (n.) நீண்டபுல் வகை (வின்.); a tall coarse plant.

[மீசைப்புல் → பீசைப்புல்]

பீஞ்சல் *pīñjal,* பெ. (n.) *பீச்சுவிளாத்தி* பார்க்க; see *piccuviḷātti.*

பீஞ்சாசிகம் *pīñjāšigam,* பெ. (n.) தகரைச் செடி; fetid cassia.

பீஞ்சுகபழம் *pīñjugapaḻam,* பெ. (n.) கடுக்காய்ப் பழம்; fruit of terminalia chebula.

பீஞ்செறி *pĩnceṟi,* பெ. (n.) *பீச்சங்கு* பார்க்க; see *piccangu.*

[பீ +செறி]

பீட்கன்று *piṭ-kaṉṟu,* பெ. (n.) கீழ்க்கன்று; undershoot, sucker, as of a plantain tree. *'கரையில் நிற்கிற வேய்களைப் பீட்கன்றாக வேர்ப்பற்றிலே குத்தியெடுத்து'* (திவ். திருநெடுந்.6,வ்யா.பக்.55.)

[பீள் +கன்று. புள் → பிள் → பிரி = பிரிவு. புள் → பீள் = பிரிந்து வருவது. பீட்கன்று, தாய் மரத்தினின்று பிரிந்து வரும் இளங்கன்று]

பீட்டகம் *piṭṭagam,* பெ. (n.) பணி, பதவி (வின்.); office, employment.

[புள் →(பிள்) → பிண்டு → பிண்டம் = திரட்டி.புள் → பிள் → பீள் → பீடு = வலிமை, பெருமை. பீடு → பீட்டகம் = பெருமை தரத்தக்க பணி]

பீட்டன் *piṭṭaṉ,* பெ. (n.) **1.** இரண்டாம் பாட்டன் (வின்.); great grand father **2.** இரண்டாம் பேரன்; great grandson. **3.** பாட்டன் (யாழ்.அக.); grand father.

பீட்டன்பாக்கு *piṭṭaṉpākku,* பெ. (n.) சாயப் பாக்கு வகை; a kind of prepared areca-nut.

பீட்டி *piṭṭi,* பெ. (n.) பாட்டி (யாழ்.அக.); grand mother.

[பீட்டன் (ஆ.பா.) – பீட்டி (பெ.பா.)]

பீட்டு *piṭṭu,* பெ.அ. (adj.) பொட்டலான (தரிசான); uncultivable (P.T.L.)

[பீடு → பீட்டு]

பீட்டை *piṭṭai,* பெ. (n.) **1.** பயிரின் இளஞ்சூல் (பிங்.); rudimentary stage in the formation of grain. **2.** முதலறுவடையின் பின்னுள்ள பயிரின் இளங்கதிர் (வின்.); tender ear of grain after the first harvest.

[புள் → (பிள்) → பீள் = இளங்கதிர், இளமை. பூட்டை = இளங்கதிர். பூட்டை → பீட்டை (மு.தா. 48)]

பீடணம் *pīḍaṇam,* பெ. (n.) அச்சம், நடுக்கம்; fear, horror.

[பே → பீ = அச்சம். பீ → பீர் = அச்சம். பீர் → பீலு = அச்சம். பீர் → (பீரணம்) → பீடணம்]

பீடபூமி *pīḍabūmi,* பெ. (n.) உயர்ந்தும் பரந்தும் காணப்படும் நிலப்பாகம் (இ.வ.); plateau, tableland

[பீடம் + பூமி]

Skt. bhūmi > த. பூமி

பீடம் *pīḍam,* பெ. (n.) **1.** இருக்கை (ஆசனம்); seat, stool, chair, raised seat. பீடஞ் செய் தாமரையோன் (திருக்கோ. 129.) **2.** மேடை; platform, dais பொழிவு(பிரசங்க)ப் பீடம். **3.** அரியணை (சிங்காதனம்); throne செம்பொற் பீடத்திருந்து (கம்பார. கும்பகர்ண. 6.) **4.** காவு(பலி)பீடம்; alter. **5.** சிலை வைப்பிடம் (விக்கிரகபீடம்); pedestal ஸ்ரீபாத பீடத்துக்கு மேல் (S.I.I.II.135,7) **6.** குறைவட்டத்தின் எஞ்சிய பகுதி (வின்.); complement of a segment **7.** குதம், பிட்டம் (யாழ்.அக.); anus.

[பு ள் → (பிள்) → பிண்டு → பிண்டம் = திரட்சி. (மு.தா.51).புள் → பிள் → பீடு → பீடம் = திரண்டது, உயர்ந்தது, உயர்ந்து அமையும் இருக்கை]

பீடமம் *pīḍamam,* பெ. (n.) முள்துளசி; thorny holy basil.

பீடர் *pīḍar,* பெ. (n.) பெருமையுடையவர்; persons of eminence. *'ஓடாப்பீட ருள்வழி யிறுத்து'* (பதிற்றுப். 45. 14.)

[பீடு → பீடர். 'அர்' ப.பா.ஈறு]

பீடரம் *pīḍarm,* பெ. (n.) கோயில் (அக.நி.); temple, place of worship.

[புள் → பிள் → பீடு → பீடம் → பீடரம்]

பீடன்பாக்கு *pīḍaṉpākku,* பெ. (n.) சேரநாட்டினின்று வரும் துவர்ப்புச்சத்து மிகுதியாயுள்ள பாக்கு; a kind of arecanut

பீடி–த்தல் *pīḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) துன்புறுத்துதல்; to give pain, afflict, annoy, exert evil influence.

[புள் → பொள் → பொளபொள. பொள பொளத்தல் = நெகிழ்தல். புள் → பிள் → பிடு → பீடு = குழைவு, துன்பம். பீடு → பீடி –,]

பீடிகை[1] *pīḍigai,* பெ. (n.) **1.** இருக்கை, பீடம் (பிங்.); seat, stool, bench. **2.** தேர் முதலியவற்றின் தட்டு; pedestal, seat, as of a car கிளர் பொற் பீடிகை (சீவக. 2213) **3.** அரியணை; throne, செம்பொற் பீடிகை கோமக னேறி (சிலப். 27, 156.) **4.** தவத்தோர் பீடம்; seat for an ascetic **5.** பீடிகைத் தெரு பார்க்க (பிங்.); see pīḍigai-t-teru **6.** முகவுரை (கொ.வ.); introduction.

[பு ள் → (பி ள்) → பி ண் டு → பிண்டம் = திரட்சி. புள் → பிள் → பீடு → பீடம் = இருக்கை, மேடை. பீடம் → பீடிகை]

பீடிகை[2] *pīḍigai,* பெ. (n.) **1.** பூந்தட்டு (பிங்.); flower trey. **2.** பூண் கொள்கலம் (திவா.); jewel-casket.

[பிழா → பிழவு → பிடவு → பிடகு → பிடகை = பூந்தட்டு. (வ.வ. 41) பிடகை → பீடிகை]

பீடிகைக்கவிகை *pīḍigai-k-kavigai,* பெ. (n.) முள்ளந் தண்டு எலும்பிலுள்ள பள்ளம்; hallow of sacrum.

[பீடிகை + கவிகை. கவி → கவிகை]

பீடிகைச்சந்து *pīḍigai-c-candu,* பெ. (n.) முதுகுத் தண்டு இணையுமிடத்திலுள்ள இடைவெளி; sacro ilac symphysis.

[பீடிகை + சந்து]

பீடிகைச்சந்துப்பொருத்து *pīḍigai-c-candu-p- pouruttu,* பெ. (n.) முள்ளந்தண்டும் இடுப்பெலும்பும் இணையுமிடம்; sacro ilac symphysis.

[பீடிகை + சந்து + பொருத்து]

பீடிகைத்தெரு *pīḍigai-t-teru,* பெ. (n.) கடைவீதி; market, bazaar. 'பீடிகைத்தெருவும்' (மணிமே. 4, 38.)

[பீடிகை[1] + தெரு]

பீடிகைநரம்பு *pīḍigai-narambu,* பெ. (n.) இடுப்படி முக்கோண மூட்டெலும்பையும் முள்ளந்தண்டையுங் இணைக்கும் நரம்புகள்; sacral nerves.

[பீடிகை + நரம்பு]

பீடிகைபுச்சபந்தினி *pīḍigai-pucca-pandiṉi,* பெ. (n.) முதுகெலும்பு இடுப்பெலும்பு முதலானவற்றின் கட்டுநார்; sacro coccygial ligament.

[பீடிகை + புச்சபந்தினி]

பீடிகையென்பு *pīḍigai-y-eṉbu,* பெ. (n.) முள்ளந்தண்டின் கீழ்ப்பகுதியில் முக்கோண வடிவில் அமைந்த ஐந்து எலும்புகள்; sacrum.

[பீடிகை + என்பு. எலும்பு → என்பு]

பீடிப்பு *pīḍippu,* பெ. (n.) துன்பம்; distress, affliction, evil influence. ***'பீடிப்புறு புண்ணுடலோடு பெயர்த்தார்'*** (கம்பரா. அதிகாயன். 253.)

[பீடி → பீடிப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

பீடிலிகைவாரி *pīḍiligaivāri,* பெ. (n.) கோயிலதிகாரிகளுள் ஒருவன்; an officer of a temple. (I.M.P.Tj. 672)

[பீடிலிகை + வாரி]

பீடு[1] *pīḍu,* பெ. (n.) 1. பெருமை; greatness ***'பீடுகெழு செல்வ மரீஇய கண்ணே'*** (பதிற்றுப். 50, 26.) 2. வலிமை; might, strength ***'நண் ணாரு முட்குமென் பீடு'*** (குறள், 1088.)

தெ. பீரு

[புல் → பொல்லு = தடி.புள் → (பிள்) → பிண்டு → பிண்டம் = திரட்சி. (மு.தா. 51) புள் → பிள் → பீள் → பீடு]

பீடு[2] *pīḍu,* பெ. (n.) 1. பொட்டல்(தரிசு) நிலம்; waste, uncultivated land; inferior soil (C.G.) 2. குறைவு (வின்.); decay, deficiency, scarcity 3. தாழ்வு; inferiority, lowness. ***'இந்தச் சரக்குப் பீடானது'*** (சென்னை.)

க., தெ. பீடு

[வீழ் → பீழ் → பீள் → பீடு. வீழ்தல் = விழுதல், தாழ்வாதல், பயனற்றுபோதல், குறைவுடையதாதல்]

பீடு[3] *pīḍu,* பெ. (n.) துன்பம் (வின்.); sorrow.

[புள் → பொள் → பொளபொள. பொளபொளத்தல் = நெகிழ்தல், ஒழுகுதல். புள் → பிள் → பிடு → பீடு]

பீடு[4] *pīḍu,* பெ. (n.) (அரு.நி.141.) 1. குழைவு; pliability. 2. ஒப்பு; similarity.

[புள் → பிள் → பிடு → பீடு]

பீடுகாடு *pīḍukāḍu,* பெ. (n.) பொட்டல்(தரிசு) நிலம்; uncultivable land. (R.T)

[பீடு + காடு. கடு → காடு]

பீடுகாலம் *pīḍu-kālam,* பெ. (n.) வறற்கடைக் காலம் (வின்.); time of scarcity.

[பீடு + காலம்]

பீடுநடை *pīḍu naḍai,* பெ. (n.) பெருமிதமான நடை; proud bearing, majestic gait. வெற்றிப் பெற்றுப் பீடு நடையோடு விளையாட்டு வீரர்கள் நாடு திரும்பினர் (உ.வ.)

[பீடு + நடை. நடு → நடை] .

பீடுநிலம் *pīdunilam,* பெ. (n.) பயிரிடாமல் கரம்பாயுள்ள வயல்; uncultivated land.

[பீடு + நிலம்]

பீத்தரு *pittaru,* பெ. (n.) *பீத்தாரு* பார்க்க; see *pittāru.*

[பீ + தரு]

Skt. taru > **த.** தரு

பீத்தல்[1] *pittal,* பெ. (n.) *பீற்றல்* பார்க்க; see *pirral.*

[பீற்றல் → பீத்தல்]

பீத்தல்[2] *pittal,* பெ. (n.) தற்பெருமைப் பேச்சு; swagger, boast.

[பில் → பீல் → பீர் = ஒரு பீச்சு. பீல் → பீற்று → பீற்றல் = நீர்ப்பொருள்வேகமாக வெளியேறுதல். பீற்று → பீத்து. பீற்றல் → பீத்தல் = நீர்ப்பொருள் தொடர்ந்து வெளியேறுதல் போல தன்னைப் பற்றி மிகுதியாகச் சொல்லுதல்]

பீத்தல்புடல் *pittal-pudal,* பெ. (n.) உடல் வலியற்றவன்; lit; hollow sponge-gourd. a person of weak constitution.

[பீத்தல் + புடல். பீறு → பீற்றல் → பீத்தல். பீற்று → பீத்து. புள் → (புழு) → புழல் → புடல் = உட்டுளையுடையது. பீத்தல் புடல் = கிழிந்ததும் உள்ளீடு இல்லாததுமானது, வலுவற்றது, வலுவற்ற உடம்பினைக் கொண்டான்.]

பீத்தாரு *pittāru,* பெ. (n.) பெருமரம்; a tree with bad odour.

[பீ + தாரு.]

Skt. taru> **த.** தாரு

பீத்தாருசருமம் *pittāru-šarumam,* பெ. (n.) பெருமரத்துப்பட்டை; bark of bad odour tree.

[பீத்தாரு + சருமம்]

Skt. carman> **த.** சருமம்.

பீத்தாளி *pittāli,* பெ. (n.) மருந்துச்செடி வகையுளொன்று; a kind of medicinal plant.

பீத்து[1]**–தல்** *pittu-,* 5 செ.கு.வி. (v.i.) *பீற்று–தல்* (கொ.வ.) பார்க்க; see *pirru-,*

[பீல் → பீற்று → பீத்து–,]

பீத்து[2] *pittu,* பெ. (n.) *பீத்தல்*[2] பார்க்க; see *pittal.*

[பீற்று → பீத்து.]

பீத்தும்பை *pittumbai,* பெ. (n.) தும்பை வகையுளொன்று; dung tumbay.

[பீ + தும்பை]

பீத்துவிளா *pittuvilā,* பெ. (n) விளா; wood-apple.

[பீத்து + விளா]

பீத்தோல் *pittōl,* பெ. (n.) மேற்றோல் (இ.வ.); epidermis.

தெ. பீதோலு

[மீத்தோல் → பீத்தால்]

பீதகசுரம் *pīdagašuram,* பெ. (n.) காய்ச்சல் வகையுளொன்று; a kind of fever.

[பீதகம் + சுரம்]

பீதகசுருள் *pīdagasuruḷ,* பெ. (n.) வெற்றிலை; betel.

[பீதகம் + சுருள்]

பீதகட்டம் *pīdakaṭṭam,* பெ. (n.) சந்தனம்; sandal.

பீதகதலி *pīdakadali,* பெ. (n.) செவ்வாழை (மலை.); red banana.

[பீதம் + கதலி. குதலி → கதலி = சிறு வாழைக்காய்]

பீதகந்தகம் *pīdakandagam,* பெ. (n.) நான்கு வகைக் கந்தகத்துள் ஒன்று; one of the four kinds of sulphur.

[பீத + கந்தகம்]

பீதகபத்திரம் *pīdaga-pattiram,* பெ. (n.) சிறிய முள்ளங்கியிலை; small radish leaf.

[பீதக + பத்திரம்]

Skt. patra > த. பத்திரம்

பீதகம் *pīdagam,* பெ. (n.) இருவேலி; cuscus root.

பீதகல் *pīdagal,* பெ. (n.) *பீதகலிகம்* பார்க்க; see *pīdakaligam.*

[பீதகலிகம் → பீதகல்]

பீதகலிகம் *pīdakaligam,* பெ. (n.) கண்ணோய் மருந்து வகையுள் ளொன்று; a kind of eye-disease plant.

பீதகவாடை *pīdagavāḍai,* பெ. (n.) *பீதாம்பரம்* பார்க்க; see *pīdāmbaram 'பீதகவாடைப் பிரானார்'* (திவ். பெரியாழ். 5, 2, 8)

பீதகற்றாழை *pīdakaṟṟāḻai,* பெ. (n.) மருட்கற்றாழை; a kind of aloe

பீதகாட்டம் *pīdakāṭṭam,* பெ. (n.) செஞ்சந்தனக்கட்டை; red sandal wood.

பீதகாண்டகம் *pīdakāṇḍagam,* பெ. (n.) செம்முள்ளி; a red variety thorny shrub.

பீதகாபேரம் *pīdakābēram,* பெ. (n.) **1.** குடவம் (பித்தளை); brass. **2.** மஞ்சள் நிறம்; yellow colour.

பீதகாரகம் *pīdakāragam,* பெ. (n.) வேங்கை மரம்; kino tree.

மறுவ. செம்புளிச்சை

பீதச்சா *pīdaccā,* பெ. (n.) நந்தியாவட்டம்; a plant with white flowers.

பீதநி *pīdani,* பெ. (n.) மூவிலைப் புன்னை; a kind of Alexandrian laurel tree.

பீதப்பெண் *piidappeṇ,* பெ. (n.) குங்கும வைப்பு நஞ்சு; a kind of prepared arsenic.

பீதபத்திரம் *pīdapattiram,* பெ. (n.) மலைக்காசினிச் செடி; a kind of mountain-ous plant.

பீதம்[1] *pīdam,* பெ. (n.) (பொதி. நி.) **1.** பன்றி; pig. **2.** எலி; rat.

பீதம்² *pīdam,* பெ. (n.) **1.** அசோகு; Asoka tree. **2.** சடைச்சிச் செடி; a plant.

பீதம்³ *pīdam,* பெ. (n.) அச்சம் (வின்.); fear, dread.

[பே → பேய் = அச்சம், அஞ்சப்படும் ஆவி. பே → பீ (வ.வ.42)= அச்சம். பீ → பீதம்]

த. பீதம் > Skt. bhīta.

bhīta என்னும் சொல்லிற்கு bhī என்பதையே வேர்மூலமாக மா.வி. அகரமுதலி குறித்துள்ளதைக் காண்க

பீதமுண்டம் *pīdamuṇḍam,* பெ. (n.) தூக்கணாங் குருவி; pendulus or loxia bird.



பீதனகம் *pīdaṉagam,* பெ. (n.) புனம்புளி; a herbal plant.

பீதனம் *pīdaṉam,* பெ. (n.) கடுக்காய்; Indian gall nut.

பீதாந்தலைக்கொடி *pīdāntalai-k-koḍi,* பெ. (n.) படர்கொடி வகை; a kind of creeper.

பீதி *pīdi,* பெ. (n.) **1.** அச்சம் (சூடா.); fear "பீதியன்றி... நலிந்தனர்" (உத்தறா. அரக்கர்.31) **2.** நோவு தரும் நோய் (திவா.); painful disease.

[பே → பீ → பீதி.]

த. பீதி > Skt. bhīti

பீதூங்கிதசுரம் *pītūṅgidaśuram,* பெ. (n.) காய்ச்சல் வகையுளொன்று; a kind of fever.

பீந்து–தல் *pīndu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கொடுத்தல் (அக.நி.); to give.

[பீற்றுதல் = நீரை வேகமான வெளியேற்று தல். பீற்று → பீத்து. பீத்து → பீந்து. பீந்துதல் = வெளியேற்றுதல், கொடுத் தல்.]

பீந்தோல் *pīn-tōl,* பெ. (n.) மீந்தோல் (நன்.178, சங்கர நமச்.); epidermis, superficial skin.

[மீந்தோல் → பீந்தோல். இனி பிய்க்குந் தோல்→பீந்தோல் எனினுமாம்.]

பீநக்கி *pīnakki,* பெ. (n.) நாக்குப் பூச்சி (சங்.அக.); thread-worm.

[பீ + நக்கி. நக்கு → நக்கி. 'இ' வினை முதலீறு]

பீநண்டு *pīnaṇḍu,* பெ. (n.) நண்டுவகை; common crab, found in holes in moist ground. (M.M. 602.)

[பீ + நண்டு. நொள் → நொண்டு → நெண்டு.நெண்டுதல் = தோண்டுதல். நொண்டு → நண்டு. வண்டலிலும் மணலிலும் கிண்டினாற் போற் கீறிச்செல்லும் நீருயிரி]

பீநாற்றமரம் *pī-nāṟṟa-maram,* பெ. (n.) *பீநாறி4* (சங்.அக.) பார்க்க; see *pī-nāṟi 4.*

[பீ + நாற்றம் + மரம்]

பீநாறி *pī-nāṟi,* பெ. (n.) 1. நீண்டமரவகை; fetid tree. 2. சிறுமரவகை; woolly-leaved fire-brand teak. 3. சிறுமர வகை; beak-drooped Nilgiri. 4. பெருமரம்; toothed-leaved tree. of heaven. 5. *பீ²,* 2 பார்க்க; see *pī²* 2.

[பீ + நாறி. நாறு → நாறி. 'இ' வினை முதலீறு]

பீநாறிச்சங்கங்குப்பி *pīnāṟi-c-caṅ gaṅguppi,* பெ. (n.) *பீநாறிச் சங்கு* பார்க்க; see *pī-nāṟi-c-caṅgu.*

[பீ + நாறி + சங்கம் + குப்பி]

பீநாறிச்சங்கு *pī-nāṟi-c-caṅgu,* பெ. (n.) சங்கங்குப்பி (வின்.); smooth volkameria.

[பீநாறி + சங்கு]

பீநாறிப்பட்டை *pīnāṟippaṭṭai,* பெ. (n.) பெருமரத்துப்பட்டை; bark of sterculia.

[பீநாறி + பட்டை]

பீநாறிப்பாக்கு *pīnāṟi-p-pākku,* பெ. (n.) பாக்கு வகை (இ.வ.); a kind of prepared arecanut of bad odour but pleasant taste.

[பீநாறி + பாக்கு]

பீநாறியெண்ணெய் *pināṟi - y-ēṇṇey,* பெ. (n.) பெருமரவித்து முதலானவற்றிற் காய்ச்சிய மருந்தெண்ணெய்; medicated oil prepared with sterculia foetida.

[பீநாறி + எண்ணெய்]

பீப்பாக்கு *pī-p-pākku,* பெ. (n.) இளம் பாக்கு (யாழ்.அக.); green tender arecanut.

[பீள் + பாக்கு. புள் → (பிள்) → பீள் = இளங்கதிர், இளமை]

பீபீயாக்கு-தல் *pī-pī-y-ākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) காரியத்தில் மேற்செல்ல வொட்டாதபடி கெடுத்தல் (இ.வ.); to reduce one to a state of nonplus.

[பீ² + பீ² + ஆக்கு-,]

பீமசாரி *pīmaśāri,* பெ. (n.) மதகரி வேம்பு; cedrela torna.

பீமரம் *pī-maram,* பெ. (n.) *பீ 3* பார்க்க; see *pī 3.*

[பீ + மரம்]

பீமூக்குமரம் *pīmūkku - maram,* பெ. (n.) *பீமரம்* பார்க்க; see *pīmaram.*

[பீமூக்கு + மரம்]

பீயங்கன் *piyaṅgaṉ,* பெ. (n.) இதளியம்; mercury.

பீயாக்கு-தல் *pi-y-ākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) அழிவுண்டாக்குதல் (இ.வ.); to damage.

[பீ + ஆக்கு –, ஆகு (த.வி.) - ஆக்கு (பி.வி.)]

பீயால் *piyāl,* பெ. (n.) *பீயாலம்* பார்க்க; see *piyālam.*

[பீ + ஆல்]

பீயாலம் *piyālam,* பெ. (n.) காட்டுமாங்காய்ப் பருப்பு; wild mango pulp.

மறுவ. சாரப்பருப்பு.

[பீ + ஆலம்]

பீயை *piyai,* பெ. (n.) முடைநாற்ற மிக்க சணல்; a kind of hemp.

[பீ → பீயை]

பீர்[1] *pir,* பெ. (n.) 1. பீர்க்கு (தொல்.எழுத். 363.); sponge-gourd. 2. மரவகை (தொல்.எழுத். 363, உரை); a kind of tree.

க. கீர்

[புல்லுதல் = துளைத்தல். புல் → புர் → புரை = உட்டுளைப் பொருள். புள் → பிர் → பீர்]

பீர்[2] *pir,* பெ. (n.) 1. பெண்டிர்க்குக் காம நோயாலுண்டாகும் பசலை நிறம் (சூடா.); pale colour of a love-sick woman. முலைகள் பீர் கொண்டதும் (தேவா. 835, 5.) 2. வெளுப்பு; whiteness. மனிசர்க் காகும் பீர் (திவ். திருவாய். 1, 5, 8)

[புல் → பில் → பிர் → பீர் = பீர்க்கம் பூவின் வெளிறிய நிறம், அதனையொத்த பசலை நிறம். பீர்பூத்தல் பார்க்க]

பீர்[3] *pir,* பெ. (n.) 1. பெருக்கு; abundant, flow. "குருதி பீர்விட" (உபதேசகர். விபூதி. 38). 2. முலைப்பால் (சூடா.); milk, flowing from a woman's breast.

பீர்[4] *pir,* பெ. (n.) ஒரு பீச்சு, பீச்சப்பட்டது; that which is dischanged at one squirt or squeeze.

[புர் → பில் → பிலிற்று. பிலிற்றுதல் = சிந்துதல், பீச்சுதல். பில் → பீல் → பீர் = ஒருபீச்சு (மு.தா. 2. 102)]

பீர்[5] *pir,* பெ. (n.) அச்சம் (சூடா.); fear.

[பேதல் = அஞ்சுதல். பே → பேய் = அஞ்சப்படும் ஆள் அல்லது தோற்றம். பே → பீ. ஒ.நோ. பேத்து → பீத்து. பீ → பீர்]

பீர்க்கங்காய் *pirkkankāy,* பெ. (n.) கறிப்பீர்க்கு; ridge gourd.

[பீர்க்கு + அம் + காய்]

பீர்க்கங்காரம் *pirkkankāram,* பெ. (n.) *பீர்க்கங்காய்* பார்க்க; see *pirkkankāy.*

[பீர்க்கங்காய் → பீர்க்கங்காரம்]

பீர்க்கங்கூடு *pir-k-kan-gūḍu,* பெ. (n.) பீர்க்கின் உள்ளீடற்ற மேற்றோடு; hollow pod of the sponge-gourd. பீர்க்கங்கூட்டின் மூன்று கண்ணும் போல (சிலப். 3. 20, உரை)

[பீர்க்கு + அம் + கூடு. பீர் → பீர்க்கு. குள் → கூள் → கூண்டு → கூடு. 'அம்' சாரியை]

பீர்க்கு *pirkku,* பெ. (n.) கொடிவகை (திவா.); sponge gourd, strainer-vine.

தெ. பீரகாய

[பீர் → பீர்க்கு]

பீர்ச்சல் *pirccal,* பெ. (n.) *பீச்சல்* பார்க்க; see *piccal.*

[பில் → பீல் → பீர் = ஒரு பீச்சு. பீர் → பீர்ச்சல். 'அல்' தொ.பெ.ஈறு]

பீர்ச்சாங்குழல் *pirccān-guḻal,* பெ. (n.) பீச்சாங்குழல் (யாழ்.அக.); syringe.

[பில் → பீல் → பீர்ச்சு + அம் + குழல். குள் → குழை → குழல். 'அம்' சாரியை]

பீர்ச்சு¹–தல் *pirccu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பீரிடச்செய்தல்; to cause streaming as in blood.

[பீள்→ பீ → பீச்சு → பீர்ச்சு–,]

பீர்ச்சு²–தல் *pirccu,* 5 செ.கு.வி. (v.i.) *பீச்சு¹–தல்* பார்க்க; see *piccu¹–,*

[பில் → பீல் → பீர் → பீர்ச்சு]

பீர்ச்சு³–தல் *pirccu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *பீச்சு²–தல்* பார்க்க; see *piccu²-*

[பில் → பீல் → பீர் → பீர்ச்சு]

பீர்த்தட்டி *pirttaṭṭi,* பெ. (n.) மிகு சுரத்துடன் கூடிய இசிவு நோய்; a delirious fever marked by high temperature.

பீர்தங்கு–தல் *pirtaṅgu,* 5 செ.கு.வி. (v.i.) *பீர்பூ–த்தல்* பார்க்க; see *pirpū-,*

[பீர் + தங்கு –,]

பீர்பீராய் *pirpir-āy,* வி.அ. (adv.) தாரை தாரையாய்; in streams. அரத்தம் பீர்பீராய் பாய்ந்து கொண்டிருந்தது.

[பீர் + பீர் + ஆய்]

பீர்பூ–த்தல் *pirpū-,* 4 செ.கு.வி. (v.i.) காமநோயால் பீர்க்கம்பூப்போல உடல் பசத்தல்; to grow pale through love-sickness, resembling in colour the sponge-gourd flower. பெய் வளை..... நன்னலம் பீர்பூப்ப (பு.வெ.12, இருபாள், 18.)

[பீர் + பூ –,]

பீர்மாந்தம் *pirmāndam,* பெ. (n.) குழந்தைகட்கு ஏற்படும் வயிற்றுப் போக்கு நோய்; a diarrhoea in children characterised by milky white motions.

பீர்மோதினி *pirmōdiṉi,* பெ. (n.) மல்லிகை; jasmine.

பீர்விடு—தல் *pirviḍu,* 20 செ.கு.வி. (v.i.) பெருக்கெடுத்தல்; to stream forth. "குருதி பீர்விட மறுகிடைக் கிடக்கலும்" (உபதேசகா. விபூதி. 38.).

[பீர் + விடு–,]

பீரம்¹ *piram,* பெ. (n.) 1. பீர்க்கு; sponge gourd. 2. பசலை நிறம்; paleness through love-sickness. பீரமு கோயு மாறின் (கல்லா. 32, 24.) 3. பூவரசு (அக.நி.); portia tree. 4. வாகை (அக.நி.); siris.

[பீர் → பீரம்]

பீரம்² *piram,* பெ. (n.) தாய்ப்பால்; mother's milk. பீரம் பேணிற் பாரந் தாங்கும் (கொன்றைவே.)

[பீர் → பீரம்]

பீரெனல் *pireṉal,* பெ. (n.) விரைந்து பாய்தற் குறிப்பு; onom. expr. of streaming. பீரென ரத்தமிறங்கிட (இராமநா. உயுத். 57.)

[பீர் + எனல்]

பீரை *pirai,* பெ. (n.) பீர்க்கு; sponge-gourd. பீரை நாறிய சுரையிவர் மருங்கின் (புறநா. 116.)

க. ந̤ீரெ; தெ. பீர

[பீர் → பீரை]

பீரோடு—தல் *pirōḍu,* 5 செ.கு.வி. (v.i.) முலைப்பால் வெளிப்படுதல்; to stream out, as milk. மன்னுதிரு முலைப்பால்கள் பீரோட (அரிசமய. பராங்குச. பக். 91)

[பீர் + ஓடு–,]

பீல் *pil,* பெ. (n.) முலைப்பாலின் பீச்சு; guantity of milk that gushes out a single squeeze of the udder பிள்ளைப் பாலில் இரண்டு பீல்கொடு (இ.வ.)

[புல் → பில் → பிலிற்று. பிலிற்றுதல் = சிந்துதல், பீச்சுதல். பில் → பீல் (மு.தா. 2, 102)]

பீலகம் *pilagam,* பெ. (n.) எறும்பு; ant.

பீலகயம் *pilagayam,* பெ. (n.) செந்தழை மருந்து; shrub, a reddish yellow varietey of pandanus.

பீலாழி *pilāḻi,* பெ. (n.) காற்பீலி வகை; a kind of toe-ring. *"காலாழி பீலாழி"* (கோவ. க. 26.)

[புல் → (பீலி) → ஆழி]

பீலி¹ *pili,* பெ. (n.) 1. மயிற்றோகை; peacock's feather. பழன மஞ்சை யுகுத்த பீலி (புறநா. 13) 2. மயில் (பிங்.); peacock. 3. சிற்றால வட்டம் (பிங்.); peacock-fan, circular fan. 4. வெண்குடை (அரு.நி.); white umbrella.

ம., க., து. பீலி

[புல் → பில் → பிலி. பிலிற்றுதல் = தூவுதல், உதிர்த்தல். பிலி → பீலி =

உதிர்க்கப் படும் தோகை, தோகையை உடைய பறவை, மயிற் றோகையால் செய்யப்பட்ட விசிறி, மென் தோகையால் செய்யப்பட்ட குடை]

பீலி² *pīli,* பெ. (n.) **1.** பொன் (அக.நி.); gold. **2.** மகளிரிடும் கால்விரலணி (சிலப். **6, 83,** உரை); toe-ring of a woman. **3.** சிறு சின்னம்; small trumpet பீலி காகளம் (கந்தபு. சூரப. இரண்டாநாள் யுத். **20) 4.** இசைக்கருவிப் பொது (திவா.); musical insturment. **5.** பெருஞ் சவளம் (பிங்.); large lance. **6.** மலை (பிங்.); mountain. **7.** மதில் (யாழ்.அக.); fortification, wall of a fort. **8.** நத்தையோடு (சங்.அக.); shell of conch.

க. பிலி.

[புல் → பூல் → பூ = பொலிவு, அழகு. புல் → பொல → பொலிவு. பொல் → பொற்பு. பொல்லுதல் = பொலிதல். பொல் → பொலம் → பொலன். பொல் → பொன் = பொலிவு, அழகு, பொலியும் தங்கம். புல் → பில் → பீல் → பீலி]

பீலி³ *pīli,* பெ. (n.) **1.** பனங்குருத்து (யாழ்.அக.); the first leaf or shoot of a palmyra. **2.** பனங்கிழங்கின் உட்குருத்து (வின்.); heart of the palmyra root, being the embryo of the future leaf; palmyra sprout. **3.** நீர்பாய் தொட்டி (வின்.); water trough or spout for irrigation. **4.** பந்தயமுறி (யாழ்ப்.); dice for casting lots.

[பீலி¹ → பீலி³]

பீலிக்கண்¹ *pīli-k-kaṇ,* பெ. (n.) மயிற்றோகைக் கண் (ஈடு, 2, 2, 1, ஜீ); peacock-eye, the ocellus on a peacock's feather.

[பீலி + கண்]

பீலிக்கண்² *pīli-k-kaṇ,* பெ. (n.) *பீலிப்பிச்சம்* பார்க்க; see *pīli-p-piccam "பீலிக் கண்ணும் ஸ்நேஹிகளாயிருப்பார் கண்களு மிறே சாத்துவது"* (திவ். பெரியாழ். **1, 9, 5.** வ்யா. பக் **191.**)

[பீலி + கண். கள் → கண்]

பீலிக்கினி *pīlikkiṉi,* பெ. (n.) சிவதைச் செடி; a plant with purgative effect.

பீலிக்குஞ்சம் *pīli-k-kuñjam,* பெ. (n.) அணி செயப்பட்ட தூக்கம் (சூடா.); decorative hangings.

[பீலி + குஞ்சம்]

பீலிக்குடை *pīli-k-kuḍai,* பெ. (n.) **1.** மயிற்றோகையாலான குடை (சீவக. **860.** உரை); umbrella made of peacock's feathers. **2.** மயிற்குஞ்சம் (வின்.); bunch of peacock's feahers.

க. பீலிதழெ

[பீலி + குடை. குள் → குழை = துளை. குழை → குடை]

பீலிக்கொட்டு *pīli-k-koṭṭu,* பெ. (n.) நீர்பாய் தொட்டி (வின்.); water trough.

[பீலி + கொட்டு]

பீலிகம் *piligam*, பெ. (n.) **1.** மண்ணீரல்; spleen. **2.** வயிற்றினிடதுபுறம் உள்ள இறைச்சிக்கட்டி; an abdominal organ situated in the left hypochonderic region.

பீலிகவூதை *piliga-vūdai*, பெ. (n.) மண்ணீரல் கெடுதியால் வரும் ஊதைநோய்; a kind of disease of the spleen.

பீலிகை *piligai*, பெ. (n.) மண்ணீரலில் ஏற்படும் நோய்; a disease of the spleen.

[பீலிகம் → பீலிகை]

பீலிகைக்கட்டி *piligai-k-katti*, பெ. (n.) வயிற்றை உப்பச்செய்து ஒக்களித்து பசியைக் குறைக்கும் மண்ணீரல் நோய்; enlargement of spleen attended with loss of appetite, big abdomen vomit etc.

[பீலிகை + கட்டி]

பீலிகோதாரம் *pilikōdāram*, பெ. (n.) மண்ணீரல் வீங்கி, வயிறு பெருத்துக் காணுமோர் நோய்; enlargement of the spleen with dropsy of the abdomen.

[பீலிகை + உதரம்]

பீலிடு–தல் *piliḍu-*, 17 செ.கு.வி. (v.i.) *பீரிடு¹–தல்* பார்க்க; see *piriḍu¹–*

[புல் → பில் → பிலிற்று. பில் → பீல் = பீச்சு. பீல் + இடு–,]

பீலித்தண்டு *pili-t-tanḍu*, பெ. (n.) பிண்டிபாலம் (பிங்.); a missile weapon.

[பீலி + தண்டு. தூள் → தள் → தண்டு]

பீலிப்பட்டை *pili-p-paṭṭai*, பெ. (n.) பெரிய இறைகூடை (வின்.); a large basket for baling water.

[பீலி + பட்டை]

பீலிப்பிச்சம் *pili-p-piccam*, பெ. (n.) மயிலிறகு (திவ். பெரியாழ். 1, 9, 5. வ்யா, பக், 191.); peacock's feather.

[பீலி + பிச்சம்]

பீலிப்பிஞ்சம் *pili-p-piñjam*, பெ. (n.) *பீலிப்பிச்சம்* (திவ். பெரியாழ். 1, 9, 5, வ்யா. பக், 191.) பார்க்க; see *pili-p-piccam*.

[பீலி + பிஞ்சம்]

பீலிபோடு–தல் *pili-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) பந்தயமுறியிடுதல் (யாழ்ப்.); to cast lots.

[பீலி + போடு–,]

பீலியார் *piliār*, பெ. (n.) அருகர் (சமணர்); Jains.

[பீலி → பீலியார் = மயிற் பீலியுடையார். 'ஆர்' ப.பா.ஈறு]

பீலிவாகை *pili-vāgai*, பெ. (n.) நீண்டமரவகை; saw tree.

[பீலி + வாகை]

பீலு[1] *pīlu,* பெ. (n.) அச்சம் (வின்.); fear.

[பீர் → பீல் → பீலு. பீர்[4] பார்க்க]

பீலு[2] *pīlu,* பெ. (n.) உகாய் மரம் (நாமதீப.326.); a tree.

பீலு[3] *pīlu,* பெ. (n.) உள்ளங்கை; palm of hand

பீலுகம் *pīlugam,* பெ. (n.) கரடி (யாழ்.அக.); bear.

[பீர் → பீல் → பீலு → பீலுகம் = அச்சம் தரத்தக்கது. பீருகம் பார்க்க]

பீவண்டு *pī-vaṇḍu,* பெ. (n.) வண்டு; dor, a lamellicorn beetle.

[பீ + வண்டு]

பீவேல் *pīvēl,* பெ. (n.) மரவகை; pulpy-podded black babul (L.)

பீவேலிகம் *pīvēligam,* பெ. (n.) வேலிப்பருத்தி; a twiner.

பீவை *pīvai,* பெ. (n.) நீர்; water.

பீழ்—தல் *pīḻ-,* 4 செ.குன்றாவி. (v.t.) பிடுங்குதல்; to uproot. பெருமரம் பீழ்ந்து கொண்டெற்றி (தேவா.185,9)

[பிள் → பிடு → பிடுங்கு. பிடுங்குதல் = பெயர்த்தல், பறித்தல். பிள் → பீள் → பீழ்]

பீழம் *pīḻam,* பெ. (n.) பீனாக்கி மரம்; a kind of tree.

பீழி—த்தல் *pīḻi-,* 11 செ.குன்றாவி. (v.t.) வருத்துதல்; to afflict, forment, give pain to. அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை (குறள்,843)

பீழை[1] *pīḻai,* பெ. (n.) மரவகை; a tree.

பீழை[2] *pīḻai-,* பெ. (n.) துன்பம்; distress, affliction, pain. பிரிவிண் கட் பீழைதருவ தொன்றில் (குறள்,839)

பீழைசாறல் *pīḻaišāṟal,* தொ. பெ. (vbl.n.) *பீளைசாரல்* பார்க்க; see *pīḷaišāral.*

[பீளை → பீழை + சாறல். சாரல் → சாறல்]

பீழைவச்சிரம் *pīḻaivacciram,* பெ. (n.) வடப்பூலா மருந்து; a kind of poolā shrub.

பீள் *pīḷ-,* பெ. (n.) 1. கரு; embryo, foetus. பீட்பிதுக்கிப் பிள்ளையை... கோடலான் (நாலடி,20) 2. இளங்கதிர் (பிங்.); tender ears of corn. கருந்தாள் போகி யொருங்குபீள் வரிந்து (புறநா.120) 3. இளமை (திவா.); tenderness.

[புள் → பிள் → பீள் = இளங்கதிர், இளமை (மு.தா.38)]

பீள்வாயு *pīḷvāyu,* பெ. (n.) கருப்ப வாயு; a disease of the uterus due to wind humour.

[பீள் + வாயு]

பீளல் *piḷal,* பெ. (n.) பெண்குறி (யாழ்.அக.); pudendum muliebre.

[பிள் → பீள் → பீளல்]

பீளை¹ *piḷai,* பெ. (n.) கண்மலம்; forming of rheum about the eys.

ம. பீள.

[பிள் → பீள் → பீளை (மு.தா.262]

பீளை² *piḷai,* பெ. (n.) கீரை வகையு ளொன்று; a plant.

பீளைக்கண் *piḷiaikkaṉ,* பெ. (n.) அழுக்குச் சேர்ந்து பீளை சாரும் கண்; bleared eyes.

[பீளை + கண்]

பீளைசாடுதல் *piḷaišāḍudal,* பெ. (n.) கண்மலம் பொங்குகை; forming of rheum about the eyes.

[பீளை + சாடுதல்]

பீளைசாரல் *piḷaišāral,* தொ. பெ. (vbl.n.) கண்ணில் பீளை கட்டல்; rheum in the eyes.

[பீளை + சாரல். சார் → சாரல்]

பீளைசாறி *piḷaišāṟi,* பெ. (n.) பூடுவகை (வின்.); a plant.

பீளைசாறுகை *piḷaišāṟugai,* பெ. (n.) *பீளை சாரல்* பார்க்க; see *piḷaišāral.*

[பீளை + சாறுகை. சாரல் → சாருகை → சாறுகை]

பீளைசாறுதல் *piḷaišāṟudal,* பெ. (n.) *பீளைசாடுதல்* (உ.வ.) பார்க்க; see *piḷaišaḍudal.*

[பீளைசாடுதல் → பீளைசாறுதல்]

பீளைசேர்தல் *piḷaišērdal,* பெ. (vbl.n.) *பீளை சாடுதல்* பார்க்க; see *piḷaišāḍudal.*

[பீளை + சேர்தல்]

பீளைதள்ளல் *piḷaitaḷḷal,* பெ. (n.) கண்ணோய் வகையுளொன்று; a kind of eye-disease.

[பீளை + தள்ளல்]

பீற்றல் *piṟṟal,* பெ. (n.) **1.** கிழியல்; rent, rip, slit. **2.** கந்தை; rag, tatter. **3.** கடனாளி; debtor.

[பீறு → பீற்று → பீற்றல்]

பீற்றல்பொத்து¹–தல் *piṟṟal-pottu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கிழிசலைப் பொருத்துதல்; to mend a rent.

[பீற்றல் + பொத்து–,]

பீற்றல்பொத்து²–தல் *piṟṟal pottu-,* செ.கு.வி. (v.i.) குறை நிரப்புதல்; to supply what is wanting.

[பீற்றல் + பொத்து—,]

பீற்று—தல் *pīṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) வீண்பெருமை பேசுதல் (கொ.வ.); to swagger, boast, hector.

[பிதற்று → பீற்று—,]

பீறிப்போடு—தல் *pīṟi-p-pōḍu,* 19 செ.குன்றாவி. (v.t.) தசை கிழியச் செய்தல்; to lacerate or tear in pieces.

[பீறி + போடு—,]

பீறு[1]—தல் *pīṟu-,* 5 செ.கு.வி. (v.i.) கிழிதல் (பிங்.); to be torn. பீறிற்றா மண்ட மென்பதோ ராகுலம் (கம்பரா. தேரேறு,33.)

ம. பீறு

[பிள் → பீள் → பீர் → பீறு]

பீறு[2]—தல் *pīṟu-,* 5செ.குன்றாவி. (v.t.) 1. கிழித்தல்; to tear, rip, slit. அல்குற் பூந்துகிற் கலாயம் பீறி (கம்பரா. ஊர்தே.189). 2. கீறுதல்; to lecerate, scratch. உகிர்(நகங்)களாற் பீறினான். 3. பிளத்தல்; to split.

[பிள் → பீள் → பீர் → பீறு]

பீறு[3] *pīṟu,* பெ. (n.) 1. கிழிவு (சங்.அக.); rent, tear. 2. பிட்டம், குதம் (யாழ்ப்.); anus.

[பிள் → பீறு]

பீறுண்டுசா—தல் *pīṟuṇḍu-sā-,* 19 செ.கு.வி. (v.i.) விலங்குகளினால் கிழிபட்டு இறத்தல்; to die of lacerated wounds caused by wild beasts, mauled by wild animals.

[பீறு + உண்டு + சா—, சாய் + சா.]

பீனக்கி *pīṉakki,* பெ. (n.) நாக்குப்பூச்சி; earth worm round-worm of the intestines.

[பீ + நக்கி]

பீனங்கன் *pīṉaṅgaṉ,* பெ. (n.) இதளியம்; mercury.

பீனம் *pīṉam,* பெ. (n.) வயிறு; belly.

பீனயக்கம் *pīṉayakkam,* பெ. (n.) விலை மலிந்த மட்டத்தேக்கான புரசமரம்; a tree, bastard teak.

பீனாறிப்பட்டை *pīṉāṟippaṭṭai,* பெ. (n.) பீநாறிப்பட்டை பார்க்க; see pināṟippaṭṭai.

[பீநாறிப்பட்டை → பீனாறிப்பட்டை]

பீனிசவ்விரை *pīṉišavvirai,* பெ. (n.) சீமை அவரை; a kind of lablab.

பு[1] *pu-,* 'ப்' என்ற மெய்யெழுத்தும் 'உ' என்ற உயிரெழுத்தும் இணைந்த உயிர்மெய் (அசை) எழுத்து; the syllable formed by adding the short vowel 'u' to the consonant 'p'

[ப் + உ]

பு[2] *pu,* இடை. (part.) **1.** தொழிற்பெயரீறு; suffix of verbal nouns, as in 'kalappu.' **2.** பண்புப் பெயரீறு; suffix of abstract nouns, as in 'māṉbu' **3.** இறந்த கால வினையெச்ச ஈறு; suffix of incomplete verbs of the past tense, as in 'ceybu'.

க. பு, வு.

எ–டு: உடை – உடைப்பு, கல – கலப்பு, எடு – எடுப்பு

மாண் – மாண்பு, செம் – செவப்பு (சிவப்பு), வெம் – வெப்பு

செய் – செய்பு, காண் – காண்பு, நோக்கு – நோக்குபு

புக்ககம் *pukkagam,* பெ. (n.) கணவன் வீடு. (குருபரம். பக். 358); the house into which a girl is married, opp. to piṟandagam.

மறுவ. புகுந்த வீடு.

[புழு → புகு + அகம். திருமணமான வுடன் பெண் கணவன் வீட்டிற்குச் செல்லும் மரபடிப்படையில் உருவான சொல்]

புக்கம்[1] *pukkam,* பெ.(n) விடியல்; day dawn.

[பகு → பக்கு = பிளப்பு. பக்கெனல் = வெடித்தற்குறிப்பு. பகு → பக்கு → பக்கம் → புக்கம் = இருளைப் பிளந்து ஒளி வரும் நேரம்]

புக்கம்[2] *pukkam,* பெ. (n.) அரத்தத்திலிருந்து கழிவுப்பொருளைப் பிரித்துச் சிறுநீராக்கி வெளியேற்றும் உறுப்பு; kidney

மறுவ. குண்டிக்காய், சிறுநீரகம்

[பகு → பக்கு = பை. பக்கு → பக்கம் → புக்கம் = சிறுநீர்ப்பை]



புக்கமால் *pukkamāl,* பெ. (n.) தொண் மணிகளுள் ஒன்றான பச்சைமணி (மரகதம்); one of the nine gems, emerald.

புக்கமாவு *pukkamāvu,* பெ. (n.) *புக்கை[2]* பார்க்க; see *pukkai[2]* குழந்தைக்குப் புக்கமாவு ஊட்டிவிட்டாயா? (உ.வ.).

[புகா → புக்கா → புக்கை → புக்க + மாவு]

புக்கரம் *pukkaram,* பெ. (n.) தொட்டிவைப்பு நஞ்சு; red orsenic.

புக்கரம்பை *pukkarambai,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tañjāvūr dt.

[புல் + கரம்பை. கர → கரம் → கரம்பு = கரிசல் நிலம். கரம்பு → கரம்பை]

புக்கன்சம்பா *pukkaṉ-sambā,* பெ. (n.) நெல்வகை; a kind of paddy.

புக்காத்து *pukkāttu,* பெ. (n.) சணல்நூல் வலை (இ.வ.); net made of flaxen cords.

[புகு → புக்கு + ஆத்து. சணல் நூல் இழைகள் புகுந்து ஆக்கப்பட்ட வலை]

புக்காம் *pukkām,* பெ. (n.) *புக்ககம்* (கொ.வ.) பார்க்க; see *pukkagam.*

மறுவ. புக்காத்து.

[புக்ககம்→ புக்காம். தொகுப்பு→ தோப்பு என இரு குறில் ஒரு நெடிலாகத் திரிந்தது போன்றது*]*

புக்கி *pukki,* பெ. (n.) *புக்கு* (நாமதீப. 323) பார்க்க; see *pukku.*

[புக்கு → புக்கி]

புக்கிகா *pukkigā,* பெ. (n.) *புக்கி* பார்க்க; see *pukki.*

[புக்கு → புக்கிகா]

புக்கில் *pukkil,* பெ. (n.) **1.** தங்குமிடம்; abode 'உயிர் புகும் புக்கில்' (மணிமே. 23, 76) **2.** வீடு; house, dwelling, permanent abode. '*புக்கில மைந்தின்று கொல்லோ*' (குறள், 340). **3.** புகலிடம்; place of refuge. '*துகளறு கேள்வி யுயர்நேதோர் புக்கில்*' (புறநா.221). **4.** உடம்பு; body as a temporary abode for the soul. '*நோக்கார் கொல் நொய்யதோர் புக்கிலை*' (நாலடி, 41).

[புகு → புக்கு + இல். ஒ.நோ. துஞ்சில் → துச்சில். இல் = இடம், இல்லம்.]

புக்கு[1] *pukku,* பெ. (n.) பிராய் (பிங்.); paper-tree.

புக்கு[2] *pukku,* பெ. (n.) *புக்குலி* பார்க்க; see *pukkuli.*

புக்குத்திருப்பி *pukku-t-tiruppi,* பெ. (n.) வட்டத்திருப்பி எனும் செடி (சங்.அக.); a plant.

புக்குபுக்கெனல் *pukku-pukkeṉal,* பெ. (n.) நெருப்பில் காற்றுப்படுவதால் உண்டாகும் ஒலிக் குறிப்பு; onom, expr. of crackling sound of fire, due to puffs of wind.

மறுவ. பகபகவெனல்.

[புக்கு + புக்கு + எனல்]

க. பக, பகபக; **தெ.** பக்குனா; **து.** பகபக; **கோத.** பக்ன், பக்பக்ன்.

புக்குலி *pukkuli,* பெ. (n.) வில்வமரம்; a sacred tree.

புக்குழி *pukkuḻi,* பெ. (n.) **புக்ககம்** பார்க்க; see *pukkagam.* '*கிழத்தி புக்குழீ*' (குக்கயாகப். 130).

[புகு → புக்கு + உழி. உழி = இடம். புக்குழி = புகுந்த இடம்]

புக்கை[1] *pukkai,* பெ. (n.) நீரூற்றுள்ள கேணி (இ.வ.); spring-pond.

மறுவ. நீரூற்று

க. புக்கெ; **தெ.** புக்க

[பொய்கை → புக்கை]

புக்கை² *pukkai,* பெ. (n.) ஒருவகைக் கூழ் (இ.வ.); a kind of porridge.

[புகா = உணவு. புகா → புக்கா → புக்கை = குழந்தைக்கு ஊட்டும் குழைத்த உணவு]

புகட்டல் *pugaṭṭal,* தொ.பெ. (vbl.n.) பருகச் செய்தல்; administering medicines or food to children by force or to adults in disease.

[புகட்டு → புகட்டல். 'அல்' தொ.பெ.ஈறு]

புகட்டு–தல் *pugaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. உட்புகுத்துதல் (யாழ். அக.); to insert, introduce 2. ஊட்டுதல்; to infuse, instil; to feed; to pour down the throat, as milk. 'அல்லம தேவன் சரிதத் தீம்பால்... புகட்டினானால் (பிரபுலிங். துதி. 11). குழந்தைக்குச் சங்கில் பால் புகட்டு (உ.வ.). 3. அறிவுறுத்துதல்; to impress on the mind, teach, instruct 'செவி திறந்து புகட்ட' (திருவிளை. விடையிலச். 4).

[புகவொட்டு → புகட்டு. புகட்டுதல் = நீர்ப் பொருளைக்கலத்தில் ஊட்டுதல். (வே.க. 3,105) ஒ.நோ: வரவிடு → வரட்டு]

புகட்டுமருந்து *pugaṭṭu marundu,* பெ. (n.) பீச்சங் குழலின் மூலம் மலவாயிலிற் செலுத்தப்படும் மருந்து; a liquid substance injected into the rectum for cleansing the bowels etc.

[புகட்டு + மருந்து]

புகடு¹–தல் *pugaḍu-,* 6 செ. குன்றாவி. (v.t.) வீசியெறிதல்; to throw '*மரனொடு வெற்பினம் புகடவுற்ற பொறுத்தன*' (கம்பரா. நாகபாச. 146).

[புகவிடு → புகடு (வே.க. 3, 105) புக + அடு – புகடு என்றுமாம்]

புகடு² *pugaḍu,* பெ. (n.) அடுப்பின் சுற்றுப்புறத்திலுள்ள மேடு (யாழ்ப்.); ridge of an oven.

மறுவ. அடுப்புத்திண்டு, அடுப்பம் பொடை

[புல் → புள் → புடை = பருத்தபாகம். புள் → (புயடு) → புகடு]

புகம் *pugam,* பெ. (n.) பாக்கு; areca nut.

புகர்¹ *pugar,* பெ. (n.) 1. கபிலநிறம் (பிங்.); tawny colour, brown, cloud colour. 2. கபில நிறமுள்ள மாடு; tawny coloured bull or cow. '*பல்பொறிக் கடுஞ்சினப் புகரும்*' (கலித்.105). 3. நிறம்; colour. '*புகர்ப்போந்தை*' (பட்டினப்.74).

ம. புகர்; **தெ.** பொகரு.

[புகு → புகல் → புகர் = புள்ளி, புள்ளிகளால் தோன்றும் மங்கல் நிறம், அந்நிறமாடு]

புகர்² *pugar,* பெ. (n.) 1. ஒளி; brightness, light. '*புகருடு மழுங்கின*' (திருப்போ.சந். திருப்பள்ளி.3). 2. அழகு; beauty '*புகர் வெள்ளை நாகர்தங்கோட்டம்*' (சிலப்.9,10). 3. வெள்ளி (சுக்கிரன்); venus. '*மந்தன்புகர் பெறும் பாந்தள்*' (இலக்.வி.883). 4. அருவி (அரு.நி.); waterfall. 5. உயிர் (அரு.நி.); life.

க. பொகரு.

[புகு → புகல் → புகர் = புகுந்து அதாவது ஊடுருவிச் செல்லும் ஒளி, ஒளி பொருந்திய அழகு, ஒளியுடன் இருக்கும் வெள்ளி, மலைப் பாதையில் புகுந்து செல்லும் அருவி, உடம்பினுள் புகுந்து இருக்கும் உயிர்]

புகர்³ *pugar,* **பெ.** (n.) **1.** புள்ளி; spot. *'புகரணி நுதல்'* (புறநா.**3**). **2.** குற்றம்; fault, defect, blemish. *'புகரின்று'* (தொல். எழுத்து, **369**). **3.** கறை; stain. *'செழும்புகர் வேர்'* (தஞ்சைவா.**289**).

[புகு → புகர் = ஒரு வண்ணப்பரப்பின் மேல் புகுந்திருப்பது (இடம் பெற்றிருப்பது), புள்ளி, புள்ளிபோல் கருதும் குற்றம், குற்றமாகப் கருதப்படும் கறை]

புகர்⁴ *pugar,* **பெ.** (n.) சோறு (அரு.நி.); food.

[புகு → புகா = உணவு. புகா → புகவு = உணவு. புகா → புகர்.]

புகர்⁵ *pugar,* **பெ.** (n.) கொக்கு (அரு.நி.); crane.

[புல் → புர் → புரள். புல் → புர் → புரி. புல் → புழு → புகு → புகர் = வளைந்த கழுத்துள்ள நீர்ப்பறவை. ஒநோ: கொள் → கொட்டு → கொக்கு]

புகர்⁶–தல் *pugar,* **3. செ.குன்றாவி.** (v.t.) **1.** பாராட்டுதல்; to praise. **2.** புகழ்தல்; to extol **3.** கைதட்டிப் பாராட்டுதல்; to applaud.

ம. புகர், புகர்ச; **க.** பொகர்; **தெ.** பொகடு, பொவடு; **து.** புகருணி, புகழுணி, பொருநி, பொகழுணி; **கூய்.** போங்க; **மால.** பொகல

[புகு → புகல் → புகர்]

புகர்க்கலை *pugar-k-kalai,* **பெ.** (n.) புள்ளிமான்கலை; spotted male deer. *'புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி'* (புறநா.**152**).

[புகர் + கலை. புகர் = புள்ளி. கலை = ஆண்மான்]

புகர்தீபம் *pugar-tibam,* **பெ.** (n.) வெண்கடம்பு; white kadamab.

புகர்நிறம் *pugarniram,* **பெ.** (n.) சாம்பல் நிறம்; ash colour.

[புகர் + நிறம்]

புகர்முகம் *pugar-mugam,* **பெ.** (n.) **1.** யானை; elephant, as having a spotted face. *"புலியொடு பொரூஉம் புகர்முக வோதையும்"* (சிலப். **25, 29**). **2.** ஒரு வகை அம்பு(பாணம்); a kind of arrow. *"புண்டரீகத்தின் முகையன்ன புகர்முகம் விட்டான்"* (கம்பரா. இராவணன் வதை. **108.**).

[புகர்+முகம். உ → மு → முகு → முகம்]



புகர்வு¹ *pugarvu,* **பெ.** (n.) *புகவு* (யாழ். அக.) பார்க்க; see *pugavu.*

[புகு → புகவு → புகர்வு]

புகர்வு² *pugarvu,* **பெ.** (n.) சோறு; cooked rice.

[புழு → புகு. புகுதல் = துளைத்தல்போல் உட்செல்லுதல். புகு → புகா = (உட்புகும்) உணவு. புகா → புகவு = புகுகை, உணவு (வே.க. 3,104) புகவு → புகர்வு]

புகர்வு³ *pugarvu* பெ. (n.) உணவுக்குரிய பண்டம்; edible item. 'புகர்வை அரிசிப் பொம்மல் பெருஞ்சோறு' (நற்.60,5).

[புகா → புகவு → புகர்வு]

புகர்வேலை *pugar-vēlai,* பெ. (n.) நொய்ம்மையான வேலைப்பாடு (நகாசு வேலை) (சென்னை.); filigree work.

[புகர் + வேலை. புகர் = புள்ளி. புகர் வேலை = புள்ளியிட் டாற்போல் செய்யப்படும் நொய்ம்மையான மினுக்கு வேலை]

புகரோன் *pugarōṉ,* பெ. (n.) வெள்ளி மீன் (அரிச்.பு. நகர்நீங். 23); venus.

[புகர் → புகரோன் = புள்ளிபோல் தோற்றமளிப்பது]

புகல்¹(லு)-தல் *pugal(lu)-,* 3. செ.குன்றாவி. (v.t.), 1. சொல்லுதல்; to say, declare, state. '*புகைநிறக் கண்ணனும் புகன்று*' (கம்பரா. யுத். மந்திரப். 45). 2. விரும்புதல்; to desire. '*செருப்புகன் றெடுத்த*' (திருமுரு.67). 3. தெரிதல்; to learn. '*மாயை புகன்றுளாய் கொலோ*' (கந்தபு. கயமுகன்வ. 8.).

ம. புகலுக.

[புல்லுதல் = நட்புச் செய்தல். புல் → புர் → புரி. புரிதல் = விரும்புதல். புல் → புள் → (புளு) → புகு → புகல். (வே.க. 3,87)]

புகல்²-தல் *pugal-,* 14செ.கு.வி. (v.i.), 1. ஒலித்தல்; to sound. '*புகன்ற தீங்குழல்*' (சீவக. 940). 2. மகிழ்தல்; to rejoice '*முகம்புகல் முறைமையின்*' (தொல். பொருள். 152).

[புல் → புல்கு. புல்குதல் = நண்பராய் மருவுதல். புல் → புள் → (புளு) → புகு → புகல் = விருப்பம், கொண்டாடுகை (வே.க. 3,87)]

புகல்³ *pugal,* பெ. (n.) 1. சொல் (பிங்); word. 2. விருப்பம்; desire. '*வானுறை புகறந்து*' (பரிபா. 19,1). 3. கொண்டாடுகை; rejoicing. '*புகலகல் நின்மார்பின்*' (கலித். 79) 4. பாடும்முறை; mode of singing. (பெரியபு. ஆனாய.26). 5. வெற்றி; victory '*புகல் விசும்பில்*' (பு.வெ. 9,21) (திவா.). 6. புகழ்; fame, renown. '*பொருபுக னல்லேறு*' (கலித். 102).

க. புகல், புகில்.

[புல் → புள் → (புளு) → புகு → புகல் (வேக. 3,87)]

புகல்⁴ *pugal,* பெ. (n.) 1. புகுகை; entering, going in முனைபுகல் புகல்வின் (பதிற்றுப். 84, 17) 2. இருப்பிடம்; residence, dwelling. "புனவர் கொள்ளியிற் புகல்வரு மஞ்ஞை" (ஐங்குறு. 295) 3. துணை (பிங்.); assistance, help. 4. பற்றுக்கோடு; support, prop. '*மையணற்காளை பொய்புகலாக*' (நற். 179) 5. அடைக்கலம் (சரண்); refuge, asylum. '*புகலது கூறுகின்றான்*' (கம்பரா. விபீடண. 109) 6. உடம்பு (பிங்.); body 7. வழிவகை (உபாயம்); means. '*புகலொன்றில்லா வடியேன்*' (தி.திருவாய். 6, 10, 10) 8. போக்கு (இ.வ.); excuse. '*இவன் அடிக்கடி புகல் சொல்லுகிறான்*'.

[புழு → புகு. புகுதல் = துளைத்தல் போல் உட்செல்லுதல், உட்படுதல். புகு → புகல்]

புகல்⁵ *pugal,* பெ. (n.) தவசக்குதிர் (திவா.); receptacle for storing grain.

மறுவ. சால், உறை, நெற்கூடு, சாடி.

[புகு → புகல்]

புகல்[6] *pugal,* பெ. (n.) புரையுள்ளது (நெல்லை. 2); hollowness.

தெ. போலு

[புள் → புழு → புழல் → புழை → பூழை = துளை, கணவாய். புழல் → போல் புள் → பொள் → பொள்ளல் (மு. தா. 277) புழல் → புகல் = உட்டுளையுள்ளது]

புகல்வார்த்தை *pugal-vārttai,* பெ. (n.) போக்குச் சொல் (கொ.வ.); vain excuse.

[புகல் + வார்த்தை. புகு → புகல் = போக்கு]

Skt. vārttā > **த.** வார்த்தை

புகல்வி *pugalvi,* பெ. (n.) விலங்கின் ஏறு; male of an animal 'புழற் கோட்டமான் புகல்வியும்' (குறிஞ்சிப்.253)

[புகுதல் = ஏறுதல். புகு → புகவு = மேலேறுகை. புகு → புகல் → புகல்வி = விலங்கின் ஆண். ஒ.நோ: ஏறு → ஏற்றை (மு. தா. 66)]

புகல்வு *pugalvu,* பெ. (n.) **1.** விருப்பம்; desire. '*முனைபுகல் புகல்வின் மாறாமைந்தரொடு*' (பதிற்றுப்.84:17) **2.** மனச்செருக்கு; pride, arrogance. '*மாறு பொரு தோட்டிய புகல்வின்*' (குறிஞ்சி. 135).

க. புக்கு, புர்கு; **தெ.** பொகரு

[புல் → புள் → (புளு) → புகல் = விருப்பம், கொண்டாடுகை. புகல் → புகல்வி (வே. க. 3, 87, 88)]

புகல்வேலை *pugal-vēlai,* பெ. (n.) அணிகலன் முதலியவற்றில் உட்டுளை யமையச் செய்யப் பட்ட வேலை (இ.வ.); hollow, unsubstantial work as of jewels.

[புகல் + வேலை. புல் = உட்டுளையுடைய பயிர் வகை. புல் → புள் → (புழு) → புழல் → புகல் = உட்டுளை]

புகலி *pugali,* பெ. (n.) **1.** புதிதாகக் குடியேறியவன்; new-comer; settler. '*அல்லாத தேவர்களெல்லாம் புண்ணியத்தால் வலிந்து புகுந்த புகலிகள்*' (தக்கயாகப். 352, உரை) **2.** சீகாழி (தேவா.); Shiyali.

[புகு → புகல் = புகுகை, இருப்பிடம். புகல் → புகலி = புகலடைந்தவன் – வள். ஒரு பெருவெள்ளக் காலத்திற் புகலிடமாயிருந்த சீகாழி (வே. க. 3, 104)]

புகலிடம் *pugal-iḍam,* பெ. (n.) **1.** இருப்பிடம்; dwelling, residence. '*புகலிட மெமதாகும் புரையிடை*' (கம்பரா. வனம்புகு. 24) **2.** ஊர் (பிங்.); town, village. **3.** தஞ்சம்; refuge, retreat, asylum. '*புகலிடம் பிறிதொன்றில்லை*' (திருவாச. 5, 62).

[புகல் + இடம். புல் → புர் → புரை = உட்டுளை, உட்டுளைப் பொருள். புல் → புள் → புழு= துளைக்கும் சிற்றுயிரி. புகு → புகல் = புகுந்திருக்குமிடம், இருப்பிடம், சரண்]

புகலூர் *pugalūr,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Tañjāvūr dt. 'பூம் பொய்கை சூழ்ந்த புகலூர்' (சம்பந்தர். 251–8).

[புகல் + ஊர்.]

புகல் என்பதற்கு விருப்பம், இருப்பிடம், அடைக்கலம் (சரண்) போன்ற பல பொருள்கள் அமைகின்றன. எனவே இறைவன் விரும்பிய இடம், அல்லது இறைவனிடம் மக்கள் புகல் அடையும் அல்லது அடைந்த ஊர் என்ற நிலையில் பெயர் அமைந்திருக்கின்றது.

புகவு[1] *pugavu,* பெ. (n.) **1.** புகுகை; entering கழுது புகவயர (ஐங்குறு. 314) **2.** மேலேறுகை; mounting, as a vehicle. '*புகவரும் புள்ளியன்மா*' (பரிபா. 10, 14).

[புழு → புகு. புகுதல் = துளைத்தல் போல் உட்செல்லுதல். வீட்டுக்காரர் வீட்டுக்குள் புகுந்தார் (உ.வ.) (வே.க.3,104) புகு → புகுவு → புகவு]

புகவு[2] *pugavu,* பெ. (n.) உணவு; food. '*பழுஞ்சோற்றுப் புகவருந்தி*' (புறநா. 395).

[புகு → புகா = உட்புகும் உணவு. புகா → புகவு (வே.க. 3, 104)]
'புகா' பார்க்க

புகவுச்சீட்டு *pugavu-c-cīṭṭu,* பெ. (n.) ஓரிடத்திற்குப் புகுவதற்குரிய சீட்டு; enterance ticket.

[புகவு + சீட்டு]

புகவுச் சீட்டை நுழைவுச்சீட்டு என்றும் புகவுத் தேர்வை நுழைவுத் தேர்வு என்றும் வழங்குதல் தவறாம் (வே.க. 3, 19)

புகழ்[1]**–தல்** *pugaḻ-,* 3 செ.குன்றாவி. (v.t.) **1.** ஏத்துதல், துதித்தில்; to praise, extol. '*புகழு நல்லொருவ னென்கோ*' (திவ். திருவாய். 3, 4,1). **2.** பாராட்டுதல்; to applaud 'வாழுமூர் தற்புகழும்' (நாலடி, 383).

மறுவ. சீர்த்தி, ஒளி, மீக்கூற்று

ம. புகழுக, புகழ்த்துக; **க.** பொகழ்; **தெ.** பொகடு, பொவடு; **து.** புகருனி, புகமுனி, பொகருனி, பொகழே; **மா.** பொகலரெ, பொகலத்ரெ; **கூ.** போங்க, போங்கி.

[புல் → புர் → புள் → புழு → புகு. புகுதல் = ஏறுதல். புகு → புகு → புகவு = மேலேறுகை. புகு → புகல் → புகழ். புகழ்தல் = உயர்த்துச் சொல்லுதல் (மு.தா. 1, 74)]

'ஒருவர்க்கு இம்மை மறுமைகட்கு இன்பத்தைத் தந்து பூமி யுள்ளளவும் நிற்பது புகழ்' என்பார் அடியார்க்கு நல்லார் (சிலப். 11: 14) அதனாலன்றோ '*புகழ் எனில் உயிரும் கொடுப்பர்*' என்கிறது புறநானூறு.

புகழ்[2] *pugaḻ,* பெ. (n.) **1.** பாராட்டு, மெச்சு, துதி; praise, panegyric, eulogy. '*புகழாய்ப் பழியாய்ப்*' (திவ். திருவாய். 6, 3, 6.). **2.** கீர்த்தி; fame, renown glory, celebrity. '*சேண்விளங்கு புகழ்*' (புறநா. 10). **3.** அருஞ்செயல்; famous deed, exploit. '*இலங்கு புகழ்*' (திருவாலவா. திருநரகச். 18).

மறுவ. இசை

ம. புகழ்; புகழ்ச்சி; **க.** பொகழ்; பொகழ்கெ, பொககெ; **து.** புகரிகெ, பொகளு; **கூ.** போப்க; **மா.** பொகலெ

[புகு → புகல் → புகழ்]

புகழ்வகை – ஒளி நன்மதிப்பு; பெயர் அல்லது பேர் நல்ல வழியிலும் தீயவழியிலும் பரவும்

பேர்: இசை புலவர் பாடுவதால் உண்டாகும் புகழ்; புகழ் இறந்தபின்னும் வழங்கும் உயர்த்துரை; சீர்த்தி அல்லது கீர்த்தி மிகு புகழ் (சொ.க. 40)

புகழ்³ *pugal*, பெ. (n.) **1.** வாகை மரம் (அக.நி); Indian laurel. **2.** அகத்தி மரம் (அக,நி.); West Indian pea tree.

[புகு → புகல் → புகழ்]

புகழ்க்கூத்து *pugal-k-kūttu*, பெ. (n.) கதைத்தலைவன் புகழ் குறித்து நிகழும் ஆடல் (சிலப். 3, 12, உரை); a dance in praise of a hero.

[புகழ் + கூத்து. குதித்தாடுவது கூத்து. புகழ்க்கூத்திற்கு நேரெதிரானது வசைக் கூத்து]

புகழ்கூறல் *pugal-kūral*, பெ. (n.) மும்மொழி (பழித்தல், புகழ்தல், மெய்கூறல்) ஒன்றான கீர்த்தியை எடுத்து விளக்குகை (யாழ்.அக.); eulogy, one of mu-m-moli, q.v.

[புகழ் + கூறல். கூறு → கூறல். 'அல்' தொ.பெ.ஈறு.]

புகழ்ச்சி *pugalcci*, பெ. (n.) பாராட்டு; praise. 'புகழ்ச்சியைக் கடந்த போகமே' (திருவாச. 37, 4.).

[புகழ் → புகழ்ச்சி. 'சி' தொ.பெ.ஈறு. பாடாண்பொருள் புகழ்ச்சி, வாழ்த்து, வழுத்து எனமூவகைப்படும். புகழ்ச்சி யாவது ஒருவரைச் சிறப்பித்துக் கூறல்; வாழ்த்தாவது ஒருவரை நீடு வாழ்க வென்றல்; வழுத்தாவது ஒரு தெய்வத்தைப் பராவுதல் (ஒ.மொ.2,67)]

புகழ்ச்சிமாலை *pugalcci-mālai*, பெ. (n.) **96** சிற்றிலக்கியங்களுள் அகவலடியும் கலியடியும் மயங்கிய வஞ்சிப்பாவால் மகளிரது சிறப்பைக் கூறும் இலக்கியம் (பிரபந்தம்) (இலக்.வி. 866); panegyric on a heroine in *vañji* verse, intermixed with *agaval* and *kali* lines, one of **96** pirapandams q.v.

[புகழ் → புகழ்ச்சி + மாலை. மயல் = மயக்கம். மயல்→ மால். மாலுதல் = மயங்குதல். மால் → மாலை = பல மலர்கள் கலக்குந் தொடை. புகழ்ச்சி மாலை = அகவலடியும், கலியடியும் கலந்து வஞ்சிப் பாவாலான சிற்றிலக்கிய வகை]

புகழ்ச்சோழநாயனார் *pugal-c-cōla nāyanār*, பெ. (n.) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவரான சோழ அரசர் (பெரியபு.); a Cōla king, canonized šaiva saint one of 63.

[புகழ் + சோழநாயனார்]

புகழ்த்துணைநாயனார் *pugal-t-tuṇai nāyanār*, பெ. (n.) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் (தேவா. 611,7); a canonized šaiva saint one of 63.

[புகழ் + துணை + நாயனார்]

புகழ்தல் *pugaḻdal,* பெ. (n.) ஒன்பான் புண்ணியத்துள் ஒன்றான போற்றி (யாழ்.அக.); adoration, one of nava-puṇṇiyam, q.v. eulogy.

[புகழ் → புகழ்தல். 'தல்'.தொ.பெ.ஈறு.]

புகழ்தலுவமை *pugaḻdal-uvamai,* பெ. (n.) உவமேயத்தை வாளாவிடுத்து உவமானத்தை யாதேனும் ஒரு சிறப்புக்காட்டிப் புகழ்ந்து கூறும் உவமையணிவகை (தண்டி. 30, உரை.); (rhet.) a simile in which the upamāṉam is praised and the upanēyam is left bare.

[புகழ்ச்சி + உவமை]

புகழ்ந்துபேசு–தல் pugaḻndu-pēšu-,. 5 செ.குன்றாவி. (v.t.) *புகழ்ந்துரை–த்தல்* பார்க்க; see *pugaḻndurai-* புகழ்ந்து பேசுவதையே பலரும் விரும்புகின்றனர். (உ.வ.)

[புகழ் → புகழ்ந்து + பேசு-,]

புகழ்ந்துரை–த்தல் *pugaḻndurai-,* 4. செ.குன்றாவி. (v.t.) பாராட்டுதல், மெச்சுதல்; to praise, to be mouth., to eulogize.

[புகழ் → புகழ்ந்து + உரை]

புகழ்ப்பூ *pugaḻ-p-pū,* பெ. (n.) பொன்னாவிரை (சங்.அக.); fetid cassia.

புகழ்புகழ் *pugaḻ-pugaḻ,* பெ. (n.) மூக்கிரட்டைக் கொடி; a prostate or creeper plant.

புகழ்பெறு–தல் pugaḻ peṟu-, 20 செ.கு.வி. (v.i.) புகழடைதல்; to get renown. எளிமையாகப் புகழ்பெற வேண்டும் என்பது திரைப்படக் கலைஞர் நோக்கம் (உ.வ.).

[புகழ் + பெறு-,]

புகழ்பொருள் *pugaḻ-poruḷ,* பெ. (n.) உவமேயம் (அணியி. 3.); (rhet.) subject of comparison.

[புகழ் + பொருள்]

புகழ்பொருளுவமையணி *pugaḻ-poruḷ-uvamai-y-aṇi,* பெ. (n.) உவமைகளுள்ள இரண்டு தொடரியங்களுள் (வாக்கியங்களுள்) முதலாவதன் உவமேய உவமானங்கள் முறையே இரண்டாவதன் உவமான உவமேயங்களாகத் தொடர்ந்து வருமாறு இரண்டு தொடரியமாக (வாக்கியமாக)ச் சொல்லப்படும் ஒருவகை உவமையணி (அணியி.2.); (rhet.) a type of simile in which there is a mutal interchange, for greater effect, in the next sentence, as between the subject of comparison as the object with which it is compared.

[புகழ்பொருள் + உவமையணி]

எ-டு: கண் மீனைப் போன்றுள்ளது. மீன் கண்ணைப் போன்றுள்ளது.

புகழ்மகள் *pugaḻ-magaḷ,* பெ. (n.) புகழாகிய தேவி; the goddess of fame 'புகழ்மகளைத் தழுவிய' (கம்பரா. இராவண. வதை. 226).

[புகழ் + மகள்]

புகழ்மங்கை[1] *pugaḻ-maṅgai,* பெ. (n.) *புகழ்மகள்* பார்க்க; see *pugaḻ-magaḷ.* 'புகழ்மங்கை யெங்குந் திகழ' (திவ். பெரியதி. 3, 2, 5).

[புகழ் + மங்கை]

புகழ்மங்கை[2] *pugaḻ-maṅgai,* பெ. (n.) எருக்கு; a milky shrub.

புகழ்மங்கைப்பால் *pugal-mangai-p-pāl,* பெ. (n.) எருக்கம் பால்; the milky juice of madar.

[புகழ்மங்கை + பால். புல் → பல் → (பன்) → பன்னல் = பருத்தி. புல் → பல் → பால் = வெண்மையானது]

புகழ்மரம் *pugal-maram,* பெ. (n.) அகத்தி மரம்; sesbania tree.

[புகழ் + மரம்]



புகழ்மாலை *pugal-mālai,* பெ. (n.) தலைவர் புகழைத் தெரிவிக்கும் சொன்மாலை; garland of verse in praise of a deity or a person. 'வறியோர் தொடுக்கும் புகழ்மாலை சூடும் நல்லியக்கோடனை' (புறநா. 176, உரை).

மறுவ. புகழாரம்.

[புகழ் + மாலை]

புகழ்மை *pugal-mai,* பெ. (n.) 1. புகழுடைமை; praise worthiness. 'பொச்சாப்பார்க் கில்லைப் புகழ்மை' (குறள், 533) 2. புகழ்; fame. 'புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலம்' (நாலடி, 72).

[புகழ் → புகழ்மை. 'மை' பண்புப் பெயரீறு.]

புகழ்மொழி *pugalmoli,* பெ. (n.) புகழுரை; eulogy.

[புகழ் + மொழி]

புகழ்வதினிகழ்தல் *pukalvadin-igaldal,* பெ. (n.) புகழ்வது போலப் பழித்துக் கூறும் அணி (மாறனலங். 229, உரை); (rhet.) a figure of speech which consists in ironical praise.

மறுவ. இகழாவிகழ்ச்சி

[புகழ்வதில் + இகழ்தல். இழு → இகு இகழ் → இகழ்ச்சி. இகழ் → இகழ்தல். 'தல்' தொ.பெ.ஈறு]

புகழ்வீசுசந்திரன் *pugal-višu-šandiran,* பெ. (n.) 1. பச்சைச் சூடம் (கருப்பூரம்) (யாழ்.அக.); medicated camphor; 2. சூட (கருப்பூர) மரம்; camphor tree.

புகழ்வீசுமதி *pugal-višu-madi,* பெ. (n.) பச்சைச் சூடம் (கருப்பூரம்); crude camphor.

புகழ்வு *pugalvu,* பெ. (n.) புகழ்ச்சி; praise, fame *'புகழ்வினையாகி'* (பெருங். உஞ்சைக். 6, 193).

[புகழ் → புகழ்வு. 'வு' தொழிற் பெயரீறு]

புகழ்வோர் *pugalvōr,* பெ. (n.) அகவர் (சூதர்), ஓவர் (மாகதர்) முதலிய ஏற்றியுரைப்போர் (வந்திகள்) (பிங்.); professional panegyrists.

[புகழ் → புகழ்வோர். 'ஓர்' பலர் பாலீறு]

பழந்தமிழகத்தில் வேந்தன் அமைதிக் காலத்தில் ஒவ்வொரு நாளும் பகலில் முதல்பத்து நாழிகை கொடைக்கும், இடைப் பத்துநாழிகை வழக்குத் தீர்த்து முறை

செய்வதற்கும், கடைப்பத்து நாழிகை தன் இல்லற இன்பத்திற்கும் செலவிட்டான். அவன் காலையில் எழுந்தவுடன் பள்ளியெழுச்சி முரசம் அறையப்படும். எட்டர் என்பவர், அவனுக்கு நாழிகை யறிவிப்பவர். அகவர் (சூதர்) என்பவர் நின்று கொண்டு அவன் முன்னோர் பெருமையைக் கூறி அவனைப் புகழ்ந்து பாடுபவர். ஓவர் (மாகதர்) என்பவர், இருந்து கொண்டு அங்ஙனம் பாடுபவர். ஏத்தாளர் பிறசமயங்களில் புகழ்ந்து பாடுபவர் (ப.த.நா.ப.104).

புகழனார் pugaḻaṉār பெ. (n.) 'அப்பரி'ன் தந்தையார்; father of the cannoized šaiva saint Appar.

[புகழ் → புகழனார்]

புகழாப்புகழ்ச்சி *pugaḻā-p-pugaḻcci,* பெ. (n.) பழிப்பது போலப் புகழும் அணிவகை. (தண்டி. 82); (rhet.) a figure of speech, containing praise couched in terms of apparent censure.

மறுவ.வஞ்சப்புகழ்ச்சி

[புகழ் + ஆ + புகழ் + சி. 'சி' தொ.பெ.ஈறு. 'ஆ' எ.ம.இடைநிலை]

புகழாவாகை *pugaḻā-vāgai,* பெ. (n.) 1. அகத்தி; West Indian pea-tree. '*புகழா வாகைப் பூவினன்ன*' (பெரும்பாண். 109.) 2. செருக்கு (அகங்காரம்) (சங்.அக.); conceit.

[புகழ் + ஆ + வாகை. 'ஆ' எ.ம. இடைநிலை]

புகழாளன் *pugaḻāḷaṉ,* பெ. (n.) புகழையுடை யோன் (திவா.); renowned person.

[புகழ் + ஆளன். புகழை ஆளுகின்றவன், புகழாளன்]

புகழுரை *pugaḻurai,* பெ. (n.) புகழ்ந்து கூறும் உரை; eulogy.

[புகழ் + உரை]

புகழேந்தி *pugaḻ-ēndi,* பெ. (n.) நளவெண்பா இயற்றிய புலவர்; a poet, author of Naḷaveṇbā 'வெண்பாவிற் புகழேந்தி' (தனிப்பா.).

[புகழ் + ஏந்தி. ஏந்து → ஏந்தி. 'இ' வினை முதலீறு]

இவர் 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் ஒப்பாரிக்கண்ணி கொற்றந்தைக் கலம்பகம், துரோபதைகுறம், மின்னொளியாள் குறம், விதுரன் குறம், புலந்திரன் தூது, அபிமன்னன் சுந்தரி மாலை, அல்லி அரசாணி மாலை, சுபத்திரை மாலை, பவளக்கொடி மாலை, புலந்திரன் களவு மாலை ஆகிய நூல்களையும் இவர் இயற்றியுள்ளார் என்று கூறப்படுகிறது. ஆனால், பாக்களின் போக்கையும் மொழிநடையையும் வண்ணனை முறைகளையும் பிறவற்றையும் நோக்கின், இவற்றை எழுதியவர், புகழேந்தி என்னும் பெயர் தாங்கிய வேறொருவராக இருக்கக் கூடும் என்று கருத வேண்டியுள்ளது.

இவரது ஊர் பொன் விளைந்த களத்தூர். சிலர் முதுகளத்தூர் என்றும் சிலர் களப்பாழ் என்றும் கூறுவர்.

புகள் *pugaḷ,* பெ. (n.) *புகழாவாகை.* (மலை.) பார்க்க; see *pugaḻāvāgai.*

[புகழ் → புகள்]

'புகழ்மரம்' பார்க்க.

புகற்சி *pugaṟci,* பெ. (n.) 1. விருப்பம்; desire. '*குறக்குறு மாக்கள் புகழ்சியினெறிந்த*' (நற்.104) 2. காதல்; love. "*புகற்சியி னமைந்தோர்*" (நம்பியகப். 37).

[புல் → புர் → (புளு) → புகு → புகல் + சி. 'சி' தொ.பெ.ஈறு]

புகற்று—தல் *pugaṟṟu-*, 6 செ.குன்றாவி. (v.t.) விரும்பச் செய்தல்; to cause to desire. '*உள்ளு மாந்தரை யுள்ளம் புகற்றுமே*' (சீவக. 870).

[புகலு—தல் (த.வி.) → புகற்று—தல் (பி.வி.)]

புகனான்கு *pugaṉāṅgu*, பெ. (n.) நிலைபேறு (ஸ்திதி) தொடக்கம் (பிரக்கிரமம்) கலப்பு (சஞ்சாரம்) ஏற்றவிறக்கம் (மூர்ச்சனை)ஆகிய நால்வகைப்பட்ட பாடன்முறை; (mus.) the four modes of singing, viz, sthiti, pirakkiramam, cañcāram, mūrccaṉai. ஆயவிசைப் புகனான்கினமைந்த புகல் வகையெடுத்து (பெரியபு. ஆனாய. 26). (செந். vi, 216)

[புகல்² + நான்கு]

புகா *pugā*, பெ. (n.) உணவு; food. "*புகாஅக் காலை*" (தொல். பொருள். 101).

[புகுதல் = உட்செல்லுதல், வாய்க்குட் செல்லுதல். புகு → புகா = வாய்க்குட் செல்லும் உணவு. ஒ.நோ: உள் → உண்— உணா. புகு → புஜ். ஒ.நோ: பகு → பஜ். புஜ் என்னும் அடியினின்றே, புக்தி, போக்த்ரு, போக, போகி, போக்ய, போஜ, போஜன முதலிய சொற்கள் பிறந்துள்ளன (வ.வ. 2, 37)]

உண்ணுதல் என்பது உட்கொள்ளுதல்; அதாவது, ஒன்று இன்னொன்றைத் தன்னுள் இழுத்தல் அல்லது சேர்த்தல், வாய்வழி வயிற்றிற்குள் ஒன்றை இடுதலும், நிலம் நீரை உறிஞ்சுதலும், பாதம் செம்பஞ்சுக்குழம்பு நிறத்தைப் பெறுதலும் உண்ணுதலே. இவற்றுள் முதலதே மக்கள் பேச்சிற் பெரு வழக்கானது. இறுதியது, சேர்தலின் அல்லது சேர்த்தலின் வகைகளுள் ஒன்றாகும்.

உண்ணுதல் என்பது அடிப்படைப் பொருளில் உட்கொள்ளுதலாதலின், பெரும்பாலும் உள்ளிடத்தை அல்லது உட்புகுத்தலைக் குறிக்குஞ் சொற்களினின்றே உண்ணுதல் வினைச்சொற்கள் தோன்றியுள்ளன.

எ—டு: உள் → உண் → உணா → உண → உணவு. புகு— Gk. பகு *(phag) phagin*, to eat, devour; *phagema*,food; *phagas,phagōn*. glutton.

phage (*phag.*), combining from meaning 'eater' as in xylophage.

phagedena, gangrene, L. *phagedaena* fr. Gk. *phagedaina*, cancer, lit. voracity fr. *phagein*, to eat.

phago, combining form meaning 'eating' as in phagocyte.

phagous, combining form meaning 'eating feeding on' as in creophagous, xylophagous, Gk. phagos, 'eater of'.

phagus. combining form meaning 'eating', as in *sarco phagas*. L. fr. Gk. *sarkophagos*,orig. flesh-consuming (stone).

phagy, combining form meaning 'eating of' (something specified), as in anthropoph*agy*, *geophagy*.

phagia, same as '*phagy*'

உகரமுதல் அகரமுதலாகத் திரிவது பெரும்பான்மை. தமிழில் மூச்சொலி (aspirate) இல்லை. தமிழ் மெய்கள் பிற மொழிகளில் மூச்சொலி மெய்யாகத் திரிவதுண்டு.

எ—டு: கல்—khal (பிராகுவி).

இங்ஙனம் தமிழ்ச்சொல் தமிழுக்கு அகப்புறமான திரவிடத்திலேயே மூச்சொலி பெறும்போது அதற்குப் புறமான ஆரியத்தில் அதைப் பெறுவது இயற்கைக்கு மாறானதன்று.

ph என்னும் இணைவரி அல்லது கூட்டெழுத்து, ஆங்கிலத்தில் 'f' என்றொலிப்பினும், கிரேக்கத்தில் மூச்சொலி கூடிய பகரமே (ஃப) என்பதை அறிதல் வேண்டும்.

புகு என்னும் தமிழ்ச்சொல், கிரேக்கத்தில் பகு அல்லது பக என்று திரிந்தபின், அதற்கினமான இந்திய ஆரிய முன்னை மொழியில் (Pre-Indian East Aryan) புஜ் (bhuj) என்று திரிந்துள்ளது.

ஒ.நோ: பகு–வ. பஜ் (bhaj).

சமற்கிருதத்திற்கு முந்தின, வேத மொழியிலேயே இத் திரிபு காணப்படுவதால், இது வேத ஆரியர் இந்தியாவிற்குட் புகுமுன்னரே நிகழ்ந்திருக்க வேண்டும். மிடற்றொலி அண்ணவொலியாகத் திரியும்போது, எடுப்பிலா வொலி (voiceless sound) எடுப்பொலியாகவும், எடுப்பொலி (voice sound) எடுப்பிலா வொலியாகவும் திரிவதே பொதுவியல்பு.

எ–டு: க–ச: குடிகை – குடிசை.

g-j: L. ago-Skt. aj (to drive).

இம் முறைப்படி, புகு என்பதன் திரிபான பகு (phag) என்னும் மேலையாரியக் கிரேக்கச் சொல் கீழையாரியத்தில் புஜ் (bhuj) என்று திரிந்துள்ளது. எடுப்பிலாவொலி எடுப்பொலியாகத் திரிவதும் இயல்பே.

எ–டு: E. acre, L. ager, Gk. agros. E. triple-E. treble.

bhuj, to eat, eat and drink, enjoy a meal, consume, enjoy, use, possess, make use of, utilize, exploit, suffer, experience, undergo, R.V., AV., Up., MBh., Kāv.

bhukta, enjoyed, eaten, made use of, possessed etc.

bhukti, eating, enjoyment, consuming, fruition, possession, usufruct.

bhuktvā, having enjoyed or eaten or possesed.

bhuji, the granting of enjoyment, favour, RV.

bhujishya. granting food, useful, AV.

bhoktru, one who enjoys or eats Maitr Up.

bhōga, enjoyment, eating, feeding on RV.

bhogin, enjoying, eating, having wealthy; a kind, a concubine.

bhōgya, to be enjoyed, to be used.

bhōja, bestowing enjoyment, bountiful, liberal, RV. leading a life of enjoyment, BhP., a king. *bhōjaka*, eating, being about to eat, giving to eat, nourishing.

bhōjana, feeding, giving to eat; the act of enjoying, using, R.V., the act of eating; a meal, food.

bhōjaniya, to be eaten, eatable; to be fed, to be made to eat, Mn.; one to whom enjoyment is to be afforded or service to be done, Nir,; food (esp. what is not masticated, as opp. to khādaniya) MBh. *bhōjin*, enjoying, eating.

bhōjya, to be enjoyed or eaten, eatable, what is enjoyed or eaten, anything to be enjoyed or eaten, a festive dinner.

bhōktavya, to be enjoyed or eaten, to be used or employed; to be possessed or governed or ruled, to be utilized or exploited, to be fed.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் பேரகரமுதலியைத் தொகுத்தவர்கள், புகு (உண்) என்னும் தென்சொற்கும் புஜ் (bhuj) என்னும் வடசொற்கும் உள்ள தொடர்பை அறிந்தே, புகவு, புகா என்னும் இரு சொற்களையும் புஜ் என்னும் வட சொல்லோடு ஒப்பு நோக்கக் குறித்திருக்கின்றனர். ஆயின் தென்சொல்லே வடசொல்லின் மூலம் என்று காட்டுவது அவர் கருத்தன்று. வடமொழி தேவமொழி என்னும் அடாவடித்தன ஏமாற்றை அடிப்படையாகக் கொண்டு, வடமொழியிலுள்ள தென்சொல் லெல்லாம் வடசொல்லென்று சொல்லாமற் சொல்வதே, அவ்வொப்பு நோக்கக்குறிப்பின் நோக்கம். தமிழை வடமொழித் திரிபாக அல்லது கிளையாகக் காட்ட வேண்டுமென்பதே சென்னைப்

ப.க.த. அகரமுதலித் தொகுப்பாளரின் அடிப்படைக் கொள்கையாதலால், வடமொழிக்கு அடிப்படையான தென்சொற்ளை யெல்லாம் வடசொல்லென்று காட்டுவதொடு, உண்மையில் தொடர்பின்றி ஒருமருங்கு ஒலியொத்த போலியொப்புமைச் சொற்களையும் வடசொற் களினின்று திரிப்பதிலும் அவற்றொடு ஒப்புநோக்குவதிலும், கண்ணுங் கருத்துமா யிருந்திருக்கின்றனர். எ–டு: ஆரியன்– ஐயன், ச்யாமா–சாமை. வேந்தன்–ஒ. நோ: தேவேந்திரன், மருந்து–ஒ.நோ:அம்ருத. (தலை.த.132–135).

புகாமோகி *pugāmōgi,* பெ. (n.) புல் வகை யுளொன்று; a kind of grass.

புகார்[1] *pugār,* பெ. (n.) **1.** ஆற்றுமுகம்; mouth of a river. *'புகாஆர்ப் புகுந்த பெருங்கலம்'* (புறநா. 30). **2.** காவிரிப் பூம்பட்டினம் (சிலப்.).; the town of Kāviri-p-pūm paṭṭiṉam, as situated at the mouth of the river Kāvēri.

[புழு → புகு → புகார் = ஆறுகடலொடு கலக்குமிடம், காவிரி கடலொடு கலந்த இடத்துக் காவிரிப்பூம்பட்டினம் (வே.க. 3, 105)]

சோழ நாட்டின் தலை நகரமாகிய புகாரைச் சிறப்பித்துக் கூறுவதன் மூலம் சோழ நாட்டை வெளிப்படுத்துகின்றார் இளங்கோவடிகள். சிலப்பதிகாரக்காலத்தில் புகார் நகரம் பெரும் புகழ் வாய்ந்த பழம் பெருமை வாய்ந்த நகரமாக இருந்த தென வரலாற்று அறிஞர்கள் ஆய்ந்து கூறி யுள்ளனர். புகார் நகரம் தேவலோகத்தோடு ஒப்பிட்டுப் பேசுமளவிற்குச் சிறப்பு வாய்ந்ததை இளங்கோவடிகள். நாகநீள் நகரொடு நாகநா, டதனொடு போகநீள் புகழ்மன்னும் புகார் நகர் என்பர். இந்திர விழவூரெடுத்த காதையில் புகார் நகரின் பல்வேறு சிறப்புகள் சுட்டப் பெற்றுள்ளன. மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம். பற்றிய செய்திகள் ஐவகை மன்றங்கள் அல்லங்காடி, நாளங்காடி, தெருவமைப்பு முறைகள் முதலியனவும் பேசப்பட்டுள்ளன.

இக்காலத்திற் பட்டணம் என்பது சென்னையைச் சிறப்பாய்க் குறித்தல் போல், அக்காலத்தில் பட்டினம் என்பது புகாரைச் சிறப்பாய்க் குறித்தது. பட்டினப்பாலை, பட்டினத்துப்பிள்ளையார் என்னும் வழக்குகளை நோக்குக (ப.த.நா.ப. 104).

பதி + அமை – பதனம் → பத்தனம் → பட்டனம் → பட்டினம். தகரம் டகரமாவது பெருவழக்கு.

பலநாடுகளிலிருந்து வந்த பல்வேறு பொருள்கள், காவிரிப்பூம்பட்டினக் கடை மறுகில் மண்டிக்கிடந்தன.

நீர் வாணிகத்தின் பொருட்டு பல்வேறு மொழிகள் பேசும் பல்வேறு நாட்டுமக்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் வந்து கலந்தினிது வாழ்ந்தனர் (ப.த.நா.ப.97).

புகார்[2] *pugār,* பெ. (n.) **1.** பனிப்படலம்; mist, fog, haze. **2.** மந்தாரம்; cloudiness of the weather, overcast sky. **3.** மழை பெய்யும் முகில்; rain-cloud. **4.** மங்கியநிறம்; duskiness, dinginess, dimness.

[புகர் → புகார்]

புகார்பிடி–த்தல் *pugār-piḍi-,* **4.** செ.கு.வி. (v.i.) ஆடையில் நீலநிறம் பற்றுதல் (வின்.); to take on a faint blue in the process of staining as a cloth.

மறுவ. நீலம் போடுதல்

[புகர் → புகார் + பிடி –.]

புகிடி *pugiḍi,* பெ. (n.) புறச்செவி விளிம்பில் மாட்டிக்கொள்ளும் மகளிர் காதணி வகை (வின்.); a golden ear-pendant worn by women on the top of the helix.

மறுவ. பொகடி, பூடி

க. புகடி, புகுடி; **தெ.** புகட, பொகட; **து.** புகுடி.

Mar. bugḍī

[புல்லுதல் = பொருந்துதல். புல் → புள் →

புண் → புணர். புணர்தல் = பொருந்து தல் புல் → புள் → புகள் → புகடி → புகிடி]

புகு¹–தல் *pugu-,* 3 செ.குன்றாவி. (v.t.) 1. அடைதல்; to reach, attain, enter. உயர்ந்த வுலகம் புகும் (குறள், 346) வீட்டிற்குள் புகுமுன் பாதத்தைக் கழுவிட வேண்டும் (உ.வ). 2. தொடங்குதல்; to make a beginning, commence. நக்குபு புக்கென (கம்பரா.சிறப். 4).

ம. புகுக, பூகுக; க. புகு, பொகு, குகு, கொகு, ஒகு; து. பொக்குனி; பட. குகு; கோத. உக்; துட. புக்

[புல் → புர் → புரை = உட்டுளை. புல் → பொல் → பொள். பொள்ளுதல்= துளைத்தல், பொளிதல். பொள் → பொள்ளை = துளை. புல் → புள் → புழு. துளைத்தரிக்கும் சிற்றுயிரி. புழு = புகு. புகுதல் = துளைத்தல் போல் உட்செல்லுதல், உட்படுதல், அகப்படுதல், செல்லுதல், தொடங்குதல், (வே.க. 3, 101–104)]

புகு²–தல் *pugu-,* 3 செ.கு.வி. (v.i.) 1. செல்லுதல்; to go, proceed. 2. தொடங்குதல்; to begin. *"கடனீராடுவான்... புகும்"* (திவ். இயற். 3, 69.) 3. தாழ்நிலை யடைதல் (வின்.); to come to a mean or abject condition. 4. வாழ்நாளடைதல்; to enter upon, as a particular age or stage of life. *"பிராய நூறு மனிதர்தாம் புகுவ ரேனும்"* (திவ். திருமாலை, 3) 5. ஏறுதல்; to mount upon, ride. *"புகவரும் பொங்குளைப் புள்ளியன் மாவும்"* (பரிபா. 10, 14). 6. நிகழ்தல்; to happen, come to pass. 7. உட்படுதல்; to undergo. *"சிறைதளை சங்கிலி புகிலும்"* (S.I.I. iii, 28). 8. அகப்படுதல்; to caught. *"சூறைபுகுவன பாறையே"* (துக்கயாகப். 64).

[புழு → புகு–. 'புகு' என்னும் வினை 'புக்கு' என இரட்டித்து இறந்தகாலம் காட்டினது அசைபழுத்தத்தினாலேயே, புக்கு பண்டைக் காலத்தில் முற்றாகவும் எச்சமாகவும் வழங்கப்பட்டது. பின்பு பால்காட்டும் ஈறுசேர்ந்து புக்கான் (புக்கு +ஆன்) என்று முற்றுக்குத் தனிவடிவம் ஏற்பட்டபின் அவ்வீறு பெறாத பண்டைவடிவம் எச்சமாக மட்டும் வழங்கி வருகின்றது. (ஒ.மொ. 1, 97–98)]

புகு³–த்தல் *pugu-,* 3 செ.குன்றாவி. (v.t.) 1. போகவிடுதல்; to cause to enter. *"வாயில் புகுப்பினும்"* (தொல்.பொருள்.149). 2. உட்செலுத்துதல்; to insert, put in.

ம. புகுக்க, புக்கிக்க, பூகிக்க: து. பொக்காவுனி, பொக்பாவுனி.

[புகு–தல் (த.வி.) - புகு–த்தல் (பி.வி.)]

புகுடி¹ *puguḍi,* பெ. (n.) 1. கழி; back water, estuary. 2. வாயில்; gate, doorway.

[புள் → புழு → புகு → புகுதி = மனைவாயில், வழி, வருவாய். புகுதி → புகுடி (மு.தா. 288)]

புகுடி² *puguḍi,* பெ. (n.) புருவம் (பிங்.); eyebrow

[புல் → புர் → புரு → புருவு → புருவம் = கண்களின் மேலுள்ள மயிர்வளைவு புருவு → புகுவு → புகுடி]

புகுடி³ *puguḍi,* பெ. (n.) புகிடி (அரு.நி.) பார்க்க; see *pugiḍi.*

[புகிடி → புகுடி]

புகுத்து–தல் *puguttu,-,* 5 செ.குன்றாவி. (v.t.) *புகு³–தல்* பார்க்க; see-*pugu³-,*

[புகுது–தல் (த.வி.) – புகுத்துதல் (பி.வி.)]

புகுதி *pugudi,* பெ. (n.) **1.** மனைவாயில் (பிங்.); front door or main entrance of a house. **2.** நிகழ்வு; occurrence, event. *'புகுதியின்னதால்'* (கந்தபு. சிங்கமு. 20). **3.** ஆழ்ந்தறியும் நுண்ணறிவு; penetrating intellect. *'புகுதி கூர்ந் துள்ளார்வேதம்'* (கம்பரா. முதற்போர். 222). **4.** வழி (அரு. நி.); way. **5.** வருவாய் (அக.நி.); income.

[புள் → புழு → புகு → புகுதி = மனை வாயில், வழி, வருவாய் (மு.தா. 2, 126)]

புகுது–தல் *pugudu-,* 3 செ.குன்றாவி. (v.t.) **1.** புகுதல், உட்செல்லுதல், நுழைதல்; to enter. *'பொய்யிலங்கெனைப் புகுதலிட்டு'* (திருவாச. 5, 92). 2. நிகழ்தல்; to happen, come to pass. *'வேறொன்றும் புகுதாவிட்ட'* (பெரியபு. எறிபத்த. 38).

[புள் → புழு → புகு → புகுது (மு.தா. 2, 126)]

புகுந்தகம் *pugundagam,* பெ. (n.) புக்ககம் பார்க்க; see *pukkagam. 'புகுந்தகமும்'* (குமர. மீனாட். இரட். 20).

[புகு → புகந்த + அகம்]

புகுந்துபார்–த்தல் *pugundu-pār-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஆழ்ந்து நோக்குதல்; to look into a thing carefully, scrutinise, examine closely.

[புகு → புகுந்து + பார்–,]

புகுந்துவிளையாடு–தல் *pugundu viḷai-y-āḍu-,* 5 செ.கு.வி. (v.i.) தடை ஏதுமில்லாமல் நன்றாகச் செயற்படுதல்; to give free rein to (one's proficiency is strength), to make a show of one's capability. வினாத் தாள் எளிமையாக இருந்ததால் மாணவர்கள் புகுந்து விளையாடி விட்டார்கள் (உ.வ.).

[புகுந்து + விளையாடு–,]

புகுபுகெனல் *pugupugeṉal,* பெ. (n.) **1.** நீர்ப்பொருள் வெளியேறுதலின் விரைவுக் குறிப்பு; onom. expr. of gushing out as water. **2.** காற்று வீசுதலின் ஒலிக்குறிப்பு; onom. expr. of coming in puffs, as wind.

[புகுபுகு + எனல்]

புகுமுகம்புரிதல் *pugu-mugam-puridal,* பெ. (n.) (அகப்.) ஒருவரையொருவர் எதிர்ப்பட்ட விடத்துத் தலைவன் தன்னை நோக்குதலை விரும்பும் தலைவியின் உள்ள நிதழ்ச்சி (தொல். பொருள். 261.); the desire of a maiden that her lover should return her gaze, when they meet each other for the first time.

[புகு + முகம் + புரிதல். 'தல்' தொ. பெ. ஈறு]

புகுர்–தல் *pugur-,* 3 செ.குன்றாவி. (v.t.) புகுதல்; to enter.

[புள் → புழு → புகு → புகுதி. புகு → புகுர்–, (மு.தா. 288)]

புகுரு–தல் *puguru-,* 4. செ.குன்றாவி. (v.t.) *புகுர்–தல்* (இ.வ.) பார்க்க; see *pugur-,*

[புகு → புகுரு (கொ.வ.)]

புகுவழி *puguvaḻi-,* பெ. (n.) நுழைவுத் தடம்; entrance.

மறுவ. நுழைவாயில்

[புகு + வழி]

புகுவாசல் *pugu-vāšal,* பெ. (n.) அடைக்கலம் புகுமிடம்; place of refuge. '*தேவதைகளும் நீங்களும் ஒரு புகுவாசல் தேடித் திரியு மன்றல்லது ஸர்வாதிகன் ஒருவன் உளன் என்று உங்கள் நெஞ்சிற்படமாட்டாது*' (திவ். திருமாலை, 9, வ்யா. பக். 42).

மறுவ. புகலிடம்

[புகு + வாசல். வாயில் → வாசல்]

புகுவாயில் *puguvāyil,* பெ. (n.) இரைக்குழலின் இறுதிப்பகுதி; the termination of the elsophagus.

[புகு + வாயில். வாய் + இல் – வாயில்]

புகை¹–தல் *pugai-,* 3 செ.கு.வி. (v.i.) 1. புகையெழுதல்; to smoke '*தீப்போற் புகைந்தெரிய*' (திருவாச. 6, 36.) 2. ஆவியெழுதல் (கொ.வ.); to emit vapour or steam. 3. செய்தி வெளிப்படத் தொடங்குதல்; to begin to be spoken of or made public; to come out 4. வருந்துதல்; to burn, as the heart; to be chagrined; to grieve. '*புண்வேற் புடையிற்புகைந்தாள்*' (சீவக. 13). 5. சினங் கொள்ளுதல் (சூடா.); to fume with anger; to be furious. 6. பயிர் முதலியன தீய்தல் (யாழ்ப்.); to be blighted, as crops; to wither, as plants. 7. குடி முதலியன அழிதல்; to be ruined as a family 8. மாறுபடுதல்; to become unfavourable. '*கரியவன் புகையினும்*' (சிலப். 10, 102). 9. தொண்டை முதலியன கரகரத்தல். to be irritated, as the throat. '*தொண்டை புகைகிறது*'.

ம. புகயுக; **க.** பொகெ, புகு, பொகு, கொகு; **தெ.** பொகையு, பொவடி, பொகசு, பொகுசு; புகெயுனி; **பட.** கொகெ.

புள் → புகு = துளைக்குட் செல், உட்செல். புகு → புகை (சு.வி. 36)]

புகை² *pugai-,* பெ. (n.) 1. எரிகின்ற பொருளின்றெழும் கரும்படலம்; smoke, fume. '*வேள்விக் கொழும் புகையும்*' (சீவக. 2977) பண்டைத் தமிழகத்தில் பெண்டிர் காரகிற் புகையாலும் சந்தனக் கட்டைப்புகையாலும் தம்கூந்தலின் ஈரம் புலர்த்துவர். (உ.வ). 2. பனிப்படலம் (வின்.); mist, haze. 3. ஆவி; vapour, steam. '*புகை வேய் குன்றத்து*' (பெரும்பாண். 19). 4. தென் கீழ்த்திசைப் பாலன் குறி (சூடா.); sign of the guardian of the South East. 5. யோசனைத் தொலைவு (தூரம்); distance of a yōjana. '*ஐஞ்ஞூறு புகைபெறும்*' (யசோதா. 1,34). 6. கண்ணில் விழும் படல வகை (சீவரட்); cataract of the eye. 7. துன்பம் (துக்கம்); distress '*சிந்தை புகையில்லை*' (திருமந். 1346). 8. மாணிக்கத்தின் குற்ற வகை; flaw in a ruby. '*புகையொடு திருகல்*' (திருவாலவா. 25, 14). 9. சுறாலைப்புகை (சாம்பிராணித் தூபம்); incense. '*புகையும் சாந்தும்*' (சிலப். 5, 198). 10. சுறாலை புகைக்கும் போது அடிக்கும் மணி (தூபமணி); gong struck while incense is burnt. '*புகை யணங்க*' (பு.வெ. 10, பொது. 8). 11. புகை வட்டம்; a hell. '*ஈரும் புகையிரு ளோடு*' (ஏலாதி, 67).

மறுவ. அரி.

ம. புக; **க.** பொக; **தெ.** பொக, பொவ; **து.** புகெ, பொகெ; **கோத.** பெக்; **துட.** பக்; **பட.** கொகெ; **கொலா., நா., கட.** பொக்;

குவி. போஇயி, போஇ.

[புள் → புகு = துளைக்குட் செல், உட் செல். புகு → புகை]

If *AS.* smoca; E smoke. LowGer; Dut. smook *(சு.வி. 36)* pu-gei, smoke (Tel. pog-a). comp. Hung. fūs, smoke; also the following words signifying vapour in the Turkish dialects; bug, buch, bugu. Comp. also the English fog. (CGDFL. 621).

புகை³—த்தல் *pugai-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. புகையச் செய்தல்; to cause to smoke, to emit smoke '*நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇ*' (புறநா.281) 2. புகையை உட்புகுத்தி உயிரிகளை (பிராணிகளை)க் கிளப்பி அகப் படுத்தியழித்தல் (திவ்.இயற். நான்மு.3வ்யா); to entrap and destroy, as by letting smoke into rat-holes. 3. கெடுத்தல்; to ruin.

ம. புகைக்க; க. கொகெ

[புகை—தல் (த.வி.) – புகை—த்தல் (பி.வி)]

புகை⁴—த்தல் *pugai-,* 4 செ.கு.வி. (v,i.) சினக்குறிப்புக் காட்டுதல் (சது.); to fume with anger; to be inflamed with rage

ம. புகயுக

[புகை → புகை—த்தல்.]

புகை⁵—த்தல் *pugai-,* 11 செ.குன்றாவி. (v.t.) புகையிலை முதலியவற்றின் புகையை உட்கொள்ளுதல்; to smoke, as tobacco or other drugs.

[புகு → புகை → புகைத்தல்]

புகைக்கட்டு *pugai-k-kaṭṭu,* பெ. (n.) புடமிட்டெடுக்கை; calcination '*நீடும் புகைக்கட்டினா லுண்டாகுங் காரியமென்னு*' (சரவண. பணவிடு.210).

[புகை + கட்டு. கள் → கட்டு]

புகைக்கண் *pugai-k-kaṇ,* பெ. (n.) நீலவிழி; blue-eye.

[புகை + கண். கள் → கண்]

புகைக்கப்பல் *pugai-k-kappal,* பெ. (n.) நீராவிக்கப்பல்; steamer, steamboat.

து. புகெகப்பல்

[புகை + கப்பல். கப்பு → கப்பல்]



புகைக்கம்மல் *pugai-k-kammal,* பெ. (n.) பார்வையை மழுங்கச்செய்யும் கண்ணோய் வகையுளொன்று; an eye disease.

[புகை + கம்மல்]

புகைக்கரி *pugai-k-kari,* பெ. (n.) **1.** எரிபொருளால் பக்கத்து இடங்களில் படியும் கரும்படலம்; smoke-black. **2.** புல்கரி, தூள் நிலக்கரி; peats.

து. புகெகரி

[புகை + கரி. கர் → கரி. புகைப்படலம் கருப்பாய் அமைவதால் கரி எனப்பட்டது. ஒ.நோ: ம. இல்கரி (இல்லத்தில் படியும் புகை, ஒட்டடை)]

புகைக்காடு *pugai-k-kāḍu,* பெ. (n.) **1.** புகைப்படலம் (வின்.); smoke; thick mist, fog. **2.** வேகம் முதலியவற்றின் மிகுதி குறிக்குஞ் சொல் (யாழ்.அக.); term indicating excess as, of speed.

ம. புகக்காடு

[புகை + காடு. கடு → காடு]

புகைக்குண்டு *pugai-k-kuṇḍu,* பெ. (n.) **1.** நச்சுப்புகை புகைக்கும் ஏனம் (யாழ்.அக.); a vessel for fumigating with poisonous fumes. **2.** துமுக்கி (துப்பாக்கி)க் குண்டு; bullet. (நெல்லை.).

[புகை + குண்டு குள் → குண்டு = உருண்ட வடிவானகலம், உருண்டையான கோளம். 'காய்ச்சினால் (நச்சுப்) புகை வருவது, வெடித்தால் புகைவருவது]

புகைக்கூடு *pugai-k-kūḍu,* பெ. (n.) **1.** புகைபோக்கி (கட்டட. நாமா.10); chimney-piece, flue, covered opening for the escape of smoke. **2.** வானக்கூண்டு (இ.வ.); balloon.

ம. புகக்கூடு; **தெ.** பொககூடு; *பட.* கொகெகூடு.

[புகை + கூடு. கூளுதல் = வளைதல். கூள் → கூண்டு → கூடு = உருண்டையான புகைக்கூண்டு]



புகைக்கூண்டு *pugai-k-kūṇḍu,* பெ. (n.) **1.** *புகைக்கூடு* பார்க்க; see *pugai-k-kuḍu.* **2.** விண்ணில் வெடிக்கும் வாணம் (வின்.); explosive shell thrown by hand or from a mortar, rocket.

[புகை + கூண்டு. குள் → கூள் → கூண்டு]

புகைக்கூர் *pugai-k-kūr,* பெ. (n.) புகைப்படை (இ.வ.); soot.

[புகை + கூர்]

புகைக்கொடி *pugai-k-koḍi,* பெ. (n.) வால் மீன் (தூமகேது); comet. '*புகைக்கொடி தோன்றினும்*' (சிலப்.20.102, அரும்.)

[புகை + கொடி. கொள் → கொடு → கொடி = வளைந்து படரும் நிலைத் திணை வகை. புகை கொடிப்போல் நீண்டுகாட்சியளிக்கும் கோள்]



புகைக்கோள் *pugai-k-kōḷ,* பெ. (n.) வால்வெள்ளி; comet.

து. புகைபீலெ

[புகை + கோள். குள் → கொள் → கோள் = சுற்றிவரும் விண்மீன். மங்கலாக, புகைப் படலம் போலத்தெரிவது புகைக்கோள்]

புகைகட்டு–தல் *pugai-kaṭṭu-,* **15** செ.கு.வி. (v.i.) **1.** புகையேற்றுதல்; to smoke or fumigate affected parts of the body, as in tooth-ache. **2.** புகையால் நிறமூட்டுதல்; to impart a gold or silver colour by fumigation

[புகை + கட்டு. கள் → கட்டு]

புகைகாட்டு–தல் *pugai-kāṭṭu-,* **15** செ.கு.வி. (v.i.) **1.** புகைத்து நோய் நீக்குதல்; to smoke, fumuigate, as a cure **2.** புகையுண்டாக்குதல் (வின்.); to burn incense, as for expelling flies, exorcising devils; **3.** சுறாலைப்புகை (தூபங்) காட்டுதல்; to offer incense, as to a deity.

[புகை + காட்டு–, காண் (கு.வி.) – காட்டு (பி.வி.)]

புகைகாண்(ணு)–தல் *pugai-kāṇ(ṇu)-,* **16** செ.குன்றாவி. (v.t.) முற்ற அழித்தல்; to destroy completly, as by cremation ***'அவனைப் புகை கண்டால்தான் விடுவான்'*** (கொ.வ.).

[புகை + காண்–,]

புகைகுடி–த்தல் *pugai-kuḍi-,* **4** செ.கு.வி. (v.i.) *புகை⁵–த்தல்* பார்க்க; see *pugai⁵-,* இளமையில் நண்பர்களால் புகை குடிக்கும் பழக்கம் ஏற்படுகிறது (உ.வ.).

[புகை + குடி-,]

புகைகொள்ளல் *pugaikoḷḷal,* தொ. பெ. (vbl.n.) *புகையிழுத்தல்* பார்க்க; see *pugaiyiḻuttal.*

[புகை + கொள்ளல். 'அல்' தொ.பெ.ஈறு]

புகைச்சகுனம் *pugai-c-caguṇam,* பெ. (n.) புகையினாற் சகுனம் பார்க்கை; omens read by observing the smoke. (Pond.).

[புகை + சகுனம்]

Skt. sakuna > த. சகுனம்

புகைச்சரக்கு *pugai-c-carakku,* பெ. (n.) புகைந்து ஆவியாகுந் தன்மையுள்ள இதளியம், வைப்பு நஞ்சு, முதலான பொருள்கள்; drugs that send fumes when put on burning unders.

[புகை + சரக்கு. சர் → சரகு → சரக்கு]

புகைச்சல் *pugaiccal,* பெ. (n.) **1.** புகை; smoke *'அங்கு மிகவும் புகைச்சலாயிருக்கிறது'* (கொ.வ.) **2.** இருள் (யாழ்.அக.); darkness, obscurity, dullness, gloominess. **3.** பார்வை மழுக்கம்; dimness of sight. *'கண்புகைச்சலாயிருக்கிறது'* (இட.வ.). **4.** வயிற்றில் உண்டாகும் காந்தல் (கொ.வ.); burning sensation in the stomach. **5.** தொண்டை யிலுண்டாம் கரகரப்பு; sore-throat **6.** *புகையிருமல்* (கொ.வ.) பார்க்க; see *pugai-y-irumal* 7. செய்தி சிறுகச்சிறுக வெளிப்படுகை (கொ.வ.); coming out little by little, getting publicity gradually. **8.** மனவெரிச்சல் (கொ.வ.) ; umbrage, chagrin, heat-burning, ill-will.

ம. புகச்சல்

[புகை → புகைச்சல். 'சல்' தொ.பெ.ஈறு]

புகைச்சல்போடு—தல் *pugaiccal-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) கொசு முதலியவை யொழியத் தீமூட்டிப் புகையூட்டுதல்; to make smoke for driving away mosquitoes.

[புகை → புகைச்சல் + போடு—,]

புகைச்சற்காதி *pugaiccaṟkādi,* பெ. (n.) எவட்சாரம்; salt petre-nitre.

புகைசாப்பிடல் *pugai-šāppiḍal,* தொ.பெ. (vbl.n.) கஞ்சா பிடித்தல்; "kanja" smoking.

[புகை + சாப்பிடல். சாப்பிடு → சாப்பிடல்]

புகைசாப்பிடு—தல் *pugai-šāppiḍu-,* **22** செ.கு.வி. (v.i.) கஞ்சா பிடித்தல்; to smoke 'kan̄ja'.

[புகை + சாப்பிடு—,]



புகைச்சுருட்டு *pugai-c-curuṭṭu,* பெ. (n.) புகை குடிப்பதற்கு உதவும் புகையிலைச் சுருள்; cigar, cheroot.

தெ. பொகச்சுட்ட
த. சுருட்டு →Eng. cheroot

[புகை + சுருட்டு. சுருள் → சுருட்டு]

புகைசுற்று—தல் *pugai-cuṟṟu-,* **15** செ.கு.வி. (v.i.) **1.** சோறு முதலியன தீய்ந்து கும்பனாற்ற மடித்தல்; to be overcooked or charred and have a smell of smoke, as food. **2.** புகை வெளியேறாமல் தங்கிக் கொள்ளுதல்; accumilation of the smoke அடுப்புப் புகைந்து வீடெல்லாம் புகைசுற்றிக் கொண்டது. (உ.வ)

மறுவ. கரிவாடை அடித்தல்

[புகை + சுற்று—,]

புகைசூழ்—தல் *pugai-šūḻ-,* **3** செ.கு.வி. (v.i.) *புகைசுற்று—தல்* (வின்.)பார்க்க; see *pugaišṟṟu-,*

[புகை + சூழ்—,]

புகைசூழ்வட்டம் *pugai-šūḻ-vaṭṭam,* பெ. (n.) *புகைவட்டம்* பார்க்க; see *pugai-vaṭṭam.*

[புகை + சூழ் + வட்டம். வள் → வட்டு → வட்டம்]

புகைஞ்சான் *pugaiñjāṉ,* பெ. (n.) 1. பயனற்றது (கொ.வ.); that which is low or useless. 2. ஆற்றலில்லாதவன் (கொ.வ.); man of inferior ability.

[புகை → புகைஞ்சான்]

புகைத்தல் *pugaittal,* பெ. (n.) சினத் தாலுண்டாகும் மனவெரிச்சல்; fuming with anger, spite. *'அவர்கள் புகைத்தலிருக்கிறபடி'* (ஈடு, 5, 9, 5)

[புகை → புகைத்தல். 'தல்' தொ.பெ.ஈறு]

புகைத்திராவகம் *pugai-t-tirāvagam,* பெ. (n.) *புகைநீர்மம்* பார்க்க; see *pugai-nirmam.*

[புகை + திராவகம்]

Skt. drāvaka. > **த.** திராவகம்

புகைதாண்டுவாள் *pugai-tāṇḍuvāḷ,* பெ. (n.) கொசு; mosquitoe.

[புகை + தாண்டுவாள்]

புகைதள்ளல் *pugaitaḷḷal,* தொ. பெ. (vbl.n.) 1. சுருட்டுப் பிடிப்பதை நீக்கிக் கட்டுப் பாடாயிருத்தல் (பத்தியமாயிருத்தல்); prohibition of smoking when mediciene is taken or when on diet. 2. மிகையாக புகையை வெளியேற்றுதல்; exhausting smoke excess. வண்டி மிகுதியாகப் புகை தற்றுகிறது (உ.வ)

[புகை + தள்ளல். தள்ளு → தள்ளல். 'அல்' தொ.பெ.ஈறு]

புகைந்திருமல் *pugaindirumal,* பெ. (n.) தொண்டையிலெரிச்சலை யுருவாக்கும் இருமல்; inflammatory cough.

மறுவ. கக்குவான்இருமல். தொண்டைப் புகைச்சல்

[புகை → புகைந்து + இருமல்]

புகைநாள் *pugai-nāḷ,* பெ. (n.) தீக்கோள் நிற்கும் விண்மீனிற்கடுத்த விண்மீன் (விதான.குணகுண.94); (astrol.) the naksatra next after that with which a malefic planet is in conjunction.

[புகை + நாள்]

புகைநாற்றம் *pugai-nāṟṟam,* பெ. (n.) கும்பல் வீச்சம்; smell of smoke. *'குழம்பில் புகைநாற்றம் வருகிறது'*

மறுவ. கரிவாடை, தீநாற்றம்

[புகை + நாற்றம். நாறு → நாற்றம்.]

புகைநிட்காரணம் *pugai-niṭkāraṇam,* பெ. (n.) வெடியுப்பு (எவட்சாரம்) (சங்.அக.); saltpetre.

[புகை + நிட்காரணம்]

Skt. nis-kāraṇa. > **த.** நிட்காரணம்.

புகைநிறம் *pugai-niṟam,* பெ. (n.) புகையை யொத்த நிறம்; smoky colour.

ம. புகநிறம்

[புகை + நிறம்]

புகைநிறி *pugai-niṟi,* பெ. (n.) எவட்சாரம்; nitrate of potash.

புகைநீர் *pugai-nir,* பெ. (n.) வடித்திறக்கிய காடிநீர்; acid, any liquid obtained by distillation. எ.கா: வெடியுப்பு நீர்.

[புகை + நீர்]

புகைநீர்மம் *pugainirmam-,* பெ. (n.) புகையாலுண்டாகும் எண்ணெய்; liquid obtained by cooling the fumes.

[புகை + நீர்மம். நீர் → நீர்மம்]

புகைப்படக்காரர் *pugai-p-padakkārar* பெ. (n.) நிழற்படம் எடுப்பவர்; *photographer.*

[புகைப்படம் + காரர்]

புகைப்படச்சுருள் *pugai-p-pada-c-curu*l, பெ. (n.) நிழற்படம் எடுப்பதற்குரிய படச்சுருள்; film roll.

[புகைப்படம் + சுருள். சுரு → சுருள்]



புகைப்படப்பெட்டி *pugai-p-pada-p-petti.* பெ. (n.) நிழற்படம் எடுக்கும் கருவி; camera.

[புகைப்படம் + பெட்டி]

புகைப்படத்தாள் *pugai-p-padattāl* பெ. (n.) நிழற் படச்சுருளில் பதிவு செய்த காட்சியைப் படியெடுக்கப் பயன்படும் ஒருவகைத் தாள்; paper used for printing the image from the negative.

[புகைப்படம் + தாள்]

புகைப்படம் *pugai-p-padam,* பெ. (n.) ஒளிப்படம்; photograph, as seemingly smoked.

மறுவ. நிழற்படம்

[புகை + படம். பட்டு → பட்டம் = பட்டையான துணி. பட்டம் → படம் = துணி, துணியிலெழுதிய ஓவியம். புகைப்படம் = புகைப்போற் காணப்படும் உருவப்படம்]

புகைப்படம் ஒரு காட்சி அல்லது உருவத்திலிருந்து வரும் ஒளியை ஆடிகள் பொருத்தப்பட்ட ஒரு கருவியின் மூலம் புகைப்படச் சுருளில் பதிவு செய்து வேதியியல் மாற்றங்களுக்கு உள்ளாக்கிப் படியெடுக்கப் படுவது

புகைப்படலம் *pugai-p-padalam,* பெ. (n.) புகைத்திரள்; expanse or volume of smoke, vapour, fog, cloud.

[புகை + படலம்.]

புகைப்படை *pugai-p-padai,* பெ. (n.) படிந்த புகைத்திரள்; soot.

[புகை + படை]

புகைப்பரண் *pugai-p-paran,* பெ. (n.) புகைபடும்படி பண்டங்களை வைப்பதற்கான பரண் (வின்.); loft over a fireplace to keep things on for being smoked.

[புகை + பரண். புரம் = உயர்ந்தமனை.புரம் → பரம் = மேல். பரம் → பரண் = உயர்ந்த இருக்கை, அடுப்புக்கு மேலே அமைந்த பரண்]

புகைப்பற்று[1] *pugai-p-parṟu,* பெ. (n.) *புகையாற்றி* பார்க்க (இ.வ.); see *pugai-y-āṟṟi*

[புகை + பற்று]

புகைப்பற்று[2] *pugai-p-parṟu,* பெ. (n.) புகைபடிந்த ஒட்டடை; cobweb with smoke deposit.

[புகை + பற்று]

புகைப்பு *pugaippu,* பெ. (n.) புகைக்கை; smoking, fumigation, smouldering.

தெ. பொகபு, பொகுபு; **து.** புகெப்பு

[புகை→புகைப்பு. 'ப்' தொ.பெ.ஈறு]

புகைப்புற்று *pugai-p-puṟṟu,* பெ. (n.) *புகைப்பற்று* பார்க்க; see *pugai-p-parṟu.*

[புகைப்பற்று → புகைப்புற்று]

புகைபடாமண் *pugaipaḍāmaṉ,* பெ. (n.) சுடாதபச்சை மண்பானை; unburnt mud vessel.

[புகை + படு + ஆ + மண். 'ஆ' எதிர்மறை இடைநிலை]

புகைபடு—தல் *pugai-paḍu-,* 19 செ.கு.வி. (v.i.) *புகைசுற்று—தல்* பார்க்க; see *pugaiśuṟṟu-.*

[புகை + படு—,]

புகைபிடி[1]**—த்தல்** *pugai-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) *புகைசுற்று—தல்* பார்க்க; see *pugai-śuṟṟu-* பொதுவிடங்களில் புகைபிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது (உ.வ.)

ம. புகபிடிக்க

[புகை + பிடி]

புகைபிடி[2]**—த்தல்** *pugaipiḍi-,* 4 செ.கு.வி (v.i.) புகையால் கரையேறுதல்; to get black due to smoke,as of wall.

மறுவ. கரிபிடித்தல்

[புகை + பிடி —,]

புகைபிடி[3]**—த்தல்** *pugai-piḍi-,,* 4 செ.கு.வி. (v.i.) புகை குடித்தல் (இ.வ.); to smoke cigars புகைபிடித்தலால் நன்மை யேதும்இல்லை (உ.வ.).

க. ஹொகெ சேது; **து.** புகெஒய்புனி,

புகெபுட்புனி

[புகை + பிடி —,]

புகைபிடி[4]**—த்தல்** *pugai-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) நச்சுத் தன்மையினைப் போக்க, மருந்துப் புகையின் முன்னின்று வேவு பிடித்தல்; to exposure to the fumes of disinfection.

[புகை + பிடி —,]

புகைபோக்கி *pugai-pōkki,* பெ. (n.) **1.** வீடு, தொழிற்சாலை போன்றவற்றிலிருந்து புகை போகுங் கூடு; chimney. **2.** ஊர்திகளில் புகை வெளியேறுவதற்கு அமைக்கப்பட்ட குழாய் போன்ற அமைப்பு; exhaust pipe, in vehicle.

ம. புகப்பழுது

[புகை + போக்கி. போக்கு→போக்கி. 'இ' வினைமுதலீறு]



புகைபோக்குவாய் *pugai-pōkkuvāy,* பெ. (n.) *புகைப்போக்கி* பார்க்க; see *pugai-p-pōkki.*

மறுவ. புகைக்கூண்டு

[புகைபோக்கு + வாய்]

புகைபோடல் *pugai-pōḍal,* தொ. பெ. (vbl.n.) நறும்புகை காட்டித் தூய்மைப் படுத்தல்; disinfecting through fumes and smoke.

[புகை + போடல். போடு → போடல். 'தல்' தொழிற்பெயரீறு.]

புகைபோடு—தல் *pugai-pōḍu-,* **19**செ. குன்றாவி. (v.t.)- **20** செ.கு.வி. (v.i.) **1.** புகை எழுப்புதல்; to create smoke. கொசுவை விரட்ட வேப்பிலை புகைபோடு **(உ.வ.)** **2.** சுறாலைப்புகை போடுதல்; to burn incense. **3.** காயைப் பழுக்கவைக்க வைக்கோல் முதலியவற்றை எரித்துப் புகை யெழுப்புதல்; to smoke hay stock etc. for fruits to quicken the process of ripening. இந்தப்பழம் தானாகப் பழுத்ததா**?** இல்லை புகை போட்டுப் பழுக்க வைத்ததா**?**

க., பட. கொகெ காகு; **து.** பகெஒய்புனி

[புகை + போடு—,]

புகைமடக்கி *pugai-maḍakki,* பெ. (n.) வெண்காரம் (யாழ்.அக.); borax.

[புகை + மடக்கி]

புகைமண்டலம் *pugai-manḍalam,* பெ. (n.) புகைப்படலம் பார்க்க; see pugai-p-paḍalam

[புகை + மண்டலம். முண்டு → மண்டு. மண்டுதல் = வளைதல். மண்டு → மண்டலம் = வட்டம், வட்டவடிவம், வட்டமாய்ச் சுற்றி வருகை, வட்டமாக அல்லது சூழ்ந்து காணப்படும் புகை, புகை மண்டலம்]

புகைமணம் *pugai-maṇam,* பெ. (n.) புகை நாற்றம் பார்க்க; see pugai-nāṟṟam.

[புகை + மணம். முள் → மள் → மண → மணம். மணத்தல் = வாசனை வீசுதல். புகையின் மணத்தை வீசுவது புகை மணம்]

புகைமாய்ச்சல் *pugai-māyccal,* பெ. (n.) கண்ணோய் வகையுளொன்று; a kind of eye disease.

[புகை + மாய்ச்சல். மாய் → மாய்ச்சல். 'சல்' தொ.பெ.ஈறு]

புகைமூட்டம் *pugai-mūṭṭam,* பெ. (n.) **1.** கொசு போன்ற சிற்றுயிரிகளை விரட்டுவதற்குப் போடும் புகைத் திரள்; emiternce of smoke to drive insects as mosquitoes. நகராட்சியினர் நேற்று புகை மூட்டம் போட்டனர் **2.** காயைப்பழுக்க வைக்க எழுப்பும் புகை; emiternce of smoke to ripen the unriped fruits. புகை மூட்டத்தால் பழுக்க வைத்த பழம் விரைவில் அழுகிவிடும். **(உ.வ.)**

[புகை + மூட்டம். மூடு → மூட்டம்]



புகைமூட்டம்போடு—தல் *pugai-mūṭṭam, pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) **1.** சில பொருட்களைக் கெடாமல் வைப்பதற்குப் புகை எழுப்புதல்; to produce smoke to keep things unspoiled, to fumigate. **2.** வாழைக்காய் முதலியவற்றைப் பழுக்கச் செய்ய புகைபோடுதல்; *to expose fruits to smoke to make them ripen quick.*

து. புகைகொர்புனி

[புகைமூட்டம் + போடு–,]

புகையடி—த்தல் *pugai-y-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) சோறு புகை சூழ்ந்து நாறுதல்; to smell smoke as badly boiled rice. 'சோறு புகையடிக்கிறது'.

[புகை + அடி –,]

புகையடுப்பு *pugai-y-aḍuppu,* பெ. (n.) மெழுகு எண்ணெய் (தைலம்) எரிக்கப் பயன்படுத்தும் அடுப்பு வகை; a variety of oven.

[புகை + அடுப்பு. அடு → அடுப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

புகையாவி *pugaiyāvi,* பெ. (n.) *புகை²* பார்க்க; see *pugai².*

[புகை + ஆவி]

புகையாற்றி *pugai-y-āṟṟi,* பெ. (n.) புகையேறிய நூலாம்படை (யாழ்.அக.); flake of smoke, soot.

ம. புகயற

[புகை + ஆற்றி]

புகையிருமல் *pugai-y-irumal,* பெ. (n.) வெப்பத்தினால் புகைந்து இருமச் செய்யும் நோய்; inflammation of the pharynx, dry cough.

மறுவ. தொண்டை புகைச்சல், கக்குவான் இருமல்.

[புகை + இருமல். இருமு → இருமல். 'அல்' தொ.பெ.ஈறு]

புகையிலை *pugai-y-ilai,* பெ. (n.) புகைத்தல், மெல்லுதல், மூக்குப்பொடியாகப் பயன் படுத்துதல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தும் கசப்போடு கூடிய காரச்சுவை கொண்ட ஒருவகை இலை, அவ்விலை தரும் செடி (பதார்த்த.560.); tobacco.

மறுவ. பித்தகோரி

ம. பொகயில; **தெ.** பொகாகு; **து.** புகொ், புகிர், புக்கிர்; **க., பட.** ஹொகெசொப்பு;

[புகை + இலை]

புகையிலைக்கட்டையுருட்டல் *pugai-y-ilai-k-kaṭṭai-y-uruṭṭal,* பெ. (n.) ஒருவகைக் கண்ணாம் பொத்தி விளையாட்டு; a kind of hide-and-seek game.

[புகையிலை + கட்டை + உருட்டல்]

இது ஒருவாறு கண்ணாம்பொத்தி போன்றதே. ஆயின் இதற்கு ஒரு வட்டம் போடப்படும்; அதோடு முந்தித்தொடுவது யார் என்று தீர்மானித்தற்கு, எல்லாரையும் வரிசையாய்க் குனிய வைத்து, அவர்கள், நிழலில் புகையிலைக் கட்டையை ஒருவர் உருட்டுவார். அது யார் நிழலில்போய் நிற்கின்றதோ அவர் ஏனையோரைக் தொடுதல் வேண்டும். (த.வி.120)

புகையிலைக்கட்டையெடுத்தல் *pugai-y-ilai-k-kaṭṭai-y-eḍuttal* பெ. (n.) ஒளிந்து விளையாடும் விளையாட்டு; a kind of hide and seek game.

[புகையிலை + கட்டை + எடுத்தல்]

ஆடுவாரெல்லாம் உத்திகட்டி இரு கட்சியாகப் பிரிந்து கொண்டபின், ஒரு கட்சியார் ஓடி ஒளிந்து கொள்வர். இன்னொரு கட்சியார், கடைகட்குச் சென்று புகையிலைக் கட்டை. (அல்லது வெற்றிலைக் காம்பு) எடுத்து வந்து, ஒளிந்தவரைத் தேடிப்பிடிப்பர், யாரையேனும் கண்டுபிடித்தபோது, கடைக்குச் சென்று வந்தமைக்கு அடையாளமாகப் புகையிலைக் கட்டையைக் காட்டல் வேண்டும், கண்டு பிடிக்கப்பட்டவர் முன்பு எல்லாரும் நின்ற இடத்திற்கு வந்துவிடுவர். எல்லாருங் கண்டுபிடிக்கப்பட்டபின் வினைமாறி விளையாடுவர். (த.வி.121)

புகையிலைக்கரி *pugaiyilai-k-kari,* பெ. (n.) எரிந்து தீய்ந்த புகையிலைச் சாம்பல்; ash of burnt tobacco.

[புகையிலை +கரி]

புகையிலைகறள் *pugai-y-ilai-k-kaṟaḷ,* பெ. (n.) 1. புகை குடித்தலால் வயிற்றிலுறைந்து இருமச் செய்யும் புகைப்படலம்; soot of the tobacco, concreting in the stomach and inducing cough 2. புகைச் சுருட்டுக் குடியால் பல் கறுப்படைகை; blackening of the teeth by tobacco smoke.

[புகை + இலை + கறள்.கறு → கறை = கருநிறம். கறு → கறள் = கறை]

புகையிலைகட்டு—தல் *pugai-y-ilai-kaṭṭu-,* 15 செ.கு.வி. (v.i.) 1. புகையிலைச் சரக்குக் கட்டுதல்; to make up packs of tobacco 2. புகையிலையைப் பாடஞ்செய்தல்; to lay up tobacco.

[புகையிலை + கட்டு–,]

புகையிலைகுடி—த்தல் *pukai-y-ilai-kuḍi-,* 4 செ.கு.வி. (v.i.) புகையிலைப் புகையை உட்கொள்ளுதல் (வின்.); to smoke tobacco.

[புகையிலை + குடி –,]

புகையிலைச்சாறு *pugai-y-ilai-c-cāṟu* பெ. (n.) புகையிலையைப் பிழியும்போது வரும் நீர்மம்; the juice of tobacco leaves.

[புகையிலை + சாறு]

வீக்கம், முடக்குவூதை (வாதம்) போன்ற நோய்களுக்கு மருந்தாகத் தேய்க்கப்படுகிறது. உடம்பில் ஒட்டிக் கொள்ளும் அட்டையின் மேல் புகையிலைச் சாற்றைப் பிழிந்தால் அது விட்டு நீங்கும்.

புகையிலைச்சிப்பம் *pugai-y-ilai-c-cippam,* பெ. (n.) புகையிலைக் கட்டு (வின்.); pack of tobacco.

[புகையிலை + சிப்பம்]

புகையிலைச்சுருட்டு *pugai-y-ilai-c-curuṭṭu,* பெ. (n.) புகைச்சுருட்டு பார்க்க; pugai-c-curuṭṭu.

[புகையிலை + சுருட்டு. சுள் → (சுரு) → சுருள் = சுருண்ட பொருள். சுருள் → சுருட்டு = சுருட்டப்பட்டது]

புகையிலைச்சுருள் *pugai-y-ilai-c-curuḷ,* பெ. (n.) காய்ந்தபுகையிலைச் சுருள்; dried tobacco leaf.

[புகையிலை + சுருள்]

புகையிலைச்சுற்று *pugai-y-ilai-c-cuṟṟu,* பெ. (n.) *புகைச்சுருட்டு* (வின்.) பார்க்க; see *pugai-c-curuṭṭu.*

[புகையிலை + சுற்று. சுல் → சுற்று = சுற்றப்பட்டது]

புகையிலைச்செடி *pugai-y-ilai-c-ceḍi,* பெ. (n.) புகைச்சுருட்டுக்குப் பயன்படுத்தும் இலைதரும் செடி; tobacco plant.

க. கொகெசொப்பின கிட; தெ. பொகசெட்டு, பொகாகுசெட்டு

[புகையிலை + செடி]

புகையிலைத்தட்டு *pugai-y-ilai-t-taṭṭu,* பெ. (n.) புகையிலையைப் போன்ற இலையை யுடைய ஒருவகைச் செடி; a plant in Kodaikkanal, its leaves resembling tobacco leaves.

[புகையிலை + தட்டு. துட்டு → தட்டு]

புகையிலைத்தூள் *pugai-y-ilai-t-tūḷ,* பெ. (n.) மூக்குத்தூள்; snuff. ''*நாசிக் கழகு புகையிலைத் தூள்*'' (தனிப்பா).

மறுவ. மூக்குப்பொடி.

[புகையிலை + தூள்]

புகையிலைபோடு-தல் *pugai-y-ilai-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) வெற்றிலையோடு புகையிலையை மெல்லுதல் (கொ.வ.); to chew tobacco with betel-leaf புகையிலை போடுதல் வாய்ப்புற்றை உருவாக்கும் (உ.வ.).

[புகையிலை + போடு-, சிலர்வெறும் புகையிலையை மெல்லுவர்]

புகையிலைவிடுதூது *pugai-y-ilai-viḍudūdu,* பெ. (n.) தூதுவகையைச் சேர்ந்த ஒரு சிற்றிலக்கிய வகை; 'tūdu' literature.

[புகையிலை + விடு + தூது]

18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த சீனிச் சக்கரைப் புலவர் என்பவரால் இயற்றப்பட்டதும் பழனி முருகவேளைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டதுமான ஒரு சிற்றிலக்கியம்.

புகையிழு—த்தல் *pugai-y-iḻu-,* 4 செ.கு.வி. (v.i.) மருந்துப் புகையினை உள்ளிழுத்தல்; to inhale medicated fumes.

[புகை + இழு—,]

புகையின்வட்டம் *pugai-y-iṉ-vaṭṭam,* பெ. (n.) *புகைவட்டம்* (திவா.) பார்க்க; see *pugai-vaṭṭam.*

[புகை + இன் + வட்டம். முள் → வள் → வட்டு → வட்டம் = சுற்று, ஒரு கோள் வான மண்டலத்தை ஒருமுறை சுற்றி வருங்காலம்]

புகையுட்கொள்(ளு)—தல் *pugaiyuṭkoḷ(ḷu)-,* 12 செ.கு.வி. (v.i.) **1.** *புகையிழு—த்தல்* பார்க்க; see *pugaiyiḻu-,* **2.** *புகையுண்(ணு)—தல்* பார்க்க; see *pugaiyuṇ(ṇu)-,*

[புகை + உட்கொள்—, 'கொள்' து.வி]

புகையுண்(ணு)[1]—தல் *pugai-y-uṇ(ṇu)-,* 12 செ.கு.வி. (v.i.) சுருட்டுப் பிடித்தல்; to smoke.

[புகை + உண்—,]

புகையுண்(ணு)[2]—தல் *pugai-y-uṇ (ṇu) -,* 12 செ.கு.வி. (v.i.) புகைபட்டுப் படத்தின் உருக்கெடுதல்; to be discoloured by smoke. "ஓவியம் புகையுண்டதே யொக்கின்ற வுருவாள்" (கம்பரா.காட்சி.11).

[புகை + உண்—,]

புகையுயிர்—த்தல் *pugai-y-uyir-,* 4 செ.கு.வி. (v.i.) கொதிப்படைதல்; to be hot with passion, to be agitated. 'செங்கண் சிவந்து நெஞ்சு புகையுயிர்த்து' (மணிமே. 8, 58).

[புகை + உயிர்—,]

புகையுறுப்பு *pugai-y-uṟuppu-,* பெ. (n.) நேர்கட்டி, செந்தேன், நிரியாசம், பச்சிலை, சந்தனம், அகில் என்ற அறுவகைச் சுறாலை (தூப) வகை (சிலப். 5, 14 உரை); incense, things that emit fragrance when smoked, numbering six viz., nērkaṭṭi, sendēṉ, niriyāsam, paccilai, sandaṉam, agil.

[புகை + உறுப்பு. புகைக்கும்போது நறுமணம் தரும் பொருள்கள்]

புகையுறை *pugai-y-uṟai,* பெ. (n.) *புகையாற்றி* (யாழ். அக.) பார்க்க; see *pugai-y-āṟṟi.*

[புகை + உறை. உறு → உறை]

புகையூட்டல் *pugai-y-ūṭṭal,* தொ.பெ. (vbl.n.) **1.** *புகையூட்டு—தல்* பார்க்க; see *pugai-y-ūṭṭu-,* **2.** காய்கள் விரைவில் பழுப்பதற்குப் புகை காட்டல்; applying smoke to make fruits to ripen quickly **3.** மருந்துத்திரியின் புகையைக் காயத்திற்குள் செலுத்துதல்; fumigation.

[புகை + ஊட்டல்]

புகையூட்டு—தல் *pugai-y-ūṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) **1.** கூந்தல் முதலியற்றுக்கு நறுமணப் புகையூட்டுதல்; to perfume the hair with incense. **2.** நோவுற்ற உடற்பகுதியில் மருந்துப் புகையேற்றி மருத்துவம் செய்தல் (வின்); to tincture, or medicate with smoke.

[புகை + ஊட்டு. உண் (கு.வி) — ஊட்டு (பி.வி.)]

புகையூட்டுகை *pugai-y-ūṭṭugai,* பெ. (n.) தூய்மையாக்குதற்காகக் கீழிருந்து புகை யேற்றுகை; the act of fumigation, suffmigation

[புகை + ஊட்டுகை]

புகையூதல் *pugai-y-ūdal,* தொ. பெ. (vbl.n.) 1. *புகையூட்டல்* பார்க்க, see *pugaiyūṭṭal* 2. புண்புரைகட்கு மருந்துப்புகை காட்டல்; exposure of ulcers and wounds to medicinal vapour to make them heal quickly.

[புகை + ஊதல். ஊது → ஊதல். 'தல்' தொ.பெ.ஈறு]

புகையூது-தல் *pugai-y-ūdu-,* 9 செ.கு.வி (v.i.) 1. காய்களைப் புகையினாற் பழுக்கச் செய்தல் (இ.வ.); to quicken the ripening of fruits by fumigation. 2. பளபளப்பேற்றுதல், பொன்பூசுதல் (முலாம் பூசுதல்) (வின்.); to gild, to line with gold.

மறுவ. புகைமூட்டம் போடுதல்

[புகை + ஊது-,]

புகையூபம் *pugaiyūbam,* பெ. (n.) தோணிமரம்; wood for preparing boats.

[புகை + யூபம்]

Skt. yūpa > த. யூபம்

புகையூரல் *pugai-y-ūral,* பெ. (n.) *புகைப்படை* (வின்.) பார்க்க; see *pugai-p-paḍai.*

[புகை + ஊரல். ஊறல் → ஊரல். 'அல்' தொ.பெ.ஈறு]

புகையேற்றல் *pugai-y-ēṟṟal,* பெ. (n.) *புகையூட்டல்* பார்க்க; see *pugai-y-ūṭṭal.*

[புகை + ஏற்றல். ஏறு → ஏற்று → ஏற்றல். 'அல்' தொ.பெ.ஈறு]

புகையோடு *pugai-y-ōḍu* பெ. (n.) புகைவெளியேறுவதற்கு அமைக்கப்பட்ட ஓடு; a special tile with an outlet to allow smoke to go out.

மறுவ. புகைபோக்கு

து. புகெஒடு

[புகை + ஓடு]



புகைரதம் *pugai-radam,* பெ. (n.) புகைவண்டி; railway train.

[புகை + ரதம்.]

Skt. rata → *த.ரதம்*

புகைவட்டம் *pugai-vaṭṭam,* பெ. (n.) எழுநிரயத்தொன்று (சூடா.); a hell, one of ēḻu naragam, q.v.

[புகை + வட்டம்]

புகைவண்டி *pugai-vaṇḍi,* பெ. (n.) இருப்புப் பாதையில் ஓடும் வண்டி ; railway train. (இ.வ.).

ம. புகவண்டி க. கொகெபண்டி; து.

புகெதகாடி

[புகை + வண்டி. வள் → வண்டு = வளையல், வட்டமான பூச்சி. வண்டு → வண்டி = சக்கரம், சக்கரத்தையுடைய யூர்த்தி. புகைவண்டி = புகையெழுப்பிக் கொண்டு ஓடும் வண்டி. முன்னர் நீராவிப் புகை எழுப்பி இயங்கியதால் புகை வண்டி எனக் கலைச் சொல்லாக்கம் செய்யப்பட்டது. இப்பொழுது நீராவி இல்லாமல் மின்சாரம் ஆகியவற்றால் இவ்வகை வண்டி ஓடுகிறது. அதனால், இப்பொழுது தொடர்வண்டி என்பன போன்று வேறு வகையில் கலைச்சொல்லாக்கம் செய்யப் பட்டு வருகின்றது.]



புகைவண்டிநிலையம் *pugai-vaṇḍinilayam,* பெ. (n.) இருப்பூர்தி நிலையம்; railway station.

ம. புகவண்டித்தானம்

[புகைவண்டி + நிலையம். 'அம்' பெருமைப் பொருள் பின்னொட்டு]

புகைவண்டு *pugai vaṇḍu,* பெ. (n.) வண்டு வகை; a kind of beetle.

[புகை + வண்டு]

இவ்வகைப் பூச்சி தன் உடலின் நுனியில் காற்றுபட்டால் புகை எழும்பக்கூடிய நீர்மத்தைச் சுரக்கும் தன்மையது. பகையுயிரிகளிலிருந்து காக்க இந் நீர்மத்தைச் சுரந்து புகை யுண்டாக்கி அப்புகையின், மறைவில் ஓடி மறைந்து விடுகிறது.

புகைவரி *pugai-vari,* பெ. (n.) வீட்டு வரி வகை; house tax.

[புகை + வரி]

புகைவாங்கல் *pugai-vāṅgal,* பெ. (n.) மருந்துப்புகையை மூக்கினால் உள்ளிழுத்தல்; inhalation of medicinal fumes.

[புகை + வாங்கல். வங்கு → வாங்கு → வாங்கல். 'அல்' தொ.பெ.ஈறு]

புகைவாய் *pugai-vāy,* பெ. (n.) எரிமலைக் குவட்டில் ஆவி வெளிப்படும் புழைவாய்; smoke-hole of valcanoes.

[புகை + வாய்]

புகைவு[1] *pugaivu,* பெ. (n.) **1.** புகைச்சல் (யாழ்.அக.); smoking. **2.** மனவெரிச்சல்; heart-burning **3.** வறட்டிருமல் ; dry-cough.

மறுவ. நெஞ்சுகரித்தல்

[புகை → புகைவு. 'வு' தொ.பெ.ஈறு]

புகைவு[2] *pugaivu,* பெ. (n.) தொண்டையி லேற்படும் அழற்சி; irritation of the throat.

[புகை → புகைவு]

புகைவூட்டுகை *puga-v-ūṭṭugai,* பெ. (n.) *புகையூட்டுகை* பார்க்க; see *pugai-y-uṭṭugai.*

[புகை → புகைவு + ஊட்டுகை. ஊட்டு → ஊட்டுகை. 'கை' தொ.பெ.ஈறு.]

புங்கங்காய் *puṅgaṅkāy,* பெ. (n.) *புங்கங்கொட்டை* பார்க்க ; see *puṅgaṅkoṭṭai.*

[புங்கம் + அம் + காய்]

புங்கங்கொட்டை *puṅgaṅkoṭṭai,* பெ. (n.) புங்க மரத்தின்கொட்டை; soapnut.

[புங்கம் + கொட்டை]

புங்கம்[1] *puṅgam,* பெ. (n.) *புங்கமரம்* பார்க்க; *see puṅga-maram.*

புங்கம்[2] *puṅgam,* பெ. (n.) **1.** அம்பு; arrow. 'புங்கப்படை (**துக்கயாகப். 82**). **2.** அம்பின் அடிப்பாகம் (பிங்.); shaft or feathered part of an arrow. புங்கவாளியொன்றினால் (**தக்க யாகப். 617**)

[புல் → புன் → புன்கு → புங்கு → புங்கம்.]

த. புங்கம் > Skt. piṅkha

புங்கம்[3] *puṅgam,* பெ. (n.) தூய்மை; purity, 'புங்கமுறு மம்புயத்தை' (சரபே. குற. **11.4**)

[புல் → பல் → பால் = வெண்மை. (மு.தா. 146) புல் → பல் → (பன்) பன்னல் = பருத்தி (மு.தா. 147) புல் → (புன்) → புங்கம்]

புங்கம்[4] *puṅgam,* பெ. (n.) குவியல் (யாழ். அக.); heap. collection.

[புல் → புள் → பிள் → பிழம்பு = திரட்சி. புல் → புங்கு → புங்கம்]

புங்கம்[5] *puṅgam,* பெ. (n.) *புன்கு* (கொ.வ.) பார்க்க; see *puṉgu.*

ம. புங்கு; **க.** கொங்கெ.

[புன்கு → புங்கு → புங்கம்]

புங்கம்பால் *puṅgampāl,* பெ. (n.) நீர்ப்புங்க மரத்தின் பட்டை, வேர் முதலானவற்றினின்று எடுக்கும் பால்; milky juice extracted from the bark and root of pongania glabra.

[புங்கம் + பால். புல் → பல் → பால்]

புங்கமரம் *puṅga maram,* பெ. (n.) சிறிய வெள்ளை நிறப் பூக்களையும் அவரைவிதை வடிவிலான காய்களையும் கொண்ட ஒருவகை மரம்; Indian beech.

[புங்கம் + மரம்]

புங்கர்க்காழகம் *puṅgar-k-kaḻāgam,* பெ. (n.) மெல்லிய ஆடை வகை (**சிலப்.14,108. உரை**); a fine cloth.

[புங்கம்+ காழகம்]

புங்கலகம் *puṅgalagam,* பெ. (n.) தணக்கு மரம்; a kind of tree.

புங்கலன் *puṅgalaṉ,* பெ. (n.) ஆதன்; soul.

புங்கவம்[1] *puṅgavam* பெ. (n.) **1.** ஆனேறு, விடையெருது(உரி.நி); bull. **2.**சிவன் ஊர்தி (நந்தி) (பிங்.); nandi, Siva's bull. "புங்கவ மூர்வோனும்" (பரிபா. **8,2**) **3.** சிறந்தது (இலக். அக.); that which is excellent.

[புங்கம் → புங்கவம்]

புங்கவம்[2] *puṅgavam* பெ. (n.) *புங்கம்[2] 1* பார்க்க; see *puṅgam[2] 1* "சூர்விடும் புங்கவங் களை" (கந்தபு. சூர. வதை).

புங்கவன்[1] *puṅgavaṉ,* பெ. (n.) **1.** சிறந்தோன்; eminent person, chief. "அமரர் புங்கவன் புந்தியி னோர்ந்தான்" (காசிக. துருவ. தவ.1). **2.** குரு (பிங்.); priest, preceptor. **3.** தேவன் (பிங்.); god, **4.** புத்தன் (திவா.); Buddha. **5.** அருகன் (திவா.); Arhat. **6.** செய்நஞ்சு வகை (யாழ்.அக.); a kind of arsenic.

[புங்கம் → புங்கவம்]

புங்கவன்[2] *puṅgavaṉ,* பெ. (n.) கந்தக நஞ்சு; natural arsenic being one of the 32 kinds.

புங்கவி *pungavi* பெ. (n.) **1.** தெய்வப்பெண் (சங்.அக.); goddess. **2.** மலைமகள் (பார்வதி); Pārvadi. 'எழிற்புங்கா' (தாயு. மலைவளர். 5).

[புங்கவன் (ஆ.பா.) – புங்கவி (பெ.பா.)]

புங்கவிருகம் *puṅga-virugam,* பெ. (n.) கத்தூரிமான் (யாழ்.அக.); musk deer.

[புங்க(ம்) + விருகம். புன்கு → புங்கு → புங்க]

Skt. mrga > **த.** விருகம்

புங்கவெண்ணெய் *puṅga-v-eṇṇey* பெ. (n.) *புங்கெண்ணெய்* பார்க்க; see *puṅkeṇṇey.*

[புங்க(ம்) + எண்ணெய்]

புங்கன் *puṅgaṉ,* பெ. (n.) மூடன் (இ.வ.); fool.

ம. புங்கன்

புங்கன்கொட்டை *puṅgaṉ-koṭṭai,* பெ. (n.) பூவந்திக் கொட்டை; soapnut.

மறுவ. புங்காங்கொட்டை, பூந்திக் கொட்டை

[புங்கன் + கொட்டை]

புங்கனூர்மாடு *puṅgaṉūr-māḍu,* பெ. (n.) வடார்க்காடு மாவட்டம் புங்கனூரிலுள்ள ஒருவகைச் சிறுசாதி மாடு (கொ.வ.); a excellent breed of Mysore cattle, raised in Puṅgaṉūr in North Arcot.

[புங்கனூர் + மாடு]

புங்காங்கொட்டை *puṅgāṅ-koṭṭai,* பெ. (n.) பூவந்தி; soapnut.

மறுவ. பூந்திக்கொட்டை

[புன்கு → புங்கு + ஆம் + கொட்டை]

புங்காட்டி *puṅgāṭṭi,* பெ. (n.) மான்மணத்தி; bezoar.

புங்காரம் *puṅgāram,* பெ. (n.) மத்தள (மிருதங்க)த்தின் வலக்கைப் பக்கம் (இ.வ.); the right side of a drum.

புங்கி *puṅgi,* பெ. (n.) முட்காவேளை (தைலவ. தைல. 76.); a plant.

புங்கு[1] *puṅgu,* பெ. (n.) *புன்கு* பார்க்க; see *puṉgu.*

ம. புங்நு; **க.** கொங்கெ.

[புன்கு → புங்கு]

புங்கு² *pungu,* பெ. (n.) முருக்கு; bastard kino.

புங்கெண்ணெய் *punkenney,* பெ. (n.) புங்கமரத்தின் வேர், பட்டை முதலான வற்றுடன் மருந்துச் சரக்குகள் கூட்டிக் காய்ச்சிய எண்ணெய் (தைலம்); medicinal oil extracted from the root of pongamila glabra.

[புங்கு + எண்ணெய். எள் + நெய் – எண்ணெய்]

புங்கைமரம் *pungai-maram,* பெ. (n.) புன்கு (இ.வ.) பார்க்க; see *pungu.*

[புங்கு → புங்கை + மரம்]

புச்சத்தலம் *pucca-t-talam,* பெ. (n.), புட்டம் (குதம்)(பிங்.); *anus, posteriors.* "புச்சத் தலத்திடை நிற்ப தபானன்"

[புச்சம் + தலம். புள் → புட்டி → புட்டம் = மாந்தன் உடம்பின் பின்பக்கம். புட்டம் → புத்தம் → புச்சம்]

Skt. stala › த. தலம்

புச்சபீதலம் *puccapitalam,* பெ. (n.), உடலின் பின்பக்கம் (யாழ்.அக.); back.

[புட்டம் → புத்தம் → புச்சம் + பீ + தலம்]

புச்சம்¹ *puccam,* பெ. (n.) **1.** பிட்டம், குண்டி; hinder part. **2.** வால்; tail. **3.** வால்மீன் (பிங்.); comet. **4.**பின்புறந்தொங்கும் ஆடைக் கொடுக்கு; fold of a man's cloth, partly left hanging behind. புச்சந் தோன்றாதபடி உள்முடியாக முடிந்து" (ஈடு, **5, 1, 6**). **5.** நேரம் (திதி4), விண்மீன் முதலியவற்றின் முதல் நாள் சென்றது போக எஞ்சிய குறை; remainder or unexpired portion of a titi or a naksatra. **6.** மயிற்றோகை (யாழ்.அக.); peacock feather. **7.** தேட்கொடுக்கு; scorpion's sting. "புச்சமுறிந்த கருந்தேள் போல" (பிரபோத. **30, 26**). **8.** தேள் (யாழ்.அக.)scorpion.

[புள் → புட்டி = உட்டுளையுள்ளது, ஒரு வகைக் கலம், சிறுபடி, குடுவை, குப்பி. புட்டி → புட்டில் = அம்பறாத் தூணி புட்டி = குடுவை போன்ற பறவையுடம் பின் பிற்பகுதி. புட்டி → புட்டம் = குடுவை போற் புடைத்த மாந்தன் உடம்பின் பின்பக்கம். (வேக. 2,38) புட்டம் → (புத்தம்) → புச்சம் = பிட்டம், விலங்கு, பறவை ஆகியவற்றின் பிட்டப் பகுதியில் இருக்கும் வால், வால்போல் நீண்டு காணப்படும் விண்மீன், பின்புறத்தில் தொங்கவிடும் ஆடை, ஒன்றின் (முன்பகுதி) கழிந்தது போக எஞ்சி நிற்கும் பின்பகுதி, வால் போல் நீண்டிருக்கும் மயிற்றோகை, வால் போல் வளைந்து காணப்படும் தேட் கொடுக்கு, அக் கொடுக்கையுடைய உயிரி.]

புச்சம்² *puccam,* பெ. (n.) முள்ளந்தண்டின் கீழ்ப்பகுதியிற் காணப்படும் புச்சவெலும்பு; cuckoo's beak shaped bone.

புச்சவூதை¹ *puccavūdai,* பெ. (n.) கை கால் முட்டிகள் மடக்கவியலாது, மிகுவலியை யுண்டாக்கும் ஊதை நோய் வகை; a painful disease affecting generally the small joints and often accompanied by concretions at the joints.

மறுவ. முடக்கு வாதம்

[புச்சம் + ஊதை]

புச்சவூதைநோய் *pucca-v-ūdai-nōy,* பெ. (n.) முள்ளந்தண்டின் அடிப்பாகத்தி லேற்படும் வலி; a disease of the coccyx.

[புச்ச + நோய்]

புச்சவெலும்பு *pucca-v-elumbu,* பெ. (n.) முள்ளந்தண்டின் கீழ்ப்பகுதியில், முக்கோண வடிவிலமைந்த தொங்கும் எலும்பு; cuckoo's beak shaped bone.

[புச்சம் + எலும்பு]

புச்சவெலும்புவலி *pucca-v-elumbu-vali,* பெ. (n.) இடுப்பெலும்பின் இணைப் பிலுண்டாகும் வலி; pain in the coccyx and the neighbouring region due to rheumatism.

[புச்சவெலும்பு + வலி]

புச்சி[1] *pucci,* பெ. (n.) எருக்கு (சங்.அக.); madar.

[புல் → புன் → புழு = துளைத்தரிக்கும் சிற்றுயிரி. புல் → புன் → (புன்சி) → புச்சி = முள்ளுள்ள காயைக் கொண்ட செடி]

புச்சி[2] *pucci,* பெ. (n.) கோழி; fowl.

புச்சிகம் *puccigam,* பெ. (n.) சித்தாமல்லிச் செடி; a plant.

புசங்கம் *pušaṅgam,* பெ. (n.) வங்கமலை; mountain containing lead ore.

புசபத்திரி *pušapattiri,* பெ. (n.) சாதிப்பத்திரி; mace.

புசல்[1] *pušal,* பெ. (n.) பெருங்காற்று; storm. whirlwind, cyclone.

[புயல் → புசல்]

புசல்[2] *pušal,* பெ. (n.) குச்சு மட்டை (வின்.); plastering brush.

புசலடித்துப்போ—தல் *pušal-aḍittu-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) சூறை நோயாற் பயிர் கெடுதல் (இ.வ.); to become wind swept and devoid of crop, as a corn, field.

[புயல் → புசல் + அடித்து + போ—,]

புசற்காற்று *pušaṟ-kāṟṟu,* பெ. (n.) பெருங்காற்று; storm-wind.

மறுவ. சூறாவளி

[புயற்காற்று → புசற்காற்று.]

புசி—த்தல் *puši,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. உட்கொள்ளுதல்; to eat, feed on. "நின்மாலியந் தீர்த்தம் புசியாதிருந்துமிலோம்." (சிவரக. தேவர்முறை. 12). 2. வினைப்பயன் முதலியன கொண்டொழுகுதல் (அனுபவித்தல்); to experience, as the fruits of past actions.

[புள் → புழு → புழு → புகா = சோறு. புகா → புகவு = உணவு. புள் → புசி → பொசி. பொசித்தல் = உண்ணுதல். (மு.த. 289) ஒ.நோ. முள் → (முசி) → மொசி. மொசித்தல் = தின்னுதல். புள் → புசி]

த. புசி > Skt. bhuj.

bhuj, to enjoy, use, possess (esp.)enjoy a meal, eat, eat and drink, consume என்று வடமொழியில் நுகர்தல் (அனுபவித்தல்), பயன்படுத்துதல், உடைமையாகக் கொண்டிருத்தல் என்றாற் போன்ற பொருள் வளர்ச்சியில், உணவை நுகர்தல் (அனுபவித்தல்) என்று புசித்தல் உண்ணுதல் பொருளில் வந்துள்ளதாக மா.வி.அக. காட்டியிருப்பது இயல்பல்லாத தன்மை யினதாதலையும் உட்செல்லுதல் என்னும் பொருளில் புகு → (புள்) → புசி என்று இயல்பாய் அமைந்திருத்தலையும் கண்டுகொள்க.

புசிகரணம் *pušikaraṇam,* பெ. (n.) தின்பண்டம்; eatables.

[புசி + கரணம்]

புசிக்கத்தக்க *pušikka-t-takka,* பெ. எ. (adj.) உண்பதற்கு ஏதுவான; to be eaten.

[புசிக்க + தக்க]

புசிகரம் *puši-karam,* பெ. (n.) **1.** பேணுதல்; nourishing. **2.** ஊண்; food.

[புசி → புசிகரம்]

புசிதம் *pušidam,* பெ. (n.) உண்பதற்குகந்த மணித்தக்காளி; a plant - used both as an vegetable and medicine.

[புசி → புசிதம்]

புசிப்பன *pušippana,* பெ. (n.) உண்ணும் பொருள்கள் (வின்.); eatables.

[புசி → புசிப்பன]

புசிப்பாளி *pušippāḷi,* பெ. (n.) கொடுத்து வைத்தவன், ஆகூழ்க்காரன் (அதிட்டசாலி) (வின்); lucky person,one who enjoys happiness by virtue of past actions.

[புசி → புசிப்பு + ஆளி]

புசிப்பு *pušippu,* பெ. (n.) **1.** உண்ணுகை; eating, feeding, taking food. **2.** உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன ஆகிய நால்வகை யுணவு (பிங்.); food, of four kinds, viz, uṇbaṉa, tiṉbaṉa, nakkuvaṉa, paruguvaṉa. **3.** வினைப்பயனுகர்ச்சி; experiencing the fruits of past actions. "*வினையளவாக ஆன்மாக்களுக்குப் புசிப்புண்டாம்*" (பிரபஞ்சவி.117). **4.** நல்லூழ், ஆகூழ் (அதிட்டம்) (வின்.); good fortune or destiny.

[புசி → புசிப்பு]

புசிப்புத்துறவு *pušippu-t-tuṟavu,* பெ. (n.) ஒருபோது உணவு கிடைக்காதபோதும் உடல் நில்லாதென்றும் எத்தனை நாள் எத்தனை வகையிலே உண்டாலும் பொந்திகை (திருப்தி) யுண்டாகாது என்றும் கருதுவதனால் தோன்றும் துறவு; the idea of renunciation occurring on a consideration of the necessity of food and the constant carrying of the body for food.

[புசி → புசிப்பு + துறவு. துற → துறவு]

புசிப்புவைராக்கியம் *pušippu-vairākkiyam,* பெ. (n.) *புசிப்புத் துறவு* பார்க்க; (சி.சி.8, 2 சிவாக்.); see *pušippu-t-tuṟavu.*

[புசிப்பு + வைராக்கியம்]

Skt. vairāgya. > **த.** வைராக்கியம்

புசுபுசுவெனல் *pušupušuveṉal,* பெ. (n.) மயிர், நூல் போன்றவற்றைத் தொடும்போது உணரும் மென்மைத் தன்மையை உணர்த்தும் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying fluff, fur.

[புசுபுசு + எனல்]

புஞ்சம் *punjam,* பெ. (n.) **1.** திரட்சி, குவியல்; collection, heap, quantity, lump. "***சலஞ்சலப் புஞ்சமும்***" (கல்லா.59,18). **2.** கூட்டம், கும்பல்; flock, crowd, swarm. "***புட்குல புஞ்சம்***" (இரகு.திக்குவி.266) **3.** நெசவில் **240** இழை கொண்ட நூற்கொத்து; (weav.) subdivision of the warp containing **240** threads of skein. **4.** நெய்த ஆடையின் அளவு வகை; cloth of the length of **36** cubits and **38** to **44** inch in width and **14** lbs in weight. (M.M.707).

க. புஞ்சி; **து.** புஞ்ச, புஞ்சொ

[புல் → புள் → பிள் → பிழம் = திரட்சி, வடிவு. புல் → (பிள்) → (பிண்டு) → பிண்டம் = தொகுதி, முழுமை, உடம்பு. புல் → பல் → பலா = பரும் பழமரம். புல் → புன் → (புன்சு) → புஞ்சம்]

த. புஞ்சம் > Skt. punja.

புஞ்சம்கொள்(ளு)–தல் *punjam kol(lu)-,* **16** செ.கு.வி. (v.i.) ஒன்றாக இணைதல், ஒன்றாகச் சேர்தல் (கருநா.); to get together.

க. புஞ்சகொள்

[புஞ்சம் + கொள்–,]

புஞ்சமுத்து *punjamuttu,* பெ. (n.) *புஞ்சைமுத்து* பார்க்க; see *punjai muttu* (S.I.I.ii.34).

[புஞ்சைமுத்து → புஞ்சமுத்து]

புஞ்சவனம் *punjavanam,* பெ. (n.) மூன்றாம் மாதக் கருப்பம்; foetus three months old.

[புல் → புன் → (புன்சு) → புஞ்சம் = திரட்சி. புஞ்சம் → புஞ்சவனம் = திரண்ட கருப்பம்]

புஞ்சி–த்தல் *punji-,* **4** செ.குன்றாவி. (v.t.) ஒன்றாக்குதல், குவியலாக்குதல் (கருநா.); together, to make heap.

க. புஞ்சிசு

[புல் → புன் → புன்சி → புஞ்சி–,]

புஞ்சிகை *punjigai,* பெ. (n.) ஆலங்கட்டி (சங்.அக.); hail-stone.

க. புஞ்சிகை (திரண்டது, குவியல்)

[புல் → புன் → (புன்சு) → புன்சிகை = திரண்ட நீர்க்கட்டி.]

புஞ்சித்துவம் *punjittuvam,* பெ. (n.) வெள்ளை (சுக்கிலம்) (யாழ்.அக.); semen.

[புஞ்சு + துவம். புல் → புன் → புன்சு → புஞ்சு. புஞ்சுதல் = ஒன்று சேர்தல், புஞ்சித்துவம் = புணர்ச்சியின் போது வெளிப்படுவது]

புஞ்சின்னம் *puncinnam,* பெ. (n.) ஆண்குறி (யாழ்.அக.); membrum virile.

[புஞ்சு + சின்னம் புல் → புன் → புன்சு → புஞ்சு. புஞ்சுதல் = ஒன்றுசேர்தல். சுல் → சில் → சின் → சின்னம். புஞ்சின்னம் = புணர்ச்சிக்கு உரியது]

புஞ்சு–தல் *punju-,* **5** செ.கு.வி. (v.i.) ஒன்றுசேர்தல்; to gather, unite. '***புஞ்சிய பந்த சந்தம்***' (மேருமந்.104).

க. புஞ்சிசு

[புல் → புன் → புன்சு → புஞ்சு.]

புஞ்சுகம் *punjugam,* பெ. (n.) முருக்கமரம்; bastard teak.

புஞ்சை *punjai,* பெ. (n.) புன்செய்; dry land.

ம. புஞ்ச; க. புஞ்சை, பிஞ்ச, புஞ்சி, புணச, புணகி, புணுகி; தெ. புஞ்ச (மேட்டுநிலம்); து. புஞ்ச, புஞ்சொ

[புல் → புன் + செய் – புன்செய் → புஞ்சை]

'புன்செய்' பார்க்க

புஞ்சைக்கண்டம் *puñjai-k-kaṇḍam,* பெ. (n.) பாசனத்தில் இருக்கும் நிலம் (சேரநா.); field under irrigation, yielding even three harvests.

ம. புஞ்சக்கண்டம்; து. புஞ்சகண்ட (ஓராண்டுக்கு ஒரு விளைச்சல் தரும் மேட்டு நிலம்)

[புஞ்சை + கண்டம்]

புஞ்சைநிலம் *puñjai-nilam,* பெ. (n.) *புன்செய்* பார்க்க; see *puṉšey.*

[புஞ்சை + நிலம். புன்செய் → புஞ்சை]

புஞ்சைப்பற்றுக்கட்டு *puñjai-p-paṟṟu-k-kaṭṭu,* பெ. (n.) இறைவை நீராற்பயிராகும் புன்செய் நிலங்களுக்கு விதிக்கும் பணத்தீர்வை; money rent levied on lands in which crops. other than paddy are raised under well-irrigation. (R.T.).

[புஞ்சை + பற்று + கட்டு]

புஞ்சைபாகாயாத்து *puñjai-pāgayāttu,* பெ. (n.) தோட்டத்தரப்பிலுள்ள புன்செய் நிலம்; dry land rated as garden land. (R.T.).

[புஞ்சை + பாகாயாத்து]

U. bāgāyat > த. பாகாயாத்து

புஞ்சைமுத்து *puñjai-muttu,* பெ. (n.) பருமுத்து; big-sized pearl. (S.I.I.ii,176).

[புஞ்சை + முத்து. புல் → புன் → (புன்சு) → புஞ்சை. முள் → முட்டு → முத்து]

புஞ்சைமேல்நஞ்சை *puñjai-mēl-nañjai,* பெ. (n.) புன்செய் நிலங்களில் சாகுபடி செய்த நன்செய்ப் பயிர்; wet crops raised in fields classed as dry.

[புஞ்சை + மேல் + நஞ்சை]

புஞ்சைவர்த்தனை *puñjai-varttaṉai,* பெ. (n.) புன்செய்த் தீர்வையொடு செலுத்தும் மிகுதியானவரி; acesss in addition to the puñjai tax (R.T.).

[புஞ்சை + வர்த்தனை]

Skt. vartana > த. வர்த்தனை

புஞ்சைவரவுநஞ்சை *puñjai-varavu nañjai,* பெ. (n.) நன்செய்நிலமாய் மதிக்கப்படும் புன்செய்; dry land classed as wet. (R.T.).

[புஞ்சை + வரவு + நஞ்சை. புன்செய் → புஞ்சை. நன்செய் → நஞ்சை]

புஞ்சைவான்பயிர் *puñjai-vāṉ-payir,* பெ. (n.) புன்செயிற் பயிராகும் மிளகாய், கத்தரி, புகையிலை, மஞ்சள் முதலியன; particular dry crop, such as chillies, brinjals, tobacco, turmeric, etc., (R.T.).

[புஞ்சை + வான் + பயிர்]

புட்களம் *puṭkaḷam,* பெ. (n.) நிறைவு; fulfilment.

புட்கால் *puṭ-kāl,* பெ. (n.) புள்ளடி; caret.

[புள் + கால். கோல் = திரண்ட கம்பு. கோல் → கால் = மரத்தூண், கற்றூண், தூண்போல் உடம்பைத் தாங்கும் உறுப்பு]

புட்குத்திருப்பி *puṭkuttiruppi,* பெ. (n.) வட்டத்திருப்பி என்ற ஒரு கொடிவகை (மலை.); velvet leaf

புட்குரல் *puṭkural,* பெ. (n.) நற்குறி, தீக்குறியாகக் கருதப்படும் பறவையொலி; cry of birds, especially omen-birds. *'ஒருவன் புட்குரன் முன்னங் கூறினான்'* (சீவக.415).

[புள் + குரல்]

புட்கோ *puṭ-kō,* பெ. (n.) கலுழன் (கருடன்) (நாமதீப.236); white headed kite.

மறுவ. கழுகு, பருந்து

[புள் + கோ. பறவைகளுக்கு அரசன் போன்றவன், பெரிய பறவை.]

புட்டகப்புடைவை *puṭṭaga-p-puḍavai,* பெ. (n.) சீலைவகை (நேமிநா.61,உரை); a kind of cloth.

[புட்டகம் + புடைவை]

புட்டகம் *puṭṭagam,* பெ. (n.) புடைவை; cloth. 'புட்டகம் பொருந்துவ புனைகுவோரும்' (பரிபா.12,17.).

[புட்டம் → புட்டகம்]

'புட்டம்¹' பார்க்க

புட்டகமண்டபம் *puṭṭaga-maṇḍabam,* பெ. (n.) கூடாரம்; tent. 'புட்டக மண்ட பத்திறைவன் சென்றான்' (சேதுபு.அகத்.36).

[புட்டகம் + மண்டபம். துணியால் அமைக்கப்பட்டது]

புட்டகவிலை *puṭṭaga-vilai,* பெ. (n.) சீலை விற்போருக்கிடும் வரிவகை; fees leveied on sellers of cloths. (S.I.I.ii,352).

[புட்டகம் + விலை]

புட்டதண்ணி *puṭṭataṇṇi,* பெ. (n.) பூதத்தான்றி (இ.வ.); carey's myrtle bloom.

புட்டந்தருவேர் *puṭṭantaru-vēr,* பெ. (n.) சிறுபாம்புக்கடி நஞ்சினைப் போக்கும் மருந்து; a root given for the poison of siṟu-pāmbu.

புட்டம்¹ *puṭṭam,* பெ. (n.) புடைவை (பிங்.); cloth.

மறுவ. கோடி, கோடிகம், படாம்,கோசிகம், கூறை, பஞ்சி, நீவியம், சீரை, கலை, கலிங்கம், சூடி, காடிகம், தூசு, கழகம், வட்டம், ஆடை, தானை, அறுவை

தெ. புட்டமு

[புடை → புடம் → புட்டம் = புடைத்த பின்புறம், புடைவை (வே.க.3.77)]

புட்டம்² *puṭṭam,* பெ. (n.) **1.** உடலின் பின்புறத்தில் புடைப்பாக உள்ள பகுதி. (ஆசனப்பக்கம்); buttocks; **2.** பெண்குறி; pudendum muliebre.

க., தெ, புட்டி.

[புள் → புட்டி = உட்டுளையுள்ளது ஒருவகைக் கலம், சிறுபடி, குடுவை, குப்பி, புட்டி → புட்டில் = அம்பராத் தூணி. தெ. புட்டிக. புட்டி = குடுவை போன்ற பறவையுடம்பின் பிற்பகுதி. புட்டி → பிட்டி கொழுத்த கோழிப் புட்டியை நெய்க்குடம் என்று கூறும் வழக்கை நோக்குக.]

புட்டி புட்டம் = குடுவை போற் புடைத்த மாந்தன் உடம்பின் பக்கம். ஒ.நோ. குண்டு → குண்டி. புட்டம் → பிட்டம் மா.வி.அ.ப்ர–ஸ்த எடுப்பாய் முன் நிற்பது என்பது மூலமாயிருக்கலாம் என்று கருதுகின்றது. (வ.வ.2.37,38.)]

puta,pūta,a buttock cf.D.pūḻa etc. the original idea is the hind part the change of ḻ in to t is found in D. (KKED.xviii)

புட்டரிசி *puṭṭariši,* பெ. (n.) இனிப்புச்சுவை மிக்க அவியரிசி; a kind of rice, which is heated in steam and taken with sugar and cocoanut.

[புட்டு + அரிசி. அரி → அரிசி]

புட்டரிசியுருண்டை *puṭṭariši-y-uruṇḍai,* பெ. (n.) பணிகார வகை (மதி.க.ii,143); a kind of cake.

[புட்டு + அரிசி + உருண்டை. உல் → உரு → உருண்டை]

புட்டல் *puṭṭal,* பெ. (n.) தலைச்சுமை (யாழ்.அக.); head-load.

[புட்டு → புடம் → புட்டம் = புடைத்துக் காணப்படுவது. புட்டம் → புட்டல் = புடைத்துத் திரளாகக் காணப்படும் கட்டு, தலைச்சுமை]

புட்டவரப்பு *puṭṭavarappu,* பெ. (n.) பெரிய வரப்பு; hedge.

[புட்டம் → புட்டை = பெருத்த விதை. புட்டம் → புட்டா → புட்ட. புட்ட + வரப்பு]

புட்டவி–த்தல் *puṭṭavi-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஆவியில் வேகவைத்தல்; to cook in steam.

[புட்டு + அவி–,]

புட்டவியல் *puṭṭaviyal,* பெ. (n.) 1. சீலையில் ஏடு கட்டி வேக வைத்தல்; heating in steam using a special apparatus. 2. புழுக்கம்; sultriness heat.

[புட்டு + அவியல்]

புட்டா[1] *puṭṭā,* பெ. (n.) வீங்கின விதை (அண்டம்) (இ.வ.); swelled testicle.

க. புட்டெ; **தெ.** புட்ட

[புடம் → புட்டம் = புடைத்த பின்புறம் புட்டம் → புட்டா]

'புட்டை' பார்க்க

புட்டா[2] *puṭṭā,* பெ. (n.) பாவின் உடற்பகுதியில் செய்யப்படும் பூவேலைப்பாடு; flower design done in the chintz.

புட்டாஏணி *puṭṭā-ēṇi,* பெ. (n.) சேலையில் புட்டா போடுவதற்குப் பயன்படும் ஏணி; a weapon used by weavers, to do flower design in saree.

புட்டாபலகை *puṭṭā-palagai,* பெ. (n.) புட்டா வாங்கப் பயன்படும் பலகை; board used to design flower in the saree.

புட்டாலம்மை *puṭṭāl-ammai,* பெ. (n.) அம்மைக்கட்டு (பைஷஜ); mumps.

[புட்டம் → புட்டல் + அம்மை. புட்டலம்மை → புட்டாலம்மை]

புட்டாளம்மை *puṭṭāḷammai,* பெ. (n.) பொன்னுக்கு வீங்கி; mumps.

[புட்டாளம் + அம்மை]

புட்டி[1] *puṭṭi,* பெ. (n.) இடை; waist. *'புட்டியிற் சேறும் புழுதியும்'* (திவ். பெரியாழ்.1, 7, 6.)

[புட்டம் → புட்டி]

த. புட்டி > Skt. pṛṣṭha

புட்டி[2] *puṭṭi,* பெ. (n.) **1.** பருமை; stoutness, robustness. *"புட்டிபடத் தசநாடியும் பூரித்து"* (திருமந்.574) **2.** கொழுப்பு (கொ.வ.); fatness, plumpness.

[புல் → புது. புது → புதல் = செறிந்ததூறு, புல்லிளம், மருந்துப்பூடு. புது → புதை → புடை. புடைத்தல் = பருத்தல், வீங்குதல். புடை → புடம் → புட்டம் = புடைத்த பின்புறம், புடைவை. புட்டம் → புட்டி = பருமை, பருத்துக் காணப்படும் கொழுப்பு (வே.க. 3. 76, 77)]

த. புட்டி > Skt. puṣṭi

புட்டி[3] *puṭṭi,* பெ. (n.) குப்பி; bottle, flask. அவள் குழந்தைக்குப் புட்டியில் பால் கொடுத்தாள் (உ.வ.).

க. புட்டி; **தெ.** புட்டி, புட்டிக; **பட.** புட்டி; **கோத.** பொடி; **து.** புடி

[புள் → புட்டி = உட்டுளையுள்ளது, ஒரு வகைக்கலம், சிறுபடி, குடுவை, குப்பி (வ.வ. 2. 37)]

புட்டி[4] *puṭṭi,* பெ. (n.) **1.** ஒருவகை முகத்தலளவை; measure of capacity 750 Madras paḍi. **2.** நிலவளவை வகை; land measure 8 to 11 1/2 acres. **3.** சிறுபடி; measure of capacity = about 1/2 Madras measure. **4.** ஒருவகை நிறுத்தலளவை; bazaar weight = 20 maṇu = 500 lbs.

தெ. புட்டி,

[புள் → புட்டி = உட்டுளையுள்ளது, ஒரு வகைக்கலம், சிறுபடி (வ.வ. 2. 37)]

புட்டிகரம் *puṭṭigaram,* பெ. (n.) **1.** அழுக்கு; dirty. **2.** புட்டி பார்க்க; see *puṭṭi.*

புட்டிடு—தல் *puṭṭiḍu-,* 17 செ.குன்றாவி. (v.t.) *புட்டவி—த்தல்* பார்க்க; see *puṭṭavi-,*

[புட்டு + இடு—,]

புட்டிப்பால் *puṭṭi-p-pāl,* பெ. (n.) தாய்ப்பாலுக்குப்பகரமாகக் குழந்தைகளுக்கு ஆவின்பாலை அல்லது இதற்கென்றே பதப்படுத்தப்பட்ட மாவுப்பொருளை நீரில் கலந்து புட்டியின் மூலம் கொடுக்கப்படும் பால்; cow milk or milk prepared from milk powder (used for bottle-feeding). தேவையான சூழ்நிலைகளில் மட்டும் குழந்தைக்குப் புட்டிப்பால் கொடுக்க வேண்டும். (உ.வ.)

[புட்டி + பால்]

புட்டில்[1] *puṭṭil,* பெ. (n.) **1.** அம்பறாத் தூணி; quiver. *'வாளிபெய் புட்டில்'* (கம்பரா. கரன். 18). **2.** விரலுறை; cover for fingers; gloves. *'விரற்றலைப் புட்டில் வீக்கி'* (சீவக. 2202). **3.** உறை (யாழ்.அக.); sheath, scabbard, cover. **4.** கூடை; basket, flower basket. *'போழிற் புனைந்த வரிப்புட்டில்'* (வின்.) (கலித், 117). **5.** இறைகூடை; baling basket. **6.** முறம் (யாழ்.அக.); winnow. **7.** குதிரையுணவு கட்டும் பை; food bag for horses. *'புழுக்கும் காணமும் புட்டில் வாய்ச் செறித்தனர்'* (சீவக. 1938). **8.** கெச்சையென்னும் அணி; tinkling anklet of a horses. *'அரிபுனை புட்டின்'* (கலித். 80). **9.** தக்கோலத்தின் காய்; cubeb. 'அம்பொதிப் புட்டில்' (திருமுரு. 191).

ம. புட்டில்; **க.** புட்டி, புட்டி, புட்டெ; **தெ.** புடி (பூக்கூடை), புடிக, புட்டிக, புடிகெ, புட்டி; **து.** புட்டி, புடயி, புடாயி. புட்டி; **கூ.** புடி, (பெரிய கூடை)

[புள் → புட்டி = உட்டுளையுள்ளது, ஒரு வகைக் கலம், சிறுபடி, குடுவை, குப்பு. புட்டி → புட்டில் = அம்பறாத்தூணி (வ.வ. 2. 37), உட்டுளையுள்ள உறை, 'இல்' குறுமையீறு. புட்டி + இல் – புட்டில். ஒ. நோ. தொட்டி + இல் – தொட்டில். (சு.வி. 14) பாண்டி – பாண்டில், விட்டி – விட்டில்]



புட்டில்[2] *puṭṭil,* பெ. (n.) *புட்டி*[3] (இ.வ.) பார்க்க; see *puṭṭi*[3]

[புள் → புட்டி → புட்டில்]

புட்டிலவம் *puṭṭilavam,* பெ. (n.) சிறுதும்பை; small lucus plant.

புட்டிவெல்லம் *puṭṭi-vellam,* பெ. (n.) பனங்கட்டி (யாழ்.அக.); jaggery, coarse sugar, kept in cases of palmyra leaves.

[புட்டி + வெல்லம்]

புட்டிற்கூடை *puṭṭiṟ-kūḍai,* பெ. (n.) சிறுகூடை (வின்.); small basket.

[புட்டில் + கூடை]

புட்டு *puṭṭu,* பெ. (n.) **1.** சிற்றுண்டிவகை; a kind of confectionery. **2.** தினைமா; millet flour.

[புள் → புட்டு]

புட்டுக்கூடை *puṭṭu-k-kūḍai,* பெ. (n.) மிகச் சிறிய கூடை; a small size basket.

மறுவ. புல்லாங் கூடை

பட. பொட்டுகூடெ.

[புட்டு + கூடை]

புட்டுத்திருப்பி *puṭṭu-t-tiruppi,* பெ. (n.) பொன்முசுட்டை வேர்; gravel root.

புட்டுப்பழம் *puṭṭu-p-paḻam,* பெ. (n.) தின் பழவகையுளொன்று; an edible fruit.

[புட்டு + பழம்]

புட்டுவாழை *puttu-vālai,* பெ. (n.) வாழை வகை; a kind of plaintain. (G.Sm.D.I.i, **215**).

[புட்டு + வாழை]

புட்டுவை—த்தல் *puttuvai-,* 4 செ.குன்றாவி. (v.t.) *புட்டவி—த்தல்* பார்க்க; see *puttavi-,*

[புட்டு + வை—,]

புட்டை *puttai,* பெ. (n.) **1.** பெருத்த விதை (அண்டம்); elephantoid scrotum. **2.** விதை வீக்கம் (அண்டவாதம்); rupture, hernia.

க., கொலா. புட்டெ; **தெ., பர்.** புட்ட

[புடை → புடம் → புட்டம் = புடைத்த பின்புறம், புடைவை (பிங்.). புட்டம் → புட்டா = வீங்கின விதை (அண்டம்). புட்டா → புட்டை. (வே.க. 3, 77)]

புட்பகத்தாவு *putpagattāvu,* பெ. (n.) கறுப்பரிசி; black rice.

புட்பகம் *putpagam,* பெ. (n.) **1.** கண்ணோய் வகை; an eye disease. **2.** மூக்கிரட்டை; a spreading plant. **3.** கஞ்சாங்கோரை; white basil.

புட்பகரிகம் *putpagarigam,* பெ. (n.) மூங்கில்; bamboo.

புட்பகை *put-pagai,* பெ. (n.) சோழன் நலங்கிள்ளியின் புனைபெயர்; title of a Cōlan king, Nalan-killi. *'புட்பகைக் கேவானாகலின்'* (புறநா. **68**).

[புள் + பகை]

புட்பகொரித்தாரு *putpa-korittāru,* பெ. (n.) கொட்டைக் கரந்தை; Indian globe thistle.

புட்பசங்குணத்தி *putpašan-gunatti,* பெ. (n.) நத்தைச் சூரி; a plant when snails approach it their shells brake.

புட்படு—த்தல் *put-padu-,* **15** செ.கு.வி. (v.i.) புட்களை வலையில் அகப்படுத்துதல்; to ensnare birds.

[புள் + படு—,]

புட்பறை *put-parai,* பெ. (n.) பறை வகை (சிலப். **10, 139,** உரை); a kind of drum.

[புள் + பறை]

புட்பாகம் *putpāgam,* பெ. (n.) மூக்கிரட்டை (சங்.அக.); spreading hogweed.

புட்பாகன் *putpāgan,* பெ. (n.) திருமால்; Tirumāl. போரானைக் கொம்பொசித்த புட்பாகன் (திவ். பெரியதி. **3, 6, 6**).

[புள் + பாகன்]

புடகடம் *pudakadam,* பெ. (n.) புடமிடுதற்குப் பயன்படுத்தப்படும் துளையிட்ட மண்குடம்; an earthen pot, which has holes at the bottom. used for extracting medicine oil by the process of calcination.

[புட + கடம்]



புடகநாறி *pudaganāṟi,* பெ. (n.) பீநாறி; woolly-leaved firebrand teak.

புடகம் *pudagam,* பெ. (n.) **1.** இலைத் தொன்னை; cup or vessel formed by stitching leaves. பலாசுறு பத்தரத்திற் புடகம் பரிவுற (சிவ. தரு. கோபுர. 184). **2.** தாமரை (யாழ்.அக.); lotus.

[புல் → புள் → புழல் = உட்டுளை, புழல் → புடல் = உட்டுளையுள்ள புடலங்காய். புழு → புழை → புடை = துளை, எலிவளை, குகை.புடை → புடம் = பொன்னைக் காய்ச்சித் தூய்மைப்படுத்தும் சிறுகலம், தொன்னை. (வே.க. 3. 101–108) புடம் → புடகம் = தொன்னை, தொன்னை போன்று உள்ளீடற்றுக் காணப்படும் தாமரை]

puṭa, puṭaka, puṭi, a cup made of leaf folded (and stitched); a basket or vessel or dish made of leaves. Its so-called D. Tbh. is pōḍa. It is somewhat difficult to determine from which root the words have arisen; but there is the Sk. verb puṭ with the meanings of 'to unite, to connect, to bind together; to interwine (samšleshaṇa, šlēsha), and there are the D. verbs pūḍu, pūṇ, hūḍu, which mean 'to unite, to connect, etc. and also D. puri, piri, which mean to twist, to twine (see s. puri cf pōsē). On these verbs puṭa, etc., rest. Sk. verbs, puṇ, pūṇ, pul, pūl, used in the meanings of samhati and sanghāta, piṭ in that of samhati and huḍ, huṇḍ in those of sangha and sanghāta are evidently cognate. For all the above-mentioned Sk. verbs and their meanings there are no authoriative references, and they may be confidently declared to have been borrowed from the adduced D.verbs which are firmly rooted in the D. language. Puṭa, etc., are therefore ultimately connected either with D. pūḍu etc. or with puri etc. (KKED. xxxv)

புடகாமிகம் *pudakāmigam,* பெ. (n.) செந்நாயுருவி; a plant Indian burred variety.

புடசயம் *pudašayam,* பெ. (n.) மருந்தைப் புடமிடுவதினால் ஏற்படும் நன்மை; benefit obtained by calcinating the medicine.

[புடம் + சயம்]

புடசாலி *pudašāli,* பெ. (n.) நாகை; stork.

புடசெந்தூரம் *puda-šendūram,* பெ. (n.) புடம்போட்ட எரிப்புச் செந்தூரம்; red oxide obtained by calcination as opposed to one obtained by burning in oven.

[புடம்+ செந்தூரம்]

புடஞ்சம் *pudañjam,* பெ. (n.) பெருமுத்தக் காசு; large sedge.

புடஞ்சயம் *pudañjayam,* பெ. (n.) மருந்தைப் புடமிடுவதினா லுண்டாகும் நன்மை; benefit obtained by calcinating the medicine.

[புடம்+ சயம்]

புடஞ்செய்–தல் *pudañjey-,* 1 செ.குன்றாவி. (v.t.) *புடமிடு–தல்* பார்க்க; see *pudam-iḍu-,*

[புடம்+ செய்–,]

புடத்தங்கம் *puda-t-tangam,* பெ. (n.) புடமிட்ட உயர்ந்த பொன்; refined gold.

[புடம்+ தங்கம்]

புடத்திற்காதி *pudattirkādi,* பெ. (n.) வளையலுப்பு; glass gall-fel vitri.

புடத்தைலம்[1] *puda-t-tailam,* பெ. (n.) *புடமெண்ணெய்* (பைஷஜ. 3) பார்க்க; see *pudam-enney.*

[புடம்+ தைலம்]

Skt. taila > த. தைலம்.

புடத்தைலம்[2] *puda-t-tailam,* பெ. (n.) சிவனார் வேம்பு எண்ணெய்; a kind of medicinal oil extracted by the process of calcination.

மறுவ. குழித்தைலம்.

[புடம் + தைலம்]

Skt. taila > த. தைலம்.

புடதலை *pudatalai,* பெ. (n.) பொடுதலை; wild long pepper.

[பொடுதலை → புடதலை]

புடதிட்டம் *pudatittam,* பெ. (n.) புடம் போடுவதற்காக எருவிடுங் குழியின் அளவு; the dimension of the pit, to pile up cowdung cakes for purpose of calcinating.

[புடம்+ திட்டம்]

"காடியே புடத்திட்ட மாமா கேளாய்
காட்டெருவி லொன்றுபுடம்
காடையாகும் பாடியே மூன்றெருகவு
தரிபுடமாம் பத்தெருத்
தான் குக்குடமாம் புரிந்து கேளாய் நாடியே
ஐம்பதெருவே
ஏனமாகும் நல்லநூறு எருகசத்தின்
புடமதாமே" (சா.அக.)

புடம் போடப் பயன்படும் எருக்குழியின் அளவு, அதில் பயன்படுத்தும் மருந்தின் அளவைப் பொறுத்தும், அதனுள் அடுக்கப்படும் வறட்டிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தும் நீள, அகல உயரங்கள் வேறுபடுகின்றது.

1. **மாப்புடம்** 1000 வறட்டிகள் போட்டுப் புடம் போடப் பயன்படும் எருக்குழியின் அளவு, இரண்டுமுழ அகலமும், இரண்டு முழ ஆழமும் கொண்டதாய் இருக்கும்.

2. **கசபுடம்** 500 வறட்டிகள் போட்டுப் புடம் போட பயன்படும் எருக்குழியின் அளவு ஒரு முழ அகலமும் ஒரு முழ ஆழமும் கொண்டதாய் இருக்கும்.

3. **வராக புடம்** 150லிருந்து 200 வறட்டிகள் போட்டுப் புடம் போடப் பயன்படும் சதுரக்குழி. ஒரு அடி அகலமும் ஒரு அடி உயரமும் கொண்டிருக்கும்.

4. **குக்குட புடம் அல்லது கோழிப்புடம்** எட்டு வறட்டிகள் மட்டுமே போட்டுப் புடம் போடும் அளவில் வெட்டப்படும் எருக்குழி.

5. **கோவுர புடம்** வறட்டியின் சிறு துண்டுகளும், தூள்களும் போட்டுப் புடம் போட பயன்படுத்தப்படும் மண்பானை.

6. **பாண்ட புடம்** மண் கலத்தில் சுடுவதற்காக, அதை வாய்கட்டப்பட்ட உமி நிறைந்த மட்கலத்தில் திணிப்பர்.

புடந்தசம் *pudandašam,* பெ. (n.) பத்துபுடம்; calcinating ten times.

[புடம் + தசம்]

புடப்பூடு *puda-p-pūdu,* பெ. (n.) பொன்னூமத்தை; a yellow coloured dhatura plant.

[புடம் + பூடு]

புடபாகம் *puḍa-bāgam,* பெ. (n.) 1. புடமிடுகை; a particular method of preparing drugs in which various substances are placed in clay cups covered over with clay and heated over the fire. புட பாகத்திற் சார்தரு முலோகமாசு தள்ளல் போல் (திருக்காளத்.பு. ஞானயோ. (18.)2. செரிமானம்; digestion. 3. சமைக்கை (யாழ்.அக.); cooking.

[புடம் + பாகம்]

புடபாதவிதி *puḍapādavidi,* பெ. (n.) புடம்போடுவதற்குரிய முறைகளைக் கூறும் நூல்; book on calcination and its rules.

[புடம் + பாதவிதி]

புடம்[1] *puḍam,* பெ. (n.) 1. புடமிடுங்கலம்; the refining or sublimating vessel or cup. 2. மூடி; cover. *'தொகு புடஞ் சற்றே யோங்கி'* (விநாயகபு. 15, 40). 3. வெயிலில் வைத்தல் முதலிய வழிகளாற் பக்குவப் படுத்துகை; calcination in fire or in the sun; preservation by being buried under the earth or in a heap of grain. *'புடஞ்சே ரெழிற்பொன்'* (உத்தரரா. திருவோலக். 10). 4. புடபாகம் 1 பார்க்க; see puḍa-bāgam, 1. 5. இடம்; place, spot. *'போதிகைப் புடங்க டோறும்'* (சூளா. கல்யா). 6. பக்கம்; side *'புடங்கழையும் வேயும்'* (சூளா. சீய. 162) 7. உள்வளைவு (யாழ்.அக.); concavity, bend. 8. இலைக்கலம், தொன்னை (யாழ்.அக.); leaf-cup. 9. கண்ணிமை (யாழ்.அக.); eye-lid. 10. கோவணம் (யாழ்.அக.); loin - cloth. 11. மூடுகை (யாழ்.அக.); closing.

[புல் → புள் → புழல் = உட்டுளை, சாய்கடை. புழல் → புடல் = உட்டுளையுள்ள புடலங்காய். புழு → புழை = துளை, குழாய், வாயில். புழை → புடை = துளை, எலிவளை. புடை → புடம். ஒ. நோ. நடை → நடம். புடம் = பொன்னைக்காய்சித் தூய்மைப் படுத்தும் சிறுகலம், தொன்னை (வே.க. 3. 106–108)]

த. புடம். > Skt. puṭa.

புடம்பாசியம் *puḍampāśiyam,* பெ. (n.) அலரி; a flower.

புடம்பு *puḍambu,* பெ. (n.) குகை; cave. *'காணாமலைப் புடம்புந்தேடி யொளிவார் சிலபேர்கள்'* (பஞ்ச. திருமுக. 1895).

மறுவ. அளை, முழை, முழைஞ்சு.

[புழ → புழை → புடை = துளை, எலிவளை, குகை, குகை போன்ற கிணற்றடிப் புழை. புழல் → புடை = சிறுகலம், இலைக்கலம். (வே.க. 3. 108). புடம் → புடம்பு.]

புடம்போடு–தல் *puḍam-pōḍu-,* 19. செ. குன்றாவி. (v.t.) 1. தங்கம் போன்ற மாழை (உலோகம்)களை நெருப்பில் உருக்கி தூய்மைப்படுத்துதல்; to purify by melting (esp. gold), to refine metal. பழைய பொன்னைப் புடம்போட்ட பின்னர் நகை செய்வார்கள் (உ.வ.). 2. மூலிகை போன்றவற்றை நெருப்பிலிட்டு எரித்து நீறா(பஸ்பம்)க்குதல்; to calcine. 3. மிக வருத்துதல் (கொ.வ.); to subject to extreme torture.

[புடம் + போடு–.]

புடம்வை–த்தல் *puḍam-vai-,* 4 செ. குன்றாவி. (v.t.) *புடமிடு–தல்* பார்க்க; see *puḍam-iḍu-,*

[புடம் + வை–.]

புடமண் *pudaman,* பெ. (n.) தூய்மையான அழுக்கற்ற மண்; pure mud.

[புடம்+ மண்]

புடமாறிப்போடல் *pudamāri-p-pōdal,* தொ. பெ. (vbl.n.) புடமிடும் போது, தேவையான மருந்துகளில் குறைவுபடில் சரிசெய்து மீண்டும் புடமிடல்; resubmitting the medicine to calcination if it is not properly done or finished.

[புடம் + மாறி + போடல்]

புடமாறியெடுத்தல் *pudamāriyeduttal,* தொ. பெ. (vbl.n.) புடத்தின் நெருப்பவிந்த பின்பு, பிரித்து மருந்தை எடுத்துக் கொள்ளுதல்; taking out the medicine after the fire completely cooled in calcination.

புடமிடு-தல் *pudam-idu-,* 19 செ. குன்றாவி. (v.t.) **1.** பொன் முதலியவற்றைத் தூய்மை படுத்துதல் (சுத்தி செய்தல்); to refine metals. *'அதகமிகப் புடமிட்டு'* (காசிக. ஓங்காரலி, சி. 6). **2.** வெய்யிலில் வைத்தல் முதலிய வழிவகை களாற் பக்குவப் படுத்துதல்; to calcinate to preserve by burying under the earth, etc; **3.** எரித்தல் (கொ.வ.); to cremate.

[புடம் + இடு–, புடமிடப்பட்டது மாற்றுயர்ந்த பொன் எனப்படும்.*]*

புடமெண்ணெய் *pudam-enney,* பெ. (n.) புடம் போட்டு எடுக்கும் எண்ணெய்; medicinal oil extracted by pudam process.

[புடம்+ எண்ணெய்]

புடல் *pudal,* பெ. (n.) **1.** புடலங்காய் காய்க்கும் கொடி; the snake-gourd plant. **2.** பேய்ப் புடல்; wild snake-gourd.

ம. புட்டல், பிட்டல்; **க.** பொட்ல, படல, பட்ல; **தெ.** பொட்ல; **து.** பட்ல; **கட.** புட்ருகி; **கூ.** புட்ர

த. புடல்→ skt.paṭola, paṭu, paṭuka.

*[புல்→ புள் → புழு = துளைத்தரிக்கும் சிற்றுயிரி. புழு → புழை = துளை, குழாய், வாயில், பலகணி. புழை → பூழை = துளை, சிறுவாயில்புழு → புழல் = உட்டுளை, சாய்கடை. புழல் → போல் = உள்ளீடல்லாதது, உட்டுளையுள்ள மூங்கில், புழல் → புடல். ஒ.நோ. குழல் → குடல். புடல் = உட்டுளையுள்ள புடலங்காய் **(வே.க. 3, 106).**]*

புடல்வெள்ளரி *pudal - vellari,* பெ. (n.) புடலங்காய் போன்ற தோற்றமுள்ள வெள்ளரி வகை; a kind of melon.

[புடல்+ வெள்ளரி]

புடலகம் *pudalagam,* பெ. (n.) பன்றி மோத்தை எனும் நிலைத்திணை; a kind of plant.

புடலங்காய் *pudalankāy,* பெ. (n.) வெளிர் பச்சை நிறம்கொண்ட பாம்பு போல நீளமாக இருக்கும் ஒருவகைக் காய்; snake-gourd.

[புடல் + அம் + காய். 'அம்' சாரியை]

புடலி[1] *puḍali,* பெ. (n.) பிடர் (இ.வ.); nape.

[பின்→ பிணம் → பிறம்பு. பிறம் → பிடம் → பிடர் → பிடரி = தலை யின் பின்புறம் (மு.தா. 293) பிடரி → புடரி. ஒ.நோ. பிட்டம் → பிட்டி → புட்டி. = பறவையின் பின்புறம். புடரி → புடலி (கொ.வ.)]

புடலி—த்தல் *puḍali-,* 4 செ.கு.வி. (v.i.) *புடவி*[2] *—த்தல்* (யாழ்.அக.) பார்க்க; see *puḍavi*[2]*-;*

[புடவி→ புடலி]

புடலை *puḍalai,* பெ. (n.) *புடல்* **1.** (கொ.வ.) பார்க்க; see *puḍal*-1.

[புழல் → புடல்→ புடலை]

புடவி[1] *puḍavi,* பெ. (n.) **1.** உலக உருண்டை (திவா.); earth. **2.** உலகம் (திவா.); world. *'அதிர்வன புடவிகளடையவே'* (தக்கயாகப் 723).

க. பொடவி; **தெ.** புட

[புல்→ புது → புதை. புடை → புடை = பருத்தபாகம், பகுதி, பக்கம், சார்பு, இடம். புடை → புடைவி → புடவி = பருத்த ஞாலம், உலகம் (வே.க. 3. 76, 77)]

புடவி[2]**—த்தல்** *puḍavi-,* 4 செ.கு.வி. (v.i.) வீங்குதல்; to be swollen, as from a blow.

[புடை→ புடைவி → புடவி = பருத்த ஞாலம், உலகம், (வே.க. 3 77). புடவி → புடவி(த்தல்) —, பின்னாக்கம் (back formation). அதாவது பெயரினின்று வினையாக்கப்பட்டது. புடவித்தல் = பருக்க வீங்குதல்]

புடவிமூலம் *puḍavimūlam,* பெ. (n.) சிறுகுறட்டை (மலை.); a species of snake-gourd.

புடவை *puḍavai,* பெ. (n.) **1.** துணி; cloth, (S.I.I.iv., **31.**) **2.** *புடைவை* **2.** பார்க்க; see *puḍaivai*[2].

ம. புடவ; **தெ.** புட்டமு

[புல்→ புது → புதை → புடை. புடைத்தல் = பருத்தல், வீங்குதல். புடை → புடைவை = சுற்றிக்கட்டிவிடும் ஆடை, மகளிர் சேலை. புடைவை → புடவை = துணி, சேலை (வே.க. 3. 77)]

புடவைக்குஞ்சம் *puḍavai-k-kuñjam,* பெ. (n.) சீலையின் முன்றானைக் குஞ்சம் (வின்.); bunch of flounce of cloth, tassel of a cloth.

[புடவை+ குஞ்சம். புடை → புடைவை → புடவை]

புடவைக்கொடை *puḍavai-koḍai-,* பெ. (n.) மணமகன் மணமகளுக்குப் புடைவை கொடுப்பதாகிய திருமண வகை; a form of marriage among Malayālis which consists in the presentation of the cloth by the bride-groom to the bride.

[புடைவை → புடவை + கொடை. கொடு → கொடை]

புடவைகளை—தல் *puḍavai-kaḷai-,* 3 செ.கு.வி. (v.i.) **1.** தூய்மையில்லாத (அசுத்தச்)சீலையை நீக்குதல்; to cast off dirty or impure clothes. **2.** மாதவிடாய் நிகழ்தல்; to be subject to catamenia

[புடைவை → புடவை + களை—, கள் → களை]

புடவைபோடு—தல் *puḍavai-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) கோடிபோடுதல் (இ.வ.); to offer ceremonially a new cloth to widow in mourning.

[புடைவை→ புடவை+ போடு—,]

புடவையெழுது—தல் *puḍavai-y-eḻudu-,* 8 செ.கு.வி. (v.i.) சீலையில் அச்சடித்தல்; to print chintz.

[புடவை + எழுது—,]

புடனண்டம் *puḍaṉaṇḍam,* பெ. (n.) பெருமுத்தக் காசு; large sedge.

புடனம் *puḍaṉam,* பெ. (n.) முறையற்ற பேச்சு; raving.

புடாயம் *puḍāyam,* பெ. (n.) மாணிக்கக் குற்றவகை; flaw in a ruby. *'இகலுறு புடாயம்'* (திருவாலவா. 25, 14).

[புள் → புளு → புடு (வே.க.3,107)
புளு → புடு → புடாயம்]

புடாரமுளை *puḍāra - muḷai,* பெ. (n.) செந்நாயுருவி (மலை.); a kind of dog-prick.

புடி—த்தல் *puḍi-,* 4 செ.கு.வி. (v.i.) பொய் சொல்லுதல்; to lie. பொய்புடிக்கிறான் (சேலம் வழக்கு).

[புள் → புளு → புடு → புடி. பொய் புடிக்கிறான் என்பது பொய் புளுகுகிறான் என்பது போன்ற மிகைபடக் கூறல். (வே.க. 3, 107)]

புடிதம் *puḍidam,* பெ. (n.) கைமுட்டி (யாழ்.அக.); fist.

[பிண்டி → பிடி → (பிடிதம்) → புடிதம்]

த. புடிதம். > Skt. puṭita.

புடியாப்பு *puḍi-y-āppu,* பெ. (n.) மேழியிலுள்ள கைப்பிடி; handle of the hoe.

[பிடியாப்பு → புடியாப்பு]

பிடியாப்பு பார்க்க

புடுக்கஞ்சுறா *puḍukkañjurā,* பெ. (n.) புடுக்கன்சுறா பார்க்க; see *puḍukkaṉ-šuṟā.*

[புடுக்கன்சுறா → புடுக்கஞ்சுறா]

புடுக்கன்சுறா *puḍukkaṉ-šuṟā,* பெ. (n.) அடுக்குப் பற்சுறா; grey shark.



புடுக்கு *puḍukku,* பெ. (n.) விதை (அண்டம்); testicle.

[புடை → புடம் → புட்டம் = புடைத்த குண்டி. புட்டம் → புட்டா → புட்டை = பெருத்த விதை (அண்டம்). (வே.க. 3, 77) புடம் → புட → புடுக்கு. 'கு' சொ.ஆ.ஈறு.]

புடை[1] *puḍai,* பெ. (n.) **1.** அடி; blow **2.** அடித்துண்டாக்கும் ஒலி; sound, noise, as from a stroke. *'கொலைவல் யானை*

செவிப்புடையும்' (சீவக. 2355) 3. பகை (இலக். அக.); enmity. 4. போர் (இலக்.அக.); war, battle.

க. பொடெ; தெ. போடு

[புல் → புது → புதை → புடை]

புடை²—த்தல் *pudai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. அரிசி முதலியவற்றைத் தவிடு தூசி முதலியன போம்படி முறத்திலிட்டுத் தட்டுதல்; to winnow, sift. அரிசி புடைக்க ஆள் வேண்டும் (உ.வ.). 2. அடித்தல்; to beat, strike; to thresh, as grain. *'களப்படப் புடைத்தான்'* (கம்பரா. சம்புமா. 24). 3. குத்துதல் (சூடா.); to pierce; to thrash. 4. கொட்டுதல்; to beat, as a drum; to tap, as on a tambourine. *'கணைவிடு புடையூஉ'* (குறிஞ்சிப். 160). 5. சிறகடித்தல் (வின்.); to flap, as the wings. 6. நூல் முதலியன எற்றுதல்; to snap, as a carpenter's string. *'நூல் புடைத்தாற் போற் கடந்த'* (சீவக. 1044). 7. துவைத்தல்; to wash, as by beating. *'கந்தை புடைத்திட வெற்றுங் கற்பாறை'* (பெரியபு. திருக்குறிப்பு. 125). 8. குட்டுதல்; to cuff with the knuckle *'சென்னியுறப் புடைத்தவர் பால்'* (பிரமோத். 2, 59). 9.உடைத்தல்; to break. புங்கவனிடுவளை புடைத்து (திருவிளை. வளையர்.27). 10. நீந்துதல் (யாழ்.அக.); to swim.

[புது → புதை → புடை]

புடை³—த்தல் *pudai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. வீங்குதல்; to swell, dilate, rise, puff up, as from a blow. *'உடல் புடைப்ப வடித்து'* (திருவாலவா. 34, 4). 2. பருத்தல்; to be enlarged. *'மெச்சவே பருத்தல் முத்தமார் தனத்தி'* (திருப்பு. 1176). 3. முன்பிதுக்கியிருத்தல், துருத்திக் கொண்டிருத்தல்; to protrude. புடைப்புச் சிற்பம் வேலைப்பாடுடையது(உ.வ.). 4. வெளிப்படுதல் (வின்.); to come to light; to be expossed, divulged, talked of 5. ஆரவாரித்தல்; to utter a loud noise; to roar, rattle. *'திண்டேர் புடைத்த மறுகெல்லாம்'* (கலித். 98). 6. அலைத்துப் பெருகுதல்; to flow in profusion, as blood. *'குருதி தோள் புடைப்ப'* (பு.வெ. 4, 16). 7. தட்டுதல்; to pat oneself, as on the shoulder.

து. புட்கெ, பொட்டெ; குட. புடீ; கோண். போரானா; நா. பொர்.

[புல் → புது → புதை → புடை (வே.க. 3, 76–77)]

புடை⁴ *pudai,* பெ. (n.) 1. பக்கம்; side *'ஒருபுடை பாம்பு கொளினும்'* (நாலடி, 148). 2. இடம் (பிங்.); place, room, location; site. 3. பகுதி; portion, section. *'மற்றப் புடையெல்லாம் ஒவ்வாது'* (இறை. கள. 1, பக்.23). 4. முறை; method. *'நிர்வகிப்பதும் சில புடைகளுண்டு'* (ஈடு, 10, 10, 11). 5. கிணற்றுப் புடைப்பு (வின்.); side of a wall. 6. எலிவளை (வின்.); rat-hole. 7. துளை (துவாரம்) முதலியன; hole, cave. 8. திரட்சி (யாழ்.அக.); bulkiness. 9. பழமுதலியவற்றின் பருத்த பாகம் (வின்.); protuberance, as in a fruit. 10. ஏழனுருபு (நன். 302); (gram.) a case-ending of the locative.

[புல் → புது → புதல் = செறிந்த தூறு, புல்லினம், மருந்துப்பூடு. புது → புதை = அம்புக் கூடு, மரச்செறிவு, செடியடர்த்தி. புதை → புடை. புடைத்தல் = பருத்தல், வீங்குதல். புடை²–, → புடை (வே.க. 3, 76. 77)]

புடை⁵ *pudai,* பெ. (n.) கட்டி; carbuncle.

[புல் → புது → புதை → புடை]

புடைக்கரப்பன் *puḍai-k-karappaṉ,* பெ. (n.) சிறுவர்கட்குப் பித்தத்தின் விளைவாலுண் டாகும் தோல் நோய்; a skin disease in children caused by biliousness.

[புடை + கரப்பான்]

புடைக்கருத்து *puḍai-k-karuttu,* பெ. (n.) இனம் பற்றிச் சார்ந்துவரும் கருத்து (யாழ். அக.); collateral or correlative meaning, as of a word of a passage.

[புடை=திரட்சி. புடை+கருத்து.]

புடைக்காலம் *puḍai-k-kālam,* பெ. (n.) இடைப்பட்ட காலம்; intervel. *'புடைக் கால மற்றொத்து'* (தக்கயாகப். 542).

[புடை + காலம்]

புடைக்கொள்(ளு)¹–தல் *puḍai-k-koḷ(ḷu)-,* 7 செ.குன்றாவி. (v.t.) தட்டுதல்; to pat, as one's shoulders in defiance. *'தோட்புடைக் கொள்ளா'* (நாலடி, 312).

[புடை + கொள்–,]

புடைக்கொள்(ளு)²–தல் *puḍai-k-koḷ(ḷu)-,* 7 செ.கு.வி. (v.i.) அருகு பருத்தல்; to swell, increase in size. *'பால் புடைக் கொண்டு'* (சிலப். 13, 162.).

[புடை + கொள்–,]

புடைகவல்(லு)–தல் *puḍai-kaval(lu)-,* 13 செ.கு.வி. (v.i.) 1. வேறு சிந்தையுடைத்தாதல்; to be worried over a collateral issue; to be distracted. *'இவள் பிறிதொன்றிற்குப் புடைகவன்று நின்ற நிலைமைக்கண் வந்தேன்'* (இறை. கள. 12 பக். 86).

[புடை + கவல்–. கவை → கவல்]

புடைகவற்றி *puḍai-kavaṟṟi,* பெ. (n.) வேறுசிந்தை; absent-mindedness, distraction. *'புடை கவற்றியில்லா நிலைமைக்கண் வந்தால்'* (இறை. கள. 12, பக். 87).

[புடை + கவற்றி. கவல் → கவறு → கவற்றி]

புடைகொள்(ளு)¹–தல் *puḍai-koḷ(ḷu)-,* 7 செ.கு.வி. (v.i.) புடைக்கொள்–, பார்க்க; see *puḍai-k-koḷ.* *'முலை புடைகொள்ளும்படி தழுவி'* (சீவக. 584, உரை).

[புடை + கொள்–,]

புடைகொள்(ளு)²–தல் *puḍai-koḷ(ḷu)-,* 7 செ.கு.வி. (v.i.) புரையோடுதல்; to form a running sore. *'கட்டி புடைகொண்டிருக்கின்றது'* (இ.வ.).

[புடை + கொள்–,]

புடைசூழ *puḍaišūḻa,* வி.அ.(adv.) (ஒருவருடன் அவரைச் சேர்ந்தவர்கள் பலர்) பின் தொடர, சுற்றிவர; followed by (people or one's retinue), surrounded by. மாணவர்கள் புடைசூழ முதல்வர் அரங்கத்திற்கு வந்தார்.

[புடை → சூழ–, புடை = பக்கம். சூழ் → சூழ]

புடைநகர் *puḍai-nagar,* பெ. (n.) புறநகர்; suburb. *'புடைநகர்த் தொழிலிடங் கடந்து புக்கபின்'* (சீவக. 85).

[புதை → புடை = இடம், பக்கம், புடை + நகர். புடைநகர் = நகருக்குப் பக்கத்தில் அமைந்த ஊர்]

புடைநூல் *pudai-nūl,* பெ. (n.) சார்பு நூல்; a class of work or treatise. *'திரிபு வேறுள்ளது புடை நூலாகும்'* (நன். 8).

[புதை → புடை = இடம், பங்கு, சார்பு. புடை + நூல்]

புடைப்பு[1] *pudaippu,* பெ. (n.) 1. அடிக்கை; stroke. *'துடைப் பேனொரு புடைப் பால்'* (கம்பரா. முதற்போர். 164). 2. கொழிக்கை; sifting. 3. வீங்குகை; swelling, protuberance from a blow. 4. மந்தணம் (இரகசியம்) முதலியன வெளியாகை (வின்.); becoming public or well-known.

தெ. போடு (போர்); **கட.** போடு (சண்டை)

[புடை → புடைப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

புடைப்பு[2] *pudaippu,* பெ. (n.) 1. வீங்கியிருக்கும் அல்லது தடித்திருக்கும் நிலை; swelling. தலையில் என்ன புடைப்பு, எங்காவது இடித்துக்கொண்டாயா? (உ.வ.). 2. துருத்திக் கொண்டிருக்கும் நிலை; protrusion.

தெ. புட்ட (எறும்புப்புற்று)

[புடை → புடைப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

புடைப்புச்சித்திரம் *pudaippu-c-cittiram,* பெ. (n.) *புடைப்புச்சிற்பம்* பார்க்க; see *pudaippu-c-cirpam.*

[புடைப்பு + சித்திரம்]

புடைப்புச்சிற்பம் *pudaippu-c-cirpam,* பெ. (n.) (கல், மரம் போன்றவற்றைச் செதுக்கி அல்லது மாழை (உலோகம்)யை உருக்கி) பின்புலத்திலிருந்து தனித்து முன் தள்ளித் தெரியுமாறு உருவாக்கப்படும் உருவம்; relief. பிள்ளையார்ப்பட்டி பிள்ளையார் சிலை புடைப்பு சிற்பம்.

[புடைப்பு + சிற்பம்]

புடைப்பெண்டிர் *pudai-p-pendir,* பெ. (n.) வைப்பாட்டிகள்; concubines. *'புடைப்பெண்டிர் மக்களுங் கீழும் பெருகி'* (நாலடி, 368).

[புடை + பெண்டிர்]

புடைப்பொன்னாளி *pudaipponnāli,* பெ. (n.) உடும்பு; guana.

புடைப்படு[1]–தல் *pudai-p-padu,* 19 செ.குன்றாவி. (v.t.) அணுகுதல்; to approach; to be near. *'என்னாரமுதைப் புடைபட்டிருப்ப தென்று கொல்லோ'* (திருவாச. 27,1)

[புடை + படு–,]

புடைப்படு[2]–தல் *pudai-p-padu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. இடம்படுதல்; to be roomy, spacious. *'மலைகளைப் புடைபடத் துளைத்து'* (ஈடு, 10, 6, 6). 2. மிகுதியாதல்; to be excessive. *'அரசனும் புடை படக் கவன்று'* (இறை. 1, பக். 7). 3. திரண்டு பருத்தல்; to swell in size; to become round. *'முதிர்ச்சியாற் புடைபடுதல்'* (குறள், 1274, உரை).

[புடை + படு–,]

புடைபர—த்தல் *pudai-para-,* 4 செ.கு.வி. (v.i.) சுற்று விரிதல்; to expand, swell. *'எய்த்திடை வருந்த வெழுந்து புடைபரந்து'* (திருவாச. 4, 33).

[புடை + பர—,]

புடைபெயர்[1]—தல் *pudai-peyar-,* 3 செ.கு.வி. (v.i.) **1.** நிலைமாறுதல்; to change in condition or position, to become topsy-turvy or overturned. *'நிலம்புடைப் பெயர்வதாயினும்'* (புறநா.34). **2.** வெளியேறுதல்; to go beyond; to trangress limits. *'புடைபெயர் கடலென'* (கம்பரா.எழுச்சி.10). **3.** அசைதல்; to move, change place. *'நாப்புடை பெயராது'* (மணிமே.23,16). **4.** தொழிற்படுதல்; to do an action. **5.** எழுந்திருத்தல்; to rise up, get up. *'கனவொடும் புடைபெயர்ந்து'* (தக்கயாகப்.240).

[புடை + பெயர்—,]

புடைபெயர்[2]—தல் *pudai-peyar-,* 3 செ.கு.வி (v.i.) வினைச்சொல் மாற்றுவடிவம் அடைதல்; to conjugate. வினைச்சொல் முக் காலத்திற்கும் புடை பெயரும்.

[புடை + பெயர்—,]

வினைச்சொல் புடைபெயரும் போது கால இடைநிலைகளைக் கொண்டு, காலத்தை உணர்த்தும்.

புடைபெயர்ச்சி *pudai-peyarcci,* பெ. (n.) **1.** நிலைமாறுகை; change in condition or position. **2.** வெளியேறுகை; movement; journey as from a place. **3.** கருத்தாவின் தொழிற்பாடு; (gram.) action of the agent.

[புடை + பெயர்ச்சி. பெயர் → பெயர்ச்சி. 'சி' தொழிற்பெயரீறு.]

புடைமண் *pudai-man,* பெ. (n.) சுதை (யாழ்.அக.); plaster.

[புடை^{3} + மண்]

புடைமூக்கன் *pudai-mūkkan,* பெ. (n.) மூக்கிலுண்டாகும் புண் வகையுளொன்று; a kind of ulcer in the nose.

[புடை + மூக்கன். முகு → முக்கு → மூக்கு = முகரும் உறுப்பு. மூக்கு → மூக்கன் = மூக்கி லுண்டாகும் புண்]

புடையடுப்பு *pudai-y-aduppu,* பெ. (n.) கொடியடுப்பு (இ.வ.); side-oven.

[புடை = பக்கம். புடை + அடுப்பு. அடு → அடுப்பு]



புடையல் *pudaiyal,* பெ. (n.) மாலை; garland. *'இரும்பனம் புடையல்'* (புறநா.99).

[புடை → புடையல். 'அல்' தொ.பெ.ஈறு]

புடையன் *pudaiyan,* பெ. (n.) பாம்புவகை (நாமதீப.257); wart snake.

[புடை → புடையன்]

புடையான்குத்து *pudaiyān-kuttu,* பெ. (n.) நச்சுக்கடிப் புண்ணோய்; an ulcer formed by

poisonous prick by beaver snake with its tail.

[புடையன் → புடையான் + குத்து]

புடையுண்(ணு)–தல் *pudai-y-uṇ(ṇu)-,* 16 செ.கு.வி. (v.i.) அடிபடுதல்; to be beaten, thrashed. *'பேயினாற் புடையுண்டாரோ'* (பாரத.சூது.267).

[புடை + உண்–,]

புடைவை *pudaivai,* பெ. (n.) **1.** ஆடை; garment. *'வெண்புடைவை மெய்சூழ்ந்து'* (பெரியபு. திருநாவுக்.1.). **2.** பெண்கள் இடுப்பில் சுற்றி கைச்சட்டை (ரவிக்கை)க்கு மேல் வரும் வகையில் கட்டிக்கொள்ளும் மேலாடை, மகளிர் சீலை; saree.

ம.புட,புடவ; தெ.புட்டமு(துணி); கோத.பொர்வ; குட. பொடெய; Skt. phuṭṭikā (ஒருவகைத்துணி)

[புடை → புடைவை = சுற்றிக்கட்டும் ஆடை, மகளிர் சேலை (வே.க.3,77)]

புடோல் *pudōl,* பெ. (n.) *புடல்* பார்க்க; see *pudal*.

[புழு → புழல் → புடல் = உட்டுளையுள்ள புடலங்காய். புடல் → புடோல்]

த. புடோல் > Skt. paṭōli

புடோலங்காய் *pudōlaṅ-kāy,* பெ. (n.) புடலங்காய். (தொல்.எழுத்து. 405, உரை.); fruit of snake gourd.

[புடலங்காய் → புடோலங்காய்]

புண் *puṇ,* பெ. (n.) **1.** உடற்றோலில் உண்டாம் ஊறு; raw sore,ulcer, wound. *'தீயினாற் சுட்டபுண்'* (குறள்,129). **2.** தசை; flesh. *'பிறவற்றின் புண்ணுமாந்தி'* (சீவக.2822). **3.** வடு; scar, scratch. 'கொடிற்றுப்புண்' (கலித்.95). **4.** மனநோவு; soreness of heart. *'புண்டரு நெஞ்சினள்'* (சேதுபு.கத்துரு.15.)

ம. புண், புண்ணு, க. புண், குண், குண்ணு; கோத. புண் தெ. புண்டு; பட. குண்ணு; து. புடி; குட. புண்ணீ; நா; கொலா, புன்; மா.புனு.

[புல் → புள் → பிள் → பிழம்பு = திரட்சி. புல் → புள் → புண் = தோலில் திரண்டு காணப்படும் ஊறு, திரண்டது போல் தெரியும் வடு, திரண்டதசை, புண்வலிப்பது போன்று உணரும் மனநோவு.]

புண்வகைகள்: varities of ulcer. **1.** நெருப்புப் புண்; burns. **2.** இணைவிழைச்சு (மேக)ப்புண்; venereal ulcer. **3.** வெள்ளைப் புண்; gonorr heal ulcer. **4.** ஆறாப்புண்; chronic ulcer. **5.** வேனற்கட்டி(கிரந்திப்புண்); syphilitic secondary rashes. **6.** ஒட்டுப்புண்; contagious sore. **7.** குழிப்புண்; deep sore or perforating ulcer. **8.** நீரிழிவுப்பரு(இராசப்புண்); diabetic-carbuncle. **9.** கரப்பான்புண்; eczema. **10.** பரங்கிப்புண்; syphilitic primary sore. **11.** வெட்டுப்புண்; incised wound. **12.** காயப்புண்; traumatic sore. **13.** அழிப்புண்; slonghing sore. **14.** கொறுக்குப்புண்; chancre. **15** வெடித்தப்புண்; fissured ulcer. **16.** அழற்புண்; inflamed ulcer. **17.** இதளிய நஞ்சு(இரச வேக்காட்டு)ப்புண்; ulcer caused by mercurial poisoning. **18.** புற்றுப்புண்; fungus ulcer. **19.** வயிற்றுப்புண்; gastric ulcer. **20.** துளைப்புண், புரைப்புண்; sinus. **21.** அரிப்புண்; rodent ulcer eating away the tissues.

புண்கரப்பன் *puṇkarappaṉ,* பெ. (n.) குழந்தை களுக்கு வரும் கரப்பன் புண்வகை; a kind of eczema in children.

[புண் + கரப்பன்]

புண்கழுநீர் *puṇkaḻunir,* பெ. (n.) புண்கள் அல்லது காயத்தைக் கழுவுவதற்குப் பயன் படுத்துங் காய்ச்சிய மருந்து நீர்; liquid used for cleaning the ulcers and wounds.

[புண் + கழுநீர்]

புண்களுபகாரி *puṇgaḷubagāri,* பெ. (n.) கறுப்பரிசி; black rice.

புண்சுரம் *puṇśuram,* பெ. (n.) ஆறாத காயத்தினாலேற்படுங் காய்ச்சல்; fever arising from wound.

[புண் + சுரம். சுள் → சுர் → சுரம்]

புண்டரம் *puṇḍaram,* பெ. (n.) சந்தனம் நீறு முதலியவற்றால் நெற்றி முதலியவற்றில் தரிக்கும் குறி; marks on the forehead and other parts of the body, made with sandal, sacred ashes or earth. 'புண்டரவிசால நெற்றிப் புரவல' (பாரத.சூது.28).

[புடம் → புண்டம் → புண்டரம். புடம்போடுதல் = எரித்து நீறாக்குதல். மா.வி.அகரமுதலி புண்டர என்னும் சொற்குப் பத்திமை (பக்தி)யுடன் இருத்தல் என்னும் பொருளுடைய 'புண்' என்பதை வேராகக் காட்டுகிறது. திருநீறு பூசிவழிபடுதல் பழந்தமிழர் வழக்க மாயிருப்பதையும் வேள்வி வழிப் பாட்டாளர்க்கு இது உரியதன்று என்பதையும் பார்க்கும் போது இச்சொல் தென்சொல்லென்பது பெறப்படும். மேலும் திருநீறுபூசுதல் முதன்மையாயிருந்து அதனின்றுபத்திமைத்தன்மை வளர்ந்தது என்று குறித்திருப்பதன் பொருத்தப் பாட்டின்மையும் நோக்கத் தக்கது]

புண்டவம் *puṇḍavam,* பெ. (n.) சாரணை (சங்.அக.); purslane leaved trianthema.

புண்டு *puṇḍu,* பெ. (n.) நரம்புச் சிலந்தியின் புண்; guinea worm ulcer.

[புண் → புண்டு]

புண்டுவிரிஞ்சான் *puṇḍuviriñjāṉ,* பெ. (n.) மீன்வகை; a kind of fish.

[புண்டு + விரிஞ்சான்]

புண்டை *puṇḍai,* பெ. (n.) பெண்குறி; pudendum muliebre.

கோத. பிட்; **துட.** பீடி

[புல் → புர் → புரை = உட்டுளை,உட்டுளைப் பொருள். புல் → புள் → புண் → புண்டை = துளையுள்ளது]

புண்ணடிப் பறிச்சல் *puṇṇaḍi-p-paṟiccal,* பெ. (n.) புரைப்புண்; elongated abscess with only a small orifice, sinus. (M.L.).

[புண் + அடி + பறிச்சல்.]

புண்ணழற்சி *puṇ-ṇ-aḻaṟci,* பெ. (n.) புண்ணால் உண்டாம் எரிவு (யாழ்ப்.); smart of a sore.

[புண் + அழற்சி. அழல் → அழற்சி. 'சி' தொழிற்பெயரீறு.]

புண்ணழற்றி *puṇ-ṇ-aḻaṟṟi,* பெ. (n.) புண்ணில் வைக்கும் காரமருந்து; caustic or antiseptic applied to ulcers or abscess. (M.M.).

[புண் + அழற்றி. அழல் (த.வி.) - அழற்று (பி.வி.) → அழற்றி. 'இ'வி.மு.ஈறு]

புண்ணழற்றுதல் *puṇ-ṇ-aḻaṟṟudal,* பெ. (n.) *புண்ணழற்சி* (யாழ்ப்.) பார்க்க; see *puṇṇaḻaṟci.*

[புண் + அழற்றுதல். 'தல்' தொ.பெ. ஈறு. அழல்(அழலுதல்) (கு.வி.) → அழற்று (பி.வி.). அழற்றுதல் = அழலச் செய்தல்]

புண்ணழுக்கு *puṇ-ṇ-aḻukku,* பெ. (n.) புண்ணினின்று தோன்றும் அழுக்கு; dirt of a sore.

க. புண்பொலசு.

[புண் + அழுக்கு]

புண்ணளை *puṇ-ṇ-aḷai,* பெ. (n.) 1. புண்ணின் குழி (யாழ்ப்.); cavity or orifice in an ulcer. 2. மூலம்;fistula

[புண் + அளை. உள் → அள் → அளை = துளை]

புண்ணாக்கர்மூலி *puṇṇākkar-mūli,* பெ. (n.) மூலிகை வகையு ளொன்று; a herb.

புண்ணாக்கீசர் *puṇṇākkīšar,* பெ. (n.) பதினெண் சித்தருளொருவர்; one of eighteen Siddhar.

புண்ணாக்கு—தல் *puṇ-ṇ-ākku-,* 15 செ.குன்றாவி. (v.t.) 1. புண் உண்டாக்குதல்; to do or cause to ulcer, make wound. 2. பிறர் மனத்தை நோகச் செய்தல்; to hurt, wound one's feelings. பிறருடைய உணர்வுகளைப் புண்ணாக்குமாறு பேசக் கூடாது (உ.வ.).

க. புண் படிசு; தெ. புண்டுசேயு

[புண் + ஆக்கு –, ஆகு(த.வி.) – ஆக்கு (பி.வி.)]

புண்ணாக்கு *puṇṇ̃ākku,* பெ. (n.) *பிண்ணாக்கு* (கொ.வ.) பார்க்க; see *piṇṇākku.*

[பிண்ணாக்கு (பிளவுபட்ட நாக்குப் போலிருப்பது) → புண்ணாக்கு]

புண்ணாக்குக்கீரை *puṇṇākku-k-kīrai,* பெ. (n.) பிண்ணாக்குப் பூண்டு (இ.வ.); a herb.

[புண்ணாக்கு + கீரை. பிண்ணாக்கு → புண்ணாக்கு]

புண்ணாக்குகை *puṇ-ṇ-ākkugai,* பெ. (n.) சீழ்ப்பிடிக்கை; becoming ulcerated.

[புண் + ஆக்குகை]

புண்ணாக்குப்பூண்டு *puṇṇākku-p-pūṇḍu,* *பிண்ணாக்குப் பூண்டு* பார்க்க; see *piṇṇākku-p-pūṇḍu.*

[பிண்ணாக்குப் பூண்டு - புண்ணாக்குப் பூண்டு. புள் → பூண்டு]

புண்ணாங்குழி *puṇṇāṅ-kuḻi,* பெ. (n.) குழிப்புண் (இ.வ.); internal ulcer.

[புண் + ஆம் + குழி]

புண்ணாணி *puṇ-ṇ-āṇi,* பெ. (n.) புண்ணின் அடிமுளை; core of an ulcer.

[புண் + ஆணி]

புண்ணாளி *puṇ-ṇ-āḷi,* பெ. (n.) புண்ணுடையோன்; one having sores.

[புண் + ஆளி]

புண்ணாற்றி *puṇ-ṇ-āṟṟi,* பெ. (n.) புண்ணைக் குணப்படுத்தும் மருந்து; medicine that heals the sores.

[புண் + ஆற்றி. ஆறு → ஆற்று → ஆற்றி.]

புண்ணானவுடம்பு *puṇṇāṉa-v-uḍambu,* பெ. (n.) புண் போல் நோகுந்தன்மையுள்ளவுடம்பு; pain in the body with tenderness as there is ulcer.

[புண் + ஆன + உடம்பு]

புண்ணியக்கருத்து *puṇṇiya-k-karuttu,* பெ. (n.) வள்ளல் மனம் (தரும சிந்தை) (யாழ்.அக.); charitable mind.

[புண்ணியம்+ கருத்து]

புண்ணியக்காலம் *puṇṇiya-k-kālam,* பெ. (n.) நல்ல நேரம்; an auspicious time.

ம., க. புண்யகால; **தெ.** புண்யகாலமு

[புண்ணியம் + காலம்]

புண்ணியக்குழம்பு *puṇṇiya-k-kuḻambu,* பெ. (n.) புண்ணிய சாந்தம் பார்க்க; see puṇṇiya-šāndam. '*வெண்ணெயொண்பாப் புண்ணியக் குழம்பு*' (ஞானா.34,10).

[புண்ணியம்+ குழம்பு]

புண்ணியகதை *puṇṇiya-kadai,* பெ. (n.) மறவனப்பு தொன்மங்கள் (இதிகாச புராணங்கள்); sacred story, as the purāṇās.

[புண்ணியம் + கதை]

புண்ணியகந்தம் *puṇṇiya-kandam,* பெ. (n.) சண்பகம் (சங்.அக); champak.

[புண்ணியம் + கந்தம்]

புண்ணியகருமம் *puṇṇiya-karumam,* பெ. (n.) நற்செயல் (வின்.); meritorious act.

[புண்ணியம் + கருமம். கரு → கரும் → கருமு → கருமம்]

புண்ணியகாரம் *puṇṇiya-kāram,* பெ. (n.) குங்கிலியம் (சங்.அக.); konkani resin.

[புண்ணியம் + காரம்]

புண்ணியகாரியம் *puṇṇiya-kāriyam,* பெ. (n.) *புண்ணியகருமம்* பார்க்க; see *puṇṇiya karumam.*

[புண்ணியம் + காரியம்]

Skt. kārya > **த.** காரியம்

புண்ணியகாலம் *puṇṇiya-kālam,* பெ. (n.) சமயச் சடங்குகளைக் கடைப்பிடிக்க ஏற்ற வெள்ளுவா (பௌர்ணமி), கோள்மறைப்பு (கிரணம்) ஆகியன நிகழும் காலம் (சேதுபு. சேதுபல.23); auspicious time for the performance of religious rites, as the time of a new moon or an eclipse.

க. புண்யகால

[புண்ணியம் + காலம்]

புண்ணியகீர்த்தி *puṇṇiya-kīrtti,* பெ. (n.) தூய்மையான புகழ்; holy praise. "*புண்ணிய கீர்த்திநுஞ் செவிமடுத்து*" (திவ்.திருச்சந்.67).

[புண்ணியம் + கீர்த்தி. சீர் = சிறப்பு, புகழ். சீர் → சீர்த்தி = பெரும்புகழ். சீர்த்தி → கீர்த்தி. ச–க ஒ.நோ. செய்–கை, செம்பு–கெம்பு. சேரலம்–கேரலம்.]

புண்ணியகேத்திரம் *puṇṇiya-kēttiram,* பெ. (n.) *புண்ணிய பூமி* (வின்.) பார்க்க; see *puṇṇiyabūmi.*

[புண்ணியம் + கேத்திரம்]

Skt. ksētra > **த.** கேத்திரம்.

புண்ணியச்செயல் *puṇṇiya-c-ceyal,* பெ. (n.) நற்செயல்; meritorious act.

[புண்ணியம் + செயல்]

புண்ணியசடம் *puṇṇia-šaḍam,* பெ. (n.) தூயவன் (பரிசுத்தமானவன்) (யாழ்.அக.); holy person.

[புண்ணியம் + சடம்]

புண்ணியசரவணம் *puṇṇiya-šaravaṇam,* பெ. (n.) அழகர் மலையிலுள்ள ஒரு பழைய பொய்கை (சிலப்.11,94); an ancient sacred pool in the Aḻagar hills near Madurai.

மறுவ. சரவணப் பொய்கை.

[புண்ணியம் + சரவணம்]

புண்ணியசரித்திரம் *puṇṇiya-šarittiram,* பெ. (n.) *புண்ணியகதை* (வின்.) பார்க்க; see *puṇṇiyakadai.*

க. புண்யசரிதெ

[புண்ணியம் + சரித்திரம்]

Skt. caritra > **த.** சரித்திரம்

புண்ணியசரீரம் *puṇṇiya-šarīram,* பெ. (n.) *புண்ணிய சடம்* (வின்.) பார்க்க; see *puṇṇiya šaḍam.*

[புண்ணியம் + சரீரம்]

Skt. sarīra > **த.** சரீரம்

புண்ணியசன்மம் *puṇṇiya-šaṉmam,* பெ. (n.) **1.** முற்பிறவிகளிற் செய்துள்ள புண்ணியங் களால் நற்பிறவி யெடுத்தவன் (வின்.); one born with a virtuous disposition as a result of good deeds in former births. **2.** *புண்ணிய சடம்* (யாழ்.அக.) பார்க்க; see *puṇṇiya-šaḍam.*

[புண்ணியம் + சன்மம்]

Skt. janmam > **த.** சன்மம்.

புண்ணியசனம் *puṇṇiya-šaṉam,* பெ.(n.) **1.** தூய்மையர்; holy person. **2.** அசுரர் அல்லது அரக்கர் (இராக்கதர்) வகை (பரிபா.5;5, உரை.); a class of Asuras or Rāksasas.

க. புண்யசன

[புண்ணியம் + சனம்]

Skt. jana > **த.** சனம்

புண்ணியசனேசுவரன் *puṇṇiya-šaṉēusuvaraṉ,* பெ. (n.) குபேரன் (யாழ்.அக.); Kubēra.

[புண்ணியம் + சனேசுவரன்]

Skt. janēšvara > **த.** சனேசுவரன்

புண்ணியசாந்தம் *puṇṇiya-šāndam,* பெ. (n.) **1.** சாணி (திவா.); cowdung. **2.** திருநீறு (பிங்.); sacred ashes.

[புண்ணியம் + சாந்தம்]

புண்ணியசாந்து *puṇṇiya-šāndu,* பெ. (n.) *புண்ணிய சாந்தம்* (சங்.அக.) பார்க்க; see *puṇṇiyašāndam.*

[புண்ணியம் + சாந்து]

புண்ணியசாலி *puṇṇiya-šāli,* பெ. (n.) ஆகூழ்க்காரன் (பாக்கியவான்)(கொ.வ.); fortunate person.

[புண்ணியம் + சாலி]

புண்ணியசுரூபி *puṇṇiyašurūbi,* பெ. (n.) *புண்ணிய வடிவினன்* (வின்.) பார்க்க; see *puṇṇiya-vaḍiviṉaṉ.*

[புண்ணிய + சுரூபி]

Skt. svarūpin > **த.** சுரூபி

புண்ணியசேடம் *puṇṇiya-šēḍam,* பெ. (n.) எடுத்த பிறவியில் நுகர்ந்தது போகப் பிற் பிறவியில் நுகர எஞ்சிநிற்கும் நல்வினை; unexhausted merit attaching to the soul of a person, left over to be exhausted in subsequent births.

[புண்ணியம் + சேடம்]

Skt. šēaṣa > **த.** சேடம்

புண்ணியசொரூபி *puṇṇiyašorūbi,* பெ. (n.) புண்ணிய வடிவினன் பார்க்க; see puṇṇiya-vaḍiviṉaṉ.

[புண்ணியம் + சொரூபி]

Skt. šuarūpin > **த.** சொரூபி.

புண்ணியத்தலம் *puṇṇiya-t-talam,* பெ. (n.) *புண்ணிய தலம்* பார்க்க; see *puṇṇiya-talam.*

[புண்ணியம் + தலம். தலை → தலம்]

புண்ணியத்தானம் *puṇṇiya-t-tāṉam,* பெ. (n.) **1.** (சாதகனுடைய) புண்ணியத்தைக் குறிப்பதாகிய ஒன்பதாமிடம் (யாழ்.அக.); (astrol.), the ninth house from the rising sign at birth. **2.** புண்ணியத் திருவிடம்; sacred place.

[புண்ணியம் + தானம்]

புண்ணியத்துறை *puṇṇiya-t-tuṟai,* பெ. (n.) **1.** புண்ணியத்தைப் பயக்கும் நீர்த் துறை. sacred bathing ghat. "*புண்ணியத்துறைகளாடி*" (கம்பரா.கைகேசி.107). **2.** புண்ணியத் துறையின் நீர்; sacred water. "*புண்ணிய நீரில்... மண்ணிய வாளின்*" (பு.வெ.6,27).

[புண்ணியம் + துறை]

புண்ணியத்தோற்றம் *puṇṇiya-t-tōṟṟam,* பெ. (n.) நன்மக்களிடம் தோன்றுதற்குரிய தவம், ஒழுக்கம், கொடை, கல்வி என்ற நால்வகைச் சிறந்த குணங்கள் (சூடா.); characteristics of a good person of four kinds, viz., tavam, oḻukkam, koḍai, kalvi.

[புண்ணியம் + தோற்றம். தோன்று → தோற்று → தோற்றம்]

புண்ணியதலம் *puṇṇiya-talam,* பெ. (n.) தூய்மையான திருவிடம்; sacred place.

[புண்ணியம் + தலம்]

புண்ணியதானம்[1] *punniya-dānam,* பெ. (n.) புண்ணியந் தருங் கொடை; gifts made on special occasions considered meritorious. "*புண்ணிய தானம் புரிந்தோனாதலின்*" (சிலப்.15,30).

[புண்ணியம் + தானம்]

புண்ணியதானம்[2] *punniya-dānam,* பெ. (n.) *புண்ணியவேள்வி* (இ.வ.) பார்க்க; see *punniya-vēlvi.*

[புண்ணியாகவாசனம் → புண்ணியதானம்]

புண்ணியதிசை *punniya-tišai,* பெ. (n.) வடதிசை; the north, as the sacred direction. "*புண்ணிய திசைமுகம் போகிய வந்நாள்*" (சிலப்.5,94).

[புண்ணியம் + திசை]

புண்ணியதிருணம் *punniya-tirunam,* பெ. (n.) வெண்டருப்பை (மலை.); white darbha-grass.

[புண்ணியம் + திருணம்]

புண்ணியதினம் *punniya-dinam,* பெ. (n.) *புண்ணிய நாள்* பார்க்க; see *punniya - nāl.*

க. புண்யதின

[புண்ணியம் + தினம்]

Skt. dina> த். தினம்

புண்ணியதீர்த்தம் *punniya-tirttam* பெ. (n.) 1. *புண்ணியத் துறை* பார்க்க; see *punniya-t-turai.* 2. *புண்ணிய நீர்* பார்க்க; see *punniya nir.*

[புண்ணியம் + தீர்த்தம்]

புண்ணியதேகம் *punniya-dēgam,* பெ. (n.) *புண்ணியவுடம்பு* பார்க்க; see *punniya-v-udambu.*

[புண்ணியம் + தேகம்]

Skt. dēha > த. தேகம்.

புண்ணியநதி *punniya-nadi,* பெ. (n.) புண்ணியம் பயக்கும் ஆறு; sacred river. "*புண்ணிய நதிகளின் நீரை*" (சிலப்.3, 122,உரை.).

க. புண்யநதி

[புண்ணியம் + நதி]

Skt. nadin > த. நதி

புண்ணியநல்லுரை *punniya-nallurai,* பெ. (n.) நல்லுரை (உபதேச) மொழி; sacred teaching.. "*புண்ணிய நல்லுறை யறிவீர் பொருந்துமின்*" (மணிமே.1,59.)

[புண்ணியம் + நல்லுரை]

புண்ணியநாள் *punniya-nāl,* பெ. (n.) சிறப்பு (விசேட) நாள்; holy day, day fit for performance of religious rites.

[புண்ணியம் + நாள்]

புண்ணியநிலம் *punniyanilam,* பெ. (n.). 1. புண்ணியத் திருவிடம்; sacred place. 2. இமயத்துக்கும் விந்தத்துக்கும் இடையிலுள்ள தேசம்; the tract of country in India lying between the Himālayas and the Vindhya mountains.

[புண்ணியம் + நிலம்]

புண்ணியநீர் *punniya-nir,* பெ. (n.) புண்ணியத் துறையின் நீர்; sacred water. "*புண்ணிய நீரில் .... மண்ணிய வாளின்*" (பு.வெ.6,27).

க. புண்யசல

[புண்ணியம் + நீர்]

புண்ணியபலம் *punniya-palam,* பெ. (n.) நல்வினைப் பயன் (வின்.); fruit of past meritorious deeds.

க. புண்யபல

[புண்ணியம் + பலம்]

Skt. phala> த. பலம்

புண்ணியபுத்திரன் *punniya-puttiran,* பெ. (n.) நன்மகன் (சற்புத்திரன்) (யாழ்.அக.); good, virtuous son.

[புண்ணியம் + புத்திரன்]

புண்ணியபுருடன் *punniya-purudan,* பெ. (n.) நல்லோன் (சற்புருடன்) (வின்.); venerable man.

[புண்ணியம் + புருடன்]

Skt. puruṣa > த. புருடன்

புண்ணியபூ *punniya-pū,* பெ. (n.) *புண்ணிய நிலம்* (வின்.) பார்க்க; see *punniya nilam.*

[புண்ணியம் + பூ]

புண்ணியபூமி *punniya-būmi,* பெ. (n.) *புண்ணிய நிலம்* பார்க்க; see *punniyanilam.*

ம., தெ. புண்யபூமி

[புண்ணியம் + பூமி]

புண்ணியம்[1] *punniyam,* பெ. (n.) **1.** அறம் (தருமம்) (உரி.நி.); virtue, moral or religious merit. **2.** நல்வினை; charity, good deeds. "*புண்ணியம் பாவம் புணர்ச்சி பிரிவென்றிவையாய்*" (திவ்.திருவாய்.6,3,4). **3.** நல்வினைப் பயன்; merit of virtuous deeds done in previous births. "*வையத் துப் புண்ணியமோ வேறே*" (நாலடி,264). **4.** தூய்மை; purity, holiness. **5.** ஒன்பான் செயல்களுள் ஒன்றான மனவமைதியைத் தரும் நற்கருமம் (சீவக.2814.உரை); (Jaina) good karma which brings peace of mind, one of nava-padārttam, q.v. **6.** தெய்வத் தன்மை (யாழ்.அக.); divine nature. **7.** ஒன்பான்(நவ)புண்ணியம்; acts of hospitality shown to an honoured guest. **8.** பணிவு (நகங்கிருதி), கொடை (தானம்), நோன்பு (விரதம்), நட்பு (சினேகம்), உணவளிக்கை (நயபோசனம்), பொறுமை (கமை), ஊக்கம் (உற்சாகம்) என எழுவகைப்பட்ட நற்செய்கை (யாழ்.அக.); meritorious acts, of seven kinds viz., nagaṅkirudi, tānam, viradam, sinēgam, nayapōšanam, kamai, urcāgam. **9.** புண்ணியசாந்தம் (அரு.நி.) பார்க்க; see punniya - šandam. **10.** நீர்த்தொட்டி (யாழ்.அக.); trough.

க. புண்ய; தெ. புண்யமு

[புல்லுதல் = பொருந்துதல். புல் → புர் → புரை. புரைதல் = பொருந்துதல். புல் → புள் → புண் → புணர். புணர்தல் = பொருந்துதல். புண் → பூண் = (பொருந்த)அணிதல், (விலங்கு) மாட்டுதல், சூழ்ந்து கொள்ளுதல். புள் → புண் → புண்ணியம் = ஏற்றுக்கொள்ளும் (பூணும்)அறம், மேற்கொள்ளும் நல்வினை]

புண்ணியம் என்னும் சொல் மேலை யாரிய மொழிகளில் இன்மையால் அது வடநாட்டுச்சொல்லே. சமற்கிருதமன்று (த.ம.150)

puṇya, (pūṇya, huṇya, hūṇya) good, right, just, beautiful etc. Could the original meaning be that is to be assented to (of D.pūṇ) - puṇya, a habitation. This has been formed of D.pūṇ, to put together; to construct. (KKED.XL)

புண்ணியம்² *puṇṇiyam,* பெ. (n.) புளிநறளை; a spreading plant.

புண்ணியம்செய்–தல் *puṇṇiyam-šey,* 1 செ.கு.வி. (v.i.) நற்செயல் புரிதல்; to do good.

க. புண்ணியங்கெய்.

[புண்ணியம் + செய்]

புண்ணியமுதல்வன் *puṇṇiya-mudalvaṉ,* பெ. (n.) 1. கடவுள்; god, as the most holy. 2. புத்தன் (திவா.); Buddha.

மறுவ. அண்ணல், முக்குற்றமில்லோன், எண்ணால் கண்ணுடையோன், பூமிசை நடந்தோன்.

[புண்ணியம் + முதல்வன்]

புண்ணியமுதல்வி *puṇṇiya-mudalvi* பெ. (n.) 1. மலைமகள் (பார்வதி) (பிங்.); Pārvadi. 2. தவத்திற் சிறந்தவள்; a woman of austere, penance. "*புண்ணிய முதல்வி திருத்தடி பொருந்தி*" (சிலப்.13,2).

[புண்ணியம் + முதல்வி]

புண்ணியமூர்த்தி *puṇṇiya-mūrtti,* பெ. (n.) 1. புண்ணியமே உருவெடுத்தாற் போன்றவன்; a holy person, considered an embodiment of virtue. "*புண்ணிய மூர்த்தி தன்னைக் காணலாம் என்னும் ஆசை*" (கம்பரா. மாயாசன.22) 2. கடவுள்; god. 3. புத்தன் (திவா.); Buddha. 4. அருகன் (பிங்.); Arhat.

க. புண்யமூர்த்தி

[புண்ணியம் + மூர்த்தி]

Skt. mūrtti > த. மூர்த்தி

புண்ணியராத்திரம் *puṇṇiyarāttiram,* பெ. (n.) *புண்ணிய விரவு* (வின்.) பார்க்க; see *puṇṇiya-v-iravu.*

[புண்ணியம் + ராத்திரம்]

Skt. rātra > த. ராத்திரம்

புண்ணியலோகம் *puṇṇiyalōgam,* பெ. (n.) *புண்ணியவுலகம்* பார்க்க; see *puṇṇiya-v-ulagam.*

க. புண்யலோக

[புண்ணியம் + லோகம். உலகம் → லோகம்]

புண்ணியவடிவினன் *puṇṇiya-vaḍivinaṉ,* பெ. (n.) 1. புண்ணிய வடிவான கடவுள்; god, as the embodiment of goodness. 2. தெய்வவுருவினன் (திவ்வியரூபி); divine form or personality.

[புண்ணிய + வடிவினன்]

புண்ணியவதி *puṇṇiyavadi,* பெ. (n.) *புண்ணிய வாட்டி* பார்க்க; see *puṇṇiya-vāṭṭi.*

க. புண்யவதி

[புண்ணியவான் (ஆ.பா.) → புண்ணியவதி (பெ.பா.)]

புண்ணியவந்திரி *punniya-vandiri,* **பெ.** (n.) மரவகை; a tree.

புண்ணியவரசு *punniya-v-arašu,* **பெ.** (n.) அரசமரவகையு ளொன்று; ficus reli.

புண்ணியவாட்டி *punniya-vāṭṭi,* **பெ.** (n.) **1.** நற்பண்புகளையுடையவள்; woman of religious merit. **2.** நற்பேறு பெற்றவள்; lucky woman. **3.** வள்ளன்மை கொண்டவள் (தருமஞ்செய்பவள்); a benevolent woman.

[புண்ணியவாளன் (ஆ.பா.) - புண்ணிய வாட்டி (பெ.பா.)]

புண்ணியவாளன் *punnia-v-āḷan,* **பெ.** (n.) *புண்ணியவான்* பார்க்க; see *punniyavān.*

தெ. புண்யுடு

[புண்ணியம் + ஆளன்]

புண்ணியவான் *punniyavān,* **பெ.** (n.) **1.** புண்ணியமிக்கவன்; person of great religious merit. "*சிவபூசைபுரி புண்ணிய வானன்*" (சிவரக.தேவர்முறை.15). **2.** நற்பேறு பெற்றவன்; lucky person. **3.** அறம் (தருமஞ்) செய்பவன் (இ.வ.); a benevolent person.

ம. புண்யவான்; **தெ.** புண்யடு.

[புண்ணியம் → புண்ணியவான்]

புண்ணியவிரவு *punniya-v-iravu,* **பெ.** (n.) சடங்கு செய்வதற்கு ஏற்ற நல்லிரவு; auspicious night for performance of ceremonies.

[புண்ணியம் + இரவு]

புண்ணியவுடம்பு *punniya-v-udambu,* **பெ.** (n.) தூய்மையானவ—ன்—ள்; holy person.

[புண்ணியம் + உடம்பு]

புண்ணியவுலகம் *punniya-v-ulagam,* **பெ.**(n.) தேவருலகம்; the world of the gods.

தெ. புண்யலோகமு.

[புண்ணியம் + உலகம்]

புண்ணியவேள்வி *punniya-vēḷvi,* **பெ.** (n.) தூய்மை யாக்கச் செய்யும் சிறப்புச் சடங்கு; purificatory ceremony.

[புண்ணியம் + வேள்வி]

புண்ணியன் *punniyan,* **பெ.** (n.) **1.** புண்ணியவான் பார்க்க; see punniyavān. "*புண்ணியர் கூடி*" (சீவக.301). **2.** அறவோன்; virtuous man.'புலவன் தீர்த்தன் புண்ணியன் புராணன்' (மணிமே. 5,98). **3.** கடவுள்; god, as the holy being. "*அனந்தன் மேற்கிடந்த வெம்புண்ணியா*"(திவ்.திருச்சந்.45). **4.** சிவபெருமான் (பிங்.); Sivan."*பெருந்துறை யெம்புண்ணியன்*" (திருவாசக.43,1). **5.** அருகன் (பிங்.); Arhat. **6.** புத்தன் (யாழ்.அக.); Buddha.

தெ. புண்யடு, புண்யவந்துடு

[புண்ணியம் → புண்ணியன்]

புண்ணியாக்கம் *punniyākkam,* **பெ.** (n.) குந்துருக்கம் (சங்.அக.); konkany resin.

புண்ணியாகம் *punniyāgam,* **பெ.** (n.) *புண்ணிய வேள்வி* பார்க்க; see *punniyavēḷvi.*

[புண்ணியம் + யாகம்]

Skt. yāga > **த.** யாகம்

புண்ணியாகவாசனம் *puṇṇiyākavāšanam,* பெ. (n.) *புண்ணிய வேள்வி* பார்க்க; see *puṇṇiyavēḷvi.* "*விதிவழியே புண்ணியாக வாசனஞ் செய்து*" (நாகைக் காரோ.புண்டரீக முனி.11).

[புண்ணியம் + யாகவாசனம்]

Skt. yāga > த. யாகம்

Skt. vācana > த. வாசனம்

புண்ணியாத்துமா *puṇṇiyāttumā,* பெ. (n.) *புண்ணியவான்* பார்க்க; see *puṇṇiyavāṉ.*

தெ. புண்யாத்முடு

[புண்ணியம் + ஆத்துமா]

Skt. ātmā > த. ஆத்துமா

புண்ணியாவாசனம் *puṇṇiyāvāšaṉam,* பெ. (n.) *புண்ணிய வேள்வி* பார்க்க; see *puṇṇiyavēḷvi.* "*பொருந்து புண்ணியா வாசனமும்*" (திருவானைக்.கோச்.செங்.31).

[புண்ணியம் + வாசனம்]

Skt. vācana > த. வாசனம்

புண்ணியானம் *puṇṇiyāṉam,* பெ. (n.) *புண்ணிய வேள்வி* பார்க்க; see *puṇṇiyavēḷvi.*

[புண்ணியாகவாசனம் → புண்ணியானம்]
Skt. yāna > த. யானம்

புண்ணியை *puṇṇiyai,* பெ. (n.)
1. *புண்ணியவதி* பார்க்க; see *puṇṇiyavadi.*
2. துளசி; sacred basil.

[புண்ணியன் (ஆ.பா.) - புண்ணியை (பெ.பா.)]

புண்ணியோதயம் *puṇṇiyōdayam,* பெ. (n.) ஆகூழ் (அதிட்டம்) (யாழ்.அக.); luck.

[புண்ணியம் + உதயம்]

புண்ணிலளை *puṇṇil-aḷai,* பெ. (n.) *புண்ணளை* (யாழ்ப்.) பார்க்க; see *puṇṇaḷai.*

[புண் + இன் + அளை – புண்ணினளை → புண்ணிலளை]

புண்ணிற்புரை *puṇṇiṟ-pūrai,* பெ. (n.) புண்ணிலோடும் புரை; sinus.

*[புண் + இன் + புரை. புல் → புர் → புரை = உட்டுளைப் புண்.
புண்ணிற்புரை = புண்ணுக்குள்ளோடும் புரை]*

புண்ணிற்பூ *puṇṇiṟ-pū,* பெ. (n.) புண்ணிலுண்டாகும் பூச்சி; maggot formed in an ulcer. (M.L.).

[புண் + இன் + பூ]

புண்ணீர் *puṇṇīr,* பெ. (n.) அரத்தம்; blood, serum. "*புண்ணீர் மாந்தி*" (பிரமோத்.2, 17).

[புண் + நீர்]

புண்ணீர்வடிகை *puṇṇīr-vaḍigai,* பெ. (n.) புரையோடிய புண்ணினின்று அரத்தம் வடிகை; a thinichor running from a sore.

*[புண்ணீர் + வடிகை.
வடி வடிகை. புண் + நீர் – புண்ணீர்]*

புண்ணுடம்பு *puṇ-ṇ-uḍambu,* பெ. (n.)
1. ஈன்றணிமையினால் அமைந்த பச்சையுடம்பு; body of a mother, on account of recent child birth. delicate body of woman

after delivery. **2.** அறங்கடை (பாவ) உடம்பு (வின்.); sinful body. **3.** புண்கள் நிறைந்தவுடம்பு; body full of sores.

[புண் + உடம்பு]

புண்ணுறுத்து–தல் *puṇ-ṇ-uṟuttu-,* 8 செ.குன்றாவி. (v.t.) வருத்துதல்; to give pain. "*நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ*" (தொல்.பொருள்.147).

[புண் + உறுத்து–,]

புண்ணூறுகை *puṇṇūṟugai,* பெ. (n.) ஆறாப் புண்ணிலேற்படும் அரிப்பு; itching in an ulcer.

[புண் + ஊறுகை. ஊறு → ஊறுகை]

புண்ணெஞ்சு *puṇṇeñju,* பெ. (n.) துன்பம்; grief.

[புண் + நெஞ்சு]

புண்ணோவு *puṇṇōvu,* பெ. (n.) புண்ணால் ஏற்படும் வலி; the pain of a sore.

க. புண்ணோவு

[புண் + நோவு]

புண்படு–தல் *puṇ-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) **1.** காயமடைதல்; to become wounded. **2.** வருந்துதல்; to be sorely grieved. பெரியோர் மனம் புண்படும்படி பேசக் கூடாது (உ.வ.).

க. புண்படெ

[புண் + படு–. பள் → படு]

புண்படுத்து–தல் *puṇ-paḍuttu,* 2.பி.வி. (c.v.) **1.** புண்ணுண்டாக்குதல்; to inflict a wound. "*யானை வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றா ளரிமா*" (நாலடி,198). **2.** வருந்துதல்; to persecute. **3.** மனம் நோவச் செய்தல்; to wound one's feelings. பிறர் மனம் புண்படுத்துமாறு பேசுதல் நல்லதன்று (உ.வ.).

க. புண்படிசு

[புண் + படுத்து. படு–தல்(த.வி.) – படு–த்து–தல் (பி.வி.)]

புண்புரை *puṇpurai,* பெ. (n.) **1.** புண்ணின் உட்டுளை; sinus. **2.** குறுகிய வாயையுடைய புரையோடிய புண் (பௌத்திரம்); fistulla.

[புண் + புரை]

புண்புரைப்புகை *puṇpurai-p-pugai,* பெ. (n.) ஆறாப்புண்ணைக் குணமாக்கும் மருந்துப் புகை; fistulla over an ulcer, to heal quickly.

[புண்புரை + புகை]

புண்மதி *puṇmadi,* பெ. (n.) திருமணமாகாதவன் (காட்டுநாயக்கர் பே.வழ.); bachelor.

புண்மாசறு–த்தல் *puṇmāśaṟu-,* 4 செ.கு.வி. (v.i.) புண்ணினழுக்ககற்றுதல்; to clear a sore.

[புண் + மாசு + அறு –]

புண்வழலை *puṇ-vaḻalai,* பெ. (n.) புண்ணிலிருந்து வடியும் சீழ்; pus from sores. "*புண் வழலை வடியும் பெரிய தலையை யுடைய ... இளங்களிறு*" (புறநா.22, உரை).

[புண் + வழலை]

புண்வாய் *puṇvāy,* பெ. (n.) புண்ணின் புழை; opening of a boil, etc.

[புண் + வாய்]

புண்வாய்கனக்கை *puṇvāy-kaṉakkai,* பெ. (n.) புண்துளை தடிக்கை; ridge of the sore getting thicker.

[புண்வாய் + கனக்கை. கல் → கன் → கனம். கனம் → கனக்கை]

புண்வாய்ச்சன்னி *puṇvāy-c-caṉṉi,* பெ. (n.) காயத்தினால் உண்டாகும் இசிவு (சன்னி) நோய் (வின்.); convulsive tetanus, lockjaw from a wound.

[புண் + வாய் + சன்னி]

புண்வெட்டை *puṇ-veṭṭai,* பெ. (n.) புண்வகை; soft sore. (M.L.).

[புண் + வெட்டை]

புணர்¹-தல் *puṇar-,* 4செ.குன்றாவி. (v.t.) **1.** பொருந்துதல் (திவா.); to join, unite. **2.** கலவி செய்தல்; to cohabit, copulate. "*மன்னியவளைப் புணரப் புக்கு*" (திவ். பெருமாள்.6,9). **3.** அளவளாவுதல் (பிங்.); to associate with, keep company with. "*ஊதியமில்லார்ப் புணர்தல்*" (நாலடி,233). **4.** மேற் கொள்ளுதல்; to undertake. "*பொருவகை புரிந்தவர் புணர்ந்த நீதியும்*" (பெருங்.வத்தவ.6,9).

மறுவ. துவள்தல், நொட்டுதல், பொலிதல், பிணைதல், புல்லுதல்.

ம. புணருக

[புல் → புள் → புண் →புணர் (வே.க.3,64)]

புணர்²-தல் *puṇar-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** ஏற்புடையதாதல்; to suit, fit. "*குரல் புணர்சீர்*" (புறநா.11). **2.** விளங்குதல்; to appeal to the mind; to be understood. **3.** எழுத்து முதலியன சந்தித்தல்; (gram.) to combine, coalesce, as letters or words in sandi. "*மொழி புணரியலயே*" (தொல்.எழுத்து.108). **4.** உடலிற்படுதல்; to touch. "*மென்முலை மேற்பனிமாருதம் புணர*" (கம்பரா.சூர்ப்பண.47). **5.** கூடியதாதல்; to be possible. "*புணரின் வெகுளாமை நன்று*" (குறள், 308).

[புல் → புள் → புண் →புணர், (வே.க.3,64)]

புணர்³-த்தல் *puṇar-,* 11 செ.குன்றாவி. (v.t.) **1.** சேர்த்தல்; to combine, connect, unite. "*நின்கழற்கணே புணர்ப்பதாக*" (திருவாச.5,71). **2.** எழுத்து முதலியன சந்திக்கும்படி செய்தல்; (gram.) to combine letters or words, in sandi. "*பெயரொடு பெயரைப் புணர்க் குங்காலும்*" (தொல்.எழுத்து. 108). **3.** நிகழ்த்து தல்; to do, make bring about. "*தூமமென் குழலியர் புணர்த்த சூழ்ச்சியால்*" (கம்பரா.திருவவ.48). **4.** பாகுபடுத்தல்; to analyse, choose, resolve. "*நாவினாற் பூவை புணர்த்துப் பேசும்*" (பு.வெ.12, வென்றிப்.12) **5.** கூட்டிச் சொல்லுதல்; to speak connectedly. "*தருக்கிய புணர்த்து*" (தொல்.பொருள்.50). **6.** கட்டுதல்; to fasten, tie. "*புணர்நார்ப் பெய்த புனைவின் கண்ணி*" (பெரும்பாண்.218). **7.** படைத்தல் (சிருட்டித்தல்); to create. "*புணர்க்கு மயனாம்*" (திவ்.திருவாய் 2,8,3). **8.** சிற்றிலக்கிய (பிரபந்த)மாகச் செய்தல்; to compose, as a pirapandam. "*நாயகன் பேர் வைத்துப் புணர்த்த புணர்ப்பு*" (ஈடு.5,9,3).

[புல் → புள் → புண் → புணர், புணர்தல்(த.வி.) - புணர்த்தல்(பி.வி.)]

புணர்⁴ *puṇar,* பெ. (n.) **1.** சேர்க்கை; mating, uniting. "*புணர்பிரியா வன்றிலும் போல்*" (நாலடி, 376) **2.** புதுமை (பிங்.); newness, novelty.

க. பொணர்

[புல் → புள் → புண் →புணர், (வே.க.3,64)]

புணர்க்கை *punarkkai,* பெ. (n.) **1.** சேர்க்கை; mating, uniting. **2.** *புணர்ப்பு² 1,4* பார்க்க; see *punarppu² 1,4.*

[புல் → புள் → புண் → புணர் + கை. 'கை' தொ.பெ.ஈறு]

புணர்குறி *punar-kuri,* பெ. (n.) தலைவன் தலைவியர் சந்திக்கும் குறியிடம்; (agap.) lovers trysting place. "*புணர்குறி செய்த புலர்குர லேனல்*" (அகநா.118).

[புணர் + குறி]

புணர்ச்சி¹ *punarcci,* பெ. (n.) **1.** சேர்க்கை (பிங்.); combination, association, union. **2.** ஒரு நாட்டவராயிருத்தல்; co-residence. "*புணர்ச்சி பழகுதல் வேண்டா*" (குறள்,785). **3.** கலவி (பிங்.); coition. "*தகைமிக்க புணர்ச்சியார்*" (கலித்.118) **4.** முன்பின் தொடர்பு (வின்.); connection of the different parts of a subject.

[புல் → புள் → புண் → புணர் → புணர்ச்சி. 'சி' தொழிற்பெயரீறு]

புணர்ச்சி² *punarcci,* பெ. (n.) எழுத்து முதலியவற்றின் சேர்க்கை(சந்தி) சொற்கூட்டு; (gram.) coalescence of letters or words in 'sandi' "*புணர்ச்சிவாயின்*" (தொல்.எழுத்து.142)

[புணர் → புணர்ச்சி.'சி' தொ.பெ.ஈறு]

இருசொற் புணர்வது புணர்ச்சி. மொழி பொதுமக்களால் ஆக்கம் பெற்றதாகலின், அதன் புணர்ச்சியும் அவரது அமைப்பே. கவனித்தறியப் பெறாது ஏற்கெனவேயிருந்த சொற்கூட்டு நெறிமுறைகளையே, புணர்ச்சி நெறிமொழிகள் (விதிகள்) என எடுத்துக் கூறினர் இலக்கணியர். இயல்புப்புணர்ச்சி, திரிபுப்புணர்ச்சி எனப் புணர்ச்சி இரு வகைப்படும். ஒரு வகை வேறுபாடுமின்றி இயல்பாயிருப்பது இயல்புப்புணர்ச்சி; ஏதேனுமொரு வகையில் திரிவது திரிபுப் புணர்ச்சி. திரிதல்–வேறுபடுதல். அது தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும். முன்னில்லாத எழுத்தோ அசையோ தோன்றுவது தோன்றல், ஓரெழுத்து மற்றோரெழுத்தாக மாறுவது திரிதல்; முன்னுள்ள எழுத்தோ அசையோ மறைவது கெடுதல்.

புணர்ச்சியிற் புதிதாய்த் தோன்றும் அசை, இரு சொற்களை அல்லது ஒரு சொல்லையும் ஒரு சொல்லுறுப்பைச் சார்ந்து நின்று இயைப்பதால் (இசைப்பதால்) சாரியை எனப்படும்.

திரிபு புணர்ச்சி–தோன்றல் (insertion)
வாழை + காய் – வாழைக்காய்
அவரை + பந்தல் – அவரைப்பந்தல்
களா + பழம் – களாப்பழம், களாம்பழம்
பூ + செடி – பூச்செடி (பூக்கும்செடி)
பூ + செடி – பூஞ்செடி (அழகியசெடி)
பணத்தை + கொடு – பணத்தைக் கொடு
ஊருக்கு + போ – ஊருக்குப்போ
வர + சொல் – வரச்சொல்
இ + நாள் – இந்நாள்
வெள் + ஆடு – வெள்ளாடு
நாடு + ஆண்மை – நாட்டாண்மை
இவை எழுத்துத்தோன்றல்
செக்கார் + குடி – செக்காரக்குடி
புளி + பழம் – புளியம்பழம்
கண் + பொத்தி – கண்ணாம் பொத்தி
இவை சாரியைதோன்றல்.

திரிதல் (mutation)
நல் + செய் – நன்செய்
வெள் + கலம் – வெண்கலம்
செம் + தாமரை – செந்தாமரை
வெம் + நீர் – வெந்நீர்
வேம்பு + இலை – வேப்பிலை
தண் + நீர் – தண்ணீர்
உள் + நாக்கு – உண்ணாக்கு
கல் + தாழை – கற்றாழை
நல் + நிலம் – நன்னிலம்
உள் + து – உண்டு
ஈன் + து – ஈற்று
இவை திரிதல்

கெடுதல் (omission)
மரம் + வேர் – மரவேர்
தொல்காப்பியம் + நூல் – தொல்காப்பிய நூல்
இவை கெடுதல்.
அன்று + கூலி – அற்றைக்கூலி
மண் + கட்டி – மண்ணாங்கட்டி
இவை தோன்றலும் திரிதலும்.
பட்டினம் + பிள்ளையார் –
பட்டினத்துப் பிள்ளையார்
நகரம் + ஆன் – நகரத்தான்.
இவை தோன்றதலும் கெடுதலும்.
வேம்பு + காய் – வேப்பங்காய்
பனை + தோப்பு – பனந்தோப்பு
இவை தோன்றலும் திரிதலும், கெடுதலும்.

மரூஉப்புணர்ச்சி

சில சொற்கள் ஒலி நெறிப்படி ஒழுங்காய்ப் புணராது மருவிப் புணரும். இப்புணர்ச்சி மரூஉப் புணர்ச்சியாம். மருவுதல் நெறி திறம்புதல்.

எ–டு : ஆதன் + தா – (ஆந்தா) ஆந்தை

அகம் + கை – அங்கை
நாழி + உரி – நாழுரி – நாடுரி

மக + கள் – மக்கள்.

உள்ளங்கை (உள்+அங்கை) என்பது அங்கையின் நடுப்பகுதி. இதில் அம் என்பது சாரியை யன்று. எந்தை, தந்தை என்பன மரூஉப் புணர்ச்சியில் எம்+தா, தம்+தா எனப் பிரியும். தா என்பது தந்தையைக் குறிக்கும் பெயர்ச்சொல். தாதை என்பதிற் போன்றே. எந்தை, தந்தை, ஆந்தை, பூந்தை என்பவற்றிலும் தை என்பது தா என்பதன் திரிபாகும்.

ஒ.நோ. எம்பி(ன்), எங்கை, எவ்வை, எம்முன், எந்தை, நும்பி(ன்), நுங்கை, நுவ்வை, நும்முன், நுந்தை, தம்பி(ன்), தங்கை, தவ்வை தம்முன், தந்தை

எம்பின் = எமக்குப் பின் பிறந்தான். கை = தங்கை (பிங்.). எங்கை = எமக்குச் சிறியவள். எம்+அவ்வை–எவ்வை. இதில் அவ்வை என்னும் அன்னையின் பெயர் அன்னை போலும் அக்கையைக் குறித்தது. இச்சொல் சில பழஞ்செய்யுள்களில் தங்கையைக் குறிப்பது, காதல் பற்றிய மரபு வழுவமைதியென அறிக. என் தந்தை, என் தம்பி, என் தங்கை என்பனவெல்லாம் வழக்குப் பற்றிய இடவழுவமைதியே.

கார்காலம், வடகோடு, கோவூர்கிழார், நாடு கிழவோன் எனச் செய்யுள் வழக்கிலும், கேடு காலம், பேறுகாலம், விறகுதலையன், விறகு காடு, வடகரை, மழைகாலம் என உலக வழக்கிலும் வலிமிகாது வழங்குவதாலும், நான்கு, வெட்கு என்னும் திரிபு வடிவுகளுடன் நால்கு, வெள்கு என்னும் இயல்பு வடிவுகளும் வழங்கி வருவதாலும், பல்கு, பல்பொருள், சில்கால், வல்சி, வள்பு எனச் சில சொற்கள் என்றும் இயல்பாகவேயிருப்பதனாலும் முதற்காலத்தில் திரிதற் புணர்ச்சி அத்துணைக் கண்டிப்பா யிருந்ததில்லை யென உய்த்துணரலாம்.

மூவகைப் புணர்ச்சியும் ஒலியிசைவை மட்டுமன்றி, இரு பொருட் கிடைப்பட்ட நெருங்கிய தொடர்பையும் உணர்த்துதல் காண்க. (த.வ.1,95–98)

புணர்ச்சி³ *puṇarcci,* பெ. (n.) அணிகலன்கள்; dress. "*புணர்ச்சிகள் பலவு மெல்லையில் பொருள்... இட*" (பெரியபு.அமர்நீ.38).

[புணர் → புணர்ச்சி]

புணர்ச்சிநிருவாகம் *puṇarcci-niruvāgam,* பெ. (n.) பாலியற் பொறுமை; sexual tolerance.

[புணர்ச்சி + நிருவாகம்]

Skt. nirvāka > **த.** நிருவாகம்

புணர்ச்சிமாலை *puṇarcci-mālai,* பெ. (n.) தண்டக மாலை (சங்.அக.); a kind of poem.

[புணர்ச்சி + மாலை. மயல் → மால் → மாலை]

புணர்ச்சியாயரை—த்தல் *puṇarcciyāy-arai,* 4 செ.குன்றாவி. (v.t.) கலக்கும்படி அரைத்தல்; to grind well in such a way that ingredients mix well.

[புணர்ச்சி + ஆய் + அரை—,]

புணர்ச்சியிலிச்சை *puṇarcciyil-iccai,* பெ. (n.) பாலியல் விருப்பம்; liking for coitus.

[புணர்ச்சியில் + இச்சை]

புணர்ச்சிவிகாரம் *puṇarcci-vigāram,* பெ. (n.) *புணர்ச்சி வேறுபாடு* பார்க்க; see *puṇarcci-vēṟupāḍu.*

[புணர்ச்சி + விகாரம்]

Skt. vikāra > **த.** விகாரம்

புணர்ச்சிவிழையாமை *puṇarcci-viḻaiyāmai,* பெ. (n.) பெண்ணுடன் சேருதலை விரும்பாமை; dislike to have female companian for intercourse. புணர்ச்சி விழையாமையாவது மாணிய நிலை (பிரமசரியம்) காத்தல் **(தொல்.பொருள்.74 இளம்.)**

[புணர்ச்சி + விழையாமை. 'ஆ' எ.ம. இடைநிலை]

புணர்ச்சிவேறுபாடு *puṇarcci-vēṟupāḍu,* பெ. (n.) தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் புணர்ச்சி வேறுபாடுகள்; (gram.) changes occurring in the combination of words of three kinds viz. tōṉṟal, tiridal, keḍudal.

[புணர்ச்சி + வேறுபாடு]
புணர்ச்சி[2] பார்க்க

புணர்த்து—தல் *puṇarttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) *புணர்[2]—தல்* பார்க்க; see *puṇar-[2],*

[புணர்தல்(த.வி.) — புணர்த்தல்(பி.வி.) புணர்த்துதல் (கா.வி.)]

புணர்தம் *puṇardam,* பெ. (n.) புனர்கொடிறு **(பிங்.)**; the seventh nakṣatra.

புணர்தல் *puṇardal,* பெ. (n.) தலைவனும் தலைவியும் கூடுதலாகிய குறிஞ்சியுரிப் பொருள் **(தொல்.பொருள்.14)**; (akap.) union of lovers, appropriate to kuṟiñji, one of five 'uripporul', q.v.

[புணர் → புணர்தல். 'தல்' தொ.பெ.ஈறு]

புணர்நலம் *puṇar-nalam,* பெ. (n.) சாரணை; purslane - leaved traintheme.

புணர்நிலை *puṇar-nilai,* பெ. (n.) சொற்கள் திரியாது புணர்ந்து ஒருசொற்றன்மைப்பட்டு நிற்றல்; compound.

[புணர் + நிலை]

பாய்மா, மாசெல்சுரம் என்றாற் போலச் சொற்கள் திரியாது புணர்ந்து ஒரு சொற்றன்மைப்பட்டு நிற்றலே புணர் நிலையாகும்.

புணர்நிலையணி *puṇar-nilai-y-aṇi,* பெ. (n.) வினை பண்பு இவை காரணமாக இரு பொருளுக்கு முடிக்குஞ் சொல்லொன்றாகப் புணர்ந்து நிற்கச் சொல்லும் அணி. **(தண்டி.84)**; (rhet.) figure of speech in which two subjects are referred to one common predicate of action or attribute.

[புணர் + நிலை + அணி]

புணர்ப்பாவை *puṇar-p-pāvai,* பெ. (n.) சக்கரப் பா முதலியவற்றின் இலக்கணங் கூறுவதும் வழக்கற்றதுமான ஒரு பழைய நூல்

(யாப்.வி.பக்.497); an ancient treatise dealing with cakkara-k-kavi, etc. not extant.

[புணர் + பாவை]

புணர்ப்பு[1] *puṇarppu,* பெ.(n.) **1.** தொடர்பு; connection. "*என்தனி நாயகன் புணர்ப்பே*" (திவ்.திருவாய்.2,8,2). **2.** புணர்ச்சி, 1,3 பார்க்க; see puṇarcci, 1 3. **3.** எழுத்து முதலியவற்றின் சந்தி; (gram.) coalescence of letters or words in sandi. "*இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே*" (நன்.152). **4.** நட்பு; friendship, intimacy. **5.** துணை; associate, comrade. "*புகையழல் வேலோன் புணர்ப்பாகி நின்றாள்*" (பு.வெ.10, சிறப்பிற்.10) **6.** உடல் (சூடா.); body, as a combination of parts. **7.** கடல் (ஈடு,2,8,3. அரும்); ocean.

[புல் → புள் → புண் → புணர். புணர்தல் = பொருந்துதல், நட்பாடல், கலவி செய்தல், சொற்கூடுதல், கூடியதாதல். புணர் → புணர்ப்பு (வே.க.3.64). 'பு' தொ.பெ.ஈறு]

புணர்ப்பு[2] *puṇarppu,* பெ. (n.) **1.** சூழ்ச்சி; contrivance, scheme, plan, artifice, craft, plot. "*முதியவன் புணர்ப்பினால்*" (கலித்.28). **2.** ஏவல்; command. "*கஞ்சன் புணர்ப்பினில் வந்த*" (திவ்.பெரியாழ்.2,4,4). **3.** சிற்றிலக்கியம், பனுவல்; poem. "*நாயகன் பேர் வைத்துப் புணர்த்த புணர்ப்புக் கேட்டாற் போலே காணும்*" (ஈடு.5,9,3) **4.** மாயம்; illusion. "*ஏழைதன் னீர்மையிந் நீர்மை யென்றாற் புணர்ப்போ கனவோ*" (திருக்கோ.17) **5.** செயல்; action,deed. "*புணர்ப்பன் பெரும்புணர்ப்பெங்கும் புலனே*" (திவ். திருவாய்.2,8,3).

[புல் → புள் → புண் → புணர் → புணர்ப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

புணர்ப்புவழு *puṇarppu vaḻu,* பெ. (n.) செய்யுட்குற்றங்களு ளொன்று (யாப்.வி.525); (pros.) a defect in versification.

[புணர் → புணர்ப்பு + வழு]

புணர்மீன் *puṇarmīṉ,* பெ. (n.) இணைக்கயல் (சூடா.); one of aṭṭa-mangalam.

[புணர் + மீன்]

புணர்விருத்தி *puṇarvirutti,* பெ. (n.) பாலியல் நிறைவு; sexual satisfaction.

[புணர் + விருத்தி]

Skt. vṛtti > **த.** விருத்தி

புணர்வு *puṇarvu,* பெ. (n.) **1.** சேர்க்கை; combination. **2.** கலவி; coition. "*புணர் வின்னினிய புலவிப்பொழுதும்*" (சீவக.1378). **3.** இணைப்பு (சூடா.); connection, joining. **4.** உடல் (பிங்.); body.

[புல் → புள் → புண் → புணர் → புணர்வு. (வே.க.3,64) 'பு' தொ. பெ. ஈறு]

புணராக்கரு *puṇarā-k-karu,* பெ. (n.) உறவின்றி யுருவாகுஞ் சூல்; impregnation by external contact without intromission, adosculation.

[புணரா + கரு]

புணராவிரக்கம் *puṇarā-v-irakkam* பெ. (n.) தான் காதலித்தவளைக் கூட நேராமையால் உண்டான வருத்தத்தோடு தலைவன் தனித்து உறைந்து வருந்துதலைக் கூறும் புறத்துறை; (பு.வெ.11, கைக்.8.). (purap.) theme of a lover grieving in solitude on account of his separation and consequent inability to meet his beloved.

[புல் → புள் → புண் → புணர் + ஆ + இரக்கம். 'ஆ' எ.ம.இ]

புணரி *puṇari,* பெ. (n.) 1. அலை, கடற்றிவலை; wave. *'வரைமருள் புணரிவான் பிசிருடைய'* (பதிற்றுப்.11). 2. கடல் (பிங்.); sea. 'உலகுசூழ்ந்த நெடும் புணரி' (திவ்.பெரியதி.8,6,5). 3. கரை (சூடா.); shore. 4. ஒலிக்கை (அரு.நி.); sounding. 5. தனிமை (அரு.நி.); loneliness.

[புணர் → புணரி = கலந்தெழும் பேரலை (வே.க.3,64), அவ்வலையையுடைய கடல், அலை மோதும் கரை, அலையால் எழும் ஒலி]

புணரிசூழ்வேலி *puṇari-šūḻ-vēli,* பெ. (n.) உட்புறம் ஒளியும் வெளிப்புறம் இருளுங் கொண்டு நிலவுலகத்தைச்சூழ்ந்துள்ளதாகக் கருதப்படும் மலைத்தொடர்; a mythical range of mountains encircling the orb of the earth and forming the limit of light and darkness. *'வெண்டிரைப் புணரிசூழ் வேலிவேந்தனே'* (சீவக.3052).

[புணரி + சூழ் + வேலி]

புணரியல் *puṇariyal,* பெ. (n.) உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல்கள் அமைந்த இலக்கணப்பகுதி; (gram.) the section of grammar which treats of coalescence of letters in sandi, of three kinds viz., uyir-īṟṟu-p-puṇariyal; mey-y-īṟṟu-p-puṇariyal, urubu-puṇariyal.

[புணர் + இயல்]

புணரியிற்றுயின்றோன் *puṇariyiṟṟuyiṉṟōṉ,* பெ. (n.) திருமால் (பிங்.); Tirumāl, as sleeping on the ocean.

[புணரி + இல் + துயின்றோன்]

புணரியோர் *puṇariyōr,* பெ. (n.) ஒன்று கூட்டியவர்; those who bring things together. *'நீருநிலனும்புணரியோர்'* (புறநா.18).

[புணர் → புணரியோர்.]

புணரொலி *puṇaroli,* பெ. (n.) ஈருயிர்க் கூட்டொலி; dipthongs

[புணர் + ஒலி]

தமிழ் உயிரெழுத்துகளுள் ஐ, ஔ இரண்டும் புணரொலியன்கள், *"அகர இகரம் ஐகாரமாகும்'* (தொல்.54). *'அகர உகரம்ஔகாரமாகும்'* (தொல்.55) என்று தொல்காப்பியங்கூறுவதால், அகரஇகரம் சேர்ந்து ஐகாரமும் அகரவுகரம் சேர்ந்து ஔகாரமும் புணரொலிகளாய்த் தோன்றின வென அறியலாம். இகரம் உகரத்தினும் முந்தியதாதலின் இகரக்கூறுள்ள ஐகாரம் உகரக்கூறுள்ள ஔகாரத்தினும் முந்தித் தோன்றியிருத்தல் வேண்டும்.

ஓரிரு சொல்முதலில் வரும் அகரஇகரம் ஐகாரமாகவும் எழுதப்பெறும்

எ–டு: வய் → வய →வயிர்→வயிரம் → வைரம் ஓரிருசொன்முதலில் வரும் அகரஉகரம் ஔகாரமாகவும் எழுதப்பெறும்.

எ–டு: கதுவாலி (குறுகிய வாலையுடைய பறவைஇனம்) → கவுதாரி (இலக்கணப்போலி → கௌதாரி) (த.வ.134,135).

புணி¹–த்தல் *puṇi-,* 4 செ.குன்றாவி. (v.t.) சேர்த்துக்கட்டுதல்; to make bundle, to tie.

[புண் → புணி–,(வே.க.3,64)]

புணி² *puṇi,* பெ. (n.) மயிர்முடி (அக.நி.); tuft of hair.

[புல் → புள் → புண் → புணி. புணித்தல் = சேர்த்துக்கட்டுதல் (வே.க.3,64) புணி → புணி = சேர்த்துக் கட்டிய மயிர்முடி]

புணி³ *puṇi,* பெ. (n.) *பிணி³,6* பார்க்க; see *piṇi³,6.*

[பிணி → புணி]

புணிகயிறு *puṇikayiṟu,* பெ. (n.) புணி தெரிவதற்காகப் பயன்படுத்தும் கயிறு; thread used to project the row of threads in a weaver's loom.

[புணி + கயிறு]

புணிச்சட்டம் *puṇi-c-caṭṭam,* பெ. (n.) புணி ஆணியுடைய பதினெட்டுச் சட்டங்கள்; an instrument in weaving.

[புணி + சட்டம்]



புணிசுழற்று–தல் *puṇi-cuḻaṟṟu-,* 15 செ.கு.வி (v.i.) ஆலையில் பாவு ஓடிய பிறகு புணிகளிலிருந்து இழைகளைச் சுழற்றுதல்; to wind the threads used to project the row of threads after spinning the warp in weaver's loom.

[புணி + சுழற்று–,. சுழல் → சுழற்று]

புணிமாறு–தல் *puṇimāṟu-,* 20 செ.கு.வி. (v.i.) *புணை மாறு–தல்* பார்க்க; see *puṇai-māṟu-,.*

[புணைமாறு → புணிமாறு]

புணை¹–த்தல் *puṇai-,* 11செ.குன்றாவி (v.t.) கட்டுதல்; to unite, tie.

[புல் → புள் → புண் → புணை –, (வே.க.3,65)]

புணை² *puṇai,* பெ. (n.) **1.** நீரில்மிதக்கும் கட்டை, தெப்பம்; கட்டுமரம்; float, raft. *'நல்லாண்மை யென்னும் புணை'* (குறள்,1134). **2.** மரக்கலம் (சூடா.); boat, vessel, ship **3.** உதவி; support, help. **4.** விலங்கு (சூடா.); fetters. **5.** ஈடு; pledge, security, **6.** பிணைமுறி; surety; *'இவனுக்குப் புணை'* (S.I.I.v,173). **7.** ஒப்பு; comparison. *'புணையில்லா வெவ்வ நோய்'* (கலித்.124).

[புள் → புண் → புணை → புணைத்தல் = கட்டுதல். புண்¹ → புணை (வே.க.3,65)]

புணை³ *puṇai,* பெ. (n.) மூங்கில் (அக.நி.); bamboo.

மறுவ. பணை

பட. கொணெ (பால்கறக்கப்பயன்படுத்தும் மூங்கிற்குழாய்); **கோத.**பெண்; **துட.**பீண்; **குட.** புண்ட

[புள் → புண் → புணை]

புணைக்கட்டை *puṇai-k-kaṭṭai,* பெ. (n.) கட்டுமரம் (இ.வ.); catamaran.

[புள் → புண் → புணை + கட்டை]

புணைகயிறு *puṇai-kayiṟu,* பெ. (n.) பூட்டாங்கயிறு, நுகத்தடியில் எருதைப் பிணைக்கும் நுகக்கயிறு (அருங்கலம்,94,உரை); rope with which a bullock is fastered to the yoke.

மறுவ. பூட்டாங்கயிறு

[புண் →புணை + கயிறு]



புணைசல் *puṇaišal,* பெ. (n.) *புணையல்* பார்க்க; see *puṇaiyal.*

[புணையல் → புணைசல்]

புணைசல்விடு-தல் *puṇaišal-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) களத்திற் கதிரைக் கடாவிட்டு உழக்குதல்; to tread out grain on the threshing-floor with the help of cattle fastened together.

மறுவ. பிணையோட்டுதல், படைவிடுதல்.

[புணையல் → புணைசல் + விடு-, 'விடு'.து.வினை]



புணைப்படு-தல் *puṇai-p-paḍu-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** பிணையாதல்; to become security; to go bail. **2.** உறுதியாதல்; to be responsible. *'திருவிளக்கெரிக்க நெய்யட்டுவதாகப் புணைப்பட்டோம்'* (S.I.I.iii.28).

[புணை + படு-,]

புணைபுணை *puṇaipuṇai,* பெ. (n.) கட்டுமரம்; catamaran. 'புணைபுணை யேறத் தாழ்த்ததை தளிரிவை நீரிற் றுவண்ட சேஎய்குன்றம்' (பரிபா.6;68).

[புணை + புணை]

'புணை' பார்க்க,

புணைமாறு-தல் *puṇaimāṟu-,* 20 செ.கு.வி. (v.i.) இணைப்பு மாறுதல்; to change the pair.

[புணை + மாறு-,]

புணையல் *puṇaiyal,* பெ. (n.) பிணைப்பு; joining together.

[புல் → புள் → புண் → புணை → புணையல். 'அல்' தொ.பெ.ஈறு]

புணையலடி—த்தல் *punaiyal-adi-,* 4 செ.குன்றாவி. (v.t.) புணைசல் விடு—தல் பார்க்க; see punaišal-vidu-,

மறுவ. பிணையோட்டுதல், பிணையடித்தல்.

[புணை → புணையல் + அடி —,]

புத் *put,* இடை. (part.) இதுவரை இல்லாமலிருந்து அப்பொழுது புதியதாகத் தோன்றியதை அல்லது உருவாக்கப்பட்டதைக் குறிக்கும் முன்னொட்டு; prefix indicating the meaning new.

[புது → புத்]

எ—டு: புத்தாடை, புத்தூர்.

புத்தகக்கல் *puttaga-k-kal,* பெ. (n.) **1.** காகச் சிலை; a black load stone. **2.** கனிமம்; mineral.

புத்தகப்படுத்து—தல் *puttaga-p-paduttu-,* 18 செ.குன்றாவி. (v.t.) ஆவணம் பதிவு செய்தல் (யாழ்ப்.); to record, register as a notary public.

[புத்தகம் + படுத்து—,]

புத்தகப்பை *puttaga-p-pai,* பெ. (n.) பள்ளிப் பாடநூல்களை வைக்கப் பயன்படுத்தும் பை; school bag. ஆண்டுக்கு ஒரு புத்தகப்பை வாங்க வேண்டியிருக்கிறது (உ.வ.).

[புத்தகம் + பை—,]

புத்தகம்[1] *puttagam,* பெ. (n.) **1.** நூல், நூற்பொருள் எழுதிய ஏட்டுத்தொகுதி, book; old manuscript. '*புத்தகமே சாலத் தொகுத்தும்*' (நாலடி, 318). **2.** படிப்பதற்கு ஏற்ற வகையில் அட்டை போட்டு இணைத்த அச்சிட்ட தாள்களின் தொகுப்பு; book. பொழுது போக வில்லை, புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறேன். (உ.வ.). **3.** எழுதுவதற்கு ஏற்ற வகையில் வெற்றுத் தாள்களை அட்டை போட்டு இணைத்த தொகுப்பு; notebook, ledger. பட்டாப் புத்தகம். **4.** சித்திரப்படாம் (பிங்.); printed cloth. **5.** மயிலிறகு (சங்.அக.); peacock-quill.

[புல் → புள் → புண் → புணர் புணர்தல் = பொருந்துதல், நட்பாடல், சொற்கூடுதல். புண் → புணி. புணித்தல் = சேர்த்துக் கட்டுதல். புல் → பொல் → பொரு. பொருதல் = பொருந்துதல், தொடுதல், முட்டுதல். பொரு → பொருந் → பொருநுதல் = பொருந்துதல், உடன்படுதல். பொருந் → பொருந்து → பொருத்து = இணைப்பு, மூட்டு. பொருத்து → பொத்து. பொத்துதல் = பொருத்துதல், தைத்துமூட்டுதல், மாலை கட்டுதல். பொத்து → பொத்தகம் = சுவடி, நிலக்கணக்கு. ஏடுகளின் சேர்க்கை. ஏட்டுச் சுவடி, சுவடி சேர்த்தல் என்னும் வழக்குகளை நோக்குக. (வே.க.3,64–70) பொத்தகம் → புத்தகம்]

த. புத்தகம் > Skt. pustaka.

புத்தகம்[2] *puttagam,* பெ. (n.) வரகு; kodu millet.

புத்தகம்படி—த்தல் *puttagam-padi-,* 4 செ.கு.வி. (v.i.) நூல் வாசித்தல்; to read a book. புத்தகம் படிக்கும் பழக்கத்தைத் தூண்ட வேண்டும் (உ.வ.).

[புத்தகம் + படி—,]

புத்தகம்பண்ணு—தல் *puttagam-pannu-,* 12 செ.குன்றாவி. (v.t.) *புத்தகப் படுத்து—தல்* பார்க்க; see *puttaga-p-paduttu-.*

[புத்தகம் + பண்ணு—, பண் → பண்ணுதல்]

புத்தகமெழுது–தல் *puttagam-eḻudu-,* 5 செ.கு.வி. (v.i.) நூலெழுதுதல்; to author a book. புத்தகமெழுதும் ஆசிரியர் பெருக வேண்டும். (உ.வ.)

[புத்தகம் + எழுது–,]

புத்தகரம் *puttagaram,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tanjavūr.

[புது + அகரம்]

புத்தசேடம் *putta-sēḍam,* பெ. (n.) உண்ட மிச்சில் (யாழ்.அக.); leavings of food after a meal.

புத்தப்புதிய *putta-p-pudiya,* பெ.அ. (adj) *புத்தம் புதிய* (கொ.வ.) பார்க்க; see *puttam pudiya.*

[புத்தம் + புதிய]

புத்தப்புதுமை *putta-p-pudumai,* பெ. (n.) மிக்க புதுமை (தக்கயாகப்.99); brand-new or very recent thing.

[புத்தம் + புதுமை. புது → புதுமை 'மை'ப.பெ.ஈறு]

புத்தபலை *puttabalai,* பெ. (n.) ஏழிலைப் புன்னை; seven leaf milky plant.

புத்தம்புதிய *puttam-pudiya,,* பெ.அ. (adj.) மிகப்புதிய; brand-new,very recent. புத்தம் புதிய துணி (உ.வ.).

[புத் → புத்தம் + புதிய. புது → புதிய]

புத்தம்புது *puttampudu,* பெ.அ. (adj.) *புத்தம் புதிய* பார்க்க; see *puttampudiya.* புத்தம் புதுத்துணி (உ.வ.).

[புத்தம் + புது]

புத்தமலர் *putta-malar,* பெ. (n.) *புத்தமலராதனம்* (தத்துவப்.108) பார்க்க; see *puttamalarādaṉam.*

புத்தமலராதனம் *putta- malar- ādaṉam,* பெ. (n.) இரண்டு காலையும் தரையினீட்டி இரண்டு கையும் கொண்டு காற்பெரு விரல்களைப் பிடித்திருக்கும் இருக்கை (ஆசன) வகை (தத்துவப்.108,உரை); a sitting posture in which the legs are stretched out and the toes are held by the hands in yoga stage.



புத்தர் *puttar,* பெ. (n.). கைச்சம்மட்டி; southern wood.

புத்தரக்கன் *puttarakkaṉ,* பெ. (n.) பருத்த குறளன் (யாழ்.அக.); stocky dwarf.

[புது → புத்து + அரக்கன். அரக்குதல் = வருத்துதல், அழித்தல். அரக்கு → அரக்கன்]

புத்தரவு *puttaravu,* பெ. (n.) *புற்றரவு* பார்க்க; see *puṟṟaravu.*

[புற்றரவு → புத்தரவு]

புத்தரி *puttari,* பெ. (n.) விழாக்களில் பயன்படுத்தும் புது அரிசி; new rice used in ceremonies.

ம., க. புத்தரி; **து.** புதுபாரு (புதுநெல்); **துட.** புத்தேரி (அறுவடைத் திருநாள்); **குட.** புத்தரி, புத்தேரி.

[புது → புத் + அரி]

புத்தல் *puttal,* பெ. (n.) நீர்க்கோங்கு; iron-wood of Malabar.

புத்தளி *puttaḷi,* பெ. (n.) தருப்பையாற் செய்த உரு; effigy made of darbha grass.

[புது → புத் + அளி]

த. புத்தளி > Skt. puttalikā

புத்தன்[1] *puttaṉ,* பெ. (n.) **1.** புதிய–வன்–வள்–து (சிவதரு.செனன.**91**); new person or thing. **2.** காசு; a coin. *'பிரதானி புத்தனுக்கும்'* (பணவிடு.**12**).

ம. புத்தன் (புதியபொருள்)

[புது → புத்து + அன்.]

புத்தன்[2] *puttaṉ,* பெ. (n.) எட்டிமரம்; a tree strychnos.

புத்தாக்கம் *puttākkam,* பெ. (n.) புதியதாக ஆக்கல்; making new.

[புது → புத் + ஆக்கம்]

புத்தாஞ்சோறு *puttāñcōṟu* பெ. (n.) கரையான் புற்று; ant hill.

[புற்று → புற்றாம் + சோறு = புற்றாம்சோறு = புற்றிலுள்ள கரையான்திரள். புற்றாம் சோறு → புத்தாம் சோறு]

புத்தாடை *puttāḍai,* பெ. (n.) புதுத்துணி, புதிய ஆடை; new clothes. பொங்கலுக்குப் புத்தாடை உடுப்பது வேளாளர் பழக்கம் (உ.வ.).

[புதிய → புத் + ஆடை. ஆடு → ஆடை = ஆடுவது, அசைவது]

புத்தாண்டு *puttāṇḍu,* பெ. (n.) அண்மையில் தொடங்கிய அல்லது அடுத்துத் தொடங்கும் ஆண்டு; new year. புத்தாண்டு வாழ்த்துகள் (உ.வ.). தமிழ்ப்புத்தாண்டின் தொடக்கம் சுறவ முதல்நாளே; மேழம் அன்று (உ.வ.)

[புது → புத் + ஆண்டு]

புத்தாத்திரி *puttāttiri,* பெ. (n.) அரிநெல்லி (மலை.); otaheite gooseberry.

[புது → புத்து + தாத்திரி]

புத்தாயிப்பழம் *puttāyi-p-paḻam,* பெ. (n.) பம்பளிமாசு(இ.வ.); pomela.

புத்தாரி *puttāri,* பெ. (n.) *புத்தாத்திரி* (சங்.அக.) பார்க்க; see *puttāttiri.*

புத்தாளி *puttāḷi,* பெ. (n.) கல்லுப்பனை; palmyra tree.

புத்தான்பவளம் *puttāṉ-pavaḷam,* பெ. (n.) நூற்றியிருபது சித்தர் மருந்து வகை யுளொன்று; one of 120 kinds of natural Siddhar's medical science.

மறுவ. புத்துக்குளச்சி

புத்தான்பழம் *puttāṉpaḻam,* பெ. (n.) புத்தான் பவளம் பார்க்க; see puttāṉ-pavaḷam.

மறுவ. புத்தான் பவளம்

புத்தி[1] *putti,* பெ. (n.) **1.** அந்தக்கரணம் நான்கனுள் ஆராய்ந்து தெளியுங் கரணம் (சி.போ.சிற்.4,1,2.); reason, power of species of andakkaraṇam, q.v. **2.** அறிவு; intellect, understanding knowledge, wisdom. '*புத்திபுகுத்தவா்*' (திருவாச.13,19). **3.** இயற்கையுணர்வு; instinct, instinctive knowledge as that of animals. **4.** நல்வழி (நல்லுபாயம்) (வின்.); nice plan, method **5.** அறிவுரை (போதனை); instruction, admonition counsel, exhortation. **6.** வழிவகை (பரிகாரம்) (வின்.); remedy, antidote. **7.** தாழ்ந்தோர் தலைவர்க்குத் தம் உடன்பாடுணர்த்துஞ் சொல்(கொ.வ.); a term signifying acceptance of the word of a superior by an inferior used in response. '*நம்பனே புத்தியென்று நலத்தரு சிற்பர் போந்து*' (விநாயகபு.3,10).

[புல் → புலம் = பொருளொடு பொருந்தும் அறிவு, அறிவுறுப்பு, அறிவுநூல், புலம் → புலன் = பொருளொடு பொருந்தும் அறிவு, அறிவுறுப்பு, அறிவுநூல் ***(சு.வி.36).*** *புல் → புன் → (புந்தி) → புத்தி = அறிவு; நல்வழி, வழிவகை]*

புத்தி[2] *putti,* பெ. (n.) *புட்டி*[3]; பார்க்க; see *puṭṭi*[3] (Pond.).

[புட்டி → புத்தி(கொ.வ.)]

புத்தி[3] *putti,* பெ. (n.) புறவுருத்தோற்றம்; reflexion.

புத்திச்சிரேணி *putticcirēṇi,* பெ. (n.) எலிச்செவி; a creeper.

புத்திதம் *puttidam,* பெ. (n.) எட்டி; nuxvomica tree.

புத்திமி *puttimi,* பெ. (n.) வெள்ளையீடு கொல்லி மரவகை; a tree.

புத்தியல்பு *puttiyalbu,* பெ. (n.) புதியத்தன்மை; new nature.

[புது → புத்து + இயல்பு. இயல் → இயல்பு]

புத்திரகருமம் *puttira-karumam,* பெ. (n.) பெற்றோர்க்கு மகன் செய்யும் ஈமச்சடங்கு; funeral ceremonies performed by a son for his deceased parent.

[புத்திரன் + கருமம்]

புத்திரகன் *puttiragaṉ,* பெ. (n.) சிறப்புத் தீக்கை பெற்றவன் (சைவச. மாணா. 4); (šaiva) one who has obtained the vicēḍa tīṭcai. **2.** அன்பன்(யாழ். அக.); beloved man. **3.** வஞ்சகன் (யாழ். அக.); cheat.

புத்திரகாமியம் *puttira kāmiyam,* பெ. (n.) *புத்திரகாமேட்டி* பார்க்க (யாழ். அக.); see *puttira-kāmēṭṭi.*

[புத்திரன் + காமியம்]

Skt. kāmya > **த.** காமியம்

புத்திரகாமேட்டி *puttirakāmēṭṭi,* பெ. (n.) ஆண்மகப்பேறுவிரும்பிச் செய்யும் வேள்வி (யாகம்) (இராமநா. பாலகா. 7); sacrifice performed to obtain sons.

புத்திரச்செல்வம் *puttira-c-celvam,* பெ. (n.) மக்கட்செல்வம்; sons, considered as wealth.

மறுவ. மக்கட்பேறு, மக்கட்செல்வம்

[புத்திரன் + செல்வம்]

புத்திரசஞ்சீவி *puttira šañjīvi,* பெ. (n.) மரவகை; a kind of tree.

புத்திரசந்தானம் *puttira šandāṉam,* பெ. (n.) ஆண் சரவடி (சந்ததி); male offspring.

[புத்திரன் + சந்தானம்]

Skt. san-tāna **> த.** சந்தானம்

புத்திரசம்பத்து *puttira šambattu,* பெ. (n.) *புத்திரச் செல்வம்* பார்க்க; see *puttira-c-celvam.*

[புத்திர(ன்) + சம்பத்து]

Skt. sampad › **த.** சம்பத்து

புத்திரசளி *puttirašāḷi,* பெ. (n.) காஞ்சிரை மரம்; a kind of tree.

மறுவ. புத்திரசாரி, புத்துருணி, புத்துவணி

புத்திரசீவம் *puttira šīvam,* பெ. (n.) *புத்திர சீவி* பார்க்க; see *puttira šīvi.*

[புத்திரன் + சீவம்]

Skt. jīvam **> த.** சீவம்

புத்திரசீவி *puttira-šīvi,* பெ. (n.) குழந்தைகள் நலமாயிருத்தற்குக் காப்பாகக்கட்டும் வித்துகளையுடை மரம் (பதார்த்த. 1024); child's amulet tree. **2.** வெள்ளால் (இ.வ); Java fig.

[புத்திரன் + சீவி]

Skt. jīvi **> த.** சீவி

புத்திரசீவிக்கொட்டை *puttira-šīvi-k-koṭṭai,* பெ. (n.) மூலம், பித்தம், நாவறட்சி, வயிற்றுப் பொருமல் போன்றவற்றைப் போக்கும் மருந்துக் கொட்டை; a nut which is said to cure piles, gleet, thrist, bloating of abdomen etc.,

புத்திரசீவிவிதை *puttirašīvi-viḍai,* பெ. (n.) *புத்திரசீவிக்கொட்டை* பார்க்க; see *puttira šīvi-k-koṭṭai.*

[புத்திரசீவி + விதை]

புத்திரசுவீகாரம் *puttirašuvīgāram,* பெ. (n.) வளர்ப்பு மகனாக எடுத்து (தத்தெடுத்து)க் கொள்ளுகை; adoption of a son.

[புத்தின் + சுவீகாரம்]

Skt. svīkāra **> த.** சுவீகாரம்

புத்திரசெனனி *puttirašeṉaṉi,* பெ. (n.) தாளி (மலை.); hedge bind-weed.

புத்திரசோகம் *puttira-šōgam,* பெ. (n.) *புத்திரத்துயர்* பார்க்க; see *puttira-t-tuyar.* "*புத்திரசோக முற்றுப் பொன்னனாணின்ற வாறும்*" (பிரமோத். 6, 25).

[புத்திர + சோகம்]

Skt. šōka **> த.** சோகம்

புத்திரசோதி *puttira šōdi,* பெ. (n.) *புத்திரசீவி* (பதார்த்த, 1024, உரை) பார்க்க; see *puttirašīvi.*

[புத்திரசீவி → புத்திரசோதி]

Skt. jyōtis **> த.** சோதி

புத்திரசோபம் *puttira-šōbam,* பெ. (n.) *புத்திரத்துயர்* (யாழ். அக.) பார்க்க; see *puttira-t-tuyar.*

[புத்திரன் + சோபம்]

Skt. kṣōbha > **த.** சோபம்

புத்திரணி *puttirani,* பெ. (n.) முள்ளிச் செடி; a plant, Indian night shade.

புத்திரம் *puttiram,* பெ. (n.) காஞ்சிரை மரம்; strychnine tree.

புத்திரமஞ்சரி *puttira-mañjari,* பெ. (n.) தணக்கு; small ach root.

புத்திரலாபம் *puttira-lābam,* பெ. (n.) மகப்பேறு; children, considered an acquisition.

[புத்திரன் + லாபம்]

Skt. lābha > **த.** லாபம்

புத்திரவஞ்சரி *puttira-vañjari,* பெ. (n.) கடுக்காய் மரம்; gall nut tree.

புத்திரவதி *puttira-vadi,* பெ. (n.) மக்கட் பேறுடையவள்; woman blessed with children.

[புத்திர → புத்திரவதி]

புத்திரவாஞ்சை *puttiravāñjai,* பெ. (n.) மக்களிடம் அன்பு; attachment to children.

[புத்திரன் + வாஞ்சை]

புத்திரவான் *puttiravāṉ,* பெ. (n.) மக்கட் பேறுடையவன்; man blessed with children.

[புத்திரன் → புத்திரவான்]

புத்திரத்தானம் *puttira-t-tāṉam,* பெ. (n.) மக்கட் பேற்றைக் குறிக்கும் ஓரையின் (இலக்கினத்து) ஐந்தாமிடம்; (astrol.) the fifth house from the ascendant, indicating offspring.

[புத்தின் + தானம்]

புத்திரத்துயர் *puttira-t-tuyar,* பெ. (n.) மகனை இழந்த துயர்; grief or sorrow occasioned by the loss of son.

[புத்திரன் + துயர்]

புத்திரதானம் *puttira-tāṉam,* பெ. (n.) **1.** புதல்வரைப் பிறப்பிக்கை; procreation of sons. **2.** வளர்ப்புப் பிள்ளையாக (தத்தாக) மகனைக் கொடுக்கை; gift of a son in adoption.

[புத்திரன் + தானம்]

புத்திரதீபம் *puttiradībam,* பெ. (n.) *புத்திர தீபமணி* பார்க்க; see *puttira-dībamaṇi. காளாமுகத்தினர்க்குப் படிகம் புத்திரதீபந் தரித்த மூர்த்தியாயும்* (சி. சி. பாயி. 1. சிவாக்.)

புத்திரதீபமணி *puttira-dībamaṇi,* பெ. (n.) காளாமுகர் மாலையாகக் கழுத்தில் அணியும் ஒரு வகை மணி; a kind of beads stringed into a necklet and worn by Kāḷāmugar. "காளாமுகர்க்குப்..... புத்திர தீபமணிகள்.......... மூர்த்தியாய்" (சி. சி. பாயி. 1, ஞானப்.)

[புத்திரதீபம் + மணி. மண்ணுதல் = கழுவுதல். மண்ணப்பட்டது மண்ணி. மண்ணி → மணி]

Skt. dīpa > த. தீபம்

புத்திரநாதன் *puttiranādan,* பெ. (n.) பிள்ளையினாற் காக்கப்படுவன் (யாழ். அக.); one who is maintained by his sons.

[புத்திரன் + நாதன்]

Skt. nadha > த. நாதன்

புத்திரப்பிரதிநிதி *puttira-p-piradinidi,* பெ. (n.) வளர்ப்புப்பிள்ளை (தத்துப்பிள்ளை) (யாழ். அக.); adopted son.

[புத்திரன் + பிரதிநிதி]

Skt. prati-nidhi > த. பிரதிநிதி

புத்திரபாகம் *puttira bāgam,* பெ. (n.) ஆண்மக் (புத்திரர்) களுக்கு ஈவுப்படி கொடுக்கும் பங்கு; division of inheritance per capita among the sons, opp. to pattiṉi-bāgam (R.I.).

[புத்திர(ன்) + பாகம்]

புத்திரமுகங்காணுதல் *puttiramugaṅ-kāṇudal,* பெ. (n.) ஒருவன் புதிதாகப் பிறந்த தன் ஆண்குழந்தையின் முகத்தை முதன் முறை நோக்குதலாகிய சடங்கு; the ceremony in which one sees the face of his new-born son for the first time.

[புத்திரன் + முகம் + காணுதல்]

புத்திரன் *puttiraṉ,* பெ. (n.) **1.** மகன்; son. **2.** மாணாக்கன்; disciple, pupil. "புத்திரரோடுங் கூடிப்போவதே கருமம்" (திருவாலவா. 54, 37).

தெ. புத்ருடு, புத்ரகுடு

[புது → புத்து → புத்திரன். புதுவதாக (குடும்பத்திற்கு) வந்தவன்]

த. புத்திரன். > Skt. puttra

putra, a son Gt. (p. 526) compares a K. root pudu, to be born. This root is nowhere found in D; it occurs only in Mr. Reave's Dictionary that was used by Dr. Gundert. Gt. further, compares puytal (of. T.puy, to be-come, to exist) a coming into existence, an existing and T. pudalva, a son, and then D. puṯṯu. T. pudalva appears to be identical with K. pōdḻva (of pōdaḷ), which may be-come pōdarva, and means "one who comes forth or springs up". See Te. podalu, to be born, s. puṯṯu. When (L. p. 486 as 506) compares T.paydal, etc., a boy (see s.D. pasuḷe, hay, etc.,) with putra, he is decid-edly wrong. (KKED, xxix).

putra, son; Drav. root pud, new(CGDFL. 577).

புத்ர என்னும் சொல்லிற்கு 'புத்' என்னும் நிரய(நரக)த்திற்குச் செல்லாமல் காப்பவன் (மகன்) என்று மா.வி. அகரமுதலி குறித்திருப்பது இயல்பு நிலைக்கு மாறானது. மேலும் putra வுக்கு push என்று வேர்மூலம் காட்டிய பின் அது etym. doutful என்று அவ்வகர முதலி குறித்துள்ளது.

புத்திராசாரி *puttirāšāri,* பெ. (n.) எட்டி மரம்; nuxvomica tree.

புத்திராதரபலா *puttirātarapalā,* பெ. (n.) கீழ்க்காய் நெல்லி; a small plant with slen-der green main branches.

புத்திராதிகட்டி *puttiradikaṭṭi,* பெ. (n.) புண் கட்டிவகையு ளொன்று; a kind of abscess.

புத்திரி[1] *puttiri,* பெ. (n.) மகள் (சூடா.); daughter.

[புது → புத்து → புத்திரன் (ஆ. பா.) - புத்திரி (பெ. பா.)]

த. புத்திரி > Skt. putri

புத்திரி[2] *puttiri,* பெ. (n.) **1.** கீழாநெல்லி (மலை.); small plant with slender green branches. **2.** கரிமுள்ளி; Indian nightshade.

மறுவ. புத்திராதரபலா

புத்திரிகம் *puttirigam,* பெ. (n.) தக்காளிச் செடி; tomato plant.

புத்திரிகை *puttirigai,* பெ. (n.) **1.** மகள் (வின்.); daughter. **2.** சித்திரப்பாவை (யாழ். அக.); doll.

[புது → புத்து → புத்திரன் (ஆ. பா.) - புத்திரி (பெ. பா.) → புத்திரிகை]

புத்திரிகைபுத்திரன் *puttirigai-puttiraṉ,* பெ. (n.) **1.** புத்திரி புத்திரன் பார்க்க; see puttiri puttiraṉ. **2.** மகனாகக் கொள்ளும் (பாவிக்கும்) மகள்; the appointed daughter, regarded as a son.

[புத்திரிகை + புத்திரன்]

புத்திரிபுத்திரன் *puttiri-puttiraṉ,* பெ. (n.) தன் மகள் வயிற்றுப் பிறந்தவனும் தனக்கே மகனாகக் கொள்ளப் பட்டவனுமாகிய பேரன் (ஏலாதி, 31); son of an appointed daughter.

[புத்திரி + புத்திரன்]

புத்திரினி *puttiriṉi,* பெ. (n.) சிறுகொப்புள வகையுளொன்று; a kind of thin abscess.

புத்திரைசுவரியம் *puttirai-šuvariyam,* பெ. (n.) *புத்திரச் செல்வம்* பார்க்க; see *puttira-c-celvam.*

[புத்திர(ன்) + ஐசுவரியம்]

Skt. aišvarya > **த.** ஐசுவரியம்

புத்திலக்கியம் *puttilakkiyam,* பெ. (n.) உள்ளடக்கத்திலும் அமைப்பு முறையிலும் இக்கால எண்ணங்களைக் காட்டும் இலக்கியம் (நவீன இலக்கியம்); modern literature.

[புது → புத் + இலக்கியம்]

புத்திறி *puttiṟi,* பெ. (n.) கறிமுள்ளி; a thorny shrub.

புத்தின்சாரி *puttiṉšāri,* பெ. (n.) காஞ்சிரை; nuxvomica tree.

புத்தீசல் *puttīšal,* பெ. (n.) புற்றீசல் பார்க்க; see puṟṟīšal.

[புற்றீசல் → புத்தீசல்]

புத்தீமம் *puttīmam,* பெ. (n.) வட்டசாரணைக் கொடி; a creeper.

புத்து[1] *puttu,* பெ. (n.) புற்று பார்க்க; see puṟṟu.

[புல் → புற்று → புத்து]

புத்து[2] *puttu,* பெ. (n.) பவளப்புற்று வைப்பு நஞ்சு; a kind of prepared arsenic.

புத்துக்கடி *puttu-k-kaḍi*, பெ. (n.) மேகப்படை; ringworm (M.L.).

[புத்து + கடி]

புத்துக்கல் *puttukkal*, பெ. (n.) சவர்க்காரம்; essence of fuller's earth.

புத்துக்குளச்சி *puttukkuḷacci*, பெ. (n.) *புத்தான் பவளம்* பார்க்க; see *puttāṉ-pavaḷam*.

மறுவ. புத்தான் பழம்

புத்துணர்ச்சி *puttuṇarcci*, பெ. (n.) **1.** (சோர்வு நீங்கும் வகையில்) மகிழ்ச்சிஉணர்வு, மனவெழுச்சி; rejuvenation, invigorating, feeling. கடற்காற்று புத்துணர்ச்சியைத் தரும் **(உ.வ.). 2.** புதிய உணர்வை அல்லது பட்டறிவை (அனுபவத்தை)த் தருவது; refreshing feeling. புத்துணர்ச்சி பெற நீர் பருக வேண்டும்.

[புது → புத் + உணர்ச்சி]

புத்துணர்ச்சியளி-த்தல் *puttuṇarcci-y-aḷi-*, 4 செ.கு.வி. (v.i.) புதிய உளப்பாங்கு தருதல், புதியதாகப் பரபரப்புக் காட்டுதல்; to give an new sensation.

[புத்துணர்ச்சி + அளி-,]

புத்துணர்வு *puttuṇarvu*, பெ. (n.) *புத்துணர்ச்சி* பார்க்க; see *puttuṇarcci*.

[புது → புத் + உணர்வு]

புத்துத்தேன் *puttu-t-ttēṉ*, பெ. (n.) புதிய தேன்; fresh honey.

[புது → புத் + தேன்]

புத்துமண் *puttumaṇ*, பெ. (n.) *புற்றுமண்* பார்க்க; see *puṟṟumaṇ*.

[புற்றுமண் → புத்துமண்]

புத்துமாங்காய் *puttu-māṅgāy*, பெ. (n.) சூட்டைத் தணிப்பதற்கு உண்ணுங் கிழங்குவகை; a kind of tuber eaten for its cooling effect.

[புற்று → புத்து + மாங்காய்.
மா + காய் – மாங்காய்]

புத்துயிர் *puttuyir*, பெ. (n.) (குன்றிய நிலையிலிருந்தோ வீழ்ச்சிக்குப் பின்னோ பெறும்) புதிய மலர்ச்சி, ஆற்றலோடுகூடிய எழுச்சி; rebirth, revival. பண்டைய கலைகளுக்குப் புத்துயிர் அளிக்க வேண்டும். **(உ.வ.).**

[புது → புத் + உயிர்]

புத்துருக்கு *putturukku*, பெ. (n.) செங்கற் சூளையிற் காணப்படும் உருகிய கற்புற்று; melted mud on the brick kiln, seen after baking the bricks.

புத்துருக்குநெய் *putturukku-ney*, பெ. (n.) புதியதாக உருக்கின நெய்; fresh clarified butter.

[புத்து + உருக்கு + நெய். புது → புத்து.
உருகு → உருக்கு. நெள் → நெய்]

புத்துருணி[1] *putturuṇi*, பெ. (n.) எட்டி (சங். அக.); staychnine tree.

புத்துருணி[2] *pulturuṇi*, பெ. (n.) *புத்துவணி* பார்க்க; see *puttuvaṇi*.

புத்துவணி *puttuvaṇi*, பெ. (n.) காஞ்சிரை மரம்; trychnine tree.

மறுவ. எட்டி, புத்துருணி, புத்திசாரி.

புத்துவைத்தல் *puttu-vaittal,* தொ. பெ. (vbl.n.) *புற்று வைத்தல்* பார்க்க; see *puṟṟuvaittal.*

[புத்து + வைத்தல்]

புத்தூர் *puttūr,* பெ. (n.) புதியவூர்; new village.

[புதி(ய) → புத் + ஊர்.]

புதியதாகத் தோன்றும் ஊர் புத்தூர். திருப்புத்தூர் என்றாற் போன்று அடை கொடுத்து வழங்கும் ஊர்களும் உண்டு. இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள புத்தூர் 'செறிபொழில் சூழ் மணிமாடத் திருப்புத்தூர்' என (290.7) திருஞானசம்பந்தரால் குறிக்கப்பட்டுள்ளது. தேவாரப் பாடல் பெற்ற பாண்டிநாட்டுப் பதியொன்று திருப்புத்தூர். அரிசில் ஆற்றங்கரையில் அமைந்த ஊர் அரிசிற்கரைப் புத்தூர். கடுவாய் ஆற்றங் கரையில் அமைந்த ஊர் கடுவாய்க்கரைப் புத்தூர். பாண்டி நாட்டிலுள்ள திருவில்லிபுத்தூர் மாலியார் (வைணவர்) போற்றும் பெரும்பதி.

சுந்தரர் திருமணம் செய்யப்போந்த புத்தூர் மணம் வந்த புத்தூர். கொங்குநாட்டில் பேரூருக்கு அருகே அமைந்த கோவன் என்னும் தலைவன் பெயரால் அமைந்தது கோயம்புத்தூர்.

புத்தேணாடு *puttēṇāḍu,* பெ. (n.) வானுலகு; celestial world. "*புலத்தலிற் புத்தேணா குண்டோ*" (குறள், 123).

[புத்தேள் + நாடு]

புத்தேள்[1] *puttēḷ,* பெ. (n.) **1.** புதுமை (சூடா.); novelty. **2.** புதியவள்; strange woman, stranger. "*புலத்தகைப் புத்தேளில் புக்கான்*" (கலித்.82).

[புது → புத் → புத்தேள்]

புத்தேள்[2] *puttēḷ,* பெ. (n.) தெய்வம்; god, deity. "*புத்தேளிர் கோட்டம் வலஞ் செய்து*" (கலித். 82);

மறுவ. அணங்கு, தெய்வம்.

[புது + எல் – புத்தெல் → புத்தேள் = புதியதாக ஒளிவடிவில் தோன்றும் தெய்வம் அல்லது தேவன் (த.ம.21)]

புத்தேளிர் *puttēḷir,* பெ. (n.) தேவர்; celestial being. "*புத்தேளிர் கோட்டம் வலஞ்செய்து*" (கலித். 82).

மறுவ. அமரர், பண்ணவர், கடவுளர், அண்டர், உம்பர், இமையவர், வானோர், புலவர், விண்ணோர், அமுதர், ஆதித்தர், மேலோர், ஐயர், சுரர், உயர்நிலத்தவர்.

[புத்தேள் → புத்தேளிர்]

புத்தேளுகம் *puttēḷugam,* பெ. (n.) மரவகை (மலை); deodar cedar.

புத்தேளுலகம் *puttēḷulagam,* பெ. (n.) புத்தேணாடு பார்க்க; see puttēṇāḍu. புத்தேளுலகத்து மீண்டும் பெறலரிதே, (குறள், 213).

[புத்தேள்[2] + உலகம்]

புத்தேளுலகு *puttēḷulagu,* பெ. (n.) *புத்தேணாடு* (பிங்.) பார்க்க; see *puttēṇāḍu.*

[புத்தேள் + உலகு]

புத்தேன் *puttēṉ,* பெ. (n.) எட்டி (மலை); nuxvomica tree.

புத்தொட்டிவைப்புநஞ்சு *puttoṭṭi-vaippu-nañju,* பெ. (n.) வைப்பு நஞ்சுவகையுளொன்று; a prepared arsenic.

புத்தோடு *puttōḍu,* பெ. (n.) புதுப்பானை; new pot. "*புத்தோடு தண்ணீர்க்குத் தான் பயந்தாங்கு*" (நாலடி. 1391).

[புது → புத் + ஓடு]

புத்தோவம் *puttōvam,* பெ. (n.) அத்திமரம்; fig tree.

புத *puda,* பெ. (n.) வாயில்; gate. "*மழை போழ்ந்து புதத்தொறும்*" (சீவக. 2398).

[புல் → புது → புதா → புத]

புதசனன் *pudašaṉaṉ,* பெ. (n.) அறிஞன் (அக. நி.); wise or learned man.

புதஞ்செய்-தல் *pudañ-cey-,* 1 செ. கு. வி. (v.i.) *புதமெழு-தல்* பார்க்க; see *pudameḻu-,* "*வெண்டிரை புரவியென்னப் புதஞ்செய்து*" (திவ். பெரியதி. 9, 3, 7).

[புதம் + செய்-,]

புதப்பிரியம் *pudappiriyam,* பெ. (n.) மரகதம் (சங். அக.); emerald.

புதம் *pudam,* பெ. (n.) மஞ்சு (மேகம்); cloud. "*புதமிகு விசும்பில்*" (திவ். பெரியதி. 9, 8, 8).

[புல் → புளி = (புளித்துப்) பொங்குவது, மேலெழுவது. புல் → புது → புதம் = மேலெழுந்து காணப்படுவது, முகில்]

புதமெழு-தல் *pudameḻu-,* 6 செ. கு. வி. (v.i.) தாவியெழுதல்; to leap up, jump up, rise with a bound. "*புதமெழு புரவிகள் புடைபரந்திட*" (சூளா. துற. 42).

க. புடவேள்

[புதம் + எழு-,]

புதர்¹ *pudar,* பெ. (n.) *புதல்¹* (அரு. நி.) பார்க்க; see *pudal.* கொல்லைப் புறத்தில் புல்லும் புதரும் மண்டிக்கிடக்கிறது (உ.வ.).

க. பொதரு; **தெ.** பொத; **து.** பூண்டெல்

[புல் → புது → புதல் → புதர் (வே. க. 3, 76) ல, ர போலி]

புதர்² *pudar,* பெ. (n.) *புதர்²* (அக. நி.) பார்க்க; see *pudār².*

[புது → புதா → புதர்]

புதர்க்காடை *pudar-k-kāḍai,* பெ. (n.) புல்நிலங்களிலும் புதர்காடுகளிலும் திரியும் காடை வகை; jungle bush-quail.

[புதர் → காடை]

புதர்ச்சிட்டு *pudar-c-ciṭṭu,* பெ. (n.) பீடபூமிப் பகுதிகளில் புல்வெளிகள், பள்ளத்தாக்குப் புதர்கள், விளைநிலங்கள், வேலிகள் ஆகியவற்றைச் சார்ந்து திரியும் ஒருவகைச்சிட்டு; pied bushchat.

[புதர் + சிட்டு]

புதர்ப்பூ *pudarppū,* பெ. (n.) புல்லின் பூ; grass flower.

[புதர் + பூ]

புதர்வானம்பாடி *pudarvāṉambāḍi,* பெ. (n.) புல்லும் புதருமான வெற்றுநிலங்களில் இருக்கும் வானம்பாடி; jerden's bush lark.

[புதர் + வானம்பாடி]

புதரவண்ணான் *pudara-vaṇṇāṉ,* பெ. (n.) இராப்பாடி; washerman for Adidravidās.

மறுவ. பொறதவண்ணான்

புதரெலி *pudar-eli,* பெ. (n.) எலிவகை; field rat.

[புதர் + எலி]

புதல்[1] *pudal,* பெ. (n.) 1. குத்துச் செடிகளின் செறிவு, தூறு; bush, thicket, low jungle. "*புதன் மறைந்து*" (குறள், 274). 2. புல்லினம் புறசாதி (திவா.); grass. 3. மருந்துப்பூடு (திவா.); medicinal shrub. 4. அரும்பு; bud. "*பூத்த முல்லைப் புதல்சூழ் பறவை*" (பதிற்றுப். 66, 16).

[புல் → புது → புதல் (வே. க. 3. 76)]

புதல்[2] *pudal,* பெ. (n.) புருவம் (பிங்.); eyebrow. "*கழைவிற்புதல்*" (தனிப்பா. ii,193, 467.).

[புல் → புது → புதல் = செறிந்த தூறு, புல்லினம் (வே.க.3,76) செறிந்த மயிர்ப்பாகம்]

புதல்[3] *pudal,* பெ. (n.) நாணல்; reed.

[புது → புதல் (புதராக வளர்வது)]

புதல்வர்ப்பேறு *pudalvar-p-pēṟu,* பெ. (n.) ஆண்மக்களைப் பெறுகை; obtaining sons. "*புதல்வர்ப் பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது*" (குறள், 61, உரை).

[புதல்வர் + பேறு. பெறு → பேறு]

புதல்வன் *pudalvaṉ,* பெ. (n.) 1. மகன்; son "*பொன்போற் புதல்வர்ப் பெறாதீரும்*" (புறநா. 9.). 2. மாணுக்கன்; disciple, student; "*எண்ணில் பத்திதிகழ் புதல்வர்க்கு*" (திருவாலவா. 35, 1). 3. குடி; subject; "*நின்புதல்வரைத் தழீஇ*" (பெருங். இலாவாண. 1, 33).

[புள் → புரு = குழந்தை. புள் → பிள் = பிள்ளை. பிள் → பிள்ளை. (புது) → புதல்வு → புதல்வன் (மு. தா. 40, 41)]

புதல்வி *pudalvi,* பெ. (n.) மகள் (பிங்.); daughter. "*பூவிலோன புதல்வன் மைந்தன் புதல்வி*" (கம்பரா. சூர்ப்ப. 39).

[புதல்வன் (ஆ. பா.) - புதல்வி (பெ. பா.) 'இ' பெ.பா. ஈறு]

புதவம்[1] *pudavam,* பெ. (n.) வாயில்; gate. "*புதவம் பலவுள*" (சிலப். 11, 119).

க. புதி (கதவின் பக்கம்)

[புதவு → புதவம்]

புதவம்[2] *pudavam,* பெ. (n.) அறுகு; bermuda grass. "*பொய்கைக் கொழுங்காற் புதவமொடு*" (பட்டினப். 243).

[புதர் → புதவம்]

புதவு[1] *pudavu,* பெ. (n.) 1. கதவு; door. "*நல்லெழினெடும்புதவு*" (பதிற்றுப். 16, 5). 2. வாயில்; entrance, gate. "*கோழிகேக்குங் கூடுடைப் புதவின்*" (பெரும்பாண். 52). 3. மதகு; sluice. "*புனல் பொரு புதவினுறந்தை*" (அகநா. 237). 4. திட்டிவாசல் (சூடா); small door with in a larger one, wicket. 5. குகை (இ. வ.); cave.

க. புதி (நுழைதல்), புது (நுழைகை), புதி (கதவின் பக்கம்)

[புல் → (புல்லம்) → பொல்லம் = ஓட்டை, துளை. புள் → புழை → பூழை = துளை, கணவாய். (மு. தா. 277) புல் → (புது) → புதவு]

புதவு² *pudavu,* பெ. (n.) புதவம்² பார்க்க; see pudavam². "*புல்லரைக் காஞ்சிப்புனல் பொருபுதவின்*" (மலைபடு. 449).

[புதல் → புதர் → புதவு]

புதவு³ *pudavu,* பெ. (n.) புல்வகை; a kind of grass.

மறுவ. புதவம்

புதளி *pudaḷi,* பெ. (n.) புலால் (அக. நி.); animal food.

புதற்புல் *pudaṟ-pul,* பெ. (n.) புல்வகை (அக. நி.); a kind of grass.

[புதர் + புல்]

புதற்பூ *pudaṟ-pū,* பெ. (n.) நிலப்பூ; flowers of grasses and shrubs.

[புதல் + பூ]

புதா¹ *pudā,* பெ. (n.) கதவு; door. "*இன்பப் புதாத்திறக்குந் தாளுடைய மூர்த்தி*" (சீவக. 1549).

[புல் → (புது) → புதா]

புதா² *pudā,* பெ. (n.) 1. மரக்கானாரை; a crane. (சிலப். 10, 117, அரும்). 2. பெருநாரை; a large heron. "*புள்ளும் புதாவும்*" (சிலப், 10, 117).

[புல் → புது → புதா (வே. க. 3. 76]

புதாநாழி *pudānāḻi,* பெ. (n.) பழைய வரிவகை; an ancient tax. (S.I.I.ii ,521).

புதாரு *pudāru,* பெ. (n.) புதர்; bush. (Pond.).

[புதர் → புதார் → புதாரு]

புதாழி *pudāḻi,* பெ. (n.) புதா நாழி பார்க்க; see pudānāḻi (S.I.I. ii,509).

[புதாநாழி → புதாழி]

புதானன் *pudāṉaṉ,* பெ. (n.) 1. *புதசனன்* (யாழ். அக.) பார்க்க; see *pudašaṉaṉ.* 2. குரு; preceptor.

புதிசு *pudišu,* பெ. (n.) *புதிது* பார்க்க; see *pudidu.*

[புதிது → புதிசு]

புதிது *pudidu,* பெ. (n.) புதியது; that which is new, uncommon or wonderful. "*அந்தோ சிறியனேன் செய்வது புதிதோ*" (அருட்பா. vi, திருமு. பிள்ளைப்பெரு. 89). 2. திருவிளக்கின் முன் வைக்கப்படும் முதல் விளைச்சற் காணிக்கை (வின்.); first sheaves of a rice crop, offered to a lamp personifying Laksmi.

க. பொதசு

[புதியது → புதிது]

புதிநகம் *pudinagam,* பெ. (n.) ஒரு வகை பழுப்பு வண்ணக்கூலம் (கோதுமை); a kind of lucas.

புதிய *pudiya,* கு. வி. எ. (adj.) புதியதான; new; புதியவிளைச்சலை அறுவடைக் காலத்தில் எதிர்ப்பார்ப்பர் (உ.வ.).

ம. புதிய; **க.** கொச, பொச

[புது → புதிய]

புதியஏற்பாடு *pudiya-ērpāḍu.,* பெ. (n.) ஏசுவின் பிறப்பு, வாழ்வு, இறப்பு, உயிர்ப்பு, அறிவுரை முதலியவற்றைப் பற்றிக் கூறும் நூல்; the new testament.

[புதிய + ஏற்பாடு]

புதியகோச்சினை *pudiya-kōccinai,* பெ. (n.) ஆன்மணத்தி; fresh bezoar. "*பொருவுறுங் குமப்பூ புதிய கோச்சினையோ ரென்றே*" (பரராசசேகரம்).

[புதிய + கோச்சினை]

புதியது[1] *pudiyadu,* பெ. (n.) இதற்கு முன் இருந்திருக்காதது, இப்பொழுது முதன்முதலாக வந்தது; that which is new. புதியது கவர்ச்சி மிக்கதாக இருக்கும் (உ.வ.).

க. பொசது; **பட.** கொசது

[புது → புதிய → புதியது]

புதியது[2] *pudiyadu,* பெ. (n.) புதியதாகச் சமைத்த சோறு (இ. வ.); freshly cooked rice, opp. to paḻaiyadu.

[புது → புதிய → புதியது]

புதியது[3] *pudiyadu,* பெ. (n.) அறுவடையானதும் கொண்டாடும் விழா; the festival on the completion of the harvest. "*கார்த்திகைப் புதியதுக்கு குளித்தார்களாகில்*" (ஈடு, 1, 5, 1).

[புது → புதிய → புதியது]

புதியதுண்(ணு)[1]–தல் *pudiyaduṇ(ṇu)-,* 6 செ. கு. வி. (v.i.) 1. ஒரேயடியாக நுகர்ச்சி கொள்ளுதல்; to enjoy in part; to have partial experience. "*இதுக்குமுன் புதியதுண்டறி யாத நான்*" (ஈடு 3, 2, 4). 2. முதல்விளைந்த விளைவை நல்வேளையிற் சமைத்துண்ணுதல்; to celebrate the ceremoney in which the first fruits of crops are cooked and eaten at an auspicious hour. "*புனத்தினிக் கிள்ளிப் புதுவலிக்காட்டி* ....இனக்குறவர் புதியதுண்ணும்" (திவ். பெரியாழ். 5, 3, 3).

[புதியது + உண்–.]

புதியதுண்(ணு)[2]–தல் *pudiyaduṇ(ṇu)-,* 6 செ. கு. வி. (v.i.) முதன் முதல் சுவை(ருசி) பார்த்தல்; to have a first taste of. "*தன் பிறவிக்குரிய போகங்களிலும் ஆசார ஸம்ஸ் காராதிகளிலும் புதியதுண்ணாதே*" (ரஹஸ்ய. 87).

[புதியது + உண்–.]

புதியதுண்ணல் *pudiduṇṇal-,* பெ. (n.) புதியதாக விளைந்த விளைவை நல்வேளையிற் சமைத்துண்ணும் சடங்கு; a ceremony in which the rice of a new crop is cooked and eaten at an auspicious hour.

[புதிது + உண்ணல். உண் → உண்ணல். 'அல்' தொ. பெ. ஈறு]

புதியமனிதன் *pudiya-maṉidaṉ.* பெ. (n.) 1. வெளியார், புதுவரவாளர் (அன்னியன்); stranger. 2. புதிதாக வேலையில் அமர்ந்தவன் (வின்.); novice, beginner one new in office. 3. ஆண்குழந்தை; stranger, new born male child.

[புதிய + மனிதன்]

புதியமரிசம் *pudiyamarišam,* பெ. (n.) நிறுத்தலளவையுளொன்று; a height. "*புதிய மரிசங்காற்கழஞ்சு*" (பரராசசேகரம்).

புதியர் *pudiyar,* பெ. (n.) *புதியவர்* பார்க்க; see *pudiyavar.*

[புதிய → புதியர். 'அர்' ப. பா. ஈறு]

புதியவர் *pudiyavar,* பெ. (n.) 1. புதிதாக வந்தவர்; new-comers. 2. விருந்தினர் (சூடா.); guests, visitors.

க. பொசம்ப, கொசப; து. பொசதாயெ, பொசப; கூ. பூனஞ்சு; பட. கொசம.

[புது → புதியவர்]

புதியவிலை *pudiyavilai,* பெ. (n.) பச்சிலை; fresh green leave.

[புதிய + இலை]

புதியவேற்பாடு *pudiyavērpāḍu,* பெ. (n.) *புதியஏற்பாடு* பார்க்க; see *pudiyaērpāḍu.*

[புதிய + ஏற்பாடு]

புதியன்புதினா *pudiyan-pudinā,* பெ. (n.) புதினாக்கீரை; a plant.

மறுவ. *புதினா*

புதியனபுகுதல் *pudiyanapugudal,* பெ. (n.) சொல்வழக்கம் முதலியன புதியனவாக உண்டாகுகை; (gram.) coming into vogue of new forms of speech or expression.'பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல' (நன். 462).

[புதியன + புகுதல். 'தல்' தொ.பெ.ஈறு]

புதியிளநீர் *pudiyiḷa-nīr,* பெ. (n.) புதிதாகப் பறித்த இளநீர்க்காய்(பதார்த்த,63); tender coconut just plucked.

[புதுயிளநீர் → புதியிளநீர்]

புதியோர் *pudiyōr,* பெ. (n.) *புதியவர்* (வின்.) பார்க்க; see *pudiyavar.*

[புது → புதி → புதியோர்]

புதிர்[1] *pudir,* பெ. (n.) *புதிது* 2 (வின்) பார்க்க; see *pudidu* 2.

[புது + கதிர் - புதுக்கதிர் → புதிர்]

புதிர்[2] *pudir,* பெ. (n.) விடுகதை; riddle.

மறுவ. பிசி

க. பது

[புள் → பிள் → பிய் → (பியி) → பிசி = பிய்ப்பது போல் விடுக்கும் விடுகதை. பிள் – பிடு → பிது → பிதிர் = விடுகதை. பிதிர் → புதிர் (மு.தா.262)]

புதிரி *pudiri,* பெ. (n.) புதுநெற்சோறு; rice (food) prepared with newly harvested paddy.

[புது + கதிர் – புதுகதிர் → புதிர் → புதிரி]

அறுவடையான பின், புதிரி என்னும் புது நெல்லைச் சமைத்து நன்றியறிவுடன் வழிபடுதெய்வத்திற்குப் படைத்துண்பதே பொங்கல் (த.க.140).

புதிரிவயல் *pudirivayal,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர், a village in Tañjāvūr dt.

[புல் + திரி + வயல் – புல்திரிவயல் → புதிரிவயல்]

புதிலி *pudili,* பெ. (n.) எண்ணெய்த்துருத்தி (யாழ்.அக); leather bag for keeping oil

க. புத்தலி

[புள் → புட்டி = உட்டுளையுள்ள கலம். புள்→ (புல்) → புது → புதுலி → புதிலி]

புதினக்கடுதாசி *pudiṉa-k-kaḍudāši,* பெ. (n.) செய்தித்தாள் (யாழ்ப்.); newspaper.

[புதினம் + கடுதாசி]

Port. cartez > **த.** கடுதாசி

புதினத்தாள் *pudiṉa-t-tāḷ,* பெ. (n.) செய்தித்தாள்; newspaper.

[புதினம் + தாள்]

புதினம்[1] *pudiṉam,* பெ. (n.) **1.** புதுமை (வின்.); newness, novelty. **2.** செய்தி; news. **3.** வியப்பு (வின்.); wonderful or strange thing; extraordinary event; miracle.

[புது → புதி → புதினம்]

புதினம்[2] *pudiṉam,* பெ. (n.) ***புதினத்தாள்*** பார்க்க (இக்.வ.); see *pudiṉattāḷ.*

[புது → புதி → புதினம்]

புதினாகம் *pudiṉāgam,* பெ. (n.) வீரம்; perchloride of mercury.

புது *pudu,* பெ.அ. (adj.) **1.** புதியதாக இருக்கிற; new. குழந்தைக்குப் புதுத்துணி என்றால் மிகவும் பிடிக்கும் (உ.வ.). **2.** மீண்டும் வருகிற அல்லது மீண்டும் ஏற்படுத்துகிற; fresh, afresh. புதுவெள்ளம், புதுக் கணக்கு. **3.** (ஒரு நிகழ்வின் தன்மை) இன்னும் விட்டு நீங்காத; still retaining the newness. புதுமாப்பிள்ளை, புதுமருமகள்.

ம. புது; **க.** ஒச, பொச, கொச; **து.** பொச;

பட. கொச; **பர்., கட.** புன்; **கோண்.** புனோ;

கூ., குவி. புனி; குரு. புனா; **மா.** புனெ; **பிரா.** பூச்குன்; **துட.** புத்.

[புல் → புள் → புழு = துளைத்தரிக்கும் சிற்றுயிரி. புழு → புகு. புகுதல் = உட்செல்லுதல். புல் → புது. ஒ.நோ. மெல் → மெது]

புதுக்கட்டு *pudu-k-kaṭṭu,* பெ. (n.) புதியமுறை (வின்.); new institutions, orders, ordinances, establishments or regulations.

[புது + கட்டு]

புதுக்கணக்குநாள் *pudu-k-kaṉakku-nāḷ,* பெ. (n.) நாட்டுக் கோட்டைச் செட்டிமார் மூன்றாண்டுக் கொருமுறை வணிக(வியாபார)த் தொடக்கத்திற்கு ஏற்படுத்தும் நல்ல நாள்; auspicious day for the commencement of business transactions for a fresh triennial period, (Nāṭṭu.Cheṭṭi)

[புது + கணக்கு + நாள்]

புதுக்கணி–த்தல் *pudu-k-kaṇi-,* 4 செ.கு.வி. (v.i.) அழகுபெறுதல்; to receive new beauty, have new attraction. ***'புதுக்கணித்த சிறகையுடைய சேவல்'*** (ஈடு.).

[புது + கணி–,]

புதுக்கணிப்பு *pudu-k-kaṇippu,* பெ. (n.) புதியவொளி; fresh lustre, enhanced beauty. *'ஆடையுடையும் புதுக்கணிப்பும்'* (திவ்.திருவாய் 8,9.5.).

[புதுக்கணி → புதுக்கணிப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

புதுக்கம் *pudukkam,* பெ. (n.) புதியதன்மை; newness.

ம. புதுக்கம்.

[புது → புதுக்கு → புதுக்கம். 'அம்' தொ.பெ.ஈறு]

புதுக்கரகம் *pudu-k-karagam,* பெ. (n.) புதுப்பானை அல்லது புது மண்சட்டி; a new earthern pot.

[புது+ கரகம்]

புதுக்கருக்கு *pudu-k-karukku,* பெ. (n.) 1. வேலைத் தொடக்கத்தில் புதிய ஆளுக்கு உண்டாஞ் சுறுசுறுப்பு; smartness or briskness of fresh hand. 2. புதுமை; freshness. *'நகையின்னும் புதுக்கருக்கு அழியவில்லை'* .

[புது + கருக்கு]

புதுக்கலசசக்கரம் *pudu-k-kalaša-šakkaram,* பெ. (n.) புதிய ஓடு; a piece of new broken tile.

[புது+ கலசம் + சக்கரம்]

புதுக்கலசம் *pudu-k-kalašam,* பெ. (n.) *புதுக்கரகம்* பார்க்க; see *pudu-k-karagam.*

[புது+ கலசம்]

புதுக்கலம் *pudu-k-kalam,* பெ. (n.) புதியமட் பாண்டம்; new pot of clay *'புதுக்கலம் போலும்'* (சீவக.2108.).

ம. புதுக்கலம்

[புது+ கலம்]

புதுக்கழுநீர் *pudu-k-kaḻunīr,* பெ. (n.) புதிதாக அரிசி கழுவின நீர்; water of washed rice which is fresh.

மறுவ. அரிசிக்கழனி, கழனித்தண்ணீர்

[புது + கழுநீர்]

புதுக்காசு *pudu-k-kāšu,* பெ. (n.) காசு (நாணய) வகை; a kind of coin. (Pd.M.).

[புது + காசு. காழ் → காசு]

புதுக்கால் *pudu-k-kāl,* பெ. (n.) புதியதாக வெட்டப்படும் கால்வாய்; new water channel. பழங்காலைத் தூர்க்காதே புதுக்காலை வெட்டாதே (பழ.).

[புது+ கால். கால் = வாய்க்கால்]

புதுக்கு—தல் *pudukku-,* 8 செ.குன்றாவி. (v.t.) 1. புதுப்பித்தல்; to renovate, make new. *'ஒளிபெறப்புதுக்கி'* (பெருங்.வத்தவ.4,2). 2. அழகுபடுத்துதல் (அலங்கரித்தல்); to adorn. *'உலகமெல்லாம் புதுக்குவானமைந்தேம்'* (உபதேசகா.சிவபுண்.365). 3. மெருகேற்றுதல்; to polish, to make shines. விளக்கைப்புளி போட்டுப் புதுக்கு (உ.வ.).

ம. புதுக்குக.

[புது → புதுக்கு—,]

புதுக்குடி *pudu-k-kuḍi,* பெ. (n.) புதிதாய் வந்தேறிய குடி; ryots newly settled in a village or town (R.T.). வாடகை வீடுகளிற் புதுக்குடி புகும்போது ஒட்டடை போக்கி வெள்ளையடிக்கப்பெறும் (உ.வ.).

[புது + குடி]

புதுக்குப்புறம் *pudukku-p-puṟam,* பெ. (n.) கோயில் முதலியவற்றைப் புதுப்பித்தற்கு வைத்த அற(தரும)ச் சொத்து; provision made for the repair of charitable institutions. 'ஸ்ரீராஜ ராஜன் கிணற்றுக்கும் தொட்டிக்கும் சேதத்துக்கும் ஆட்டாண்டு தோறும் புதுக்குப் புறமாக வைச்ச நெல்லு' (S.I.I.iii, 7).

[புதுக்கு + புறம். 'புறம்' இறையிலி நிலத்தைக் குறிக்கும் பின்னொட்டு. ஒ.நோ. அடிசிற்புறம், அறப்புறம். (த.வ.1,95)]

புதுக்குளிகை *pudu-k-kuḷigai,* பெ. (n.) பழைய காசு (நாணய) வகை; an ancient coin. (S.I.I.iv.108).

[புது + குளிகை. குள் → குளியம் → குளிகை]

புதுக்கொல்லை *pudu-k-kollai,* பெ. (n.) புதியதாகக் திருத்திய வேளாண்நிலம்; newly cultivated agricultural land.

[புது + கொல்லை]

காடுவெட்டிக் களப்புதல், கல்பொறுக்குதல், எருவிடுதல், ஆழவுழுதல், கட்டியடித்தல், பரம்படித்தல் (தாளியடித்தல், பல்லியாடுதல், ஊட்டித்தல்,படலிழுத்தல்) புழுதியுணக்கல், விதைத்தல், களையெடுத்தல், காவல்காத்தல், அறுவடைசெய்தல், களஞ்சேர்த்தல், சாணை யடைதல் (சூடுபோடுதல்,போரமைத்தல்), சாணைபிரித்தல், காயப்போடுதல், பிணை யலடித்தல் (கடாவிடுதல்,அதரிதிரித்தல்), வைக்கோல் அல்லது சக்கை, அல்லது கப்பி நீக்கல், பொலிதூற்றல், பொலியளத்தல், விதைக்கெடுத்தல், களஞ்சியஞ் சேர்த்தல் என்பன வானாவாரிப் புதுக்கொல்லை வேளாண்மை வினைகளாம் (ப.த.நா.ப.89,90)

புதுக்கோட்டை *pudu-k-kōṭṭai,* பெ. (n.) 1. புதியதாக அமைக்கப்பட்ட கோட்டை; new fort. 2. ஒரு நகரத்தின் பெயர்; name of a town.

[புது + கோட்டை]

புதுக்கோட்டைமாடு *pudu-k-kōṭṭai-māḍu,* பெ. (n.) முரட்டுத்தனமுள்ள மாடு (இ.வ.); wild cattle, as of Pudukkōṭṭai, a small Indian state in south India.

[புதுக்கோட்டை + மாடு]

புதுக்கோடி *pudu-k-kōḍi,* பெ. (n.) கைம்பெண்ணுக்கு (விதவைக்கு) அளிக்குங் கோடிப்புடைவை (இ.வ.); new cloth offered ceremonially to a woman on her widow-hood.

[புது + கோடி]

புதுக்கோள் *pudu-k-kōḷ,* பெ. (n.) புதிதாகப் பற்றிக் கொள்ளப்பட்டது; new acquisition, as of a wild elephant; seizure, as of a fort-wall. '*புதுக்கோள் யானையும்*' (மணிமே.28,60).

[புது + கோள். கொள் → கோள்]

புதுகை *pudugai,* பெ. (n.) புதுக்கோட்டை ஊரின் மரூஉச்சொல்; contracted form of the Pudukkōṭṭai town.

[புதுக்கோட்டை → புதுகை]

புதுச்சமையல் *pudu-c-camaiyal,* பெ. (n.) புதியதாக சமைத்த உணவு, சுடுசமையல்; fresh food, hot food. நாட்டுப்புறத்தில் பொதுவாக இராவுணவே புதுச்சமையலாகும் (உ.வ.).

[புது + சமையல். சமை → சமையல்]

புதுச்சரக்கு *pudu-c-carakku,* பெ. (n.) **1.** புதிய வணிகப் பண்டம் (வின்.); new or fresh merchandise. **2.** இனிவரும் ஊழ் (ஆகாமியம்); karma, which is yet to come to fruition. '*பழஞ்சரக்கும் புதுச்சரக்கும் பணியற்றேனே*' (மதுரைப்,49).

[புது + சரக்கு]

புதுச்செய்கை *pudu-c-ceygai,* பெ. (n.) புதிய ஆண்டில் முதற்சாகுபடி (வின்.); first cultivation in a year.

[புது + செய்கை. செய் → செய்கை]

புதுச்செய்தி *pudu-c-ceydi,* பெ. (n.) புதுவதாக வரும் செய்தி; latest news. புதுச்செய்தி தருவதற்கு இதழ்களில் முன்னுரிமை (உ.வ.).

[புது + செய்தி]

புதுச்சேரி *pudu-c-cēri,* பெ. (n.) **1.** இந்திய நாட்டின்நடுவண் அரசின் ஆளுகைக்குட்பட்ட ஒரு மாநிலம்; an union territory of India. **2.** அம்மாநிலத்தின் தலைநகரம்; capital of Puduccēri union territory.

மறுவ. பாண்டிச்சேரி

ம. புதுச்சேரி

[புது + சேரி. சேர் → சேரி]

புதுச்சேரிக்கிழங்கு *puduccēri-k-kiḻangu,* பெ. (n.) *புதுச்சேரிவள்ளி* பார்க்க; see *puduccēri-vaḷḷi.*

[புதுச்சேரி + கிழங்கு]

புதுச்சேரிமாப்பிள்ளை *puduccēri-māppiḷḷai,* பெ. (n.) பகட்டாக (ஆடம்பரமாய்) இருப்பவன்; fop,dandy.

[புதுச்சேரி + மாப்பிள்ளை]

புதுச்சேரிவள்ளி *puduccēri-vaḷḷi,* பெ. (n.) *புதுச்சேரி வள்ளிக்கிழங்கு* பார்க்க; see *pudu-c-cērivaḷḷi-k-kiḻangu.*

[புதுச்சேரி + வள்ளி]

புதுச்சேரிவள்ளிக்கிழங்கு *puduccēri-vaḷḷi-k-kiḻangu,* பெ. (n.) **1.** செவ்வள்ளி; purple yam. **2.** மரவள்ளிக்கிழங்கு; root of tapioca

[புதுச்சேரி + வள்ளிக்கிழங்கு]

புதுச்சேவகன் *pudu-c-cēvagaṉ,* பெ. (n.) புதிதாகப் படைத்துறையில் சேர்ந்த (இராணுவத்திலமர்ந்த) படையாள் (புதுவை.); conscript.

[புது + சேவகன்]

புதுச்சொல்புனைவு *pudu-c-col puṉaivu,* பெ. (n.) புதியதாகக் கலைச்சொல் படைப்பு; coining new technical terms பாவாணரின் புதுச்சொல் புனைவு நிகரற்றது (உ.வ.).

[புதுச்சொல் + புனைவு]

புதுச்சோறு *pudu-c-cōṟu,* பெ. (n.) சுடுசோறு; hot cooked rice.

[புது + சோறு]

புதுசு *pudušu,* பெ. (n.) *புதியது* பார்க்க; see *pudiyadu.*

[புதியது → புதிது → புதுசு]

புதுத்தண்ணீர் *pudu-t-taṇṇir,* பெ. (n.) *புதுநிறை* (இ.வ.) பார்க்க; see *puduniṟai.*

[புது + தண்ணீர்]

புதுத்தண்ணீர்விட்டலசு—தல் *pudu-t-taṇṇir viṭṭalašu-,* 8 செ.குன்றாவி. (v.t.) 1. பாத்தியிலிருந்து உப்புவாரிய பின்னர் பழைய நீரைப் பாத்தியிலிருந்து கழித்துவிட்டுப் புது நீரால் நன்றாக அலசுதல்; to wash the salt pan with fresh water after sweeping the salt from it. 2. ஒருமுறை அலசிய துணிகளைச் சவர்க்காரம் போக மீண்டும் புது நீர் விட்டு நன்றாக அலசுதல்; to rince the washed clothes one again with fresh water to romove the soap cleanly

[புதுத்தண்ணீர் + விட்டு + அலசு –,]

புதுத்தரை *pudu-t-tarai,* பெ. (n.) 1. நீர்நிலையைத் தூர்த்து உண்டாக்கின நிலம் (பூமி) (வின்.) ; reclaimed land, as by draining away water and raising the surface level. 2. புதிதாக இடப்பட்ட தரை; floor newly laid.

[புது + தரை]

புதுத்திங்கள் *pudu-t-tiṅgaḷ,* பெ. (n.) பிறைநிலா; crescent moon. 'புதுத் திங்கட்கண்ணியான்' (கலித்.150.)

[புது + திங்கள்]

புதுத்துணி *pudu-t-tuṇi,* பெ. (n.) பயன்படுத்தப்படாத துணி; new cloth.

க., பட. கொசபட்டெ

[புது + துணி]

புதுத்தேவங்குடி *pudu-t-tēvaṅguḍi,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tañjāvūr dt.

[புது + தேவன் + குடி]

புதுத்தேன் *pudu-t-tēṉ,* பெ. (n.) நாட்படாத தேன்; fresh honey.

[புது + தேன்]

புதுநகர் *pudunagar* பெ. (n.) புதியதாக உருவான நகரம்; new town.

[புது + நகர்]

புதுநடை *pudu-naḍai,* பெ. (n.) புது மாதிரியான முறை (அல்லது) ஒழுக்கம் (வின்.); new style or fashion; strange or unusual manners.

[புது + நடை]

புதுநாணயம் *pudu-nāṇayam,* பெ. (n.) 1. புதிதாக முத்திரையடிக்கப்பட்ட காசு; new coin. 2. பழைய வழக்குக்கு மாறுபட்ட வழக்கு (வின்.); an innovation.

[புது + நாணயம்]

Skt. nāṇaka > த. நாணயம்

புதுநிலசலம் *puḍunila-šalam,* பெ. (n.) கங்கைத் தண்ணீர்; water of Ganges.

[புது + நிலசலம்]

புதுநிறை *pudu-niṟai,* பெ. (n.) ஆறு முதலியவற்றின் புதுப்பெருக்கு; freshes in a river. '*புதுநிறைவந்த புனலஞ்சாயல்*'

மறுவ. ஆற்றுப்பெருக்கு

க. கொசநீரு

[புது + நிறை]

புதுநீர்[1] *pudunīr,* பெ. (n.) *புதுநிறை* பார்க்க; see *pudu-niṟai.*

[புது + நீர்]

புதுநீர்[2] *pudunīr,* பெ. (n.) ஊற்று நீர்; spring water.

[புது + நீர்]

புதுநீர்விழவு *pudunīr-viḻavu,* பெ. (n.) *புதுப்புனல்விழவு* பார்க்க, see *pudu-p-puṉal-viḻavu* '*புதுநீர் விழவின் ஆரவாரத்தை*' (மதுரைக்.264, உரை).

[புதுநீர்+ விழவு]

புதுநீராட்டு *pudu-nīr-āṭṭu,* பெ. (n.) *புதுப்புனல்விழவு* பார்க்க, see *pudu-p-puṉalviḻavu.* '*புதல்வராணை புதுநீராட்டெடன்*' (பெருங். உஞ்சைக்.38,23).

[புதுநீர் + ஆட்டு]

புதுப்பசளை *pudu-p-pašaḷai,* பெ. (n.) கொடிப்பசலை; heart leaved malabar night-shade.

[புது + பசளை]

புதுப்பட்டி *pudu-p-paṭṭi,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tañjāvūr dt.

[புது + பட்டி]

புதுப்பணம் *pudu-p-paṇam,* பெ. (n.) **1.** சிறு காசு (நாணய)வகை (வின்.); a small coin. **2.** புதுச்செல்வம்; newly acquired wealth.

[புது + பணம். படம் → பணம்]

புதுப்பழக்கம் *pudu-p-paḻakkam,* பெ. (n.) **1.** புதிய வழக்கம்; new usage, practice or fashion. புகைபிடித்தல் அவனுக்குப் புதுப்பழக்கம் (உ.வ.). **2.** பழக்கமில்லாதவன் செயல்; work of a beginner; un accustomed effort, as of a novice **3.** புதிய பழக்கம்; new or recent acquaintance.

[புது + பழக்கம்]

புதுப்பானை *pudu-p-pāṉai,* பெ. (n.) *புதுக்கலசம்* பார்க்க; see *pudu-k-kalasam.*

மறுவ. புதுப்பாண்டம்.

க., பட. கொச மடகெ.

[புது + பானை]

புதுப்பி—த்தல் *puduppi-,* **11** செ.குன்றாவி. (v.t.) **1.** பழுதுபார்த்தல்; to renovate, repair. **2.** காலத்திற்கு ஏற்ப மாற்றியமைத்தல்; to make new, remodel,refit, modernise. வேலை

வாய்ப்பு அட்டையைப் புதுப்பித்து விட்டாயா? (உ.வ.).

[புது → புதுப்பி–,]

புதுப்புது *pudu-p-pudu,* பெ.அ (adj.) அண்மையில் உருவாக்கப்பட்டது அல்லது தோன்றியது; very recently made or produced.

க. கொசகொச.

[புது + புது]

புதுப்புதுக்கு–தல் *pudu-p-pudukku-,* 8 செ. குன்றாவி. (v.t.) *புதுப்பி–த்தல்* (வின்.) பார்க்க; see *puduppi-,*

[புது + புதுக்கு –,]

புதுப்புனல்விழவு *pudu-p-puṉal-viḻavu,* பெ. (n.) ஆற்றின் புது நீர் வந்தபோது நிகழ்த்தும் கொண்டாட்டம்; festival celebrating the on-coming of freshes in a river. கரிகால் வளவன் புதுப்புனல் விழவு கொண்டாடுந் தலைநாட்போல (சிலப்.6,160 உரை).

[புது + புனல் + விழவு. விள் → விளை → விழை → விழைவு = விருப்பம், விரும்பி நிகழ்த்தும் கொண்டாட்டம்.]

புதுப்புனலாட்டு *pudu-p-puṉal-āṭṭu,* பெ. (n.) *புதுப்புனல் விழவு (சிலப்.10.22,அரும்)* பார்க்க; see *pudu-p-puṉal-viḻavu.*

[புது + புனல் + ஆட்டு]

புதுப்புனைவர் *pudu-p-pūṉaivar,* பெ. (n.) புதியதாக ஒன்றைக் கண்டு பிடிப்பவர்; inventer.

[புது + புனைவர்]

புதுப்பெண் *pudu-p-peṇ,* பெ. (n.) புதியதாகத் திருமணமான பெண் (கொ.வ.); newly-married woman, bride.

மறுவ. மணப்பெண்

ம. புதியபெண்ணு

[புது + பெண்]

புதுப்பெயல் *pudu-p-peyal,* பெ. (n.) முதன்முதலாகப் பெய்யும் மழை; first rains ***"பொய்யா வானம் புதுப்பெயல் பொழிதலும்"*** (சிலப்.23, கட்டுரை.9).

[புது + பெயல். பெய் → பெயல். 'அல்' தொ.பெ.ஈறு 'புது' முன்மை குறித்த முன்னொட்டு. (த.வ.1,93)]

புதுப்போக்கு *pudu-p-pōkku,* பெ. (n.) புதுவகை; style, new fashion. திரைப் படங்களில் புதுப்போக்கைக் கடைப் பிடிப்பவர் நன்கு பொருளீட்டுவர் (உ.வ.)

[புது + போக்கு. போ → போக்கு]

புதுபுது–த்தல் *pudupudu-,* 11 செ.கு.வி. (v.i.) *புதுமு–தல் (இ.வ.)* பார்க்க; see *pudumu-,*

[புது + புது–,]

புதுமங்கலக்குடியான் *pudumaṅgala-k-kuḍiyāṉ,* பெ. (n.) பழைய காசு (நாணய) வகை (பணவிடு.139); an ancient coin.

[புதுமங்கலம் + குடியான்]

புதுமணம் *pudumaṇam,* பெ. (n.) திருமணம் (திவா.); marriage, wedding.

[புது + மணம். முள் → (மள்) → மண → மணம். மணத்தல் = கலத்தல், கூடுதல்]

புதுமணவாட்டி *pudu-maṇavāṭṭi,* பெ. (n.) புதியதாகத் திருமணம் செய்து கொண்டவள்; woman, bride.

மறுவ. மணப்பெண், புதுப்பெண்

ம. புதியபெண்ணு.

[புது + மணவாட்டி]

புதுமணவாளன் *pudu-maṇavāḷan,* பெ. (n.) **1.** புதிதாகத் திருமணம் செய்துகொண்டவன்; newly-married man, bridegroom. புதுமணவாளப் பிள்ளைகளும்....காத்தற்கு ஏகினார் (சீவக.420,உரை) **2.** என்றும் மணமகனாக இருக்கும் தன்மையினன்; one who ever enjoys the pleasures of a bridegroom "*பூக்கம ழமளி சேக்கும் புதுமணவாளனார்*" (சீவக.1880)

மறுவ. மணமகன், புதுமாப்பிள்ளை

[புது + மணவாளன்.]

புதுமருந்து *pudu-marundu,* பெ. (n.) **1.** அன்று செய்த மருந்து; newly prepared medicine. **2.** வழக்கமாகத் தரப்படும் மருந்து அல்லாமல் மாற்று மருந்து அல்லது கூடுதலான வேறுமருந்து; new medicine instead of old medicine or new medicine additional to it.

[புது + மருந்து. முரு → மரு → மருந்து = நோய்தீர்க்கும் நறுமணத்தழை, நோய் நீக்கும்பொருள்.]

புதுமலர் *pudu-malar,* பெ. (n.) அன்றலர்ந்த மலர்; fresh flower.

ம. புதுமலர்

[புது + மலர்]

புதுமழை *pudumaḻai,* பெ. (n.) முதல் மழை; the first rain.

ம. புதுமழ

[புது + மழை]

புதுமழைத்தண்ணீர் *pudumaḻai-t-taṇṇīr,* பெ. (n.) அன்று பெய்த மழைநீர்; water obtained by fresh rain.

மறுவ. புதுப்பெயல்

[புது + மழை + தண்ணீர்]

புதுமனிதன் *pudu-manidan,* பெ. (n.) **1.** *புதிய மனிதன்* பார்க்க; see *pudiya manidan.* **2.** தன் கரிசு(பாவம்)க்கு இரங்கிய கிறித்தவன் (கொ.வ.); true Christian.

[புது + மனிதன்.]

Skt. manu-ja > **த.** மனிதன்

புதுமனை *pudu-manai,* பெ. (n.) புதியதாகக் கட்டப்பட்ட இல்லம்; newly built house.

மறுவ. புதுவீடு.

[புது + மனை]

புதுமனைப்புகுவிழா *pudu-manai-p- pugu-viḻā,* பெ. (n.) புதியதாகக் கட்டப்பட்ட இல்லத்திற்குக் குடியேறுவதைக் குறிக்க நடத்தும் விழா (கிரகப்பிரவேசம்); house warming. நண்பர் புதுமனைப்புகுவிழாவினைச் சிறப்பாக நடத்தினார் (உ.வ.)

[புதுமனை + புகுவிழா]

புதுமாடு *pudu-māḍu,* பெ. (n.) பழக்கப்படாத மாடு; untamed bull.

[புது + மாடு]

புதுமாடுகுளிப்பாட்டு–தல் *pudu-māḍu-kuḷippāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) (புதியமாட்டைக் குளிப்பித்தல்) தொடக்கத்தில் ஆர்வமாயிருத்தல்; (lit., to wash a new bull) to show extreme zeal in work, at the commencement.

[புதுமாடு + குளிப்பாட்டு–,]

புதுமாப்பிள்ளை *pudu-māppiḷḷai,* பெ. (n.) *புதுமணவாளன் (கொ.வ.)* பார்க்க; see *pudumaṇavāḷaṉ.*

[புது + மாப்பிள்ளை. மணப்பிள்ளை → மாப்பிள்ளை]

புதுமானியம் *pudu-māṉiyam,* பெ. (n.) புதிதாகக் கொடுத்த இலவய (இனாம்) நிலம். (பணவிடு.171.); newly-granted inam land.

[புது + மானியம்]

புதுமின்னல் *pudumiṉṉal,* பெ. (n.) பழைய காசு(நாணய)வகை (பணவிடு.143.); an anicient coin.

புதுமு–தல் *pudumu-,* 5 செ.கு.வி. (v.i.) ஒன்றும் அறியாததுபோல் பேசுதல் (நெல்லை.); to talk with feigned ignorance.

[புது → புதுமு–,]

புதுமுகனை *pudumugaṉai,* பெ. (n.) தொடக்கம் (வின்.); beginning, commencement, as of an event.

[புது + முகனை]

புதுமுகம் *pudu-mugam,* பெ. (n.) **1.** நாடகம் திரைப்படம் போன்றவற்றில் முதன் முதலாக அறிமுகமாகுபவர்; person making his or her debut in stage, film etc. புதுமுகங்களுக்கு நல்லவரவேற்பு இருக்கிறது. (உ.வ.) **2.** புதியவர், முதன்முறையாகப் பார்க்கப்படுபவர்; stranger. யார் அந்தப் புதுமுகம் (உ.வ.)

[புது + முகம்]

புதுமுதல் *pudumudal,* பெ. (n.) அடுத்த ஆண்டு (இ.வ.); succeeding year.

[புது + முதல்]

புதுமுயற்கூடு *pudumuyaṟ-kūḍu,* பெ. (n.) திங்கள் (சந்திரன்) (சாதக சிற்.6.); the moon.

புதுமை[1] *pudumai,* பெ. (n.) **1.** புதிதாந்தன்மை; newness, freshness, novelty. "*பின்னைப் புதுமைக்கும் போத்துமப் பெற்றியனே*" (திருவாச.7,9). **2.** பழக்கமின்மை; want of training or practice **3.** அரியதாக நிகழ்வது (அபூர்வம்); strangeness, extraordinariness, uncommonness **4.** வியப்பு; miracle அங்ஙனங்காண்பேனாயின் இஃது ஒரு புதுமையன்றோ (சிலப்.19,10, உரை) **5.** மிகுதி (திவா.); plenty, abundance **6.** எழில்; fresh glow, brightness புது மயிலூர் பரன் (கந்தபு.அவையடக்.13) **7.** நாட்டுக்கோட்டையார் பிள்ளைப்பேறு முதலியவற்றைக் கொண்டாடும் சடங்கு வகை (நாட்.செட்.); ceremonial feast on the occasion of childbirth etc.

ம.புதும; **க.**பொசது,கொசது; பட. கொசது;

குட.,புதுமெ

[புது → புதுமை]

யாதொன்றும் எவ்விடத்தானும் எக்காலத்தினும் தோன்றாததோர் பொருள் தோன்றுதல் (தொல்.பொருள்.251) என்று இளம்பூரணர்

புதுமைக்குத் தரும் வரையறை பருப்பொருளுக்கும் நுண்பொருளுக்கும் பொருந்துதல் காண்க.

புதுமை[2] *pudumai,* பெ. (n.) நான்முகப் புல்; a kind of grass.

புதுமைகாட்டு–தல் *pudumai-kāṭṭu-,* 15 செ.கு.வி. (v.i.) **1.** இயற்கை இறந்த செயல் (அற்புதம்) தோற்றுவித்தல் (வின்.); to perform miracles, to show miraculous powers. **2.** அறியாததுபோற் காட்டிக் கொள்ளுதல்; to pretend ignorance.

[புதுமை + காட்டு–,]

புதுமைசெய்–தல் *pudumai-šey-,* 1 செ.கு.வி. (v.i.) *புதுமைகாட்டு–தல் (வின்.)* பார்க்க; see *pudumai-kāṭṭu-,*

[புதுமை + செய்]

புதுமொழி[1]–தல் *pudu-moḻi-,* 3 செ.கு.வி. (v.i.) புதிய செய்தி கூறுதல்; to announce fresh news "*தூதர் புதுமொழிந்துறக் கேட்டனை*" (உபதேசகா. சிவத்துரோ.171)

[புது + மொழி–,]

புதுமொழி[2] *pudu-moḻi,* பெ. (n.) புதியதாகத் தோன்றிய மொழி, முதுமொழிக்கு எதிரானது; new language.

[புது + மொழி. தமிழ் ஒரு முதுமொழி (ancient language). *இந்தி ஒரு புதுமொழி. (ஒ.மொ.1,80)]*

புதுமொழி[3] *pudu-moḻi,* பெ. (n.) புதியதாக அனைவராலும் பயன்படுத்தப் படும் தொடர் மொழி, பழமொழி போல் புதியதாக உருவாக்கப்பட்டது; newly constructed proverb.

புதுவது *pudu-vadu,* பெ. (n.) புதிது; anything new "*அது புதுவதோவன்றே*" (புறநா.42).

புதுவயல் *pudu-vayal,* பெ. (n.) புதியதாக திருத்தியமைக்கப்பட்ட வயல்; land newly brought under cultivation.

[புது + வயல்]

புதுவரவு *pudu-varavu,* பெ. (n.) புதியதாகத் வந்தது; new arrival.

[புது + வரவு]

புதுவல் *puduval,* பெ. (n.) புதியதாகத் திருத்தி யமைத்த வயல் (நாஞ்.); land newly brought under cultivation.

ம. புதுவல்

[புதுவயல் → புதுவல்]

புதுவழி *pudu-vaḻi,* பெ. (n.) புதியதாக உருவாக்கப்பட்ட வழி; new path.

[புது + வழி]

புதுவன் *puduvaṉ,* பெ. (n.) புதியவன்; new man, stranger. "*புலம்பெயர் புதுவன்*" (சிலப்.16:129)

[புது → புதுவன்]

புதுவன்னம் *puduvaṉṉam,* பெ. (n.) *புதுச்சோறு* பார்க்க; see *pudu-c-cōṟu.*

[புது + அன்னம்]

Skt. anna > **த.** அன்னம்

புதுவீடு *puduviḍu* பெ. (n.) *புதுமனை* பார்க்க; see *pudumaṉai.*

க., பட. ஹொசமனெ.

[புது + வீடு]

புதுவெட்டு *pudu-veṭṭu,* பெ. (n.) பழைய காசு(நாணய) வகை (பணவிடு.133.); an ancient coin.

புதுவெள்ளம் *puduveḷḷam,* பெ. (n.) மழைக்குப்பின் ஆற்றில் வரும் திடீர் நீர்ப்பெருக்கு, புதியதாக வரும் வெள்ளம்; fresh flood, sudden rise of water in rivers after rain.

ம. புதுவெள்ளம்.

[புது + வெள்ளம். வெள் → வெள்ளம் = வெளுப்பான புதுப்பெருக்கு நீர்]

புதுவெள்ளை *pudu-veḷḷai,* பெ. (n.) நாட்படாத வெட்டைநோய்; fresh gonorrhoea *opposed* to chronic one.

மறுவ. வெள்ளைநோய்

[புது + வெள்ளை. முள் → வெள் → வெள்ளை = உடம்பிலுள்ள சூட்டுவகை]

புதுவை *puduvai,* பெ. (n.) திருவில்லிபுத்தூர் (ஸ்ரீவில்லிபுத்தூர்), புதுச்சேரி, புதுக்கோட்டை முதலிய ஊர்ப் பெயர்களின் மரூஉச்சொல்; contracted form of the names of certain towns, as Tiruvilliputtūr, Puduccēri, Pudukkōṭṭai etc. புதுவை விட்டுசித்தன் (திவ்.பெரியாழ்.3,3,10) 'தருவுயர்ந்திடு புதுவையம்பதி' (தனிப்பாடல்)

[புதுச்சேரி → புதுவை, புதுக்கோட்டை → புதுவை என வெவ்வேறு நிலையின் மரூஉச் சொற்கள் இவை.]

புதுவைசுப்புராமசாமிமுதலியார் *puduvai šuppurāmašāmi-mudaliyār,* பெ. (n.) ஒரு புலவர்; a poet.

இவர் கோகிலாம்பிகைமாலை, வில்வ வனத்தந்தாதி ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

புதுவைபொன்னையாமுதலியார் *puduvai poṉṉaiyā - mudaliyār,* பெ. (n.) ஒரு புலவர்; a poet.

இவர் மயிலாசல முருகர் மும்மணிக்கோவை என்ற நூலை இயற்றியுள்ளார்.

புதுவோர் *puduvōr,* பெ. (n.) **1.** புதிய மாந்தர்; strangers. "*புதுவோர் நோக்கினும் பணிக்கு நோய்கூ ரடுக்கத்து*" (மலைபடு.288). **2.** பட்டறிவு (அனுபவம்) அற்றவர்; in experienced persons.

[புது → புதுவோர்]

புதை¹–தல் *pudai-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** மண்ணுக்குள் மறைதல், ஏதாவது ஒரு பொருளாய் மறைக்கப்படுதல்; to be buried, as treasure, to be covered, concealed, அங்கண்மால் விசும்பு புதைய (மதுரைக்.384.). **2.** அமிழ்தல்; to sink in, as a wheel, to enter, penetrate, as in arrow. "*நெடுஞ்சுனை புதையப் புகுந்தெடுத்தளித்தும்*" (கல்லா.13). **3.** உள்ளடங்கியிருத்தல்; to lie hidden, as a meaning. இப்பாட்டு புதைபொருளுள்ளது.

[புல் → புது → புதை–]

புதை²–த்தல் *pudai-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. அடக்கம் பண்ணுதல்; to bury, to inter. பிணத்தைப் புதைப்பதும் தமிழர் வழக்கம் (உ.வ.) 2. ஒளித்துவைத்தல்; to hide, as treasure, to conceal. "*தேமாங்கனியை.... அறையிற் புதைத்து*" (திருமந்.202). 3. வாய் செவி முதலியவற்றைப் பொத்துதல்; to close, cover, as the mouth, ear. "*சிந்துரப்பவளச் செவ்வாய் செங்கையிற் புதைத்து*" (கம்பரா. கைகேசி, சூழ்.104). 4. போர்த்துதல் (வின்.); to clothe, to cover. "*புதையிரும்படாஅம்போக நீக்கி*" (சிலப்.5,4) 5. மறைத்துப் பேசுதல் (வின்.); to speak in parables, to write obscurely. 6. மணிக்கற்கள் (இரத்தினம்) பதித்தல்; to inlay, encase, as jewels. 7. வலிமையைக் குறைத்தல்; to weaken, reduce, diminish. புதைத்திலன் மிதத்திலன் (இரகு. முடிசூட்.117) 8. அமிழ்த்துதல் (யாழ்.அக.); to cause to sink., to lower.

க.பொதிசு; தெ. பொதுகு; து. புதெக்க.

[புல் → புது → புதை]

புதை³ *pudai,* பெ. (n.) 1. மறைவு (சூடா.); concealment 2. காட்டில் மரம் அடர்ந்த இடம் (வின்.); thick part of jungle, as a cover for beasts. 3. மறைபொருள் (வின்.); that which is concealed, mystical. 4. புதைபொருள்; hidden treasure. புதைக்குணிதியென (தனிப்பா. i,353,78). 5. மறைவிடம்; place of concealment. புதையிருந்தன்ன கிளரொளி வனப்பினர் (பெருங்.உஞ் சைக்.34,133). 6. உடல் (சூடா.); body. 7. அம்புக்கட்டு (திவா.); bundle or sheaf of arrows. 'புதையம்பிற்பட்டு' (குறள்,597). 8. ஆயிரம்; thousand.

[புல் → புது → புதை]

புதை⁴ *pudai,* பெ. (n.) புதுமை (சூடா.); novelty.

[புது → புதை]

புதை⁵ *pudai,* பெ. (n.) *புரை⁶* பார்க்க; see *purai⁶* புண்புதை வைத்துப் பழுத்திருக்கிறது. (உ.வ.)

[புல் → புர்→புரை = உட்டுளை, உட்டுளைப் பொருள். புரை → புதை]

புதைக்கரு *pudai-k-karu,* பெ. (n.) முதிராநிலையிற்பிறந்தவுடனிறந்து புதைக்கப்படும் குழந்தை; buried foetus or immatured child which born dead or died after delivery.

[புதை + கரு. குரு → கரு = சூல், முட்டை, குழவி, குட்டி]

புதைகுழி *pudai - kuḻi,* பெ. (n.) 1. இறந்தவரைப் புதைப்பதற்கான குழி; pit for burial, grave. 2. *புதைமணல்* பார்க்க; see *pudai-maṇal.*

[புதை + குழி]

புதைசாலகம் *pudaiśālagam,* பெ. (n.) சாய்க்கடை நீர் செல்வதற்காக ஏற்படுத்தப்பட்ட நிலத்தடி வழி; underground drainage.

மறுவ.கரந்துபடை.

[புதை + சாலகம்]

பண்டைத்தமிழகத்தின் கோநகர்களில் அங்கண நீரைக்கண்ணிற்படாமல் செலுத்துதற்கு, கரந்துபடை என்னும் புதைசாலகம் இருந்தது. அது தெரு நடுவிற் கட்டப்பட்டு யானைக்கூட்டம் மேற்செல்லும்படி கருங்கல்லால் மூடப்பட்டிருந்தது. அதிற்சென்ற நீர் யானைத் துதிக்கை போன்ற தூம்பின் வாயிலாய் அகழியில் விழுந்தது. (ப.த.நா.ப.138)

புதைபொருள் *pudai-poruḷ,* பெ. (n.) **1.** நிலத்திற் புதைந்து கிடக்கும் செல்வம்; hidden treasure. **2.** நிலத்தின் கீழ் புதைந்திருக்கும் பண்டைக் காலச் சின்னங்கள்; burried remains (found in archaeological excavations). **3.** ஆழ்ந்த கருத்துடைய பேச்சு அல்லது எழுத்து (கொவ.); speech or written of profound significence. **4.** பாட்டில் மறைந்துள்ள பொருள்; hidden meaning in the verse.

[புதை + பொருள்]

புதைமணல் *pudai-maṇal,* பெ. (n.) மேற்பரப்பில் அழுந்தும் எந்த ஒன்றும் உட்சென்றுவிடக் கூடிய மணற்பரப்பு. quicksand.

மறுவ. சொரிமணல், உதிர்மணல்.

[புதை + மணல்]

புதையல் *pudaiyal,* பெ. (n.) **1.** மறைகை; being hidden. **2.** *புதைபொருள்* பார்க்க; see *pudai poruḷ.* புதையலைக் கல்லியெடுத்தவன் (இராமநா.ஆரணி.23). **3.** அம்புக்கட்டு (அக.நி.); sheaf of arrows. **4.** கேடயம் (அக.நி.); shield.

[புதை → புதையல். 'அல்' தொ.பெ.ஈறு]

புதையிருள் *pudaiyiruḷ,* பெ. (n.) காரிருள்; deep darkness. 'புதையிருட் படாஅம்போக நீக்கி' (சிலப்.5,4).

[புதை + இருள்]

புதையூரல் *pudai-y-ūral,* பெ. (n.) கொல்லங்கோவை (மலை.); a climbing shrub.

புதைவாணம் *pudaivāṇam,* பெ. (n.) பொறிவாணவகை; a kind of rocket

[புதை + வாணம்]

புப்புசக்கட்டி *puppuša-k-kaṭṭi,* பெ. (n.) நுரையீரலில் ஏற்படுங் கட்டி; pulmonary abscess.

[புப்புசம் + கட்டி]

புப்புசச்சன்னறை *puppuša-c-caṉṉaṟai,* பெ. (n.) நுரையீரலிலுள்ள காற்றறை; aircell of the lung.

[புப்புசம் + சன்னறை]

புப்புசச்சுருக்கம் *pupuša-c-curukkam,* பெ. (n.) நுரையீரலின் ஒடுக்கத்தினாலுண்டாகும் நோய்; pulmonary condensation.

[புப்புசம் + சுருக்கம்]

புப்புசச்சுழற்றி *puppuša-c-cuḻaṟṟi,* பெ. (n.) நுரையீரல் வழியாய் அரத்தம் போதல்; pulmonary circulation of blood.

[புப்புசம் + சுழற்றி]

புப்புசதாபிதம் *puppuša-tābidam,* பெ. (n.) *புப்புசவழற்சி* பார்க்க; see *puppuša-v-aḻaṟci.*

[புப்புசம் + தாபிதம்]

Skt. tāpita > **த.** தாபிதம்

புப்புசநரம்பு *puppuša - narambu,* பெ. (n.) மூளை நரம்பு; pneumo gastric nerves.

[புப்புசம் + நரம்பு]

புப்புசநாடி *puppuša-nāḍi,* பெ. (n.) தூய்மையான செவ்வியரத்தத்தை நுரையீரலினின்று

நெஞ்சுப்பையினிடப் பக்கத்திற்குக் கொண்டு போய்ச் சேர்க்கும் குழல்; pulmonary vein.

[புப்புசம் + நாடி]

புப்புசநாளம் *puppuša-nāḷam,* பெ. (n.) மாசுபட்ட காரியரத்தத்தை நுரையீரற் பைகளுக்கு எடுத்துச் செல்லுங்குழல்; pulmonary artery.

[புப்புசம் + நாளம். நுள் → (நூள்) → நாள் → நாளம் = உட்டுளையுள்ள தண்டு, அரத்தக் குழாய்]

புப்புசபதம் *puppuša-padam,* பெ. (n.) *புப்புசவழற்சி* பார்க்க; see *puppuša-v-aḻaṟci.*

மறுவ. புப்புசதாபம்

[புப்புசம் + பதம்]

புப்புசம் *puppušam,* பெ. (n.) நுரையீரல் (இங்.வை.); lung.

[உ → உப்பு → உப்புசம் → புப்புசம் = உப்பி அதாவது விரிந்து சுருங்குவது]

த. உப்புசம் > Skt. phuppusa.

புப்புசவழற்சி *puppuša-v-aḻaṟci,* பெ. (n.) நுரையீரல் நோய்வகை; lung discese, pleuropneumonia (M.L.).

[புப்புசம் + அழற்சி]

புப்புசவழிப்புண் *puppuša-vaḻi-p-puṇ,* பெ. (n.) நுரையீரலிலேற்படும் தசையழுகல் நோய்; pulmonary gangrene.

[புப்புசவழி + புண்]

புப்புசவேர் *puppuša-vēr,* பெ. (n.) நுரையீரலின் அடிப்பகுதி; root fo the lungs.

[புப்புசம் + வேர்]

புப்புசோனதனம் *puppušōṉadaṉam,* பெ. (n.) முழு சுழற்சியற்ற நுரையீரல்; atelutasis pulmonium.

புப்புலம் *puppulam,* பெ. (n.) நுரையீரலினின்று உச்சிநோக்கிச் செல்லும் பத்துவகை வளியு ளொன்று; one of the ten vital airs situated in the chest or lungs.

புப்புளம் *puppuḷam,* பெ. (n.) புடைப்பு, குமிழ்; திரட்சி; bulb.

[புடை → புடைப்பு → புப்பு → புப்புளம்]

பும்மெனல் *pumm-eṉal,* பெ. (n.) ஒலிக்குறிப்பு வகை (சங்.அக.); onom. expr. denoting buzzing sound.

[பும் + எனல்]

பும்மைதுனம் *pummaiduṉam,* பெ. (n.) எருவாய்ப்புணர்ச்சி a kind of sodomy.

பும்விருகம் *pumvirugam,* பெ. (n.) **1.** ஒருவகை (கத்தூரி) நஞ்சு; a variety of aconity. **2.** ஒருவகை மான் (கத்தூரி) (சங்.அக.); musk deer.

புய்¹–தல் *puy-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** பறிக்கப்படுதல்; to be pulled out, torn off, wrested. புய்ந்து கால்போகில் புலான் முகந்த வெண்குடை (களவழி. **39**). **2.** மறைதல்; to disappear. கோலப்பகற்களிகறான்றுகற் புய்ய (திவ்.இயற்.திருவிருத்.40).

[புல் → புள் → புய் (வே.க.3,114)]

புய்²–த்தல் *puy-,* 4 செ.குன்றாவி. (v.t.) **1.** பறித்தல்; to extract, pull out, uproot புய்த்தெறி கரும்பின் விடுகழை (புறநா.28). **2.** பயத்தல்; to produce, yield.

தெ.புச்சு; நா.புச்; பர்.புச்ச; கட.புச்கிர்; கோண்.புச்கானா; குரு. புதுக்னா; மா.புசெ,

[புள்→புய். புய்தல் (த.வி.) – புய்த்தல் (பி.வி.)]

புய¹–த்தல் *puya-,* 12செ.குன்றாவி. (v.t.) 1. *புய்²–த்தல் 1* பார்க்க; *puy² 1,* மெய்வதி வேல்புயந்து மேல்வரும் (விநாயகபு. 37,60) 2. வெளியேறுதல் (ஈடு, 9,5,10); to depart, separate.

[புய்த்தல் → புயத்தல்]

புய²–த்தல் *puya-,* 4 செ.குன்றாவி. (v.t.) பெயர்த்தல்; to pluck, pull out '*நவைகண்டு வாட்கண் புயக்கவொரு மைந்தனைப் போவித்தார்*' (கச்சி.வண்டுவிடு.293.).

[புல்→ புள் → புய். புய்த்தல் = பறிக்கப்படுதல் (வே.க.3,114,) புய்த்தல் → புயத்தல்]

புயக்கு *puyakku,* பெ. (n.) **1.** விட்டுநீங்குகை; departing, separation. **2.** மனக்கவர்ச்சி (ஈடு. 9, 5, 10); attractiveness.

[புய → புயக்கு]

புயங்கொட்டு–தல் *puyaṅ-koṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) மறக்குறியாகத் தோள்கட்டுதல்; to strike or pat on one's own shoulder in challege, as a warrior. தங்கச் சிமையப் புயங் கொட்டும் (தனிப்பா.i,382,29).

[புயம் + கொட்டு–,]

புயத்துணை *puya-t-tuṇai,* பெ. (n.) தகுந்த துணைவன் (வின்.); helper, useful as the arm.

[புயம் + துணை]

புயபராக்கிரமம் *puya-parākkiramam,* பெ. (n.) *புயவலி (வின்.)* பார்க்க; see *puya-vali.*

[புய + பராக்கிரமம்]

Skt. parākrama > த. பராக்கிரமம்

புயபலம் *puya-palam,* பெ. (n.) *புயவலி (வின்.)* பார்க்க; see *puya-vali.*

[புயம் + பலம்]

Skt. phala > த. பலம்

புயம் *puyam,* பெ. (n.) **1.** தோள்; arm, shoulder. "புயம்பலவுடைய தென்னிலங்கையர் வேந்தன்" (தேவா.130,8) **2.** புடை; side **3.** கோணத்தின் பக்கக்கோடு (இக்.); (math.) side of an angle.

[புல் → பொல்லு = தடி. புள் → (பிள்) → பிண்டு → பிண்டம் = திரட்சி (மு.தா.209) புள் → புய் → புயம் = திரண்ட தோள்]

த. புயம் > Skt. bhuja

வளைதல் பொருள்படும் bhuj என்னும் அடியிலிருந்து வளைந்தது, வளைந்து தொங்குவது, தொங்கும் கை, கைபோன்ற தும்பிக்கை, போன்ற பொருள் வளர்ச்சியைக் கொண்ட bhuja என்னும் சொல் வளர்ந்துள்ளதை மா.வி.அகரமுதலி காட்டுகிறது. இப்பொருள் வளர்ச்சி கைக்கும் அதுபோன்று விளங்குவனவற்றிற்கும் பொருந்துமேயல்லாமல் தோளுக்குப் பொருந்தாமையைக் காணலாம். பணைத்தோள், திண்டோள், திணிதோள் என்பன போன்ற வழக்குகள் தமிழில் தோள் திரட்சிப்

பொருளில் வழக்கூன்றியுள்ளதைக் காட்டுகின்றன. திரட்சிப்பொருள் அடிப்படையில் தோள், பின் அத்தோளுடன் பொருந்தியிருக்கும் மேற்கை, கை, கைபோன்ற தும்பிக்கை என்றாற்போன்ற ஆட்சிகள் இயல்பான பொருள் வளர்ச்சியைக் காட்டுக்கின்றன. தமிழில் தோள், இருதோள்களில் ஒன்றைப்போன்று இருக்கும் பக்கம், பக்கத்தைப்போன்ற கோணத்தின் பக்கக்கோடு ஆகிய பொருள்களுடன் நின்றுள்ளது.

புயமுட்டி *puya-muṭṭi,* பெ. (n.) வில்லைத் தோண்மேற் பிடித்து மேனோக்கி அம்பெய்கை (சீவக.1680, உரை); holding the bow above the shoulder and shooting upwards.

[புயம் + முட்டி]

புயல்[1] *puyal,* பெ. (n.) **1.** மழைபெய்கை; raining. புயல்(மேகம்)போறிருமேனியம்மான் (திவ்.திருவாய்.8,10,2) **2.** நீர்; water.'மாமேகம் பெய்த புயல்' (சீவக.2476). **3.** முகில் (மேகம்); cloud.`விண்டுமுன்னிய புயல்' (பதிற்றுப்.84,22).

மறுவ. மழை, எழிலி, மங்குல், மஞ்சு, கொண்டல், கொண்மூ, விண், விசும்பு, மால், செல், கார், மை, மாரி,

[பொய் → பெய். பெய்தல் = துளைவழி நீர் ஒழுகுதல், (வே.க.3,126) பெய் → பெயல் = பொழிகை, மழை, மழைத்துளி. பெயல் → புயல் = முகிலினின்று விழும் மழை, மழையாலான நீர், மழைபெய்யும் முகில்]

புயல்[2] *puyal,* பெ. (n.) **1.** கொடுங்காற்று (வின்.); gale, storm, tempest, gust, squall, **2.** சுழல் காற்று; cyclone.

மறுவ. சூறை, சூறாவளி,

[புள் → (புய்) → புயல் (மு.தா.251)]

புயல்காற்று *puyal-kāṟṟu,* பெ. (n.) *புயற்காற்று* பார்க்க; see *puyaṟ-kāṟṟu,* புயல்காற்றின் வேகம் தணியவில்லை.

[புயல் + காற்று]

புயல்சின்னம் *puyal - śiṉṉam,* பெ. (n.) புயல் தோற்றுதற்குரிய அறிகுறி; storm

[புயல் + சின்னம்]

புயல்மண்டலம் *puyal - maṇḍalam,* பெ. (n.) புயல் உருவாகியிருக்கும் பகுதி; storm-zone.

[புயல் + மண்டலம்]

புயல்முகில் *puyal - mugil,* பெ. (n.) புயலின்போது எழும் முகில்; storm cloud.

[புயல் + முகில்]

புயல்மேகம் *puyal - mēgam* பெ. (n.) *புயல் முகில்* பார்க்க; see *puyal-mugil.*

[புயல் + மேகம்]

புயல்மையம் *puyal - maiyam,* பெ. (n.) புயல்காற்று நிலை கொண்டிருக்கும் இடம்; the centre place of storm, cyclone.

[புயல் + மையம்.]

Skt. madya> **த.** மத்தியம் → மையம்

புயல்வண்ணன் *puyal-vaṇṇaṉ,* பெ. (n.) திருமால்; Tirumāl. புயல் வண்ணன் புனல் வார்க்க (கலிங்.1).

[புயல் + வண்ணன். புயல் = முகில்]

புயலடி—த்தல் *puyal-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) சூறாவளி காற்றடித்தல்; to form cyclone.

[புயல் + அடி—,]

புயலாய் *puyalāy,* வி.எ. (adv.) ஆர்ப்பாட்டமாய்; stormily. தேர்தல் நாள்களில் தலைவர் புயலாய் இயங்கினார் (உ.வ.).

[புயல் + ஆய்]

புயலேறு *puyalēṟu,* பெ. (n.) இடி; thunder. பெருஞ்சினப் புயலேறனையை (பதிற்றுப்.51,28).

[புயல் + ஏறு]

புயவகுப்பு *puya-vaguppu,* பெ. (n.) பாட்டுடைத் தலைவனது தோள்வலியைக் கூறும் கலம்பக வுறுப்பு (குமர.பிர.மதுரைக்.11); a section of kalampagam, describing the valourous deeds of its hero.

[புயம் + வகுப்பு]

புயவலி *puya-vali,* பெ. (n.) தோள்வலிமை (வின்.); strength of arm.

[புயம் + வலி]

புயற்காற்று *puyaṟ-kāṟṟu,* பெ. (n.) பெருங்காற்று; storm-wind. (C.G.).

[புயல் + காற்று]

புயாசலம் *puyāšalam,* பெ. (n.) மலையொத்த தோள் (வின்.); hill-like shoulder.

[புயம் → புயா + அசலம்]

Skt. acala > **த.** அசலம்

புயாந்தரம் *puyāndaram,* பெ. (n.) பெ. (n.) மார்பு (யாழ்.அக.); chest of a person.

[புயம் → புயாந்தரம்]

புர—த்தல் *pura-,* 12 செ.குன்றாவி. (v.t.) 1. காத்தல், பேணிவளர்த்தல்; to keep, preserve, protect, cherish, tend, govern. வளங்கெழு சிறப்பி னுலகம் புரைஇ (பதிற்றுப்.50,4). 2. மிகுதியாகக் கொடுத்தல் (பிங்.); to give bountifully, bestow. 3. வணங்குதல்(பிங்.); to reverence. 4. உதவுதல்; to bestow favour. மகோதராதிகள் புரக்க (தக்கயாகப்.138).

க.பொரெ; **தெ.**ப்ரோசு; **கோண்.**பொர்பனா; **கொலா.** புராய்; பர்.பொரிப்

AS.beorgen; Ger. bergew

[புல் → புர் → புர—,]

புரக்காழ் *pura-k-kāḻ,* பெ. (n.) பெண்மரம்; the female species of tree.

[புறம் → புரம் + காழ்]

புரகரன் *purakaraṉ,* பெ. (n.) முப்புர (திரிபுர) மழித்தோன், சிவபெருமான்; Šivaṉ, as the destroyer of tiripuram. "புரகரனிச்சாஞானக் கிரியையாப் போந்தவில்வ மரமுதல்" (திருவிளை, இந்திரன் முடி.17.).

[புரம் + கரன்,]

Skt.hara > **த.** கரன்

புரச்சோதி *puraccōdi,* பெ. (n.) மலைபடு மூலிகை; an herb that grows on mountains.

புரசங்கொட்டை *purašaṅ-koṭṭai,* பெ. (n.) மலப்புழு, வயிற்றிரைச்சல் போன்றவற்றைப் போக்கும் புரசம் விதை; seed of buteafrondosa.

மறுவ. முருக்கம் விதை, புரசம் விதை

[புரசம் + கொட்டை]

புரசம்பிசின் *purašam-pišin,* பெ. (n.) பிசின்வகையுளொன்று; gum of butea frondosa tree.

[புரசம் + பிசின்]

புரசம்விதை *purašam - vidai,* பெ. (n.) *புரசங்கொட்டை* பார்க்க; see *purašaṅ-koṭṭai.*

[புரசம் + விதை]

புரசல் *purašal,* பெ. (n.) ஒழுக்கு (இ.வ.); leak.

[புல் → புர்→புரை = உட்டுளை. புரை → புரைசல் = துளை வே.க.3.101,102, புரைசல் → புரசல்]

புரசு[1] *purašu,* பெ. (n.) பூவரசு; portia tree.

[பூவரசு → புரசு]

புரசு[2] *purašu,* பெ. (n.) மரவகை; East Indian satin-wood. (L.).

புரசு[3] *purašu,* பெ. (n.) மரவகை (பதார்த்த.212); battle of plessey tree.

புரசு[4] *purašu,* பெ. (n.) சிறு பெண்குழந்தை; a little girl.

[புள் → பிள் = பிள்ளை, பிள்ளமையழகு. புள் → புரு = குழந்தை (மு.தா.40,41) புரு → புருசு → புரசு]

புரசுமேற்புல்லுருவி *purašu-mēṟ-pulluruvi,* பெ. (n.) மூலமுளையைப் போக்குஞ் சூரணம்; parasite of buteafrondosa powder which is useful in piles.

[புரசுமேல் → புல்லுருவி]

புரசை *purašai,* பெ. (n.) யானைக் கழுத்திலிடும் கயிறு; halter or head-stall of an elephant. ஆய்மணிப் புரசை யானையின் (கம்பரா. சூளா.36)

[புள் → புரு → புரள். புள் → புர → புரசை]

புரஞ்சரம் *purañjaram,* பெ. (n.) தோள்; shoulder.

[புரந்தரம் → புரஞ்சரம்]

புரட்சி[1] *puraṭci,* பெ. (n.) **1.** பிறழ்வு (கொ.வ.); upsetting, overturning, **2.** ஒழுங்கின்மை; disorder. **3.** சட்டமில்லா நிலை; anarchy.

[புள் → புரு → புரள். புரள்தல் = சொல் மாறுதல். புரள் → பிறள் → பிறழ்ச்சி, புரள் → புரட்சி (மு.தா.234)]

புரட்சி[2] *puraṭci,* பெ. (n.) குறுகிய காலத்தில் நிலைமை முற்றிலும் மாறும் தன்மை; revolution. தொழிலாளர்கள் புரட்சி செய்வதைத் தவிர வேறு வழி இல்லை. (உ.வ.)

[புரள் → புரட்சி (மு.தா.234)]

புரட்சிகரம் *puraṭcigaram,* பெ. (n.) (பழமையிலிருந்து விலகி) துணிவுடன் செய்யும் புதுமை; the quality of being revolutionary. புரட்சிகரமானதிட்டம் (உ.வ.)

[புரட்சி + கரம்]

Skt. ākarṣaka > **த.** கரம்

புரட்சிசெய்–தல் *puratci-šey-,* 4 செ.கு.வி. (v.i.) குறுகிய காலத்தில் இருக்கும் நிலையை மாற்றுவதற்குப் பணிபுரிதல்; to revolutionize.

[புரட்சி + செய்–,]

புரட்சியாளர் *puratciyālar,* பெ. (n.) நிலைமையை முற்றும் மாற்ற பணிபுரிந்தவர்; revolutionary.

[புரட்சி + ஆளர்]

புரட்டல்[1] *purattal,* பெ. (n.) கறி; (fried) vegetables.

[புரள் → புரட்டு. புரட்டுதல் = ஒன்றைத் திருப்புதல். புரட்டு → புரட்டல் = புரட்டிச் சமைக்குங் கறி, (மு.தா.231)]

புரட்டல்[2] *purattal,* பெ. (n.) அமைதியின்மை; restlessness.

[புரட்டு → புரட்டல். 'அல்' தொ.பெ.ஈறு]

புரட்டல்[3] *purattal,* பெ. (n.) ஏமாற்றுதல்; cheating. அவன் ஒரு புரட்டல் பேர்வழி (உ.வ)

[புரட்டு → புரட்டல். 'அல்' தொ.பெ.ஈறு]

புரட்டன் *purattan,* பெ. (n.) **1.** மாறாட்டக்காரன்; deceiver, equivocator,(S.I.I.v.3). **2.** பொய்யன், உண்மையைத் திரித்தும் மாற்றியும் கூறுபவன்; liar, one who distorts facts, wheeler - dealer, twister.

ம. பிரட்டன்

[புள் → புரு→புரள். புரள்தல் = சொல் மாறுதல். புரள் → புரளி = மெய்ம்மாற்று, பொய். புரள் → புரட்டு → புரட்டன் (மு.தா.234)]

புரட்டி *puratti,* பெ. (n.) ஒன்றைப்புரட்ட பயன்படுத்தும் கருவி; an instrument used to turn.

[புரள் → புரட்டு. புரட்டுதல் = ஒன்றைத் திருப்புதல். புரட்டு→ புரட்டி. தோசை புரட்டி = தோசைத்திருப்பி (மு.தா.231.)]

புரட்டிக்கீரை *puratti-k-kīrai,* பெ. (n.) காட்டுத்துத்தி; bristly-leaved jew's mallow (L.)

புரட்டியடி–த்தல் *puratti-y-adi-,* 4 செ. குன்றாவி. (v.t.) **1.** மாறாட்டமாய்ப் பேசுதல் (வின்.); to prevaricate. **2.** உண்மையை மறுத்தல்; to deny a fact, to lie boldly.

[புரள் → புரட்டு → புரட்டி + அடி –,]

புரட்டு[1]–தல் *purattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** உருட்டுதல்; to turn a thing over, to roll முடையுடைக் கருந்தலை புரட்டு முன்றா ளுகிருடையடிய(பட்டினப்.230.) **2.** செய்து முடித்தல்; to accomplish, used in contempt. **3.** கீழ்மேலாகத் திருப்புதல்; to turn up, as the soil in ploughing **4.** கறி முதலியவற்றைக் கிண்டி வதக்குதல் (இ.வ.); to fry, as vegetable curry **5.** குமட்டுதல்; to nauseate, retch. வயிற்றைப் புரட்டுகிறது **6.** ஏய்த்தல் (வஞ்சித்தல்) (வின்.); to deceive, to falsify. **7.** மாறுபடுத்துதல் (கொ.வ.); to pervert, distort. **8.** தேய்த்தல் (வின்.); to smear, rub on the head, as oil. **9.** அழுக்காக்குதல் (வின்.); to stain, foul with dirt. **10.** மறுத்துரைத்தல் (ஆட்சேபித்தல்) (வின்.); to deny, refute.

ம. புரட்டுக, பிரட்டுக; **பட.**பொரட்டு

[புரள் → புரட்டு]

புரட்டு² *puraṭṭu,* **பெ.** (n.) **1.** கீழ்மேலாகத் திருப்புகை; turning over, over turn, overthrow. **2.** மாறுபட்ட பேச்சு; prevarication. 'புறப்பட்டார் புரட்டுப் பேசி' (திருவாலவா.**38,14**) **3.** ஏய்ப்பு (வஞ்சகம்); deceit, treachery. **4.** குமட்டும் உணர்வு (வாந்திக்குணம்); sickness, nausea, **5.** வயிற்றுவலி (யாழ்ப்.); pain in the bowels.**6.** கறிவகை (இ.வ.); a kind of vegtable curry.

[புரள் → புரட்டு]

புரட்டு³-தல் *puraṭṭu-,* **5** செ.குன்றாவி. (v.t.) பொத்தகவிதழ்கள் முதலியவற்றைத் திருப்புதல்(கொ.வ.); to turn over, as the leaves of a book.

[புல் → புர் → புரள் → புரளுதல் = கீழ்மேலாகத்திருப்புதல். (வே.க.3,94,95), திருப்புதல்]

புரட்டுருட்டு *puraṭṭuruṭṭu,* **பெ.** (n.) **1.** மாறாட்டமாகப் பேசுகை; lying, prevarication. **2.** தந்திரச் செயல்; subterfuge.

[புரட்டு + உருட்டு. இதை உருட்டு புரட்டு என்று மாற்றிச்சொல்வதும் உண்டு.]

புரட்டோடியம் *puraṭṭōḍiyam,* **பெ.** (n.) இழிவழக்கு (வின்.); obscene language.

[புரட்டு → புரட்டோடியம்]

புரடம் *puraḍam,* **பெ.** (n.) பொன்; gold.

புரண்டை *puranḍai,* **பெ.** (n.) திருகலான கொடிவகை, பிரண்டை; square stalked vine.

[புரு → புரள் → புரண்டை = புரண்டிருக்கும் அல்லது முறுக்குண்டிருக்கும் கொடி (மு.தா.242)]

புரணி¹ *puraṇi,* **பெ.** (n.) **1.** ஊன் (பிங்.); flesh 'குணபாசி....நடித்து நின்றயின்றன புரணி' (அரிசமய. பரகா.**37.**) **2.** தோல் (கொ.வ.); skin. **3.** சாரமற்றது; that which is useless. 'சோலையின் போக்யதை புரணியென்னும்படி யாய்த்து ஊரில் போக்யதை' (திவ். திருமலை.**18**,வ்யா,பக்,**67**)

[புறம் → புறன் → புறணி = மேற்புறம், மரத்தின் மேற்புறமாயிருக்கும் பட்டை. புறணி → புரணி = விலங்குகளின் மேலாக இருக்கும் ஊன், ஊனைப் போர்த்தியிருக்கும் தோல், (மேலாக இருக்கும்) சாரமற்றது.]

புரணி² *puraṇi,* **பெ.** (n.) *புளியம்புறணி* பார்க்க; see *puḷiyam puṟaṇi.*

[புறணி → புரணி]

புரணிமண் *puraṇimaṇ,* **பெ.** (n.) கழுதை; ass.

புரத்தாபனநோய் *purattābaṇa-nōy,* **பெ.** (n.) சிறுநீர்ப்பையிலேற்படும் அழலை நோய்; a disease of urinary bladder.

புரத்திரயம் *purattirayam,* **பெ.** (n.) *புரம் மூன்று* பார்க்க; see *puram - mūṉṟu.*'திண்சிலையாற் புரத்திரயங்களையும் பொடியாக்கிலன்...எங்கள் பண்ணவனே' (திருநாற்.**24.**)

[புரம் + திரயம்.]

Skt. traya > **த.** திரயம்

புரத்துவாரம் *pura-t-tuvāram,* **பெ.** (n.) *புரவாயில் (வின்.)* பார்க்க; see *puravāyil*.

[புரம் + துவாரம்]

Skt. dvāra > **த.** துவாரம்

புரதகனன் *puradaganan,* பெ. (n.) *புரமெரித்தோன் (வின்.)* பார்க்க; see *purameritton.*

[புரம் + தகனன்]

புரந்தரம் *purandaram,* பெ. (n.) தோள் (சங்.அக.); shoulder.

[புயம் → புரம் → புரந்தரம்]

புரந்தரலோகம் *purandaralōgam,* பெ. (n.) *புரந்தரவுலகம்* பார்க்க; see *purandara-v-ulagam.* 'செல்வப்புரந்தரலோகம் புழைக்கடை யாகுமெம் போலிகட் கே' (திருநூற்.32.).

[புரந்தர(ன்) + லோகம்.]

த. உலகம் > Skt. lōga.

Skt. dara > **த.** தரன்

புரந்தரவுலகம் *purandara-v-ulagam,* பெ. (n.) இந்திரவுலகம்; Indra's heaven.

[புரந்தர(ன்) + உலகம்]

புரந்தரன் *purandaran,* பெ. (n.) (கோட்டையை உடைத்தவன்) இந்திரன்; Indra. "புரந்தரன் தன்னோடு வானோர்" (தேவா. 926, 8).

ம. புரந்தரன்

[புரம் + தரன்]

Skt. dara > **த.** தரன்

புரந்தார் *purandār,* பெ. (n.) அரசர்; kings. 'புரந்தார்கண் ணீர்மல்க' (குறள், 780)

க. பொரெதர்

[புரம் → புரந்தார்]

புரப்பிரியை *purappiriyai,* பெ. (n.) செந்தாழை (அனாசி) (மூ.அ.); pine-apple.

புரப்பு *purappu,* பெ. (n.) காப்பு (பாதுகாப்பு) (சங்.அக.); keeping, protection.

தெ. ப்ரோபு

[புர → புரப்பு]

புரம்¹ *puram,* பெ. (n.) **1.** ஊர்(பிங்.); town. **2.** நகரம் (பிங்.); city.'மதுரை யந்தண் புரத்தின் கண்'(திருவாலவா. 39, 1) **3.** மதிலரண் ஆழ்ந்த தலைநகரம் (சூடா.); metropolis, fortified town, royal city, capital. **4.** புரம் மூன்று பார்க்க; see puram mūnru.'புரமெரி செய்தவர்' (தேவா. 97, 11) **5.** கோயில்; temple.'மேருவு மூவர்க் கோதிய புரமும்' (கல்லா. 24, 23) **6.** மேன்மாடம் (யாழ்.அக.). upper storey. **7.** வீடு (யாழ்.அக.); house. **8.** உடல் (பிங்.); body.'அயன்புரமெனப் பொலிந்தான்' (பாகவத. 1, மாயவனமி. 16) **9.** புறணி, தோல் (யாழ்.அக.); skin.

OE.*burg, burh;* OS. *burg;* OHG. *burug;* ON.*burg;* Goth.*baurge;* E.*borough* Sc.*burgh.*

[புர் → புரை = உயர்வு. புரையோர் = உயர்ந்தோர். புர் → புரம் = உயர்ந்தமனை, அஃதுள்ள நகர். குடிநகர், பதி முதலிய பிற சொற்களும் தனியில்லையும் ஊரையுங் குறித்தல் காண்க. உயர்ந்த கட்டடங்களுள் தலைமையானது கோபுரம். ஒ.நோ. கோநாய், அரசமரம், நாயகத் தூக்கம். புரம் → பரம் = மேல். பரம் → பரன், பரை. (மு.தா. 67)]

வேந்தன் இருந்த உயர்ந்த எழுநிலைக் கட்டடம் முதலிற் கோபுரம் எனப்பட்டது. பின்பு அதைப் பொற்கோயிலில் அமைந்த எழுநிலை வானளாவி அப்பெயர் பெற்றது. அதன் அமைப்பு தேரை ஒத்ததாகும்.

வேந்தன் தன் தலைநகரை நாற்புறமும் நோக்கவும் தொலைவிற் பகை வரவைக் காணவும், பகைவர் முற்றுகையிட்டு உழிஞைப்போரை நடத்துங்கால் நொச்சிப்போரைக் கண்காணிக்கவும், அவன் அரண்மனையில் மேல் எழுநிலை கொண்ட ஓர் உயர்ந்த தேர் போன்ற கட்டடம் கட்டப்பட்டிருந்தது. அது புரம் எனப்பட்டது. புரம் = உயர்ந்த கட்டடமான மேன்மாடம். புரவி = உயர்ந்த சுவரைத் தாண்டும் குதிரை.

புரம் என்பது, பின்பு புரத்தைக் கொண்ட அரண்மனையையும் அதன் சூழலையும் (Acropolis) குறித்து, அதன் பின் நகர் என்னும் சொற்போல் தலைநகர் முழுவதையும் குறித்து, நாளடைவில் நகரப் பொதுப் பெயராயிற்று.

அரண்மனையிலுள்ள புரம் அரசன் இருக்கையாதலால், கோபுரம் எனப்பட்டது. கோ அரசன். கோ இருந்த இல் கோயில் எனப்பட்டதை நோக்குக.

பகைவர் வரவு காண்டற்குக் கோபுரம் சிறந்த அமைப்பென்று கண்டபின் நகரைச் சூழ்ந்த கோட்டை மதிலிலும், வாயிலிற் பெரிதாகவும் மற்ற இடங்களிற் சிறியனவாகவும் கோபுரங்கள் கட்டப் பட்டன. சிறியன கொத்தளம் எனப் பட்டன. (ப.த.நா.ப. 123, 124)

புரம்² *puram,* பெ. (n.) முன் (சூடா.); before, in place or time.

புரம்பாய்வை–த்தல் *purampāy-vai-,* 4 செ. குன்றாவி. (v.t.) மறைவாக வைத்தல்; to keep aside.

[புரம்பாய் + வை–, புறம் → புரம்]

புரம்மூன்று *purammūṉṟu,* பெ. (n.) முப்புரம் (திரிபுரம்); the three cities destroyed by Sivaṉ.

[புரம் + மூன்று]

புரம்மூன்றெரித்தோன் *purammūṉṟerittōṉ,* பெ. (n.) முப்புரத்தை (திரிபுரத்தை) எரித்தவன், சிவபெருமான்; Sivaṉ, as the destroyer of tiripuram.

மறுவ. புராரி, புராந்தகன், பித்தன், புலித்தோலான், அரவன், அண்ணல், பரமன், அரன்.

[புரம் + மூன்று + எரித்தோன்]

புரமெரித்தோன் *puram - erittōṉ,* பெ. (n.) *புரம்மூன்றெரித்தோன்* பார்க்க; see *purammūṉṟerittōṉ.*

[புரம் + எரித்தோன்]

புரவரித்திணைக்களம் *puravari-t-tiṇai-k-kaḷam,* பெ. (n.) *புரவுவரிதிணைக்களம்* பார்க்க; see *puravuvari tiṇai-k-kaḷam* (s.1.1 iii. 116, 17).

[புரவு + வரி + திணைக்களம்]

புரவரியார் *puravariyār,* பெ. (n.) அரசிறைக் கணக்கர்; revenue accountants. (I.M.P.Sm. 56)

[புரவு + வரியார்]

புரவலன் *puravalaṉ,* பெ. (n.) காத்துதவுவோன்; protector, preserver, defender. 'மெய்யது புரவல ரின்மையிற் பசியே' (புறநா. 69) 2. அரசன்; king. 'புரவல னெடுங்கடை' (பு.வெ. 9, 2, கொளு) 3. கொடையாளன் (பு.வெ. 9, 25, கொளு); liberal man.

மறுவ. பெருமான், ஏந்தல், வேந்தன், மன்னன், பொருநன், கோ, கொற்றவன், இறைவன், அண்ணல், தலைவன், காவலன், குரிசில்.

[புர → புரவு → புரவலன்]

அரசனுக்குக் காவல் தொழிலே சிறப்பாதலால் புரவலன் காவலன் அல்லது அரசன் என்னும் பொருளைக் குறித்து நின்றது. அரசு என்பது அரண் என்னும் சொல்லிற்கு இணையாய் காவல் என்னும் கருத்தை அடிப்படையாய்க் கொண்டிருப்பது ஒப்பு நோக்கத் தக்கது.

வேந்தன் அமைதிக் காலத்தில் ஒவ்வொரு நாளும் பகலில் முதற் பத்து நாழிகை கொடைக்குச் செலவிட்டான். இது போன்ற அரசின் அல்லது புரவலன் கொடைக் குணம் பற்றிப் புரவலன் கொடையாளனைக் குறித்தது.

புரவாய்தல் *pura-vāydal,* பெ. (n.) *புரவாயில் (நாமதீப. 493)* பார்க்க; see *puravāyil.*

[புரவாயில் → புரவாய்தல்]

புரவாயில் *puravāyil,* பெ. (n.) நகரத்தின் வாயில் (சூடா.); tower gate of a city or town.

[புரம் + வாயில்]

புரவாலி *puravāli,* பெ. (n.) கழிப்பிடம் (கக்குசு); latrine, privy (C.G.).

[புறவாலி → புரவாலி]

புரவி¹ *puravi,* பெ. (n.) குதிரை; horse.'கதழ்பரிய புரவி'(பதிற்றுப். 80, 13)

மறுவ. பாடலம், கோடகம், இவுளி, வன்னி, குதிரை, பரி, கந்துகம், கனவட்டம், கோரம்.

[புரம் = உயர்ந்தமனை. புரம் → புரவி = மதில் தாண்டும் உயர்ந்த குதிரை. (மு.தா. 67)]

புரவி² *puravi,* பெ. (n.) 1. முதலாம் விண்மீன் (அசுவதி) (பிங்.); the first naksatra. 2. குதிரை அல்லது யானை கட்டுமிடம்; stable for horses or elephants.'பட்டத்தியானை பூண்ட புரவியிற் குறடும், குதிரை பூண்ட புரவியிற் குறடும்.' (கோயிலொ.17)

[புரம் → புரவி]

புரவி³ *puravi,* பெ. (n.) பிறப்பு; class, order, 'கெட்டிக்காரப்புரவி' (யாழ்ப்.)

[பிறவி → புரவி (கொ.வ.)]

புரவிசயன் *puraviśayan,* பெ. (n.) முப்புரம் வென்றோன்; Šivan, as conqueror of tiripuram.'புரவிசயன் சூடந்தரு பாகீரதி' (பாரத.அருச்சுனன்றீர்.7)

[புரம் + விசயன்.]

Skt.vijaya> த.விசய

புரவித்தேவர் *puravi-t-tēvar,* பெ. (n.) குதிரைமுகமுள்ள தேவர் (அசுவினி தேவதைகள்); the Asvins, as gods with horse-faces.'ஆயுள் பெருகுமா றுதவிக்கப்பா் பிரிந்திடாப் புரவித் தேவர்' (யாகவத.2, மாயவனிலை.14)

[புரவி + தேவர்]

புரவியாட்டம் *puravi-y-āṭṭam,* பெ. (n.) பொய்க்கால் குதிரை; a folk dance performed with a dummy horse.

[புரவி + ஆட்டம்]

புரவியெடுப்பு *puravi-y-eḍuppu,* பெ. (n.) குதிரைஊர்தியில் (வாகனத்தில்) இறைவன் (சுவாமி) எழுந்தருளுந் திருவிழா (பஞ்ச. திருமுக.172.); festival of taking a deity on a horse in procession.

[புரவி + எடுப்பு. எடு → எடுப்பு]

புரவிவட்டம் *puravi-vaṭṭam,* பெ. (n.) குதிரையோடும் தெரு (வையாளி வீதி) (சூடா.); riding ground.

[புரவி + வட்டம்]

புரவிவேள்வி *puravi-vēḷvi,* பெ. (n.) குதிரை வேள்வி; horse sacrifice 'அண்ணலம் புரவிவேள்வி யாற்றினன்' (பாகவத.1. பரிட்சித்துவின்.19).

[புரவி + வேள்வி]

புரவென்றியோன் *puraveṉṟiyōṉ,* பெ. (n.) முப்புரம் (திரிபுரம்) வென்றோன், சிவபெருமான்; Sivaṉ, as conqueror of tiripuram.

[புரம் + வென்றியோன். வெற்றி → வென்றி]

புரவு *puravu,* பெ. (n.) 1. காப்பு; care, protection.'பெயன்மழை புரவின்றாகி' (பதிற்றுப்.26.6) 2. கொடை; gift, grant, boon.'இடுகதிறையே புரவெதிர்ந் தோர்க்கென' (பதிற்றுப். 80,10) 3. ஆட்சியிடம்; place of jurisdiction. 'புரவுடையார்களை வரும் புரவாசற வாண்டு' (தேவா.461.5) 4. அரசிறை; tax.'குடிபுர விரக்குங் கூரி லாண்மைச் சிறியோன்' (புறநா.75.) 5. அரசனால் அளிக்கப்படும் இறையிலி நிலம்; land given free of rent by a king."புரவுத்தொடுத் துண்குவை யாயினும்" (புறநா.260) 'எட்டிப்புரவு, காவிதிப்புரவு' (நன்.158, மயிலை.) 6. ஆறுமுதலியவற்றிலிருந்து நீர்பாயும் வயனிலம்; paddy-field irrigated by a river or tank. ஆற்றுப்புரவு 7. செழுமை; fertility, as of the soil.'புரவார் கழனிசூழ்' (திவ். திருவாய்.8,9,9).

[புல் → புர் → புர. புரத்தல் = காத்தல், பேணிவளர்த்தல். புர → புரவு]

புரவுநெல் *puravu-nel,* பெ. (n.) நெல்லாகச் செலுத்தும் நிலவரி; land-tax paid in paddy. *'அளக்கக் கடவ புரவுநெல் முந்நூற்றுக் காடியும்'* (S.I.I.v,499.)

[புரவு + நெல்]

புரவுபொன் *puravu-poṉ,* பெ. (n.) வரிவகை; an ancient tax (S.I.I.ii.509, 52).

[புரவு + பொன்]

புரவுரிதிணைக்களம் *puravuri-tiṇai-k-kaḷam,* பெ. (n.) அரசிறைக் கணக்கு வைப்போர் கூடும் அலுவலகம்; office of revenue accountants.

[புரவு + வரி + திணைக்களம்]

புரவுவரி *puravu-vari,* பெ. (n.) அரசிறைக்கணக்கன்; revenue accountant. (S.I.I.ii.306)

[புரவு + வரி]

புரள்(ளு)—தல் *puraḷ(ḷu)-,* 2 செ.கு.வி. (v.i.) 1. உருளுதல்; to roll over, to tumble over, to be upset. 'அடித்துப் புரண்டுவிழுந்தான், கழுதை புரண்ட களமாய் போய் விட்டது' 2. கழிதல்; to slip off. 'புல்லார் புரவி விடல்' (குறள், 755) 3. அலைமறிதல்; to roll, as waver. 'புரணெடுந்திரைகளம்' (கம்பரா. விபீடண.27) 4. நிரம்பி வழிதல், கரை கடந்தோடுதல்; to be full to the brim, to overflow. "ஆறுகரைபுரண்டு போகிறது" 5. அழுக்காதல் (வின்.); to become besmeared, soiled or dirty. 6. நீரிற்கலத்தல் (வின்.); to be soaked, drenched. 7. மாறுபாடடைதல்; to deranged, to be changed, as times, seasons customs or laws; to be overturened, as a state. 8. சொற்பிறழ்தல்; to go back upon one's word.

9. மறுப்புத் தெரிவிக்கப்படுதல் (வின்.); to be refuted or confuted. 10. சுற்றுதல் (வின்.); to revolve. 11. பணம் விரைந்து தொகுதல் அல்லது கைமாறுதல்; to abound. அந்த ஊரில் பணம் புரள்கிறது. 12. மாறிமாறி வருதல்; to come alternately. 'வெயில்களும் நிலாக்களும் புரள' (கம்பரா. பிரமா.99) 13. சாதல்; to die. 'கழுத்திலே புண்ணாகிப் புழுத்துப் புரண்டான்' (குருபரம்.105, ஆறா.)

> ம.புரளுக, பிரளுக; க.பொரள், புருள்; தெ.பொரலு; து.புரெலுனி, புரெயுனி, பொளரலுனி, பொரெடுனி; கோத. பொர்ண், பொண்; பட. பெரணு

> *[புல் + புர் → புரள் (வே.க.31, 94)]*

புரளவை–த்தல் *pura*l*a-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) உண்ணாக்கில் தடவல்; to smear over ovula.

> *[புரள் → புரள + வை–,]*

புரளி[1] *pura*l*i*, பெ. (n.) 1. பொய் (வின்.); lying, falsehood. 2. ஏய்ப்பு (வஞ்சனை); deceit. 3. குறும்பு (வின்.); mischief, waggishness. 4. சண்டை; quarrel, wrangle, broil. 5. கலகம்(வின்.); insurrection. 6. முருட்டுத்தனம் (வின்.); restiveness, as of a beast, unruliness, refractoriness.

> *[புல் → புர் → புரள். புரளுதல் = உருளுதல், மாறுபாடடைதல் புரள் → புரளி = (வே.க.3,94)]*

புரளி[2] *pura*l*i*, பெ. (n.) அரத்தம், குருதி; (இறை.1,பக்,9.); blood.

புரளிக்காரன் *pura*l*i-k-kāra*n, பெ. (n.) 1. பொய்யன்(வின்.); liar, prevaricator. 2. புரட்டுச் செய்வோன்; mischievous person, wag, knave. 3. சண்டையிடுபவன்; quarrelsome person. 4. ஆணைமீறிக் கலகஞ்செய்வோன்; rebel, insurgent.

> *[புரளி + காரன்]*

புரளிபண்ணு[1]**–தல்** *pura*l*i-pa*ṇṇ*u-*, 15 செ.கு.வி. (v.i.) குறும்பு செய்தல் (வின்.); to be waggish, mischievous.

> *[புரளி + பண்ணு–,]*

புரளிபண்ணு[2]**–தல்** *pura*l*i-pa*ṇṇ*u-*, 12 செ.குன்றாவி. (v.t.) ஏளனம் செய்தல் (கொ.வ.); to mock.

> *[புரளி + பண்ணு–,]*

புரளிவித்தைக்காரன் *pura*l*i-vittai-k-kāra*n, பெ. (n.) மாய்மாலக் காரன்(புதுவை.); charlatan.

> *[புரளி + வித்தை + காரன்]*
>
> Skt. vidyā › த. வித்தை

புராணம் *purā*ṇ*am*, பெ. (n.) கடுக்காய்; galnut.

புராணி[1] *purā*ṇ*i*, பெ. (n.) *புறணி (தைலவ.தைல)* பார்க்க; see *pu*ṟ*a*ṇ*i*.

> *[புரணி → புராணி]*

புராணி[2] *purā*ṇ*i*, பெ. (n.) பட்டைவகையுளொன்று; a kind of bark.

> *[புரணி → புராணி]*

புராணியை *purā*ṇ*iyai*, பெ. (n.) *புராணி* பார்க்க; see *purā*ṇ*i*.

> *[புராணி → புராணியை]*

புராரி *purāri,* பெ. (n.) *புரமூன்றெரித்தோன்* பார்க்க (பிங்.); see *pura-mūṉṟerittōṉ.*

[புரம் + எரி–புரமெரி → புராரி]

புரி¹–தல் *puri-,* 4 செ.குன்றாவி. (v.t.) **1.** விரும்புதல்; to desire. புகுமுகம் புரிதல் (தொல்.பொ.261.) **2.** ஊழ்கம் செய்தல் (தியானித்தல்); to meditate upon, 'இறைவன்...புகழ் புரிந்தார்' (குறள்,5). **3.** செய்தல்; to do, make.'தினைத் துணையு நன்றி புரிகல்லா' (நாலடி.323) **4.** படைத்தல்; to create.'எவ்வுலகும் புரிவானை' (சிலப்.பிரபஞ். வெங்கைக்க.65) **5.** ஈனுதல்; to bring forth, produce.'பொன்போறார் கொன்றை புரிந்தன'. (திணைமாலை,109) **6.** கொடுத்தல்; to give. 'பெருநிதி வேட்டன வேட்டன புரிந்தான்' (உபதேசகா. சிவவிரத,257) **7.** பட்டறிதல் (அனுபவித்தல்); to experience, suffer. 'புண்டரிகை போலுமிவ ளின்னல் புரிகின்றாள்' (கம்பரா.சூளா.1) **8.** உற்றுப் பார்த்தல்; to gaze at, watch intently.'பயத்தாலே புரிந்து பார்க்கிறபோது' (திவ்.திருநெடுந்.21, வ்யா.பக்.174) **9.** உசாவுதல் (விசாரணை செய்தல்); to investigate, examine. 'அறம் புரிந்தன்ன செங்கோனாட்டத்து' (புறநா.35) **10.** சொல்லுதல்; to say, tell.'அந்தணாளர்புரியு மருமறை' (தேவா.865,5) **11.** நடத்துதல்; to exercise, perform அரசு புரிந்தான். **12.** மேற்கொள்ளுதல்; to accept.'போக்குவரவு புரிய' (சி.போ.2).

தெ. புர, புரலாடு

[புல்லுதல் = நட்புச் செய்தல். புல் → புல்க. புல்குதல் = நண்பராய் மருவுதல், புல் → புர் → புரி (வே.க.3,87)]

புரி²–தல் *puri-,* 2 செ.கு.வி. (v.i.) **1.** முறுக்குக் கொள்ளுதல்; to be twisted, to curl.'சுகிர்புரி நரம்பின்' (மலைபடு.23) **2.** திரும்புதல்; to turn. 'மற்றையருகே புரியல்' (திவ். இயற். திருவிருத்,42,வ்யா.பக்.247). **3.** மிகுதல்; to abound,'வனப்புப் புரிந்த தகையினான்' (பரிபா.7,51) **4.** அசைதல்; to shake. 'தார்புரிந்தன்ன' (பதிற்றுப். 66,13)

ம. புரியுக.

E.spire; L.spira; Gk.speria.

[புல் → புர் → புரள். புரளுதல் = உருளுதல், மாறுபாடடைதல். புர் → புரி (வேக,3, 94,95)]

புரி³–த்தல் *puri-,* **11** செ.குன்றாவி. (v.t.) விரும்பச் செய்தல்; to cause to desire.'புரித்த தெங்கிளநீரும்' (சீவக.2402)

[புல் → புர்→ புரி. புரிதல்(த.வி.) – புரித்தல் (பி.வி.) (வே.க.3.87)]

புரி⁴ *puri,* பெ. (n.) **1.** கயிறு; cord, twine, rope. '*மாற்புரி நரம்பின்*' (பெரும்பாண்.181.) **2.** முறுக்கு; strand, twist as of straw. '*புரியடங்கு நரம்பு*' (சிறுபாண்.34) **3.** சுருள்; curl, as of hair.'*புரிக்குழன் மடந்தை*' (சீவக. 2688) **4.** சுரி(கொ.வ.); spiral, screw. **5.** சங்கு; conch, '*புரியொருகை பற்றி*' (திவ். இயற்.1,31) **6.** யாழ் நரம்பு; string, as of a lute. '*புரிவளர் குழலொடு*' (சீவக.124) **7.** மாலை; garland, as of pearls.'*புரிமணி சுமந்த பொற்பூண்*' (சீவக.619) **8.** கட்டு (சூடா.); tie, fastening.

ம., க., தெ., து. புரி

[புல் → புர் → புரி (வே.க.3,94,95) = முறுக்கு, முறுக்கிய கயிறு, உள்திருகிய சங்கு. இடம்புரி = வலமிருந்து இடமாக வளைந்த சங்கு. கொடும்புளி = அறும் நிலையிலுள்ள கம்பியின் அல்லது முடிச்சுப்படும் நிலையிலுள்ள கயிற்றின் கொடு முறுக்கு. முப்புரி = வைக்கோற் பழுதை. (த.க. 148.149)]

த. புரி > Skt. puri

புரி⁵ *puri,* பெ. (n.) **1.** செய்கை (சூடா.); making, doing. **2.** விருப்பம் (சீவக.124, உரை); desire.

[புல் → புர் → புரி (வே.க.3.87)]

புரி⁶–த்தல் *puri-,* 11 செ.குன்றாவி. (v.t.) நிறைத்தல்; to fill up. '*நன்மணிபுரித்தன*' (சீவக.1203) **2.** பதித்தல்; to enchase, inlay. '*முத்தம்வாய் புரித்தன*' (சீவக.150)

[புல் → புர் → புரி]

புரி⁷ *puri,* பெ. (n.) **1.** நகரம் (பிங்.); town, city, **2.** தலைநகரம் (சூடா.); capital city. **3.** மருதநிலத்தூர் (சூடா.); village of an agricultural tract. **4.** உடல்; body. '*புரிக்கிலேசத்தை யகற்றி யாட்கொள்ளும்*' (அருட்பா, vi பிள்ளைப்பெரு.129)

க., து. புரி

[புல் → புர் → புரி = வளைவு, வளைந்த (சூழ்ந்த) கோட்டை. (தமி.வ.15)]

த புரி > Skt. purī

தமிழிற் புரம் என்பது கோபுரமுள்ள நகரையும், புரி என்பது கோட்டையுள்ள நகரையும் குறிக்கும். ஆயின், வடமொழியில் இவ்வேறுபாடின்மையால் புர, புரய என்னும் சொற்களும் கோட்டை அல்லது நகர் என்னும் பொதுப்பொருளே தரும். (த.க.149.)

புரி⁸–தல் *puri-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** விளங்குதல்; to shine; to be manifest. "*சோதிபுரிந்திடுமதுவே*" (சி.சி.2,82) **2.** பொருள்விளங்குதல்; to be understood. நன்கு புரிகின்றது.

[புல் → புலம் = ஐம்பொறிகள்பொருள்களோடு பொருந்தி அறியும்அறிவு.புல்→ புலம் → புலர். புலர்தல் = தெளிதல், தெளிவாதல், விடிதல். (வே.க.3.62,63) புல் → புர் → புரி]

புரி⁹–த்தல் *puri-,* 11 செ.கு.வி. (v.i.) *புரி⁸–தல்* பார்க்க; see *puri⁸-,* 'நின்மலவடிவாய்ப் புரிக்கும்' (ஞானவா.மாவலி.48.)

[புல் → புர் → புரி]

புரிக்குழல் *puri-k-kuḻal,* பெ. (n.) *புரிகுழல்* பார்க்க; see *puri-kuḻal.* '*புரிக்குழன் மடந்தையர்*' (சீவக.2688).

ம. புரிகுழல்

[புரி + குழல்]

புரிக்கூடு *puri-k-kūḍu,* பெ. (n.) நெற்சேர்; straw bin for paddy '*புரிக்கூட்டில் நின்ற.....பலவருக்கத்து நெல்லு*' (சிலப்.10,123,உரை.)

[புல் → புர் → புரி = முறுக்கு, சுரி,கயிறு. புரி + கூடு – புரிக்கூடு = வைக்கோற்புரி, நெற்கூடு (வே.க.3,95)]

புரிகயிறு *purikayiṟu,* பெ. (n.) வைக்கோலால் முறுக்கிச் செய்த கயிறு; rope made of hay.

[புரி + கயிறு]

புரிகன்மம் *puriկaṉmam,* பெ. (n.) மாற்றிலக்கம் (புதுவை.); (math.) logarithm.

[புரி + கன்மம்]

புரிகுழல் *puri-kuḻal,* பெ. (n.) கடைகுழன்று சுருண்ட கூந்தல்; curly tresses '*புரிகுழன் மாதர்*' (சிலப்.14,37)

[புரி + குழல்]

புரிகை *puri-gai,* பெ. (n.) முத்திரை (அங்கக்கிரியை) வகை (சிலப்.3,12,உரை,பக்.81.); (nāṭya.) a hand-pose.

[புரி → புரிகை. புல் → புர் → புரி. புரிதல் = செய்தல். புரிகை = கைகளால் முத்திரை செய்கை]

புரிசடை *puri-šaḍai,* பெ. (n.) திரண்டு சுருண்ட சடை (வின்.); tangled, matted locks.

[புரி + சடை]

புரிசம்[1] *purišam,* பெ. (n.) அருமை (இ.வ.); scarcity.

புரிசம்[2] *purišam,* பெ. (n.) நான்கு முழ நீளம் (வின்.); length of four cubits.

புரிசாலம் *purišālam,* பெ. (n.) 1. கெஞ்சுகை; urgent entreaty 2. வேண்டுகை (விண்ணப்பம்) (இ.வ.); petition.

[புரி + சாலம். சாரம் → சாலம்]

புரிசாலம்பிடி—த்தல் *purišālam-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) வருந்தி வேண்டுதல் (வின்.); to beg earnestly.

[புரிசாலம் + பிடி —,]

புரிசை *purišai,* பெ. (n.) மதில்; fortification, wall. '*ஏந்துகொடியிறைப் புரிசை*' (புறநா.17) E.murus

[புரி → புரிசை = நகரைச்சூழ்ந்த மதில் (வே.க.3,96)]

பண்டைத்தமிழகத்தின் கோநகர்களில், ஊரைச்சுற்றிக் கோட்டைமதில் இருந்தது. அது புரிசை எனப்பட்டது. புரிதல் வளைதல். புரிசையுள்ள நகர்ப்பெயர்களே முதலில் புரி என்னும் ஈறு பெற்றன. கோட்டை என்பதும் வளைதற் பொருளதே. கோடுதல் வளைதல். பாம்புரி, கொத்தளம் (bastion), வாயிற் கோபுரம், பதணம் (rampart), ஞாயில் முதலிய பல வுறுப்புகளை யுடையது கோட்டைமதில். சில நகர்களில் ஏழெயில்கள் இருந்தன. புறமதிலைச் சுற்றி அகழி இருந்தது. (ப.த.நா.ப.138, 139)

புரிதாள் *puridāḷ,* பெ. (n.) *புரிகட்டை* பார்க்க; see *purikaṭṭai.*

[புரி + தாள்]

புரிதிரி—த்தல் *puri-tiri-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கயிற்றுக்காகப் புரிமுறுக்குதல் (யாழ்.அக.); to twist, as strands for rope-making. 2. கெடுக்க வாய்ப்புத் தேடுதல் (இ.வ.); to plot one's ruin.

[புர் → புர் → புரி = முறுக்கு, கயிறு. புரி + திரி—,]

புரிதெறித்தல் *puri-teṟittal,* பெ. (n.) 1. கயிறு அறுகை; breaking of a rope 2. வழி தவறுகை; failure of a stratagem.

[புரி + தெறித்தல். 'தல்' தொ.பெ.ஈறு]

புரிந்துகொள்ளு—தல் *purinduko!(!u)-,* 10 செ.குன்றாவி. (v.t.) 1. செய்தியைப் பொருள் தெளிவோடு உள்வாங்குதல்; to understand.

அவர் சொன்னதை நான் புரிந்து கொண்டேன் (உ.வ.) **2.** நிலைமையை யுணர்தல்; to realize, comprehend, அவர் என் நிலைமையைப் புரிந்துகொண்டார்.

[புரி → புரிந்து + கொள்–,]

புரிந்தோர் *purindōr,* பெ. (n.) நண்பர் (சூடா.); friends.

[புல் → புல்கு. புல்குதல் = நண்பராய் மருவுதல். புல்→புர்→புரி. புரிதல் = விரும்புதல் (வே.க.3.87) புரி → புரிந்தோர்]

புரிநூல் *puri-nūl,* பெ. (n.) *புரிமுந்நூல்* பார்க்க; see *purimunnūl.* *'திருமார்பினிற் புரிநூலும் பூண்டெழு பொற்பதே'* (தேவா.385,3.)

க. புரிநேண்(திரித்தகயிறு)

[புர் → புரி = முறுக்கு, கயிறு. புரி + நூல் ஒ.நோ.முப்புரி = முறுக்கிய முந்நூல் (பூணூல்)]

புரிப்பி–த்தல் *purippi-,* 11 செ.குன்றாவி. (v.t.) வளைந்து திரும்பச் செய்தல்; to cause to bend. *"சந்ததம் திருத்தச் செம்பதம் புரிப்பித்து"* (திருவாலவா.கடவுள் 2.)

[புல் → புர் → புரி. புரிதல் = வளைதல், திரும்புதல். புரி → புரிப்பி–, 'பி' பி.வி.ஈறு]

புரிபாய்ச்சு–தல் *puri-pāyccu-,* 5 செ.குன்றாவி. (v.t.) சிறு கயிற்றை முறுக்குதற்கு ஒழுங்குபடுத்துதல் (யாழ்ப்.); to arrange strands for making cord.

[புரி + பாய்ச்சு. பாய் → பாய்ச்சு]

புரிமணை *puri-maṇai,* பெ. (n.) பாண்டம் வைத்தற்கு வைக்கோலைச் சுற்றியமைத்த பீடம்; ring shaped pad of twisted straw, etc.

[புல்→ புர்→புரி = முறுக்கு, கயிறு. புரி + மணை – புரிமணை = வைக்கோற் புரியால் செய்யப்பட்ட மணை]



புரிமாந்தம் *purimāndam,* பெ. (n.) மாவிலங்க மரம்; a tree-crataeva.

புரிமுகம்[1] *puri-mugam,* பெ. (n.) கோபுரம் (யாழ்.அக.); tower at the front of a town.

[புரி + முகம். புல் → புர்→புரி,வளைவு, மதில் சூழ்ந்த கோட்டை. புரிமுகம் = மதில் சூழ்ந்த கோபுரம்]

புரிமுகம்[2] *puri-mugam,* பெ. (n.) **1.** சங்கு (யாழ்.அக.); conch **2.** நத்தை; snail.

[புரி → முகம். புல் → புர் → புரி = முறுக்கு, சங்கு. புரிமுகம் = வளைந்த சங்கு. ஒ.நோ. வலம்புரி = வலப்புறமாக வளைந்த சங்கு. இடம்புரி = இடப்புறமாக வளைந்த சங்கு]

புரிமுந்நூல் *puri-munnūl,* பெ. (n.) முறுக்கிய பூணூல்; sacred thread worn by the twice born, consisting of three stands. *'புரிமுந்நூலணிமார்பர்'* (பெரியபு.தடுத்தாட்.117.)

[புல் → புரி = முறுக்கு, கயிறு. புரி + முந்நூல். புரிமுந்நூல் = மூன்று நூல்கள் முறுக்குண்ட பூணூல்]

புரிமுறுக்கல் *puri-muṟukkal,* பெ. (n.) கோட்சொல்லுகை (யாழ்.அக.); tale bearing.

[புரி + முறுக்கல். புல்→ புர் → புரி = முறுக்கு, சுருள். முறு → முறுக்கல். 'அல்' தொ.பெ. ஈறு. புரிமுறுக்கல் = பிணையச்செய்து திரித்தல், திரித்துப் பேசுதல்.]

புரிமுறுக்கு[1]-தல் *puri-muṟukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) கோட்சொல்லுதல்; to carry tales, back-bite.

[புரி + முறுக்கு –,]

புரிமுறுக்கு[2] *puri-muṟukku,* பெ. (n.) *புரிமுறுக்கல்* பார்க்க; see *purimuṟukkal.* **2.** மலராத தாமரைப்பூ (வின்.); unblown lotus.

[புரி + முறுக்கு.]

புரிமுறுக்கு[3] *purimuṟukku,* பெ. (n.) முறுக்கு வளையல்; ring made of twisted hay etc.

[புரி + முறுக்கு.]

புரிமோகம் *purimōgam,* பெ. (n.) **1.** சம்புநாவல் (மலை.); rose-apple. **2.** விளா; wood-apple.

புரியட்டகம் *puriyaṭṭagam,* பெ. (n.) *புரியட்டம்* பார்க்க; see *puriyaṭṭam.* 'மனாதி தன்மாத்திரை புரியட்டகந்தான்' **(சி.சி.2,64.)**

[புரியட்டம் → புரியட்டகம்]

புரியட்டகாயம் *puriyaṭṭa-kāyam,* பெ. (n.) *புரியட்டம்* பார்க்க (வின்.); see *puriyaṭṭam.*

[புரியட்டம் + காயம்]

புரியட்டசித்தினி *puriyaṭṭašittiṉi,* பெ. (n.) தக்கோலம்; a fragrant drug chewed with betal.

புரியட்டம் *puriyaṭṭam,* பெ. (n.) நுண்ணுடம்பு; a kind of spiritual form of body, subtle body.

[புல் → புரி = முறுக்கு. புரி → புரியட்டம். பருவுடம்பிற்குள் வெளிப்படையாக அறியவியலாத தன்மையில் முறுக்கு போல் இருப்பதாகக் கொள்ளப்படும் நுண்ணுடம்பு]

புரியட்டரூபம் *puriyaṭṭa-rūbam,* பெ. (n.) *புரியட்டம்* பார்க்க; see *puriyaṭṭam.* 'புரியட்ட ரூபம்தானே பாகனா சரீரமாகி' **(சி.சி.2,36.)**

[புரியட்டம்+ ரூபம்]

த. உருவம் > Skt. rūpa › **த.** ரூபம்.

புரியணை *puri-y-aṇai,* பெ. (n.) *புரிமணை (தைலவ.தைல.)* பார்க்க; see *purimaṇai.*

[புரி + அணை. புரிமணை → புரியணை என்றுமாம்]

பானையின் அடித்தூரைச் சுமக்கவும் அதை நிலத்தில் படாதவாறு தாங்கவும் பின்னப்பட்ட அணை புரியணை. இது வாழைநார், வைக்கோல், தெங்கின்நார், பச்சைக்கொடி முதலியவற்றால் பின்னப்படும்.

புரியம் *puriyam,* பெ. (n.) கூத்துவகை (பிங்.); a kind of drama.

[புரி → புரியம்]

புரியிட்டீர்—த்தல் *puriyittir-,* 4 செ.குன்றாவி. (v.t.) *புரியைக் கட்டியிழு—த்தல்* பார்க்க; see *puriyai-k-kaṭṭiyiḻu-,* இடந்தொறும் புரியிட்டீர்த்தாரிருநூறு காதம்' (குற்றா. தல.கவுற்சன.31.)

[புரி → புரியை + இட்டு + ஈர்—,]

புரியைக்கட்டியிழு—த்தல் *puriyai-k-kaṭṭi-y-iḻu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. பழுதையினாற் கட்டியிழுத்தல்; to fasten with strands of straw and draw. 2. தொல்லைப் படுத்துதல்; to vex, harass, torment. "*நான் உன்னைப் புரியைக்கட்டி யிழுக்கிறேன்*" (உ.வ.)

[புரியை + கட்டி + இழு—,]

புரிவலி—த்தல் *puri-vali-,* 4 செ.கு.வி. (v.i.) கட்டுதல்; to tie, fasten. 'முத்தாற் புரிவலித்து' (திருவாலவா.32,20)

[புரி + வலி—,]

புரிவளை *puri-vaḷai,* பெ. (n.) முறுக்கு வளையல்; twisted bracelet. 'புகலாதொழுகும் புரிவளையார் மென்றோள்' (பு.வெ.10, காஞ்சிப்.1)

[புரி + வளை. வள் → வளை = வளையல்]

புரிவிடு—தல் *puri-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) கயிறு திரிக்கப் புரியை முறுக்குதல் (வின்.); to twist for making cord.

[புரி + விடு—,]

புரிவில்புகழ்ச்சியணி *purivil-pugaḻcci-y-aṇi,* பெ. (n.) பழிப்பது போலப் புகழும் அணிவகை (வீரசோ.அலங்.12); (rhet.) indirect or veiled eulogy.

[புரிவு + இல் + புகழ்ச்சி + அணி]

புரிவின்மைநயம் *purivinmai-nayam,* பெ. (n.) புத்தசமயத்து நயம் நான்கனுள் ஒன்று (மணிமே.30,218); (Buddh.) a casual relation one of four nayam.q.v.

[புரிவு + இன்மை + நயம்]

புரிவு[1] *purivu,* பெ. (n.) 1. அன்பு; love, attachment. 'புரிவொடு நாவினாற் பூவை புணர்த்து' (பு.வெ.ஒழிபு,12) 2. விருப்பம்; desire. 'வினை தீர்க்கும் புரிவுடையார்' (தேவா.905,1) 3. தொழில்; action, practice. 'இருவிரளி மிர்த்துப் புரிவொரு சேர்த்து' (கல்லா.8)

[புல் → புர் → புரி. புரிதல் = விரும்புதல். புல் → புர் → புரி → பரி = அன்பு (வே.க.3.87), புரி → புரிவு]

புரிவு[2] *purivu,* பெ. (n.) 1. தவறு; error. 'புரிவிலாமொழி விதூரம்' (பாரத.சூது.43) 2. தப்பி நீங்குகை; escape. 'புரிவின்றி.... போற்றுவ போற்றி' (பு.வெ.8,20) 3. வேறுபடுகை (அக.நி.); change.

[புரி → புரிவு (வே.க.3.96)]

புரிவு[3] *purivu,* பெ. (n.) தெளிவு; clearness, lucidity. 'புரிவில்புகழ்ச்சி கட்டே' (வீரசோ. அலங்.12)

[புல்லுதல் = பொருந்துதல். புல் → புல்கு. புல்குதல் = அணைதல். நண்பராய் மருவுதல். புல் → புலம் → புலன் = பொறியறிவு, அறிவுடைமை, கண்கூடு, தெளிவு (வே.க.3,62,63) புல் → புர் → புரி]

புரீடமம் *puriḍamam,* பெ. (n.) உளுந்து; black gram.

புரீத்தி *puritti,* பெ. (n.) தூக்கத்திற்குரிய நாடி வகை; a nerve one that causes sleep.

புரு[1] *puru,* பெ. (n.) **1.** மிகுதி (சங்.அக.); abundance **2.** பருமை; greatness புரு சுண்டந் தாங்குந் தன்மையால் (விநாயகபு.46,44) **3.** வீடு (மோட்சம்) (வின்.); heaven.

[புல் → பல் → பன்மை = ஒன்றிற்கு மேற்பட்ட தொகைப் பருமை, தொகுதி. புல் → புர் → புரு,]

புரு[2] *puru,* பெ. (n.) குழந்தை (வின்.); child, infant.

து. புரு (இளைய), புருகஞ்சிட(சிறு கன்று) புருநிணெ (இளையகாய், பிஞ்சு)

[புள் + புரு (மு.தா.40)]

த. புரு > Skt.bhrūṇa

புரு[3] *puru,* பெ. (n.) காட்டுக்குமிழ் (கா.); french mulberry of the wersern ghat.

புருங்கி *purungi,* பெ. (n.) கரிசலாங்கண்ணி; a plant eclypta prostata.

புருசு *purušu,* பெ. (n.) வாணவகை (வின்.); a kind of rocket.

புருடகி *purudagi,* பெ. (n.) புன்னை; poon tree.

[புருடம் → புருடகி.]

புருடம் *purudam,* பெ. (n.) புன்னை (மலை.); common poon.

புருடமிரு *purudamiru,* பெ. (n.) புருபீரு *(சங்.அக.)* பார்க்க; see *puru biru.*

புருடா[1] *purudā,* பெ. (n.) அச்சமூட்டுகை (கொ.வ.); frightening.

[புல் → புர்→புரள். புரளுதல் = உருளுதல், மாறுபாடடைதல், சொற்பிறழ்தல். புரள்→ புரட்டு. புரட்டுதல் = உருட்டுதல், கீழ்மேலாகத் திருப்புதல், வஞ்சித்தல். புரள்→ புரட்டு = கீழ்மேலாகத் திருப்புகை, சொற்பொருள்திரிப்பு, வஞ்சகம் (வே.க.3.94,95) புரள்→புரடு→புரடா = மாற்றிச்சொல்லி அச்சுறுத்துகை.]

புருடா[2] *purudā,* பெ. (n.) பொய் (இ.வ.); falsehood.

தெ.புருடா.

[புல்→புர்→புரள்→புரட்டு, கீழ்மேலாகத் திருப்புகை, வஞ்சகம். புரள் → புரடு → புரடா.]

புருடாதிகம் *purudādigam,* பெ. (n.) பெருநரந்தம் (பம்பளிமாசு); a very big citrus fruit.

புருடால் *purudāl,* பெ. (n.) *புருடா*[2] பார்க்க; see *purudā*[2]

[புருடா → புருடால்]

புருடி *purudi,* பெ. (n.) *புருண்டி* பார்க்க; see *purundi.*

[புருண்டி → புருடி]

புருடு *purudu,* பெ. (n.) **1.** பேறுகால தூய்மைக்கேடு (பிரசவத்தீட்டு) (இ.வ.); ceremonial pollution on account of child birth.

2. மகப்பேறு கூடத்தில் குழந்தைக்கு வரும் புண்கட்டி; skin eruptions of a new born child.

க.புருடு; புருடு, புருடி; **துட.**பிச்அச் (பேறுகாலத்திற்குப்பின்காருவாவரை பெண்கள் தங்கும்குடில்)

[புள் → புரு = குழந்தை. புள் → புரு→ புருடு]

புருண்டி *puruṇḍi,* **பெ.** (n.) மல்லிகை (மலை.); jasmine.

[புல்→புர். புரு → புருண்டி]

த. புருண்டி>Skt. bhūruṇḍi.

புருணம் *puruṇam,* **பெ.** (n.) கருப்பைக் குழவி (தைலவ.தைல.); foetus.

[புள் → புரு = குழந்தை. புள் → பிள் → பிள்ளை. பிள் → பீள் = கரு, கருப்பைக் குழவி, இளமை (மு.தா.40,41.) புரு → புருணம்]

த. புருணம்> Skt. bhrūṇa

புருணமேகம் *puruṇamēgam,* **பெ.** (n.) கடுக்காய்; galnut.

புருபீரு *purupīru,* **பெ.** (n.) தண்ணீர் விட்டான் (மலை); water root.

புருபீருகம் *purupīrugam,* **பெ.** (n.) *புருபீரு* பார்க்க; see *purupīru.*

[புருபீரு → புருபீருகம்]

புருமோகம் *purumōgam,* **பெ.** (n.) *புரிமோகம்* பார்க்க; see *purimōgam.*

மறுவ. சம்பு நாவல்

புருவத்துடிப்பு *puruva-t-tuḍippu,* **பெ.** (n.) புருவ நடுவிடத்தில் துடித்தலையுருவாக்கும் ஊதை நோய்; a disease which causes constant twitch of the eye-brows.

[புருவம் + (அத்து) + துடிப்பு 'அத்து' சாரியை. துடி → துடிப்பு]

புருவத்துமேல் *puruvattu-mēl,* **பெ.** (n.) சிவபெருமானது நெற்றிக்கண் (தக்கயாகப்.334, உரை); Šivaṉ's third eye, in the forehead.

[புருவம் → புருவத்து + மேல்]

புருவநடு *puruvanaḍu,* **பெ.** (n.) **1.** புருவங்களின் இடையிலுள்ள பகுதி; space between the eyebrows. **2.** ஆறாதாரங்களுள் ஒன்றான ஆதன் இருப்பிடம் (ஆஞ்ஞை); (yōga) middle of the forehead considered as the seat of the soul.

[புருவம் + நடு]

புருவநெரி—த்தல் *puruvaneri-,* 4 **செ.கு.வி.** (v.i.) சினத்தால் புருவங்களை வளைத்தல் (கொ.வ.); to knit one's eyebrows in anger, to frown.

[புருவம் + நெரி—]

புருவப்புழுவெட்டு *puruva-p-pulu-veṭṭu,* **பெ.** (n.) புருவத்திலேற்படுமுடியுதிர்வு நோய்; a disease marked by the falling of the hairs of eyebrow.

[புருவம் + புழு + வெட்டு]

புருவம்[1] *puruvam,* **பெ.** (n.) குதிரை (சது.); horse.

[புரவி → புருவி → புருவம்]

புருவம்[2] *puruvam,* பெ. (n.) **1.** கண்களின் மேலுள்ள மயிர்வளைவு, வளைந்த கண்பட்டை; eybrow. 'கொடும்புருவம்' (குறள்,1086) **2.** புண்விளிம்பு (வின்.); lip of a sore **3.** வரம்பு (வின்.); ridge of flowerbed or plot of garden.

[புல் → புரு → புரி. புரிதல் = வளைதல். வலம்புரி இடம்புரி என்னும் சங்குகளை நோக்குக. புரு → புருவம் = கண்மேல் மயிர் வளைவு (த.வ.1.68)]

புருவம்சுழி–த்தல் *puruvam - šuḷi-,* 4 செ.கு.வி. (v.i.) *புருவ நெரி–த்தல்* பார்க்க; see *puruva neri-,*

[புருவம் + சுழி–,]

புருவமத்தி *puruvamatti,* பெ. (n.) *புருவநடு* பார்க்க; see *puruva-naḍu.*

[புருவம் + மத்தி]

Skt. madhya > **த.** மத்தி

புருவமத்தியம் *puruva-mattiyam,* பெ. (n.) *புருவநடு* பார்க்க; see *puruva-naḍu.*

[புருவம் + மத்தியம்]

Skt. madhya > **த.** மத்தியம்

புருவமையம் *puruvamaiyam,* பெ. (n.) *புருவநடு* பார்க்க; see *puruva-naḍu.*

[புருவம் + மையம்]

Skt. madhya > **த.** மைய.

புருவை[1] *puruvai,* பெ. (n.) **1.** ஆடு; goat, 'செந்நிலப் புறவின் புன்மயிர்ப் புருவை' (நற்.321) **2.** செம்மறியாடு (பிங்.); sheep **3.** பெண்ணாடு; female of goat or sheep. 'குருமயிர் புருவை' (ஐங்குறு.238)

[புல் → புரை → பிரை → பெருகு → பெருக்கு. புல் → புரு → புருவை]

புருவை[2] *puruvai,* பெ. (n.) இளமை (சூடா.); youth, juvenility.

[புள் → புரு = குழந்தை. புரு → புருவை = இளமைப்பருவம்]

புருன்றி *puruṉṟi,* பெ. (n.) மல்லிகை; jasmine flower.

புரூஉ *purūu,* பெ. (n.) புருவம்; eyebrow. 'சிலபுரூஉப் பங்கத்தினும்' (துக்கயாகப்.430)

[புரு → புருவம். புரு → புரூஉ]

புரூண்ணம் *purūṇṇam,* பெ. (n.) கருப் பத்திலுள்ள முதிர்கரு; foetus.

[புரு → புருண்ணம் → புரூண்ணம்]

புரை[1]**–தல்** *purai-,* 4 செ.குன்றாவி. (v.t.) **1.** ஒத்தல்; to resemble. 'வேய்புரை பெழியி...பணைத்தோள்' (பதிற்றுப்.65,8) **2.** தைத்தல்; to sew coarsely with a fibre or thread, to stitch. 'தம்முடைய வஸ்திரத்தைப் புரையாநின்றாராய்' (ஈடு,4,10,7) **3.** மறைத்தல் (வின்.); to take means to hide, as a fault, to conceal.

[புல்லுதல் = பொருந்துதல், ஒத்தல். புல் → புரை (மு.தா.197) புரைதல் = ஒத்தல், பொருத்தித் தைத்தல்,]

புரை[2]**–தல்** *purai-,* 2செ.கு.வி. (v.i.) **1.** பொருந்துதல்; to be becoming or proper,

to be appropriate. "புறத்தோ ராங்கட் புரைவ தென்ப" (தொல். பொ.176). **2.** நேர்தல்; to happen, occur. "புணர்ந்தோரிடை முலையல்கல் புரைவது" (பரிபா.6,55). **3.** மூச்சுத் திணறுதல் (இ.வ.); to be suffocated.

க. புருள்

[புல்லுதல் = பொருந்தல். புல் → புரை (மு.தா.197)]

புரை³—த்தல் *purai-,* **11** செ.குன்றாவி. (v.t.) பெருமையாதல்; to be great, 'பொழிற்பூம் புகலி' (தேவா.73,11)

[புல் → பல் → பரு → பெரு → பெருமை. (வே.க.3,72–75) புல் → புர் → புரை]

புரை⁴ *purai,* பெ. (n.) ஒப்பு (பிங்.); resemblance.

தெ. புருடு

[புல் → புரை (மு.தா.197)]

புரை⁵ *purai,* பெ. (n.) **1.** உயர்ச்சி; height, elevation, eminence, 'முனிவன் புரைவரைக் கீறி' (பரிபா.11,11) **2.** பெருமை; greatness. "புரையோய் புரையின்று" (பரிபா.20,73).

[புல் → பல் → பரு → பெரு → பெருமை. (வே.க.3,72–75) புல் → புர் → புரை]

புரை⁶ *purai,* பெ. (n.) **1.** உட்டுளை; tubular hollow. "புரைபுரை கனியப் புகுந்து" (திருவாச.22,3) **2.** உட்டுளைப் பொருள் (பிங்.); tube, pipe. **3.** குரல்வளை; wind pipe (C.G.). **4.** விளக்கு மாடம்; small niche in a wall for a lamp. **5.** குற்றம்; defect, fault, blemish. 'புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்' (குறள்,292) **6.** உள்ளோடும் புண், உட்டுளைப் புண்; deep ulcer, fistula, sinus. **7.** கண்ணோய் வகை; cataract. **8.** (உள்ளீடற்ற அல்லது உண்மையில்லாப்) பொய்; false-hood. 'வடிவிற் பிறந்த புகரிலும் புரையின்றிக்கே' (ஈடு, 4,3,9) **9.** களவு (யாழ்.அக.); theft, **10.** நொய்ம்மை (கனமின்மை); lightness, 'புரையாய்க் கனமாய்' (தேவா.174,7) **11.** பைமடிப்பு அல்லது அறை; (வின்.); division or pouch of a bag. **12.** கூறுபாடு; division of a subject. 'புரைவிடுத்துரைமோ' (சீவக.1732)

ம. புர; **க.** பொரெ, பொரகெ; **தெ.** பொர

[புல்லுதல் = துளைத்தல். புல் = உட்டுளையுள்ள நிலைத்திணை வகை, உட்டுளையுள்ள பனை, உட்டுளையுள்ள தென்னை, உட்டுளையுள்ள மூங்கில், சிறுமை. புல் → புன். புன்மை = சிறுமை புல் → புர் → புரை (வே.க.3.101)]

Skt.pura; Gk.poros (passage); L.,OF.,ME.,E.pore (minute opening)

புரை⁷ *purai,* பெ. (n.) **1.** வீடு; house, dwelling. "புரைபுரை பாலிலை செய்ய வல்ல" (திவ்.பெரியாழ்.2,9,1), "மண்புரை பெருகிய மரமுள் கானம்" (ஐங்குறு.319). **2.** தவச்சாலை; hermitage. (கம்பரா.திருவவ.42) **3.** கோயில்; temple, "புரைவயிற் புரைவயிற் பெரிய நல்கி" (பதிற்றுப்.15,37). **4.** அறை; small room. **5.** பெட்டியின் அறை; compartment, as of a box. பெட்டிப்புரைக்குள் வை. **6.** மாட்டுத் தொழுவம் (மாட்டுவா.23); cowstall. 7. இடம்; place. "இருமற்றிரைவிரிபுரையை" (ஞானா.43,21). **8.** மூலை,பக்கம்; corner, side. "பொகுட்டதோர் புரையின் வைகுமால்" (கம்பரா.இரணிய.71). **9.** நிலம், பூமி (பிங்.); earth.

ம. புர; **து.** பொரெ, புரெ (கூரை), **புர.** (வீடு); **துட.**பர்ய் (கூரை); **குட.**பொரெ (கூரை)

[புல் → புர் → புரை (வே.க.3,100)]

புரை⁸ *purai,* பெ. (n.) பழமை (யாழ்.அக.); antiquity.

புரை⁹–த்தல் *purai-,* 11 செ.கு.வி. (v.i.) 1. குற்றப்படுதல்; to be defective. 2. தப்புதல்; to escape. 'உணரவல்லார்க்குப் புரைத்தெங்கும் போகான்' (திருமந்.1774) 3. ஒரு வாய்ப்பாட்டில் (தானத்தே) பாட ஒருவாய்ப்பாட்டிற்கு (தானத்தே) இசை நழுவுதல் (திவாலவா.57,26); (mus.) to slip into one note when trying another. 4. மறைவு வெளிப்படுதல் (வின்.); to come out, as a secret.

தெ.பொரபடு,பொரபோவு

[புல் → புர்→ புரை]

புரைக்கட்டி *purai-k-katti,* பெ. (n.) உட்டுளையுடைய புண்கட்டி (இ.வ.); tumour.

க. பொரெ, புரெ

[புரை + கட்டி]

புரைக்கல் *purai-k-kal,* பெ. (n.) மருந்தரைக்கும் குழியம்மி; small stone slab for grinding drugs.

[புரை + கல்]



புரைக்குத்தல் *purai-k-kuttal,* பெ. (n.) *பிரைக்குத்தல்* பார்க்க; see *pirai-k-kuttal.*

[பிரைக்குத்தல் → புரைக்குத்தல்]

புரைக்குழல் *purai-k-kulal,* பெ. (n.) 1. பிடரியில் அல்லது கழுத்தில் தோன்றும் தசைக்கட்டி; dewlap, goitre, morbid enlargement in the nape of neck. 2. *புரைக்கட்டி* பார்க்க; see *purai-k-katti.*

[புரை + குழல்]

புரைக்குழி *purai-k-kuli,* பெ. (n.) *புரைக்கட்டி (பிங்.)* பார்க்க; see *purai-k-katti* (M.L.).

[புரை + குழி + குள் → குழி]

புரைக்குழை *purai-k-kulai,* பெ. (n.) *புரைக்குழல் 1* பார்க்க; see *purai-k-kulai 1* (M.L.).

[புரை + குழை. குள் → குழை]

புரைக்கேறு–தல் *puraikkēru,-* 7 செ.கு.வி. (v.i.) *புரையேறுதல்(வின்.)* பார்க்க; see *purai-y-ēru-,*

[புரைக்கு + ஏறு–,

மூச்சுக்குழலான புரைக்கு உணவுப்பொருள் சென்று விடுதல்]

புரைகிளை–த்தல் *purai-kilai-,* 4 செ.கு.வி. (v.i.) *புரையோடு–தல்* பார்க்க; see *purai-y-ōdu-,*

[புரை + கிளை–,]

புரைச்சதை *purai-c-cadai,* பெ. (n.) கழலை; sarcoma.

புரைச்சதைப்புண் *purai-cadai-p-puṇ,* பெ. (n.) சீழ்க்கழலை; ulcerated sarcoma.

[புரைச்சதை + புண்]

புரைச்சல் *puraiccal,* பெ. (n.) திணறுமூச்சு (சங்.அக.); suffocation, panting.

[புரை → புரைச்சல்]

புரைசல்¹ *puraišal,* பெ. (n.) **1.** பொத்துகை; mending, darning, braiding.**2.**மந்தணம் (இரகசியம்); secret, private affairs.

[புல் → புள் → புண் → புணர் . புல் → புர் → புரை → புரைசல்]

புரைசல்² *puraišal,* பெ. (n.) **1.** குழப்பம் (யாழ்.அக.); disorder, discord, variance. **2.** துளை; hollow, hole, interstice. **3.** வலுவின்மை; weakness. 'பிறனுடைய புரைசல்களை எப்படி யறியலாம்.' (பஞ்சதந்.**64.**) **4.** குற்றம்; flaw, defect. **5.** மாணிக்கக் குற்றங்களுள் ஒன்று (இ.வ.); flaw in a precious stone.

*[புரை = துளை, சிறுதுளை. புரை → புரைசல் (வே.க.**3.102**)]*

புரைசு *puraišu,* பெ. (n.) பலாசு (மூ.அ.); palas-tree.

புரைசை *puraišai,* பெ. (n.) புரசை பார்க்க; see purašai. "புரைசை யானையிற் கொண்டு" (கம்பரா.பள்ளியடை.**126**)

[புரசை → புரைசை]

புரைத்தல் *puraittal,* பெ. (n.) இன்னாமுரல் (அபசுர) வகை (திருவாலவா. **57,14,** அரும். இசைமரபு); (mus.) a defective note in singing.

[புல் → (புல்லம்) → பொல்லம் = ஓட்டை, துளை. புல் → புரை = குற்றம். புரை → புரைத்தல் = பாடும்போது புரை (குற்றம்) விழுதல், புரைவிழுந்த பாடல்]

புரைத்தைலம் *purai-t-tailam,* பெ. (n.) சீழ்ப்பிடித்துப் புரையோடிய புண்களுக்குப் பயன்படுத்தும் மருந்து; medicated oil for sinus sore. fistula etc.

[புரை + தைலம்]

Skt. taila > த. தைலம்

புரைப்படு-தல் *purai-p-paḍu-,* **20** செ.கு.வி. (v.i.) பொந்துபடுதல்; to become hollow, as a tree. "மரம் புரைபட்டது" (தொல்.சொல்.**390**,உரை).

[புரை + படு-, புல் → புரை = ஓட்டை, துளை. 'படு' து.வி.]

புரைப்பு¹ *purai-p-pu,* பெ.(n) **1.** குற்றம்; fault, defect. "புரைப்பிலாத பரம்பரனே" (திவ்.திருவாய். **4,3,9**). **2.** ஐயுறவு; doubt 'புரைப்பறத் தெளிதல் காட்சி' (மேருமந் **.107**)

*[புல்லுதல் = துளைத்தல். புல் = உட்டுளையுள்ள நிலைத்திணைவகை, புல்லரிசி, சிறுமை. புல் → புர் → புரை = உட்டுளை, உட்டுளைப் பொருள், பொய், குற்றம். புரை → புரைப்பு (வே.க.**3.101,102**]*

புரைப்பு² *puraippu,* பெ.(n) ஒப்பு ; resemblance, likeness. 'புரைப்பின்று' (பு.வெ.**2,6.**)

[புல் → புரை. புரைதல் = ஒத்தல். (மு.தா.197) புரை = ஒப்பு. புரை → புரைப்பு. 'பு'. தொ.பெ.ஈறு]

புரைப்புண் *purai-p-puṇ,* பெ.(n) உள்ளோடும் அல்லது உட்டுளைப் புண்; elongated abscess with only a small orifice, sinus.

[புரை + புண்]

புரைபடு—தல் *purai-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) வருந்துதல்; to be distressed 'புள்ளிநிலனும் புரைபடலரிதென' (பரிபா.2,34,).

[புரை + படு—,]

புரைபோ—தல் *purai-pō-,* 8 செ.கு.வி. (v.i.) *புரையோடு—தல்* பார்க்க; see *purai-y-ōḍu-,* (M.L.)

[புரை + போ—,]

புரைமாறல் *puraimāṟal,* பெ. (n.) புண்புரை ஆறிக்குணமடைதல்; healing of the sinus.

[புரை + மாறல். மாறு → மாறல்]

புரைமை[1] *puraimai,* பெ. (n.) *புரை*[5] பார்க்க; see *purai.*[5] *'மன்பதை காக்கும் நின் புரைமை நோக்காது'* (புறநா.210).

[புரை + புரைமை. 'மை'ப.பெ.ஈறு]

புரைமை[2] *puraimai,* பெ. (n.) ஊடுருவ இடந்தரும் இயல்பு; permeability.

[புரை → புரைமை]

புரைமோர் *purai-mōr,* பெ. (n.) *பிரைமோர்* பார்க்க; see *pirai mōr.* மறுவ. உறைமோர்

[பிரைமோர் → புரைமோர்]

புரைய *puraiya,* இடை. (part.) ஓர் உவமஉருபு (தொல்.பொ.290); particle showing simalarity or resemblance.

[புல்→ புரை(வி.)=பொருந்து, ஒப்பாகு (பெ.) ஒப்பு.புரைய=போல(உவமஒருபு) (சு.வி.36)]

புரையகடிக்கரைசல் *puraiya-kaḍi-k-karaišal,* பெ. (n.) மாங்கிசக்கரைசல்; water distilled from the flesh of birds.

புரையன் *puraiyaṉ,* பெ. (n.) 1.வீடு; house, cottage 2. இலைக்குடில் (பன்னசாலை); dwelling made of leaves.

[புரை → புரையன் = (உட்டுளையுள்ள) வீடு (வே.க.3,102)]

புரையிசிவு *purai-y-išivu,* பெ. (n.) நீர்கோவை சளிநோய்வகை; neuralgia (M.L).

[பிரை + இசிவு]

புரையிடம் *purai-y-iḍam,* பெ. (n.) 1. தோப்பு; garden(T.A.S.ii,51.); 2. வீட்டை யொட்டிய வெறுமையான (காலி) இடம்; vacant space at the backyard of a house. புரையிடத்தில் தான் வைக்கோற் போர் வைத்திருக்கிறோம். (உ.வ.)

[புரை+இடம்.புல்= உட்டுளையுள்ள நிலைத்திணை வகை, உட்டுளையுள்ள பனை, உட்டுளையுள்ள தென்னை. புல் → புரை = உட்டுளைப்பொருள். புரையிடம் = உட்டுளையுள்ள நிலைத்திணை (தென்னை, பனை முதலியன) வளருமிடம்]

புரையுநர் *puraiyunar,* பெ. (n.) ஒப்பவர்; rivals, equals. *"புரையுநரில்லாப் புரமையோய்"* (திருமுரு.280.).

[புரை = ஒப்பு. புரையுநர் = ஈடானவர், நிகரானவர், சம நிலையாளர்.]

புரையுள் *purai-y-uḷ,* பெ.(n.) வீடு(பிங்.); house.

[புல் → புர் → புரை = (உட்டுளையுள்ள) வீடு. புரை → புரையுள் (வே.க.3,102)]

புரையேற்றம் *purai-y-ērram* பெ (v.i.) உணவுப்பொருள் தனக்குரிய வழியிற் செல்லாது உயிர்ப்பு (சுவாச)க் குழலிற் சென்று அடைத்துக் கொள்கை; suffocation due to food entering the wind pipe.

[புரை + ஏற்றம். ஏறு → ஏற்றம்]

புரையேறு-தல் *purai-y-ēṟu-,* 6 செ.கு.வி(v.i.) உணவுப்பொருள் தனக்குரிய வழியிற் செல்லாது மூச்சுக்குழலிற் சென்று அடைத்துக்கொள்ளுதல்; to be suffocated by food passing into the wind pipe. சாப்பிடும்போது பேசாதே, புரையேறிவிடும் (உ.வ.).

[புரை + ஏறு-,]

புரையோடல் *purai-y-ōḍal.* பெ. (n.) புரையோடுதல்; becoming fistulous.

[புரை + ஓடல். ஓடு → ஓடல்.]

புரையோடிய *purai-y-ōḍiya,* பெ.எ. (adj.) பன்மடி வளைவுகளுடைய; sinuous.

[புரை + ஓடிய. ஓடு → ஓடிய]

புரையோடு-தல் *purai-y-ōḍu-,* 5 செ.கு.வி (v.i.) புண்ணில் உட்டுளையுண்டாதல்; to become fistulous as an ulcer.

[புரை + ஓடு-.]

புரையோர்¹ *puraiyōr,* பெ. (n.) 1.பெரியோர்; eminent persons. *"வேட்கைப்புரையோர்"* (பதிற்றுப். 15,31,) 2. மெய்ப்பொருளுணர்ந்தோர் men of real wisdom.*"புரையோரைப் படர்ந்து நீ"* (கலித்.15.)

E. peer,an equal, a nobleman; L. peer, equal.

[புல் → புலம் → புலன்.புல் → புரை. புரைதல் = பொருந்துதல் ஒப்பாதல். புல் → புரை → புரைய போல. புரை → புரையோர் = ஒத்தோர், உவமை கூறத்தக்க பெரியோர். 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை' (தொல்.1222) என்றதனால் உயர்ந்த பொருளே உவமை கொள்ளப்படுவது மரபு எனவறிக]

புரையோர்² *puraiyōr,* பெ. (n.) காதல் மகளிர்; sweet hearts. *'புரையோருண்கட்டுயில்"* (பதிற்றுப்.16,18.).

[புரை → புரையோர்]

புரையோர்³ *puraiyōr,* பெ. (v.i.) 1. கீழோர் (சூடா.); base persons of low rank, 2. திருடர் (பிங்.); robbers.

மறுவ. புழுக்கை.

[புல் → புன்மை = சிறுமை. புல் → புர் → புரை = உள்ளீடற்ற அல்லது உண்மையில்லாப்பொய், நொய்ம்மை (கனமின்மை), குற்றம் (வே.க.3.11.102) புரை → புரையோர்]

புரைவளர்–தல் *purai-vaḷar-,* 3 செ.கு.வி. (v.i.) கண்ணில் சதை வளர்தல் (இ.வ.); to have cataract developed in the eye.

[புரை + வளர்–,]

புரைவு *puraivu,* பெ. (n.) பொருத்துவாய் தையல்; stitching.

[புரை → புரைவு. 'வு' தொ.பெ.ஈறு]

புரைவை–த்தல் *purai-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) துழாயாக்கல்; to fistulate

[புரை + வை–,]

புரோரவீளை *purōra-v-īḷai,* பெ.(n.) ஈளை நோய் வகையுளொன்று; thymic asthma

மறுவ. புரையிசிவு

புல்¹ *pul,* பெ. (n.) மூங்கிற் குடும்பத்தைச் சேர்ந்த புல்வகை (தொல். பொ. 641) (திவா.); grass family having exogenous toughness of structure as bamboo. **2.** பனை (மலை.); palmya-palm. "அன்றில் புற்சேக்கை புக்கு" (கல்லா.38,10). **3.** பதினேழாம் மீன். (அனுடம்); the 17th naksatra **4.** தென்னை (தைலவ. தைல.); coconut palm. **5.** நிலத்திணை வகை; a vegetable kingdom. **6.** ஒரு சார் விலங்குகளின் உணவான பூடு வகை; grass. பசும்புல் தலை காண்பரிது (குறள், 16) **7.** புதர் (பிங்); thicket. **8.** கம்பு; bulrush millet. **9.** புன்செய் தவசம் (புறநா.248); any grain other than paddy. **10.** *புல்லரிசி* பார்க்க; see *pullariśi.* **11.** மருந்துச் செடி வகை (திவா.); a kind of medicinal plant. **12.** சிறுமை; smallness, in quantity, number or value. புல்லுளை (கம்பரா. வரைகாட்சி.70). **13.** இழிவு; meaness, lowness, baseness. "புன்கோட்டி" (நாலடி, 255) **14.** கபில நிறம் (பிங்.); tawny colour.

ம. க., கோத., துட. புல்; தெ. புலு, புல்லு, பில்லு; து. புல்லு, படீ. குல்லு, குட. பில்லீ

[புல்லுதல் துளைத்தல். இவ்வினைச்சொல் வழக்கிறந்தது. புல்உட்டுளையுள்ள நிலைத்திணை வகை, ஊனுண்ணா விலங்குணவான தாளுள்ள நிலைத்திணை வகை, உட்டுளையுள்ளபனை, பனைவடிவான நாள் (அனுடம்), உட்டுளையுள்ள தென்னை, உட்டுளை யுள்ளமூங்கில், புல்லாங்குழல், புற்போன்ற கம்பம் பயிர், புல்லசிரி (வே.க. 3.101).]

புல்வகை

1. அறுகம்புல்	10. நாணற்புல்
2. இலைப்புல்	11. நெல்லுப்புல்
3. எலிக்குச்சிப்புல்	12. பீனசப்புல்
4. ஒட்டுப்புல்	13. பேய்ப்புல்
5. காவட்டம்புல்	14. மத்தங்காய்ப்புல்
6. கன்றுக்குட்டிப்புல்	15. மாந்தப்புல்
7. கோரைப்புல்	16. வயற்புல்
8. சோதிப்புல்	17. வாசனைப்புல்
9. தருப்பைப்புல்	

புல்² *pul,* பெ.(n.) (பிங்.) **1.** புணர்ச்சி; copulation. **2.** சிவல்; partridge.

[புல்லுதல் = பொருந்துதல், புணர்தல் (வே.க. 3, 62) புல்(லு) → புல்]

புல்³ *pul,* பெ. (n.) புலி (திவா.); tiger.

ம., க., தெ. புலி; து. பில்லி

[புல்லுதல் → பொருந்துதல். புல் → புல்லி → புலி = முன்னங் கால்களால் தழுவிப் பற்றும் வேங்கை அல்லது சிறுத்தை (வே.க. 3,62)]

புல்கல் *pulgal,* பெ.(n.) அணைதல்; embracing.

[புல்கு → புல்கல்]

புல்கு–தல் *pulgu-,* 6 செ.கு.வி.(v.i.) 1. அணைதல்; to embrace. 'அன்னந் தன்னினம் பெடையொடும் புல்கி' (தேவா. 584. 9). 2. புணர்தல்; to copulate. 3. நண்பினராய் மருவுதல் (யாழ்ப்); to be attached, as friends.

ம. புல்குக, புல்லுக.

[புல்லுதல் = பொருந்துதல். புல் → புல்கு (வே.க. 3,62)]

புல்சுருட்டை *pulšuruttai,* பெ.(n.) பாம்புவகையு ளொன்று; a variety of snake.

[புல் + சுருட்டை. சுருள் → சுருட்டை]

புல்நாகம் *pul-nāgam,* பெ.(n.) நாகப்பாம்பு வகை (இ.வ.); a kind of cobra.

[புல் + நாகம்]



புல்நாகன் *pulnāgan,* பெ.(n.) தாழம்பூ விலிருக்கும் சிறு நாகம்; snake in the flower of fragrant screw pine.

மறுவ. சிறுநாகம்

[புல் + நாகன்]

புல்பத்தையடி–த்தல் *pul-pattai-y-adi-,* 4 செ.கு.வி. (v.i.) புல் முளைத்த பத்தைகளை வரிசையாய் வைத்துக் கட்டுதல்; to turf. (C.E.M).

[புல் + பத்தை + அடி. பற்றை = புல் வளர்ந்த மண்கட்டி. பற்றை → பத்தை.]

புல்மரம் *pulmaram,* பெ.(n.) தென்னைமரம்; coconut palm.

[புல் + மரம்]



புல்மானம் *pul-mānam,* பெ.(n.) *புன்மானம் (வின்)* பார்க்க; see *punmānam.*

[புல் + மானம். புல் → புலம் → புலர். புலர்தல் = தெளிதல், தெளிவாதல். புல் → புலர்ச்சி = விடிகை. புலர் → புலரி = விடியல். புல்லுதல் = பொருந்துதல், புணர்தல் (வே.க. 3,62–64)]

புல்முளை–த்தல் *pul-mulai-,* 4 செ.கு.வி. (v.i.) *புல்லெழு–தல் (கொ.வ.)* பார்க்க; see *pul-l-elu-,*

[புல் + முளை]

புல்முனைப்பூச்சி *pulmunai-p-pūcci,* பெ.(n.) சிறு புழு அல்லது உயிரி வகையு ளொன்று; a kind of small-worm or insect.

[புல்முனை + பூச்சி]

புல்மேய்–தல் *pul-mēy-,* 3 செ.கு.வி. (v.i.) *புல்லு மேய்–தல்* பார்க்க; see *pullu-mēy-,*

[புல் + மேய்]

புல்ல[1] *pulla,* வி.எ.(adv.) பொருந்த; suitably, agreeably.

[புல்லுதல் = பொருந்துதல். புல் → புல்ல (வே.க. 3,63)]

புல்ல[2] *pulla,* இடை. (part.) உவமவுருபு; particle showing similarity or resemblence. 'புல்லப் பொருவப் பொற்பப் போல' (தொல். உவம. 11)

[புல்லுதல் → பொருந்துதல். புல் → புல்ல (வே.க.3,63) = ஒன்றினோடு பொருந்திப் பார்ப்பதை உணர்த்துவது]

புல்லகச்சி *pullagacci,* பெ. (n.) சேம்பு; colocasia.

புல்லகண்டங்கரும்பு *pullakaṇḍaṅ karumbu,* பெ. (n.) பேய்க்கரும்பு; wild sugarcane.

[புல்ல + கண்டம் + கரும்பு. கள் → கண்டு → கண்டம். கரு → கரும்பு]

புல்லகண்டம்[1] *pullakaṇḍam,* பெ. (n.) **1.** ஒருவகைக் கரும்பு (நாநார்த்த 178) ; a kind of sugar-cane. **2.** கண்ட சருக்கரை (பிங்.); sugan candy.

தெ. புல்லகண்டமு

[புல் → புல்ல + கண்டம். தென்னை, பனை, மூங்கில் போன்று கரும்பும் புல்லினத்தைச் சார்ந்தது. இதைப் புல் (grass)லுக்குப் பொருள் சொல்லும் போது any plant of the monocotyledonous family Gramineae, the most important to man in the vegetable kingdom, with long, narrow leaves and tubular stems, including wheat and other cereals, reeds (but not sedges), bamboo and sugar-cane என்று சேம்பரார் ஆங்கில அகரமுதலி குறித்துள்ளதைக் காண்க.*]*

புல்லகண்டம்[2] *pullagaṇḍam,* பெ.(n.) கருப்பஞ்சாறு; juice of sugarcane.

[புல் → புல்ல + கண்டம்]

புல்லகம் *pullagam,* பெ. (n.) மகளிர் தலைக்கோலத்தில் ஒருறுப்பாகிய நெற்றியணி; women's ornament for the forehead,part of 'talai-k-kōlam'. *'தொய்யகம் புல்லகந் தொடர்ந்த தலைக்கணி'* (சிலப்.6,107).

[புல்லுதல்= பொருந்துதல். புல் → புல்லகம்= நெற்றியோடு பொருந்தியிருக்கும் அணி]

புல்லங்கண்டம் *pullaṅkaṇḍam,* பெ. (n.) சருக்கரைக்கட்டி; jaggery.

மறுவ. மண்டை வெல்லம்

[புல் → புல்லம் + கண்டம்]

புல்லங்காடனார் *pullaṅgāḍaṉār,* பெ. (n.) 5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a poet of fifth century.

இவர் கைந்நிலை என்ற நூலை இயற்றியுள்ளார்

புல்லட்டை *pul-l-aṭṭai,* பெ. (n.) பயிரையழிக்கும் பூச்சிவகை (இ.வ.); slug species of vaginula.

[புல் + அட்டை. ஒட்டு → அட்டு → அட்டை]

புல்லடை *pullaḍai,* பெ (n.) அப்பம்; rice-cake.

புல்லணர் *pul-l-aṇar,* பெ. (n.) *புல்லணல் (யாழ்.அக)* பார்க்க; see *pullaṇal.*

[புல் +அணல் – புல்லணல் → புல்லணர்]

புல்லணல் *pullaṇal,* பெ. (n.) இளந்தாடி; down on the chin. 'புல்லணற்காளை ' (புறநா.258.)

[புல் +அணல். அண் → அணல்]

புல்லணை[1] *pul-l-aṇai,* பெ. (n.) புற்படுக்கை (வின்); bed of grass.

[புல் +அணை. அள் → அண் → அண → அணை = இருக்கை,மெத்தை, படுக்கை]

புல்லணை[2] *pul-l-aṇai,* பெ. (n.) முன்னிட்டி (புதுவை.); manger, crib.

[புல் + அணை]

புல்லம்[1] *pullam,* பெ. (n.) **1.**எருது; bull. *'புல்லமேறிதன் பூம்புகலியை'* (தேவா. **76,11.**) **2.** விடையோரை (சூடா.); taurus of the zodiac.

[புல் → புல்லம். திரண்ட உருவமுடையது]

புல்லம்[2] *pullam,* பெ. (n.) வசைமொழி; abuse, *'புல்லம்பேசியும்'* (தேவா. **380,6.**).

[புல்லுதல்=துளைத்தல். புல்= சிறுமை, இழிவு. புல்→புல்லம்=இழிவுபடக் கூறும் வசவு,]

புல்லம்[3] *pullam,* பெ. (n.) பூ (யாழ்.அக.); flower.

[புல் → புலர். புலர்தல் = தெளிதல், வடிதல். புல்→ புல்லம் = (இதழ்)விரிந்த பூ]

புல்லமருது *pullamarudu,* பெ. (n.) மரவகை; paniculate winged myrobalan.

புல்லர்[1] *pullar,* பெ. (n.) வேடர்(சது.); hunters.

க. புளுங்காரர (வலை விரித்துப் பறவைகளைப் பிடிப்பவன்)

[வில் → வில்லர் = வில்லேந்தி வேட்டையாடுபவர், வேடர். வில்லர் → பில்லர் → புல்லர்.]

புல்லர்[2] *pullar,* பெ. (n.) சிறுமைக்குணமுடையவர்; mean or petty-minded person.

[புல் → புல்லர். புல் = சிறுமை. எ.கா. புன்மை, புல்லியர், புன்செய், புன்செயல், புன்னகை (ஒ.மொ.2,96.)]

புல்லரி[1]–த்தல் *pul-l-ari-,* **4** செ.கு.வி. (v.i.) **1.** மயிர்க்கூச்செறிதல்; to make the flesh creep; to horripilate. **2.** மாடு முதலியன உணவு விருப்பமின்றிப் புல்லைத் துழாவுதல்; to show aversion towards fodder, as cattle. *'மாடு தீவனந் தின்னாது புல்லரிக்கும்'* (மாட்டுவா.**88.**).

மறுவ. மயிர்க்கூச்செறிதல்

தெ. புல்லரி

[புல்+அரி–, அரித்தல் = தினவெடுத்தல்]

புல்லரி[2] *pullari,* பெ. (n.) புற்கட்டு; sheaf of grass.

[புல் + அரி. அரி = கதிர்க்கட்டு.]

புல்லரி³ *pullari,* பெ. (n.) மேய்ச்சல்வரி; tax on grazing fine levied on stray cattle (C.G).

தெ.புல்லரி

[புல்வரி → புல்லரி]

புல்லரிச்சாவி *pullari-c-cāvi-,* பெ. (n.) புல்முளையாத காலத்துச் செய்யும் வரிநீக்கம்; remission of tax when grazing lands become barren or devoid of grass (C.G).

[புல்லரி + சாவி]

புல்லரிசி *pul-l-ariši,* பெ. (n.) வற்கட (பஞ்ச)க் காலத்தில் ஏழைகள் உண்ணும் அரிசிபோன்ற தவசம் (புறநா.**248** உரை); grain of cluster grass eaten in time of scarcity.

[புல்லுதல் = துளைத்தல். புல்= உட்டுளை யுள்ள நிலைத்திணைவகை புற்போன்ற கம்பம், புல்லரிசி (வேக.3,101) புல் +அரிசி]

புல்லரிப்பு *pul-l-arippu,* பெ. (n.) உணர்வின்மி குதியால் தோலில் ஏற்படும் சிலிர்ப்பு நிலை, புல்லரிக்கிற நிலை; thrilling, exciting (state). புல்லரிப்பை ஏற்படுத்தும் நிகழ்ச்சி.

[புல் + அரிப்பு]

புல்லரிவரி *pullari-vari,* பெ. (n.) *புல்லரி²* பார்க்க; see *pullari²* (C.G.).

[புல்லரி + வரி]

புல்லரிவாள் *pullarivāḷ,* பெ. (n.) நெற்பயிரினிடையிலுள்ள புல்லையறுக்கப் பயன்படுத்தும் பன்னறுவாள்; a kind of sickle.

[புல் + அரிவாள். அரிதல் = சிறிது சிறிதாக அறுத்தல். வள் → வாள் = வளைந்த கத்தி]



புல்லல் *pullal,* பெ. (n.) ***புல்கல்*** பார்க்க; see *pulgal.*

மறுவ. மருவுதல், நண்ணல், சார்தல், அணுகல், அருகுதல், சிவணல், துன்னல், அண்ணல். தழுவுதல், கட்டிப்பிடித்தல்

[புல் → புல்லல்]

புல்லவட்டக்காசு *pullavaṭṭa-k-kāšu,* பெ. (n.) பழைய காசுவகை (பணவுடு. **114**); an ancient coin.

[புல்லவட்டம் + காசு]

புல்லவம் *pullavam,* பெ. (n.) சிறுநாவல் மரம்; a tree.

[புல் → புல்லவம்]

புல்லவை *pullavai,* பெ. (n.) சிறியோர் (கல்வியறிவு குறைந்தோர்) அவை; council of less learned. 'புல்லவையுள் பொச்சாந்தும்' (குறள்,719.)

[புல் + அவை]

புல்லற்கூறு—தல் *pullaṟ-kūṟu-,* 5 செ.கு.வி. (v.i.) ஏசுதல்; to abuse, revile.

'தலைமகள் பரத்தையைப் புல்லற் கூறியது' (பு.வெ. 12, பெண்பாற். 10, கொளு, உரை.).

[புல் → புல்லம் = வசைமொழி. புல்லல் + கூறு–,]

புல்லறிவர் *pul-l-arivar,* பெ. (n.) *புல்லறிவாளர்* (நிகண்டு) பார்க்க; see *pullarivāḷar.*

[புல் = சிறுமை, இழிவு. புல் + அறிவர். அறிவு → அறிவர்]

புல்லறிவாண்மை *pul-l-arivāṇmai,* பெ. (n.) அறிவின்மை (குறள், அதி.5.); low understanding, ignorance.

[புல் + அறிவு + ஆண்மை]

புல்லறிவாளர் *pul-l-arivāḷar,* பெ. (n.) மேம்போக்கான அறிவுடையவன் (குறள், 841, உரை); men of low understanding; foolish men; shallow pretenders to knowledge.

[புல் + அறிவு + ஆளர்]

புல்லறிவினார் *pul-l-arivinār,* பெ. (n.) *புல்லறிவாளர்* பார்க்க; see *pullarivāḷar.* *'வாழ்நாளைப் போக்குவார் புல்லறிவினார்'* (நாலடி, 327.).

[புல் + அறிவினார்]

புல்லறிவு *pul-l-arivu,* பெ. (n.) அறியாமை; ignorance, little knowledge. *'புல்லறிவு காட்டி விடும்'* (நாலடி, 314.).

[புல் = சிறுமை, இழிவு. புல் + அறிவு]

புல்லறுகு *pul-l-arugu,* பெ. (n.) அறுகு வகை (இ.வ.); a variety of bermuda grass.

[புல் + அறுகு.]

புல்லன் *pullaṉ,* பெ. (n.) **1.** அறிவற்றவன்; ignorant person; **2.** இழிந்தவன்; vile, base person. *'கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளென'* (கம்பரா. தாடகை. 72). **3.** ஒழுக்க மில்லாதவன்; man without character.

[புல் → புன்மை = சிறுமை, இழிவு. புல் → புல்லன். 'அன்'. ஆ.பா.ஈறு.]

புல்லா *pullā,* பெ. (n.) ஆறடி கொண்ட நீட்டலளவைக் கோல் (வின்.); six foot rod, used as a linear measure.

க.புள்ளெ; **தெ.** புல்ல; **து.** புல்லே

[புல் →பல்= பல்காற் பறவை. புல்→ புது → புதா → புதை= அம்புக்கட்டு. புல் → புல்லா = திரண்டகோல், அளவு கோல்]

புல்லாக்கு *pullākku,* பெ. (n.) *புலாக்கு* பார்க்க; see *pulākku.*

[புலாக்கு → புல்லாக்கு.]

புல்லாங்கழி *pullāṅ-kaḻi,* பெ. (n.) *புல்லாங்குழல்* பார்க்க; see *pullāṅ-kuḻal.*

[புல் = உட்டுளையுள்ள நிலைத்திணை வகை, உட்டுளையுள்ள மூங்கில். புல் + ஆம் + கழி. புல்லாங்கழி = மூங்கில் கழியால் செய்யப்பட்ட இசைக்கருவி.]

புல்லாங்குழல் *pullāṅ-kuḻal,* பெ. (n.) ஒருபுறம் அடைப்பும் குழலில் வாய் வைத்து ஊத ஒருதுளையும், வாயால் ஊதிய காற்று வெவ்வேறு வகைகளில் வெளியேறுவதற்கு ஏற்ப ஆறுமுதல் எட்டுத்துளைகளும் உடைய ஒரு இசைக் கருவி ; flute.

ம. புல்லாங்குழல்

[புல் + ஆம் + குழல். புல் = உட்டுளை, உட்டுள்ளயுள்ள பயிர்வகை அல்லது மூங்கில். புல்லாங் குழல் = மூங்கிற் குழல் (த.வ. 1, 69.)]



புல்லாஞ்சி *pullāñji,* பெ. (n.) செடிவகை; a plant. *'புல்லாஞ்சிப் பழமும்'* (இராசவைத். 143).

புல்லாடவன் *pullāḍavaṉ,* பெ. (n.) *புல்லாள், 1* பார்க்க; see *pullāḷ 1. 'புல்லாடவனை யறியா திரையென' (துணிகைப்பு. களவு. 415.).*

[புல் + ஆடவன்]

புல்லாணி *pullāṇi,* பெ. (n.) திருப்புல்லாணி; Tirumāl shrine. புன்னை முத்தம் பொழில் சூழ்ந்து அழகாயப் புல்லாணியே (நாலா. 1768)

[புல் + அணை – புல்லணை → புல்லாணி]

இராமன் புல்லணை மேல் கிடந்து வருணனை வேண்டிய இடம் என்று தொல்கதை வழங்குகின்றது.

புல்லாந்தி *pullāndi,* பெ. (n.) பூலா (தைலவ. தைல.); a large, often scandent shrub.

புல்லாநீர் *pullānīr,* பெ. (n.) அரத்தம்; blood.

புல்லாம்பாசி *pullām-pāsi,* பெ. (n.) பாசிவகை (இ.வ.); a kind of moss.

[புல் + ஆம் + பாசி]

புல்லாம்பூச்சி *pullāmpūcci,* பெ. (n.) *புல்லாமொய்ச்சி (இ.வ.)* பார்க்க; see *pullā-moycci.*

[புல்லாம் + மொய்ச்சி – புல்லாம்மொய்ச்சி → புல்லாம்பூச்சி]

புல்லாமகம் *pullāmagam,* பெ. (n.) சேவகனார் கிழங்கு; a kind of medcinal root.

புல்லாமணக்கு *pul-l-āmaṇakku,* பெ. (n.) நீர்ப்பனை; creeping aumanac. (M.M. 55).

[புல் + ஆமணக்கு]

புல்லாமொய்ச்சி *pullā-moycci,* பெ. (n.) புல் நிறைந்த தரை (கொ.வ.); grassy ground.

[புல் + ஆம் + மொய்ச்சி. மொய் → மொய்ச்சி ஒ.நோ: காய் → காய்ச்சி]

புல்லார்¹–தல் *pul-l-ār-,* 3 செ.கு.வி. (v.i.) (புல்லைத் தின்னுதல்) தோல்வியுறுதல்; lit. to eat grass to submit, surrender. *'பகைவர் புல்லார்க'* (ஐங்குறு. 4).

[புல் + ஆர்–,]

புல்லார்தல் என்னும் வழக்கு மற்போரில் தோற்றுப் போனவன் சிறிது புல்லைத் தின்ன வேண்டுமென்று இருந்ததாகத் தெரிய வருகின்றது. (சொ.க. 23)

ஒ.நோ: மண்ணைக் கவ்வுதல்

புல்லார்² *pullār,* பெ. (n.) பகைவர் (திவா.); foes, enemies.

[புல்லு + ஆ + அர். 'ஆ' எ.ம. இடை நிலை.

புல்லார் = நட்புச் செய்யும் தன்மை இல்லாதவர், இகலுபவர்]

புல்லாவிரை *pullāvirai,* பெ. (n.) செடிவகை (இ.வ.); a plant.

புல்லாள்[1] *pul-l-āḷ,* பெ. (n.) 1. புல்லுரு பார்க்க; see pulluru. *'புல்லாளைச் செய்து கொல்லையிலே வைத்தாற் போலே'* (இராமநா. கிட்கி. 5). 2. ஆறலை கள்வன்; highway robber. *'புலவு வில்லுழவிற் புல்லாள் வழங்கும்'* (பதிற்றுப். 15, 12).

[புல் + ஆள்]

புல்லாள்[2] *pul-l-āḷ,* பெ. (n.) புல்வெட்டிக் கொணருங் கூலியாள் (இ.வ.); grass-cutter.

[புல் + ஆள்]

புல்லி *pulli,* பெ. (n.) 1. புறவிதழ் (பிங்.); external petal of a flower, opp. to alli. 2. பூவிதழ் (சங்.அக.); petal of a flower.

[புல் → புல்லி]

புல்லிகம் *pulligam,* பெ. (n.) சிறுதேக்கு; bushy fire brand teak.

புல்லிகை *pulligai,* பெ. (n.) கன்னசாமரை (கலித். 96, 11, உரை.); tassels for horse's ears.

[புல்லி → புல்லிகை]

புல்லிகைச்சாமரை *pulligai-c-cāmarai,* பெ. (n.) *புல்லிகை* பார்க்க; see *pulligai. 'மென் காதின் புல்லிகைச் சாமரை'* (கலித். 96).

[புல்லிகை + சாமரை]

புல்லிடைமூலி *pulliḍai-mūli,* பெ. (n.) மூலிகை வகையு ளொன்று; a herb.

புல்லிண்டல் *pulliṇḍal,* பெ. (n.) பேய்க்கரும்பு; wild sugarcane.

தெ. புல்லகண்ட (ஒருவகைக்கிழங்கு)

[புல்லகண்டம் → புல்லிண்டல்]

புல்லிதழ் *pul-l-idaḻ,* பெ. (n.) *புல்லி* பார்க்க; see *pulli. 'மலரி னகவிதழொடு புல்லிதழு மொன்றுதல்'* (சிவப். பிர. சோண. 50.).

[புல் + இதழ்]

புல்லிது *pullidu,* பெ. (n.) பூ (யாழ்.அக.); flower.

[புல் → புல்லிது]

புல்லியம் *pulliyam,* பெ. (n.) *புளிநரளை (மலை.)* பார்க்க; see *puḷinaraḷai.*

புல்லியார் *pulliyār,* பெ. (n.) இழிந்தவர்; low, base persons. *'பரத்தையருள்ளும் புல்லியாரை விரும்புவான்'* (ஐங்குறு. 164, உரை.).

[புல்= சிறுமை, இழிவு. புல் → புல்லியார் = இழிகுணமுடையார்]

புல்லிலைவைப்பு *pul-l-ilai-vaippu,* பெ. (n.) இலைகளால் வேயப்பட்ட குடிசை களையுடைய ஊர்; village of leafy huts. புல்லான்வழங்கும் புல்லிலைவைப்பான் (பதிற்றுப்.15,13.).

[புல் + இலை + வைப்பு]

புல்லிவட்டம் *pulli-vaṭṭam,* பெ. (n.) பூவின் வெளிவரிசை இதழ், புறவிதழ்; sepals (of flower)

[புல்லி+ வட்டம்]



புல்லினத்தாயன் *pullinattāyan,* பெ. (n.) ஆட்டிடையன்; shepherd. *'புல்லினத் தாயனை நீயாயின்'* (கலித். 113.).

[புல்லினம் + அத்து + ஆயன். 'அத்து' சாரியை]

புல்லினத்தான் *pullinattān,* பெ. (n.) புல்லினத்தாயன் (கலித். 107) பார்க்க; see pullinattāyan.

[புல்லினம் + அத்து + ஆன். 'அத்து' சாரியை. 'ஆன்' ஆ.பா.ஈறு]

புல்லினம் *pul-l-inam,* பெ. (n.) ஆட்டினம்; goats and sheep, dist. fr. nallinam. *'புல்லினத் தார்க்கும் குடஞ்சுட் டவர்க்கும்'* (கலித். 107.).

[புல் + இனம். நல்லினம் = ஆநிரை. அதற்கு எதிரானது அதாவது சிறுமையான ஆட்டினம்.]

புல்லீரம் *pul-l-īram,* பெ. (n.) சிறு ஈரம்; slight moisture. *'புல்லீரம் போழ்தி னுழவே போல்'* (நாலடி, 115.).

[புல் = சிறுமை, சிறுதன்மை. புல் + ஈரம்]

புல்லு[1]–தல் *pullu-,* 6 செ.குன்றாவி. (v.t.) 1. தழுவுதல்; to embrace *'என்னாகம்..... புல்லி'* (பு.வெ. 9, 49) 2. புணர்தல்; to copulate. தம்மைப் புலந்தாரைப் புல்லாவிடல் (குறள், 1303.) 3. பொருந்துதல்; to agree, suit. *'அல்லா வாயினும் புல்லுவவுளவே'* (தொல். பொ. 221) 4. வரவேற்றல்; to receive warmly. *'புல்லா வகம் புகுமின்...... என்பவர் மாட்டு'* (நாலடி, 303) 5. ஒத்திருத்தல்; to resemble equal. *'புத்தே ளுலகிற் பொன்மரம் புல்ல'* (தொல். பொ. 289, உரை.) 6. ஒட்டுதல் (வின்.); to cling to; to join.

[உல் → புல் → புல்லு–]

புல்லு[2]–தல் *pullu-,* 6 செ.கு.வி. (v.i.) நட்புச் செய்தல்; to contract friend-ship. *'ஒல்லா ரிடவாயிற் புல்லிய பாங்கினும்'* (தொல். பொ. 76, உரை.).

[புல் → புல்லு. (வே.க. 3,62)]

புல்லு[3] *pullu,* பெ. (n.) *புல்[1]* பார்க்க; see *pul[1]*.

க. புல்லு

[புல் → புல்லு]

புல்லு[4] *pullu,* பெ. (n.) 1. கிட்டிப்புள் (கொ.வ.); the cat in the game of tipcat. 2. கொடியின் தாங்கு கட்டை (இ.வ.); wooden toggle of a clothes - line.

[புல்லுதல் = பொருந்துதல். புல் → புல்லு]

புல்லுக்கட்டு *pullu-k-kaṭṭu,* பெ. (n.) புற்கட்டு; bundle of grass. *'புல்லுக் கட்டும் விறகுஞ் சுமந்தபேர்'* (தனிப்பா. i, 266.).

மறுவ. அரிகெடை, அரிகட்டு.

க. பூமாழ

[புல் → புல்லு + கட்டு]

புல்லுக்கட்டை *pullu-k-kaṭṭai,* பெ. (n.) அறுத்து விட்ட புல்லின் அடிப்பாகம் (வின்.); stubble of grass.

[புல்லு + கட்டை]

புல்லுக்கற்றை *pullu-k-kaṟṟai,* பெ. (n.) புல்லுத்திரள் (யாழ்.அக.); grass-pile.

மறுவ. அரிகெடை, அரிதாள்

[புல் → புல்லு + கற்றை]

புல்லுக்காரி *pullu-k-kāri,* பெ. (n.) புல் விற்பவள்; woman who gathers and sells grass.

[புல் → புல்லு + காரி]

புல்லுக்குருவி *pullu-k-kuruvi,* பெ. (n.) காடைவகை (வின்.); kind of quail.

[புல் → புல்லு + குருவி]



புல்லுச்சத்தகம் *pullu-c-cattagam,* பெ. (n.) *புல்வாரி (யாழ்.அக.)* பார்க்க; see *pul-vāri.*

[புல் → புல்லு + சத்தகம்]

புல்லுச்செதுக்கி *pullu-c-cedukki,* பெ. (n.) **1.** புல்லைச் செதுக்குங் கருவி; grass-hoe. **2.** பாவிலுள்ள சிக்கல்களை எடுக்குங் கருவி; weaver's brush.

மறுவ. புல்வெட்டி.

[புல் → புல்லு + செதுக்கி]



புல்லுத்தடுக்குஞ்சூரைக்கொடி *pullu-t-taḍukkuñ-cūrai-k-koḍi,* பெ. (n.) செடிவகை (இ.வ.); a shrub.

[புல் → புல்லு + தடுக்கும் + சூரைக்கொடி]

புல்லுத்தரை *pullu-t-tarai,* பெ. (n.) புற்படர்ந்த நிலம்; pasture, meadow.

து. புல்லடி.

[புல் → புல்லு + தரை]

புல்லுநர் *pullunar,* பெ. (n.) நண்பர் (சூடா.); friends.

[புல்லுதல் = பொருந்துதல், தழுவுதல், நட்புச் செய்தல். புல் → புல்லுநர் = நட்புச் செய்பவர், நண்பர்]

புல்லுநீர் *pullu-nīr,* பெ. (n.) வெண்ணீர் (விந்து நீர்); semen.

[புல்(லு) + நீர்]

புல்லுப்பற்றை *pullu-p-paṟṟai,* பெ. (n.) புல்வளர்ந்த மண்கட்டி(கொ.வ.); turf, sod.

[புல் → புல்லு + பற்றை]

புல்லுப்பிடி–த்தல் *pullu-p-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) புல்லடர்ந்து விடுதல் (வின்.); to be over grown with grass.

மறுவ. கோரைப்பற்றுதல்

[புல் → புல்லு + பிடி–,]

புல்லுமாறு *pullumāṟu,* பெ. (n.) ஊகம் புல்லாலான துடைப்பம் (நெல்லை.); broom made of a kind of grass.

மறுவ. பூந்துடைப்பம், சீவு துடைப்பம்.

[புல் → புல்லு + மாறு]

புல்லுமேய்[1]–தல் *pullu-mēy-,* 3 செ.கு.வி. (v.i.) புல்லாற் கூரை போடுதல் (வின்.); to thatch.

மறுவ. கூரைவேய்தல்.

[புல் → புல்லு + மேய்–,]

புல்லுமேய்[2]–தல் *pullu-mēy-,* 3 செ.கு.வி. (v.i.) புல்லுத்தின்னுதல்; to graze.

[புல் → புல்லு + மேய்–, மே → மேல், மே → மேய் = புல்லின் மேற்பகுதியை (விலங்கு) தின்னுதல்]

புல்லுமேய்[3]–த்தல் *pullu-mēy-,* 4 செ. குன்றாவி. (v.t.) ஆடுமாடுகளைப் புல்லுத் தின்னச் செய்தல்; to graze.

[புல் → புல்லு + மேய்–. மேய்தல் (த.வி.) – மேய்த்தல் (பி.வி.)]

புல்லுயிர் *pul-l-uyir,* பெ. (n.) (சிறுஉயிர்) குழந்தை; lit, little life, child. ***'புல்லுயிர் தன்னோடு நின்றுழி'*** (சீவக. 332.).

[புல் + உயிர்]

புல்லுரு *pul-l-uru,* பெ. (n.) பயிரையழிக்கும் விலங்கு பறவை முதலியன வெருவியோடும் படி புல்லாற் செய்து புலத்தில் வைக்கப்பட்ட உருவம்; scare crow made of grass. ***'மாபறவை புல்லுரு வஞ்சுவபோல்'*** (நீதிநெறி. 23.).

மறுவ. சோளக்கொல்லை பொம்மை.

[புல் + உரு]

புல்லுருவி *pulluruvi,* பெ. (n.) **1.** மரஞ் செடிகளில் ஒட்டி வளரும் பூடுவகை; honey suckle mistletoe. ***'கீரைக்குப் புல்லுருவி கீழே முளைத்தாற் போல்'*** (இராம நா. அயோத். 20.) **2.** பயிரோடு கலந்திருக்கும் புல்; tares. 'புல்லுருவியை யெல்லாம் களைந்தால்தான் பயிர் செழிக்கும்' (உ.வ.) **3.** பிறர் உழைப்பைச் சார்ந்து தன் பிழைப்பினை மேற்கொள்பவன்; a man of parasitic nature. நல்லவர்களுக்கு நடுவில் புல்லுருவியாக இருக்கும் இவன் யார்? (உ.வ.).

[புல் + உருவி. உருவு → உருவி]

புல்லுருவியம்மன் *pulluruvi-y-ammaṉ,* பெ. (n.) சின்னம்மை; chicken pox (M.L.).

[புல்லுருவி + அம்மன்]

புல்லுருவிவேர் *pulluruvi-vēr,* பெ. (n.) குருவிச்சை வேர்; roots of parasitic plant.

[புல்லுருவி + வேர்]

புல்லுவரி *pullu-vari,* பெ. (n.) மேய்ச்சல் வரிவகை; a grazing tax. (G.T.D. **1, 211.**).

[புல் → புல்லு + வரி]

புல்லுவேய்—தல் *pullu-vēy-,* **3** செ.கு.வி. (v.i.) *புல்லுமேய்—தல்* பார்க்க; see *pullu-mēy-,*

[புல் → புல்லு + வேய். மேய் → வேய்]

புல்லுளி *pulluḷi,* பெ. (n.) *புல்லுருவி* ***(கொ.வ.)*** பார்க்க; see *pulluruvi.*

[புல் → புல்லுளி]

புல்லுளுவை *pulluḷuvai,* பெ. (n.) ஆறடி பத்துவிரல நீளம் வளர்வதும் மங்கல் நிறமுள்ளதுமான கடல்மீன் வகை; a kind of sea-fish, dull brown in colour, attaining **6**ft **10** in length.

[புல் → புன்மை = புகர்நிறம்,
புல் + உளுவை]



புல்லுறு—த்தல் *pulluṟu-,* **4** செ.குன்றாவி. (v.t.) நிகழ்த்துதல்; to cause to occur, to perform. ***'மேலைநாள் புல்லுறுத்ததியாவும்'*** **(கம்பரா. சடாயுகாண். 43.).**

[புல் → புல்லு + உறு—,]

புல்லூகி *pullūgi,* பெ. (n.) மிதித்தவர்களை மயங்கச் செய்யும் பூண்டு; a plant that bewilders persons trampling on it.

மறுவ. திகைப்பூடு.

புல்லூதியம் *pullūdiyam,* பெ. (n.) பனை (மலை.); palmyra palm.

[புல் = உட்டுளையுள்ள நிலைத்திணை வகை, (உட்டுளையுள்ள புல்) பனை. புல் → புல்லூதியம்]

புல்லூரி[1] *pullūri,* பெ. (n.) *புல்லுருவி* பார்க்க; see *pulluruvi.*

[புல்லுருவி → புல்லூரி]

புல்லூரி[2] *pullūri,* பெ. (n.) கருங்குட்டத்தைப் போக்கும் மூலிகை; a herb that cures the disease that turns the skin black.

புல்லூறு *pullūṟu,* பெ. (n.) பறவை வகை (பிங்.) (பதிற்றுப். **165.** அரும்.); a kind of bird.

புல்லெடு—த்தல் *pul-l-eḍu-,* **4** செ.கு.வி.(v.i.) பயிரினிடையிலுள்ள களை பறித்தல்; to weed out.

மறுவ. புல்பிடுங்கல், களையெடுத்தல்

[புல் + எடு—, புல் = களை]

புல்லெண்ணெய் *pul-l-eṇṇey,* பெ. (n.) புற்களினின்றெடுத்த நறுமண எண்ணெய் (வாசனைத் தைல) வகை (இ.வ.); oil distilled from grasses, used in perfumery; grass-oil.

[புல் + எண்ணெய்]

புல்லெழு—தல் *pul-l-eḻu-,* **3** செ.கு.வி. (v.i.) (புல்லுண்டாதல்) ஆள்வழக்கறுதல்; lit, to be overgrown with grass; to become deserted. *'நரகமெல்லாம் புல்லெழுந் தொழியும்'* (திவ். திருமாலை. **13.**).

[புல் + எழு—,]

புல்லெனல் *pul-l-eṉal,* பெ. (n.) **1** பொலிவழிதற் குறிப்பு; expr. signifying ruined condition, loss of splendour. *'அரங்கு புல்லென்னப் போகி'* (சீவக, **2531.**) **2** இழிவுபாட்டுக் குறிப்பு; expr. signifying worthlessness.

[புல் + எனல்]

புல்லை *pullai,* பெ. (n.) மங்கல் நிறம் (வின்.); dull, yellowish colour.

ம., க., தெ., புல்ல..

[புல் → புன்மை = புகர்நிறம், மங்கலான பார்வை. புல் → புல்லை]

புல்லைக்காளை *pullai-k-kāḷai,* பெ. (n.) மங்கல் நிறமுள்ள எருது; dull yellowish bull, dull-coloured bull.

[புல்லை + காளை]

புல்லொலி *pulloli,* பெ. (n.) *புல்லுருவி* பார்க்க; see *pulluruvi.*

புல்லொளி *pul-l-oḷi,* பெ. (n.) வெள்ளென்ற விடியற் காலம் (புதுவை.); early dawn, twilight.

மறுவ. வெள்ளணம் (நெல்லை.)

[புல் + ஒளி]

புல்வரகு *pul-varagu,* பெ. (n.) தவசவகை (யாழ்.அக.); a kind of millet.

மறுவ. வரகரிசி.

[புல் + வரகு]

புல்வரி *pul-vari,* பெ. (n.) மேய்ச்சல் வரி; tax on grazing; fine levied on stray cattle.

[புல் + வரி]

புல்வழி *pul-vaḻi,* பெ. (n.) புல்லடர்ந்த வழி; a grassy path.

க. புலுவட்டெ, புலுபட்டெ; **பட.** குல்லுதாரி.

[புல் + வழி]

புல்வாடி *pul-vāḍi,* பெ. (n.) புல்விற்குமிடம் (யாழ்.அக.); grass depot.

[புல் + வாடி]

புல்வாண்டைக்காசு *pul-vāṇḍai-k-kāšu,* பெ. (n.) சிறுகாசு (நாணய) வகை; a small coin. *'புல்வாண்டைக் காசு மில்லையென்று கரைவாரும்'* (விறலிவிடு. **373.**).

புல்வாய் *pul-vāy,* பெ. (n.) கலைமான்; deer, antelope. *'புல்வாய் புலியுழை மரையே கவரி'* (தொல். பொ. **590.**).

க. புல்லெ, குல்லெ

[புல் + வாய்]



புல்வாரி *pul-vāri,* பெ. (n.) **1.** புல்லறுக்கும் அரிவாள் (யாழ்.அக.); sickle for cutting grass. **2.** புல்லை வாரும் கருவி; வறண்டி, வைக்கோல் வாரி; rake.

மறுவ. ஆக்கறுவாள்.

[புல் + வாரி]

புல்விரியன் *pul-viriyaṉ,* பெ. (n.) விரியன் பாம்பு வகை; grass adder, small viper. (M.M.).

[புல் + விரியன்]

புல்வீடு *pul-vīḍu,* பெ. (n.) புல்வேய்ந்த கூரையுள்ள குடிசை (வின்.); thatched house.

மறுவ. புற்குரம்பை.

க. புல்மனெ, புல்வனெ

[புல் + வீடு]

புல்வெட்டிப்பல் *pul-veṭṭi-p-pal,* பெ. (n.) மாட்டின் முன்வாய்ப் பல்; front teeth of cattle; incisors.

[புல் + வெட்டி + பல்]

புல்வெளி *pul-veḷi,* பெ. (n.) புல் அடர்ந்து வளர்ந்திருக்கும் நிலப்பரப்பு; pasture, medow. நகரத்தில் புல்வெளி இருக்க வாய்ப்பு இல்லை. (உ.வ.)

ம. புல்புறம்; **து.** புலவாட், புலாடி.

[புல் + வெளி.]

புல்வேய்குரம்பை *pul-vēy-kurambai,* பெ. (n.) புல்வீடு பார்க்க; see pulvīḍu. *'குன்றக் குறவன் புல்வேய் குரம்பை'* (ஐங்குறு. 252.).

[புல் + வேய் + குரம்பை. மே = மேல். மே → மேய்.மேய்தல் = விலங்கு புல்லின் மேற் பகுதியைத் தின்னுதல், கூரையின் மேல் வைக்கோலிடுதல். மேய் → வேய். வேய்தல் = கூரையின் மேல் வைக்கோலிடுதல்.]

புல¹—த்தல் *pula-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** மனம் வேறுபடுதல்; to pout, sulk; to be displeased. *'புலத்தலு மூடலு மாகியவிடத்து'* (தொல். பொ. 157.) **2.** துன்புறுதல்; to suffer pain. *'போகும் புழையுட் புலந்து'* (ஏலாதி, 11).

[புல் → புர் → புரள். புரளுதல் = உருளுதல், மாறுபாடடைதல். புல் → புல (மு.தா. 206)]

புல²—த்தல் *pula-,* 4 செ.குன்றாவி. (v.t.) வெறுத்தல்; to dislike. "பலபுலந்து" (பொருந. 175).

[புல் → புல—,]

புல³—த்தல் *pula-,* 4 செ.குன்றாவி. (v.t.) அறிவுறுத்துதல்; to make known; to instruct. *'புலக்க வேண்டுறுமக் காதை'* (உபதேசகா. சிவத்துரோ. 264).

[புல்லுதல் = பொருந்துதல். புல் → புலம் = ஐம்பொறிகள் பொருள்களொடு பொருந்தி அறியும் அறிவு. புல் → புல]

புல[4] *pula,* பெ. (n.) புலவு[2] 2. 3, பார்க்க; see pulavu[2] 2. 3, *'புலவேல் வானவன்'* (பு. வெ. 10, 1, கொளு).

[புல் → புல]

புலக்கட்டுப்பாடு *pula-k-kaṭṭu-p-pāḍu,* பெ. (n.) களக்கட்டுப்பாடு; field control.

[புலம் + கட்டுப்பாடு. கட்டுப்படு → கட்டுப்பாடு]

புலக்கம் *pulakkam,* பெ. (n.) வழக்கம் (யாழ்.அக.); habit.

[புழக்கம் → புலக்கம் (கொ.வ.)]

புலக்காசு *pula-k-kāšu,* பெ. (n.) பழைய காசு வகை (பணவிடு. 114); an ancient coin.

[புலம் + காசு. காய்ச்சு → காசு.]

புலக்காணி *pula-k-kāṇi,* பெ. (n.) மேட்டு நிலம் (வின்.); high elevated land.

[புல் → புலம் = பொருந்தியிருக்கும் நிலம், விளைநிலம் (வே.க. 3. 62). புலம் + காணி]

புலங்கொள்(ளு)-தல் *pulaṅ-koḷ(ḷu)-,* 16 செ.கு.வி. (v.i.) 1. விளங்குதல் (வின்.); to be clearly understood. 2. வெளிச்சமாதல்; to be visible; to be bright.

[புல் → புலம் = ஐம்பொறிகள் பொருள் களொடு பொருந்தி அறியும் அறிவு, பொறியுணர்வு (வே.க. 3. 62) புலம் + கொள்.]

புலங்கொளி *pulaṅ-koḷi,* பெ. (n.) 1. உணர்வுறுப்பு (வின்.); sense-organ. 2. செய்திப் பற்றுள்ளவன் (யாழ்.அக.); epicure, sensual-man.

[புலம் + கொளி. கொள் + இ – கொளி]

புலச்சாமை *pula-c-cāmai,* பெ. (n.) சாமை வகை(வின்.); a kind of poor-man's millet.

[புலம் + சாமை]

புலச்சாய்வு *pula-c-cāyvu,* பெ. (n.) *புலச்சார்வு (வின்.)* பார்க்க; see *pula-c-cārvu.*

[புலச்சார்வு → புலச்சாய்வு]

புலச்சார்வு *pula-c-cārvu,* பெ. (n.) வயற்புறம் (வின்.); field and lands adjacent to fields.

[புலம் + சாய்வு. புலத்தைச் சார்ந்திருப்பது. சார் → சார்வு. 'வு' பெ.ஆ. ஈறு.]

புலச்சி[1] *pulacci,* பெ. (n.) அறிவு நிறைந்தவள்; wise woman. *'சிவனிற் புலச்சி தனக்கு'* (திருப்பு. 123).

[புல் → புலம் → புலவன்(ஆ.பா.) - புலத்தி (பெ.பா.) புலத்தி → புலச்சி. ஒ.நோ. வேட்டுவத்தி → வேட்டுவச்சி (வே.க. 3. 63.)]

புலச்சி[2] *pulacci,* பெ. (n.) கும்பாதிரி[1]; gum lac tree. (Nels.).

புலச்செய்கை *pula-c-ceygai,* பெ. (n.) உழவு (வின்.); agriculture, husbandry, tillage.

[புல் → புலம் = பொருந்தியிருக்கும் நிலம், நிலம். புலம் + செய்கை. செய் → செய்கை]

புலச்சோதி *pulaccōdi,* பெ. (n.) மாமூலிகை இருபத்து மூன்றிலொன்று; one of the 23 drugs which are considered best.

புலத்தகை *pula-t-tagai,* பெ. (n.) ஊடல்; sulks. *'இராகுலன் றன்னொடு புலத்தகை யெய்தினை'* (மணிமே. 10, 21).

[புல → புலத்தகை]

புலத்தமரம் *pulatta-maram,* பெ. (n.) பெருமரம்; tooth-leaved tree.

[புல் → பல் → பல. புல் → பல் → பர் → பரு. புல் → புலத்த + மரம்]

புலத்தரை *pula-t-tarai,* பெ. (n.) *புலக்காணி (வின்.)* பார்க்க; see *pulakkāṇi.*

[புலம் → புலத்தரை]

புலத்தவிருக்கம் *pulatta-virukkam,* பெ. (n.) பெருமரம் (சங்.அக.); tooth-leaved tree of heaven.

[புல் → பல் → பல. புல் → பல் → பர் → பரு → பருமை. புல் → புலத்த + விருக்கம்.]

Skt. vṟikṣa > த. விருக்கம்

'புலத்தமரம்' பார்க்க

புலத்தார் *pulattār,* பெ. (n.) குடிகள் (வின்.); inhabitants. "தென்புலத்தார்".

[புல் → புலம் = நிலம். புலம் → புலத்தார் = (ஓரிடத்தில்) நிலையாக வாழ்பவர். 'ஆர்' ப.பா.ஈறு.]

புலத்தி[1] *pulatti,* பெ. (n.) பெண் புலவர்; poetess.

[புலவன் (ஆ.பா.)–புலத்தி (பெ.பா.)]

கிழவன் என்னும் சொல் பெண்பாலிற் கிழத்தி என்றாவது போல் புலவன் என்னும் சொல் புலத்தி என்றாகும். இங்ஙனம் அமைக்காது பெண்பாற் புலவர் என்பது வழுவாம். (த.வ.288)

புலத்தி[2] *pulatti,* பெ. (n.) வண்ணாத்தி; washerwoman. *'அறனில்புலத்தி'* (நற்.90).

ம. புலத்தி, புலச்சி (இழிகுலப்பெண்);
க. பொலத்தி (இழிகுலப்பெண்)

[புலைத்தி → புலத்தி]

புலத்துறைமுற்றியகூடலூர்கிழார் *pulatturai-muṟṟiya-kūḍalūr-kiḻār,* பெ. (n.) ஐங்குறு நூறு தொகுத்த சங்ககாலத்துப் புலவர்; an ancient poet, compiler of aiṅkuṟunūṟu.

புலத்தோர் *pulattōr,* பெ. (n.) அறிஞன், முனிவன்; wisemen, sages, savants. *'போத நிலைகண்ட புலத்தோர்'* (தாயு.பராபர.194).

[புலம் + அத்து + ஓர். புல் → புலம். அத்து' சாரியை. 'ஓர்' ப.பா.ஈறு]

புலந்திரன்களவுமாலை *pulandiraṉ-kaḷavu-mālai,* பெ. (n.) புகழேந்திப் புலவர் இயற்றியதாகச் சொல்லப்படுவதும் எளிய செய்யுள் நடையில் அமைந்ததுமான கதை நூல்; a popular poem, attributed to Pugaḻēndi-p-pulavar.

புலநரம்பு *pula-narambu,* பெ. (n.) சிறப்புணர்வைத் தூண்டும் நரம்பு; nerve which induces feelings.

[புலம் + நரம்பு. நாளம் → (நளம்) → நரம் → நரம்பு]

புலநெறிவழக்கம் *pula-neṟi-vaḻakkam,* பெ. (n.) புலவரால் கைக்கொள்ளப்படும் செய்யுள் வழக்கு (தொல்.பொ.53.); literary usage or convention, dist. fr. 'ulagiyal vaḻakku' and 'nāḍāga vaḻakku'.

[புலம் + நெறி + வழக்கம்]

புலப்பங்காணல் *pulappaṅ-kāṇal,* பெ. (n.) இசிவுநோயினாலேற்படும் பிதற்றல்; raving.

[புலப்பம் + காணல்]

புலப்படு-தல் *pula-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. தெரிதல்; to be perceived, understood. 2. வெளிப்படுதல்; to become clear or conspicuous.

[புலம் = அறிவு, பொறியுணர்வு புலம் + படு-, புலப்படுதல் = புலனொடு பொருந்து தல். (மு.தா.183)]

புலப்படுத்து-தல் *pula-p-paḍuttu-,* 12 செ.குன்றாவி. (v.t.) தெரிவித்தல்; to make clear or intelligible; to cause to be understood.

[புலப்படு-தல் (த.வி.) - புலப்படு-த்துதல் (பி.வி).]

புலப்பம்¹ *pulappam,* பெ. (n.) 1. நோய் மிகுதியால் வாய்குழறுகை; delirium. 2. பிதற்று; raving, as of a lunatic. 3. அலப்பு; chattering, babbling. *'மந்திர மோதாவாய்க்கு மட்டறாப் புலப்பம் வைத்தார்'* (குற்றா.தல. கவுற்சன.42). 4. அழுகை (கொ.வ.); crying, weeping, lamentation.

[புலம்பு → புலப்பம்]

புலப்பம்² *pulappam,* பெ. (n.) புலப்பாடு *(யாழ்.அக.)* பார்க்க; see *pulappāḍu.*

[புலம் → புலப்பம்]

புலப்பாடு *pula-p-pāḍu,* பெ. (n.) 1. நன்றாய்த் தெரிகை (வின்.); appearing clearly understood. 2. மட்டுக் கட்டுகை (யாழ்.அக.); adjusting, keeping within bounds.

[புலப்படு → புலப்பாடு]

புலபுலப்பு *pula-pulappu,* பெ. (n.) காய்ச்சல் நிலத்தின் புழுதித் தன்மை; looseness, as of soil.

[புலபுல → புலபுலப்பு]

புலபுலெனல் *pulapuleṉal,* பெ. (n.) விரைந்து தொடர்ந்து வருதற் குறிப்பு; expr. denoting quick succession. *'புலபுலெனக் கலகலென புதல்வர்களைப் பெறுவீர்'* (பட்டினத் திருப்பா.178).

மறுவ. பொலபொலவென

[புலபுல + எனல்]

புலம்¹ *pulam,* பெ. (n.) 1. வயல்; arable land, rice field மிச்சில் மிசைவான் புலம் (குறள்,85.) 2. இடம்; place, location, region, tract of country. *'புலங்கெடவிறுக்கும் வரம்பிறானை'* (புறநா.16) 3. திக்கு; quarter, point of the compass *'தென்புல வாழ்நர்க்கு'* (புறநா.9) 4. மேட்டு நிலம் (யாழ்ப்.); high land for dry cultivation.

ம. புலம்; க. பொல; தெ. பொலமு; து.புல (புல்வெளி); பட. ஹொல; பர். பொலுப்; கட. பொலுப், பொல்லுப்; கொலா.பொலம்.

[புல் → புலம். புல்லுதல் = பொருந்துதல். அடர்ந்த மரஞ்செடி கொடிகளால் இரண்டு கிடவாது வெட்டவெளியான நிலமெல்லாம் கண்ணிற்குப் புலனானதினால் புலம் எனப்பட்டது (தமி.வ.31)]

புலம்² *pulam,* பெ. (n.) **1.** பொறி; sense, faculty of any organ of sense. *'புலம்பல கலங்க'* (ஞானா.27,6.) **2.** புலனுணர்வு; sensation; consciousness; perception by the sense. *'அடல்வேண்டுமைந்தன் புலத்தை'* (குறள்,343.) **3.** அறிவு; knowldege, learning, wisdom, *'நுண்மா னுழைபுலம்'* (குறள்,407.) **4.** கூர்மதி (வின்.); intellectual sharpness, wit. **5.** துப்பு; clue. (C.G.) **6.** நூல்; treatise, work. *'புலந்தொகுத்தோனே'* (தொல்.பாயி.) **7.** மறை (வேதம்); the vedas. "புலம்புரி யந்தணர் (பரிபா. 6,45).

ம.புலம்; தெ.பொலமு

[புல் → புலம் = பொருளொடுபொருந்தும் அறிவு, அறிவுறுப்பு, அறிவுநூல் (சு.வி.36)]

புலம்பல்¹ *pulambal,* பெ. (n.) **1.** ஒலி (பிங்.); sound. **2.** தனிமைகூறுகை; grieving over one's loneliness. *'பாசறைப் புலம்பலும்'* (தொல்.பொ. 41, உரை). **3.** பிதற்றுகை; raving **4.** அலப்புகை; chattering; babbling **5.** அழுகை; weeping, lamenting, mourning. 'கண்டோர் பாங்கினும் போகிய திறந்து நற்றாய் புலம்பலும் (தொல்.பொ.36). **6.** அழுகைப் பாட்டு; song of lamentation. 'தெய்வத்தேவகி புலம்பிய புலம்பல் (திவ்.பெருமாள்.7,11).

மறுவ. சிலம்பர், இயம்பல், சிலைத்தல், துவைத்தல், அலம்பல், கறங்கல், அழுங்கல், தழங்கல், சிலும்பல், கலித்தல், தெவிட்டல், கனைத்தல், கலம்புதல்.

ம. புலம்பல்

[புலம்பு → புலம்பல். 'அல்' தொ.பெ.ஈறு]

புலம்பல்² *pulambal,* பெ. (n.) மனங்கலங்கல்; being agitated in mind.

[புலம்பு → புலம்பல். 'அல்' தொ.பெ.ஈறு]

புலம்பன்¹ *pulamban,* பெ. (n.) நெய்தனிலத் தலைவன்; chief or lord of maritime tract. *'மெல்லம்புலம்பன் பிரிந்தென'* (ஐங்குறு.133).

தெ.பொலமரி (வேளாளர்)

[புலம் → புலம்பு = நிலம். மெல்லம் புலம்பு = நுண்மணலால் மெல்லிய நெய்தல் நிலம் (திருக்கோவை.379, உரை) மெல்லம் புலம்பன் = நெய்தல் நிலத் தலைவன் "மெல்லம் புலம்பன் பிரிந்தென" (குறுந்.5.) (வே.க.3.63.) 'அன்' ஆ.பா.ஈறு]

புலம்பன்² *pulamban,* பெ. (n.) ஆதன் (ஆன்மா); soul. "*புலம்பனுக்கொன்றும் புணர்ந்திலை*" (திருமந்.2934).

[புலம் = அறிவு. புலம் → புலம்பு → புலம்பன் = அறிவுடைய ஆதன் (வே.க.3.63)]

புலம்பாவு *pulam-pāvu,* பெ. (n.) தினைவிதைக்கை (இ.வ.); sowing Italian millet.

[புல் → புலம் = நிலம், விளைநிலம். புலம் + பாவு]

புலம்பிடி–த்தல் *pulam-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) துப்புக் கண்டுபிடித்தல்; to obtain or find a clue.(C.G.). *'கள்வனை அறியப்புலம் பிடித்தார்கள்'*

[புலம் + பிடி –,]

புலம்பிலவு *pulampilavu,* பெ. (n.) இலவங்கப் பட்டை; cinnamon bark.

புலம்பு¹–தல் *pulambu-,* 7 செ.கு.வி (v.i.) **1.** ஒலித்தல்; to sound, *'கழலார் சிலம்பு புலம்ப'* (தேவா.607,7). **2.** பிதற்றுதல் (கொ.வ.); to

speak foolishly or incoherently. **3.** அழுதல்; to utter lamentations, to wail, cry out. *'தயரதன் தான் புலம்பியவப் புலம்பல்'* (திவ்.பெருமாள்.9,11). **4.** தனித்தல்; to be solitary, lonely. *'கொடுவாயிரும்பின் மடிதலை புலம்பி'* (பெரும்பாண்.286). **5.** வருந்துதல்; to grieve. *'அகம்புலம்புகின்றேன்'* (கம்பரா. இந்திரசித். 61). **6.** வாடுதல்; to fade. *'இவணலம் புலம்பி'* (ஐங்குறு.57).

ம.புலம்புக; **க.** பலும்பு, கலுபு; **தெ.** பலுமு; **து.** பலம்புனி; **பர்.** பொல்ல (ஒலி)

[புல் = பொருந்தற்கருத்து வேர். (வே.க.3,62). புல் → புலு → பலுமு (தெ.) = முணுமுணுத்தல், பேசுதல். புல் → புல → புலம்பு. புலம்புதல் = ஒலித்தல், பிதற்றுதல், அழுதல்]

புலம்பு²–தல் *pulambu-,* 6 செ.குன்றாவி. (v.t.) **1.** வெறுத்தல்; to despise, abhor. *'புலம்பலர் பொறுப்பரன்றே'* (சீவக.2088). **2.** அடிக்கடி கூறுதல்; to utter repeatedly. *'வீரட்டம் புலம்பேனாகிலேன்'* (தேவா.999,12).

[புல் → புல → புலம்பு. 'புலம்பு–தல்' பார்க்க]

புலம்பு³ *pulambu,* பெ. (n.) **1.** ஒலி; sound *'புலம்பறு கடத்து'* (குறுந்.174.) **2.** பிதற்றல் மொழி; foolish, incoherent talk. *'வென்று மென்றாற் புலம்பன்றி புலமைத் தாமோ'* (கம்பரா.பாசப்.11). **3.** அழுகையொலி; lament. *'கடலெனப் புலம்பு கொண்டனர்'* (சூளா.முத்.33). **4.** தனிமை; loneliness; solitariness. *'புலம்பே தனிமை'* (தொல்.சொல்.331). **5.** பிரிவு; separation, as from husband. *'கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின்'* (தொல்.பொ.147). **6.** மனக்கலக்கம் (யாழ்.அக.); agitation. **7.** வருத்தம்; grief affliction. *'காலை யிசைக்கும் பொழுதொடுபுலம்புகொள'* (பதிற்றுப்.81,5). **8.** வெறுப்பு; dislike. *'பாவம் புலம்பொடு போக்கினானே'* (சீவக.820). **9.** அச்சம் (பிங்.); fear. **10.** குற்றம்; fault, defect. *'புலம்பற வளர்த்த வம்மென் பூம்புகை'* (சீவக.2092).

ம. பலம்பன்; **க.** புலக; **தெ.** பலவரிந்த, பலவரமு

[புல் → புல→ புலம்பு. 'புலம்பு–தல்' பார்க்க]

புலம்புநீர் *pulambu-nir,* பெ. (n.) கண்ணீர்; tear. *'புலம்புநீ ருருட்டி'* (மணிமே.3,9).

[புலம்பு + நீர். புலம்பும்போது அதாவது அழும்போது வரும் நீர்]

புலம்புமுத்து *pulambu-muttu,* பெ. (n.) அழுகைக் கண்ணீர்; tears of sorrow, as pearly, opp. to 'uvagai muttu'. *'நிமிர் நெடுங்கண் புலம்பு முத்துறைப்பி'* (சிலப்.4,71).

[புலம்பு + முத்து. அழும்போது முத்துப் போன்று வரும் கண்ணீர்]

புலம்புவி–த்தல் *pulambuvi-,* 8 செ.குன்றாவி. (v.t.) தன்னிலை இழக்கச் செய்தல்; to cause one to lose self control. *'புலம்புவித் தருளி னீங்கி'* (சீவக.2516).

[புலம்பு → புலம்புவி. 'வி' பி.வி.ஈறு]

புலம்புள் *pulambul,* பெ. (n.) **புலம்பல் 5.** பார்க்க; see *pulambal 5.* *'புலம்பு ளேற்றிடாவடைந்தோரை'* (இரகு.திக்கு.62).

[புலம்பல் → புலம்புள்]

புலம்பெயர்புதுவன் *pulam-peyar-puduvan,* பெ. (n.) வேறொருநாட்டிலிருந்து வந்தவன், பிற நாட்டினன்; foreigner. புலம்பெயர் புதுவறி போக்குவனியானெனக் (சிலப்.16:129).

[புலம்பெயர் + புதுவன். புலம் = இடம், வாழிடம், நாடு]

புலம்பெயர்மாக்கள் *pulam peyar mākkaḷ,* பெ. (n.) 1. அயல்நாட்டினர்; foreigners, immigrants. *'கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்'* (சிலப்.5,11). 2. கடலோடிகள்(சிலப்.5,11. அரும்); mariners.

[புல் → புலம் = நிலம். புலம் + பெயர் + மாக்கள். பெய் → பெயர். பெயர்தல் = இடம் பெயர்தல் மக்கள் → மாக்கள் ஒ.நோ: மொழிபெயர் தேயம்]

புலம்விசாரி—த்தல் *pulamvišāri-,* 4 செ.கு.வி. (v.i.) *புலமுசாவு—தல் (கொ.வ.)* பார்க்க; see *pulam ПŠāvu-,*

[புலம் + விசாரி—,]

Skt. vicāra > த. விசாரம் → விசாரி—த்தல்

புலம்வை—த்தல் *pulamvai-,* 4 செ.கு.வி. (v.i.) உளவு எதிர்பார்த்தல்; to be on the lookout for a clue. (C.G.).

[புல்ம் + வை—,]

புலமக்கள் *pula-makkaḷ,* பெ. (n.) படித்தோர்; learned men. புலமக்களாலும் பொது மக்களாலும் பாராட்டப் பெற்றவர் பாவாணர் (உ.வ).

[புலம் + மக்கள்]

புலமகள் *pula-magaḷ,* பெ. (n.) கலைமகள்; Sarasvadhi. *'புலமகள் புகழ்'* (சீவக.2566).

[புலம் + மகள். புலம் = ஐம்பொறிகள் பொருள்களோடு பொருந்த அறியும் அறிவு. புலம் → புலவன் = அறிஞன், அறிவுள்ள பாவலன். புலமகள் பெண்பால் அறிவுக்கடவுள். மக → மகள்]

புலமகன் *pula-magaṉ,* பெ. (n.) புலமையுள்ளவன்; learned man, scholar. *'வேறொடு புலமகன் விரும்பி வாங்கினான்'* (கம்பரா.எழுச்.3).

[புலம் + மகன். புல் → புலம் = அறிவு. முகு → மக → மகன்]

புலமங்கை *pula-maṅgai,* பெ. (n.) நிலப்பெருமாட்டி (பூமிப்பிராட்டி) (திவ்.பெரியதி. 3,2,5.) goddess of earth.

[புல் → புலம் = நிலம். புலம் + மங்கை]

புலமறி—தல் *pulam-aṟi-,* 3 செ.குன்றாவி. (v.t.) துப்பறிதல் (சென்னை.); to spy out, detect.

[புலம் + அறி—, புலம் → புலன் = துப்பு]

புலமாக்கு—தல் *pūlam-ākku-,* 8 செ.குன்றாவி. (v.t.) 1. *புலப்படுத்து—தல்* பார்க்க; see *pula-p-paḍuttu-* *'நெறியெலாம் புலமாக்கிய வெந்தையை'* (திருவாச.5,32). 2. வெளியாக்குதல் (கொ.வ.); to bring to light.

[புலம் + ஆக்கு—, ஆகு—தல் (த.வி.) — ஆக்கு—தல் (பி.வி.)]

புலமினுக்கி *pula-miṉukki,* பெ. (n.) துடைப்பம் (தைலவ.தைல.); broom, as cleansing a place.

மறுவ. வாரியல், பெருக்குமாறு, விளக்குமாறு.

[புலம் + மினுக்கி. மினுக்கு → மினுக்கி]

புலமுசாவு–தல் *pulam-ušāvu-,* 7 செ.கு.வி. (v.i.) உளவறிதல்; to seek a clue.

[புலம் + உசாவு–,]

புலமை *pulamai,* பெ. (n.) **1.** கல்வி; knowldge, learning. தமிழில் புலமைமிக்கவர்களுள் பாவாணர் குறிப்பிடத்தக்கவர் (உ.வ). **2.** மெய்யறிவு (ஞானம்); spiritual wisdom. *'புரையுந ரில்லாப் புலமையோய்'* (திருமுரு.280). **3.** செய்யுளியற்றும் ஆற்றல்; poetic talent or ability.

[புல் → புலம் → புலன் = பொருந்தியறியும் அறிவு. புலம் = அறிவு, அறிவுநூல், இலக்கணம். புலம் → புலமை (மு.தா.183)]

புலமைபாடு–தல் *pulamai-pāḍu-,* 11 செ.கு.வி. (v.i.) பா(கவி)ப்பாடுதல்; to compose poetry. *'கைக்கூலி கொண்டு புலமை பாடினேனாகாதே யென்கிறார்'* (ஈடு).

[புலம் → புலமை + பாடு–,]

புலமையர் *pulamaiyar,* பெ. (n.) *புலமையோர் (வின்.)* பார்க்க; see *pulamaiyōr.*

[புலம் → புலமை → புலமையர்]

புலமையோர் *pulamaiyōr,* பெ. (n.) **1.** பாவலர் (கவி.), அறிவன் (கமகன்), தருக்கி (வாதி), சொல்லி (வாக்கி) என்ற நால்வகைக்கல்வி வல்லோர் (பிங்.); learned persons, of four classes, viz, kavi, kamakaṉ, vāti, vākki. **2.** கற்றோர்; scholars, professors, experts. *'புகரின் றென்மனார் புலமையோரே'* (தொல்.எழுத்.369).

மறுவ. கலைஞர், மேதையர், மூத்தோர், கற்றவர், கவிஞர், அறிஞர்.

[புலம் → புலமை → புலமையோர்]

புலர்¹–தல் *pular-,* 11 செ.கு.வி. (v.i.) **1.** வாடுதல்; to fade, wither. **2.** உலர்தல்; to grow dry; to become patched, as the tongue. *'புகையுஞ் சாந்தும் புலராது சிறந்து'* (சிலப். 5, 197.) **3.** தளர்தல்; to faint; to become weak. *'இமையோர்களும் புலர்ந்தார்'* (கம்பரா. நிகும். 116.) **4.** குறைதல்; to decrease. *'கதம் புலர்ந்த சிந்தை'* (கம்பரா. மூலபல. 79.) **5.** விலகுதல்; to leave, depart. *'ஆயம் புலர்க'* (பு. வெ. 4, 22.) **6.** முற்றுதல்; to mature, as grain. *'வரகினிருங்குரல் புலர'* (மதுரைக். 272.)

[புல் → பொல் → பொலு. பொலு பொலுத்தல் = நன்றாகக் காய்தல். பொல் → (பொரு) → பொருக்கு = காய்ந்த சோற்றுப் பருக்கை. புல் → புலர் (மு.தா. 139)]

புலர்²–தல் *pular-,* 11 செ.கு.வி. (v.i.) **1.** விடிதல்; to dawn, as the day. புலர் விடியல் (பு. வெ. 9, 47) **2.** தெளிதல்; to clear up. நல்லா னெஞ்சமும் புலர்ந்ததன்றே (சீவக. 1397)

ம. புலருக; **குட.** பொல; **மால.** புல்புல்ரெ;

[புல்லுதல் = பொருந்துதல். புல் → புலம் → புலன் = பொருந்தியறியும் அறிவு. புலனாதல் = அறியப்படுதல். புலம் → புலர். புலர்தல் = கண்ணுக்குத் தெரிதல், விடிதல். (மு.தா. 183)]

புலர்³–த்தல் *pular-,* 3 செ.குன்றாவி. (v.t.) பூசுதல்; to besmear.

[புல் → புலர்]

புலர்⁴ *pular,* பெ. (n.) உலர்கை; being parched. *'புலர்வாடு நாவிற்கு'* (கலித். 6.)

[புல் → புலர்]

புலர்காலை *pular-kālai,* பெ. (n.) 1. *புலரி,* 1 பார்க்க; see *pulari* 1 2. அழிவுக் காலம்; the period of cosmic deluge. *'புலர்காலை மாயை மேவிப் பொருந்தும்'* (சிவப்பிர. 16.)

[புல் → புலம் → புலர். புலர் + காலை]

புலர்ச்சி¹ *pularcci,* பெ. (n.) 1. வாடுகை; withering, fading. 2. உலருகை; drying.

[புல் → புலர் → புலர்ச்சி. 'சி' தொ.பெ.ஈறு. புலர்¹ பார்க்க]

புலர்ச்சி² *pularcci,* பெ. (n.) 1. விடிகை; dawning. *'இருளின் புலர்ச்சி யென் றென்று'* (வெங்கைக்கோ. 380.).

ம. புலர், புலர்ச்ச; து. புல்லெ, புல்யெ, புல்யகெல, புல்யகொலெ; குட. பொலசெ.

[புலம் → புலர். புலர்தல் = தெளிதல், தெளிவாதல், விடிதல். புலர் → புலர்ச்சி (வே.க.3,63)]

புலர்த்து–தல் *pularttu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. உலர்த்துதல்; to deprive of moisture; to cause to dry. *'துகில்கொடு குஞ்சி யீரம் புலர்த்தி'* 2. வாட்டுதல்; to cause to fade or wither. 3. பூசுதல் (பிங்.); to besmear, daub.

[புல் → புலர் → புலர்த்து –, புலர்தல் (த.வி.) – புலர்த்துதல் (பி.வி.)]

புலர்பு *pularpu,* பெ. (n.) *புலரி* 1. பார்க்க; see *pulari.* 1 *'பனிப்புலர் பாடி'* (பரிபா. 11, 83.)

[புல் → புலம் → புலர். புலர்தல் = தெளிதல், தெளிவாதல், விடியல். புல் → புலம் → புலரி விடியல். புலர் → புலர்ப்பு. (வே.க.3,61–63) 'பு' தொ.பெ.ஈறு]

புலர்வு *pularvu,* பெ. (n.) *புலர்ச்சி, 2. (சங்.அக.)* பார்க்க; see *pularcci 2*

[புல் → புலம் → புலரி = விடியல். புல் → புலர் → புலர்வு. 'வு' தொ.பெ.ஈறு புலர்ப்பு → புலர்பு.]

புலரி *pulari,* பெ. (n.) 1. இரவு நீங்கி காலையில் வெளிச்சம் தோன்றும் நேரம், விடியல் (திவா.); dawn. *'புலரி புலருதென்று'* (திருமந். 210.) 2. ஞாயிறு, கதிரவன்; sun. *'தாமரைப் பூநனி முகிழ்த்தன புலரிபோனபின்'* (கம்பரா. சித்திர. 42.)

ம., து. புலர்

[புல் → புலம் → புலர். புலர்தல் = கண்ணுக்குத் தெரிதல், விடிதல். புலர் → புலரி = விடியல் (மு.தா. 183.) விடியலில் தோன்றும் ஞாயிறு. 'இ' வினைமுதலீறு]

புலரிக்காலை *pulari-k-kālai,* பெ. (n.) *புலரி, 1 (திவா.)* பார்க்க; see *pulari 1*

[புலரி + காலை. புல் → புலர் → புலரி = விடியல். காலை, = விடியற்காலம்]

புலரிகம் *pularigam,* பெ. (n.) *புலரி, 1* பார்க்க; see *pulari* 1.

[புலரி → புலரிகம்]

புலரிவைகறை *pulari-vaigarai,* பெ. (n.) வைகறைக்கும் புலரிக்கும் இடைப்பட்ட காலம்; morning twilight, time between day break and sunrise. *'புலரி வைகறைப் பொய்கைத் தாமரை'* (சிலப். 14, 3.)

[புலரி + வைகறை]

புலவஞ்சி *pulavañji,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village, in Tañjāvūr dt.

[புலம் + வஞ்சி]

புலவநல்லூர் *pulava - nallūr,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tañjāvūr dt.

[புலவன் + நல்லூர்]

புலவர்[1] *pulavar,* பெ. (n.) **1.** புலமையோர் பார்க்க; see pulamaiyōr. *'நரம்பின் மறைய வென்மனார் புலவர்'* (தொல். எழுத். 33.) **2** அறிவர் (ஞானிகள்); wisemen, sages. *'புலவரைப் போற்றாது புத்தேளுலகு'* (குறள், 234.) **3.** குறுநில மன்னர் (வின்.); petty chieftains. **4.** கூத்தர் (பிங்.); dancers, actors. **5.** கம்மியர் (பிங்.); artisans, mechanics. **6.** ஒவியம் முதலிய கலைவல்லார் (பிங்.); artists. **7.** வடுகர்(சாளுக்கியர்)(பிங்.); the Cāḷukyas. **8.** கோயம்புத்தூர் மாவட்டத்தில் பழக்க வழக்கங்களில் கொங்குவேளாளரை யொத்தவராய் வேளாண்மை செய்யும் ஒரு சாதியார்; a caste of cultivators in Coimbatore district, who resemble Konku Vēḷāḷas, in their customs and manners. (E.T.vi, 235.) **9.** பனிசவர் ஓச்சர், முதலிய சில சாதியாரின் பட்டப்பெயர்; caste title of the members of certain castes like the Paṉiśavar and the ōccar. (E.T.vi, 57.) (E.T.v, 420.)

[புல்லுதல் = பொருந்துதல். புல்→ புலம் → புலன் = பொருந்தியறியும் அறிவு. புலம் = அறிவு, அறிவு நூல், இலக்கணம். புலம் → புலமை. புலம் → புலவன் (மு.தா. 183) புலவன் → புலவர். 'ர்' ப.பா.ஈறு

பண்டைத் தமிழகத்தில் வேந்தரைப் புகழ்ந்து பாடிய புலவர்க்குச் சிறந்த பரிசும் முற்றூட்டும் (சர்வமானியமும்) அளிக்கப் பட்டன.

பாண்டியர் தலைசிறந்த புலவரையெல்லாங் கூட்டி, தமிழக் கழகம் நிறுவிப் போற்றினர்.

புலவரின் பாடல்களும் நூல்களும், பாண்டியர் தமிழக் கழகத்தில் குற்றமற்றவையென ஒப்புக் கொள்ளப்பட்டாலொழிய உலகில் வழங்கா. அங்ஙனம் ஒப்பம் பெறுதல் அரங்கேற்றம் எனப்பட்டது. (ப. தா.ந.ப. 121.)]

புலவர்[2] *pulavar,* பெ. (n.) தேவர் (திவா.); Gods.

மறுவ. பண்ணவர், புத்தேளிர், கடவுளர், அண்டர், உம்பர், இமையவர், வானோர், விண்ணோர், அமுதர், ஆதித்தர், மேலோர், ஐயர், உயர் நிலத்தவர்.

[புலவன் → புலவர். புலவர்[1] பார்க்க]

புலவர்குழந்தை *pulavar - kuḻandai,* பெ. (n.) 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a poet of twentieth century.

[புலவர் + குழந்தை]

இவர் (1906–1972) திருநணாச் சிலேடை வெண்பா என்னும் சிற்றிலக்கியம் இராவண காவியம் என்னும் பேரிலக்கியம் யாப்பதிகாரம் என்னும் இலக்கணம் முதலியவற்றை இயற்றியுள்ளார். திருக்குறளுக்கு இவர் எழுதியவுரை குழந்தையுரை எனப்படும்.

புலவர்புராணம் *pulvar-purāṇam,* பெ. (n.) முருகதாசர் பாடிய தமிழ்ப் புலவர் வரலாறு; a metrical biography of Tamil poets by Muruka-dāsar, 19th c.

[புலவர் + புராணம்]

புலவராற்றுப்படை *pulavarāṟṟu-p-paḍai,* பெ. (n.) 1. ஒரு புலவன் தனக்குப் பரிசளித்த அரசனையும் அவனது தலைநகரையும் வேறு புலவனிடம் சிறப்பித்து அவ் வரசனிடத்து அவனை ஆற்றுப் படுத்தலைக் கூறும் புறத்துறை (புறநா. 48.); (purap.) theme describing to a poet, the munificence of a royal patron and splendour of his city and directing the poet to his court. 2. ஒரு புலவனைக் கடவுளிடத்துப் பயன்கொள்ளும் படி ஆற்றுப்படுத்தலைக் கூறும் புறத்துறை (பு. வெ. 9, 42.); (purap.) theme of guiding a poet into the presence of a deity. 3. புலவராற்றுப் படை பற்றிய சிற்றிலக்கியம் (பிரபந்தம்); poem on the theme of pulavarāṟṟu-p-paḍai.

[புலவர் + ஆற்றுப்படை. ஆற்றுப்படு(த்து) → ஆற்றுப்படை]

புலவராற்றுவழக்கம் *pulavarāṟṟu - vaḻakkam,* பெ. (n.) புலநெறி வழக்கம் (தொல். பொ. 53, உரை.); literary usage.

[புலவராற்று + வழக்கம்]

புலவரி *pulavari,* பெ. (n.) பழைய வரிவகை; an ancient tax (S.I.I. vi 2)

[புலம் + வரி]

புலவரிசி *pulavariši,* பெ. (n.) இறைச்சி சேர்த்துச் சமைத்தற் கேற்ற அரிசிவகை (இ.வ.); a kind of rice, fit to be cooked with meat.

[புலவு + அரிசி]

புலவரை *pula-varai,* பெ. (n.) 1. நிலவெல்லை; boundary, as of a country. *'புலவரைத் தோன்றல் யாவது'* (பதிற்றுப். 80.) 2. அறிவினெல்லை; the utmost bounds of knowledge. *'புலவரை யறியாப் புகழொடு பொலிந்து'* (பரிபா. 15, 1.)

[புலம் → புலவரை]

புலவல் *pulaval,* பெ. (n.) 1. வெறுப்பு; displeasure, dislike. *'புலவனீ கூறியென்'* (கலித். 89.) 2. *புலவு² 3* பார்க்க; see *pulavu² 3 'கல்லென் சேரிப் புலவற்புன்னை'* (நற். 63.)

[புலம் → புலவல்]

புலவன்¹ *pulavaṉ,* பெ. (n.) 1. அறிஞன் (பு. வெ. சிறப்பு.); sage, philosopher. 2. பாவலர் (சூடா.); poet. 3. தேவன் (பிங்.); Dēvaṉ, celestial being. 4. அறிவன்(புதன்)(சூடா.); Mercury. 5. வேந்தன்(இந்திரன்) (பிங்.); Indra. 6. அருகன் (பிங்.); Arhat. *'பொருனன் புனிதன் புராணன் புலவன்'* (சிலப். 10, 179.) 7. புத்தன்; Buddha. *'புலவன் றீர்த்தன் புண்ணியன் புராணன்'* (மணி. 5, 98.)

தெ. பொலமரி (விடை தெரிந்தவன்)

[புல் → புலம் → அறிவு, பொறியுணர்வு. புலம் → புலவன் (வே.க. 3, 63)]

புலவன்² *pulavaṉ,* பெ. (n.) முருகன் (பிங்.); lord Murugaṉ.

மறுவ. பொன்னெயிற்கோன், விண்ணவன் அண்ணல், மதனை வென்றோன், அருட் கொடி வேந்தன், ஆசான், குறிஞ்சி வேந்தன், வேலினுக்கிறை, செவ்வேள், மேகவாகனன், வேள்விக்கு வேந்தன்,

விண்முழுதுமாள், கோபதி, வேந்தன், சிலம்பன், மஞ்சையூர்தி, குமரன், ஆறுமுகன்.

[புல் → புலம் → புலவன்]

புலவா *pulavā,* பெ. (n.) பூலா (சங்.அக.); a large often scandent shrub.

புலவாகிதம் *pulavāgidam,* பெ. (n.) *பூலா (சங்.அக.)* பார்க்க; see *pūlā.*

[புலவா → புலவாகிதம்]

புலவி *pulavi,* பெ. (n.) 1. ஊடல்; sulks, bouderie. *'புணர்வின் னினிய புலவிப் பொழுதும்'* (சீவக. 1378.). 2. வெறுப்பு; displeasure; dislike.

[புல → புலவி]

கணவன் தவற்றாலோ மனைவியின் பேதைமையாலோ சில சமையங்களில் அவரிடைப் பிணக்கு நேர்வதுண்டு. அன்று மனைவி ஊடிக் கணவனொடு பேசாதிருப்பாள். ஊடுதல் சடைவு கொள்ளுதல். அது கணவனால் எளிதாய்த் தீர்க்கப்படும். அது குழந்தையைக் கணவன் எடுத்துக் கொண்டு போய்க் கொடுப்பதனாலும், வீட்டிற்கு விருந்தினர் வந்திருப்பதாலும், உறவினரும் நண்பரும் தலையிடுவதாலும் தீர்க்கப்படும். புலவி முற்றிவிட்டால் துனி எனப்படும். அதை ஒருவராலும் தீர்க்க முடியாது. நீண்ட நாட் சென்று அது தானே தணியும். பழகப் பழகப்பாலும் புளிப்பது போல், கணவன் மனைவி யரிடைப்பட்ட காமவின்பம் சற்றுச் சுவை குறையும் போது அதை நிறைத்தற்குப் புலவியும் வேண்டுமென்றும், அது உணவிற்கு உப்பிடுவது போன்றதென்றும் ஊடல் உப்புக் குறைவதும் துனி உப்பு மிகுவதும் போன்றவை யென்றும் உப்பு மிகையாற் சுவை கெடுவது போல் துனியால் இன்பங் கெடுமாதலால் அந் நிலையை அடையாதவாறு புலவியைத் தடுத்துவிட வேண்டு மென்றும் திருவள்ளுவர் கூறுவர். *'உப்பமைந் தற்றாற் புலவி அது சிறிது மிக்கற்றால் நீள விடல்'* (குறள், 1302) (ப.த.நா.ப. 62.)

புலவிநீட்டம் *pulavi-nīṭṭam,* பெ. (n.) 1. ஊடல் மிகுதி; continued sulks. 2. கலவியிற் கூச்சம் (யாழ்ப்.); conjugal shyness.

[புலவி + நீட்டம்]

புலவிநுணுக்கம் *pulavi-nuṇukkam,* பெ. (n.) சிறு(அற்பக்)காரணத்தைக் கொண்டு தலைவி ஊடுகை (குறள், 132, அதி.); sulks of a wife on flimsy ground.

[புலவி + நுணுக்கம்]

புலவில்லை *pulavillai,* பெ. (n.) தொலைவி லுள்ள பொருளைப் பார்க்க உதவும் கண்ணாடி; field lens.

[புலம் + வில்லை]

புலவு¹–தல் *pulavu-,* 12 செ.கு.வி. (v.i.) புலானாற்ற மடித்தல்; to smell raw flesh. *'புலவுவாய் பாண'* (பெரும்பாண். 22.)

புலவு²–தல் *pulavu,* 12 செ.குன்றாவி. (v.t.) வெறுத்தல்; to dilike, abhor, புலவுதி மாதோ நீயே (புறநா. 219)

[புல → புலவு]

புலவு³ *pulavu,* பெ. (n.) 1. வெறுப்பு; dislike, abhorrence *'புலவுவாய்ப் பாண'* (பெரும்பாண். 22). 2. புலால் (சூடா.); flesh, raw meat, fish. *'புலவுமணற் பூங்கானல்'* (பட்டினப். 94). 3. குருதி, அரத்தம்; blood. *'புடையவிழந்த கூந்தல் புலவுத்தோய'* (சீவக. 293.) 5. நிரயம் (நரகம்) (பிங்.); hell.

[புல → புலவு]

புலவு[4] *pulavu,* பெ. (n.) வயல் (வின்.); arable land.

க. பொல

[புல் → புலம் = நிலம். புலம் → புலவு]

புலவு[5] *pulavu,* பெ. (n.) ஊனோடு கலந்து பக்குவப்படுத்திய உணவு; a kind of dish prepared of cooked meat and boiled rice.

மறுவ. ஊன்சோறு.

[புல் → புல → புலவு]

'புலால்' பார்க்க

ஊன்சோறு அல்லது புலவு பண்டைக் காலத்தில் தமிழகத்திலேயே தோன்றிப் பின்பு வழக்கற்றது. முகம்மதியர் வந்தபின் அவரிடமிருந்து புதிதாய்க் கற்றுக் கொண்டதன்று.

மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டான் றானாக் கொழுந்துவை யூன்சோறும்
பெட்டாங் கீயும் பெருவளம் பழுனி
என்றும் (113)

புலராப் பச்சிலை யிடையிடுபு தொடுத்த
மலரா மாலைப் பந்துகண் டன்ன
ஊன்சோற் றமலை பாண்கடும் பருத்தும்
செம்மற் றம்ம நின் வெம்முனை யிருக்கை
என்றும் (33) வரும் புறப்பாட்டடிகளைக் காண்க.

புலவு[6] *pulavu,* பெ. (n.) சிற்றிலை புலவு,; மரவகை; a tree.

புலவேடர் *pulavēḍar,* பெ. (n.) வேடரைப் போன்று முரட்டாக இயங்கும் ஐம்பொறி; the five senses considered as uncivilized like hunters.

[புலம் + வேடர்]

புலவை *pulavai,* பெ. (n.) *புலவை மருது* பார்க்க; see *pulavai marudau* (L.)

புலவைமருது *pulavai - marudu,* பெ. (n.) பூமருது; flowering muradh. (L.)

[புலவை + மருது]

புலவோன் *pulavōṉ,* பெ. (n.) *1 புலவன்*[1]*–, 2* பார்க்க; see *pulavaṉ*[1]*–, 2.* 2. ஆதன் (ஆத்துமா); soul. *'புவிபுன லனல் கான் மதி புல வோனென முழுதுநிறைந்த முக்கட் பெருமான்'* (கல்லா. 10.)

[புல் → புல → புலவோன்]

புலன் *pulaṉ,* பெ. (n.) 1. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புலன் உணர்வுகள்; sense of the body, of five kinds, viz., šuvai, oḷi, ūṟu, ōšāi, nāṟṟam. *'கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்'* (குறள், 1101) 2. பொறி; organ of sense. *'புலனோடு புணரான்'* (ஞானா. 48, 9.) 3. செயல்கருவி(கருமேந்திரியம்); the organ of motor action. *'இருபுலனும்...... இகழாரே'* (ஆசாரக். 33.) 4. அறிவுடைமை; wisdom, intelligence. *'செல்வம் புலனே புணர்வு'* (தொல். பொ. 299.) 5. பகுத்தறிவு (நாலடி. 12.); intellect; discernment. 6. தெளிவு; that which is clear or obvious. *'பெரும்புணர்ப் பெங்கும் புலனே'* (திவ். திருவாய். 2, 8.) 7. உறுப்பு; limb. *'ஒன்பது வாய்ப் புலனும்'* (நாலடி. 47.) 8. வயல்; arable land. *'புலனந்த'* (பரிபா. 7, 9.) 9. செவ்விதிற் கிளந்தோதல் வேண்டாது சேரிமொழியாற் குறித்தது தோன்றும் நூல் வனப்பு ளொன்று (தொல். பொ. 554.); (poet.) a merit in composition consisting in the use of local idioms of much suggestiveness. 10. *புலம்–,* 2, 3, 4, 9, 10, 11. பார்க்க; see *pulam-* . 2, 3, 4, 9, 11.

[புல் → புலம் = பொருளொடு பொருந்தும் அறிவு, அறிவுறுப்பு, அறிவு நூல். புலம் → புலன் (சு.வி. 36.) பொருந்தியறியும் அறிவு (மு.தா. 183) பொருந்தியிருக்கும் நிலம் (வே.க. 3, 62)]

புலன்செலுத்து–தல் *pulaṉ-šeluttu-,* 12 செ.குன்றாவி. (v.t.) கூர்ந்து (பத்தரமாகக்) கவனித்தல் (வின்.); to attend carefully.

[புலன் + செலுத்து–,]

புலன்வென்றோர் *pulaṉ-veṉṟōr,* பெ. (n.) முனிவர் (ஐம்புலன்களை வென்றவர்) (யாழ்.அக.); ascetics as having conquered the senses.

[புலன் + வென்றோர்]

புலனடக்கம் *pulaṉaḍakkam,* பெ. (n.) **1.** புலன்களை அடக்குகை; controlling of senses. **2.** ஓகப் பயிற்சியின் எண்ணுறுப்புகளுள் ஒன்று (பிரத்தியாகாரம்); one of the eight organs of 'yōga'.

[புலம் + அடக்கம். அடங்கு (த.வி.) – அடக்கு (பி.வி.) – அடக்கம் (தொ.பெ.)]

ஒழுக்கம் (இயமம்), ஒழுங்கு (நியமம்), இருக்கை (ஆசனம்),வளிநிலை (பிராணாயாமம்), புலனடக்கம் (பிரத்தியாகாரம்), நிறை (தாரணை), ஊழ்கம் (தியானம்), ஒடுக்கம் (சமாதி)என்பன ஓகப்பயிற்சியின் எண்ணுறுப்புகள். இவற்றுள் இருக்கையும் வளிநிலையும் உடற்பயிற்சி; ஏனைய ஓகப்பயிற்சி (ப.த.நா.ப. 143)

புலனறி–தல் *pulaṉ-aṟi-,* 3 செ.குன்றாவி. (v.t.) துப்பறிதல் (சென்னை.); to spy out.

[புல் → புலம் = ஐம்பொறிகள் பொருள்களோடு பொருந்தி அறியும் அறிவு, கூர்மதி, துப்பு (வே.க. 3, 62). புலன் + அறி–]

புலனறிசிறப்பு *pulaṉ-aṟi-šiṟappu,* பெ. (n.) வேற்றுப் புலத்தினது நிலையை அறிவித்தார்க்குத் தாம் முன் கூறியதினும் பெருகக் கொடுத்தலை யுணர்த்தும் ஒரு புறத்துறை (பு.வெ. 1, 17.); (purap.) theme of a king specially rewarding spies on their giving useful information about the enemy's country.

[புலனறி + சிறப்பு]

புலனாகு–தல் *pulaṉāgu,* 7 செ.கு.வி.(v.i.) **1.** பார்வையில் படுதல், தெரிதல்; to be visible **2.** தெளிவாதல்; to become clear, be evident. கொடுமை இழைக்கப்பட்டது என்பது உசாவலில் (விசாரணையில்) புலனாகியது. (உ.வ.)

[புலன் + ஆகு–,]

புலனாய்வு *pulaṉāyvu,* பெ. (n.) ஒரு குற்றம் பற்றிய கரி(சாட்சி)களைத் தொகுக்கக் காவல்துறை அதிகாரி எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கை; investigation (of an offense) புலனாய்வு நடந்துவருகிறது. (உ.வ.) **2.** காவல்துறையல்லாத பிறதுறைகளில் ஒரு நிகழ்வுக்கான கரணியம், சூழ்நிலை, அதன் விளைவுகள் ஆகியவற்றைக் கண்டறிய எடுக்கப்படும் நடவடிக்கை; (departmental) investigation (of causes, background etc.) வருவாய்த்துறைப் புலனாய்வு அதிகாரிகள். (உ.வ.)

[புலன் + ஆய்வு]

புலனி *pulaṉi,* பெ. (n.) நண்டு (சங்.அக.); crab.

புலனிடம் *pulaṉiḍam,* பெ. (n.) வாய் (பிங்.) mouth.

[புலம் → புலன் + இடம்]

புலனுக்கடுத்த *pulaṉukkaḍutta,* பெ.எ. (adj.) சிற்றின்பந் தொடர்பான; sexual.

புலனுணர்வாற்றல் *pulaṉuṇarvāṟṟal,* பெ. (n.) *புலன்* பார்க்க; see *pulaṉ.*

[புலன் + உணர்வு + ஆற்றல். புலம் → புலன்]

புலனுணர்வு *pulaṉuṇarvu,* பெ. (n.) *புலன்* பார்க்க; see *pulaṉ.*

[புலன் + உணர்வு. புலம்→ புலன்]

புலனுணர்வுத்திறம் *pulaṉuṇarvu-t-tiṟam,* பெ. (n.) *புலன்* பார்க்க; see *pulaṉ.*

[புலன் + உணர்வு + திறம். புலம் → புலன்]

புலனுழுதுண்மார் *pulaṉ-uḻuduṇmār,* பெ. (n.) கற்றோர்; learned men, as cultivating knowledge. *'புலனுழு துண்மார் புன்கணஞ்சி'* (புறநா. 46.)

[புலன் + உழுது + உண்மார்]

புலனெறி–தல் *pulaṉeṟi-,* 3 செ.குன்றாவி. (v.t.) ஐம்புலனை வெல்லுதல்; to subdue or overcome the senses. *'புலனெறிந்த மெய்ப்போத மாதவன்'* (பாகவத. 1, பரிட்சித்துச். 16.)

[புலன் + நெறி–,]

புலனொடுக்கம் *pulaṉ-oḍukkam,* பெ. (n.) ஐம்புலவாசையை யொடுக்குகை; suppression or subduing of the senses.

[புலன் + ஒடுக்கம். ஒடு → ஒடுங்கு → ஒடுக்கு → ஒடுக்கம்.]

புலா[1] *pulā,* பெ. (n.) *புலவு*[2] பார்க்க; see *pulavu*[2]. *'புலா விட்டரற்ற'* (புறநா. 326.)

[புல → புலவு → புலா]

புலாகம்[1] *pulāgam,* பெ. (n.) சோற்றுப்பருக்கை சோற்றவிழ்; a grain of cooked rice. *'தாலிபுலாக நியாயம்'* (சிவசம. 24.).

[புல் → புலாகம்]

புலாகம்[2] *pulāgam,* பெ. (n.) மீன்; fish.

புலாதி *pulādi,* பெ. (n.) 1. கவலை (யாழ்ப்.); care, anxiety. 2. குழப்பம் (பிராந்தி) (யாழ்.அக.); confusion.

[புலம் + ஆதி]

புலாநீர் *pulānīr,* பெ. (n.) *புலானீர்* பார்க்க; see *pulānīr.*

புலால் *pulāl-,* பெ. (n.) 1. உடலின் ஊன் முழுத்தொகுதி, விலங்கின் எலும்பைச் சுற்றியுள்ள மென்தசைப்பொருள், இறைச்சி, ஊன்; flesh, raw meat, fish. 'புன்புலால் யாக்கை' (திருவாசக37–10.) உண்ணாமை வேண்டும் புலாஅல் (குறள், 257) 2. புலால் நாற்றம்; smell of raw meat, flesh or fish. கயற்புலால் புன்னை கடியும் (நாலடி, 97) 3. தசை நரம்பு (இங்.வைத்.); muscle

[புல் → புள் → பிள் → பிழம்பு = திரட்சி . புல் → புலல் → புலால் = திரண்டதசை, இறைச்சி, அதன் மணம்.]

புலால்கட்டி *pulāl-kaṭṭi,* பெ. (n.) முத்துச் குளித்தலில் கொடிய கடல்மீன் முதலியவற்றை வாய்கட்டித் தடுப்போன் (சங்.அக.); one who binds by magic the mouths of sharks etc., at a pearl fishery.

[புலால் + கட்டி. புல் → புலம் → புலன் = பொறியறிவு, பொறி. புலன் → புலனிடம் = வாய். புலன் → புலால் = வாய்]

புலால்கட்டு—தல் *pulāl-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) முத்துக் குளித்தலில் கொடியமீன் முதலியவற்றின் வாயைக் கட்டுதல் (யாழ்ப்.); to bind by magic the mouths of sharks, etc., at a pearl-fishery.

[புலால் + கட்டு]

புலால்நாற்றம் *pulāl-nāṟṟam,* பெ. (n.) இறைச்சி மணம்; smell of flesh.

[புலால் + நாற்றம். நாறு → நாற்றம்]

புலால்நாறி *pulāl-nāṟi,* பெ. (n.) இறைச்சி நாற்ற மடிக்கும் பெண்; a woman who emits the smell of fish.

[புலால் + நாறி. நாறு → நாறி]

புலால்மேகம் *pulāl - mēgam,* பெ. (n.) சிறுநீர் மணம் பரப்பும் வெட்டை நோய் வகையு ளொன்று; a venereal disease where in the urine smells fishy.

[புலால் + மேகம்]

புலால்வெறுப்பு *pulālveṟuppu,* பெ. (n.) இறைச்சி உணவின் மேலுண்டான வெறுப்பு; abnormal aversion to flesh or meat as food.

[புலால் + வெறுப்பு. வெறு → வெறுப்பு]

புலாலிடம் *pulāliḍam,* பெ. (n.) தசை சேர்ந்திருக்குமிடம், உடம்பு; body, as made of flesh.

[புலால் + இடம்]

புலாலுணவு *pulāluṇavu,* பெ. (n.) *புலவு[5]* பார்க்க; see *pulavu[5]*.

[புலால் + உணவு]

புலாவு[1] *pulāvu,* பெ. (n.) *புலவு[1]* பார்க்க; see *pulavu[1]*.

[புலவு → புலாவு]

புலாவு[2]—தல் *pulāvu-,* 6 செ.கு.வி. (v.i.) புலவு பார்க்க; see *pulavu*. ***'உரவுக் களிற்றுப் புலா அம் பாசறை'*** (பதிற்றுப் 61, 15.).

[புல → புலா → புலாவு]

புலாவு[3]—தல் *pulāvu-,* 6 செ.கு.வி. (v.i.) விடிதல்; to dawn. (திவ். இயற். திருவிருத். 75. வ்யா.)

[புல்லுதல் = பொருந்துதல். புல் → புலம் → புலன். புலனாதல் = அறியப்படுதல். புலப்படுதல் = புலலொடு பொருந்துதல். புல் → புலர் → புலர். புலர்தல் = கண்ணுக்குத் தெரிதல், விடிதல் (மு.தா. 183.) புல் → புல → புலாவு]

புலாழி *pulāḻi,* பெ. (n.) புலால் நாற்றம் பொருந்திய சக்கரப்படை; discus smelling of slain bodies. ***'புலாழித் தலைக் கொண்ட புண்'.*** (பு.வெ. 4, 22.)

[புல + ஆழி]

புலாற்றானம் *pulāṟṟāṉam,* பெ. (n.) புலாலிடம் பார்க்க; see *pulāliḍam*. ***'புலாற்றான நீக்கலாமே'*** (தேவா. 1224,)

[புலால் + தானம்]

Skt. stāna > த. தானம்

புலாற்றுருத்தி *pullāṟṟurutti,* பெ. (n.) புலாலிடம் பார்க்க; see pulāliḍam. *'பொல்லாப் புலாற் றுருத்தி போக்கலாமே'* (தேவா. 1224, 1.)

[புலால் + துருத்தி]

புலான்மறுத்தல் *pulāṉ-maṟuttal,* பெ. (n.) புலாலுணவு விலக்குகை (குறள், 26. அதி.); abstinence from animal food.

[புலான் + மறுத்தல்]

தமிழகத்தில், முதலில்துறவியரே புலாலுணவை நீக்கி வந்தனர். திருவள்ளுவர், அருளுடைமை, புலான் மறுத்தல், கொல்லாமை என்னும் மூவதிகாரங்களையும் துறவறவியலில் வைத்திருப்பதும் கண்ணப்ப நாயனார் படையலும் இங்குக் கவனிக்கத்தக்கன. சமணம் தமிழ் நாட்டிற்கு வந்த பின்னரே இல்லறத்தாரும், சிறப்பாகச் சிவநெறியர், புலாலுணவை நீக்கத் தலைப் பட்டனர். அதனால், மரக்கறியுணவு 'சைவம்' எனப்பட்டது. (ப.த.நா.ப. 39)

புலானாற்றம் *pulāṉāṟṟam,* பெ. (n.) புலால் வீச்சம்; smell of fish or flesh.

[புலால் + நாற்றம். நாறு → நாற்றம்]

புலானீர் *pulāṉīr,* பெ. (n.) அரத்தம் (சூடா.); blood.

[புலால் + நீர்]

புலி¹ *puli,* பெ. (n.) பூனை இனத்தைச் சார்ந்ததும் வரிக் கோடுகளை யுடையதும் பெரிய தோற்ற முடையதுமான நாற்கால் விலங்கு; large Asian striped feline quadruped, tiger, panther, *'புலி தாக்குறின்'* (குறள், 599) பாம்பை முட்டையிலே, புலியைக் குட்டியிலே கொல்ல வேண்டும் (பழ.)

மறுவ. உழுவை, வேங்கை.

ம., க., புலி; **தெ.** புலி, பெத்துபுலி, பெப்புலி; **து.** பிலி; **கோத.** புச்; **துட.** பூசி, ஊலி; **பட.** குலி; **கொலா., நா.** புல்; **கட.** பெர்புல்;

கோண். புல்லீ, புலியால்.

[புள் → புல். புல்லுதல் = பொருந்துதல், தழுவுதல். புல்லி → புலி = முன்கால்களால் தழுவும் விலங்கு (சு.வி. 36.)]



புலி² *puli,* 1. *புலிக்கால்முனி* பார்க்க; see *pulikkāl muṉi. 'தில்லைச் சிவனேயிவ் வாட்டை விட்டுப் போமோ சொல்லாயப் புலி'* (தனிப்பா. ii, 40, 79.); 2. வேங்கை (தைலவ. தைல. 74.). East Indian lion. 3. அரிமா (சிங்கம்) (அக.நி.); lion. 4. மடங்கலோரை(சிங்கவிராசி)(பிங்.); leo of the zodiac. 5. நால்வகைச் சாந்துள் ஒன்று (பிங்.); a compound ointment one of nālvagai-c-cāndu. 6. மயிர்ச் சாந்து; a perfumed unguent for the hair. ஓர் புலிப் பூங்குழலாள் (தனிப்பா. ii, 5, 8.) 7. உண்ணாக்கு (யாழ்.அக.); uvula. 8. சூது கருவிகளி லொன்று; piece in the game of puli-k-kaṭṭam.

மறுவ. ஆடுபுலிஆட்டம்

[புல்லி → புலி]

புலி³ *puli,* பெ. (n.) நாயுருவிச் செடி; a medicinal plant.

புலிக்கட்டம் *puli-k-kaṭṭam,* பெ. (n.) பதினைந்தாம்புலி; a kind of chess.

[புலி + கட்டம்]

புலிக்கட்டாம் *puli-k-kaṭṭām,* பெ. (n.) *புலிக் கட்டம்* பார்க்க; see *puli-k-kaṭṭam.*

[புலிக்கட்டம் → புலிக்கட்டாம்]

புலிக்கட்டான் *puli-k-kaṭṭāṉ,* பெ. (n.) *புலிக் கட்டம் (இ.வ.)* பார்க்க; see *puli-k-kaṭṭam.*

[புலிக்கட்டம் → புலிக்கட்டான்]

புலிக்கட்டு *puli-k-kaṭṭu,* பெ. (n.) புலி வாயைக் கட்டும் மந்திரம்; a spell for stopping or closing the tigers mouth by enchantment and rendering it harmless.

[புலி + கட்டு. கள் → கட்டு]

புலிக்கண் *puli-k-kaṇ,* பெ. (n.) **1.** செத்தை சருகுகள் புகாதபடி மதகின் உட்புறத்தின் நிறுத்தும் துளையிட்ட கல்; stone grid on the inner side of a sluice. **2.** *புலிக்கண்கல்* பார்க்க; see *puli-k-kaṇ-kal.*

[புலி → கண்]

புலிக்கண்கல் *puli-k-kaṇ-kal,* பெ. (n.) தொண்மணிகளுள் ஒன்று(கோமேதகம்) (யாழ்.அக.); sardonyx, a precious stone.

[புலிக்கண் + கல்]

புலிக்காலி *pulikkāli,* பெ. (n.) புலியின் காலடியைப் போன்ற வடிவுள்ள மூலிகை; a herb which resembles the claws of a tiger.

[புலி + காலி. கால் → காலி]

புலிக்கான்முனி *puli-kāṉ-muṉi,* பெ. (n.) ஒரு முனிவர் (வியாக்கிர பாதர்) (கோயிற்பு. பதஞ்சலி. 77.); a rṣi, sage, saint.

[புலிக்கால் + முனி]

புலிக்குட்டி *puli-k-kuṭṭi,* பெ. (n.) *புலிக்குருளை* பார்க்க; see *puli-k-kuruḷai.*

க. புலிமறி.

[புலி + குட்டி]

புலிக்குடத்தி *puli-k-kuḍatti,* பெ. (n.) கழுதைப்புலி (வின்.); hyaena.

[புலி + குடத்தி]

புலிக்குருளை *puli-k-kuruḷai,* பெ. (n.) இளையபுலி; a younger tiger.

க. புலிமறி

[புலி + குருளை. குரு → குருள் → குருளை = நாய், பன்றி, புலி, முயல், நரி முதலியவற்றின் குட்டி "நாயே பன்றி புலிமுயல் நான்கும் ஆயுங் காலை குருளை யென்ப." "நரியும் அற்றே நாடினர் கொளினே" (தொல். மரபியல், 8,9)]

புலிக்குமிழ் *puli-k-kumiḻ,* பெ. (n.) பெருங் குமிழ்; coomb teak. (Nels.)

புலிக்குளமாடு *pulikkuḷa-māḍu,* பெ. (n.) மதுரை மாவட்டத்தின் புலிக்குளம் என்னும் ஊரிலுள்ள மாட்டுவகை; bullock of a special breed from Pulikkuḷam in Madurai district.

[புலிக்குளம் + மாடு]

புலிக்கொடி[1] *puli-k-kodi,* பெ. (n.) சோழர்க்குரிய அடையாளக்கொடி; the flag bears the image of tiger, Co̱ḻar king's flag.

[புலி + கொடி]

புலிக்கொடி[2] *puli-k-kodi,* பெ. (n.) மருந்துச் செடி வகை; a kind of medicinal plant.

மறுவ. வல்லியம்.

[புலி + கொடி]

புலிக்கொடியோன் *puli-k-koḍiyōṉ,* பெ. (n.) சோழன் (பிங்.); Cōḻa king as having a tiger-flag.

[புலி + கொடி + ஓன்]

புலிகடிமால் *puli-kaḍi-māl,* பெ. (n.) புலியைக் கொன்று முனிவரை மீட்ட இருங்கோவே ளென்னும் சிற்றரசன் (புறநா. 201.); Iruṅkō vēḷ, an ancient chief who slew a tiger that threatened a sage.

[புலி + கடி– + மால்]

புலிச்சங்கிலி *puli-c-caṅgili,* பெ. (n.) *புலித் தொடர் (முல்லைப் 62, உரை.)* பார்க்க; see *puli-t-toḍar.*

[புலி + சங்கிலி]

புலிச்சுவடி *puli-c-cuvaḍi,* பெ. (n.) செடி வகை; tigers foot bindweed.

ம. புலிச்சுவடி

[புலி + சுவடி]

புலிச்சுறா *puliccuṟā,* பெ. (n.) 15 அடி வரையில் நீண்டிருப்பதும் மேலே வரிகள் பட்டைப் பட்டையாய்ப் பார்ப்பதற்கு அழகாக இருப்பதும் ஆகிய கடற்சுறா; a sea shark which is more than 15 feet long with stripes on the body.

[புலி + சுறா]



புலிச்சோவடி *puli-c-cōvaḍi,* பெ. (n.) *புலிச்சுவடி* பார்க்க; see *puli-c-uvaḍi.*

[புலிச்சுவடி → புலிச்சோவடி]

புலித்தடம் *pulittaḍam,* பெ. (n.) நஞ்சுக் கொடி; navel cord.

புலித்தடுக்கி *puli-t-taḍukki,* பெ. (n.) *புலிதடுக்கி 1 (சங்.அக.)* பார்க்க; see *puli-taḍu-kki.* 1

[புலி + தடுக்கி]

புலித்தண்டை *puli-t-taṇḍai,* பெ. (n.) **1.** விருதுவகை; an insignia *'புலித்தண்டையும்.... கயற்றுவசமும் படைத்தோன்'* (சிவந்தெழுந்த பல்ல, பிள். 18.). **2.** கோயில் மதிப்பு (மரியாதை) வகை; an honour conferred on a liberal donor to a temple.

[புலி + தண்டை]

புலித்தொடக்கி *puli-t-toḍakki,* பெ. (n.) ஈயத்தண்டு; a sensitive plant.

புலித்தொடர் *puli-t-toḍar,* பெ. (n.) தொடரி (சங்கிலி) வகை; a kind of chain. *'புலித்தொடர் விட்ட புனைமா ணல்லில்'* (முல்லைப். 62.).

[புலி + தொடர்]

புலித்தோல் *puli-t-tōl,* பெ. (n.) புலியின் உரி; tiger's skin.

ம. புலித்தோல்; **க.** புலிதொகலு; பட, குலிதோலு

[புலி + தோல்.]

புலித்தோலான் *puli-t-tōlāṉ,* பெ. (n.) *புலித் தோலுடையோன்* பார்க்க; see *puli-t-tōluḍaiyōṉ.*

[புலி + தோல் + ஆன்]

புலித்தோலுடையோன் *puli-t-tōluḍaiyōṉ,* பெ. (n.) சிவபெருமான் (பிங்.); Šivaṉ, as robed in a tiger's skin.

[புலித்தோல் + உடையான்]

புலிதடுக்கி *puli-taḍukki,* பெ. (n.) **1.** கொடி வகை (பிங்.); Mysore thorn. **2.** கற்றாழை (மலை.); curacoa aloes. **3.** தொடரி (முட்செடி வகை) (மலை.); a straggling prickly shrub.

[புலி + தடுக்கி]

புலிதுடக்கி *puli-tudakki,* பெ. (n.) *புலிதடுக்கி, 1. (நாமதீப. 312.)* பார்க்க; see *puli taḍukki 1.*

[புலிதடுக்கி → புலிதுடக்கி]

புலிதொடக்கி *puli-toḍakki,* பெ. (n.) *புலிதடுக்கி 1.* பார்க்க; see *pulitaḍukki.* 1

[புலிதடுக்கி → புலிதொடக்கி]

புலிநகக்குறி *pulinagakkuṟi,* பெ. (n.) காமக்குறி; a sign of sexual possion.

[புலிநகம் + குறி]

Skt. nakha > த. நகம்

புலிநகக்கொன்றை *puli-naga-k-koṉṟai,* பெ. (n.) புலியுகிர் (நகம்) போன்ற பூக்களை யுடைய கொன்றை வகை (யாழ்.அக.); fetid cassia.

[புலி + நகம் + கொன்றை]

Skt. nakha > த. நகம்

புலிநகப்பூடு *pulinagappūḍu,* பெ. (n.) மஞ்சட் கொன்றைப் பூடு; fetid cassia.

மறுவ. புலிநகக்கொன்றை, புலிராகி

[புலிநகம் + பூடு. பூண்டு → பூடு.]

Skt. nakha > த. நகம்

புலிநகம் *puli-nagam,* பெ. (n.) *புலியுகிர்*[1] பார்க்க; see *puli-y-ugir*[1].

ம. புலிநகம்; **தெ.** புலிகோரு

[புலி + நகம்]

Skt. nakha > த. நகம்.

புலிநடலை *pulinaḍalai,* பெ. (n.) ஆனைத் தடிப்பு என்னும் பூண்டு (சங்.அக.); a plant.

புலிநெய் *puli-ney,* பெ. (n.) மருந்தாக உதவும் புலிக்கொழுப்பு; tiger's fat, a medicament.

[புலி + நெய். நுள் → நொள் → நெள் → நெய் = நீர்மப்பொருளாகிய உருக்கின வெண்ணெய், கொழுப்பு.]

புலிப்பளை *pulippaḷai,* பெ. (n.) புலியிருக்குங் குகை (யாழ்ப்.); tiger's den.

[புலி + அளை – புலியளை → புலிப்பளை. உள் → அள் → அளை = துளை, வளை, பொந்து, குகை]

புலிப்பற்றாலி *pulai-p-paṟṟāli,* பெ. (n.) புலியின் பற்களாலாகிய கழுத்தணி; a kind of necklace made of tigers teeth. *'புலிப்பற்றாலிப் புன்றலைச் சிறாஅர்'* (புறநா. 374.)

ம. புலியன்மோதிரம்

[புலி + பல் + தாலி]

புலிப்பாகைமூர்த்தியார் *pulippāgai - mūrttiyār,* பெ. (n.) பிற்காலப் புலவர்; a poet of later period.

இவர் வள்ளியம்மை புராணம் என்ற நூலை இயற்றியுள்ளார்.

புலிப்பாணி *pulippāṇi,* பெ. (n.) மருத்துவம் (வைத்தியம்), மாயக்கலை (சாலம்), முதலியன பற்றி நூல்களியற்றிய ஒருசித்தர் (சங்.அக.); a Siddha, author of works on medicine and magic.

புலிப்புறா *puli-p-puṟā,* பெ. (n.) புள்ளிப்புறா; spoted dove.

[புள்ளிப்புறா → புலிப்புறா]

புலிப்பூடு *pulippūḍu,* பெ. (n.) கற்றாழை; aloe.



புலிப்பொறி *puli-p-poṟi,* பெ. (n.) மதிற்பொறிகளுளொன்று (சிலப்.15,216, உரை.); defensive machine of a fortress.

[புலி + பெறி]

புலிப்போத்து *puli-p-pōttu,* பெ. (n.) புலிக்குட்டி; tiger's cub. 'புலிப்போத்தன்ன புல்லணற்காளை' (பெரும்பாண்,138.).

[புலி + போத்து. போது → போத்து. போது – அரும்பு, பிஞ்சு, இளம்பருவம்.]

புலிபம் *pulipam,* பெ. (n.) பொன்னாவிரை, (மலை.); tanner's cassia.

புலிபாசிதம் *pulipāšidam,* பெ.(n.) செவ்வியம்; the stem of pepper climber.

புலிபாவிரை *pulipāvirai,* பெ. (n.) *புலிபம்* பார்க்க; see *pulipam.*

மறுவ. பொன்னாவிரை.

[புலிபம் → புலபாவிரை]

புலிமரம் *pulimaram,* பெ. (n.) வேங்கை மரம்; Indian kino.

மறுவ. கணி.

[புலி + மரம்.ஒருபொருள்பன் மொழிகளாய் வரும் வேங்கை, புலி என்னும் இரண்டு சொற்களும் புலியைப் போல் காட்சி தரும் மரத்தைக் குறிப்பன வாயின. வேங்கைமரம் பூ பூத்த நிலையில் புலி போல் காட்சியளிப்பதை "உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கை" (கலி.38,6) எனக் குறிப்பதைக் காண்க.]

புலிமிட்டீசன் *pulimiṭṭīšaṉ,* பெ.(n.) பூனைக்காவிக் கொடி; a climber-mucuna pruricus.

புலிமிரட்டி *pulimiraṭṭi,* பெ.(n.) மாயக்கலை (வித்தை)யில் மை செய்யப் பயன்படும் மூலிகை; a plant used in magic for preparing black paint.

[புலி + மிரட்டி. மிரட்டு → மிரட்டி]

புலிமுகக்கடுக்கன் *pul-muga-k-kaḍukkaṉ,* பெ.(n.) புலியின் முகத்தைப் போன்றதும் மகளிர் காதிற் பூண்பதுமான அணிவகை (வின்.); a kind of ear-ornament worn by women, resembling a tiger's face.

[புலிமுகம் + கடுக்கன்]

புலிமுகச்சிலந்தி *puli-muga-c-cilandi,* பெ. (n.) நச்சு வண்டுவகை (யாழ்.அக.); tarantula, as tiger-faced.

[புலிமுகம் + சிலந்தி]

புலிமுகத்தண்டை *puli-muga-t-taṇḍai,* பெ.(n.) *புலித்தண்டை* பார்க்க; see *puli-t-taṇḍai.*

[புலிமுகம் + தண்டை. தள் → தண்டு → தண்டை = தாமரைக்கொடித் தண்டு போன்ற காலணி.]

புலிமுகப்பணி *puli-muga-p-paṇi,* பெ.(n.) *புலிமுகக் கடுக்கன் **(யாழ்.அக.)*** பார்க்க; see *puli-muga-k-kaḍukkaṉ.*

[புலி + முகம் + பணி]

புலிமுகப்பு *puli-mugappu,* பெ. (n.) *புலிமுகமாடம் **(சீவக. 1836, உரை)*** பார்க்க; see *puli-muga-māḍam.*

[புலி + முகப்பு. முகம் → முகப்பு]

புலிமுகப்பூச்சி *puli-muga-p-pūcci,* பெ. (n.) *புலிமுகச் சிலந்தி **(சங்.அக.)*** பார்க்க; see *puli-muga-c-cilandi.*

[புலி + முகம் + பூச்சி]

புலிமுகம் *puli-mugam,* பெ.(n.) மாட நெற்றி வகை (திவ். பெரியதி. 3, 8, 2 வ்யா. பக். 607); a kind of facade.

ம. புலிமுகம்.

[புலி + முகம். முகு → முகம் = முன்பக்கம், தலையின் முன்பக்கம்.]

'புலிமுகமாடம்' பார்க்க.

புலிமுகமாடம் *puli-muga-māḍam,* பெ.(n.) புலியுருவத்தை முகப்பிற் செய்து வைத்துள்ள மாளிகை; edifice having the figure of a tiger in its facade. *'புலிமுகமாட மலிர வேறி'* (பெருங். இலாவாண. 9, 69.).

[புலிமுகம் + மாடம்]

புலிமுகவாயில் *puli-muga-vāyil,* பெ.(n.) புலிமுக வுருவமைந்த வாயில் (**சீவக. 1836,** குறிப்பு); the gate of an edifice, bearing the figure of a tiger in its facade.

[புலிமுகம் + வாயில்]

புலிமுன்னாடு *pulimunnāḍu,* பெ. (n.) மூலிகை முன் நோய்; as the goat can't stand before the tiger so also disease cannot stand before the medicine.

[புலி + முன் + ஆடு]

புலிமுனியோன் *puli-muniyōn-,* பெ.(n.) *புலிக்கான்முனி* பார்க்க; see *puli-k-kāṉmuni.* *'தெரிவுற நீடும் புலிமுனி யோனும்'* (கோயிற்பு. நடராச. **35.**)

[புலி + முனியோன். முனிதல் = சினத்தல், வெறுத்தல். முனி → முனிவன் = உலகப்பற்றைத் துறந்த அறிவன். முனி → முனியோன்]

புலிமெய்ச்சிலந்தி *puli-mey-c-cilandi,* பெ. (n.) *புலிமுகச் சிலந்தி (வின்.)* பார்க்க; see *puli-muga-c-cilandi.*

[புலி + மெய் + சிலந்தி]

புலியன்திருக்கை *puliyaṉ - tirukkai,* பெ. (n.) மீன்வகையுளொன்று; a kind of fish.

புலியிண்டு *puli-y-iṇḍu,* பெ.(n.) கொடிவகை; white brasiletto climber(L.)

[புலி + இண்டு]

புலியுகிர்[1] *puli-y-ugir,* பெ.(n.) **1.** புலியின் உகிர்; a tigers claw. **2.** புலியின் உகிரை (நகத்தை)க் கோத்துக் குழந்தைகளுக்குக் காப்பாக அணியும் ஓரணி; a necklet with a pendant of tiger's claw, of ten used as a charm for a child. **3.** உகிர் (நக)க் குறிவகை (**கொக்கோ. 5, 53.**); (erot.) nail-mark on the breasts of a woman. **4.** மரவகை; a tree.

க. புலியுகுர்,; **தெ.** புலிகோரு; **பட.** குலிஉகிலு.

[புலி + உகிர். உள் → உளி → உளியம் = உளிபோற் கூரிய உகிர்களையுடைய கரடி. உளி → உகி → உகிர்]

புலியுகிர்[2] *puli-y-ugir,* பெ.(n.) முப்பத்திரண்டு ஓமாலிகையுள் ஒன்று (**சிலப். 6, 77,** உரை); an aromatic substance, one of **32** ōmāligai, q.v.

[புலி + உகிர்]

புலியுகிரி *puliyugiri,* பெ.(n.) *புலிதடுக்கி, 1 (சங்.அக.)* பார்க்க; see *puli-taḍukki-1*

[புலி + உகிரி]

புலியுகிலி *puli-y-ugili,* பெ.(n.) *புலியுகிரி (மலை.)* பார்க்க; see *puli-y-ugiri.*

[புலியுகிரி → புலியுகிலி. 'ர—ல' போலி]

புலியுப்புக்கண்டம் *puliyuppu-k-kaṇḍam,* பெ.(n.) காயவைத்துப் பக்குவப்படுத்திய புலியின் இறைச்சித் துண்டம்; dried and preserved tiger's flesh.

[புலி + உப்புக்கண்டம்]

புலியும்ஆடும் *puliyum - āḍum,* பெ.(n.) சிறுவர் விளையாட்டு; a kind of children game.

[புலி + உம் + ஆடு + உம்]

பல பிள்ளைகள் வட்டமாய்க் கைகோத்து நிற்க ஒரு பிள்ளை உள்ளும் மற்றொரு பிள்ளை வெளியும் நிற்பர். உள்நிற்கும் பிள்ளை ஆடாகவும் வெளிநிற்கும் பிள்ளை புலியாகவும் பாவிக்கப்பெறுவர். புலிக்கும் வட்டமாய் நிற்கும் பிள்ளைகட்கும் பின் வருமாறு உரையாட்டு நிகழும்.

புலி: சங்கிலி புங்கிலி கதவைத்திற. பிள்ளைகள்: நான்மாட்டேன் வேங்கைப்புலி.

புலி: வரலாமா? வரக்கூடாதா? பிள்ளைகள்: வரக்கூடாது.

பிள்ளைகள் வழிமறித்தபின் புலியாரேனும் இரு பிள்ளை கட்கிடையில் நுழையப் பார்க்கும். பிள்ளைகள் இடம்விடுவதில்லை. பலமுறை அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தபின், புலிதிடுமென்று ஓரிடத்தில் வலிந்து புகும். உடனே ஆடு வெளியே விடப்பெறும். புலி ஆட்டைப்பிடிக்க வெளி யேறும். ஆடு மீண்டும் உள்ளே விடப்பெறும். இங்ஙனம் மாறிமாறி இரண்டொருமுறை நிகழ்ந்தபின் இறுதியில் புலி ஆட்டைப் பிடித்துக் கொள்ளும்.

இவ்விளையாட்டின் தோற்றம் வெளிப்படை. வட்டமாய் நிற்கும் பிள்ளைகள் ஆட்டுத் தொழுவத்தை நிகர்ப்பர் (த.வி.130)

புலியுயர்த்தோன் *puli-y-uyarttōṉ,* பெ.(n.) சோழன் (புலிக் கொடியை உயர வெடுத்தவன் (சூடா.)); Cōḻa king, as flying a tiger-flag.

மறுவ. புலிக்கொடியோன்

[புலி + உயர்த்தோன்]

புலியுறுமி *puli-y-uṟumi,* பெ.(n.) **1.** புலிபோல் முழங்கும் பறை வகை; a kind of drum sounding like the growl of a tiger. **2.** கிறிச்சான்; watchman's rattle. **3.** புள்ளோட்டுங் கருவி; rattle to scare away birds.

[புலி + உறுமி]

புலியுறை *puli-y-uṟai,* பெ.(n.) புலித்தோலாற் செய்த கருவியின் மேலுறை; sheath of sword, javelin, etc., made of tiger's skin. *'திண்பிணி யெஃகம் புல்யுறை கழிப்ப'* (பதிற்றுப். 19, 4)

[புலி + உறை]

புலியூர்[1] *puliyūr,* பெ.(n.) தில்லை (சிதம்பரம்) (சூடா.); Tillai (Chidambaram)

[புலி + ஊர்]

புலிகள் மிகுதியாக இருந்த ஊர் என்னும் பொருளில் ஏற்பட்ட பெயர். புலியின் வீரத்தை வியந்து பாராட்டும் வகையில் அமைந்த ஊர் புலியூர் என்றும் அமையும். பாதிரிப்புலியூர், எருக்கத்தம் புலியூர் முதலிய ஊர்கள் பாடல்பெற்றுள்ளன. பெரும்புலியூர் பெரம்பலூர் என்றும் குறும்புலியூர் குறும்பலூர் என்றும் திரிபடைந்துள்ளன. மயிலாடுதுறைக்குத் தெற்கே அமைந்த ஊர் சிறுபுலியூர். ஆயின் புலிக்காலுடன் திகழ்ந்த முனிவன் (வியாக்கரபாதர்) வாழ்ந்த இடம் என்று தொல்கதை புனையப்பட்டது பிற்கால வழக்காகும்

புலியூர்[2] *puliyūr,* பெ. (n.) குட்டநாட்டு ஊர்; a village in Kuṭṭanāḍu. "செழுநீர் வயல் குட்டநாட்டுத் திருப்புலியூர்" (நாலா–2942). 'திகழ் மணி நெடு மாடம் நீடு திருப்புலியூர்' (நாலா–2944)

[புலி + ஊர் .]

புலிகள் மிகுதியாக வாழ்ந்தமையால் இப்பெயர் பெற்றது.

புலியூர்க்கோட்டம் *puliyūr-k-kōṭṭam,* பெ.(n.) தொண்டை மண்டலத்துக் கோட்டங்களு ளொன்று (S.I.I. iv. 188); a kōṭṭam in Toṇḍaimaṇḍalam.

[புலியூர் + கோட்டம். கோடு → கோட்டம்]

புலியூர்சிதம்பரரேவணசித்தர் *puliyūr-šidambara - rēvaṇa - šittar,* பெ.(n.) பிற்காலப் புலவர்; a poet of later period.

இவர் அகராதி நிகண்டு, சிவஞான தீபம், பட்டீச்சுரப் புராணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

புலியூர்ப்பட்டு *puli-y-ūr - paṭṭu,* பெ.(n.) பட்டுவகை; a kind of silk cloth. (S.I.I.viii. 85)

[புலியூர் + பட்டு]

புலியூர்வெண்பா *puli-y-ūr-veṇbā,* பெ.(n.) தில்லை (சிதம்பரத்து)ச் சிவபெருமான் மேல் பதினெட்டாம் நூற்றாண்டினரான மாரிமுத்துப் புலவரியற்றிய ஒரு சிற்றிலக்கியம் (அபி.சிந்.); a poem on the Sivaṉ shrine in Chidambaram, by Māri-muttu-p-pulavar of 18th cent.

[புலியூர் + வெண்பா]

புலியேறு *puli-y-ēṟu,* பெ.(n.) ஆண் புலி; male tiger.

[புலி + ஏறு.]

புலிராகி *pulirāgi,* பெ.(n.) *புலிநகப்பூடு* பார்க்க; see *pulinagappūḍu.*

புலிரிகம் *pulirigam,* பெ.(n.) பாம்பு (யாழ்.அக.); snake.

புலிவலம் *pulivalam,* பெ.(n.) திருவாரூர் மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tiruvārūr dt.

[புலி + வலம்]

புலிவேடம் *puli-vēḍam,* பெ.(n.) இசுலாமியத் (முகரம்) திருநாளில் கொள்ளும் புலிக்கோலம் முதலியமுகமூடி உருவம்(வேடம்); masquerade during Muharram especially the tiger-masquerade. (G.Sm.D.I.i, 160.)

[புலி + வேடம்.]

Skt. vēṣa > த. வேடம்

புலு *pulu,* பெ.(n.) பத்தைக் குறிக்கும் குழூஉக்குறி (சங்.அக.); cant for ten.

புலுட்டு–தல் *puluṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தோசை (ரொட்டி) முதலியன கருக்குதல்; to roast, parch, fry lightly. 2. சுடுதல்; to burn, as one's finger; to scald.

[புல் → புலு → புலுண்டு → புலுட்டு–,]

புலுட்டை *puliṭṭai,* பெ. (n.) 1. செழிப்பற்றது; that which is withered, thin, lean. *'புலுட்டைப் பயிர்'* 2. மங்கின நிறம்; colour; tawny brown *'புலுட்டைப் பசு'* 3. மங்கின அல்லது செழிப்பற்ற தன்மை; withering condition.

[புல் → புலு → புலுண்டு → புலுட்டு → புலுட்டை]

புலுண்டல் *pulunḍal,* பெ.(n.) 1. கருகலுணவு; food carelessly cooked, badly rusted or smoked. 2. *புலுட்டை* பார்க்க; see *puluṭṭai.*

மறுவ. புல்காரொட்டி

[புலுண்டு → புலுண்டல். 'அல்' தொ.பெ.ஈறு]

புலுண்டு–தல் *puliunḍu-,* 15 செ.கு.வி. (v.i.) கருகுதல்; to be roasted, fried or parched lightly; to be spoiled in boiling by absorption of water.

[புல் → புள் → புழுங்கு. புழுங்குதல் = எரிதல், புகைதல்.
புல் → புலு → புலுண்டு--,]

புலை[1] *pulai,* பெ.(n.) **1.** இழிவு; baseness. *'புலையாம் பிறவி பிறந்து'* (அஷ்டப். திருவரங்க. **16**) **2.** தூய்மையற்றது; uncleanness *'புலை சூழ் வேள்வியில்'* (மணிமே. **13, 28**) **3.** தீட்டு; defilement *'பொன்னகர் மூடிப் புலைசெய் துடன்று'* (கல்லா. **25, 11**) **4.** தீயநெறி; vice, evil way *'புலைமேலுஞ் செலற்கொத்துப் போது கின்ற செல்வத்தின்'* (கம்பரா. இராவணன்வதை. **204**) **5.** பொய்; lie. *'கள்ளங் கொலை கட்புலை காமமென் றைந்து மற்றார்க்கு'* (அரிச்.பு.நாட்டுப். **6**) **6.** விலைத்தொழில்; adultery. *'புல்ல லோம்பன் மின் புலைமக னிவனென'* (மணிமே. **13, 91**) **7.** கீழ்மகன்; outcaste. *'எச்சிலார் நோக்கார் புலைதிங்கள்'* (ஆசாரக். **6**) **8.** தீ நாற்றம் (வின்); stench.

க. பொல், கொல்; **து.** பொலசு

[புல்லுதல் = துளைத்தல். புல் = உட்டுளை யுள்ள நிலைத்திணை வகை. புல் → புன் → புன்மை = புல்லைப் போன்ற இழிந்த நிலை, இழிவு, சிறுமை, சிறு தன்மை. புல் → புல்லன் = இழிந்தோன். புல் → புலை]

புலை[2] *pulai,* பெ.(n.) ஊன்; animal food "புலையுள்ளி வாழ்தல்" (இன். நாற். **13**).

[புல்லுதல் = பொருந்துதல், ஒட்டுதல். புல் → புலை = உடற்கூட்டில் எலும்போடு ஒட்டியிருக்கும் தசை, ஊன்]

புலைக்குளி *pulai-k-kuḷi,* பெ.(n.) பிணத்தைப் புதைத்து விட்டு, வீடுதிரும்பும் முன் குளித்து விட்டு வருவது; bath taken after burying the corpse, before returning to the house.

[புலை + குளி. பிணம் புலையாக(தீட்டாக)க் கருதப்பட்டதால் அதை நீக்கும் பொருட்டுக் கொள்ளும் குளியல் புலைக்குளி எனப்பட்டது]

புலைச்சி[1] *pulaicci,* பெ.(n.) புலைப்பெண்; a woman of pulaiya caste. *'கண்ணில்லா ளொரு புலைச்சி'* (பிரமோத். **3, 3.**)

ம. புலச்சி; **க.** பொலதி, கொலதி

[புல் → புலை → புலைச்சி. 'சி' பெ.பா.ஈறு]

புலைச்சி[2] *pulaicci,* பெ.(n.) எவட்சாரம் (சங்.அக.); nitrate of potash.

புலைச்சேரி *pulaiccēri,* பெ.(n.) புலை (சாதியோர்) வாழுமிடம்; quarters of the pulaiyās. *'அவ்வாறு செறிமனைகள் புலைச்சேரி சுடுகாடாகும்'* (சிவரக. பிசாசு. **22**)

க. பொலெகேரி, பொலகேரி, கொலகேரி, கொலெகேரி

[புலை + சேரி. சேர் → சேரி]

புலைசு *pulaišu,* பெ.(n.) புலால்; flesh, raw meat. *'புலைசு தேன்க ளொருவுதல்'* (யசோதர. **4, 17.**)

மறுவ. இறைச்சி, ஊன், கறி, திற்றி, தூ, தூவு, புலவு, புலால், வள்ளூரம், விடுக்கு

தெ. பொலுசு

[புலை → புலைசு]

புலைஞர் *pulaiñar,* பெ.(n.) **1.** இழிந்தோர்; (யாழ்.அக.) vile people. **2.** கீழ்மக்கள் (பிங்.); out castes.

[புலை → புலைஞர்]

புலைத்தனம் *pulai-t-taṉam,* பெ.(n.) 1. இழிகுணம்; baseness, vileness. 2. கொலைக் குணம் (யாழ்.அக.); barbarity; cruelty to animals.

[புலை + தனம்]

புலைத்தி *pulaitti,* பெ.(n.) 1. இழிகுலத்துப் பெண்; a low caste woman. *'முருகு மெய்ப் பட்ட புலைத்தி போல'* (புறநா. 259) 2. வண்ணாத்தி; washerwoman. *'புலைத்தி கழீஇய தூவெள்ளறுவை'* (புறநா. 311.)

க. கொலத்தி, பொலதி; பட. கொலத்தி

[புலை → புலைத்தி. 'தி' பெ.பா.ஈறு]

புலைத்தொழில் *pulai-t-toḻil,* பெ.(n.) இழிசெயல்; evil habits, vile practice. *'பொல்லாத காமப் புலைத்தொழிலில்'* (தாயு. எந்நாட். தத்துவ. 13.)

க. பொலெகெலச (தீட்டுடன் தொடர்பு கொள்ளுதல்)

[புலை + தொழில்]

புலைப்பாடி *pulai-p-pāḍi,* பெ.(n.) *புலைச்சேரி* பார்க்க; see *pulai-c-cēri.* *'சிற்றில்பல நிறைந்துளதோர் புலைப்பாடி'* (பெரியபு. திருநாளைப். 6.)

[புலை + பாடி. படு → பாடு → பாடி = மிகத் தாழ்மட்டமான கூரை வீடுகள் சேர்ந்த முல்லை நிலத்தூர், சிற்றூர், ஊர்]

புலைமகன் *pulai-magaṉ,* பெ. (n.) 1. கீழ்க்குலத்தைச் சேர்ந்தவன்; low-caste man. 2. இறுதிச்சடங்கு செய்விப்போன் (புரோகிதன்); purohit, as officiating in funeral ceremonies. *'புலை மகனுக்குப்ப'* (சீவக. 2984) 3. மயிர் மழிப்போன் (நாவிதன்); barber, as officiating in funeral ceremonies (சீவக. 2984, உரை)

ம. புலயன்; க. பொலெய; பட. கொலய

[புலை + மகன். மழ → மக → மகன்.]

புலைமை *pulaimai,* பெ.(n.) 1. இழிவு; vileness; baseness; *'நின் தலைமையில் வாழ்க்கை புலைமையென்றஞ்சி'* (மணி, 24, 80.) 2. இழிவான நடை (வின்.); vicious practice.

க. பொல், கொல்.

[புலை → புலைமை]

புலையர்சுடுநீறு *pulaiyar-šuḍu-nīṟu,* பெ.(n.) சுடுகாட்டுச் சாம்பல்; ash of the burning pure

[புலையர் + சுடு + நீறு]

புலையவிர்ப்பட்டை *pulai-y-avir-p-paṭṭai,* பெ.(n.) கருப்புநிற மூலிகை; honey shrub.

புலையன் *pulaiyaṉ,* பெ.(n.) 1. கீழ்மகன்; base or low caste person, outcaste; *'புலையனும் விரும்பாதவிப் புன்புலால் யாக்கை'* (அரிச். 4. மயான. 128.) 2. இறுதிச்சடங்குசெய்விப்போன் (புரோகிதன்); purohit *'புலைய னேவப் புன்மேல் அமர்ந்துண்டு'* (புறநா. 360) 3. ஒருசார் மலை வாழ்நர் (சாதி); an aboriginal caste on the Aṉaimalai's and other hills of South India. 4. இழிசினர், கீழோர் (சண்டாளன. அரு.நி.); outcaste. 5. பாணன்; a person belonging to Pāṇaṉ caste. *'பாண்டலை யிட்ட பலவல் புலையனை'* (கலித். 35)

ம. புலையன்; க. பொலெய, கொலெய;

குட. பொலெய; பட கொலெய

[புலை → புலையன்] புலை[1] பார்க்க

pulinda, a man of a barbarous tribe. Gt. (p. **528**) compares. D. poleya (pulaya) s. pole. cf. plava (No. 207) pulōma, name of a demon. For this term too Gt. (p. **528**) compares D. pole etc., pulkasa, the son of a Nishāda or of a Sūdra father as of a Kshatriyā mother. Gt. (p. **528**) refers also this term to D. pōle. etc., (KKED xxix)

புலையாட்டம் *pulai-y-āṭṭam,* பெ.(n.) நிலையின்மை (வின்.); transitoriness, illusiveness.

[புலை + ஆட்டம். ஆடு → ஆட்டு → ஆட்டம்]

புலையாட்டு *pulai-y-āṭṭu,* பெ.(n.) *புலையாட்டம் (வின்.)* பார்க்க; see *pulai-y-āṭṭam.*

[புலை + ஆட்டு. ஆடு → ஆட்டு]

புலையாடி *pulai-y-āḍi,* பெ.(n.) புலையன் எனப் பொருள்படும் வசை(நிந்தை)ச்சொல்; pulaiya man, a term of abuse.

[புலை + ஆடி. ஆடு → ஆடி. 'இ' வினைமுதலீறு]

புலையாடு-தல் *pulai-y-āḍu-,* 7 செ.கு.வி.(v.i.) இழிவாக நடத்தல் (வின்); to lead a vicious life.

[புலை + ஆடு-, 'ஆடு' து.வி.]

புலைவினையர் *pulai-viṉaiyar,* பெ.(n.) இழிதொழிலாளர்; abominable, vile person; men of execrable deeds. *'கொலைவினைய ராகிய மாக்கள் புலை வினையர்'* (குறள், 329)

[புலை + வினையர்]

புலௌ *pulau,* பெ. (n.) *புலவு[4] (வின்.)* பார்க்க; see *pulavu[4].*

[புலவு → புலௌ]

புவ்வத்தாமரை *puvva-t-tāmarai,* பெ. (n.) திருமாலின் உந்தி (நாபி)யினின்று எழுந்த முளரி (கமலம்); lotus from the navel of Viṣṇu, as the most ancient. *'புவ்வத் தாமரை புதையுங் கண்ணன்'* (பரிபா.**15,49.**)

[பூ → பூவு → புவ்வு + தாமரை. தும் → தும்பு → துப்பு = சிவப்பு. தும்பு → தும் பரம் = சிவப்பு. தும் → துமர் → துவர் = சிவப்பு. துமர் → தமர் → தாமரம் = செம்பு. தாமரம் → தாமரை]

புவ்வா *puvvā,* பெ. (n.) உணவு; food.

க., தெ. புவ்வ

[புகுதல் = உட்செல்லுதல், வாய்க்குட் செல்லுதல். புகு → புகா = வாய்க்குட் செல்லும் உணவு. ஒ.நே. உள் → உண். புகா → புகவு = உணவு. புகா → புவா → புவ்வா (கொ.வ.) (வ.வ.2,37)]

புவ்வு *puvvu,* பெ. (n.) பூ பார்க்க; see *pū.*

க.புவ்வு, பூவு, குவ்வு, கூவு; **தெ.** புவு, புவ்வு,

[பூ → பூவு → புவ்வு]

புவத்துக்குடி *puvuattu-k-kuḍi,* பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள புவத்துக் குடியிலிருந்து வந்த ஒருசார் செட்டி இனம் (சாதி); (E.T.ii.) a division of Chettis who wear a tuft of hair and who came originally from Puvattu-k-kuḍi, a village in Tañjāvūr district.

[புறத்துக்குடி → (பூத்துக்குடி) → புவத்துக்குடி]

புவர் *puvar,* **பெ.** (n.) பகைவர்; enemies. (Tranquebar.)

மறுவ. எதிரி.

[பகைவர் → பொகவர் → புகவர் → புவர்]

புழக்கடை *pul̤a-k-kaḍai,* **பெ.** (n.) *புழைக்கடை (கொ.வ.)* பார்க்க; see pul̤ai-k-kaḍai.

மறுவ. கொல்லைப்புறம், புறவாடை, பொறவடை.

[புழைக்கடை → புழக்கடை]

புழக்கடைநடை *pul̤a-k-kaḍai - naḍai,* **பெ.** (n.) புழைக்கடைக்குப் போகும் வழி; gangway leading to the backyard of a house(C.G.).

மறுவ. நடை.

[புழைக்கடை → புழக்கடை + நடை]

புழக்கம் *pul̤akkam,* **பெ.** (n.) **1.** அறிமுகம்; familiarity. **2.** (காசு, சொல் முதலியவை) வழக்கில் இருக்கும் நிலை, பயன்பாடு; (of coins, word,etc,) circulation, currency. use. புதிய இருபத்தைந்து காசு புழக்கத்திற்கு வந்துள்ளது, இந்தச் சொல் இன்னும் புழக்கத்தில் இருக்கிறதா? (உ.வ.) **3.** தோற்றம் (யாழ்.அக.); appearance **4.** இடைவெளிவிட்ட தன்மை; sparseness. *'புழக்கமாய் நாற்று விட்டான்'* Cm.

[பன் → (பய்) → பயில் → பயிற்று. பழ → பழகு → பழக்கு → பழக்கம் பழகு → பழங்கு, பழங்குதல் = ஒரு புதுப்பொருளைப் பலநாட் பயன் படுத்துதல் பழைமையாக்குதல், பயன் படுத்துதல். பழங்கு → புழங்கு → புழக்கம் = ஒரு பொருளைப் பலகாற் பயன் படுத்துதல், ஓரிடத்திற் பழகுதல், நடமாட்டம், பணப்புழக்கம், மக்கட்புழக்கம் என்பன வழக்கு (மு.தா.274,275)]

புழக்கை *pul̤akkai,* **பெ.** (n.) அல்குல் வழி; way of vagina.

[புழு → புழை = துளை. புழை → புழைக்கை =(துளையுடைய) தும்பிக்கை. புழைக்கை → புழக்கை]

புழகு *pul̤agu,* **பெ.** (n.) **1.** மலையெருக்கு; mountain madar, *'புழகமல் சாரல்''* (மலைபடு.219.) **2.** புனமுருங்கை; palas tree. (குறிஞ்சிப்.96.உரை.) **3.** செந்நிறப்பூவுள்ள செடி (குறிஞ்சிப்.96,உரை.); a plant with red flowers.

புழங்கு-தல் *pul̤aṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) & செ.கு.வி. (v.t.) **1.** கையாளுதல் to practice, exercise, put to use. *'விதர்ப்ப தேயத்திற் புழங்கலுறும் பொருண் முழுதும் பொலிந்து'* (விநாயகபு.55,4.) **2.** பழகுதல் (இ.வ.); to be conversant or acquainted to abide or associate with.

[பழ → பழகு → பழக்கு → பழக்கம். பழகு → பழங்கு → புழங்கு (மு.தா.274, 275)]

புழப்பு *pul̤appu,* **பெ.** (n.) பொன்னாவிரை (சங்.அக.); tanner's cassia.

புழல் *pul̤al,* **பெ.** (n.) **1.** உட்டுளை; tube, anything hollow, *'பூழிபூத்த புழற்காளாம்பி'* (சிறுபாண்.134.) **2.** சாக்கடை(சலதாரை)(பிங்.); drain. **3.** பண்ணியாரம்; a kind of pastry.

'*தீம்புழல்வல்சி* (மதுரைக்.395.)4. மீன்வகை (பிங்.); fish.

[புல்லுதல் = துளைத்தல். புல்→ புள்→ புழு = துளைத்தரிக்கும் சிற்றுயிரி. புழு → புழல் (வே.க.3,101–106)]

புழற்காய் *pular̲kāy,* பெ. (n.) நடுவில் துளைகொண்ட காய், கொன்றை; hollow fruit, as of kon̲r̲ai '*புழற்காய்க் கொன்றைக் கோடணி கொடியினர்*' (நற்.296,4)

[புழல் + காய்]

புழற்கால் *pular̲kāl,* பெ. (n.) துளையுள்ள நாளம்; hollow stalk as of a lotus. புழற்காலாம்பல் முதலியனவும் (தொல். பொ.642, உரை.)

[புழல் + கால்]

புழற்கோட்டம் *pular̲-kōṭṭam,* பெ.(n.) தொண்டைமண்டலத்துக் கோட்டங்களுளொன்று; a kōṭṭam in Toṇḍai-maṇḍalam. (S.I.I.iv,187);

[புழல் + கோட்டம். கோடு → கோட்டம்]

புழற்கோடு *pular̲-kōḍu,* பெ. (n.) உட்டுளையுள்ள கொம்பு; hollow horn. '*புழற்கோட்டாமான் புகல்வியும்*' (குறிஞ்சிப்.253.).

[புழல் + கோடு. குல் → குள் → கொள் → கொடு → கோடு = வளைவு, வளைந்த விலங்குக்கொம்பு.]

புழாந்தை *pulāndai,* பெ. (n.) புழானென்பவனுடையதந்தை (தொல். எழுத்.348,உரை,); father of Pulān̲.

[புழான் + தந்தை → புழான்தந்தை → புழாந்தை (மரூஉ)]

புழு¹ *pulu,* பெ. (n.) 1. காலற்று நெளிந்து நகரும் நீள் உடலுயிரி, சிற்றுயிரி (கிருமி); Worm, maggot '*புழுவாய்ப் பிறக்கினும்*' (தேவா.1012,8.) 2. கரு (இ.வ.); embryo

ம.புழு; க.புழு, புழ; தெ.புருகு, புருவு, ப்ருவ்வு; து.புரி,புர, புரு; கோத.பூ; துட. புவ்; பட. கூ; குட, புளு; கொலா, நா,புர்ரெ;

பர்.புருட்; கட.புடுத்; மா.பொம்ரு; கொண்.பிழி; கூய். ப்ரியு, ப்ரீயு; குவி. ப்ரீயுலி; குரு.பொச்கொ; பிரா.பூ;

[புல்லுதல் = துளைத்தல். புல் → பொய். பொல்லுதல் = துளைத்தல். பொல் = புதல். புல் → புள் → புழு = துளைத்தரிக்கும் சிற்றுயிரி. (வே.க.3,101–104)]

pilu, a worm, an insect cf.D.pulu, etc., puṇdara, a worm cf.D.pula, etc., pulaka, anykind of insect or vermin infesting animals. cf.D.pula, etc. (KKED.xxi)

புழு²–த்தல் *pulu-,* 11 செ.கு.வி. (v.i.) 1. புழுப்பிறத்தல்; to breed worms. '*அவரைக்காய் புழுத்துப் போயிற்று*' 2. சூலுருதல் (கருத்தரித்தல்); to become pregnant. அவள் வயிற்றில் ஒரு புழுவாவது புழுக்கவில்லையே 3. மிகுதல்; to be superabundant as, fruits. '*இந்த ஆண்டு (வருடம்) பலாக்காயாய்ப் புழுத்துப் போயிற்று*' (இ.வ.) 4. வெறுப்புடன் பேசுதல் (வின்.); to abuse 5. பயனற்றதாதல் (கொ.வ.); to be useless or worthless, as a worm eaten thing.

ம.புழுக்க; க.புழி; தெ.ப்ருச்சு; து.பூர்குனி; பூர்ங்குனி; குரு.பொச்னா; பட.கூத்து.

[புல் → புள் → புழு–, (வே.க.3,104)]

புழுக்கச்செய் —தல் *pulukkaccey-,* 1 செ.கு.வி. (v.i.) நச்சுப் புழுவை யுருவாக்கல்; to verminate

[புழுக்க + செய்—,]

புழுக்கட்டி *pulukkatti,* பெ. (n.) **1.** புழுக்களால் நேர்ந்த கட்டி; abscess formed on account of germs. **2.** புழுக்கள் நிறைந்த கட்டி; worm ridden abscess.

[புழு + கட்டி. கள் → கட்டி]

புழுக்கடி[1] *pulukkadi,* பெ. (n.) **1.** புழு அரித்தது (வின்.); anything worm eaten. **2.** முடியை உதிரச் செய்யும் நோய்வகை; a disease which makes the hair fall off.

மறுவ. புழுவெட்டு.

ம. புழுக்கடி

[புழு + கடி]

புழுக்கடி[2] *pulukkadi,* பெ. (n.) *புழுக்கம், 1. (இ.வ.)* பார்க்க; see *pulukkam.1*

[புழுக்கம் → புழுக்கடி]

புழுக்கம் *pulukkam,* பெ. (n.) **1.** காற்றில்லாத சரக்கறையில் வியர்க்கும் வெப்பம்; heat, sultriness. **2.** வேர்வை; sweat. **3.** துன்பம்; great distress '*நெஞ்சு புழுக்கமுறத் திண்டாடினன்*' (கம்பரா. அதிகாய.27.) **4.** பொறாமை (கொ.வ.); envy. **5.** வன்மம் (யாழ்.அக.); long cherished hatred.

[புழுங்கு → புழுக்கம்.]

புழுக்கமா—தல் *pulukkam-ā-,* 6 செ.கு.வி. (v.i.) வெப்பங்கொள்ளல்; to get heat from closeness of air.

[புழுக்கம் + ஆ —,]

புழுக்கமானகாலம் *pulukkamāna-kālam,* பெ.(n.) மிகுவெப்பமுள்ள பருவம்; sweltering weather.

[புழுக்கமான + காலம்]

புழுக்கமுறல் *pulukkamural,* பெ. (n.) கூடுதலாக வியர்த்தல்; sweat.

[புழுக்கம் + உறல். உறு → உறல்]

புழுக்கல் *pulukkal,* பெ. (n.) **1.** அவித்தது; anything slightly boiled '*உப்பிலிப்புழுக்கல்*' (சீவக.2984.) **2.** சோறு; cooked rice. '*விரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்*' (பொருந.1141) **3.** புழுங்கலரிசி; rice from paddy parboiled, dried and husked. '*புழுக்கலா னிமிர்ந்த சோறு*' (திருவிளை.நாட்ப்டு.32.) **4.** முதிரைப்பண்டம்; pulse, pease '*புழுக்கலு நோலையும்*' (சிலப்.5,68.)

[புழுக்கு →புழுக்கல். 'அல்' தொ.பெ.ஈறு]

புழுக்கழிச்சல் *pulu-k-kaliccal,* பெ. (n.) கரப்பான் புழுவினால் குழந்தைகட்கு ஏற்படும் வயிற்றுளைச்சல் நோய்,; a children disease

மறுவ. வயிற்றுப்போக்கு

[புழு + கழிச்சல்.கழி → கழிச்சல்.'சல்' தொ.பொ.ஈறு]

புழுக்களைத்தள்ளல் *pulukkalai-t-tallal,* பெ. (n.) முட்டையிலிருந்த புழுக்களை நறுக்கிய தழை பரப்பப்பட்ட தட்டில் கோழி இறகால் தள்ளுதல்; pushing the worms from the eggs, to the plate scattered with leaf by the help of a feather

[புழுக்களை + தள்ளல். தள்ளு → தள்ளல். 'அல்'. தொ.பெ.ஈறு]

புழுக்கறை *pu̱lukkaṟai,* பெ. (n.) புழுங்கச் செய்யும் அறை; hot air room for causing perspiration '*புழுக்கறைப் பட்டோர் போன்று*' (மணிமே.3,95.)

[புழுக்கு + அறை. அறு → அறை]

புழுக்காதி *pu̱lukkādi,* பெ. (n.) ஆடு தின்னாப்பாளை; a bitter ash coloured creeper.



புழுக்காய்ச்சல் *pu̱lukkāyccal,* பெ. (n.) குழந்தைகளின் வயிற்றில் வளரும் புழுக்களா லேற்படுங் காய்ச்சல்; a fever of young children due to worms in the abdomen.

[புழு + காய்ச்சல். காய் → காய்ச்சல். 'சல்'. தொ.பெ.ஈறு]

புழுக்கு[1]–தல் *pu̱lukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. அவிழ்த்தல்; to boil before husking as paddy. 2. தீய்த்தல் (வின்.); to scorch, as the sun.

[புழுங்கு (த.வி.) - புழுக்கு. (பி.வி.)]

புழுக்கு[2]–தல் *pu̱lukku-,* 6 செ.குன்றாவி. (v.t.) அரிசி பாதிவேகும்படி அவித்தல்; to boil partially, parboil.

ம. புழுக்குக.

[புழு → புழுக்கு–,]

புழுக்கு[3] *pu̱lukku,* பெ. (n.) 1. அவிக்கை; boiling grains. 2. புழுங்கவெந்த வுணவு; well-boiled food. '*கட்டிப்புழுக்கின்*' (பதிற்றுப். 90,25.). 3. குழையச் சமைத்த பருப்பு (பெரும்பாண்.195, உரை.); dholl well boiled and seasoned. 4.பருப்புச்சோறு (பெரும்பாண். 195,உரை.); dholl and rice boiled together 5. இறைச்சி; flesh, meat. '*யாமைப்புழுக்கின்*' (புறநா.212.)

[புள் → புழுங்கு (த.வி.) - புழுக்கு (பி.வி.) → புழுக்கு (தொ.பெ.)]

புழுக்குடைச்சல் *pu̱lu-k-kuḍaiccal,* பெ. (n.) சொத்தைப்பல்; carious tooth. (M.L.)

[புழு + குடைச்சல். குடை → குடைச்சல். 'சல்' தொ.பெ.ஈறு]

புழுக்குடோரி *pu̱lukkuḍōri,* பெ. (n.) நிலவாகை; country senna-cassia anceolata.

புழுக்குத்தட்டம் *pu̱lukku-t-taṭṭam,* பெ. (n.) மீன்பிடிக்க கடலுக்குள் செல்லும் பரதவர் கொண்டு செல்லும் மண்பாண்டம்; a pot which used by fishermen at the time of fishing.

[புழுங்கு → புழுக்கு. தட்டு → தட்டம்]

புழுக்குத்தி *pu̱lu-k-kutti,* பெ. (n.) *புழுக்கொத்தி (வின்.)* பார்க்க; see *pu̱lu-k-kotti.*

[புழுக்கொத்தி → புழுக்குத்தி]

புழுக்குத்து¹–தல் *pul̤ukkuttu-,* **6** செ.குன்றாவி. (v.t.) புழு அரித்தல்; to be eaten away by worm.

ம. புழுக்குத்துக

[புழு + குத்து–,]

புழுக்குத்து² *pul̤ukkuttu,* **பெ.** (n.) புழுவால் ஏற்படும் அரிப்பு; the damage suffer from worms as of tree etc.

ம. புழுக்குத்து

[புழு + குத்து–,]

புழுக்குரம்பை *pul̤u-k-kurambai,* **பெ.** (n.) **1.** நத்தை முதலியவற்றின் கூடு; chrysalis the testaceous or mud shell of insects, cocoon. **2.** உடம்பு; body.

[புழு + குரம்பை.]

புழுக்குவது *pul̤ukkuvaḍu,* **பெ.** (n.) *புழுங்கல், 2,3, (பிங்.)* பார்க்க; see *pul̤uṅgal.* **2,3**

[புழுக்கு → புழுக்குவது]

புழுக்கூடு *pul̤u-k-kūḍu,* **பெ.** (n.) **1.** *புழுக்குரம்பை (திருவாச.5,55)* பார்க்க; see *pul̤u-k-kurambai* **2.** பூஞ்சு (இ.வ.); mould.

[புழு + கூடு. குள் → கூள் → கூண்டு → கூடு]

புழுக்கை¹ *pul̤ukkai,* **பெ.** (n.) **1.** ஆடு, எலி முதலியவற்றின் மலம், பிழுக்கை (கொ.வ.); dung, as of sheep or rats. எலி புழுக்கை இறப்பில் இருந்து என்ன, வரப்பில் இருந்து என்ன (பழ.) **2.** அடிமை; slave. *'நான் புழுக்கை மாதிரி உழைக்கிறேன்'* தனக்கு என்றால் புழுக்கை கலம் கழுவி உண்ணாள் (பழ.) **3.** தொழுத்தை (கொ.வ.); menial servant.

ம. பிழுகு; **க.** பிள்கெ, பிக்கெ, கி̤க்கெ;

தெ. பிடக, பிடுக; பட கி̤க்கெ.

[(புல்) → (பில்) → பேல். புள் → புழுக்கை (மு.தா.262)]

புழுக்கை² *pul̤ukkai,* **பெ.** (n.) ஈச்சம்பழம்; date fruit.

[புள் → புழுக்கை = புழுக்கை போன்ற கொட்டையையுடையது.]

புழுக்கைச்சி *pul̤ukkaicci,* **பெ.** (n.) **1.** மிகவிழிந்தபெண்; low, base woman. புழுக்கை புழுங்கி மா இடித்தாலும், புழுக்கைச்சிக்கு ஒரு கொழுக்கட்டை. (பழ) **2.** அடிமையானவள்; female slave. (யாழ்.அக.)

[புழுக்கையன் (ஆ.பா.) → புழுக்கைச்சி (பெ.பா.) 'சி' பெ.பா.ஈறு.]

புழுக்கைப்பட்டை *pul̤ukkaippaṭṭai,* **பெ.** (n.) ஒருவகை மூலிகைச்செடி; medicinal herb.

[புழுக்கை + பட்டை]

புழுக்கையன் *pul̤ukkaiyaṉ,* **பெ.** (n.) **1.** மிகவிழிந்த மாந்தன்; low, base person. *'ஒழுக்கமற்ற புழுக்கையன்'* (தமிழ்நா.**219.**) **2.** அடிமையானவன்; male slave.

[புள் → புழுக்கை → புழுக்கையன் = ஆடு, எலிபோன்றவற்றின் மலத்தைப் போன்றவன், இழிந்தவன்.]

புழுக்கொடியல் *pulukkodiyal,* பெ. (n.) அவித்துக்காயவைத்த பனங்கிழங்கு (யாழ்ப்.); palmyra root parboiled and dried in the sun.

[புழுக்கு + ஒடியல்]

புழுக்கொத்தி *pulu-k-kotti,* பெ. (n.) பெருங்கொண்டலாத்தி; hoopoe, upupa epops as pecking worms.

ம. புழுக்கொத்தி

[புழு + கொத்தி]

புழுக்கொல்லி[1] *pulu-k-kolli,* பெ. (n.) 1. ஆடுதின்னாப் பாளை (மலை.); worm killer. 2. நாகமல்லி; ringworm-root.

ம. புழுகொல்லி.

[புழு + கொல்லி]

புழுக்கொல்லி[2] *pulukkolli,* பெ. (n.) வண்டு கொல்லிச் செடி; cassia alata.

[புழு + கொல்லி]

புழுகறுப்பு *pulu - karuppu,* பெ. (n.) இலையிலுள்ள மண்ணைத் தின்பதால் புழு கறுப்பாக மாறும் நோய்; disease of a worm changing black in colour due to the sand in the leaf.

[புழு + கறுப்பு]

புழுகன் *pulugan,* பெ. (n.) *புளுகன் (இ.வ.)* பார்க்க; see *pulugan.*

[புளுகன் → புழுகன்]

புழுகு[1] *pulugu,* பெ. (n.) அம்புத்தலை (பிங்.); arrowhead. '*கொல்வினைப் பொலிந்த கூர்ங் குறும்புழுகின்*', (அகநா.9.)

க.பிளுகு, பிள்கு.

[புல்லுதல் = துளைத்தல். புல் → புர் → புரை = உட்டுளை. புல் → புழு = துளைத் தரிக்கும் சிற்றுயிரி (வே.க.3,101–104) புள் → புழு → புழுகு = குத்தும் கூர் முனையுள்ள அம்புத்தலை]

த. புழுகு > Skt. puṅkhā

புழுகு[2] *pulugu,* பெ. (n.) நறுமணப்பண்டவகை (பிங்.); civet. (S.I.I.iii.187.) 2. புழுகுப் பூனை பார்க்க; see pulugu-p-pūnai. 3. பெரிய புனுகுப் பூனை; civet cat.

ம. புழுகு, புழு; க. புழ, புழு, புணுகு, புணகு, புனகு, புனுகு, புலி; தெ. புனுகு; து. புணுங்கு, புணுகு, புனுகு; குட. பு–பெக்கி

[புள் → புழு → புழுக்கை. பிள் → பீள் → பீளை → பூளை. புள் → புழு → புழுகு = பூனையின் உடலினின்று வெளிப்படும் நறுமணப்பொருள்]

புழுகு[3] *pulugu,* பெ. (n.) *புளுகு* பார்க்க; see *pulugu.*

[புளுகு → புழுகு]

புழுகுகடமை *pulugu-kadamai,* பெ. (n.) பழைய வரிவகை. an ancient tax; (S.I.I.vii. 46).

[புழுகு + கடமை]

புழுகுச்சட்டம் *pulugu-c-cattam,* பெ.(n.) 1. புழுகு உருவாகும் பூனையின் உறுப்பு; sac in which civet is generated. 2. *புழுகு[1]*, 1. (பதார்த்த.1079) பார்க்க; see *pulugu[1]*, 1

[புழுகு + சட்டம்]

புழுகுசட்டந்தட்டு–தல் *pulugu-cattan-tattu-,* 15 செ.கு.வி.(v.i.) சட்டந்தட்டுதல் (வின்.); to extract civet from its sac.

[புழுகுசட்டம் + தட்டு–,]

புழுகுசட்டம் *pulugu-cattam,* பெ.(n.) 1. *புழுகுச்சட்டம்* பார்க்க; see *pulugu-c-cattam* 2. புழுகு[1] *(பதார்த்த. 1079.)* பார்க்க; see *pulugu*[1].

[புழுகு + சட்டம்]

புழுகுசம்பா *pulugu-šambā,* பெ.(n.) நறுமணமுள்ள நெல்வகை (பதார்த்த. 802); a kind of fragrant paddy.

[புழுகு + சம்பா]

புழுகுசாத்து–தல் *pulugu-šāttu-,* 15 செ.கு.வி. (v.i.) தெய்வம் முதலியவற்றிகுப் புழுகுபூசுதல்; to besmear with civet, as an idol.

[புழுகு + சாத்து–,]

புழுகுசாறல் *pulugu-šāral,* பெ.(n.) புழுகுப் பூனையினிடத்தேனும் அதன் கூண்டுக் கம்பியிடத்தேனும் புழுகு உறைந்து கிடக்கை (வின்.); the collection of civet on the civet-cat or on the sticks of the cage.

மறுவ. புனுகு

[புழுகு + சாறல்]

புழுகுணி *puluguni,* பெ.(n.) *புளுகுணி* பார்க்க; see *puluguni.*

[புழுகுணி + புழுகுணி]

புழுகுணிக்கறுப்பன் *puluguni-k-karuppan,* பெ.(n.) வெறும்பொய்யன்; deliberate liar. *'பொல்லாப் புழுகுணிக்கறுப்பன்'*

[புளுகுணிக்கறுப்பன் → புழுகுணிக்கறுப்பன்]

புழுகுநெய் *pulugu-ney,* பெ.(n.) புழுகு சட்டத்திலிகுந்து எடுக்கும் நறுமணப் பண்டம்; civet. *'புழுகு நெய்ச் சொக்கா'* (மதுரைக். 53.)

[புழுகு + நெய். நெள் → நெய்]

புழுகுப்பிள்ளை *pulugu-p-pillai,* பெ.(n.) *புழுகுப் பூனை (நாமதீப. 226.)* பார்க்க; see *pulugu-p-pūnai.*

[புழுகு + பிள்ளை]

புழுகுப்பூனை *pulugu-p-pūnai,* பெ.(n.) ஒருவகை நறுமணப் பண்டந்தரும் பூனைவகை (பதார்த்த. 862.); civet-cat.

[புழுகு + பூனை]

புழுகுவரி *pulugu- vari,* பெ.(n.) பழைய வரிவகை. an ancient tax; (S.I.I. iv. 195)

[புழுகு + வரி]

புழுங்கரிசி *pulungariši,* பெ.(n.) *புழுங்கலரிசி* பார்க்க; see *pulungalariši.*

[புழுங்கு + அரிசி. அரி → அரிசி]

புழுங்கல்[1] *pulungal,* பெ.(n.) *புழுங்கலரிசி* பார்க்க; see *pulungalariši.*

க. புழ்கி, புக்கி (பருப்புடன் வேகவைத்த அரிசி); தெ. புலகமு (பச்சைபயிருடன் வேகவைத்த அரிசி); Skt. pulāka (a lump of boiled rice)

[புழுங்கலரிசி → புழுங்கல்]

புழுங்கல்² *pulungal,* பெ.(n.) **1.** அவிகை; parboiling. **2.** அவித்தது; that which in parboiled. *'புழுங்க னெல்லின் பொறி வீழ்த்தென்ன'* (ஐங்குறு. பக். **143,** பாட்டு, **4.**) **3.** புழுக்கின நெல்; paddy parboiled and dried before husking. **4.** சினம் (பிங்.); anger. **5.** புழுக்கம்; sultriness **6.** வேர்க்கை; persipiration, sweating. **7.** பண்படுத்திய புன்செய்; pun-šey land prepared for sowing.

[புழுங்கு → புழுங்கல். 'அல்' தொ.பெ.ஈறு]

புழுங்கல்³ *pulungal,* பெ.(n.) காசுக் குற்றவகை (பணவிடு. **139**); a defect in coins.

[புழுங்கு → புழுங்கல்]

புழுங்கலரிசி *pulungal-arisi,* பெ.(n.) புழுக்கிய நெல்லின் அரிசி (பதார்த்த. **822.**); rice husked from pulungal, opp. to paccariši.

[புழுங்கல் + அரிசி. அரி → அரிசி]

பச்சரிசி, புழுங்கலரிசி என்னும் இரு வகையுள் தமிழர் விரும்பியது பின்னதே. அது சூட்டைத் தணிப்பதனால் வெப்ப நாட்டிற்கேற்றதாகும். குழம்பின் சுவையையும் மிகுத்துக் காட்டும். அதற்காகவே, அதற்குரிய தனி முயற்சியை மேற்கொண்டனர். அதனால் ஏற்படும் வலுக்குறைவிற்குக் கறி வகைகளாலும் நெய்யாலும் ஈடு செய்யப்பெறும்.

'இருங்கா முலக்கை யிரும்புமுகந் தேய்த்த அவைப்பு மாண் அரிசி இமலைபெண் சோறு' (சிறுபாண். **193–4**) என்பது தூய வெள்ளையாய் அரிசி தீட்டப்பட்டதைத் தெரிவிக்கும் (ப.த.நா.ப. **37**)

புழுங்கு¹–தல் *pulungu-,* 5 செ.கு.வி.(v.i.) **1.** ஆவியெழ வேகுதல்; to be steamed; to be slightly boiled or steamed; to be parboiled. **2.** சிறுக வேகுதல் (வின்.); to boil gently or stew, as rice after the water is poured off. **3.** வெப்பத்தாற் புழுக்கமாதல்; to be sultry, as the weather *'தொடுநீர்ப் பரவை முகம் புழுங்கத் தோன்றும் பரிதி'* (குமர. பிர. முத்துக். பிள். **22.**) **4.** சினத்தால் (கோபத்தால்) வெம்புதல்; to be hot with anger. **5.** வேர்த்தல் (இ.வ.); to perspire. **6.** பொறாமைப் படுதல்; to be envious, to feel heart-burning. **7.** வாடுதல்; to wither, fade. *'புழுங்கு கோதை பொறிபின்றிறம்'* (சீவக. **2504**) **8.** வருந்துதல்; to be troubled *'வெய்துயிர்க்கும் விழுங்கும் புழுங்குமால்'* (கம்பரா. நகர்நீங்கு. **11**)

ம. புழுங்நுக, புழுக்குக; **க.** புழுகு; **து.** புர்குனி; **குட.** புக்கி

[புழு → புழுங்கு–,]

புழுங்கு²–தல் *pulungu-,* **11** செ.குன்றாவி.(v.t.) சினத்தல்; to be angry, indignant. *"முக்கணன் புதல்வனை வேறெனப் புழுங்கி"* (துணிகைப்பு. சீபரி. **260**).

[புழு → புழுங்கு–,]

புழுங்கைப்பட்டை *pulungai-p-pattai,* பெ.(n.) ஒரு மருந்துச்செடி; *a medicinal plant.*

[புழுங்கை + பட்டை]

புழுத்தபல் *pulutta-pal,* பெ.(n.) சொத்தைப்பல் (கொ.வ.); carious tooth.

[புழு → புழுத்த + பல்]

புழுத்தரிசி *puluttarisi,* பெ.(n.) புழுவுண்ணும் அரிசி; worm eaten rice.

[புழு → புழுத்த + அரிசி]

புழுத்துநெளி–தல் *puḻuttu-neḷi-,* 3 செ.கு.வி. (v.i.) புழுமேய்தல்; to be eaten by worms.

[புழுத்து + நெளி–,]

புழுதி *puḻudi,* பெ. (n.) 1. மண்தூள்; dust, dried earth, pulverised or fine powder. *'வெண் புழுதி மேற்பெய்து கொண்டளைந்தது'* (திவ். பெரியாழ். 1, 7, 9) 2. காய்ந்த நிலம்; dry earth. *'புழுதியினிறனுழு வளைவாய் நாஞ்சி லோனும்'* (பரிபா. 13, 33.) 3. *புழுதிக்கால்* பார்க்க; see *puḻudi-k-kāl*

ம. புழுதி, பூழி; தெ. பூதித, பூதி; து. பொய்யெ (மணல்), பூதிங்த, பூது (சாம்பல் வண்ணம்), பூதி (சாம்பல்); துட. பூத்ய்; குட. புதி; பர். பொர்மில்; மால. பொர்சி;

[புள் → பூள் → (பூழ்) → பூழி = தூள், புழுதி. பூழ் → பூழ்தி = புழுதி. பூழ்தி → புழுதி (மு.தா. 127)]

puḻudi, also pūḻi, and pūḻdi dust; Can. puḻil, sand. Comp. Latin, puḻvis (CGDFL.599)

புழுதிக்கலப்பை *puḻudi-k-kalappai,* பெ.(n.) புழுதியில் ஓட்டும் கலப்பை; plough-share use to plough in the dust land.

[புழுதி + கலப்பை]



புழுதிக்காடு *puḻudi-k-kāḍu,* பெ.(n.) புழுதியாகப் பண்படுத்திய புன்செய் (வின்.); dry-ploughed field.

[புழுதி + காடு. கடுத்தல் = மிகுதல். கடு → காடு = மிகுதி]

புழுதிக்காப்பு *puḻudi-k-kāppu,* பெ.(n.) காப்பாக நெற்றியிலிடும் மண்பொட்டு; mark of wet-mud placed on the fore head as a charm against evil. *'சீரார் செழும் புழுதிக் காப்பிட்டு'* (திவ். இயற். சிறிய. 6, 16.)

[புழுதி + காப்பு. கா → காப்பு]

புழுதிக்கார் *puḻudi-k-kār,* பெ.(n.) நெல்வகை. a kind of paddy; (G.Tj.D. 1, 95)

[புழுதி + கார்]

புழுதிக்கால்நாற்று *puḻudi-k-kāl-nāṟṟu,* பெ.(n.) *புழுதிநாற்று (இ.வ.)* பார்க்க; see *puḻudi-nāṟṟu*

[புழுதிக்கால் + நாற்று]

புழுதிக்கால்விதைப்பு *puḻudi-k-kāl -vidaippu,* பெ.(n.) காய்ந்த வயலை உழுது விதைக்கை; sowing paddy on dry land previously prepared

[புழுதிக்கால் + விதைப்பு. விதை → விதைப்பு]

புழுதிக்குடி *puḻudi-k-kuḍi,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tañjāvūr dt.

[புழுதி + குடி]

புழுதிகுடி–த்தல் *pu*l*udi-kudi-,* 4 செ.கு.வி. (v.i.) தூசி, மூச்சுடன் உட்செல்லுதல் (வின்.); to inhale dust, as snakes; to take in dust involuntarily.

[புழுதி + குடி–,]

புழுதிகுளி–த்தல் *pu*l*udi-kuli-,* 4 செ.கு.வி.(v.i.) *புழுதியளை–தல் (வின்.)* பார்க்க; see *pu*l*udi-yalai-,*

[புழுதி + குளி–,]

புழுதிநட்டு *pu*l*udi-nattu,* பெ.(n.) வறண்டநிலத்தில் முளைக்குஞ் செடி; plant growing on dry soil. (W.G.)

[புழுதி + நட்டு]

புழுதிநாற்று *pu*l*udi-nāṟṟu,* பெ.(n.) ஈரப்பற்றில்லாத காலத்தில் உழுது பண்படுத்திய நாற்றங்காலில் உண்டாம் நாற்று; paddy-seedling grown on dry seed-beds.

[புழுதி + நாற்று]

புழுதிப்படலம் *pu*l*udi-p-padalam,* பெ.(n.) புழுதியின் கூட்டம்; drift, cloud or mass of dust.

[புழுதி + படலம்]

புழுதிப்பயிர் *pu*l*udi-p-payir,* பெ.(n.) புழுதிக்காலில் முளைத்த பயிர்; crop raised on puludi-k-kāl.

[புழுதி + பயிர்]

புழுதிபாடு *pu*l*udi-pādu,* பெ.(n.) வெற்று (தரிசு) நிலம்; waste land. *'பாலாற்று நின்றும் தோண்டின பெரும்பிடுகு காலின் புழுதிபாடும்'* (S.I.I. 151)

[புழுதி + பாடு. படு → பாடு]

புழுதிபுரட்டி *pu*l*udi-puratti,* பெ.(n.) ஒருவகை நெல்; a kind of paddy போரிறங்கல் மீட்டான் புழுதிபுரட்டி யென்னும் (நெல்விடு. 189)

[புழுதி + புரட்டி. புரள் → புரட்டு → புரட்டி]

புழுதிபோடு–தல் *pu*l*udi-pōdu-,* 19 செ.குன்றாவி. (v.t.) புழுதியில் உழுது விதைத்தல் (யாழ்ப்.); to plough and sow when a field is dry.

[புழுதி + போடு–,]

புழுதிமழை *pu*l*udi-malai,* பெ. (n.) மண்காற்று (யாழ்.அக.); dust storm.

[புழுதி + மழை]

புழுதிமாயம் *pu*l*udi-māyam,* பெ. (n.) 1. ஏமாற்று (வின்.); deceit, imposture, as throwing dust in one's eyes. 2. வீண்செலவு செய்கை (வின்.); squandering. காசை புழுதிமயம் இறைக்கிறான்

[புழுதி + மாயம்]

புழுதியளை–தல் *pu*l*udi-y-alai-,* 3 செ.கு.வி. (v.i.) 1. புழுதியிற் புரளுதல்; to lie or wallow in dust, as a child. 2. தூசிபடிதல்; to be enveloped in, or covered with, dust. *'புழுதி யளைந்த பொன்மேனி'* (திவ். பெரியாழ். 2, 4, 9.)

[புழுதி + அளை–, அள் → அளை]

புழுதியாக்கு–தல் *puḻudi-y-ākku-,* 8 செ.குன்றாவி. (v.t.) **1.** காய்ந்த வயலை உழுது பண்படுத்துல்; to plough 'nañšey' lands while dry. **2.** பொடியாக்குதல், அழித்தல்; to reduce to powder; to demolish, ruin.

[புழுதி + ஆக்கு–,]

புழுதியாடு–தல் *puḻudi-y-āḍu-,* 5 செ.கு.வி.(v.i.) *புழுதியளை–தல்* பார்க்க; see *puḻudi-y-aḷai-, 'புழுதியாடிய மெய்யினர்'* (கம்பரா. நகர்நீங்கு. **218.**)

[புழுதி + ஆடு–,]

புழுதியுணக்கல் *puḻudi-y-uṇakkal,* **பெ.**(n.) கட்டியடிக்க ஏதுவாக உலரவிடுதல்; drying of clods. இரண்டு நாளில் புழுதி யுணக்கல் தீர்ந்துவிடும், பின்னர் கட்டியடித்து விடலாம். (உ.வ.)

[புழுதி + உணக்கல். உணங்கு (கு.வி.) – உணக்கு (பி.வி.) – உணக்கல் (தொ.பெ.), அல்.தொ.பெ.ஈறு]

புழுதியெடு–த்தல் *puḻudi-y-eḍu-,* 4 செ.குன்றாவி.(v.t.) மூன்றாமுறை கடைசியாக உழுதல் (வின்.); to plough a field for the third and last time.

மறுவ. மூன்றாம்சால்.

[புழுதி + எடு–,]

புழுதிவிதை–த்தல் *puḻudi-vidai-,* 4 செ.குன்றாவி. (v.t.) *புழுதிபோடு–தல் (வின்.)* பார்க்க; see *puḻudi-pōḍu-,*

[புழுதி + விதை–,]

புழுதிவிதைப்பு *puḻudi-vidaippu,* **பெ.**(n.) *புழுதிக் கால் விதைப்பு* பார்க்க; see *puḻudi-k-kāl vidaippu.*

[புழுதி + விதைப்பு. விதை → விதைப்பு]

புழுதிவிரட்டி *puḻudi-viraṭṭi,* பெ.(n.) **100** நாளில் விளையும் ஒருவகை மட்டநெல்; a kind of inferior paddy maturing in 100 days (G,Tn.D.I. **143.**)

[புழுதி + விரட்டி]

புழுதிவிரை *puḻudi-virai,* பெ.(n.) *புழுதிக்கால் விதைப்பு* பார்க்க; see *puḻudi-k-kāl - vidaippu* (C.G.)

[புழுதிவிதை → புழுதிவிரை]

புழுதின்குடோரி *puḻudiṉ-kuḍōri,* பெ.(n.) ஆடாதோடை; Malabar winter cherry.

புழுது *puḻudu,* **பெ.** (n.) அம்புக் குதை (சது.); knob or feathered part of an arrow.

[புழுகு → புழுது]

புழுநாறுவிரணம் *puḻunāṟu-v-iraṇam,* **பெ.** (n.) முடைநாற்றமுள்ள சீழ்ப்புண்; foul ulcer.

[புழுநாறு + விரணம்]

Skt. vraṇa > **த.** விரணம்

புழுநெளிபுண் *puḻu-neḷi-puṇ,* **பெ.**(n.) அழிபுண்; ulcer with swarming worms.

[புழுநெளி + புண்]

புழுநெளிவு *pul̤u-nel̤ivu,* பெ.(n.) புழுஅரிப்பு; vermiculation.

[புழு + நெளிவு]

புழுப்பகம் *pul̤uppagam,* பெ. (n.) மூக்கிரட்டை (சங்.அக.); spreading hogweed.

புழுப்பகை *pul̤u-p-pagai,* பெ. (n.) வளி(வாயு) விளங்கம் (தைலவ. தைல. **66.**); common wind bery, as worm-killer.

[புழு + பகை]

புழுப்பல் *pul̤u-p-pal,* பெ. (n.) சொத்தைப்பல்; carrious tooth. (M.L.)

மறுவ. பூச்சிப்பல்

ம. புழுப்பல்

[புழு + பல்]

புழுப்பு *pul̤uppu,* பெ. (n.) புழுவுண்டாகை (யாழ்.அக.); breeding of worms.

[புழு → புழுப்பு]

புழுப்புநக்கி *pul̤uppu - nakki,* பெ. (n.) நச்சுயிரி; poisonous insect.

புழுப்பூனை *pul̤u-p-pūṉai,* பெ. (n.) *புழுகுப்பூனை* பார்க்க; see *pul̤ugu-p-pūṉai.* *'புழுப் பூனை பீசம்'* (விறலிவிடு. **632.**)

[புழுகுப்பூனை → புழுப்பூனை]

புழுப்போக்கி *pul̤u-p-pōkki,* பெ. (n.) குடற்புழுக்கொல்லி; vermifuge.

[புழு + போக்கி. போக்கு → போக்கி]

புழுபுழு-த்தல் *pul̤u - pul̤u-,* **4** செ.கு.வி. (v.i.) அதிகமாய்ப் புழுத்தல்; to be eaten extremly by worms as in fruits, sores etc.

[புழு + புழு-,]

புழுபுழுத்துச்சா-தல் *pul̤u - pul̤uttu-c-cā-,* **4** செ.கு.வி. (v.i.) புழுவரிக்கும் புண்களால் சாதல்; to die on account of ulcers which swarm with worms.

[புழு + புழுத்து + சா-,]

புழுமலடு *pul̤u-malaḍu,* பெ. (n.) *புழுவால்மலடு* பார்க்க; see *pul̤uvālmalaḍu.*

[புழு + மலடு]

புழுமேய்தல் *pul̤u-mēydal,* பெ. (n.) **1.** புழுவரித்துச் சொறியுண்டாகை (யாழ்.அக.) gnawing of worms or germs causing irritation, **2.** புழுவரித்துப் போகை; being worm-eaten. **3.** மயிருதிர்ந்து வழுக்கையாகை; becoming bald from disease.

[புழு + மேய்தல். 'தல்' தொ.பெ.ஈறு]

புழுவதை *pul̤u-vadai,* பெ. (n.) தேனடை (யாழ்.அக.); honey comb.

[புழுவடை → புழுவதை]

புழுவரளை *pul̤uvaral̤ai,* பெ. (n.) சீழ்ப்பிடித்துப் புழுக்கள் விழும் நிலையிலுள்ள புண்; skin or ulcerous disease where in worms are found in plenty.

[புழு + வரளை]

புழுவரித்தகண்பட்டை *pul̤u-v-aritta - kaṇ-paṭṭai,* பெ. (n.) *புழுவெட்டல்* பார்க்க; see *pul̤uveṭṭal* (M.L.)

[புழு + அரித்த + கண்பட்டை]

புழுவரித்தபல் *pul̤u-varitta-pal,* பெ. (n.) *புழுப்பல்* பார்க்க; see *pul̤u-p-pal*

மறுவ. பூச்சிவிழுந்தபல்.

[புழு + அரித்த + பல்]

புழுவரித்தல் *pul̤u-v-arittal,* பெ. (n.) *புழுமேய்தல்* **(சங்.அக.)** பார்க்க; see *pul̤u-mēydal*

[புழு + அரித்தல். 'தல்' தொ.பெ.ஈறு]

புழுவளிவிளக்கம் *pul̤uvaḷi-viḷakkam,* பெ. (n.) ஒட்டுயிரியான குடற்புழுபற்றிய ஆய்வு நூல்; helminthology.

[புழுவளி + விளக்கம்]

புழுவால்மலடு *pul̤uvālmalaḍu,* பெ. (n.) கருப்பையில் உருவாகி, உயிர்ச்சத்தை உண்டு மலட்டுத் தன்மையுண்டாக்கும் புழு; sterility caused by some germs.

[புழுவால் + மலடு]

புழுவுணவு *pul̤u-v-uṇavu,* பெ. (n.) புழுக்களே உணவாகும் நிரய (நரக) வகை (**சேதுபு. தனுக். 3**); a hell where worms are eaten as food.

[புழு + உணவு]

புழுவூன்பிண்டம் *pul̤uvūṉ - piṇḍam,* பெ. (n.) புழுக்கள் மலிந்த உடல்; body *"வழுவொடு கிடந்த புழுவூன் பிண்டத்து"* (**மணிமே. 6, 109**)

[புழு + ஊன் + பிண்டம்]

புழுவெட்டல் *pul̤u-veṭṭal,* பெ. (n.) கண்ணிமை நோய்வகை; inflammation of the eyelid, blepharitis. (M.L.)

[புழு + வெட்டல். வெட்டு → வெட்டல். 'அல்' தொ.பெ.ஈறு]

புழுவெட்டு *pul̤u-veṭṭu,* பெ. (n.) **1.** புழுவரித்தது (**யாழ்.அக.**); that which is worm-eaten. **2.** மயிரை உதிரச் செய்யும் நோய்வகை (**கடம்ப. 4. இலீலா. 113**); a disease which makes the hair fall off; baldness, alopecia **3.** *புழுப்பல்* பார்க்க; see *pul̤uppal.* **4.** *புழுவெட்டல்* பார்க்க; see *pul̤veṭṭal.*

[புழு + வெட்டு]

புழுவை–த்தல் *pul̤u-vai-,* 4 செ.கு.வி. (v.i.) புழுத்தல்; to be wormy, as meat or sore; to fester.

[புழு + வை–,]

புழை¹ *pul̤ai,* பெ. (n.) **1.** துளை; hole. *'தம்பத்தின் மேற் புழையே முளவாக்கி'* (**திருநூற். 23**) **2.** குழாய்; tube, pipe. **3.** வாயில்; entrance, gate. *'திருந்தெயிற் குடபாற் சிறுபுழைபோகி'* (**மணி. 6, 22**) **4.** சிறுவாயில்; secret way, sally-port. *'வாயிலொடு புழையமைத்து'* (**பட்டினப். 287.**) **5.** காட்டுவழி; forest-path. *'கவை முள்ளிற் புழையமைப்பவும்'* (**புறநா. 98.**) **6.** ஒடுக்க வழி; narrow path, by path. *'புழைதொறு மாட்டிய'* (**மலைபடு. 194.**) **7.** சாளரம்; window. *'சில் காற்றிசைக்கும் பல்புழை நல்லில்'* (**மதுரைக். 358.**) **8.** ஏவறை; archer's bastion. *'கவையும் கழுவும் புதையும் புழையும்'* (**சிலப். 15, 212.**)

9. நிரயம்; hell *'போகும் புழையுட் புகுந்து'* (ஏலாதி, **11.**)

ம. புழ; **க.** பொழெ (வழி); **தெ.** புந்த (கால் நடை செல்லும் வழி); **கோத.** புள்; **துட.** பீள்

[புல் → புர் → புரை = உட்டுளை, உள்துளைப்பொருள். புல் → புற்று = உட்டுளையுள்ள கறையான் மண்கூடு (வே.க. 3, 101, 107) புல் → புள் → புழு → புழை = பக்கவாட்டிலும், ஒரு பொருளிலுமுள்ள ஆழ்ந்த பள்ளம்]

puri, puṇḍra, a river cf. D. pura, pōnal, pōḻe (KKED. xxvii)

புழை²–த்தல் *puḻai-,* 4 செ.குன்றாவி. (v.t.) துளையிடுதல்; to bore, riddle. *'அனங்கன் வாளி புழைத்த தம் புணர்மென கொங்கை'* (கம்பரா. கைகேசி, **85**)

[புல் → புள் → புழு → புழை–,]

புழை³ *puḻai,* பெ. (n.) **1.** புண்ணின் துளை; sinus. **2.** ஊசி; pin.

[புழு → புழை]

புழைக்கடை *puḻai-k-kaḍai,* பெ. (n.) **1.** வீட்டின் பின் வாயிற்புறம், கொல்லைப்புறம்; open space behind a house and attached to it; rear gangway. *'உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்'* (திவ். திருப்பா. **14.**) **2.** கடைமடை; last sluice of a tank. *'புழைக்கடைப் புனலைத் தொழுகும்'* (சீவக. **16, 14.**) **3.** நுழைவாயில் (இலக்.அக.); small gate.

மறுவ. புறக்கடை

[புழை → புழைக்கடை.]

புழைக்கை *puḻai-k-kai,* பெ. (n.) **1.** தும்பிக்கை; elephant's trunk. **2.** யானை (திவா.); elephant, as having a trunk.

[புழு → புழை = துளை. புழைத்தல் = துளையிடுதல். புழை → புழைக்கை (வே.க.3,108) = துளையுள்ள கை, தும்பிக்கை, தும்பிக்கையை யுடைய யானை]



புழைவழி *puḻai-vaḻi,* பெ. (n.) ஊசித்துளை; pin like hole.

[புழை + வழி]

புழைவாயில் *puḻaivāyil,* பெ. (n.) பெரிய கதவுகள் சாத்தப்படும்போது உட்செல்வதற்கு அமைக்கப்படும் சிறிய நுழைவாயில்; wicket, small door or gate within the compass of a larger one. *'புழைவாயில் போகிடைகழி'* (பட்டினப்பா.)

மறுவ. திட்டி வாசல்

[புழை + வாயில். புல் → புர் → புரை = உட்டுளை. புள் → புழு → புழை = துளை, சிறுதிறப்பு. புழைவாயில் = பெரிய கதவில் துளைபோல் அமைந்திருக்கும் சிறுகதவு, சிறுவழி]

புள்¹ *puḷ,* பெ. (n.) **1.** பறவை; fowl. *'வேட்டுவன் புட்டிமிழ்த் தற்று'* (குறள், **274.**) **2.** கணந்துள்; a kind of bird. *'புள்ளும் புதாவும்'*

(சிலப். 10, 117.) 3. வண்டு (சூடா.); bee. *'புள்ளுண் பூந்தொடைக் குழலார்க்கு'* (உபதேசகா. சிவவிர. 11.) பறவை நிமித்தம்; augury. *'புள்ளோர்த்துப் படையமைத்து'* (அகநா. 207.) 5. பறவைநாள் (திவா.); the 23rd naksatra. *'பனைமுதற் புள் வரை பகர்ந்திடு கலிக்கும்'* (இலக். வி. 881.) 6. கைவளை; bracelet; *'புட்கை போகிய புன்றலை மகாரொடு'* (மலைபடு. 253) 7. மது; drinking, drink *'புள்ளே, புனலே, புலவியிம் மூன்றினும்'* (பரிபா. 16, 39.) 8. கிட்டிப்புள்; trap, stick used in the game of tip-cat. 9. கிட்டி; an instrument of torture.

ம. புள்; **தெ.** புலூகு; **கோத.** புள், பிள்; **துட.** பீள்;

E. fowl; AS. fugel; Gk. vogel; Ice. juge;

[புல் → புர் → புரம். புரம் = உயர்ந்த மனை, அஃதுள்ள நகர். புரம் → பரம் = மேல். புரம் → புரவி = மதில்தாண்டும் குதிரை. புர் → புரை = உயர்வு. புரையோர் = உயந்தோர். புல் → புள் = (மேலெழும்) பறவை]

புள்² *pul,* பெ. (n.) நீர்வாழ் பறவை; birds of the gall genus.

புள்சாட்டிக்கொம்பு *pulcātti-k-kombu,* பெ. (n.) ஏற்றத்திற் பயன்படுத்தும் விலங்கின் நேர்க்கொம்பு; straight horn of beast, used as plough share.

[புள்சாட்டி + கொம்பு]

புள்நூல் *pul-nūl,* பெ. (n.) 1. பறவை இயக்கத்தைக் கொண்டு வரப்போகும் நன்மை தீமைகளைக் கணித்துக் கூறும் நூல்; augury, ornithoscopy. 2. பறவையியல் நூல்; ornithology.

[புள் + நூல்]

வல்லூறு, ஆந்தை, காகம், கரிக்குருவி, காடை முதலிய பறவைகளின் குரலையும் இயக்கத்தையும் கொண்டு, வரப்போகும் நன்மை தீமைகளைக் கணித்துக் கூறுவது புள்நூல்.

புள் = பறவை. புள்ளால் அறியப்படும் குறியைப் புள் என்பது ஆகுபெயர்.

வழிச்செல்வார் வாயினின்று தற்செயலாய் வரும் சொல்லைக் குறியாகக் கொள்வது, வாய்ப்புள் எனப்படும்.

உடம்பின் பலவுறுப்புகள் துடிப்பதைக் கூறும் துடிநாலும், கட்டு என்னும் நெற்குறியும், கழங்கு என்னும காய்க்குறியும், ஏதேனும் ஓர் ஏட்டைத்தொடும் தொடுகுறியும், எண்குறியும், பெயர்க்குறியும், நின்ற நிலைக்குறியும் கவடிக்குறியும் கண்ட காட்சிக் குறியும், நேர்ந்த நிகழ்ச்சிக் குறியும், சொன்ன சொற்குறியும், கோடிழைத்தற் குறியும் மூச்சுவிடற்குறியும், தேவராளர்குறியும், விரிச்சிக்குறியும் (oracle) இரண்டிலொன்றன் குறியும், பல்வேறு நிகழ்ச்சிகளான நற்குறி தீக்குறிகளும் பிறவும் புள்நூலின் பாற்படுவனவே (ப.த.நா.ப. 147–148)

புள்பாய்ச்சல் *pul-pāyccal,* பெ. (n.) கடற்பரப்பி மேல் மீனைக் கொத்தித் தின்பதற்காகப் பாயும் பறவைகளின் பாய்ச்சல்; leaping of birds on the surface of the sea. for pecking fish.

[புள் + பாய்ச்சல். பாய் → பாய்ச்சல். 'சல்' தொ.பெ.ஈறு]

புள்வருக்கநூல் *pul-varukka-nūl,* பெ. (n.) பறப்பனவற்றைப் பற்றிக் கூறும் நூல்(இக்.வ.); ornithology.

[புள் + வருக்கம் + நூல்]

புள்வாய்கீண்டோன் *pul-vāy-kiṇḍōṉ,* பெ. (n.) கண்ணபெருமான் (பகாசுரன் வாயைப்

பிளந்தவன்) (சேதுபு. இலக்குமி. 5); Krishna, as having torn the mouth of Bakan, an Asura who had the form of a crane.

[புள் வாய் + கீண்டோன்]

புள்ளடி¹–த்தல் *pul-l-adi-,* 4 செ.கு.வி. (v.i.) கிட்டிப்புள் ஆடுதல்; to play the game of tip-cat.

[புள் + அடி –,]

புள்ளடி² *pul-l-adi,* பெ. (n.) 1. பறவையின் பாதம்; bird's foot, 2. தொடர்ந்த கையெழுத்தில் விட்ட பகுதியை மேலே யெழுதி அதனிடத்தைக் காட்டக் கீழிடும் புட்கால்போன்ற குறி; cross mark; caret to indicate the insertion of someting omitted in writing, as like a birds foot. 3. நேரி(வாக்கு)ச் சீட்டில் போடும் பெருக்கல் குறி; the multiplication sign to placed on a ballot paper. நேரிச் சீட்டில் எமது சின்னத்திற்கு நேரே புள்ளடி இடுங்கள் 4. உரைகல் (வின்.); touchstone 5. செடிவகை; a species of tick-trefoil, 6. தாளஅளவு உறுப்புகளுள் ஒன்று; (mus.) an element of time measure. (பரத.தாள.35, உரை.) 7. ஏணி (யாழ்.அக.); ladder.

ம. புள்ளடி.

[புள் + அடி]

புள்ளடி³ *pul-l-adi,* பெ. (n.) மணிக் குற்றங்களுளொன்று; a defect in precious stones. "புள்ளடியுட் கீற்று பொருங்குற்ற மைந்துவகை" (பஞ்ச.திருமுக.477.).

[புள் + அடி]

புள்ளடிக்கல் *pulladi-k-kal,* பெ. (n.) அடையாளமிட்ட எல்லைக்கல்; demarcation stone. "ஆசறுதியில் நாட்டின் புள்ளடிக்கல்லே யுற்று" (S.I.I.v, 206).

[புள்ளடி + கல்]

புள்ளடிபோடு¹–தல் *pul-l-adi - pōdu-,* 20 செ.கு.வி. (v.i.) கையெழுத்தில் புள்ளடிக் குறியிடுதல்; to insert a caret.

[புள்ளடி + போடு–,]

புள்ளடிபோடு²–தல் *pul-l-adi-pōdu-,* 20 செ.கு.வி. (v.i.) கீறல் போடுதல் (இ.வ.); to make a mark in the place of signature, as an illiterate person.

[புள்ளடி + போடு–,ஒ.நோ. கோழி கிறுக்கல் (கிறுக்கலான கையெழுத்து)]

புள்ளம்¹ *pullam,* பெ. (n.) 1. கொடுவாள் (பிங்.); bill hook *'வளைந்து கூர்த்த புள்ளமும்'* (அரிசமய. பத்திசா. 26) 2. அரிவாள் வகை (திவா.); a kind of sickle. *'புள்ளங்கள் சூற்சங்கிற் றீட்டுவார்'* (அரிச். 4, நாட். 45) 3. அரிவாண் மணை; a cutting instrument for dressing vegetables.

[புல் → புர் → புரள். புரள் → புரட்டு. புர் → புரி → புல் → புள் → புள்ளம் = வளைந்த கொடுவாள், அரிவாள்]



புள்ளம்² *pu/lam,* பெ. (n.) *புள்* பார்க்க; see *pu/.*

[புள் → புள்ளம்]

புள்ளம்பூதங்குடி *pullam - pūdaṅguḍi,* பெ. (n.) திருமங்கையாழ்வார் பாடல் பெற்ற ஊர்; a shrine sanctified by hymns of Tirumaṅgai-y-āḻvār.

[புள்ளம் + பூதங்குடி. புள் → புள்ளம் = அழகிய புட்கள் (பறவைகள்) நிறைந்த பகுதி. பூதனார் என்னும் புலவர் வாழ்ந்த ஊர் பூதங்குடி]

புள்ளமங்கலம் *pulla maṅgalam,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tañjāvūr dt.

[புள்ள + மங்கலம். பிள்ளை → புள்ள]

புள்ளமங்கை *pulla - maṅgai,* பெ. (n.) a village in Tañjāvūr dt. 'கறையார் மிடறுடையான் கமழ் கொன்றைச்சடைமுடி மேல்பொறையார் தரு கங்கைப் புனலுடையான் புள்ளமங்கை (சம்பந்தர்'16–3)

[புள் + மங்கை. புள் = பறவை. புள்ளமங்கை, புள் மிகுதியாக இருந்த இடம்]

புள்ளரசு *pu/-/-arašu,* பெ. (n.) கருடன்; garuḍa, king of birds. *'புள்ளரசைக் கொன்றுயிர் பின் கொடுத்தார் போலும்'* (தேவா. 598, 8.)

[புள் + அரசு. பறவைகளுக்கு அரசன் போன்ற பெரும் பறவை]

புள்ளரிச்சாவி *pullari-c-cāvi,* பெ. (n.) *புல்லரிச்சாவி* (இ.வ.) பார்க்க; see *pullari-c-cāvi*

[புல்லரிச்சாவி → புள்ளரிச்சாவி]

புள்ளரையன் *pu/-/-araiyaṉ,* பெ. (n.) *புள்ளரசு* பார்க்க; see *pu/-/-arašu 'புள்ளரையன் புகழ்குழறும் புனவரங்கமே'* (திவ். பெரியாழ். 4, 9, 5.)

[புள் + அரையன். அரசன் → அரைசன் → அரையன்]

புள்ளறுதல் *pu/-/-aṟudal,* பெ. (n.) காசுக் குற்றவகை (பணவிடு. 139); a defect in coins.

[புள் + அறுதல். 'தல்' தொ.பெ.ஈறு]

புள்ளன்பிளாச்சை *pullaṉ-piḷāccai,* பெ. (n.) மீன்வகையுளொன்று; a kind of fish.



புள்ளாங்குச்சு *pullāṅ-guccu,* பெ. (n.) கீச்சுக் கீச்சுத் தாம்பாளம் என்ற குழந்தைகள் விளையாட்டு (நெல்லை.); children's game.

[புள்ளாம் + குச்சு]

புள்ளி¹ *pulli,* பெ. (n.) பொட்டுக்குறி; mark, dot, speck, point jot. *'புள்ளிக் கள்வன்'* (ஐங்குறு. 21.) 2. எழுத்தின் மேலிடுங்குத்து அல்லது சுழிக்குறி (தொல். எழுத். 15, 16); dot placed over a letter. 3. மெய்யெழுத்து; consonant. *'ஒன்றன் புள்ளி'* (நன்.189)

4. குற்றியலிகர உகரங்கள் (தொல். பொ. 666, உரை.); the shortened இ or உ. 5. வணிகர் சரக்கின் மேலிடும் விலைமதிப்புக் குறி (வின்.); code-mark made on goods by a trader to indicate their value. 6. கவற்றின் கட்டம்; mark on a piece of dice *'புள்ளியல் கவற்றில்'* (கல்லா. 92, 11.) 7. மதிப்பு; estimate. 8. ஆள்; individual. 9. பேரேடு (இ.வ.); ledger 10. பெருந்தொகை (வின்.); large sum. 11. இமயமலை (பிங்.); the Himalayas *'புள்ளிமால் வரை'* (கம்பரா. ஆற்று. 4.) 13. பல்லி (திவா.); lizard. 14. நண்டு(அக.நி.); crab.

ம. புள்ளி; **கோத.** புள்ய்.

[புள் = துளை, தோண்டு, வெட்டு, கொத்து, குத்து. புள் + இ – புள்ளி = குத்து (a point), சிறு வட்டக்குறி, புள்ளியால் குறிக்கப்படும் ஆள். (சு.வி. 37)]

புள்ளி² *pulli,* பெ. (n.) ஆய்தவெழுத்து (தொல். எழுத். 2.); the letter ஃ

[புள் + இ– புள்.]

ஆய்தம் ஒருயிரோடுங் கூடாது தனித்து நிற்பதால் தனிநிலை என்றும், புள்ளிவடிவாயிருப்பதால் புள்ளி என்றும் முப்புள்ளி என்றும் தனக்குப்பின் வரும் வல்லினமெய்யை மெலிவிப்பதால் நலிபு என்றும் பெயர் பெறும் (கு.வ.139).

'குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும்' (தொல்.2) என்று *'முப்பாற் புள்ளி'* என்பது மூவெழுத்தையும் பொதுப்படத் தழுவுமாறு உம்மைத் தொகையாய்ச் சேர்த்துக் கூறியிருத்தலின், பண்டைக் காலத்திற் புள்ளி பெற்றன எனப்படும் (இலக்.கட்.56).

புள்ளி³ *pulli,* பெ. (n.) மஞ்சள் நிறத் தேமல்; yellow patches on the skin.

[புள் → புள்ளி]

புள்ளி⁴ *pulli,* பெ. (n.) பறவை; bird.

[புள் → புள்ளி]

புள்ளிக்கண் *pulli-k-kaṇ,* பெ. (n.) மாட்டின் கடைக்கண்ணில் விழும் வெள்ளை நிறப் புள்ளி (மாட்டுவா. 16.); white spots in the corner of the eyes of cattle.

[புள்ளி + கண்]

புள்ளிக்கணக்கன் *pulli-k-kaṇakkaṉ,* பெ. (n.) வணிகத்திற்குப் (காரியாம்சத்தில்) பயன்படும் கணக்கில் வல்லவன்; one versed in the tradesmen's accounts.

[புள்ளிக்கணக்கு → புள்ளிக்கணக்கன்]

புள்ளிக்கணக்கு *pulli-k-kaṇakku,* பெ. (n.) செயல் முறையில் (காரியாம்சத்தில்) பயன்படுங் கணக்கு; practical arithmetic opp. to paḷḷi-k-kaṇakku. 2. பயிர் விளைச்சல் மதிப்பு; valuation of a standing crop. 3. வரவுசெலவு மதிப்புத் திட்டம்; budget estimate 4. துணிவணிகர் துணியிலிடும் விலைக் குறியீடு (வின்.); method adopted by tradesmen in marking prices of cloth.

[புள்ளி + கணக்கு. புள் + இ– புள்ளி. புள்ளிக் கணக்கு = குறியிட்டுக் கணிக்கும் கணக்கு (சு.வி. 37.)]

புள்ளிக்கரப்பன் *pulli-k-karappaṉ,* பெ. (n.) தோல்நோய்; a kind of skin disease.

மறுவ. புள்ளிக்குட்டம்.

[புள்ளி + கரப்பன்]

புள்ளிக்கல் *pulli-k-kal,* பெ. (n.) கானற்கல்; a king of spotted stone.

[புள்ளி + கல்]

புள்ளிக்கலவா *pulli-k-kalavā,* பெ. (n.) புள்ளிக் கலவாய் பார்க்க; see pulli-k-kalavāy

[புள்ளிக்கலவாய் → புள்ளிக்கலவா]

புள்ளிக்கலவாய் *pulli-k-kalavāy,* பெ. (n.) 1. செந்நிறமும் பழுப்பு நிறமும் கலந்த கடல் மீன்வகை; spotted perch, reddish brown, 2. சாம்பல் நிறமுள்ள கடல்மீன் வகை; a seafish, deep grey.

[புள்ளி + கலவாய்]



புள்ளிக்கவுடா *pulli-k-kavuḍā,* பெ. (n.) சங்குவகை; a kind of conch

[புள்ளி + கவுடா]

புள்ளிக்கழி *pulli-k-kaḻi,* பெ. (n.) தோணியின் குறுக்காக கட்டப்படும் கம்பு; cross-bar of fishing boat.

[புள்ளி + கழி]

புள்ளிக்கற்றாழை *pulli-k-karrālai,* பெ. (n.) *பிள்ளைக் கற்றாழை* பார்க்க; see *pillai-k-karrālai.*

[பிள்ளைக்கற்றாழை + புள்ளைக் கற்றாழை → புள்ளிக்கற்றாழை]

புள்ளிக்காரன் *pulli-k-kāran,* பெ. (n.) 1. பணக்காரன்; rich man. 2. கணக்கன்; accountant. 3. பெயர் சொல்லாது குறிப்பிடப்பட்டவன்; particular person purposely not specified by name. 4. *புள்ளிபார்ப்பவன்* (இ.வ.) பார்க்க; see *pulli-p-pārppavan*

[புள்ளி + காரன். புள் + இ = புள்ளி. புள்ளிக்காரன் = புள்ளி குத்தப்பட்ட குற்றவாளி cf. E. bull, a sealed edict of the pupe, L. bulla, a knob, anything rounded by art; later, a leaden seal; E. bill, an acount of money, a draft of a proposed law clit. a sealed paper from Low.L. billa-bulla, a deal (சு.வி. 37)]

'புள்ளிக்காரன்' முகத்தில் கரியைப் பூசுதல், கரிக் கோடிடுதல் முதலிய வழக்குகள் ஊர்க்கு மாறான குற்றவாளிகளை ஊரார் செம்புள்ளி கரும்புள்ளி குத்தி அவமானம் படுத்தியதை நினைவுறுத்தும். (சொ.க. 23)

புள்ளிக்கால் *pulli-k-kāl,* பெ. (n.) உகரத்தின் மேல் இடப்படும் 'ள' என்னும் நெடிற்குறி (வின்.); the character 'ள' subjoined to the letter 'உ' to lenghen it.

[புள்ளி + கால்]

புள்ளிக்குட்டம் *pulli-k-kuttam,* பெ. (n.) *புள்ளிக் கரப்பன்* பார்க்க; see *pulli-k-karappan.*

[புள்ளி + குட்டம்]

புள்ளிக்குயில் *pulli-k-kuyil,* பெ. (n.) வரிக்குயில் (வின்.); striped koel

[புள்ளி + குயில்]



புள்ளிக்குரவை *pulli-k-kuravai,* பெ. (n.) மீன்வகையுளொன்று; a kind of fish.

புள்ளிக்குளிகைவராகன் *pulli-k-kuligai-varāgan,* பெ. (n.) பழைய காசு வகை; an ancient coin (M.E.R. 32 of 1923).

[புள்ளிக்குளிகை + வராகன்]

புள்ளிக்கெடுத்தை *pulli-k-keduttai,* பெ. (n.) நச்சு மீன் வகையுளொன்று; a kind of danger fish.

புள்ளிக்கெண்டை *pulli-k-kendai,* பெ. (n.) புள்ளியுள்ள மீன்; spotted fish.

[புள்ளி + கெண்டை]



புள்ளிக்கோழி *pulli-k-kōli,* பெ. (n.) கடல் மீன் வகை; a kind of sea-fish.

[புள்ளி + கோழி]

புள்ளிகிச்சான் *pulli-kiccān,* பெ. (n.) மீன்வகையுளொன்று; a kind of fish.

புள்ளிகுத்து–தல் *pulli-kuttu-,* 12 செ. குன்றாவி. (v.t.) **1.** கணக்கெழுதுதல்; to write accounts. **2.** ஏட்டெழுத்தில் அடிப்புக் குறியாக எழுத்தின் மேல் குத்திடுதல்; to delete by placing dot or dots over a letter or letters, in cadjan writing. ***'எழுத்து உருவழியாதே கிடந்தாலும் புள்ளி குத்தினால் அத்தைக் கழித்து மேலே போமா போலே'*** (ஈடு, 7, 3, 4.).

[புள்ளி + குத்து–,]

புள்ளிச்சந்தம் *pulli-c-candam,* பெ. (n.) திருவாரூர் மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tiruvārūr dt.

[புள்ளி சந்தம் → புள்ளிச்சந்தம். புத்தப் பள்ளிக்குக் கொடுக்கப்பட்ட இறையிலி நிலமுடைய ஊர்.]

புள்ளிச்சில்லை *pulli-c-cillai,* பெ. (n.) மார்பிலும் வயிற்றிலும் கருப்புக் கீற்றுகளைக் கொண்ட பறவை வகை; spotted munia.

[புள்ளி + இல்லை]

புள்ளிச்சிலம்பன் *pulli-c-cilamban,* பெ. (n.) மார்பு வயிறு ஆகிய இடங்களில் செம்பழுப்பு கோடுகளையுடைய பறவை வகை; spotted babbler.

[புள்ளி + சிலம்பன்]

புள்ளிச்சுறா *pul̤l̤i-c-cur̤ā,* பெ. (n.) மீன்வகையுளொன்று; a kind of sharp fish.

[புள்ளி + சுறா. சுல் → சுர் → சுரு → சுறு → சுறுக்கு = கூர்மை. சுறு → சுறா = கத்திபோல் வெட்டும் செதிலுள்ள கடல் மீன்.]

புள்ளிச்சோறு *pul̤l̤i-c-cōr̤u,* பெ. (n.) விளைவு மதிப்பிடும் அதிகாரிகள் பொருட்டு வாங்கும் பழைய வரி வகை; ancient tax for the maintenance of official estimators of the produce of fields.

[புள்ளி + சோறு]

புள்ளித்திரட்டை *pul̤l̤i-t-tiraṭṭai,* பெ. (n.) மீன்வகையுளொன்று; a kind of fish.

[புள்ளி + திரட்டை]

புள்ளித்திருக்கை *pul̤l̤i-t-tirukkai,* பெ. (n.) சோனகத்திருக்கை (வின்.); sting ray

புள்ளித்தும்பி *pul̤l̤i-t-tumbi,* பெ.(n.) மீன் வகையுளொன்று; a kind of fish.

புள்ளித்தேளி *pul̤l̤i-t-tēl̤i,* பெ.(n.) மீன் வகையுளொன்று; a kind of fish.

புள்ளிதறட்டை *pul̤l̤i-tar̤aṭṭai,* பெ.(n.) வெண்ணிறமுள்ளதும் 15 அங்குல நீளம் வளரக் கூடியதுமான கடல்மீன் வகை; a see fish, silvery, attaining 15 in. in length.

புள்ளிநோய் *pul̤l̤inōy,* பெ. (n.) உடம்பு முழுவதும் புள்ளிகளை யேற்படுத்தும் தோல்நோய்; a venereal disease which causes spots all over the body.

[புள்ளி + நோய்]

புள்ளிப்பட்டு *pul̤l̤i-p-paṭṭu,* பெ. (n.) பூத்தொழிலமைந்த பட்டு வகை (வின்.); veriegated silk-stuff.

[புள்ளி + பட்டு]

புள்ளிப்பன்னா *pul̤l̤i-p-pan̲n̲ā,* பெ. (n.) பில்லி பன்னா; a sea fish.

புள்ளிப்பனையேறி *pul̤l̤i-p-pan̲ai-y-ēr̤i,* பெ. (n.) மஞ்சணிறமுள்ள ஆற்றுமீன் வகை; yellow coloured fish with spots.

[புள்ளி + பனையேறி]

புள்ளிப்பாரை *pul̤l̤i-p-pārai,* பெ. (n.) மீன்வகை; caranx assinis a kind of fish.

[புள்ளி + பாரை]



புள்ளிப்பிலாச்சை *pul̤l̤i-p-pilāccai,* பெ. (n.) *பிலாச்சை மீன்* பார்க்க; see *pilāccai mīn̲.*

[புள்ளி + பிலாச்சை]

புள்ளிப்புலி *pul̤l̤i-p-puli,* பெ. (n.) சிறுத்தை; a leopard. (சேரநா.)

ம. புள்ளிப்புலி, புள்ளிநரி,

[புள்ளி + புலி]

புள்ளிப்பூனை *pulli-p-pūnai,* பெ. (n.) பழுப்பு நிறப்புள்ளிகள் உடைய பூனை வகை; rusty-spotted cat.

[புள்ளி + பூனை]

புள்ளிபட்டினசுட்டான் *pulli-pattina-šuttān,* பெ.(n.) மீன் வகையுளொன்று; a kind of fish.

புள்ளிபார்–த்தல் *pulli-pār-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** அறுவடைக்குமுன் வயலின் விளைவை மதிப்பிடுதல்; to estimate the produce of a field before harvesting. **2.** கணக்கை முடித்தல் (வின்.); to settle accounts.

[புள்ளி + பார்–,]

புள்ளிபார்ப்பவன் *pulli-pārppavan,* பெ.(n.) அறுவடைக்குமுன் வயலின் விளைவை மதிப்பிடும் பணியாளன்; official estimator of the produce of fields before harvesting.

[புள்ளி + பார்ப்பவன்]

புள்ளிபாலகெண்டை *pulli-pāla-kendai,* பெ. (n.) மீன்வகையுளொன்று; a kind of fish.



புள்ளிபோடு–தல் *pulli-pōdu-,* 20 செ.கு.வி. (v.i.) **1.** குறியிடுதல்; to make a mark. **2.** குறிப்பெழுதுதல் (வின்.); to make a note. **3.** *புள்ளிபார்–த்தல்* பார்க்க; see *pulli-p-pār.*

[புள்ளி + போடு–,]

புள்ளிமட்டி *pulli-matti,* பெ. (n.) கிளிஞ்சல் வகையுளொன்று; a kind of shell.

புள்ளிமரங்கொத்தி *pulli maraṅkōtti,* பெ. (n.) மஞ்சள் தோய்ந்த வெண்மை நிறமுடைய மார்பிலும் வயிற்றிலும் பெரிய கரும்புள்ளி களைக் கொண்ட மரங்கொத்தி வகை; speckled piculet.

[புள்ளி + மரங்கொத்தி]

புள்ளிமருது *pulli-marudu,* பெ. (n.) பிள்ளை மருது மரம்; white winged myrobalam.

மருது. வெண்மருது.

[பிள்ளைமருது → புள்ளைமருது → புள்ளி மருது]

புள்ளிமான் *pulli-mān,* பெ. (n.) **1.** புள்ளிகளுடைய மான் வகை; spotted deer, '*புள்ளிமான் கலையை*' (புறநா. 152. உரை). **2.** மான்வகை; hog-deer.

மறுவ. கலைமான்

ம. புள்ளிமான்

[புள்ளி + மான்]

புள்ளிமிசுக்கு *pulli-mišukku,* பெ. (n.) *புள்ளிக்கணக்கு* (இ.வ.) பார்க்க; see *pulli-k-kanakku.*

[புள்ளி + மிசுக்கு]

புள்ளிமிருகம் *pul̤l̤i-mirugam-,* பெ. (n.) *புள்ளிமான்*(வின்.)பார்க்க; see *pul̤l̤i-māṉ.*

[புள்ளி + மிருகம்]

Skt. mṛga > த. மிருகம்.

புள்ளிமூக்குவாத்து *pul̤l̤i-mūkku-vāttu,* பெ. (n.) வெளிர்ப்பழுப்பு நிறத்தில் ஆழ்ந்த பழுப்பு நிறக் கோடுகளையுடைய பறவை; spot. billed duck.

[புள்ளி + மூக்கு + வாத்து]

புள்ளியட்டை *pul̤l̤i-y-aṭṭai,* பெ. (n.) புள்ளியுள்ள அட்டை வகை; specked leech.

[புள்ளி + அட்டை. ஒட்டு → அட்டு → அட்டை = ஊனுடம்புடன் ஒட்டிக் கொண்டு அரத்தத்தை உறிஞ்சும் ஓர் உயிரி.]

புள்ளியந்திருக்கை *pul̤l̤iyan-tirukkai,* பெ. (n.) *புள்ளித்திருக்கை* பார்க்க; see *pul̤l̤i-t-tirukkai.*

[புள்ளித்திருக்கை → புள்ளியந் திருக்கை]

புள்ளியம்[1] *pul̤l̤iyam,* பெ. (n.) சிறுகுறிஞ்சா (மலை.); small Indian ipecacuanha.

புள்ளியம்[2] *pul̤l̤iyam,* பெ. (n.) *புளிநறளை* பார்க்க; see *pul̤inaṟal̤ai*

புள்ளியற்கலிமா *pul̤-l̤-iyaṟ-kali-mā,* பெ. (n.) *புள்ளியன்மா* பார்க்க; see *pul̤l̤iyaṉmā.* '*புள்ளியற் கலிமா வுடைமையான*' (தொல்.பொ.194).

[புள் + இயல் + கலி + மா]

புள்ளியன்மா *pul̤-l̤-iyaṉmā,* பெ. (n.) பறவையின் வேகமுடைய குதிரை; horse that flies like a bird. '*பொங்குளைப் புள்ளியன் மாவும்*' (பரிபா.10,14).

[புள்ளி + இயல் + மா]

புள்ளியாந்தை *pul̤l̤i-y-āndai,* பெ. (n.) சாம்பல் பழுப்பு நிறவுடலில் வெள்ளைப் புள்ளிகளைக் கொண்ட ஆந்தை வகை; spotted owlet.

[புள்ளி + ஆந்தை]

புள்ளியிடு-தல் *pul̤l̤i-y-iḍu-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. கணக்கிற் குறித்துக் கொள்ளுதல்; to enter in an account. '*புள்ளியிட்ட கணக்கு மாற்றி*' (மதுரைப். பதிற்.47). 2. பொருள் விளங்கும்படி சொற்றொடரியத்தில் (வாக்கிய ங்களிற்) குறியிடுதல்; to punctuate.

[புள்ளி + இடு-,]

புள்ளியியல் *pul̤l̤iyiyal,* பெ. (n.) (தகவலையோ, நிலவரத்தையோ) எண்களால் குறித்துத் தெரிவிக்கும் முறை; statistics '*மக்கள் தொகையைத் கட்டுப்படுத்தா விட்டால் சிக்கல் உருவாகும் என்று ஒரு புள்ளியியல் நிறுவனம் தெரிவித்தது*' (உ.வ).

[புள்ளி + இயல்]

புள்ளியிரலை *pul̤l̤i-y-iralai,* பெ. (n.) *புள்ளிமான்1* பார்க்க; see *pul̤l̤imāṉ1.* '*கவலையமருப்பிற் புள்ளியிரலை*' (பதிற்றுப். 74,10).

[புள்ளி + இரலை]

புள்ளியினம் *pul̤l̤i-y-iṉam,* பெ. (n.) *புள்ளியீடு(வின்.)* பார்க்க; see *pul̤l̤i-y-īḍu.*

[புள்ளி + இனம்]

புள்ளிச் சிலம்பன்

புள்ளி மரங்கொத்தி

புள்ளி ஆந்தை

புள்ளிச் சில்லை

புள்ளிமூக்கு வாத்து

புதிர் வானம்பாடி

புள்ளியீடு *pul̤l̤i-y-īḍu,* பெ. (n.) பொருள் விளங்கும்படி சொற்றொடர்களில் இடும் குறியீடு (இக்.); punctuation.

[புள்ளி + ஈடு. இடு → ஈடு]

புள்ளியுளுவை *pul̤l̤i-y-ul̤uvai,* பெ. (n.) மீன்வகையுளொன்று; a kind of fish.

[புள்ளி + உளுவை]



புள்ளிரி *pul̤l̤iri,* பெ. (n.) செஞ்சந்தனம்; red sandal.

புள்ளிருக்குவேளூர் *pul-l-irukkuvēl̤ūr,* பெ. (n.) வினைதீர்த்தான் (வைத்தீசுவரன்) கோயில் என்று அழைக்கப்படும் ஊரின் பழையபெயர்; ancient name of the village Vaittīšuvaran̠ kōyil.

[புள் + இருக்கும் + வேளூர். புள் மிகுதியாக இருந்த ஊர்.]

புள்ளிரோகம் *pul̤l̤i-rōgam,* பெ. (n.) நோய்வகை (வின்.); a disease.

[புள்ளி + ரோகம்.]

Skt.rōha > *த.* ரோகம்

புள்ளிவண்டு *pul̤l̤i-vaṇḍu,* பெ. (n.) கழுதை வண்டு (வின்.); ground beetle.

[புள்ளி + வண்டு]

புள்ளிவராகன் *pul̤l̤i-varāgan̠,* பெ. (n.) மூன்றரை உருபாமதிப்புள்ள பொற்காசு வகை (வின்.); star pagoda=3 1/2. rupees

[புள்ளி + வராகன்]

Skt. varāha > த. வராகன்

புள்ளிவரி *pul̤l̤i-vari,* பெ. (n.) பட்டியல் (வின்.); catalogue.

[புள்ளி + வரி]

புள்ளிவரிக்கலை *pul̤l̤i-vari-k-kalai,* பெ. (n.) புள்ளியையும் வரியையுமுடைய கலைமான்; spotted deer. *'அள்ளல் ஆடிய புள்ளி வரிக்கலை'* (நற். 265,2).

[புள்ளி + வரி + கலை]

புள்ளிவிவரம் *pul̤l̤i-vivaram,* பெ. (n.) *புள்ளிவிளக்கம்* பார்க்க; see *pul̤l̤i vil̤akkam.* *'தொழில் வளர்ச்சிபற்றிப்புள்ளிவிவரங்களுடன் விளக்கினார்'* (உ.வ).

[புள்ளி + விவரம்]

Skt. vivara > த. விவரம்

புள்ளிவிழல் *pul̤l̤i-vil̠al,* பெ. (n.) பெண்ணிய நோய்; a venereal disease.

[புள்ளி + விழல். விழு → விழல்]

புள்ளிவிளக்கம் *pul̤l̤i-vil̤akkam,* பெ. (n.) எண்ணிக்கை அடிப்படையில் தரப்படும் விளக்கம்; statistical information.

ம. புள்ளிவிளக்கம்

[புள்ளி + விளக்கம்]

புள்ளீடு[1] *pu!!īḍu,* பெ. (n.) சிவகணங்களுள் ஒருவகைப் பேய்க்(பைசாச)கணம் (தக்கயாகப். 605, உரை.); a group of bird-like demon-attendants of Šivaṉ.

[புள் → புள்ளீடு]

புள்ளீடு[2] *pu!-!-īḍu,* பெ. (n.) பறவைக் குற்றத்தினால் வருவதாகக் கருதப்படும் பிள்ளை நோய்; a disease in children, attributed to the evil influence of birds. புள்ளீட்டுக்கும் பேயீட்டுக்கும் பிழைக்கப்பெற்ற தென்கிறார் (திவ்.பெரியாழ்.2,5,4,வ்யா.பக்.343.).

[புள் + ஈடு. இடு → ஈடு]

புள்ளு[1] *pu!!u,* பெ. (n.) 1. புள் (சிலப்.10,117, உரை.) பார்க்க; see pu! 2. சிறுபுள்ளடி (மூ.அ.); a species of tick-trefoil.

[புள் → புள்ளு]

புள்ளு[2] *pu!!u,* பெ. (n.) விதைக்கரும்பு; piece cut off, as sugarcane cut cross wise.

மறுவ . விதைகரணை

[புள் → புள்ளு]

புள்ளுரை—த்தல் *pu!!urai-,* 4 செ.கு.வி. (v.i.) புள்ளொலி கொண்டு நிமித்தங்கூறுதல்; to predict from omen-birds, '*முந்து புள்ளுரைத்த முதுமகன்*' (பெருங்.உஞ்சைக்.56,234.)

[புள் + உரை—]

புள்ளுவம் *pu!!uvam,* பெ. (n.) 1. பறவையினோசை (சீவக.2039,உரை.); cry of birds. 2. ஏய்ப்பு (வஞ்சகம்); deceit, guile, craft, falsehood. '*பொய்யொருநாள் பட்டதேயமையும் புள்ளுவம் பேசாதே போக நம்பீ*' (திவ்.பெருமாள்.6,7.)

[புள் → புள்ளுவம்]

புள்ளுவன் *pu!!uvaṉ,* பெ. (n.) 1. ஏய்ப்பன் (வஞ்சகன்); deceitful person; '*புள்ளுவன் கார்வம் பொதியறை*' (திவ்.பெரியதி.10,7,4.). 2. பாலைநில மகன் (சூடா.); dweller in a desert tract. 3. கீழ்மகன் (பிங்.); base, vile person.

[புள்ளுவம் → புள்ளுவன்]

புள்ளூர்கடவுள் *pu!-!-ūr-kaḍavu!,* பெ. (n.) திருமால்(கருடன் மேலேறிச் செல்லும் தெய்வம்.); Tirumāl as riding on garuḍa. '*புள்ளூர் கடவுளைப் போற்றுதும் போற்றுதும்*' (சிலப்.17,ஆடுநர்ப் புகழ்தல்.)

[புள் + ஊர் + கடவுள்]

புள்ளெனல் *pu!-!-eṉal,* பெ. (n.) புளித்தற் குறிப்பு; expr.of sourness of taste. "கூழ் புள்ளென்றது" (நேமிநா,66,உரை).

[புள் + எனல்]

புள்ளொலி *pu!-!-oli,* பெ. (n.) பறவையினது ஓசை; *chirping sound of birds.* "புள்ளொலி சிறந்த தெள்ளரிச் சிலம்பாடி "(மணிமே. 5,111).

[புள் + ஒலி]

புள்ளையார்சங்கு *pu!!aiyār šaṅgu,* பெ. (n.) பிள்ளையார் போன்ற அமைப்பிற் காணப்படும் சங்கு; a conch, which in a shape of 'Pi!!aiyār'.

[பிள்ளையார் → புள்ளையார் + சங்கு]



புள்ளோச்சு-தல் *pul-l -ōccu-,* 15 செ.கு.வி. (v.i.) *புள்ளோப்பு-தல்* பார்க்க; see *pul-l-ōppu-,*

[புள் + ஓச்சு-,]

புள்ளோப்பு-தல் *pul-l-ōppu-,* 6 செ.கு.வி. (v.i.) பறவையை ஓட்டுதல்; to drive away birds as from a corn field. '*கொழுமீ னுணங்கல் புள்ளோப்பும்*' (ஐந்.ஐம்.47)

மறுவ. கவறோட்டுதல்,

[புள் + ஒப்பு-,]

புளகம்[1] *pulagam,* பெ. (n.) 1. மிகுந்த அச்சம் பெருமகிழ்ச்சி ஆகியவற்றால் உடற்றோலின் மேலுள்ள மயிர்கள் நிமிர்ந்து நிற்கை, மயிர் சிலிர்க்கை; horripilation, erection of the hairs on the skin, as from excessive fear, delight etc. சிந்தை பயமெய்தி யுறுபுளகத் தோடும் (திருவாலவா. 30,45) 2. மகிழ்ச்சி (வின்); joy, delight, ecstacy

மறுவ. மயிர்ப்புடைப்பு, மயிர்க் கூச்செறிவு.

க.,து. புலக, புளக

[புல் → புலகம் → புளகம்.]

த. புளகம் > Skt. pulaka.

இச்சொல்லின் முதற்பொருளாக உண்ணக் கூடிய ஒருவகைச் செடி (a species of edible plant) என்று மா.வி.அக. குறித்திருப்பது இச்சொல் புல்லோடுதொடர்பு கொண்டிருந்ததைக் காட்டுகிறது. வடமொழியில் இதன் வினை வடிவம் இல்லை; பெருவழக்குமில்லை

புளகம்[2] *pulagam,* பெ. (n.) சோறு (பிங்.); boiled rice.

க. புலக, புலிக(சோற்றுருண்டை)

[புல் → புள் → பிள் → பிழம்பு = திரட்சி. (வே.க.3.81) புல் → புள் → புளகம் = சோற்றுருண்டை, சோறு]

புளகம்[3] *pulagam,* பெ. (n.) கண்ணாடி; mirror, looking-glass. செம்பொற் புளகத் தின ஞாயிறு செற்ற கோயில் (சீவக. 1867)

[புல்லுதல் = துளைத்தல். புல் → புழு → புகு. புல் → புள் → புளகம் = உருவத்தின் நிழலை உட்புகவைத்துக் காட்டும் பொருள்]

புளகாங்கிதம் *pulagāngidam,* பெ. (n.) புளகிதம் பார்க்க; see pulagidam.

[புளகம் + அங்கிதம்]

Skt. ankita > த. அங்கிதம்

புளகி-த்தல் *pulagi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மயிர் சிலிர்த்தல்; to horripilate as from rapture. 2. மிக மகிழ்தல் (வின்.); to be in ecstacy.

[புல் → புலகம் → புளகி-, புளகித்தல் = புல்லைப்போன்று உடல்மேலுள்ள மயிர்கள் நேராக நிற்றல்.]

புளகிதம் *pulagidam,* பெ. (n.) 1. மயிர்ச்சிலிர்ப்பு; horripilation, goose-skin, as from rapture *'புளகிதத்தோடுங் கண்ணீர்மேவ மெய்கம்பித்து'* (திருவாலவா. 1,22.) 2. பெருமகிழ்ச்சி (வின்.); ecstacy, rapture

[புல் → புலகம் → புளகித்தல். புளகி → புளகிதம்.]
'புளகம்' பார்க்க.

த. புளகிதம் > Skt. pulakita.

புளகினி *pulakiṉi,* பெ. (n.) தாமரைமணி; lotus bead.

புளகு *pulagu,* பெ. (n.) *புளகம்*[1] பார்க்க; see *pulagam*[1] மெய்யும் புளகெழ (பாரத. கீசக. 59)

[புல் → புலகம் → புளகம் → புளகு]
த. புளகு > Skt. pulaka.

புளங்கொள்(ளு)—தல் *pulaṅgol(lu)-,* 10 செ.குன்றாவி. (v.t.) *புலங்கொள்—தல்* பார்க்க; see *pulaṅ-kol-,* *'சுடலை நீறு புளங்கொளவிளங்கினை'* (தேவா.256,4.)

[புலங்கொள் → புளங்கொள்]

புளப்பாகல் *pulappāgal,* பெ. (n.) வாலுழுவை. (மலை.); climbing staff plant.

புளம் *pulam,* பெ. (n.) 1. அண்ணம்; the uvula. 2. மேல்வாய்; palate.

[புள் → புளி = புளித்துப்பொங்குவது. புளி → புளிஞன் = மலையேறுபவள். புள் → புளம் = மேலே இருப்பது, அண்ணம்.]

புளரியசாத்தம் *pulariyaśāttam,* பெ. (n.) திருநீறு; the sacred ashes.

புளவை *pulavai,* பெ. (n.) 1. பிளவை பார்க்க; see pilavai. 2. பட்டு; silk

[பிள் → பிள → பிளவை → புளவை]

புளவைப்பருத்தி *pulavai-p-parutti,* பெ. (n.) பட்டுப்பருத்தி; silk cotton.

[புளவை + பருத்தி]

புளாகம் *pulāgam,* பெ. (n.) கஞ்சி; gruel.

[புல் → புள் → புளகம் = சோறு. புளகம் → புளாகம் = சோற்றைக் கரைத்தாற் போன்றுள்ள கஞ்சி]

புளி[1] *puli,* பெ. (n.) 1. புளிப்புச்சுவை (மூ.அ.); acidity, tartness. 2. மரவகை (மூ.அ.); tamarind, tree 3. புளியம் பழத்தின் ஓட்டை நீக்கிப் பெறப்படும் புளிப்புச் சுவையுடைய சதைப் பகுதி; tamarind குழம்புவைக்கக் கொஞ்சமாகப் புளி எடுத்துக்கொள் (உ.வ.) 4. புளிங்கறி; curry cantaining tamarind. *'அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து'* (அகநா.60.) 5. தித்திப்பு (சிறுபாண்,. 175.உரை); sweetness. 6. பெண் சரக்குவகை (வின்.) substance, in general.

ம., குட புளி; *க.*புளி, புள்ள, புளு, புல்ல, புளிசெ, புணசெ, புணிசெ, புணுசி, புணுசெ, புண்செ, புளும்செ, குணசி, குணசெ, குணிசெ, குணுசெ, குளிசெ. தெ. புலி; *து.* புளி, புலி; கோத புள்ய்; *துட,* பூள்ய்; *கொலா.*புல்லெ; கட. புல்லா; *கோண்.* புலா; குவி. புல்ல; *பட.*குய்.

[(புள்) → புளி = புளிப்புச்சுவை, புளிப்புப் பழம், புளிப்புப் பழந்தரும் மரம்]

புளி வகைகள்

1. ஆனைப்புளி
2. ஈழப்புளி
3. காட்டுப்புளி
4. கொடிப்புளி
5. கொடுக்காய்ப்புளி
6. கொன்றைப்புளி
7. கோணப்புளி
8. சரக்கொன்றைப்புளி
9. சிவப்புப்புளி
10. சீனம் புளி
11. சூலப்புளி
12. செடிப்புளி
13. சோலைப்புளி
14. பப்ரப்புளி
15. பழம்புளி
16. பாப்பாரப்புளி
17. புனம் புளி
18. பொந்தம்புளி
19. மணிலாப்புளி
20. மாம்புளி
21. மூலப்புளி .



புளி² –த்தல் *puḷi-,* 11 செ.கு.வி. (v.i.) 1. புளிப்பேறுதல்; to turn sour; to ferment; to be leavened. *'அமுது புளித்தாங்கு'* (சீவக.2015.). 2. கன்றுதல்; to become sore. *'கன்னம் புளிக்க அறைந்தான்'* (உ.வ.) 3. தன்மை திரிதல்; to change in taste or quality. 4. வெறுத்துப்போதல்; to be disgusting, as from surfeit. 5. கைக்கெட்டாதென்ற காரணத்தால் விடப்படுதல்; to be given up as being beyond one's reach. 6. வேலைக்கு உதவுமாறு களிப்பாக இருத்தல்; to become soft and pasty, as lime. *'சுண்ணாம்பு புளித்திருக்கிறது'* 7. செறிதல் (அக.நி.); to be thick, close, crowded or dense.

ம. புளிக்க; *தெ.* புலியு; *து.*புலிபுலி, புலியுனி,

[(புள்) → புளி = புளித்துப் பொங்குவது, புளிப்புச் சுவை, புளிப்புப் பழம் . புளித்தல் = புளித்துப் பொங்குதல். புளிக்க வைத்த மா எழும்பியிருத்தலைக் கொண்டே அது புளித்துவிட்டதென்று அறிந்து கொள்ளுதல் காண்க. (மு.தா.63)]

புளி³ *puḷi,* பெ. (n.) 1. சீனம்; alum. 2. எலுமிச்சை; the skin or rind of lime fruit.

புளிக்கடலை *puḷi-k-kaḍalai,* பெ. (n.) 1. புளித்த கடலை; sour Bengal gram. 2. கடலைப் புளிப்பு; vinegar extracted from the plant of Bengal gram.

[புளி + கடலை]

புளிக்கருணை *puḷi-k-karuṇai,* பெ. (n.) கருணைவகை (தைலவ.தைல.135,20,உரை); a kind of tuberous rooted herb.

[புளி + கருணை. கறணை → கருணை]

புளிக்கரை¹–த்தல் *puḷi-k-karai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கறிக்காகப் புளியை நீரிற் கரைத்தல் (வின்.); to dissolve tamarind for

curry preparations. 2. கவலைப்படுதல் (இ.வ.); to be anxious.

து. புளிபாடுனி

[புளி + கரை–,]

புளிக்கரை²–த்தல் *puḷi-k-karai-,* 4 செ. குன்றாவி. (v.t.) கலக்கப் படச்செய்தல் (இ.வ.); to make one anxious. தேர்வுக்குச் செல்லும் மாணவன் வயிற்றில் புளிக் கரைத்தாற் போல் காணப் படுகிறான் (உ.வ.).

[புளி + கரை–,]

புளிக்கவை–த்தல் *puḷikkavai-,* 4 செ.குன்றாவி. (v.t.) நுரைகொள்ள வைத்தல்; to ferment.

து. புளிபா, புலிபா,

[புளி → புளிக்க + வை–,]

புளிக்கறி *puḷi-k-kaṟi,* பெ.(n.) *புளிங்கறி* பார்க்க; see *puḷiṅkaṟi.*

[புளி + கறி]

புளிக்காப்பு *puḷi-k-kāppu,* பெ.(n.) சிலைக்கு எண்ணெய்க் காப்பிடும் போது எண்ணெய் கழற்ற உதவும் அரைத்த புளி முதலியன (திவ். பெரியாழ். 2, 4, 1, வ்யா. பக். 311); past of tarmarind, soapnut, etc., used for removing oil smeared on the idols in a ceremonial bath.

தெ. புலிகாபு

[புளி + காப்பு. கா → காப்பு]

புளிக்காய்ச்சல் *puḷi-k-kāyccal,* பெ. (n.) புளியைக் கரைத்து மிளகாய், கடலைப் பருப்பு, பெருங்காயம் முதலிய பொருள்களைச் சேர்த்துக் காய்ச்சி உருவாக்கும் கெட்டியான குழம்பு; a thick spicy concentrate of tamarind obtained by boiling.

[புளி + காய்ச்சல். காய் → காய்ச்சல். 'சல்' தொ.பெ. ஈறு]

புளிக்கீரை *puḷi-k-kīrai,* பெ.(n.) புளிச்சக்கீரை; Indian sorrel.

மறுவ. புளிச்சிறுகீரை. புளியாரை

[புளி + கீரை]

புளிக்குடி–த்தல் *puḷi-k-kuḍi-,* 4 செ.கு.வி.(v.i.) ஈன்றணிமையாயிருத்தல் (இ.வ.); to be in child-bed.

து. புளிநீர் (புளியிலையைக் கொண்டு காய்ச்சிய சாறு)

[புளி + குடி. உடல் வலியைப் போக்க புளியம் இலையை நீரில் போட்டுக் காய்ச்சிய சாற்றைக் குழந்தை பெற்ற பெண்ணுக்குக் கொடுக்கும் பழக்கம் அடிப்படையில் உருவானது புளிக்குடித்தல் என்னும் சொல்லாட்சி. பின்னர் அது ஈன்றணிமையாய் இருக்கும் நிலையைக் குறித்தது.]

புளிக்குடித்திரு–த்தல் *puḷ-k-kuḍittiru-,* 3 செ.கு.வி. (v.i.) *புளிக்குடி–த்தல்* பார்க்க; see *puḷi-k-kuḍi-,*

[புளி + குடித்து + இரு–,]

புளிக்குழம்பு *puḷi-k-kuḻambu,* பெ.(n.) *புளிங்கறி* பார்க்க; see *puḷiṅkaṟi.* புளிக் குழம்பு எளிதில் கெடாது (உ.வ.).

மறுவ. புளியாணம், தீயல், காரக்குழம்பு

[புளி + குழம்பு]

புளிக்குளி–த்தல் *puḷi-k-kuḷi-,* 4 செ.கு.வி. (v.i.) *புளிக்குடி –த்தல்* பார்க்க; see *puḷi-k-kuḍi-,*

[புளிக்குடி → புளிக்குளி –,]

புளிக்கொச்சு *puḷi-k-koccu,* பெ. (n.) *புளிக் கோசு* பார்க்க; see *puḷi-k-kōšu.*

[புளி + கொச்சு]

புளிக்கொட்டை *puḷi-k-koṭṭai,* பெ. (n.) புளியம் பழத்திற்குள் இருக்கும் விதை; tamarind.

து. புலிகொட்டி.

[புளி + கொட்டை]

புளிக்கொடிமுந்திரி *puḷikkoḍi-munḍiri,* பெ.(n.) புளிப்புத் திராட்சை; sour grape.

[புளி + கொடிமுந்திரி]

புளிக்கொழுமிச்சை *puḷi-k-koḻumiccai,* பெ. (n.) புளிப்புச்சுவையுள்ள கொழுமிச்சை; sour citrous.

[புளி + கொழுமிச்சை]

புளிக்கோசு *puḷi-k-kōšu,* பெ. (n.) புளியிட்டுச் சமைத்த கறிவகை; a preparation of tamarind, used as a relish.

மறுவ. புளிக் கொச்சு.

E.cosh › **த.** கோசு

[புளி + கோசு]

புளிக்கோட்டை *puḷi-k-kōṭṭai,* பெ. (n.) கொட்டை நீக்கித் திரட்டி வைக்கப்பட்ட புளித்திரளை (கொ.வ.); tamarind fruit, massed after removing the stones and rinds.

[புளி + கோட்டை]

புளிகரை–த்தல் *puḷi-karai-,* 4 செ.கு.வி. (v.i.) *புளிக்கரை–த்தல்* பார்க்க; see *puḷi-k-karai-,*

[புளி + கரை–,]

புளிகுடி–த்தல் *puḷi-kuḍi-,* 4 செ.கு.வி. (v.i.) *புளிக்குடி–த்தல்* பார்க்க; see *puḷi-k-kuḍi-,*

[புளி + குடி –,]

புளிகை *puḷigai,* பெ. (n.) ***புளித்தல்*** பார்க்க; see *puḷittal.*

[புளி → புளிகை]

புளிகொடு–த்தல் *puḷi-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) முத்துக்குளியலில் முத்தை விழுங்கினவனிடமிருந்து அம்முத்தை மலமூலம் வெளியேற்றப் புளியை உட்கொள்ளச் செய்தல் (வின்.); to give tamarind pulp to a man who has swallowed pearls, causing him to void them.

[புளி + கொடு–,]

புளிங்கருணை *puḷiṅkaruṇai,* பெ.(n.) *புளிநறளை* பார்க்க; see *puḷinaṟaḷai.*

[புளி + கருணை. கரணை → கருணை.]

புளிங்கறி *puḷi-ṅ-kaṟi,* பெ.(n.) புளிச்சாறிட்டுச் சமைத்த கறி (S.I.I.ii, 127.); curry containing tamarind juice.

து. புளிகொத்தெல்

மறுவ. புளிக்கொச்சு

[புளி + கறி]

புளிங்காடி *pulingādi,* பெ.(n.) மிகப்புளிப்பேறிய காடி; vinegar.

[புளி + காடி]

புளிங்கூழ் *puli-n-kūl,* பெ.(n.) புளியிட்டாக்கிய கூழ்வகை; porridge cooked in tamarind juice. *'அவரையம் புளிங்கூழ்'* (மலைபடு. 436).

[புளி + கூழ்]

புளிச்சக்கண் *pulicca-k-kaṇ,* பெ.(n.) *புளித்தகண்* பார்க்க; see *pulitta-kaṇ*

[புளி → புளித்த → புளிச்ச + கண்]

புளிச்சக்காடி *pulicca-k-kādi,* பெ.(n.) *புளிச்சற்காடி (வின்.)* பார்க்க; see *puliccaṟkādi.* 2. மிக்க புளிப்பு (கொ.வ.); extreme sourness, as of vinegar.

[புளி → புளிச்ச + காடி]

புளிச்சக்காய் *pulicca-k-kāy,* பெ. (n.) *புளிச்சக்காய்மரம்* பார்க்க; see *puliccakkāy maram.*

புளிச்சக்காய்மரம் *puliccakkāy-maram,* பெ.(n.) ஒருவகை மரம்; bilimbi tree. (L.)

[புளிச்சக்காய் + மரம்]

புளிச்சக்கை *puli-c-cakkai,* பெ. (n.) புளியைக் கரைத்த பின் எஞ்சிய சாரமற்ற கோது (வின்.); refuse of tamarind fruit.

மறுவ. புளிக்கோது.

[புளி + சக்கை]

புளிச்சங்காடு *puliccaṅgāḍu,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tañjāvūr dt.

[புளியங்காடு → புளிச்சங்காடு]

புளிச்சத்து *puli-c-cattu,* பெ. (n.) புளிப்பிழிவு; the essence of tamarind.

[புளி + சத்து]

Skt. sat › **த.** சத்து

புளிச்சதண்ணீர் *pulicca-taṇṇīr,* பெ. (n.) புளிப்பேறிய பழஞ்சோற்று நீர் (கொ.வ.); water allowed to stand over cooked rice and get sour.

மறுவ. நீத்தத்தண்ணீர், நீராத்தண்ணீர், பழையதண்ணீர்

[புளிச்ச + தண்ணீர்]

புளிச்சநா *puliccanā,* பெ.(n.) *புளிச்சக்கீரை* பார்க்க; see *pulicca-k-kīrai.*

[புளி → புளிச்ச + நா]

புளிச்சநார் *pulicca-nār,* பெ. (n.) புளிச்சைச் செடியிலிருந்து எடுக்கப்படும் நார் (கொ.வ.); fibre of Indian brown hemp.

[புளிச்சை + நார்]

புளிச்சரக்கு *puli-c-carakku,* பெ. (n.) புளிப்பைச் சமமாக்கும் காரப்பொருள்; alkali.

[புளி + சரக்கு. சர் → சரகு → சரக்கு = காய்ந்த பண்டம், காய்ந்த வணிகப் பண்டம், பண்டம்.]

புளிச்சக்காய் பிலிம்பி

புளியாரை

புரசு

புளிச்சல் *puḷiccal,* பெ.(n.) புளிப்பானது (வின்.); anything acid, sour of leavened.

[புளி → புளிச்சல்]

புளிச்சலேப்பம் *puḷiccal-ēppam,* பெ. (n.) புளிச்சேப்பம் (வின்.) பார்க்க; see puḷicc ēppam

[புளிச்சல் + ஏப்பம்]

புளிச்சற்கண் *puḷiccaṟ-kaṇ,* பெ. (n.) *புளிச்சைக் கண்* (வின்.) பார்க்க; see *puḷiccai*-k-kaṇ.

[புளிச்சை + கண்]

புளிச்சற்காடி *puḷiccaṟ-kāḍi,* பெ.(n.) **1.** புளித்த பனாட்டுத் தண்ணீர் (வின்.); sour water in which palmyra pulp has been washed.**2.** புளிச்சத் தண்ணீர் (இ.வ.) பார்க்க; see puḷicca-t-taṇṇīr.

[புளிச்சல் + காடி]

புளிச்சற்றண்ணீர் *puḷiccaṟṟaṇṇīr,* பெ. (n.) *புளிச்சதண்ணீர் (வின்.)* பார்க்க; see *puḷicca-taṇṇīr.*

[புளிச்சல் + தண்ணீர்]

புளிச்சாங்கீரை *puḷiccāṅ-kīrai,* பெ. (n.) *புளிச்சை 1 (கொ.வ.)* பார்க்க; see *puḷiccai 1.*

[புளிச்சை + கீரை]

புளிச்சாணை *puḷi-c-cāṇai,* பெ. (n.) புளித்திரளை (இ.வ.); rounded mass of tamarind pulp.

[புளி + சாணை]

புளிச்சாரம் *puḷi-c-cāram,* பெ. (n.) புளிச்சாறு; the essence of tamarind.

[புளி + சாரம்]

புளிச்சாறு *puḷi-c-cāṟu,* பெ. (n.) வேகவைத்த காய்கறிகளுடன் வெந்தயத்தையும், புளிச்சாற்றையும் சேர்த்து செய்யும் ஒருவகைக் குழம்பு (வின்.); vegetable soup prepared with tamarind and fenugreek.

மறுவ. கழனிப்புளிச்சாறு

ம. புளிஞ்சாறு; து. புளிச்சாறு.

[புளி + சாறு]

புளிச்சான்[1] *puḷiccāṉ,* பெ.(n.) கொடிவகை (இ.வ.); a large woody climber with shining leaves and scarlet fruits.

[புளி → புளிச்சான்]

புளிச்சான்[2] *puḷiccāṉ,* பெ.(n.) சாதிக்காய்; a kind of nutmeg.

புளிச்சி[1] *puḷicci,* பெ.(n.) பருத்திவகை; a kind of coarse cotton (G.Tn.D. **1, 163.**).

புளிச்சி[2] *puḷicci,* பெ.(n.) புளியாரை; prostate plant, sour sorrel.

[புளி → புளிச்சி]

புளிச்சிராய் *puḷicciṟāy,* பெ.(n.) புளிச்சி[2] பார்க்க; see puḷicci[2]

[புளி + சிராய்]

புளிச்சிறுகீரை *puḷi-c-ciṟukīrai,* பெ. (n.) உயிரணுக்களை உண்டாக்கி புணர்ச்சியில் விருப்பத்தினை யேற்படுத்தும் புளியாரைக் கீரை; a kind or greens which increases semen and desire for inter-course.

மறுவ. புளிக்கீரை, புளியாரை, காசினிக் கீரை.

[புளி + சிறுகீரை]

புளிச்சுண்ணம் *puḷi-c-cuṇṇam,* பெ. (n.) பழம்புளி, கருப்பூரம் போன்றவற்றைச் சிற்றாமணக் கெண்ணெயுடன் பிசைந்து எரியூட்டி யுருவாக்குஞ் சுண்ணம்; a calcium prepared by burning the paste prepared castor oil, camphor and old tamarind.

[புளி + சுண்ணம். சுள் → சுண் → சுண்ணம்]

புளிச்சுரோணிதம் *puḷi-c-curōṇidam,* பெ. (n.) படிகாரம், காடி போன்ற புளிப்புள்ள சரக்குகள் (வின்.); acid substance which combines with an alkali.

[புளி → புளிச்சு + ரோணிதம்]

புளிச்சுவை *puḷi-c-cuvai,* பெ. (n.) அறுசுவைகளுளொன்று; sour taste.

து. புளிச்வாது.

[புளி + சுவை]

புளிச்செவ்வந்தி *puḷi-c-cevvandi,* பெ. (n.) மரவகை; a species of wooly jacket.

[புளி +செவ்வந்தி]

புளிச்சேப்பம் *puḷiccēppam,* பெ. (n.) உண்டது செரியாமையால் வரும் ஏப்பம்; belching on account of indigestion.

து. புளிஆரிகெ

[புளிச்ச + ஏப்பம். ஏ → ஏப்பம்]

புளிச்சை *puḷiccai,* பெ. (n.) **1.** செடிவகை; Indian brown hemp, **2.** செம்புளிச்சை; roselle. **3.** கும்பாதிரி; lac tree. **4.** புளிச்செவ்வந்தி பார்க்க; see puḷi-c-cevvandi. **5.** பீளை; rheum, secretion from the eyes.

க. பிலிசி.

[புளி → புளிச்சை]

புளிச்சைக்கண் *puḷiccai-k-kaṇ,* பெ.(n.) பீளை நிரம்பிய கண்; blear eyes, rheumy eyes.

[புளிச்சை + கண்]

புளிச்சைக்கீரை *puḷiccai-k-kīrai,* பெ.(n.) *புளிச்சை 1 (மலை.)* பார்க்க; see *puḷiccai 1.*

[புளிச்சை + கீரை]

புளிச்சைக்கொட்டை *puḷiccai-k-koṭṭai,* பெ.(n.) **1.** புளிச்சைக் கீரைக்கொட்டை; seed of prostate sour plant. **2.** புளியங்கொட்டை; seed of tamarind fruit.

மறுவ. புளிக்கொட்டை

[புளி → புளிச்சை + கொட்டை]

புளிச்சைப்பழம் *puḷiccai-p-paḻam,* பெ. (n.) புளிப்புச் சுவையுள்ள பழம்; a sour fruit.

[புளி → புளிச்சை + பழம்]

புங்கன் கரஞ்ச

புளிச்சக்கீரை பீலு

புலிப்பிரண்டை

புளிச்சோபிதம் *puḷi-c-cōbidam,* பெ. (n.) புளிக் கொட்டை பார்க்க; see puḷi-k-koṭṭai.

[புளி + சோபிதம்]

புளிச்சோறு *puḷi-c-cōṟu,* பெ. (n.) புளியிட்டு அட்ட சோறு; boiled rice dressed with tamarind sauce. *'புளிச்சோறுண்டுளே களித்தேன்'* (அருட்பா, vi, அவா வறுப்பு. 7.).

[புளி + சோறு]

புளிஞ்சோறு *puḷi-ñ-cōṟu,* பெ. (n.) *புளிச்சோறு* பார்க்க; see *puḷi-c-cōṟu.*

[புளி + சோறு]

புளிஞன் *puḷiñaṉ,* பெ.(n.) வேடன் (சூடா.); hunter, mountaineer. *'சவரர் புளிஞர் வளைந்தது'* (பெருங். உஞ்சைக். 55, தலைப்பு.).

ம. புளியன் (ஒரு இனத்தார்); க. புலிந்த; து. புளிந்தெ.

[புள் → (பள்) → (பண்) → பணை = பரண், உயரம். புர் → புரம் = உயர்ந்த மலை. புரம் → பரம் = மேல்(மு.தா. 67) புள் → புளி = புளித்து பொங்குவது (மு.தா.63), உயர்ந்து நிற்கும் மலை. புளி → புளிஞன் = மலையேறுபவன், வேடன்]

த. புளிஞன் > Skt. pulinda.

புளித்தஆரை *puḷittaārai,* பெ. (n.) புளியாரை பார்க்க; see puḷiyārai.

[புளி → புளித்த + ஆரை]

புளித்தகஞ்சி *puḷitta-kañji,* பெ. (n.) நுரைத்து மிகுவூட்டம் பொதிந்த சோற்று நீர்; yeast.

[புளி → புளித்த + கஞ்சி]

புளித்தகண் *puḷitta-kaṇ,* பெ. (n.) கண்ணி லொழுக்கினை ஏற்படுத்தும் நோய்; an eye disease marked by purulent discharge, sore eye.

மறுவ. புளிச்சக்கண், பீளைக்கண்

[புளி → புளித்த + கண்]

புளித்தகழுநீர் *puḷitta-kaḻunīr,* பெ. (n.) சத்து நிறைந்த சோற்றுக்காடி; rice vinegar.

[புளி → புளித்த+கழு + நீர்]

புளித்தகள் *puḷitta-kaḷ,* பெ.(n.) புளிப்பேறிய கள்; sour toddy.

து. புளிகளி

[புளி → புளித்த + கள்]

புளித்தகளா *puḷitta-kaḷā,* பெ. (n.) புளிப்புச்சுவைமிக்க களாக்காய்; fruits of carissa carandas.

[புளி → புளித்த + களா]

புளித்தகாடி *puḷitta-kāḍi,* பெ.(n.) நுரைத்த ஊட்டம்மிக்க கழுநீர்; vinegar-any fermented liquid.

[புளி → புளித்த + காடி]

புளித்தகாடிச்சோறு *puḷitta-kāḍi-c-cōṟu,* பெ. (n.) புளிப்பும், ஊட்டம் நிறைந்த சோற்று நீர்; rice at the bottom of fermented rice water.

[புளி → புளித்த + காடி + சோறு]

புளித்தசிறுகீரை *pulitta-šiṟu-kīrai,* பெ. (n.) *புளிச்சிறுகீரை* பார்க்க; see *puli-c-ciṟu-kīrai.*

[புளித்த + சிறுகீரை]

புளித்தசோறு *pulitta-šōṟu,* பெ.(n.) நன்கு புளித்து நுரைத்த சோற்று நீரில் ஊறவைத்துப் பக்குவப்படுத்திய சோறு; rice at the bottom of fermented rice water.

[புளித்த + சோறு]

புளித்தண்ணீர் *puli-t-taṇṇiir,* பெ. (n.) *புளிக் காய்ச்சல் (இ.வ.)* பார்க்க; see *puli-k-kāyccal.*

[புளி + தண்ணீர்]

புளித்ததயிர் *pulitta-tayir,* பெ. (n.) வெப்பத்தைப் போக்கி, செரிமானத்தை யுண்டாக்கி நாவறட்சியைப் போக்கும் தன்மையுள்ள தயிர்; curd, which it improves digestion, quenches thrist and reduces heat.

[புளித்த + தயிர்]

புளித்ததேன் *pulitta-tēṉ,* பெ.(n.) நாள்பட்ட தேன்; old honey which turned sour.

[புளித்த + தேன்]

புளித்தநாரத்தை *pulitta-nārattai,* பெ. (n.) *புளிநாரத்தை* பார்க்க; see *puli-nārattai*

[புளி → புளித்த + நாரத்தை]

புளித்தநாற்றம் *pulitta-nāṟṟam,* பெ. (n.) நுரைத்துக் கெட்ட மணம்; sour smell.

[புளித்த + நாற்றம். நாறு → நாற்றம்]

புளித்தநீர் *pulitta-nīr,* பெ. (n.) குடலிலுள்ள காடிநீர்; acid liquid in the intestine.

[புளித்த + நீர்]

புளித்தமா *pulitta-mā,* பெ.(n.) புளிப்பேறிய தோசைமா (இ.வ.); fermented dough.

[புளி → புளித்த + மா]

புளித்தமோர் *pultta-mōr,* பெ. (n.) நுரைத்துக் காடிச்சுவை யேறிய மோர்; sour butter milk.

க. புளிமொசர், குளிமொசரு

[புளித்த + மோர்]

புளித்தயேப்பம் *pulitta-y-ēppam,* பெ. (n.) *புளியேப்பம்* பார்க்க; see *puli-y-ēppam.*

து. புளிஆரிகை.

[புளித்த + ஏப்பம். ஏ → ஏப்பம்]

புளித்தல் *pulittal,* பெ. (n.) சிறுமர வகை; a species of flowered nutmeg, (L.).

புளித்துப்போ—தல் *pulittu-p-pō-,* 8செ.கு.வி. (v.i.) **1.** மா முதலியன புளிப்பேறுதல்; to turn sour; to ferment. தோசை மாவு புளித்துப்போய் விட்டது (உ.வ.) **2.** எதிர்பார்த்தது கிட்டாமற் போதல் (இ.வ.); to be disappointed. **3.** அருவருத்துப் போதல் (இ.வ.); to be disgusted, as from surfeit. கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன பாட்டைமீண்டும் போடாதே (உ.வ.), பழகப் பழகப் பாலும் புளிக்கும் (பழ.).

[புளி → புளித்து + போ–,]

புளித்தமோர் *puitta-mōr,* பெ. (n.) நுரைத்துக் காடிச்சுவை யேறிய மோர்; sour butter milk.

க. புளிமொசர், குளிமொசரு

...

[புளித்த + மோர்]

புளித்தயேப்பம் *pulitta-y-ēppam,* பெ. (n.) *புளியேப்பம்* பார்க்க; see *puli-y-ēppam.*

து. புளிஆரிகை.

[புளித்த + ஏப்பம். ஏ → ஏப்பம்]

புளித்தல் *pulittal,* பெ. (n.) சிறுமர வகை; a species of flowered nutmeg, (L.).

புளித்துப்போ—தல் *pulittu-p-pō-,* 8செ.கு.வி. (v.i.) **1.** மா முதலியன புளிப்பேறுதல்; to turn sour; to ferment. தோசை மாவு புளித்துப்போய் விட்டது (உ.வ.) **2.** எதிர்பார்த்தது கிட்டாமற் போதல் (இ.வ.); to be disappointed. **3.** அருவருத்துப் போதல் (இ.வ.); to be disgusted, as from surfeit. கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன பாட்டைமீண்டும் போடாதே (உ.வ.) பழகப் பழகப் பாலும் புளிக்கும் (பழ.)

[புளி → புளித்து + போ—,]

புளித்தோடை *puli-t-tōḍai,* பெ. (n.) மரவகை (வின்.); an acid lemon.

[புளி + தோடை]

புளிதசம் *pulidašam,* பெ. (n.) விலங்குகளின் செவ்வரத்தத்திலும் நிலைத்திணை (தாவர)களிலும் காணப்படும் நுண்ணிழைமைப் பொருள்; a peculiar substance found in fresh blood in animals and vegetable kingdom.

புளிதம் *pulidam,* பெ. (n.) **1.** புலால் (சூடா.); flesh. **2.** ஒருவகையுணவு; a kind of food. *'ஈரற்புளிதமுமா'* (கலிங். **506.**).

[புல் → புல்லு. புல்லுதல் = பொருந்துதல். புல் → புலி → புலிதம் → புளிதம்]

புளிந்தசம் *pulindašam,* பெ. (n.) *புலிதடுக்கி 1* பார்க்க; see *pulitaḍukki 1.*

புளிந்தயிர் *puli-n-tayir,* பெ. (n.) புளிப்பேறிய தயிர் (வின்.); sour curds.

க. புளியளெ

[புளி + தயிர்]

புளிந்தன் *pulindan,* பெ. (n.) *புளிஞன்* பார்க்க; see *puliñan* *'புளிந்தனருட் சிவகோசன்'* (சீகாளத். பு. விடசங். 88).

[புளி → புளிந்தன்]

த. புளிந்தன் > Skt. pulinda.

புளிநடலை *puli-naḍalai,* பெ. (n.) *புளிநறளை (மலை.)* பார்க்க; see *pulinaralai.*

[புளிநறளை → புளிநடலை]

புளிநவ்வல் *pulinvval,* பெ. (n.) புளிப்பு நாவல்பழம்; a kind of jamoon.

[புளி + நவ்வல். நாவல் → நவ்வல்]

புளிநறளை[1] *puli-naralai,* பெ. (n.) கொடிவகை; bristly trifoliate vine, (L.).

[புளியரளை →புளிநறளை]

புளிநறளை[2] *pulinaralai,* பெ. (n.) புளியரனை; vitis lanata.

[புளியரனை→புளிநரளை]

புளிநறளைக்கிழங்கு *puli-naṟaḷai-k-kiḻangu,* பெ. (n.) செம்பைப் பொன்னாக்குவதும், வெளிமூலத்தை வேரறுக்குந் தன்மை பெற்றதுமான புளியம் பிரண்டைக் கிழங்கு; root of vitis lanata; which purifies copper and is a remedy for piles.

[புளிநறளை + கிழங்கு]

புளிநாரத்தை *puli-nārattai,* பெ. (n.) புளிப்புச் சுவை பொருந்திய நாரத்தை; citron.

மறுவ. புளிப்புநாரத்தை

[புளி + நாரத்தை]

புளிநாற்றவேர்வை *pulināṟṟa-vērvai,* பெ. (n.) புளிப்புமணமுள்ள வியர்வை; sour smelling perspiration.

[புளிநாற்றம் + வேர்வை. வியர்வை → வேர்வை]

புளிப்பலா *puli-p-palā,* பெ. (n.) **1.** முள்ளுச்சீத்தா; soursop. **2.** தாளிசபத்திரி; wild cinnamon.

[புளி + பலா]

புளிப்பற்று—தல் *puli-p-paṟṟu-,15* செ.குன்றாவி. (v.t.) புளிப்பேறுதல்; to become acidic or fermented.

[புளி + பற்று—,]

புளிப்பன் *pulippan,* பெ. (n.) *புளிப்பான்* பார்க்க; see *pulippāṉ.*

[புளிப்பான் → புளிப்பன்]

புளிப்பா(கு)—தல் *pulippā(gu)-,* **6** செ.கு.வி. (v.i.) புளிப்புத் தன்மையாதல்; to sour.

[புளிப்பு + ஆ—,]

புளிப்பாக்கு—தல் *pulipp-ākku-,* **5** செ. குன்றாவி. (v.t.) புளிப்புச் சுவை தன்மையதாக்குதல்; to make sour.

[புளிப்பு + ஆக்கு—,]

புளிப்பாகல் *puli-p-pāgal,* பெ. (n.) சிறு வாலுளுவை; small variety of intellect tree.

[புளி + பாகல்]

புளிப்பாகு *puli-p-pāgu,* பெ. (n.) குழம்புணவு (குறுந். **167.**); liquid curry.

[புளி + பாகு]

புளிப்பாறை *puli-p-pāṟai,* பெ. (n.) *புளியாரை* பார்க்க; see *puliyārai.*

[புளி → புளிப்பு +ஆரை]

புளிப்பான் *puli-p-pāṉ,* பெ. (n.) *புளியேப்பம்* பார்க்க; see *puli-y-ēppam.*

[புளி→ புளிப்பு → புளிப்பான்]

புளிப்பி *pulippi,* பெ. (n.) புளிக்க வைக்கை; leaven.

[புளி → புளிப்பி]

புளிப்பிச்சான் *pulippiccāṉ,* பெ. (n.) *புளிச்சான்²* பார்க்க; see *puliccāṉ².*

[புளிப்பு → புளிப்பிச்சான்]

புளிப்பிரண்டை *puḷi-p-piranḍai,* பெ. (n.) *புளிநறளை (பதார்த்த. 338.)* பார்க்க; see *puḷinaṟaḷai.*

[புளி + பிரண்டை. புரள் → புரண்டை → பிரண்டை = திருகலான கொடி]

புளிப்பிராகியம் *puḷi-p-pirāgiyam,* பெ. (n.) *புளியம்பூ* பார்க்க; see *puḷiyambū.*

புளிப்பிராணி *puḷi-p-pirāṇi,* பெ. (n.) புளியம் பட்டை; bark of tamarind tree.

[புளி + பிராணி. புறணி → பிரணி → பிராணி]

புளிப்பிராதகி *puḷi-p-pirādagi,* பெ. (n.) சேனைக்கிழங்கு; yam.

புளிப்பிலந்தை *puḷippilandai,* பெ. (n.) புளிப்புச்சுவையுள்ள இலந்தைப் பழம்; sour zizypus.

[புளிப்பு + இலந்தை]

புளிப்பு *puḷippu,* பெ. (n.) **1.** அறுசுவையு ளொன்று; sourness, acidity, one of aṟuśuvai, q.v. **2.** புளிக்கை; fermenting, fermentation, souring. **3.** புளிப்புள்ள மருந்துச் சரக்கு; acid, vegetable or mineral.

ம. புளிப்பு, புளியன்; **து.** புளிப்பு.

[புளி → புளிப்பு]

முக்கனிகளுள் ஏதேனுமொன்று இனிப்பும், பாகற்காய் அல்லது சுண்டைவற்றல் கசப்பும், காரவடை உறைப்பும், புளிக்கறியும் தயிரும் ஊறுகாயும் புளிப்பும், மாதுளங்காய் அல்லது கச்சல் துவர்ப்பும், உப்பேறி உவர்ப்பும் ஆகும். இத்தகைய உண்டி, தமிழரின் சுவை முதிர்ச்சியையும் தலைசிறந்த நாகரிகத்தையும் மருந்துவ அறிவையும் உடல் நலவுணர்ச் சியையும் ஒருங்கே காட்டும். அறுசுவை யுள்ளும் தமிழர்க்குச் சிறந்தவை இனிப்பும் புளிப்பும் ஆகும். இது வெப்ப நாட்டியல்பு **(ப.த.நா.ப. 38)**

புளிப்புக்காட்டு—தல் *puḷippu-k-kāṭṭu-,* **5** செ.குன்றாவி. (v.t.) அச்சமுறுத்துதல்; to frighten.

மறுவ. பூச்சிக்காட்டு

[புளிப்பு + காட்டு–,]

புளிப்புக்கீரை *puḷippu-k-kīrai,* பெ. (n.) சுவையற்ற தன்மை,வயிற்றுக் கடுப்பு, கரப்பான் போன்றவற்றைப் போக்கும் புளிச்சுவையுள்ள கீரை **(பதார்த்த. 605.)**; Indian brown hemp.

மறுவ. புளிச்சை,காசினிக்கீரை, புளிச் சிறுகீரை.

[புளிப்பு + கீரை]

புளிப்புக்குஞ்சிதம் *puḷippu-k-kuñjidam,* பெ. (n.) புளியங்காடி; sour vinegar.

[புளிப்பு + குஞ்சிதம்]

புளிப்புக்கொடிமுந்திரி *puḷippu-k-koḍimundiri,* பெ. (n.) *புளிக்கொடி முந்திரி* பார்க்க; see *puḷi-k-koḍi mundiri.*

மறுவ. புளிமுந்திரிகை.

[புளிப்பு + கொடிமுந்திரி]

புளிப்புக்கொழுஞ்சி *puḷippu-k-koḻuñji,* பெ. (n.) செங்கொழுஞ்சி; sour orange.

மறுவ. கொழுமிச்சை

[புளிப்பு + கொழுஞ்சி]

புளிப்புக்கொழுமிச்சை *pulippu-k-kolumiccai,* பெ. (n.) *புளிப்புக்கொழுஞ்சி* பார்க்க; see *pulippu-k -koluñji.*

[புளிப்பு + கொழுமிச்சை]

புளிப்புத்தட்டு–தல் *pulippu-t-tattu-,* 15 செ.கு.வி. (v.i.) **1.** சிறிது புளிப்புடையதாதல் (வின்.); to be slightly sour in taste. *தயிரைக் குளிர்ப் பதனப் பெட்டிக்குள் வை. இல்லையென்றால் புளிப்புத்தட்டிவிடும்* (உ.வ.). **2.** சுவையறுதல் (இ.வ.); to become tasteless **3.** *புளித்துப் போ–தல்* பார்க்க; see *pulittu-p-pō-,*

[புளிப்பு + தட்டு–,]

புளிப்புத்தமரத்தை *pulippu-t-tamarattai,* பெ. (n.) மனக்குழப்பம் குரற்கம்மல், கண்ணோய், மனநல ஊட்டக் குறைவு போன்றவற்றைப் போக்குந் தமரத்தை; sour Chinese gooseberry which is used in eye disease sore throat loss of semen and confusion of mind.

[புளிப்பு + தமரத்தை]

புளிப்புநாரத்தை *pulippu-nārattai,* பெ. (n.) புளிப்புள்ள நாரத்தை வகை (வின்.); a kind of citron.

[புளிப்பு + நாரத்தை]

புளிப்புமாங்காய் *pulippu-māngāy,* பெ. (n.) புளிப்புச் சுவையுடைய(பிஞ்சு) மாங்காய்; (tender) sour mango.

[புளிப்பு + மாங்காய்]

புளிப்புமாதுளை *pulippu-mādulai,* பெ. (n.) புளிப்புள்ள மாதுளை வகை; double-flowered pomegranate.

[புளிப்பு + மாதுளை]

புளிப்புவிடுதல் *pulippu-vidudal,* பெ. (n.) பற்றுவிட்டுப் போகை (கொ.வ.); getting sick of a thing, losing zest or interest.

[புளிப்பு + விடுதல். விடு → விடுதல். 'தல்' தொ.பெ.ஈறு]

புளிமஞ்சி *puli-mañji,* பெ. (n.) *புளிச்சை 1.* பார்க்க; see *puliccai 1.*

[புளி + மஞ்சி]

புளிமடலைக் கிழங்கு *pulimadalai-k-kilangu,* பெ. (n.) *புளிநறளைக் கிழங்கு* பார்க்க; see *pulinarali-k-kilangu.*

[புளிமடலை + கிழங்கு]

புளிமண்டி *puli-mandi,* பெ. (n.) **1.** கெட்டுப் போன பனம்பழம் (வின்.); spoiled palmyra fruit, as unpleasantly sour. **2.** அழுக்கானது (வின்.); that which is dirty.

[புளி + மண்டி. மண்டு → மண்டி = மண்டி (மிகுந்து) கிடப்பது]

புளிமதுரை *puli-madurai,* பெ. (n.) **1.** செடிவகை (வின்.); a kind of shrub. **2.** *புளி நறளை(மலை.)* பார்க்க; see *pulinaralai.*

[புளி + மதுரை]

புளிமரங்கா *puli-marangā,* பெ. (n.) குலவாழை, a species of gamboge.

புளிமரிசை *pulimarišai,* பெ. (n.) *புளிச்சை, 1* பார்க்க; see *puḷiccai* 1. (L.).

புளிமா[1] *puḷi-mā,* பெ. (n.) 1. புளிப்புக் கனியுண்டாக்கும் மாமரம் (திருமந். 202.); species of mango sour in taste. 2. புளிச்சக் காய் மரம்; bilimbi tree. 3. காட்டுமா; buchanan's mango. 4. நீண்ட மரவகை; Indian hog-plum.

க. குளீமாவு

[புளி + மா]

புளிமா[2] puḷi-mā, பெ. (n.) நிரைநேர் வாய்பாடு (காரிகை,உறுப்.7.); (pros.) a formula of metrical foot, nirai-nēr-nirai(uu-).

[புளி + மா]

எ–டு;

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்த்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே
[கந்தர்.அனு.]

புளிமாங்கனி *puḷimā-ṅ-gaṉi,* பெ. (n.) நிரை நேர் நிரை வாய்பாடு (காரிகை. உறுப். 7.); (pros.) a formula of metrical foot nirai-nēr-nirai.

[புளிமா + கனி]

எ–டு;

மலையஞ்சின மழையஞ்சின வளமஞ்சின பிறவும்
நிலையஞ்சின திசைவெங்கரி நிமிர்கின்றன கடலின்
அலையஞ்சின பிறிதென்சில தனியைங்கர கரியும்
கொலையஞ்சுதல் புரிகின்றது கரியின்படி கொளலால்
[கம்பரா. அதி.வதைப்.பட.154]

இப்பாடலில் ஒவ்வோரடியிலும் முதல் மூன்று, சீர்கள் புளிமாங்கனி என்னும் வாய்பாடு கொண்டுள்ளன.

புளிமாங்காய் *puḷimāṅ-gāy,* பெ. (n.) 1. நிரை நேர் நேர் வாய்பாடு (காரிகை, உறுப். 7.) a formula of metrical foot nirai-nēr-nēr (ய--) 2. பெண்சரக்கு வகை; an acid substance.

[புளிமா + காய்]

'துறந்தார்க்கும்.......... இறந்தார்க்கும்

புளிமாஞ்சை *puḷi-māñjai,* பெ. (n.) *புளிச்சை 1.* பார்க்க; see *puḷiccai* 1.

[புளிமஞ்சி → புளிமாஞ்சி]

புளிமாதளை *puḷi-mādaḷai,* பெ. (n.) *புளிப்பு மாதுளை (வின்.)* பார்க்க; see *puḷippu-māduḷai*

[புளிப்புமாதுளை → புளிமாதளை]

புளிமாந்தண்ணிழல் *puḷimā-n-taṇṇiḻal,* பெ. (n.) நிரை நேர் நேர் நிரை வாய்பாடு (காரிகை. உறுப். 8); (pros.) a formula of metrical foot nirai-nēr-nirai. (ய--ய)

[புளிமா + தண்ணிழல்]

எ–டு:

தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன தனதான்

புளிமாந்தண்பூ *puḷimā-n-taṇpū,* பெ. (n.) நிரை நேர் நேர் நேர் வாய்பாடு (காரிகை, உறுப். 8); (pros.) a formula of metrical foot, nirai-nēr-nēr-nēr. (யய---).

[புளிமா + தண்பூ]

எ–டு:

தனத்தா தத்தத் தனதான

புளிமாநறுநிழல் *puḷimā-naṟu-niḻal,* பெ. (n.) நிரைநேர் நிரைநிரை வாய்பாடு (காரிகை. உறுப். 8.) ;(pros.) a formula of metrical foot (ய-யய)

[புளிமா + நறுநிழல்]

எ–டு:

தனன தனதன தனதன தனதன

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன

புளிமாநறும்பூ *puḷima-naṟumbū,* பெ. (n.) நிரை நேர் நிரை நேர் வாய்பாடு (காரிகை. உறுப். 8.); (pros.) a formula of metrical foot nirai-nēr-nirai-nēr.(ய-யய)

[புளிமா + நறும்பூ]

எ–டு:

தனந்த தனந்த தனந்த தனந்த
தனந்த தனந்த தனந்த தனதான்

புளிமாறு *puḷi-māṟu,* பெ. (n.) புளியம் வளார்; tamarind switch. *'அடித்த புளிமாறு'* (திருவாலவா. 30, 42)

[புளி + மாறு. வார்→வாரு→வாறு→ மாறு]

புளிமிதவை *puḷi-midavai,* பெ. (n.) *புளிங்கூழ்* பார்க்க; see *puḷiṅ-gūḻ*. *'ஆய்மக ளட்ட வம்புளி மிதவை'* (புறநா. 215.)

[புளி + மிதவை]

புளிமீன் *puḷi-mīṉ,* பெ. (n.) புளியிட்ட மீன் கறி (வின்.); fish soured with tamarind juice and eaten as a relish.

[புளி + மீன்]

புளிமூட்டை *puḷi-mūṭṭai,* பெ. (n.) புளியை மொத்தமாக வைத்து ஓலைப் பாயால் சுற்றிய கட்டு; roll of tamarind packed in a basket.

[புளி + மூட்டை]

புளியங்காய் *puḷiyaṅ-kāy* , பெ. (n.) புளியமரத்துக்காய்; unripe tamarind fruit.

ம. புளிங்ங.

[புளி + அம் + காய்]

புளியங்குடிஉய்யவந்தார் *puḷiyaṅguḍi-uyya vandār,* பெ. (n.) ஒரு புலவர்; a poet.

[புளியங்குடி + உய்ய + வந்தார்]

இவர் நாற்கவிராச நம்பியின் தந்தை

புளியங்குடிநாற்கவிராயநம்பி *puḷiyaṅguḍi-nāṟkavirāya - nambi,* பெ. (n.) ஒரு புலவர்; a poet

[புளியங்குடி + நாற்கவிராய + நம்பி]

இவர் நம்பியகப் பொருள் என்ற பொருளிலக்கண நூலை இயற்றியவர்.

புளியங்குடிப்புலவர் *puḷiyaṅguḍi-p-pulavar,* பெ. (n.) பிற்காலப் புலவர்; a poet of later period.

[புளியங்குடி + புலவர்]

இவர் கோமதியம்மை பிள்ளைத்தமிழ் என்ற நூலை இயற்றியுள்ளார்.

புளியங்குளம் அருணாசலக்கவிராயர் *puḷiyaṅkuḷam - aruṇācala-k-kavirāyar,* பெ. (n.) பிற்காலப் புலவர்; a poet of later period.

[புளியங்குளம் + அருணாசலம் + கவிராயர்]

இவர் 'சக்ரவாளத்தகடு' என்ற சீட்டுக் கவி பாட்டைப் பாடியுள்ளார்.

புளியங்கூழ் *puḷiyaṅ-gūḻ,* பெ. (n.) *புளிங்கூழ் (மலைபடு. 436, உரை.)* பார்க்க; see *puḷiṅgūḻ.*

[புளி → புளியம் + கூழ்]

புளியங்கொட்டை *puḷiyaṅ-koṭṭai,* பெ. (n.) **1.** புளியவிதை; tamarind seed. **2.** ஒருவகைச் சீலை (இ.வ.); a kind of saree.

மறுவ. புளிச்சைக்கொட்டை.

ம. புளிங்கரு; **து.** புளிகொட்டை, புள்கொட்டை, புணகடை,புலிங்கொடை, புள்கொடை. புளிங்கொட்டை.

[புளி → புளியம் + கொட்டை. கொள்→ கொட்டு = வட்டமான நெற்கூடு. கொட்டு → கொட்டில் = மாட்டுத்தொழு. கொட்டு → கொட்டை = திரண்ட விதை.]

புளியங்கொடி *puḷiyaṅkoḍi,* பெ. (n.) கொடிபுன்கு (வின்.); hog creeper.

[புளி → புளியம் + கொடி. கொடு → கொடி = வளைந்து படரும் நிலைத் திணைவகை.]

புளியங்கொம்பு *puḷiyaṅ - kombu,* பெ. (n.) மிக உறுதிப்பாட்டிற்குரியதாகக் கருதப்படும் புளியமரத்துக் கிளை; a tamarind branch,proverbial for toughness. பிடித்தாலும் புளியங்கொம்பைப் பார்த்துப் பிடித்தான்(உ.வ.).

ம. புளிங்கொம்பு

[புளி + கொம்பு → கொள் → கொண்பு (கொண்பு) → கொம்பு = வளைந்த விலங்கின் தலையுறுப்பு, கொம்பு போன்ற மரக்கிளை.]

புளியச்சாதம் *puḷiya-c-cādam,* பெ. (n.) *புளிச்சோறு* பார்க்க; see *puḷi-c-cōṟu.*

[புளியம் + சாதம்]

புளியந்தோப்பு *puḷiya-n-tōppu,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tañjāvūr dt.

[புளி + தோப்பு]

புளியம்பழம் *puḷiyam-paḻam,* பெ.(n.) புளியமரத்துப் பழம்; a tamarind fruit.

ம.புளிங்ங; **க.**ஹுளிகண்ணு

[புளி + அம் + பழம்]

புளியம்பாசி *puḷiyam-pāši,* பெ. (n.) **1.** நீர்ப்பூடுவகை(வின்.); a water plant, chara zeylan. **2.** பாசிவகை; a kind of moss

[புளி → புளியம் + பாசி]

புளியம்பாதி *puḷiyam-pādi,* பெ. (n.) *புளியம்பாசி 1. (யாழ்.அக.)*பார்க்க; see *puḷiyam -pāši 1.*

[புளியம்பாசி → புளியம்பாதி]

புளியம்பிஞ்சு *puḷiyam - piñju* பெ. (n.) புளியமரத்து இளங்காய்; tender fruit of tamarind.

[புளி → புளியம் + பிஞ்சு]

புளியம்பிராணி *puḷiyam-pirāṇi,* பெ. (n.) புளியஞ் செதிள் (சங்.அக.); bark of tamarind.

[புளி → புளியம் + பிராணி. புறணி→ பிரணி → பிராணி]

புளியம்பூ *puḷiyam - pū* பெ.(n.) புளிய மரத்தின் பூ; flower of tamarind tree.

[புளி → புளியம் + பூ]

புளியம்பொருக்கு *puḷiyam - porokku* பெ. (n.) புளியமரத்தில் இருக்கும் உலர்ந்தபட்டை;bark of tamarind tree.

[புளி → புளியம் + பொருக்கு]

புளியம்விதை *puḷiyam - vidai* பெ. (n.) புளியங்கொட்டை;seeds of tamarind fruit.

[புளி → புளியம்+விதை]

பாலியல் நோய் (சுக்கிலமேகம்), பித்தம் மிகுதியால் உண்டாகும் நோய் (பித்தாதிசாரம்), பெரும்புண் (அதிவிரணம்), நீர்க்கடுப்பு, முதலிய நோய்களை நீக்கும் மருத்துவப் பண்பு புளியம் விதைக்குண்டென்று சா.அக. குறிப்பிடுகின்றது

புளியமடல்பிரண்டை *puḷiya-maḍal-piraṇḍai,* பெ. (n.) *புளிநறளை (நாஞ்.)* பார்க்க; see *puḷinaṟaḷai*

[புளியமடல் + பிரண்டை. புரள் → புரண்டை → பிரண்டை]

புளியமரம் *puḷiya-maram,* பெ. (n.) மஞ்சள் நிறப் பூக்களையும் பருகங்களுக்கும் மருத்துக்கும் பயன்படும் கருஞ்சிவப்பு வண்ண புளிப்புச் சுவை மிகுந்த பழச்சதைப் பகுதியை உடைய நீண்ட பழுப்பு வண்ண விதை நெற்றுக்களையும் தரும் வெப்ப மண்டலத்தில் வளரும் பெரிய மரவகை; tamarind. புளியமரத்தில் ஏறினவன் பல் கூசினால் இறங்குவான் (பழ.).

க.குளிமர; து.புளித்தமர

[புளி → புளிய + மரம்]

புளியரணைக்கிழங்கு *puḷiyaraṇai-k-kiḻaṅgu,* பெ.(n.) *புளிநறளை* பார்க்க; see *puḷinaṟaḷai*

[புளியரணை + கிழங்கு]

புளியரனை *puḷiyaraṉai,* பெ. (n.) ஆனைத்தடிச்சல் (மூ.அ.); smooth leaved fish bone climber.

புளியளை *puḷi-y-aḷai,* பெ. (n.) புளித்தமோர்; sour buttermilk (கருநா.).

க.புளியளெ, புள்ளளெ,

[புளி + அளை]

புளியறணை *puḷiyaṟaṇai,* பெ (n.) *புளியரனை (வின்.)* பார்க்க; see *puḷiyaṟaṇai.*

[புளியரனை → புளியறணை]

புளியன்னம் *puḷi-y-aṉṉam,* பெ. (n.) *புளிச் சோறு* பார்க்க; see *puḷi-c-cōṟu.*

க. குளியன்ன

[புளி + அன்னம்]

Skt. anna > த. அன்னம்

புளியாஞ்சிறுகீரை *puḷiyāñ-ciṟu-kīrai,* பெ. (n.) *புளியாரை (நாஞ்.)* பார்க்க; see *puḷiyārai.*

[புளி → புளியாம் + சிறு + கீரை]

புளியாத்தி *puḷi-y-ātti,* பெ. (n.) மலையாத்தி; Malabar mountain-ebony, (L.).

[புளி + ஆத்தி]

புளியாம்பூ *puḷiyāmpū,* பெ. (n.) *புளியம்பூ* பார்க்க; see *puḷiyam pū.*

[புளியம்பூ → புளியாம்பூ]

புளியாம்பூதுவரைமாடு *puḷiyāmbūduvarai-māḍu,* பெ. (n.) சிவப்பும், வெள்ளைப் புள்ளிகளும் வெண்மயிரும் கலந்ததும், மிகு விலையுடையதுமான மாடு; cow with red and white dots on its body.

[புளியாம்பூ + துவரை + மாடு. மா → மாடு]

புளியாமணக்கு *puḷi-y-āmaṇakku,* பெ. (n.) ஏரிக்கரைக் காட்டாமணக்கு; glaucous-leaved physic-nut. (L.)

[புளி + ஆமணக்கு]



புளியாரை *puḷi-y-ārai,* பெ. (n.) பூடுவகை; (பதார்த்த. 595.); yellow wood-sorrel,

ம. புளியாரன்

[புளி + ஆரை]

புளியிட்டகறி *puḷiyiṭṭa-kaṟi,* பெ. (n.) *புளிங்கறி* பார்க்க; see *puḷiṅkaṟi.*

[புளி + இட்ட + கறி]

புளியிட்டங்கறி *puḷi-y-iṭṭadaṅ-kaṟi,* பெ. (n.) *புளிங்கறி* பார்க்க; see *puḷiṅkaṟi.* (S.I.I.ii. 127)

[புளி + இட்ட + கறி]

புளியில்லாக்கறி *puḷi-y-illā-k-kaṟi,* பெ. (n.) புளியின்றியாக்கிய குழம்புவகை; sauce prepared without tamarind.

[புளி + இல்லா + கறி]

புளியிலை *puḷi-y-ilai,* பெ. (n.) புளியமரத்து இலை; tamarind leaf.

ம. புளியில.

[புளி + இலை]

புளியிலைக்கம்பி *puḷiyilai-k-kambi,* பெ. (n.) ஆடையிற் புளியிலை போன்ற கரை வகை; striped border in cloth resembling tamarind leaf.

[புளியிலை + கம்பி]

புளியீண்டு *puḷi-y-īṇḍu,* பெ. (n.) கொடிவகை; rosy-flushed white brasiletto, climber.

[புளி + ஈண்டு]

புளியுப்பு *puḷiyuppu,* பெ. (n.) உப்புவகை; acid salt.

[புளி + உப்பு]

புளியெண்ணெய் *puḷi-y-eṇṇey,* **பெ.** (n.) மருந்தெண்ணெய் வகை (வின்.); an acidified medicinal oil.

[புளி + எண்ணெய். எள் + நெய் – எண்ணெய்]

புளியேப்பம் *puḷiyēppam,* **பெ.** (n.) *புளிச்சேப்பம்* பார்க்க; see *puḷiccēppam.*

க. குளி தேகு; **து.** புளிஆரிகை

[புளி + ஏப்பம். ஏ → ஏப்பம்]

புளியோகரம் *puḷi-yō-garam,* **பெ.** (n.) *புளிச்சோறு (வின்.)* பார்க்க; see *puḷi-cōṟu.*

[புளி + ஓகரம்]

Skt. ōdana > த.ஓதனம் → ஓகரம்.

புளியோதரை *puḷiyōdarai,* **பெ.** (n.) *புளிச்சோறு* பார்க்க; see *puḷi-c-cōṟu.*

[புளியோதனம் → புளியோதரை]

புளியோதனம் *puḷi-y-ōdaṉam,* **பெ.** (n.) *புளிச்சோறு (பதார்த்த. 1405)* பார்க்க; see *puḷi-c-cōṟu.*

[புளி + ஓதனம்]

Skt. ōdana > த.ஓதனம்

புளியோரை *puḷi-yōrai,* **பெ.** (n.) *புளிச்சோறு (இ.வ.)* பார்க்க; see *puḷi-c-cōṟu.*

க. புளியன்ன, குளியன்ன.

[புளி + ஓரை]

புளிரசம் *puḷirašam,* **பெ.** (n.) *புளிச்சாறு* பார்க்க; see *puḷi-c-cāṟu.*

ம. புளிரசம்.

[புளி + ரசம்]

Skt. rasa > த.ரசம்

புளிராயிதம் *puḷi-rāyidam,* **பெ.** (n.) புளிப்பச்சடி (இ.வ.); relish seasoned with tamarind.

புளிவசளை *puḷi-vašaḷai,* **பெ.** (n.) வல்லிசூரணை (சங்.அக.); a kind of greens.

புளிவஞ்சி *puḷi-vañji,* **பெ.** (n.) புளிப்புள்ள பழங்கள் காய்க்குங் கொடிவகை (நாநார்த்த. 556); a creeper with sour fruits.

[புளி + வஞ்சி]

புளிவாரிட்டமீன் *puḷi-vāriṭṭa-mīṉ,* **பெ.** (n.) *புளிமீன்(வின்.)*பார்க்க; see *puḷimīṉ.*

[புளிவார்த்திட்டமீன் → புளிவாரிட்டமீன்]

புளினம் *puḷiṉam,* **பெ.** (n.) **1.** ஆற்றிடைத்திட்டு (வின்.); land of alluvial formation in the bed of a river. **2.** மணற்குன்று (பிங்.); heap, hillock or mount of sand. '*மணிபடுபுளினம்*' (கம்பரா.நாட்டு. **47.**) .

[புளி → புளினம்]

த.புளினம் > Skt. puḷina

புளினன் *puḷiṉaṉ,* **பெ.** (n.) *புளிஞன் (பிங்.)* பார்க்க; see *puḷiñaṉ.*

[புளிஞன் → புளினன்]

புளுக்கை *pulukkai,* பெ. (n.) முறையாக மணம் செய்யாத வெளிநாட்டார்க்கும் பரதவர்க்கும் பிறந்தவர் (கொ.வ.); person born to an outsider and a Paradava couples.

புளுகன் *pulugaṉ,* பெ. (n.) பொய்யன்; liar.

கோத. புள்கன் (தன்னைத்தான் புகழ்பவன்)

[புளு → புளுகு → புளுகன்]

'புளுகு' பார்க்க

புளுகு[1] *pulugu,* பெ. (n.)1 முழு(சுத்த)ப் பொய்; obvious lie, bare-faced falsehood. **2.** கற்பனை; concoction.

[புல்லுதல் = துளைத்தல். புல் → பொல். பொல்லுதல் = துளைத்தல், உளியாற் கொத்துதல். பொல் = உட்டுளையுள்ள பதர். புல் → புர் → புரை = உட்டுளை, உட்டுளைப் பொருள். புல் → புள் → புழு = துளைத்தரிக்கும் சிற்றுயிரி. → புள் → புளு → புளுகு = பொய் (வே.க. 3, 101–107)]

புளுகு[2]**–தல்** *pulugu-,* **5** செ.கு.வி. (v.i.) **1.** முழுப்பொய் சொல்லுதல்; to tell bare-faced lies,obvious lie, bare. faced falsehood. **2.** கற்பித்தல்; to concoct.

கோத. புள்க் (பெருமிதம்கொள்ளல்)

[புல் → (புல்லம்) → பொல்லம் = ஓட்டை, துளை. புல் → புரை = துளை, சிறுதுளை. புள் → புழை → பூழை = துளை, கண்வாய். புல் → பொள் → பொள்ளல் = துளை. பொள்ளை = துளை (மு.தா.227) புள் → புளு → புளுகு = உள்ளீடற்றது, பொய்.]

புளுகுணி *puluguṇi,* பெ. (n.) பொய்யன்; liar.

[புளு → புளுகு → புளுகுணி = வழக்கமாய்ப் பொய் சொல்பவன். (வே.க.3,107)]

புளை[1]**–தல்** *pulai-,* **4** செ.கு.வி. (v.i.) அழகுபடுத்தப்படுதல்; to be equipped accoutred, adorned. '*புளைந்த பாய்பரி*' (கம்பரா. கரன்.**76.**).

[புனை → புளை]

புளை[2]**–த்தல்** *pulai-,* **4** செ.கு.வி. (v.i.) *புளை–தல்* பார்க்க; see *pulai-,* 'புளைத்தரத மாபுரவி' (பாதர. மணிமான்.**41.**).

[புனை → புளை–]

புற்கசன் *puṟkašaṉ,* பெ. (n.) இழிந்தவன் (சண்டாளன்); low, vile, base man.

[புல்லுதல் = துளைத்தல் புல் = உட்டுளையுள்ள பொருள், சிறுமை, இழிவு. புல் → புல்லன் = இழிந்தோன். புல் → புல்கசன் → புற்கசன்]

புற்கட்டி *puṟ-kaṭṭi,* பெ. (n.) புல்லுடன் கூடிய மண்கட்டி (வின்.); piece of turf or sod.

மறுவ: புற்பத்தை, புறளி கரடு, தொம்பை

[புல் + கட்டி]

புற்கட்டை *puṟ-kaṭṭai,* பெ. (n.)**1.** அறுகம்புல்லின் அடிக்கட்டை (வின்.); stem of harialli grass. **2.** அறுத்த பயிர்த்தாள் (இ.வ.); stubble.

மறுவ. அரிகட்டு, அரிகெடை, அரிதாள்.

[புல் + கட்டை]

புற்கம் *puṟkam,* பெ. (n.) **1.** குறைவு; fault, **2.** புல்லறிவு; wrong knowledge; prejudice bias. **3.** மாயம் (வின்.); delusion illusion; worldiness.

[புல் → புன் → புன்மை. புல் → புன் → புன்கம் → புற்கம்]

புற்கரடு *puṟ-karaḍu,* பெ. (n.) *புற்பற்றை* (இ.வ.) பார்க்க; see *puṟpaṟṟai.*

[புல் + கரடு]

புற்கலம் *puṟkalam,* பெ. (n.) **1.** உடம்பு; body. "புற்கலம் புறவுருவாகும்' (மணிமே.27,197.). **2.** கல்முதலியஉயிரற்றபொருள்கள் (பிரபோத.33, 22.); matter, as the non-living part of the creation. **3.** உயிரற்ற பொருள் (அசீவம்.) (மேருமந்.41.); (jaina.) a category of fundamental entities.

[புல் = உட்டுளையுள்ள பொருள், உடம்பு. புல் + கலம்.]

புற்கலன் *puṟkalaṉ,* பெ. (n.) ஆதன் (ஆன்மா) (பிங்.); soul, life. "*மனனைப் புற்கலனிடத்தி லொடுக்கி*" (காசிக. யோக.13.).

[புல் + கலன்]

புற்கவ்வு-தல் *puṟ-kavvu-,* 15 செ.கு.வி. (v.i.) தோல்வியை யொத்துக்கொள்ளுதல்; to accept defeat. "*போக்யதைக்குத்தோற்றுப் புற்கவ்விச் சொல்லுகிறார்*" (ஈடு,5,8,1.).

[புல் + கவ்வு –, புற்கவ்வு = புல்லை உண்ணுதல். தோற்றபின் சிறிது புல்லைத் தின்னுதல் என்னும் பழக்கத்தின் அடிப்படையில் புல்லைக் கவ்வுதல் தோல்வியை ஒத்துக்கொள்ளுதலைக் குறித்தது.]

புற்கற்றை *puṟ-kaṟṟai,* பெ. (n.) புற்றிரள்; bundle of grass. "*எழுந்த புற்கற்றை தீற்றி*" (சீவக.3105.).

[புல் + கற்றை]

புற்கு *puṟku,* பெ. (n.) பழுப்புநிறம் (திவா.); tawny colour, dimness.

[புல் → புன் → புற்கு]

புற்குருவி *puṟ-kuruvi,* பெ. (n.) காடை வகை (வின்.); a kind of quail

[புல் + குருவி]



புற்கெனல் *puṟkeṉal,* பெ. (n.) **1.** ஒளிமழுங்கற் குறிப்பு; expr. signifying being dim. "*வாளற்றுப் புற்கென்றை கண்ணும்*" (குறள்,1261.). **2.** பயனில்லாமைக் குறிப்பு; expr; signifying being useless. '*புன்னிலத்திட்ட வித்திற் புற்கென விளைந்து*' (சீவக.2823.). **3.** புன்மைக் குறிப்பு; expr; signifying paling in comparison '*புகழ்வெல்லாம் பெரும்பாலும் பட்டுரையாய்ப் புற்கென்றே* காட்டுமால்' (திவ்.திருவாய்.3,1,2.).

[புல் → புன் → புன்கு + எனல்]

புற்கை[1] *puṟkai,* பெ. (n.) **1.** ஒருவகைக் கஞ்சி; a kind of porridge of rice or other grains.

'*தெண்ணீர் அடுபுற்கையாயினும்*' (குறள்,1065.)·
2. சோறு (பிங்.); boiled rice.

[புல் → புற்கை]

புற்கை[2] *pur̲-kai,* பெ. (n.) பற்று (புதுவை.); poultice.

[புல் → புற்கை]

புற்கொடி *pur̲-kodi,* பெ. (n.) **1.** சுரை (மலை.); calabash, climber. **2.** பேய்ச்சுரை (பிங்.); wild melon.

[புல் + கொடி]

புற்கோரை *pur̲-kōrai,* பெ. (n.) கோரைவகை; a coarse grass.

[புல் + கோரை]

புற்சாமை *pur̲-cāmai,* பெ. (n.) சாமைவகை; a specious of little millet.

[புல் + சாமை]

புற்செதுக்கி *pur̲-cedukki,* பெ. (n.) புல்லைச் செதுக்க வுதவுங்கருவி (இ.வ.); grass hoe.

மறுவ. புல்வெட்டி

[புல் → செதுக்கி. செதுக்கு → செதுக்கி]



புற்பண்ணை *pur̲-pan̲n̲ai,* பெ. (n.) கோழிக்கீரை (புதுவை.); a kind of greens.

[புல் + பண்ணை]

புற்பதி *pur̲-padi,* பெ. (n.) **1.** பனை (பிங்.); palmyra. **2.** வாழைக் கிழங்கு (தைலவ. தைல.); plantain-root.

[புல் + பதி]

புற்பற்றை *pur̲-par̲r̲ai,* பெ. (n.) புல்லுடன் கூடிய மண்ணாங்கட்டி; turf, sod.

மறுவ. புற்காடு

[புல் + பற்றை]

புற்பறி *pur̲-pari,* பெ. (n.) ஒருவகைக் கூடை (வின்.); a kind of wicker-basket.

[புல் + பறி]

புற்பாய் *pur̲-pāy,* பெ. (n.) பாய்வகை (திவ.); grass-mat.

க. குல்லுசாபெ

[புல் + பாய்]

புற்புல்லெனல் *pur̲pul-l-en̲al,* பெ. (n.) விடிதற்குறிப்பு (வின்.); expr. indicating break of day.

[புற்புல் + எனல்]

புற்பொழி *pur̲-poli,* பெ. (n.) **1.** *புற்பற்றை* பார்க்க; see *pur̲par̲r̲ai.* **2.** புல்லடர்ந்த வரப்பு; ridge.

[புல் + பொழி]

புற்போதி *pur̤-pōdi,* பெ. (n.) பூவரசு (மலை.); portia tree.

புற்றஞ்சோறு *pur̤r̤añ-cōr̤u,* பெ. (n.) புற்றாஞ்சோறு (திவா.)பார்க்க; see pur̤r̤āñcōr̤u.

[புற்றம் + சோறு. புல் → புற்று → புற்றம். சொல் → சொன்றி → சோறு]

புற்றம் *pur̤r̤am,* பெ. (n.) புற்று; ant-hill. *'நெடுஞ் செம்புற்ற மீயல் பகர'* (ஐங்குறு. 497.).

[புல் → புற்று = உட்டுளையுள்ள கறையான் மண்கூடு. புற்று → புற்றம் (வே.க. 3, 107)]

புற்றளை *pur̤r̤al̤ai,* பெ. (n.) புற்றின் துளை; hole in an ant-hill *'நாகம் கிடந்த .... புற்றளை'* (மணிமே. 20, 99.).

[புல் → புற்று + அளை. புற்றளை = புற்று வளை (வே.க. 3, 107)]

புற்றாஞ்சோறு *pur̤r̤āñ-cōr̤u,* பெ. (n.) 1. புற்றிலுள்ள கறையான் திரள்(பிங்.); termites in an ant-hill. 2. பூஞ்சணம்(இ.வ.); mould.

[புல் → புற்று → புற்றாம் + சோறு. சொல் = நெல்.சொல் → சொன்றி → சோறு = நெற்சோறு. புற்றாஞ்சோறு = நெற் சோறு போல் காணப்படும் கறையான் திரள்.]

புற்றாம்பழஞ்சோறு *pur̤r̤ām - pal̤añ-cōr̤u,* பெ. (n.) *புற்றாஞ்சோறு* பார்க்க; see *pur̤r̤āñ--cōr̤u. 'புற்றின்கட் கிடக்கும் புற்றாம் பழஞ் சோற்றை'* (பெரும்பாண். 276, உரை.).

[புற்றாம் + பழம் + சோறு]

புற்றாம்பழம் *pur̤r̤ām-pal̤am,* பெ. (n.) *புற்றாஞ்சோறு* (யாழ்.அக.)பார்க்க; see *pur̤r̤āñ-cōr̤u*

[புற்று → புற்றாம் + பழம்]

புற்றாளி *pur̤r̤āl̤i,* பெ. (n.) 1. பனை; palmyra. 2. பனைநாள்; the 17th naksatra.

[புல் + தாளி]

புற்றானியபானம் *pur̤r̤āṉiya-pāṉam,* பெ. (n.) சாராய வகை (கிறித்.); cervisia.

[புல் + தானியம் + பானம்]

Skt. dhānya> த. தானியம்.

Skt. pāna> பானம்.

புற்றீசல் *pur̤r̤īšal,* பெ. (n.) (பெரும்பாலும் உவமையாக) புற்றிலிருந்து பெருமளவில் புறப்படும் ஈசல்; (often used as a simile) swarm of moths. *'திரைப்படங்கள் புற்றீசல் போல் வெளி வரத் தொடங்கி விட்டன'* (உ.வ.).

[புற்று + ஈசல்]

புற்று[1] *pur̤r̤u,* பெ. (n.) 1. கறையான் கட்டிய மண் கூடு; ant-hill, mound thrown up by termites. *'புற்றிடை வெகுளி நாகம்'* (சீவக. 1285.). கறையான் புற்றிற் பாம்பு குடிகொண்டது போல (உ.வ.). 2. எறும்பு முதலியவற்றின் வளை; hole, as of ants. 3. புரை வைத்த புண்; anything scurvy, scrofulous or cancerous; rapilloma. *'புழுச்செறி .... புற்றுறு நோய்'* (கடம்ப. 4. இலீலா. 116.).

ம. புற்று; க. புத்து, புத்த, குத்த, குத்து, உத்த; தெ. கொலா; நா. புட்ட; து. புஞ்ச; குட. புத்தீ; கோண். புட்டீ; கொண். புழ்கி; கூய். புசி; குவி. பூசி; குரு. புட்டா; மால. புதெ;

த. புற்று > Skt. puṭa, puttikā.

[புல் → புற்று = உட்டுளையுள்ள கறையான் மண்கூடு, உட்டுளையுள்ள எறும்புவளை, துளையுள்ள புண் ஒ.நோ. சுல் → சுற்று. (வே.க. 3, 107)]

புற்று² *puṟṟu,* பெ. (n.) **1.** தலை (அக.நி.); head. **2.** எழுத்து; letter.

[புல் → புற்று]

புற்றுக்காளான் *puṟṟu-k-kāḷāṉ,* பெ. (n.) காளான் வகை (வின்.); a kind of mushroom.

[புற்று + காளான்]



புற்றுத்தேன் *puṟṟu-t-tēṉ,* பெ. (n.) மதிலிடுக்கு முதலியவற்றில் ஈக்களால் வைக்கப்படுந்தேன் (பதார்த்த. 199.); honey secreted by bees in crevices of walls, etc.

[புற்று + தேன்]

புற்றுநோய் *puṟṟu-nōy,* பெ. (n.) இயல்புக்கு மாறான உயிரணுப் பெருக்கத்தால் உள்ளுறுப்புகள் அல்லது அரத்தம் கெட்டு (உடல் இளைத்து) இறப்பு நேரக் கூடிய நோய்; cancer. *'குமுகாயத்தைப் பிடித்திருக்கும் புற்று நோய் ஊழல்'* (உ.வ.).

[புற்று + நோய்]

புற்றுமண் *puṟṟu-maṇ,* பெ. (n.) கறையானால் வைக்கப்பட்டதும் குழைவுள்ளதும் மருந்து முதலியற்றில் பயன்படுத்தப் படுவதுமான மண்; soft earth thrown up by white ants, used as medicine.

[புற்று + மண்]

புற்றுவெடிப்பு *puṟṟu-veḍippu,* பெ. (n.) பித்தவெடிப்பு; fissure-foot.

[புற்று + வெடிப்பு. வெடி → வெடிப்பு]

புற்றுவை-த்தல் *puṟṟu-vai-,*4 செ.கு.வி. (v.t.) **1.** கறையானால் புற்றுண்டாதல்; to form small mounds of earth, as by white ants. **2.** புண் புரை வைத்தல்; to become cancerous.

[புல் → புற்று + வை-,]

புற *puṟa,* பெ. (n.) *புறா* பார்க்க; see *puṟā.* *'புன்புறப்பேடை'* (ஐங்குறு. 425.).

[புறா → புற]

புறக்கட்டு *puṟa-k-kaṭṭu,* பெ. (n.) **1.** வீட்டின் வெளிக்கட்டடம்; out-house. **2.** கையை முதுகிலே வைத்துக் கட்டுகை (வின்.); fastening of the hands behind the back.

[புறம் + கட்டு]

புறக்கடமை *pura-k-kadamai,* பெ. (n.) பழைய வரிவகை; an ancient tax. புறக்கடமை மாத்தால் தரகுக்கும் ஒருபூ குடிப்பற்றுக்கும் ஒரு பணம் (S.I.I.viii, 139).

[புறம் + கடமை]

புறக்கடல் *pura-k-kadal,* பெ. (n.) பெரும்புறக்கடல்; outermost circumambient sea.

[புறம் + கடல்]

புறக்கடன் *pura-k-kadan,* பெ. (n.) பின்னடமானம் (இ.வ.); subsequent mortgage of a property.

[புறம் + கடன்]

புறக்கடி—த்தல் *pura-k-kadi-,* 4 செ.குன்றாவி. (v.t.) வெளியேற்றுதல்; to expel. பெண் டிழுந்தான் கூட்டத்தில் ஒன்றாகப் புறக் கடித்தோம் (S.I.I.vii, 49).

[புறகு → புறக்கு → புறக்கடி—,]

புறக்கடை *pura-k-kadai,* பெ. (n.) வீட்டின் பின்புறம்; backyard, as of a house.

மறுவ. புழக்கடை, கொல்லைப்புறம்

[புறம் + கடை. கடு→ கடை=இடம்]

புறக்கண் *pura-k-kan,* பெ. (n.) 1. கண்ணிமையின் வெளிப்புறம்; exterior of the eyelid. 2. புற(தூல)க்கண்; physical eye, opp. to aga-k-kan.

[புறம் + கண்]

புறக்கண் காண முடியாதவற்றையும் நெடுந் தொலைவிலுள்ள வற்றையும் கண்டறியும் ஓர் அறிவுக்கண் போன்ற உறுப்பு குமரிநாட்டு மக்கள் நெற்றியிலிருந்ததென்றும் அதனாலேயே அவர்தம் இறைவனுக்கும் (சிவனுக்கும்) ஒரு நெற்றிக் கண்ணைப் படைத்துக் கூறினரென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர் (ப.த.நா.ப. 83).

புறக்கணி—த்தல் *pura-k-kani-,* 4 செ. குன்றாவி. (v.t.) 1. மதியாதிருத்தல் (பராமுகமர்தல்); to disregard, slight, neglect. *'உருகா மனத்தார்களைப் புறக்கணித் திடும்'* (தேவா. 612, 2.). 2. ஏளனமாகக் கருதுதல் (அலட்சியம் செய்தல்); to disdain, treat with contempt. *'புறக் கணித்திடப் பட்டீர்க்கும்'* (சீவக. 2376.).

[புறம் + கணி—,]

புறக்கணிப்பு *pura-k-kanippu,* பெ. (n.) கலந்து கொள்ள மறுத்து ஒதுங்குவது; boycott. *'தேர்தல் புறக்கணிப்பு'* (உ.வ.).

[புறம் + கணிப்பு. கணி→ கணிப்பு.]

புறக்கந்து[1] *pura-k-kandu,* பெ. (n.) வண்டியச்சின் முனை (யாழ்ப்.); extremity of an axle-tree.

[புறம் + கந்து]

புறக்கந்து[2] *pura-k-kandu,* பெ. (n.) களத்துத் தூற்றி விழுந்த பதர்க்குப்பை; heap of chaff formed in winnowing grain.

[புறம் + கந்து]

புறக்கரணம் *pura-k-karanam,* பெ. (n.) 1. கைகால் முதலிய உறுப்பு; limb of the body. 2. தொழிற்கு உதவியாகவுள்ள வெளிக்கருவி (பி.வி. 12); objective instruments.

[புறம் + கரணம்]

புறக்கலனை *pur̲a-k-kalan̲ai,* பெ. (n.) பழைய வரிவகை; an ancient tax (S.I.I.vii, 79.).

[புறம் + கலனை]

புறக்கழனியார் *pur̲a-k-kaḻan̲iyār,* பெ. (n.) ஊருக்கு வெளியே வாழுங் குடிகள்; people who live outside the village (I.M.P.Cg.689).

[புறம் + கழனியார். கழனி → கழனியார்]

புறக்கழுத்து *pur̲a-k-kaḻuttu,* பெ. (n.) பிடர்; nape of the neck. *'மயிலினது புறக்கழுத்தை யொத்த திருமேனியை யுடைய மாயவன்'* (சிலப். 17, பக். 458.).

[புறம் + கழுத்து]

புறக்களம் *pur̲a-k-kaḷam,* பெ. (n.) களத்தில் விளைச்சலை அளந்த பின் சிதறிக்கிடப்பதும் தொழிலாளிகட்கு உரிமையானதுமான தவசப் பகுதி; scattered grain left after measuring the produce on the threshing-floor, treated as allowance to agricultural labourers.(C.G.)

[புறம் + களம். குல் → குள் → கள். கள்ளுதல்=கூடுதல், பொருந்துதல். கள்→களம்=கூட்டம்,கூடுமிடம்,நெற்களம்]

புறக்காதுபடல் *pur̲a-kādu-paḍal,* பெ. (n.) குத்திய காதில் சோணைகோணி மடிந் திருக்கை (யாழ்ப்.); turning forward of the lobe of the ear, caused by bad treatment after perforation.

[புறம் + காது + படல்]

புறக்காப்பு *pur̲a-k-kāppu,* பெ. (n.) புறத்தே யமைக்கப்படுங் காவல்; outer guard of sentry. *'பாடி காவலர் .... புறக்காப்பமைத்து'* (பெருங். மகத. 17, 215.).

[புறம் + காப்பு. கா → காப்பு]

புறக்காவல் *pur̲a-k-kāval,* பெ. (n.) மெய்க் காவல் (வின்.); body-guard.

[புறம் + காவல். கா → காவல்]

புறக்காழ் *pura-k-kāḻ,* பெ. (n.) **1.** பனை முதலியவற்றில் உள்ள வெளிவயிரம் (தொல். பொ. 640.); hard outer part of the stem of a tree, as of palmyra. **2.** பெண்மரம் (திவா.); female tree, as palmyra.

[புறம் + காழ்]

புறக்கிடு—தல் *pur̲akkiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) புறங்காட்டியோடுதல்; to flee, take to flight, showing one's back to enemy. *'வெருவொடு புறக்கிடுவது'* (பாரத. அணி.28.).

[பின் → பிற்கு. பிறம்→பிறவு→பிறகு = முதுகு. பிறகு → பிறக்கு= முதுகு. பிறகு → புறகு. பிறக்கு → புறக்கு. புறக்கு + இடு. புறக்கிடுதல் = புறங்காட்டுதல் (மு.தா. 294)]

புறக்கு *pur̲akku,* பெ. (n.) வெளிப்புறம்; outer side of face of anything. *'வெண்புறக் குடைய திரிமருப் பிரலை'* (அகநா. 139.).

[புறம் → புறவு → புறகு = வெளிப்புறம், புறம்பானவன். புறகு → புறக்கு (மு.தா. 295)]

புறக்குடி *pur̲a-k-kuḍi,* பெ. (n.) **1.** நிலச்சொந்தக்காரர்க்குக் கட்டுப்படாத குடியானவன்; farmer or field-labourer, not being a regular tenant under a landlord (Tj.). **2.** வெளியூரிற் சென்று வேளாண்மை செய்யும் குடியானவன்; ryot who farms in neighbouring villages , a class of farmers

in Salem district. (G. Sm. D. ii, **62.**) **3.** *புறஞ்சேரி* பார்க்க; see *purañcēri* *'புறக்குடி கடந்து'* (மணிமே, **28, 4.**).

[புறம் + குடி. குல் → குள் → குட → குடி]

புறக்குடிப்பாயகாரி *puṟakkuḍi-p-pāya kāri,* பெ. (n.) சிற்றூரில் நிலவுரிமை பெறாத வந்தேறியான குடி; tenant without any occupancy right. (M.N.A.D.284.)

[புறக்குடி + பாயகாரி]

புறக்குடை *puṟa-k-kuḍai,* பெ. (n.) *புறக்கொடை* பார்க்க; see *puṟa-k-koḍai.* *'புறக்குடை நீவி'* (பெருங். மகத. **14, 144.**).

[புறக்கொடை → புறக்குடை]

புறக்குழல் *puṟa-k-kuḻal,* பெ. (n.) கால் நடைகளுக்கு வருங் கழலை; tumour, round tumour, as on the neck of a bull, goitre. (M.L.)

[புறம் + குழல்]

புறக்கூத்து *puṟa-k-kūttu,* பெ. (n.) கூத்துவகை (சிலப். **3, 16,** உரை.); a kind of dance.

[புறம் + கூத்து]

குதித்தாடுவது கூத்து. அது வேத்தியல் பொதுவியல், அகக்கூத்து புறக்கூத்து என்றாற் போல் பல்வேறு வகையில் இவ்விருவகைப்படும். (ப.த.நா.ப. **128**).

புறக்கூரை *puṟa-k-kūrai,* பெ. (n.) வீட்டின் பின்புறம் தாழும் கூரை (வின்.); part of the roof, sloping towards the back of a house.

[புறம் + கூரை. புறம் = முதுகு,பின் பக்கம்]



புறக்கை *puṟa-k-kai,* பெ. (n.) **1.** வெளிப்புறம்; outside. **2.** வலப்புறம்; right side in turning **3.** *புறங்கை* பார்க்க; see *puaṟaṅgai.*

[புறம் + கை – புறங்கை → புறக்கை. மூடின கையின் உட்புறமாயிருப்பது உள்ளங்கை அல்லது அகங்கை. அதன் வெளிப் புறமாயிருப்பது புறங்கை. பிறம் → புறம் = வெளி, வெளிப்பக்கம் அல்லது வெளிப்புறம்]

புறக்கொடு¹—த்தல் *puṟa-k-koḍu-,* **4** செ.கு.வி. (v.i.) தோற்றோடுதல்; to turn back and flee after defeat. *'புறக்கொடுத்திறத்தி'* (புறநா. **8.**).

[புறம் + கொடு – புறங்கொடு → புறக்கொடு. பிறம் → புறம் = முதுகு]

புறக்கொடு²—த்தல் *puṟ-k-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) போகவிடுதல்; to allow to depart, let lose. *'திருப்புறக் கொடுத்த செம் பொற்றாமரை'* (சீவக. **560**).

[புறம் + கொடு – புறங்கொடு → புறக்கொடு. பிறம் → புறம் = முதுகு. போகவிடுதல் அதாவது திரும்பிப்போதல் முதுகைக் காட்டிச் செல்லும் தன்மையது இவ்வடிப்படையிலேயே புறக்கொடுத்தல் போகவிடுதலைக் குறித்தது]

புறக்கொடை *pura-k-kodai,* பெ. (n.) 1. போரில் முதுகு காட்டுகை; turning the back in battle-field. *'வினையை வென்று புறக்கொடை காணுமன்றே'* (சீவக. 1430.). 2. புறங்காப்பு பார்க்க; see puran-kāppu. *'தம்பி புறக்கொடை காத்து நிற்ப'* (கம்பரா. மாயாசன. 23.). 3. கோயிலின் வெளிப்புறம்; outside of a temple. *'திருப்புறக் கொடையில் அருளாளதாசன் வன்னுந் திருநந்தவனம்'* (S.I.I.iii, 141.). 4. உடலின் பின்புறம்; back of the body. 5. பிரிந்த நிலை; separation, absence. "மற்றவர் புறக்கொடையே பழிதூற்றும் புல்லியார்" (கலித்.25).

[புறம் + கொடை. பிறம் → புறம் = முதுகு, வெளிப்பக்கம். கொடு → கொடை]

புறக்கோட்டை *pura-k-kōttai,* பெ. (n.) முதன்மைக் கோட்டையைக் காக்கும் கட்டடம்; outer defence to a castle; barbican.

[புறம் + கோட்டை. புறம் = வெளி, வெளிப்பக்கம். குள் → கொள் → கோண் → கோடு. கோடுதல் = வளைதல். கோடு → கோட்டம் = வளைவு. கோட்டம் → கோட்டை]

புறக்கோடி *pura-k-kōdi,* பெ. (n.) புறக்கடை பார்க்க; see *pura-k-kadai.*

[புறம் + கோடி. கோடு → கோடி]

புறக்கோயில் *pura-k-kōyil,* பெ. (n.) வெளியிலுள்ள கோயில்(S.I.I.v, 329.); the outer shrine .

[புறம் + கோயில். கோ + இல் → கோயில்]

புறகடம் *purakadam,* பெ. (n.) ஏய்ப்பு (வஞ்சனை) (இ.வ.);deceit.

புறகிடு-தல் *purakidu-,*20செ.கு.வி. (v.i.) *புறக்கிடு-தல்* பார்க்க; see *pura-k-kidu* *'ஆயினும் புறகிட'* (சிவதரு. சனன. 55).

[புறக்கிடு-தல் → புறகிடு-தல்]

புறகு *puragu,* வி.எ. (adv.) புறம்பான-வன்-வள்-து; excluded person or thing. *'சிவனடியார் தம்மைத் தொழுது வந்தணையா தொருவாறொ துங்கும் வன்றொண்டன் புறகு'* (பெரியபு. விறன்மிண். 7.).

[பின் → பிற்கு. பிறம் → பிறவு → பிறகு = முதுகு. பிறகு → புறகு (மு.தா. 294.)]

புறங்கடை[1] *purań-kadai,* பெ. (n.) 1. வீட்டின் வெளிப்புறம்; outside of a house. *'புறங்கடை வைத்தீவர் சோறும்'* (நாலடி, 293.). 2. வெளியிடம், பிறர்க்கு உரிமையான இடம் (பிரதேசம்); locality other than one's own. *'புறங்கடை நல்லிசையு நாட்டும்'* (நீதிநெறி. 2.).

[புறம் + கடை. புறம் = வெளி, வெளிப்புறம்]

புறங்கடை[2] *purań-kadai,* பெ. (n.) பின்பிறந்தோன்; younger brother. *'முந்நீர் வண்ணன் புறங்கடை'* (பெரும்பாண். 30).

[பின் → பிற → பிறவு → பிறகு → பிறக்கு. பிறக்கிடுதல் = பின்னுக்குச் செல்லுதல். பிறக்கு → பிறங்கு → பிறங்கடை = பின்னால் வரும் உரிமையாளன் (வாரிசு) (மு.தா. 293) பிறங்கடை → புறங்கடை]

புறங்கழித்தல் *purań-kalittal,* பெ. (n.) நாட்டுக் கோட்டைச் செட்டிகளின் திருமணத்திற்கு முன் பூசகன் (புரோகிதன்) மணமகளின் தலை, தோள், முழந்தாள்களில் வேப்பங்குழையால் தொட்டுப் பின் அதனை எறிந்துவிடுஞ்

சடங்கு; a ceremoney preliminary to a marriage among Nāṭṭukōttai-c-cheṭṭies wherein the purohit touches the bride's head, shoulders and knees with margosa twigs, and throws them away. (E.T.V, **266**.):

[புறம் + கழித்தல். கழி → கழித்தல். 'தல்' தொ.பெ.ஈறு]

புறங்கா—த்தல் *puṟaṅkā-,* **4** செ.குன்றாவி. (v.t.) காத்தல்; to guard, protect, save. *'வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப'* (தொல்.பொ. **422**.).

[புறம் + கா—,]

புறங்காட்டு[1]—தல் *puṟaṅ-kāṭṭu-,* **15** செ.கு.வி. (v.i.) **1.** அவமதிப்புண்டாகப் பின்புறந் திரும்புதல்; to turn one's back in contempt. **2.** தோற்றோடுதல்; to show one's back, in defeat. *'தாட்புறக்குப் போந்த கமடம் புறங்காட்ட'* (சிவப். பிர. வெங்கையு. **206**). **3.** வெளிக்குக் காட்டுதல்; to have the outward appearance of, to pretend. *'தாழ்ந்தவராய்ப் புறங்காட்டி யகத்திலே வஞ்சம் வைத்து'* (அருட்பா, vi, பிள்ளைப்பெரு. **106**.)

ம. புறம்காட்டுக

[புறம் + காட்டு—,]

புறங்காட்டு[2]—தல் *puṟaṅ-kāṭṭu-,* **15** செ.குன்றாவி. (v.t.) ***புறங்காண்—தல்*** பார்க்க; see *puṟaṅ-kāṇ-,*

[புறம் + காட்டு—, காண் (த.வி.) - காட்டு (பி.வி.) *]*

புறங்காடு *puṟaṅ-kāḍu,* பெ. (n.) பிணத்தை எரிக்கும் அல்லது புதைக்கும் இடம் (பிங்.); place of cremation or burial. *'புறங்காட்டுதிர்ந்துக்க பல்லென்பு'* (நாலடி, **45**.).

மறுவ. சுடுகாடு, காளவனம், பிணக்காடு இடுகாடு, ஈமம், படுகாடு, சுடுநிலம்.

[புறம் + காடு]

ஊருக்குப் புறம்பாக அதாவது வெளியே அமைந்த இடம்.

புறங்காண்(ணு)—தல் *puṟaṅ-kāṇ(ṇu)-,* **16**.செ.குன்றாவி. (v.t.) முறியடித்தல்; to defeat, put to flight. *'புரிநாண் புடையிற் புறங்காண்டலல்லால்'* (கலித். **15**.)

[புறம் + காண்—,]

புறங்காப்பு *puṟaṅ-kāppu,* பெ. (n.) புறத்தில் நின்று பாதுகாக்கை; acting as body guard. *'புறங்காப் பிளையர்'* (பெருங். உஞ்சைக். **33.99**.).

[புறம் + காப்பு. கா. → காப்பு]

புறங்கால் *puṟaṅgāl,* பெ. (n.) **1.** பாதத்தின் மேற்புறம்; upper part of the foot. instep. *'புறங்காலிற் போக விறைப்பேன்'* (கலித். **144**.). **2.** குதிங்காலின் மேற்புறம் (இ.வ.); heel.

ம. புறங்கால், புறவடி

[புறம் + கால். பாதத்தில் அடிப் புறமாயிருப்பது உள்ளங்கால் (உள் + அகம் + கால்). அதன் வெளிப்புறமா இருப்பது புறங்கால் (பாதத்தின் மேற்புறம்). முன்னங்காலுக்குப் பின்புறமாயிருப்பதும் புறங்கால் (குதிங்காலின் மேற்புறம்) புறம் = வெளி, வெளிப்பக்கம், பக்கம், மேற்பக்கம்]

புறங்காவல் *puṟaṅ-kāval,* பெ. (n.) மெய்காப்பாளர்; body guard. "சுற்றி நின்றார் புறங்காவலமரா" (தேவா. **271, 2**)

[புறம் + காவல். கா → காவல்]

புறங்காழ் *puṟaṅ-kāḻ*, பெ. (n.) *புறக்காழ், 2.* (வின்.) பார்க்க; see *puṟa-k-kāḻ-2*

[புறம் + காழ் → புறங்காழ் → புறங்காழ்]

புறங்கான் *puṟuṅ-kāṉ*, பெ. (n.) முல்லைநிலம்; jungle, pastoral tract. *'புறங்கானில் வாழ் கோபாலரோ'* (பாரத. இராச. 115.).

[புறம் + கான்.பிறம் → பிறம் = மருத நிலத் திற்குப் புறம்பான முல்லை (மு.தா. 295)]

புறங்குடி *puṟaṅguḍi*, பெ. (n.) தஞ்சை மாவட்ட ஊர்; a village in Tañjāvūr dt.

[புறம் + குடி]

புறங்கூற்றாளன் *puṟaṅ-kūṟṟāḷaṉ*, பெ. (n.) பிறரைக் காணாவிடத்துப் பழிப்போன்; backbiter, slanderer. *'பொய்க்கரியாளர் புறங்கூற்றாளர்'* (சிலப். 5, 131.).

மறுவ. புறணிபேசுபவன்

[புறங்கூற்று + ஆளன்]

புறங்கூற்று *puṟaṅ-kūṟṟu*, பெ. (n.) காணாவிடத்துப் பிறர்மேல் பழிதூற்றுகை; slander, backbiting, *'தீய புறங்கூற்றின் மூகையாய்'* (நாலடி, 158.)

[புறம் + கூற்று. கூறு → கூற்று]

புறங்கூறு-தல் *puṟaṅ-kūṟu-*, 7 செ.கு.வி. (v.i.) 1. காணாவிடத்துப் பிறர்மேல் அலர்தூற்றுதல்; to backbite, slander. *'புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின்'* (குறள், 183.). 2. மந்தணத்தை வெளிப்படுத்தல் (வின்.); to expose secrets.

மறுவ. கோள்சொல்லுதல்

[புறம் + கூறு-, பின் → பின → பிறம் → பிறம்பு. பிறம் → புறம் = முதுகு, வெளி, வெளிப் பக்கம். புறங்கூறுதல் = பின்னால் பழித்தல் (மு.தா. 293, 294)]

உண்மைக்குப் புறம்பானவற்றைக் கூறுதலே புறங்கூறுதல் ஆகும். எனினும் உரையாசிரியர்கள் 'யாவரையும் இகழ்ச்சி யானவற்றைப் புறத்துரையாமை' (மணக்.குறள், அதி.முன்.) என்றும் 'ஒருவரையொருவர் அவர் புறத்துரையாமை' (இளம்.தொல்.பொருள்.74) என்றும் 'காணாதவழிப் பிறரை இகழ்ந்து உரையாமை (பரிமே. குறள், அதி.19) என்றும் காணாத விடத்துக் கூறுவதையே புறங்கூறுதல் என்று குறித்துள்ளனர். ஒருவரைக்காணாத விடத்தில் அவரைப்பற்றி உண்மைக்குப் புறம்பானவற்றைப் பேசுவதில் தயக்கம் ஏதும் இருக்காத நிலை பற்றியே காணாதவழிப் பேசுவது முதன்மை எய்தியது.

புறங்கை *puṟaṅgai*, பெ. (n.) கையின் பின்புறம்; back of palm. *'அகங்கை யொட்டியும் புறங்கையிற் புகுத்தியும்'* (பெருங். வத்தவ. 12, 83.).

[புறம் + கை. மூடின கையின் உட்புறமாயிருப்பது உள்ளங்கை அல்லது அகங்கை. அதன் வெளிப் புறமாயிருப்பது புறங்கை. பிறம் → புறம் = வெளி, வெளிப் பக்கம் (மு.தா.294,295) செய் → கெய் → கை. அகப்பகையும் புறப்பகையும் போல் பிரிந்து நில்லாது அகங்கையும் புறங்கையும் ஒன்றி நிற்கும்]



புறங்கைநக்கு–தல் *puṟaṅkai-nakku-,* **15** செ.கு.வி. (v.i.) (கையின் மேற்புறத்தை நக்குதல்) போகூழ் மிகுதல்; lit, to lick the back of one's hand. to be poor.

[புறம் + கை – புறங்கை + நக்கு –]

பொருளைக் கையாள்பவன் கொள்ளும் சிறுநுகர்ச்சி அப்பொருளின் சிறு கூற்றைக் குறைக்கும். இது பொருள் உடையானுக்கு இழப்பாவது நோக்கிப் புறங்கை நக்குதல் போகூழைக் குறித்தது.

புறங்கைநாறி *puṟaṅgai-nāṟi,* பெ. (n.) மரவகை; a tree.

புறங்கொடு–த்தல் *puṟaṅ-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** பின்புறங் காட்டுதல்; to turn one's back. *'நாணென்னு நல்லாள் புறங்கொடுக்கும்'* (குறள், **924.**). **2.** *புறங்காட்டு ²–தல்* பார்க்க; see *puṟaṅ-kāṭṭu ²-,*

[புறம் + கொடு–,]

புறச்சபை *puṟa-c-cabai,* பெ. (n.) நல்லருளைப் பொறாத (நற்கருணையனுபவியாத) கிறித்தவர் கூட்டம்; non-conformed Chiristian, catechumen (Chr.)

[புறம் + சபை. அவை → சவை → சபை]

புறச்சபையான் *puṟa-c-cabaiyāṉ,* பெ. (n.) நல்லருளைப் பெறாத (நற்கருணை யனுபவியாத) கிறித்தவன்; non-conformed Christian; catechumen.

[புறச்சபை → புறச்சபையான்]

புறச்சமயம் *puṟa-c-camayam,* பெ. (n.) மாறுபட்ட கொள்கையுள்ள சமயம் (சி.சி. **8, 11**) (பிங்); heterodox religious system.

[புறம் + சமயம்]

'அகம்' தன் கொள்கையைச் சேர்ந்தது. 'புறம்' தன் கொள்கைக்குப் புறம்பானது.

புறச்சாட்சி *puṟā-c-cāṭci,* பெ. (n.) *புறச்சான்று* (வின்.)பார்க்க; see *pura-c-cāṉṟu.*

[புறம் + சாட்சி]

Skt. šāksin > த. சாட்சி

புறச்சான்று *puṟa-c-cāṉṟu,* பெ. (n.) **1.** சூழ்நிலைகளை உன்னி (ஊகி)த்தறிய விடும் சான்று; external evidence.**2.** கையொப்பமிட்ட சான்றாளியல்லாத வேறு சான்றாளி; witness other than attesting witnesses. **3.** முன் சொன்ன சான்றை உடன் பட்டு அல்லது மறுத்துக் கூறும் சான்றாளி; witness brought to support or disprove evidence previously let in.

[புறம் + சான்று]

புறச்சுட்டு *puṟa-c-cuṭṭu,* பெ. (n.) சொல் லிற்குப் புறத்துறுப்பால் வருஞ் சுட்டெழுத்து; (gram.) demonstrative prefix a, i, u, not forming an integral part of the word of which it is a component, opp. to aga-c-cuṭṭu.

[புறம் + சுட்டு.]

எ–டு: அப் பையன், இப் பெண்.

புறச்சுவர்தீற்று–தல் *puṟa-c-cuvar-tiṟṟu,* 15 செ.கு.வி. (v.i.) **1.** உறவினரை மதிக்காமல் (அலட்சியம்) செய்து பிறருக்கு மதிப்பு (உபசாரம்) செய்தல் (வின்.); to entertain strangers while neglecting one's own kinsmen. **2.** அகத் தூய்மையின்றிப் புறத்தில் ஒழுங்கானவர்போல் நடத்தல் (வின்.); to be scrupulous in external conduct while being wicked at heart.

[புறம் + சுவர் + தீற்று–,]

புறச்சுற்று *puṟa-c-cuṟṟu,* பெ. (n.) 1. சுற்றுப்புற இடம் (பிரதேசம்); outlying parts of a town or a village. 2. சுற்றுப்புறவமைதி; environment, surroundings.

க. ஹொரசுத்து

[புறம் + சுற்று]

புறச்சேரி¹ *puṟa-c-cēri,* பெ. (n.) புறஞ்சேரி பார்க்க; see puṟañcēri. *'பலகோழி யுறைகிணற்றுப் புறச்சேரி'* (பட்டினப். 77.).

[புறம் + சேரி – புறஞ்சேரி. புறஞ்சேரி → புறச்சேரி. சேர் → சேரி]

புறச்சேரி² *puṟa-c-cēri,* பெ. (n.) பறைச் சேரி (எங்களூர், 132.); Pariah quarters.

[புறம் + சேரி]

புறச்சொல் *puṟa-c-col,* பெ. (n.) நாடகத்தில் தனக்குட் பேசிக் கொள்ளாமல் எல்லோரும் கேட்கும்படியாக உரைக்கும் சொல் (சிலப். 3, 13, உரை.); (dram.) what is spoken aloud.

[புறம் + சொல்]

புறஞ்சாய்–தல் *puṟañ-cāy-,* 3 செ.கு.வி. (v.i.) தோற்றல்; to be defeated, routed. *'புறஞ்சாய்ந்து காண்டைப்பாய் நெஞ்சே'* (கலித். 89.)

[புறம் + சாய்–]

புறஞ்சிறை *puṟañ-ciṟai,* பெ. (n.) 1. மாளிகை முதலியவற்றிக்கு அருகிலுள்ள இடம்; premises in the neighbourhood of a palace or castle. *'தாரருந் தகைப்பிற புறஞ்சிறை'* (பதிற்றுப். 64, 8.). 2. வேலிக்குப் புறம்பானது; place outside the fence, as of a field. *'புறஞ்சிறை மாக்கட்கு.... புய்த்தெறி கரும்பின்'* (புறநா. 28.). 3. புறஞ்சேரி பார்க்க; see puṟañcēri. *'புறஞ்சிறைப் பொழிலும்'* (சிலப்.14, 1.). 4. அருகிலுள்ள இடம்; neighbourhood, vicinity. *'யாமே புறஞ்சிறை யிருந்தும் பொன்னன்னம்மே'* (புறநா. 84.).

[புறம் + சிறை]

புறஞ்சிறைப்பாடி *puṟañciṟai-p-pāḍi,* பெ. (n.) நகர்க்கு வெளியில் அமைந்துள்ள சேரி; hamlet adjoining a city. *'புறஞ்சிறைப் பாடியில் ஆநிரை காக்கும்'* (தொல். பொ. 57, உரை).

[புறஞ்சிறை + பாடி. படு → பாடு → பாடி]

புறஞ்சுவர்கோலஞ்செய்–தல் *puṟañ-cuvar-kōlañcey-,* 1 செ.கு.வி. (v.i.) (வெளிச்சுவரை அழகுபடுத்துதல்) உட் குற்றங்களையாது உடம்பை அழகு படுத்துதல்; lit, to decorate the outside of a wall.; to adorn the body without removing the inner defects. *'புறஞ்சுவர் கோலஞ் செய்து புட்கவ்வக் கிடக்கின்றீரே'* (திவ். திருமாலை, 6.)

[புறஞ்சுவம் + கோலம் + செய்–]

'புறச்சுவர்தீற்று–தல்' பார்க்க

புறஞ்செய்¹–தல் *puṟañcey-,* 1 செ.குன்றாவி. (v.t.) 1. உடம்பை அழகு செய்தல்; to adorn the body. *'புறஞ்செயச் சிதைதல்'* (தொல். பொ. 266.) 2. காப்பாற்றுதல்; to protect, cherish, maintain. *'வைகலுமில்புறஞ் செய்தலின்'* (திரிகடு. 64.).

[புறம் + செய்–,]

புறஞ்செய்²–தல் *puṟañ-cey-,* 1 செ.குன்றாவி. (v.t.) வெளியேற்றுதல்; to extern, to expel

"இந்நாட்டு மண்ணகத்தே வாழாது புறஞ்செய்தும்" (பாரதி. தேசீய. 47)

[புறம் + செய்-,]

புறஞ்சேரி *puṟañ-cēri,* பெ. (n.) நகர்க்குப் புறம்பே மக்கள் வாழும் இடம்; outskirts of a city; suburb. *'புறஞ்சேரி யிறுத்த காதை'* (சிலப். 13, தலைப்பு)

[புறம் + சேரி. சேர் → சேரி]

புறஞ்சொல்¹(லு)-தல் *puṟañ-col(lu)-,* 15 செ.கு.வி. (v.i.) கோட் சொல்லுதல்; to slander, backbite. *'புறஞ்சொல்லும் புன்மையாற் காணப்படும்'* (குறள், 185.)

[புறம் + சொல். புறம் = முதுகு, வெளி, வெளிப் பக்கம். புறஞ்சொல்லுதல் = பின்னாற் பழித்தல்]

புறஞ்சொல்² *puṟañ-cōl,* பெ. (n.) 1. வெளியிற் கூறும் அலர்மொழி; (akap.) gossip about the intrigues of lovers. *'புறஞ் சொலென்னும் பெருஞ்சிமி றாரப்ப'* (சீவக. 1665.) 2. பழிச்சொல்; slander. *'புறஞ்சொ றூற்றாது புகழுந் தன்மையள்'* (பெருங். வத்தவ. 10, 31.).

[புறம் + சொல்]

புறடை *puṟaḍai,* பெ. (n.) ஊரின் வெளிப் புறமமைந்த நன்செய் நிலம்; irrigated land situated away from a village.

[புறம் → புறன் → புறனடை → புறடை. அடு → அடை = அடுத்துள்ளது]

புறண்டு-தல் *puṟaṇḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பிறாண்டு; to scratch.

[பிறாண்டு → புறாண்டு → புறண்டு-,]

புறணி *puṟaṇi,* பெ. (n.) 1. புறங்கூறுகை; slander, backbiting. *'காணாவிடந் தனிலே புறணி பலபேசி'* (குமரே. சத. 28.). 2. மரப்பட்டை (பிங்.); outer bark of a tree. 3. தோல் (பிங்.); skin, rind, peel, coat. 4. அகணிக்கு எதிர்; opposite of inside or interior. 'கடுக்காயில் அகணி நஞ்சு, சுக்கில் புறணி நஞ்சு' 5. புலால் (பிங்.); flesh, mutton. 6. புறம்பானது (சூடா.); anything that is outside. 7. குறிஞ்சி நிலம்; hilly tract. 8. முல்லை நிலம் (பிங்.); pastoral tract. *'பூக்குந் தாழை புறணியருகெலாம்'* (தேவா. 842, 6.). 9. உழும்போது பொடியாகாத மண்கட்டி (தஞ்சை.); sod of earth, turned in ploughing.

[பின் → பிற்கு → பிறகு → பிறவு → பிறகு = முதுகு. பிறம் → புறம் = முதுகு. விலங்கு கட்டும் பறவைகட்கும் குப்புறப் படுத் திருக்கும் மாந்தனுக்கும் முதுகு மேற் புறமாயிருப்பதால், முதுகின் பெயர் மேற் புறத்தைக் குறித்தது. புறம்= மேற்பக்கம், பக்கம். புறம் → புறன் → (புறனி) → புறணி = மேற்புறம் (மு.தா. 294, 295) மரத்தின் மேற்புற மாயிருக்கும் பட்டை, தோல்]

புறணிபேசு-தல் *puṟaṇi - pēsu-,* 5 செ.கு.வி. *புறம்பேசு-தல்* பார்க்க; see *puṟam - pēsu-,*

[புறணி + பேசு-,]

புறணிநாடு *puṟaṇi - nāḍu,* பெ. (n.) 1. எல்லைப் புறமாயுள்ள நாடு; border land; bordering country. *'சோணாட்டுப் படும் புறணி நாடுகளிலும்'* (S.I.I.iii, 14.). 2. அயல்நாடு (இ.வ.); foreign country.

[புறணி + நாடு. புறம் → புறன் → (புறனி) → புறணி மேற் புறம், பக்கம்]

புறணிபோடு—தல் *purani - pōdu-,* 20 செ.கு.வி. (v.i.) படைச்சாலிற் புரண்ட மண்கட்டிகளை நிரவுதல் (இ.வ.); to level the sods of earth in a ploughed land.

[புறணி + போடு—,]

புறத்தங்கம் *purattangam,* பெ. (n.) புறத்துறுப்பு பார்க்க; purattuṟuppu

[புறம் → புறத்து + அங்கம்]

Skt. anga > த. அங்கம்.

புறத்தவன் *puṟattavaṉ,* பெ. (n.) 1. அயல் நாட்டான் (அன்னியன்); foreigner, stranger. 2. *புறம்பணையாள்* (சூடா.) பார்க்க; see *puṟampaṇaiyāḷ.*

க. பொறபிக; தெ. பெற.

[புறம் → புறத்து + அவன்]

புறத்தி[1] *puṟatti,* பெ. (n.) புறம்பானது (வின்.); that which is outside, external, foreign or extrinsic.

ம. புறத்து.

[புறம் → புறத்தி]

புறத்தி[2] *puratti,* பெ. (n.) சாயல் (புதுவை.); looks, external appearance of a person.

[புறம் → புறத்தி]

புறத்திக்கிடம்பண்ணு—தல் *puṟatti-k-kiḍam-paṇṇu-,* 5 செ.கு.வி. (v.i.) தன்னைச் சேர்ந்தவனைப் பழிக்கு உள்ளாக்குதல் (வின்.); to expose a friend to reproach.

[புறம் → புறத்திக்கு + இடம் + பண்ணு—,]

புறத்திடு—தல் *puṟattiḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) வெளிவிடுதல் (குறள், 590, உரை.); to divulge.

[புறம் → புறத்து + இடு—,]

புறத்திண்ணை *puṟa-t-tiṇṇai,* பெ. (n.) வீட்டு வெளித்திண்ணை (இ.வ.); pial.

[புறம் + திண்ணை. துள் → (திள்) → திண் → திண்ணை = திரண்ட மேடு]

புறத்திணை *puṟa-t-tiṇai,* பெ. (n.) வெட்சி, வஞ்சி, காஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் என ஏழுவகையாகவும் (தொல்.) இவற்றுடன் கரந்தையும் நொச்சியும் சேர ஒன்பது வகையாகவும் (பன்னிருபடலம்) இவ்வொன்பதுடன் பொதுவியல், கைக்கிளை பெருந்திணை மூன்றுஞ் சேரப் பன்னிரு வகையாகவும் (பு.வெ.) பிரித்துக் கூறப்படும் புறப்பொருள் பற்றிய ஒழுக்கங்கள்; theme describing, conduct as regards war, state-affairs etc., opp, to aga-t-tiṇai, of seven kinds, viz., veṭci, vañci, kāñci, uḻiñai, tumbai, vāgai, pāḍāṉ according to Tolkāppiyam, or of nine kinds adding karandai and nocci to the above according to Paṉṉiṟu-paḍalam or of 12 kinds, including in addition poduvial kaikkiḷai, and peruntiṇai according to Puṟaporuḷ-veṇpā mālai.

[புறம் + திணை]

அகம் புறம் என்னும் இருவகைப் பாகுபாட்டுள் எல்லாப் பொருள்களும் அடக்கப்பட்டுவிட்டன. புறப்பொருள்பற்றிய எழுதிணைகளுள், முதலைந்தும் அரசனுக்குச் சிறப்புக் கொடுத்தற் பொருட்டு அவனுக்குரிய போர்த் தொழிலையே பற்றிக் கூறினும், வாகை பாடாண் என்னும் இறுதியிரண்டும், மற்றெல்லா மக்கள் தொழில்களையும்

சேர்த்துத் தழுவுவனவாகும். இதை யறியாதார் தழ்ப் பொருளிலக்கணம் குறைபாடுள்ள தெனக் குறை கூறுவர் (செ.சி.13)

புறத்திணைநன்னாகனார் *pura-t-tiṇai-naṉṉāgaṉār*, பெ. (n.) கழக(சங்க)க் காலப்புலவர்; poet of saṅgam age.

[புறத்திணை + நன்னாகனார்]

ஒய்மான் நல்லியக் கோடன், ஒய்மான் நல்லியாதன், கரும்பனூர் கிழான் முதலியவரைப் பாடியவர். இவர்க்கு நன்னாகனார் எனவும் பெயர் (புறநா.)

புறத்தியம் *purattiyam*, பெ. (n.) *புறத்தி (வின்.)* பார்க்க; see *puratti*.

[புறத்தி → புறத்தியம்]

புறத்தியான் *purattiyāṉ*, பெ. (n.) *புறத்தவன்1.* பார்க்க; see *purattavaṉ.1.*

[புறம் → புறத்தி → புறத்தியான்]

புறத்திரட்டு *pura-t-tiraṭṭu*, பெ. (n.) புறப்பொருள் பற்றிய செய்யுட்களைப் பல நூல்களிலிருந்து திரட்டி அமைக்கப்பட்ட தொகை நூல்; an anthology on the themes of puram.

[புறம் + திரட்டு. திரள் → திரடு → திரட்டு]

புறத்திரு—த்தல் *purattiru-*, 3 செ.கு.வி. (v.i.) வெளியே காத்திருத்தல்; to wait outside. *'புறத்திரு போகென்னு மின்னாச் சொல்'* (நாலடி, 326.).

[புறம் → புறத்து + இரு—,]

புறத்திறு—த்தல் *purattiru-*, 3 செ.குன்றாவி. (v.t.) முற்றுகையிடுதல்; to besiege. *'போக்கற வளைஇப் புறத்திறுத்தன்று'* (பு.வெ.1,7.).

[புறம் → புறத்து + இறு—,]

புறத்திறை *purattirai*, பெ. (n.) வேற்றரசனுடைய மதிலை மேற்சென்ற வேந்தன் முற்றுகை செய்தலைக் கூறும் புறத்துறை (பு.வெ.6, 10.); (purap.) theme of an invading chief besieging his adversary's fort.

[புறத்திறு → புறத்திறை. இறு → இறை.]

புறத்துடர் *purattuḍar*, பெ. (n.) அணிவகை(S.I.I.ii, 16); a kind of jewel.

[புறம் + துடர். தொடர் → துடர்]

புறத்துப்பக்கம் *purattu-p-pakkam*, பெ. (n.) *புறப்பக்கம் (இ.வ.)* பார்க்க; see *pura-p-pakkam.*

[புறம் → புறத்து + பக்கம்]

புறத்துழிஞை *purattuḻiñai*, பெ. (n.) வேற்றரசனுடைய மதிலைச் சூழ்ந்த அகழின் கரையில் மேற்சென்ற வேந்தன் படை (சேனை)யுடன் தங்கி முற்றுகையிடுதலைக் கூறும் புறத்துறை (பு.வெ. 6, 16.); (purap.) theme of an invading chief camping on the banks of the moat and besieging the fort of his adversary.

[புறம் → புறத்து + உழிஞை]

புறத்துறவு *pura-t-turavu*, பெ. (n.) அகப்பற்றுவிடாமல் துறவிபோல் புனைந்து (வேடங்)கொள்ளுகை; assuming an ascetics guise without real renunciation.

[புறம் + துறவு. துற → துறவு. புறத்தளவில் மட்டும் கொள்ளும் துறவு நிலை.]

புறத்துறுப்பு *puratturuppu,* பெ. (n.) 1. இடம், பொருள், ஏவல் முதலிய பக்கத்துணை; external resources, as position, property, authority, influence, opp. to agatturuppu. *'புறத்துறுப் பொல்லா மெவன் செய்யும்'* (குறள்,79.). 2. உடலின் புறத்துள்ள உறுப்பு (அங்கம்); limb, external member of the body.

[புறம் → புறத்து + உறுப்பு]

புறத்துறை *pura-t-turai,* பெ. (n.) புறத்திணையின் பகுதி; minor theme grouped under a purattiṇai, *'வீரரைப்பாடும் புறத்துறை யெல்லாம் முடித்து'* (சிலப். 27, 46, அரும்.)

[புறம் + துறை]

புறத்தூய்மை *pura-t-tūymai,* பெ. (n.) வெளிப்புறத் தூய்மை; external cleanliness. புறத்தூய்மையைக் காட்டிலும் அகத்தூய்மையே நாகரிகத்திற்குச் சிறந்ததாக எண்ணப்படும் (உ.வ.).

[புறம் + தூய்மை]

அறிவாலும் (ஞானத்தாலும்) ஒழுக்கத்தாலும் இல்லறத்தினும், பன்மாண் சிறந்த துறவறத்தில் புறத்தூய்மை ஒரு பொருளாகக் கொள்ளப்படுவதன்று. இலலறத்தினும் ஒருவன் எத்துணை எளியனா யிருப்பினும், தன்னையும் தன் பொருள்களையும் தூயவாய் வைத்துக் கொள்வதே புறத்தூய்மை (ப.க. 100)

புறத்தொழுக்கம் *purattolukkam,* பெ. (n.) பரத்தையவரோடு கூடியொழுகுகை; living with concubines. "*புறத்தொழுக்கத்திலே நெடு நாள் ஒழுகி...... மீண்டு தலைவியொடு கூடி*" (ஐங்குறு. 1. உரை).

[புறம் → புறத்து + ஒழுக்கம்

ஒழுகு → ஒழுக்கு → ஒழுக்கம்]

புறத்தோற்றம் *pura-t-tōrram,* பெ. (n.) வெளிப்புறத்தோற்றம்; exterior. நகரமக்கள் புறத்தோற்றத்தில் தூய்மை கடைப் பிடிக்கின்றனர் (உ.வ.).

[புறம் + தோற்றம்]

புறந்தள்ளு—தல் *purantaḷḷu-,* 12 செ.குன்றாவி. (v.t.) விலக்குதல், நீக்குதல், சேர்த்துக் கொள்ளாமல் ஒதுக்கி வைத்தல்; to exclude

[புறம் + தள்ளு—,]

புறந்தருநர் *purantarunar,* பெ. (n.) பாதுகாப்பவர்; protector. "*பகடு புறந்தருநர்*" (புறநா.).

[புறந்தரு → புறந்தருநர்]

புறந்தா[1]—தல் (புறந்தருதல்) *purantā-,* 15 செ.குன்றாவி. (v.t.) 1. காத்தல்; to protect, take care of. "*குடி புறந்தருகுவை யாயின்*" (புறநா. 35). 2. கை விடுதல்; to forsake "*பிழைப்பிலா புறந் தந்தானும்*" (சீவக. 252). 3. போற்றுதல்; *to extol, praise.* "*அடி புறந்தருவர் நின்னடங்கா தோரே*" (புறநா. 35).

[புறம் → தா(தரு—)—,]

புறந்தா[2]—தல் (புறந்தருதல்) *purantā-,* 18 செ.கு.வி. (v.t.) 1. தோற்றுப் போதல்; to turn one's back in retreat, to be defeated. 2. நிறம் உண்டாதல்; to become shiny "*பொடியழற் புறந்தந்த..... கிண்கிணி*" (கலித். 85).

[புறம் + தா(தரு—)—]

புறந்தாள் *purantāḷ-,* பெ. (n.) *புறங்கால் (யாழ். அக.)* பார்க்க; see *puraṅkāl*

[புறம் + தாள்]

புறந்துர—த்தல் *puran-tura,* 3 செ.குன்றாவி. (v.t.) எருதுகளை முதுகிலே யடித்து ஓட்டுதல்; to drive cattle by striking them on the back. *'மகவுடை மகடூஉப் பகடு புறந்துரப்ப'* (பெரும்பாண். 58.)

[புறம் + துர—]

புறநகர் *pura-nagar,* பெ. (n.) நகரின் புறப்பகுதி; outlying part of a city, suburb.

[புற(ம்) + நகர்]

புறநடம் *pura-nadam,* பெ. (n.) *புறநாடகம் (சிலப்.3,12, அரும்.)* பார்க்க; see *pura-nādagam.*

[புற(ம்) + நடம்]

புறநடை *pura-nadai,* பெ. (n.) *புறனடை நூற்பா (நன். 19, மயிலை. அரும்.)* பார்க்க; see *puranadai-nūrpā.*

[புற(ம்) + நடை]

புறநாட்டுப் பெருங்கொற்றனார் *puranāttu-p-perun-korranār,* பெ. (n.) கடைக்கழக (சங்கம்) மருவிய காலத்துப் புலவர்; poet of post-sangam age.

[புறநாடு + பெருங்கொற்றனார்]

இவர் இயற்பெயர் பெருங்கொற்றனார். இவர் நாடு புறநாடாயிருக்கலாம். 'ஆர்' உயர்வு பன்மை ஈறு.

புறநாடகம் *pura-nādagam,* பெ. (n.) இன்பம் (சிருங்காரந்)தவிர மற்றைச் சுவை பற்றி வரும் நாடகவகை (சிலப். 3, 13, உரை.); a drama where the prevailing sentiment is one other than cirunkāram or love.

[புற(ம்) + நாடகம்]

புறநானூறு *puranānūru,* பெ. (n.) எட்டுத் தொகையுள் ஒன்றானதும் புறப்பொருளைப் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டதுமான தொகை நூல்; an ancient poetic anthology on the topics of pura-p-porul. containing 400 verses, one of ettu-t-togai

[புறம் + நானூறு]

புறநானூற்றில் ஒரு சில (2, 358, 362, 366) செய்யுள்களைத் தவிரப் பிறவற்றை யெல்லாம் பாடினாரும் அவராற் பாடப்பட்டாரும் கடைக்கழகக் காலத்தினராதலின் புறநானூற்றின் காலம் கடைக்கழகக் காலமாகும் (கி.பி. 2ஆம் நூற்றாண்டு)

புறநானூறு ஒருதொகை நூல் அல்லது தனிப்பாடற்றிரட்டே. புறப்பொருளைப் பற்றிய நானூறு செய்யுள்களைக் கொண்டது புறநானூறு. இன்னாநாற்பது, இனியவைநாற்பது முதலிய நாற்பது பாக்களைக் கொண்ட பனுவல்களையும், நற்றிணை நானூறு, பழமொழி நானூறு, குறுந்தொகை நானூறு, நாலடி நானூறு, முதலிய நானூறு பாக்களைக் கொண்ட பனுவல்களையும் நாலாயிரக் கோவை, நாலாயிரத்திவ்யப்பிரபந்தம் (தெய்வப்பனுவல்) முதலிய நாலாயிரம் பாக்களைக் கொண்ட பனுவல்களையும் நோக்குமிடத்து நாலென்னும் எண் ஏதோவொரு காரணம் பற்றி நூற்செய்யுட் தொகைக்குச் சிறந்ததாகக் கொள்ளப்பட்ட தென்பது தெரிகின்றது. அது நால்வகைப் பாவோ நால்வகைக் குலமோ பற்றியிருக்கலாம்.

புறநானூற்றுச் செய்யுள்களிற் சில சிதைந்துங் குறைந்துமிருப்பதால், இந்நூல் செய்யுள்களின் அடிச்சிறுமை பெருமையும் சொற்றொகையும் அறிவதற்கில்லை. ஆயினும், இதுபோதுள்ளபடி அடியுஞ்சொல்லும் எண்ணிப் பார்ப்பின் ஒரு செய்யுளின் சராசரி அடித்தொகை பதினெட்டென்பதும் ஓர் அடியின் சராசரிச் சொற்றொகை ஆறென்பதும் தெரியவரும். ஆகவே, ஒரு செய்யுளின் சராசரிச் சொற்றொகை ஏறத்தாழ நூறென்பது பெறப்படும்.

பண்டைத் தமிழ்நூல்களெல்லாம் தனித்தமிழ் என்னும் பொதுக்கொள்கைக்கேற்ப, புறநானூறும் தனித்தமிழே. ஆங்காங்கு

இரண்டொரு வடசொற்கள் அருகி வந்திருப்பதானால், புறநானூற்றின் தனித்தமிழ்த் தன்மை குன்றிவிடாது. இந்நூலில் வந்திருக்கும் வடசொற்களெல்லாம் இருபது அல்லது இருபத்தைந்தே. இவற்றுள்ளும் ஒருசில தென்சொல்லோ வடசொல்லோ என ஐயுறற்குரியன.

இரண்டொரு வடசொற்கள் இங்குமங்குமாக அருகி வந்திருப்பது கொண்டு புறநானூறு முழுமையுங்கலப்புத் தமிழென்பராயின், பிறமொழிச்சொல் கலவாத மொழியே உலகத்திலில்லையென்னும், ஆரியத்திலும் சுட்டும் வினாவும் மூவிடப்பெயரும் போன்ற அடிப்படைச் சொற்களெல்லாம் வேர்நிலையில் தமிழா யிருத்தலின் தமிழ் தனித்து வழங்கினும் ஆரியம் தனித்து வழங்கல் கூடாமையென்னும் கூறிவிடுக்க. (ப.க. 2, 3)

புறநிலை *puṟa-nilai,* பெ. (n.) **1.** வெளிப்புறம்; outside. *'புறநிலைக் கோட்டம்'* (சிலப், 5, 180.) **2.** வேறுபட்டநிலை; changed condition or state. *'வழிநாட் பொய்யொடு நின்ற புறநிலை'* (புறநா. 211.). **3.** நீ வணங்குந் தெய்வம் நின்னைப் புறங்காப்ப நின் வழிவழி மிகுவதாக எனக் கூறுவதும் **96** வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாவதுமான நூல் வகை (சது.); poem invoking the tutelary deity of a chief to shower properity on his family and his decendants, one of **96** pirapandam. **4.** உதவிநோக்கிப் பிறர் புறங்கடையில் நிற்கும் நிலை (புறநா. **211,** உரை.); standing in the back-yard of one's house, seeking one's favour. **5.** ஏவல் செய்து பின்னிற்கை (அக.நா. **32.**); personal attendance, as of a pupil upon his guru. **6.** சாதிப் பெரும்பண் நான்கனுள் ஒன்று. (சிலப். **8, 41,** உரை.); (mus.) a class of primary melody-types one of four cādi-p-perumpaṇ, q.v.

[புறம் + நிலை]

புறநிலைக்கருவி *puṟ-nilai-k-karuvi,* பெ. (n.) **5** நிலத்தின் (பிருதிவியின்) கூறு, **5** நீரின் (அப்புவின்) கூறு, **5** நெருப்பின் (தேயுவின்) கூறு, **5** காற்றின் (வாயுவின்) கூறு, **5** வானத்தின் (ஆகாயத்தின்) கூறு, பத்து (தச) காற்று (வாயு), பத்து (தச) நாடி, **5** சொல்நடை முதலியன (வசனாதி) **4** வாக்கு, முக்குணம், நானுணர்வு மூன்று (அகங்காரத்திரயம் அல்லது ஏடணாத்திரயம்) என்ற **11** வகையும், **60** விரியுமுள்ள மெய்ப்பொருட்கள் (தத்துவங்கள்) (சிலப். கட்; திருவால. தட்.) (saiva.) external categories, of **11** kinds **60** in number, viz., **5** pirutuviyiṉ kūṟu, **5** appuviṉ kūṟu, **5** tēyuviṉ kūṟu, **5** vāyuviṉ kūṟu, **5**, ākāyattiṉ kūṟu, taša vāyu, **5**, tasa-nāḍi **5** vacaṉādi, **4** vākku, mukkuṇam agaṅ-kāra-t-tirayam or ēḍaṇāttirayam.

[புறநிலை + கருவி]

புறநிலைமருதம் *puṟa-nilai-marudam,* பெ. (n.) பெரும்பண் வகை; (சிலப். **8, 39.**); (mus.) a primary melody-type,

[புறநிலை + மருதம்]

புறநிலைவாழ்த்து *puṟa-nilai-vāḻttu,* பெ. (n.) **1.** வழிபடு தெய்வம் நின்னைப் புறங்காப்ப வழிவழி செல்வத்தொடு சிறந்து பொலிக என்று தலைவனொருவனைக் கூறும் வாழ்த்து; (தொல், பொ. **422.**); benediction upon a chief, in which his tutelary deity is invoked to bless him and his descendents. **2.** *புறநிலை 3 (சங்.அக.)* பார்க்க; see *puṟanilai 3.*

[புறநிலை + வாழ்த்து. வாழ் → வாழ்த்து]

புறநிறச்சார்பு *pura-nira-c-cārbu,* பெ. (n.) மணிக் குற்றங்களுளொன்று; a defect in precious stones. "*போழ்ந்திடு தராசம் புறநிறச் சார்பு*" (பஞ்ச, திருமுக, 476.).

[புறம் + நிறம் + சார்பு . சார் → சார்பு.]

புறநீங்கு—தல் *pura-nīngu-,* 3 செ.கு.வி. (v.i.) 1. விடுதலையாய் விலகிப் போதல்; to be at liberty. 2. விலக்கப்படுதல்; to be separated from others.

[புறம் + நீங்கு—,]

புறநீர்மை *pura-nīrmai,* பெ. (n.) பண் வகை (பிங்.); a melody type.

[புறம் + நீர்மை]

புறநோயாளி *pura - nōyāḷi,* பெ (n.) மருத்துவ மனைக்கு வந்து மருத்துவம் (சிகிச்சை) பெற்றுச் செல்பவர்; out patient. *'புறநோயாளிகள் பகுதியில் நாள்தோறும் கூட்டம் இருக்கும்'* (உ.வ.).

[புறம் + நோயாளி]

புறப்பக்கம் *pura-p-pakkam,* பெ. (n.) உலக நடப்பை யொட்டிய கருதுகோள் (இலெளகிக விஷயங்களை யொட்டிய அனுமானம்) (வின்.); (log.) inference regarding non-relilgious or secular matters.

[புறம் + பக்கம்]

புறப்பகுதி *pura-p-pagudi,* பெ. (n.) வெளிப்பக்கம்; exterior.

[புறம் + பகுதி]

புறப்பகை *pura-p-pagai,* பெ. (n.) 1. வெளிப் படையான பகை; open hostililty. 2. பகைவன்; enemy. *'புறப் பகைகளை அடக்கும் ஆண்மை யுடையார்க்கும்'* (குறள், 148, உரை.).

[புறம் + பகை. அகங்கையும் புறங்கையும் போல் ஒன்றி நிற்காமல் அகப்பகையும் புறப்பகையும் பிரிந்து நிற்கும்.]

புறப்பட்டுக்கொள்(ளு)—தல் *pura-p-paṭṭu-k-koḷ(ḷu)-,* 12 செ.கு.வி. (v.i.) வெளியேறுதல்; to go out, go out. *'நெருப்புப்பற்றிப் புறம்பே எரியாநின்றால் புறப்பட்டுக் கொள்கிடாய் என்று'* (ஈடு, 1, 2, 1.).

[புறப்பட்டு + கொள்—,]

புறப்பட்டுப்போ—தல் *pura-p-paṭṭu-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) *புறப்பட்டுக்கொள்(ளு)—தல்* பார்க்க; see *pura-p-paṭṭu-k-koḷ(ḷu)-,* அவன் புறப்பட்டுப் போய்விட்டான் (உ.வ.).

[புறப்பட்டு + போ—,]

புறப்படு—தல் *pura-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. செலவு மேற்கொள்ளுதல்; to set forth, proceed, start on a journey. *'பாயிரப் பதிக மோதிப் புறப்பட்டார்'* (திருவாலவா. 37, 11.). 2. புறம்பே செல்லுதல்; to go out. *'புறப்படாத பருவத்தே போனாய்'* (அகநா. 7, உரை.). 3. புறத்தில் தோன்றுதல்; to start or jut out, protrude, as a stone in a wall, 4. புண் முதலியன உண்டாதல் (வின்.); to break out, as eruptions. 5. பொசிதல் (வின்.); to ooze out, issue, exude.

ம. புறப்பெடுக; க. கொரவடு, கொரபடு

[புறம் + படு—, புறம் = வெளி, வெளிப்பக்கம்]

புறப்படுத்து–தல் *pur̤a-p-paḍuttu-*, 3 செ.குன்றாவி. (v.t.) வெளிப்படுத்துதல்; to divulge, reveal, publish. *'புறப்படுத்தா னாகு முறை'* (குறள், 590.).

[புறம் + படுத்து–, படு–தல் (த.வி.) – படுத்து–தல் (பி.வி.)]

புறப்படைவீடு *pur̤a-p-paḍai-viḍu*, பெ. (n.) *புறஞ்சேரி (சீவக. 85.)* பார்க்க; see *pur̤añcēri.*

[புறப்படை + வீடு]

புறப்பணை *pur̤a-p-paṇai*, பெ. (n.) முல்லைநிலம்(சங்.அக.); pastoral tract.

[புறம் = மருத நிலத்திற்குப் புறம்பான முல்லை. புறம் → புறவு = முல்லை. புறம் → புறம்பு → புறம்பணை = முல்லை (மு.தா. 295)]

புறப்பத்தியம் *pur̤a-p-pattiyam*, பெ. (n.) மருந்துண்ணும் காலத்தில் உணவில் கடைப் பிடிக்க வேண்டிய கட்டுப்பாடு (மறுபத்தியம்) (வின்.); diet or regimen prescribed after a course of medicine.

[புறம் + பத்தியம்]

புறப்பற்று *pur̤a-p-ar̤r̤u*, பெ. (n.) எனது என்னும் பற்று, நான் என்னும் அகப்பற்றுக்கு எதிரானது; external attachment, as attachment to property and family, opp. to 'aga-p-par̤r̤u'. *'எனதென்னும் புறப்பற்று விடுதல் கூறப்பட்டது'* (குறள், 344, உரை.)

[புறம் + பற்று. நான் என்பது ஆதனுடன் (ஆத்மாவுடன்) இணைந்து செயல் படுவதால் அது அகத்ததாகக் கொள்ளப் பட்டது. எனது அவ்வாறில்லாமல் புறத்தே அமையும் பொருள்களாகவும் பிறவாகவும் இருப்பதால் புறத்தது எனப்பட்டது. பற்று அகம், புறம் இரண்டிடத்திற்கும் பொது]

புறப்பாட்டு *pur̤a-p-pāṭṭu*, பெ. (n.) 1. புறப்பொருளைப் பற்றிய செய்யுள்; verses on a topic of pur̤a-p-poruḷ 2. *புறநானூறு* பார்க்க; see *pur̤a-nāṉūr̤u.*

[புறம் + பாட்டு]

புறப்பாட்டுவண்ணம் *pur̤a-p-pāṭṭu-vaṇṇam*, பெ. (n.) இறுதியடி முடியாதிருப்பவும் தான் முடிந்த அடிபோலக் காட்டும் சந்தம் (தொல். பொ. 537.); (pros.) a rhythm effected by making the penultimate line read like the last line of a stanza.

[புறப்பாட்டு + வண்ணம்]

புறப்பாட்டுவீக்கம் *pur̤a-p-pāṭṭu-vīkkam*, பெ. (n.) புண் வீக்க வகை; inflammation of the cellular tissue, cellulitis.

[புறப்பாட்டு + வீக்கம்]

புறப்பாடு *pur̤appāḍu*, பெ. (n.) 1. வெளி யேறுகை; 1 coming forth, sallying out. 2. புறந்தோன்றுகை; appearing outside protruding, jutting out. *'ஒரு பொருள் புறப்பாடின்றி'* (திவ். இயற். திருவாசிரியம், 7.). 3. செல்கை; setting out, departure, as of a traveller. *'புறப்பாடும் வழிச் செலவும்'* (சிலப். 8, 45, உரை.) 4. கோயில் சிலை (மூர்த்தி) வெளியில் எழுந்தருளுகை; procession of an idol. 5. புண்கட்டி வகை (நெல்லை.); eruption, boil, abscess, carbuncle.

ம. புறப்பாடு.

[புறப்படு → புறப்பாடு. 'படு' என்னும் துணைவினை முதனிலை திரிந்து பாடு என்றாயிற்று ஒ.நோ. கடப்படு → கடப்பாடு]

புறப்புண் *pura-p-pun,* பெ. (n.) முதுகில் பட்டபுண்; wound on the back of a person. *'முன்பு குறித்தெறிந்த புறப்புண் ணாணி'* (புறநா. 65.).

[புறம் + புண்]

புறப்புறக்கருவி *pura-p-pura-k-karuvi,* பெ. (n.) *புறப்புறமுழவு (சிலப். அரும்.)* பார்க்க; see *pura-p-pura-mulavu.*

[புறப்புறம் + கருவி]

புறப்புறம் *pura-p-puram,* பெ. (n.) முற்றும் வேறானது (அந்நியமானது); that which is outermost.

[புறம் + புறம். தமிழனுக்குத் தமிழ் அகம்; திராவிடம் அகப்புறம்; ஆரியம் புறம்; சேமியம் புறப்புறம். இவ்வகைக் கூற்றினின்று அகம்புறம் என்னும் சொற்களின் பொருளை ஒருவாறுணரலாம் (தமி.வ.115) புறம் = வெளி, வெளிப் பக்கம். வெளியான (வேறான) தன்மையை வலியுறுத்த புறம் அடுக்கி வந்துள்ளது]

புறப்புறமுழவு *pura-p-pura-mulavu,* பெ. (n.) முழவுவகை (சிலப். 3, 27, உரை.); a kind of drum, as 'neytarparai', etc.

[புறப்புறம் + முழவு]

புறப்பூசை *pura-p-pūšai,* பெ. (n.) கோயில் முதலிய இடங்களில் சிவபெருமானுக்குச் செய்யும் வழிபாடு (ஞானபூசா.15 உரை); (šaiva.) worship offered to Šivan set up in temples, etc.

[புறம் + பூசை. பூசு → பூசை]

புறப்பெண்டிர் *pura-p-pendir,* பெ. (n.) பரத்தையர் (இறை.43,பக்.174.); courtesans.

[புறம் + பெண்டிர். பெள் → பெண் → பெண்டு → பெண்டிர். புறப்பெண்டிர் புதல்வனைப்பெறுவதற்கு உரிமையுள்ள இல்வாழ்க்கைக்குப் புறம்பான பெண்டிர்]

புறப்பொருள் *pura-p-porul,* பெ. (n.) 1. *புறத்திணை (பு.வெ.சிறப்பு.1.)* பார்க்க; see *pur-a-t-tinai.* 2. வீரம் (சீவக.1090,உரை.); martial spirit, heroism. 3. வெளிப்படையான பொருள் (கம்பரா.இரணிய.32.); apparent meaning.

[புறம் + பொருள்]

புறப்பொருள்வெண்பாமாலை *pura-p-porul-venpā-mālai,* பெ. (n.) புறத்திணை வகைகளைப் பற்றி வெண்பாவினால் ஐயனாரிதனார் இயற்றிய ஓர் இலக்கண நூல்; a treatise on the topics of puram, in venpā metre, by Aiyanāridanār.

[புறப்பொருள் + வெண்பா + மாலை]

புறம்[1] *puram,* பெ. (n.) 1. வெளியிடம்; outside, exterior, opp. to agam. *'புறங்குன்றி கண்டனையரேனும்'* (குறள்,277.). 2. அயன்மை (அன்னியம்); that which is foreign, extraneous. 3. *புறத்திணை* பார்க்க; see *pura-t-tinai.* 4. *புறநானூறு* பார்க்க; see *puranānūru.* *"அகம்புறமென் றித்திறத்த"* (தனிப்பா.) 5. வீரம்(சூடா.); heroism, bravery, valour. *'தான்புறங் கட்டுப்பட்டு'* (சீவக.1090.) 6. பக்கம்; side, part, face, surface. *'புனலாடப் புறஞ்சூழ்ந்து'* (கலித்.76). 7. முதுகு; back. 'புறம்புல்லின் (கலித்.94). 8. *புறக்கொடை* பார்க்க; see *pura-k-kodai.* *'துப்புறுவர் புறம் பெற்றிசினே'* (புறநா.11.) 9. பின்புறம் (வின்.) backside, behind, background, rear.

10. புறங்கூற்று; backbiting, as person, calumny. *'புறஞ்சொல்லும் புன்மையால்'* (குறள்,185.). **11.** அலர்மொழி; gossip about intrigue between lovers. *'புறமாறப்பட்டவர்'* (கலித்.80.) **12.** ஒருதலைப்பக்கம் (பட்சபாதம்) (வின்.); partiality, **13.** இடம் (திவா.); place. *'கரிபுறவட்டில்'* (சிலப்.16,32.). **14.** இறையிலி நிலம்; land free from assesment. *'ஐந்தூரதன்புற மாக்கினானே'* (சீவக.2574.). **15.** ஏழனுருபுள் ஒன்று (நன்.302.); (gram.) a locative case suffix. **16.** திசை (வின்.); region, point of compass quarter; tract or part of a country, district. **17.** காலம்; time, season. *'யாம்பிறர் செய்புற நோக்கி யிருத்துமோ'* (கலித். 111.).

ம. புறம்; **க.**பொற, பொறகு, பொறகெ; **து.**பிட; **கோத.** பொரன்ச்

[பின் → பிற → பிறவு → பிறகு → பிறக்கு. பிறக்கிடுதல் = பின்னுக்குச்செல்லுதல். பிறக்கு → பிறங்கு → பிறங்கடை = பின்னால் வரும் உரிமையாளன் (வாரிசு). பின் → பினம் → பிறம் → பிறம்பு → பிறம்பத்தங்கால் = பின்னங்கால். பிள் → பின் → பிறம் → புறம் = வெளி, வெளிப்பக்கம், புறப்பொருள். 'உள்ளும் புறம்பும்' 'அகமும் புறமும்' என்னுந் தொடர்களால் புறம் என்னும் சொல் உட்பக்கத்திற்கு எதிரான வெளிப் பக்கத்தைக் குறிப்பது தெளிவாகும். மூடின கையின் உட்புறமாயிருப்பது உள்ளங்கை அல்லது அகங்கை என்றும் அதன் வெளிப்புறமாயிருப்பது புறங்கை என்றும் கூறப்படுதல் காண்க (மு.தா.293–295)]

புறமாவது நிரை கோடற்பகுதியும், பகை வயிற்சேறலும், எயில் வளைத்தலும் இருபெரு வேந்தரும் ஒரு களத்துப் பொருதலும், வென்றிவகையும், நிலையாமைவகையும் புகழ்ச்சிவகையும் என எழு வகைப்படும். (இளம், தொல். புறத்திணை. முன்.)

பொருளிலக்கணத்தில் பொருள்களெல்லாம் அகம், புறம் என இரண்டாகவும், அவற்றுள் அகம் கைக்கிளை ஐந்திணை பெருந்திணை என ஏழாகவும், புறம் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழாகவும் வகுப்படும். (ஒ.மொ. 1,176) மக்களையெல்லாம் நடத்தும் குணம் இரண்டு அவை காதலும் மறமும். இவ்விரு குணங்களுள்ளும் அல்லது குண வாழ்க்கையுள்ளும் உள்ளத்திற்கு மிக நெருங்கியது காதலே. ஆதலால் அதை அகமென்றார். அகமல்லாதது புறமாதலின் மறத்தைப் புறம் என்றார். இங்ஙனம் இரண்டையும் வேறுபடுத்திக் கூறினும் அவை அகப்பகையும் புறப்பகையும் போலப் பிரிந்து நில்லாது அகங்கையும் புறங்கையும் போல ஒன்றியே நிற்கும் (தமி.வ.115).

puṟam, a side, especially the outside, the exterior, the back e.g., *appuṟam*, that side; *ippuṟam*, this side; adjectivally puṟattu, external; adverbially puṟambāga (puṟam-b-āga), externally; as a verbal theme puṟappaḍu (pura-(p)-paḍu), to set out; Can pora-ge, outside; pora-ḍu, to set forth. There is, doubtless, an ulterior connection between puṟa-m, the outside, externally, and piṟa, other, after; yet they are not to be regarded as one and the same word; and puṟam has affinities of its own, as well as meanings of its own. Comp.Greek para, beside, in which one of the meanings of the Dravidian word appears, whilst the meaning of 'side' is not conveyed by the relative Sanskrit para. Comp. especially the Latin *foris* abroad; *forum*, a public place; fori, the decks of a ship, with the Canarese *pora*, outside, This seems a more natural derivation of *foris* than the Greek *thura*, Sans, *dvāra*, a door, a word which I have compared with the Dravidian *tiṟa*, to open, In the

Dravidian languages f is unknown, and, p is always used instead. (CGDFL. **599,600**)

புறம்² *puṟam,* பெ. (n.) **1.** உடம்பு; body. *'பைம்புறப் படுகிளி'* (ஐங்குறு.**260**.). **2.** மதில் (பிங்.); fortification. **3.** மருதநிலத்தூர் (சூடா.); village or town in agricultural tract.

[பின் → பிறம் → புறம் = மருத நிலத்திற்குப் புறம்பான முல்லை, முல்லையடுத்த குறிஞ்சி. (மு.தா.295)] உயிர் உள்ளிருப்பது; உயிர் குடியிருக்கும் உடம்பு வெளியிருப்பது என்னும் பொருளைக் குறிக்கும் வகையிலேயே புறம் உடம்பைக் குறித்தது. பின் புறமாக அமைந்த கோட்டை, காப்புள்ள ஊர் என்னும் வகையில் மருத நிலத்தூரைக் குறித்தது.

புறம்காட்டு–தல் *puṟam-kāṭṭu-,* **15** செ.கு.வி (v.i.) *புறங்காட்டு¹–தல்* பார்க்க; see *puṟaṅkāṭṭu-,*

ம. புறம்காட்டுக.

[புறம் + காட்டு–,]

புறம்படி *puṟam-paḍi,* பெ. (n.) நகரின் புறப்பகுதி; outskirts of a town. 'தஞ்சாவூர்ப் புறம்படி' (S.I.I.ii.**124**).

மறுவ. ஊர் ஒதுக்குப்புறம்

[புறம் → புறம்படி]

புறம்பணை¹ *puṟam-paṇai,* பெ. (n.) **1.** முல்லைநிலம்; pastoral tract. **2.** குறிஞ்சிநிலம்; hilly tract.

[பின் → பிறம் → புறம் = மருத நிலத்திற்குப் புறம்பான முல்லை, முல்லையடுத்த குறிஞ்சி. புறம் → புறம்பு → புறம்பணை = முல்லை, குறிஞ்சி. (மு.தா.295)]

புறம்பணை² *puṟam-paṇai,* பெ. (n.) நகர்ப்புறமாகிய மருத நிலம்; agricultural region outside a town. *'புறம்பணை யிம்பு மோசை'* (சீவக.**85**.).

[புறம் → புறம்பு → புறம்பணை (மு.தா.295)]

புறம்பணையான் *puṟampaṇaiyāṉ,* பெ. (n.) ஊர்க்கு வெளியேயிருப்பவன், ஐயனார்; Aiyaṉār, as having His abode outside the village. 'புறம்பணையான் வாழ்கோட்டம்' (சிலப்.**9, 12**.).

மறுவ. காரி, புறத்தவன், கடல்வண்ணன், சாத்தா, பூரணைகேள்வன், புல்கலை மணாளன், மாசாத்தன், செண்டாயுதன், வெள்ளையானையூர்தி, அறத்தைக் காப்போன்

[புறம்பணை+ ஆன்]

புறம்பர் *puṟambar,* பெ. (n.) புறப்பக்கம்; outside. *'புறம்பரெய்தி'* (பாரத.திரௌபதிமா.**65**.)

[புறம்பு + அர்]

புறம்பாக்கு–தல் *puṟambākku-,* **12** செ.குன்றாவி. (v.t.) **1.** நீக்குதல்; to exclude. **2.** குலத்தி (சாதியி)னின்றும் நீக்குதல் (வின்.); to excommunicate.

மறுவ. தள்ளிவைத்தல்

[புறம் → புறம்பு + ஆக்கு–,]

புறம்பு[1] *puṟambu,* பெ. (n.) **1.** வெளியிடம்; exterior, outside. *'பொங்கரில் வண்டு புறம்பலை சோலைகள்'* (பெரியபு.ஆனாய.7.). **2.** தனியானது (வின்.); that which is separate, detached, distrinct or exclusive. **3.** மற்றை; other **4.** முதுகு; back of a person. *'தன்னைப் புறம்பழித்து நீவ்'* (கலித்.51.).

க.ஹொரகு

[புறம் = வெளி, வெளிப்பக்கம், புறப் பொருள். புறம் → புறம்பு = வெளிப்புறம். (மு.தா.295)]

புறம்பு[2] *puṟambu,* பெ. (n.) பழைய வரிவகை; an ancient tax (S.I.I.iv,**99**).

புறம்புக்குப்போ–தல் *puṟambukku-p-pō-,* **8** செ.கு.வி. (v.i) மலங்கழித்தல் (வின்.); to go to stool.

மறுவ. வெளிக்குப்போதல்

[புறம்→புறம்பு = வெளிப்புறம். புறம்பு + போ–,]

புறம்புபண்ணு–தல் *puṟambu-paṇṇu-,* **12** செ.குன்றாவி. (v.t.) **1.** தனியாக்குதல்; to set apart. **2.** *புறம்பாக்கு–தல்* பார்க்க; see *puṟambākku-,*

[புறம் → புறம்பு + பண்ணு–,]

புறம்புல்கு–தல் *puṟam-pulgu-,* **12** செ.குன்றாவி.(v.t.)பின்புறத்தைக் கட்டித்தழுவுதல்; to clasp or embrace a person from behind, as a child in play. *'என் குட்டன் வந்தென்னைப் புறம்புல்குவான்'* (திவ்.பெரியாழ்.1,9,1.).

[புறம் + புல்கு–,]

புறம்பெறு–தல் *puṟam-peṟu-,* **9** செ.குன்றாவி. (v.t.) (முதுகு காணுதல்) புறக்கொடையைப் பெறுதல்; lit, to see the back to gain victory over one's enemies. *'கொங்கு புறம்பெற்ற கொற்ற வேந்தே'* (புறநா.373.)

[புறம் + பெறு–,]

புறம்பேசு–தல் *puṟam-pēšu-,* 7 செ.கு.வி. (v.i.) (ஒருவர் இல்லாதபோது அவரைப்பற்றி) குற்றங்குறை சொல்லுதல், புறங்கூறுதல் (திவ்.பெரியாழ். 2,4,5, வ்யா. பக்.319); to back bite. அவர் என்னைப் பற்றிப் புறம் பேசித்திரிகிறார். (உ.வ.)

[புறம் + பேசு–,]

புறம்பொசி–தல் *puṟam-poši-,* 3 செ.கு.வி. (v.i.) **1.** வெளியிற் கசிதல்; to ooze. **2.** வெளிப்படுதல்; to emerge. *'உட்கிடந்த வண்ணமே புறம்பொசிந்து காட்டிடே'* (குருபரம். தனிப்.)

[புறம் + பொசி–,]

புறம்போ–தல் *puṟam-pō-,* 9 செ.கு.வி. (v.i.) விட்டு நீங்குதல்; to quit, leave off. *'அறிவு புறம்போய'* (கல்லா.கண.துதி.)

[புறம் + போ–,]

புறம்போக்கு[1]–தல் *puṟam-pōkku-,* **8** செ.குன்றாவி. (v.t.) அகற்றுதல்; to remove, take away. *'பலகை புறம்போக்க'* (பெரியபு. ஏனாதி.37.)

[புறம் + போக்கு–, போகு– (த.வி.) போக்கு (பி.வி.)]

புறம்போக்கு² *pur̲am-pōkku,* பெ. (n.) 1.குமுகாய(சமுதாய) நன்மை வேளாண்மைக்குத் தகுதியின்மை முதலிய காரணங்களினால் குடிகள்வசம் விடப்படாததும் தீர்வை வகுக்கப்படாததுமாகிய நிலம்; land exempt from assessment, either because it is set a side for communal purposes or because it is unclutivable (M.N.A.D.1,284.). 2. பொதுமகள்; public woman.(C.G.)

ம. புறம்போக்கு (வெளியூர் செல்லல், கூடுதல் செலவு)

[புறம் + போக்கு போ → போக்கு]

புறம்போக்கு³ *pur̲am-pōkku-,* பெ. (n.) தாய் தந்தை அற்றவர்; orphan. போடா புறம்போக்கு நாயே (உ.வ.).

[புறம் + போக்கு]

புறம்போக்குநிலம் *pur̲am-pōkku-nilam,* பெ. (n.) பயிர்செய்யத் தகுதியற்றதும், தீர்வைக்குட்படுத்தப் பெறாததுமான அரசு நிலம்; not taxed barren land.

[புறம் + போக்கு + நிலம்]

புறம்விடு—தல் *puram-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) விலக்கிவிடுதல்; to abandon. *'என்னைப் புறம்விடுத லென்னே பராபரமே'* (தாயு.பராபர.263.)

[புறம் + விடு—,]

புறமட்டைநார் *pur̲a-maṭṭai-nār,* பெ. (n.) பனைமட்டையின் வெளிப்புறத்திலிருந்து எடுக்கும் மட்டமான நார்வகை; fibre on the outer side of the palmyra leaf stalk, considered inferior.

[புறமட்டை + நார்]

புறமடை *pur̲a-maḍai,* பெ. (n.) 1. வெளி வாய்க்கால்; outside channel. 2. மதகின் வெளிப்புறம்; outlet of a channel. *'புறமடை யடைப்பதாற் பயனில்லை'* 3. வெளிமடை; the outside of a sluice. 4. கோயிற் புறத்துள்ள சிறு தெய்வங்கட்கு இடும் படைப்பு (வின்.); offering of flesh and spirits, made to ferocious deities, outside a temple opp.to uṇmaḍai.

[புறம் + மடை. மடு → மடை]

புறமதில் *pur̲a-madil,* பெ. (n.) கோட்டையின் வெளிமதில் (பதிற்றுப்16,உறை); outer wall of a fortified town.

ம. புறமதில்

[புறம் + மதில்]

புறமதிற்சேரி *pur̲a-madir̲-cēri,* பெ. (n.) *புறஞ்சேரி* பார்க்க; see *pur̲añcēri.* *'புறமதிற்சேரியுங் குறுகுதற் கரிதா'* (பெருங். உஞ்சைக்.47,72).

[புறம் + மதில் + சேரி. சேர் → சேரி]

புறமயிர் *pur̲a-mayir,* பெ. (n.) உடலின் மயிர் (வின்.); hair on the body.

[புறம் + மயிர்]

புறமலை *pur̲a-malai,* பெ. (n.) பக்கமலை; sistering hill. *'மாலிருஞ் சோலைப் புறமலைசார'* (திவ்.திருவாய், 2,10,5.)

ம. புறமல

[புறம் + மலை]

புறமறி—தல் *pura-mari-,* 2 செ. குன்றாவி. (v.t.) வெளியிலிருந்து உணர்தல்; to feel (a thing from being outside). *'மிக்கோய் இதனைப் புறமறிப் பாராய்'* (மணிமே.4,121.).

[புறம் + அறி—,]

புறமறிப்பார்—த்தல் *puramari-p-pār-,* 4 செ.குன்றாவி.(v.t.) (உட்பக்கத்தை வெளிப்புறமாகத் திருப்பிப் பார்த்தல்) நன்கு ஆராய்தல்; to examine closely, as by turning inside out. *'மக்கள் யாக்கையிதுவென வுணர்ந்து மிக்கோ யிதனைப் புறமறிப்பாராய்'* (மணிமே.4,121.).

[புறம் + மறி + பார்—,]

புறமறிவு *puram-arivu,* பெ. (n.) பிறர்க்கு நன்மை நினைக்கை (வின்.); regard for the welfare of other, benevolence.

[புறம் + அறிவு. அறி → அறிவு]

புறமறை—த்தல் *pura-marai-,* 4 செ.குன்றாவி. (v.t.) வெளித்தோன்றாமல் மறைத்தல்; to canceal, hide. *'கையாற் றொழுக்கங் கொண்டு புறமறைத்து'* (மணிமே.23,22.).

[புறம் + மறை—,]

புறமனை *pura-manai,* பெ. (n.) மேலோர் வாழும் ஊர்க்குடியிருப்புக்கு வெளியிலுள்ள மனையிடம்; house-site outside the quarters of the higher castes, opp.to uṇmanai. (C.G.)

[புறம் + மனை]

புறமாக *puramāga,* வி.எ. (adv.) 1. பக்கமாய்; in the direction of, towards. தாமதமாக வந்தவர்கள் ஒரு புறமாக நின்றனர். (உ.வ.) 2. வெளிப்படையாய்; clearly.

[புறம் → புறமாக]

புறமாறு[1]—தல் *pura-māru-,* 11 செ.கு.வி. (v.i.) 1. இடம்மாறுதல்; to migrate, change place. *'கொங்குண வண்டிற் பெயர்ந்து புறமாறீ'* (ஐங்குறு.226.). 2. வலிமையிழத்தல்; to lose vigour or strength. *'இரப்பவ னெஞ்சம்போற் புல்லென்று புறமாறி,* (கலித்.120,5.).

[புறம் + மாறு—,]

புறமாறு[2]—தல் *puramāru-,* 11 செ.குன்றாவி. (v.t.) கைவிடுதல்; to abandon, desert. 'அருள் புறமாறிய' (கலித்.15).

[புறம் + மாறு—,]

புறமானம் *puramānam,* பெ. (n.) மேலெல்லை; upper limit. இந்த அஸ்தைர்யத்திலும் உள்மானம் புறமான மொழிய நித்யராயிருப்ப ரொருவருமில்லை (திவ்.திருச்சந்.66,வ்யா.பக்.191).

[புறம் → புறமானம். மானம் = அளவு, எல்லை]

புறமுதுகிடு—தல் *puramudugidu-,* 20 செ.கு.வி. (v.i.) *புறமுதுகுகாட்டு—தல்* பார்க்க; see *puramudugu kāṭṭu-,*

[புறமுதுகு + இடு—,'இடு' து.வி.]

புறமுதுகுகாட்டு—தல் *puramudugu-kāṭṭu-,* 15 செ.கு.வி. (v.i.) (போரில் எதிர்த்து நிற்காமல் கோழைத்தனமாக) திரும்பிச் செல்லுதல், பின்வாங்குதல்; to back track (from battle). போர்க்களத்தில் செத்துமடிவோம்; புற முதுகுகாட்ட மாட்டோம் என்பதுதான் மறவர்களின் சூளுரை (உ.வ.).

[புறமுதுகு + காட்டு—,]

புறமுழவு *pur̠a-mul̠avu,* பெ. (n.) அதமத் தோற்கருவி (சிலப்.3,27,உரை); a kind of inferior drum, as kaṇa-p-par̠ai, etc.

[புறம் + முழவு. முள் → முழு → முழா = திரட்சி, மத்தளம். முழா → முழவு]

புறமூலம் *pur̠a-mūlam,* பெ. (n.) முளை வெளித்தோன்றும் மூலநோய் வகை; external piles (M.L.).

[புறம் + மூலம்]

புறமேழி *pur̠amēl̠i,* பெ. (n.) பொத்தாறு இல்லாமல் பயன்படுத்தும் மேழி; plough share without shaft.

[புறம் + மேழி]

புறமொழி *pur̠a-mol̠i,* பெ. (n.) புறங்கூற்று; backbiting, slander. *'நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி'* (தொல்.பொ.274.).

[புறம் + மொழி]

புறவடி *pur̠a-vaḍi,* பெ. (n.) பாதத்தின் மேற்புறம்; upper surface of the foot, instep. *'யாமயாழ் மழலை யாடன் புறவடிக் கிழுக்க மன்னோ'* (கம்பரா.நாடவி.34.).

ம. புறவடி

[புற(ம்) + அடி]

புறவடை *pur̠avaḍai,* பெ. (n.) 1. கிணற்றிறவையால் வேளாண்மை செய்யப்படும் நன்செய்த்தாக்கு; plot of wet land cultivated mainly by lift irrigation.(C.G.) 2. குடிவாரத்துக்கு அடைத்த நிலம்; field let to a tenant for cultivation. (R.T.)

மறுவ. ஈடுகாட்டி, அடைமானம்

[புறவு + அடை]

புறவண்டை *pur̠a-v-aṇḍai,* பெ. (n.) பின்புறம்; back, behind. *'புறவண்டை வந்து பிடித்தார்கள்'*

மறுவ. புறத்தாலே

[புற(ம்) + அண்டை]

புறவணி *pur̠avaṇi,* பெ. (n.) *புறவு¹, 3,4.* **(பிங்.)** பார்க்க; see *puravu¹,* 3,4

[புறவு + அணி. அண் → அணி]

புறவம்¹ *pur̠avam,* பெ. (n.) 1. *புறவு–1,3,4.* **(பிங்.)** பார்க்க; see *pur̠avu- 1,3,4,* *"நறைவிரி புறவம்"* (கம்பரா.நாட்டுப்.48.). 2. சீர்காழி (தேவா.); Shiyali. 3. தோல் (அக.நி.); skin.

[புறம் → புறவு → புறவம்]

தமிழ்ச்சொற்கள் பல இன்னோசைபற்றி 'அம்'ஈறு பெறுதல் பெரும்பான்மை எ–டு. தூண்–தூணம்; கால்–காலம்; குன்று–குன்றம்; நெஞ்சு–நெஞ்சம்; கண்டு–கண்டம் (இலக்.கட்31).

புறவம்² *pur̠avam,* பெ. (n.) *புறா* பார்க்க; see *pur̠ā.* *'கானுறை புறவ மெல்லாம்'* (சீவக.1430.).

[புறம் → புறவு = முல்லை, குறிஞ்சி. புறம் → புற = முல்லை நிலப்பறவை வகை. புற → புறா → புறவு → புறவம் (மு.தா.295)]

புறவயம் *pur̠a-vayam,* பெ. (n.) வெளி உலகைச் சார்ந்து அமையும் தன்மை; external. *'புறவயமான தூண்டுதல்களும் அகவயமான தூண்டுதல்களும் ஒருங்கிணைந்து ஓர் எழுத்தாளனை எழுத வைக்கின்றன'* (உ.வ.).

[புறம் + வயம்]

புறவயிரம் *pura-vayiram,* பெ. (n.) மரத்தின் வெளிவயிரம் (வின்.); the hard outer part of an exogenous tree.

[புறம் + வயிரம்]

புறவரி *pura-vari,* பெ. (n.) தலைவனுடன் அணையாது தலைவி புறத்தே நின்று நடிக்கும் நடிப்பு; dance of a woman coldly neglecting the company of her lover. "புறத்து நின்றாடிய புன்புற வரியும்" (சிலப்.8,93.).

[புறம் + வரி]

புறவழி *pura-vali,* பெ. (n.) பின்பக்கம்; backside. *'வீட்டின் புறவழிச் சுவர்'.*

மறுவ. புறவடை, புழக்கடை, கொல்லைப்புறம், பொறவடை

[புறம் + வழி]

புறவழிச்சாலை *puravali-c-cālai,* பெ. (n.) நகரம், ஊர் முதலியவற்றினுள் நுழையாமலே அவற்றைக் கடந்து செல்லும் வகையில் அவற்றின் வெளி எல்லையை ஒட்டி அமைக்கப்பட்டிருக்கும் நெடுஞ்சாலை; by pass road.

[புறவழி + சாலை]

புறவளையம் *pura-valaiyam,* பெ. (n.) கண்ணோவு முதலியவற்றுக்கு இடும் மருந்துவகை (வின்.); a medicinal unguent for sore eyes, etc.,

க. கொர வளெய (சுற்று, சூழல்,வட்ட வடிவமாதல்)

[புறம் + வளையம். வள் → வளை → வளையம்]

புறவாய் *puravāy,* பெ. (n.) வெளிப்புறம்; that which is outside, exterior. "அருகு நின்றவர்களின் முகத்திலே அப்பூச்சியென்று கண்ணினிமையை அகவாய் புறவாயாகப் புரட்டி விழித்து" (திவ்.பெரியாழ்.2,4,6, வ்யா.பக்.320).

[புறம் → புற + வாய். வாய் = இடம்.]

புறவாயம் *pura-v-āyam,* பெ. (n.) பணமாகத் தண்டப்படும் செக்கிறை முதலாய சில்லறை வரிகள்; revenue from external sources, collected mainly in cash. *'வடகண்டத்திலும் கமுகடியிலும் வந்த புறவாயங்களால்'* (S.I.I.ii,121.)

[புற(ம்) + ஆயம்]

புறவாயில் *pura-vāyil,* பெ. (n.) வெளிவாசல் (வின்.); outer door, gate or entrance.

ம. புறவாயி, புறாயி (தாழ்வாரம்); **து.** பொரப்படி

[புறம் + வாயில்]

புறவாரி *pura-vāri,* பெ. (n.) தாய்ச்சுவரைக் கடந்து வெளியில் நீண்டுள்ள கூரை (கொ.வ.); eaves.

மறுவ. இறப்பு, இறவாரம், இறவாணம் சாக்கை.

[புறம் → புறவாரி]

புறவாலி *puravāli,* பெ. (n.) மலங்கழிக்குமிடம்; latrine, privy. (C.G.)

[புறம் → புறம்பாய் → புறவாய் → புறவாயி → புறவாலி. வெளிக்குச் செல்லுதல், வெளிக்குப் போதல், கொல்லைக்குப் போதல் போன்று அவையல் கிளவியாய் ஆளப்பட்டது புறவாலி. புறவிடை வீட்டுக் கொல்லையைக் குறிப்பது ஒப்பு நோக்கத்தக்கது]

புறவாழி *pur̲a-v-āl̲i,* பெ. (n.) பெரும்புறக்கடல்; the outermost ocean surrounding the seventh annular continent, *'பின்னப் படுத்திப் புறவாழி வரல்போல்'* (இரகு.திக்கு.38.).

[பிற(ம்) + ஆழி]

புறவிசிவுச்சன்னி *pur̲a-v-iśivu-c-can̲n̲i,* பெ. (n.) *புறவீச்சு*(வின்.)பார்க்க; see *pur̲aviccu.*

[புறம் + இசிவு + சன்னி]

Skt. san-ni-pāta › த. சன்னி

புறவிடுதி *pur̲a-viḍudi,* பெ. (n.) *பிறவிடுதி* (யாழ்ப்.) பார்க்க; see *pir̲aviḍudi*

[பிறவிடுதி → புறவிடுதி]

புறவிடை[1] *pur̲a-viḍai,* பெ. (n.) பிரிதற்குப் பெறும் விடை; permission to leave. *'கசிந்து தாழ்ந்தனன் புறவிடை கொண்டான்'* (காஞ்சிப்பு.பன்னிரு.142.).

[புற(ம்) + விடை]

புறவிடை[2] *pur̲a-viḍai,* பெ. (n.)வீட்டுக் கொல்லை; back-yārd of a house. Cm.

[புற(ம்) + இடை]

புறவிதழ் *pur̲a-vidal̲,* பெ. (n.) பூவின் வெளிப்புறத்துள்ள இதழ்; sepal of a calyx, external petal.

மறுவ. புல்லி.

க. கொரசொப்பு
...

[புற(ம்)+ இதழ்]

புறவிரல் *pur̲a-viral,* பெ. (n.) விரலின் வெளிப்பக்கம்; out side of a finger. *'வீக்கின நரம்பை அகவிரலாலும் புறவிரலாலும் கரணஞ் செய்து'* (சீவக.657,உரை.)

[புறம் + விரல். விரி → விரல்]

புறவீச்சு *pur̲a-viccu,* பெ. (n.) *புறவீச்சுச் சன்னி* (வின்.) பார்க்க; see *pur̲a-viccu-c-can̲n̲i.*

[புறம் + வீச்சு]

புறவீச்சுச்சன்னி *pur̲a-viccu-c-can̲n̲i,* பெ. (n.) இசிவுநோய் வகை (வின்.); lockjaw, tetanus.

[புறவீச்சு + சன்னி]

Skt. san-ni-pāta › த. சன்னி

புறவீடு *pur̲a-vīḍu,* பெ. (n.) 1. யாத்திரைக்குமுன் நன்முழுத்தத்தில் அரசுச் சின்னத்தைப் புறத்தே அனுப்புகை; sending the royal equipage in advance at an auspicious hour, before a king's journey. *'வாளைப் புறவீடு விட்டது'* (பு.வெ.3,4, கொளு, உரை.) 2. *பிறவிடுதி* பார்க்க; see *pir̲aviḍudi* *'திருமாளிகையிலே புறவீடு விட்டிருக்கிற வளவிலே'* (திவ். பெரியாழ்,4,7.வ்யா.995.).

[புறம் + வீடு. விடு → வீடு.]

புறவீதி *pur̲a-vīdi,* பெ. (n.) 1. நகரின் வெளிவீதி; street outskirting a town. *'இவர் புற வீதிமகளிராய் முற்கூறிய கடைகழி மகளிர்'* (சிலப்.14,118, உரை). 2. கோயில் முதலியவற்றின் வெளிவீதி (வின்.); outer court of a temple, etc.

[புறம் + வீதி]

புறா வகைகள்

பச்சைப் புறா

நீலமலைப் புறா

புள்ளிப் புறா

கள்ளிப் புறா

மத்திப் புறா



பஞ்சவர்ணப் புறா

புறவு[1] *pur̤avu,* பெ. (n.) **1.** காடு; forest. '*உதிர்த்த மலர்வீழ் புறவின்*' (பெரும்பாண்.**496.**) **2.** சிறுகாடு; jungle. '*புறவே......மள்ளர் மேன*' (பதிற்றுப்.13,20.). **3.** முல்லை நிலம்; forest tract. '*தன்புற வணிந்த*' (குறுந்.404.). **4.** குறிஞ்சிநிலம் (சூடா.); hilly tract. **5.** வேளாண்மை நிலம்; cultivable land '*கண்மாய்ப் புறவு*'. **6.** முல்லைக் கொடி; eared jasmine. '*நின்னுத னாறு நறுந்தண் புறவின்*' (ஐங்குறு.**413.**).

ம. பிறாவு, ப்ராவு.

[புறம் = மருதநிலத்திற்குப் புறம்பான முல்லை, முல்லையடுத்த குறிஞ்சி. புறம் → புறவு = முல்லை, குறிஞ்சி (மு.தா.295)]

புறவு[2] *pur̤avu,* பெ. (n.) புறா; dove, pigeon, '*புன்புறப் புறவின் கணநிரை*' (பதிற்றுப்.39,11.).

[புறம் = மருதநிலத்திற்குப் புறம்பான முல்லை. புறம் → புற = முல்லை நிலப்பறவை வகை. புற → புறா → புறவு(மு.தா.295)]

புறவுரு *pur̤a-v-uru,* பெ. (n.) உடம்பினுறுப்பு; limb of the body, '*ஓரணு புற்கலம்புறவுரு வாகும்*' (மணிமே.27,197.).

[புறம் + உரு. புறம் = உடம்பு]

புறவுரை *pur̤a-v-urai,* பெ. (n.) பாயிரம் (நன்.பொது.2.); preface.

[புறம் + உரை.]

நூல்சொல்லிய பொருளில்லாதவற்றைச் சொல்வது புறவுரை.

புறவெட்டி *pur̤a-veṭṭi,* பெ. (n.) பழைய வரிவகை; an ancient tax (S.I.I.viii,***139***)

[புறம் + வெட்டி. வெட்டு → வெட்டி]

புறவெட்டு *pur̤a-veṭṭu-,* பெ. (n.) **1.** மரத்தில் வெட்டும் மேல்வெட்டு; cut on the surface of timber. **2.** அறுத்த மரத்துண்டின் மேற்பற்றை (வின்.); outside plank or piece of a sawn timber. **3.** எதிர்ப்பேச்சு (யாழ்ப்.); contemptuous opposition or contradicition.

[புற(ம்) + வெட்டு]

புறன்[1] *pur̤an̠,* பெ. (n.) 1 *புறம்* பார்க்க; see *pur̤am.* **2.** பழிச்சொல்; slander. '*கேளாம் புறன்*' (சி.போ.அவையடக்.**9.**).

[பின் → பிற்கு. பிறம் → பிறவு → பிறகு = முதுகு. பிறகு → பிறக்கு = முதுகு. புறம் → புறம் → புறன் (மு.தா.294) = (பின்னால்) பழிக்கும் சொல்]

புறன்[2] *pur̤an̠,* வி.எ. (adv.) காணாத போது; behind one's back. 'புறனழீஇப் பொய்த்து நகை' (குறள்,**182**).

[பின் → பிற்கு. பிறம் → பிறவு → பிறகு = முதுகு. பிறகு → பிறக்கு = முதுகு. பிறம் → புறம் → புறன் (மு.தா.294) = முதுகுக்குப் பின்னால்]

புறன்[3] *pur̤an̠,* பெ. (n.) மறுதலையானது, எதிரானது; that which is opposite. வஞ்சிதானே முல்லையது புறனே (தொல். பொரு. **6**).

[புறம் → புறன். வெட்சி – குறிஞ்சி, வஞ்சி – முல்லை, உழிஞை – மருதம், தும்பை – நெய்தல், வாகை – பாலை, காஞ்சி – பெருந்திணை, பாடாண் –கைக் கிளை என ஏழு அகத்திணைகளுக்கு ஏழு புறத்திணைகளைப் புறனாக (மறுதலைகளாக)க் கொள்வது மரபு.]

புறனடை *pur̤an̠aḍai,* பெ. (n.) *புறனடை நூற்பா* (நன்.**20.**) பார்க்க,; see *pur̤an̠aḍai nūr̤pā.*

[புறன் + அடை. புறத்து அடையாய் வருவது புறநடை. வேறு விதமாகிய நடக்கையெனினும் பொருந்தும் என்பார் ஆறுமுகநாவலர் (நன்.20.)]

முன்பு கூறப்பட்ட நடைமுறைக்குப் புறனாகக் கூறுதல். நடைப்புறன் என்பதன் இலக்கணப் போலியே புறனடையாகும்.

புறனடைச்சூத்திரம் *puranadai-c-cūttiram,* பெ. (n.) *புறனடை நூற்பா* பார்க்க; see *puranadai- nūrpā.*

[புறனடை + சூத்திரம்]

Skt. sūtra › **த.** சூத்திரம்.

புறனடைநூற்பா *purabadai-nūrpā,* பெ. (n.) வகுத்தவற்றுள் அடங்காதனவற்றை அமைத்துக் காட்டும் பொது நூற்பா **(சீவக.39, உரை.);** general permissive rule, sanctioning grammatical forms, not specifically dealt with.

[புறனடை + நூற்பா. நூல் + பா–நூற்பா]

புறனண்டை *purananḍai,* பெ. (n.) பின்புறம்; hind part, rear, back.

[பிறம் → புறம்→புறன்→புறனண்டை (மு.தா.294.)]

புறனழி–த்தல் *puran-aḻi-,* 4 செ.குன்றாவி. (v.t.) புறங்கூறுதல்; to defame, slander. ***'புறனழீஇப் பொய்த்து நகை'*** **(குறள்,182).**

[புறன் + அழி–,]

புறனிலை *purrnilai,* பெ. (n.) பின்னிலை **(அகநா.32.);** hanging on a person in expectation of a favour.

[புறன் + நிலை. பின் → பிற்கு. பிறம் → பிறவு → பிறகு. பிறம் → புறம் → புறன்]

புறனுரை *puran-urai,* பெ. (n.) **1.** பழிச்சொல்; slander. ***'பொல்லான் றிரைந்தானென்னும் புறனுரை'*** **(திவ்.பெரியதி.6,4,7.) 2.** வெற்றுரை; meaningless utterence ***'புறனுரையே யாயினும்.....திறனுரையே சிந்தித் திரு'*** **(திவ்.இயற்.1,41.)**

[புறன் + உரை]

புறனே *puranē,* வி.அ. (adv.) பின்பு, பிந்தி, பிறகு; after, afterwards, subsequently.

[பிறம் → புறம் → புறன்→ புறக்கடை = வீட்டின் பின்பக்கம். புறன் → புறனே (மு.தா.294)]

புறனோக்கு–தல் *puranōkku-,* 5 செ.கு.வி. (v.i.) ஒருவன் நீங்கும் அற்றம் பார்த்தல்; to watch for one's absence. ***'புறனோக்கிப் புன்சொலுரைப்பான் பொறை'*** **(குறள்,189.)**

[புறம் + நோக்கு–,]

புறா *purā,* பெ. (n.) வீட்டுப்பறவையாக வளர்ப்பதற்கு ஏற்றதான பல வகைகளில் காணப்படும் காட்டுப் பறவைவகை; dove, pigeon. ***'மாமணிப்புறா'*** **(சீவக.70.)**

ம. பிறாவு, ப்ராவு; **க.**கொரசு (ஒருவகைப் புறா); **து.** புத; **கோண்.**புரா், புராா்; கொண். பொா்ரொக; **குரு.** புா்ரா; **மால.**புரெ;

[புறம் →புற = முல்லைநிலப் பறவை வகை. புற → புறா]

புறாவகைகள்

1. ஐநிற(பஞ்சவர்ண)ப் புறா (emerald dove)
2. கள்ளிப் புறா (eurasian coloured dove)
3. சாம்பல் நெற்றிப்புறா (pompadour green pigeon)

4. சிறிய தவிட்டுப்புறா (little brown dove)
5. தவிட்டுப் புறா (red coloured dove)
6. நீலகிரி காட்டுப்புறா (Nilgiri wood pigeon)
7. பச்சைப்புறா (yellow legged green pigeon)
8. புள்ளிப்புறா (spotted dove)
9. பெரிய பச்சைப்புறா (green imperial pigeon)
10. மந்திப்புறா (mountain imperial pigeon)
11. மாடப்புறா (blue rock pigeon)



புறாக்காலி *puṟā-k-kāli,* பெ. (n.) பூடுவகை (வின்.); a kind of plant.

[புறா + காலி. கால் → காலி]

புறாக்குஞ்சு *puṟā-k-kuñju,* பெ. (n.) இளம்புறா; dove let.

[புறா + குஞ்சு. குள் → குய் → குய்ஞ்சு → குஞ்சு]

புறாக்கூட்டுவண்டி *puṟā-k-kūṭṭu-vaṇḍi,* பெ. (n.) ஒருவகைப் பெட்டி வண்டி (இ.வ.); box-bandy, bullock cart on spring as resembling a dovecote.

[புறா + கூட்டு + வண்டி]



புறாக்கூட்டுவேலை *puṟākūṭṭu-vēlai,* பெ. (n.) கட்டடவேலைவகை (இ.வ.); honeycomb work.

[புறா + கூட்டு + வேலை]

புறாக்கூடு *puṟā-k-kūḍu,* பெ. (n.) **1.** புறாக்கள் வசிக்குமாறு கட்டப்பட்ட கூண்டுகள் dovecote, pigeon-house. **2.** பேழை (அலமாரி) முதலியவற்றில் புறாக்கூடுபோற் செய்யப்பட்ட சிற்றறை (இக்.வ.); pigeon hole, as in a desk or bureau.

[புறா + கூடு. கூண்டு → கூடு.]

புறாண்டு—தல் *puṟāṇḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பிறாண்டு; to scratch.

[பிறண்டு → புறாண்டு]

புறாத்தலை *puṟā-t-talai,* பெ. (n.) சிறியதலை; small head, as of a dove. *'புறாத்தலைவேடன்'* (சீவக.450)

[புறா + தலை]

புறாப்பொறுக்கி *puṟā-p-poṟukki,* பெ. (n.) பூடுவகை (சித்.அக.); a plant.

புறாமாடம் *puṟā-māḍam,* பெ. (n.) *புறாக்கூடு* பார்க்க; see *puṟā-k-kūḍu.*

[புறா + மாடம்]

புறாமுட்டி *purāmuṭṭi,* பெ. (n.) செடிவகை; parakeet-bur, a widespread weed,

புறாமுட்டைச்சங்கு *purā-muṭṭai-c-cangu,* பெ. (n.) சங்கு வகை; kind of conch, resembles the egg of a dove.

[புறாமுட்டை + சங்கு]

புறாய் *puṟāy,* பெ. (n.) வேளாண்மைக்குரிய நிலவகை (செந்.xiii, 172.); a kind of arable land.

புறாவால் *purā-vāl,* பெ. (n.) பலகை முதலியவற்றை இணைக்கும் இணைப்பு வகை (இ.வ.); dovetail joint, as of plank, etc.

[புறா + வால்]

புன்கண் *puṉ-kaṇ,* பெ. (n.) **1.** துன்பம் (பிங்.); sorrow, distress, trouble, affliction, sadness. *'புள்ளுறு புன்கண் தீர்த்தோன்'* (சிலப்.20,52.). **2.** நோய் (பிங்.); disease. **3.** மெலிவு (திவா.); leannes, emaciation. **4.** வறுமை; poverty, adversity. *'இரவலர் புன்கணஞ்சும்'* (பதிற்றுப்.57,14.). **5.** பொலிவழிவு; loss of beauty or charm. *'புன்கண்கொண் டினையவும்'* (கலித்.2.). **6.** அச்சம்; fear *'பிரிவஞ்சம் புன்கணுடைத்தால்'* (குறள்,1152.). **7.** இழிவு; meaness. "பொய்க்கரி புகலும் புன்கணார்" (கம்பரா. கிங்கர. 58).

[புல் → புன் → புன்கண்.]

புன்கண்மை *puṉkaṇmai,* பெ. (n.) *புன்கண்* பார்க்க; see *puṉkaṇ.* *'பொருள்வேண்டும் புன்கண்மை'* (கலித்.61.).

[புன்கண் → புன்கண்மை]

புன்கம்[1] *puṉgam,* பெ. (n.) சோறு; (திவா.) boiled rice. *'பாற்பெய் புன்கந் தேனொடு மயக்கி'*(புறநா.34.).

[புழு → புகு → புகா = (உட்புகும்) உணவு. புகா → புகவு = உணவு (வே.க.3.104). புகா → புங்கா → புங்கம் → புன்கம் = உணவு, சோறு]

புன்கம்[2] *puṉgam,* பெ. (n.) புன்கு; Indian beech. *'புன்கம் பொரியணிந்தன'* (சீவக.1649.)

[புன்கு → புன்கம்]

புன்கம்பிண்ணாக்கு *puṉgam-piṇākku,* பெ. (n.) புன்கவிதையில் எண்ணெய் எடுத்த பிறகு உள்ள பயனற்ற சக்கை; oil cake of puṉgu seeds, as entirely useless. *'புன்கம் புண்ணாக்குக்குச் செக்கடித்தான்'*

[புன்கம் + பிண்ணாக்கு. பிள் + நாக்கு – பிண்ணாக்கு. புன்கம் விதைகளை எண்ணெயாட்டிய பின் எஞ்சிய சக்கை பிளவுபட்ட நாக்குபோல் இருப்பதால் பிண்ணாக்கு எனப்பட்டது.]

புன்காலி *puṉ-kāli,* பெ. (n.) (பிங்.) **1.** காயா; iron-wood tree.trumpet flower tree. **2.** பாதிரி; yellow-flowered fragrant trumpet-flower tree.

[பொல் → பொலிவு. பொல் → பொன் → புன் → புன்காலி.]

புன்கு *puṉgu,* பெ. (n.) மரவகை Indian beech. *'பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கு'* (சிலப்.12,பக்.318.). **2.** காட்டுப் புன்னை; Malabar poon. **3.** புரசு(திவா.); palas-tree. **4.** காட்டுப்பச்சிலை; rosewood. **5.** மரவகை; a species of privet, (Kādar.)

சாம்பல் நெற்றிப் புறா

மாடப் புறா



பெரிய பச்சைப் புறா

தவிட்டுப் புறா

ம. புங்ஙு; க. கொங்கெ; து. புங்கு

[பொல் → பொன் → புன் → புன்கு.]
புன்னை பார்க்க

புன்கூர்¹-தல் *puṉ-kūr-,* 3 செ.கு.வி. (v.i.) வருந்துதல்; to be distresed. *'வேட்கை மிகுதியான் வெய்துண்டு புன்கூர்ந்தார் போலவும்'* (தொல்.பொ.102,உரை.).

[புல் + கூர்-,]

புன்கூர்² *puṉkūr,* பெ. (n.) தஞ்சைமாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Tañjāvūr dt. 'காரேறும் எயிற் புன்கூர்' (பெரிய திருநாளை.).

[பொல் → பொன் → புன் → புன்கு + ஊர். புன்கு = புங்கமரம். திருப்புன்கூர் என்று அடைசேர்த்து வழங்குதலும் உண்டு]

புன்கெண்ணெய் *puṉgeṉṉey,* பெ. (n.) புன்கம் விதைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்; oil extracted from Indian-beech seeds.

[புன்கு + எண்ணெய். எள் + நெய் – எண்ணெய்]

புன்சிரிப்பு *puṉ-širippu,* பெ. (n.) இளமுறுவல்; gentle smile. *'செம்பவள வாய்க்குள்ளே புன்சிரிப்பின் மார்க்கமோ'* (பணவிடு. 315).

மறுவ. இளநகை, புன்னகை, மென்னகை

ம. புஞ்சிரி

[புன் + சிரிப்பு. 'புன்' அழியாமையை உணர்த்தும் முன்னொட்டு (த.வ. 1, 91) *]*

புன்செய் *puṉ-šey,* பெ. (n.) **1.** புன்செய்ப் பயிர் செய்வதற்கு ஏற்றநிலம் (பு.வெ. 12, வென்றி. 4.); land fit for dry cultivation only. **2.** புன்செய்ப் பயிர்; dry crop.

ம. புஞ்ச; தெ. புஞ்ச (மேட்டுநிலம்); து. புஞ்சகண்ட(வயல்)

['புல்' தாழ்வுப் பொருள் முன்னொட்டு (த.வ. 1, 93) புல் → புன் + செய் – புன்செய்]

மருதத்திலுள்ள விளைநிலங்கள் செய் எனப்பெயர் பெற்றன. செடி கொடி, புற்களைதல், கல்லெடுத்தல், உரமிடுதல், பன்முறையுழுதல், கட்டியடித்தல் பரம்படித்தல் (பல்லியாடுதல்), புழுதியாக்குதல், காயவிடுதல் என்றும் பல வகையில் திருத்தப்பட்ட நிலம் செய் எனப்பட்டது. செய்தல் திருத்துதல் பேரளவாகத் திருத்தப்பட்டது நன்செய் என்றும் சிற்றளவாகத் திருத்தப்பட்டது புன்செய் என்னும் சொல்லப்பட்டன. (தமி.வ.1,37).

புனமாயினும் புன் செயாயினும் பண்டைத் தமிழர் மேட்டு நிலத்திற் பயிர் செய்ய விரும்பவில்லை. மேடு சுவல் என்றும் பள்ளம் அவல் என்றும் பெயர் பெறும். "மேட்டுப் புன்செயை உழுதவனும் கெட்டான் மேனி மினுக்கியை மணந்தவனும் கெட்டான்" என்பது பழமொழி. (ப.த.நா.ப. 88).

புன்செய் வேளாண்மையாயின் புழுதியுணக்கற்குப் பின்னும் களையெடுத்தற்கு முன்னும் நாற்றுப்பாவல், பாத்தி பிடித்தல், நீர் பாய்ச்சி நடுதல் ஆகிய வினைகள் நிகழும். (ப.க.நா.ப.82)

புன்செய்க்காடு *puṉšey-k-kāḍu,* பெ. (n.) பயிரிடத்தக்க புன்செய்; cultivable dry land (P.T.I.).

[புன்செய் + காடு]

புன்செய்கை *puṉšeygai,* பெ. (n.) புன்செய்ப் பயிரிடுகை (வின்.); raising dry crop.

[புன் + செய் – புன்செய் → புன்செய்கை]

புன்செய்ச்சாகுபடி *punšey-c-cāgupaḍi,* பெ. (n.) *புன்செய்விளைச்சல்* பார்க்க; see *puncey-viḷaiccal.*

[புன்செய் + சாகுபடி]

புன்செய்த்தரநன்செய் *punšey-t-tara-nanšey,* பெ.(n.) புன்செய்யாகக் கணக்கில் பதியப்பட்டு நன்செய் வேளாண்மை செய்யும் நிலம்; land on which wet crops are raised, though classed as dry. (C.G.)

[புன்செய் + தரம் + நன்செய்]

புன்செய்த்தானியம் *pun-šey-t-tāniyam,* பெ. (n.) மேட்டுநிலத்தில் விளையுந்தவசம்; grains cultivated in the up land.

[புன்செய் + தானியம்]

Skt.dhanya > **த.** தானியம்

புன்செய்த்தோட்டம் *punšey-t-tōṭṭam,* பெ. (n.) நெல்லொழிந்த தவசங்கள் விளையுந் தோட்டம்; garden land in which cereals other that paddy are grown. (P.T.L)

[புன்செய் + தோட்டம்]

புன்செய்ப்பயிர் *punšey-p-payir,* பெ. (n.) நெல்லொழிந்த மற்றைப்பயிர்கள்; dry crops, cereals.

[புன்செய் + பயிர்]

புன்செய்ப்பருந்து *punšey-p-parundu,* பெ. (n.) கழுகுவகை; dwarf eagle (M.M, 218).

[புன்செய் + பருந்து]

புன்செய்ப்புறம்போக்கு *punšey-p-purampōkku,* பெ. (n.) அரசிற்குரிய பயிரிடப்படாத பொதுநிலம்; uncultivated goverment land.

[புன்செய் + புறம்+ போக்கு]

புன்செய்பாகாயாத்தீர்வை *punšey-pāgāyāt-tirvai,* பெ. (n.) புன்செய்யில் தோட்டப்பயிரிடும் போது ஏற்படும் தீர்வை; assesment charged on garden-cultivation in lands classed as dry. (R.T.)

[புன்செய் + பாகாயா + தீர்வை. தீர் → தீர்வை]

புன்செய்மேல்நன்செய் *punšey-mēl-nanšey,* பெ. (n.) *புன்செய்த்தர நன்செய்* பார்க்க; see *punšey-t-tara-nanšey* (C.G.)

[புன்செய் + மேல் + நன்செய்]

புன்செய்வரவுநன்செய் *punšey-varavu-nanšey,* பெ. (n.) முதலில் புன்செய்யாக விருந்து பின்பு நன்செய்யாகப் பதிவான நிலம் (இ.வ.); land originally classed as dry and later reclassed as wet.

[புன்செய் + வரவு + நன்செய்]

புன்செய்விளைச்சல் *puncey-viḷaiccal,* பெ. (n.) நெல்லொழிந்த ஏனையப் பயிர் வேளாண்மை; cultivation of cereals, other than paddy.

[புன்செய் + விளைச்சல். விளை → விளைச் சல். 'சல்' தொ.பெ.ஈறு]

புன்செயல் *punšeyal,* பெ. (n.) இழி செயல்; low work.

[புன் + செயல். புல் = சிறுமை]

புன்சொல் *punšol,* பெ. (n.) பழித்துரை; slander. *'புறனோக்கிப் புல்சொ லுரைப்பான் பொறை'* (குறள், 189).

[புன் + சொல். புல் → புன்]

புன்பயிர் *pun-payir,* பெ. (n.) 1. *புன்செய்ப் பயிர்* பார்க்க;(S.I.I. ii, 247) see *punšey-p-payir* 2. குறைந்த (அற்ப) விளைவு; poor crop *'ஆடுதேள் புன்பயிராம்'* (சினேந். 112.).

[புன் + பயிர்]

புன்புலம் *pun-pulam,* பெ. (n.) 1. வெற்று நிலம்; waste land *'புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சி'* (குறுந். 202.). 2. புன்செய் நிலம்; dry land. *'கானவைப்பிற் புன்புலத்தானே'* (குறுந். 183). 3. புல்லிய இடம்; arid, barren place. *'புன்புலக் களத்திடை'* (கம்பரா. முதற். 119.) 4. புல்லிய அறிவு; mean understanding. *'புன்புலத் தரக்கன்'* (கம்பரா. மகுட. 28.).

[புன் + புலம்]

புன்மக்கள் *pun-makkaḷ,* பெ. (n.) இழிந்தவர்; low, vulgar persons. *'வேறாய புன்மக்கள் பக்கம் புகுவாய் நீ'* (நாலடி. 266.).

[புன் + மக்கள். மக + கள் – மக்கள்]

புன்மரம் *pun-maram,* பெ. (n.) 1. புறவயிரமுள்ள மரம் (பிங்.); exogenous tree. 2. தென்னை (தைலவ. தைல.);coconut tree.

[புல் + மரம்]

புன்மாலை *pun-mālai,* பெ. (n.) புற்கென்ற மாலைக் காலம்; dim evening twilight. *'சிறுபுன் மாலை தலைவரின்'* (பு.வெ. 11, பெண்பாற். 3.).

[புன் + மாலை. மால் → மாலை = இரவும் பகலுங் கலக்கும் அந்திவேளை]

புன்மானம் *punmānam,* பெ. (n.) *புன்வானம்* பார்க்க; see *punvānam.*

[புன் + வானம் – புன்வானம் → புன் மானம்]

புன்முருக்கு *pun-murukku,* பெ. (n.) பூடுவகை (வின்.); a plant.

புன்முறுவல் *pun-muṟuval,* பெ. (n.) *புன்சிரிப்பு* பார்க்க; see *pun-širippu.* *'நின்முகங் காட்டிப் புன்முறுவல் செய்து'* (திவ். நாய்ச் 2, 9.).

[புன் + முறுவல்]

புன்முறுவல் செய்–தல் *pun-muṟuval-šey-*, 1செ.கு.வி. (v.i) நகைமுகங் காட்டுதல்; to-smile.

[புன்முறுவல் + செய்]

புன்மூரல் *pun-mūral,* பெ. (n.) *புன்சிரிப்பு* பார்க்க; see *pun-širippu.* *'புன்மூரல் தோன்றினாள்'* (சிவந்தெழுந்த பல்லவ. உலா. 276.).

[புன் + மூரல்]

புன்மை *punmai,* பெ. (n.) 1. இழிவு; meanness, lowness, vileness. *'பகைமிக்க நெஞ்சத்தேம் புன்மை பாராட்டுவாய்'* (கலித். 118.). 2. தூய்மையின்மை (அசுத்தம்); unclean-

ness. *'புன்மை நாளும் புனிதமாம்'* (திருவாலவா. 37, 10.). 3. சிறுமை (கோயிற்பு. நட. 29.); smallness. 4. துன்பம்; affliciton, suffering. சிறுபுன்மாலை (முல்லைப். 6) 5. வறுமை; poverty. *'மாலை யன்னதோர் புன்மையும்'* (பொருந. 96.). 6. குற்றம் (பிங்.); fault.*'புன்மையில் காட்சி யவர்'* (குறள், 174.). 7. புகர்நிறம்(உரி.நி.); murkiness, tawny colour. 8. பார்வை மழுக்கம்; dimness of vision. *'புன்மையின் மிக்கன புதுமைக் கண்களே'* (துணிகைப்பு. வள்ளி. 97.). 9. மறதி (சூடா.); forgetfulness, oblivion.

[புல்லுதல் = துளைத்தல். புல் = உட்டுளை யுள்ள நிலைத்திணைவகை, சிறுமை. புல் + மை – புன்மை = சிறுமை. சிறுதன்மை (வே.க. 3, 101.)]

புன்வானம் *pun-vānam,* பெ. (n.) விடியற் காலம் (வின்.); the grey of the morning gleam of day-break.

மறுவ. புலர்பொழுது.

[புன் + வானம். புல் → புன் → புன்மை = ஒளிமழுக்கம்]

புன்றலை *punralai,* பெ. (n.) 1. சிறியதலை (கோயிற்பு.நட.29.); small head. 2. இளந்தலை; tender head, as of a child. *'புன்றலை மந்தி'* (ஐங்குறு. 273.). 3. சிவந்த மயிருள்ள தலை; ruddy-haired head. *'புன்றலை யிரும்பரதவர்'* (பட்டினப். 90.).

[புன் + தலை. புல் → புன் → புன்மை = சிறுமை]

புன்றுமி *punrumi,* பெ. (n.) தூறல் (யாழ்.அக.); drizzle.

[புன் + துமி]

புன்றொழில் *punrolil,* பெ. (n.) தீச்செயல்; vicious deed, base or evil action. *'புன்றொழிற் குரங்கொடு புணரு நட்பனோ'* (கம்பரா. வாலிவதை. 25)

[புன் + தொழில்]

புன்னகை *punnagai,* பெ. (n.) *புன்சிரிப்பு* பார்க்க; see *punširippu*

மறுவ. இளநகை, மென்னகை

ம. புஞ்சரி.

[புன் + நகை. புல் = சிறுமை. புன்னகை = சிறுநகை. சிறுமையைக் குறிக்கும் 'புல்' நகையுடன் சேர்ந்து புன்னகை உருவாவது போல் தெலுங்கில் சிறுமையைக் குறிக்கும் சிறு நவ்வு (நகை)வுடன் சேர்ந்து சிறுநவ்வு (புன்னகை) சொல்லாட்சி உருவாயிருப் பதைக் காண்க.]

புன்னகைக்காட்டு-தல் *punnagai-k-kāttu-,* 5, செ.கு.வி.(v.i) புன்முறுவல் செய்தல், நகை முகம் காட்டுதல்; to smile.

[புன்னகை + காட்டு–,]

புன்னம்புலரி *punnampulari,* பெ. (n.) வைகறை; early dawn. *'புன்னம்புலரியி னிலப்பட'* (பரிபா. 6, 58.).

[புன் → புன்னம் + புலரி]

புன்னறவம் *punnaravam,* பெ. (n.) இஞ்சி (யாழ்.அக.); ginger.

புன்னறுவம் *punnaruvam,* பெ. (n.) சாரணை (மலை.); purslane leaved trianthema.

புன்னாகம்[1] *punnāgam,* பெ. (n.) **1.** *புன்னை* (பிங்.) (பரிபா. **11, 16.**) பார்க்க; see *punnai* **2.** குரங்குமஞ்சணாறி; kamela (L.). **3.** கோழிக்கீரை (மலை.); common purslane.

[பொல் → பொன்→புன்→புன்னை→ புன்னாகம்] 'புன்னை' பார்க்க.

punnāga, the tree rotleria tinctoria, from the blossoms of which a yellowish dye is prepared. Gt. (p. **518**) is right in deriving the word from D.pon etc., gold cf. D. punnike, ponne etc., (KKED.xxiv)

punnāga, a tree from the flowers of which a yellow dye is prepared. Drav.pon, gold. (CGDFL.577)

புன்னாகம்[2] *punnāgam,* பெ. (n.) *பூநாகம்*[1] (இ.வ.) பார்க்க; see *pūnāgam*[1].

[பூநாகம் → புன்னாகம்]

புன்னாகவராளி *punnāgavarāli,* பெ. (n.) பண் (இராக) வகை; (mus.) a musical mode.

புன்னாதர் *punnādar,* பெ. (n.) இழிந்த அறிவினர்; mean, stupid person. *'அல்லனவே யறைகின்ற புன்னாதர்கள்'* (சீவக. **3096.**).

[புன் + ஆதர்]

புன்னிடா *punnidā,* பெ. (n.) தகரை (மலை.); fetid cassia.

புன்னிலம் *punnilam,* பெ. (n.) பயனற்ற நிலை; barren land. *'புன்னிலத்திட்ட வித்து'* (சீவக. **2823.**).

[புல் → புன் + நிலம்]

புன்னீர் *punnīr,* பெ. (n.) **1.** கழிவு நீர்; drainage. *'புன்னீர் விட்டு பாய்ச்சிக் கொள்வதாகவும்'* (S.I.I. iii. **46**). **2.** குருதி; (சங்.அக.); blood.

[புல் → புன் + நீர்]

புன்னெறி *punneri,* பெ. (n.) **1.** தீயவழி; bad ways. *'புனனெறி யதனிற் செல்லும்'* (கந்தபு. வள்ளி. மண். **262.**). **2.** பொய்ச்சமயம்; false religion. *'புன்னெறித் துன்னயத் தன்பிலாரொடு'* (திருநூற். **22.**).

[புல் → புன் + நெறி]

புன்னை *punnai,* பெ. (n.) மரவகை; mastwood. *'புன்னை வாலிணர்ப் படுசினை'* (பதிற்றுப். **30, 3**).

ம. புன்ன; **க.** புன்னிகெ, பொன்னெ, கொன்னெ; **தெ.** பொன்ன; **து.** பொன்னெ;

த.புன்னை > Skt punnāga

[பொன் → பொலி → பொலிவு. பொல் பொற்பு. பொல்லுதல் = அழகாதல், பொலிதல். பொற்ற = அழகிய, சிறந்த பொன்னாலான. பொல் → பொன். (தமி .வ.37) பொன் → புன் → புன்னை = பொலிவான பூக்களைத் தருவது]

புன்னைவகைகள்

1. சிறுபுன்னை, **2.** சுரபுன்னை, **3.** சோரைப் புன்னை

புன்னைக்காயெண்ணெய் *punnai-k-kāy-enney,* பெ. (n.) *புன்னை யெண்ணெய்* பார்க்க see *punnai-y-enney.*

[புன்னைக்காய் + எண்ணெய்]

புன்னைக்கொட்டையெண்ணெய் *punnai-k-kottai-y-enney,* பெ. (n.) *புன்னை யெண்ணெய்* பார்க்க; see *punnai-y-enney.*

[புன்னைக்கொட்டை + எண்ணெய்]

புன்னையெண்ணெய் *punnai-y-enney,* பெ.(n.) புன்னை விதைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் (வின்.); domba oil, as extracted from punnai seeds

[புன்னை + எண்ணெய்]

புன்னைவனச்சம்பா *punnai-vana-c-cambā,* பெ.(n.)சம்பா நெல் வகை;a kind of camba paddy. புன்னைவனச் சம்பாப் புழுகு சம்பா (நெல்விடு.183)

[புன்னை + வனம் + சம்பா]

Skt vana › **த.** வனம்

புன்னைவனம் *punnai-vanam,* பெ. (n.) சங்கரநயினார் கோயில்; Sankara nayinār kōvil,a shrine scared to Sivan. தேமேவு புன்னைவனஞ் சென்று தொழ (சங்கரலிங்கவுலா,18)

[புன்னை + வனம்]

Skt. vana › **த.** வனம்

புனக்கவுல் *puna-k-kavul,* பெ. (n.) முக்கால் திட்டம் வரிசெலுத்தும் கட்டளையுள்ள குத்தகையுடன் படிக்கை; cowle granted on condition that three-fourths of the normal assessment should be paid (R.T.)

[புனம் + கவுல்]

புனக்கஞ்சி *puna-k-kañji,* பெ. (n.) *புனப்பாகம்* பார்க்க; see *punap*-pāgam.

[புனம் + கஞ்சி]

புனக்காடு *puna-k-kādu,* பெ. (n.) மலைசார்பிற் காட்டையழித்து இரண்டொரு ஆண்டு உழுது விதைத்துப் பின் செடி கொடிகளை முளைக்கவிட்டு மறுபடியும் முன்போற் செய்யும் சாகுபடி; shifting cultivation on the hill; cultivation on the wooded slopes, the jungle being cleared and burnt, and the process being repeated after allowing the land to lie fallow until a fresh growth has re-established itself, dist. fr. uravakādu

ம. புனக்கண்டம்

[புனம் + காடு]

புனக்காவல் *puna-k-kāval,* பெ. (n.) தினைப்புனங் காக்கை; watching crops in the hills.

[புனம் + காவல்]

புனக்குளம் *puna-k-kulam,* பெ. (n.) மழை நீர் தேங்கிநிற்கும் குட்டை; pool. *'பெரிய குளமும் புனக் குளங்களும்'* (S.I.I.v, 137.)

[புனம் + குளம். குல் → குள் → குளம்]

புனகம் *punagam,* பெ. (n.) உணவு; food. *'திருமுடிகட் கன்பாற் புனகமிட்டு'* (அரிசமய. பரகால. 150.)

[புன்கம் → புனகம்]

புனத்துளசி *puna-t-tulaši,* பெ. (n.) காட்டுத் துளசி (பிங்.); wild basil.

[புனம் + துளசி. துளவு = துளசி. துளவு → (துளசு) → துளசி]



புனப்பாகம் *puna-p-pāgam*,பெ.(n.) இருமுறை சமைத்த நீர்த்தன்மையான கட்டுப் பாடான உணவு;liquid diet or food, boiled twice to facilitate digestion.

[புனல் + பாகம்]

புனம் *punam*, பெ. (n.) மலைச் சார்பான கொல்லை; upland fit for dry cultivation. *'கானவன் சூடுறு வியன்புனம்'* (அகநா. 358.).

ம. புனம், புனக்கண்டம்; **து.** புஞ்ச

[புல்லுதல் = துளைத்தல். புல் = உட்டுளையுள்ள பயிர்வகை, சிறுமை, இழிவு. புல் → புலம்= தோண்டப்பட்ட நிலம். புலம்→ புனம்.]

குறிஞ்சியிலும் முல்லையுலுமுள்ள விளை நிலங்கள் கொல்லை அல்லது புனம் என்று பெயர் பெற்றன. (ப.த.நா.ப. 87.)

புனமல்லி *puna-malli*, பெ. (n.) காட்டு மல்லிகை (மூ.அக.); wild jasmine.

[புனம் + மல்லி]

புனமுருக்கு *puna-murukku*, பெ. (n.) *புரசு* [2] (பிங்.) பார்க்க; see *purašu* [2]

ம. புநமிந்ந

[புனம் + முருக்கு]

புனமுருங்கை *puna-murungai*, பெ. (n.) *புரசு* [2] பார்க்க; see *purasu.*[2] (L.)

[புனம் + முருங்கை]

புனர் *punar*, வி.எ. (adv.) மீண்டும், மறுபடியும், திரும்பவும்; further, again, back, in return.

[பின் + புன் → புனர்]

punar, further, again; back, in return; etc., Gt. (p.**526**) is inclined to connect this word with D.pin,etc. (KKEDxi)

புனர்ச்சன்மம் *punar-c-canmam*, பெ. (n.) *புனர் வாழ்வு* பார்க்க; see *punarvālvu.*

[புனர் + சன்மம்]

புனர்ச்சனனம் *punar-c-cananam*, பெ. (n.) *புனர்வாழ்வு* பார்க்க; see *punar-vālvu.*

[புனர் + சனனம்]

Skt. janana > **த.**சனனம்

புனர்சுரம் *punar-šuram*, பெ. (n.) இடைவிட்டு வரும் காய்ச்சல்; relapsing fever (M.L.)

[புனர் + சுரம்]

புனர்வாழ்வு *punar - vālvu*, பெ. (n.) **1.** மறுபிறவி (வின்); transmigration of souls. **2.** கடுநோய் முதலிய இடரினின்று தப்பிப்பிழைக்கை; recovery from serious illness or accident, considered as a rebirth. **3.** மறுவாழ்வு, இழந்தவற்றை அளிக்கை; rehabilitation.

[புனர் + வாழ்வு]

புனர்விசாரணை *punarvišāraṇai,* பெ. (n.) வழக்கின் மறு உசாவல் (விசாரணை); (legal.) re-trial.

[புனர் + விசாரணை]

Skt. vicāraṇa > த.விசாரணை

புனர்விவாகம் *puṉar-vivāgam,* பெ. (n.) மறுமணம்; remarriage as of widows.

[புனர் + விவாகம்]

Skt. punar > த.விவாகம்

புனரி *puṉari,* பெ. (n.) *புனரித்தண்டு* பார்க்க; see *puṉari-t-taṇḍu.*

[புனலி → புனரி]

புனரித்தண்டு *puṉari-t-taṇḍu,* பெ. (n.) பூடுவகை (யாழ். அக.); a plant.

[புனரி + தண்டு. துள் → தள் → தண்டு]

புனல்[1] *puṉal,* பெ. (n.) 1. நீர்; water. *'தண்புனல் பரந்த'* (புறநா. 7.). 2. ஆறு; flood, torrent, stream, river. *'மழை கொளக் குறையாது புனல் புக மிகாது'* (மதுரைக். 424) (பிங்.). 3. குளிர்ச்சி; cold. *'மண்புன லிளவெயில்'* (பரிபா. 15.27). 4. முற்குளம் (பூராடம்); the 20th naksatra. 'விட்டம் புனலுத்திராடம்' (விதான. குணா குண. 29.). 5. வாலுளுவை (சங்.அக.); black-oil tree.

மறுவ. வாரி, ஆலம், தீலாலம், மழையலர், நீரம், புட்கரம், சிந்து, பாணி, கார், ஆறல், மாரி, அம்பு, உதம், அப்பு, வருணம், வனம், வார்.

ம. புனல், புணல்; **க.** பொனல்; பொனலு, கொனல், கொனலு; **து.** புணல் (மிதத்தல்); **பட.** கொனல்

[புல்லுதல்= துளைத்தல். புல் → புன் → புனல்.]

புனல்நாடு *puṉal-nāḍu,* பெ. (n.) *புனனாடு* பார்க்க; see *puṉaṉāḍu.*

க.புணல்நாடு(ஆறுபாயும்நாடு)

[புனல் + நாடு]

புனல்பண்ணை *puṉal-paṇṇai,* பெ. (n.) கோழிக்கீரைவகை (புதுவை.); a kind of greens.

[புனல் + பண்ணை]

புனல்பாய்—தல் *puṉal-pāy-,* 2. செ.கு.வி. (v.i.) நீரில் விளையாடுதல்; to play in the water. *'புனல்பாய் மகளிநாட'* (பதிற்றுப். 86, 10.).

[புனல் + பாய்–,]

புனல்முருங்கை *puṉal-muruṅgai,* பெ. (n.) செடிவகை (வின்.); three leaved indigo.

[புனல் + முருங்கை]

புனல்யாற்றுப்பொருள்கோள் *puṉalyāṟṟu-p-poruḷkōḷ,* பெ. (n.) அடிதோறும் பொருள் அற்று மீளாது சேறல் (யாப்.95); எண்வகைப் பொருள்களுள் ஒன்று; one of the eight modes of construing verses.

மறுவ. ஆற்றுநீர் பொருள்கோள்

[புனல் + ஆற்று + பொருள்கோள்]

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற" (குறள்,34.)

இக்குறளின் பொருள் ஆற்றுநீர் இடைவிடாது செல்வது போல் அமைந்துள்ளமையைக் காண்க.

புனல்வாயில் *punal-vāyil,* பெ. (n.) மதகு; sluice of a channel. *'புனல்வாயிற் பூம் பொய்கை'* (பதிற்றுப். 13, 8.).

[புனல் + வாயில்]

புனல்விளையாட்டு *punal-viḷaiyāṭṭu,* பெ. (n.) நீர்விளையாட்டு; sporting in water.

மறுவ. நீர்விழா, நீராட்டு, நீராட்டணி.

[புனல் + விளையாட்டு. விள் → விளை = விருப்பம். விளையாடுதல் = விரும்பி யாடுதல். விளையாடு → விளையாட்டு.]

பண்டைக் காலத்தில், ஆற்றருகேயிருந்த நகர மாந்தரெல்லாரும் ஆண்டுதோறும் ஆற்றிற் புதுவெள்ளம் வந்தவுடன் ஒருங்கே சென்று, ஒரு பகலிற் பெரும்பகுதி அவ் வெள்ளத்தில் திளைத்தாடி இன்புற்ற விளையாட்டு விழா.

நீராடு வாரெல்லாம், ஆற்றிடுவதற்குப் பொன்னாலும் வெள்ளியாலும் செய்த மீன்முதலிய காணிக்கைக் கருவிகளையும், புணை, தெப்பம், பரிசில் முதலிய மிதவைக் கருவிகளையும், காதலர் மீது நறுமண நெய்யையும் வண்ணநீரையும் தெளித்தற்குத் துருத்தி கொம்பு சிவிறி முதலிய விளையாட்டுக் கருவிகளையும் நீராடிய பின் வேண்டும் ஊண் உடை அகில் முதலியவற்றையும் தத்தமக்கு இயன்றவாறு யானை, குதிரை, தேர் முதலியவற்றில் ஊர்ந்தும் கால்நடையாய் நடந்தும் கொண்டுசெல்வர். குடிவாரியாக ஆங்காங்கு அமைக்கப் பெற்ற குற்றில்களும் புதுக்கடைகளும் சேர்ந்து ஒரு விழவூர் போலக் காட்சியளிக்கும்.

நீந்தவல்லார் சற்று ஆழத்திலும் அல்லாதார் கரையையடுத்தும் நீராடுவதும், பூசுஞ் சுண்ணம் சாந்து, குழம்பு முதலிய வற்றின் ஏற்றத்தாழ்வுபற்றிப் பெண்டிர் இகலாடுவதும், தம் கணவன்மார் பிற பெண்டிரொடு கூடிப்புனலாடினாரென்று மனைக்கிழத்தியர் ஊடுவதும், பூசுசாந்தம் புனைந்தமாலை உழக்கும் நீராட்டு முதலிய வற்றாற் கலங்கல் வெள்ளம் புதுமணம் பெறுவதும், புனலாட்டு நிகழ்ச்சிகளாம்

நீராடியவர் மாலைக்காலத்தில் மகிழ்ந்தும் அயர்ந்தும் மனை திரும்புவர்.(த.வி.139.)

புனல்வேந்தன் *punal-vēndan,* பெ. (n.) மழைக்கடவுள் (வருணன்) (சூடா.); Varuṇa, as lord of the waters.

[புனல் + வேந்தன். வேய் → வேய்ந்தோன் → வேந்தன்.]

புனலவன் *punalavan,* பெ. (n.) *புனல்வேந்தன்* பார்க்க; see *punal-vēndan.* *'புனலவன் புகழின் வீந்ததால்'* (கம்பரா. வருணனை, 39.).

[புனல் → புனலவன்]

புனலன் *punalan,* பெ. (n.) திருமால்; Tirumāl. புனலன் மேனி (துக்கயாகப். 710).

[புனல் → புனலன் = புனல் (நீரின்) மேல் பள்ளி கொண்டவன்]

புனலாட்டு *punalāṭṭu,* பெ. (n.) *புனல் விளையாட்டு* பார்க்க; see *punal-,viḷaiyāṭṭu*

[புனல் +ஆட்டு]

புனலாடையாள் *punal-āḍaiyāḷ,* பெ. (n.) (நீராடையுடுத்தவள்) நிலமகள்; earth, as robed in the waters of the ocean. *'பொங்கும் புனலாடையாளும்'* (பு.வெ.8,29.).

[புனல் + ஆடையாள்]

புனலி *punali,* பெ. (n.) 1. காட்டுமல்லிகை. (குறிஞ்சிப். 75, உரை.); wild jasmine. 2. *புனலிக் கொடி* பார்க்க; see *punali-k-koḍi.*

[புனல் → புனலி]

புனலிக்கொடி *punali-k-kodi,* பெ. (n.) 1. கொடிவகை; bastard rose-wood-climber, 2. கொடிப்புன்கு; hog-creeper.

[புனலி + கொடி]

புனலை *punalai,* பெ. (n.) பூவந்தி (சங்.அக.); soap-nut.

மறுவ. பூந்திக்கொட்டை, புங்கங்காய்.

புனவர் *punavar,* பெ. (n.) குறிஞ்சிநிலமக்கள்; inhabitants of the hilly tracts. '*புனவன் சிறுபொறி மாட்டிய பெருங்கல்*' (நற். 119.) (திவா.).

[புனம் → புனவர் = புனத்தில் (மலைச்சார்பானகொல்லையில்) வாழ்பவர்]

புனவாசல் *punavāšal,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tañjāvūr dt.

[புனல் + வாசல்]

புனவாயில் *punavāyil,* பெ. (n.) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Rāmanādapuram dt. '*கண்டலு ஞாழலும் நின்று பெருங்கடற் கானல்வாய்ப் புண்டரீகம் மலர்ப் பொய்கை சூழ்ந்த புனவாயில்*' (சம்பந்தர் – 269 – 2).

மறுவ. பழம்பதி

[புன்னை + வாயில் – புன்னை வாயில் → புனவாயில். இனி புனல் வாயில் (கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ள ஊர் புனவாயில் என்றுமாம்.]

புனவெலுமிச்சை *puna-v-elumiccai,* பெ. (n.) குருந்து (பிங்.); wild lime.

[புனம் + எலுமிச்சை]

புனவேடு *punavēdu,* பெ. (n.) வரிக்கூத்துவகை; (சிலப். 3, 13, உரை.); a masquerade dance.

[புனம் + வேடு]

புனற்கடல் *punarkadal,* பெ. (n.) நன்னீர்க்கடல் (திவா); ring-shaped ocean of fresh water.

[புனம் + கடல்]

புனற்கரசன் *punarkarašan,* பெ. (n.) *புனல்வேந்தன் (திவா.)*பார்க்க; see *punal vēndan.*

[புனல் + கு + அரசன்]

புனற்செல்வன் *punarcelvan,* பெ. (n.) *புனல் வேந்தன் (பிங்.)* பார்க்க; see *punal-vēndan.*

[புனல் + செல்வன்]

புனற்படுநெருப்பு *punar-padu-neruppu,* பெ. (n.) வடவைத்தீ; the submarine fire. '*புனற்படு நெருப்பிற் பொம்மென வுரறி*' (பெருந். உஞ்சைக். 47, 129.).

[புனல் + படு + நெருப்பு]

புனற்பாகம் *punar-pāgam,* பெ. (n.) *புனப்பாகம் (பதார்த்த. 1386)* பார்க்க; see *puna-p-pāgam*

[புனம் + பாகம்]

புனற்றுளசி *punarrulaši,* பெ. (n.) *புனத்துளசி (பிங்.)* பார்க்க; see *puna-t-tulaši.*

[புனம் + துளசி. துளவு→ (துளசு) →துளசி.]

புனறருபுணர்ச்சி *punararu-punarcci,* பெ. (n.) வெள்ள நீரிடையே வீழ்ந்த தலைவியைத் தலைவன் காத்தவிடத்து அவ்விருவர்க்கும் உண்டான கூட்டம் (தொல். பொ. 114. உரை, பக். 548); (agap.) union of a lover with his beloved on the occasion of his rescuing her from being drowned in a flood.

[புனல் + தரு + புணர்ச்சி. புணர் → புணர்ச்சி]

புனனாடன் *punanādan,* பெ. (n.) (நீர்நிறைந்த நாட்டையுடைவன்) சோழ அரசன் (பிங்.); Cōla king, as lord of Punanādu. '*புன்னாடன் றப்பியாரட்ட களத்து*' (களவழி.1)

[புனல் + நாடு → புனனாடு → புனநாடன்]

புனனாடு *punanādu,* பெ. (n.) 1. சோழநாடு. (பிங்.); the Cōla country. '*பொன்னியெந்நாளும் பொய்யா தளிக்கும் புனனாட்டு*' (பெரியபு. சண்டேசு. 1). 2. கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் ஒன்று (நன். 273, உரை.); a region where kodun-Tamil was spoken, one of 12 kodum-Tamil-nādu.

[புனல் + நாடு]

புனாதி *punādi,* பெ. (n.) கடைக்கல்; foundation.

புனிகம் *punigam,* பெ. (n.) ஒருசெய்நஞ்சு (சங்கபாஷாணம்) (சங்.அக.); a mineral poison.

புனிற்றா *punirrā,* பெ. (n.) ஈன்றணிமையுள்ள மாடு அல்லது எருமை; cow or buffalo which has recently calved. '*புனிற்றாப் பாய்ந்த வயிற்றுப்புண்ணினன்*' (மணிமே. 5, 47.) 'எருமைச் செங்கட் புனிற்றா' (ஐங்குறு. 92.).

[புனிறு + ஆ]

புனிற்றுமதி *punirru-madi,* பெ. (n.) இளமதி; crescent moon. '*புனிற்று மதிகண்டுருகிப் பொழிந்த நீரால்*' (பெரியபு. திருக்குறிப்பு. 92).

மறுவ. இளம்பிறை

[புனிறு + மதி]

புனிறு *puniru,* பெ. (n.) 1. ஈன்றணிமை; recency of delivery, as of a woman. '*புதல்வற் பயந்த புனிறுசேர் பொழுதின்*' (தொல். பொ. 146.) 2. அணிமையில் ஈனப்பட்டது; that which is recently born. '*புனிற்றிளங்குழவி*' (மணிமே. 29, 5). '*புன்றலை நாய்ப்புனிற்றும்*' (பெரியபு. திருநாளைப். 8). 3. பிஞ்சுத்தன்மை; greenness, as of unripe fruit. '*புனிறுதீர் பெரும்பழம்*' (ஞானா. 41, 5). 4. மகப் பேற்றாலான தீட்டு (தைலவ. தைல); ceremonial impurity due to child-birth. 5. புதுமை (சூடா.);newness. 6. தோல் (சது.); skin.

[புல் → புன் → புன்மை= சிறுமை, தூய்மை யின்மை, குற்றம். புல் → புன் → புனிறு]

புனுகு *punugu,* பெ. (n.) புழுகு; civet

க. புணுகு; **தெ.**புநுகு

[புழுகு → புனுகு]

புனுகுச்சட்டம் *punugu-c-caṭṭam,* பெ. (n.) **1.** புனுகு உண்டாகும் பூனையின் உறுப்பு; gland in the anal pouch of the civet-cat. **2.** புனுகுப்பூனையின் சட்டத்தினின்றும் எடுத்துச் சேர்க்கப்படும் நறுமணப் பண்டம்; unctuous substance of the civet-cat.

தெ. புணுகுசெட்டமு.

[புனுகு + சட்டம்]

புனுகுசட்டம் *punugu-šaṭṭam,* பெ. (n.) *புனுகுச்சட்டம்* பார்க்க; see *punugu-c.caṭṭam.*

[புனுகுச்சட்டம் → புனுகுசட்டம்]

தெ. புணுகுசட்டமு.

புனுகுப்பூனை *punugu-p-pūnai,* பெ. (n.) புனுகைத் தரும் பூனைவகை; civet-cat viverra-civetta.

க. புழுகுபிள்ள; **தெ.**புனுகுபில்லி

[புழுகு → புனுகு + பூனை]



புனுகுபூனை *punugu-pūnai,* பெ. (n.) *புனுகுப்பூனை* பார்க்க; see *punugu-p-pūnai*

[புனுகுப்பூனை → புனுகுபூனை]

புனை¹–தல் *punai-,* 3 செ.குன்றாவி. (v.t.) **1.** சூடுதல்; to dress, put on, as clothes. garlands, jewels. *'பூமாலை புனைந்தேத்தி'* (தேவா.727,3.). **2.** அழகுபடுத்துதுல் (அலங்கரித்தல்); to adorn, decorate. *'புனை தேர்பண்ணவும்'* (புறநா.12.). **3.** அணியமாக்குதல் (சித்தஞ்செய்தல்); to make ready. **4.** ஓவியமெழுதுதல்; to paint. *'புனையா ஓவியங் கடுப்ப'* (நெடுநல்.147.). **5.** முடைதல்; to plait, as an ōla basket; *'போழிற் புனைந்த வரிப்புட்டில்'* (கலித்.117.). **6.** கட்டுதல்; to string, bird. *'ஆய்பூ வடும்பின்அலர் கொண்டு..... கோதை புனைந்த வழி'* (கலித்.144.). **7.** சூடுதல்; to wear. *'அவன் கண்ணி நீ புனைந் தாயாயின்'* (கலித்.116.). **8.** ஒழுங்காக அமைத்தல்; to put in order. *'படைபண்ணிப் புனையும்'* (கலித்.17.). **9.** சிறப்பித்துக் கூறுதல்; to use laudatory language, praise. *'புனையினும் புல்லென்னு நட்பு'* (குறள்,790.). **10.** கற்பித்தல்; to exaggerate. *'புனைந்துபேசி'* (தேவா.1224,3.) **11.** செய்யுளமைத்தல்; to compose, a poetry. *'நாவிற் புனைந்த நன்கவிதை'* (பரிபா.6,8.) **12.** செய்தல்; to make, form. *'வரிமணற் புனைபாவைக்கு'* (புறநா.11.).

ம. புனயுக

[புல் → (பூல்) → பூ = பொலிவு, அழகு,மலர். பூத்தல் = பொலிதல், அழகாதல், பூமலர்தல். புல் → பொல் → பொலி → பொலிவு (மு.தா.135) புல் → புன் → புனை]

புனை² *punai,* பெ. (n.) **1.** அழகு (பிங்.); beauty. **2.** பொலிவு (பிங்.); attractive. **3.** அணி (அலங்காரம்)செய்தல் (பிங்.); decoration. **4.** அணிகலன்; ornament, jewel. *'கைபுனை புனைந்தும்'* (கல்லா.84.3.). **5.** தளைக்கும் விலங்கு; fetters, shakles. *'புனைபூணும்'* (குறள், 836.). **6.** சீலை; cloth, vestment. **7.** புதுமை; newness, recenty.

[புல் → புன் → புனை]

புனை³ *puṉai,* பெ. (n.) நீர்; water, flood. '*அழுதளாவிய புனைவரவுயிர்வரு முலவை*' (கம்பரா.அகத்.4.).

[புல் → புன் → புனல் → புனை]

புனைகுழல் *puṉai-kuḻal,* பெ. (n.) *புனைகோதை (வின்.)* பார்க்க; see *puṉai-kōdai.*

[புனை + குழல்]

புனைகதை *puṉai-kadai,* பெ. (n.) கற்பனைக் கதை; fiction.

[புனை + கதை]

புனைகோதை *puṉai-kōdai,* பெ. (n.) கூந்தலழகுள்ள பெண் (வின்.); lady, as having beautiful locks.

[புனை + கோதை]

புனைசுருட்டு *puṉai-šuruṭṭu,* பெ. (n.) ஏய்ப்பு (மோசம்); deceitful conduct, underhand dealing.

[புனை + சுருட்டு. சுருள் (த.வி.) – சுருட்டு (பி.வி.)]

புனைந்துரை *puṉaindurai,* பெ. (n.) 1. அழகுநலத்துடன் சொல்லும் சொல்; rhetorical language or poetic embellishment. (நம்பியகப்.2.) 2. பாயிரம் (நன்.2.); preface, introduction.

மறுவ. தந்துரை, முகவுரை, பதிகம், நூன்முகம், முன்னுரை

[புனை → புனைந்து + உரை]

சான்றுகள் ஏதும் இல்லாமல் தாமாகக் கருத்துகளை உருவாக்கிக் கூறும் புனைந்துரை பெரியதனைச் சுருக்கிச் சொல்லுதல், சிறியதனைப் பெருக்கிச் சொல்லுதல் என இருதிறத்தது.

புனைந்தோர் *puṉaindōr,* பெ. (n.) கம்மாளர் (சூடா.); artisans, mechanics.

[புனை → புனைந்தோர்]

புனைபெயர் *puṉai-peyar,* பெ. (n.) கற்பித்துக்கொண்ட பெயர்; pen-name, pseudonym. புனைபெயரில் கதை எழுதுவோர் மிகப்பலர், (உ.வ.)

[புனை + பெயர்.]

புனைமொழி *puṉai-moḻi,* பெ. (n.) அழகு சொல் (இ.வ.); hetorical expression.

[புனை + மொழி]

புனையல் *puṉaiyal,* பெ. (n.) மாலை; garland, necklace, '*உருத்திரமாமணிப் புனையல்*' (உபதேசகா. சிவநாம.173.).

[புனை → புனையல். இனி பிணையல் → புணையல்' → புனையல் என்றுமாம்]

புனையிழை *puṉai-y-iḻai,* பெ. (n.) சிறந்த பெண் (சூடா.) ; lady, as wearing beautiful ornaments. '*புனையிழை யிழந்தபின்*' (பு.வெ.10, சிறப்பிற்பொது 3, கொளு).

[புனை + இழை]

புனையிறும்பு *puṉai-y-iṟumbu,* பெ. (n.) செய்காடு; grove. '*புதைந்திருடீங்கும் புனையிறும்பு*' (திருக்கோ.148.).

[புனை + இறும்பு]

புனைவன் *punaivan,* பெ. (n.) கம்மியன் (திவா.); mechanic, artisan, architect, *'வானவர் புனைவற் கொண்டே....பாசறை புனைவித்து'* (கந்தபு.யுத்தகாண். வரவுகேள். 26.)

[புனை → புனைவன் = அழகுபடுத்துபவன், கலைஞன், தொழில் வல்லவன்.]

புனைவிலி *punaivili,* பெ. (n.) உவமைக்குப் பயன்படுத்தும் பொருள்(உபமானப்பொருள்) (வின்.); the thing chosen for comparison.

[புனைவு → புனைவிலி]

புனைவிலிபுகழ்ச்சி *punaivili-pugalcci,* பெ. (n.) பிறிது மொழிதல் (அணியி.27, பக்.17.); (rhet.) a figure of speech.

[புனைவிலி + புகழ்ச்சி]

புனைவு *punaivu,* பெ. (n.) 1. அழகு; beauty 2. அழகு (அலங்காரம்) படுத்துதல் ; ornament decoration. 3. செழிப்பு; fertility, fruitfulness. 4. செய்கை (அக.நி.); making, producing.

[புனை → புனைவு]

புனைவுப்பெயர் *punaivu-p-peyar,* பெ. (n.) *புனைபெயர்* பார்க்க; see *punai peyar.*

[புனைபெயர் → புனைவுப்பெயர்]

புனைவுளி *punaivuli,* பெ. (n.) உவமித்துக்கூற பயன்படுத்தும் பொருள் (வின்.); the object described by a simile.

[புனை → புனைவுளி]

பூ¹ *pū,* 'ப்' என்ற மெய்யெழுத்தும் 'ஊ' என்ற உயிரெழுத்தும் இணைந்த உயிர்மெய் (அசை) எழுத்து; the syllable formed by adding the long vowel 'ū' to the consonant 'p'.

[ப் + ஊ]

பூ²–த்தல் *pū-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மலர்தல்; to blossom, bloom. *'பூத்த மாஅத்து'* (ஐங்குறு.10). 2. பொலிவு பெறுதல்; to flourish, to be prosperous. *'மீன் பூத்தன்ன தோன்றலர்'* (திருமுரு.169). 3. மாதவிலக்காதல் (இருதுவாதல்); to menstruate. *'பூத்த காலைப் புனையிழை மனைவியை'* (நம்பியகப்.91) 4. நெடுநேரம் நோக்குதலாற் கண்ணொளி மழுங்குதல்; to become blurred in vision, as by long wistful look. 5. பூஞ்சாளம்பிடித்தல் (இ.வ.); to become mouldy. 6. பயனின்றிப் போதல்; to become useless. *'எதிர்பார்த்த கருமம் (காரியம்) பூத்துப் போயிற்று'* 7. நெருப்பு சாம்பலாகி நெருப்பை மறைத்தவாறு பூசியிருத்தல்; to coat or form layer, as of ash around fire.

ம. பூ, பூக்க; **க.** பூ, புவ்வு, கூ, குவ்வு; **தெ.** பூசு, பூய்; **துட.** பூவ்; **கோத.**, பர். பூப்; **கோண்.** புய்யின; **கொண்.** பூ; **கூய்.** பூப்; **குரு.** புய்த்ன, புய்த்னா; மால; புத்தெ; பட. கூ

[பொல் → புல் → பூல் → பூ = பொலிவு, அழகு, மலர். பூத்தல் = பொலிதல், அழகாதல், பூமலர்தல் (மு.தா.135) (வ.வ.2.39)]

பூ³–த்தல் *pū,* 4 செ.கு.வி. (v.i.) தோன்றுதல்; to appear. *'பூத்திழி மதமலை'* (கம்பரா. கும்பகா,315).

[புல் → புள் → புழு → புகு. புகுதல் = தோன்றுதல். புகு → பூ. பூத்தல் = தோன்றுதல்(வ.வ.39]

பூ⁴–த்தல் *pū-,* 4 செ.குன்றாவி. (v,t.) **1.** மலர் முதலியவற்றைத் தோற்றுவித்தல்; to produce, as flower. '*செய்ய தாமரைகள் எல்லாந் தெரிவையர் முகங்கள் பூத்த*' (கம்பரா. நீர்விளை.3). **2.** படைத்தல்; to create. '*ஞாலமெல்லாம் பூத்தோனே*' (பாரத. கிருட்டிண.12). **3.** பெற்றெடுத்தல்; to give birth to. '*ஒரு திருவைப் பூத்தனள்*' (பிரமோத்.8,18.).

ம. பூக்குக

[புல் → புள் → புழு → புகு → புகுதல் = தோன்றுதல். புகு → பூ. பூத்தல் = தோன்றுதல், படைத்தல் (வ.வ.2,39)]

பூ⁵ *pū,* பெ. (n.) **1.** ஒன்று அல்லது பல மலர்ச்சூலக (மலரின் பெண்மையுறுப்புத் தையும் மலரிழை (மலரின் ஆணுறுப்பு) யையும் கொண்ட மரஞ்செடிகொடிகளில் காணப்படும் இனப் பெருக்கவுறுப்பு (பிங்.); flower, blossom. **2.** தாமரைப் பூ; lotus flower. '*பூவெனப்படுவது பொறிவாழ்பூவே*' **3.** பூத்தொழில்; floral design. '*பூக்கனிந்து*' (பொருந.82). **4.** சேவலின் தலைச்சூடு; cocks comb. '*பூத்தலைச்சேவல்*' (சீவக.120). **5.** நிறம்; colour. '*பறவாப் பூவைப் பூவினோயே*' (பரிபா.3,73). **6.** நீலநிறம் (அக.நி); blue colour. **7.** அழகு; beauty, charm. **8.** பொலிவு (திவா.); richness, fertility, flourishing condition. '*பூமலர்ச் சோலையும்*' (மணிமே.20,29). **9.** மென்மை; tenderness. **10.** யானையின் நுதற்புகர்; spots on an elephants forhead. '*பூநுதலாடியல் யானை*' (புறநா.165) **11.** யானையின் நெற்றிப் பட்டம்; ornamental plate on the forehead. '*பூநுதல் யானையொரு*' (புறநா.12.). **12.** கண்ணின் கருவிழியில் விழும் வெண்பொட்டு (வின்.); web, film or cataract in the eye, opacity, abugo. **13.** விளைவுப் பருவம் (போகம்); crop of wet cultivation. நீர்வளம் மிகுந்த பாங்கரில் முப்பூ விளையும். **14.** கருவிப்பொருக்கு (வின்.); roughness on the wiry edge of a tool after grinding. **15.** தீப்பொறி; spark, as of fire. **16.** தேங்காய்த் துருவல்; flake, as of scraped coconut. **17.** நுண்பொடி; fine powder or dust. **18.** மீனின் மூச்சுக்கருவி (வின்.); gill of a fish. **19.** அரைக்கால்; the fraction 1/8. '*இணங்கற்பூ*' Cant. **20.** கும்பாதிரி; lac tree. **21.** கதிர்க்கற்றை படுதற்கு முன்னுள்ள பூநீற்றின் கதிர்' (தைலவ.தைல.3.); crude form of pū-niṟu, before it is acted upon by the sun's rays. **22.** முப்பூ (சங்.அக.); a set of three substances used in medicine. **23.** இந்துப்பு (யாழ்.அக.); rock-salt. **24.** இலை (யாழ்.அக.); leaf. **25.** வேள்வித்தீ (ஓமாக்கினி) (யாழ்.அக.); sacrificial fire. **26.** கூர்மை; sharpness, keenness, point. '*பூவாட்கோவலா*' (புறநா.224). **27.** நிரயவகை (யாழ்.அக.); a hell. **28.** பூப்பு; menstruation, catamenia. '*பூவாளா வலர்தொடுப்பார்க்குத்*' (குஞ்சைவா.382).

ம. பூ, பூவு; **க., தெ.** பூ, பூவு, புவ்வு; **து., கோத., குட., கட.** பூ; **துட.** புவ்; **நா.** பூத; **கோண்.** புங்கார்; **கூய்.** பூசு; **குரு.** பூப், பூம்ப; **மால.**பூபு; **பட. கூ**...

Skt.phulla; Pkt.puppha.

[புல் → பொல் → பொலி → பொலிவு. புல் → (பூல்) → பூ = பொலிவு, அழகு, மலர் (மு.தா.135)]

puṟpa, pushpa, flower, the mentrual flux. Gt. (p.527)thinks the word comes form D.pū to flower; Cl. (p.474) doubts it, and prefers to derive that verb from Sk. phull, to flower, comparing Mhr. phūla, a flower (i.e.s.phulla). But phull does not exactly explain the form of. puṟpa. Puṟpa appears to represent an original pulpa and to be somehow connected with D. pul, grass (probably that is coloured). This leads to D. pōle, that is coloured;

menstrual flux, the terms adduced under which sufficiently explain puṟpa. The D. words for 'flower' are puvvu (i.e.pulva?) etc. (KKED.xxiv).

பூ கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ (புதர்ப்பூ) என நால்வகை யுண்டு என பழந் தமிழ் இலக்கியங்கள் காட்டுகின்றன. (இவற்றுடன் செடிப்பூ என்பதொன்றும் சேர்த்துக் கொள்ளலாம். (ஒ.மொ.2,20)) பூ நிலைகளை ஐவகையாகக் கண்டு தோன்றிய நிலையில் அரும்பு என்றும், மலரத்தொடங்கிய நிலையிற் போது என்றும், மலர்ந்த நிலையில் மலர் என்றும், உதிர்ந்து விழுந்த நிலையில் வீ யென்றும் வாடிச்சிவந்த நிலையில் செம்மல் என்றும் சொல்லினர் பழந்தமிழர். பூ என்பது பொதுப்பெயர். (செ.சி.10,11)

பூ⁶ *pū,* பெ. (n.) **1.** நிலம் (பிங்.); earth. **2.** பிறப்பு; birth, production.

[புல் → புள் → புழு → புகு. புகுதல் = தோன்றுதல். புகு → பூ. பூத்தல் = தோன்றுதல், படைத்தல். பூ = தோன்றிய நிலம், படைக்கப்பட்ட பிறப்பு]

த. பூ > Skt. bhū

பூக்கஞ்சா *pū-k-kañjā,* பெ. (n.) பூங்கஞ்சா (யாழ்.அக.); male plant of Indian hemp.

[பூ + கஞ்சா]

பூக்கட்டு—தல் *pū-k-kaṭṭu-,* 15 செ.கு.வி. (v.i.) மலர்மாலை தொடுத்தல்; to make garlands of flowers.

க. பூகட்டு, கூகட்டு, கூவுகட்டு;

து. பூகட்டுணி

[பூ + கட்டு—, கள் → கட்டு]

பூக்கடுக்கன் *pū-k-kaḍukkaṉ,* பெ. (n.) பரவர் காதணிவகை; a kind of ear-ring (Parava.).

து. பூஒலை

[பூ + கடுக்கன்]

பூக்கண்டல் *pū-k-kaṇḍal,* பெ. (n.) சிறுமரவகை (வின்.); dich otomous cymed mangrove.

[பூ + கண்டல்]

பூக்கணை *pū-k-kaṇai,* பெ. (n.) மலர் அம்பு; an arrow of flowers (especially of Kāma).

க. பூகணெ, பூசரல், பூசரலு, பூசரளு; **து.** பூகணெ, பூபகரி

[பூ + கணை]

பூக்கந்தகம் *pū-k-kandagam,* பெ. (n.) புடமிட்ட கந்தகம் (வின்.); flowers of sulphur.

[பூ + கந்தகம்]

பூக்கம்¹ *pūkkam,* பெ. (n.) கமுகு (திவா.); areca-palm.

மறுவ. வார்.

பூக்கம்² *pūkkam,* பெ. (n.) **1.** ஊர்; town. **2.** மருத நிலத்தூர்; town in an agricultural tract.

[பாக்கம் → பூக்கம்]

பூக்கரப்பன்பட்டை *pūkkarappaṉpaṭṭai,* பெ. (n.) பூக்கரப்பான் மரத்துப்பட்டை; bark of pūkkarappāṉ.

[பூக்கரப்பன் + பட்டை]

பூக்கள் வகைகள்

நிலப்பூ

நீர்ப்பூ

கொடிப்பூ



காட்டுப்பூ

பூக்கரப்பான் *pū-k-karappāṉ,* பெ. (n.) ஒரு மரம்; a kind of tree.

[பூ + கரப்பான்]

பூக்கவர்ந்துண்ணி *pū-k-kavarnduṇṇi,* பெ. (n.) குரங்கு; monkey. '*வாலியாம் பூக்கவர்ந்துண்ணி*' (கம்பரா. கும்ப. 180).

[பூ + கவர்ந்துண்ணி]

பூக்கள்ளி *pū-k-kaḷḷi,* பெ. (n.) ஒருவகைக் கள்ளி; a milky shrub or spurge.

[பூ + கள்ளி. கள் = முள். கள் → கள்ளி]



பூக்காணம் *pū-k-kāṇam,* பெ. (n.) நிலவுருண்டையின் (பூமியின்) சாய்கோடு (அட்சாம்சம்); latitude.

[பூ + காணம்]

பூக்காமரம் *pūkkā-maram,* பெ. (n.) பூவாத மரம்; a tree that never yields flower.

[பூ → பூக்கா + மரம். 'ஆ' எ.ம. இடைநிலை]

பூக்காரன் *pū-k-kāraṉ,* பெ. (n.) பூ விற்பவன்; flower dealer.

[பூ + காரன். கடி → கரி → காரம் → காரன்]

பூக்காரி *pū-k-kāri,* பெ. (n.) பூவிற்பவள்; female flower dealer.

து. பூத்தாளு

[பூ + காரி. காரன் (ஆ.பா.) - காரி (பெ.பா.)]

பூக்காவி *pū-k-kāvi,* பெ. (n.) பூங்காவி பார்க்க; see *pūṅgāvi.*

[பூ + காவி]

பூக்கு—தல் *pūkku-,* 15 செ.கு.வி. (v.i.) *பூ³–த்தல்* பார்க்க; see *pū ³-,*

[பூ → பூக்கு–,]

பூக்குஞ்சு *pū-k-kuñju,* பெ. (n.) இறகு தோன்றாத பறவைக் குஞ்சு (வின்.); மிகவும் இளம் பறவைக் குஞ்சு; unfledged young bird.

[பூ + குஞ்சு]

பூக்குட்டான் *pū-k-kuṭṭāṉ,* பெ. (n.) பூக்குடலை (யாழ்.அக.) பார்க்க; see *pū-k-kuḍalai.*

மறுவ. கொட்டான்

[பூ + குட்டான். குள் → குட்டம் = சிறுமை, குறுமை. குள் → குட்டான் = சிறிய ஓலைப்பெட்டி, சிறுபடப்பு]

பூக்குடலை *pū-k-kuḍalai,* பெ. (n.) நீளமாக முடைந்த பூக்கூடை வகை (கொ.வ.); cylindrical 'ōlai' basket for flowers.

[பூ + குடலை. குள் → குழை = துளை. குழை → குடை → குடைவு. குழை → குழலை → குடலை]

பூக்குதல் *pūkkutal,* பெ. (n.) 1. நினைக்கை (அரு.நி.); remembering. 2. தோன்றுகை; appearing.

[புல் → புள் → புழு → புகு. புகுதல் = தோன்றுதல். புகு → பூ. பூத்தல் = தோன்றுதல். பூ → பூக்கு]

பூக்குதிரை *pū-k-kudirai,* பெ. (n.) ஒரு பூவின் பெயரைச் சொல்லி ஒருவன் மேலொருவன் குதிரையேறி விளையாடும் விளையாட்டு; a children game by telling a flower's name and climbing on one's back.

[பூ + குதிரை.]

ஏதேனுமொரு தேர்ந்தெடுப்பு வகையில் தவறவிட்ட ஒருவன், அண்ணாவிபோல் நிற்கும் ஒருவனிடம் மறைவாக ஒரு பூப்பெயரைச் சொல்லிவிட்டுக் குனிந்து நிற்கவேண்டும். பிறகு ஒவ்வொருவனாய் அவன் மேற் குதிரையேறு முன் ஒவ்வொரு பூப்பெயரை அண்ணாவியிடம் வெளிப் படையாய்ச் சொல்ல வேண்டும். யாரேனும் ஒருவன் சொன்ன பூ குனிந்தவன் சொன்னதாயிருப்பின் பின்பு அவன் அண்ணாவியிடம் ஒரு பூப்பெயரை மறைவாகச் சொல்லிவிட்டுத் தான் குனிய வேண்டும். முன்பு குனிந்து நின்றவன், பின்பு பிறரொடு சேர்ந்து முன் சொன்னவாறு விளையாடுவான். குனிந்தவன் சொல்லாத வேறு பூப்பெயர் சொல்லிக் குதிரை யேறினவன் ஒரு நிமையத்திற்குள் இறங்கிவிடல் வேண்டும். குனிந்தவன் சொன்ன பூ வரும்வரையும் ஒவ்வொருவனாகவும் மாறிமாறியும் ஏறியிறங்கிக் கொண்டே யிருப்பர். (த.வி.62).

பூக்கும்பருவம் *pūkkum-paruvam,* பெ. (n.) 1. மலர் மலரும் காலம்; flowering season. 2. பருவம் அடையும் காலம்; aged enough to attain puberty.

[பூ → பூக்கும் + பருவம்]

பூக்குழி *pū-k-kuḻi,* பெ. (n.) தீக்குழி (இ.வ.); fire-pit in the ceremony of walking on live coals.

[பூ + குழி. குள் → குளி → குழி. இறை நம்பிக்கையடிப்படையில் நெருப்புத் தணல் பூவாக இருக்கும் என்னும் நம்பிக்கையில் அழைக்கப்பட்டது. இனி தணல்மேல் சாம்பல் பூத்திருந்தது என்றும் அல்லது பூப்போன்ற தணல் என்றும் கொள்ளலாம்.]

பூக்குளம் *pū-k-kuḷam,* பெ. (n.) பூங்குளம் பார்க்க; see pūṅkuḷam.

க. பூகொள, கூகொள

[பூ + குளம்]

பூக்குறடு *pū-k-kuṟaḍu,* பெ. (n.) பூமாலை தொடுப்பதற்கான மேடான இடம் (யாழ்.அக.); raised platform for garland makers.

[பூ + குறடு. குல் → குரு → குற → குறடு]

பூக்குறிஞ்சி *pūkkūriñji,* பெ. (n.) கரும்பூக் குறிஞ்சி.; a kind of medicinal plant.

ம. பூங்குறிஞ்சி (ஒரு வகைப் பூக்கும் மரம்)

[பூ + குறிஞ்சி. குறி → குறிஞ்சி]

பூக்கூடம் *pū-k-kūḍam,* பெ. (n.) பூக்குறடு (நெல்லை.) பார்க்க; see *pū-k-kuṟaḍu.*

[பூ + கூடம். கூடு → கூடம். குள் → கூள். கூள்தல் = திரளுதல். கூள் → கூடு → கூடம் = திரண்ட இடம், மேடானபகுதி]

பூக்கூடை *pū-k-kūḍai,* பெ. (n.) பூவைக்கும் கூடை; flower basket.

ம. பூக்கொட்ட

[பூ + கூடை. கூடு → கூடை = வட்டமான மூங்கில்முடைவு]

பூக்கொடி *pū-k-koḍi,* பெ. (n.) மலர்களை யுடைய கொடி; a branch which has flower. "*பூக்கொடி வல்லியுங் கரும்பும் நடுமின்*" (மணிமே. 1, 47).

[பூ + கொடி. கொள் → கொடு → கொடி= வளைந்து படரும் நிலைத்திணை வகை.]

பூக்கொய்–தல் *pū-k-koy-,* 1 செ.கு.வி. (v.i.) பூப்பறித்தல்; to gather flowers. '*தோகை பூக்கொய் மகளிரிற் றோன்றும்*' (ஐங்குறு. 297).

க. பூகொய், கூகொய், கூகொய்யு.

[பூ + கொய்–,]

பூக்கோசனி *pūkkōšaṉi,* பெ. (n.) வெட்பாலை; a tree, tellicherry bark.

பூக்கோசு *pū-k-kōšu,* பெ. (n.) பெரிய வெள்ளை நிற பூவையுடைய கோசு; a cabbage with a large white flower head, cauliflower.

[பூ + கோசு]

E. cosh › த.கோசு

பூக்கோட்காஞ்சி *pūkkōṭ-kāñji* பெ. (n.) *பூக்கோணிலை* (புறநா. 293. திணைக் குறிப்பு) பார்க்க; see *pūk-kōṇilai.*

[பூக்கோள் + காஞ்சி]

பூக்கோணிலை *pūkkōṇilai,* பெ. (n.) போரை மேற்கொள்ளும் போது வெட்சி முதலிய மலர்களை அரசனிடமிருந்து வீரன் பெற்றுக் கொள்ளுதலைக் கூறும் புறத்துறை. (பு.வெ. 4, 10, தலைப்பு); (purap.) theme describing the acceptance by a warrior of 'veṭci' and other flowers of 'pura-t-tiṇai', from a king on the occasion of his undertaking an act of hostility.

[பூ + கொள் - பூக்கொள் → பூக்கோள் + நிலை]

பூக்கோள் *pū-k-kōḷ,* பெ. (n.) பூக்கோணிலை பார்க்க; see pū-k-kōṇilai. '*பூக்கோளின் றென்றையும்*' (புறநா.289.9).

[பூ+கொள் - பூக்கொள் → பூக்கோள்]

பூகண்டகர் *pū-kaṇḍagar,* பெ. (n.) அசுரர்; Asuras, as the enemies of the world. '*பூகண்டகர் கோவோ டாகண்டலன் மாய*' (தக்கயாகப். 693).

[பூ + கண்டகர். பூ → பூது → பூதம் = தோன்றியது, ஐம்பூதங்களுள் ஒன்று. பூ= நிலம்]

பூகண்டம் *pū-kaṇḍam,* பெ. (n.) 1. பூவலயம் (பிங்.); earth. 2. நிலப்பரப்பின் பெரும்பகுதி; continent.

[பூ+ கண்டம். குள் → கள் → கண் → கண்டு → கண்டம் = ஒன்று திரண்டது]

பூகதம்[1] *pū-kadam,* பெ. (n.) உலகை யடைந்தது; that which has reached the earth.

[பூ+ கதம்]

Skt. gata › த. கதம்.

பூகதம்² *pūkadam,* பெ. (n.) பூகம்¹ 1 பார்க்க; see pūgam¹-1. *'இரசதத்த பூகதம்'* (குற்றா. தல. திருமண.30).

பூகதம்பம் *pū-kadambam,* பெ. (n.) நிலக்கடம்பு (மலை.); a plant.

பூகதர் *pūgadar,* பெ. (n.) புகழ்வோர் (திவா.); panegyrists. *'பூகதரடைந்தார்'* (உபதேசகா. சிவத்துரோ.196).

பூகதன் *pū-gadaṉ,* பெ. (n.) நிலவுலகை யடைந்தவன்; one who has reached the earth, one who is born on the earth. *'பூகதனாகியவன்றே'* (பாரத.திரௌ.52).

[பூ+ கதன் . கதம் → கதன்]

பூகநிழலினள் *pūga-niḻaliṉaḷ,* பெ. (n.) பூகநிழலுற்ற வஞ்சி (பிங்.) பார்க்க; see pūga niḻaluṟṟa-vañji.

[பூகம்+ நிழலினள்]

பூகநிழலுற்றவஞ்சி *pūganiḻal-uṟṟa-vañji,* பெ. (n.) அறத்(தரும)தேவதை (சூடா.); goddess of virtue, as seated under an areca-palm.

[பூகம் + நிழலுற்ற + வஞ்சி]

பூகபீடம் *pūga-pīḍam,* பெ. (n.) காளாஞ்சி (யாழ்.அக.); spittoon.

மறுவ. எச்சிற்போணி

[பூகம்+ பீடம்]

பூகம்¹ *pūgam,* பெ. (n.) **1.** கமுகு (திவா.); areca-palm. *"வனமெலாம்"* நாகம்பூகம் (திரு வாலவா.27,37) **2.** திப்பலிப்பனை (மலை.); jaggery-palm.

ம. பூகம்; **க.** பூகபல, பூகபள

[புள் → (புளகம்) → பூகம்]

பூகம்² *pūgam,* பெ. (n.) **1.** திரட்சி (பிங்.); collection, multitude. **2.** ஒருவகைக் குல (சாதி)க் கூட்டம் (சுக்கிரநீதி,288); a caste assembly.

க. பூக

[புல் → புள்→ பிள்→ பிழம்பு, புள்→ (புளகம்) → பூகம்]

பூகம்³ *pūgam,* பெ. (n.) **1.** கழுகு (யாழ்.அக.); eagle. **2.** பலா; jack-tree.

பூகம்பம் *pūgambam,* பெ. (n.) **1.** நிலவதிர்ச்சி; earthquake. *"பூகம்பம் பிறந்துடுவு மரும்பகலே விழுந்து"* (பாரத. சூதுபோர்.259). **2.** ஞாயிறு நின்ற நாளுக்கு ஏழாம் நாள் (விதான. குணாகுண.34); (astrol.) the seventh nakṣatra from that occupied by the sun.

[பூ+ கம்பம். கம் → கம்பம்]

பூகம்பனம் *pūgambaṉam,* பெ. (n.) பூகம்பம், (யாழ்.அக.) பார்க்க; see pūgambam.

[பூகம்பம் → பூகம்பனம். கம் → கம்பம் → கம்பனம்.]

பூகம்பு *pūgambu,* பெ. (n.) குணநலம் (சுபாவம்) (யாழ்.அக.); nature.

பூகரணம் *pūkaraṇam,* பெ. (n.) **பூகன்னம்** பார்க்க; see *pūkaṉṉam.*

[பூ + கரணம். கன்னம் → கர்ணம் → கரணம்]

பூகரபம் *pū-karabam,* பெ. (n.) கையாந்தகரை (மலை.); a plant found in moist places.

பூகரம் *pū-karam,* பெ. (n.) பூகரபம் (யாழ்.அக.) பார்க்க; see pūkarabam.

பூகளிந்தம் *pūkaḷindam,* பெ. (n.) பூமிச் சருக்கரை (நாமதீப.345); necklace berried climbing caper.

பூகன்னம் *pūkaṉṉam,* பெ. (n.) **1.** உலக உருண்டையின் நடுவிட்டம் (வின்.); diameter of the earth. **2.** புற்று (இ.வ.); ant-hill.

[பூ + கன்னம். குல் → கல் → கன் → கன்னம் = குழி, நடு, நடுப்பக்கத்துக் கோடு]

பூகாமி *pūgāmi,* பெ. (n.) நிலத்தில் விரைந்து செல்லுங் குதிரை (வின்.); horse that goes well on land, opp. to cala-kāmi.

[பூ+ காமி.]

பூகேசம் *pūkēšam,* பெ. (n.) **1.** ஆலமரம் (சங்.அக.); banyan tree. **2.** நீர்ப்பாசி (சங்.அக.); moss.

[பூ+ கேசம்.]

Skt. kēša > **த.** கேசம்.

பூகோளசாத்திரம் *pūgōḷa-šāttiram,* பெ. (n.) *பூகோள நூல்* பார்க்க; see *pūgōḷa-nūl.*

[பூ+ கோளம் + சாத்திரம். குள் → குளிகை = உருண்டைமாத்திரை. குளி → குளியம் = உருண்டை. குள் → கொள் → கோள் → கோளம் = உருண்டை]

Skt. šāstra > **த.** சாத்திரம்.

பூகோளநூல் *pūgōḷanūl,* பெ. (n.) மலை, ஆறு தட்பவெப்பம் முதலிய நிலவுலகின் இயல்புகளை விளக்கிக் கூறும் நூல்; geography.

[பூ+ கோளம் + நூல்]

பூகோளம் *pūgōḷam,* பெ. (n.) நிலவுலக வுருண்டை; the terrestrial globe.

[பூ+ கோளம். குள் → கொள் → கோள் → கோளம்]



பூங்கஞ்சா *pū-ṅ-kañjā,* பெ. (n.) செடிவகை; (யாழ்.அக.); ganja, male plant of Indian hemp.

[பூ+ கஞ்சா]

பூங்கணுத்திரையார் *pūṅkaṇu-t-tiraiyār,* பெ. (n.) ஒரு கழகப்புலவர்; poet of saṅgam age.

பூங்கணை *pūṅgaṇai,* பெ. (n.) அணிச்சை; pimpernel.

பூங்கதலி *pū-ṅ-kadali,* பெ. (n.) வாழை வகை(இ.வ.); a kind of plantain.

மறுவ. கதலிவாழை

[பூ+ கதலி. குதலி → கதலி = சிறுகாய் வாழை]

பூங்கதிர் *pū-ṅ-kadir,* பெ. (n.) **1.** வெண்கதிர் (யாழ்.அக.); white ray. **2.** ஒளி; light.

[பூ+ கதிர்]

பூங்கரந்தை *pūṅkarandai,* பெ. (n.) **1.** ஒரு வகைக் கரந்தை; a tree. **2.** பூச்சாங்கொட்டை; three lobed soup nut tree.

பூங்கரும்பு *pūṅgarumbu,* பெ. (n.) செங்கரும்பு வகை (மலை.); a species of tender; red sugar-cane.

[பூ+ கரும்பு. கர் → கரு → கரும்பு]

பூங்கருவி *pū-ṅ-karuvi,* பெ. (n.) ஒருவகைப் படைக்கலம் (பிங்.); a weapon.

[பூ+ கருவி]

பூங்கல்காரம் *pūṅgal kāram,* பெ. (n.) கல்நார்; asbestos.

பூங்கரை *pūṅgarāi,* பெ. (n.) கடல்நுரை; sea foam.

[பூ+ கரை]

பூங்கலன் *pū-ṅ-galaṉ,* பெ. (n.) பூக்குடலை பார்க்க; see pūkkuḍalai '*குசைப் புல்லும் பொலிசமித்தும் பூங்கலனும்*' (கோயிற்பு. இரணியவன்ம.36).

[பூ+ கலன்]

பூங்கவணி *pū-ṅ-gavaṇi,* பெ. (n.) புடைவை வகை (யாழ்.அக.); a saree.

[பூ+ கவணி]

பூங்கற்று *pūṅgaṟṟu,* பெ. (n.) **1.** பூதம் (அக.நி.); goblin. **2.** அழகு; beauty.

பூங்கா *pū-ṅ-gā,* பெ. (n.) **1.** பூஞ்சோலை; flower garden. '*அன்பரென மன்னுமொரு பூங்கா*' (திருவாத. 4. திருப்பெரு. 16). **2.** இன்பந் துய்த்தற் பொருட்டுச் செல்வர் உண்டாக்கிய தோட்டம்; pleasure grove.

ம. பூங்கா

[பூ+ கா]

பூங்காடு *pūṅkāḍu,* பெ. (n.) இளங்காடு; young forest.

[பூ + காடு. பூ =இளமை. புள் → பிள் → பீள் =இளங்கதிர், இளமை. புகு → பூ → போ → போத்து = இளங்கிளை. புகு → பூ. கடு → காடு]

பூங்காம்பு *pūṅ-kāmbu,* பெ. (n.) பூ செடியுடன் பொருந்தியிருக்கும் உறுப்பு; flower stalk.

க. பூதொடம்பெ

[பூ + காம்பு]

பூங்காய் *pūṅkāy,* பெ. (n.) பூம்பிஞ்சு பார்க்க; see *pūmpiñju.*

து. பூகாயி

[பூ + காய்]

பூங்கார் *pū-ṅ-kār,* பெ. (n.) நான்கு மாதத்தில் விளையும் நெல்வகை; (G.Tj.D.I.**94.**); a kind of paddy maturing in four months.

[பூ + கார். கர் → கரு → கார்]

பூங்காரம்[1] *pū-ṅ-kāram,* பெ. (n.) பூ நீற்றுக் காரம்; impure carbonate of soda, nitre.

[பூ + காரம்]

பூங்காரம்[2] *pū-ṅ-kāram,* பெ. (n.) மந்தாரம் (யாழ்.அக.); shade, dimness, gloom cast by mist or passing clouds.

பூங்காரம்[3] *pūṅkāram,* பெ. (n.) மந்தாரம்; a kind of blue stone.

பூங்காரை *pū-ṅ-kārai,* பெ. (n.) **1.** மருக்காரை; common emetic nut. **2.** நெல்வகை; a kind of paddy. (Nels.**99.**)

[பூ + காரை. கர் → கரு → கார் → காரை]

பூங்காலா *pū-ṅ-kālā,* பெ. (n.) கருமை வெண்மை நிறமுள்ள நல்ல தண்ணீர் மீன்வகை, பஞ்சலை; a fresh water fish, dark silvery.

[பூ + காலா]

பூங்காலி *pūṅgāli,* பெ. (n.) பாதிரி; yellow flowered fragrant trumpet-flower tree.

[பூ → பூம் + காலி]



பூங்காவனம் *pūṅgāvaṉam,* பெ. (n.) பூங்கா பார்க்க; see pūṅgā. *'மலர்ப்பூங்காவனஞ் சூழொற்றிமா நகரீர்'* (அருட்பா,**1.** இங்கித**92.**).

[பூங்கா + வனம்]

Skt. vana > **த.** வனம்

பூங்காவி *pū-ṅ-gāvi,* பெ. (n.) **1.** நீரில் தோய்ப்பதனால் துணியிற் படியும் காவிநிறம்; brown tinge in white cloth due to long use. **2.** காவிக்கல் வகை, செங்காவி; red ochre.

[பூ + காவி]

பூங்கீரை *pū-ṅ-girai,* பெ. (n.) **1.** கீரைவகை; cockscomb greens. **2.** செடிவகை; a plant.

[பூ + கீரை]

பூங்கு *pūṅgu,* பெ.அ. (adj.) (நாமதீப.**772**) பல; many.

[பொங்கு → புங்கு → பூங்கு]

பூங்குஞ்சு *pū-ṅ-guñju,* பெ. (n.) பூக்குஞ்சு (இ.வ.) பார்க்க; see *pū-k-kuñju.*

[பூ + குஞ்சு. குள் → குய் → குய்ஞ்சு→ குஞ்சு = பறவையின் இளமைப்பெயர். எ–டு: கோழிக்குஞ்சு, புறாக்குஞ்சு.]

பூங்குடம் *pū-ṅ-guḍam,* பெ. (n.) கரகம்; (இ.வ.); decorated waterpot.

[பூ + குடம். குல் → குள் → குளம் → குடம்]

பூங்குருவி *pūṅkuruvi,* பெ. (n.) ஒரு வகைப் பறவை; thrush.

[பூ + குருவி.]

பூங்குருவி வகைகள்

1. கருப்புவெள்ளை பூங்குருவி
2. சீகாரப் பூங்குருவி
3. செந்தலைப் பூங்குருவி
4. நீலத்தலைப் பூங்குருவி
5. நீலப் பூங்குருவி
6. நீலமலைப் பூங்குருவி



பூங்குலம் *pūṅkulam,* பெ. (n.) நாகை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Nāga paṭṭiṉam dt.

பூங்குழல் *pū-ṅ-guḻal,* பெ. (n.) பலவடி நீளம் வளர்வதும் நீலநிறமுடையதுமான கடல்மீன் வகை; a seafish bluish, attaining several feet in length.



பூங்குளம் *pūṅkuḷam* பெ. (n.) பூக்கள் நிறைந்த குளம்; tank where flower plants are grown.

க. பூகொள, கூகொள.

[பூ + குளம். குல் → குள் → குளம் = நீரைத்துளைப்பது போல் முழுகிக் குளிக்கும் நீர்நிலை]

பூங்குறுணல் *pū-ṅ-kuṟuṇal,* பெ. (n.) *பூங்குறு நொய்* (யாழ்.அக.) பார்க்க; see *pūṅguṟunoy.*

[பூங்குறுநெல் → பூங்குறுணல்]

பூங்குறுநெல் *pū-ṅ-kuṟu-nel,* பெ. (n.) *பூங்குறு நொய்* பார்க்க; see *pūṅguṟu-noy.*

[பூங்குறு + நெல்]

பூங்குறுநொய் *pūṅguṟu-noy,* பெ. (n.) நுண்ணிய குறுநொய்; very fine grit.

[பூ + குறு + நொய்]

பூங்குருவி வகைகள்

நீலத்தலை பூங்குருவி

நீலப்பூங்குருவி

சீகாரப்பூங்குருவி

செந்தலைப் பூங்குருவி

நீலமலைப் பூங்குருவி

வரிப் பூங்குருவி

பூங்கொடி *pū-ṅ-goḍi,* பெ. (n.) 1. மலர் கொண்ட கொடி; flowering creeper. 2. பெண்; woman. *'புந்திகொளப்பட்ட பூங்கொடியார்'* (திருவாச.36,9). 3. அழகிய கொடி; beautiful flag. *'பொருந்து பூங்கொடிகளாடைகளாட'* (திருவாலவா.39,20).

[பூ + கொடி. ஆடவன் பெண்டு ஆகிய இருபாலருள் பெண்டு மிக மெல்லியளாதலின் கொடி எனப்படுவார். இதனாலேயே குறிஞ்சி நிலப் பெண்டிற்குக் கொடிச்சி என்று பெயர். பெண்ணைக் கொடியென உவமையாகு பெயராற் குறிப்பது மட்டுமின்றி, பெண்கொடி என உருவக வாய்பாட்டிற் கூறுவதுமுண்டு. புல், பூண்டு, செடி, கொடி, மரம் என்னும் ஐவகை நிலைத்திணை (தாவர) உயிர்களுள் பெரும்பாலும் மெல்லியதும் விரைந்து வளர்வதும் ஒரு கொள்கொம்பைப் பற்றிப் படர்வதும் கொடியே. பெண்ணைக் கொடியென்று சொன்னவளவிலேயே அவள் ஆடவனிலும் மெல்லியள் என்றும் அவனிலும் விரைந்து வளர்பவளென்றும், ஒரு கொழுநனைத் துணைக் கொண்டே வாழ்பவளென்றும், மூன்று பெண்பாற் குணங்கள் குறிப்பறியக்கிடக்கின்றன. (சொ.க.4)]

பூங்கொத்து[1] *pū-ṅ-gottu,* பெ. (n.) பூவின் தொகுதி; bunch of flowers, a cluster of flowers.

ம. பூதொங்கல்; க. பூகொஞ்சல்

[பூ + கொத்து. குத்து(கைப்பிடியளவு, திரட்சி) → கொத்து = பூ காய் முதலியவற்றின் குலை]

பூங்கொத்து[2] *pūṅkottu,* பெ. (n.) மஞ்சள்; turmeric plant.

[பூ + கொத்து]

பூங்கொம்பு *pū-ṅ-gombu,* பெ. (n.) மலர்களையுடைய கிளை; flowered branch *"அணிமலர்ப் பூங்கொம் பகமலி யுவகையில்"* (மணிமே.15,72).

[பூ + கொம்பு. கொள் → கொண் → (கொண்பு) → கொம்பு]

பூங்கொல்லை *pū-ṅ-gollai,* பெ. (n.) பூங்கா (யாழ்.அக.) பார்க்க; see *pūṅgā.*

[பூ + கொல்லை]

பூங்கோயில் *pū-ṅ-gōyil,* பெ. (n.) திருவாரூர்சிவாலயம்; the Sivaṉ shrine in Tiruvārūr. *'பொன்றயங்குமதிலாரூப் பூங் கோயில்'* (பெரியபு.மனுநீதி.49) (தேவா.699.5)

[பூ + கோயில். கோ+இல்–கோயில்]

பூங்கோரை *pū-ṅ-gōrai,* பெ. (n.) 1. கோரை வகை; edible sedge, 2. கோரைவகை; sedge with cubins, triquctrous at the base. (A.)

[பூ + கோரை]

பூங்கோலி *pū-ṅ-kōli,* பெ. (n.) நெல்வகை; a kind of paddy.

[பூ + கோலி]

பூச்சக்கரம் *pū-c-cakkaram,* பெ. (n.) 1. பூமண்டலம்; the earth. 2. நிலநடுக்கோடு; equator. 3. சக்கரவாணம்; a kind of whirling rocket.

[பூ + சக்கரம். சருக்கரம் → சக்கரம்]

பூச்சக்கரவாளக்குடை *pū-c-cakkara vāḷa-kkuḍai,* பெ. (n.) கோயில் திருவுருவங்களுக்குப் பிடிக்கும் பெரிய வெண்குடை;

huge, white temple umbrella. *'மதிகொண்ட பூச்சக்கரவாளக் குடையின்'* (திருப்போ சந்நிதி.அலங்கா.49).

[பூ + சக்கரவாளம் + குடை]

பூச்சக்கரவாளம் *pū-c-cakkaravāḷam,* பெ. (n.) சக்கரவாளமலை (யாழ்.அக.); range of mountains, supposed to encircle the earth.

[பூ + சக்கரவாளம்]

பூச்சக்கரன் *pū-c-cakkaraṉ,* பெ. (n.) அரசன் (வின்.); king.

[பூ + சக்கரன்]

பூச்சக்காய் *pūccakkāy,* பெ. (n.) பூவந்தி (வின்.); see pūvandi.

பூச்சக்கொட்டை *pūccakkoṭṭai,* பெ. (n.) பூவந்திக்கொட்டை; three lobed soap nut tree, which produces froth, when agitated with water.

மறுவ. பூந்திக்கொட்டை, பூவந்தி, பூச்சக்காய்

பூச்சட்டி *pūccaṭṭi,* பெ. (n.) பூந்தொட்டி பார்க்க; see pūntoṭṭi.

ம. பூச்சட்டி

[பூ+ சட்டி]

பூச்சட்டை *pū-c-caṭṭai,* பெ. (n.) **1.** தெய்வத்திற்குப் பூவினாற் செய்தணியும் அங்கி (இ.வ.); garment of flowers put on a deity. **2.** பூத்தொழில் அமைத்த துகிற்சட்டை; garment embroidered with floral designs. **3.** குடலைக்கதிர் (வின்.); ear of grains in blossom.

[பூ+ சட்டை]

பூச்சர்க்கரைக்கிழங்கு *pū-c-carkkarai-k-kiḻaṅgu,* பெ.(n.)நிலப்பூசனி; panicled bindweed.

[பூ + சர்க்கரை + கிழங்கு]



பூச்சரக்கல் *pūccara-k-kal,* பெ. (n.) சுக்கான் கல்; lime stone.

[பூச்சரம் + கல்]

பூச்சரம் *pū-c-caram* பெ. (n.) மலர்மாலை; a garland or chaplet of flowers.

க. பூசர

[பூ + சரம்]

பூச்சருக்கரைக்கிழங்கு *pūccarukkarai-kiḻaṅgu,* பெ. (n.) நிலப்பூசனி; panicled bind weed.

பூச்சல்லா *pū-c-callā,* பெ. (n.) பூத் தொழிலமைந்த மெல்லியது துகில் வகை (இ.வ); muslin embroidered with fine floral designs.

[பூ + சல்லா]

பூச்சாண்டி *pūccāṇḍi,* பெ. (n.) குழந்தைகளுக்கு அச்சமுண்டாக்கும் உருவம்; an imaginary being, invoked to frighten children; bugbear, hobgoblin.

[பூச்சி + ஆண்டி – பூச்சியாண்டி → பூச்சாண்டி]

பூச்சாண்டிகாட்டு–தல் *pūccāṇḍi-kāṭṭu-,* 15 செ.குன்றாவி. (v.t.) அச்ச(பய)ங்காட்டுதல்; to frighten with a bugbear, as children.

[பூச்சி + ஆண்டி – பூச்சியாண்டி → பூச்சாண்டி + காட்டு. காண் (த.வி.) - காட்டு (பி.வி.)]

பூச்சாத்து *pū-c-cāttu,* பெ. (n.) திருவரங்கத்தில் ஆடவை(ஆனி)மாதம் நடக்கும் திருவிழா (இ.வ.); a festival in Tiruvaraṅgam (Sriraṅgam) temple in the month of āṉi.

[பூ + சாத்து]

பூச்சாயை *pū-c-cāyai,* பெ. (n.) நிலவுருண்டையின் நிழல்; shadow of the earth.

[பூ + சாயை]

பூச்சாரம்¹ *pū-c-cāram,* பெ. (n.) நிலவளம்; fertility of the soil.

[பூ + சாரம். சாறு → சாறம் → சாரம்]

பூச்சாரம்² *pū-c-cāram,* பெ. (n.) **1.** பூவின் சாரம்; essence of flowers. **2.** பூநீறு; efflloresence grown on the soil of fuller's earth. **3.** பூவழலை; a mineral substance collected from the soil of washerman's earth.

[பூ + சாரம்]

பூச்சாறு *pū-c-cāṟu,* பெ. (n.) பூவின்சாறு; juice of flowers.

[பூ + சாறு]

பூச்சி¹ *pūcci,* பெ. (n.) **1.** சிற்றுயிரி (செந்து); insect, beetle, worm or any small reptile. **2.** குடற்புழு; worms in the intestines.

ம. பூச்சி; **க.** பூசி, பூசி; **பட.** சூ

[புல் → புர் → புரை = உட்டுளை, உட்டுளைப்பொருள். புல் → புள் → புழு = துளைத்தரிக்கும் சிற்றுயிரி (வே.க.3.101–104) புல் → பூள் → பூய் → பூய்ச்சி → பூச்சி]

பூச்சி² *pūcci,* பெ. (n.) குழந்தைகளை அச்சுறுத்தற்கேனும் சிரிப்பிப்பதற்கேனும் சொல்லும் சொல் (கொ.வ.); word meaning hobgoblin, used either to frighten or make children laugh.

[புள் → புய் → புய்ச்சி → புச்சி → பூச்சி = பெரியது]

பூச்சி³ *pūcci,* பெ. (n.) சிறுவர் விளையாட்டு; a children game.

[புள் → புய் → புய்ச்சி → புச்சி → பூச்சி]

பூச்சி என்பது ஆள்நிழல். நிலவொளியிற் பூச்சி தெரியும் போது ஒருவரைத் தொடும் விளையாட்டு பூச்சி அல்லது பூச்சிவிளையாட்டு. ஆடுவாருள் ஏதேனுமொரு வகையில் அகப்பட்டுக் கொண்ட ஒருவர், நிலவொளியிடத்தில் நிற்க, ஏனையரெல்லாம் அருகேயுள்ள ஓர் இருண்ட இடத்தில் நின்று கொள்வர்.

இருண்ட இடத்தில் நிற்பவர் ஒளியிடத்திற்குவரின், அவரைத் தொடலாம்; இல்லாவிடின் தொடல் கூடாது. ஒளியிடத்தில் தொடப்பட்டவர் பின்பு பிறரைத் தொடுதல் வேண்டும் (த.வி.122)

பூச்சிக்கடி *pūcci-k-kaḍi,* பெ. (n.) 1. பூச்சியின் கடி; insect-bite, sting of an insect. 2. பூச்சியால் உடலிற் பரவும் பற்று; worms, parasites, 3. புண்கட்டிவகை (வின்.); an eruption of the skin, herpes.

[பூச்சி + கடி]

பூச்சிக்கள்ளி *pūcci-k-kaḷḷi,* பெ. (n.) கள்ளிவகை; cochineal fig, a cactus.

பூச்சிக்கூடு *pūcci-k-kūḍu,* பெ. (n.) 1. பூச்சிகள் வாழும் கூடு; insect-nest. 2. பூச்சிகளை யடைத்து வைக்குங் கூடு; cage for insects. 3. காதணி வகை (வின்.); golden cylindrical ear-ring worn in the lobe of the ear.

[பூச்சி + கூடு. பண்டைநாளில் பாம்படம் (நாகபடம்), தண்டொட்டி, அரிசித்தழும்பு, பூச்சிக்கூடு, மேலீடு என்னும் ஐவகைக் காதணிகளை அணிந்து வந்தனர்.]

பூச்சிக்கொட்டை *pūcci-k-koṭṭai,* பெ. (n.) நெய்க்கொட்டான்; soapnut.

[பூச்சி + கொட்டை]

பூச்சிகாட்டு-தல் *pūcci-kāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) அச்சங்காட்டுதல்; to frighten children by distortions of face or grimaces. *'பூச்சிகாட்டித் திரியும் புத்தியென்ன'* (கொண்டல் விடு.66).

[பூச்சி + காட்டு-, காண்(த.வி.) – காட்டு (பி.வி.)]

பூச்சிகொல்லி *pūcci-kolli,* பெ. (n.) (பூச்சியைக்கொல்வது) வசம்பு; sweet - flag, as insecticide.

மறுவ. பிள்ளைவளர்த்தி,பேர் சொல்லாதது

[பூச்சி + கொல்லி. கொல் → கொல்லி. 'இ' வினைமுதலீறு]

பூச்சிகொல்லிமருந்து *pūcci-k-kolli-marundu,* பெ. (n.) *பூச்சிகொல்லி* பார்க்க; see *pūcci-k-kolli.*

[பூச்சிகொல்லி + மருந்து]

பூச்சித்துளை *pūcci-t-tuḷai,* பெ. (n.) பூச்சிகள் இருக்கும் துளை; worm hole.

[பூச்சி + துளை. துல் → துள் → துளை]

பூச்சிதம் *pūccidam,* பெ. (n.) மதிப்பு; esteem. *'பூச்சிதந்தௌத்தியம்'* (விநாயகபு.69,60).

[பூச்சியம் → பூச்சிதம்]

பூச்சிநோய் *pūcci-nōy,* பெ. (n.) வயிற்றில் புழுவுண்டாம் நோய்வகை; worms.

[பூச்சி + நோய்]

பூச்சிப்பல் *pūcci-p-pal,* பெ. (n.) சொத்தைப்பல்; carious tooth.

[பூச்சி + பல்]

பூச்சிப்பொடி *pūcci-p-poḍi,* பெ. (n.) பூச்சிக்கொல்லி மருந்து; worm powder, vermifuge.

[பூச்சி + பொடி]

பூச்சிபற—த்தல் *pūcci-para-,* 3 செ.கு.வி (v.i.) பேரொளி, பெருஞ்சோர்வு முதலிய காரணங்களாற் கண்கூசுதல்; to be blurred as the eyes from glare weakness or defective sight. *'இக்கட்டடத்தைப் பார்க்கும் போது கண்பூச்சி பறக்கின்றது'.*

[பூச்சி + பற—,]

பூச்சிபிடி[1]—த்தல் *pūcci-pidi-,* 4 செ.கு.வி. (v.i.) பண்டம் புழுவுண்டாகிக் கெட்டுப் போதல்; to infested with worms to become wormy. அரிசி பூச்சிபிடித்துவிட்டது.

[பூச்சி + பிடி—,]

பூச்சிபிடி[2]—த்தல் *pūcci-pidi-,* 4 செ.குன்றாவி. (v.t.) பிறர் விருப்பப்படி (இச்சகமாக) நடத்தல்; to coax. 2. வேண்டாதவிடத்து மிகுந்த எச்சரிக்கையுடன் செயல் செய்தல்; to handle gingerly. என்ன பூச்சி பிடிக்கிறாய்?

[பூச்சி + பிடி—,]

பூச்சிபூச்சியெனல் *pūcci-pūcci-yenal,* பெ. (n.) 1. தேவையின்றி அச்சப்படற் குறிப்பு; onom, expr. of being unnecessarily afraid. 2. அச்சுறுத்துதற் குறிப்பு; onom. expr, of being frightening.

[பூச்சி + பூச்சி + எனல்]

பூச்சிமருந்து *pūcci-marundu,* பெ. (n.) பூச்சி கொல்லி பார்க்க; see pūcci -kolli.

[பூச்சி + மருந்து . மரு → மருந்து]

பூச்சிமிரட்டு *pūcci-mirattu,* பெ. (n.) பொய்யாக அச்சங்காட்டுகை (கொ.வ.); false of feigned threat.

[பூச்சி + மிரட்டு]

பூச்சியடி—த்தல் *pūcci-y-adi-,* 4 செ.குன்றாவி. (v.t.) பயிருக்கு நோயுண்டாதல்; to infest with worms, as of plants etc.

[பூச்சி + அடி —]

பூச்சியத்துவம் *pūcciyattuvam,* பெ. (n.) மதிப்பு (கௌரவம்); honour, respect. *'கிருகத் தனுக்கு பூச்சியத்துவஞ் சொல்லும்'* (சிவசமவா. 65).

[பூசு → பூச்சியம் → பூச்சியத்துவம்]

Skt. tva > த. துவம்

பூச்சியம் *pūcciyam,* பெ. (n.) 1. மதிக்க (கௌரவிக்க)த் தக்கது; that which is venerable, worthy of worship. 2. நன்மதிப்பு; honour, reputation *'நிலை தவறாத் தானத்திற் பூச்சியமே சாரும்'* (தனிப்பா. ii. 279, 665). 3. பகட்டாரவாரம் (ஆடம்பரம்) (வின்.); ostentation, display.

[பூசுதல் = கழுவுதல். பூசு → பூசை = தெய்வச் சிலையைக் கழுவிச்செய்யும் வழிபாடு. பூசு → பூசித்தல் = வழிபாடு செய்தல். பூசு → பூச்சு = தடவுகை, மெழுகுகை. பூசு → பூச்சு → பூச்சியம். 'இயம்' ஓர் ஈறு. ஒ.நோ : இலக்கியம்]

பூச்சியன்[1] *pūcciyan,* பெ. (n.) வழிபாட்டிற் குரியவன், வணக்கத்திற்குரியவன்; one who is venerable.

[பூச்சியம் → பூச்சியன்]

பூச்சியன்² *pūcciyaṉ,* பெ. (n.) கறுப்பும், வெள்ளையுமான புள்ளிகளுடைய வண்டிமாடு (யாழ்ப்.); draught ox of grey and white spots.

[பூச்சியம் → பூச்சியன். பூச்சி = (பூச்சிபோன்ற) புள்ளி]

பூச்சியாள்(ளு)—தல் *pūcci-y-āḷ(ḷu)-,* 12 செ.கு.வி. (v.i.) இலை முதலியவற்றை யரிக்கும் பூச்சிகள் மிகுந்திருத்தல்; to be infested with insects as a garden. பூந்தோட்டம் பூச்சியாளவும் (S.I.I.iv, 150)

[பூச்சி + ஆள்—,]

பூச்சிரோகம் *pūcci-rōgam,* பெ. (n.) *பூச்சி நோய்* பார்க்க; see *pūcci-nōy* (M.L.)

[பூச்சி + ரோகம்]

Skt. roha > தரோகம்.

பூச்சிலை *pū-c-cilai,* பெ. (n.) கல்வகை (யாழ்.அக.); a kind of stone.

[பூ + சிலை]

பூச்சிவிடு—தல் *pūcci-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) *பூச்சி காட்டு—தல்* (யாழ்.அக.) பார்க்க; see *pūcci-kāṭṭu-,*

[பூச்சி + விடு—,]

பூச்சிவிளக்கநூல் *pūcci-viḷakka-nūl,* பெ. (n.) பூச்சிகளைப் பற்றிய நூல் (புதுவை.); entomology.

[பூச்சி + விளக்கம் + நூல்]

பூச்சிவிதை *pūcci-vidai,* பெ. (n.) பூச்சியரித்த விதை; worm seed.

[பூச்சி + விதை]

பூச்சிவெட்டு *pūcci-veṭṭu,* பெ. (n.) **1.** வழுக்கை; baldness, loss of hair, alopecia (M.L.) **2.** குழிந்த கண்; bleared or sunken eyes, blepharitis (M.L.) **3.** ஆடைகளில் பூச்சிகளால் ஏற்படும் துளை; damage to clothes, caused by insects.

[பூச்சி + வெட்டு]

பூச்சீட்டு *pū-c-ciṭṭu,* பெ. (n.) ஆறுமாதங்கட்கு ஒருமுறை பணஞ் செலுத்தும் சீட்டு; a chit fund at which subscriptions are payable halfyearly (G.Tn.D.I, 194).

[பூ + சீட்டு. சுள் → (சுட்டு) → சிட்டு → சீட்டு]

பூச்சு *pūccu,* பெ. (n.) **1.** தடவுகை; daubing, smearing, anointing. *'தேசுற்றிடு பூச்சன்பொடு சேர்ப்பார்'* (சிவரக. நைமிச. 26). **2.** மேற்பூசுகை; coating, gilding plating, tinning, plastering. *'பொன் பொருவ நொய்யர் புனை பூச்சுடைமை'* (பிரபோத. 11, 66). **3.** கஞ்சிப்பசை (வின்); starch. **4.** மருந்துப் பற்று; medicinal paste, plaster. **5.** வெளிப்பகட்டு (வின்); external show, pretence. **6.** குற்றம் முதலியன மறைக்கை (வின்); concealment of one's poverty or defects assuming appearance. **7.** இதமான செயல் முதலியன; soothing act or word. *'மற்றோர் பூச்சிலை'* (தேவா. 351, 4).

ம. பூசல், பூச்சு; **க.** பூசு

[பூசு → பூச்சு]

பூச்சுத்தயிலம் *pūccu-t-tayilam,* பெ. (n.) பூச்செண்ணெய் பார்க்க; see pūccēṇṇey.

[பூச்சு + தயிலம்]

Skt. taila > த. தயிலம்

பூச்சுப்புடைவை *pūccu-p-puḍaivai,* பெ. (n.) கஞ்சிப்பசையிட்ட புடைவை (வின்.); cloth sized with starch.

[பூச்சு + புடைவை]

பூச்சுமருந்து *pūccu-marundu,* பெ. (n.) பூசுமருந்து பார்க்க; see pūšumarundu.

[பூசு → பூச்சு + மருந்து]

பூச்சுவேலை *pūccu-vēlai,* பெ. (n.) 1 சுவர்களிற் சுண்ணந் தீற்றும் வேலை; plastering. *'வீட்டிற் பூச்சுவேலை நடக்கிறது'* 2. முலாமிடும் வேலை; plating, gilding, tinning. *'இந்த நகை பூச்சு வேலையுள்ளது'* 3. வெளிப்பகட்டு (இ.வ.); showy work, anything superficial.

[பூசு → பூச்சு + வேலை]

பூச்சூட்டு *pū-c-cūṭṭu,* பெ. (n.) முதற் கருவுற்ற மகளிர்க்கு ஐந்து அல்லது ஏழாம் மாதத்திற் கூந்தலைப் பூவால் அழகுபடுத்தி (அலங்கரித்து) பிறந்தகத்தில் நிகழ்த்துஞ் சடங்கு; ceremony of adorning with flowers the head of a young woman in the fifth or seventh month of her first pregnancy performed in her father's house.

[பூ + சூட்டு. சூடு → சூட்டு]

பூச்சூடு—தல் *pū-c-cūḍu-,* 5 செ.கு.வி. (v.i.) பூவை அணிந்து கொள்ளுதல்; to adorn hair etc, with flower. காலையில் பூச்சூடுதல் மகளிர்க்கு மகிழ்ச்சி தரும். (உ.வ.)

[பூ + சூடு-,]

பூச்செடி *pū-c-ceḍi,* பெ. (n.) பூக்கும் செடி; flower plant.

க. பூகிடு, பூகிட

[பூ + செடி]

பூச்செண்டு *pū-c-ceṇḍu,* பெ. (n.) பூவினாலமைந்த செண்டு; bouquet of flowers.

க. பூசெண்டு, பூதுண்டு, கூ செண்டு, பூதொங்கல்; து. பூகொளிம்மை

[பூ + செண்டு]

பூச்செண்ணெய் *pūcceṇṇey,* பெ. (n.) மேலே பூசும் எண்ணெய்; liniment externally applied.

[பூசு → பூச்சு + எண்ணெய்]

பூச்சேலை *pū-c-cēlai,* பெ. (n.) பூவேலை யமைந்த புடைவை; saree decorated with floral designs.

[பூ + சேலை]

பூச்சை *pūccai,* பெ. (n.) பூனை (நாஞ்); cat.

ம. பூச்ச; து. பூசெ, பூச்செ; கோத. பீச்; குட. பூஞெ

E. felis; L.feles

[பூசு → பூசை → பூச்சை]

பூச்சையநாய்க்கன்பணம் *pūccaiya-nāykkanpaṇam,* பெ. (n.) பழைய நாணய வகை (பணவிடு, 140); a coin formerly current in South India.

பூச்சொக்கா *pū-c-cokkā,* பெ. (n.) *பூச்சொக்காய்* பார்க்க; see *pū-c-cokkāy.*

[பூ + சொக்கா]

பூச்சொக்காய் *pū-c-cokkāy,* பெ. (n.) பூவேலையுள்ள துணியிற்றைத்த சட்டை; long jacket embroidered with floral designs.

[பூ + சொக்காய்]

பூசக்கரம் *pū-šakkaram,* பெ. (n.) *பூச்சக்கரம்* (துக்கயாகப். 6, உரை) பார்க்க; see *pū-c-cakkaram.*

[பூச்சக்கரம் → பூசக்கரம்]

பூசக்கரவாளம் *pū-šakkaravāḷam,* பெ. (n.) பூச்சக்கரவாளம் (யாழ்.அக.) பார்க்க; see pū-c-cakkaravāḷam.

[பூச்சக்கரவாளம் → பூசக்கரவாளம்]

பூசக்கரன் *pū-šakkaraṉ,* பெ. (n.) பூச்சக்கரன் (யாழ்.அக.) பார்க்க; see pū-c-cakkaraṉ.

[பூச்சக்கரன் → பூசக்கரன்]

பூசகம் *pūšagam,* பெ. (n.) பூமிசருக்கரைக் கிழங்கு; a kind of sweet root.

பூசகன் *pūšagaṉ,* பெ. (n.) கோயிற் பூசாரி (அருச்சகன்); one who performs worship, temple-priest.

[பூசு → பூசி → பூசை → பூசகன் = பூசை செய்பவன்]

பூசணம்[1] *pūšaṇam,* பெ. (n.) 1. பூஞ்சணம் 2. பார்க்க; see pūñ-jaṇam. 2. 2. அழுக்கு (யாழ்.அக.); dirt.

[பூஞ்சணம் → பூசணம்]

பூசணம்[2] *pūšaṇam,* பெ. (n.) நேர்த்திக் கடனாக முடித்து வைக்கும் காசு முதலியன; coin tied in a piece of cloth and set apart as a votive offering. *'ஒரு பணமெடுத்து பூசண முடிந்துவை'* (நாஞ்.).

[பூசை → பூசணம் = பூசைக்காக ஒதுக்குவது]

பூசணி[1] *pūšaṇi,* பெ. (n.) 1. சமையலுக்குப் பயன்படும் முட்டை வடிவத்து அல்லது உருண்டை வடிவத்துப் பெரும் காயைத் தரும் செடி (நாமதீப.333); pumpkin plant. 2. சர்க்கரைப் பூசணி; squash gourd. 3. பூசணிவகை; true musk melon.

[பூ + சுணை – பூசுணை → பூசணி. சுள் → சுண் → சுணை = இலைகாய் முதலியவற்றிலுள்ள சிறுமுள்]



பூசணி² *pūsaṇi,* பெ. (n.) அடைக்கலங் குருவி; sparrow.



பூசணிக்காய் *pūšṇi-k-kāy,* பெ. (n.) பூசணிச் செடியின் காய்; pumpkin.

[பூசணி + காய். 'பூசணி¹' பார்க்க]

பூசணிக்கொடி *pūšaṇi-k-koḍi,* பெ. (n.) பூசணிச் செடியின் கொடி; pumpkin climber.

[பூசணி + கொடி]

பூசந்தி *pū-šandi,* பெ. (n.) இரு பெருங்கடலைப் பிரிக்கும் ஒடுக்கமான நிலம் (இ.வ.); isthmus.

[பூ + சந்தி. சந்து → சந்தி]

பூசநீர் *pūšanīr,* பெ. (n.) வழலையுப்பு; a salt, exteracted from Dhobys earth, fullers earth.

பூசபத்திரி *pūšapattiri,* பெ. (n.) ஒரு கடைச் சரக்கு; a bazaar drug.

பூசம் *pūšam,* பெ. (n.) **1.** உந்தி; naval. **2.** புடல்; gourd.

பூசரக்கல் *pūšara-k-kal,* பெ. (n.) சுக்கான் கல்; lime stone.

பூசரி *pūšari,* பெ. (n.) கண்கள் அசையாமல் மூக்கின் நுனியைப் பார்ப்பது; seeing the tip of the nose with the eyes.

பூசரிமுத்திரை *pūšari-muttirai,* பெ. (n.) தாமரை யிருக்கையிலிருந்து கொண்டு மூக்கு நுனியைப் பார்த்திருக்கும் ஒக நிலை; (yōga.) a posture in which a yōgi seated in padumāšanam, gazes at the tip of his nose.

[பூ + சரி + முத்திரை]

பூசருக்கரை *pūšarukkarai,* பெ. (n.) **1.** உப்பு; common salt. **2.** சீந்திற் சருக்கரை; a bitter substance prepared from the stalk of the moon plant.

[பூ + சருக்கரை]

பூசல்¹ *pūšal,* பெ. (n.) **1.** போர்; battle. *'ஆன பூசலறிந்திலம்'* (கம்பரா. உலாவியல். 34). **2.** பேரொலி; clamour, loud uproar. *'அரற்றும் பூசலார்'* (கம்பரா. இராவ்ணன்வதை. 228). **3.** பலருமறிய வெளிப்படுத்துகை; making known, publishing. *'புன்கணீர் பூசறரும்'* (குறள், 71.) **4.** கூப்பீடு; wailing, lamentation, complaining, crying. *'மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம் ஆய்ந்த பூசன் மயக்கத்தானும்'* (தொல். பொ. 79) **5.** வருத்தம்; distress. *'கண்ணுறு பூசல் கைகளைந் தாங்கே'* (கலித். 34.).

ம. பூயல்; க. புய்யல்,

[பூசு → பூசல் = போர், ஆராவாரம் (மு.தா. 171)]

பூசல்² *pūšal,* பெ. (n.) ஒப்பனை (சூடா.); decoration, adornment.

[பூசு → பூசல்]

பூசல்³ *pūšal,* பெ. (n.) பூசுதல்; smearing, daubing.

[பூசு + அல் – பூசல். 'அல்' தொ.பெ.ஈறு]

பூசல்நாயனார் *pūšal-nāyaṉār,* பெ. (n.) பூசலார் நாயனார் பார்க்க; see pūšalār nāyaṉār.

[பூசல் + நாயனார்]

பூசல்நெற்றி *pūšal-neṟṟi,* பெ. (n.) போர் முகம்; field of battle. *'பூசல் நெற்றியிலே அவனழியும் படியாக'* (திவ். பெரியதி. 4, 6, 4. வ்யா).

[பூசல் + நெற்றி]

பூசலார்நாயனார் *pūšalār-nāyaṉār,* பெ. (n.) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் (பெரியபு.); a cononized šaiva saint one of 63.

[பூசலார் + நாயனார். நாயன் + நாயனார்]

பூசலிசை–த்தல் *pūšal-išai-,* 4 செ.கு.வி. (v.i.) கலகச் சொல்லால் சண்டை மூட்டுதல்; (தொல். பொ. 313. உரை); to stir up a quarrel with angry words.

[பூசல் + இசை–, இயை → இசை]

பூசலிடு–தல் *pūšal-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. முறையிடுதல்; to complain loudly. *'காலந்தோறும் யானிருந்து கைதலை பூசலிட்டால்'* (திவ். திருவாய். 4, 7, 1). 2. பேரொலிபடக் கதறுதல்; to cry loudly. *'அன்பாற் புரண்டரும் பூசலிட்டாள்'* (கம்பரா. மாயாச. 32). 3. கூட்டுதல்; to join, unite. (ஈடு, 5, 1, 7.).

[பூசல் + இடு–,]

பூசலை *pūšalai,* பெ. (n.) *பூசலார் நாயனார்* பார்க்க; see *pūšalār nāyaṉār. 'பூசலை சண்டேசன்'* (சேக்கிழார். பு. 38.).

[பூசலார் (நாயனார்) → பூசலை மரூஉ]

பூசற்களம் *pūšaṟkaḷam,* பெ. (n.) போர்க்களம் (அகநா. 89, உரை); battle-field.

[பூசல் → களம். குல் → குள் → கள் களம்]

பூசற்களரி *pūšaṟ-kaḷari,* பெ. (n.) பூசற்களம் (பு. வெ. 9, 19, உரை) பார்க்க; see pūšaṟ-kaḷam.

[பூசல் + களரி. குல் → குள் → கள் → களம் = கூட்டம். கள் → களர் → களரி = அவை, போர்க்களம்]

பூசற்கோழை *pūšaṟ-kōḻai,* பெ. (n.) போர்க்கு அச்சப்படுபவன்; coward in battle. *'இப்போதாகப் பூசற்கோழைகளாக வொண்ணாது'* (திவ். பொரியதி. 7, 5, 3).

[பூசல் + கோழை]

பூசற்பறை *pūšaṟ-paṟai,* பெ. (n.) பாலை நிலப்பறையுள் ஒன்று (இறை. 1, பக், 18); a drum of the desert tract.

[பூசல் + பறை]

பூசற்பாக்கியம் *pūšaṟpākkiyam,* பெ. (n.) வெற்றித்திரு (ஈடு.10,6,8); the goddess of victory.

[பூசல் + பாக்கியம்]

Skt. bhāgya > **த.** பாக்கியம்

பூசற்றண்ணுமை *pūšar rannumai,* பெ. (n.) பகைவருடன் போர் புரிவதற்காக வீரரை அழைத்தற்குக் கொட்டும்பறை(நன். 380); drum used for calling men to arms.

[பூசல் + தண்ணுமை]

பூசற்றுடி *pūšarrudi,* பெ. (n.) பூசற்பறை பார்க்க; see pūšarparai. *'பூசற்றுடி பூசலறாப் புனவாயில்'* (தேவா. 889, 7).

[பூசல் + துடி]

பூசறு—த்தல் *pūšaru-,* 4 செ.குன்றாவி. (v.t.) வாய் முதலியன கழுவுந் தொழிலை முடித்தல்; to finish the work of washing or cleansing the mouth, etc., *'பொடியு நீருங்காட்டிடக் கொண்டு வாய்ப்பப் பூசறுத்து'* (சீவக.1302).

[பூசு + அறு.பூசுதல் = கழுவுதல். அர் → அறு]

பூசன்மயக்கு *pūšan-mayakku,* பெ. (n.) 1. குல முதற்பிள்ளை யிறக்கச் சுற்றத்தார் புலம்புதலைச் சொல்லும் புறத்துறை. (பு. வெ. 10, சிறப். 6); (purap.) theme describing the wailing of kinsfolk on the death of a young warrior. 2. வேந்தன் இறந்து பட்டானாக அவனது குடிகள் இரங்குதலைக் கூறும் புறத்துறை (பு. வெ. 10, சிறப். 7); (purap.) theme describing the wailing of the subjects on the death of their king.

[பூசல் + மயக்கு]

பூசன்மாற்று *pūšan-märru,* பெ. (n.) நிரை கவர்ந்த வெட்சியார் மீட்க வந்த கரந்தையாரைப் போரிலழித்தமை கூறும் புறத்துறை (பு. வெ. 1, 10); (purap.) theme describing the success of the invaders seizing the cows and defeating the forces that pursue to recover them.

[பூசல் + மாற்று. மாறு → மாற்று]

பூசனம்[1] *pūšanam,* பெ. (n.) பூசை, வழிபாடு (ஆராதனை); solemn ritual, worship, devotion. *'நரிப்பரியைப் பூசனஞ் செய்து'* (திருவிளை. நரிபரி. 120).

[பூசை → பூசனம்]

பூசனம்[2] *pūšanam,* பெ. (n.) பூஞ்சணம் (இ.வ.); mould.

[பூஞ்சணம் → பூசணம் → பூசனம்]

பூசனி[1] *pūšani,* பெ. (n.) பூசணி[1] பார்க்க; see pūšaṇi.

[பூ + சுணை → பூசுணை → பூசணி → பூசனி]

பூசனி[2] *pūšani,* பெ. (n.) பூஞ்சணம் (யாழ்.அக.) பார்க்க; see puñjaṇam.

[பூஞ்சணம் → பூசணம் → பூசணி → பூசனி]

பூசனி[3] *pūšani,* பெ. (n.) அடைக்கலாங் குருவி (யாழ்.அக.); sparrow.

[பூசணி → பூசனி]

பூசனிக்காய்க்கொத்துமணி *pūšani-k-kāy-k-kottu-maṇi,* பெ. (n.) கழுத்தணிவகை; necklace having pumpkin shaped beads.

[பூசனிக்காய் + கொத்துமணி]



பூசனை *pūšaṉai,* பெ. (n.) **1.** அன்றாட வழிபாடு; daily, ritual or worship *'சிறப்பொடு பூசனை செல்லாது'* (குறள், 18). **2.** மதிப்பளிக்கை; honouring. *'பூசனை வரன்முறை யியற்ற'* (கம்பரா. படைக்கா. 30).

க. பூசன, பூசனெ

[பூசை → பூசனை]

பூசனைபடை-த்தல் *pūšaṉai-paḍai-,* 4 செ.கு.வி. (v.i.) வணக்கஞ் செய்தல்; to honour, perform worship. *'பார் படைத்தவன் படைக்கொரு பூசனை படைத்தீர்'* (கம்பரா. பிரமா. 184).

[பூசனை + படை-]

பூசாக்கல் *pūšā-k-kal,* பெ. (n.) சுக்கான்கல் (யாழ்.அக.); kunker, lime-stone.

பூசாகாலம் *pūšā-kālam,* பெ. (n.) பூசைக்காலம் பார்க்க; see pūšai-k kālam.

க. பூசாகாலம்

[பூசை → பூசா + காலம்]

பூசாசாரி *pūšāšāri,* பெ. (n.) பூசாரி (யாழ்.அக.) பார்க்க; see pūšāri.

[பூசை + ஆசாரி → பூசையாசாரி → பூசாசாரி]

பூசாந்தப்படல் *pūšānda-p-paḍal,* பெ. (n.) *பூசாந்தப் படலம்*(வின்.) பார்க்க; see *pūšānda-p-paḍalam.*

[பூசை → பூசா → பூசாந்த + படல்]

பூசாந்தப்படலம் *pūšānda-p-paḍalam,* பெ. (n.) சப்பரம் வைக்கும் இடம் (யாழ்ப்.); resting place for capparam.

[பூசை → பூசா → பூசாந்த + படலம்]

பூசாந்தரம் *pūšāndaram,* பெ. (n.) **1.** சேலை வகை (இ.வ.); a saree. **2.** நீர் வடியும் புண்கட்டிவகை; lachrymal abscess. (M.L.).

பூசாந்திப்பட்டை *pūšāndi-p-paṭṭai,* பெ. (n.) புவந்திப்பட்டை; bark of puvandi.

[பூசாந்தி + பட்டை]

பூசாந்திரக்கடுக்கன் *pūsāndira-k-kaḍukkaṉ,* பெ. (n.) ஒருவகைக் காதணி (பஞ்ச பூசாவந்தம்); a kind of ear ring.

[பூசாந்திரம் + கடுக்கன்]

பூசாந்திரப்பட்டை *pūšāndira-p-paṭṭai,* பெ. (n.) ஒரு மருந்துப்பட்டை (தைலவ. தைல. 59); a bark used for medicinal purposes.

[பூசாந்திரம் + பட்டை]

பூசாந்திரம்[1] *pūšāndiram,* பெ. (n.) ஒருவகைக் காதணி (பஞ்ச பூசாவந்தம்); a kind of ear ring.

பூசாந்திரம்[2] *pūšāndiram,* பெ. (n.) **1.** அருமை பண்ணுகை (யாழ்.அக.); making much of. **2.** மரவகை (தைலவ. தைல. 59); a tree.

பூசாந்திரம்[3] *pūšāndiram,* பெ. (n.) கடைக்கண்ணில் பீளை சார்ந்து வீக்கம் உண்டாக்குமோர் கண்ணோய்; ophthalmia with purulent discharge.

பூசாபலம் *pūšā-palam,* பெ. (n.) தெய்வ வழிபாட்டால் உண்டாம் பயன்; result of one's devotion to god. *'மனத்தாற்புரி பூசாபலம் போலும்'* (பிரமோத். 5, 37).

[பூசை → பூசா + பலம்]

Skt. phala > **த.** பலம்

பூசாரம்பம் *pūšārambam,* பெ. (n.) பூசனையின் தொடக்கம்; beginning of ceremonial worship.

[பூசை → பூசா + ஆரம்பம்]

Skt. ārambha > **த.** ஆரம்பம்

பூசாரி *pūšāri,* பெ. (n.) **1.** சிறு தெய்வத்துக்குக் கோயிலிற் பூசை புரிவோன்; priest of a village deity. **2.** பேயோட்டும் மந்திரவாதி; exorcit.

க., து., பட. பூசாரி.

[பூசை → பூசையாரி → பூசாரி. தலையாரி என்னுஞ் சொல்லிற் போல் ஆரி என்பது ஓர் ஈறு (வ.வ. 2, 40)] 'பூசை[2]' பார்க்க

பார்ப்பனர் தமிழரின் மொழி, நூல், மதம், பழக்கவழக்கம் முதலியவற்றையறிந்த பின், முருகன்(சேயோன்) திருமால் (மாயோன்) முதலிய பழந்தனித்தமிழ் தெய்வங்களை ஆரியத் தெய்வங்களாகக் காட்டிப் பழமைகள் (புராணங்கள்) வடமொழியில் வரைந்துகொண்டு மதத்திற் கதிகாரிகளாய்ப் பூசாரித் தொழில் மேற்கொண்டனர். இதுவே அவர்கள் குலத்திற்குத் தமிழ்நாட்டிற் பெருந்தலைமையும் நல்வாழ்வும் தந்தாகும் (ஒ.மொ.29).

பூசாரிமுத்திரை *pūšāri-muttirai,* பெ. (n.) தாமரை இருக்கை(பதுமாசனத்தி) யிலிருந்து கொண்டு மூக்குநுனியைப் பார்ப்பதாகிய ஓகவகை (யோகஞானா.34); a yogic posture of looking at the tip of the nose, sitting in padumāšaṉam.

[பூசாரி + முத்திரை]

பூசாரியன் *pūšāriyaṉ,* பெ. (n.) சடங்கு செய்விக்கும் குரு (புரோகிதன்); family priest.

[பூசாரி → பூசாரியன்]

பூசாலி *pūšāli,* பெ. (n.) ***பூசாரி*** (யாழ்.அக.) பார்க்க; see *pūšāri.*

[பூசை → பூசையாரி → பூசாரி → பூசாலி]

பூசாவிதி *pūšāvidi,* பெ. (n.) ***பூசைவிதி*** பார்க்க; see *pūšaividi.*

[பூசை → பூசா + விதி]

பூசாவிருத்தி *pūšāvirutti,* பெ. (n.) கோயிற் பூசைக்கு விட்ட இறையிலி நிலம்; inam land granted for performing worship in a temple. (I.M.P.N.A. 240).

[பூசை → பூசா + விருத்தி]

Skt. vṟuddhi > **த.** விருத்தி.

பூசி—த்தல் *pūši-,* 11 செ.குன்றாவி. (v.t.) **1.** பூசை செய்தல்; to perform acts of ceremonial worship. ***'பூசித்தும் போக்கினேன் போது'*** (திவ். இயற். நான்மு. 63). **2.** மதிப்பு

(மரியாதை) காட்டுதல்; to treat courteously, reverence. 3. கொண்டாடுதல்; to caress, fondle. *'புதல்வா வெம்மைப் பூசிப்பதே'* (திருக்கோ. 396).

[பூசுதல் = கழுவுதல். பூசு → பூசி]

பூசிக்கொள்(ளு)–தல் *pūši-k-koḷ(ḷu)-*, 10 செ.குன்றாவி. (v.t.) தடவிக்கொள்ளுதல்; to smear, to anoint. தலையில் எண்ணெய் பூசிக்கொள் (உ.வ).

க. பூசிகொள்

[பூசி + கொள்–,'கொள்' து.வி]

பூசிதன் *pūšidaṉ*, பெ. (n.) வணங்கப் படுவோன்; person much venerated or revered.

[பூசி → பூசிதன்]

பூசிப்பு *pūšippu*, பெ. (n.) வணக்கம்; worship, adoration.

[பூசி → பூசிப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

பூசிப்புணர்த்து–தல் *pūši-p-puṇarttu-*, 8 செ.குன்றாவி. (v.t.) சந்தனம் பூசி அணிகளையணிதல் (வின்.); to besmear with sandal and adorn with jewels.

[பூசி + புணர்த்து]

பூசிமெழுகு–தல் *pūši-meḻagu-*, 5 செ.குன்றாவி. (v.t.) குற்றம் நடந்ததாக ஒப்புக்கொள்ளாமல் வேறு ஏதேனும் கூறி மறைத்தல் (கொ.வ.); to slur over a fault, crime or defect, gloss over. உண்மையை நேரடியாகப் பேசு. பூசிமெழுகாதே (உ.வ).

[பூசு → பூசி + மெழுகு–,]

பூசியஉலோகம் *pūšiyaulōgam*, பெ. (n.) பூசிய மாழை பார்க்க; see pūšiya-māḻai.

[பூசிய + உலோகம்]

Skt. ulōha > த. உலோகம்

பூசியமாழை *pūšiyamāḻai*, பெ. (n.) மேற்பூசு பூசப்பட்ட மாழை (உலோகம்); coated metal.

[பூசு → பூசிய + மாழை]

பூசினி *pūsiṉi*, பெ. (n.) *பூசனி*¹ பார்க்க; see *pūšaṉi*.

[பூசனி → பூசினி]

பூசு¹–தல் *pūšu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. தடவுதல்; to besmear, anoint, rub, daub, spread on, plaster. *'நீறுபூசி நிமிர்சடை மேற் பிறை'* (தேவா. 627). 2. மெழுகுதல்; to scrub the floor with cowdung dissolved in water. *'புனலொடு விரவியே பூசினல்லது'* (புரலிங். இட்டலிங். 37). 3. கழுவுதல்; to clean. *'பூசிக் கொளினு மிரும்பின்கண் மாசொட்டும்'* (நான் மணிக். 99). 4. நீரால் அலம்புதல்; to wash, as with water. நீருண்டார் *'நீரான்வாய் பூசுப'* (நான்மணிக் 35).

மறுவ. தரைமெழுகல்

ம. பூசுக; க. பூசு; கூசு; தெ. பூயு; து. புசுனி; பட. கூசு.

Skt. pušta (working in clay, modelling) pusta-karman (plastering, painting.)

[புல்→ பொல்→ பொரு → பொருந் → பொருந்து(மு.தா.166) புல் → புள் → புண் → புணர். புணர்தல் = பொருந்துதல் (வே.க. 3, 64) புல் → புள் → புய் → (புசு) → பூசு]

பூசு²–தல் *pūšu-,* 10 செ.கு.வி. (v.i.) இயைதல்; to gather together. "*ஆயிரமுரு மொன்றாகப் பூசின்*" (கம்பரா. நிரும். 91).

[புல் → புள் → புய் → (புசு) → பூசு–,]

பூசு³ *pūšu,* பெ. (n.) 1. பூசுகை; daubling, smearing. 2. தவசத்தின் உமி அல்லது தொலி; thin skin or pellicle enveloping grains. 3. ஒட்டடை(வின்); cobweb. 4. தூசு (வின்.); dirt.

க. பூசு

[பூசு¹ → பூசு]

பூசு⁴–தல் *pūšu-,* 12 செ.குன்றாவி. (v.t.) ஒப்பனை செய்தல் (அலங்கரித்தல்) (வின்.); to adorn, decorate.

[புல் → புள் → புய் → (புசு) → பூசு]

பூசுகை *pūšugai* பெ. (n.) தடவுகை; smearing.

க. பூசு, பூசல், பூசுவிகெ

[பூசு → பூசுகை.'கை' தொ.பெ.ஈறு]

பூசுசாந்தாற்றி *pūšu-šāndāṟṟi,* பெ. (n.) சிற்றால வட்டம்; a kind of small, circular fan. '*பூசுசாந்தாற்றி.... நீத்தவரிடத்து நாற்றி*' (சீவக. 1906).

[பூசு + சாந்தாற்றி]

பூசுணி *pūšuṇi,* பெ. (n.) பூசணி¹ பார்க்க; see pūšaṇi¹ '*தண்டைக்காலம்மை சமைத்து வைத்த பூசணிக்காய்*' (துனிப்பா.).

மருவ. தடியங்காய், பரங்கிக்காய்

[பூ + சுணை – பூசுணை → பூசணி பூசுணி]

பூசுத்தி *pū-cutti,* பெ. (n.) இலைபோடுமுன் நிலத்தில் நீர் தெளித்துச் செய்யும் தூய்மை (வின்.); cleaning the floor by sprinkling water, as before laying the leaves for dinner.

[பூ + சுத்தி]

Skt.suddhi > த. சுத்தி

பூசுதயிலம் *pūšu-tayilam,* பெ. (n.) உடம்பின் மீது பூசுதற்குரிய நெய்மம் (யாழ்.அக.); liniment.

[பூசு + தயிலம்.]

Skt. taila > த. தயிலம்

பூசுதன் *pū-šudaṉ,* பெ. (n.) செவ்வாய் (யாழ்.அக.); mars, as son of the earth.

[பூ + அதன்]

Skt.suta > த. சுதன்

பூசுமஞ்சள் *pūšumañjal,* பெ. (n.) உடம்பில் இழைத்துப் பூச உதவும் மஞ்சள் கிழங்கு; raw turmeric. பூசுமஞ்சள்தூள் அதிகமாக விற்பனையாகிறது (உ.வ.).

மருவ. கத்தூரிமஞ்சள்

[பூசு + மஞ்சள். மங்கு → மங்கள் → மஞ்சல் = மங்கலான நிறம், அந்நிறக் கிழங்கு. (மஞ்சள்) மஞ்சல் → மஞ்சள்]

பூசுமருந்து *pūšu-marundu,* பெ. (n.) மேற்பூச்சு மருந்து, உடம்பில் வலியுள்ள பாகத்தில் தேய்க்கும் மருந்து; an ointment or liniment used externally on the affected parts of the body, embrocation.

[பூசு + மருந்து. மரு → மருந்து. மரு → மருந்து]

பூசுரன் *pūšuraṉ,* பெ. (n.) பார்ப்பனன்; Brahman, considered as god on earth. 'பூசுரன் ஞானசம்பந்தன் சொன்ன' (தேவா.539,11).

[பூ + சுரன்]

பூசுறு-தல் *pūšuṟu-,* 4 செ.கு.வி. (v.i.) ஒப்பனைசெய்தல் (அலங்கரித்தல்); to adorn. 'பூசுறு பருதியிற் பொலிந்து தோன்றினான்' (சீவக.953).

[பூசு → பூசுறு-,]

பூசை¹ *pūšai,* பெ. (n.) 1. வீட்டுப்பூனை; cat. 'செவ்வாய் வெருகினைப் பூசை யென்றலும்' (தொல்.பொ.623). 2. காட்டுப் பூனை; wild cat.

ம. புச்ச; து. புச்செ; குட. பூனெ; கோத. பீச்; பிரா. பிழிழி

[நிலத்திற் பூசிப்பூசி மெத்தென்று நடப்பதால் பூனை பூசை யெனப்பட்டது. பூசு → பூசை (தமிவ.1,28) பூசை என்பது வீட்டுப் பூனையின் பெயர் (தமி.வ,108)

நாய்க்கு ஆட்பற்றுப் போல் பூனைக்கு இடப் பற்று மிகுந்திருப்பதால், தொல்வரவுணர்ச்சி மிக்க ஆண்பூனை பருத்துக் கொழுத்த நிலையில் இன்றும் காட்டிற்குச் சென்று கண்டார் அஞ்சத்தக்க வெருவாகி விடுகின்றது.

'வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்' (தொல்.மர.19)

'வெருக்கு விடையன்ன வெருணோக்கு' (புறம்.324) 'பின்ளை வெருகின் முள்ளெயிறு புரைய' (புறம்.117)

என்பவற்றால், தமிழகத்திற் காட்டுப் பூனை தொன்று தொட்டு இருந்து வருவதை அறியலாம்

இனி, மேலையாரியப் பூனைப் பெயர்கள் தமிழ்ச் சொல்லின் திரிபாயிருத்தலால், தமிழகத்தினின்றே பூனை ஐரோப்பாவிற்குச் சென்றதாகத் தெரிகின்றது.

பூசை–E.puss-pussy; MLG. pus; Norw.puse; Du.poes; L.felis. *இதன் மூலம் தெரியவில்லையென்றும், ஒருகால் முதற் காலத்தில் இது ஒரு பூனை விளிச்சொல்லாயிருந்திருக்கலாமென்றும், எருதந்துறை* (oxford) *ஆங்கிலஅகா முதலி கூறுகின்றது. நெல்லை வட்டாரத்தில் இன்றும் பூனையைப் பூசுபூசு என்று அழைப்பதைக் காணலாம். (தமி.வ.1,28)]*

pūs-ei, a cat, especially in the South Tamil idiom; Mal.pūchcha, in the Cashgar dialect of the Afghan, pusha signifies a cat; comp. Irish pus, a cat; English puss (CGDFL. .600).

பூசை² *pūšai,* பெ. (n.) 1. வழிபாடு; worship; homage to superiors; adoration of the gods with proper ceremonies. 'ஈங்கு நீ பூசை செய்வதியாவனை' (கூர்மபு.கண்ணன் சிவபூசை.1). 2. அடியார் அமுது செய்கை; taking meals, as of devotees 3. செம்மையான அடி(கொ.வ.); flogging, thrashing. நேரம் கழித்து வீட்டுக்குச் சென்றால் பூசை விழும் (உ.வ.).

க., து., பட. பூசெ

[பூசுதல் = கழுவுதல், தெய்வப் படிமையை நீரால் துப்புரவாக்குதல். பூசு → பூசி. பூசித்தல் = பூச்சாத்தியும் தேங்காய் பழம் முதலியன படைத்தும் வழிபடுதல். உழவு

என்பது பயிர்த்தொழிலின் பின் வினைகளையும் குறித்தல்போல், பூசித்தல் என்பது வழிபாட்டின் பின் விளைவுகளையும் குறித்தது. பூசி → பூசை. ஒ.நோ: ஆசு (பற்று) → ஆசி (அவாவு) → ஆசை (அவா.) பூசை → பூசனை → பூசனம். ஐ,அனை,அனம் என்பன தமிழ் ஈறுகளே. பூசை → பூசாரி. ஆரி தலையாரி என்பதிற்போல் ஓர் ஈறு. பூசாச்சாரி (பூசை + ஆச்சாரி) என்னும் வழக்கு வடமொழியிலுமில்லை. பூசெய் என்பது பூசை என்றாயிற்றென்று கொள்வது பொருந்தாது.

பூசி > Skt.pūj. *பூசை* > Skt. pūjā. *பூசனம்* > Skt. pūjana. *பூசனை* > Skt. pūjnā.

வேத ஆரியர்க்கு வேள்விவேட்டலே யன்றிப் படிமைப்பூசையும் கோவில் வழிபாடும் இல்லை. பூஜ் என்னும் சொல்லும் வேதத்திலில்லை. பாரதம் முதலிய பிற்கால வடபனுவல்களிலேயே அது வழங்குகின்றது. (தி.த.ம.49)]

pūjā, worship, adoration, etc. Gt. (p.528) thinks it probable that this word has come from. D. pūsu, originally meaning 'anointing with oil' Sk.verb pūj, to worship. etc, would then be the same as D. pūsu. (KKEDxii)

பூசை³ *pūšai,* பெ. (n.) நெட்டி (பிங்.); pith.

பூசை⁴ *pūšai,* பெ. (n.) புடலை; snake gourd.

[புழை → புயை → புசை → பூசை]

பூசைக்கண் *pūšai-k-kaṇ,* பெ. (n.) பூனைக்கண்; cat-eye,blue-eye.

ம. புச்சகண்; பட. பூசெகண்ணு

[பூசை + கண்]

பூசைக்காணிக்கை *pūšai-k-kāṇikkai,* பெ. (n.) சிறு வரிவகை (நாஞ்.); a petty cess.

[பூசை + காணிக்கை]

பூசைக்காப்பு *pūšai-k-kāppu,* பெ. (n.) வேகமாக (பலமாக) அடிக்கை (நெல்லை.); sound beating, thrashing.

[பூசை + காப்பு. கா → காப்பு]

பூசைக்காலம் *pūšai-k-kālam,* பெ. (n.) பூசைக்குரிய வேளை; time of worship.

க. பூசாகால

[பூசை + காலம். கால் → காலம்]

பூசைக்குறடு *pūšai-k-kuṟaḍu,* பெ. (n.) பூசை மேடை பார்க்க; see *pušai-mēḍai.*

[பூசை + குறடு]

பூசைகொடு–த்தல் *pūšai-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** பார்ப்பனர் முதலியோர்க்கு உணவிடுதல்; to feed Brahmans. etc, **2.** வலுவாக அடித்தல்; to flog.

[பூசை + கொடு–,]

பூசைசெய்–தல் *pūšai-šey-,* 1 செ.குன்றாவி. (v.t.) **1.** வணக்கம் செலுத்துதல்; to reverence, honour. **2.** பூசனை செய்தல்; to worship. திங்கள்தோறும் பூசைசெய்வது அவரது வழக்கம்.

க. பூசிசு; பட. பூசிய மாடு

[பூசை + செய்–,]

பூசைத்தாயர் *pūšai-t-tāyar,* பெ. (n.) ஒரு புலவர்; a poet.

[பூசை + தாயர்]

பூசைநேரம் *pūšai-nēram,* பெ. (n.) *பூசைக்காலம்* பார்க்க; see *pūšai-k-kālam.*

[பூசை + நேரம்]

பூசைப்பரிசாரகன் *pūšai-p-parišāragan,* பெ. (n.) *பூசையாள்*[1] பார்க்க; see *pūšai-y-āḷ*[1]

[பூசை + பரிசாரகன்]

Skt. paricāraka > த. பரிசாரகன்

பூசைப்பரிசாரன் *pūšai-p-parišāran,* பெ. (n.) *பூசையாள்*[2] பார்க்க; see *pūsai-y-āḷ*[2]

[பூசை + பரிகாரகன்]

Skt. paricāraka > த. பரிசாரகன்

பூசைப்பாடிவெள்ளை *pūšai-p-pāḍi-veḷḷai,* பெ. (n.) நெல்வகை; a kind of paddy. "*சிறை மீட்டான் வளர்பூசைப் பாடி வெள்ளை*" (நெல்விடு.186).

பூசைப்பெட்டி *pūšai-p-peṭṭi,* பெ. (n.) தனிவழிபாட்டு (ஆன்மார்த்த) இலிங்கம் வைக்கும் பெட்டி; case for the liṅgam used in private worship.

[பூசை + பெட்டி. பிள் → (பெள்) → பெட்டி]

பூசைபண்ணு-தல் *pūšai-paṇṇu-,* 15 செ.கு.வி. (v.i.) 1. வணங்குதல் (ஆராதனை செய்தல்); to perform worship. சிலர் காலையில் தவறாது பூசை பண்ணுவர் (உ.வ.) 2. உணவு உட்கொள்ளல்; to take food.

[பூசை + பண்ணு-]

பூசைபுரி-தல் *pūšai-puri-,* 2 செ.கு.வி. (v.i.) *பூசை செய்-தல்* பார்க்க; see *pūšaisey-,*

[பூசை + புரி-,]

பூசைபோடு-தல் *pūšai-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. காவு (பலி)கொடுத்தல்; to offer pali to village deities 2. *பூசைபண்ணு-தல்* 2, (வின்.) பார்க்க; see *pūšaipaṇṇu 2.* 3. வலுவாக அடித்தல்; to flog soundly.

[பூசை + போடு-,]

பூசைமணி *pūšai-maṇi,* பெ. (n.) வழிபாடு செய்யும்போது அடிக்கும் கைம்மணி; hand bell rung during the performance of pūja.

[பூசை + மணி. முள் → (மள்) → (மண்) → மணி]



பூசைமிச்சம் *pūšai-miccam,* பெ. (n.) கோயிலில் நாள்தொறும் செய்யும் கட்டளையில் செலவாகாத மிகுதி; unexpended balance in the daily allowances of a pagoda (W.G.).

[பூசை + மிச்சம்]

பூசைமுகம் *pūšai-mugam,* பெ. (n.) பூசை நடக்கும் இடம் (யாழ்.அக.); the place where divine worship is performed.

[பூசை + முகம். முகம் = முன்பக்கம், பக்கம்]

பூசைமுறை *pūšai-muṟai,* பெ. (n.) பூசைக்குரிய சடங்குகள் (நியமங்கள்); rules for the performance of worship.

[பூசை + முறை]

பூசைமேடை *pūsai-mēḍai,* பெ. (n.) பூசை செய்வதற்காக ஏற்பட்ட உயர்ந்த இடம்; plateform in which pūja is performed.

[பூசை + மேடை. மேடு → மேடை]

பூசையறை *pūšai-y-aṟai,* பெ. (n.) பூசை செய்வதற்காக ஒதுக்கப்பட்ட அறை; room set apart for divine worship.

[பூசை + அறை. அறு → அறை]

பூசையாள்[1] *pūšai-y-āḷ,* பெ. (n.) **1.** பூசைக்கு உதவியாக இருக்கும் வேலையாள்; servant attending during one's 'pūšai'. **2.** குருவுக்குப் பணிவிடை புரியும் வழிநிற்போன் (சீடன்); disciple attending a 'guru'.

[பூசை + ஆள்]

பூசையாள்[2] *pūšaiyāḷ,* பெ. (n.) திருச்சபையினரின் செயல்களைப் பார்ப்பவர் (புதுவை.); deacon.

[பூசை + ஆள்]

பூசைவிதி *pūšaividi,* பெ. (n.) *பூசைமுறை* பார்க்க; see *pūšaimuṟai.*

[பூசை + விதி]

Skt. vidhi> **த.** விதி

பூசைவீடு *pūšai-vīḍu,* பெ. (n.) *பூசையறை* பார்க்க; see *pūšai-y-aṟai.*

[பூசை + வீடு.]

பூசைவேளை *pūšai-vēḷai,* பெ. (n.) **1.** *பூசைக்காலம்* பார்க்க; see *pūšai-k-kālam.* **2.** பார்ப்பனர் உண்ணுதற்குரிய வேளை; the time when Brahman's take their meals.

[பூசை + வேளை]

பூஞ்சக்கல்[1] *pūñja-k-kal,* பெ. (n.) ஒருவகை நீலக்கல் (யாழ்.அக.); a kind of blue stone.

[பூஞ்சல் + கல் – பூஞ்சல்கல் → பூஞ்சக் கல்]

பூஞ்சக்கல்[2] *pūñja-k-kal,* பெ. (n.) செம்பாறைக்கல்(சா.அக.); red stone.

[பூஞ்சல் + கல். குல் → கல்]

பூஞ்சக்காளம் *pūñja-k-kāḷam,* பெ. (n.) *பூஞ்சணம்*(இ.வ.) பார்க்க; see *pūñjaṇam.*

[பூஞ்சல் + காளம்]

பூஞ்சக்காளன் *pūñja-k-kāḷaṉ,* பெ. (n.) *பூஞ்சணம்* பார்க்க; see *pūñjaṇam.*

[பூஞ்சை + காளான் – பூஞ்சைக்காளான் → பூஞ்சக்காளன்]

பூஞ்சணம் *pūñjaṇam,* பெ. (n.) **1.** மரம் முதலியவற்றின் மேல் ஈர நைப்பினால்

உண்டாம் பாசி; mould,mildew, **2.** ஒட்டடை; cobweb, smut.

மறுவ. நூலாம்படை

[பூஞ்சு → பூஞ்சணம்]

பூஞ்சணவன் *pūñjaṇavaṉ,* பெ. (n.) *பூஞ்சணம்* (வின்.) பார்க்க; see *pūñjaṇam.*

[பூஞ்சணம் → பூஞ்சணவன்]

பூஞ்சணற்பு *pū-ñjaṇaṟpu,* பெ. (n.) கஞ்சாச் செடிவகை (வின்.); a luxuriant species of Indian hemp.

[பூ + சணல் + பூ]



பூஞ்சல் *pūñjal,* பெ. (n.) **1.** மங்கனிறம்; brownish colour. **2.** கண்ணொளி மங்கல் (வின்.); dimness of sight. **3.** வலுவற்றவன் (இ.வ.); unhealthy man.

[பூ → பூஞ்சு → பூஞ்சல்]

பூஞ்சரம் *pūñjaram,* பெ. (n.) *பூச்சரம்* பார்க்க; see *pūccaram.*

க. பூசர.

[பூ + சரம்]

பூஞ்சலாடு—தல் *pūñjalāḍu-,* 5 செ.கு.வி. (v.i.) கண்ணொளி மங்குதல் (யாழ்.அக.); to be dim in the eyes.

[பூஞ்சல் + ஆடு—,]

பூஞ்சற்கண் *pūñjaṟkaṇ,* பெ. (n.) **1.** பீளைக்கண்; bleared eyes. **2.** ஒளி மங்கிய கண்; dim eyes **3.** குழிந்த கண்; small, sunken eyes.

[பூஞ்சல் + கண்]

பூஞ்சனிறம் *pūñjaṉiṟam,* பெ. (n.) மங்கின நிறம்; dusky or dim colour.

[பூஞ்சல் + நிறம்]

பூஞ்சாட்டி *pū-ñ-jāṭṭi,* பெ. (n.) வேளாண்மையினால் எருவினுரம் இழந்த நிலம் (யாழ்.அக.); land that has lost the effect of manure by cultivation.

[பூ + சாட்டி]

பூஞ்சாட்டித்தரிசு *pūñjāṭṭi-t-tarišu,* பெ. (n.) பூஞ்சாட்டியாகி வேளாண்மை செய்யப்படாத நிலம் (யாழ்.ப்.); uncultivated land after it became pūñjāṭṭi.

[பூஞ்சாட்டி + தரிசு]

பூஞ்சாட்டிநிலம் *pūñjāṭṭinilam,* பெ. (n.) *பூஞ்சாட்டி* (யாழ்ப்) பார்க்க; see *pūñjāṭṭi.*

[பூஞ்சாட்டி + நிலம்]

பூஞ்சாடுதல் *pūñjāḍudal,* பெ. (n.) கண்ணின் முன் பூச்சியாடுவது போலிருக்கை (யாழ்.அக.); dancing of specks before the eyes.

[பூஞ்சு + ஆடுதல். 'தல்' தொ.பெ.ஈறு]

பூஞ்சாந்து *pūñcāndu,* பெ. (n.) *பூசாந்தரப்பட்டை* (தைலவ.தைல,59.) பார்க்க; see *pūšāndara-p-paṭṭai.*

[பூ + சாந்து]

பூஞ்சாம்பல் *pūñcāmbal,* பெ. (n.) பூவை எரித்து உண்டாக்கும் சாம்பல்; ash of flowers.

[பூ + சாம்பல். சுள்→ சுட்டி → சுப்பு. சுப்புதல் = விரைந்து நீர்வற்றுதல். சுப்பு → சும்பு → சம்பு → சாம்பு. சாம்புதல் = எரிதல்,வாடுதல். சாம்பு → சாம்பல்]

பூஞ்சாயம் *pū-ñ-cāyam,* பெ. (n.) அழுத்தமான சிவப்பு நிறம் (வின்.); deep, ruddy colour.

[பூ + சாயம்]

பூஞ்சாளம் *pūñjāḷam,* பெ. (n.) *பூஞ்சணம்* பார்க்க; see *pūñjaṇam.*

தெ. புத்சு

[பூஞ்சணம் → பூஞ்சாளம்]

பூஞ்சாற்றூர் *pūñcāṟṟūr,* பெ. (n.) சோழமண்டலத்தில் உள்ளதோர் ஊர்; a village in Coḻa maṇḍalam.

பூஞ்சான் *pūñjāṉ,* பெ. (n.) புல்வகை (யாழ்.அக.); a kind of grass.

பூஞ்சி *pūñcji,* பெ. (n.) (யாழ்.அக.) 1. தூசி; dust. 2. மங்கல்; dimness.

[பூஞ்சு → பூஞ்சி]

பூஞ்சிகை *pūñ-cigai,* பெ. (n.) பூவையணிந்த மயிர்முடி; lock of hair adorned with flowers.

'வண்டு மேய்ந்த வரிமுரல் பூஞ்சிகை' (சீவக.2581.)

[பூ+சிகை]

Skt.šikhā > த. சிகை

பூஞ்சிட்டி *pūñciṭṭi,* பெ. (n.) மஞ்சிட்டி; a climber.

பூஞ்சிட்டு[1] *pū-ñ-ciṭṭu,* பெ. (n.) குருவி வகை (வின்); a small bird.

[பூ + சிட்டு. சுள் → (சுட்டு) → சிட்டு]



பூஞ்சிட்டு[2] *pū-ñ-ciṭṭu,* பெ. (n.) 1. தூசி; dust. 2. மங்கல்; dimness.

[பூஞ்சி → பூஞ்சிட்டு]

பூஞ்சிறகு *pū-ñ-ciṟagu,* பெ. (n.) பறவைக்குஞ்சின் சிறகு; down of young birds.

[பூ + சிறகு]

பூஞ்சீப்பு *pū-ñ-cīppu,* பெ. (n.) வாழைக்குலையின் நுனிச்சீப்பு (வின்.); small plantains at the top of a fruit bearing stalk.

[பூ + சீப்பு]

பூஞ்சு[1] *pūñju,* பெ. (n.) 1. **பூஞ்சணம்** (யாழ்.அக.) பார்க்க; see *puñjaṇam.* 2. **பூஞ்சல்,** 1. (வின்.) பார்க்க; see *puñjal.*1

ம. பூக்க, பூப்பு; **க.** பூசு, பூசெ, பூசி, பூசு, பூச்டெ; **தெ.** பூசு, பூது; **து.** பூசு, பூசு, பூசி, பூங்கெ.

[பூ → பூஞ்சு]

பூஞ்சு[2] *pūñju,* பெ. (n.) பலாச் சுளையின் மேலுள்ள நார்ப்பகுதி (நாஞ்.); layer of fibres enclosing the flesh of a jack-fruit.

[புள் → (பிள்) → பீள் = இளங்கதிர், இளமை. (புகு) → பூ → போ → போது→ போத்து = இளங்கிளை. புகு → பூ = மென்மையானது. பூ → பூஞ்சு]

பூஞ்சுண்ணம் *pūñ-cuṇṇam,* பெ. (n.) பூந்தாது (வின்); farina of flowers pollen.

[பூ + சுண்ணம். சுள் → சுண் → சுண்ணம் = நறுமணப்பொடி, பொடி, பூந்தாது]

பூஞ்சுநெத்திலி *pūñju - nettili,* பெ. (n.) ஒரு வகை மீன்; a kind of fish.



பூஞ்சுமடு *pūñjumaḍu,* பெ. (n.) பூவினாலாகிய சும்மாடு; loadpad of flowers. *'குழிசி பூஞ்சுமட்டிரீஇ'* (பெரும்பாண். 159).

[பூ + சுமடு. சுமை + அடு – சுமையடு → சுமடு]

பூஞ்செடி *pūñjeḍi,* பெ. (n.) **பூச்செடி** பார்க்க; see *pūcceḍi.*

க. பூகிட, பூகிடு

[பூ + செடி]

பூஞ்செண்டு *pū-ñ-ceṇḍu,* பெ. (n.) **பூச்செண்டு** பார்க்க; see *pū-c-ceṇḍu* .

க. பூசெண்டு, பூசண்டு, கூசெண்டு

[பூ + செண்டு]

பூஞ்சை[1] *pūñjai,* பெ. (n.) 1. **பூஞ்சல்** பார்க்க; see *pū-ñ-jal.* 2. பாழ் (வின்.); barrenness, unfruitfulness. 3. ஒட்டடை (சங்.அக.); cob-web.

மறுவ. நூலாம்படை

[பூஞ்சு → பூஞ்சை]

பூஞ்சை[2] *pūñjai,* பெ. (n.) கண்மங்கல்; dimness of sight.

பூஞ்சைநிலம் *pūñjai nilam,* பெ. (n.) பாழ்நிலம் (யாழ்.அக.); uncultivated ground.

[பூஞ்சை + நிலம்]

பூஞ்சோலை *pūñjōlai,* பெ. (n.) பலவகையான அழகிய மலர்கள் பூக்கும் மரம் செடிகள் நிறைந்த இடம், மலர்ச்சோலை; flower garden. *'பூஞ்சோலை மயிலெழுந் தாலவும்'* (புறநா. 116).

மறுவ. பூங்கா

[பூ + சோலை]

பூஞ்சோலைத்தலைவன் *pūñjōlai-t-talaivaṉ* பெ. (n.) அரண்மனைப் பூந்தோட்டக்காரன்; gardener of palace.

[பூ + சோலை +தலைவன்]

பூஞை *pūñai,* பெ. (n.) 1. பூனை (பிங்.); cat. 2. பூஞையாதனம் பார்க்க; see *pūñai-y-ādaṉam. 'சிலம்பி சிச்சிலி பூஞை கிருமி'* (தத்துவப். 109).

[பூசு → பூசை = நிலத்திற் பூசினாற் போல மெத்தென்று நடப்பது . பூசை → பூனை → பூஞை (செ.சி.81)]

பூஞையாதனம் *pūñai-yādaṉam,* பெ. (n.) பூனைபோல் முழுங்காலை மடக்கிக் கைகளை ஊன்றி வானத்தை (ஆகாயத்தை)ப் பார்த்திருக்கும் இருக்கை (ஆசன) வகை (தத்துவப். 109, உரை); (yōga.) a kind of cat-like yogic posture.

[பூஞை + ஆதனம்]

Skt. āsana > **த.** ஆதனம்

பூட்கை[1] *pūṭkai,* பெ. (n.) 1. கொள்கை; belief, opinion, tenet. 2. ஒருவினையை முடித்தற்கு மேற்கொள்ளும் உறுதி; resolution, determination; purpose. *'பூட்கை யில்லோன் யாக்கைபோல'* (புறநா. 69). 3. வலிமை; strength. *'ஓடா பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி'* (திருமுரு. 247). 4. அரிமா (சிங்கம்) (சூடா.); lion.

[புல் → புள் → புண் → பூண். பூணுதல் = நுகத்தில் கட்டப்படுதல், மணஞ்செய்தல், நெருங்கி இறுக்கமாதல், பூண் → பூட்கை (வே.க.3.62–66)]

பூட்கை[2] *pūṭkai,* பெ. (n.) 1. யானை; elephant. *'வீழ்ந்த புரவிவெம் பூட்கை தேர்'* (கம்பரா. முதற்போ. 58). 2. யானை யாளி (பிங்.); a fabulous animal.

[புழைத்தல் = துளையிடுதல். புழைக்கை = தும்பிக்கை, யானை. புழைக்கை → பூழ்க்கை → பூட்கை (வே.க. 3, 108)]

பூட்கை[3] *pūṭkai,* பெ. (n.) தோல்; skin.

[பூண் + கை – பூண்கை → பூட்கை]

பூட்சி *pūṭci,* பெ. (n.) 1. பொருந்துகை, பூணுகை (சது.); wearing, putting on. 2. அணிகலன் (ஆபரணம்) (கல்லா. 91, 9, உரை); ornament. 3. உடல் (பிங்.); body. *'புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய்'* (தேவா. 1160, 6). 4. புணர்ப்பு; union. *'பூதப் பூட்சி யுள்ளெழும் போதகமும்'* (பிரபோத. 31, 36). 5. கொள்கை; belief, tenet. 6. மனவுறுதி determination *"உறுபொரு ளுணரும் பூட்சியோய்"* (கம்பரா. உயுத். மந்திர. 66) 7. வரிவகை; a tax (S.I.I.ii. 530 ft.n) 8. உரிமை (அக.நி.); right, propriety, title.

[புல் → புள் → புண் → பூண் → பூட்சி (வே.க.3, 67)]

பூட்டக்கக்கள்ளி *pūṭṭakka-k-kaḷḷi,* பெ. (n.) வஞ்சகி (கு.உருகூர்ப். 51); deceitful woman.

[பூட்டக்கம் + கள்ளி]

பூட்டக்கம் *pūṭṭakkam,* பெ. (n.) *பூட்டகம்* (இ.வ.) பார்க்க; see *pūṭṭagam.*

[பூட்டகம் → பூட்டக்கம்]

பூட்டகக்காரன் *pūṭṭaga-k-kāraṉ,* பெ. (n.) வீண்பெருமை பாராட்டுபவன் (வின்.); vain boaster.

மறுவ. பகட்டுக்காரன்

தெ. பூடகீடு, பூடகுடு (ஏய்ப்பன்)

[பூட்டகம் + காரன்]

பூட்டகம் *pūṭṭagam,* பெ. (n.) **1.** வீண்பெருமை (வின்); vain pretention, boasting. ***'என்ன பூட்டகமோ'*** (பெருந். தொ. 1275) **2.** பூட்டக வேலை (வின்.) பார்க்க; see pūṭṭagavēlai **3.** வஞ்சகம்; art, guile, trick. **4.** மருமம் (இரகசியம்); secrecy. ***'அந்தச் சேதி பூட்டகமாயிருக்கிறது'.***

மறுவ. கமுக்கம்

க. பூட, பூடக, பூடகதன, பூடட; **தெ.** பூடகமு, பூடகீடு, பூடகூடு; **து.** பூடி, பூடு, பூடங்க, பூடகதனெ.

[பூண் (கு.வி.) – பூட்டு (பி.வ.). பூட்டு → பூட்டகம் (வே.க. 3, 67)]

பூட்டகவேலை *pūṭṭaga - vēlai,* பெ. (n.) போலி வேலை (வின்); flimsy, unsubstantiall work.

மறுவ. பகட்டுவேலை, மேனாமினுக்கு வேலை

தெ. பூடகமு (பொய்,ஏமாற்று), பூடகாலமாரி *[பூட்டகம் + வேலை]*

பூட்டகாரன் *pūṭṭa-kāraṉ,* பெ. (n.) *பூட்டகக் காரன்* (யாழ்.அக.) பார்க்க; see *pūṭṭaga-k-kāraṉ.*

[பூட்டகக்காரன் → பூட்டகாரன்]

பூட்டங்கம் *pūṭṭaṅgam,* பெ. (n.) **1.***பூட்டகம்* **3,** பார்க்க; see *pūṭṭagam* **3. 2.** அகப்படுத்துகை; entrapping, inveigling, ensnaring. **3.** வில்லங்கம் (யாழ்.அக.); trouble, encumbrance.

[புண் → பூண். பூணுதல் = நுகத்தில் கட்டப்படுதல், விலங்கு மாட்டப்படுதல். பூண் → பூட்டு. பூட்டுதல் = விலங்கு மாட்டுதல், பூட்டுப்பூட்டுதல், இறுகக் கட்டுதல். பூட்டு → பூட்டங்கம்]

பூட்டங்கயிறு *pūṭṭaṅ-kayiṟu,* பெ. (n.) *பூட்டாங்கயிறு* (வின்.) பார்க்க; see *pūṭṭāṅ-kayiṟu.*

மறுவ. பூட்டாந்தும்பு

[பூட்டாங்கயிறு → பூட்டங்கயிறு]

பூட்டல் *pūṭṭal,* தொ.பெ. (vbl.n.) பூட்டுகை; locking.

[பூட்டு → பூட்டல். 'அல்'. தொபெ.ஈறு]

பூட்டழி-த்தல் *pūṭṭaḻi-,* 4 செ.குன்றாவி. (v.t.) கட்டுக்குலைத்தல்; to scatter, disperse, as an army. ***'பூலந்தை வான்புகப் பூட்டழிந்த... வேந்தன்'*** (இறை. 17, உரை, பக். 100).

[பூட்டு + அழி–. பூண் → பூட்டு. பூட்டுதல் = இறுகக்கட்டுதல்]

பூட்டறு-தல் *pūṭṭaṟu-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** கட்டுக்குலைதல்; to get disjointed or loose - jointed, as the various parts of the body. **2.** நுகத்தினின்றும் விடுபடுதல்; to get unyoked.

[பூண் → பூட்டு + அறு–,]

பூட்டன் *pūṭṭaṉ,* பெ. (n.) பாட்டனுக்குத் தகப்பன்; great-grand father.

[பூ = பிறப்பு. பூ + பாட்டன் – பூபாட்டன் → பூட்டன்]

பூட்டாங்கம் *pūṭṭāṅgam,* பெ. (n.) பூட்டாங்கம், 2 (வின்.) பார்க்க; see *pūṭṭāṅgam,* 2.

[பூட்டங்கம் → பூட்டாங்கம்]

பூட்டாங்கயிறு *pūṭṭāṉ-kayiṟu,* பெ. (n.) எருத்தைப் பிணைக்கும் நுகக்கயிறு (ஏரெழு. 9, தலைப்பு); rope by which a bullock is fastened to the yoke.

[பூட்டு → பூட்டாம் + கயிறு. பூண் → பூட்டு. பூட்டுதல் = காளைமுத்லிய வற்றை நுகத்திற் பிணைத்தல்]

பூட்டி *pūṭṭi,* பெ. (n.) பாட்டனைப் பெற்ற தாய்; great grand mother.

[பூட்டன் (ஆ.பா.) – பூட்டி (பெ.பா.). 'இ' பெ. பா. ஈறு]

பூட்டு¹–தல் *pūṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) **1.** மாட்டுதல்; to lock, fasten, hook, to fix, as an arrow in the bow. *'பொருசிலை மேற் சரம் பூட்டான்'* (ஏரெழு. 17). **2.** இணைத்தல்; to unite. *'என்பாற் பூட்டு நண்பு பூண்டான்'* (பாரத. வாரணா. 37). **3.** வைத்தல்; to place, put. *'ஒல்லையி லரி வாட் பூட்டி'* (பெரியபு. அரிவாட். 16). **4.** எருது முதலியவற்றைப் பிணைத்தல்; to attach, as horses or bullocks to a carriage; to yoke, harness. *'களிறு பலபூட்டி'* (பதிற்றுப்44,16). **5.** தொழுவிலடித்தல் (வின்.); to put in the stocks. **6.** விலங்கு மாட்டுதல் (வின்.); to manacle, shackle, fetter. **7.** பொறுப்பேற்றுதல்; to entrust, give incharge. *'தாதை பூட்டிய செல்வம்'* (கம்பரா. வாலிவ. 81). **8.** அணிதல்; to put on, as rings, jewels. garlands *'பைந்தார் பூட்டி'* (பதிற்றுப். 42, 10.) **9.** இறுகக் கட்டுதல்; to lock, grip, as ones arms or legs, in wrestling. "*பூட்டியகையன்*" (கம்பரா. குகப். 34). **10.** பொருத்திக் கூறுதல் (வின்.); to bring into order or sequence, as different parts of a discourse. **11.** அகப்படுத்துதல் (வின்.); to entrap, inveigle, secure in an engagement by artifice. **12.** நாணேற்றுதல்; to fasten, as the sting to a bow. பூட்டுசிலை (சீவக. 1788) **13.** இறுக்குதல் (வின்.); to tighten **14.** வழக்குத் தொடுத்தல்; to start, as a case; to file, as a suit. 'கொடுமை சால் வழக்குப் பூட்டி வென்றவர்' (திருவிளை. மாமானா. 14).

ம. பூட்டுக; க. பூடு; தெ. புனு; பட. பூட்டு

[புல் → புள் → புண் → புணர். புணர்தல் = பொருந்துதல், நட்பாடல், மேற்கொள்ளுதல். புண் → பூண். பூணுதல் = நுகத்திற் கட்டப்படுதல், விலங்கு மாட்டப்படுதல்,மேற்கொள்ளுதல். பூண் → பூட்டு (வே.க. 3, 64–67)]

பூட்டு² *pūṭṭu,* பெ. (n.) **1.** பிணிப்பு; locking, fastening, clasping, harnessing *'கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட்டு'* (புறநா.141). **2.** கதவு மூடி முதலியவற்றைத் தாழிட்டபின் அதற்குமேல் அவற்றைப் பொருந்தி இருக்குமாறும் செய்வதும் திறவு கோலாற் பூட்டித் திறக்கப் பயன்படுவதுமான கருவி (பிங்.); lock. **3.** கொக்கி (பிங்.); clasp, hook, catch. **4.** கயிறு கப்பி இணைப்பதற்காக விட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள இருப்புவளை கம்பி; clevis. **5.** நாண்கயிறு (சூடா.); bowstring. **6.** உடற்பொருத்து; joining, as of bones; articulation, joint, *'பூட்டற்றுத்*

தேகமற்று' (தாயு. பாரய. 295). 7. மல்லுக்கட்டு; locking or entrangling antagoinsts arms or legs in wrestlings. so as to deprive him of power. 8. இறுக்கம்; tautness, as of a bowstring. 9. தளைக்கும் விலங்கு; shackles, mancles, fetters. 10. இடர் (ஆபத்து); calamity. *'பிழைத்தாளப்பா இந்த பூட்டுக்கு'.* 11. மகளிர் அளகத்திற் பூணும் அணிவகை; a head ornament. worn by women. *'அளகபந்தி பூட்டிய பூட்டும்'* (கம்பரா. கோலங். 5). 12. அடுக்கு; pile, as of coins; specified quantity, as of leaves. *'ரூபாயைப் பூட்டுப் பூட்டாக எண்ணி வைத்தான்'.* 13. முடைந்த நான்கு தென்னங்கீற்றுக் கொண்ட கட்டு; a bundle of four plaited coconut leaves. 14. நெருங்கிய படைவீரர் வரிசை (சேனைக்கட்டு); serried rank of an army. *'வான்புகப் பூட்டழித்த..... வேந்தன்'* (இறை. 17, உரை, பக் 100).

ம., பட. பூட்டு

[பூண் → பூட்டு(தல்) → பூட்டு]



பூட்டு³ puttu, பெ. (n.) மந்தணம் (இரகசியம்); secret.

[பூள் → பூண் → பூட்டு]

பூட்டுக்கயிறு *pūṭṭu-k-kayiṟu,* பெ. (n.) *பூட்டாங் கயிறு* (யாழ்.அக.) பார்க்க; see *pūṭṭāṉ-kayiṟu.*

[பூட்டு + கயிறு]

பூட்டுக்கனி *pūṭṭu-k-kaṉi,* பெ. (n.) கண்டங் கத்திரி; a thorny shrub.

[பூட்டு + கனி]

பூட்டுக்குச்சி *pūṭṭu-k-kucci,* பெ. (n.) திறவுகோல்; key.

[பூட்டு + குச்சி. பூட்டைத்திறக்கவுதவும் குச்சி போன்ற கருவி]

பூட்டுக்கை *pūṭṭu-k-kai,* பெ. (n.) *பூட்டுக்குச்சி* பார்க்க; see *pūṭṭu-k-kucci.*

[பூட்டு + கை. பூட்டைத்திறக்கவுதவும் கை போன்ற கருவி]

பூட்டுசாவி *pūṭṭu-cāvi,* பெ. (n.) *பூட்டுக் குச்சி* பார்க்க; see *pūṭṭu-k-kucci.*

[பூட்டு + சாவி]

port. chiavi > **த.** சாவி

பூட்டுத்தலை *pūṭṭuttalai,* பெ. (n.) நூலைப் பாவுசெய்யப் பயன்படுத்துங் கருவி; weaving instrument, which helps to make the yarn to warp.

[பூட்டு + தலை]

பூட்டுத்தை—த்தல் *pūṭṭu-t-tai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. கதவு முதலியவற்றில் பூட்டை இணைத்தல்; to fasten a padlock. 2. காரியம் ஏற்படுதல் (பலித்தல்) (இ.வ.); to the take effect, as a plot.

[பூட்டு + தை—,]

பூட்டுநழுவு—தல் *pūṭṭu-naḻuvu-,* 6 செ.கு.வி. (v.i.) *பூட்டுவிலகு—தல்* பார்க்க; see *pūṭṭu-vilagu.*

[பூட்டு + நழுவு—,]

பூட்டுநோவு *pūṭṭu-nōvu,* பெ. (n.) உடற் சந்துகளில் உண்டாம் வலி; inflammation of the joints arthritis (M.L.).

[பூட்டு + நோவு. பூட்டு = உடற்பொருத்து, மூட்டு]

பூட்டுப்பங்குவாயு *pūṭṭu-p-paṅguvāyu,* பெ. (n.) கீல்வாயு; arthritis.

[பூட்டுப்பங்கு + வாயு]

Skt. vāyu > **த.** வாயு

பூட்டுப்பண்டம் *pūṭṭu-p-paṇḍam,* பெ. (n.) கஞ்சா குடுக்கை; ganja smoking pipe.

[பூட்டு + பண்டம்]

பூட்டுப்போடு—தல் *pūṭṭu-p-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) 1. திறவு கோலாற் பூட்டிடுதல்; to lock. 2. பேசவொட்டாது செய்தல் (இ.வ.); to silence.

[பூட்டு + போடு—,]

பூட்டுமறையாணி *pūṭṭu - maṟai-y-āṇi,* பெ. (n.) சேர்க்கும் தாழ்ப்பாள்; assembling bolt.

[பூட்டு + மறையாணி]

பூட்டுமுறை *pūṭṭu - muṟai,* பெ. (n.) சேர்க்கை முறை; assembly method. அவன் வானொலியைப் பிரித்துப் பூட்டுமுறையை அறிந்தவன் (உ.வ.)

[பூட்டு + முறை]

பூட்டுவாய்[1] *pūṭṭu-vāy,* பெ. (n.) திறவுகோல் புகுந்துளை; key hole.

[பூட்டு + வாய்]



பூட்டுவாய்[2] *pūṭṭuvāy,* பெ. (n.) நெருக்கடியான நேரம்; critical juncture.

[பூட்டு + வாய்]

பூட்டுவிடு—தல் *pūṭṭu-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) *பூட்டுவிலகு—தல்* பார்க்க; see *pūṭṭu-vilagu-,*

[பூட்டு + விடு—,]

பூட்டுவில் *pūṭṭu-vil,* பெ. (n.) *பூட்டுவிற்பொருள் கோள்* (நன். 415) பார்க்க; see *pūṭṭuviṟ poruḷkōl.*

[பூட்டு + வில்]

பூட்டுவிலகு-தல் *pūṭṭu-vilagu-,* 15 செ.கு.வி. (v.i.) உடற்பொருத்துவாய் விலகிப் போதல்; to be dislocated as joints.

[பூட்டு + விலகு-,]

பூட்டுவிற்பொருள்கோள் *pūṭṭu-viṟ-poruḷkōḷ,* பெ. (n.) பொருள்கோள் எட்டனுள் செய்யுளின் முதலினும் ஈற்றினும் உள்ள சொற்கள் தம்முள் இயையப் பொருள் கொள்ளும் முறை (நன். 415); a method of construing a verse by taking together the first and last words, one of eight poruḷ-kōḷ, q.v.

[பூட்டு + வில் + பொருள் + கோள்]

"*திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர் இறந்துபடின் பெரிதாம் ஏதம் உறந்தையர் கோன் தண்ணார மார்பன் தமிழர் பெருமானை கண்ணாரக் காணக் கதவு*" (முத்தொள்ளாரம்) '*கதவு*' என்ற இறுதிச் சொல்லை '*திறந்திடு மின்*' என்ற முதற் செல்லுக்கு முன்பாக வைத்து '*கதவு திறந்திடுமின்*' என்று வில்லின் இரு முனையையும் நாணால் இணைப்பது போன்று இணைத்துப் பொருள் கொள்வது இம்முறையாகும்.

பூட்டுசி *pūṭṭūśi,* பெ. (n.) பெண்கள் சட்டையில் குத்திக்கொள்ளப் பயன்படுத்தும் காப்பூசி (யாழ்ப்.); safety pin.

[பூட்டு + ஊசி]

பூட்டை[1] *pūṭṭai,* பெ. (n.) ஏற்றமரம் (வின்.); picottah. '*பிறப் பிறப்பாம் பூட்டைதனை*' (ஞானவா. உற்ப. 70). 2. இராட்டினச் சக்கரம்; wheel of the pulley. '*சத்தமிடாதபடி பூட்டைக்கு எண்ணெய் போடு*' (இ.வ.) 3. இறை கூடை; basket of baling water. 4. பூட்டைப் பொறி (திவா.) பார்க்க; see pūṭṭai-p-poṟi 5. செக்கு (அக.நி.); oil-press. 6. பூட்டாங்கயிறு (இ.வ.); cord for fastening a bullock to its yoke.

[பூட்டு → பூட்டை]

பூட்டை[2] *pūṭṭai,* பெ. (n.) சோளக்கதிர் (வின்.); sheaf of cōḷam.

[புல் → (பிள்) → பீள் = இளங்கதிர், இளமை. புள் → (பூள்) → பூண் → பூட்டை = இளங்கதிர் (மு.தா. 39)]

பூட்டைக்கிணறு *pūṭṭai-k-kiṇaṟu,* பெ. (n.) நீர் பாய்ச்சுதற்கு ஏற்றம் அமைந்த கிணறு; well fitted with, picottah, for irrigating fields. (S.I.I.iv. 194).

[பூட்டை + கிணறு]

பூட்டைக்குண்டிகை *pūṭṭai-k-kuṇḍigai,* பெ. (n.) ஏற்றச்சால்; basket for baling water. '*பூட்டைக் குண்டிகை போலே யேறுவ திழிவதாக*' (ரகஸ்ய. 1366).

[பூட்டை + குண்டிகை]

பூட்டைதறி-த்தல் *pūṭṭai-taṟi-,* 4 செ.கு.வி. (v.i.) எருதுகள் நுகக்கட்டவிழ்தல்; to be unfastened as the ropes that hold the oxen to a yoke. '*வண்டி பூட்டைதறித்தது எனக்குத் தெரியாது*'.

[பூட்டு → பூட்டை + தறி-,]

பூட்டைப்பொறி *pūṭṭai-p-poṟi,* பெ. (n.) நீரிறைக்கும் கருவி வகை (சிலப். 10, 110, உரை); water-lift.

[பூட்டை + பொறி]

பூட்டைபறி—தல் *pūṭṭai-paṟi-,* 4 செ.கு.வி. (v.i.) *பூட்டை வாங்கு—தல்* (வின்.) பார்க்க; see *pūṭṭai-vāṅgu-,*

[பூட்டை + பறி]

பூட்டைவாங்கு—தல் *pūṭṭai-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) சோளப்பயிர் முதலியன கதிர்விடுதல் (வின்.); to shoot out, as ears of cōḷam.

[பூட்டை + வாங்கு—,]

'பூட்டை²' பார்க்க.

பூட்பராசன் *pūṭparāšan,* பெ. (n.) கருஞ்சீரகம் (மலை); black cumin.

பூடகம் *pūḍagam,* பெ. (n.) வெளிப்படையாகத் தெரியாதது, உன்னித்து (ஊகித்து) அறியும் வகையில் மறைமுகமாக இருப்பது; enigma. *'அவனுக்கு இதுவரை பூடகமாக இருந்த ஒன்று இப்போது புரியத் தொடங்கிற்று', 'பிடிகொடுக்காத பூடகமான பேச்சு'.* (உ.வ.)

[பூட்டகம் → பூடகம்]

பூடணம் *pūḍaṇam,* பெ. (n.) அணிகலன் (பிங்.); ornament, jewel. *'பொன்னணி பூடணம்'* (திருமந்.2289).

[பூண் → பூடு → பூடணம் = பூட்டுவது, அணிவது]

பூடம்¹ *pūḍam,* பெ. (n.) சிறுதேவதை வாழ்தற்குரியதாகக் கட்டிய மேட்டிடம் (நெல்லை.); a mound of earth or bricks where in a minor deity resides.

[புள் → (புள்) → (பிண்டு) → பிண்டம் = திரட்சி. புள் → பூண்டு → பூடு → பூடம்]

பூடம்² *pūḍam,* பெ. (n.) *புடம்* (வின்.) பார்க்க; see *puḍam.*

[புடம் → பூடம்]

பூடா *pūḍā,* பெ. (n.) பத்து நாடியுள் ஒன்று (சிலப்.3,26, உரை); a principal tubular vessel oxf the human body, one of tašanāḍi.

பூடி *pūḍi,* பெ. (n.) மகளிர் காதின்மேற்புறத்து அணியும் அணி வகை (இ.வ.); gold ear-ornament worn at the top of helix by women.

[பூடு → பூடி]

பூடு¹—தல் *pūḍu,* 5 செ.கு.வி. (v.i.) இணைதல் (கருநா.); to join.

க. பூடு, ஊடு, பூண், கூடு

[பூண் → பூடு—,]

பூடு² *pūḍu,* பெ. (n.) 1. சிறுசெடி; small plant,herb. *'புல்லாகிப் பூடாய்'* (திருவாச.1,26). 2. வெள்ளைப் பூண்டு; garlic.

[புல் → பொல்லி = தடி. புள் → (பிள்) → பிண்டு → பிண்டம் = திரட்சி. புள் → பூண்டு → பூடு = வெங்காயம் வெள்ளைப் பூண்டு முதலியவற்றின் அடி (மு.தா.209,212)]



பூடுத்தைலம் *pūḍuttailam,* பெ. (n.) வெள்ளைப் பூண்டு எண்ணெய் (தைலம்); oil extracted from garlic.

[பூடு + தைலம்]

Skt. taila > த. தைலம்

பூடுதலை *pūḍutalai,* பெ. (n.) சிறுசிறு பட்டைகளை வட்ட வடிவில் இணைத்துச் சுழலும்படி அமைத்த சிட்டநூல் சுற்றுவதற் கான கருவி (சாதனம்); swift (for hanks).

[பூண் → பூடு + தலை]

பூண்¹(ணு)–தல் *pūṇ-(ṇu)-,* 12 செ.குன்றாவி. (v.t.) 1. அணிதல்; to put on, wear *'பூண்பதுவும் பொங்கரவம்'* (திருவாச்12,1). 2. விலங்கு முதலியன அணிதல்; to be fettered with, shackled with, yoked with 'புனை பூணும், (குறள்,836). 3. சூழ்ந்து கொள்ளுதல்; to surround. *'யாருமச் செங்கணானைப் பூண்டனர்'* (கம்பரா. இராவணன்கள.19). 4. மேற்கொள்ளுதல்; to undertake, as a business, to assume duty. *'போர்த்தொழில் வேட்கை பூண்டு'* (கம்பரா. படைத்தலை.1). 5. உடைத்தாதல்; to become possessed of, as knowledge, love. *'அன்புபூண்டனை'* (கம்பரா.விபீட.ணடை.2).

ம. பூணுக; க. பூண், பூடு; தெ. பூனு, பூனுசு, பூசு; து. புணெபுனி, புணெபினி, புணெவுனி,

[புல்லுதல் = பொருந்துதல். புல் → புர் → புரை. புரைதல் = பொருந்துதல். புல் → புள் → புண் → புணர். புணர்தல் = பொருந்துதல். புண் → புணி. புணித்தல் = சேர்த்துக் கட்டுதல். புண் → பூண் (வே.க.3,62–66)]

பூண்²(ணு)–தல் *pūṇ(ṇ)-,* 10 செ.கு.வி. (v.i.) 1. சிக்கிக் கொள்ளுதல்; to become entangled as a lock of hair; to be caught as birds in a snare. 2. நுகத்திற் கட்டப்படுதல் (வின்.); to be yoked. *'பூண்டன புரவியோ'* (கம்பரா. இராவணன்.38). 3. நெருங்கி யிறுகுதல்; to come close together; to become inseparable. *'அவனுக்குப் பல்பூண்டு விட்டது'*.

[புல் → புள் → புண் → பூண்]

பூண்³ *pūṇ,* பெ. (n.) 1. அணி; jewel. *'நுண்பூணாகம் வடுக்கொளமுயங்கி'* (மதுரைக்.569). 2. உலக்கை, தடி முதலியவற்றின் முனையிற் செறித்த வளையம்; ring, ferrule, cap. *'பூண்செறிந்த தலையையுடைய தண்டுகோலை'* (புறநா.243, உரை). ஒட்டை நாழிக்குப் பூண் கட்டினது போல (பழ.). 3. யானைக் கோட்டின் கிம்புரி; ornamental knob of an elephants tusk. 4. கவசம்; armour. *'பூணணிமார்ப போற்றி'* (சீவக.264).

ம.பூண்; தெ.பொன்னு

[புள் → புண் → பூண்]

பூண்கட்டு¹–தல் *pūṇ-kaṭṭu-,* 15 செ.கு.வி. (v.i.) 1. உலக்கை முதலியவற்றுக்குப் பூண்பிடித்தல்; to fasten a ferrule on. கொல்லன் எளிமை கண்டு குரங்கு காலுக்குப் பூண் கட்டச் சொன்னதாம் (பழ.). 2. வலுப்படுத்துதல்; to add strength to.

[பூண் + கட்டு–, கள் → கட்டு–]

பூண்கட்டு²–தல் *pūṇ-kaṭṭu-,* 12 செ.குன்றாவி. (v.t.) போற்றுதல்; to make much of. *'இந்த ருசியைப் பூண்கட்டிக் கொள்ளத் தேடுகிறவர்கள் கழிக்கச் சொன்னால் கழியார்களிறே'* (ஈடு,1,6,8).

[பூண் + கட்டு–, கள் → கட்டு]

பூண்கடைப்புணர்வு *pūṇ-kaḍai-p-puṇarvu,* பெ. (n.) அணிகலக்கொக்கி (பிங்.); hook of a jewel.

[பூண் + கடை + புணர்வு. புணர் → புணர்வு]

பூண்சம்பா *pūṇ-sambā,* பெ. (n.) சம்பா நெல்வகை; a kind of Sambā Paddu (G.Tp.D.i,132).

[பூண் + சம்பா]

பூண்டகச்சைப்புயன் *pūṇḍakaccai-p-puyaṉ,* பெ. (n.) காண்டா விலங்கு (மிருகம்); rhinoceres.

பூண்டறு-த்தல் *pūṇḍaṟu-,* 4 செ.குன்றாவி. (v.t.) அடியோடழித்தல்; to uproot; destroy utterly.

[பூண்டு + அறு-, அர் → அறு]

பூண்டான் *pūṇḍāṉ,* பெ. (n.) கணவன்; husband. '*பூண்டான் கழித்தற்கருமையால்*' (நாலடி.56).

[புல் → புள் → புண் → பூண். பூணுதல் = மணஞ்செய்தல், நெருங்கியிறுக்கமாதல். பூண் → பூண்டான்]

பூண்டி *pūṇḍi,* பெ. (n.) 1. ஊர் (பிங்.); town, village, district. 2. தோட்டம்; shrubbery, garden. (M.M.) 3. திடர்ப்பட்ட கடற்பகுதி (யாழ்.அக.); shallow part of the sea.

[புள் → (பூது) → பூதம் = பெரியது, பெரும்பேய். புள் → புண் → பூண் → பூண்டி = திரண்ட பகுதி, மேட்டுநிலம், மேட்டு நிலத்திலமைந்தவூர்]

பூண்டி அரங்கநாதமுதலியார் *pūṇḍi araṅganādamudaliyār,* பெ. (n.) கச்சிக் கலம்பகம் என்னும் நூல் இயற்றிய புலவர்; a poet. who authored kacci-k-kalambagam.

[பூண்டி + அரங்கநாதன் + முதலியார்]

பூண்டின்கழிகை *pūṇḍiṉkaḻigai,* பெ. (n.) புலித்தொடக்கி; a sensitive plant.

பூண்டு *pūṇḍu,* பெ. (n.) 1. பூடு1, (நன்.304,மயிலை) பார்க்க; see *pūḍu*1 2. உள்ளிப்பூடு; garlic 3. சிற்றடையாளம்; trace, vestige. '*ஆண்பூண்டு கண்டாலும் பேசாமற் கட்டிட்டாள்*' (விறலிவிடு.822).

[புல் → புள் → புண் → புணர். புணர்தல் = பொருந்துதல். புண் → புணி. புணித்தல் = சேர்த்துக்கட்டுதல். புள் → புணை. புண் → பூண் = உலக்கைத் தடி. பூண் → பூண்டு = பற் போன்ற பருப்புகள் அல்லது சுளைகள் நெருங்கிப் பொருந்திய பூடு வகை. எ-டு: வெங்காயப் பூண்டு, வெள்ளைப் பூண்டு, சிற்றெச்சம் (vestige, trace) ஆரியப் பூண்டை வேரறுக்க வேண்டுமென்பது ஒருசிலர் கொள்கை (வே.க.3,62-67)]

பூண்டுத்திரி *pūṇḍu-t-tiri,* பெ. (n.) பூண்டுப் பல் பார்க்க; see *pūṇḍu-p-pal.*

[பூண்டு + திரி]

பூண்டுப்பல் *pūṇḍu-p-pal,* பெ. (n.) பூண்டின் சுளை; a tooth of garlic. குழம்புக்கு இரண்டு பூண்டுப்பல் தட்டிப் போடு (உ.வ.)

[பூண்டு + பல்]

பூண்டோடு *pūṇḍōḍu,* வி.அ. (adv.) (எதுவும், யாரும்) விடுபடாமல்; அடியோடு; totally; to the root. '*ஓர் இனத்தைப் பூண்டோடு அழிக்க முயன்றவர்களும் உண்டு*. '*சுற்றுப்புறச் சூழல் பாதிப்பினால் சில உயிரினங்கள் பூண்டோடு அழிய வாய்ப்பிருக்கிறது*' (உ.வ.).

[பூண் → பூண்டு +ஓடு]

பூண்தேக்கு *pūṇ-tēkku,* பெ. (n.) மரவகை (இ.வ.); a tree, klimnoria hospita.

[பூண் + தேக்கு]

பூணல் *pūṇal,* பெ. (n.) *பூணூல்* (கொ.வ.) பார்க்க; see *pūṇūl.*

[பூணூல் → பூணல்]

பூணனூல் *pūṇaṉūl,* பெ. (n.) *பூணூல்* 1, பார்க்க; see *pūṇūl,* 1. '*பொறிகிளர் பூணனூல் புரள*' (தேவா. 224, 5).

[பூண் → பூணல் + நூல்]

பூணாங்காரல் *pūṇāṅ - kāral,* பெ. (n.) ஓர் காரல் மீன்; a fish of the equuala genus.

[பூண் + ஆம் + காரல்]

பூணாங்கு *pūṇāṅgu,* பெ. (n.) *பிண்ணாக்கு* (இ.வ.) பார்க்க; see *piṇṇākku.* '*இலுப்பைப் பூணாங்கு*'.

[பிள் + நாக்கு → பிண்ணாக்கு → புண்ணாக்கு → பூணாங்கு]

பூணாரம் *pūṇāram,* பெ. (n.) அணிகலன்; jewel, ornament. '*பூணார மார்பனை*' (திவ். பெரியதி. 11, 7, 1).

ம. பூ்ணாரம்.

[பூண் + ஆரம்]

பூணாரம்பேசு—தல் *pūṇāram-pēšu-,* 6 செ.கு.வி. (v.i.) பெருமை பேசுதல் (கொ.வ.); to talk high.

[பூணாரம் + பேசு—,]

பூணாரவெலும்பு *pūṇāra-velumbu,* பெ. (n.) 1. காரையெலும்பு; collar bone. 2. மணிக் கட்டெலும்பு (யாழ்.அக.); wrist-bone.

[பூணாரம் + எலும்பு. எல் → எலும்பு]

பூணி¹ *pūṇi,* பெ. (n.) 1. எருது; bull, bullock. '*பூணிபூண்டுழப் புட்சிலம்பும்*' (தேவா. 647, 3). 2.கன்றுகாலி (ஆனினம்); cattle. '*பூணிமேய்க்கு மிளங்கோவலர்*' (திவ். பெரியாழ், 3, 6, 1). 3. விடையோரை (இடபராசி); taurus of the zodiac. 4. நீர்ப்பறவை வகை; a kind of water bird. 'பெரும்பூட் பூணியும் பேழ்வாய்க் கொக்கும்' (பெருங். உஞ்சைக். 51, 69.)

ம. பூணி(அம்புக்கூடு, அம்பறாத்துணி; க. பூணி(அம்பு)

[புல் → புள் → புண் → பூண் → பூணி = நுகம் பூணும் எருது, கன்றுகாலி (வே.க 3, 66)]

பூணி²—த்தல் *pūṇi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. தோற்றுவித்தல்; to cause to appear; to bring into existance. '*விசும்பிற் புத்தப் புது மதியம் பூணித்தான்*' (மாறனலங். 224, 531). 2. குறிப்பிடுதல் (வின்.); to allude to, refer to.

[புண் → பூண் → பூணி—, (வே.க. 3, 66)]

பூணி³–த்தல் *pūṇi-,* 5 செ.கு.வி. (v.i.) பூட்கை பண்ணுதல்; to make a vow. 'என்னோடே பூணித்து' (ஈடு. 10, 8, 5).

[புண் → பூண் → பூணி (வே.க. 3, 66)]

பூணிப்பு *pūṇippu,* பெ. (n.) 1. பூட்கை; vow. '*பஃறலை பூழியிற் புரட்டலென் பூணிப்பாம்*' (கம்பரா. பிணிவீ. 63). 2. தீர்மானம்; decision, resolve. '*பூணிப் பொன்றுடையனாக*' (கம்பரா. அதிகா. 180).

[பூண் → பூணி → பூணிப்பு . 'பு' தொ. பெ. ஈறு]

பூணில் *pūṇil,* பெ. (n.) குருவி வகை; the seven sisters.

[பூண் → பூணி → பூணில்]

பூணில்லாவுலக்கை *pūṇillā-v-ulakkai,* பெ. (n.) மருந்து வகைகளிடிக்கும் போது களிம்பேறா வண்ணம் பயன்படுத்தும் இரும்புப் பூண் போடாத உலக்கை; a long wooden instrument for pounding medicine or herbs in a mortar without iron band at the end.

[பூண் + இல்லா + உலக்கை]

பூணுகை *pūṇugai,* பெ. (n.) 1. பூணுதல்; putting on. 2. அணிதல்; wearing.

[புள் → புண் → பூண். பூணுதல் = நுகத்திற் கட்டப்படுதல், மணஞ்செய்தல், விலங்கு மாட்டப்படுதல். பூண் → பூணுகை]

பூணுநூல் *pūṇu-nūl,* பெ. (n.) பூணூல், 1. பார்க்க; see *pūṇūl1.* '*மைவந்த நிறக்கேச வடப்பூணுநூலும்*' (பெரியபு. மானக்கஞ்சா. 23).

ம. பூணூல்

[பூணும் + நூல்]

பூணூல் *pūṇūl,* பெ. (n.) 1. இருபிறப்பாளர் (துவிசர்) அணியும் முப்புரிநூல் (திவா.); sacred thread of three strands worn by 'tuvišar'. '*முத்தப்பூணூ லத்தகு புனை கலம்*' (சிலப். 23, 96). குடலைப் பிடுங்கிப் பூணூல் போட்டுக் கொள்ளுவேன் (பழ.). 2. *பூணூற் கலியாணம்* பார்க்க; see *pūṇūṟ kaliyāṇam.*

ம. பூணூல்

[பூண் + நூல்]



பூணூற்கலியாணம் *pūṇūṟ-kaliyāṇam,* பெ. (n.) முப்புரிநூல் அணியும் சடங்கு (உபநயனம்); investitute of the sacred thread.

[பூணூல் + கலியாணம்]

பூணெலும்பு *pūṇelumbu,* பெ. (n.) மார்பெலும்பு; chest bone.

[பூண் + எலும்பு]

பூணை *pūṇai,* பெ. (n.) முல்லை நிலம் (யாழ்.அக.); pastoral tract.

[பூணி = கன்றுகாலி, ஆனினம். பூணி → பூணை = ஆனினத்திற்கு உகந்த இடம்]

பூத்தட்டு *pū-t-taṭṭu,* பெ. (n.) *பூந்தட்டு* பார்க்க; see *pūntaṭṭu.*

ம. பூத்தட்டம்

[பூ+ தட்டு]

பூத்தட்டுதல் *pūt-taṭṭudal,* பெ. (n.) வெண்ணிறமாதற் பொருட்டு மெழுகை யுருக்கித் தண்ணீரிலூற்றித் தகடாக்குகை (யாழ்ப்.); reducing melted wax to flakes by pouring it into water in the process of whitening it.

[பூ + தட்டுதல். 'தல்' தொ.பெ.ஈறு]

பூத்தநாள் *pūtta- nāḷ,* பெ. (n.) மாதவிலக்குப் பொழுது; the period of menses.

[பூத்த + நாள்]

பூத்தநீறு *pūtta - nīṟu,* பெ. (n.) தாளித்த சுண்ணாம்பு; slacked lime.

[பூத்த + நீறு]

பூத்தபூ *pūtta - pū,* பெ. (n.) பூநீறு; efflorescence found on the soil of fullers earth.

[பூத்த + பூ]

பூத்தமங்கை *pūtta - mangai,* பெ. (n.) **1.** பூப்படைந்த பெண்; a girl who attained puberty. **2.** சூல்கொண்ட பெண்; pregnant woman.

மறுவ. முதிர்ந்தபெண், சமைந்தபெண்.

[பூத்த + மங்கை]

பூத்தருபுணர்ச்சி *pū-t-taru-puṇarcci,* பெ. (n.) தனக்கு எட்டாத மரத்தினின்றும் தான் விரும்பிய பூவைப் பறித்துதவிய தலைவனது நன்றி பாராட்டித் தலைவி அவனைக் கூடுங்கூட்டம் (தொல். பொ. 114, பக், 548); (akap.) union of a lover and beloved on the occasion of his getting flowers for her from a tree out of her reach.

[பூ + தரு + புணர்ச்சி. புணர் → புணர்ச்சி]

பூத்தவள் *pūttavaḷ,* பெ. (n.) மாதவிடாய்ப் பெண்; woman in her menses.

[பூ → பூத்த → பூத்தவள்]

பூத்தாழம்பழம் *pūttāḻam paḻam,* பெ. (n.) ஒருவகைத் தாழை(அன்னாசி)ப் பழம்; pine apple.

[பூத்தாழம் + பழம்]

பூத்தாளி *pūttāḷi,* பெ. (n.) **1.** மரவகை; white catamaran tree. **2.** செந்தணக்கு; false tragacanth. (L.)

[பூ + தாளி]

பூத்தானம்[1] *pū-t-tāṉam,* பெ. (n.) அருமை பாராட்டுகை (வின்.); making much of, keeping too nicely, using very delicately.

[பூ + தானம். தனம் → தானம்]

பூத்தானம்[2] *pū-t-tāṉam,* பெ. (n.) புதுமை (இ.வ.); novelty.

[பூ + தானம். பூத்தல் = தோன்றுதல், பூ = புதியது]

Skt. sthāna > **த.** தானம்

பூத்தானம்பிடி—த்தல் *pūttāṉam - piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) அஞ்சுதல் (இ.வ.); to fear.

[பூத்தானம் + பிடி —,]

பூத்திரம் *pūttiram,* பெ. (n.) மலை (யாழ்.அக.); mountain.

[பூத்தல் = தோன்றுதல். பூ → பூத்திரம்]

பூத்திரி *pū-t-tiri,* பெ. (n.) பூப்போலத் தீப்பொறிகள் விழும் வாண வகை (வின்.); a kind of fire work or rocket that drops flower like sparks.

மருவ. புசுவாணம், பூவானம்

[பூ + திரி]

பூத்திரு *pūttiru,* பெ. (n.) **1.** வில்வமரம்; a kind of bael tree. **2.** நாய்வேளை; a plant.

பூத்துப்பூத்தெனல் *pūttu-p-pūtteṉal,* பெ. (n.) **1.** ஓடுதல் முதலியவற்றால் உண்டாம் மூச்சிழைத்தற்குறிப்பு; expr. of hard breathing, as from running **2.** உடல் வீக்கக் குறிப்பு; expr. of sudden swelling of the body.

[பூத்து + பூத்து + எனல்]

பூத்துப்போ—தல் *pūttu-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) **1.** நெருப்பில் நீறுபடர்தல்; to gather ashes, as coals. **'பூத்துப்போன நெருப்பு'** **2.** கண்பார்வை மங்குதல்; to be lack-lustrous, as eye sight. ***'கண் பூத்துப் போயிற்று'***

து. பூபரப்புனி (கண்பொறை உருவாதல்)

[பூ → பூத்து → போ—,]

பூத்துறட்டி *pūtturaṭṭi,* பெ. (n.) பூப்பறிக்கும் துறட்டி; pole with an iron hook fixed at one end to pluck flower.

[பூ + துறட்டி. துறடு → துறட்டி]

பூத்தொடு—த்தல் *pū-t-toḍu-,* 4 செ.கு.வி. (v.i.) **1.** பூமாலை கட்டுதல்; to string flowers into a garland. **2.** பண்டங்களை நெருக்கமின்றி வைத்துப் பெரிதாகக் கட்டுதல்; to put up things very loosely so as to make an appearance of bulkiness. **3.** கதை கட்டுதல் (வின்.); to fabricate, make a false story.

[பூ + தொடு—,]

பூத்தொழில் *pū-t-toḻil,* பெ. (n.) பூவேலைப்பாடு; embroidery. பண்டைத் தமிழகத்தில் ஆடை பூத்தொழிலுடன் நுண்ணிதாய் நெய்யப் பட்டிருந்தது (உ.வ.).

[பூ + தொழில்]

பூதக்கண்ணாடி *pūda-k-kaṇṇāḍi,* பெ. (n.) சிறியதைப் பெரியதாகக் காட்டும் கண்ணாடி வகை; microscope, as a magnifier.

ம. பூதக்கண்ணாடி; **தெ.** பூதஅத்தமு.

[பூதம் + கண்ணாடி. புது → பூத → பூதம் = பருத்தது, பெரியது]



பூதக்கலம் *pūda-k-kalam,* பெ. (n.) மணப்பெண் மணமகனுக்கு முதன்முறை உணவு பரிமாறுகை (வின்.); serving of food by the bride to the bridegroom for the first time.

[பூதம் + கலம். பூத்தல் = தோன்றுதல். பூ → பூதம் = புதியது]

பூதக்கலவி *pūda-k-kalavi,* பெ. (n.) சில சாதியாருள் சில சிறப்பு நாள்களில் சீட்டு விழுந்த பெண்ணோடு கூடும் கூட்டம்; intercourse with a woman chosen by lot on a festive occasion. prevalent among certain castes, not now in vogue. பூதக்கலவியிலும் புளிச்சக்கண்ணியா?

[பூதம் + கலவி]

பூதக்கால் *pūda-k-kāl,* பெ. (n.) யானைக் கால்; elephantiasis.

[பூதம் + கால். பூதம் = பெரியது]



பூதக்காவு *pūda-k-kāvu,* பெ. (n.) **1.** பூதங்களுக்குத் திருவிழாக்களில் கொடுக்கும் படையல்; offerings to evil spirits during festivals. **2.** *பூத வேள்வி* பார்க்க; see *pūda vēḷvi.*

[பூதம் + காவு]

பூதக்குயம் *pūda-k-kuyam,* பெ. (n.) ஆலம்விழுது (தைலவ. தைல.); air-root of a banyan.

[பூதம் + குயம்]

பூதக்கூட்டுவுடம்பு *pūda-k-kūṭṭu-v-uḍambu,* பெ. (n.) ஐம்பூதங்களின் கூட்டத்தால் தோன்றிய வுடம்பு; physical body, formed by pūdapariṇāmam.

[பூதம் + கூட்டு + உடம்பு]

பூதகணம் *pūda-kaṇam,* பெ. (n.) பூதங்களின் கூட்டம்; host of goblins.

[பூதம் + கணம். பூது → பூதம் → பருத்தது, பருத்த பேய். கல் → கள் → கண் → கணம் = கூட்டம்]

பூதகரப்பன்பட்டை *pūda-karappaṉ paṭṭai,* பெ. (n.) *பூதகரப்பான் பட்டை* (யாழ்.அக.) பார்க்க; see *pūda karappāṉ paṭṭai.*

[பூதகரப்பான் + பட்டை]

பூதகரப்பான் *pūda-karappāṉ,* பெ. (n.) பீநாறி; fetid tree.

பூதகரப்பான்பட்டை *pūdakarappāṉ - paṭṭai,* பெ. (n.) பீநாறி மரப்பட்டை (மலை.); bark of the fetid tree.

[பூதகரப்பான் + பட்டை]

பூதகலிக்கம் *pūda-kalikkam,* பெ. (n.) பேய்களையோட்ட மந்திரவாதி இடும் அஞ்சன வகை (வின்.); a kind of collyrium used by magicians to exorcise evil spirits.

[பூதம் + கலிக்கம்]

பூதகி *pūdagi,* பெ. (n.) *பூதனை* பார்க்க; see *pūdaṉai.*

[ஊது → பூது → பூதல் → பூதலி. பூதலித்தல் = பருத்தல், தடித்தல் (வ.வ. 2, 40) பூது → பூதகி = பெண்ணரக்கி]

பூதகேசரி *pūda-kēšari,* பெ. (n.) வெட்பாலை (மலை.); conessi bark.

பூதகேசனி *pūda-kēšaṉi,* பெ. (n.) சடாமாஞ்சி (மலை.); spikenard herb.

பூதகேசி *pūda-kēši,* பெ. (n.) காஞ்சொறி (மலை.); climbing nettle.

பூதங்கண்டகுளம் *pūdaṅ-kaṇḍa-kuḷam,* பெ. (n.) திருப்பரங்குன்றத்திற்கு வடக்கேயுள்ள ஓர் ஏரி; a water tank of north to Tiruparaṅkuṉṟam.

[பூதம் + கண்ட + குளம்]

குண்டோதரன் என்னும் பூதத்தால் வெட்டப்பட்ட குளம் என்று திருவிளையாடல் (தொன்மம்) கூறுகிறது. இக்குளத்தின் கரை பூதங்கண்டகரையென இக்காலத்தும் வழங்கும்; இதற்கு அருகில் கூடைதட்டிப் பறம்பெனச் சிறிய மலை யொன்றுண்டு. வெட்டிய மண்ணை யெடுத்துக் கரையிற் கொட்டிய கூடையைக் குண்டோதரனாகிய பூதம் இதில் தட்டியதென்பர்.

பூதங்கண்ணனார் *pūdaṅ-kaṇṇaṉār,* பெ. (n.) கழக (சங்க)க் காலப்புலவர்; a poet of sangam age.

[பூதம் + கண்ணனார்]

பூதங்காட்டு—தல் *pūdaṅ-kāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) கண்ணாடி முதலியன கோணலாக்கி (விகாரமாக்கி)ச் சாயை காட்டுதல்; to give a distorted reflection as a concave or defective miror.

[பூதம் + காட்டு—, உருவம் இருக்கிறபடி காட்டுதல் இயல்பாகக் கொள்ளப்படும். பூதம் உருவு திரிந்து காணப்படும் எனும் கருத்தடிப்படையிலேயே திரித்துக் காட்டுவது பூதங்காட்டுதல் எனப் பட்டது]

பூதங்கொல்லி *pūdaṅkolli,* பெ. (n.) 1. நீண்டபூமரவகை; panicled-flowered milled leaf tree. 2. மரவகை. few-flowered milled leaf tree.

பூதசஞ்சாரம் *pūda-šañjāram,* பெ. (n.) உலக வாழ்வு (யாழ்.அக.); worldly or secular life.

[பூ → புது → பூதம்+ சம்சாரம்]

Skt. samsāṟa > த. சம்சாரம்

பூதசஞ்சாரி[1] *pūda-šañjāri,* பெ. (n.) உலக வாழ்வை விடாதவன் (யாழ்.அக.); worldly man, one engaged in secular pursuits.

[பூ → பூது → பூதம் + சஞ்சாரி]

Skt. samsārin > த. சஞ்சாரி

பூதசஞ்சாரி[2] *pūda-šañjāri,* பெ. (n.) காட்டுத் தீ (யாழ்.அக.); wild fire.

பூதசதுக்கம் *pūda-šadukkam,* பெ. (n.) காவிரிப் பூம்பட்டினத்தில் பூதம் நின்று காவல் புரிந்து வந்த நாற்சந்தி; junction of four roads in Kāviri-p-pūmpaṭṭiṉam where the image of a goblin stood keeping watch. *'பூதம் புடைத்துணும் பூதசதுக்கமும்'* (சிலப். 5. 134).

[பூதம் + சதுக்கம். ஊது → பூது → பூதம்]

பூதசரீரம் *pūda-šarīram,* பெ. (n.) *பூதவுடல்* பார்க்க; see *pūda-v-uḍal.*

[பூதம் + சரீரம்]

Skt. šarīra > **த.** சரீரம்.

பூதசாரசரீரம் *pūda-šāra-šarīram,* பெ. (n.) இறையுடம்பு (யாழ்.அக.); ethereal body.

[பூதசாரம் + சரீரம்]

Skt. šarīra > **த.** சரீரம்.

பூதசாரம் *pūda-šāram,* பெ. (n.) ஐம்பூதச் சாரம் (வின்.); essence of the elements that which is formed of or belongs to the elements that which is elemental.

[பூதம் + சாரம்]

பூதசாரவுடம்பு *pūdašāra-v-uḍambu,* பெ. (n.) வானுலக இன்பத்தை நுகரும் (அனுபவிக்க) ஆதன் (ஆன்மா) எடுக்கும் தேவவுடல் (சி.சி. 2, 36, மறைஞா.); ethereal body assumed by the soul in order to enjoy the bliss of heaven.

[பூதம் + சாரம்]

பூதசுத்தி *pūda-šutti,* பெ. (n.) **1.** அன்று செய்த கரிசு(பாவங்)களை நீக்குவதாகிய (ஆன்மசுத்தியின்) ஆதன் தூய்மையின் பங்கு (அங்கம்) (சைவச. பொது. 502, உரை); (saiva.) daily ceremonial by which the soul is purified from daily sins, part of āṉma-šutti.

[பூதம் + சுத்தி]

பூதஞ்சி *pūdañji,* பெ. (n.) **1.** உண்கை முதலியவற்றிற் காட்டும் கூச்சம் (இ.வ.); delicacy. **2.** புனைசுருட்டு; deceit.

பூதஞ்சேந்தனார் *pūdañ-cēndaṉār,* பெ. (n.) இனியவை நாற்பது இயற்றிய பழையபுலவர்; an ancient poet, son of Pūdaṉ, author of 'iniyavai-nāṟpadu'.

பூதத்தார் *pūdattār,* பெ. (n.) பூதத்தாழ்வார் பார்க்க; see pūda-t-tāḻvār. *'பொய்கையார் பூதத்தார் பேயார்'* (உபதேசரத். 4).

[பூதத்தாழ்வார் → பூதத்தார்]

பூதத்தாழ்வார் *pūda-t-tāḻvār,* பெ. (n.) ஆழ்வார் பதின்மரில் ஒருவர் (திவ்.); a Vaiṣṇava saint, one of ten āḻvār, q.v.

பூதத்தான் *pūdattān,* பெ. (n.) ஒரு சிறு தெய்வம் (நாஞ்); a minor deity.

[பூதம் → பூதத்தான்]

பூதத்தான்றி *pūdattāṉṟi,* பெ. (n.) கும்பி; careys myrtle bloom (L.)

பூதத்துணர் *pūdattuṇar,* பெ. (n.) புனமுருங்கை (மலை.); palas tree.

பூததயவு *pūda-tayavu,* பெ. (n.) பூதவிரக்கம் பார்க்க; see pūda-v-irakkam. *'பூத தயவுடைய ராயினோ ரெவருக்கும்'* (குமரே. சத. 97).

[பூதம் + தயவு]

Skt. dayā > **த.** தயவு

பூததயை *pūda-tayai,* பெ. (n.) *பூதவிரக்கம்* பார்க்க; see *pūda-v-irakkam.*

[பூதம் + தயை]

Skt. dayā > **த.** தயை

பூததவசம் *pūdatavašam,* பெ. (n.) எள்; sesame.

[பூதம் + தவசம்]

பூததாத்திரி *pūda-dāttiri,* பெ. (n.) (உயிரிகளின் வளர்ப்புத்தாய்) நிலவுலகம்; earth as foster-mother of living beings.

[பூதம் + தாத்திரி]

பூததாரன் *pūda-dāraṉ,* பெ. (n.) (பூதங்களை அடக்கியாளும்) சிவபெருமான் (இலிங்க. 4); šivaṉ as ruling the goblin hosts.

[பூதம் + தாரன்]

Skt. dhara > **த.** தரன் → தாரன்.

பூததானியம் *pūda-dāṉiyam,* பெ. (n.) *பூத தவசம்* (யாழ்.அக.) பார்க்க; see *pūda-tavašam.*

[பூதம் + தானியம்]

Skt. dhanya > **த.** தானியம்

பூததீர்த்தம் *pūda-tirttam,* பெ. (n.) *பூத நன்னீர்* (சைவச. பொது. 66) பார்க்க; see *pūdanaṉṉir.*

[பூதம் + தீர்த்தம்]

Skt. tirtha > **த.** தீர்த்தம்

பூததேசி *pūdadēši,* பெ. (n.) வெண்ணொச்சி (சங்.அக.); five-leaved chaste tree.

பூதநடனம் *pūda-naḍaṉam,* பெ. (n.) ஒருகாலை யுயர்த்தி மடக்கியாடுகை; dancing with one leg raised and bent.

[பூதம் + நடனம்]

பூதநன்னீர் *pūdanaṉṉir,* பெ. (n.) ஐம்பூதங்களின் பொருட்டு உள்ளங்கையினின்று விடப்படும் படையல் நீர்; (šaiva.) water poured from the palm of the hand to propitiate the five elements, one of pañca tirttam.

[பூதம் + நன்னீர். நல் + நீர் – நன்னீர்]

பூதநாசனம் *pūdanāšaṉam,* பெ. (n.) சேங்கொட்டை (மலை.); marking-nut tree.

பூதநாசினி *pūdanāšiṉi,* பெ. (n.) பெருங் காயம் (தைலவ. தைல. 16); asafoetida.

பூதநாடி *pūdanāḍi,* பெ. (n.) பேய் பிடித்தவரிடம் ஒழுங்கின்றித் துடிக்கும் நாடிவகை (கொ.வ.); irregular pulse of one possessed by an evil spirit.

[பூதம் + நாடி]

பூதநாதன் *pūda-nādaṉ,* பெ. (n.) பூதங்களுக்குத் தலைவன், சிவபெருமான்; Sivaṉ, as lord of the goblins. பூதநாதனைப் பூம்புகலூரனை (தேவா. 781. 6.) 2. *பூதநாயகன்* 2 பார்க்க; see *pūdanāyagaṉ,*2

[பூதம் + நாதன்]

Skt. nātha > **த.** நாதன்

பூதநாயகன் *pūda-nāyagaṉ,* பெ. (n.) 1. *பூதநாதன்,* 1 பார்க்க; see *pūdanādaṉ,* 1 பூதநாயகர் புற்றிடங் கொண்டவர் (பெரியபு. திருக்கூட். 1). 2. கடவுள்; god. பூதநாயகனீர் சூழ்ந்த புலிக்கு நாயகன் (கம்பரா. அங்கத. 21).

[பூதம் + நாயகன். நயம் → நாயகம் → நாயகன் = தலைவன்]

பூதநாயகி *pūda-nāyagi,* பெ. (n.) மலைமகள்; Pārvadi.

[பூதநாயகன் (ஆ.பா.)– பூதநாயகி (பெ.பா.)]

பூதநிருத்தம் *pūdaniruttam,* பெ. (n.) *பூத நடனம்* (சங்.அக.) பார்க்க; see *pūda - nadanam.*

[பூதம் + நிருத்தம்]

Skt. nrtta > **த.** நிருத்தம்

பூதநூல் *pūdanūl,* பெ. (n.) இயற்பொருள் ஆற்றல் ஆகியவற்றின் இயல்புகளைப்பற்றி ஆயும் நூல்; physics.

மறுவ. இயற்பியல்

[பூதம் + நூல்]

பூதநோய் *pūda-nōy,* பெ. (n.) நோய் வகை (கடம்ப. பு. இலீலா. 143); a disease.

[பூதம் + நோய்]

பூதப்பட்டை *pūda-p-paṭṭai,* பெ. (n.) *பூதகரப்பான் பட்டை* (மூ.அ.) பார்க்க; see *pudā-karappāṉ paṭṭai.*

[பூதம் + பட்டை]

பூதப்படையோன் *pūda-p-paḍaiyōṉ,* பெ. (n.) பூதப்படைகளை யுடையவன், சிவபெருமான் (நாமதீப். 15); Sivaṉ, as having an army of goblins.

[பூதம் + படையோன்]

பூதப்பற்றன் *pūda-p-paṟṟaṉ,* பெ. (n.) பொருளே முதன்மையானது எனக் கருதுபவன் (உலோகாயதன்); materialist.

[பூதம் + பற்றன். பற்று → பற்றன்]

பூதப்பாண்டியன் *pūda-p-pāṇḍiyaṉ,* பெ. (n.) கழக(சங்க)க்கால மன்னன்; a king of sangam age.

[பூதம் + பாண்டியன்]

புலவனும் வீரனுமாய் சிறந்து விளங்கியவன். அகநானூற்றிலும், புறநானூற்றிலும் பாடப் பெற்றவன். ஒல்லையூர் தந்த எனும் அடைச்சிறப்பான் இவனுடைய புலமையும் வீரமும் உணரத்தக்கன.

பூதப்பாண்டியன்தேவியார் *pūda-p-pāṇḍiyaṉ-dēviyār,* பெ. (n.) பூதப்பாண்டியனின் மனைவி; king Pūda pāṇḍiyaṉ's wife.

[பூதப்பாண்டியன் + தேவியார்]

கணவன் இறந்தவுடன் அந்நிலையில் இருந்து அன்புகாட்ட யாராலும் முடியாது என்று கூறி தீயில் பாய்ந்து உயிர்விட்ட அரசி.

பூதபஞ்சம் *pūda-pañjam,* பெ. (n.) *பூதமைந்து* பார்க்க; see *pūdamaindu.*

[பூதம் + பஞ்சம்]

பூதபத்திரி *pūda-pattiri,* பெ. (n.) துளசி (சங்.அக.); sacred basil.

[பூதம் + பத்திரி]

பூதபதி *pūdapadi,* பெ. (n.) *பூதவாளி* (பிங்.) பார்க்க; see *pūdavāḷi.*

[பூதம் + பதி]

பூதபரிணாமதேகம் *pūda- pariṇāma-dēgam,* பெ. (n.) *பூதக்கூட்டு வுடம்பு* பார்க்க; see *pūda-k-kūṭṭu- v-uḍambu.*

[பூதம் + பரிணாமம் + தேகம்]

Skt. pari-ṇāma > **த.** பரிணாமம்; Skt. dēha > **த.** தேகம்

பூதபலம் *pūda-palam,* பெ. (n.) பலா (சங்.அக.); jack tree.

[பூதம் + பலம். பழம் → பலம்]

பூதபலி *pūda bali,* பெ. (n.) *பூதக்காவு* பார்க்க; see *pūda-k-kāvu.*

[பூதம் + பலி]

Skt. balī > **த.** பலி

பூதம்¹ *pūdam,* பெ. (n.) **1.** நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி என்ற ஐம்பூதங்கள் (திவா.); the five elements of nature viz., earth, water, fire, wind, ether. **2.** ஐம்பூதங்களின் சிறப்புத் தெய்வங்கள்; the deities presiding over the five elements. 'ஐம்பூத மன்றே கெடும்' (ஆசாரக். **16**). **3.** உடம்பு; body . 'தம்பூத மெண்ணா திகழ்வானேல்' (ஆசாரத். **16**).

[பூத்தல் = தோன்றுதல். பூ → பூது → பூதம் = தோன்றியது, ஐம்பூதங்களுள் ஒன்று. "வளியென வருஉம் பூதக் கிளவியும்" (தொல்.242)(வ.வ.240)]

பூதம்² *pūdam,* பெ. (n.) **1.** இறந்தவரின் பேயுருவம்; ghost of a deceased person. **2.** பூதகணம்; demon, goblin, malignant spirit, described as dawarfish with huge pot-belly and very small legs. "*பூதங்காப்பப் பொலி களந்தழீஇ*" (புறநா.369,17). **3.** தாழி (பரணி) (பிங்.); the second naksatra. **4.** பருத்தது (கொ.வ.); anything big or monstrous. **5.** உயிரி (பிங்.); any living creature. அகில பூதங்காப்பானவனே யென்ன (கலிங். **198**). **6.** *பூத வேள்வி* பார்க்க; see *pūdavēḷvi.* **7.** இறையுணர்வு உள்ளவன் (பக்தன்.); devotee. கடல் வண்ணன் பூதங்கள். (திவ். திருவாய். 5, 2, 1). **8.** இருப்பு; being used in compounds. "*ஆதார பூதமாக*" (திருப்பு. **326**). **9.** உள்ளான்புள் (அக.நி.); common snipe. **10.** சடாமஞ்சி (தைலவ. தைல) spikenard. **11.** கமுகு (சங்.அக.); areca palm. **12.**கூந்தற்பனை; talipot palm. **13.** ஆலமரம்; banyan tree.

மறுவ. குறள், கூளி, பாரிடம்

தெ. பூதமு.

[ஊதாங்குழலால் நெருப்பூவதைப் பூத்துப்பூத்தென ஊதுகிறான் என்பது வழக்கு.காற்றூதுவதால் துருத்தியும் ஊத்தாம்பையும் புடைக்கும். ஊதுதல் = வீங்குதல், பருத்தல். ஊது → பூது → பூதல் → பூதலி. பூதலித்தல் = பருத்தல், தடித்தல். பூது → பூதம் = பருத்தது, பருத்த பேய். பூதக்கால் = யானைக்கால். பூதக்கண்ணாடி = பெருக்கிக்காட்டும் கண்ணாடி. பொத்து → பொது → புது → பூது → பூதம் என்றுமாம். புதா பெருநாரை. பொத்து → பொத்தை = பருமிளகாய். புதல் → புதர் = அடர்செடி. புதை = அடர்காடு, அம்புக்கட்டு. புதை → பூதை = அம்புக் கட்டு. பூதி = பொது. பொது → பொதும்பு → பொதும்பர். மா.வி. அ.வும் செ.ப.க.வும் இருவேறு பூதச் சொல்லையும் ஒன்றாகக் கூறியிருப்பது தவாறம் (வ.வ.2. 40)]

Skt.bhūta > **த.** *பூதம்*

பேய்கட்கும் பூதங்கட்கும் கள்ளும் இறைச்சியும் படைப்பதும் கடாவும் சேவலும் காவு கொடுப்பதும் கல்வியும் பண்பாடுங் குன்றிய பொது மக்கட்குக் களிப்பையும் ஊக்கத்தையும் ஊட்டுவனவாயிருந்தன.

சில சமையங்களிற் புதையலெடுக்கவும் கிணறு வெட்டவும் கட்டடங்கட்டவும் நரக்காவு கொடுக்க

வேண்டியதாயிற்று. 'புதையலைப் பூதங்காத்தாற்போல்' "கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற்போல்" என்னும் உவமைப் பழமொழிகள் கவனிக்கத் தக்கன.

பூதங்கள் குறும்பூதம் பெரும்பூதம் என இருவகை. பூதத்தாழ்வார் என்றுவரும் இறையடியார் பெயர் பூதத்தை அடுத்து வழங்கிய நிலையைக் காட்டுகிறது.

பேய்களையும் பூதங்களையும் கல்லிலும் சுதையிலும் சிறிதும் பெரிதுமாக அஞ்சத்தக்க முகத்துடன் மாந்தனைப் போன்ற படிவஞ் சமைத்தும், கற்றூணில் உருவஞ்செதுக்கியும் சுவரில் ஓவியம் வரைந்தும் உடல் வடிவின்றி மண்ணிலும் சுதையிலும் பட்டைக் கூம்பாக அமைத்தும் உருவ வணக்கம் செய்து வந்தனர் பண்டையர் (த.ம.11–16).

பூதம்³ *pūdam,* பெ. (n.) *பூதவம் 1* (பிங்.) பார்க்க; see *pudavam 1.*

[ஊது → பூது → பூதம்]

பூதம்⁴ *pūdam,* பெ. (n.) பூரான் (நெல்லை.); centiped.

[பூரான் → பூரன் → பூரம் → பூதம்]

பூதம்⁵ *pūdam,* பெ. (n.) தெருவலம் வரும்போது தூக்கிச் செல்லும் மாந்தவடிவம் (இ.வ.); huge hollow figure of a man or woman carried in procession.

[ஊது → பூது → பூதம்]

பூதம்புல்லன் *pūdam-pullan,* பெ. (n.) கடைக்கழக(சங்க)மருவிய காலத்துப் புலவர்; poet of post-sangam age.

பூதமகீபாலன் *pūdamakīpālan,* பெ. (n.) புள்ளலூர் வேளாளன், ஔவையார்க்கு விருந்திட்டுப் பாடல் பெற்றவன்; Pul̤l̤alūr Vēl̤āl̤an, a patron to poetress Auvai.

பூதமரம் *pūda-maram,* பெ. (n.) 1. பெருவாகை (பதார்த்த. 220); siris. 2. ஆல்; banyan.

[பூதம் +மரம்]

பூதமாறுபாடு *pūda mārupādu,* பெ. (n.) ஐம்பூதங்களின் மாறுபாடு; modifications or changes of the five elements.

[பூதம் +மாறுபாடு]

பூதமிவர்ந்தோன் *pūdam-ivarndōn,* பெ. (n.) பிள்ளையார் (நாமதீப. 27); Ganeṣa.

[பூதம் + இவர்ந்தோன்]

பூதமுசுட்டை *pūda-muṡuṭṭai,* பெ. (n.) வட்டத்திருப்பி (சங்.அக); velvet leaf.

பூதமுத்தன் *pūda-muttan,* பெ. (n.) *பூதப் பற்றன்* (நாமதீப. 126.) பார்க்க; see *pūda-p-parran.*

[பூதம் + முத்தன். முத்து → முத்தன்]

பூதமைந்து *pūdam-aindu,* பெ. (n.) ஐம்பூதம்; the five elements of nature.

[பூதம் + ஐந்து]

பூதயஞ்ஞம் *pūdayaññam,* பெ. (n.) *பூதவேள்வி* பார்க்க; see *pūda-vēl̤vi.*

[பூதம் + யஞ்ஞம்]

Skt. yajña > த. யஞ்ஞம்

பூதயாகம் *pūda-yāgam,* பெ. (n.) *பூதவேள்வி* (சூடா.) (குறள், 87, கீழ்க்குறிப்பு) பார்க்க; see *pūda-vēl̤vi.*

[பூதம் + யாகம்]

Skt. yāga > த. யாகம்

பூதர் *pūdar,* பெ. (n.) **1.** பதினெண் கணத்து ளொருசாரார் (பிங்.); a class of demingods, one of padiṉeṇ-kaṇam. **2.** பூதம்; demons, devils. *'கல்லாதார் தேருங்காற் பூதரே'* (சிறுபஞ். 20). **3.** மாந்தர்; human beings. "*ஒருபூதரு மங்கறியாவதை*" (அஷ்டப். திருவரங்கத்துமா. 62).

[ஊது → பூது → பூதம் = பருத்தது, பருத்த பேய் (வ.வ. 2, 40) பூதம் → பூதர்]

பூதரக்கள்ளி *pūdara-k-kaḷḷi,* பெ. (n.) கோபுரக் கள்ளி; a kind of tall spurge.

பூதரப்புடம் *pūdara-p-puḍam,* பெ. (n.) ஓர் வகைப்புடம்; calcination in sand bath.

[பூதரம் + புடம்]

பூதரவி *pūdaravi,* பெ. (n.) உடம்பின் கொழுப்பு; fat of the body.

பூதரறளி *pūdararaḷi,* பெ. (n.) வெண்டாளி; white catamaran tree.

பூதராயன் *pūda-rāyaṉ,* பெ. (n.) பேய் (யாழ்.அக.); devil, goblin.

[பூதம் + ராயன். அரசன் → அரையன் → ராயன்]

பூதரூபத்தன் *pūdarūpattaṉ,* பெ. (n.) பிள்ளையார் (நாமதீப. 27.); Ganēṣa.

[பூதம் + ரூபத்தன். உருவம் → உருவத்தான் → ரூபத்தான்]

பூதலக்கிழத்தி *pūdala-k-kiḻatti,* பெ. (n.) நிலமங்கை (திவ். திருச்சந். 72); goddess of earth.

[பூ + தலம் + கிழத்தி]

பூதலம் *pūdalam,* பெ. (n.) நிலவுலகம்; the earth. *'பாதம் பூதலத்தே போந்தருளி'* (திருவாச. 8, 1).

[பூ + தலம்]

பூதலூர் *pūdalūr,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tañjāvūr dt.

பூதவக்குருக்கண் *pūdava-k-kurukkaṇ,* பெ. (n.) ஆலம் விழுது (தைலவ. தைல. 94); air-root of the banyan.

[பூதவம் + குருக்கண்]

பூதவச்சம் *pūdavaccam,* பெ. (n.) பூதகரப்பான் பார்க்க; see *pūda karappāṉ.*

பூதவம் *pūdavam,* பெ. (n.) **1.** ஆல் (திவா.); banyan. **2.** பூமருது 1, (சூடா.) பார்க்க; see *pūmarudu 1.*

[புது → பூது → பூதம் → பூதவம் = மிகப் பெரியதாய்ப் படரும் அல்லது பூதம் குடியிருக்கும் ஆலமரம் (வே.க. 3, 76)]

பூதவனல் *pūda-vaṉal,* பெ. (n.) சினநெருப்பு (கோபாக்கினி) (திவா.); the fire of anger.

[பூதம் + அனல். உல் → அல் → அன் → அனல்]

பூதவாகம் *pūdavāgam,* பெ. (n.) *பூதவாசம்* (சங்.அக.) பார்க்க; see *pūdavāšam.*

[பூதவாசம் → பூதவாகம்]

பூதவாகனம் *pūdavāgaṉam,* பெ. (n.) சிவபெருமான் எழுந்தருளும் ஊர்தி வகை; goblin-vehicle of šivaṉ.

[பூதம் + வாகனம்]

Skt. vāhana > த. வாகனம்

பூதவாசகம் *pūdavāšagam,* பெ. (n.) பெருந்தேக்கு (சங்.அக.); teak.

பூதவாசம் *pūdavāšam,* பெ. (n.) **1.** தான்றி (மலை.); belleric myrobalan. **2.** உடம்பு (யாழ்.அக.); body.

[பூதம் + வாசம்]

பூதவாதம் *pūda-vādam,* பெ. (n.) பூதங்களின் சேர்க்கையினால் ஞால(அண்ட)வுருவாக்கம் ஏற்பட்டது எனக் கூறும் கூற்று; (மணிமே. 27, 263, உரை); doctrine holding that the world is formed from the five elements without any divine agency.

[பூதம் + வாதம்]

Skt. vāda > த. வாதம்

பூதவாதி *pūdavādi,* பெ. (n.) பூதவாத மதத்தவன்; believer in the doctrine of pūda vādam. "*பூதவாதியைப் புகனீயென்ன*" (மணிமே. 27, 263).

[பூதம் + வாதி. வாதம் → வாதி]

Skt. vādin > த. வாதி

பூதவாளி *pūdavāḷi,* பெ. (n.) பூதங்களுக்கு நாயகன், சிவபெருமான்; Šivaṉ, as lord of the goblins. "*பூதவாளிநின் பொன்னடி யடைந்தேன்*" (தேவா. 176, 3).

[பூத(ம்) + ஆளி. ஆள் → ஆளி]

பூதவிகாரம் *pūda-vigāram,* பெ. (n.) *பூதமாறுபாடு* பார்க்க; see *pūda māṟupāḍu.* '*பூதவிகாரப் புணர்ப் பென்போர்களும்*' (மணிமே. 21, 100).

[பூதம் + விகாரம்]

Skt. vi-kāra > த. விகாரம்

பூதவிரக்கம் *pūda-virakkam,* பெ. (n.) உயிர்களிடத்திற் காட்டும் அன்பு; kindness to creatures.

[பூதம் + இரக்கம்]

பூதவிருக்கம் *pūda-v-irukkam,* பெ. (n.) **1.** பீநாறி (சங்.அக); fetid tree. **2.** பெருவாகை; siris.

[பூதம் + விருக்கம்]

Skt. vṟiksha > த. விருக்கம். vṟiksha என்னும் சொல்லை வளரும் அல்லது உடன் என்னும் பொருளுடைய bṟih என்னும் சொல்லோடு பொருத்திப் பார்க்கிறது மா.வி. அகரமுதலி. ஆயின் bṟih என்பது தமிழ் பெருகு என்னும் அடியோடு தொடர்புடையது.

பூதவிருள் *pūda-v-iruḷ,* பெ. (n.) **1.** ஞால(அண்ட) கோளத்தைச் சூழ்ந்திருக்கும் புறவிருள் (யாழ்.அக.); darkness surrounding the universe. **2.** காரிருள் (அந்தகாரம்) (திருவருட். 2, 6, உரை); intense darkness.

[பூதம் + இருள்]

பூதவீடு *pūda-vīḍu,* பெ. (n.) ஐம்பூதங் களாலாகிய உடல் (சங்.அக); body, as constituted of the five-elements.

[பூதம் + வீடு]

பூதவுடம்பு *pūda-v-uḍambu,* பெ. (n.) *பூதவுடல்* பார்க்க; see *pūda-v-uḍal.*

[பூதம் + உடம்பு]

பூதவுடல் *pūda-v-uḍal,* பெ. (n.) 1. (ஐந்து பூதங்களாலான) பருவுடம்பு (தூலவுடம்பு); the gross body, as composed of the five elements. (வீரநாரா. பாயி. 21). 2. ஒருவர் இறந்ததும் அவருடைய உடலை மங்கல வழக்காகக் குறிப்பிடும் சொல்; euphemism for the dead body, mortal remains. அன்னாரின் பூதவுடல் இன்று மாலை அடக்கம் செய்யப்படும் (உ.வ).

[பூத(ம்) + உடல்]

பூதவுப்பு *pūda-v-uppu,* பெ. (n.) சந்தியுப்பு (சங்.அக.); a kind of salt.

[பூதம் + உப்பு]

பூதவுரு *pūda-uru,* பெ. (n.) நிலம், (பிருதுவி) நீர் (அப்பு), நெருப்பு (தேயு), காற்று (வாயு) ஆகிய நான்குங் கொண்ட உருவப் பகுதி (மணிமே. 30, 190, கீழ்க்குறிப்பு); (Buddh.) a variety of uruvam consisting of piruttivi, appu, tēyu, and vāyu.

[பூதம் + உரு]

பூதவேசி *pūdavēsi,* பெ. (n.) *பூததேசி* (மலை.) பார்க்க; see *pūdadēsi.*

[பூததேசி → பூதவேசி]

பூதவேர் *pūda-vēr,* பெ. (n.) உடம்பின் நரம்பு; nerves of the body.

[பூத(ம்) + வேர்]

பூதவேள்வி *pūda-vēḷvi,* பெ. (n.) ஐவகை வேள்விகளுள் நெறிப்படி உயிரிகட்குக் காவு (பலி) உணவு ஈகை (பிங்.); giving food to animals as enjoined in the sāstrās one of ai-vagai-vēḷvi.

[பூதம் + வேள்வி]

பூதன்[1] *pūdaṉ,* பெ. (n.) 1. ஆதன் (ஆன்மா) (பிங்.); the soul. 2. மகன் (யாழ்.அக.); son. 3. பூதத்தாழ்வார் பார்க்க; see pūdattāḻvār. பொய்கை பூதன் பேயார் (அஷ்டப். நூற்றெட். காப்பு) 4. ஒரு பண்டையியற் பெயர்; a person name of ancient time. 5. பருத்தவுடம் பினன்; giants who are reputed to be of a great stature as physical strength but mostly of meagre mentality.

[பூதம் → பூதன் (வே. க. 3. 77)]

பூதன்[2] *pūdaṉ,* பெ. (n.) தூயன் (பரிசுத்தன்); purified soul. "*புமையிலுமை யொடும் புணர்ந்த பூதனே*" (வேதாரணி. விநாயக. 43).

[பூதம் → பூதன்]

பூதன்[3] *pūdaṉ,* பெ. (n.) கடுக்காய்; gall-nut.

பூதன்தேவனார் *pūdaṉ-dēvaṉār,* பெ. (n.) கடைக்கழக (சங்க)ப் புலவர்; poet of sangam age.

[பூதன் + தேவனார். இவர் ஈழநாட்டி லிருந்து மதுரை யடைந்தவரென்று சிலர் குறிப்பர்]

பூதனன் *pūdaṉaṉ,* பெ. (n.) அரசன் (சங்.அக.); king.

[பூ → பூதனன்]

பூதனாசரீரம் *pūdaṉā-šarīram,* பெ. (n.) பூதவுடல் பார்க்க; see pūda-v-uḍal. "*பூதனா சரீரம் போனால்*" (சி.சி. 2, 36).

[பூதம் → பூதன் + சரீரம்]

Skt. šarīra > **த.** சரீரம்.

பூதனார் *pūdaṉār,* பெ. (n.) கழக (சங்க)க் காலப் புலவர்; a poet of sangam age.

இவர் பாலைத்திணையைப் புனைந்து பாடியுள்ளார். மகட்போக்கிய தாய் பாலையை வருணிப்பதாக இவர் கூறியது மிக்க சுவையுடையதாகும்.

பூதனை *pūdaṉai,* பெ. (n.) 1. தன் நச்சுமுலைப் பாலுட்டிக் கண்ணனைக் கொல்லவந்த ஓரரக்கி; a demoness who assumed the form of a woman for killing Krishna by suckling him with poisoned milk. *நள்ளிருள் வந்தபூதனை மாள* (திவ்.பெரியதி.10,9,1). 2. நோய்வகை (சினேந்.230); a disease.

[பூதன்(ஆ.பா.) - பூதனை(பெ.பா.)]

பூதாக்கலம் *pūdā-k-kalam,* பெ. (n.) *பூதக் கலம்* பார்க்க; see *pūda-k-kalam.*

[பூதக்கலம் → பூதாக்கலம்]

பூதாக்கலம்பணி—தல் *pūdā-k-kalam-paṇi-,* 3 செ.கு.வி (v.i.) மணவாளனும் மணவாட்டியும் முதன்முறை ஒருகலத்தில் உண்ணுதல் (யாழ்.அக.); to eat in the same vessel for the first time, as a bride-groom and, his bride.

[பூதக்கலம் → பூதாக்கலம் + பணி—,]

பூதாகாரம் *pūdā-kāram,* பெ. (n.) மிகப்பருத்தது (கொ.வ.); that which is huge or monstrous.

[ஊது → பூது → பூதம் → பூதாகாரம்]

பூதாங்குசம் *pūdāṅgušam,* பெ. (n.) பேய்மருட்டி (மலை.); a soft woolly plant.

[பூதம் + அங்குசம்]

பூதாச்சிறையன் *pūdācciṟaiyaṉ,* பெ. (n.) சூட(பச்சைக்கர்ப்பூர) வகை (பதார்த்த. 1078); a kind of medicated camphor.

பூதாஞ்சனம் *pūdāñjaṉam,* பெ. (n.) பேய்க் கோளைக் கண்டுபிடிக்க உதவும் மை (வின்.); magical ointment for discovering whether a person is possessed or not, one of three añjaṉam.

[பூதம் + அஞ்சனம்]

Skt. añjana > **த.** அஞ்சனம்.

பூதாண்டம் *pūdāṇḍam,* பெ. (n.) புடவி (பேரண்டம்); universe, cosmos. *'ஏதமில் பூதாண்டத் தெல்லையினீறே'* (திருமந். 2748).

[பூதம் + அண்டம்]

Skt. aṇḍa > **த.** அண்டம்.

பூதாத்துமன் *pūdāttumaṉ,* பெ. (n.) துறவி (யாழ்.அக.); one who has entirely abandoned worldly desires, ascetic.

[பூத + ஆத்துமன்]

பூதாத்துமா *pūdāttumā,* பெ. (n.) **1.** உயிரி; (சீவாத்துமா); any living being. **2.** உடல் (யாழ்.அக.); body. **3.** துணைக்காரணம் (யாழ்.அக.); instrumental cause. **4.** சிவபெருமான் (யாழ்.அக.); Šivan. **5.** நான்முகன் (யாழ்.அக.); Brahma.

[பூதம் + ஆத்துமா]

Skt. ātmā > **த.** ஆத்துமா.

பூதாதன் *pūdādan,* பெ. (n.) ஐம்பூதங்களோடு கூடியிருக்கும் புலம்பன் (ஆன்மா) நிலை; the state of soul, when it is associated with the five elements.

[பூதன் + ஆதன்]

பூதான்மா *pūdānmā,* பெ. (n.) *பூதாதன்* (சி. போ. பா. 6, 2, பக். 317) பார்க்க; see *pūdādan.*

[பூதன் + ஆன்மா]

பூதானம்¹ *pūdānam,* பெ. (n.) நிலக்கொடை; gift of land.

[பூ + தானம். தா → தானம்]

பூதானம்² *pūdānam,* பெ. (n.) சிறிய வலியையும் பொறுக்க முடியாத தன்மை (கொ.வ.); delicate nature which will not brook the least pain.

[பூ³ + தனம் – பூதனம் → பூதானம்]

பூதி¹ *pūdi,* பெ. (n.) **1.** முடை நாற்றம் (திவா.); stench, as of putrid flesh. **2.** புனுகுச் சட்டம் (தைலவ.); secreting glands of civet-cat. **3.** சேறு (பிங்.); mud, mire. **4.** ஏழு நிரயத்துள் (நரகத்துள்) ஒன்று (பிங்.); a hell, one of ēḻunaragam.

[புழுதி → பூதி]

பூதி² *pūdi,* பெ. (n.) **1.** செல்வம் (பிங்.); affluence, wealth, prosperity. *'பூதிதரு மிலிங்க பூசனை'* (காஞ்சிப்பு. கலிங்க. 21). **2.** சாம்பல் (வின்.); ashes. **3.** திருநீறு (பிங்.); sacred ashes. *"பூதியணி பொன்னிறத்தர்"* (தேவா. 592, 2). **4.** புழுதி (சூடா.); dust, powder. **5.** நிலம் (அக.நி.); earth. **6.** ஊன் (வின்.); flesh, meat. **7.** கொடுமை (பிங்.); atrocity, violence, cruelty. **8.** நாய்வேளை (மலை.); a sticky plant.

[புள் → பூள் → (பூழ்) → பூழி = தூள், புழுதி. பூழ் → பூழ்தி → புழுதி. (மு.தா. 127) புழுதி → பூதி]

பூதி³ *pūdi,* பெ. (n.) உடம்பு (யாழ்.அக.); body.

[பூதம் → பூதி]

த. பூதி › Skt. bhutin

பூதி⁴ *pūdi,* பெ. (n.) **1.** பொதுமை (இ.வ.); indefiniteness, general terms. பூதியாய்ச் சொல்லுகிறான். **2.** அடிப்படையின்றுக் குற்றம் சுமத்துகை; baseless imputation.

[பொது → பொதி → பூதி]

பூதிகம்¹ *pūdigam,* பெ. (n.) **1.** உடம்பு (சூடா.); body. **2.** நிலவுலகம்; world.

[பூதம் → பூதி → பூதிகம்]

பூதிகம்² *pūdigam,* பெ. (n.) **1.** நிலவேம்பு (சங்.அக.); chiretta. **2.** வாசனைப்புல் வகை

(சங்.அக.); a fragrant grass. **3.** சாதிக்காய் (சங்.அக.); true nutmeg. **4.** அகில் (சங்.அக.); eagle wood. **5.** ஆயில் (தைலவ.தைல.42); gong wood.

[பூதி → பூதிகம்]

பூதிகம்³ *pūdigam,* பெ. (n.) புன்கு (நாமதீப. 293); Indian beech.

[பூதி → பூதிகம்]

பூதிகாய் *pūdi-kāy,* பெ. (n.) ஆலமரப்பட்டை (சங்.அக.); bark of banyan tree.

[பூது → பூதம் → பூதி + காய்]

பூதிப்படியாய் *pūdi-p-paḍiyāy,* வி. அ. (adv.) பொதுவாய் (இ.வ.); generally, commonly.

[பூதி + படி + ஆய்]

பூதிப்பிடி *pūdi-p-piḍi,* பெ. (n.) **1.** கரணியமின்றி (அநியாயமாய்) தாக்குகை (வின்.); attacking a person unjustly. **2.** பிறர் செயற்பாட்டில் காரணமில்லாமல் நுழைகை (வின்.); intermeddling with other's concerns.

[பூதி + பிடி]

பூதிமம் *pūdimam,* பெ. (n.) தூதுவளை (சங்.அக.); climbing brinjal.

பூதியம் *pūdiyam,* பெ. (n.) **1.** நிலவுலகம் (பிங்.); world. **2.** உடம்பு (பிங்.); body. "*அப்பூதியந் துறந்த வாருயிரை*" (திருவாரூ. 78). **3.** ஐம்பூதம் (வின்.); the five elements.

[பூதகம் → பூதியம்]

பூதுரந்தரர் *pūdurandarar,* பெ. (n.) அரசன்; kings, as supporters of the earth. "*எதிர் பூதுரந்தரர் யாவரும்*" (பாரத. இராசசூ. 136).

[பூ + துரந்தரர்]

பூதூர் *pūdūr,* பெ. (n.) புதுவதாக ஏற்பட்ட ஊர்; new village. திருப்பெரும்பூதூர்.

[புது + ஊர்–புதூர் → பூதூர்]

பூதேசன் *pūdēšan,* பெ. (n.) சிவபெருமான் (பிங்.); Šivan, as lord of the goblins.

[பூதம் + ஈசன் – பூதமீசன் → பூதேசன்]

பூதேவர் *pūdēvar,* பெ. (n.) பார்ப்பனர்; Brahmans, considered as gods on earth. '*ஒருகோடி பூதேவரும்*' (பாரத. தற்சிறப் 2).

[பூ + தேவர். தேப் → தேய்வு → தேவு → தேவர்]

பூதேவி *pūdēvi,* பெ. (n.) மண்மகள்; the goddess of earth.

[பூ + தேவி.தேய் → தேய்வு → தேவு → தேவன் (ஆ.பா.) – தேவி (பெ.பா.)]

பூதை *pūdai,* பெ. (n.) அம்பு (சூடா.); arrow.

[புதை → பூதை]

பூதோன்மாதரோகம் *pūdōnmādarōgam,* பேய்க் கோளாறு (பைஷஜ. 286); demoniac possession, hysteria.

[பூதம் + உன்மாதம் + ரோகம்]

Skt. rōha › த. ரோகம்; Skt. un-matta › த. உன்மத்தம் → உன்மாதம்

பூந்தகரை *pūndakarai,* பெ. (n.) தகரை; a plant.

[பூ + தகரை]



பூந்தட்டம் *pū-n-taṭṭam,* பெ. (n.) *பூந்தட்டு* பார்க்க; see *pūn-taṭṭu. 'ஆய்பூந்தட்டத்து'* (பெருங். வத்தவ. 7, 26).

ம. பூத்தட்டம்

[பூ + தட்டம். தட்டு → தட்டம்]

பூந்தட்டு *pū-n-taṭṭu,* பெ. (n.) பூவைத்தற்குரிய தட்டு (பிங்.); flower salver.

[பூ + தட்டு]

பூந்தணர் *pūndaṇar,* பெ. (n.) புனல் முருங்கை; a tree.

பூந்தராய் *pūndarāy,* பெ. (n.) சீர்காழி; Shiyāli *'பூந்தராய்ப் பந்தணாய்ந்த பாடலால்'* (தேவா. 180, 11).

பூந்தவிசு *pū-n-tavišu,* பெ. (n.) மலரிருக்கை; seat made of flowers. *'புதிதினிட்ட பூந்தவிசி னுச்சிமேல்'* (சீவக. 705.)

[பூ + தவிசு]

பூந்தளிர் *pūndaḷir,* பெ. (n.) *பூந்துளிர்* பார்க்க; see *pūnduḷir.*

க. பூதளிர்.

[பூ + தளிர்]

பூந்தாதி *pūndādi,* பெ. (n.) பிச்சிப்பூ; a kind of jasmine.

பூந்தாது *pū-n-dādu,* பெ. (n.) 1. மகரந்தப் பொடி (சூடா.); pollen, farina of flowers. 2. கோங்கு (மலை.); false tragacanth.

க. பூதூளி, பூதூளு; தெ. புவ்வுபொடி, புவ்பொடி.

[பூ + தாது]

பூந்தாலிகம் *pūndāligam,* பெ. (n.) பெருந்தும்மை; large lucas.

பூந்தாழங்குடி *pūndāḻaṅkuḍi,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tañjāvūr dt.

[பூ + தாழை + குடி]

பூந்தாழம் *pūndāḻam,* பெ. (n.) *பூத்தாழம் பழம்* பார்க்க; see *pūttāḻam paḻam.*

பூந்தாழம்பழம் *pūndāḻam-paḻam,* பெ. (n.) ஒருவகைத் தாழை (அன்னாசி)ப் பழம்; pine-apple.

[பூந்தாழம் + பழம்]

பூந்தாழை *pū-n-dāḻai,* பெ. (n.) ஒருவகைத் தாழை (அன்னாசி) (சங்.அக); pine-apple.

[பூ + தாழை]



பூந்தி[1] *pūndi,* பெ. (n.) *புன்கு 1* (மலை.) பார்க்க; see *pungu 1.*

பூந்தி[2] *pūndi,* பெ. (n.) *பூவந்தி* (வின்.) பார்க்க; see *pūvandi.*

[பூவந்தி → பூந்தி]

பூந்திக்கொட்டை *pūndi-k-kottai,* பெ. (n.) *பூவந்தி* பார்க்க; see *pūvandi.*

[பூவந்தி → பூந்தி + கொட்டை]

பூந்துகள் *pū-n-dugal,* பெ. (n.) மகரந்தப் பொடி, (யாழ்.அக.); pollen of flowers.

ம. பூம்பொடி; க. பூதுளி, பூதூளு

[பூ + துகள்]

பூந்துகில் *pū-n-dugil,* பெ. (n.) 1. பூவேலை செய்த ஆடை; garment embroidered with floral designs. *'பூந்துகிற்கொடுத்த தீந்தேனகிற் புகை'* (சீவக. 1855). 2. பொற்கரையுள்ள ஆடை; gold bordered silk cloth. *'ஞாயிற்றணி வணப்பமைந்த பூந்துகில்'* (பரிபா. 13, 2).

[பூ + துகில்]

பூந்துணர் *pūndunar,* பெ. (n.) 1. பூங்கொத்து; cluster of flowers. *'பூந்துணர் வாளி'* (கம்பரா. உலாவியா. 11). 2. புனமுருக்கு (மலை.); palas tree.

[பூ + துணர்]

பூந்துளிர் *pū-n-dulir,* பெ. (n.) மெல்லிய தளிர் (யாழ்.அக.); tender sprout, a young shoot with flowers.

க. பூதளிர்

[பூ + துளிர்]

பூந்துறை *pūndurai,* பெ. (n.) மலர்கள் நிறைந்துள்ள நீர்நிலை; a pond in which flowers grown. *"தண்மணல் துருத்தியுந் தாழ்பூந்துறைகளும்"* (மணிமே. 1, 65).

[பூ + துறை]

பூந்தூள் *pū-n-dūl,* பெ. (n.) *பூந்துகள்* (யாழ்.அக.) பார்க்க; see *pūndugal.*

க. பூதுளி, பூதூளு

[பூ + தூள். துகள் → தூள்]

பூந்தேக்கு *pū-n-dēkku,* பெ. (n.) மரவகை; a tree, kleinhovia hospita.

[பூ + தேக்கு]

பூந்தேர் *pū-n-dēr,* பெ. (n.) பூக்களால் புனையப்பட்ட தேர் (யாழ்.அக.); chariot adorned with flowers.

[பூ + தேர்]

பூந்தேறல் *pūndēṟal,* பெ. (n.) புதிய இனிய மது; fresh and sweet toddy. ***"விளைபூந் தேறலின் மெய்தவத் தீரே"*** **(மணிமே. 3, 99).**

[பூ + தேறல். துல் → (தெல்) → தென் = (தெளிவு,கள்) இனிமை. தென் → தெறு → தேறு → தேறல் = தெளிந்த கள்.]

பூந்தேன் *pūndēṉ,* பெ. (n.) பூவிலிருக்கும் மது; honey in the flowers, nector of flowers.

ம. பூந்தேன்

[பூ + தேன். துல் → (தெல்) → தென் → தேன்.]

பூந்தேனினம் *pūndēṉiṉam,* பெ. (n.) பூந்தாது; pollen.

[பூ + தேனினம்]

பூந்தை *pūndai,* பெ. (n.) பூதன் என்பவனது தந்தை (தொல். எழுத்து. **348,** உரை); father of a person named Pūdaṉ.

[பூதன் + தந்தை. பூந்தை மரூஉ]

பூந்தொங்கல் *pūntoṅgal,* பெ. (n.) பூங்கொத்து பார்க்க; see *pūṅgottu.*

க. பூதொங்கல்

[பூ + தொங்கல். தொங்கு → தொங்கல்]

பூந்தொட்டி *pūndoṭṭi,* பெ. (n.) பூச்செடி வளர்க்கும் சிறு தொட்டி; flowerpot.

ம. பூச்சட்டி

[பூ + தொட்டி]

பூந்தோட்டக்கறுப்பு *pū-n-tōṭṭa-k-kaṟuppu,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில் பூந்தோட்ட மென்ற சிற்றூரில் நெய்யப்படும் கறுப்புச் சேலை வகை (இ.வ.); a saree of black colour, made at Pūntōṭṭam, a village in Tañjāvūr.

[பூந்தோட்டம் + கறுப்பு]

பூந்தோட்டம் *pū-n-tōṭṭam,* பெ. (n.) **1.** பூக்கள் நிறைந்த தோட்டம் (நந்தவனம்) (சூடா.); flower garden. **2.** சோலை (சிந்தா. நி. **65.**); grove.

ம. பூந்தோட்டம்; **க.** பூதோட, பூம்பொல, கூ.தோட

[பூ + தோட்டம்]

பூந்தோடு *pū-n-tōḍu,* பெ. (n.) பூவின் இதழ் (யாழ்.அக.); flower petal.

[பூ + தோடு]

பூந்தோள் *pū-n-dōḷ,* பெ. (n.) பொலிவு பொருந்திய சுவல் (புயம்); grandness of appearance of shoulder. ***"பூந்தோள் யாப்பின் மிஞிலி காக்கும்"*** **(நற்றிணை, 365, 4).**

[பூ + தோள்]

பூநாகம்¹ *pū-nāgam,* பெ. (n.) பூவில் உள்ள சிறுபாம்பு வகை (ஜீவரட். **344**); a kind of small snake found among flowers.

[பூ + நாகம்]

பூநாகம்² *pū-nāgam,* பெ. (n.) **1.** நாகப் பூச்சி; round-worm infecting the small intestines; ascaris lumbricoides. ***'பூநாகமுங் குழைத்தல் போனம்'*** (திருவாரூர். அவை) **2.** நாங்கூழ்

(பிங்.); earth-worm. 3. *பூநீறு* (யாழ்.அக.) பார்க்க; see *pūniṟu.*

பூநாச்சிப்புல் *pūnācci-p-pul,* பெ. (n.) குறத்திப் பாசி; job's tears.

[பூநாச்சி + புல்]

பூநாமக்காரன் *pū-nāmakkāraṉ,* பெ. (n.) நெல்வகைகளுள் ஒன்று; a kind of paddy. (A.).

பூநாரை *pū-nārai,* பெ. (n.) சிவப்பு நாரை வகை; flamingo.

[பூ + நாரை]



பூநிம்பம் *pū-nimbam,* பெ. (n.) நிலவேம்பு (மலை.); chiretta.

பூநிறம் *pū-niṟam,* பெ. (n.) மாந்தளிர்க்கல் (யாழ்.அக.); a kind of precious stone.

பூநீர்[1] *pū-nīr,* பெ. (n.) 1. பனிநீர் (யாழ்.அக.); rose-water. 2. அரக்குநீர்; water, coloured red. *'பூநீர் துடையாள்'* (பரிபா. 16, 21).

[பூ + நீர்]

பூநீர்[2] *pū-nīr,* பெ. (n.) உவர்மண்ணில் எடுக்கும் நீர் (சங்.அக.) water obtained form brackish soil.

ம. பூநீர்

[பூ + நீர்]

பூநீலம் *pū-nīlam,* பெ. (n.) 1. அவுரிவகை (யாழ்.அக.); a kind of indigo. 2. ஓர் கடைச்சரக்கு; a bazaar drug.

[பூ + நீலம்]

பூநீற்றுச்சுண்ணம் *pūnīṟṟu-c-cuṇṇam,* பெ. (n.) முப்புச் சுண்ணம்; a medicinal powder prepared out of three salts.

[பூநீறு + சுண்ணம்]

பூநீறு *pūniṟu,* பெ. (n.) 1. ஒருவகை வெள்ளை உவர்மண் (வின்.); light white-coloured earthy matter containing a great proportion of carbonate of soda. 2. ஒருவகை மருந்துப் பொடி (யாழ்.அக.); a medicinal powder.

[பூ + நீறு]

பூநீறுக்கல் *pūniṟu-k-kal,* பெ. (n.) வெள்ளை பூக்கான்கல்; a white lime stone.

[பூநீறு + கல்]

பூநீறுக்காரம் *pūnīru-k-kāram,* பெ. (n.) *பூநீறுப்பு* பார்க்க; see *pūniṟuppu.*

[பூநீறு + காரம்]

பூநீறுப்பு *pūniṟuppu,* பெ. (n.) எரியுப்பு (வின்.); carbonate of soda.

[பூநீறு + உப்பு]

பூநெட்டி *pū-neṭṭi,* பெ. (n.) வெண்கிடை (இ.வ.); pith.

[பூ + நெட்டி]

பூநொய் *pūnoy,* பெ. (n.) சிறுநொய் (கொ.வ.); fine grits.

[பூ + நொய்]

பூநொய்க்கஞ்சி *pūnoy-k-kañji,* பெ. (n.) சிறுநொய் போட்டுக்காய்ச்சிய கஞ்சி; gruel prepared out of fine rice grits.

[பூநொய் + கஞ்சி]

இக்கஞ்சி வெப்பத்தையும் களைப்பையும் நீக்கி பசி உண்டாக்கும் என்று சா.அக. குறிக்கிறது.

பூநோன்பு *pū-nōṉbu,* பெ. (n.) கொங்கு நாட்டில் பொங்கலைக் கொண்டாடும் விழா; a festival observed by maidens on the third day of pongal, in Koṅgunāḍu. *'பூநோன்புக்குப் பூப்பறிக்கச் சென்று'* (எங்களுர், **159).**

[பூ + நோன்பு]

பூப்பகம் *pūppagam,* பெ. (n.) பெண்குறி (பிங்.); pudendum muliebre.

[பூப்பு + அகம்]

பூப்பகவாயில் *pū-p-paga - vāyil,* பெ. (n.) பெண்குறி; vagina.

[பூப்பகம் + வாயில்]

பூப்பட்டமாலைக்கண் *pū-p-paṭṭa - mālai-k-kaṇ,* பெ. (n.) ஓர் கண்ணோய்; an eye disease.

[பூ + பட்ட + மாலைக்கண்]

பூப்பட்டை *pū-p-paṭṭai,* பெ. (n.) இலவங்கப் பட்டை (சங்.அக.); cinnamon bark.

பூப்படர்—தல் *pūpaḍar-,* **3** செ.கு.வி. (v.i.) கண்ணில் பூ படர்தல்; to spread as in cataract of the eye.

மறுவ. புரைவிழுதல்

[பூ + படர்–,]

பூப்படலம் *pū-p-paḍalam,* பெ. (n.) ஓர் வகைக் கண்ணோய்; an eye disease.

[பூ + படலம்]

பூப்படை¹—தல் *pūppaḍi-,* 2 செ.கு.வி. (v.i.) பருவமெய்துதல்; to attain puberty.

[பூப்பு + அடை–,]

பூப்படை² *pū-p-paḍai,* பெ. (n.) *பூப்பலி,* **1,** (நாஞ்.) பார்க்க; see *pūppali-,* **1**

[பூ³ + படை]

பூப்படை³ *pū-p-paḍai,* பெ. (n.) கண்ணில் விழும் பூ; a speck or ulcer in the eye.

[பூ + படை]

பூப்பதாரி *pūppadāri,* பெ. (n.) வீட்டுவிலக்கான பெண் (யாழ்.அக.); a woman in her periods.

[பூப்பு + தாரி]

Skt. dhārin > **த.** தாரி

பூப்பந்தர் *pū-p-pandar,* பெ. (n.) *பூப்பந்தல்* பார்க்க; see *pū-p-pandal.*

[பூ + பந்தல். பந்தல் → பந்தர். ல—ர கடைப்போலி]

பூப்பந்தல் *pū-p-pandal,* பெ. (n.) பூவினால் அழகுறப் புனையப்பட்ட பந்தல்; pandal adorned with flowers.

ம. பூப்பந்தல்

[பூ + பந்தல்]

பூப்பரிதி *pū-p-paridi,* பெ. (n.) *பூபரிதி* (யாழ்.அக.) பார்க்க; see *pūparidi.*

[பூ + பரிதி]

பூப்பருத்தி *pū-p-parutti,* பெ. (n.) பூவரசு (மலை.); portia tree.

[பூ + பருத்தி]

பூப்பல்லக்கு *pū-p-pallakku,* பெ. (n.) பூவினால் அழகுறப் புனையப்பட்ட பல்லக்கு; palanquin decorated with flowers.

[பூ + பல்லக்கு]

பூப்பலகை *pū-p-palagai,* பெ. (n.) நன்னாரி (சங்.அக.); Indian sarsaparilla.

பூப்பலா *pū-p-palā,* பெ. (n.) மரவகை (சங்.அக.); a tree.

பூப்பலாசு *pū-p-palāšu,* பெ. (n.) பலாசு; palas tree.

பூப்பார்வைநுழைவு *pū-p-pārvai nulaivn,* பெ. (n.) 1. நிலவுலகுக்கு வந்திறங்குகை; descending on the earth. 2. ஆண்டுப் பிறப்பிற்குப் பின் நன்னாளில் முதன்முதலாகத் தனது பயனிலத்தைப் பார்வையிடுகை (வின்); visiting ones field for the first time in the new year on an auspicious day.

[பூ + பார்வை+ நுழைவு]

பூப்பலி *pū-p-pali,* பெ. (n.) 1. போற்றி வழிபடற்குரிய மலர்; flowers offered in worship. *'வண்டு சூழ் பூப்பலி சுமந்து'* (சீவக. 3052). 2. போற்றி வழிபாடு; ceremonial worship. *'பூப்பலி செய்து'* (சிலப். 28, 231). 3. மலரால் செய்யப்படும் பூசனை; worship by offering flowers. *'கடவுட் பீடிகைப் பூப்பலி கடைகொள்க'. (மணிமே.7,121)*

[பூ + பலி]

Skt. bali > த. பலி

பூப்பாவாடை *pū-p-pāvāḍai,* பெ. (n.) தேவிக்குப் பாவாடையைப் போலப் பூவாற் செய்து சாத்திய ஆடை; skirt of flowers put on the image of a goddess.

[பூ + பாவாடை]

பூப்பிஞ்சு *pū-p-piñju,* பெ. (n.) இளம்பிஞ்சு (கொ.வ.); tender, green fruit.

து. பூநினெ

[பூ + பிஞ்சு]

பூப்பிரதட்சிணம் *pū-p-piradaṭciṇam,* பெ. (n.) *பூவலம்* பார்க்க; see *pū-valam.*

[பூ + பிரதட்சிணம்]

Skt. pradakṣṇa > த. பிரதட்சனம்

பூப்பிரவேசம் *pū-p-piravēšam,* பெ. (n.) *பூப்பார்வை நுழைவு* பார்க்க; see *pū-p-ārvai nuḻaivu.*

Skt. pra-vēša > **த.** பிரவேசம்

பூப்பிலி *pūppili,* பெ. (n.) பருவம் எய்தாத பெண், திரளாத பெண்; immatured girl, one who has hot attained puberty.

[பூப்பு + இலி]

பூப்பிள்ளை *pū-p-piḷḷai,* பெ. (n.) சிவ பூசையின் போது உதவியாக இருப்பவன்; servant attending a worshipper during his šivapūja.

[பூ + பிள்ளை. புள் → பிள் → பிள்ளை. பூசைக்குரிய பூக்களைப் பறித்துக் கொடுக்கும் பிள்ளை பூப்பிள்ளை]

பூப்பிள்ளையட்டவணை *pūppiḷḷai-y-aṭṭavaṇai,* பெ. (n.) திருவாவடுதுறை அம்பலவாண தேசிகரியற்றிய சிவனியக் கொண்முடிபு நூல்; a primer on saivam in prose by, Ambalavāṇa-dēšigar of Tiruvāvaḍudurai.

[பூப்பிள்ளை + அட்டவணை]

பூப்பு *pūppu,* பெ. (n.) **1.** பூக்கை; flowering, blooming. **2.** மாதவிலக்கு; menstruation. *'பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்'* (தொல். பொ. 187).

[பூ → பூப்பு]

பூப்புடத்தைலம் *pūpuḍa-t-tailam,* பெ. (n.) குழியெண்ணெய் (குழித்தைலம்); oil extracted by a variety of calcination.

[பூப்புடம் + தைலம்]

Skt. taila > **த.** தைலம்

பூப்புடம் *pū-p-puḍam,* பெ. (n.) **1.** பூமிபுடம்; a method of calcination. **2.** பூப்புடமிட்ட பொருள்; medicinal substance clacinated in pū-p-pudam.

[பூ + புடம்]

பூப்புநீராட்டுவிழா *pūppu - nīrāṭṭu - viḻā,* பூப்படைந்த பெண்ணுக்குச் செய்யும் சடங்கு; purificator ceremony for the girl who has attained puberty.

[பூப்பு + நீராட்டு + விழா]

பூப்புல் *pū-p-pul,* பெ. (n.) ஒருவகைப் புல்; little-millet grass.

[பூ + புல்]

பூப்பூ–த்தல் *pū-p-pū-,* 4 செ.கு.வி. (v.i.) மலர்தல்; to flower, bloom, blossom.

து. பூஅரலுனி, பூபூபினி, பூபூபுனி

[பூ + பூ–,]

பூப்பேசு–தல் *pū-p-pēšu-,* 5 செ.கு.வி. (v.i.) கணிகை(வேசி)யர்க்குரிய நாட்பரிசம் பேசி முடித்தல்; to fix the daily hire of harlot. *'பரத்தையரைப் பூப்பேசிக் கொள்கின்ற'* (கலித். 66, உரை).

[பூ + பேசு–,]

பூப்பொங்கல் *pū-p-pongal,* பெ. (n.) *பூநோன்பு* (எங்களூர், 90). பார்க்க; see *pūnōṉbu.*

[பூ + பொங்கல். பொங்கு → பொங்கல்]

பூப்போடு–தல் *pū-p-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) ஆடையிற் பூவேலை செய்தல்; to embroider with floral designs, as a cloth.

[பூ + போடு–,]

பூப்போல *pū-p-pōla,* வி.எ. (adv.) (பூவைப் போல) மெதுவாய்; lit, like a flower, gently. *'அவள் பூப்போல வந்தாள்'.*

[பூ + போல]

பூபகம் *pūpagam,* பெ. (n.) பெண் குறி; genital of a female.

[பூப்பு + அகம்–பூப்பகம்→பூபகம்]

பூபடலம் *pū-paḍalam,* பெ. (n.) ஓர் கண்ணோய்; an eye disease.

[பூ + படலம்]

பூபதனப்பூப்புடம் *pū-padaṉa-p-pū-p-puḍam,* பெ. (n.) முப்பூப்புடத்துளொன்று (இ.வ.); a method of calcining medicine, one of muppū-p-puḍam, q.v.

[பூ + பதனம் + பூ + புடம்]

பூபதி[1] *pūpadi,* பெ. (n.) **1.** அரசன்; king, ruler, as lord of the earth. 'புரந்தரனா மெனப் பூபதியாகி' (அஷ்டப். அழகரந். 5). **2.** பூபதி மாத்திரை (பதார்த்த. 1226) பார்க்க; see pūpadi māttirai. **3.** ஆதிநாகம் (ஆதிசேடன்) (அரு. நி. 312); Adisēṣan.

[பூ + பதி]

பூபதி[2] *pupadi,* பெ. (n.) மல்லிகை (மலை.); jasmine.

பூபதிமாத்திரை *pūpadimāttirai,* பெ. (n.) ஒரு வகைக் குளிகை (பதார்த்த. 1226).; a kind of pill.

[பூபதி + மாத்திரை]

பூபதிரசம் *pūpadirasam,* பெ. (n.) இதளிய மருந்துவகை (பதார்த்த. 220); a preparation of mercury.

பூபம்[1] *pūbam,* பெ. (n.) ***பூவன் வாழை*** பார்க்க; see *pūvaṉvāḻai.*

[பூவன் → பூபன் → பூபம்]

பூபம்[2] *pubam,* பெ. (n.) அடை முதலிய சிற்றுண்டி; a kind of pan-cake prepared for break-fast.

பூபரிசமா–தல் *pū-parišamā-,* 6 செ.கு.வி. (v.i.) பிறத்தல்; to be born.

[பூ + பரிச + மா–,]

Skt. sparsa > த. பரிசம்

பூபரிதி *pū-paridi,* பெ. (n.) **1.** நிலநடுக் கோட்டிற்குச் செங்குத்தான மட்டத்தளமுள்ள வான்கோண வட்டம் (அயன ரேகை); equinoctial line. **2.** நிலவுலகின் சுற்றளவு; circumference of the earth.

[பூ + பரிதி]

பூபரிப்பயறு *pūpari-p-payaṟu,* பெ. (n.) பாசிப்பயறு; pillipesare.

[பூபரி + பயறு]

பூபலா *pū - palā,* பெ. (n.) நாவல் பழம்; jamoon fruit.

பூபன் *pūbaṉ,* பெ. (n.) அரசன்; sovereign, as protecting the earth. "*பொறையினாற் பெரியன் பூபன்*" (சூளா. தூது. 90).

[பூ → பூபன்]

பூபனை *pū - pāṉai,* பெ. (n.) நிலப்பனை; ground palm.

[பூ + பனை]



பூபாகம் *pūbāgam,* பெ. (n.) நிலப்பரப்பு (இக்.வ.); land.

[பூ + பாகம்]

பூபாலன்[1] *pūpālaṉ,* பெ. (n.) **1.** அரசன் (திவா.); king, sovereign. **2.** வேளாளன் (பிங்.); Vēḷāḷaṉ, agriculturist. **3.** மூக்கினடுவில் ஒன்று அல்லது மூன்று சுழிகள் கொண்ட உயர்வகைக் குதிரை (சுக்கிரநீதி, 314); horse with one or three marks at the centre of its nose, as the prince of horses.

[பூ + பாலன்]

Skt. pāla > **த.** பாலன்

பூபாலன்[2] *pūpālaṉ,* பெ. (n.) *பூமகன்*[2] (அரு.நி.) பார்க்க; see *pūmagaṉ*[2].

[பூ + பாலன்]

பூபிலிகம் *pūpiligam,* பெ. (n.) திரளாத தன்மை; inability to attain puberty.

[பூப்பிலி → பூப்பிலகம் → பூபிலிகம்]

பூம்பட்டு *pūm-paṭṭu,* பெ. (n.) மெல்லியபட்டு; fine, soft silk.

[பூ + பட்டு]

பூம்பட்டினம் *pūmpaṭṭiṉam,* பெ. (n.) *'புகார்'* பார்க்க; see *pugār.*

[புகும் → பூம்+பட்டினம். காவிரி புகும் பட்டினம்]

பூம்பந்தர் *pū-m-pandar,* பெ. (n.) *பூப்பந்தல்* பார்க்க; see *pū-p-pandal.* *'தருமணன் ஞெமரிய தண்பூம்பந்தருள்'* (பெருங். வத்தவ 6, 12).

[பூ + பந்தர். பந்தல் → பந்தர். ல - ர போலி]

பூம்பந்தல் *pū-m-pandal,* பெ. (n.) **1.** *பூப்பந்தல்* பார்க்க; see *pū-p-pandal.* **2.** ஊர்தி வகை (இ.வ.); a kind of vehicle (vāhanam).

[பூ + பந்தல்]

பூம்பந்து *pū-m-pandu,* பெ. (n.) பூவினால் அமைந்த பந்து (சீவக, 2547, உரை); ball of flowers.

க. பூந்தொங்கல்

[பூ + பந்து]

பூம்பல்லக்கு *pūm-pallakku,* பெ. (n.) *பூப்பல்லக்கு* (நெல்லை.) பார்க்க; see *pū-p-pallakku.*

[பூ + பல்லக்கு]

பூம்பழம் *pūm-paḻam,* பெ. (n.) சவர்க்கார எண்ணெயைப் போக்கும் ஒரு பழம்; a fruit capable of removing the oil from the fuller earth.

[பூ + பழம்]

பூம்பறியல் *pūmpaṟiyal,* பெ. (n.) உணவுக் குறைவு; scarcity of food.

பூம்பனை *pū-m-paṉai,* பெ. (n.) ஆண்பனை (யாழ்.அக.); male palmyra, as yielding only flowers.

[பூ + பனை]

பூம்பாதிரி *pū-m-pādiri,* பெ. (n.) 1. பாதிரி; trumpet-flower. 2. பாதிரிவகை; rose flowered fragrant trumpet tree. 3. மரவகை; elliptic leaved trumpet tree.

[பூ + பாதிரி]

பூம்பாளை[1] *pū-m-pāḷai,* பெ. (n.) 1. இளம் பாளை; tender spathe. *'கண்கமுகின் பூம்பாளை'* (தேவா. 623, 10). 2. மடங்கல் (ஆவணி) நளி (கார்த்திகை)யில் விதைக்கப் பட்டு நான்கு மாதங்களில் விளையும் சம்பா வகை (நாமதீப. 351); a kind of sampā paddy sown in āvaṇi-kārttikai, maturing in four months.

[பூ + பாளை]

பூம்பாளை[2] *pūmpāḷai,* பெ. (n.) தென்னம் பாளை; cocoanut spadix.

[பூ + பாளை]

பூம்பிஞ்சு *pū-m-piñju,* பெ. (n.) 1. இளம் பிஞ்சு (கொ.வ); tender, green fruit. 2. பூவிதழ் விழாமல் இருக்கும் பிஞ்சு; a small fruit found which the flower still stands.

க. பூமிடி

[பூ + பிஞ்சு]

பூம்பிடகை *pū-m-piḍagai,* பெ. (n.) பூங்கூடை; flower-basket. *'கொம்பனார்கள் பூம்பிடகை கொண்டணைய'* (பெரியபு. திருக்குறிப். 99).

[பூ + பிடகை. பிள் → பிளா → பிழா → பிடா → பிடகு → பிடகை]

பூம்பிடா *pū-m-piḍā,* பெ. (n.) *பூம்பிடகை* (யாழ்ப்.) பார்க்க; see *pūmpiḍagai.*

[பூ + பிடா. பிள் → பிளா → பிழா → பிடா]

பூம்பிள்ளை *pū-m-piḷḷai,* பெ. (n.) இளம் பிள்ளை; tender child. *'பசுங்கரும் பார்த்திடும் பூம்பிள்ளை'* (திருமந். 1068).

[பூ + பிள்ளை. புள் → பிள் → பிள்ளை]

பூம்புகார் *pūmpugār* பெ. (n.) *புகார்* பார்க்க; see *pugār.*

[பூ + புகார். புகு(ம்) → பூ= காவிரி கடலில் புகும் (கலக்கும்) இடம்]

பூசணி



பூம்பூம்மாடு



பூவரசு

பூனைக்காலி

பூம்புகை[1] *pū-m-pugai,* பெ. (n.) நறுமணப் புகை; smoke of fragrant substances; incense. *'பூம்புகை யோடளாய்'* (கம்பரா. நாட்டுப். 41).

[பூ + புகை]

பூம்புகை[2] *pūmpugai,* பெ. (n.) சுனைகள் செறிந்த ஒரு புதர்ச்செடி; a shrub.

மறுவ. பூம்புல்.

[பூ + புகை]

பூம்பூம்மாடு *pūmpūm māḍu,* பெ. (n.) கேட்கிற கேள்விகளுக்கு *'ஆமாம்'* என்றால் மேலும் கீழும் *'இல்லை'* என்றால் பக்க வாட்டிலும் தலையை ஆட்டப் பழக்கிவைத்து ஒப்பனை செய்து வீடுகளுக்குக் கூட்டி வரும் மாடு; a decorated bull trained to nod its head for 'yes' and shake it for 'no'. *'கேட்பதற் கெல்லாம் பூம்பூம் மாடு மாதிரி தலையை ஆட்டாதே'.*

[பூம்பூம் = உருமி மேளத்தில் ஒலி. பூம்பூம் மாடு = மேளத்தின் ஒலிக்கேற்ப தலை யசைக்கும் மாடு. மா → மான் → மாடு]



பூம்பொதி *pū-m-podi,* பெ. (n.) பூவினது கட்டு; bundle of flowers. *"பூம்பொதி சிதையக் கிழித்துப் பெடைகொண்டு"* (மணிமே. 5, 125).

[பூ + பொதி]

பூம்பொய்கை *pūm-poygai,* பெ. (n.) பூக்கள் பூத்திருக்கும் பொய்கை; a pond in which flowers i.e. lotuses grow.

க. பூகொள.

[பூ + பொய்கை]

பூம்பொருக்கு *pūm-porukku,* பெ. (n.) வாடற்பூ; faded flower. *'வெள்ளி லோத்திரத்தின் பூம்பொருக்கரைத்த சாந்தின்'* (சீவக. 622).

[பூ → பூம் + பொருக்கு]

பூம்பொழில் *pū-m-poḻil,* பெ. (n.) மலர்ச் சோலை; park. *"கள்ளவிழ் பூம்பொழில் இடையிடை சொரிய"* (மணிமே. 6, 8).

மறுவ. பூங்கா

[பூ + பொழில்]

பூம்போர்வை *pūm-pōrvai,* பெ. (n.) பூத்தொழிலையுடய மேற்போர்வை; blanket embroidered with floral designs. *'எலிப் பூம்போர்வையொடு மயிர்ப்படம் விரித்து'* (பெருங். உஞ்சைத் 47, 179).

[பூ → பூம் + போர்வை]

பூம்மாடு *pūm-māḍu,* பெ. (n.) பெருமாள் மாடு; performing bull. (Tp.).

[பூம்பூம்மாடு → பூம்மாடு]

'பூம்பூம்மாடு' பார்க்க.

பூமகண்மைந்தர் *pūmagaṉ-maindar,* பெ. (n.) வேளாளர் (வின்.); Vēḷāḷas husband men, as sons of the mother earth.

[பூமகள் + மைந்தர்]

பூமகள்¹ *pū-magaḷ,* பெ. (n.) திருமகள் (இலக்குமி); Lakshmi as flower-born. *'பொய்தீர் பூமகள்'* (சீவக. 2566).

ம. பூமகள்

[பூ + மகள். முகு → மக → மகள்]

பூமகள்² *pū-magaḷ,* பெ. (n.) பூதேவி; Goddess of earth. *'பூமகட்கு மணிமுடியா மதுரை'* (திருவாலவா. 39, 1).

[பூ + மகள்]

பூமகன்¹ *pū-magaṉ,* பெ. (n.) நான்முகன் (பிரமன்); Brahmā. *'பூமகன் புகழ் வானவர் போற்றுதற்காமகன்'* (திவ். நாய்ச். 4,3).

[பூ + மகன்]

பூமகன்² *pū-magaṉ,* பெ. (n.) (பூமியின் புதல்வன்) செவ்வாய் (திவா.); mars, as son of the earth.

[பூ + மகன். முகு → மக → மகன்]

பூமகா *pūmagā,* பெ. (n.) கையாந்தகரை (சங்.அக.); a plant growing in wet places.

பூமங்கை *pū-maṅgai,* பெ. (n.) திருமகள் (இலக்குமி); Lakṣmi. *'பூமங்கை கேள்வன் பொலிவு'* (திவ். இயற். 3, 6).

[பூ + மங்கை]

பூமடந்தை¹ *pū-maḍandai,* பெ. (n.) பூமகள் பார்க்க; see pūmagaḷ. *'பூமடந்தை யனை யாளை'* (பாரத. அருச்சுனன்றீர். 40).

[பூ + மடந்தை]

பூமடந்தை² *pū-maḍandai,* பெ. (n.) *பூமகள்²* பார்க்க; see *pūmagaḷ²*. (கம்பரா. பிராட்டி களங். 6).

[பூ + மடந்தை]

பூமடல்¹ *pū-maḍal,* பெ. (n.) வாழை முதலியவற்றின் குலையிலுள்ள மடல்; sheath or spathe, as of the plantain.

[பூ + மடல்]

பூமடல்² *pūmaḍal,* பெ. (n.) பூதாழம்; fragrant screw pine.

பூமடி¹–தல் *pū-maḍi-,* 2 செ.கு.வி. (v.i.) கத்திக் கூர் மழுங்குதல் (வின்.); to become wiry-edged, as a razor.

[பூ + மடி–, பூ = மென்மையானது, மெல்லிய (கத்தியின்) கூர்]

பூமடி² *pū-maḍi,* பெ. (n.) மெல்லிய மடி (யாழ்.அக.); soft udder of a cow.

[பூ + மடி]

பூமடை *pū-maḍai-,*பெ. (n.) மலர்படையல் (வின்.); offering of flowers.

[பூ + மடை. மடு → மடை]

பூமண்டபம் *pū-maṇḍabam,* பெ. (n.) பூமாலை தொடுக்கும் இடம் (கோயிலொ. 14); place where flowers are strung, as in a temple.

[பூ + மண்டபம். மண்டு → மண்டகம் → மண்டபம்]

பூமண்டலம் *pū-maṇḍalam,* பெ. (n.) நிலவுலகம்; earth, world.

[பூ + மண்டலம். முள் → முண்டு → மண்டு → மண்டலம்]

பூமணம் *pū-maṇam,* பெ. (n.) பூவினது நறுமணம்; the fragrance of flowers, the scent of flowers.

ம. பூமணம்; *க.* பூகம்மு

[பூ + மணம்]

பூமத்தாப்பு *pū-mattāppu,* பெ. (n.) பல நிறங்களில் பூப்போல ஒளியைச் சிதறும் மத்தாப்பு வகை; a kind of sparkler.

[பூ + மத்தாப்பு]

U.mahtab > *த.* மத்தாப்பு

பூமத்தை *pūmattai,* பெ. (n.) செடி வகை (யாழ்.அக.); a plant.

பூமது *pūmadu,* பெ. (n.) தேன் *(பூவினது மது)*; honey.

[பூ + மது]

பூமரம் *pū-maram,* பெ. (n.) **1.** பூக்கும் மரம் (அக.நி.); a tree that bears flowers, flowering tree. **2.** கும்பாதிரி[1]; lac tree. **3.** அறிகுறி (அக.நி); sign, indication.

க. பூமர; **ம.** பூமரம்

[பூ + மரம்]

பூமருதம் *pūmarudam,* பெ. (n.) வெண்மருது; a tree.

மறுவ. பிள்ளை மருது.

பூமருது *pū-marudu,* பெ. (n.) **1.** மருதமர வகை; flowering mardah. *'கிளிவளர் பூமருதணிந்து'* (சீவக. **64**). **2.** மரவகை; Indian bloodwood.

[பூ + மருது]

பூமலடு *pūmaladu,* பெ. (n.) தங்கம்; refined gold.

பூமலர் *pūmalar,* பெ. (n.) பாச்சாவுருண்டை (இரசகற்பூரம்); subchloride of mercury.

[பூ + மலர். மீமிசைச்சொல்]

பூமலர்ச்சி *pūmalarcci,* பெ. (n.) பூவிதழ்விரிவு, அரும்பவிழ்வு; anthesis.

[பூ + மலர்ச்சி. மலர் → மலர்ச்சி]

பூமலி *pūmali,* பெ. (n.) மூளை (சங்.அக.); brain.

பூமலிகம் *pūmaligam,* பெ. (n.) இடது மூக்குத் துளை வழியாகச் செல்லும் உயிர்க்காற்று (இரேசகம்); the vital air passing through the left nostril.

பூமழை *pū maḻai,* பெ. (n.) பூக்களின் மழை (புஷ்ப வர்ஷம்); shower of flowers. *'பூமழை முனைவனுக்கு'* (சீவக. **1943**).

மறுவ : பூமாரி

ம. பூமழ; **க.** பூமளெ

[பூ + மழை]

பூமன்[1] *pū-maṉ,* பெ. (n.) அரசன்; sovereign, as protecting the earth. *'சிதம்பர பூமா'* (தனிப்பா. i, 183, 6).

[பூ → பூமன்]

பூமன்[2] *pūmaṉ,* பெ. (n.) செவ்வாய் (சூடா.); mars.

[பூ → பூமன்]

பூமனாந்தை *pūmaṉ-āndai,* பெ. (n.) ஆந்தை வகை; brown fish owl.

[பூமன்+ ஆந்தை. பூமன்= பூம்பூம் எனவும் பூமோஆம் எனவும் அச்சமூட்டும் வகையில் உரக்கக்குரலெடுத்துக் கத்துவது]

பூமா *pūmā,* பெ. (n.) மிக்கது; abundant.

பூமாஞ்சா *pū-māñjā,* பெ. (n.) செடிவகை; clerodendron.

பூமாதளை *pūmādaḷai,* பெ. (n.) பூமாதுளை பார்க்க; see *pumāduḷai.*

[பூ + மாதளை – பூமாதுளை→ பூமாதளை]

பூமாது[1] *pū-mādu,* பெ. (n.) **1.** திருமகள் (இலக்குமி) (சங்.அக.); Goddess of wealth. **2.** கலைமகள்; Goddess of learning.

ம. பூமாது

[பூ + மாது]

பூமாது[2] *pū-mādu,* பெ. (n.) நிலமகள்; Goddess of earth. *'பூமாதி னிதயகமலத்து வைகும் பொலிவானும்'* (குமர, பிர. திருவாரூர். நான். 19).

[பூ + மாது]

பூமாதுளை *pū-māduḷai,* பெ. (n.) காய்க்காது பூமட்டும் விடும் ஓர் வகை மாதுளை; double flowered pomegranate, as bearing only flowers.

[பூ + மாதுளை]

பூமாயி *pū-māyi,* பெ. (n.) குழந்தைகளிடம் நோய் உருவாக்கும் எனக் கருதப்படும் ஒரு தேவதை; an evil spirit believed to cause disease among children.

பூமாரி *pū-māri,* பெ. (n.) **1.** பூமழை பார்க்க; see pūmaḻai. *'பூமாரி சிந்தி'* (பு. வெ 10, 8.) **2.** வேம்பு (சங்.அக.); neem, margosa. **3.** மென்தூறல்; light drizzle.

ம. பூமழ; **க.** பூமழெ, பூசரி

[பூ + மாரி. மால் = கருப்பு. மால் → மார் → மாரி= கரியமுகில், மழை.]

பூமாலை *pū-mālai,* பெ. (n.) பூவினாற் செய்த மாலை; garland of flowers. *'பூமாலை சூடிக் கொடுத்தாளை'* (திவ். நாய்ச். தனி). குரங்கு கையில் பூமாலை அகப்பட்டது போல (பழ).

ம. பூமால; **க.** பூமாலிக, பூமாலெ; **து.** பூமாலை, பூமாலிகை; **பட.** கூமாலெ.

[பூ + மாலை. மயில் → மால். மாலுதல் = மயங்குதல். மால் → மாலை = பல மலர்கள் கலக்குந் தொடை]

பூமாலைக்காரன் *pū-mālai-k-kāraṉ,* பெ. (n.) பதினெண் குடிமக்களுள் பூமாலை தொடுப்போன்; garland-maker, one of 18 kuḍimakkaḷ, q.v.

[பூமாலை + காரன்]

பூமாலைகொண்டுசொரிதல் *pūmālai-koṇḍu-šoridal,* பெ. (n.) நேர்த்திக்கடன் வகை; a kind of votive offering to a temple (Nāñ.)

[பூமாலை + கொண்டு + சொரிதல்]

பூமாறுதல் *pū-mārudal,* பெ. (n.) பூப்பு நின்று போகை (இ.வ.); menopause.

[பூ + மாறுதல். 'தல்' தொ.பெ.ஈறு]

பூமான்[1] *pūmāṉ,* பெ. (n.) அரசன்; king.

[பூ^{2} + மான். மகன் → மான்]

பூமான்[2] *pū-māṉ,* பெ. (n.) திருமகள் (இலக்குமி); Lakṣmi. (நாமதீப. 53).

[பூ^{1} + மான். மகள் → மாள் → மான்]

பூமிசை[1] *pūmišai,* பெ. (n.) திருமகள், (இலக்குமி) (யாழ்.அக.); Lakṣmi.

[பூ + மிசை]

பூமிசை[2] *pūmišai,* பெ. (n.) சீதைப் பெருமாட்டி (யாழ்.அக.); Šītā.

[பூ + மிசை]

பூமிசைநடந்தோன்[1] *pūmišai naḍandōṉ,* பெ. (n.) தாமரைப் பூவில் நடந்தவன், அருகக் கடவுள் (பிங்.); Arhat, as one who walked on the lotus.

மறுவ. எண்குணன், அறவாழிவேந்தன். சின்னவரன், உறுவன், முனைவன், மாசேனன். தேவன், மூவுலகுணர்ந்த மூர்த்தி, வென்றோன், போதன், கலைகட்கெல்லாம் நாதன், முக்குற்ற மில்லோன், எண்ணில் கண்ணுடையோன்.

[பூ + மிசை + நடந்தோன்]

பூமிசைநடந்தோன்[2] *pūmišai-naḍandōṉ,* பெ. (n.) புத்தன் (திவா.); Buddha.

[பூ + மிசை + நடந்தோன்]

பூமின்[1] *pū-miṉ,* பெ. (n.) திருமகள் (இலக்குமி தேவி)(சூடா).; Lakṣmi. *'பூமின் கேள்வன்'* (கம்பரா. அகலிகை. 73)

[பூ + மின்]

மின் என்பது உவமையாதி பெயராய்ப் பெண்ணைக் குறித்தது.

பூமின்[2] *pūmiṉ,* பெ. (n.) ஒருவகை மீன்; a kind of fish.

[பூ + மீன்]

பூமீன்கெண்டை *pū-mīṉ-keṇḍai,* பெ. (n.) நன்னீரில் வாழும் பெருமீன் வகை; mahsir, silvery, weighing 100 to 150 lbs. the great, fresh water game - fish of India.

[பூ + மீன்கெண்டை]

பூமுகம் *pū-mugam,* பெ. (n.) 1. பொலிந்த முகம்; cheerful face. *'பூமுகமழுங்கக் கொன்று'* (ஞானா. 45). 2. வீட்டு முன்முகப்பு (நாஞ்.); porch.

[பூ + முகம்]

பூமுடி—தல் *pūmuḍi-,* 2 செ.கு.வி.(v.i.) பூச்சூடிக்கொள்ளுதல்; to wear flowers.

து. பூமுடிபுனி

[பூ + முடி –,]

பூமுடிக்கம்பு *pū-muḍi-k-kambu,* பெ. (n.) கம்புப் பயிர்வகை (இ.வ.); a kind of spiked millet, pennisetum.

பூமுடிகட்டுக்கயிறு *pūmuḍi kaṭṭu-k-kayiṟu,* பெ. (n.) கட்டு மரத்தைக்கட்ட பயன்படுத்தும் கயிறு; rope for tie catamaram.

[பூமுடி + கட்டு + கயிறு]

பூமுலை *pū-mulai,* பெ. (n.) மாட்டின் மெல்லிய மடி (இ.வ.); soft udder of a cow.

[பூ + முலை]

பூமுறி–த்தல் *pū-muṟi-,* 4 செ.கு.வி. (v.i.) வாழைக்காய் பருத்தற்காக அதன் பூவை யொடித்தல் (வின்.); to pluck the plantain blossom, so that the fruit may grow bigger.

[பூ + முறி–,]

பூமுறை *pū-muṟai,* பெ. (n.) மரஞ்செடிகளில் பூவுண்டாகுங் காலம் (வின்.); flowering season, as of a tree.

[பூ + முறை]

பூமேல்வைத்துக்கொடு–த்தல் *pū-mēl-vaittu-k-koḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) (பூவின் மேலாக ஒன்றை வைத்துக்கொடுத்தல்) ஒருவனிடமிருந்து வாங்கின பொருளை நன்றியறிதலோடு திரும்பக் கொடுத்தல்; lit. to give by placing on flowers to pay back with grateful thanks.

[பூ + மேல் + வைத்து + கொடு–,]

பூமேனடந்தான் *pū-mēṉaḍandāṉ,* பெ. (n.) அருகக் கடவுள் (குறள், 3, உரை); Arhat.

[பூ + மேல் + நடந்தான்]

பூமேனி *pūmēṉi,* பெ. (n.) பூவைப்போன்ற தோல் (உடல்); skin as soft as flower.

ம. பூமேனி

[பூ + மேனி]

பூமொக்குள் *pū-mokkuḷ,* பெ. (n.) பூசை ஏனம் (புதுவை.); chalice.

[பூ + மொக்குள்]

பூமொட்டு *pū-moṭṭu,* பெ. (n.) பூ அரும்பு; flower bud.

து. பூ பரெல்

[பூ + மொட்டு]

பூய்–த்தல் *pūy-,* 11 செ.குன்றாவி. (v.t.) *புய்²* (திவா.) பார்க்க; see *puy².*

[புய் → பூய்–]

பூயஞ்சம்பா *pūyañ-cambā,* பெ. (n.) சம்பா நெல்வகை (விவசா. 2); a kind of šambā paddy.

பூர்¹–த்தல் *pūṟ-,* 3 செ.கு.வி (v.i.) *பூ–த்தல்* பார்க்க see *pū-.* மீன் பூர்த்து விட்டது.

[பூ –, → பூர்–,]

பூர்² *pūṟ,* பெ. (n.) வெள்ளம்; flood. 'பூரம்புராசி' (பாரத.இராச.116).

பூர்³(ரு)–தல் *pūr-,* 3 செ.கு.வி. (v.i.) புகுருதல்; to enter.

[புகுரு → புகுர் → பூர். பூர்தல் = புகுதல் (வே.க., 3, 105)]

பூர்பூரெனல் *pūrpūreṉal,* பெ. (n.) விரைவிற் பருத்தற் குறிப்பு; onom. expr. of swelling, enlarging suddenly or growing rapidly.

[பூர் + பூர் + எனல்]

பூரகப்புல் *pūraga-p-pul,* பெ. (n.) மந்தங் காய்ப்புல்; a kind of grass.

[பூரகம் + புல்]

பூரகம்[1] *pūragam,* பெ. (n.) **1.** நிரப்புகை; filling, satisfying. **2.** உயிர்க் காற்று (பிராணாயா யாமம்)க்கு உறுப்பானதும் காற்றை உள்ளே யிழுப்பதுமான செயல்; (yoga), inhalation, filling the breath, a part of pirāṇāyāmam. பூரகரேசகத்துடன் பொருந்து கும்பகம் (பிரயோக.440 18).

[புகுர் → பூர். பூர்தல் = புகுதல். பூர் → பூரகம்]

பூரகம்[2] *pūragam,* பெ. (n.) மத்தங்காய்ப்புல் (மலை.); red species of little millet.

பூரணம் *pūraṇam,* பெ. (n.) பூஞ்சாணம் (இ.வ.); mould, mildew. இந்தப் பண்டம் பூரணம் பிடித்துவிட்டது.

[பூஞ்சணம் → பூரணம்]

பூரதிகாரம் *pūradikāram,* பெ. (n.) சீனக்காரம் (சங்.அக.); alum.

பூரந்தொழுதல் *pūran-toḻudal,* பெ. (n.) பெண் பூப்பெய்தும் (இருதுவான) போது கண்ணேறு (திருட்டி) கழிக்குஞ் சடங்கு (இ.வ.); ceremony of warding off evil eye from a pubescent girl, by waving coloured rice about her.

[பூரம் + தொழுதல்]

பூரப்பரியாள் *pūra-p-pariyāḷ,* பெ. (n.) *பூரவாகினி* (நாமதீப. 56) பார்க்க; see *pūravāgiṉi.*

[பூரம் + பரியாள்.]

பூரப்பாளை *pūra-p-pāḷai,* பெ. (n.) தலைக் கோலத்தில் ஒருறுப்பு (சிலப். 6, 106, உரை); a piece in a womens head-ornament.

[பூரம் → பாளை.]

பூரபதி *pūra-padi,* பெ. (n.) பச்சைக் கற்பூரம் (யாழ்.அக.); medicated camphor.

பூரம்[1] *pūram,* பெ. (n.) **1.** வெள்ளம்; flood. *'பூரமாநதி'* (பாரத. சம்பவ. 39). **2.** நிறைவு fulness, completeness.

[பூர் → பூரம்]

பூரம்[2] *pūram,* பெ. (n.) ஒரு திருமணச் சடங்கு; nuptial ceremony, as completing a marriage (R.F).

[புல் → புர் → பூரம்]

பூரம்[3] *pūram,* பெ. (n.) **1.** தேள் (யாழ்.அக.); scorpian. **2.** பூரான்; centipede. **3.** பழம் (நாமதீப. 368); fruit. **4.** பொன் (அரு.நி.); gold.

[புகுரு → புகுர் → பூர். பூர்தல் = புகுதல். பூர் → பூரான். பூர் → பூரம்]

பூரவாகினி *pūra-vāgiṉi,* பெ. (n.) கலைமகள்; Šarasvadi, as riding on a centipede.

[பூரம் + வாகினி]

Skt. vahni > **த.** வாகினி

பூரவுப்பு *pūra-v-uppu,* பெ. (n.) சத்திச்சாரம் (மூ.அ.); a kind of acrid salt.

பூராக்காசு *pūrākkāšu,* பெ. (n.) செல்லல் என்னும் மீன்; a fresh water fish.

பூராயம் *pūrāyam,* பெ. (n.) **1.** ஆராய்ச்சி; close investigation, attention. *'பூராயரமாயுணர ஆகமது தந்ததும்'* (தாயு. பரிபூ. 8). **2.** வியக்கத்தக்கது (வின்.); object of curiosity. *'பேரும் பூராயமாய்'* (தாயு. பரிபூ. 6). **3.** குழந்தைகளின் கவனத்தைக் கவரும் பொருள் (வின்.); that which engages attention, as the first development of intellect in a child.

[பூர் + ஆயம். புகு → புகுர் → பூர். பூர்தல் = புகுதல், நுழைதல். ஆய் → ஆயம். உட்புகுந்து அதாவது நுணுகி ஆராய்வது பூராயம்]

பூராயமிடு—தல் *pūrāyam-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) நுணுகியாராய்தல் (வின்.); to inquire closely.

[பூராயம் + இடு—,]

பூரார்சக்கை *pūrār-šakkai,* பெ. (n.) *பூரார் பலகை* (இ.வ.) பார்க்க; see *pūrār palagai.*

[பூரார் + சக்கை]

பூரார்பலகை *pūrār-palagai,* பெ. (n.) வீட்டு மேல் தளத்தின் அடியிற் பரப்பும் பலகை (வின்.); ceiling plank, sheathing board, veneer.

[பூரார் + பலகை]

பூராறுதை—த்தல் *pūrāṟudai,* 4 செ.கு.வி. (v.i.) முகட்டில் தளப்பலகை தைத்தல்; to join and fix ceiling planks. (C.E.M).

[பூராறு + தை—,]

பூராறுபலகை *pūrāṟu-palagai,* பெ. (n.) பூரார் பலகை (இ.வ.) பார்க்க; see pūrār palagai.

[பூரார்பலகை → பூராறுபலகை]

பூரான்¹ *pūrāṉ,* பெ. (n.) பல கால்களையுடைய ஒரு நச்சு உயிரி; a venomous creature of the centepede or myriapod family.

[புகுது → புகுரு. புகுருதல் = புகுதல். புகுரு → புகுர் → பூர். பூர்தல் = புகுதல். பூர் → பூரான் = மண்ணிற்குள் விரைந்து புகும் நச்சுப்பூச்சி (வே.க. 3, 105)]

பூரான்வகை

1. கரும்பூரான்
2. காட்டுப்பூரான்
3. சடைப்பூரான்
4. சாணிப் பூரான்
5. சிறுபூரான்
6. செம்பூரான்
7. பெரும்பூரான்
8. மண்பூரான்
9. வெண்பூரான்.

பூரான்² *pūrāṉ,* பெ. (n.) **1.** குதிரை வயிற்றின் கீழ் நீண்டுள்ள தீச்சுழி (அசுவசா. 22); a line mark in the belly of a horse considered inauspicious. **2.** பனை முளை (யாழ்ப்.); edible matter in the palmyra stone or coconut formed when the root shoots forth.

பூரான்கடி *pūrāṉkaḍi,* பெ. (n.) பூரானின் கடி; bite of centipede.

[பூரான் + கடி]

பூரான்கவ்வல் *pūrāṉ-kavval,* பெ. (n.) மாட்டின் ஒரு காதின் கீழ் மட்டு (மாத்திர)முள்ள தீச்சுழி வகை (அபி. சிந். 787); an inauspicious hair-curl below one of the ears of a bull or cow.

[பூரான் + கவ்வல்]

பூரான்காவிக்கல் *pūrāṉ-kāvi-k-kal,* பெ. (n.) காவிக்கல் வகை (வின்.); reddish yellow ochre, as having the colour of a pūrāṉ.

[பூரான் + காவிக்கல்]

பூரானட்டிகை *pūrāṉ-aṭṭikai,* பெ. (n.) கழுத்தணிவகை; a kind of close fitting necklace.

[பூரான் + அட்டிகை. ஒட்டு → அட்டு → அட்டி → அட்டிகை]

பூரி[1]–த்தல் *pūri-,* 4 செ.கு.வி. (v.i.) 1. நிறைதல்; to be full. *'பூரிப்பதுள்ளே சிவம்'* (ஔவை. கு. திருவருள். 4, 9). 2. குறைவற நிரம்புதல்; to become perfect. 3. களித்தல்; to rejoice; to be satisfied. *'பூரித்தென் னெஞ்சே புரி'* (திவ். இயற். 3, 44). 4. பருத்தல்; to be plump, or full formed; to swell. *'பூரித்த முலையிலே'* (தாயு. மலைவளர். 2). *'நெடும்புயம் பூரித்து'* (பாரத. காண்டவ. 28). 5. பொலிதல்; to thrive, as vegetation. 6. மிகுதல் (பிங்.); to abound. 7. பூரகஞ் செய்தல்; (yoga.) to take in air at a long breath. *'ரேசிப்பது போலப் பூரித்து நிற்கில்'* (ஔவை. கு.... வீட்டுநெறி. 5, 6).

[புல் → பல் → பல. புல் → பல் → பன்மை. புல் → புது → புதல் = செறிந்த தூறு. புது → பூது→ பூதம் = பருத்தது. (வே.க. 3, 72–76) புல் → புர் → பூர் → பூரி]

பூரி[2]–த்தல் *pūri-,* 4 செ.குன்றாவி (v.t.) 1. நிறைத்தல்; to fill. *'வண்ணநீர் பூரித்த வட்டெறிய'* (பரிபா. 12, 68). 2. பொதிந்துள்ள கருத்தை வெளியிட உரிய சொற்களைச் சேர்த்தல்; to complete the sense by adding the words omitted. *'அக்கண்ணழகிலே ஈடுபடுகிறார் என்று பூரிப்பது'* (திருவிருத். 63, 342. அரும்). 3. படைத்தல்; to create *'பரமன் பூரிக்க'* (தக்கயாகப். 694).

[புல் → புர் → பூர் → பூரி]

பூரி[3] *pūri,* பெ.அ. (adj.) மிக்க; much, many; abundant; numerous great, important. *'நங்குடி கோத்திரப் பெயர் பூரிச்சிரேட்டம்'* (பிரபோத. 11, 91).

[புல் → புர் → பூர் → பூரி]

பூரி[4] *pūri,* பெ. (n.) 1. மிகுதி; abundance. *'பூரிகொள சுண்ணமும்'* (கந்தபு. சூரப. வதை. 35). 2. பூரிதட்சிணை பார்க்க; see pūritaṭciṇai. *'பூரி கோடியின் மேற்செல'* (உபதேசகா. சிவத்துரோ. 195). 3. பொன் (திவா.); gold. *'பசும்பூரி சேர்த்தி'* (கம்பரா. விடைகொடுத். 1). 4. மொத்தம்; (arith.) the total. *'ஆக ஒரு திருநாளைக்குப் பூரிநெல்லு கலனை தூணிப் பதக்காக'* (S.I.I. ii, 128). 5. ஒருபேரெண் (பிங்.); a quintillion.

[புல் → புர் → பூர் → பூரி]

பூரி[5] *pūri,* பெ. (n.) 1. ஊதுங் கருவி வகை; a wind instrument. 2. வில்லின் நாண் (சூடா.); bow string. 3. குற்றம் (வின்.); fault. 4. கலப்பு

நெல்(வி.ன்.); mixed paddy. 5. *பூரியரிசி* (இ.வ.) பார்க்க; see *pūri-y-ariši*. 6. பப்பரப்புளி; baobab.

ம. பூரிக; தெ. பூரா.

[புல் → புள் → புழு. புழு = துளைக்கும் சிற்றுயிரி. புழு → புகு. புகுதல் = உட்செல்லுதல். புகு → புகுது. புகுதுதல் = உட்செல்லுதல். புகுது → புகுர் → பூர். பூர்தல் = புகுதல். புகுது → புகுரு. புகுருதல் = புகுதல். புகுரு → புகுர் → பூர்.பூர்தல்: புகுதல்(வே.க.3, 104–105) பூர் → பூரி]

பூரி⁶ *pūri*, பெ. (n.) விரிந்த பாளையின் உள்ளிருக்கும் பூத்தொகுதி; flower-like contents of an open spathe.

[பூ + விரி – பூவிரி → பூரி]

பூரி⁷ *pūri*, பெ. (n.) *பூரியரிசி* (நாஞ்.) பார்க்க; see *pūriyariši*.

பூரி⁸ *pūri*, பெ. (n.) 1. புல்; grass 2. நரியிலந்தை; jackel jujuba.

பூரிக்காய் *pūri-k-kāy*, பெ. (n.) சவுரிக்காய்; a fruit, tricho.

பூரிக்குத்தலரிசி *pūri-k-kuttal-ariši*, பெ. (n.) நன்றாய்த் தீட்டிய அரிசி (S.I.I.vi, 11); polished rice.

[பூரி + குத்தல் + அரிசி]

பூரிக்கெண்டை *pūri-k-keṇḍai*, பெ. (n.) சல்லிக்கெண்டை; a river fish.

பூரிக்கோ *pūrikkō*, பெ. (n.) குறுந்தொகை தொகுத்த ஆசிரியன்; the compiler of kuru-n-togai.

பூரிகம் *pūrigam*, பெ. (n.) அப்பவருக்கம் (திவா.); pastry or cake full in appearance but hollow in side.

[புல்லுதல் = துளைத்தல். புல் → புர் → புரை = உட்டுளை, உட்டுளைப் பொருள் (வே.க. 3, 101) புர் → பூர் → பூரி → பூரிகம்]

பூரிகா *pūrikā*, பெ. (n.) அகில் (மலை.); eagle wood.

பூரிகை¹ *pūrigai*, பெ. (n.) ஊதுகுழல்; trumpet. *'தாரை பூரிகைவளை துடி'* (திருப்பு. 890).

ம.பூரிக; தெ. புருக, பூரா

[புகுரு → புகுர் → பூர். பூர்தல் = புகுதல். (வே. க. 3, 104–105) பூர் → பூரி → பூரிகை.]

பூரிகை² *pūrigai*, பெ. (n.) *பூரிகம்* பார்க்க (பிங்.); see *pūrigam*.

பூரிகை³ *pūrigai*, பெ. (n.) *பூரகம்¹* பார்க்க (அரு.நி); see *pūragam¹*.

[பூர் → பூரகம் → பூரிகம்]

பூரிச்சேரல் *pūri-c-cēral*, பெ. (n.) அரிசி வகை; a kind of rice. *'திருப்பதியமுதுக்குப் பூரிச்சேரல்'* (S.I.I.vii, 300).

[பூரி + சேரல்]

பூரித்தநீர்ப்பை *pūritta-nīr-p-pai,* பெ. (n.) பருத்த சிறு நீர்ப்பை; distended bladder.

[பூரித்த + நீர் + பை]

பூரித்தியம் *pūrittiyam,* பெ. (n.) மூக்கிரட்டை a prostate plant.

பூரிதட்சிணை *pūritaṭciṇai,* பெ. (n.) சிறப்புக்காலங்களில் பார்ப்பனர்க்குக் கொடுக்கும் பரிசு; gift of money to Brahmans on festive occasions.

[பூரி + தட்சிணை]

பூரிதம் *pūridam,* பெ. (n.) **1.** நிரப்பப்பட்டது; that which is filled. **2.** மிகுகளிப்பு (சங்.அக.); exultation, great joy. **3.** மிகுதி (சங்.அக.); plenty, abundance.

[புல்லுதல் = பொருந்துதல். புல் → புர் → பூர் → பூரி → பூரிதம்]

பூரிதயம் *pūridayam,* பெ. (n.) சிறுதக்காளி; small tomato.

பூரிநெல் *pūri-nel,* பெ. (n.) கலப்புநெல் (S.I.I.ii, 127.); mixed paddy.

[பூரி + நெல்]

பூரிநெல்லி *pūrinelli,* பெ. (n.) காட்டுக் கன்னி; a tree.

பூரிப்பு *pūrippu,* பெ. (n.) **1.** நிறைவு; filling. **2.** பருமன்; largeness, as of body; plumpness. **3.** மிகுதி (சூடா.); plenty, abundance. **4.** மிகுமகிழ்ச்சி; satisfaction; cheerfulness; exhilaration, great joy. ***'பூரிப்பொரு வாட்டங்களுறாதே'*** (திருப்போ. சந். குயிற்பத்து. 7). **5.** ஒளி; lustre. ***'வைரத்தின் பூரிப்பு'*** (இ.வ).

[புல்லுதல் = பொருந்துதல். புல் → புர் → பூர் → பூரி → பூரிப்பு]

பூரிப்புளி *pūripuḷi,* பெ. (n.) பப்பரப்புளி; a plant.

[பூரி + புளி]

பூரிபத்திரம் *pūri-p-pattiram,* பெ. (n.) முடிகலன்(மகுட)வுறுப்பு (இ.வ.); ornamental fillet of a crown.

[பூரி + பத்திரம்]

Skt. patra > த. பத்திரம்

பூரிமம் *pūrimam,* பெ. (n.) **1.** தெருவின் சிறகு; side of a street. ***'உயர்பூரிம விழுத்தெருவில்'*** (மதுரைக். 18). **2.** சாந்திட்டுக் கட்டிய தொட்டி (மதுரைக். 18, உரை); cistern.

பூரிமரம் *pūri-maram,* பெ. (n.) பப்பரப்புளி; baobab.

[பூரி + மரம்]

பூரியது *pūriyadu,* பெ. (n.) தாழ்வானது; that which is low. ***'சீரியன் வுள்ளிப் பூரியன மறத்தல் வேண்டும்'*** (குறள், 1206, மணக்).

[பூரி → பூரியது. புள் → (புரா) → புரை = குற்றம் (மு.தா.278) புர் → பூர் → பூரி]

பூரியம்[1] *pūriyam,* பெ. (n.) **1.** ஊர் (பிங்.); town, village. **2.** மருத நிலத்தூர் (பிங்.); agricultural town. **3.** அரசர் வீதி (பிங்.); royal street. **4.** அரசிருக்கை (சது.); royal residence.

[புர் → புரம் = உயர்ந்த மனை, அஃதுள்ள நகர், குடிநகர். புர் → பூர் → பூரி → பூரியம்]

பூரியம்² *pūriyam,* பெ. (n.) **1.** *பூரி⁶,* **6** (பிங்.) பார்க்க; see *puri⁶,* **6. 2.** *பூரி⁶,* **4** (நாமதீப. 377) பார்க்க; see *pūri⁶,* **4.**

[பூரி → பூரியம்]

பூரியமாக்கள் *pūriya-mākkaḷ,* பெ. (n.) *பூரியார்* பார்க்க; see *pūriyār* *'பூரிய மாக்களுண்பது மண்டி'* (பரிபா.6,48).

[பூரிய + மாக்கள்]

பூரியர்¹ *pūriyar,* பெ. (n.) **1.** இழிந்தவர்; mean minded people. *'பூரியர்களாழுமளறு'* (குறள்,919). *'பூரியரேயுந்தம்மைப் புகல் புகுந்தோர்க்கு'* (கம்பரா.வீபீடண.119). **2.** கொடியவர்; wicked persons.

[புல் → புள் → பொள் → பள் → பள்ளம் (வேக.3,148) புள் → (புரா) → புரை = குற்றம் (மு.தா.278) புர் → பூர் → பூரி → பூரியர்]

பூரியர்² *pūriyar,* பெ. (n.) நிலவேம்பு; a plant, ground neem.

பூரியரிசி¹ *pūri-y-ariši,* பெ. (n.) மட்டையரிசி (இ.வ.); bad grains of rice red in colour; unhusked paddy.

[பூரி + அரிசி. அரி → அரிசி]

பூரியரிசி² *pūri-y-ariši,* பெ. (n.) ஆயுதப் பூசை (தசராப்) பண்டிகையில் கொடுக்கப்படும் கொடை(தான)அரிசி; doles of rice during the dusserah festival.

[பூரி + அரிசி. அரி → அரிசி]

பூரியரிசி³ *pūri-y-ariši,* பெ. (n.) வெள்ளையரிசி (நாஞ்.); white, polished rice.

பூரியார் *pūriyār,* பெ. (n.) **1.** கீழ்மக்கள்; base or low people. *'பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள'* (குறள்,241). **2.** கொடியவர்; wicked persons.

[பூரியர் → பூரியார்.]

'பூரியர்' பார்க்க.

பூரு¹-தல் *pūru-,* **5** செ.குன்றாவி. (v.t.) துளைத்தல் (கொ.வ.); to pierce.

[புகு → புகுது. புகுதுதல் = உட்செல்லுதல். புகுகு → புகுரு. புகுருதல் = புகுதல். புகுரு → புகுர் → பூர். பூர்தல் = புகுதல் (வே.க.3,105) பூர் →பூரு]

பூரு² *pūru,* பெ. (n.) புருவம் (சூடா.); eyebrow. "துணைவிழி பூருவினிடையே செருகிட "(சிவரக.நைமிச.33).

[புர் → புர் → புரி. புரிதல் = வளைதல் புர் → புரு → புருவு → புருவம் = கண்களின் மேலுள்ள மயிர்வளைவு (வே.க.3,94–98) புர் → புரு → பூரு]

பூருகம் *pūrugam,* பெ. (n.) நிலத்தில் முளைப்பது, மரம் (சூடா.); tree, growing on the earth.

[பூ → பூருகம்]

பூருண்டி *pūruṇḍi,* பெ. (n.) **1.** மல்லிகை (சூடா.); jasmine. **2.** வேலிப்பருத்தி (மலை.); hedge twiner. **3.** தேட்கொடுக்கி (வின்.); Indian turnsole.

பூருது *pūrudu,* பெ. (n.) *பூநீறு* (தைலவ.தைல. 135,134) பார்க்க; see *pūniṟu.*

[பூ → பூருது]

பூரைப்படு—தல் *pūrai-p-paḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) மீன் பிடிக்கும் போது வலைகிழிதல்; to torn net in fishing.

[புள் = ஒட்டை, துளை. புள் → புரை. புரை + படு– புரைப்படு → பூரைப்படு–,]

பூரைபூரையெனல் *pūrai-pūrai-y-eṉal,* பெ. (n.) *போதும் போதுமெனல்;* expr. signifying enough, enough. *'பூரைபூரை யென்றி ருகையாலமைத்த புத்தேளிர்'* (அரிச்.பு.மீட்சி.16).

[பூரை + பூரை +எனல்]

பூதசரீரம் *pūda-šarīram,* பெ. (n.) *பூதவுடல்* பார்க்க; see *pūda-v-uḍal.*

[பூதம் + சரீரம்]

Skt. šarīra > **த.** சரீரம்

பூரையிடு—தல் *pūrai-y-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) **1.** முடிவடைதல்; to cease, end. *'பாரிவரு கூத்தினிப் பூரையிட வமையாதோ'* (திருப்பு.879). **2.** அலுப்புண்டாக்குதல் (வின்.); to become tedious, as a story.

[பூரை + இடு–,]

பூல் *pūl,* பெ. (n.) *பூலா* பார்க்க; see *pūlā* *'பூல்வேலென்றா'* (தொல்.எழுத்.375).

பூலத்தி *pūlatti,* பெ. (n.) பூமருது (மலை.); flowering murdah.

பூலா *pūlā,* பெ. (n.) **1.** செடிவகை; black berried feather foil. **2.** மரவகை; red. silk cotton tree.

[பூல் → பூலா. இனி புலவா → பூலா என்றுமாம்]

பூலாங்கிழங்கு *pūlāṅ-kiḻaṅgu,* பெ. (n.) **1.** செடிவகை; rong zedoary. **2.** கிழங்குவகை; root of long zedoary.

[பூலா + கிழங்கு]

பூலாச்செண்டு *pūlā-c-ceṇḍu,* பெ. (n.) **1.** பூச்செண்டு; ball of flowers. **2.** திருமணக்காலத்தில் நிகழும் நலுங்கில் மணமக்கள் நிகழ்த்தும் பூச்செண்டாட்டம்; play with balls of flower by the bride groom and bride during 'naluṅgu'.

தெ. பூலாசெண்டு

[பூவாலாகிய → பூலா + செண்டு]

பூலாசம் *pūlāšam,* பெ. (n.) *பூலா,*1. (தைலவ.தைல.134) பார்க்க; see *pūlā,* 1

[பூலா → பூலாசம்]

பூலாஞ்சி *pūlāñji,* பெ. (n.) *பூலா,* **1.** (தைலவ. தைல.) பார்க்க; see *pūlā-,*1

[பூலா → பூலாஞ்சி]

பூலாத்தி *pūlātti,* பெ. (n.) பூடுவகை; a, shrub.

[பூலா + அத்தி]

பூலான் *pūlāṉ,* பெ. (n.) **1.** கருப்பு பூலான்; black honey shrub. **2.** முள்ளில்லாவெண்பூலான்; white honey shrub.

பூலான்கொல்லை *pūlāṉkollai,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village of Tanjāvūr dt.

[பூலான் + கொல்லை]

பூலி[1]-த்தல் *pūli-,* 4 செ.கு.வி. (v.i.) உடம்பு பூரித்தல்; to swell. *'பூலித்தகங்குழைந்து பொன்னுசவாடாமோ'* (திருவாச.16,8).

[பூரித்தல் → பூலித்தல்]

பூலி[2] *pūli,* பெ. (n.) வெண்பூலி, வெள்ளை புல்லாந்தி; white honey shrub.

பூலியாத்தி *pūli-y-ātti,* பெ. (n.) ஒருவகை ஆத்தி; a shrub.

பூலை[1] *pūlai,* பெ. (n.) அணிற்பிள்ளை; squirrel.

பூலை[2] *pūlai,* பெ. (n.) கிச்சிலிக்கிழங்கு; long zedoary.

பூலைப்பூ *pūlai-p-pū,* பெ. (n.) பூலைச் செடியின் பூ; flower of sirupūlai.

[பூலை + பூ]

பூலோகம் *pū-lōgam,* பெ. (n.) மேலேழுலகத்துள் முதலாவது, (திவ.); the earth, first of mēl-ēḻ-ulagam, q.v.

[பூ + உலகம். உலகம் > லோகம்]

'பூவுலகு' பார்க்க

பூலோகவைகுண்டம் *pūlōga vaiguṇḍam,* பெ. (n.) திருவரங்கம் (இ.வ.); Srirangam, considered as vaikuntha on earth.

[பூ + லோக + வைகுண்டம். உலகம் → லோகம்]

Skt. vaikuṇṭha > த. வைகுண்டம்

பூவசியர் *pū-vaśiyar,* பெ. (n.) பூவைசியர் (யாழ்.அக.) பார்க்க; see *pūvaiśiyar.*

[பூவைசியர் → பூவசியர்]

Skt. vaiśya > த. வைசியர்

பூவட்டம் *pū-vaṭṭam,* பெ. (n.) **1.** பூவைச் சூழ்ந்துள்ள தோடு; corolla. **2.** பூவடிச்சிதல்; bract. **3.** விரலணிகளுள் ஒன்று (பரவ.); a kind of ring.

[பூ + வட்டம்]

பூவடிச்சிதலிலை *pūvaḍi-c-cidalilai,* பெ. (n.) கவட்டில் பூத்தோற்றுவிக்கும் உருத்திரிந்த இலை; bract ole.

[பூ + அடி + சிதல் + இலை]

பூவண்டம் *pū-v-aṇḍam,* பெ. (n.) வெங்காயம் (சங்.அக.); onion.

[பூ + அண்டம்]

Skt. aṇḍa > த. அண்டம்

பூவண்டமயிர் *pūvaṇḍa-mayir,* பெ. (n.) பூவண்டம் (சங்.அக.) பார்க்க; see *pūvaṇḍam.*

[பூவண்டம் + மயிர்]

பூவண்டர் *pū-v-aṇdar,* பெ. (n.) ஒருசார் இடையர் (நாஞ்.); a sub.sect of shepherd caste.

[பூ + அண்டர்]

பூவணி *pū-v-aṇi,* பெ. (n.) **1.** பூமாலை; garland. **2.** சதுக்கம்; junction of the roads.

[பூ + அணி]

பூவணிகன் *pū-vaṇigaṉ,* பெ. (n.) பூ விற்பவன்; a dealer in flowers, a florist.

க. பூவடிக, கூவ்வடிக, கூவடிக,

[பூ + வணிகன்]

பூவணை *pū-v-aṇai,* பெ. (n.) மலர்ப்பள்ளி; bed of flowers. *'வீதி மருங்கியன்றபூவணைப்பள்ளி"* (மணி.4,54).

[பூ+ அணை. அள் →அண் → அணை]

பூவத்தி[1] *pū-v-atti,* பெ. (n.) கும்பாதிரி; lac tree (L.)

பூவத்தி[2] *pū-v-atti,* பெ. (n.) வாணவகை (இ.வ.); a kind of firework.

[பூ+ வத்தி]

பூவத்தூர் *pūvattūr,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Tanjāvūr dt.

பூவந்தம் *pū-v-andam,* பெ. (n.) நிலவாகை (பதார்த்த.1059); Tinnevelly senna.

பூவந்தி *pū-v-andi,* பெ. (n.) **1.** மரவகை (மலை.); trijugate - leaved soap-nut. **2.** மரவகை; four leaved soap-nut. **3.** புன்கு, (மலை.); Indian beech.

ம. பூவந்தி

[பூ → பூவந்தி]

பூவம் *pūvam,* பெ. (n.) **1.** கும்பாதிரி; lac tree (L.) **2.** காட்டுப் பூவம்; longam **3.** *பூவந்தி* (வின்.) பார்க்க; see *pūvandi*

மறுவ. பூ, பூவு, பூவந்தி

ம. பூவம்,பூவந்தி; **பர்.**புய்; **குரு.**புத்ரா; **மால.**புச்ரெ

பூவம்பர் *pū-v-ambar,* பெ. (n.) ஒருவகை நறுமணப் பண்டம்; a kind of amber. *'புழுகு பொன்னம்பர் பூவம்பர் பொங்கவே'* (திருக்காளத். பு.7,55).

[பூ + அம்பர்]

பூவம்பழம்[1] *pū-v-ampaḻam,* பெ. (n.) கொஞ்சிப் பழம்; fruit of pūvam.

[பூவம் + பழம்]

பூவம்பழம்[2] *pū-v-ampaḻam,* பெ. (n.) *பூவன் கதலி* பார்க்க; see *pūvaṉ kadali.*

[பூவன்பழம் → பூவம்பழம்]

பூவம்பன் *pū-v-ambaṉ,* பெ. (n.) மன்மதன் (அக.நி.); Kāma, as having arrows of flowers.

[பூ + அம்பன். அம்பு → அம்பன் = அம்பினையுடையவன்]

பூவமளி *pū-v-amaḷi,* பெ. (n.) எண்களிப்புள் (அட்டபோகத்துள்) ஒன்றான மலர்ப்படுக்கை; bed of flowers one of aṣṭa-pōgam,q.v.

[பூ + அமளி]

பூவரசு *pū-v-arašu,* பெ. (n.) **1.** மரவகை; (பதார்த்த.379). portia tree. **2.** மரவகை; rhododendron.

ம. பூவரசன்; **க.** கூவரசு,

[பூ + அரசு. அரசு போன்று இலையையுடைய மரம். ஆயின் அரசு போலன்றிப் பூக்கும் தன்மை நோக்கிப் பூவரசு எனப்பட்டது.]

பூவரசுப்பால் *pū-v-arašu-p-pāl,* பெ. (n.) தழும்பு முதலிய தோல்நோய்களுக்குப் பயன்படுத்தும் பூவரசு மரத்தின் பால்; the yellow milk or juice of the fruit of portia tree, used for ring worm and other skin diseases.

[பூவரசு + பால்]

பூவரன் *pū-varaṉ,* பெ. (n.) அரசன் (வின்.); king.

[பூ + வரன்]

பூவராகம் *pū-varāgam,* பெ. (n.) திருமாலின் பன்றி தோற்றரவம் (அவதாரம்); boar incarnation of Tirumāl, as having the earth on its tusk.

[பூ + வராகம்]

பூவராகன் *pū-varāgaṉ,* பெ. (n.) பன்றி உருவம் கொண்ட காசுவகை; star pagoda, gold coin bearing the inpression of a boar.

[பூ + வராகன்]

பூவரும்பு *pū-v-arumbu,* பெ. (n.) பூமொக்கு; flower bud.

[பூ + அரும்பு. உரு → அரு → அரும்பு]

பூவல்[1] *pūval,* பெ. (n.) **1.** சிவப்பு (சூடா.); red colour. **2.** செம்மண்; red earth. *'இல்பூவலூட்டி'* (கலித்.114).

ம. பூவல்

[புள் → புழுங்கு. புழுங்குதல் = எரிதல், புகைத்தல் = எரிதல் (மு.தா.133) புள் → புழு → பூ → பூவல்]

பூவல்[2] *pūval,* பெ. (n) துரவு (யாழ்.அக.); large well.

[புல் → புல் → புழு. புள் → புழு→ பூ→ பூவல்]

பூவல்[3] *pūval,* பெ. (n.) பூத்திடுகை (அரு.நி.); flowering.

[பொல் → புல் → பூல் → பூ= பொலிவு, அழகு, மலர். பூத்தல்= பொலிதல், அழகாதல்,பூ மலர்தல் (மு.தா.135) (வ.வ.2,39). பூ → பூவல். 'அல்' தொ. பெ.ஈறு]

பூவல்லிகொய்தல் *pū-v-alli-koydal,* பெ. (n.) பூக்கொய்து ஆடும் மகளிர் விளையாட்டு வகை (திருவாச. 13. 1); gathering flowers, a pastime of girls.

[பூ + அல்லி + கொய்,]

பூவலம் *pū-valam,* பெ. (n.) நிலவுலகத்தை (பூமியை) வலஞ்சுற்றி வருகை; circumambu-

lation of the earth from left to right. *'பூவலஞ் செய்வதொன்று'* (திருவேங். சத. 6).

[பூ + வலம்]

பூவலயம் *pū-valayam,* பெ. (n.) மண்ணுலகம் (பிங்.); earth.

[பூ + வலயம். வல்→ வல. வலத்தல்= வலைத்தல்,சூழ்தல். வல்→ வலயம்= வட்டம், நிலவுலகத்தின் வளைவான பகுதி]

பூவழலை *pū-vaḻalai,* பெ. (n.) *பூநீறு* (யாழ்.அக.) பார்க்க; see *pūnīṟu.*

[பூ + வழலை]

பூவழிச்சீட்டு *pū-vaḻi-c-ciṭṭu,* பெ. (n.) *பூச்சீட்டு* (நாஞ்.) பார்க்க; see *pū-c-ciṭṭu.*

[பூ → பூவழி + சீட்டு. சுள் → (சுட்டு) → சிட்டு = சிறியது. சிட்டு → சீட்டு = ஓலை நறுக்கு]

பூவள்ளம் *pū-vaḷḷam,* பெ. (n.) மட்கிண்ணம் (தைலவ. பாயி. 49); earthen cup.

[பூ + வள்ளம்]

பூவளர்த்தி *pū-vaḷartti,* பெ. (n.) கண்ணிமை நோய்; a disease of eye lid.

பூவன்[1] *pūvaṉ,* பெ. (n.) 1. நான்முகன் (அயன்); Brahmā. *'புலமும் பூவனு நாற்றுமு நீ'* (பரிபா. 1, 46). 2. செவ்வாழை; red banana. 3. *பூவன் கதலி* பார்க்க; see *pūvaṉ kadali*

ம. பூவன்

[பூ → பூவன்]

பூவன்[2] *pūvaṉ,* பெ. (n.) சேவல்(சேரநா.); cock.

ம. பூவன்; க. புஞ்ச், புஞ்சு; தெ. புஞ்சு; து. பூஞ்செ; கோத. பூஞ்ன்; படஃசூஞ்ச

[பூ → பூவன் = தலையில் பூ(கொண்டை)யை யுடையது. 'அன்' உடைமை குறித்த ஈறு]

பூவன்கதலி *pūvaṉ-kadali,* பெ. (n.) வாழை வகை (இ.வ.); a kind of plantain.

[பூ → பூவன் + கதலி]

பூவன்பழம்[1] *pūvaṉ-paḻam,* பெ. (n.) *பூவன் கதலி* பார்க்க; see *pūvaṉ - kadali.*

[பூவன் + பழம்]

பூவன்பழம்[2] *pūvaṉ - paḻam,* பெ. (n.) நெய்க் கொட்டான் பழம்; soapnut tree.

பூவனூர் *pūvaṉūr,* பெ (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village Tañjāvūr dt.

பூவா—தல் *pūvā-,* 7 செ.கு.வி. (v.i.) மலர்தல்; to be produced (flowers), to blossom.

க. பூவாகு

[பூ + ஆ –,]

பூவாசிப்பட்டம் *pūvāśippaṭṭam,* பெ. (n.) கோடைக்காலத்திற் பயிரிடப்பெறும் புன்செய்ப் பயிர்; dry crop season starts from summer.

[பூவாசி + பட்டம்]

பூவாடங்கேழ்வரகு *pūvāḍaṅ kēḻvaragu,* பெ. (n.) ஒருவகை கேழ்வரகு; a kind of ragi.

[பூவாடம் + கேழ்வரகு. கேழ் → கேழ் வரகு = செந்நிற வரகுவகை]

பூவாடம்கேழ்வரகு *pūvāḍam - kēḻvaragu,* பெ. (n.) *பூவாடங்கேழ்வரகு* பார்க்க; see *pūvāḍaṅ kēḻvaragu.*

[பூவாடம் + கேழ்வரகு]

பூவாடைக்காதி *pū-v-āḍaikkādi,* பெ. (n.) *பூவாடைக்காரி* (இ.வ.) பார்க்க; see *pūvāḍai-k-kāri.*

[பூவாடைக்காரி → பூவாடைக்காதி]

பூவாடைக்காரி *pū-v-āḍaikkāri,* பெ. (n.) மாங்கலியத்துடன் இறந்து தெய்வமான மாது (பிரபஞ். பக். 540); a woman worshipped as a family goddess on her death during the life time of her husband.

[பூவாடம் + காரி]

பூவாடைப்பானை *pūvāḍai-p-pāṉai,* பெ. (n.) மங்கலப்பெண்டிர் வழிபாடன்று (சுமங்கலிப் பிரார்த்தனை யன்று) பூவாடைக் காரிக்குக் காணிக்கையாக்கும் சேலையை, அடுத்த மங்கலப்பெண்டிர் வழிபாடு (சுமங்கலிப் பிரார்த்தனை) வரை காத்து வைக்கும் பானை; a pot in which the cloth offered to Pūvādaikkāri at a sumaṅgali-p-pirārttaṉai is kept till the next sumaṅgali-p-pirārttaṉai.

[பூவாடை + பானை]

பூவாடையம்மன் *pū-v-āḍai-y-ammaṉ,* பெ. (n.) *பூவாடைக்காரி* (பிரபஞ். பக். 541) பார்க்க; see *pū-v-āḍai-k-kāri.*

[பூவாடை + அம்மன்]

பூவாணம் *pū-vāṇam,* பெ. (n.) வாணவகை (இ.வ.); a kind of rocket that throws out flower like sparks.

[பூ + வாணம்]

பூவாத்தாள் *pūvāttāḷ,* பெ. (n.) *பூநீறு* பார்க்க; see *pūniṟu.*

பூவாதிகாரம் *pūvādikāram,* பெ. (n.) சீனக்காரம் (சங்.அக.); alum.

பூவாதுகாய்க்குமரம் *pūvādu - kāy-k-ku maram,* பெ. (n.) *பூவாமற்காய்க்குமரம்* பார்க்க; see *pūvāmaṟ kāykku maram.*

[பூவாது + காய்க்கும் + மரம்]

பூவாமரம் *pūvāmaram,* பெ. (n.) கோளி; trees yielding without flowering.

[பூ + ஆ + மரம்]

பூவாமற்காய்க்குமரம் *pūvāmaṟ-kāykku maram,* பெ. (n.) பூவாதே காய்க்குமரம் (சூடா.); tree that bears internal flowers as apparently not flowering.

[பூவாமல் + காய்க்கும் + மரம்]

பூவால் *pū-vāl,* பெ. (n.) **1.** குஞ்சமுள்ள வால்; tufted tail of cattle. **2.** வால்நுனியில் வெள்ளை விழும் மாட்டுக் குற்ற வகை (மாட்டுவா. 18); a defect in cattle.

[பூ + வால்]

பூவாழை *pū-vāḻai,* பெ. (n.) **1.** வாழைவகை; guindy plantain (G.SM.D.i.i, 215). **2.** செடி வகை; Indian shot.

து. பூபாரெ

[பூ + வாழை]

பூவாளி[1] *pū-vāḷi,* பெ. (n.) **1.** காமன் (மன்மதன்) (பிங்.); Kāma as having arrows of flowers. **2.** காமனுடைய பூவம்பு; Kāmas arrow of flowers.

[பூ + வாளி]

பூவாளி[2] *pū-vāḷi,* பெ. (n.) செடிகளுக்குச் சிறிதுசிறிதாக நீர் ஊற்றப் பயன்படுத்தும் வாளி; water-can.

[பூ + வாளி]



பூவாளை *pū-vāḷai,* பெ. (n.) ஒருவகை மீன்; a kind of herring.

பூவி–த்தல் *pūvi-,* **11** செ.கு.வி. (v.i.) புகுவித்தல்; to cause to enter. *'போய்ப்போ ஒய் வெந்நரற் பூவியேல்'* (திவ். இயற். பெரிய திருவந். 40).

[பூகு → பூகுவி → பூவி. 'வி' பி.வி.ஈறு]

பூவிடுவான் *pū-viḍuvāṉ,* பெ. (n.) கோயிற்குப் பூத்தொண்டு செய்பவன்; one who supplies flowers for a temple. (T.A.S.i, **6.**)

[பூ + விடுவான். விடுபவன் → விடுவான்]

பூவிதழ் *pū-v-idaḻ,* பெ. (n.) மலரேடு (பிங்.); flower petal.

மறுவ. பூந்தோடு

து. பூதசெள்

[பூ + இதழ்]

பூவிந்து *pūvindu,* பெ. (n.) **1.** *பூவிந்து நாதம்* (சங்.அக.) பார்க்க; see *pūvindunādam.* **2.** வீரம் என்ற மருந்துச் சரக்கு; corrosive sublimate.

[பூ + விந்து]

பூவிந்துநாதம் *pūvindu-nādam,* பெ. (n.) காக்கைப்பொன் (அப்பிரகம்) (மூ.அ.); mica.

[பூவிந்து + நாதம்]

பூவிரணம் *pū-viraṇam,* பெ. (n.) ஆண்குறி மலரிலுள்ள புண் (சங்.அக.); sore on the glans penis.

[பூ + விரணம்]

Skt. vraṇa > **த.** விரணம்

பூவிரி *pū-viri,* பெ. (n.) தென்னம்பாளை (மாட்டுவா. 162); coconut spathe.

[பூ + விரி]

பூவில் *pū-vil,* பெ. (n.) காமனுடைய (மன்மதனது) மலர்வில் (பிங்.); flower-bow of Kāmā.

[பூ + வில்]

பூவிலாப்பாலை *pūvilā-p-pālai,* பெ. (n.) ஒரு விதப்பாலை; stinking swallow wort.

[பூவிலா + பாலை]

பூவிலி *pū-vili,* பெ. (n.) பிறப்பற்றவ—ன்—ள்; one who is birth less. *'பூவிலி பூவிதழ்'* (திருமந். 1409).

[பூ + இலி. இல் → இலி]

பூவிலை *pū-vilai,* பெ. (n.) விலை மாதர் பெறும் அற்றைப் பரிசம்; day's hire of a prostitute. *'பூவிலை யீத்தவன் பொன்றின னென்று'* (மணிமே.24, 19).

[பூ + விலை]

பூவிழுதல் *pū-viḻudal,* பெ. (n.) **1.** சொரசொரப்பு நீங்குகை (வின்.); removal of rough ness, as from the edge of a blade. **2.** கண்ணின் கருவிழியில் வெள்ளை விழுகை; formation of cataract in the eye. *'கண்ணிற் பூவிழுந்தது'.*

[பூ + விழுதல்]

பூவிளம் *pūviḷam,* பெ. (n.) ஒரு செய் நஞ்சு (கற்பாஷாணம்) (மூ.அ.); a mineral poison.

பூவிளைகை *pū-viḷaigai,* பெ. (n.) நன்மை (போகம்) விளைகை; fruitfulness, as of a crop; produce of a season.

[பூ + விளைகை. விளை → விளைகை]

பூவிற்கண்ணி *pūviṟkaṇṇi,* பெ. (n.) அத்தி; fig tree.

பூவிற்கொம்பு *pūviṟkombu,* பெ. (n.) *பூவின்கிழத்தி* பார்க்க; see *pūviṉkiḻatti.* பூவிற்கொம்பும் புகழும்படி (மேருந்.47).

[பூ + இன் + கொம்பு]

பூவின்கிழத்தி *pūviṉ - kiḻatti,* பெ. (n.) திருமகள் (இலக்குமி.) (பிங்.); Laksmi, as seated on a lotus. *'சேராளே பூவின் கிழத்தி புலந்து'* (நாலடி, 252).

[பூவின் + கிழத்தி]

பூவின்சருக்கரை *pūviṉ - šarukkarai,* பெ. (n.) மலரிலிருந்து எடுக்கும் சருக்கரை; sugar extracted from flowers.

[பூ + இன் + சருக்கரை]

பூவினன் *pūviṉaṉ,* பெ. (n.) நான்முகன் (பிரமன், அயன்); Brahma. *'பூவினன் குலையம் பொருட்கு மாலுற'* (கந்தபு. கடவுள்வா. 14).

[பூ → பூவினன்]

பூவு *pūvu,* பெ. (n.) **1.** *பூவம்*[1] பார்க்க, 1; see *pūvam*[1] -,1 **2.** கதம்பம்; a species of roudeletia wort.

பூவுக்கிடு—தல் *pūvukkiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) காதலன் காதலிக்குப் பரிசங் கொடுத்தல்; to make a present to ones beloved. *'பூவுக் கிட்டோம் போலும்'* (ஈடு, 8, 2, 6.)

[பூவுக்கு + இடு—,]

பூவுசிலை *pūvušilai,* பெ. (n.) ஒரு வாகை; sirissa tree.

பூவுடம்பு *pūvuḍambu,* பெ. (n.) மென்மையான உடம்பு; soft body.

[பூ + உடம்பு]

பூவுணா *pūvuṇā,* பெ. (n.) காட்டிலுப்பை; forest bassia.

பூவுதிர்—தல் *pū-v-udiri-,* 4 செ.கு.வி. (v.i.) பூக்கழிதல்; to deflorate, to shed flower.

[பூ + உதிர்–,]

பூவுதிர்வு *pū-v-udirvu,* பெ. (n.) மலர்கள் உதிர்கை; defloration.

[பூ + உதிர்வு]

பூவுமாமரம் *pūvumāmaram,* பெ. (n.) *பூவந்தி மரம்* பார்க்க; see *pūvandimaram.*

பூவுயிர்—த்தல் *pū-v-uyir-,* 4 செ.கு.வி. (v.i.) மலர்தல்; to blossom. *'பூவுயிர்த்தன்ன... உண்கண்'* (கலித். 142).

[பூ + உயிர்–,]

பூவுலகம் *pū-v-ulagam,* பெ. (n.) *பூவுலகு* பார்க்க; see *pūvulagu.*

[பூ + உலகம்]

பூவுலகு *pū-v-ulagu,* பெ. (n.) நிலவுலகம்; the earth. *'படர் மேதினியானது பூவுல கெங்கணுமே'* (கம்பரா. அதிகா. 75).

[பூ + உலகு. உலகம் → உலகு]

பூவுள் *pūvuḷ,* பெ. (n.) பூவின் உட்பக்கம்; inside of a flower, corolla.

[பூ + உள்]

பூவெடு—த்தல் *pū-v-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. கோயிற் பூசைக்கு மலரெடுத்தல்; to gather flowers for a temple. 2. கண்ணில் விழுந்த பூவை நீக்குதல்; to remove cataract from the eye.

[பூ + எடு–,]

பூவெடுத்தகண் *pū-v-eḍutta kaṇ,* பெ. (n.) பூவுரித்தகண்; anomalous state of refraction caused by the absence of the crystalline,lens, as after an operation for cataract.

[பூ + எடுத்த + கண்]

பூவெண்ணெய் *pū-v-eṇṇey,* பெ. (n.) 1. கொடிவகை; aduloil plant. 2. மருந் தெண்ணெய் வகை (யாழ்.அக.); a kind of medicinal oil. 3. நறும் எண்ணெய்வகை (வின்.); a scented oil.

[பூ + எண்ணெய். எள் + நெய்—எண்ணெய்]

பூவெண்புள்ளி *pū-veṇpuḷḷi,* பெ. (n.) ஒரு வகைக் கண்ணோய்; opacity of the lens, an eye disease.

[பூ + வெண் + புள்ளி]

பூவெள்ளை *pū-veḷḷai,* பெ. (n.) அரைக்கால் உரூபாவுக்கு வழங்கும் குழூஉக்குறி; mercantile term for 1/8 rupee.

பூவெறி *pūveṟi,* பெ. (n.) பூவின் நறுமணம்; fragrance of flower.

[பூ + வெறி]

பூவேர் *pū-vēr,* பெ. (n.) *பூநாகம்* (தைலவ. தைல. 73). பார்க்க; see *pūnāgam.*

[பூ + வேர்]

பூவேலை *pū-vēlai,* பெ. (n.) பூப்போன்ற சித்திர வேலை; floral design.

[பூ + வேலை]

பூவேலைப்பாடு *pūvēlai-p-pāḍu,* பெ. (n.) *பூத்தொழில்* பார்க்க; see *pūttoḻil.*

[பூ + வேலைப்பாடு. படு → பாடு]

பூவேளைக்காரார் *pū-vēḷai-k-kārar,* பெ. (n.) அரசர்க்குரிய காலங்களில் பூவிடாவிடில் தம்மைத் தாமே குத்திக் கொண்டு மடியும் வீரர் தொகுதியினர்; devoted servants who have taken a vow to stab themselves to death if their king is not supplied with flowers and garlands at the specified times. *'பூவேளைக் காரரைப் போலே முடிவா றொருவர் இறே'* (ஈடு. 5, 1.9).

[பூ + வேளைக்காரார்]

பூவை[1] *pūvai,* பெ. (n.) 1. காயா; oblong cordate - leaved bilberry. *'பூவைப் புதுமலரொக்கு நிறம்'* (நான்மணி. 1). 2. நாகணவாய்ப் புள்; bush myna *'புரிவொடு நாவினாற் பூவை புணர்த்து'* (பு. வெ. 12, வென்றிப். 12). 3. குயில் (அக.நி.); koel. 4. கிளி; parrot. 5. கீரிப்புழு; an intestinal worm, thread worm.

[பூ → பூவை]

பூவை[2] *pūvai,* பெ. (n.) பெண்; lady, woman. *'போதல் காரிய மென்றனள் பூவை'* (கம்பரா. சூளா. 26).

மறுவ. காரிகை

[பூ → பூவை. பூவைப்போன்ற பெண்]

பூவை[3] *pūvai,* பெ. (n.) காயாச் செடிவகை; a variety of kāyā. *'பூவை யாவது காயாவின் அவாந்தரப் பேதமானாப் போலே'* (திவ். பெரியாழ். 3, 4, 9 வ்யா. பக். 620).

பூவைசியர் *pū-vaiśiyar,* பெ. (n.) வேளாளர் (பிங்.); Vēlalās as cultivators.

[பூ + வைசியர்]

Skt. vaišya > த. வைசியர்

பூவைநிலை *pūvai-nilai,* பெ. (n.) 1. காயாம்பூவை மாயவன் நிறத்தோடு உவமித்துப் புகழும் புறத்துறை (பு.வெ.9,4); (purap.) theme in which the bilberry flower is praised as resembling the colour of Viṣṇu. 2. அரசனைத் தேவரோடு ஒப்பக்கூறும் புறத்துறை (புறநா.36) (தொல்.பொ.60); (purap.) theme in which a king is likened to a god.

[பூவை + நிலை]

பூவைவண்ணன் *pūvai-vaṇṇaṉ,* பெ. (n.) திருமால் (பிங்.) (திவ்.பெரியதி. 2,2,8); Tirumāl as having the colour of bilberry flower.

[பூவை + வண்ணன்]

பூவொதுங்கு—தல் *pū-v-oduṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) கருப்பையின் வாசல் ஒதுங்கிப் போதல்; to be displaced of cervix.

[பூ + ஒதுங்கு—,]

பூவொல்லி *pū-v-olli,* பெ. (n.) உள்ளீடற்ற தேங்காய் வகை (யாழ்.அக.); a spoilt coconut with the kernal empty.

[பூ + ஒல்லி]

பூவோடு *pūvōḍu,* பெ. (n.) தொட்டி செய்நஞ்சு (பாடாணம்) (யாழ்.அக.); a mineral poison.

பூழ்[1] *pūḻ,* பெ. (n.) **1.** காடைவகை (பிங்.); quail *'அளித்து நீ பண்ணிய பூழெல்லாமின்னும் விளித்து'* (கலித்.95). **2.** கானாங்கோழி; jungle fowl. *'கவுதாரி பூழ்........பறந்து'* (அரிச்.பு.வஞ்ச.39).

க. புர்லி, புரலி, புருலி; கெ. பூரேடு; கோத. மொணாம்பிரி.

பூழ்[2] *pūḻ,* பெ. (n.) புழை (இலக்.அக.); hole.

[புழு → புழல் = உட்டுளை. புழு→புழை = துளை, குழாய். புழை → பூல் = துளை.புழை → பூழை = துளை (வே.க.3,106–108) பூழை → பூழ்]

பூழ்[3] *pūḻ,* பெ. (n.) பூழான் பார்க்க; see *pūḻāṉ.*

பூழ்க்கரம் *pūḻkkaram,* பெ. (n.) வெண் கோட்டம். (மலை.); Arabian costum.

பூழ்க்கை *pūḻ-k-kai,* பெ. (n.) யானை; elephant, as having tubular trunk. *'பூழ்க்கை முகன் மனுவை நனியெண்ணின்'* (விநாயகபு.14,9).

மறுவ. ஆம்பல், உம்பல், உவா, எறும்பி, ஒங்கல், கரி, களவன், கறையடி, குஞ்சரம், கைம்மலை, கைம்மா, தூங்கல், தும்பி, தோல், நால்வாய், பகடு, புகர்முகம், பெருமா, பொங்கடி, மதமா,மறமலி, மாதிரம், மொய், யானை, வழுவை, வாரணம், வேழம் (குமி.வ.101)

[புழு → புழை = துளை. புழை → புழைக்கை = தும்பிக்கை, யானை. புழைக்கை → பூழ்க்கை (வே.க.3,108)]

பூழ்தி[1] *pūḻdi,* பெ. (n.) (பிங்.) **1.** இறைச்சி; meat. **2.** முடைநாற்றம்; stench of putrid flesh.

பூழ்தி[2] *pūḻdi,* பெ. (n.) **1.** புழுதி; dust. *'கேழல் பூழ்தி கிளைக்க'* (தேவா.1152,5.) **2.** கொடுமை (பிங்.); cruelty, oppression.

[புள் → (பொள்) → பொடி. பொடித்தல் = தூளாக்குதல். புள் → பூள்→ (பூழ்) → பூழி = தூள், புழுதி. பூழ் → பூழ்தி. (மு.தா.127)]

பூழளம் *pūḻaḷam,* பெ. (n.) நெய்த்தோலி; anchovy. (M.M.710).

பூழான் *pūḻāṉ,* பெ. (n.) **1.** கவுதாரி (திவா.); Indian partridge. **2.** கானாங்கோழி (நாமதீப. 248); jungle-fowl. **3.** சம்பங்கோழி; turkey.

[பூழ் → பூழான்]

பூழி *pūḻi,* பெ. (n.) **1.** தூள்; powder. *'வானம்பூழிபடக்கருக்கி'* (கல்லா.25,28.) **2.** புழுதி; dust *'பூழிபூத்த புழற்காளாம்பீ'* (சிறுபாண்.134). **3.** திருநீறு (விபூதி); sacred ashes. *'பூழி புனைந்தவர்'* (கந்தபு.யுத்.வரவு.13.) **4.** பூழிநாடு (நன்.273). பார்க்க; see *pūḻināḍu.* **5.** குழைசேறு; soft mire or mud. **6.** சேற்றிற்குமிழி; bubble in muddy water.

ம. பூழி; க.புளில்; து.பொய்யை;

[புள் →பொள் → பொடி. புள்→பூள் (பூழ்) → பூழி (மு.தா.127)]

பூழிநாடு *pūḻi-nāḍu*, பெ. (n.) கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் ஒன்று; the region where a vulgar dialect of Tamil was spoken, one of 12 koḍun-tamilnāḍu, q.v.

[பூழி + நாடு]

பூழியசணி *pūḻiyaśaṇi*, பெ. (n.) பூவணி; a kind of gourd.

பூழியபலம் *pūḻiya-palam*, பெ. (n.) பூசணி (மலை.); pumpkin.

[பூழி + பலம்]

பூழியன் *pūḻiyaṉ*, பெ. (n.) 1. (பூழிநாட்டுக்குத் தலைவன்) சேரன் (திவா.); Chēra king, as lord of pūḻi-nāḍu. 2. பாண்டியன்; Paṇḍya king. *'பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன்'* (சேக்கி.பு.பாயி.6).

[பூழி → பூழியன்]

பூழியான் *pūḻiyāṉ*, பெ. (n.) 1. சிவபெருமான்; Šivaṉ, as wearing sacred ashes. *'பூழியான் பூணே'* (தமிழ்நா.78). 2.*'புழுதியினிடத்துள்ளவன்'* one who lies in the dust. *தலைமகன் பூழியால்'* (கம்பரா.முதற்.83).

[புள் → பொள் → பொடி. புள்→ பூள் → (பூழ்). → பூழி (மு.தா.127) = பொடியாகவுள்ள புழுதி, தீறுநீறு. பூழி → பூழியான். புழுதி (திருநீறு) அணிந்தவன்]

பூழில் *pūḻil*, பெ. (n.) 1. அகில்; eaglewood. *'சாந்தம் பூழிலொடு பொங்குநுரை சுமந்து'* (பதிற்றுப்.87,2). 2. நிலம் (சூடா.); earth.

[புல் → பொல் → பொலி. பொலிதல் = பெருகுதல், மிகுதல், சிறத்தல். பொழ்→ பொழில் = உலகம், நாடு, நாட்டின் கூறு(வே.க. 3,79.80). பொழில்→ புழில் → பூழில்]

பூழை *pūḻai*, பெ. (n.) 1. சிறுவாயில்; small door with in a larger one, sally port, wicket gate. *'பூழைத்தலை நுழைந்து'* (தேவா.845,1). 2. மலைக்கணவாய் (பிங்.); mountain pass. 3. புழை; crevice, opening. *'புகையும் புகற்கரிய பூழை நுழைந்து'* (நாலடி, 282).

[புழு → புழல் = உட்டுளை. புழு →புழை = துளை. புழை→பூழை (வே.க.3,106–108)]

பூள் *pūḷ*, பெ. (n.) ஆண்குறி; membrum virile.

[புல்லுதல் = பொருந்துதல். புல் = புணர்ச்சி. புல்→புள்→புண்→புணர்→புணர்ச்சி (வே.க.3,62–64) புல் → புள் →பூள். கலவியிற் பொருந்தும் உறுப்பு]

பூளபாம்பு *pūḷa pāmbu*, பெ. (n.) ஒருவகைப் பாம்பு; a kind of snake.

[பூளம்+பாம்பு]

பூளம் *pūḷam*, பெ. (n.) பூவரசு (மலை.); poria tree.

பூளை[1] *pūḷai*, பெ. (n.) 1. இலவு; red silk cotton *'பூளை மெல்லணைமேல்'* (சீவக.1628). 2. செடிவகை; wool plant. 3. செடிவகை; javanese wool plant. *'பூளைப் பூவினன்ன....சொன்றி'* (பெரும்பாண்.192–3). 4. வெற்றிப்பூ (பிங்.); flower worn as a symbol of victory.

ம. பூல

பூளை[2] *pūḷai,* பெ. (n.) பீளை பார்க்க; see pīḷai *'கண்களில் வெண்பூளை சுரப்ப'* (தாயு.எந்நாட். மாதரைப்.5).

[புல் → (பில்)→ பேல். புள்→புழுக்கை → பிழுக்கை. (புள்)→பிள்→(பிய்) → பீ. பிள் → பீள் → பீளை→ பூளை = கண்மலம் (மு.தா.262)]

பூளைசூடி *pūḷai-šūḍi,* பெ. (n.) பூளை யணிந்தவன், சிவபெருமான்; šivaṉ as wearing pūḷai. *'பூளை சூடி தன்னகை யினிலெயில் பொடித்தனபோல்'* (கம்பரா. அகலிகை.39).

[பூளை + சூடி. சூடு → சூடி. 'இ' வினை முதலீறு]

பூளைப்பஞ்சு *pūḷai-p-pañju,* பெ. (n.) பஞ்சுவகை (வின்.); silk-cotton.

[பூளை + பஞ்சு]

பூளைப்பூ *pūḷai-p-pū,* பெ. (n.) பூளைப்பஞ்சு பார்க்க; see pūḷai-p-pañju *'பூளைப்பூவாம் பிறவி'* (பெரியபு.திருநாளைப் போ.22).

[பூளை + பூ]

பூற்சாதம் *pūṟcādam,* பெ. (n.) பொடுதலை (நாமதீப.323); a plant.

பூறு *pūṟu,* பெ. (n.) பிட்டம் (இ.வ.); anus.

ம. பூரம்; **தெ.** பூட; **து.** பூடி; **குட.** பூரீ (பெண் பிறப்புறுப்பு)

[பீறு → பூறு]

பூன்சம்பா *pūṉšambā,* பெ. (n.) நெல்வகை; a variety of paddy in Trichirappaḷḷi dt.

பூனதம் *pūṉadam,* பெ. (n.) பொன்: gold. *'குலிசக்குழுச்சுலவு பூனதக்கிம்புரி'* (திருப்போ.சந்.பிள்ளைத்.சப்பா.5).

பூனை[1] *pūṉai,* பெ. (n.) புலால் உண்ணுவதும் நான்குகால்களையுடையதுமான சிறிய வீட்டு விலங்கு; small domesticated carnivorous quadruped, cat. இந்தப் பூனையும் பால் குடிக்குமா? (பழ.)

மறுவ. பூசை, கொத்தி, விடரகன்

[பூசு→பூசை → பூனை(தமி.வ.1,28)]

பூனை என்பது பூசை என்னும் சொல்லின் திரிபே. பூசுதல் = கழுவுதல், சிலைகழுவுதல். நெல்லை மாவட்டத்தின் ஒருபகுதியில், *'முகம்பூசுதல்'* என்பது இன்றும் உலக வழக்காயிருக்கின்றது. *"பூசிக்கொளினும் இரும்பின்கண் மாசொட்டும்"* (நான்மணி.99).

பூனை அடிக்கடி தன் எச்சிலை முன்னங்காலால் தொட்டு முகத்தைப் பூசிக்கொள்வதால், அது பூசையெனப் பெயர் பெற்றது. *"வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றலும்"* (தொல்.மரபு.69). வடமொழியிலுள்ள மார்ஜால என்னும் பூனைப் பெயரும் இக்காரணம் பற்றியதே. மெழுகு– **வ.**ம்ருஜ்(mrj) = பூசு, கழுவு.ம்ருஜ்–மார்ஜ்–மார்ஜாரா–மார்ஜால.

பூனையைப் பூசுபூசு என்றழைப்பது பெண்டிர் வழக்கம். பூசை→பூச்சை (நாஞ்சில்நாட்டு வழக்கு). பூச்சை→**ம.** பூச்ச. பூசை→பூனை. ச–ன, போலித்திரிபு. ஒநோ: பிசை–பினை.

பூனைக்கண் = பூனைக்கண்போன்ற நிறமுள்ளஒளிக்கல்(வைடூரியம்). ஆங்கிலத்திலும் இது cat's eye என்று பெயர் பெற்றிருத்தலை நோக்குக. வைடூரியம் என்னும் வடசொல்லும் இக்காரணம் பற்றியதே.

பூனை→பூஞை.ஒ.நோ:அன்னை → அஞ்ஞை. இனி, பூசை→பூஞை என்றலுமாம். ஒ.நோ: குடிசை→குடிஞை. *"சிலம்பி சிச்சிலி பூஞை கிருமி"* (தத்துவப்.19).

(The Oxford English Dictionary and Klein's Comp.Ety.Dy.of the E.Language).

E. puss, pus, pusse. (a word common to several Teutonic languages. usually as a call-name for the cat). Du. poes, LG. puus, puuskatte, puus-man, Sw. dial. pus, katte pus, Norw.puse, puus, Lith. puz.puiz, Ir. and Gael.fus, Alb.piso, Ruman pisica.

Puss in the corner.' a game of children; Pussy-wants-a-corner, an American name of the game.

E.pussy, a pet name for a cat. Y dim. suffix.

pussy-cat, a nursery word for a cat.

pussyfoot, to tread stealthily like a cat.

pussy-willow, the American glaucous willow, in reference to its silky catkins.

Puss-Etymology unknown என்பது O.E.D.; Imitative of the spitting of a cat என்பது K.C.E.D.E.L.,

பூசை அல்லது பூனை யென்பது வீட்டுப் பூனையையே. காட்டுப் பூனை வெருகு எனப்படும். வெருவத்தக்க தோற்றமும் வலிமையும் உடையது வெருகு. வெருவுதல்– அஞ்சுதல். வெருகு வீட்டில் வளர்க்கப்பட்ட பின் பூசையெனப் பெயர் பெற்றது. "*வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றலும்*" என்று தொல்காப்பியம் கூறுதல் காண்க. வீட்டுப்புனை இலத்தீனில் felis domestica எனப்படும்.

feline (adj.) = cat like. felid = one of the Felidoe or cat-tribe. (தலை.த.178–180)

பூனை வகை

1. காட்டுப்பூனை
2. சிவிங்கிப் பூனை
3. புலிப் பூனை
4. புனுகுப் பூனை
5. மீன் கொல்லிப்பூனை
6. வீட்டுப் பூனை

பூனை[2] *pūṉai,* பெ. (n.) **1.** இலவம்பிசின்; the gum of silk cotton tree. **2.** காஞ்சொறி; a kind of nettle. **3.** சிறுகாஞ்சொறி; tragia cannabina.

பூனைக்கடி *pūṉai-k-kaḍi,* பெ. (n.) பூனைக்கடியின் நஞ்சு (விஷம்); bite of a cat.

[பூனை + கடி]

பூனைக்கண் *pūṉai-k-kaṇ,* பெ. (n.) **1.** பூனையின் கண்போன்ற கண்; cat-like eye. **2.** *பூனைக்கண் வைடூரியம்* பார்க்க; see *pūṉai-k-kaṇ - vaiḍūriyam.* **3.** குங்கிலியம்; masticha.

[பூனை + கண்]

பூனைக்கண்கல் *pūṉai-k-kaṇ-kal,* பெ. (n.) *பூனைக்கண்* வைடூரியம் (இ.வ.) பார்க்க; see *pūṉai-k-kaṇvaiḍūriyam.*

[பூனைக்கண் + கல்]

பூனைக்கண்குங்கிலியம் *pūṉai-k-kaṇkuṅgiliyam,* பெ. (n.) செடிவகை (M.M.); mastric-, tree, evergreen shrub.

[பூனைக்கண் +குங்கிலியம்]

பூனைக்கண்கெளிறு *pūṉai-k-kaṇ-keḷiṟu,* பெ. (n.) மீன்வகை; a kind of fish. '*ஒடும் பூனைக்கண்கெளிறு*' (பறாளை.பள்ளு.16).

[பூனைக்கண் + கெளிறு]

பூனைக்கண்ணன் *pūṉai-k-kaṇṇaṉ*, பெ. (n.) பூனைக்கண் போன்ற கண்ணை யுடையவன்; person having cat-like eyes.

[பூனைக்கண் → பூனைக்கண்ணன்]

பூனைக்கண்ணி *pūṉai-k-kaṇṇi*, பெ. (n.) ஒரு வகை மீன்; a kind of fish.

[பூனை+கண்ணி]

பூனைக்கண்புருடராகம் *pūṉai-k-kaṇ-puruḍarāgam*, பெ. (n.) ***பூனைக்கண் வைடூரியம்*** (யாழ்.அக.) பார்க்க; see *pūṉai-k-kaṇ-vaiḍūriyam*.

[பூனைக்கண் + புருடராகம்]

Skt. puṣparāga > **த.** புருடராகம்

பூனைக்கண்வைடூரியம் *pūṉai-k-kaṇ-vaiḍūriyam*, பெ. (n.) ஒளிக்கல்(வைடூரிய) வகை; cat's eye.

[பூனைக்கண் + வைடூரியம்]

Skt. vaiḍūrya > **த.** வைடூரியம்

பூனைக்கழற்சி *pūṉai-k-kaḻaṟci*, பெ. (n.) கொடிவகை (யாழ்.அக.); prickly brasiletto.

[பூனை+ கழற்சி]

பூனைக்காச்சி *pūṉai-k-kācci*, பெ. (n.) ஒருகொடி; a twiner like lablab

[பூனை+ காச்சி]

இக்காயின் மேல்தோல் பூனையின் மேல்தோல்போல் மயிருடையதாய் இருக்கும் கொடியிலைகள் அவரைக் கொடி போன் றிருக்கும். காய் சுணையுள்ளது. காயி னுள்ளிருக்கும் பருப்பு மாவு சத்துள்ளது. இம்மாவினை ஏழை எளிய மக்கள் பிட்டு முதலியசிற்றுணவாகச் செய்துண்பார்கள். இச் செடி கோடிக்கரைக் காட்டில் மிகுதியாயுள்ளது.

பூனைக்காஞ்சி *pūṉaikkāñji*, பெ. (n.) பூனைக்காஞ்சொறி (பச்.மூ.); small climbing nettle.

[பூனைக்காஞ்சொறி → பூனைக்காஞ்சி]

பூனைக்காஞ்சொறி *pūṉai-k-kāñcoṟi*, பெ. (n.) சிறுகாஞ்சொறி (மூ.அக.); small climbing nettle.

மறுவ.பூனைக்காலி

[பூனை + காஞ்சொறி]

பூனைக்காட்டஞ்சிலந்தி *pūṉai-k-kāṭṭañ-cilandi*, பெ. (n.) ஒரு வகைச் சிலந்தி; a insect.

[பூனைக்காட்ட + சிலந்தி]

பூனைக்காய்ச்சி *pūṉai-k-kāycci*, பெ. (n.)
1. தீய்ந்த பயிர்; empty or blasted ear or crop.
2. கொடிவகை (இ.வ.); climber.

[பூனை + காய்ச்சி]

பூனைக்காய்ச்சிமணி *pūṉai-k-kāyccimaṇi*, பெ. (n.) குறவர் அணியும் அணிவகை (இ.வ.); a bead used in ornaments by Kuṟavās.

[பூனைக்காய்ச்சி → மணி. மண் → மண்ணி → மணி]

பூனைக்காய்ஞ்சொறி *pūṉai-k-kāyñcoṟi*, பெ. (n.) பூனைக்காஞ்சொறி பார்க்க; see pūṉai-k-kañcoṟi.

[பூனைக்காய் + சொறி]

பூனைக்காய்வேளை *pūṉai-k-kāy-vēḷai,* பெ. (n.) ஒருவகைக் காய்வேளை செடிவகை(யாழ்.அக.); shaggy wild indigo.

[பூனை + காய்வேளை]

பூனைக்காலி *pūṉai-k-kāli,* பெ. (n.) 1. கொடிவகை (பாதர்த்த.794); cow-hage 2. சிமிக்கிப்பூ (சங்.அக.); mountain passion flower. 3. *பூனைக்காய்வேளை* (மூ.அ.) பார்க்க; see *pūṉai-k-kāyvēḷai.*

[பூனை + காலி]

பூனைக்கீரை *pūṉai-k-kīrai,* பெ. (n.) 1. புலிச்சுவடி (வின்.); tiger's foot bind weed. 2. *பூனைக்காய் வேளை* (மூ.அ.) பார்க்க; see *pūṉai-k-kāyvēḷai.*

[பூனை + கீரை]

பூனைக்குட்டி *pūṉai-k-kuṭṭi,* பெ. (n.) பூனையின் குட்டி; kitten. பூனைக்குட்டியைக் கட்டிக்கொண்டு சகுனம் பார்க்கிறதுபோல (பழ.).

[பூனை + குட்டி]

பூனைக்குடல் *pūṉai-k-kuḍal,* பெ. (n.) 1. பூனையின் குடல்; intestines of cat. 2. ஒருவகை நரம்புக் கயிறு; cat jut.

[பூனை + குடல். குழல்→குடல்]

பூனைக்குத்திக்காடு *pūṉai-k-kutti-k-kāḍu,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; village in Tañjāvūr dt.

[பூனை + குத்தி + காடு]

பூனைக்கெளித்தி *pūṉai-k-keḷitti,* பெ. (n.) ஒரு மீன்வகை; a kind of fish.

[பூனை + கெளித்தி]

பூனைக்கெளிறு *pūṉai-k-keḷiṟu,* பெ. (n.) பதினான்கு விரல(அங்குல)நீளமும் வெண்ணிறமும் கொண்ட கடல் மீன்வகை; a sea-fish, silvery, attaining 14 in.in length.

[பூனை + கெளிறு]

பூனைச்சம்பந்தம் *pūṉai-c-cambandam,* பெ. (n.) *பூனைத்தொடர்பு* (வின்.) பார்க்க; see *pūṉai-t-toḍarbu.*

[பூனை + சம்பந்தம்]

Skt. sam-bandha > **த.** சம்பந்தம்

பூனைச்செவி *pūṉai-c-cevi,* பெ. (n.) குறைக்காது; deformed earlike of a cat.

[பூனை + செவி]

பூனைத்திசை *pūṉai-t-tišai* , பெ. (n.) தென்கிழக்கு (வின்.); south east.

[பூனை + திசை. திக்கு → திகை → திசை]

பூனைத்தேக்கு *pūṉai-t-tēkku,* பெ. (n.) தேக்குமரவகை; a tree, betavian teak.

[பூனை + தேக்கு]

பூனைத்தொடர்பு *pūṉai-t-toḍarbu,* பெ. (n.) பூனை தன் குட்டியோடு கொண்டிருக்கும் தொடர்பு போன்றது (மாத்ச்சார சோர நியாயம்); (log.) illustration of the cat taking care of its kitten without any effort on their part.

[பூனை + தொடர்பு]

பூனைதொழுஞ்சாறு *pūṉaitoḻuñcāṟu*, பெ. (n.) குப்பை மேனிச்சாறு; juice of rubbish plant.

[பூனைத்தொழு + சாறு]

பூனைப்பகை *pūṉai-p-pagai*, பெ. (n.) குப்பைமேனி; rubbish plant.

பூனைப்பகைவன் *pūṉai-p-pagaivaṉ*, பெ. (n.) எலி; rat.

[பூனை + பகைவன்]

பூனைப்பகைவன்முள் *pūṉai-p-pagaivaṉmuḷ*, பெ. (n.) எலிமுள்; bone of rat.

[பூனைப்பகைவன் + முள்]

பூனைப்பதித்தான் *pūṉai-p-padittāṉ*, பெ. (n.) *பூனைக்காலி* பார்க்க; see *pūṉai-k-kāli*.

பூனைப்பருந்து *pūṉai-p-parundu*, பெ. (n.) பறவை வகை; pale harrier.

[பூனை + பருந்து]

பூனைப்பிடி *puṉai-p-piḍi*, பெ. (n.) *பூனைத்தொடர்பு* பார்க்க (இ.வ.); see *pūṉai-t-toḍarbu*.

[பூனை + பிடி]

பூனைப்பிடுக்கவரை *pūṉai-p-piḍukkavarai*, பெ. (n.) *பூனைக்காலி*,1, பார்க்க; see *pūṉai-k-kāli-*,1 (A).

[பூனைப்பிடுக்கு + அவரை]

பூனைப்பிடுக்கன் *pūṉai-p-piḍukkaṉ*, பெ. (n.) 1. *பூனைக்காலி*,1 (வின்.) பார்க்க; see *pūṉai-k-kāli-*,1. 2. காட்டுக்கடலி; round leaved Indian linden (L.).

[பூனைப்பிடுக்கு → பூனைப்பிடுக்கன்]

பூனைப்பிடுக்கு *pūṉai-p-piḍukku*, பெ. (n.) *பூனைக்காலி* 1. பார்க்க; see *pūṉai-k-kāli.-1*

[பூனை + பிடுக்கு]

பூனைப்பிள்ளை *pūṉai-p.piḷḷai*, பெ. (n.) *பூனை* பார்க்க; see *pūṉai*.

[பூனை + பிள்ளை]

பிள்ளையில்லாதவர்கள், சில உயிரினங்களிற் சிலவற்றைப் பிள்ளைபோல் வீட்டில் வைத்து வளர்ப்பது பண்டை வழக்கம். அதனால், *"இருக்கும் பிள்ளை மூன்று, ஓடும் பிள்ளை மூன்று"* என்று ஒரு பழமொழி யெழுந்தது. ஓடும் பிள்ளை மூன்றனுள், அணிற்பிள்ளை கீரிப்பிள்ளை என்பன இரண்டு. மூன்றாம் பிள்ளை பூனைப்பிள்ளையாயிருக்கலாம்.

"பிள்ளை குழவி கன்றே போத்தெனக்
கொள்ளவும் அமையும் ஓரறி வுயிர்க்கே"
(தொல். மரபு.24)

"நாயே பன்றி புலிமுயல் நான்கும்
ஆயுங் காலைக் குருளை யென்ப" (ஷை ஷை 8)

"நரியும் அற்றே நாடினர் கொளினே" (ஷை ஷை 9)

"பிள்ளைப் பெயரும் பிழைப்பாண்டில்லை
கொள்ளுங் காலை நாயலங் கடையே" (ஷை ஷை11)

"கோடுவாழ்குரங்கும் குட்டி கூறுப" (ஷை ஷை 13)

"மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்
அவையும் அன்ன அப்பாலான." (ஷை ஷை 14)

"பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை" (ஷை ஷை 4)

என்று தொல்காப்பியங் கூறுவதால், பல்வேறு உயிரினங்களிலும் சிற்சில உயிரிகள் பிள்ளையென்னும் இளமைப் பெயர் பெற்றிருந்தமை அறியப்படும்.

வீட்டுப்பூனைக்குட்டிபாலூட்டி வளர்க்கப்படுவது பெரும்பான்மை. ஆதலால், பூனைப்பிள்ளை யென்பது, பெருவழக்குப் பற்றி, பிள்ளையென்னும் பொதுப் பெயராலேயே குறிக்கப்பட்டிருப்பது இயல்பு. பிள்ளைபோல் வளர்க்கப்படுவது, பெரிதான பின்பும் அப்பெயர் பெறும். அணிற்பிள்ளை கீரிப்பிள்ளை முதலிய பெயர்களை நோக்குக. (குட்டி என்பது ஆட்டுக்குட்டியையும். கன்றுக்குட்டி என்பது மாட்டுக்கன்றையும், சிறப்பாகக் குறித்தலையும் நோக்குக.)

பிள்ளையென்னுஞ்சொல் தெலுங்கிற் பில்லியென்று திரியும். ஒ.நோ: தள்ளை (தாய்)– தல்லி. பில்லி–இந். பில்லீ (billi). பில்லியென்பது இலத்தீனில் felis அல்லது feles என்று வழங்கும். உயர்திணையில் இருபாற்கும் பொதுவான பிள்ளை யென்னும் இளமைப்பெயர், இலத்தீனில் filius என்று மகனையும், filia என்று மகளையும் குறித்து வழங்குதல் காண்க. பிள்ளை என்பது, வடார்க்காட்டு ஆம்பூரில் வட்டத்தில்ஆண்பிள்ளையையும், பாண்டிநாட்டுப் பகுதியிற் பெண்பிள்ளையையும், சிறப்பாகக் குறிப்பது, வழக்கு வேறுபாடு பற்றியதே. (தலை.த.180)

பூனைப்பீசன் *pūṉai-p-pīšaṉ,* பெ. (n.) *பூனையண்டம்* பார்க்க; see *pūṉai-y-aṇḍam.*

[பூனை + பீசன்.]

பூனைப்புடல் *pūṉai-p-puḍal,* பெ. (n.) பாகல்; balsam-pear, climber.

[பூனை + புடல். புழு → புழல் → புடல்]

பூனைப்புரண்டி *pūṉai-p-puraṇḍi,* பெ. (n.) பூனையின் உறுமலொலி; cat's purr.

[பூனை + புரண்டி]

பூனைப்புல் *pūṉai-p-pul,* பெ. (n.) ஒருவகைப் புல்; a kind of grass.

[பூனை + புல்]

பூனைப்புலி *pūṉai-p-puli,* பெ. (n.) சுக்கு நாறி; a tree.

பூனைப்பூண்டு *pūṉai-p-pūṇḍu,* பெ. (n.) ஒரு நச்சுப் பூண்டு; a poisonous drug.

பூனைமடி *pūṉai-maḍi,* பெ. (n.) *பூனைக்காலி,*1 (வின்.) பார்க்க; see *pūṉai-k-kāli*1-.

[பூனை + மடி]

பூனைமயிர் *pūṉai-mayir,* பெ. (n.) 1. பூனையின் (உரோமம்) மயிர் போன்று உள்ள மயிர் (கொ.வ); light coloured hair, like that of a cat. 2. *பூனைக் கழற்சி* பார்க்க; see *pūṉai-k-kaḻaṟci.*

[பூனை + மயிர்.]

பூனைமூலி *pūṉai-mūli,* பெ. (n.) குப்பை மேனி (மூ.அ.); Indial acalypha.

[பூனை + மூலி]

பூனையடிச்சிலந்தி *pūṉai-y-aḍi-c-cilandi,* பெ. (n.) ஒருவகைப் புற்றுநோய்; a kind of cancer.

பூனையண்டம் *pūṉai-y-aṇḍam,* பெ. (n.) 1. பூனைவிதை; scrotum of cat. 2. ஒருகொடி; a creeper.

[பூனை + அண்டம்]

Skt. aṇḍa > த. அண்டம்

பூனையவரை *pūṉai-y-avarai,* பெ. (n.) *பூனைக்காலி, 1* (இ.வ.) பார்க்க; see *pūṉai-k-kāli.*1

[பூனை + அவரை]

பூனையாதாரம் *pūṉai-y-ādāram,* பெ. (n.) *பூனைப்புல்* பார்க்க; see *pūṉai-p-pul.*

[பூனை + ஆதாரம்]

Skt. ā-dhāra > **த.** ஆதாரம்

பூனைவணங்கி *pūṉai-vaṇaṅgi,* பெ. (n.)
1. குப்பைமேனி (நாமதீப.321); Indian acalypha
2. நாயுருவி (சங்.அக.); a plant.

[பூனை + வணங்கி]

பூனைவாற்புல் *pūṉaivāṟ-pul,* பெ. (n.) ஒருவகைப் புல்; cat's tail grass, Timothy grass.

[பூனைவால் + புல்]

பூனைவித்து *pūṉai-vittu,* பெ. (n.) *பூனைக்காலிவித்து* பார்க்க; seed of the climber-mucana pruricus.

[பூனை + வித்து]

பூனைவிரந்தி *pūṉaivirandi,* பெ. (n.) ஒருவகைக் கொடி; a climbing creeper.

பூனைவிருடணம் *pūṉaiviruḍaṇam,* பெ. (n.) கொடிவகை; hoary-branched obvate-leaved climbing caper.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ஆறாம் மடலம் - மூன்றாம் பாகம்

பெ - பௌ

Vol. VI-Part -III

முனைவர் பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.

அரசு செயலாளர்,

தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட

இயக்கக வெளியீடு

2005

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

பெ

பெ pe, பெ. (n.) தமிழ் நெடுங்கணக்கில் 'ப்' என்ற மெய்யும் 'எ' என்ற உயிர்க்குறிலும் சேர்ந்து உருவான உயிர்மெய்யெழுத்து; the compound of, `p' and, `a'

[ப் + எ = பெ]

பெங்கு pengu, பெ. (n.) ஒருவகைக் கள் (மூ.அ.); a kind of toddy.

பெட்டகங்கொட்டு–தல் pettagan- kottu-, பெ. (n.) மணப்பெண்ணுக்கு வரிசை யெடுத்துச் செல்லும் போது கைதட்டி மங்கலவொலி எழுப்புதல்; to clap the hands in applause when presents are carried in procession to a bride.

[பெட்டகம் + கொட்டு–,தல்]

பெட்டகத்துத்தி pettaga-t-tutti, பெ. (n.) வெண்டைவகை; (மலை) musk-mallow.

[பெட்டகம் + துத்தி]

பெட்டகநூல் peettaga-nūl, பெ. (n.) வழிகாட்டுப்பொத்தகம்; source-book.

[பெட்டகம் + நூல்]

பெட்டகப்பெட்டி pettaga-p-petti, பெ. (n.) மரம் அல்லது இரும்பாலாகிய பெரும் பேழை; safe or treasure-chest made either of wood or iron.

[பெட்டகம் + பெட்டி]

பெட்டகம் pettagam, பெ. (n.) 1. பெட்டி; chest, box. *'ஆங்கிலங்கு மளப்பரும் பெட்டகம்'* (திருவாலவா;27:22.) 2. மணப்பெண்ணுக்கு வரிசைகள் கொண்டு செல்லும் பெட்டி; a box in which presents to the beride are carried in procession.

[பிள் → பெள் → பெட்டி → பெட்டகம்]
(வே.க.110)

பெட்டல் pettgal, பெ. (n.) 1. விருப்பம்; (திவா). desire, longin. *'பிரித்தலும் பெட்டலும்'* (தொல்.கற்பு. 6). 2. காதலித்தல்; loving. *'பிறன் பொருளாட் பெட்டொழுகும் பேதைமை'* (குறள்.141). 3. செய்ய விரும்புதல்; desire to do. *'பெட்டவை செய்யார்'* (இனி. நாற். 23).

[பிள் → பெள் = பெள் + தல் = பெட்டல்]
(வே. க. 88)

பெட்டன் pettan, பெ. (n.) பொய்யன்; liar, deceiful person. *'பெட்டனாகிலுந் திருவடிப் பிழையேன்;'* (தேவா. 1110, 2).

[பெட்டு → பெட்டன்]

பெட்டார் pettār, பெ. (n.) 1. நண்பர்; friends. (சூடா). 2. விரும்பியவர்; lovers. *'பேணாது பெட்டார்'* (குறள் 1178).

[பெள் → பெட்டார்]

பெட்டி[1] petti, பெ. (n.) 1. பண்டங்களை வைத்துக் காக்கவுதவும் மூடியுள்ள கலம்; chest, trunk, coffer. 2. கூடை (வின்.); basket, flower-basket. 3. தொடர்வண்டி முதலியவற்றின் அறை; compartment, as in a railway carriage. 4. வண்டியோட்டுபவன் உட்காரும் இடம்; driver's seat in a carriage. 5. வண்டியில் உட்காருமிடத்திற்கு அடியில் சிறுபொருள்கள் வைப்பதற்கான இடம்; fixed box under the seat in a carriage. 6. சான்றாளி; witness box. 7. சுண்ணாம்பு முதலியன அளக்கும் முகத்தலளவை; a measure of capacity, as in measuring lime.

[பிள் → பெள் → பெட்டி]



பெட்டி[2] petti, பெ. (n.) நெல்வகை; a kind of paddy.

பெட்டிக் கோரை petti-k-kōrai, பெ. (n.) கோரை வகை; a glalbrous rush-like sedge.

[பெட்டி + கோரை]

பெட்டிகரிபிலை pietti-karipilai, பெ. (n.) நெல்வகை; a kind of paddy.

பெட்டிப்பல்லக்கு petti-p-pallakku, பெ. (n.) பெட்டியின் உருவில் அமைந்த பல்லக்கு வகை; box-like-palanguin.

[பெட்டி + பல்லக்கு]



பெட்டிபோடு—தல்[1] petti-pōdu-, செ.கு.வி. (v.i.) ஒத்திசை, இசைத்தல் (இக்.வ.); to play on the harmoniam. "பெட்டி போடுகிற பையன் இன்னும் வரவில்லையா?" (உ.வ.)

[பெட்டி + போடுதல்]

பெட்டிபோடு—தல்[2] petti-pōdu-, செ.கு.வி. (v.i.) சூடேறிய மாழைப்பெட்டியால் துணியின் சுருக்கம் நீங்கத் தேய்த்து மடித்து வைத்தல்; inoning.

[பெட்டி + போடு—.]

பெட்டிமோதிரம் petti-mōdiram, பெ. (n.) மோதிர வகை (புதுவை.); a kind of ring.

[பெட்டி + மோதிரம்]

பெட்டியடி petti-y-adi, பெ. (n.) பண வரவு செலவு செய்யுங் கணக்கப் பிள்ளை; cashkeeper.

[பெள் → பெட்டி → பெட்டியடி]

பெட்டியிழைப்புளி petti-y-ilaippuli, பெ. (n.) இழைப்புளி வகை; (கட்டட. நாமா. 39) panel plane.

[பெட்டி + இழைப்புளி]



பெட்டிலிக்குழல் pettili-k-kulalr, பெ. (n.) *சுங்குத்தான் குழல்* பார்க்க; see *sunguttan kulal.*

[பெட்டிலி + குழல்]

பெட்டிவண்டி petti-vandi, பெ. (n.) வண்டி வகை; bullock-coach.

[பெட்டி + வண்டி]

பெட்டிவரிசை petti-varišai, பெ. (n.) மணப்பெண் புகுந்தவீடு செல்லும்போது கொண்டு செல்லும் வரிசை; presents taken by a bride when she goes to her bridegroom's house.

[பெட்டி + வரிசை]

பெட்டிவாணம் petti-vānam, பெ. (n.) பெட்டியினின்று பல உருவங்களில் வெளிப் படும் வாணவகை; fire works in the shap of a case from which various figures are liberated, one after another.

[பெட்டி + வாணம்]

பெட்டு pettu, பெ. (n.) 1. பொய் (பிங்); lie, false- hood. '*மானுடம் போன்று பெட்டினை யுரைப்போர்*' (பதிபெனா. கோபப்பிர). 2. மயக்குச்சொல்; delusive word. '*கயவர் சொல்லும் பெட்டைக் கெடுக்கும்*' (திவ். இராமாநுச நூற். 93).

[பெள் → பெட்டல் → பெட்டு]
(வே. க. 89)

பெட்டெனல் pettendal, பெ (n.) விரைவுக்குறிப்பு; expr. signi fying. quickness. '*ஏகுதிர் பெட்டென்று*' (காஞ்சிப்பு. நாடு. 21)

ம. பெட்டெந்நு

[பெட்டு + எனல்]

பெட்டை[1] pettai, பெ. (n.) 1. விலங்கு புட்கள் இவற்றின் பெண்பால் (தொல். பொ. 607/8); female of animals and birds. 2. பெண்; woman, girl. "*ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை பெட்டை யென்னும் பெயர்க் கொடைக் குரிய*" (தொல். மரபு. 53). "*புள்ளும் உரிய அப்பெயர்க் கென்ப.*" (தொல். மரபு. 54).

ம., தெ. பெட்ட.

[பெள் → பெட்டை] (வே. க. 89)

பெட்டை[2] pettai, பெ. (n.) 1. குருடு; blindness 2. குறைவு (யாழ்ப்.); imperfection.

[பெள் → பெட்டை]

பெட்டைக்கட்டு pettai-k-kattu, பெ. (n.) தளர்ந்த முடிச்சு (யாழ்ப்.); loose knot. not badly tide.

[பெள் → பெட்டை + கட்டு]
(வே. க. 89)

பெட்டைக்கடல் peṭṭaik-k-kaṭal, பெ. (n.) ஆழமற்ற கடல்; shallow sea.

[பெள் → பெட்டை + கடல்]

பெட்டைக்கண் peṭṭai-k-kaṉ, பெ. (n.) 1. குறையுடைய கண் (வின்.); defective eye. 2. மாறு கண்; squint eye. 3. சிறுகண்; small-eye. 4. தேங்காயின் மட்டையிலுள்ள துளையில்லாக் கண்கள்; the two false eyes of a coconut.

[பெள் → பெட்டை + கண்]

பெட்டைக்காடு peṭṭai-k-kāḍu, பெ. (n.) விளைவற்ற நிலம்; barren tract of land.

[பெள் → பெட்டை = காடு]

பெட்டைக்குஞ்சு peṭṭai-k-kuñju, பெ. (n.) *பெட்டைக் கோழி* பார்க்க; see *peṭṭai-k-kōḻi.*

[பெட்டை + குஞ்சு]

பெட்டைக் கோழி peṭṭai-k-kōḻi, பெ. (n.) இளம் பெண்கோழி; Pullet, moorhen.

[பெட்டை + கோழி]



பெட்டைமாறி[1] peṭṭai-mari, பெ. (n.) 1. கெட்ட வொழுக்க முடையவளின் கணவன்; cuckold. 2. ஆண் தன்மையுள்ள பெண்; masculine woman, Nirago.

[பெள் → பெட்டை → மாறி]

பெட்டைமாறி[2] peṭṭai-māṟi, பெ. (n.) மனைவி தீயவொழுக்கத்தைக் கண்டும் காணாதவன் போலிருப்பவன்; man who winks at wife's in fidelity.

[பெள் → பெட்டை + மாறி]

பெட்டை முடிச்சு peṭṭai-muḍiccu, பெ. (n.) *பெட்டைக் கட்டு* பார்க்க; see *peṭṭai-k-kaṭṭu.*

[பெள் → பெட்டை + முடிச்சு]

பெட்டையன் peṭṭaiyaṉ, பெ. (n.) 1. அலி; hermaphrodite, eunuch. 2. ஆண்மையற்றவன்; effeminate man.

[பெள் → பெட்டை + அன்]

பெட்ப pietpa, பெ. (n.) மிக; much, exceedingy. '*பெட்ப நகுகின்றது*' (சீவக. 1662).

[பெள் → பெட்ப]

பெட்பு[1] peṭpu, பெ. (n.) 1. விருப்பம்; desire. (சூடா) '*குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்*' (தொல். களவு. 11). '*பெட்புறும்*' (கம்பரா. மூலபல. 135). 2. பேணுகை; cherishing, regard. '*பெட்ட வாயில் பெற் றிரவு வலியுறுப்பினும்*' (தொல். களவு. 11). 3. அன்பு (சூடா); love. 4. பெருமை (சூடா); greatness. 5. தன்மை; nature.

[பிள் → பெள். பெள் + பு → பெட்பு]
(வே. க. 88)

பெட்பு² petpu, பெ. (n.) பாதுகாப்பு; (தொல். சொல். 338). protection.

[பிள் + பெள். பெள் + பு = பெட்பு]
(வே. க. 88)

பெடம் pedam, பெ. (n.) மிகுதி (அக. நி.); much.

தெ. பெத்த.

[பெள் → பெடம்]

பெடை peṭai, பெ. (n.) புட்களின் பெண் பால்; female of birds. (தொல். பொ. 609) '*பேடையும் பெடையும் நாடின் ஒன்றும்*' (தொ. மரபு. 55) "*செந்தலையன்றில் இறவினன்ன கொடுவாய்ப் பெடையொடு*" (குறுந். 160).

ம. பெட, க. ஹேட்டே.

[பெள் + பெட்டை + பெடை]
(வே. க. 88)

பெடைமாறி peḍai-māṟi, பெ. (n.) பெட்டை மாறி (வின்.) பார்க்க; see peṭṭaimāṟi.

[பெடை + மாறி]

பெண் peṇ, பெ. (n.) 1. பெண் பாலினம்; womankind. "*பெண்ணே பெருமையுடைத்து*" (குறள். 907). "*பெண்ணும் பிணாவும் மக்கட்குரிய*" (தொல். மரபு. 90). 2. மகள்; daughter. "*இந்திரன் பெண்ணை*" (கந்தபு. திருப்ப. 35). 3. சிறுமி; girl. 4. மணமகள்; bride. '*பெண்கோ ளொழுக்கம் கண்கொள நோக்கி*' (அகநா. 112). 5. மனைவி; wife. "*பெண்ணீற் றுற்றென*" (புறநா. 82). 6. விலங்கு நிலைத் திணைகளின் பெடை (திவா); female of animals and plants. 7. பெண்டன்மை; womanish ness.

ம. பெண். க. பெண், ஹெண்ணு.

[பெள் + பெண்]
(வே.க.90)

பெண்கட்டு-தல் peṇ-kaṭṭu, செ.கு.வி. (v.i.) *பெண்கொள்* பார்க்க; see *peṇkoḷ*.

[பெள் + பெண் + கட்டு-தல்]

பெண்கரு peṇ-karu, பெ. (n.) சினை முட்டை; ovum.

[பெள் → பெண் + கரு → பெண்கரு]
(வே. க. 90)

பெண்கலை peṇ-kalai, பெ. (n.) வண்ணப் பாவின் பிற்பகுதி (வின்.) ; latter half of a vaṇṇam verse.

[பெள் → பெண் → பெண்கலை]

பெண்கிரகம் peṇ-kiragam, பெ. (n.) கதிரவனைச் சுற்றிச் செல்லும் திங்கள், வெள்ளியாகிய பெண்பாற் கோள்கள். female planet, as moom and venus.

[பெள் → பெண் + Skt. graha. *த. கிரகம்]*

பெண்குணம் peṇ-kuṇam, பெ. (n.) *மகடூஉக் குணம்* பார்க்க. see *magaḍūū-k-kuṇam*.

[பெண் + குணம்]

பெண்குமைஞ்சான் peṇ-kumaiñjaṉ, பெ. (n.) சுராலைத் தூள்(சாம்பிராணி) (சங்.அக.); benzin.

[பெள் → பெண் → பெண்குமைஞ்சான்]

பெண்குறி peṇkuri, பெ. (n.) அல்குல்; pedendum muliebre.

[பெள் → பெண் + குறி]

பெண்கேள்—தல் peṇ-kēḷ, செ.குன்றாவி. (v.t.). திருமணஞ்செய்து கொடுக்கும்படி பெற்றோரிடம் மகட் கேட்டல்; to ask the parents of a girl to give her in marriage. "தஞ்சாவூரிலிருந்து பெண் கேட்டு வந்திருக்கிறார்கள்."

[பெள் → பெண் + கேள் —,]

பெண்கை peṇ-kai, பெ. (n.) பெண்பாற் செயல் குறிக்கும் நளிநயக்கை. (சிலப். 3, 18. உரை); gesture of hands representing the action of women.

[பெள் → பெண் → பெண்கை]

பெண்கொடி peṇ-koḍi, பெ. (n.) மெல்லியலான பெண்; woman, tender as a vine. *'ஓர் பெண் கொடியை வதை செய்தான்'* (திவ். நாய்ச். 8:9).

[பெள் → பெண் + கொடி]

பெண்கொடு—த்தல் peṇ-koḍu, பெ. (n.) பெண்ணைத் திருமணஞ் செய்து கொடுத்தல்; to give a girl in marriage. "என் மாமன் எனக்ககுப் பெண்கொடுக்கமறுக்கிறான்."

[பெள் → பெண் கொடு—த்தல்]

பெண்கொடுத்தமாமன் peṇ-koḍutta-māmaṉ, பெ. (n.) ஒருவனுடைய மனைவியின் தந்தை; a man's father-in-law, dist fr. tāy-māmaṉ.

[பெண் + கொடுத்த + மாமன்]

மாமன் என்னுஞ் சொல் அம்மானையுங் குறிக்கலானமையின் அதனின்று வேறுபடுத்தும் பொருட்டுப் பெண் கொடுத்த என்னும் அடைமொழி சேர்ந்தது.

பெண்கொலை peṇ-kolai, பெ. (n.) பெண்ணைக் கொலை செய்தல்; murder of a women. *'பெண் கொலை புரிந்த நன்னன் போல'* (குறுந். 292)

[பெள் → பெண் + கொலை]

பெண்கொள்(ளு)—தல் peṇ-koḷ, செ.கு.வி. (v.i.) பெண்ணைத் திருமணஞ்செய்தல்; to marry or take a wife. *'பேய் கொண்டாலுங் கொள்ளலாம் பெண் கொள்ளலாகாதே'* (சிவப். பிர. வரலாறு. பக். 19).

[பெள் → பெண் + கொள்(ளு)—தல்]

பெண்கோலம் peṇ-kōlam, பெ. (n.) 1. மகளிர் பூணுங் கோலம்; female attire or costume. 2. பெண் புனைவு (வேடம்) (வின்.); female part or disguise.

[பெண் + கோலம்]

பெண்கோள் peṇ-kōḷ, பெ. (n.) பெண்ணை மணம்புரிந்து உறவுசெய்து கொள்கை; entering into alliance with another family by marrying a girl. "*பெண் கோளொழுக்கத்தி னொத்து மறுத்தல் பற்றி*" (தொல். பொ. 79, உரை). 2. *பெண் கிரகம்* (நாமதீப்.101) பார்க்க; see *peṇ-kiragam*.

[பெண் + கோள்]

பெண்சக்கரவர்த்தி peṇ-cakkaravartti, பெ. (n.) 1. பேரரசி; empress; '*பெண் சக்கரவர்த்தி யுடனெய்திய பள்ளியினி தெழுந்து*' (விக்கிரம. உலா. 80). 2. *பெண்ணாயகம்* பார்க்க; see *peṇ-nāyagam*.

[*பெண்* + Skt. cakravarti. *த. சக்ரவர்த்தி*]

பெண்சகோதரம் peṇ-šagōdaran, பெ. (n.) உடன்பிறந்தாள்; sister.

[*பெண்* + Skt. sahōdara. *த.சகோதரம்*]

பெண்சந்ததி peṇ-šandadi, பெ. (n.) 1. பெண் குழந்தை; female issue. 2. பெண் பிறங்கடை; female heir.

[*பெண்* + Skt. santati. *த.சந்ததி*]

பெண்சரக்கு peṇ-šarakku, பெ. (n.) படிக்காரம், பழப்புளி, காடி முதலிய புளிப்புள்ள சரக்குகள் (மூ.அ); any acid which a readily combines with an alkali or base, as paḍikkāram, paḻa-p-puli, kāḍi dist. fr.āṉ-šarakku.

[*பெண் + சரக்கு*]

பெண்சனம் peṇ-šaṉam, பெ. (n.) மகளிர் கூட்டம்; womanfolk. '*தண்கோசம்பிப் பெண்சன நோக்கி*' (பெருங்.நரவாண.9, 34).

[*பெண்* + Skt. jana. *த. சனம்*]

பெண்சாதி peṇ-šadi, பெ. (n.) 1. பெண்பாலர்; woman kind. '*குணச் சிறப்பால் உலகத்துப் பெண்சாதி விருப்பமுற்ற...மகளிர்.*' (மதுரைக். 555, உரை). 2. மனைவி; wife. '*உன்தன் வீட்டுப் பெண் சாதிக்காக*' (இராமநா. அயோத்.8).

[*பெள் → பெண்+ சாதி*]

பெண்சாவி peṇ-šāvi, பெ. (n.) துளையுள்ள தாழ்க்கோல் ; tubular key bored key.

[*பெள் → பெண்*.Port.cāvi. *த.சாவி*]



பெண்சிரட்டை peṇ-širaṭṭai, பெ. (n.) கண்ணுள்ள கொட்டாங்கச்சி (நெல்லை.); the outer shell of that half of a broken cocount containing its eye.

[*பெள் → பெண் → பெண்சிரட்டை*]



பெண்சினை peṇ-šiṉai, பெ. (n.) *பெண்கரு* பார்க்க; see *peṇkaru*.

[*பெண் + சினை*]

பெண்சீக்கு peṇ-šikku, பெ. (n.) தகாப்புணர்ச்சி யால் வரும் பாலியல் நோய்; venereal disease.

[*பெண்* + E.sick > *த. சீக்கு*]

பெண்சோடினை peṇ-šōḍiṉai, பெ. (n.) 1. நாடகத்திற் கொள்ளும் பெண் கோலம்; female attire for the stage. 2. மணப் பெண்ணை ஒப்பனை செய்தல்; decoration of a women, as a bride.

[பெள் → பெண் + சோடினை]

சோடனை
சுவடி → சோடி → சோடினை = ஒப்பனை.

பெண்டகம் peṇḍagam, பெ. (n.) *பெண்டகன்* பார்க்க, see *peṇḍagaṉ*.

[பெள் → பெண் → பெண்டு → பெண்டகம்]
(வே.க.பக்.90)

பெண்டகன் peṇḍagaṉ, பெ. (n.) அலி (பிங்.); hermaphrodite, eunuch.

க. ஹெண்ணுக.

[பெள் → பெண் → பெண்டு → பெண்டகம்]
(வே.க.90)

பெண்டகை peṇḍagai, பெ. (n.) *பெண்டகைமை* பார்க்க; see peṇḍagaimai.

[பெண் + தகை → பெண்டகை]

பெண்டகைமை peṇḍagaimai, பெ. (n.) பெண்மைக் குணம்; womanliness.

[பெண் + தகைமை]

பெண்டன் peṇḍaṉ, பெ. (n.) *பெண்டகன்* பார்க்க; see *peṇḍagaṉ*.

ம. பெண்டி, க. பெண்ட், கெண்ட,
தெ. பெண்ட்டி.

[பெண்டு → பெண்டன் = பேடி (திவா.)]
(வே.க. பக். 92)

பெண்டாட்டி peṇḍaṭṭi, பெ. (n.) 1. பெண்; woman. '*செல்லப் பெண்டாட்டி நீ*' (திவ். திருப்பா. 11). "*ஒரு பெண்டாட்டி தமரொடு கலாய்த்து*" (இறை. கள.1, உரை). 2. மனைவி; wife. '*கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி*' (திடுகடு. 96). 3. வேலைக் காரி; woman servant. (s.i.i. 11. 483).

க. ஹெண்டத்தி

[பெண்டு + ஆள் → பெண்டாட்டி]

பெண்டாளு-தல் peṇḍāḷu, செ.குன்றாவி. (v.t.) மனைவியாக நுகர்தல்; to have as wife.

தெ. பெண்ட்லாடு.

[பெண்டு + ஆள்]

பெண்டிழந்தான் சுழி peṇṭiḻantāṉ-euḻi, பெ. (n.) தன்னை உடையவனது மனைவியை இழக்கச் செய்வதாகக் கருதப்படும் மாட்டுச் சுழிவகை (மாட்டுவா. 22).; unlucky mark in cattle in the form of a line across the back, indicating that the owner will lose his wife.

[பெண்டு + இழந்தான் + சுழி]

பெண்டு peṇḍu, பெ. (n.) 1. பெண்; woman. "*ஒரு பெண்டா லிதய முருகினை யாயின்*" (வெங்கைக்கோ. 47). 2. மனைவி; wife. "*வனை நல முடையளோ மகிழ்நின் பெண்டே*" (ஐங்குறு. 57).

ம. பெண்டி, க. பெண்ட, ஹெண்ட,
தெ. பெண்ட்டி

[பெண் → பெண்டு] (வே.க.92)

பெண்டுக்கஞ்சி peṇḍukkañji, பெ. (n.) ஆண்மையற்றவன்; effeminate-man.

[பெண்டுக்கு + அஞ்சி]

பெண்டுக்குமேய்க்கி pendukku-mēykki, பெ. (n.) 1. பெண் கொண்ட வீட்டைச் சேர்ந்து தன் மனைவியின். ஆடுகளை மேய்க்கும் இடையர் இனத்தவன்; a division of a itaiyar who tend the sheep of their wives and observe matriarchal customs. 2. மனைவிக்குக் கீழடங்கி நடப்பவன்; henpecked husband.

[பெண்டு + மேய்க்கி]

பெண்டுகட்டு-தல் pendu-kattu, செ.குன்றாவி. (v.t.) தகாத சேர்க்கை குறித்துப் பழிகூறுதல் (வின்.); to attribrute criminal intimacy with a person of the opposite sex.

[பெண்டு + கட்டு-தல்]

பெண்டுகம் pendugam, பெ. (n.) *கழற்சி* பார்க்க (மலை); see *kalarci.*

[பெண் → பெண்டு → பெண்டுகம்]

பெண்டுகள்சட்டி pendugal-šatti, பெ. (n.) 1. பெண்கொண்ட வீட்டைச் சேர்ந்து தன் மனைவியின் ஆடுகளை மேய்க்கும் இடையர்; a division of itdaiyar who tend the sheep of their wives and observe matriarchal customs. 2. மனைவிக்குக் கீழடங்கி நடப்பவன்; henpecked husband.

[பெண்→பெண்டு – பெண்டுகள் + சட்டி]

(வே.க.92)
பெண்டு = பேடி

பெண்டு பிள்ளை pendu-pillai, பெ. (n.) மனைவி குழந்தைகள் அடங்கிய குடும்பம்; family, as consisting of wife and children.

[பெண்டு + பிள்ளை]

பெண்டுருவன் penturuvan, பெ. (n.) திருமால் (நாம. தீப. 50); thirumāl, as having assumed the form of mogini.

[பெண் → பெண்டு + வுரு → பெண்டுருவன்]

பெண்டுவசட்டி penduva-šatti, பெ. (n.) *பெண்டுகள் சட்டி* பார்க்க; see *pendugal catti.*

[பெண்டுகள் + சட்டி → பெண்டுவசட்டி]

பெண்டுவை-த்தல் pendu-vai, செ.குன்றா.வி. (v.t.) வைப்பாட்டியாகக் கொள்ளுதல்; to keep as concubine. *'நீரிவளைப் பெண்டுவைத்துக் கொள்ளும்'* (தெய்வச், விறலிவிடு. 292).

[பெண்டு + வை-த்தல்]

பெண்டைக்காய் pendai-k-kāy, பெ. (n.) வெண்டைக் காய்; lady's finger.

[பெண்டை + காய்]

பெண்டை மரக்கால் pendai-marakkāl, பெ. (n.) இரண்டரைப்படி கொள்ளும் தவச வளவை; containing two and a half padi.

[இரண்டரை → ரெண்டரை → பெண்டரை → பெண்டை + மரக்கால்]

பெண்ணடி pen-n-adi, பெ. (n.) பெண்பிறங்கடை; female child for heir. "*ஒரு பெண்ணடி தன் காணிக்குத் தேடக் கருத்தாகி*" (விறலிவிடு. 152).

[பெண் + அடி]

பெண்ணரசி peṇ-ṇ-araši, பெ. (n.) 1. ஆட்சிபுரியும் பெண்; queen consort. *'தன்னரசளித்த பெண்ணரசி'* (திருவிளை. பாயி. 11). 2. அழகிற் சிறந்தவள்; queenly woman.

[பெண் + அரிசி பெண்ணரசி]

பெண்ணரசு peṇ-ṇ-arašu, பெ. (n.) 1. *பெண்ணரசி* பார்க்க; see *peṇ-ṇ-araši.* 2. குடும்பத்தில் பெண் ஆளுமை; petticoat government.

[பெண் + அரசு → பெண்ணரசு]

பெண்ணருங்கலம் peṇ-ṇ-aruṅgalam, பெ. (n.) பெண்களிற் சிறந்தவள்; a gen among woman as an ornament. *"பெண்ணருங்கலத்தொடு பிணைந்த பொருள்"* (சீவக. 198)

[பெண் + அருங்கலம்]

பெண்ணலம் peṇṇalam, பெ. (n.) 1. பெண்மைக்குணம்; womanliness. 2. பெண்ணின் அழகு, முதலியன; womanly grace. 3. பெண்ணின்பம்; enjoyment with a woman. *"பெண்ணலங் காதலிற் பேயுமாயினான்"* (சீவக. 2010).

[பெண் + நலம்]

பெண்ணலி peṇ-ṇ-ali, பெ. (n.) பெண் தன்மை மிக்க அலி; hermaphrodite with feminine characteristies predominating. (தொல். பொருள். 605. உரை)

[பெண் + அலி]

–பெண் ஆண் அல்லாதவன்–ன் அலி. அல்→அலி

பெண்ணழைத்தல் peṇ-ṇ-aḻaittal, பெ. (n.) திருமணத்திற்கு முன் மணமகளை மணமகன் வீட்டுக்கு அழைத்தல்; welcoming a bride at the bride groom's house just before wedding. 2. திருமணம் செய்து கொள்ளுதல் (யாழ்.அக.); marriage.

[பெண் + அழைத்தல்]

பெண்ணன் peṇṇaṉ, பெ. (n.) ஆண்மையற்ற (வீரமற்றவன்); effeminate man.

[பெள் + பெண் + பெண்ணன்] (வே.க.91)

பெண்ணாசி pen-ṉāši, பெ. (n.) இல்லிமூக்கு (நாஞ்.); bleeding nose.

[பெள் + நாசி]

பெண்ணாசை peṇ-ṇ-āšai, பெ. (n.) பெண் மீது பற்று; love of woman.

[பெண் + ஆசை]

skt.nāsika, *த. நாசி*

பெண்ணாட்சி peṇ-ṇ-āṭci, பெ. (n.) பெண்ணாளுமை; woman personality.

[பெண் + ஆட்சி]

பெண்ணாடை peṇ-ṇ-āḍai, பெ. (n.) *பெண்ணுடை* பார்க்க; see *peṇ-ṇ-uḍai.*

[பெண் + ஆடை]

பெண்ணாண் peṇ-ṇ-aṉ, பெ. (n.) கணவன் மனைவியர்; (தம்பதிகள்)(நாமதீப. 176); husband and wife.

[பெள் → பெண் + ஆண்] (வே.க.91)

பெண்ணாய்ப்பிறந்தவள் peṇ-ṇ-āy-p-pirandanaḷ, பெ. (n.) பெண்(நெல்லை); woman.

[பெண் + ஆய் + பிறந்தவள்]

பெண்ணாயகம் peṇ-ṇāyagam, பெ. (n.) பெண்களுக்குள் அரசி; queen among woman.

[பெண் + நாயகம்]

பெண்ணாள்[1] peṇ-ṇ-āḷ, பெ. (n.) நடவு முதலிய பயிர் வேலை செய்யும் உழத்தி; female farm-labourer.

மறுவ. நடவான்

[பெண் + ஆள்]

பெண்ணாள்[2] peṇ-ṇ-āḷ, பெ. (n.) பெண்கோள் (வின்.); female naksatra, as kārttigai, Tiruvādirai etc.

[பெண் + நாள் → பெண்ணாள்]

பெண்ணாளுமை peṇ-ṇ-āṭci, பெ. (n.) *பெண்ணாட்சி* பார்க்க; see *peṇ-ṇ-āṭci.*

[பெண் + ஆளுமை]

பெண்ணாறு peṇ-ṇ-āṟu, பெ. (n.) கிழக்கு நோக்கியோடும் ஆறு; eastward flowing river, opp. to āṉ-āṟu. '*ஆணாறு பெண்ணாறு ஒன்றின்றிக்கே*' (ஈடு, 4, 4, ப்ர).

[பெண் + ஆறு]

பெண்ணியல்பு peṇ-iyalpu, பெ. (n.) பெண்மை; womanish.

[பெண் + இயல்பு]

பெண்ணிராசி peṇ-ṇ-rāśi, பெ. (n.) ஏழுவகை இராசிகள் (மங்களே. 2, 15, உரை); female or even signs of the zodioc.

[பெண் + இராசி]

(skt. rāsi → த. இராசி)

பெண்ணினம் peṇ-ṇ-iṉam, பெ. (n.) மகளிர்; womankind.

[பெண் + இனம்]

பெண்ணீர்மை peṇṇīrmai, பெ. (n.) பெண்மைக் குணம்; womanliness. '*பெண்ணீர்மை கற்பழியா வாற்றால்*' (நல்வழி. 16).

[பெண் + நீர்மை]

பெண்ணுடம்பு peṇ-ṇ-uḍambu, பெ. (n.) பெண் குறி (வின்.); redendum muliebre.

[பெண் + உடம்பு]

பெண்ணுரிமை pēṇ-ṇ-urimai, பெ. (n.) ஆணுக்கு நிகராகக் குமுகாயத்தில் சொத்துரிமை முதற்கொண்டு அனைத்து நிலையிலும் சம உரிமை அளித்தல்; woman's right.

[பெண் + உரிமை]

பெண்விடுதலை pēṇ-viḍudalai, பெ. (n.) *பெண்ணுரிமை* பார்க்க; see *peṇ-ṇ-urimai.*

[பெண் + விடுதலை]

பெண்ணுலகு peṇ-ṇ-ulagu, பெ. (n.) பெண்கள் மாத்திரமே வாழுவதாக் கருதப்படும் தீவு; an island said to be solely in habited by women. '*பெண்ணுல கேய்ப்ப*' (பெருங். உஞ்சைக். 42, 181)

[பெண் + உலகு]

பெண்ணுழைப்பு peṇ-ṇ-nulaippu, பெ. (n.) *பெண்பாடு* பார்க்க; see *peṇ pāṭu.*

[பெண் + உழைப்பு]

பெண்ணுடை peṇ-ṇ-uḍai, பெ. (n.) பெண்டிர்க்குரிய ஆடை (இ.வ.); female attire.

[பெண் + உடை]

பெண்ணுறுப்பு *peṇ-ṇ-uṟuppu,* பெ. (n.)
1. பெண்ணுக்குரிய உறுப்புகள்; limb or part of a body, peculiar to women.
2. *பெண்ணுடம்பு* பார்க்க; see *peṇṇuḍambu.*
3. *பெண்குறி* பார்க்க; see *peṇ-kuṟi.*

[பெண் + உறுப்பு]

பெண்ணெடு—த்தல் *peṇ-ṇ-eḍu,* செ.குன்றாவி. (v.t.) திருமணஞ் செய்தல்; to marry, chosse as a bride. '*நீ எங்கே பெண்ணெடுத்தாய்?*'

[பெண் + எடு—,த்தல்]

பெண்ணெழுத்து *peṇ-ṇ-eḻuttu,* பெ. (n.) 1. உயிர்மெய் (பிங்.); compound letter or vowelconsonant in Tamil orthography. 2. நெட்டெழுத்து; (வெண்பாப். முதன்மொ.6) long vowel.

[பெண் + எழுத்து]

பெண்ணை *peṇṇai,* பெ. (n.) 1. பனை; palmyra-palm. '*மன்றப் பெண்ணைவாங்கு மடற் குடம்பை*' (நற். 303) 2. *பெண் மரம்* (மூ.அ) பார்க்க; see *peṇmaram.* 3. நீர்முள்ளி; (மலை) water-thorn. 4. வடபெண்ணை தென்பெண்ணையாறுகள்; rivers, north pennaiyaru, south penniyaru '*பெண்ணையம் படப்பை நாடுகிழவோயே*' (புறநா.126) பெண்ணையெனுநதியாறுகடந்து; (கலிங்.354)

[பெள் → பெண் → பெண்ணை]

பெண்ணை வாயன் *peṇṇai-vāyaṉ.* பெ. (n.) 1. *பெண்வாயன்* பார்க்க; see *peṇ-vāyaṉ* 2. அலி; hermaphrodite.

பெண்தண்டு *peṇ-taṇḍu,* பெ. (n.) இடக்காது (வின்); small gristly protuberance of the left ear, dist.frāṇ-taṇḍu

மாந்தர்தம் உடலில் வலப்புறம் ஆண்டன்மையும் இடப்புறம் பெண்டன்மையும் உள்ளது என்னுங் கருத்துப்பற்றி இடக்காது பெண் தொண்டு எனப்பட்டது போலும். தொண்டு— தொளை.

[பெண் + தொண்டு → தண்டு]

பெண்தன்மை *pēṟṇ-taṉmai,* பெ. (n.) *பெண்மயம்*[1] பார்க்க, see *peṇmayam*[1]

[பெண் + தன்மை]

பெண்தானையான் *peṇ-tāṉaiyāṉ,* பெ. (n.) காமன் அல்லது பெண் படையான் (நாமதீப.58); kama, as having women for hisarmy.

[பெண் + தானையான்]

பெண்பருவம் *peṇ-paruvam,* பெ. (n.) *மகளிர் பருவம்* பார்க்க; see *maglir paruvam.*stages in the life of a woman. (பிங்.)

[பெண் + பருவம்]

பெண்பள்ளி *peṇ-paḷḷi,* பெ. (n.) பெண் துறவிகள்தங்குமிடம்;nunnery. *'இம்மனையும் இக்கிணறும்* பெண்பள்ளி யாவதாகவும்' (s.i.i.vii, 24.)

[பெண் + பள்ளி]

பெண்பழி *peṇ-p-paḻi,* பெ. (n.) **1.** பெண் கொலைப் பழி; crime of killing a woman. '*இனையதோர்* பெண்பழியை யாரேற்றார். (திருவிளை.பழியஞ்.12) **2.**பெண்ணைவருத்தல் அல்லது கட்டாயப்படுத்துவதால் உண்டாகும் பழி(வின்); guilt of harassing or forcing a woman.

[பெண் + பழி]

பெண்பனை *peṇ-paṉai,* பெ. (n.) காய்க்கும் பனை; (தொல்.பொ. 558, உரை). palmyra, as bearing fruit.

[பெண் + பனை]

பெண்பாடு *peṇ-pāḍu,* பெ.(n.) பெண்பிள்ளை யினுழைப்பு; efforts or industry of the female members of a family. '*ஆண்பாடு பெண்பாடு பட்டு அந்த வேலை முடிந்தது*'

[பெண் + பாடு]

பெண்பாத்தி *peṇ-pātti,* பெ. (n.) உப்பளத்தில் உப்பு நீரைச் சுண்டவிடும் பாத்திவகை; condenser in salt-pans dist. fr.āṇ-pātti.

[வெண் → பெண் + பாத்தி]

பெண்பார்—த்தல் *peṇ-par,* செ.கு.வி. (v.i.) திருமணத்திற்கு மணமகளைத் தேர்ந் தெடுத்தல்; to choose a bride.

[பெண் + பார்]

பெண்பால் *peṇ-pāl,* பெ. (n.) **1.** ஐம்பால்களுள் ஒன்று; (நன்.262) feminine gender, one of ai-m-bāl, q.v. **2.** பெண்ணினம்; female sex. '*ஒரு பெண்பாலேன்*' (சீவக. 1662)

[பெண் + பால்]

பெண்பாலெழுத்து *pen-pal-eluttu,* பெ. (n.) *பெண்ணெழுத்து* பார்க்க; see *peṇ-ṇ-e ittu.* (இலக்.வி.773, உரை).

[பெண்பால் + எழுத்து]

பெண்பாவம் *pen-pavam,* பெ (n.) *பெண்பழி* (வின்) பார்க்க; see *penpaḻi.*

[பெண் + பாவம்]

பெண்பாற் பருவம் *pen-par-paruvam,* பெ. (n.) மகளிர் பருவம்; stages in the life of a woman.

[பெண்பால் + பருவம்]

பெண்பாற் பிள்ளைக்கவி *pen-par-pillai-k-kavi,* பெ. (n.) பெண்பாற் பிள்ளைத் தமிழ் பார்க்க; (இலக்.வி.807, உரை.)

[பெண்பால் + பிள்ளை + skt-kavi. *த.கவி]*

பெண்பாற் பிள்ளைத்தமிழ் *pen-par-pillait-tamil,* பெ. (n.) ஆண்பால், பெண்பால்ஆகிய இரண்டிற்கும்பொதுவாயுள்ளபருவங்களோடு, பெண்பாற்கே சிறப்பாக உரிய கழங்குப்

பருவம், அல்லது நீராடற் பருவம், அம்மானைப் பருவம், ஊசற் பருவங்களைச் சேர்த்துப் பெண் தெய்வத்தை அல்லது சிறப்புடைய பெண்பாலைப் புனைந்து பாடும் பிள்ளைத்தமிழ் வகை; a poem descrbing the different stages in the child hood of a goddess or heroine an consisting of seven sections common.

[பெண்பால் + பிள்ளை + தமிழ்]

பெண்பாற்பிள்ளைப்பாட்டு *pen-par-pillai-p-pattu,* பெ. (n.) *பெண்பாற் பிள்ளைத் தமிழ்* பார்க்க; (பிங்.).

[பெண்பால் + பிள்ளை + பாட்டு]

பெண்பிடி-த்தல் *peṇ-pidi,* செ.குன்றாவி. (v.t.) கூத்தியாகக் கொள்ளுதல் (யாழ்.அக); to keepaconcubine.

[பெண் + பிடி]

பெண்பிள்ளை *peṇ-piḷḷai-cikku,* பெ. (n.) **1.** பெண் குழந்தை; female infant, girl, **2.** மகளிர்; woman; *'நாயகப் பெண் பிள்ளாய்'* (திவ்.திருப்பா.7) **3.** மனைவி; wife.

[பெண் + பிள்ளை]

பெண்பிள்ளைசீக்கு *peṇ-piḷḷai-cikku,* பெ. (n.) *பெண்சீக்கு* (M.L.) பார்க்க; see *peṇcikku.*

[பெண்பிள்ளை+ E. Sick → த.சீக்கு]

பெண்பிள்ளை வியாதி *peṇ-piḷḷai-viyādi,* பெ. (n.) *பெண்சீக்கு* (M.L.) பார்க்க; see *peṇ-cikku.*

[பெண்பிள்ளை + skt vyādhi. த.வியாதி]

பெண்பிற-த்தல் *peṇ-piṟa,* செ.கு.வி. (v.i.) பெண்பிறவியெடுத்தல்; to be born a woman. *'வல்வினையேன்பெண்பிறந்தே'* (திவ்.திருவாய். 5,4,3.).

[பெண் + பிற–,]

பெண்பிறந்தார் *peṇ-piṟancdār,* பெ. (n.) பெண்டிர்; woman. *"பெண் பிறந்தா ரெய்தும் பெருந்துயர்"* (திவ்.திருவாய்.5,4,4)

[பெண் + பிறந்தார்]

பெண்பிறப்பு *peṇ-piṟappu,* பெ. (n.) பெண்ணாகப் பிறத்தல்; being born a woman. *"பெண்பிறப்புந்தோழியினிதென"* (சீவக.1297)

[பெண் + பிறப்பு]

பெண்புத்தி *peṇ-putti,* பெ.(n.) பெண்டிர்க்குரிய அறிவு; woman's wit, used in contempt. *'பெண்புத்தி பின்புத்தி'.*

[பெண் + skt-buddhi. த.புத்தி]

பெண்பூக்கதிர் *peṇ-pū-k-kadir,* பெ. (n.) செடி மரம் முதலியவற்றிற் காயாக மாறும் பூங்கொத்து(இ.வ.); pistillate cluster.

[பெண் + பூக்கதிர்]

பெண்பெண்டாட்டி *peṇ-peṇḍāṭṭi,* பெ. (n.) பெண், woman. ஒரு பெண் பெண்டாட்டி ஆணுடை யுடுத்து; (ஈடு,6,2,ப்ர.)

[பெண் + பெண்டாட்டி]

பெண்பெருமாள் *peṇ-perumāḷ,* பெ. (n.) பெண்ணரசி; queen, queenly woman. *'பெண் பெருமாளந்தப்புரப் பெருமாள்'*(மூவருலா: இராசராச. 80.)

[பெண் + பெருமாள்]

பெண்போகம் *peṇ-pōgam,* பெ. (n.) **1.** எட்டுத் துய்ப்புகளில் (அட்ட போகங்களில் ஒன்றான சிற்றின்பந் துய்க்கை; sexual onfoyment with a woman. one of aštā-pōkam, q.v. (w.). **2.** முப்பத்திரண்டறங்களுள் பெண்ணின் பந்துய்க்கப் பிறனுக்கு உதவும் அறம் (பிங்.); aiding a man to obtain sexual enjoyment one of muppattiraṇḍadṟm.

[பெண் + skt. bhōga. *த.போகம்]*

பெண்மகவு *peṇ-magavu,* பெ. (n.) பெண்குழந்தை; woman-child.

[பெண் + மகவு]

பெண்மகள் *peṇ-magaḷ,* பெ. (n.) **1.** பெண்; woman. **2.** பெண் மகவு; girl-child.

[பெண் +மகள்]

பெண்மகன் *peṇ-magaṉ,* பெ. (n.) புறத்துப் போய் விளையாடும் பேதைப் பருவத்துப் மெண்மகள் (தொல்.சொல். **164.** சேனா.); girl child which has attained the stage of playing in the neighbourhood.

[பெண் + மகன்]

'பெண்மகன்' என்னும் மாறோக்கத்தார் (சொற்கை) வழக்கு, பெட்டைப்பசன் என்னும் ஆம்பூர் வட்டத்தார் வழக்குப்போன்றது.

பெண்மயக்கம் *peṇ-mayakkam,*பெ.(n.) பெண்மேற் கொள்ளும் காதல் (வின்); falling in love with a woman.

[பெண் + மயக்கம்]

பெண்மயம் *peṇ-mayam,*பெ.(n.) **1.** பெண் தன்மை; womanliness, feminine nature. *'பெண்மயமோ பெரிதே'* **(சீவக. 228.)** **2.** பெண்டிர்திரள்; crowd of women. *'அங்கே பெண்மயமாயிருக்கிறது, போகமுடிய வில்லை.'*

[பெரும் + மயம்]

பெண்மயல் *peṇ-mayal,*பெ.(n.) *பெண்மயக்கம்.* (வின்.) பார்க்க; *peṇ-mayakkam.*

[பெண் + மயல்]

பெண்மயிர் *peṇ-mayir,* பெ. (n.) பெண்ணின் கூந்தல் (பிங்.); tresses, woman's lock of hair.

[பெண் + மயிர்]



பெண்மரம் *peṇ-maram,* பெ. (n.) **1.** புறக்காழுள்ள மரம் (பிங்.); endogenous tree. **2.** காய்க்கும் மரம் அல்லது செடி (வின்); female tree or plant.

[பெண் + மரம்]

பெண்மாயம் *peṇ-māyam,* பெ. (n.) *பெண்வலை* (வின்.) பார்க்க; *peṇ-valai.*

[பெண் + மாயம்]

பெண்மாறி *peṇ-māxṟi,* பெ. (n.) பெண்டிர் பலரிடம் மாறிமாறிக் காதல் கொள்பவர் (வின்.) a man who if fickle in his love.

[பெண் + மாறி]

பெண்மூச்சு *pen-mūccu,* பெ. (n.) விடாப்பிடி; ஒட்டாரம் (யாழ்.அக.); obstinacy, as a feminine trait.

[பெண் + மூச்சு]

பெண்மை[1] *penmai,* பெ. (n.) தாய்மை; woman hood.

[பெண் + மை]

பெண்மை[2] *penmai,* பெ. (n.) 1. *பெண் பிறப்பு* பார்க்க; see *penpirappu.* '*பெண்மைக்கு இரதியென*' (பாரத.திரௌபதிமாலை.39) 2. பெண்ணுக்குரிய நலம்; feminine grace. '*காணியைப் பெண்மைக் கெல்லாம்*' (கம்பரா. மீட்சி.46) 3. பெண்ணின்தன்மை; womanliness, gentleness, womanishness. '*பெண்மையு மிலளாகி யழுதலு மழூஉம்*' (கலித், 147.) 4. பெண்ணின்பம்; sexual enjoyment with a woman; '*பிறனியலாள் பெண்மை நயவாதவன்*' (குறள். 147.) 5. அமைதித்தன்மை; modesty '*பெண்மை நாண்வனப்புச் சாயல்* ' (சீவக. 356.); 6. நிறை; self-restraint, natural to a woman '*பிறையெனு நுதலவள் பெண்மை யென்படும்*' (கம்பரா. மிதிலைப். 40.)

[பெண் + மை]

மை பண்புப் பெயரீ ஈறு.

பெண்வசம்பு *pen-vašambu,* பெ. (n.) பிசிறில்லாத வசம்பு; sweet flag without bristles.

[பெண் + வசம்பு]

பெண்வலை *pen-valai,* பெ. (n.) பெண்டிர் செய்யும் ஈர்ப்புச் செயல்; toils of a woman. '*பெண்வலைப் படாதவர்*' (சீவக. 78.)

[பெண் + வலை]

பெண்வழி *pen-vali,* பெ. (n.) 1. பெண்ணினமாக உரிமையிறங்குதற்குரிய பிறங்கடை வரிசை; female line, as in inheritance matriarchy. 2. *பெண்வழிச் சுற்றம்* (யாழ்.அக.); பார்க்க, see *pen-vali-c-curram.*

[பெண் + வழி]

வழி = குடிவழி.

மக்களுக்குத் தலைமுறைதலைமுறையாய் உரிமைதொடர்ந்துவரும்வழி, தந்தைவழி தாய்வழி அல்லது மகன்வழி மகள்வழி என இரண்டாம், இவற்றுள் தாய் வழியே பழந்தமிழ் நாட்டில் வழங்கி வந்த தென்பதற்கு, தாயம் என்னும் வழக்கே சான்றாம். தாய்வழிப்பெறுவது தாயம். தந்தைவழி அல்லது மகன்வழி ஆண்வழியும்தாய்வழிஅல்லது மகள்வழி பெண்வழியும் ஆகும். ஆத்திரேலியோ என்னுந்தென்கண்டத்தில் பெண் வழியுரிமை இருந்து வருவதாகச் சொல்லப் படுகின்றது.

பெண்வழிச் சுற்றம் *pen-vali-c-curram,* பெ. (n.) பெண்ணினமாக வரும் உறவு (யாழ்.அக.); reiation in the female line.

[பெண்வழி + சுற்றம்]

பெண்வழிச் சேறல் *pen-vali-c-ceral,* பெ. (n.) காமப் பேராசையில் மனைவி விருப்பப்படியே ஒழுகுகை (குறள். அதி. 91.); being led by wife. being under wife's influence.

[பெண்வழி + சேறல்]

செல்தல்→சேறல்

பெண்வாயன் *pen-vāyan,* பெ. (n.) பெண்டிர் போற் சளசளவென்று பேசுவோன் (இ.வ.); man who talks lika a woman.

[பெண் + வாயன்]

பெண்வாரிசு *peṇ-vāriśu,* பெ. (n.) *பெண்வழி* பார்க்க; see *pervali.*

[பெண் + u. wāris. *த.வாரிசு]*

பெண்வியாதி *peṇ-viyādi,* பெ. (n.) *பெண்சீக்கு* (M.L) பார்க்க; see *peṇ-cikku.*

[பெண் + skt vyādhi. *த.வியாதி]*

பெண்விளக்கு *peṇ-viḷakku,* பெ. (n.) 1. பெண்களிற்சிறந்தவள்;woman conspicuous for virtue and other excellences. '*பெண் விளக்காகிய பெறலரும் பேதாய்*' (பெருங். இலாவாண. 18, 79) 2. பாவை விளக்கு (இ.வ.); damsel shaped standard of a lamp.

[பெண் + விளக்கு]

பெண்வீட்டார் *peṇ-viṭṭār,* பெ. (n.) மணமகளைச் சேர்ந்த உறவாடிகள்; parents and other relatives of a bride, bride's party.

[பெண் + வீட்டார்]

பெண்வை–த்ததல் *peṇ-vai-,* செ.குன்றாவி. (v.t.). வைப்பாட்டியாகக் கொள்ளுதல் (நெல்லை); to keep as conbine.

[பெண் + வை–]

பெத்தகாலம் *petta-kālam,* பெ. (n.) ஆதன் (ஆன்மா) பாசத்திற்கு உட்பட்ட காலம்; period during which a soul is in bondage of mummalam. மலத்தினால்மறைப்புண்டு கிடக்கும் அப் பெத்த காலத்து' (சி.போ. பா. 2, 2. பக். 63. சுவாமிநா.)

[பற்று → பத்து → பெத்து → பெத்தம் + காலம்]

பெத்ததசை *pentta-taśai,* பெ. (n.) ஆதனின் பாசபந்தத்திற்கு உட்பட்ட நிலை (யாழ்.அக.); condition of the soul subject to the bondage of mummalam.

[பற்று → பத்து → பெத்து + தசை]

பெத்தம் *pettam,* பெ. (n.) 1. கட்டு; bond, tie, ligature. 2. ஆதனின் பாசபந்தம் bondage of the soul, connection of & the soul with mummalan; '*பெத்தமொடு முத்தியும்*' (தாயு. ஆனந்த. 5.) 3. சேர்மானம் (யழ்.அக.); thing added.

[பற்று → பத்து → பெத்து → பெத்தம்]

பெத்தமுத்தி *petta-mutti,* பெ. (n.) 1. பந்தமும் வீடும்; bondage and liberation of souls. 2. ஒன்றுகை (இலய) (யாழ்.அக.); salvation by absorption in to God-head.

[பெத்தம் + முத்தி]

பெத்தமூலம் *petta-mūlam,* பெ. (n.) சிறுவழுதுணை, 1.(சங்.அக.)பார்க்க; śiṟuvaḻuduṇai nightshade Indian.

[பெத்தம் + மூலம்]

பெத்தர் *pettar,* பெ. (n.) பாசபந்தமுள்ள உயிர்கள்; souls bondage.

[பெத்து → பெத்தர்]

பெத்தல் *pettal,* பெ. (n.) *பெருங்குரும்பை* (மலை.) பார்க்க; *bow-string hemp.*

[பெத்து → பெத்தல்]

பெத்தான்மா *pettāṉmā,* பெ. (n.) பாசபந்தமுள்ள உயிர்; soul in bondage. '*முத்தியின்கட் பெத்தான்மாவை*' (சி.சி. 11,6.)

[பெத்து + ஆன்மா]

skt ātmā *ஆத்மா த. ஆன்மா*

பெத்தி *petti,* பெ. (n.) *சிறுவழுதுணை* 1. (மலை); பார்க்க see *śiṟu vāḻuduṇai* indian nightshade.

[பெத்து → பெத்தி]

பெத்து *pettu,* பெ. (n.) பெத்தம் பார்க்க; see pettam. '*பெத்தின்றியைந்து தொழிலானும்*' (விநாயகபு. 82,47)

[பற்று → பத்து → பெத்து]

பெதரிக்களம் *pedarikkaḷam,* பெ. (n.) *எட்டி'* பார்க்க (சங்.அக.); strychinōe tree.

[பெதரி + களம்]

பெதிகாரம் *pedikgāram,* பெ. (n.) படிக்காரம் (சங்.அக.); alum.

[படிகாரம் → பெடிகாரம் → பெதிகாரம்]

பெதும்பை *pedumabi,* பெ. (n.) 1. எட்டு முதல் பதினொரு அகவை வரையுள்ள பெண் (இலக். வி. 860.); girl between the ages of 8 and. 11. 2. பெண் (திவா.); woman.

[பேது – பெது – பெதும்மை]

பெந்தகம் *pendagam,* பெ. (n.) 1. கட்டு; tie. 2. அடைமானம்; simple mortage.

[பற்று → பத்து → பந்து → பெந்து → பெந்தகம்]

பெந்தம் *pendam,* பெ. (n.) 1. கட்டு (வின்); bond- age. 2. தொடர்பு; (மாறனலங். 281, உரை. பக்.477.) relation, conection.

[பெந்தகம் → பெந்தம்]

பெந்தர் *pendar,* பெ. (n.) *பெத்தர்* பார்க்க. see *pettar.* (யாழ்.அக.).

[பெத்தர் – பெந்தர்]

பெந்தனம் *pendaṉam,* பெ. (n.) *பெந்தம்.* (யாழ். அக.) பார்க்க; see *pendam.*

[பெந்தம் – பெந்தனம்]

பெந்தி–த்தல் *pendi-,* செ.குன்றாவி. (v.t.) 1. *பந்தி* பார்க்க;see*pandi.* 2. சித்திரப்பாக்களில் எழுத்துகளை அடைத்தல்; to confine, as letters of a stanza with in the figure of a particular shape.'*சக்கரத்தினுள் அக்கரந் தடுமாறப் பெந்திப்பது*' (மாறனலங். 281, உரை. பக்.477.)

[பந்து → பெந்தி]

பெந்து *pendu,* பெ. (n.) *பந்து'* பார்க்க; end *pandu'.*

[பந்து → பெந்து]

பெந்தை *pendai,* பெ. (n.) 1. அருவருப்பாய்ப் பருத்தது; monstrosity. 2. கலப்பையின் ஒருறுப்பு; a part of a ploughshare.

*[பெத்தை → பெந்தை
பெரிது → பெர்த்து → பெத்து→பெத்தை]*

பெந்தைக்கயிறு *pendai-k-kayiṟu,* பெ. (n.) 1. நன்றாய்த் திரிக்காத கயிறு; rope not neatly twisted. 2. கொழுவுள்ள கட்டையைக் கலப்பையோடிணைக்குங் கயிறு; rope that binds the parts of a phoughshare.

[பெந்தை + கயிறு]



பெந்தைவிழி *pendai-viḻi,* பெ. (n.) 1. உருண்டை விழி; goggle-eyes. 2. அச்சத்தால் கண் மருண்டு பார்க்கை; staring or rolling of the eyes, as in bewilderment.

[பேம் → பேந்தை → பெந்தை + விழி]

பெம்மான் *pemmāṉ,* பெ. (n.) 1. இறைவன்; god. *'பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே'* (தேவா.61,1.) 2. பெரியோன்(வின்); great man.

[பெருமகன் → பெருமான் → பெம்மான்]

பெய்¹–தல் *pey-,* செ.கு.வி. (v.i.) *1. மேனின்று பொழிதல்;* to rain, fall, as dew or hail. *'பெய்யெனப் பெய்யு மழை'* (குறள்.55.)

பொய் → பெய். பெய்தல்= துளைவழி நீர் ஒழுகுதல் போல முகிலினின்று மழை ஒழுகுதல். (வே.க.3; 126)

பெய்²–தல் pey-, செ.குன்றாவி. (v.t.) 2. பொழிதல்; to pour down, pour into. *'பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்'* (புறநா.115.) 3. கலமுதலியவற்றில் இடுதல்; to put, place, lay, put into serve up, as food in a dish. *'உலைப்பெய் தடுவது போலுந்துயர்'* (நாலடி.14.). 4. எறிந்து போகவிடுதல்; to throw out, throw aside *'பார்த்துழிப் பெய்யிலென்'* (நாலடி.26.). 5. இடைச் செருகுதல்; to insert, interpolate as in a text. 6. கொடுத்தல்; to give, confer *'உயிர்க்கு....வீடுபேறாக்கம் பெய்தானை'* (தேவா.975,7.) 7. அமைத்தல்; to make; to settle, appoint *'பிரான் பெய்த காவு கண்டீர்... மூவுலகே'.* (திவ். திருவாய்.6,3,5.) 8.பரப்புதல்; to spread. *'தருமணல் தாழப்பெய்து'* (கலித்.114.) 9. புகவிடுதல்; to discharge. *'கருந்தலை யடுக்கலி னணைகள்.... பெருங்கடலிடைப் பெய்து'* (கம்பரா. கும்ப. 248.) 10. எழுதுதல்; to writedraw, *'பெய்கரும் பீர்க்கவும் வல்லன்'* (கலித்.143.). 11. அணிதல்; to put on, as harness; to wear, as jewells, cloths, flowers. *'மைந்தர் தண்டார் மகளிர் பெய்யவும்'* (பரிபா.20,21.). 12. பயன்படுத்தல்; to bring into play; to use. *'பெய்திறனெல்லாம் பெய்து பேசினேன்'* (கம்பரா. கும்ப.169.) 13. கட்டுதல்; to tie, faster. *'புணர்நாரப் பெய்த புனைவின் கண்ணி'* (பெரும்.பாண். 218). 14. சிறுநீர் முதலியன ஒழுகவிடுதல் (கொ.வ.).; to discharge, as urine; to shed, as tears. 15. தூவுதல்; to strew, scatter, as flowers. 16. பங்கிடுதல் (திவா.) to distribute 16. செறித்தல் (பிங்.). to crowd, being close together. *'பெய்ம்மணி யேயதேர்'* (கம்பரா. நாக பாச. 128)

ம. பெய்யுக

[பொய் → பெய்]

பெய்கலம் *pey-kalam,* பெ.(n.) ஏனம்; pot or vessel.

[பெய் + கலம்.]

பெய்தளத்தல் *peydalattal,* பெ. (n.) படியால் அளக்கும் அளவை வகை; (தொல். எழுத்.7, உரை.) measuring by a vessel of standard capacity.

[பெய் – பெய்து + அளத்தல் – 'தல் தொ.பெ.ஈறு]

பெய்துரை *peydurai,* பெ. (n) 1. இடைப்பெய்து உரைப்பது; insertion, interpolation. 2. பாயிரம் (பிங்.)preface, introduction.

[பெய் – பெய்து + உரை]

பெய்வளை *pey - valai,* பெ.(n) பெண்பால்; lady, as wearing bracelets. '*பேதை பெருந்தோளி பெய்வளா யென்னும்*' (நாலடி. 47.).

[பெய் + வளை]

பெயர் *peyar,* பெ.(n) 1. பெயர்; name, appellation, designation, epithet. '*மறவர் பெயரும் பீடுமெழுதி*' (அகநா. 67.). 2. புகழ்; reputation, renown, celebrity, fame. '*பெரும் பெயர் மீளி*' (கலித். 17.) 3. பெருமை (சூடா.); greatness. 4. ஆள் person; எத்தனை பெயர் வந்தார்கள்? 5. வடிவு; shape, form. '*கூந்த லென்னும் பெயரொடு*' (பரிபா. 3,31.) 6. பொருள்; property, substance '*பெற்ற பெரும்பெயர் பலர்கை யிரீஇய*' (பதிற்றுப்.90,23.) 7. பொருளிலக்கணங் கூறு நூல்; treatise dealing with porul '*சொற்பெயர் நாட்டங் கேள்வி*' (பதிற்றுப். 21,1.) 8. இதன் பொருட்டு; alleged cause, pretext. '*திருவிழா வென்பதோர் பெயரால்*' (காஞ்சிப்பு. நகர. 70.). 9. சூளுரை; vow '*பொருவேமெனப் பெயர் கொடுத்து*' (பட்டினப். 289.) 10. பெயர்ச்சொல் (தொல்.எழுத். 180.) பார்க்க. (gram.) 11. முதல் வேற்றுமை; (gram.) nominative case. '*அவைதாம் பெயர் ஐ யொடுகு*' (தொல். சொல். 64.).

தெ. பேரு; க. பேசர்; ம. பேயர்;
து. புதேரு; பட. ஹெசரு.

[பெய் – பெயர்]

பெயர்—தல் *peyar-,* செ.கு.வி. (v.i.) 1. போதல் (திவா.); to move, leave, stir, rise, depart. '*திசை யெங்கணும் பெயர்ந்தான்*' (கம்பரா. நிகும்பலை. 101.). 2. பிறழ்தல்; to turn about, shift, veer. '*நிலம் பெயரினும் நின்சொற் பெயரல்*' (புறநா.3.). 3. மீளுதல்; to return, come back. '*சூழ்ந்த நிரை பெயரல்*' (பு.வெ.1,10.) 4. மாறுதல்; to vary, change. '*ஆணெனத் தோன்றி யலியெனப் பெயர்ந்து*' (திருவாச. 3,134.) 5. சிதைவுறுதல்; to fall into ruins. '*கட்டடம் பெயர்ந்து போயிற்று*' 6. இணைப்பு நெகிழ்தல்; to grow loose; to be detached. '*தளம் பெயர்ந்து விட்டது*' 7. கூத்தாடுதல் (பிங்.); to dance. 8. சலித்தல்; to shake. '*பெயரும்.... பிதற்றும்*'(கம்பரா.சூர்ப்ப. 98.). 9. அசையிடுதல்; to chew the cud. '*விளையா விளங்கணாற மெல்குபு பெயரா*' (சிறுபாண். 45.) 10. இடம் விட்டு மாறுதல் (வின்.); to be displaced, dislocated. 11. பிரிதல்; to be separated; to stand aside நிலம் பெயர்ந்துறைதல் (தொல். தோ பொ. 169.). 12. கிளர்தல்; to be agitated '*ஓதநீரிற் பெயர்பு பொங்க*' (புறநா. 22.). 13. தேய்தல்; to be rupped (w.) 14. பணம் நடமாடுதல்; to pass from hand to hand., as currency. '*அந்த ஊர் எப்பொழும் பணம் பெயரக்கூடியது*' 15. தண்டப்படுதல் (வசூலாதல்); to be collected, as money or debt. '*ஆயிர உருபா பெயர்ந்தது*'

[பெய் – பெயர்]

பெயர்³–த்தல் *peyar-,* செ.குன்றாவி. (v.t.) 1. போக்குதல்; to remove, displace, dislodge, dislocate, unseat. '*உடைமை மயலாகும் மற்றும் பெயர்த்து*' (குறள். 344.) 2. நிலைமாறச் செய்தல்; to dispel; to shake from its basis. '*சூறை மாருதத் தெறியது வளியிற் கொட்கப் பெயர்க்கும் குழகன்*' (திருவாச .3,12.) 3. அப்புறப்படுத்துதல்; to drive away, as foes; to remove from one place to another, as cattle. '*தென்னவற் பெயரிய.... தொன்முதுகடவுள்*' (மதுரைக். 40.) 4. திருப்பிப் போடுதல் (யாழ். அக.); to turn over, as a cake 5. பிடுங்குதல்; to uproot, as a plant; to force open, as a door. 6. கெடுத்தல்; to blow up; to blast; to ruin. '*பிணம் பிறங்கப் பெயர்த்திட்டன்று*' (பு. வெ. 1,10.) 7. ஒடுக்கிக் கொள்ளுதல்; to absorb, gather into one's self. '*பல்லுருவம் பெயர்த்துநீ*' (கலித். கடவுள்.). 8. பிரித்தல்; to separate. '*நாணடப் ரெயர்த்தனமக்குமாங் கொல்லாது*' (கலித். 47.) 9. மீட்டுதல்; to redeem, save, recover. '*நல்வளைத் தோளியைப் பெயர்க்கும் விச்சையின்*' (பெருங். வத்தவ. 6,40.). 10. தண்டுதல் (வசூலித்தல்) to collect, realise. '*நூறு உருவா பெயர்த்தேன்*' 11. செலுத்துதல்; to lead, push, drive.'*இனிய சொல்லி யின்னாங்குப் பெயர்ப்பது*' (கலித். 14.). 12. விடுத்தல்; to discharge. '*வெஞ்சரம்.... இராகவன் சிலை நின்று பெயர்த்தான்*' (கம்பரா. முதற்.228.)

[பெயர்தல் (த.வி.) – பெயர்த்தல் (பி.வி.)]

'த்' பிறவினையாக்க உருபு.

பெயர்க்கணக்கு *peyar-k-kaṇakku,* பெ. (n.) 1. பங்கீடு(வின்); distribution of shares. (n.) 2. பேரேடு(இ.வ.); ledger.

[பெயர் + கணக்கு]

பெயர்க்கு *peyarkku,* வி.அ. (adv.) பெயர் மாத்திரையாய்; nominally; for form's sake. '*பெயர்க்கு மாத்திரம் அவன் அரசன்*'

[பெயர் – பெயர்க்கு.]

பெயர்ச்சி[1] *peyarcci,* பெ. (n.) இடமாறுகை; shifting, moving. காரி(சனி)ப் பெயர்ச்சி அடுத்த திங்கள் நிகழும் (உ.வ)

[பெயர்² – பெயர்த்தி – பெயர்ச்சி.]

பெயர்ச்சி[2] *peyarcci,* பெ.(n.) இடமாற்றுகை; removal, displacement, dislocation.

[பெயர்³ – பெயர்ச்சி.]

பெயர்ச்சூத்திரம் *peyar-c-cūttiram,* பெ. (n.) *பெயர் நூற்பா* பார்க்க; see *peyar nūrpā*

[பெயர் + சூத்திரம்.]

skt. sūtra > *த சூத்திரம்.*

பெயர்ச்செவ்வெண் *peyar-c-cevveṇ,* பெ. (n.) பெயர்களில் எண்ணிடைச் சொல் தொக்கு விட்டிசைத்து வருந்தொடர் (நன். 428.); (gram.) a series of nowns with the connecting conjunction understood there being a pause between the nowns in utterance. dist. fr. u mmai-t-tokai.

[பெயர் + செவ்வெண்.]

பெயர்ச்சொல் *peyar-c-col.,* பெ. (n.) நால்வகைச் சொற்களுள் பொருளைக் குறிக்க வழங்குச்சொல்; (gram.) noun or pronoun, one of four parts of speech.

[பெயர் + சொல்.]

பெயர்த்தி[1] *peyartt,* பெ. (n.) 1. மக்கள் வயிற்றுப் பெண்; grand-daughter, as bearing the same name as her grandmother 2. பாட்டி(யாழ்ப்.); grandmother.

[பெயர் → பெயர்த்தி]

பெயரன் (ஆ.பா.) → பெயர்த்தி (பெ.பா) 'தி' (பெ.பா.ஈறு)

பெயர்த்தி[2] *peyartti,* பெ. (n.) கோள் முதலிய வற்றின் பெயர்ச்சி; movement, as of a planet from one irāši to another. '*சனிப் பெயர்ச்சி*'.

[பெயர்[2] – பெயர்த்தி.]

பெயர்த்திரிசொல் *peyar-t-tiri-šol,* பெ.(n.) 1. திரிந்து வழங்கும் பெயர்ச் சொல்.(சீவக. 1774, உரை.); altered or changed form of a noun. 2. தம்பொருளை அரிதில் விளக்கும் பெயர்ச் சொல் (நன். 272, உரை.); archaic or classical noun.

[பெயர் + திரிசொல்.]

பெயர்த்து *peyarttu,* வி.எ (adv.) *பெயர்த்தும்* பார்க்க, see *peyarttum.* '*பெயர்த் தொற்றும்*' (கலித். 103.)

[பெயர் – பெயர்த்து.]

பெயர்த்துக் கொடுக்கும் வலி *peyarttu-k-kodukkum-vali,* பெ.(n.) பேறுகால வலிக்குமுன் சிறிது சிறிதாக வலிக்கும் நோவு(இ.வ.); preliminary labour pains due to movements of the foetus.

[பெயர்த்து + கொடுக்கும் + வலி]

பெயர்த்துநடு-தல் *peyarttu-nadu,* செ.குன்றாவி. (v.t.) நாற்றுப்பிடுங்கி நடுதல்; to transplant.

[பெயர்த்து + நடு]

பெயர்த்தும் *peyarttum,* வி.எ. (adv.) பின்னும்; again, in return. '*ஞாயிறு பெயர்த்து நின்.... குடகடற் குளிக்கும்*' (புறநா. 2.)

[பெயர் → பெயர்த்தும்]

பெயர்த்துரை *peyar-t-t-urai,* பெ.(n.) திரும்பக் கூறுதல்; repetition. (குறள், 944,உரை.)

[பெயர்த்து + உரை]

பெயர்த்தெழுது-தல் *peyartteludu,* செ.குன்றாவி. (v.t.) 1. படியெடுத்தல்(வின்); to copy, transcribe. 2. மொழிபெயர்த்தல்(இ.வ.); to translate from one language to another.

[பெயர் → பெயர்த்து + எழுது]

பெயர்திறம் *peyar-tiram,* பெ. (n.) முல்லை யாழ்த்திறவகை(பிங்.); (mus.) an ancient secondary melody-type of mullai-class.

[பெயர் – திறம்]

பெயர்ந்து *peyarndu,* வி.எ. (adv.) 1. மறுபடியும்; again. '*பெயர்ந்தொரு சிகரந்தேடின்*' (கம்பரா. கும்பகருண.184) 2. பிற்பாடு; presently, afterwards. '*பெயர்ந்துவா*'.

[பெயர் → பெயர்ந்து]

பெயர் நூற்பா *peyarnūṟpā,* பெ. (n.) குறி நூற்பா (குறிச்சூத்திரம்)(யாப்.வி.பாயி.பக்.11) (இலக்) nūṟpa dealing with technical terms.

[பெயர் + நூற்பா]

பெயர்நேரிசை *peyar-nērišai,* பெ. (n.) சிற்றிலக்கியவகை தொண்ணூற்றாறனுள் பாட்டுடைத் தலைவன் பெயர் சார்ந்து வர50, 70 அல்லது 90 நேரிசை வெண்பாக்களால் இயற்றப்படும் சிற்றிலக்கிய வகை (இலக்.வி. 830.); a poem of 50, 70 or 90 stanzas of nēršai veṉbā, each mentioning the name of a patron or hero, one of 96 šiṟṟilakkiyam. q.v;

[பெயர் + நேரிசை]

பெயர்ப்பகுதி *peyar-p-pagudi,* பெ.(n.) பகுசொல்லில் பெயராகிய பகுதி; (gram.) nominal base of a derivative word.

[பெயர் + பகுதி]

பெயர்ப்படு-த்தல் *peyar-p-paḍu,* செ.குன்றாவி. (v.t.) பேரிடுதல்; to name after. '*மூதூர் நின் பெயர்ப்படுத்தேன்*' (மணிமே.பதி. 31.).

[பெயர் + படு-,]

பெயர்ப்பு *peyarppu,* 1. பெயரச் செய்கை; shifting, eradication. 2. மொழிபெயர்ப்பு (இ.வ.) translation.

[பெயர் – பெயர்ப்பு]

'பு' (சொல்லாக்க ஈறு)

பெயர் படை-த்தல் *peyar-paḍai,* செ.கு.வி. (v.i.) பேர்படைத்தல்; to become famous.

[பெயர் + படை]

பெயர்பாதி *peyar-pādi,* பெ. (n.) சரிபாதி; (கொ.வ.) exact half.

[பெயர் + பாதி]

பகுதி – பாதி

பெயர்புறம் *peyar-puṟam,* பெ. (n.) புறங்கொடுக்கை; retreating '*பெயர்புறத் தார்த்து*' (புறநா.35.)

[பெயர்[2] + புறம்]

பெயர்ப்போலி *peyar-p-pōli,* பெ. (n.) உரிச்சொல்வகை (தொல்.சொல்.297,சேனா); word partaking of the nature of a noun.

[பெயர் + போலி]

பெயர்பொறி-த்தல் *peyar-poṟi-,* செ.குன்றாவி. (v.t.) புகழை நிலைநிறுத்துதல்; to be distinguished. '*பெயர் பொறிக்கும் பேராண்மையில்லாக் கடை*' (நாலடி.199)

[பெயர் + பொறி]

பெயர்போ-தல் *peyar-pō,* பெ. (n.) செ.கு.வி. (v.i.) புகழ்பெறுதல்; to be renowned. celebrated famous.

[பெயர் + போ]

பெயர்வழி[1] *peyar-vaḻi,* பெ. (n.) 1. ஆள்; individual. 2. தலைமுறை; genealogy (w.)

[பெயர் + வழி]

பெயர்வழி[2] *peyarvaḻi,* பெ.(n.) பொருளட்டவணை; list, catalogue

[பெயர் + வழி]

பெயர் வேற்றுமை *peyar-vērrumai,* பெ.(n.) முதல் வேற்றுமை; (gram) nominative case. '*அவ்வாறும் பெயர் வேற்றுமைப் பயனிலையாம்*' (தொல். சொல். 66, சேனா.)

மறுவ. எழுவாய் வேற்றுமை

[பெயர் – வேற்றுமை]

வேற்றுமை = பொருள் வேற்றுமை செய்வன. (நன். 261) பெயர் வேற்றுமை என்பது ஒரு சொற்றொடரின் எழுவாய் இது என்று உணர்த்துவதாகும். எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை. உருபேற்றல் பெயர்க்கு இலக்கணமாகும். பெயர் வேற்றுமை பயனிலை கொள்ளாத வழியும் பெயர் வேற்றுமையேயாகும்.

பெயரகராதி *peyar-agarādi.* பெ.(n.) சதுரகராதியில் சொற்பொருளை விளக்கும் பகுதி; first section of Beschi's cadur-agarādi, containing homonyms.

[பெயர் – அகராதி]

பெயரட்டவணை *peyar-aṭṭavaṇai,* பெ. (n.) பெயர்ப்பட்டியல்(இ.வ.); index of names.

[பெயர் + அட்டவணை]

பெயரடி[1]–த்தல் *peyar-adi-,* செ.குன்றாவி. (v.t.) ஒருவன் பெயரைப் பதிவுப் புத்த கத்தினின்று நீக்குதல்; to score out a name, as from a roll or register. (தற்.) "மாணவர் ஐவர் சம்பளம் கட்டாமையால் பெயரடித்துவிட்டடார்கள்"

[பெயர் – அடி]

பெயரடி[2] *peyar-aḍi,* பெ. (n.) *பெயர்ப்பகுதி.* பார்க்க; see *peyar-p-pagudi*

[பெயர் + அடி]

அடி = முதலானது, பகுசொல்லிற் பெயராகிய பகுதி.

பெயரப்பெயர *peyara-p-peyara,* வி.எ. (adv.) மீண்டும் மீண்டும்; again, and again. '*பெயரப் பெயரப் பார்த்தான்*' (யாழ்ப்.)

[பெயர்[2] – அ + பெயர் + அ]

'அ' வினையெச்ச ஈறு

பெயரன் *peyaraṉ,* பெ.(n.) பெயரையுடையவன்; one who beavis a name. '*எந்தை பெயரனை*' (கலித். 81) 2. மகன் அல்லது மகளிடம் பிறந்த பெயரன்; grandson, as bearing the grandfather's name. '*தனிக் காதலைப் பெயரனை*' (கம்பரா. அதிகாய.117.) 3. பாட்டன் (யாழ்ப்); grandfather.

ஒருவனுக்கு மகனின் மகன் பேரன் எனப்படுவான். பெயரன் என்பது பேரன் என மருவிற்று. பாட்டன் பெயரைப் பேரனுக்கிடுவது பண்டை வழக்கமாதலால், பேரனுக்கு அப்பெயராயிற்று. சிலர் பாட்டனையும் பேரன் அல்லது பேரனார் என்பர். அரசகேசரி, பரகேசரி, எனற பட்டங்கள், பிற்காலச் சோழர்க்கு ஒன்றுவிட்டு வழங்கியதும் இம்முறை பற்றியே. (வே.கட்.26)

[பேரன் → பெயரன்]

பெயர் → பெயரன்= (முதற்காலத்திற் பாட்டன் பெயரைப் பெற்றுவந்த) மகன்மகன் (வே.க.127)

பெயராயிரு–த்தல் *peyarāy-iru-,* செ.கு.வி. (v.i.) 1. புகழுண்டாதல்; to be famous, celebrated 2. வெளிப்பாடு; to be rumoured, to be noised abroad.

[பெயர் + ஆய் + இரு]

பெயராளி *peyar-āḷi,* பெ. (n.) புகழ்மிக்கவன் (யாழ்.அக.); person of great celebrity.

[பெயர் + ஆள் + இ]

பெயரிடுதல் *peyar-iḍu-*, செ.கு.வி. (v.i.) பெயர் சூட்டுதல்; to give a name; to perfrom the rite of naming a child. "பெயரிடுதல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டியதில்லை."

[பெயர் + இடு]

பெயரிடை நிலை *peyar-iḍai-nilai*, பெ.(n.) பெயரின் முதனிலை இறுதிநிலை கட்கு இடைநிற்கும் எழுத்து (நன். 141, உரை.); (gram.) medial letter between the root and suffix of a noun as ñ in ariñaṉ.

[பெயர் + இடைநிலை]

பெயரிய *peyariya*, பெ.எ. (adv.) 1. பெயர்பெற்ற; having a name. '*இருபாற் பெயரிய.... மூதூர்*' (புறநா. 202.) 2. பெயரால் அழைத்த; of calling by name. '*கோவெனப் பெயரிய காலை*' (புறநா. 152.)

[பெயர் – பெயரிய]

பெயரியல் *peyar-iyal*, பெ. (n.) சொல்லதி காரத்திற் பெயர்ச்சொல்லிலக்கணங் கூறும் பகுதி (தொல்.); (gram.) chapter on nouns.

[பெயர் + இயல்]

பெயரியற்சொல் *peyar-iyaṟ-col*, பெ. (n.) தன் பொருளை இயல்பில் விளக்கும் பெயர்ச்சொல் (நன். 269); noun that naturally suggests its meaning.

[பெயர் + இயல் + சொல்]

பெயரிரவல் *peyar-iraval*, பெ. (n.) உடைமைக்கு உரியவர் பெயரை மறைத்து உரியரல்லாதார் பேரால் நடத்தும் நடவடிக்கை; benami transaction.

[பெயர் + இரவல்]

பெயரின்மை *peyar-iṉmai*, பெ. (n.) இறைவனெண்குணத்தொன்றான சொல்லமுடியாத தன்மை(பிங்.); namelessness, one of iṟaivaṉ-eṇ-guṇam. q.v.

[பெயர் + இன்மை]

பெயரின்னிசை *peyar-iṉṉišai*, பெ. (n.) சிற்றிலக்கிய வகை தொண்ணூற் றாறனுள் பாட்டுடைத் தலைவன் பெயர் சார்ந்துவர 50, 70 அல்லது 90 இன்னிசை வெண்பாக்களால் இயற்றப்படும் சிற்றிலக்கிய வகை. (இலக். வி. 825.) (சது.); a poem of 50, 70 to 90 stangas of iṉṉišsi-veṇbā each mentioning the name of a patron or hero, one of 96 širṟilakkiyam.

[பெயர் + இன்னிசை]

பெயருரிச்சொல் *peyar-uri-c-col*, பெ. (n.) பெயர்ச்சொல்லைத் தழுவிவரும் சொல்(இ.வ.); adjective, as qualifying a noun.

[பெயர் + உரிச்சொல்]

பெயரூர் *peyar-ūr*, பெ. (n.) பெயரும் பிறந்தவிடமும்(வின்); name and native place.

[பெயர் + ஊர்].

பெயரெச்சம் *peyar-eccam*, பெ. (n.) பெயர்கொண்டு முடியும் வினைக்குறை (நன். 340.); பெயரை எச்சமாக உடையது. relative participle, as requiring a noun to complete the sense.

[பெயர் + எச்சம்]

பெயரெஞ்சுகிளவி *peyar-eñju-kiḷavi*, பெ. (n.) *பெயரெச்சம்* (தொல். சொல். 238.) பார்க்க; see *peyar-eccam*

[பெயர் + எஞ்சு + கிளவி]

பெயரெடு–த்தல் *peyar-eḍu-,* செ.கு.வி. (v.i.) 1. பெயர் பெறுதல்; to get a name. 2. *பெயரடி* பார்க்க; see *peyar-aḍi*

[பெயர் + எடு]

பெயரெழுத்து *peyar-eḻuttu,* பெ. (n.) எழுத்து வகை(பிங்.); a kind of letter.

[பெயர் + எழுத்து]

பெயரேடு *peyar-ēḍu,* பெ. (n.) பேரேடு(நாஞ்.); ledger.

[பெயர் + ஏடு]

பெயல். *peyal,* பெ. (n.) 1. பொழிகை; showering *'ஒல்லாது வானம் பெயல்'* (குறள். 559.) 2. மறை; rain *'மன்னவ னாட்ட பெயலும் விளையுளுந் தொக்கு'* (குறள். 545.) 3. மழைத்துளி (திவா.); rain drop. 4. முகில்; cloud. *'பெயறுளி முகிழென'* (கலித். 56.)

[பெய் – பெயல்]

பெயலை *peyalai,* பெ. (n.) மழை(சது.); rain "பெயலை பொய்த்தால் பெருந்தீங்கு" (இ.வ)

[பெய் → பெயல் → பெயலை]

பெயாதனம் *peyādanam,* பெ. (n.) வேங்கை (மலை.) பார்க்க; East India Kino.

பெரட்டு *peraṭṭu,* பெ. (n.) புரட்டு; deception. *'பெரட்டும் உருட்டும் வேதனை செய்வதும்'* (கனம் கிருஷ்ணையர், கீர்த்.21.).

[புரட்டு → பெரட்டு]

பெரி *peri,* பெ. (n.) சிறுநாகப்பூ; iron-wood of ceylon

பெரிசு *perišu,* பெ. (n.) *பெரியது* (யாழ்.அக.) பார்க்க; see *periyadu*

[பெரியது– பெரிது – பெரிசு] (கொ.வ.)

பெரிது[1] *peridu,* பெ. (n.) பெரியது; that which is great big or large. *'நன்மை கடலிற் பெரிது'* (குறள். 103.)

[பெரியது– பெரிது]

பெரிது[2] *peridu* வி.அ. (adv.) மிகவும்; greatly. *'கலங்குவன் பெரிதென'* (கலித்.27.)

[பெரியது– பெரிது]

பெரிய *periya,* பெ.அ. (adf.) 1. பெரிதான large, great. *'பெரிய மேருவரையே சிலையா மலைவுற்றார்'* (தேவா. 1114.9.) 2. மூத்த; elder. *'பெரிய தாயார்'* 3. இன்றியமையாத; importan great. *'பெரிய செயல்'* 4. நல்ல; noble. பெரிய நடை.

[பெரு(மை) பெரி – ய]

பெரியகம்பு *periya kambu,* பெ. (n.) கம்புப் பயிர்வகை; large bulrush millet, pennisetum typhoideum.

[பெரிய + கம்பு]



பெரியகரடி *periya-karadi,* பெ. (n.) எழுமுனிமண்டலம்; the great bear. (pond.)

[பெரிய + கரடி]

பெரியகருப்பன் *periya-karuppan,* பெ. (n.) ஒரு சிற்றூர்த் தெய்வம்(இ.வ.); a village deity.

[பெரிய + கருப்பன்]

பெரியகாட்டுச்சாதி *periya-kāṭṭu-c-cādi,* பெ. (n.) காட்டுச் சாதி(M.M.887); malabar nutmeg.

[பெரிய + காட்டுச்சாதி. skt jāti. *த.சாதி]*

பெரியகாடை *periya-kāḍai,* பெ. (n.) காடை வகை(M.M. 75); common quail, coturnix communis.

[பெரிய + காடை]



பெரியகிளி *periya-kiḷi,* பெ. (n.) கிளிவகை; large indian parakeet, palacornis nepalensis.

[பெரிய + கிளி]

பெரியகுடி *periya-kuḍi,* பெ. (n.) *பெரிய குடியானவன்* பார்க்க; see *periya kuḍiyāṉavaṉ*

[பெரிய + குடி]

பெரியகுடியானவன் *periya-kuḍiyāṉavaṉ,* பெ. (n.) 1. தலைமை வேளாளன்; biggest tenant or cultivator in a village. 2. சிற்றூரின் பெருஞ்செல்வர்; mirasdār.

[பெரிய + குடியானவன்]

பெரியகுணம் *periya-guṇam,* பெ. (n.) 1. உயர்ந்தபண்பு; nobility, liberal disposition, magnanimity. 2. உலகப் பற்றின்மை(வின்) superiority or indifference to worldly greatness, honours or pleasure.

[பெரிய + குணம்]

பெரியகை *periya-kai,* பெ. (n.) 1. தாராளமான கை(யாழ்.அக.); liberal or bountiful hand. 2. பணக்காரன்(இ.வ.); wealthy person 3. சாய்கால் மிக்க ஆட்சி(வின்); influential party.

[பெரிய + கை]

பெரியகோயில் *periya-koyil,* பெ. (n.) திருவரங்கம்; Thiruvarangam *'நஞ்சேவகனார். மருவிய பெரியகோயில்'* (திவ். திருமாலை.11.) 2. தஞ்சைப் பெரியகோயில்; Tanjore bigtemple.

[பெரிய + கோயில்]



பெரியசம்பா *periya-šambā,* பெ. (n.) ஆறுமாதத்திற் பயிராகும் சம்பா நெல்வகை (விவசாய.1); a kind of šambā paddy, maturing in six months.

பெரியசீயர் *periya-šiyar,* பெ. (n.) மணவாள மாமுனிகள்; an ācārya of the teṉkāli sri vaisṇavar.

[பெரிய + சீயர்]

skt.jiyar-**த.**சீயர்

பெரிய சேரான் *periya-cērāṉ,* பெ. (n.) தேன் சேரான்(யாழ்ப்.) glabrous marting-nut.

[பெரிய + சேரான்]

பெரிய தக்காளி *periya-takkāli,* பெ. (n.) தக்காளி வகை(M.M.365.); indian winter-cherry, physalus peruuiana.

[பெரிய + தக்காளி]

பெரிய தகப்பன் *periya-tagappaṉ,* பெ. (n.) 1. தந்தையின் மூத்தஉடன்பிறந்தான்; father's elder brother. 2. தாயின் மூத்த உடன் பிறந்தாளின் கணவன்; husband of mother's elder sister.

மறுவ. பெரியப்பன்

[பெரிய + தகப்பன்]

பெரியதகரை *periya-tagarai,* பெ. (n.) மரவகை(m.m. 155.); West Indian bead tree.

[பெரிய + தகரை]

பெரியதட்டு *periya-taṭṭu,* பெ. (n.) கப்பலின் மேற்பகுதியான தளம்(naut.); deck.

[பெரிய + தட்டு]

பெரியதம்பிரான் *periya-tambirāṉ,* பெ. (n.) 1. தம்பிரானுள் தலைவர்(வின்); chief among the non-brahmin saiva ascetics of a mutt. 2. வண்ணார் முதலியோர் வணங்கும் சிவ திருமேனி; a form of siva, worshipped by washerman and others 3. அங்காளம்மை(குஞ்.); a form of goddess Durgā.

[பெரிய + தம்பிரான்]

பெரியதலை *periya-talai,* பெ. (n.) பெரியவன்(கொ.வ.); a prominent person

[பெரிய + தலை]

பெரியதனக்காரன் *periya-daṉa-k-kāraṉ,* 1. சிற்றூர் மணியக்காரன்(R.T.) village headman. 2. சாதித் தலைவன்(இ.வ.); hereditary headman of a caste. 3. சிற்றூரில் நில உடைமையாளர்; mirāsdār, chief landholder in a village.

[பெரியதனம் → பெரியதனக்காரன்]

பெரியதனம் *periya-daṉam,* பெ. (n.) 1. பெருமை (வின்.); dignity, honour. 2. மேட்டிமை (வின்.); pride, arrogance, haughtiness 3. மேற்பார்வை (வின்.); superintendence 4. பார்க்க, *பெரியதனக்காரன்* (கொ.வ.) see *periyataṉakkāraṉ.*

[பெரிய + தனம்]

தனம் = தன்மை

பெரியதாக்கு–தல் *periyadākku-,* செ.குன்றாவி. (v.t.). 1. வளர்த்தல்; to cause to grow. இளங்கன்றைப் பெரியதாக்கும் பொறுப்பு இவருடையதானது(உ.வ.) 2. பலவாக்கு; to mulfity. 3. பருமனாக்கு; to cause to in create, big.

க. பெர்சிசு, பெச்சிசு

[பெரியது + ஆக்கு]

ஆகு. (த.வி.) – ஆக்கு(பி.வி)

பெரியதாய் *pariya-tāy,* பெ. (n.) **1.** தாயின் மூத்த உடன் பிறந்தாள்; mother's elder sister; **2.** தந்தையின் மூத்த உடன் பிறந்தான் மனைவி; wife of father's elder brother.

மறுவ. பெரியம்மா

[பெரிய + தாய்]

பெரியதாயி *pariya-tāyi,* பெ. (n.) ஒரு சிற்றூர்த் தேவதை;(G. SM. D. I. i, 120.) a village goddess.

[பெரியதாய் → பெரியதாயி]

பெரியதிருநாள் *pariya-tiru-nāḷ,* பெ. (n.) ஆண்டுதோறும் நடக்கும் பெரிய திருவிழா; (ஈடு. 10,4,10.); the important annual festival in a temple.

[பெரிய + திருநாள்]

பெரியதிருமடல் *periya-tirumaḍal,* பெ. (n.) நாலாயிரத்தெய்வப்பனுவலில் திருமங்கையாழ்வார் இயற்றிய சிற்றிலக்கிய வகை; a poem in divviya-p-pirabandam by Tirumaṅgai-y-āḷvār.

[பெரிய + திருமடல்]

பெரியதிருமொழி *pariya-tirumoḷi,* பெ. (n.) நாலாயிரத்தெய்வப்பனுவில் திருமங்கை யாழ்வார் இயற்றிய சிற்றிலக்கிய (பிரபந்த)வகை; a poem in Tivya-p-pirabandam, by Tirumaṅgai-y-āḷvār.

[பெரிய + திருமொழி]

பெரியதிருவடி *periya-tiru-v-aḍi,* பெ. (n.) கருடாழ்வார்(ஈடு,1,4,6); Garuḍa, dist. fr. ciṟiya-tiru-v-aḍi.

[பெரிய + திருவடி]

பெரியதிருவந்தாதி *periya-tiru-v-andādi;* பெ. (n.) நாலாயிரத் தெய்வப் பனுவில் வெண்பாக்களால் ஈறுதொடங்கியாக நம்மாழ்வார் இயற்றிய சிற்றிலக்கியவகை; a poem in veṉbā in Tivviya-p-pirabandam by Nammāḷvār.

[பெரிய + திரு + skt.anta *+* ādi *த.அந்தாதி]*

பெரியதிருவோலக்கம் *periya-tiru-v-ōlakkam,* பெ. (n.) அடியாரது பெருங்குழு (வைண); a large assemble of devotees, as in front of a deity.

[பெரிய + திரு + ஓலக்கம்]

பெரியதெள்ளுக்காய் *periyateḷḷukkāy,* பெ. (n.) அவரைக்கொடி வகை(m.m. 238); hegro bean cowitch,

[பெரிய + தெள்ளுக்காய்]

பெரியதேவர் *periyatēvar,* பெ. (n.) **1.** ஆளும் அரசனுக்கு முன் ஆண்ட அரசன்; (கல்); the predecessor of a ruling king. **2.** நந்திதேவர்; the sacred bull Nandi.

[பெரிய + தேவர்]

பெரியநங்கை *periyan-naṅṅgai,* பெ. (n.) *பெரியா நங்கை* (மூ.அ.) பார்க்க; see *periyā naṅgai.*

[பெரிய + நங்கை]

பெரியநடை *pariya-naḍai,* பெ. (n.) நல்லொழுக்கம்; noble courše of conduct.

[பெரிய + நடை]

பெரியநம்பி *periyanambi,* பெ. (n.) இராமாநு சரின் ஆசிரியர்களுள் ஒருவர்; (அஷ்டப். ஊசஅ. 18); vaiṣṇava ācārya, precepor of Rāmānuja.

[பெரிய + நம்பி]

பெரியநறுவிலி *periyanaṟuvili,* பெ. (n.) மரவகை(M.M.802); large sebesten, m.tr., cordia obliqua.

[பெரிய + நறுவிலி]

பெரியநாள் *periya-nāḷ,* பெ. (n.) திருநாள்; festival day.

[பெரிய + நாள்.]

பெரியநோவு *periya-nōvu,* பெ. (n.) கால் நடைகட்கு வரும் வெக்கை நோய் (கால். வி.53); rinderpest, cattleplague.

[பெரிய + நோவு]

பெரியப்பச்சி *periyappacci,* பெ. (n.), *பெரியப்பன்* பார்க்க; see *periyappaṉ.*

[பெரிய + அப்பச்சி]

பெரியப்பன் → பெரியப்பச்சி

பெரியப்பன் *periyappaṉ,* பெ. (n.), தகப்பனுடன் பிறந்த மூத்தவன்; senior paternal uncle; 2. தாயின் தமக்கை கணவன்; mother's elder slster's hustand.

[பெரிய + அப்பன்]

பெரியப்பா *periyappā,* பெ. (n.), *பெரியப்பன்* பார்க்க; see *periyappaṉ.*

[பெரியப்பன் - பெரியப்பா. (வி.)]

பெரியபடி *periya paḍi,* பெ. (n.), நிலைத்த கொள்ளளவுள்ள படி; a standand measure of capaciy.

[பெரிய + படி]

பெரிய பணம் *periya paṇam,* பெ. (n.), 1. கால் உருவா மதிப்புக் கொண்ட காசு (G. Sm. D.l.i. 293); a coin of the value of querter rupee. 2. இரண்டரை 'அணா' மதிப்புக் கொண்ட காசுவகை. (C. G. 154); big fanam = 2 1/2 annas.

[பெரிய + பணம்]

பெரிய பிராட்டி *periya piraṭṭi,* பெ. (n.), திருமகள்; lakshmi, as chief consort of višṇu. பெரிய பிராட்டியார் பக்கல் போலே (ஈடு,10,10,6)

[பெரிய + பிராட்டி]

பெரிய பிள்ளை *periya piḷḷai,* பெ. (n.), ஊர் அல்லது குடும்பத்திற்குத் தலைமையாக மதிக்கப்பட்டவன் (இட.வ.), aged man of a village or a family, held in respect.

[பெரிய + பிள்ளை]

பெரிய புராணம் *periya-purāṇam,* பெ. (n.), நாயன்மார் அறுபத்து மூவர் வரலாறு குறித்துச் சேக்கிழாரால் பாடப்பட்ட நூல்; a hagiologic poem containing the lives of the sixty. three Nāyaṉmār, by cēkkiḻār.

[பெரிய + skt, purāṇa. *த.புராணம்]*

பெரியபுலு *periya - pulu,* பெ. (n.), நூறு(யாழ்ப்.); cant for hundred, as a large ten.

[பெரிய + பல்து (பத்து) → பலு → புலு]

பெரியபுனுகுப் பூனை *periya punugu-p-pūnai,* பெ. (n.), புனுகுப் பூனை வகை; large civet cat, viverra zebettia.

[பெரிய + புனுகுப் பூனை]

பெரிய பூளை *periya-pūḷai,* பெ. (n.), செடி வகை(m.m. 702); large poolay, m. sh. aerna javanica.

[பெரிய + பூளை]

பெரிய பெயர் *periya peyar,* பெ. (n.), பெரும் புகழ்(வின்); great fame, celebrity;

[பெரிய + பெயர்]

பெரிய பெருமாள் *periya perumāḷ,* பெ. (n.), 1. திருவரங்கத்துத் திருமால்; god at srire Tiru-v-arangam. பெரிய பெருமாளரங்க ராடிரூசல் (அஷ்டப். ஊசல். 2. பேரரசன்; (s.l.l. ii. 155) paramount soverign, emperor. பெரியபெருமாள் படிமை ஒன்று.

[பெரிய + பெருமாள்]

பெரிய பேச்சு *periya pēccu,* பெ. (n.), நல்ல பேச்சு; agreat, noble nord. 2. நீண்ட உரையாடல்; long discussion.

க. பெர்மாது.

[பெரிய + பேச்சு]

பெரிய பொருள் *periya poruḷ,* பெ. (n.), பரம்பொருள் (பரப்பிரமம்); Brahma, as the supreme being. "ஞானவானந்தமாம் பெரிய பொருளைப் பணிகுவாம்" (தாயு. திருவருள். பரசிவ. 2)

[பெரிய + பொருள்]

பெரியம்மா *periyammā,* பெ. (n.), *பெரியம்மாள்* பார்க்க; see *periyammāḷ.*

[பெரிய + அம்மா]

பெரியம்மாள் *periyammāḷ,* பெ. (n.), 1. தகப்பனுடன் பிறந்த மூத்தோனின் மனைவி; senior paternal uncle's wife. 2. தாயின் தமக்கை; mother'seldersister. 3. வீட்டுத்தலைவி (இ.வ.); the elder 4. lady or mistress of a house.

[பெரிய + அம்மாள்]

பெரியம்மான் *periyammāṉ,* பெ. (n.), 1. தாயுடன் பிறந்த மூத்தவன்; eldest of mother's brother's. 2. தந்தையினுடைய தமக்கையின் கணவன்; father's elder sister's husband.

[பெரிய + அம்மான்]

பெரியம்மான் பச்சரிசி *periyammāṉ-paccarisi,* பெ. (n.), செடி வகை (M.M. 27); pillbearing shrge, small herb.

[பெரியம்மான் + பச்சரிசி]

நிலத்தை யொட்டிப் படரும் அம்மான் பச்சரிசிச் செடிவகையுளொன்று.

பெரியம்மை *periyammai,* பெ. (n.), 1. *பெரியம்மாள்* (சொ.வ.) பார்க்க; see *periyammāḷ.* 2. அம்மை நோய் வகை (சொ.வ.); small-pox, personifed as a deity. 3. மூதேவி; goddens of misfortuse. மட்டில் பெரியம்மை வாகனமே (தனிப்பா. i, 96, 17).

[பெரிய + அம்மை]

பெரியமரம் *periya-maram,* பெ. (n.), கடலோடிகளின் பெரிய கட்டுமரம்; a large catamaran.

க. பேர்மர

[பெரிய + மரம்]

பெரிய மனசு *periya manašu,* பெ. (n.), *பெரிய மனம்* பார்க்க; *periya-manam.*

[பெரிய + மனம் → மனசு]

பெரியமனம் *periya-manam,* பெ. (n.) **1.** நன்மனம்; noble mind, magnanimity. **2.** தொடர்பு பற்றாதும் கைம்மாறு கருதாதும் எல்லா உயிர்கள் மேலும் இயல்பாகச் செல்லும் இரக்க உணர்வு – அருள் (இ.வ.); favour.

[பெரிய + மனம்]

பெரிய மனிதன் *periya manidan,* பெ. (n.), **1.** மேன்மையாளன்; great man. **2.** செல்வமும் சாய்காலு முள்ளவன்; wealthy, influential man. **3.** உயர்ந்த நிலையிலுள்ளவன்; man of position, official or otherwise. **4.** அகவை முதிர்ந்தோன்; aged man. **5.** வண்ணாரினத் தலைவன்(E.T.VII. **317**); head man of a caste, as of washerman.

[பெரிய + skṭ-Manu-ša→ *மனுஷ்யா→ த. மனிதன்]*

பெரிய பெண் *periyapen,* பெ. (n.), **1.** அகவை முதிர்ந்தவள்; aged woman. **2.** தகுந்த நிலையிலுள்ளவள்; influential woman; woman of position. **3.** பருவமடைந்தவள்; a girl who attainded puberty.

[பெரிய + பெண்]

பெரியமனுசி *periyamanusi,* பெ. (n.), *பெரிய பெண்* பார்க்க; see *periya pen.*

[பெரிய + skṭ. Mānusi- *மனுஷி → த. மனுசி]*

பெரியமனுசியா–தல் *periyamanuriyā,* செ.கு.வி. (n.),. பார்க்க; see *periyalāvalatal.*

[பெரிய + skṭ-Manusi-*மனுஷி → த. மனுசி + ஆ]*

பெரியமாவிலிங்கம் *periya-māvilingam,* பெ. (n.), மாவிலிங்க வகை; a species of garlic pear.

[பெரிய + மாவிலிங்கம்]

பெரிய முப்பழம் *periya-muppāḷam,* பெ. (n.), பாட்டின் மரபு கூறும் ஒரு பழைய நூல் (யாப். வி. பக். **516**); an ancient treatise on poetics, not now extant.

[பெரிய + முப்பழம்]

பெரிய மூக்கிரட்டை *periya mukkiraṭṭai,* பெ. (n.),மூக்குத்திக்கொடிவகை(ட.) pointed-leaved hogweed.

[பெரிய + மூக்கிரட்டை]

பெரியமூளை *periya mūḷai,* பெ. (n.), மூளையின் மேற்பாகம் (இங். வை. **27**); cerebrum, fore brain. **2.** அறிவாற்றல் மிக்கவன்; a person of great intellect.

[பெரிய + மூளை]

பெரியமேளம் *periya-mēḷam,* பெ. (n.), 1. நாககரம் முதலிய பெரிய இசைக் கருவிகள் கொண்டு வாசிக்கப்டும் மேளம்; music of big instruments, like clarionet, pipe drum and cymbals, dist cinna-mēḷam. 2. பெரும் படியாய்ச் செய்வது; anything done on a large scale. அவர் வேலைகளெல்லாம் பெரிய மேளம்.

[பெரிய + மேளம்]

பெரியர் *periyar,* பெ. (n.), *பெரியார்* பார்க்க; see *periyār.* "சான்றோர் பெரியராக் கொள்வது கோள்" (நாலடி. 165)

[பெரியார் - பெரியர்]

பெரியலவங்கப்பட்டை *periyalavaṅga-p-paṭṭai,* பெ. (n.), மரவகை; cassia cinnamon.

[பெரிய + இலவங்கப்பட்டை]

பெரியவசூரி *periyavaśūri,* பெ. (n.), 1. *பெரியம்மை* பார்க்க; see *periyammai.*

[பெரிய + வைசூலி→ வைசூரி→ வசூரி]

பெரியவடி *periya-v-aḍi,* பெ. (n.), நீண்டவடி; a long foot.

க. பேரடி

[பெரிய + அடி]

பெரியவர் *periyavar,* பெ. (n.), 1. உயர்ந்தோர்; the great. பெரியவர் கேண்மை பிறை போல... நந்தும் (நாலடி. 125) 2. முதியவர்; the aged. 3. முன்னோர்; ancestors. எங்கள் பெரியவர் தேடிவைத்த சொத்து.

[பெருமை → பெரியோர் → பெரியவர்]

பெரிய வரகு *periya varagu,* பெ. (n.), வரகு வகை(Rd.M.); a large species of common millet.

[பெரிய + வரகு]

பெரிய வராடி *periya varāḍi,* பெ. (n.), பாலையாழ்த்திற வகை (பிங்.); a secondary medody - type of the pālai class.

[பெரிய + வராடி]

பெரிய வவசரம் *periya v-avaśaram,* பெ. (n.), உச்சிக் காலத்தில் கோயில் திருமேனிக்குப் படைக்கும் படையல்; noon meal offered before the chiefdeity in a temple.

[பெரிய +skt. avasara. த.அவசரம்]

பெரியவள் *periyavaḷ,* பெ. (n.), 1. அகவை முதிர்ந்தவள்; elderlywoman. 2. பூப்பெய்தியவள்; a girl who has attained puberty.

[பெரிய + (அ)வள்]

பெரியவளா-தல் *periyavaḷ-ā-,* செ. கு. வி. (v.i.), பூப்பெய்துதல்; to attain pubery, as a girl.

[பெரியவள் + ஆ -, → பெரியவளாதல்]

பெரியவன் *periyavan,* பெ. (n.), 1. உரிய அகவை அடைந்தவன்; grown-up man. 2. மூத்தோன்; senior, elder. "தம்பியை நோக்கிப்பெரியவன்.... என்றான்" (கம்பரா.சித்திர.57.) 3. பெரிய நிலையிலுள்ள வன்; bigwig.

[பெரிய + (அ)வன்]

க. பெர்மக

பெரியவாகை *periyavāgai,* பெ. (n.), *காட்டுவாகை,* பார்க்க; see *kāttu-vāgai.*

[பெரிய + வாகை]

பெரியவாச்சான்பிள்ளை *periya-v-āccāṉpiḷḷi,* பெ. (n.), கி.பி. 13 ஆம் நூற்றாண்டி னரும் நாலாயிரத் தெய்வப் பனுவலுக்கு உரையும் மற்றும் பல நூல்களும் இயற்றியவருமான ஒரு மாலிய ஆசிரியர் (உபதேசரத். 46); a vaišṇava ācārya, author of many works, and commentator of Tivya-p-pirpandam.

[பெரிய + ஆசான் + பிள்ளை]

பெரியவாத்தி *periya-v-ātti,* பெ. (n.), சிவப்புமந்தாரை; purple variegated mountain ebony.

பெரியவாய்[1] *periya-vāy,* பெ. (n.), அலப்பு வாயன்; one who talks loudly and boisterously.

மறுவ. *அகலவாய்*

[பெரிய + வாய்]

பெரியவாய்[2] *periyavāy,* பெ. (n.), மரவகை; half-spur, flowered nutmeg.

[பெரிய + வாய்]

பெரியவாள் *periya-vāḷ,* பெ. (n.), ஈர்வாள்; pit saw.

[பெரிய + வாள்]

பெரியவீட்டுக்காரன் *periya viṭṭu-k-kāraṉ,* பெ. (n.), 1. செல்வமுடையவன்; big or wealthy man. 2. பறையன்; a man of paṟiya caste.

[பெரிய + வீட்டுக்காரன்]

பெரியவுடையநாயனார் *periya-v-udaiyaāyaṉār,* பெ. (n.), தஞ்சைக் கோயில் இறைவன்; god bṟhadisvara of the Tanjore.

[பெரிய + உடைய + நாயனார்]

பெரியவுடையார் *periya-u-ḍaiyār,* பெ. (n.), சடாயு; (திவ். இயற். திருவிருத். 18. வயா) jaḍāyu.

[பெரிய + உடையார்]

பெரியவெண்ணம் *periya-v-eṇṇam,* பெ. (n.), 1. உயர்ந்த சிந்தை; nobleaspiration, great conception. 2. வீண் பெருமை; high conceit, assumption.

[பெரிய + எண்ணம்]

பெரிய வெள்ளிக்கிழமை *periya-veḷḷi-k-k-kiḻamai,* பெ. (n.), ஏசுபெருமான் குறுக்கில் (சிலுவையில்) அறைந்து கொல்லப்பட்ட நாளின் ஆண்டுக் கொண்டாட்டம்; (கிறித்) good friday, the anniversary of the day on which jesus christ was crucified.

[பெரிய + வெள்ளிக்கிழமை]

பெரியாண்டவர் *periyāṇḍavar,* பெ. (n.), ஒரு தெய்வம்; a deity.

[பெரிய + ஆண்டவர்]

பெரியாணங்கை *periyāṇaṅgai,* பெ. (n.), *பெரியா நங்கை* பார்க்க; see *periyā naṅgai.*

[பெரியாள் + நங்கை]

பெரியாத்தாள் *periyāttāḷ,* பெ. (n.), *பெரியம்மாள்* பார்க்க; see *periyammāḷ.*

[பெரிய + ஆத்தாள்]

ஆத்தாள் = தாய்

பெரியாத்தை *periyāttai,* பெ. (n.), *பெரியம்மாள்* பார்க்க; see *periyammāḷ.*

[பெரியாத்தாள் - பெரியாத்தை]

பெரியாநங்கை *periyā-naṅgai,* பெ. (n.), செடி வகை (பதார்த்த.544); large milkwort.

[பெரிய + நங்கை]

பெரியாம்பல் *periyāmbal,* பெ. (n.), அல்லி; water lilly.

[பெரிய + ஆம்பல்]

பெரியாய்ச்சி *periyācci,* பெ. (n.), *பெரியம்மாள்* பார்க்க; see *periyammāḷ.*

[பெரிய + ஆய் → ஆய்= தாய் ஆய்ச்சி]

பெரியாயி *periyāyi,* பெ. (n.), *பெரியம்மாள்* பார்க்க; see *periammāḷ.*

[பெரிய + ஆய் → ஆயி]

பெரியார்[1] *periyār,* பெ. (n.), **1.** மூத்தோர்; the aged. **2.** சிறந்தோர்; the great. "பெரியார் பெருமை சிறுதகைமை" (நாலடி. 170) **3.** அறிவர்; saints, sags. பெரியாரும் பணித்தார் (குறள், 381 பரி. அவ.) **4.** அரசர்; kings. "பெரியார் மனையகத்தும்....வணங்கார் குரவரையுங் கண்டால்" (ஆசாரக். 73).

க. பிரியர். : பட. கிரிய

[பெருமை → பெரியார்]

பெரியார்[2] *periyār,* பெ. (n.), திராவிட கழகத்தின் தனிப்பெருந்தலைவர், தன்மான இயக்க நிறுவனர்; சமய மூடநம்பிக்கைகளைச் சாடிய பகுத்தறிவுச் சிந்தனையாளர்; the great leader of Dravidar kazhagam and founder of self-respect. one who regects common ideas about religion.

[பெருமை → பெரியார்]



பெரியாழ்வார் *periyāḻvār,* பெ. (n.), ஆழ்வார் பதின்மருள் ஒருவர்; a vairḏava saint and hymnist, one of ten āḻvār. பட்டடர்பிரான் பெற்றான் பெரியாழ்வா ரென்னும் பெயர் (உப தேசரத். 18.)

[பெரிய + ஆழ்வார்]

பெரியோர் *periyōr,* பெ. (n.), *பெரியார்*[1] பார்க்க; see *periyār.* "பெரியோர் கண்டு கைவிட்ட மயல் (நாலடி." 43.) (திவா.)

[பெரியார் → பெரியோர்]

பெரியோர்பெருமான் *periyōr perumāṉ,* பெ. (n.), நான்முகன்; brahmā, as lord of sages. "மேலைப் பெரியோர் பெருமான் படைத்தான்" (சீவக. 2066.)

[பெரியோர் + பெருமான்]

பெரியோன் *periyōn*, பெ. (n.), உயர்ந்தோன்; great man. கருணையினாற் பெரியோ னொருவன் (திருவாச. 44, 2) 2. கடவுள்; god as the great. "பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்" (சிலப். 5, 169)

[பெரியன் - பெரியோன்]

பெரு–த்தல் *peru-*, செ.கு.வி (v.i.), 1. பருத்தல்; to grow thick, large, stout. 2. மிகுதல்; to become numerous. "கரடியாதி பெருத்த " (விநாயகபு.)

ம. பெருகுக; தெ. பெருகு.

[பல் → பரு → பெரு]

பெருக்க *perukka*, வி. எ. (adv.), மிகுதியாய்; greaty, intensely. ஏன் நீ பேராசை கொண்டு பெருக்கத் தவிக்கிறாய் (இட.வ.).

பெரு - பெருக்க

'அ' வி. எ. ஈறு.

பெருக்கம் *perukkam*, பெ. (n.), 1. வளர்ச்சி; increase, augmentation. 2. மிகுதி; multipliciy, plentiulness, abundancea "உண்மைப் பெருக்கமாந் திறமை." (திருவாச. 42, 7) 3.செல்வம், prosperity, opulenec, wealth. பெருக்கம் பெருமித "நீர்த்து" (குறள். 431). 4. வெள்ளம்; flood, deluge. "புதுப்பெருக்கம் போல" (நாலடி. 354) 5. நிறைவு; fulness, perfection . "பெருக்கத்து மதிதழுவி" (விநாயகபு) 6. நீடிப்பு; long continuance, as of the tāli' worn by a married woman. அவள் தாலிப் பெருக்கமா யிருக்கிறாள்.

[பெரு → பெருகு → பெருக்கம்]

பெருக்கம் பண்ணுதல் *perukkam pannu*, செ. குன்றா.வி. (v.t.) களத்துப் பரவிய நெல்லைக் கையாற் கூட்டுதல்(யாழ்ப்.) to glean grains scattered on the threshing - floor.

[பெருக்கம் + பண்ணு]

பெருக்கமரம் *perukka-maram*, பெ. (n.). *பப்பரப்புளி* (L.) பார்க்க; see *papparappuli*.

[பெருக்கம் + மரம்]

பெருக்கல் *perukkal*, பெ. (n.), 1. குப்பை கூட்டுகை; sweeping. 2. ஓர் எண்ணை மற்றோர் எண்ணாற் சுட்டிய மடங்கு அதிகப்படுத்துகை; multiplication. 3. மேம் படுத்துகை; improving, making prosperous. "பின்யானிவனைப் பெருக்கலு முற்றனென்" (பெருங். உஞ்சைக். 37, 200)

[பெருக்கு + அல்]

'அல்' தொ. பெ. ஈறு)

பெருக்கல் வாய்பாடு *perukkal vāypādu*, பெ. (n.) எண்கனைப் பெருக்குவதாலுண்டாம் தொகையைக் காட்டும் வாய்பாடு (கணக்); multiplication table. இரண்டாம் வகுப்பில் பெருக்கல் வாய்பாடு கற்பிக்கப்படுகிறது.

[பெருக்கல் + வாய்பாடு]

பெருக்கலங்காரம் *perukkalaṅgāram*, பெ. (n.), வியப்பணி (அதிசய வணி); (rhet.). (வீரசோ. அலங். 25, உரை) hyperbole.

[பெருக்கல் + அலங்காரம்]

(skt. alankāra *த. அலங்காரம்)*

பெருக்கற்கணக்கு *perukkar-kaṉakku,* பெ. (n.). *பெருக்கல்,* பார்க்க; see *parukkal* (arith.)

[பெருக்கல் + கணக்கு]

பெருக்கன் *perukkaṉ,* பெ. (n.), பரும்படியானது (வின்); that which is coarse.

[பெருக்கு → பெருக்கன்]

பெருக்காச்சவட்டு *perukkāccavaṭṭū,* பெ. (n.). கவனமின்மை; indifference. (யாழ். அக.) 2. வெறுப்பு; dislike.

[பெருக்கு + ஆ + சவட்டு]

பெருக்காலட்டை *perukkāl-aṭṭai,* பெ. (n.). அட்டைவகை (இ.வ.); a kind of leech.

[பெரு(மை) + கால் + அட்டை]

பெருக்காளர் *perukkāḷar,* பெ. (n.). 1. சிறப்புடையோர்; grandees, noblemen. 2. கடை நிலையர் (சூத்திரர்); (பிங்) men of the sūdra caste.

[பெருக்கு + ஆள் + அர்]

பெருக்காறு *perukkāṟu.* பெ. (n.). பெருகியோடும் ஆறு; river in floods. செல்வமோ பெருக்காறு போலாம். (குமரே. ச. 67.)

[பெருக்கு + ஆறு]

பெருக்கி *perukki,* பெ. (n.). வித்தமிழ்து (விந்து); (சங். அக.); semen virile.

[பெருக்கு → பெருக்கி.]

'இ' வினைமுதல்குறித்த ஈறு.

பெருக்கிவிடு—தல் *perukki-viḍu-,* செ.கு.வி. (v.i.). ஓடி விடுதல்; to run away.

பெருகு (கு. வி.) - பெருக்கு (பி. வி.)

பெருக்குதல் = அகலுதல், நீங்குதல், தொலைவாதல், ஒடுதல்.

[பெருகு → பெருக்கு → பெருக்கி + விடு- தல்]

பெருக்கு¹—தல் *perukku,* செ. குன்றாவி. (v.t.). 1. விரியச் செய்தல்; to cause to increase or abound; to make greater. "வாரி பெருக்கி" (குறள். 512) 2. நீர் நிரப்புதல்; to fill, to cause to swell and overflow. வாய்க்காலால் ஏரியைப் பெருக்க வேண்டும். (உ. வ.) 3. மோர் முதலியற்றை நீர் கலந்து பெருகச் செய்தல்; to dilute with water, as buttermilk. "நீர் சுருக்கி மோர் பெருக்கி" (பதார்த்த. 1498) 4. குப்பை கூட்டுதல்; to sweep. 5. ஓர் எண்ணை மற்றோர் எண்ணாற் கூட்டிய மடங்கு அதிகப்படுத்துதல் (கணக்); to mulitply.

தெ. பெருக; **க.** பெர்சிசு; **ம.** பெருக்குக.

[பல் → பரு - பெரு → பெருகு → பெருக்கு]

பெருக்கு (பி. வி),

பெருக்கு² *perukku,* பெ. (n.). 1. வெள்ளம்; flood, inundation. "ஆற்றுப்பெருக்கற்று" (நல்வழி. 9) 2. கடல் நீரேற்றம்; ebb of the tide. 3. குருதியோட்டத்தின் மிகுதி; height of the circulation of the blood which is supposed to ebb and flodaily like the tide.

4. மிகுதி (வின்); influx, like the wealth. 5. *பெருக்கற்கணக்கு;* (யாழ். அக.) பார்க்க; see *perukkarkenakku.* 6. *பெருக்குத் தொகை* பார்க்க; see *perukku-t-togai.* 7. *பப்பரப்புளி* (மலை) பார்க்க; see *papparapuli,* baobab.

[பெருகு + பெருக்கு]

பெருக்குக் கணக்கு *perukku-k-kanakku,* பெ. (n.), *பெருக்கற்கணக்கு* (யாழ். அக.) பார்க்க; see *perukkar-kankku.*

[பெருக்கு + கணக்கு]

பெருக்குத் தொகை *perukku-t-togai,* பெ. (n.), இரண்டு எண்களைப் பெருக்கியதாற் கூடிய தொகை(கணக்); product.

[பெருக்கு + தொகை]

பெருக்குமாறு perukku - māruபெ.(n.) விளக்குமாறு (இ.வ.);broom.

[பெருக்கு + மிலாறு→ மாறு]

பெருக்குமெண் *perukkumen,* பெ. (n.), மற்றொன்றைப் பெருக்குதற்கு உரிய எண் (கணக்.); multiplier.

[பெருக்கு(ம்) + எண்]

பெருக்குரல் *perukkural,* பெ. (n.), பாடுகையில் தோன்றும் வெடித்த குரல்; cracked voice (mus.) (திருவாலவா. 57,26)

[பெரு(மை) + குரல்]

பெருக்கு வேளை *perukku-vēlai,* பெ. (n.), 1. கடலின் நீரேற்றக் காலம்; time of the flow of tide. 2. உடலில் குருதியோட்டம் மிகுந்த காலம்; time of the day when the circulation of the blood is at its height. 3. உச்சிப்போது (யாழ். அக.); midday.

[பெருக்கு + வேளை]

பெருகு = விரைவு, பெருகிய நிலை, உயர் நிலை.

பெருக்கெடு-த்தல் *perukkedu,* செ. கு. வி. (v.i.). வெள்ளம் அதிகமாதல்; to flood, as a river; to ebb, a tide.

[பெருக்கு + எடு.]

பெருக *peruga,* வி.எ.(*adv)* நிரம்ப; abundantly, prosperously. 'பெருக வாழ்.'

[பெருகு - பெருக.]

'அ' வி. எ. ஈறு

பெருகல் *perugal,* பெ. (n.), மிகுதி; (பிங்.) abundance.

[பெருகு + அல்]

பெருகளர்வா *peru-galarvā,* பெ. (n.), மரவகைm.m.; large tooth brushtree.

[பெருகு + அளர்வா.]

பெருகளற்று வட்டம் *perugalarru - vattam,* பெ. (n.), *பெருங்களிற்று வட்டம்* (பிங்.*ms.)* பார்க்க; see *perungalrru-vattam.*

[பெரு + களிற்று + வட்டம்]

பெருகியல் *perugiyal,* பெ. (n.), சாதிப்பெரும் பண் நான்கனுள் ஒன்று(கந்தபு. சூரனர. 23); a class of primary melody, types, one of four šādi-p-perum-pan. (mus.)

[பெருகு + இயல்.]

பெருகியன் மருதம் *perugiyaṉ-marudam,* பெ. (n.), பண் வகை (சிலப். 8,39.) a primary melody-type

[பெருகியல் + மருதம்]

பெருகிலை *perukilai,* பெரு.(n.) *வெள்ளைக் கண்ணி* (L.); Pink. tinted heart leaved glory tree.

பெருகு-தல் *perugu,* செ. கு. வி. (v.i.). 1. அளவு மிகுதல்; to increase in numbers, multiply, spread to abound. 2. நிறைதல்; (சூடா.); to become full; to be perfected. 3. நீர் மிகுந்தெழுதல்; to rise, swell, to over flow, as water பெருகு மதவேழம் (திவ். இயற். 2,75) 4. மேம்படுதல்; to be increased, augmented or enlarged, to grow great, prosper. "பண்பிலார் கேண்மை பெருகலிற் குன்ற லினிது" (குறள். 811) 5. முதிர்தல்; to come to maturity, as embryo. "பெருகுசூலிளம்பிடிக்கு" (கம்பரா. சித்திர. 10) 6. வளர்தல்; to grow தளிபெருகுந் தண்சினைய (பரிபா. 8,91). 7. ஆக்கந்தருதல் (வின்.); to bring prosperity. 8. தாலி அற்று வீழ்தல்(கொ.வ.); to snap, as the thread of the marriage badge, used euphemistically. 9. கேடுறுதல், (தொல். சொல். 17 உரை) (திருக்கோ. 218. உரை); to be injured, ruined, used euphemistically. 10. விளக்கணைதல்; (நேமி . சொல்.10. உரை); to be put out or extinguished, used euphemistically.

க. பெர்சு

[பல் -பரு - பெரு - பெருகு.]

பெருகு[2] *perugu,* பெ. (n.). தயிர்; (பிங்.) curdled milk.

தெ. பெருகு.

[பெரு → பெருகு]

பெருகு[3] *perugu,* பெ. (n.) அணிகல வகை; (அக.நி); an ornament.

[பெரு → பெருகு]

பெருகுசாதி *perugušādi,* பெ. (n.). பண்ணியற்றிற வகைகளுள் ஒன்று;(mus.) (சிலப். 13, 110-12, உரை); a sub-variety, of paṉṉiyaṟṟiṟam

[பெருகு + சாதி]

பெருங்கட்டி *peru-ṅkaṭṭi,* பெ. (n.), பிளவை; abscess.

[பெரும் + கட்டி]

பெருங்கட்டு *peru-n-kaṭṭu,* பெ. (n.), பெருஞ்சரக்கு மூட்டை; large bundle.

[பெரும் + கட்டு]

பெருங்கட்டுக்கொடி *peru-ṅ-kaṭṭu-k-koḍi,* பெ. (n.), பாலுள்ள கொடிவகை; (பதார்த்த. 325) a milcy creeper.

[பெரும் + காட்டுக்கொடி]

பெருங்கடப்பு *peruṅgaḍappu,* பெ. (n.). கடப்ப நெல் வகை(A.); a kind of paddy

[பெரும் + கடப்பு]

பெருங்கடமை *perun-gadamai,* பெ. (n.), பெரும்பொறுப்பு; duty

[பெரும் + கடமை]

பெருங்கடி *peru-ṅ-kadi,* பெ. (n.), படை நோய் வகை (யாழ். அக.); singworm.

[பெரும் + கடி]

பெருங்கடுகு *peru-ṅ-kadugu,* பெ. (n.),கடுகு வகை(இ.வ.); a kind of mustard.

[பெரும் + கடுகு]

பெருங்கடிந்துரை *peru-n-katindurai,* பெ. (n.), *பெருங்கண்டனம்;* reproachful language.

[பெரும் + கடிந்துரை]

பெருங்கடை *peru-in-kaḍai,* பெ. (n.), பெரிய கடைவீதி; big bazaar street.

[பெரும் + கடை]

பெருங்கண்டனம் *peru-n-Kantanam,* பெ. (n.), பெருங்கடிந்துரை பார்க்க.see Perunkatinturai

[பெரும் + கண்டனம்]

பெருங்கண்ணாடி விரியன் *peru-ṅ-kaṇṇāḍi- viriya,* பெ. (n.), பாம்புவகை(M.M); large glass viper

[பெரும் + கண்ணாடி + விரியன்]



பெருங்கண்ணி *peruñ-kanni,* பெ. (n.), பொறிவலை; toils.

[பெரும் + கண்ணி]

பெருங்கணக்கு *peru-ṅ- kaṇakku* பெ. (n.), **1.** பெருந்தொகை; large amount. **2.** பெரும் படியானது; that which is on a large scale. **3.** இறுமாப்பு; arrogance. அவர் பெருங் கணக்கிலே பேசுகிறார்.

[பெரும் + கணக்கு]

பெருங்கணி *peru-ṅ-kaṇi,* பெ. (n.), தலைமைக் கணியன்; chief astrologer. "ஆசான் பெருங் கணி யறக்களத் தந்தணர்" (சிலப். 22, 8)

[பெரிய + கணி]

பெருங்கத்தரிசால் *peru-ṅ-kattari-šāl,* பெ. (n.) கிளை விளக்குத்தண்டு (புதுவை.) candelanra.

பெருங்கதை *peru-ṅ-kadai,* பெ (n.) **1.** நீண்டகதை; Very long story **2.** மிகவும் அறிந்த செய்தி(வின்); general report, thing well known. **3.** பிள்ளையார் கதைப்படலத்தில்

இறுதிப்படிப்பு(யாழ்ப்.); last reading of Piḷḷaiyār-kadai, in a temple. **4.** உதயணன் வரலாறு பற்றியதும் பிருகத்து கதையைத் தழுவிய மைந்ததும் கொங்கு வேளிராற் பாடப் பெற்றதுமான தமிழிலக்கியம்; a Tamil poem by Kongu-Vēl containing the story of Udayaṇaṉ being an adoption of Brhatkata.

[பெரும் + கதை.]

பெருங்கம்பு *peru-ṅ-kambu.* பெ (n.) **1.** கம்புப்பயிர்வகை; large bulrush millet, pennistam.

[பெரும் + கம்பு]

பெருங்கமுக்கம் *peru-m-kamukkam,* பெ. (n.) *பெருமந்தணம்* பார்க்க; see *purumandanam.*

[பெரும் + கமுக்கம்]

பெருங்கரப்பான் *peru-ṅ-karappān,* பெ (n.) **1.** கரப்பான் வகை (**குஞ்.சா.**iii.**92**); a kind of eruption.

பெருங்கரம் *peru-ṅ-karam,* ஸ(n) கோவேறு கழுதை; *mule.* *"பெருங்கரத்துருவு பெற்றனன்"* (**சேதுபு. பாவநா,24**).

[பெரும் + கரம்]

பெருங்கரணை *peruṅ-karaṇai,* பெ.(n) *பெருங்கழலைப்* பார்க்க; *see peru-ṅ-kaḻalai.*

[பெரும் + கரணை]

பெருங்கல்வம் *perun-kalvam,* பெ. (n) பெரிய உரல்; (குழியம்மி); *big mortar*

[பெரும் + கல்வம்]

பெருங்கலக்கம் *Peruṅ-kalakkam, orr (n)(* மனஉலைவு; *lack of peace.*

[பெரும் + கலக்கம்]

பெருங்கலக்குறுத்து–தல் *peru-ṅ-kala-kuruttu-.* செ.குன்றாவி (v.t.) பெரிய குழப்பமுண்டுபண்ணுதல்; to create a big commotion or uproar. *'கொடித்தேர் வீதியும் பீடிகைத் தெருவும் பெருங்கலக்குறுத்தாங்கு'* (**மணிமே.4.38**).

[பெரும் + கலக்குறுத்து]

பெருங்கலகம் *peruṅ-kalagam.* பெ. (n) பெரும்பூசல்; disorder, dispute

[பெரும் + கலகம்]

பெருங்கலம் *peru-ṅ-kaiam,*-பெ. (n.) ஆயிரம் நரம்புடைய பேரியாழ்; a large lute having, **1,000** strips. *'ஓங்கிய பெருங்கலந் தருக்கிய வுதயணன்'* (**பெருங். இலாவாண.1.74**).

[பெரும் + கலம்]



பெருங்கலித்தொகை *peru-ṅ-kali-t-togai-* பெ. (n.) இறந்துபட்ட இடைக்கழகத்து நூல்களுள் ஒன்று; a Tamil treatise of iḍai-c-saṅgaṅ not extant. *"இருங்கலி கடிந்த பெருங் கலித் தொகையொடு"* (**சிலப். உரைப்பா. பக்.7**அடிக்குறிப்பு).

[பெரும் + கலித்தொகை]

பெருங்கலையன் *peru-ṅ-kalaiyaṉ,* பெ. (n.) நெல்வகை (யாழ்.அக.); a kind of paddy.

[பெரும் + கலையன்]

பெருங்கவர்ச்சி *peru-ṅgavarchi,* பெ. (n) ஈர்ப்பாற்றல்; attraction.

[பெரும் + கவர்ச்சி]

பெருங்கவி *peru-ṅ-gavi,* பெ. (n.) **1.** பாவலர்; a kind of poetical composition. அகலப்பா பாடவல்லவன் (யாப்.வி.பக்.513); a poet skilled in composing Agalappā.

[பெரும் + Skt.kavi. த. கவி]

பெருங்கழலை *peruṅ-kaḻalai,* பெ. *(n)* பெருங்கழலைக்கட்டி; *bigwart.*

[பெரும் + கழலை]

பெருங்கள்ளி *peruṅ-kaḷḷi,* பெ. (n.) **1.** சிறுமரவகை; white frangipani, s.tr., plumeria alba. **2.** ஈழத்தலரி; pagoda tree.

[பெரும் + கள்ளி]

பெருங்களிப்பு *peru-n-kalippu,* பெ. (n.) பெருமகிழ்ச்சி; great pleasure.

[பெரும் + களிப்பு]

பெருங்களன்செய்—தல் *peru-ṅ-kaḷaṉšey-,* செ.குன்றாவி. (v.t.) தெய்வத்தன்மைக்குரிய இடமாக அணியம் செய்தல்; to cleanse a ground and consecrate it. *'உளம் பெருங்களன் செய்ததுமிலை'* (திருவாச.5.35.)

[பெரும் + களன் + செய்]

பெருங்களா *pēru-ṅ-kaḷā,* பெ. (n.) மரவகை; large Bengal currant, s.tr., carissa carandas.

[பெரும் + களா]

பெருங்களிற்றுவட்டம் *peru-ṅ-kaḷiṟṟu-vaṭṭam,* பெ. (n.) எழுநிரயத்தொன்று (பிங்.); a hell, one of eḷu-nirayam.

[பெருகளற்றுவட்டம் → பெருங்களிற்று வட்டம். பெருகு + அளறு + வட்டம் = பெருகளற்றுவட்டம்]

பெருங்கற்றாழை *peruṅ-kaṟṟāḷai,* பெ. (n.) கற்றாழை வகை; a kind of aloe. (நாஞ்.).

[பெரும் + கற்றாழை]



பெருங்கறி *peru-ṅ-kaṟi,* பெ. (n.) பெருங் கூட்டத்திற்குப் படைக்கச் செய்யப்படும் கறிவகை; (இ.வ.) curry specially prepared for supplying a large number of people.

[பெரும் + கறி]

பெருங்கறையான் *peru-ṅ-karaiyāṉ*, பெ. (n.) தாய்க்கறையான் பார்க்க; see tāy-k-kaṟaiyāṉ queen-ant found in every nest of termites.

மறுவ. சிதல்

[பெரும் + கறையான் கறை + ஆன்]

பெருங்காக்கை பாடினியம் *peru-ṅ-kākkai-pāḍiṉiyam*, பெ. (n.) பெருங்காக்கை பாடினியார் இயற்றிய யாப்பிலக்கண நூல் (வின்.); a treatise on prosody by peru-ṅ-kākkai-p-pi-niyār, not extant.

[பெரும் + காக்கைபாடினியம்]

பெருங்காசிக்கம்பு *peru-ṅ-kāši-k-kambu*, பெ. (n.) காசிக்கம்பு (G.Sm.D.I.i,219) பார்க்க; see kāši-k-kambu. a variety of kambu. (g.sm.d.i.i,219);

[பெரும் + காசிக்கம்பு]

பெருங்காஞ்சி *peru-ṅ-kāñji*, பெ. (n.) 1. ஒவ்வொருவரையும் கூற்றம் அணுகு மென்று சான்றோர் கூறுதலைப் பற்றிச் சொல்லும் புறத்துறைவகை (தொல்.பொ. 79,உரை.); (purap.) theme descrribing the teaching of the wise men about the transitoriness of life. 2. வீரர் படைமுகத்துத் தம் ஆற்றல் தோற்று வித்தலைக்கூறும் புறத்துறைவகை. (பு.வெ.4,6.) (purap.) theme describing the exhibition by warriors of their prowess on the field of battle.

[பெரும் + காஞ்சி]

பெருங்காஞ்சொறி *peru-ṅ-kāñjoṟi*, பெ. (n.) *காஞ்சொறி* (பாதார்த்த.486.); பார்க்க; see *kāñjoṟi*. climbing nettle.

[பெரும் + காஞ்சொறி]

பெருங்காடு *peru-ṅ-kāḍu*, பெ. (n.) பெரிய புதர்க்காடு extensive jungle. (பிங்.); 2. சுடுகாடு; burning-ground. '*பெருங்காட்டுப் பண்ணிய.......ஈமம்*' (புறநா.246.)

[பெரும் + காடு]

பெருங்காடுதரிசு *peru-ṅ-kāḍu-tariḍšu*, பெ. (n.) பெருங்காற்றரிசு பார்க்க; see peru-ṅ-kāṟṟarišu. (வின்.)

[பெருங்காடு + தரிசு]

(u.tar த. தரிசு)

பெருங்காந்தாரி *peru-ṅ-kāndāri*, பெ. (n.) மிளகுவகை (நாஞ்); a kind of pepper.

[பெரும் + காந்தாரி]

பெருங்காப்பியம் *peru-ṅ-kappiyam*, பெ. (n.) 96 சிற்றிலக்கியங்களுள், தன்னி கரில்லாத தலைவனைப் பற்றியதாய் நாற்பொருள் பயப்ப, நாடுநகர் முதலியவற்றைச் சிறப்பித்துப் பாடப்பெறும் தொடர்நிலைச் செய்யுள் வகை. (தண்டி.பொது.7.); epic poem dealing with the story of a peerless hero, explaining the four purusārttam and describing the excellencess of the country, city, etc.,

[பெரும் + skt. kāvya. காவ்யம் → த. காவியம்]

பெருங்காயம் *peru-ṅ-kāyam*, பெ. (n.) 1. மரவகை; asafoetida 2. ஒருவகை மரப்பிசின் (பிங்.) commercial resinous product of ferula; '*பெருங்காயத்தினது குழம்பைப் பூசி*' (சீவக.788,உரை.) 3. *பெருஞ்சீரகம்* பார்க்க; see *peru-ñ-giragam*.

[பெரும் + காயம்]

பெருங்காயா *peru-ṅ-kāya,* பெ. (n.) 1. காயாவகை; common ovate-leaved tree bilberry, s.tr., Edeule memeeylon, 2. சிறுமரவகை; oblong cordate-leaved tree bilberry, s.tr. memecylon malabaricum.

[பெரும் + காயா]

பெருங்கார் *peru-ṅ-kār,* பெ. (n.) நெல்வகை (A.); a kind of paddy.

[பெரும் + கார்]

பெருங்காராமணி *peru-ṅ-kārāmaṇi,* பெ. (n.) காராமணிவகை (வின்.); a kind of gram

[பெரும் + காராமணி]

பெருங்காரை *peru-ṅ-kārai,* பெ. (n.) 1. ஒருவகைச் சிறுமரம்; grey emeticnut. s.tr., randia ulignosa 2. காரைமீன்வகை; a large species of kārai fish.

[பெரும் + காரை]

பெருங்கால் *peru-ṅ-kāl,* பெ.(n.) 1. யானைக்கால்(வின்.); elephantiasis 2. பெரிய வாய்க்கால் major channel.

[பெரும் + கால்]

பெருங்கால்² *peru-ṅ-kāl,* பெ. (n.) பெருங்காற்று பார்க்க, see peru-ṅ-kāṟṟu. '*பெருங்காலெறிய*' (திருக்கருவை.பதிற்றுப்.) (வின்.)

[பெரும் + கால்]

பெருங்காற்பிடி-த்தல் *peru-ṅ-kāṟpiḍi-,* செ.குன்றாவி. (v.t.) கால் திமிர்ப்பட்டுப் போதல்(நாஞ்.); to have one's feet benumbed.

[பெருங்கால் + பிடி]

பெருங்காற்றரிசு *peru-ṅ-kāṟṟarišu,* பெ. (n.) பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பயிரிடப்படாத நிலம் (w.G.); land left waste for more than fifteen years.

[பெரும் + கால் + u.tar. த. தரிசு]

பெருங்காற்று *peru-ṅ-kāṟṟu,* பெ. (n.) புயற்காற்று; storm. gale.

[பெரும் + காற்று கால் – காற்று]

பெருங்கிடை¹ *peru-ṅ-kiḍai,* பெ. (n.) நெட்டிவகை; a large species of sola pith.

[பெரும் + கிடை]

பெருங்கிடை² *peru-ṅ-kiḍai,* பெ. (n.) நோயால் நெடுங்காலம் படுக்கையிற் கிடக்கை; continued illness.

[பெரும் + கிட – கிடை]

பெருங்கிரந்தி *peru-ṅ-kirandi,* பெ. (n.) 1. வயிற்றுநோய் வகை (வின்.); affection of the mesenteric gland mesenterit glands. 2. *பெருங்கிருமி* (இ.வ.) பார்க்க; see *peru-ṅ-kirumi*

[பெரும் + *skt.granthi.* த. கிரந்தி]

பெருங்கிராமம் *peru-ṅ-kirāmam,* பெ. (n.) ஐந்நூறு குடியுள்ள ஊர் (சூடா.); major village, having 500 families.

[பெரும் + skt.grāma. கிராமம்]

பெருங்கிருமி *peru-ṅ-kirumi,* பெ. (n.) வயிற்றுப்புழுப்போன்றதோ ருயிரி ; a parasitic mematoid-worm Ascaris lumbricoides.

[பெரும் + *skṭ.kṛmi.* த. கிருமி]

பெருங்கில்லி *peru-ṅ-killi,* பெ.(n) பெருங்கிட்டிப்புள்; *bigtipcat*

[பெரும் + கில்லி]

கில்லி = கிட்டிப்புள்

பெருங்கிழங்கு *peru-ṅ-kiḻaṅgu,* பெ. (n.) பெருமருந்து (மலை.) Indian birthwort.

[பெரும் + கிழங்கு]

பெருங்கிழமை *peru-ṅ-kiḻamai,* பெ. (n.) **1.** முழுவுரிமை (அக.நி.) entire or sole right, absolute title. **2.** மிகுநேயம் (அக.நி.). close friendship or intimacy.

[பெரும் + கிழமை]

பெருங்கிளர்ச்சி *pērun-kiḷarcci,* பெ. (n.) பெருங்கொந்தளிப்பு; *tumult.*

[பெரும் + கிளர்ச்சி]

பெருங்கிளிச்சல் *peru-ṅ-kiḷiccal,* பெ. (n.) நீலநிறமுள்ள கடல்மீன் வகை; a sea-fish, bluish, caesio chrysozona.

[பெரும் + கிளிச்சல்]

பெருங்கிளுவை *peru-ṅ-kiluvai,* பெ. (n.) கிளுவை (வின்.) பார்க்க; see kiḷuvai hill lalsam tree.

[பெரும் + கிளுவை]

பெருங்கிளை *peru-ṅ-kiḷai,* பெ. (n.) பரந்த சுற்றத்தாருடைய குடும்பம்; wide circle of relations.

[பெரும் + கிளை]

பெருங்கிளையார் *peru-ṅ-kilaiyar,* பெ. (n.) பள்ளர் வகையினர் (திருச்சி.வழ.); a subdivision of the paḷḷar caste.

பெருங்கீரை *peru-ṅ-kirai,* பெ. (n.) கீரைவகை (வின்.) a species of greens.

[பெரும் + கீரை]

பெருங்கீழ்வட்டம் *peru-ṅ-kiḻ-vaṭṭam,* பெ. (n.) ஏழுநிரயங் களுளொன்று hell (பிங்.), one of eḻu-naragam, q.v.

[பெரும் + கீழ் + வட்டம்]

பெருங்கீற்று ரூபாய் *peruṅ-kiṟṟu-rūbāy,* பெ. (n.) பழைய காசுவகை (சரவண. பணவிடு.63); an ancient.coin.

[பெரும் + கீற்று ரூபாய். E. Rupee த. ரூபாய்]

பெருங்குட்டம் *peru-ṅ-guṭṭam,* பெ. (n.) குட்டநோய் வகை; (இராசவைத்.) leprosy.

[பெரும் + குட்டம்]

பெருங்குடல் *peru-ṅ-kuḍal,* பெ. (n.) குடற் பிரிவு. (M.L.) large intestine, colon.

[பெரும் + குடல்]



பெருங்குடி[1] *peru-ṅ-kuḍi,* பெ. (n.) நில வுடைமையான்; land lord. (colas, ii,389.)

[பெரும் + குடி]

பெருங்குடி[2] *peru-ṅ-kuḍi,* பெ. (n.) 1. உயர்குடி; noble family 2. பெருங்குடிவாணிகர் பார்க்க; see peruṅguḍivāṇigar "விளங்கு பெருங்கு மாசாத்துவாணிகன்" (சிலப்.20,57-8)

[பெரும் + குடி]

பெருங்குடியர் *peru-ṅ-kuḍiyar,* பெ. (n.) பெருங்குடி வாணிகர் (சீவக.1756.உரை.) பார்க்க; see peru-n-kuḍi vāṇigar.

[பெருங்குடி → பெருங்குடியார்]

பெருங்குடியாட்டம் *peru-ṅ-kuḍi-y-aṭṭam,* பெ. (n.) நாட்டாண்மை; village headship "நடுவில் பெருங்குடியாட்டமும் என்னென்பது தான்" (ஈடு,3,5,6.)

[பெருங்குடி + ஆட்டம்]

ஆட்டம் = ஒரு சொல்லாக்க ஈறு.

பெருங்குடிவாணிகர் *peru-ṅ-kuḍi-vāṇigar,* பெ. (n.) வணிகருள் ஒரு பிரிவினர்; an ancient caste of merchants. '*பெருங்குடி வாணிகன் பெருமடமகளே*' (சிலப்.2,76.)

[பெருங்குடி + வாணிகர்]

பெருங்குப்பை *peru-ṅ-kuppai,* பெ. (n.) *பெரும்புழுதி* பார்க்க; see *perum puḻudi.*

[பெரும் + குப்பை]

பெருங்குமிழ் *peru-ṅ-kumiḻ,* பெ. (n.) மரவகை (பதார்த்த.215.) coomb teak.

[பெரும் + குமிழ்]

பெருங்குயம் *peru-ṅ-kuyam,* பெ. (n.) குயவர்க்கு அரசரளிக்கும் பட்டப்பெயர்; an ancient title, conferred on potters. '*குலாலற் கேற்பப் பெருங்குய மருளி*' (பெருங். வத்தவ.9,48.)

[பெரும் + குயம்]

பெருங்குரல் *peru-n-kural,* பெ. (n.) பேரொலி; great tone.

[பெரும் + குரல்]

பெருங்குருகு *peru-ṅ-kurugu,* பெ. (n.) 1. யானையுண்குரு (பிங்.); a fabulous bird. 2. தலைக்கழகத்து வழங்கிய ஓர் இசைத் தமிழ் நூல் (சிலப்.உரைப்பா.) a treatise on music of the talai-c-caṅgam, not now extant.

[பெரும் + குருகு]

பெருங்குருந்து *peru-ṅ-kurudu,* பெ. (n.) காட்டெலுமிச்சை (L) பார்க்க; காட்டெலுமிச்சை indian wild-line.

[பெரும் + குருந்து]

பெருங்குரும்பை[1] *peruṅ-kurumbai,* பெ. (n.) சிறுசெடிவகை; bowstring hemp, stemless plant.

[பெரும் + குரும்பை]

பெருங்குரும்பை[2] *peru-ṅ-kurumbai,* பெ. (n.) 1. கோட்டம்; costum. 2. பூலாங்கிழங்கு; long zedoary.

பெருங்குவியல் *perun-kuviyal,* பெ. (n.) குப்பைமேடு; large heap.

[பெரும் + குவியல் → குவியல்]

பெருங்குழப்பம் *pērun-gulappam,* பெ. (n.) பெருங்குளறுபடி; great confusion.

[பெரும் + குழப்பம்]

பெருங்குழி *peru-ṅ-kuḻi,* பெ. (n.) 1. பெரிய பள்ளம்; large pit. 2. கடல்; sea. *'துன்பப் பெருங்குழிக்கே'* (திருநூற்.20.) 3. முழு எண்களின் சதுரவாய்பாடு (arith.) squaring of integral numbers. opp. to ciṟu-kuḻi. 4. முக்கால் குறுக்கம் கொண்ட நிலவளவு; superficial measure. 3/4 acre.

[பெரும் + குழி]

பெருங்குழுவைந்து *peru-ṅ-kuḻu-v-aindu,* பெ. (n.) ஐம்பெருங்குழு (திவா.) பார்க்க; see ai-m-peruṅkuḻu the five cheif officers of a king.

[பெரும் + குழு + ஐந்து]

பெருங்குளவி *peru-ṅ-guḷavi,* பெ. (n.) குளவிவகை (யாழ்.அக.); a kind of wasp.

[பெருங் + குளவி]

பெருங்குற்றம் *pērun-guttam,* பெ. (n.) பெருந்தவறு; serious crime.

[பெரும் + குற்றம்]

பெருங்குறட்டை *peru-ṅ-kuraṭṭai,* பெ. (n.) காக்கணங்கொவ்வை mussel-shell creeper. (மலை.); 2. பெருமருந்து indian birthwort. (சங்.அக.).

[பெரும் + குறட்டை]

பெருங்குறட்டை[2] *peru-ṅ-kuṟaṭṭai,* பெ. (n.) தூக்கத்தில் விடும் உரத்த குறட்டை; noisy snoring.

[பெரும் + குறட்டை]

பெருங்குறடு *peru-ṅ-kuṟadu,* பெ. (n.) விறகு முதலியன பிளப்பதற்காக அடியில் வைக்குந் தாங்குகட்டை (பிங்.) large block of wood, used as a support in hewing wood etc.

[பெரும் + குறடு]

பெருங்குறவை *peru-ṅ-kuṟavai,* பெ. (n.) 1. பசுமை நிறமுள்ளதும் 13 விரலம்வரை வளர்வதும் நல்ல தண்ணீரில் வாழ்வதுமான மீன்வகை; murrel, a fresh-water fish, greenish, attaining 13 in. in length,

ophiocepha lusgacha. **2.** 8விரலம்வரை வளர்வதும் பசுமை நிறமுள்ளதும் நல்ல தண்ணீரில் வாழ்வதுமான மீன்வகை; a fresh-water fish, greenish, attaining 8 in. in lergth. liscognatlius lamta.

[பெரும் + குறவை]

பெருங்குறி *peru-ṅ-kuṟi,* பெ. (n.) *பெருங் குறிச்சபை* பார்க்க; see *peru-ṅ-kuri-c-cavvai.* (s.i.i.iv.32.)

[பெரும் + குறி]

பெருங்குறிச்சபை *peru-ṅ-kuṟi-c-cabai,* பெ. (n.) ஊர்ப் பேரவை; the great assembly of a village (or) town.

[பெருங்குறி + சபை]

பெருங்குறிஞ்சா *peru-ṅ-kuṟiñjā,* பெ. (n.) *பெருங்குறிஞ்சி* பார்க்க; see *peru-ṅ-kuriñji.*

[பெரும் + குறிஞ்சா]

பெருங்குறிஞ்சி *peru-ṅ-kuruñji,* பெ. (n.) **1.** கொடிவகை; a species of scammony swallowwart. **2.** பூடுவகை (பிங்.); a species of conehead. m.sh., strobilanthes consangwineus typica. **3.** குறிஞ்சிப்பாட்டு; a poem. '*கபிலர் பாடிய பெருங்குறிஞ்சியினும்*' (பரிபா.19,77,உரை.)

[பெரும் + குறிஞ்சி]

பெருங்குறிமகாசபை *peru-ṅ-kuṟi,* பெ. (n.) *பெருங்குறியவை* (i.m.p.tj.1123.) பார்க்க; see *peru-ṅ-kuri-y-avai.*

[பெருங்குறி + மகாசபை]

த. மா > skt.mahā

பெருங்குறியவையே அதன் சிறப்புநோக்கி பெருங்குறி மகாசபை என வழங்கப் பெற்றுள்ளது. இதனைத் தமிழில் பெருங்குறிப் பேரவை என்று வழங்கலாம்.

பெருங்குறியவை *peru-ṅ-kuṟi-y-avai,* பெ. (n.) ஊர்ப்பெருஞ்சபை; the great assembly of a village or town.

[பெருங்குறி + அவை]

பெருங்குறைபாடு *peruṅguraipatu,* பெ. (n.) பெருந்தீங்கு; bigdraw back.

[பெரும் + குறைபாடு]

பெருங்குன்றூர் கிழார் *peru-ṅ-kuṉṟūr-kiḻār,* பெ. (n.) பதிற்றுப் பத்தில் ஒன்பதாம் பத்தைப் பாடியர் புலவர்; the author of the ninth decade of patiṟṟu-p-pattu.

[பெருங்குன்றூர் + கிழார்]

பெருங்கூட்டணி *peru-n-kuttani,* பெ. (n.) பல அரசியல் கட்சிகளின் கூட்டு நடவடிக்கை; common all of some political party.

[பெரும் + கூட்டணி]

பெருங்கூட்டம் *perū-n-kuttam,* பெ. (n.) திரளான கூட்டம்; mass metting.

[பெரும் + கூட்டம்]

பெருங்கூட்டாளி *peru-ṅ-kuttali,* பெ. (n.) சிறந்த நண்பன்; good friend.

[பெரும் + கூட்டாளி]

பெருங்கை *peru-ṅ-kai,* பெ. (n.) 1. பெரியகை பார்க்க; see periya-kai. (வின்.)2. யானை elephant, as having a long trunk. 'பெருங்கைத் தொழுதியின்' (பதிற்றுப்.76.6.)

[பெரும் + கை]

பெருங்கைக்காரன் *peru-ṅ-kaik-k-āraṉ,* பெ. (n.) பெருஞ்செல்வம் படைத்தவன்; wealthily person.

[பெரும் + கைக்காரன்]

பெருங்கையால் *peru-ṅ-kai-y-āl,* பெ. (n.) பகன்றை (சிலப்.13, 157,உரை.) a plant.

[பெருங்கை + அல்]

பெருங்கொச்சை *pēru-ṅ-koccai,* பெ. (n.) இழிஞன்; mean fellow.

[பெரும் + கொச்சை]

பெருங்கொடி *peru-ṅ-koḍi,* பெ. (n.) 1. பதாகை (பிங்.); large flag. 2. பறக்கவிடும் பெரும்பட்டம் (வின்.) large paper kite

[பெரும் + கொடி]

பெருங்கொடை *peru-ṅ-koḍai,* பெ. (n.) எல்லோர்க்கும் ஏராளமாகக் கொடுக்கை; endow with gift.

[பெரும் + கொடை]

பெருங்கொண்டலாத்தி *peru-ṅ-koṇḍalātti,* பெ. (n.) பறவைவகை(F.); hoopoe, upupa epops.

[பெரும் + கொண்டை + உலாத்தி]



பெருங்கொண்டையார் *peru-ṅ-koṇḍaiyār,* பெ. (n.) தென்னாட்டு மாலியப் (வைணவ) பார்ப்பனரில் ஒரு வகுப்பினர்; a sect of vaisnava brahmins in the south, as from pēṇukoṇda.

[பெரும் + கொண்டையார்]

பெருங்கொத்தரம் *peru-ṅ-kottaram,* பெ. (n.) அரவகை; rough file, wood rasp.

[பெரும் + கொத்து + அரம்]

பெருங்கொந்தளிப்பு *pērun-kontaḷippu,* பெ. (n.) *பெருங்கிளர்ச்சி* பார்க்க. see *peru-ṅ-kiḷarcci.*

[பெரும் + கொந்தளிப்பு]

பெருங்கொம்மட்டி *peru-ṅ-kommaṭṭi,* பெ. (n.) கொம்மட்டிவகை (நாஞ்.); a kind of cucumber.

[பெரும் + கொம்மட்டி]

பெருங்கொய்சகம் *pēru-koycagam,* பெ. (n.) பெருஞ்கொச்சகம்; big pucker.

[பெரும் + கொய்சகம்]

கொய்சகம் → கொச்சகம்

பெருங்கொள்ளை *pērun-kollai,* பெ. (n.) *பெருந்திருட்டு* பார்க்க; see *peruntittru.*

[பெரும் + கொள்ளை]

பெருங்கொன்றை *peru-ṅ-koṉṟai,* பெ. (n.) கொன்றைவகை; a species of unarmed brasiletto. 2. ஊதை(வாத) நாராயணம்; creamy peacock flower.

[பெரும் + கொன்றை]

பெருங்கோட்டான் *peru-ṅ-kōṭṭāṉ,* பெ. (n.) ஆந்தைவகை (பிங்.); a kind of large owl.

[பெரும் + கோட்டான் கோடு = மரக்கிளை கோடு – கோட்டான் = மரக்கொம்பில் இருப்பது]



பெருங்கோடணை *peru-ṅ-kōḍaṇai,* பெ. (n.) ஒருகட் பறைவகை; kettle-drum.

[பெரும் + கோடணை]

த. கோடணை > skt. ghōsaṇā

பெருங்கோநங்கை *peru-ṅ-ko-naṅgai,* பெ. (n.) பெருங்கோப் பெண்டு பார்க்க; see Peru-ṅ-kō-p-peṇḍu. '*பெருங்கோ நங்கை பெட்பவேறிய.....இளம்பிடி*' (பெருங். உஞ்சைக்.40,30.)

[பெருங்கோ + நங்கை]

பெருங்கோப்பெண்டு *peru-ṅ-kō-p-peṇḍu.* பெ. (n.) பட்டத்து அரசி; chief queen '*பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்தனள்*' (சிலப்.25,86.)

[பெருங்கோ + பெண்டு]

பெருங்கோபம் *pērun-kovam,* பெ. (n.) கடுஞ்சினம்; violent anger.

[பெரும் + கோபம்]

(skt. kopa → த.போகம்)

பெருங்கோரை *peru-ṅ-kōrai,* பெ. (n.) 1. பூடுவகை (C.E.M.); spikenard herb. 2. பாய்க்கோரை வகை; a kind of sedge used for matting.

[பெரும் + கோரை]

பெருங்கோழியவரை *peru-ṅ-kōḻi-y-avarai,* பெ. (n.) கொடிவகை (A.); a small climber along the banks of tidal creeks and rivers.

[பெருங் + அவரை]



பெருங்கோழை *pērun-kolai,* பெ. (n.) வீரமற்றவன்; big - slobber.

[பெரும் + கோழை]

பெருங்கோள் *perun-kol,* பெ. (n.) பெரிய வான் கோள்; big planet.

[பெரும் + கோள்]

பெருங்கௌசிகனார் *peru-ṅ-kaušigaṉār,* பெ. (n.) பத்துப் பாட்டினுள் ஒன்றான மலைபடுகடாமியற்றிய ஆசிரியர்; a poet, author of Malaipaḍu-kiaḍām, one of pattu-p-pāttu, q.v.

[பெரும் + கௌசிகனார்]

பெருச்சாளி *peruccāḷi,* பெ. (n.) பெருத்த எலி (பிங்.); bandicoot bandicota mala barica, as a large rat. '*இறைவன் பெருச்சாளியைக் கடவி*' (விநாயகபு.59,15.)

ம. பெரிச்சாலி

[பெருத்த + எலி] பெருத்தஎலி – பெருச்சாளி]



பெருஞ்சங்கு *pērun-cankul,* பெ. (n.) பெரியசங்கு; big conch.

[பெரும் + சங்கு]

பெருஞ்சச்சரவு *pērun-cacharavu,* பெ. (n.) பெரும்பூசல்; big contention.

[பெரும் + சச்சரவு]

பெருஞ்சகுனம் *pērun-jagunam,* பெ. (n.) பெருநிமித்தம்; big omen.

[பெரும் + சகுனம்]

(skt. šakuna → த. சகுனம்)

பெருஞ்சரக்கு *peru-ñ-carakku,* பெ. (n.) பேரளவாக விற்கப்படும் பருத்திவிதை பாக்குப்போன்ற பண்டம்(G.Tp.Di.177.); goods sold in large quantities, as cotton seeds, areca-nuts, etc.

[பெரும் + சரக்கு]

பெருஞ்சள்ளை *perun-callai,* பெ. (n.) பெருந்தொல்லை; nuisance.

[பெரும் + சள்ளை]

பெருஞ்சவளம் *peru-ñ-javaḷam,* பெ. (n.) குந்தப்படைவகை (பிங்.) large-sized dart or lance, dist. fr. ciṟucavaḷam.

[பெரும் + சவளம்]

பெருஞ்சன்னல் *pērun-cannel,* பெ. (n.) பெரும்பலகணி; big-window.

[பெரும் + சன்னல்]

(port. janella → த. சன்னல்)

பெருஞ்சாட்டை *pērun-sattai,* பெ. (n.) பெருங்கசை; big-whip.

[பெரும் + சாட்டை]

பெருஞ்சாண்நடவு *peru-ñ-cāṇ-naḍavu,* பெ. (n.) நாற்றை விலகநடுகை (இ.வ.); mode of transplantation in which the seedlings are planted with large interspaces.

[பெருஞ்சாண் + நடவு]

பெருஞ்சாந்தி *peru-ñ-šāndi,* பெ. (n.) கோயிற் பெரிய திருவிழாவின் முடிவில் நடக்கும் பெரிய (அபிடேகம்) திருமுழுக்காட்டு; mahabhi sēkam at the end of the chief festival in a temple. '*கபாலீச்சரமமர்ந்தான் பெருஞ்சாந்தி காணாதே போதியோ?*" (தேவா.1119,10.)

[பெரும் + சாந்தி]

skt. šanti. த. சாந்தி

பெருஞ்சாமம் *peru-ñ-cāmam,* பெ. (n.) ஏழரை நாழிகை கொண்ட காலவளவை(வின்.); a period of three hours.

[பெரும் + யாமம் → சாமம்]

பெருஞ்சாமரை *perun-jamarai,* பெ. (n.) ஈயோட்டும் மயிர்க்குச்சம்; chowry.

[பெரும் + சாமரை]

பெருஞ்சாய் *peru-ñ-cāy,* பெ. (n.) பேராற்றல்; great strength. '*சாயாப் பெருஞ்சாய்கெட*' (கம்பரா.நாக.21.)

[பெரும் + சாய்]

பெருஞ்சாலை *pērun-salai,* பெ.(n.) பேரொழுங்கை (அகலச் சாலை); broadway.

[பெரும் + சாலை]

பெருஞ்சாவு *peru-ñ-cāvu,* பெ. (n.) அகவையில் முதிர்ந்தோரது இறப்பு; death in old age.

[பெரும் + சாவு சா–சாவு]

பெருஞ்சிந்தனை *pērun-cintanai,* பெ. (n.) கடுஞ்சிந்தனை; exlogitation.

[பெரும் + சிந்தனை]

பெருஞ்சிரங்கு *peru-ñ-cirangu,* பெ. (n.) சொறிவகை(M.L.); scalries itch.

[பெரும் + சிரங்கு]

பெருஞ்சிவிங்கி *peru-ñ-civingi,* பெ. (n.) *சிறுத்தை,* பார்க்க; see *šiṟuttai. panthor.*

[பெரும் + சிவிங்கி]

பெருஞ்சிறப்பு *peru-ñ-ciṟappu,* பெ. (n.) 1. பெரும் மதிப்புரவு; high honours. 2. உயர்ந்த கொண்டாட்டநேரம்; grand festive occasion.

[பெருமை + சிறப்பு]

பெருஞ்சின்னி *peru-ñ-ciṉṉi,* பெ. (n.) செடிவகை (பதார்த்த.535.); a species of birth-leaved acalypha.

[பெரும் + சின்னி]

பெருஞ்சீரகம் *peru-ñ-ciragam,* பெ. (n.) 1. சோம்பு; common anise, 2. பெருஞ்சீரக செடிவகை(L.); chinese anise,plant with aromatic seeds.

[பெரும் + சீரகம்]

உலகில் முதன்முதற் சிறந்த முறையிற் சமையல் தொடங்கியதும் அதற்குச் சீரகத்தைப் பயன்படுத்தியதும் தமிழகமே (வ.வர.155)

பெருஞ்சுவர் *peru-n-cuvar,* பெ. (n.) நீளமான சுவர்; long wall. 1. சீனநாட்டில் உள்ள பெருஞ்சுவர் உலகத்தின் நீளமான சுவராகும்.

[பெரும் + சுவர்]

பெருஞ்சூட்டு *peru-ñ-cūṭṭu,* பெ. (n.) தலையணிவகை (பிங்.); a kind of head ornament.

[பெரும் + சூட்டு சூடு–சூட்டு]

பெருஞ்சூழ்ச்சி *peru-ñ-cuñcci,* பெ. (n.) பெரும் ஏமாற்றுவேலை; do fraud.

[பெரும் + சூழ்ச்சி]

பெருஞ்சூறாவளி *perun-curāvali,* பெ. (n.) பெருஞ்சுழல் காற்று; violent storm.

[பெரும் + சூறாவளி]

பெருஞ்சூனியம் *peru-ñ-cūṉiyam,* பெ. (n.) பெருவசியம்; pishogue.

[பெரும் + SKt. ūnya *த. சூனியம்]*

பெருஞ்செக்கு[1] *peru-ñ-cekku,* பெ. (n.) பெருஞ்செக்காலை; big oil-press.

[பெரும் + செக்கு]

பெருஞ்செக்கு[2] *peru-ñ-cekku,* பெ. (n.) 24வது விண்மீன்; the 24th nak-satra. (திவா.)

[பெரும் + செக்கு]

பெருஞ்செங்கார் *peru-ñ-ceṅgār,* பெ. (n.) நெல்வகை (A.); a kind of paddy

[பெரும் + செம்(மை) + கார்]

பெருஞ்செய் *peru-ñ-cey,* பெ. (n.) மேம்பாடுள்ள செயல்; great dead. *'பெருஞ்செய் யாடவர்'* (புறநா.199.)

[பெரும் + செய்]

பெருஞ்செய்யாளன் *peru-ñ-cey-āḷaṉ,* பெ. (n.) பெரிய வீரச்செயலுள்ளவன்; a man of great deeds. *'எஃகுளங்கிழிய. ...... அருங்கட னிறுத்த பெருஞ்செய்யாளன்'* (புறநா.282.)

[பெருஞ்செய் + ஆளன்]

பெருஞ்செய்யான் *peru-ñ-ceyyāṉ,* பெ. (n.) தேள்வகை (யாழ்.அக.); a kind of scorpion. 2. பெரும்பூரான் (சங்.அக.) பார்க்க; see peru-m-pūrāṉ.

[பெரும் + செய்யான்]

பெருஞ்செருப்படி *peru-ñ-ceruppaḍi,* பெ. (n.) பூடுவகை (வின்.); a plant, croton plicatum.

[பெரும் + செருப்படை → செருப்படி]

பெருஞ்சேரலிரும்பொறை *peru-ñ-cēral-irum-porai,* பெ. (n.) பதிற்றுப் பத்தனுள் எட்டாம் பத்தினாற் புகழப்பட்ட சேரன்; a cēra king, the hero of the eighth decad of padiṟṟu-pattu.

[பெருஞ்சேரல் + இரும்பொறை]

பெருஞ்சேனை *peruñ-sanai,* பெ. (n.) பெரும்படை; large army.

[பெரும் + சொல்]

பெருஞ்சொல் *peru-ñ-col,* பெ. (n.) பலரறிசொல் (திவா.); word known to many.

[பெரும் + சொல்]

பெருஞ்சொறி *peru-ñ-coṟi,* பெ. (n.) தவளைச் சொறி; a kind of eruption.

[பெரும் + சொறி]

பெருஞ்சொறிக்குட்டம் *peru-ñ-coṟi-k-kuṭṭam,* பெ. (n.) கொடியகுட்டநோய்வகை; a virulent form of leprosy.

[பெருஞ்சொறி + குட்டம்]

பெருஞ்சோதனை *peru-n-cōtanai,* பெ. (n.) ஆராய்ந்து தேடுதல்; act of searching.

[பெரும்+ சோதனை]

(skt. šōdhana → த. சோதனை)

பெருஞ்சோலி *peru-ñ-cōli,* பெ. (n.) வெள்ளைக்கடம்பு; bridal couch plant.

[பெரும் + சோலி]

பெருஞ்சோழி *perun-cōḻi,* பெ. (n.) பெரும்சிப்பி; bigcowry.

[பெரும் + சோழி]

பெருஞ்சோற்றுநிலை *peru-ñ-jōṟṟu-nilai,* பெ. (n.) போர்மேற்கொண்ட அரசன் படையாளர்க்கு உண்டியளித்து முகமன் செய்தலைக்கூறும் புறத்துறை (purap.); theme of a king giving feast to his soldiers on the eve of battle. '*பிண்டமேய பெருஞ்சோற்று நிலையும்*' (தொல்.பொ.63.)

[பெருஞ்சோற்று + நிலை]

பெருஞ்சோற்றுவஞ்சி *peru-ñ-cōṟṟu-vañji,* பெ. (n.) *பெருஞ்சோற்றுநிலை,* பார்க்க; see *peru-ñ-cōṟṟu-nilai.* சோற்றுநிலை. '*பின்றாச் சிறப்பிற்பெருஞ்சோற்று வஞ்சியும்*' (சிலப். 25,144.)

[பெருஞ்சோற்று + வஞ்சி]

பெருஞ்சோறு *peru-ñ-ñ-cōṟu,* பெ. (n.) 1. அரசன்தன் படைத்தலைவர்க்கு அளிக்கும் பேருணவு; sumptuous feast given by a king to the generals of his army. '*உதியஞ் சேரல் பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை*' (அகநா.233.) 2. 2ஆம் விண் மீன். (திவா.); the second naksatra.

[பெரும் + சோறு]

பெருந்தக்காளி *peru-n-takkāḷi,* பெ. (n.) தக்காளி வகை(L.); Indian winter-cherry, psysalis peruiana

[பெரும் + தக்காளி]

பெருந்தகரை *peru-n-tagarai,* பெ. (n.) ஒருவகைச் சிறுமரம்(L.); west Indian bead tree, s.tr., leucaena glauca.

[பெரும் + தகரை]

பெருந்தகளி *peru-n-tagaḷi,* பெ. (n.) பலமுகங்களையுடையவிளக்கு; multifaced oil-lamp.

[பெரும் + தகழி→தகளி]

பெருந்தகை *peru-n-tagai,* பெ. (n.) 1. பெருமையுள்ளவ–ன்–ள்; noble-minded person. '*பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை*' (நெடுநல்.106.) 2. பெருந்தன்மை பார்க்க, 3. மிக்க அழகு; great beauty. '*பெயர்ந்தான் பெருந்தகையினான்*' (பு.வெ.6,30.)

[பெருமை + தகை]

பெருந்தடிமல் *peru-n-taḍimal,* பெ. (n.) ஒருவகைச் சுரநோய்(M.L.): influenza.

[பெரும் + தடிமல் தடிமன்–தடிமல்]

பெருந்தண்வாழ்க்கை *peru-n-taṇ-vāḻkkai,* பெ. (n.) நல்லறப்பெருமை கொண்ட இல்லற வாழ்க்கை; high dignity noble life. "விருந்து புறந்தருஉம் பெருந்தண் வாழ்க்கையும்" (சிலப்பு. மனை.86.)

[பெருமை + தண் + வாழ்க்கை]

பெருந்தரம் *peru-n-taram,* பெ. (n.) 1. பேரலுவல்பணிவகை; a high office ஸ்ரீராஜராஜதேவர் பெருந்தரம்.....சேனாபதி மும்மடி சோழப் ரம்மாராயன்" (s.i.i.ii,161,3.) 2. தாராளமனம்(கொ.வ.) liberal mindedness.

[பெரும் + தரம்]

பெருந்தரா *peru-n-tarā,* பெ.(n.) *பெருந்தரம்,* 2. பார்க்க; இ.வ., கொ.வ.; see *peru-n-taram.*

[பெரும் + தரம்→தரா]

பெருந்தலை *peru-n-dalai,* பெ. (n.) தலைமைக்காரன்; head man. (இ.வ.)

[பெரும் + தலை]

பெருந்தலைக்கறையான் *peru-n-talai-k-kaṟaiyāṉ,* பெ. (n.) கறையான் வகை(வின்); large-headed white ant.

[பெருந்தலை + கறையான்]

பெருந்தலைத்திமிங்கிலம் *peru-n-talai-t-timiṅgilam,* பெ. (n.) திமிங்கிலவகை(M.M.); sperm whale, Euphysetes macrocephalus, as having a huge head.

[பெருந் + தலை + திமிங்கிலம்]

பெருந்தவறு *peru-n-tavaru,* பெ. (n.) பெருங்குற்றம்; gross-offence.

[பெரும் + தவறு]

பெருந்தன்மை *peru-n-taṉmai,* பெ. (n.) 1. மேம்பாடு; high dignity, noble character 2. செருக்கு (அகந்தை) (யாழ்.அக.) selfconceit. 3. இறைமை; god-hood, 4. வள்ளன்மை; generosity.

[பெரும் + தன்மை]

பெருந்தன்மையாளர் *pērun-daṉmaiyalar,* பெ. (n.) நற்பண்பாளர்; gentleman.

[பெரும்தன்மை + ஆளர்]

பெருந்தனம் *peru-n-taṉam,* பெ. (n.) 1. சோழரது அரசாங்க பணிகளிலொன்று; an office of the state under cōḷa government . ஸ்ரீராஜராஜதேவர் பெருந்தனம் மும்மடி சோழ போசன் (s.i.i.ii,222.) 2. கணிகையரில் ஒரு பிரிவினர்(சிலப்,14,167, உரை.); a class of dancing-girls.

[பெரும் + தனம்]

பெருந்தாதை *peru-n-tādai,* பெ. (n.) *பெரியப்பன்* பார்க்க; see *periyappaṉ* . *'பெருந்தாதை சொல்லால்......அவனிகாப்ப'* (பாகவத.1. தன்மபுத்திர.41.)

[பெரும் + தாதை]

பெருந்தாய் *peru-n-tāy,* பெ. (n.) *பெரிய தாயார்* பார்க்க; see *periyatāyar.* '*பெருந்தாயுழைப்புகுந்தான்*' (உபதேசகா. சிவவிரத.259.)

[பெரும் + தாய்]

பெருந்தாரா *peru-n-tārā,* பெ. (n.) வாத்து வகை(வின்); goose, auser auser.

[பெரும் + தாரா]



பெருந்தாழை *peru-n-dāḷai,* பெ. (n.) *சீமைக்கற்றாழை*(L.) பார்க்க; see *šīmai-R-Raṟṟāḷai,* giant mexican lily,

[பெரும் + தாழை]

பெருந்தாளி[1] *peru-n-tāḷi,* பெ. (n.) பெருந்தகளி(இ.வ.) பார்க்க; see *peru-n-tagaḷi.*

[பெரும் + தகளி→தாளி]

பெருந்தாளி[2] *peru-n-tāḷi,* பெ. (n.) தாளிச் செடிவகை(வின்); a large climber.

[பெரும் + தாளி]

பெருந்தானம் *peru-n-tāṉam,* பெ. (n.) நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, உதடு, பல் தலையாகிய ஒலியெழும் எட்டு உறுப்புகள் (சிலப்.3,26,உரை.); parts of the body, from which speech proceds, eight in humber, viz., neñju, miḍaṟu, nākku, mūkku, aṇṇākku, udaḍu-pal, talai.

[பெரும் + skt tana. த.தானம்]

பெருந்திகிரி *peru-n-tigiri,* பெ. (n.) எல்லைச் சக்கரவாளத்துக்கும் அப்பாலுள்ள சக்கரவாளமலை; a mythical range of mountain cakkaravāḷam. '*பெருந்திகிரி வெற்புடையவே*' (தக்கயாகப்.403.)

[பெரும் + திகிரி]

பெருந்திசை *peru-n-tišai,* பெ. (n.) **1.** வடக்கு முதலிய முதன்மையான திசை; any of the four cardinal points **2.** நீண்ட நிலப்பரப்புள்ள திக்கு; a direction in which the land area is extensive. '*வடதிசை பெருந்திசை யாகலின்*' (சிலப்.5,94, உரை.)

[பெரும் + திசை]

பெருந்திட்டம் *perun-tittam,* பெ. (n.) வரைவுத்திட்டம்; great plan.

[பெரும் + திட்டம்]

பெருந்திணை *peru-n-tiṇai,* பெ. (n.) அகத்திணையேழனுள் ஒன்றானதும் ஒத்த தன்மைல்லாதவளுடனாவது நெறிமுறை மாறாக வாவது, தன்னைவிட அகவையில் முதிர்ந்தவ ளோடாவது, மனம் ஒவ்வாதவளோடாவது கூடும் காதல்; (akap.) improper love, as when it is in violation of customary rules or when the woman is older than the man or is of a different caste or does not consent, one of serven aga-t-tiṇai. q.v. "கைக்கிளை முதலாப் பெருந்திணையிறவாய்" (தொல்.பொருள்.1)

"பெரும்பகுதி மக்கள் மணமுறைகளுள் பெரும்பாலனவற்றைத் தன்னுள் அடக்கி நிற்பதால், பொருந்தாக்காமம் பெருந்திணை எனப்பட்டது. கவர்வு மணங்களும், இயற்கைக்கு மாறான எல்லாப் புணர்ச்சி வகைகளும் பெருந்திணையே: காதலொடு பொருந்தாமையும் நெறியொடு பொருந்தாமையும் பற்றி, பெருந்திணை பொருந்தாக்காமம் எனப்பட்டது." (கு.தி.பக்.16)

[பெரும் + திணை]

பெருந்திரட்டு *peru-n-tiraṭṭu,* பெ. (n.) தத்துவராயர் தொகுத்த மறைமுடிபு (வேதாந்த) நூல்; the larger religious anthology compiled by tattuvarāyar. dist.fr.kurṟu-n-tiṟṟu.

[பெரும் + திரட்டு]

பெருந்திராய் *peru-n-tirāy,* பெ. (n.) பூடுவகை(M.M.); Indian chickweed, s.sh., mouugo spergula

[பெரும் + திராய்]

பெருந்திருக்கை *peru-n-tirukkai,* பெ. (n.) திருக்கைமீன் வகை; sting-ray, reddish brown, attaining 6 ft. across and 3 ft. in length, pteroplatea micrura.

[பெரும் + திருக்கை]

பெருந்திருட்டு *perun-tiruttu,* பெ. (n.) பெருங்கொள்ளை; great steal.

[பெரும் + திருட்டு]

பெருந்திருப்பாவாடை *peru-n-tiru-p-āvāḍai,* பெ. (n.) *பெருந்திருவமிழ்து*(ஈடு.); பார்க்க see *peru-n-tiru-v-amirdu.*

[பெரும் + திரு+பாவாடை]

பெருந்திருவமிர்து *peru-n-tiru-v-amirdu,* பெ. (n.) *பெருந்திருவமிழ்து* பார்க்க; see *peru-n-tiru -v-amiḻdu.*

[பெரும் + திரு + அமிர்து. அமிழ்து → அமிர்து]

பெருந்திருவமிழ்து *peru-n-tiru-v-amiḻdu,* பெ. (n.) இறைவனுக்குப் படைக்கும் பெரும்படையல் (நிவேதனம்); food offered to God in a large scale *'திருவிழா எழுந்தருளுகைக்கும் பெருந்திருவமிழ்து செய்து அருளுகைக்கும்'* (s.i.i.v.365.)

[பெரும் + திரு + அமிழ்து]

பெருந்திருவி *peru-n-tiruvi,* பெ. (n.) பெருஞ்செல்வமுள்ளவள்; wealthy lady. 'பெருந்திருவியார் மகள்கொல்' (சீவக.1969.)

[பெரும் + திருவி திரு + இ = திருவி திரு = செல்வம் 'இ'–பெ.பா.ஈறு]

பெருந்திரைப்பு *pērun-tirappu,* பெ. (n.) பெருங்கொய்சகம்; (கொசவம்) big pucker.

[பெரும் + திரைப்பு]

பெருந்தில்லை *peru-n-tillai,* பெ. (n.) தில்லைமரவகை(யாழ்.அக.); a kind of tillai tree.

[பெரும் + தில்லை]

பெருந்திவசம் *peru-n-tivašam,* பெ. (n.) தலைத்திவசம்(இ.வ.); first annual ceremony of a decessed person.

[பெரும் + திவசம்]

பெருந்திறனாளர் *pēru-n-tiranālar,* பெ. (n.) பெருவல்லுநர்; great expert.

[பெரும் + திறனாளர்]

பெருந்தீங்கு *pērun-tingu,* பெ. (n.) பேரிடர்; risk.

[பெரும் + தீங்கு]

பெருந்தீக்கோல் *pērun-tikkol,* பெ. (n.) பெருஞ்சூட்டுக்கோல்; big pocker.

[பெரும் + தீக்கோல்]

பெருந்தீக்குறி *pērun-tikkuri,* பெ. (n.) பெருந்தீநிமித்தம்; great knell.

[பெரும் + தீக்குறி]

பெருந்தீவட்டி *peru-n-devatte,* பெ. (n.) பெருந்தீப்பந்தவிளக்கு; Portable light

[பெரும் + தீவட்டி]

பெருந்தீவு *peru-a-tivu,* பெ. (n.) எழுதீவு; the seven continents. (பிங்.)

[பெரும் + தீவு]

பெருந்தீனிக்காரன் *peru-n-tini-k-kāraṉ,* பேருண்டியாளன்; glutton.

[பெரும் + தீனி +காரன்.] உடையவனைக் குறிக்கும் ஈறு காரன்

பெருந்துக்கம் *peru-n-tukkam,* பெ. (n.) மனச்சோர்வு; sadness.

[பெரும் + துக்கம்]

(skt. duhkha → *த. துக்கம்)*

பெருந்துத்தி *peru-n-tutti,* பெ. (n.) 1. செடிவகை; common evening mallow. m.sh., abutilon Indicum 2. துத்திச்செடிவகை; wrinkled leaved evening mallow. m.sh., abutilon cesiaticum.

[பெரும் + துத்தி]



பெருந்தும்பை *peru-n-tumbai,* பெ. (n.) தும்பைவகை; large species of white dead-nettle, leucas aphalotes.

[பெரும் + தும்பை]

பெருந்துருத்தி *peru-n-turutti,* பெ. (n.) நீர் வீசுங்கருவிவகை(சூடா.) ; a kind of syringe.

[பெரும் + துருத்தி]

பெருந்துளசி *peru-n-tuḷaśi,* பெ. (n.) துளசி வகை; large basil, l.sh., ocimum gratissimum.

[பெரும் + துளசி]

பெருந்துறை *peru-n-tuṟai,* பெ. (n.) 1. பெரியதுறைமுகம்; large seaport. 'பெருந்துறை மருங்கிற் பெயராது' (சிலப்.13,178.) 2. திருப்பெருந்துறை பார்க்க; Avuḍaiyārkoil. 'சீரார் பெருந்துறை நந்தேவன்' (திருவாச.1,15.)

[பெரும் + துறை]

பெருந்துன்பம் *peru-n-tunpam,* பெ. (n.) பெருந்துன்பம்; deep distress.

[பெரும் + துன்பம்]

பெருந்தூறு *peru-n-tūṟu,* பெ. (n.) பெரும்புதர்(சூடா.); large bush, underwood.

[பெரும் + தூறு]

பெருந்தெரு *peru-n-teru,* பெ. (n.) நகரின் முதன்மைத் தெரு; main street *'நகரியிற் பெருந்தெருவிலே விலைக்கு விற்பாரை'* (சிலப்.3,165–9,உரை.)

[பெரும் + தெரு]

பெருந்தேக்கு *peru-n-tēkku,* பெ. (n.) தேக்கு(சங்.அக.); teak wood.

[பெரும் + தேக்கு]

பெருந்தேட்டம் *peru-n-tattam,* பெ. (n.) நுணுக்கத்தேடுதல்; act of searching.

[பெரும் +தேட்டம்]

பெருந்தேட்கொடுக்கு *Peru-n-tēṭ-koḍukku,* பெ. (n.) தேட்கொடுக்கி வகை (பதார்த்த.264); a large species of Indian turnsole.

[பெரும் + தேட் கொடுக்கு]

பெருந்தேவபாணி *Peru-n-dēva-bāṇi* பெ. (n.) **1.** கடவுளரை வாழ்த்தும் இசைப்பாவகை (சிலப்.6.35. உரை); a kind of song in praise of gods, opp. to ciṟu-dēva- bāṇi **2.** பதினோராந் திருமுறையைச் சார்ந்ததும் நக்கீரதேவர் இயற்றியதுமான ஒரு சிற்றிலக்கியம்; a poem in praise of siva in padinōrān- tirumuṟai by Nakkera-dvar

[பெரும் + தேவபாணி]

பெருந்தேவன் *Peru-n-dēvaṉ,* பெ. (n.) தலைமைத் தெய்வம்; the Supreme Deity. *'உலகேழும் விழுங்கி யுமிழ்ந்திட்ட பெருந்தேவன்'* (திவ்.திருவாய்.4,6,4.)

[பெரும் + தேவன்]

பெருந்தேவனார் *Peru-n-dēvaṉār,* பெ. (n.) **1.** பாரதம் பாடிய கழகக் காலப் புலவர்; (தொல்.பொ.72, உரை.பக்.231.) a sangam poet, author of Tamil Bhāradam **2.** ஒன்பதாம் நூற்றாண்டில் பாரதவெண்பா பாடிய புலவர்; the author of pārada-veṇbā, 9th c **3.** பதினோராம் நூற்றாண்டினரான வீரசோழியவுரைகாரர்; the author of the commentary on vira-sōḻiyam, 11th c

[பெரும் + தேவன்+ஆர்+'ஆ' (உ.ப.ஈறு)]

பெருந்தேவி *peru-n-dēvi,* பெ. (n.) பட்டத்து அரசி chie queen *'பாண்டியன் பெருந்தேவி வாழ்கென'* (சிலப்.20.21.)

[பெரும் + தேவி+ தேவன் – (ஆ.பா.)– தேவி (பெ.பா)]

பெருந்தேன் *peru-n-tēṉ,* பெ. (n.) **1.** தேனீக்கள் கட்டும் தேன்; honey secreted by bees *'குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந் தேனிழைக்கும்'* (குறுந்.2.) **2.** பெருந்தேனீ பார்க்க; *peru-n-tēṉ,* *'பெருந்தேன் கண்படு வரையின்'* (குறுந்.273)

[பெரும் + தேன்]

பெருந்தேனீ *peru-n-tēṉi,* பெ. (n.) பெரிய தேனீவகை; (வின்.) large sized honey bee

[பெரும் + தேன் + a]

பெருந்தையலிடு—தல் *peru-n-taiyal-iḍu,* செ.குன்றா.வி (v.i.) நன்றாகத் தைப்பதற்கு முன் பெரும்படியாக நூலையோட்டுதல்; to stich a running shtch; to tack

[பெரும் + தையல் + இடு]'இடு' (துவி)]

பெருந்தொகை *peru-togai,* பெ. (n.) பெருந்திரள் பார்க்க; see peruntiral.

[பெரும் + தொகை]

பெருந்தொடர் *peru-n-toḍar,* பெ. (n.) எழுவாய் பயனிலை முடிந்த கிளவியம் (வாக்கியம்) சிலவற்றைப் பிணைத்து நடக்குந் தொடர்ந்த கிளவிபம் (தொல். சொல்.42, சேனா.); compound or complex

[பெரும் + தொடர்]

பெருந்தொடை *peran-toḍai,* பெ. (n.) 1. தொடையின் மேற்பகுதி; upper part of the thigh; thick part of the thigh *'வெள்ளம் பெருந்தொடை வரை வந்தது'* 2. இடுப்பு (இ.வ.); hip

[பெரும் + தொடை]

பெருந்தொப்பி *perun-toppi.* பெ. (n.) பெரிய கவிப்பு; top-hat.

[பெரும் + U. topi. த. தொப்பி.]

பெருந்தொல்லை *perun-tollai,* பெ. (n.) பெருந்துன்பம்; great nuisance.

[பெரும் + தொல்லை]

பெருந்தொழுகை *peru-n-tulukai* பெ. (n.) பெருமிறைத்தொழுகை; mass prayer.

[பெரும் + தொழுகை]

பெருந்தோல்வி *peru-tolvi.* பெ. (n.) படுதோல்வி; heavy fall.

[பெரும் + தொழுகை]

பெருநகரத்தார் *peru-nagarattār,* பெ. (n.) வணிகர்(I.M.P.Tj.142.); merchants.

[பெரு + நகரம்+ 'அத்து' சாரியை] ஆர்

பெருநகர் *peru-nagar,* பெ. (n.) மக்கள் தொகை மிக்க தலைமை மாநகரம்; Metro politan city

[பெரும் + நகர்]

பெருநகை *peru-nagai,* பெ. (n.) 1. பெருஞ்சிரிப்பு (பிங்); broad laugh laughter ridialous 2. பேரிகழ்ச்சி; being highly ridicuilous *'ஊரவர்க் கெல்லாம் பெருநகையாகி'* (கலித்.45.)

[பெரு + நகை]

பெருநடை *peru-naḍai,* பெ. (n.) 1. விரைந்த செலவு; fast walk' as of bullocks 2. புறக்கூத்துக்குரிய ஆடல்களுள் ஒன்று (சிலப்.3,16,உரை.); a mode of dancing. 3.உயர்ந்தவொழுக்கும் (சங்.அக); excellent conduct

[பெரு + நடை]

பெருநந்தியாவட்டம் *peru-nandiyā-vaṭṭam,* பெ. (n.) பெரு நந்தியாவட்டை பார்க்க; see perunantiyāvattai.

[பெரு(மை) + நந்தியாவட்டம்]

பெருநந்தியாவட்டை *peru-nandiyāvaṭṭai,* பெ. (n.) அடுக்கு நந்தியாவட்டம் பார்க்க;see adukku- nandiya vattam East Indian rosebay

[பெரு(மை) + நந்தியாவட்டம் நந்தியாவட்டம் –நந்தியாவட்டை]

பெருநம்பி *peru-nambi,* பெ. (n.) 1. இளவரசற்க்குரிய பட்டப்பெயர்; title of a royal prince *'பெருநம்பியாக வென்றான்'* (சீவக.2913.) 2. அரசர்க்குரிய மதிப்புரவு (விபவமெல்லாம்) பெறும் அமைச்சர் பட்டம்; title of a minister to whom royal honours are shown *'பெருநம்பி குலச்சிறை'* (தேவா.737,4)

[பெரு + நம்பி]

பெருநம்பிகள் *peru-nambigal,* பெ. (n.) கடிகைமாக்கள் (பிங்) பார்க்க; Radigai-mākkaḷ, panegyrists

[பெரு + நம்பிகள்] 'கள்' (ப.பா.ஈறு)

பெருநரிவெங்காயம் *peru-narivengāyam,* பெ. (n.) செடிவகை(A); poison lily, s.sh crinum asiaticum. (a)

[பெரு + நரிவெங்காயம்]

பெருநல்குரவு *peru-nalgravu,* பெ. (n.) பெருவறுமை, பார்க்க; see peruvarumai.

[பெரு + நல்குரவு]

நல்குரவு = வறுமை

பெருநறளை *peru-neṟalai,* பெ.(n.) நீண்ட கொடிவகை; wolly heart vine (l) (செ.அக.)

[பெரு + நறளை]

பெருநறுவிலி *peru-neṟuvili,* பெ. (n.) 1. மரவகை; large sebesten, m.tr, cordia oblifua pypica 2. நறுவிலிவகை; a kind of felted leaved selerge sebesten, s.tr, cordia fulvasa (செ.அக.)

[பெரு + நறுவிலி]

பெருநாட்டம் *peru-nattam,* பெ. (n.) பெருவிருப்பம்; aspiration.

[பெரு + நாட்டம்]

பெருநாடி *peru-nāḍi,* பெ. (n.) மூல அடிப்படையான குருதிக்குழய், இரத்தக்குழாய் (M.L); aorta

[பெரு + நாடி]

பெருநாணல் *peru-nāṇal,* பெ. (n.) நாணல் வகை(m.m.509); dog bamboo,i.sh.) phragmites rox burghi

[பெரு + நாணல்]

பெருநாத்திகர் *perum-nathigar,* பெ. (n.) பகுத்தறிவாளர் (இன்மைக்கொள்கையர்); altheist.

[பெரும் + நாத்திகர்]

(skt. nāstikan → *த. நாத்திகர்)*

பெருநாரை *peru-nārai.* பெ. (n.) 1. நாரைவகை (பிங்); cyrus crane, Grus antigone 2.தலைக்கழகத்து வழங்கிய இசைநூல்களுள் ஒன்று (சிலப்.உரைப்பா.) ஒன்று a treatise on music, of the first sangam, not now extant.

[பெரு + நாரை]



பெருநாவல் *perunāval.* பெ. (n.) நாவல்வகை; (மலை) East Indian rose-apple

[பெரு + நாவல்]

பெருநாள் *peru-nāḷ,* பெ.(n.) 1. திருநாள்; festival, festive occasion *'ஒருபெரு நாளான் மணவணி காண'* (சிலப்.1,41.) 2. 27ஆவது விண்மீன் (சூடா.); the 27th naksatra 3. ஒரு முகம்மதியப் பண்டிகை; day of breaking the fast and enjoyment of the feast of Id. ul. Fitr. 4. நெடுங்காலம்; long period of time. *'பெருநா டெரிகின்றிலர்..... உனை'* (கம்பரா. இரணிய. 106.)

[பெரு + நாள்]

பெருநாளிகம் *peru-nāḷjgam,* பெ. (n.) நெருப்பை (அக்கினியை) வெளியிட்டழிக்கும் ஒருவகைத் தகரி (சுக்கிரநீதி,329.); a destrtuctive mechanisam, resembling a gun.

[பெரு + நாளிகம்]

பெருநாளிருக்கை *peru-nāḷ- irukkai.* பெ.(n.) அரசனது சிறப்பு நாளோலக்கம் (சிலப்.23.56.); great durbar of a king. *'திருநிலை பெற்ற பெருநாளிருக்கை'*

[பெருநாள் + இருக்கை]

பெருநான்கெல்லை *peru-nāṉgellai.* பெ.(n.) 1. சிற்றூர் அல்லது நிலத்தாக்கின் பேரெல்லை; bowndary, as of a village or block of land. opp.to ciru-nāṉgellai 2. எல்லை; boundary *'இப்பெருநான் கெல்லைக்குட்பட்ட இவ்வரைமா நிலமும்'* (s.i.i.iii.45.)

[பெரு + நான்கு+எல்லை]

பெருநிந்தை *peru-nintai.* பெ. (n.) பெருமிழிவு; great insult.

[பெரு + நிந்தை]

(skt. nindū - *நிந்தை)*

பெருநிரவி *peru-niravi.* பெ. (n.) கூட்டம்; (யாழ்.அக) gatherng

[பெரு + நிரவி]

பெருநிலம் *peru-nilam,* பெ.(n.) 1. நிலவுலகம்; earth. *'பெருநில முழுதாளும் பெருமகன்'* (சிலப்.1,31.) ;highest heaven *'அருளொடு பெருநில மளிக்கும்'* (திவ்,பெரியதி.1,1,9.)

[பெரு + நிலம் நில்—நிலம்]

பெருநிலை *peru-nilai.* பெ.(n.) (ஈடு,3,7,2 அரும்); 1. ஒருபக்கம் சார்தல் (பட்சபாதம்); partiality. 2. சான்று (சாட்சி); testimony 3. விடாப்பிடி; perseverance

[பெரு + நிலை]

பெருநிலைநில்–தல் (பெருநிலைநிற்றல்) *peru-nilai-nil.* செ.கு.வி(v.i.) உதவிசெய்தல்; to render assistance. *'உன்கிருததிரிமத்துக்குப் பெருநிலை நிற்பார்க்கன்றோ தெரிவது'* (ஈடு,6.2.5.) 2. சான்று சொல்லுதல்; to give testimony to accomplish,do.(ஈடு,3,7,2, அரும்);

[பெரு + நிலை + நில்]

பெருநீர் *peru-nir,* பெ. (n.) 1. கடல்; ocean,sea. *'பெருநீர் போகுமிரியன் மாக்களொடு'* (சிலப்.6.112.) 2. பெருநீர் முறை பார்க்க; see peru-nir-murai

[பெருமை + நீர்]

பெருநீர்முறை *peru-nir-murai,* பெ. (n.) மழைக்காலத்துப் பாய்ச்சல் முறையின்றித் தாராளமாக ஓடும் நீர்ப்பெருக்கு; water allowed to flow without any restraint or regulation during the rainy season (C.G)

[பெருநீர் + முறை]

பெருநூல் *peru-nul,* பெ.(n.) பெரிய நூல்; large book.

[பெரும் + நூல்]

பெருநெஞ்சு *peru-nēñju,* பெ(n.) 1. செருக்கு (அகம்பாவம்)(வின்.); pride 2.மனவுறுதி (தைரியம்); courage *'அஞ்சாப் பெருநெஞ்சுள்ளவன்'*

[பெரு–மை + நெஞ்சு]

பெருநெருஞ்சி *peru-nēruñji,* பெ. (n.) ஒருவகைச்செடி; a stout- stemmed herb with spiny fruits and slimy leaves.

[பெரு + நெருஞ்சி]

பெருநெல் *peru-nel,* பெ. (n.) 1. மட்டநெல்; carse paddy 2. நெல்வகை(வின்); a kind of paddy, longer in growing than other kinds

[பெரு + நெல்]

பெருநெறி *peru-neri,* பெ(n.) 1. பெருவழி; royal road, trunk road 2. வீடுபேறு; the path of salvation *'பேயனாகிலும் பெருநெறி காட்டாய்'* (திருவாச. 23,7.)

[பெருமை + நெறி]

பெருநையல் *peru-naiyal,* பெ. (n.) 1. பெருவியாதி நோய்[1] பார்க்க; see peru-nōy 2. அம்மை (வைசூரி) (வின்.); small pox

[பெரு + நையல்]

பெருநோக்காடு *peru-nōkkāḍu,* பெ. (n.) பெரு நோய்[1](வியாதி)(M.C) பார்க்க; see peru-nōy

[பெரு + நோக்காடு]

பெருநோய்[1] peru- nōy[1], பெ. (n.) குட்டநோய்; leprosy

மறுவ. தொழுநோய்

[பெரு + நோய்]

பெருநோய்[2] *peru-nōy,* பெ. (n.) மாட்டுநோய் வகை; (மாட்டுவா.105.) rinder - pest

[பெரு + நோய்]

பெருநோன்பு *peru-nonbu,* பெ. (n.) உண்ணாநிலை; abstinence from good.

[பெரு + நோன்பு]

பெருப்பம் *peruppam*, பெ. (n.) பருமன்; bigness, thickness

[பல்–பரு–பெரு, பெரு – பெருப்பம்]

பெருப்பி–த்தல் *peruppi-*, செ.குன்றாவி (v.t.) 1. பெரிதாக்குதல்; to magnify, enlarge. 2. புனைந்து கூறுதல்; to exaggerate

[பெரு–பெருப்பி (காரணவினை) 'பி' (கா.வி.ஈறு)]

பெருப்பு *peruppu-*, பெ. (n.) பெருக்கை; becomming large, being stout. *'பணையே பிழைத்தல் பெருப்புமாகும்'* (தொல்.சொல்.339.)

[பெரு–பெருப்பு 'பு' (சொ.ஆ.ஈறு)]

பெரும்பசலை *peru-m-pašalai*, பெ. (n.) கொடிவகை(A.); large-flowered purslane, portulaca quadrifida.

[பெரு+பசலை பசளை–பசலை விழு–வழலை–வயலை–பசளை]



பெரும்பசளி *perum-pašaḷai*, பெ. (n.) பெரும்பசலை பார்க்க (இ.வ.) ; see peru-m-pašalai

[பெரும்+பசளி] வயலை–பசலை–பசள

பெரும்பசிரி *peru-m-paširi-*, பெ. (n.) கீரைவகை; (மூ.அ) a kind of greens

பெரும்பஞ்சமூலம் *peru-m-pañjamūlam*, பெ. (n.) வில்வம்,வாகை,பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி என்ற ஐந்து மரங்களின் வேர்களைக் கொண்டு செய்த கூட்டுமருந்து (யாழ்.அக); compound medicine of the roots of five trees, viz., vilvam, vāgai, peru-ṅ-kumiḻ, taḻutāḻai, pādiri.

[பெரும்+பஞ்ச+மூலம் skt.pañcan-த.பஞ்ச மூலம்=வேர்]

பெரும்பஞ்சை *peru-m-panjai*, பெ. (n.) பெருவறுமை பார்க்க. see peruvarumai

[பெரும்+பஞ்சை]

பெரும்படி[1] *peru-m-paḍi*, பெ. (n.) உயர்தரம்; grandeur.

[பெருமை+படி]

பெரும்படி[2] *peru-m-paḍi*, பெ. (n.) முருடு; coarseness, roughness 2. தோராயம் rough calculation 3. பருமன்; thickness, stoutness 4. பெரும்போக்கு; liberal scale 5. செருக்கு (அகந்தை) (இ.வ.); arrongance

[பெரும்+படி+படி= முரட்டு, தடிமன், செருக்கு]

பெரும்படை *peru-m-paḍai*, பெ. (n.) 1. பெரிய தானை; large army 2. இறந்த வீரன் புகழை நடுகல்லிற் பொறிப்பதைக் குறிக்கும் புறத்துறை (தொல்.பொ.60); (purap) theme describing the exploits of a hero and inscribing them on a naḍu-kal. 3. தெய்வமாகிய நடுகற்குப் பெருஞ்சிறப்புப் படைத்தலைக்கூறும் புறத்துறை (தொல்.பொ.60,

உரை.); (purap.) theme describing the gift of valuable offerings to a nadu-gal.

[பெரும்+படை]

பெரும்பண் *peru-m-pan,* பெ. (n.) பதினாறு தலைமைப் பண்கள். பாலையாழ், செந்து, மண்டலியாழ், பௌரி, மருதயாழ், தேவதாளி, நிருபதுங்கராகம், நாகராகம், குறிஞ்சியாழ், ஆசாரி, சாயவேளார் கொல்லி, கின்னராகம், செவ்வழி,மௌசாளி, சீராகம், சந்தி (பிங்.) group of sixteen main melogy-types viz. pālaiyāḻ, sendu, maṇḍaliyāḻ, panri, marudayāḻ, dēvatāḻi,nirupaturiga rāgam, nāgarāgam, kuṟiñjiyāḻ, āḻāri, sāyavēḻār, kolli, kiṉṉarāgam, sevvaḻi, manrāli,śirāgam, sandi.

[பெரும் + பண்]

பெரும்பணி *peru-m-paṇi,* பெ. (n.) கிடைத்தற்கரியது; that which is dear or scarce *'அவை தன்னை இவன் தான் லபித்தானாகை பெரும்பணியிறே'* (திவ்.பெரியதி.3,5,4, உரை.)

[பெரும் + பணி]

பெரும்பத்து *peru-m-pattu,* பெ. (n.) *பெரும்பற்று* பார்க்க (W.G.); see *peru-m-paṟṟu*

[பெரும் + பத்து பற்று – பத்து பற்று = வயல், நிலம்]

பெரும்பதி *peru-m-padi,* பெ. (n.) மருங்கிலூர் சூழ்பதி (வின்.); town surrounded by villages (W) *"போயோர் பெரும்பதியுட் பட்டேம்"* (சிலப்.9; 46)

[பெரும் +பதி]

பெரும்பயறு *peru-m-payaṟu,* பெ. (n.) காராமணி; chowlee-bean. *'அரிகாற் பெரும்பயறு நிறைக்குமூர்'* (ஐங்குறு.47)

[பெரும் + பயறு]

பெரும்பராக்கு *peru-m-parākku,* பெ. (n.) உன்னிப்பாயிராமை (வின்.); carelessness. negligence, supineness

[பெரும் + பராக்கு skt.parāk- க.பராக்கு= கவனமின்மை]

பெரும்பருந்து *peru-m-parundu,* பெ.(n.) *பெரும்புள்*(யாழ்.அக); பார்க்க see *peru-m-puḷ*

[பெரும் + பருந்து]



பெரும்பருவம் *perum-paruvam,* பெ. (n.) ஈரம் மிகுந்திருப்பதால் உழுவதற்குத் தகுதியற்ற நிலம் (நாஞ்.); land unfit for ploughing owing to its being exceedingly moist.nā.

[பெரும் + பருவம்]

த. பருவம் → skt.parvan

பெரும்பற்றப்புலியூர் *peru-m-parra-p-puliyūr,* பெ. (n.) தில்லை (சிதம்பரம்); chidambaram *'பெரும்பற்றப் புலியூரானை'* (தேவா.12,1.)

[பெரும் + பற்றப்புலியூர்]

பெரும்பற்றப்புலியூர்நம்பி *peru-m-parra-p-puliyūr-nambi,* பெ. (n.) திருவால வாயுடையார் திருவிளையாடல் தொன்ம (புராண) நூலாசிரியர்; the author of Tiru-v- ālavāyu ḍaiyar-Tiruviḷai yaḍar tonmam

[பெரும் பற்றப்புலியூர் + நம்பி]

பெரும்பற்று *peru-m-parru,* பெ. (n.) அரசுக்கு உரிமையானநிலம்; (T.A.S; land, the proprietary right which lies in the hands of the government.

[பெரும் +பற்று]

[பெரும் +பறவை]

பெரும்பறை *peru-m-parai,* பெ. (n.) தோற்கருவிவகை; (சிலப்,3.2,உரை,பக்.106) a kind of large drum.

[பெரும் + பறை]



பெரும்பறையன் *peru-m-paraiyan,* பெ. (n.) பறையர் இனத்துள் ஒரு பிரிவு (பஞ்சம சாதி வகை) (M.M.654.); a sub sect of paraiyas

[பெரும் + பறையன்]

பெரும்பனசை *peru-m-panašai,* பெ. (n.) பெரும்பனையன்(வின்.) பார்க்க ; see peru-m panayan.

[பெரும் + பனசை]

பெரும்பனையன் *peru-m-panaiyan,* பெ. (n.) அம்மைநோய் (வைசூரி)வகை (வின்.) ; a virulent kind of small-pox with large pustules

[பெரும் + பனையன் பனை–பனையன்= கொடுவாரிநோய்]

பெரும்பாடி காவல் *perum-pādi-kāval,* பெ. (n.) தலைமைக்காவலன் (M.E.R. 407 of 1921);chief watchman

[பெரும் + பாடிகாவல்]

பெரும்பாடு *peru-m-pāḍu,* பெ. (n.) 1. பேருழைப்பு; great effort great suffering, strain 2. வீட்டுவிலக்குக் குருதியிறைப்பு நோய்; excessice menstruation menorrhagia 3. கருப்பக்குறைப்பு; profuse bleeding from the womb, metrorrhagia (இ.வ)

[பெரும் + பாடு]

பெரும்பாண் *peru-m-pāṇ,* பெ. (n.) பெரும்பாணர் பார்க்க; see peru-m pāṇar. *'பெரும்பாணிருக்கையும்'* (மதுரைக்.342.)

[பெரும் + பாண்]

பெரும்பாணர் *peru-m-pāṇar,* பெ. (n.) யாழ் வாசிக்கும் பாணர்குல வகையார்; a division of pāṇar caste. *'அருட்பெரும் பாணனாரை'* (பெரியபு.திருநீலகண்டயாழ்ப்.3.)

[பெரும் + பாணர்]

பெரும்பாணாற்றுப்படை *peru-m-pāṇāṟṟu-p-paḍai,* பெ. (n.) பத்துப்பாட்டினுள் ஒன்றானதும் தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியதுமான ஆற்றுப்படை வகை; a poem in praise of Toṇḍaimān-iḷantiraiyaṉ, by kaḍiyalūr uruttiraṅgaṇṇaṉār, included in Pattu-p-pāṭṭu.

[பெரும்பாண் + ஆற்றுப்படை]

பெரும்பாந்தள் *peru-m-pāndaḷ,* பெ. (n.) பெரும்பாம்பு (வின்) பார்க்க; see *peru-mpāmbu.*

[பெரும் + பாந்தள்]

பெரும்பாம்பு *peru-m-pāmbu,* பெ. (n.) பெரிய பாம்பு; large snake. *பேழ்வாய்க் கிளர் பெரும் பாம்பினோடும்* (சீவக.2298). (திவா.)

[பெரும் + பாம்பு]

பெரும்பாலார் *peru-m-pālār,* பெ. (n.) மிகுதியான எண்ணிக்கையினவர்; the majority.

[பெரும் + பாலார்]

பெரும்பாலும் *peru-m-pāl-um,* பெ. எ. (adv) பெரும்பகுதி அளவு; for the most part, mostly, generally, commonly, customarily. பயிலுறவுற்றபடி பெரும்பாலுமிப் பெருந்திருநகர் *படைப்பான்* (கம்பரா.நகர.4.)

[பெரும் + பால் + உம்.]

பெரும்பாலை *peru-m-pālai,* பெ. (n.) பெரும் பண்வகை (சிலப். பக். 454.); (mus.) a major melody-type.

[பெரும் + பாலை]

பெரும்பாவி *peru-m-pāvi,* பெ. (n.) கொடுந் தீவினையாளன்; great sinner, sad dog.

[பெரும் + பாவி]

skt. pāpin › த. பாவி

பெரும்பாழ் *peru-m-pāḻ,* பெ. (n.) 1. மூல முதல் (பிரகிருதி); primordial matter. *'சூழ்ந்தகன் றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும் பாழேயோ'* (திவ். திருவாய். 10, 10, 10.) 2. பெருவெளி (திவா.) barren tract. 3. முற்று மழிவு; complete ruin.

[பெரும் + பாழ்]

பெரும்பாழ் செய்–தல் *peru-m-pāḻ-šey,* செ.குன்றாவி. (v.t.) முழுதும் அழித்தல்; to devastate entirely. *'பெரும்பாழ் செய்து மமையான்'* (பட்டினப். 270.)

[பெரும் + பாழ்செய்]

பெரும்பாழ்வெளி *peru-m-pāḻ-veḷi,* பெ. (n.) 1. *பெரும்பாழ்* 1, 2. பார்க்க; see *peru-m-pāḻ* 2. உச்சிக்குமேற் பன்னிரண்டு விரலங்கட்கு மேலுள்ளதாகக் கருதப்படுமிடம் (யாழ்.அக.); a mystic centre in the human body.

[பெரும் + பாழ்வெளி]

பெரும்பாற்சொற்றி *peru-m-pāṟ-coṟṟi,* பெ. (n.) பாற்சொற்றி வகை (வின்); a plant, aster acantha.

[பெரும் + பாற்சொற்றி]

பெரும்பான்மை[1] *peru-m-pāṉmai,* பெ. (n.) புகழுரை; praise. *'தலை மகளைப்பெரும் பான்மை கூறி'* (திருக்கோ. 164, உரை.)

[பெரும் + பான்மை]

பெரும்பான்மை[2] *peru-m-pāṉmai,* பெ.எ. (adv.) பெரும்பாலும்; for the most part, usually. *'பெரும்பான்மையு மறிதற் கரிதாட் விதி'* (இறை. 3 பாட்டு. 50.)

[பெரும் + பான்மை]

பெரும்பானை மோர் *peru-m-pāṉai-mor,* பெ. (n.) நீருணவு (நீராகாரம்); (இ.வ.) rice-water.

[பெரும் + பானை + மோர்]

பெரும்பிடி *peru-m-piḍi,* பெ. (n.) 1. கட்டாயப் படுத்திப் பெறுகை (வசூல்); exaction (W.) 2. ஒட்டாரம் (பிடிவாதம்); obstinacy. (இ.வ.)

[பெரும் + பிடி]

பெரும்பிண்ணாக்குக் கீரை *peru-m-piṇṇākku-k-kīrai,* பெ. (n.) கீரை வகை (M.M.); jews- mallow m.sh., corchorus olitorious.

[பெரும் + பிண்ணாக்குக் கீரை]

பெரும்பிரண்டை *peru-m-piraṇḍai,* பெ (n.) 1. பிரண்டை வகை; a large kind of square-stalked vine. 2. கொடிவகை (L.); leafless vanilla m.cl., vanilla wightiana

[பெரும் + பிரண்டை]



பெரும்பிலா *peru-m-pilā,* பெ. (n.) பொன்னா விரை (யாழ்.அக.) fetid cassia.

பெரும்பிழுக்கை *peru-m-piḻukkai,* பெ. (n.) வரிக் கூத்துவகை (சிலப். 3, 12, பக். 88.); a kind of masquerade dance.

[பெரும் + பிழுக்கை]

பெரும்பிளவை *peru-m-piḷavai,* பெ. (n.) அரசபிளவை; carbuncle, anthrax.

[பெரும் + பிளவை]

பெரும்பிறிது *peru-m-piṟidu,* பெ. (n.) இறப்பு; death, as a great change. *'பெரும்பிறி தின்மையி னிலேனு மல்லேன்'* (நற். 381.)

[பெரும் + பிறிது]

பெரும்பீர்க்கு *peru-m-pīrkku,* பெ. (n.) பீர்க்கு வகை; (பிங்.) a kind of sponge - gourd.

[பெரும் + பீர்க்கு]

பெரும்பீளை *peru-m-pīḷai,* பெ. (n.) *பெரும் பூளை* பார்க்க. see *peru-m pūḷai.* (பதார்த்த. 275.)

[பெரும் + பீளை]

பூளை – பீளை

பெரும்புகழ் *perum-pugal,* பெ. (n.) பெரும் பாராட்டு; high praise.

[பெரும் + புகழ்]

பெரும்புதர் *peru-m-putar,* பெ. (n.) பெரும் புதர்; shrub, big bushy plant.

[பெரும் + புதர்]

பெரும்புயல்[1] *peru-m-puyal,* பெ. (n.) 1. பெருங்காற்று; violent storm.

[பெரும் + புயல்.]

பெரும்புயல்[2] *peru-m-puyal,* பெ. (n.) *பெரும் பெயல்* (பிங்.) பார்க்க *see perum peyal*

[பெரும் + புயல்]

பெரும்புலர்காலை *peru-m-pular kālai,* பெ. (n.) பொழுது புலர்தற்கு முன்னுள்ள விடியற்காலம்; early hours of the morning. *'பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி'* (தேவா. 523, 4.)

[பெரும் + புலர்காலை]

பெரும்புலர்விடியல் *perum-pular-vidiyal,* பெ. (n.) பெரும்புலர் காலை பார்க்க; see peru-m-pular-kālai. *'பெரும்புலர் விடியலு மாலை'* (குறுந். 234.)

[பெரும் + புலர் + விடியல்]

பெரும்புலால் *peru-m-pulāl,* பெ. (n.) பெருமீன்; large fish. (யாழ்.அக.)

[பெரும் + புலால்]

பெரும்புலி *peru-m-puli,* பெ. (n.) வேங்கைப் புலி; tiger, felis tigris.

[பெரும் + புலி]

மறுவ: கடுவா

பெரும்புழுதி *peru-m-Puludhi,* பெ. (n.) பெருங்குப்பை; loose soil.

[பெரும் + புழுதி]

பெரும்புள் *peru-m-pul,* பெ. (n.) 1. பெருங் கோட்டான் (பிங்.); rock-horned owl, bubo bengaleusis. 2. எட்டுக்காலுள்ள பெரிய பறவை (நிகண்டு); fabulous eight-legged bird.

[பெரும் + புள்]

பெரும்புள்ளி *peru-m-pulli,* பெ. (n.) பெரும்பணக்காரர்; (நிலக்கிழார்) feudal superior lord.

[பெரும் + புள்ளி]

பெரும்புறக்கடல் *peru-m-pura-k-kadal,* பெ. (n.) சக்கர வாளமாலையைச் சூழ்ந்துள்ள கடல்; outermost circumambient ocean beyond cakkaravāḷam. *'பெரும்புறக் கடலை யடலேற்றினை'* (திவ். பெரியதி. 7, 10, 1.)

[பெரும் + புறக்கடல்]

பெரும்புறம் *peru-m-puram,* பெ. (n.) பெருவெளி; outermost space. *'வாயிலின் பெரும்புறத் துய்த்தனர்'* (கம்பரா. இரணிய. 81.)

[பெரும் + புறம்]

பெரும்பூ *peru-m-pū,* பெ. (n.) நிலத்தின் ஆண்டு (வருட) வருவாய்; the annual agricultural produce. *'ஒன்பதாவது பெரும்பூ முதலிட்டு'* (s.i.i.v, 107.)

[பெரும் + பூ]

பெரும்பூசணி *peru-m-pūšaṇi,* பெ. (n.) சாம்பற் பூசணி. ash-gourd.

[பெரும் + பூசணி]

பூ + சுணை – பூசுணை – பூசணி



பெரும்பூண் *peru-m-pūṇ,* பெ. (n.) மார்பிற் பூணும் பேரணி; a big jewel worn on the chest. *'பெரும்பூண் மன்னவன்'* (பு.வெ. 10.)

[பெரும் + பூண்]

பெரும்பூம்பாதிரி *peru-m-pū-m-pādiri,* பெ. (n.) (L.) ஆட்டுக்கொம்பொதி பார்க்க; see ātti-k-kombodi long-leaved trumpet-tree. (I.)

[பெரும் + பூம்பாதிரி]

பெரும்பூரான் *peru-m-pūrāṉ,* பெ. (n.) பூரான் வகை (சங்.அக.); a kind of centipede.

[பெரும் + பூரான்]

பெரும்பூழை *peru-m-pūḻai,* பெ. (n.) கதவிலிடும் வாயில் (யாழ்.அக.) wicket.

[பெரும் + புழை]

[புழை – பூழை]

பெரும்பூளை *peru-m-pūḷai,* பெ. (n.) செடி வகை; javanese wool plant m.sh., acrua javanica. (பட்டினப். 244, உரை.)

[பெரும் + பூளை]

பெரும்பெயர் *peru-m-peyar,* பெ. (n.) 1. பெரும்புகழ்; renown. *'பெரும்பெயர்ப் பெண்டிர்க்கு'* (சிலப். 28. 208.) 2. வீடு. (மோட்சம்) final emancipation. *'அரும்பெறன் மரபிற் பெருபெயர் முருக'* (திருமுரு. 269.)

[பெரும் + பெயர்]

பெரும்பெயர்ப்பொருள் *peru-m-peyar-p-poruḷ,* பெ. (n.) *பெரும்பொருள்* பார்க்க, see *perumporuḷ. 'பெரும் பெயர்ப் பொருளிற் காணப்படுவதாகிய சிறப்பியல்பு'* (சி.போ.சிற்.பாயி.)

[பெரும் + பெயர்ப்பொருள்]

பெரும்பெயருலகம் *peru-m-peyar-ulagam,* பெ. (n.) விண்ணுலகம் heaven. *'பெரும்பெயருலகம் பெறீஇயரோ வன்னை'* (குறுந். 83.)

[பெரும் + பெயருலகம்]

பெரும்பெயல் *peru-m-peyal,* பெ. (n.) கனத்த மழை; heavyrain. *'பெரும் பெயல் பொழிந்த சிறுபுன்மாலை'* (முல்லைப். 6.)

[பெரும் + பெயல்]

பெய் – பெயல்

பெரும்பேச்சாளர் *peru-m-pēccalar,* பெ. (n.) சிறந்த பேச்சாளர்; great oraterar.

[பெரும் + பேச்சாளர்]

பெரும்பேச்சு *peru-m-pēccu,* பெ. (n.) 1. பெரிய வெறும்பேச்சு; wide rumour. 2. அலப்பற்பேச்சு; incessant talk, loquacity, 3. புகழ்; fame. *'பெற்றுடையான் பெரும் பேச்சுடையான்'* (தேவா. 1106, 5.)

[பெரும் + பேச்சு]

பெரும்பேது *peru-m-pēdu,* பெ. (n.) 1. பெரும்பித்து; excessive modness or distress, as in love. *'பெரும் பேதுறுதல் களைமதி'* (கலித். 21.) 2. சாக்காடு; death, as the great distress. *'வெந்திறற் கூற்றம் பெரும்பேதுறுப்ப'* (புறநா. 238. 10.)

[பெரும் + பேது]

பெரும்பொங்கல் *peru-m-pongal,* பெ. (n.) 1. சுறவ(தை)ப் பொங்கல், a festival (w.) 2. சிற்றூர்த் தேவதைக்கு ஊராரிடும் பொங்கல்; offering of pangal to a village deity by the villagers in common. (யாழ்.அக.)

[பெரும் + பொங்கல்]

பெரும்பொய் *perum-pōy,* பெ. (n.) கட்டுக்கதை; untruth.

[பெரும் + பொய்]

பெரும்பொருள் *peru-m-poruḷ,* பெ. (n.) 1. சிறப்புடைய பொருள்; a thing of great value. 'பெரும்பொரு ணீதிச் செங்கோற் பெருமகன்' (சீவக.2534.) 2. அறம்; virtue . (மணிமே.19,160, உரை.) 3. அறிவு; wisdom. 'பெருந்தவர் தம்மாற் பெரும்பொரு ளெய்த' (மணிமே–19,160.) 4. பேரின்பவீடு (மோட்சம்); salvation 'பெரும்பொருளையுடையமுருக' (திருமுரு. 269,உரை.) 5. அகப்பொருள் பற்றியதோர் நூல் (சீவக.187,உரை.); a treatise on aga-p-poruḷ.

[பெரும் + பொருள்]

பெரும்பொருள் விளக்கம் *peru-m-poruḷ viḷakkam,* பெ. (n.) ஒரு அறநூல் (புறத்திரட்டு); a poem on morals.

[பெரும் பொருள் + விளக்கம்]

பெரும்பொழுது *peru-m-poḻudu,* பெ. (n.) கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் பருவங்கள் (நம்பிய கப்.11); seasons of the year, of which there are six, viz., kār,kūdir, muṉ-paṉi, piṉ-paṉi, iḷa-vēṉil, muḷuvēṉil, dist. fr.ciṟu-podudu. (நம்பியகப் - II).

[பெரும் + பொழுது]

பெரும்பொன்படு–தல் *peru-m-poṉpaḍu,* செ.கு.வி. (v.i.) தோற்றப் பொலிவுண்டாதல்; to be charming in appearance. *'தொய்யிலெழுதி யிறுத்த பெரும்பொன் படுகம்'* (கலித்.64.)

[பெரும் + பொன்படு –,]

பெரும்போக்கு *peru-m-pōkku,* பெ. (n.) **1.** பெருந்தன்மை; brood-mindedness, liberality. **2.** சாக்காடு; death.

[பெரும் + போக்கு]

போ–போகு–போக்கு.

போக்கு = போதல், வழி, நடை, பழக்கம், முடிவு.

பெரும்போகம் *peru-m-pōgam,* பெ. (n.) **1.** மிகுந்த விளைவு (கொ.வ.); bumper crop. **2.** பேரின்பம்; supreme bliss. '*பெரும்போகம் பின்னும் புதிதாய்*' (திருக்கோ.**9.**)

[பெரும் + போகம் →பூ→ பூகம்→போகம்]

பெரும்பற்று *perum-parttu,* பெ. (n.) மிகுந்த ஆசை; thick attachment.

[பெரும் + பற்று]

பெரும் போட்டி *perum-pōtti,* பெ. (n.) கடும் போட்டி; sever contest.

[பெரும் + போட்டி]

பெருமக்கள் *peru-makkal,* பெ. (n.) **1.** பெரியோர்; the great '*பெருமக்களுள்ள வர்தம் பெருமானை*' (திவ்.திருவாய்.**3,7,5.**) **2.** ஊரலுவல் (காரியங்களை) மேற்பார்வை செய்யும் சவைப் பெரியோர்; members of a village assembly, as great men. '*ஸம்வத்ஸர வாரியப் பெருமக்கள்*' (s.i.i.iii,**9.**)

[பெரு + மக்கள்]

பெருமகன்[1] *peru-magan,* பெ. (n.) நிலக்கிழார்; lord.

[பெரு + மகன்]

பெருமகன்[2] *peru-magan,* பெ. (n.) **1.** உயர்பண்பாளர் (பிங்.);. great man **2.** தலைவன்; chief '*வயவர் பெருமகன்*' (பெரும்பாண்.**101.**) **3.** அரசன்; king. '*வெண்குடைப் பெருமகன் கோயிலுள்*' (சீவக.**183.**) **4.** அருகதேவன்; arhat. 'பெருமகன் றிருமொழி' (சிலப்.**10,47.**)

[பெரு + மகன்]

பெருமகிழ்ச்சி *peru-makilcci,* பெ. (n.) பெருவகை; great joy.

[பெரும் + மகிழ்ச்சி]

பெருமகிழ்ச்சிமாலை *peru-magilcci-mālai,* பெ. (n.) **96** வகைச் சிற்றிலக்கியங்களுள் கற்புடைப் பெண்டிர் பெருமையைக் கூறும் நூல்வகை(சது); a panegyric in which the greatness of chaste women is described one of **96** širrilakkiyams, q.v.

[பெரு + மகிழ்ச்சி + மாலை.]

பெருமங்கலம் *peru-mangalam,* பெ. (n.) **1.** நன்னிகழ்ச்சி; auspicious festival. **2.** வாழ்த்துப் பாடல்; benedictory song. '*பெரு மங்கலம் பாடுவார்*' (சீவக.**308,** உரை.) **3.** அரசன் தன் பிறந்த நாளில் குடிகட்கு அருள் செய்வதைக் கூறும் புறத்துறை; (purap.) theme of a king rolbed in white on this birth day and bestowing powers on his subjects. '*பிறந்தநாள்வயிற் பெருமங்கலமும்*' (தொல். பொ.**91.**) **4. 96** வகைப் சிற்றிலக்கியங்களுள் அரசனது பிறந்த நாண் மங்கலத்தைக் கூறும் நூல் (சது.); poem descrilling the celebration of a king's birthday, one of **96** širrilakkiyams. q.v

[பெரு + மங்கலம்]

மங்கு–மங்கல்–மஞ்சல் = மங்கலான நிறம், அந்நிறக்கிழங்கு (மஞ்சள்) மஞ்சல்–மஞ்சள்.
மங்கல்–மங்கலம் மஞ்சளால் அல்லது மஞ்சள் நீரால் குறிக்கப்பெறும் நன்னிலைமை. திருமணம், திருமணத்தாலி, மங்கலநிகழ்ச்சி, மங்கலச் சின்னம், மங்கலவழக்கு, நன்மை, (வட.வர. 213.)

பெருமஞ்சாடி *peru-mañjāḍi*, பெ. (n.) 1. *ஆனைத் தெல்லு*(நாஞ்) பார்க்க; see *āṉai-t-tellu*. a climber.

[பெரு + மஞ்சாடி]

பெருமஞ்சிகன் *peru-mañjigaṉ*, பெ. (n.) மயிர்வினைஞன் (நாவிதன்)(தி.வா.); barber. '*பெருமஞ்சிகனுக்கு.... கூந்தற் கருமம்*' (சீகாளத்.பு. விடசங்க.66.)

[பெரு + மஞ்சிகன்]

பெருமடை *peru-maḍai*, பெ. (n.) தெய்வங் களுக்கிடும் சோற்றுப்படையல்; food offering to a deity. '*வளமிகு சிறப்பிற்றெய்வப் பெருமடை கொடுத்து*' (பெரியபு.கண்ணப்.19.).

[பெரு + மடை]

மடு–மடை

பெருமடிப்பு *peru-maḍippu*, பெ. (n.) கொய்சகம் (திரைப்பு); pucker.

[பெரும் + மடிப்பு]

பெருமணம் *peru-maṇam*, பெ.(n.) திருமணம்; marriage. '*பெருமணம் பண்ணி யறத்தினிற் கொண்ட*' (கலித். 96,36.)

[பெரு + மணம்]

மணத்தல் = கலத்தல், இருவர் மனம் ஒன்று கூடுதல்

மண → மணம் = திருமணம்

பெருமணல்வட்டம் *peru-maṇal-vaṭṭam*, பெ. (n.) ஏழு நிரயத்தொன்று. (பிங்.) a hell of sand, one of elu-naraam, q.v.

[பெரு + மணல்வட்டம்]

பெருமத்தளி *peru-matttaḷi*, பெ. (n.) முழவம்(திவ்.திருப்பள்ளி.9. வ்யா); akind of drum.

[பெரும் + மத்தளி(மத்தளி= வாச்சியவகை]

பெருமதிப்பன் *peru-madippaṉ*, பெ. (n.) அதிக விலைபெற்ற பொருள்(ஈ.டு.). precious or valuable object.

[பெரு + மதிப்பன்]

பெருமந்தனம் *peru-m-manḍātanam*, பெ. (n.) இன்றியமையாத கமுக்கச் செய்தி; top-secreat.

[பெரும் + மந்தனம்]

பெருமந்தாரை *peru-mandārai*, பெ. (n.) *செம்மந்தாரை* பார்க்க; see *-mandārai*,purple variegated mountain ebony.

[பெரு + மந்தாரை]

பெருமரம் *peru-maram*, பெ. (n.) 1. மரவகை; toothed-leaved tree of heaven, 1. tr., ailan thus excels. 2. பீநாறி(மலை.); fetid tree 3. பெருங்கள்ளி; white frangipani.

ம. பெருமரம்

[பெரு + மரம்]

பெருமருந்து *peru-marundu,* பெ. (n.) கொடிவகை (பதார்த்த. 269) Indian birthwort, m.cl. aristolochia indica.

ம. பெருமருந்து

[பெரு + மருந்து]

பெருமல்லிகை *peru-malligai,* பெ. (n.) கொடிவகை (மூ.அ.); single-flowered Arabian jasmine, m.cl. jasmin sambac-heyneana.

[பெரு + மல்லிகை]

பெருமலம் *perumalam,* பெ. (n.) புன்கு, (சங்.அக.) indian beech.

[பெரு + மலம்]

பெருமலரி *perum-alari,* பெ. (n.) பெருங்கள்ளி; white frangipani.

[பெரும் + அலரி.]



பெருமலை *peru-malai,* பெ. (n.) மாமலை(மேரு);(பிங்) Mt. Meru.

[பெரு + மலை.]

பெருமலைகலக்கி *perumalai-kalakki,* பெ. (n.) பூடுவகை(வின்.); peacock-tailed Adiantum, adiantum caudatum. (w.)

[பெரு + மலைகலக்கி.]

பெருமழை *peru-maḻai,* பெ. (n.) கனத்த மழை; heavy. rain.

[பெரு + மழை]

பெருமறைநூல் *perumari-nul,* பெ. (n.) அறநூல்; book of charity. "தமிழர்களின் பெருமறைநூல் திருக்குறளாகும்."

[பெரும் + மறை +நூல்]

பெருமனமுரிவு *perumanamurivu,* பெ. (n.) பெருமனக் கசப்பு; great disappoint.

[பெரும் + மனம் + முரிவு]

பெருமா *peru-mā,* பெ. (n.) யானை; elephant.

[பெரு + மா.]

பெருமாக்கோதையார் *peru-mā-k-kōdaiyār,* பெ. (n.) சேரமான் பெருமாள் நாயனாரின் பிள்ளைப் பருவத்துப் பெயர்; name of saint cēramāṉ perumāḷ-nāyaṉār, given to him by his parents. 'அரனரு ளாற்பிறந்தார் பெருமாக் கோதையார்' (பெரியபு.சேரமான்.5)

[பெரு + மா + கோதையார்.]

ஈண்டுப் பெரு, மா எனு மீரடையும் ஒரே பொருளினவாய் அமைந்துள்ளமை காண்க. இவ்வடைகள் சிறப்புத்தன்மையை உணர்த்தும் ஒரு பொருட் பன்மொழிகள்.

பெருமாட்டி *perumāṭṭi,* பெ. (n.) தலைவி (திவா.) lady, mistress, princess. (செ.அக.)

[பெருமான் (ஆ.பா.) – பெருமாட்டி (பெ.பா.)]

ஆளன் (ஆ) ஆட்டி (பெ) ஒ. நோ. திருவாளன் திருவாட்டி.

பெருமை + ஆட்டி = பெருமாட்டி

பெருமாந்தம் *peru-māndam,* பெ. (n.) குழந்தைநோய்வகை; a disease of children.

[பெரு + மாந்தம்]

மொத்து–மந்து–மந்து–மந்தம்.

மந்தம்–மாந்தம்=செரியாமையாற் குழந்தைகட் குண்டாகும் நோய்.

பெருமாப்பு *perum-āppu,* பெ. (n.) ஆப்புத்தள்ளி (புதுவை) பார்க்க; see āppu-t-taḷḷi.

பெரும் + ஆப்பு

பெருமாமிசம் *peru-māmicam,* பெ. (n.) மாட்டுக் கறி (இ.வ.); beef.

[பெரு + SKṭ. māmsa. த. மாமிசம்.]

பெருமாள் *perumāḷ,* பெ. (n.) 1. பெருமையிற் சிறந்தவ–ன்–ள்; person of eminence. 'பாண்பெருமாள்' (திவ். இராமானுச.11.) 2. சேரர் பட்டப்பெயர்; title of cēra king 3. திருமால்; Tiru-mai 4. கடவுள் (திருப்பு.); god.

ம. பெருமாள்

[பெரும் + ஆள்.]

பெருமாள்கோயில் *perumāḷ-koil,* பெ. (n.) 1. திருமால் கோயில் Tirumāl temple. 2. சின்ன காஞ்சிபுரம்; little conjeevaram (vaisṇ.)

[பெருமாள் + கோயில்.]

பெருமாள்கோயில் மாடு *perumāḷ-kōil-māḍu,* பெ. (n.) திருமால் கோயில் எருது; temple bull. 2. உடம்பு கொழுத்தவன்(கொ.வ.); fat man.

[பெருமாள் கோவில் + மாடு.]

பெருமாள்திருமொழி *perumāḷ-tirumoḻi,* பெ. (n.) நாலயிரத் தெய்வப் பனுவலில் குலசேகராழ்வார் இயற்றிய பாடற்றொகுதி; the poems of kulacēekarāḻvār, collected in divya-p-pirapandam.

[பெருமாள் + திருமொழி]

பெருமாள்மாடு *perumāḷmāḍu,* பெ. (n.) ஊர் ஊராய்த் திரியும் இரப்பாளிகள் தெருவில் ஆட்டங் காட்டப் பழக்கியதும் புனைவு செய்யப் பெற்றதுமான எருது, Performing bull adovned with cowries etc., belonging to wandering medicants (E.T.Vi.194);

[பெருமாள் + மாடு.]

பெருமான் *perumāṉ,* பெ. (n.) 1. பெருமையிற் சிறந்தோன்; (பிங்.); nobleman, great person. 2. அரசன் (திவா.) king. 3. மூத்தோன் (திவா.); elder; elder brother. 4. கடவுள் (திவா.) god, as siva, visṇu. *'பெருமானுரை பிடித்தேம்'* (கம்பரா. நிகும்பலை. 143.) 5. பெருமாட்டி; lady. *'தங்கா விருப்பிற் றம்பெருமான்'* (சீவக.2608.)

[பெருமகன் + பெருமான்.]

பெருமானடிகள் *perumāṉ-aḍigal,* பெ. (n.) 1. இறைவன்; divine being, a term of reverence '*பெரிய விடைமேல் வருவாரெம் பெருமா னடிகளே*' (தேவா.528,1.) '*வல்லத்துத் திருத்தீக்காலிப் பெருமானடிகளுக்கு*' (s.i.i.iii, 95.) 2. அரசர் தலைவர் பட்டப்பெயர்(கல்.); a title of kings and chieftains.

[பெருமான் + அடிகள்.]

பெருமிடறு செய்—தல் *peru-miḍaṟu-šey-,* செ.கு.வி. (v.i.) உரத்தழுதல்; to cry aloud; '*விழுந்து பெருமிடறு செய்து ஆர்த்தராய்க் கூப்பிட்டு*' (குருபரம். 537.)

[பெருமி + டறு செய்..]

பெருமிதச் செயல் *perumida-c-cayal,* பெ. (n) நற்செயல்; *good deed*

[பெருமை + மிதம் + செயல்.]

பெருமிதச் செய்கை *perumida-c-cikai,* பெ. (n) *பெருமிதச் செயல்* பார்க்க; *see perumidaccayal.*

[பெருமை + மிதம் + செய்கை.]

பெருமிதம் *peru-midam,* பெ. (n.) 1. பேரெல்லை (தொல்.பொ.257. உரை); maximum limit, 2. மேம்பாடு; greatness. '*பெருக்கம் பெருமித நீர்த்து*' (குறள்.431.) 3. தருக்கு; pride, arrogance. '*பெருமை பெருமித மின்மை*' (குறள்.979.) 5. எண்வகை மெய்ப்பாடுகளுள் கல்வி முதலிய பெருமைகளில் மேம்படுகை; consciousness of one's greatness, one of eitht mey-p-pāḍu. q.v. '*கல்வி தறுக ணிசைமை கொடையெனச் சொல்லப்பட்ட பெருமித நான்கே*' (தொல்.பொ.57.)

[பெரு(மை) → பெருமிதம்]

பெருமிதத்தன்மை *pērumida-tanmai,* பெ. (n.) பெருந்தன்மை; dignity.

[பெருமிதம் + தன்மை]

பெருமித வாழ்க்கை *perumida-valkkai,* பெ. (n.) துன்ப நிலையிலும் மேம்பட்ட வாழ்க்கை வாழ்தல்; dignity life.

[பெருமிதம் + வாழ்க்கை]

பெருமிழலைக்குறும்பநாயனார் *peru-miḻalai-k-kurumba nāyaṉār,* பெ. (n.) நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவர் (பெரியபு); a cannized šaiva saint, one of 63.

[பெருமிழலை + குறும்ப நாயனார்]

பெருமிளகி *peru-miḷagi,* பெ. (A.) நெல்வகை(a.); a kind of paddy

[பெருமை + இளகி]

பெருமீன் *peru-min,* பெ. (n.) யானைமீன் (திவா); a kind of large fish.

[பெரு + மீன்]



பெருமுசுட்டை *peru-mušuṭṭai,* பெ. (n.) 1. கொடிவகை; many - flowered bindweed l clo i pornea staphylina. 2. முசுட்டை வகை; malabar convolvulus. l.cl., i. pomaea malabārica.

[பெரு + முசுட்டை]

பெருமுட்டை *peru-muṭṭai,* பெ. (n.) பெருமரம் (மலை.); see perumaram.

[பெரு + முட்டை]

பெருமுத்தரையர் *peru-muttaraiyar,* பெ. (n.) கொடையாற்சிறந்த பண்டைச் சிற்றரசருள் ஒருவகையார்; a dynasty of chieftains of former days, renowed for their liberality. 'பெருமுத்தரையர் பெரிதுவந் தீயும் கருணைச் சோறு' (நாலடி,200.)

[பெரு + முத்தரையர்]

பெருமுதலி *peru-mudali,* பெ. (n.) தலைவன்; chief. ***'எங்கண் முன்பெருமுதலி யல்லலேயோ'*** (பெரியபு. கண்ணப். 117.)

[பெரு + முதலி]

பெருமுதியன் *peru-mudiyaṉ,* பெ. (n.) கோயில் அதிகாரிகளு ளொருவன்(T.A.S.iii 106); a temple official

பெருமுயற்சி *peru-muyarcci,* பெ. (n.) பேருழைப்பு; hard work.

[பெரும் + முயற்சி]

பெருமுளை *peru-muḷai,* பெ. (n.) இசைப்பாட்டு வகை (சிலப்.10,131,உரை.) ; a song.

[பெரு + முளை]

பெருமுன்னறிவு *pēru-munarivu,* பெ. (n.) முன்னறிதிறம்; fore thought.

[பெரும் + முன்னறிவு]

பெருமுனைப்பு *peru-munaippu,* பெ. (n.) பெருமுயற்சி பார்க்க; see perumuyarcci.

[பெரும் + முனைப்பு]

பெருமூங்கில் *peru-mūṅgil,* பெ. (n.) மூங்கில் மரவகை. (குறிஞ்சிப்.65, உரை.) large bamboo, 1. tr. bambusa arundinaca.

[பெரு + மூங்கில்]

பெருமூச்சு *peru-mūccu,* பெ. (n.) நெட்டுயிர்ப்பு; sigh, long breath. ***'பெருமூச்செழ விம்மின னிருந்தான்'*** (பிரபோத. 37,6.)

[பெரு + மூச்சு]

பெருமூச்சுவிடு-தல் *peru-mūccu-viḍu-,* செ.கு.வி. (v.i.) பெரிதாக மூச்சுவிடுதல்(வின்.); to heave a sigh.

[பெருமூச்சு + விடு-,]

பெருமூச்செறி-தல் *peru-mūcceṟi-,* செ.குன்றா.வி. (v.t.) *பெருமூச்சு விடு-தல்* பார்க்க; see *perumūccuviḍu-.*

[பெருமூச்சு + எறி-,]

பெருமூத்திரம் *peru-muttram,* பெ. (n.) நீரிழிவு நோய் (இராசவைத்.54.) diabeter

[பெரு + மூத்திரம் மோள் + திரம் – மோத்திரம்–மூத்திரம்]

பெருமை *perumai,* பெ. (n.) 1. பருமை; bigness, largeness, 2. மாட்சிமை; greatness, dignnity, excellence, eminernce, nobleness, grandeur. '*பெருமையுந் தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு*' (குறள்.974.); 3. மிகுதி abundance, excess. '*இன்றில்லை யென்னும் பெருமை யுடைத்து*' (குறள்.336.) (திவா.). 4. வல்லமை; power, might 5. சீர்த்தி; celebrity, renown. 6. செருக்கு; pride, vanity, haughtiness, '*அவன் பெருமையடிக்கிறான்*' 6. 7. அருமை; dearness, difficulty, (சீவக.1709, உரை.)

க. பெர்மை

[பல் – பரு – பெரு, பெரு – பெருமை. பெருமைக்கருத்து திரட்சிக் கருத்தின் வழிப்பட்ட பருமைக் கருத்தினின்றே தோன்றியுள்ளது. மதிப்பிற்கும் புகழிற்கும் ஏதுவான அறிவாற்றலதிகார செல் வங்களின் பருமையே பெருமை.]

பெருமைக்குணம் *perumai-k-kunam,* பெ. (n.) *பெருமைப்பண்பு* பார்க்க; see *perumaippanpu*

[பெருமை + குணம்]

பெருமைப்பண்பு *perumai-p-panpu,* பெ. (n.) மாட்சிமைக்குணம்; noble character.

[பெருமை + பண்பு]

பெருமைப்பாடு *perumai-p-pāḍu,* பெ. (n.) *பெருமை,*6. பார்க்க; see *perumai*

[பெருமை + பாடு படு–பாடு]

பெருமைப்பெண் *perumai-p-peṇ,* பெ. (n.) உரிமைச் சுற்றத்திலன்றிப்புறம்பே செல்வநோக்கித் தெரிந்தெடுக்கப்பட்ட மணப்பெண் (இ.வ.); bride chosen from a renowned or wealthy family, dist.fr. urimai-p-peṇ.

[பெருமை + பெண் பெருமை = மதிப்பு, செல்வம், வளமை.]

உறவுமுறை பற்றி மணத்தற்குரியவள் உரிமைப்பெண் என்றும் செல்வநிலை பற்றி மணத்தற்கு ஏற்றவள் பெருமைப் பெண் கூறுப.

பெருமெண்ணிக்கை *peru-menikgai,* பெ. (n.) பெருமளவு எண்ணிக்கை; large number.

[பெரும் + எண்ணிக்கை]

பெருவங்கியம் *peru-vaṅgiyam,* பெ. (n.) யானைத் துதிக்கை போலும் வடிவுள்ள இசைக்குழல் (புறநா.152, உரை.); long wind instrument shaped like an elephant's trunk.

[பெரு + வங்கியம்]

பெருவசியம் *peru-viciyam,* பெ. (n.) பெருங்கவர்ச்சி; pishogue.

[பெரும் + வசியம்]

பெருவஞ்சி *peru-vañji,* பெ. (n.) பகைவர் நாட்டை எரிகொளுத்துவதைக் கூறும் புறத்துறை. (பு.வெ.3,22.) (purap.) theme describing the setting fire to an enemy's country

[பெரு + வஞ்சி]

பெருவட்டம் *peru-vaṭṭam,* பெ. (n.) காட்டுமர வகை (வின்.); a kind of jungle tree.

[பெரு + வட்டம்]

பெருவண்டு *peru-vaṇḍu,* பெ. (n.) பறக்கும் தன்மை கொண்ட ஒருவகைக்குளவி; kind of flying insect of which the common kind has a narrow waist.

[பெரும் + வண்டு]



பெருவண்ணம் *peru-vaṇṇam,* பெ. (n.) இசைவகை. (பெரியபு.ஆனாய.28.) (mus.) a variety of melody-type.

[பெரு + வண்ணம்]

பெருவண்ணான் *peru-vaṇṇāṉ,* பெ. (n.) வண்ணாரச் சாதி வகை; an important division of the vaṇṇāṉ caste.

[பெரு + வண்ணான்.]

பெருவண்மை *peru-vaṇmai,* பெ. (n.) 1. பெருங்கொடை; generosity or munificence 2. அம்பெய்தற்குரிய நால்வகை இலக்குகளுள் பெரியதாகிய இலக்கு; a large or wide target for an arrow, one of four ilakku, q.v.

[பெரு + வண்மை.]

பெருவயிறு *peru-vayiṟu,* பெ. (n.) 1. பருத்த வயிறு; pot-belly, paunch 2. நீர்க்கோவை; dropsy; ascitis '*பெருவயிறு வயிறுவலி படுவன்வர்*' (திருப்பு.790.)

க. பெர் பசிறு. ம. பெருவயரு.

[பெரு + வயிறு]

பெருவர் *peruvar,* பெ. (n.) பெருமையுடையவர்; great persons. '*பெருவரா யுறையு நீர்மையர்*' (தேவா.852,9.)

[பெரு – பெருவர்]

பெருவரகு *peru-varagu,* பெ. (n.) வரகுவகை (விவசா.4); a kind of common millet .

பெருவருத்தம் *peru-varuttam,* பெ. (n.) பெருந்துன்பம்; sadness.

[பெரும் + வருத்தம்]

பெருவரை *peru-varai,* பெ. (n.) பெருமலை; Mt. Mēru. '*சிறந்த பெருவரையுடனும்*' (சிவதரு.கோபுர.30.)

[பெரு + வரை]

பெருவரைமீன் *peru-vari,* பெ. (n.) *அறிசா* (சங்.அக.) பார்க்க; see *ariśā a fish*

பெருவல்லுநர் *pēru-vallunar,* பெ. (n.) பெருந்திறனாளர்; expert.

[பெரும் + வல்லுநர்]

பெருவலி *peru-vali,* பெ. (n.) 1. மிகு வலிமை யுடையது; that which is very strong or powerful. '*ஊழிற் பெருவலி யாவுள*' (குறள்.380.) 2. பெருநோவு; (யாழ்.அக.) excessive pain.

[பெரு + வலி]

பெருவலிப்பு *pēru-valippu,* பெ. (n.) இசிவு நோய்; convulsion.

[பெரும் + வலிப்பு]

பெருவலிமை *pēru-valimai,* பெ. (n.) மிகுந்தஆற்றல்; greatstrength.

[பெரும் + வலிமை]

பெருவலை *peru-valai,* பெ. (n.) கடலில் மீ ன் பிடிப்பவர் பயன்படுத்தும் பெரிய வலை வகை (இ.வ.) ; a large sized net used by fishermen in the seas.

[பெரு + வலை]

பெருவழக்கு[1] *peru-vaḻakku,* பெ. (n.) **1.** பலரும் கையாளும் முறை; largely prevalent custom or usage. **2.** எல்லா விடத்திலும் நிறைந்திருத்தல்; omnipresence; ***'எங்கணும் பெருவழக்காய்'*** (தாயு.திருவருள், விலாச.1.)

[பெரு + வழக்கு]

பெருவழி *peru-vaḻi,* பெ. (n.) **1.** பெரும்பாதை (திவா.); highroad, trunk road. பெருவழி நாவற் கனியினு மெளியள்" (திவ். பெரியதி. 10,9,5) **2.** வீடுபேறு; Path of salvation. "கருவழி யாக்குங் கணக்கையறுத்துப் பெருவழி யாக்கும்" (திருமந். 1374) ம. பெருவழி

[பெரு + வழி]

பெருவழக்கு[2] *peru-vaḻakku,* பெ. (n.) பொதுநெறி; common method.

[பெரு + வழக்கு]

பெருவள்ளி *peru-vaḷḷi,* பெ. (n.) **1.** வள்ளி வகை. (பதார்த்த.437.) cultivated yam, m.cl. dioscorea sativa. (பதார்த்த.437.) **2.** ஒருவகைக் கிழங்குக் கொடி; ping-stalked yam, m.cl.dioscorea alata.

[பெரு + வள்ளி]

பெருவளவாய் *peru-vaḷa-vāy,* பெ. (n.) பேராற்றுக்கால்; big channel. "நாட்டுக்குப் பாயும் பெருவளவாயும்" (S.I.I.ii.54)

பெருவளி *peru-vaḷi,* பெ. (n.) சூறாவளி (சண்டமாருதம்); storm; hurricane ***'பெண்ணையந் தோட்டம் பெருவளி புக்கற்றே'*** (களவழி.24.)

[பெரு + வளி]

பெருவளைப்பு *peruvaippu,* பெ. (n.) பெரிய காவல்; utmost vigilence, extreme care. ***'சிறுமுதுக்குறைவிதானே பெருவளைப்பிட்டுக் காத்த கற்பு'*** (சீவக.2077.)

[பெரு + வளை→வளைப்பு]

பெருவறுமை *pēru-varumai,* பெ. (n.) பெருநல்குரவு; greatpoverty.

[பெரும் + வறுமை]

பெருவணம் *peru-vaṉam,* பெ. (n.) கடல்; sea. ***'செறிந்த பன்மணிப்பெருவணம்'*** (கம்பரா.முதற். 246.)

[பெரு + வணம்]

[பெ + SKt Vana. த. வணம்]

பெருவாகை *peru-vāgai,* பெ. (n.) **1.** வாகை மரம்; siris, **1.** tr., Albizzia lebbek. **2.** வேலிப் பருத்தி (மலை.) ; stinking swallow wort.

[பெரு + வாகை]

பெருவாடை *peru-vāḍai,* பெ. (n.) பெருவளி பார்க்க; see peruvaḷi யுற்ற மரங்களி னடுக்க மெய்தா' (கம்பரா.மாயாசீ.59.)

[பெரு + வாடை வட(க்கு)–வாடை]

பெருவாய்மலர் *peru-vāy-malar,* பெ. (n.) இருவாட்சி; tuscan jasmine '*பெருவாய் மலரொடு பசும்பிடி மகிழ்ந்து*' (பதிற்றுப்.81,25.)

[பெரு + வாய்மலர்]

பெருவாயன்¹ *peru-vāyaṉ,* பெ. (n.) 1. அலப்புபவன்; chatterbox. 2. கழுதை [illegible]; donkey.

[பெரு + வாயன் வாய்—வாயன்]

பெருவாயன்² *peru-vāyaṉ* பெ. (n.) 1. கடகப்பெட்டி (இ.வ.); basket 2. பெருமத்தளி (திருப்பள்ளி. 9, வ்யா) பார்க்க; *peru-*[illegible]

பெரு + வாயன்

பெருவாயில் *peru-vāyil,* பெ. (n.) கோபுரம்; tower. (திவா.)

[பெரு + வாயில் வாய்→வாயில்]

பெருவாயின்முள்ளியார் *peru-vāyiṉ-muḷḷiyār,* பெ. (n.) ஆசாரக்கோவை இயற்றிய புலவர்; a poet, the author of ācāra-k-kōvai.

[பெருவாயின் + முள்ளியார்]

பெருவார்த்தை *peru-vārttai,* பெ. (n.) பெருமையுடைய உரை; great word; notable utterence. '*மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டு சித்தர் கேட்டிருப்பர்*' (திவ்.நாய்ச்.11,10.)

[பெரு + வார்த்தை]

skt.vārttā > த. வார்த்தை

பெருவாரல்வலை *peru-vāral-valai,* பெ. (n.) மீன் பிடிக்கும் பெரிய வலைவகை (சிலப்.14,173,அரும்.); a large fishing net.

[பெரு + வாரல்+வலை]

பெருவாரி¹ *peru-vāri,* பெ. (n.) 1. பெரு வெள்ளம்; great flood. '*தாமறையிறை வீழ்த்த பெருவாரி*' (பரிபா.9,4.) 2. மிகுதி; abundancee, large numbers.

[பெரு + வாரி]

பெருவாரி² *peru-vāri,* பெ. (n.) 1. பரவல் நோய்; epidemie, pestilence. 2. கொள்ளை நோய் வகை; bubonic plague.

[பெரு + வாரி. வாரு—வாரி]

பெருவாரிக்காய்ச்சல் *peruvāri-k-kāyccal,* பெ. (n.) *பெருவாரி*², 2 பார்க்க; *see peru-vāri.*

[பெருவாரி + காய்ச்சல்]

பெருவாழ்வு¹ *peru-vāḻvu,* பெ. (n.) 1. நிரம்பிய பேறு; great prosperity '*சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வும்*' (திருப்பு.195.) 2. பேரின்பம்; (திருப்பு.751.) heavenly bliss.

[பெரு + வாழ்வு வாழ்—வு= வாழ்வு 'வு'— தொ. பெ. ஈறு.]

பெருவாழ்வு² *peru-vāḻvu,* பெ. (n.) நல்வாழ்வு; well-being.

[பெருமை + வாழ்வு]

பெருவாழைப்பூ *peru-vāḻai-p-pū,* பெ. (n.) புடைவை வகை; a kind of saree. (இ.வ.)

[பெரு + வாழைப்பூ]

பெருவிடை[1] *peru-viḍai,* பெ. (n.) பெருவிளக்கவிடை; large answer.

[பெரும் + விடை]

பெருவிடை[2] *peru-vidai,* பெ. (n.) இறப்பு; death, as taking final leave.

[பெரு + விடை]

பெருவியாதி *peru-viyādi,* பெ.(n.) பெருநோய்[2] பார்க்க; see *perunōy*[2] *'சயரோகம் பெருவியாதி'* (கடம்ப.4. இலீலா.115.)

[பெரு + SKṭ-Vyādhi. த. வியாதி.]

பெருவிரல் *peru-viral,* பெ. (n.) **1.** கட்டைவிரல்; thumb or big toe. **2.** நெல் எட்டுக்கொண்ட நீட்டலளவைவகை (சிலப்.3.100,உரை.); a lineal measure of the length of a thumb = eight nel.

[பெரு + விரல்]



பெருவிரியன் *peru-viriyan,* பெ. (n.) விரியன் பாம்பு வகை; russell's viper.

[பெரு + விரியன்]



பெருவிருந்து[1] *peru-virundu,* பெ. (n.) சிறப்பு விருந்து; great feast.

[பெரு + விருந்து]

பெருவிருந்து[2] *peru-virundu,* பெ. (n.) ஊர் விருந்து (இ.வ.); caste-dinner, public feast.

[பெரு + விருந்து]

பெருவிருப்பம் *peru-viruppam,* பெ. (n.) பேராவல்; earnestdesire.

[பெரும் + விருப்பம்]

பெருவிலை *peru-vilai,* பெ. (n.) மிக்கவிலை; great worth; high price. ***'பெருவிலை யாரத்தோடு' (கம்பரா. விடை. 119.)***

[பெரு + விலை]

பெருவிலையர் *peru-vilaiyar,* பெ. (n.) பெருந்தகையர்; eminent person.

[பெருமை + விலையர்]

பெருவிலையன் *peru-vilaiyan,* பெ. (n.) மிக்கவிலை பெறுவது; a thing of high value. '*பெருவிலையனான ரத்னத்தை*' (திவ். பெரியதி. 2, 7, 6. வ்யா.)

[பெருவிலை → பெருவிலையன்]

பெருவிழா *peru-viḻā,* பெ. (n.) பெரிய திருவிழா; great festival: '*தேவர்கோற் கெடுத்த பெருவிழா*' *(மணி, மே. 3, 34–5)*

[பெரு + விழா]

பெருவிளா *peru-viḷā,* பெ. (n.) மரவகை; tooth brush true

[பெரு + விளா]

பெருவிறல் *peru-viṟal,* பெ. (n.) 1. மிகுவலி; great power. 'பெருவிரல் வேந்தன்' (பெருங். உஞ்சைக்.39,40) 2. பெருவிறலாளி (தொல். சொல்.57,உரை பார்க்க 3. *முருகக்கடவுள்; skanda.* 'ஆலமர் செல்வனணிசால் பெருவிறல்' (கலித்.81,9)

[பெரு + விறல்]

பெருவிறலாளி *peru-viṟal-āḷi,* பெ. (n.) மிக்க வலிமையுடையவன் very strong or powerful man '*பெருவிறலாளி யென்ன*' (பெரியபு. இயற்பகை.17.)

[பெரு + விறல்+ஆள் → ஆளி]

பெருவிறைச்சி *peru-viraicci,* பெ. (n.) மாட்டிறைச்சி; beef.

[பெரு + இறைச்சி]

பெருவினைத்திறம் *peru-vinittiram,* பெ. (n.) வினையாண்மைத்திறம்; will-power.

[பெரும் + வினைத்திறம்]

பெருவினையம் *pēru-viniyam,* பெ. (n.) செய்வினை; witchcraft.

[பெரும் + வினையம்]

பெருவீடு *peru-vidu* பெ. (n.) பிற்பகலில் மாடுகளை மேய விடுகை;letting out cattle in the afternoon, for grazing "சிறுவீடன்றியே பெருவீடும் விடும்படியாய்" (திவ். திருப்பள்ளி. 4, வ்யா.)

[பெரு + வீடு]

பெருவு—தல் *peruvu-,* செ.கு.வி. (v.i.) தூக்கத்தில் அச்சத்தாற் பிதற்றுதல்(வின்.); to talk in sleep.

[வெருவு – பெருவு]

பெருவெக்கை *peru-vekkai,* பெ. (n.) மாட்டு நோய்வகை (மாட்டுவா.108); a kind of cattle disease. பெருவெதுப்பு பார்க்க; see peruveduppu.

[பெரு + வெக்கை]

பெருவெதுப்பு *peru-veduppu,* பெ. (n.) மாட்டு நோய்வகை (மாட்டுவா.156); a kind of cattle disease.

[பெரு + வெதுப்பு]

வெதும்பு – வெதுப்பு

பெருவெழுத்து *peru-v-eḻuttu,* பெ. (n.) 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்து (பஞ்சாக்கர) மந்திரத்திற் சிவபெருமானைக் குறிக்கும் 'சி' என்ற எழுத்து; letter 'ši' in the incantation namašivāya indicating šiva. '*பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்தும்*' (கொடிக்.4)

[பெரு + எழுத்து]

பெருவெள்ளம்[1] *peru-vellam,* பெ. (n.) ஊழிப்பெருவெள்ளம்; the deinge. "உண்ணாத பெருவெள்ளம் உண்ணாமல் தான் விழுங்கி உய்யக் கொண்ட கண்ணாளன்" (திவ். பெரியதி. 2,6,7)

[பெரும் + வெள்ளம்]

பெருவெள்ளம்[2] *peru-vellam,* பெ. (n.) பெருமழையால் உண்டாகும் வெள்ளப் பெருக்கு; flood of a river caused by heavy rains.

[பெரும் + வெள்ளம்]

பெருவெளி *peru-veli,* பெ. (n.) **1.** விரிந்த வெளியிடம்; open space. '*துவாத சாந்தப் பெருவெளியில்*' (குமர. பிர. மீனாட். பிள்ளை. 42.) **2.** திறந்தவெளி; the ethereal expanse. **3.** வாலறிவு; (phil.) pure intelligence.

[பெரு + வெளி]

பெருவெளிச்சம் *pēru-veliccam,* பெ. (n.) பொலிவுச்சுடரொளி; brightness.

[பெரும் + வெளிச்சம்]

பெருவேம்பு *peru-vēmbu,* பெ. (n.) மலை வேம்பு (மூ.அ) பார்க்க; see peru-vēmbu persian lilac.

[பெரு + வேம்பு]

பெருவேளை *peru-vēlai,* பெ. (n.) நாய்வேளை; a sticky plant that grows best in sandly places.

[பெரு + வேளை]

பெல்லம் *pellam,* பெ. (n.) *வெல்லம்* (இ.வ.) பார்க்க; see *vellam.*

க., பட பெல்ல

[வெல்லம் – பெல்லம்]

பெல்லி[1] *pelli,* பெ. (n.) துறட்டின் முனைக் கொக்கி(யாழ்ப்.); hook tied to the end of a pole.

தெ. பெல்ல
பிளந்த வாயையுடைய கருவி

பில் → பிள் → புள் → புல் → பெல் → → பெல்லி 'இ' வினைமுதலீறு

பெல்லி[2] *pelli,* பெ. (n.) சூனியவித்தை; witchcraft, magic. அவளைப் பில்லி அடித்துவிட்டது. (W.)

Sinh. *pilli*

[பில்லி → பெல்லி]

பெள்[1]–தல் (பெட்டல்) *pel-,* செ.குன்றாவி. (v.t.) **1.** விரும்புதல்; to desire. '*பிரித்தலும் பெட்டலும்*' (தொல்.பொ.147.) **2.** காதலித்தல்; to love. '*பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை*' (குறள்.141.) **3.** நினைத்தல்; to intend. '*பெட்டவைசெய்யார்*' (இனி.நாற்.23.)

[பிள் → பெள் + தல் – பெட்டல்]

பெள்[2]–தல் (பெட்டல்) செ.கு.வி. (v.i.) மிகுதல்; to be immoderate '*வெண்டிங்கள் பெட்ப நகுகின்றது*' (சீவக.1662.)

[பிள் → பெள் + தல் – பெட்டல்]

பெள்³–தல் (பெட்டல்) *peḷ-,* செ.குன்றாவி.(v.t.) காப்பாற்றுதல்; to protect. 'பெட்டல் என்பது புறந்தருதல்' (தொல். சொல். 332. இளம்பூ)

[பிள் → பெள் + தல் → பெட்டல்]

பெற்றதகப்பன் *peṟṟa-tagappaṉ,* பெ. (n.) தந்தை; father.

பெற்றதகப்பன் என்பது செஞ்ஞாயிறு என்பது போன்றது. பெற்ற என்பது இனமில் அடைமொழி.

[பெற்ற + தகப்பன்]

பெற்றதாய் *peṟṟa-tāy,* பெ. (n.) பெற்றெடுத்த தாய்; own mother. '*பெற்றதாய் நீயே*' (திவ்.இயற்.பெரியதிருவந்.5.)

பேணிவளர்ப்பவளாகிய செவிலியும் தாய் எனப்படுதலின் 'பெற்ற தாய்' என்பதில் உள்ள பெற்ற என்பது இன அடையாம்.

[பெற்ற + தாய்]

பெற்றபிள்ளை *peṟṟa-piḷḷai,* பெ. (n.) சொந்த மக–ன்–ள்; own child. '*தாமரையோன் பெற்ற பிள்ளையை*' (திருக்கோ.129.)

[பெற்ற + பிள்ளை]

பிள்ளை= தாய் வயிற்றிலிருந்து பிரிந்தது

பெற்றம் *peṟṟam,* பெ. (n.) 1. பெருமை; greatness. 'பெற்றமாளிகை (திவ்.பெரிய.10,1,10.) 2. காற்று; wind, air. '*பெற்றம் பெற்றவன்*' (பாரத.வாரணா.11.) 3. மாடு (தொல்.பொ.594.); bull or cow. 4. எருமை (தொல். சொல்.408, உரை.); buffalo. 5. விடையோரை; tauras of the zodiac.

[பெறு (பேறு) பெற்று–பெற்றம்]

பெற்றவர் *peṟṟavar,* பெ. (n.) பெற்றோர் பார்க்க; see peṟṟōr '*பித்தர் போற் பின்றொடர்ந்தனர் பெற்றவர்*' (பிரபுலிங். வசவண்.3.)

[பெற்ற + அவர்]

பெற்றவன் *peṟṟavaṉ,* பெ. (n.) தகப்பன்; father. '*பெற்றவ னாளித்த மோலி யிளையவன் பெற*' (கம்பரா.விபீட.136.)

[பெற்ற + அவன்]

பெற்றார் *peṟṟār,* பெ. (n.) பெற்றோர் பார்க்க; see peṟṟōr பெற்றார். '*பெற்றார் தளைகழல*' (திவ்.இயற்.1,20.)

[பெற்றோர் → பெற்றார்.]

பெற்றான் *peṟṟāṉ,* பெ. (n.) பெற்றவன் பார்க்க; see peṟṟavaṉ 2. கணவன்; husband. '*பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர்*' (குறள்.58.)

[பெறு → பெற்றான்]

பெற்றி *peṟṟi,* பெ. (n.) 1. இயல்பு; nature; natural property. '*பெற்றி பிழையா தொருநடையாகுவர் சான்றோர்*' (நாலடி.343.) 2. தன்மை; character, quality. 'உறாஅமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்' (குறள்.442.) 3. வகை; method, manner, order. '*அப்பெயர் புணர்ந்த பெற்றியும்*' (காசிக.பஞ்சநத.1.) 4. செயன்முறை; course of action '*மாருதி வடித்துச் சொன்ன பெற்றியே பெற்றி*'

(கம்பரா.விபீடண.108.) 5. பெருமை; greatness, esteem (திருக்கோ.373, உரை.) 6. நிகழ்ச்சி; event, occurrence. *'உற்றபெற்றி யுணர்த்துவாம்'* (கம்பரா. கைகேசி.63.) 7. பேறு; acquisition, boon *'யோகத்தின் பெற்றியாலே'* (கம்பரா. சவரி.8.) 8. நோன்பு (விரதம்); fasting. *'பெறுகதில் லம்மவிவ் வூருமோர் பெற்றி'* (சிலப்.குன்றக்.)

[பெறு → பெற்றி]

பெற்றிமை *perrimai,* பெ. (n.) 1. பெற்றி, 5. பார்க்க; see perri. பெற்ற மேறுதல் பெற்றி மையோ' (தேவா.488,10.) 2. செய்யவேண்டு முறை; conduct, behaviour. *'பெற்றிமை யொன்றறியாத தக்கனது'* (தேவா.622,6.) 3. சாதி; class, division. *'பேதாய் திதியாகும் பெற்றிமையின்'* (சி.போ.1,1,1.)

[பெற்றி – பெற்றிமை]

பெற்று *perru,* பெ. (n.) 1. பெருக்கம் (தொல்.சொல்.305) bigness, greatness. 2. அடுக்கு; pile. (தொல்.சொல்.305,உரை.) 3. சாய்கால்; influence. *'அவன் பக்கற் பெற்றுடையரா யிருப்பர்களிறே'* (ஈடு,6,10,2.) 4. எருது; bill 'பெற்றொன் றேறி' (தேவா.428,8.)

[பெறு–பெற்று]

பெற்றோர் *perrōr,* பெ. (n.) சிறந்த பேறுபெற்ற தாய் தந்தையர்; parents.

[பெறு–பெற்ற+அவர் பெற்றவர்–பெற்றோர்.]

பெறங்கவலை *peraṅkavalai,* பெ. (n.) *பெருங்கண்வலை.* பார்க்க; see *peru-ṅ-kaṇvalai.* (இ.வ.)

[பெருங்கண்வலை–பெறங்கவலை]

பெறாப்பேறு *perā-p-pēru,* பெ. (n.) கிடைத்தற்கரிய பேறு; rare luck or fortune. *'பெறாப்பேறு பெற்று வைத்து'* (பெரியபு. குங்கிலி.11.)

[பெறு + ஆ + பேறு]

'ஆ' எ. ம. இ. நி.

பெறால் *perāl,* பெ. (n.) மீன்முதுகிற் புள்ளி; (இ.வ.) spots on the back of a fish.

பெறு–தல்[1] *peru,* செ.குன்றாவி. (v.t.) 1. அடைதல்; to get, obtain, secure, possess, "கையுறப் பெற்றக்கால்" (நாலடி. 5.) 2. பேறுயிர்த்தல்; To bring forth, bear, as childran. *'பெற்றாளொருபிள்ளையென் மனையாட்டி'* (தனிப்பா. i, 235. 1.) 3. பிறப்பித்தல்; to be get, generate. *'தான் பெற்ற புதல்வன்'* (நாலடி. 197). 4. அறிதல்; to know, *'எல்லா யாம் பெற்றேம்'* (பரிபா. 8, 83.) பெறு[2]–தல், peru செ.கு.வி. (v.i.) விலைத்தகுதியுடையதாதல்; to be worth; to be worthy of; to fetch a price. *'அப்பண்டம் அவ்வளவு பெறுமா?"*

[பெறு → பெறுதல்]

பெறுக்கல் *perukkal,* பெ. (n.) அரிசி; rice. *'முறியாப் பெறுக்கன் முப்பழம்'* (பதினொ. திருவிடை. வை.16.

[பெறு–பெறுக்கு–பெறுக்கல்]

பெறுக்கு–தல் *perukku,* செ.குன்றா.வி. (v.t.) பொறுக்குதல்; to gather pickup, as stones. பெறுக்கினர் சிலைகளைப் பெருஞ் சினத்தராய் (பிரபுலிங். சித்தரா. 21)

[பொறுக்கு–பெறுக்கு;]

பெறுத்து–தல் *peruttu,* செ.குன்றா.வி. (v.t.) அடைவித்தல்; to cause to obtain. *'நிலைபெறுத்தலும் நீக்கலும்'* (கம்பரா. பாயி.1) 2. உண்ணுதல்; to eat. *'அவற்றைப் பெறுத்திப் போந்தான்'* (திவ். பெரியாழ். 2.9.9).

[பெறு–பெறுத்து]

பெறுமானம் *peru-māṉam,* பெ. (n.) 1. மதிப்பு; value. *'அந்த ஆயிரம் பொன் பெறுமானமுள்ளது.'* 2. கடன் தீர்க்கும் தகுதி; solvency. அவன் பெறுமானமுள்ள புள்ளி

[பெறு + மானம் (சொ.ஆ.ஈறு]

பெறுதி *perudi,* பெ. (n.) 1. ஊதியம்; Gain, profit. *'பெறுதி விரும்பினை யாகுவை'* (மணி.மே 25, 115) 2. அடையத்தகும் பொருள்; that which is sought to be got or reached; goal. *'மறைகளினிநு தியிடவரிய பெறுதியை'* (திருப்பு. 928). 3. *பெறுமதி* பார்க்க,

[பெறு–பெறுதி]

பெறுமதி *perumadi,* பெ. (n.) 1. தகுதி; worth, value. 2. திறமை; ability. 3. உறுதி; Validity, security. 4. பரிசு; prize, reward.

[பெறு–பெறுமதி மதி (சொ.ஆ.ஈறு.]

பெறுமாதம் *peru-mādam,* பெ. (n.) பேறுகாலம்; the month of parturition.

[பெறு + மாதம்]

பெறுமுரி *peru-muri,* பெ. (n.) சம்பளம்; *wages,* "பரிசுரத்தார் பெறுமுரியாகப் பெற்று" (S. I. I. iii, 30)

பென்னம்பெரிய *peṉṉam periya,* பெ.எ. (adf.) மிகப்பெரிய; Very large.

[சின்னஞ்சிறிய xபென்னம்பெரிய]

பென்னம்பெருத்த *peṉṉam-perutta,* பெ. (adf.) பென்னம்பெரிய; பார்க்க; see peṉṉam periya.

[சின்னஞ்சிறுத்த xபென்னம்பெருத்த]

பென்னாங்கொட்டை *peṉṉāṅkoṭṭai,* பெ. (n.) பேன்கொட்டை. cocculus indicus. பார்க்க; see peṉ-Koṭṭai.

[பென்+ ஆம் + கொட்டை]

பெறுவது கொள்வார் *peruvadu-kolvār,* பெ. (n.) விலைமகளிர்; prostitutes. *'பெறுவது கொள்வாரும் கள்வரும் நேர்'* (குறள், 813.)

[பெறுவது + கொள்வார்ன]

பென்னை *peṉṉai,* பெ. (n.) யானை (சங்.அக.); elephant.

பே¹ *pē,* தமிழ் நெடுங்கணக்கில் 'ப்' என்ற மெய்யெழுத்தும், 'ஏ' என்ற உயிர்நெடிலும் சேர்ந்து வருவது உயிர்மெய் எழுத்து; the compound of p and ē.

[ப் + ஏ = பே]

பே² *pē,* பெ. (n.) அச்சம்; fear. பே முதிர் கடவுள்" (குறுந்.87) அச்சத்தை உணர்த்தும் பேம்–ஒலிக்குறிப்புச் சொல்

[பேம் → பே]

பே³ *pē,* பெ. (n.) **1.** நுரை(பிங்); foam. seum, froth '*பேஎநாறுந் தாழ்நீர்ப் பனிச்சுனை*" (இறை.7, உரை)**2.** மஞ்சு (வின்.) cloud

பே⁴ *pē,* இடை. (part.) இல்லை என்னும் பொருள்தரும் சொல்; (வின்.) a prefix meaning no

பேஎம் *pēem,* பெ. (n.) ***பே²(திவா)*** பார்க்க; *see pē².*

[பேம் → பேஎம்]

பேக்கலாண்டி *pēkkal-āmdi,* பெ. (n.) மூடன்;(இ.வ) simpleton, foolishfellow.

u.bevakif

[பே → பேக்கு → பேக்கலாண்டி]

பேக்கு–பேக்கலாண்டி பே–அச்சம், வெறுமை பே–பேக்கு அறிவிலி.

பேகணி–த்தல் *pēgani,* செ.கு.வி. (v.i.) **1.** குழப்பமுறுதல் ; to be distressed. *இழக்கப்புகா நின்றா யென்று பேகணியா நின்றேன்*" (ஈடு,9,4,3,)**2.** நிறம் வேறுபடுதல் to change colour; to become pallid *'பேகணித்துப்பிற்காலித்துப் போகக்கவ்வ அக்கினி'* (திவ்.பெரியதி.2,4,2,. வ்யா)

[பேழ்கணி–பேகணி]

பேகணிப்பு *pēgaṇippu,* பெ. (n.) **1.** துன்பம் (துக்கம்) (ஈடு, **9, 6, 6**); sorrow, distress. **2.** நிறம் வேறுபடுகை; (திவ். பெரியதி. **2, 4, 2**.வ்யா.அரும்.) becoming pallid.

[பேழ்கணி – பேகணி – பேகணிப்பு,]

'பு'. சொ.ஆ.ஈறு.

பேகம்¹ *pēgam,* பெ. (n.) தவளை (பிங்.); frog.

skt.bhēka

[பேஎம் – பேகம்]

'பே' ஒலிக்குறிப்பு



பேகன்¹ *pēgan,* பெ. (n.) ஆண் தவளை. (யாழ்.அக.); male of the frog.

[பேஎம் – பேகம் – பேகன்]

பேகன்² *pēgan,* பெ. (n.) கடைவள்ளல்கள் எழுவருள் ஒருவன்; a liberal chief, one of seven kadai-vaḷḷalgaḷ. *'பெருங்கன் னாடன் பேகனும்'* (சிறுபாண். 87)

[பாகன் → பேகன்]

பேசி *pēci*, பெ. (n.) பெண்தவளை (யாழ்.அக.); female frog.

[பேளம் – பேகன்] (ஆ.பா.) – பேகி (பெயா)

பேச்சடைப்பு *pēccaḍaippu*, பெ. (n.) பேச முடியாமற் செய்யும் நோய்;(M.L.) loss of voice, aphonia.

[பேச்சு + அடைப்பு]

பேச்சல் *pēccal*, பெ. (n.) பேசுகை (யாழ்.அக.); speaking.

[பேசு → பேசல் → பேச்சல்]

'அல்' தொ.பெ.ஈறு.

பேச்சழி–தல் *pēccaḻi-*, செ.கு.வி. (v.i.) சொன்ன சொல் தவறுதல் (யாழ்.அக.); to fail to keep one's word.

[பேச்சு + அழி–]

பேச்சற்றவன் *pēccaṟṟavaṉ*, பெ. (n.) 1. பேசமாட்டாதவன் (யாழ்.அக.); one who is speechless or dumb. 2. பேசா நோன்பு (மௌன விரதம்) பூண்டவன்; one who has taken a vow of silence. 3. உறுதிமொழி தவறுபவன்(வின்.); one who fails in his word.

[பேச்சு + அற்றவன்]

பேச்சுறுதி *pēccuṟudi*, பெ. (n.) ஒப்பந்தத்தில் முடிவான பேச்சு (யாழ்.அக.); decision in bargaining.

[பேச்சு + உறுதி]

பேச்சாட்டுத்துணை *pēccāṭṭu-t-tuṇai*, பெ. (n.) பேச்சுக்குத் துணையானவன் (யாழ்.அக.); companion, as one to talk with.

[பேச்சு + பேச்சாடு → பேச்சாட்டு

பேச்சாட்டு + துணை]

ஆடு → ஆட்டு

பேச்சாடுதுணை *pēccāḍu-tuṇai*, பெ. (n.) பேச்சாட்டுத் துணை (இ.வ.); பார்க்க. *see pēccāṭṭu-t-tuṇai.*

[பேச்சாடு + துணை]

'ஆடு'(து.வி.)

பேச்சாளர் *pēccāḷar*, பெ. (n.) சொற்பொழிவாளர்; skilful orator.

[பேச்சு + ஆளர்]

பேச்சாளி *pēccāḷi*, பெ. (n.) 1. சொல்வன்மையுள்ளவன்; good speaker. 2. சொல்லுறுதியுள்ளவன்; a man who keeps his word.

[பேச்சு + ஆள்→ ஆளி]
ஆளி → 'இ' வினைமுதலீறு

பேச்சாற்றல் *pēccāṟṟal*, பெ. (n.) மேடைப் பேச்சுத்திறம்; skilful oration 'திரு.வி.க. பேச்சாற்றல் வாய்ந்தவர்'

[பேச்சு + ஆற்றல்]

பேச்சி *pēcci*, பெ. (n.) *பேய்ச்சி* பார்க்க; see *pēycci.*

[பேய்ச்சி – பேச்சி]

பேச்சி² *pēcci,* பெ. (n.) *பேயத்தி* பார்க்க; see *pēyatti.*

[பேயத்தி – பேச்சி]

பேச்சு *pēccu,* பெ. (n.) **1.** பேசுகை; speaking. *'பேரமளிப் பேச்செலாம்'* (பாரத. அருச்சுனன்றவ. 63) **2.** மொழி; speech, language. **3.** புகழ்(வின்.); praise. (w.) **4.** உரையாடல்(கொ.வ.); conversation, talk. **5.** செய்தி; errand, message, verbal communication, report. **6.** பொய்ச்செய்தி; rumour. **7.** சொல்; word utterence. *'பேயர்தாம் பேசுமப் பேச்சை'* (திவ். பெரியதி. 9, 7, 7) **8.** கட்டுரை; discourse, harangue. *'பிண்டியும் போதியும் பேணுவார் பேச்சினை'* (தேவா. 83, 10)

[பேசு – பேச்சு]

பேச்சுக்காரன் *pēccu-k-kāraṉ,* பெ. (n.) **1.** சொல்வன்மையுடையவன் (வின்.); good speaker. **2.** வாயாடி; talkative man.

[பேச்சு + காரன்]

பேச்சுக்கிடம் *pēccukkiḍam,* பெ. (n.) **1.** பேசுமுரிமை; liberty of speech. **2.** பழிக்குக் காரணியம்; occasion or room for slander. 'முறைப்படி அவருக்குச் செய்தி தெரிவிக்காதது பேச்சுக்கு இடமாகி விட்டது.

[பேச்சுக்கு – இடம்]

பேச்சுக் குற்றம் *pēccu-k-kuṟṟam,* பெ. (n.) சொற்குற்றம்; defect in speech.

[பேச்சு + குற்றம்]

பேச்சுக்கொடு—த்தல் *pēccu-k-koḍ.,* செ.கு.வி. (v.i.) **1.** மந்தணமறியச் சொல்லாடு தல் (வின்.); to speak with one in order to obtain secrets to sound (w.) **2.** பேச்சு நீடித்தல் (யாழ்.அக.); to prolong one's talk. **3.** பொழுது போக்காகச் சொல்லாடுதல் (இ.வ.); to keep oneself engaged by talking with.

[பேச்சு + கொடு]

கொடு (கு.வி.)

பேச்சுத்தட்டு—தல் *pēccu-t-taṭṭu,* செ.கு.வி. (v.i.) **1.** சொல் தடுமாறுதல்; to stammer, stutter; to hesitate **2.** சொன்னசொல் தவறுதல்; to break one's word. **3.** பிறர் கூற்றை மறுத்தல்; to go against the expressed wishes of a person.

[பேச்சு + தட்டு]

பேச்சுத்தடித்தல் *pēccu-t-taḍittal,* பெ. (n.) சொல் கடுமையாகை (கொ.வ.) ; growing hot in speech.

[பேச்சு + தடித்தல்]

தடி → தடித்தல்.

'அல்' தொ.பெ.ஈறு

பேச்சுத்தடுமாறு—தல் *pēccu-t-taḍumāṟu-,* செ.கு.வி. (v.i.) **1.** சொல் குழறுதல்; to be confused, puzzeled or disconcerted in speaking (w.) **2.** உறுதிமொழி தவறுதல் (இ.வ.) ; to break one's word.

[பேச்சு + தடுமாறு]

பேச்சுத்தப்பு–தல் *pēccu-t-tappu-,* செ.கு.வி. (v.i.) பேச்சழி பார்க்க; see pēccaḻi.

[பேச்சு + தப்பு–]

பேச்சுத்தாராளம் *pēccu-t-tārāḷam,* பெ. (n.) 1. வெறும் வாய்ச்சொல் (இ.வ.); empty speech, speech not followed by action. 2. சொல்வன்மை (வின்.) fluency of speech, eloquence. 3. உரையாடற் றிறம் (வின்.); ability in conversation, politeness in address.

[பேச்சு + தாராளம்]

பேச்சுத்திராணி *pēccu-t-tirāṇi,* பெ. (n.) பேச்சுத்தாராளம் (வின்.); 2. பார்க்க; see pēccu-t-tārāḷam.

[பேச்சு + திறன் → திறனி → திராணி]

பேச்சுத்துணை *pēccu-t-tuṇai,* பெ. (n.) பேசிப் பொழுது போக்குதற்குத் துணையாக இருக்கும் ஆள் (கொ.வ.); companion, as one to speak with.

[பேச்சு + துணை]

பேச்சுநிதானம் *pēccu-nidāṉam,* பெ. (n.) பேச்சுறுதி. (இ.வ.) பார்க்க; see pēccurudi.

[பேச்சு + Skt nādāna. *த. நிதானம்]*

பேச்சுப்பிடுங்கு–தல் *pēccu-p-piḍuṅgu,* செ.கு.வி. (v.i.) சொல்லாடி மந்தணத்தை யறிதல்(வின்.); to fish out secrets from another's talk; to pump cleverly.

[பேச்சு + பிடுங்கு]

பேச்சுமூச்சில்லாமை *pēccu-mūccillāmai,* பெ. (n.) 1. அமைதி; absence of activity, quietness. *'பேச்சு மூச்சில்லாத பேரின்ப வெள்ளமுற்று'* (தாயு. எந்நாட். ஆனந்த. 1) 2. அடங்கி யிருக்கை (இ.வ.); quiet submission.

[பேச்சு + மூச்சு + இல்லாமை]
பேச்சு + மூச்சு. எதுகை நோக்கி இரட்டித்து வந்த மரபிணை மொழி]

பேச்சுமூச்சு *pēccu-muccu,* உயிருள்ள தென்பதைக் காட்டும் பேச்சும் மூச்சும் (வின்.) signs of life, as speech and breath.

[பேச்சு+ மூச்சு]

மரபு இணைமொழி.

பேச்சு வல்லபம் *pēccu-vallabam,* பெ. (n.) *பேச்சுத்திராணி* (வின்.) பார்க்க; see *pēccu-t-tirāṇi*

[பேச்சு+ வல்லபம்.
வல்லவம்→ வல்லபம்]

பேச்சுவளர்–த்தல் *pēccu-valar-,* செ.கு.வி. (v.i.) பேச்சுக்கொடு (யாழ்.அக.) பார்க்க ; see pēccuvaḷar

[பேச்சு+ வளர்]

பேச்சுவளர்தல் *pēccu-vaḷardal,* பெ (n.) 1. நீண்டஉரையாடல் ;prolonged speech or conversation 2. வாய்ச்சண்டையில் வசவு மிகுகை ;growing abusive in quarrel.

[பேச்சு+ வளர்தல்]

'தல்' [தொ.பெ.ஈறு]

பேச்சுவாயன் *pēccu-vāyaṉ,* பெ. (n.) வாயாடி (யாழ்.அக); talkative person.

[பேச்சு + வாயன்]

பேச்சுவார்த்தை *pēccu-vārttai,* பெ. (n.) 1. உரையாடல்; talk 2. நட்பு; amicable or speaking terms 3. மறுத்துரைத்தல் (யாழ்.அக); dispute.

[பேச்சு+ SKt. Vārttā. த. வார்த்தை]

பேச்சுறுதி *pēccuṟdi,* பெ. (n.) உறுதிமொழியை நிறைவேற்றுந்தன்மை; faithfulness to one's word

[பேச்சு + உறுதி]

பேச்சைமடி–த்தல் *pēccai-maḍi,* செ.கு.வி (v.i.) 1. சொன்ன சொல் மாறுதல் (வின்.); to eduivocate. 2. வீண் தருக்கம் பேசுதல் (கொ.வ.); to argue perversely

[பேச்சு→ பேச்சை+மடி]

மடி=மறுத்தல்,தவறுதல்,மாறுதல்

பேச்சோடுதுணை *pēccōḍu-tuṇai,* பெ. (n.) பேச்சாட்டுத்துணை பார்க்க; see pēccāṭṭu-t-tuṇai. "*திருவாருக்குப் போகிறேன் பேச்சோடு துணையாய் நீயும் வருகிறாயா?*"

[பேச்சாடு→ பேச்சோடு+துணை]

பேசகம்[1] *pēsagam,* பெ. (n.) (யாழ்.அக) 1. ஆந்தை; owl. 2. மஞ்சு; clould 3. யானை வாலினடி; the roof of elephan'ts tail 4. யானை வாலின் நுனி; tip of elephant's tail



பேசகம்[2] *pēšagam,* பெ. (n.) வாயில் (யாழ்.அக); gate

[பேழகம்→ பேசகம்]

பேசகி *pēcagi,* பெ. (n.) யானை (சங்.அக); elephant

[பேழ்→ பேழகி→ பேசகி]



பேசங்கை *pēcaṅgai,* பெ. (n.) மலங்கழிக்கை; going to stool ḍist fr.aṟpa-carikai (இ.வ)

பேசல் *pēšal,* பெ (n.) 1. பேசுகை; talking, speaking, *'பேசிற்றே பேசலல்லால்'* (திவ்.திருமாலை.25) 2. வஞ்சின் முடிக்கை; fulfilling one's vow. *'வாளினாற் பேசலல்லால்'* (சீவக.257)

[பேசு+அல்] (தொ.பெ.ஈறு)

பேசலாத்தி *pēšalātti,* பெ. (n.) இராப்பாலை (A); a garden tree with smooth grey bark

பேசாத பேச்சு *pēcāda-pēccu,* பெ. (n.) 1. தகுதியற்ற சொல்; improper talk 2. வெறுப்பூட்டும் சொல்; indecent or obscene talk

[பேசாத + (எ.ம.பெ.எ) + பேச்சு]

பேசாதிரு–த்தல் *pesādiru.,* செ.கு.வி செயலற்றிருத்தல்; to keep quiet. வாத்யங்கள் வாய்த்தால் கூத்தாடுவாருடம்பு பேசாதிராதிறே" (திவ். பெரியதி. 1,2,1, வ்யா. பக். 59)

[பேசு → பேசாது+இரு.]

'ஆ' எ. ம. இ.

பேசாமடந்தை *pēša-madandai,* பெ. (n.) வாய் வாளாமை பூண்ட பெண் (கொ.வ); reticent, silent women

[பேசு → பேசா + மடந்தை]

('ஆ' எ.ம.இ.நி.)

பேசாமை *pēšāmai,* பெ. (n.) வாய்வாளாமை (மௌனம்); silence, as observed by ascetics. *'அருட்பெற்றோர்கள் பெற்ற பெருமை......... பேசாமை யாகுமெனவே'* (தாயு.பரிபூரண.2.)

[பேசு → பேசாமை]

'ஆ' எ. ம. இ.

'மை' ப.பெ.ஈறு.

பேசார் *pēšār,* பெ. (n.) ஊமைகள்; the dumb. *'பேணாமாக்கள் பேசார் பிணித்தோர்'* (மணிமே.28.223)

[பேசு→ பேசார்] 'ஆ' (எ.ம.இடநில) *'ர்'* (ப.பா.ஈறு)

பேசாவழக்கு *pēšā-valakku,* பெ. (n.) பயனற்ற வழக்கு(C.G.); a naseless or vexatious suit

[பேசு + ஆ (எ.ம.இ.நி.) + வழக்கு]

பேசாவெழுத்து *pēšā -v-eluttu,* பெ. (n.) *'நமசிவாய'* என்ற ஐந்தெழுத்து (ஐந்க்கர) மந்திரத்திற் சிவபெருமானைக் குறிக்கும் *'சி'* என்ற எழுத்து. பேசுமெழுத்துடனே பேசாவெழுத்தினையும்

[பேசு + ஆ (எ.ம.இ.நி) + எழுத்து]

பேசி *pēši,* பெ. (n.) (யாழ்.அக)1. சதை; muscle. 2.நரம்பு; tendon. 3. பூமொட்டு; bud 4. இடியேறு; thunderbolt 5. முட்டை; egg

பேசுவது போல் உள் நிலையை வெளிப்படுத்துவனவும் பேசி எனப்பட்டன.

பேசு¹–தல் *pēšu,* செ.கு.வி (v.i) 1. சொல் லாடுதல்; to talk, speak. 2. வஞ்சினமுடித்தல்; to fulfil a vow. *'வாளினாற் பேசலல்லால்'* (சீவக.259) 3. வீணை நரம்பு முதலியன இசைத்தல்; to sound, as a lute string *'கையாழ் (பிடில்) நரம்பு (தந்தி) நன்றாகப் பேசவில்லை'* 4. நாடி முதலியன துடித்தல்; to feat, as the pulse. *'கையில் பித்தநாடி பேசவில்லை'* 5. உரக்கப்பேசுதல்; to make noise, to roar. *'தரங்கநீர் பேசிலும்'* (திவ்.பெரியதி.8,2,7,)

பேசு²–தல் *pēšu-*, செ.குன்றாவி. (v.t) 1.சொல்லுதல்; to tell, say. *'வாயினாற் பேசறேற்றேன்'* (சீவக.257) 2.பலமுறை சொல்லுதல்; to repeat manytimes. *'ஈன்றுழாய் மாயனையே பேசியே'* (திவ்.இயற். பெரியதி.38) 3. போற்றுதல் to praise. *'பேசாத நாளெல்லாம் பிறவாநாளே'* (தேவா.12,1) செயலைப்பேசிமுடிவு செய்தல்; to deal, bargain negotiate verbally,as a business. 4. வைதல்; to abuse, vilify.

பேசுமெழுத்து *pēšu-m-eḻuttu*, பெ. (n.) நமசிவாய என்னும் ஐந்தெழுத்தில் ஆற்றலை உணர்த்தும் *'வ'* என்றவெழுத்து; the letter 'va' in the incantation 'namašivāya; indicating siva- sakti. வைகரிவாக்கு; *'பேசுமெழுத்துடனே'* (கொடிக்.4) 2. articulate utterance *'ஊமையெழுத்தொடுபேசு மெழுத்துறின்'* (திருமந்.2158)

[பேசு + எழுத்து]

பேசுலம் *pēšulam*, பெ. (n.) செடிவகை (இ.வ.); a plant - Arum colocasia

பேசுலி *pēšuli*, பெ. (n.) *பேசுலம்* (இ.வ.) பார்க்க; *see pēšulan*.

பேசுவாய் *pecuvāy*, பெ. (n.) வாயடிப்பவன்; talkative person

[பேசு + வாய்]

பேசுவாயன் *pēšu-vāyaṉ*, பெ. (n.) 1. பரிந்து பேசுவோன்; intercessor. வாயாடி; talkative person

[பேசு + வாயன்]

பேடகம்² *pēḍgam*, பெ. (n.) பண்டைக்காலத்து வழங்கிய ஒருவகைத்துகில் (சிலப்.14,108,உரை); a garment of ancient times

பேடணம் *pēḍaṇam*, பெ. (n.) 1. பொடி செய்கை; grinding,pulverising 2.திரிகைக்கல்; grinding - stone.



பேடன் *pēṭḍaṉ*, பெ. (n.) ஆண்தன்மை மிகுந்த அலி; hermaphrodite with male characteristics predominating. பேடன் வந்தான் (நன்.263,உரை)

[பேடு → பேடன்]

பெண்மைவிட்டு ஆண்மை அவாவுப்பேடு ஆண்பால்.

பேடா *pēḍā*, தெப்பம்; raft float

[பேடு → பேடா]

பேடாடல் *pēḍāṭḍal*, பெ. (n.) *பேடு²* (சிலப்.3,14, உரை, பக்.90). பார்க்க; see *pēḍu*

[பேடு + ஆடல்]

பேடாப்போ–தல் *pēḍa-p-pō* செ.கு.வி. (v.i.) உலாவப்போதல்; to walk for recreation.

[பேடு + ஆ + போ]

பேடி[1] *pēḍi,* பெ. (n.) 1. பெண்தன்மை மிகுந்த அலி; hermphrodite with female charactristics predominating. *'பெண்ணவா யாணிழந்த பேடி'* (நாலடி.251) 2. ஆண்மை யின்மை; impotence. 3. நடுவிரல்; middle-finger *'சுட்டுப்பேடி'* (சிலப்.3,18 உரை, மேற்கோள்,பக்.95); 4. அச்சம்; fear.

[பேடு → பேடி]

பேடி[2]**–த்தல்** *pēḍi,* செ.குன்றாவி. (v.i.) அஞ்சுதல்; to be afraid.

[பே →பேடு → பேடி]

பேடி[3] *pēḍi,* பெ. (n.) விலங்கு (C.G.); fetters.

[பேடு → பேடி]

பேடிகை *pēḍigai,* பெ. (n.) *1. கூடை; (யாழ்.அக)* basket. *2. உறை; (அக.நி.)* cover.

[பேடு → பேடிகை]

பேடிசங்காட்டு–தல் *pēḍišaṅ - kāṭṭu.,* செ.கு.வி. (v.i.) 1. மாய்மாலஞ்செய்தல்; to play the hypocrite 2. போலிவேலை செய்தல்; to counterfeit a work

[பேடிசம் → காட்டு–தல்]

பேடிசம் *peticam,* பெ. (n.) மாய்மாலம் (யாழ்.அக); imposition, deception

[பேடு → பேடியம் → பேடிசம்]

பேடிசெய்–தல் *pēḍi-šey,* செ.குன்றாவி (v.t.) விலங்கிடுதல்; to handcuff

[பேடி +செய்–தல்]

பேடியாடல் *pēḍi-y-ādal,* பெ. (n.) பேடு[2] பார்க்க; see *pēḍu.* காமனாடிய பேடியாடலும் (சிலப்.6,57)

[பேடி +ஆடல்]

பேடியெழுத்து *pēḍi-y-leuttu,* பெ. (n.) ஆய்த வெழுத்து (வின்.); the letter 'ஃ'as neither male nor female

[பேடி +எழுத்து]

பேடு *pēḍu,* பெ. (n.) 1. பெண்பால்; female sex *'பேடலியாணர் போலும்'* (தேவா.249,1) 2. பெண் பறவை; female of birds *'பேடுஞ் சேவலும்'* (மலைபடு.141,உரை) 3. சிறுமை; smallness (பிங்) 4. ஒருசார் விலங்குகளின் பெண்; female of certain quadrupeds. *'தெய்வமாக வைத்த எருமையாகிய பேட்டின் கொம்போடே' (கலித்.114. உரை)* 5. சிற்றூர்; small town, village. 6. நடுவிரல்; the middle fonger *'சுட்டும் பேடும்'* (சிலப்.3,18,உரை) 7. உள்ளீடின்றிப் பயனற்றது; what is unproductive, useless or kernelless *'இந்தந் தேங்காய் பேடு'*(உ.வ) 8. *பேடி*[1] 1.பார்க்க 9. கூத்துப் பதினொன்றனுள் ஒன்றானதும் வாணனால் சிறையிடப்பெற்ற தன்மகன் அநிருத்தனைச்சிறைமீட்டுப்பிரத்தியுமானன் ஆடியதுமான கூத்து; dance of piratiyumṉaṉ when he relelased his son Aniruttaṉ from the prison of vāṇaṉ, one of 11 kuttu.g.r

[பெள் → பேடு]

பேடுமூஞ்சி *pēḍu-mūñji,* பெ (n.) பெண்முகம் (யாழ்.அக) ; feminine face

[பேடு +மூஞ்சி]

பேடை *petai,* பெ. (n.) பறவையின் பெண்பால் (பிங்.); female of birds , hen *'மிழற்றேன்மின் குயிற்பேடைகாள்'* (திவ்.திருவாய்.9,5,1)

ம. பேட. க. ஹேடே

[பெள் → பேடு → பேடை]

பேடை² *pēḍai,* பெ. (n.) கூடை (யாழ்.அக); basket

[பெள் + பேடை]

பேண் *pen,* பெ. (n.) **1.** புறந்தரல் (தொல்.சொல்.338); protection **2.** விருப்பம் (தொல்,சொல்.338); desire **3.** *பேண்மரம்* (வின்.) பார்க்க; *see pēṇ-maram*

[பெல் → பெண் → பேண்]

பேண்மரம் *pēṇ-maram,* பெ. (n.) துலாத்தாங்கு மரம் (வின்.); the stand of a picottah

[பேண் +மரம்]

பேணகம் *pēṇagam,* பெ. (n.) பணிகாரவகை (வின்.); a kind of pastry.

[பேண் +அகம் → பேணகம்]

பேணம் *pēṇam,* பெ. (n.) **1.** மதிப்பு; tenderness, recard, esteem. **2.** பதனம்; care, caution. **3.** பேணுகை; nurture, fostering.

[பேண் → பேணம்]

பேணரவு *pēṇaravu,* பெ. (n.) பேணல் பார்க்க; see pēṇal

[பேண் → பேணரவு]

பேணல் *pēṇal,* பெ. (n.) **1.** பேணுகை; nurturing, fostering. **2.** மிகுவிருப்பம்; intense desire. **3.** கருதுகை (அரு.நி); thinking **4.** மிகுகை (அரு.நி); increasing.

[பேண் → பேணல்]

பேணலர் *pēṇalar,* பெ. (n.) பகைவர்; foes.

[பேண் +அல்+ அர்]

('அல்' எ. ம. இ. நி)

பேணாமாக்கள் *pēṇā-mākkaḷ,* பெ. (n.) எதிரிகள்; helpless, friendless persons *"பேணாமாக்கள் பேசார் பிணித்தோர்* (மணிமே.28,223)

[பேண் +ஆ+மாக்கள்]

'அல்' எ. ம. இ. நி.

பேணாமை *pēṇāmai,* பெ (n.) பகைமை; enmity. *"பேணாமை பேணப் படும்* (குறள்.866)

[பேண் +ஆ+மை]

('அல்' எ. ம. இ. நி)

பேணார் *pēṇār,* பெ. (n.) பகைவர்; foes. *பேணா ரகநாட்டு'* (பு.வெ.3,4.)

[பேணு +ஆ+அர்]

('அல்' எ. ம. இ. நி)

பேணி *pēṇi,* பெ. (n.) பணியாரம் (இந்துபாக); a kind of sweet meat

[பண் → பணி → பேணி]

பேணியார் *pēṇiyār,* பெ. (n.) விரும்பப் பட்டோர்; lovers. *"பேணியார் பெட்ப செயின்'* (குறள்.1257)

[பேண் + பேணி + ஆர்]

பேணிவளர்த்தல் *pēnivalartal,* பெ. (n.) பாதுகாத்து வளர்த்தல்; help to grow.

[பேணி + வளர்த்தல்]

பேணுகை *pēnukai,* பெ. (n.) பேணி வளர்த்தல் பார்க்க;

[பேண் → பேணுகை]

பேணு-தல் *pēṇu,* செ.குன்றாவி (v.i.) **1.**போற்றுதல்; to treat tenderly, to cherish. *"தந்தை தாய்ப்பேண்"* (ஆத்தி சூ.) **2.** போற்றி காத்தல்; to protect. *"பேணித் தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்"* (புறநா.9) **3.** மதித்தல்; to regard,esteem,value. *"குன்று.... தெய்வம் பேணித்திசை தொழுதனிர் சென்மின்"* (பரிபா.15,48) (திவா) **4.** விரும்புதல்; disire. *'பேணான்வெகுளி'* (குறள்.526) **5.** ஒப்புரவு; to treat courteously. *'பிறர் தன்னைப் பேணுங்கா னாணலும்'* (திரிகடு.6) **6.** வழிபடுதல்; to worship. *'அமரர்ப் பேணியும்'* (பட்டினப்.200) **7.** பொருட் படுத்துதல்; to care for,mind *"துவலைத் தண்டுளி பேணார்"* (நெடுநல்.34) **8.** கழுவாய் செய்தல்; to attend carefully, talk particular car of. *'பாணியுந்தூக்கு நடையும் பெயராமை பேணி'* (பு.வெ.12,ஒழிபு.19)**9.** ஒப்பனை செய்தல்; to adorn. *'பேணி நிறுத் தாரணி'* (கலித்.104) **10.** கருதுதல் (திவா); to purpose, intend. **11.** குறித்தல் (சூடா); to mark out **12.** உட்கொள்ளுதல்; to take in , swallow. "விளங்கு பொற்கலத்தில் விரும்புவன பேணி" (சிறுபாண். 244) **13.** அறிதல்; to know. *'பேணாதொருத்தி பேதுற'* (பரிபா.7,67). **14.** ஒத்தல்; to resemble *'பெருநறாப் பேணியவே கூர்நறா வார்ந்தவள் கண்'* (பரிபா.7,63).

[பேண் → பேணு]

பேணுநர் *pēṇunar,* பெ. (n.) போற்றிக்காப்போர்; guardians. *'பெண்டிர் கொல்லோ பேணுநர் கொல்லோ'* (மணிமே.14;47)

[பேணு → பேணுநர்]

பேத்தல் *pēttal,* பெ. (n.) பிதற்றுமொழி; incoherent talk; meaningless speech.

[பிதற்று → பேத்து → பேத்தல்]

பேத்தி[1] *pētti,* பெ. (n.) பேர்த்தி; grand - daughter *'பேத்திமாருண்டு பண்ணும்'* (பணவிடு.255)

[பேர்→ பேத்தி]

பேத்தி[2] *pētti,* பெ. (n.) பேயத்தி; corr of

[பேயத்தி→ பேத்தி]

பேத்து-தல் *pēttu,* செ.குன்றா.வி (v.i.) *பிதற்று(கொ.வ.)* பார்க்க; *see pētattu*

[பிதற்று → பேத்து]

பேத்துவம் *pēttuvam,* பெ. (n.) **1.** அமுதம்; nectar **2.** நெய்; chee. (சங்.அக)

[பேத்து → பேத்துவம்]

பேத்தை *pēttai,* பெ. (n.) **1.** மீன்வகை; globe-fish, genus, tetrodon **2. 9** விரலம் வளர்வதும் பழுப்புநிறம் உள்ளதுமான மீன்வகை; globe-fish, brown, attaining **9** in. in length, Tetrodon nigro punctatus. **3.** பற்பேத்தை (யாழ்.அக); பார்க்க gum boil **4.** வயிற்றுவீக்கம் (யாழ்.அக); bloated belly

[பேத்து → பேத்தை]



பேதறு–த்தல் *pēdaṟu,* செ.குன்றாவி (v.i.) கலக்கமொழித்தல்; to clear doubt. *'மாருதி வந்துன்னைப்பேதறுத்து'* (கம்பரா.மீட்சி.166)

[பேது + அறு → பேதறு]

பேதிக்கிழங்கு *pēdi-k-kiḻaṅgu,* பெ. (n.) 1. கொடிவகை; jalap, m.le Impomaea Purga. (சா.அக.)

பேது[1] *pēdu,* பெ. (n.) 1. மயக்கம்; bewilderment, confusion, consternation. *'நல்லவை பேதுறார் கேட்டல்'* (இனி. நாற். 9.) 2. பித்துப் பிடித்தல்; delirium, mental derangement. *'சாயலாடான் பேது கண்டு'* (சீவக. 1744.) 4. அறிவின்மை; ignorane. *'பிழை யென்னாய் பேதுறீஇ'* (பு.வெ. 11, கைக்கிளை. பெண். 8.)

skt. bhēda. **க.** பேது

[பித்து→பேத்து → பேது]

பேதுறவு *pēduṟavu,* பெ. (n.) 1. மயக்கம்; bewilderment, mental derargement, mental. *'பேணிலா தவர் பேதுற வோட்டினோம்'* (தேவா. 497, 10.) 2. துன்பம் (சங்.அக.); distress.

[பேதுறு → பேதுறவு]

பேதுறு–தல் *pēduṟu-,* செ.கு.வி. (v.i.) 1. மயங்குதல்; to be bewilered. *'பேதுறுகின்ற போன்ற பெருமழைக் கண்கள்'* (சீவக.2544.) 2. பித்துப் பிடித்தல் (வின்.); to become insane. 3. வருந்துதல்; to be distressed. *'பேதுற்ற விதனைக் கண்டு'* (பரிபா. 18, 12.) 4. அறியா திருத்தல் (பு. வெ. 11, கைக்கிளை. பெண். 8.); to be ignorant.

[பேது + உறு → பேதுறு–தல்]

பேதுறு–த்தல் *pēduṟu,* செ.குன்றாவி. (v.t.) வருத்துதல்; to cause distress. *'உயிரைப் பேதுறுத்து'* (சீவக. 2766.)

பேதுறு → பேதுறுத்தல். (கா.விளை.)

[பேது + உறு]

பேதை *pēdai,* பெ. (n.) 1. அறிவிலி (பிங்.); simpleton, ignorant person, dolt. *'பிள்ளைமை விளம்பினாய் பேதை நீயெனா'* (கம்பரா. யுத். மந்திரப். 72.) *'மடிமடிக் கொண்டொழுகும் பேதை'* (குறள்.603) 2. பெண்; woman, as simple minded. *'பசந்தது பைந்தொடிப் பேதை நுதல்'* (குறள். 1238.) 3. பாலை நிலப் பெண்; (இறை. 1, 18.) woman of desort tract. 4. மகளிர் பருவம் ஏழனுள் ஐந்து வயது முதல் ஏழு அகவை வரையுள்ள பருவத்துப் பெண் (பிங்.); girl between theages of five and seven. 5. வறியவன் (பிங்.); poor person. 6. கள் (சது.); toddy, vinous liquor. 7. அலி (பிங்.); hermaphrodite.

தெ. அம்பேத

[பேது – பேதை]

பேதைப்படு—த்தல் *pēdai-p-paḍu-,* செ.குன்றாவி. வி. (v.t.) மடமையாக்குதல்; to make foolish. *'பேதைப் படுக்கு மிழவூழ்'* (குறள். 372.)

[பேதை + படு]

பேதைப்பருவம் *pēdai-p-paruvam,* பெ. (n.) அறியாப் பருவம்; age of innocence.

[பேதை + பருவம்]

பேதைப்புத்தி *pēdai-p-putti,* பெ. (n.) ஏமாளி; weak intellect; folly, credulity, indiscretion. (w.)

[பேதை + SKṭ. nuddhi. த. புத்தி]

பேதைப்பெண் *pēdai-p-peṇ,* பெ. (n.) இளம்பெண்; young lady.

[பேதை + பெண்]

பேதைமை *pēdaimai,* பெ. (n.) மடமை; folly, ignorance, credulouse ness. *'பேதைமை யன்ற தறிவு'* (நாலடி. 249.)

[பேதை — பேதைமை]

மை. ப. பெ. ஈறு

பேதைபாதம் *pēnda-pādam,*பெ. (n.) பெண் தெய்வத் திருவுருவின் காலில் அணியும் அணிவகை;an ornament for the log of an idol. "திருக்கழற் கீழிடும் பேதைபாதமும்" (S.I.I.viii,39)

[பேதை + பாதம்]

பேதமை *pēndamai,* பெ. (n.) உய்த்துணராமை (தொல். பொ. 248, இளம்பூ); lack of discernment.

[பேதை→ பேதமை]

பேந்தவலை *pēnda-valai,* பெ. (n.) கண்கள் சிறியவாகப் பின்னிய வலை (இ.வ.); small-eyed net. (loc.)

பேந்தவிழி—த்தல் *pēnda-viḻi-,* செ.கு.வி. (v.i.) மருண்டு விழித்தல் (கொ.வ.) ; to stare, roll the eyes in bewilder ment.

[பே → பேந்து → பேந்த + விழி]

பேந்து—தல் *pēndu-,* செ.கு.வி. (v.i.) மருளுதல்; to be bewildered. *'பேந்திப் பேந்தி விழிக்கிறான்'*

[பே — பேந்து]

பேம் *pēm,* பெ. (n.) அச்சம்; fear, dread, terror. *'பேந்தரு பேய்வனம்'* (சீவக. 1181.)

[பே² → பேம்]

பேய்¹ *pēy,* பெ. (n.) 1. அச்சுறுத்தும் ஆவி; devil, goblin, fiend. *'சுழலு மழல்விழிக் கொள்ளிவாய்ப் பேய்'* (பதினொ. மூத்த. 1.) 2. காட்டுத்தன்மை (வின்.); wildness, as of vegetation 3. தீமை (வின்.); evil. (w.) 4. வெறி; madness, as of a dog; frenzy.

[பே — பேய்]

பேய்² *pēy,* பெ. (n.) இல்லை யென்னும் பொருள் கொண்ட சொல் (அக.நி.); a term meaning 'no'.

[பே⁴ — பேய்]

பேய்க்கஞ்சான் *pēykkañjāṉ,* பெ. (n.) சாணாக்கியப் பூண்டிலுள்ள பூச்சிவகை (சங்.அக.); a worm infesting cāṇākki-p-pūṇḍu.

பேய்க்கடம்பை *pēy-k-kaḍambai,* பெ. (n.) மரவகை(L.); a tree

[பேய்¹ + கடம்பை]

பேய்க்கடுக்காய் *pēy-k-kaḍukkāy,* பெ. (n.) 1. பெரிய மரவகை; crape myrtle, 2. பூமருது, 1. பார்க்க; see *pūmarudu.*

[பேய் + கடுக்காய்]

பேய்க்கண் *pēy-k-kaṇ,* பெ. (n.) 1. சுழல்விழி; rolling eyes, as of a demoniac. 2. அஞ்சத் தக்க விழி; frightful eyes, as of a devil.

[பேய் + கண்]

பேய்க்கண்டல் *pēy-k-kaṇḍal,* பெ. (n.) சிறுமர வகை (வின்.); simple cymed mangrove

[பேய் + கண்டல்]

பேய்க்கருங்காலி *pēy-k-karuṅgāli,* பெ. (n.) கருங்காலிவகை (L.); tamarind like cutch, m.tr.,

[பேய் + கருங்காலி]

[கருங்கால் – கருங்காலி]

பேய்க்கரும்பு *pēy-k-karumbu,* பெ. (n.) நாணல் வகை (A.); kaus, a large and coarse grass

[பேய் + கரும்பு]

பேய்க்களா *pēy-k-kaḷā,* பெ. (n.) களாவகை (மலை.); a species of whortleberry.

[பேய் + களா]

பேய்க்கற்றாழை *pēy-k-kāṟṟāḻai,* பெ. (n.) காட்டுக் கற்றாழை (பதார்த்த. 369.) பார்க்க; kāṭṭu-k-kaṟṟaḻai. century-plant.

[பேய் + கற்றாழை]

பேய்க்கனவு *pēy-k-kāṉavu,* பெ. (n.) தீக்கனவு; night mare.

[பேய் + கனவு]

பேய்க்கனி *pēy-k-kaṉi,* பெ. (n.) பேயன் வாழை (தைலவ. தைல. 113.); பார்க்க *see pēyaṉvāḻai.*

[பேய் + கனி]



பேய்க்காஞ்சி *pēy-k-kāñji,* பெ. (n.) புண்பட்ட வீரனைக் கங்குல் யாமத்துப் பேய் காத்தமை கூறும் புறத்துறை (தொல். பொ. 79.); (purap.) theme describing the protection of a wounded warrior by a demon during night.

[பேய் + காஞ்சி]

பேய்க்காடு *pēy-k-kāḍu,* பெ. (n.) பேய் வதியுங் கானகம் (வின்.); haunted jungle

[பேய் + காடு]

பேய்க்காலெறும்பு *pēy-k-kāleṟmbu,* பெ. (n.) எறும்புவகை (வின்.); a kind of small black ant with long feet.

[பேய்க்கால் + எறும்பு]

பேய்க்காளான் *pēy-k-kāḷāṉ,* பெ. (n.) காளான் வகை (யாழ்.அக.); toadstool, fungi.

[பேய் + காளான்]

பேய்க்காற்று *pēykkāṟṟu,* பெ. (n.) சுழல் காற்று; whirlwind.

ம. பேய்க்காத்து

[பேய் + காற்று]

பேய்க்குணம் *pēy-k-kuṇam,* பெ. (n.) அருவருக் கத்தக்க தீக்குணம்; bad, unsociable, peevish disposition.

[பேய் + குணம்]

பேய்க்கும்மட்டி *pēy-k-kummaṭṭi,* பெ. (n.) பேய்க் கொம்மட்டி (யாழ்.அக.) பார்க்க; see pēy-k-kommaṭṭi.

[பேய்க்கொம்மட்டி – பேய்க்கும்மட்டி]

பேய்க்குரவை *pēy-k-kuravai,* பெ. (n.) போருக்குச் செல்லும் அரசன் செலுத்தும் தேர்க்கு முன்னும் பின்னும் பேய் ஆடுவதைக் கூறும் புறத்துறை (பு. வெ. 7, 19.); (puṟap.) theme describing the dance of demons both in front and in rear of a chariot led by a warrior-king.

[பேய் + குரவை]

பேய்க்குருந்து *pēy-k-kurundu,* பெ. (n.) மர வகை; raceme-flowered wild lime.

[பேய் + குருந்து]

பேய்க்குறை *pēy-k-kuṟai,* பெ. (n.) சினம் கொண்டு பேய் செய்யுங் கேடு; evil or disaster, resulting from the malice of an unpropitiated devil.

[பேய் + குறை]

பேய்க்குன்றி *pēy-k-kuṉṟi,* பெ. (n.) குன்றி வகை (யாழ்.அக.); a kind of crab's-eye.

[பேய் + குன்றி]

பேய்க்கூண்டு *pēy-k-kūṇḍu,* பெ. (n.) செய்வினை பயிற்றுமிடம் (வின்.); place where the black arts are taught.

[பேய் + கூண்டு]

பேய்க்கூத்து *pēy-k-kūttu,* பெ. (n.) **1.** பேயாட்டம்; devil dance. **2.** குழப்பம்; confusion.

[பேய் + கூத்து]

பேய்க்கொடை *pēy-k-koḍai,* பெ. (n.) வாரியிறைக்கும் ஈகை; lavish and indiscriminate giving.

[பேய் + கொடை]

பேய்க்கொம்மட்டி *pēy-k-kommaṭṭi,* பெ. (n.) கொடி வகை (யாழ்.அக.); colocynth.

[பேய் + கொம்மட்டி]

பேய்க்கோட்டாலை *pēy-k-kōṭṭālai,* பெ. (n.) **1.** *பேய்க் கோளாறு* பார்க்க; see *pēy-k-kōḷāṟu.* **2.** *பேய்க்குறை*(வின்.) பார்க்க; see *pēy-k-kuṟai.*

[பேய் + கொள்தல் → கோடல் → கோட்டாலை]

பேய்க்கோட்டி *pēy-k-kōṭṭi,* பெ. (n.) 1. *பேய்க் கோளாறு* பார்க்க; see *pēy-k-kōḷāṟu.* 2. *பேய்த்தனம்* பார்க்க; see *pēy-t-taṉam.*

[பேய் + கோட்டி]

கொள் → கோள் → கோட்டி

பேய்க்கோயில் *pēy-k-kōyil,* பெ. (n.) பேய் உறையும் சிறு கோயில் (M.M. 681.); devil temple.

[பேய் + கோயில்]

பேய்க்கோலம் *pēy-k-kōlam,* பெ. (n.) 1. பேயின் வடிவம்; devil-like appearance. என் பணிந்த பேய்க் கோலம் (பதினொ. அற்புதத்திரு. 29.) 2. அழகிழந்த (அவ) தோற்றம்; appearance of wretchedness. "ஒண்டொடியிப் பேய்க் கோலங் கொண்டு" (பிரபுலிங். அக்க. துற. 55.)

[பேய் + கோலம்]

பேய்க்கோள் *pēy-k-kōḷ,* பெ. (n.) பேய் பிடிக்கை; demoniac possession.

[பேய் + கோள்]

கொள் → கோள்

பேய்க்கோளாறு *pēy-k-kōḷāṟu,* பெ. (n.) பேய் பிடித்தலாலுண்டான இயல்பல்லாச் செய்கை; violent actions of a demoniac, as whirling the head.

[பேய் + கோளாறு]

பேய்க்காண்(ணு)-தல் *pēy-kāṇ,* செ.கு.வி. (v.i.) பேய் பிடித்தல்; to be possessed. 'பேய் கண்டாற் போல்' (திருக்கோ. 84, உரை)

[பேய் + காண்.,]

பேய்ச்சக்காலெறும்பு *pēycca-k-kāl-eṟumbu,* பெ. (n.) பேய்க்காலெறும்பு பார்க்க; see pēy-k-kālerumbu.

[பேய்க்காலெறும்பு - பேய்ச்சக்காலெறும்பு]

பேய்ச்சத்தம் *pēy-c-cattam,* பெ. (n.) பேரொலி (வின்.); hideous noise, as of a devil.

[பேய் + SKṭ.sabda. த. சத்தம்]

பேய்ச்சாளை *pēy-c-cāḷai,* பெ. (n.) கருநிறச் சாளைமீன்வகை (வின்.); interior caḷai fish.

[பேய் + சாளை]



பேய்ச்சி *pēy-cci,* பெ. (n.) 1.பெண்பேய்; demoness. "பேய்ச்சி பாலுண்ட பிரான்" (திவ்.இயற்.3.28) 2. பேய் பிடித்தவள்; woman under possession of a demon

[பேயன்- பேய்ச்சி(பெ.பா)]

பேய்ச்சீந்தில் *pēy-c.cindil,* பெ. (n.) ஒருவகைச் செடி (ஆகாசகருடன்); (சங்.அக) a climbing chrub

[பேய்+ சீந்தில்]

பேய்ச்சீயக்காய் *pēy-c.ciyakkāy,* பெ. (n.) கொடிவகை;copius narrow- leaved soap-pod

[பேய்+ சீயக்காய் சீக்காய் → சீயக்காய்]

பேய்ச்சுண்டை *pēy-c-cuṇḍai* பெ. (n.) மலைச்சுண்டை; (M.M. 829) prickly nightshade.

[பேய் + சுண்டை]

பேய்ச்சுரை *pēy-c-curai,* பெ. (n.) சுரை வகை; wild melon. 'கைப்பறா பேய்ச்சுரையின் காய்' (நாலடி.116)

[பேய் + சுரை]

பேய்ச்செயல் *pēy-c-cayal,* பெ. (n.) தீ நடத்தை; devilisim., black magic.

[பேய் + செயல்]

பேய்ச்சேட்டை *pēy-c-cēṭṭai,* பெ. (n.) *பேய்க் கோளாறு* பார்க்க; see *pēy-k-kōḷāru.*

[பேய் + சேட்டை]

பேய்ச்சொறி *pēy-c-coṟi,* பெ. (n.)
1. பெருஞ்சொறி வகை; itch, scabies.
2. சிரங்குவகை; nettle rash, urticaria.

[பேய் + சொறி]

பேய்த்தக்காளி *pēy-t-takkāḷi,* பெ. (n.) சீமைத் தக்காளி (வின்.) பார்க்க šimai-t-takkāli; tomato.(w)

[பேய் + தக்காளி]

பேய்த்தண்ணீர் *pēy-t-taṇṇir,* பெ. (n.) சாராயம் (வின்.); ardent spirits. (w)

[பேய் + தண்ணீர்]

பேய்த்தத்து *pēy-t-tattu,* பெ. (n.) சிரங்கு வகை; (M.L) nettle rash, urticaria.

[பேய் + தத்து]

பேய்த்தனம் *pēy-t-taṉam,* பெ. (n.)
1. முட்டாள்தனம்; fiendishness, ferocious ness, devilishness. 'இந்தப் பேய்த்தனமேன்' (தாயு. பாயப்புலி. 23) 2. பித்து; madness.
3. புல்லறிவு (சங்.அக.); foolishness.

[பேய் + தனம்]

பேய்த்.தாரை *pēy-t-tārai,* பெ. (n.) ஊதுகருவி வகை; a large trumpet.

[பேய் + தாரை]



பேய்த்தி *pēytti,* பெ. (n.) பேய்ச்சி; demoness"சிறுபேய் பெரும்பேய்த்தியைச் சென்றுபற்றும்" (நீலகேசி.8)

பேய்த்திமிட்டி *pēy-t-timiṭṭi,* பெ. (n.) பேய்க் கொம்மட்டி (சங்.அக.) பார்க்க; see pēy-k-kommaṭṭi.

[பேய்க்கொம்மட்டி – பேய்த்திமிட்டி]

பேய்த்தும்பை *pēy-t-tumbai,* பெ. (n.) 1. காசித்தும்பை; (M.M. 911); flower tumhai. 2. *பேய் மருட்டி* M.M. பார்க்க; see *pēymarutti.*

[பேய் + தும்மை]

பேய்த்தும்மட்டி *pēy-t-tummatti,* பெ. (n.) 1. *பேய்க் கொம்மட்டி* (சங்.அக.) பார்க்க; *see pēy-k-kommatti.* 2. *பேய்ச்சுரை* பார்க்க; *see pēy-c-curai.*

[பேய் + தும்மட்டி]

பேய்த்தேர் *pēy-t-tēr,* பெ. (n.) கானனீர்; mirage. பேய்த் தேர்ப்பின் குடங்கொண்டு நீர்க்குச் செல்வார். (தேவா. 1145, 10)

[பேய் + தேர்]

பேய்நடம் *pēy-nadam,* பெ. (n.) வெறியாட்டு (திவா.); dancing under the influence of a demon.

[பேய் + நடம்]

பேய்நரி *pēy-nari,* பெ. (n.) வெறிபிடித்த நரி;rabid fox. "பேய்நாய் பேய்நரி முதலியவற்றின் கடிகளுக்கு" (குஞ். சா. iii 102)

[பேய்+நரி]

பேய்நவரை *pēy-navarai,* பெ. (n.) நான்கு விரலம் வளர்வதும் பழுப்புப் புள்ளியும் வெள்ளை நிறமுடையதுமான நவரை மீன்வகை; red mullet, silvery, spotted with brown, attaining 4 in. in length.

[பேய் + நவரை]



பேய்நாய் *pēynāy,* பெ. (n.) வெறி பிடித்த நாய்; (M.L.) rabid dog.

[பேய் + நாய்]

பேய்நாய்க்கடி *pēy-nāy-k-kadi,* பெ. (n.) பேய் நாய்க்கடிச் சன்னி (M.L.) பார்க்க; see pēynāy-k-kadic-canni.

[பேய் + நாய்க்+ கடி]

பேய்நாய்க்கடி சன்னி *pēnāy-k-kadisanni,* பெ. (n.) வெறிநாய்க்கடியால் உண்டாகும் சன்னிவகை; ;(M.L.) hydrophobia.

[பேய் + நாய்க்கடி + சன்னி]

(skt. janni. த. சன்னி.)

பேய்நிலை *pēy-nilai,* பெ. (n.) எண்வகை மணத்துள் (பைசாசம்) ஒன்று (இறை. 1, 22); a form of marriage.

[பேய் + நிலை]

பேய்ப்பசலை *pēy-p-pasalai,* பெ. (n.) *பேய்ப்பசளை* (மூ.அ.) பார்க்க; *see pēy-p-paśaḷai.*

[பேய்ப்பசளை – பேய்ப்பசலை]

பேய்ப்புடல் *pēy-p-puḍal,* பெ. (n.) பூடுவகை (பதார்த்த.354.); wild snake gourd

[பேய் + புடல்]

பேய்ப்புடோல் *pēy-p-puḍōl,* பெ. (n.) *பேய்ப்புடல்* (இ.வ.) பார்க்க; see *pēy-p-pudal.*

பேய்ப்புத்தி *pēy-p-putti,* பெ. (n.) அறிவின்மை (வின்.); imprudence,folly rashness

[பேய் + SKṭ. nuddhi. த. புத்தி]

பேய்ப்புகையிலை *pēy-pugaiyilai,* பெ. (n.) காட்டுப்புகையிலை (சித். அக.); a kind of tobacco.

[பேய் + புகையிலை]

பேய்ப்புல் *pēy-p-pul,* பெ. (n.) ஒட்டுப்புல் (பதார்த்த.378); sticking grass.

[பேய் + புல்]

பேய்ப்பூலா *pēy-p-pūlā,* பெ. (n.) செடிவகை; buck - torn

[பேய் + பூலா]

பேய்ப்பெண் *pēy-p-peṇ,* பெ. (n.) அறிவில்லாத பெண்; foolish girl '*பேச்சரவங் கேட்டிலையோ பேய்ப் பெண்ணே*' (திவ்.திருப்பா.7.)

[பேய் + பெண்]

பேய்ப்போக்கு *pēy-p-pōkku,* பெ. (n) ஒழுங்கற்ற ஒழுக்கம், irregular, absurd conduct. (w.)

[பேய்+போக்கு]

பேய்பிடித்தல் *pēy-piḍittal,* பெ. (n.) பேயால் பற்றப் படுதல்; being possessed by a devil; obsession.

[பேய் + பிடித்தல்]

பேய்மருட்டி *pēy-Maruṭṭi,* பெ. (n.) செடிவகை(பதார்த்த. 243.); malabar catamint, s.sr; anisomeles malabarica.

[பேய் + மருட்டி]

பேய்மழை *pēy-Malai,* பெ. (n.) பெருமழை; Heavy fall of rain.

[பேய் + மழை]

பேய்மனம் *pēy-Maṇam,* பெ. (n.) 1. அறிவற்ற மனம்; distracted, foolish mind. '*என்பேய் மனமால் கொண்டதே*' (திருநூற்.1.) 2. இழிந்த மனம்(வின்); vile heart, carnal mind.

[பேய் + மனம்]

பேய்மாடி *pēy-māḍi,* பெ. (n.) *புளிநறளை* (மலை.) பார்க்க; see *puḷinaraḷai.*

[பேய் + மாடி]

பேய்மிரட்டி *pēy-miraṭṭi,* பெ. (n.) (மூ.அ.) 1. *பேய்மருட்டி* பார்க்க; see *pēy maruṭṭi.* 2. *கிலுகிலுப்பை* பார்க்க; *see kilukiluppai* species of rattle work.

[பேய்மருட்டி → பேய் மிரட்டி]

பேய்மிளகாய் *pēy-miḷagāy,* பெ. (n.) சீமைப் பச்சை மிளகாய் (A.); cayenne peper.

[பேய்+மிளகாய்]

பேய்முகம் *pēy-mugam,* பெ. (n.) பேய்மூஞ்சி (வின்); hideuns face.

[பேய்+முகம்]

பேய்முசுட்டை *pēy-mušuttai,* பெ. (n.) 1. *சமுத்திரப்பாலை* (வின்) பார்க்க; see *samullira-t-pālai* elephant creeper. 2. கொடிவகை. malabar creeper. 3. ஒருவகைச் சொறிசிரங்கு (இ.வ.); nettle rash, urticaria.

[பேய்+முசுட்டை]

பேய்முசுட்டைக்கடி *pēy-mušuṭṭai k-kaḍi,* பெ. (n.) உடம்பிற் செந்நிறப் புள்ளிவிழும் நோய்வகை (M.L.); purpura, a disease marked by livid spots on the skin.

[பேய்முசுட்டை + கடி]

பேய்முல்லை *pēy-mullai,* பெ. (n.) *பேய்முசுட்டை* (சங்.அக.) பார்க்க; see *Peymusuttai.*

பேய்முன்னை *pēy-muṉṉai,* பெ. (n.) 1. மரவகை; charcoal tree. 2. சமுத்திரப்பாலை; elephant creeper. (l.)

[பேய்+முன்னை]

பேய்மூஞ்சி *pēy-mūñci,* பெ. (n.) ஒழுங்கற்ற முகம் (கோரமுகம்.) (வின்); hideous face.

[பேய் + மூஞ்சி]

பேய்மை *pēymai,* பெ. (n.) பேயின் தன்மை; devilishness. '*பேய்மையாக்குமிப் பேதை தமைக்கள்வனொடுடனாய்*' (வீரசோ.யாப்.5, உரை.)

[பேய் + மை 'மை' ப.பெ.ஈறு]

பேய்முள்ளி *pēy-muḷḷi,* பெ. (n.) காட்டு முள்ளி (சித்.அக.); Wild thorny plant.

[பேய் + மூஞ்சி]

பேய்வரகு *pēy-varagu,* பெ. (n.) காட்டுவரகு (சித்.அக.); Wild ragi.

பேய்வழிபாடு *pēy-vaḻipāḍu,* பெ. (n.) பேயை வழிபடுதல்; devil-worship.

[பேய் + வழிபாடு]

பேய்வாதுமை *pēy-vādumai,* பெ. (n.) வாதுமை வகை (இ.வ.); Wild almond.

பேய்விட்டாட்டு–தல் *pēy-viṭṭāṭṭu,* செ. குன்றாவி. (v.t.) *பேயாட்டு* (வின்) பார்க்க; see *pēyāṭṭu.*

[பேய் + விட்டு + ஆட்டு]

பேய்வித்தை *pēy-vittai,* பெ. (n.) சல்லியம்; witchcraft. (w)

[பேய் + வித்தை]

பேய்வெருட்டி *pēy-verutti*, பெ. (n.) *பேய்மருட்டி* (நாமதீப.344) பார்க்க; see *pēy-marutti*

[பேய் + மருட்டி –பேய்வெருட்டி]

பேயகத்தி *pēy-agatti*, பெ. (n.) *சீமையகத்தி*(L.) பார்க்க; see *cīmai-y-agathi* large feat letted aglandular senna.

[பேய் + அகத்தி]

பேயத்தி *pēy-atti*, பெ. (n.) அத்திவகை (L.); devil fig, s.tr., ficus hispida.

[பேய் + அத்தி]

பேயம் *pēyam*, பெ. (n.) நீர் முதலியன போன்ற பருகலுணவு (சங்.அக.); food taken in by drinking or sipping, as water, milk, etc.

[பெய்–பேய்–பேயம்]

பேயம்பழம் *pēyampaḻam*, பெ. (n.) பேயன் வாழையின் பழம் (இ.வ.); fruit of pēyaṉ-vāḻai.

[பாயம் → பேய் → பேயன் + பழம்]

பேயம்மையார் *pēy-ammaiyār*, பெ. (n.) *பேயார்* (யாப்.வி.) பார்க்க; see *pēyār*.

[பேய் + அம்மையார்]

பேயமன்று *pēya-maṉṟu*, பெ. (n.) மதுக்குடிக்குமிடம்; liquor-saloon. '*பேயமன்றினினின்று பிறங்கெரி*' (கம்பரா. இலங்கையெரி 14.)

[பேயம் + மன்று]

பேயருளாந்தை *pēy-aruḷāndai*, பெ. (n.) *பாலையுடைச்சி* (L.)பார்க்க; see *pālai-y-uṭicci*, indian calosanthes.

பேயவரை *pēy-avarai*, பெ. (n.) *கோழியவரை*1. பார்க்க; see *kōḻi-y-avari*, sword-bean. 2. பொன்னாவிரை fetid cassia.

[பேய் + அவரை]

பேயன்[1] *pēyaṉ*, பெ. (n.) 1. பேய்பிடித்தவன்; demomac. 2. பித்தன் (பைத்தியக் காரன்); madman '*பேயனாகிலும் பெருநெறிகாட்டாய்*' (திருவாச. 23,7.)

[பேய் + அன் 'அன்' ஆ,பா.ஈறு]

பேயன்[2] *pēyaṉ*, பெ. (n.) *பேயன்வாழை* (பதார்த்த.727.) பார்க்க; see *pēyaṉvāḻai*.

[பாயம்→ பேயம்→ பேயன்]

பேயன்வாழை *pēyaṉ-vāḻai*, பெ. (n.) வாழை வகை; a kind of banana,

[பாயம்→ பேயம்→ பேயன் + வாழை]

பேயனார் *pēyaṉār*, பெ. (n.) ஐங்குறுநூற்றின் ஐந்தாம் நூறாகிய முல்லைத்திணையைப் பாடிய பழைய புலவர்; an ancient poet, author of the fifth hundred in Iṇguru-nūru.

[பேய + அன் + 'ஆர்' 'ஆர்' உயர்வுப் பன்மை ஈறு]

பேயாட்டம் *pēy-āṭṭam*, பெ. (n.) பேய்க்கூத்து; devil dance. 2. பேய்த்தன்மை; fiendishness ferociousness. 3. கலக்கம்; confusion, disorder.

[பேய் + ஆட்டம்]
ஆடு–ஆட்டம்

பேயாட்டி *pēy-āṭṭi,* பெ. (n.) 1. மருளேறு வருவித்துக் குறிசொல்லச் செய்வோன்(வின்); one who makes a person possessed and causes him to utter oracles 2. *பேயோட்டி,* (சங்.அக.) 1. பார்க்க; see *pēyōṭṭi.*

[பேயாடி → பேயாட்டி]

பேயாட்டு—தல் *pēy-āṭṭu-,* செ.குன்றாவி. (v.t.) 1. குறிசொல்லுதற்குப் மருளோறச் செய்தல் (வின்); to cause a person to be possessed for making him utter oracles 2. *பேயோட்டு* (இ.வ.). பார்க்க; see *pēyōṭṭu*

[பேய் + ஆட்டு]

பேயாடி *pēy-āḍi,* பெ. (n.) 1. வெறியாடுபவன் (இ.வ.); a person under demoniac possession. 2. *பேயாட்டி* (வின்) பார்க்க; see *pēyāṭṭi*3. *பேயாட்டி* (வின்) பார்க்க; see *pēyōṭṭi.*

[பேய் + ஆடி]

பேயாடு—தல் *pēy-ḍu,* செ.குவி. (v.i.) பேய்பிடித்தாடுதல் (வின்); to whirl the head through demoniac possession.

[பேய் + ஆடு]

பேயாமணக்கு *pēy-āmaṇakku,* பெ. (n.) ஆமணக்குவகை(L.); red physic nut,

[பேய் + ஆமணக்கு]

பேயார் *pēyār,* பெ. (n.) பேயாழ்வார் பார்க்க; see pēyāḻvār '*பொய்கையார் பூதத்தார் பேயார்*' (உப தேசரத்.4.) 2. *காரைக்காலம்மையார்* பார்க்க; *Rārairrāḷ-ammaiyār.* a canonized saiva saint, '*பேயார்க்கு மடியேன்*' (தேவா.737.4.)

[பேய் – பேயார் 'ஆர்' உயர்வுப்பன்மை ஈறு.]

பேயாரால் *pēyārāl,* பெ. (n.) இரண்டடி நீளத்துக்கு மேல் வளர்வதும் மங்கல் (கபில) நிறமுடையதுமான நன்னீர் மீன்வகை; eel, rich brown, attaining more than 2ft. in length.

[பேய் + ஆரால் → ஆரால்]



பேயாவாரை *pēyāvārai,* பெ. (n.) *பேயாவிரை* (இங்.வை.) பார்க்க; see *pēyāvirai.*

[பேய் + ஆவாரை ஆவிரை—ஆவாரை]

பேயாவிரை *pēy-āvirai,* பெ. (n.) செடிவகை; negro coffee.

[பேய் + ஆவிரை]

பேயாழ்வார் *pēyāḻvār,* பெ. (n.) நாலாயிரத் தெய்வப்பனுவில் இயற்பாவைச் சார்ந்த மூன்றாந்திருவந்தாதி இயற்றியவரும் ஆழ்வார் பதின்மருள் ஒருவருமான பெரியார் (உபதேசாத்.6.); a vaisṇava saint, author of the third Tiru.v-andādi of iyarpā,in Nālāyira-p.pirapandam.

[பேய் + ஆழ்வார்]

பேயிரதம் *pēy-iradam,* பெ. (n.) *பேய்த்தேர்* (இலக்.அக.) பார்க்க; see *pēy-t-tēr.*

[பேய் + skt. rasa. த. இரதம்]

பேயீடு *pēy-īḍu,* பெ. (n.) பேயின் தொந்தரவால் உண்டாவதாகக் கருதப்படும் பிள்ளைநோய்; a disease of children, attributed to the influence of evil spirtis, '*புள்ளீட்டுக்கும் பேயீட்டுக்கும் பிழைக்கப்பெற்றதென்கிறார்*' (திவ்.பெரியாழ். 2,5,9,வ்யா.பக்.343.)

பேயுடுப்பை *pēy-uḍuppai,* பெ. (n.) செடிவகை; (விவசா.6.); a plant.

பேயுமிதல் *pēyumidal,* பெ. (n.) பேய் முதலியன ஒருவன் அரத்தத்தை உறிஞ்சியுண்டு கொல்லுகை (j.) sucking the blood of a person either killing or greatly injuring him, as a denil or vampire.

[பேய் + உமிழ்தல் → உமிதல்.]

பேயுள்ளி *pēy-uḷḷi,* பெ. (n.) நரிவெங்காயம்(வின்); indian squill.

[பேய் + உள்ளி]

பேயூடம் *pēyūḍam,* பெ. (n.) அமிழ்தம்; nectar. 2. சீம்பால்; beestings. 3. வெண்ணெய்; (யாழ்.அக) butter.

skt. pēyūsa

பேயூமத்தை *pēyūmattai,* பெ. (n.) *மருளூமத்தை* (மலை.) பார்க்க; see *maruḷ-ūmathai.* cockle.bur.

[பேய் + ஊமத்தை]

பேயெரி-த்தல் *pēyeri,* பெ. (n.) மந்திரத்தாற் பேயை எரித்துப் போக்குதல்; to burn out a devil by magic.

[பேய் + எரி]

பேயெள் *pēyeḷ,* பெ. (n.) *காட்டெள்,* 2. (A) பார்க்க; see *kāṭṭeḷ,* wild sesame.

[பேய் + எள்]

பேயேற்று-தல் *pēy-ēṟṟu,* செ.கு.வி (v.i.) *பேயையுருவேற்று* (வின்) பார்க்க; see *pēyaiy uru-v-ēṟṟu.* (w.)

[பேய் + ஏற்று]

பேயையுருவேற்று-தல் *pēyai-y-uru-v-ēṟṟu,* செ.கு.வி. (v.i.) ஒருவனைப் பேய்பிடிக்கச் செய்தல் (வின்); to cause a dene to possess a person.

[பேய் + ஐ + உரு + ஏற்று]

பேயொலி *pēyoli,* பெ. (n.) பெருங்கூப்பாடு; hideous noise, as of a devil.

[பேய் + ஒலி]

பேயோட்டி *pēyōṭṭi,* பெ. (n.) 1. பேயை ஓட்டுவோன்; exorcist. (loc.) 2. மரவகை (யாழ்.அக.); a tree.

[பேய் + ஓட்டி]

பேயோட்டு-தல் *pēyōṭṭu,* செ.குன்றாவி. (v.t.) பேயை மந்திரத்தால் வெளியேற்றுதல்; to exorcise.

[பேய் + ஓட்டு]

பேயோடாடி *pēyōḍāḍi,* பெ. (n.) பேயுடன் ஆடுபவன், சிவன் (பிங்.); siva, as ḍancing with devils.

[பேய் + ஒடு + ஆடு + இ]

'இ' வினைமுதலீறு

பேயோணான் *pēyōṇāṉ,* பெ. (n.) ஒந்தி வகை (வின்); large bloodsucker.

[பேய் + ஓணான்]

பேர்¹–தல் *pēr,* செ.கு.வி. (v.i.) **1.** சிதைதல்; to become loose, to be detached. கட்டடம் பேர்ந்து போயிற்று **2.** பிரிதல்; to separate. "உமையோ டென்றும் பேரானை" (தேவா.872,5) **3.** போதல்; to depart, go away. "பேர்ந்தும் பெயர்ந்தும்" (திவ்.திருவாய்.5,3,3) **4.** அழிதல்; to be annihilated. "பேர்கின்ற தாகும் பிறப்பு" (அறநெறி. 169.) **5.** பிறழ்தல்; to flop, as a fish. "கெண்டைக் குலம்....பேர்கின்றவே" (திருவிருத்.11.) **6.** அசைதல்; to move. பேருங் கற்றைக் கவரி (கம்பரா.முதற்.98.) **7.** குறைதல்; to lesser, diminish. "பேராச் சிறப்பின்" (தொல்.பொ.102.) **8.** பின் வாங்குதல்; to draw back, retreat, as a warrior. "பொருதகர் தாக்கற்குப் பேருந்த கைத்து" (குறள்.486) **9.** முறைபிறழ்தல்; to go out of order. "வினையைப் பேராம லூட்டும் பிரான்" (சி.போ.2,2.) **10.** நிலைமாறுதல்; to change. பேதிப்பன"நீயவை பேர்கிலையால்" (கம்பரா. இரணிய.110)

[பெயர்–பேர்]

பேர்²–த்தல் *pēr,* செ.குன்றாவி. (v.t.) **1.** இடம்விட்டு நீக்குதல்; to change, remove. "என்றவனைப் பேர்த்திங்ஙன் மீட்டுத் தருவாய்" (சிலப்.9,38.) **2.** அழித்தல்; to destroy, annihilate. **3.** புரட்டுதல்; to turn over. "வன்கழுகு பேர்த்திட்டுக் கொத்தும்" (நாலடி.48) **4.** முறித்தல்; to break. "பேர்த்தனை மாசகடம் பிள்ளையாய்" (திவ்.இயற்,2,10) **5.** மாற்றுதல்; to alter, distort.

[பெயர்–பேர் பேர்த்தல் (காரண வினை)]

பேர்³ *pēr,* பெ. (n.) **1.** ஒருவருக்கோ அல்லது ஒரு பொருளுக்கோ இடும் பெயர்; name "பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்" (நாலடி.175) **2.** ஆள்; per son, individual. "அயற்பேரைக் காய்தி" (கம்பரா.சரபங்.30) **3.** உயிரி; living thing "விசும்பிற் செல்வதோர் பேர் செலாது". (கம்பரா. நாகபா.156.) **4.** புகழ்; praise, fame. "பேர் பரந்த பிரமாபுர மேவிய பெம்மான்" (தேவா,62,3) **5.** மிகக்குறைந்த அளவுள்ளது; that which is nominal; mere name or pretest. 'ஒரு பேர்காணும் வேண்டுவது.' (ஈடு.9,3,1)

தெ. பேரு; க. பெசர்; ம. பேர்; பட; கெசரு

[பெயர் → பேர்]

பேர்⁴ *pēr,* பெ. (n.) பெருமை (அக.நி.); largeness

[பல் – பரு–பெரு பெரு–பேர்]

பேர்க்கடமை *pēr-k-kaḍamai,* பெ. (n.) ஆள்வரிவகை (I.M.P.Cg.529.); a tax on individuals.

பேர்க்குடி *pēr-k-kuḍi,* பெ. (n.) அடிமை; slave 'உன் பேர்க்குடியாக இருக்கிறேன்'. (திருநெல்லை.)

[பெயர் → பேர் + குடி]

பேர்கெட்டவன் *pēr-keṭṭavaṉ,* பெ. (n.) கயவன் (இ.வ.); rogue, scoundral.

[பெயர்கெட்டவன் → பேர்கெட்டவன்]

பேர்கேட்டவன் *pērkēṭṭavaṉ,* பெ. (n.) நாடறிந்தவன் (நெல்லை); a well-known person.

[பேர் + கேட்டவன்]

பேர்கொடு–த்தல் *pēr kodu,* செ.கு.வி. (v.i.) 1. புகழ்தருதல்(கொ.வ.); to give a good name, to bring credit. 2. குறிப்புப் பெயரிடுதல்(கொ.வ.); to nick name. (colleq.) 3. ஒருகுறிக்கோளுக்காகச் சூளேற்றி (ஞானஸ்நானம் செய்து) பெயரிடுதல்; to baptise, as giving a name to a child.

[பேர் + கொடு]

பேர்சொல்லாதது *pēš-olladadu,* பெ. (n.) இரவில் பேர் வழங்கத்தகாத வசம்பு, ஊசி முதலிய பொருள்கள்; particular thing not named at night, as sweet flag, needle etc. 2. அக்கி(இ.வ.); herpes.

[பேர் + சொல்லாதது.]

பேர்சொல்லாதவன் *pēršolladavan,* பெ. (n.) முடிதிருத்துவோன்(இ.வ.); barber, as not to be named at night.

[பேர் + சொல்லாதவன்]

பேர்சொல்(லு–)–தல் *pērsol,* செ.குன்றாவி. (v.t.) ஒருவரது புகழைத் தாங்கிநிறுத்துதல் to hold one's fame.

[பேர் + சொல்(லு)]

பேர்அட்டவணை *pērattavanai,* பெ. (n.) பெயர்ப்பட்டியல்; index of names.

[பேர் + அட்டவணை]

பேர்த்தி *pērtti,* பெ. (n.) மகனது அல்லது மகளது மகள்; grand-daughter, 2. பாட்டி(இ.வ.); grandmother.

[பெயர்த்தி–பேர்த்தி பேரன் (ஆ.பா. பெயர்த்தி (பெ.பா.)]

பேர்த்து *pērttu,* வி.எ. (adv.) 1. பேர்த்தும் பார்க்க; see pērttum. "ஒருதலையாப் பேர்த்துள்ள வேண்டா பிறப்பு" (குறள்.357) 2. மாற்றாக; in return. "பேர்த்து நாய் கௌவினா ரீங்கில்லை" (நாலடி.70)

[பெயர்த்து–பேர்த்து]

பேர்த்தும் *pērttum,* வி.எ. (adv.) மறுபடியும்; again. 'பின்னைப் பழம்பொருட்கும் பேர்த்துமப் பெற்றியனே' (திருவாச. 7,9)

[பேர்த்து → பேர்த்தும்]

பேர்ந்தும் *pērndaum,* வி.எ. (adv.) *பேர்த்தும்* பார்க்க; see *pērttum.*

பேர்படை–த்தல் *pēr-padai,* செ.கு.வி. (v.i.) *பேர்பெறுதல்* பார்க்க; see *pēr-peru.* "பேர்படைத்த விசையனுடன்" (பாரத. கிருட்டிண.1.)

[பெயர்–பேர் + படை –,]

பேர்பாதி *pēr-pādi,* பெ. (n.) சரிபாதி; exactly half. just half.

[பேர் + பாதி]

ஒகோ. செம்பாதி

பேர்பெறு–தல் *pēr-peru,* செ.கு.வி. (v.i.) 1. பெயர் கொள்ளுதல்; to bear a name. "மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர் பெற்ற" (நாலடி.59) 2. புகழ்பெறுதல்; to be famous.

[பேர் + பெறு–தல்]

பேர்மகிழ் *pērmagil,* பெ. (n.) பெருமகிழ்ச்சி; great mirth. "பேர்மகிழ் செய்யும் பெருநறா" (பரிபா.7,63.)

[பெயர்–பேர் + மகிழ்]

பேர்வாசி[1] *pēr-vāši,* பெ. (n.) பேர்மட்டுமுள்ளது; being only nominal. 'பேர்வாசியே யாம்படி நாம் புண்ணிமைத்த இருவகைப்பட்ட தர்மங்களையும் போக்குவார்'(A.டு.1,6,9) **2.** ஒருவன் பெயரைக் குழந்தைக்கிடுவதால் அதற்குண்டாவதாகக் கருதும் குணம்(கொ.வ.); mcharacterintics believed to be aquired by a child being named of to a person.

பேர்வாசி[2] *pēr-vāši,* பெ. (n.) செம்பாதி; exaitly half.

பேர்மல்லி *pērmalli,* பெ. (n.) *கஞ்சாங்கோரை,* பார்க்க; (சங்.அக.), see *kañjan-kōrai,* white basil.

பேர்வரி *pēr-vari,* பெ. (n.) *ஆள்வரி(தல்)* பார்க்க; see *āḷ-vari.*

பேர்வழி *pērvaḷi,* பெ. (n.) **1.** பெயர்ப்பட்டி (கொ.வ.) list of names, roll, register. **2.** மரபுவழி; genealogy. **3.** ஆள்; person, individual. அந்தப் பேர்வழி யார்?

[பேர் + வழி]

பேர்வழிப்பட்டோலை *pērvaḷi-paṭṭōlai,* பெ. (n.) **1.** பேரேடு; ledger. **2.** பேர் பெயர்ப்பட்டியலின் நிரல்; index of names.

[பேர்வழி + பட்டோலை]

பேர்வை[1]**த்தல்** *pēr vai,* செ.குன்றாவி. (v.t.) **1.** பெயரிடுதல்; to charister, to name. **2.** குறிப்புப்பெயரிடுதல்; to nickname.

[பேர் + வை 'வை' (து.வி.)]

பேர்வைத்தல்[2] *pērvaittal,* பெ. (n.) **1.** பெயரிடும் சடங்கு; ceremony of namingachild. **2.** குறிப்புப் பெயரிடுகை; nicknaming.

[பேர் + வைத்தல்]

பேரகத்தி *pēragatti,* பெ. (n.) சிறியமரவகை; (யாழ்.அக.) west indian sesban.

[பெரு→ பேர் + அகத்தி]

பேரகத்தியம் *pēr-agattiyam,* பெ. (n.) அகத்தியமுனிவர் இயற்றியதாகக் கூறப் படுவதும் இறந்துபட்டதுமான இலக்கண நூல்; a grammar, attributed to Agastya, not now extant.

[பெரு→ பேர் + அகத்தியம்]

பேரகலம் *pērar-akalam,* பெ. (n.) பெருமகலம்; broadness.

[பெரு→ பேர் + அகலம்]

பேரச்சம் *pēr-atcham,* பெ. (n.) பெருந்திகில்; extreme fear.

[பெரு→ பேர் + அச்சம்]

பேரசம் *pērašam,* பெ. (n.) அகன்ற சதுப்பு நிலம்; large swap.

[பெரு→ பேர் + அசம். அயம்–அசம்]

பேரட்டிக்கீரை *pēratti-k-kcrai,* பெ. (n.) பெரும்பிண்ணாக்குக் கீரை(m.m.); see perum-piṇṇākku-k-kirai, jews-mallow.

[புரட்டிக்கீரை–பேரட்டிக்கீரை.]

பேரடம் *pēradam,* பெ. (n.) வெண்ணொச்சி (மூ.அ.); five-leaved chaste tree.

பேரடி–த்தல் *pēr-adi,* செ.குன்றாவி. (v.t.) பேரைப்பதிவுப் புத்தகத்தினின்று நீக்குதல்; to remove a name from a register.

[பேர் + அடி –,]

பேரடிபடு[1]–தல் *pēr-adipadu,* செ.குன்றாவி. (v.t.) எங்கும் பேசப்படுதல்; to talk about, famous. கு"ஊழல் முறையீட்டில் அமைச்சர் பேர் அடிபடுகிறது"

[பேர் + அடிபடு]

பேரடிபடுதல்[2] *pēr-adipadudal,* பெ. (n.) எங்கும் பேசப்படுகை; being talked about; being famous.

[பேர் + அடிபடுதல்]

பேரண்டம்[1] *pēr-aṇḍam,* பெ. (n.) 1. வியனுலகு (சங்.அக.); universe. 2. மண்டையோடு (சங்.அக.); skill. 3. மூளை (சங்.அக.); brain.

[பெரு→ பேர் +அண்டம்]

(skt. aṇḍa → *த. அண்டம்)*

பேரண்டம்[2] *pēr-aṇḍam,* பெ. (n.) நரி (யாழ்.அக.); fox



பேரணி[1] *pēr-aṇi,* பெ. (n.) 1. படையின் பின்னணி (பிங்.); the rear of an army. *'பேரணியி னின்ற பெருங்களிறுகள்'* (சீவக.277, உரை.) 2. நடுப்படை; maind body or centre of an army. 3. *பேரணிகலம்* (பிங்.); பார்க்க 4. கிம்புரி; ornamental ring put on the tusks of elephants and other animals. *'பேரணி யிலங்கொளி மருப்பிற் களிறும்'* (பரிபா.13,35.)

[பல்→ பரு→ பெரு பெரு→ பேர்+அணி]

பேரணி[2] *pēr-aṇi,* பெ. (n.) ஒருங்கு திரளுதல்; assembly of an organisation.

[பல் + பரு + பெரு + பேர் + அணி]

பேரணிகலம் *pēr-aṇi-kalam,* பெ. (n.) பெரும்பதக்கம்; a big ornament worn on the chest. *'பேரணிகல மணிந்த முலையாரும்'* (சீவக.2340,உரை.)

[பெரு→ பேர் + அணிகலம்]

பேரணை *pēr-aṇai,* பெ. (n.) 1. பெரிய அணைக்கட்டு; big dam. 2. பெருந்தடை; great obstacle. *'சீர்த்த பேரணை தன்னையும் சிந்தின'* (கம்பரா.முதற்போர்.13.)

[பெரு → பேர் + அணை]

பேரத்தி *pēr-atti,* பெ. (n.) நரிமுள்ளிச்செடி; indian night shade.

பேரதிர்ச்சி *pērathircci,* பெ. (n.) பெருந்திகில்; great shock

[பெரு→பேர் + அதிர்ச்சி]

பேரநீதி *pēra-nithi,* பெ. (n.) பெருஅநீதி; great injustice.

[பெரு→பேர் + skt a-niti. *த.அநீதி]*

பேரப்பன் *pēr-appan,* பெ. (n.) தந்தையின் தமையன் (s.i.i.ii,94,20.); father's elder brother.

[பேர் + அப்பன்]

பேரப்பிள்ளை *pēra-p-piḷḷai,* பெ. (n.) *பேரன்,* பார்க்க; see *pēran.*

[பேரன் + பிள்ளை]

பேரம்[1] *pēram,* பெ. (n.) **1.** விற்பனை sale, trade. **2.** ஒப்பந்தத்திற்கு முன்பேசும் விலைப்பேச்சு; bargaining higgling and haggling. 'பேரஞ் சொல்லாமற் சரியாக சொல்லு **3.** அருவிலை; high value.

skt. bēra. தெ. பேரமு; க.பேர

[பெயரம்–பேரம்]

பேரம்[2] *pēram,* பெ. (n.) **1.** வடிவம் (நன். 273,மயிலை.); form, shape. **2.** உடம்பு; body. **3.** (விக்கிரகம்) திருவுருவச்சிலை; idol. *'உத்சவ பேரம்'*

[பேர்→பேரம்]

பேரம்பலம் *pēr-ambalam,* பெ. (n.) தில்லைத் திருக்கோயிலிலுள்ள பெருமன்றம்; sacred hall in chidambaram. *'சேயவன் திருப்பேரம்பலம்'* (பெரியபு. பாயி.8.)

[பெரு→ பேர் + அம்பலம்]

பேரம்பேசுதல் *pēram-pēšudal,* பெ. (n.) *பேரம்[1]* பார்க்க, see *pēram[1]*

[பேரம் + பேசுதல்]

பேரமட்டி *pēramaaṭṭi,* பெ. (n.) *பேராமுட்டி.* பார்க்க; see *pērāmuṭṭi* (யாழ்.அக.)

[பேராமுட்டி,–பேரமட்டி]

பேரமுட்டி *pēramutti,* பெ. (n.) *பேராமுட்டி* பார்க்க; see *pērāmuṭṭi* (யாழ்.அக.)

[பேராமுட்டி – பேரமுட்டி]

பேரரசன் *pēr-arašan,* பெ. (n.) பேரரசை ஆளும் மன்னன்; மாமன்னன்; emperor.

[பேர்+ அரசன்]

பேரரசு *pēr-arašu,* பெ. (n.) பல நாடுகளைக் கொண்ட பரந்த நிலப்பரப்பைத் தன் நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டு ஆட்சி நடத்தும் அரசு; empire.

[பேர்+ அரசு]

பேரரத்தை *pēr-arattai,* பெ. (n.) மருந்துச் செடிவகை,(பதார்த்த.984.) big galangal.

[பெரு → பேர்– அரத்தை]

பேரவை *per-avai,* பெ. (n.) 1. சட்டமன்றம்; legislature assembly. 2. குறிப்பிட்ட ஒரு தரப்பினர் தங்களுக்காக ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பு: forum, union. மாணவர் பேரவை, தொழிற்சங்கம் பேரவை.

பேரவைத்தலைவர் *pēr-avai-t-talaivar,* பெ. (n.) மக்களவை, மாநிலங்களவை, சட்டமன்றம் ஆகியவற்றில் அவை நடவடிக்கைகளை நடுவர் போல் இருந்து நடத்திடும் பொறுப்புவகிப்பவர்; speake of the parliament or the state legislative assembly.

[பேரவை + தலைவர்]

பேருவி *pēr-aruvi,* பெ. (n.) பெரிய அருவி; (சூடா.) huge waterfall

[பெரு→ பேர் + அருவி]

பேரருளாளன் *pēr-aruḷ-āḷaṉ,* பெ. (n.) 1. மிக்க இரக்கமுள்ளவன்; most gracious one, as god '*பேரருளாளர் போலும்*' (தேவா.439,1.) 2. சின்ன காஞ்சீபுரத்திற் கோயில் கொண்டுள்ள திருமால் (குருபரம்.170.); visṇu, as worshipped at little conjeevaram.

[பெரு→ பேர் + அருளாளன்]

பேரருளுடைமை *pēr-aruḷ-uḍaimai,* பெ. (n.) சிவனெண் குணத்துள் ஒன்றாகிய மிகுந்த அருளையுடைமை(குறள்,9,உரை.) being of boundless grace, one of šivaṉ-eṇ-guṇam, q.v.

[பெரு→ பேர் + அருளுடைமை]

பேரலை *pēr-alai,* பெ. (n.) கடலின் தோன்றும் பெரிய அலை; ground-swell.

[பெரு→ பேர் + அலை]

பேரவ்வை *pēr-avvai,* பெ. (n.) பெரியதாய்(குல்); elder maternal aunt.

[பெரு→ பேர் + அவ்வை]

பேரவரை *pēr-avarai,* பெ. (n.) அவரை வகை(வின்); a large species of Egyption bean

[பெரு→ பேர்+ அவரை]

பேரவியல் *pēr-aviyal,* பெ. (n.) பெரும்பொங்கல்:(யாழ்ப்.) cooking rice on a large scale, as for a company of religious mendicants.

[பெரு→ பேர் + அவியல்]

பேரழகு *pēralaku,* பெ. (n.) பொலிவான அழகு; good looking.

[பெரு→ பேர் + அழகு]

பேரழை—த்தல் *pēr-aḻai,* செ.கு.வி. (v.i.) வருகைக் கணக்கெடுத்தல்(புதுவை); to take the roll-call or attendance.

[பேர் + அழை—,]

பேரளவு *pēr-aḷavu,* பெ. (n.) 1. பேரறிவு; great wisdom. '*பேரளவுடைய அர்ஜுனன்*' (ஈடு,2,8,6.) 2. பெருஞ்சிறப்பு; great respect. '*ஆர்புனை வேந்தற்கப் பேரளவியற்றி*' (மணிமே.5,116.) 3. பெருமளவு; large quantity.

[பெரு→ பேர் + அளவு]

பேறம் *pēraram,* பெ. (n.) பேய்க்கொடை பார்க்க; see *peykkodai.*

[பெரு→ பேர் + அறம்]

பேரறிவாளன் *pēr-arivāḷan,* பெ. (n.) உயர்ந்த அறிவுடையவன்;person of mature under standing, wise man. '*உலகவாம் பேரறி வாளன் திரு*' (குறள்,215.)

[பெரு→பேர் + அறிவாளன்]

பேரறநூல் *pērara-nul,* பெ. (n.) திருமறைநூல்; moral instruction look. திருக்குறள் இனம், மொழிபாகுபாடின்றி அனைவருக்கும் பொதுவான பேரற நூலாகும்.

[பெரு→பேர் + அறநூல்]

பேரறநெறி *perara-neeri,* பெ. (n.) நயன்மைநெறி; moralethics.திருக்குறள் அனைத்து மொழியினர்க்கும் நயன்மை கூறும் அற நூலாகும்.

[பேரறம் + நெறி]

பேரறிவு[1] *pēr-arivu,* பெ. (n.) தீமை செய்தார்க்கும் தீமை செய்யாதிருக்கும் நல்லறிவு; good-sense. **2.** அறிவினுள் எல்லாந் தலையென்பதீயசெறுவார்க்கும் செய்யாவிடல்.(கு.203).

[பெரு→பேர்+ அறிவு]

பேரறிவு[2] *pēr-arivu,* பெ. (n.) **1.** பகுத்தறிவு; sense of discrimnation. **2.** நூலறிவு; divine knowledge; spiritual knowledge **3.** மூதறிவு; uncommon mental powers, high mental attainments; great wisdom. '*தம்பேரறிவு தோன்ற நல்லந்துவனார் செய்யுட்செய்தார்*' (கலித்.142,உரை.)

[பெரு→பேர் + அறிவு]

பேரறிவுத்திறம் *pērarivu-t-tiram,* பெ. (n.) பகுத்தறிவுத்திறம்; knowledge of common sense.

[பேரறிவு + திறம்]

பேரறுகு *pēr-arugu,* பெ. (n.) அறுகுவகை(வின்); elephant bermuda grass.

[பெரு→பேர் + அறுகு]

பேரன் *pēran,* பெ. (n.) **1.** மகன் அல்லது மகளின் மகன்; grandson, as bearing the grandfather's name. **2.** பாட்டன்; grandfather '*உங்கள் பேரனார்தந் தேசுடை யெழுத்தே யாகில்*' (பெரியபு.தடுத்தாட்.60.)

[பெயரன்–பேரன்]

பேராசிரியர்[1] *pēr-āśiriyar,* பெ. (n.) தொல்காப்பியத்திற்கும் திருக்கோவையார்க்கும் உரையிட்ட ஆசிரியர்; a commentator of Tolkāppiyam and Tiru-k-kōvaiyār.

[பெரு→பேர் + ஆசிரியர்]

பேராசிரியர்[2] *pēr-āśiriyar,* பெ. (n.) பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் பணியாற்றும் உயர்நிலைப் பதிவுபெற்ற ஆசிரியர்; professor. தேவநேயப்பாவாணர் சேலம் நகராண்மைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். (உ.வ.)

[பெரு(மை)→பேர் + ஆசிரியர்]

பேராசிரியை *per-āsiriyai,* பெ. (n.) பெண் பேராசிரியர்; women professor.

பேராசிரியன் ஆ.பா
பேராசிரியை பெ.பா.

பேராசை *pēr-ācai,* பெ. (n.) 1. பெருவிருப்பம்; intense desire. '*பேராசை வாரியனை*' (திருவாச.8,2.) 2. மிக்க பொருளாசை; avarice, '*பேராசைக் காரனைப் பெரும்புளுகன் வெல்லுவான்*'

[பெரு → பேர் + ஆசை]

பேராசைக்காரன் *pērašai-k-kāraṉ,* பெ. (n.) பொருளாசை கொண்டவன்; avarice perspm.

"பேராசைக் காரனடா பார்ப்பான்"

[பேராசை + காரன்]

'காரன்' வினைமுதணர்த்தும் ஆண்பாலீறு

பேராட்டி *pēr-aṭṭi,* பெ. (n.) பெருமையுடையவள்; lady of ominence. '*பேராட்டி சீராட்டும் பிள்ளையார்*' (கோயிற்பு.பாயி.7.)

[பெரு→ பேர் + ஆட்டி]

'ஆட்டி' பெ. பா. ஈறு.

பேராண்டி *pēr-āṇḍi,* பெ. (n.) பேரன்; grandson

[பேர் → பேரன் → பேரான் → பேராண்டி]

பேராண்டு *pēr-āṇḍu,* பெ. (n.) அறுபது ஆண்டு (வருடங்) கொண்ட காலம் (வின்); jupiter cycle of 60 years.

[பெரு – பேர், பேர் + ஆண்டு]
'யாண்டு → ஆண்டு

பேராண்முல்லை *pēr-āṇ-mullai,* பெ (n.) சினமிக்க மன்னன் போர்க்களத்தைக் கைக் கொண்டதைக் கூறும் புறத்துறை;(பு.வெ.8,26.) (purap) theme describing a wrathful king becomming master of the situation in a battle- field.

[பெரு →பேர்+ ஆண் + முல்லை]

பேராண்மை[1] *pēr-āṇmai,* பெ. (n.) வினைத்திறம்(வல்லமை); manly strenth.

[பெரு → பேர் + ஆண்மை]

பேராண்மை[2] *pēr-āṇmai,* பெ. (n.) 1. மிக்க வீரம்; great valour or prowess; heroism. 'போரண்மை என்ப தறுகண்' (குறள் 773) 2. மானம்; honour. "பேராண்மை வேண்டுபவர்" (குறள்,962) 3. அரிய வீரச் செயல்(திவா); heroic exploit, feat of arms.

[பெரு→பேர்+ஆண்மை]

பேராண்வஞ்சி *pēr-āṇ-vañji,* பெ. (n.) பகைவர் பொரும் செருவைத்தொலைத்த தலைமை யையுடைய வீரர்க்குப் பெரிதுங் கொடுத்தலைக் கூறும் புறத்துறை;(பு.வெ.3,9.) theme describing gifts made to soldiers who put the enemy's army to rout.

[பெரு→பேர் + ஆண் + வஞ்சி]

பேராத்தி *pēr-ātti,* பெ. (n.) தும்பை[1] பார்க்க;(சங்.அக) see *tumbai*[1] white dead nettlce.

[பேர்+ஆத்தி.]

பேராந்தை *pēr-āndai,* பெ. (n.) 1. நிலாமுகிப்புள் (பிங்); greek partridge. 2. ஆந்தைவகை; rock-horned owl. '*மலையின்கட் பேராந்தை யோடு கூடி யொலிக்கும்*' (புறநா.170,உரை)

[பெரு →பேர்+ஆந்தை]

பேராப்பணம் *pērāppaṉam,* பெ. (n.) 1. கணக்கின் விடை; solution of a mathematical problem 2. தீர்ந்த முடிவு; net result 3. நிகர ஊதியம் (லாபம்); net profit

[பெயர் →பேர்+ஆ+பணம்] 'ஆ' எதிர்மறை இடைநிலை

பேராபத்து *pērāpattu,* பெ. (n.) பெருமிடர்; great misfortune.

[பெரும் + skt.a-pad. த.ஆபத்து]

பேராமட்டி *pērā-maṭṭi,* பெ. (n.) *பேராமுட்டி* பார்க்க;(யாழ்.அக) see *pērāmuṭṭi*

[பேராமுட்டி – பேராமட்டி]

பேராமணக்கு *pēr-āmaṇakku,* பெ. (n.) *ஆமணக்கு*;(மூ.அ) castor plant. பார்க்க; see *āmaṇakku.*

[பெரு–பேர்+ஆமணக்கு]

பேராமல்லி *pēr-ā-malli,* பெ. (n.) **1.** *பேராமல்லிகை*(வின்) பார்க்க; see *pērāmalligai* **2.** கொத்த மல்லிவகை;(மூ.அ) a kind of coriander.

[பெரு–பேர்+ஆ+மல்லி]

பேராமல்லிகை *pēr-ā-malligai,* பெ. (n.) **1.**பெருமல்லிகை; single flowered a rabian jasmine.

[பெரு → பேர்+ஆ + மல்லிகை]

பேராமுட்டி *pēr-ā-muṭṭi,* பெ. (n.) **1.** செடிவகை (பதார்த்த.469) ; pink-tinged white sticky mallow

[பெருமை + ஆ + முட்டி]

பேராயம் *pēr-āyam,* பெ. (n.) *எண்பேராயம்* (திவா)பார்க்க; see *eṇpērāyam,* the eight groups of retinues.

[பெரு →பேர்+ஆயம்]

பேராயிரம் *pēr-āyiram,* பெ. (n.) இறைவனுக்குள்ள ஆயிரம் பெயர்கள்(தேவா.896.5); the thousand names of any particular deity.

[பேர் + ஆயிரம்]

பேரார்வம் *pēr-arvam,* பெ. (n.) மிகுவிருப்பம்; burning desire.

[பெரு → பேர் + ஆர்வம்]

பேராரம் *pēr-āram,* பெ. (n.) முத்தாலான அணிகலவகை; a large necklace of pearls. *'நிலவுவீசு பேரார நிபுடமாலை'* (தக்கயாகப்.106.)

[பெருபேர் + ஆரம்]

பேராரால் *pēr-ārāl,* பெ. (n.) இரண்டடிநீளம் வளர்வதும் பழுப்பு நிறமுள்ளதுமான மீன்வகை (பதார்த்த.919); thorny backed eel, rich brown, attaining more than 2ft.in.length

[பெரு →பேர் + ஆரல்→ஆரால்]



பேராலவட்டம் *pēr-ālavaṭṭam,* பெ. (n.) பெரியவிசிறிவகை; a large, ornamental, circular fan. (பிங்.) (சீவக.1906, உரை)

[பேர்+ஆலவட்டம்]

பேராவல் *pēraval,* பெ. (n.) வேணவா; earnest desire.

[பெரும்+ஆவல்]

பேராளன் *pēr-āḷaṉ,* பெ. (n.) 1. பெருமை யுடையவன்; renowned personage. *'உம்பராளும் பேராளன்'* (திவ்.பெரியதி,7,4,4.) 2. பல பெயர்களைப் பெற்றவன்; one who bears several names. "பேராளன் பேரோதும் பெரியோரை" (திவ். திருநெடுந்.20) 3. 5ஆவது விண்மீன் (பிங்); the fifth makṣatra 4. 4ஆவது விண்மீன்;(சூடா) nakṣatra

[பேர்+ஆளன்]

பேராளி *pēr-āḷi,* பெ. (n.) 1. ஒருவன் பெயரைக் கொண்டவன்–வள்; namesake 2. புகழ் வாய்ந்தவன்–வள்(யாழ்.அக); famous person.

[பேர்+ஆளி]

'இ' வினைமுதலீறு

பேராற்றல் *pērāṟ-aṟtal,* பெ. (n.) போரிடும் ஆற்றல்; superior skill great power.

[பெருமை + ஆற்றல் → பேராற்றல்]

பேராறு *pēr-āṟu,* பெ. (n.) 1. மலையிற் பிறந்து கடலில் நேரே கலக்கும் நீரோட்டம்; river rising in a mountain and emptying into a sea. 2. மேல்கடலிற் கலக்கும் ஓர் ஆறு; a river flowing west-wards from the western ghats. *'அரசன் பேராற்றங் கரையினின்று போந்து'* (சிலப்.25, 180, அரும்.) 3. கிருட்டிணா நதி; the river krishā "நிறைந்து வரும் பேராறு மிழிந்து" (கலிங்.355)

[பெரு→பேர்+ ஆறு]

பேரானந்தம் *pēr-āṉandam,* பெ. (n.) மேலான மகிழ்ச்சி (பரமானந்தம்); supreme bliss. *'பற்றிய பேரானந்தம் பாடுதுங் காணம்மானாய்'* (திருவாச.8,28)

[பெருமை + skt.ā-nanda. த.ஆனந்தம்]

பேரி[1] *pēri,* பெ. (n.) 1.முரசு; kettle-drum. *'சங்குபேரி முழங்கிய தானையே'* (கம்பரா.எழுச்.28) 2. பறை(வின்);drum

[பெரு→பேர்→ பேரி]



பேரிகை *pērigai,* பெ (n.) *பேரி*[1] (சிலப்.3.27.உரை) பார்க்க; see *peri*[1]

skt bhērikā

[பேரி + பேரிகை]

'இகை' சொல்லாக்க ஈறு

பேரிசு *pērigai,* பெ (n.) 1. கணக்கின் மொத்தத்தொகை; sum or aggregate of an account. 2. ஊரார் கட்டும் மொத்தவரி; total amount of a revenue assessment.

[பெரு→பேரி → பேரிசு]

பேரிசை *pēr-isai,* பெ. (n.) 1. பெரும்புகழ்; great renown. *'பேரிசை நன்னன்'*

(மதுரைக்.618) 2. கடைச்சங்கத்து வழங்கிய ஓர் இசை நூல் (இறை.5 உரை); a treatise on music, of the last saṇgam, not now extant.

[பெரு → பேர்+ இசை]

பேரிடர் *pēritar,* பெ. (n.) பெருந்துன்பம்; great trouble.

[பெரு → பேர் + இடர்]

பேரிடு—தல் *pēir-iḍu-,* செ.கு.வி. (v.i.) பெயரிடு—தல் பார்க்க; see peyariḍu '*மானிட சாதியின் பேரிடு மாதர்காள்*'. (திவ்.பெரியாழ்.4,6,2)

[பெயிரிடு – தல் → பேரிடு – தல்]

பேரியம் *pēriyam-,* பெ. (n.) *பேரி*¹ பார்க்க; see *pēri* '*பேரியங்கண் முருடாகுளி*'. (கம்பரா. இராவ.தானை.12.)

[பெரு → பேர் + இயம்]

பேரியல் *pēr-iyal,* பெ. (n.) பெருந்தன்மை; noble character. '*தில்லைப் பேரியலூரார்*'. (திருக்கோ.311.)

[பெரு → பேர் + இயல்]

பேரியல்பு *pēr-iyalpu,* பெ. (n.) கெழுதகைமை; good manner.

[பெரு → பேர் + இயல்பு]

பேரிரக்கம் *pēr-irakkam,* பெ. (n.) கழிவிரக்கம்; repentance.

[பெரு → பேர் + இரக்கம்]

பேரியற் காஞ்சி *pēr-iyaṟ-kāñji,* பெ. (n.) கேட்டினியல்புகளைப் புலவர் எடுத்துக் கூறுந்துறைவகை (திவா); theme in which a poet describes the nature of evil

[பெரு→பேர் + இ+காஞ்சி]

பேரியாழ் *pēriyāl,* பெ. (n.) 1. நால்வகை யாழ்களுள் இருபத்தொரு நரம்புள்ளது (சிலப்.3,26.உரை); a lute of ṟā strings, one of four yāḷ.

[பெரு→பேர்+யாழ்]

பேரியாறு *pēr-i-yāṟu,* பெ. (n.) 1. *பேராறு*¹,2 பார்க்க; see *pērwnāṟu*¹,2 2. கங்கைப் பேரியாற்று (சிலப்.28,121) பெருமலை விலங்கிய பேரியாற்றடைகரை (சிலப்.25,22).

[பெரு→பேர்+யாறு]

பேரிரவல் *pēriraval,* பெ. (n.) மாற்றுப் பெயரில் இலங்குதல்; benami transaction (loc)

[பெயர்→பேர் + இரவல்]

பேரிரைச்சல் *pērai-chal,* பெ. (n.) பெருங்கூச்சல்; uproar.

[பெரு→ பேர்+ இரைச்சல்]

பேரிருக்கை *pērirukkai,* பெ. (n.) *தோணா முகம்*(வின்) பார்க்க; see *tōṇāmugam,*town surrounded by a moat

[பெரு – பேர் + இருக்கை]

பேரிரைப்பை *pēriraippai,* பெ. (n.) அசை போடும் விலங்குகளின் மேல் வயிறு(கால்.வி.); first stomach of ruminants, rumen

[பெரு → பேர் + இரைப்பை]

பேரிரையான் *pēr-iraiyāṉ,* பெ. (n.) மிகுதியாக உண்போன்; glutton. *'நிற்குங் கழிபே ரிரையான்க ணோய்'* (குறள்.946)

[பெரு →பேர் + இரையான்]

பேரில் *pēri,* இடை (prep.) **1.** மீது; on, about. அவன் பேரில் குற்றமில்லை. **2.** பிறகு; after. அவன் சொன்னதன்பேரில் வந்தான்

[பேர் → பேரில் 'இல்' (ஐந்தாம்வே.2. 62.2)]

பேரிலக்கம் *pērilakkam,* பெ. (n.) பின்ன மல்லாத முழுவெண்; integer,whole number.

[பெரு→பேர் + இலக்கம்]

பேரிழப்பு *pērilappu,* பெ. (n.) மிகுந்த இழப்பு; great loss better loose.

[பெரும் → பேர்+இழப்பு → பேரிழப்பு]

பேரிழவு *pērilavu,* பெ. (n.) **1.** மிகுந்த இழப்பு; great calamity. **2.** தொல்லை (கொ.வ.); worry, bother.

[பெரு→பேர் + இழவு]

பேரிளம் பெண் *pērilam,peṇ* பெ. (n.) **1.** எழுவகைப் பருவ மகளிருள் முப்பத்திரண்டு அகவைக்கு மேல் நாற்பது அகவை வரையுள்ள பெண் (பிங்); women between the ages of 32 and 40. **2.** முப்பதுக்கு மேல் ஐம்பத்தைந்து வரை அகவையுள்ள பெண் (கொக்கோ.); women between the ages of 30 and 55.

[பெரு → பேர் + இளம் + பெண்]

பேரிளமை *pērilamai,* பெ. (n.) **1.** இளமை தொடக்கம்; early period of youthfulness. "அணைந்த பேரிளமையாலே தனை நனிமதித்து" (திருவாலவா.13.15) **2.** இளமை–முதுமை இடைப்பட்ட அகவை;middle age. "நகரத்தோழும் பேரிளமையோழும்" (s.I.I.i.65)

[பெரு→பேர் + இளமை]

பேரின்பம் *pēriṉbam,* பெ. (n.) **1.** மேலான இன்பம் (பிங்); supreme bliess "அளவில் பேரின்பத் தடியரோ டிருந்தமை" (திவ். திருவாய். 10.3.11) **2.** வீட்டின்பம்; heavenly bliss, salvation. "பேரின்பத் தோங்கும்..... நாதப்பறை" (திருவாச.198).

[பெரு→பேர்+இன்பம்]

பேரின்ப வாழ்வு *pēriṉba vālvu,* பெ. (n.) வீட்டுலக வாழ்வு; blissful life. "நம்முடனாம் பேரின்ப வாழ்வு சேர்வார்" (கஞ்சிப்பு.தழுவ.65)

[பேரின்பம் + வாழ்வு]

பேரீகம் *pērigam,* பெ (n.) **1.** வட்டத்திருப்பி (மலை); Indian pareira **2.** பிரண்டை(சங்.அக.) square. stalked vine.

பேரீச்சு *pēriccu,* பெ. (n.) *பேரீந்து*(பதார்த்த.525) பார்க்க; see *pērindu*

[பேரீந்து – பேரீச்சு]

பேரீஞ்சு *pēriñju,* பெ. (n.) *பேரீந்து* பார்க்க; see *pērindu*

[பேரீந்து – பேரீஞ்சு]

பேரீந்து *pērindu,* பெ. (n.) ஈந்துவகை(சூடா.); date.palm

[பெரு→பேர் + ஈந்து]

பேரு[1] *pēru,* பெ. (n.) சிற்றூரில் நீர்பாய்ச்சு வோனுக்குக் கொடுக்கும் வரி(R.T); a fee paid to a person authorised to distribute water for irrigation

[பெரு - பேரு]

பேரு[2] *pēru,* பெ. (n.) 1. கடல்; sea, ocean 2. ஞாயிறு; sun 3. தீ; fire 4. பொன்மலை (யாழ்.அக.); Mt.Mēru.

skt. pēru

[பெரு - பேரு]

பேருண்டி *pēr-uṇḍi,* பெ. (n.) 1. மிகுதியாயுட் கொள்ளும் உணவு (பிங்); gluttony. 2. ஒரு நாளிற் கொள்ளும்இன்றியமையா உணவு; principal meal.

[பெரு→ பேர் + உண்டி]

பேருண்டிக்கலம் *pērunti-k-kalam,* பெ. (n.) பெருஞ்சமையல் ஏனம்; a big cooking vessel.

[பேருண்டி +கலம்]

பேருண்டிக்காரன் *pērunti-k-karan,* பெ. (n.) *பேருண்டியாளன்* பார்க்க; see *peruntiyalan.*

[பேருண்டி +காரன்]

பேருண்டியாளன் *pēr-uṇḍi-y-āḷaṉ,* பெ. (n.) மிகவுண்போன்;glutton.

[பேருண்டி + ஆளன்]

பேருண்டிவேட்கை *pērunti-vetkai,* பெ. (n.) பெருந்தீனி வேட்கை; voracity of appentite.

[பேருண்டி + வேட்கை]

பேருதவி *pērudavi,* பெ. (n.) பெருநன்றி; help in dire distress, great farour. "பேருதவிக் கைமாறா" (திவ்.திருவாய்.8,1,10)

[பெரு → பேர் + உதவி]

பேருபகாரம் *pērubakāram,* பெ. (n.) *பேருதவி* பார்க்க; see *pēr-udavi.*

[பெரு → பேர் + skṭ. upa- kāra. த. உபகாரம்]

பேருவகை *pēruvagai,* பெ. (n.) பெருமகிழ்ச்சி; great joy.

[பெரும் → பேர் + உவகை]

பேருமரி *pēr-umari,* பெ. (n.) வழலையும்(சோப்பும்) கண்ணாடியுஞ் செய்ய உதவும் உமரிவகை;(யாழ்.அக.) a plant that yiedls a coarse kind of barilla for soap and glass.

[பெரு → பேர் + உமரி]

பேருயிர் *pēr-uyir,* பெ. (n.) 1. கடவுள்; god, as Supreme Being. '*உண்டுமிழ்ந்தளந்த பேருயிரேயோ*" (திவ்.திருவாய்8.1.5) 2. பெருங்காற்று;(தைலவ.தைல) boisterous wind

[பெரு → பேர் + உயிர்]

பேருரியோன் *pēruuriyōṉ,* பெ. (n.) தோல்வினைஞன்; cobbeer (தைலவ.தைல)

[பெரு→பேர் +உரி→உரியோன்]

பேருறக்கம் *pēr-urakkam,* பெ (n.) 1. பெருந்தூக்கம்; sound sleep. *'ஈதென்ன பேருறக்கம்'* (திவ்.திருப்பா.12) 2. இறப்பு; death. "உறங்கினார் பேருறக்கங் கொண்டார்" (அருட்பா.1.நெஞ்சறி. 477).

[பேர் +உறக்கம்]

பேரூர் *pēr-ūr,* பெ. (n.) 1. நகரம்; city *'காவலன் பேரூர் கனையெரி யூட்டிய'* (மணிமே.2,54) 2. மருத நிலத்தூர் (இறை.கள.1,19); large town in an agricultural tract. 3. கோயம்புத்தூர் மாவட்டத்து அமைந்த சிவன் கோயில் a siva shrine in coimbatore District *கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர்'* (பெரியபு. ஏயர்கோன்.88)

[பெரும் + ஊர் → பேரூர்]

பேரூர்ப்புராணம் *pērūr.p.purāṇam,* பெ. (n.) கோயம்புத்தூர் மாவட்டத்திள்ள பேரூர்ச் சிறப்பைப் பற்றிக் கச்சியப்ப முனிவரியற்றிய தொன்மம்; a purāṇam in verse on pērūr in coimbatore district, by kacciyappa . muṇivar.

[பேரூர் + புராணம்]

பேருழைப்பு *pērulaippu,* பெ. (n.) பெரும்பாடு; great strain.

[பெரு→ பேர் + உழைப்பு]

பேருள்ளம் *pēr-ullam,* பெ. (n.) பெருந்தகைப்பண்பு; charity mind.

[பெரு→ பேர் + ஊக்கம்]

பேரெடு—த்தல்[1] *pēr-eḍu,* செ.கு.வி (v.i.) புகழ்பெறுதல்; to become famous.

[பெரு→பேர் +எடு—,]

பேரெடு—த்தல்[2] *pēreḍu,* செ.குன்றாவி (v.i.) பட்டியலிலிருந்து பெயரை நீக்கி விடுதல்; to strike off the roll

[பெயர் + எடு—,]

பேரெண் *pēr-ṇen,* பெ. (n.) 1. பெருந்தொகை; high number 2. நாற்சீர் ஈரடியாய் வரும் அம்போதரங்கவுறுப்பு வகை (காரிகை, செய்.10 உரை); (pros.) a variety of ambōdaraṅgam consisting of double line of four feet each.

[பெரு→ பேர்+ எண்]

பேரெல்லை *pēr-ellai,* பெ. (n.) செய்யுளின் அடிப் பெருமைக்கு அமைந்த வரையறை; maximum limit, as of the number of lines in a verse, opp. to ciṟṟellai

[பெரு→ பேர்+ எல்லை]

பேரெல்லைவெண்பா *pēr-ellai-veṇbā,* பெ. (n.) எட்டடி வெண்பா(யாழ்.அக); a veṇba having eight lines.

[பேரெல்லை + வெண்பா]

பேரெலி *pēreli,* பெ. (n.) பெரிய எலிவகை; a kind of large rat பன்மயிர்ப்பேரெலி (சீவக. 1898)

க.பேரிலி

[பெரு→ பேர் + எலி]

பேரெலுமிச்சை *pērelumiccai,* பெ. (n.) எலுமிச்சை வகை; citron lemon.

[பெரு→ பேர் + எலுமிச்சை]

பேரெள் *pērel,* பெ. (n.) எள்வகை; a species of large sesame.

[பெரு→ பேர்+ எள்]

பேரேடு *pērēḍu,* பெ. (n.) பேர்வழி இனக்கணக்கு; ledger.

[பெரு → பேர் + ஏடு]

பேரேலம் *pērēlam,* பெ. (n.) ஏலவகை; great cardamom.

[பெரு → பேர் + ஏலம்]

பேரேற்ற பண்டாரம் *pērḍēṟṟāpanram,* பெ. (n.) தமிழ்ச் சிவனிய வேளாளருக்குத் திருவாங்கூர் அரசர் வழங்கும் பட்டப்பெயர்(நாஞ்); a title conferred by the Travancore kinds on the Tamil šaiva vēḷāḷas

[பேர் + ஏற்ற + பண்டாரம்]

பேரை *pērai,* பெ. (n.) நீர்(அக.நி); water.

பேரொலி *pēroli,* பெ. (n.) பெருங்கூச்சல்; loud noice.

[பெரு→ பேர் + ஒலி]

பேரொளி *pēroḷi,* பெ. (n.) **1.** மிகுந்த ஒளி; great light, lustre. “பேரொளியேசேர்வன” (திருவிருத்.14) **2.** ஞாயிறு; sun **3.** திங்கள்; moon. “பேரொளியைக் கூடி யரவங் கொள்ளுநாள்” (சைவச பொது.13) **4.** கடவுள் god, as the supreme light. “சித்தாந்தப் பேரொளியை” (தாயு,பொருள்.2)

[பெரு → பேர் + ஒளி]

பேல்[1](லு)—தல் *pēl-,* செ.குன்றா.வி. (v.t.) செ.கு.வி. (v.i.) *பேள் பார்க்க; see pēḷ.*

[பீர் → பீல் → பேல்]

பேல்[1] *pēl,* பெ. (n.) விரைவு; speed, swiftness.

[பீர் → பீல் → பேல்]

பேல்[2] *pēl,* பெ. (n.) கால் நரம்பில் உண்டை கட்டும் குதிரை நோய்வகை; a horse-desease characterised by tumour in the leg. (அசுவசா. 117.)

பேலகம் *pēlakam,* பெ. (n.) தெப்பம்; (யாழ்.அக.) boat.

[பேல் → பேலகம்]

பேலம் *pēlam,* பெ. (n.) **1.** விதை; testicle. **2.** சிறுபங்கு; small portion or share. **3.** போகை; going.

பேலவம் *pēlavam,* பெ. (n.) மெல்லியது; softness. (யாழ்.அக.)

பேலி *pēli,* பெ. (n.) குதிரை; *horse.* (சங்.அக.)

[பீல் → பேல் →பேலி]

பேலிகை *pēligai,* பெ. (n.) பேளிகை (சங்.அக.) பார்க்க; see pēligai.

[பேல் → பேலிகை]

பேழ் *pēḷ,* பெ. (n.) பெருமை (பிங்.); largeness, rastness

[பிள் → (பெல்) → பேழ்]
மு.தா. (பக்.216)

பேழ்கணி–த்தல் *pēḻkaṇi,* செ.கு.வி (v.i.) **1.** அஞ்சுதல்; to be afraid. "*உமையானவள் பேழ்கணிக்க..... விடமுண்டதென்னே".* (தேவா.**444,1**) **2.** கண்மூடுதல்; to close one's eyes, as in sleep. "பேழ்கணித்து.... துயில் கொண்டார்" (பெரியபு. திருநாவுக்.**275**) **3.** மருண்டு விழித்தல்; to stare in fear. '*பிறப்பானின்று பேழ் கணித்தால்*' (திருவாச.**45,7**) **4.** *பேகணி* பார்க்க; see *pēlaṇi.*

[பேழ் + கணி]

பேழ்வாய் *pēḻ-vāy,* பெ. (n.) பெரியவாய்; large mouth. '*பிறழ்பற் பேழ்வாய்.... பேய் மகள்*'. (திருமுரு.**47**.)

[பெள் → பேள் → பேழ் + வாய்]
பேழ்வாய்= அகன்றவாய். மு.தா. (பக்–261)

பேழி *pēḻi,* பெ. (n.) புடைவை; saree (அக.நி)

[பிள் → பிளி → பேழி]

பேழை[1] *pēḻai,* பெ. (n.) பெருமை; largeness. '*பேழைவார் சடை*' (தேவா.**853,6**)

[பேழ் + ஐ]

பேழை[2] *pēḻai,* பெ. (n.) **1.** பெட்டி; chest, box, coffer, ark. **2.** கூடை(வின்.); basket.

[பேழ் + பேழை]

பேழைமரம் *pēḻai-maram,* பெ. (n.) பெரிய மரவகை; carey's myrtle-bloom.

[பேழை + மரம்]

பேள்(ளு)தல் *pēḷ,* செ.கு.வி. (v.i.) மலங்கழித்தல்; to ease oneself.

[பேல் → பேள்]

பேளிகை *pēḷikai,* பெ. (n.) உண்டெஞ்சிய எச்சில் (பிங்.) ; food left on the plate ofter eating.

[பேழ் → பேள் → பேளிகை]

பேறக்காசி *pēṟakkāśi,* பெ. (n.) நாய்முள்ளி (சங்.அக.); Indian nighshade.

பேறு *pēṟu,* பெ. (n.) **1.** பெறுகை; receiving, obtaining. '*மக்கட் பேறு*' (குறள்.**61**) **2.** அடையத்தக்கது; anything worth obtaining. 'விழுப்பேற்றி னஃதொப்ப தில்' (குறள்,**162**) **3.** ஊதியம் (பிங்.) ; profit, gain. **4.** அருட்கொடை (வின்.); boon, blessing. **5.** நன்கொடை; gift, prize, reward. **6.** பயன்; advantage, benefit, result **7.** தகுதி (வின்.); worth, merit, desert.**8.** மகப்பெறுகை; childbirth. **9.** முகத்தலளவையில் ஒன்றைக் குறிக்கும் சொல்; term meaning 'one' in measuring out grains. (தைலவ.தைல.) **10.** புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் ஆகிய பதினாறு வகைப்பட்ட செல்வம் (அபி.சிந்); acquisition, of which there are 16, viz, pugaḻ, kalvi, veṟṟi, nan-makkḷ, poṉ, nel,nallūḻ, nugarcci, arrivu, aḻagu, perumai, iḷamai, tuṇivu, nōy-iṉmai, vāḻnāḷ **11.** செல்வம் (யாழ்.அக.); wealth. **12.** நல்லூழ் (யாழ்.அக.); good fortune.

13. நிலப்பயன்வகை(G.Tn.D.I.189); a kind of land tenure. 14. இரை; prey, food. *'பேற்றொடாழ் புனன் மூழ்கியெழுந்திடும்புள்"* (இரகு.திக்குவி.62.)

[பெறு → பேறு]

பேறுகாலம் *pēṟu-kālam*, பெ. (n.) மகப் பெறுங்காலம்; time of parturition or delivery.

[பேறு + காலம்]

பேன் *pēṉ*, பெ. (n.) தலை முடியிலுண்டாகும் சிற்றுயிரி; louse; pediculi. *"ஈரும் பேனுமி ருந்திறை கூடி"* (பொருந.79)

பேன்குத்து–தல் *pēṉ-kuttu*, செ.கு.வி. (v.i.) பேனை நசுக்குதல்(வின்.); to crackor crush lice

[பேன் + குத்து–தல்]

பேன்கொட்டை *pēṉ-koṭṭai*, பெ. (n.) *காக்காய் கொல்லி* பார்க்க; see *kākkāy-kolli*. cocculus - indicus.

பேனம் *pēnam*, பெ. (n.) நுரை; froth, foam, *'பேன வெண்குடையவாய'* (கம்பரா. பிரமாத்.145)

பேனவாகி *pēnavāki*, பெ. (n.) இடி; thunder. (யாழ்.அக.)

பேனன் *pēṉaṉ*, பெ. (n.) 1. கதிரவன்; sun 2. திங்கள்; moon. (யாழ்.அக.)

பை[1] *pai*, தமிழ்நெடுங்கணக்கில் 'ப்' என்ற மெய்யும் 'ஐ' என்ற உயிரும் சேர்ந்து உருவான உயிர்மெய் எழுத்து; the compound of 'ப்' and 'ஐ'

[ப் + ஐ = பை]

பை[2] *pai*, பெ. (n.) 1. பசுமை (பிங்.); greeness, freshness. 2. நிறம் (வின்.); colour 3. இளமை; youth. *'பைதீர் பாணரொடு'* (மலைபடு.40) 4. அழகு; (திவா.) beauty. *'பைவண்ண மணிக்கூடந்தனில்'* (பாரத. கிருட்டிணன்.33) 5. உடல்வலி; strength, vigour, *'நும் பைதீர் கடும் பொடு'* (பெரும் பாண்.103)

[பசு → (பசி) → (பயி) → பை → பை] மு.தா. (பக்.45)

பை[3]–த்தல் *pai*, செ.கு.வி. (v.i.) 1. பசுமை யாதல்; to become green or greenish. (சூடா.) 2. விளங்குதல்; to look bright *'பைத்த சோதி'* (தக்கயாகப்.467)

[பசு → (பசி) → (பயி) → பை → பை] மு.தா. (பக்.45)

பை[4] *pai*, பெ. (n.) 1. துணிதோல் முதலிய வற்றால் அமைந்த கொள்கலம்; sack, purse, satchel. *"தோற்பையுணின்று ......கூத்தன் புறப்பட்டக் கால்"* (நாலடி.26) 2. பாம்புப்படம்; hood of a cobra. *'அரவம்.....பைவிரித்தென'.* (மணிமே.20, 1054) 3. சிறுநீர்ப்பை முதலிய உடலுள்ளுறுப்பு; bladder, duct, pouch, as in animal bodies. 4. 500 அல்லது 1000 உருபா. இரண்டு பை அந்தப் பாவலர் பெற்றார் (உ.வ.)

பை⁵–த்தல் *pai,* பெ. (n.) 1. விரித்தல்; to spread the hood, as a bobra. '*பைத்த பாம்பின் நத்தி யேப்ப*' (பெருந.69) 2. சினங்கொள்ளல்(பிங்.); to be angry 3. பொங்குதல்; to be tumultuous, as the sea. '*பைத்தாவத் திரை சிந்திய... நித்திலம்* (சீவக.1766.) 4. மிகுதல் (அக.நி.); to be excessive. '*பைத்தபல் பீடை*' (விநாயகபு.73,36)

[பை → பை–த்தல்]

பைக்கம் *paikkam,* பெ. (n.) *பயிக்கம்(வின்.)* பார்க்க, *see payekkam.*

[பயிக்கம் → பைக்கம்]

பைக்கலம் *pai-k-kalam,* பெ. (n.) பச்சைக் குப்பி; green flask. கள்ளினிரும் பைக்கலம். (மதுரைக்.228.)

[பை + கலம்]

பைகிரி *paikiri,* பெ. (n.) நாய்; dog (சங்.அக.)

பைகோமட்டம் *paikō-mattam,* பெ. (n.) மட்டக்குதிரைச் சாதிவகை; pegu pony. '*பைகோ மட்டங்களாக*' (பிரதாப.விலா.18)

பைகோவைச்சிவப்பு *paikōvai-c-civappu,* பெ. (n.) ஒரு வகைச் சிவப்பு மணி; pegu ruby.

பைங்கண் *pai-k-kaṅ,* பெ. (n.)1. குளிர்ந்த கண்; tender eye. '*பைங்கண்ணன் புன் மயிரன்*' (இறை.1.பக்.7) 2. பசியவுடம்பு; tenderbody. '*பைங்கண் மாஅல்*' (பரிபா.3,82) 3. சினத்தால் பசிய கண்; eye fuming with anger. (பரிபா.5,27) 4. பச்சென்ற விடம்; fresh, green spot. "பைங்கட் புனத்த பைங்கூழ்." (குமர.பிர.நீதிநெறி.61)

[பை + கண்]

பைங்கிளி *pai-ṅ-kiḷi,* பெ. (n.) 1. பச்சைக்கிளி; parrot with green plumage '*பைங்கிளிப் பாய்கலை....கொற்றவை.*' (பு.வெ.1,20.) 2. அழகிய இளம் பெண்; young, beautiful lady.

[பை + கிளி]

பைங்கால் நிலம் *pai-ṅ-kāl-nilam,* பெ. (n.) நன்செய்நிலம்; wet field. "பைங்கால் நிலத்தைப் பருமரக் காடென்று" (சரவண. பணவிடு.142

[பைங்கால் + நிலம்]

பைங்கிணறு *pai-ṅ-kiṉaṟu,* பெ. (n.) குட்டை (S.I.I.vii,41); small pond.

[பை + கிணறு]

பைங்குலைத்தாரு *paiṅ-kulaitaru,* பெ. (n.) இளநீர்க்குலை; cluster of tender coconet. '*பத்திபட நிறைத்த பைங்குலைத் தாரும்* (பெருங்.2;2:176).

[பை + குலை + தாறு]



பைங்குழி *pai-n-kuli,* பெ. (n.) கருத்தங்கும் இடம்; womb. (பிங்.)

[பை + குழி]

பைங்கூதாளம் *painku-talam,* பெ. (n.) பசிய தூதுவளை; green climbing bringan. *"பைங்கூ தாளமும் வெண்பூஞ்சள்ளியும்"* (பெருங்.2:12:22)

[பை + கூதாளம்]

பைங்கூழ் *pai-ṅ-kūl,* பெ. (n.) **1.** இளம்பயிர்; tender crops. *'பைங்கூழ் களைகட் டதனொடு நேர்'* (குறள்.550) **2.** விளைநிலம்' cultivated land. *'உமிழ்வோ டிருபுலனுஞ் சோரார்'* (ஆசாரக்.33) **3.** நோய்; (சது.) disease.

[பை + கூழ்]

பைங்கூன் *paiṅkūn,* பெ. (n.) *காவட்டம் புல்;(சங்.அக.)*பார்க்க; see *kāvatham-pul citronella grass.*

[பை + கூன்]

பைங்கேழ்க்கலிங்கம் *painkel, k-kalinkam,* பெ.(n.) பசியநிற ஆடை; green cloth *"பைங்கேழ்க் கலிங்கமும் பட்டுத் தூசும்'* **(பெருங்.1:42:207).**

[பை + கேழ் + கலிங்கம்]

பைங்கேழ்த்தாமம் *painkel-t-tamam,* பெ. (n.) பசிய நிறமுடைய மாலை; green garland *'பைங்கேழ்த் தாமம் பக்கம் வளைகு'* (பெருங்.2:16:145).

[பை + கேழ் + தாமம்]

பைங்கொடி *pai-ṅ-koḍi,* பெ. (n.) **1.** பச்சிலைக் கொடிவகை; a fragrant creeper, *'பைங்கொடி நறைக்காய்'* (திருமுரு.190) **2.** பெண்; woman.

[பை + கொடி]

பைசந்தி *pai-šandi,* பெ. (n.) *பைங்குழி* பார்க்க (பிங்.); *see painkuli.*

[பை + சந்து → பைசந்தி]

பைசாரம் *paicāram,* பெ. (n.) இருப்பிட வட்டாரம்; locality. *'கச்சிப்பேட்டுக் கீழைப் பைசாரத்து'.*

[பிசாரம் → பைசாரம்]

பைசு *paicu,* பெ. (n.) பால்; milk. (சா.அக.)

[பிசு → பைசு]

பைசுனம் *paicuṇam,* பெ. (n.) **1.** கருசத்தனம்; miserliness, niggardliness. **2.** புறங்கூறுகை; backbiting. (சங்.அக.)

[பிசுனம்→ பைசுனம்]

பைஞ்சாய் *pai-ñ-cāy,* பெ. (n.) *பஞ்சாய்'* பார்க்க; *see pañjāy 'பைஞ்சாய்ப் பாவை யீன்றனென் யானே'* (ஐங்குறு.155)

[பை + சாய்]

பைஞ்சேறு *pai-ñ-cēru,* பெ. (n.) சாணம்; cowdung, as greenish. *'பைந்சேறு மெழுகிய படிவ நன்னகர்'* (பெரும்பாண்.298)

[பை + சேறு]

பைஞ்ஞிணம் *pai-ñ-ñiṇam,* பெ. (n.) புதிய இறைச்சி; fresh meat. '*பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் ளமலை*' (புறநா.177)

[பை + நிணம் → ஞிணம் → பைஞ்ஞிணம்]

பைஞ்ஞீல் *pai-ñ-ñil,* பெ. (n.) *பைஞ்ஞீலம்* (திவா) பார்க்க; *see pai-ñ-ñilam.*

[பைஞ்ஞீலம் → பைஞ்ஞீல்]

பைஞ்ஞீலம்[1] *pai-ñ-ñilam,* பெ. (n.) *பைஞ்ஞீலம்* (சூடா.) பார்க்க; see *pai-ñ-nilam*

பைஞ்ஞீலம்[2] 1. பசியநீலம்; greenish sapphire (யாழ்.அக.) 2. வாழைவகை; a bpecies of plantain.

[பை + ஞீலம்]

பைஞ்ஞீலி *pai-ñ-ñili,* பெ. (n.) பைஞ்ஞிலம் பார்க்க, see pain-nilam. (பிங்.)

[பை + ஞிலி]

பைத்தம் *paittam,* பெ. (n.) 1. கிறுக்கு; Insanity, mania, craziness. 2. மூடத்தனம்; folly.

[பித்தம் → பைத்தம்]

பைத்தல் *pait-t-tal,* பெ. (n.) 1. பசுமை; *green* 2. சினம்; *angry*

[பை → பைத்தல்]

பைதலங்கடும்பு *paitalam-katumpu,* பெ. (n.) பசி துன்பமுடைய சுற்றம்; neighbour who has hungry, "*விருந்தலும் உண்டென பைதலங்கடும்பே*" (புறநா.139).

[பை + தலம் + கடும்பு]

பைத்து *paittu,* பெ. (n.) பைது[1] பார்க்க; (திவா.) see paidu.

[பசுமைத்து → பைத்து]

பைதல் *paidal,* பெ. (n.) 1. இளையது; that which is young or small. '*பைதல் வெண்பிறை*' (தேவா.628,5) "*சிறுகிளிப் பைதலே*' (திவ்.திருவாய்,9,5,6) 2. சிறுவன்; boy. '*பைதலை யித்தனை பொழுது கொண் டிருப்பதோ*' (கம்பரா. பிணிவீட். 2) 3. துன்பம்; sorrow, affliction. '*பைத லுழப்ப தெவன்*' (குறள்.1172) 4. குளிர்; cold, chilliness. "*பனிப்படு பைதல்*" (பரிபா.11,75)

[பை→ பைதல்]

பைதா *paidā,* பெ. (n.) வண்டிச்சக்கரம்; wheel of a cart.

[வை → வையா → வைதா → பைதா]



பைதாவடை—த்தல் *paidā-v-adai,* செ.கு.வி. (v.i.) வண்டிச்சக்கரத்தை அச்சில் கோத்தல்(நாஞ்); to fit the weel in the axle of acart.

[பைதா + அடை —த்தல்]

பைதாவரைத்தல் *paida-v-araidal,* பெ. (n.) வண்டிக்கூட்டில் சக்கரம் உரசுகை; rubbing of the weel against the body of the cart.

[பைதா + அரைத்தல்]

பைதிரம் *paitiram,* பெ. (n.) நாடு; country, district. '*வளனறு பைதிரம்*' (பதிற்றுப்.19,18)

[பை → பைதிரம்]

பைது *paidu,* பெ. (n.) 1. பசுமை; greenness, freshness. '*நிலம் பைதற்ற புலங்கெடு காலையும்*' (பதிற்றுப்.23) 2. ஈரம்; moisture, dampness. '*நிலம் பைதறச் செல்கதிர் ஞாயிறு செயிர் சினஞ் சொரிதலின்*' (கலித்.20)

[பை → பைது]

பைந்தார் *pai-n-tār,* பெ. (n.) செவ்விமாலை; garland of fresh flowers, '*பனிமலர்ப் பைந்தார்*' (பு.வெ.9,1)

[பை + தார்]

பைந்தினை *pai-n-tiṉai,* பெ. (n.) 1. தினை (பிங்.) பார்க்க; *seetinai.* italian milet. 2. *கருந்தினை* (மலை.) பார்க்க, see *karu-n-tiṉai,* black Intalian millet.

[பை + தினை]

பைந்து *paindu,* பெ. (n.) பந்து; ball. '*தன்மலர் நறுபைந் தூழறிந் துருட்டா*' (பெருங்.மகத.8,64)

பைந்தொடி *pai-n-todi,* பெ. (n.) 1. பொன் வளையல்; golden bracelet. "பைந்தொடி சோரும்" (குறள்.1234) 2. பெண்; with golden bracelet. "உடம்பா டெனவறி பைந்தொடியே" (வீரசோ.யாப்.18)

[பை + தொடி]

பைந்நாகம் *pai-n-nāgam,* பெ. (n.) 1. நாகப்பாம்பு; cobra, as hooded. '*பைந்நாகப் பாய்சுருட்டிக்கொள்*' (பெருந்தொ.1875) 2. பன்னாங்கு பார்க்க, see pananku top-cover, as of a palanquin. '*திருப்பல்லக்குப் பைந்நாக முதலானவை*' (கோயிலொ.94)

[பை + நாகம்]

பைப்பய *pai-p-paya,* கு.வி.எ. (adv.) மெல்லமெல்ல; slowly, softly, gently. '*காமம் பைப்பயக் கழிய*' (சீவக.2760)

[பையப்பைய → பைப்பய]

பைய *pai-ya,* கு.வி.எ. (adv.) மெல்ல;by degrees slowly; softly, gently. "பைய நகும்" (குறள். 1098)

பைபீலம் *paipilam,* பெ. (n.) எறும்பு; ant. (யாழ்.அக.)

பைபீலிகை *paipilikai,* பெ. (n.) எறும்பு; ant. (யாழ்.அக.)

பைம்பல் *paimpal,* பெ. (n.) 1. பம்பல்[3]பார்க்க, joviality. 2. *பம்பல்*[4] பார்க்க, *luxuriance.*

[பம்பல் →பைம்பல்]

பைம்பூண் *pai-m-pūṉ,* பெ. (n.) பசும்பொன்னாற் செய்யப்பட்ட அணி; ornament made of fine gold. '*பைம்பூ ணடல் வேந்தன்*' (பு.வெ.8,1)

[பை + பூண்]

பைம்பொன் *pai-m-poṉ,* பெ. (n.) **1.** பசும்பொன்; fine gold. *'பைம்பொன் செய்ஞ்ஞரும்'* (மணிமே.28,36) **2.** மேருமலை; mt. meru. (அக.நி.)

[பை + பொன்]

பைம்மறி–த்தல் *pai-m-maṟi,* செ.குன்றாவி. (v.t.) **1.** உட்புறத்தை வெளிப் புறமாகத் திருப்புதல்; to turn a thing inside out, as a bag. *'பைம்மறியாப் பார்க்கப் படும்'* (நாலடி.42) **2.** பையின் வாயை மூடுதல்; to close the mouth of a bag. *'பைம்மறித் தியற்றியன்ன .... குரம்பை'* (தேவா.632,8)

[பை + மறி–]

பைம்மை¹ *paimmai,* பெ. (n.) பசுமை; greenness, green colour. (திவா.)

[பை + பைம்மை]

பைம்மை² *paimmai,* பெ. (n.) கன்னிமடத்தில் சேர்ந்து உறையும் பெண்துறவி;

[பை +அம்மை]

பைமறி *pai-maṟi,* பெ. (n.) பையின் உட்புறத்தை வெளிப்புறமாகத் திருப்புகை; (மணிமே.அரும்.பக்.504) turning a bag inside out;

[பை + மறி]

பைமாசு *paimāsu,* பெ. (n.) 19–ஆம் நூற்றாண்டில் ஆங்கில அரசால் இந்தியாவில் செய்யப்பட்ட நிலவளவு; land measurement made early in the nineteenth centurey by the british in india.

பைமாத்தார் *paimattar,* பெ. (n.) நிலஅளவு செய்யும் ஊழியர்; surveyor.

பைமை¹ *paimai,* பெ. (n.) *பைம்மை¹* பார்க்க, see *paimmai* (w.)

[பை + பைமை]

பைமை² *paimai,* பெ. (n.) *பைம்மை²* பார்க்க, see *paimmai2* (w.)

பைய *paiya,* கு.வி.எ. (adv.) மெல்ல; by degrees, slowly, softly. *'பையநகும்'* (குறள்.1098)

[பை + பைய]

பையம் *paiyam,* பெ. (n.) **1.** கூடை; basket. **2.** *கோரை* பார்க்க; see *kōrai,* sedge.

[வையம் → பையம்]
வையம் = வட்டமானது.

பையர *pai-y-ara,* பெ. (n.) *பையரவு* பார்க்க; see *pai-y-aravu.* *'பையர விழுங்கப்பட்ட.... மதியம்'* (சீவக.1540)

[பை +அர]

பையரவு *pai-y-aravu,* பெ. (n.) நச்சுப் பையையுடைய நாகம்; hooded, cobra. *'பையர வலகுலார்த முள்ளமும் பளிங்கும்போல'* (கம்பரா.மிதிலை.16)

[பை +அரவு]

பையல் *paiyal,* பெ. (n.) **1.** சிறுவன்; boy, little, fellow. *'அளிய னம்பைய லென்னார்'* (திவ்.திருமாலை.37) **2.** தகுதியற்றவன்;

unworthy, mean fellow. '*அப்பையல் அதுதனக்கு எளிவரவாக நினைத்திருக்குமே*' (ஈடு,3,6,ப்ர.)

[பை → பையல்] மு.தா.பக்.45

பையன் *paiyan,* பெ. (n.) **1.** *பையல்*[1] பார்க்க, see *paiyal*[1], **2.** மகன் (கொ.வ.); son.

[பை → பையல் → பையன்]

பையா-த்தல் *paiyā.,* செ.கு.வி. (v.i.) **1.** வருந்துதல்; to be distressed, to suffer pain. '*அரவம் வைகிக்கேட்டுப் பையாந்திசினே*', (நற்.144) **2.** அச்சந் தோற்றுதல்; to show signs of fear. '*பையாக்க விழிக்கத் தொடங்கினான்*' (ஈடு,5,10,3).

[பை → பையா → பையாத்தல்] மு.தா.

பையாப்பு *paiyāppu,* பெ. (n.) துன்பம்; distress, suffering. அதனால் '*பையாப்புற்ற நம்முடைய சுற்றத்தை*' (புறநா.221,உரை.) '*பையாப் போடு பசிகாட்டி*' (கலிங்.557)

[பை → பையா → பையாப்பு]

பையுள் *paiyuḷ,* பெ. (n.) **1.** நோய்; (தொல்.சொல்.341) disease. **2.** துன்பம்; (திவா.) suffering '*மெல்லிய நெஞ்சு பையுள் தூர*' (கலித்.137,8) **3.** சிறுமை (சூடா.); poverty, adversity. **4.** மயக்கம்; (திருக்கோ. 19, உரை.) confusion

[பை → பையுள்]

பையெனல் *pai-y-eṉal,* பெ. (n.) **1.** மெதுவாதற்குறிப்பு; being slow or gentle. '*கையிற் சுட்டிப் பையென வெண்ணி*' (புறநா.257) **2.** ஒளிமழுங்குதற்குறிப்பு; being dim, dull. '*பாடுநர் கடும்பும் பையென் றனவே*' (புறநா.238) **3.** வருந்தற் குறிப்பு; being distressed. "பையென்ற நெஞ்சத்தேம்" (கலித்.118)

[பை + எனல்]

பையோடதி *pai-y-ōḍadi,* பெ. (n.) பச்சைக் கொடி; (தைலவ.தைல.) green creeper.

பையோலை *pai-y-ōlai,* பெ. (n.) பச்சோலை; green ola. '*பனைப் பையோலை*' (திருவாலவா.27,68)

[பை + ஒலை]

பைரவமாத்திரை *pairava-māttirai,* பெ. (n.) ஒருவகை மருந்துக்குளிகை (பதார்த்த.1209); a medicinal pill.

பைரவரசம் *pairava-rašam,* பெ. (n.) இதளியகூட்டிச் செய்யும் மருந்துவகை; a medicine prepared with mercury.

பைரி[1] *pairi,* பெ. (n.) இராசாளி வகை; peregrine falcon.

[வைரி → பைரி]

பைவாதல் *[பைவருதம்] pai-vā-,* செ.கு.வி. (v.i.) துன்புறுத்தல்; to be distressed "பைவருங் கேளிரும் பதியும் கதறமெய் விரும்போது" கந்தரலங்.84

பொ¹ *po.* தமிழ் நெடுங்கணக்கில் '*ப்*' என்ற மெய்யெழுத்தும், '*ஒ*' என்ற உயிரெழுத்தும் சேர்ந்து உண்டான உயிர்மெய்யெழுத்து; the compound of ப் and ஒ.

[ப் + ஒ = பொ]

பொ²–த்தல் *po,* செ.குன்றாவி. (v.t.) 1. துளைத்தல்; to perforate, puncture, make a hole or opening. *"பொத்த நூற்கல்லும்" (நாலடி.376)*

பொ³–த்தல் செ.கு.வி. (V.i.) கொப்புளித்தல்; to be blistered தீப்பட்டுக் கை பொத்தது (உ.வ.).

பொக்கசம் *pokkašam,* பெ. (n.) *பொக்கிசம்* பார்க்க; see *pokkišam*

பொக்கசவைப்பு *pokkaša-vaippu,* பெ. (n.) புதைந்து கிடைக்கும் செல்வம் (திரவியம்) (யாழ்.அக); treasure trove, hidden treasure

[பொக்கசம் + வைப்பு]

பொக்கணந்தூக்கி *Pokkaṇa-n-tūkki* பெ. (n.) 1. சுரைக்கொடி வகை (சங்.அக); a kind of curai plant. 2. *முடக்கொற்றான்* (மாட்டுவா.142) பார்க்க; see *muḍakkoṟṟān.*

[பொக்கணம் + தூக்கி]



பொக்கணப்பிச்சி *pokkaṇa-p-picci,* பெ. (n.) *முடக்கொற்றான்,* ballon-vine. (மலை) பார்க்க; see *muḍakkoṟṟān.*

[பொக்கணம் + பிடிச்சி]

பொக்கணம் *pokkaṇam,* பெ. (n) 1. சோழியப்பை; beggar's bag, wallet, '*சுத்திய பொக்கணத்து.... கோலத்தினீர்*' (திருக்கோ.242) 2. பெருமருந்து; (மலை) பார்க்க; see *peru - marundu* indian birthwort.

தெ. பொக்கணமு. க.ம. பொக்கணம்

பொக்கணி *pokkaṇi,* பெ. (n.) 1. தவசம் முதலியன குத்தும் உரல்; rice mortar. 2. விரிந்த தொப்புள் (யாழ்ப்.); large,open navel. 3. நீர்மக்கலம் (யாழ்.அக); a kind of drinking vessel.



பொக்கணை *pokkaṇai,* பெ. (n.) 1. மரம் கல் முதலியவற்றிலுள்ள பொந்து; hole in a tree,stone or ground,cleft ina rock. 2. *பொக்கணி,1* பார்க்க; see *pokkaṇi*

[பொக்கணி → பொக்கணை]

பொக்கம் *pokkam,* பெ. (n.) 1. பொய்; lie,false hood. '*பொக்கம் பலயேசி*' (தேவா.326,7) 2.

வஞ்சகம்; deceit, '*பொய்யும் பொக்கமும் போக்கி*' (தேவா.1210,4) 3. குற்றம்; fault. '*பொன்னங் கழல்பரவாப் பொக்கமும் பொக்கமே*'. (தேவா.1017,1)

[பொக்கு → பொக்கம்]

பொக்கணவன் *Pokkaṇavaṉ* பெ. (n.) சிவபெருமான் (தஞ்.சர.i,79); siva.

[பொக்கணம்→ பொக்கணவன்]

பொக்கிப்பரு *Pokki-p-paru,* பெ. (n.) செவிப்புண் வகை (பரராச.i.134); a kind of boil in the ear

பொக்கம்² *Pokkam,* பெ. (n.) 1. மிகுதி; abundance. '*செறியிருட் பொக்க மெண்ணீர்*' (திருக்கோ.382) 2. உயரம்; eminence, height 3. பொலிவு; (பிங்.) bloom, splendour. '*புடைபரந்து பொக்கம்பரப்ப*' (பதினொ.ஆளு. திருவுலா) 4. அச்சம்; awe. '*நீ எனக்குப் பொக்கங்காட்ட வேண்டாம்*'

[பொங்கு → பொக்கம்]

பொக்கல் *pokkal,* பெ. (n.) பொக்கை பார்க்க. see pokkai.

[பொய் → பொக்கல்]

பொக்கல்வாய் *pokkaḷ-vāy,* பெ. (n.) *பொக்கை வாய்* பார்க்க; see *pokkaḷvay.*

பொக்களம் *pokkaḷam,* பெ. (n.) *பொக்குளம்* பார்க்க; see *pokkuḷam.*

பொக்கன் *pokkaṉ,* பெ. (n.) தோற்றப் பொலிவுள்ளவன்; man of fine appearance, handsome man. '*துடியிடையாள் துணை முலைக்குச் சேர்வதாகும் பொக்கான்காண்*' (தேவா,619,2)

[பொக்கம் → பொக்கன்]

பொக்கிப்பயல் *pokki-p-payal,* பெ. (n.) தறிதலை; (உ.வ.) vagabond.

[பொறுக்கி → பொக்கிப்பயல்]

பொக்கிப்பரு 1. கருவூலம், treasury. 2. கருவூலப்பணி office of a treasurer. "பொக்கிசம் முத்திருளப்பபிள்ளை" (I.M.P.Rd.)

பொக்கிப் பிளவை *Pokki-p-piḷavai,* பெ. (n.) பிளவை வகை (பரராச.i.49); a kind of carbuncle

பொக்கிப்போ–தல் *pokki-p-pō,* செ.கு.வி. (v.i) 1. கொப்புளமுண்டாதல்; to be blistered, scalded. 2. புண்கட்டியுண்டாதல்; to breakout with boils.

[பொக்கு + போ]

பொக்கிலவணம் *pokki-lavaṇam,* பெ. (n.) 1. உப்புவகை; (யாழ்.அக) a kind of salt.

பொக்கினதுப்பி *pokkiṉatuppi,* பெ. (n.) *பெருமருந்து,* பார்க்க; see *peru-marundu.* Indian birthwort. (சங்.அக)

பொக்கு–தல் *pokku-,* செ.குன்றாவி. (v.t) கொப்புளங்கொள்ளுதல்; to be blistered' '*உடம்பெல்லாம் பொக்கிவிட்டது.*'

[பொருக்கு → பொக்கு–தல்]

பொக்கு[2] *pokku,* பெ. (n.) 1. மரப்பொந்து; (பிங்) hollow in a tree. 2. குற்றம்; (திவா) defect, fault, blemish '*பொக்குப்பை*' (திருப்பு.432). 30 உள்ளீடு முற்றாத தவசம்; imperfectly matured grain. 4. தவச நொறுங்கு; grit.

[பொல் → பொக்கு]



பொக்கு[3] *pokku,* பெ. (n.) பொருக்கு (வின்.); flake, scale.

[பொருக்கு → பொக்கு]

பொக்குப்பொக்கெனல் *pokku-p-pokkeṉal,* பெ. (n.)

1. ஒலிக்குறிப்பு; chewing noisily,as a toothless person.'*அவன் பொக்குப் பொக்குன்று சாப்பிடுகிறான்.*' (உ.வ)

2. விரைவுக்குறிப்பு (வின்.); being in haste.

"பொக்குப் பொக்கென்று வேலையைப் பார்!"

3. தீக்கொழுந்து விட்டுவிட்டெரிதற் குறிப்பு; flickering of flame.

[பொக்கு + பொக்கு + எனல்]

பொக்குமல்லி *pokkumalli,* பெ. (n.) பூச்செடி (இக்.வ); a flowering plant.

[பொக்கு +மல்லி]

பொக்குமுத்து *pokku-muttu,* பெ. (n.) சூதுமுத்து (இ.வ.); false pearl.

[பொக்கு +முத்து]

பொக்குவாய் *pokku-vay,* பெ. (n.) 1. பொக்கைவாய் பார்க்க; (யாழ்.அக) see pokkaivāy.

[பொக்கு + வாய்]

பொக்குள் *pokkuḷ,* பெ. (n.) கொப்பூழ்; navel.

க. பொக்குள்

[கொப்புள் → பொக்குள்]

பொக்குளம் *Pokkuḷam,* பெ. (n) கொப்புளம்; (சங்.அக) boil.

க.பொக்குழி ம.பொக்குலி

[கொப்புளம் → பொக்குளம்]

இடமாற்று (ஒ.நோ.) தசை > சதை

பொக்குளி-த்தல் *pokkuḷi,* செகு.வி. (v.i.) கொப்புளங்கிளம்புதல் (யாழ்ப்); to rize in blisters.

[கொப்புளி → பொக்குளி]

பொக்குளிப்பான் *pokkḷippāṉ,* பெ. (n.) அம்மைநோய் வகை; measles.

[கொப்புளிப்பான் → பொக்குளிப்பான்]

பொக்கெனல் *pokkeṉal,* பெ. (n.) விரைவுக் குறிப்பு; abruptness "பொக்கெனக் கொடுபோய்" (பாரத. வார.131)

[பொக்கு + எனல்]

பொக்கை *pokkai,* பெ. (n.) 1. சிறுதுளை; little hole, crack. 2. மூளியாயிருக்கை; having a part deformed, dented or broken 3. நோய் முதலியவற்றின் நொறுங்கு; grit. 4. குற்றம்; fault, blemish. "நீடுபொக்கையிற் பிறவியைப் பழித்து." (தேவா.242,10)

[பொ → பொக்கை]

பொக்கை² *pokkai,* பெ. (n.) மோர்க்கூழ் (இ.வ.); porridge.

[புற்கை → பொக்கை]

பொக்கைப்பல் *pokkai-p-pal,* பெ. (n) ஓட்டை யான பல்வரிசை; a row of teeth with gaps.

[பொக்கை + பல்]



பொக்கைவாய் *pokkai-vāy,* பெ. (n.) பற்போன வாய்; toothless mouth. '*பொக்கை வாயாக்கினார் சூரியனை,*' (தனிப்பா.ii,25, 56)

[பொக்கை + வாய்]

பொகடி *pogaḍi,* பெ. (n.) மகளிர் காதணி வகை; a kind of ear-ornament. '*காதிற் பொகடி யொருசோ டொழிய*' (விறலிவிடு,830) க.புகடி.

[பூடி → பொகடி]

பொகில் *pokil,* பெ. (n.) அரும்பு; bud. '*பொகில் பிடித்தலருஞ்சந்தப் பொதும்பர்*' (இரகு. குசனயோ. 63)

[போகில் + பொகில்]

பொகு–த்தல் *poguttal* செ.குன்றாவி (v.t) ஓட்டை செய்தல் (யாழ்.அக); to make a hole.

[பொ → பொகு]

பொகுட்டு *poguṭṭu,* பெ. (n.) 1. கலங்கல் நீரில் எழும் குமிழி; bubble formed in turbit water."திரை நுரைமென் பொகுட்டு... அரிவை" (பரிபா.11,27) 2. தாமரை அல்லது கோங்கின் பூவிலுள்ள கொட்டை (நன்.387, மயிலை); pericarp of the lotus or common caung flower. "அரும்பொகுட் டனைத்தே யண்ணல் கோயில்" (பரிபா.பக்.174) 3. மலை (கிங்); mountain

பொகுவல் *poguval,* பெ. (n.) பறவைவகை; a bird. '*செவிசெஞ் சேவலும் பொகுவலும்*' (புறநா.238)

[பொகு + பொகுதல்]

பொங்கடி *poṅgaḍi,* பெ. (n.) 1. யானை; elephant. '*பொங்கடி படிகயம்*' (அகநா,44) 2. அரிமா (நிகண்டு) lion;

[பொங்கு+அடி]

பொங்கத்தம் ponkattam, பெ. (n.) *பொங்கத்தம் பொங்கோ* பார்க்க; *'கலிநன்றி புகன்ற பொங்கத்தங் கொண்டு.'* (திவ்.பெரியதி.10,2,10)

பொங்கத்தம்பொங்கு pongattam-pongu, பெ. (n.) *பொங்கத்தம் பொங்கோ* பார்க்க; see pongattam pongō, 'அந்தச் சப்தானுகாரம் பொங்கத்தம் பொங்கு என்கிற இது' (திவ்.பெரியதி.10,2,1,வ்யா.)

பொங்கத்தம்பொங்கோ pongattam-pongu, பெ. (n.) போரில் தோற்றவர் ஆடிக் கொண்டு கூறும் அடைக்கலக் குரல் (திவ்.பெரியதி,10,2); exclamation of surrender by defeated warriors with a particular kind of dance.

பொங்கம் pongam, பெ. (n.) 1. மிகுதி; increase, abundance. 2. மகிழ்ச்சி (வின்.); exultation, joy (ய) 3. ஒழுங்கு; accuracy, regularity. *'பொங்கமாய்ப் படிந்தது'*. (இன்.வ) 4. நெற்றி; (யாழ்.அக) forehead. 5. பொங்கர்,4 (சங்.அக) பார்க்க; 6. நறுமணம்; (சங்.அக). fragrance. 7. பொலிவு; bloom, splendour *'பூடணமும் பொங்கமும்'* (பணவிடு.365)

தெ. பொங்கு

[பொங்கு → பொங்கம்]

பொங்கர் pongar, பெ. (n.) 1. மரக்கொம்பு; branch of a tree. *'வேங்கை யிருஞ்சினைப் பொங்கர்'* (மதுரைக்.296) 2. மலை; (பிங்) hill, mountain. 3. சோலை; (சிலப்,10,69,உரை) grove 4. இலவு (பிங்); red-flowered silk cotton tree. 5. வாடற்பூ; faded flower. *'தாதுசோர் பொங்கர்'* (சிலப்.10,69)

[பொங்கு → பொங்கர்]

பொங்கல் *pongal,* பெ. (n.) 1. பொங்குகை; boiling, bubbling, leaping. 2. கடுஞ்சினம்; violent anger. 3. மிளகு, சீரகம், உப்பு, நெய் முதலியன கலந்து அட்ட பொங்கல்; a preparation of boiled rice seasoned with salt, pepper, cumin seeds and ghee. *'பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து'* 4. ஞாயிறு சுறவ வோரையிற் செல்லும் நாளான சுறவ(தை)த்திங்கள் முதல் நாளன்று ஞாயிறுபோற்றி வழிபட்டு அதற்குப் பொங்கல் படையலிட்டுச் செய்யும் திருவிழா; solar festival; when the sun enters Carpricorn and Takes a northward course, being the first day of the month tai, when Pongal is prepared as an offering. 5. உயர்ச்சி (சூடா); height. 6. பருமை; largeness. *'பொங்கல் வெம்முலைகள்'* (சீவக.2805) 7. மிகுதி; (பிங்) fulness,excess 8. கள்; toddy. *'பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து'* (சிலப்.69, அரும்) 9. பொலிவு; (பிங்) bloom, splendour.

க. பொங்கலு

[பொங்கு → பொங்கல்]



பொங்கல் வரிசை *pongal-varišai,* பெ. (n.) 1. திருமணம் முடித்த பெண்களுக்குப் பெற்றோர் பொங்கல் விழாவையொட்டிச் செய்யும் சீர் வரிசை; present sent to a married woman by her parents on pongal day. 2. பெரியோர்க்குப் பொங்கல் நாளில்

செய்யும் பரிசு; present sent to a superior on poṅgal day.

[பொங்கல் + வரிசை]

பொங்கல்வை¹–த்தல் *poṅgal-vai,* செ.கு.வி (v.i) தெய்வத்துக்குப் பொங்கற் சோறு சமைத்தல்; to boil rice for offering to a deity.

பொங்கல்வை²–த்தல் *poṅgal-vai,* செ.குன்றாவி. v.t அழித்தல்; to injure,destory.

[பொங்கல் + வை]

பொங்கலாடு–தல் *poṅgal-āḍu,* செ.கு.வி (v.i) பஞ்சுபோலப் பரவியெழுதல்; to rise sponge-like,as silk cotton. '*பெய்து புறந்தந்து பொங்கலாடி*' (பதிற்றுப்,55,14).

[பொங்கல்+ஆடு]

பொங்கலாண்டி *poṅgal-āṇḍi,* பெ (n.) *பொங்கலாள்* (வின்.) பார்க்க; see *poṅgal-ḷal.*

[பொங்கல்+ஆண்டி]

பொங்கலாள் *poṅgal-āḷ,* பெ (n.) 1. சமையற் காரன்; cook. 2. தானே சமைத்துத் தனியே உண்போன்; one who cooks his own food and lives by himself.

மறுவ. பொங்கலாண்டி

[பொங்கல் + ஆள்]

பொங்கலிடு–தல் *poṅgal-iḍu,* செ. குன்றா.வி (v.i) *பொங்கல்வை 1* பார்க்க; see *poṅgalvai.*

[பொங்கல் + இடுதல்]

பொங்கலோ பொங்கல் *pongalo-ponkgal,* பெ. (n.) பொங்கல் விழாவில் பானையிற் பால் பொங்கும் போதும், மாட்டுப் பொங்கலில் மாட்டை ஓட்டி விடும் போதும் மகிழ்சியுடன் கூறும் ஓர் ஆரவாரச்சொல்; loud exclamation of joy on the occasion of boiling milk for pongal or of starting a bull in māṭṭu-p-poṅgal.

[பொங்கலோ + பொங்கல்]

பொங்கழி *poṅgaḻi,* பெ. (n.) தூற்றாப்பொலி; unsifted paddy on the threshing-floor. '*பொங்கழி யாலைப் புகையொடும் பரந்து*' (சிலப்.10,151)

பொங்கற்காரன் *poṅgāṟ-kāraṉ,* பெ. (n.) *பொங்கலாள்* பார்க்க; see *poṅgal!*

பொங்கற்சாதம் *poṅgaṟ-cādam,* பெ. (n.) 1. *பொங்கல்,3* பார்க்க; see *poṅgal.* 2. கஞ்சி சுவறும்படி சமைத்த சோறு; boiled rice with the water not strained off, but left to steep.

[பொங்கல் + சாதம்]

பொங்கற்படி *poṅgaṟ-padi,* பெ. (n.) 1. சுறவ(தை)ப் பொங்கலன்று கொடுக்கும் அன்பளிப்பு; money-presents given on the poṅgal day.

[பொங்கல்+படி]

பொங்கற்பண்டிகை *ponkar-paṇḍigai,* பெ (n.) தமிழ் மக்கள் ஆண்டுதோறும் சுறவ (தை) மாதம் முதல் நாளில் பொங்கலிட்டுக் கொண்டாடும் விழா; poṅgal festival.

[பொங்கல் + பண்டிகை]

பொங்கல் பண்டிகை என்பது உழவர் திருநாள். அறுவடையான பின், புதிரி என்னும் புது நெல்லைச் சமைத்து நன்றியறிவுடன் வழிபடு தெய்வத்திற்குப் படைத்துண்பதே பொங்கல். நீர்வளம் மிகுந்த பாங்கரில் முப்பூ விளையும். (பூவென்பது வெள்ளாமை.) நீர் வளமில்லா இடங்களில் மாரி நீர்த்தேக்கத்தால் ஒரு வெள்ளாமைதான் விளைக்க முடியும். ஆகவே, சிலை (மார்கழி) அல்லது சுறவை (தை) மாத அறுவடையே நாடெங்கும் நிகழும். ஆதலால், தைப்பொங்கல் பெரும் பொங்கல் எனப்பெறும்.

செந்நெற் பச்சரிசியைப் பெரும்பாலும் தவிடு போக்காமல் சரி நீர் வைத்துச் சமைத்து, பருப்புக்குழம்புடன் உண்பது பொங்கல் மரபு. "*பருப்புக் கேட்கும் பச்சரிசிச் சோறு, செருப்புக் கேட்கும் சித்திரை மாத வெயில்!*" என்பது பழமொழி. பொங்கற் பானையில் உலை பொங்கி வந்தவுடன் சிறிது வழிய விடுவது பொங்கல் அடையாளமாகக் கருதப் பெறும், இதுவே உழுதுண்பார் பொங்கல்.

அக்காரடலை (சருக்கரைப் பொங்கல்) அக்காரவடிசில் (சருக்கரை நெய்ப்பொங்கல்) நெய்ப்பொங்கல், மிளகுப்பொங்கல், வெண் பொங்கல் முதலிய சுவைமிக்க பொங்கல் வகைகளெல்லாம் உழுவித் துண்பாரும் செல்வருமான பிறர் பொங்கல். பால் பொங்க வைப்பது இடையர் பொங்கல். சல்லிக் கட்டென்றும் மஞ்சு விரட்டென்றும் மாடு விடுதல் என்றும் நடைபெற்றுவருவது பண்டை முல்லைநில வழக்கம் (ஏறுதழுவல்).

திணை நிலைக் காலத்தில் உழவர் வழிபட்ட தெய்வம் விண்ணோர் தலைவனான வேந்தன் (இந்திரன்) திணைமயக்கம் ஏற்பட்ட பின், பாலை நிலத் தெய்வமான காளியும் நடுகல் தெய்வங்களும் வழிபடு தெய்வங் களாயின. சிவநெறியும் திருமால் நெறியுமான பெருமதங்கள் தோன்றிய பின், உழுவித் துண்பார்தம் கொள்கைப்படி சிவனையோ திருமாலையோ வழிபட்டு வருகின்றனர்.

ஆங்கிலக் கல்வியினாலும், நயன்மை (நீதிக்கட்சி) ஆட்சியினாலும், தமிழரிடையே மறுமலர்ச்சி யுண்டாயிருப்பதால் பொங்கல் பெருநாள் ஒரு நாட்டினத் திருநாளாகத் தமிழரனைவராலும் ஒருவகைப் புத்துணர்ச்சியு டன் இன்று கொண்டாடப்பட்டு வருகின்றது. பிராமணர் பொங்கலைச் சங்கராந்தி என்பர்.

பொங்கல் உழவர்க்கே சிறப்பாக வுரிய பெரும் பண்டிகையாயினும் அரசியலாரும் உழவரல்லாத பிற பொது மக்களும் இப் பெருநாளைக் கொண்டாடி உழவரை ஊக்குவதுடன்; நன்றியறிவாகவும் தந்நலங் கருதியும், நிலமுள்ள ஏழையுழவர்க்குக் கடனடைக்கவும் குலவெருதுகள் வாங்கவும் பொருளுதவியும், பொறியியற் கருவிகள், நல்விதைகள், வல்லுரங்கள் முதலியன இலவசமாக வழங்கியும்; நிலமில்லாத வுழவர்க்கு அவற்றோடு நிலமும் வழங்கியும் பெரு நிலக்கிழவரும் சிறுநிலக்கிழவரும் 'நிலமில்லா வுழவருமாகிய முத்திறத்தார்க்கும் புதிய அறிவியல் முறைகளைக் கற்பித்தும்; உழைப்பினால் பெருவிளைவு காட்டுபவர் பண்ணையாராயின் (மிராசுதார்) பட்டம் சின்னம் சலுகை முதலியவற்றாலும் எளியவராயின் நன்கொடையினாலும் சிறப்பித்தும்; சூத்திரன் என்னும் சிற்றிழிவையும் தீண்டாதான் என்னும் பேரிழிவையும் அடியோ டகற்றியும்; எதிர்கால வுழவராவது தாய்மொழிச் செய்தித்தாளைப் படித்துத் தம் அறிவைப் பெருக்கிக் கொள்ளுமாறு, இலவசக் கட்டாயத் துவக்கக் கல்வியை விரைந்தேற்படுத்தியும்; உணவுப் பொருள் விளைவுப் பெருக்க இயக்கத்தை ஓங்கச் செய்வாராக.

"*பகடு நடந்த கூழ்*" என்று நாலடியார் கூறியபடி, உழவுத் தொழிற்குதவும் எருது களையும், பிந்தி யுதவக்கூடிய கன்று களையும், பாலுணவளிக்கும் பெற்றங்களையும் (பசுக்களையும்) போதிய ஊட்டங் கொடுத்தும் மிகைவேலை வாங்காதும், நோய் மருத்துவஞ் செய்தும், உடையவர் பேணுமாறு கருத்தாய்க் கவனித்தும்; பேணாதவரைத் தண்டித்தும்; கால்நடைப் பண்ணைகளை ஆங்காங்கு ஏற்படுத்தியும்; அரசியலார் உழவுத் தொழிலை ஊக்குவாராக.

உழவர் வாழ்க! உழவெருதுகள் வாழ்க!

—பாவாணர்

பொங்கற்பருக்கை *pongar-parukkai,* பெ. (n.) பொங்கலன்று புதிதாக அறுத்துக்குத்திச் சமைத்த பச்சரிசிச்சோறு; food of raw rice cooked on the pongal day. *'பொங்கற் பருக்கை பூராப் பிடியோ?'*

[பொங்கல் + பருக்கை]

பொங்கற்பானை ponkar-pānai, பெ. (n.) 1. சுறவ(தை)ப்பொங்கற்குப் பயன்படுத்தும் புதுப்பானை; new mud-pot used to boil rice for the pongal feast. 2. வயிறு பெருத்தவன்; pot-belly.

[பொங்கல்+பானை]



பொங்காரம் pongāram, பெ. (n.) 1. பொங்குகை (யாழ்.அக); increase, overflow. 2. மிகுதுயரம்.(வின்.); sadness, grief, sorrow 3. சீற்றம்; Anger. "பூசலைப் பார்த்துப் பழைய பொங்காரந் தீராமல்" (தெய்வச். விறலிவிடு.479) 4. வளையளுப்பு (இ.வ); glass-gall.

[பொங்கு+பொங்காரம்]

பொங்கித்தெளித்தல் pongi-t-telittal, பெ. (n.) வீட்டுக்கூரையில் ஆந்தை தங்கியதற்குக் கழுவாயாகப் பொங்கலிட்டுப் பாற்கஞ்சியை வீட்டில் தெளிக்குஞ்சடங்கு (யாழ்ப்.); purificatory ceremony of boling rice in milk and sprinkling the house with the soup, because an owl has alighted on the roof.

[பொங்கி + தெளித்தல்]

பொங்கிவழி–தல் pongi-vali, செ.கு.வி (v.i) 1.சோறு முதலியன கொதித்துப் புறத்துவடிதல்; to boil over,as rice or milk. 2. செல்வம் பெருகுதல்; to abound to overflowing,as wealth.

[பொங்கு + வழி]

பொங்கு–தல் *pongu,* செ.கு.வி (v.i.) 1. காய்ந்து கொதித்தல்; to boil up, bubble up by heat. 2. கொந்தளித்தல்; to foam and rage, as the sea. *'பொங்குநீர் ஞாலம்'* (நாலடி.72). 3. மிகுதல் (பங்); to increase *'மகிழ்ச்சி பொங்கி'* (காசிக.சயிலே.23). 4. பருத்தல்; to expand. swell, as with joy. *'வன் கொங்கை பொங்க'* (திருவாச.9,8) 5. மேற்கிளர்தல்; to shoot up. *'நெய்ம்மலி யாவுதி பொங்க'* (புறநா.15) 6. ஊக்கம் கொள்ளுதல்; to be elated, spirited. *'போர்த்தோழில் வேட்கை பூண்டு பொங்கினார்'* (கம்பரா.படைத்.1) 7. வைகுளுதல்; to burust in anger.*'பொங்கி மறத்திடை மான மேற்கொண்டு'* (பு.வெ.5,6) 8.செருக்குதல்; to be haughty. *'பொங்குதலின்றிப் புரையோர் நாணிப்பண்'* (தொல்.பொ. 426) 9. நுரைத்தெழுதல்; to ferment, effer vesce. *'தோசைமா கள்ளு முதலியன பொங்கும்'* 10. விளங்குதல்; to bebright, attractive. *'பொங்குவெண்ணுலு பொடியணி மார்பிற் பொலிவித்து'* (தேவா.876,2) 11. மயிர் சிலிர்த்தல்; to stand on end,as hair or mane. *'எரிமயிர் பொங்க'* (திவ்.திருப்பா.23) 12. வீங்குதல்; to be swollen,as a boil or sore. *'பதைத்தடி பொங்கு நங்காய்'* (திருக்கோ.228) 13.விரைதல்; to be swift, rapid. *'பொங்குநடை

....*விடையாமவரூர்தி* (தேவா.535,2) **14.** துள்ளுதல்; to jump, leap. '*ஏழையிரும்புகர் பொங்க*' (கலித்.107) **15.** கண் சூடுகொள்ளுதல்; to be inflamed, as eyes. **16.** உயர்தல் (பிங்); to rise, grow high. **17.** செழித்தல்; to a bound, flourish; to be fruitful. **18.** ஒலித்தல்; to sound, roar, to cook. '*பொங்கின சிலம்புகள்*' (கம்பரா.உண்டாட். 63)

தெ.க.பொங்கு. ம.பொங்குக.

[பொங்கு → பொங்குதல்]

பொங்கு[2] *poṅku-,* செ.குன்றாவி.(v.t.) சமைத்தல்(கொ.வ.); to cook.

பொங்கு[3] *poṅgu-,* பெ. (n.) **1.** செல்வச் செழிப்பு; prosperity. '*உன்பொங்கு குங்க*' (யாழ்ப்.) **2.** நற்பேறு; goodluck, fortunte '*பொட்டைப்பயலுக்கு இந்தப் பொங்கு விளையுமோ*' (ஆதியூரவதானி,38)

பொங்குகாலம் *poṅgu-kālam,* பெ. (n) பொங்குங்காலம் பார்க்க, see poṅgun-kālam. '*பொங்குகாலந்தழைக்கும்*' (குமரே.சத.48)

[பொங்கு + காலம்]

பொங்குகிறவன் *poṅgukiravaṉ,* பெ. (n.) சமையற்காரன் cook.

[பொங்கு + கிறு + அ + அன்]

பொங்குங்காலம் *poṅgu-ṅ-kālam,* பெ. (n.) செழிப்புக்காலம்; period of waxing prosperity, opp. to maṅgu-ṅ-kālam. '*பொங்குங்காலம் புளி பூக்கும், மங்குங்காலம் மா காய்க்கும்*'

[பொங்கும் + காலம்]

பொங்குசனி *poṅgu-šaṉi,* பெ. (n.) வாழ்நாள் இரண்டாமுறை வரும் ஏழரையாண்டுச்சனி; the second period in a person's life of ēḻavai-y-āṇḍu-c-caṉi.

[பொங்கு + SKt. sani. *த. சனி]*

பொங்குநீர்க்கிணறு *poṉkuneer-k-lomari,* பெ. (n.)இயல்பாக நீர்ப்பெருக்கு பொங்கி மேலெழும்பி, நிலத்தில் வழிந்தோடும் ஆழ்துளைக்கிணறு.

[பொங்கு + நீர்+கிணறு]

பொங்குமுட்டி *poṅgu-muṭṭi,* பெ. (n.) சமையற்பானை; pot for boiling rice.

[பொங்கு + முட்டி]

பொங்கோலம் *poṅgōlam,* பெ. (n.) குழந்தைநலங் கருதி வேண்டுதல் கட்டும் வித்துக்களையுடைய மரம்; child's amulet tree.

[பொங்கு+கோலம்]

பொச்சக்கயிறு *pocca-k-kayiṟu,* பெ. (n.) கொச்சக்கயிறு; rope made of cocoanut fibre (உ.வ)

[பொச்சம்+கயிறு]

பொச்சடி *poccadi,* பெ. (n.) வெறுநாக்கு அடிக்கை; smacking the lips, as in eating or in token of aversion or contempt.

[பொய் → பொச்சடி]

பொச்சம் *poccam,* பெ. (n.) **1.** குற்றம்; fault, defect, moral evil. '*பொச்சமில் போகமும்*' (காஞ்சிப்பு.திருநெறி.2) **2.** பொய்; lie, falsehood. '*பொச்சமி லன்பும்*' (திருவிளை.நாட்டுப்.31)

3. அவா; greediness, avidity. 4. தேங்காய் மட்டை (யாழ்ப்.); fibrous husk of cocoanut. 5. உணவு; (யாழ்.அக) food

[பொக்கம் → பொச்சம்]

பொச்சரிப்பு *poccari-p-pu,* பெ. (n.) *பொறாமை* பார்க்க; see *poramai.* (தஞ்சை.வழக்கு)

[பொச்சு → அரிப்பு]

பொச்சா–த்தல் *poccā,* செ.குன்றா.வி. (v.t) 1,மறத்தல்; to forget. *'புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க'* (குறள்.719) 2. இகழ்தல்; to deride, ridicule *'கொடையளிக்கட் பொச்சாவார்'* (ஆசாரக்.67)

பொச்சாப்பன் *poccāppan,* பெ. (n.) மறதியுள்ளவன்; forgetful person, *'மடிமானி பொச்சாப்பன்'* (தொல்.எழுத்.சிறப்புப்.பக்.4)

[பொச்சாப்பு → பொச்சாப்பன்]

பொச்சாப்பு *poccāppu,* பெ. (n.) 1. மறதி; forgetfulness, *'பொச்சாப்புக் கொல்லும் புகழை'* (குறள்.532) 2. பொல்லாங்கு (வின்.); badness, evil, wickedness(ய.) 3. குற்றம் (பிங்.); fault, 4. உறுதியின்றி மனநெகிழ்ந்திருக்கை; instability of mind. *'வன்சொல் பொச்சாப்பு'* (தொல்.பொ. 279)

[பொச்சா → பொச்சாப்பு]

பொச்சாலி poccāli, பெ. (n.) சாலிநெல்வகை (வின்.); a kind of cāli paddy.

[பொச்சா → பொச்சாலி]

பொச்சு[1] poccu, பெ. (n.) 1. see பொச்சம்' 2. பழத்தின் சேதமடைந்த பகுதி; blighted part, as in jack-fruits, mangoes, etc., 3. see பொச்சம், 4 (யாழ்ப்.) பார்க்க;(பிங்.) see poccam.

[பொச்சம் → பொச்சு]

பொச்சு[2] poccu, பெ. (n.) 1. பெண்குறி மயிர்; crines mulbrifries pudendi, 2. பெண்குறி; pudendum muliebre. 3. எருவாய் (வின்.); anus (ய) 4. மயிர்க்கொத்து (வின்.); quantity of hair,

க. பொச்சு

பொச்செரிப்பு pocцerippu, பெ. (n.) பொறாமை; jealousy.

[பொச்சு → எரிப்பு]

பொச்சை[1] poccai, பெ. (n.) 1. காடு; forest, copse. *'பொச்சையிடை......வெட்டுங்கொலை வேடர்'* (திருப்பு.7) 2. கரிகாடு (பிங்.); burnt jungle (பங்) 3. சிறுமலை (சூடா); hillock. 4. மலை (திவா.) hill mountain. 5.புழுக்கூடு; nest of insects. 'பொச்சையிற் கையிடாதே' (வின்.)

[பொற்றை → பொச்சை]

பொச்சை[2] *poccai,* பெ. (n.) குற்றம்; fault. *'பொச்சையர் கடனனி பொருமல் கொள்வதே'* (கந்தர்.தருமகோ.19)

[பொச்சம் → பொச்சை]

பொச்சை[3] *poccai,* பெ. (n.) தொப்பை வயிறு; paunch, pot-belly. *'பொக்கையிட்டுப்பாந்தமாக வவன் வளர்ந்து'* (ஆதியூரவதானி.8)

தெ. பொட்ச. க. பொஜ்ஜெ

பொசி¹–தல் *poši,* செ.கு.வி, (v.i) **1.** கசிதல்; to ooze out, percolate.'*நெல்லுக் கிறைத்த நீர் ...புல்லுக்கு மாங்கே பொசியுமாம்*' (மூதுரை.10) **2.** வடிதல் (வின்.); to flow freely, as tears, milk, stream. (ய.) **3.** செய்தி வெளியாதல்; (பாரத. அருச்சுனன்றவ.40) to leak out,as a report or secret. **4.** மனமுருகுதல் (வின்.); to melt, be softened,as the heart in benevolence.

[பொசி → பொசி–தல்]

பொசி² *poši,* பெ. (n.) **1.** கசிவது; that which oozes. **2.** ஊனீர்; secretion in the body. '*பொசியினான் மிடைந்து புழுப்பொதிந்த உடம்பு*' (தேவா.812,6)

பொசி³ *poši,* பெ. (n.) துத்தம் (சங்.அக); sulphate of copper or zing.

பொசி⁴–த்தல் *poši,* செ.குன்றா.வி. (v.t) **1.** உட்கொள்ளுதல்; to eat, feed on. '*நின்மாலியாந் தீர்த்தம் புசியாதிருந்துமிலோம்*' (சிவரக. தேவர் முறை.12) **2.** வினைப்பயன் எதிர்கொள்ளுதல்; to experince, as the fruits of past actions.

[புசி → பொசி]

பொசிக்கை *pocikkai,* பெ. (n.) கால்நடைகளுக்கு வரும் ஒருவகைக் காய்ச்சல்; malarial fever affecting cattle.

[பொசுக்கு → பொசிக்கை]

பொசிவு *pošivu,* பெ. (n.) **1.** நெகிழ்வு; ductility. '*பொசிவுறு பசும்பொன்*' (கம்பரா, ஊர்தேடு.99) **2.** கசிவு (வின்.); oozing,issuing gently.

[பொசி → பொசிவு]

பொசுக்கு¹–தல் *pocikku,* செ.குன்றாவி. (v.i) **1.** சாம்பலாக எரித்தல்; to burn to ashes. **2.** வெதுப்புதல்; to scorch,burn,as the sun. **3.** தீயில் வாட்டுதல்; to singe, toast. **4.** துன்பப்படுத்துல்; to persecute, afflict.

[பொசுங்கு → பொசுக்கு]

பொசுக்கு²–தல் *pošukku,* செ.குன்றாவி. (v.i) மலக்காற்றுவிடுதல் (வின்.); to break wind.

பொசுக்குநோவு *pošukku-nōvu,* பெ. (n.) ஆட்டுநோய்வகை(C.E.M); a disease of sheep and goats.

[பொசுக்கு → நோவு]

பொசுக்கெனல் *pošukkeṉal,* பெ. (n.) விரைவுக்குறிப்பு; suddenness,quickness.

[பொசுக்கு + எனல்]

பொசுங்கல் *pošuṅgal,* பெ, (n.) **1.** கருகினது; that which is signed,scorched or burnt. **2.** மந்தன்; one who speaks or acts with hesitation. **3.** வலுவற்றவன்; weak,

insignificant person. 4. சிறுதூற்றல்; slight drizzling. *'மழை உறைத்துப் பெய்யவில்லை, பொசுங்கலாயிருக்கிறது'.*

[பொசுங்கு–பொசுங்கல்]

பொசுங்கு¹–தல் *posuṅgu,* செ.கு.வி, (v.i) 1. எரிக்கப்படுதல்; to burn,to be consumed,as hair,paper. 2. காய்தல்; to be scorched slightly,as grain. 3. வாட்டப்படுதல் (வின்.); to be signed, toasted. 4.அழிவுறுதல்; to be ruined. 'அந்தக் குடும்பம் பொசுங்கிவிட்டது.'

[பொசு → பொசுங்கு]

பொசுங்கு²–தல் *posuṅgu,* செ.கு.வி. (v.i) இணங்குதல்; to be united,to agree. *'இருவருக்கும் பொசுங்காது'*

பொசுபொசு–த்தல் *posu-posu-,* செ.கு.வி. (v.i) 1. கமுக்கம் பேசுதல்(யாழ்.அக); to whisper,murmur in secret. 2. மெதுவாகக் கசிதல்; (யாழ்.அக) to ooze out slowly. 3. எரிச்சலுண்டாகும்படி அடிக்கடி பேசுதல்; to be unfortunate. 4. மழைதுளித்தல் (சங்.அக); to drizzle.

பொசுபொசுப்பு *posu-posuppu,* பெ. (n.) அடிக்கடி நெருக்கிக் கேட்கும் தொந்தரவு; being importunate. "அவர் பொசு பொசுப்புத் தாங்க முடியவில்லை."

[பொசுபொசு+பு]

பொசுபொசெனல் *posu-posenal,* பெ. (n.) 1. எளிதில் எரிதற்குறிப்பு; being burnt easily. 2. இலேசாய்ப் பெய்தற்குறிப்பு;raining slighly 3.விரைவுக்குறிப்பு being sudden,as the explosion of a gun.

பொட்டல் *poñju,* செ.கு.வி. (v.i) செழித்தல்; to prosper, thrive. *'மாடு கன்று பொஞ்சாது'.*

[பொங்கு → பொஞ்சு]

பொஞ்சு²–தல் *poñju,* செ.கு.வி. (v.i.) பொசுங்கு²பார்க்க; see posuṅgu.

[பொசுங்கு → பொஞ்சு]

பொட்ட *poṭṭa,* கு.வி.எ, (adv) விரைவாக; suddenly, swiftly. *'பொட்ட வல்லுயிர் போவதன் முன்னம்'* (தேவா.20,26) 2. முழுதும்; entirely. *'பொட்டத்துற்றி மாரிப்பகை புணர்த்த'* (திவ்.பொரியாழ்.3,5,1)

பொட்டகத்துத்தி *poṭṭaga-t-tutti,* பெ, (n.) காட்டுக்கத்தூரிச்செடி; muskmallo.

[பொட்டல் → துத்தி]

பொட்டகத்தூரி *poṭṭa-katturi,* பெ,(n.) *பொட்டகத் துத்தி* பார்க்க; see *irattuga-t-tutti*

[பொட்டல் → கத்தூரி]

பொட்டச்சி poṭṭacci, பெ. (n.) பெண்; women, used in contempt.

[பெள் → பேடு → பேடை → பெட்டை → பெட்டைச்சி → பொட்டச்சி]

'சி' – பெண்பாலீறு

பொட்டணம் *poṭṭaṇam,* பெ. (n.) 1. சிறுமூட்டை; small bundle, parcel. 2. ஒத்தடமிடும் *சீலைப்பந்து;* bundle of drugs, leaves, etc. tied in a piece of cloth and used in fomentation.

தெ. பொட்டணமு. க. பொட்டண.

[பொட்டலம் → பொட்டணம்]

பொட்டணம் போடு—தல் *pottanam-pōdu.,* செ.கு.வி. (v.i) ஒத்தடமிடுதல்; to apply fomentation.

[பொட்டணம் + போடு—,]



பொட்டணமொற்று—தல் *pottanam-orru-,* *பொட்டணம்* (வின்.) போடு பார்க்க; see *pottanam-pōdu*

[பொட்டணம் + ஒற்று—தல்]

பொட்டணி *pottani,* பெ. (n.) *பொட்டணம்* பார்க்க; see *pottanam.*

[பொட்டணம் + பொட்டணி]

பொட்டரி—த்தல் *pottari,* செ.குன்றா.வி. (v.t) ஆடையைப் பூச்சியரித்தல் (வின்.); to fret a garment, as moths.

[பொட்டு+அரி]

பொட்டல் *pottal,* பெ. (n.) **1.** பாழிடம்; barren or aride tract, waste land, 'பூமி சில பொட்டலற (தாயு.எந்நாட்.1242) **2.** திறந்த வெளியிடம்; open space. '*அந்திக்கடைப் பொட்டல்*', '*கோவலன் பொட்டல்*'. **3.** தலை வழுக்கை (இ.வ.); baldness.

[பொட்டு → பொட்டல்]

பொட்டல்வெளி *pottal-veli* பெ. (n.)மேய்ச்சல் புல்வெளி; grass land, moor land.

[பொட்டல்+வெளி]

பொட்டலஅஞ்சல் *pottala-ancal,* பெ. (n.) சிப்ப அஞ்சல் parcel post

[பொட்டலம்+அஞ்சல்]

பொட்டலம் *pottalam.* பெ. (n.) *பொட்டணம்,1* பார்க்க; see *pottanam.*

பொட்டளி *pottali.* பெ. (n.) *பொட்டணம்1* (யாழ்.அக) பார்க்க; see *pottanam.*

பொட்டி[1]—த்தல் *potti.* செ.கு.வி. (v.i) திறத்தல்; to open. '*கடிதக்கட்டைப் பொட்டித்துப் பார்த்தான்*'.

[பொள் → பொட்டு → பொட்டி]

பொட்டி[2] *potti.* பெ. (n.) விலைமகள்; prostitute. '*பொட்டியாளாசை கொஞ்ச மட்டினிலே மாறாது*'. (கவிகுஞ்.3)

[பெட்டை → (பெட்டி) → பொட்டி]

பொட்டி[3] *potti.* பெ. (n.) **1.** கதவுகளில் அமைந்த வேலை வகை; see *pottippu.* **2.** பெட்டி; box.

[பெட்டி → பொட்டி]

பொட்டிப்பிழைப்புளி *pottippailaippuli,* பெ. (n.) ஒருவகைத் தச்சுக்கருவி(C.E.M.); panel-plane.

[பொட்டிப்பு + இழைப்புளி]



பொட்டிப்புக்கதவு *pottippu-k-kadavu,* பெ. (n.) கதவுவகை(C.E.M.); panel door.

[பொட்டிப்பு+கதவு]

பொட்டிமகன் *potti-magan,* பெ. (n.) 1. கணிகையின் மகன்; prostitute's son. 2. கெட்டிக்காரன் (வின்.); a clever fellow,used in contemt *'செக்காரப் பொட்டி மக்கள் வாசல் வழிப்போகோமே'* (தனிப்பா.i,142,39)

[பொட்டி + மகன்]

பொட்டில் *pottil,* பெ. (n.) ஊர்வலம் முதலியவற்றில் வெடியோசை செய்யுங்கருவி (வின்.); machine with pistolets to make a cracking noise in a procession.

[பொட்டு → பொட்டில்]

பொட்டில்சுடு-தல் *pottil-cutu,* செ.கு.வி. (v.i) நெற்றியின் பக்கத்துக்குறியில் கைத் துமுக்கியாற் சுடுதல் (வின்.); to fire a pistol (ய.)

[பொட்டில் + சுடு]

பொட்டிலம் *pottilam,* பெ. (n.) *பொட்டணம்* 1. (யாழ்.அக) பார்க்க; see *pottanam1*

பொட்டிலி *pottili,* பெ. (n.) *பொட்டில்* (வின்.) பார்க்க; see *pottil.*

[பொட்டு → பொட்டிலி]

பொட்டிலுப்பு *pottil-uppu,* பெ. (n.) வெடியுப்பு; saltpetre,nitrate of potash.

க. பெட்டலுப்பு

[பொட்டில் + உப்பு]

பொட்டு¹ *pottu,* பெ. (n.) 1. நெற்றியிலிடும் வட்டக்குறி; round mark, red white or black, worn on the forehead. *'பொட்டணியா ணுதல்'* (திருக்கோ. 303) 2. பொன்னாற் செய்த ஒருவகைத்தாலி; gold ornament in the shape of small metal cups strung together and worn round the neck. *'அரக்கியர் கட்டிய பொட்டுகள் தொட்டறுபட்டிடும்'* (இராமநா.சுந். 18.) 3. ஒருவகையணி; a kind of jewel. *'திருக்கைப்பொட்டு'* (S.I.I. ii, 16.) 4. கன்னத்தின் மேற்பொருத்து; temple of the head. 5. சிறுமை; trifle. 'பொட்டான வேர்களும்' (இராமநா.) 6. வட்டவடிவான குறி; dot, spot, mark 7. துளி; drop. மழை ஒரு பொட்டுக்கூட விழவில்லை. 8. புழு; worm (பிங்) 9. பூச்சிவகை; moth. பொட்டரித்த ஆடை 10. *பொட்டுப்பூச்சி* (வின்.) பார்க்க; 11. ஒன்று என்னும் எண்ணைக் குறிக்கும் புள்ளி; dot, representing one 12. தகுதியின்றிப் பிறரை ஏமாற்றிப் பெறும் நன்மதிப்பு (வின்.); repute or esteem obtained by imposing on others. 13. நுழைவழி (வின்.); hole or opening to creep through; as in a hedge.

தெ.க. பொட்டு

[பொள் + து = பொட்டு]

பொட்டு² *pottu,* பெ. (n.) **1.** உழுந்து முதலிய தவசங்களின் தோலோடு கூடிய சிறுதுகள்; chaft; husk with particles of grain. **2.** பொடி; dust. 'குலக்கிரி பொட்டெழ' (திருப்பு. 740) **3.** பொடுகு; dandruff '*அவன் தலை பொட்டெழுந்தி ருக்கிறது*'.

[பொற்று → பொட்டு]

பொட்டு³–தல் *pottu,* பெ. (n.) செ.கு.வி. (v.i.) வெடித்தல்; (இ.வ.) to burst.

பொட்டுக்கட்டுதல் *pottu-k-kattutal,* பெ. (n.) தேவகணிகையாக கோயிற்குரிமையாக்கும் பெண்ணுக்குத் தாலிகட்டுஞ் சடங்கு; ceremony of dedicating a dancing girl to a temple by tying the marriage badge round her neck.

[பொட்டு + கட்டுதல்]

பொட்டுக்கம்பு *pottu-k-kambu,* பெ. (n.) 1. கம்புவகை(A.); a kind of bulrush - millet.

[பொட்டு + கம்பு]

பொட்டுக்கருகல்மணி *pottu-k-karugal mani,* பெ. (n.) கறுப்பு மணிகள் கோத்த ஒரு வகைத்தாலி; string of black beads and discs, worn by girls and women, used by Telugus as a marriage badge also.

[பொட்டு + கருகல் + மணி]

பொட்டுக்கறிவள்ளி *pottu-k-karivalli;* பெ. (n.) *செவ்வள்ளி* (L.) பார்க்க; see *cevvalli.* purple yam. tred

[பொட்டு + கறிவள்ளி]

பொட்டுக்காரை *pottu-k-kārai,* பெ. (n.) 1. காரைமீன் வகை (வின்.); a kind of fish.

[பொட்டு + காதை]

பொட்டுக்காறை *pottu-k-kārai,* பெ. (n.) மகளிர் கழுத்தணிவகை; a kind of neck-ornament. '*பொட்டுக்காறை யெந்த ஈஞுவன் வீட்டில் இருக்குதோ*' (விறலிவிடு. 701.)



பொட்டுக்குத்து–தல் *pottu-k-kuttu,* பெ. (n.) பச்சைகுத்துதல்; the tattoo with a kind of vegetable extract.

[பொட்டு + குத்துதல்]



பொட்டுக்குலை–தல் *pottu-k-kulai,* பெ. (n.) செ.கு.வி. (v.i.) மதிப்பிழத்தல் (யாழ்.அக.) to lose honour or esteem.

[பொட்டு + குலை–தல்]

பொட்டுக்குற்று–தல் *pottu-k-kurru-,* பெ. (n.) செ.கு.வி. (v.i.) பார்க்க; பொட்டுக்குத்து; (யாழ்.அக.)

[பொட்டு + குற்று-தல்]

பொட்டுக்கேடு *pottu-k-kēdu,* பெ. (n.) தகாத பெருமதிப்பை யிழக்கை (வின்.); loss of ill-deserved reputation.

[பொட்டு + கேடு]

பொட்டுத்தாமரை pottu-t-tā-marai, பெ. (n.) *கண்டு பாரங்கி* பார்க்க; indian lotus croton.

தெ.ம. புட்டத்தாமர. க. பொட்டதாவர.

பொட்டுத்தாலி *pottu-t-tāli,* பெ. (n.) பொட்டு வடிவான மங்கல நாண்; marriage badge with dises or small cups strung together.

[பொட்டு + தாலி]



பொட்டுத்துவரை pottu-t-tuvarai, பெ. (n.) மரவகை (L.) ; anaimalai calaminder-wood, m.tr.,

[பொட்டு + துவரை]

பொட்டுப்பூச்சி *pottu-p-pūcci,* பெ. (n) சிலந்திப்பூச்சி வகை (வின்.); small round bodied venomous spider with long legs.

[பொட்டு + பூச்சி]



பொட்டுப்பொட்டெனல் *pottu-p-pottenal,* பெ.(n) ஒலிக்குறிப்பு வகை; expr. signifying sound of an thing dropping down.

[பொட்டுப்பொட்டு + எனல்]

பொட்டுப்பொடி *pottu-p-podi,* பெ. (n.) சிறுபண்டம்; knick-knack *'அவன் பொட்டுப் பொடிகளையெல்லாம் அள்ளிக்கொண்டு போய் விட்டான்'* (இ.வ.)

[பொட்டு + பொடி]

பொட்டுவெடி *pottu-vedi,* பொட்டுப் போன்ற வடிவமைப்புக் கொண்ட சிறுபட்டாசு வகை.

பொட்டெழுத-தல் *pottelu,* பெ. (n.) அழிவுறுதல்; to be ruined; to crumble to dust. *'ஒளித்திட்ட சூர் பொட்டெழுக்குத்தும் ராவுத்த'.* (திருப்பு. 724).

[பொட்டு + எழு-தல்]

பொட்டெனல் *pottenal,* பெ. (n.) விரைவுக் குறிப்பு; expr. signifying quickness, suddenness, agility. *'பொட்டெனவே யயோத்திப்பட்டணமெல்லாம் வந்து'.* (இராமநா. அயோத்.12.)

[பொட்டு + எனல்]

பொட்டை[1] *poṭṭai,* பெ. (n.) 1. குருடு; blindness. *'கண்பொட்டையாயினும் அம்பட்டனான்'.* (தனிப்பா.1, 171, 23.) 2. கண்ணொளி மழுக்கம்; blear-sight

[பொல் → பொள் → பொற்று → பொத்து → பொத்தை → பொட்டை]

உள்ளீடற்றது–பயனற்றது.

பொட்டை[3] *poṭṭai,* பெ. (n) சூதாடுவோர் குழூஉக்குறி; a cant in gambling. *'அடியிது பொட்டையீதென்பர்'* (கந்தபு. கயமுகனுற். 168.)

[பொள் → பொற்று → பொத்தை → பொட்டை]

பொட்டைக்கண் *poṭṭai-k-kaṇ,* பெ. (n.) குருட்டுவிழி; blind eye

[பொட்டை + கண்]

பொட்டைச்சி[1] *poṭṭaicci,* பெ. (n.) பார்க்க, பொட்டச்சி.

[பெட்டை → பொட்டை → பொட்டைச்சி]

'சி' பெண்பாலீறு

பொட்டைச்சி[2] *poṭṭaicci,* பெ. (n.) ferm of *பொட்டையன்,* 2. (வின்.) பார்க்க; see *poṭṭaiyaṉ*

[பெட்டைச்சி → பொட்டைச்சி]

பொட்டையன்[1] *poṭṭaiyaṉ,* பெ. (n.) குருடன்; blind man; "பொட்டையாய் புகலாய்," (தனிப்பா. 171,23.).

[பொட்டை → பொட்டையன்]

பொட்டையன்[2] *poṭṭaiyaṉ,* பெ. (n.) பெண்வழிச் செல்லும் ஆடவன்; henpecked husband

[பெட்டையன் → பொட்டையன்]

பொடி–தல்[1] *poḍi-,* பெ. (n.) செ.கு.வி. 1. தூளாதல்; to be broken to pieces, as rice; to become pulverised; *'சிரம்பொடிந்து சிந்தவே'* (கம்பரா. மூலபல. 93) 2. தீய்தல்; to be blighted, as grain. *'பொறாதார் தங்கண் பொடிவதெவன்'* (கலித்.105.) 3. ஒளி மழுங்குதல்; to lose brightness. *'கண்ணெலாம் பொடிந்தலற'* (தேவா. 805.8.) 4. கெடுதல் (வின்.); to perish; to be destroyed (w.) 5. சினங்கொள்ளுதல்; to be angry. *'தன் கைகால் தப்புச் செய்ததென்று பொடிய விரகுண்டோ'* (திவ். திருப்பா. 28. உரை.பக்.244)

பொடி[2]**–த்தல்** *poḍi-,* செ.குன்றா.வி. (v.t.) 1. கண்டித்தல்; to rebuke, check. *'பொடிகிற தாய்மாரைக்குறித்து'* (ஈடு, 7, 3, 4.) 2. வெறுத்தல்; to despise, dislike. *'பொடிந்த நின் செவ்வி காட்டெனா'* (புறநா. 160.)

பொடி[3]**–த்தல்** *poḍi-,* செ.குன்றாவி. (v.t.) 1. துகளாக்குதல்; to pulverises reduce to dust or powder. 'எழுமலை பொடித்த.... வள்ளிதுணைக் கேள்வன் (கல்லா 1.) 2. கெடுத்தல்; to spoil, destroy. *'அது கண்பொடித்த நாள்'* (கம்பரா. காட்சி, 28.) 3. தோற்றுவித்தல்; to produce

பொடி[4]**–த்தல்** *poḍi-,* செ.கு.வி. (v.t.) 1. அரும்புதல்; to spring up, shoot, rise. *'முலைபொடியா'* (திருக்கோ. 104) 2. தோன்றுதல்; to appear; *'ஊன்றலைப் பொடித்தாங்கனைய செஞ்சூட்டின்'* (சீவக. 2106.) 3. விளங்குதல்; to shine *'இரவி கோடி .... பொடித்து'* (சூடா. 5, 1.) 4. வியரரும்புதல்; to bedew; to ooze out, as perspiration. *'புள்ளிவியர் பொடிப்ப'* (பதினொ. திருவிடைம. 16). 5. புளகித்தல்; to horripillate. *'பொடித்தன வுரோமராசியே'* (கம்பரா. உண்டாட்டு. 36.) 6. பொடியாதல்; to be pulverised. *'பூழையோடே பொடித்து'* (கம்பரா. எதிர்கோ. 10.)

பொடி³ *poḍi-,* பெ. (n) 1. தூள்; (powder) '*வாசநறும் பொடி*' (பெருங்.மகத. 17,160.) 2. புழுதி (பிங்.); dust. '*பொடியாடிக்கிடப்பதோ*' (சிலப் 19,481) 3. பூந்தாது; pollen of flowers. 4. மூக்குத்தூள்; snuff. '*பொடிக்கடி நாசித் துளையிலே புகுத்தி*' (அருட்பா, vi. அவாவறு12) 5. சொக்குப்பொடி (வின்.); magical powder. 6. மாழைகளைப் பற்ற வைக்கும் பொடி; solder metallic cement; 7. சாம்பல்; ash '*பொடியழல்*' (கலித்: 85.2) 8. திருநீறு. (திவா.); sacred ashes. (மெய்சேர். பொடியர்' (தேவா. 46,5.) 9. சிறிய துண்டு; anything small or minute; particle; fragment. 10. சிறியது; that which is small. 11. சிறுமணி (கொ.வ.); small gem. 12. சிறு பிள்ளை (யாழ்ப்.); little child.

பொடிக்காசு *poḍi-k-kāšu,* பெ.(n) கைக்கூலி; bribe "நானாவித இமிசை செய்து பொடிக்காசு வாங்குகிறாமிதங் காண்க"(தாசில்தால் நா. பக்90)

[பொடி → காசு]

பொடிச்சல்லி *poḍi-c-calli,* பெ. (n.) 1. கட்டட வேலைக்காக உடைத்த கருங்கல் அல்லது செங்கற் சிறு துண்டு; (C.E.M.); small bits of brick or stone, used for concrete.

[பொடி + சல்லி]

பொடிச்சிரங்கு *poḍi-c-ciraiṅgu,* பெ.(n.) சொறிசிரங்கு வகை; (itch, scabies, running scall, eczema.

[பொடி + சிரங்கு]

பொடிச்சிலை *poḍi-c-cilai,* பெ. (n.) மஞ்சணிறமுள்ள கல்வகை. (மூ.அ.); (a yellow mineral.

[பொடி + சிலை]

பொடிசு *poḍišu,* பெ. (n.) 1. சிறியது; (particle, grain, as of sand; fragment; anything small. 2. *பொடிச்சி.* (இ.வ.) பார்க்க; see *Poḍicci.* 3. கணிகைச்சிறுமி ; young courtezan.

[பொடி → பொடிசு]

பொடித்தடை *poḍi-t-taḍai,* பெ. (n.) *பொடிப் பட்டை.* (இ.வ.) பார்க்க; see *poḍi-p-paṭṭai.*

[பொடி + தடை]

பொடித்தரை *poḍi-t-tarai,* பெ. (n.) பொடி மிகுதியான நிலம். (சிலப் 3, 96, உரை.); a variety of soil which is dusty.

[பொடி + தரை]

பொடித்தூவல் *poḍi-t-tūval,* பெ. (n) ஒரு வகை மரக்கறியுணவு (கொ.வ.) ; a kind of vegetable curry

[பொடி + தூவல்]

பொடிதூவு–தல் *poḍi-tūvu..* செ.கு.வி. (v.i.) மரக்கறியில் மாப்பொடி கலத்தல் (கொ.வ.); to sprinkle rice-flour in preparing vegetable curry.

[பொடி + தூவு–தல்]

பொடிநகை *poḍi-nagai,* பெ. (n) மட்டப்பொடி அதிகமாகச் சேர்த்துச் செய்யப்பட்ட அணிகலன் (இ.வ.); jewel or ornament, with inferior alloy used largely in soldering or in setting precious stones.

[பொடி + நகை]

பொடிப்பட்டை *poḍi-p-paṭṭai,* பெ. (n) மூக்குத்தூள் வைக்கும் வாழைப் பட்டைக் கூடு; dried rind, as of plantain folded for keeping snuff.

[பொடி + பட்டை]

பொடிப்பருவம் *podi-p-paruvam,* பெ. (n) நீர்பாய்ச்சாது புழுதியில் நெல் விதைப்பதற்குச் செய்யும் பக்குவம்; preparation of nanjai, in dry condition for sowing paddy.

[பொடி + பருவம்]

பொடிப்பாடு *podi-p-pāḍu,* பெ. (n) நகைகளில் மிகுதியாகப் பொன்பொடி சேர்க்கை(நாஞ்.); excessive use of solder in making ornaments

[பொடி + பாடு]

பொடிப்பு *podippu,* பெ. (n) 1. புளகம்; horripillation. *'முற்றுடல் பொடிப்புக் கொள்ள'* (கந்தபு.மேருப்.4.) 2. *பொடுகு,* 1. (இ.வ.). பார்க்க; see *poḍugu.*

[பொடி → பொடிப்பு]

பொடிப்போடு—தல் *podi-p-pōḍu,* செ.கு.வி. (v.i) மூக்குள் புகையிலைத் தூளிடுதல்; to take snuff. 2. மாயப்பொடியிடுதல்; to cast magical powders on one.

[பொடி + போடு—தல்]

பொடிபடு—தல் *podi-padu,* செ.கு.வி. (v.i) உடைபடுதல்; to be broken, crushed. *'கரை பொடிபடப் புடைத்ததை யன்றே'* (அரிச்பு. மீட்சி 14.)

[பொடி + படு—தல்]

பொடிப்பண்ணு—தல் *podi-pannu,* செ.குன்றாவி. (v.t.) 1. தூளாக்குதல்; to pulverise 2. துண்டித்தல். (சங்.அ.க.); to cut in two.

[பொடி + பண்ணுதல்]

பொடிபொட்டு *podi-pottu,* பெ(n.). 1. சிறியது; anything small 2. பதரானது; that which is like chaff

[பொடி + பொள் + து]

மரபு இணைமொழி

பொடிமட்டை *podi-mattai,* பெ (n.). மூக்குத் தூள் வைக்கும் வாழைப்பட்டைக் கூடு; dried rind, as of plantain folded for keeping snuff. "சவடால் பொடிமட்டை தட்டிவிட்டால் வெறும் மட்டை" (உ.வ.)

[பொடி + பட்டை → மட்டை]

பொடிமரம் *podi-maram,* பெ (n.). பொடிப் பருவத்தில் உதவும் உழவுக்கருவி வகை(இ.வ.); an instrument used in ploughing a dry nañjai

[பொடி+மரம் → பொடிமரம்]

பொடியம்மை *podi-y-ammai,* பெ(n.). அம்மைவகை(வின்.); measles.

[பொடி + அம்மை]

பொடியல் *podiyal,* பெ(n.). இரும்பில் துளை போடுங் கம்மக்கருவி; punching pin.

மறுவ. 'பொடியிர்'

[பொடி → பொடியல்]

பொடியன் *podiyan,* பெ(n.). 1. சிறுவன்(யாழ்ப்.); boy. 2. புல்லன்; insignificant person. *'காமப்பொடி யாிற் பொடியேன்'* (அருட்பா,vi, ஆற்றாமை. 10.)

[பொடி → பொடியன்]

பொடியா—தல் *podi-y-ā-,* செ.கு.வி. (v.i.). அழிதல்; to perish *'பொய்யும் பொடியாகா தென்செய்கேன்'* (திருவாச. 47.1.)

[பொடி + ஆதல்]

பொடியாடி *poḍi-y-āḍi,* பெ(n.). சிவபிரான்; siva as smearing ashes. '*விடையாய் பொடியாடீ*' (திருவாச 25.5.)

[பொடி + ஆடி]

பொடியாணி *poḍi-y-āṇi,* பெ. (n.). சிற்றாணி(C.E.M.); tack nail

[பொடி + ஆணி]



பொடியிழைப்புளி *poḍi-y-iḻaippuḷi,* பெ (n.). 1. சிற்றிழைப்புளி (கட்டட. நாமா. 39.); a small plane.

[பொடி + இழைப்பு + உளி]

பொடியுழவு *poḍi-y-uḻavu,* பெ(n.). புழுதிக்காலுழவு; dry ploughing dist. fr. toḻi-y-uḻavu.

[பொடி + உழவு]

பொடிவரகு *poḍi-varagu,* பெ. (n.). 1. தினை வகை (வின்.); paddy-field grass.

[பொடி + வரகு]

பொடிவிதை *poḍi-vidai,* பெ(n.). *புழுதிக்கால் விதைப்பு,* (இ.வ.) பார்க்க; see *puḻudi-k-kāl-vidaippu.*

[பொடி + விதை]

பொடிவிளக்கணம் *poḍi-viḷakkaṇam,* பெ. (n.). *பொடிவிளக்கம்* (யாழ்.அக.) பார்க்க; see *poḍi-viḷakkam*

பொடிவிளக்கம் *poḍi-viḷakkam,* பெ. (n.). பொன்நகையில் அதிகப் பொடி சேர்த்து இணைக்கை; soldering an ornament with a large quantity of alloy.

[பொடி → பொடிவிளக்கம்]

பொடிவு *poḍivu,* பெ(n.). 1. சிதைவு; anything broken. 2. வசவு; cursing.

[பொடி → பொடிவு]

பொடிவெட்டி *poḍi-veṭṭiu,* பெ. (n.). தட்டாருடைய பொன்கம்பி வெட்டும் கத்தரிக்கோல்(வின்.); goldsmith's shears or scissors.

[பொடி + வெட்டி]



பொடிவை–த்தல் *poḍi-vai-,* செ.கு.வி. (v.i.). 1. மாழைகளைப் பற்ற வைத்தல்; to solder with metallic powder. 2. சூழ்ச்சியாகப் பேசுதல் (கொ.வ.),; to speak cunningly or decritfully 3. கோட்சொல்லுதல் (இ.வ.); to calumniate, slander.

[பொடி + வை–த்தல்]

பொடிவைத்தூது–தல் *podi-vaittūdu-*, செ.கு.வி. (v.i.). *பொடிவை* **1.(வின்.)** பார்க்க; see *podi-vai-*,

[பொடிவைத்து + ஊது]

பொடுக்கு *poḍukku*, பெ. (n.). மனக்கறுவு; grudge.

பொடுக்கெனல் *poḍukkeṉal*, பெ. (n.). ஓர் ஒலிக்குறிப்பு; onam. expr. signifying (a) breaking suddenly, as of cords. (b) விரைவுக்குறிப்பு; suddenness, quickness. '*சீவன் பொடுக்கென்று போயிற்று.*'

[பொடுக்கு + எனல்]

பொடுகு *poḍugu*, பெ. (n.). **1.** தலைச்சுண்டு; scurf, dandruff, scall on the head **2.** சிறுமை; smallness. '*பொடுகுப்பனங்காய்*' **3.** பூடுவகை; a shunb (யாழ்.அக.).

[பொடிகு + பொடுகு]

பொடுகுக்காய் *poḍugu-k-kāy*, பெ. (n.). **1.** சிறுகாய் (இ.வ.).; small unripefelt or bery

[பொடுகு + காய்]

பொடுதலை *poḍutalai*, பெ. (n.). பூடுவகை (பதார்த்த. **351.**); wild long pepper,



பொடுதலை *poḍudalai*, பெ. (n.). *பொடுதலை.* (நாம.தீப **323.**) பார்க்க; see *poḍutalai*

பொடுபொடு–த்தல் *poḍu-poḍu-*, செ.கு.வி. (v.i.). **1.** வெடித்தல்; to snap, as cords. **2.** துளித்தல்; to spatter, drizzle, **3.** குறைதல்(வின்.); to be scanty, hardly sufficient **4.** விரைவாய் பேசுதல்(வின்.); to speak **5.** வயிறிரைதல்; to wamble, as the bowels, **6.** கல் முதலியன ஒலியுடன் விழுதல்; to fall, as stones one after another

பொடுபொடெனல் *poḍu-poḍeṉal*, பெ. (n.). (a) ஓர் ஒலிக்குறிப்பு; onaom expr. signifying snapping of cords, drizzling of rain, falling of fruits or stones one after another.b) **2.** விரைந்து பேசற்குறிப்பு; rattling in speaking

[பொடுபொடு + எனல்]

பொண்டுதல் *ponḍu*, செ.கு.வி. கெட்டுப்போதல்(யாழ்ப்.); to grow bad deteriorate

பொத்தகம் *pottagam*, பெ. (n.). **1.** சித்திரப்படாம் (தி.வா.); painted cloth. **2.** புத்தகம்; book '*நிறைநூற் பொத்தகம் நெடுமணையேற்றி*' (பெருங் உஞ்சைக். **34, 26.**) **3.** நிலக்கணக்கு; land register. 'பொத்தகப்படிகுழி' (S.I.I. iii, **80**)

[பொருத்து → பொத்து → பொத்தகம்]

பொத்தகம்² *pottagam*, பெ. (n.). மயிலிறகு (பாலவா. **1012.**); feather of the peacock.

[பொத்து → பொத்தகம்]



பொத்தப்பி *pottappi,* பெ. (n.). தொண்டை மண்டலத்து வேங்கடக் கோட்டத்தைச் சார்ந்ததும் காளத்தியைச் சூழ்ந்ததுமான நாடு; the country around kālahasti, part of vēṉgaḍa-k-koṭṭam, in Tondai-maṇḍalam. 'கண்ணப்பர் திருநாடென்பர்.... பொத்தப்பி நாடு' (பெரியபு. கண்ணப்ப. 1.) (செந்.29, 147.)

பொத்தம் பொது *poṭṭam-podu,* பெ. (n.). பொது (வின்.); generality

[பொது + அம் + பொது]

பொத்தாம் பொது *pottam-podu,* பெ. (n.). பொது ; generality

[பொத்தம்பொது → பொத்தாம்பொது]

பொத்தர் *pottar,* பெ. (n.) பொத்தல் பார்க்க; see pottal.

[பொத்து → பொத்தர்]

பொத்தல் *pottal,* பெ. (n.) **1.** துளை; hole. **2.** கடன்; debt **3.** குற்றம்; fault defect **4.** கிழிசல்; tear.

க.பொத்தரெ. ம.பொத்து. து.பொட்ரெ

[பொத்து → பொத்தல்]

பொத்தலடை—த்தல் *pottal-aḍai,* பெ. (n.) செ.கு.வி(v.i.) **1.** சுவர் கூரை முதலியவற்றி லுள்ள ஒட்டையை அடைத்தல்; to stop holes, as in a wall or roof **2.** கடன் தீர்த்தல் கொ,வ; to pay off debts **3.** குற்றத்தை மறைத்தல்; to cover a fault with excuses.

[பொத்தல் + அடை]

பொத்தலூசி *pottal-ūci,* பெ. (n.) *பொடியல்* (யாழ்.அக) பார்க்க; see *potiyal.*

[பொத்தல் + ஊசி]

பொத்தற்சுரை *pottar-curai,* பெ. (n.) ஒன்றுக்கும் உதவாதவன் (இ.வ); useless person

[பொத்தல் + சுரை]

பொத்தாறு *pottāṟu,* பெ. (n.) *பொத்தாறுகட்டை* (யாழ்.அக) பார்க்க; see *pottāṟu-k-kaṭṭai,*

[பொருத்து → பொத்து+ஆறு]

பொத்தாறுகட்டை *pottāṟu-k-kaṭṭai,* பெ. (n.) ஏர்க்கால்(வின்.); shaft of the plough

[பொத்தாறு + கட்டை]



பொத்தான் *pottāṉ,* பெ. (n.) சட்டையையுடலில் இட்டு மூடுவதற்கு உதவும் பொருள்; button <fr.bouton <e

[பொருத்து → பொருத்தான் → பொத்தான் 'ஆன்' உடைமைப் பொருளீறு]

பொத்தான்கட்டை *pottāṉ-kaṭṭai,* பெ. (n.) சுவரில் ஆணி முதலியன அடிக்கப் பதிக்கும் மரக்கட்டை (கட்டடநாமா); wooden plug in a wall for fastening nails, etc.

[பொத்தான் + கட்டை]

பொத்தானட்டிகை *pottāṉ-aṭṭigai,* பெ. (n.) கழுத்தணி வகை (இ.வ); a kind of necklet

[பொத்தான் + அட்டிகை]

பொத்தி *potti,* பெ. (n.) **1.** *பொத்தித்தோத்தி* பார்க்க; **2.** *சீலை*(சங்.அக) cloth **3.** மடல்விரியா வாழைப்பூ(யாழ்ப்.); un blown flower of the plantain **4.** சோளக்கதிர்; ear of cōlam in sheath. **5.** தவசக்கதிர்(வின்.) ear of grain in sheath **6.** கன்மணி வகை; a kind of gem. '*மாணிக்கம் எழுபதும் பொத்திநாற்பத் தொன்பதும்*' (s.i.i.iii,143) **7.** தோலுரியாத பனங்கிழங்கு, tender palmyra root with unpeeled rind **8.** ஓர் உயிரின விதைப்பை; scrotum **9.** ஒரு பழைய சோழநகர்; ā an old cōld town. '*பொத்தியாண்ட பெருஞ் சோழனையும்*' (பதிற்றுப் 9. பதி) **10.** வரால்; murrel. '*மத்தியுஞ் சிறுபொத்தியும்*' (குருகூர்ப்பள்ளு)

[பொத்து → பொத்தி]

பொத்தி² *potti,* பெ. (n.) பொது(வின்.); generality

[பொத்து → பொத்தி]

பொத்திக்கரப்பான் *potti-k-karappāṉ,* கரப்பான் வகை; an eruption that spreads on the body of a child

[பொத்தி + கரப்பான்]

பொத்திக்காளான் *potti-k-kāḷāṉ,* பெ. (n.) காளான் வகை(யாழ்.அக); a kind of mushroom

[பொத்தி + காளான்]



பொத்திக்கோரை *potti-k-kōrai,* பெ. (n.) கோரைவகை(வின்.); a kind of sedge

[பொத்தி + கோரை]

பொத்தித்தானம் *potti-t-tāṉam,* பெ. (n.) *பொத்தி*¹, 8 வின் பார்க்க; see *potti*

[பொத்தி + தானம்]

பொத்தித்தோவத்தி *potti-t-tōvatti* பெ. (n.) நார்மடி,(வின்.) garment of fitres

[பொத்தி + தோள்அந்தி → தோள்வந்தி → தோவத்தி]

பொத்தித்தள்ளு–தல் *potti-t-taḷḷu-,* செ.கு.வி. (v.i.) வாழை முதலியன குலை போடுதல் (யாழ்.அக), to shoot binches of flowers, as plantant

[பொத்தி + தள்ளு –தல்]

பொத்திப்பிடி–த்தல் *potti-p-piḍi-*, செ.குன்றா.வி. (v.t.) உள்ளங்கைக்குட்பற்றுதல்; to hold in the closed fist; to clasp

[பொத்தி + பிடி]

பொத்தியாட்டம் *potti-āṭṭam*, பெ. (n.) கண்ணாம்பொத்தியாட்டம்; game where blind folded person tries to catch others.

[பொத்தி + ஆட்டம்]

பொத்திரம் *pottiram*, பெ. (n.) எறிபடை; missile weapon. *'பொத்திரம் பாய்ந்து மாய்ந்தீர்'* (சேதுபு. சங்கரபாண்டி.41.)

[பொள் + திறம் → திரம்]

பொத்திலம் *pottilam*, பெ. (n.) மரப்பொந்து; hole in a tree. *'பொத்திலத் துறையு மாந்தை'* (சீவக.1395.)

[பொந்து + இல்லம் → பொத்திலம்]

பொத்திவை–த்தல் *potti -vai-*, செ.குன்றா.வி 1. மறைத்தல்; to conceal 2. பாதுகாப்புப் படுத்துதல் to keep safe

[பொத்தர் – பொத்திவைத்தல்]

பொத்து–தல் *pottu-*, செ.குன்றாவி. (v.t) 1. புதைத்தல் (பிங்) to bury *'மண்ணிடைக் கடிது பொத்துதல்'* (கம்பரா. விராதன்வதை. 43) 2. வாய், கண், காது முதலியவற்றை மூடுதல்; to cover, close as the mouth, eyes or ears with the fingers or otherwise. *'தன் செவித் தொளையிருகைகளாற் பொத்தி'* (கம்பரா. இரணிய. 22) 3. விரல் மடக்கி உள்ளங்கையை மூடுதல் (இ.வ.) to close the fingers together 4. தைத்து மூட்டுதல்; to mend, patch, botch as baskets an bags. 5. தைத்தல்; to stitch. *'இலையைப் பொத்திப்போடு'* 6. மறைத்தல்; to hide, conceal *'செம்பால் .. கிளர்படி பொத்தின'* (கம்பரா.கரன்வதை. 100) 7. அடித்தல்; to beat. *'அவனை நன்றாய்ப் பொத்திவிட்டார்கள்'*. 8. தீ மூட்டுதல்; to light, as a fire. *'கனையெரி பொத்தி'* (மணிமே. 2,42) 9. மாலை கட்டுதல்; to tie, string together, as a wreath. *'மறுகண்ணியும் பொத்தி'* (ஈடு. 1. 3, 1). 10. கற்பனை செய்தல்; to invent, imagine இல்லாத தெய்வம் பொத்தித்தம் *'மயிர் பறிக்குஞ்சமணர்'* (தேவா. 65. 8,7.)

பொத்து²–தல் *pottu-*, செ.கு.வி. (v.t) 1. கலத்தல்; to mix, *'நெஞ்சம் பொத்தி'* (பு.வெ. 11, ஆண்பால், 4.) 2. நிறைதல்; to be filled. *'வான்மேற் பொத்தினகுழு'*. (கம்பரா. கரன்வதை, 100.).

க.ம. பொத்து

பொத்து² pottu, பெ. (n.) 1. மூடுகை; covering, stopping closing up. 2. அடைப்பு; 3. பொத்தல்; *'அருச்சுனன் அம்பினால் பலபொத்துப் பொத்தினான்'* 4. பொந்து. hole, rat-hole, small cavity, hollow in a tree. (பிங்.) *'முதுமரப் பொத்தில்'* (புறநா.364,11.). 5. வயிறு; stomach. *'பொத்தடைப் பான் பொருட்டால் மையல் கொண்டீர்'* (தேவா.188,6.) 6. தவறு; fault, defect, blemish. *'பொத்தினண் பிற்பொத்தியொடு'* (புறநா.212.) 7. தீயொழுக்கம்; evil; crime; immorality (w.) 8. பொய்; falsehood, lie. *'புல்லறிவு கொண்டு பல பொத்து மொழி புத்தர்'* (திருவாத.பு. புத்தரை.77.) 9. பல்லி; lizard. (பிங்.);

[புல் → பொல் → பொத்து]

பொத்துக்கடி *Pottu-k-kaḍi*, பெ. (n.) 1. படர்தாமரை; ringworm. 2. கரப்பான் வகை; eczema. 3. அண்டவிதை; scrotum.

[பொட்டு → பொத்து+கடி]

பொத்துப்படு—தல் *Pottu-p-paḍu,* செ.கு.வி. (v.i.) **1.** தவறுதல்; to fail. **2.** நோக்கம் கைகூடாது தீமை பயத்தல்; to miscarry and result in evil. '*பலர்நின்று போற்றினும் பொத்துப் படும்*' (குறள்.468.)

[புல் → பொல் → பொத்து+ படு → பொத்துப்படு]

பொத்துப்பாய் *Pottu-p-pāy,* காடுமுருடான பாய். rough or coarse mat. (யாழ்.அக.)

[பொத்து + பாய்]

பொத்துப் பொத்தெனல் *Pottu-p-potteṉal,* பெ. (n.) **1.** ஒலிக்குறிப்பு வகை; onom. expr. signifying a falling with a thud, as of heavy fruits. **2.** தடித்திருத்தற் குறிப்பு; plumpress. '*குழந்தை பொத்துப்பொத்தென்று இருக்கிறது.*'

[பொத்து + பொத்து + எனல்]

பொத்துமான் *Pottu-māṉ,* பெ. (n.) மான்வகை(யாழ்ப்.); a kind of deer. (j.)

[பொத்து + மான்]

பொத்தெனல் *Potteṉal,* பெ. (n.) ஓர் ஒலிக் குறிப்பு; onom. expr. signifying falling with a thud.

[பொத்து + எனல்]

பொத்தை[1] *Pottai,* பெ. (n.) பருமையானது(கொ.வ.); anything large, or bulky.

தெ. பொத்து க.பொஜ்ஜ

[பொத்து → பொத்தை]

பொத்தை[2] *Pottai,* பெ. (n.) **1.** பொத்தல் பார்க்க; '*பொத்தை யூன்சுவர்*' (திருவாச.26,7.). **2.** உடம்பு; body. '*உடம்பு அழுக்குப்பேணும் பொத்தையே போற்றி*' (தேவா.996,1.).

[பொது → பொத்து → பொத்தை]

வே.க (பக்.79)

பொத்தை[3] *Pottai,* பெ. (n.) *பேத்தை1.* பார்க்க; see *pettai*

[பொத்து → பொத்தை]

பொத்தைக்கால் *Pottai-k-kāl,* பெ. (n.) யானைக்கால்; elephantiasis.

[பொத்தை + கால்]

பொத்தைச்சி *Pottaicci,* பெ. (n.) தடித்தவள் (யாழ்.அக.); stout woman.

[பொத்தையன் → பொத்தைச்சி]

பொத்தையன் *Pottaiyaṉ,* பெ. (n.) தடித்தவன். stout man.

[பொத்தை + அன்]

பொதரவண்ணான் *Podara-vaṇṇāṉ,* பெ. (n.) *இராப்பாடி* பார்க்க; see *Irāpāḍi.*

[பொதி → பொதிரை → பொதிரை+ வண்ணான்]

பொதரையன் *Podaraiyan*, பெ. (n.) *பொதர வண்ணான்* பார்க்க; see *podara-vaṇṇāṉ*

[பொதி → பொதிரை → பொதிரையன்]

பொதி¹-தல் *Podi-*, செ.கு.வி. (v.i.) **1.** நிறைதல்; to be full, as in leaning *'மிக்ககனம் பொதிந்த நூல்'* (நாலடி,341.).

பொதி²-தல் *Podi-*. **1.** சேமித்தல்; to store up, treasure up. *'பொன்போற் பொதிந்து'* (குறள்,155.) **2.** உள்ளடக்குதல்; to contain, hold. *'செழுந்தேனும் பொதிந்து'* (திருக்கோ.46.) **3.** மறைத்தல்; to hide, conceal, cover up. *'தூண்டிலினுட் பொதிந்த தேரையும்'* (திரிகடு.24.) **4.** பிணித்தல்; to tie up, as a bundle (w.) **5.** கடைப்பிடித்தல்; to maintain follow, act up to. *'யானிகழ்த்து நீதியைப் பொதிவதுன்கடன்'* (விநாயகபு.4.1.).

[பொத்து → பொத்தி → பொதி]

பொதி³ *Podi*, பெ. (n.) **1.** நிறைவு; fullness, perfection. *'பொதித்தே னுகர்ந்தகலும்'* (தஞ்சைவா. 290.) **2.** மூட்டை; pack, bundle; load, as for a beast; parcel tied in a cloth. *'கண்ணெழுத்துப்படுத்த.....பொதி'* (சிலப்.5,112.) **3.** பலபண்டம் (திவா.); miscellanceous goods. **4.** செல்வம். (திவா.); treasuse. **5.** சொற்பயன். (திவா.); meaning of a word. **6.** ஒருவகை நிறையளவு; pack-load, a measure of weight varying with the locality. **7.** 3 அல்லது 4 கன அடியுள்ள நீர்மப் பொருளளவு வகை; a liquid measure of 3or4c.ft. **8.** 2640 சதுரஅடிகொண்ட நிலவளவு வகை(M.M.); a superficial measure of land, **2,640.** sq.yards. **9.** பிணிப்பு; tie, fastening. *'மலர்ப்பொதிய விழ்த்து'* (காசிக.நாரத.5) **10.** கட்டுச்சோறு (பிங்.); boiled rice tied up for a journey; viaticum. **11.** தொகுதி; collection. *'பெய்கணைப் பொதிகளாலே வளர்ந்தது பிறந்தகோபம்'* (கம்பரா.நாகபா.114.) **12.** அரும்பு; flower bud. *'கமலப் பொதியினை நகுவன புணர்முலை'* (கம்பரா. நாட்.44.) **13.** கொத்து; cluster. *'அம்பொதித்தோரை'* (மலைபடு.121.) **14.** முளை; tender shoots, as of paddy. *'பசும்பொதித் தேறல்'* (மலைபடு.463.) **15.** உடல்; body *'பொதியே சுமந்துழல்வீர்'* (தேவா.1154.9.). **16.** தவிடு (பிங்.); bran. **17.** கரிகாடு (பிங்.); burnt jungle. **18.** மூங்கில் முதலியவற்றின் பட்டை; bark, as of bamboos. *'பையங்கழை பொதிகளைந் தன்ன'* (புறநா.253.) **19.** குடையோலை (திவா.); ola basket used as a cup in eating and drinking. **20.** ஆவு முதலியவற்றின் மடி(C.G.); vadder. **21.** பருமன்; stoutness. ஆள்பொதியாயிருக்கிறான் (உ.வ.) **22.** ஓலைக்குடை (சது.); umbrella made of palm leaves.

[பொது → பொதி]

வே.க. பக்.78

பொதி³ *Podi*, பெ. (n.) **1.** *பொதியில்* பார்க்க: **1.** *'மன்றும் பொதியினு மாமயில்சேர் தஞ்சை வாணன்'* (தஞ்சைவா.34.). **2.** *பொதியம்* பார்க்க; see *podiyam* *'பொதிமா முனிவ'* (சிவதரு. பாவ.23.)

[பொது → பொதி]

பொதி⁴ *Podi*, பெ. (n.) காய்ந்த நன்செய்; dry state of wet land. tinn.

[புழுதி → பொதி]

பொதிகரம் *Podi-karam,* பெ. (n.) காரமருந்து; caustic. "பொதிகாரமிட்ட புண்போல்" (சரவண. பணவிடு.109)

[பொதி + கரம்]

பொதிக்காரன் *Podi-k-kāraṉ,* பெ. (n.) *பொதிகாரன்* பார்க்க; *Podi-k-kāraṉ*

[பொதி + காரன்]

பொதிகாரன் *Podi-kāraṉ,* பெ. (n.) பொதி யெருதுக்காரன்; person who use pack-oxen.

[பொதி + காரன்]

பொதிகெளிறு *Podi-keḷiṟu,* பெ. (n.) கடல்மீன்வகை (J.N.); a seafish

[பொதி + கெளிறு]

பொதியப்பத்துண்டு *Poti-appatuntu,* பெ. (n.) பழக்கூட்டுப் பண்ணியத்துண்டு; tartlet.

[பொதி + அப்பம் + துண்டு]

பொதியப்பம் *Pōdi-appam,* பெ. (n.) பழங்கள் உட்பொதிந்த பண்ணியம்; tartlet.

[பொதி + அப்பம்]

பொதிகை *Podigai,* பெ. (n.) *பொதியம்* பார்க்க; see *podiyam.*

[பொதி→ பொதிகை] வே.க. (பக்.78)

பொதிகைநிகண்டு *Podigai-nigaṇḍu,* கல்லிடைக் குறிச்சியிலிருந்த சுவாமி கவிராயரால்' இயற்றப்பெற்ற தமிழ்ச் சொற்பொருள் நூல்; a tamil lexicon

[பொதிகை +Skt. nighantu.த. நிகண்டு]

பொதிச்சோறு *podi-c-cōṟu,* பெ. (n.) *பொதிசோறு* பார்க்க; see *podi-šōṟu.*

[பொதி + சோறு]

பொதிசோறு podi-šōṟu, பெ. (n.) *பொதி*². *10.* (திவா.) பார்க்க; *'சால மிகப்பசித்தீர் இப்பொதிசோறு தருகின்றேன்'.* (பெரியபு. ஏயர்கோன் 159.)

(பொதி + சோறு)

பொதிந்துவை–த்தல் *podinduvai-,* செ.குன்றா.வி. (v.t). இடைவிடாது மனத்துட் கொள்ளுதல் (யாழ்.அக.); to keep always in memory. "பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து" (திருக் 155)

[பொதிந்து + வை]

பொதிப்பருவம் *podi-p-paruvam,* பெ. (n.) நெற்கதிரிற் பால் பிடிக்கும் பருவம்(இ.வ.); stage in the growth of paddy when the grain is in the milk.

[பொதி + பருவம்]

பொதிப்போதா *podi-p-pōda,* பெ. (n.) பெருநாரை. (அக. நி.); a large heron.

[பொதி + போதா]

பொதிமாடு *podi-māḍu,* பெ. (n.) மூட்டை சுமக்கும் எருது (வின்.); pack bull.

[பொதி + மாடு]

பொதிமுருங்குநோய் *podi-muruṅgu-nōy,* பெ. (n.) சோளப்பயிர் நோய்வகை; a disease affecting cōlam crop. 2. மாட்டுநோய் வகை; a cattle disease.

[பொதி + முருங்கு + நோய்]

பொதியப்பொருப்பன் *podiya-p-poruppan,* பெ. (n.) பாண்டியன். (தி.வா.); pandya king, as lord of mt. potiyam.

[*பொதியம் + பொருப்பன்*]

பொதியம் *podiyam,* பெ. (n.) பாண்டிய நாட்டிலுள்ளதும் அகத்திய முனிவர் இருப்பிடமாகக் கருதப்படுவதுமான மலை; a mountain in pandya country, famed as the abode of Agattiyar. *'பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்றே'* (புறநா.2)

[*பொதி → பொதியம்*]

'அம்' பெருமைப் பொருள் பின்னொட்டு

பொதியவிழ்[1]–தல் *podi-y-avil-,* செ.கு.வி. (v.i.) அரும்பு முறுக்கவிழ்தல்; to blossom out, unfold. *'பொதியவிழ் மாலை வீழ்ந்து'* (சீவக. 1447)

[*பொதி + அவிழ்*]

பொதியவிழ்–த்தல் *podi-y-avil-,* செ.குன்றா.வி. (v.t.) தன் வரலாறு விரித்தல் (இ.வ.) to begin one's tale; lit. to open one's bag. (பையை அவிழ்த்தல்)

[*பொதி + அவிழ் → அவிழ்த்தல்*]

பொதியவெற்பன் *podiya-verpan,* பெ. (n.) *பொதியப் பொருப்பன்.* (சூடா.) பார்க்க; see *podiya-p-poruppan*

[*பொதியம் +வெற்பன்*]

பொதியறு–த்தல் *podi-y-aru-,* செ.கு.வி. (v.i.) பணத்தைக் கவர்தல்; to extort money. *'கணிகையரே போன்றிருந்து பொதியறுக்கும் புத்தன்'* (நீலகேசி குண்டல. 74.).

[*பொதி + அறு*]

பொதியறை *podi-y-arai,* பெ. (n.) காற்றோட்டமில்லாத கீழறை; underground room without air-holes. *'பொதியறைப் பட்டோர் போன்றுளம் வருந்தி'* (மணிமே. 4, 105.)

[*பொதி + அறை*]

பொதியன் *podyan,* பெ. (n.) அகத்தியமுனிவர் (யாழ்.அக.); sage agastya

[*பொதியம் → பொதியன்*]

பொதியன்கெளிறு *podiyan-kēliru,* பெ. (n.) மீன்வகை; a kind of fish *'பொதியன் கெளிறு வவ்வால்'* (பறாளை. பள்ளு.16)

[*பொதி → பொதியன் → கெளிறு*]



பொதியனாபி *podiyanābi,* பெ. (n.) மயிர் (சங்.அக.); hair.

பொதியில் *poti-y-il,* பெ. (n.) **1.** அம்பலம்; public hall. *'தமனியப் பொதியிலும்' (மணிமே. 28, 66)* **2.** *பொதியம்.* பார்க்க; *'ஆஅய் மழை தவழ் பொதியில்' (குறுந். 84.)*

[*பொது + இல் → பொதியில்*]

பொதியுறை *poti-urai,* பெ. (n.) மருந்துறை; capsule.

[பொதி + உரை]

பொதியெருது *potiy-erutu,* பெ. (n.) *பொதிமாடு.* (தனிப்பா. ii, 283, 487.) பார்க்க; *podimadu*

[பொதி + எருது]

பொதிர்[1]–தல் *podir-,* செ.கு.வி. (v.i.) 1. வீங்குதல்; to swell. *'புனைதார் பொர நொந்து பொதிர்ந்த வென'* (சீவக. 1380.) 2. மிகுதல் (வின்.); to increase, abount (w) 3. நடுங்குதல்; to tremble. *'சிரம்பொதிர்ந் தமர ரஞ்ச'* (கம்பரா. பிரமாத். 13) 4. அஞ்சுதல் (தி.வா.) to be afraid.

[பொதி → பொதிர் →பொதிர்தல்]

(வே.க.பக்.78)

பொதிர்[2]–த்தல் *podir-,* செ.குன்றாவி. 1. குத்துதல்; to pierce (v.t.) *'கழை பொதிர்ப்பத் தேன் சொரிந்து'* (சீவக. 2778) 2. முரித்தல்; to break, break off *'கவண்கலான் வார்பணை பொதிர்த்தும்' (தணிகைப்பு. நாட்டுப். 41.)*

பொதிர்[3]–த்தல் *podir-,*செ.கு.வி. (v.i) பருத்தல்; to well, increase in size, became large. 'பொதிர்த்த முலையிடை' (பரிபா. 21, 25.)

[பொதி→பொதி→பொதிர்தல்]
(வே.க.பக்.79)

பொதிர் *podir-,* பெ. (n.) *பொதிர்வு1* பார்க்க; *'மெய்பொதி ரெறிந்துவிம்ம'.* (சூளா. அரசி. 10)

[பொதிர் → பொதிர்]

பொதிர்ப்பு *podirppu,* பெ. (n.) *பொதிர்வு* (திவா.) பார்க்க; *see podirvu*

[பொதிர் → பொதிர் → பொதிர்ப்பு]

பொதிர்வு *podirvu,* பெ. (n.) நடுக்கம், trembling. *'எல்லாவுலகும் பொதிர்வுற'* (கம்பரா. வாலிவ. 30) 2. அச்சம். (சங்.அக.); fear, dread.

[பொதிர் → பொதிர்வு]

பொதிரெறி–தல் *podir-eri,* செ.கு.வி. (v.i.) நடுங்குதல்; to tremble. *'நண்ணோர் பொதிரெறிய வார்த்தான்'.* (கம்பரா. அதிகா. 100)

[பொதிர் + எறி → தல்]

பொதிவு *podivu,* பெ. (n.) பொதியாகக் கட்டுகை (யாழ். அக.) 2. ஒற்றுமை *'அந்த சகோதரர்க்குள் பொதிவுண்';* (இ.வ.) union.

[பொதி → பொதிவு]

பொதிவை–த்தல் *podi-vai-,* செ.கு.வி. (v.i) 1. புதையல் வைத்தல்; to keep a treasure underground. *'பூதலத்திலேதான் பொதிவைத் திரப்பவர்போல்'* (கூளப்ப. காதல். 6). 2. நெற்பயிர் முதலியன காய்பிடிக்கும் பருவமாதல் (நெல்லை); to be big with grains, as standing crop.

[பொதி + வை]

பொதின்பொதினெனல் *podin-podinenal,* பெ. (n.) ஈரடுக்கொலிக்குறிப்பு(வின்.) (யாழ்.அக.) onom. expr. of a recurring sound.

[பொதின் + பொதின் + எனல்]

பொதீர்பொதீரெனல் *poiir-poiir-enal,* பெ. (n.) விழுதல், அடித்தல், முதலிவற்றின் ஈரடுக் கொலிக்குறிப்பு(வின்.) onom. expr. of a recurring sound of falling, as fruits, blows, etc.

[பொதீர் + பொதீர் + எனல்]

பொது—தல் *potu-,* செ.கு.வி. (v.i.) துளைபடுதல்; to be perforated. *'மரம் பொதச்சரந்துரந்து'* (திவ். திருச்சந். 73)

பொது—த்தல் *podu-,* செ.குன்றாவி.(v.t.) 1. துளைத்தல்; to bore. *'புட்கள் பொதுத்த புலால் வெண்டலை'* (பதினொ. மூத்த. 3.) 2. முள் முதலியன பாய்தல்; to pierce, prick. *'கப்பணம் கால்களைப் பொதுக்கும்படி'* (மதுரைக் 598, உரை.)

[பொது → பொது—த்தல்]

பொது[3] *potu.* பெ. (n.) 1. பொதுமையானது. 'that which is common or shared by many; generality, opp. to cirappu. *'பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்'* (குறள், 528.) 2. சிறப்பின்மை; lack of distinction. *'பொதுக் கொண்ட... வதுவை'.* (கலித். 66). 3. இயல்பானது; that which is ordinary or general. ÊĿaOO *'பொதுவின் மண்ணுயிர்க் குலங்களும்'* (கம்பரா. வருணனை. 30.) 4. வழக்கமானது; that which is usual or natural. *'உரை பொதுவே'* (கம்பரா. முதற். 172.) 5. நடுவுநிலை. neutrality. *'அவன் எந்தப் பக்கத்திலும் சேராது பொதுவாயிருக்கிறான்'* 6. ஒப்பு; likeness, equality. *'ஒன்றொடு பொதுப்படா வுயர் புயத்தினான்'* (கம்பரா. நாகபாச. 75.) 7. குறிப்பான பொருளின்மை; (கொ.வ.) vagueness. 8. வெளிப்படையானது; that which is public. 9. மன்று; public place, assembly. *'பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை'* (புறநா. 89) 10. தில்லையம்பலம்; the hall in the temple at chidambaram *'கோலமார் தருப் பொதுவினில் வருகென'* (திருவாச. 2, 128.)

[புது→ பொது]

வே.க. (பக்.78)

ம. பொது. தெ.பொது (பொத்து)

பொதுஅறிவு *pōdu-arivu,* பெ. (n.) *பகுத்தறிவு (நல்லறிவு);* common sense

[பொது + அறிவு]

பொதுஒப்புமை *pōtu-oppumai,* பெ. (n.) *பொதுச்சாயல்* பார்க்க; see *pōtu-c-calai*

[பொது + ஒப்புமை]

பொதுஊழியர் *pōtu-uliyar,* பெ. (n.) அரசுப்பணியாளர்; government servent

[பொது + ஊழியர்]

பொதுஒழுகலாறு *pōtu-olunkalaru,* பெ. (n.) பொது நடத்தைமுறை; common behaviour

[பொது + ஒழுகலாறு]

பொதுஒழுங்கை *pōtu-olunkai,* பெ, (n.) *பொதுச்சாலை* பார்க்க; see *pōdu-c-calai*

[பொது + ஒழுங்கை]

பொதுக்கணக்கு *pōtu-k-kanakku,* பெ. (n.) பொது வரவு – செலவுக்கணக்கு; statement of debits and credits.

[பொது + கணக்கு]

பொதுக்கணக்கர் *pōtu-k-kanakkar*, பெ. (n.) பொது வரவுசெலவுக் கணக்காளர்; common Accountant.

[பொது + கணக்கர்]

பொதுக்கட்டு—தல் *podu-k-kaṭṭu-*, செ. குன்றா.வி. (v.t.) நடுநிலையாளரிடம் தருக்கப் பொருளை ஒப்படைத்தல் (கொ.வ.); to deposit by mutual consent, as with a mediator or panchāyat.

[பொது + கட்டு]

பொதுக்கருத்து *pōdu-k-karuttu*, பெ. (n.) பொதுநலக்கருத்து; common welfare idea.

[பொது + கருத்து]

பொதுக்காரியம் *podu-k-kāriyam*, பெ. (n.) குமுகாய நலத்துக்கேற்ற செயல்(கொ.வ.); matter concerning a community or the general public.

[பொது + காரியம்]

(skt. kārya - த. காரியம்)

பொதுக்கு—தல் *podukku-*, செ.குன்றா.வி. (v.t.) 1. விலக்குதல்; to omit, leave out. 2. மறைத்தல்; to conceal. 'விழிவேல் பாய்ந்து பொதுக்கிடம் விடாதென்னாகம் புகுந்து' (இரகு. கடிமண. 49.) 3. கவர்தல்; to embezzle.

[பதுக்கு → பொதுக்கு]

பொதுக்கு²—தல் *potukku-*, செ.குன்றா.வி. (v.t.) புகையிற் பழுக்க வைத்தல்; to riper fruits by funigation. *'வாழைக்காய்களைக் கனியாகுமாறு இலை முதலியன இட்டுப் பொதுக்குகிறார்கள்'* (இ.வ.)

[பொதி → பொதுக்கு]

பொதுக்கு³ *podukku* பெ. (n.) 1. விலக்கு; omission. *'பொதுக்கற வுரைக்குமது'* (இரகு. மீட்சி. 18.) 2. ஒதுக்கு (சங்.அக.); secluded place. 3. மறைப்பு (சங்.அக.); concealment.

[பொதி → பொதுக்கு]

பொதுக்குணம் *potu-k-kuṇam*, பெ. (n.) *பொதுத்தன்மை* பார்க்க; see potu-t-*taṉmai*

[பொது + குணம்]

பொதுக்குழு *pōdu-k-kuḻu*, பெ. (n.) 1. பொதுத்திட்டமிடல் குழு; group of common estimate. 2. ஓர் அமைப்பின் உறுப்பினர் கூட்டம்; General body of an organization.

[பொது + குழு]

பொதுக்கூட்டம் *pōdu-k-kuttam*, பெ. (n.) ஒரு குறிப்பிட்ட கருத்தை மக்களிடையே எடுத்துச் சொல்லப் பொது இடத்தில் நிகழ்த்தப் பெறும் மேடைப்பேச்சு, mass meeting. public meeting.

[பொது + கூட்டம்]

பொதுக்கெனல்¹ *podukkeṉal*, பெ. (n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom expr. of (a) sudden noise. (b) நெகிழ்தற் குறிப்பு; yielding to pressure.

[பொதுக்கு + எனல்]

பொதுக்கெனல்² *podukkeṉal*, பெ. (n.) ஞெரேரெனல் (அக்நா. 39. உரை); onom expr of suddeness

பொதுக்கை *podu-k-kai*, பெ. (n.) பல கூத்துக்கும் பொதுவான நளிநயக்கை வகை;

(சிலப். 3.18. உரை.); (nātya): a gesture of hand common to different kinds of dances.

[பொது + கை]

பொதுக்கோ *podukkō-,* இ.சொல். *int.* சடக்கென;hurriedly or suddenly. *'புள்ளிதுவென்று பொதுக்கோவாய் கீண்டிட்ட'* (திவ். பெரியாழ். 2, 5, 4.)

[பொதுக்கு → பொதுக்கோ]

பொதுக்கோட்பாடு *pōtu-k-kotpatu,* பெ. (n.) பொதுநெறிமுறை; general principle.

[பொது + கோட்பாடு]

பொதுங்கு—தல் *podungu-,* செ.கு.வி. (v.i.) வருந்துதல்; to suffer. *"பொதுங்கிய வைவரை"* (திருமந். 2914.)

[பொசுங்கு → பொதுங்கு]

பொதுச்சட்டம் *pōtu-c-cattam,* பெ. (n.) பொதுநெறிமுறை; general rule.

[பொது + சட்டம்]

பொதுச்சதுக்கம் *pōtu-c-catukkam,* பெ. (n.) நகரின் நடுவில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தெருக்கள் சந்திப்பதால் ஏற்படும் பரந்த வெளியிடம்.open space in the middle of the town formed by the meeting of two or more streets.

[பொது + சதுக்கம்]

பொதுச்சாயல் *pōtu-c-cayal,* பெ. (n.) பொது ஒப்புமை; common resemplance.

[பொது + சாயல்]

பொதுச்சாலை *pōtu-c-calai,* பெ. (n.) பொது ஒழுங்கை; common road.

[பொது + சாலை]

பொதுச்சீர் *podu-c-cir,* பெ. (n.) நாலசையாலாகிய வஞ்சிப்பாவில்' வரக்கூடியனவும், தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்பவற்றோடு தண்ணிழல், தண்பூ நறும்பூ,நறுநிழல் என்பவற்றைத் தனித்தனிச் சேர்ப்பதனால் தோன்றுவனவுமான 16 சீர்கள் (காரிகை. உறுப். 5); (pros) vañji; feet of four syllables peculiar to vanci, verse, of which there areāūs , the formulas being formed by adding to tēma, puḷimā, karuviḷam, kūviḷam, each of the terms taṇṇiḻal, taṇpū, naṟumpu,naṟuniḻal.

[பொது + சீர்]

பொதுச்சூத்திரம் *podu-c-cūttiram,* பெ. (n.) பொதுவான இலக்கணங் கூறும் (சூத்திரம்) நூற்பா; (gram) aphorism stating a general rule.

[பொது + SKt. sūtra. *த.சூத்திரம்]*

பொதுச்செய்தி *pōtu-c-cithi,* பெ. (n.) பொது நடப்புச் செய்தி; common topic.

[பொது + செய்தி]

பொதுச்செலவு podu-c-celavu, பெ. (n.) **1.** காவல்முதலியவற்றிற்குநில உரிமையாளர் களத்திற் செலவிடும் தவசம்(R.T); general charges in kind met by land-owners on the threshing-floor. **2.** பொதுப் பணத்திலிருந்து ஊரார் முதலியோர் செலவிடுந்தொகை; expenses met from a common fund, as of a villages.

[பொது + செலவு]

பொதுச்சொத்து potu-c-cottu, பெ. (n.) 1. பொது நன்மை, வேளாண்மைக்குத் தகுதியின்மை முதலிய காரணங்களினால் தீர்வை குறிக்கப்படாமலும், பயிரிடாமலும் விடப்பட்ட நிலம்; land exempt from assessment, either because it is set aside for communal purposes or because it is uncultivable (M.N.A.D-ā.ṟōḍ) 2. பொட்டல்காடு, dry land. *"அந்திக்கடைப் பொட்டல்" "பூமி சில பொட்டலற்" (தாயு.எந்நாட்.1242)* 3. பலருக்குப் *பொதுவான இடம்,* common property. *புறம்போக்கு – வரண்ட வெற்று நிலம்.*

[பொது + சொத்து]

பொதுச்சொம் podu-c-com, பெ. (n.) பொதுப்படையான சொத்து; (யாழ்.அக) common property.

[பொது + சொம்]

பொதுச்சொல் podu-c-col, பெ. (n.) 1. எல்லாரும் அறிந்த சொல்; word in general use. 2. இருதிணைகட்கும் பொதுவாகிய சொல்; (Gram) word common to both the tiṇai. '*ஒன்றொழி பொதுச்சொல்*' (நன்.269) 3. உலகம் பலர்க்கும் பொது என்ற சொல்; world inplying common possession, as of the world. '*போகம் வேண்டிப் பொதுச் சொற் பொறாஅது*' (புறநா.8) 4. படலம் முதலிய நூற்பகுதிக்குத் தலைப்பாக இடும்சொல்; general heading '*பொதுச் சொற்றானே படர்வது படலம்*' (சூடா)

[பொது + சொல்]

பொதுசனம் podu-šaṉam, பெ. (n.) 1. பொது மக்கள்; the public. 2. நடுநிலையாளர்கள்; arbitrators.

[பொது + skt.Jana. *த.சனம்]*

பொதுஞானம் podu-ñāṉam, பெ. (n.) பொது அறிவு; differentiated knowledge. '*பொது ஞானம் வந்தணுகி*' (கோயிற்பு. இரணிய.38)

[பொது + pkt.ñāna.skt.jñāna. *த. ஞானம்]*

பொதுத்தன்மை podu-t-taṉmai, பெ. (n.) 1. நடுவுநிலைமை; neutrality. 2. பெரும்பாலும் காணப்படும்குணம்; commonness, generality. 3. உவமான உவமேயங்களில் அமைந்துள்ள பொதுவான இயல்பு (அணியி.1); attribute common to uvamāṉam and unamēyam, as redness to coral and to the lips.

[பொது + தன்மை]

பொதுத்திட்டம் potu-t-titam, பொ. (n.) பொது மதிப்பீடு; common plan.

[பொது + தேர்தல்]

பொதுத்திணை podu-t-tiṇai, பெ. (n.) இரு திணைகட்கும் பொதுச்சொல்(வின்); word, common to both the tiṇai.

[பொது + திணை]

பொதுத்துறை podu-t-tuṟai, பொ. (n.) *பொதுநிறுவனம்* பார்க்க; see *podu-niṟuvaṉam.*

[பொது + துறை]

பொதுத்தேர்தல் podu-t-tērdal, பொ. (n.) நாடாளுமன்றம்–சட்டமன்றம் ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க 18–அகவை நிரம்பிய ஆண்–பெண் அனைவரிடமும் நேரி(vote) பெறுவதற்கான தேர்தல்; act of choosing by vote, general election.

[பொது + தேர்தல்]

பொதுத்தேர்வு pōdu-t-tērvu, பொ. (n.) மாணவர்களின் திறமையறிய நடத்தப்படும் தேர்வு; publicexamination.

[பொது + தேர்வு]

பொதுத்தோற்றம் potu-t-totram, பொ. (n.) நேர்த்தியான தோற்றம்; get-up, general appearance.

[பொது + தோற்றம்]

பொதுநடுவர் podu-naḍuvar, பெ. (n.) நடுநிலையாளர் (யாழ்.அக); arbitrators.

[பொது + நடுவர்]

பொதுநலத்தார் podu-nalattār, பெ. (n.) பொதுமகளிர்; prostitutes. '*பொதுநலத்தார் புன்னலந் தோயார்*' (குறள்.915)

[பொது + நலம் → நலத்தார்]

பொதுநலப்பண்பு pōtu-nalappanpu, பெ. (n.) பொதுநலம் பேணும் பண்பு; common weal.

[பொதுநலம் + பண்பு]

பொதுநலம் podu-nalam, பெ. (n.) 1. *பொது நன்மை* பார்க்க; see *podu nanmai* 2. பொருள் கொடுப்பார் பெறுஞ்சிற்றின்பம்(குறள்.915); sexual enjoyment avail able for hire.

[பொது + நலம்]

பொதுநன்மை podu-naṉmai, பெ. (n.) பொதுமக்களுக்கு உற்ற நன்மை; common weal, public good.

[பொது + நன்மை]

பொதுநாயகம் podu-nāyagam, பெ. (n.) எல்லாவற்றிற்குந் தலைமை; universal severeignty. "பொதுநாயகம் பாவித்து இறுமாந்து"(திவ்.பெரியாழ்.4,9.4)

பொதுநிலம் potu-nilam, பெ. (n.) 1. பலருக்குப் பொதுவானநிலம்; land held in joint ownership. 2. குமுகாய நன்மைக்காகச் சிற்றூர்களில் பயிரிடாது விடப்பட்ட நிலம்; land left uncultivated in a villege for communal purposes.

[பொது + நிலம்]

பொதுநிறம் podu-niṟam, பெ. (n.) 1. மாநிறம்(வின்); complexion between fair and black, as an indefinite middling colour.

[பொது + நிறம்]

பொதுநிறுவனம் poṟu-niduvaṉam, பெ. (n.) அரசின் பொது வெளியீடு மற்றும் ஊர்திகள் செயலொழுங்குத்துறை; public department.

[பொது + நிறுவனம்]

பொதுநீக்கு-தல் podu-nīkku, செ.குன்றா.வி. (v.t.) 1. பொதுமையை விடுத்தல்; to avoid generality. '*பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க்கென்றும் பெருந்துணையை*' தேவா. 13,5) 2. தனக்கே உரிமையாக்குதல்; to make one's own.

[பொது + நீக்கு]

பொதுநீங்குவமை podu-nīṅguramai, பெ. (n.) 1. *இயைபின்மையணி*(தண்டி.30,23) பார்க்க; see *iyaibiṉmai-y-aṇi* a figure of speech.

[பொது + நீங்கு + உவமை]

பொதுநூல் pōdu-nūl, பெ. (n.) எல்லாப் பிரிவினருக்கும் பொதுவான நூல்; அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலில் உலக மாந்தரினம் அனைவரும் வியந்து ஏற்கும் அறநெறி, பொருளாக்கம், வாழ்வியல் ஒழுகலாறு ஆகிய மெய்ப்பொருள் உண்மைகளை உள்ளடக்கிய திருக்குறள் குறிப்பிடத்தக்கது. treatise on fundamental principles acceptable to all religionists.

[பொது + நூல்]

பொதுநெறி podu-neṟi, பெ. (n.) யாவரும் செல்லும் வழி; common way. '*உயிர்போகு பொதுநெறி*' (சிலப்.28,173)

[பொது + நெறி]

பொதுநோக்கு podu-nōkku, பெ. (n.) 1. எல்லாரையும் ஒப்ப நோக்குகை; impartial regard, as of a king. '*பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே*' (புறநா. 121) 2. மாறுபாடான பார்வை; indifferent look '*ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்*' (குறள்.1099) 3. பகுத்தறிவு;common sense. '*எம்மி டத்தேயமைந்துள்ளஅறிவின் அகலத்தளவாகப் பொதுநோக்காக நோக்கி*' (பிரபஞ்சவி. 20)

[பொது+நோக்கு]

பொதுநோக்கம் pōtu-nōkkam, பெ. (n.) பொதுநலப் பார்வை; public intrest.

[பொது + நோக்கம்]

பொதுப்பங்கு pōtu-p-panku, பெ. (n.) *பொதுச்சொத்து* பார்க்க; see *potuccottu.*

[பொது + பங்கு]

பொதுப்படு-தல் podu-p-paḍu, செ.கு.வி. (v.i.) 1. பொதுவாதல்; to be general '*பொதுப்படக் கூறி வாடியழுங்கல்*' (திருக்கோ. 354) 2. ஒப்பாதல்; to agree. '*பொன்னொடே பொருவினல்ல தொன்றொடு பொதுப்படாவுயர் புயத்தினான்.*' (கம்பரா. நாகபாச. 75)

[பொது + படு-,]

பொதுப்படை podu-p-paḍai, பெ. (n.) பொதுவானது; that which is common.

[பொது + பொதுப்படு → படை]

பொதுப்பட்டியல் potu-p-patiyal, பெ. (n.) பொதுவான பட்டியல்; common list.

[பொது + பட்டியல்]

பொதுப்பண் podu-p-paṉ, பெ. (n.) இரவும் பகலும் பாடற்கு உரியபண்(சங்.அக); musical mode fit to be sung during both day and night.

[பொது + பண்]

பொதுப்பண்பு potu-p-panpu, பெ. (n.) பொதுநலன்; common charactor.

[பொது + பண்பு]

பொதுப்பணம் podu-p-paṇam, பெ. (n.) பொதுவான தொகை; common fund.

[பொது + பணம்]

பொதுப்பணி potu-p-pani, பெ. (n.) அறப்பணி சார்ந்த பொது நலப்பணி; public welfare work.

[பொது + பணி]

பொதுப்பணித்துறை podu-p-paṇi-t-tuṟai, பெ. (n.) சாலைப்போக்குவரத்து; நீர்நிலைகள், அரசுக்குச்சொந்தமானகட்டடங்கள் முதலியவற்றைப் பேணுகை; Public Works Department.

[பொதுப் + பணித்துறை]

பொதுப்பாதை potu-p-patai, பெ. (n.) பொதுவழி; common road.

[பொது + பாதை]

பொதுப்பால் pōdu-p-pāl, பெ. (n.) ஆண்–பெண் இரண்டும் குறிக்கும் பொதுப் பால்; common gender.

[பொது + பால்]

பொதுப்பாயிரம் podu-p-pāyiram, பெ. (n.) நூலியல்பு, நுவல்வோன்திறம், நுவலுந்திறன், கொள்வோன்கூற்று, கோடற்கூற்று ஆகியவற்றைப் பற்றிக் கூறும் முன்னுரை; general preface dealing with the nature of treatises, and authors, the method of teaching students and the method of study, opp. to ciṟappu-p-pāyiram. "எல்லா நூற்குமிலை பொதுப்பாயிரம்" (நன்.2)

[சிறப்பு + பாயிரம்]

பொதுப்பெண் podu-p-peṇ, பெ. (n.) *பொது மகள்*[1](சூடா) பார்க்க; see *podu-magaḷ*.

[பொது + பெண்]

பொதுப்பெண்டு potu-p-pentu, பெ. (n.) *பொதுமகள்*[1] பார்க்க; see *podu-magaḷ* '*பொதுப்பெண்டி ரல்குற்புனை மேகலை*' (கம்பரா.வரைக்கா.76)

[பொது+பெண்டு]

பொதுப்பெயர் podu-p-peyar, பெ. (n.) **1.** பல பொருட்குப் பொதுவாகிய பெயர்(நன். 62. உரை); generic name, opp. to cirappu-p-peyar **2.** இருதிணைக்கும் அல்லது அஃறிணை இருபாற்கும் பொதுவாகவரும் பெயர்(நன்.281–282); noun common to both tiṇai, or both numbers in aṟrinai

[பொது+பெயர்]

பொதுப்பேச்சு podu-p-pēccu, பெ. (n.) **1.** பொதுப்படையான சொல்; indefinite language or talk. **2.** ஈர்ப்பாற்றல் வாய்ந்த பேச்சு(வின்); ambiguous talk.

[பொது+பேச்சு]

பொதுப்பொல்லாங்கு potu-p-pollanku, பெ. (n.) *பொல்லாங்கு* பார்க்க; see *pollanku*.

[பொது + பொல்லாங்கு]

பொதுபொதெனல் podu-podeṉal, பெ. (n.) **1.** வர வர மிகுதியாதற்குறிப்பு(சங்.அக); gradual increase **2.** ஆடை முதலியன அழுத்தமின்மைக்குறிப்பு; softness, as of texture. **3.** ஈரத்தால் நனைந்திருந்தற் குறிப்பு(வின்); yielding to pressure on account of dampness, as a wall.

[பொது + பொது + எனல்]

பொதும்பர் podumbar, பெ. (n.) **1.** மரம் செறிந்த இடம்; thick grove. '*பொழிலின் வியன் பொதும்பரின்*' (திருக்கோ. 39) **2.** இளமரக்கா; park, pleasure garden. "வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்" (பெரும்பாண். 374) **3.** *பொதும்பு*[1](சங்.அக); பார்க்க; see *podumbu*[1].

[பொதும்ப்+ அர்]

பொதும்பல் podumbal, பெ. (n.) பொதுவருவாய்(J.N.); general income.

பொதும்பு podumbu, பெ. (n.) 1. சோலை; grove. '*காந்தளம் பொதும்பில்*' (அகநா. 18) 2. குறுங்காடு; shrubbly jungle. '*முல்லையம் பொதும்பின்*' (சீவக.3042) 3. மரப்பொந்து(பிங்); hole, hollow in a tree. 4. குழி; pit. '*பொதும்பினில் வீழ்ந்து வழுக்கி*' (திவ். பெரியாழ். 5,2,7) 5. குகை; cave. மேருவின் பொதும்பில்' (கம்பரா.மீட்சிப்.325)

[பொது → பொதும்பு]



பொதுமக்கள் podu-makkaḷ, பெ. (n.) 1. பொதுவகைமக்கள்; the general public. 2. சிறப்பில்லாத மக்கள்; ordinary men, men of ordinary intellect. '*புலமிக்க வரைப் புலமை தெரிதல்...பொதுமக்கட் காகாதே*' (பழமொ.5)

[பொது + மக்கள்]

பொதுமகள் podu-magaḷ, பெ. (n.) 1. பரத்தை(பிங்); whore, harlot. '*பொது மகளாப் புதல்வரி தாம்*' (கோயிற்பு.பதஞ்ச.26) 2. இடைக்குலப் பெண்; shepherdess. பொது மகளி ரெல்லாரும்....புக்கார் பொதுவரோடு (கலித்.101)

[பொது + மகள்]

பொதுமடந்தை podu-maḍandai, பெ. (n.) 1. *பொதுமகள்* பார்க்க; see *podumagaḷ*. '*பொது மடந்தையர் தமக்கும்....புதுமையல்ல*' (பாரத. கிருட்டிண. 128)

[பொது + மடந்தை]

பொதுமத்தியம் podu-mattiyam, பெ. (n.) 1. பொதுவானது (யாழ்.அக); that which is common or general.

[பொது + skt. madhyama.த.மத்தியம்]

பொதுமதிப்பீடு podu-madippīḍu, பெ. (n.) பொதுக்கணிப்பு; common estimate.

[பொது + மதிப்பீடு]

பொதுமருத்துவம் potu-marutuvam, பெ. (n.) பொதுபண்டுவம்; common treatment.

[பொது + மருத்துவம்]

பொதுமருத்துவமனை podumarutuvamaṉai, பெ. (n.) பொதுவகைப் பண்டுவத்திற்கான மருத்துவ மனை; general hospital.

[பொது + மருத்துவமனை]

பொதுமறை podu-maṟai, பெ. (n.) பொது அற நூல்; (ஒழுக்கவியல்) மொழி, சமயம், இனம், நாடு முதலான சார்புகளின்றி மக்கட்குலம் முழுமைக்கும் பொதுவான அறநெறிகளை வகுத்துரைப்பதால், திருக்குறளை அறிஞர் உலகம் பொதுமறை எனப் போற்றுகிறது,

[பொது + மறை]

பொதுமனப்பாங்கு potu-manappanku, பெ. (n.) பரந்தமனப்பாங்கு; broad minded.

[பொது + மனப்பாங்கு]

பொதுமனிதன் podu- maṉidan, பெ. (n.) 1. நடு நிலையாளர்(வின்), mediator (W) 2. ஒரு பக்கமும் சாராதவன், dis-interested person.

[பொது + skt.manu-ja. த.மனிதன் *]*

பொதுமுதல் podu-mudal, பெ. (n.) கூட்டுவணிகத்தின் முதலீடு, Joint Stock.

[பொது + k.mudal. *த. முதல்]*

பொதுமை podumai, பெ. (n.) 1. இயல்பானது; ordinariness; superficiality *'பொதுமை பார்க்கின்'* (கம்பரா, மாயாசீ. 71) 2. பொது வுடைமை, Common property. *'பூவின் மேலிருந்த தெய்வத்தை யாலும் பொதுமை யுற்றாள்'* (கம்பரா, மாயாசனக.62)3.நன்மை; goodness. *'புரிகின்ற காரியத்தின் பொதுமை நோக்கி'* (கம்பரா, மருத்து. 29)

[பொது → பொதுமை]

'மை' பண்புப் பெயரீறு

பொதுமை உருவரை pōtumai-uruvarai, பெ. (n.) முன்மாதிரி வரைபடம்; common desin.

[பொதுமை + உருவரை]

பொதுமொழி podu-moḻi, பெ. (n.) 1. சிறப்பில்லாச் சொல், word or speech not worthy of any regard, platitude. *'ஏதின்மாக்கள் பொதுமொழி கொள்ளாது'* (புறநா.58) 2. குறிப்பான பொருளில்லாத சொல், indefinite speech, vague genetal expression. 3. பொதுப் படையான சொல் (நன்); term of general application. 4. பிரியாது நின்ற விடத்து ஒரு பொருளும் பிரிந்தவிடத்து வேறு பொருளும் பயக்கும் சொல் (நன். 260); a word, dearing in a compound a meaning different from its ordinary sense. 5. பொதுச்சொல்,[3]பார்க்க *'பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளும்'* (கலித். 68) (பிங்) 6. *பொதுச்சொல்*[4] பார்க்க; see *podu-c-col.* [3] *'பொதுமொழி படரின்'* (நன். 17)

[பொது + மொழி]

பொதுவசனம் podu-vašaṉam, பெ. (n.) 1. ஊரில் வழங்கும் சொல், common saying; rumour. 2. பலபொருள் தரும் ஒரு சொல் அல்லதுதொடர்(வின்); ra word, phase or sentence of more than one meaning(w) 3. *பொதுமொழி,* 2,3(வின்) பார்க்க; see *podu-mōḻi.*

[பொது + வசனம்]

(skt. Vasana *த. வசனம்)*

பொதுவர் poduvar, பெ. (n.) 1. இடையர்; herdsmen 'புன்பொதுவர் வழிபொன்ற'; (பட்டினப் 281). 2. நடுநிலையாளர்; mediators. 3. பொதுமகளிர்; Prostitutes. *'பொதுவர் பொலி மறுகும்'* (மணிமே. 28, 51).

[பொது + அர் → பொதுவர்]

பொதுவறிவு podu-v-aṟivu பெ. (n.) 1. உலக நடப்புகளைப்பற்றியவறிவு; General knowledge *'பொதுவறி விகழ்ந்து புலமுறு மாதவன்'* (மணிமே. 1984)

[பொது + அறிவு]

பொதுவறு—தல் podu-v-aṟu-, செ.கு.வி. (v.i.) ஒருவனுக்கே யுரியதாதல்; to become exclusively one's own. *'பொலங்கிளளர் மானந்தானே பொதுவறக் கொடுப்பென்'* (கம்பரா. மாயாச 51)

[பொது + அறு]

பொதுவறு சிறப்பு podu-v-aṟu-širappu, பெ. (n.) தனக்கேயுரிய சிறப்பு; exclusive quality, special characteristic '*பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்*' (சிலப். 1, 16)

[பொதுவறு + சிறப்பு]

பொதுவனுமானம் podu-v-aṉumāṉam, பெ. (n.) ஒன்று உள்ளது கொண்டுஅதனுடன் காணப்படும் வேறொன்று உளது என்று கொள்ளும் கருதலளவை வகை (சி.போ 1. பாண்டிப்.); (log) inference of the existence of a thing by the presense of a concomitant, conisdered not wholly conclusive but only probable and consistant, opp to ciṟappaṉu- māṉam,

[பொது + skṭ.anumāna- *த.அனுமானம்]*

பொதுவாக podu-v-āga, (வி.எ.) (adv) 1. ஒன்றைச் சிறப்பித்துக் கூறாமல், generally, commonly. 2. நடுவுநிலையாக; impartially.

[பொது + ஆக → பொதுவாக]

பொதுவாய்பாடு potu-vaipatu, பெ. (n.) பொதுக்கணிப்பேடு; common tables.

[பொது + வாய்பாடு]

பொதுவாள் podu-v-āḷ, பெ. (n.) 1. *பொது மாந்தன்* பார்க்க; see *podu-manidaṉ*. 2. கோயில் மேற்பார்வைப் பணி செய்யும் மலையாள சாதியினார்; a caste in malabār whose hereditary occupation is temple management. '*பொதுவாள்கையில் நீரோட்டி*' (T.A.S. iv, 9)

[பொது + ஆள்]

பொதுவிதி podu-vidi, பெ. (n.) பொதுவான இலக்கணம் (பொருள் 166, உரை); (gram) general rule.

[பொது + skṭ.vidhi. *த. விதி]*

பொதுவியர் poduviyar, பெ. (n.) இடைச்சியர் (சூடா), (திருக்கோ 136, உரை) wormen of the shephered tribe.

[பொதுவர் → பொதுவியர்]

பொதுவியல் podu-v-iyal, பெ. (n.) 1. பலவற்றிற்குப் பொதுவாகவுள்ள குணம் (சி.போ 1,4); general attribute, common characteristics. 2. உவமானவுவமேயங் களுக்குள்ள இயல்பான தன்மை; (rhet) attribute common to vuamāṉam and vuamēyam 3. பொதுவிலக்கண முணர்த்தும் நூற்பகுதி (நன்); section of grammar dealing with general principles. 4. வேத்தியற்கு வேறான கூத்துவகை (சிலப் 14, 148), a dance, opp to vēttiyal.

[பொது + இயல்]

பொதுவில் podu-v-il, பெ. (n.) அம்பலம் (அக.நி); public hall '*பெருங்கண நாதர் போற்றிப் பொதுவினின்றாடும்*' (பெரியபு திருமலைக்கு 10)

பொதுவிலக்கணம் podu-v-ilakkaṉam, பெ. (n.) சிறப்பாகவின்றிப் பலவற்றுக்கும் பொதுவாகக் கூறும் நெறி (நன் 62 உரை) (gram) common or general rule.

[பொது + இலக்கணம்]

பொதுவிலே விடு–தல் poduvilē-viḍu-, பெ. (n.) 1. ஒரு பொருளை எல்லோர்க்கும் பயன்படும் படி அமர்த்தல்; to let things to be enjoyed in common. 2. பொருளைப் பாதுகாவாது விடுதல்; (இ.வ.); to leave things uncared for.

பொதுவுடைமை pōdu-udaimai, பெ. (n.) பொதுமை; Common Property.

[பொது + உடைமை]

பணநாட்டமின்றி, எல்லாரும் தத்தமக்கியன்ற பணியைச் செய்து, எல்லாப் பொருள்களையும் ஒத்த உரிமையோடு பயன்படுத்தி ஒற்றுமையாக வாழும்குடும்பஅல்லது கூட்டுக் குடும்ப வாழ்க்கையே பொதுவுடைமை (ம.வி.(அ).வ.கூ.)

பொதுவெழுத்து podu-v-eḻuttu, பெ.(n.), ஆரியந் தமிழ்களுக்குப் பொதுவாயுள்ள எழுத்து. (நன். 150); (gram) letter common to both tamil and sanskrit.

[பொது + எழுத்து]

பொதுவை poduvai, பெ.(n.), பொதுமகள், 1. பார்க்க, *'பொதுவைய ரகம் புகுந்து'* (திருப்பு. 129.)

[பொது → பொதுவை]

பொதுளகரம் podu-ḷagaram, பெ. (n.) தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான 'ள' என்ற எழுத்து; the tamil letter 'ḷ' as being common to tamil and sanskrit, dist fr. ciṟappu-ḷagaram

பொதுளு–தல் poduḷu-, செ.கு.வி. (v.i.), 1. நெருங்குதல் (சூடா); to be thick, close or crowded. *'சிகையனல் பொதுளியல்'* (கம்பரா. இந்திரசித்து 20) 2. நிறைதல்; to be possessed of, filled. *'ஞானங் குணங்கல்வி நூல் பொதுளி'* (அரிசமய. பரகால. 7.) 3. தழைத்தல்; to be luxuriant; to prosper thrive. *'இருள்படப் பொதுளிய'* (திருமுரு. 10.)

தெ. பொத. க. பொதெ.

[பொது → பொதுளு]

பொதை podai, பெ.(n.), செடி(C.G); bush.

தெ. பொத. க. பொதெ.

[பொது → பொதை]

பொந்தந் தடி pondantaḍi, பெ.(n.), பெருந்தடி (நெல்லை); a big club.

[மொந்தை → மொந்தம் → பொந்தம் + தடி]

பொந்தர்[1] pondar, பெ. (n.), பொந்து; hole, (இ.வ.) hollow.

[பொந்து → பொந்தர்]

பொந்தர்[2] pondar, பெ.(n.), ஒருவகை நீர்ப்புள்(வின்); a water bird.

[பொந்து → மொந்தர்]

பொந்தி pondi, பெ.(n.), 1. உடம்பு; body. *'சோற்றினால் வளர்த்த பொந்தி'* (திருப்பு. 731.) 2. பருமை (சங்.அக.); stoutness 3. மரத்தினாற் செய்த வாள்(வின்); wooden sword.

[பொந்து → பொந்தி]

பொந்திக்கை pondikkai, பெ. (n.), பொருந்துகை; union.

[பொருந்து → பொருந்திக்கை]

பொந்திகை pondigai, பெ.(n.), மனநிறைவு, (இ.வ.) self satisfaction.

[பொருந்து → பொந்திகை]

பொந்திகைச் சுற்றுலா pontikai-c-cutrula, பெ. (n.) இன்பச் சுற்றுலா; act of enjoying.

[பொந்திகை + சுற்றுலா]

பொந்திகையுலா pontikai-ulla, பெ. (n.) இன்பச்சிற்றுலா; picnic, trip for pleasure.

[பொந்திகை + உலா]

பொந்து pondu, பெ. (n.) 1. மரப்பொந்து; hole, recess, hollow in a tree. '*ஆனந்தத் தேனிருந்த பொந்தை*' (திருவாச. 13, 2) 2. எலி முதலியவற்றின் வளை; hole in the ground, as of rat or snake. 3. பல்லி (பிங்.); lizard.

தெ.பொந்த

[பொத்து → பொந்து]

பொந்துக்கோரை pondu-k-kōrai, பெ.(n.), கோரை வகை(வின்); a sedge.

[பொந்து + கோரை]

பொந்துத்தேன் pondu-t-tēṉ, பெ. (n.), மரப்பொந்து முதலியவற்றில் வைக்கப்பட்ட தேன்(வின்); honey gathered in the hollow of a tree, crevice, etc.

[பொந்து + தேன்]

பொந்தை pondai, பெ. (n.), 1. சீலையோட்டை; rent in a cloth. 2. உடம்பு; body. 3. மயிர்ச்சிக்கு; stickness of hair. '*மயிர் பொந்தையாகவிருக்கிறது*'.

க. பொந்தெ.

[பொந்து → பொந்தை]

பொந்தைக்கோல் pondai-k-kōl, பெ. (n.), **பொந்தையக்கோல்.** பார்க்க; see *ponta-yakkol.*

[பொந்தை + கோல்]

பொந்தையக்கோல் pondaiya-k-kōl, பெ. (n.) பூண்கட்டின தடி(வின்); staff with a ferule.

[பொந்தை + கோல்]



பொம்மக்காதேவி pommakkā-dēvi, பெ.(n.), தொட்டியருடைய குல தெய்வமும் மாயக் கலையினர் வணங்குவதுமாகிய ஒரு தேவதை; (E.T. IV, 189.); patron deity of the tōttiya caste, worshipped also by jugglers.

[பொம்(மை) → (இ)யக்காதேவி]

பொம்மல்[1] pommal, பெ. (n.) பொலிவு; fine appearance. '*ஒளிர்பொன்னனைய பொம்மனிறம்*' (கம்பரா. உருக்கா. 68) 2. மிகுதி (திவா.); abundance, copiousness. '*புகுந்த வவ்விருளின் பொம்மல்*' (இரகு. இலவண. 55.) 3. பருமன்; size, thickness,

plumpness. *'பொம்மல் வனமுலை'* (சீவக. 2717.) **4.** கூட்டம்; multitude, as of stars. "பொலிந்தன உடுவின் பொம்மல்" (கந்தபு. காசிபன்புல. 28.) **5.** சோறு; boiled rice. *'இறடிப் பொம்மல் பெறுகுவீர்'* (மலைபடு. 169.) (பிங்.) **6.** மகிழ்ச்சி; exultation. *'போய்வருங் கரும முற்றிற் றென்பதோர் பொம்மல் பொங்க'* (கம்பரா. திருவடி. 3.)

[பெரு → பெருமு → பொருமு → பொம்மல்]

பொம்மல்² pommal, பெ.(n.), பொம்மை; puppet, effigy. *'பொம்மலாட்டுவிக்கும் தோலுருப் போல்'* (விறலிவிடு.)

[போன்மை → பொம்மை → பொம்மல்]

பொம்மலாட்டம் pommal-āṭṭam, பெ.(n.), பொம்மையை வைத்து ஆட்டும் நாடகம்; puppet show. **2.** மாயம்; disguise, deceptive appearance. *'பொம்மலாட்டமென்றேயிரு'* (பட்டினத். பொது.21)

[பொம்மல் + ஆட்டம்]

பொம்மலி pommali, பெ. (n.). பருத்தவள் (யாழ்.அக.) stout woman.

[பொம்மல் → பொம்மலி]

பொம்மன் pommaṉ, பெ.(n.), யாரோ ஒருவன்(வின்); some one, used in contempt. *"பேரெலாம் பொம்மன் திம்மன்"* (தனிப்.)

தெ.பொம்மடி.

[பொம்மல் → பொம்மன்]

பொம்மியம்மன் pommi-y-ammaṉ, பெ. (n.), சிறுதெய்வங்களிலொன்று(இ.வ.); a minor deity.

[பொம்மி + அம்மன்]

பொம்மு-தல் pommu-, செ.கு.வி. **1.** பொலிதல்; to excel in appearance. **2.** மிகுதல்; to swell. *'அதிர்குரல் பொம்ம'* (பாரத. பதினான். 112).

[பொருமு → பொம்மு-,]

பொம்மெனல் pom-m-eṉal, பெ.(n.), ஒரொலிக்குறிப்பு (பிங்.); tinkling sound. *'பொம்மென் பரிபுரம்'* (பாரத. அருச்சுனன்றீர். 9.) (b) விரைவுக்குறிப்பு; being sudden or rapid. *'மாதர் பொம்மெனப் புகுந்து'* (கம்பரா. உலாவியல்.1.) (c) அடர்ச்சிக் குறிப்பு; being thick or crowded. *'பொம்மெனிருள்வாய்'* (திருக்கோ. 395.)

[பொம் + எனல்]

பொம்மை¹ pommai, பெ. (n.) பாவை; puppet, effigy.

க. பொம்பெ.

[போன்மை → பொம்மை]

பொம்மை² pommai, பெ.(n.), **1.** பிட்டம்; buttocks. *'அவன் நடக்கும்போது பொம்மை யாடுகிறது.'* (இ.வ.) **2.** கைப்பிடிசுவர்(வின்); breastwork, parapet.

[பொம்மு → பொம்மை]

பொம்மைவாய் *pommai-vāy*, பெ. (n.), தடித்த வாய் கிண்டற் பெயர்; a nickname, used in contempt.

[பொம்மை² + வாய்]

பொய்¹ – தல் *poy,* செ.கு.வி. (v.i). 1. பிடுங்கப்படுதல்; to be pulled out, torn off. *'பொய்த குத்தின.... புண்'* (கம்பரா. கிங்கர. 50) 2. துளைக்கப்படுதல்; to be hollowed. *'பொய்தகடொன்று பொருந்தி'* (கம்பரா.பஞ்ச. 49)

[புய் → பொய்]

பொய்² – தல் poy செ.குன்றா.வி. (v.t). வீழ்த்துதல்; to fell, throw down. *'அவை பார் சோரப் பொய்தான்'* (கம்பரா . அட்ச. 33)

[புய் → பொய்]

பொய்³ *poy,* பெ. (n.) 1. பொய்க்கூற்று; falsehood, falsity. "பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ." (குறள். 938) 2. மருட்சித் தோற்றம்; illusion of the world, deceptive appearance. 3. போலியானது(வின்); sham, that which is counterfeit or false. 4. நிலையாமை; instability *'புற்புதமே யன்ன பொய்க்குடி வாழ்க்கையை'* (திருநூற். 3) 5. உட்டுளை; tubbularity, hole. *'பொய்பொரு முடங்குகை'* (சிலப் 15, 50) 6. மரப்பொந்து(பிங்.); hollow or recess in a tree. 7. செயற்கையானது; that which is artificial, as poy-k-kāl. 8. சிறு சிராய் (வின்); small slinter.

தெ. பொல்லு க. புசி. ம.பொய்

[புய் → பொய்]

பொய்⁴ – த்தல் *poy,* செ.கு.வி. (v.i.) 1. தவறுதல்; to fail, as a prediction or omen; to deceive hope, as clouds. *'விண்ணின்று பொய்ப்பின்'* (குறள். 13) 2. தம் செயலினின்று பின்வாங்குதல்; to prove false. "பொய்த்தோர் வில்லிகள் போவாராம்." (கம்பரா. சூளா. 41) 3. கெடுதல்; to go to ruin. *'பொருளென்னும் பொய்யா விளக்கம்'* (குறள். 753)

பொய்⁵ – த்தல் poy-, செ.குன்றாவி. (v.t.) 1. பொய்யாகப் பேசுதல்; to lie, utter falsehood to make false pretences. *'தன்னெஞ் சறிவது பொய்யற்க.'* (குறள். 293) 2. வஞ்சித்தல்; to deceive, cheat. *'நின்றோடிப் பொய்த்தல்'* (நாலடி. 111)

[பொய் → பொய்–த்தல்]

பொய்க்க *poykka,* கு.வி.எ. (adv.) 1. பொய்பட; falsely, not in earnest. *'அங்கையாகிய அழகிய தலத்தால் பொய்க்கத் தட்டின வளவிலே'* (சீவக. 1834, உரை). 2. மெதுவாய்; slowly. *'பொய்க்க அடியிட்டுக் கொண்டு போனபடி'* (ஈ.டு. 5, 10, 4)

[பொய் → பொய்க்க]

பொய்க்கடி *poy-k-kadi,* பெ. (n.) 1. கால் நடைகள் நுனிப்புல் மேய்கை; browsing. 2. தீங்கு விளைக்காத கடி; harmless, playful bite, as of a dog.

[பொய் + கடி]

பொய்க்கண் *poy-k-kaṉ,* பெ. (n.) 1. போலிக் கண்; artificial eye. 2. கண்ணருகு(வின்); part near the eye. 3. கண்மண்டை(யாழ்.அக); bones forming the eye-socket.

[பொய் + கண்]

பொய்க்கண்டிப்பு *pōy-k-kantippu,* பெ. (n.) பொய்யாகக் கண்டித்தல்; false rebake.

[பொய் + கண்டிப்பு]

பொய்க்கண்ணி *poy-k-kaṇṇi,* பெ. (n.) *பொய்ப்பூ* (யாழ்.அக.) பார்க்க; see *poy-p-pū.*

[பொய் + கண்ணி]

பொய்க்கண்ணீர் *pōy-k-kanneer,* பெ. (n.) போலியாக அழுதல்; முதலைக்கண்ணீர்; crocodile tears.

[பொய் + கண்ணீர்]

பொய்க்கணிப்பு *pōy-k-kanippu,* பெ. (n.) தவறான மதிப்பீடு; false calculation.

[பொய் + கணிப்பு]

பொய்க்கதை *poy-k-kadai,* பெ. (n.) **1.** கட்டி விடப்பட்ட செய்தி; fib. **2.** கட்டுக்கதை; fiction.

[பொய் + கதை]

பொய்க்கரணியம் *pōy-k-karaniyam,* பெ. (n.) பொய்யானகரணியம்(காரணம்); false reasoning.

[பொய் + கரணியம்]

பொய்க்கரி *poy-k-kari,* பெ. (n.) *பொய்ச்சான்று* பார்க்க; see *poy-cāṭcci.* *'பொய்க்கரிபோகன்மின்'* (சிலப். 30.192)

[பொய் + கரி]

பொய்க்கரிமாக்கள் *poy-k-kari-mākkaḷ,* பெ. (n.) பொய்ச்சான்று கூறுபவர்; false witnesses. *'பொய்க்கரிமாக்கள் புறங்கூற்றாளர்.'* (சிலப். 5, 131, பி – ம்)

[பொய்க்கரி + மாக்கள்]

பொய்க்கரியாளர் *poy-k-kari-y-āḷar,* பெ. (n.) *பொய்க்கரிமாக்கள்* பார்க்க, see *Poy-k-kari-mākkaḷ.* *'பொய்க்கரியாளர் புறங்கூற்றாளர்.'* (சிலப். 5, 131)

[பொய்க்கரி + ஆளர்]

பொய்க்காய்வு *poy-k-kāyvu,* பெ. (n.) வெறுப்பது போன்ற நடிப்பு; " பொய்க்காய்வு காய்தியென் நெஞ்சு" (குறள்.1246); temporary estrangement.

[பொய் + காய்→காய்வு]

பொய்க்காரணம் *pōy-k-karanam,* பெ. (n.) *பொய்க்கரணியம்* பார்க்க; see *Pōy-k-karaniyam.*

[பொய் + காரணம்]

பொய்க்கால் *poy-k-kāl,* பெ. (n.) **1.** விளையாட்டில் கால்களால் ஏறிச்செலுத்தும் கழி; stilt. *'அந்தரமாய் பொய்க்காலிலாடும் வித்தை.'* (நெல்விடு. 358) **2.** காலுக்கு மாற்றாக மரத்தால் அமைத்துக் கட்டப்பட்ட போலிக்கால்; wooden leg.

[பொய் + கால்]

பொய்க்காற்குதிரை *poy-k-kāṟ-kudirai,* பெ. (n.) ஊர்ந்து செல்வது போல் உள்ளிருந்து மாந்தன் ஆட்டும் மரக்குதிரை; wooden rider and horse, played by a man hiding inside.

[பொய்க்கால் + குதிரை]

பொய்க்கிணறு *poy-k-kiṉaṟu,* பெ. (n.) யானை முதலியவற்றை அகப்படுத்தும் படுகுழி; false well or pit, as a trap for elephants.

[பொய் + கிணறு]

பொய்க்கிளை *poy-k-kilai*, பெ. (n.) பலாமரத்தி லுண்டாம் பிஞ்சு பிடியா முளை(யாழ்.அக.); false sprout, as in Jack-trees.

[பொய் + கிளை]

பொய்க்குரல் *poy-k-kural*, பெ. (n.) போலியோசை(வின்); feigned or counterfeit voise.

[பொய் + குரல்]

பொய்க்குழி *poy-k-kuli*, பெ. (n.) 1. பார்வைக்கு மூடியது போன்றிருந்து கால் வைத்தால் உள்ளே ஆழ்த்தும் குழி; covered pit giving a flase notion of safety 2. கோலி விளையாட்டில் தனியே விடப்பட்ட குழி(இ.வ.); a pit set apart without using, in playing marbles. 3. நாற்று நட்ட குழி(யாழ்.அக.); Prepared pit where seedlings are grown before runs plantation.

[பொய் + குழி]

பொய்க்குற்றம் *poy-k-kurttam*, பெ. (n.) போலிக்குற்றச்சாட்டு; slander.

[பொய் + குற்றம்]

பொய்க்குற்றச்சாட்டு *poy-k-kurtacattu*, பெ. (n.) *பொய்க்குற்றம்* பார்க்க; see *pōli-k-kurttam*.

[பொய் + குற்றம் + சாட்டு]

பொய்க்கூடு *poy-k-kūḍu*, பெ. (n.) 1. உடல்; (யாழ்.அக.) body

[பொய் + கூடு]

பொய்க்கூற்று *pōy-k-kurttu*, பெ. (n.) நேர்மையில்லா உரை; false statement.

[பொய் + கூற்று]

பொய்க்கை *poy-k-kai*, பெ. (n.) மீன் வகை(வின்); a kind of fish.

[பொய் + கை]

பொய்க்கையொப்பம் *pōy-k-kaiyoppam*, பெ. (n.) போலிக்கையெழுத்து; fraud signature.

[பொய் + கையொப்பம்]

பொய்க்கொண்டை *poy-k-koṇḍai*, பெ. (n.) நெட்டியால் செய்யப்பட்ட கொண்டை வகை; (சிலப். 5, 34 உரை) a kind of pithwork forming a frame for ha(ri) dressing.

[பொய் + கொண்டை]

பொய்க்கோலம் *poy-k-kōlam*, பெ. (n.) 1. இயற்கையுருவை மறைக்கும் மாறுகோலம்; false or assumed appearance, disguise. *'பொய்க்கோலஞ்செய்ய வொழியுமே'* (நாலடி.43) 2. படிற்றொழுக்கம்(வின்); hypocrisy.

[பொய் + கோலம்]

பொய்மதிப்பீடு *pōy-matipitu*, பெ. (n.) *பொய்க்கணிப்பு* பார்க்க; see *poykkanippu*.

[பொய் + மதிப்பீடு]

பொய்கை[1] *poygai*, பெ. (n.) 1. இயற்கையிலுண்டான நீர்நிலை; natural spring or pond. *'வாவியும் பொய்கையுங் கண்டீர்.'* (சீவக.337) 2. நீர்நிலை; tank. *"பொய்கைவாயிற் புனல்பொரு புதவின்"* (பதிற்றுப். 27) 3. பொய்கையார்,1 பார்க்க; *'களவழிப்பா முன்செய்தபொய்கை'* (தொல்.பொ.91) 4. பொய்கையாழ்வார் பார்க்க; *'பொய்கை பூதம் பேய்'* (பிர.போத. 11, 9)

[பொய் → பொய்கை]

பொய்கை² *poygai,* பெ. (n.) கோட்டான்; a kind of owl. (யாழ்.அக.)

பொய்கையார் *poygaiyār,* பெ. (n.) 1. களவழி நாற்பது இயற்றிய ஆசிரியர்; an ancient poet, author of kaḷavali-nāṟpadu. (புறநா. 48). 2. *பொய்கையாழ்வார்* பார்க்க; see *poygai-y-āḻvār.* *'பொய்கையார் பூதத்தார் பேயார்'* (உபதேசரத். 4)

[பொய்கை + ஆர்]

பொய்கையாழ்வார் *poygai-y-āḻvār,* பெ. (n.) காஞ்சிபுரத்தில் ஒரு பொய்கையில் தோன்றிய வரும், ஆழ்வார் பதின்மருள் ஒருவருமான திருமாலடியார்; a vaiṣṇava saint, born at a tank in conjeevaram, one of the ten āḻvār.

[பொய்கை + ஆழ்வார்]

பொய்க்கோலம் *pōy-k-kolam,* பெ. (n.) புனைவு செய்யப்பட்ட தோற்றம்; false appearance.

[பொய் + கோலம்]

பொய்ச்சத்தம் *poy-c-cattam,* பெ. (n.) *பொய்க்குரல்*(வின்) பார்க்க; see *poy-k-kural.*

[பொய் + skṭ.sālada. *த.சத்தம்]*

பொய்ச்சத்தியம் *poy-c-cattiyam,* பெ. (n.) *பொய்யாணை*(வின்) பார்க்க; see *poy-y-āṇai.*

[பொய் + skṭ.satya. *த.சத்தியம்]*

பொய்ச்சாக்கு *pōy-c-cākku,* பெ. (n.) நொண்டிச்சாக்கு; lame execuse.

[பொய் + சாக்கு]

பொய்ச்சா-த்தல் *poyccā,* செ.குன்றா.வி. (v.t) மறத்தல் (வின்); to forget.

[பொய்ச்சா → பொய்ச்சா-த்தல்]

பொய்ச்சாட்சி *poy-c-cāṭci,* பெ. (n.) 1. உண்மைக்கு மாறான சான்று; false testimony. *'பொய்ச்சாட்சி சொல்லும் பதர்'* (குமரே. சத. 28) 2. பொய்ச்சாட்சிக்காரன்; false witness.

[பொய் + skṭ.sākṣin. *த.சாட்சி]*

பொய்ச்சாட்சியம் *poy-c-cāṭciyam,* பெ. (n.) *பொய்ச்சாட்சி,* பார்க்க; see *poy-c-cāṭci.*

[பொய் + skṭ.sākṣya. *த.சாட்சியம்]*

பொய்ச்சான்று *poy-c-cāṉṟu,* பெ. (n.) *பொய்ச்சாட்சி* பார்க்க; see *poy-c-cāṭci*

[பொய் + சான்று]

பொய்ச்சான்றேறு-தல் *poy-c-cāṉṟēṟu,* செ.குன்றா.வி.(v.t) பொய்ச்சான்று சொல்லுதல்; to give false evidence. *'வஞ்சித்துப் பொய்ச்சான்றேறுவாரும்'* (சிலப். 5, 128, உரை)

[பொய்ச்சான்று + ஏறு]

பொய்ச்சிரிப்பு *pōy-c-cirippu,* பெ. (n.) *பொய்ப்புன்னகை* பார்க்க; see *poy-punnakai.*

[பொய் + சிரிப்பு]

பொய்ச்சீத்தை *poy-c-cittai,* பெ. (n.) பொய்யே பேசும் கீழ்மகன்; (தொல்.சொல். 57, உரை) low-born liar.

[பொய் + சீத்தை]

பொய்ச்சீப்பு *poy-c-cippu,* பெ. (n.) வாழைக்குலையிற் றோன்றியழியும் நுனிச்சீப்பு(வின்); the last row of blossoms that forms on the bunch of a plantain and perishes.

[பொய் + சீப்பு]



பொய்ச்சு *poyccu*, பெ. (n.) பழத்தின் குற்றம்(வின்); flaw, defect, as in a fruit.

[பொய் → பொய்ச்சு]

பொய்ச்சுற்றம் *poy-c-cuṟṟam*, பெ. (n.) அன்பற்ற சுற்றம்; kinship without natural love.

[பொய் + சுற்றம்]

பொய்ச்சுற்றம் பேசு-தல் *poy-c-cuṟṟam-pēšu-*, செ.கு.வி.(v.i) இணக்கமின்றி உறவு கொண்டாடுதல்; to claim kinship without real love. *'குருபாண்டவர்க் காயங்கொர் பொய்ச்சுற்றம் பேசி"* (திவ். பெரியாழ். 5, 3, 4)

[பொய்ச்சுற்றம் + பேசு]

பொய்ச்சூள் *poy-c-cūḷ* பெ. (n.), பொய்யாணை; false oath. *'பொய்ச்சூளா ளென்ப தறியேன் யான்'* (பரிபா, 12, 63)

[பொய் + சூள்]

பொய்செய்-தல் *poy-šeyt-*, செ.கு.வி. (v.i.), உண்மையற்று ஒழுகுதல்; to prove false. 'கார்யத்தில் வந்தால் மெய் செய்வரைப் போலே பொய் செய்து தலைக்கட்டும்' (ஈடு.10,4,5.)

பொய்ச்செய்தி *pōy-c-cithi*, பெ. (n.), நம்பகத்தன்மையற்ற பொய்யான செய்தி; romour.

[பொய் + செய்தி]

பொய்சொல்லி *poy-šolli*, பெ. (n.) பொய் சொல்லுபவன்-ள் (வின்); liar.

[பொய் + சொல்லி]

'இ' வி. மு. ஈறு.

பொய்த்தலை *poy-t-talai*, பெ. (n.), கன்னமிடுவோர் கன்னத்துளை வழியாய் உட்செலுத்தும் போலிக் கை(வின்); mask or false head on a pole, pushed by thieves through a hole made in the wall of a house to ascertain whether the inmates are vigilant or not.

[பொய் + தலை]

பொய்த்தூக்கம் *poy-t-tūkkam*, பெ. (n.), 1. குறையுறக்கம்(வின்); unsound sleep. (w.) 2. *பொய்யுறக்கம்*,1 பார்க்க; see *poy-y-urakkam*.

[பொய் + தூக்கம்]

பொய்த்தேர் *poy-t-tēr*, பெ. (n.), 1. பேய்த் தேர்; (நாமதீப. 414) mirage. 2. பிண மின்றித் தனியே வீதியில் வரும் வெறுந்தேர்; dummy bier carried in a funeral procession.

[பொய் + தேர்]

பொய்த்தோற்றம் *poy-t-tōṟṟam*, பெ. (n.) போலித்தோற்றம்; false show.

[பொய் + தோற்றம்]

பொய்தல் *poydal,* பெ. (n.). 1. மகளிர் விளையாட்டு; woman's game. 'பொய்தலாய மொடு' (சிலப்.6,151) 2. சிற்றில்; house of sand made by children in play. *'பொய்தணி வண்டிமிர் மணற்கோடு'* (பரிபா.20,23) 3. மகளிர் கூட்டம்;(சூடா) company of women.

[பொய் → பொய்தல்]

பொய்ந்நாட்டு *poy-n-nāṭṭu,* பெ. (n.), பொய்யாக நாட்டிக்கொள்ளப்பட்டது; that which is made falsely. "பொய்ந்நாட்டேனும்" (சீவக.1637)

[பொய் + நீர்]

பொய்ந்நீர் *poy-n-nir,* பெ. (n.). *பொய்த்தேர்1* (யாழ்.அக.) பார்க்க; see *poy-t-tōr1*

[பொய் + நீர்]

பொய்ந்நெறி *poy-n-neṟi,* பெ. (n.). தீயவழி; false path, evil way. *'பொய்ந்நெறி நீக்கிய வதிசயம்'* (திருவாச. 26 10).

[பொய் + நெறி]

பொய்ப்பத்திரம் *poy-p-pattiram,* பெ. (n.). போலிஆவணம்(வின்); false document.

[பொய் + skt.patra. த.பத்திரம்]

பொய்ப்பாடு *Poy-p-pāḍu,* பெ. (n.) 1. தவறுகை; failure, futility. 2. பொய்படுகை; proving falses.

[பொய் + 'மாடு' சொல்லாக்காறு→பாடு]

பொய்ப்பார் *Poy-p-pār,* பெ. (n.) இளகலான நிலப்பகுதி (வின்.); unstable stratum, as found in digging well.

[பொய் + பார்]

பொய்ப்பிஞ்சு *Poy-p-piñju,* பெ. (n.) காயாகாமல் வெம்பியுதிரும் இளங்காய் (யாழ்ப்.); tander fruit that appears early in a plant and drops down without ripening

[பொய் + பிஞ்சு]

பொய்ப்பு *Poyppu,* பெ. (n.) உண்மையற்றது; falsification, deception. *'பொய்ப்பற யாரும் போற்ற'* (திருவாலவா. 56, 4)

[பொய் → பொய்ப்பு]

பொய்ப்புன்னகை *Pōy-p-punnakai,* பெ. (n.) போலிச் சிரிப்பு; false laugh.

[பொய் + புன்னகை]

பொய்ப்பூ *Poy-p-pū,* பெ. (n.) காய்பிடிக்காது உதிரும் முதற்பூ (சங்.அக); the first flower of a plant which drorps down without developing.

[பொய் +பூ]

பொய்ப்பேச்சு *Pōy-p-paccu,* பெ. (n.) பாசாங்குப் பேச்சு; meaningless talk.

[பொய் + பேச்சு]

பொய்ப்பொருள் *Poy-p-poruḷ,* பெ. (n.) எக்காலத்து மில்லாத பொருள்; thing which is non-existent.

[பொய் + பொருள்]

பொய்படு–தல் *Poy-paḍu-,* செ.கு.வி. (v.i.) 1. பொய்யாதல்; to prove false. 2. பயன் விளையாது அழிந்திடுதல்; to fail of purpose. *'பொய்படு மொன்றோ'* (குறள், 836)

[பொய் + படுதல்]

பொய்ம்மணல் *Poy-m-maṇal,* பெ. (n.) புதை மணல் (கொ.வ.); quicksand.

[பொய் + மணல்]

பொய்முகம் *Pōy-m-mugām,* பெ. (n.) வஞ்ச முகம்; false-face.

[பொய் + முகம்]

பொய்ம்மூக்கு *Poy-m-mūkku,* பெ. (n.) 1. மூக்கின் கீழுள்ள உறுப்பு(வின்.); bottom of the nose (W) 2. மேல் மூக்கு; top of the nostril. 3. போலிமூக்கு; artificial nose.

[பொய் + மூக்கு]

பொய்ம்மை *Poymmai,* பெ. (n.) 1. பொய்; false hood, lie. *'பொய்ம்மையும் வாய்மை யிடத்த'* (குறள், 292) 2. மாயம்; unreality, illusion. 3. போலி; that which is counterfeit or antificial

[பொய் → பொய்ம்மை]

'மை' ப. பெ. ஈறு.

பொய்ம்மையாளர் *Poymmai-y-āḷar,* பெ. (n.) பொய்யர்; liars, persons given to false hood or duplicity *'பொய்ம்மையாளரைப் பாடாதே'* (தேவா. 647, 1)

[பொய்ம்மை + ஆளர்]

பொய்ம்மையுத்தரம் *Poymmai-y-uttaram,* பெ. (n.) வழக்காளியின் பேச்சை எதிர் வழக்காளி மறுத்துரைக்கை (சுக்கிர நீதி, 270); statement by the defendant contesting the plaintiff's statement.

[பொய்மை + உத்தரம்]

பொய்யடி *Poy-y-aḍi,* பெ. (n.) 1. போலியடி; playful stroke proving light or harmless. 2. பொய்யால் பிறரை வஞ்சிக்கை; deceiving by false words. 3. அச்சுறுத்துகை terrifying

[பொய்+அடி]

பொய்யடிமை *Poy-y-aḍimai,* பெ. (n.) போலிப் பத்தி; insincere devotion to God. *'பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்'* (தேவா. 737, 7)

[பொய் + அடிமை]

பொய்யடிமையில்லாதபுலவர் *Poy-y-aḍimai-y-illāda-pulavar,* பெ. (n.) சிவபெருமானை வழிபடும் கழகப் புலவர்களான தொகையடியார் (பதினோ. திருத்தொண்டர் திருவந். 49); poets of the last sangam who congecrated their lives to the worship of šiva, one of togai-y-aḍiyār, q.v.

[பொய்யடிமை + இல்லாத புலவர்]

பொய்யம்பு *Poy-y-ambu,* பெ. (n.) விளை யாட்டம்பு; sham arrow, discharged in play or mock flight. *'வேடுவனாய்ப் பொய்யம் பெய்து'* (தேவா.149)

[பொய் + அம்பு]

பொய்யவியல் செய்—தல் *Poy-y-aviyalšey,* செ.குன்றாவி. (v.t.) புழுக்குதல்; to pārboil

[பொய் + அவியல் + செய்—]

பொய்யறுகல் *Poy-y-aṟu-kal,* பெ. (n.) பாதி வெந்த செங்கல் (C.G.); brick partiality barrt.

[பொய் + அறுகல்]

பொய்யறை *Poy-y-axai*, பெ. (n.) 1. பெட்டகத்தின் மறைவறை; பொய்க்குழி ; secret compartment in a box or safe. 2. *'பொய்யறைப் படுத்து'* (சிலப். 10, 70) பார்க்க;

[பொய் + அறை]

பொய்யன் *Poyyaṉ*, பெ. (n.) பொய்பேசுபவன்; liar. *'பொய்யர் கண்டீர் வாழ்க்கையாளர்'* (தேவா, 88, 6)

க. புசிக.

[பொய் + அன்]

பொய்யாடல் *Poy-y-āḍal*, பெ. (n.) வினைய மில்லாத சிறுபிள்ளைகள் விளையாட்டு; innocent sport, as of children. *'பொய்யாடலாடும் புணர்ப்பின்'* (பரிபா. 11, 89)

[பொய் + ஆடல்]

பொய்யாணை *Poy-y-āṇai*, பெ. (n.) பொய்யாகச் செய்யும் உறுதிமொழி (யாழ்.அக); false oath, perjury.

[பொய் + ஆணை]

பொய்யாப்புள் *Poyyā-p-puḷ*, பெ. (n.) பறவை வகை (சூடா.); rail, water-fowl.

[பொய் + ஆ + புள்]

'ஆ' எ. ம. இ. நி.

பொய்யாமை *Poyyāmai*, பெ. (n.) பொய் சொல்லாமை; being truthful. *'பொய்யாமை யன்ன புகழில்லை'* (குறள், 296) 2. நடுநிலைமை; impartiality *'பொய்யாமை நுவலுநின் செங்கோல்'* (கலித். 99)

[பொய் + ஆ + மை → பொய்யாமை]

'ஆ' எ. ம. இ. நி. 'மை'. ப. பெ. ஈறு.

பொய்யாமொழி *Poy-y-ā-moḻi*, பெ. (n.) 1. மெய்யுரை; never-failing word, true word. 2. மறைநூல்; sacred scriptures of the hindus, as the vēdas and the gamās. *'பொய்யா மொழியா லந்தணர் போற்றும் புத்தூரில்'* (தேவா. 612, 10) 3. திருக்குறள்; the kuṟal. *'திருவள்ளுவர் மொழிந்த பொய்யா மொழிக்கும்'* (வள்ளுவமா. 23) 4. தஞ்சைவாணன் கோவை யியற்றிய புலவர் (தமிழ்நா.); a poet, author of lañjaiṉ-vāṇaṉ - kōvai.

[பொய் + ஆ + மொழி]

'ஆ' எ. ம. இ. நி.

பொய்யாறு *Poy-y-āṟu*, பெ. (n.) *பொய்ந்நெறி* பார்க்க; see *Poy-n-neṟi*. *'பொய்யாற் றொழுக்கங் கொண்டு'* (மணிமே. 23,22)

[பொய் + ஆறு]

பொய்யிகந்தோர் *Poy-y-igandōr*, பெ. (n.) முனிவர் (உரி.நி); sages.

[பொய் + இகந்தோர்]

பொய்யிடை *Poy-y-iḍai*, பெ. (n.) நுண்ணிய இடை; slender waist. *'வார்முலை பொறாத பொய்யிடை நைய'* (கம்பரா. ஊர்தே. 104)

[பொய் + இடை]

பொய்யில்புலவன் *Poy-y-il-pulavaṉ*, பெ. (n.) 1. மெய்யறிவன்; man of true wisdom. *'பொய்யில் புலவர் புரிந்துறையு மேலுலகம்'* (பு.வெ. 10,4) 2. திருவள்ளுவர்; Tiruvaḷḷuvar. *'பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப் பொய்யில் புலவன்'* (மணிமே. 22, 61.)

[பொய் + இல் + புலவன்]

பொய்யுகம் *Poy-y-ugam,* பெ. (n.) கடையூழி (கலியுகம்); kaliyuga. *'நாலாம் பொய்யுகம்'* (திருவிளை. இரசவாத. 30)

[பொய் + Skt. yuga.த.யுகம்]

பொய்யுரம் *Poy-y-uram,* பெ. (n.) மயக்க அறிவு; illusory knowledge. *'பொய்யுரமுறு நிருவிகற்ப வுரு'* (வேதா. சூ. 67)

[பொய் + உரம்]

பொய்யுறக்கம் *Poy-y-uṟakkam,* பெ. (n.) 1. கள்ளத் தூக்கம்; pretanded sleep. *'மடவாள் போந்தனையும் பொய்யுறக்கம்.... உறங்கி'* (திவ். இயற். சிறிய. ம.31) 2. பொய்த்தூக்கம், (வின்.) பார்க்க; 1. Poy-t-ukkam

[பொய் + உறக்கம்]

பொய்யுறக்கு *Poy-y-uṟakku,* பெ. (n.) *பொய்யுறக்கம்* பார்க்க; see *Poy-y-urakkam* *'அமளி மேலாப் பொய்யுறக் குறங்கு வானை'* (கம்பரா. ஊர்ய தே. 213)

[பொய் + உறக்கு]

பொய்யுறங்கு-தல் *Poy-y-uṟaṅgu-.* செ.கு.வி. (v.i.) உறங்குவது போல் நடித்தல்; to pretend to sleep. *'புனையிழை யொருமயில் பொய்யுறங்குவாள்'* (கம்பரா. உண்டா. 64)

[பொய் + உறங்கு-,]

பொய்யொழுக்கம் *Pōy-yolukkam,* பெ. (n.) தீய நடத்தை; immoral ethics (conduct)

[பொய் + ஒழுக்கம்]

பொய்யொழுகலாறு *Pōy-yolukalaru,* பெ. (n.) *பொய்யொழுக்கம்* பார்க்க; see *poyyolukkam.*

[பொய் + ஒழுகலாறு]

ஒழுகலாறு = நடத்தை

பொய்வளைவு *Poy-valaivu,* பெ. (n.) மேலே வளைவுகட்டுதற்காக இடும் முட்டுவளைவு (C.E.M.); scaffold for an arch.

[பொய் + வளைவு]

பொய்வாழ்வு *Poy-vāḻvu,* பெ. (n.) 1. நிலையற்ற வாழ்க்கை; transitori ness of human life. 2. போலியொழுக்கமுள்ள வாழ்க்கை; a life of duplicity.

[பொய் + வாழ்வு]

பொய்வெட்டு *Poy-veṭṭu,* பெ. (n.) (காசின் குற்றவகை (சரவண. பணவிடு. 67); a defect in coins

[பொய் + வட்டு →வெட்டு]

பொரி-தல் *Pori-,* செ.கு.வி. (v.i.) 1. பொரியாதல்; to be parched, baked. *'செந்தீ யினிடைப் பொரிந்து தெறித்த பொரிபோல'* (பிரபுலிங். பிரபுதே. 54) 2. வறுபடுதல்(வின்); to be roasted, fried, as grain. 3. தீய்தல்; to be blackened by fire, singed, scorched or burnt by the sun. *'பொரிந்தன கலவைகள்'* (கம்பரா. மிதிலைக் காட்.50) 4. விரைவாகப் பேசுதல்(கொ.வ.); to speak fluently. 5. அலப்புதல்(வின்); to blab. 6. உப்பு முதலியன தரையிற்பூத்தல்(வின்); to form, as a thin stratum or layer of salt. 7. படிதல்; togather, as a coat of dust on the body.

8. மெல்லென ஒலித்தல்(வின்); to crack, pop, make slight reports, as musketry 9. வாணப்பொரி மிகுந்து சொரிதல்; to throw out sparks, as Roman candle or a whirling firebrand. *'பொரிந்தோடின ..... கருங் கோளரிக் கிளையான் விடு சரமே'.* (கம்பரா. நிகும்பலைய. 112.) 10. பொருக்குவெடித்தல் (யாழ்.அக.) to be dried up and shrivelled as the skin.

[பல் → பர் → பரி → பொரி]

க. புரி

பொரி²–த்தல் *Pori-,* செ.குன்றா.வி. (v.t.) 1. பொரியச் செய்தல்; to fry *'நெய்யுறப் பொரித்த'* (புறநா. 397.) 2. வறுத்தல்; to parch, toast, as grain. 3. கிழங்கு சுடுதல்(வின்); to bake after roasting on live coals, as yams. 4. அடைகாத்துக் குஞ்சையுண்டாக்குதல்; to hatch, as birds. 5. போக்குதல்; to disperse, remove. *'அல்லைப் பொரிக்கு மதிக்குடை நிழற்ற'* (குணிகைப்பு. வள்ளி. 122) 6. தீய்த்தல்; to burn, scorch, as the sun. *'வெயில் பொரிக்கிறது'* 7. புளியில்லாமற் சமைத்தல்; to cook without tamarind. *'பொரித்தகுழம்பு'* 8. குறைந்தவிலைக்கு விற்றல் (யாழ்.அக.); to sell at a low price.

[பொரி → பொரி–த்தல்]

பொரி³ *Pori,* பெ. (n.) 1. பொரிக்கப் பட்டது; a fry, anything fried. 2. பொரிகறி; fried curry. *'நேர்நிறை பொரியுங் குய்யும் வறைகளும்'* (சீவக. 2971.) 3. பொரிந்த நெல் முதலியன; parched grain or pulse. *'பொரிப்பூம்புன்கின்'*ன(நற்.9.) 4. கரிந்தகாடு (வின்); jungle burnt. 5. எருமைக் கன்று (நன். 387, மயிலை.); calf of buffalo. 6. நன்றாகச் சமைக்காத சோறு(இ.வ.); badly cooked food.

[பல் → பர் → பரி → பொரி]

க. புரி. ம. பொரி

பொரிக்கஞ்சி *Pori-k-kañci,* பெ. (n.) பொரிமாவாற் செய்த கஞ்சி(பதார்த்த. 1581.) : gruel made of the flour of parched grain.

[பொரி + கஞ்சி]

பொரிக்குழைப்பிண்டி *Pori-k-kuḻai-p-piṇḍi,* பெ. (n.) பண்ணியாரவகை (இராசவைத். 139); a kind of cake.

[பொரி + குழை + பிண்டி]

பொரிகடலை *Pori-kaḍalai,* பெ. (n.) உப்பும் மஞ்சளுந்தூவி வறுத்த கடலைத் தின்பண்டம்; (கொ.வ.) parched bengal gram seasoned with turmeric and salt.

[பொரி + கடலை]

பொரிகரப்பான் *Pori-karappāṉ,* பெ. (n.) ஒருவகைச் சிரங்கு; running scall, eczema.

[பொரி + கரப்பான்]

பொரிகறி *Pori-kaṟi,* பெ. (n.) புளியிடாமற் சமைத்த கறிவகை; (s.i.i. ii, 127, 19.) seasoned curry prepared without tamarind.

[பொரி + கறி]

பொரிகாரம் *Pori-kāram,* பெ. (n.) 1. வெங்காரம்(வின்); borax. 2. படிக்காரம் (சங்.அக.); alum

[பொரி + காரம்]

பொரிகொள்ளு *Pori-kollu,* **பெ.** (n.) காணத்தை வறுத்துச் செய்த சிற்றுண்டி வகை(இ.வ.); a kind of broth prepared without tamarind.

[பொரி + கொள்ளு]

பொரிச்சாற்றமுது *Pori-c-cāṟṟamudu,* **பெ.** (n.) புளியில்லாமல் ஆக்கிய மிளகுநீர்; a kind of mulligatawny prepared without tamarind.

[பொரி + சாற்றஅமுது]

பொரிசிந்து–தல் *Pori-šindu-,* **செ.கு.வி.** (v.i.) *பொரிதூவு* (வின்) பார்க்க; see *pori-tūru.*

[பொரி + சிந்துதல்]

பொரிதூவு–தல் *Pori-tūvu-,* **செ.கு.வி.** (v.i.) பிணச்சடங்கு முதலியவற்றில் நெற்பொரியை வாரியிறைத்தல்(வின்); to ceatter parched rice, as at a funeral.

[பொரி + தூவு]

பொரிப்பூண்டு *Pori-p-pūṇḍu,* **பெ.** (n.) **1.** *கரப்பான்பூடு* (பதார்த்த **279.**) பார்க்க; see *karappāṉ-pūḍu.* a thorny shrub. **2.** *நீர்முள்ளி* (மலை.) பார்க்க,

[பொரி + பூண்டு]

பொரிபுறந்தடவு–தல் *Pori-puṟan-taḍavu-,* **செ.கு.வி.** (v.i.) உட்குறையை மறைத்து வெளியே மினுங்கச் செய்தல்; to cover up defects. *'நீங்கள் பொரிபுறந் தடவி வருந்திச் சேமஞ்சாத்தி வைத்து'* (ஈடு, **4, 10, 2**).

[பொரி + புறந்தடவு–,]

பொரிபொரி–த்தல் *Pori-pori-,* **செ.கு.வி.** (v.i.) ஓயாது விரைந்து பேசுதல்; to chatter; to speak rapidly and incessantly. (இ.வ.)

[பொரி + பொரி]

பொரிபொரிச்சான் *Pori-poriccāṉ,* **பெ.** (n.) அழுத்தினால் சுடக்கோசையிட்டு வெடிக்கும் காய்களையுடைய ஒருவகைச் செடி(வின்); a plant whose unripe seeds burst with a cracking noise when pressed.

[பொரிபொரி + ஆன்]

பொரிபொரியெனல் *Pori-pori-y-eṉal,* **பெ.** (n.) **1.** வசைபொழிதற் குறிப்பு; onom. expr. of ascolding. **2.** விரைந்து பேசற்குறிப்பு(கொ.வ.); rapid speaking.

[பொரிபொரி + எனல்]

பொரிபோடுதல் *Pori-pōḍudal-,* **பெ.** (n.) திருமணக் காலத்தில் ஒமத்தீயில் நெற் பொரியை யிடுகை; throwing parched grain into the sacrificial fire, as in a marriage.

[பொரி + போடுதல்]

பொரிமலர் *Pori-malar,* **பெ.** (n.) புன்கு. **1.** (மலை.); பார்க்க, indian beech.

[பொரி + மலர்]

பொரிமா *Pori-mā,* **பெ.** (n.) வறுத்த அரிசியின் மா; flour of parched rice. *'பொரிமாவை மெச்சின பொக்கைவாயன்'*

[பொரி → பொரிமா]

பொரிமாச்சிந்தி *Pori-mā-c-cindi,* **பெ.** (n.) *பொரிமாத் தட்டி* (யாழ்.அக.) பார்க்க; see *pori-ma-t-laṭṭi.*

[பொரிமா + சிந்தி]

பொரிமாத்தட்டி *Pori-ma-t-taṭṭi,* பெ. (n.) வீணெண்ணமுள்ளவன் (யாழ்.அக.); one who builds castles in the air.

[பொரிமா + தட்டி]

பொரிமாத்திரளை *Porima-t-tiraḷai,* பெ. (n.) *பொரிவிளாங்காய்* (யாழ்.அக.) பார்க்க; see *pori-viḷaṅkay.*

[பொரிமா + திரளை]

பொரிமாதூவு—தல் *Pori-mā-tūvu,* செ.கு.வி. (v.i.) பொரிமாவைக் கறியில் தூவிப் பக்குவஞ் செய்தல்(வின்); to season by sprinkling flour of parched rice on certain curries.

[பொரிமா + தூவு]

பொரியரிசி *Pori-y-ariśi,* பெ. (n.) வறுத்த அரிசி(வின்); parched rice.

[பொரி + அரிசி]

பொரியரிசியேப்பம் *Pori-y-arici-y-ēppam,* பெ. (n.) புளிச்சேப்பம்.(இ.வ.) belching on account of indigestion.

[பொரியரிசி + ஏப்பம்]

பொரியரை *Pori-y-arai,* பெ. (n.) மரத்தின் பொரிந்த அடிப்பகுதி; rough, cracked surface of the trunk of trees. *'பொரியரை ஞாழல்'* (சீவக. 515)

[பொரி + அரை]

பொரியல் *Poriyal,* பெ. (n.) **1.** பொரிகை; frying. **2.** பொரித்த உணவு; fried food fry. *'கோழிப்பெடையினாற்சமைத்த பொரியலோடு'* (பெரும்பாண். 256. உரை.)

[பொரி → பொரியல்]

பொரியல்கரியல் *Poriyal-kariyal,* பெ. (n.) பல்வகையான பொரித்த வுணவு(வின்); different kinds of fried food.

[பொரியல் + கறியல்]

பொரியுண்டை[1] *Pori-y-uṇḍai,* பெ. (n.) *பொரியுருண்டை* பார்க்க; see *pori-y-uṇḍai.*

[பொரி + உண்டை]

பொரியுருண்டை[2] *Pori-y-uruṉḍai,* பெ. (n.) நெற்பொரியைப்பாகிட்டுத்திரட்டிய உருண்டை. (பதார்த்த. 1423.); a ball of sweetmeat made of fried rice and molasses.

[பொரி + உருண்டை]

பொரிவாணம் *Pori-vāṇam,* பெ. (n.) ஒருவகை வேடிக்கைவாணம்(இ.வ.); rocket which explodes and throws out star-like sparks.

[பொரி + வாணம்]

பொரிவாயன் *Pori-vāyaṉ,* பெ. (n.) கடல்மீன் வகை(J.N.); a sea fish, white attaining seven inches in length.

பொரிவிளங்காய் *Pori-viḷaṅkāy,* பெ. (n.) *பொரிவிளாங்காய்*(வின்) பார்க்க; see *pori-vilaṅkay.*

[பொரி + விளங்காய்]

பொரிவிளாங்காய் *Pori-viḷāṅkāy,* பெ. (n.) சிறுபயற்றுமாவோடு சருக்கரை சேர்த்துச் செய்த விளங்காய் போல் உருண்டையான பணியாரம்(வின்); a ball of sweet meat made of green-gram flour and sugar.

[பொரி + விளாங்காய்]

பொரிவு *Porivu,* பெ. (n.) 1. மாணிக்கக் குற்றவகை; a flaw in rubies. *'இறுகுதல் கருகுதல் பொரிவே',* (திருவாலவா. 25, 14.) 2. பச்சைமணிக் குற்றம் எட்டனுள் ஒன்று. (சிலப். 14, 184. உரை.); a flaw in emeralds, one of eight maragada-k-kurram.

[பொரி → பொரிவு]

பொரு¹-தல் *poru-,* செ.கு.வி. (v.i.) 1. போர் செய்தல்; to fight, contend in warfare, engage in battle. *'ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழிய'* (புறநா. 2.) 2. சூதாடுதல்; to play games of chance. *'போது போகுமாறிருந்து பொருதும்'* (பாரத. சூது. 169.) 3. மாறுபடுதல்; to compete, viewith, strive against. *'கண்பொர விளங்கு.... குடை'* (புறநா. 35.) 4. வீசுதல்; to blow, as the wind. *'குரூஉப்புகை பிசிரக் கால்பொர'* (பதிற்றுப். 15, 6.)

பொரு²-தல் *poru-,* செ.குன்றா.வி. (v.t.) 1. தடவுதல்; to play, as a lute. *'வீணைபொரு தொழிலும்'* (சீவக. 1795) 2. கடைதல்; to churn. *'ஒற்றைக்கிரி மத்தைப் பொருது'* (திருப்பு. 1.) 3. ஒப்பாதல்; to resemble. *'மலையெத்தனை அத்தனை.... பொருகிற்பன'* (கம்பரா. அதிகா. 150.) 4. தாக்குதல்; to come in collision with, dash against, as waves. *'பொருபுனறரூஉம்'* (சிறுபாண். 118.) 5. முட்டுதல்; to reach, extend. *'விண்பொரு புகழ்'* (புறநா. 11.) 6. பொருந்துதல்; to join, unite, combine. *'பொய்பொரு முடங்குகை'* (சிலப். 15, 50.) 7. பெருக்குதல்; (math.) to multiply. *'அவற்றைப் பொருளாதியாறினானும் பொர'* (நன். 269, மயிலை.) க. போர்

பொரு³ *poru,* பெ. (n.) 1. உவமை simile (பிங்.) 2. ஒப்பு; equality. *'பொருவாகப் புக்கிருப்பார்'* (தேவா. 780, 11.) 3. எதிர்த்தடை; obstacle. *'ஆறுசமயங்கட் கொல்லாம் பொருவாகி நின்றானவன்'* (திவ். திருவாய். 9, 4, 8.)

பொருக்க *porukka,* விஎ adv. விரைவாக; speedily.

[பொருக்கெனல் → பொருக்க]

பொருக்கற்றுப்போ-தல் *porukkarru-p-pō-,* செ.கு.வி. (v.i.) நன்றாகவிந்து போதல்(வின்.); to be quite extinguished

[பொருக்கு + அறு + போ]

பொருக்காங்கட்டி *porukkāṅ-katti,* பெ. (n.) 1. மண்ணாங்கட்டி; dried clod of earth. 2. அரத்தம் முதலியன உறைவதாலுண்டாம் கட்டி; clot.

[பொருக்கு + கட்டி → பொருக்காங்கட்டி]

பொருக்கு¹ *porukku,* பெ. (n.) 1. பருக்கை; grain of boiled rice. *'காக்கைக்குச் சோற்றிலோர் பொருக்குங் கொடுக்க நேர்ந்திடா'* (அருட்பா. vi, ஆற்றாமை, 3, 1.) 2. சேறுமுதலியன உலரும் போது மேலே காய்ந்தெழும்பும் ஏடு; flake, skin, thin layer that peels off, scale. *'பூசுகந்தம் தனத்திற் பொரிந்தது.... பொருக்கெழும்பி'* (தனிப்பா.i, 381, 27.) 3. மரப்பட்டை; bark. *'வெள்ளி லோத்திரத்தின் பூம்பொருக் கரைத்த சாந்து'* (சீவக. 622.) 4. *பொருக்கு மண்* (யாழ்.அக.) பார்க்க; see *Porukku-man*

[பல் → பரு → பருக்கு → பொருக்கு]

பொருக்கு² *pōrukku,* பெ. (n.) பல்ஊத்தை; tartar. 2. சொறிசிரங்கு; crust

[பல் → பரு → பருக்கு → பொருக்கு]

பொருக்குமண் *porukku-man,* பெ. (n.) செதிளாய்ப் பேர்ந்த மண் (வின்.); flake which rises on parched ground.

[பொருக்கு + மண்]

பொருக்கெனல் *porukkeṉal,* பெ. (n.) விரைவுக் குறிப்பு; onom. expr, signifying swiftness or quickness. *'பொருக்கென வீடணா புகறியாலென்றான்'* (கம்பரா. கும்பகர்ண. 112.)

[பொருக்கு + எனல்]

பொருகளம் *poru-kaḷam,* பெ. (n.) போர்க்களம் (சூடா); field of battle. *'பொருகளம் புகுந்தார்'* (கம்பரா. படைத். 67.)

[பொரு+களம்]

பொருகு *porugu,* பெ. (n.) சோறு (திவா.); boiled rice

[பொருக்கு → பொருகு]

பொருட்காட்சி *poruṭ-kātchi,* பெ. (n.) பொருள்களின் கண்காட்சி; Exibaition.

[பொருள் + காட்சி]

பொருட்குற்றம் *poruṭ-k-kuṟṟam,* பெ. (n.) செய்யுளின் பொருளில் உண்டாம் பிழை (rhet.) impropriety or blemish in the meaning of a verse. *'சொற்குற்றமின்று வேறு பொருட் குற்ற மென்றான்'* (திருவிளை. தருமி. 103.)

[பொருள் + குற்றம்]

பொருட்குன்று *poruṭ-kuṉṟu,* பெ. (n.) பொன்(மேரு)மலை; mt. mēru, as of gold. *'அரும்பலியனைத்து மீயினதுபொருட் குன்று கண்டீர்'* (சீவக. 2926.)

[பொருள் + குன்று]

பொருட்கை *poruṭ-kai,* பெ. (n.) பாடற்பொருள் பொருந்தக் காட்டும் நளிநயக்கை (சிலப். 3, 18, உரை) (nāṭaya.); gesture revealing the meaning of a verse.

[பொருள் + கை]



பொருட்சார்பு *poruṭ-cārbu,* பெ. (n.) பொருளிடத்துற்ற ஆசை; attachment to wordlly things. *'உயிர்ச் சார்பு பொருட்சார்பிற் பற்றுடங்கலும் விடுமாகில்'* (திருக்களிற்றுப். 39, உரை.)

[பொருள் + சார்பு]

பொருட்சிதைவு *poruṭ-cidaivu,* பெ. (n.) 1. சொத்து இழப்பு; injury, loss of property. 2. சொல் கால வேறுபாட்டாற் கருத்தில் மாறுகை(வின்.); change in the meaning of a word in course of time. (w.) 3. *பொருட்குற்றம்* பார்க்க; see *Poruṭ-kuṟṟam*

[பொருள் + சிதைவு]

பொருட்சிறப்பணி *poruṭ-ciṟappaṇi,* பெ. (n.) *பொருளணி* பார்க்க; (யாழ்.அக.) (rhet.) a class of figure of speech relating to sense.

[பொருள் + சிறப்பு + அணி]

பொருட்சுருக்கம் *poruḷ-curukkam,* பெ. (n.) கருத்துச்சுருக்கம்; synopsis.

[பொருள் + சுருக்கம்]

பொருட்சுவை *poruṭ-cuvai,* பெ. (n.) செய்யுட் பொருளின் சுவை (ரசம்) (யாழ்.அக.) beauty of ideas, as in a verse.

[பொருள் + சுவை]

பொருட்செல்வம் *poruṭ-celvam,* பெ. (n.) (திரவிய சம்பத்து) பொருளாகிய செல்வம்; meterial wealth. *'பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள'* (குறள், 241.)

[பொருள் + செல்வம்]

பொருட்செல்வி *poruṭ-celvi,* பெ. (n.) *பொருளின் செல்வி* (வின்.) பார்க்க; *poruliṉ-šelvi*

[பொருள் + செல்வி]

பொருட்சேதம் *poruṭ-cētam,* பெ. (n.) *பொருட்சிதைவு,* 1. (யாழ்.அக.) பார்க்க; see *Poruṭ-šidavu*

[பொருள் + சேதம்]

பொருட்டன்மை *poruṭṭaṉmai,* பெ. (n.) பொருளின்கணுள்ள உருவ இயல்புகளை உள்ளவாறு புனைந்து கூறும் அணிவகை. (தண்டி. 28.); (rhet.) description of the form of any person or thing.

[பொருள் + தன்மை]

பொருட்டால் *poruṭṭāl,* வி.எ. adv. *பொருட்டு* பார்க்க; see *Poruṭṭu* *'வென்றிப் பொருட்டால்... கன்றிக் கறுத் தெழுந்து'* (நாலடி, 315.)

[பொருட்டு → பொருட்டால்]

பொருட்டிரிபு *poruṭṭiribu,* பெ. (n.) ஒரு சொல்லில் அல்லது சொற்றொடரிலுள்ள பொருள் மாறுபாடு(வின்.); change in the meaning of words and expressions according to the manner in which they are read.

[பொருள் + திரிபு]

பொருட்டு[1] *poruṭṭu,* பெ. (n.) 1. காரணம் (பிங்.); cause. 2. மதிப்புக்குரியது; matter of importance, thing of weight. *'அது ஒரு பொருட்டில்லை'* –

பொருட்டு[2] *poruṭṭu,*(adv.) நிமித்தமாக; to, for the sake of, in order to, to the end that on account of, with, by, through. *'வேளாண்மை செய்தற் பொருட்டு'* (குறள், 81.)

பொருட்டொடர் நிலைச் செய்யுள் *poruṭṭoḍar-nilai-c-ceyyuḷ,* பெ. (n.) இலக்கியம் (சிலப். உரைப்பாயிரம்.) (rhet.) narrative or epic poem.

[பொருள் + தொடர்நிலை + செய்யுள்]

பொருட்படு–தல் *poruṭ-paḍu-,* செ.கு.வி. (v.i.) பயன்படுதல் (யாழ்.அக.); to be useful.

[பொருள் + படு–தல்]

பொருட்படுத்து–தல் *poruṭ-paḍuttu-,* செ.குன்றா.வி. (v.t.) மதித்தல்; to esteem, make important. *'நாய்மேற் றவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த'* (திருவாச. 10, 20.)

[பொருள் + படுத்து]

பொருட்பால் *poruṭ-pāl,* பெ. (n.) முப்பால்களுள் பொருளைப்பற்றிக் கூறும் நூற்பகுதி (குறள்.); wealth, as a topic treated in works, like kuṟal, Nālaḍi, etc.,

[பொருள் + பால்]

பொருட்டொடர்பு *poruṭ-toḍarbu,* பெ. (n.) பொருளினியைபு(வின்.); fitness in regard to meaning or subject-matter

[பொருள் + தொடர்பு]

பொருட்பிறிதின் கிழமை *poruṭ-piṟiḍin-kiḻamai,* பெ. (n.) ஒரு பொருளுக்குத் தன்னினும் வேறானதனோடு உள்ள உரிமை (சங்.அக.); (gram.) separable relation of two different objects.

[பொருள் + பிறிதின்கிழமை]

பொருட்பின்வருநிலை *poruṭ-piṉ-varunilai,* பெ. (n.) முன்வந்த பொருளே பின்னும் பலவிடங்களில் வரும் அணி (தண்டி, 41, உரை.) (rhet.) repeating the same idea in different forms of expression.

[பொருள் + பின்வருநிலை]

பொருட்பெண்டிர் *poruṭ-peṇḍir,* பெ. (n.) விலைமாா்; harlots. *'பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்'* (குறள், 913.)

[பொருள் + பெண்டிர்]

பொருட்பெயர் *poruṭ-peyer,* பெ. (n.) 1. பொருளடியாகப் பிறந்த பெயர்ச் சொல்; (நன். 132.); noun derived from the name of a concreate object. 2. ஒரு பொருளுக்கு உரியபெயர்; name of a thing.

[பொருள் + பெயர்]

பொருட்பெற்றி *poruṭ-peṟṟi,* பெ. (n.) மெய்ம்மை (குறள்.34.அதி.அவதா.); essential or underlying truth, reality.

[பொருள் + பெற்றி]

பொருண் மயக்கம் *poruṇ-mayakkam,* பெ. (n.) தன் பொருளிற் றீராது பிறி தொன்றன் பொருளின் கண்ணும் உருபு வருகை use of a particular case ending appropriate to the sense intended, though different from the proper grammatical case ending. (பி.வி. 15, உரை) (gram.)

[பொருள் + மயக்கம்]

பொருண்மன்னன் *poruṇ-maṉṉaṉ,* பெ. (n.) செல்வக்கிழவன் (குபேரன்); kubēra, as king of wealth. *'பொருண் மன்னனைப் பற்றிப் புட்பகங் கொண்ட மருண் மன்னனை யெற்றி'* (தேவா. 748, 11.)

[பொருள் + மன்னன்]

பொருண்முடிவு *poruṇ-mudivu,* பெ. (n.) 1. செய்தி முடிவு; termination of a topic. 2. முடிந்த கருத்து; substance of a discourse. 3. பயனிலை(வின்.); predicatcm, as completing the sense. 4. பொருள் முற்றிய சொற்றொடர்(வின்.); complete sentence.

[பொருள் + முடிவு]

பொருண்முரணணி *poruṇ-muraṇ-aṇi,* பெ. (n.) பொருள் முரண்படத் தொடுக்கும் அணிவகை (யாழ்.அக.); antithesis.

[பொருள் + முரணணி]

பொருண்மை *poruṇmai,* பெ. (n.) 1. கருத்துப் பொருள்; meaning, purport or subject-matter of a work. *'போதயோகின் பொருண்மையைக் காட்டுழி'* (கந்தபு. மேருப். 66.) 2. *பொருணிலை,*1 (தொல். சொல். 236, சேனா) பார்க்க; *porunilai,*

[பொருள் + மை]

பொருண்மொழி *poruṇ-moḻi,* பெ. (n.) 1. மெய்யுரை சொல்; truthful utterance. *'பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன் மின்'* (சிலப், 30, 192) 2. உச்சரிப்பு மந்திரம்; (சிலப். 10, 100, அரும்.) mantra, incantation.

[பொருள் + மொழி]

பொருண் மொழிக்காஞ்சி *poruṇ-moḻi-k-kāñji,* பெ. (n.) 1. உயிர்க்கு இம்மை மறுமைகளில் உறுதி தரும் பொருளை ஒருவனுக்குக் கூறுதல் பற்றிய புறத்துறை (புறநா. 24, துறைவிளக்கம்.); theme describing the principle of conduct that ensure happiness in this life and the life to come. 2. முனிவர் தாம் தெளிந்த மெய்ப்பொருளை விரும்பிக் கூறுதல் பற்றிய புறத்துறை (பு.வெ.10.காஞ்சிப்.)3; theme of sages describing the basic truths of their experience.

[பொருண்மொழி + காஞ்சி]

பொருணயம் *poruṇayam,* பெ. (n.) நூலின் கருத்து நயம்; excellence of ideas in a work. opp. to coṉṉayam

[பொருள் + நயம்]

பொருணான்கு *poruṇāṅgu,* பெ. (n.) அறம், பொருள், இன்பம், வீடு என நால்வகைப்பட்ட உறுதிப்பொருள்; Objective worthy of human pursuit foru in number viz aṟam, poruḷ, inbam viḍu

பொருணி *poruṇi,* பெ. (n.) கள்(வின்.); toddy, fermented liquor

[புளிநீர் → புளிநி → பொளிநி → பொருணி]

பொருணிலை *porunilai,* பெ. (n.) 1. பொருளின் றன்மை; quality, nature. *'எதிர் மறுத்து மொழியினும் பொருணிலை திரியா'* (தொல். சொல். 107.) 2. *பொருண் முடிவு,* 3. (யாழ்.அக.) பார்க்க; see *poruṇ-mudivu*

[பொருள் + நிலை]

பொருணூல் *poruṇūl,* பெ. (n.) 1. அகப் பொருளைப் பற்றிய நூல்; treatise on the characteristies of love poetry. *'ஓங்கிய பொருணூ லன்பி னைந்திணையென் றெடுத்த'* (திருவாலவா. 15, 12) 2. பொருளியல்; (பெருங். உஞ்சைக். 34, 91) economics. *'பொருணூலாயும் புலவோர்'*

[பொருள் + நூல்]

பொருத்தக்கடுதாசி *porutta-k-kaḍutāśi,* பெ. (n.) திருமணம் முதலிய செய்திகள் குறித்த ஒப்பந்த முறி(வின்.); written contract, as in a marrigage.

[பொருத்தம் + கடுதாசி]

[கடிதம் → கடிதத்தாள் → கடிதாசி]

பொருத்தச்சக்கரம் *porutta-c-cakkaram,* பெ. (n.) மணமக்களின் விண்மீன் பொருத்தம் பார்க்கும் சக்கரம்(வின்.); diagram to ascertain the agreement between the naksatras of the bride and bridegroom.

[பொருத்தம் + சக்கரம்]



பொருத்தச்சீட்டு *porutta-c-ciṭṭu,* பெ. (n.) *பொருத்தக் கடுதாசி*(வின்.) பார்க்க; see porutta kadutaši.

[பொருத்தம் + சீட்டு]

பொருத்தச்சுவடி *porutta-c-cuvaḍi,* பெ. (n.) தச்சநூல் (நாஞ்.); treatise on carpentry

[பொருத்தம் + சுவடி]

பொருத்தம் *poruttam,* பெ. (n.) **1.** பொருந்துகை; fitting, adaptation. **2.** தகுதி; propriety. *'பொய் முகங் காட்டிக் கரத்தல் பொருத்தமன்று'* (திருக்கோ.356) **3.** இணக்கம்; harmony, concord. அவனுக்குமிவனுக்கும் எப்போதும் பொருத்தமிலைலை. **4.** உடன்படிக்கை(வின்.); agrement, contract **5.** மணமக்களின் பொருத்தவிணக்கம்(வின்.); favourableness or agreement of heroscopes of the two parties to the married. **6.** மனநிறைவு (வின்.); satisfaction **7.** சரிபார்க்கை; verifying. **8.** நோயைத் தடுக்க நஞ்சினைத் தோலுட் செலுத்துகை; innoculation.

[பொருந்து → பொருத்தம்]

பொருத்தம் பார்–த்தல் *poruttam-pār,* செ.குன்றா.வி. (v.t.) மணமகன் மணமகளின் திருமணப் பொருத்தம் பார்த்தல்; to examine the agreement of horoscopes of a bride and bridegroom.

[பொருத்தம் + பார் –,]

பொருத்தனை[2] *poruttaṉai,* பெ. (n.) *பொருத்தம்* 1.(யாழ்.அக) பார்க்க; see *poruttam[1]*

[பொருத்தம் → பொருத்தனை]

பொருத்தினை *poruttiṉai,* பெ. (n.) *பொருத்தனை[1]* (யாழ்.அக) பார்க்க; see *poruttaṉai*

[பொருத்தனை → பொருத்தனை]

பொருத்து[1]–தல் *poruttu,* செ.குன்றா.வி. (v.t.) **1.** பொருந்தச்செய்தல்; to fit, adapt. *'சந்துகள் புல்லறப் பொருத்துவ தொன்று'* (கம்பரா. மருத்துமலை. **90**) **2.** உடன்படுத்துல்; to induce consent. *'பொருடரும்படி யின்று பொருத்தி'* (அரிச். பு. வஞ்ச. **8**) **3.** கூட்டுதல்; to cause to agree, to reconcile. *'பிரிந்தார் பொருத்தலும் வல்ல தமைச்சு'* (குறள், **633.**) **4.** வேலைக்கமர்த்துதல்(வின்.); to engage for labour. **5.** அமையச் செய்தல்(வின்.); to brig over, as to a party or an opinion. **6.** இரு பொருள்களை இசைத்தல்;(பிங்.) to join together, knit, unite. **7.** விளக்கேற்றுதல்; to kindle. **8.** போர் மூட்டுதல்; to stir up, as to a fight. *'வாரணம் பொருத்து வாரும்'* (கம்பரா. நாட்டுப். **16.**)

[பொருந்து → பொருத்து]

பொருத்து² *poruttu,* பெ. (n.) 1. இணைப்பு(வின்.); joining junction. 2. உடல் மூட்டு; joint, suture of bones in the body. *'பொருத்தெலாங் கட்டு விட்டு'* (பணவிடு. 298.) 3. மரத்தின் இணைப்பு; joining, in carpentry. 4. மரக்கணு; knot of a plant 5. ஒன்று சேர்க்கை; uniting. *'பொருத்துறு பொரு ளுண்டாமோ'* (கம்பரா. கும்பகர்ண. 157) 6. ஒப்பந்தம்(வின்.); agreement 7. கன்னப்பொட்டு; temple of the head.

[பொருந்து → பொருத்து]

பொருத்துவிடு-தல் *poruttu-vidu,* செ.கு.வி. (v.i.) 1. உடன் மூட்டுப் பிசகுதல்; to be dislocated, disjoined. 2. இணக்கமறுதல்; to become separate.

[பொருத்து + விடு-தல்]

பொருத்துவேலை *poruttu-vēlai,* பெ. (n.) மரத்தின் இணைப்பு வேலை(வின்.); joinery

[பொருத்து + வேலை]

பொருத்தோலை *poruttōlai,* பெ. (n.) 1. *பொருத்தக் கடுதாசி* (யாழ்.அக.) பார்க்க; 2. கூரைமோடு பொருத்திக் கட்டும் ஓலை(நாஞ்.); plaited palm leaves over the ridge of a roof.

[பொருத்து + ஓலை]



பொருதல் *porudal,* பெ. (n.) 1. போர்; war, (சூடா) fight. 2. தும்பை; (மலை.) white dead nettle

[பொரு → பொருதல்]

பொருதவை-த்தல் *poruda-vai,* செ.குன்றா. வி. (v.t.) பற்றவைத்தல்(வின்.); to engraft, to solder, to join (w.)

[பொருத + வை-]

பொருது¹-தல் *porudu,* செ.கு.வி. (v.i.) 1. ஒன்றுதல்; (யாழ்.அக.) to be joined, combined, united with. 2. போர் செய்தல்; to fight, contend.

[புல் → பொல் → பொர் → பொரு.]

பொருது²-தல் *porudu,* செ.குன்றா.வி (v.t.) இணைத்தல் (சங்.அக.); to join together, unite.

[பொரு → பொருது]

பொருந்(நு)-தல் *porun-,* செ.கு.வி. (v.i.) 1. பொருந்துதல் (நன்.137); to be suitable. 2. உடன்படுதல் (வின்.); to agree consent.

[பொருந்து → பொருந்]

பொருந்தநதி *porunda-nadi,* பெ. (n.) அமராவதியாறு; (யாழ்.அக.) the river Amrāvadi

[பொருந்தம் + நதி]

(skt.madi → த. நதி)

பொருந்தம் *porundam,* பெ. (n.) *பொருநை* (பிங்.) பார்க்க; see *porunai*

[பொருந்து → பொருந்தம்]

பொருந்தர் *poruntar,* பெ. (n.) 1. நெய்வோர் (வின்.); weavers, as joining threads (w.). 2. கூடை முதலியன முடைவோர் (சூடா.); makers of mats and baskets.

[பொருத்தர் → பொருந்தர்]

பொருந்தலன் *porundalan,* பெ. (n.) பகைவன்; foe, enemy. *'பொருந்தலனாகம் புள்ளுவந் தேற'* (திவ். பெரியதி. 10, 9, 8)

[பொருந்து + அல் + அன்]

'அல்' எ.ம.இ.

பொருந்தவிடு–தல் *porunda-vidu-,* செ.குன்றா.வி (v.t.) இணக்குவித்தல்; to reconcile. *'இரண்டு தலைக்கும் உறவாய்ப் பொருந்தவிடச் சென்று'* (ஈடு. 4, 6, 1.)

[பொருந்து + விடு]

பொருந்தாக்காமம் *porundā-k-kāmam,* பெ. (n.) *பொருந்திணை* பார்க்க; see *peruntiṇai.* (நம்பியகப். 5.)

[பொருந்து + ஆ + காமம்]

'ஆ' எ.ம.இ.

பொருந்தாமை *porundāmai,* பெ. (n.) 1. இணக்கமின்மை; disagreement, incongruity. 2. வெறுப்பு (யாழ்.அக.); hartred, disgust

[பொருந்து + ஆ + மை]

'ஆ' எ.ம.இ.

பொருந்தார் *porundār,* பெ. (n.) பகைவர்; enemies. *'பொருந்தார் கைவேல் நுதிபோல் பரல்பாய'* (திவ்.பெருமாள். 9, 5.)

[பொருந்து + ஆ + ர்]

'ஆ' எ.ம.இ. புணர்ந்து கெட்டது.

'ர்' ப.பா. ஈறு.

பொருந்திக்கொடு–தல் *porundi-k-kodu-,* செ.குன்றா. வி. (v.t.) ஒப்பந்தத்தின் மேல் வேலை யிடுதல்(வின்.); to give a work on contract.

[பொருந்தி + கொடு]

பொருந்திவாங்கு–தல் *porundi-vāṅgu-,* செ.குன்றா.வி. (v.t.) மனமிசைந்து விலைக்கு வாங்குதல்(வின்.); to purchase after having agreed about the price.

[பொருந்து → வாங்கு–,]

பொருந்திவிடு–தல் *porundi-vidu,* செ.கு.வி. (v.i.) 1. ஒடிந்த எலும்பு முதலியன கூடுதல்; to join, as broken bones. 2. ஒப்பந்தமாதல்; to be stipulated.

[பொருந்தி + விடு]

பொருந்து[1]–தல் *porundu-,* செ.கு.வி. (v.i.) 1. மனம் இசைவாதல்; to agree, consent. *'கொணர் குவா யெனப் பொருந்தினன்'* (கம்பரா. மருத்து. 85.) 2. தகுதியாதல்; to be suitable, proper. 3. அமைதல்; to abide. *'அறநெறி பொருந்த'* (கம்பரா. விபீடண. 43) 4. உடன்படுதல்; to make a contract, an agreement. 5. நெருங்குதல்; to come into close. *'பொருந்தவந் துற்ற போரில்'* (கம்பரா. கும்பகருண. 13) 6. நிகழ்வித்தல்; to occur happen. *'புண்ணியம் பொருந்திற்று'* (கம்பரா. கும்பகருண. 131) 7. நிறைவேறுதல்; to be constituted, made. *'பூதமைந்தினும் பொருந்திய வுருவினாற் புரளான்'* (கம்பரா. இரணிய. 18.)

க.பொருது

பொருந்து²–தல் *porundu,* செ.குன்றா.வி. (v.t.) **1.** கலத்தல்; to combine with. *'பண்பொருந்த விசைபாடும்'* (தேவா. 268, 5) **2.** அடைதல்; to reach. *'வந்தடி பொருந்தி முந்தை நிற்பின்'* (புறநா. 10) **3.** அளவளாவுதல்; to associate cordially. *'மணிமேகலை... பொருந்தின ளென்னும் பான்மைக் கட்டுரை'* (மணிமே. 23,46.)

[பொரு → பொருந்து–தல்]

பொருந்துமாறு *porundum-āṟu,* பெ. (n.) பகுத்தறிவு உத்தி (அல்லது) கோட்பாடு; ratiocination. *'பொருந்து மாற்றானும் புலாலுண்டல் இழிந்ததென்பது'* (குறள், 257, உரை)

[பொருந்து + ஆறு]

பொருநராற்றுப்படை *porunar-āṟṟu-p-paḍai,* பெ. (n.) சோழன் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடியதும் பத்துப் பாட்டினுள் ஒன்றுமான ஆற்றுப்படைநூல்; a poem an cōḻaṉ karikāṟ-peruvaḷattāṉ in pattu-p-pāṭṭu by muḍa-t-tāma-k-kaṇṇiyār.

[பொருநர் + ஆற்றுப்படை]

பொருநல் *porunal,* பெ. (n.) பொருநையாறு; the river porunai. *'பொருநல் வடகரை வள்டொலை வில்லி மங்கலம்'* (திவ். திருவாய். 6, 5, 8)

[பொருநை → பொருநல்]

பொருநன்¹ *porunaṉ,* பெ. (n.) **1.** வீரன்; warrior, hero. *'பாலறிமரபிற் பொருநர் கண்ணும்'* (தொல். பொருள். 74) **2.** திண்ணியன்; strong, robust, valiant man. **3.** அரசன்; king. *'அறந்துஞ் சுறந்தைப் பொருநனை'* (புறநா. 58.) **4.** குறிஞ்சி நிலத்தலைவன்(பிங்.); chief of a hilly tract **5.** படைத்தலைவன்; commander of an army, general. (பிங்) **6.** உவமிக்கப்படுவோன்; one who is the standard of comparison. *'போர்மிகு பொருந'* (திருமுரு.276.) **7.** தலைவன் (பிங்.); leader **8.** பகைவன்; foe, enemy. *'பொருநரைப் பொறா.... பஞ்சவ ரோறே'* (புறநா. 58.)

[பொரு → பொருநன்]

பொருநன்² *porunan,* பெ. (n.) **1.** ஏர்க்களத் தேனும் போர்க்களத்தேனும் சென்றுபாடும் கூத்தன்; (தொல். பொ. 91. உரை) one who dances and sings on the battle field and on the threshing-floor. **2.** கூத்தன்; actor, dancer. *'பண்ணிமை யடைத்த பலகட் பொருநர் பாடல்'* (கம்பரா. ஊர். 162.)

[பொரு → பொருநன்]

பொருநாறு *porunāṟu,* பெ. (n.) *பொருநராற்றுப் படை* பார்க்க; see *porunar-āṟṟu-p-paḍai* *'முருகு பொருநாறு பாணிரண்டு'* (பத்துப் பாட்டு, தனிப்பா.)

[பொருநர் + ஆறு → பொருநன்]

[பொருநராறு → பொருநாறு]

பொருநை *porunai,* பெ. (n.) **1.** தாமிரபரணி; the river tāmiraparani. "குமரி பொன்னி வகை பொருநை நல்லாறு" (குமர. பிர. மீனா. பிள். 11) **2.** *ஆன் பொருநை* (திவா) பார்க்க; see *āṉporunai.* a river in the cera country. (திவா.)

[பொரு → பொருநை]

பொருநைத்துறைவன் *porunai-t-turaivaṉ,* பெ. (n.) **1.** சேரன் (பிங்.); cēra king, as lord of the Aṉ porunai river. **2.** பாண்டியன்; pandya king, as lord of the Tāmiraparaṇi river. *'பொருநைத் துறைவன் பொற்பாவாய் புது நீராடி யருளுகவே'* (குமர. பிர. மீனா. பிள். 88.)

[பொருநை + துறைவன்]

பொருப்பரையன் *poruppariyaṉ,* பெ. (n.) பனி (இமய) மலை; the himālayas, as king of hills. *'பொருப்பரையன் மடப்பாவை'* (நந்திக். பாயி.)

[பொருப்பு + அரையன்]

பொருப்பன் *poruppaṉ,* பெ. (n.) **1.** குறிஞ்சி நிலத்தலைவன்; chief of a hilly tract. **2.** குறிஞ்சி நிலவேடன்; hunder of the hills. *'வேலுடைப் பொருப்பாங்குணர்வுற'* (கந்தபு. கடவுள்வா.12) **3.** பாண்டியன்(கலித்.36); (பொதியமலைக் குரியவன்) pandya king, as lord of podiyam **4.** மலைக்குரியவன்; lord of a hill. *'பொருப்பனைப் புனலாளொடு புன்சடை அருப்பனை'* (தேவா. 781, 9) **5.** பனிமலை (இமயமலை); the Himalayas. பொருப்பன் மங்கைபங்கனை (தேவா. 1188, 6)

[பொருப்பு → பொருப்பன்]

பொருப்பு *poruppu,* பெ. (n.) **1.** மலை; mountain. *'வரைத்தா ளருவிப் பொருப்பின்'* (மதுரைக். 42.) 2. பக்கமலை; spur of a range of hills. *'சாரற் பொருப்பிடத்தே'* (திருக்கோ. 293.)

[பல் → பரு → பொரு → பொருப்பு]

பொருப்பெறிந்தான் *porupperindāṉ,* பெ. (n.) முருகக் கடவுள் (உரி.நி.); skanda, as one who pierced the krauñca hill with his spear.

[பொருப்பு + எறிந்தான்]

பொருபுவி *poru-puvi,* பெ. (n.) **1.** போர்க்களம்; battle-field **2.** பாலை நிலம்; desert tract.

[பொரு + skt. lhuvi. *த. புவி.]*

பொரு பொரு–த்தல் *poru-poru-,* செ.கு.வி. (v.i.) **1.** அறத்தீய்தல்; to be liable to crumbling from too much frying. **2.** முணுமுணுத்தல்: to mutter in dissatisfaction.

[பொருபொரெனல் → பொருபொரு]

பொருபொருப்பான் *poruporuppāṉ,* பெ. (n.) மரவகை (யாழ்.அக.); a kind of tree.

பொருபொரெனல் *poru-poreṉal,* பெ. (n.) **1.** தீய்த்தற்குறிப்பு; crumbling. **2.** முணுமுணுத் தற்குறிப்பு; muttering.

[பொருபொரு + எனல்]

பொரும்பி *porumbi,* பெ. (n.) ஆவிரை வகை (மலை); a kind of senna.

பொரும்பிலா வேர் *porumbilāvēr,* பெ. (n.) **1.** மலை வேர்; a hill-plant. **2.** வட்டத் திருப்பி; rattle wort.

பொருமல் *porumal,* பெ. (n.) **1.** அச்சம்; fear. *'பொச்சையர் கடனனி பொருமல் கொள்வதே'* (கந்தபு. தருமகோ. 19.) **2.** துன்பம்; trouble. *'போயதெம் பொரும லென்னா'* (கம்பரா. திருவவ. 25) **3.** அழாது விம்முகை; sobbing. ''உயிர் போக்கிப் போக்கி யுழக்கும் பொருமலான்'' (கம்பரா. மீட்சி. 208)

4. வயிற்றுப் பொருமல் (பதார்த்த. 1358); flatulence, wind in the stomach. 5. பூரிப்பு; plumpness *'புந்தி யோங்கு மூவகைப் பொருமலோ'* (கம்பரா. மீட்சி. 22.) 6. பொறாமை; jealousy. அவன் பேரில் அவனுக்குப் பொருமல் அதிகம்.

[பொருமு → பொருமல்]

பொருமல்[2] *porumal,* பெ. (n.) பொருமையின்மை; impatience."பொருமலை நானெங்கே யுடக்குவேன்"(தெய்வச். விறலிவிடு.239)

[பொருமு → பொருமல்]

'இ' பெ.பா. ஈறு.

பொருமலி *porumali,* பெ. (n.) தடித்தவள்; fat woman

[பொருமல் → பொருமலி]

பொருமிநாதம் *porumi-nādam,* பெ. (n.) பூரம் (சங்.அக.); calomel.

பொருமு-தல் *porumu,* செ.கு.வி. (v.i.) 1. துன்புறுதல்; to be distressed. *'பூசலுண்டாமெனப் பொருமா'* (கம்பரா. காட்சி. 18) 2. விம்மியழுதல்; to choke with crying, sob. *'போர்வலான் றடுப்பவும் பொருமி விம்மினான்'* (கம்பரா. தைலமாட்டு. 41) 3. உப்புதல்; to be bloated, as the body from wind or disease. 4. பூரித்தல்; to be puffed up, as from elation. *'பேருவகை மீக்கொண்டு பொருமினான்'* (உபதேசகா. விபூதி. 100.) 5. ஈரித்துப் பருத்தல்; to swell, to become soaked, as tile, new pot or sponge 6. பொறாமைப்படுதல்; to be jealous, envious.

[பொரு → பொருமு]

பொருமுகவெழினி *poru-mugu-v-eḻiṉi,* பெ. (ா.) அரங்கின் இரண்டு வலத்தூணிடத்தும் பொருந்திய உருவுதிரை (சிலப். 3, 109); curtain between the pillars to the right of the stage.

[பொரு + முகம் + எழினி]

பொருவ *poruva,* பெ. (n.) இடை. part. ஓர் உவமைச் சொல் (தொல். பொ. 289); a term of comparison.

[பொருவு → பொருவ]

பொருவாய் *poruvāy,* பெ. (n.) கடல் மீன் வகை(வின்.); anchovy, blackish.

பொருவாய்க் கற்றலை *poruvāy-k-kaṟṟalai,* பெ. (n.) *ஆனைவாயன் கற்றலை* பார்க்க; see *aṉaivāyaṉ-kaṟṟalai* a sea-fish.

[பொருவாய் + கற்றலை]



பொருவிலி *poruvili,* பெ. (n.) 1. ஒப்பிலி; one without equal. 2. சிவபிரான் (சங்.அக.); siva.

[பொருவு + இல்+இ]

'இ' ஒ. ஈறு

பொருவு¹–தல் *poruvu,* செ.குன்றா.வி. (v.t.) 1. ஒத்தல்; to equal, compare. *'உன்னைப் பொருவு முனிவோர்'* (கந்தபு. திருக்கல். 55) 2. உராய்தல்; to rub. *'விற்கொணான் பொருவுதோள்'* (கம்பரா. நிந்தனை. 52)

பொருவு¹–தல் *poruvu,* செ.கு.வி. (v.i.) 1. நேர்தல்; to happen. *'போன்றன வினய தன்மை பொருவியது'* (கம்பரா. இரணிய. 152)

[பொரு → பொருவு]

பொருவு³ *poruvu,* பெ. (n.) ஒப்பு; resemblance, comparison. *'பொருவற்றா ளென்மகள்'* (திவ். திருநெடுந். 19.)

[பொரு → பொருவு]

பொருவுசாரம் *poruvu-šāram,* பெ. (n.) பொறாமை (இ.வ.); envy, jealousy.

[பொருமு + விசாரம்]

[பொருவிசாரம் → பொருவுசாரம்]

Skt. Vicāra → த. விசாரம்

பொருள் *poruḷ,* பெ. (n.) 1. பருப்பொருள்; material substance, entity. "விளங்கிய பொருள்க டம்மைப் பொய்வகை யின்றித் தேறல்" (சீவக. 1436) 2. சொற்பொருள்(சூடா.); meaning, as of a word. 3. செய்தி; matter. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் (குறள், 423) 4. உண்மைக்கருத்து; true object. வேதங் கண்ணிய பொருளெலாம் (கம்பரா. இரணிய. 1) 5. செயல்; object, affair. "ஒருபொருள் சொல்லுவ துடையேன்" (கலித். 8) 6. மெய்மைநெறி; essential principle, நவையறு நன்பொரு ளுரைமினோ (மணிமே. பதி, 87) 7. மெய்மை; reality. *'பொருள்சேர் புகழ்புரிந்தார்'* (குறள், 5) 8. நன்கு மதிக்கப்படுவது; that which is important or moment. *'பொருளே மன்ற பொருளே'* (குறுந். 174) 9. கல்வி; learning. 10. அறிவு knowledge; ' (பெரியபு. நமிநந். 10.) policy, belief. *பொய்யு மெய்யுமா மென்னும் பொருண் மேற் கொள்ளும் புரை நெறியார்'* 11. அறம்; virtue. *'துறத்தல் பொருளாமோ'* (சீவக. 2960) 12. பயன்; reselt. *'மெய்ப் பொருள் காண்ப தறிவு'* (குறள், 423) 13. வீடுபேறு; final bliss. *'புகலூர் புகழப் பொருளாகுமே'* (தேவா.640,8) 14. இறைவன்; god. *'பொருளு மான்மாவுங் காட்டி'* (குமர. பிர.கந்தர்கலி. 27) 15. செல்வம்; wealth. *'பெரும் பொருள் வைத்தீர் வழங்குமின்'* (நாலடி. 6.) 16. பலபண்டம்(சூடா); provision, stores. 17. பொன்; (சூடா) gold. 18. மகன்; (பிங்) son. *'தாரகனைப் பொருது பொன்று வித்தபொருளினை முன்படைத்து கந்த புனிதன்'* (தேவா. 622, 9) 19. சுணங்கு; beauty-spot, as on woman's breast. *'போகமும் பொருளுமீன்றபுணர்முலைத் தடங்கள்'* (சீவக. 460) 20. உவமேயம்; the thing compared in a simile. *'பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்'* (தொல். பொ. 284.) 21. *உறுதி*,4 பார்க்க; see *urudi* *'அறம் பொருளின்பம் வீடென்னும் நான்கு பொருளினும்'* (திருக்கோ. 1, 2000) 22. மறுதலைப் பொருளுணர்வு; deduction or conclusion from premises given, inference from circumstances. *'அபாவம் பொருளொப்பு'* (சி.சி. அளைவ, 1, மறைஞா) 23. அகமும் புறமுமாகிய திணைப்பொருள்; affairs of life, as topics of poetry, in two classes, viz., agam, puṟam. 24. பொருளாட்சி; science of political economy. *'ஞாலத் தறம் பொருள் கண்டார்க ணில்'* (குறள். 141) 25. தலைமை (யாழ்.அக.); headship, leadership. 26. கொள்கை; doctrine. பொய்யு மெய்யுமா

மென்னும் பொருண்மேற்கொள்ளும் புரை நெறியார். (பெரியபு. நமிநந். 10) 27. தந்திரம்; stratagem, device. 'விரிக்க முயல்வார் புணர்ந்த பொருளாமிது' (கம்பரா. சடாயு.155)

க. பொருளு. ம.பொருள். து.பொருலு.

[புல் → பொல் → (பொர்) → பொருள்]

பொருள்கோள் *poruḷ-kōḷ,* பெ. (n.) 1. ஆற்று நீர் மொழி மாற்று நிரனிறை, விற்பூட்டு தாப்பிசை அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு அடிமறிமாற்று என எண் வகையாகச் செய்யுட்குப் பொருள் கொள்ளும் முறை; modes of construing verses, of which there are eight, viz., yāṟṟu-nīr, moḻi-māṟṟu, niraniṟai, viṟ-pūṭṭu, tāppišai, aḷai-maṟi-pāppu, koṇḍu-kuṭṭu, aḍimaṟi-māṟṟu. 2. ஒருவகைத் திருமண முறை; a kind of marriage.

[பொருள் + கோள்]

பொருள்செய்[1]–தல் *poruḷ-šey,* செ.குன்றா.வி. (v.t.) 1. மதித்தல்; to treat with regard, esteem highly. நான் உன்னைப் பொருள் செய்வேன்

பொருள்செய்[2]–தல் *poruḷ-šey,* செ.குன்றா.வி. (v.i.)செல்வந் தேடுதல்; to acquire wealth. *'பொருள் செய்வார்க்கு மஃதிடம்'* (சீவக. 77)

[பொருள் + செய்]

பொருள்செய்வோர் *poruḷ-ceyvōr,* பெ. (n.) வணிகர் (உரி.நி.); vaisyas, as merchants.

[பொருள் + செய்வோர்]

பொருள்புரிநூல் *poruḷ-puri-nūl,* பெ. (n.) பொருள் நூல்; Treatise on Polity (பெருங். உஞ்சைக்.32,1.)

[பொருள் + புரி+ நூல்]

பொருள்வகை *poruḷ-vagai,* பெ. (n.) *பொருள்கோள்* (நம்பியகப். 211.) பார்க்க; see *poruḷ-kōḷ*

[பொருள் + வகை]

பொருள்வயிற்பிரிவு *poruḷ-vayiṟ-pirivu,* பெ. (n.) பொருள்தேடற் காரணம் பற்றித் தலைவியைத் தலைவன் பிரிகை (திருக்கோ. 332, அவ); separation of a lover from his beloved, in pursuit of wealth.

[பொருள் + வயின் + பிரிவு]

பொருள்வழு *poruḷ-vaḻu,* பெ. (n.) செய்யுட் குற்றங்களு ளொன்று (யாப். வி. 525); a defect in versification.

[பொருள் + வழு]

பொருள்விலையாட்டி *poruḷ-vilaiyāṭṭi,* பெ. (n.) விலைமாது; prostitute. *'வருணக்காப்பிலள் பொருள் விலையாட்டி யென்று'* (மணிமே. 5, 87.)

[பொருள் + விலையாட்டி]

பொருள்விளங்கவைத்தல் *poruḷ-viḷaṅga-vaittal,* பெ. (n.) பொருள் எளிதில் விளங்கு மாறு செய்யுள் முதலியவற்றை அமைக்கை(வின்.); perspicuity, charity of expression

[பொருள் + விளங்கவைத்தல்]

பொருள்வீடு *poru!-vīḍu,* பெ. (n.) பொருளிற் பற்றறுகை (யாழ்.அக.); non-attachment to worldly goods.

[பொருள் + வீடு]

பொருளகராதி *poru!-agarādi,* பெ. (n.) சதுரகராதியில் ஒருபொருட் பல்பெயர் கூறும் பகுதி (வின்.); dictionary of synonyous words, one of the four sections of cadur-agarādi

[பொருள் + அகராதி]

பொருளட்டவணை *poru!-aṭṭavaṇai,* பெ. (n.) நூல் முதலியவற்றின் உள்ளடக்கச் செய்திக் குறிப்பு; table of contents.

[பொருள் + அட்டவணை]

பொருளடக்கம் *poru!-aṭakkam,* பெ. (n.) *பொருளட்டவணை* பார்க்க; see *poru!-aṭṭavaṇai*

[பொருள் + அடக்கம்]

பொருளணி *poru!-aṇi,* பெ. (n.) பொருளமைவு பேச்சுத்திறன்; a class of figure of speech relating to sense, opp. to col-l-ani. *'பொருளணியியல்'* (தண்டி)

[பொருள் + அணி]

பொருளதிகாரம் *poru!-adigāram,* பெ. (n.) **1.** அகப்பொருளிலக்கண நூல்; treatise on agapporu!. அரசன் பொருளதிகார மின்மையிற் கவல்கின்றான், (இறை. 1, உரை) **2.** அகம் புறம் முதலியவற்றைக் கூறும் தொல்காப்பியத்தின் மூன்றாம் பகுதி; the third division of Tolkāppiyam, treating of agam, puṟam, etc. **3.** அறிவார்ந்த செய்திகளை யெல்லாம் விரித்துப் பொருணான்கினையும் கூறும் நூற்பகுதி(வின்.); that part of ethics which treats of poruṇāṉgu, embracing all kinds of knowledge and practice

[பொருள் + அதிகாரம்]

பொருளந்தாதி *poru!-andādi,* பெ. (n.) *பொருளிசையந்தாதி* பார்க்க. see *poru!-iśai-andādi.*

[பொருள் +Skt. anta + ādi. த. அந்தாதி]

பொருளற்றபேச்சு *poru!-artapeccu,* பெ. (n.) கொச்சைப்பேச்சு; meaningless talk.

[பொருள் + அற்ற + பேச்சு]

பொருளறை *poru!-aṟai,* பெ. (n.) கருவூல அறை; treasury. *"பெரும் பொருளறையுட்பட்ட ஆணிப்பொன்"* (திருவாலவா.35,24)

[பொருள் + அறை]

பொருளன் *poru!aṉ,* பெ. (n.) பரம்பொருள்; ultimate reality. *'பொருளன் புனிதன்'* (சிலப். 10, 174.)

[பொருள் → பொருளன்]

பொருளாக்கம் *pōru!-akkam,* பெ. (n.) பொருள்தேடுதல்; earn money.

[பொருள் + ஆக்கம்]

பொருளாகுபெயர் *poru!-āgupeyar,* பெ. (n.) முதற்பொருளின் பெயர் அதன் சினைக்காகும் ஆகுபெயர் (நன். 290); metonymy, where the whole is put for its part.

[பொருள் + ஆகுபெயர்]

பொருளாசை *porul-āśi,* பெ. (n.) பணம் முதலானவற்றின் மீதான நசை; covetousness, avarice.

[பொருள் + ஆசை]

பொருளாள் *porul-āl,* பெ. (n.) இல்லாள் (மனைவி); wife, as one's property. *'பிறன் பொருளாட் பெட்டொழுகும் பேதைமை'* (குறள், 141.)

[பொருள் + ஆள்]

'ஆள்' பெண்பாலீறு.

கணவனின் பெருமைக்குக் கரணியமாய் இருத்தலின் மனைவி பொருளாள் எனப்பட்டாள். 'பொருளல்லவற்றைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள்' எனுங்குறட்பா ஈண்டு நோக்கற்பாற்று.

பொருளாளர் *porul-ālar,* பெ. (n.) காசாளர்; cashier.

[பொருள் + ஆள்+அர்]

பொருளானந்தம் *porul-āṉandam,* பெ. (n.) இறைச்சியினும் புகழ்ச்சியினும், உவமையினும் பிறவற்றினும் ஊறுபயப்பப் பாடும் 'ஆனந்தக் குற்றம்' (யாப். வி. பக், 519) a defect in composition of iṟaicci, eulogy, simile, etc.,

[பொருள் +SKt. anta-ādi. த. ஆனந்தம்]

பொருளிசையந்தாதி *porul-iśai-y-andādi,* பெ. (n.) ஓசையாலன்றிப் பொருளால் வரும் ஈறு தொடங்கித் தொடை(ஈடு. 1, 6, 2, ஜீ); variety of andadi-t-todai in which the repetition of the ending is confined to mere sense and has no reference to word or sound, opp. to iyal-icai-y-andādi.

[பொருளிசை + அந்தாதி]

[SKt. anta+ādi. த. அந்தாதி]

பொருளியல் *poruliyal,* பெ. (n.) அகப்பொருள் பாடலடங்கிய ஒரு நூல் (களவியற்.); ananthology of poems on agapporul.

[பொருள் + இயல்]

பொருளியல்புரைத்தல் *porul-iyalburaittal,* பெ. (n.) எடுத்துக்கொண்ட பொருளின் இயல்பை உரைத்தல்; indication of the subject matter of a treatise.

[பொருள் + இயல்பு+ உரைத்தல்]

பொருளிலக்கணம் *porul-ilakkaṇam,* பெ. (n.) அகம் புறம் முதலியவற்றைக் கூறும் இலக்கண நூல்(வின்.); grammar dealing with agam, puṟam, etc.

[பொருள் + இலக்கணம்]

பொருளின்செல்வி *poruliṉ-šelvi,* பெ. (n.) திருமகள் (பிங்.); lakshmi, as goddess of wealth.

[பொருள் → பொருளின்+ செல்வி]

பொருளின்பம் *porul-iṉbam,* பெ. (n.) பொருட்சுவை பார்க்க; see *poruṭ-cuvai.* (இலக். வி. 635, உரை.)

[பொருள் + இன்பம்]

பொல்லாங்கன் *pollāṅgaṉ,* பெ. (n.) குறும்புக்காரன் (யாழ்.அக.); misehievous person.

[பொல்லாங்கு → பொல்லாங்கன்]

பொல்லாங்குக்காரன் *pollānku-k-karan,* பெ. (n.) தீங்கிழைப்பவன்; bad egg, ill-wisher.

[பொல்லாங்கு+காரன்]

'காரன்' உடைமை பற்றிய ஆண்பாலீறு.

பொல்லாங்கெண்ணம் *pōllanku-ennam,* பெ. (n.) தீயஎண்ணம்; ill - will.

[பொல்லாங்கு+எண்ணம்]

பொல்லாங்குச் செயல் *pōllanku-c-cayal,* பெ. (n.) கெடுசெயல்; mal practice

[பொல்லாங்கு + செயல்]

பொல்லாங்குத்திட்டு *pōllanku-t-tittu,* பெ. (n.) வசைமொழி; evil-speaking

[பொல்லாங்கு + திட்டு]

பொல்லாங்குத்தீக்குறி *pōllanku-t-tikkuri,* பெ. (n.) பொல்லாங்குஅறிகுறி; fore boding

[பொல்லாங்கு + அறிகுறி]

பொல்லாச்செயல் *pōlla-c-cayal,* பெ. (n.) *பொல்லாங்குசெயல்* பார்க்க; see *pollanku-c-cayal*

[பொல்லாங்கு + செயல்]

பொல்லாதவன் *pōllatavan,* பெ. (n.) தீங்காளன்; (போக்கிரி) rascal

[பொல்லாங்கு + செயல்]

பொருளுபதை porul-ubadai, பெ. (n.) அமைச்சர் முதலியோரை அரசன் தெரிந்தெடுத் தற்குரியதேர்திறம் நான்கனுள் வேற்றரசனிடம் அதிகப்பொருள் பெறலாமென்று கூறுவித்துத் தேர்வு செய்யும் முறை (குறள்,501,உரை); testing a minister:s or officer's loyalty by throwing him into circumstances in which he is tempted by tales of prospective prosperity under another sovereign, one of four ubadai, q.v.

[பொருள் +Skt. upa.dhā- த.உபதை]

பொருளுரை poru!-urai, பெ. (n.) 1. மெய்யுரை; truthful or unfailing word '*பொய்யுரையே யன்று பொருளுரையே*' (சிலப்,9,18.). 2. பயனுடைய சொல்; useful word or speech. "ஓர் பொருளுரை கேளிதென்றான்" (சிவக.1123)3. புகழுரை; reputation *பொருளுரையிழந்து.....நாணுத் துறந்தேன்*' (மணிமே.2,40.) 4. மந்திரம்; mantra '*பொருளுரை பெற்று வந்தான்*' (சீவக.1723.)

[பொருள் + உரை]

பொருளுரையாளர் porul-urai-y-āļar, பெ. (n.) சான்றோர்; wise men, sages. '*பொருளுரையாளர் நச்சுக் கொன்றேற்கு*' (சிலப்.16,65)

[பொருளுரை+ ஆளர்]

பொருளுவமை poru!-uvamai, பெ. (n.) பொருளின் தன்மையை உவமித்துக் கூறும் அணிவகை (யாழ்.அக.); (rhet) a kind of simile in which the qualities of two things are compared.

பொருனை porunai, பெ. (n.) *பொருநை* பார்க்க; see *porunai.* '*அலைதீர்ப் பொருனை நதிமுகத்தும்*' (திருவாலவா. திருநாட்டுச்.9).

[பொருநை → பொருனை]

பொரேரெனல் porēr-eṉal, பெ. (n.) சடுதிக்குறிப்பு; onom. expr. signifying suddenness. *'வண்டு பொரேரென வெழ'* (பரிபா.பக்.166,30.)

[பொரேர் + எனல்]

பொல் pol, பெ. (n.) *பொல்லு²* பார்க்க; see *pollu²*

க.பொல்

[புல் → பொல்]

பொல்லது polladu, பெ. (n.) *பொல்லாது*(வின்) பார்க்க; see *pollādu*. *'நல்லது பொல்லது'*.

[பொல்லாது → பொல்லது]

பொல்லம் pollam, பெ. (n.) 1. தைக்கை (திவா.); stitching 2. இணைக்கை (பிங்.); joining as in tailoring or in carpentry. 3. சேர்த்துத் தைக்க உதவும் சிறுதுண்டு (யாழ்ப்.); piece, division, strip, used in patch work.

[புல் → பொல் → பொல்லம்]

பொல்லம்பொத்து-தல் pollam,pottu-, செ.குன்றாவி. (v.t.) கிழிந்த துணியின் இரண்டு தலையையுங்கூட்டித் தைத்தல்; to sew together, as two pieces of cloth. *'பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை'* (பொருந.8.)

[பொல்லம் + பொத்து–,]

பொல்லர் pollar, பெ. (n.) 1. தையற்காரர் (பிங்.); tailors, as sewers. 2. தோல்வினைஞர்; leather workers, shoe makers.

[புல் → பொல் → பொல்லர்]



பொல்லா pollā, பெ.எ (adj.) 1. தீமையான; bad, vicious, evil, wicked. *'பொல்லாக் கனாக்கண்டார்'* (சீவக.2173.) 2. கடுமையான; severe, intense. *'பொல்லாத மருந்து'*

க. பொல்ல. ம. பொல்லா

[புல் → பொல் → பொல் + ஆ]

'ஆ' – எ.ம.இ.

பொல்லாக்காட்சி pollā-k-kāṭci, பெ. (n.) மயக்கவறிவு; confused knowledge, bewilderment. *'வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்று'* (மணிமே.30,71.)

[பொல் + ஆ + காட்சி]

'ஆ'– எ.ம.இ.

பொல்லாக்காலம் pollā-k-kālam, பெ. (n.) கெட்டகாலம்; evil or inpropities time.

[பொல் + ஆ + காலம்]

'ஆ'– எ. ம.இ.

பொல்லாக் குறும்பு pollā-k-kuṟumbu, பெ. (n.) தீமையுடைய சிற்றரண்; dangerous small port. *'பொல்லாக் குறும்பும் போகுதற் கருமையின்'* (பெருங். 1:54:50)

[பொல் + ஆ + குறும்பு]

'ஆ' – எ.ம.இ.

பொல்லாங்கு pollāṅgu,பெ. (n) **1.** தீது; evil, vice, vileness. '*பொல்லாங்கென்பவை யெல்லாந் தவிர்*' (கொன்றைவே.) **2.** குற்றம் (பிங்.) defect, fault. '*மாணவகன் பொல்லாங் குரைக்க*' (பெரியபு. சண்டேசுர.40.), **3.** ஈனம் (யாழ்.அக.); deficiency, degradation. **4.** கேடு(வின்); ruin, injury, destruction. **5.** மறதி (சூடா.); forgetfulness.

[பொல்லா → பொல்லாங்கு]

பொல்லாங்குச்சொல் pōlanku-c-col, பெ. (n.) தீமொழி; evil word.

[பொல்லாங்கு + சொல்]

பொல்லாச்சாம்பற்றரை pollā-c-cāmparrarai, பெ. (n.) கட்டடத்திற்குத் தகுதியில்லாத தரைவகை; building purposes. '*உவர்த்தரை ஈளைத்தரை பொல்லாச்சாம்பற்றரை*' (சிலப்.3,94, உரை. பக்.114.).

[பொல்+ ஆ + சாம்பல் + தரை]

'ஆ' – எ.ம.இ.

பொல்லாத்தனம் pollā-t-taṉam, பெ. (n.) தீமை விளைவிக்கும் குணம்; wickedness. '*என்னிடமே உன் பொல்லாத்தனத்தைக் காட்டுகிறாயே!*'

[பொல் + ஆ + தனம்]

'ஆ' – எ.ம.இ.

பொல்லாத pollāda பெ.எ. (adj.) *பொல்லா* பார்க்க; see *pollā*. '*பொல்லாத சமணரொடு*' (தேவா.412,10.).

[பொல் → பொல்லாத]

பொல்+ஆ+த்+அ.
'ஆ' எ.ம.இ.
'த்'– இ.கா. இடைநிலை
'அ'– பெ.எ. ஈறு.

பொல்லாதகிரமம் pollāda-kiramam, பெ. (n.) தீயதொழில்; evil dealing.

[பொல் → பொல்லாத +skt.grāma. த.கிரமம்]

பொல்லாதவன் pollādavaṉ, பெ. (n.) **1.** தீயவன்; bad, wicked man. **2.** கடுமையான வன் rude, rough man.

[பொல் → பொல்லாதவன்]

பொல்லாது[1] pollādu, பெ. (n.) தீயது; vice, evil. '*பெடையொடுபுணர்வுவிரும்பல் பொல்லாதெனவும்*' (பெருங்.மகத.2,168.)

[பொல் → பொல்லாது]

பொல்லது[2] pollādu, பெ. (n.) உடல் முதலியன கேடுற்றநிலை; emaciation; thinness,as of body; spoilt condition. "நீஇப்படிப் பொல்லாதயிருப்பானேனென்ன, நாம் நோயாய்க் கிடந்தோம் கண்டீரேயென்று" (சங்கற்பநி. 205,உரை.)

பொல்லாநிலம்[1] pollā-nilam, பெ. (n.) சேற்றுநிலம் (பிங்.); land full of mire.

[பொல் → பொல்லா + நிலம்]

பொல்லாநிலம்[2] pollā-nilam, பெ. (n.) இடுகாடு; cremation ground. "உங்களைப் பொல்லா நிலத்திலேயிடுவதற்கு முன்னம்" (திவ். திருப்பல். பு, வ்யா. பக். 50)

பொல்லாப்பு[1] pollāppu, பெ. (n.) **1.** *பொல்லாங்கு*(வின்) பார்க்க; see *pollāṅgu*, 1,2. **2.** மனக்குறை; grievance '*பொல்லாப்பென் மேலுண்டோ மன்மதா*' (குற்றா. குற.33.) **3.** துன்பம்; trouble. '*ஒருவன் தனக்குப் பொல்லாப்பு வேண்டின்*' (நான்மணி, 17,உரை.)

[பொல் → பொல்லாப்பு]

பொல்லாப்பு² pollāppu, பெ. (n.) *மறுப்பு;* bobjection. *"இக்சாணிக்குப் பொல்லாப்புச் சொல்லில்" (புதுக். கல். 327)*

பொல்லாமணி pollā-maṇi, பெ. (n.) **1.** துளையிடப் பெறாத மணி; gem which has not been bored. **2.** குற்றமற்ற மணி(வின்); flawless gem **3.** மாசற்ற பரம்பொருள்; god, as immaculate. '*என் பொல்லா மணியைப் புணர்ந்தே*' (திருவாச.271.)

[பொல் → பொல்லா + மணி]

பொல்லாமை pollāmai, பெ. (n.) **1.** தீது; evil, ill, vileness. **2.** குற்றம்; fault, defect. '*வீணை பொல்லாமை.....இது*' (சீவக.717.).

[பொல் → பொல்லா → பொல்லாமை]

பொல்லாவாறு pollā-v-āṟu, பெ. (n.) தீச்செயல்; evil course of conduct. '*பொல்லாவாறு செயப்புரியாது*' (தேவா.602,7.)

[பொல் → பொல்லா+ஆறு → பொல்லாவாறு]

பொல்லான்¹ pollāṉ, பெ. (n.) **1.** தீயவன்; wicked man. '*வேடரென்னும் பொல்லார்க்கு*' (வெங்கைக்கோ.101.) **2.** அறிவிலி; ignorant person. '*பேதைநீ பெரிதும் பொல்லாய்*' (சீவக.269.)

[பொல் → பொல்லா → பொல்லான்]

பொல்லான்² pollāṉ, பெ. (n.) குதிரைவகை; a species of horse. '*மயிர்வரி நீலான் பொல்லான்*' (திருவாலவா.28,69.)

[பொல் → பொல்லா → பொல்லான்]

பொல்லு–தல் pollu-, செ.குன்றா.வி (v.t.) *பொள்ளு* பார்க்க; '*பொல்லாப் பிள்ளையார்*' see *pollu.*

[புல் → பொல் → பொல்லு]

பொல்லு² pollu, பெ. (n.) பதர்(வின்); empty glume or husk of grain.

[புல் → பொல் → பொல்லு]

பொல்லு³ pollu, பெ. (n.) **1.** தடி(யாழ்.அக.); walking stick; cane **2.** ஊன்றுகோல், prop.

[புல் → பொல் → பொல்லு]



பொலங்கலம் polaṅ-kalam, பெ. (n.) பொன்னணிகலன்; gold jewel. '*பொலங்கலநந்த*' (ஐங்குறு.316.)

[புல் → பொல் → பொலம் + கலம்]

பொலங்கா polaṅ-kā, பெ. (n.) இந்திரனுடைய சோலை; grove of indra. '*அரும்பொலங் கா வைந்தால்*' (தக்கயாகப்.71.)

[பொலம் + கா]

பொலந்தும்பை polan-tumpai, பெ. (n.) பொன்னானியன்ற தும்பை; Tumpai-which made by gold. '*பொலந்தும்பைக் கழற்பாண்டிற்* (புறநா.97)

[பொலம் + தும்பை]

பொல்பொலவெனல் pola-pola-v-enal, பெ. (n.) (அ)பொறுபொலெனல்(அகசந்.உ.); Expr. singnifying crumbling, as of earth. (ஆ) நெகிழ்ந்திருத்தற் குறிப்பு(தஞ்சை); looseness.

பொலம்¹ polam, பெ. (n.) 1. பொன்; gold. *'பொலம்பூண் வேந்தர்'* (பதிற்றுப்.64) 2. அழகு(திவா.); beauty, fairness. *'பொலந்தேர்ப் பொறைய'* (பதிற்றுப்.84,6.) 3. அணிகலம் jewel. 4. பொன்னிறம்(வின்); gold colour.

[புல் → பொல் → பொலம்]

பொலம்² polam, பெ. (n.) பொல்லாங்கு(வின்); badness, evil.

[பொல் → பொல்லாம்(→ பொல்லாங்கு பொல்லாம் → பொல்லாப்பு. பொல்லாம் →) பொலம்]

பொலம்புள் polam-puḷ, பெ. (n.), *பொன்வாய்ப்புள்* பார்க்க; see *penvāy-p-puḷ* *'கயல்கொள் பொலம்புள்'* (பெருங்.வத்தவ.2,69.) kingfisher.

[பொலம்¹ + புள்]

பொலன் polan, பெ. (n.) *பொலம்¹* பார்க்க; see *polam¹* *'பொலன் கழற்காற்பொடி'* (கம்பரா.குலமுறை.29.)

[பொலம்¹ → பொலன்]

பொழக்கடை pōlakkatay, பெ. (n.) கொல்லைப்புறம்; backyard.

[புழைக்கடை → பொழக்கடை]

பொலன்காலா *polan-kālā*, பெ. (n.) ஆறடி நீளம் வளரக் கூடியதும், மின்னும் பசிய நிறமுள்ளதுமான கடல் மீன்வகை; mango - fish, silvery green, attaining 6 ft. in length, polynemus tetradactylus.

[பொலன் + காலா]



பொலா *pola*, பெ. (n.) ஊன்; flesh.

[புலால்→ பொலா]

பொலி¹-தல் *poli-*, செ.கு.வி. (v.i.) 1. செழித்தல்; to flourish, prosper, thrive. *'பொலியு மால்வரை'* (தேவா. 236, 8) 2. பெருகுதல்(வின்); to be enlarged; to appear grand, as from dress; to swell in size, as rice in boiling; to grow full 3. மிகுதல்; to abound, increase. *'கழுநீர் பொலிந்த கண்ணகன் பொய்கை'* (மதுரைக். 171.) 4. விளங்குதல்; to bloom, as the countenance; to shine. *'மார்பில்....... பொலிந்த சாந்தமொடு'* (பதிற்றுப். 88, 30.) 5. சிறத்தல்; to be high, great or celebrated. *'பொலிந்த வருந்தவத்தோற்கே'* (புறநா.1.) 6. மங்கலமாதல்; to be auspicious or fortunate. *'பொலிக பொலிக பொலிக'* (திவ். திருவாய். 5, 2, 1) (யாழ்ப்.) 7. நீடுவாழ்தல்; to live long and prosperously, used as a benediction. *'வழிவழி சிறந்து பொலிமின்'* (தொல். பொ. 422.) 8. நிகழ்தல்; to occur. *'பொலிந்த தாமினிது போரென லொடும்'* (கம்பரா. தானை காண். 2).

[புல்→ பொல் → பொலி]

பொலி²—தல் *poli-,* செ. குன்றாவி. (v.t) புணர்தல்; to cover, as bull or ram; to capulate. *'பொலிகாளை'*

[புல் → பொல் → பொலி]

பொலி² *poli,* பெ. (n.) **1.** தூற்றாநெற்குவியல். (யாழ்ப்.); heap of unwinnowed grain. **2.** தூற்றியநெல் winnowed paddy. **3.** விளைவின் அளவு; out-turn. *'அந்த வயல் என்ன பொலி காணும்?'* **4.** தவசமாகக் (தானியம்) கொடுக்கும் வட்டி,(இ.வ.) interest paid in kind. **5.** களத்தில் நெல்லளக்கும் போது முதல் மரக்காலுக்கு மங்கலமாக வழங்கும் பெயர்;(இ.வ.) a term for the first marakkāl, of grain measured at the threshing floor. **6.** முடிதிருத்துவோன் கொங்கு வேளாளரில் இறந்தவரெலும்பை மூன்றா நாள் நீரிலிட்டுப் பசுமரத்திற்கு பால்வார்க்கும் போது வழங்கும் நற்சொல்(G.TP.D.I.105); exclamation by a barber on the third day of a funeral, as he pours milk at the foot of a green tree after throwing the bones of the deceased in water, a custom among the koṅgu vēḷāḷās. **7.** புணர்ச்சி; covering, as of animals (கொ.வ.)

[புல் → பொல் → பொலி

பொலிஎருது *pōli-earutu,* பெ. (n.) *பொலியெருது* பார்க்க; see *poliearutu.*

[பொலி + எருது]

பொலிக்கட்டை *poli-k-kaṭṭai,* பெ. (n.) பொலியெருதுகளைக் கட்டும் மரக்கட்டை (யாழ்.அக.); stock to which the leading ox in threshing is tied.

[பொலி + கட்டை]



பொலிக்கந்து *poli-k-kandu,* பெ. (n.) தூற்றியபின் களத்திற் கிடக்கும் நெற் கலந்த பதர்(வின்); chaff containing some grain, left on the threshing-floor after winnowing.

[பொலி + கந்து = பதர்]

பொலிக்குறிப்பு *poli-k-kuṟippu,* பெ. (n.) கதிரடித்துக் குவித்த நெற்பட்டடைக் கணக்கு(R.T.); memorandum of the heaps of corn on a threshing-floor.

[பொலி + குறிப்பு]

பொலிக்கெடி *poli-k-keḍi,* பெ. (n.) வைக்கோல் (யாழ்.அக.); straw.

[பொலி + கெடி]

பொலிகடா *poli-kaḍā,* பெ. (n.) **1.** *பொலியெருது* (வின்) பார்க்க; see *poli-y-erudu.* **2.** பொலியாடு; ram or he-goat kept for covering (w.) **3.** தன்மனம் போனபடி திரியும் தடியன்(இ.வ.); rake, reckless person who leads a loose life.

[பொலி + கடா]

பொலிகாளை *poli-kāḷai,* பெ.(n.) *பொலியெருது* பார்க்க; 1. see *polikāḷai.*

[பொலி + காளை]

பொலிகூறு–தல் *poli-kūṟu-,* செ.கு.வி. (v.i.) அறுவடை முடிவிற் களத்தே மகிழ்ச்சிக் குறியாகவும் பண்ணையார்க்கு வாழ்த்தாகவும் பாடிப் பொலியோ பொலி என்று கூவுதல்(வின்.); to shout poli-y-ō-poli in joy and as a blessing to a landlord when the year's harvest is over.

[பொலி + கூறு–தல்]

பொலிகை *poligai,* பெ. (n.) *பொலிசை*(s.i.i. iii. 55. 8.) பார்க்க; see *polišai.*

[பொலிசை → பொலிகை]

பொலிச்சல் *policcal,* பெ. (n.) புணர்ச்சி;(இ.வ.) covering, especially among animals.

பொலிச்சற்காளை *policcaṟ-kāḷai,* பெ. (n.) *பொலியெருது*,1 பார்க்க; see *poli-y-erudu,*

[பொலிச்சல் + காளை]

பொலிசை *polisai,* பெ. (n.) 1. ஊதியம்; gain, profit. *'பொன் பெற்ற பொலிசை பெற்றார் பிணையனார்'* (சீவக. 2546.) 2. வட்டி; interest, especially in kind. *'பொலிசைக்குக் கொண்ட ஊரும்'* (s.i.i. ii, 82.)

[பொலி → பொலிசை]

பொலிசையூட்டு–தல் *polišai-y-ūṭṭu-,* செ.கு.வி. (v.i.) வட்டி செலுத்துதல்; to pay interest.

[பொலிசை + ஊட்டு–]

பொலிசையூட்டு *polišai-y-ūṭṭu,* பெ. (n.) வட்டி பெறுகை; earning interest. *'பொலிசை யூட்டுக்கு .... வைத்த காசு'* (s.i.i. 11, 121.)

[பொலிசை + ஊட்டு]

பொலிதள்ளி *poli-taḷḷi,* பெ. (n.) களத்திலே நெல்லை அளக்கும்போது அதனைக் குவித்துத் தரும் சிற்றூர் ஆள்(இ.வ.); village servant who assists in measuring paddy, especially by shoving it within easy reach of the marakkāl.

[பொலி + தள் → தள்ளி]

'இ' வி. மு. ஈறு.

பொலிதூற்று–தல் *poli-tūṟṟu-,* செ. குன்றாவி. (v.t.) களத்தில் நெல்லைப் பதர்போகக் காற்றில் தூற்றுதல்; to separate grains from chaff by winnowing.

[பொலி + தூற்று–]

பொலிநடையன் *poli-nadaiyaṉ,* பெ. (n.) *பொலியெருது*, 2. (யாழ்.அக.) பார்க்க; see *poli-y-erudu.*

பொலிப்பாட்டு *poli-p-pāṭṭu,* பெ. (n.) 1. அறுவடைமுடிவிற் களத்தே தலைவனை வாழ்த்தி உழவர் பாடும் பாட்டு (இ.வ.); song sung by farmers in the threshing floor in praise of the landlord at the end of a harvest. 2. கடுமையான வசை; strong invective. *'பொலிப்பாட்டுப் பாடப் புகுந்தாள்'.* (விறலி விடு. 785.)

[பொலி + பாட்டு]

பொலிப்பாடு *polippādu,* பெ. (n.) *பொலிகடா,* 2. பார்க்க; see *poli-kaḍā.* *'பொலிப்பாட்டைப் போலே புறப்பட்டாள்'* (விறலிவிடு. 785.)

[பொலிப்பு + ஆடு → பொலிப்பாடு]

பொலிப்பாய் *polippāy,* வி.எ. *(adv.)* மெதுவாய் (இ.வ.); gently.

[பொலிப்பு+ஆ –,]

பொலிப்பு *polippu,* பெ. (n.) புணர்ச்சி; act of covering, especially by a bull.

[பொல் → பொலி → பொலிப்பு]

பொலிப்புக்கடா *polippu-k-kaḍā,* பெ. (n.) *பொலிகடா,* 1. பார்க்க; see *poli-kaḍā,1* *'பொலிப்புக் கடாவின் கொழுப்பு'* (விறலிவிடு. 632.)

[பொலி → பொலிப்பு + கடா]

பொலிபாடுதல் *poli-pāḍudal,* பெ. (n.) 1. களத்திற் சூடடிக்கும் போது உழவர் பாட்டுப்பாடுகை (சிலப். 10, 137, உரை.); singing by farmers in the threshing- floor when cattle are being led to tread the sheaves 2. பொலிப்பாட்டுப் பாடுகை (இ.வ.); singing of poli-p-pāṭṭu.

[பொலி + பாடுதல்]

பொலிபொலியெனல் *poli-poli-y-eṉal,* பெ. (n.) சூட்டடியிற் பிணையல் மாடுகளை ஓட்டும் போது உழவரிடும் ஒலிக்குறிப்பு (வின்.); redupl.of பொலி + expression shouted to urge bullocks in treading out grain.

[பொலி பொலி + எனல்]

பொலிமதம் *polimatam,* பெ. (n.) 1. நண்டு; crab. 2. ஆண்குறி; penis.

பொலிமுறைநாகு *poli-muṟai-nāgu,* பெ. (n.) பொலியக்கூடிய பக்குவமுள்ள கிடாரி (S.I.I.iv.102); heifer fit for covering.

[பொலி+ முறை + நாகு]

பொலியளவு *poli-y-aḷavu,* பெ. (n.) களத்திற் சூடடித்தவுடன் தாராளமாக அளக்கும் நெல்லளவு; over measure, liberal measuring of grain.on a threshing floor.

[பொலி + அளவு]

பொலியாடு *pōli-atu,* பெ. (n.) *பொலிகடர்* பார்க்க; see *polikata*

[பொலி + ஆடு]

பொலியூட்டு *poli-y-ūṭṭu,* பெ. (n.) *பொலிசையூட்டு* (s.i.i.iii, 84, 88.) பார்க்க; see *policaiyōṭṭu*

[பொலி + ஊட்டு]

பொலியெருது *poli-y-erudu,* பெ. (n.) 1. ஆக்களைச் சினையாக்குதற் பொருட்டு வளர்க்கப்படும் காளை (பிங்.); bull kept for covering. *'கொடிய பொலியெருதை யிருமூக்கிலும் கயிறொன்று கோத்து'* (அறப். சத. 42) 2. களத்துப் பிணையல் மாடுகளில் முதற்செல்லுங்கடா (வின்); the leading ox in treading out grain on a threshing - floor. (w.) 3. உழவுக்காளை; breeding bull

[பொலி + எருது]



பொலிவீசு–தல் *poli-vīsu-*, செ.குன்றாவி. (v.t.) களத்தில் நெல்லைப் பதர்போக வீசுதல் (இ.வ.); to winnow the heap of grain on a threshing floor.

[பொலி + வீசு–]

பொலிவீடு *polivīḍu*, பெ. (n.) கோயிற் செலவு கட்கு விடப்படும் சிற்றூர்; village given as an endowment for temple expenses. 'பொலி வீடாகப் ..... புத்தூர் என்கிற கிராமத்தை ஸமர்ப்பித்தான்' (கோயிலொ. 125.)

[பொலி + வீடு → விடு]

பொலிவு *polivu-*, பெ. (n.) **1.** முகமலர்ச்சி; brightness or bloom of countenance. 2. தோற்றப் பொலிவு; grandness of appearance, as from dress. *'கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்'* (திருவாச. 2, 30) 3. அழகு (அக.நி.); beauty, splendour, lustre. *'பொன்னரைச் சீரையின் பொலிவும் நோக்கினான்'* (கம்பரா. நகர்நீங்கு. 162.) 4. செழிப்பு; prosperity. 5. பருமை (வின்.); largeness **6.** மிகுதி (அக.நி.); fullness, abundance, copiousness. *'புண்ணியந்தோன்றி மேன்மேல் வளர்வதன் பொலிவு போல்வார்'* (பெரியபு. கண்ணப்ப. 42) **7.** எழுச்சி (பிங்.); height, loftiness. **8.** பொன் (அக.நி.); gold. **9.** வெறுந்தோற்றம்(யாழ்ப்.); speciousness, plausibility, (j.) **10.** புணர்ச்சி (கொ.வ.); covering, among animals.

[பொல் + பொலி + பொலிவு]

பொலிவு மங்கலம் *polivu - maṅgalam*, பெ. (n.) மன்னவன் மகிழப் பிறந்த ஆண் குழந்தையைப் பலரும் கொண்டாடுதலைக் கூறும் புறத்துறை (பு.வெ.9, 23.) (puṟap.) theme describing the public celebrations on the birth of a prince.

[பொலிவு + மங்கலம்]

பொலிவேடு *polivēḍu*, பெ. (n.) *பொலிவீடு* பார்க்க; see *polivīdu* *'கொடியாலத்தைப் பொலிவேட்டுக் கிராமமாகச் சமர்ப்பித்தான்'* (கோயிலொ. 125.)

[பொலிவீடு → பொலிவேடு]

பொலிவொழுங்கு *pōli-oluku*, பெ. (n.) செவ்வொழுங்கு; good order.

[பொலிவு + ஒழுங்கு]

பொலுகு–தல் *polugu-*, செ.கு.வி. (v.i.) **1.** அதிகப்படுதல்; to increast, enlarge, as a sore; to spread, as an eruption. **2.** நீரொழுகுதல் (சங்.அக.) to flow, drip, as water.

தெ. பொலசு

[பொலி + பொலிகு + பொலுகு]

பொலுபொலனல் *polu-polenal*, பெ. (n.) (அ) உதிர்தற்குறிப்பு; onom ecpr signifying falling loosely or quickly. (ஆ) நொறுங்கற்குறிப்பு; crumbling, as of earth.

[பொலுபொலு + எனல்]

பொழி¹–தல் *poḻi,* செ.குன்றாவி. (v.t.) 1. பெய்தல்; to pour forth, shower, as rain. *'கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்'* (புறநா.203) 2. மிகச் செலுத்துதல்; to discharge in abundance. *'இளங்கோளரி பொழிந்தான்'* (கம்பரா.நிகும்பலை.118) 3. தாராளமாய்க் கொடுத்தல் (கடா.); to give liberally. 4. தட்டுத் தடங்கலின்றிப் பேசுதல்; to pour forth a torrent of eloquence. *'அவன் அவையில் நின்று பொழிகிறான்'*

[பொய் → பொயி→ பொழி]

பொழி²–தல் *poḻi,* செ.கு.வி. (v.i.) 1. நிறைந்தொழுகுதல்; to flow, overflow. *'புரப்போன் பாத்திரம் பொழிந்தூண் சுரந்து'* (மணிமே.14,49) 2. நிறைதல்; to abound, as wealth. *'பொழிமணித் தண்டூண்'* (பெருங். உஞ்சைக். 47,110) 3. தங்குதல்; to settle, rest, as a cloud on a mounatain. *'தளிமழை பொழியுந் தன்பரங் குன்றில்'* (மதுரைக் 263)

[பொய் → பொயி→ பொழி]

பொழி³ *poḻi,* பெ.(n.) 1. வயல்வரம்பு (இ.வ.); ridge. 2. எல்லை (இ.வ.); boundary, limit. 3. கடலுக்கும் கழிநீர்நிலைக்கும் இடையிலுள்ள சிறுகரை (நாஞ்.); a small strip of land between sea and lagoon. (nāñ.) 4. கணு; joint. *'பொற்குடம் பொருந்திய பொழியமை மணித்தூண்'* (பெருங்.உஞ்சைக்.48,47.) 5. உரிக்கப்பட்டது; that which is peeled off, as fifre or rind. *'பெரும்பொழி வெண்ணார்'* (அகநா.83.) தெ.ம. பொலி

[பொலி + பொழி + பொழில் + பொழி]

பொழிகணை *poḻi-kaṇai,* பெ. (n.) தொடர்ந்து எய்கின்ற அம்பு; pour down or shaft. *'கலிப்பிணிக் கறைத்தோல் பொழிகணை உதைப்ப'* (அகநா.24)

[பொழி + கணை]

பொழிப்பு *poḻippu,* பெ.(n.) 1. *பொழிப்புரை* பார்க்க; see *poḻippurai.* *'பொழிப்பகல நுட்ப நூலெச்சம்'* (நாலடி,319). 2. நூற்பதிகம்; argument of a poem or treatise. *'சுந்தரர் விளையாடற்குச் சொல்லிய தமிழ்ப்பொழிப் பாம்'* (திருவாலவா.பதிகம்.11.) 3. குறிப்பு; clue, hint, short direction. *'பொழிப்புக் காட்டினான்'* (w.). 4. ஊகித்தல்; inference from appearances or circumstances 5. *பொழிப்புத் தொடை* பார்க்க; see *poḻippu-t-toḍḍai.* *'பொழிப்பு மொரூஉவுஞ் செந்தொடை மரபும்'* (தொல்.பொ.402.)

[புல் → பொல் → பொலி (திரள்) → பொழி → பொழிப்பு]

பொழிப்புத்திரட்டு–தல் *poḻippu-t-tiraṭṭu-,* செ.கு.வி. (v.i.) பிண்டப் பொருள் கூறுதல்; to give the substance, as of a passage. *'கருத்துரைத்துக் கண்ணழித்துப் பொழிப்புத் திரட்டியகலங்கூறல்'* (இறை.கள.1,13.)

[பொழிப்பு + திரட்டு–தல்]

பொழிப்புத்தொடை *poḻippu-t-toḍai,* பெ.(n.) அளவடியுள் முதற்சீர்க்கண்ணும் மூன்றாஞ் சீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது; (இலக்.வி.723.) (pros.) versification in which there is mōṉai, etc. in the first and third feet of a four-foot line.

[பொழிப்பு + தொடை]

பொழிப்புப்பொழிப்பாய்ப் பேசு-தல் *polippu-p-polippāy-p-pēsu-,* செ.குன்றாவி (v.t.) 1. வசைப்பொருள் உள்ளடங்கப் பேசுதல்; to speak sarcastically. 2. சுருங்கக் கூறுதல் (வின்.); to give a brief outline

[பொழிப்பு →பொழிப்பாய் + பேசு]

பொழிப்புரை *polippurai,* பெ. (n.) பொருளைத் திரட்டிக் கூறும் உரை. (பிங்.); a commentry which paraphrases a text or summarises, its substance.

[பொழிப்பு + உரை]

பொழில் *polil,* பெ.(n.) 1. பெருமை; (பிங்.) greatness, largencess. 2. சோலை. (பிங்.); park, grove, forest. '*காவதப் பொழிற் கப்புறம்*' (கம்பரா. வனம்புகு. 32) 3. பூந்தோட்டம் (திவா.); flower garden; pleasure-garden. '*அணிமலர்ப் பூம்பொழிலகவயின்*' (மணிமே.பதி.38.) 4. மண்ணுலகம்; earth. '*பொழில் காவலன்*' (பு.வெ.6,6.) 5. உலகம்; world '*நல்கித்தான் காத்தளிக்கம் பொழிலேழும்*' (திவ்.திருவாய், 1,4,5.) 6. நாடு (சூடா.); country, district. 7. நாட்டின் கூறு; division of a country. '*நாவலந்தண்பொழில்*' (பெரும்பாண்.465.)

[புல்→ பொல் → பொலி → பொழி + பொழில்]

பொழிலகம் *polilakam,* பெ. (n.) *பொழில்,* 3.பார்க்க; see *polilakam.* '*அணிமலர் பூம்பொழிலகவையின்*' (மணி.பதி.38.)

[பொழில் + அகம்]

பொழிவு *polivu,* பெ. (n.) 1. பொழிகை; flowing; raining. '*பொழிவொழியாப் பூஞ்சோலை*' (பெரியபு. திருநாளைப்.3) 2. நிறை (வின்.); affluence. 3. பெருகுதல் (வின்.); increase, as of revenue. 4. ஊதியம்; profit, advantage.

[பொழி + பொழிவு]

பொழிற்பாயல் *polirpāyal,* பெ. (n.) சோலையிடத்துப் படுக்கை; bed in park. '*ஆராக் காம மலர்பொழிற் பாயல்*' (பரிபா.8.40.)

[பொழில் + பாயல்]

பொழுசாய்-தல் *polu-šāy-,* பெ. (n.) பொழுது சாய்தல்; Sunset.

[பொழுது → பொழு+ சாய்–,தல்]

பொழுதறுதி[1] *poludarudi,* பெ. (n.) கதிரவன் மறையும் வேளை; time of sunset

பொழுதறுதி[2] *poludarudi,* (adv.) முழுநாளும், (கொ.வ.) whole day. '*பொழுதறுதி வேலை செய்ததேன்*'

[பொழுது + அறுதி]

பொழுதிருக்க *poludirukka,* வி.எ. (adv.) கதிரவன் மறைவதற்கு முன்; just before sunset, while it is still day. '*பொழுதிருக்க வந்தேன்*'

[பொழுது +இரு → இருக்க]

பொழுதிற்கூடல் *poludir-kūdal,* பெ. (n.) *பொழுதொடுபுணர்தல்* (சூடா.) பார்க்க; see *polutodupūnartal.*

[பொழுது → பொழுதில் + கூடல்]

பொழுதிறங்கு–தல் *poludirangudal-,* பெ. (n.) கதிரவன் மறையும்நேரம்; sunset.

[பொழுது + இறங்குதல்]

பொழுது *poludu,* பெ. (n.) **1.** காலம்; time. *'இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது'* (குறள்,481.) **2.** தக்கசமயம்; oppurtunity. **3.** வாழ்நாள்; lifetime *'பொழுதளந்தறியும் பொய்யா....காண்கையர்'* (முல்லைப்.55.) **4.** கணம்; moment of time. *'ஒருபொழுதும் வாழ்வ தறியார்'* (குறள்,337.) **5.** சிறுபொழுது பெரும்பொழுதுகள்; (சிலப்.பதிக.உரை.)division of time, of two kinds; viz., ciru-poludu, peru-m-polutu. **6.** கதிரவன் (பிங்.); sun *'பொழுது போய்ப் பட்டபின்றை'* (சீவக.1747.)

[போது + போழ்து + பொழுது]

பொழுதுகட்டுதல் *poludu-kattudal,* பெ. (n.) மழைக்குறியாக முகிலால் கதிரவன் மறைப்புண்ணுகை; cloudy sky, as a sign of rain.

[பொழுது + கட்டுதல்]

பொழுதுகண்டிரங்கல் *poludu-kandirangal,* பெ. (n.) பிரிவாற்றாத தலைவி மாலைப் பொழுதுகண்டு வருந்துகை (குறள்,அதி,123.) (akap.) theme describing the pining of a maiden at eventide for her absent lover.

[பொழுது + கண்டு + இரங்கல்]

பொழுது காணுதல் *poludu-kāṇudal,* பெ. (n.) **1.** *பொழுது புறப்படுதல்* (வின்.); பார்க்க; (w.) see *poludu-purappadudal.* **2.** காலம் போதியதாகை; sufficiency of time.

[பொழுது + காணுதல்]

பொழுதுசாய்தல் *poludu-šāydal,* பெ. (n.) ***பொழுதிறங்குதல்.*** பார்க்க, see *poludu-irangudal*

[பொழுது + சாய்தல்]

பொழுதுசோறுசாப்பிடு–தல் *poludu-šōru-šāppidu-,* செ.கு.வி. (v.i.) கதிரவன் மறையுமுன் உண்ணுதல்; to take food before sunset. *'ஞாயிற்றுக்கிழமையாதலால் பொழுது சோறு சாப்பிட்டேன்'* (நாஞ்.)

[பொழுது + சோறு + சாப்பிடு–]

பொழுதுதயம் *polududayam,* பெ. (n.) கதிரவன் தோற்றம்; rising of the sun.

[பொழுது + உதயம்]

Skt. udaya→த. உதய

பொழுதுதாழ்த்து–தல் *poludu-tālttu,* செ.கு.வி. (v.i.) **1.** காலம் நீட்டித்தல்; to be late, behind time. **2.** காலம் போக்குதல் (யாழ்ப்.); to while away time.

[பொழுது + தாழ்த்து–]

பொழுதுதிரும்பல் *poludu-tirumbal,* பெ. (n.) கதிரவன் உச்சியினின்று சாய்கை; the sun's passing beyond the meridian.

[பொழுது + திரும்பல்]

பொழுதுதிரும்பி *poludu-tirumbi,* பெ. (n.) பொழுதுவணங்கி; sun flower plant.

[பொழுது + திரும்பி]

பொழுதுபடுதல் *poludu-padutal,* பெ. (n.) *பொழுதிறங்குதல்* பார்க்க; see *poludirangudal.*

[பொழுது + படுதல்]

பொழுதுபுகுதல் *poludu-pugudal,* பெ. (n.) *பொழுதிறங்குதல்* பார்க்க; see *poludirangudal.*

[பொழுது + புகுதல்]

பொழுதுபுறப்படுதல் *polutu-purappadutal,* பெ. (n.) கதிரவன் தோற்றுதல்; sunrise.

[பொழுது + புறப்படு]

பொழுதுபூதல் *poludu-pūdal,* பெ. (n.) பொழுதுபுகுதல்; Sunset.

[பொழுது + புகுதல் → பூதல்]

பொழுதுபோக்கு—தல் *poludu-pōkku,* செ.கு.வி. (v.i.) **1.** காலங்கழித்தல்; to pass away time. spend time in recreation. **2.** சோம்பிக் கழித்தல் (யாழ்ப்.); to idle, while away.

[பொழுது + போக்கு—,தல்]

பொழுதுபோக்கு² *polutu-pōkku,* பெ. (n.) **1.** காலங் கழிக்கை; spending of time. *'நிற்பரவுபூசையினும் பொழுதுபோக்கெனக் கருள் புரிவாய்'* (சிவப்.பிரபந். சோண.29.). **2.** இளைப்பாறும் பொருட்டு விளையாடுகை; recreation.

[பொழுது + போக்கு]

பொழுதுபோக்குப்பேச்சு *pōlutu-pōkku-p-patchu,* பெ. (n.) சிற்றுரையாடல்; trival talk.

[பொழுது + போக்கு + பேச்சு]

பொழுதுபோதல் *poludu-pōdal,* பெ. (n.) **1.** *பொழுதிறங்குதல்* பார்க்க; see poludirangudal. **2.** காலங்கழிக்கை; whiling away time.

[பொழுது + போதல்]

பொழுதுமறை poludu-marai, பெ. (n.) மாலை; evening. *'புட்டகந்தன்னைப் பொழுதுமறை புக்கும்'* (பெருங்.2:9:26.)

[பொழுது + மறை]

பொழுதுவணங்கி poludu-vanangi, பெ. (n.) *சூரியகாந்தி* பார்க்க; see suriyakānti sunflower.

[பொழுது + வணங்கி]

பொழுதுவிடிதல் poludu-vididal, பெ. (n.) *பொழுது விடியல்* பார்க்க; see poludu-viddyal

[பொழுது + விடிதல்]

பொழுதுவிடியல் poludu-vidiyal, பெ. (n.) விடியற்; break of day.

[பொழுது + விடியல்]



பொழுதுவிடு—தல் polutu-vidu-, செ.கு.வி. (v.i.) *பொழுது போக்கு—,* (யாழ்.அக.) பார்க்க; see *polutu-pōkku.*

[பொழுது + விடுதல்]

பொழுதூர்தல் poḻudūrdal, பெ. (n.) சாயுங்காலமாகை (இ.வ.); becoming dusk.

[பொழுது + ஊர்தல்]

பொழுதேறுதல் *poḻudērudal,* பெ. (n.) காலங்கழிகை; elapsing of time.

[பொழுது + ஏறுதல்]

பொழுதொடுபுணர்தல் *poḻutoḍu-puṇardal,* பெ. (n.) வணிகர் குணங்கள் எட்டனுள் செயல்களைக் காலத்திற் கேற்பக்கொண்டு நடத்துகை. (பிங்.); adapting oneself to the times, one of eight virtues of the merchant-caste.

[பொழுது → பொழுதொடு → புணர்தல்]

பொழுதோடு *poḻudōḍu,* (adv.) 1. மறையுமுன்; just before sunset. 2. தகுதியான காலத்தில்; in time.

[பொழுது → பொழுதோடு]

பொள்[1] *poḷ,* பெ. (n.) உட்டொளை (பிங்.); hole.

[புல் → பொல் → பொள்]

பொள்[2] *poḷ,* பெ. (n.) *பொள்ளெனல்* (திவா.) பார்க்க; see *poḷḷeṉal.*

[பொள் → பொள்ளெனல்]

பொள்ளல் *poḷḷal,* பெ. (n.) 1. துளைக்கை; boring a hole. 2. பொளிகை; chiselling, as a stone. 3. துளை; hole, rent, fissure, puncture. '*பொள்ளலாக்கை யகத்தில்*' (தேவா.262,5.) 4. மரப்பொந்து. hollow in a tree. (பிங்.); 5.அம்மைவடு; pocks, in small - pox. 6. அப்பவகை. pastry. (பிங்.); 7. கொப்புளம்; blister, swelling 8. குற்றம்; failure, fault, defect, as a puncture '*காரியம் பொள்ளலாய்ப் போயிற்று*'

[புல் → பொல் → பொள் → பொள்ளல்]

பொள்ளாமணி *poḷḷāmaṇi,* பெ. (n.) *பொல்லா மணி.* பார்க்க; see *pollāmaṇi*

[பொள் + ஆ + மணி]

'ஆ'–எ.ம.இ.

பொள்ளு[1]–தல் *poḷḷu,* செ.குன்றாவி. (v.t.) 1. துளைத்தல்; to bore make a hole. 2. பொளிதல்(வின்.); to hew, chisel

பொள்ளு[2]–தல் *poḷḷu,*செ.கு.வி. (v.i) 1. கொப்புளம் உண்டாதல்; to blister, to sell. '*எண்ணெய்ச்சுடர்,விழுந்து கை பொள்ளி விட்டது*' 2. கிழிதல் (வின்.); to be rent or torn,

[பொள் → பொள்ளு → பொள்ளுதல்]

பொள்ளெனல் *poḷ-ḷ-eṉal,* பெ. (n.) விரைவுக்குறிப்பு; onom expr.signifying suddenness. '*தன்னகல மெல்லாம் பொள்ளென வியர்த்து*' (சீவக.256.)

[பொள் + எனல்]

பொள்ளை *poḷḷai,* பெ. (n.) தொளை; hole. '*பொள்ளைக்கரத்த போதகத்தின்*' (திவ்.பெரியதி.5,1,2.)

[பொள் → பொள்ளை]

பொளி¹–தல் *poḷi-,* செ.குன்றாவி. (v.t.) 1. உளியாற் கொத்துதல்; to chisel, pick. '*கல்பொளிந்தன்ன*' (மதுரைக்.482.) 2. பிளத்தல்; to split, as a stone. '*பொளிந்து திண்சிலை*' (விநாயகபு.22,43.) 3. இடித்தல்; to beat so as to break; to dig. '*கற்றரையைப் பொளிந்து பண்ணின கிடங்கினையுடைய*' (மதுரைக்.730, உரை) 4. துளைசெய்தல் (வின்.); to make holes, to open, puncture, as a blister.

பொளி²–தல் *poḷi-,*–செ.கு.வி. (v.i.) 1. ஒட்டையாதல்; to be perforated punctured. '*கண்டவிடமெங்கும் பொளிந்து*' (ஈடு, 4,1,1.) 2. பள்ளாமதல் (இ.வ.); to become dented

[பொள் → பொளி → பொளிதல்]

பொளி³–த்தல் *poḷi-,* செ.குன்றா.வி. (v.t.) 1. துளைசெய்தல்; to bore, perforate, puncture. '*மாடத்தாங்கட் சாளரம் பொளித்த கால்போகுபெருவழி*' (மணிமே.4,52.) 2. கிழித்தல்; to tear into strips, as fibre. '*களிறு..... ஆச்சாவைப் பிளந்து அந்நாரைப் பொளித்து*' (தொல்.பொ.231,உரை).

[பொள் → பொளி → பொளி-]

பொளி⁴ *poḷi,* பெ. (n.) 1. உளியாலிட்ட துளை; hole made with a chisel; mortise. 2. மண்வெட்டியின் வெட்டு (யாழ்.அக.); depression left in the earth by a hoe or shovel. 3. பாய்முடைவதற்கு வகிர்ந்து வைக்கும் ஓலை; strip of ola, prepared for braiding into mats. '*சிறுபொளிப்பாய்*' (nāñ). 4. *பொளிமண்* பார்க்க; see *poḷimaṇ*

[பொள் → பொளி]

பொளி⁵ *poḷi,* பெ. (n.) *பொழி* பார்க்க; see *poḻi* '*பொளியை வெட்டி இரண்டு தளையும் ஒன்றாக்கினான்*'

[பொலி → பொழில் → பொழி → பொளி]

பொளிமண் *poḷi-maṇ,* பெ. (n.) மண்வெட்டியாற் புல்லோடு சேர்த்தெடுத்த வரப்புமண் (வின்.); hoe-full or shorel-full of earth, piece of turf.

[பொளி + மண்]

பொளிரேகை *poḷi-rēgai,* பெ. (n.) பார்க்க. *பொளிவாய்* பார்க்க; see *poḷivāy.*

[பொளி → SKṭ. rekhā. த.பொளிவு]

பொளிவாய் *poḷi-vāy,* பெ. (n.) உளிமுதலிய கருவியால் வெட்டப்பட்டகாடி(இ.வ.); groove; hollow cut by a tool; mortise.

[பொளி + வாய்]

பொளிவு *poḷivu,* பெ. (n.) பொளிகை (வின்.); picking, as a millstone; chiselling, hewing.

[பொளி → பொளிவு]

பொற்கசை *poṟ-kasai,* பெ. (n.) பொன்கம்பி. (யாழ்.அக.); gold wire.

[பொன் + கசை]

பொற்கட்டி *poṟ-kaṭṭi,* பெ. (n.) தங்கக்கட்டி; nugget, ingot of gold. '*காய்ச்சச் சுடர் விடும் பொற்கட்டிபோல்*' (தாயு.பராபர.354.)

[பொன் + கட்டி]

பொற்கடுக்காய் *por̠-kaḍukkāy,* பெ. (n.) பொன்னிறமான மஞ்சள் கடுக்காய்; yellow gall nut.

[பொன் + கடுக்காய்]

பொற்கண் *por̠-kaṉ,* பெ. (n.) பொன்னால் செய்யப்பட்ட கண்; golden eye.

நேர்த்திக் கடனுக்காகத் தெய்வத் திருமேனிக்கு அணிவிக்கச் செய்யப்படும் கண்ணடக்கம்.

[பொன் + கண்]

பொற்கண்டை *por̠-kaṇṇḍai,* பெ. (n.) *பொற்கெண்டை* (யாழ்.அக.) பார்க்க; see *por̠-kaṇḍai*

[பொன் + கெண்டை → கண்டை]

பொற்கண்ணி *por̠-kaṇṇi,* பெ. (n.) பொன்னாங்கண்ணி; sessile plant-Illecebrm sessile.

பொற்கணக்கு *por̠-kaṇakku,* பெ. (n.) பொன்னிறையளவு(வின்.); table of weights for precious metals; troy weight

[பொன் + கணக்கு]

பொற்கம்பி *por-kambi,* பெ. (n.) தங்கக் கம்பி; gold wire. "*பொற் கம்பியினை யொத்த.... நரம்பினது*" (சிறுபாண். 34, உரை.)

[பொன் + கம்பி]

பொற்கரை *por̠-karai,* பெ. (n.) பொன்னிழை; gold lace."போர்த்திய பொற்கரைவெண் பட்டு" (த.வ.)

[பொன் + கரை]

பொற்கலசம் *por̠-kalašam,* பெ. (n.) 1. கோபுரம் முதலியவற்றின் மேல் வைக்கும் பொன்னாலாகிய கும்பம்; pot-shaped finial of gold, as an ornament on a tower. 2. பொன்ஏனம் (கிறித்.); golden vial, golden vessel.

[பொன் + கலசம்]

பொற்கலம் *por̠-kalam,* பெ. (n.) 1. பொன் ஏனம்; golden vessel "*பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்*" (நாலடி, 206) 2. பொன்னாலியன்ற அணிகலன்; Golden ornament.

[பொன் + கலம்]

பொற்கலன் *por̠kalaṉ,* பெ. (n.) *பொற்கலம்,* பார்க்க see *por̠-kalam.* "*பொன்னிற் பிறிதாகிய பொற்கலனே*" (கம்பரா. இரணிய. 112)

[பொன் + கலன்]

பொற்கலனிருக்கை *por̠-kalaṉ-irukkai,* பெ. (n.) *பொற்பண்டாரம்* (பிங்.) பார்க்க; see *por̠paṇḍāram.*

[பொன் + கலன் + இருக்கை]

பொற்கலியாணம் *por̠-kaliyāṇam,* பெ. (n.) மணநாள் தொடங்கி ஐம்பதாண்டு முடிந்தவன்று கணவனும் மனைவியும் கொண்டாடும் சடங்கு (கிறித்.); Golden jubilee of a wedding.

[பொன் + கலியாணம்]

பொற்காசுகம் *por̠-kāšugam,* பெ. (n.) கொள்ளுக்கொடி; horse-gram creeper.

[பொன் + காசுகம்]

பொற்காசு *poṟ-kāśu,* பெ. (n.) **1.** பொன்னால் செய்யப்பட்ட பணம் (திவா.); gold Coin. **2.** *கொள்* (மலை.) பார்க்க; see *koḷ* Horse-gram.

[பொன் + காசு]

பொற்காப்பு *poṟ-kāppu,* பெ. (n.) பொன்னால் செய்யப்பட்ட வளை; gold bangle, braselet. '*பொற்காப்புக்கு ஆசைப்பட்டுப் புலியின் கையில் அகப்பட்டது போல*' (பழ.)

[பொன் + காப்பு]

பொற்காரை *poṟ-kārai,* பெ. (n.) பொன்னாலியன்ற கழுத்தணிவகை (சங்.அக.); a gold necklet.

[பொன் + காரை]

பொற்கிடுகு *poṟ-kiḍugu,* பெ. (n.) பொன்னாலாகிய மேற்றட்டி; a roof which made by gold. 'பொற்கிடுகு செறிந்த போர்வை முற்றி' (பெருங்.1:34:135)

[பொன் + கிடுகு]

பொற்கிழி *poṟ-kiḻi,* பெ. (n.) சீலையின் முடிந்த தங்கக் காசுப்பொதி; gold or gold coins tied up in a piece of cloth. "*கையுறை வேலாளீந்த பொற்கிழி*" (திருவிளை தருமிக். 81.)

[பொன் + கிழி]

பொற்குறு சுண்ணம் *poṟkuru-suṇṇam,* பெ. (n.) பொற்பொடி; powder of gold '*முத்து மணியும் பொற்குறு சுண்ணமும்*' (பெருங்.1:42:92)

பொற்கூடம் *poṟ-kūdam,* பெ. (n.) ஏமகூடம்; a mountain to the north of the Himālayas. '*பொற்கூடஞ் சென்றுறுதி*' (கம்பரா. மருத்து.24.)

[பொன் + கூடம்]

பொற்கெண்டை *poṟ-kendai,* பெ. (n.) *பொற்சரிகை.* (யாழ்.அக.) பார்க்க; see *poṟ-carigai*

[பொன் + கெண்டை]

பொற்கெனல்[1] *poṟ-kenal,* பெ. (n.) பொன்னிறமுடையதாதற் குறிப்பு; expr. of being or becoming golden in colour. '*பன்மலர் பொற்கெனும் பரிசு*' (குணிகைப்பு. நகர. 37.)

[பொன் → பொற்கு + எனல்]

பொற்கெனல்[2] *poṟ-kenal,* பெ. (n.) விரைவுக்குறிப்பு; onom expr of suddenness. '*பொற்கென் றெழுந்து முத்தந்தந்து*' (கனம் கிருஷ்ணையர்.கீர்த்.17)

[பொருக்கெனல்→ பொற்கெனல்]

பொற்கைப் பாண்டியன் *poṟ-kai-p-paṇḍiyaṉ,* பெ. (n.) இரவில் பார்ப்பனி யொருத்தியின் வீட்டுக் கதவைத் தட்டிப் போந்த குற்றத்திற்காகத் தன் கை குறைத்து, அக்கைக்குப் பகரமாகப் பொற்கை பூண்ட பாண்டிய வேந்தன் (தொல். பொ. 89, இளம்பூ.) a pandiyaṉ, who is said to have punished himself for knocking at the door of a Brahmin woman's house during his nightly rounds by cutting off his hand and obtained a golden hand instead.

[பொன் + கை + பாண்டியன்]

பொற்கொல்லன் *por-kollan*, பெ. (n.) பொன் செய் கொல்லன் பார்க்க; see *pon-šey-kollan*. '*பொற்கொல்லராயிர வரைக் கொன்று*' (சிலப்.பதி. உரைபெறு கட்டுரை, 1)

[பொன் + கொல்லன்]

பொற்கோபிதம் *por-kopbidam*, பெ. (n.) மஞ்சள் வெற்றிலை; yellow betel leaf tree bearing yellow fragrant flowers.

பொற்கோயில் *por-kōil*, பெ. (n.) பொன்னால் வேயப்பட்டகோயில். (அமிரிதசரசு கோயில்); temple which has golden roof.

[பொன் + கோயில்]

பொற்கோள் *por-kōl*, பெ. (n.) வியாழக்கோள்; the planet jupiter '*எரிபசும் பொற்கோள் வந்து*' (திருவிளை. உக்கிரதிருவவ.11.)

[பொன் + கோள்]

பொற்சபை *por-cabai*, பெ. (n.) தில்லையிலுள்ள பொன்னம்பலம். (சங்.அக.) The Golden Hall at chidambaram.

[பொன் + →சுவை→ சபை]

பொற்சரக்கு *por-carakku*, பெ. (n.) உயர்ந்த பண்டம்; goods of the highest quality, valuable as gold.

[பொன் + சரக்கு]

பொற்சரடு *por-caradu*, பெ. (n.) பொற்கம்பியாற் பின்னிய கழுத்தணி வகை (இ.வ.); necklace made by plaiting gold threads.

[பொன் + சரடு]

பொற்சரிகை *por-carigai*, பெ. (n.) ஆடைக்கரை முதலியவற்றிற் சேர்க்கப்படும் பொன்னாலமைந்த இழை; Gold thread, gold fringe "*செம்பொற்சரிகை வேலையிட்டு*" (தனிப்பா.1,260)

[பொன் + U.zari. த. சரிகை]

பொற்சாமம் *por-cāmam*, பெ. (n.) கொன்றை; a cassia.

பொற்சாயல் *porcāyal*, பெ. (n.) உடம்பின் பொன்மேனி; glittering body.

[பொன் + சாயல்]

பொற்சிலை *por-cilai*, பெ. (n.) 1. பொன்னாலான படிமை; golden image. 2. பொன்மயமான மலை; mt. Mēru, as golden. (மகாமேரு)

[பொன் + சிலை]

பொற்சின்னம் *por-cinnam*, பெ. (n.) போர்க்குச் செல்லும் வீரர் வாயிலிட்டுக் கொள்ளும் பொற்றுண்டு. (சீவக.2303, உரை.) small piece of gold put by warriors in their mouths when going to war.

[பொன் + சின்னம்]

பொற்சீந்தில் *por-cintil*, பெ. (n.) 1. நற்சீந்தில்(M.M.); a superior kind of gulancha. 2. சீந்தில்வகை (L.); woolly heart-leaved moon-seed, m.d.

[பொன் + சீந்தில்]

பொற்பாளை *poṟ-pāḷai*, பெ. (n.) நெல்வகை (குருகூர்ப்.58); a kind of paddy.

பொற்பி—த்தல் *poṟpi-*, செ.குன்றாவி. (v.t.) ஒப்பனை செய்தல் (அலங்கரித்தல்); to beautify, adorn. '*கருளோதி சிகழிகையாகப் பொற்பித்தார்*' (பிரமோத். 9,19.)

[பொன் + பு = பொற்பு → பொற்பி]

'பு' சொல்லாக்க ஈறு

பொற்பிதிர் poṟ-pidir, பெ. (n.) பசலை; beauty spots on a woman's person. '*பொற்பிதி ரணிந்து வீங்கும் புணர்முலை*' (கூர்மபு அருக்.6.)

[பொன் + பிதிர்]

பொற்பிரகாசம் *poṟ-pirakasam*, பெ. (n.) *பொன்மயம்*, (யாழ்.அக.) பார்க்க; see *ponmayam*

[பொன் +Skt. pra-Kāsa. த.பிரகாசம்]

பொற்பின்னல் *poṟ-pinnal*, பெ. (n.) பொற்கம்பியாற் பின்னிய அரைஞாண்; waist-band woven of gold threads. '*திருவரையில் சாத்தின பொற்பின்னலும்*' (திவ். பெரியாழ். 1,7,3,வ்யா. பக்.142)

[பொன் + பின்னல்]

பொற்பு *poṟpu*, பெ. (n.) 1. அழகு; (பிங்.) beauty, gracefulness elegance. '*பொற்புடை யரக்கி*' (கம்பரா.சூர்ப்ப.68.) 2. ஒப்பனை (பிங்.); decoration; embellishment 3. பொலிவு; magnificence, excellence '*மகடூஉ மடன்மேற் பொற்புடை நெறிமை யின்மையான*' (தொல்.பொ.35.) 4. மிகுதி. (திவா.); abundance, plenty. '*புண்ணின் பொற்பை*' (ஞானா.43,8.) 5. தன்மை; nature, quality, '*அகமலரின் வைத்துப் போற்றும் பொற்பினார்*' (பெரியபு.பெருமிழ.3.)

[பொன் + பு = பொற்பு]

'பு' சொல்லாக்க ஈறு

பொற்புவி *poṟ-puvi*, பெ. (n.) *பொற்படி* பார்க்க; see *poṟpaḍi*. '*சரபங்கனினிதேறப் பொற்புவி கொடுத்த புகழ் போற்றிடுதும்*' (சேதுபு. இராமனருச்.63.)

[பொன் +Skt. bhuvi. த.புவி]

பொற்புறுத்து—தல் *poṟ-puruttu-*, செ.குன்றா.வி. (v.t.) ஒப்பனைசெய்தல் (பிங்.) to adorn.

[பொற்பு + உறுத்து—]

பொற்பூ[1] *poṟ-pū*, பெ. (n.) 1. *தங்கப்பூ* பார்க்க; see *taṅga-p-pū* golden flower. 2. பாணர்க்கு அரசர் சூடவளிக்கும் தாமரையுருவான பொன்னணி வகை. (பொருந.159,கீழ்க்குறிப்பு.); grnamental lotus flower, made of gold and presented to a bard by a king.

[பொன் + பூ]

பொற்பூ[1] *poṟ-pū*, பெ. (n.) பழைய வரிவகை (M.E.R. 217 of 1927–8) an ancient tax

பொற்பூச்சு *poṟ-pūccu*, பெ. (n.) பொற்குழம்பு பூசுகை(வின்.); gilding. 2. பொன்னின் அரக்கு; gold foil.

[பொன் + பூச்சு]

பொற்பூண் *por-pōn,* பெ. (n.) பொன்னால் செய்யப்பட்ட அணி; golden ornament, jewel.

[பொன் + பூண்]

பொற்பூணூல் *por-pūnūl,* பெ. (n.) பொன்னாலான பூணூல் (இ.வ.) ; sacred thread of gold, used as an ornament.

[பொன் + பூணூல்]

பொற்பொது *por-podu,* பெ. (n.) *பொற்சபை,* பார்க்க; see *porcabai* '*பொருவிடைப்பாகர் மன்னும்பொற்பொதுவதனுட் புக்கார்*' (பெரியபு.இயற்பகை. 34.).

[பொன் + பொது]

பொற்ற *porra,* பெ. (n.) 1. பொன்னாலாகிய; golden. '*பொற்ற மாளிகை*' (விநாயகபு.75,126.) 2. சிறந்த; good, excelent, fine. '*பொற்ற சுண்ணமெனப் புகழ்ந்தார்*' (சீவக.885.)

[பொல் → பொற்ற]

பொற்றகடு *porragadu,* பெ. (n.) 1. *பொற்சின்னம்* பார்க்க; see *porcinnam* '*பொற்றகடு தம்வாயுளிட்டு*' (சீவக.778,உரை.) 2. பொன்னின் மெருகுத்தாள் (இ.வ.); gold foil.

[பொன் + தகடு]

பொற்றட்டம் *porrattam,* பெ. (n.) பொன்னாலாகிய தட்டுப் போன்ற பூ; golden broad petalled. '*வண்பொற் றட்டமலர்ந்த வாதலின்*'

[பொன் + தட்டு → தட்டம்]

பொற்றட்டான் *porrattān,* பெ. (n.) பொன்செய்கொல்லன்(வின்.); goldsmith.

மறுவ. பொற்கொல்லன்

[பொன் + தட்டான்]

பொற்றலை *porralai,* பெ. (n.) *பொற்றலைக் கையாந்தகரை* (பதார்த்த.) பார்க்க; see *porrlai-k-kaiyāndagarai.*

[பொன் + தலை]

பொற்றலைக்கரிப்பான் பெ. (n.) *porralai-k-karippān,* *பொற்றலைக்கையாந்தகரை.* (சங்.அக.) பார்க்க; see *porrlai-k-kaiyāndagarai.*

[பொற் + தலை + கரிப்பான்]

பொற்றலைக்கையாந்தகரை *porralaikkay āntakarai,* பெ. (n.) மருந்துப்பூடு வகை; ceylon verbesina, m.cl. (பதார்த்த.361.)

[பொற்றலை + கையாந்தகரை]

பொற்றாது *porrādu,* பெ. (n.) பொற்றலைக் *கையாந்தகரை* (மலை.) பார்க்க; see *porralai-k-kayantakarai*

[பொன் + தாது]

பொற்றாப்பு *porrāppu,* பெ. (n.) மயிலாப்பூர்த் திருக்கோயிலில் நடைபெறும் ஊஞ்சல் திருவிழா. a festival in the šiva shrine at Mylapore '*கபாலீச்சரமமர்ந்தான் பொற்றாப்புக் காணாதே போதியோ*' (தேவா.1119,8.).

[பொன் + தாம்பு]

பொற்றாமரை *porrāmarai,* பெ. (n.) 1. பொன்வண்ணமுளரி; golden lotus, as of svarge. '*பொற்றாமரை யடியே போற்றும் பொருள் கேளாய்*' (திவ். திருப்பா. 29) 2. மதுரைக் கோயில் முதலிய திருவிடங்களில் உள்ள பொய்கை; sacred tank, as in the temple at Maduri. '*தலைச் சதி பொற்றாமரை*'

(தேவா. 435, 10) 3. பொற்பு பார்க்க; see poṟ-pū *'பைம் பொற்றாமரை பாணர்ச்சூட்டி'* (பதிற்றுப். 48)

[பொன் + தாமரை]

பொற்றாரை *poṟṟārai,* பெ. (n.) *பெற்றோரை* (சீவக. 2132, பி-ம்) பார்க்க; see *poṟṟōrai.*

[பொன் + தாரை]

பொற்றாலம் *poṟṟālam,* பெ. (n.) *பொற்படி* பார்க்க; see *poṟ-paḍi. 'பொற்றாலத்தமரர்'* (சேதுபு. திருநாட். 14)

[பொன் + தாலம்]

பொற்றாலி *poṟṟāli,* பெ. (n.) மங்கல அணி; marriage badge of gold.

[பொன் + தாலி]



பொற்றாவல்லி *poṟṟāvalli,* பெ. (n.) *சீந்தில்* (சங்.அக.) பார்க்க; see *cindil*

பொற்றி *poṟṟi,* பெ. (n.) *எருமைப்பாற் சொற்றி* (மூ.அ) பார்க்க; see *erumaippāṟ-coṟṟi,* a species of the plant rucllia.

பொற்றேகராசன் *poṟṟēga-rāśan,* பெ. (n.) பொற்றலைக் கையாந்தகரை (தைலவ. தைல.) பார்க்க; see poṟṟalai-k-kaiyāntakarai

[பொன் + Skt. dōha. த.இராசன்]

பெற்றேரை *poṟṟērai,* பெ. (n.) பொற்றோரை (சீவக. 2132, பி. ம்) பார்க்க; see poṟṟorai

[பொன் + தோரை → தேரை]

பொற்றை *poṟṟai,* பெ. (n.) 1. சிறுமலை; hillock, mound. *'பொற்றைமால் வரைகளோ வென் புயநெடும் பொருப்பு மம்மா'* (கம்பரா. இலங்கைகாண். 22) 2. கற்பாறை; (திவ். திருச்சந். 52, வ்யா) rock. 3. மலை; mountain. *'பொற்றையுற் றெடுத்தான்'* (தேவா. 1218, 10) 4. சிறுதூறு (அக.நி); bush, low jungle. (அரு.நி) 5. காடு;(திவ். திருச்சந்த 52, வியா) forest. 6. கரிகாடு; burnt jungle.

[பொறை → பொற்றை]

பொற்றொட்டி *poṟṟoṭṭi,* பெ. (n.) கொடிய நஞ்சு வகை (வின்.); arsenic

பொற்றொடி *poṟṟoḍi,* பெ. (n.) 1. பொன்னாலாகிய தோள்வளை; golden bracelet. *'பொற்றொடித் தோட் பையரவல்குன் மடந்தை நல்லீர்'* (திருவாச. 9, 12) 2. பெண் (பொன் தோள் வளை அணிந்தவள்); woman, as wearing golden bracelets. *'பிரியல மென்றுரைத்த பொற்றொடியும்'* (நாலடி. 376)

[பொன் + தொடி]

பொற்றோரை *porrōrai,* பெ. (n.) இடையிலே அணியும் பொன்வடம்; thread-like waist ornament, made of gold. *'அல்குற் பொற்றோரை மின்ன'* (சீவக. 2132)

[பொன் + தோரை]



பொறாமை *porāmai,* பெ. (n.) 1. அழுக்காறு; envy, grudge, jealously. *'இப் பொறாமையும் பொறைக்கு மறுதலையாகலின்'* (குறள், 17, ஆம்அதி. முன்னுரை) 2. பொறுமையின்மை; impatience. *'பொறாமையுஞ் சிறிது தோன்ற'* (கம்பரா. கிங்கரர்.2) 3. பொருமல்; sobbing.

ம. பொரய்ம.

[பொறு + ஆ(எ.ம.இ.)–மை பண். பெ.ஈறு]

பொறி¹–தல் *pori,* செ.கு.வி. (v.i.) 1. பறிதல் (யாழ்ப்.); to snap, spring, as a trap, etc. 2. தீச்சுடர் சிதறுதல்;to throw out sparks. *'பொறிந்தெழு கண்ணினன்'* (கம்பரா. கும்ப. 254) 3. சறுக்குதல் (யாழ்.அக); to slip, slide, as the foot. 4. சரிதல் (வின்.); to be sloping or aslant 5. விழப்புகுதல் (வின்.); to be ready to fall on one, as an occusation. 6. கலைதல் (வின்.); to fail

பொறி²–த்தல் *pori,* செ.குன்றா.வி. (v.t.) 1. முத்திரையிடுதல்; to impress, stamp. *'கெண்டையொடு பொறித்த குடுமியவாக'* (புறநா. 58) 2. எழுதுதல் (பிங்); to write. *'தொய்யில் பொறித்த வனமுலை'* (கலித். 93) 3. சித்திரித்தல்; to sketch, paint. *'பொறித்த வாழையின் கனியினை'* (பிரபுலிங். வசவண். 19) 4. தெறித்தல்; to bespatter. "முலைத்தடஞ் சேதகம் பொறிப்ப." (சீவக. 46) 5. கலைத்தல் (வின்.); frustrate.

[பொளி → பொறி]

பொறித்தல் *pori,*செ.கு.வி. (v.i.) 1. *பொறி¹* – பார்க்க. see *pori¹* 2. *பொறி!2* பார்க்க. *'நெருப்பிடை யிடை பொறித்தெழ'* (கம்பரா. வருண. 32) 3. அழுந்துதல்; to be impressed or imprinted. "புலவியுட் பொறித்த புண்" (கலித். 71, 11)

[பொளி → பொறி]

பொறி³ *pori,* பெ. (n.) 1. வரி; stripe, as of a tiger. *'பொறி யுழுவை'* 2. கைவரி; (பிங்.) line on the palm 3. புள்ளி; spot, as on an elephants forehead; dot, point. *'பொறிய மடமான்'* (கலித். 13, 3) 4. தழும்பு; mark, impression. *'நல்லா ரிளமுலைப் பொறியும்'* (சீவக. 2190) 5. அடையாளம் (அடையாளம்); sign, token. (w) 6. எழுத்து; letter, writing. 7. இலச்சினை; seal, signet. "கோண்மாக் குயின்ற சேண் விளங்கு தொடுபொறி" (புறநா. 58) 8. விருது; badge, insignia. "வெல்பொறியு நாடுங் கொடுத் தளித்தான்" (பு. வெ. 7, 2) 9. உடலுறுப்பு அடையாளம்; auspicious mark on one's body. *'பூமியை யாடற்கொத்த பொறியினன்'* (சீவக. 1339) 10. வண்டு; bee. *'பொறிகலந்த பொழில்'* (தேவா. 638) 11. பீலி; peacock's tail, as spotted. "பல்பொறி மஞ்ஞை" (திருமுரு. 122) 12. தேமல்; beauty-spot on the body of a person. 13. படிமை; form,

image. எந்திரப் பொறியினிற்ப (கமபரா. கும்ப. 5) 14. ஊழ்; fate. *'அவை பொறியின் வகைவண்ணம்'* (சீவக. 848) 15. கன்னப் பொருத்து; temple of the head. 16. மூட்டுவாய்; joint. *'பொறி புனை வினைப் பொலங்கோதை'* (பரிபா. 11, 64) 17. மெய்; வாய், கண், மூக்கு, செவி என்ற ஐவகைப் புலன்கள்; organs of sense, of which there are five, viz., mey, vāy, kaṇ, mūkku, cevi *'பொறிவாயி லைந்தவித்தான்'* (குறள், 6) 18. ஆண்குறி; male organ. 19. மனம்; mind. *'துள்ளும் பொறியின் னிலை சோதனை தான்'* (கம்பரா. இரணிய. 105) 20. அறிவு; wisdom, knowledge. *'பூரண மோதிலும் பொறியிலீர்'* (தேவா. 1203, 6) 21. அனற்றுகள்; spark, scintilation. *'கூடும் வெம்பொறிச்'* கொடுங்கனல்' (கம்பரா. வருணனை. 22) 22. ஒளி; brightness. *'பொறிவரிப் புகர்முகம்'* (பெரும்பாண். 448) 23. சூழ்ச்சியம்; machine, trap. *'வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய'* (புறநா. 19) 24. மதிலுறுப்பு (பிங்.); figure or engine on wall. 25. மரக்கலம்; dhoney. (பிங்) 26. தந்திரம்; stratagem. "பொறியிற் பலமாயந் தரும்" (கம்பரா. சூர்ப்ப. 139) 27. நெற்றிப் பட்டம்; diadem. "வேந்தன் பெயராற் பொறியும் பெற்றான்" (சீவக. 1792) 28. திருமகள்; (திவா.) lakshmi. 29. செல்வம்; riches, wealth. *'பொறிகொடு நாணற்ற போழ்தே'* (நான்மணி. 45) 30. பொலிவு; (பிங்)splendour. 31. ஊழ்வினைப் பயன்; good karma. *'பொறியறு நெஞ்சத் திறைமுறை பிழைத்தோன்'* (சிலப். 20, 25) 32. திரட்சி; roundness, rotundity. *'முகண்டைப் பொறிப்புற வான்பூ'* (நெடுநல். 13)

[புல்→ பொல் → பொறி]

பொறிஎக்கி *poṟiekki,* பெ. (n.) இயந்திர ஆற்றலுள்ள நீர்வாங்கு குழாய்; power driven pump.

[பொறி + எக்கி]

பொறிக்கல் *poṟi-k-kal,* பெ. (n.) சிலை நாகக்கல்; a kind of stone. 2. சுக்கான்கல்; kunkur.

[பொறி + கல்]

பொறிக்காளான் *poṟi-k-kāḷāṉ,* பெ. (n.) பேய்க்காளான்; a variety of mushroon.

பொறிக்கேதனம் *poṟi-k-kēdaṉam,* பெ. (n.) மூகைப்புல்; a variety of grass.

பொறிகடலை *poṟi-kaṭalai,* பெ. (n.) 1. சிறு கடலை; bengal gram. 2. பொரித்த கடலை; fried bengal gram.

[பொரி→பொறி + கடலை]

பொறி கலங்கு-தல் *poṟi-kalaṅgu,* செ.கு.வி. (v.i.) அறிவு மயங்குதல்; to be confused and bewildered in one's senses. *'புலனைந்தும் பொறி கலங்கி நெறிமயங்கி'* (தேவா. 278, 1)

[பொறி + கலங்கு]

பொறி சிதறு-தல் *poṟi-śdaṟu,* செ.கு.வி. (v.i.) 1. தீப்பொறி பறத்தல்; to fly out, as sparks, 2. *பொறி கலங்கு-*, பார்க்க; see *poṟi-kalaṅgu*

[பொறி + சிதறு-,]

பொறித்தாழ் *poṟittāḻ,* பெ. (n.) இயந்திரத் தாழ்க்கோல்; machine bar. 'பொன்செய் பேழையோரு பொறிதாழ் நீங்கி' (பெருந்.1:32:77)

பொறிதட்டு–தல் *poṟi-taṭṭu-,* செ.கு.வி. (v.i.) 1. அறிவு கலங்குதல்; to flash, as eyes from a blow. 2. வழுக்குதல்; to slide, as the feet.

[பொறி + தட்டு–,]

பொறிதொலை–த்தல் *poṟi-tolai-,* செ.கு.வி. (v.i.) ஒரு செயலை மனமின்றித் தீராக் கடமையாக முடித்தல்; to do any work, as a matter of duty.

[பொறி + தொலை –,]

பொறிநீர் *poṟinīr,* பெ. (n.) விழியம் ; semen.

மறுவ. வித்தமிழ்து

[பொறி + நீர்]

பொறிப்பாவை *poṟippāvai,* பெ. (n.) இயந்திரப் பாவை; machine dall. "பெரும்பொறிப் பாவை மருங்கி னிரீஇ" (பெருங். 1:58:61)

[பொறி + பாவை]

பொறிப்பு *poṟippu,* பெ. (n.) 1. பறிகை (வின்.); snapping. 2. எழுதுகை (இ.வ.); writing, drawing.

[பொறி → பொறிப்பு]

பொறிப்பேழை *poṟippēḻai,* பெ. (n.) சூழ்ச்சியத்தையுடைய பெட்டி; machine box. 'பெரும்பொறிப் பேழை இவையெனக் கூறிக்' (பெருங்.1:40:239)

[பொறி + பேழை]

பொறிபறத்தல் *poṟi-paṟattal,* பெ. (n.) 1. தீப்பொறி சிதறுகை; flying of sparks. "நீரிடை நிமிர்பொறி பறக்க" (கம்பரா. சேது. 11) 2. தீப்பறக்கப் பார்க்கை (வின்.); flaming of the eyes, as in anger.

[பொறி + பறத்தல்]

பொறிமயிர் *poṟimayir,* பெ. (n.) புள்ளி களையுடைய மயிர்; spot on the hair. 'பொறிமயிர் எருத்தில் குறுநடைப் பெடை' (குறுந்.154)

[பொறி + மயிர்]

பொறிமுதல் *poṟi-mudal,* பெ. (n.) உயிர்; soul, as superior to the senses. (பொறியங்களின் தலைவன்) (சீவக).

[பொறி + முதல்]

பொறியமலம் *poṟi-y-amalam,* பெ. (n.) புங்க மரம்; (சங்.அக) indian beech.

[பொறி + அமலம்]

பொறியமைப்பு *poṟiyamaippu,* பெ. (n.) கருவி அமைந்திருக்கும் நிலை; Device.

[பொறி + அமைப்பு]

பொறியரை *poṟi-y-arai,* பெ. (n.) *சிறுபுள்ளடி* பார்க்க; see *śiṟupuḷḷaḍi* a species of tick-trefoil (சங்.அக.)

[பொறி + அரை]



பொறியற்றார் *poṟi-y-aṟṟār,* பெ. (n.) *பொறியிலார்* (திவா.) பார்க்க; see *poṟ-y-ilār*

[பொறி + அற்றார்]

பொறியறை *poṟi-y-aṟai,* பெ. (n.) 1. *பொறியிலி* 1 (தொல். சொல். 57, உரை) பார்க்க; see *poṟi-y-ili* 2. திருவிலி; one devoid of luck. *'பொய்வழங்கி வாழும் பொறியறையும்'* (திரிகடு. 15)

[பொறி + அறு → அறை]

பொறியார்—த்தல் *poṟi-y-ār-,* செ.கு.வி. (v.i.) *பொறிதட்டு 1* (யாழ்.அக) பார்க்க; see *poṟitaṭṭu*

[பொறி + ஆர் —,]

பொறியிலார் *poṟi-y-ilār,* பெ. (n.) கீழோர் (சூடா); the base, the vulgar.

[பொறி + இலார்]

பொறியிலி *poṟi-y-ili,* பெ. (n.) 1. அறிவற்றவ—ன்—ள்; ignorant, senseless person. *'பறிதலைப் பொறியிலிச் சமணர்'* (திருப்பு. 259) 2. உறுப்புக் குறையுடையவ—ன்—ள்; deformed person. *'கைகான் முடங்கு பொறியிலி'* (பிரபுலிங். துதிகதி, 1) 3. நற்பேறில்லாதவ—ன்—ள்(வின்.); unfortunate person.

[பொறி + இலி]

பொறியேற்று—தல் *poṟi-y-ēṟṟu,* செ.கு.வி. (v.i.) *பொறிவை* (யாழ்.அக) பார்க்க; see *poṟivai.*

[பொறி + ஏற்று]

பொறியொற்றோலை *poṟi-y-oṟṟōlai,* பெ. (n.) முத்திரையிட்ட ஓலைக்கடிதம்; letter in cadjan leaf, impressed with a seal. *'அமைதியாளரைப் பொறியொற் றோலையோ டறியப் போக்கி'* (பெருங். நரவாண. 7, 71)

[பொறி + ஒற்று + ஓலை]

பொறிவரித்தவிசு *poṟivarittavišu,* பெ. (n.) புலித்தோல் இறக்கை; seat which made by skin of tiger. *'பொறிவரித் தவிசிற் பொன்னிறப் பலகை'* (பெருங்.2:17:83)

[பொறி + வரி+தவிசு]

பொறிவாயில் *poṟi-vāyil,* பெ. (n.) புலன் (திவா);organ of sense. *'பொறிவாயி லைந்தவித்தான்'* (குறள், 6)

[பொறி + வாயில்]

பொறிவாயிற் காட்சி *poṟi-vāyiṟ-kāṭci,* பெ. (n.) புலன்களால் அறியுமறிவு; perception of the senses with the aid of mental faculties.

[பொறிவாயில் + காட்சி]

பொறிவிரியன் *poṟviriyan,* பெ. (n.) ஒருவகை விரியன் பாம்பு, variety of snake.

[பொறி + விரியன்]

பொறிவு *poṟivu,* பெ. (n.) 1. சறுக்கல்; sloping, sliding. 2. பறிகை; snapping.

[பொறி → பொறிவு]

பொறிவை—த்தல் *poṟi-vai,* செ.கு.வி. (v.i.) எலி முதலிய உயிரிகளைப் பிடிக்க வைக்கும் கிட்டி, வலை முதலியன (வின்.); to set a

trap."எலித் தொல்லை தங்கமுடியவில்லை இன்று பொறி வைக்க வேண்டும்."

[பொறி + வை –,]

பொறு¹–த்தல் *poṟu,* செ.குன்றா.வி. (v.t.) **1.** சுமத்தல்; to bear, sustain. *'இசையிலா யாக்கை பொறுத்த நிலம்'* (குறள், 239) **2.** தாங்குதல்; to bear with. *'ஆலத்து .... நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்கு'* (புறநா. 58) **3.** அணிதல்; to put on, wear. *'அம்மணி பொறித்திரென் றறைந்தான்'* (உபதேசகா. உருத்திராக். 44) **4.** இளக்காரம் கொடுத்தல் (வின்.); to indulge, allow. **5.** மன்னித்தல்; to excuse, forgive. *'தம்மை யிகழ்ந்தமைதாம் பொறுப்ப தன்றி'* (நாலடி, 58) **6.** ஏற்றமை; to endure, suffer. *'பொறுக்கிலேனுடல் போக்கிடங் காணேன்'* (திருவாச. 23, 6) **7.** பொறுப்பேற்றல்; to take responsibility. **8.** தள்ளிப் போடுதல்; postpone. **9.** உவமையாகப் பெறுதல்; to be similar. "உலம் பொறுக்கலாத தோளாய்" (சீவக. 402)

[புல் → பொல் → பொறு]

பொறு¹–த்தல் *poṟu,* செ.கு.வி. (v.i.) **1.** அடக்கமாய் இருத்தல்; to be patient. **2.** பேச்சு முதலியவற்றின் இடையே நின்று கொள்ளுதல்; to stop, wait, as in speaking or in eating; to desist. **3.** விலை கொள்ளுதல்; to coast, as an article; to be spent or expended on. **4.** தோணிதட்டிப் போதல்; to run aground, as a vessel; to strand. **5.** மாட்டிக் கொள்ளுதல்; to become fixed, jammed, wedged in. **6.** பொறுப்பாதல் (வின்.); responsibility.

[புல் → பொல் → பொறு]

பொறுக்கவை–த்தல் *poṟukka-vai-,* செ.குன்றாவி. (v.t.) **1.** சாரவைத்தல்; to place, lean against. **2.** தோணி தட்டச் செய்தல்; to run aground, as a vessel, **3.** பொறுப்பாதல்; to impose a duty or expense upon. **4.** மிகுபார மேற்றுதல்; to overload. **5.** ஏற்றமையும் படி செய்தல்; to cause to bear.

[பொறு → பொறுக்கவை]

பொறுக்குவிதை *poṟkkuvidai,* பெ. (n.) செம்மைப்படுத்தப்பட்ட விதை; improved seed.

[பொறுக்கு + விதை]

பொறுக்கி *poṟukki,* பெ. (n.) *பொறுக்கித் தின்னி* (கொவ.) பார்க்க; see *poṟukki-t-tiṉṉi.*

[பொறுக்கு → பொறுக்கி]

'இ' வி.மு ஈறு.

பொறுக்கித் தின்னி *poṟukki-t-tiṉṉi,* பெ. (n.) **1.** இங்கும் அங்குமாகப் பொறுக்கித் தின்னும் வறிய–ன்–ள்; one who picks up, gathers, gets his food here and there; one despicably poor. **2.** கஞ்சன்; niggardly person.

[பொறுக்கி → தின்னி]

பொறுக்குசீட்டு *poṟukku-c-cittu,* பெ. (n.) திருவுளச்சீட்டு (ஆகம்). lottery.

[பொறுக்கு+சீட்டு]

பொறுக்கு–தல் *poṟukku-,* செ.குன்றாவி. அங்கும் இங்கும் சிதறிய பொருளைத் தெரிந்தெடுத்தல்; to pick up here and there, glean; to pick out from mass, select.

[பொறுக்கு → பொறுக்குதல்]

பொறுத்துப்போ¹–தல் *poruttu-p-pō-*, செ.குன்றாவி. (v.t.) **1.** தோணிகட்டுதல்; to ran aground. **2.** மாட்டிக்கொள்ளுதல்; to be stuck or jammed in.

[பொறுத்து → பொறுத்து+போ]

பொறுத்துப்போ²–தல் *poruttu-p-pō-*, செ.குன்றாவி. (v.i.) தொடர்ந்து பொறுத்தல்; to continue toterate.

[பொறுத்து+போ]

பொறுதி *porudi*, **பெ.** (n.) **1.** பொறுமை; patience, forbearance. *'மிகவும் பொறுதியுள்ள வன்'***2.** குற்றம் பாராட்டாமை(வின்.) ; pardon, forgiveness. **3.** இளக்காரம் (யாழ்ப்.); indulgence, levity **4.** ஒய்வு (யாழ்ப்.); suspension of business. **5.** சுணக்கம் (யாழ்ப்.); slowness, delibration, delay

[பொறு → பொறுதி]

பொறுப்பற்றவன் *porupparravan*, பெ. (n.) **1.** பொறுப்பு ஏற்காதவன் (கொ.வ.); irresponsible person. **2.** பொறுமையற்றவன்; impatient man **3.** உதவியற்றவன்; one destitute of help.

[பொறுப்பு + அற்றவன்]

பொறுப்பாளி *poruppāḷi*, பெ. (n.) பொறுப்பானவன்; responsible person.

[பொறுப்பு + ஆளி]

'ஆளி' வினைமுதலீறு.

பொறுப்பி–த்தல் *poruppi-*, செ.குன்றா.வி. (v.t.) **1.** சுமத்துதல்; to cause to rest on. **2.** *பொறுப்புக்கட்டு–,* **1.** பார்க்க; see *poruppu-k-kattu* **3.** முட்டுக் கொடுத்தல்; to prop; to sustain **4.** பொறுக்குமாறு செய்தல்; to cause to bear. *'திருவடியைப் பொறுப்பிக்கு மவர் தன் சொல்வழி வருமவரைப் பொறுப்பிக்கச் சொல்ல வேண்டாவிறே'* (அட்டாதச. முமுட்சுப்.) **5.** பாதுகாத்தல் (இ.வ.); to maintain.

[பொறு → பொறுப்பி–த்தல்]

பொறுப்பு *poruppu*, பெ. (n.) **1.** பாரம்; stress, pressure, burden. **2.** முட்டு (வின்.); prop, support, stay. **3.** உறுதி; duty, responsibility. **4.** இன்றியமையாமை; importance. **5.** தகுதி; weight of character. **6.** பொறுமை; patience, forbearance. **7.** வரி (இ.வ.); tax.

[பொறு → பொறுப்பு]

பொறுப்புக்கட்டு–தல் *poruppu-k-kattu-*, செ. குன்றாவி.(v.t.) **1.** உறுதியளிக்கச் செய்தல்; to put responsibility on. **2.** ஈடுகாட்டுதல்; to tender as security. **3.** முற்றுவித்தல் (வின்.); to accomplish

பொறுப்புக்காரன் *poruppu-k-kāran*, பெ. (n.) *பொறுப்பாளி*(யாழ்.அக.) பார்க்க; see *poruppali*

[பொறுப்பு + காரன்]

'காரன்' உடையவனைக் குறிக்கும் ஈறு.

பொறுப்புடைமை *pōruppu-utamai*, பெ. (n.) கடமைப்பொறுப்பு; oblication

[பொறுப்பு + உடமை]

பொறுமி *porumi*, பெ. (n.) அவுரி போன்ற இலையும் சிவந்த சிறுபூவுமுடைய பூடுவகை;

a red-flowered plant with indigo like leaf and bean-like fruit.

பொறுமை *porumai,* பெ. (n.) 1. அடக்கம்; meekness, self-control 2. பொறை; patience, endurance, tolerance, forbearance.

[பொறு → பொறுமை]

'மை' ப. பெ. ஈறு

பொறுமைக்காரன் *porumai-k-kāran,* பெ. (n.) சாந்தமுள்ளவன் (வின்.); patient man.

[பொறுமை + காரன்]
'காரன்' உடையவனைக் குறிக்கும் ஈறு.

பொறுமைசாலி *porumai-cāli,* பெ. (n.) *பொறுமைக்காரன்* பார்க்க; see *porumāi-k-kāran.*

[பொறுமை + சாலி]

'சாலி' உடைமைப் பொருளீறு.

ஒ.நோ. திறமைசாலி, பாக்கியசாலி

பொறுவாஞ்சேறு *poruvāñcēru,* பெ. (n.) கடல் சேற்றின் வகை; a kind of sea mud.

பொறை *porai,* பெ. (n.) 1. சிறுகுன்று; small hill. hillock. '*அறையும் பொறையு மணந்த தலைய*' (புறநா. 118.) 2. மலை; mountain '*நெடும் பொறை மிசைய குறுங்காற் கொன்றை*' (ஐங்குறு. 430.) 3. சுமை. (திவா.); burden. load. '*குழையு மிழையும் பொறையா*' (கலித். 90.) 4. கனம்; weight, heaviness. '*பொறை தந்தன காசொளிர் பூண்*' (கம்பரா. அதிகா. 40.) 5. நிலவுலகு (பிங்.); earth. '*பொறைதரத் திரண்டதாரு*' (இரகு. தசரதன்சாப. 50.) 6. பொறுமை; patience, forbearance '*வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை*' (குறள், 153.) 7. அடக்கம் calmness, meekness. '*அருந்ததி முதலிய மகளிராடுதல் புரிந்தனர்* பொறையு நாணு நீங்கினார்.' (கம்பரா. மீட்சி. 88); 8. கருப்பம். (சூடா.) pregnancy. 9. வலிமை; strength. '*போதகாதிபன் முதலை வாயிடைப் பொறை தளர்ந்து*' (பாரத. வேந்திரகீய.)

[பொறு → பொறை]

பொறைநிலை *porainilai,* பெ. (n.) மனத்தை ஒருவழிப்படுத்துதல் (தாரணை.வ.); (concentrated atention in yogic meditation.

[பொறை + நிலை]

பொறைநோய் *porainōy,* பெ. (n.) கருப்பத் துன்பமாகிய நோய்; pain of pregnancy.

[பொறை + நோய்]

பொறைமண் *poraiman,* பெ. (n.) 1. செத்தை முதலியவற்றின் கலவையான வளம் நிறைந்த மண்; loamy soil. 2. செங்கல் செய்வதற்கான களிமண்; clay used for making bricks.

[பொறை + மண்]

பொறைமலி *poraimali,* பெ. (n.) சுமைமிக்க; heavy lord. 'பொறைமலி கழுதை நெடுமிரை தழீஇய' (அகநா.89.)

பொறைமை *poraimai,* பெ. (n.) *பொறை,* 6. பார்க்க; '*நின்னெஞ்சங்கொண்ட பொறைமை காணிய*' (பெருங்.உஞ்சைக்.36,84.)

[பொறு → பொறை → பொறைமை]

பொறையன் *poraiyan,* பெ. (n.) 1. சுமப்பவன்; sustainer, bearer '*புன்னிலைப் பவத்துக்*

கெல்லாந் தானொரு பொறையனாகி (உபதேசகா. சிவபுண்.344.) 2. சேரன்; cēra king, as lord of the mountainous region in the Tamil country. 'யானைக் கடுமான் பொறைய' (புறநா.53.) 3. பொறுமைக்கும் பொறைக்கும் சிறந்த தருமன். Dharmapatra, the eldest of the pāndavās as embodiment of patience. (சூடா.);

[பொறு → பொறை → பொறையன்]

பொறையாட்டி *poṟai-y-āṭṭi,* பெ. (n.) 1. பொறுமை யுள்ளவன்; patient woman. 'சுருங்கும் மருங்குற் பெரும்பொறை யாட்டியை' (திருக்கோ.353.) 2. காவுகொடுக்கும் பூசாரிப் பெண்; priestess who offers kāvu. 'காணப்பலி நேர்கடவுட் பொறையாட்டி வந்தாள்' (பெரியபு. கண்ணப்.65.)

[பொறை + ஆட்டி]

பொறையாளன் *poṟai-y-āḷaṉ,* பெ. (n.) பொறையன் (பிங்.) பார்க்க; see *poṟaiyaṉ*3.

[பொறை + ஆளன்]

பொறையாற்று-தல் *poṟai-y-āṟṟu-,* பெ. (n.) பொறுத்தல்; (கம்பரா.உருக்.11.); to bear with patience.

[பொறை + ஆற்று → பொறையாற்று-தல்]

பொறையிருந்தாற்று-தல் *poṟai-y-irundāṟṟu,* செ.குன்றாவி. (v.t.) துன்பம் பொறுத்தலைக் கடைப்பிடித்தல்; to bear with patience." பொறையிருந்தாற்றியென் னுயிரும் போற்றினேன்" (கம்பரா. சுந்தர. உருக்காட்டு.11)

[பொறை + இரு → இருந்து + ஆற்றுதல்]

பொறையிலான் *poṟai-y-ilāṉ,* பெ. (n.) பொறுமையில்லாதவன்; impatient person. 2. வேடன் (சூடா.); savage; forester, hunter.

[பொறை + இல்+ஆ]

'இல்' எ. ம. இடைநிலை

பொறையுடைமை *poṟai-y-ḍaimai,* பெ. (n.) நெஞ்சுரம் (மனத்திண்மை); vitality. 'நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறை யுடைமை போற்றி ஒழுகப் படும்' (குறள்.154)

[பொறை + உடைமை]

பொறையுயிர்-த்தல் *poṟai-y-uyir-,* செ.குன்றா.வி. (v.t.) 1. இளைப்பாறும்படி சுமையிறக்குதல்; to disburden and rest. 'துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி (பொருந,239.) 2. மகப்பேறு; to be delivered of a child. 'பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டில்' (நன்.269,உரை,)

[பொறை + உயிர்த்தல்]

பொன் *poṉ,* பெ. (n.) 1. செம்பொன் (சாதரூபம்), கிளிச்சிறை, ஆடகம், நாவலம் என நான்குவகைப்பட்ட தங்கம்; gold of which there are four kinds, viz., cātarūpam, kiḷiccirai, āḍagam, campunatam. 'பொன்னுந்துகிரும் முத்தும்' (புறநா.218.) 2. மாழை (பிங்.); metal செம்பொன், வெண்பொன், கரும்பொன் 3. இரும்பு; iron. 'தூண்டிற் பொன் மீன் விழுங்கியற்று' (குறள், 931.) 4. செல்வம்; wealth. 'பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்'(நள.கலி தொடர்.68.) 5. அணிகலன்; ornament. 'கடலுடுத்த காரிகை பொன்னணிந்திருந் தென' (சீவக.1250.) 6. திருநாண்; marriage badge. 'பொன்னைக் கொணர்ந்து.... நீபொன் புனைந்ததுவே' (குஞ்சைவா.359.) 7. தங்ககாசு;a

gold coin. **8.** *பொன்மலை*, **1**, பார்க்க; see *ponmālai*,1 ஆணிப்பொன்வில்லி (**குமர.பிர.மீனாட்.பிள்.63.**) **9.** பொலிவு; grandeur, magnificence. '*பொன்னார் வயற்பூம் புகலி*' (தேவா.72,2.) **10.** பசலை; sallowness of complexion from love sickness. '*வயங்கு பொன்னீன்றுமுலையினாளே*' (**சீவக.1530.**) **11.** பேரொளி(வின்.); lustre, splendour, brilliance **12.** அழகு (பிங்.); beauty, eleganece, comeliness. '*பொன் புனைந்த கழலடியோன்*' (பு.வெ.7,2, கொளு) **13.** ஏற்றம்; preciousness, excellence, rarity. '*பொன்னிறை சுருங்கார்*' (சீவக.2380). **14.** திருமகள்; lasksmi, the Goddess of fortune. '*பொன்றுஞ்சு மார்பன்*' (சீவக.14.) **15.** வியாழன்; jupiter '*பொன்னொடு வெள்ளியும்..... இருக்கை யீயவே*' (**கம்பரா.மாரீச.16.**) **16.** கதிரவன்; sun. '*உடலுயிரும் பொன்விழியு மெனும் புணர்ப்பு*' (**மணிமே.6,145.**) **17.** பெண் குறி (பிங்.); pudendem muliebre.

பொன்கண் *poṉ-kaṉ*, பெ. (n.) **1.** சிவந்த உடம்பு; reddish body. '*பொன்கட் பச்சை பைங்கண் மாஅல்*' (பரிபா.3:82.) **2.** *பொற்கண்* பார்க்க; see *poṟkaṉ*.

[பொன் + கண்]

பொன்காண்(ணு)-தல் *poṉ-kāṇ-*, செ.கு.வி (v.t.) மாற்றுக்காணுதல்; to lest the quality of gold. "*பொன் காண்பார்களாகவும்*" (S.I.I.vi.149.)

[பொன் + காண்-,]

பொன்குற்றம் *poṉ-kuṟṟam*, பெ. (n.) திரை; களிம்பு the defects of gold; verdigiris.

[பொன் + குற்றம்]

பொன்கோலம் *poṉ-kōlam*, பெ. (n.) 'புத்திரசீவி' எனப்படும் மரம்; child's amulet tree. (l.)

பொன்ஞாண் *poṉ-ñāṉ*, பெ. (n.) பொற்கொடி; gold chain. '*பின்னுறு பொன்ஞான் பெருந்தொடர் கோத்த்*' (பெருங்,1:46:177.)

[பொன் + ஞாண்]

பொன்செய்-தல் *poṉ-cey-*, பெ. (n.) நல்ல செயல் செய்தல்; to do a good deed. '*கேட்டீமின் பொன்செய் தேன்*' (கலித்.143.)

[பொன் + செய்-]

பொன்செய்கொல்லன் *poṉ-cey-kollaṉ*, பெ. (n.) தட்டான்; goldsmith. '*பொன்செய் கொல்லனி னினிய தெளிர்ப்பி*' (நற்.394.)

[பொன் + செய் + கொல்லன்]

பொன்செய்புலவன் *pon-cey-pulavaṉ*, பெ. (n.) **1.** பொன்செய் கொல்லன் பார்க்க; see pon-cey-kollaṉ. **2.** பொன்னரிப்போன்; gatherer of gold, as from mines. (சிலப்.5,31.அரும்.)

[பொன் + செய் + புலவன்]

பொன்ஞெகிழி *poṉ-ñekiḻi*, பெ. (n.) அரிபெய்சிலம்பு. gold anklet with beads inside for tinkling (திவா.);

[பொன் +ஞெகிழி]

பொன்துகள் *poṉ-tukaḷ*, பெ. (n.) தங்கத்தூள் (பொடி); gold-dust.

[பொன் +துகள்]

பொன்நூற்புழு *ponnōṟpuḻu,* பெ. (n.) நீண்டுருண்ட வடிவுடைய பொன்னிறமான புழுவகை; golden nematode

[பொன் + நூல் + புடு]

பொன்படு—தல் *pon-paḍu-,* பெ. (v.i.) தோற்றப்பொலிவுறுதல்; to appear bright. *'தொய்யிலெழுதியிறுத்த பெரும்பொன் படுகம்' (கலித்.64.)'*

[பொன் + படு—.]

பொன்பத்தன் *pon-pattaṉ,* பெ. (n.) *பொன்செய் கொல்லன்.* பார்க்க; see *pon-cey-kollaṉ.* (கொ.வ.)

[பொன் + பத்தன்]

பொன்பற்றியூர்ப்புத்தமித்திரனார் *poṉ-pṟṟiyūrp-puttamittiranār,* பெ. (n.) வீரசோழியம் என்னும் இலக்கண நூல் செய்த புலவர்; a authour of the veracoliyam.

பொன்பாதிரி *poṉ-pātiri,* பெ. (n.) மரவகை; fragrant trumpet-flower.

[பொன் + பாதிரி]

பொன்பாவை *pon-pāvai,* பெ. (n.) திருமகள்; Laxsmi. *'பொன்பாவை கேள்வா'* (திவ்.இயற்.4,59.)

[பொன் + பாவை]

பொன்புனை—தல் *poṉ-puṉai-,* செ.குன்றா. வி. (v.t.) திருமங்கலியம் பூட்டி மணத்தல்; to marry, as tying the tāli. *'நுங்கேண்முன்னர் நீ பொன் புனைந்ததுவே'* (குஞ்சைவா.359.)

[பொன் + புனை]

பொன்பூண்(ணு)தல் *poṉ-pūṉ-,* செ.கு.வி. (v.i.) அணிகலன் அணிதல்; to wear gold ornaments.

[பொன் + பூண் → பூணுதல்]

பொன்பெயரோன் *poṉ-peyarōṉ,* பெ. (n.) பொன்னன் இரணியகசிபு; hiraṇyakaśipu, as gold coloured. *'பொன்பெயரோன் மார்பிடந்த வீங்கோத வண்ணர்'* (திவ்.இயற்.1,23.)

[பொன் + பெயர் → பெயரோன்]

பொன்மணல் *poṉ-maṇal,* பெ. (n.) பொற்றுகள் கொண்ட மணல்; sand containing gold; gold ore. (w.)

[பொன் + மணல்]

பொன்மணி *poṉ-maṇi,* பெ. (n.) 1. பொன்னாலாகிய உருண்டைமணி; gold bead. 2. பொன்மணியாலான அணிவகை; necklace of gold beads. *'பொன்மணி யொலிப்ப'* (திவ்.பெரியதி.1,7,1.)

[பொன் + மணி]

பொன்மணியார் *poṉ-maṇiyār,* பெ. (n.) கழகக்காலப்புலவர். a sankam poet. (குறுந்.391);

[பொன் + மணி → மணியார்]

பொன்மணை *poṉ-maṇai,* பெ. (n.) பொற்பலகை; low golden seat. *'நன்கை நடுவட் பொன்மணை யேற்றிப்'* (பெருங் 1:42:107.)

[பொன் + மணை]

பொன்மயம் *poṉ-mayam,* பெ. (n.) பொன்னிற மான பளபளப்பு ; golden lustre. (w.)

[பொன் + மயம்]

பொன்மயிற்கொன்றை *poṉ-mayiṟ-k-koṉṟai,* பெ. (n.) கொன்றை வகை,; a kind of indian labarman. (சங்.அக.)

[பொன் + மயில் + கொன்றை]

பொன்மரம் *pon-maram,* பெ. (n.) துறக்கத் திலுள்ள (சொர்க்கத்திலுள்ள) பொன் மயமான மரம். golden tree, in suarga. (சீவக.3122.)

[பொன் + மரம்]

பொன்மலை *poṉ-malai,* பெ. (n.) 1. தங்க மயமானமலை (மேரு) mt. mēru as golden.(பிங்.); '*பொன்மலைக் கடவுள்*' (திருவிளை. மேருவை.39.) 2. பனி (இமய)மலை. (பிங்.); the Himalayās '*பொன்மலைப் புலிநின் றோங்க*' (பெரியபு.எறிபத்த.2.) 3. மேற்றிசை மலை; western-hill where the sunsets. '*பொன்மலை சுடர்சேர*' (கலித்.126.) 4. முப்புரங்களுள் ஒன்று; one of three arieal castles destroyed by šiva (பிங்.). 5. திருச்சிராப்பள்ளிலுள்ள தாயுமானவர் மலை (வின்.); the rock in Tricirāppaḷḷi.

[பொன் + மலை]

பொன்மலைவல்லி *poṉ-malai-valli,* பெ. (n.) மலைமகள் (பார்வதி); goddess pārvati '*புரிவு செய்தனள் பொன்மலைவல்லி*' (பெரியபு. திருக்குறிப்பு.56.)

[பொன்மலை + வல்லி]

பொன்மழை *poṉ-maḷai,* பெ. (n.) *பொன்மாரி,* 1.; பார்க்க; see *poṉmāri,* 1 (w)

[பொன் + மழை]

பொன்மாசை *poṉ-mācai,* பெ. (n.) பொன்னா லாகிய ஒருவகைக்காசு; gold coin. '*கன பொன்மாசை காண வேந்தி*' (பருங். 1:36:76)

[பொன் + மாழை → மாசை]

பொன்மாரி *poṉ-māri,* பெ. (n.) *1.* தங்கமழை; shower of gold "*நன்நீரது தவிர்துப் பென்மாரியாகப் பொழி (தமிழ்நா. 52) 2. குதிரைச் சாதிவகை;* A kind of horse. "*நாயன வஞ்சனம் பொன்மாரி*" (*திருவாலவா.28,69)*

பொன்மாலை *poṉ-mālai,* பெ. (n.) பொன்னரிமாலை பார்க்க; see *poṉ-narimālai.* '*பொன் மாலை யலங்கலோ மரம் புலம்ப*' (சீவக. 349.)

[பொன் + மாலை]

பொன்மாளிகை *poṉ-mālgai,* பெ. (n.) அரண்மனையில்அரசன்தங்கும் ஆடகமாடம்; golden palace. '*பொன்மாளிகைத் துஞ்சின தேவராக*' (s.i.i.ii, 70)

[பொன் + மாளிகை]

பொன்மீன் *poṉ-miṉ,* பெ. (n.) *பூமீன் கெண்டை* பார்க்க; (இ.வ.); see *pūmiṉ-keṇdai.*

[பொன் + மீன்]

பொன்முசுட்டை *pon-mucuttai,* பெ. (n.) 1. வட்டத்திருப்பி பார்க்க; kidney leaved moon seed. 2. செடிவகை; buckler-leaved moon-seed. 3. ஆடுதின்னாப் பாளை;பார்க்க, worm-killer. (l.) 4. *அரிவாண் முனைப் பூண்டு* பார்க்க; see *arivāṉmaṉaip-pūṇdu.*

[பொன் + முசுட்டை]

பொன்முடி *pōṉ-muti,* பெ. (n.) பொன்மணிகளால் அணி செய்யப்பட்ட மகுடம்; srown net.

[பொன் + முடி]

பொன்முடியார் *poṉmufiyār,* பெ. (n.) கடைக்கழகப்புலவருள்ஒருவர் a poet of last sangam.;

பொன்முல்லை *poṉ-mullai,* பெ. (n.) பூச்செடி வகை; golden jasmine.

[பொன் + முல்லை]

பொன்முலாம் *poṉ-mulām,* பெ. (n.) பொன்பூச்சு; gilding. (w.)

[பொன் + முலாம்]

பொன்முளை *poṉ-muḷai,* பெ. (n.) பொற்காசின் முத்திரை; stamp on a gold coin.

[பொன் + முளை]

பொன்மூங்கில் *poṉ-mūṅkil,* பெ. (n.) திருவாங்கூரில் விளைவதும் முள்ளில்லாத் துமாகிய ஒருவகை மூங்கில் பொன்பூச்சு; thorn less bamboo of travancore-axytenanthera bourdillon.

[பொன் + மூங்கில்]

பொன்மெழுகு *poṉ-meḷuku,* பெ. (n.) பொன்னுரை எடுக்கும் மெழுகு; a kind of darkish wax used by goldsmiths in testing the fineness of gold.

[பொன் + மெழுகு]

பொன்மேனிச்சி *poṉ-mani-c-ci,* பெ. (n.) பேய்க்கடலை; a bitter wild gram.

[பொன் + மேனி → மேனிச்சி]

'இ' உடைமைப்பொருள் பெயரீறு.

பொன்மை *poṉmai,* பெ. (n.) பொன்னிறம் (திவா.) colour of gold. *'குயம்பொன்மை மாமலராகக் குலவின'* (தேவா. 251, 8.)

[பொன் → பொன்மை]

'மை' ப. பெ. ஈறு.

பொன்வண்டு *poṉ-vaṇdu,* பெ. (n.) பொன்னிறமுள்ள வண்டுவகை; gold coloured beetle. *'போந்ததென் னெஞ்சென்னும் பொன்வண்டு'* (திவ். இராமானுச. 100)

[பொன் + வண்டு]



பொன்வண்ணக் காரிளை *poṉ-vaṇṇa-k kāriḷai,* பெ. (n.) கந்தகம் sulphur.(சங்.அக.)

[பொன் + வண்ணம் + காரிளை]

பொன்வண்ணக் குறிஞ்சி *poṉ-vaṇṇa-k-kuṟiñchi,* பெ. (n.) பொன்னிற பூவுள்ள மருதோன்றி; hanna

[பொன் + வண்ணம் + குறிஞ்சி]

பொன்வண்ணத்தந்தாதி *poṉ-vaṇṇa-ttantāti,* பெ. (n.) பதினோராந் திருமுறையுள் இடம் பெற்றுள்ளதும் சேரமான் பெருமாள்நாயனார் இயற்றியதுமான சிற்றிலக்கியம்; a poem in patinorān-trumurai, by cēramāṉ-perumaḷ nāyaṉār.

[பொன் + வண்ணம் → வண்ணத்து +அந்தாதி]

skt. anta + ādi → *த.அந்தாதி]*

பொன்வரி *poṉ-vari,* பெ. (n.) பழைய வரிவகை; an ancient tax (i.m.p.cg. 861.)

[பொன் + வரி]

பொன்வரிமாடை *poṉ-vari-māḍai,* பெ. (n.) **பொன்வரி** பார்க்க,; see *poṉvari* (i.m.p.cg. 861.)

[பொன்வரி + மாடை]

பொன்வரை *poṉ-varai,* பெ. (n.)
1. **பொன்மலை,** 1. 3. பார்க்க; see *poṉmalai*
2. **பொன் மலை,** 2. பார்க்க; see *poṉmalai,* 2 *'புண்டரிகம் பொன்வரைமே லேற்றி'* (பெரியபு. ஏனாதி. 1.)

[பொன் + வரை]

பொன்வறுகல் *poṉ-vaṟukal,* பெ. (n.) பொன்னிறமாக வறுத்தல்; to fry till it attains gold colour or red colour.

[பொன் + வறுகல்]

பொன்வாணிகர் *poṉ-vāṇikar,* பெ. (n.) தங்க வணிகர்கள்; dealers in gold. *'பொற்பேதத்தைப் பகுத்தறியும் பொன்வாணிகர்'* (சிலப். 14, 204, உரை)

[பொன் + வாணிகர்]

பொன்வாய்ப்புள் *poṉ-vāy-ppuḷ,* பெ. (n.) சிச்சிலிக்குருவி (பிங்.); king-fisher.

[பொன் + வாய் + புள்]

பொன்வானம் *poṉ-vānam,* பெ. (n.) குடசம் (பித்தளை) மலை. hill of brass.(யாழ்.அக.);

[பொன் + வானம்]

பொன்வித்து *poṉ-vittu,* பெ. (n.) ஈயமணல் sand containing lead (சங்.அக.);

[பொன் + வித்து]

பொன்வில்லி *poṉ-villi,* பெ. (n.) சிவபிரான்; siva as having mēru, as bow. [பொன் மலையை (மேருவை) வில்லாக உடையவன்] *'ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்கவல்லி'* (குமர. பிர. மீனாட். பிர். 63)

[பொன் + வில் → வில்லி]

'இ' உடைமைப் பொருள் பெயரீறு.

பொன்விலை *poṉ-vilai,* பெ. (n.) ஏற்றமான விலை; very high price, as of gold.

[பொன் + விலை]

பொன்விலைப் பாவையர் *poṉ-vilai-p-pāvayar,* பெ. (n.) *பொன் விலை மகளிர்* பார்க்க; *see poṉ-vilai-magalir, 'பொன் விலைப் பாவையர் மனமும் போன்றதே'* (கம்பரா. தாடகை. 15)

[பொன் + விலை + பாவையர்]

பொன்விலை மகளிர் *poṉ-vilai-magaḷir,* பெ. (n.) பரத்தை; prostitutes.

பொன்விழா *poṉ-vilā,* பெ. (n.) ஐம்பதாம் ஆண்டுக் கொண்டாட்டம்; golden Jubilee. (இக்.வ.)

[பொன் + விழா]

பொன்விளைவிடம் *poṉ-viḷaividam,* பெ. (n.) பொன் உண்டாகுமிடம்; gold mine

[பொன் + விளைவு + இடம்]

பொன்வினை செய்வோர் *poṉ-vinai-ceyvōr,* பெ. (n.) *பொன் வினைமாக்கள்* பார்க்க; see *poṉvinaimākkaḷ*

[பொன் + வினை+செய்வோர்]

பொன்வினை மாக்கள் *poṉ-viṉal-mākkal,* பெ. (n.) தட்டார் goldsmiths. (சூடா.);

[பொன் வினை + மாக்கள்]

பொன்வீ *poṉvī,* பெ. (n.) பொன்னிறமான மலர்; golden colour flower. 'பொன்வீ ஞாழலோடும் புன்னைவரிக்கும்' (அகநா.70.). 'பொன்வீ மணியரும் பினவே' (ஐங்குறு.201.)

[பொன் + வீ]

பொன்வெட்டு *poṉ-veṭṭu,* பெ. (n.) *பொன்வெட்டுவாய்* பார்க்க; (இ.வ.); *see poṉ-veṭṭuvāy*

[பொன் + வெட்டு]

பொன்வெட்டுவாய் *poṉ-veṭṭu-vāy,* பெ. (n.) பேச்சு முதலியவற்றில் நேர்மை; exactness, as in correctness of speech etc., as cut-gold. (இ.வ.)

[பொன் + வெட்டு + வாய்]

பொன்றக் கெடுதல் *poṉṟa-k-keḍu,* செ.கு.வி. (v.i.) முற்றவும் அழிதல்; to be absolutely, ruined, *'பொன்றக் கெடாப் பொருள்'* (மணி, 30, 223.)

[பொன்ற+கெடுதல்]

பொன்றல் *poṉṟl,* பெ. (n.) சாதல்; dying

[பொன்று → பொன்றல்]

பொன்றாவல்லி *poṉṟā-valli,* பெ. (n.) சீந்தில் பார்க்க, gulancha. (தைலவ. தைல.);

பொன்று-தல் *poṉṟu-,* செ.கு.வி. (v.i.) 1. அழிதல்; to perish, to be ruined. *'புகழல்லாற் பொன்றாது நிற்பதொன்றில்'* (குறள், 233.) 2. இறத்தல்; to die, *'மடமாக்கள் பொன்றிலென் பொன்றாக்காலென்'* (நாலடி, 323.) 3. தவறுதல்; to fail. *'பொன்றலில் பகழிக்கு'* (கம்பரா. வருண. 77) 4. பார்வை முதலியன குறைதல்; to be reduced; to become wearied or dim, as the eyes by great exertion.

[புல் (துளை) → பொல் + து → பொத்து → பொற்று → பொன்று]

பொன்றொடு-தல் *poṉṟodu-,* செ.குன்றா.வி. (v.t.) பொன்னைத் தொட்டுச் சூளுறுதல்; to adjure, take oath, touching a piece of gold. *'பொன் றொட் டேம் யாதுமும்மைப் போகொட்டோம்'* (சீவக. 2945.)

[பொன் + தொடுதல்]

பொன்னகர் *poṉṉakar,* பெ. (n.) 1. வானுலகம்; amarāvati, as the golden city. *'பொன்னகர்*

வறிதாப் போதுவர்' (மணி. 1, 41.) 2. சிவனுலகு; siva's heaven. *'புகுவதாவதும் போதரவில்லதும் பொன்னகர்'* (திருவாச. 5, 36.)

[பொன் + நகர்]

பொன்னகர்க்கிறைவன் *ponnakar-k-kiraivan,* பெ. (n.) வேந்தன் (இந்திரன்) indra, as lord of ponnakar. (பிங்.)

[பொன்னகர்க்கு + இறைவன்]

பொன்னகர்ச் செல்வன் *ponnakar-c-celvan,* பெ. (n.) *பொன்னகர்க்கிறைவன்* பார்க்க; *see ponnakar-c-celvan.*

[பொன்னகர் + செல்வன்]

பொன்னகரம் *ponnakaram,* பெ. (n.) பொன்னகர், 1 பார்க்க, *'பொன்னகரம் புக்கு'* (திவ். இயற். பெரியம. 20); *see ponnakar.*

[நகர் → நகரம்]

பொன்னங்கொட்டை *ponna-n-kottai,* பெ. (n.) பூவந்திக் கொட்டை; *soap nut-sapindus trifoliatus.*

[பொன் → பொன்னம் → கொட்டை]

பொன்னச்சேரான் *ponnaccēran,* பெ. (n.) சேங்கொட்டைவகை பார்க்க; glabrous marking-nut. (l.)

பொன்னசலம் *pon-n-acalam,* பெ. (n.) *பொன்மலை,* 1, 2, 3 பார்க்க; *see ponmalai.* 1,2,3.

[பொன் + அசலம்]

[Skt.a-cala → த. அசலம்]

பொன்னஞ்சிலம்பு *pon-n-an-cilampu,* பெ. (n.) *பொன்மலை,* 1, 2, 3.பார்க்க; *see ponmalai,* 1,2,3. *'அத்த மென்னும் பொன்னஞ் சிலம்பு கதிரோன் மறைதலும்'* (இறை. 18, பக், 142, மேற்கோள்.)

[பொன் + பொன்னம் + சிலம்பு]

பொன்னடர் *pon-n-adar,* பெ. (n.) தகட்டுப் பொன்; fine gold leaf. *'பசும் பொன்னட ராறு கோடி'* (சீவக. 1973)

[பொன் → அடர்]

பொன்னணி–தல் *pon-n-ani-,* செ.குன்றா.வி. (v.t.) *பொன்புனை* பார்க்க; *see, ponpunai* *'கன்னியன்னா டன்னைப் பொன்னணிவான்'* (இறை. 23, பக். 164. மேற்கோள்)

[பொன் → அணிதல்]

பொன்னத்துப் பெட்டி *ponnattu-p-petti,* பெ. (n.) திருமணத்தில் தாலி கூறைகள் எடுத்துச் செல்லும் பெட்டி; basket in which the tāli and wedding saree are carried in a marriage (j.)

[பொன் + பொன்னத்து + பெட்டி]

பொன்னப்பிரகம் *pon-nappirakam,* பெ. (n.) சாக்காய்பொன்வகை; (சங்.அக.) a kind of mica.

[பொன் → அப்பிரசம்]

[Skt.abhraka → த. அப்பிரகம்]

பொன்னம்பர் *pon-n-ampar,* பெ. (n.) ஒருவகை மணப் பண்டம்; a kind of amber. *'புழுகு பொன்னம்பர் பூவம்பர் பொங்கவே'* (திருக்காளத், 4. பஞ்சாக். 55) (செ.அக.)

[பொன் → அம்பர்]

பொன்னம்பல அடிகள் *ponnampala-adikal,* பெ. (n.) 1. 'கைவல்ய நவநீதம்' என்ற நூலும் பகவத் கீதைக்குச் சொற்பொருளு எழுதியுள்ளார்; the outhor of kaivalya-navanitam. 2. *'இரு சமய விளக்க சோதி''* என்ற நூலை எழுதியவர். காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர். an author of eru-samaya-vilakka-soti, in kanchipuram.

பொன்னம்பல சிவம் *ponnampala-sivam,* பெ. (n.) மறைவனத்திறை மாலை, தேசியகீதக் கொத்து, குமார விநாயகர் பதிகம் போன்ற நூல்களை இயற்றியவர். the author of poetry viz maraivanat-tiraimālai, tāciyakitak-kottu, etc.

பொன்னம்பலத்தார் *pon-n-ampala-ttār,* பெ. (n.) கைக்கோளர் சாதியைச் சார்ந்த இரந் துண்ணும் பிரிவினர். beggars attached to the kaikkōla caste.(e. t. iii. 35.):

[பொன்னம்பலம் →பொன்னம்பலத்தார்]

[பொன் + அம்பலத்தார்]

பொன்னம்பலதாசர் *pon-n-ampala-tācar,* பெ. (n.) *'தில்லை சிவகாம சௌந்திரி திருவிரட்டைமணிமாலை'* நூலை இயற்றியவர், the author of tillai-sivakama-sountari-tiruviratti-mani-malai

பொன்னம்பலம் *pon-n-ambalam,* 1. பொன் னாலமைந்த கூடம் golden hall (சிலப். பதிகம், 41, உரை). 2. தில்லையிலுள்ள பொற்சவை; the golden hall of chidambaram. *'பொன்னம் பலத்து மேவியாடல் புரியா நின்றவர்'* (பெரியபு. திருநாவுக். 175.)

[பொன் + அம்பலம்]

பொன்னம்பாளை pon-nam-bāḷai, பெ. (n.) நெல்வகை; a kind of paddy (a.)

[பொன் → பொன்னாம் + பாளை]

பொன்னம்மாள் ponnammāḷ, பெ. (n.) *'சிவானந்த சாரம்'* எனும் நூல் இயற்றியவர் the author ofsivānanta-sāram.

பொன்னரி[1] pon-n-ari, பெ. (n.) கிண்கிணி முதலியவற்றுளிடும் பொற்பரல்; bead of gold inside a thinking ornament. *'பொன்னரிய கிண்கிணியும்'* (சீவக.2921.)

[பொன் + அரி]

பொன்னரி[2]**—த்தல்** pon-n-ari-, செ.கு.வி. (v.i.) வேறு பொருள்களினின்றும் தங்கத்தைப் பிரித்தெடுத்தல்; to sift gold from other things (w.)

[பொன் + அரித்தல்]

பொன்னரிதாரம் pon-n-aritāram, பெ. (n.) அரிதாரவகை orpiment, a sulphide of arsenic. (பதார்த்த.1158.)

[பொன் + அரிதாரம்]

பொன்னரிமாலை pon-n-arimālai, பெ. (n.) கழுத்தணிவகை; a kind of gold necklace. *'தோளிற்றோன்றும் பொன்னரிமாலை'* (கம்பரா.மாயாசன.5.)

[பொன் + அரி + மாலை]

பொன்னரியமாலை pon-n-ariya-mālai, பெ. (n.) *பொன்னரி மாலை* பார்க்க; see *pon-n-ariyimalai* (யாழ்.அக.).

[பொன் + அரி → அரியம் + மாலை]

பொன்னலரி poṉ-ṉ-alari, பெ. (n.)
1. ஈழத்தலரி பார்க்க, (மூ.அ.); pagoda tree.
2. அலரிவகை; exile oleander (l.)

[பொன் + அலரி]

பொன்னவன் poṉṉavaṉ, செ.(n.)
1. பொன்போல் அருமையானவன்; one precious like gold. *'முன்னவனுலகுக்கு முழுமணிப் பொன்னவன்'* (தேவா.1069,8)
2. வியாழன்; jupiter, as the golden planet.
3. இரணியகசிபு, hiranya kasibu. (w.)
4. கனாநூலியற்றிய புலவர்; the author of kaṉāṉūl, a treatise on dreams.

[பொன் → பொன்னவன்]

பொன்னறுவிலி poṉṉaṟuvili, பெ. (n.) மரவகை; golden sebestan.

[பொன் + நறுவிலி]

பொன்னறை poṉ-ṉ-aṟai, பெ. (n.)
1. பொற்பேழை; golden chest *'பல்கலமேதகப் பெய்ததோர் பொன்னறைதான் கொடுத்தான்'* (சீவக.237.) 2. அரசன் தங்கும் எழில்மண்டபம்; king's apartments. *'பொன்னறையு ளின்னமளிப் பூவணையின் மேலோன்'* (சீவக.2035.) 3. கருவூலம்; place where treafure and jewels are kept. *'விளங்கு பொன்னறையுள் விழுநிதிப் பேழையுள்'* (பெருங்.உஞ்சைக்.38, 210.)

[பொன் + அறை]

பொன்னன் poṉṉaṉ, பெ. (n.) 1. பொன்னுடைய யோன்; one who has gold. (நன்.276,உரை.) 2. *பொன்னவன்,* 1 பார்க்க; see *poṉṉavan,* 1 *'என்ன .... அடியேன்றனமாகியபொன்னன்'* (தேவா.784,2.) 3. சிறியவன்; urchin, small boy. (w.) 4. அருகக் கடவுள்; arhat (w.) 5. *பொன்னவன்* 3 பார்க்க; see *poṉṉavan,* 3 *'பொன்னன் பைம்பூ ணெஞ்சிடந்து'* (திவ்.பெரியதி.3,4,4.)

பொன்னாகத்தான் poṉ-ṉ-ākattāṉ, பெ. (n.) *பொன்னவன்* 3 பார்க்க; see *poṉṉavan.* *'பொன்னாகத்தானை நக்கரியுருவமாகி நகங்கிளர்ந்திடந்து'* (திவ்.பெரியதி.5,9,5.)

[பொன் + ஆகத்தான்]

பொன்னாகனார் poṉṉākaṉār, பெ. (n.) கழகக்காலப் புலவர் குறுந்தொகையில் இவர் பாடல்கள் இடம்பெற்றுள்ளன; a sankam poet.

பொன்னாங்கண்ணி poṉ-ṉ-āṅ-kaṇṇi, பெ. (n.) 1. *பொன்னாங்காணி* பார்க்க; see *poṉ-ṉ-āṅkāṇi* (இ.வ.) 2. உணவுக்குப் பயன்படும் கீரை; a kind of green's *'கண்ணுக்கினிய பொன்னாங்கண்ணி'* (பழ.) பொன்னாங் கண்ணியைப் புளியிட்டு ஆக்கினால் உண்ணாப் பெண்ணும் உழக்கு உண்பாள் (பழ.)

[பொன்னாங்காணி → பொன்னாங்கண்ணி]



பொன்னாங்காணி poṉ-ṉ-āṅ-kāṇi, பெ. (n.) பூடுவகை a plant growing in damp places. (பதார்த்த.349.);

[பொன் + பொன்னாம் + காணி]

பொன்னாங்காணிச் சக்களத்தி ponnāṅ-kāṇi-c-cakkalatti, பெ. (n.) பொன்னாங்காணி போன்ற பூடுவகை; a plant resembling ponnaṅkāṇi.

பொன்னாங்காய் poṉ-ṉ-āṅ-kāy, பெ. (n.) *பொன்னாங்கொட்டை* பார்க்க; see *pon-nāṅkoṭṭai.*

[பொன் → பொன்னாம் + காய்]



பொன்னாங்கொட்டை poṉ-ṉ-āṅ-koṭṭai, பெ. (n.) பூவந்தி[1],1 பார்க்க; (m.m.**843.**)

[பொன் → பொன்னாம் + கொட்டை]

பொன்னாசி[1] ponnāci, பெ. (n.) அரத்தம் வடியும் மூக்கு; bleeding nose.

[பொன் + skṭ. nāsikā. த. நாசி]

பொன்னாசி[2] *poṉ-ṉ-āci,* பெ. (n.) ஆண்குறி; penis. '*குழந்தை பொன்னாசியில் எறும்பு கடித்தது*'. (இ.வ.)

[பொன் + skṭ. nāsikā. நாசி]

பொன்னாசியுடைகை *poṉṉāci-y-udaikai,* பெ. (n.)மூக்கிலிருந்துகுருதிவடிகை; nose-bleed, epistaxis.

[பொன் +skṭ. nāsikā. நாசி + உடைகை]

பொன்னாசை *poṉ-ṉ-ācai,* பெ.(n.) பொருளில் வைக்கும் பற்று. desire of wealth, avarice.(கைவல்.தத்.1.)

[பொன் + ஆசை]

பொன்னாட்சி *poṉ-ṉ-āṭci,* பெ. (n.) வியாழக்கிழமை; thurs day, as the day presided over by jupiter. *'உரோகிணி யூர்ந்த வொளிமதி யொண் பொன்னாட்சி'* (சீவக.620.)

[பொன் + ஆட்சி]

பொன்னாடை *poṉ-ṉ-ādai,* பெ. (n.) பொன்னிழை கொண்டு நெய்த துணி; gold coth; gold bordered silk cloth. '*பொன்னாடை புனைந்தானும்*' (கம்பரா.மாரீச.4.)

[பொன் + ஆடை]

பொன்னாந்தகரை *poṉ-ṉ-āṉ-takarai,* பெ. (n.) *பொன்னாவிரை* பார்க்க; see *poṉṉavirai* (பைஷஜ.)

[பொன் → பொன்னாம் + தகரை]

பொன்னாந்தட்டான் *poṉ-ṉ-āṉ-taṭṭāṉ,* பெ. (n.) நெஞ்சிடத்தே மஞ்சணிறம் வாய்ந்த ஒருவகைக்குருவி yellow-breasted thrush, as gold coloured. (பதார்த்த.900); 2. தட்டாரப் பூச்சி பார்க்க; dragon-fly. (இ.வ.)

[பொன் → பொன்னாம் + தட்டான்]



பொன்னாந்தலை *poṉ-ṉ-ān-talai,* பெ. (n.) வெண்ணிறமுள்ள கடல்மீன்; sea-bream, small sea-fish, whitish.

பொன்னாம்பழம் *poṉ-ṉām-palam,* பெ. (n.) நெய்க்கொட்டான்பார்க்க; soap-nut.(மலை.)

பொன்னாம்பூ *pon-ṉ-ām-pū,* பெ. (n.) *பொன்னாவிரை* பார்க்க; see *poṉṉāvirai.* (மலை.)

பொன்னாயகன் *poṉṉāyakaṉ,* பெ. (n.) நெல்வகை; a kind of paddy. '*கறுப்பன் சின்னட்டி பொன்னாயகன்*' (பறாளை.பள்ளு.23.)

[பொன் + நாயகன்]

பொன்னாவாரை *poṉ-ṉāvārai,* பெ. (n.) *பொன்னாவிரை* பார்க்க; see *poṉṉavirai.*

[பொன் + ஆவிரை → ஆவாரை]

பொன்னாவிரை *poṉ-ṉ-āvirai,* பெ. (n.) 1. செடிவகை; fetid cassia, (a.) 2. பேயாவிரை negro coffee (l) 3. மஞ்சட் கொன்றை; siamese tree senna. (k.r.).

[பொன் + ஆவிரை]

பொன்னி *poṉṉi,* பெ. (n.) 1. காவிரி. (திவா.) the kāvēri. '*பொன்னிவளம் பெருகும்*' (திவ்.பெரியதி.7,8,3.). 2. எட்டாம்பாட்டன்; ancestor of the 8th generation (j.) 3. *பொன்னாசி* பார்க்க; see *poṟṟāci.*

[பொன் → பொன்னி]

'இ' உடைமைப்பொருள் பெயரீறு

பொன்னிக்குடமுடைதல் *ponni-k-kudamudaital,* பெ.(n.) *பொன்னாசியுடைகை* பார்க்க; (m.l.); see *poṟṟāciyuṭaikai.*

பொன்னிடம் *poṉ-ṉ-idam,* பெ. (n.) உச்சித்துளை; fontanells '*பொன்னிடந்தேறி*' (திருப்பு.586.)

[பொன் + இடம்]

பொன்னித்துறைவன் *poṉṉi-t-tuṟaivaṉ,* பெ. (n.) சோழன்; chōḻa king a lord of the vāvēri region. '*பொன்னித்துறைவனை வாழ்த்தினவே*' (கலிங்.581,புதுப்.)

[பொன்னி + துறைவன்]

பொன்னிநாடன் *poṉṉi-nādaṉ,* பெ. (n.) சோழன்;choḻa king.'*வண்டல்பாய் பொன்னிநாடனை*' (கலிங்.135.)

[பொன்னி + நாடன்]

பொன்னிநாடு *poṉṉi-nādu,* பெ. (n.) சோழநாடு; chōla country. '*தியாகமா விநோதன் தெய்வப் பொன்னி நாட்டு*' (கம்பரா.மருந்து.58.)

[பொன்னி + நாடு]

பொன்னிமிளை *ponnimiḷai,* பெ. (n.) தாதுப்பொருள் வகை; gold-coloured antimony.

[பொன் + நிமிளை]

பொன்னியாயி *ponni-y-āyi,* பெ. (n.) ஒரு சிற்றூர்த் தெய்வம்; (g.tp.d.1,89.). a village goddess.

[பொன்னி + ஆய் → ஆயி]

பொன்னியுடைதல் *ponni-y-udaital,* பெ. (n.) *பொன்னாசியுடைகை* பார்க்க (இ.வ.); see *porrāciyudaikai*

[பொன்னி + உடைதல்]

பொன்னிரேக்கு *pon-n-irēkku,* பெ. (n.) பொன்னிலைத் தகடு; gold-foil, gold-leaf. (இ.வ.)

[பொன் + ரேக்கு → இரேக்கு]

[U. rēk → த. இரேக்கு]

பொன்னிலக்கம் *pon-n-ilakkam,* பெ. (n.) 1. எண்வாய்பாடு; numberation table. 2. பொன்னிறை வாய்பாடு; table of gold weight. (m.m.)

[பொன் + இலக்கம்]

பொன்னிலம் *ponnilam,* பெ. (n.) பொன்னுலகம்; svarga, as the golden land. 'பொன்னஇலத் தெழுந்தோர்.......பூங்கொடி' (சீவக.1457)

[பொன் + நிலம்]

பொன்னிழை *pōn-nilai,* பெ. (n.) *பொற்சரிகை* பார்க்க; see *porcarikai.*

[பொன் +இழை]

பொன்னிற்பொதி–தல் *ponnir-poti-,* செ.குன்றா.வி.(v.t.) பொன்போலப் பேணிக்கொள்ளுதல்; to take great care of; to treasure. '*பொன்னிற் பொதிந்தேன்*' (சிலப்.16,13.)

[பொன் → பொன்னில் + பொதி–]

பொன்னிறமாட்சி *ponnira-māṭci,* பெ. (n.) *பொன்னிமிளை* பார்க்க; (சங்.அக.) see *ponnrimilai.*

பொன்னிறத்தி *ponnratti,* பெ. (n.) கண்டங்கத்திரி; a thorny shrubsolanum jacquini.

பொன்னுக்காதி *ponnkkāti,* பெ. (n.) களிம்பற்ற செம்பு; copper purified which does not rust.

பொன்னுக்கு வீங்கி *ponnukku-vingi,* பெ. (n.) கூகைக்கட்டு; mumps, parotities, believed to be cured by wearing a gold ornament.

[பொன் → பொன்னுக்கு + வீங்கி]

பொன்னுச்சாமிக்கவிராயர் *ponnu-c-cami-k-kavirāyar,* பெ. (n.) காதற்பிரபந்தம் என்ற நூலின் ஆசிரியர்; an author of katarpirabantam.

பொன்னுச்சாமித்தேவர் *ponnu-c-camit-tāvar,* பெ. (n.) 'இராச மன்னார்கோயில்(குடி) தலபுராணம் இராசமன்னனார் அலங்காரக் கோவை' ஆகிய நூல்களை இயற்றியவர். the author of erāsamannār-koil-talapurānam and erāsamannār-alakāram-kōvai

பொன்னுச்சாமிப்பிள்ளை *ponnusamip-pillai,* பெ. (n.) 'கோடாங்கி மாலை' எனும் நூல் இயற்றியவர். the author of koṭānki-mālai.

பொன்னுடம்பு *poṉ-ṉ-udambu,* பெ. (n.) 1. தேவ உடம்பு; body of a divine being, as golden. '*தவத்துடம்பு நீங்கினார்.... பொன்னு டம்படைந்த தொப்பவே*' (சீவக.325.) 2. பெண்குறி; pudendum muliebre. (தஞ்.).

[பொன் + உடம்பு]

பொன்னுருக்கு—தல் *poṉ-ṉ-urukku-,* பெ. (n.) நற்காலத்தில் தாலிசெய்யப் பொன்னை உருக்கிவிடுதல்; to perform the ceremony of melting gold for the tāli at an auspicious time.

[பொன் + உருக்கு—]

பொன்னுருட்டு *poṉ-ṉ-uruṭṭu,* பெ. (n.) உருட்டாயமைத்த பொன்மோதிரம்; plain gold ring, hoop of gold. (w.)

[பொன் + உருட்டு]

பொன்னுரை *poṉ-ṉ-urai,* பெ. (n.) 1. உரைகல்லில் உரைத்த பொன்னின் தேய்மானம் streak of gold on a touchstone. '*பொன்னுரைகடுக்குந்திதலையர்*' (திருமுரு.145.). 2. ஒருவகை நெல்; a kind of paddy. (a.)

[பொன் + உரை]

பொன்னுலகம் *poṉ-ṉ-ulakam,* பெ. (n.) 1. வானுலகம்; suarga. '*பொன்னுலகத்துள்ள துப்புரவு*' (சீவக.527.) 2. (jaina) *பொன்னெயில் வட்டம்* பார்க்க; see *poṟṟeyil-vaṭṭam.* '*பொன்னுலகத்துய்க்கு மூழ்வினை*' (சீவக.380.)

[பொன் + உலகம்]

பொன்னுலகாளி *poṉ-ṉ-ulakāḷi,* பெ. (n.) வேந்தன் (இந்திரன்) (பிங்.); indra.

[பொன் + உலகு + ஆளி]

ஆளி–'இ' உடைமைப்பெயரீறு

பொன்னுலகு *poṉ-ṉ-ulaku,* பெ. (n.) பொன்னுலகம் பார்க்க, '*பொன்னுலகாள*' (தேவா.293,16.)

[பொன் + உலகு]

பொன்னுறுமாலை *poṉ-ṉ-uṟumālai,* பெ. (n.) பொன்னிழை கலந்து நெய்த கைத்துண்டு வகை; a hand kerchief interwoven with gold. (w.)

[பொன் + உறு+மாலை]

பொன்னூசல் *poṉ-ṉ-ūcal,* பெ. (n.) பொன்னாலாகிய ஊஞ்சல்; golden swing. '*பொன்னூசலாடாமோ*' (திருவாச.16,1.)

[பொன் + ஊசல்]

பொன்னூமத்தை *poṉ-ṉ-ūmattai,* பெ. (n.) 1. செடிவகை. (பிங்.); purple stramony 2. செடி வகை; a species of zanthium orientale.

[பொன் + ஊமத்தை]

பொன்னூல் *poṉṉūl,* பெ. (n.) **1.** பொற்கம்பி. (s.i.i.ii,**156,42.**); gold wire. **2.** கழுத்தணிவகை; gold necklace of several strands. **3.** பொற்பூணூல்; golden sacred thread. *'புடையார் பொன்னூலினன்'* (திவ்.திருவாய். 3,7,4.)

[பொன் + நூல்]

பொன்னெயில் *poṉ-ṉ-eyil,* பெ. (n.) *பொன்னெயில் வட்டம்* பார்க்க; see *ponneyil-vaṭṭam.* *'குபேரன் செய்த விருப்புறு பொன்னெயிற்குள்'* ..... ஆதிமூர்த்தி (சூடா.4,1.)

[பொன் + எயில்]

பொன்னெயில் வட்டம் *poṉ-ṉ-eyil-vaṭṭam,* பெ. (n.) பார்க்க, சமவசரணம். (jain) heavenlypavilion. *'பொன்னெயில் வட்டத்திற்கு செலுத்தும் ஊழ்வினை'* (சீவக.380,உரை,)

[பொன்னெயில் + வட்டம்]

பொன்னெயிற்கோன் *poṉ-ṉ-eyiṟ-kōṉ,* பெ. (n.) *பொன்னெயிநாதன்* பார்க்க; (சூடா.) see *poṉ-ṉ-eyiṟ-kōṉ.*

பொன்னெயினாதன் *poṉ-ṉ-eyiṉātaṉ,* பெ. (n.) அருகக் கடவுள். (திவா.) (jaina.) arhat, as lord of the camavacaranam.

[பொன்னெயில் +skt.nātha. த.நாதன்]

பொன்னெழுத்து *poṉ-ṉ-eḻuttu,* பெ. (n.) ஒருவகைத் துகில். a kind of cloth (சிலப்.14,108,உரை.).

[பொன் + எழுத்து]

பொன்னேர் *poṉ-ṉ-ēr,* பெ.(n.) **1.** பருவ காலத்தில் நல்லநாளில் முதன் முறையாக உழுங்கலப்பை; the plough used on an auspicious day for the first time in a season. *'பொன்னேர் பூட்டி நின்றோர்'* (சிலப்.10,135,உரை.) **2.** *பொன்னேர்க்கட்டு* பார்க்க; (இ.வ.) see *poṉ-n-ērkaṭṭu.*

[பொன் + ஏர்]

பொன்னேர்க்கட்டு *poṉ-ṉ-ērkaṭṭu,* பெ. (n.) பருவகாலத்தில் நல்ல நாளிற் செய்யும் முதலுழவு; first ploughing of a season on an auspicious day with appropriate ceremonies (w.)

[பொன்னேர் + கட்டு]

பொன்னேர்ப்பூட்டு *poṉ-ṉ-ē-p-pūṭṭ,* பெ. (n.) *பொன்னேர்க்கட்டு* பார்க்க; see *poṉ-ṉ-ērkaṭṭu* (w.)

[பொன்னேர் + பூட்டு]

பொன்னையசாமிகள் *poṉ-naiya-sāmikal,* பெ. (n.) 'சதானந்த சதகம்' என்றநூலை இயற்றியவர்; the author of satānanta-satakam.

பொன்னையாபிள்ளை.க *ponnaiyāpillai. ka,* பெ. (n.) இசையில், தஞ்சைப்பெருவுடையான் பேரிசை ஆகிய நூல்களை இயற்றியவர்; the author of esaiyial, and tancai-p-peruvuṭaiyan-pērisai

பொன்னோர் *ponnōr,* பெ. (n.) தேவர்கள்; dēvās. (பெருங். இலாவாண.7,168, பாடபேதம்)

[பொன் → பொன்னோர்]

பொன்னோடை *ponnōdai,* பெ. (n.) பொன்னாற் செய்த நெற்றிப்பட்டம்; thin plat of gold worn on the forehead, as an ornament or badge of distinction. *'பொன்னோடை நன்றென்றாள் நல்லாளே'* (முத்தொ.58)

[பொன் + ஓடை]

பொன்னோதுவார்,சு *ponnōtuvār,su,* பெ. (n.) 'திருஞான சம்பந்த மூர்த்திநாயனார் புராண வசனம்' எனும் நூலை இயற்றியவர்; the author of tiruñana-sammanta-murtti-nayanār-purāna-vasanam.

பொன்னோலை *pon-n-ōlai,* பெ. (n.) மகளிர் காதணி வகை; gold ear-ring for a woman. 'பொன்னோலை வட்டம் பொழிந்து மின்னுகுப் (சீவக.677.)

[பொன் + ஓலை]

பொனத்தி *ponatti,* பெ. (n.) **1.** நீல நிறமுள்ளதும் ஆறுஅடி வளர்ச்சியுடையதுமான ஆற்றுமீன் வகை; a river-fish, bluish, attaining **2.** நீல நிறமுள்ள ஆற்றுமீன் வகை. a river-fish with long maxillary barbels, bluish.

போ¹ *pō,* தமிழ் நெடுங்கணக்கில் 'ப்' என்ற மெய்யெழுத்தும், 'ஓ'என்றநெட்டுயிரெழுத்தும் சேர்ந்து உண்டான உயிர்மெய்யெழுத்து; the compound of ப் and ஓ.

[ப்+ஓ=போ]

போ²–தல் *pō-,* செ.கு.வி. (v.i.) **1.** செல்லுதல்; to go, proceed; to go away, depart. *'மாமலர் கொய்ய... யானும் போவல்'* (மணிமே. 3, 83.) **2.** அடைதல்(வின்); to reach a destination (w.) **3.** உரியதாதல்(வின்); to belong **4.** பிறத்தல்; to be born. *'வணிகர் மரபிற் போந்தோன்'* (உபதேசகா. சிவபுண். 153) **5.** நீண்டு செல்லுதல்; to lie, pass through, as a path. *'தென்கரைக்கு நடுவாகப் போயின இடை கழி'* (T.A.S. i. 189) **6.** தகுதியாதல்; to be proper, admissible passable. *'அப்படிச் செய்யப் போகாது'(வின்)* **7.** நெடுமையாதல் (தொல். சொல். 317.); to become long; to be stretched out **8.** நேர்மையாதல்; to become straight. *'வார்தல் போகல்.... நேர்பு நெடுமையும் செய்யும் பொருள'* (தொல். சொல். 317); **9.** பரத்தல் to extend, spread *'விசும்பினு ஞாலத்தகத்தும் வளியே யெதிர்போம் பல்கதிர் ஞாயிற்றொளி'* (கலித். 144, 40.) **10** நிரம்புதல்; to be full. *'நலந்துறை போய நங்கை'* (சீவக. 2132) **11.** மேற்படுதல்; to exceed transcend. *'ஆயிர மல்ல போன'* (கம்பரா. மாயாசனக. 14.) **12.** ஓங்குதல்; to shoot up; to be tall. *'கள்ளிபோகிய களரியம் பறந்தலை'* (புறநா. 237.) **13.** நன்கு பயிலுதல்; to become expert in. *'முத்தமிழ்த் துறையின் முறை போகிய வுத்தமக் கவி'* (கம்பரா. சிறப்புப். 9.) **14.** கூடியதாதல்; to undergo, experience, to go through the process of. *'மூச்சுவிடப் போகவில்லை'* **15.** பிரிதல்; to separate . *'புலம்பப் போகாது'* (பரிபா. 11, 118)

16. ஒழிதல்; to cease. *'மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப'* (புறநா. 10) 17. நீங்குதல்; to leave, abandon. *'நூல்போன சங்கிலி'* (பதினொ. திருத். திருவந். 69.) 18. கழிதல்; to go by, pass over; to lapse. *'போய காலங்கள்'* (திவ். திருவாய். 2, 6, 10) 19. மறைதல், to vanish, disappear. 'ஒளியவன்.....தேரும் போயிற்று' (திவ்.பெரியதி. 8,6,6) 20. காணாமற் போதல்; to be missing; to be lost. *'போன பொருள் திரும்பாது'* 21. மாறுதல்(வின்); to change, as from one state to another (w.) 22. கழிக்கப் படுதல்; to be subtracted. *'ஆறிலே இரண்டு போக'* 23. வகுக்கப் படுதல்; to be diveded. *'நூறில் பன்னிரண்டு எட்டுத்தரம் போகும்'* 24. சாதல்; to perish, due *'தந்தையார்; போயினார் தாயரும் போயினார் தாமும் போவார்'* (தேவா. 692, 2) 25. முடிவாதல்; to be conclusive. *'இன்பமாவதே போந்த நெறி என்றிருந்தேன்'* (தாயு. சின்மயானந்த. 5.) 26. ஒலியடங்குதல்; to be hushed. *'முரசெலாம் போன'* (கம்பரா. முதற்போ. 232) 27. புணர்தல்; to cohabit. *'அவளோடு போனான்'*–

[ஊ → ஒ → போ → போ]

போ³–தல் pō-, aux. an aux. (a) தொடங்குவதைக் குறிக்கும் துணைவினை; expressing what is about to happen. *'அதைச் செய்யப் போகிறான்'* (b) emphasising the meaning of the main verb பகுதிப் பொருளையே வற்புறுத்தும் துணைவினை. *'தூங்கிப் போனான்'*

க. ஒரி. போகு ம. போ

[போ→போ – தல்]

போ⁴ *Pō*, இடை. part. ஓர் அசைநிலை (தொல்.சொல். 281.); an expletive.

போக்கடா *Pōkkaḍā*, பெ. (n.) வம்பன்; (இ.வ.) rowdy.

[போக்கு + கடா]

போக்கடி–த்தல் *Pōkkaḍi-*, செ.குன்றாவி. (v.t.) 1. இழத்தல்; to lose. *'கான் மாரீசன் என்றவரையும் போக்கடித்தேன்'* (இராமநா. உயுத். 44.) 2. வீணாக்குதல்(வின்); to waste (w.) 3. விலக்குதல்(வின்); to dispel, disperse, banish, chase away 4. போகச் செய்தல்(வின்); to cause to go.

[போ→போக்கு + அடி → போக்கடி]

போக்கடி² *Pōkkaḍi*, பெ. (n.) 1. இழக்கை(வின்); losing, loss. 2. பொருளாதரவு(வின்); pecuniary means. 3. தற்போக்கு; liberty of action. (w.) 4. கழுவாய்; remedy. *'போக்கடி யற்ற தசை'* (ஈடு, 9, 1, 2.) 5. காலக்கெடு; opportunity, scope. *'மேல் வார்த்தை சொல்கைக்கு ஒரு போக்கடியுமில்லை'* (ஈடு. 6, 2, 5.)

[போ → போக்கு + அடி → போக்கடி]

போக்கடிப்பான் *Pōkkaḍippāṉ*, பெ. (n.) ஒரு வசைச் சொல்; a curse, meaning 'loser'

[போக்கடி → போக்கடிப்பான்]

போக்கடியறு–தல் *Pōkkaḍi-y-aṟu*, செ.கு.வி. (v.i.) 1. புகலிடமில்லையாதல்; to lose one's means of livelihood. 2. செயலறுதல் (குருபரம், 342); to be helpless, to be laid prostrate.

[போக்கடி + அறு–,]

போக்கணங்கெட்டவன் *Pōkkaṉaṅ-keṭṭavaṉ,* பெ. (n.) *போக்கறுவான்* (கொ.வ.) பார்க்க; see *pōkkaṟuvāṉ.*

[போக்கு → போக்கணம் + கெட்டவன்]

போக்கணம்[1] *Pōkkaṇam,* பெ. (n.) புகல்; refuge, way of escape.

[போக்கு → போக்கணம்]

அணம்–பெயரீறு

போக்கணம்[2] *Pōkkaṇam,* பெ. (n.) நாணம்(வின்) shame, sense of shame

[போக்கு + அணம்]

போக்கணம்[3] *Pōkkaṇam,* பெ. (n.) கட்டுச்சோறு; viaticem, food for journey.

[பொக்கணம் → போக்கணம்]

போக்கம் *Pōkkam,* பெ. (n.) பொலிவு(சூடா); beauty, splendour.

[பொக்கம் → போக்கம்]

போக்கறு[1]**–தல்** *Pōkkaṟu,* செ.கு.வி. (v.i.) 1. குற்றம் நீங்குதல்; to be faultless. "போக்கறுபனுவல்" (தொல். பாயி). 2. கதியறுதல்; to lose one's means of livelihood. *'போக்கற்றுச் செயல்மாண்டு நின்ற நிலை'* (ஈடு, 6, 10, 10)

[போக்கு + அறு–,]

போக்கறு[2]**–தல்** *Pōkkaṟu,* செ.குன்றாவி(v.t.) முட்டின்றிச் செய்தல்; to make no depault. கோயில் தேவைசாரம் சந்திராதித்தவரை போக்கறுப்பலனாகச்சிலாலேகை பன்னிக்கொடுத்தோம் (S.I.I.iv.102)கடமை தட்டுப்போக்கறுக்கபோணுமென்று மகாசபையோம் சம்மதித்து(S.I.I.viii,165)

[போக்கு + அறு–த்தல்]

போக்கறுதி *Pōkkaṟudi,* பெ.(n.) புகலின்மை; want of an alternative. 'முன்பு பலபடியுஞ் சொன்னதனையேபோக்கறுதிலாற் பின்புஞ் சொல்லுகின்றேன்' (நிலகேசி. 392, உரை)

[போக்கு + அறு → அறுதி]

போக்கறுவான் *Pōkkaṟuvvāṉ,* பெ. (n.) 1. போக்கிடமில்லாதவன்; one who has nothing to fall back upon; one who has no means of living; a destitute person. *'போக்கறுவான் வீட்டிற் புகுந்தான்'* (விறலிவிடு. 845)

[போக்கறு → போக்கறுவான்]

போக்கன் *Pōkkaṉ,* பெ. (n.) 1. வழிப்போக்கன்; wayfarer, traveller. 2. வெளிநாட்டுக்காரன்; foreigner. 3. பயனற்றவன்; worthless person. 4. கயவன்(வின்); mean fellow

க. போக ம. போக்கந

[போக்கு → போக்கன்]

போக்காட்டு–தல் *Pōkkāṭṭu-,* செ.குன்றாவி. (v.t.) 1. அனுப்பிவிடுதல்; to send away. 2. வேற்றிடம் போகுமாறு சாக்குச் சொல்லி விடுத்தல்; to send to another place or to a third person, excusing oneself.

[போக்கு → காட்டு–,]

போக்காடு[1] *Pōkkāḍu,* பெ. (n.) தீவினைகளைப் போக்கும் பொருட்டு காட்டெல்லையில் போகவிடப்படும் ஆட்டுக்கடா; scape goat.

[போக்கு → ஆடு]

போக்காடு[2] *Pōkkāḍu,* பெ. (n.) இறப்பு; death. (யாழ்.அக.)

[போ → போக்காடு]

போக்காளன் *Pōkkāḷaṉ,* பெ. (n.) 1. இளமையில் இறந்தோன்; man who died a premature death. 2. பயனற்றவன்; worthless man.

[போக்கு + ஆள் + அன் → போக்காளன்]

போக்காளி *Pōkkāḷi,* பெ. (n.) 1. இளமையில் இறந்தவ–ன்–ள்; man or women who died a premature death. 2. ஒன்றுக்கும் உதவாதவ–ன்–ள்; workless person.

[போக்கு + ஆள் + இ → போக்காளி]

'இ' உடைமைப் பொருள் பெயரீறு

போக்கி *Pōkki,* வி.எ. (adv.) 1. *போக்கன்,*2 (யாழ்.அக.) பார்க்க; see *pōkkan.* 2. பின்பு; afterwards. ***'இவை போக்கிச் சொல்லுதும்'*** (தொல். பொ. 444, உரை) 3. தவிர; besides. ***'கல்யாணகுண விசயமான இத்தனைப் போக்கிப் புறம் போயிற்றில்லை'*** (ஈடு, 3, 1, 6)

[போக்கு → போக்கி]

போக்கிச் சொல்(லு)–தல் *Pōkki-crcol,* செ.கு.வி. (v.i.) பின்னர்க் கூறுதல்; to deal with, in a latter place. 'அவை இரண்டு திணைக்கும் விரவுவினை ஆதலாற் போக்கிச் சொல்லுதும்' (நேமி நா. 41, உரை.)

[போக்கு+ சொல்–,]

போக்கிடம் *Pōkkiḍam,* பெ. (n.) 1. ஒதுக்கிடம்; way of escape. 2. புகலிடம்; place of refuge. ***'போக்கிடங் காணேன்'*** (திருவாச. 23, 6)

[போக்கு → இடம்]

போக்கியல் *Pōkkiyal,* பெ. (n.) சுரிதகம் (வீரசோ. யாப். 11, உரை) ; last member of some kinds of kali-p-pā verse.

[போக்கு + இயல்]

போக்கிரி *Pōkkiri,* பெ. (n.) ***போக்கிலி*** பார்க்க see *pōkkili.*

[போக்கு → போக்கிலி → போக்கிரி]

போக்கிரிசாக்கிரி *Pōkkiricākkiri,* பெ. (n.) *போக்கிலி*[2] (வின்) பார்க்க; see *pōkkili.*

[போக்கிரி + சாக்கிரி]

எதுகை நோக்கி வந்த மரபு இணைச்சொல்

போக்கிரித்தனம் *Pōkkiri-t-taṉam,* பெ. (n.) பொல்லாச்செயல்; rascality.

[போக்கிரி + தனம்]

போக்கிலி *Pōkkili,* பெ. (n.) 1. கதியற்றவன்; one who has no refuge. (யாழ்.அக.) 2. கயவன்; (சங்.அக.) villain.

[போக்கு + இலி]

இல் + இ – இலி 'இ' உடைமைப் பொருள் பெயரீறு.

போக்கு[1]–தல் *Pōkku,* செ.குன்றாவி. (v.t.) **1.** போகச் செய்தல்; to sent, to cause to go. "பிள்ளையைப் போக்கினேன்" (திவ்.பெரியாழ். 3. 2. 1) **2.** செய்தல்; to discharge, pay, render. "வனத்துழாய்க் கணவர்க்கும் வணக்கம் போக்கினாள்" (கம்பரா. மீட்சிப். 84) **3.** செய்து முடித்தல்; to complete, finish. புரிய வேண்டுவ யாவையும் விதிமுறை போக்கி (உபதேசகா. சிவவிரத. 319) **4.** கொடுத்தல்; to give. *'கலன்களும் தூசும் போக்கினான்'* (கம்பரா. எழுச். 6) **5.** உணர்த்துதல்; inform, make known. *'கரிபோக்கினாள்'* (சீவக. 889) **6.** உட்புகுத்துதல்(வின்); to insert. **7.** கட்டுதல்; to bind. "ஏக்கழுத்து நாணாற் கரும்பினணை மென்றோள் போக்கிச் சிறைபிடித்தாள்". (பரிபா. 7, 56) **8.** மெலிவுறச் செய்தல்; to make lean. ஆக்கையைப் போக்கப் பெற்று (திருவாச. 6, 10) **9.** இல்லாமற் செய்தல்; to clear remove *'அழுக்கைப் போக்கினான்'* **10.** கழித்தல்; to pass or spend, as time. *'அவத்தமே வாழ்நாளைப் போக்குவார்'* (நாலடி. 327) **11.** அழித்தல்; to ruin, destroy, kill. ஆக்குதலளித்தல் போக்குதல். (சிவப். பிர. இஷ்ட நெடுங்கழி. 7)

[போ → போக்கு]

போக்கு[2]–தல் *Pōkku,* செ.குன்றாவி. (v.t.) கற்பித்தல்; to teach. 'ஆசார்யன் போக்கின வையேயாகிலும் சத்யந்நிதியிலே சொல்லக் கடவதல்ல' (திவ்.திருநெடுந்.13 வ்யா.)

[போ → போக்கு]

போக்கு[3] *Pōkku,* பெ. (n.) **1.** போகச்செய்கை; causing to go, letting out. **2.** வழி way, passage, exit, **3.** சுரங்கவழி(வின்); subterranean passage **4.** நடை(பிங்); walk, step, gait. **5.** மீட்சி; recovery. *'நாகம் போக்கறக் கொண்ட தேனும்'* (சீவக. 1285) **6.** புகல்; refuge. *'இலங்கை போக்கறவும்'* (கம்பரா. மாயாசனக. 83) **7.** இடம்; place. இது இந்தப்போக்கிலே கிடைக்குமா? **8.** நிலத்தியல்பு; character of land, as hilly sandy. மலைப்போக்கு, ஆற்றுப்போக்கு, **9.** மனச் சாய்வு; tendency, turn of mind. *'அவனைப் போக்குப் போல் விட்டுப் பிடிக்க வேண்டும்'* **10.** சாக்கு; excuse. **11.** பழக்கம் (யாழ்.அக.); habit **12.** நடைமுறை; manner, **13.** விருப்பம்; desire, **14.** பொலிவு; style. **15.** நீர்முதலியவற்றின் ஓட்டம்; flowilng, as of water or wind. "புணரியைப் போக்கற வடைத்தவாறும்" (கம்பரா. ஒற்றுக். 46) **16.** மலமுதலியன வெளிப்படுகை; euacuation. **17.** பறவை நூலில் ஆந்தையின் தொழிலால் குறிக்கப்படும் விளைவு(சூடா); prediction by the action of owl among pancapaksi **18.** கேடு; loss, ruin. போக்கு மதுவிளிந் தற்று (குறள். 332) **19.** செலவு; expense. **20.** இறப்பு; death. "போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே" (திருவாச. 1, 77) **21.** குற்றம்; fault, defect. போக்கறு பனுவல் (தொல். பாயி) **22.** கழிப்புக் கழிக்கை; ceremony of averting evil. **23.** மரக்கன்று;(பிங்) sapling

க. போக

[போ → போக்கு]

போக்கு[4] *Pōkku,* பெ. (n.) செல்லுகை; going, passing. *'குறும்பி னூழையும் வாயிலும் போக்கறவளைஇ'* (பு. வெ. 1, 7, கொளு)

[போ → போக்கு]

போக்கு[5] *Pōkku,* பெ. (n.) நடத்தை; conduct. *'அழகிதாயிருந்தது எம்முடைய போக்கு'* (ஈடு,1,4,7)

[போ → போக்கு]

போக்குக்கழி–த்தல் *Pōkku-k-kaḻi-,* **செ.கு.வி.** (v.i.) கண்ணேறு கழித்தல்; to dispel the effects of the evil eye.

[போக்கு + கழி–,]

போக்குக்காட்டு–தல் *Pōkku-k-kāṭṭu-,* **செ.கு.வி.** (v.i.) **1.** வழிகாட்டுதல்; to point out a way. **2.** சாக்குச் சொல்லுதல்; to give excuse. **3.** குறிப்புக் காட்டுதல்(வின்); to give an outline or clue, to suggest.

[போக்கு → காட்டு–,]

போக்குச்சாக்கு *Pōkku-c-cākku,* **பெ.** (n.) நொண்டிச்சாக்கு(வின்); lame excuse, pretence.

[போக்கு + சாக்கு]

போக்குச்சுற்றிப் போடு–தல் *Pōkku-c-cuṟṟi-p-pōḍu,* **செ.கு.வி.** (v.i.) *போக்குப் போடு*(வின்) பார்க்க; see *pōkku-p-pōḍu.*

[போக்கு + போக்கு + போடு]

போக்குச்செய்தல் *Pōkku-c-cey-* **செ.குன்றாவி.** (v.t.) விற்றல்; to sell. "போக்குச் செய்து பொன்வரக்காட்டுக"(கல்.)

[போக்கு + செய்–,]

போக்குச்சொல்(லு)–தல் *Pōkku-c-col,* **செ.கு.வி.** (v.i.) சாக்குக் காட்டுதல்; to make excuse.

[போக்கு + சொல்]

போக்குத்தெளிவு *Pōkku-t-teḷivu,* **பெ.** (n.) இறக்குந் தறுவாயில் உண்டாகும் நோய்த் தெளிவு; apparent abatement of disease just before death.

[போக்கு + தெளிவு]

போக்குநீக்கு[1] *Pōkku-nīkku,* **பெ.** (n.) **1.** போக்குவரத்து; going and coming. **2.** பாட்டை(வின்); thorough fare **3.** புகலிடம்; refuge. **4.** இடைவெளி(வின்); escape, opening. **5.** வழிமுறை(வின்); methed, way. **6.** பழக்கம்; (யாழ்.அக.) habit, practice.

[போக்கு + நீக்கு]

போக்குநீக்கு[2] *Pōkku-nīkku,* **பெ.** (n.) **1.** அன்பு கெழு நிலைமை(இ.வ.); amiability. **2.** ஈவிரக்கம்(கொ.வ.); kind heartedness.

[போக்கு + நீக்கு]

போக்குப்போடு–தல் *Pōkku-p-pōḍu,* **செ.கு.வி.** (v.i.) கண்ணேறு கழிக்க அல்லது பேய் விரட்ட உயிர்க்காவு கொடுத்தல்; to offer pali in an open or exposed place for dispelling demons or averting evil.

[போக்கு + போடு–,]

போக்குவண்டி *Pōkku-vaṇḍi,* **பெ.** (n.) **1.** வெறுமையாகத் திரும்பிச் செல்வதால் குறைந்த வாடகைக்குக் கிடைக்கும் வண்டி; return bandy, cart retuning empty after discharging its load and therefore available for a cheap fare. **2.** விரும்பிய இடத்திற்குச் சென்று கொண்டிருப்பதால் குறைந்த வாடகைக்குக் கிடைக்கும் வண்டி; carriage or cart going in the desired direction of its own accord and therefore available for a cheap fare.

[போக்கு + வண்டி]

போக்குவரத்து *Pōkku-varattu,* பெ. (n.) 1. போதலும் வருதலும்; going and returning. 'புகுந்தே னென்கிற இது ஒரு போக்குவரத்து உண்டாயான்று' (ஈடு, 6, 10, 10). 2. ஊடாடுகை(வின்); familiar intercourse, frequent visiting, intercommunication 3. விருந்தினர்(வின்); guests. 4. வரவு செலவு; income and expenditure.

[போக்கு + வரத்து]

போக்குவரத்துக்கழகம் *Pōkku-varattu-kalagam,* பெ. (n.) செல்கையர் போக்குவரத்து நிறுவனம்; Public transport Department.

[போக்குவரத்து + கழகம்]

போக்குவரத்துத் துறை *Pōkku-varattu-turai,* பெ. (n.) ஆட்களையும் சரக்குகளையும் இடம் விட்டு இடம் கொண்டு செல்லும் ஊர்தி நிறுவனம்; Transport Department.

[போக்குவரத்து + துறை]

போக்குவரத்துநெரிசல் *Pōkku-varattu-nerical,* பெ. (n.) போக்குவரத்துத்தடை; hold up of traffic.

[போக்குவரத்து + நெரிசல்]

போக்குவரத்து மணியம் *Pōkku-varattu-maniyam,* பெ. (n.) விருந்தினரை வரவேற்று நலம் பாராட்டும் ஊழியர்; clerk deputed to attend on guests.

[போக்குவரத்து + மணியம்]

போக்குவரவு *Pōkku-varavu,* பெ. (n.) 1. போக்குவரத்து பார்க்க 2. பிறப்பிறப்பு; death and birth. *'போக்குவரவு புகிய'* (சி. போ. 2.) 3. நிலவுரிமையை உறுதிப்படுத்தும் துறை அல்லது அலுவலகம்; settlement, a revenue term. *'போக்குவரவு கச்சேரி'* 4. உரிமைப்பதிவு ஆவணம் மாறுகை; transfer of patta. நான் விலைக்கு வாங்கின நிலம் என்பேர்க்கு இன்னும் போக்கு வரவு ஆகவில்லை (நாஞ்.)

[போக்கு + வரவு]

போக்குவாக்கு *Pōkkuvākku,* பெ. (n.) 1. பொலிவான தோற்றம்; good personal appearance. 2. உடற்கட்டு; good build of body, said of a person.

[போக்கு + வாக்கு]

போக்குவிடு[1]–தல் *Pōkku-viḍu,* செ.கு.வி. (v.i.) 1. நீர் போகவிடுதல்; to make a drain, on outlet, 2. போக்குவை 1– பார்க்க (w) 3. வழிவிடுதல்; to provide a way or means of outlet.

போக்குவிடு[1]–தல் *Pōkku-viḍu,* செ.குன்றா.வி. (v.t.) 1. செலவழித்தல்; to spend.

[போக்கு + விடு]

போக்குவீடு *Pōkku-vīḍu,* பெ. (n.) 1. செல்லவிடுகை; sending away. 2. சொற் செயல்களால் உணர்ச்சிக்கு வழிவிடுகை; outlet, as for one's feelings; giving vent. "பிராட்டியைக் கண்ட பிரீதிக்குப் போக்கு வீடாக" (திவ். திருமாலை. 1, வ்யா. பக். 11)

[போக்குவிடு → போக்குவீடு]

போக்குவை–த்தல் *Pōkku-vai-,* செ.கு.வி. (v.i.) 1. கீழ்ச்சுரங்கம் அமைத்தல்; to make underground cellar for hiding treasure. 2. செலவுக்கு வழிதேடுதல்; to find out ways of exlpenditure.

[போக்கு + வை]

போக *Pōga,* கு.வி.எ. (adv) **1.** தவிர; besides, excepting. *'போரிலிற்றவர்கள் போக மற்றவர் புறத்தி லோடியதும்'* (பிரபோத. 30, 59) **2.** பகுதிப் பொருளில் வரும் ஒரு துணைச் சொல்; an expletive of emphasis. நான் வரப்போக வேலை நடக்கவில்லை. (கொ.வ)

[போ → போக]

போக காரிகை *pōga-kārigai,* பெ. (n.) ஒரு (சிவனியக் கொண்முடிவு) நூல்; a treatise on siva siddhānda philosophy.

[போ + காரிகை]

போகடி[1]–த்தல் *pōgaḍi,* செ.குன்றா.வி. (v.t.) *போக்கடி*(வின்) பார்க்க; see *pōkkaḍi*

[போக்கடி → போகடி]

போகடி[2] *pōgaḍi,* பெ. (n.) கொண்டிமாடு(வின்); மந்தையை விட்டுப்பிரிந்த மாடு stray cattle.

[போ → போகடி]

போகடிப் போக்கு *pōgaḍi-p-pōkku,* பெ. (n.) தற்செயல்; accident, casualness.

[போகடி + போக்கு]

போகடு[1] –தல் *pōgaḍu,* செ.குன்றா.வி. (v.t.) **1.** கழித்துவிடுதல்; to set aside, cast away. *'போகட்ட உடம்மையும்'* (சீவக. 951, உரை) 2. போகவிடுதல்; to let go. *'போகெனப் போகடாய்'* (சீவக. 1365)

[போகவிடு- → போகடு-]

போகடு[2] –தல் *pōgaḍu,* செ.கு.வி. (v.i) **1.** விலகுதல்; to leave, escape. *'பொல்லாதது போகடும்'* (தேவா. 376. 4)

[போகவிடு- → போகடு-]

போகண்டன் *pōgaṇḍan,* பெ. (n.) ஐந்து அகவைக்கு மேல் பதினைந்து அகவைக்குட் பட்ட ஆண் மகவு(யாழ்.அக.); a male child between five and fifteen years.

போகநாதர் *pōga-nādar,* பெ. (n.) மருத்துவ நூல்கள் பலவற்றின் ஆசிரியரும் பதினெண் சித்தரி லொருவருமான முனிவர்; a mystic, author of several works on medicine, one of padineṇ-šiddar.

போகப்போக *pōga-p-pōga,* கு.வி.எ. (adv) காலம் செல்லச் செல்ல; as time goes on.

[போக + போக]

போகல் *pōgal,* பெ. (n.) **1.** உயர்வு(பிங்); rising **2.** நீளம்(சூடா); length.

[போகு → போகல்]

போகவிடு–தல் *pōga-viḍu,* செ.குன்றா.வி. (v.t.) நழுவ விடுதல்; to let go, allow to pass or slilp away, to abandon. *'போதித்த உண்மை யெங்கே போகவிட்டாய்'* (தாயு. உடல்பொய். 5)

[போ → போக + விடு–,]

போகாப்புல் *pōgā-p-pul,* பெ. (n.) செங்கழுநீர் போன்ற களைய முடியாத கொடிவகை; creeper that can not be rooted out,as ceṅgaḻunīr. *'போகாப் புல்லாகிய கழுநீர் முதலைப் பறித்து'* (சிலப். 10, 127, உரை)

[போ → போகு + ஆ + புல்]

போகாறு *pōgāṟu,* பெ. (n.) பொருளைச் செலவிடும் வழி; expenditure of money. *'கேடில்லை போகா றகலாக் கடை'* (குறள், 478)

[போ → போகு + ஆறு ன

போகி¹ *pōgi,* பெ. (n.) *போகிப்பண்டிகை* பார்க்க; see *pōgi-p-panttigai.*

[போகு → போகி]

போகி² *pōki,* பெ. (n.) சிவிகை சுமப்போன்; palanquin-bearer.

க. போயி

போகி³ *pōki,* பெ. (n.) *கார் போகி* (தைலவ. தைல.) பார்க்க; see *kār-pōgi.*

போகி கொளுத்தல் *pōgi-koluttal,* பெ. (n.) போகிப்பண்டிகை நாளில் முந்திய இரவில் பழைய பண்டங்களையும், பழந்துணிகளையும் நெருப்பி லிடுகை; burning of old clothes and leumber on the night of poki-pantikai

[போகி + கொளுத்தல்]

போகிப் பண்டிகை *pōki-p-pantikai,* பெ. (n.) பொங்கற் பண்டிகைக்கு முந்திய நாளிற் பழையன கழித்தும் இல்லம் புதுக்கியும் செய்யும் விழாத் தொடக்கம்; festival on the day before pōnkal.

[போகு → போகி+ பண்டிகை]

போகில் *pōgil,* பெ. (n.) 1. பூவரும்பு(பிங்). flower bud. 2. கொப்பூழ்(பிங்).; navel.3. பறவை; bird. *'ஆலம் போகிறனைத்தடுக்கும் வேனில்'* (ஐங்குறு. 303)

[புகு → (போகு) → போகில் → போகில்]



போகிவல்லபம் *pōgi-vallabam,* பெ. (n.) சந்தனம்(மலை); sandal wood.

[போகில் + வல்லபம்]

நறுமணம் பற்றிப் போகில் என்பது சந்தனத்தைக் குறித்ததாகலாம்

போகிவாசம் *pōgi-vāšam,* பெ. (n.) *போகிவல்லபம்* (சங்.அக.) பார்க்க; see *pōgi vallabam.*

[போகில் + வாசம்]

போகின்ற காலம் *pōginṟa-kālam,* பெ. (n.) நிகழ் காலம்; present time. *'போகின்ற காலங்கள்'* (திவ். திருவாய். 2, 6, 10)

[போ → போகின்ற+ காலம்]

போகு-தல் *pōgu-,* செ.கு.வி. (v.i.) *போ* பார்க்க; see *pō.*

[போ → போகு]

போகுகாலம் *pōgu-kālam,* பெ. (n.) எதிர்காலம்; future tense. *'போய காலங்கள் போகு காலங்கள்'* (திவ். திருவாய், 2, 6, 10)

[போகு + காலம்]

போகுடி *pō-kuḍi,* பெ. (n.) **1.** ஊரைவிட்டுப் போய் விட்ட குடும்பம்; family that has left its native village. **2.** பிறங்கடை இல்லாமல் மறைந்து போனவனுடைய சொத்து; property left by a person who has disappeared without leaving any heirs or claimants.

[போகு + குடி]

போகுயர்–தல் *pōguyar,* செ.கு.வி. (v.i.) **1.** வளர்தல்; to grow, increase. *'போகுயர் நீள்கழை'* (சீவக. 1422) **2.** உயர்தல்; to be high, to rise upward. *'போகுயர் மதிய மேறி'* (சீவக. 705)

[போகு + உயர்]

போகூழ் *pōgūḻ,* பெ. (n.) தீவினைப்பயன் (தீயூழ்); fate that ordains loss. *'கைப்பொருள் போகூழாற் றோன்று மடி'* (குறள், 371)

[போகு + ஊழ்]

போகை *Pōgai,* பெ. (n.) செலவு; departure, going. *'போகைசேர் விடைகொண்டு'* (கந்தபு. சூரன்றண், 31)

தெ. போக. க. போகு

[போ → போகை]

போகொட்டு–தல் *Pōgoṭṭu,* செ.குன்றா.வி. (v.t.) போகவிடுதல்; to permit to go, allow to depart. *'யாமு நும்மைப் போகொட்டோம்'* (சீவக. 2045)

[போ → போக + ஒட்டு–,]

போங்கம் *Pōṅgam,* பெ. (n.) மஞ்சாடி மரவகை; (குறிஞ்சிப் .74) a veriety of redwood.

[போ → போக்கு → போங்கு → போங்கம்]

போங்காலம் *Pō-ṅ-kālam,* பெ. (n.) **1.** தீவினைப் பயன் விளைந்து துன்புறும் வேளை(வின்); time of adverse influences, when former evil deeds bear fruit, opp. to āṅkālam. **2.** இறப்புக் காலம் (வின்); time of death.

[போம்+ காலம்]

போங்கு *Pōṅgu,* பெ. (n.) *போக்கு*[2](யாழ்.அக.) பார்க்க; see *pōkku*[2]

[போக்கு → போங்கு]

போசக்கை *Pōša-k-kai,* பெ. (n.) **1.** போலித் தோற்றம்; deceptiveness of appearance. **2.** மேற் பூச்சு; superficialit. of character. **3.** மாயம்; counterfeit, sham, pretence or cover to save credit or hide poverty.

[பூசு → பூசகை → போசகை → போசக்கை]

போசக்கை வேலை *Pōšakkai-vēlai,* பெ. (n.) போலி வலை(வின்); counterfeit, unsubstantial work.

[போசக்கை + வேலை]

போசிவல்லபம் *Pōšivallabam,* பெ. (n.) *போகிவல்லபம்*(சங்.அக) பார்க்க; see *pōgi-vallabam.*

போஞ்சான் *Pōñjāṉ,* பெ. (n.) நெல்வகை; a kind of paddy.

போஞ்சி *Pōñji,* பெ. (n.) **1.** கையணிவகை; a kind of wristlet. **2.** எலுமிச்சை பழச்சாறு; lime-juice and sugar.

க. போஞ்செ

போஞ்சிக்காய் *Pōñji-k-kāy,* பெ. (n.) அவரைக்காய்; field-bean.



போட்கன் *Pōtkaṉ,* பெ. (n.) **1.** பொய்யன்; liar. *'ஆராய்ந்தால் அதுதானும் போட்கன்'* (ஈடு. 8, 10, 1) **2.** சுணைகேடன்; person deviod of shame or modesty. *'போட்கன் மிதித்த வடிப் பாட்டிற் பொடித்தான் கொணர்ந்து பூசீர்கள்'* (திவ். நாய்ச், 13, 6)

[புல் → பொல் → பொள் → போள் → போட்கன்]

போட்டடுப்பு *Pōṭṭaḍuppu,* பெ. (n.) *போடு*[4] (இ.வ.) பார்க்க; see *pōḍu* a kind of oven.

[போடு + அடுப்பு]

போட்டடை—த்தல் *Pōṭṭaḍai,* செ.குன்றா.வி. (v.t.) திணித்தல்; to stuff, cram, as food.

[போடு → போட்டு + அடை]

போட்டி *Pōtti,* பெ. (n.) **1.** எதிரிடை; rivalry, emulation. *'தாட்டிகமுடன் வெகுபோட்டி போட்டிகளாக'* (இராமநா. உயுத், 15) **2.** கேலி(யாழ்.அக); ridicule.

தெ. க. போடி

[புல் → பொல் → பொள் → (பொட்டி) → போட்டி]

போட்டி—சமன்மை; இகலுதல்.

போட்டி[2] *Pōtti,* பெ. (n.) பந்தயம்; contest.

போட்டிக்காரன் *Pōṭṭi-k-kāraṉ,* பெ. (n.) **1.** எதிரி; rival. (w). **2.** கேலிக்காரன்; one who ridicules or sneers. (யாழ்.அக)

[போட்டி + காரன்]

போட்டிக்கை *Pōṭṭikkai,* பெ. (n.) *போட்டி*(வின்) பார்க்க; see *pōṭṭi.*

[போட்டி → போட்டிகை → போட்டிக்கை]
'கை' தொ. பெ. ஈறு.

போட்டிவழக்கு *Pōṭṭi-vaḻakku,* பெ. (n.) இடையறா எதிர்வழக்கு(வின்); continual rivalry or dispute.

[போட்டி + வழக்கு]

போட்டுக் கொடு—த்தல் *Pōṭṭu-k-koḍu-,* செ.குன்றாவி. (v.t.) **1.** கூடச் சேர்த்தளித்தல் (இ.வ.); to add, supplement. **2.** பிறனுக்காகச் செய்தல்; to be for another, as a sum. **3.** அடித்தல்(வின்); to slap, cuff **4.** கோள்மூட்டுதல்; to tell tales. 'எழுத்தரை ஏவலன் தலைமையாசிரியரிடம் போட்டுக் கொடுத்தான்'

[போட்டு + கொடு—,]

போட்டுக்கொள்(ளு)—தல் *Pōṭṭu-k-koḷ-,* செ.குன்றாவி. (v.t.) **1.** பூணுதல்(வின்); to wear. **2.** ஏற்றுக் கொள்ளுதல்(கொ.வ.); to take upon oneself.

[போட்டு + கொள்—,]

போட்டுப்பொல்லாங்கு *Pōṭṭu-p-pollāṅgu,* பெ. (n.) **1.** குற்றம்(யாழ்.அக); fault. **2.** வசை; abuse.

[போட்டு + பொல்லாங்கு]

போட்டுமாறு-தல் *Pōṭṭu-māṟu,* செ.குன்றா.வி. (v.t.) **1.** குழப்புதல்; to confuse, to mix up. **2.** உழப்பிப் பேசுதல்; to equivocate.

[போட்டு + மாறு -,]

போட்டுவிடு-தல் *Pōṭṭu-viḍu-,* செ.குன்றா.வி. (v.t.) **1.** நழுவவிடுதல்; to drop. **2.** எறிதல்; to cast away. **3.** இழத்தல்; to lose **4.** கொன்று கைவிடுதல்; to leave, abandon, as an elephant, after killing its enemy. **5.** மேற்போதல்; to surpass, to ovevrcome

[போட்டு + விடு-,]

போட்டுவை-த்தல் *Pōṭṭu-vai-,* செ.குன்றா.வி. (v.t.) **1.** சேமித்துவைத்தல்; to lay up **2.** காலந் தாழ்த்துதல்; to delay. கடிதத்திற்கு மறுமொழி எழுதாமல் போட்டு வைத்திருக்கிறான்.

[போட்டு + வை]

போடகம் *Pōḍagam,* பெ. (n.) **1.** புண்(வின்); boil, tumour. **2.** அம்மைக் கொப்புளம் (சங்.அக); pock in small pox. **3.** கொப்புளிப்பான்;(சங்.அக) measles. **4.** அம்மை; small pox.

[போடு → போடகம்]

போடம்[2] *Pōḍam,* பெ. (n.) **1.** தகர்க்கை(சேதுபு. வேதா. 34, கீழ்க்குறிப்பு); slapping. **2.** சொல்லுக்கு அடிப்படையாய் வரும் பொருளை உணர்த்தவல்ல இசை(பி. வி. 18); eternal and imperceptible element of sounds and words and the real vehicle of the idea which flashes on the mind when a sound is uttered.

[போடு → போடம்]

போடி[1] *Pōḍi,* பெ. (n.) *சம்புநாவல்* (மூ.அ) பார்க்க; see *sambunāval.*

போடி[2] *Pōḍi,* பெ. (n.) *போட்டி,*1 (C.G.) பார்க்க; see *pōṭṭi.*

[போட்டி → போடி]

போடி[3] *Pōṭi,* பெ. (n.) *போடியார்*(யாழ்ப்.) பார்க்க; see *pōḍiyar.*

[போடு → போடி]

'இ' வினைமுதல் ஈறு.

போடியார் *Pōḍiyār,* பெ. (n.) நிலக்கிழார்; landed proprietor.

[பாடி → போடி → போடியார்]

போடு[1]-தல் *Pōtu,* செ.குன்றா.வி. (v.t.) **1.** எறிதல்; to cast down, throw a short. distance, to cast away. *'பூத்த கடுக்கையைச் சிறிதும் போடா'* (இரகு. ஆற்று. 19) **2.** இடுதல்; to put, set in a position, lay. *'புல்லாயினு மொருபச்சிலை யாயினும் போட்டிறைஞ்சி'* (தாயு. பாயப்புலி. 31) **3.** தாழ்முதலியன இடுதல்; to fasten, as a bott. *'கதவு போட்டாயிற்றா?'* **4.** பூணுதல்; to put on, as ornaments. *'வயிரமாலை பொலியப் போட்டு'* (இரகு. இலவண. 40) **5.** ஈனுதல்; to bring forth, as animals, to put forth, yield, as fruit-tree. *'வாழை குலை போட்டது'* **6.** அச்சிட்டு வெளிப் படுத்துதல்; to bring out, to publish. *'புத்தகம் போட்டான்'* **7.** கணக்குச் செய்தல்; to work, as a sum. **8.** வரைதல்; to draw, as a figure. **9.** பரிமாறுதல்; to serve, to stamp, to teat, as a drum. *'செருப்பா லொருவன் போடானோ'* (தனிப்பா. 1, 41, 80) **10.** அடித்தல்; to strike, to stamp. **11.** விதைத்தல்; to sow,

plant, 12. பயன்படுத்தல்; to use, as totacco. *'புகையிலை போடுகிறவன்'* 13. கள்முதலியன குடித்தல்; to drink, as toddy. "அந்தத் தடியன் போட்டுக்கொண்டு வந்து வம்பு வளர்க்கிறான்." 14. விடுத்தல்; to lose, to drop *'வீரமுங் களத்தே போட்டு'* (கம்பரா. கும்பக. 1) 15. பணமுதலியன கட்டுதல்; to pay, invest. *'பணம் போட்டு வாங்கினான்'* 16. பிரித்து இடுதல்; to cast, as lots, to allot. *'சீட்டுப் போடு'* செ.கு.வி. (v.i.) 1. உண்டாதல்; to become, form, (w). 2. ஒரு துணை வினை; anauxiliary verb. *'அவன் செய்து போட்டான்'*

[போ → போடு]

போடு[2] *Pōtu,* பெ. (n.) 1. எடுப்பாயுள்ளது; anything striking or impressive as a speech. *'அவன் ஒரு போடு போட்டான், எல்லாரும் ஒடுங்கினார்கள்'* 2. நற்பேறு; luck.

[போ → போடு]

போடு[3] *Pōtu,* பெ. (n.) மொட்டை; taldness, shaven condition.

[மொட்டைபோடு → போடு]

போடு[4] *Pōtu,* பெ. (n.) 1. பொந்து; hole, opening, cleft, *'வயல் வரப்பில் போடு பாய்ந்திருப்பதால் பாய்ச்சின நீர் நிற்பதில்லை'* 2. கோட்டையடுப்பு பார்க்க.

[புல் பொல் → பொள் → பொத்து பொட்டு → போடு]

போடு காடு *Pōtu-kātu,* பெ. (n.) மலைச் சார்வில் புன்செய் வேளாண்மை செய்யக் கூடிய நிலம்; land fit for raising dry crops on the hills (w)

[போடு + காடு]

போடுகால் *Pōtu-kāl,* பெ. (n.) தரிசுநிலத்தை முதல் முறையாக உழுது பயிரிடுகை; first cultivation in waste land.

[போடு + கால்]

போடுகால் நிலம் *Pōtukāl-nilam,* பெ. (n.) சிலகாலங்களில் மட்டும் பயிர் செய்யப்படும் நிலம்; land cultivated off and on and not annually.

[போடுகால் + நிலம்]

போடுகால் பாத்தியம் *Pōtukāl-pāttiyaam,* பெ. (n.) வெற்று நிலத்தை உழுது பயிர் செய்வதால் குடியானவனுக்கு நிலத்திலுண்டாம் உரிமை; customary right accruing to a farmer in an uncultivated waste brought by him under cultivation.

[போடுகால் + பாத்தியம்]

போடுகை *Pōtukai,* பெ. (n.) கப்பலோரத்துள்ள கைப்பிடி; bulwark.

[போடு → போடுகை]

போடுதடி *Pōtu-tati,* பெ. (n.) பயனற்றவன்; (எறிந்த தடி) lit, a stick thrown away, useless person. (w)

[போடு + தடி]

போடுதை *Pōtutai,* பெ. (n.) சுவரைக் காக்கும் மேற்கட்டு; coping on a wall

[போடு → போடுகை → போடுதை]

போடு பாய்-தல் *Pōtu-pāy,* செ.கு.வி. (v.i.) வயல் வரப்பில் வெடிப்புண்டாதல்; to have defts in ridges.

[போடு + பாய்]

போடுமண் *Pōtu-man,* பெ. (n.) புதிதாகக் கொணர்ந்து கொட்டிய மண்; loose earth freshly thrown.

[போடு + மண்]

போடுவான் *Pōtuvān,* பெ. (n.) தோசை முதலிய பணியாரத்தில் சேர்க்கும் உளுத்தமா; mashed black gram used in preparing rice-cajes.

[போடு → போடுவான்]

போத்தா[1]–தல்(போத்தருதல்) *pōttā,* செ.குன்றா.வி. (v.t.) **1.** போய்க்கொண்டு வருதல்; to go and bring, to get, fetch. *'பரதவர் போத்தந்த பன்மீன்'* (தொல்.பொ.114, உரை). **2.** உரிய சொல்லை வருவித்துரைத்தல்; to fill up, as an ellipsis in a sentence. **3.** கொடுத்தனுப்புதல்; to send by messenger. "அமரர்கள் போத்தந்தார்" (திவ்.பெரியாழ். 1,3,4) **4.** புறப்படவிடுதல்; to send out, to permit to go out. *'உன்னை....போத்தந்த நுமர்'* (கலித்,58,10).

போத்தா[2]–தல் *pōttā-,* செ.கு.வி. **1.** போதலைச் செய்தல்; to go, proceed. *'நல்வாயிற் போத்தந்த பொழுதினான்',* கலித்.84,5.) **2.** வெளிவருதல்; to get out, come out. *'போத்தந்து தாயர் தெருவிற் றவிர்ப்ப'* (கலித்.84,14)

[போ + தா → போத்தா–தல்]

போத்தி *pōtti,* பெ. (n.) **1.** பாட்டன்; grand father **2.** மலையாளக் கோயில் பூசாரி; brahman temple.priest in Malabar.

[போற்றி → போத்தி]

போத்திரி *pōttiri,* பெ. (n.) பன்றி(சூடா.); hog, pig.

[போத்தி → போத்திரி]



போத்து[1] *pōttu,* பெ. (n.) **1.** பெற்றம், எருமை, புலி, மரை, புல்வாய் முதலிய விலங்கேற்றின் பொது(தொல்.பொருள்.597); male of animals, especialy, cattle, tigers, deer. **2.** மயில் எழால் என்பவற்றின் ஆண்;(தொல்.பொ.598) male of peafowl, herons and some other birds. **3.** முதலை, சுறாப்போன்ற நீர் வாழினத்து ஆண்; male of aguatic animals, as crocodile, etc. (தொல்.பொ.580) **4.** ஓரறிவுயிரினிளமை. (தொல்.பொ.580) sapling **5.** புதுக்கிளை; tender branch or shoot. of a tree. மரம் போத்து விட்டிருக்கிறது. **6.** செம்போத்து(சங்.அக.) பார்க்க; sem pottu crow-pheasant.

[பொத்து → போத்து]

போத்து[2] *pōttu,* பெ. (n.) **1.** பொந்து; hole, hollow. **2.** விலங்கு துயிலிடம்; lair of a beast. **3.** மனக்குற்றம்; vice, fault, as hollowness of mind. *'போத்தறார் புல்லறிவினார்'* (நாலடி,351)

[பொத்து → போத்து]

போத்துக்கால் *pōttu-k-kāl,* பெ. (n.) காம்பு;(தொல்.பொ.579,உரை) sugar-cane.

[போத்து + கால்]

போத்துராசா *pōttu-rāšā,* பெ. (n.) சோம்பேறி; indolent person, *'தடிப்போத்துராசா'*.

[போத்து + இராசா]

[த. அரசன் Skt. rajā த. இராசா]

போத்துவெடி–த்தல் *pōttu-vedi,* செ.கு.வி (v.i.) மரக்கிளை தோன்றுதல்(வின்); to sprout, as saplings.

[போத்து + வெடி –,]



போத *pōda,* கு.வி.எ. (adv.) 1. போதுமானபடி; sufficiently. *'போதக்கொடுத்தான்'* 2. செவ்வையாக; well, rightly. *'போதத் தன்செவித் தொளையிரு கைகளாற் பொத்தி'* (கம்பரா. இரணி.22.) 3. விரைவாக; speedily. *'உய்ய வேண்டிலெழுபோத நெஞ்சே'* (தேவா.640,8)

[போது → போத]

போதக்கட்டை *pōda-k-kaṭṭai,* பெ. (n.) *போதிக்கட்டை* பார்க்க; see *podikkaṭṭai.*

[போதி + கட்டை → போதக்கட்டை]

போதகம்[1] *pōdagam,* பெ. (n.) 1. இளமை; (பிங்.) youthfulness, infancy. 2. யானைக் கன்று;(பிங்.) elephant calf. "வேழப்போதக மன்னவன் தாலோ" (திவ்.பெருமாள்,7,1) 3. யானை; elephant. *'போதகமொன்று கன்றி'* (கம்பரா. விபீடண.113). 4. விலங்கின் பிள்ளை (சூடா); youth of animals 5. போத்து 1,4. (பிங்.). பார்க்க

போதகம்[2] *pōdagam,* பெ. (n.) *பசளை*[3](மலை) பார்க்க; see *pašalai*[3]

போதகம்[3] *pōtakam,* பெ. (n.) அப்பவகை;(பிங்.) a kind of sweetmeat.

[பொருத்து → பொத்து → போதகம்]

போதகம்[5] *pōdagam,* பெ. (n.) எட்டிமரம்(மலை.); strychnine tree.

போதந்து *pōdandu,* வி.எ. (part) ஒரு சொல் விழுக்காடு; an expletive. அது விலக்குப் பட்டது, *'ஈண்டுப் போதந்து'* (தொல்.சொல், 422, இளம்பூ.)

[போதா → போதந்து]

போதப்புறா *pōdā-p-puṟā,* பெ. (n.) புறாவகை(M.M); imperial pigeon.



போதம் *pōdam,* பெ. (n.) 1. மரக்கலம்(திவா); ship, boat. *'போதங்கொ ணெடுந்தனிப் பொருவில் கூம்பொடு'* (கம்பரா.பள்ளிபடை.68)

2. 2ஆம் விண்மீன் (பிங்.); the second naksatra, 3. போதகம்1, 2 (அக.நி) பார்க்க. 4. மனைக்கட்டு (யாழ்.அக); house-site.



போதர *pōdara,* கு.வி.எ (adv.) அதிகமாக; abundantly, plentiful. *'போதரக் கனவிற் கண்டு'* (திவ்.திருக்குறுந்,4)

போதரவு[1] *pōdaravu,* பெ. (n.) 1. போகை; passing, going. *'புகுவதாவதும் போதர வில்லதும்'* (திருவாச.5,36) 2. செலுத்துகை; sending despatching 3. கொண்டு வருகை(வின்.); bringing.

[போது → போதரவு]

போதரவு[2] *pōdaravu,* பெ. (n.) 1. நயச்சொல்; respectfulness of language, blandishment. *'போதரவான சொல்'* 2. நல்லுதவி; civility, urbanity. 3. பொய்ப்புகழ்ச்சி; adulation, flattery. 4. பேணுகை; using anything with care.

[போது → போதரவு]

போதலிப்பு *pōdalippu,* பெ. (n.) *போதரவு*[2] (யாழ்ப்.) பார்க்க; see *podaravu*[2]

[போது → போதலிப்பு]

போதலிமை *pōdalimai,* பெ. (n.) *போதரவு*[2] (யாழ்.அக.) பார்க்க; see *podaravu*[2]

[போது → போதலிமை]

போதவாகன் *pōda-vāgaṉ,* பெ. (n.) தோணியோட்டுபவன்(சங்.அக.); boatman.

போதா[1]**-தல்(போதருதல்)** *pōdā,* செ.கு.வி. (v.i.) 1. செல்லுதல்; to go, pass. *'புறங்கடை போதரவிட்ட நுமரும்'* (கலித்.56). 2. திரும்புதல்; to return. 'போதரும்போ தச்சம் (நாலடி,83) 3. வருதல்; to come *'போதர் கண்டாயிங்கே போதர்கண்டாய்'* (திவ். பெரியாழ்.2,9,6) 4. பெறப்படுதல்; to be inferred. *'ஆண்டிருந்து துய்ப்பரென்பது போதரும்'*. (திருக்கோ.1,உரை)

[போ + தா]

போதா[2]**-தல்** *pōdā,*செ.குன்றா.வி. (v.t.) 1. கொண்டுபோதல்(பிங்.); to carry away. 2. கொண்டுவருதல்(வின்.); to bring (w.) 3. எதிர்கொண்டு போதல்(சூடா); to welcome, receive with courtesy.

[போ + தா]

போதா[2] *pōdā,* பெ. (n.) பெருநாரை (சிலப்.10,117,உரை); cyrus crane.

போதாக்காலம் *pōdā-k-kālam,* பெ. (n.) தீக்காலம்(வின்.); time of misfortune, evil days.

[போது + ஆ + காலம்]
'ஆ' – எ.ம.இ.நி.

போதாக்குறை *pōda-k-kuṟai,* பெ. (n.) *போதாக்குறைச்சல்* பார்க்க; see *pōda-k-kuṟaiccal.*

[போது + ஆ + குறை]

'ஆ' – எ.ம.இ.

போதாக்குறைக்கு *pōta-k-kuraikku,* வி.எ. (adv.) உள்ளவை போதாதென்று; as though not sufficient. *'போதாக்குறைக்குப் பிள்ளையும் பிறந்தது'.*

[போது + ஆ + குறை + கு]

'ஆ' – எ.ம.இ.

போதாக்குறைச்சல் *pōdā-k-kuṟaiccal,* பெ. (n.) அதிகப்படி(வின்.); supplement; addition to make up any deficiency.

[போது + ஆ + குறைச்சல்]

'ஆ' – எ.ம.இ.நி.

போதாதகாலம் *pōdāda-kālam,* பெ. (n.) *போதாக்காலம்* பார்க்க; see *podā-k-kalam.*

[போதாத + காலம்]

போதாமை *pōdāmai,* பெ. (n.) **1.** மனவொப்பின்மை; estrangement between persons. **2.** குறைவு; insufficiency, unfitness. **3.** பற்றாக்குறை; scarcitx.

[போது + ஆ + மை → போதாமை]

'ஆ' எ.ம.இ.நி

'மை' பண்புப்பெயரீறு.

போதி[1] *pōdi,* பெ. (n.) மலை (பிங்).; hill, mountain.



போதி[2] *pōti,* பெ. (n.) போதிகைக்கட்டை பார்க்க; see pōdigai-k-kaṭṭai *'இந்திர நீலக்கல்லுருத்தலை போதியது'* (திருவிளை,திருமண.64)

[போது→ போதி]

போதிகை *pōdigai,* பெ. (n.) போதிகைக் கட்டை பார்க்க. "போதிகைத் தலத்து" (கம்பரா. நகரப்.25)

[போதி → போதிகை]

போதிகைக்கட்டை *pōdigai-k-kaṭṭai,* பெ. (n.) **1.** தூண்மேல் வைக்கும் தாங்குகட்டை; capital of a pillar. **2.** குறுந்தறி;(பிங்). stake.

[போதிகை + கட்டை]

போதிகைத்தூண் *pōdigai-t-tūṉ,* பெ. (n.) குறுந்தூண் (யாழ்.அக.); stout pillar.

[போதிகை + தூண்]



போதிய *Pōdiya,* பெ, எ, (adj.) போதுமான, போதிய அளவு; adeguate, competent, suitable.

[போது → போதிய]

போதியகுடி *Pōdiyakuḍi,* பெ. (n.) பெரு மதிப்பிற்குறிய குடும்பம்(வின்.); respectable family. (w)

[போதிய + குடி]

போதியல் *Pōdiyal,* பெ,(n.) ***போதிகைப் பலகை*** (இ.வ.) பார்க்க; see *pōdigai-p-palagai*

போதியவன் *Pōdiyavān,* பெ. (n.) கண்ணிய வான்(யாழ்.அக); gentlemen, nobleman.

[போது → போதியவன்]

போதினன் *Pōtiṉaṉ,* பெ. (n.) நான்முகன் (தாமரைப் பூவில் இருப்பவன்); Brahama, as seated on the lotus. "திருமாலும் போதினனுந் தேவரும்" (சிவதரு. பாயி. 2)

[போது → போதினன்]

போது¹–தல் *Pōdu,* செ.கு.வி. (v.i.) **1.** போதியதாதல்; to be adequate, to suffice. ''உலகமெலா முரல் போதா தென்றே'' (திருவாச, **9, 6**) **2.** மதிக்கப்படுதல்(வின்.); to be respectable. **3.** தகுதியாதல்; to be competent, fit, suitable.

போது²–தல் *Pōdu-,* செ.கு.வி. (v.i.) **1.** செல்லுதல்; to go, pass. *'போது நான் வினைக்கேடன்'* (திருவாச, 5, 22) **2.** ஒழுகுதல்; to conduct oneself, behave *'அறனை அறிந்து போதுதல்... சான்ற வர்க்கெல்லாம் முறைமை'* (கலித், 139, 2, உரை)

[போ → போது – தல்]

போது³ *Pōdu,* பெ. (n.) **1.** மலரும் பருவத்தரும்பு; flower bud ready to open''காலை பகலெல்லாம் போதாகி'' (குறள்.1227); flower bud ready to open, **2.** மலர் (திவா.) ; flower போதார் கூந்தல்" (பு.வெ.12,இருபாற்.5,கொளு.) **3.** செல்வி (திருவிருத்.76, அரும்.பக்.389); freshness, beauty.

போது⁴ *Pōdu,* பெ. (n.) **1.** பொழுது 1, 2, 3, (சூடா) பார்க்க "போதுஞ் சென்றது குடபால்" (கம்பரா. வனம்புகு. 14)

போது⁵ *Pōdu,*வி.எ. (adv). பொழுதில்; when, while, during the time that. *'ஆட்கொண்ட போதே கொண்டிலையோ'* (திருவாச. 33, 7)

ஒரி.க.போழ்து

[போ → போது]

போதுகட்டுதல் *Pōdu-kaṭṭudal,* பெ. (n.) 1. காலை, மாலைகளில் முகில் சில நாழிகை வரை கதிரவனை மறைத்துக் கொண்டிருக்கை; hiding of the sun by clouds for some time in the morning and the evening. 2. மழைபெய்வதற்கு அறிகுறியாய்க் காரிக் கிழமை (சனிக்கிழமை) மாலையும் அடுத்த நாட்காலையும் முகில் கதிரவனை மறைத்திருக்கை; hiding of the sun by clouds on a saturday evening and the next morning as indicative of heavy rain during the week.

[போது + கட்டுதல்]

போதுகாலம் *Pōdu-kālam,* பெ. (n.) பேறுகாலம்; time of childbirth.

[போது + காலம்]

போது செய்–தல் *Pōdu-šey-,* செ.கு.வி. (v.i.) 1. பேரரும்பாதல்; to be ready to blossom, as a bud. 2. மூடுதல்; to close. *'கண் போது செய்து'*(திவ். இயற். திருவிருத். 93) 3. அலருதல்(வ்யா.) to blossom. (திவ். இயற். திருவிருத். 93) 4. உண்ணுதல்; to eat. "வெண்ணெய் போது செய்தமரிய புனிதர்" (திவ். பெரியதி. 8, 7, 4) 5. குரல் மாறுதல் (ஈடு, 2, 3, 7); to change, as voice on account of phlegm.

[போது + செய்–,]

போதுஞ்சாட்சி *Pōtu-ñ-cāṭci,* பெ. (n.) தகுதியான சாட்சி(வின்.); competent witness.

[போது + S.K.t sāksi. *த. சாட்சி]*

போதுபடுதல் *Pōdu-paḍudal,* பெ. (n.) கதிரவன் மறைவு; sunset.

[போது + படுதல்]

போது போக்கு¹–தல் *Pōdu-pōkku-,* செ.கு.வி. (v.i.) காலங்கழித்தல்; to spend time. *'புறனல ரவனுறப் போது போக்கி'* (கம்பரா. உருக்கா. 14)

[போது + போக்கு–,]

போதுபோக்கு² *Pōdu-pōkku,* பெ. (n.) 1. காலங்கழிக்கை; passing of time. 2. விளையாடி இளைப்பாறுகை; recreation. "போதுபோக்காகச் சில பிரபந்தங்களைப் பண்ணுவிக்கப் பார்த்தோம்." (ஈடு, 7, 9, ப்ர)

[போது + போக்கு]

போதுபோக்கு³ *Pōdu-pōkku,* பெ. (n.) விளையாட்டு; play; past time. "தோளைக் கழித்துத் தலையைச் சரித்துப் போதுபோக்காக நின்று கொன்றபடி" (ஈடு.1,6,7)

[போது + போக்கு]

போதும் போதாதெனல் *Pōdum-pōdāadenal,* பெ. (n.) சிறிது குறைந்ததன் குறிப்பு; expr. of slight deficiency or insufficiency.

[போதும் + போதாது + எனல்]

போது வைகுதல் *Pōdu-vaigudal,* பெ. (n.) காலம் நீட்டிக்கை; being late. "அமுது செய்கைக்குப் போதுவைகிற்று." (ஈடு, 7, 10, 4)

[போது + வைகுதல்]

போதைப்புல் *Pōdai-p-pul,* பெ. (n.) 1. கர்ப்பூரப்புல்(வின்.); lemon-grass. (w) 2. காவட்டம்புல்(சங்.அக); பார்க்க; see *kāvaṭṭampul* citronella grass

[போதை + புல்]

போந்த *Pōnda,* பெ.எ. (adj.) **1.** தகுந்த; fit, suitable, proper, competent. *'போந்த மனிதன்'* (w) **2.** பழகின (வின்.); practised. **3.** தீர்மான மான; final, ultimate. *'உண்டுடுத் தின்பமாவதே போந்தநெறி'* (தாயு, சின்மயா. 5)

[போ → போந்த]

போந்தி *Pōnti,* பெ. (n.) **1.** வீக்கம்(யாழ்.அக); swelling. **2.** *போந்திக்கால்* பார்க்க; see *pōndi-k-kāl.*

தெ. போத

[போ → போந்தி]

போந்திக்கால் *Pōndi-k-kāl,* பெ. (n.) யானைக் கால்(வின்.); elephantiasis. (w.)

தெ.போதஹாலு

[பொந்தி → போந்தி → போந்திக்கால்]

போந்தி= வீக்கம்.தெ.போதாக்காலு.வே.க. (பக்.79.)



போந்தின் கண்ணிக்கோன் *Pōndin-kaṇṇi-k-kōṉ,* பெ. (n.) *போாந்தின்றாரோன்*(பிங்). பார்க்க;

[போந்து→ போந்தின் + கண்ணி + கோன்]

போந்தின்றாரோன் *Pōndinrāron,* பெ. (n.) சேரன்(சூடா.); cēra king, as decked with a garland of palmyra flowers. (பனம்பூமாலை யுடையவன்)

[போந்து → போந்தின் + தாரோன்]

போந்து *Pōndu,* பெ. (n.) **1.** போந்தை பார்க்க; see pōndai *'அவன் பொன் முடிமேற் போந்து கண்டான்'* (பெருந்தொகை. **690**) **2.** பல்லி; lizard.

[பொந்து → போந்து]

போந்தை *Pōntai,* பெ. (n.) **1.** பனை; palmyra palm. "போந்தை வேம்பே யாரென வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்" (தொல். பொ. 60) **2.** இளம்பனை(திவா.); young palmyra. **3.** பனை(அனுட)நாள்; the 17th naksatra.

[போந்து → போந்தை]

போபடி *Pōpaḍi,* பெ. (n.) உருவொற்றுமை, (வின்.); trace

தெ.போபடி

[போல்+படி]

போபடிவிசாரி-த்தல் *Pōpadi-višāri-,* செ.கு.வி. (v.i.) திருட்டைப் பற்றித் துப்பு உசாவுதல்(வின்.); to trace stolen property, to investigate about theft.

[போபடி + விசாரி]
[Skt. bicāri→த. விசாரி.]

போம் *Pōm,* இடை. (part.) ஓர் அசைச் சொல்(சது); an expletive.

[போ → போம்]

போம்பல் *Pōmbal,* பெ. (n.) நீர்க்கடம்பு(மலை.); water cadamba.

[போம் → போம்பல்]

போய்ப்பாடு *Pōy-p-pāḍu,* பெ. (n.) 1. புகழ்; prise. "போய்ப்பாடுடைய நின்தந்தையும்" (திவ். பெரியாழ். 2, 3, 1). 2. பெரிதாயிருக்கை; largeness. *'சங்கங்கள் போய்ப்பாடுடையனவே'* (திவ். திருப்பா. 26)

[போ → போய் + பாடு]

'பாடு' – தொ.பெ.ஈறு.

போய்வ—தல் *Pōy-vā.,* செ.கு.வி. (v.i.) போதல் (கொ.வ.); to go

போயகாலம் *Pōya-kālam,* பெ. (n.) போன காலம் பார்க்க; see poṉakālam.(திவ். திருவாய். 2, 6, 10)

[போ + காலம் → போயகாலம்]

போயி *Pōyi,* பெ. (n.) *போகி³* (வின்.) பார்க்க; see *pōgi³*

[போகி+ போயி]

போயிற்று *Pōyirru,* இடை. (part) ஓர் அசைநிலை(தொல். சொல். 425); an expletive. (தொல். சொல். 425)

[போ → போயிற்று]

போர்¹—த்தல் *Pōr-,* செ.குன்றா.வி. (v.t.) 1. அணிதல்; to wear, put on. ஆரம் போர் திருமார்பை (கம்பரா. இராவணன்வதை. 240) 2. மூடுதல்; to cloak, to hide. *'பெற்றம் புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று'* (குறள். 273) 3. சூழ்தல்; to surround. "விண்ணோ ரெங்கோன் புடையிற் போர்த்தார்." (கந்தபு. சிங்கமு. 457)

[பொரு → போர்த்தல்]

போர்² *Pōr,* பெ. (n.) 1. செறிந்து பொருந்துகை; joining fast together. "திண்போர்க் கதவம்" (மதுரைக். 354) 2. கதிர் வைக்கோற் படப்பு; heap of unthreshed grain, straw. stack. "போரிடை யுறங்கு மன்னம்" (கம்பரா. நாட். 6) 3. 24ஆவது விண்மீன் (பிங்.); the 24th naksatra. 5. குவியல்; accumulation மரப்பொந்து (யாழ்ப்.); hollow of a tree.

[பொரு → போர்]

போர்³ *Pōr,* பெ. (n.) 1. சண்டை; fight, battle, war. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் (குறள், 758) 2. மற்போர்; wrestling. 3. இகல்; rivalry, competition, "வீணைவாட் போர்க்கலாம்" (சீவக. 620)

[பொரு →போர்]

போர்⁴ *Pōr,* பெ. (n.) 1. புகர்நிறம் (போர்க்காளை); towny colour. 2. புள்ளி 'கரும்போர்க்காளை' (நாஞ்.); spot.

[புகர் → போர்]

போர்⁵ *Pōr,* பெ. (n.) பசுவின் சாணம் (யாழ்ப்.); cow-dung.

போர்க்கட்டு—தல் *Pōr-k-kattu,* செகுன்றா.வி. (v.t.) 1. உள்ளுக்குள்ளே சரிப்படுத்துதல்; to adjust settle. 2. மறைத்து அடக்கிக் கொள்ளுதல்; to hide. (யாழ்.அக.)

[போர் + கட்டு – தல்]

போர்க்கடம் *Pōr-k-kaḍam,* பெ. (n.) சண்டை செய்வதாகிய வீரர் கடமை; the duty of a warrior to fight in battle. "போர்க்கடம் பூண்ட பொருவலித் தடக்கையின்" (பெருங். உஞ்சைக். 53, 91)

[போர் + கடம்]

போர்க்கடா *Pōr-k-kaḍā,* பெ. (n.) சண்டைக்காக வளர்க்கப்படும் ஆட்டுக்கடா (கொ.வ.); fighting ram.

[போர் + கடா]



போர்க்கண் *Pōr-k-kaṇ,* பெ. (n.) போர்க்களம், பார்க்க; see pōr-k-kalam. "போர்க்கண் துணிபுனல்" (பரிபா. 6, 29)

[போர் + கண்]

போர்க்கதவு *Pōr-k-katavu,* பெ. (n.) 1. பலகைகளை இணைத்த கதவு; batten door. *'புலிப் பொறிப் போர்க்கதவின்'* (பட்டினப். 40) 2. இரட்டைக் கதவு (சிலப். அரும். அகராதி.); folding doors, as joined.

[போர் + கதவு]

போர்க்கருவி *Pōr-k-karuvi,* பெ. (n.) படைக்கலம்; weapon of war.

[போர் + கருவி]

போர்க்கப்பல் *Pōr-k-kappal,* பெ. (n.) போர்க்கலம்; war-ship.

[போர் + கப்பல்]

போர்க்கவசம் *Pōr-k-kavaśam,* பெ. (n.) போர்த்தற்காப்புக் கருவிகள்; apparatus for defence.

[போர் + கவசம்]

போர்க்களத் தொழிதல் *Pōr-k-kaḷattoḻidal,* பெ. (n.) போரிற் புறங்கொடாது வீரன் பூசற்களரியிலே பட்டதைக்கூறும் புறத்துறை (பு. வெ. 2, 6, தலைப்பு); theme describing a warrior fighting to the last on the battle field without retreating.

[போர்க்களம் + தொழிதல்]

போர்க்களம் *Pōr-k-kaḷam,* பெ. (n.) போரிடு மிடம் (பிங்.); field of battle *'போர்க்களம் பாடும் பொருநன்'* (பொருந. 57, உரை)

[போர் + களம்]

போர்க்களரி *Pōr-k-kaḷari,* பெ. (n.) போர்க்களம் பார்க்க; see por-k-kalam. 'போர்க் களரியிலே விழுந்தான்' (பு. வெ. 2, 6, உரை)

[போர் + களரி]

போர்க்களப்படை *Por-k-kalappatai,* பெ. (n.) போர்ப்படை; army.

[போர் + களம் + படை]

போர்க்களவீரன் *Pōr-k-kalaveran,* பெ. (n.) போர்வீரன் பார்க்க. see porveeran.

[போர் + களம் + வீரன்]

போர்க்காளை *Pōr-k-kāḷai,* பெ. (n.) உடலிற் புள்ளியமைந்த எருது; bullock with sports on the body.

[புகர்→போர் + காளை]

போர்க்குதிரை *Pōr-kutirai,* பெ. (n.) போர்களக் குதிரை; war-horse.

[போர் + குதிரை]

போர்க்குரல் *Pōr-k-kural,* பெ. (n.) *போர்முழக்கம்* பார்க்க; see *pōrmulakkam.*

[போர் + குரல்]

போர்க்குறிப்பு *Pōr-k-kuṟippu,* பெ. (n.) அரிக் கட்டுக்களின் கணக்கு; account of corn stalks cut.

[போர் + குறிப்பு]

போர்க்கெழுவஞ்சி *Pōrkkeḻu-vañji,* பெ. (n.) வஞ்சிமாலை சூடி போருக்குப் புறப்படும் வீரரைப் புகழும் சிற்றிலக்கியவகை(வின்.); panegyric on an army marching to battle, the warriors being decked with wreaths of vañji flowers.

[போர்க்கு+எழு + வஞ்சி]

போர்க்கோலம் *Pōr-k-kōlam,* பெ. (n.) போரணி பூணுகை; military accoutrements, martial costume. ***'போர்க்கோல நீக்கி.... முலையார் மண்ணுறுப்ப வாடி'*** (சீவக. 2352)

[போர் + கோலம்]

போர் கல–த்தல் *Pōr-kala-,* செ.கு.வி. (v.i.) போர்புரிதல்(வின்.); to engage in a battle.

[போர் + கல–த்தல்]

போர்ச்சேவகன் *Pōr-c-cēvagaṉ,* பெ. (n.) படை வீரன்; soldier.

[போர் + S.K.ṭ. sēvaka. த.சேவகன்]

போர்ச்சேவல் *Pōr-c-cēval,* பெ. (n.) போர்ப் பந்தயத்துக்காக வளர்க்கப்படும் சேவல்; game-cock, fighting cock.

[போர் + சேவல்]



போர்ச்சேணை *Pōr-c-cēṉai,* பெ. (n.) *போர்ப் படை* பார்க்க; see *pōr-p-paḍai.*

[போர் + சேனை]

போர்த்தளவாடங்கள் *Por-t-taḷavādaṅgal, Por-t-talavatankal,* பெ. (n.) போர்க் கருவிகள்; military equipments.

[போர் + தளவாடங்கள்]

போர்த்திறன் *Pōr-t-taṉi-p-pūvai,* பெ. (n.) *போர்ச்சயப் பாவை* பார்க்க; see *pōr-caya-p-pāvai.*

[போர் + திறன்]

போர்த்தினவு *Pōr-t-tiran,* பெ. (n.) போரிடும் திறமை; military skill.

[போர் +சேனை]

போர்த்துக்கட்டு—தல் *Pōrttu-k-kattu-*, செ.குன்றாவி. (v.t.) 1. உள்ளுக்குள்ளே சரிப்படுத்துதல்; to adjust, settle. அடக்கிக் கொள்ளுதல்; to hide

[போர்த்து +கட்டு—,]

போர்த்துமூடு—தல் *pōrttu-mūḍu-*, செ.குன்றா.வி. (v.t.) *போர்த்துக்கட்டு* 2 (யாழ்.அக.) பார்க்க; see *pōrttu-k-kaṭṭu*

[போர்த்து + மூடு]

போர்த்தேங்காய் *pōṟ-t-tēṅkāy*, பெ. (n.) பந்தயத்துக்குரிய வலிய தேங்காய்; heard cocount used in game or contest of physical strength.

[போர் + தேங்காய்]

போர்நடிவடிக்கை *pōr-natavati-k-kai*, பெ. (n.) போர்நிலவரம்; state of warfare.

[போர் + நடிவடிக்கை]

போர்நாட்டம் *pōr-nattam*, பெ. (n.) போரிடும் ஆசை; war-disire.

[போர் + நாட்டம்]

போர்நிறம் *pōr-niṟam*, பெ. (n.) போர்ப்பொலிவு; fighting vigour. '*போர்நிறப் புத்தி சேனன்*' (சீவக.789,உரை)

[புகர் → போர் + நிறம்]

போர்நிறுத்தம் *pōr-niruttam*, பெ. (n.) இடைக்காலச் சண்டை நிறுத்தம்; armistice

[போர் + நிறுத்தம்]

போர்ப்படை *pōr-p-patai*, பெ. (n.) போரிடச் செல்லும் படை; force equipped for war.

[போர் + படை]

போர்ப்படைபட்டியல் *por-p-patai-patiyal*, பெ. (n.) போர்ப்படை விளக்கக்குறிப்பு; army list.

[போர் + படை + பட்டியல்]

போர்ப்பறை *pōr-p-paṟai* பெ. (n.) போர் முரசு; war-drum. "போர்ப்பறை முழங்கி யெங்கும்" (சீவக.758)

[போர் + பறை]



போர்ப்பிச்சை *pōr-p-piccai*, பெ. (n.) திருப்பணிக்காகக் களத்தில் தண்டப்படும் பழைய வரிவகை(G.Tn.D.I.313.); a tax collected in ancient times at the time of the harvest from the ryots for repairs to temples.

[போர் + பிச்சை]

Skt. lehiksā → *த.பிச்சை*

போர்ப்பு *pōrppu*, பெ. (n.) 1. *போர்வை* பார்க்க; see *pōrvai* போர்ப்புறு முரசம் (பதிற்றுப்.84,2) 2. நெற்போர்(பிங்.); heap of threshed paddy.

[போர் → போர்ப்பு]

போர்ப்பூ *por-p-pū,* பெ. (n.) போரில் வீரர் அணிந்து கொள்ளும் அடையாளப்பூ; flower for garland used by warriors when going to battle. *'போர்ப்பூவும் தார்ப்பூவும்'* (தொல்.பொ.626,உரை)

[போர் + பூ]

போர்ப்பை *pōrppai,* பெ. (n.) 1. உழவுசாலின் உட்குழிவு; gurrow. 2. களை கொட்டின் அடி (யாழ்.அக.); handle of a small hoe.

[போர் + பை]

போர்ப்பைக்காளை *pōrppai-k-kāḷai,* பெ. (n.) 1. பொலியெருது; breeding bull. 2. உழவுக்குரிய காளை (யாழ்.அக.); plough ox.

[புல் → பொல் → போல் → போர் → போர்ப்பை + காளை]



போர்ப்பையன் *pōrppaiyan,* பெ. (n.) போர்ப்பைக் காளை (யாழ்.அக.) பார்க்க; see *pōrppai-k-kāḷai*

[புல் → பொல் → போல் → போர் → போர்ப்பையன்]

போர்பு *pōrbu,* பெ. (n.) தவசப்போர்; grain heap. குன்றுகண் டன்ன நிலைப்பல் போர்பு (புறநா.353)

[போர் → போர்பு]

போர்போடு—தல் *pōr-pōḍu-,* செ.குன்றா.வி. (v.t.) தவச மணிகளைப் பிரித்தபின் வைக்கோலை மழையிற் கெடாத படி குவித்து மூடுதல் (யாழ்.அக.); to stack hay after threshing.

[போர் + போடு—தல்]

போர்மகள் *pōr-magaḷ,* பெ. (n.) வெற்றித்திருமகள்; goddess of victory. "போர்மகளை ......தழுவியகை பொறாமை கூர." (கம்பரா.இராவணன்வதை.226)

[போர் + மகள்]

போர்மடந்தை *pōr-maḍandai,* பெ. (n.) 1. காளி; Durga, the goddess of war. 2. வெற்றித் திருமகள்;(யாழ்.அக.) the goddess of valour.

[போர் + மடந்தை]

போர்மறவன் *pōr-maṟavan,* பெ. (n.) *போர்வீரன்* பார்க்க; see *pōr-vīran.*

[போர் + மறவன்]

போர்மாந்தம் *pōr-māndam,* பெ. (n.) குழந்தை நோய் வகை;(பாலவா.) a child's disease caused by visceral obstructions.

[பொருமு + மாந்தம்]

போர்முகம் *pōr-mugam,* பெ. (n.) 1. போர்முனை; front, foremost line of battle. *'போர் முகத்தை யறியானைப் புலியே றென்றேன்'.* (தனிப்பா. 1, 275, 16). 2. போர் முனைந்து நிகழுமிடம்; the place where battle rages the most. *'போர் முகந் தன்னினீ புறந்தந் தேகினால்'* (பாரத.நிரைமீட்.70)

[போர் + முகம்]

போர்முரசு *pōr-murašu,* பெ. (n.) *போர்ப் பறை,* பார்க்க; see *pōr-p-paṟai* '*போர் முரசெடி வெழுப்பொங்கி* (பாரத.நான்காம்.3)

[போர் + முரசு]

போர்முழக்கம் *pōr-mulakkam,* பெ. (n.) போர்க்குரல்; war-shout.

[போர் + முழக்கம்]

போர்முள் *pōr-muḷ,* பெ. (n.) சேவலின் முன்னங்கால் முள் (யாழ்.அக.); cock's claw.

[போர் + முள்]

போர்முனை *pōr-muṉai,* பெ. (n.) *போர்முகம்* (யாழ்.அக.) பார்க்க; see *pōrmugam.*

[போர் + முனை]

போர்மூட்டு—தல் *pōr-mūṭṭu,* செ.குன்றா.வி (v.t.) **1.** சண்டை செய்யத்தூண்டுதல்;(யாழ்.அக.) to spur on to guarrel. **2.** கோள்சொல்லிப் பிரித்தல்(இ.வ.); to creat mis-under. standing between.

[போர் + மூட்டு]

போர்மை *pōrmai,* பெ. (n.) இரக்கம் (ருமதீப.608.); mercy, pity.

[ஒருமை→ போர்மை]

போர்வாங்கிவிடு—தல் *pōr-vāṅgi-viḍu,* செ.குன்றா.வி. (v.t.) சூடடிக்கத் தொடங்குதல்; to begin threshing of the grain.

[போர் + வாங்கிவிடு—,]

போர்வீரன் *pōr-vīraṉ,* பெ. (n.) போரிடும் வீரன்; soldier.

[போர் + வீரன்]

போர்வு *pōrvu,* பெ. (n.) *போர்பு* பார்க்க; see porbu. "கயலார் ரை போர்விற் சேக்கும்." (ஐங்குறு.9)

[போர் → போர்வு]

போர்வெறியர் *pōr-veṟiyar,* பெ. (n.) வெற்றுவீரம்பேசுபவர்; warmonger.

[போர் + வெறியர்]

போர்வை *pōrvai,* பெ. (n.) **1.** மூடுகை (பிங்.); covering, wrapping **2.** மேன் மூடுந்துணி(பிங்.); upper garment, cloak, blanket, rug, mantle. "யானையினுரிவைப் போர்வை" (கம்பரா.மிதிலை.150) **3.** தோல்; (பிங்.) skin. **4.** கவசம்; cocet of mail, corslet. '*புலிப்பொறிப் போர்வை நீக்கி* (சீவக.266). **5.** வாள்முதலியவற்றின்உறை (சீவக.266,உரை); sheath, as of sword. **6.** தேர்த்தட்டின் வெளிமறையப் பாவின பலகை; wooden cover of a temple-car. உள்ளரக் கெறிந்த வருக்குறு போர்வை. (சிறுபாண்.256)

தெ.போர்வ

[போர் → போர்வை]

போர்வைச்சீலை *pōrvai-c-cīlai,* பெ. (n.) *போர்வை* 2 பார்க்க; see *pōrvai*

[போர்வை + சீலை]

போர *pōra,* வி.எ. (adv.) மிகவும் (ஈடு,4,7,ப்ர.); entirely, exceedingly.

[போரு → போர]

போரடி[1]–த்தல் *pōr-aḍi-,* செ.குன்றாவி.(v.t.) தலையடிக் கதிர்ப்போரினின்றும் தவசத்தை அடித்தெடுத்தல்; to thresh or beat out grain from straw.

[போர் + அடி–த்தல்]

போரடி[2]–த்தல் *pōr-aḍi-,* செ.கு.வி.(v.i.) தருக்கமிடுதல் (வின்.); to wrangle over.

[போர் + அடி–த்தல்]

போரடி[3] *pōr-aḍi-,* பெ.(n.) 1. தலையடிக் கதிர்ப்போரைக் கடாவிட்டு அடித்து நெல்லைப் பிரிக்கை; threshing. 2. நெற்களம்; threshing-floor. 3. தேங்காய் விளையாட்டு (யாழ்ப்.); playing with cocoanuts.

[போர் → போரடி]

போரப்பொலிய *pōra-p-polia,* கு.வி.எ.(adv.) முழுவதும்; fully, completely. *'இவன் இவனைப் போரப் பொலியச் சொல்லுங்காட்டில்'* (ஈடு,4,7,ப்ர.)

[போர + பொலிய]

போரன் *pōraṉ,* பெ.(n.) வைக்கோல் தட்டை (யாழ்ப்.); paddy silk.

[போர் → போரன்]

போராக்காலம் *pōrā-k-kālam,* பெ.(n.) *போதாக்காலம்* பார்க்க; see *pōdā-k-kālam.*

[போதா → போரா]

போராசை *pōr-āšai,* பெ.(n.) *போர்நாட்டம்* பார்க்க; see *pōr-nāṭṭam.*

[போர் + ஆசை]

போராட்டக்களம் *pōrāṭṭa-k-kaḷam,* பெ.(n.) போரிடுமிடம்; armagedon (or) war field.

[போராட்டம் + களம்]

போராட்டம் *pōrāṭṭam,* பெ.(n.) 1. சண்டையிடுகை; fighting. *"மடந்தையர் சிற்றின்பமோ... பொன்னாட்டும் வந்ததென்றாற் போராட்டமல்லவோ"* (தாயு. எங்குநிறை.10). 2. சண்டை; combat, struggle. 3. போட்டி; competition, rivalry. 4. விடாமுயற்சி; contention, striving earnestly.

[போராடு → போராட்டம்]

போராடு–தல் *pōrāḍu-,* பெ.(n.) 1. பொருதல்; to fight, carry on war. *"பூமியைப் போராடியிரந்தோருந் தம்மதென்பார்"* (தாயு. பாராபர. 228). 2. தொந்தரவு படுதல்; to struggle. 3. பேரம் பேசுதல்; bargain (w.).

[போர் + ஆடு–தல்]

போரார்வம் *pōr-ārvam,* பெ.(n.) போரிடும் எண்ணம்; fighting spirit.

[போர் + ஆர்வம்]

போராற்றல் *pōr-āṟṟal,* பெ.(n.) போரிடும் ஆற்றல்; fighting capacity.

[போர் + ஆற்றல்]

போரான் *pōrāṉ,* பெ.(n.) குதிரைவகை; a kind of horse. *"உயர்கனவட்டம் போரான்"* (திருவாலவா.28,69).

போரி¹ *pōri*, பெ. (n.) பொருவோன்; egual, rival. (w.)

[போர் → போரி]

'இ' வினைமுதல் ஈறு

போரி² *pōri*, பெ. (n.) முருகன் வழிபாட்டு இடமான திருப்போரூர்; tiru-p-pōrūr sccred to god subrahmanya போரிவா ழுறுமா முகனே (திருப்போ.சந்.9,1)

[போரூர் → போரி]

போரிக்கட்டை *pōri-k-kattai*, பெ. (n.) *போதிகைக்கட்டை* பார்க்க; see *pori kattai*.

[போதி → போரி + கட்டை]

போரிகை *pōrikai*, பெ. (n.) *போதிகைக் கட்டை* பார்க்க; see *porikai*.

[போதிகை → போரிகை]

போரிடுதல் *pōritutal*, பெ. (n.) பொருதல்; one engaged in fight.

[போர் + இடுதல்]

போரிலேபோடு–தல் *pōril-ē-pōtu*, செ.குன்றா.வி. (v.t.) பயனற்றதாக்குதல்; to render useless.

[போர் → போரிலே → போடு]

போரிழப்பு *pōr-elappu*, பெ. (n.) போரினால் உண்டாகும் இழப்பு; loss of war.

[போர் + இழப்பு]

போருணர்ச்சி *pōr-unarchi*, பெ. (n.) போரிடும் மனப்பான்மை; fighting spirit.

[போர் + உணர்ச்சி]

போரு¹–தல் *pōru*, செ.கு.வி. (v.i.) **1.** செல்லுதல்; to go on, proceed, to continue. நீர் ஆதரித்துக்கொண்டு போரும் (குருபரம்.170). **2.** மீண்டுவருதல்; to return. **3.** எட்டுதல்; to reach. போரவிடாயெங்கள் பட்டை (திவ்.நாய்ச்.3,7) **4.** பொருள் பெறப்படுதல்; to be understood, as a meaning. '*பிரத்தியகர்த்தவிசயமாயும் போருகையாலே*' (ஈடு,1,1,2).

[போது → போரு]

போரு²–தல் *pōru*, செ.கு.வி. (v.i.) **1.** போதியதாதல்; to be enough, sufficient. சிறு மானிடவரென்று எண்ணுகைக்குக் கூடப் பாற்றம் போராதபடியான நாம், (திவ். திருநெடுந், 21, வ்யா. பக்.198)

[போது → போரு–தல்]

போருதவி *pōr-utavi*, பெ. (n.) போர்வீரனுக்கு உதவிசெய்கை; succour rendered to a warrior. (w).

[போர் + உதவி]

போரூக்கம் *pōr-ukkam*, பெ. (n.) போரிடும் மனஎழுச்சி; fond of fighting.

[போர் + ஊக்கம்]

போரெதிர்–தல் *pōr-etir*, செ.கு.வி. (v.i.) போர்செய்தலை மேற்கொள்ளுதல்; to set out to fight. '*போரெதிந்தற்றா*' (கலித்.89)

[போர் + எதிர்–தல்]

போரேறு *pōr-ēru,* பெ. (n.) **1.** போர் செய்யவல்ல காளை; fighting bull போரேறொன் றுடையானு. மளகைக் கோனும் (திவ். பெரியதி. 2,10) **2.** போர்வீரன்; champion, hero.புட்குழியெம்போரேற்றை (திவ்.இயற்.பெரிய. ம,117) **3.** செவ்வாய் கோள்; the planet mars. (சது.)

[போர் + ஏறு]

போல்¹(லு)–தல் *pōl,* செ.குன்றா.வி. (v.t.) **1.** ஒத்தல்; to resemble, to be like. '*மக்களே போல்வர் கயவர்* (குறள்,1071) **2.** இணை யொத்தல்; to egual, match.

[போ → போல்(லு)–தல்]

போல்² *pōl,* இ.சொல். (Part) **1.** ஓர் உவமவுருபு; a particle of comparison. சமன் செய்து சீர்தூக்குங் கோல்போலமைந்து (குறள்,118) **2.** ஓர்அசைச்சொல்; expletive. (திருக்கோ,222)

[போ → போல்]

போல்² *pōl,* பெ. (n.) **1.** உள்ளீடில்லாதது; hollow object. '*போல்வளை*'. **2.** பதர்; chaff. (w). **3.** பொய்; falsehood. (அரு.நி) **4.** மூங்கில்; bamboo. (மலை)

[புல் → பொல்→ போல்]

தெ. போலு

போல்⁴ *pōl,* பெ. (n.) **1.** வெற்றி; victory, valour. பண்புணரார்மதின்மேல்போலனை (தேவா.381–1.) **2.** படை; neapon. (அரு.நி) **3.** வாள்; sword (அரு.நி.)

[போ → போல்]

போல்கட்டை *pōl-kattai,* பெ. (n.) போல்மரம் பார்க்க. see polmaram.

[போல் + கட்டை]

போல்சாவி *pōl-cāvi,* பெ. (n.) உட்டுளையுள்ள திறவுகோல்; tubularkey.

[போல் + .சாவி]

port. chiavi→ *த.சாவி*

போல்மரம் *pōl-maram,* பெ. (n.) வண்டியின் முன்புறத்துள்ள நீண்ட மரக்கட்டை; wooden shaftfitted to the fore-part of a vehicle.

[போல் + மரம்]



போல்மூங்கில் *pōl-munkil,* பெ. (n.) மூங்கில் வகை; hollow bamboo.

[போல் + மூங்கில்]

போல *pōla,* இ.சொல். (Part) *போல்*1, 2 பார்க்க; see *pol*,1,2. (தொல்.பொ.291)

[போல் → போல]

போலி *pōli,* பெ. (n.) **1.** ஒப்புடையவன் வள்–து; a person or thing that is egual, egui valent. தில்லை போலிதன் காதலனே

(திருக்கோ.303) தாமரை திருவடிகளுக்குப் போலியாயிருக்க. (ஈடு,1,4,ப்ர) 2. ஒப்பு; similarity.உவமப்போலி (தொல்.பொ.300,உரை) 3. சாயல்; imitation, semblance. (w). 4. கள்ளப்பொருள்; anything spurious, bcounterfeit. '*போலிநாணயம்*' 5. வஞ்சகம்; pretence, hypocrisy. 6. கேலி; jest. 7. போலியெழுத்து பார்க்க (நன்.122) 8. இலக்கணப்போலி பார்க்க. (நன்.238) 9. போலிப்பாசம்; sophism. '*பக்கப்போலியு மேதுப் போலியும்*' (மணி.29,145)

[போல் → போலி]

போலிஇரக்கம் *pōli-earkkam,* பெ. (n.) பொய்இரக்கம்; lips sympathy.

[போலி +இரக்கம்]

போலிக்குரல் *pōli-k-kural,* பெ. (n.) மாற்றுக்குரல்; false roar.

[போலி + குரல்]

போலிக்கையொப்பம் *pōli-k-kaiyōppam,* பெ. (n.) பொய்க்கையொப்பம்; forgery signature.

[போலி + கையொப்பம்]

போலிச்சமயம் *pōli-c-camayam,* பெ. (n.) பொய்யான மதம்; false religion.

[போலி + சமயம்]

போலிச்செய்தி *pōli-c-caithi,* பெ. (n.) பொய்ச்செய்தி; false news.

[போலி + செய்தி]

போலிநடிப்பு *pōli-natippu,* பெ. (n.) பாசாங்கு செய்தல்; hypocricy.

[போலி + நடிப்பு]

போலிச்சரக்கு *pōli-c-carakku,* பெ. (n.) 1. உண்மைச் சரக்கைப் போலச் செய்த பண்டம்; imitation goods or commodity, as not genuine. 2. வெளிப்பகட்டுள்ள பொருள்; showy goods, as appearing good.

[போலி + சரக்கு]

போலித்தகவல் *poli-t-talaval,* பெ. (n.) பொய்த்தகவல்; general talk of doultful accuracy.

[போலி + Aral.dakhl. த.தகவல்]

போலித்தனம் *pōli-t-tanam,* பெ. (n.) உண்மையல்லாத வெளித்தோற்றம்; imitation, disguise, show. (யாழ்.அக)

[போலி + தனம்]

போலித்திரை *pōli-t-tirai,* பெ. (n.) பொய்த்திரை; curtain.

[போலி + திரை]

போலித் தோற்றம் *pōli-t-tottam,* பெ. (n.) செயற்கைத் தோற்றம்; false appearance.

[போலி + தோற்றம்]

போலிநடை *poli-natai,* பெ. (n.) போலியான நடத்தை; trick of sly̆le.

[போலி + நடை]

போலிநியாயம் *pōli-niyāyam*, பெ. (n.) 1. பொய்க்காரணம்; false reasoning 2. நியாயம் போல் காணப்படும் நியாயமற்றது; that which seems just bet is really unjust.

[போலி + skt. nyāya. *த.நியாயம்]*

போலிப்பாசம் *poli-p-pācam*, பெ. (n.) பொய்ப் பாசம்; sophism.

[போலி + பாசம்]

போலிப்பேச்சு *Poli-p-pechu*, பெ. (n.) பசப்புப் பேச்சு; hypocritical speech.

[போலி + பேச்சு]

போலிமனிதன் *Pōli-manitan*, பெ. (n.) மக்கட்பண்பற்றவன்; brutish man (w)

[போலி + skt. manu-ja. *த.மனிதன்]*

போலிமை *Pōlimai*, பெ. (n.) **போலி²** பார்க்க. see *poli²* *'போலிமை கிரங்கி யுரைத்த பாசுரத்தாலே'* (திவ். திருவாய். ஈடு. 2.1.2. ப்ர. பண்ணி)

[போலி → போலிமை]

போலிமொழி *Pōli-moli*, பெ. (n.) **இலக்கணப்** *போலி* பார்க்க; see *ilakkana poli* (நன். 238. மயிலை)

[போலி + மொழி]

போலியாள் *Pōli-y-āl*, பெ. (n.) 1. வெளி வேடக்காரன்; dissembler, pretender. (யாழ்.அக) 2. மேல் வாரியாக வேலை செய்பவன்; superficial person. (w.)

[போலி + ஆள்]

போலியிரக்கம் *Pōli-erakkam*, பெ. (n.) பொய்யாக இரக்கம் காட்டுதல்; lip's sympathy.

[போலி + இரக்கம்]

போலியெழுத்து *Pōli-y-eluttu*, பெ. (n.) 1. ஒரெழுத்துக்குப் பகரமாக அவ்வொலியில் அமையும் எழுத்து; syllatle or letter resembling another in sound, as அய் for ஐ, அவ் for ஒள. 2. ஒரெழுத்துக்குப் பகரமாக வரும் எழுத்து; letter substituted for another different in sound, as in சாம்பர் for சாம்பல். (நன்.)

[போலி + எழுத்து]

போலிவாழ்க்கை *Pōli-valkkai*, பெ. (n.) பொய் வாழ்க்கை; false life.

[போலி + வாழ்க்கை]

போலிவீரம் *Pōli-veram*, பெ. (n.) பாசாங்கு வீரம்; lion's skin.

[போலி + வீரம்]

போலிவேடம் *Pōli-vedam*, பெ. (n.) போலி நடிப்பு; hypocricy.

[போலி + வேடம்]

Skt. Vēsa→*த.வேடம்*

போலிவேலை *Pōli-vēlai*, பெ. (n.) கள்ளத்தனமான வேலை; shoddy work; (யாழ்.அக)

[போலி + வேலை]

போலும் *Pōlum,* இ.சொல். (part) ஓர் அசைச் சொல்; an expletive. (நன். 441)

[போல் → போலும்]

போவி–த்தல் *Pōvi,* செ.குன்றா.வி. (v.t.) போக்குதல்; to cause to go, to lead. போலிப்பம் பாழினுடம்பை (நல்வழி, 19).

[போ + போவி–த்தல்]

போவு *Pōvu,* பெ. (n.) போகை; going. *'போவுண்ட தென்னினைய'* (கம்பரா. நாகபாச. 231)

[போ → போவு]

போவி–த்தல் *Pōvuvi,* செ.குன்றா.வி. (v.t.) *போவி* பார்க்க; see *pōvi.* (நன். 137, மயிலை)

[போ → போவு → போவுவி – த்தல்]

போழ்[1]–தல் *Pōl,* செ.கு.வி. (v.i.) 1. பிளவுபடுதல்; to be cleft, split. 2. பிரிவுபடுதல்; to be disunited. (w). செ.குன்றா.வி. (v.t) 1. பிளத்தல்; to split, cleave open. கல்லுடை நெடுநெறி போழ்ந்து சுரனறுப்ப (பதிற்றுப். 19, 2). 2. ஊடுருவிச் செல்லுதல்; to pass through, cross over. கடற்குட்டம்போழ்வர்கலவர் (நான்மணி. 18). 3. அழித்தல்; to dispel, to destroy. *'நீடிருள் போழு நிலைமைத்து'* (சீவக. 2118).

[புல் → பொல் → போழ்]

போழ்[2] *Pōl,* பெ. (n.) 1. பிளவு; cleft. போழ்படக் கிடந்த (கல்லா. முருக்க) 2. துண்டம்; piece. பசுங்காய்ப் போழொடு (பெரும்பாண், 307) 3. தோலால் அமைந்த வார்; leathe strap போழ் தூண்டுசி (புறநா. 82, 4). 4. தகடு; sheet. வெள்ளிப் போழ் விலங்கவைத் தனைய (சீவக. 70)

[புல்→பொல் → போழ்]

போழ்க்கமை *Pōlkkamai,* பெ. (n.) அடைவு கேடு; irregularity, disorder, ill-manners. (திவ். திருமாலை, 33, வ்யா, 110)

[போழ்க்கன் → போழ்க்கமை]

போழ்க்கன் *Pōlkkan,* பெ. (n.) அடைவு கேடன்; ill-mannerer person. பொய்யெல்லாம் பொதிந்து கொண்ட போழ்க்கனேன் (திவ். திருமாலை, 33)

[போழ் → போழ்க்கன்]

போழ்து *Pōltu,* பெ. (n.) 1. பொழுது பார்க்க. அழல் மண்டு போழ்தின் (நாலடி. 202) 2. நன்முகூர்த்தம்; auspicious time. *'இப்போழ்து போழ்தென் றதுவாய்ப்பக் கூறிய'* (கலித். 93)

[போது → போழ்து]

போழ்முகம் *Pōl-mukam,* பெ. (n.) பன்றி; hog. (பிங்.)

[போழ் + முகம்]

போழ்முகி *Pōl-muki,* பெ. (n.) போழ்முகம் பார்க்க. (நாமதீப. 220)

[போழ் + முகம் → முகி]

போழ்வாய் *Pōl-vāy,* பெ. (n.) 1. பிளந்த வாய்; open mouth. போழ்வாய வன்றிலும் (திவ். இலற். திருவிருத், 87). 2. பொக்கை வாய்; tooth less mouth. போழ் வாய்ச்சி கண்டுடம்பு பூரித்தாள் (விறலிவிடு. 195)

[போழ் + வாய்]

போழ்வு *Pōlvu,* பெ. (n.) பிளவு; cleft, fissure.

[போழ் → போழ்வு]

போழ்காலா *Pōla-kāla,* பெ. (n.) பளபளத்த பச்சை நிறமுள்ளதும் ஆறடிநீளம் வளர்வதுமான கடல் மீன்வகை; reseball, sea-fish, silvery green, attaining six feet and more in length. polynemus tetradactylus.

[போழ் → போழகாலா]



போழப்பெட்டி *Pōla-p-petti,* பெ. (n.) 1. வண்ணங் கொடுத்த பனையோலைகளைக் கொண்டு பலவடிவமாக முடையப்படும் கூடை; palmyra basket of fancy shapes, cloured attractively. 2. திருமணத்தின் போது மாப்பிள்ளை வீட்டார் மணமகள் வீட்டிற்குத் தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு முதலியன கொண்டு போகும் சாயவட்டி; lacguer plate containing cocoanuts, aarecanuts, betels and plantains carried to the bride's house by the bride-groom's party in a marriage.

[பிழா → பெட்டி → போழப்பெட்டி]

போழம் *Pōlam,* பெ. (n.) மாறுபடுஞ் சொல்; inconsistent word. *'போழம் பலபேசி'* (தேவா. 1080, 11)

[போல் → போழ் → போழம்]

போளம் *Pōlam,* பெ. (n.) நறுமணப் பண்டவகை; myrrh, aloes, gum-myrrh.

போளம்[2] *Pōlam,* பெ. (n.) ஒருவகைத் நிலைத்திணை; a plant. (மலை)

போளி *Pōli,* பெ. (n.) மூடன்; simpleton.

போற்றரவு *Pōṟṟaarvu,* பெ. (n.) பேணுகை; due regard, civility, (w.)

[போற்று → போற்றரவு]

போற்றலர் *Pōṟṟalar,* பெ. (n.) *போற்றார்* பார்க்க; see *porrār.*

[போற்று + அல் + அர்]
'அல்' எ. ம. இ. நி.

போற்றன் *pōṟṟan,* பெ. (n.) பாட்டன்; grand-father (நாமதீப. 189)

[போற்று + அன் → போற்றன்]

போற்றார் *Pōṟṟār,* பெ. (n.) பகைவர்; foes, enemies. *'போற்றாப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்'* (புறநா. 2)

[போற்று + ஆ + அர்]
'அல்' எ. ம. இ. நி.

போற்றி *Pōṟṟi,* பெ. (n.) 1. புகழ்மொழி; praisse, applause, commendation (w) 2. கோயிற் பூசை செய்யும் மலையாள நாட்டுப் பூசாரி; brahman temple-priest of malabar. (w). 3. போத்தி[1] பார்க்க. செ.கு.வி (v.i) 1. வழிபடு சொல் வகை; explamation of praise. *'பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி'* (சிலப், 13,92)

[போற்று → போற்றி]

போற்றி செய் –தல் *Pōrri-cey,* செ.குன்றா.வி. (v.t.) வழிபடுதல்; to praise, worship, adore. பரமனை...போற்றி செய்வேனே. (திருமந். 3.)

[போற்றி + செய்தல்]

போற்றிசை–த்தல் *Pōṟṟicai,* செ.குன்றா.வி. (v.t.) போற்றிசெய் பார்க்க. *'புறந்தருவார் போற்றிசைப்ப'* (பெருயபு. மானக்கஞ்சாற, 12)

[போற்று → போற்றிசை – த்தல்]

போற்றி சொல்(லு)–தல் *Pōrri-col,* செ.குன்றா.வி. (v.t.) *போற்றிசெய்* பார்க்க; see *porri-cey* (w).

[போற்றி + சொல்(லு)–தல்]

போற்றிப்பஃறொடை *Pōrri-p-pakrotai,* பெ. (n.) மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள் ஒன்றும் உமாபதிசிவம் இயற்றியதுமான சிவனியக் கொண்முடிபு நூல்; a text-book of the siva siddhanta philosophy by umāpati-civvācāriyar, one of 14 mey-kanta-cāttiram. q.v.

[போற்றி + பஃறொடை]

போற்றி பண்ணு–தல் *Pōṟṟi-paṉṉu,* செ.குன்றா.வி. (v.t) *போற்றிசெய்* பார்க்க; see *porri-cey.* (w).

[போற்றி + பண்ணு–தல்]

போற்றிப் பேணுதல் *Pōtri-penutal,* பெ.(n.) சீராட்டி வளர்த்தல்; cherishment.

[போற்றி + பேணுதல்]

போற்றிமை *Pōṟṟimai,* பெ. (n.) வணக்கம்; honour, reverence. (w).

[போற்றி → போற்றிமை]

போற்றியாதல் *Pōṟṟi-y-ātal,* பெ. (n.) இடுக்குகை; grasping or securing closely. (நாமதீப. 757.)

[பொத்து → பொற்று → பொற்றி போற்றி + ஆதல்]

போற்றீடு *Pōṟṟitu,* பெ. (n.) பாதுகாவல் வகை; a system of watching. *'போற்றீடு முதலிய பாதுகாவலும்'* (தொல். பொ. 171, உரை)

[போற்று + இடு → ஈடு]

போற்று¹–தல் *Pōṟṟu,* செ.குன்றா.வி. (v.t.) 1. வழிபடுதல்; to praise, applaud. (பிங்.) போற்று மடியா ருண்ணின்று நகுவேன் (திருவாச. 5, 60) 2. வணங்குதல்; toworhsip(பிங்.) 3. பாதுகாத்தல்; to protect, keep with great care. போற்றினரியவை போற்றல். (குறள், 693) 4. வளர்த்தல்; to noursih (w.) 5. தீயவை தடுத்துக்காத்தல்; to guard against. புறஞ்சொற் போற்றுமின் (சிலப். 30, 188) 6. கடை பிடித்தல்; to adhere, hold fast to. புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் 7. விருந்தோம்பல்; to entertain, to treat with regard. *'எம்மைப் போற்றவே'* (கம்பரா. அரசியல். 40) 8. விரும்புதல்; to desire. *'போற்றிக் கேண்மதி'* (பொருந. 60) 9. கருதுதல்; to conzider. பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின் (குறள், 537) 10. மனத்துக் கொள்ளுதல்; to under stand, to pay attention to. *'கொண்டானர் நிரை போற்றெனக் கூறினான்'*

(சீவக. 430). 11. கூட்டுதல்; to gather to gether. (பிங்).

[புல் → புகல் → புகற்று → போற்று]

போற்று² *Pōṟṟu,* பெ. (n.) 1. காப்பு; protection (சங்.அக). 2. பாராட்டி வழிபடு; praise, invocation. 3. புகழ்தல்; very high commendation. (யாழ்.அக.)

[புகல் → புகற்று → போற்று]

போற்றுநர் *Pōṟṟunar,* பெ. (n.) 1. சுற்றத்தார்; relatives, kinsmen. போற்றா ருயிரினும் போற்றுந ருயிரினும் (பரிபா. 4, 52) 2. ஒன்றுணர்வார்; those who understand. வேற்றுமை யின்றது போற்றுநர்ப் பெறினே (பரிபா. 4, 55)

[போற்று + போற்றுநர்]

போறை *Pōrai,* பெ. (n.) 1. பொந்து; hole, hollow in a tree. 2. கிணறு முதலியவற்றின் வங்கு; cavity in the side of a well. (w.)

[புரை→போரை → போறை]

போன் *Pōn,* பெ. (n.) 1. பொறி; trap (ஈடு, 2, 8. 4, ஜி) 2. மலைக் குகை; cave running into the side of a hill. 3. உலைக்கும் துருத்திக்கும் இடையில் சாய்வாகச் செல்லும் அடுப்புப் பாகம்; sloping cavity between the bellows and the over in a pōn-atuupu.

[புல்→போல் → போன்]

பௌ *Pau,* தமிழ் நெடுங்கணக்கில் 'ப்' என்ற என்ற மெய்யெழுத்தும் 'ஔ' என்ற உயிரெழுத்தும் சேர்ந்து உண்டான உயிர் மெய்யெழுத்து; the compound of ப் and ஔ. (செ.அக).

[ப் + ஔ → பௌ]

பௌரி *Pauri,* பெ. (n.) பெரும் பண் வகை; a musical mode, one of perum. pan, q.v.

பௌலுருவி *Pauluruvi,* பெ. (n.) மரஞ் செடிகளில் ஒட்டி வளரும் பூடுவகை; honey suckle mistletoe. ***"கீரைக்குப் புல்லுருவி கீழே முளைத்தாற் போல்"*** (இராமநா. அயோத். 20)

[புல்லுருவி → பௌலுருவி]

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ஏழாம் மடலம் - முதல் பாகம்

ம - மா

Vol. VII - Part - I

து.இராசேந்திரன் இ.ஆ.ப

அரசு செயலாளர்

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட

இயக்கக வெளியீடு

2007

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

ஏழாம் மடலம் - முதல் பாகம்

(ம, மா)

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

VOL. VII - PART I

து. இராசேந்திரன், இ.ஆ.ப.
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும்
செய்தித் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு

2007

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 19

முதற் பதிப்பு : 2007

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. VII, Part - I

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு
Government of Tamilnadu

விலை : உருபா 400/–

குறியீட்டெண் : Colon No. P.J1-J, 314"K.M4

வெளியிட்டோர் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

அச்சீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை 600 113.

நூல் கிடைக்குமிடம் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை – 600 113.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

VOL. VII- PART I

ஏழாம் மடலம் - முதல் பாகம்

(ம, மா)

பதிப்புக் குழு

து. இராசேந்திரன், இ.ஆ.ப.

அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும்

செய்தித் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

கூர்ந்தாய்வாளர்

திரு.மா.பூங்குன்றன்

தொகுப்பாளர்கள்

திரு.முத்து.பிச்சை

முனைவர் மு.கண்ணன் (பகுதிப் பொறுப்பாளர்)

முனைவர் பா.வெற்றிச்செல்வன்

முனைவர் ச.செந்திலாண்டவன்

முனைவர் இரா.கு.ஆல்துரை

திரு.கா.இளமுருகு

திரு.ச.கி.கணேசன் (ஓவியர்)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 20.4.2007

அணிந்துரை

அகரமுதலி திட்டத்தின் ஏழு மற்றும் எட்டாம் மடலங்கள் இதழ்களை விரிப்பது கண்டு என் இதயம் பெருமிதம் எய்துகிறது. ஒவ்வொரு மொழியிலும் அதன் சொற்களுக்கு வேர் மூலம் காண முற்படும்போது, பெரும்பாலான சொற்களின் வேர்மூலங்கள் அடுத்த மொழிகளில் சென்று நிற்கும். ஆனால், தமிழில் உள்ள சொற்களின் மூலங்கள் அனைத்தும் தமிழிலேயே அமைந்துள்ளன. இப்போது நடைமுறையில் வழங்குகிற தமிழ்ச் சொற்களும், உருவாகி வருகின்ற கலைச் சொற்களும், தொழில்நுட்பச் சொற்களும் ஏற்கனவே வழங்கிய வேர் மூலங்களிலிருந்து விரிந்தும் பெருகியும் வந்தனவும் வருவனவும் ஆகும்.

அறிவியல் வளர்ச்சி மிகுந்துள்ள இந்நாளில், செய்தித் தொடர்பாலும் தொழில் நுட்ப வளர்ச்சியாலும் உலகம் சுருங்கிவிட்ட நிலையில், ஒரு மொழியில் அண்டையயல் மொழிச் சொற்களெல்லாம் கலந்து விடுவது இயல்பு. இத்தகைய சூழ்நிலையிலும் தமிழ் தனித்தியங்க வல்லதாக நெடுங்காலமாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. இதைத்தான் பாவேந்தர் பாரதிதாசனார் 'தனித்தியங்கும் தன்மை தமிழினுக்கு உண்டு; தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு' என்று ஆணித்தரமாகப் பாடி வைத்தார்.

அவ்வாறு, தமிழ், தான் தனித்தியங்குவது மட்டுமல்லாமல், பிற மொழிகளுக்கும் சொற்களை வாரி வழங்கிக் கொண்டுள்ளது. தமிழகத்திற்கு அப்பால் தனித்தனியே பிரிந்து வழங்கிவரும் திராவிட மொழிகளுக்கெல்லாம் தமிழ்மொழி வேர் மூலங்களை வழங்கியுள்ளதால், அவற்றின் அடிப்படையிலேயே அம்மொழிகளில் சொற்கள் பெருகியுள்ளமையைக் காண்கிறோம். அதனாலேயே, 'தமிழ் திரவிடத்திற்குத் தாய்' என்று தேவநேயப் பாவாணர் பறை சாற்றினார்.

இன்னும் பல மொழிகளிலுமுள்ள சொற்களின் வேர் மூலங்களும் தமிழிலேயே இருப்பதைக் காண நேர்கிறது. இது மொழியியல் உலகின் ஆய்வுப் போக்கைப் பல திருப்பங்களுக்கு உள்ளடக்குகின்றது. நெடுங்காலமாக வழக்கத்தில் இருப்பதும், தனித்தியங்க வல்லதும், பிறமொழிகளுக்குச் சொற்களை வழங்கவல்லதுமான மொழியே 'செம்மொழி' எனச் செம்மொழி இலக்கணம் வரையறுக்கப்படுகின்றது. தமிழின் இலக்கண இலக்கிய நூல்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு மறைக்கப்பட்டிருந்த காலமான கி.பி. 1857 அளவில் தமிழகம் வந்திருந்த கால்டுவெல் பெருமகனார் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் ஓர் ஒப்புமையைக் கண்டறிந்து, "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" (The comparative grammar of Dravidian Languages) என்ற நூலை வெளியிட்டார். அதன் வழி அவர் தன் ஆராய்ச்சியில் கண்ட முடிவுதான், "தமிழ் ஒரு செம்மொழி" என்பதாகும்.

அதன்பின், ஆங்கில அறிஞர்களான, "மெக்ளின்" போன்றவர்கள் தமிழ்மொழியில் உள்ள பதிவுகளையும், தமிழர்களின் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றையும் அறிவியல், வானியல் போன்றவற்றில் அவர்கள் பெற்றிருந்த அறிவாற்றலையும் ஆராய முற்பட்டனர். அவற்றின்வழி அந்த அறிஞர் பெருமக்கள் எல்லாம், 'தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழி' (Primary Classical) என்று வழிமொழிந்து சென்றனர்.

இவற்றின் தொடர்ச்சியாகத் தமிழை ஒரு செம்மொழி என அரசே அறிவிக்க வேண்டுமென்று பரிதிமாற் கலைஞர் தன் கோரிக்கையை முதன்முதலில் அரசின் முன்வைத்து வலியுறுத்தினார்.

ஆனால், இதை முழுவதுமாக அறிவியல் வழியாக மொழியியலில் நிறுவுவதற்குச் சொற்களுக்கு உரிய வேர் மூலம் காணும் சொற்பிறப்பியல் பணியே துணை நிற்கும் என்று, தன் வாழ்நாளையே சொல்லாய்வுக்கென ஒப்புவித்துக் கொண்டவர் 'மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்'. இத்தகைய பலரது தொடர்ச்சியான சிந்தனைகளின், செயல்பாடுகளின் மூலமாகத்தான் தமிழ் ஒரு செம்மொழி என்பதற்கான அங்கீகாரத்தை இன்று நாம் வென்றெடுத்துள்ளோம்; வெற்றிவாகை சூடியுள்ளோம்.

தமிழ்மொழியில் வழங்கும் சொற்களுக்கெல்லாம் வேர்மூலம் காண்பது என்பது ஆழ்கடலில் முத்தெடுக்கும் பணியினும் கடினமானது; இந்தப் பணியொன்றே தமிழ் செம்மொழி என்பதை ஏற்கச் செய்யும் முதன்மைப் பணியாகும். இப்பணியில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பல ஆண்டுகள் உழைத்து ஆராய்ச்சி நூல்கள் பலவற்றை உருவாக்கி வெளியிட்டுள்ளார்; 'உயர்தனிச்செம்மொழி' (The Primary Classical Language of the World) என்ற நூலைப் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே வெளியிட்டுள்ளார்.

தேவநேயப் பாவாணரின் இந்தச் சொல்லாராய்ச்சித் திறனை அறிந்து, அவர்தம் பணி தமிழ் உலகிற்குத் தேவை என்று நான் கருதியதால் 8.5.1974 அன்று, 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்ககம்' என்னும் ஒரு துறையைப் புதிதாக நிறுவி, அதற்குப் பாவாணர் அவர்களையே இயக்குநராகவும் நியமனம் செய்து அகர முதலித் தொகுதிகள் வெளிவர ஆவன செய்ததை இவ்வேளையில் மகிழ்வுடன் நினைவு கூர்கிறேன். அதன் பயனாக, பணிகள் சிறப்பாக நிகழ்ந்து முதல் தொகுதி அணியமாகிக் கொண்டிருக்கும் நிலையில் பாவாணர் அவர்கள் திடீரென மறைந்தார்கள். அதற்குப்பின் அவர்தம் நூல்களை அடிப்படையாகக் கொண்டு, அவரின் அணுகுமுறையிலேயே தொடர்ந்து அகர முதலித்திட்டத்தின் அடுத்தடுத்தத் தொகுதிகள் வெளிவரலாயின.

பாவாணர் மறைவுக்குப் பின்னும், ஒவ்வொரு முறையும் அரசுப்பொறுப்பு ஏற்கிற போதும் இந்தத் துறையின் வளர்ச்சியில் நான் மிகுந்த அக்கறை செலுத்தி வந்துள்ளேன். 1996ஆம் ஆண்டில் தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாட்டுக்கு எனத் தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டுச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்திற்குத் தேவையான கூடுதல் பணியாளர்கள், கணிப்பொறியமைப்பு போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

இதுவரை, மும்மூன்று தொகுதிகள் கொண்ட ஆறு மடலங்களாக மொத்தம் 18 தொகுதிகள் சென்ற ஆண்டுவரை வெளிவந்து முடிந்துள்ளன. இப்போது 'ம', 'ய', 'வ' வரிசையில் ஆறு பகுதிகள் வெளிவருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். எஞ்சிய பகுதிகளும் விரைந்து வெளிவர வேண்டும் என்பது என் அவா. இந்த அகரமுதலிப் பகுதிகள் வெளிவர உறுதுணையாய் நின்ற தமிழ் வளர்ச்சி–பண்பாடு (ம) அறநிலையத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் மற்றும் அகரமுதலித் திட்ட இயக்கத்தின் பொறுப்பு இயக்குநர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப. அவர்களுக்கும், நூல்களை உருவாக்கியுள்ள அகரமுதலித் திட்டத்தின் ஆசிரியர், பணியாளர் குழுக்களுக்கும் எனது உளமார்ந்த பாராட்டுகள் உரித்தாகுக.

என்றும்,

அன்புடன்

(மு. கருணாநிதி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
"முத்தமிழறிஞர்"

கலைஞர் மு. கருணாநிதி



மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

து. இராசேந்திரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையம் (ம) செய்தித் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்,

பதிப்புரை

"வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!" –பாரதி.

இலக்கிய வளமும் இலக்கணத் திட்பமும் கொண்ட – தொன்மையிலேயே பெருமை பெற்ற தமிழ் மொழியில் அகரமுதலி எனப்படும் சொற்பொருள் வரிசையடங்கிய நூல் மிகவும் பிற்கால வரவு.

தொல்காப்பியத்திலேயே அரிய சொற்கள் பலவற்றிற்குப் பொருள் கூறும் இயல்கள் உண்டு. பாடல்களில் சொற்களுக்குப் பொருள் கூறும் நூல்கள் எழுந்திருந்தன. ஆனால் பொது மக்களும் பயன்படுத்தும் வண்ணம் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்த முதல் தமிழ் அகராதி நூல் சதுரகராதிதான் என்பர் மொழியறிஞர். கிறித்துவ மதம் பரப்ப வந்த மதப் பரப்புநரான வீரமாமுனிவர் தமிழ் கற்று திளைத்தபின் தமிழுக்கு அளித்த நூல்களில் அரிய நூலாக அறிமுகப்படுத்திய நூல் சதுரகராதி.

ஐரோப்பிய நாடுகளில்தான் அகராதி முதலில் தோன்றியது என்பர். ஐரோப்பிய நாடுகளில் ஒரு மொழியில் உள்ள சொற்கள் ஏற்கெனவே இலத்தீனத்திலிருந்தோ கிரேக்கத்திலிருந்தோ அல்லது இதுபோன்ற பழைய மொழிகளிலிருந்து வந்தவையாகவே இருக்கும். ஆங்கில மொழியை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இன்றைய நிலையில் உலகில் உள்ள அனைத்து மொழி அகரமுதலிகளும் ஒரு சேர அழிந்துபட்டுவிட்டது என்ற நிலை உருவானால் ஆங்கில மொழி பாதி அழிந்து பட்டுவிடும். எனவே பாதி மக்களுக்கு ஆங்கிலம் அகரமுதலியில்தான் வாழ்ந்து கொண்டுள்ளது.

ஆங்கிலம் பல மொழிகளின் கூட்டுமொழியாக பெரும்பங்கு இயங்குவதே அதற்கு மூலக் காரணமாகும்.

அவ்வாறுள்ள நிலையில் தமிழ் தனித்தியங்கும் தன்மையைப் பெரிதும் பெற்றுள்ளது. கல்வியறிவில்லாத ஒருவரும் கூட பல சொற்களை அதுவரை கேட்டுமறியாத நிலையில் கேட்ட மாத்திரத்தில் அதன் சூழ்நிலைப் பொருளைக் கொண்டும் ஒலி ஏற்ற இறக்கத்தைக் கொண்டும் புரிந்து கொள்வர். அதுமட்டுமல்லாது அதை அந்தப் பொருளிலேயே மீண்டும் பயன்படுத்த முன்வருவர்.

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி பெற்ற இந்தக் காலத்தில் கலைச்சொற்கள் உருவாக்கம் மிகுந்து ஏராளமான சொற்கள் தமிழ் மொழிக்குப் புது வரவாகக் கொள்ளப்பட்டுள்ளன. ஒரு துறை சார்ந்த கலைச்சொற்கள் மற்ற துறை சார்ந்தவர்களுக்கும் பொதுவாக அனைவர்க்கும் புரியும் வண்ணம் செய்வதற்கு அகரமுதலி கட்டாயம் தேவைப்படுகிறது.

தமிழிலேயே பல்வகைக் காரணங்களினால் பிறமொழிச் சொற்கள் கலந்து விடுவதால் நாளடைவில் மக்களின் பயன்பாட்டு நிலையில் பிறமொழிச் சொற்கள் ஏராளமாகத் தமிழில் கலந்து விடுகின்றன. அனைத்து மக்களும் அவற்றைப் புரிந்து கொள்ள அகரமுதலி தேவைப்படுகிறது. இந்த அகரமுதலி அச்சொற்களின் மூலமொழி எது என்பதையும் அந்த மொழியில் அதன்பொருள் என்ன என்பதையும் தமிழில் அது வடிவ மாற்றம், கருத்து மாற்றம் பெற்ற நிலை ஆகிய அனைத்தையும் தெரிவிக்கிறது.

ஆங்கில மொழிக்கு கீற்று (W.W. Skeat) என்பவர் 1879 இல் ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியிட்டார். அதில் ஆங்கில மொழிச்சொற்கள் எந்தெந்த மொழியிலிருந்து எந்தெந்தக் கருத்தில் ஆங்கிலத்திற்கு வந்தன என்பதான சொற்களின் வரலாற்றை எடுத்து கூறுவதாக அமைந்திருந்தது.

"மொழி என்பது ஒரு மக்களினம் பேசும் பேச்சிலும், இயற்றும் இலக்கியத்திலும், ஆளும் சொற்களின் முழுமையான சொற்றொகுதி". சொற்களன்றி மொழியென்று தனி வேறாக ஒன்றுமில்லை. ஆதலால் சொல்லாராய்ச்சியே மொழியாராய்ச்சிக்கு அடிப்படை என்பர் அறிஞர் பெருமக்கள். அத்தகைய மொழியாராய்ச்சியில் தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்ட பெருமகனார் 'மொழி ஞாயிறு' தேவநேயப் பாவாணராவார். அவரது சீரிய தலைமையின்கீழ் தமிழ்நாடு அரசால் 1974இல் உருவாக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் என்னும் இத்துறை, அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி சொற்பிறப்பியல் அகரமுதலி பகுதிகளை தொகுத்து வெளியிட்டு வருகிறது. பேரகரமுதலி வெளியீடுகள் வரிசையில், ஏழாம் மடலத்தின் மூன்று பகுதிகளில் ம, மா வரிசை என்ற இப்பகுதி முதல் பகுதியாகும்.

இதில் சிக்கலான பல சொற்களின் வேர் மூலங்களை இத்தொகுதி எடுத்துக் காட்டுகிறது. சான்றாக

'மல்லன்' என்ற சொல்லுக்கு 'முல்' – 'மல்'. மல் = பருமை, வளம், வலிமை, திரட்சி என்று கூறப்பட்டுள்ளது. திரண்ட வலிமையுடைய இருவர் அல்லது இரு படைகள் கூடிப் பொருவது போர்; மல் + போர்= மற்போர்.

மேலும், *'மங்கலம்'* என்ற சொல்லுக்கும் *'மட்டம்'* என்ற சொல்லுக்கும் முறையே 14 மற்றும் 19 வகையான பொருள் விளக்கங்கள் அழகுறக் கொடுக்கப்பட்டுள்ளன. அதைப்போல *'மடம்'* என்ற சொல்லுக்கும் *'மடி'* என்ற சொல்லுக்கும் *'மண்டிலம்'* என்ற சொல்லுக்கும் *'மதம்'* என்ற சொல்லுக்கும் பல்வகைப் பொருள் விளக்கங்கள் பொருத்தப்பாட்டுடன் தரப்பட்டுள்ளன.

அதேப்போல *'மாதம்', 'மாலை'* மற்றும் *'மானம்'* ஆகிய சொற்களுக்கு மேற்கோள்களுடன் பொருள் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

இதுபோன்ற சிறப்புப் பொருள்களைத் தருவதன் வழி இந்த அகரமுதலி வேறெந்த அகரமுதலிக்கும் இல்லாத சிறப்பினைப் பெறுகிறது.

தமிழ் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் ஊக்கம் அளித்து வரும் நம் ***மாண்புமிகு முதலமைச்சர்*** அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பகுதியை உருவாக்குவதில் உறுதுணையாக நின்ற பதிப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர்கள், பகுதிப் பொறுப்பாளர், தொகுப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரையும் பாராட்டுவதுடன் மேலும் சிறப்பாகப் பணியாற்ற வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

துு. இராசேந்திரன்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ம

ம[1] *ma,* மகரமெய்யும் அகர உயிருஞ் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து; the compound of ம் and அ.

[ம் + அ.]

ம[2] *ma,* பெ.(n.) ஏழிசைக் குறியீடுகளுள் நான்காவதாகிய உழை (மத்திமம்) எனப்படும் இசையி னெழுத்து (சிலப்.3:67, அரும்.); the symbol of the fourth note of the gamut (Mus.).

[ம் + அ.]

ம[3] *ma,* பெ.(n.) 1. நிலவு (இலக்.அக.); moon. 2. சிவன் (இலக்.அக.); *Šivan.* 3. காலன் (இலக்.அக.); *Yaman.* 4. காலம் (யாழ்.அக.); time. 5. நான்முகன் (யாழ்.அக.); Brahman. 6. திருமால் (யாழ்.அக.); *Tirumāl.* 7. நஞ்சு (யாழ்.அக.); poison.

[ம் + அ.]

மஃகான் *makkāṉ,* பெ.(n.) மகரவொற்று; the letter 'm'. *"மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்" (தொல்.எழுத்து.28).*

[ம + கான்.]

மக்கட்கதி *makkaṭ-kati,* பெ.(n.) நான்கு நிலைகளுள் மக்களாய்ப் பிறக்கும் பிறப்பு (சீவக.2790, தலைப்பு); birth as a human being, one of *nāṟ-kati* (q.v.).

*[மக்கள் + **Skt.** கதி.]*

Skt. கதி > த.நிலை.

மக்கட்கதியெழுத்து *makkaṭ-kati-y-eḻuttu,* பெ.(n.) ஆ, ஈ, ஊ, ஏ என்ற நான்கு உயிர் நெடிலும், ங, ஞ, ண, ந, ம என்ற ஐந்து மெய்யெழுத்துகளும் (பன்னிருபா, 24); the four long vowels ā, ī, ū, ē and the consonants ṅ, ñ, ṇ, n, m.

மக்கட்சேவகம் *makkaṭ-cēvagam,* பெ.(n.) மக்கள் ஊழியம்; service to the people. *"மக்கட் சேவகப் பேற்றுக்குப் பரப்பு ஒரு மாவுக்குக் குறுணியாக" (தெ.க.தொ. 4:33).*

*[மக்கள் + **Skt.**சேவகம்.]*

மக்கட்சேவகன் *makkaṭ-sēvagaṉ,* பெ.(n.) மக்கள் ஊழியன்; one who does personal service, social worker. *"தண்டுகிற நெல்லு மக்கட் சேவகர்க் கொண்டு" (தெ.க.தொ. 4:33).*

*[மக்கள் + **Skt.**சேவகன்.]*

மக்கட்டம்பிடி-த்தல் *makkaṭṭam-piḍi-,* 4 செ.கு.வி.(v.i.) இழுபறிப்படுதல் (யாழ்.அக.); to be landed in difficulties.

[முக்கட்டு→முக்கட்டம்→மக்கட்டம் + பிடி-. முக்கட்டு = துன்பநிலை (தஞ்சை வழக்கு).]

மக்கட்டாயம் *makkaṭṭāyam,* பெ.(n.) மகன் முறையாய் வரும் தாய வுரிமை; system of inheritance rights to the sons, succession in the time of sons, dist.fr. *maruma-k-kaṭṭāyaṉ.*

[மகன்→மக்கள் + தாயம். (மக்கள் – ஆண்பாற் பன்மை.]

மக்கட்டு[1] *makkaṭṭu,* பெ.(n.) மணிக்கட்டு (தக்கயாகப்.99, உரை); wrist.

[மணிக்கட்டு→மக்கட்டு]

மக்கட்டு² *makkaṭṭu,* பெ.(n.) அரையில் ஆடையின் மேற்கட்டுங்கட்டு; waistband. *"புதுப்புது மக்கட்டலை மக்கட்டினரே" (தக்கயாகப். 99).*

[மேல் + கட்டு→மேக்கட்டு→மக்கட்டு.]

மக்கட்பரப்பு *makkaṭ-parappu,* பெ.(n.) 1. மன்பதை; humanity, human beings. 2. நாட்டு மக்கள் (திவா.); inhabitants or citizens of a state, the public, the common wealth.

[மக்கள் + பரப்பு.]

மக்கட்பாடு *makkaṭ-pāḍu,* பெ.(n.) மக்களுடைய முயற்சி; human effort. *"மக்கட் பாட்டினானும் வலியானும்..... பெறலாவதன்று" (இறை.1, 10).*

[மக்கள் + பாடு.]

மக்கட்பேறு *makkaṭ-pēṟu,* பெ.(n.) 1. பிள்ளை; obtaining children. 2. பெறுகை; be getting children. *"அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற" (குறள், 61).*

[மக்கள் + பேறு.]

மக்கடபுத்தி *makkaḍa-putti,* பெ.(n.) குறும்புத் தனம் (வின்.); mischievous tendency.

*[ஒருகா.மழுக்கடம் + **Skt.**புத்தி.]*

மக்கடி-த்தல் *makkaḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) உருவழித்தல் (வின்.); to deform, disfigure.

[மழுக்கடி→மக்கடி-,]

மக்கண்முரி *makkaṇ-muri,* பெ.(n.) வடிவின் சிறியவ-ன்-ள் (கலித்.94); dwarf, chit, slip of a person, used in contempt.

[மக்கள் + முரி (முரி = சிறுமை).]

மக்கம்¹ *makkam,* பெ.(n.) எருக்கு (மலை.); madar. maddar-*Rubia cordifolia.*

மக்கம்² *makkam,* பெ.(n.) நெய்வோர் தறி (வின்.); loom.

தெ. மக்கமு; க. மக்க.

மக்கமல்லார்-தல் *makkamallār-,* 2 செ.கு.வி. (v.i.) மல்லாந்து கிடத்தல் (வின்.); to lie on the back.

[மக்க + (மீமிசை அடைச்சொல்) மல்லார். மலர் →மல்லார்-. மலர்தல் = முன்புறம் மேனோக்கி இருத்தல். "கவிழ்ந்த மண்டை மலர்க்குநர்யாரென" (புறநா.103).]

மக்கல் *makkal,* பெ.(n.) கெட்டுப்போன பொருள்; anything spoiled. *அரிசி மக்கலாயிருக்கிறது (உ.வ.).*

[முல் (பொருந்தற் கருத்து வேர்)→முள்→மள் →மள்கு. மள்குதல் = ஒளி குறைதல், குறைதல். மள்கு→மழுகு→மழுகுதல் = ஒளி குறைதல். மழுகு →மழுங்கு→மங்கு. மள்கு→மட்கு. மட்குதல் = மயங்குதல், ஒளி மங்குதல், அழுக்கடைதல், வலி குன்றுதல். மட்கு→மக்கு→மக்குதல் = ஒளி மழுங்குதல், அழுக்கேறுதல், கெட்டுப்போதல். மக்கு→மக்கல் (வே.க.4:60).]

மக்கல்நாற்றம் *makkal-nāṟṟam,* பெ.(n.) கெட்ட வாடை; fusty, stink.

[மட்கு→மக்கு. மக்கல் + நாற்றம்.]

மக்கல்லசூளை *makkalla-šūḷai,* பெ.(n.) மக்கல்லம் பார்க்க; see *makkallam* (சா.அக.).

மக்கல்லம் *makkallam,* பெ.(n.) மகவீன்ற பெண்களின் கருப்பையிலிருந்து அழுக்கு முழுவதுமாய் வெளிப்படாததினால் ஏற்படும் நோய்; a disease in which *lochia* of newly delivered woman is obstructed in its exit by the local *voyu* and thereby causing growths (nodules) below the naval on the sides of the pelvis or the pubis. Severe piercing pain is felt about the region of navel stomach and bladder (சா.அக.).

மக்கள் *makkaḷ,* பெ.(n.) 1. மாந்தவினம்; human beings, in general. *"உயர்திணை யென்பனார் மக்கட் சுட்டே" (தொல்.சொல்.1).* 2. ஐம்பொறியுணர்வொடு மனவறிவுமுடைய உயிர்கள்; human beings for excellence as having the five senses as well as the mind which is the sixth sense. *"மக்கள் தாமே ஆறறி வுயிரே" (தொல்.பொருள்.588).* 3. பிள்ளைகள்; children. *"தம்பொரு ளென்ப தம்மக்கள்" (குறள், 63). "விலங்கொடு மக்களனையர் இலங்குநூல் கற்றாரோ டேனை யவர்" (குறள், 410). "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு" (பழமொழி).*

ம., க. மக்கள்.

மக்கள்வழி *makkaḷ-vaḻi,* பெ.(n.) மக்கள் சொத்துரிமை; patriarchal, system of inheritance in which the property descends to the sons.

[மக்கள் + வழி.]

மக்களி[1]–த்தல் *makkaḷi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. குணமடைந்த நோய் திரும்புதல் (சென்னை); to return, relapse, as disease. 2. உடற் சந்து பிசகுதல்; to be dislocated, as the joints.

[மறுக்களித்தல்→மக்களித்தல். ஒ.நோ. ஒருக்களித்தல்→ஒக்களித்தல்.]

மக்களி[2]–த்தல் *makkaḷi-,* 18 செ.குன்றாவி. (v.t.) மாற்றுதல்; to modify, revoke, supersede, retract. *மக்களித்துப் பேசாதே (உ.வ.).*

[மறுக்களி–,→மக்களி–,]

மக்களி[3]–த்தல் *makkaḷi-,* 4 செ.கு.வி.(v.i.) புரளுதல்; dislocality.

[மறுக்களித்தல்=மறுபுறம் திரும்புதல். மறுக்களி →மக்களி–,]

மக்களிக்குசுரம் *makkaḷikku-šuram,* பெ.(n.) பழம்சுரம்; relapsing fever (சா.அக.).

மக்களிப்பு *makkaḷippu,* பெ.(n.) 1. புரளுகை; failures, defect, distortion. 2. குணமான நோய் திரும்புகை; returning or relapse, as of a disease.

[மறுக்களிப்பு→மக்களிப்பு.]

மக்களுறை *makkaḷuṟai,* பெ.(n.) மக்கள் மருந்து; medicine for human being (சா.அக.).

[மக்கள் + உறை.]

மக்கன் *makkaṉ*, பெ.(n.) மந்தன்; dullard.

[முல் (பொருந்தற் கருத்து வேர்)→முள்→மள்→மள்கு→மட்கு. மட்குதல் = ஒளி மங்குதல், அழுக்கடைதல், வலி குன்றுதல். ஒ.நோ. வெள் → வெள்கு→வெட்கு. மட்கு→மக்கு = மந்தன், அறிவிலி. மக்கு→மக்கன் (வே.க.4:60).]

மக்கனம் *makkaṉam*, பெ.(n.) 1. மூழ்குகை; immersion. 2. அவமானம் (வின்.); disgrace, shame.

[மக்கு→மக்கனம்.]

மக்கனீசம் *makkaṉīšam*, பெ.(n.) தங்கம்; refined gold (சா.அக.).

மக்காச்சோளம் *makkā-c-cōḷam*, பெ.(n.) ஒருவகைச் சோளம்; maize indian corn - *Zea mays*.



மக்காயன் *makkāyaṉ*, பெ.(n.) மூடன் (இ.வ.); dullard, idiot.

[மக்கு→மக்கன்→மக்காயன்.]

மக்காரெட்டி *makkā-reṭṭi*, பெ.(n.) பழைய நாணய வகை (சரவண. பணவிடு.58–59); an ancient coin.

மக்கி[1] *makki*, பெ.(n.) 1. மரவகை; ceylon gamboge. 2. குளிகை வகை (யாழ்.அக.); a medicinal pill.

மக்கி[2] *makki*, பெ.(n.) ஈ; house fly (C.G.).

மக்கி[3] *makki*, பெ.(n.) வெண்பார்க்கல் (யாழ்ப்.); marl, calcareous earth.

மக்கிக்கலவை *makki-k-kalavai*, பெ.(n.) பிசின் கலப்பு; a compound of gambage.

[மக்கி + கலவை.]

மக்கிக்குமக்கி *makkikku-makki*, பெ.(n.) ஈயடிச்சான் காப்பி; exact reproduction or copy (C.L.).

க. மக்கிகாமக்கி.

மக்கிகா *makkikā*, பெ.(n.) எருக்கு; muddar plant (சா.அக.).

மக்கிச்செடி *makki-c-ceḍi*, பெ.(n.) மக்கிப் பிசின் எடுக்கும் ஒருவகைச் சீனச்செடி; a kind of tree yielding gamboggi (சா.அக.).

மக்கிசாபுகையிலை *makkišā-pugai-y-ilai*, பெ.(n.) மூக்குத்தூள் புகையிலை; tabacco used for preparing snuff (சா.அக.).

மக்கிட்டுப்பிடி *makkiṭṭu-p-piḍi*, பெ.(n.) கைகளாற் கட்டிப் பிடிக்கும் பிடிப்பு; grip by throwing one's arms round another. *மக்கிட்டுப்பிடியாகப் பிடித்தான் (இ.வ.).*

[மல் + கட்டு + பிடி.]

மற்போர்க்குரிய கட்டுப்பிடி.

மக்கிமுக்கி *makki-mukki*, பெ.(n.) மக்கி[1] பார்க்க (யாழ்ப்.); see *makki*[1].

மக்கிமுக்கிமரம் *makki-mukki-maram*, பெ.(n.) ஒருவகைப் பிசின் மரம்; ceylon gamboge tree.

[மக்கிமுக்கி + மரம்.]

மக்கிறந்தம் *makkirandam,* பெ.(n.) பித்தளை; brass (சா.அக.).

மக்கு[1]–தல் *makku-,* 5 செ.கு.வி.(v.i.) 1. அழிதல் (வின்.); to die, perish. 2. மந்தமாதல்; to become dull. *"மக்கிய ஞானத் தீயால்" (கைவல்.தத்.90).* 3. கெடுதல்; to decay, as fruits. 4.அழுக்கேறுதல் (வின்.); to moulder. 5. ஈரத்தாற் கெட்டுப் போதல்; to be spoiled, as by dampness. *அரிசி மக்கிப் போய் விட்டது (உ.வ.).* 6. கருத்துப்போதல்; to become dark or block. *வெள்ளி மக்கி விட்டது (உ.வ.).*

[முல் (பொருந்தற் கருத்துவேர்)→முள்→மள் → மள்கு→மட்கு. மட்குதல் = ஒளி மழுங்குதல், அழுக்கேறுதல், கருத்துப்போதல், கெட்டுப் போதல். மட்டு→மக்கு (வே.க.4:60).]

மக்கு[2] *makku,* பெ.(n.) 1. மந்தகுணம்; sluggishness, doltishness. 2. அறிவிலி; ignorant person, dullard.

[முல் → முள் → மள் → மள்கு → மட்கு → மக்கு (வே.க.4:60).]

மக்கு[3] *makku,* பெ.(n.) 1. அடைமண்; soft clay for filling up crevices in walls. 2. மரவேலையிற் சந்து தெரியாமல் அடைக்கும் சாந்து; putty, in carpentry, filler.

[மழுக்கு→மக்கு. மேடு பள்ளங்களை மழுக்கிச் சமன்படுத்தும் சாந்து அல்லது களிமண்.]

மக்குரு *makkuru,* பெ.(n.) எலும்பு இளைத்தல்; emaciated bone.

[மக்கு + உரு.]

மக்குலம் *makkulam,* பெ.(n.) சிலாசத்து; a substance said to be oozing out from mountain (சா.அக.).

மக்கையன் *makkaiyan,* பெ.(n.) அறிவுக் குறையுடையவன்; dullard.

[மழுக்கு→மக்கு→மக்கையன் (மு.தா.99).]

மக[1] *maga,* பெ.(n.) 1. பிள்ளை; child, infant, young of an animal. *"மந்திம்மக" (சீவக. 1897).* 2. மகன் அல்லது மகள்; son or daughter. *"மகமுறை தடுப்ப" (மலைபடு.185).* 3. இளமை (யாழ்.அக.); young age, adolence.

[முள் (இளமைக்கருத்துவேர்)→ முளை= இளமை. முளையான் = சிறு குழந்தை. முள்→மள் →மள்ளன் = இளைஞன். மள்→மள→மழ = இளமை. "மழவும் குழவும் இளமைப் பொருள" (தொல்.உரி. 14). 'அழ மழப்போலும்' (திருக்கோ.147). மழ→மக.]

மக[2] *maga,* பெ.(n.) மகமை[3] பார்க்க; see *magamai.*

[மகமை →மக.]

மகக்குழை *maga-k-kuḻai,* பெ.(n.) மாவிலை (தைலவ. தைல. அனுபந்த.61); mango leaf.

[மக = இளமை. இளமையில் அழகாயிருப்பது எவ்வுயிர்க்கும் பொதுவியல்பு. இருப்பினும் மாந்தளிர் எல்லாவற்றுள்ளும் அழகாயிருந்தமையினால் மாந்தளிர் மேனி என்பன போன்ற வழக்குகள் எழுந்தன. அதன்வழி மக + குழை என்றாகி யிருக்கலாம். குழை = தழை.]

மகச்சோறு *maga-c-cōṟu,* பெ.(n.) முப்பத் திரண்டறங்களுள் குழந்தைகட்குச் சோறளிக்கும் அறம்; food for infants, one of thirty two good deeds.

[மக = இளமை, குழந்தை. மக + சோறு.]

மகட்கருமம் *magaṭ-karumam*, பெ.(n.) பெண்ணை மணந்து கொள்ளுகை; taking a girl in marriage, as a duty. *"நின் மகற் கொரு மகட்கரும முன்னி" (சூளா.தூது.15).*

[மகள் + கருமம்.]

மகட்கொடை *magaṭ-koḍai*, பெ.(n.) தன் மகளை மணஞ்செய்து கொடுக்கை; gift of a daughter in marriage. *"நன்மகற் கல்லது மகட் கொடை நேரார்" (பெருங்.உஞ்சைக். 36, 93).*

[மகள் + கொடை.]

மகட்கோடல் *magaṭ-kōḍal*, பெ.(n.) பெண்ணை மணம் புரிகை (இலக்.வி.485, உரை.); marriage, as the acceptance of a girl.

[மகள் + கோடல்.]

மகட்பாற்காஞ்சி *magaṭpāṟ-kāñci*, பெ.(n.) முதுகுடித்தலைவனிடம் நின் மகளைத் தருக வென்று கேட்கும் அரசனோடு அவன் மாறுபட்டு நிற்பதைக் கூறும் புறத்துறை (தொல்.பொருள்.79, உரை.); theme describing the refusal of a person belonging to an ancient clan to give his daughter in marriage to a king who asks for her hand.

[மகள் + பால் + காஞ்சி.]

அகத்திணை ஏழனுள் பெருந்திணைக்குப் புறனாகியது காஞ்சித்திணை. அஃது ஒன்றற் கொன்று உரிமையாதல், யாக்கை, இளமை முதலிய பல நெறியானும் நிலையாத வுலக இயற்கைக்குப் பொருந்திய நெறியினை யுடையது (இலக்.வி.614. உரை.)

எண்வகை மணத்தினும் நான்கு மணம் பெற்ற பெருந்திணை போல இக்காஞ்சியும் அறமுதலாய மும்முதற் பொருளும் அவற்றது நிலையின்மையுமாகிய ஆறனுள்ளும், நிலையின்மை மூன்றற்குமுரித்தா யெல்லாத் திணைகட்குமொத்த மரபிற் றாகலானும் 'பின்னர் நான்கும் பெருந்திணை பெறு' மென்ற நான்குஞ் சான்றோ ரிகழ்ந்தாற் போல அறமுதலியவற்றது நிலையின்மை யுணர்ந்து அவற்றை அவரிகழ்தலானும் ஏறிய மடற்றிற முதலிய நான்கும் பொருந்தாக் காமமாயினவாறு போல உலகியல் நோக்கி நிலையாமை நாற் பொருளன்றாகலானும் உரிப் பொருளிடம் மயங்கி வருதலன்றித் தனக்கு நிலமில்லாத பெருந்திணை போல அறம்பொரு ளின்பம் பற்றி யன்றி வேறு நிலையாமை யென்றோர் பொருளின்றாதல் ஒப்புமையானும் காஞ்சித் திணை பெருந்திணைக்குப் புறத்திணை யெனப்பட்டது (த.சொ.அக.)

மகட்பேசு-தல் *magaṭ-pēšu-*,5 செ.குன்றாவி. (v.t.) திருமணத்துக்குப் பெண்ணை உறுதிப் படுத்தல்; settle as a bride; to betroth a bride. *"வந்திருந்தென்னை மகட்பேசி" (திவ்.நாய்ச்.6, 3).*

[மகள் +பேசு-,]

மகடி[1] *magaḍi*, பெ.(n.) மகிடி பார்க்க (வின்.); see *magiḍi*.

மகடி[2] *magaḍi*, பெ.(n.) மேற்கட்டுள்ள வீடு; terraced house, storied building (C.G.).

[மாடி→மகடி. ஒ.நோ. தட்டு-தகடு, தூள் - துகள், பால்→பகல்.]

மகடு[1] *magaḍu*, பெ.(n.) 1. பெண்; female. 2. மனைவி; wife, spouse.

[முல் (இளமைக் கருத்து வேர்)→முள்→முளை. முளையான் = சிறு குழந்தை. முள்→மள். மள்ளன் = இளைஞன், மறவன். மள்→மள→மழ. மழ: இளமை, இளமைக்குரிய பெண்மை. மழ→மக = இளமை, பிள்ளை, மகன் அல்லது மகள். மக→மகள் = பெண், புதல்வி. மகள்→மகடு (வே.க.4:7).]

மகடு² *magaḍu,* பெ.(n.) மகிடி பார்க்க (அரு.நி.); see *magiḍi.*

மகடூஉ *magaḍūu,* பெ.(n.) 1. பெண்; female, woman. *"மகடூஉ வறிசொல்" (தொல். சொல்.2).* 2. மனைவி; wife, spouse. *"இற்பொலி மகடூஉப் போல" (புறநா.33). "ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும்" (தொல். எழுத்து.271).*

[மகடு→மகடூஉ.]

தொல் பழங்காலங்களில் சொல்லி னிமைக்காக மெய்யீற்றுச் சொற்களோடு உகரஞ் சேர்ப்பது பேச்சு வழக்கில் இயல்பாயிருந்தது. இடவழக்காயினும் பெருக வழங்கிய இடவழக்குகள் ஆதலின் இதனை ஒப்ப முடிந்த உலக வழக்காகத் தொல்காப்பியரும் ஏற்றார். உயிரீற்றில் முடியும் வினைமுற்றுகளும் வினையெச்சங்களும் ஒப்புமையாக்கம் கருதி பெயரீற்றிலும் ஆட்சி பெறலாயின. வினையெச்ச வாய்பாடுகளில் செய்யூ என்னும் வாய்பாடு தொல்காப்பியத்தில் குறிக்கப் பெறுகிறது. இதனையொத்து அவன்கண்டு, அவன் கண்டான் என்னும் வினைமுற்றைக் கண்டூஉ எனவும் மகள் என்னும் பெயர்ச்சொல்லை மகள் →மகடு→மகடூஉ என்றும் அளபெடையில் நீட்டி ஒலிப்பது இனிமை கருதிய இடவழக்காம். கிரேக்க மொழியில் மொழியிடையிலும் இத்தகு உயிர்நீட்டங்கள் உளவென்பர். தமிழில் உயிர் அளபெடையாட்சி மிக்கிருந்ததற்கு ஆடூஉ, மகடூஉ போன்ற சொல்லாட்சிகள் தக்க சான்றுகளாகின்றன. வினைமுற்று உயிரீற்று அளபெடையாக தொன்முது காலத்தில் இருந்திருக்கலாம் என்பதற்குச் சான்றாக, கல்லாத தெலுங்கு மக்களின் பேச்சு வழக்கில் உகர ஈற்று ஏவல் வினைகள் அளபெடையாக ஒரொருகால் நீண்டொலிப்பதை இன்றும் கேட்க முடிகிறது.

மகடூஉக்குணம் *magaḍūu-k-kuṇam,* பெ. (n.) பெண்களுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணம் (இறை.2, உரை. பக்.29); feminine qualities, numbering four, viz. *accam, maḍam, naṇam, payiṟpu.*

[மகள்→மகடு→மகடூஉ.குள்→குணம் (வளைவு, அடங்கிய தன்மை, பணிவு, ஒத்துவரும் இயல்பு, நலம், மேன்மை, மேம்பட்டு விளங்கும் திறம், அறிவு). மகடூஉ + குணம்.]

மகடூஉமுன்னிலை *magaḍū-u-muṉṉilai,* பெ. (n.) பெண்ணை முன்னிலைப்படுத்திக் கூறுகை (காரிகை.பாயி.1, உரை.); vocative, addressing a woman.

[மகள்→மகடு→மகடூஉ + முன்னிலை.]

மகண்மறுத்தல் *magaṇ-maṟuttal,* பெ.(n.) மகண்மறுத்துமொழிதல் பார்க்க *(புறநா.109, துறைக்குறிப்பு.);* see *magaṇ-maṟuttu-moḻidal.*

[மகள் + மறுத்தல்.]

மகண்மறுத்துமொழிதல் *magaṇ-maṟuttu-moḻidal-,* பெ.(n.) பகைவீரன் தம் மகளை மணங்கோடற்கு விரும்பிக் கேட்கச் சிற்றரசர் மறுத்தலைக் கூறும் புறத்துறை (பு.வெ.5, 9); theme describing the refusal of a chieftain to give his daughter in marriage to a hostile warrior when demanded.

[மகள் + மறுத்து + மொழிதல்.]

மகண்மா *magaṇ-mā,* பெ.(n.) 1. பெண் வடிவங் கொண்ட ஒரு விலங்கு; a fabulous animal having the form of a woman. *"மைந்தரைப் பார்ப்பன மாமகண்மாக் குழாம்" (சீவக.1902).* 2. அலி (நன்.264.விருத்.); hermaphrodite.

[மகள் + மா.]

மகண்மை[1] *maganmai*, பெ.(n.) 1. பெண்டன்மை; womanhood. 2. மகளாகுந் தன்மை; daughter hood. *"தமரலாரும் மகண்மை கொள்ளக் கருதுங் குறியினாள்" (வெங்கையு. 154).*

[மகள் + மை – மகண்மை.]

மகண்மை[2] *maganmai*, பெ.(n.) மகமை பார்க்க; see *magamai. "அந்தராய மகண்மை கொளாதே மாகவும்" (தெ.க. தொ.3, 175, 28).*

மகதந்திரம் *maga-tandiram*, பெ.(n.) ஒரு சிற்ப நூல் (இருசமய. சிற்பசாத்.3); a treatise an architecture.

மகதம் *magadam*, பெ.(n.) மகிழம் பார்க்க; see *magiḻam* (சா.அக.).

மகதுருமம் *magaturumam*, பெ.(n.) அரசமரம்; peepul tree *ficus religiose* (சா.அக.).

மகதேசன் *magatēšaṉ*, பெ.(n.) 1. மகத நாட்டரசன்; king of *Magadai*. 2. நடு நாட்டைச் சேர்ந்த மகதநாட்டுச் சிற்றரசன்; king of a part of the country in *naḍu-nāḍu*. *"மகத தேசனாறைநகர் காவலன்" (பெருந்தொ.1192).*

[மகதை + தேசன்.]

மகதேசன்பெருவழி *magadēšaṉ-peru vaḻi*, பெ.(n.) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் ஆறகழூரிலிருந்து காஞ்சிபுரம் செல்வதற்காக வாணர்களால் அமைக்கப்பட்ட நெடுஞ்சாலை; a high way leading to *Kanchipuram* from *Aragalur*, *Attur* Taluk, *Salem* District formed by the *Bana* rulers.

[மகதை + ஈசன் + பெருவழி.]

மகதை மண்டலத்தை ஆண்ட வாணர்கள் மகதைப் பெருமாள், மகதேசன் என்றவாறு அழைக்கப்பட்டனர். "ஸ்வஸ்தி ஸ்ரீ மகதேசன் பெருவழி" என்ற எழுத்துகளும் கீழே குழிகளும் செதுக்கிய கல் ஒன்று சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் ஆறகழூரில் கண்டுபிடிக்கப்பட்டு, சேலம் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகிறது. அதன் கற்காரை (சிமிட்டி) வார்ப்பு சேலம் பொதுப்பணித் துறை ஆய்வு மாளிகையில் உள்ள வரலாற்றகத்தில் உள்ளது. ஒரு குழி ஒரு காதத்தைக் குறிக்கும். ஒரு காதம் 4 கல் (மைல்). 1 படைசால் (பர்லாங்கு) 220 அடி நீளத்திற்குச் சமம். ஒரு வரிக்கு 5 குழி வீதம் 4 வரிசையும் ஐந்தாவது வரிசையில் 6 குழியும் உள்ளன. ஐந்தாவது வரியில் கல் உடைந்துவிட்டது. 26 காதம் என்பது 105 கல்லும் 440 அடியும் ஆகும் (தோராயமாக 169 கிலோமீட்டர்).

மகதை[1] *magadai*, பெ.(n.) திப்பிலி பார்க்க; see *tippili*.

மகதைப்பெருமாள் *magadai-p-perumāḷ*, பெ.(n.) சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகிலுள்ள ஆறகழூரைத் தலைநகராகக் கொண்ட மகதை மண்டலத்தை ஆண்ட வாணர்களின் பொதுப் பெயர்; a general name of the *Banas*, who ruled *Magadhai mandalam* with *Aragalur* as capital near *Attur* of *Salem* District.

[மகதை + பெருமாள்.]

மகதைமண்டலம் *magadai-manḍalam*, பெ.(n.) சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் அமைந்துள்ள ஆறகழூரைத் தலைமை யிடமாகக் கொண்ட வாணர்கள் ஆண்ட நாட்டுப் பகுதி; a region ruled by *Banas* with *Aragalur* near *Attur* in *Salem* District, as capital.

[மகதம் + மண்டலம். ஒருகா. மகோதை → மகதை.]

மகந்தரம் *magandaram,* பெ.(n.) 1. கள்; toddy. 2. பதநீர்; sweet toddy.

மகந்து *magandu,* பெ.(n.) துறவிகளின் மடத்திற்குத் தலைவனாயிருக்குந் துறவி; head of a religious establishment, superior of a monastery, who is succeeded on his death by the chief of his disciples (R.F.).

மகப்பால் *magappāl,* பெ.(n.) மகப்பால் வார்த்தல் பார்க்க (திவா.); see *magappāl-vārttal.*

[மக + பால்.]

மகப்பால்வார்த்தல் *magappāl-vārttal,* பெ.(n.) முப்பத்திரண்டறங்களுள் ஏதிலிப் பிள்ளைக்குப் பால் வார்த்தலாகிய அறம்; giving milk to infants, an act of charity, one of thirty two good deeds.

முப்பத்திரண்டறங்களாவன: 1. ஆதுலர் சாலை, 2. ஓதுவார்க்குணவு, 3. அறு சமயத்தோர்க்குணவு, 4. ஆவுக்கு வாயுறை, 5. சிறைச்சோறு, 6. ஐயம், 7. தின்பண்டம் நல்கல், 8. மகச்சோறு, 9. மகப்பெறுவித்தல், 10. மக வளர்த்தல், 11. மகப்பால், 12. அறவைப்பிணஞ் சுடுதல், 13. அழிந்தோரை நிறுத்தல், 14. வண்ணார், 15. நாவிதர், 16. வதுவை, 17. பூணூல், 18. நோய் மருந்து, 19. கண்ணாடி, 20. நாளோலை, 21. கண் மருந்து, 22. தலைக்கெண்ணெய், 23. பெண் நுகர்ச்சி, 24. அட்டுண், 25. பிறரறங்காத்தல், 26. தண்ணீர்ப் பந்தர், 27. மடம், 28. தடம், 29. கா, 30. ஆவுறிஞ்சுதறி, 31. ஏறுவிடுத்தல், 32. விலையுயிர் கொடுத்துக் கொலையுயிர் மீட்டல்.

[மகப்பால் + வார்த்தல்.]

மகப்பெறுவித்தல் *maga-p-peṟuvittal,* பெ.(n.) முப்பத்திரண்டறங்களுள் மகவைப் பெறுவித்தல் ஆகிய அறம்; rendering assistance in child-birth, an act of charity, one of thirty two deeds.

[மக + பெறுவித்தல்.]

மகப்பேறு *maga-p-pēṟu,* பெ.(n.) பிள்ளைப் பேறு; giving birth to a child. *"மன்னன் மகப்பேற்றின் மனங்களித்து" (பிரமோத்.8, 122).*

[மகவு + பேறு.]

மகம் *magam,* பெ.(n.) ஈகம்; sacrifice. *"மகந்தான் செய்து வழி வந்தார்" (திருவாச. 21, 3).*

மகம்பூ *magam-pū,* பெ.(n.) பெருஞ்சீரகம் (சங்.அக.); common arise.



மகமாயி *magamāyi,* பெ.(n.) 1. மலைமகள்; *Pārvati. "பூதநாயக டத்துக் காமி மகமாயி" (திருப்பு.641).* 2. பெரியம்மைக்குரிய தேவதை; the Goddess of small-pox (Loc).

மகமுறை *maga-muṟai,* பெ.(n.) 1. விருந்து (அக.நி.); feast. 2. வேள்வி செய்யும் முறைமை (யாழ்.அக.); method of performing sacrifices.

மகமேரு *maga-mēru,* பெ.(n.) மகாமேரு பார்க்க; see *magā-mēru.*

மகமை[1] *magamai,* பெ.(n.) பொதுச் செயல்களுக்காக விரும்பிச் செலுத்தப்படும் ஒரு சிறு தன்னார்வ வரி; a voluntary tax or cess for common cause. *"திருமாலை திருவிளக்குவாகிய கயிங்கரியங்களுக்காக மகமை திட்டம் செய்து தானம்" (ஆவணம்–1, கல்–இரண்டாம் பகுதி.1).*

மகமை[2] *magamai,* பெ.(n.) குத்தகை (கொ. நா. ஆவ.74, பக்.309); tenure, lease.

மகமை[3] *magamai,* பெ.(n.) 1. கோயில் அறச்சாலை முதலியவற்றின் செலவுக்காக தண்டப்படும் வரி; contribution in grain for a temple or attram, levied from cultivators now given optionally, tax or contribution levied for a religious or charitable purpose bearing a certain definite preparation (R.F.). *"மானிய நிலம்பதி மகமையென்பதும்" (செவ்வந்திபு. உறையூர். 31).* 2. வணிகர்கள் தங்கள் ஊதியத்தில் இருந்து அறத்திற்குக் கொடுக்கும் தொகை; donation for charity consisting of a fixed percentage on the profits of commercial transactions. 3. நிலவரி வகை; an ancient land tax (S.I.I. vi, 187) (I.M.P. Cg.519).

மகரக்குறுக்கம் *magara-k-kuṟukkam,* பெ.(n.) தன் மாத்திரையின் அளவில் குறைந்த மகரமெய்; shorthand (ம்) as in போன்ம், one of ten *cārpeḻuttu* q.v. (Gram.) (நன்.96).

ம + கரம் – மகரம். மகரம் + குறுக்கம். கரம் – எழுத்துச் சாரியை. கரம், காரம், கான் என்னும் மூன்றும் பழந்தமிழ் எழுத்துச் சாரியைகள். இவற்றுள் கரம். கான் இரண்டும் நெட்டெழுத்திற்கு வாரா. ஆயினும் கரம், காரம், கான் இம்மூன்றும் குற்றெழுத்துச் சாரியைகளாய் வரும் (தொல். எழுத்து.137,உரை.).கரம் குற்றெழுத்திற்கும் காரம் நெட்டெழுத்திற்கும் சொல்லும் வழக்கு அச்சாரியைகளில் அமைந்துள்ள குறில் நெடில் வடிவங்களால் ஏற்பட்டதென்க. உயிரெழுத்தின் உதவியின்றித் தாமாக வொலிக்காத மெய் எழுத்துக்களை ஒலிப்பித்தல் பொருட்டும், தாமாக ஒலிக்கும் உயிரெழுத்துகளையும் எளிதாக ஒலிப்பித்தற் பொருட்டும், சில துணையொலிகளைப் பண்டைத் தமிழிலக்கண நூலார் அமைத்துள்ளனர். அவை எழுத்துச் சாரியை எனப்படும்.

வடமொழியாளர் கரம், காரம் என்னும் இரண்டையே தமிழினின்று கொண்டுள்ளனர். அதோடு குறிற்கு இரண்டையும் வேறுபாடின்றி ஆள்வர். இதனாற் சாரியையமைப்பின் தமிழ்மூலம் தெளிவாகத் தெரிகிறது. கரம், காரம் என்பன வடமொழியில் கர, கார என்று ஈறுகெட்டு நிற்கும். சாரியை என்னும் குறியீடும் வடமொழியிலில்லை (வ.வ.299).

மகரகந்தம் *magarakandam,* பெ.(n.) வெங்காயம் (சங்.அக.); onion.

மகரகாலம் *magara-kālam,* பெ.(n.) மா; mango.

மகரசகா *magara-cakā,* பெ.(n.) மருதோன்றி வகை (சங்.அக.); a kind of henna with ever-fresh flowers (சா.அக.).

மகரசால் *magarasāl,* பெ.(n.) மாமரம் (சா.அக.); mango tree (சா.அக.).

மகரசாலம் *magara-cālam,* பெ.(n.) மகர காலம் பார்க்க (சங்.அக.); see *magara-kālam* (சா.அக.).

மகரசிதம் *magara-cidam,* பெ.(n.) கொன்றை மரம்; a tree *konrai* (சா.அக.).

மகரசியா *magaraciyā,* பெ.(n.) செழுமலர்க் கொன்றை; large flower cassia - *Cassia florida* (சா.அக.).

மகரதம் *magaradam,* பெ.(n.) கொடிவேலி என்னுஞ் செடி; a plant, *plumbago zetanka* (சா.அக.).

மகரவிரி *magara-viri,* பெ.(n.) மகரவிருத்தி பார்க்க; see *magara-virutti* (சா.அக.).

மகரவிருத்தி *magara-virutti,* பெ.(n.) சேம்பு; a kind of Indian kales-*Tuber-colocasia* (சா.அக.).

மகரவேதிகம் *magara-vēdigam,* பெ.(n.) வாலுளுவை மரம்; intellect tree (சா.அக.).

மகரிப்பு *magarippu,* பெ.(n.) கையாந்தகரை எனுஞ் செடி; a plant (சா.அக.).

மகருதம் *magarudam,* பெ.(n.) கொடிவேலி எனும் நிலைத் திணை(மலை.); ceylon leadwort.

மகரை *magarai,* பெ.(n.) கடல்மீன் வகை; a sea-fish (இ.வ.).

மகலிங்கம் *maga-liṅgam,* பெ.(n.) மரவகை; weavers beam, *Sehrebera swietenioides* (L.).

மகவளர்த்தல் *maga-vaḷarttal,* பெ.(n.) மகவு வளர்த்தல் பார்க்க (சூடா.); see *magavu-vaḷarttal.*

மகவன் *magavan,* பெ.(n.) மகவான் பார்க்க (யாழ்.அக.); see *magavān.*

மகவாட்டி *magavāṭṭi,* பெ.(n.) மக்கட் செல்வமுடையவள் (யாழ்.அக.); woman blessed with children.

[மக→மகவாட்டி.]

மகவாதநோய் *maga-vāda-nōy,* பெ.(n.) ஒரு நோய்; complicated rhematic diseases (சா.அக.).

மகவாதரோகம் *magavāda-rōgam,* பெ.(n.) மகவாதநோய் பார்க்க; see *magavāda-nōy* (சா.அக.).

மகவான்[1] *magavān,* பெ.(n.) மகப்பேறுடையவன்; one who has children. *"தன் மசகனூறு மகவானாகச் செய்யும்" (தேவை.16).*

[மக→மகவான்.]

மகவான்[2] *magavān,* பெ.(n.) 1. இந்திரன்; Indiran. *"மகவான்மக ளிரங்கின னரற்ற" (பாரத. பதின்மூன்.168).* 2. சிவன் (சங்.அக.); lord *Śivan.*

மகவான்[3] *magavān,* பெ.(n.) யாகஞ் செய்பவன்; sacrificer. *"வேதாவை மிக்க மகவானாகக் கூட்டி" (தேவை.15).*

மகவின்கோள் *magavin-kōḷ,* பெ.(n.) வியாழன் எனும் கோள் (நாமதீப.100); the planet jupiter.

[மகவு →மகவின் + கோள்.]

மகவு *magavu,* பெ.(n.) 1. குழந்தை (திவா.); infant. *"மகவுமுலைவருட" (கம்பரா.தைல.13).* 2. மகன்; son. *"கொண்டதோர் மகவி னாசை" (அரிச்.பு.மயான.20).* 3. கோட்டில் வாழ் விலங்கின் பிள்ளை (தொல். பொருள். 569); young of animals living on trees, as of monkeys.

[முல் = இளமைக் கருத்துவேர். முல்→முள் →முளை. முள்→மள்→மள→மழ = இளமை, குழந்தை. மழ→மக→மகவு (வே.க.4:60).]

மகவுவளர்த்தல் *magavu-vaḷarttal,* பெ. (n.) முப்பத்திரண்டறங்களுள் குழந்தைகளை வளர்த்தலாகிய அறம் (பிங்.); fostering children, an act of charity, one of thirty two good deeds (q.v.).

[மக→மகவு + வளர்த்தல்.]

மகப்பால்வார்த்தல் பார்க்க.

மகவேள்வி *maga-vēḷvi,* பெ.(n.) ஆண் மகப்பேறு விரும்பிச் செய்யும் வேள்வி; sacrifice performed for obtaining male child. *"மிக்க மகவேள்விசெய் விருப்புடைய னாகி" (திருவிளை. தடாதகை.7).*

[மக → மகவு + வேள்வி.]

மகள் *magaḷ,* பெ.(n.) 1. பெண்மகவு; daughter. *"நல்கூர்ந்தார் செல்வமகள்" (கலித்.56).* 2. பெண்; woman, female, feminine, damsel. *"ஆய மகணீயாயின்" (கலித்.107).* 3. மனைவி; wife. *"மனக்கினியாற்கு நீ மகளாயதூஉம்" (மணிமே.21, 30). "பெண்மை அடுத்த மகள் என்கிளவியும்" (தொல்.சொல்.165).* 4. பெண் தெய்வம்; goddess. *திருமகள் (உ.வ.).* 5. தெய்வத்தாய்; god mother. *நிலமகள் (உ.வ.).*

[முல் (இளமைக் கருத்து வேர்)→முள்→முளை. முளையான் = சிறுவன். முள்→மள்→மழ = இளமை, இளமைக்குரிய மென்மை. மழ→மக→மகள் (வே.க.4:60).]

(மழ = மென்மை, இளமை. குழந்தைகளில் பெண்ணாயினும் ஆணாயினும் மென்மையும் இளமையும் பொதுவாதலின் பால்காட்டும் ஈறே ஆண் குழந்தையையும் பெண் குழந்தையையும் வேறுபடுத்தும். அள் – பெண்பாலீறு).

மகளிக்கீரை *magaḷi-k-kīrai,* பெ.(n.) கீரை வகை (யாழ்.அக.); cockscomb greens, quail grass-*Celosia argentea.*

மகளிர் *magaḷir,* பெ.(n.) பெண்கள்; woman. *"வசையில் வாழ்க்கை மகளிர் மலைத்தலல்லது" (புறநா.10). "பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ் பொற்கொடி மகளிரும் மைந்தரும் கூடி நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்" (வெற்றிவேற்கை 55). 'இனம்போன்று இனம்அல்லார் கேண்மை மகளிர் மனம்போல வேறுபடும்' (குறள், 822).*

[மகள்→மகளிர்.]

மகளிர்பருவம் *magaḷir-paruvam,* பெ.(n.) 1. பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற எழுவகைப் பெண் பருவம் (திவா.); stages of woman's life, of which there are seven, viz. *pēdai, pedumbai, maṅgai, maḍandai, arivai, terivai, pēriḷampeṇ.* 2. வாலை, தருணி, பிரவுடை, விருத்தை என்ற நால்வகைப் பெண்பருவம்; stages of woman's life, numbering four, viz. *vālai, taruṇi, piravuṭai, viruttai.*

[மகளிர் + பருவம்.]

மகளிரான்மலர்மரம் *magaḷirāṉ-malar maram-,* பெ.(n.) உயர்பிரிவு (உத்தமசாதி)ப் பெண்களின் தொடுகை முதலிய செய்கைகளால் மலர்வனவாகக் கருதப்படும் மகிழ், ஏழிலைம்பாலை, பாதிரி, முல்லை, புன்னை, குரா, அசோகு, குருக்கத்தி, மரா, சண்பகம் என்ற பத்துவகை மரங்கள்

(இரத்தினச்.41, தலைப்பு); trees and plants believed to blossom by the very touch, look, etc, of woman of the highest class, numbering ten, viz. *magil, ēlilaimpālai, pādiri, mullai, punnai, kurā, ašōgu, kurukkatti, marā, cambagam.*

[மகளிரால் மலரும் மரம்→மகளிரான் மலரும் மரம்→மகளிரான் மலர் மரம்.]

மகளீது *magalīdu,*பெ.(n.) மகிழம்பூ பார்க்க; see *magilampū* (சா.அக.).

மகளோது *magalōdu,*பெ.(n.) நரிப்பாலை பார்க்க; see *nari-p-pālai* (சா.அக.).

மகற்பலம் *magar-palam,*பெ.(n.) பெரும்பலன்; great, strong, important result. *"மகற்பல வாஞ்சைபாலே" (சிவதரு. பரம.47).*

மகன் *magan,*பெ.(n.) 1. ஆண்மகவு; son. *"தன் மகன்றா யுயர்வும்" (தொல்.பொருள். 172).* 2. குழந்தை (வின்.); child. 3. ஆண் பிள்ளை; man, male person. *"செய்ந் நன்றி கொன்ற மகற்கு" (குறள், 110).* 4. சிறந்தோன்; exalted or esteemed or noble person. *"நூல்கற்ற மகன்றுணையா நல்லகொளல்" (நாலடி, 136).* 5. வீரன்; warrior. *'வேந்தன் மனம்போல வந்தமகன்' (பு.வெ.2, 5).* 6. கணவன்; husband. *"நினக்கிவன் மகனாகத் தோன்றியதூஉம்" (மணிமே.21: 29).*

[முல் (இளமைக் கருத்து வேர்)→முள்→முளை. முளையான் = இளையோன், குழவி. முள்→மள். மள்ளன் = இளையோன், வீரன். மள்→மழ = இளமை, இளமைக்குரிய மென்மை. மழ→மக = இளமை, பிள்ளை. மக→மகன் (வே.க.4:6).]

மகன்மை[1] *maganmai,* பெ.(n.) 1. மகன்றன்மை; sonship. *'மகன்மை கொண்டார்' (பெரியபு. தடுத்தாட்.5).* 2. ஆண்டன்மை (யாழ்.அக.); manliness.

[மகன்→மகன்மை.]

மகன்மை[2] *maganmai,* பெ.(n.) பழைய வரிவகை; an ancient tax. *"வலங்கை யிடங்கை மகன்மையும்" (தெ.க.தொ.3, 115).*

[மகமை→மகன்மை.]

மகன்றில் *maganril,* பெ.(n.) ஆண் பெண்களுள் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாத நீர்வாழ் பறவை வகையில் ஆண் பறவை; a male species of aquatic love bird. *"குறுங்காண் மகன்றிலன்ன வுடன்புணர் கொள்கை" (ஐங்குறு.381).*

[மகன்றில் = ஆண் அன்றில்.]



மகனாலிமூலி *maganāli-mūli,* பெ.(n.) சிறுமுன்னைவேர் பார்க்க; see *cirumunnai-vēr* (சா.அக.).

மகாஅவிழ்தம் *magā-avildam,* பெ.(n.) சுக்கு; dried ginger (சா.அக.).

மகாகண்டம் *magā-kandam,* பெ.(n.) பெரிய முள்ளங்கி; large radish-*Raphanus sativus* (சா.அக.).

மகாகண்ணி *magā-kaṇṇi,* பெ.(n.) இந்திர பாடாணம்; a variety of arsenic (சா.அக.).

மகாகணம் *magā-kaṇam,* பெ.(n.) குழந்தைகட்கு நாக்கு, உதடு புண்ணாகி, கண் வெளுத்து, உடல் வெதும்பிக் காணும் ஒருவகைக் கணைநோய்; a congenital disease of the children marked by anemia, ulcerated tongue and lips (சா.அக.).

மகாகற்பம் *magā-kaṟpam,* பெ.(n.) 1. சிறந்த கற்பமூலிகை; a superior drug or herb to prolong life, drug of all healing potency. 2. சித்தர்கள் பயன்படுத்தும் சிறந்த மருந்து; a superior medicinal preparation used by siddars to secure immortal youth (சா.அக.).

மகாகாசம் *magā-kāšam,* பெ.(n.) 1. ஒரு வகைக் காசநோய்; a kind of virulent asthma or bronchitis. 2. பரவெளி; atmosphere or ether (சா.அக.).

மகாகாலங்கம் *magā-kālaṅgam,* பெ.(n.) ஆதண்டை; a thorny shrub (சா.அக.).

மகாகாளி *magā-kāḷi,* பெ.(n.) ஆட்டுச்செவி அல்லது ஆடு தீண்டாப்பாலை; a bitter prostate plant.

மறுவ. ஆடுதின்னாப் பாலை.

மகாகுட்டம் *magā-kuṭṭam,* பெ.(n.) பெரு நோய்; leprosy (சா.அக.).

மகாகும்பி *magā-kumbi,* பெ.(n.) சாம்பற் பூசணி (மலை.); ash-gourd (சா.அக.).

மகாகுமரி *magā-kumari,* பெ.(n.) குங்குமச் செவ்வந்தி; a big variety of red chamomile (சா.அக.).

மகாகுழம்பு *magā-kuḻambu,* பெ.(n.) அகத்தியர் பெருங்குழம்பு; a wax like medicine (சா.அக.).

மகாகெந்தம் *magā-kendam,* பெ.(n.) சீதேவிசெங்கழுநீர் பார்க்க; see *šīdēvi-šeṅkaḻunīr* (சா.அக.).

மகாகெந்தா *magā-kentā,* பெ.(n.) கருப்புக் கடலை; a black bengal gram (சா.அக.).

மகாகோளி *magā-kōḷi,* பெ.(n.) கற்க திரவிய வகை; a medicinal drug. *"வாலுகம் மகாகோளி மகிழம்" (தைலவ.தைல.77).*

மகாசகை *magā-cagai,* பெ.(n.) வாடாத பூவுள்ள மறுதோன்றி மரம்; a tree yielding unfading flowers (சா.அக.).

மகாசங்கம் *magā-caṅgam,* பெ.(n.) 1. எலும்பு; bone. 2. நெற்றி; forehead (சா.அக.).

மகாசாயம் *magā-cāyam,* பெ.(n.) ஆலமரம்; banyan tree (சா.அக.).

மகாசாரக்கந்தம் *magā-cāra-k-kandam,* பெ.(n.) பேரீச்சு; date of wild variety (சா.அக.).

மகாசாரம் *magā-cāram,* பெ.(n.) சிறுவிடு கொள் பார்க்க; see *siṟuviḍu-koḷ* (சா.அக.).

மகாசாலினி *magā-cāliṉi,* பெ.(n.) தின்பீர்க்கு; a climber, species of sponge gourd (சா.அக.).

மகாசிங்கச்சுண்ணம் *magā-ciṅga-c-cuṇṇam,* பெ.(n.) துருசுச் சுண்ணம்; calcined white powder of copper sulphate (சா.அக.).

மகாசித்திரசாயனம் *magā-cittira-šāyaṉam,* பெ.(n.) தாளிப்பனை; talipot palm (சா.அக.).

மகாசிராவி *magā-cirāvi,* பெ.(n.) கோவைக் கொடி; a creeper (சா.அக.).

மகாசிரோட்டம் *magā-cirōṭṭam,* பெ.(n.) நாள்பட்ட வயிற்றுப்போக்கு; chronic diarrhoea (சா.அக.).

மகாசுவாசம் *magā-cuvācam,* பெ.(n.) கண்டத்தில் கலகலவென்று ஒலியுடன் விடும் பெரும் மூச்சு; sound sigh, a disease in which the patient breaths heavily lying sound in the throat, eyes fixed in gaze and with gramps at his sides (சா.அக.).

மகாத்திரம் *magāttiram,* பெ.(n.) தேக்கு; teak (சா.அக.).

மகாத்துருவம் *magā-t-turuvam,* பெ.(n.) வெண்கடம்பு மரம்; white cadamba tree (சா.அக.).

மகாதசம் *magā-dacam,* பெ.(n.) மாவுலிங்க மரம்; the tree mavulingam (சா.அக.).

மகாதமணி *magā-tamaṇi,* பெ.(n.) நெஞ்சகத்தின் இடது பக்கத்தினின்றும் கிளம்பும் ஒரு பெரிய செவ்வரத்தக் குழல்; a large artery starting from the left ventricle of the heart (aorta)(சா.அக.).



மகாதானம் *magā-tāṉam,* பெ.(n.) பெருங் கொட்டை; big seed (சா.அக.).

மகாதி *magāti,* பெ.(n.) திப்பிலி; long pepper plant (சா.அக.).

மகாதிம்பம் *magā-timbam,* பெ.(n.) ஒரு வகைப் பெருமரம்; species of a big tree (சா.அக.).

மகாநங்கை *magānaṅgai,* பெ.(n.) மிளகாய் நங்கை பார்க்க; see *miḷagāy-naṅgai* (சா.அக.).

மகாநந்தை *magā-nandai,* பெ.(n.) கள்; toddy (சா.அக.).

மகாநாரி *magānāri,* பெ.(n.) சுரபுன்னை மரம்; *surabuṉṉai* tree (சா.அக.).

மகாபஞ்சமூலம் *magā-pañja-mūlam,* பெ.(n.) ஐந்து வகை மரத்தின் பட்டைகளைச் சேர்த்தரைத்த கூட்டு; the paste of barks of the five trees or herbs.

ஐவகை மரங்களாவன: 1. வில்வம், 2. முன்னை, 3. ஈகர்மூலி, 4. பாதிரி, 5. பெருமரம்.

மகாபத்திரம் *magā-pattiram,* பெ.(n.) 1. பனை மரம் (சங்.அக.); palmyra tree. 2. வில்வ இலை; leaf of bael tree. 3. தேக்கு; teak (சா.அக.).

மகாபத்திரி *magā-pattiri,* பெ.(n.) சிவப்பாமணக்கு; red castor plant (சா.அக.).

மகாபலம்¹ *magā-palam,* பெ.(n.) வில்வம்; bael (சா.அக.).

மகாபலம்² *magā-palam,* பெ.(n.) 1. கொழிஞ்சி; sylhet orange. 2. தூதுவளை; climbing brinjal. 3. தெங்கு; coconut-plant (சா.அக.).

மகாபலா *magā-palā,*பெ.(n.) 1. பேராமுட்டி; a plant. 2. வரித்தும்மட்டி; stripe country cucumber (சா.அக.).

மகாபலிகம் *magā-paligam,* பெ.(n.) வெள்ளைப் பூசணி; ash gourd (சா.அக.).

மகாபலிபுரம் *magāpalipuram-,* பெ.(n.) மாமல்லபுரம் பார்க்க; see *māmalla-puram.*

மகாபித்தம் *magā-pittam,* பெ.(n.) வில்வ மரம்; bael tree (சா.அக.).

மகாபிராணம் *magā-pirāṇam,* பெ.(n.) காகம்; crow (சா.அக.).

மகாமால் *magāmāl,*பெ.(n.) வில்வ இலை; leaf of bael tree (சா.அக.).

மகாமூர்க்கம் *magā-mūrkkam,* பெ.(n.) நாரத்தை; bitter orange tree (சா.அக.).

மகார்[1] *magār,* பெ.(n.) 1. மகன்கள்; sons. *"அவுணர்கோன் மகார்" (கந்தபு. மூவாயிர. 58).* 2. குழந்தைகள் (பிங்.); children. *"இளந்துணை மகாரின்" (பதிற்றுப். 71:7).*

[முல் (இளமைக் கருத்து வேர்)→முள்→முளை →முளையான் = சிறு குழந்தை, சிறுவன். முள்→மள். மள்ளன் =இளைஞன், மறவன். மள்→மழ = இளமை, இளமைக்குரிய மென்மை, குழந்தை. மழ→மழவு = இளமை, குழந்தை. மழவு→மகவு = குழந்தை, மகன், மரத்தில் வாழும் விலங்கின் குட்டி. மழ→மக→மகள் = பெண், புதல்வி, மனைவி. மகள்→மகன்→மகார் (வே.க.4:7).]

மகாரசிங்கி *magāra-śiṅgi,*பெ.(n.) சினை முட்டை; ovum (சா.அக.).

மகாரசிதகாரம் *magāracitakāram,*பெ.(n.) மிளகு; pepper (சா.அக.).

மகாரசிதம் *magāracitam,*பெ.(n.) மாமரம்; mango tree (சா.அக.).

மகாரம்[1] *magāram,*பெ.(n.) கல்லுப்பு; rock salt.

மகாரம்[2] *magāram,*பெ.(n.) மகாரவெழுத்து; the mystic letter 'ம'.

[ம + காரம்.]

மகரம் பார்க்க; see magaram.

மகாரவி *magāravi,*பெ.(n.) கறுப்பரிசி; black rice (சா.அக.).

மகாரவுப்பு *magāra-v-uppu,* பெ.(n.) கல்லுப்பு (மூ.அ.); rock salt (சா.அக.).

மகாராசயோகி *magārāśa-yōgi,* பெ.(n.) பச்சைக் கற்பூரம்; crude camphor (சா.அக.).

மகாரிட்டம் *magāriṭṭam,* பெ.(n.) மலைவேம்பு; mountain neem (சா.அக.).

மகாலிங்கம் *magāliṅgam,*பெ.(n.) ஒரு மரம்; a tree-weaver bean (சா.அக.).

மகாலோகம் *magālōgam,*பெ.(n.) காகம்; crow (சா.அக.).

மகாவிக்கல் *magā-vikkal,*பெ.(n.) மிகுந்த ஓசையுடன் பிறக்கும் விக்கல்; hiccupps which produces a feeling of crushing pain at the vulnerable parts stretches out the body in full shaking all the limbs and causes severe thirst. It accurs with a considerable force accompanied by a loud sound (சா.அக.).

மகாவிருக்கம் *magā-virukkam,* பெ.(n.) சதுரக்கள்ளி; a kind of square *Spurge - cactus* (சா.அக.).

மகாவிருட்சாதி *magāviruṭcāti,* பெ.(n.) புல்லூரி; a parasite plant (சா.அக.).

மகாவில் *magāvil,* பெ.(n.) பேராமுட்டி எனும் மருந்துச் செடி; a medicinal plant (சா.அக.).

மகாவினிதம் *magā-viṉidam,* பெ.(n.) பேரா முட்டி எனும் மருந்துச் செடி; a medicinal plant (சா.அக.).

மகாவெள்ளை *magā-veḷḷai,* பெ.(n.) படிகக் கல்; a crystal stone (சா.அக.).

மகானிலம் *magā-ṉilam,* பெ.(n.) தகரை; plant (சா.அக.).

மகி *magi,* பெ.(n.) தேவாங்கு; Jemur the Indian sloth (சா.அக.).



மகிடி[1]–த்தல் *magiḍi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. மக்களித்தல் (வின்.); to be sprained, dislocated. 2. தலைகீழாக விழுதல் (இ.வ.), குப்புறக் கவிழ்தல்; to be over turned, to lie down in back.

[மறுக்களி → மக்களி → மகளி → மகடி → மகிடி (கொ.வ.)]

மகிடி[2] *magiḍi,* பெ.(n.) பாம்பாட்டியின் ஊது குழல்வகை; a kind of hautboy used by snake-charmers.

[மகிழ் → மகிழி → மகுழி → மகுடி.]

மனம் மகிழ்த்தும் ஓசைக்குரிய இசைக் கருவி.

மகிடி[3] *magiḍi,* பெ.(n.) 1. மந்திரத்தால் பொருளை மறைத்தலும் அதனைக் கண்டெடுத்தலுமாகிய மந்திரக்காரரிடையே நிகழும் போட்டி; trial of magical powers between two enchanters in which one hides some treasure from the other and challanges him to discover it by mantras. 2. வெளிக்காணாமற் புதைத்தும் புதைத்ததைக் கண்டெடுத்தும் ஆடும் விளையாட்டு வகை (வின்.); common play where things are hidden by one player and discovered by another.

[மகிழ் → மகு → மகுழி → மகுடி. மகிழ்வு மிகுவிக்கும் விளையாட்டு.]

மகுடி என்பது மோடி எனத் திரிந்தது.

மகிடிக்குழல் *magiḍi-kuḻal,* பெ.(n.) மகிடி[2] பார்க்க; see *magiḍi.*

[மகிடி + குழல்.]

மகிடியெடு–த்தல் *magiḍi-y-eḍu-,* 18 செ. குன்றாவி.(v.t.) மகிடியில் மறைந்த பொருளைக் கண்டெடுத்தல் (வின்.); to search for and discover a thing hidden in *magiḍi.*

[மகிடி + எடு–.]

மகிடிவை–த்தல் *magiḍi-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. பொருளை மந்திரத்தால் மறைப்பித்தல்; to hide treasure as magicians. 2. மகிடி விளையாட்டில் ஆடு கருவியைப் புதைத்தல்; to hide a play - thing, as players.

[மகிடி[2] + வை–.]

மகிணன் *maginan*, பெ.(n.) 1. கணவன்; husband. *"நின் மகிணன் றனையும்" (கந்தபு. திருமண.29).* 2. மருதநிலத் தலைவன்; chief of an agricultural tract. *"தலைவன் பெயர் ஊரன் மகிணன்" (இறை. களவி.1, பக்.18).* 3. இறைவன்; lord. *"மதிய மூர்ச டாமோலி மகிணர்" (தக்கயாகப். 111).*

[மகிழ் + நன் – மகிழ்நன் → மகிணன்.]

மகிழ்த்தும் இயல்பினன்.

ஒ.நோ: வாழ்நன் →வாணன்.

மகிமை *magimai*, பெ.(n.) கொங்கணவர் என்னும் பெயரிய சித்தர்; one of the siddhars named *Konganavar*, the author of several Tamil medical works (சா.அக.).

மகிரி *magiri*, பெ.(n.) நீலஞ்சோதி எனுஞ் செடி; a plant called *nilañjoti* (சா.அக.).

மகிழ்[1]–தல் *magil-*, 4 செ.கு.வி.(v.i.) 1. அகங்களித்தல்; to joy, rejoice, exult. *"காணின் மகிழ்ந்துள்ளம்" (குறள், 1057).* 2. உணர்வழிய உவகையெய்துதல்; to forget oneself out of joy. *"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும் கள்ளுக்கில்காமத்திற் குண்டு" (குறள், 1281).* 3. குமிழியிடுதல்; to bubble up in boiling. *'சோறு மகிழ்ந்து வருகிறது' (உ.வ.).*

[முகு →மகு →மகிழ்.]

மகிழ்[2]–தல் *magil-*, 2 செ.குன்றாவி.(v.t.) 1. விரும்புதல்; to wish, desire. *"மங்கலவணியிற் பிறிதணி மகிழாள்" (சிலப்.4: 50).* 2. உண்ணுதல்; to take in drink. *"தேறன் மகிழ்ந்து" (புறநா.129).*

[முகு →மகு →மகிழ்–.]

மகிழ்[3] *magil*, பெ.(n.) 1. இன்பம்; joy exhilaration, happiness. *"மகிழ்சிறந்து" (புறநா.20, 32).* 2. குடிவெறி; intoxication from liquor. *"மகிழ்மிகச் சிறப்ப மயங்கினள் கொல்லோ" (ஐங்குறு.42).* 3. மது; toddy or liquor. *"பிழி மகிழுண்பார் பிறர்" (பு.வெ.2, 11).*

[முகி → மகிழ்.]

மகிழ்[4] *magil*, பெ.(n.) மணமுள்ள மலர் தரும் மரவகை; pointed-leaved ape-flower - *mimusaps elangi*. *"மகிழ்மாலை மார்பினன்" (திவ். திருவாய். 4, 10, 11).*

மகிழ்ச்சி *magilcci*, பெ.(n.) 1. உவகை; joy, pleasure, delight, gladness. *"மன்னா மகிழ்ச்சி யறிவுடையாளர்க ணில்" (நாலடி, 16).* 2. மகிழ்ச்சியணி (சூடா.) பார்க்க; see *magilcci-y-ani*.

[மகிழ் → மகிழ்ச்சி.]

மகிழ்ச்சிநிலை *magilcci-nilai*, பெ.(n.) உள்ள மிகுதி; elation of spirits. *"மார்பன் மடவரற் புணர்ந்த மகிழ்ச்சி நிலை" (பு.வெ.10, பொதுவி. முல்லைப்.1, கொளு).*

[மகிழ்ச்சி + நிலை.]

மகிழ்ச்சியணி *magilcci-y-ani*, பெ.(n.) மகிழ்ந்து சொல்லுகையாகிய அணிவகை (வீரசோ.அலங்.12); figure of speech in which joy is expressed.

[மகிழ்ச்சி + அணி.]

மகிழ்ச்சிவினை *magilcci-vinai*, பெ.(n.) நல்லூழ், நல்வினை, அறம்; religious merit, good destiny or virtue. *"மேவிய மகிழ்ச்சி வினைப் பயனுண் குவர்" (மணிமே. 30:81).*

[மகிழ்ச்சி + வினை.]

மகிழ்த்தாரான் *magil-t-tāran,* பெ.(n.) மன்மதன் (நாமதீப.58, உரை.); *Kāmaṉ,* the Indian cupid.

[மகிழ் + தாரன்.]

மகிழ்நன் *magilnaṉ,*பெ.(n.) 1. மகிணன், 1 பார்க்க; see *magiṇaṉ.* *"மகிழ்நன் மகிழ்நன் பரத்தமை நோவேன் றோழி" (கலித்.75).* 2. மகிணன், 2 பார்க்க; see *magiṇaṉ.* *"எய்தின னாகின்று கொல்லோ மகிழ்நன்" (ஐங்குறு.24).*

[மகிழ் + நன்.]

மகிழ்வு *magilvu,* பெ.(n.) மகிழ்ச்சி பார்க்க; see *magilcci.* *"இன்பமு மகிழ்வு மெங்கும்" (பெரியபு. நாட்டு.31).*

[மகிழ் → மகிழ்வு.]

மகிழடிசேவை *magil-aḍi-cēvai,* பெ.(n.) சென்னை, திருவொற்றியூர்ச் சிவன் கோயிலில் நிகழும் ஒரு திருநாள்; a festival in the siva shrine of *Tiru-v-oṟṟiyūr* of Chennai.

[மகிழடி + சேவை.]

மகிழம் *magilam,*பெ.(n.) மணமுள்ள மரவகை மலர்; pointed - leaved ape-flower. *"வேங்கை மராஅ மகிழம்" (பரிபா.22, 7).*

[மகிழ்→மகிழம். மனம் மகிழ்க்கும் நறுமண முள்ள மலர்.]

மகிழம்பூ[1] *magilam-pū,*பெ.(n.) ஒரு பூவகை; *magilam* a kind of flower, *minu sopāclengi.*



மகிழம்பூ[2] *magilam-pū,*பெ.(n.) புடைவை வகை; a variety of saree. *மகிழம் பூவின் வடிவம் பொறித்த புடவை.*

மகிழம்பூத்தேன்குழல் *magilam-pū-t-tēṉ kulal,*பெ.(n.) மகிழம்பூப் பணிகாரம்; a kind of cake.

[மகிழம்பூ + தேன்குழல்.]

மகிழம்பூப்பணிகாரம் *magilambū-p-paṇigāram,*பெ.(n.) பணியார வகை; a kind of cake made in imitation of *magil* flowers.

[மகிழம்பூ + பணிகாரம்.]

மகிழமரம் *magila-maram,*பெ.(n.) மகிழ்[3] பார்க்க; see *magil.*

[மகிழம் + மரம்.]

மகிழலகு *magil-alagu,*பெ.(n.) மகிழம் விதை (திவ்.இயற்.1, 49); seed of the *magil* tree, formerly used in astrological calculation.

[மகிழ் + அலகு.]

மகிழிசை *magil-iśai,*பெ.(n.) செந்துறைப் பாட்டுள் ஒரு வகை (யாப்.வி.538); a kind of *centurai-p-pāṭṭu.*

[மகிழ் + இசை.]

மகிழின்பரல் *magiḻiṉ-paral,* பெ.(n.) மகிழலகு பார்க்க; see *magiḻ-alagu.*

மகிளம் *magiḷam,*பெ.(n.) பூவிதழ் (யாழ்.அக.); petal.

மகிளி[1]-த்தல் *magiḷi-,*4 செ.கு.வி.(v.i.) மகிடி பார்க்க (வின்.); see *magiḍi.*

மகிளி[2] *magiḷi,*பெ.(n.) 1. மகிளிக்கீரை பார்க்க; see *magiḷi-k-kīrai.* 2. சேறு; mire (Nāñ).

மகிளிக்கீரை *magiḷi-k-kīrai,*பெ.(n.) கீரை வகை (வின்.); a species of greens.

மகிளிப்பருவம் *magiḷi-p-paruvam,* பெ.(n.) சேற்றுக் காலாக உழுது சாகுபடிக்குத் தகுதியான நிலை (நாஞ்.); condition of wet land prepared for *cēṟṟukkāl* cultivation.

[மகிளி+பருவம். மகிளி = சேறு.]

மகினம் *magiṉam,*பெ.(n.) ஆட்சிப் பரப்பு (யாழ்.அக.); jurisdiction of kingdom.

மகீ *magī,*பெ.(n.) மகி பார்க்க (யாழ்.அக.); see *magi.*

மகீசணி *magīcaṇi,* பெ.(n.) ஐந்திலை நொச்சி; a small tree.

மகுடஞ்சூட்டுதல் *maguḍañ-cūṭṭudal,* பெ.(n.) முடிசூட்டு; coronation.

[மகுடம் + சூட்டுதல்.]

மகுடஞ்சூழ்-தல் *maguḍañ-sūḻ-,*2 செ.கு.வி. (v.i.) 1. கண்ணொளி மங்குதல்; to become dim as eye sight. *'அவனுக்குக் கண் மகுடஞ் சூழ்ந்து போயிற்று' (உ.வ.).* 2. செருக்கால் புறக்கணிப்புக்கு ஆளாதல்; to become regardless of others, as one elevated to a high office.

[மகுடம் + சூழ்.]

மகுடம் *maguḍam,* பெ.(n.) 1. மணிமுடி; crown. *"அரக்கன்றன் மகுடம்" (கம்பரா. முதற்போ. 246).* 2. தலைப்பாகை வகை (வின்.); head-dress, turban, cresft, tiara. 3. புனைவான உச்சி; anything crest - like, as the ornamental top of a temple car. 4. பல பாடல்களில் ஒரே வகையில் வரும் முடிவு; finishing part of stanzas in a poem, in the form of a refrain. 5. கட்டுரை முதலியவற்றின் தலைப்பு; title, captain. 6. சிவாகமம் இருபத்தெட்டனுள் ஒன்று (திருமந்.73); an ancient Saiva scripture, one of 28 civākamam, q.v. 7. ஓலைச் சுவடியின் மணி முடிச்சுக் கொண்டை (யாழ்ப்.); ornamental button of an *olai* book. 8. மாதர் காதணி வகை; a ear-ornament worn by women (J.). 9. மத்தளம் முதலியவற்றின் விளிம்பு (சங்.அக.); edge of drums. 10. பறை வகை (நாஞ்.); a kind of drum. 11. ஒளிமங்கல்(வின்.); dimness of vision, obscurity. *'எனக்குக் கண் மகுடமாயிருக்கிறது' (உ.வ.).*

[முகடு (முகடம்)→ மகுடம்.]

மகிழ்→மகிழும்→முகுளம் → முகுடம் → மகுடம். மொட்டுப் போன்ற கூம்பிய மணி முடி.

முகம்→முகடு = மூக்குப்போன்ற கூரையுச்சி. முகடு = உச்சி, வீட்டின் உச்சி, வாணமுகடு, தலை, உயர்வு. முகடு→(முகடம்)→மகுடம். இனி, முகிழ் → முகிழும்→முகுளம்→முகுடம்→மகுடம் = மொட்டுப் போற் கூம்பிய மணிமுடி என்றுமாம்.

வ. மகுட (t.), முகுட (t.) பேராசிரியர் பரோ இச்சொல்லைத் தென் சொல்லென்றே கூறுவர். (The Sanskrit Language p.381) முகுடம் பிறை வடிவினதென்றும், கிரீடம் குவிந்ததென்றும்,

மௌலி மும்முனைய தென்றும் மா.வி.அ.கூறும் (வ.மொ.வ.212, 213) (செல்வி.செப்.78, பக்.11) (மு.தா.105).

மகுடயோகம் *maguḍa-yōgam,* பெ.(n.) ஐந்தாமிடத்திற் குருவும் பத்தாமிடத்திற் சனியும் ஒன்பதாமிடத்திற் பஞ்சமாதிபதியும் இருக்க வரும் நிலை (சங்.அக.); a status, when Jupiter is situate in the fifth, Saturn in the tenth house and the lord of the fifth in the ninth house.

*[மகுடம் + **Skt.**யோகம்.]*

மகுடி *maguḍi,* பெ.(n.) 1. மகிடி[2] பார்க்க; see *magiḍi.* 2. ஓர் இசைக் கருவி; a kind of trumpet or flute. *"மகுடியின் கிளை யிமிழ்த்தனர்" (பாரத.அணி.15).*



மகுமம் *magumam,* பெ.(n.) மார்பு; breast, chest.

[மருமம்→மார்பு, இலை. மருமம்→மகுமம்.]

மகுரக்கா *magurakkā,* பெ.(n.) வழுதலை எனுஞ்செடி; brinjal plant (சா.அக.).

மகுலம் *magulam,* பெ.(n.) மகிழ்பூ; pointed-leaved ape-flower.

மகுளம்பல் *maguḷampal,* பெ.(n.) கவிழ் தும்பை; a species of dead nettle plant (சா.அக.).

மகுளி *maguḷi,* பெ.(n.) 1. ஓசை; sound, noise. *"உருடுடி மகுளியிற் பொருடெரிந் திசைக்கும் கடுங்குரற் குடிஞைய" (அகநா.19).* 3. எட்பயிர் முதலியவற்றிற்கு வரும் அரக்குநோய் (மலைபடு.103); redness, a disease affecting sesame and other plants.

மகுளிபாய்-தல் *maguḷi-pāy-,* 2 செ.கு.வி. (v.i.) நீரின்மையால் எள்ளு முதலிய செடி கொடிகள் செந்நிறமடைதல்; to turn red for want of water, as sesame, etc.

[மகுளி + பாய்-.]

மகூலம் *magūlam,* பெ.(n.) மலர்ந்த பூ; blossom flower.

மங்கணசித்தர் *maṅgaṇa-šittar,* பெ.(n.) ஒரு சித்தர் (அபி.சிந்.); a siddhar.

மங்கம்மாள் *maṅgammāḷ,* பெ.(n.) மதுரையி லிருந்து ஆண்ட நாயக்க வழி அரசி (சி.பெ.அக.); queen of the *Nāyakkar* clan who ruled *Pāṇḍya* Region from *Madurai.*

மங்கல் *maṅgal,* பெ.(n.) 1. கெடுகை; decaying, fading. 2. ஒளி மழுக்கம்; dimness, obscurity, growing dim. 3. இருள் கலந்த நேரம்; darkness, dusk. 4. உளி மழுங்கல்; blunt as edge of chisel.

[முல் (பொருந்தற் கருத்து வேர்)→முள்→மள் →மள்கு. மள்குதல் = ஒளி குறைதல், குறைதல். மள்கு→மழுகு. மழுகுதல் = ஒளி குறைதல். மழுகு →மழுங்கு. மழுங்கல்=ஒளி குறைதல், பொலிவழிதல், கவனிப்பின்றி மறைந்துபோதல், கெடுதல். மழுங்கு →மங்கு→மங்கல் (வே.க.4:59).]

மங்கல்யம் *mańgalyam*, பெ.(n.) மங்கலியம் பார்க்க; see *mańgaliyam*.

[மங்கலியம்→மங்கல்யம்.]

மங்கல்லியம் *mańgalliyam*, பெ.(n.) 1. மங்கலியம் பார்க்க; see *mańgaliyam*. 2. சந்தனம்; sandal wood. 3. தயிர் (யாழ்.அக.); curd. 4. பொன் (யாழ்.அக.); gold. 5. செவ்வீயம் (யாழ்.அக.); red lead.

[மங்கலியம்→மங்கல்லியம்.]

மங்கலக்குடி *mańgala-k-kuḍi*, பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரிக்கரையில் அமைந்துள்ள, தற்போது திருமங்கலக்குடி என வழங்கும் ஊர்; the present Thirumańgala-k-kuḍi situated on the banks of cauvery in Thanjavur Dt. *"மாவிரியும் பொழில் மங்கலக் குடி" (அப்பர் தேவாரம்.187, 2) (இல.ஊ.பெ.).*

[மங்கலம் + குடி.]

மங்கலக்கருவி *mańgala-k-karuvi*, பெ.(n.) 1. மழிப்புக்கத்தி; razor, as used for shaving on auspicious occasions like wedding. *"மங்கலக் கருவி முன்னுறுத்தி வாழ்த்தி" (சீவக.2411).* 2. யாழ் முதலிய இசைக்கருவிகள்; musical instruments, as yāl, etc. *"நங்கை கற்கு மங்கலக் கருவிக்கு" (பெருங்.உஞ்ஞைக்.34, 171).*

[மங்கலம் + கருவி.]

மங்கலக்கிழமை *mańgala-k-kiḷamai*, பெ.(n.) செவ்வாய்க்கிழமை; Tuesday, as the day of Mars. *"மங்கலக் கிழமை தன்னிற் கைப்பலி கொடுத்து" (யசோதர. 2, 58).*

[மங்கலம் + கிழமை.]

செவ்வாய்க் கோளை செவ்வண்ணமாகப் பார்த்தது போலவே செம்மஞ்சள் நிறமாகவும், வடவர் பார்த்திருந்ததால் மஞ்சள்கோளை மங்கலக் கோளாக்கி, அதேபோல் செவ்வாய்க்கிழமை மங்கலக் கிழமையானது போலும்.

மங்கலகரப்புல் *mańgalagara-p-pul*, பெ.(n.) அறுகம்புல்; the doob grass or harialli grass-cynodon dactylon or devil's grass (சா.அக.).

[மங்கலம் →மங்கலகரம் + புல்.]

மங்கலகாரியம் *mańgala-kāriyam*, பெ.(n.) நற்சடங்கு; festive, auspicious or joyous ceremony.

[மங்கலம் + காரியம். மங்கல்→மங்கலம்.]

த. கருமம் > வ. காரியம்.

மங்கலகீதம் *mańgala-gīdam*, பெ.(n.) மங்கலப்பாட்டு பார்க்க; see *mańgala-p-pāṭṭu*. *"மங்கல கீதம் பாட" (கம்பரா.விடை கொடுத்த.5).*

*[மங்கலம் + **Skt.**கீதம்.]*

மங்கலகௌசிகம் *mańgala-koucigam*, பெ.(n.) அராக வகை (வின்.); a musical mode.

*[மங்கலம் + **Skt.**கௌசிகம்.]*

மங்கலகௌசிகை *mańgala-kaucigai*, பெ.(n.) மங்கலகௌசிகம் பார்க்க (வின்.); see *mańgala-kaucigam*.

*[மங்கலம் + **Skt.**கௌசிகை.]*

மங்கலச்செய்கை *mańgala-c-ceygai*, பெ.(n.) மங்கலகாரியம் பார்க்க (வின்.); see *mańgala-kāriyam*.

[மங்கலம் + செய்கை.]

மங்கலச்செறு *mangala-c-ceṟu,* பெ.(n.) மாமல்லபுரத்தை அடுத்த சிறுதாவூர் என்ற ஊரின் அருகிலுள்ள ஊர்; name of a place near *Sirudāvūr* next to *Mamallapuram.* *"எங்கள் ஊர் உக்காவிரி வாய்க்காலுக்குத் தெற்கு மங்கச்செறும்" (தெ.க.தொ.I. கல்.42, 12).*

[மங்கலம் + செறு.]

மங்கலச்சொல் *mangala-c-col,* பெ.(n.) 1. நலத்தைக் குறிக்கும் மொழி (வின்.); auspicious word. 2. வாழ்த்து உரை (வின்.); languages of benediction. 3. செய்யுட்களின் முதலில் வரற்குரிய திரு, பூ, உலக முதலிய நன்மொழிகள் (வெண்பாப். முதல் மொழி.2); particular words or their synonyms considered auspicious to begin a poem with as *tiru, pū, ulagam,* etc.

[மங்கலம் + சொல்.]

மங்கலசூத்திரம் *mangala-šūttiram,* பெ.(n.) மங்கலநாண்; twisted thread in which the *tāli* is strung.

[மங்கலம் + சூத்திரம்.]

மங்கலத்திருநாள் *mangala-t-tirunāḷ,* பெ.(n.) நன்னாள் (மணிமே.10:83); holy day of festival.

[மங்கலம் + திருநாள்.]

மங்கலத்துகில் *mangala-t-tugil,* பெ.(n.) வெண்டுகில்; white cloth, as auspicious. *"மங்கலத் துகிலை வாங்கி" (சீவக. 1146).*

[மங்கலம் + துகில்.]

மங்கலதினம் *mangala-tiṉam,* பெ.(n.) மங்கலநாள் பார்க்க; see *mangala-nāḷ.*

த. நாள்; வ. தினம்.

[மங்கலம் + Skt.தினம்.]

மங்கலதூரியம் *mangala-tūriyam,* பெ.(n.) மங்களஇசை பார்க்க (வின்.); see *mangaḷa-išai.*

[மங்கலம் + தூரியம்.]

மங்கலநதி *mangala-nadi,* பெ.(n.) நன்னீ ராடற்குரிய பேராறு; sacred or holy river.

[மங்கலம் + Skt. நதி.]

மங்கலநாண் *mangala-nāṉ,* பெ.(n.) தாலிச் சரடு; twisted thread in which the *tāli* is strung. *"நிறைநெடு மங்கல நாணோ" (கம்பரா. நகர.2).*

[மங்கலம் + நாண்.]

மஞ்சள்நிறத்த நாண்.



மங்கலநாள் *mangala-nāḷ,* பெ.(n.) நன்னாள்; auspicious day. *"மங்கலநாட் கணித் தறிந்தனன்" (உபதேசகா. சிவ புண்ணிய.60).*

[மங்கலம் + நாள்.]

மங்கலநானம் *mangala-nāṉam,* பெ.(n.) மங்களநீராடல் பார்க்க; see *mangala-nīrāḍal.*

*[மங்கலம் + **Skt.**ஸ்நானம்.]*

மங்கலநீராடல் *mangala-nīrāḍal,* பெ.(n.) நற்செயல் தொடங்கும் போது செய்யும் நீராட்டம்; bath at the commencement of an auspicious ceremony.

[மங்கலம் + நீராடல்.]

மங்கலப்பத்திரிகை *mangala-pattirigai,* பெ.(n.) திருமணவழைப்பு (வின்.); marriage invitation.

*[மங்கலம் + **Skt.**பத்திரிகை.]*

மங்கலப்பாட்டு *mangala-p-pāṭṭu,* பெ.(n.) நன்னாளில் பாடும் பாடல்; music on auspicious occasions.

[மங்கலம் + பாட்டு.]

மங்கலப்பாடகர் *mangala-p-pāḍagar,* பெ.(n.) அரசர் முதலியவரைப் புகழ்வோர் (வின்.); bards, encomiasts.

[மங்கலம் + பாடகர்.]

மங்கலப்பிரதை *mangala-p-piradai,* பெ.(n.) மஞ்சள் (சங்.அக.); turmeric (சா.அக.).

மங்கலப்புருடன் *mangala-p-puruḍaṉ,* பெ.(n.) 1. மங்கல செயல் செய்யத் தகுதி யுள்ளவன் (வின்.); the proper man to perform or conduct a ceremony or to communicate good tidings, as a married man. 2. எப்பொழுதும் நலந்துய்ப்போன் (இ.வ.); a man who is ever happy.

*[மங்கலம் + **Skt.** புருட(ஷ)ன்.]*

மங்கலப்பேரிகை *mangala-p-pērigai,* பெ.(n.) மங்கல காலங்களில் முழக்கும் முரசம் (வின்.); drum beaten an auspicious occasions.

[மங்கலம் + பேரிகை.]

மங்கலப்பொருத்தம் *mangala-p-poruttam,* பெ.(n.) செய்யுண் முதன் மொழிப் பொருத்தம் பத்தனுள் முதன் மொழியிடத்து மங்கலச் சொல் நிற்பது (வெண்பாப். முதன்மொழி.2); rule of propriety by which a *mangala-c-col* is used at the commencement of a poem, one of ten *ceyyuṇ-mudaṉ-moḻi-p-poruttam.*

[மங்கலம் + பொருத்தம்.]

மங்கலபத்திரம் *mangala-pattiram,* பெ.(n.) திரு முதலிய மங்கலச் சொற்களால் தொடங்கப்படுவதும், தலைவனும் பணியாளனும் உடன்பட்டுச் செய்து கொள்வதுமான ஒப்பந்த ஆவணம்; document indicating an agreement between master and servant embodying the terms of the contract of service, which begins with holy words like tiru, etc.

*[மங்கல + **Skt.** பத்திரம்.]*

மங்கலம்¹ *mangalam,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் மழநாட்டில் இருந்த ஒரூர்; a village in Mazha nadu in Thanjavur Dt. *"மங்கலமானது மங்கலமாகிய வாழ் மூதூர்" (பெரியபு.30, 7).*

மங்கலம்² *mangalam,* பெ.(n.) 1. நலமான தன்மை; auspiciousness, propitiousness. *"குழலினாளை மங்கலக் கடிப்புச் சேர்த்தி" (சீவக.488).* 2. ஆக்கம்; achievement,

மங்கல நாண் வகை

சொக்கர் மீனாட்சி தாலி

செட்டிநாடு தாலி

கேரள தாலி

கேரள தாலி

கிறித்தவர் தாலி

கொழும்பு கிறித்தவர்

கொழும்பு அம்மன்

தென்களை தாலி

வள்ளலார் தாலி

கிறித்தவர் தாலி

கிறித்தவர் தாலி

பிள்ளையார் தாலி

பிள்ளையார் தாலி

முதலியார் தாலி

ஆந்திரா பொட்டு தாலி

நாயுடு தாலி

துளசி தாலி

வொக்காலிகல் தாலி

பிராமின் தாலி

கிறித்தவர் தாலி

முஸ்லிம் தாலி

செட்டிநாடு தாலி

செட்டிநாடு தாலி

தெலுங்கு தத்தாபட்டு தாலி

கொழும்பு தாலி

தெலுங்கு தத்தாபட்டு தாலி

கொழும்பு தாலி

பிராமின் கீழ் துளசி தாலி

வொக்காலிகல் தாலி

கொழும்பு கொம்பு தாலி

means of accomplishment, good fortune. *"விண்வேண்டின் வேறாதன் மங்கலம் வேந்தர்க்கு" (பு.வெ.9, 10).* 3. பொலிவு; splendour. *"மணக்கோல மங்கலம் யாம் பாட" (பு.வெ.9, 22).* 4. நற்செயல் (பிங்.); good deed according to the *śastras.* 5. நன்மை; goodness, honour. *"மங்கலமென்ப மனைமாட்சி" (குறள், 60).* 6. திருமணம்; marriage. *"மங்கல வாழ்த்துப் பாடலும்" (சிலப். பதி.63).* 7. தாலி; marriage badge. *"மற்றை நல்லணிகள் காணுன் மங்கலங் காத்த மன்னோ" (கம்பரா. உருக்காட்டு.35).* 8. கொடை (திவா.); virtue. 9. சிறப்பு; excellence. *"சைவமங்கல வேதி யத் தாபதன்" (திருவிளை. விருத்த.13).* 10. வாழ்த்து; praise, panegyric, blessings. *"மங்கல மொழியும்" (தொல். பொருள்.244).* 11. மங்கலவழக்கு பார்க்க (நன்.267); see *mangala-valakku.* 12. எண் வகை மங்கலம்; eight auspicious objects. *"படிவ மங்கலங் களெட்டும் பரித்து" (திருவிளை. திருமணப். 143).* 13. சேர்க்கை; gathering, collecting. 14. தகனபலி (யாழ்.அக.); funeral oblation.

[மங்கல்→மங்கலம்.]

முல் →முள் →(மள்) →மண். மண்ணுதல் = மழித்தல். இந்தக் கத்தி மண்ணாது என்பது தென்னாட்டு வழக்கு. மள் →மழ் →மழி. மழித்தல் = மொட்டையடித்தல். மள் →மழ →மழுங்கு →மழுங்கன் = வேலைப்பாடில்லாத அணி. மங்கல் என்பது உளி மழுங்கல். மழுங்கு →மங்கு →மங்கல் →மஞ்சல்= மங்கலானநிறம். மங்கல் நிறம் = மஞ்சள் நிறம். வெண்மையுமன்றிப் பச்சையுமன்றி இடை நிகர்த்ததாய் மங்கிய நிறமாக விடுத்தலின் மஞ்சள் நிறம் முதலாவது மங்கல் எனப்பட்டது. மங்கல் → மஞ்சல் →மஞ்சள். ஒ.நோ. கழங்கு →கழஞ்சு. இலங்கு →இலஞ்சு →இலஞ்சி. மஞ்சல் = மஞ்சள் நிறமுள்ள சரக்கு.

தமிழ் நாட்டில் கணவனோடு கூடி வாழும் பெண்டிர் அழகிற்கும் உடல் நலத்திற்கும் மணத்திற்கும் மஞ்சள் தேய்த்துக் குளிப்பது வழக்கமாதலின் மஞ்சட்கும் மஞ்சள் நிறத்திற்கும் மங்கலத் தன்மை ஏற்பட்டு விட்டது. திருமண வரிசையில் வைக்கப்படும் பொருள்களில் மஞ்சளும் ஒன்றாகும். மங்கல் →மங்கலம் = மஞ்சட் பூச்சாற் குறிக்கப் பெறும் மகளிர் வாழ்க்கைநலம். மஞ்சளாலும் மஞ்சள் நிறத்தாலும் குறிக்கப் பெறும். நற்செய்தி (மு.தா.102).

வடவர் காட்டும் மூலம்

மங்க் = செல், இயங்கு. இதன் தவறானப் பொருத்தப்பாட்டினை உய்த்துணர்க.

மங்கலம்பதினாறு *mangalam-patinaru,* பெ.(n.) எண் வகை மங்கலத்தோடு வாள், குடை, ஆலவட்டம், சங்கம், தவிசு, திரு, அரசியலாழி, ஓமாலிகை யென்ற எட்டுஞ் சேர்ந்த பதினாறு வகையான எடுபிடிகள் (பெருங். இலாவண, 5, 26, அரும்.); the sixteen auspicious paraphernalia, including, sword, umberlla, fan, conch, seat, the head ornament *tiru,* royal discus and pots containing fragrant drugs along with *attamangalam.*

[மங்கலம் + பதினாறு.]

மங்கலமகளிர் *mangala-magalir,* பெ.(n.) மங்கலமங்கையர் பார்க்க; see *mangala-mangaiyar. "மங்கல மகளிரொடு மாலைசூட்டி" (புறநா.332).*

[மங்கலம் + மகளிர்.]

மங்கலமங்கையர் *mangala-mangaiyar,* பெ.(n.) வாழ்வரசிகள்; women under coverture. *"மங்கல மங்கையராய் மன்னவர் கன்னியராய்" (பெருந்தொ.969).*

[மங்கலம் + மங்கையர்.]

மங்கலமடந்தை *maṅgala-maḍandai,* பெ.(n.) 1. வாழ்வரசி; married woman, an auspicious. 2. மங்கலாதேவி பார்க்க; see *maṅgalā-dēvi.* *"மங்கல மடந்தை கோட்டத்து" (சிலப்.30: 53).*

[மங்கலம் + மடந்தை.]

மங்கலமரபு *maṅgala-marabu,* பெ.(n.) மங்கல வழக்கு பார்க்க (நன்.266, மயிலை.); see *maṅgala-vaḻakku.*

[மங்கலம் + மரபு.]

மங்கலமாந்தர் *maṅgala-māndar,* பெ.(n.) மங்கல காரியங்களைச் செய்வோர் (பெரியபு. மூர்த்தி.39); those who perform auspicious rites, as in a coronation.

[மங்கலம் + மாந்தர்.]

மங்கலமுகூர்த்தம் *maṅgala-mugūrttam,* பெ.(n.) மங்கலமுழுத்தம் பார்க்க; see *maṅgala-muḻuttam.*

[மங்கலம் + முகூர்த்தம். முழுத்தம் → முகூர்த்தம்.]

மங்கலமுரசு *maṅgala-muraśu,* பெ.(n.) மங்கலப்பேரிகை பார்க்க; see *maṅgala-p-pērigai.* *"மங்கல முரசின மழை யினார்த்தன" (கம்பரா. கடிமண.41).*

[மங்கலம் + முரசு.]

மங்கலமுழவம் *maṅgala-muḻavam,* பெ.(n.) மங்கலப்பேரிகை பார்க்க; see *maṅgala-p-pērigai.* *"மங்கல முழவம் விம்ம" (பாரத. திரௌபதி மாலை.18).*

[மங்கலம் + முழவம்.]

மங்கலமுழுக்கு *maṅgala-muḻukku,* பெ.(n.) நற்செயற் றொடங்குமுன் செய்யும் நீராட்டு; bath at the commencement of an auspicious ceremony.

[மங்கலம் + முழுக்கு.]

மங்கலமுழுத்தம் *maṅgala-muḻuttam,* பெ.(n.) நல்லோரை; auspicious hour.

[மங்கலம் + முழுத்தம்.]

மங்கலமொழி *maṅgala-moḻi,* பெ.(n.) மங்கலச்சொல் பார்க்க; see *maṅgala-c-col.* *"மங்கல மொழியும், வைஇய மொழியும்" (தொல்.பொருள்.244).*

[மங்கலம் + மொழி.]

மங்கலவண்ணம் *maṅgala-vaṇṇam,* பெ.(n.) மங்கலக் குறியான வெண்மைநிறம்; whiteness, as the auspicious colour. *"மங்கல வண்ணமாகிய வெள்ளணியும் அணிந்து" (தொல்.பொருள்.91, உரை).*

[மங்கலம் + வண்ணம்.]

மங்கலவணி *maṅgala-v-aṇi,* பெ.(n.) 1. திருமங்கலியம்; marriage badge. *"அகலுண் மங்கலவணி யெழுந்து" (சிலப். 1:47, அரும்.).* 2. இயற்கையழகு; natural charm or beauty. *"மறுவின் மங்கல வணியே யன்றியும்" (சிலப்.2:63).* 3. மங்கலக்குறியாக அணியும் வெள்ளணி; white cloth or ornament, as worn at a wedding. *"மங்கல வணியினர்" (சீவக.603).*

[மங்கலம் + அணி.]

மங்கலவரிகை *mańgala-varigai,* பெ.(n.) ஒருவனுக்குண்டாகும் நன்மைகளைக் குறிப்பதாகக் கருதப்படும் உள்ளங்கை வரிகை (திருவாரூ.குற.); a kind of distinctive line on the palm of the hand, believed to indicate one's fortune.

[மங்கலம் →மங்களம் + Skt. வரிகை.]

மங்கலவழக்கு *mańgala-vaḻakku,* பெ.(n.) தகுதிவழக்கு மூன்றனுள் மங்கலம் அல்லாததை மங்கலமாகக் கூறும் வழக்கு (நன்.267, உரை.); euphemism, usage of an auspicious word to denote an inauspicious thing one of three *tagudi-vaḻakku,* q.v.

[மங்கலம் + வழக்கு.]

ஒருவர் துன்புறும் போது, அவரை ஆற்றித் தேற்றுவதும் அவரொடு தாமும் சேர்ந்து துன்புறுவதும், உயர்ந்தோர் இயல்பு. கண்ணன்ன கேளிரை இழப்பதும், எரி போன்ற வறுமையால் வாடுவதும் பெருந்துன்பமாம். அத்துன்பங்களை அவற்றிற்குரிய சொல்லாற் குறிப்பினும் அவற்றால் துன்புறுவோர்க்குத் துன்பம் பெருகுமென்று கருதி, இன்பமும் நன்மையும் குறிக்கும் சொற்களால் அவற்றைக் குறித்து வந்தனர் பண்டை மேலோர். இதனை மங்கல வழக் கென்பர் இலக்கணவாசிரியர்.

செத்தானைத் துஞ்சினான் என்றும், சாவைப் பெரும் பிறிது என்றும், சுடுகாட்டை நன்காடு என்றும், தாலியறுதலைத் தாலி பெருகிற்று என்றும் வறுமையை நிரப்பு என்றும், வறுமைப் பாட்டை நல் கூர்தல் என்றும் கூறுவது மங்கல வழக்காம்.

துஞ்சுதல்–தூங்குதல். நிரப்பு–நிறைவு, நல் கூர்தல்–நன்மை மிகுதல். இனி, சாவுக் கேதுவான நச்சுயிரிகளையும் மங்கலச் சொல்லாற் குறிப்பது வழக்கம். எ–டு: நல்ல பாம்பு (சொல்.112).

மங்கலவள்ளை *mańgala-vaḷḷai,* பெ.(n.) உயர்குல மங்கையை ஒன்பது வெண்பாவில் வகுப்புறப் பாடும் சிற்றிலக்கியம் (பிரபந்தம்) (இலக்.வி.); a poem about a lady of noble birth, in nine veṇbās.

[மங்கலம் + வள்ளை.]

மங்கலவாச்சியம் *mańgala-vācciyam,* பெ.(n.) நற்காலங்களில் இசைக்கப்படும் இசைக்கருவி; musical instruments played on auspicious occasion, usually nathasvaram and co-instruments colloq.

[மங்கலம்→மங்களம் + வாச்சியம் (வாத்தியம் →வாச்சியம்).]

மங்கலவார்த்தை *mańgala-vārttai,* பெ.(n.) 1. நன்மொழி; auspicous language. 2. நற் செய்தி; good news. 3. மங்கலச்சொல் பார்க்க; see *mańgala-c-col.*

[மங்கலம் + Skt.வார்த்தை.]

மங்கலவாரம் *mańgala-vāram,* பெ.(n.) 1. நல்லநாள்; auspicious day as Monday or Wednesday or a day when there is a favourable configuration of the planets. 2. மங்களவாரம் பார்க்க; see *mańgala-vāram.*

[மங்கலம் + Skt.வாரம்.]

மங்கலவாழ்த்து *mańgala-vāḻttu,* பெ.(n.) சிற்றிலக்கியத்தின் முதலில் அல்லது இறுதியிற் செய்யப்படும் வழுத்து; salutation, praise, especially in the opening or the conclusion of a poem.

[மங்கலம் + வாழ்த்து.]

மங்கலவினைஞன் *mangala-vinaiñan,* பெ.(n.) 1. முடிதிருத்துவோன்; barber, as doing auspicous work. 2. மங்கலப்புருடன் பார்க்க (வின்.); see *mangala-p-purudan.*

[மங்கலம் + வினைஞன்.]

மங்கலவெள்ளை *mangala-vellai,* பெ.(n.) 1. சிற்றிலக்கியம் தொன்னூற்றாறனுள் சந்தமும் வெண்பாவும் விரவிய ஒன்பது பாடல்களாலேனும், கலிவெண்பா ஒன்றினாலேனும், ஒன்பது வெண்பாக்களினாலேனும், ஒன்பது சந்தங்களினாலேனும் உயர்குடிப் பிறந்த கற்புடை மடந்தையைப் புகழ்ந்துபாடும் சிற்றிலக்கியம் (பன்னிருபா. 300-302); poem on a chaste or continent lady of noble birth in nine mixed stanzàs of *venpā,* and *vaguppu* metre or one *kalivenpā* or nine stanzas either in *venpā* or *vaguppu* metre, one of 96 pirapanthams, q.v. 2. சந்தனக் குழம்பு; sandal paste, as used an auspicious occasions. *"மங்கல வெள்ளை வழித்து" (சீவக.1477).*

[மங்கலம் + வெள்ளை.]

மங்கலவேளை *mangala-vēlai,* பெ.(n.) மங்கலமுழுத்தம் பார்க்க (வின்.); see *mangala-muluttam.*

[மங்கலம் + வேளை.]

மங்கலன் *mangalan,* பெ.(n.) 1. செவ்வாய்; the planet Mars. 2. மங்கலியன் (வின்.) பார்க்க; see *mangaliyan.*

மங்கலாதேவி *mangalā-dēvi,* பெ.(n.) ஒரு பெண் தெய்வம் (சிலப்.30:53, அரும்.); celestial rymph.

[மங்கலம் + தேவி.]

மங்கலி[1] *mangali,* பெ.(n.) இல்லத்தரசி; married woman, as wearing the *tāli.*

[மங்கலம்→மங்கலி.]

மங்கலி[2] *mangali,* பெ.(n.) மங்கலியன் பார்க்க (வின்.); see *mangaliyan.*

[மங்கலம்→மங்கலி→மங்கலியன்.]

மங்கலியக்காரி *mangaliya-k-kāri,* பெ.(n.) 1. மங்கலி பார்க்க; see *mangali.* 2. மனைவி; wife.

[மங்கலம்→மங்கலியம் + காரி. காரி - உடைமை குறித்த பெண்பாலீறு.]

மங்கலியகம் *mangaliyagam,* பெ.(n.) சிறு கடலை வகை (யாழ்.அக.); small bengal gram.

மங்கலியசூத்திரம் *mangaliya-šūttiram,* பெ.(n.) மங்கலசூத்திரம் பார்க்க; see *mangala-šūttiram. "மங்கலிய சூத்திரத்தை யணிந்த மகளிருடனே" (புறநா. 127, உரை).*

[மங்கலம்→மங்கலியம் + சூத்திரம்.]

மங்கலியப்பிச்சை *mangaliya-p-piccai,* பெ.(n.) கணவனுயிரைக் காக்குமாறு மனைவி இரந்து கேட்கை (கொ.வ.); wife's prayer to save her husband's life when he is in dying bed begging for preservation of her tali.

[மங்கலம்→மங்கலி →மங்கலியம் + பிச்சை.]

மங்கலியப்பெண்டுகள் *mangaliya-p-pendugal,* பெ.(n.) 1. வாழ்வரசிகளாய் இறந்தவரும் அவரவர் குடும்பத்தினரால் தெய்வமாகக் கொண்டாடப்படுவோருமாகிய

பெண்டிர்; woman who died during the lifetime of their husbands and are worshiped as deities of their families. 2. வாழ்வரசிகளாய் இறந்த மகளிர் பொருட்டுச் செய்யும் சடங்கு; a feast in honour of *mankaliya-p-penḍugaḷ.*

[மங்கலம்→மங்கலியம் + பெண்டுகள்.]

மங்கலியப்பொருத்தம் *maṅgaliya-p-poruttam,* பெ.(n.) மணப் பொருத்தம்; an agreement of horoscopes of the bride and the bridegroom regarding 'rajju' i.e. safety of *tāli* (astrol).

[மங்கலம் →மங்கலியம் + பொருத்தம்.]

மங்கலியம் *maṅgaliyam,* பெ.(n.) திருமணத்திற் கட்டப்படுந் தாலி; *tāli;* wedding badge.

[மங்கலம்→ மங்கலி→ மங்கலியம்.]

மங்கலியவதி *maṅgaliyavadi,* பெ.(n.) வாழ்வரசி; a married woman.

[மங்கல்→ மங்கலி→ மங்கலியவதி.]

மங்கலியன் *maṅgaliyaṉ,* பெ.(n.) முடி திருத்துவோன்; barber.

[மங்கல்→ மங்கலி →மங்கலியன்.]

மங்கலை[1] *maṅgalai,* பெ.(n.) மருத்துவத்தில் முன்னாளில் சிறந்திருந்த மருத்துவ மங்கை; nick name of a lady who experted herself in maternity cases (சி.பெ.அக.).

மங்கலை[2] *maṅgalai,* பெ.(n.) 1. கணவனோடு வாழ்பவள்; married woman. 2. திருமகள்; *Tirumagaḷ.* 3. மலைமகள்; *Malaimagaḷ.* 4. கொற்றவை; *Koṟṟavai.*

[மங்கலம்→ மங்கலை.]

மங்கலை[3] *maṅgalai,* பெ.(n.) முடி திருத்துவோர் குலப்பெண் (அம்பட்டச்சி) (வின்.); woman of the barber caste.

[மங்கலியன் (ஆ.பா.)→மங்கலை (பெ.பா.).]

மங்களகீதம் *maṅgaḷa-kītam,* பெ.(n.) மங்கலகீதம் பார்க்க (வின்.); see *maṅgala-kītam.*

[மங்கலம் →மங்களம் + Skt.கீதம்.]

மங்களப்பாடகர் *maṅgaḷa-p-pāḍagar,* பெ.(n.) மங்கலபாடகர் பார்க்க (வின்.); see *maṅgala-pāḍagar.*

[மங்கலம்→மங்களம் + பாடகர்.]

மங்களப்பாடவர் *maṅgaḷa-p-pāḍavar,* பெ.(n.) மங்கலபாடகர் பார்க்க (வின்.); see *maṅgala-pāḍagar.*

[மங்கலம் →மங்களம் + பாடவர். பாடகர்→ பாடவர்.]

மங்களம் *maṅgaḷam,* பெ.(n.) மங்கலம் பார்க்க; see *maṅgalam.*

[மங்கலம்→மங்களம்.]

மங்களர் *maṅgaḷar,* பெ.(n.) புத்தருள் ஒருவர் (மணிமே.பக்.369); a Buddha.

மங்களரேகை *maṅgaḷa-rēgai,* பெ.(n.) மங்கலவரிகை பார்க்க; see *maṅgala-varigai.*

[மங்கலம்→மங்களம் + Skt. ரேகை. வரிகை →ரேகை.]

மங்களவாத்தியம் *maṅgaḷa-vāttiyam,* பெ.(n.) மங்கலவாச்சியம் பார்க்க; see *maṅgala-vācciyam.*

[மங்கலம்→மங்களம் + வாத்தியம் (வாத்தியம் →வாச்சியம்).]

மங்களவாரநாள் *maṅgaḷavāra-nāḷ,* பெ.(n.) செவ்வாய்க்கிழமை; Tuesday. *சகாத்தம் 1668 இதில் மேற்செல்லா நின்ற அஷ்செய தை மி மங்கள வாற னாள் பூசனஷத்திரத்தில் (த.மரா.செப்.50, 17–41.)*

மங்களவாரம் *maṅgaḷa-vāram,* பெ.(n.) மங்கலவாரம் பார்க்க; see *maṅgala-vāram.*

[மங்கலவாரம் →மங்களவாரம்.]

மங்களன் *maṅgaḷaṉ,* பெ.(n.) மங்கலன் பார்க்க; see *maṅgaḷaṉ.*

[மங்கலன்→மங்களன்.]

மங்களாசரணை *maṅgaḷā-šaraṇai,* பெ.(n.) வாழ்த்து, வணக்கம், வத்து நிர்த்தேசம் என்ற முப்பகுதியுடைய நூன்முகம்; prefatory verse to a book or poem, of which there are three kinds viz. *vāḻttu, vaṇakkam, vattu-nirtēcam. "வாய்த்த நூன்முகத் துரைக்கு மங்களாசரணை வாழ்த்து வணக்கொடு வத்துநிர்த் தேசமூன்று" (வேதா.சூ.8).*

மங்களாசாரம் *maṅgaḷā-šāram,* பெ.(n.) மங்கலவாழ்த்து பார்க்க; see *maṅgaḷa-vāḻttu. "மங்களாசாரமுரம்பெறு தேவமோதிலக்கணத்தில்" (பிரபோத.11, 4).*

மங்களாரத்தி *maṅgaḷāratti,* பெ.(n.) மங்களாலத்தி பார்க்க; see *maṅgaḷālatti.*

[மங்கலம்→மங்களம் + ஆரத்தி. ஆலத்தி→ ஆரத்தி.]

மங்களாலத்தி *maṅgaḷālatti,* பெ.(n.) 1. கடவுளுக்குச் சுழற்றியெடுக்கும் கருப்பூர ஆரத்தி; waving of camphor before a deity. *"மங்களாலத்தி யானவுடனே வட்டிலிலே திருப்படிக்கத்தை முகந்து" (கோயிலொ.59).* 2. நற்காலங்களில் மஞ்சணீர் சுற்றுகை; ceremony of waving turmeric water in a dish, an auspicious occasion.

[மங்கலம் →மங்களம் +ஆலத்தி. ஆல் + ஆற்று–ஆலாற்று→ ஆலாத்து→ ஆலாத்தி. இனி, ஆலாத்தி→ஆராத்தி→ஆரத்தி என்றுமாம். ஆலாற்றுதல் = சுற்றச் செய்தல். ஆலத்தி பார்க்க.]

மங்களான் *maṅgaḷāṉ,* பெ.(n.) குதிரைச் சாதி வகை (அசுவசா.151); a bread of horse.

மங்களியம் *maṅgaḷiyam,* பெ.(n.) 1. அரச மரம்; a tree. 2. பாலை மரம்; *pālai* tree (சா.அக.).

மங்களூரோடு *maṅgaḷūr-ōḍu,* பெ.(n.) ஒரு வகைத் தட்டோடு; Calicut tiles as from *mangalore.*

[மங்களூர் + ஓடு.]

மங்களூர் எனும் ஊரின் பெயரினால் அமைந்த ஓடு.

மங்களை *maṅgaḷai,* பெ.(n.) 1. மங்கலை[1] பார்க்க; see *maṅgalai. "மலைமக ளிகுளை மங்களை மண்டபமிழைத்து" (காஞ்சிப்பு. மாசாத்.35).* 2. பருவ நிலைகளுள் ஒன்று (வின்.); a period of human life. 3. யோகினி திசையிலொன்று (யாழ்.அக.); a direction in *yōgiṉi.*

[மங்கலை→மங்களை.]

மங்கனிறம் *maṅgaṉiṟam,* பெ.(n.) மங்கின நிறம்; dim or dingy colour.

[மங்கல் + நிறம்.]

மங்காமைகாத்தான் *maṅgāmai-kāttāṉ,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy. *"சீரிய லழகியவாணன் மங்காமை காத்தான்" (பறாளை. பள்ளு.24).*

மங்காரநெய் *maṅgāra-ney,* பெ.(n.) சுறா மீன் நெய்; shark lever oil (சா.அக.).

[மங்காரம் + நெய்.]

மங்காரம் *maṅgāram,* பெ.(n.) சுறாமீன்; shark (சா.அக.).



மங்கிணி *maṅgiṇi,* பெ.(n.) 1. மந்த அறிவுள்ளவ–ன்–ள்; extremely dull person. 2. பயனற்றவ–ன்–ள் (வின்.); mean, worthless person.

[மங்கு →மங்கிணி.]

மங்கிலம் *maṅgilam,* பெ.(n.) காட்டுத்தீ (யாழ். அக.); forest fire.

மங்கு¹–தல் *maṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. குறைதல்; to grow less, to diminish. *"தாக மங்குதலின்மையால்" (விநாயகபு.80, 94).* 2. ஒளி மங்குதல்; to become dim, as light or eye-sight. 3. நிறங்குன்றுதல்; to grow pale, to loose lustre. 4. பெருமை குறைதல்; to be obscured, as splendour, glory, fame, to fade, as beauty, to decline in prosperity, as a religion, to be reduced in circumstance, power or authority. 5. வாட்டமுறுதல்; to be deprived of freshness, as the countenance, power or authority. 6. கெடுதல்; to decay, to be ruined. *"தீவினைத் தெவ்வெனும் பேர் மங்க" (திருநூற்.19).* 7. சாதல்; to die, perish. *"மங்கியு முற்பவித்து முழல் வல்லிடரில்" (திருப்போ. சந்.மட்டுவிருத்.7).*

[முல் (பொருந்தற் கருத்து வேர்)→முள்→மள் →மள்கு. மள்குதல் = ஒளி குறைதல், குறைதல். மள்கு→மழுகு. மழுகுதல் = ஒளி குறைதல். மழுகு→மழுங்கு. மழுங்குதல் = ஒளி குன்றுதல், பொலிவழிதல், கெடுதல். மழுங்கு→மங்கு (வே.க.4:59).]

மங்கு² *maṅgu,* பெ.(n.) 1. கேடு; ruin, loss. 2. வங்கு (வின்.); black spots on the face.

[மழுங்கு→மங்கு.]

மங்கு³ *maṅgu,* பெ.(n.) சாடி (இ.வ.); polished earthern jar.



மங்குங்காலம் *mangun-kālam,* பெ.(n.) தீமைக் காலம்; time of dearth or adversity, unpropitious season. *"மங்குங் காலத்திற்கு மா; பொங்குங் காலத்திற்குப் புளி" (பழ.).*

[மங்கும் + காலம்.]

மா மிகுதியாகக் காய்ப்பின் அந்த ஆண்டு மழை குறைந்து வறட்சி ஏற்படும் என்பதும் புளி மிகுதியாகக் காய்ப்பின் மழை மிகுந்து வளமை மிகும் என்பதும் பொதுவான மக்கள் நம்பிக்கை.

மங்குசனி *mangu-šani,* பெ.(n.) மங்குநோய் முகன் பார்க்க; see *mangu-nōy-mugan.*

*[மங்கு + **Skt.**சனி. சனி = நோய்முகன்.]*

***Skt.** சனி > த. காரி.*

மங்குநோய்முகன் *mangu-nōy-mugan,* பெ.(n.) ஒருவனுடைய வாழ்நாளில் முதலில் வந்து தீமை செய்யும் ஏழரையாண்டுக் காரி; the first period of 7 1/2 years when saturn abides in the 12th, 1st and 2nd house from a person's *cantira-rāši,* indicating mis-fortunes.

மங்குல் *mangul,* பெ.(n.) 1. ஒளிக்குறைவு; dim. 2. கண் தெரியாதவாறு குறைந்த மூடு பனி; fog. *"மங்குல் மனங்கவர" (பு.வெ.9, 45).* 3. இருட்சி; darkness. *"மங்குல் மாப்புகை" (புறநா.4, 103).*4. இரவு (திவா.); night. 5. இருண்ட முகில்; cloud. *"மங்குறோய் மணிமாட..... நெடுவீதி" (தேவா. 41, 7).* 6. கரிய வானம்; sky. *"மங்குல்வாய் விளக்கு மண்டலமே" (திருக்கோ. 177).* 7. வான வெளிப் பக்கமாகிய திசை; direction, point of the compass. *"புயன்மங்குலி னறை பொங்க" (கலித். 105, 25).*

[மங்கு →மங்குல்.]

மங்குல்வாணி *mangulvāṇi,* பெ.(n.) வான் குரல்; voice from the heaven. *"மங்குல் வாணி யுதித்த மட மயிலே" (அருணகிரிபு. அருந்தவ. 162).*

[மங்குல் + வாணி.]

வானி→ வாணி. வானத்திலிருந்து வரும் குரல்.

மங்குலம் *mangulam,* பெ.(n.) 1. மழுக்கம்; cloudiness, murkiness, obscuration. 2. கலக்கம்; perturbation, confusion of mind. 3. முகவாட்டம்; gloominess, gravity of countanance. 4. பார்வை மந்தம்; dullness of the eye, dimness of sight. 5. ஐயம்; uncertainty, doubtfulness. 6. நிறக்குறைவு; Indistinctness, obscure ness, paleness, as of a colour.

[மங்கு→மங்குல்→மங்குலம்.]

மங்குலி *manguli,* பெ.(n.) இந்திரன்; Indran, as the Lord of the clouds. *"அமிர்தங் கடைந்தவ னஞ்ச மங்குலி" (திருப்பு.559).*

[மங்குல்→மங்குலி.]

மங்குளம் *mangulam,* பெ.(n.) மங்குலம் பார்க்க; see *mangulam.*

மங்கை *mangai,* பெ.(n.) 1. பெண்; woman. வாலிழை மடமங்கையர் (புறநா.11). 2. 12 முதல் 13 வயது வரை உள்ள பெண்; a girl between 12 and 13 years. *"மொய் கொண்ட மங்கை யிடங்கடவா மாண்பினாள்" (பதினொ. திருக்கைலாய. உலா.100).* 3. கற்றாழை (சூடா.); aloe. 4. மங்கலம் பார்க்க; see *mangalam. சீவரமங்கை, வரகுண மங்கை.* 5. இதளியம் (சங்.அக.); mercury. 6. பெண் பருவங்களுலொன்று; one of the feminine

stage *மங்கைப் பருவத்தாள் (உ.வ.). "நாளல்லா நாள் பூத்த நன்மலரும் போலுமே ஆளில்லா மங்கைக் கழகு" (மூதுரை, 3).*

[மழுங்கு→மங்கு→மங்கை.]

மணப் பருவத்திற்குரியவர் பதினாறாட்டைப் பருவத்தானும் பன்னீராட்டைப் பருவத்தாளும் என்று அகப்பொருளிலக்கணமும் மாகவானிகர் வண்கை மாநாய்கண் குலக்கொம்பர் ஈகைவான் கொடியன்னாள் ஈராறாண் டகவையாள் (சிலப். மங்கல.23) என்று இளங்கோவடிகளும் கூறுதலையும், பன்னீராட்டைப் பருவத்தார் மங்கை யெனப்படுதலையும் நோக்குக.

மங்கைபங்கன் *maṅgai-paṅgaṉ,* பெ.(n.) மங்கைபாகன் பார்க்க; see *maṅgai-pāgaṉ. "மங்கைபங்கனை மாசிலா மணியை" (தேவா. 549, 5).*

[மங்கை + பங்கன்.]

மங்கைபங்காளன் *maṅgai-paṅgāḷaṉ,* பெ.(n.) மங்கைபாகன் பார்க்க (வின்.); see *maṅgai-pāgaṉ.*

[மங்கை + பங்காளன்.]

மங்கைபாகன் *maṅgai-pāgaṉ,* பெ.(n.) சிவ வடிவங்களுளொன்று; a form of *śiva* half male and half female. *"மங்கை பாகனை நோக்கி" (கம்பரா.அகலிகை.50).*

[மங்கலம் + பாகன்.]

மங்கைமூலி *maṅgai-mūli,* பெ.(n.) வெள்ளை நாயுருவி; a white species of the plant Indian burr (சா.அக.).

மங்கையக்கண்ணி *maṅgaya-k-kaṇṇi,* பெ.(n.) கற்பூரவல்லி; country borage (சா.அக.).

மங்கையர்க்கரசி *maṅgayar-k-karaśi,* பெ.(n.) 1. பெண்களிற் சிறந்தவள்; the best woman. 2. பெண்மைக் குணங்கள் நிறைந்தவள்; the woman who passess all femine qualities.

[மங்கையர்க்கு + அரசி.]

மங்கையர்க்கரசியார் *maṅgayar-k-karaśiyār,* பெ.(n.) நாயன்மார் அறுபத்து மூவருள் நின்ற சீர் நெடுமாறனுடைய தேவியாராகிய சிவனடியார்; the queen of the *Pāṇḍiya* king *Niṉṟacīr-Neḍumāṟa, Nāyaṉār,* a cononized *Śaiva* saint, one of 63.

[மங்கையர்க்கு + அரசியார்.]

மங்கையர்கோன் *maṅgayarkōṉ,* பெ.(n.) திருங்கையாழ்வார்; a *Vaiṇava* saint. *"மங்கையர்கோன்..... அவதரித்த கார்த்திகை நாள்" (உபதேசரத்.9).*

[மங்கு→மங்கை→மங்கையர் + கோன்.]

மங்கஞ்சம்பா *maṅgañ-campā,* பெ.(n.) ஏழு மாதத்திற் பயிராகக் கூடிய சம்பா நெல்வகை (விவசா.2); a kind of *campā* paddy, maturing in seven months.

மங்குநார் *maṅgu-nār,* பெ.(n.) மக்கி உலர்ந்த நார்; fibre of plants, dry and decayed.

[மக்கு → மங்கு + நார்.]

மச்சங்கள் *maccaṅgaḷ,* பெ.(n.) இலாஞ்சன ரோகம்; moles (சா.அக.).

மச்சங்கொல்லி *maccaṅ-kolli,* பெ.(n.) புகையிலை; tobacco (சா.அக.)

மச்சசல்லி *macca-calli,* பெ.(n.) மீன் எலும்பு; fish bone (சா.அக.).

மச்சத்தின்கச்சம் *maccattiṉ-kaccam,* பெ.(n.) மீனெலும்பு (சா.அக.); fish bone, cuttle bone (சா.அக.).

மச்சதாது *macca-tādu,* பெ.(n.) எலும்புக்குள் இருக்கும் ஒருவகை மூலப்பொருள்; marrow of the bone (சா.அக.)

மச்சதேசம் *macca-tēšam,* பெ.(n.) தேசம் ஐம்பத்தாறனுள் ஒன்று; a country in Central India, one of 56 *tecam.*

மச்சப்பொன் *macca-p-poṉ,* பெ.(n.) மாற்றறிய வைத்திருக்கும் மாதிரிப்பொன்; piece of gold kept for a sample.

மச்சம்[1] *maccam,* பெ.(n.) உடம்பிலுண்டாகும் புள்ளி; mole on the skin.

மள் → மய் → மை = கருமை, முகில், காராடு.

மை → மயில் = கரு (நீல) நிறத் தோகையுள்ள பறவை.

மயில் → மயிலை = கருமை கலந்த வெள்ளைக் காளை.

மை → மயிர் = கரியமுடி.

மை → மயி → மசி = கரிய குழம்பு (தஞ்சை நாட்டார் எழுதும் மையை மசியென்றே கூறுவர்).

மசி → மசகு = வண்டிமை.

மச்சு → மச்சம் (மு.தா.181).

மச்சம்[2] *maccam,* பெ.(n.) 1. மச்சப்பொன் பார்க்க; see *macca-p-poṉ.* *"வன்றொண்டர் மச்சம் வெட்டிக் கைக்கொண்டு" (பெரியபு. ஏயர்கோன். 109).* 2. சுவடு, ஏடல்; trace, clue (இ.வ.).

மச்சமாமுகம் *macca-mā-mugam,* பெ.(n.) புல்லுருவி; a parasitic plant (சா.அக.).

மச்சமுனி *macca-muṉi,* பெ.(n.) பதினெண் சித்தருள் ஒருவரும் மருத்துவ நூலியற்றியவருமான ஒரு சித்தர்; reputed mystic, author of treatises on medicine, one of *patiṉeṉ-cittar* q.v.

மச்சரேகை *macc-rēgai,* பெ.(n.) ஆண்மகவு உண்டென்பதைக் குறிக்கும் உள்ளங்கை வரிக்கோடு; a line in the palm of hand, believed to denote the existence of male off spring.

மச்சனம் *maccaṉam,* பெ.(n.) நன்னீராட்டு (ஆறுமுகநா.14); baptism, immersion.

மச்சாக்கி *maccākki,* பெ.(n.) பொன்னாங் கண்ணி (நாமதீப.298); a plant.

மச்சி[1] *macci,* பெ.(n.) மச்சு[4] பார்க்க (சங். அக.); see *maccu.*

மச்சி[2] *macci,* பெ.(n.) 1. பூனைக்காலி; a climbing plant. 2. கிச்சிலி; orange. 3. கணுக்கால் எலும்பு; ankle bone (சா.அக.).

மச்சிக்கண்ணி *macci-k-kaṇṇi,* பெ.(n.) பொன்னாங்கண்ணி; sessile plant (சா.அக.).



மச்சிக்கொடி *macci-k-kodi,* பெ.(n.) பூனைக் காலி; a climbing plant (சா.அக.).

மச்சிகை[1] *maccigai,* பெ.(n.) மோர்; butter-milk (சா.அக.).

[மத்திகை→மச்சிகை. மத்தினால் கடையப்பட்ட மோர்.]

மச்சிகை[2] *maccigai,* பெ.(n.) ஈ (வின்.); fly.

மச்சிப்பாசி *macci-p-pāci,* பெ.(n.) மச்சியாச்சி பார்க்க; see *macci-y-ācci.*

மச்சியாகிதம் *macciyāgitam,* பெ.(n.) பொற்றிலை கரிப்பான்; a eclipse plant (சா.அக.).

மச்சியாங்கண்ணி *macciyān-kanni,* பெ.(n.) பொன்னாங்கண்ணி; sessile plant (சா.அக.).

மறுவ. மச்சியாத்தி, மச்சியாச்சி, மச்சாக்கி.

மச்சியாச்சி *macciyācci,* பெ.(n.) மச்சியாங் கண்ணி பார்க்க; see *macciyān-kanni.*

மச்சிருங்கி *maccirungi,* பெ.(n.) களாவிழுதி; *Indian ipecacuanha* (சா.அக.).

மச்சில் *maccil,* பெ.(n.) மச்சு[1] பார்க்க; see *maccu*[1].

மச்சினேயம் *maccinēyam,* பெ.(n.) கம்பம்புல்; a kind of grass (சா.அக.).

மச்சு[1] *maccu,* பெ.(n.) 1. மட்டமாகச் செங்கல் குத்திப்பாவிய மேற்றளம்; terraced roof, flat-roof. 2. மேற்றளத்திற் பாவும் பலகை (வின்); wainscot ceiling. 3. மேல்மாடம்; upper story. *"மச்சணி மாடங்கள்" (திவ். திருவாய். 5, 9, 3).* 4. உத்தரமட்டத்தின் மேலுள்ள பலகைத் தடுப்பு (வின்.); board partition for the gable of a room or boarded enclosure of an upper room, loft under the roof of a house.

மச்சு[2] *maccu,* பெ.(n.) மச்சுப்பொன் பார்க்க; see *maccu-p-pon.*

மச்சு[3] *maccu,* பெ.(n.) 1. குற்றம் (சங்.அக.); blemish, fault. 2. ஒழுங்கின்மை; that which is improper. *"மச்சிது செய்தார் யாரோ" (பெரியபு. கண்ணப்ப.108).*

[மள்→மரு→மறு = குற்றம். மள்→மச்சு (மு.தா. 182).]

மச்சு[4] *maccu,* பெ.(n.) பூனைக்காலி; cow-hage.

மச்சுகத்தி *maccu-katti,* பெ.(n.) மரஞ் செடிகளைச் சீர்படுத்துங் கத்தி; pruning knife (C.G.).

தெ. மட்சுகத்தி, க. மச்சுகத்தி.

[மச்சு + கத்தி.]



மச்சுக்கல் *maccu-k-kal,* பெ.(n.) மேற்றளத்திற் பதிக்கும் செங்கல் வகை (யாழ்.அக.); ceiling brick.

[மச்சு+கல்.]

மச்சுக்கால் *maccu-k-kāl,* பெ.(n.) விட்டத்தின் நடுக்குத்துக் கால் (வின்.); king-post.

[மச்சு+கால்.]

மச்சுப்பாவு-தல் *maccu-p-pāvu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. மேற்றளத்தைப் பலகை முதலியவற்றால் மூடுதல்; to cover the floor of an upper storey with planks, bricks, etc. 2. மேலிடத்தைப் பலகையாலடைத்தல்; to make a board ceiling.

[மச்சு+பாவு-, பரவு → பாவு-,]

மச்சுப்போ-தல் *maccu-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) 1. மக்குதல்; to decay, rot. 2. சோறு குழைதல் (யாழ்ப்.); to be reduced to a mash by over-boiling, a rice.

[மை-தல்→மை→மச்சு + போ-,]

மச்சுவா *maccuvā,* பெ.(n.) ஏதம் நிகழும் போது பயன்படுத்திக் கொள்வதற்காகத் தோணியில் வைத்திருக்கும் சிறு படகு (க.ப.அக.); life boat.

மச்சுவீடு *maccu-vīḍu,* பெ.(n.) 1. மேற்றள முள்ள கட்டிடம்; house with a terraced roof. 2. பலகையடைப்புள்ள மேன்மாடி வீடு (வின்.); house with a wainscot ceiling.

[மச்சு + வீடு.]



மச்சை[1] *maccai,* பெ.(n.) அம்பெய்தற்குரிய குறி (வின்.); target.

மச்சை[2] *maccai,* பெ.(n.) மச்சம்[2], 3 பார்க்க; see *maccam*[2], *3.*

மச்சை[3] *maccai,* பெ.(n.) 1. எலும்பினுள்ளுள்ள மூளை; marrow of the bones. 2. உட்காய்ச்சல் (யாழ்.அக.); internal fever. 3. மீனம்பர் (யாழ்.அக.); irey amber.

மச்சையுருக்கி *maccai-y-urukki,* பெ.(n.) எலும்பினுட்பசை வற்றுதல்; a trophy of bone marrow (சா.அக.).

மச்சையெலும்பு *maccai-y-elumbu,* பெ.(n.) 1. எருதின் மச்சை யெலும்பு; medulla rubre. 2. நிணவெலும்பு; marrow bone (சா.அக.).

மச்சைவாதம் *maccai-vādam,* பெ.(n.) நாரத்தை; bitter orange (சா.அக.).

மசக்கம் *maśakkam,* பெ.(n.) 1. மயக்கம்; swoon, unconsciousness. 2. மந்தம்; dullness, indolence. *அவன் மசக்கம் பிடித்தவன் (இ.வ.).* 3. மசக்கை பார்க்க; see *maśakkai.*

[முல் (பொருந்தற் கருத்த வேர்)→முள்→முய் →முய→முயகு→முயங்கு. முயங்குதல் = பொருந்துதல், தழுவுதல், புணர்தல், செய்தல். முயங்கிக் கொள்ளுதல் = கணவனும் மனைவியுமாக வாழ்தல். முயங்கு→முயக்கு = தழுவுகை. முயக்கு →முயக்கம் = தழுவுகை, புணர்ச்சி, தொடர்பு. முயக்கு→மயக்கு = போர் செய்கை, கலக்கம். மயக்கு→மயக்கம் = கலப்பு, ஒரு வேற்றுமையுருபு மற்றொரு வேற்றுமைப் பொருளிற் கலத்தல் (வேற்றுமை மயக்கம்). எழுத்துப் புணர்ச்சி, இருபாற் கலப்பாகிய அலி, அறிவின் திரிபு, அறியாமை, காமநோய், உணர்விழப்பு. மயங்கு→மசங்கு→மசக்கு →மசக்கம் (வே.க.4:57).]

மசக்கல் *maśakkal,* பெ.(n.) மசங்கல், 1 பார்க்க; see *maśangal.*

[மயக்கம் →மசக்கம் →மசக்கல்]

மசக்கி *maśakki,* பெ.(n.) அழகாலும் தளுக்காலும் மயக்குபவள் (கொ.வ.); showily attractive woman.

[மயக்கி→மசக்கி.]

மசக்கிவைத்தல் *maśakki-vaittal,* பெ.(n.) நிலத்தை சீர்செய்து சமப்படுத்தி, நல்ல விளைநிலமாக செய்து வைத்தல்; reform the land meliorate. *சங்கரப்பாண்டியன் மாறஞ்துவனன் சிவ பத்தன் மசக்கி வைத்த நிலத்துக்கு கீழ் பாற்கெல்லை இத்தேவர் திருவிளக்கு (தெ.இ.க.தொ.19, கல்.372-3).*

மசக்கு-தல் *maśakku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. மயங்கச் செய்தல்; to charm, bewitch. *"லீலை யிலேயுற முறை மசக்கவும்" (திருப்பு.338).* 2. குழப்புதல்; to confuse, perplex. 3. ஆடையைக் கஞ்சிப் பற்று நீங்கும்படி கசக்குதல்; to crumple, as a cloth to get out the stiffening.

[முல் (பொருந்தற் கருத்து வேர்)→முள்→முய் →முய→முயகு→முயங்கு→மயங்கு→மசங்கு→மசக்கு (வே.க.4:57).]

மசக்குப்பரவிடு-தல் *maśakku-p-para viḍu-,* 18 செ.குன்றாவி.(v.t.) ஐயமுறப்படுதல்; to be confused, as regarding identity. *"தன்னொடு மசக்குப் பரவிடலாம் படியான தேவ சாதியையும்" (ஈடு.2, 2, 5).*

[மயக்கு → மசக்கு + பரவிடுதல்.]

மசக்கை *maśakkai,* பெ.(n.) 1. கருவுற்ற பெண்ணுக்கு உண்டாகும் மயக்கம்; morbid longings of a pregnant woman. 2. சூதகக் கட்டு (பைஷஜ. 258); amenorrhoea.

[மயங்கு → மசங்கு → மசக்கு → மசக்குதல் = மயங்கச் செய்தல், குழப்புதல். மசக்கு→மசக்கம் →மசக்கை (வே.க.4:57).]

மசக்கைக்காரி *maśakkai-k-kāri,* பெ.(n.) மசக்கையாயிருக்கும் கருவுற்ற பெண்; pregnant woman suffering from morning sickness.

[மசக்கை + காரி.]

மசக்கைப்பண்டம் *maśakkai-p-paṇḍam,* பெ.(n.) கருவுற்ற பெண்கள் மசக்கைக் காலத்தில் விரும்பும் தின்பண்டம்; special articles of food, desired by pregnant women.

[மசக்கை + பண்டம்.]

மசகம்[1] *maśagam,* பெ.(n.) 1. கொசுகு (பிங்.); gnat, mosquito. *"மசகந்தர மென்னலாய்" (அஷ்டப். திருவேங்கடத். 59).* 2. நீர்த்துருத்தி (யாழ்.அக.); squirt.

[மசகு →மசகம்.]

மசகம்[2] *maśagam,* பெ.(n.) மயிர் (யாழ்.அக.); hair.

[மள் → (மய்) மை = கருமை, முகில், காராடு, கரிய குழம்பு. மை→மயி →மசி = கரியகுழம்பு (தஞ்சை நாட்டார் எழுதும் மையை மசி யென்றே கூறுவர்). மசி → மசகு = வண்டி மை. மசகு → மசகம் (மு.தா.181).]

மசகம்[3] *maśagam,* பெ.(n.) மயக்கம் (யாழ். அக.); confusion.

[மயக்கம்→மசக்கம்→மசகம்.]

மசகரி *maśakari,* பெ.(n.) 1. மசகாரி (சிலப்.6, 169, அரும்.பாடபேதம்) பார்க்க; see *maśakāri.* 2. திரை (இ.வ.); curtain.

மசகவரி *maśaga-vari,* பெ.(n.) மசகாரி (சீவக.838, உரை.பாடபேதம்) பார்க்க; see *maśakāri.*

மசகாரி *maśakāri,* பெ.(n.) சித்திரப் பணி எழுதியதும் கொசுகுகளை விலக்குவதுமான அமளித் திரை (சிலப்.6, 169, அரும்) (சீவக. 838, உரை); decorated bed-curtain for protection against mosquitoes.

மசகி *maśagi,* பெ.(n.) அத்தி பார்க்க; see *atti.*

மசகிற்புள் *maśagiṟ-puḷ,* பெ.(n.) கடற்பறவை வகை (வின்.); a species of sea-gull.

மசகு[1]-தல் *maśagu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. சுணங்கி நிற்றல்; to linger, loiter, to hang about designedly. 2. மனந்தடுமாறுதல்; to hesitate, to be in suspence, to be undecided or undetermined.

[மசக்கு → மசகு.]

மசகு[2] *maśagu,* பெ.(n.) வைக்கோற் கரியோடு எண்ணெய்த்துணி கலந்து கட்டை வண்டியின் அச்சிலிடும் மை; mixture of oil and burnt straw, used as grease for country carts.

தெ. மசக.

[மள் →(மய்) மை = கருமை, முகில், காராடு, கரியகுழம்பு. மை → மயில் = கரு (நீல) நிறத் தோகையுள்ள பறவை. மயில் → மயிலை = கருமை கலந்த வெள்ளைக் காளை. மை → மயிர் → கரியமுடி. மை → மயி → மசி = கரிய குழம்பு. மசி → மசகு.]

மசங்கல் *maśaṅgal,* பெ.(n.) 1. பகலும் இரவும் கலக்கும் அந்திப்பொழுது (வின்.); twilight of evening. 2. மயக்கம்; confusion, perplexity. *"மசங்கற் சமண் மண்டைக்கையர்" (தேவா.567, 10).*

[மயங்கு → மசங்கு → மசங்கல் (வே.க.4:57).]

பகலும் இரவும் மயங்கும் - அந்திப் பொழுதை அந்தி மயங்கும் நேரம் என்னும் வழக்கை நோக்குக.

மசங்கு-தல் *maśaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. மயங்குதல் (திவா.567, 10); to become confused, to be doubtful. 2. ஒளி குறைதல்; to become dull, to lose lustre. *'மேனியில் வன்னமு மசங் காதோ' (இராமநா. அயோத். 11).* 3. கசங்குதல் (வின்.); to be crumpled, to grow soft by use.

[மயங்கு → மசங்கு-,]

மசடன் *maśaḍaṉ,* பெ.(n.) குணங்கெட்டவன்; person of bad character. *"அசடனை மசடனை ஆசார வீணனை" (திருப்பு.557).*

[மை → மயி → மசி → மச → மசடன்.]

மசண்டை *maśaṇḍai,* பெ.(n.) மசங்கல், 1 பார்க்க; see *maśaṅgal.*

[மச → மசள் → மசண்டை.]

மசண்டைப்பொழுது *maśaṇḍai-p-poḻudu,* பெ.(n.) மசங்கல், 1 பார்க்க; see *maśaṅgal.*

[மசண்டை + பொழுது.]

மசணை *maśaṇai,* பெ.(n.) 1. மந்தன்; dullard, indolent person. 2. நெல்வகை; a kind of paddy.

மசதி *maśadi,* பெ.(n.) கடுகு ரோகிணி; medicinal root (சா.அக.).

மசந்தகடுக்கை *maśanda-kaḍukkai,* பெ. (n.) செழுமலர்க் கொன்றை; large flower cassie (சா.அக.).

மசநாய்க்கடி *maśa-nāy-k-kaḍi,* பெ.(n.) வெறிநாய்க்கடி; rabis do bite hydrophobia (M.L.).

[மச + நாய் + கடி.]

மசம்[1] *maśam,* பெ.(n.) 1. அளவு; measure. 2. சினம்; anger. 3. ஒலி; sound (சா.அக.).

மசம்[2] *maśam,* பெ.(n.) கொசுகு (வின்.); mosquito (சா.அக.).

மசகு[1] *maśagu,* பெ.(n.) நடுக்கடலில் திசை தெரியாது ஆழ்ந்தகன்ற இடம் (யாழ்ப்.); deep sea, far from shore, where there is no mark for guidance.

[மயங்கு → மசகு.]

மசகு[2]–தல் *maśagu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கலங்கி நிற்றல்; to linger, loiter; to hang about designedly. 2. மனந்தடுமாறுதல்; to hesitate; to be in suspense; to be undecided or undetermined.

[முள் → முய் → முய → முயகு → மயகு → மசகு (வே.க.(4:57).]

மசமச–த்தல் *maśa-maśa-,*4 செ.கு.வி.(v.i.) 1. தினவெடுத்தல் (இ.வ.); to itch. 2. செயலை முடிக்க காலந்தாழ்த்தல்; to be slow and indecisive. 3. தெளிவற்று கலங்கலான பார்வை; uncleared sight.

[மய → மயத்தல் = மயங்குதல். மயமயத்தல் = தொடர்ந்து மயக்கத்தை ஏற்படுத்துதல். மயமயத்தல் → மசமச–த்தல்.]

மசமசவெனல் *maśamaśa-v-enal,* பெ.(n.) 1. தினவெடுத்தற் குறிப்பு; itching. 2. தீர்மானமின்றி இழுத்தற்குறிப்பு; wavering, as in speech or action. 3. தெளிவற்ற பார்வையுணரல்; to feel glaring sight.

[மயமய + எனல் → மசமச + எனல் → மச மசவெனல்.]

மசமசெனல் *maśa-maśenal,* பெ.(n.) மசமச வெனல் பார்க்க; see *maśamaśa-v-enal.*

மசரகம் *maśaragam,* பெ.(n.) குருவி; sparrow (சா.அக.).



மசரதம் *maśa-radam,* பெ.(n.) கானல் நீர், பேய்த்தேர்; mirage. *"மசரத மனையவர் வரமும்" (கம்பரா.திருவவ.22).*

[மச + Skt. ரதம்.]

மசரைநோய் *maśarai-nōy,* பெ.(n.) கால்நடை நோய் வகை (பாலவா.1041); a disease of cattle.

மசரோகம் *maśarōgam,* பெ.(n.) 1. மறு; wart. 2. பாலுண்ணி; lichen (சா.அக.).

மசவு *maśavu,* பெ.(n.) மசகு[2] பார்க்க; see *maśagu.*

[மசகு → மசவு.]

மசறி *maśaṟi*,பெ.(n.) மீன் வகை; a kind of fish. *"நெற்றலி யசலிலை மசறி" (குருகூர்ப். 20).*

மசாரகம் *maśāragam*,பெ.(n.) இந்திர நீலமணி; a kind of blue stone (சா.அக.).

மசால் *maśāl*,பெ.(n.) மசாலை பார்க்க; see *maśālai.*

[மசாலை→மசால் (கொச்சை).]

மசாலை¹ *maśālai*, பெ.(n.) கறிச்செலவு; condiments, spices, curry -stuffs.

மசாலை² *maśālai*,பெ.(n.) குதிரை முதலிய விலங்குகட்குக் கொடுக்கும் மருந்து; drugs mashed and given to horse and other animals.

மசாலைமேய்-த்தல் *maśālai-mēy-*, 1 செ.குன்றாவி.(v.t.) குதிரை முதலிய விலங்குகட்கு மசாலை கொடுத்தல் (வின்.); to give *maśālai* as to a horse.

[மசாலை + மேய்-.]

மசானக்கரை *maśāṉa-k-karai*, பெ.(n.) மசானம் பார்க்க; see *maśāṉam.*

[மயானம்→மசானம் + கரை.]

மசானக்கொள்ளை *maśāṉa-k-koḷḷai*, பெ.(n.) பகற்கொள்ளை; day-light robbery. *"மாயாவி தேடிய முதலெல்லாம் மசானக் கொள்ளையாய்ப் போகிறது" (பழ.).*

[மயானம்→மசானம் + கொள்ளை.]

மசானச்சாம்பல் *maśāṉa-c-cāmbal*, பெ.(n.) பிணஞ்சுட்ட சாம்பல்; ashes of the corpse or dead body (சா.அக.).

[மயானம் + சாம்பல்.]

மசானம் *maśāṉam*, பெ.(n.) 1. சுடுகாடு; cremation ground, burial place. 2. சுடலை; cremation ground.

[மயானம் → மசானம். மாய்தல் = மறைதல், இறத்தல்.]

மசி¹-தல் *maśi-*, 2 செ.கு.வி.(v.i.) 1. நெரநெர வென்றிராமல் வழுவழுப்பாயிருத்தல்; to be mashed, worked about with a ladle, reduced to pulp. 2. வளைந்து கொடுத்தல், விட்டுக்கொடுத்தல்; to yield, to be placable. *அவன் இலகுவிலே மசியமாட்டான் (உ.வ.).*

[மத்து→மத்தி. மத்தித்தல் = மத்தினால் கடைந்து கூழாக்குதல். மதி→மசி; மசித்தல் = குழைத்தல். மசிதல் = குழைதல்.]

மசி²-த்தல் *maśi-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கடைந்து அல்லது பிசைந்து குழையச் செய்தல்; to mash, as food, to reduce to a thin pulpy consistence, as greens, fruits. 2. மைக் கட்டியை அல்லது களிம்பை நீரிற் குழைத்து எழுதுமை யுருவாக்குதல்; to prepare by mixing, as ink. *"மசித்து மையை விள்ள வெழுதி" (பதினொ. திருவாலங். மூத்.2).*

[மத்து→மத்தி→மதி→மசி; மத்தித்தல் மத்தினாற் கடைதல். மதித்தல் = குழைத்தல்.]

மசி³ *maśi*, பெ.(n.) 1. கரிய குழம்பு; liquid of thick consistency, paste in ink. *"மசிகலந் தெழுதப்பட்ட" (சூளா.தூது.83).* 2. மசகு² பார்க்க; see *maśagu.*

[மள்→(மய்) மை→மசி. மை = கருமை, முகில், காராடு, கரிய குழம்பு. மை→மசி.]

மசிக்குப்பி *mašai-k-kuppi,* பெ.(n.) மசிக்கூடு பார்க்க (இ.வ.); see *maši-k-kūḍu.*

[மசி³+ குப்பி.]

மசிக்கூடு *maši-k-kūḍu,* பெ.(n.) எழுதுமை வைக்குங் குப்பி; ink-bottle, ink-stand.

[மசி³+கூடு.]



மசிகம் *mašigam,* பெ.(n.) புற்று (சங்.அக.); anthill.

மசிதானி *maši-tāṉi,* பெ.(n.) மசிக்கூடு பார்க்க; see *maši-k-kūḍu.*

மசிபதம் *maši-padam,* பெ.(n.) இறகுத் தூவல் (யாழ்.அக.); quill-pen.

மசிமையிலி *mašimai-y-ili,* பெ.(n.) வெட்க மில்லாதவன்; shameless person. *"வஞ்சகப் பேய்ச்சி பா லுண்ட மசிமையிலீ" (திவ்.நாய்ச்.3, 9),*

[மசிமை + இலி.]

மசியல் *mašiyal,* பெ.(n.) கடைந்து செய்த உணவு முதலியன (வின்.); anything mashed, mash, pulp.

[மத்தி →மதி→மசி→மசியல்.]

மசிர் *mašir,* பெ.(n.) 1. மயிர்; hair. 2. அறுகு; tender bermuda-grass.

[மள் →(மய்) மை = கருமை, முகில், காராடு, கரிய குழம்பு. மை → மயில் = கரு (நீல) நிறத் தோகையுள்ள பறவை, மை →மயிர் = கரிய முடி (மு.தா.181), மயிர்→மசிர் (கொ.வ.).]

மசிரன் *maširaṉ,* பெ.(n.) கூல (தானிய)க் கதிரை அரிக்கும் பூச்சி வகை; insect that eats into the stalks of dry crops.

[மசிர்→மசிரன்.]

மசில் *mašil,* பெ.(n.) மஞ்சில்² பார்க்க; see *mañcil².*

மசினை *mašiṉai,* பெ.(n.) சீமைச் சணல் (புதுவை.); hemp.

மசுக்கரம் *mašukkaram,* பெ.(n.) மூங்கில் (மலை.); spiny bamboo.

மசுரம் *mašuram,* பெ.(n.) கடலை (சங்.அக.); bengal gram (சா.அக.).

மசுரன் *mašuraṉ,* பெ.(n.) மசிரன் பார்க்க; see *maširaṉ.*

மசூரிகை *mašūrigai,* பெ.(n.) 1. ஒருவகை நோய்; a kind of disease. 2. கடலைக் கட்டி; boils of the size of gram (சா.அக.).

மசூரிப்பருப்பு *mašūri-p-paruppu,* பெ. (n.) ஒருவகைப் பருப்பு; a kind of pulse (சா.அக.).

மசை *mašai,* பெ.(n.) 1. மசகு² பார்க்க; see *mašagu. "வண்டிக்கு மசை போட்டாய் விட்டதா" (உ.வ.).* 2. மூடன் (இ.வ.); fool, idiot.

[மசி→மசகு→மசை (கொச்சை).]

மஞ்சக்குடி *mañja-k-kuḍi,* பெ.(n.) அறந்தாங்கி வட்டத்தில் திருப்புரவாசல் அருகில் உள்ள ஊர்; a place near *Thiruppuravasal* in *Aranthangi* Taluk. *"மஞ்சலக்குடிப்பற்றில் ஏம்பலான கலியுகராமநல்லூர்" (தெ.க.தொ. 8, கல். 210–2).*

மஞ்சக்குளிப்பான்பணம் *mañja-k-kuḷippāṉ-paṇam,* பெ.(n.) நாணய வகை; a kind of coin (Tr.Rev.m.ii,217).

மஞ்சகம்[1] *mañjagam,* பெ.(n.) கட்டில் (சங். அக.); bedstead.

மஞ்சகம்[2] *mañjagam,* பெ.(n.) மஞ்சுகம் பார்க்க (சங்.அக.); see *mañjugam.*

மஞ்சகீடம் *mañja-kīḍam,* பெ.(n.) மூட்டைப் பூச்சி (நாநார்த்த.1048); bug.

மஞ்சட்கச்சி *mañjaṭ-kacci,* பெ.(n.) மஞ்சணிறக் காய் காய்க்குந் தென்னை வகை; a species of coconut, bearing yellow nuts.

மஞ்சட்கடம்பு *mañjaṭ-kaḍambu,* பெ.(n.) நீண்ட மரவகை; a kind of cadamba tree (L.).

[மஞ்சள் + கடம்பு. கடம்பு = மரவகை.]

மஞ்சட்கடிதம் *mañjaṭ-kaḍidam,* பெ.(n.) மஞ்சள்கடிதம் பார்க்க; see *mañjaḷ-kaḍidam.*

[மஞ்சள் + கடிதம்.]

மஞ்சட்கடிதாசி *mañjaṭ-kaḍidāśi,* பெ.(n.) மஞ்சள்கடிதம் பார்க்க; see *mañjaḷ-kaḍidam.*

[மஞ்சள் + கடிதாசி.]

மஞ்சட்கடுக்காய் *mañjaṭ-kaḍukkāi,* பெ.(n.) வரிக்கடுக்காய்; a variety of gallnut (சா.அக.).

[மஞ்சள் + கடுக்காய்.]

மஞ்சட்கடுதாசிகொடுத்தல் *mañjaṭ-kaḍudāci-koḍuttal,* பெ.(n.) கடன் இறுக்க முடியாத நிலையேற்படுகை(கொ.வ.); becoming insolvent.

[மஞ்சள்கடுதாசி + கொடுத்தல்.]

மஞ்சட்கரிசாலை *mañjaṭ-kari-sālai,* பெ.(n.) மஞ்சள் பூவிடும் ஒருவகைக் கரிசலாங்கண்ணி (சா.அக.); a variety of eclipse plant bearing yellow flowers.

மறுவ. மஞ்சட்கரிப்பான், பொற்றிலைக் கரிப்பான்.

[மஞ்சள் + கரிசாலை.]



மஞ்சட்கரு *mañjaṭ-karu,* பெ.(n.) முட்டையின் மஞ்சணிறமான உள்ளீடு (வின்.); yolk of an egg.

[மஞ்சள் + கரு.]

மஞ்சட்கல்[1] *mañjaṭ-kal,* பெ.(n.) சொரிப் புள்ளிக் கல் (சா.அக.); a kind of mineral salt.

மஞ்சட்கல்² *mañjaṭ-kal,* பெ.(n.) மஞ்சள் நிறமுடைய கல்; a kind of yellow stone.

[மஞ்சள் + கல்.]

மஞ்சட்கலவாய் *mañjaṭ-kalavāy,* பெ.(n.) செந்நீல நிறமுடையதும் 10 1/2 விரலம் வளரக் கூடியதுமான கடல் மீன் வகை; a sea fish deep purplish-blue, attaining 10 1/2 inch in length, *Serranus flavocaeruleus.*

மஞ்சட்களவாணி *mañjaṭ-kaḷavāṇi,* பெ. (n.) மஞ்சட்டிருடி பார்க்க; see *mañcaṭṭiruḍi* (m.m.).

[மஞ்சள் + களவாணி.]

மஞ்சட்கனிச்சி *mañjaṭ-kaṉicci,* பெ.(n.) எட்டி (சா.அக.); nuxuomica.

மஞ்சட்காசித்தும்பை *mañjaṭ-kāsi-t-tumbai,* பெ.(n.) 1. ஒருவகை நோய்; a kind of disease. 2. பொன்னிறத் தும்பை; flowering plant with yellow flower (சா.அக.).

மஞ்சட்காஞ்சி *mañjaṭ-kāñji,* பெ.(n.) மர வகை; elliptic acuminate small leaved gamboge m.tr. *Garcinia timberti* (L.).

[மஞ்சள் + காஞ்சி.]

மஞ்சட்காணி *mañjaṭ-kāṇi,* பெ.(n.) மண விழாவின் போது பெண்ணுக்குப் பெற்றோர் அன்பளிப்பாக வழங்கும் நிலம்; settlement assignment of land to a daughter, a kind of dowry (C.G.).

[மஞ்சள் + காணி.]

மஞ்சட்காப்பு *mañjaṭ-kāppu,* பெ.(n.) 1. நெற்றியிலிடும் மஞ்சட் பொட்டு; mark of turmeric paste on the forehead, considered a charn. 2. கோயிற் றெய்வங்களுக்குச் சாத்தும் அரைத்த மஞ்சள் விழுது; turmeric paste with which a deity is coated. *"நெய்யிலை யடைக்காய் மஞ்சட் காப்பு" (உபதேசா. சிவத்துரோ.498).* 3. குழந்தைக்கு முதலெழுத்தறிமுகஞ் செய்யும் போது எழுதும் ஒலைக்கு மஞ்சள் பூசுகை; smearing with turmeric the ola leaf on which the first lesson of a child is written. 4.தெய்வங்களுக்கு நேர்த்திக் கடன் செலுத்துவோர் கையில் கட்டும் மஞ்சளில் தோய்த்த துணி; a piece of cloth wet in the turmaric paste tied on the forehand at the occassion of vow made to deity. 5. வினைத் தொடக்கத்தில் கையில் கட்டும் காப்பு மஞ்சள்; to tie an amulet, a yellow string on the arm in token of a vow and as a pledge of its fulfilment.

[மஞ்சள் + காப்பு.]

மஞ்சட்காமாலை *mañjaṭ-kāmālai,* பெ.(n.) குருதியில் பித்தநீர் கலப்பதால் கண்களும் தோலும் மஞ்சள் நிறமடைந்து காணப்படும் ஒரு நோய்; jaundice icterus.

[மஞ்சள் + காமாலை.]

மஞ்சட்காவி *mañjaṭ-kāvi,* பெ.(n.) மஞ்சள் நிறமான காவி; ochre of yellow colour.

[மஞ்சள் + காவி.]

மஞ்சட்காளான் *mañjaṭ-kāḷāṉ,* பெ.(n.) காளான் வகை (வின்.); a yellow mushroom.

[மஞ்சள் + காளான்.]

மஞ்சட்கிலுகிலுப்பை *mañjaṭ-kilu-kiluppai,* பெ.(n.) பெருங்கிலுகிலுப்பை (சித்.அக.); a kind of mattlewort.

மஞ்சட்கிழங்கு *mañjaṭ-kiḻaṅgu,* பெ.(n.) 1. கழிச்சற (பேதி)க் கிழங்கு; rhuberb. 2. குளிக்குமஞ்சள்; turmeric used by women while bathing (சா.அக.).

மஞ்சட்குங்குமத்துக்கழை-த்தல் *mañjaṭ kuṅgumattukkaḻai-,* 4 செ. குன்றாவி. (v.t.) நற்செயல்களில் மஞ்சள் தாம்பூலம் முதலியன பெற்றுக் கொள்ளுதற்குப் பெண்டிரை அழைத்தல்; to invite women folk, on an auspicious occasion when saffron, red powder, betel, etc, are given.

[மஞ்சள்குங்குமத்துக்கு + அழை-,]

மஞ்சட்குச்சி *mañjaṭ-kucci,* பெ.(n.) மர மஞ்சள்; tree turmeric.

[மஞ்சள் + குச்சி.]

மஞ்சட்குப்பஞ்செட்டி *mañjaṭ-kuppañceṭṭi,* பெ.(n.) மஞ்சம்பத்துச்செட்டி பார்க்க (இ.வ.); see *mañjambattu-c-ceṭṭi.*

மஞ்சட்குருவி *mañjaṭ-kuruvi,* பெ.(n.) 1. தூக்கணாங் குருவி; weaver-bird (m.m.1021). 2. குருவி வகை; turmeric bulbul, Ixos luteolus (m.m.102).

[மஞ்சள் + குருவி.]

மஞ்சட்குளி¹-த்தல் *mañjaṭ-kuḷi-,*4 செ.கு.வி. (v.t.) 1. மகளிர் நீராடும் போது உடலுக்கு மஞ்சள் தடவி முழுகுதல்; to smear the face and the body with a thin paste of turmeric, as women in bathing. 2. பெண்டன்மையனாகுதல்; to consider oneself as a woman, said of a man in devision. *'அந்தச் செயலை முடிக்காமற் போனால் நான் மஞ்சட் குளிக்கிறேன்' (இ.வ.).* 3. மர முதலியன மஞ்சள் நிறங் கொள்ளுதல்; to become yellow, as trees in water-logged.

[மஞ்சள் + குளி-த்தல்.]

மஞ்சட்குளி²-த்தல் *mañjaṭ-kuḷi-,*4 செ.கு.வி. (v.i.) பகட்டாய் வாழ்தல்; to lead a fashionable life. *"கொஞ்சி நீ மஞ்சட் குளிக்கிறாய்" (பஞ்ச.திருமுக.1217).*

[மஞ்சள் + குளி-,.]

மஞ்சட்குளி³ *mañjaṭ-kuḷi,*பெ.(n.) 1. மஞ்சள் தேய்த்துக் குளிக்கை; bath after smearing the face and the body with turmeric paste. *"மஞ்சட் குளியை மறவாதே" (விறலிவிடு.).* 2. மஞ்சணீர்விளையாட்டு பார்க்க; see *mañjaṉīr-viḷaiyāṭṭu.*

[மஞ்சள் + குளி.]

மஞ்சட்குறவான் *mañjaṭ-kuṟavāṉ,* பெ.(n.) ஒருவகைக் கடல் மீன்; a kind of sea fish.

[மஞ்சள் + குறவான்.]

மஞ்சட்கூவாளி *mañjaṭ-kūvāḷi,* பெ.(n.) மஞ்சளரளி, மஞ்சள் பூப்பூக்கும் அரளிச்செடி; a plant with yellow flowers.

[மஞ்சள் + கூவாளி.]

மஞ்சட்கெளிறு *mañjaṭ-keḷiṟu,* பெ.(n.) கெளிற்று மீன் வகை; a fish of golden colour.

[மஞ்சள் + கெளிறு.]

மஞ்சட்கொத்து *mañjaṭ-kottu,* பெ.(n.) கிழங்குடன் கூடிய மஞ்சட் செடி; turmeric plant with its cluster of tubers, as auspicious. *'பொங்கலுக்குப் படைக்க மஞ்சட் கொத்து வாங்கி வா' (உ.வ.).*

[மஞ்சள் + கொத்து.]

மஞ்சட்கொம்பு *mañjaṭ-kombu,* பெ.(n.) மஞ்சட்டேறு பார்க்க (இ.வ.); see *mañjaṭṭēṟu.*

[மஞ்சள் + கொம்பு.]

மஞ்சட்கொழுப்பன் *mañjaṭ-koḻuppaṉ,* பெ.(n.) பறவை வகை; Indian oriole, oriolus kundoo.

மஞ்சட்கொன்றை *mañjaṭ-koṉṟai,* பெ.(n.) 1. சிறுமரவகை; sulphur-flowered senna. 2. பிரம்புக் கொன்றை; siamese tree senna.

[மஞ்சள் + கொன்றை.]

மஞ்சட்கோங்கு *mañjaṭ-kōṅgu,* பெ.(n.) சடைக்கோங்கு மரம்; a variety of silk cotton tree.

[மஞ்சள் + கோங்கு.]

மஞ்சட்கோழிமீன் *mañjaṭ-kōḻi-mīṉ,* பெ.(n.) கடல் மீன் வகை; a sea-fish buff, vertically banded; *Chaetodon octofasciatus.*

[மஞ்சள் + கோழிமீன்.]

மஞ்சட்சாமந்தி *mañjaṭ-cāmandi,* பெ.(n.) செவ்வந்தி வகை (வின்.); yellow chrysan-*Themum coronation.*

[மஞ்சள் + சாமந்தி.]

மஞ்சட்சாரி *mañjaṭ-cāri,* பெ.(n.) மஞ்சள் வெற்றிலை; yellow betel leaf (சா.அக.).

[மஞ்சள் + சாரி.]

மஞ்சட்சாரை *mañjaṭ-cārai,* பெ. (n.) 1. பாம்பு வகை (சீவரட்.); yellow rat-snake, *Zaolys mucos* . 2. நச்சுப்பாம்பு வகை; rock snake, *Bungarus fasciatus,* as having yellow marks on the sides of its head (m.m.751).

[மஞ்சள் + சாரை.]



மஞ்சட்சிட்டு *mañjaṭ-ciṭṭu,* பெ.(n.) தூக்கணங் குருவி (இ.வ.); weaver bird.

[மஞ்சள் + சிட்டு.]

மஞ்சட்சித்தகத்தி *mañjaṭ-cittakatti,* பெ.(n.) மஞ்சட் செம்பை; a small tree which bears yellow flowers (சா.அக.).

மஞ்சட்சித்திரப்பூ *mañjaṭ-cittirappū,* பெ.(n.) செவ்வந்திப் பூ; yellow chamomile (சா.அக.).

மஞ்சட்சீனக்கிழங்கு *mañjat-cīṉa-k-kiḻaṅgu,* பெ.(n.) மருந்துச் செடி வகை; indian rhubarh (சா.அக.).

[மஞ்சள் + சீனக்கிழங்கு.]

மஞ்சட்செம்முள்ளி *mañjaṭ-cemmuḷḷi,* பெ.(n.) 1. செம்முள்ளி; thorny nail-dye. 2. செம்முள்ளி வகை; leser yellow nail-dye s.sh., *Barleria cuspidata.* 3. நீலம்பரம்; densespiked blue nail - dye (m.m.558).

[மஞ்சள் + செம்முள்ளி.]

மஞ்சட்செவ்வந்தி *mañjaṭ-cevvandi,* பெ.(n.) மஞ்சட்சாமந்தி பார்க்க (வின்.); see *mañjaṭ-cāmandi.*

[மஞ்சள் + செவ்வந்தி.]

மஞ்சட்சேவிதம் *mañjaṭ-cēvidam,* பெ.(n.) மக்காச்சோளம் பார்க்க; see *makkā-c-cōḷam* (சா.அக.).

மஞ்சட்சோகை *mañjaṭ-cōgai,* பெ.(n.) சோகை நோய் வகை; yellow sickness, cholorosis (M.L.).

[மஞ்சள் + சோகை.]

மஞ்சட்சோளம் *mañjaṭ-cōḷam,* பெ.(n.) சோள வகை (விவசா.3); a kind of maize.

[மஞ்சள் + சோளம்.]

மஞ்சட்டணக்கு *mañjaṭṭaṇakku,* பெ.(n.) கோங்கிலவு; false tragacanth.

[மஞ்சள் + தணக்கு.]

மஞ்சட்டாழை *mañjaṭṭāḻai,* பெ.(n.) தாழை வகை (சித்.அக.); a kind of aloe.

[மஞ்சள் + தாழை.]

மஞ்சட்டி *mañjaṭṭi,* பெ.(n.) மஞ்சிட்டி பார்க்க (வின்.); see *mañjiṭṭi.*

மஞ்சட்டிச்சேலை *mañjaṭi-c-cēlai,* பெ.(n.) சேலை வகை (தெ.க.தொ.7:22); a kind of saree.

[மஞ்சட்டி + சேலை.]

மஞ்சட்டிரளை *mañjaṭṭiraḷai,* பெ.(n.) கணவனை இழந்தவள் ஈமச்சடங்கில் சுற்றத்தார்க்கு வழங்கும் மஞ்சளுருண்டை; ball of turmeric paste given by a widow to her relations at the cremation of her husband, as a token of her blessing.

[மஞ்சள் + திரளை. திரள் →திரளை.]

மஞ்சட்டிருடி *mañjaṭṭiruḍi,* பெ.(n.) முகமும் மூக்கும் மஞ்சள் நிறமாயுள்ள கழுகுவகை; dung kite, *Neophron perenopterus* (m.m.284).

[மஞ்சள் + திருடி.]

மஞ்சட்டுணி *mañjaṭṭuṇi,* பெ.(n.) மஞ்சணீரில் தோய்த்த சீலை (வின்.); cloth dipped in water tinged with turmeric, as auspicious.

[மஞ்சள் + துணி.]

மஞ்சட்டேறு *mañjaṭṭēṟu,* பெ.(n.) மஞ்சட் கிழங்குத் துண்டு (வின்.); small piece of turmeric.

மஞ்சட்டோறு *mañjaṭṭōṟu,* பெ.(n.) மஞ்சட்டேறு (வின்.) பார்க்க; see *mañjaṭṭēṟu.*

மஞ்சட்பட்டி *mañjaṭ-paṭṭi,* பெ.(n.) ஒருவகை மஞ்சட் பூண்டு; guiana golden funnel dog bane (சா.அக.).

மஞ்சட்பால்கொடு-த்தல் *mañjaṭ-pāl-koḍu-,* 4 செ.கு.வி.(v.i.) தத்தெடுத்துக் கொள்ளுதல்; to adopt a child (Loc.).

[மஞ்சள் + பால் + கொடு-.]

மஞ்சட்பாவட்டை *mañjaṭ-pāvaṭṭai,* பெ.(n.) மஞ்சணாறி பார்க்க (வின்.); see *mañjaṇāṟi.*

மஞ்சட்பாவாடை *mañjaṭ-pāvāḍai,* பெ.(n.) சிற்றூர்த் தெய்வங்களை வழிபடும்போது அணிவிக்கும் மஞ்சணீரில் தோய்த்த புத்தாடை; new cloth immensed or dipped in water tinged with turmeric, put on while worshipping village deities.

[மஞ்சள் + பாவாடை.]

மஞ்சட்பூ *mañjaṭ-pū,* பெ.(n.) பவள மல்லிகை; night flowering jasmine.

[மஞ்சள் + பூ.]

மஞ்சட்பூச்சு *mañjaṭ-pūccu,* பெ.(n.) மகளிர் குளிக்கும் போது மஞ்சளரைத்துப் பூசிக் கொள்ளுகை; rubbing the face and body with turmeric paste as woman in bathing.

[மஞ்சள் + பூச்சு.]

மஞ்சட்பூதைவேனை *mañjaṭ-pūtai-vēṉai,* பெ.(n.) ஒருவகை (கற்பக) மூலிகை; a rejuvenating plant which bear yellow flowers (சா.அக.).

மஞ்சட்பொரி *mañjaṭ-pori,* பெ.(n.) சொர்ண பேதி; a mineral dissolving gold (சா.அக.).

மஞ்சணத்தி *mañjaṇatti,* பெ.(n.) நுணா மரம்; a tree with fragrant flowers.

மஞ்சணம் *mañjaṇam,* பெ.(n.) பற்பொடி; dentifrice.

மஞ்சணாங்கு *mañjaṇāṅgu,* பெ.(n.) சோலை கொடுக்காய்ப் புளி; a kind of gamboge.

மஞ்சணாடி *mañjaṇāḍi,* பெ.(n.) வைரமணியின் குற்றங்களுள் ஒன்றாகிய மஞ்சணிறக் கீற்று; yellow streak, a flaw in diamond.

[மஞ்சள் + நாடி.]

மஞ்சணாத்தி *mañjaṇātti,* பெ.(n.) மஞ்சணாறி பார்க்க; see *mañjaṇāṟi.*

[மஞ்சணாறி→மஞ்சணாத்தி.]

மஞ்சணாதி *mañjaṇādi,* பெ.(n.) 1. மரவகை; Indian mulberry, s.tr. *morinda citirifolia.* 2. செடி வகை; dying mulberry, s.sh. *Morinda tinctoria.* 3. கொடி வகை; small ach root s.cl. *Morinda umballata.*

[மஞ்சள் + நாறி.]

மஞ்சணாற்றி *mañjaṇāṟṟi,* பெ.(n.) மஞ்சணாறி பார்க்க (வின்.); see *mañjaṇāṟi.*

[மஞ்சணாறி→ மஞ்சணாத்தி→மஞ்சணாற்றி.]

மஞ்சணாறி *mañjaṇāṟi,* பெ.(n.) ஒரு வகை மரம்; morinda umbellata.

மஞ்சணி *mañjaṇi,* பெ.(n.) வேலிப்பருத்தி (உத்தாமணி); a twining creeper.

மஞ்சணிப்பு *mañjaṇippu,* பெ.(n.) மஞ்சள் நிறம்; yellowness.

மஞ்சணீர் *mañjaṇīr,* பெ.(n.) 1. நற் காலங்களில் பயன்படுத்தும் மஞ்சட் கரைத்த நீர்; water mixed with turmeric and other ingredients, for use on auspicious occasions. 2. திருமணத்தில் விருந்தினர் மீது மஞ்சணீர் தெளிக்கும் நான்காம் நாள்; fourth day of a wedding, as the time for sprinkling turmeric water, as guests.

[மஞ்சள் + நீர்.]

மஞ்சணீர்குடிப்பி-த்தல் *mañjaṇīr-kuḍippi-,* 4 செ.குன்றாவி.(v.t.) தத்தெடுத்துக் கொள்ளுங் குழந்தையை மஞ்சணீர் குடிப்பிக்குஞ் சடங்கினைச் செய்தல் (குருபரம்.354); to make a child drink turmeric-mixed water, as a ceremonial rite in adoption.

[மஞ்சள் + நீர் + குடிப்பி-.]

மஞ்சணீர்ச்சீட்டு *mañjaṇīr-c-cīṭṭu,* பெ.(n.) தத்தெடுப்பதைக் குறிக்கும் ஆவணம்; deed of adoption.

[மஞ்சள் + நீர் + சீட்டு.]

மஞ்சணீர்சுற்று-தல் *mañjaṇīr-šuṟṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) ஆளான (சமைந்த) பெண்ணிற்குச் சடங்கு செய்தல்; to celebrate the puberscence of a girl with the prescribed ceremonies.

[மஞ்சள் + நீர் + சுற்று-.]

மஞ்சணீர்த்திருவிழா *mañjaṇīr-t-tiru-viḻā,* பெ.(n.) இளவேனில் விழா; the spring festival.

[மஞ்சள் + நீர் + திருவிழா.]

மஞ்சணீர்நதி *mañjaṇīr-nadi,* பெ.(n.) மஞ்சணீராறு பார்க்க; see *mañja-ṇīrāṟu.*

[மஞ்சள் + நீர் + **Skt.** *நதி.]*

மஞ்சணீர்ப்பிள்ளை *mañjaṇīr-p-piḷḷai,* பெ.(n.) தத்தெடுத்துக் கொண்ட பிள்ளை; adopted child.

[மஞ்சள் + நீர் + பிள்ளை.]

மஞ்சணீர்விளையாட்டு *mañjaṇīr-viḷaiyāṭṭu,* பெ.(n.) விழா, திருமணம் முதலியவற்றின் முடிவில் மஞ்சணீரிறைத்து விளையாடுகை; play of sprinkling turmeric mixed water at the close of a festival, marriage etc.

[மஞ்சள் + நீர் + விளையாட்டு.]

மஞ்சணீராறு *mañja-ṇīr-āṟu,* பெ.(n.) காஞ்சீபுரத்திற்கருகில் ஓடும் வேகவதியாறு; the river *vēgavadi,* flowing near *kāñjīpuram. 'மஞ்சணீர் நதியின் பாங்கர்' (காஞ்சிப்பு. சார்ந்தா.47).*

[மஞ்சள் + நீராறு.]

மஞ்சணுணா *mañjaṇuṇā,* பெ. (n.) மஞ்சணாறி பார்க்க (வின்.); see *mañjaṇāṟi.*

[மஞ்சள் + நுணா.]

மஞ்சணை[1] *mañjaṇai,* பெ.(n.) சில சாதி மகளிர் கழுத்திலும், சிறுதெய்வங்களின் உருவங்களிலும் பூசப்படும் எண்ணெய்க்

குங்குமம் (குருகூர்ப்பள்ளு, 71); turmeric paint mixed with oil, smeared on the necks of women of certain castes and idols of minor deities.

[மஞ்சள் + நெய். மஞ்சணெய் → மஞ்சணை.]

மஞ்சணை² *mañjaṇai*, பெ.(n.) மஞ்சணாறி, 1 (வின்.) பார்க்க; see *mañjaṇāṟi*.

மஞ்சத்தண்ணீர்கரைத்தல் *mañjaṭ-taṇṇīr-karaittal*, பெ.(n.) பெண் பருவமடைதல் (இ.வ.); attaining puberty, as a girl.

[மஞ்சள் + தண்ணீர் + கரைத்தல்.]

மஞ்சதி *mañjati*, பெ.(n.) கையாந்தகரை என்னுஞ்செடி; a kind of plant.

மஞ்சநீர்த்தகப்பன் *mañja-ṉīr-t-tagappaṉ*, பெ.(n.) தத்தெடுத்துக் கொண்ட தந்தை; (புதுவை.); adoptive father.

[மஞ்சள் + நீர் + தகப்பன்.]

மஞ்சநீலம் *mañja-nīlam*, பெ.(n.) துருசு, துத்தநாகம்; copper sulphate.

மஞ்சப்பத்துச்செட்டி *mañja-p-pattu-c-ceṭṭi*, பெ.(n.) செட்டிச்சாதி வகை; a sub-division of chetties (E.T.ii, 910).

மஞ்சம் *mañjam*, பெ.(n.) 1. கட்டில் (பிங்.); bed-stead, couch, cot. *"மருவிய விறலியோடு மஞ்சநீ டலத்து வைகும்" (திருவாலவா.54, 34).* 2. இருக்கை யிடுதற்குரிய அடித்தளம்; platform, dais. *"மஞ்சமேறி மணித்தவி சேறினார் " (பாரத. குருகுலச்.120).* 3. சப்பரம் (யாழ்ப்.); canopied vehicle for idls.

மஞ்சம்புல்¹ *mañjam-pul*, பெ.(n.) நுணா; morind tinctoria.

மஞ்சம்புல்² *mañjam-pul*, பெ.(n.) எலுமிச்சம் மணமுள்ள ஒருவகைப் புல்; lemon grass-*Androogon schoenanthus.*

மஞ்சமண்டபம் *mañja-maṇḍabam*, பெ.(n.) பள்ளியறை (யாழ்.அக.); bed chamber.

[மஞ்சம் + மண்டபம்.]

மஞ்சமம் *mañjamam*, பெ.(n.) அரக்காம்பல்; red water lilly plant (சா.அக.).

மஞ்சரம்¹ *mañjaram*, பெ.(n.) இலைக்கள்ளி; leafly milk spurge (சா.அக.).



மஞ்சரம்² *mañjaram*, பெ.(n.) முத்து (சிந்தா. நி.); pearl.

மஞ்சரா *mañjarā*, பெ.(n.) மணித்தக்காளி; a plant (சா.அக.).

மஞ்சலன் *mañjalaṉ*, பெ.(n.) வில்லாளி; bowman.

மஞ்சலிக்கான் *mañjalikkāṉ*, பெ.(n.) மஞ்சிலிக்கான் பார்க்க; see *mañjilikkāṉ*.

மஞ்சவாகை *mañja-vāgai*, பெ.(n.) ஒருவகை வாகை; a variety of sirrassa tree.

[மஞ்சள் + வாகை.]

மஞ்சவெய்யில் *mañja-veyyil,* பெ.(n.) மஞ்சள்வெயில் பார்க்க; see *mañjal-veil.*

[மஞ்சள் + வெய்யில்.]

மஞ்சள்[1] *mañjal,* பெ.(n.) 1. செடிவகை; turmeric, curcuma longa. *"மஞ்சள் மெல்லிலை மயிர்ப்புறந் தைவர" (சிறுபாண். 44).* 2. மஞ்சணிறம்; yellow colour, as that of turmeric. *மஞ்சள் வெயில்.* 3. எலுமிச்சை (சங்.அக.); acid lime. 4. மஞ்சட்குருவி பார்க்க; see *mañjat-kuruvi.*

[மங்கல்→மஞ்சள்.]

மஞ்சள்[2] *mañjal,* பெ.(n.) அரிசனம்; Indian saffron.

மஞ்சள் வகைகள் : 1. விரலி மஞ்சள்; 2. சருகு மஞ்சள், 3. பூசு மஞ்சள், 4. கறி மஞ்சள், 5. கூகை மஞ்சள், 6. கத்தூரி மஞ்சள், 7. நாட்டு மஞ்சள், 8. சீமை மஞ்சள், 9. குரங்கு மஞ்சள்.

மஞ்சள்அட்டை *mañjal-aṭṭai,* பெ.(n.) கால் பந்தாட்டத்தில் தவறாக விளையாடிய ஆட்டக்காரரை எச்சரித்துக் காட்டப்படும் அட்டைத்துண்டு; yellow card shown in foot ball match as warning signal.

[மஞ்சள் + அட்டை.]

மஞ்சள்கடம்பை *mañjal-kaḍambai,* பெ.(n.) 1. மஞ்சள் நிறமான கடம்பை; yellow cadamba. 2. மஞ்சட்கடம்பை பார்க்க; see *mañjat-kaḍambai.*

[மஞ்சள் + கடம்பை.]

மஞ்சள்கடிதம் *mañjal-kaḍidam,* பெ.(n.) ஒருவர் கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலையைத் தெரிவிக்கும் அறிவிப்பு; petition given by a debtor unable to pay his debts notice of bankruptey.

[மஞ்சள் + கடிதம்.]

மஞ்சள்கண் *mañjal-kaṇ,* பெ.(n.) ஒரு வகைக் கண்ணோய்; xanthelasma (சா.அக.).

[மஞ்சள் + கண்.]

மஞ்சள்கயிறு *mañjal-kayiṟu,* பெ.(n.) தாலியாக அணியும் மஞ்சள் தடவிய கயிறு; cord soaked in turmeric solution and worn as *tāli.*

[மஞ்சள் + கயிறு.]

மஞ்சள்கரு *mañjal-karu,* பெ.(n.) முட்டையிலுள்ள மஞ்சள் நிறத்திலிருக்கும் உயிர்ப் பொருள்; yolk.

[மஞ்சள் + கரு.]

மஞ்சள்காப்பு *mañjal-kāppu,* பெ.(n.) கோயில் திருவிழாவின் போது இறைப்பற்றாளர்கள் கட்டி கொள்ளும் காப்பு; a piece of cloth with coin wet in the turmaric paste tied on the forehand at the occassion of deity function. *"வெற்றிலை நாற்பதுக்கு நெல்லிரு நாழியும் மஞ்சள் காப்புக்கு நெல்லுரியும் திருமடைப் பள்ளிக்கு விறகுக்கு குசக்கலத்துக்கு நெல் நாழியும்" (தெ.க. தொ.7, 409–6).*

[மஞ்சள் + காப்பு.]

மஞ்சள்குரு *mañjal-guru,* பெ.(n.) எலுமிச்சம் பழம்; lime fruit (சா.அக.).

[மஞ்சள் + குரு.]

மஞ்சள்குருவி *mañjaḷ-kuruvi,* பெ.(n.) குருவி வகை; turmeric bulbul.

[மஞ்சள் + குருவி.]

மஞ்சள்குளி-த்தல் *mañjaḷ-kuḷi-,* 4 செ.கு.வி. (v.i.) மஞ்சட்குளி-த்தல் பார்க்க; see *mañjaṭ-kuḷi-.*

[மஞ்சள் + குரு.]

மஞ்சள்தண்ணீர் *mañjaḷ-taṇṇīr,* பெ.(n.) மஞ்சள்நீராட்டுவிழா பார்க்க; see *mañjaḷ-nīrāṭṭu-viḻā.*

[மஞ்சள் + தண்ணீர்.]

மஞ்சள்தாழை *mañjaḷ-tāḻai,* பெ.(n.) பொன்னிறத் தாழை; golden yellow or yellowish red screw pine very fragrant flower.

[மஞ்சள் + தாழை.]

மஞ்சள்திணை *mañjaḷ-tiṇai,* பெ.(n.) திணை வகை; Italian millet.

[மஞ்சள் + திணை.]

மஞ்சள்திருடி *mañjaḷ-tiruḍi,* பெ.(n.) கழுகு வகை; kind of eagle.

[மஞ்சள் + திருடி.]

மஞ்சள்தெங்கு *mañjaḷ-teṅgu,* பெ.(n.) தென்னை வகை; a variety of coconut tree bearing big coconuts, whose shells are used as vessels.

[மஞ்சள் + தெங்கு.]

மஞ்சள்நாகதாளி *mañjaḷ-nāga-tāḷi,* பெ.(n.) சப்பாத்துக் கள்ளி; cactus *opuntia dillenil.*

[மஞ்சள் + நாகதாளி.]

மஞ்சள்நாங்கு *mañjaḷ-nāṅgu,* பெ.(n.) சோலைக் கொடுக்காய்ப் புளி; a species of gambage.

[மஞ்சள் + நாங்கு.]

மஞ்சள்நாறிப்பட்டை *mañjaḷ-nāṟi-p-paṭṭai,* பெ.(n.) நுணாப்பட்டை; the bark of *nuṇā* tree.

[மஞ்சள்நாறி + பட்டை.]

மஞ்சள்நீர் *mañjaḷ-nīr,* பெ.(n.) 1. முட்டையின் மஞ்சட் கரு; yellow of an egg. 2. மஞ்சள் கரைத்த நீர்; water mixed turmeric. 3. மஞ்சள் நிறமான நீர்; yellow coloured water. 4. மஞ்சள் நிறமான சிறுநீர் (மூத்திரம்); yellow coloured urine.

[மஞ்சள் + நீர்.]

மஞ்சள்நீராட்டு *mañjaḷ-nīrāṭṭu-,* பெ.(n.) மஞ்சள்நீராட்டுவிழா பார்க்க; see *mañjaḷ-nīrāṭṭu-viḻā.*

[மஞ்சள் + நீராட்டு.]

மஞ்சள்நீராட்டுவிழா *mañjaḷ-nirāṭṭu-viḻā,* பெ.(n.) பூப்பெய்திய பெண்களுக்கு நடத்தப்படும் சடங்கு; a ritual bath in turmeric mixed water for a girl who has attained pubterty.

[மஞ்சள் + நீராட்டு + விழா.]

மஞ்சள்மந்தாரை *mañjaḷ-mandārai,* பெ.(n.) மந்தாரை வகை (வின்.); a species of mountain ebony.

[மஞ்சள் + மந்தாரை.]

மஞ்சள்மல்லிகை *mañjal-malligai,* பெ.(n.) மல்லிகை இனத்தைச் சார்ந்த மஞ்சள் நிறமான நச்சுச் செடி; a poisonous climber resembling jasmine creeper with yellow flowers.

[மஞ்சள் + மல்லிகை.]

மஞ்சள்முள்ளங்கி *mañcal-mullangi,* பெ.(n.) கிழங்கு வகை (இ.வ.); carrot-*Daucus carota.*

[மஞ்சள் + முள்ளங்கி.]

மஞ்சள்முளை *mañcal-mulai,* பெ.(n.) இரண்டொரு நாளான நென்முளை (நாஞ்.); paddy seedling, one or two days old.

[மஞ்சள் + முளை.]

மஞ்சள்முளைக்கிடை *mañcal-mulai-k-kidai,* பெ.(n.) விதைத்து இரண்டொரு நாள் சென்றபின் வயலிலிடும் ஆட்டுக்கிடை (நாஞ்.); penning sheep in a field where paddy has been sown recently.

[மஞ்சள் + முளை+ கிடை.]

மஞ்சள்மெழுகு *mañcal-melugu,* பெ.(n.) தேன்மெழுகு; bee's wax.

[மஞ்சள் + மெழுகு.]

மஞ்சள்மேகம் *mañcal-mēgam,* பெ.(n.) மேகநோய்; a kind of venereal disease.

[மஞ்சள் + மேகம்.]

மஞ்சள்வசந்தம் *mañcal-vašandam,* பெ.(n.) ஒரு நற்செயல் (வின்.); a auspicious ceremony in which turmeric - mixed water in sprinkled.

[மஞ்சள் + வசந்தம்.]

மஞ்சள்வரிக்குறவான் *mañcal-vari-k-kuravān,* பெ.(n.) முதுகில் கறுப்பு மஞ்சள் வரிகளையுடைய கடல் மீன்; file fish.

[மஞ்சள்வரி + குறவான்.]



மஞ்சள்வாங்கு-தல் *mañcal-vāngu-,* 5 செ.கு.வி. (v.i.) திருமணம் உறுதி செய்தல்; to settle a marriage.

[மஞ்சள் + வாங்கு-.]

மஞ்சள்வாடை *mañjal-vādai,* பெ.(n.) மகப்பேற்றுப் பெண்களில் அறையிலிடும் மஞ்சட்பொடி மணம் (வின்.); scent of turmeric, as at the house when there is a lying-in.

[மஞ்சள் + வாடை.]

மஞ்சள்விசிறி *mañjal-viširi,* பெ.(n.) சேலை வகை (இ.வ.); a kind of saree.

[மஞ்சள் + விசிறி.]

மஞ்சள்விளையாட்டு *mañjal-vilaiyāttu,* பெ.(n.) மஞ்சணீர்விளையாட்டு பார்க்க (வின்.); see *mañcanir-vilaiyāttu.*

[மஞ்சள் + விளையாட்டு.]

மஞ்சள்வீரி *mañjaḷ-vīri,* பெ.(n.) மணலிக் கீரை (சா.அக.); a bitter kitchen greens (சா.அக.).

[மஞ்சள் + வீரி.]

மஞ்சள்வெயில் *mañcaḷ-veyil,* பெ.(n.) மாலை வெயில் (கொ.வ.); yellow sunshine just before sunset, evening glow.

[மஞ்சள் + வெயில்.]

மஞ்சள்வேட்டி *mañcaḷ-vēṭṭi,* பெ.(n.) மண மகன் முதலியோர் அணியும் மஞ்சணீற் றோய்த்த ஆடை; cloth dyed yellow, as worn by the bridegroom at the time of marriage.

[மஞ்சள் + வேட்டி.]

மஞ்சளரளி *mañjaḷaraḷi,* பெ.(n.) மஞ்சள் நிறத்தில் பூக்கும் அரளி; மலையரளி, தங்க அரளி; exile olender, *thevetia nerifoloia.*

[மஞ்சள் + அரளி.]

மஞ்சளலரி *mañcaḷ-alari,* பெ.(n.) மஞ்சளரளி பார்க்க; see *mañjaḷ-araḷi.*

[மஞ்சள் + அலரி.]

மஞ்சளாலாத்தி *mañcaḷ-ālātti,* பெ.(n.) மஞ்சணீரால் எடுக்கும் ஆரத்தி (வின்.); ceremony of waving turmeric-mixed water to avert the evil eye.

[மஞ்சள் + ஆலாத்தி.]

மஞ்சளாவாரை *mañcaḷ-āvārai,* பெ.(n.) ஆவாரை; a shrub.

[மஞ்சள் + ஆவாரை.]

மஞ்சளி *mañcaḷi,* பெ.(n.) வேலிப் பருத்தி (மலை.); hedge twiner.

மஞ்சளி–த்தல் *mañcaḷi-,* 4 செ.குன்றாவி. (v.t.) மஞ்சணிறமாதல்; to turn-yellow. *"கண்கள் மஞ்சளித்து" (அசுவசா.88).*

[மஞ்சள் → மஞ்சளி–.]

மஞ்சளிளங்கலையன் *mañcaḷ-iḷaṅ-kalaiyaṉ,* பெ.(n.) நெல் வகை; a kind of paddy.

மஞ்சளிளநீர்த்தென்னை *mañcaḷiḷa-nīr-t-teṉṉai,* பெ.(n.) மஞ்சட்தெங்கு பார்க்க; see *mañcaṭ-teṅgu.*

[மஞ்சள் + இளநீர் + தென்னை.]

மஞ்சளிளவஞ்சி *mañcaḷiḷa-vañji,* பெ.(n.) மயில்வஞ்சி எனும் மரம்; a tree.

மஞ்சளெண்ணெய் *mañcaḷ-eṇṇey,* பெ.(n.) 1. மஞ்சள் சேர்த்து வடித்த மருந்தெண்ணெய் (வின்.); a medicinal oil prepared with turmeric. 2. மட்டமான மண்ணெண்ணெய்; crude kerosene (Mod.).

[மஞ்சள் + எண்ணெய்.]

மஞ்சன்¹ *mañcaṉ,* பெ.(n.) மஞ்சணிற முடையவன் (இ.வ.); man of yellow complexion.

[மஞ்சலன் → மஞ்சன்.]

மஞ்சன்² *mañcaṉ,* பெ.(n.) 1. மகன்; son. *"சுந்தரி தரு மஞ்சன்" (கந்தபு. திருவி.81).* 2. ஆண்மகன்; man, young man. *"எழுந்தனர் மஞ்சு தோய்புய மஞ்சரே" (கம்பரா.கைகேசி.55).*

மஞ்சனப்புல் *mañjaṉa-p-pul,* பெ.(n.) மஞ்சம்புல் பார்க்க (வின்.); see *mañjampul.*

[மஞ்சனம் + புல்.]

மஞ்சனி[1] *mañjaṉi,* பெ.(n.) பெண் (திவா.); woman.

மஞ்சனி[2] *mañjaṉi,* பெ.(n.) வேலிப்பருத்தி; hedge twiner.

மஞ்சா *mañjā,* பெ.(n.) இலைக்கள்ளி (மலை.); five-tubercled.

மஞ்சாக்குரு *mañcā-k-kuru,* பெ.(n.) எலுமிச்சை; acid lime.

மஞ்சாரி *mañcāri,* பெ.(n.) கஞ்சாங்கோரை (மலை.); white - basil.

மஞ்சாளி *mañcāḷi,* பெ.(n.) மஞ்சாடி பார்க்க; see *mañcāḍi.*

மஞ்சி[1] *mañci,* பெ.(n.) 1. சணல்; sunnhemp. 2. சணல் நார்; hemp fibre.

மஞ்சி[2] *mañci,* பெ.(n.) படகு; cargo boat wtih a raised platform.

[மஞ்சு → மஞ்சி.]



மஞ்சி[3] *mañci,* பெ.(n.) 1. சிறுவரம்பு; ridge between garden beds. 2. குறும்பு (இ.வ.); gable.

[மஞ்சு → மஞ்சி.]

மஞ்சி[4] *mañci,* பெ.(n.) மூடுபனி (இ.வ.); fog.

[மஞ்சு → மஞ்சி.]

மஞ்சி[5] *mañci,* பெ.(n.) சுங்கம் வாங்கி, கூட்டிக் கொடுப்போன் (வின்.); pimp, pander.

மஞ்சிக்கம் *mañcikkam,* பெ.(n.) ஊர்ப்புறத்துத் தரிசு நிலம்; uncultivated land near a village or town. *"மஞ்சிக்கமாகக் கிடந்த நிலத்தில் மூன்று பாடகந் திருத்தி" (தெ.க. தொ.III, 203, 14).*

மஞ்சிகம்[1] *mañcigam,* பெ.(n.) தாளி (பிங்.); hedge bind-weed.

மஞ்சிகம்[2] *mañcigam,* பெ.(n.) மஞ்சிகை[1] பார்க்க (பிங்.); see *mañcigai.*

மஞ்சிகன் *mañcigaṉ,* பெ.(n.) முடிதிருத்துவோன் (நாவிதன்); barber.

மஞ்சிகை[1] *mañcigai,* பெ.(n.) 1. பெட்டி; chest, box. *"யவன மஞ்சிகை" (பெருங். உஞ்சைக். 32, 745).* 2. கொட்டாரம்; store-room. *"கூழுடைக் கொழுமஞ்சிகை" (பட்டினப். 163).* 3. தொம்பை (பட்டினப்.163, கீழ்க் குறிப்பு); grain bin.

[மஞ்சு → மஞ்சி → மஞ்சிகை.]

மஞ்சிகை[2] *mañcigai,* பெ.(n.) 1. தாளி; hedge bind-weed. 2. கையாந்தகரை; a plant found in wet places. 3. காதணி வகை; a ear-ornament. *"மஞ்சிகை துளைச் சிறு காதினுட் டுளங்க" (சீவக.2388).*

மஞ்சு விரட்டல்





மஞ்சிட்டம் *mañciṭṭam,* பெ.(n.) மஞ்சாடி[1, 2] பார்க்க; see *mañcāḍi.*

மஞ்சிட்டி *mañciṭṭi,* பெ.(n.) 1. நீர்ப்பூடுவகை; munjeet, Indian madder, *rubia cordifolia* (I, P). 2. சாப்பிரா (சிறுமரவகை); arnotto. 3. சாயவேர்; chayroot for dyeing (L.).

மஞ்சிபலை *mañcipalai,* பெ.(n.) வாழை (யாழ். அக.); plantain.

மஞ்சிமம் *mañcimam,* பெ.(n.) அழகு (சிந்தா. நி.); beauty.

மஞ்சிமூட்டம் *mañci-mūṭṭam,* பெ.(n.) மூடு பனி (இ.வ.); thick fog.

[மஞ்சு + மூட்டம்.]

மஞ்சிரம் *mañciram,* பெ.(n.) காலாழி; toe-ring.

மஞ்சிரு *mañciru,* பெ.(n.) கையாந்தகரை எனுஞ்செடி; a plant found in wet places.

மஞ்சில் *mañcil,* பெ.(n.) முதுவரப்பு வழி; large embankment of cause way between paddy fields, used as a path.

மஞ்சிலிக்கான் *mañcilikkāṉ,* பெ.(n.) திருநீற்றுப் பச்சை; fragrant basil.

மஞ்சிவிரட்டு *mañji-viraṭṭu,* பெ.(n.) மஞ்சு விரட்டு பார்க்க; see *mañju-viraṭṭu.*

[மஞ்சு + விரட்டு.]

மஞ்சிறு *mañciṟu,* பெ.(n.) கையாந்தகரை எனுஞ் செடி; a plant found in wet places.

மஞ்சீரகம் *mañcīragam,* பெ.(n.) கழற்சி; molucca - bean.

மஞ்சு[1] *mañcu,* பெ.(n.) 1. அழகு (சூடா.); beauty, gracefulness. *"மஞ்சுடை மணி நகு மாலை மண்டபம்" (சூளா.குமார.17).* 2. அணிகலன் (சூடா.); jewel.

மஞ்சு[2] *mañcu,* பெ.(n.) 1. வெண்முகில்; white cloud. *"மஞ்செனநின்றுலவும்" (சீவக.2853).* 2. முகில்; cloud. *"யாக்கை மலையாடு மஞ்சு போற்றோன்றி" (நாலடி, 28).* 3. பனி (பிங்.); dew. 4. மூடுபனி (இ.வ.); fog. 5. யானை முதுகு; back of an elephant.

மஞ்சு[3] *mañcu,* பெ.(n.) களஞ்சியம் (வின்.); store-house, granary.

மஞ்சு[4] *mañcu,* பெ.(n.) 1. கட்டில்; cot, bed-stead. 2. குறுமாடியின் அடைப்பு; board - partition or gable carried above the wall. 3. வீட்டு முகடு (பிங்.); ridge of a roof.

மஞ்சு[5] *mañcu,* பெ.(n.) 1. இளமை; youthful ness, juvenility. 2. வலிமை; strength, force. *"மஞ்சரங்கிய மார்பிலும்" (கம்பரா. இராவணன் வதை 168).*

[மைந்து→மந்து→மஞ்சு.]

மஞ்சுக்கட்டை *mañcu-k-kaṭṭai,* பெ.(n.) முகட்டுச் சரிவு; sloping roof over the breadth of a house.

[மஞ்சு[4] + கட்டை.]

மஞ்சுவெருட்டு *mañcu-veruṭṭu,* பெ.(n.) 1. மஞ்சுவிரட்டு பார்க்க; see *mañju-viraṭṭu.* 2. ஆ கவர்கை (இ.வ.); cattle raid.

[மஞ்சு[5] + வெருட்டு. வெருள்→வெருட்டு.]

மஞ்சுளம் *mañcuḷam*, பெ.(n.) 1. அழகு; beauty, agreeableness. *"மலரடி மஞ்சுளப் பஞ்சி" (கம்பரா. ஊர்தேடு.32).* 2. இலேசு; softness, tenderness. *"மஞ்சுளமா கிருப்பது சுபுக நன்றென்பர்" (திருவிளை. உக்கிர. வேல்வளை.35).*

மஞ்சூடை *mañcūḍai*, பெ.(n.) 1. பெரிய கூடை; large basket. 2. பெட்டி; box.

மஞ்சைக்காணி *mañcai-k-kāṇi*, பெ.(n.) மஞ்சட்காணி (இ.வ.) பார்க்க; see *mañjaṭ-kāṇi*.

[மஞ்சள்→மஞ்சை + காணி.]

மஞ்ஞை *maññai*, பெ.(n.) மயில்; peacock. *"பழன மஞ்ஞை யுகுத்த பீலி" (புறநா.13).*

மஞ்ஞையீர்க்கு *maññai-y-īrkku*, பெ.(n.) மயிலிறகு; peacock's feather.

[மஞ்ஞை + ஈர்க்கு.]

மஞ்ஞையூர்தி *maññai-y-ūrdi*, பெ.(n.) முருகக் கடவுள்; Lord *Murugaṉ* as having a peacock for his vehicle.

[மஞ்ஞை + ஊர்தி.]

மட்கடம் *maṭkaḍam*, பெ.(n.) மண் ஏனம்; mud pot.

மட்கடி-த்தல் *maṭkaḍi-*, 4 செ.குன்றாவி.(v.t.) கெடுமாறு செய்தல்; to damage, to destroy, to lose by negligence.

[மட்கு→மட்கடி-த்தல்.]

மட்கண்டம் *maṭ-kaṇḍam*, பெ.(n.) கிணறு தோண்டும் போது காணும் மண்பாகம்; statum of earth as in sinking wells.

[மண் + கண்டம்.]

மட்கலம் *maṭ-kalam*, பெ.(n.) மண்ணாலான பாண்டம்; earthern vessel. *"பசுமட் கலத்துணீர் பெய்திரீஇ யற்று" (குறள், 660).*

[மண் + கலம்.]



மட்கு-தல் *maṭku*, 5 செ.கு.வி.(v.i.) 1. ஒளி மங்குதல்; to be dim, duskey, to be deprived of lustre, glory or brilliance. *"நாகத்தின் வஞ்சவாயின் மதியென மட்குவான்" (கம்பரா. அயோமு.12).* 2. வலுகுன்றுதல்; to lose strength, to become defficient. *"தரியலர் முனைமட்க" (பாரத. மீட்சி.176).* 3. மயங்குதல்; to be bewildered. *"மட்கிய சிந்தை" (கம்பரா. தைல.5).* 4. அழுக்கடைதல் (கொச்சை.); to become mouldy; to be foul or dirty. 5. அழிதல்; to be destroyed. *"மதத்தர் மட்கினர்" (பிரபோத.30, 58).*

[மள்கு→மட்கு.]

மட்குகை *maṭkugai*, பெ.(n.) குகை; crucible.

[மண் + குகை.]

மட்சாந்து *maṭ-cāndu*, பெ.(n.) சுவர்கட்ட உதவும் குழைத்த மண் சேறு; mud plaster used in building walls.

[மண் + சாந்து.]

மட்சுவர் *maṭ-cuvar,* பெ.(n.) மண்ணால் கட்டப்பட்ட சுவர்; mudwall.

[மண் + சுவர்.]

மட்டக்கொம்பன்சுறா *maṭṭā-k-kombaṉ-šurā,* பெ.(n.) பழுப்பு நிறமுள்ளதும் பலவடிகள் நீண்டு வளர்வதுமான மீன்வகை; hammer-head shark, grey, attaining several feet in length, *zygaena tudes.*

மட்டக்கோல் *maṭṭa-k-kōl,* பெ.(n.) 1. கொத்து வேலைக் கருவிகளுலொன்று (வின்.); rule, ruler, mason's smoothing rule. 2. மட்டப்பலகை (இவ்.) பார்க்க; see *maṭṭa-p-palagai.*

[மட்டு→மட்டம். மட்டம் + கோல்.]



மட்டக்கோலூசி *maṭṭa-k-kōlūši,* பெ.(n.) அறுவை மருத்துவக் கருவிகளுள் ஒன்று; one of the surgical instruments.

மட்டங்கட்டு-தல் *maṭṭaṅ-kaṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. தளம் முதலியவற்றின் ஏற்றத் தாழ்வைக் கயிறு மட்டப்பலகை முதலியவற்றினால் அறிதல்; to as certain the eveness or level of a surface by time or rule. 2. துளையின் தட்டுகளைத் தடைப் பொருளிட்டுச் சமனாக்குதல்; to balance at the scales.

[மட்டு→மட்டம் + கட்டு-. மட்டம் = ஒரே அளவு.]

மட்டச்சாவாளை *maṭṭa-c-cāvāḷai,* பெ.(n.) வெண்மை நிறமுள்ளதும் 25 விரலம் வரை வளர்வதுமான மீன் வகை; ribbon-fish, burrished silver, attaining 25 in. in length, *trichiurus muticuss.*

[மட்டம் + சாவாளை.]

மட்டச்சுவர் *maṭṭa-c-cuvar,* பெ.(n.) சிறுசுவர்; dwarf wall, breast wall (C.E.M.).

[மட்டம் + சுவர். மட்டம் = குறைவான அளவு.]

மட்டச்சுறா *maṭṭa-c-cuṟā,* பெ.(n.) சாம்பனிற முடையதும் 9 அடிவரை வளர்வதும் கொடியதுமான சுறா மீன்வகை; shark, grey, very ferocious, attaining 9 ft. in length, *carcharias gangeticus.*

[மட்டம் + சுறா.]

மட்டசுத்தம் *maṭṭa-šuttam,* பெ.(n.) 1. நன்கு அமைந்தது; that which is well-proportioned and smoothly formed. 2. முழுமை; entireness, absoluteness.

[மட்டம் + **Skt.***சுத்தம். மட்டம் = ஒரே அளவு நிலை.]*

மட்டஞ்செய்-தல் *maṭṭañ-cey-,* 1 செ.குன்றாவி. (v.t.) 1. சமனாக்குதல்; to level, as the ground, to trim evenly, as a garland. *"கத்தரிகையால் மட்டஞ்செய்த மாலையினை" (பு.வெ.3, 3, கொளு. உரை).* 2. செவ்விதாகச் செய்தல்; to beautify, render attractive. *"மணிச்செய் கடிப்பினை மட்டஞ் செய்து" (பெருங்.உஞ்சைக்.34, 199).*

[மட்டம் + செய். மட்டம் = ஒரே அளவு.]

மட்டத்தரம் *matta-t-taram*, பெ.(n.) 1. தாழ்ந்த தரம்; inferior quality. 2. நடுத்தரம்; medium quality.

[மட்டம் + தரம். மட்டம் = தாழ்வு.]

மட்டத்தாரை *matta-t-tārai*, பெ.(n.) கூர்மை யற்ற விளிம்புடையது; anything smooth-edged, as a diamond. *"கட்டினவைரம் மட்டத்தாரை அறுநூற்று முப்பத்தாறும்" (தெ.க.தொ.2:78).*

[மட்டம் + தாரை. மட்டம் = மட்டமாகத் தட்டப்பட்டது.]

மட்டத்தாரைச்சப்படி *matta-t-tārai-c-cappadi*, பெ.(n.) மழுங்கிய விளிம்புடைய தட்டை வைரம் (தெ.க.தொ.2:78); flat diamond with smooth edges.

[மட்டம் + தாரை + சப்படி. மட்டம் = மட்டமாகத் தட்டிச் சமப்படுத்தப்பட்டது.]

மட்டைத்தாரைச்சவக்கம் *mattai-t-tārai-c-cavakkam*, பெ.(n.) மழுங்கிய விளிம் புடையதும் சதுர வடிவுள்ளதுமான வைரக்கல்; square shaped diamond with smooth edges. *"மட்டத்தாரைச் சவக்கம் நூற்றறுபத் தொன்பதும்" (தெ.க.தொ.2:78).*

[மட்டம் + தாரை + சவக்கம். மட்டம் = மட்டமாகத் தட்டப்பட்டது.]

மட்டத்திருக்கை *matta-t-tirukkai*, பெ.(n.) செம்பசுமை நிறமுள்ள திருக்கை மீன் வகை; ray-fish grenish - brown *Rhinoptera adspensa.*

[மட்டம் + திருக்கை.]



மட்டத்துருத்தி *matta-t-turutti*, பெ.(n.) 1. நீர் முதலியன வீசுங் கருவி வகை; a kind of squirt. *"சுண்ணத்தையும் சந்தனத்தையும் ... மட்டத் துருத்தியாலும் நெடுநீ் துருத்தியாலும் சிதற" (சீவக. 86, உரை).* 2. கம்மக் கருவி வகை (இ.வ.); a kind of hand-bellows. 3. நறுமணம் புகைக்கும் கலம் (வின்.); a small - sized perfuming pot.

[மட்டம் + துருத்தி.]

மட்டநூல் *matta-nūl*, பெ.(n.) சமநிலை பார்ப்பதற்கு உதவும் நூல்; measuring line.

[மட்டு→மட்டம் + நூல். மட்டம் = ஒரே அளவு.]

மட்டப்பலகை *matta-p-palagai*, பெ.(n.) 1. சமனறியுந் தச்சுக் கருவி; measuring rod, carpenter's, rule. 2. மணியாசிப் பலகை; mason's smoothing plane. 3. சமநிலை காட்டுங் கொத்துக் கருவி; mason's level, wooden frame with plumb line. 4. உயர்வு தாழ்ச்சிகளைக் காட்டவுதவும் அளவு கோடிட்ட பலகை; levelling staff. 5. வயலில் மண்கொண்டு செல்லும் தட்டுப் பலகை; a kind of flat sled for carrying soild from one part of a field to another (G.Tp.D.I.141).

[மட்டு→மட்டம் + பலகை. மட்டம் = ஒரே சம அளவு.]

மட்டப்பா *matta-p-pā*, பெ.(n.) மொட்டை மாடி (இ.வ.); open terrace, flat roof.

மட்டம் = ஒரே சம அளவு.

[மட்டம்→மட்டப்பா.]

மட்டப்பாவீடு *matta-p-pā-vīdu,* பெ.(n.) மொட்டை மாடியுள்ள வீடு; house with open terrace.

மட்டம் = ஒரே சம அளவு.

[மட்டம்→மட்டப்பா + வீடு.]

மட்டப்பாவு[1] *matta-p-pāvu*, பெ.(n.) மட்டப்பா பார்க்க; see *matta-p-pā.*

மட்டப்பாவு[2] *matta-p-pāvu*, பெ.(n.) குறைந்த அளவுள்ள பாவு; short lengthen warp.

[மட்டம் + பாவு.]

மட்டப்பாறை *matta-p-pārai,* பெ.(n.) ஒரு வகைக் கடல்மீன்; a sea fish.



மட்டப்பிரி *matta-p-piri*, பெ.(n.) வள்ளத்தின் உறுப்பு (க.ப.அக.); a part of the vallam.

மட்டப்பொன் *matta-p-pon*, பெ.(n.) மாற்றுக் குறைவான பொன் (வின்.); impure gold, as inferior in quality.

[மட்டு→மட்டம் + பொன்.]

மட்டம்[1] *mattam,* பெ.(n.) 1. அளவு; measure. 2. சமநிலை; evenness, flatness. 3. அளவுகோல்; rule, line, gauging rod. 4. எல்லை; limit, extent, bound, degree (w.). 5. ஊகம்; guess, conjecture. 6. ஒப்பு; equality in length, height, size, measure or quality. 7. சிறுமை; smallness. *"மட்டப்பூ" (தெ.க.தொ.2:84).* 8. தாழ்வு; inferiority, deficiency. 9. மிதம்; moderation. 10. செட்டு; furglity. 11. சிறு குதிரை (இ.வ.); pony. 12. வாழை, கரும்பு முதலியவற்றின் கன்று; sapling of plantain, bamboo, sugarcane etc. 13. பொன் மணியின் உறுப்பு வகை (வின்.); smooth round neck of gold bead. 14. ஆனைக் குட்டி; young male elephant. 15. ஒரே உயரமுள்ள நிலை; level.16. சமவெண்; whole quantity, sum, leaving no over plus. 17. மூன்றொத்துடைய தாளம் (சிலப்.3:151, உரை); triple beat in measuring time. 18. குறைவு; der se. *"அவற்றில் ஆதரம் மட்டமாட கும்" (ஸ்ரீவசன.3, பிர.172).* 19. கேடயம் (வின்.); shield.

[மட்டு→மட்டம்.]

மட்டம்[2] *mattam,* பெ.(n.) கள்; toddy. *"மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன.... சுனை" (குறுந்.193).*

மட்டம்பார்–த்தல் *mattam-pār-*, 4 செ.கு.வி. (v.i.) பாதை சுவர் முதலியவற்றின் ஒழுங்கை நோட்டம் பார்த்தல்; to examine the level or straightness, as of a road or wall etc.

[மட்டம் + பார்–. மட்டம் = ஒரே அளவு.]

மட்டம்பிடி[1]–த்தல் *mattam-pidi-,* 4 செ.கு.வி. (v.i.) மதிப்பிடுதல்; to estimate.

[மட்டம் + பிடி–. மட்டம் = ஒரே அளவு.]

மட்டம்பிடி[2]–த்தல் *mattam-pidi-,* 4 செ. குன்றாவி.(v.t.) 1. மட்டம்வெடி–, பார்க்க; see *mattam-vedi-.* 2. சமனாக்குதல் (இ.வ.); to level.

மட்டம்போடு–தல் *mattam-pōdu-,* 20 செ.கு.வி.(v.i.) வேண்டுமென்றே வேலை முதலியவற்றுக்கு வாராதிருத்தல்; to absent oneself wilfully. *'பள்ளிக்குச் செல்லாமல் மட்டம் போட்டு விட்டான்' (உ.வ.).*

[மட்டம் + போடு–. மட்டம் = குறைவு.]

மட்டம்வெடி–த்தல் *mattam-vedi-,* 4 செ.கு.வி.(v.i.) கிளை கப்புகள் உண்டாதல்; to shoot forth, branch out, as from the stem of a plant.

[மட்டு→மட்டம் + வெடி–.]

மட்டம்வை–த்தல் *mattam-vai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மட்டம்வெடி–த்தல் பார்க்க (யாழ். அக.); see *mattam-vedi-.* 2. மட்டங் கட்டு–தல் பார்க்க; see *mattankattu-.*

[மட்டம் + வை–.]

மட்டமாய்க்கூட்டல் *mattamāy-k-kūttal,* பெ.(n.) மொத்தமாய்க் கூட்டல்; to add in moderate quantity.

[மட்டமாய் + கூட்டல்.]

மட்டயந்திரம் *matta-yandiram,* பெ.(n.) சம நிலையை அறியும் கருவி (இக்.வ.); instrument for testing level.

[மட்டு→மட்டம் + இயந்திரம்.]

மட்டலகு *mattalagu,* பெ.(n.) இழைப்புளியின் உருண்டை அலகு வகை; blade for the jack-plane.

[மட்டு→மட்டம் + அலகு.]

மட்டவிழைப்புளி *matta-v-ilaippuli,* பெ.(n.) தச்சுக் கருவி வகை; jack plane, joiner's plane for coarse work.

[மட்டம் + இழைப்புளி.]



மட்டவேலை *matta-vēlai,* பெ.(n.) பரும்படியான வேலை (யாழ்.அக.); rough work, work not requiring much skill, as different from ilaippu and *nakāšu-vēlai.*

[மட்டம் + வேலை.]

மட்டவேலைக்காரன் *matta-vēlai-k-kāran,* பெ.(n.) வெள்ளி தங்கவேலைகளில் காப்பு முதலிய பரும்படி வேலை செய்யுந் தட்டான்; smith whose work does not require much skill.

[மட்டு→மட்டம் + வேலைக்காரன்.]

மட்டறி[1]– தல் *mattari-,* 2 செ.குன்றாவி.(v.t.) 1. மதிப்பிடுதல்; to guess, make a rough estimate. 2. பழகியறிதல்; to bear in mind

so as to recognise or identify, to know well. 3. ஒப்பிடுதல்; to liken, compare with.

[மட்டம்→ மட்டு + அறி–. மட்டம் = அளவு, மதிப்பு.]

மட்டறி²–தல் *mattari-,* 2 செ.கு.வி.(v.i.) 1. அளவேற்படுத்துதல்; to fix a limit, to stint. 2. குறிப்பறிதல்; to understand indications.

[மட்டம்→ மட்டு + அறி–.]

மட்டன் *mattan,* பெ.(n.) மூடன்; dullard. *"கட்டைப் புத்தியன் மட்டன்" (திருப்பு.419).*

[மட்டு →மட்டன். மட்டம் = அளவு குறைவு.]

மட்டனம் *mattanam,* பெ.(n.) பூசுகை; smearing, rubbing over. *"மான்மதக் கலவைச் சாந்த மட்டனஞ் செய்து" (திருவிளை. உக்கிர. வேல்வளை.45).*

[மட்டு→மட்டம்→மட்டனம்.]

மட்டாய் *mattāy,* கு.வி.எ.(adv.) 1. அளவாய்; moderately, temperately. 2. வேண்டிய வளவாக; as much as in needed. 3. செட்டாக; sparingly, parsimoniously, frugally. 4. ஏற்கத்தக்கதாக; passably, tolerably.

[மட்டு→மட்டாய். மட்டு = அளவு.]

மட்டாயுதம் *mattāyudam,* பெ.(n.) வாள்; sword.

[மட்டு + Skt.ஆயுதம்.]

மட்டி¹–த்தல் *matti-,* 4 செ.கு.வி.(v.i.) மண்டலித்தல்; to be or become circular, to form into circles or ringlets, to coil.

[முல்(வளைதற் கருத்து வேர்)→முள்→ முண்டு →மண்டு→மண்டி = காலை மடக்கி முழங்காலால் நிற்கை. முட்டு→ மட்டு→ மட்டி → மட்டி –த்தல் (வே.க.4:83).]

மட்டி²–த்தல் *matti-,* 4 செ.குன்றாவி.(v.t.) வட்டமாகுதல்; to make circular. *"திரடோள்கண் மட்டித்தாட" (தேவா.12, 3).*

[முட்டு→மட்டு→மட்டி →மட்டி–த்தல்.]

மட்டி³ *matti,* பெ.(n.) 1. மூடன்; dolt, blockhead. *"அறியாத.... மூடமட்டி" (திருப்பு.195).* 2. ஒழுங்கின்மை; clumsiness, awkwardness. 3. பரும்படி; roughness, coarseness. 4. மக்கு (இவ.); putty, cement for whiting. 5. மட்டிக்காரை பார்க்க; see *matti-k-kārai.* 6. சிப்பிமீன்; oyster, cockle, shell-fish. 7. மட்டிவாழை பார்க்க; see *matti-vālai.*

தெ., க. மட்டி.

[முட்டு→மட்டு→மட்டி (வே.க.4:65).]

மட்டி⁴–த்தல் *matti-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. அழித்தல்; to destroy. *"மணிகொள் குட்டிம மட்டித்து" (கம்பரா. பொழிலிறுத்.24).* 2. முறித்தல்; to break. *"மாங்கனிப் பணை மட்டித்து" (கம்பரா. பொழிலிறுத்.25).* 3. பூசுதல்; to put on, clap on, daub, as sandal paste. *"குளிர்சாந்த மட்டித்து" (திவ்.நாய்ச்.6, 10).* 4. மெழுகுதல்; to cleanse, as the floor. *"மணிநிலஞ் சந்தனங் கொண்டு மட்டியா" (மேருமந்.629).* 5. பிசைதல்; to mix and knead. *"சுண்ணமொடு மட்டித்துக் கலந்த குங்குமக் கொழுஞ் சேறு" (பெருங். உஞ்சைக்.40, 222–3).* 6. உறுதி செய்தல்; to ascertain, discover determine.

[முட்டு→மட்டு→மட்டி–.]

மட்டி⁵ *matti,* பெ.(n.) மண்டலிக்கை; coiling, as of a snake, circuling as of a wrestler. *"மட்டியே முதலாவுள்ள மற்றொழிலின்" (பாரத.சடாசுர.18).*

மட்டிக்கம்பிவேட்டி *matti-k-kambi-vētti*, பெ.(n.) பொடிக் கம்பிக்கரையுள்ள முருட்டு வேட்டி (இ.வ.); coarse cloth with a narrow line border, worn by men.

[மட்டுக்கம்பி →மட்டிக்கம்பி + வேட்டி.]

மட்டிக்காய் *matti-k-kāy*, பெ.(n.) மட்டிக் கொடியின் காய்; fruit of *matti-k-kodi* (சா.அக.).

மட்டிக்காரை *matti-k-kārai*, பெ.(n.) பரும்படியாக அரைத்த சுண்ணச்சாந்து; coarse or rough plaster.

[மட்டு→மட்டி + காரை.]

மட்டிக்கொடி *matti-k-kodi*, பெ.(n.) ஒரு வகைச் செடி; a plant (சா.அக.).

மட்டிகேயம் *matti-kēyam*, பெ.(n.) விளாத்தி மரம்; a tree (சா.அக.).

மட்டிகை *mattigai*, பெ.(n.) களத்தில் வைக்கோல் அரிக்கட்டு முதலியவற்றின் மேல் இடுஞ்சாணி முத்திரை; seal of cowdung put upon bundled sheats of paddy of straw on the threshing floor or upon corn sacks (m.m.483).

[மட்டு→மட்டி →மட்டிகை.]

மட்டிச்சிப்பி *matti-c-cippi*, பெ.(n.) சிப்பி மீனோடு (வின்.); oyster shell.

[மட்டி + சிப்பி.]

மட்டிடு-தல் *mattidu-*, 17 செ.குன்றாவி.(v.t.) மட்டறி- பார்க்க (வின்.); see *mattari-*,

[மட்டு →மட்டிடு-தல்.]

மட்டித்தனம் *matti-t-tanam*, பெ.(n.) மூடத்தனம்; stupidity, foolishness.

[மட்டு →மட்டித்தனம்.]

மட்டித்தாள் *matti-t-tāl*, பெ.(n.) கரட்டுத்தாள், மட்டமான தாள்; coarse paper.

[மட்டு →மட்டி + தாள்.]

மட்டித்தேயம் *matti-t-tēyam*, பெ.(n.) வெள்ளைக் கருங்காலி மரம்; a tree (சா.அக.).

மட்டித்தையல் *matti-t-taiyal*, பெ.(n.) பரும்படித் தையல் (வின்.); coarse sewing.

[மட்டு→மட்டி + தையல்.]

மட்டிப்படைக்கலம் *matti-p-padai-k-kalam*, பெ.(n.) மட்டி[3] பார்க்க (திவா.); see *matti*.

[மட்டி[3] + படைக்கலம்.]

மட்டிப்பாம்பு *matti-p-pāmbu*, பெ.(n.) ஒரு வகை பாம்பு; a variety of snake (சா.அக.).

[மட்டி + பாம்பு.]

மட்டிப்பால் *matti-p-pāl*, பெ.(n.) 1. மரவகை; entireleaved tree of heaven, l.tr. *Ailanthus mala-baricus*. 2. நறுமணப் பொருள் வகை; ailanthus balsam.

மட்டிப்பாலை *matti-p-pālai*, பெ.(n.) மட்டிப்பால் பார்க்க; see *matti-p-pāl*.

மட்டிப்புடவை *matti-p-pudavai*, பெ.(n.) முருட்டுச் சீலை; coarse cloth worn by women.

[மட்டி + புடவை.]

மட்டிமீன் *maṭṭi-mīṉ*, பெ.(n.) மீன் வகை; a kind of fish. *"பருந்துவாயன் மட்டிமீன் பாரக் கெண்டை" (பறாளை.பள்ளு.15).*

[மட்டி + மீன்.]

மட்டியம் *maṭṭiyam*, பெ.(n.) தாள வகையு ளொன்று (பரத.தாள.19); a variety of time-measure one of *catta-tāḷam.*

மட்டியூர்நிலவளவுகோல் *maṭṭiyūr-nila vaḷavukōl*, பெ.(n.) கோச்சடையன் வீரபாண்டியனின் 5ஆவது ஆட்சியாண்டில் திருமயம் வட்டத்தில் வழக்கிலிருந்த ஒரு வகை அளவுகோல்; a measurement of *Tirumayam vattam* at the period of *Kōccaḍaiyaṉ-vīrapāṇḍiaṉ. "நிலம் முக்காணி முந்திரிகையும் மட்டியூர் நிலவளவுகோலால் இப்பழந்தேவதாநம் நீங்கலாக" (புது.கல்.361/2).*

மட்டிலை *maṭṭilai*, பெ.(n.) பச்சிலை (தைலவ. தைல.); mysore gamboge.

மட்டிவாய்[1] *maṭṭivāy*, பெ.(n.) 1. திறந்தகன்ற வாய்; gaping mouth. 2. மட்டிவாயன், 3 பார்க்க; see *maṭṭi-vāyaṉ.*

[மட்டி + வாய்.]

மட்டிவாய்[2] *maṭṭivāy*, பெ.(n.) மங்கிய சிவப்பு நிறமுள்ளதும் ஓரடி வளர்வதுமான கடல்மீன் வகை; a sea-fish pale dull red, attaining one foot in length, scolopsis vosmerti.

[மட்டி + வாய்.]

மட்டிவாயன் *maṭṭi-vāyaṉ*, பெ.(n.) 1. திறந்தகன்ற வாயையுடையவன்; one who has a gaping mouth. 2. முப்பது விரலம் வளரக் கூடியதும் சாம்பல் நிறமுள்ளதுமான மீன்வகை; black rock-cod, silvery grey, attaining 30 in. in length, sparus berda. 3. 18 விரலம் வளர்வதும் சாம்பல் நிறமுள்ளதுமான கடல் மீன் வகை; a sea-fish, silver-grey, attaining 18 in. length *chrysophrys datria.*

[மட்டி + வாயன்.]



மட்டிவாழை *maṭṭi-vāḻai*, பெ.(n.) வாழை வகை (நாஞ்.); a kind of plantain.

[மட்டி + வாழை.]

மட்டிவேலை *maṭṭi-vēlai*, பெ.(n.)1. பரும்படியான வேலை; rough work opp. to fine work. 2. திறமை வேண்டாத வேலை; work not requiring inteligence or skill.

[மட்டி + வேலை.]

மட்டு[1] *maṭṭu*, பெ.(n.) 1. அளவு; measure, quantity, standard, degree, size, proportion, amount. 2. எல்லை; limit, extent, boundary, scope, range. *"வடிவுக்கோர் மட்டுண்டாமோ" (ஞானவா. தேவா.1).* 3. குத்து மதிப்பு; estimate, conjecture, as from the eye-sight. 4. அளவு; moderateness, tolerableness. 5. பொதுத் தன்மை; that which is middling

or common place. *"மட்டாய்ச் செலவிடு" (உ.வ.).* 6. நிலவளவு வகை; a standard of land measurement. 7. மட்டம்¹ பார்க்க; see *mattam.*

[முல் (பொருந்தற் கருத்து வேர்)→முள்→முட்டு→மட்டு (வே.க.4:65).]

ஒள்றோடொன்று முட்டுகிற நிலையிலேயே ஒன்றன் நீள அளவு தெரியும்.

மட்டு² *mattu,* பெ.(n.) 1. கருவி (திவா.); a weapon. 2. கிளிஞ்சல் வகை; calm. 3. மீன் வகை; meretrix. 4. ஒரு வகை மரம்; a kind of tree.

மட்டு³ *mattu,* பெ.(n.) 1. தேன்; honey. *"மட்டுவாயவிழ்ந்த தண்டார்" (சீவக.1145).* 2. கள்; toddy, fermented liquor. *"வெப்புடைய மட்டுண்டு" (புறநா.24).* 3. சாறு; sweet juice. *"கருப்பு மட்டுவாய் மடுத்து" (திருவாசக.5, 80).* 4. உடலுறவின்போது கிளர்ச்சி யுண்டாவதற்காகப் பருகும் பருகம்; drink taken at the time of sexual union. *"மட்டுடை மணமகள்" (சீவக.98).* 5. மது வைக்குஞ் சாடி; liquor jar. *"மட்டுவாய் திறப்பவும்" (புறநா. 113).* 6. மணம்; fragrant smell. *"மட்டுநீறொடும்" (இரகு. இரகுவுற். 23).*

[முல்→ முள்→முட்டு→முத்து. முத்துதல் = பொருந்துதல், ஒத்தல், கலத்தல். முத்து→மத்து = கலப்பு, கலக்கம், மயக்கம், மயக்கஞ் செய்யும் பித்தம், மயக்கம் தரும் கள், தீங்கள்ளாகிய தேன், பித்தமுண்டாக்கும் ஊமத்தை. மத்து→மட்டு (வே.க.4:67).]

மட்டுக்கட்டு¹–தல் *mattu-k-kattu-,* 5 செ. குன்றாவி. (v.t.) 1. ஒரு நிலைக்கு வருதல்; to form a judgement after observation. 2. இனமறிந்து கொள்ளுதல்; to recognise identify. 3. அனுமானித்தல்; to infer. 4. உணர்தல்; to comperhend. 5. மதிப்பிடுதல்; to estimate. 6. அளவுக் குட்படுதல்; to stint, limit. 7. தடுத்தல்; to hinder.

[மட்டு² + கட்டு–.]

மட்டுக்கட்டு²–தல் *mattu-k-kattu-,* 5 செ.கு.வி. (v.i.) சரிநிலைக்கு வருதல்; to be brought to the normal condition or limits.

[மட்டு + கட்டு–.]

மட்டுக்குமிஞ்சு–தல் *mattukku-miñcu-,* 5 செ.கு.வி. (v.i.) அளவு கடத்தல்; to exceed bounds, as in eating, to be excessive, as prices.

[மட்டுக்கு + மிஞ்சு–.]

மட்டுக்குழி *mattu-k-kuli,* பெ.(n.) அளவாக வெட்டிய குழி; excavated pit. *"அதனைச் சூழப் பறித்துக் கிடக்கின்ற மட்டுக் குழிகளினுள்ளே" (பெரும்பாண்.108, உரை).*

[மட்டு + குழி.]

மட்டுக்கோணம் *mattu-k-kōnam,* பெ.(n.) நேர்கோணம் (யாழ்.அக.); right angle.

[மட்டு + கோணம்.]

மட்டுக்கோல் *mattu-k-kōl,* பெ.(n.) அளவு கழி; measuring rod.

[மட்டு + கோல்.]

மட்டுத்தப்பு¹–தல் *mattu-t-tappu,* 5 செ.கு.வி.(v.i.) 1. இலக்குத் தவறுதல்; to miss an aim; to take a wrong direction.

2. மதிப்புத் தவறுதல்; to exceed propriety, to behave or speak disrespectfully or impolitely. 3. அளவு கடந்து செலவிடுதல்; to live extravagantly. 4. அளவு மிஞ்சுதல்; to act conceitedly, to assume airs.

[மட்டு + தப்பு-.]

மட்டுத்தப்பு² *mattu-t-tappu,* பெ.(n.) சரி கவனமின்மை; impropriety, immoderation.

[மட்டு + தப்பு.]

மட்டுத்திட்டம் *mattu-t-tittam,* பெ.(n.) 1. மதிப்பு; guess, estimate, conjecture. 2. அளவு; extent, amount, limit. 3. நடத்தை; character, worth, merit.

[மட்டு + திட்டம்.]

மட்டுப்படு-தல் *mattu-p-padu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. அளக்கப்படுதல்; to be measured, gauged. 2. வரையறைப்படுதல்; to be limited, circumscribed, curbed. *"மட்டுப் படாக் கொங்கை மானார்" (தனிப்பா.1, 149, 54).* 3. உணரப்படுதல்; to be comprehended, understood. 4. குறைதல்; to decrease, grow less.

[மட்டு + படு-.]

மட்டுப்பால் *mattu-p-pāl,* பெ.(n.) மட்டிப்பால் பார்க்க (பதார்த்த.116); see *matti-p-pāl.*

மட்டுப்பிடி-த்தல் *mattu-p-pidi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. இனமறிந்து கொள்ளுதல்; to recognise, identify. 2. உணர்தல்; to comprehend. 3. தீர்மானம் செய்தல்; to decide, determine. 4. அளத்தல் (இ.வ.); to measure.

[மட்டு + பிடி-.]

மட்டுப்பிரமாணம் *mattu-p-piramāṇam,* பெ.(n.) சரியளவு (யாழ்.அக.); correct measure.

மட்டும் *mattum,* பெ.அ.(adv.) 1. வரை; until, so far, as far as. *'அந்த ஊர் மட்டும் போவோம்' (உ.வ.).* 2. மாத்திரம்; only. *'நீ மட்டும் போகலாம்' (உ.வ.).*

[மட்டு = எல்லை. மட்டும் = (இட எல்லை, ஆள் எல்லை) எல்லை வரையறுப்பு.]

மட்டுமதிப்பு *mattu-madippu,* பெ.(n.) 1. தகுதிக்கேற்ற மதிப்பு; due regard for another's character or rank, politeness. 2. நன்னடை; good behaviour.

[மட்டு + மதிப்பு.]

மட்டுமதியம் *mattu-madiyam,* பெ.(n.) 1. சரியளவு; actual measurement. 2. நடுவளவு; moderation. 3. மட்டுத்திட்டம் பார்க்க; see *mattu-t-tittam.*

[மட்டு + Skt. மத்திய→மதியம்.]

மட்டுமரியாதை *mattu-mariyādai,* பெ.(n.) மட்டுமதிப்பு பார்க்க; see *mattu-madippu.*

[மட்டு + Skt.மரியாதை.]

மட்டுமருங்கு *mattu-marungu,* பெ.(n.) மட்டு மதிப்பு பார்க்க; see *mattu-madippu.*

[மட்டு + மருங்கு.]

மட்டுமிஞ்சு-தல் *mattu-miñju-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. அளவு மிஞ்சுதல்; to be excess in proportion. 2. அளவு தப்புதல்; to go wrong in proportion.

மட்டுவாயூடகம் *maṭṭu-vāy-ūḍagam,* பெ.(n.) 1. வெண்ணிறமுள்ள கடல் மீன்வகை; sea-fish, silvery, Gerreslucidus. 2. வெண்ணிற முடையதும் நாலரைவிரற்கடை வளர்வதுமான கடல்மீன் வகை; a sea-fish, silvery, attaining 4 1/2 inch in length, Gerres setifer.

மட்டை[1] *maṭṭai,* பெ.(n.) 1. தெங்கு, பனை முதலியவற்றின் மடல்; leaf-stalk of fern or palm, stem of plantain. 2. தேங்காயின் மேல் தோடு; husk of coconut. 3. 4500 வெற்றிலை அல்லது 45 கவுளி கொண்ட வெற்றிலைக்கட்டு; a bundle of 4500 betel leaves. 4. பந்தடிக்கும் மட்டை; bat. 5. பாம்பு; snake. *"மட்டையிடம் குட்டி வலம்" (பழ.).*

[மட்டு →மட்டை.]

மட்டை[2] *maṭṭai,* பெ.(n.) 1. மொட்டை; baldness. *"கொய்யப்பட்ட மட்டையாகிய தலையுடனே" (புறநா.261, உரை).* 2. உடற் குறை; headless body, trunk. 3. மூடன்; stupid fellow.

[மொட்டை →மட்டை.]

மட்டை[3] *maṭṭai,* பெ.(n.) 1. பயனற்றவ–ன்–ள்–து; worthless person or thing. *"இந்த மட்டைக் கிறுத்த தெல்லா போதும்" (விறலிவிடு.889).* 2. மட்டமான நெல்; a variety of paddy, as inferior. 3. மாசுள்ள நென்மணி; coarse grain in paddy.

[முல் (பொருந்தற் கருத்து வேர்)→முள்→ முட்டு→மட்டு = அளவு, எல்லை, குத்து மதிப்பு, சிறுமை, தாழ்வு, குறைவு, அடக்கம், சிக்கன அளவு, ஒப்பு. மட்டு→மட்டை (வே.க.4:66).]

மட்டைக்கங்கு *maṭṭai-k-kaṅgu,* பெ.(n.) பனை முதலியவற்றின் மட்டையடியிலுள்ள ஓலை; leaves on either side of the lower part of palmyra stem.

[மட்டை + கங்கு.]

மட்டைக்கட்டுவடலி *maṭṭai-k-kaṭṭuvaḍali,* பெ.(n.) மட்டை நிரம்பிய இளம்பனை; young *palmyra* tree thick with leaves.

[மட்டைக்கட்டு + வடலி.]

மட்டைக்குதிரை *maṭṭai-k-kudirai,* பெ.(n.) நெசவுக் கருவியின் ஒருறுப்பு; trestle for preparing the warp in weaving.

[மட்டை + குதிரை.]



மட்டைக்கொம்பு *maṭṭai-k-kombu,* பெ.(n.) விலங்கின் விரி கொம்பு; horns of an animal extending side ways.

[மட்டை + கொம்பு. மட்டை = விரிவது.]

மட்டைக்கோரை *maṭṭai-k-kōrai,* பெ.(n.) கோரை வகை; smooth sedge, *Cyperus procerulus.*

[மட்டை + கோரை.]

மட்டைகட்டு-தல் *mattai-kattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) மட்டைவைத்துக்கட்டு-, பார்க்க; see *mattai-vaittu-k-kattu-.*

[மட்டை + கட்டு-.]

மட்டைகடி-த்தல் *mattai-kadi-,* 4 செ.கு.வி. (v.i.) பிள்ளைகள் உதடு கடித்தல்; to bite the lower lip, as a child.

[மட்டை+கடி-.]

மட்டைச்சாறு *mattai-c-cāru,* பெ.(n.) பனை மட்டைச்சாறு; juice of the stalk or stem of the leaf of palmyra (சா.அக.).

[மட்டை+சாறு.]

மட்டைச்சொண்டு *mattai-c-condu,* பெ.(n.) பெரிய உதடு; large lip.

[மட்டை + சொண்டு.]

மட்டைத்தும்பு *mattai-t-tumbu,* பெ.(n.) பனைநார்; fibre of the palmyra stem.

[மட்டை + தும்பு.]

மட்டைத்தேள் *mattai-t-tēl,* பெ.(n.)1. பிள்ளைத் தேள்; a kind of scorpion. 2. பூரான் வகை; a kind of centipede.

[மட்டை + தேள்.]

மட்டைதட்டு¹-தல் *mattai-tattu-,* 5 செ.கு.வி. (v.i.) தென்னை மட்டையை நசுக்கி நாரெடுத்தல்; to beat the integument of the coconut to form coir.

[மட்டை + தட்டு-.]

மட்டைதட்டு²-தல் *mattai-tattu-,* 5 செ.கு.வி. (v.i.) ஏழையாதல்; to become poor.

[மட்டை + தட்டு-.]

மட்டைப்படல் *mattai-p-padal,* பெ.(n.) பனை மட்டையாலாகிய வேலி; fence of palmyra stems.

[மட்டை + படல்.]

மட்டைப்பூச்சி *mattai-p-pūcci,* பெ.(n.) புழு வகை; tape-warm.

[மட்டை + பூச்சி.]

மட்டைப்பூசை *mattai-p-pūšai,* பெ.(n.) மட்டையடி³-, 2 பார்க்க; see *mattai-y-adi-.*

[மட்டை + பூசை.]

மட்டையடி¹-த்தல் *mattai-y-adi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. வறுமையால் வருந்துதல்; to suffer from destitution. 2. பிறன் பொருட்டுத் தொல்லைமேற் கொள்ளுதல்; to worry oneself in another's cause.

[மட்டை + அடி-.]

மட்டையடி²-த்தல் *mattai-y-adi-,* 4 செ.குன்றாவி. (v.t.) பகடி பண்ணுதல்; to ridicule.

[மட்டை + அடி-.]

மட்டையடி³-த்தல் *mattai-y-adi-,* பெ.(n.) 1. ஆண் தெய்வத்துக்கும் அம்மனுக்கும் உள்ள காதற் கலகத்தைக் குறிக்கோளாய்க் கொண்டு தேவரடியாரும் கோயிற் பணியாளர்களும் அவரவர்க்கும் முறையே படிநிகராளிகளாய் நின்று நடத்தும் கோயிற்றிருவிழா; a temple festival in which dancing girls and temple servants take sides representing the Goddess and the God respectively and enact their love-quarrel. 2. இகழ்ச்சிக் குறியாகத்

தேங்காய் மட்டையால் அடிக்கை; beating with the coconut husk, in contempt. 3. பகடி (இ.வ.); ridicule.

[மட்டை + அடி-.]

மட்டையடியடி¹-த்தல் *mattai-y-adi-adi-,* 4 செ.குன்றாவி.(v.t.) வாழை மட்டையால் அடித்து விளையாடுதல்; to beat with plaintain stems in sport.

[மட்டையடி + அடி-.]

மட்டையடியடி²-த்தல் *mattai-y-adi-adi-,*4 செ.கு.வி.(v.i.) 1. விருந்து பண்ணாம விருத்தல்; to receive impolitely. 2. ஏளனமாகப் பேசுதல் (இ.வ.); to use obscene language.

[மட்டையடி + அடி-.]

மட்டையடியாகச்செய்தல் *mattai-y-adiyāga-c-ceydal,* பெ.(n.) 1. வேறுபாடில்லாமல் ஒரேயடியாக செய்யப்படும் செய்கை; doing the same thing for all account. 2. புரிந்து கொள்ளாமல் ஒரே செயலை எந்த விடத்தும் செய்யும் செய்கை; doing the samething for all place without understanding.

மட்டையர் *mattaiyar,* பெ.(n.) சமணர்; jains, as bald-headed. *"துவரியாடையர் மட்டையர் சமண் தொண்டர்கள்" (திவ். பெரியதி. 2, 1, 6).*

[மொட்டை → மட்டை → மட்டையர்.]

மட்டைவைத்துக்கட்டு¹-தல் *mattai-vaittu-k-kattu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கூடையின் மேற்பகுதியைப் பனை மட்டையின் பிளந்த சிம்பு வைத்துப் பின்னுதல்; to fasten the top of a basket with fibres of palmyra stem. 2. உடைந்த எலும்புகள் கூடும்படி மரச்சிம்பு வைத்துக் கட்டுதல்; to fasten splints on a broken limb.

[மட்டைவைத்து + கட்டு-.]

மட்டைவைத்துக்கட்டு²-தல் *mattai-vaittu-k-kattu-,* 5 செ.கு.வி.(v.i.) ஒருவன் குறையைத் தாங்கிப் பேசுதல்; to support another in his fault.

[மட்டைவைத்து + கட்டு-.]

மட்பகை *mat-pagai,* பெ.(n.) 1. மட்கலத்தை அறுக்குங் கருவி; potter's instrument for paring clay. 2. மட்பகைவன் பார்க்க; see *mat-pagaivan.*

[மண் + பகை.]

மட்பகைஞன் *mat-pagaiñan,* பெ.(n.) மட்பகைவன் பார்க்க; see *mat-pagaivan.*

[மண் + பகைஞன்.]

மட்பகைவன் *mat-pagaivan-,* பெ.(n.) குயவன் (சூடா.); potter.

[மண் + பகைவன்.]

மட்பலகை *maṭ-palagai,* பெ.(n.) சுடாத செங்கல்; unburnt brick. *"திருப்பணிக்குப் பயிலுஞ் சுடுமட் பலகை பலகொண்ணர் வித்து" (பெரியபு. ஏயர்கோ.49).*

[மண் + பலகை.]

மட்பனை *maṭ-paṉai,* பெ.(n.) நிலப்பனை; moosly root.

[மண் + பனை.]

மட்பாண்டம் *maṭ-pāṇḍam,* பெ.(n.) மண்ணால் செய்த ஏனங்கள்; earthern vessels.

[மண் + பாண்டம்.]

மட்பாம்பு *maṭ-pāmbu,* பெ.(n.) நிலத்தைத் தாங்குவதாகத் தொன்மங்களால் கருதப் படும் ஆயிரம் தலை கொண்ட பாம்பு; mythological thousand - headed serpent which supporting the earth. *"மட்பாம்பு நெளிய.... மிக்கு நடந்தது பெரும்படைச் சாத்து" (திருவாலவா. 39, 20).*

[மண் + பாம்பு.]

மடக்கடி *maḍa-k-kaḍi,* பெ.(n.) 1. கோணல்; crookedness. 2. சமமின்மை; uneveness, as of a road, bank, shore, etc. 3. ஏதம்; danger, peril, hazard. 4. சூழ்ச்சி; indirectness or crabbedness of an answer calculated to deceive. 5. தந்திரம்; stratagem, device, craft. 6. வலைக்குட் படுத்துகை; entrapping, entangling ensnaring.

[மடக்கு + அடி.]

மடக்கம் *maḍakkam,* பெ.(n.) 1. வளைவு; flexure, crook. 2. வணக்கம்; reverence, veneration. 3. பணிவு; subjection, subordination, compliance, conformity. 4. மனவடக்கம்; restraint, limitation. 5. நோய் திரும்புகை (நாஞ்.); return, relapse, as of fever.

[முல் (வளைதற் கருத்துவேர்)→முள்→ முடங்கு→மடங்கு→மடக்கு = வளைவு, மூலை முடக்கு, தடுப்பு, தடை. மடக்கு→மடக்கம் (வே.க.4:82).]

மடக்கல் *maḍakkal,* பெ.(n.) முடக்கல்; bending as in limbs - flexing.

[முடக்கல்→மடக்கல்: உகர அகரத்திரிவு (ஒ.நோ.) குடைதல்→கடைதல்.]

மடக்கனியான் *maḍakkaṉi-y-āṉ,* பெ.(n.) ஓணான்; lizard.

மடக்காணி *maḍa-k-kāṇi,* பெ.(n.) மடத்துக்கு விடப்பட்ட நிலம்; donates land for abbey. *"திருவீழிமிழலை திருநாவுகரசன் மடக் காணி" (திரு.வீழி.கல்.573/1977).*

[மடம் + காணி. காணி = நிலம்.]

மடக்கிடு-தல் *maḍakkiḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. மேற்செல்லாது தடுத்து வைத்தல்; to check, to keep within certain limits. *"மடக்கிடன் மனமொடு" (பெருங். உஞ்சைக். 34, 50).* 2. வாய்மடுத்தல் (ஈடு.2, 3, 9, ஜீ); to swallow at a single draught.

[மடக்கு + இடு-.]

மடக்கியல் *maḍakkiyal,* பெ.(n.) சுரிதகம் (யாழ். அக.); last member of a *Kalippā.*

[மடக்கு + இயல்.]

மடக்கிளி *maḍa-k-kiḷi,* பெ.(n.) 1. இளங் கிளி; young parrot. *"சிறையாரு மடக்கிளியே யிங்கேவா" (தேவா.).* 2. பெண்; woman, charming like a parrot. 3. நீலங்கலந்த சாம்பல் நிறமுள்ளதும் பதின்மூன்று விரற்கடை வளரக் கூடியதுமான கடல்மீன் வகை; a sea-fish, bluish grey, attaining 13 inch in length, *therapon jarbua.*

மடக்கிறால்¹ *maḍakkiṟāl,* பெ.(n.) மீன் வகையு ளொன்று; a kind of fish.

மடக்கிறால்² *maḍakkiṟāl,* பெ.(n.) சிப்பிமீன் வகை; prawn, *astacus carcinus.*

மடக்கீதம் *maḍakkīdam,* பெ.(n.) ஒருவகை நஞ்சு; a kind of arsenic.

மடக்கு¹-தல் *maḍakku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. மடித்தல்; to bend, as the arms, knees, to draw in, fold, shut, as knife, to double, to deflect. *"வால்விசைத் தெடுத்து வன்றாண் மடக்கி" (கம்பரா.கடறாவு.17).* 2. திருப்புதல்; to turn about, as a horse, carriage or vessel, to turn back. *"தடுத்திடை மடக்குதன் மானும்" (காஞ்சிப்பு. நகர.6).* 3. மாறிமாறிச் செய்தல்; to repeat. 4. வென்று கீழ்ப்படுத்துதல்; to subdue, as in war, conquer, to surpass. 5. வாயடக்குதல்; to stop by argument or sophistry; to confute, to over power. 6. கால்நடை முதலியவற்றை ஒருசேர அடக்கி வைத்தல்; to compress; to restrain; to keep together, as cattle in a row. *"இந்த வயலுக்கு ஒருநாள் மாட்டுக்கடை மடக்க வேண்டும்" (உ.வ.).* 7. பண்டம் முதலியவற்றைத் தன் வசப்படுத்துதல்; to engage, as a servent, to secure for oneself, as an article or cargo, preventing others from obtaining it. 8. தடுத்தல்; to stop or hinder, as proceedings, to quash. 9. அழித்தல்; to destroy; to kill. *"மடக்கு வாயுயிரை யென்னா" (கம்பரா. கும்பக. 188).* 10. பணிவாக்குதல்; to tame, humble. 11. உடற்கட்டுக் குலைதல்; to break the constitution as disease. 12. மருந்து முதலியவற்றின் கடுமை முதலியவற்றை முறித்தல்; to counteract, as force; to reduce, as the power of a medicine, the action of a poison; to check, as a fire from spreading. 13. தவச அரியறுத்தல்; to reap, as sheaves of corn. 14. உடுத்துதல்; to wear around the waist, as a garment. *"மடக்கினார் புலியின் றோலை" (தேவா.955, 1).* 15. ஒதுக்கிக் கட்டுதல்; to parcel out and enclose, as a piece of land.

மடக்கு²-தல் *maḍakku-,* 5 செ.கு.வி.(v.i.) திரும்பத் திரும்ப வருதல்; to recur, as letters or words. *"ஒரெழுத்து மடக்கலும்" (தண்டி.95).*

[முல் = வளைதல் பொருள். முல்→முள்→முண் →முணவு→முணகு→முணங்கு→முணங்குதல் = வளைதல். முன்→முணம்→முடம் = வளைவு. முடம் →முடவு. முடவுதல் = நொண்டுதெல். முடம்→முடங்கு. முடங்குதல் = வளைதல். முடங்கு→முடக்கு = வளைவு. முடக்கு→மடக்கு (வே.க.4:82).]

மடக்கு³ *maḍakku,* பெ.(n.) 1. மூலைமுடுக்கு; bend, crook, flexure; corner. 2. வளைவு (கொ.வ.); inflection, deflection, refraction. 3. திருப்பு (இ.வ.); turn. 4. மடிப்பு; fold; folding, as of a knife or table. 5. மடக்குக் கத்தி பார்க்க; see *maḍakku-k-katti.* 6. தடை; curb, check, rebuff. 7. மாறிமாறி வருகை; repetition, constant recurrence.

8. தாறுமாறு; zigzag course. 9. நிலவளவு வகை; superficial measure of land, 1/2 acre, as a turn of ploughing cattle (G.Sm.D.I.i, 288). 10. செய்யுளில் சொல்சீர் முதலியன பொருள் வேறுபட்டு மீண்டும் மீண்டும் வருவதாகிய சொல்லணி வகை (தண்டி.90); repetion of a word, foot or line of poetry, in a stanza each time in a different sense. 11. ஒருதடவையில் உட்கொள்ளக் கூடிய நீர் (இ.வ.); mouthful of liquid swallowed at a time. 12. நூல்; thread.

[முடங்கு →மடங்கு →மடக்கு.]

மடக்கு[4] *madakku,* பெ.(n.) அளந்த நிலத்தின் வரி மதிப்பிற்குச் சமமான நிலம்; tax equivalent land area for newly measured land. *(ஆவணம் 1991, 10 – iii (1) அதிஇராசேந்திரனின் 3ஆம் ஆண்டு கல்வெட்டு (கி.பி.1070), அரியலூர் வட்டம் பெரிய திருக்கோணம் சௌந்தர பெருமாள் கோயில்).*

மடக்கு[5] *madakku,* பெ.(n.) பெரிய மண்ணகல், மண் ஏனம் மூடி; a large earthern plate.

மடக்குக்கட்டி *madakku-k-katti,* பெ.(n.) மடக்குக் கவிழ்த்தது போலிருக்கும் ஒருவகை கட்டி; a kind of abscess to resemble an Indian saucer in its shape (சா.அக.).

[மடக்கு + கட்டி.]

மடக்குக்கட்டில் *madakku-k-kattil,* பெ.(n.) மடிக்கக்கூடிய கட்டில் (இக்.வ.); folding cot.

[மடக்கு + கட்டில்.]

மடக்குக்கத்தரி *madakku-k-kattari,* பெ.(n.) மடக்கி வைக்கும் சிறிய கத்தரிக் கோல் வகை (இ.வ.); folding scissors.

[மடக்கு + கத்தரி.]

மடக்குக்கத்தி *madakku-k-katti,* பெ.(n.) பிடிக்குள் மடக்கி வைக்குங் கத்தி வகை (இ.வ.); folding knife, clasp knife.

[மடக்கு + கத்தி.]



மடக்குக்கதவு *madakku-k-kadavu,* பெ.(n.) மடிப்புள்ள கதவு வகை; folding door.

[மடக்கு + கதவு.]

மடக்குக்கால்[1] *madakku-k-kāl,* பெ.(n.) வளை கால்; bandy leg.

[மடக்கு + கால்.]

மடக்குக்கால்[2] *madakku-k-kāl,* பெ.(n.) முட்டுக்கால்; support, prop.

[மடக்கு + கால்.]

மடக்குக்குடர் *madakku-k-kudar,* பெ.(n.) குடற்பகுதி; large intestings.

[மடக்கு + குடர். குடல் →குடர்.]

மடக்குச்சுரம் *madakku-c-curam,* பெ.(n.) மாறிமாறி வரும் காய்ச்சல்; a fever constantly recurring, intermittent fever.

[மடக்கு+சுரம். மடக்கு = திருப்பு, திரும்பத் திரும்ப.]

மடக்குத்தூரம் *madakku-t-tūram,* பெ.(n.) மடக்குத்தொலைவு பார்க்க; see *madakku-t-tolaivu.*

[மடக்கு + தூரம்.]

Skt. தூரம்; த. தொலைவு.

மடக்குத்தொலைவு *madakku-t-tolaivu,* பெ.(n.) அணைப்புத் தூரம் (இ.வ.); distance through which the furrow is turned.

[மடக்கு + தொலைவு.]

மடக்குநாற்காலி *madakku-nārkāli,* பெ.(n.) மடக்கக்கூடிய இருக்கை; folding chair.

[மடக்கு + நாற்காலி.]

மடக்குநீட்டு *madakku-nīttu,* பெ.(n.) திருமுகவோலை; royal writ.

[மடக்கு + நீட்டு.]

மடக்குப்பிடிக்கத்தி *madakku-pidi-k-katti,* பெ.(n.) மடக்குக்கத்தி பார்க்க; see *madakku-k-katti.*

[மடக்குப்பிடி + கத்தி.]

மடக்குமடக்கெனல் *madakku-madakkenal,* பெ.(n.) நீர் குடிப்பதிலுண்டாகும் ஓர் ஒலிக்குறிப்பு; onom, expr. signifying gurgling of water in drinking.

மடக்குமண்டா *madakku-mandā,* பெ.(n.) மீன்பிடி கருவி வகை; a kind of fishing instrument (க.ப.அக.).

மடக்குமேசை *madakku-mēšai,* பெ.(n.) கால்களை மடக்கி வைத்தற்குரிய மேசை; folding table.

[மடக்கு + மேசை.]

மடக்குயில் *mada-k-kuyil,* பெ.(n.) குயில் போன்ற குரலினையுடைய பெண்; woman having a sweet voice like the koel.

[மழ →மழம்→மடம் + குயில்.]

மடக்குவரி *madakku-vari,* பெ.(n.) 1. இரண்டாம் விளைச்சலின் மேல் விதிக்கும் வரி; additional tax, as for a second corp. 2. வரிமேல் வரி; additional cess.

[மடக்கு + வரி.]

மடக்கெழுத்தாணி *madakkeluttāni,* பெ.(n.) கத்தியுடன் பிடிக்குள் அடங்கும் எழுத்தாணி வகை; folding style with knife.

[மடக்கு + எழுத்தாணி.]



மடக்கெனல் *madakkenal,* பெ.(n.) மடக்குமடக்கெனல் பார்க்க; see *madakku-madakkenal.*

[மடக்குமடக்கெனல்→ மடக்கெனல்.]

மடக்கொடி *mada-k-kodi*, பெ.(n.) இளம் பெண்; young woman, as tender. *"ஒரு மடக் கொடியாகி வந்து" (கம்பரா.அகலி.51). "மாபெரும் பாத்திரம் மடக்கொடி பெற்றனை" (மணிமே.).*

[மழ→மழம்→மடம். மடம் + கொடி.]

மடங்கக்கூறு-தல் *madanga-k-kūṟu-*, 5 செ.குன்றாவி.(v.t.) திரும்பக் கூறுதல்; to repeat. *"அவை.... மடங்கக்கூறல் வேண்டாவாம்" (தொல்.பொருள்.255, உரை).*

[மடங்கு + கூறு-.]

மடங்கடி-த்தல் *madangadi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. தோற்கச் செய்தல்; to subdue, suppress, restrain, repulse; to check, as in war or in argument; to put rout; to chase. 2. திரும்பச் செய்யும்படி பண்ணுதல் (இ.வ.); to compel, as a person, to re-do a thing.

[மடங்கு + அடி-.]

மடங்கல் *madangal*, பெ.(n.) 1. வளைகை; bending, being bent. 2. கோணம்; crook, angle, corner. 3. மீளுகை; returning. 4. மழுங்கிப் போகை; curving or blunting of the edge. 5. அடக்கம்; suppression, control. 6. ஒடுக்கம்; absorption. *"மைந்துடை யொரவனு மடங்கலுநீ" (பரிபா.1, 44).* 7. முடிவு; end. 8. இடி; thunderbolt. 9. வடவைத்தீ (பிங்.); submarine fire. *"மடங்கல் வண்ணங் கொண்ட கருந்திறல்" (பதிற்றுப்.628).* 10. ஊழிக்காலம்; termination of yuga. *"மடங்கற் காலை" (கலித்.120).* 11. கூற்றுவன்; God of death. *"மடங்கல் போற் சினைஇ" (கலித்.2).* 12. கூற்றுவனின் ஏவலர்; servant of God of death. *"தருமனு மடங்கலும்" (பரிபா.3, 8).* 13. அரிமா; lion. *"மடங்கலிற் சீறி மலைத் தெழுந்தார்" (பு.வெ.3, 24).* 14. அரிமா மாந்தன் (நரசிங்கம்); man-lion incarnation of *Tirumāl*. *"மடங்கலாய் மாறட்டாய்" (சிலப்.17, முன்னிலைப் பரவல், 3).* 15. யாளி; fabulous griffin. 16. நோய் வகை; a disease. 17. முற்றிவளைந்து சாய்ந்த கதிர் (இ.வ.); ripened sheaf of grain, prostrate in the field. 18. சம்பா அறுவடையான பின் விதைப்பிலுண்டாகும் கோடைப் பயிர் (இ.வ.); summer catch-corp. sown after *campā* has been reaped. 19. தாழை (அக.நி.); fragrant screw-pine.

[முல் (வளைதற் கருத்துவேர்)→முள்→முண்→முண→முணவு→முணங்கு→முணங்குதல் = உள் வளைதல், உள்ளடங்குதல், அடங்குதல், குரலையடக்கிப் பேசுதல். முணங்கு = சோம்பலால் ஏற்படும் உடம்பு வளைவு, முடக்கம், சோம்பு, அடக்கம். முணங்கு→முடங்கு→முடக்கு = வளைவு, தெருவின் கோணம், முடக்கு (நெளி) மோதிரம். முடங்கும் நாக்கு, முடக்குநோய், தடை, காலத்தாழ்வு, வேலையின்மை. முடங்கு→மடங்கு → மடங்கல் (வே.க.4:82).]

மடங்கலர் *madangalar*, பெ.(n.) பகைவர்; enemies, foes.

மடங்கலூர்தி *madangalūrdi*, பெ.(n.) கொற்றவை (அரிமா மீதமர்ந்தவள்); *Durgā*, as riding a lion.

[மடங்கல் + ஊர்தி.]

மடங்கற்கணக்கு *madangar-kaṇakku*, பெ.(n.) சாகுபடியான பயிரில் பலனைக் குறிக்கும் கணக்கு; accounts of the actual produce of a field.

[மடங்கல் + கணக்கு.]

மடங்கற்கொடியோன் *madaṅgaṟ-koḍiyōṉ,* பெ.(n.) வீமன் (சூடா.); *Bhima*, as having a lion banner.

[மடங்கல் + கொடியோன்.]

மடங்காநீர் *madaṅgā-nīr,* பெ.(n.) வற்றாத நீரூற்று (சினேந்.362, தலைப்பு); unfailing supply of water, as from a spring.

[மடங்கா + நீர். 'ஆ' எதிர்மறை இடைநிலை.]

மடங்கி *madaṅgi,* வி.எ.(adv.) இருந்து; on sitting posture. *"தலைப்போ கன்மையிற் சிறுவழி மடங்கி" (புறநா.223:2).*

மடங்கு¹-தல் *madaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. வளைதல் (பிங்.); to become bent, as the arm or leg. *"படையோன் முடங்கி மடங்கி" (கலித். 94, 9).* 2. முடங்குதல்; to be shut, closed, folded, as a knife or table. 3. கோணுதல்; to be inflected, deflected, refracted, bent out of place. 4. வளைந்து செல்லுதல்; to bend, turn, as a road, or river. 5. மீளுதல்; to turn about. 6. சொல் முதலியன திரும்ப வருதல்; to be repeated. *"என்று மடங்கக் கூறல் வேண்டாவாம்" (தொல். பொருள்.255, உரை).* 7. திருகுதல்; to be twisted, distorted, as a limb. 8. குறைதல்; to be diminished. *"மடங்கா விளையுள் வயலூரா" (சிலப்.23:119).* 9. சுருங்குதல்; shrink. *"மூப்புக் காலத்து உடலின் தோல் மடங்கும்" (உ.வ.).* 10. ஒடுங்குதல்; to be absorbed. (திருக்கோ. 75, உரை). 11. நெளிதல்; to be battered. 12. கீழ்ப்படுதல்; to submit, yield, surrender. *"காரொலி மடங்க....... களத்தினார்த்த பேரொலி" (கம்பரா. நாகபாச.291).* 13. தாழ்தல்; to be humbled, tamed, reduced, as pride, to be broken down, as the constitution. *"இகழ்பாடுவோ ரெருத்த மடங்க" (புறநா.40, பாடபேதம்).* 14. செயலறுதல்; to be indolent, inactive. *"உழவினார் கைம்மடங்கின்" (குறள், 1034).* 15. சூடடங்குதல்; to be decreased in force, as the wind or heat, to yield, as a disease or poison to medicines or *mantras.* 16. நிறுத்தப் பெறுதல்; to be stopped, hindered, to be quashed, as proceedings. *"மண்டமரின்றொடு மடங்கும்" (கம்பரா.கும்ப.267).* 17. தடுக்கப்படுதல்; to be turned off, diverted, thrown back, as weapons. 18. வாயடங்குதல்; to be silenced by argument, by sophistry, by authority, to be checked, confuted, refuted. 19. சொத்துரிமையாளர் இறந்தபின் சொத்து முதலியன ஒருவன்பால் அடைந்து விடுதல் (கொச்சை.); to be lodged with one's as property on the death of the owner.

[முல் (வளைதற் கருத்து வேர்)→முள்→முண். முண→முணவு→முணகு→முணங்கு. முணங்குதல் = உள்வளைதல், உள்ளடங்குதல், அடங்குதல், குரலையடக்கிப் பேசுதல். முணங்கு = சோம்பலால் ஏற்படும் உடம்புவளைவு, முடக்கம், சோம்பு, அடக்கம். முணங்கு→முடங்கு. முடக்கு = வளைவு, தெருவின் கோணம், முடக்கு மோதிரம் (நெளி). முடங்கும் நாக்கு, முடக்குநாய், தடை, காலத்தாழ்வு, வேலையின்மை. முடங்கு→மடங்கு.]

மடங்கு² *madaṅgu,* பெ.(n.) 1. மடி, அளவு; measure, quantity, degree. *"இரு மடங்காக வெய்தும்" (சூளா.கல்யா.165).* 2. அடக்கம்; suppression, control. 3. மடங்குத்தீர்வை பார்க்க; see *madaṅgu-t-tīrvai.* 4. நோய் (யாழ்.அக.); disease. 5. இழைக் கயிறு (யாழ்.அக.); coir rope.

[முல் (வளைதற்கருத்து வேர்)→முள்→முடங்கு→மடங்கு.]

மடங்கு[3] *madangu,* பெ.(n.) 1. மணங்கு[3] பார்க்க; see *manangu.* 2. பங்கு; share, portion.

மடங்குக்கட்டு-தல் *madangu-k-kattu-,* 5 செ.கு.வி.(v.i.) வலையை அளவாகக் கட்டுதல்; tie the fishing net in the limited area.

மடங்குத்தீர்வை *madangu-t-tirvai,* பெ.(n.) தண்டவரி; penal assessment (R.T.).

[மடங்கு + தீர்வை.]

மடங்குபலன் *madangu-palan,* பெ.(n.) முற்றி வளைந்து சாய்ந்த கதிர்; ripened sheaf of grain, protrate in the field.

மடங்கைப்பூடு *madangai-p-pūdu,* பெ.(n.) எழுத்தாணிப் பச்சிலை எனுஞ்செடி; a plant whose flower shoots up in the form of a style.

மடசாம்பிராணி *madašāmbirāni,* பெ.(n.) மடையசாம்பிராணி 1, பார்க்க (இ.வ.); see *madaiya-šāmbirāni.*

[மடையசாம்பிராணி→மடசாம்பிராணி.]

மடத்தனம் *mada-t-tanam,* பெ.(n.) 1. மூட குணம்; stupidity, dullness. 2. மடம்[1],1 பார்க்க; see *madam.*

[மடமை + தனம்.]

மடத்துவாசல்மறியல் *madattuvāšal-mariyal,* பெ.(n.) நாட்டுக் கோட்டைச் செட்டிகள் மடத்து அதிகாரிகளை முன்னிட்டுக் கொண்டு செய்யும் பஞ்சாயத்து வகை; an old form of *pancāyat* among *Nāttu-k-kōttai-c-cetties,* dist. fr. *Kōvil-vāšal-mariyal* (E.T.V.263).

[மடத்துவாசல் + மறியல்.]

மடதருமம் *mada-tarumam,* பெ.(n.) 1. மடத்துக்குச் செய்யும் தருமம்; donation to a mutt. 2. மடத்திற் புரியுந் தருமம்; alms given at a mutt.

[மடம் + Skt. தருமம்.]

மடதாளம் *mada-tālam,* பெ.(n.) மட்டிய தாளம் பார்க்க; see *mattiya-tālam.*

[மட்டியதாளம்→மடதாளம்.]

மடதி *madati,* பெ.(n.) ஆலங்கட்டி; hail stone (சா.அக.).

மடந்தை[1] *madandai,* பெ.(n.) 1. பெண்; woman, lady. *"இடைக்குல மடந்தை" (சிலப்.16:2).* 2. மகளிர் பருவம் ஏழனுள் பதினான்கு முதல் பத்தொன்பது அகவை வரையுள்ள பருவத்துப் பெண்; woman between the aged of 14 and 19. *"மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்" (சிலப்.). "உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன மடந்தையொடு எம்மிடை நட்பு" (குறள், 1122).* 3. பருவமாகாத பெண் (யாழ்.அக.); girls who have not attained puperty. 4. சேம்புவகை (நாஞ்.); a kind of Indian kales.

[முல் (இளமைக் கருத்துவேர்)→முள்→முளை. முளை = வித்தினின்று முளைத்த சிறுவெளிப்பாடு, இளமை, மரக்கன்று, சிறு பிள்ளை, மகன். முளை→ முளையான் = சிறுகுழந்தை. முள்→மள்→மள்ளன் = இளைஞன், மறவன், படைமறவன், குறிஞ்சி நிலவாணர். மள்→மள→மழ = இளமை, குழந்தை. மழ→ மழம்→ மழல்→ மழலை = இளமை, குழந்தைகளின் இனிய திருந்தாச் சொல். மழ→மழம்→மடம் = இளமை, இளமைக்குரிய மென்மை, இளமைக்குரிய அழகு, இளமைக்குரிய அறியாமை, பெண்பாற் குணம் நான்கனுள் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமையாகிய பேதைமை. மழ→மட→மடம்→மடந்தை (வே.க.4:5).]

மடந்தை² *madandai,* பெ.(n.) 1. மரமஞ்சள்; tree turmeric. 2. அரிதாரம்; orpiment.

மடந்தையாயிரு-த்தல் *madandai-y-āy-iru-,* 3 செ.கு.வி.(v.i.) மகப்பெறும் பருவத்தினளாதல்; to be of child-bearing age. *"அவள் மடந்தையா யிருக்கிறாள்" (உ.வ.).*

[மடந்தையாய் + இரு-.]

மடநடை *maḍa-naḍai,* பெ.(n.) மென்னடை; gentle gait, as a women and children. *"மடநடை பெண்மை வனப்பென்ப தோராய்" (சீவக.2125).*

[மள்→மழ→மழலை = இளமை, குழவி, மழ → மழம் →மடம் = இளமை. மடம் + நடை.]

மடநோக்கு *maḍa-nōkku,* பெ.(n.) மருண்ட பார்வை; bashful, timid look. *"பெருமட நோக்கிற் சிறுநுதல்" (பு.வெ.11, 7).*

[மடம் + நோக்கு.]

மடப்பசுதி *maḍa-p-pašudi,* பெ.(n.) கருங் கூளி; a black vulture (சா.அக.).

மடப்பதிங்கம் *maḍa-p-padiṅgam,* பெ.(n.) உளுந்து; black gram (சா.அக.).

மடப்பதியினாம் *maḍa-p-padiyiṉām,* பெ.(n.) பணியாளர்களுக்கு மோரும் உணவு மளிப்பதற்காக விடப்படும் இறையிலி நிலம் (இ.வ.); endowment for supplying butter-milk and food for public officers.

[மடம்² + பதி + உருது. இனம்→இனாம்.]

மடப்பம்¹ *maḍappam,* பெ.(n.) 1. மென்மை; tenderness. 2. இணக்கம்; acquiescence. 3. பேதைமை; simplicity, credulity.

[முல் (இளமைக் கருத்துவேர்)→முள்→மள். மள்ளன் = இளைஞன், மறவன். மள்→மள→மழ = இளமை, குழந்தை. மழ→மட →மடப்பு→மடப்பம் (வே.க.4:5).]

மடப்பம்² *maḍappam,* பெ.(n.) 1. மருத நிலத்தூர்; town in an agricultural tract. 2. ஐந்நூறு ஊர்களுக்குத் தலைமை பெற்ற ஊர்; chief town admist 500 villages.

மடப்பம்³ *maḍappam,* பெ.(n.) அரண்மனையிற் பணி செய்யும் பெண் (யாழ்.அக.); female inmate of a palace.

மடப்பள்ளி *maḍa-p-paḷḷi,* பெ.(n.) மடைப் பள்ளி பார்க்க (வின்.); see *maḍai-p-paḷḷi.*

[மடைப்பள்ளி → மடப்பள்ளி.]

மடப்பளி *maḍa-p-paḷi,* பெ.(n.) மடைப்பள்ளி பார்க்க; see *maḍai-p-paḷḷi.*

[மடைப்பள்ளி→மடப்பள்ளி→மடப்பளி.]

மடப்பளிப்பால் *maḍa-p-paḷi-pāl,* பெ.(n.) தென்னங்கள்; coconut toddy (சா.அக.).

மடப்பற்று *maḍa-p-paṟṟu,* பெ.(n.) மடத்துக்குரிய சொத்து (யாழ்.அக.); property of a monastery.

[மடம்² + பற்று.]

மடப்புறத்துஇறையிலி *maḍappuṟattu-iṟaiyili,* பெ.(n.) வரிகள் நீக்கிய கோயில் நிலம்; tax free temple land. *"படுவூர்க் கோட்டத்து காவிரிப்பாக்கப் பற்று திருபாற்கடலில் இவருக்குக் காணியான நிலத்தில் இவருக்கு மடப்புறத்து இறையிலி" (தெ.க.தொ.17, கல்.759-3).*

[மடப்புறத்து + இறையிலி.]

மடம்[1] *madam*, பெ.(n.) 1. அறியாமை; ignorance, folly. *"மடப்படலின்றிச் சூழுமதி வல்லார்" (சீவக.1927).* 2. மகடூஉக் குணம் நான்கனுள் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமையாகிய பேதைமை; simplicity, credulity, artelessness, one of four *magadū-u-kkuṇam*. *"வாலிழை மட மங்கையர்" (புறநா.11).* 3. அழகு; beauty. *"மடக்கணீர் கோரும்" (சிலப்.17, உரைப்பாட்டு மடை).* 4. மென்மை; tenderness, delicacy. *"தெளி நடை மடப்பிணை" (புறநா.23).* 5. இணக்கம்; acquiescence. *"அஞ்சிறைய மடநாராய்" (திவ்.திருவாய்.1, 4, 1).*

[முல் (இளமைக் கருத்துவேர்)→முள்→முளை. முளை = வித்திநின்று முளைத்த சிறுவெளிப்பாடு, இளமை, மரக்கன்று, சிறு பிள்ளை, மகன். முளை→ முளையான் = சிறுகுழந்தை. முள்→மள்→மள்ளன் = இளைஞன், மறவன், படைமறவன், குறிஞ்சி நிலவாணர். மள்→மள→மழ = இளமை, குழந்தை. மழ→ மழம்→ மழல்→ மழலை = இளமை, குழந்தைகளின் இனிய திருந்தாச் சொல். மழ→ மழம்→மடம் = இளமை, இளமைக்குரிய மென்மை, இளமைக்குரிய அழகு, இளமைக்குரிய அறியாமை, பெண்பாற் குணம் நான்கனுள் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமையாகிய பேதைமை. மழ→மட→மடம். முள்→மள் →மள்ளன் = இளைஞன், வீரன். மள்→மழ = இளமை, குழவி. மழவுங்குழவும் இளமைப் பொருள (தொல்.உரி, 14). மழ→மட→மடம் (வே.க.4:5).]

இரு திணையிலும் பெண்பால் ஆண்பாலினும் மடம் மிக்கதாகக் கருதப்படுவதால் மடவரல், மடந்தை முதலிய பெயர்கள் உயர்திணையிலும் மந்தி, மூடு முதலிய பெயர்கள் அஃறிணையிலும் பெண்பாலைக் குறிக்க வெழுந்தன (மு.தா.42).

மடம்[2] *madam*, பெ.(n.) 1. துறவியர் தங்குமிடம்; hermitage. *ஆண்டிகள் கூடி மடம் கட்டினாற்போல்? (பழ.).* 2. இரப்போர்க்கு உணவளிக்குமிடம் அல்லது இரப்போர் உண்டு தங்குமிடம்; a place where pilgrims and religious mendicants are fed. *"வல்லநாட்டு ஸ்ரீ கோவிஞ்சபாடி மடத்தில் உண்ண" (தெ.க.தொ.13:33).* 3. ஊர்ப் பொதுக் கட்டடம், உசாவடி (சாவடி); a public building in a village. 4. வழிப்போக்கர் தங்குமிடம்; rest-house. 5. கோயில்; temple. 6. இடம்; place. 7. தேர் (யாழ்.அக.); car.

[முல் (துளைத்தற் கருத்து வேர்)→முள்→மள் →மடு = ஆற்றிடைப் பள்ளம், அருவி விழும் பள்ள நீர்க் குண்டு, ஆற்றிடைக் குட்டை, ஆவின்மடி. மடு →மடுத்தல் = வாயில் வைத்தல், உண்ணுதல், விழுங்குதல், ஊட்டுதல், நிறைத்தல், சேர்த்தல், உட்புகுத்துதல், உட்செலுத்துதல், அமிழ்த்துதல். மடு →மடம் (வே.க.4:91).]

மடம்[3] *madam*, பெ.(n.) 1. இதளியம்; mercury. 2. பெருங்காயம்; asafoetida (சா.அக.).

மடமடக்கி *mada-madakki*, பெ.(n.) வட்டத் திருப்பி; root of twining plant (சா.அக.).

மடமட-த்தல் *mada-mada-*, 4 செ.கு.வி. (v.i.) ஒலித்தல்; to gurgle, rattle.

மடமடப்பு *mada-madappu*, பெ.(n.) ஒலிக்கை; gurgling, purling, rattling.

[மடமட →மடமடப்பு.]

மடமடவெனல் *mada-mada-v-enal*, பெ.(n.) மடமடெனல் பார்க்க; see *mada-madenal*.

[மடமட + எனல்.]

மடமடெனல் *mada-madenal,* பெ.(n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying gurgling, as water, rattling, rustling. 2. விரைவுக் குறிப்பு; being in haste, acting with despatch.

[மடமட + எனல்.]

மடமயில்¹ *madamayil,* பெ.(n.) அறியாப் பெண்; an innocent girl.

[மடம் = அழகு, முதிராஅறிவு. மடம் + மயில்.]

மடமயில்² *mada-mayil,* பெ.(n.) அழகிய பெண்; woman, beautiful like peafowl.

[மடம் = அழகு. மடம்¹ + மயில்.]

மடமான் *madamān,* பெ.(n.) பெண்; woman, as timid as a deer. *"மட மானினைப் போத வென்று" (திவ்.பெரியதி.3, 7, 1).*

[மடம்¹ + மான்.]

மடமை¹ *madamai,* பெ.(n.) அறிவின்மை; idiocy.

[மடம்→மடமை.]

மடமை² *madamai,* பெ.(n.) பேதைமை; ignorance, stupidity, silliness, folly. *"விருந்தோம்ப லோம்பா மடமை" (குறள், 89).*

[மழ→மட→மடமை.]

மடல் *madal,* பெ.(n.) 1. பனை முதலியவற்றின் ஏடு (சூடா.); flat leaf of palm, plantain and screwpine. *"கொழுமடற் குமரி வாழை" (சீவக.274).* 2. பனங்கருக்கு; jagged stem of a palmyra leaf. *"ஒழிமடல் விறகிற் கழி மீன் சுட்டு" (புறநா.29).* 3. தான் காதலித்த தலைவியைப் பெறாவிடத்துத் தலைவன் ஏறுதற்பொருட்டுப் பனங்கருக்காற் குதிரை போற் செய்த ஊர்தி; horse of palmyra stems on which a thwarted lover mounts to proclaim his grief and win his love. *"ஏறிய மடற்றிறம்" (தொல். பொருள்.51).* 4. கலிவெண்பாவின் உறுப்பாகிய உலாமடல் (சூடா.); *ulā-madal,* a poem in *kali-venpā* metre. 5. பூவிதழ்; flower petal. *"மடல் விரிமலர்" (பாகவத.1, மாயவன–9). "மடல் பெரிது மகிழ் இனிது கந்தம்" (மூதுரை–12).* 6. கிளை; branch. *"மடற்பெரிய வாலின் கீழ்" (தேவா.26, 10).* 7. கண்ணிமை; eye-lid. *"கண்மடல்".* 8. திருநீறும் சந்தனமும் வைக்கும் கலம் (சீவக. 1147, உரை); receptacle for sacred ashes and sandal. *"பொன்னின் புஷ்கரப் பத்திமடல் ஒன்று" (தெ.க.தொ.2, 15).* 9. சோளக்கதிர் முதலியவற்றின் மேலுறை (வின்.); sheath, as of Indian corn, plantain flower, etc. 10. காதுச்சுணை (யாழ்.அக.); external border or tip of the ear. 11. தோண் மேலிடம் (வின்.); shoulder blade. 12. ஆயுதவலகு; blade of a weapon. *"மடற்றலைக் கதிர்கொள் வேலான்" (இரகு.குசண.35).* 13. கை; hand. *"மடலோடுமடல் சேரக்கட்டி" (வெங்கைக்கோ. 8).* 14. ஏற்றக்கழி; standing pole of a well - sweep. 15. சிறுவாய்க்கால் (வின்.); branch channel. *"பொய்தலை அடுத்த மடலின் கண்ணும்" (தொல். பொருள்.111).*

மடல்² *madal,* பெ.(n.) கடிதம்; ஓலை வடிவிலோ, தாள் வடிவிலோ செய்திகளை எழுதியனுப்பும் ஏடு; letter.

மடல்வாத்து *maḍal-vāttu,* பெ.(n.) மயிலைப் போன்ற தோகையினை யுடைய நீர்ப்பறவை வகை; a water-fowl resembling the black cormorant, but with a different-coloured bill and plumage like a peacock's.

[மடல் + வாத்து.]



மடல்வாழை *maḍal-vāḻai,* பெ.(n.) பேயன் வாழை; a kind of banana.

[மடல் + வாழை.]

மடலட்டு *maḍalaṭṭu,* பெ.(n.) பனைவெல்லம்; palm jaggery.

[மடல் + அட்டு. மடல் = பனை.]

மடலவிழ்-தல் *maḍalaviḻ-,* 2 செ.கு.வி.(v.i.) இதழ்விரிதல்; to burst, as flower-sheath.

[மடல் + அவிழ்-.]

மடலாந்து *maḍalāndu,* பெ.(n.) மட்டைப்படல் பார்க்க; see *maṭṭai-p-paḍal.*

மடலி *maḍali,* பெ.(n.) இளம்பனை; young palmyra tree.

[மட→மடல் = இளமை. மடல் →மடலி.]

மடலி-த்தல் *maḍali-,* 4 செ.கு.வி.(v.i.) மடங்கித் திரும்புதல் (யாழ்.அக.); to bend, double.

[முல் (வளைதற் கருத்து வேர்)→முள்→முண் →முண்டு→மண்டு→மண்டி = காலை முடக்கி முழங்காலால் நிற்கை. மண்டிபோடுதல், மண்டியிடுதல் என்னும் வழக்கை நோக்குக. மண்டு→மண்டலம் = வட்டம், வட்ட வடிவம். மண்டலம்→மண்டலி. மண்டலித்தல் = வளைத்தல், பாம்பு முதலியன வட்டமாகச் சுற்றியிருத்தல், வில்லாளி காலை வளைத்து வட்டமாக்குதல். மண்டலி→மடலி (வே.க.4:83).]

மடலூர்-தல் *maḍalūr-,* 2 செ.கு.வி.(v.i.) தான் காதலித்த தலைவியை அடைதல் வேண்டிப் பனைமடலாலான குதிரையைத் தலைவன் ஏறி ஊர்தல்; to ride a horse of palmyra stems, as a disappointed lover to win his love. *"மடலூர்தல் யாமத்து முள்ளுவேன்" (குறள், 1136).*

[மடல் + ஊர்-.]

மடலூர்ச்சி *maḍal-ūrcci,* பெ.(n.) மடல் 3, 4 பார்க்க; see *maḍal.*

[மடல் + ஊர்ச்சி.]

மடலேறு-தல் *maḍal-ēṟu-,* 5 செ.கு.வி.(v.i.) மடலூர்-, பார்க்க; see *maḍalūr-,* *"நோனாவுடம்பு முயிரு மடலேறும்" (குறள், 1132).*

[மடல் + ஏறு-.]

மடவரல் *maḍa-varal,* பெ.(n.) 1. மடப்பம்; simplicity, artlessness. *"மடவரலுண்கண் வாணுதல் விறலி" (புறநா. 89).* 2. பெண்;

woman. *"மடவர னோக்கம்" (குறள், 1085). "மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே" (திருமுருகா.100-102).*

[முல் (இளமைக் கருத்துவேர்)→முள்→முளை = வித்தினின்று முளைத்த சிறு வெளிப்பாடு, இளமை, சிறுபிள்ளை, மகன். முள்→மள்→மழ. மழவு = இளமை, குழந்தை. மழ→மட→மடம் = இளமை, இளமைக்குரிய மென்மை. மடம்→மடந்தை = பெண். மடம்→மடம்வால் →மடவரல் (வே.க.4:6).]

இருதிணையிலும் பெண்பால் ஆண்பாலினும் மடம் மிக்கதாகக் கருதப்படுவதால் மடவரல், மடந்தை முதலிய பெயர்கள் உயர்திணையிலும், மந்தி மூடு முதலிய பெயர்கள் அஃறிணையிலும் பெண்பாலைக் குறிக்க வெழுந்தன (மு.தா.42).

மடவள் *madaval*, பெ.(n.) அறிவிலாள்; stupid woman. *"மடவளம்ம நீ யினிக் கொண்டோளே" (ஐங்குறு.67).*

[முள்→மள்→மள→மழ = இளமை, குழந்தை. மழ→மழம் + மடம் = இளமை, மென்மை, அழகு. மடம் →மடவள் (வே.க.4:5).]

மடவளாகம் *madavaḷāgam*, பெ.(n.) கோயிலைச் சூழ்ந்துள்ள வீதி; streets around a temple. *"இம்மடவளாகத்து இருக்கிற குடிகளுக்கு" (தெ.க.தொ.3, 48). "குன்றத்தூரின் மடவளாகந் தானாக்கி" (சேக்கிழார்.பு.19).*

[மடம்[2] + வளாகம்.]

மடவன் *madavaṉ*, பெ.(n.) அறிவிலான்; stupid person. *"மடவர் மெல்லியர் செல்லினும்" (புறநா.106).*

[முள்→மள்→மள→மழ→மழம்→மடம்→மடவன் (வே.க.4:5).]

மடவா-தல் *mada-vā-*, 18 செ.கு.வி.(v.i.) மடப்பம் வருதல்; to be charming, as a girl. *"கொல்லிக் குடவரைப் பாவையின் மடவந்தனளே" (குறுந். 100).*

[மடம்→மட + வா-.]

மடவாமீன் *madavā-mīṉ*, பெ.(n.) மடவை 4 பார்க்க; see *madavai*.

மடவாயம் *madavāyam*, பெ.(n.) மகளிர் விளையாட்டுக் கூட்டம்; company of girl-playmates of a maiden. *"மடவாயமாகி மிடையும் பதினெண் கணத்து மடவாரும்" (தக்கயாகப்.307).*

[மடம்[2] + ஆயம்.]

மடவார் *madavār*, பெ.(n.) 1. மகளிர்; woman, lady. *"வலம்வந்த மடவார்க ணடமாட" (தேவா.278, 1).* 2. மூடர்; fools. *"வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை" (குறள், 153).*

மடவாழை *mada-vāḻai*, பெ.(n.) பேயன் வாழை; a kind of banana (G.Sm.D.I. i, 215).

[மடல் + வாழை.]

மடவாள் *madavāḷ*, பெ.(n.) பெண் (திவா.); woman. *"குழன்மடவாள் கூறுடைய ளொருபாகம்" (திருவாச.5, 17).*

[மடவள்→மடவடாள்.]

மடவி *madavi*, பெ.(n.) மடவியர் பார்க்க; see *madaviyar*.

[மட→மடவி.]

மடவியர் *madaviyar*, பெ.(n.) 1. மடவார்[1] பார்க்க; see *madavār*. *"மடவியரைச் சிந்தை விருப்பஞ் செய்வித்தல்" (கொக்கோ. பாயி.12).* 2. மடவார்[2] பார்க்க; see *madavār*. *"வரையகவாணர் மடவியரே" (இறை.18, உரை. மேற்.).*

[மடம்→மடவி→மடவியர் (வே.க.4:5).]

மடவிளாகம் *maḍa-viḷāgam* பெ.(n.) கோயிலைச் சுற்றியுள்ள தெருவில் மடத்திற்கென்று அமைக்கப்பட்ட நிலப்பகுதி (மடவளாகம்); a land allotted for the street around the temple. *"ஸ்ரீகுலொத்துங்க சொழவிண்ணகராழ்வா(ன்) கொயிலிற் திருமடவிளாகத்து(த்) தெற்கில்பருமட" (தெ.க. தொ.IV, கல்.134/1986).*

மடவை *maḍavai,* பெ.(n.) 1. கவைக்கால்; post. *"மடவையிடைக்கழல் வைப்பார்போல்" (சேதுபு. தேவிபுர.64).* 2. துடுப்பு; oar, paddle. 3. தணக்கு; whirling-nut. 4. வெண்ணிற முள்ள மீன் வகை (பதார்த்த. 932); grey mullet, silvery, mugil oligolepe.

மடவைக்கெண்டை *maḍavai-k-keṇḍai,* பெ.(n.) மீன் வகை (யாழ்.அக.); a species of carp.

[மடவை + கெண்டை.]

மடவைச்சுறா *maḍavai-c-cuṟā,* பெ. (n.) சுறா மீன் வகை; a kind of *šuṟā* fish.

[மடவை + சுறா.]

மடவைமயக்கி *maḍavai-mayakki,* பெ.(n.) பெண்கள் மயங்க வைக்கும் செடி; a plant which enchants woman (சா.அக.).

மடவோர் *maḍavōr,* பெ.(n.) 1. மடவார், 1 பார்க்க; see *maḍavār. "பெருமதர் மழைக்கண் மடவோர்க்கு" (மணிமே.19:73).* 2. மடவார் 2 பார்க்க; see *maḍavār. "மக்களிர் சிறந்த மடவோ ருண்டோ" (மணிமே.6:104).*

[மடவார்→மடவோர்.]

மடற்கள்ளி *maḍaṟ-kaḷḷi,* பெ.(n.) ஒரு வகைக் கள்ளி; a kind of spurge (சா.அக.).

[மடல் + கள்ளி.]

மடற்பரி *maḍaṟ-pari,* பெ.(n.) மடல்³ பார்க்க; see *maḍal³.*

[மடல் + பரி.]

மடற்பனை *maḍaṟ-paṉai,* பெ.(n.) சங்குப் பனை; a tree.

[மடல் + பனை.]

மடற்பாளை *maḍaṟ-pāḷai,* பெ.(n.) பூம்பாளை (யாழ்.அக.); tender spathe.

[மடல் + பாளை.]

மடற்றுத்தம் *maḍaṟṟuttam,* பெ.(n.) துத்த வகை; native hydrous silicate of zinc, calamine.

[மடல் + துத்தம்.]

மடறுங்கி *maḍaṟuṅgi,* பெ.(n.) சிறுதும்பை பார்க்க; see *šiṟu-tumbai* (சா.அக.).

மடன்¹ *maḍaṉ,* பெ.(n.) 1. அறியாமை; ignorance. *"இன்சொலார் தன் மடனொக்கு மடனு முண்டோ" (கம்பரா.உண்டாட்டு.10).* 2. கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை; credulity; proneness to accept another's opinion and holding fast to it. *"சாயலு நாணு மடனு மென்றா" (தொல். பொருள்.247).*

[மடம் →மடன்.]

மடன்² *maḍaṉ,* பெ.(n.) அறிவிலான்; ignorant person.

க. மடன்.

[மடம் →மடன்.]

மடன்மா *madaṉ-mā*, பெ. (n.) மடல் 3 பார்க்க; see *madal 3*. *"மடன்மாகூறு மிடனுமா ருண்டே" (தொல்.பொருள்.99).*

[மடல் + மா.]

மடா *madā*, பெ.(n.) ஏன வகை; large earthern vessel. *"அடைச்சேம் பெழுந்த வாடுறு மடாவின்" (பதிற்றுப்.24, 20).*

[முழுத்தல் = பருத்தல். முழு→முழா→முடா→ மிடா = பெருத்த மண்பானை. மிடா→மடா.]

மடாதிபத்தியம் *madātipattiyam*, பெ.(n.) கோயில் அல்லது மடத்தின் மேலாண்மை (யாழ்.அக.); management of affairs of a temple or mutt.

*[மடல் + **Skt.**அதிபத்தியம்.]*

மடாதிபதி *madādipati*, பெ.(n.) மடத்துத் தலைவன்; head of a monastery.

*[மடம் + **Skt.**அதிபதி.]*

மடாரெனல் *madār-eṉal*, பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying crashing noise. *"மரம் மடாரென்று முறிந்தது" (உ.வ.).*

[மடார் + எனல்.]

மடாலயம் *madālayam*, பெ.(n.) மடம்² 1, 2 பார்க்க; see *madam*.

[மடம் + ஆலயம்.]

மடி¹–தல் *madi-*, 2 செ.கு.வி.(v.i.) 1. மடங்குதல்; to be bent, folded, turned down, lapped in. *"வள்ளுகிர் மடிய" (கம்பரா.கும்ப.182).* 2. நுனி மழுங்குதல்; to be turned, as an edge or a point. *"வயிரவாளை..... வாய்மடிய வீழ்த்த" (வாயுசங்.யாவுஞ்.3).* 3. தலை சாய்தல்; to droop, as the head of one asleep or as sheafs of grain in a field. 4. வீழ்தல்; to fall on. *"மடி மடிந்து மாண்ட வுஞற்றி லவர்க்கு" (குறள், 604).* 5. வாடுதல் (இ.வ.); to wither, as leaves. 6. சுருளுதல்; to roll, as waves. *"மடிதிரை தந்திட்ட..... முத்தம்" (நாலடி, 224).* 7. முயற்சியறுதல்; to be indolent, inactive. *"மடியாவினைஞர்" (பெரும்பாண்.254).* 8. தூங்குதல்; to sleep. *"மன்பதை யெல்லா மடிந்த விருங்கங்குல்" (கலித்.65).* 9. சுருங்குதல்; to shrink, contract. *"வீங்கு சுரை மடிய" (அகநா.54.).* 10. ஊக்கங்குறைதல்; to be dispirited. *"உவவு மடிந்துண் டாடியும்" (பட்டினப்.93).* 11. அழிதல்; to perish; to be destroyed. *"குடிமடிந்து குற்றம் பெருகும்" (குறள், 604).* 12. சாதல்; to die. *"வல்லது மடிதலே யென்னின் மாறுதிர்" (கம்பரா. அதிகார.6.).* 13. தானியங்கேடுறுதல்; to become mouldy, as rice. *"மடிந்துபோன அரிசி" (உ.வ.).* 14. திரண்டு செல்லுதல்; to rush in together as a crowd. *"மக்கள் திருவிழாக் காண மடிகிறார்கள்" (உ.வ.).* 15. கொப்புள முடைதல்; to break, to be broken as a blister.

[முடிதல் = வளைத்து அல்லது மடித்துக் கட்டுதல். முடி→மடி = வளைந்து மடங்குதல். முட்டு →முட்டி→முடி = இறுதி. முடி→மடிதல் = 1. சாதல், 2. அழிதல்.]

மடி²–த்தல் *madi-*, 2 செ.குன்றாவி.(v.t.) அழித்தல்; to kill destroy. *"மரனெலா மடிப்ப" (கம்பரா. தாடகை.35).*

[முட்டு→முட்டி→முடி. முடிதல் = இறுதியாதல், முற்றுப் பெறுதல், நிறைவேறுதல், செய்ய முடிதல். வாணாள் முடிந்து இறத்தல், அழிதல். முடி→மடிதல் = சாதல், அழிதல். மடித்தல் = அழித்தல் (வே.க.4:65).]

மடி[3]–த்தல் *madi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. மடக்குதல்; to fold, as the arms, to fold up, as cloth, as paper, to double up, shut up, as a folding knife. 2. வளைதல்; to bend, turn down, turn in curl. 3. பேச்சில் மடங்க வடித்தல்; to baffle in speech, confound by artifice, as in an argument. 4. அழித்தல்; to kill, destroy. *"மரனெலா மடிப்ப" (கம்பரா.தாடகை.35).* 5. உழக்குதல்; to tramble down, to throw into confusion.

[முல் (வளைதற் கருத்துவேர்)→முள்→ முண்டு →முண்டி →முடி. முடிதல் = வளைத்து அல்லது சுற்றிக் கட்டுதல். முடித்தல் = கூந்தலைக் கட்டுதல், பூமாலை கொண்டையிற் கட்டியணிதல். முடி = பறவை பிடிக்குங் கண்ணி, கட்டு, முடிச்சு, உச்சியில் முடிக்கும் மயிர்க்கட்டு வகை, நாற்று முடி. முடி →மடி (வே.க.4:85).]

மடி[4] *madi,* பெ.(n.) 1. மடங்குகை; bending down, as sheaf of paddy. 2. வயிற்று மடிப்பு; crease in abdomen. 3. வயிறு; belly, stomach. *"இடாகினிப் பேய் வாங்கி மடியகத்திட்டாண் மகவை" (சிலப்.9: 22).* 4. அரை; waist. *"பணப்பையை மடியிற் கட்டிக் கொண்டான்" (உ.வ.).* 5. மடித்த தொடையின் மேற்பகுதி; lap. *"குழந்தை அவன் மடியில் உட்கார்ந்து கொண்டிருந்தது" (உ.வ.).* 6. ஆடை, தாள் முதலியவற்றின் மடிப்பு; orget. *"சேமமடிந்த பொழுதில்" (குறிஞ்சிப். 156).* 7. ஆடை; cloth, garment. *"குறியவு நெடியவு மடிதரூஉ விரித்து" (மதுரைக்.520).* 8. தூய்மையாக உடுத்தும் மரவுரி, பட்டு, பருத்தி முதலியவற்றாலாகிய ஆடை வகை; cloth made of the fibre of trees, coarse silk, cotton, etc., as ceremonially pure. *"உடுக்க மடி கொண்டுவா" (கொச்சை.).* 9. தீட்டில்லா நிலை; ceremonial purity, as of one who has bathed. *'நான் மடியாயிருக்கிறேன், எண்ணைத் தொடாதே' (உ.வ.).* 10. பல துண்டுகள் கொண்ட ஆடை வகை; piece consisting of a certain number of clothes. 11. பை போன்ற முந்திச் சொருக்கு; fold in a cloth wrapped round the waist, answering for a pocket. *பாக்கை மடியில் கட்டலாம் தோப்பை மடியிலே கட்டலாமா?' (பழ.).* 12. வலை வகை; a kind of net. 13. மீன்வலையோடு சேர்ந்த பெரும்பை; large bag attached to a finishing net. 14. மாடு முதலியவற்றின் முலையிடம்; udder, especially of a cow. *"மடி வெண் டிங்களா" (கம்பரா.ஊர்தே.56).* 15. அடக்கம்; submission. 16. தனிமை (பிங்.); loneliness. 17. சோம்பல்; sloth, idleness, indolence. *"போகூழாற் றோன்று மடி" (குறள், 371). "மடியை மடியா ஒழுகல் குடியைக் குடியாக வேண்டு பவர்" (குறள், 602).* 18. சோம்பலுடையவன்; lazy person. *"களி மடி மானி" (நன்.39).* 19. நோய் (பிங்.); disease. 20. கேடு (பிங்.); ruin, loss, detriment, damage. 21. பொய் (பிங்.); lie, falsehood. 22. பகை; hatred, emity. 23. முடைநாற்றம்; bad odour. *"மடிநாறு மேனி" (தேவா.30, 4).* 24. இரட்டைக் கட்டுமரம்; double catamaram (G.Tn. D.I.229). 25. சோறு (அக.நி.); boiled rice. 26. தாழை 1; fragrant screw-pine. 27. தாழை விழுது (தைலவ.தைல.125); external root of the screw-pine. 28. மடங்கு; turn, time. *"கூற்றினும் மும்மடி கொன்றான்" (கம்பரா.இலங்கையெரி.57).*

மடி[5]–தல் *madi-,* 4 செ.குன்றாவி.(v.t.) மறத்தல்; to forget. *"சேம மடிந்த பொழுதில்" (குறிஞ்சிப்.156).*

மடிக்கதம் *maḍi-k-kadam*, பெ.(n.) மலைப் பூவரசு; mountain portia tree (சா.அக.).

மடிக்கதிர் *maḍi-k-kadir*, பெ.(n.) கதிரறுப் போர்க்குப் பரிசாகக் கொடுக்குந் தவசக் கதிர்; perquisite of grain given to women engaged in reaping a crop (M.M.452).

[மடி² + கதிர்.]

மடிக்கயிறு *maḍi-k-kayiṟu*, பெ.(n.) பரதவர் பயன்படுத்தும் நீண்ட கயிறு; coden rop.

[மடி + கயிறு.]

மடிக்குருவி *maḍi-k-kuruvi*, பெ.(n.) வெற்றிலை; betel leaf.

[மடி + குருவி.]

மடிகசக்கு-தல் *maḍi-kaśakku-*, 5 செ. குன்றாவி.(v.t.) மடிபிசை-தல் பார்க்க (வின்.); see *maḍi-piśai-*.

[மடி + கசக்கு-.]

மடிகட்டு¹-தல் *maḍi-kaṭṭu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. தூய ஆடை அணிதல்; to dress in ceremonially pure cloth. 2. ஆடையை உலர்த்தல்; to dry a washed cloth. 3. மணப் பெண்ணின் மடியில் வெற்றிலை பாக்குப் பழங்கட்டுதல்; to the betels and fruits in the cloth of a bride.

[மடி + கட்டு-.]

மடிகட்டு²-தல் *maḍi-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) அதிகமாக எடுத்துக் கொள்ளுதல் (இ.வ.); to take in large quantity.

[மடி² + கட்டு-.]

மடிகட்டு³-தல் *maḍi-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) கடற்கரைக்கு வந்துவிட்ட பெரு வலையின் வாயை (மீன்கள் வெளி வராதிருக்க)க் கட்டுதல்; to tie up the finishing net.

[மடி + கட்டு-.]

மடிகட்டை *maḍi-kaṭṭai*, பெ.(n.) பெரிய வலையிலுள்ள மடியின் வாயை அகற்றிப் பிடிக்கக் கட்டப்பட்டிருக்கும் கட்டை; wodden log tied in the mouth of the finishing net for wide opening.

[மடி + கட்டை. மடி = வலை.]

மடிகம் *maḍigam*, பெ.(n.) தாழை; fragrant screw pine (சா.அக.).

மடிகம்பு *maḍi-kambu*, பெ.(n.) 1. தறிமரம்; web beam. 2. வலைக்கம்பு (யாழ்.அக.); main pole of a fishing net.

[மடி³ + கம்பு.]

மடிகாது *maḍi-kādu*, பெ.(n.) நாய் முதலியவற்றின் மடிந்த காது; lop ear, as of a dog.

[மடி + காது.]

மடிகாரன் *maḍi-kāraṉ*, பெ.(n.) நாட்டுப் படகில் தொழில் செய்வோர்; one who used to fishing by country boat.

[மடி + காரன்.]

மடிகால் *maḍi-kāl*, பெ.(n.) முழந்தாளிடும் போது மடித்த கால்; bent leg as when kneeling.

[மடி + கால்.]

மடிச்சீலை¹ *maḍi-c-cīlai*, பெ.(n.) தூய ஆடை; ceremonically pure cloth.

[மடி + சீலை. சேலை→சீலை.]

மடிச்சீலை[2] *mado-c-cilai,* பெ.(n.) 1. மடியிற் கட்டிக் கொள்ளும் பணப்பை; purse kept in the gridle. *"மடிச்சீலை கொட்டித் தாராதவரார்" (விறலிவிடு.117).* 2. நீர்ச்சீலை; forelap.

[மடி + சீலை. சேலை→சீலை.]

மடிச்சுக்கட்டி *madiccu-k-katti,* பெ.(n.) புழுவகை (யாழ்.அக.); a kind of worm.

மடிசஞ்சி *madicañji,* பெ.(n.) மடிவேட்டி வைத்தற்குரியதும் புல் அல்லது கம்பளியா லானதுமான பை; bag made of reed or wool for keeping clothes ceremonially pure.

[மடி + சஞ்சி.]

மடிசல் *madical,* பெ.(n.) 1. நீர்த் தொடர்பால் பொருள்களில் உண்டாகும் கெடுதி; damage caused by lapse of time or by dampness. 2. நாட்பட்டுக் கெட்ட தவசம்; grain injured by time.

[மடி → மடிசல்.]

மடிசாறுபாய்-தல் *madišāru-pāy-,* 2 செ.கு.வி. (v.i.) நீர்ப்பொருள் ஒழுங்காய் நேரே விழாது பக்கம் விலகிச் சிந்துதல் (இ.வ.); to be spilled in pouring a liquid, as from carelessness.

[மடி + சாறு + பாய்-.]

மடிசாறு *madicāru,* பெ.(n.) மடிதாறு பார்க்க (இ.வ.); see *madi-tāru.*

[மடிதாறு →மடிசாறு.]

மடிசீலை *madi-cilai,* பெ.(n.) நீர்ச்சீலை (கோவணம்) (இ.வ.); forelap.

[மடி + சீலை.]

மடிசெவி *madicevi,* பெ.(n.) மடிகாது பார்க்க; see *madi-kādu.*

[மடி + செவி.]

மடிதடவு-தல் *madi-tadavu-,* 5 செ. குன்றாவி. (v.t.) 1. பிறன்பொருளைக் கவரல்; to pick-pocket, skealthily remove purse, jewels, etc. from a person. *"தன்னை விசுவசித்து உடன் கிடந்தவனை மடி தடவினவனைப் போல" (ஈடு.10, 8, 2. அரும்.).* 2. ஏதேனும் மறைத்து வைத்திருப்பதைப் பார்க்க மடியைத் தடவி ஆய்தல்; to examine one's clothes and see if anything is kept hidden. *"மடிதடவாத சோறும்" (ஸ்ரீவசன.3, 28).*

[மடி + தடவு-.]

மடிதப்பு-தல் *madi-tappu-,* 5 செ.கு.வி.(v.i.) (வலையின் உறுப்பாகிய) மடியை அலசுதல்; washing the net.

[மடி + தப்பு-.]

மடிந்தகாது *madinta-kādu,* பெ.(n.) மடிந்து அகன்ற காது; flap ear.

[மடிந்த + காது.]

மடிப்பங்கால் *madippaṅkāl,* பெ.(n.) மடிகால் பார்க்க; see *madi-kāl.*

மடிப்பணம் *madi-p-panam,* பெ.(n.) கைப் பணம்; cash on hand.

[மடி + பணம்.]

மடிப்பாளி *madi-p-pāli,* பெ.(n.) மோசக்காரன்; cheat, defraud, impostor.

மடிப்பிச்சை *madi-p-piccai-,* பெ.(n.) 1. இடுப்புத் துணியிலேற்கும் பிச்சை; alms received in one's loin-cloth. 2. தாழ்மையாய்க் கேட்கும்

பிச்சைப் பொருள்; alms begged for in a mean manner. *'தெய்வமே இந்தப் பிள்ளையை மடிப்பிச்சை தரவேணும்' (உ.வ.).*

[மடி² + பிச்சை.]

மடிப்பிள்ளை *madi-p-pillai,* பெ.(n.) கைக் குழந்தை; child in arm.

[மடி + பிள்ளை.]

மடிப்பிளை *madi-p-pilai,* பெ.(n.) மடிப்பினை பார்க்க; see *madi-p-pinai.*

[மடிப்பினை → மடிப்பிளை.]

மடிப்பினை *madi-p-pinai,* பெ.(n.) ஈய மூலப்பொருள், வங்க மணல் (யாழ்.அக.); lead ore.

மடிப்பு¹ *madippu,* பெ.(n.) 1. ஒன்றைப் பல பகுதிகளாக மடித்திருப்பது; fold, doubling, plait. 2. மடிப்புத்தையல் பார்க்க; see *madipp-t-taiyal.* 3. மடிப்படையாளம்; crease mark of a fold. 4. தொந்தி மடிப்பு; fold, crease in the abdomen as from obesity. 5. மோசம்; trick, fraud, imposture, entanglement. *'மடிப்பான பேச்சு' (உ.வ.).* 6. இருபோகம்; double crop (C.G.).

[மடி → மடிப்பு.]

மடிப்பு²*madippu,* பெ.(n.) மடிக்கக் கூடிய கதவு ஆடும் இரும்புக் கருவி; folding hinge.

[மடி → மடிப்பு.]

மடிப்புக்கதவு *madippu-k-kadavu,* பெ.(n.) மடக்கக் கூடிய கதவு; folding door.

[மடி → மடிப்பு + கதவு.]

மடிப்புக்காரன் *madippu-k-kāran,* பெ.(n.) மடிப்பாளி பார்க்க; see *madi-p-pāli.*

மடிப்புக்கால் *madippu-k-kāl,* பெ.(n.) மடிகால் பார்க்க; see *madi-kāl.*

[மடிப்பு + கால்.]

மடிப்புடவை *madi-p-pudavai,* பெ.(n.) 1. மடித்த ஆடை; folded cloth. *"சிறியனவும் நெடியனவுமாகிய மடிப்புடவைகளை" (மதுரைக். 520, உரை).* 2. மகளிரின் சீலை; saree which is ceremonially pure.

[மடி + புடவை.]

மடிப்புத்தையல் *madippu-t-taiyal,* பெ.(n.) மடித்துத் தைக்குந் தையல்; hemming.

[மடிப்பு + தையல்.]

மடிப்புப்பேச்சு *madippu-p-pēccu,* பெ.(n.) கவர் பொருள்படுஞ் சொல்; equivocal speech.

[மடிப்பு + பேச்சு.]

மடிப்புப்பேசு-தல் *madippu-p-pēšu-,* 5 செ.கு.வி.(v.i.) கவர் பொருள்படக் கூறுதல் (வின்.); to use words in a double sense with intent to deceive.

[மடிப்பு + பேசு-.]

மடிப்பெட்டி *madi-p-petti,* பெ.(n.) 1. சீலை வைக்கும் ஓலைக் கூடை; ola basket for keeping cloths ceremonially. 2. அரை மடியிலமைக்கும் வெற்றிலைப் பாக்குப் பை (வின்.); betel pouch carried in the waist-fold.

[மடி + பெட்டி.]

மடிப்பெழுத்தாணி *madippeluttāni,* பெ.(n.) கைப்பிடியுள் மடங்கும் எழுத்தாணி வகை; foldable iron style.

[மடிப்பு + எழுத்தாணி.]

மடிப்பை *madi-p-pai,* பெ.(n.) 1. அரை மடியிற் கட்டிய பை; purse kept in the girdle. 2. அடைப்பை (யாழ்.அக.); bag for keeping betel. 3. மடிசஞ்சி பார்க்க; see *madi-canci.*

[மடி + பை.]

மடிபிசை-தல் *madi-pišai-,* 2 செ.குன்றாவி. (v.t.) பால் சுரக்கும்படியாகப் பசுவின் மடியைத் தடவுதல்; to chafe the udder of a cow in milking.

[மடி + பிசை-தல்.]

மடிபிடி[1]-த்தல் *madi-pidi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கட்டாயப்படுத்துதல்; to compel, as seizing by the waist cloth. *"மடிபிடித்துக் காற்கட்டி விலக்க வொண்ணாதபடி யாயிருக்கை" (ஈடு.5, 3, 5).* 2. வலுவிற் சண்டைக்கு அழைத்தல் (இ.வ.); to pick a quarrel. 3. வழக்காடுதல் (வின்.); to dispute.

[மடி + பிடி-.]

மடிபிடி[2] *madi-pidi,* பெ.(n.) 1. கட்டாயம்; compulsion, as caused by seizing by the waist cloth. *"தூதரென்று மடிபிடியதாக நின்று" (திருப்பு.1204).* 2. சண்டை; altercation, dipute. 3. மாத்துவப் பெண்கள் மடி நோற்கத் தொடங்குகை (இ.வ.); commencement of the observance of ceremonial purity by Mādhva women.

[மடி+பிடி.]

மடிபிடிவழக்கு *madi-pidi-valakku,* பெ.(n.) பகைவரிருவர் ஒருவர் மேலொருவர் தொடுக்கும் வழக்கு; mutual complaint, application for redress by both parties to a dispute.

[மடிபிடி + வழக்கு.]

மடிமாங்காய்போடு-தல் *madi-māngāy-pōdu-,* 19 செ.கு.வி.(v.i.) 1. செய்யாததைச் செய்ததாக ஏறிட்டுக் குற்றங் கூறுதல்; to charge falsely, putting a mango in another's possession in order to acccuse him of theft. 2. கையூட்டுக் கொடுத்தல் (யாழ்ப்.); to bribe.

[மடிமாங்காய் + போடு-.]

மடிமாங்காயிடு-தல் *madi-mānga-y-idu-,* 17 செ.கு.வி.(v.i.) மடிமாங்காய்போடு-, பார்க்க; see *madi-māngāy-pōdu-.* *"மடிமாங்காயிட்டு விஷயீகரிக்க வந்திருக்கிறவன்" (திவ்.திருநெடுந். 9, பக்.73).*

[மடிமாங்காய் + இடு-.]

மடிமாறி *madi-māri,* பெ.(n.) முடிச்சுமாறி (இ.வ.); pick-pocket.

[மடி + மாறி.]

மடிமூத்தார்தாழி *madi-mūttār-tāli,* பெ.(n.) முதுமக்கட்டாழி; large urn found in ancient burial places.

[மடி + மூத்தார்தாழி.]

மடிமை *madimai,* பெ.(n.) சோம்பு (தொல். பொருள்.260); idleness, sloth, inactivity.

[மடி → மடிமை.]

மடியல் *madiyal,* பெ.(n.) மடிசல் பார்க்க; see *madišal.*

[மடிசல் → மடியல்.]

மடியில் *maḍi-y-il*, பெ.(n.) கூடாரம்; tent. *"மடியில்விட்டு" (சேதுபு.அகத்.33).*

[மடி + இல்.]



மடியிறக்கு–தல் *maḍi-y-iṟakku-*, 5 செ.கு.வி. (v.i.) ஈனுவதற்கு முன் பசுவின் மடி பருத்தல் (வின்.); to have udder distended, as a cow before calving.

[மடி+இறக்கு–,]

மடியுண்டடிப்பான் *maḍiyuṇḍaḍi-p-pāṉ*, பெ.(n.) பூசனி; pumpkin (சா.அக.).

மடியுறை *maḍiyuṟai*, பெ.(n.) விம்மிதம்; astonishment, bewilderment. *"மருளெனக் கருதிய மடியுறை கேண்மதி" (பெருங். உஞ்சைக். 48, 111).*

[மடி + உறை.]

மடியேந்து–தல் *maḍi-y-ēndu-*, 5 செ.குன்றாவி. (v.t.) மடியேல்–, பார்க்க; see *maḍi-y-ēl-*.

[மடி + ஏந்து–.]

மடியேல்–தல் *maḍi-y-ēl-*, 9 செ.குன்றாவி. (v.t.) பிச்சையெடுத்தல் (யாசித்தல்); to beg, as receiving alms in one's cloth. *"பிரயோசனத்துக்கு மடியேற்கை யன்றிக்கே" (ஈடு.3, 7, 1).*

மடில் *maḍil*, பெ.(n.) தாழை; fragrant screw pine (சா.அக.).

மடிவலை *maḍi-valai*, பெ.(n.) வலை வகை (க.ப.அக.); boat seine, bag net.

[மடி + வலை–.]

மடிவி–த்தல் *maḍivi-*, 4 செ.குன்றாவி.(v.t.) 1. முனை மழுங்கச் செய்தல்; to blunt, as the edge of an instrument. 2. கொல்லுதல்; to kill.

[மடி →மடிவி–,]

மடிவிடு–தல் *maḍi-viḍu-*, 20 செ.கு.வி.(v.i.) மடியிறக்கு–, பார்க்க (வின்.); see *maḍi-y-iṟakku-*.

[மடியிறக்கு →மடிவிடு–.]

மடிவு *maḍivu*, பெ.(n.) 1. சோம்பல்; inactivity, indolence. *"ஒடியா முறையின் மடிவிலையாகி" (புறநா.29).* 2. உற்சாகக் குறைவு; discouragement. 3. அழிவு (வின்.); ruin, loss, destruction. 4. சாவு; death.

[மடி →மடிவு.]

மடிவை *maḍi-vai*, பெ.(n.) தழை; fonage. *"மடிவைக் குறுந்தொடி மகளிர்..... முனையின்" (அகநா.226).*

மடு¹–த்தல் *maḍu-*, 4 செ.குன்றாவி.(v.t.) 1. உண்ணுதல்; to take food or drink. *"மடுத்தவனஞ்சமுதா" (தேவா.238, 3).* 2. நிறைத்தல் (வின்.); to fill, penetrate, suffuse, as adour. 3. சேர்த்தல்; to unite, join. *"பிணக்குவை கொண்டோடிக்.... கடல் கங்கை மடுத்திடை தூராதே" (கம்பரா. குகப்.21).* 4. அடக்கிக் கொள்ளுதல்; to hold, contain. *"மடுத்து மாமலையேந்தலுற்றான்"*

(தேவா.823). 5. ஊட்டுதல்; to cause to eat or drink; to feed. *"ஒண்டொடி மகளிர் மடுப்ப" (புறநா.56).* 6. தீ மூட்டுதல்; to kindle. *"கொலைஞ ருலை யேற்றித் தீ மடுப்ப" (நாலடி, 331).* 7. அமிழ்த்துதல்; to immerse, cause to sink. *"ஞானவாரி மடுத்து" (சி.சி.8, 16).* 8. குத்துதல்; to gore, pierce, thrust. *"கூர்நுதி மடுத்தத னிறஞ் சாடி" (கலித்.52, 3).* 9. மோசம் பண்ணுதல்; to inveigle, to entrap, to act treacherously. *'அவனை மடுத்து விட்டான்' (இ.வ.).* 10. விழுங்குதல்; to devour. *"வரவர வாய்மடுத்து" (நீதிநெறி, 64).* 11. மயக்குதல் (யாழ்ப்.); to charm. 12. செலுத்துதல்; to cause; to go or enter. *"மதியொடு பாம்பு மடுப்பென்" (கலித்.144, 21).*

மடு²–த்தல் *madu-,* 4 செ.கு.வி.(v.i.) இடையூறு எதிர்ப்படுதல்; to meet with obstacle. *"மடுத்த வாயெல்லாம் பகடன்னான்" (குறள், 624).*

[முல் (துளைத்தற் கருத்துவேர்)→முள்→முழ →முழுகு→முழுங்கு. முழுங்குதல் = முழுகுதல், தொண்டைக்குள் அல்லது வயிற்றிற்குள் முழுகச் செய்தல், விழுங்குதல். முள்→மள்→மடு (வே.க.4:90).]

மடு³ *madu,* பெ.(n.) 1. நீர்நிலை (பிங்.); pond, pool. *"கங்கை வருநீர் மடுவுள்"(திருவாச.6, 26).* 2. ஆற்றிடைப் பள்ளம்; deep place in a river or channel. *"ஆறிடுமேடு மடுவும்போ லாஞ் செல்வம்" (நல்வழி, 32).*

[முள்→முள்கு; முள்குதல் = உட்செலுத்துதல். முள்→மள்→மடு = ஆற்றிடை பள்ளம்.]

மடுத்தடி–த்தல் *madu-t-tadi-,* 18 செ.குன்றாவி. (v.t.) மடங்கடித்தல், ஏற்காமல் தள்ளுதல்; to frustrate an object.

[மடி→மடு→மடுத்து + அடி–.]

மடுத்தல் *maduttal,* பெ.(n.) சுத்தியல் (வின்.); hammer.

[மடி→மடு→மடுத்தல்.]



மடுப்படு–த்தல் *madu-p-padu-,* 20 செ. குன்றாவி.(v.t.) ஆழ்ந்திருத்தல்; to be deep. *"மடுப்படுக்குஞ் சுருதிப் பொருள்" (தேவா. 80, 10).*

மடுப்பு¹ *maduppu,* பெ.(n.) 1. அடைவு; containing. 2. நிறைப்பு; filling up, suffusion. 3. உண்கை; taking food. 4. மோசஞ்செய்கை; deceiving, inveigling. 5. ஏமாற்றம்; baffing frustration, disappointment. 6. கேடு; injury.

[மடு→மடுப்பு.]

மடுப்பு² *maduppu,* பெ.(n.) மடிப்பு பார்க்க (யாழ்.அக.); see *madippu.*

[மடு→மடுப்பு (கொச்சை).]

மடுமீன் *madu-min,* பெ.(n.) ஆற்றின் மடுவில் தங்கியிருக்கும் மீன்; fish existing in the deep place of a river.

[மடு + மீன்.]

மடுமுழுங்கி *maḍu-muḻuṅgi,* பெ.(n.) நீர் வெள்ளை எனும் நெல் வகை; a kind of paddy.

மடுவங்கரை *maḍuvaṅkarai,* பெ.(n.) குளக்கரை (வின்.); side or brink of a pool or tank.

[மடு + அம் + கரை.]

மடுவிடு¹-தல் *maḍu-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) ஆற்றில் மடுவுண்டாதல்; to make a deep place in a river or channel.

மடுவிடு²-தல் *maḍu-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) கன்றைத் தாய்ப்பால் குடிக்க விடுதல்; to feed calf in cow's udder.

மடுவிப்புருதி *maḍuvi-p-purudi,* பெ.(n.) கட்டி வகை; a kind of abscess (சா.அக.).

மடை¹ *maḍai,* பெ.(n.) 1. தொளை (திவா.); hole, aperture. 2. வாய்; mouth. 3. குளத்திற்கு வாய் போன்ற மதகு; small sluice of a tank. *"உழவ ருடைத்த தெண்ணீர் மடை" (தஞ்சைவா.151).* 4. மதகுப் பலகை; shutters of a sluice. 5. நீரணை; dam by which the flow of water in a channel is obstructed. 6. ஓடை; channel. *"மடை தோறும் கமலமென் பூச்செறி யெறும்பியூர்" (தேவா.379, 9).* 7. அணிகலக் கடைப்பூட்டு; clasp, as of an ornament. *"மடைசெறி முன்கைக் கடகமொடு" (புறநா. 150).* 8. படைக்கலமூட்டு; joint, as in a spear. *"மடையவிழ்ந்த....... வேல்" (சீவக.293).* 9. அழுத்தின ஆணி; nail, rivet. *"மடைகலங்கி நிலை திரிந்தன" (புறநா.97).* 10. உண்ணுஞ்சோறு (பிங்.); boiled rice. 11. சமையல் வேலை; cooking. *"அடுமடைப் பேய்க் கெலாம்" (கலிங்.139).* 12. தெய்வப் படையல்; oblation of food to a deity. *"மடை யடும்பால்" (கலித்.109).*

OE. mete = food. **OS.** meti, mat; **OHG.** maz; **ON.** matr; **Goth.** mats; **E.** meat.

[முல் (துளைத்தற் கருத்து வேர்)→முள்→ மள் →மடு = ஆற்றிடைப் பள்ளம். அருவி விழும் பள்ளநீர்க் குண்டு, ஆற்றிடைக் குட்டை, ஆவின்பால் மடி. மடு→ மடுத்தல் = வாயில் வைத்தல், உண்ணுதல். விழுங்குதல், ஊட்டுதல், நிறைத்தல், சேர்த்தல், உட்புகுத்துதல், குத்துதல், உட்செலுத்துதல். மடு→மடை (வே.க.4:91).]

மடை² *maḍai,* பெ.(n.) 1. மடைமை, பேதைமை; ignorance. 2. மூதறிவின்மை; silliness. 3. அறிவு மழுக்கம்; stupidity.

[முள்→மள்→மள்ளன் = இளைஞன், வீரன். மள்→மழ = இளமை, குழவி. மழவுங் குழவும் இளமைப் பொருள (தொல்.பொருள்.உரி.14). மழ→மழவு = இளமை, குழவி. மழவு→மழவன் = இளைஞன், வீரன். மழ→மழமை = இளமை. மழ→மத→மட→மடம் = இளமை, மடமை. மட→மடப்பு→மடப்பம் = இளமை, மடமை. மட→மடை = மடைமை. இருதிணையிலும் பெண்பால் ஆண்பாலினும் மடம் மிக்கதாகக் கருதப்படுவதால் மடவரல், மடந்தை முதலிய பெயர்கள் அஃறிணையிலும் பெண்பாலைக் குறிக்க வெழுந்தன (மு.தா.42).]

மடை³ *maḍai,* பெ.(n.) 1. சமையல் வேலை; cooking. *"அடுமடைப் பேய்க்கெலாம்" (கலிங்.139).* 2. சோறு; boiled rice. 3. படையல் உணவு; oblation of food to a deity. *"மடையடும்பால்" (கலித்.109).*

[மடுத்தல் = உண்ணுதல். மடு→மடை = உணவு.]

மடை[4] *madai,* பெ.(n.) பழைய நாணய வகை; an ancient coin (I.m.p.cg.1009-10).

மடை[5] *madai,* பெ.(n.) 1. நீர்நிலைகளிலிருந்து நிலங்களுக்கு நீர் பாய்கின்ற திறப்பு; way to irrigation water cannal. *"ஸ்ரீகான பள்ளியில் மழவராயப்புத்தேரியில் முதல் மடையில் நம்பிராட்டியற்கு அமுது படிக்கு" (தருமகல்.1, தொ.1, 32).* 2. ஓடை; channel.

[மடு→மடை.]

மடைக்கடல் *madai-k-kadal,* பெ.(n.) ஆற்று நீர் கடலில் கலக்கும் கடற்பாகம் (யாழ்.அக.); river-mouth, that part of the sea where the river joins it.

[மடை + கடல்.]

மடைக்கலப்பானை *madai-k-kala-p-pānai,* பெ.(n.) ஒரு வகைப் பானை; a kind of pot.

[மடை + கலம் + பானை. மடை = சமையல் தொழில்.]

மடைக்கலம் *madai-k-kalam,* பெ.(n.) சமையல் ஏனம்; cooking utensil. *"மடைக்கலஞ் சிதைய வீழ்ந்த மடைபானை" (மணிமே.21: 56).*

[மடை + கலம்.]

மடைக்கழி-த்தல் *madai-k-kali-,* 4 செ.குன்றாவி.(v.t.) மதகு திறத்தல் (புதுவை.); to open the sluice.

[மடை + கழி-.]

மடைகோலு-தல் *madai-kōlu-,* 5 செ.கு.வி. (v.i.) வயலுக்கு நீர்பாய்ச்சுதல்; to attend to the irrigation of fields.

[மடை + கோலு-. மடை = மதகு.]

மடைச்சாதி *madai-c-cādi,* பெ.(n.) அறிவு குறைந்த கூட்டத்தார் (வின்.); ignorant folk.

[மடை + சாதி. மடம் →மடை.]

மடைத்தலை *madai-t-talai,* பெ.(n.) மதகு; sluice, head of a channel. *"மடைத் தலையிலோடுமீ னாட" (மூதுரை, 16).*

[மடை + தலை.]



மடைத்தனம் *madai-t-tanam,* பெ.(n.) அறிவுக் குறை; folly.

[மடத்தனம்→மடைத்தனம்.]

மடைத்தொழில் *madai-t-tolil,* பெ.(n.) சமையல் தொழில்; work of cooking. *"மடைத் தொழிற்கு மிக்கோன்" (நள.கலிநீங்.25).*

[மடை + தொழில். மடு→மடை = சமையல்.]

மடைத்தொழிலோன் *madai-t-tolilōn,* பெ. (n.) சமையற்காரன் (பிங்.); cook.

[மடை + தொழிலோன்.]

மடைதிறப்போன் *madai-tira-p-pōn-,* பெ. (n.) மடைவெட்டி (நாஞ்.) பார்க்க; see *madai-vetti.*

[மடைதிறப்போன்→ மடைவெட்டி.]

மடைதிறப்புக்கதிர் *madai-tirappu-k-kadir,* பெ.(n.) அறுவடைக் காலத்தில் மடை வெட்டிக்குக் கொடுக்கும் நெற்கதிர்; perquiste in kind to *madai-vetti,* during harvest.

[மடைதிறப்பு + கதிர்.]

மடைநில்—தல் *madai-nil-,*14 செ.கு.வி. (v.i.) வேண்டும் போதெல்லாம் பெற்றம் பால் சுரத்தல்; to secrete milk in cow whenever we need. *இந்த மாடு மடைநிற்காது (சென்னை).*

[மடை + நில்–.]

மடைநூல் *madai-nūl,* பெ.(n.) சமையற் கலை நூல்; art of cookry, treatise on cooking. *"மடைநூற் செய்தியும்" (மணிமே.2: 22).*

மடைப்பண்டம் *madai-p-pandam,* பெ.(n.) இறைவனுக்குப் படைக்குஞ் சோறு; rice offerings to a deity.

[மடை + பண்டம்.]

மடைப்பள்ளி[1] *madai-p-palli,* பெ.(n.) கோயில் முதலியவற்றின் அடுக்களை; cook-house, kitchen, especially of a temple. *"அடுந்தீ மாறா மடைப்பள்ளி யாகி" (கல்லா.23, 37).*

[மடை + பள்ளி.]

மடைப்பள்ளி[2] *madai-p-palli,* பெ.(n.) 1. அரண்மனைச் சமையற்காரன்; steward of a palace. 2. ஒரு சாதி (யாழ்ப்.); a caste of people.

[மடை + பள்ளி.]

மடைப்பளி *madai-p-pali,* பெ.(n.) மடைப் பள்ளி பார்க்க; see *madai-p-palli.*

[மடைப்பள்ளி→மடைப்பளி.]

மடைப்பின்தொட்டி *madai-p-pin-totti,* பெ.(n.) ஏரிக்கு வெளிப்புறத்தில் மதகின் ஓரமாய்க் கட்டப் பெற்ற தொட்டி (இ.வ.); cistern outside a tank-bund near its sluice.

[மடை + பின் + தொட்டி.]

மடைபரவு—தல் *madai-paravu-,* 5 செ.கு.வி. (v.i.) மடைபோடு–, பார்க்க (யாழ்ப்.); see *madai-pōdu-.*

[மடை + பரவு–.]

மடைபோடு—தல் *madai-pōdu-,* 19 செ.கு.வி. (v.i.) இறைவனுக்குச் சோறு படைத்தல்; to lay out rice offerings before a deity.

[மடை + போடு–. மடை = உணவு.]

மடைமாறி *madai-māri,* பெ.(n.) புரட்டுக்காரன்–ரி; cheat, deceitful person. *"தொழுதாள் மடைமாறி சொல்வாள்" (விறலி விடு.803).*

மடைமுகம் *madai-mugam,* பெ.(n.) 1. மடைத்தலை பார்க்க; see *madai-talai.* 2. மடைக்கடல் பார்க்க (யாழ்ப். அக.); see *madai-k-kadal.*

[மடை + முகம்.]

மடைமுன்தொட்டி *madai-mun-totti,* பெ.(n.) ஏரிக்கு உட்புறத்தில் மதகு ஓரமாய் நீர் வேகத்தைக் குறைத்தற்குச் சதுர வடிவிற் கட்டப்பட்ட தொட்டி (இ.வ.); cistern inside a tank - bund in front of a sluice; to lesson water pressure at its head.

[மடை + முன் + தொட்டி.]

மடைமை *maḍaimai,* பெ.(n.) அறியாமை; ignorance.

[மடி → மட →மடம் = மடந்தை. மடம்→மடைமை (வே.க.4:6).]

மடையசாதி *maḍaiya-cādi,* பெ.(n.) மடைச் சாதி பார்க்க (வின்.); see *maḍai-c-cādi.*

[மடைச்சாதி→ மடையசாதி.]

மடையசாம்பிராணி *maḍaiya-cāmbirāṇi,* பெ.(n.) 1. அறிவுக்குறைவன் (யாழ்.அக.); dunce. 2. மட்டிப்பால் பார்க்க; see *maṭṭi-p-pāl.* 3. மடையன்சாம்பிராணி பார்க்க; see *maḍaiyaṉ-šāmbirāṇi.*

மடையடை–த்தல் *maḍai-y-aḍai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. நீர்பாயுங் காலை மூடுதல்; to close the source of irrigation. 2. தீர்மானமான விடை சொல்லுதல்; to give a definite reply.

[மடை + அடை.]

மடையன்[1] *maḍaiyaṉ,* பெ.(n.) சமையற்காரன்; cooking man. *"இவ்வறச் சாலை மடையன் ஒருவனுக்கு" (தெ.க.தொ.5, கல்.223). "மடைக்கலஞ் சீழ்ந்த வீழ்ந்த மடையனை" (மணி.21, 56).*

[முல் (துளைத்தற் கருத்து வேர்)→ முள்→மள் →மடு = ஆற்றிடைப் பள்ளம், அருவி விழும் பள்ளநீர்க்குண்டு. மடு→மடுத்தல் = வாயில் வைத்தல், உண்ணுதல். மடு→மடை = தொளை, வாய், உண்ணுஞ் சோறு, சமையல் வேலை. மடை→மடையன் (வே.க. 4:92).]

மடையன்[2] *maḍaiyaṉ,* பெ.(n.) மடைவெட்டி பார்க்க; see *maḍai-veṭṭi.*

[மடை→ மடையன். மடை = மதகுக் கதவு.]

மடையன்[3] *maḍaiyaṉ,* பெ.(n.) அறிவுக் குறைவாளன்; block-head. *"மடையர் பொருள் பெறமருவிகள்" (திருப்பு.828).*

[மழ→மழம்→மடம்→மடயன்→மடையன். மடம் = இளமை, இளமைக்குரிய அறியாமை (வே.க.4:6).]

மடையன்சாம்பிராணி *maḍaiyaṉ-šāmbirāṇi,* பெ.(n.) 1. மரவகை; malabar mohogany. 2. மடையசாம்பிராணி பார்க்க; see *maḍaiya-šāmbirāṇi.*

மடையன்நீர் *maḍaiyaṉ-nīr,* பெ.(n.) தெளிந்த நீர்; crystal water.

[மடை + நீர் – மடையன்நீர்.]

மடையான் *maḍaiyāṉ,* பெ.(n.) 1. மடை வெட்டி பார்க்க; see *maḍai-veṭṭi.* 2. பறவை வகை (பதார்த்த.896); heron, ardea. 3. உள்ளான் வகை; a grey snipe.

மடை = நீரோடை. மடையில் நிற்கும் பறவை மடையான்.

மடையுப்பு *maḍai-y-uppu,* பெ.(n.) சோற்றுப்பு; common salt.

[மடை + உப்பு. மடை = சமையல் தொழில். சமையலுக்குப் பயன்படும் உப்பு.]

மடைவெட்டி *maḍai-veṭṭi,* பெ.(n.) நீர்மடை திறப்போன்; sluice opener, servent watching the irrigation works and distributing the water (R.T.).

[மடை + வெட்டி. மடை = நீர்நிலை.]

மண்[1] *maṉ,* பெ.(n.) 1. நிலவுலகம்; the earth, the world. *"மண்ணொடு புகழ் நிறீஇ" (பு.வெ.2, 5).* 2. ஐம்பூதத்தொன்று; earth, as

an element. *"புனலொடு மண்ணும் விண்ணும்" (திருவாச.5, 8).* 3. நீராடுங்காற் பூசிக்கொள்ளும் பத்துவகை மண்; clods of earth taken from ten specified places and rubbed on the person in purificatory baths. *"ஆடுநீரன பத்து மண்களும்" (சீவக.2418).* 4. புழுதி (பிங்.); dust, dirt. 5. திருநாமத்துக்குரிய வெள்ளிய மண்கட்டி; white earth used by *Vaiśṇavas* in marking their fore-head. *"ஈராறு நாம முறை செய்துமண் கொடிடுவார்கள் காணுமிமை யோர்" (பாரத.ஒன்பதாம்.1).* 6. தரை (வின்.); dry ground, soil, land. 7. அணு; atom, particle, grain. *"மண்டிணிந்த நிலனும்" (புறநா.2).* 8. சுண்ணச் சாந்து; lime-mortar, cement. *"மண்ணோ டியைந்த மரத்தனையர்" (குறள், 576).* 9. மத்தள முதலியவற்றிற் பூசும் மார்ச்சனை; paste smeared on the head of a drum for toning it. *"மண்கனை முழவின்" (மலைபடு.370).* 10. மனை; house-site. *"நான் கோயிலில் மண்பெற்றது அவ்வேளாளனாலே" (திவ்.கண்ணிநுண்.3, வியா.).* 11. வயல்; cultivable field. *'அவன் மண் மனையில்லாதவன்' (இ.வ).*

[முல் (பொருந்தற் கருத்துவேர்) → மல் → மண்.]

பல அணுக்கள் அல்லது உறுப்புகள் பொருள்கள் பொருந்துவதால் (ஒன்று சேர்வதால்) திரட்சி அல்லது பருமை உண்டாகும்.

ஒ.நோ. சேரே திரட்சி (தொல்.உரி.65). மிகுதியால் வளமும் பருமையால் வன்மையும் உண்டாகும்.

மண்² *maṇ,* பெ.(n.) 1. கழுவுகை; washing. *"மண்ணீருமாகாது" (மூதுரை, 12) (அக.நி.).* 2. ஒப்பனை; adornment, decoration. *"மண் கெழுமறவன்" (பு.வெ.4, 15, கொளு.).*

மண்கட்டு-தல் *maṇ-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. புற்றுக்கட்டுதல்; to throw up earth, as white ants. 2. மாழைகளை உருக்குதற்காகக் கருக்கட்டுதல்; to make moulds of earth for casting metals.

[மண் + கட்டு-.]

மண்கட்டை *maṇ-kaṭṭai,* பெ.(n.) வாணக் குழலின் களிமண்ணடைப்பு; base of rocket, formed of clay. 2. உடம்பு; human body.

[மண் + கட்டை.]



மண்கண்டம் *maṇ-kaṇḍam,* பெ.(n.) மண்பார் பார்க்க (வின்.); see *maṇ-pār.*

மண்கனை *maṇ-kaṇai,* பெ.(n.) 1. குடமுழவு வகை (பிங்.); a large hemi spherical drum. 2. முழவுப் பொது (அக.நி.); drum.

மண்கத்திரி *maṇ-kattiri,* பெ.(n.) ஒரு வகைப் பாம்பு; a kind of snake (சா.அக.).

மண்கல் *maṇ-kal,* பெ.(n.) 1. செங்கல்; brick. 2. வெள்ளைச் சுக்கான் கல்; white kunkur stone.

[மண் + கல்.]

மண்கல்லுச்சத்து *man-kallu-c-cattu,* பெ. (n.) பல கல்லுச் சத்து; the essence of several stones.

மண்கலம் *man-kalam,* பெ.(n.) மட்கலம் பார்க்க; see *maṭkalam.*

[மட்கலம் →மண்கலம்.]

மண்கவரை *man-kavarai,* பெ.(n.) சேலம் மாவட்டத்தில் மண்ணிலிருந்து உப்புக் காய்ச்சும் ஒட்டர் வகையார்; a class of *oṭṭar* in *Salem* district, who manufacture salt from earth (E.T.iv. 455).

[மண் + கவரை.]

மண்கிடங்கு *man-kiḍaṅgu,* பெ.(n.) 1. மண்ணெடுத்த குழி; pit made by digging earth. 2. கல்லறை (யாழ்ப்.); grave.

[மண் + கிடங்கு.]

மண்கிணறு *man-kiṇāṟu,* பெ.(n.) 1. களி மண்ணில் தோண்டிய கட்டடமில்லாத கிணறு; well dug out in clay, without walling. 2. மணற்பாங்கில் தோண்டப்பட்ட கிணறு (யாழ்.அக.); well in a sandy tract.

[மண் + கிணறு.]

மண்கிழங்கு *man-kiḻaṅgu,* பெ.(n.) சிறு கிழங்கு பார்க்க; see *siṟu-kiḻaṅgu.*

[மண் + கிழங்கு.]

மண்குகை *man-kugai,* பெ.(n.) 1. நிலவறை; cave in the earth. 2. குளவிக்கூடு; hornet's nest. 3. மண்மூசை; crucible.

[மண் + குகை.]

மண்குத்திப்பாம்பு *man-kutti-p-pāmbu,* பெ.(n.) ஒருவகைப் பாம்பு; a kind of snake (சா.அக.).

[மண்குத்தி + பாம்பு.]

மண்குத்துநோய் *man-kuttu-nōy,* பெ.(n.) குழந்தை ஈன்றவுடனே மார்பு, தலை, கீழ் வயிறு முதலிய இடங்களில் காணும் பொறுக்கவியலாத குத்தல் நோய்; an unbearable pain due to the irregular discharge or retention of after birth. The pain is felt in the abdomen, chest, head and other places in the system (சா.அக.).

[மண்குத்து + நோய்.]

மண்குத்துநோவு *man-kuttu-nōvu,* பெ.(n.) பிள்ளைப் பேற்றின் பின் உண்டாகும் நோவு (சீவரட்.208); after delivery pains.

[மண்குத்து + நோவு.]

மண்கும்பம் *man-kumbam,* பெ.(n.) மண் மேடு பார்க்க (யாழ்.அக.); see *man-mēḍu.*

[மண் + கும்பம்.]

மண்கும்பி *man-kumbi,* பெ.(n.) மண்மேடு பார்க்க (யாழ்.அக.); see *man-mēḍu.*

[மண் + கும்பி.]

மண்குழை-த்தல் *man-kuḻai-,* 4 செ.கு.வி. (v.i.) சுவர் முதலியன கட்டுதற்கு உதவுமாறு மண்ணைக் குழைத்துச் சாந்தாக்குதல்; to mix water with clay or mud to form a semi-liquid mass as in building a wall.

[மண் + குழை-.]

மண்குளி-த்தல் *man-kuli-*,4 செ.கு.வி.(v.i.) புழுதியாகுதல்; to roll in the dust, to take a sand-bath, as a beast or bird.

[மண் + குளி-.]

மண்கூட்டாளன் *man-kūttālan,* பெ.(n.) குயவன்; potter. *"மண் கூட்டாளன் மனைவயின் மறையவும்" (பெருங். உஞ்சைக். 46, 332).*

[மண் + கூட்டாளன்.]

மண்கூர்மை *man-kūrmai,* பெ.(n.) வளையலுப்பு; a salt obtained from the fuller's earth.

[மண் +கூர்மை.]

மண்கொட்டு *man-kottu,* பெ.(n.) மண்வெட்டி பார்க்க; see *man-vetti. "அத்தனை மண் கொட்டால் வெட்டா" (கடம்ப.பு.இலீலா.34).*

[மண் +கொட்டு.]

மண்கொத்தளம் *man-kottalam,* பெ.(n.) மண்ணாற் செய்த மதிலுறுப்பு (யாழ். அக.); part of a rampart, made of mud.

[மண் + கொத்தளம்.]

மண்கோபுரக்கல் *man-kōpura-k-kal,* பெ. (n.) செங்கல்; brick.

[மண் + கோபுரம் + கல்.]

மண்சாடி *man-cādi,* பெ.(n.) 1. மண்ணாற் செய்த பாண்டம்; earthern jar. 2. யானைக் குன்றி மரம்; a tree.

[மண் + சாடி.]

மண்சாடிக்குண்டுமணி *manšādi-k-kundumani,* பெ.(n.) மண்சாடிக்குன்றிமணி பார்க்க; see *manšādi-k-kunrimani.*

[மண் + சாடி + குண்டுமணி. குன்றிமணி →குண்டுமணி.]

மண்சாடிக்குன்றிமணி *manšādi-k-kunrimani,* பெ.(n.) பெரிய குன்றிமணி; big relty seed (சா.அக.).

[மண் + சாடி + குன்றிமணி.]

மண்சாந்து *man-šāndu,* பெ.(n.) குழைத்த சேறு (இ.வ.); mud plaster.

[மண் + சாந்து.]

மண்சிலை *man-šilai,* பெ.(n.) கற்காவி (யாழ். அக.); red ochre.

[மண் + சிலை.]

மண்சிவப்பு *man-šivappu,* பெ.(n.) கருஞ்சிவப்பு (யாழ்.அக.); dark red.

[மண் + சிவப்பு.]

மண்சீலை *man-šīlai,* பெ.(n.) மருந்து புடமிடக் கலத்தின்மேற் சுற்றும் மண்ணூட்டிய துணி (கொ.வ.); piece of cloth coated with luting and tied either round the mouth of the pot for calcining medicines or round the medicines to be calcined.

[மண் + சீலை.]

மண்சீலைசந்துசெய்-தல் *man-šīlai-šandu-šey-,*1 செ.குன்றாவி.(v.t.) மண்சீலை செய்-, பார்க்க; see *man-šīlai-šey-.*

[மண் + சீலை + சந்து + செய்-.]

மண்சீலைசெய்–தல் *maṇšīlai-šey,* 1 செ.குன்றாவி.(v.t.) சீலை மண் செய்தல்; to lute the crucible which containes the medicine to be calcined.

[மண் + சீலை + சந்து + செய்–.]

மண்சுதை *maṇ-šudai,* பெ.(n.) சுண்ணச் சாந்து; chunnam plaster.

[மண் + சுதை.]

மண்செய்கை *maṇ-šeygai,* பெ.(n.) மண் வேலை பார்க்க (யாழ்.அக.); see *maṇ-vēlai.*

[மண் + செய்கை.]

மண்செய்–தல் *maṇ-šey,* 1 செ.குன்றாவி. (v.t.) மண்சிலைசெய்–தல் பார்க்க; see *maṇ-šilai-šey-.*

[மண் + செய்–.]

மண்சேய் *maṇ-šēy,* பெ.(n.) செவ்வாய் (நாமதீப.90); mars, as son of the earth.

[மண் + சேய்.]

மண்சோறு *maṇ-šōṟu,* பெ.(n.) 1. தெய்வத்திற்கு நேர்ந்து கொண்டு கோயில் தரையில் சோறிட்டு உண்ணும்போது; as per take vow eat the rice food from temple floor. 2. மணற்சோறு பார்க்க (யாழ்.அக.); see *maṇaṟ-šōṟu.*

[மண் + சோறு.]

மண்டக்கம் *maṇḍakkam,* பெ.(n.) முத்துக் குளிப்போனை மேலிழுக்கும் கயிறு (வின்.); rope used for hauling up divers in pearl fishery.

மண்டக்கன் *maṇḍakkaṉ,* பெ.(n.) மண்டக்காள் பார்க்க; see *maṇḍakkāḷ.* *"மண்டக்க னேறாமல்" (நெல்விடு.222).*

[மண்டக்கம் →மண்டக்கன்.]

மண்டக்காள் *maṇḍakkāḷ,* பெ.(n.) முத்துக் குளிப்பவனைக் கயிறு கொண்டு மேலிழுப்பவன்; one that hauls up divers in pearl fishery.

[மண்டக்கம் + ஆள் – மண்டக்காள்.]

மண்டக்கு *maṇḍakku,* பெ.(n.) மண்டக்கம் பார்க்க (வின்.); see *maṇḍakkam.*

[மண்டக்கம்→மண்டக்கு.]

மண்டகப்படி[1] *maṇḍaga-p-paḍi,* பெ.(n.) மண்டபச்செலவு பார்க்க; see *maṇḍaba-c-celavu.*

மண்டகப்படி[2] *maṇḍaga-p-paḍi,* பெ.(n.) 1. பகடி; ridicule. 2. அடி; tharshing, beating.

மண்டகப்படிச்செலவு *maṇḍaga-p-paḍi-c-celavu,* பெ.(n.) மண்டபச்செலவு பார்க்க; see *maṇḍaba-c-celavu.*

[மண்டகப்படி + செலவு.]

மண்டகம்[1] *maṇḍagam,* பெ.(n.) மண்டபம்[1] பார்க்க; see *maṇḍabam.* *"மண்டகம் எடுத்த நிலத்தொடும்" (S.I.I.i, 150, 61).*

[மண்டபம்→மண்டகம்.]

மண்டகம்[2] *maṇḍagam,* பெ.(n.) சருக்கரை போடாத பூரி; a wheat cake prepared without sugar (வின்.).

மண்டகி *maṇḍagi,* பெ.(n.) ஆமணக்குச் செடி; castor plant (சா.அக.).

மண்டங்கள்ளி *maṇḍaṅgaḷḷi,* பெ.(n.) கள்ளி வகை; cement plant s.t.r. *Euphorhia trigona.*

மண்டபச்செலவு *maṇḍaba-c-celavu,* பெ. (n.) இறைவன் (உற்சவமூர்த்தி) மண்டபத்தில் எழுந்தருள்வதற்காகச் செய்யுஞ் செலவு; expense incurred for receiving a deity in a *maṇḍapam* during a festival.

[மண்டபம் + செலவு.]

மண்டபப்படி[1] *maḍaba-p-paḍi,* பெ.(n.) 1. மண்டபச்செலவு பார்க்க; see *maṇḍaba-c-celavu.* 2. திருநாட் சிறப்பு; special celebration to a deity at a festival. *இன்றைக்கு நாலாம் மண்டபப்படி (உ.வ.).* 3. திருவிழாவில் இறைவன் தங்குமிடம் (கொ.வ.); halting place for a deity in a festival procession.

மண்டபப்படி[2] *maḍaba-p-paḍi,* பெ.(n.) மடைப் பண்டம் பார்க்க; see *maḍai-p-paṇḍam.*

மண்டபம்[1] *maṇḍabam,* பெ.(n.) திருநாளில் இறைவன் தங்குவதற்காகக் கட்டப்பட்ட கற்கட்டடம்; pavilion in a temple or other place used during festivals for the reception of idols when they are carried in procession, generally a square or rectangular hall with a flat roof supported by pillars. 2. ஒப்பனைப் பந்தல்; temporary saloon or open shed decorated for festive occasion. 3. சாவடி; public hall or rest - house.

[மண்டுதல் = நெருங்குதல், நிறைதல், நிறைந்து கூடுதல். மண்டு = செறிவு, மிகுதி. மண்டு→மண்டகம்→மண்டபம். ஒ.நோ. வாணிகம் →வாணிபம்.]

மண்டபம்[2] *maṇḍabam,* பெ.(n.) மண்டலம்[1] பார்க்க; see *maṇḍalam.*

மண்டபவெழினி *maṇḍaba-v-eḻiṉi,* பெ.(n.) கூடாரம்; tent or pavilion resembling a hall. *"கண்டங்குத்திய மண்டப வெழினியுள்" (பெருங். உஞ்சைக்.37. 103).*

[மண்டபம் + எழினி.]

மண்டம்[1] *maṇḍam,* பெ.(n.) 1. நீர்ப் பொருளைக் காய்ச்சும் போது அல்லது புளிப்புச் சேர்க்கும் போது மேலெழும் ஏடு; skimmings, scum froth or foam, as on boiling or fermenting liquids. 2. தயிரேடு; cream of curdled milk. 3. ஆமணக்கு (மலை.); castor plant.

மண்டம்[2] *maṇḍam,* பெ.(n.) 1. ஒருவகைக் கஞ்சி; a kind of rice pap. 2. மண்டை; skull. 3. நொதி; bear yeast (சா.அக.).

மண்டையந்தம் *maṇḍaiyandam,* பெ.(n.) சோறு; cooked rice (சா.அக.).

மண்டயிலம் *maṇḍayilam,* பெ.(n.) 1. மண்ணிலூறும் (தயிலம்) நெய்; oil springing from the earth - crude oil. 2. மண்ணெ(ண்ணெ)ய்; kerosine oil. 3. மண்ணில் வடிக்கும் எண்ணெய்; oil extracted from the mud.

[மண் + Skt. தைலம்.]

மண்டர் *maṇḍar,* பெ.(n.) படைவீரர் (திவா.); heroes, champions, soldiers.

மண்டல் *maṇḍal,* பெ.(n.) வெள்ளத்தின் அடியில் திரளும் மண், வண்டல்; sediment.

[மண்டு→மண்டல் (மு.தா.159).]

மண்டல்வலை *maṇḍal-valai,* பெ.(n.) வலை வகை; kind of fishing net.

[மண்டல் +வலை.]

வலையின் சிறப்புத் தன்மை:- மிதப்புக் கட்டைகள் சிறியனவாகவும், கீங்காக் கற்கள் பெரியனவாகவும் இருக்கும். 400 முதல் 500 அடி நீளமுடையது. தடித்த கயிற்றாலானது. 5 அங்குல கண்களையுடையது (க.ப.அக.).

மண்டலச்சீரந்தாதி *mandala-c-cirandādi*, பெ.(n.) ஒரு செய்யுளின் இறுதியடியின் இறுதிச் சீரும் முதலடியின் முதற்சீரும் ஒன்றாய் வரப் பாடும் அந்தாதி வகை; a kind of Šir-antādi in whcih the last foot of the last line of a stanza is the same as the first line. *"மண்டல எழுத்தந்தாதி, செந்நடை எழுத்தந்தாதி, மண்டல அசையந்தாதி, மண்டலச் சீரந்தாதி, செந்நடை அடியந்தாதி, மண்டல மயக்கந்தாதி, செந்நடை மயக்கந்தாதி, மண்டல இடையிட்ட அடியந்தாதி எனக் கொள்க" (யாப்.வி.52, பக்.193).*

[மண்டலம் + சீர் + அந்தாதி.]

மண்டலசெயம் *mandala-ceyam*, பெ.(n.) உலக வெற்றி; world - conquest.

[மண்டலம் + செயம். **Skt.***Jayam.]*

மண்டலநிலை *mandala-nilai*, பெ.(n.) வில்லோர் நிலை நான்கினுள் ஒன்று; a posture in archery. *"வில்வளைத் தெதிர் மண்டல நிலையாய்" (பாரத.நிரை.67).*

[மண்டு = வளைதல். மண்டு → மண்டலம். மண்டலம் + நிலை.]

மண்டலநெறி *mandala-neri*, பெ.(n.) எந்திரச் சக்கரம் வரைதற்குரிய நெறிமுறைகள் (வின்.); directions for making diagrams for worship.

[மண்டலம் + நெறி.]

மண்டலபுருடன் *mandala-purudan*, பெ.(n.) 16ஆம் நூற்றாண்டில் சூடாமணி நிகண்டை இயற்றிய சமண ஆசிரியர்; author of *šūdāmaninigandu* of 16th century a Jain.

மண்டலபூசை *mandala-pūšai*, பெ.(n.) 40, 41 அல்லது 45 நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும் வழிபாடு; the ceremony of anoiting idols continually for 40, 41 or 45 days.

[மண்டலம் + பூசெய் → பூசை.]

மண்டலம்[1] *mandalam*, பெ.(n.) 1. நிலவுலகம்; the earth. *"மண்டலந் தனைஇ..... குளிரவே வைத்தோன்" (பாரத.குருகுல.3).* 2. வட்டம் (பிங்.); circle, sphere, orbit. *"சுடர் மண்டலம்" (திருநூற்.80).* 3. வட்ட வடிவம் (திவா.); disc, as of sun or moon or clouds. 4. கதிரவன் பரிப்பு; ecliptic. 5. கதிரவன் மறைப்பின் போதான நிலவின் வட்டப்பாதை; circle of the moon during eclipse. 6. ஒரு பகுதி; region, as of sun, moon or clouds. *'மேக மண்டலம்' (உ.வ.).* 7. நாட்டின் பெரும்பகுதி; district, division of a country. *'சோழ மண்டலம்' (உ.வ.).* 8. ஊர் (பிங்.); town. 9. மந்திரச் சக்கரம் (வின்.); mystic circular diagram. 10. குதிரையின் வேக வகை; a pace of horse. *"பண்ணிய வீதிபற்றி மண்டலம் பயிற்றினானே" (சீவக.795).* 11. கூட்டம்; assembly, serried array. *"சேனை மண்டலங்களுடனே" (பாரத. பத்தாம்.30).* 12. பரிவேடம்; halo, as round sun or moon. *'சூரியனைச் சுற்றி மண்டலம் போட்டிருக்கிறது' (உ.வ.).* 13. 108 சிற்றிலக்கியங்களுள் ஒன்று; one of 108 upanisad. 14. நடுவிரல் நுனியும் பெருவிரல் நுனியும் கூடி வளைந்திருக்க மற்ற

விரல்களும் ஒக்க வளைந்து நிற்கும் இணையாவினைக்கை (சிலப்.3, 18, உரை); a gesture with one hand in which the tips of the middle finger and the thumb are joined and the other fingers are bent, one of 33 *iṇaiyā-viṉai-k-kai.* 13. காதலியின் இணைவில் காதலனிடும் நகக்குறி ஆறனுள் வட்ட வடிவமுள்ள அடையாளம் (கொக்கோ.5, 58); circular nail mark made on a woman's body by her lover during sexual union. 14. வில்லோர் நிலையில் ஒன்று (சூடா.); a posture in archery. 15. வட்ட வடிவமான படை வகுப்பு; array of an army in a circular form. 16. மேலுலகம்; heaven. *'பரமண்டலம்' (உ.வ.).*

[முல் (வளைதற் கருத்து வேர்)→முள்→முட்டு →முட்டை = சுழி, சுண்ணம். முள்→(மள்)→(மண்)→ மணி = வட்டமான வெண்கலம். முண்டு →மண்டு. மண்டுதல் = வளைதல். மண்டு→மண்டலம் = வட்டம், வட்டகையான நாட்டுப் பிரிவு, நாற்பான் நாள் வட்டம் (மு.தா.244).]

மண்டலம்² *maṇḍalam,* பெ.(n.) 1. பாம்பு முதலியவற்றின் சுற்று; coil, as of a snake or rope. *"மண்டலம் பயிலுரகர்" (பாரத. குருகுல.3).* 2. வட்டவடிவ படையமைப்பு வகை; array of an army in a circular form.

[முல் (வளைதற் கருத்து வேர்) முள்→முட்டு → முட்டை=சுழி, சுண்ணம். முள்→(மள்)→(மண்)→ மணி = வட்டமான வெண்கலம். முண்டு→மண்டு. மண்டுதல் = வளைதல். மண்டு→மண்டலம் (மு.தா.244).]

மண்டலம்³ *maṇḍalam,* பெ.(n.) 40, 41, 45 நாள் கொண்ட காலவளவு; days and time of 40, 41, 45.

[மண்டு→மண்டலம்.]

மண்டலம்போடு-தல் *maṇḍalam-pōḍu-,* 2 செ.கு.வி. (v.i.) 1. பாம்பு முதலியன வட்டமாய்ச் சுற்றியிருத்தல்; to form into circles or coils as a snake. 2. சுற்றிச் சுற்றி வட்டமிடுதல்; to pass round one another in a circle, as combatants, to describe circles in the air, as birds. 3. சக்கரம் முதலியன வரைதல்; to make ornamental, strological or mystic diagrams, commonly circular. 4. மண்டலமிடு-தல் பார்க்க; see *maṇḍala-miḍu-.*

[மண்டலம் + போடு-.]

மண்டலமட்டி *maṇḍalamaṭṭi,* பெ.(n.) மண்டலாட்டி பார்க்க; see *maṇḍalāṭṭi.*

[மண்டலம் + மட்டி.]

மண்டலமயக்கந்தாதி *maṇḍala-mayakk andādi,* பெ.(n.) 1. ஒரு செய்யுளின் இறுதி யடியின் இறுதி எழுத்து அசை அல்லது சீர் முதலடியின் முதலெழுத்து அசை அல்லது சீரோடு ஒத்து வருமாறு பாடப்படும் மயக்கந்தாதி வகை (யாப்.வி.52, உரை); a kind of *mayakkantādi* in which the last letter, syllable or foot of the last line of a stanza is the same as the first letter, syallable or foot of its first line. 2. மண்டலச்சீரந்தாதி பார்க்க; see *maṇḍala-c-cīrantādi.*

[மண்டலம் + மயக்கு + அந்தாதி.]

மண்டலமழை *maṇḍala-maḻai,* பெ.(n.) பரந்து பெய்யும் மழை (வின்.); rain falling over a wide area.

[மண்டலம் + மழை. மண்டலம் = பரப்பு.]

மண்டலமாக்கள் *mandala-mākkaļ,* பெ.(n.) 1. அரசர்; kings, rulers. *"மண்டல மாக்கள் பிரிதோருவங் கொண்டும்" (சிலப்.8, 89, உரை, மேற்.).* 2. மண்டிலமாக்கள் பார்க்க; see *mandila-mākkaļ.*

[மண்டலம் + மாக்கள்.]

மண்டலமிடு-தல் *mandalamidu-,* 20 செ. கு.வி.(v.i.) 1. மண்டலம்போடு– பார்க்க; see *mandalam-pōdu-.* 2. உணவு உண்பதற்கும், பூசை முதலியவற்றிற்காகவும் நீர் தெளித்துத் தடவி இடம் பண்ணுதல்; to prepare a place by cleaning it with water as for dining or and worship. *"நீரைத் தெளித்துத் தடவி மண்டலமிட்டு" (சிலப்.16, 41, உரை.).* 3. ஒரு மண்டல காலம் வழிபடுதல்(திவ்.நாய்ச்.1, வியா.); to perform worship for a *mandalam.* 4. பரிவேடங் கொள்ளுதல்; to have a halo, as the sun or moon.

[மண்டலம் + இடு–.]

மண்டலர் *mandalar,* பெ.(n.) அருகபதம் பெற்றவரில் ஒரு சாரார் (சி.சி.பர.ஆசீவகன் மறுதலை, 2); a class of Arhats.

[மண்டலம் + அர்.]

மண்டலவசையந்தாதி *mandala-vašai-andādi,* பெ.(n.) 1. ஒரு செய்யுளின் இறுதி யடியின் இறுதியசையும் முதலடியின் முதலசையும் ஒன்றாக வரும்படி பாடப்படும் அசையந்தாதி (யாப்.வி.52, உரை); a kind of *ašai-andādi* in which the last syllable of the last line of a stanza is the same as the first syllable of its first line. 2. மண்டலச்சீரந்தாதி பார்க்க; see *mandala-c-cīrandādi.*

[மண்டலம் + அசை + அந்தாதி.]

மண்டலவடியந்தாதி *mandala-v-adi-andādi,* பெ.(n.) ஒரு செய்யுளிறுதியடியின் இறுதி எழுத்து, அசை அல்லது சீர் முதலடியின் முதல் எழுத்து, அசை அல்லது சீருடன் ஒத்து வருமாறு பாடப்படும் அந்தாதி வகை (யாப்.வி.52, உரை); a kind of *andadi* in which the last letter, syllable or foot of the last line of a stanza is the same as the first letter, syllable or foot of its first line.

[மண்டலம் + அடி + அந்தாதி.]

மண்டலவர்சம் *mandala-varsam,* பெ.(n.) மண்டலமழை பார்க்க; see *mandala-maļai.* *"ஆதிமழை என்று மண்டல வர்ஷமாக்கி" (திவ். திருப்பா.4, வியா.).*

[மண்டலம் + Skt. வர்சம்.]

மண்டலவன் *mandalavan,* பெ.(n.) மண்டல புருடன் (சூடா.3, 78) பார்க்க; see *mandala-purudan.*

[மண்டலம் + அவன்.]

மண்டலவிதி *mandala-vidi,* பெ.(n.) மண்டல நெறி பார்க்க; see *mandala-neri.*

[மண்டலம் + விதி.]

Skt. விதி > த. நெறி.

மண்டலவியூகம் *mandalaviyūgam,* பெ.(n.) வட்டமாக அமைக்கும் படை வகுப்பு (குறள், 767, உரை); circular array, as of any army.

[மண்டலம் + வியூகம்.]

மண்டலவிரியன் *maṇḍala-viriyaṉ*, பெ.(n.) மண்டலி³ பார்க்க (இ.வ.); see *maṇḍali*.

[மண்டலம் + விரியன்.]

Skt. வியூகம் > த. படையமைப்பு.

மண்டலவெழுத்தந்தாதி *maṇḍala-v-eḻuttandādi*, பெ.(n.) 1. ஒரு செய்யுளின் இறுதியடியின் இறுதியெழுத்தும் முதலடியின் முதலெழுத்தும் ஒன்றாய் வரப் பாடப்படும் எழுத்தந்தாதி வகை (யாப்.வி.52, உரை); a kind of *eḻuttandādi* in which the last letter of the last line of a stanza is the same as the first letter of its first line. 2. மண்டலச்சீரந்தாதி பார்க்க; see *maṇḍala-c-cīrandādi*.

[மண்டலம் + எழுத்து + அந்தாதி.]

மண்டலாகாரம் *maṇḍalāgāram*, பெ.(n.) வட்ட வடிவம் (வின்.); circular shape, circular course.

[மண்டலம் + ஆகாரம்.]

மண்டலாசி *maṇḍalāśi*, பெ.(n.) 1. பழைய திருவனந்தபுரம் மாநிலத்தில் மன்னர் இறந்தபோது தலைவிரித்துப் போட்டு இழவு கொண்டாட அமர்த்தப்படுவோர்; professional mourners, who bewail at the demise of the king in the old *Travancore* state. 2. அடங்காப்பிடாரி; termagent, shrew.

மண்டலாட்டி *maṇḍalaṭṭi*, பெ.(n.) இலுப்பை மரம் (மலை.); a species of mahwa.

மண்டலாதி *maṇḍalādi*, பெ.(n.) மாங்காய்; mango (சா.அக.).

மண்டலாபிடேகம் *maṇḍalābiḍēgam*, பெ.(n.) மண்டலபூசை பார்க்க; see *maṇḍala-pūšai*.

*[மண்டலம் + **Skt.**அபிசேகம்.]*

மண்டலார்த்தம் *maṇḍalārttam*, பெ.(n.) 1. அரை வட்டம்; semi circle. 2. அரை விட்டம், ஆரம்; semi-diameter.

*[மண்டலம் + **Skt.** அர்த்தம்.]*

மண்டலி¹–த்தல் *maṇḍali-*, 20 செ.கு.வி.(v.i.) 1. மண்டலம்போடு–, பார்க்க; see *maṇḍalam-pōḍu-*. 2. காலை வளைத்து வட்டமாக்குதல்; to bend the legs in a low-like form. 3. இறுதிப் பாட்டின் அல்லது இறுதி அடியின் இறுதி எழுத்து, அசை, சீர் என்பனவற்றுள் ஏதேனும் ஒன்று முதற்பாட்டின் அல்லது முதல் அடியின் முதல் எழுத்து, அசை, சீர் என்பனவற்றுள் ஒன்றாய் வருமாறு இசைத்தல்; to compose a poem so that the last letter, syllable or foot of its last line or stanza is the same as the first letter, syllable or foot of its first line or stanza.

[முல் (வளைதற் கருத்து வேர்) முள்→முட்டு →முட்டை = சுழி, சுன்னம். முள்→(மள்)→(மண்)→ மணி = வட்டமான வெண்கலம். முள்→முண்→ முண்டு→மண்டு→மண்டி→மண்டியிடுதல் = காலை மடித்தல் அல்லது மடக்குதல். மண்டு →மண்டலம்→ மண்டலி– (வே.க.4:83).]

மண்டலி²–த்தல் *maṇḍali-*, 20 செ.குன்றாவி. (v.t.) வளைத்தல்; to surround.

[மண்டு→மண்டலம்→ மண்டலி–.]

மண்டலி³ *maṇḍali,* பெ.(n.) உடலில் வட்டப் பொட்டுகள் நிறைந்த நச்சுப் பாம்பு வகை; a venemous serpent, as marked with round spots.

[மண்டு→மண்டலம்→ மண்டலி.]



மண்டலி⁴ *maṇḍali,* பெ.(n.) மண் (சூடா.); earth.

மண்டலி⁵ *maṇḍali,* பெ.(n.) கூட்டம் (சது.); crowd, company.

மண்டலிகம் *maṇḍaligam,* பெ.(n.) கருங்கூளி; black variety of vulture (சா.அக.).

மண்டலிகன் *maṇḍaligaṉ,* பெ.(n.) 1. அரசன்; king. *"மண்டலிகர்க் கெல்லா மகுடம் போல்வான்" (பிரமோத்.8, 11).* 2. நாட்டின் ஒரு பகுதியை யாளும் அதிகாரி; viceroy, petty ruler, ruler of a limited region. *"திருவேங்கடநாத மண்டலிகன்" (பணவிடு. 52).*

[முள்→(மள்)→(மண்)→மணி = வட்டமான வெண்கலம். முண்டு→ மண்டு→ மண்டி→ மண்டியிடுதல் = காலை மடித்தல் அல்லது மடக்குதல். மண்டுதல் = வளைதல். மண்டு→ மண்டலம் = வட்டம், வட்டகையான நாட்டுப் பிரிவு. மண்டலம்→மண்டலி→மண்டலிகன்.]

மண்டலிகனை *maṇḍaligaṉai,* பெ.(n.) கொட்டைப் பாக்கு; areca nut (raw.) (சா.அக.).

மண்டலிசிதம் *maṇḍališidam,* பெ.(n.) 1. கடுகு; mustard. 2. தேன்; honey. 3. வியர்வை; perspiration (சா.அக.).

மண்டலிப்பாம்பு *maṇḍali-p-pāmbu,* பெ.(n.) சுருட்டை, பனையன், விரியன் முதலிய வளையமிட்டு செல்லும் பாம்பு, நீளமாகவும் தோலில் வளையக் குறியுடன் ஒளிரும் பாம்பு; a snake generally found lying in circle, those which are large and slow and marked with ring like or circular spots on their skin and have the glow of the sun or fire - viper snake.

[மண்டலி + பாம்பு.]

மண்டலியாழ் *maṇḍaḷi-yāḷ,* பெ.(n.) பெரும் பண்களுள் ஒன்று (பிங்.); a melody type.

[மண்டலி + யாழ்.]

மண்டலீகன் *maṇḍaligaṉ,* பெ.(n.) 1. மண்டலிகன்¹ பார்க்க; see *maṇḍaligaṉ. "பலமன்னியர் மண்டலீகர்" (உத்தரரா. திருவோலக். 11).* 2. மண்டலிகன்² பார்க்க; see *maṇḍaligaṉ²*.

[மண்டலிகன்→மண்டலீகன்.]

மண்டலேச்சுவரன் *maṇḍalē-c-cuvaraṉ,* பெ.(n.) 1. நாற்பது யோசனை சதுரம் பரப்புள்ளதும், நூறு நூறாயிரம் ஊர்கள் கொண்டதுமான நாட்டையாளும் தனியரசன்; emperor, independent morach, paramount sovereign who rules over a country 40 yōjanas square or containing over 100,000 hamlets.

2. சிவதீக்கையின் போது நடுக்கும்பத்தின் அடியில் இடப்படும் யந்திரம் (இ.வ.); a figure drawn on the ground, on which the principal pot is placed, in *Śivadik*.

[மண்டலம் + ஈச்சுவரன்.]

மண்டலேசன் *maṇḍalēśaṉ*, பெ.(n.) மண்டலேச்சுவரன் பார்க்க; see *maṇḍalē-c-cuvaraṉ*.

[மண்டலம் + ஈசன்.]

மண்டலேசுரன் *maṇḍalēśuraṉ*, பெ.(n.) மண்டலேச்சுவரன் பார்க்க; see *maṇḍalē-c-cuvaraṉ*.

[மண்டலம் + ஈசுவரன்.]

மண்டவம் *maṇḍavam*, பெ.(n.) சுங்கச்சாவடி (வின்.); custom house.

[மண்டபம்→மண்டவம்.]

மண்டா *maṇḍā*, பெ.(n.) மீன், பன்றி வகைகளைக் குத்த உதவும் ஈட்டி வகை (வின்.); harpoon, hog-spear with short barked prongs.



மண்டாங்கி *maṇḍāṅgi*, பெ.(n.) மண்தாங்கிப் பலகை பார்க்க; see *maṇṭāṅgi-p-palagai*.

[மண் + தாங்கி. மண்தாங்கி →மண்டாங்கி.]

மண்டாங்கிச்சுவர் *maṇḍāṅgi-c-cuvar*, பெ.(n.) குறட்டின் முன்னே கட்டப்படுங் குத்துக் கற்சுவர்; retaining wall.

[மண் + தாங்கி + சுவர். மண்தாங்கிச்சுவர் →மண்டாங்கிச்சுவர்.]

மண்டாடி *maṇḍāḍi*, பெ.(n.) வள்ளத்தைச் செலுத்துபவர்; sailor of *vaḷḷam*.

மண்டி¹ *maṇḍi*, பெ.(n.) காலை முடக்கி முழந்தாளால் நிற்கை; kneeling, kneeling on one knee, as an archer. *"ஒரு கால் மண்டியாக.... மடித்து வைத்து" (புறநா.80, உரை).*

[முள் (வட்டக்கருத்து வேர்). முள்→முண்டு→ மண்டு→மண்டி. மண்டியிடுதல் = காலை மடித்தல் அல்லது மடக்குதல்.]

மண்டி² *maṇḍi*, பெ.(n.) 1. வண்டல் (வின்.); sediment, dregs, settlings, lees. 2. கலங்கல் நீர்; muddy water.

க., தெ. மட்டி.

[மண்டுதல் = நெருங்குதல், திரளுதல். மண்டு →மண்டி (மு.தா.159).]

மண்டி³ *maṇḍi*, பெ.(n.) 1. தவசம் (தானியம்) மொத்தமாக விற்குமிடம்; wholesale grain market. *'மண்டித் தெரு' (உ.வ.). "பூரியி மாக்க ளுண்பது மண்டி நாரரி நறவ முகுப்ப நலனழிந்து" (பரிபா.6, 48).* 2. பெருவணிகம் செய்யும் பண்டகசாலை (வின்.); shop, stall, warehouse, large shop where things are sold wholesale or in large quantities.

[முல் (பொருந்தற் கருத்து வேர்)→மல்= பருமை, வளம், வலிமை. பல அணுக்கள் அல்லது உறுப்புகள் அல்லது பொருள்கள் பொருந்துவதால் (ஒன்று சேர்வதால்) திரட்சி அல்லது பருமை உண்டாகும். ஒ.நோ. சேரே திரட்சி (தொல்.உரி.65) மிகுதியால் வளமும் பருமையால் வலிமையும் உண்டாகும். மல்→மண்→மண்டி.]

மண்டிக்கலம் *maṇḍi-k-kalam*, பெ.(n.) 72 படி கொண்ட முகத்தலளவை; gain measure of 72 *paḍi*.

[மண்டி + கலம்.]

மண்டிக்கிட–த்தல் *maṇḍi-k-kiḍa-*, 3 செ.கு.வி.(v.i.) அடர்ந்து வளர்ந்திருத்தல், நிறைந்திருத்தல்; growing wild in the fields. *"புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு" (பாரதியார்).*

[மண்டி + கிட–.]

மண்டிகை *maṇḍigai*, பெ.(n.) அப்ப வகை (பிங்.); a kind of cake.

[மண்டி →மண்டிகை. மண்டி = வளைவு.]

மண்டிதம் *maṇḍidam*, பெ.(n.) சிறுகீரை (மலை.); a species of amaranth.

மண்டிபோடு–தல் *maṇḍi-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) முழங்கால் முட்டிமேல் நிற்றல்; to stand with leg or legs bent, as in player or in archery. ***வீட்டுப்பாடம் செய்யாததால், வகுப்பில் மண்டி போட்டான் (உ.வ.).***

[மண்டி + போடு–.]



மண்டியிடு–தல் *maṇḍi-y-iḍu-*, 20 செ.கு.வி. (v.i.) முழந்தாளில் நிற்றல்; to stand on the knees, as for prayer. *இறைவன் முன் மண்டியிட்டார் (உ.வ.).*

[மண்டி + இடு–.]

மண்டிரவல் *maṇḍi-raval*, பெ.(n.) இரவலாகப் பெற்ற நகையை வறுமையால் அடகு வைக்கை (வின்.); pledging borrowed jewellery, when in straits.

[மண்டி + இரவல்.]

மண்டிலக்கடவுள் *maṇḍila-k-kaḍavuḷ*, பெ.(n.) நிலவு; the moon. *"மறுவுடை மண்டிலக் கடவுளை வளைத்த" (பெருங். இலாவண.9, 168).*

[மண்டிலம் + கடவுள்.]

மண்டிலநிலை *maṇḍila-nilai*, பெ.(n.)1. தேசிக் கூத்தின் வகை (பிங்.); a posture in *tēśi-k-kūttu*. 2. மண்டலம்[14] பார்க்க; see *maṇḍalam*[14].

[மண்டலம் + நிலை – மண்டலநிலை→ மண்டிலநிலை.]

மண்டிலம் *maṇḍilam*, பெ.(n.) 1. வட்டம்; circle, orbit. 2. வட்ட வடிவு; disc, as of sun or moon. *"செஞ்ஞாயிற்றுப் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்" (புறநா.30).* 3. வட்டமா யோடுகை; coursing in a circle. *"செலவொடு மண்டிலஞ் சென்று" (பு.வெ.12, வென்றிப், 14).* 4. குதிரை (பிங்.); horse, a running in a circle. *"கழிப்புலாய் மண்டிலங் கொட்பு" (இன்னா.35).* 5. நாட்டின் பெரும் பகுதி; district, division of a country. 6. நிலம்; the earth. *"கடல்சூழ் மண்டிலம்" (குறுந்.300).* 7. கதிரவன்; sun. *"பகல் செய்*

மண்டிலம் பாரித் தாங்கு" (பெரும்பாண்.442). 8. நிலவு; moon. *"செய்வுறு மண்டிலம்" (கலித்.7).* 9. தேசிக் கூத்தின் வகை; a posture in *tēsi-k-kūttu*. 10. வானம் (பிங்.); air, atmosphere, heavens. 11. கண்ணாடி; mirror. *"மையறு மண்டிலம் போலக் காட்ட" (மணிமே. 25, 127).* 12. பாம்பு முதலியவற்றின் சுற்று; coil, as of a snake or rope. 13. வட்ட வடிவப் படையமைப்பு வகை (குறள், 767, உரை); array of an army in a circular form. *"மண்டிலத் தருமையும்" (தொல்.பொருள்.41).* 14. ஒரு நாட்டிய முத்திரை (பிங்.); a posture. 15. வில்லோர் நிலையுளொன்று; a posture in archery, one of four *villōr-nilai.*

[முள்→முட்டு→முட்டை = சுழி, சுன்னம். முள் →(மள்)→(மண்)→ மணி = வட்டமான வெண்கலம். முண்டு→மண்டு→மண்டி. மண்டியிடுதல் = காலை மடித்தல் அல்லது மடக்குதல். மண்டி→மண்டிலம் (மு.தா.244).]

"ஒத்தா ழிசையும் மண்டில யாப்பும்
குட்டமு நேரடிக் கொட்டின வெண்ப"
(தொல்.செய்.114).
"மண்டிலங் குட்ட மென்றிவை யிரண்டும்
செந்தூக் கியல வென்மனார் புலவர்"
(தொல்.செய்.116).

இங்ஙனம் மண்டில யாப்புத் தொல் காப்பியத்திலேயே சொல்லப்பட்டிருத்தலையும் "என்மனார் புலவர்" என்னும் முன்னூல் பலவற்றைக் குறிக்குந் தொடரையும் ஊன்றி நோக்குக.

நிலைமண்டில வாசிரியப்பா, அடிமறிமண்டில வாசிரியப்பா என்னும் அகவற்பா வகைகள், தொன்றுதொட்டு வழங்கி வருவன. தமிழ் யாப்பு முறை முற்றும் ஆரியச் சார்பற்றது.

மண்டில மாக்கள் = நாட்டின் பகுதியை ஆளும் அதிகாரிகள்.

பழஞ் சோழ நாட்டில் பிரிவான தொண்டை மண்டலமும், பழஞ் சேர நாட்டின் பிரிவான கொங்கு மண்டலமும் போன்ற பல மண்டலங்கள், முதற்காலத்தில் மண்டில மாக்கள் அல்லது மண்டலிகர் என்னும் அதிகாரிகளாலேயே ஆளப்பட்டு வந்திருத்தல் வேண்டும். அவர்கள் அரசு குடும்பத்தினராகவோ, உழுவித்துண்ணும் வேளாண் தலைவராகவோ, குறுநில மன்னராகவோ, தண்டத் தலைவராகவோ இருந்திருக்கலாம்.

எண்ணூற்றுக் காவத அளவு முழுகிப்போன பழம் பாண்டி நாடான *"செந்தமிழ் வழக்கொடு சிவணிய நிலமும்"* பனிமலைவரை பரவியிருந்த பழஞ் சேர சோழ நாடுகளும், இருந்த முதுபழங்காலத்தில், முத்தமிழ் வழங்கிய முந்து தமிழகம் எத்துணையோ மண்டலங்களாகப் பகுக்கப்பட்டு மண்டலிகரால் ஆளப்பட்டு வந்திருத்தல் வேண்டும்.

பாண்டியன் குடிப்பெயர்களுள் ஒன்றான பஞ்சவன் என்னுஞ் சொல், முதலிரு கழகக்கால அல்லது தலைக் கழகக்காலப் பாண்டியர், துணையரையர் (அல்லது மண்டலிகர்) ஐவரைக் கொண்டு நாடாண்டமையை யுணர்த்தும்.

"பஞ்சவ னீடு கூனும்" என்று 15ஆம் நூற்றாண்டு அருணகிரிநாதர் பாடியது போன்றே, *"பழியொடு படராப் பஞ்சவ வாழி"* என்று 2ஆம் நூற்றாண்டு இளங்கோவடிகளும் பாடியிருத்தல் வேண்டும்.

அஞ்சவன் என்னுஞ் சொல்லே, பிற்காலத்தில் வடமொழியிலும் தென்மொழியிலும் பஞ்சவன் என்று திரிந்ததாகத் தெரிகின்றது (கை–ஐ–ஐயது–ஐது–ஐந்து–ஐந்தவன்–ஐஞ்சவன்–அஞ்சவன்–பஞ்சவன்).

ஒ.நோ.: அப்பளம் - தெ. அப்படமு; க. பப்பள; ம. பப்படம்; வ. பர்ப்பட்ட. அப்பளக் கட்டையால் மாவை அப்பளித்தமைப்பது அப்பளம்.

முண்டு, மண்டு, மண்டி, மண்டலம், மண்டலிகன், மண்டலித்தல், மண்டிலம் முதலிய சொற்கள் மேலையாரிய மொழிகளில் இல்லை.

Mandalian (Dim. Mandolined) என்னும் இத்தாலிய நரப்பிசைக் கருவிப் பெயரும், மண்டிலியாழ் என்னும் தென்சொல்லில் திரிபாய் இருத்தல் வேண்டும்.

தமிழின் தென்மை, தொன்மை, முன்மை முதலிய தன்மைகளை நடுநிலையாக ஆராய்ந்தறிந்தவர்க்கு, மேற்கூறியவையெல்லாம் வெள்ளிடை மலையாம்.

மண்டிலமாக்கள் *maṇḍila-mākkaḷ,* பெ.(n.) நாட்டின் பகுதியை ஆளும் அதிகாரிகள்; viceroys, petty rulers. *"மண்டிலமாக்களும் தண்டத் தலைவருமாய்" (தொல்.பொருள்.30, உரை).*

[மண்டிலம் + மாக்கள்.]

மண்டிலயாப்பு *maṇḍila-y-āppu,* பெ.(n.) நாற்சீரடிச் செய்யுள் (தொல்.பொருள்.427); verse of four feet to a line.

[மண்டிலம் + யாப்பு.]

மண்டிவணிகம் *maṇḍi-vaṇigam,* பெ.(n.) மொத்த வணிகம் (வின்.); wholesale trade.

[மண்டி + வணிகம்.]

மண்டு¹-தல் *maṇḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நெருங்குதல்; to be close together, crowded, pressed. *"விரிசடை மண்டி யலைந்திட" (கோயிற்பு.பதஞ்சலி.40).* 2. விரைந்து செல்லுதல்; to move swiftly. *"கடற்படை குறிப்ப மண்டி" (புறநா.6).* 3. திரளுதல்; to collect together, to around, to come in flocks, throngs; to press, rush. *"காவ்விசைத் தோடிக் கடல்புக மண்டி" (திருவாச. 2, 135).* 4. உக்கிரமாதல்; to grow vehement, to wax fierce. *"மண்டமர்" (பு.வெ.1, 1).* 5. ஒளியுமிழ்தல்; to glow, to blaze. *"மண்டு மெரியுள்" (பு.வெ.1, 1).* 6. அதிகமாதல்; to increase, to become excessive. *"மண்டிய கடும்பசி தனக்கு" (தாயு.ஆனந்தமான.4).* 7. ஈடுபடுதல்; to be fascinated, charmed, engrossed. *"முற்பட வடிவிலே மண்டுகிறாள்" (ஈடு.5, 3, 1).*

[முண்டுதல் = நெருங்குதல். முண்டு → மண்டு (மு.தா.82).]

மண்டு²-தல் *maṇḍu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. செலுத்துதல்; to thrust in. *"நுதிமுக மழுங்க மண்.... மதிலபாயு நின் களிறு" (புறநா.31).* 2. நெருக்கித் தாக்குதல்; to press upon, close in, to attack. *"அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்" (புறநா.62).* 3. நிரம்ப உண்ணுதல்; to eat and drink greedily. *"இரை மண்டி" (தேவா.72, 8).* 4. சேரவிணைத்தல்; to insert and fasten. *"கால்மண் டெஃகம்" (மலைபடு.129).* 5. மூண்டு பொருதல்; to oppose, resist, fight against with vehemence. *"ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்" (தொல். பொருள்.72).* 6. கவர்தல் (வின்.); to snatch, to steal. 7. தாங்குதல் (வின்.); to support, prop.

[முள் → முண்டு → மண்டு. மண்டுகால் = முட்டுக்கால் (மு.தா.82).]

மண்டு³ *mandu,* பெ.(n.) 1. செறிவு; pressing, throughing. 2. மிகுதி; plenty, abundance.

[முள்→முண்டு→மண்டு (மு.தா.89).]

மண்டு⁴ *mandu,* பெ.(n.) மூடன்; fool.

M. monda; K. monda.

[முள்→(மள்)→மழு→மழுகு→மழுங்கு→மழுக்கு →மழுக்கம். முள்→முட்டு→மொட்டை = மட்டை. முழு மொட்டை →முழுமட்டு.முள்→(மொள்)→மொழுக்கு →மொழுக்கட்டை →மொக்கட்டை = மழுக்கமானது. முள்→ (மொள்)→ மொண் → மொண்ணை → மண்ணை →மன் →மண் →மண்டு.]

மண்டுகால் *mandu-kāl,* பெ.(n.) முட்டுக்கால் (வின்.); prop.

[மண்டு + கால்.]

மண்டூக்கி *mandūkki,* பெ.(n.) மீன் வேட்டைக்குப் பயன்படும் முனையில் கொக்கி போல் வளைந்த இரும்புக் கருவி; fishing instrument.

மண்டுகசீவன் *mandūga-šīvan,* பெ.(n.) தவளைக்கல் (யாழ்.அக.); laterite.

[மண்டூகம் + சீவன்.]

மண்டுகபன்னி *mandūga-panni,* பெ.(n.) அழிஞ்சில் (மூ.அ.); sage leaved alangium.

மண்டூகம்¹ *mandūgam,* பெ.(n.) 1. தவளை (பிங்.); frog. 2. மூடன் (கொ.வ.); fool. 3. தேரை; toad. 4. இரும்புத்துரு; iron rust iron oxide.

மண்டூகம்² *mandūgam,* பெ.(n.) மண்டூரம் (யாழ்.அக.) பார்க்க; see *mandūram.*

மண்டூகி *mandūgi,* பெ.(n.) பெண் தவளை; female frog (சா.அக.).

மண்டூகை *mandūgai,* பெ.(n.) விலைமகள் (சிந்தா.நி.); prostitute.

மண்டூரசிந்தூரம் *mandūra-šindūram,* பெ.(n.) இருப்புக் கிட்டத்தாற் செய்த செந்நிறச் சாம்பல் (அறப்.சத.51); calcinated iron ore, as medicine.

[மண்டூரம் + சிந்தூரம்.]

மண்டூரம் *mandūram,* பெ.(n.) இருப்புக் கிட்டம் (வின்.); iron dross, oxide of iron, refuse of melted iron.

மண்டெரி *manderi,* பெ.(n.) 1. பெருந்தீ; great fire. 2. காட்டுத் தீ (காடாக்கினி.); wild fire (சா.அக.).

மண்டை¹ *mandai,* பெ.(n.) 1. மட்கலம்; earthern vessel. *"காதலனடி நீர் சுடுமண் மண்டையின்..... மாற்றி" (சிலப்.16, 39).* 2. ஒரு முகத்த லளவை (தொல். எழுத்து.170, உரை); a standard measure. 3. இரப்போர் கலம், திருவோடு; mendicant's begging bowl. *"புலராமண்டை..... கொழுநிணம் பொருப்ப" (புறநா.103).* 4. இரப்போர்கலம் போன்ற தலையோடு; skull, cranium, brain-pan. 5. தலையோடுள்ள தலைப் பகுதி; eranium. *"செவ்வாயனைத்தான் வணங்கா மண்டை யிருக்கும்" (அஷ்டப்.திருவேங்கடத்தந்.61).* 6. தலை; head. 7. தென்னை முதலியவற்றின் தலைப்பக்கம் (நாஞ்.); to portion as of palms. 8. இளவரசன் மகுடம்; crown of the prince.

க. மண்டே; ம. மண்ட.

[முல் (துளைத்தற் கருத்து வேர்)→முள் →மொள்→மொண்டான் = நீர் மொள்ளுங் கல வகை. மொள்→மொண்டை →மொந்தை = மொள் கலம், கள் மொண்டு வார்க்கும் அளவைக் கலம், சிறு மரப்பாண்டம், ஒரு கட்பாறை வகை. மொண்டை →மண்டை (வே.க.4:92).]

மண்டை[2] *mandai,* பெ.(n.) விலைமகள்; prostitute. *"நீலி நாடகமும் பயில் மண்டைகள்" (திருப்பு.67).*

மண்டைக்கட்டு *mandai-k-kattu,* பெ.(n.) 1. தலையிற்கட்டும் கட்டு; a bandage to the head. 2. தலைப்பாகை வகை; a kind of mitre turban.

மண்டைக்கடுவன் *mandai-k-kaduvan,* பெ.(n.) தலையிற் காணும் சொறிப்புண் வகை (பாலவா.687); chronic eczema of the head.

[மண்டை + கடுவன்.]

மண்டைக்கண் *mandai-k-kan,* பெ.(n.) குழிந்த கண், உள்ளாங்கண் (வின்.); sunken eye.

[மண்டை + கண்.]

மண்டைக்கரப்பன் *mandai-k-karappan,* பெ.(n.) மண்டைக்கரப்பான் பார்க்க; see *mandai-k-karappān.*

[மண்டை + கரப்பன்.]

மண்டைக்கரப்பான் *mandai-k-karappān,* பெ.(n.) தலையில் வரும் கரப்பான் நோய் வகை (பைஷஜா.); ring worm of the head.

[மண்டை + கரப்பான்.]

மண்டைக்கருப்பன் *mandai-k-karuppan,* பெ.(n.) ஊர்க் காவல் தெய்வம்; a village deity.

[மண்டை + கருப்பன்.]

மண்டைக்கருவம் *mandai-k-karuvam,* பெ.(n.) மிகு செருக்கு; self-conceit, headstrongness.

[மண்டை + கருவம். கரு + அம். கரு = உயர்வு, பெருமை, செருக்கு. 'அம்' சொல்லாக்க ஈறு.]

மண்டைக்கல் *mandai-k-kal,* பெ.(n.) விரால் தலைக்கல்; stone in the head (சா.அக.).

மண்டைக்கனம் *mandai-k-kanam,* பெ.(n.) 1. தடுமண் பிடிப்பதால் தலை கனத்திருக்கை; heavyness of head, due to cold. 2. மண்டைக்கருவம் பார்க்க; see *mandai-k-karuvam* (இ.வ.).

[மண்டை + கனம்.]

மண்டைக்காறல் *mandai-k-kāral,* பெ.(n.) வெண்மை நிறமுடையதும், பத்து விரலம் வளர்வதுமான கடல் மீன் வகை; a sea fish, silvery, attaining 10 inches and more in length.

[மண்டை + காறல்.]

மண்டைக்குடைச்சல் *mandai-k-kudaiccal,* பெ.(n.) 1. மண்டைக்குத்து பார்க்க; see *mandai-k-kuttu.* 2. சிக்கலான பணிமேற் குறித்த சொல் வழக்கு; an idiom for the complicated task.

[மண்டை + குடைச்சல்.]

மண்டைக்குத்தல் *mandai-k-kuttal,* பெ.(n.) மண்டைக்குடைச்சல் பார்க்க; see *mandai-k-kudaiccal.*

[மண்டை + குத்தல்.]

மண்டைக்குத்து *mandai-k-kuttu,* பெ.(n.) 1. தலைநோவு; headache. 2. தலைநோவு வகை; neuralgia.

[மண்டை + குத்து.]

மண்டைக்குழி *maṇḍai-k-kuḻi*, பெ.(n.) பிறந்த குழந்தைகளுக்கு தலைப்பகுதியின் நடுவில் காணப்படும் மெல்லிய சவ்வு போன்ற மூடிய பகுதி; the cranial cavity.

[மண்டை + குழி.]

மண்டைக்கெளிறு *maṇḍai-k-keḷiṟu*, பெ.(n.) மீன் வகை; a kind of fish.

[மண்டை + கெளிறு.]



மண்டைக்கொழுப்பு *maṇḍai-k-koḻuppu*, பெ.(n.) மிகு செருக்கு; self conceit; headstrongeness.

[மண்டை + கொழுப்பு.]

மண்டைக்கோழை *maṇḍai-k-kōḻai*, பெ.(n.) சளி அதிகமாகும் தலைநோய் வகை (யாழ். அக.); accumulation of mucus in the head.

[மண்டை + கோழை.]

மண்டைச்சூலை *maṇḍai-c-cūlai*, பெ.(n.) நோய் வகை (யாழ்.அக.); a kind of disease.

[மண்டை + சூலை.]

மண்டைப்பாணர் *maṇḍai-p-pāṇar*, பெ.(n.) உண்கலமேந்தி இரக்கும் பாணர் வகையார்; a class of musicians, as begging with bowls. *"இசைப்பாணரும் மண்டைப் பாணரும் யாழ்ப்பாணருமெனப் பலராம்" (தொல்.பொருள்.91, உரை).*

[மண்டை + பாணர்.]

மண்டைப்பீனசம் *maṇḍai-p-pīṉašam*, பெ.(n.) பீனச நோய் வகை (வின்.); a disease of the head.

[மண்டை + பீனசம்.]

மண்டைப்புழு *maṇḍai-p-puḻu*, பெ.(n.) 1. மண்டைப்பூச்சி பார்க்க; see *maṇḍai-p-pūcci.* 2. மண்டைக்கருவம் பார்க்க; see *maṇḍai-k-karuvam.*

[மண்டை + புழு.]

மண்டைப்புழுவருதல் *maṇḍai-p-puḻu-varudal*, பெ.(n.) பிடிவாதங் காட்டுகை (வின்.); obstinancy.

[மண்டை + புழு + வருதல்.]

மண்டைப்பூச்சி *maṇḍai-p-pūcci*, பெ.(n.) தலையோட்டினுள்ளிருப்பதும் ஒருவனோடு மாய்வதுமாய்க் கருதப்படும் புழு வகை; a worm believed to live in the skull of a person and die with him. *'அவனுக்கு மண்டைப் பூச்சி மாய்கிற காலம்' (உ.வ.).*

[மண்டை + பூச்சி.]

மண்டைப்பெரியதனக்காரன் *maṇḍai-p-periya-daṉa-k-kāraṉ*, பெ.(n.) தொட்டியர் தலைவனது பட்டப் பெயர்; headman in the *Thoṭṭiyar* community.

[மண்டை + பெரியதனக்காரன்.]

மண்டையடைப்பான் *mandai-adaippān,* பெ.(n.) சன்னி நோய் வகை; apoplexy (இ.வ.).

[மண்டை + அடைப்பான்.]

மண்டையிடி *mandai-y-idi,* பெ.(n.) 1. தலை வலி; headache. 2. பீனசம்; neuralgia.

[மண்டை + இடி.]

மண்டையெலும்பு *mandai-y-elumbu,* பெ.(n.) தலையோடு; carnial bone.

மண்டையோட்டுப்பொருத்து *mandai-y-ōttu-p-poruttu,* பெ.(n.) மண்டையெலும்புப் பொருத்து; joint of the skull bones.

மண்டையோடு *mandai-y-ōdu,* பெ.(n.) ஓடு போன்ற தலையெலும்பு; skull, cranium.

[மண்டை + ஓடு.]

மண்டைவலி *mandai-vali,* பெ.(n.) தலைவலி; headache.

[மண்டை + வலி.]

மண்டைவறளுதல் *mandai-varaludal,* பெ.(n.) எண்ணெய்க் குளியலில்லாமையால் உண்டாம் தலையெரிச்சல் (வின்.); burning sensation in the head, due to omission of oil bath.

[மண்டை + வறளுதல்.]

மண்டைவியாதி *mandai-viyādi,* பெ.(n.) மண்டைநோய் பார்க்க; see *mandai-nōy.*

[மண்டை + Skt. வியாதி.]

மண்டைவெல்லம் *mandai-vellam,* பெ.(n.) மொத்தையாகத் திரட்டிய வெல்லம் (இ.வ.); jaggery or coarse cane - sugar in hemispherical moulds.

[மண்டை + வெல்லம்.]

மண்டோதரி *mandōdari,* பெ.(n.) இலங்கை வேந்தன் இராவணன் மனைவி, சிற்பி மயனுடைய மகள்; wife of Ravana, the king of Lanka and the daughter of Maya, the great architect of Rakshasas. *"மண்டோதரி காதலன் வான்புக" (திவ். பெரியாழ்.5, 4, 5).*

மண்ணகம் *mannagam,* பெ.(n.) 1. நாடு; country. *"மண்ணகங் காவன் மன்னன்" (பு.வெ.9, 5 கொளு.).* 2. மனை; land for construction. *"மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு" (சிலப்.3:96).*

[மண் + அகம்.]

மண்ணகமடந்தை *mannaga-madandai,* பெ.(n.) மண்மடந்தை பார்க்க; see *man-madandai. "கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை" (சிலப்.5: 3).*

[மண்ணகம் + மடந்தை.]

மண்ணகை *mannagai,* பெ.(n.) கச்சோலம்; a kind of aromatic substance.

மண்ணங்கட்டி *mannangatti,* பெ.(n.) மண்ணாங்கட்டி பார்க்க (தொல்.எழுத்து. 405, உரை); see *mannāngatti.*

[மண் + அம் + கட்டி – மண்ணங்கட்டி.]

மண்ணசை *man-n-asai,* பெ.(n.) மண்ணாசை பார்க்க; see *man-n-āsai. "எஞ்சா மண்ணசை..... அடல் குறித்தன்று" (தொல். பொருள்.62).*

[மண் + நசை. நசை = விருப்பம், ஆசை.]

மண்ணடி[1]–த்தல் *maṉ-ṉ-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மண் கொணர்ந்து கொட்டுதல்; to bring and deposit earth as for the level. *பள்ளத்தை நிரப்பி மேடாக்க, மண்ணடிக்க வேண்டும் (உ.வ.).* 2. மண் மேடிடுதல் (கொ.வ.); to silt, as in a river.

மண்ணடி[2]–த்தல் *maṉ-ṉ-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) சீர் கெடுத்தல்; to ruin. *'வாழ்வில் மண்ணடித்து விடுவார்கள்' (உ.வ.).*

[மண் + அடி–.]

மண்ணடைப்பான் *maṉ-ṉ-aḍaippāṉ,* பெ.(n.) ஒரு நோய்; a disease.

[மண் + அடைப்பான்.]

மண்ணம் *maṉṉam,* பெ.(n.) நீர்த்த சுண்ணாம்பு (திவா.); slaked lime.

மண்ணரசு *maṉ-ṉ-arašu,* பெ.(n.) பூவரசு; portia tree.

[மண் + அரசு.]

மண்ணரிநார் *maṉ-ṉ-ari-nār,* பெ.(n.) குயவர் திருவையில் வனைந்த கலத்தை அறுத்து எடுக்கப் பயன்படும் முறுக்கு நூல் (வின்.); potter's string to cut the pot - thrown on the wheel.

[மண் + அரி + நார்.]

மண்ணரியாளன் *maṉṉari-y-āḷaṉ,* பெ.(n.) மண்ணரிவாளன் பார்க்க; see *maṉṉari-v-āḷaṉ.*

[மண் + அரி + ஆளன்.]

மண்ணரிவாளர் *maṉ-ṉ-arivāḷar,* பெ.(n.) குயவர்; potter.

[மண் + அரிவாளர்.]

மண்ணரிவாளன் *maṉ-ṉ-arivāḷaṉ,* பெ.(n.) மண்ணரிவாளர் பார்க்க; see *maṉ-ṉ-arivāḷar.*

[மண் + அரி + ஆளன்.]

மண்ணரை–த்தல் *maṉ-ṉ-arai-,* 4 செ.கு.வி. (v.i.) சோம்பியிருத்தல் (யாழ்.); to be lazy, to lounge.

[மண் + அரை–,]

மண்ணவர் *maṉṉavar,* பெ.(n.) மக்கள்; human beings. *"மண்ணவர் விண்ணவர் வணங்க" (தேவா.52, 6).*

[மண் + அவர்.]

மண்ணறை *maṉṉaṟai,* பெ.(n.) மண்பூச்சு (வின்.); plastering with mud.

[மண் + அறை.]

மண்ணன்[1] *maṉṉaṉ,* பெ.(n.) மந்தன் (வின்.); clod hopper, dullard, stupid person.

[மண் + அன்.]

மண்ணன்[2] *maṉṉaṉ,* பெ.(n.) சின்னம்மை நோய் வகை; a kind of chicken pox.

[மண் + அன்.]

மண்ணா *maṉṉā,* பெ.(n.) மீன் வகை (வின்.); a kind of fish.

மண்ணாகம் *maṉ-ṉāgam,* பெ.(n.) 1. மண்நாகம் பார்க்க; see *maṉ-ṉāgam.* 2. மண்புழு; earth worm.

[மண் + நாகம்.]

மண்ணாங்கட்டி[1] *man-n-āṅ-katti,* பெ.(n.) மண்கட்டி (தொல்.எழுத்து.405, உரை), கெட்டிபட்ட மண்திரள்; clod, clod pole.

[மண் + அம் + கட்டி – மண்ணங்கட்டி → மண்ணாங்கட்டி.]

மண்ணாங்கட்டி[2] *man-n-āṅ-katti,* பெ.(n.) வெறுப்பு, சலிப்பு இவற்றால் வெளிப்படுத்தும் சொல்; an expression of contempt or disgust. *அவன் ஒரு மண்ணாங்கட்டியும் செய்யமாட்டான்.*

மண்ணாசை *mannāšai,* பெ.(n.) நிலத்தை அடைவதற்கான பற்று; desire to grab land.

[மண் + ஆசை.]

மண்ணாட்டி *mannātti,* பெ.(n.) மாரெலும்பு; breast bone (சா.அக.).

மண்ணாடி[1] *mannādi,* பெ.(n.) மண்டாடி பார்க்க; see *mandādi* (சா.அக.).

மண்ணாடி[2] *mannādi,* பெ.(n.) மலை நாடுகளில் ஊர்த் தலைமையுள்ள மக்கள் (வின்.); a caste of village - headmen in the hills.

[மன்றாடி → மண்ணாடி.]

மண்ணாதம் *mannādam,* பெ.(n.) உவர் மண்; dhoby's earth (சா.அக.).

மண்ணாந்தை *mannāndai,* பெ.(n.) அறிவிலி (கொ.வ.); dolt, idiot.

[மண் + அந்தை – மண்ணந்தை → மண்ணாந்தை.]

மண்ணாய்ப்போ-தல் *mannāy-p-pō-,* 4 செ.கு.வி.(v.i.) வசை; an abuse, desiring the other person to go ruined.

[மண் + ஆய் + போ-.]

மண்ணாவான் *mannāvān,* பெ.(n.) ஒரு வசைச் சொல்; fellow to go to dust, a term of abuse.

[மண் + ஆவான்.]

மண்ணான் *mannān,* பெ.(n.) புதரவண்ணான், இராப்பாடி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு துணி துவைப்பவர்; washerman for depressed people.

[மண் + அன் – மண்ணன் → மண்ணான். மண்ணுதல் = கழுவுதல்.]

மண்ணானை *mannānai,* பெ.(n.) கரு; foetus.

மண்ணி[1] *manni,* பெ.(n.) 1. மண்ணன் (வின்.) பார்க்க; see *mannan.* 2. 13 விரலம் வளர்வதும் வெளிறின பச்சை நிறமுள்ளதுமான நன்னீர் மீன் வகை; murrel, a fresh - water fish, greenish, attaining 13 inch. in length. 3. சோழ நாட்டிலுள்ளதோர் ஆறு; a river in *Cola* country. *"மண்ணித் தென் கரைமேல்.... நாங்கை" (திவ்.பெரியதி.4, 1, 5).*

மண்ணி[2] *manni,* பெ.(n.) ஆறு (தெ.க.தொ. 13, கல்.212–8); river.

மண்ணிடு-தல் *mannidu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. சுவருக்கு மண்பூசுதல்; to plaster with mud. 2. கால்கழுவுகையில் மண்ணால் தூய்மை செய்தல்; to clean oneself with mud, as after evaculation. 3. மண்ணடி (நாஞ்.) பார்க்க; see *mannadi.*

[மண் + இடு-.]

மண்ணியற்று *manniyarru,* பெ.(n.) மட்கலம் (சங்.அக.); mud pot.

[மண் +இயற்று.]

மண்ணில்வேந்தன்[1] *mannil-vēndan,* பெ.(n.) 1. எலுமிச்சை; lime fruit. 2. மண்புழு; earth worm.

[மண்ணில் + வேந்தன்.]

மண்ணில்வேந்தன்[2] *mannil-vēndan,* பெ.(n.) மண்ணிலவேந்தன் பார்க்க; see *mannila-vēndan.*

[மண்ணிலவேந்தன் →மண்ணில்வேந்தன்.]

மண்ணிலம் *man-nilam,* பெ.(n.) நிலவுருண்டை (வின்.); the earth.

[மண் + நிலம்.]

மண்ணிலவேந்தன் *mannila-vēndan,* பெ.(n.) 1. பூவரசு; portia tree. 2. அரசு (மலை.); pipal. 3. முடிதும்பை (வின்.); a fragrant plant. 4. வெற்றிலை (மலை.); betal vive.

[மண் + நிலம் + வேந்தன்.]

மண்ணிற்கீழ்சேர்-த்தல் *mannir-kīl-cēr-,* 4 செ.கு.வி.(v.i.) புடம்போட்டு மண்ணிற் புதைத்து வைத்தல்; to burry in the earth.

[மண்ணின் + கீழ் + சேர்-.]

மண்ணின்பிறட்டு *mannin-pirattu,* பெ.(n.) பேரோசனை பார்க்க; see *pērōšanai* (சா.அக.).

மண்ணினாதம் *manninādam,* பெ.(n.) உவர் மண் (யாழ்.அக.); fuller's earth.

[மண்ணின் + நாதம்.]

மண்ணீட்டாளர் *mannīttālar,* பெ.(n.) 1. குயவர்; potter. 2. மண் அல்லது சுதையால் பாவை முதலியன செய்வோர்; those who make images etc. in mud, cement or plaster. 3. சிற்பக் கலைஞர் (சூடா.); masons, sculpter.

[மண் + ஈடு + ஆளர்.]

மண்ணீடு *mannīdu,* பெ.(n.) 1. திண்ணை (பிங்.); pyal. 2. மாடப்புரை (வின்.); niche in a wall for a light or an image. 3. வேயா மாடம் (சூடா.); terraced house. 4. சுதையாற் செய்த பாவை வடிவம்; plaster image. *"உயிர்களும் மவ்வுயிரிடங்களும்...மண்ணீட்டிற் பண்புற வகுத்து" (மணிமே.6: 200).*

[மண் + ஈடு.]

மண்ணீர் *mannīr,* பெ.(n.) கழுவ உதவும் நீர்; water fit only for washing. *"கடல் பெரிது மண்ணீரு மாகாது" (வாக்குண்.12).*

[மண் + நீர்.]

மண்ணீர்மை *mannīrmai,* பெ.(n.) உலகவியல்பு; worldliness, earthliness. *"மண்ணீர்மையாலே மயங்காது" (தாயு.பராபர. 333).*

[மண் + நீர்மை.]

மண்ணீரல் *mannīral,* பெ.(n.) இடது விலாவை யொட்டியுள்ள ஈரல்; spleen.

[மண் + ஈரல்.]



மண்ணீரலடைப்பான் *mannīral-adaippān,* பெ.(n.) மண்ணீரற்சன்னி பார்க்க; see *mannīrar-šanni.*

[மண்ணீரல் + அடைப்பான்.]

மண்ணீரற்சன்னி *mannīrar-šanni,* பெ.(n.) சன்னிநோய் வகை; splenic apoplexy.

[மண்ணீரல் + சன்னி.]

மண்ணு[1]–தல் *mannu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நீராடுதல்; to bathe, to perform ablutions. *"மண்ணு மங்கலமும்" (தொல். பொருள்.68).* 2. மூழ்குதல்; to immerse oneself completely, as in water. *"பனிக்கய மண்ணி" (புறநா.79).*

[முள் → முழு → முழுகு → முழுக்கு → முழுகு = குளித்தல், மூழ்குதல். முள் → (மள்) → மண் → மண்ணு–தல் = குளித்தல் (மு.தா.290).]

மண்ணு[2]–தல் *mannu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கழுவுதல்; to wash, clean by washing. *"மண்ணி மாசற்ற நின் கூழையுள்" (கலித்.107).* 2. பூசுதல்; to smear, anoint. *"தண்ணருந் தகரங் கமழ மண்ணி" (குறிஞ்சிப்.108).* 3. செய்தல்; to do, make, perform. *"ஆவுதி மண்ணி" (மதுரைக்.494).* 4. ஒப்பனை செய்தல் (பிங்.); to adorn, beautify, decorate. 5. செப்பமிடுதல்; to polish, perfect, finish, as a gem. *"மண்ணுறு மணியின்" (புறநா.147).*

[முள் → (மள்) → மண் → மண்ணு (மு.தா.290).]

மண்ணுக்கிரையாய்ப்போ–தல் *mannu-k-kiraiyāi-pō-,* 8 செ.கு.வி.(v.i.) சாதல், நீங்குதல்; death.

[மண்ணுக்கு + இரையாய்ப்போ–.]

மண்ணுக்குடையவன் *mannu-k-kudaiyavan,* பெ.(n.) 1. நிலவுரிமைக்காரன் (இ.வ.); proprieter of land, land lord. 2. அரசன் (வின்.); king. 3. குயவர்; potter.

[மண் + கு + உடையவன்.]

மண்ணுக்குப்போடு[1]–தல் *mannukku-p-pōdu-,* 19 செ.குன்றாவி.(v.t.) கடுஞ் சிறையிலிடுதல்; to award rigorous imprisonment.

[மண் + கு + போடு–.]

மண்ணுக்குப்போடு[2]–தல் *mannukku-p-pōdu-,* 19 செ.குன்றாவி.(v.t.) நன்றி கெட்டவனுக்கு உதவுதல்; to do a great favour to one who proves ungrateful.

[மண் + கு + போடு–.]

மண்ணுடையாள் *mannudaiyāl,* பெ.(n.) புல்லுருவி; a parasitic plant.

மண்ணுடையான் *mannudaiyān,* பெ.(n.) 1. வேளார், குயவர்; potter. 2. அரசர்; king.

மண்ணுண்ணி *man-n-unni,* பெ.(n.) 1. ஒரு வகைப் பாம்பு; a kind of snake. 2. மந்தன்; a dull man. 3. மண்புழு; earth worm.

மண்ணுண்(ணு)–தல் *man-n-un-,* 4 செ.கு.வி. (v.i.) தோற்று விழுதல்; to be thrown down defeated. *"எதிரிகள் மண்ணுண்ணும் படியான திவ்யாயுதங்களைத் தரித்திருக்கிற நீ" (ஈடு.7, 2, 6).*

[மண் + உண் – மண்ணுண்(ணு)–.]

மண்ணுணி *man-n-uni,* பெ.(n.) 1. மண்ணுளிப் பாம்பு; a kind of snake. 2. மண்ணில் உண்டாகும் புழு வகை (வின்.); earthworm. 3. திருமால்; *Tirumāl* as devouring the earth. *"மலர் சிலம்படியை மண்ணுணி போய்ச் சந்தியாதயர" (சிவப். பிரபந். சோணசைல.83).* 4. ஒன்றுக்கு முதவாதவன் (வின்.); mean, worthless person, as eating dirt.

[மண் + உணி.]

மண்ணுதலைவிடக்கல் *mannutalai-viḍakkal*, பெ.(n.) அஞ்சனக்கல் பார்க்க; see *añcanakkal* (சா.அக.).

மண்ணுநீர் *mannu-nīr*, பெ.(n.) 1. மஞ்சன நீர்; water for bathing. *"மண்ணுநீர் மருளவாட்டி" (சீவக.2326).* 2. மண்ணீர்; water for washing.

[மண்ணு + நீர்.]

மண்ணுப்பு[1] *mannuppu*, பெ.(n.) துரிசை வெளுக்கச் செய்யுமோர் உப்பு; a salt that classifies copper sulphate (சா.அக.).

[மண் + உப்பு.]

மண்ணுப்பு[2] *mannuppu*, பெ.(n.) உப்பு வகை; potash.

மண்ணுப்பெய்-தல் *mannu-p-pey-*, 4 செ. குன்றாவி.(v.t.) குளிப்பாட்டுதல்; to bathe, wash. *"மண்ணு நீராலழகனை மண்ணு பெய்து" (சீவக.1345).*

[மண்ணு + பெய்-.]

மண்ணுமங்கலம் *mannu-mangalam*, பெ.(n.) 1. அரசன் முடிபுனைந்த காலந் தொடங்கி யாண்டுதோறும் முடிபுனைந்து நன்னீராடுதலைக் கூறும் புறத்துறை (தொல். பொருள்.91); theme describing the ceremonial bath of a king on the day of his coronation and on the successive anniversaries of that day. 2. மாற்றரசனது மதிலையழித்த அரசன் மங்கலமாக நன்னீராடுதலைக் கூறும் புறத்துறை (தொல். பொருள்.91); theme describing the purificatory bath of a victorious king on the destruction of a hostile king. 3. தோல்வி கண்ட வேந்தனான பகைவன் பெயரானே, அவன் முடி புனைந்து வென்ற வேந்தன் நன்னீராடுதலைக் கூறும் புறத்துறை; theme describing a ceremonial bath of a conquerer, when he assumes the crown and title of the vaniquished enemy. *"குடுமி கொண்ட மண்ணுமங்கலமும்" (தொல்.பொருள்.68).*

[மண்ணு + மங்கலம்.]

மண்ணுருவி *mannuruvi*, பெ.(n.) குழித்தைலம் (சங்.அக.); a medicinal oil.

[மண் + உருவி.]

மண்ணுலகு *man-n-ulagu*, பெ.(n.) நிலவுருண்டை (சூடா.); the earth.

[மண் + உலகு.]

மண்ணுள்ளார் *man-n-uḷḷār*, பெ.(n.) மக்கள் (வின்.); the human beings.

[மண் + உள்ளார்.]

மண்ணுளி *mannuḷi*, பெ.(n.) மண்ணுளிப் பாம்பு பார்க்க; see *mannuḷi-p-pāmbu.*

[மண்ணுணி→மண்ணுளி.]

மண்ணுளிக்காரம் *mannuḷi-k-kāram*, பெ.(n.) அரிதாரம் (சங்.அக.); yellow orpiment.

[மண்ணுளி + காரம்.]

மண்ணுளிப்பாம்பு *mannuḷi-p-pāmbu*, பெ.(n.) 1. பாம்பு வகை; a kind of snake. 2. மண்ணில் உண்டாகும் புழு வகை (வின்.); earth worm.

[மண் + உணி + பாம்பு - மண்ணுணிப்பாம்பு →மண்ணுளிப்பாம்பு.]

மண்ணுளியன் *mannuliyan,* பெ.(n.) மண்ணுளிப்பாம்பு பார்க்க (நாமதீப.257); see *mannuli-p-pāmbu.*

க. மண்ணுளிக.

[மண் + உளியன்.]

மண்ணுளுவை[1] *mannuluvai,* பெ.(n.) சேற்றில் புதைந்து கொள்ளும் நன்னீர் மீன் வகை; a fresh water fish which hides in the mud.

[மண் + உளுவை.]



மண்ணுளுவை[2] *mannuluvai,* பெ.(n.) ஏறக்குறைய 7 அடி வளர்வதும் மங்கற் சிவப்பு நிறமுள்ளதுமான கடல்மீன் வகை; mudskate, dull brown, attaining nearly 7 feet in length.

[மண் + உளுவை.]

மண்ணுறு-த்தல் *mannuru-,*4 செ.குன்றாவி. (v.t.) 1. கழுவுதல் (திருமுரு.25, உரை); to wash, cleanse, to polish, as a gem. 2. ஒப்பனை செய்தல்; to adorn, beautify, decorate. *"மகரப் பகுவாய் தாழ மண்ணுறுத்து" (திருமுரு.25).* 3. மஞ்சன மாட்டுதல்; to bathe, as an idol. *"வார்க்கோல மாலை முலையார் மண்ணுறுப்ப வாடி" (சீவக.2352).*

[மண் + உறு-.]

மண்ணெடு-த்தல் *man-n-uedu-,*4செ.கு.வி. (v.i.) 1. குழியினின்று மண்ணை நீக்குதல்; to remove earth, as from a pit. 2. மண்ணைப் பறித்துக் கிளப்புதல் (வின்.); to dig up earth, as rats, white ants etc. 3. கோட்டுமண் கொள்ளுதல் (வின்.); to toss up earth, as cows with their horns. 4. வயலை வெட்டித் திருத்துதல் (வின்.); to lower the level of a field by removing earth. 5. மட்கலம் செய்வதற்கான வண்டல் அல்லது களி மண்ணை ஏரியிலிருந்தோ வயலிலிருந்தோ வெட்டி எடுத்து மேட்டுப் பகுதியில் குவித்து வைத்தல்; to remove silt or clay for making pots from tank beds or paddy fields and stack at uptands.

[மண் + எடு-.]

மண்ணெண்ணெய் *man-n-enney,* பெ.(n.) மண்ணெய் பார்க்க; see *manney.*

[மண் + எண்ணெய் (எள் + நெய்).]

மண்ணெய் *man-ney,* பெ.(n.) நிலத்தடியிலிருந்து எடுத்து தூய்மை செய்யப்பட்டு, எரிபொருளாய்ப் பயன்படும் எண்ணெய் வகை; kerosene oil, petroleum, naptha, a rock oil.

[மண் + நெய்.]

முதன்முதலாக எள்ளிலிருந்து எடுக்கப்படும் நெய் 'எண்ணெய்' என்று வழங்கப்பட்டு அதன்பின் 'எண்ணெய்' என்பதே அனைத்திலிருந்தும் எடுக்கப்படும் நெய்க்கும் பொதுப்பெயரானது.

கடலை + நெய் (எண்ணெய்) = கடலையெண்ணெய்.

மண்ணேறிவிடு-தல் *maṇ-ṇ-ēṟi-viḍu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. நீர் கெட்டுப்போதல்; to become foul as water. 2. புண் அழுக்கடைதல்; to become dirty as a sore. 3. வண்டல் மண் படிதல்; to silt, as in a river.

[மண் + ஏறி + விடு-.]

மண்ணேறு-தல் *maṇṇēṟu-,* 4 செ.கு.வி. (v.i.) சுவரில் ஏறுதல்; to scale as a wall. *திருடன் மண்ணேறிக் குதித்து ஓடிவிட்டான் (உ.வ.).*

[மண் + ஏறு-.]

மண்ணை[1] *maṇṇai,* பெ.(n.) 1. கூர்மழுக்கம்; bluntness. *"மண்ணை வெண்கோட்டுச் சிறுகண் யானை" (அகநா.24).* 2. மூடன் (சூடா.); ignorant, stupid or dull person. *"இம்மணியை நின்மணியொடு கலக்கும் மண்ணை தானுளனோ" (மேருமந்.303).* 3. இளமை (பிங்.); juvenility, youth. *"மண்ணை நல்லான்" (ஞானா.34, 9).* 4. காலின் கெண்டைச் சதை (நாஞ்.); calf of the leg. 5. பேய் (சூடா.); devil, hobgoblin. *"செறிந்தன கழுகுடன் மண்ணை" (கந்தபு. சிங்கமு.85).* 6. கொடிவகை (மலை.); a kind of creeper.

[மொண்ணை →மண்ணை.]

மண்ணை[2] *maṇṇai,* பெ.(n.) 1. வாலுளுவை; a drug plant. 2. வெங்காயம்; onion (சா.அக.).

மண்ணைக்கட்டி[1] *maṇṇai-k-kaṭṭi,* பெ.(n.) அதிங்கு எனும் பயிரி; plant.

[மண்ணை + கட்டி.]

மண்ணைக்கட்டி[2] *maṇṇai-k-kaṭṭi,* பெ.(n.) தொண்டைப்புண் வகை; inflammation of toncils.

[மண்ணை + கட்டி.]

மண்ணைக்கரையேறுதல் *maṇṇai-k-karai-ERudal,* பெ.(n.) காலின் கெண்டைச் சதை மேலேறுகை (நாஞ்.); spasmodic and involentary movement in the calf of the leg.

[மண்ணை + கரை + ஏறுதல்.]

மண்ணைநாங்கு *maṇṇai-nāṅgu,* பெ.(n.) சிறுநாகப் பூ வகை; narrow leaved ceylon iron wood.

[மண்ணை + நாங்கு.]

மண்ணைப்பூ *maṇṇai-p-pū,* பெ.(n.) வெங்காயப் பூ; the flower of onion.

[மண்ணை + பூ.]

மண்ணொட்டர் *maṇṇoṭṭar,* பெ.(n.) மண் வேலை செய்வோர் (வின்.); men doing earthwork, well diggers, wall builders.

[மண் + ஒட்டர்.]

தமிழ் நாட்டில் வாழும் உழைப்பிற்கு அஞ்சா இனம். கிணறு தோண்டுதல், கல் உடைத்தல், வாய்க்கால் வெட்டுதல் போன்ற எல்லா வேலைகளிலும், இந்தியா முழுவதும் ஈடுபட்டுள்ளனர்.

மண்ணொட்டி *maṇṇoṭṭi,* பெ.(n.) ஒருவகை வெள்ளை நஞ்சு; white arsenic in its native state.

[மண் + ஒட்டி.]

மண்ணோகதம் *maṇṇōkatam,* பெ.(n.) ஒரு தலைப்பூடு; garlic with only one tooth (சா.அக.).

மண்ணோடு *maṉṉōḍu,* பெ.(n.) ஒருவகை ஓடு; a kind of tiles.

மண்ணோர் *maṉṉōr,* பெ.(n.) மக்கள்; human beings as inhabitants of earth. *"மண்ணோர் மருந்து" (திருவாச.11, 19).*

[மண் →மண்ணோர்.]

மண்தாங்கி *maṇtāṅgi,* பெ.(n.) மண்தாங்கிப் பலகை பார்க்க; see *maṇ-tāṅgi-p-palagai.*

[மண் + தாங்கி.]

மண்தாங்கிப்பலகை *maṇ-tāṅgi-p-palagai,* பெ.(n.) கதவுநிலைக்கு மேலுள்ள சுவரைத் தாங்கும் பலகை; lintel.

[மண் + தாங்கி + பலகை.]



மண்திண்ணிச்சத்து *maṇ-tiṇṇi-c-cattu,* பெ.(n.) செவ்வட்டை; centipede (சா.அக.).

[மண் + திண்ணி + சத்து.]

மண்தைலம் *maṇ-tailam,* பெ.(n.) பூசு நெய் வகை, நெய்மம் (வின்.); bitumen.

*[மண் + **Skt.** தைலம்.]*

மண்தோண்டி *maṇ-tōṇḍi,* பெ.(n.) மண் தோண்டி எடுக்கும் பொறி; dredger.

மறுவ. மண்வாரி, மண்வெட்டி.

[மண் + தோண்டி.]

மண்நாகம் *maṇ-nāgam,* பெ.(n.) மண்ணுளிப் பாம்பு பார்க்க; see *maṇṇuḷi-p-pāmbu.*

[மண் + நாகம்.]

மண்பவளம் *maṇ-pavaḷam,* பெ.(n.) பவளம் போன்று மண்ணாற் செய்த போலிகை (வின்.); immitation coral, made of clay.

[மண் + பவளம்.]

மண்பாக்கு *maṇ-pākku,* பெ.(n.) ஒருவகைத் தரங்குறைந்த பாக்கு; an inferior kind of areca-nut.

[மண் + பாக்கு.]

மண்பாச்சி *maṇ-pācci,* பெ.(n.) மண்ணீரல்; spleen.

[மண் + பாச்சி.]

மண்பாடு *maṇ-pāḍu,* பெ.(n.) நிலத்தினியல்பு; nature of the soil or land. *"திருவயோத்யையில் மண்பாடுதானே ராமபக்தியைப் பிறப்பிக்குமா போலே" (ஈடு.4, 9, 11).*

[மண் + பாடு.]

மண்பாண்டம் *maṇ-pāṇḍam,* பெ.(n.) மட்கலம் பார்க்க; see *maṭ-kalam.*

[மண் + பாண்டம்.]

மண்பார் *maṇ-pār,* பெ.(n.) கிணறு வெட்டுகையில் பாறையின் கீழ்க் காணப்படும்

கெட்டிமண் (வின்.); stratum of hard clay below the rocky stratum, in well digging.

[மண் + பார்.]

மண்பிடி *man-pidi*, பெ.(n.) களி மண்ணிலுள்ள பசை (யாழ்.அக.); the sticky nature of clay.

[மண் + பிடி.]

மண்புரை *man-purai*, பெ.(n.) மண் பொதிந்த வீடு; mud hut. *"மண்புரை பெருகிய மரமுளி கானம்" (ஐங்குறு.319).*

[மண் + புரை.]

மண்புளி-த்தல் *man-puli-*, 4 செ.கு.வி.(v.i.) 1. மண் குழைந்து நல்ல சாந்தாதல்; to ferment and become well-seasoned and sticky, as mortar mixed and pounded on the preceding day. 2. நிலம் மழையால் இளகி மென்மையாதல்; to become soft by continued rain, as land.

[மண் + புளி-.]

மண்புழுங்கு-தல் *man-pulungu-*, 5 செ.கு.வி. (v.i.) முதல் நாள் உரிய அளவு மணலோடு கலந்து, நன்கு மதித்து வைத்த மண் குயவனார் திருவையில் எளிதில் வனையும் வண்ணம் மென்மையாதல்; clay mixed with proper proportion of sand, the previous day, to ferment and become seasoned, so as to be easily thrown on the wheel of the potter.

[மண் + புழுங்கு-.]

மண்பூச்சு *man-pūccu*, பெ.(n.) சுவர் முதலியவற்றை மண் சாந்தால் தீற்றுகை; plastering with mud.

[மண் + பூச்சு.]

மண்பூசு-தல் *man-pūsu-*, 5 செ.கு.வி.(v.i.) சுவர் முதலியவற்றிற்கு மண் சாந்து தீற்றுதல்; to plaster with mud.

[மண் + பூசு-.]

மண்பொதுத்தந்தை *man-podu-t-tandai*, பெ.(n.) படைப்புக் கடவுள், நான்முகன் (பிங்.); *Nanmugan*, as the common father of the world.

[மண் + பொது + தந்தை.]

மண்பொறி *man-pori*, பெ.(n.) சுடுமண் இலச்சினை; terracotta seal. *"கூந்தன் மண்பொறி" (சிலப்.13: 84).*

[மண் + பொறி.]

மண்போடு-தல் *man-pōdu-*, 20 செ.கு.வி. 1. கேடுசெய்தல் (வின்.); to ruin a person, as throwing mud into his month. 2. வைது, மண்ணை வாரித் தூற்றுதல்; to curse one, throwing up mud in the air.

[மண் + போடு-.]

மண்மக்கள் *man-makkal*, பெ.(n.) வேளாளர்; *velālars*, as the childen of the earth.

[மண் + மக்கள்.]

மண்மகள் *man-magal*, பெ.(n.) நிலமடந்தை; goddess of earth. *"திருமகளு மண்மகளு மாய்மகளுஞ் சேர்ந்தால்" (திவ்.இயற்.1, 42).*

[மண் + மகள்.]

மண்மகள்புதல்வர் *man-magal-pudalvar*, பெ.(n.) மண்மக்கள் பார்க்க; see *man-makkal*

[மண்மகள் + புதல்வர்.]

மண்மகன் *maṇ-magaṉ,* பெ.(n.) குயவர்; potter. *"நிமித்தக் காரண சிவன் மண்மகன் போல நின்று" (சி.சி.1, 18, ஞானப்.)*

மறுவ. மண்மான், மண்ணீட்டாளர், மண்ணுடையார், வேளார்.

[மண் + மகன்.]

மண்மடக்கு *maṇ-maḍakku,* பெ.(n.) மண்ணால் செய்த (மடக்கு) ஏனம், பானை மூடி; earthern sauce or dish. *'மண்மடக்கில் வைத்து மேல் மடக்கால் மூடு' (உ.வ.).*

[மண் + மடக்கு.]

மண்மடந்தை *maṇ-maḍantai,* பெ.(n.) 1. மண்மகள் பார்க்க; see *maṇmagaḷ. "திருமடந்தை, மண்மடந்தை யிரு பாலுந் திகழ" (திவ்.பெரியதி.3, 10, 1).* 2. பூவுலகத்துப் பெண்; woman of the earth.

[மண் + மடந்தை.]

மண்மலி *maṇ-mali,* பெ.(n.) மருக்கொழுந்து (மலை.); southern - wood.

[மண் + மலி.]

மண்மழை *maṇ-maḻai,* பெ.(n.) மண்மாரி பார்க்க; see *maṇmāri. "மாமுகிற் கணம்...... மண்மழையைத் தீ முகங்களா லிறைத்தன" (செவ்வந்திப்பு. உறையூ. 56).*

[மண் + மழை.]

மண்மறைவு *maṇ-maṟaivu,* பெ.(n.) மண் மறைவில் புடம் போடல்; burrying under the earth or calcifying in sand bath (சா.அக.).

[மண் + மறைவு.]

மண்மாரி *maṇ-māri,* பெ.(n.) 1. மண்ணாகப் பெய்யும் மழை; shower of dust, dust storm. *"மண்மாரி பெய்கவிந்த வான்" (தனிப்பா.i, 64, 127).* 2. வறுமை (இ.வ.); adversity.

[மண் + மாரி.]

மண்மாலை *maṇ-mālai,* பெ.(n.) செம்மண்; red earth (சா.அக.).

[மண் + மாலை.]

மண்மூசை *maṇ-mūšai,* பெ.(n.) மருந்து செய்யவும் மாழைகளை யுருக்கவும் உதவும் மண்ணாலான குகை (கொப்பு) (கொ.வ.); earthern crucible for calcinating medicines or melting metals.

[மண் + மூசை.]

மண்மூடி *maṇ-mūḍi,* பெ.(n.) மண்ணாலான பெரிய மூடி; a large earther dish.

[மண் + மூடி.]

மண்மேடிடு-தல் *maṇ-mēḍiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) ஆறு, வயல் முதலியன மணலால் தூர்ந்து மேடாய்ப் போதல்; to silt, as a river, field, etc.

[மண்மேடு + இடு-.]

மண்மேடு *maṇ-mēḍu,* பெ.(n.) மண்ணாலான குன்று; earthern mound.

[மண் + மேடு.]

மண்வட்டகை *maṇ-vaṭṭagai,* பெ.(n.) மண் ஏனம்; earthern ware.

[மண் + வட்டகை.]

மண்வருசம் *maṉ-varušam,* பெ.(n.) மண்மாரி பார்க்க; see *maṉ-māri.* *"உறையூரிற் கல்வருஷமும், மண் வருஷமும் பெய்வித்து" (தக்கயாகப்.205, உரை).*

[மண் + Skt.வருசம்.]

மண்வாரி *maṉ-vāri* பெ.(n.) மண்ணோடு வீசும் பெருங்காற்று (வின்.); violent wind drifting the dust.

[மண் + வாரி.]

மண்வினைமாக்கள் *maṉ-viṉai-mākkaḷ,* பெ.(n.) குயவர்; potters as workers in clay. *"மண்வினை மாக்க டம்வினை முடிமார்" (ஞானா.41, 11).*

[மண் + வினை + மாக்கள்.]

மண்வெட்டி *maṉ-veṭṭi,* பெ.(n.) மண் தோண்டுங் கருவி வகை (இ.வ.); spade, hoe, especially with short handle.

[மண் + வெட்டி.]



மண்வெட்டிக்காரர் *maṉ-veṭṭi-k-kārar,* பெ.(n.) கரூர் வட்டாரத்தில் உழவுத் தொழில் செய்யும் இனத்தார் (இ.வ.); a community of agricultural labourers, as seen always with spades.

[மண் + வெட்டி + காரர்.]

சாதியைச் சுட்டாமல், தொழில் சார்ந்த அடையாளத்தோடு சுட்டும் மதிப்புச் சொல்.

மண்வெட்டிப்பல் *maṉ-veṭṭi-p-pal,* பெ.(n.) மண்வெட்டி போல அகன்று, தட்டையாய் உள்ள பல் (இ.வ.); broad and incisor tooth, a being like a spade.

[மண்வெட்டி + பல்.]

மண்வேலை *maṉ-vēlai,* பெ.(n.) மண்ணால் கரை முதலாயின இடுந்தொழில்; earth work excavation for canals, building foundation and embankments.

[மண் + வேலை.]

மண¹–த்தல் *maṇa-,* 3 செ.கு.வி.(v.i.) 1. கலத்தல்; to be united, mingled. *"அறையும் பொறையு மணந்த தலைய" (புறநா.118).* 2. வந்து கூடுதல்; to come together. *"நிரை மணந்த காலையே" (சீவக.418).* 3. நேர்தல்; to happen. *"மருவுற மணந்த நட்பு" (கலித்.46).* 4. பொருந்துதல்; to be fixed, attached. *"மத்தகத் தருவியின் மணந்த வோடையை" (சீவக. 2211).* 5. கமழ்தல்; to emit fragrance. *"மணந்த சோலையும்" (அரிச்.பு.விவாக.98).* 6. விளங்குதல்; to shine. *"தேவர் மருட மணக்குங் கழல் வீரா" (திருப்பு.527).*

[மணம்→மண–த்தல்.]

மண²–த்தல் *maṇa-,* 12 செ.குன்றாவி.(v.t.) 1. திருமணம் புரிதல்; to wed. *"மணந்தார் பிரிவுள்ளி" (நாலடி, 397).* 2. புணர்தல் (பிங்.); to copulate with. *"மாசில்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுள்" (கலித்.24).* 3. கூடியிருத்தல்; to live in company with.

"மணக்குங்கான் மலரன்ன தகையவாய்" (கலித்.25). 4. அணைத்தல்; to embrace. *"திருந்திழை மென்றோள் மணந்தவன்" (கலித்.).*

[மணம் →மண-.]

மணக்கத்தம்புல் *manakkattam-pul,* பெ.(n.) ஒருவகைப் புல்; a kind of grass (சா.அக.).

[மணக்கத்தம் + புல்.]

மணக்கத்தை *manakkattai,* பெ.(n.) நெல் வகை; a kind of paddy.

மணக்கத்தையரிசி *manakkattai-y-ariši,* பெ.(n.) ஒரு வகை சிவப்பரிசி; a kind of red rice for pudding and cakes.

[மணக்கத்தை + அரிசி.]

மணக்காப்புச்சீமந்தம் *manakkāppu-c-cīmandam,* பெ.(n.) மகளிரின் முதற் கருப்பத்தில் வளைகாப்புடன் சேர்த்துச் செய்யும் சீமந்தச் சடங்கு (இ.வ.); the celebration of a woman during the period of her first pregnancy called *cīmandam*, along with bangle wearing ceremony.

[மணம் + காப்பு + சீமந்தம்.]

மணக்கால் *manakkāl,* பெ.(n.) கலியாணப் பந்தலிடுவதற்கு முதலில் நடும் முழுத்தக் கால் (இ.வ.); first post set up in an auspicious hour for a marriage pavilion.

[மணம் + கால்.]

மணக்கால்நம்பி *manakkāl-nambi,* பெ.(n.) மாலியப் பெரியார்களுள் ஒருவர் (குருபரம்.); a *Vaishnava Acharya.*

[மணக்கால் + நம்பி.]

மணக்கிழத்தி *mana-k-kilatti,* பெ.(n.) கறுப்பறுகு; a black variety of dub grass (சா.அக.).

[மணம்[1] + கிழத்தி.]

மணக்குடவர் *mana-k-kudavar,* பெ.(n.) திருக்குறளாசிரியர்களுள் ஒருவர்; a commentator on the *kural.* *"தருமர் மணக்குடவர்...... வள்ளுவர் நூற் கெல்லையுரை செய்தாரிவர்" (பெருந்தொ. 1538).*

[மணம் + குடவர்.]

மணக்குடையர் *mana-k-kudayar,* பெ.(n.) மணக்குடவர் பார்க்க (தொண்டை.சத.40, மேற்கோள்.); see *mana-k-kudavar.*

[மணக்குடவர்→மணக்குடையர்.]

மணக்குழம்பு *mana-k-kulambu,* பெ.(n.) வயிற்றின் மீதும், மார்பின் மீதும் பூசிக் கொள்ளும் சந்தனங் கலந்த ஒருவகை மணக் குழம்பு; a sandal wood paste with other drugs is smeared over the abdomen, and chest.

[மணம் + குழம்பு.]

மணக்கோல் *mana-k-kōl,* பெ.(n.) மலரம்பு; flower arrow of *kāman.* *"மணக்கோ றுரந்த..... மதனை" (கல்லா. 31, 8).*

[மணம் + கோல்.]

மணக்கோலம்[1] *mana-k-kōlam,* பெ.(n.) 1. திருமணத்துக்குரிய ஒப்பனை; wedding dress or costume. *"மணக்கோலமதே பிணக்கோலமதாம் பிறவியது" (தேவா. 934, 7).* 2. திருமண ஊர்கோலம் (இ.வ.); marriage procession. 3. மணச்சடங்கின்

முன்னிகழும் மணமகனது ஊர்கோலம் (வின்.); procession of the bridgroom just before his marriage.

[மணம் + கோலம்.]

மணக்கோலம்[2] *maṇa-k-kōlam,* பெ.(n.) வாழை; plantain (சா.அக.).

மணக்கோலமூலி *maṇa-k-kōla-mūli,* பெ.(n.) 1. காட்டு முருங்கை; wild mornika tree. 2. ஒருவகை நில ஆவாரை; senna leaved shrub (சா.அக.).

மணக்கோவை *maṇa-k-kōvai,* பெ.(n.) ஒருவகைக் கோவை; used for curry *Kovai* fruit tender (சா.அக.).

மணங்கட்டு-தல் *maṇaṅ-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) நறுமண மூட்டுதல்; to fumigate with odours, perfume.

[மணம் + கட்டு-.]

மணங்கல் *maṇaṅgal,* பெ.(n.) 1. பெரும்பானை (அக.நி.); big pot. 2. யானை; elephant.

மணங்கிளர்-தல் *maṇaṅ-kiḷar-,* 11 செ.கு.வி. (v.i.) மணந்தட்டு-, பார்க்க; see *maṇan-taṭṭu.*

மணங்கு[1] *maṇaṅgu,* பெ.(n.) ஆட்டுக்குட்டி (திவா.); lamp.

மணங்கு[2] *maṇaṅgu,* பெ.(n.) இருவாட்சி (மலை.); tuscan jasmine.

மணங்கு[3] *maṇaṅgu,* பெ.(n.) நிறைவகை; a standard weight, 25 lbs.

மணங்கு[4] *maṇaṅgu,* பெ.(n.) மடங்கு[2], 1 பார்க்க; see *maḍaṅgu.*

[மடங்கு→மணங்கு.]

மணங்குலை-தல் *maṇaṅ-kulai-,* 2 செ.கு.வி. (v.i.) நிலைகுலைதல்; to be ruined in circumstances. *"மக்கி மணங் குலைந்து" (இராமநா.யுத்.81).*

மணங்கொம்பு *maṇaṅkombu,* பெ.(n.) மணுகுப்பூ பார்க்க; see *maṇugu-p-pū.*

மணஞ்சேரி *maṇañjēri,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரிக்கு வடகரையில் அமைந்துள்ள ஊர்; a town on the northern banks of cauvery in Thanjavur Dt. *"மயிலொரு மல்கிய சோலை மணஞ்சேரி" (பெரியபு.152-1).*

[மணம் + சேரி. மணம் = திருமணம்.]

மணத்தக்கள்ளி *maṇatta-k-kaḷḷi,* பெ.(n.) இலைக்கள்ளி; leafy milk spurge (சா.அக.).

மணத்தக்காளி *maṇa-t-takkāḷi,* பெ.(n.) மணித்தக்காளி பார்க்க; see *maṇi-t-takkāḷi.*

[மணித்தக்காளி→மணத்தக்காளி (கொ.வ.).]

மணத்தூண் *maṇa-t-tūṇ,* பெ.(n.) திருவரங்கத்தில் அரங்கநாதர் கோயிலுட் புறத்திலுள்ள இரட்டைத் தூண்கள் (திவ். பெருமாள், 1, 2); the two pillars in the court of *Thiruvaraṅgam* temple.

மணந்தட்டு-தல் *maṇan-daṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) நறுமணம் வீசுதல் (யாழ்.அக.); to be fragrant; to spread sweet smell.

[மணம் + தட்டு-. மணம் = நறுமணம்.]

மணந்தவன் *maṇandavaṉ,* பெ.(n.) கணவன்; husband. *"மணந்தவர் தேர்........ தோன்றும்" (திருக்கோ.326).*

[மணம்→மணந்தவன். மணம் = திருமணம்.]

மணப்பந்தல் *maṇa-p-pandal,* பெ.(n.) திருமணத்தில் இடப்படும் ஒப்பனைப் பந்தல் (வின்.); marriage pavilion erected and decorated for the occasion.

[மணம் + பந்தல். மணம் = திருமணம்.]

மணப்பறை *maṇa-p-paṟai,* பெ.(n.) திருமண முழவு; marriage drum. *"மன்றங் கறங்க மணப்பறை யாயின" (நாலடி, 23).*

[மணம் + பறை. மணம் = திருமணம்.]

மணப்பாகு[1] *maṇa-p-pāgu,* பெ.(n.) முறுகாத வெல்லப்பாகு; meltless treacle (சா.அக.). *'முறுகிய வெல்லப்பாகிற்கு எதிரானது'.*

மணப்பாகு[2] *maṇa-p-pāgu,* பெ.(n.) பாகு வகை (பதார்த்த.182); a kind of treacle.

மணப்பாரி *maṇa-p-pāri,* பெ.(n.) ஓர் அம்மை; a kind of measles (சா.அக.).

மணப்பிரண்டை *maṇa-p-piraṇḍai,* பெ.(n.) நறுமணப் பிரண்டை; a kind of fragrant plant (சா.அக.).

[மணம் + பிரண்டை.]

மணப்பு *maṇappu,* பெ.(n.) 1. நறுமணம்; scent, odour, perfume. *"முழுவதும் மணப்புள்ள சந்தனநெய்" (தைலவ.பாயி.16, உரை).* 2. புணர்ச்சி (வின்.); copulation. 3. சாரம் (யாழ்.அக.); essence. 4. செல்வமுடைமை (யாழ்.அக.); possession of extensive properties.

[மணம் → மணப்பு.]

மணப்பூச்சு *maṇa-p-pūccu,* பெ.(n.) உடம்பிற் பூசும் சந்தனக் குழம்பு முதலியன; fragrant paste of camphor, sandal, etc., for the person. *"கார்கால மணப்பூச்சின் குணம்" (பதார்த்த.1432).*

[மணம் + பூச்சு. மணம் = நறுமணம்.]

மணப்பொடி *maṇa-p-poḍi,* பெ.(n.) நறுந்துகள்; scented powder.

[மணம் + பொடி. மணம் = நறுமணம்.]

மணப்பொருத்தம் *maṇa-p-poruttam,* பெ.(n.) 1. திருமணப் பொருத்தம்; agreement in the horoscopes of a bridgroom and a bride with reference to their fitness for marriage. 2. திருமண உடன்படிக்கை (வின்.); marriage contract, written agreement between parties marrying or giving their children in marriage.

[மணம் + பொருத்தம். மணம் = திருமணம்.]

மணம் *maṇam,* பெ.(n.) 1. கூடுகை; union, as of lovers. *"ஏதிலார் மணந்தனில் மனம்போக்கும்" (காசிக.மகளிர்.10).* 2. எண் வகையான திருமணம் (பிங்.); marriage, of which there are eight kinds. 3. நறுநாற்றம்; fragrance. *"மணநாறு படப்பை" (பெரும்பாண்.354).* 4. நறுமணப் பொருள்; fragrant substance. *"மணங்கமழ் நாற்றம்" (மதுரைக்.447).* 5. மதிப்பு; respectability, dignity. *பணமுள்ளவனுக்கே மணமுண்டு (பழ.).* 6. நன்னிலை; prosperity, affuence. *"மக்கி மணங்குலைந்து" (இராமநா.உயுத்.81).*

தெ. மநுவு; க. மணம்.

[முல் (பொருந்தற் கருத்து வேர்) → முள் → மள் → மண் → மண. மணத்தல் = பொருந்துதல். மண → மணம் (வே.க. 4:63).]

மணம்பிடி–த்தல் *manam-pidi-*, 4 செ. குன்றாவி.(v.t.) 1. மோப்பம் பிடித்தல்; to perceive by smell or scent, as dogs. 2. நறுமணம் முதலியவற்றால் இழுக்கப்படுதல் (யாழ்ப்.); to be attracted by dainties, as children; to be attracted by smell, as insects. 3. முடைநாற்றம் வீசுதல் (வின்.); to stink.

[மணம் + பிடி. மணம் = நறுமணம், முடைநாற்றம்.]

மணம்புரி–தல் *manam-puri-*, 2 செ.குன்றாவி. (v.t.) திருமணம் செய்தல்; to marry.

[மணம் + புரி–. மணம் = திருமணம்.]

மணமக்கள் *mana-makkal*, பெ.(n.) புதிதாய்த் திருமணம் செய்து கொள்பவர்கள்; newly married couples, newly-weds.

[மணம் + மக்கள்.]

கணவன் மனைவியுமாக ஒருவருக்கொருவர் வாழ்க்கைத் துணைவராய் இல்லறம் தொடங்கும் இருவரும், திருமணத்தன்று மணமக்கள் எனப்படுவர். அவ்விருவரையும் பிரித்துக் கூறுங்கால், மணமகன் மணமகள் என்றும், மணவாளன் மணவாட்டி என்றும், பெண் மாப்பிள்ளை (மணவாளப்பிள்ளை) என்றும், பெண் பிள்ளை என்றும், கூறுவது வழக்கம். மணமகனைப் பிள்ளை என்பது வடார்க்காட்டு வழக்கு (த.தி. முன்.vi).

மணமகள் *mana-magal*, பெ.(n.) திருமணப் பெண்; bride.

[மணம் + மகள்.]

மணமகன் *mana-magan*, பெ.(n.) 1. திருமண மாப்பிள்ளை; bridegroom. *"மணமகன் போல நின்றான்" (சீவக.2185).* 2. கணவன் (சூடா.); husband. *"மணமகனே பிணமகனாய்" (திருவிளை. பழியஞ்.40).*

[மணம் + மகன்.]

மணமண்டபம் *mana-mandabam*, பெ.(n.) திருமண மண்டபம் (யாழ்.அக.); marriage pavilion.

[மணம் + மண்டபம்.]

மணமலி *mana-mali*, பெ.(n.) மருக்கொழுந்து (மலை.); southern wood.

[மணம் + மலி.]

மணமாலை *mana-mālai*, பெ.(n.) திருமணத்தில் மணமக்கள் சூடும் பூமாலை; garland for the bride and bridegroom at a wedding. *"மணமாலை அந்தரி சூட்ட" (திவ்.நாய்ச். 6, 3).*

[மணம் + மாலை.]

மணமுரசு *mana-murašu*, பெ.(n.) விழா முரசு (சிலப்.5:141); drum used at festivals and marriages.

[மணம் + முரசு.]

மணமுழவு *mana-mulavu*, பெ.(n.) மருதநிலப் பறை (தொல்.பொருள்.18, உரை); drum of the agricultural tract.

[மணம் + முழவு.]

மணமேற்குடி *mana-mērrkudi*, பெ.(n.) நின்றசீர் நெடுமாறன் என்ற பாண்டிய மன்னனின் அமைச்சர் குலச்சிறையார் பிறந்த ஊர்; the native place of *kulacciṟayār*, the minister of *Ninrašīr Neḍumāṟan*, the Pandya king. *"குருந்தவிழ் சாரல் மணமேற்குடி மண்குலச் சிறையே" (திருத்தொண்டர்.26).*

மணல் *maṇal,* பெ.(n.) 1. பொடியாயுள்ள பிதிர்மண்; sand; gravel. *"பெருமணலுலகமும்" (தொல். பொருள்.5).* 2. மரகதக் குற்றம் எட்டனுள் ஒன்று (சிலப்.14:184); flaw in emerald, one of eight *maragada-k-kuṟṟam.*

மணல்தரம் *maṇal-taram,* பெ.(n.) மணற்றரை பார்க்க; see *maṇaṟṟarai* (loc.).

மணல்தாரா *maṇal-tārā,* பெ.(n.) மணற்றாரா பார்க்க; see *maṇaṟṟārā* (சா.அக.).

மணல்திட்டு *maṇal-tiṭṭu,* பெ.(n.) கடலுள் காணலாகும் சிறுசிறு திட்டுகள்; a small mount found in sea.

[மணல் + திட்டு.]

மணல்திட்டை *maṇal-tiṭṭai,* பெ.(n.) மணற் குன்று; sand hill; sand bank.

[மணல் + திட்டை.]

மணல்தொட்டி *maṇal-toṭṭi,* பெ.(n.) மருந்தைப் புடம் போடுவதற்காக மணல் நிரப்பிய இரும்புத் தொட்டி; an iron tub full of sand used in the calcination of medicinal powders (சா.அக.).

[மணல் + தொட்டி.]

மணல்மத்திகை *maṇal-mattigai,* பெ.(n.) மணற்குளியல்; sand bath (சா.அக.).

மணல்மறைவுபுடம் *maṇal-maṟaivu-puḍam,* பெ.(n.) புடம் போடுவதற்குரிய மருந்தடங்கிய குப்பியைக் கழுத்தளவு மணலுக்குள் புதைத்து வைத்தல்; to keep the bottle containing medicine to be calcined in slow; cow dung fire concealed in the sand up to the neck (சா.அக.).

[மணல் + மறைவுபுடம்.]

மணல்முள்ளங்கி *maṇal-muḷḷaṅgi,* பெ.(n.) ஆற்றுமுள்ளி பார்க்க; see *āṟṟu-muḷḷi* (சா.அக.).

மணல்மேடு *maṇal-mēḍu,* பெ.(n.) ஆற்றுவாய்ப் பக்கம் மேடாகக் குவிந்திருக்கும் மணல் குவியல்; sand pile near river side.

[மணல் + மேடு.]

மணல்வாரி *maṇal-vāri,* பெ.(n.) 1. மண் தோண்டி பார்க்க (இக்.வ.); see *maṇ-tōṇḍi.* 2. நெல்வகை; a kind of paddy. *"சேரு மணல்வாரி குளவாளை" (பறாளை. பள்ளு. 23).* 3. புல்வகை (யாழ்.அக.); a kind of grass. 4. சின்னம்மை வகை; measles (இ.வ.). 5. மணல்போக்கி பார்க்க; see *maṇal-pōkki.*

[மணல் + வாரி.]

மணல்வாரிச்சடங்கு *maṇal-vāri-c-caḍaṅgu,* பெ.(n.) தொல் தமிழர் திருமணத்தில் குடத்தில் மணலைக் கொட்டி நீர் வார்க்கும் நடப்பு வகை; ceremony of putting sand into a big pot and pouring in water, a custom at the wedding of *Tol-tamilar.*

[மணல்வாரி + சடங்கு.]

மணலக்கம்பம் *maṇala-k-kambam,* பெ.(n.) பால்வீதி மண்டலம் (யாழ்.அக.); the milky way.

மணலடித்தரிசு *maṇalaḍi-t-tarišu,* பெ.(n.) மணல் மேவிப் பாழ்பட்ட நிலம் (இ.வ.); land rendered waste by accumulation of sand.

[மணலடி + தரிசு.]

மணலி[1] *maṇali,* பெ.(n.) சேக்கிழார் நமிநந்தியடிகள் புராணத்தில் சுட்டும் திருவாரூர் வட்டத்தில் திருநெல்லிக்காவல் அருகிலிருந்த ஊர்; a town near *Thirunallikkaval* in *Thiruvarur* Taluk, which is mentioned by *Šēkkiḻar* in *Naminandiaḍigaḷ purāṇam.* *"தேவர் பெருமாள் எழுச்சி திருமணலிக் கொருநாள் எழுந்தருள" (பெரியபு.நமி.22).*

[மணல்→மணலி.]

மணலி[2] *maṇali,* பெ.(n.) கீரைவகை (பதார்த்த. 593); sandgreens, *Gisekia pharnacloides.*

மணலி[3] *maṇali,* பெ.(n.) 1. மருக்கொழுந்து (மலை.); southern wood. 2. நெல்வகை (நாமதீப.351); a kind of paddy. 3. பாம்பு வகை (நிகண்டு); a kind of snake.

மணலிக்கீரை *maṇali-k-kīrai,* பெ.(n.) கீரை வகை; a kind of greens (சா.அக.).

[மணலி + கீரை.]

மணலிக்கோரை *maṇali-k-kōrai,* பெ.(n.) உப்பங்கோரை; a kind of nut grass (சா.அக.).

[மணலி + கோரை.]

மணலிரும்பு *maṇal-irumbu,* பெ.(n.) மணல் கலந்த இரும்பு; iron ore.

[மணல் + இரும்பு.]

மணலுறிஞ்சி *maṇal-uṟiñji,* பெ.(n.) மணலைப் பறித்துப் போக்கும் பள்ளமடை (இ.வ.); under sluice, to draw away sand.

[மணல் + உறிஞ்சி.]

மணலூர் *maṇalūr,* பெ.(n.) மணலூர்புரம் (திருவாலவா.53, 6) பார்க்க; see *maṇalūr-puram.*

மணலூர்புரம் *maṇalūr-puram,* பெ.(n.) பாண்டியரது பழைய தலைநகரம் (பி.வி.2, உரை); an ancient *pāṇḍiya* capital.

மணலேறு *maṇal-ēṟu,* பெ.(n.) முத்துக் குற்றவகை (சிலப்.14:193, உரை); a flaw in pearls.

[மணல் + ஏறு.]

மணலை *maṇalai,* பெ.(n.) மணலைமீன் பார்க்க (வின்.); see *maṇalai-mīṉ.*

[மணலைமீன்→மணலை.]

மணலைமீன் *maṇalai-mīṉ,* பெ.(n.) கல் நவரை என்னும் மீன் வகை (வின்.); a sea fish.

[மணலை + மீன்.]

மணலொத்திடம் *maṇalottiḍam,* பெ.(n.) மணலை வறுத்து ஒத்திடமிடுதல்; the application of hot sand for affected part of the body (சா.அக.).

[மணல் + ஒத்திடம்.]

மணவணி *maṇa-v-aṇi,* பெ.(n.) மணக் கோலம் பார்க்க; see *maṇa-k-kōlam.* *"ஒரு பெருநாளான் மணவணி காண மகிழ்ந்தனர்" (சிலப்.1:42). "மணஅணி அணிந்த மகளிர் ஆங்கே பிணஅணி அணிந்துதம் கொழு நரைத் தழீஇ உடுத்த ஆடை கோடியாக முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்" (உலகநீதி, 56).*

[மணம் + அணி.]

மணவருக்கம் *maṇa-varukkam,* பெ.(n.) நறுமணச் சரக்கு வகை; aromatic substance.

[மணம் + வருக்கம். மணம் = நறுமணம்.]

மணவரைபுடம் *maṇavarai-puḍam,* பெ.(n.) மணற்புடம்; sand bath (சா.அக.).

மணவறை *maṇa-v-aṟai,* பெ.(n.) 1. திருமண மண்டபம்; chamber or dais for the performance of the marriage rites. *"என்னெஞ்ச மணவறை" (குமர.பிர.மீனாட். இரட்.2).* 2. பள்ளியறை; bed-chamber. *"மணவறை யியற்றினாரே" (சீவக.837).*

[மணம் + அறை. மணம் = திருமணம்.]

மணவறைத்தோழன் *maṇavaṟai-t-tōḻaṉ,* பெ.(n.) மாப்பிள்ளைத் தோழன் (வின்.); bridegroom's companion; best man.

[மணவறை +தோழன்.]

மணவன்னம் *maṇa-vaṉṉam,* பெ.(n.) உப்பிலி பார்க்க; see *uppili* (சா.அக.).

மணவாட்டி *maṇavāṭṭi,* பெ.(n.) 1. மணமகள்; bride. 2. மனைவி (பிங்.); wife. *"இவன் மணவாட்டி சேந்தங்குரத்தி" (தெ.க.தொ. 125).*

[மணம் + ஆட்டி. மணம் = திருமணம். ஆட்டி = பெண்பாலீறு. எ.டு. மூதாட்டி, பெருமாட்டி, திருவாட்டி.]

மணவாரி *maṇavāri,* பெ.(n.) பெரு நெல் வகை; a kind of coarse paddy.

மணவாளதாசர் *maṇa-v-āḷa-dāšar,* பெ.(n.) பிள்ளைப் பெருமாளையங்கார்; an author.

மணவாளம் *maṇa-vāḷam,* பெ.(n.) நேர் வாளம்; croton seed (சா.அக.).

மணவாளமாமுனி *maṇa-vāḷa-māmuṉi,* பெ.(n.) 14-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும் உபதேச ரத்தினமாலை முதலிய நூல்கள் இயற்றியவருமான தென்கலை மாலியர்; an *ācārya* of the *teṉkalai śri vaisṇavas,* author of *upadēca-rattiṉa-mālai* and other works, 14th C.

மணவாளன் *maṇa-v-āḷaṉ,* பெ.(n.) 1. மண மகன்; bridegroom. 2. கணவன்; husband. *"மலையான் மணவாளா" (திருவாச.6:40).*

[மணம் + ஆளன்.]

மணவாளன்சோறு *maṇa-v-āḷaṉ-cōṟu,* பெ.(n.) மாமியார் மருமகனுக்குத் திருமணவறையிற் செய்யும் விருந்து; the ceremonial feast in the bridal chamber, given to the bridegroom by the bride's mother.

[மணவாளன் + சோறு.]

மணவாளன்தழுக்கல் *maṇa-v-āḷaṉ-taḻu-k-kal,* பெ.(n.) (கிறித்.) திருமணத்தில் மணமகனையும் மண மகளையும் அவரவர் பெற்றோர்களும் உற்றோர்களும் தனித்தனி தழுவும் சடங்கு (E.T.vi.453); the ceremony in which the bridegroom and the bride are embraced by their respective parents and relations.

மணவாளி *maṇa-v-āḷi,* பெ.(n.) 1. மணமகன்; bridegroom. 2. மணமகள்; bride.

[மணம் + ஆளி.]

மணவிற்கூத்தனானகாலிங்கராயன் *maṇaviṟ-kūttaṉāṉa-kāliṅgarāyaṉ,* பெ.(n.) குலோத்துங்க சோழனின் படைத் தலைவன்; Major General of *Kulōthuṅga cōḷaṉ* (சி.பெ.அக.).

சைவ சமயப் பற்றுடையவன்; தில்லையில் பொற்கூரை அமைத்தான்; நூற்றுக்கால் மண்டபம், பெரிய திருச்சுற்று மாளிகை, தேவார மண்டபம் ஆகியவை அமைத்தான். ஞானசம்பந்தர் கோயிலுக்கும் பொன் வேய்ந்தான். பூம்பொழில் அமைத்தான். திருவதிகை வீரட்டானேச் சுரத்திலும் கூரைக்குப் பொன் வேய்ந்தான்.

மணவிற்கோட்டம் *manvir-kōttam,* பெ.(n.) தொண்டை மண்டலத்து 24 கோட்டங்களுள் ஒன்று (S.I.I.i, 119); one of the 24 *kōttams* of *tondaimandalam.*

மணவினை *mana-vinai,* பெ.(n.) திருமண நடப்பு (சடங்கு); marriage ceremony.

[மணம் + வினை.]

மணவீசம் *mana-visam,* பெ.(n.) மாதுளை (சங்.அக.); pomegranate.

மணவு *manavu,* பெ.(n.) பலகறை; cowry.

மணவை *manavai,* பெ.(n.) அடுப்பு (தைலவ. தைல.பாயி.14); oven, hearth, cooking place.

[மண் → மணவை.]

மணவோலை *mana-v-ōlai,* பெ.(n.) திருமண அழைப்பிதழ்; invitation to a marriage.

[மணம் + ஓலை.]

மணற்கல் *manar-kal,* பெ.(n.) மணற்பாங்கான பாறை (வின்.); sand stone, aqueous rock.

[மணல் + கல்.]

மணற்காடை *manar-kādai,* பெ.(n.) மணலி லிருக்கும் பொன்னைச் சப்பி வாழும் தவளையைப் போன்ற ஓர் உயிரி; a creature like frog living on gold mixed up in sandy places (சா.அக.).

[மணல் + காடை.]

மணற்கால் *manar-kāl,* பெ.(n.) மணற் பாங்கான நிலம் (இ.வ.); sandy soil.

[மணல் → மணற்கால். ஒ.நோ.ஆற்றங்கால், சேற்றங்கால்.]

மணற்காலப்பள்ளி *manar-kāla-p-palli,* பெ.(n.) மணற் மேடாக உள்ள ஊர்; sand hillock place or village. *"இந்நாட்டு வெளாநாட்டு மணற் காலப்பள்ளியுந் திறப்பான் பரகேசரி தேவதானங்களும் திருவடிகள் தேவதானங்களும்" (தெ.க.4, தொ.2, 4, 46).*

மணற்காளான்[1] *manar-kālān,* பெ.(n.) 1. தவளை; a frog. 2. மணலில் முளைக்கும் காளான்; a kind of mushroom grown in the sandy places (சா.அக.).

மணற்காளான்[2] *manar-kālān,* பெ.(n.) மணற்றவளை பார்க்க (வின்.); see *manarravalai.*

மணற்கீரை *manar-kirai,* பெ.(n.) மணலி, 1 பார்க்க; see *manali.*

[மணல் + கீரை.]

மணற்குருவி *manar-kuruvi,* பெ.(n.) மணற் காடை பார்க்க; see *manar-kādai.*

[மணல் + குருவி.]

மணற்குன்றம் *manar-kunram,* பெ.(n.) மணலின் திட்டை; sand-heap, sand-bank, sand dunes. *"வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையும்" (மணிமே. 1:64).*

[மணல் + குன்றம்.]

மணற்குன்று[1] *maṉaṟ-kuṉṟu,* பெ.(n.) மண் மேடு; sand hillock. *"எருக்காட்டுச் சேரியில் மணற்குன்று கல்லியும் குழி தூர்த்தும்" (தெ.க.தொ.22, கல்.32-1).*

[மணல் + குன்று.]

மணற்குன்று[2] *maṉaṟ-kuṉṟu,* பெ.(n.) புடம் போடுவதற்காகக் குவிக்கும் மணலின் திரள்; a heap of sand intended for purposes of calcination.

[மணல் + குன்று.]

மணற்குன்று[3] *maṉaṟ-kuṉṟu,* பெ.(n.) மணற் குன்றம் பார்க்க (சங்.அக.); see *maṉaṟ-kuṉṟam.*

[மணல் + குன்று.]

மணற்கூகை *maṉaṟ-kūgai,* பெ.(n.) தவளை (வின்.); frog.

[மணல் + கூகை.]

மணற்கூர்கை *maṉaṟ-kūrgai,* பெ.(n.) வளையலுப்பு; a kind of salt (சா.அக.).

மணற்கை *maṉaṟ-kai,* பெ.(n.) மணற்றரை பார்க்க; see *maṉaṟṟarai.*

மணற்கொழிப்பான் *maṉaṟ-koḻippāṉ,* பெ.(n.) அம்மை வகை (இ.வ.); an eruptive disease, as resembling sand.

[மணல் + கொழிப்பான். மணல் போன்ற சிறு கொப்புளங்களாய்த் தோன்றும் அம்மை.]

மணற்கோட்டை *maṉaṟ-kōṭṭai,* பெ.(n.) 1. மணலாலான கோட்டை; sand embankment, as a rampart. 2. வெள்ளத்தைத் தடுக்க இடும் மணற் குவியல் (பதிற்றுப்.30, உரை); protecting bank of sand, as of a river in floods.

[மணல் + கோட்டை.]

மணற்கோடு *maṉaṟ-kōḍu,* பெ.(n.) மணற் கோட்டை பார்க்க; see *maṉaṟ-kōṭṭai.* *"மணற்கோடு கொண்டு" (பதிற்றுப்.30:27).*

[மணல் + கோடு. கோட்டை →கோடு.]

மணற்கோவை *maṉaṟ-kōvai,* பெ.(n.) மணலிற் படருங் கோவைக் கொடிவகை (மூ.அ.); a kind of creeper growing in a sandy tract, a climbing plant.

[மணல் + கோவை.]

மணற்சாரி *maṉaṟ-šāri,* பெ.(n.) மணற்றறை பார்க்க (உ.வ.); see *maṉaṟṟarai.*

[மணல் + சாரி.]

மணற்சுண்ணாம்பு *maṉaṟ-cuṇṇāmbu,* பெ.(n.) மணல் மிகுந்துள்ள சுண்ணாம்புக்கல்; sandy limestone.

[மணல் + சுண்ணாம்பு]

மணற்சோறு *maṉaṟ-cōṟu,* பெ.(n.) குழந்தைகள் விளையாட்டில் சோறாகக் கருதும் மணல்; sand, regarded as rice by children. *"சிறியார் மணற் சோற்றிற் றேக்கிடுமாபோல்" (திருமந்.306).*

[மணல் + சோறு.]

மணற்பருவம் *maṉaṟ-paruvam,* பெ.(n.) புழுதிக்காலாக உழுது உழவுக்கு ஏற்ற நிலை; preparation of a *nañjai* and for *puḻudi-k-kāl* cultivation.

[மணல் + பருவம்.]

மணற்பாக்கு *maṇaṟ-pākku*, பெ.(n.) கெடாமலிருப்பதற்காக மணலிற் புதைத்து வைக்கும் பாக்கு (யாழ்ப்.); arecanut, preserved by being kept buried in sand.

[மணல் + பாக்கு.]

மணற்பாங்கு *maṇaṟ-pāṅgu*, பெ.(n.) மணற்றறை பார்க்க; see *maṇaṟṟaṟai*.

[மணல் + பாங்கு.]

மணற்பாடு *maṇaṟ-pāḍu*, பெ.(n.) பயிரிடுவதற்குத் தகாத மணல் பாங்கான நிலம்; sandy soil unfit for cultivation.

[மணல் + பாடு.]

மணற்பாறை *maṇaṟ-pāṟai*, பெ.(n.) மென்மைத் தன்மையுடைய பாறை; sedimentry rock; rock formed by the seas and lakes depositing sand and mud in their shores or the bottom.

[மணல் + பாறை.]

மணற்புடம் *maṇaṟ-puḍam*, பெ.(n.) மணல் மறைவில் போடும் புடம்; sand bath.

[மணல் + புடம்.]

மணற்புரம் *maṇaṟ-puṟam*, பெ.(n.) மணலூர்புரம் பார்க்க (திருவாலவா.53:10); see *maṇalūr-puram*.

[மணல் + புரம்.]

மணற்பொருக்கு *maṇaṟ-porukku*, பெ.(n.) கருஞ்சுக்கான்; black lime stone (சா.அக.).

மணற்போக்கி *maṇaṟ-pōkki*, பெ.(n.) வாய்க்காலில் மணல் கழிவதற்காக ஏற்படுத்திய வழி (இ.வ.); sand escape.

[மணல் + போக்கி.]

மணற்றரம் *maṇaṟṟaram*, பெ.(n.) மணற்றரை பார்க்க (W.G.); see *maṇaṟṟarai*.

[மணல் + தரம்.]

மணற்றரை *maṇaṟṟarai*, பெ.(n.) மணல் பாங்கான நிலம் (வின்.); sandy soil; sandy tract of land.

[மணல் + தரை.]

மணற்றவளை *maṇaṟṟavaḷai*, பெ.(n.) தவளை வகை (வின்.); mud frog.

[மணல் + தவளை.]

மணற்றாரா *maṇaṟṟārā*, பெ.(n.) தாராவகை (வின்.); a species of wild duck or teal.

[மணல் + தாரா.]

மணற்றிருக்கை *maṇaṟṟirukkai*, பெ.(n.) திருக்கைமீன் வகை (வின்.); a kind of thorn-back fish.

[மணல் + திருக்கை.]

மணாட்டு *maṇāṭṭu*, பெ.(n.) மணமகளாகு நிலை; brideship. *"மணாட்டுப் புறஞ் செய்யுங் கொலோ" (திவ்.பெரியாழ்.3, 8, 4).*

[மணம் → மணாட்டு.]

மணாட்டுப்பெண் *maṇāṭṭu-p-peṇ*, பெ.(n.) மருமகள்; daughter-in-law. *"நந்த கோபருடைய மணாட்டுப் பெண்ணாய்" (திவ்.திருப்பா.18, வியா, பக்.168).*

[மணாட்டு + பெண்.]

மணாட்டுப் பெண் என்பது முறையே மாட்டுப்பெண் நாட்டுப் பெண் என மருவி, மருமகள் என்னும் பொருளில், தஞ்சை வட்டாரத்தில் வழங்கி வருகின்றது (த.தி.முன்.vi).

மணாளன் *maṇāḷaṉ*, பெ.(n.) 1. மணமகன்; bridegroom. *"நித்த மணாளர் நிரம்ப வழகியர்" (திருவாச.17, 3).* 2. கணவன்; husband. *"மானேர் நோக்கி மணாளா போற்றி" (திருவாச.4, 135).*

[மணம்→மணாளன்.]

மணி *maṇi*, பெ.(n.) 1. தொன்மணிகள் (பிங்.); gem, nine precious stones. 2. நீல மணி (திவா.); sapphire. *"முண்டகங் கதிர்மணி கழாஅலவும்" (சிறுபாண். 148).* 3. மாணிக்கம்; ruby. *"மணிவாய்க் கிள்ளை" (கல்லா.50, 23).* 4. முத்து (பிங்.); pearl. 5. சிந்தாமணி; a supernatural gem. *"உம்பர்தரு தேனுமணிக் கசிவாகி" (திருப்பு. விநாயகர் துதி.2).* 6. பளிங்கு; crystal. *"மணியுட் டிகழ்தரு நூல்போல்" (குறள், 1273).* 7. கண்மணி; apple of the eye. *"கருமணியிற் பாவாய்" (குறள், 1123).* 8. அக்கமணி (உருத்திராக்கம்) தாமரைமணி முதலியன; sacred bead, as rudrak or lotus seed. *"மாசிலாத மணிதிகழ் மேனி" (பெரியபு. திருக்கூட்ட.6).* 9. கூலமணி; grain of corn. *நெல்மணிக் குவியல் (உ.வ.).* 10. நஞ்சுநீக்குங் கல்; snake - stone. *"மணிமந்திர மாதியால்" (தாயு. பரிபூரண.9).* 11. நிலாக்காந்தக்கல்; moon stone. *"நீடுநீர் மணிநீரும்" (சீவக.2418).* 12. மணிமாலை; necklace of beads. *"நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு" (தொல்.பொருள்.480).* 13. அணிகலன்; jewel. 14. உருண்டை வடிவுள்ள பொருள்; small round thing, as bead. *"மணியிருதலையுஞ் சேர்த்தி" (சீவக.2977).* 15. வலையினோரத்திற் கட்டிய உருண்டைகள்; round sinkers attached, to a net. *"இனமணி விளிம்புறக் கோத்து" (திருவாலவா.22, 13).* 16. மீன் வலையின் முடிச்சு; knot in a fishing net. *"மணிவலை".* 17. நண்டு, தேள் முதலியவற்றின் கொடுக்குமணி (வின்.); knuckle or joint of lobster, scorpion, etc. 18. ஆட்டினதர் (வின்.); wattle on the throat of a sheep. 19. வீடு பெற்ற உயிர் (ஆன்மா); liberated soul. *"மணியினுக் கொளி" (சீவக.3100).* 20. அழகு (சூடா.); beauty. *"மணிக்காத்து" (கல்லா.4).* 21. கதிரவன் (பிங்.); sun. 22. ஒளி; light. *"செம்மணி மணிபழுத் தமைந்த வாய்" (கம்பரா.இலங்கைகே.12).* 23. நன்மை (பிங்.); goodness, auspiciousness. 24. சிறந்தது; that which is excellent. *மணியான செய்தி சொன்னான் (உ.வ.).* 25. கருமை (பிங்.); blackness. 26. கண்டை; bell; gong. *"மணிகிளர் முன்றிற் றென்னவன்" (புறநா.388, 13).* 27. கண்டையோசை; sound, as of bell, gong, etc. *"மணி கேட்கிறது" (உ.வ.).* 28. அறுபது நிமிடம் நேரம் (mod.); hour. 29. ஒன்பது; the number 9. *"மணிநாள்" (தைலவ.தைல.115).* 30. ஆண் குறியின் நுனி (இ.வ.); tip of the penis. 31. பெண்குறியின் ஓர் உறுப்பு (யாழ்.அக.); a part of the pudendum muliebre.

[முல் (இளமைக் கருத்து வேர்)→முள்→முண்→முண. முணமுணத்தல் = வாய்க்குள் மெல்லப் பேசுதல். முண்→மண்→மணி (வே.க. 4:3).]

மணிக்கஞ்செடி *maṇikkañ-ceḍi*, பெ.(n.) மணிச்சட்டி பார்க்க (யாழ்.அக.); see *maṇi-c-caṭṭi.*

[மணிச்சட்டி→மணிக்கஞ்செடி.]

மணிக்கட்டி *maṇi-k-kaṭṭi,* பெ.(n.) நெய் முதலிய உறைந்த பொருள்களின் மீது உண்டாகும் கட்டி (வின்.); bead - like formation on the surface of congealed substances, as ghee, lard.

[மணி + கட்டி.]

மணிக்கட்டு *maṇi-k-kaṭṭu,* பெ.(n.) கைத்தலத்திற்கும் முன்கைக்கும் இடைப்பட்ட பொருத்திடம்; wrist, carpus. *"மணிக் கட்டதனை வளைத்திட லென்ப" (பரத. பாவ.24).*

தெ., க. மணிகட்டு; ம. மணிக்கட்டு.

[மணி + கட்டு.]

மணிக்கட்டுநாடி *maṇi-k-kaṭṭu-nāḍi,* பெ. (n.) மணிக்கட்டில் பார்க்கும் நாடி; pulse selt at the wrist.

[மணிக்கட்டு + நாடி.]

மணிக்கட்டெலும்பு *maṇi-k-kaṭṭelumbu,* பெ. (n.) மணிக்கட்டிலுள்ள எலும்புகள்; wrist bones.

[மணிக்கட்டு + எலும்பு.]

மணிக்கட்டை *maṇi-k-kaṭṭai,* பெ.(n.) வலை மிதப்பதற்காக மேலே கட்டப்படும் மரக்கட்டைத் துண்டு; a piece of log tie up on a fishing-net.

[மணி + கட்டை. மணி = சிறியது.]

மணிக்கடை *maṇi-k-kaḍai,* பெ.(n.) மணிக் கட்டு; wrist.

[மணிக்கட்டு→மணிக்கடை.]

மணிக்கடைநாடி *maṇi-k-kaḍai-nāḍi,* பெ. (n.) மணிக்கட்டுநாடி பார்க்க; see *maṇi-k-kaṭṭu-nāḍi.*

[மணிக்கடை + நாடி.]

மணிக்கடைநூல் *maṇi-k-kaḍai-nūl,* பெ.(n.) மணிக்கட்டின் சுற்றளவைக் கொண்டு அவரவர் நோயின் தன்மையைக் கூறும் நூல்; a treatise describing the methods of diagnosing diseases by using a thread and measuring the wrist and fingers.

[மணிக்கடை + நூல்.]

மணிக்கணக்கு *maṇi-k-kaṇakku,* பெ.(n.) கடியாரப்படியுள்ள ஒழுங்கு (உ.வ.); mechanical regularity like clock-work.

[மணி + கணக்கு.]

மணிக்கயிறு[1] *maṇi-k-kayiṟu,* பெ.(n.) 1. கண்டாமணியை இழுத்தடிக்குங் கயிறு; bell - rope. 2. முடிச்சுள்ள சாட்டைக் கயிறு; whip-lash with knots. 3. பாசக்கயிறு; yama's noose. *"மணிக் கயிற்றினாற் றளைத்தனர்" (உபதேசகா. சிவ புண்ணிய. 272).* 4. முத்துவடம்; string of pearls. *"மணிக்கயிற் றூசன் மறலிய விடத்தும்" (பெருங். உஞ்சைக்.34, 116).* 5. முறுக்கு நன்கமைந்து மெல்லிதான கயிறு (இ.வ.); finely twisted cord.

[மண் + கயிறு. மணி = சிறியது.]

மணிக்கயிறு[2] *maṇi-k-kayiṟu,* பெ.(n.) நாயுருவி; a plant Indian burr (சா.அக.).

மறுவ. மணிக்கருது.

மணிக்கழலை *maṇi-k-kaḻalai,* பெ.(n.) ஒரு நோய்; an ulcer.

[மணி + கழலை.]

மணிக்காக்கை *maṇi-k-kākkai,* பெ.(n.) காக்கை வகை; a kind of crow.

[மணி + காக்கை. மணி = சிறியது.]

மணிக்காடை *maṇi-k-kāḍai,* பெ.(n.) சிறு காடை வகை; button-quail. *"மணிக்காடை முட்டை" (விறலிவிடு. 628).*

[மணி + காடை. மணி = சிறியது.]

மணிக்காம்பு *maṇi-k-kāmbu,* பெ.(n.) 1. மணி இழைத்துச் செய்த கால்; jewelled stand or leg. *"தானோர் மணிக்காம்பு போனிமிர்ந்து" (திவ்.இயற்.பெரியதி.).* 2. தக்காளி (சங்.அக.); tomato.

[மணி + காம்பு.]

மணிக்காரி *maṇi-k-kāri,* பெ.(n.) வெண் காரம்; borax (சா.அக.).

மணிக்கால் *maṇi-k-kāl,* பெ.(n.) வலையின் அடிப்பகுதி நீரில் அமிழ்வதற்காகக் கோக்கப்படும் சுட்ட மண்ணுருண்டை; round fired glay die at the bottom of fishing net.

[மணி + கால். மணி கட்டும் கடைப்பகுதி.]

மணிக்காலறிஞர் *maṇi-k-kāl-aṟiñar,* பெ.(n.) மணிகளின் குணமறிந்த வணிகர்; merchants skilled in the knowledge. *"மணிக்காலறிஞர் பெருங்குடி" (கல்லா. முருக.துதி).*

[மணிக்கால் + அறிஞர்.]

மணிக்காளி *maṇi-k-kāḷi,* பெ.(n.) மணித் தக்காளி (மூ.அ.); black nightshade.

[மணித்தக்காளி→மணிக்காளி (கொ.வ.).]

மணிக்காற்பள்ளி *maṇi-k-kāṟ-paḷḷi,* பெ.(n.) அரசர்க்குரிய சிவிகை வகை (சூடா.); a kind of palanquin for king.

[மணிக்கால் + பள்ளி.]

மணிக்குடர் *maṇi-k-kuḍar,* பெ.(n.) 1. சிறுகுடல், மணிக்குடல்; small intestines. 2. நஞ்சு; poison.

[மணி + குடல்→ குடர். மணி = சிறியது.]

மணிக்குடல் *maṇi-k-kuḍal,* பெ.(n.) சிறுகுடல் (உ.வ.); small intestines.

[மணி + குடல். மணி = சிறியது.]

மணிக்குடற்நோய் *maṇi-k-kuḍaṟ-nōy,* பெ.(n.) ஒருவகைக் குடல் நோய்; tuberculosis of the bowels or small intestines.

[மணிக்குடல் + நோய்.]

மணிக்குடற்புழு *maṇi-k-kuḍaṟ-puḻu,* பெ.(n.) சிறுகுடற் புழு; round worm occupying the upper part of the small intestines.

[மணிக்குடல் + புழு.]

மணிக்கூடு *maṇi-k-kūḍu,* பெ.(n.) 1. மணிதூங்கு மாடம் (கட்டட.நாமா.4); belfry-stand; bell-tower. 2. கடிகாரமமைந்த கோபுரம்; clock-tower, clock-house. 3. கடியாரக்கூடு (யாழ்ப்.); clock case. 4. கடிகாரம் (வின்.); clock, as containing a bell. 5. நாழிகை வட்டில் (யாழ்.அக.); clepsydra; hour-glass. 6. சாயப்பூடுவகை (இ.வ.); a plant used in dyeing.

[மணி + கூடு.]

மணிக்கூண்டு *maṇi-k-kūṇḍu,* பெ.(n.) மணிக்கூடு, 1, 2 பார்க்க (இ.வ.); see *maṇi-k-kūḍu.*

[மணி + கூண்டு.]

மணிக்கை *maṇi-k-kai,* பெ.(n.) மணிக்கட்டு பார்க்க; see *maṇi-k-kaṭṭu.*

[மணிக்கட்டு→மணிக்கை.]

மணிக்கொச்சம் *maṇi-k-koccam,* பெ.(n.) மணிக்கயிறு, 5 பார்க்க (இ.வ.); see *maṇi-k-kayiṟu.*

மணிக்கொட்டை *maṇi-k-koṭṭai,* பெ.(n.) சிற்றாமணக்குக் கொட்டை; castor seed.

[மணி + கொட்டை.]

மணிக்கோரை *maṇi-k-kōrai,* பெ.(n.) கோரை வகை (வின்.); a kind of sedge.

[மணி + கோரை.]

மணிக்கோவை[1] *maṇi-k-kōvai,* பெ.(n.) சிறு மணிக்கோவை பார்க்க; see *siṟu-maṇi-k-kōvai.*

[மணி + கோவை.]

மணிக்கோவை[2] *maṇi-k-kōvai,* பெ.(n.) மணிமாலை; necklace of gems. *"பொன்னாண் கோத்த நன்மணிக் கோவை" (மணிமே.3:133).*

[மணி + கோவை.]

மணிகட்டு—தல் *maṇi-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) கதிரில் தவசமணி உண்டாதல்; to form grains, in ears of corn.

[மணி + கட்டு-,]

மணிகடம் *maṇi-kaḍam,* பெ.(n.) வேலிப் பருத்தி (உத்தாமணி) (சங்.அக.); hedge - twiner.

மணிகண்டசாவி *maṇi-kaṇḍa-cāvi,* பெ.(n.) மணிபிடிச்சாவி பார்க்க; see *maṇi-piḍi-c-cāvi.*

[மணிகண்ட + சாவி.]

மணிகண்டன் *maṇi-kaṇḍaṉ,* பெ.(n.) (நீலகண்டத்தையுடைய) சிவன்; *Śivaṉ,* as blue-necked. *"மணிகண்ட னென்னும் பேர் மற்றிதனால்" (பூவண.உலா, 50).*

[மணி + கண்டன்.]

மணிகம் *maṇigam,* பெ.(n.) நீர்க்குடம் (யாழ். அக.); water-pot.

மணிகன்றிகை *maṇi-kaṉṟigai,* பெ.(n.) மணிகர்ணிகை பார்க்க; see *maṇi-karṇigai. "காசியிற் சிறந்ததொன் மணிக்கன்றிகை" (கந்தபு.தக்கன்.சிவபூ.2).*

மணிகன்னிகை *maṇi-kaṉṉigai,* பெ.(n.) மணிகர்ணிகை பார்க்க; see *maṇi-karṇigai. "மணிகன்னிகையாடி" (காசிக. தேவ.அக.2).*

மணிகாசம் *maṇi-kācam,* பெ.(n.) கண்ணோய் வகை (யாழ்.அக.); an eye-disease.

மணிகாரன் *maṇi-kāraṉ,* பெ.(n.) மணி வேலை செய்பவன் (சங்.அக.); worker in precious stones.

மணிகாரம் *maṇi-kāram,* பெ.(n.) வெண் காரம் (மூ.அ.); borax.

மணிகானனம் *maṇi-kāṉaṉam,* பெ.(n.) கழுத்து (சிந்தா.நி.41); neck.

மணிகிலுக்கு-தல் *mani-kilukku-,* 5 செ.கு.வி. (v.i.) கைம்மணி யடித்தல் (யாழ்ப்.); to ring a hand bell.

[மணி + கிலுக்கு.]

மணிகுயிற்றுநர் *mani-kuyirrunar,* பெ.(n.) முத்துக்கோப்பார் (பிங்.); makers or pearl garlands.

[மணி + குயிற்றுநர்.]

மணிகூடம் *mani-kūdam,* பெ.(n.) இந்திரனின் விளையாட்டுச் செய்குன்று (சங்.அக.); an artificial hillock where Indra sports.

[மணி + கூடம்.]

மணிச்சட்டம் *mani-c-cattam,* பெ.(n.) குழந்தைகளுக்கு எண் அறிவிக்க உதவும் மணிகள் கோத்த சட்டம்; a wooden trame with rows of coloured beads, for teaching arithmetic to children, abacus.

[மணி + சட்டம்.]



மணிச்சட்டி *mani-c-catti,* பெ.(n.) விளிம்பில் மணிவடிவமைந்த மண்சட்டி (யாழ்ப்.); earthern pot with a rim like a row of beads.

[மணி + சட்டி.]

மணிச்சம்பா *mani-c-cambā,* பெ.(n.) நீரிழிவைப் போக்கும் ஒருவகைச் சம்பா நெல்; a kind of paddy rice curing diabetics.

[மணி + சம்பா.]

மணிச்சிகை *mani-c-cigai,* பெ.(n.) குன்றி; crab's-eye. *"செங்கொடு வேரி தேமா மணிச்சிகை" (குறிஞ்சிப்.64).*

[மணி + சிகை.]

மணிச்சித்திரம் *mani-c-cittiram,* பெ.(n.) பொற்றலைக் கரிப்பான்; a prostate plant-eclipse plant bearing yellow flowers (சா.அக.).

மணிச்சுறா *mani-c-curā,* பெ.(n.) சாம்ப னிறமுள்ளதும் 12 அடி வளர்வதுமான சுறாமீன் வகை; black shark, grey, attaining 12 ft. in length.

[மணி + சுறா.]

மணிச்செப்பு *mani-c-ceppu,* பெ.(n.) மணி யிழைத்த செப்பு; small casket set with precious stones. *"மாலைப் பெரு மணிச்செப்பும்" (சீவக.2474).*

[மணி + செப்பு.]

மணிச்சோதி *mani-c-cōdi,* பெ.(n.) வாயு தேவனது வில் (சங்.அக.); the bow of the wind-god.

மணிசகம் *mani-cagam,* பெ.(n.) மணீசகம் பார்க்க (யாழ்.அக.); see *manicagam.*

மணிசரம் *mani-caram,* பெ.(n.) மணிக் கோவை பார்க்க (யாழ்.அக.); see *mani-k-kōvai.*

[மணி + சரம். சரம் = கோவை.]

மணிசேகரம் *maṇi-cēgaram,* பெ.(n.) காலனுடைய அந்தப்புரம் (சங்.அக.); yama's harem.

மணித்தக்காளி *maṇi-t-takkāḷi,* பெ.(n.) கரும்பச்சைநிற இலைகளையும் பழுத்த நிலையில் கருநிறமாக இருக்கும் சிறிய மணி போன்ற காய்களையுமுடைய ஒருவகைச் செடி; black night shade.

[மணி + தக்காளி.]

மணித்தீவம் *maṇi-t-tīvam,* பெ.(n.) பெண்கள் மாத்திரம் வாழும் ஒரு தீவு (பெருங். உஞ்சைக்.42, 181, குறிப்புரை); an island inhabited by women alone.

[மணி + தீவம்.]

மணித்துத்தி *maṇi-t-tutti,* பெ.(n.) சிறுதுத்தி (வின்.); five-winged capsule rose-mallow.

[மணி + துத்தி. மணி = சிறியது.]

மணித்தைலம் *maṇi-t-tailam,* பெ.(n.) ஆமணக்கு நெய்; oil of castor seed.

[மணி + Skt.தைலம். மணி = ஆமணக்கு விதை. தில் = எள். திலம்–தைலம்–நெய்மம்.]

மணிதம் *maṇitam,* பெ.(n.) மணியினோசை (யாழ்.அக.); sound of the bell.

[மணி→மணிதம்.]

மணிதனு *maṇi-taṉu,* பெ.(n.) வானவில் (யாழ்.அக.); rainbow.

[மணி + தனு.]

மணிதாட்பத்திரி *maṇi-dāṭ-pattiri,* பெ.(n.) சேலை வகை (இ.வ.); a kind of saree.

மணிதிரள்(ளு)–தல் *maṇi-tiraḷ-,* 16 செ.கு.வி.(v.i.) நெற்கதிரில் தவசமணி திரண்டு உருவடைதல்; to mature, as grain in corn-ears.

[மணி + திரள்.]

மணிதீபம் *maṇi-tībam,* பெ.(n.) மணித்தீவம் பார்க்க (சங்.அக.); see *maṇi-t-tīvam.*

[மணி + தீபம்.]

மணிதுருவிடு–தல் *maṇi-turuviḍu-,* 20 செ.கு.வி.(v.i.) மணிகளைச் சுத்தி செய்தல் (யாழ்.அக.); to cut and polish gem.

மணிந்தம் *maṇindam,* பெ.(n.) மணிபந்தம் பார்க்க (யாழ்.அக.); see *maṇi-bandam.*

[மணிபந்தம்→மணிந்தம்.]

மணிநா *maṇi-nā,* பெ.(n.) மணியின் நாக்கு; tongue of a bell. *"ஆடுங் கடைமணி நாவசை யாமல்" (தமிழ்நா.128).*

[மணி + நா. நா = நாக்கு.]

மணிநாக்கு *maṇi-nākku,* பெ.(n.) மணிநா பார்க்க; see *maṇi-nā.*

[மணி + நாக்கு.]

மணிநிறம் *maṇi-niṟam,* பெ.(n.) கருநீல நிறம்; dark blue colour, as of sapphire. *"மணிநிறம் கொண்ட மாமலை வெற்பில்" (ஐங்குறு.224).*

[மணி + நிறம்.]

மணிநிறவண்ணன் *maṇi-niṟa-vaṇṇaṉ,* பெ.(n.) மணிவண்ணன் பார்க்க; see *maṇi-vaṇṇaṉ.*

[மணிநிறம் + வண்ணன்.]

மணிநீர் *maṇi-nīr,* பெ.(n.) 1. மணிபோலும் நிறத்தினையுடைய நீர்; dark blue water, as in a tank. *"மணிநீரு மண்ணும் மலையும்" (குறள், 642). "துகில்சேர் மலர்போன் மணிநீர் நிறைந்தன்று புனலென மூதூர் மலிந்தன் றவருரை" (பரிபா.12, 93–4).* 2. மணியிலுள்ள நீர்; water of a gem.

[மணி + நீர்.]

மணிநீலகாசம் *maṇi-nīla-kāsam,* பெ.(n.) கண்ணோய் வகை; cataract (சா.அக.).

மறுவ. நீலகாசம்

மணிநெய் *maṇi-ney,* பெ.(n.) சிறு முத்துக் கொட்டை எண்ணெய்; oil pressed from the small castor seed.

[மணி + நெய்.]

மணிப்பவளம் *maṇi-p-pavaḷam,* பெ.(n.) தமிழும் வடமொழியும் விரவிய உரைநடை; a kind of style in which words of two languages as Tamil and Sanskrit are mixed.

மறுவ. மணிப்பிரவாளம்

[மணி + பவளம்.]

த. பவளம் > வ. பிரவாளம்.

ஒ.நோ. த. மதங்கம் > வ. மிருதங்கம்.

மணிப்பாரா *maṇi-p-pārā,* பெ.(n.) அரண்மனை வாயிலில் நேரத்தை அறிவிக்க அடிக்கும் மணிகட்டிய காவலிடம்; palace gate where the hours are struck. 2. அரண்மனை வாயிலில் மணியடித்துக் காவல்புரியும் வேலை; office of striking the hour-gong at a palace - gate.

[மணி + பாரா (உருது).]

மணிப்பாரி *maṇi-p-pāri,* பெ.(n.) 1. இராக் காவலாளரின் பாட்டு வகை; a kind of night -watchman's song. 2. மணியடித்துக் கொண்டு சுற்றும் இரவுக்காவலர்; patrol by night-watchman, sounding gongs.

[மணி + பாரி.]

மணிப்பால் *maṇi-p-pāl,* பெ.(n.) கடைக்கண் சிரங்கு; ulcer at the angle of the eye (சா.அக.).

மணிப்பிடிப்பு *maṇi-p-piḍippu,* பெ.(n.) நெற் கதிரில் மணி தோன்றுகை; formation of grains in the corn ears.

[மணி + பிடிப்பு.]

மணிப்பிரவாளம் *maṇi-p-piravāḷam,* பெ.(n.) மணிப்பவளம் பார்க்க; see *maṇi-p-pavaḷam.*

[மணி + பிரவாளம்.]

த. பவளம் → ப்ரவளம் → வ. பிரவாளம்.

மணிப்புங்கம் *maṇi-p-puṅgam,* பெ.(n.) 1. பூவந்தி மரவகை (M.M.844); rusty soap-nut. 2. நெய்க்கொட்டான் (மலை.); soap-nut.

[மணி + புங்கம்.]

மணிப்புங்கு *maṇi-p-puṅgu,* பெ.(n.) மணிப் புங்கம் பார்க்க (பாலவா.); see *maṇi-p-puṅgam.*

[மணிப்புங்கம் → மணிப்புங்கு.]

மணிப்புறா *maṇi-p-puṟā,* பெ.(n.) புறாவகை (பதார்த்த.906); ring-dove, turtle-dove, spotted dove.

[மணி + புறா.]

மணிப்புன்கம் *maṇi-p-puṉgam,* பெ.(n.) மணிப்புங்கம் (இ.வ.); see *maṇi-p-puṅgam.*

[மணிபுங்கம்→மணிப்புன்கம்.]

மணிப்புன்கு *maṇi-p-puṉgu,* பெ.(n.) மணிப் புங்கம் (மலை.) பார்க்க; see *maṇi-p-puṅgam.*

[மணிப்புங்கம்→மணிப்புன்கு.]

மணிப்பொச்சம் *maṇi-p-poccam,* பெ.(n.) மணிக்கயிறு, 5 பார்க்க (இ.வ.); see *maṇi-k-kayiṟu.*

[மணி + பொச்சம்.]

மணிபத்மம் *maṇi-patmam,* பெ.(n.) புத்த பாதம் (மணிமே.3:65–6, அரும்.); the buddha's foot-print.

[மணி + பத்மம்]

மணிபந்தம் *maṇi-pandam,* பெ.(n.) மணிக் கட்டு பார்க்க; see *maṇi-k-kaṭṭu. "இரண்டு முழங்கையி னிரண்டு மணிபந்தத்து" (சைவச.பொது.192).*

[மணி + பந்தம்.]

மணிபந்து *maṇi-pandu,* பெ.(n.) மணிபந்தம் பார்க்க; see *maṇi-pandam. "கைகளும் மணிபந்தசைத்துற" (பெரியபு. திருநாவுக். 358).*

[மணி + பந்து. பந்து = பந்தம்.]

மணிபர்வதம் *maṇi-parvadam,* பெ.(n.) மணிகூடம் பார்க்க; see *maṇi-kūḍam.*

[மணி + பர்வதம்.]

மணிபல்லவம் *maṇi-pallavam,* பெ.(n.) காவிரிப்பூம்பட்டினத்திற்குக் தென்கிழக்கே 30 யோசனைத் தொலைவிலுள்ளதும் புத்த பாத அடிச்சுவடுடையதுமான ஒரு தீவு; an island, 30 *yōjanas* south-east of *Kāviri-p-pūmpaṭṭiṉam,* said to contain a foot-print of the buddha on a pedestal. *"மணிமேகலையை மணி பல்லவத்துய்த்து" (மணிமே.பதி.44).*

[மணி + பல்லவம்.]

மணிமேகலை பாவியத்தில் புத்த அடிச்சுவடு அமைந்துள்ளதாகக் கூறப்பட்ட இடம் இதுவேயெனக் கருதப்படுகிறது. தற்போது நயினாத்தீவு என்று அழைக்கப்படுகிறது.

புகாரிலிருந்து தெற்கே 30 யோசனை தூரத்தில் மணிபல்லவம் இருந்ததாக மணிமேகலை தெரிவிக்கின்றது. யோசனை என்பது 16 கல். 5 படைசால் (பர்லாங்) 440 அடி நீளம் ஆகும். இத் தொலைவு பொருத்தமாக இல்லை. ஒரு கூப்பிடுதூரம் 1 கல் 1 படைசால் 220 அடி நீளம். 30 கூப்பிடுதூரம் என்று இருந்திருந்தால் சரியாக இருக்கும்.

மணிபிடி[1]–த்தல் *maṇi-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) மணிகட்டைப் பிடித்து நாடி பார்த்தல்; to feel the pulse at the wrist.

[மணி + பிடி–.]

மணிபிடி[2]–த்தல் *maṇi-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) மணிகட்டு–தல் பார்க்க (கொ.வ.); see *maṇi-kaṭṭu-.*

[மணி + பிடி–.]

மணிபிடி[3]–த்தல் *maṇi-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) கதிரில் தவசமணி பிடித்தல்; to format grains in the corn ears.

[மணி + பிடி–. மணி = தவசமணி.]

மணிபிடிச்சாவி *maṇi-piḍi-c-cāvi,* பெ.(n.) முற்றாது கெட்டபயிர்; blighted ear of corn with few grains.

[மணிபிடி + சாவி.]

மணிபிந்துமாலை *maṇi-pindu-mālai,* பெ.(n.) கை, முளி, நெற்றி, மார்பு, தொடை இவ்விடங்களில் அழுந்தும்படி வைக்கும் பற்குறி; impressions of teeth made in the forehead, chest, thigh and wrist (சா.அக.).

மணிபீசம் *maṇi-pīšam,* பெ.(n.) மாதுளை; fruit pomegranate (சா.அக.).

மணிபுட்பகம் *maṇi-puṭpagam,* பெ.(n.) சகதேவன் சங்கு (பகவற்.1, 11); the conch of *Šahadēva.*

மணிபூமி *maṇi-pūmi,* பெ.(n.) மணி விளையும் நிலம்; ruby mine.

[மணி + பூமி.]

மணிமகுடம் *maṇi-maguḍam,* பெ.(n.) 1. மணிமுடி; crown set with precious stones, worn by great monarchs. 2. ஏட்டுச் சுவடியைக் கட்டுங் கயிற்றின் தலைமுடிச்சு (யாழ்.அக.); ornamented button of an ola bock.

[மணி + மகுடம்.]

மணிமண்டபம் *maṇi-maṇḍabam,* பெ.(n.) 1. மணிக்கூடு, 1, 2 பார்க்க; see *maṇi-k-kūḍu.* 2. மணியம்பலம் பார்க்க; see *maṇiyambalam.*

[மணி + மண்டபம்.]

மணிமந்தம் *maṇimandam,* பெ.(n.) இந்துப்பு (சங்.அக.); salt petre.

மணிமந்திரௌசதம் *maṇi-mantirau sadam,* பெ.(n.) நஞ்சு முதலியன நீக்கற்குரிய மணி மந்திரம் மருந்து பின்னும் மூவகை நீக்குகள்; gem, mantra and medicine, being three remedies for poison, etc.

மணிமலர் *maṇi-malar,* பெ.(n.) குவளை; blue nelumbo. *"மணிமலர்க் கோலை விடுகண்"* *(சீவக.1613).*

[மணி + மலர்.]

மணிமலை *maṇi-malai,* பெ.(n.) ஏழ்குன்ற நாட்டு மகேந்திர மலைக்குத் தெற்கே பெருவள நாட்டில் இருந்த பண்டைய ஊர்; an old place of Peruvalanadu, situated south of Mahendramalai of *Eḻkuṉṟa nāḍu.*

[மணி + மலை.]

இது மேரு மலையின் 49 கொடுமுடிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இங்கு "மணிமலைத் தமிழ்ச் சங்கம்" என்ற பெயரில் தமிழ்ச் சங்கம் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது.

மணிமாடம் *maṇi-māḍam,* பெ.(n.) 1. சிறந்த மாளிகை; beautiful palace. *"அம்பொனொடு மணிமாட வயோத்தி யெய்தி" (திவ். பெருமாள்.10, 8).* 2. திருநறையூர்த் திருமால் கோயில் (திவ்.பெரியதி.6, 6); a *Visṇu* shrine at *Tiru-naṟaiyūr.*

[மணி + மாடம்.]

மணிமாலை *maṇi-mālai,* பெ.(n.) 1. முத்து வடம்; garland of pearls. 2. 96 சிற்றிலக்கியங்களுள் ஒன்றான வெண்பா இருபதும் கலித்துறை நாற்பதும் விரவச் செய்யும் சிற்றிலக்கியம் (சது.); a poem of 20

veṉpā and 40 *kali-t-tuṟai*, one of 96 pirapantam, q.v. 3. திருமகள் (யாழ்.அக.); the goddess of wealth. 4. திருவாசியாகிய பிரபை (சங்.அக.); ornamental arch over the head of an idol. 5. காதலியின் உடலில் காதலனாற் செய்யப்பட்ட பற்குறி (யாழ்.அக.); (Erot.) a cirular mark left by the teeth of a lover on the body of his beloved, during sexual union.

[மணி + மாலை.]

மணிமாளிகை *maṉi-māḷigai,* பெ.(n.) மணி மண்டபம் பார்க்க; see *maṉi-maṇḍabam.*

[மணி + மாளிகை.]

மணிமான் *maṉi-māṉ,* பெ.(n.) கதிரவன், சூரியன்; the sun.

மணிமிடற்றன் *maṉi-miḍaṟṟaṉ,* பெ.(n.) துரிசு; blue vitriol.

மணிமிடைப்பவளம் *maṉi-miḍai-p-pavaḷam,* பெ.(n.) 1. மணியும் பவளமுங் கலந்த மணி; necklace of gems and coral beads strung alternately. 2. அகநானூற்றின் இரண்டாம் பிரிவு; the second section of the anthology *akanāṉūṟu.* *"பாட்டு நூற்றென்பதும் மணிமிடைபவளம் எனப்படும்" (அகநா. பாயி.உரை, பக்.406).*

மணியும் பவளமும் விரவியுள்ள மாலையைப் போல ஒளி நயமும் பொருளமைதியும் ஒருங்கேயமையப் பெற்ற 180 அகப்பாடல்கள் கொண்ட இரண்டாம் பகுதி.

மணிமுசுட்டை *maṉi-mušuṭṭai,* பெ.(n.) பேய்முசுட்டை பார்க்க (சங்.அக.); see *pēy-mugaṭṭai.*

மணிமுடி[1] *maṉi-muḍi,* பெ.(n.) விலை யுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட தலையணி; crown set with precious stones, worn by great monarches.

[மணி + முடி.]

மணிமுடி[2] *maṉi-muḍi,* பெ.(n.) இறுகித் திரண்ட முடிச்சு; hard knot. *"மணிமுடி யேறின" (சிலப்.27:65).*

[மணி + முடி.]

மணிமுடிச்சு *maṉi-muḍiccu,* பெ.(n.) மணி முடி, 2 பார்க்க; see *maṉi-muḍi.*

[மணி + முடிச்சு.]

மணிமுடிச்சோழன் *maṉimuḍi-c-cōḻaṉ,* பெ.(n.) கி.பி.7-ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்த சோழ மன்னன்; a *Cōḻa* king ruled over at middle period of the seventh century.

[மணிமுடி + சோழன்.]

இவனது மகள் மங்கையர்க்கரசி. பாண்டிய மன்னன் அரிகேசரி மாறவர்மன் மங்கையர்க்கரசியை மணந்தான் (பிற்காலச் சோழ வரலாறு – சதாசிவப் பண்டாரத்தார், பக்.8).

மணிமேகலாதெய்வம் *maṉi-mēgalā-deyvam,* பெ.(n.) மணிமேகலை காவியத்தில் மணிமேகலையை ஆற்றுப்படுத்தும் இறை மகள்; goddess, who guided *Maṉimēgalai* in the epic *Maṉimēgalai* (சி.பெ.அக.).

[மணிமேகலை + தெய்வம்.]

மணிமேகலை[1] *maṉi-mēgalai,* பெ.(n.) 1. இந்திரனேவலால் தீவங்கள் சிலவற்றைக் காவல் புரிந்துவந்த தேவதை (சிலப்.15:33);

tutelary goddess gurading certain islands by Indra's command. 2. கோவலனுக்கு மாதவிக்கும் பிறந்த மகள்; the daughter of *Kōvalaṉ*, the hero of the *Cilappatikāram*, by *Mādavi.* 3. கூலவாணிகன் சாத்தனார் இயற்றியதும் ஐம்பெரும் பாவியத்து ளொன்றாகியதும் மணிமேகலையின் துறவைக் கூறுவதுமான புத்த நூல்; a buddhistic epic poem on the renunciation of *Maṇimēgalai*, by *Kūla-vāṇigaṉ-cāttaṉār*, one of *Imperuṅ-kāviyam.* 4. இடையில் அணியும் அணிகலன் வகை; woman's jewelled girdle. *"வாரார வீக்கி மணிமேகலை திருத்தி" (திவ்.இயற். சிறிய.ம.10).*

மணிமேகலைதுறவு *maṇi-mēgalai-tuṟavu,* பெ.(n.) மணிமேகலை, 3 பார்க்க (மணிமே. பதிகம்.97); see *maṇi-mēgalai.*

[மணிமேகலை + துறவு.]

மணிமேடை *maṇi-mēḍai,* பெ.(n.) மணிக்கூடு, 1, 2 பார்க்க (இ.வ.); see *maṇi-k-kūḍu.*

[மணி + மேடை.]

மணியக்காரன் *maṇiya-k-kāraṉ,* பெ.(n.) சிற்றூர், கோயில் முதலியவற்றில் மேல் கண்காணிப்பு செய்வோன்; headman of a village; superintendent of a temple, etc. (R.F.). *"துடிமணியக்காரர்" (விறலிவிடு. 1055).*

தெ. மணியக்காடு; க. மணியக்கார; ம. மணியக்காரன்.

[மணியம்→மணியக்காரன்.]

மணியங்காக்கை *maṇiyaṅ-kākkai,* பெ.(n.) சாம்பல் நிறமுள்ள காக்கை வகை (வின்.); royston crow, ashy in colour.

[மணி + காக்கை.]

மணியச்சட்டம் *maṇiya-c-caṭṭam,* பெ.(n.) தலைமை; உயர்நிலை; official power. *"அவர் மணியச் சட்டமெல்லா முன்னுடைய சட்டமே" (பணவிடு.175).*

[மணியம் + சட்டம்.]

மணியம் *maṇiyam,* பெ.(n.) ஊர், கோயில், மடம் முதலியவற்றை மேற்பார்க்கும் வேலை; office of the village headman, employed as a revenue subordinate of the government for which he holds a *Māṇiyam* or receives payment; superintendence of temples, mutts, palace, custom-houses, etc. *"துர்ச்சனர் தமக்கேற்ற மணியம்" (அறப்.சத.49). "தேளுக்கு மணியம் கொடுத்தால் இரவிற்கு இரவு கொட்டும்" (பழ.).*

மணியம்பலம் *maṇiyambalam,* பெ.(n.) அவை மண்டபம்; hall. *"மறையவர் தம் மணியம்பலத் துளினிதிருந்து" (T.A.S.i, 4).*

[மணி + அம்பலம்.]

மணியரங்கம் *maṇi-y-araṅgam,* பெ.(n.) நிலா முற்றம்; terrace. *"அணிமணியரங்கம்.... மாள்வோ னேறி" (சிலப்.28:65).*

[மணி + அரங்கம்.]

மணியாசப்பலகை *maṇiyāśa-p-palagai,* பெ.(n.) மணியாசுப்பலகை பார்க்க (கொ.வ.); see *maṇiyāśu-p-palagai.*

[மணியாசு + பலகை.]

மணியாசம் *maṇi-y-āšam*, பெ.(n.) 1. மணியாசுப் பலகை பார்க்க; see *maṇiyāšu-p-palagai.* 2. சுவர் முதலியவற்றுக்கு இடும் மெருகு; polish, as given to laster on walls.

[மணியாசுப்பலகை →மணியாசம்.]

மணியாசமிடு-தல் *maṇiyācam-iḍu-*, 4 செ.குன்றாவி.(v.t.) சுவர் முதலியவற்றை மெருகிடுதல் (கொ.வ.); to polish plaster with a polishing board.

[மணியாசம் + இடு-.]

மணியாசனம் *maṇi-y-āšaṉam*, பெ.(n.) மணியாசுப்பலகை பார்க்க (ஈடு, 5, 1, 5 ஜீ); see *maṇiyāšu-p-palagai.*

[மணி + Skt.ஆசனம் > த. இருக்கை.]

மணியாசி *maṇiyāši*, பெ.(n.) 1. மரவகை (யாழ்.அக.); a tree. 2. மணியாசுப்பலகை பார்க்க (வின்.); see *maṇiyācu-p-palagai.*

[மணியாசுப்பலகை →மணியாசி.]

மணியாசிக்கட்டை *maṇiyāci-k-kaṭṭai*, பெ.(n.) மணியாசுப்பலகை பார்க்க (யாழ்.அக.); see *maṇiyācu-p-palagai.*

[மணியாசுப்பலகை →மணியாசுக்கட்டை.]

மணியாசு *maṇiyāšu*, பெ.(n.) மணியாசுப் பலகை பார்க்க (யாழ்.அக.); see *maṇiyācu-p-palagai.*

[மணியாசுப்பலகை →மணியாசு.]

மணியாசுக்கல் *maṇiyāšu-k-kal*, பெ.(n.) சுண்ணாம்பு தீற்றிய சுவரில் மெருகுண்டாம்படி தேய்க்குங் கல் (இ.வ.); stone used for polishing the plaster on walls.

[மணியாசு + கல்.]

மணியாசுப்பலகை *maṇiyāšu-p-palagai*, பெ.(n.) சுவர்த்தலத்திற்கு மெருகிடும் பலகை (கொ.வ.); polishing board.

[மணியாசு + பலகை.]



மணியாட்டங்கொடி *maṇi-yāṭṭaṅ-koḍi*, பெ.(n.) ஒருவகைக் கொடி; a kind of climber (சா.அக.).

மணியாடி *maṇi-y-āḍi*, பெ.(n.) குலகுரு (G.Tp.D.1, 91); family priest.

மணியாத்தி *maṇi-y-ātti*, பெ.(n.) காட்டாத்தி; a small tree.

மணியாமணக்கு[1] *maṇi-y-āmaṇakku*, பெ.(n.) பறங்கியாமணக்கு; chine castor plant (சா.அக.).

மணியாமணக்கு[2] *maṇi-y-āmaṇakku*, பெ.(n.) பப்பாளி (மலை.); papaw.

மணியிலையான் *maṇi-y-ilaiyāṉ*, பெ.(n.) ஈவகை (யாழ்ப்.); a kind of fly.

மணியீரல் *maṇi-y-īral*, பெ.(n.) குடலின் ஒரு பகுதி (வின்.); part of the intestines.

[மணி + ஈரல்.]

மணியுப்பு *mani-y-uppu,* பெ.(n.) கறியுப்பு (சங்.அக.); common salt.

[மணி + உப்பு.]

மணியுயிர் *mani-y-uyir,* பெ.(n.) முத்தி பெற்ற ஆன்மா; liberated salt. *"மணியுயிர் பொன்னுயிர்" (சீவக.3111).*

[மணி + உயிர்.]

மணியூது-தல் *mani-y-ūdu-,* 5 செ.கு.வி. (v.i.) தீயில் ஊதிப்பொன்மணி திரட்டுதல் (யாழ்.அக.); to make gold beads by blowing in a chafing dish.

[மணி + ஊது-,]

மணியெண்ணி[1] *mani-y-enni,* பெ.(n.) நென் மணி எண்ணுபவன் (வின்.); person, as counting grains.

[மணி + எண்ணி.]

மணியெண்ணி[2] *mani-y-enni,* பெ.(n.) கருமி, கஞ்சன்; stingy person.

மணியெலும்பு *mani-y-elumbu,* பெ.(n.) முதுகின் முள்ளந்தண்டு; vertebral.

[மணி + எலும்பு.]

மணிரங்கு *mani-rangu,* பெ.(n.) ஒரு வகைப் பண்; a medlody - type.

மணிராக்கம் *manirākkam,* பெ.(n.) சாதிலிங்கம் (சங்.அக.); vermilion.

மணிலிங்கம் *manilingam,* பெ.(n.) அறிவன் (சங்.அக.); the planet mercury.

மணிவட்டம் *mani-vattam,* பெ.(n.) 1. வீரக் கழல் (மலை.); warrior's anklering. 2. சிலம்பு (வின்.); tinkling anklet. 3. சேகண்டி (வின்.); gong.

[மணி + வட்டம்.]

மணிவடம்[1] *mani-vadam,* பெ.(n.) மணிகளால் ஆன மாலை; one string of round beads. *"திரள் மணி வடம் ஒன்று" (தெ.க.தொ.2, பக்.413).*

[மணி + வடம்.]

மணிவடம்[2] *mani-vadam,* பெ.(n.) 1. மணிச்சரம்; string of gems. 2. அக்க மணி முதலிய மணிகளாலான மாலை; of *rudrāksa* or other beads. 3. முத்து மாலை; string of pearls. 4. பாதசாலம்; anklet. 5. அணிவடம், வீரக்கழல்; warrior's ankle-ring.

[மணி +வடம்.]

மணிவண்ணன் *mani-vannan,* பெ.(n.) திருமால்; *Tirumāl,* as sapphire - coloured. *"திண்டோன் மணிவண்ணா" (திவ்.திருப்பல்.1).*

[மணி + வண்ணன்.]

மணிவலை *mani-valai,* பெ.(n.) மீன் பிடிக்கும் ஒருவகை வலை; casting - net, as having bead.

[மணி + வலை.]

மணிவளர்த்தி *mani-valartti,* பெ.(n.) கண்ணோய் வகை; an eye disease (சா.அக.). *'கடைக்கண்ணில் பலதரமும் மணிப்பால் எழும்புவதும் உடைவதுமா யிருக்கும் கண்ணோய்'.*

மணிவாசல் *mani-vāšal,* பெ.(n.) ஒப்பனை மிகுந்த தலைவாயில்; jewelled or decorated gate, as of a palace.

[மணி + வாசல்.]

மணிவாளம் *maṇi-vāḷam,* பெ.(n.) உருக்கு; steel (சா.அக.).

மணிவித்து *maṇi-vittu,* பெ.(n.) சிற்றாமணக்குக் கொட்டை; small castor seed.

[மணி + வித்து.]

மணிவித்தையுள்ளோன் *maṇi-vittai-y-uḷḷōṉ,* பெ.(n.) தூதுவளை; a thorny climber the leaves one used in curry (சா.அக.).

மணிவினைஞர் *maṇi-viṉaiñar,* பெ.(n.) 1. மணி வேலைக்காரர்; those who work in precious stones. *"இலங்குமணி வினைஞ ரிரீஇய மறுகும்" (மணிமே.28:45).* 2. முத்துக் கோப்பார் (சூடா.); those who string pearls.

[மணி + வினைஞர்.]

மணிவீசம் *maṇi-vīšam,* பெ.(n.) மாதுளை (மலை.); pomegranate.

மணிவேம்பு *maṇi-vēmbu,* பெ.(n.) ஒரு வகை வேம்பு; a kind of margose tree.

[மணி + வேம்பு.]

மணிவேர் *maṇi-vēr,* பெ.(n.) மணியைப் போன்ற திரட்சியை ஆங்காங்குடைய வேர்; a root bearing bead like elevation.

[மணி + வேர்.]

மணீசகம் *maṇi-šagam,* பெ.(n.) நிலவுக்கல்; moonstone.

மணு *maṇu,* பெ.(n.) எட்டு வீசை கொண்ட மணங்கு என்னும் நிறுத்தலளவு (கொ.வ.); maund, a standard weight = 8 viss = 40 seers = 25 lbs., varying in different localities.

[மணங்கு → மணுங்கு → மணு.]

மணுகுப்பூ *māṇugu-p-pū,* பெ.(n.) பயிற்றமா முதலியன சேர்த்துச் செய்த பணியார வகை (இ.வ.); a confection made of pulse, rice.

மணை[1] *maṇai,* பெ.(n.) 1. அமர்வுப் பலகை; low, wooden seat. *"நூலே கரக முக்கோல் மணையே" (தொல்.பொருள்.626).* 2. மண மேடை முதலியன (பிங்.); low, earthern dais. 3. பலகை; board, plank. *"கடலம் பவளம் மணையில்" (சீவக.922).* 4. யானை மேற்றவிசு (பிங்.); howdah. 5. வெட்டுக்கருவின் அடிக்கட்டை (ஐங்குறு.); wooden base for cutting instruments. 6. பாதம் வைக்கும் படி (யாழ்.அக.); foot - stool. 7. பருத்தியினின்று பஞ்சு பிரிக்குங் கருவி (வின்.); instrument for ginning cotton. 8. தேங்காய்த் துருவலகு (யாழ்.அக.); instrument for scraping coconut.

மணை[2] *maṇai,* பெ.(n.) 1. மழுங்கற் கருவி (j.); blunt instrument. 2. மழுங்கல் (யாழ்.அக.); bluntness.

மணைக்கத்தி *maṇai-k-katti,* பெ.(n.) மழுங்கற் கத்தி (வின்.); blunt knife.

[மணை + கத்தி. மொண்ணை → மொணை → மணை.]

மணையன் *maṇaiyaṉ,* பெ.(n.) 1. அறிவுக் கூர்மையற்றவன்; dull person. 2. மழுங்கற் கருவி; blunt weapon.

[மொண்ணை → மொணை → மணை → மணையன்.]

மணையிற்கோட்டம்[1] *maṇaiyiṟ-kōṭṭam,* பெ.(n.) அரக்கோணம் வட்டத்திலிருந்த பண்டைய நாட்டுப் பிரிவுகளில் ஒன்று; an

ancient division of *arak-kōṇam.* *"ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்து புரிசை நாட்டு ஊரோடகத்து" (தெ.க.தொ.5, க.881–10).*

மணையிற்கோட்டம்² *maṇaiyiṟ-kōṭṭam,* பெ.(n.) வாலாசாபேட்டையின் பண்டைய ஆட்சிப் பிரிவு; an administrative division of *Vālāca-pēṭṭai. "இத்தேவர் தேவதானம் மணையிற் கோட்டத்துப் புரிசை நாட்டுச்" (தெ.இ.க.தொ.22, கல்.270–5).*

மத்தக்காளி *matta-k-kāḷi,* பெ.(n.) பூடு வகை (யாழ்.அக.); a plant.

மத்தகக்குழிவு *mattaga-k-kuḻivu,* பெ.(n.) மத்தகங்குழிதல் பார்க்க; see *mattagaṅ-kuḻidal. "மத்தகக்குழிவு தராசம்" (கல்லா. 47).*

மத்தகத்தகடு *mattaga-t-tagaḍu,* பெ.(n.) யானை முகத் தகடு (அ) முன்தலைப் பகுதி தகடு; fore head plate. *"மத்தகத் தகடு ஒன்று பொன் பதின்கழஞ்சு" (தெ.கல்.தொ.2, பக்.410–99).*

[மத்தகம் + தகடு.]

மத்தகங்குழிதல் *mattagaṅ-kuḻidal,* பெ.(n.) மாணிக்கக் குற்றங்களுளொன்று; a flaw in rubies. *"மிகவுறு தராச மத்தகங் குழிதல்" (திருவாலவ. 25:14).*

[மத்தகம் + குழிதல்.]

மத்தகசம் *mattagaśam,* பெ.(n.) மதயானை; must elephant. *"தன்னை யொரு ஞானமத்தகச மென வளர்த்தாய்" (தாயு.மௌன.1).*

[மத்தம் + கசம். கயம்→கசம்.]

மத்தகசுத்தி *mattaga-śutti,* பெ.(n.) மாணிக்கக்கணங்களுள் ஒன்று (திருவாலவா. 25, 13); a good feature of rubies.

[மத்தகம் + சுத்தி.]

மத்தகதி *mattakati,* பெ.(n.) 1. தாழ்வு நடை; slow beat as in pulse. 2. மெல்லிய நடை; slow pace.

மத்தகம்¹ *mattagam,* பெ.(n.) 1. தலை;head. *"மத்தகத்திடைக் கைகளைக் கூப்பி" (திவ். பெரியாழ்.4, 5, 2).* 2. உச்சி; top, crown. *"வாள்..... மத்தகத் திறுப்ப" (சீவக.2251).* 3. நெற்றி; forehead. *"மத்தகஞ்சேர் தனிநோக்கினன்" (திருக்கோ.106).* 4. தலைக்கோலம்; a kind of head ornament, worn by women. *"மத்தக நித்திலம்" (பரிபா.165).* 5. யானையின் கும்பத்தலம் (சூடா.); round protuberance on the temples of an elephant. *"மத்தயானை மத்தகத்து" (திவ்.திருச்சந்.58).* 6. யானை நெற்றி (பிங்.); elephant's fore-head. 7. முகப்பு; front. *"மத்தகமணியொடு" (சிலப்.6, 91).* 8. மலை நெற்றி (சூடா.); face of precipitous rock. 9. தரிசுநிலம் (வின்.); arid land.

[மொத்தகம்→மத்தகம்.]

உடம்பில் மொத்த உருண்டை வடிவானதும் முகாமையானதும் தனித்திருப்பதுமான உறுப்பு தலை என்பது கருதி இப்பெயர் வந்திருக்கலாம். வடமொழியில் 'மஸ்தக' என்பது வேர் காட்டப்படவில்லை.

மத்தகம்² *mattagam,* பெ.(n.) காற்றோட்டமற்ற இறுக்கமான சூழல்; sultriness state of being humid.

மத்தகமாலை *mattaga-mālai,* பெ.(n.) 1. கோத்த மலர் (பிங்.); wreath of flowers. 2. தலையில் அணியும் மாலை; garland worn on the head. *"மத்தகமாலை யொடு மணமகள் போல்வது" (பெருங்.உஞ்சைக்.38, 297).*

[மத்தகம் + மாலை.]

மத்தகமூலம் *mattaga-mūlam,* பெ.(n.) கழுத்து; neck.

[மத்தகம் + மூலம்.]

மத்தகன் *mattagaṉ,* பெ.(n.) மதி மயங்கினவன்; intoxicated person. *"மத்தகர்க்கன்றோ மறுபிறப்பு" (திருமந். 2069).*

[மந்தகன்→மந்தகம்.]

மத்தகாசம் *matta-kāšam,* பெ.(n.) கண்ணோயி னொன்று (யாழ்.அக.); an eye - disease.

மத்தகிரிக்கண்டிராயன் *mattagiri-k-kaṇḍirāyaṉ,* பெ.(n.) பழைய நாணய வகை (பணவிடு.137); an ancient coin.

மத்தகீசம் *mattagīšam,* பெ.(n.) யானை (யாழ்.அக.); elephant.

மத்தகுணம் *matta-guṇam,* பெ.(n.) 1. மத குணம்; rutted condition. 2. யானை; elephant.

[உன்மத்தம் →மத்தம் + குணம்.]

மத்தங்காய்[1] *mattaṅgāy,* பெ.(n.) ஊமத்தங் காய்; fruit of dhatura.

மத்தங்காய்[2] *mattaṅgāy,* பெ.(n.) 1. கடுக்காய் (பாலவா.713); myrobalan. 2. பூசனி, 1 (நாஞ்.); pumkin.

மத்தங்காய்ப்புல் *mattaṅgāy-p-pul,* பெ.(n.) செஞ்சாமை (m.m.); red little millet.

[மத்தங்காய் + புல்.]

மத்தங்காயரிசி *mattaṅgāy-ariši,* பெ.(n.) செஞ்சாமை மணி; grain of red little-millet, as minute.

[மத்தங்காய் + அரிசி.]

மத்தங்கோரை *mattaṅkōrai,* பெ.(n.) பாய்க் கோரை; a weed with which mat is made.

[மத்தம் + கோரை.]

மத்தஞ்சாறு *mattañcāṟu,* பெ.(n.) 1. சவுட்டுப்பு; a salt extracted from fuller's eath. 2. ஊமத்தஞ்சாறு; juice of dhatura.

மத்தப்புடல் *matta-p-puḍal,* பெ.(n.) பன்றிப் புடல்; a variety of snake gourd which is short and stout.

[மத்தம் + புடல்.]

மத்தம்[1] *mattam,* பெ.(n.) 1. களிப்பு; intoxication form liquor; passion, lust. *"மத்தக்கரியுரியோன்" (திருக்கோ.388).* 2. மயக்கம்; bewilderment. *"மத்தமாம் பிணிநோய்க்கு" (தேவா.462, 3).* 3. யானை மதம் (திருக்கோ.388, உரை); frenzy, as of a must elephant. 4. பித்தியம்; தெரள்; கோட்டி; கிறுக்கு; madness. *"மத்த மனத்தொடு மாலிவ னென்ன" (திருவாச.5, 3).* 5. செருக்கு (உரி.நி.); pride, haughtiness. 6. கருவூமத்தை; people stramony. *"மத்தநன் மாமலரும் மதியும் வளர்" (தேவா.923, 8).* 7. எருமைக்கடா (யாழ்.அக.); buffalo. 8. குயில் (யாழ்.அக.); cuckoo.

[முல் (பொருந்தற் கருத்து வேர்)→முள்→மள் →மட்டு→மத்து→மத்தம் (வே.க. 4:67).]

மத்தம்² *mattam,*பெ.(n.) மத்து; chuming stick. *"ஆய்மகள் மத்தம் பிணித்த கயிறுபோல்" (கலித்.110).*

[மத்து→மத்தம்.]

மத்தமா *mattamā,* பெ.(n.) யானை (நிகண்டு.); must elephant.

[மத்தம் + மா. மா = விலங்கு.]

மத்தயம் *mattayam,*பெ.(n.) நீர்க் கடம்பு; a tree growing near water (சா.அக.).

மத்தரி *mattari,*பெ.(n.) பறை வகை (பரிபா.12, 41); a kind of drum. *"மத்தரி தடாரி தண்ணுமை மகுளி ஒத்தளத்து சீர்தூக்கி யொருவர் பிற்படார்" (பரிபா.12:93–4).*

மத்தவாரணம் *matta-vāraṇam,* பெ.(n.) 1. மதயானை; elephant in rut. *"மத்தவாரணம் பிடிகளோடு வாரிதோய் கானியாறும்" (பாரத. அருச்சுனன்றவ.2).* 2. மச்சின் மேலுள்ள தாழ்வாரம் (யாழ்.அக.); verandah of the upper floor. 3. வீட்டின் மேன்மாடத்துறுப்பு; attic turret or small room on the top-floor of a large building. *"தோழியருந் தானு நெடுமத்த வாரணத்தி னின்று" (ஏகாம்.உலா.27).* 4. நந்தவனம் (யாழ்.அக.); flower-garden. 5. திண்டு (வின்.); pillow in the shape of a half-moon. 6. பாக்கு வெற்றிலைத் துவையல் (யாழ்.அக.); betel leaf and nut pounded together.

மத்தளக்கட்டை *mattaḷa-k-kaṭṭai,* பெ.(n.) மத்தளத்தில் மரத்தாற் செய்த பகுதி; wooden frame of a drum.

[மத்தளம் + கட்டை.]

மத்தளம் *mattaḷam,* பெ.(n.) பறை வகை; a kind of drum. *"மத்தளங் கொட்ட" (திவ்.நாய்ச்.6, 6).*



[முல்→முள்→முள்கு. முள்குதல் = மயங்குதல். முள்→முளி = உடல்மூட்டு, மரக்கணு. முளி→ முழி →மொழி = முழங்கை, முழங்கால் முதலியவற்றின் பொருத்து. மரஞ்செடி கொடிகளின் கணு, கரும்பின் இருகணுவிற் கிடைப்பட்ட பகுதி, கரும்பின் மொழிபோற் சொற்றொடர்க்குறுப்பான சொல். முள்→முழு→முழுவு. முழுவுதல் = பொருந்தித் தொடுதல், முத்தமிடுதல், தழுவுதல். முழுவு→முழவு. முழவுதல் = நெருங்கிப் பழகுதல். முழவு→முழாவு. முழாவுதல் = நெருங்கிப் பழகுதல். முழுத்தல் = திரளுதல், பருத்தல், முழுத்த ஆண் பிள்ளை. முழுஆள்→முழாள் = வளர்ச்சியடைந்த பெரிய ஆள். முழு→முழா = திரண்ட முரசு, குடமுழா. முல்→முது →முத்து. முத்துதல் = சேர்தல், ஒன்றை யொன்று தொடுதல், அன்பிற்கறிகுறியாக இருவர் முகங்கள் அல்லது உதடுகள் பொருந்தித் தொடுதல், திரளுதல். முத்து→முத்தை = திரட்சி, சோற்றுருண்டை. மொலு→மொது. மொது மொது வெனல் = திரளுதற் குறிப்பு. மொதுமொதுவென மக்கள் குவிந்தார்கள் (உ.வ.). மொது→மொத்து. மொத்துதல் = உரக்க அல்லது வலுக்க அடித்தல். நன்றாய் மொத்திவிட்டார்கள் (உ.வ.). மொத்து = வலுத்த அடி. மொத்து→மொத்தி = புடைப்பு.

மொத்து→மொத்திகை→மத்திகை = குதிரையை அடிக்கும் சமட்டி. மொத்து→மொத்தளம் = கூட்டம், மொத்தம். மொத்தளம்→மத்தளம் = இருந்தடிக்கும் பெரு மதங்கம் அல்லது இருதலை முழா.]

மத்தளி[1] *mattaḷi,* பெ.(n.) 1. இசைக்கருவி வகை (திவ்.பெரியாழ்.3, 4, 1); a kind of drum. 2. உடல்; body. *"மத்தளி மண்ணாய் வயங்கிய வாறே" (திருமந்.189).*

மத்தளி[2] *mattaḷi,* பெ.(n.) மத்தளிகன் பார்க்க; see *mattaḷigaṉ. "பாதாள முஞ்சுதி யடங்கமிகு தொனி செயும் பண்பு பெறுவோன் மத்தளி" (திருவேங்.சத.64).*

மத்தளிகன் *mattaḷigaṉ,* பெ.(n.) மத்தளம் வாசிப்போன்; one who plays the *mattaḷam. "மத்தளிகள் பின்போனாள்" (பிரபுலிங்.மாயை. கோலா.45).*

[மத்தளி→மத்தளிகன்.]

வ. மர்தலிகா.

மர்தலிகா என்னும் வடிவம் மா.வ.சு.வில் இல்லை. செ.அக.வில் மட்டுமே உள்ளது (வ.வ.217).

மத்தன் *mattaṉ,* பெ.(n.) 1. பித்துப் பிடித்தவன்; crazy fellow. *"மத்தனேன் பெறு மாமலமாய" (தாயு.பொன்னை.35).* 2. அதியுற்சாகி; wild enthusiast. *"பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து" (திருவாச.3, 153).* 3. அறிவு மயக்க மடைந்தவன்; bewildered person. *"இறந்தனர் போல வீழ்ந்த மத்தரை" (பாரத.நிரை.102).* 4. செருக்குள்ளவன்; proud fellow. *"மத்தனிராவணன் கொதித்தான்" (இரமநா.உயுத்.44).*

வ. மத்த.

[முல் (பொருந்தற் கருத்துவேர்). முல்→ முள் →மள்→மட்டு = கள், தேன், இன்சாறு, காமக் குடிப்பு. மட்டு→மத்து→மத்தம்→மத்தன்.]

மத்தனம் *mattaṉam,* பெ.(n.) அழுத்திப் பிடிக்கை; shampooing. *"மருவிய வழிபாடன்றே மத்தன மென்ப" (கந்தபு. இந்திரபுரி.44).*

மத்தனலிங்கம் *mattaṉa-liṅgam,* பெ.(n.) மருக்காரை (மூ.அ.); emetic-nut.

மத்தனும்பழம் *mattaṉum-paḻam,* பெ.(n.) பொன்னாங்காய்; fruit of soap nut tree (சா.அக.).

மத்தாகி *mattāgi,* பெ.(n.) தேன்; honey (சா.அக.).

மத்தாகிக்கூடு *mattāgi-k-kūḍu,* பெ.(n.) தேன் மெழுகு; bee's wax (சா.அக.).

மத்தாகிதம் *mattāgidam,* பெ.(n.) தேன்; honey (சா.அக.).

மத்தாடி *mattāḍi,* பெ.(n.) 1. நீலவூமத்தை (L.); blue thorn apple. 2. கருவூமத்தை (மலை.); purple stramony.

மத்தாடிப்புகை *mattāḍi-p-pugai,* பெ.(n.) ஊமத்தம் பூவின் புகை, நெஞ்சக நோய்க்கு மருந்தாகப் பிடிப்பது; smoking the dry flower powder of dhature specially of the black variety for dhatura (சா.அக.).

[மதம்→மத்தம் = ஊமத்தம். மத்தம்→மத்தாடி + புகை.]

மத்தாடு-தல் *mattāḍu-,* 5 செ.கு.வி.(v.i.) பெண்கள் கைகோத்து ஆடுதல் (இ.வ.); to whirl in play, as girls holding each other by the hand.

[மத்து + ஆடு-,]

மத்தாளமணி *mattāḷamaṇi,* பெ.(n.) கழுத்தணி வகை (பரதவ.); a necklace.

மத்தான் *mattāṉ,* பெ.(n.) கருமத்தை; black variety or blue variety of dhatura (சா.அக.).

மத்தி[1]-த்தல் *matti-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. மருந்து கலத்தல் (கொ.வ.); to mix, as medicine. 2. அடித்தல் (இ.வ.); to beat. 3. தேய்த்தல் (யாழ்.அக.); to rub. 4. மத்தினாற் கடைதல்; to churn. *"பாற்சமுத்திரத்தை மத்தித்த திருமால்" (கூர்மபு.).*

[மத்து→மத்தி-.]

மத்தி[2] *matti,* பெ.(n.) மீன்வகை; a fish. *"மத்தியுஞ் சிறு பொத்தியும்" (குருகூர்ப் பள்ளு).*

மத்தி[3] *matti,* பெ.(n.) கழகக் காலத்து வீரன்; a warrior of *saṅgam* age (சி.பெ.அக.).

இவன் கழார் என்னும் ஊரினன். மாமூலனார் (அகநா.211), பரணர் (அகநா.6), ஓரம்போகியார் (ஐங்குறு.571) ஆகியோரால் பாடப்பட்ட தலைவன்.

மத்திகா *mattigā,* பெ.(n.) பருத்தி; cotton plant (சா.அக.).

மத்திகை[1] *mattigai,* பெ.(n.) நடுவிரல்; middle finger (சா.அக.).

மத்திகை[2] *mattigai,* பெ.(n.) 1. குதிரைச் சம்மட்டி; whip, horse whip. *"மத்திகை வளைஇய மறிந்து வீங்கு செறிவுடை" (முல்லைப்.59).* 2. கழி; staff, rod. *"வேயின் மத்திகையர்" (அரிசமய. குலசே. 54).* 3. விளக்குத் தண்டு (சூடா.); lamp-stand. 4. பூமாலை (பிங்.); flower garland.

மத்திடு-தல் *mattiḍu-,* 17 செ.குன்றாவி.(v.t.) கடைதல்; to churn. *"மானிலாவிய நோக்கியர் படிறிடை மத்திடுதயிராகி" (திருவாச.5, 40).*

[மத்து + இடு-.]

மத்தியகெந்தம் *mattiya-kendam,* பெ.(n.) மகிழம்பூ; a very fragrant small flower of a tree (சா.அக.).

மத்தியபாதம் *mattiya-pādam,* பெ.(n.) சிறு மூளையின் இருபாகங்களையும் இணைத்துக் கொண்டிருக்கும் நார்க்கட்டுகளாலாகிய கால்களில் ஒன்று; one of fibrous bands by which the cerebellum is attached to the brain stem (சா.அக.).

மத்தியம் *mattiyam,* பெ.(n.) 1. கள் அல்லது வெறியம்; toddy or arrack. 2. மயக்கும் பொருள்; any substance that causes giddiness (சா.அக.).

மத்தியமண்டபம் *mattiya-maṇḍabam,* பெ.(n.) மது நுரை; the forth of liquor (சா.அக.).

மத்தியமிகை *mattiya-migai,* பெ.(n.) கன்னிப் பெண்; middle aged girl, who is chaste (சா.அக.).

மத்தியாத்திரம் *mattiyāttiram,* பெ.(n.) சிறுகுடல்களை முதுகுடன் இணைக்கும் ஒரு சவ்வு; mesantery a membrane in the abdominal cavity serving to retain the intestines and their appendages in proper position by uniting them with the vertibral column (சா.அக.).

மத்தியாமோதம் *mattiyā-mōdam,* பெ.(n.) மகிழ மரம்; a tree which bears small flowers which one very fragrant but not attractive (சா.அக.).

மத்திரக்கல் *mattira-k-kal,* பெ.(n.) கருங்கல்; granite (சா.அக.).

மத்தின்சாறு *mattiṉ-šāṟu,* பெ.(n.) ஊமத்தஞ்சாறு; juice of dhatura leaves.

[மத்து + இன் + சாறு.]

மத்தின்வேர் *mattiṉ-vēr,* பெ.(n.) ஊமத்தையின் வேர்; root of dhatura. *"இட்டமாந் தேற்றாக் கொட்டை மத்தின்வேர் வசம்பு மஞ்சள்" (பரராச சேகரம்).*

[மத்து + இன் + வேர்.]

மத்து[1] *mattu,* பெ.(n.) 1. தயிர் முதலியன கடையுங்கருவி; churning staff. *"ஆயர் மத்தெறி தயிரி னாயினர்" (சீவக.421).* 2. பருப்பு, கீரை முதலியன கடையுங் கருவி; churning staff.



[முல் (பொருந்தற்கருத்து வேர்). முல்→முள். முள்→முட்டு→முட்டி→முடி→மடி.முட்டு→மட்டு→மட்டம். மட்டு→மட்டி. முட்டு→முத்து. முத்துதல் (முட்டுதல்) = பொருந்துதல். முத்து (முட்டு)→மத்து (மட்டு) = பொருந்தி கடையும் கருவி. இனி, முத்து→மொத்து = (மொத்தை) மொத்து→மத்து எனினுமாம். கடை கருவி அடியில் மொத்தமா யிருப்பதனால் மத்தெனப்பட்டது (வே.க.4:50).]

மத்து[2] *mattu,* பெ.(n.) ஊமத்தை; thorn apple or purple stramony. *"நன்மதத்தை நாகத் தயல் சூடிய நம்பனே போல்" (கம்பரா. உருக்.கா.81).*

[முல் (பொருந்தற்கருத்து வேர்). முல்→முள்→மள்→மர்→மறு. ஒ.நோ. கள்→கர்→கரு. முள்→முட்டு. முட்டு (முத்து)→மட்டு (மத்து). மத்து = கலப்பு, கலக்கம், மயக்கம், மயக்கஞ் செய்யும் பித்தம், மயக்கம் தரும் கள், தீங் கள்ளாகிய தேன், பித்தமுண்டாக்கும் ஊமத்தை (வே.க.4:67).]

மத்து[3] *mattu,* பெ.(n.) 1. மோர்; butter-milk, watery curds. *"அவந்தி மத்துமாற்றப் பளவைப் படிப்பலமாம்" (தைலவ.தைல.59).* 2. தயிர்; curdled mild and cream.

[முத்து→மத்து. மத்தினால் கடைதற் குரியதும், கடைந்த பின் கிடைப்பதும்.]

மத்துவம் *mattuvam,* பெ.(n.) போதை; intoxicant (சா.அக.).

மத்துவாசம் *mattuvāšam,* பெ.(n.) பன்னீர்; rose water(சா.அக.).

மத்தை[1] *mattai,* பெ.(n.) கடலலை; tide.

மத்தை[2] *mattai,* பெ.(n.) 1. மயக்கந் தருவது; intoxicant. 2. ஊமத்தை; dhatura.

மத்தையை *mattaiyai,* பெ.(n.) 1. நாணமும் காமமும் சமமாக வுள்ளவள்; a woman of normal modesty and love. 2. இடுப்பு; waist. 3. நடுவிரல்; middle finger (சா.அக.).

மத¹–த்தல் *mada-,* 4 செ.கு.வி.(v.i.) 1. மதங்கொள்ளுதல்; to be furious, as by must, fanaticism. *"மிகவு மதத்து மதம் பொழிந்து" (ஞானவா.நிருவா.47).* 2. கொழுத்தல்; to be luxuriant or fruitful; to grow fat. 3. காமமிகுதல்; to be wanton or lascivious. 4. களித்தல்; to be intoxicated. 5. செருக்குதல்; to be arrogant. 6. மயங்குதல் (வின்.); to be bewildered.

[முல்→முள்→மள்→மட்டு→மத்து→மது. மது →மதர்→மதர்வு =வலிமை. மதர்வு→மதவு→மத (வே.க.4:69).]

மத² *mada,* பெ.(n.) 1. வலிமை; strength. 2. அழகு; beauty. 3. மிகுதி; excess; abundance. 4. மடமை; ignorance. *"மதவே மடனும் வலியும் ஆகும்" (தொல்.சொல்.377).*

[மது→மதர்→மத.]

மதக்கம்¹ *madakkam,* பெ.(n.) 1. பேருண்டி, குடி, கஞ்சா முதலியவற்றாலுண்டாம் மயக்கம்; stupor caused by over-eating or drinking or taking narcotics. *'ஆறு மதக்கத்தினாலல்லவா எங்களை விழுங்காமல் விட்டிட்டது' (உ.வ.).* 2. களைப்பு, சோர்வு (யாழ்.அக.); weariness. 3. ஈடுபாடு இன்றி மேம்போக்காகச் செய்யும் செயல்; not fully involvement.

[மது→மத→மதக்கம்.]

மதக்கம்² *madakkam,* பெ.(n.) வதங்குகை (யாழ்.அக.); dryness.

மதகம்¹ *madagam,* பெ.(n.) காஞ்சிரை; a tree (சா.அக.).

மதகம்² *madagam,* பெ.(n.) யானை மத்தகம் (பிங்.); head of an elephant.

மதகம்³ *madagam,* பெ.(n.) சுக்கு (சங்.அக.); dried ginger.

மதகயம் *madagayam,* பெ.(n.) மதகரி பார்க்க; see *madagari.*

[மதம் + கயம்.]

மதகரி *madagari,* பெ.(n.) ஆண்யானை (திவா.); male elephant, as rutting.

[மதம் + கரி.]

மதகரிக்கணை *madakari-k-kaṇai,* பெ.(n.) யானைத்திப்பிலி (தைலவ.தைல.); monkey-creeper.

[மதகரி + காணை.]

மதகரிக்குளம்பு *madakari-k-kuḷambu,* பெ.(n.) யானைக்குளம்பு; foot of elephant.

[மதகரி + குளம்பு.]

மதகரிநீர் *madagari-nīr,* பெ.(n.) யானை மூத்திரம்; urine of elephant.

[மதகரி + நீர்.]

மதகரிவேம்பு *madakari-vēmbu,* பெ.(n.) 1. பெருமர வகை; chittagong wood. 2. மரவகை; common bastard cedar. 3. மரவகை; trifoliate red cedar.

மதகு *madagu,* பெ.(n.) குளம் முதலியவற்றில் நீர் பாயும் மடை வகை; covered channel, drain, conduit, sluice to let off water from a tank. *"புனல் மதகில் வாழ்முதலை" (திருவிசை.கருவூர்.9:2).*

மதகுஞ்சரம் *mada-kuñcaram,* பெ.(n.) அத்தி; fig (சா.அக.).

மதகுத்துவாரம் *madagu-t-tuvāram,* பெ.(n.) மதகுத்துளை பார்க்க; see *madagu-t-tuḷai.*

[மதகு + Skt. துவாரம்.]

மதகுத்துளை *madagu-t-tuḷai,* பெ.(n.) மதகின் கண்; vent way.

[மதகு + துளை.]

மதகுமுழுகி *madagu-muḻugi,* பெ.(n.) நீரில் முழுகி மதகினைச் செப்பனிடுவோன்; one whose business it is to dive and repair a sluice.

[மதகு + முழுகி.]

மதங்கநாதர் *madaṅga-nādar,* பெ.(n.) தொன்நாதருளொருவர் (யாழ்.அக.); a great siddha.

மதங்கம்[1] *madaṅgam,* பெ.(n.) சிறுவாச்சிய வகை; a small drum. *"மதங்கமொடு துந்துபி.... முழங்கவே" (திருவாத.பு.கடவுள்.1).*

மதங்கம் – ம்ருதங்க

மதங்கம் என்பத மத்தளத்தின் சிறுமை. இடக்கண்ணையும் வலக்கண்ணையும் தொடர்ந்து தட்டுவதால் ஏற்படும் ஒலியினின்று இப்பெயர் பெற்றது.

"மதங்கமொடு துந்துபி... முழங்கவே" (திருவாத.பு.கடவுள்.1).

ம்ருதங்க என்னும் சொல் பின்வருமாறு இருவகையுள் ஒன்றில் தோன்றியிருக்கலாமென்று மா.வி.அ.கூறும்.

(1) ம்ருதம் + க = அடிக்கும்போது செல்வது ("going about while being beatern")

இப்பொருளில் க(ga) என்பது கம்(gam) என்பதன் கடைக்குறை.

(2) மர்தல் – ம்ருதங்க.

ஆரியர் வருமுன்பே தமிழ் முத்தமிழாய் வழங்கிற்றென்பதும் மதங்கம் ஆட்டிற்கும் பாட்டிற்கும் உரிய இசைத்தமிழ்க் கருவி யென்பதும், அறிக (வ.வ.217).

மதங்கம்[2] *madaṅgam,* பெ.(n.) மதங்கியார் பார்க்க (யாழ்.அக.); see *madaṅgiyār.*

மதங்கம்[3] *madaṅgam,* பெ.(n.) 1. யானை (யாழ்.அக.); elephant. 2. முகில் (யாழ்.அக.); cloud. 3. ஒரு மலை (யாழ்.அக.); a mountain. 4. ஓராகமம் (சங்.அக.); an *āgama* in sanskrit.

மதங்கம்புல் *madaṅgam-pul,* பெ.(n.) மத்தங்காய்ப்புல் பார்க்க; see *mattaṅgāy-p-pul.*

[மத்தங்காய்ப்புல் → மதங்காய்ப்புல் → மதங்கம்புல்.]

மதங்கயம் *madaṅgayam,* பெ.(n.) யானை; elephant. *"மதிக்கு மதங்கய மனைய வரக்கன்" (சேதுபு.பிரமகத்.7).*

[மதம் + கயம்.]

மதங்கர் *madaṅgar,* பெ.(n.) இசை, கூத்து இவற்றைத் தொழிலாகக் கொண்ட ஓரினத்தவர்; a communities, whose profession is music and dance (சி.பெ.அக.).

மதங்கள் *madaṅgaḷ,* பெ.(n.) மிளகு; pepper (சா.அக.).

மதங்கன்[1] *madaṅgaṉ,* பெ.(n.) ஒரு முனிவன்; a saint. *"மதங்கன திருக்கை சேர்ந்தார்" (கம்பரா.கவந்தன்.58).*

மதங்கன்² *madaṅgaṉ*, பெ.(n.) 1. பாணன் (பிங்.); bard. 2. பெரும்பாணன் (சிலப்.5:184, உரை); a class of *pāṉars.*

மதங்கி¹ *madaṅgi*, பெ.(n.) தம் இரண்டு கைகளிலும் வாட்படை ஏந்திச் சுழன்று ஆடும் ஆடல் மகளிர்; dancing girls who dance with swords on her both hands (சி.பெ.அக.).

மதங்கி² *madaṅgi*, பெ.(n.) 16 அகவையுடைய பெண்; girl of 16 years (சா.அக.).

மதங்கி³ *madaṅgi*, பெ.(n.) 1. மலைமகள் (சங்.அக.); *Malaimagaḷ*, the consort of *Śivaṉ*. 2. காளி (வின்.); *Kāḷi*. 3. பாண்மகள் (பிங்.); songstress. 4. ஆடல் பாடல் வல்லவள்; singing danseuse. *"மதங்கியரை யொத்த மயில்" (கம்பரா.கார்கால.29).*

மதங்கியார் *madaṅgiyār*, பெ.(n.) இரண்டு கைகளிலும் வாளெடுத்துச் சுழற்றியாடும் இளம்பெண்ணான மதங்கி மீது ஒருவன் காமுறுவதாகப் பாடும் கலம்பகவுறுப்பு (குமர.பிர.மதுரைக்கலம்.15, தலைப்பு); a characteristic theme in *Kalampagam*, describing the love of a man towards a beautiful young actress who plays with swords in both hands.

மதங்கை¹ *madaṅgai*, பெ.(n.) யானைத் திப்பிலி; long pepper (சா.அக.).

மதங்கை² *madaṅgai*, பெ.(n.) அத்தி (சங்.அக.); fig.

மதங்கொள்-தல் *madaṅ-koḷ-*, 16 செ.கு.வி. (v.i.) மதத்தல்; to grow fatty, lusty.

[மதம் + கொள்-தல்.]

மதச்சுவடு *mada-c-cuvaḍu*, பெ.(n.) யானையின் மதநீர் வடித்துண்டான தழும்பு (பிங்.); trace left by the flow of ichorous discharge from the temples of a rutting elephant.

[மதம் + சுவடு.]

மதசத்தி *mada-šatti*, பெ.(n.) மதுக்களி (மணிமே.27:265, அடிக்குறிப்பு); power to intoxicate, as of spirits.

மதசருக்கரை *mada-carukkarai*, பெ.(n.) கன்னல் சருக்கரை; cane sugar (சா.அக.).

மதசலம் *mada-calam*, பெ.(n.) யானையின் மதநீர்; must of a rutting elephant.

[மதம் + சலம்.]

மதசாரணை *mada-šāraṇai*, பெ.(n.) தண்ணீர்விட்டான் கிழங்கு (சங்.அக.); climbing asparagus.

மதசாரம் *madašāram*, பெ.(n.) இலவமரம்; silk - cotton tree (சா.அக.).

மதசாறம் *mada-šāṟam*, பெ.(n.) அன்னம்; swan (சா.அக.).



மதண்டி *madaṇḍi*, பெ.(n.) வல்லாரை (சங்.அக.); Indian pennyword.

மதணன் *madaṉaṉ*, பெ.(n.) கடல்மீன் வகை; a sea - fish.

மதத்தவள் *madattavaḷ*, பெ.(n.) மதங் கொண்டவள்; a meritricious or a lusty woman; intriguing woman (சா.அக.).

[மதம்→மதத்தவள்.]

மதத்தன் *madattaṉ*, பெ.(n.) 1. மதத்திற் பற்றுள்ளவன்; religious person. *"மதத்தரின் மறுத்து" (தணிகைப்பு.அகத்திய. 110).* 2. கருவம் பிடித்தவன் (யாழ்.அக.); proudman, as one intoxicated.

[மதம்→மதத்தன்.]

மதத்திரட்டு *mada-t-tiraṭṭu*, பெ.(n.) ஒருசார் கொள்கையைத் திரட்டிச் சொல்லும் நூல்; treatise containing the codified doctrines of any system of thought. *"மயன் மதத் திரட்டை யெல்லாம் விரித்தன்ன" (இரகு. தேனுவந்.121).*

[மதம் + திரட்டு.]

மதத்து *madattu*, பெ.(n.) வெறியை யுண்டாக்கும் கூட்டு மருந்து வகை (இ.வ.); an intoxicating compound.

மதத்துப்போதல் *madattu-p-pōdal*, பெ.(n.) மத–த்தல் பார்க்க; see *mada-*.

மததயிலம் *mada-tayilam*, பெ.(n.) மதநீர் பார்க்க; see *mada-nīr*. *"பாயுங் களிற்றின் மததயிலம் பாயப்பாய வாரீரே" (கலிங்.493).*

மதநீர் *mada-nīr*, பெ.(n.) 1. யானையின் மதநீர்; must of a rutting elephant. 2. ஒண்ணீர்; semen. *"மதநீர்பாய மெலிந்தனர்" (கந்தபு. ததீசியுத்.40).*

[மதம் + நீர்.]

மதப்பாளிப்பூடு *mada-p-pāḷi-p-pūḍu*, பெ.(n.) முடக்கொற்றான்; a creeper.

மதப்பு *madappu*, பெ.(n.) 1. களிப்பு; being intoxicated; exhilaration. 2. சிற்றின்பத் தோய்வு; wantonness or voluptuousness. 3. வெறி கொள்ளுகை; being ferocious as beasts. 4. நில முதலியவற்றின் செழிப்பு; being fertile, as land, being luxuriant, as trees or vegetation.

[மதம்→மதப்பு.]

மதப்பூ *madappū*, பெ.(n.) மராட்டிமொக்கு (தைலவ.தைல.135); an aphrodisiac.

மதபன்னி *mada-paṉṉi*, பெ.(n.) மதரபன்னி பார்க்க (சங்.அக.); see *madara-paṉṉi*.

மதபாணி *mada-pāṇi*, பெ.(n.) மதரபன்னி பார்க்க (சங்.அக.); see *madara-paṉṉi*.

மதபேதம் *mada-pēdam*, பெ.(n.) 1. கொள்கை வேறுபாடு; difference of opinion or belief. 2. புறச்சமயம்; heterodox religious system.

*[மதம்[1] + **Skt.**பேதம்.]*

மதபேதி *mada-pēdi*, பெ.(n.) புறச்சமயி (யாழ்.அக.); person belonging to a heterodox religious system.

[மதம் + பேதி.]

மதம்[1] *madam*, பெ.(n.) 1. மதித்தறிந்து கையாளும் நூல் நெறிமுறை; opinion, belief. *"எழுவகை மதமே" (நன்.11).* 2. அம்மை யிம்மை யும்மை (மறுமை) நிலைகளை மதித்தறிந்து கடைப்பிடிக்குங் கொள்கை; religious tenet, sect, religion. *"தத்த மதங்களே யமைவதாக" (திருவாச.4:52).*

சிவமதம், மால் மதம் (உ.வ.). 3. அறிவு (யாழ்.அக.); knowledge. 4. உடன்பாடு, ஒப்பு, இயைபு (யாழ்.அக.); agreement, consent. 5. பெற்றதைப் பெரிதாக மதிப்பது (சி.சி.2, 80, மறைஞா.); esteeming highly any favour received. 6. கற்பித்தல்; கல்வி (யாழ்.அக.); teaching. 7. பல (நாமதீப.772); many. 8. ஆறு; the number '6', as from the six 'madam'.

மதி → மதம் = மதித்தறிந்து கையாளும் நூல் நெறிமுறை, அம்மையிம்மை யும்மை நிலைகளை மதித்தறிந்து கடைபிடிக்குங் கொள்கை.

மதி→மதம் = 1. பெரிதாக மதிப்பது, 2. கருத்து, 3. கொள்கை, 4. நெறிமுறை, 5. சமயம். *"தத்தம் மதங்களே யமைவதாக" (திருவாச.4, 52).* வ. மத (mata).

மத என்னும் சமற்கிருதச் சொல்லை மன் என்னும் மூலத்தினின்று திரிப்பர். மன் என்பதினின்று, மான், மா, மானம் முதலிய சொற்கள் பிறக்குமே யன்றி மதி அல்லது மதம் என்னும் சொல் தோன்றாது.

கடைதலைக் குறிக்கும் மதி என்னும் வினைச் சொல்லும், மத்து என்னும், வடிவினின்றே திரிந்திருக்கிறது. முத்து → மொத்து →மத்து = மொத்தையாக விருக்கும் கடைகருவி.

மத்து → மத்தி, மத்தித்தல் = மத்தினாற் கடைதல். மத்தி → மதி. மதித்தல் = 1. கடைதல். "மந்தரங் கொடு மதித்த நாள்" (சேதுபு.சங்கர.20). 2. கடைதல் போல் விரலா லழுத்தி மசியச் செய்தல். மதி → மசி. மசிதல் = கடைந்ததுபோற் களியாதல். குழந்தைக்குச் சோற்றை மதித்து ஊட்டு என்னும் வழக்கை நோக்குக.

மத்து என்னும் பெயரை மந்த (mantha) என்றும், மத்தித்தல் என்னும் வினையை மத் (math) என்றும், சமற்கிருதத்தில் திரித்திருக்கின்றனர். இவற்றிற்கு வேர் தமிழிலேயே யன்றி வடமொழியிலில்லை.

அளத்தற் பொருள் குறித்த mete என்னும் ஆங்கில வினைச் சொல் கவனிக்கத் தக்கது. E. mete (to measure), OE, OS. metal ON. meta, Goth. mital, OHG. mezzan.

E. meter = person or thing that measures. Metron (measure) என்னும் கிரேக்கச் சொல் மாத்திரை என்பதன் திரிபு. மா → மாத்திரம் → மாத்திரை – வ. மாத்ரா. மாத்தல் என்னும் வினை தமிழில் வழக்கற்றது.

எழுவகை மதமே உடன்படல் மறுத்தல்
பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
தாஅ னாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே
பிறர்நூற் குற்றங் காட்டல் ஏனைப்
பிறிதொடு படாஅன் தன்மதங் கொளலே

என்னும் நன்னூல் நூற்பாவினின்று (11), ஒரு பொருள் அல்லது நெறிமுறை (principle) இன்னவா றிருத்தல் வேண்டுமென்று மதித்துக் கொள்வதே மதம் என்றும், சமயம் மதமென்னும் பெயர் பெற்றது.

தெய்வம் உண்மையின்மை, தெய்வத்தின் தன்மை, தெய்வத்தால் ஏற்படும் நன்மை, தெய்வத்திற்கும் மாந்தனுக்கும் உள்ள உறவு, மறுமை யுண்மையின்மை, மறுமையில் இருக்கும் வாழ்வுநிலை ஆகியவற்றைப் பற்றி இன்னவாறிருக்கு மென்று ஒருவர் மதித்துக் கொள்வதே, பொதுவாக மதமென்று சொல்லப்படுவதாகும்.

தெய்வமும் மறுமையும் புறக்கண்ணாற் காணப்படாத பொருள்களாதலாலும், மக்களின்

மனப்பான்மை வெவ்வேறு வகைப்பட்டிருப்பதனாலும், மதமானது, ஒவ்வொருவரும் தத்தம் அறிவிற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு மதித்துக் கொள்வதாகவே யுள்ளது.

தெய்வம் உண்டென்று கொள்வது போன்றே, இல்லையென்று கொள்வதும், மதமாகும். ஆகவே, நம்பு மதம், நம்பா மதம் என மதம் இருவகைப்படும். அவற்றுள் ஒவ்வொன்றும் பல திறப்பட்டுள்ளது. ஆயின், நம்பு மதப் பிரிவுகளே மிகப் பற்பல திறத்தனவா யுள்ளன (த.ம.:வ.வ.).

மதம்² *madam,* பெ.(n.) 1. மகிழ்ச்சி; exhilaration, exultation, joy. *"காதலி சொல்லிற் பிறக்கு முயர்மதம்" (நான்மணி.7).* 2. மதசலம் பார்க்க; see *mada-šalam. "மதயானை" (சீவக.2485).* 3. வலிமை; strength. *"படிமதஞ் சாம்ப வொதுங்கி" (பரிபா.4:18).* 4. செருக்கு (பிங்.); pride, arrogance, presumption. *"போரெதிர்ந் தேற்றார் மதுகை மதந்தப" (பரிபா.18:1).* 5. சாறம் (வின்.); animal or vegetable gluten; essence, juice. 6. தேன்; honey. *"மதங்கமழ் கோதை" (சீவக.2584).* 7. வெறி (சங்.அக.); madness; frenzy. 8. காம விகாரத்தின் மிகுதி (திருக்கோ.69, உரை); சிற்றின்பத் தோய்வு; wantonness, lasciviousness, venereal heat. 9. நில வளம் (வின்.); richness of land, fertility. 10. மதுக்களிப்பு (மலைபடு.173, உரை); inebriety, intoxication. 11. மான் மணத்தி; musk. *"மாலையுஞ் சாந்து மதமு மிழைகளும்" (பரிபா.10:92).* 12. கன்மதம் (தைலவ.தைல.125); rock alum. 13. ஒண்ணீர் (யாழ்.அக.); semen. 14. மிகுதி (யாழ்.அக.); abundance. 15. பெருமை (யாழ்.அக.); greatness.

[முல் (பொருந்தற் கருத்து வேர்)→முள்→மள்→மட்டு→மத்து→மது→மதம் (வே.க. 4:68).]

மதமடக்கிநீர் *madam-adakki-nir,* பெ.(n.) கருந்தேன்; black honey.

மதமடு *mada-madu,* பெ.(n.) வெள்ளைப் பூண்டு (மூ.அ.); garlic.

மதமத்தகம் *mada-mattagam,* பெ.(n.) கஞ்சங்குல்லை (கஞ்சா) (வின்.); hemp plant.

மதமத்தம் *mada-mattam,* பெ.(n.) மதமத்தை பார்க்க; see *mada-mattai. "வன்னி கொன்றை மதமத்தம்" (தேவா. 625:1).*

[மதமத்தை→மதமத்தம்.]

மதமத்தன் *mada-mattan,* பெ.(n.) மதத்தினால் மயங்கிக்கிடப்பவன் (யாழ்.அக.); one who forgets himself in pride.

[மதம் + மத்தன். மத்தன் = மதிமயக்க மடைந்தவன்.]

மதமத்தன்தாழி *madamattan-tāli,* பெ.(n.) முதுமக்கட்டாழி பார்க்க; see *mudu-makkat-tāli.*

மதமத்திமூலி *madamatti-mūli,* பெ.(n.) கருமத்தை; black dhatura plant.

மதமத்தை *mada-mattai,* பெ.(n.) பொன் னூமத்தை (பிங்.); purple stramony.

மதமத-த்தல் *mada-mada-,* 11 செ.கு.வி. (v.i.) மத-த்தல் பார்க்க; see *mada-,*

மதமதக்கச்சால் *madamadakka-c-cāl,* பெ.(n.) முதுமக்கட்டாழி; large earthern jar for interring old men in olden times.

மதமதக்கத்தாழி *madamadakka-t-tāḻi*, பெ.(n.) முதுமக்கட்டாழி பார்க்க; see *mudu-makkaṭṭāḻi*.

மதமதப்பு *mada-madappu*, பெ.(n.) 1. உணர்ச்சியின்மை (வின்.); insensitiveness. 2. திமிர் (வின்.); arrogance. 3. செழிப்பு (திருவிருத்.9, வியா. பக்.71); floorishing condition.

[மதம்→மதன்→மதர்→மதர்வு→மதவு→மத. மத = மிகுதி, வலிமை, அழகு, மடமை. மதமத→மதமதப்பு (வே.க.4:69).]

மதமதப்புக்குத்தல் *mada-madappu-k-kuttal*, பெ.(n.) நரம்பு நோய் வகை (M.L.) neuritis, inflammation of the nerves.

[மதமதப்பு + குத்தல்.]

மதமதர்-த்தல் *mada-madar-*, 4 செ.கு.வி. (v.i.) களிப்பு மிகுதல்; to be vivacious. *"தேய்த்து மதமதர்த்து" (கொண்டல். விடு.193).*

[மத + மதர்.]

மதமதெனல் *mada-madeṉal*, பெ.(n.) 1. மதமுறுதற்குறிப்பு; onom. expr. of being wanton or infauated. 2. உடலுறுப்பு மரத்துப் போதற் குறிப்பு; being paralysed temporarily, as the limbs. 3. நீர் குடிக்கும் போதுண்டாம் ஒலிக்குறிப்பு (யாழ்ப்.); making a noise in drinking. 4. விரைவுக் குறிப்பு; being quick or intense. *"தீ மதமத வென்று பற்றி யெரிகிறது" (உ.வ.).* 5. செழித்து வளர்தற் குறிப்பு (கொ.வ.); growing in luxuriance.

[மதமத + எனல்.]

மதமமுகம் *madama-mugam*, பெ.(n.) காரைச் செடி; a shrub.

மதமலை *mada-malai*, பெ.(n.) மதமா பார்க்க; see *madamā*. *"வாம்பரி மதமலை" (கம்பரா. அகலி.18).*

[மதமா→மதமலை.]

மதமா *madamā*, பெ.(n.) யானை (பிங்.); elephant.

[மதம் + மா.]

மதமூச்சு *mada-mūccu*, பெ.(n.) மதமூர்ச்சை பார்க்க; see *madamūrccai*.

மதமூர்ச்சை *madamūrccai*, பெ.(n.) ஒரு நோய்; a disease.

மதமெடு-த்தல் *madam-eḍu-*, 4 செ.கு.வி. (v.i.) மதங்கொள்ளல்; to become lusty.

[மதம் + எடு-.]

மதமெருதம் *madamerudam*, பெ.(n.) யானை; elephant.

மறுவ. மதமொய்.

மதமேறு-தல் *madam-ēṟu-*, 5 செ.கு.வி.(v.i.) பெண்களுக்கு மதம் மேன்மேலும் கூடுதல்; increasing of lustiness in woman.

[மதம் + ஏறு-.]

மதமொய் *mada-moy*, பெ.(n.) மதமா பார்க்க (நிகண்டு.); see *mada-mā*.

[மதமா→மதமாய்→மதமொய் (கொ.வ.).]

மதயந்தி *madayanti*, பெ.(n.) 1. மதயந்திகை (யாழ்.அக.) பார்க்க; see *madayandigai*. 2. கஞ்சா (நாமதீப.321); ganja.

மதயந்திகை *madayandigai,* பெ.(n.) மல்லிகை வகை (யாழ்.அக.); a kind of jasmine.

மதயானையுப்பு *mada-yāṉai-uppu,* பெ.(n.) உப்புக்குரு பார்க்க; see *uppu-k-kuru.*

மதர்[1]-த்தல் *madar-,* 11 செ.கு.வி.(v.i.) 1. செழித்தல்; to flourish; to be fertile, rich or luxuriant. 2. மரமுதலியன பயனறும்படி மித மிஞ்சிக் கொழுத்தல் (இ.வ.); to be too luxuriant to be productive, as soil, plants, etc. 3. மதங் கொள்ளுதல்; to be affected with frenzy, as a bull or elephant. *“மதர்விடையிற் சீறி” (பு.வெ.7, 14).* 4. செருக்குதல் (வின்.); to be self-conceited, arrogant. 5. களித்தல் (திவா.); to rejoice, to be full of joy. *“மதுப்பருகிப் பருவாளை நின்று மதர்க்கு மருங்கெலாம்” (கம்பரா.நாட்டுப்.24).* 6. மிகுதல் (திவா.); to increase, abound. *“மதராி மழைக்கண்” (சீவக.2803).*

[முல் (பொருந்தற்கருத்துவேர்)→முல்→முள்→மள்→மட்டு→மத்து→மது→மதம்→மதன் = கலக்கம், மடமை, செருக்கு, வலிமை, மிகுதி. மதன்→மதர் (வே.க.4:68).]

மதர்[2] *madar,* பெ.(n.) 1. செருக்கு; pride, arrogance, self-conceit, wantonness. *“அரிமதர் மழைக்கண்ணீர்” (கலித்.77).* 2. மகிழ்ச்சி (திவா.); joy. 3. மிகுதி (பிங்.); abundance. 4. பாய்ச்சல் (யாழ்.அக.); rush, gust, impulse. 5. வீரம் (அரு.நி.); bravery. 6. மதசலம் பார்க்க (நாமதீப.207); see *mada-šalam.*

[மதம் →மதர்.]

மதர்த்தவிழி *madartta-viḻi,* பெ.(n.) காம மிகுப்பினால் உறங்காத கண்கள்; loss of sleep due to love sickness.

[மதர்த்த + விழி.]

மதர்ப்பு *madarppu,* பெ.(n.) மதர்வு பார்க்க (அக.நி.); see *madarvu.*

[மதர்வு→மதர்ப்பு.]

மதர்வு *madarvu,* பெ.(n.) 1. செழிப்பு; flourishing, being rich, plump or luxuriant. 2. இறுமாப்பு; pride, arrogance. 3. உள்ளக்களிப்பு (பிங்.); joy, delight. 4. ஆசைப் பெருக்கம் (யாழ்.அக.); intense, desire. 5. அழகு (சூடா.); beauty. 6. வலிமை (சூடா.); strength. 7. மிகுதி (திவா.); abundance, fullness, excess. 8. புலவி (அரு.நி.); sulks. 9. இடம் (பிங்.); place. 10. நிலம் (அரு.நி.); earth.

[மதம்→மதர்→மதர்வு (வே.க.4:69).]

மதர்வை *madarvai,* பெ.(n.) 1. மதர்வு, 1 பார்க்க; see *madarvu,* 1. *“மதர்வைக் கொம்பு” (சூளா. நகர.25).* 2. செருக்கு; pride, haughtiness. *“மதர்வை நோக்கமும்” (கந்தபு.தெய்வயா.64).* 3. களிப்பு (பிங்.); exhilaration. 4. மயக்கம்; bewilderment. *“மதர்வை வெங்கதிர் பரப்பு கிடந்தென” (சீவக.322).*

[மதம்→மதர்→மதர்வு→மதர்வை (வே.க.4:69).]

மதரணி *madaraṇi,* பெ.(n.) ஒளிமிக்க அணிகலன்; bright ornaments. *“நிலஞ்சேர் மதரணிகண்ட குரங்கின்” (புறநா.378, 20).*

[மதம்→மதர் + அணி.]

மதரபன்னி *madarapaṉṉi,* பெ.(n.) வட்டத் திருப்பி (மலை.); velvet-leaf.

மதரம் *madaram,* பெ.(n.) இஞ்சி; ginger (சா.அக.).

மதராகன் *mada-rāgaṉ,* பெ.(n.) 1. காமக் கடவுள்; god of love. 2. சேவல்; cock.

மதலம் *madalam,* பெ.(n.) வெள்ளுள்ளி; garlic.

மதலிகை *madaligai,* பெ.(n.) 1. அணிகலத் தொங்கல் (பிங்.); pendant of a jewel. 2. அலங்காரத் தொங்கல்; ornamental hangings. *"மதலிகை மலிந்த.......... குடை" (இரகு.அயனெ.106).*

மதலிங்கம் *mada-liṅgam,* பெ.(n.) 1. அமுக்கிரா (மலை.); winter cherry. 2. சிவனார் வேம்பு; siva's neem.

மதலை¹ *madalai,* பெ.(n.) 1. பற்றுக் கோடு; prop, support. *"மதலையாஞ் சார்பிலார்க்கு" (குறள், 449).* 2. தூண்; post, pillar. *"மதலைகீழ் வைத்ததென் மதலைக் கோதிலேன்" (உபதேசகா.சிவத்து.61).* 3. வேள்வித்தூண்; sacrificial post. *"மதலைநாண் பறப்பை" (கந்தபு. சாலைசெய்.23).* 4. வீட்டின் கொடுங்கை; overhanging border, cornices or projections on the sides or front of a house. *"மதலை மாடமும்" (மணிமே.1:53).* 5. பற்று; desire, attachment. *"மதலை யினெஞ்சொடு" (கலித்.28).* 6. மரக்கலம் (திவா.); ship, boat. *"கொழுநிதிக் குப்பை யெல்லாம்......... மதலையேற்றி" (சீவக.505).* 7. குழந்தை; child, infant. 8. மகன் (பிங்.); son. *"மதலை யிற்றமை கேட்டலும்" (சேதுபு. அக்கினி.82).* 9. பாவை (திவா.); doll. 10. கொன்றை (பிங்.); senna. 11. சரக் கொன்றை (தைலவ.தைல.); indian laburnum.

[முல் (முன்மைக் கருத்துவேர்)→முது→முதல். முதல் = தொடக்கம், கரணியம், தலைமை வரிசை, அடிப்பாகம், அடிமரம், இடம் (வே.க.4:13). முதல்→மதல். ஒ.நோ. முடி→மடி. முடித்தல் = முற்றுவித்தல். மடித்தல் = அழித்தல் (வே.க.4:65). மதல்→மதலை.]

மதலை² *madalai,* பெ.(n.) மழலைமொழி (வின்.); prattle of children.

[முல் (இளமைக் கருத்து வேர்)→முள்→மள் →மள்ளன் = இளைஞன், மறவன். மள்→மள→மழ = இளமை, குழந்தை. மழ→மழும்→மழல்→மழலை = இளமை, குழந்தைகளின் இனிய திருந்தாச் சொல். மழலை→மதலை (வே.க.4:7).]

மதலைக்கிளி *madalai-k-kiḷi,* பெ.(n.) இளங்கிளி; young parrots. *"மதலைக் கிளியின் மழலைப் பாடலும்" (பெருங். உஞ்சைக்.48, 164).*

[மழ = இளமை. மழ→மழலை→மதலை + கிளி.]

மதலைத்தூக்கு *madalai-t-tūkku,* பெ.(n.) இருசீருடைய இசைத்தூக்கு (சிலப்.3, 26, உரை, பக்.91); a kind of verse, having two *cīr* to a foot.

[மதலை + தூக்கு.]

மதலைநீர் *madalai-nīr,* பெ.(n.) குழந்தையின் சிறுநீர்; urine of a child.

[மழ→மழலை→மதலை + நீர்.]

மதலைப்பள்ளி *madalai-p-paḷḷi,* பெ.(n.) கொடுங்கையைத் தாங்குதலையுடைய பலகையாகிய கபோதகத்தலை; wooden

support under a cornice or other projection. *"மதலைப்பள்ளி மாறுவன விருப்ப" (நெடுநல்.48).*

[மதலை + பள்ளி.]

மதலைமாசகி *madalai-māšagi,* பெ.(n.) மாதளை; a small tree.

மதலைவாழ்த்து *madalai-vāḻttu,* பெ.(n.) தலைவனது கொலு மண்டபத்துத் தூணைப் புகழ்ந்து கூறும் துறை வகை (மாறன.91, 125); a theme in which the pillar supporting the audience-hall of a hero is extolled.

[மதலை¹ + வாழ்த்து.]

மதவடக்கி *mada-v-aḍakki,* பெ.(n.) கள்ளி நீர்; juice of spurge (சா.அக.).

[மதவு + அடக்கி.]

மதவலி *mada-vali,* பெ.(n.) 1. மிகுவலி; great strength. *"மைந்துடைமல்லன் மதவலி முருக்கி" (புறநா.80). "பதிற்றுக்கை மதவலி நூற்றுக்கை யாற்றல் ஆயிரம் விரித்தகைம் மாயமள்ள" (பரிபா.3:40-1).* 2. மிக்க வலிமையுடையவன்; person of great strength. *"வலம்புரி பொறித்த வண்கை மதவலி" (சீவக.204).* 3. முருகன்; Lord Murugan. *"சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி" (திருமுரு.275).*

[மல் = மிகுதி. மல்→மள்→மள→மத→மதம் + வலி.]

மதவலை *mada-valai,* பெ.(n.) நாற்புறத்திலுமுள்ள மீன்களைப் பையினுள் நுழையச் செய்து பிடிக்கும் வலை (இ.வ.); a kind of fishing net in to which fish are driven from all sides.

மதவாசி *mada-vāši,* பெ.(n.) துரியம்; one of the five statums of soul (சா.அக.).

மதவாதி *mada-vādi,* பெ.(n.) சமயத் தருக்கஞ் செய்வோன்; one who is skilled in religious disputation.

[மதம் + Skt. வாதி.]

மதவானை *madavāṉai,* பெ.(n.) வட்டக் கிலுகிலுப்பை எனுஞ்செடி; a plant (சா.அக.).

மதவிருந்தம் *mada-virundam,* பெ.(n.) யானை (யாழ்.அக.); elephant.

மதவிழி *mada-viḻi,* பெ.(n.) மதங் கொண்ட கண்; staring look at men by women due to excess of lust or veneral passion (சா.அக.).

[மதம் + விழி.]

மதவு¹ *madavu,* பெ.(n.) வலிமை; strength. *"மதவு நடை நல்லான்" (அகநா.14).*

[மதர்வு→மதவுள (வே.க.4:69).]

மதவு² *madavu,* பெ.(n.) மதகு (யாழ்.அக.) பார்க்க; see *madagu.*

[மதகு→மதவு (கொ.வ.).]

மதவெறி¹ *madaveṟi,* பெ.(n.) 1. அரத்த வெறி; giddiness caused by richness of blood. 2. காமவெறி; venereal passion. 3. குடி வெறி; intoxication (சா.அக.).

[மதம்² + வெறி.]

மதவெறி² *madaveṟi,* பெ.(n.) சமயத் திணிப்பு; imposition of religous thoughts.

[மதம்¹ + வெறி.]

மதளை *madaḷai,* பெ.(n.) மதலை² பார்க்க (இ.வ.); see *madalai.*

[மதலை→மதளை.]

மதளைவையம் *madaḷai-vaiyam,* பெ.(n.) காஞ்சொறி எனும் செடி (யாழ்.அக.); climbing nettle.

மதன் *madaṉ,* பெ.(n.) 1. செருக்கு; arrogance. "மதனுடை நோன்றாள்" (பட்டினப்.278). 2. வலிமை; strength. "மதனுடை முழவுத்தோள்" (புறநா.50). 3. மனவெழுச்சி; enthusiasm, elation. "மதனுடைய நோன்றாள்" (புறநா.75, உரை). 4. அழகு (பிங்.); beauty. 5. மாட்சிமை (பிங்.); greatness, glory. 6. மிகுதி (யாழ்.அக.); abundance, excess. 7. மடமை; ignorance. "மதனுடை நோன்றாள்" (திருமுரு.7, உரை). 8. கலக்கம் (யாழ்.அக.); bewilderment.

[முல் (பொருந்தற் கருத்து வேர்). முல்→முள்→முள்கு. முள்குதல் = ஒளிகுறைதல், குறைதல். முள்கு→மள்கு→மழுகு→மழுங்குதல் = ஒளி குறைதல், பொலிவழிதல். மழுங்கு→மங்கு. மங்குதல் = ஒளிகுறைதல். மள்கு→மட்கு. மட்குதல் = மயங்குதல், ஒளிமங்குதல். மட்கு→மக்கு = மந்தன், அறிவிலி. மள்கு→மாள்கு→மாழ்கு. மாழ்குதல் = கலத்தல், மயங்குதல், சோம்புதல், மங்குதல். மாள்→மாட்டு (பி.வி.) ஒ.நோ: நீள்→நீட்டு. மாளுதல் = முடிதல். மாட்டுதல் = முடித்தல். மள்→மறு. ஒ.நோ: வெள்→வெறு. வெள்ளிலை→வெற்றிலை. முட்டு→முட்டி→முடி. முடிதல் = இறுதியாதல், நிறை வேறுதல், செய்ய முடிதல். முடி→மடி→மடிதல் = சாதல், அழிதல். முட்டு→மட்டு=அளவு. மட்டு→மட்டம் = அளவு. மட்டு→மத்து→ மத்தி→மதி. மதித்தல் = அளவிடுதல். மத்து→மட்டு = கள். மத்து→மத்தம் = மயக்கம். மத்து→மத்தன்→மதன் (வே.க.4:68).]

மதனசலாகை *madaṉa-śalāgai,* பெ.(n.) 1. குயிற்பேடை; female cuckoo. 2. மருந்து வகை; a medicine.

மதனசாத்திரம் *madaṉa-śāttiram,* பெ.(n.) மதனநூல் பார்க்க; see *madaṉa-nūl.*

மதனத்துமதுகம் *madaṉattu-madugam,* பெ.(n.) தேன்மெழுகு; bee's wax (சா.அக.).

மதனநூல் *madaṉa-nūl,* பெ.(n.) அறுபத்து நான்கு கலையுள் ஒன்றாகிய காம நூல்; erotics, one of *aṟupattu-nālukalai* (q.v.).

[மதனம் + நூல்.]

மதனம்[1] *madaṉam,* பெ.(n.) 1. காமம் (பிங்.); sexual passion, love. 2. காமன் கணைகளுள் புணர்ச்சி விருப்பத்தைத் தரும் அம்பு (பிங்.); the arrow of *Kāmaṉ* which produces sexual passion. 3. பெருமிதம் (யாழ்.அக.); pride. 4. வசந்தகாலம் (யாழ். அக.); spring. 5. தேனீ (யாழ்.அக.); bee. 6. தேன்மெழுகு (யாழ்.அக.); bees wax. 7. மருக்காரை (மலை.); emetic-nut. 8. இரண்டடி நீளத்திற்கு மேல் வளர்வதும் சாம்பல் நிறமுள்ளதுமான கடல்மீன் வகை; a sea-fish, salty grey, attaining 2 ft. or more in length-*Diagramma crassis pinum*. 9. 18 அங்குல நீளம் வளர்வதும் வெண்ணிறமுள்ளதுமான கடல் மீன் வகை; a sea-fish, silvery, attaining 18 in. in length-*Chrysophrys datnia.*

[மதன்→மதனம் (வே.க.4:68).]

மதனம்[2] *madaṉam,* பெ.(n.) 1. கடைகை; churning. "அமுதமதனத்தி லாழிமிசை வரும்" (பாரத.பன்னிரண்.45). 2. அழிக்கை; destroying, slaying. "கலிமதனன்" (இறை.23, உரை, பக்.175). 3. மனக்கலக்கம்; perturbation of mind.

[மதன்→மதனம்.]

மதனம்[3] *madaṉam*, பெ.(n.) அமைதி; silence. *"மதனம் மலையைச் சாதிக்கும்" (பழ.).*

[மத்து→மதனம்.]

மதனமஞ்சரி *madaṉa-mañjari*, பெ.(n.) கிளிஞ்சில்; bivalve shell.

மதனமஞ்சிகை *madaṉa-mañjigai*, பெ.(n.) சீவக சிந்தாமணி காப்பியத்தில் வரும் கதை மகள்; one of the names of a lady appearing in the epic of *Seevaga chintamani* (சி.பெ.அக.).

மதனரூபி *madaṉa-rūbi*, பெ.(n.) பச்சோந்தி; chameleon.

மதனலிங்கம்[1] *madaṉa-liṅgam*, பெ.(n.) அமுக்கிறா எனுஞ்செடி; a plant.

மதனலிங்கம்[2] *madaṉa-liṅgam*, பெ.(n.) மருக்காரை எனுஞ் செடி (மலை.); emetic-nut.

மதனலீலை *madaṉa-līlai*, பெ.(n.) காம விளையாட்டு; lascivious act, sports in sexual union. *"மதனலீலையிற் பழுதற வழிபடும் பாவை" (பாரத. அருச்சுனன்றீர்.61).*

[மதனம் + Skt. லீலை.]

மதனவல்லி *madaṉa-valli*, பெ.(n.) வாலை; Goddess of universal energy (சா.அக.).

மதனவல்லிச்சுண்ணம் *madaṉa-valli-c-cuṇṇam*, பெ.(n.) முப்பூச்சுண்ணம்; a superior kind of white calcined powder used in alchemy and in curing diseases (சா.அக.).

மதனவல்லிநீர் *madaṉa-valli-nīr*, பெ.(n.) தூய நீர்; clear water (சா.அக.).

மதனவல்லிப்பூடு *madaṉa-valli-p-pūḍu*, பெ.(n.) காமப்பூ; a plant (சா.அக.).

மதனவேள் *madaṉa-vēḷ*, பெ.(n.) மதனன், 1 பார்க்க; see *madaṉaṉ, 1*. *"மதனவேள் மிகவெய்ய" (சிலப்.6:35, உரை).*

[மதனம் + வேள்.]

மதனன்[1] *madaṉaṉ*, பெ.(n.) சீவக சிந்தாமணி காவியத்தில் வரும் ஒரு கதை மகன்; one of the character of the epic *Šivaga šintāmaṇi* (சி.பெ.அக.).

ஏமாங்கத நாட்டை வஞ்சனையாகக் கைப்பற்றிய கட்டியங்காரனுடைய அளியன் (மைத்துனன்).

மதனன்[2] *madaṉaṉ*, பெ.(n.) 1. காமவேள் (பிங்.); *Kāmaṉ*, the god of love. *"மதனனென்றார் தம்மை" (திவ்.பெரியதி.6, 4, 8).* 2. காமுகன்; lover. *"மதனர் மின்னிடையவர்க்கே" (திவ்.திருவாய். 6, 1, 11).*

[மதனம்→மதனன்.]

மதனா *madaṉā*, பெ.(n.) மீன் வகை; a kind of fish.

மதனாகமம் *madaṉā-kamam*, பெ.(n.) மதனநூல் பார்க்க; see *madaṉa-nūl*. *"மதனாகமங்கள் விளம்பு மால்" (கொக்கோ. 3, 28).*

மதனாங்குசம் *madaṉāṅgušam*, பெ.(n.) 1. மதனாலயம், 1 பார்க்க; see *madaṉālayam*. 2. நகம்; finger nail.

[மதன் + அங்குசம்.]

மதனாயுதம் *madaṉāyudam*, பெ.(n.) மதனாலயம், 1 பார்க்க (யாழ்.அக.); see *madaṉālayam*

[மதன் + ஆயுதம்.]

மதனாலயம் *madaṉālayam*, பெ.(n.) 1. பெண் குறி; *pudendum muliebra*. *"புண்டரநுதலி பொற்பாம் புதுமதனாலயம் போய்" (இரகு. மாலையீ.79).* 2. தாமரை (மலை.); lotus.

[மதன் + ஆலயம்.]

மதனாவத்தை *madaṉāvattai*, பெ.(n.) பிரிவுத்துயர் (யாழ்.அக.); pangs of separation, as of lovers.

*[மதன் + **Skt.** அவத்தை.]*

மதனைவென்றோன் *madaṉai-veṉṟōṉ*, பெ.(n.) அருகக்கடவுள் (சூடா.); Arhat, as the conqueror of *Kāmāṉ*.

[மதனை + வென்றோன்.]

மதனோற்சவம் *madaṉōṟcavam*, பெ.(n.) வேனில் விழா (யாழ்.அக.); festival celebrating the spring.

[மதன் + உற்சவம்.]

மதனோற்சவை *madaṉōṟcavai*, பெ.(n.) அரம்பை (யாழ்.அக.); celestial damsel.

[மதன் + உள்சவை.]

மதா *madā*, பெ.(n.) சிறட்டி; பிரண்டை; a climber (சா.அக.).

மதாகம் *madāgam*, பெ.(n.) இலுப்பை மரம்; a tree (சா.அக.).

மதாசலம் *madā-šalam*, பெ.(n.) யானை; elephant.

மதாசாரம் *madāšāram*, பெ.(n.) சமய வொழுக்கம்; religious, practice, observance of religious rites and rules.

*[மதம் + **Skt.**ஆசாரம்.]*

மதாணி *madāṇi*, பெ.(n.) 1. கழுத்தணியின் தொங்கல்; large pendant suspended from the necklace. *"திண்கதிர் மதாணி" (மதுரைக்.461).* 2. அணிகலன் (ஆபரணம்) (திவா.); jewel.

மதாத்தியம் *madāttiyam*, பெ.(n.) 1. கள், வெறியம் அதிகமாகக் குடித்ததினால் அல்லது போதையினால் ஏற்படும் நோய்; a kind of disease arising from intoxication due to liquor. 2. நினைவு மறந்து மரம் போல் சாய்ந்து மூர்ச்சையுற்றவன் போல் உடல் அசைவற்றுக் கிடத்தல்; to lie down senselessly.

மதாந்தபுத்தி *madānda-putti*, பெ.(n.) இறுமாப்பினால் ஆழ்ந்து செல்லாத அறிவு (கொ.வ.); superficially or shallowness due to haughtiness.

மதாபிமானி *madābimāṉi*, பெ.(n.) மதப் பற்றுள்ளவன்; enthusiast, fanatic.

*[மதம் + **Skt.**அபிமானி.]*

மதாமடையம் *madā-maḍaiyam*, பெ.(n.) கண்ணிமை; eye lid.

மதார் *madār*, பெ.(n.) செருக்கு (வின்.); arrogance.

[மதம்→மதார். மதம் = செருக்கு, கள், தேன், யானை மதம்.]

மதார்சிங்கு *madār-šiṅgu*, பெ.(n.) மருந்துச் சரக்கு வகை (C.G.); litharge, impure oxide of lead.

மதாரம் *madāram*, பெ.(n.) 1. மான்மணத்தி; musk. 2. யானை; elephant. 3. பன்றி; pig.

மதாலம் *madālam*, பெ.(n.) கொன்றைச் செடி (மலை.); senna.

மதாலாபி *madālābi,* பெ.(n.) குயில்; Indian cuckoo.

மதாவரிசி *madā-v-ariši,* பெ.(n.) ஓமாலிகை முப்பத்திரண்டனுள் ஒன்று (சிலப்.6:27, உரை); a fragrant substance, one of 32 *ōmaligai* (q.v.).

மதாவளம் *madāvaḷam,* பெ.(n.) யானை (பிங்.); elephant.

மதாளி-த்தல் *madāḷi-,* 11 செ.கு.வி.(v.i.) 1. செழித்தல் (வின்.); to thrive, flourish, to be luxuriant, rich and abundant. 2. பயிர் முதலியன பயன்படாதபடி கொழுத்துக் கெடுதல்; to be too luxuriant to be productive, as plants, soil, etc. *"பயிர் மதாளித்துப் போனால் நுனிகளை அறுத்துப் போடுகை" (ஈடு, 9, 5, 7, ஜீ, அரும்.).*

மதானுசாரம் *madāṉu-šāram,* பெ.(n.) மதாசாரம் பார்க்க (வின்.); see *madā-šāram.*

மதானுசாரி *madāṉu-šāri,* பெ.(n.) மத சாரத்தைப் பின்பற்றுவோன் (வின்.); one who follows the rites of his creed.

மதி¹-த்தல் *madi-,* 11 செ.குன்றாவி.(v.t.) 1. அளவிடுதல்; to estimate. *"மண் விழைந்து வாழ்நாண் மதியாமை" (திரிகடு.29).* 2. பொருட்படுத்துதல்; to esteem, regard, respect, reverence. *"மண்ணாள்வான் மதித்துமிரேன்" (திருவாச. 5, 12).* 3. கருதுதல்; to think, to consider. *"ஆடலை மதித்தான்" (கந்தபு. திருவிளை.1).* 4. ஊழ்கம் செய்தல் (தியானித்தல்); to meditate upon. *"நந்தியங் குரவனை மதிப்பாம்" (விநாயகபு. கடவுள்.13).* 5. துணிதல்; to decide; to ascertain; to be assured of. *"தேர்மணிக் குரலென விவண் மதிக்குமன்" (கலித்.126, 7).*

[முல் (பொருந்தற் கருத்து வேர்)→முள் → முட்டு→மட்டு→மட்டி. முத்துதல் (முட்டுதல்) →மத்துதல் (மட்டுதல்) = பொருந்துதல், ஒத்தல். முத்து (முட்டு)→மத்து = அளவு. மத்து→மத்தி. மத்தித்தல் = அளவிடுதல். மத்து→மதி (வே.க. 4:66).]

மதி² *madi,* பெ.(n.) 1. இயற்கையறிவு; understanding, intellect. *"மதுநுட்ப நூலோடுடை யார்க்கு" (குறள், 636).* 2. பகுத்தறிவு; discrimination, judgement. *"மதியிலி மடநெஞ்சே" (திருவாச.5, 33).* 3. வேதங்களிற் கூறியவற்றைக் கேட்டலும் அதன்படி நடத்தலுமாகிய செய்கடன் (சங்.அக.); duty of listening to exposition of the *vēdas* and acting inaccordance with the precepts thereof. 4. மதிப்பு; esteem, value. *"நீண்மதிக் குலிசம்" (இரகு. யாகப்.92).* 5. காசியபரின் மனைவியான தட்சன் மகள்; a wife of *Kāšyapaṉ* and daughter of Dhaksan. *"மதி யென்பாள்..... பயந்தனளால்" (கம்பரா. சடாயுகாண்.26).* 6. பிண்டி மரம் (சங்.அக.); *asōka* tree.

மதி³ *madi,* பெ.(n.) 1. நிலவு; moon. *"மதிப்பின்னீர பேதையார் நட்பு" (குறள், 782).* 2. மாதம்; month. *"தசமதி தாயொடு தான்படும்" (திருவாச.4, 24).* 3. ஓரை (இராசி.); sign of the zodiac. *"ஆறிரு மதியினும்" (சிலப்.26:25).* 4. செல்வக் கடவுள் (குபேரன்); *Kubēraṉ.* *"தென்றிசை மதியின் வாளி" (பாரத.நிரைமீட்.100).* 5. இடைகலை; breath passing through the left nostril. *"மதியிலிரு நான் கிரேசித்து" (காசிக.

யோக.23). 6. மதிநாள் பார்க்க (சூடா.); see *madi-nāḷ*.7. ஒன்று என்னும் எண்ணைக் குறிக்கும் குழூஉக்குறி (E.T.ii.96); the number`one'. 8. கற்கடகராசி (சங்.அக.); cancer of the zodiac, as the moon's house.

[முல்→முள்→மள்→மட்டு→மத்து. மத்து→மது = கள், தேன், இலுப்பைப்பூ முதலியவற்றினின்று காய்ச்சி யிறக்கும் வெறிநீர், அமுதம், இனிமை. மது→மதி. மதி = மயக்கும் நிலவு. இப்பொருள் வடமொழியிலில்லை. ஒ.நோ: L. luna-moon. L. lunaticus. E. lunatic - insane person. E.lunacy = insanity. பண்டைக்காலத்தில் நிலவொளியாற் கோட்டி யுண்டாவதாக ஒரு கருத்து உலகம் முழுதும் பரவியிருந்தது (வே.க.4:67).]

மதி⁴ *madi,* பெ.(n.) அதிமதுரம் (சங்.அக.); liquorice plant.

மதி⁵ *madi,*பெ.(n.) 1. ஒரு முன்னிலை யசைச் சொல் (தொல்.சொல்.276); an euphonic suffix of the imperative mood. 2. ஒரு படர்க்கைச் சொல்; expletive of the third person. *"பரிசி னல்கு மதி" (திருமுரு. 295).*

மதி⁶-த்தல் *madi-,* 11 செ.குன்றாவி.(v.t.) கடைதல்; to churn. *"மந்தரங்கொடு மதித்த நாள்" (சேதுபு.சங்கர.20).*

[மத்து→மதி.]

மதி⁷-த்தல் *madi-,*11 செ.கு.வி.(v.i.) 1. கொழுத்தல்; to be haughty. *"மதித் தெதிர் தெவ்வர்" (இரகு.மீட்சி.37).* 2. மதங்கொள்ளுதல்; to be furious. *"மதித்த களிற்றினின்" (கம்பரா. பஞ்சசே. 56).* 3. உப்புதல் (இ.வ.); to bloat. *"உடம்பு மதித்து விட்டது" (உ.வ.).*

மதி⁸ *madi,* பெ.(n.) யானை; elephant. *"கோண் மதித்திடர் கிடந்தன" (கம்பரா. நாகபாச.136).*

மதிக்கண்ணியான் *madi-k-kaṇṇiyāṉ,* பெ.(n.) சிவன்; *Šivaṉ,* as wearing the moon an wreath on his head. *"கொன்றை மாலைக் குளிர்மதிக் கண்ணியாற்கு" (சீவக.208).*

[மதி + கண்ணியான்.]

மதிக்கணம் *mati-k-kaṇam,*பெ.(n.) நூலின் முதற்செய்யுளின் முதலில் அமையும்படி புளிமாங்காய் என்னும் வாய்ப்பாடு பற்றி வரும் நற்கணச்சீர்வகை; metrical foot consisting of one nirai and two *nēr,* considered auspicious at the commencement of a poem.

[மதி + கணம்.]

மதிக்கல் *madi-k-kal,* பெ.(n.) நிலாக் கல்; moon stone.

[மதி + கல்.]

மதிக்கலை *madi-k-kalai,* பெ.(n.) 1. வளர்வதும் தேய்வதுமான நிலவுக் கலை; phase of the moon. 2. பதினாறு (தைலவ.தைல.); the number '16'.

[மதி + கலை.]

மதிக்கொழுந்து *madi-k-koḻundu,* பெ.(n.) இளம்பிறை; crescent moon, as tender. *"வெண் மதிக்கொழுந் தொன்று" (திருவாச. 6, 4).*

[மதி + கொழுந்து.]

மதிகம்¹ *madigam,*பெ.(n.) மோர்; butter milk (சா.அக.).

மதிகம்² *madigam,* பெ.(n.) செடிவகை; matico plant (சா.அக.).

மதிகயம் *madikayam,* பெ.(n.) ஒருவகைத் தெள்ளுக் கொடி; a creeper (சா.அக.).

மதிகாத்தி *madi-kātti,* பெ.(n.) 1. காசுமீரப் படிக்கல்; a kind of mineral stone found in Kashmere. 2. பளிங்கு; crystal; mirror (சா.அக.).

மதிகாந்தி *madi-gāndi,* பெ.(n.) பளிங்கு (சங்.அக.); crystal.

மதிகாலம் *mādi-kālam,* பெ.(n.) இரவுக் காலம்; night time.

[மதி + காலம்.]

மதிகூர்மை[1] *madi-kūrmai,* பெ.(n.) அறிவுக் கூர்மை; keenness, intelligence.

[மதி + கூர்மை.]

மதிகூர்மை[2] *madi-kūrmai,* பெ.(n.) இந்துப்பு (சங்.அக.); rock salt.

மதிகெடு-தல் *madi-kedu-,* 20 செ.கு.வி. (v.i.) மயக்குதல்; to stupefy.

[மதி + கெடு-தல்.]

மதிகேடன் *madi-kēḍaṉ,* பெ.(n.) நல்லறிவில்லாதவன்; fool. *“வஞ்சமணர் தேரர் மதிகேடர்” (தேவா.397, 10).*

[மதி + கேடன்.]

மதிகேடி *madi-kēḍi,* பெ.(n.) அறிவில்லாத பெண்; foolish woman.

[மதி + கேடி.]

மதிகேடு *madi-kēḍu,* பெ.(n.) 1. அறிவு கெடுகை; losing sense. 2. உன்மத்தங் கொள்கை; becoming mad.

[மதி + கேடு.]

மதிச்சடையன் *madi-c-caḍaiyaṉ,* பெ.(n.) (நிலவினைச் சடையிலே தரித்தவன்) சிவன்; *Šivaṉ,* as wearing the moon on his locks.

[மதி + சடையன்.]

மதிச்சாரம் *madi-c-cāram,* பெ.(n.) சவ்வீரம்; a medicinal compound (சா.அக.).

மதிச்சுண்ணம் *madi-c-cuṉṉam,* பெ.(n.) முப்பு; calicined three salts which includes efflorescence.

[மதி + சுண்ணம்.]

மதிசகன் *madi-šagaṉ,* பெ.(n.) (நிலவினது தோழன்) மன்மதன் (பிங்.); *Kāmaṉ,* as the moon's companion.

[மதி + சகன்.]

மதிசாக்கினி *madi-šākkiṉi,* பெ.(n.) சிறு வாலுளுவையரிசி; a plant (சா.அக.).

மதிசாரம் *madi-šāram,* பெ.(n.) ஒன்பான் மணிகளுளொன்று, கெம்பு; one of nine gems (சா.அக.).

மதிசிக்குரு *madiši-k-kuru,* பெ.(n.) புனல் முருங்கை; a tree *Indigofera Arcuata* (சா.அக.).

மதிசூடி *madi-šūḍi,* பெ.(n.) சிவன்; *Šivaṉ,* as wearing the moon. *“மதிசூடி தன்னோடையனை” (திவ்.இயற்.நான்முகன்.66).*

[மதி + சூடி.]

மதிசெயநீர் *madi-šeya-nīr,* பெ.(n.) 1. 9 அல்லது 10 மாதத்தியக் கருப்பிண்டத்திலிருந்து இறக்கும் செயநீர்; a pungent liquid extracted for 9 or 10 months old foetus by adding some salts. 2. வாலை செயநீர்; pungent liquid (சா.அக.).

மதிஞன் *madiñan*, பெ.(n.) அறிஞன்; learned man. *"மதிஞர் வளமுற்ற வேதத்தை யோதியே" (திருமந்.61).*

[மதி→மதிஞன்.]

மதிஞானம் *madi-ñāṉam*, பெ.(n.) இயற்கை யறிவு; knowledge gained by the mental faculties and the senses. *"மதிஞானத்தான் அறிய வொண்ணாத குணத்தோன்" (சீவக.3097, உரை).*

[மதி + ஞானம்.]

மதிதம் *madidam*, பெ.(n.) 1. மோர் (சூடா.); butter-milk. 2. தயிர் (பிங்.); curd.

மதிதறு *madi-taṟu*, பெ.(n.) பொன் மணல்; gold ore (சா.அக.).

மதிதிசை *madi-tišai*, பெ.(n.) செல்வக் கடவுள் இருப்பதாகக் கருதப்படும் வடக்கு (பிங்.); north, as the quarter of *Kubēraṉ*.

மதிதிறாணம் *madi-tiṟāṇam*, பெ.(n.) கரும்பு; sugarcane (சா.அக.).

மதிதேயல் *madi-tēyal*, பெ.(n.) மூச்சை யடக்கி விடுதற்குப் பழகுகை; to lower exhalation (சா.அக.).

மதிநாள் *madi-nāḷ*, பெ.(n.) ஐந்தாவது விண்மீன் (பிங்.); the fifth *naksatra*.

[மதி + நாள்.]

மதிநீர் *madi-nīr*, பெ.(n.) செயநீர்; pungent liquid extracted from exposing to the moon (சா.அக.).

மறுவ. மதிசலம்

[மதி + நீர்.]

மதிநுட்பம் *madi-nuṭpam*, பெ.(n.) இயற்கை நுண்ணறிவு; shrewdness, keenness of natural intelligence. *"மதிநுட்ப நூலோடுடையார்க்கு" (குறள், 636).*

[மதி + நுட்பம்.]

மதிநூல் *madi-nūl*, பெ.(n.) சமண நூல்; scripture. *"எல்லா மதிநூலும் பொதிந்தது..... நான்முக னற்பெயரே" (திருநூற்.21).*

[மதி + நூல்.]

மதிநெறி *madi-neṟi*, பெ.(n.) நிலாச்சரவடி; lunar race of kings. *"மதிநெறி மாதை வேட்பான்" (திருவாலவா.4, 24).*

[மதி + நெறி.]

மதிப்ப *madippa*, பெ.(n.) ஓர் உவம வாய்பாடு (தொல்.பொருள்.289); a particle of comparison.

[மதி→ மதிப்ப.]

மதிப்பகை *madippagai*, பெ.(n.) 1. கருங் கோள்; the ascending node. 2. செங்கோள்; the descending node.

[மதி + பகை.]

மதிப்பாகம் *madi-p-pāgam*, பெ.(n.) மதிப்பிள்ளை பார்க்க; see *madi-p-piḷḷai*. *"அவிர்மதிப் பாகக் கன்மேற் காய்ந்தவாள்..... தேய்த்து" (சீவக.2496).*

[மதி + பாகம்.]

மதிப்பாகு *madi-p-pāgu*, பெ.(n.) மதிப் பிள்ளை பார்க்க; see *madi-p-piḷḷai*. *"செழுமதிப் பாகென வாருகிர் குறைத்து" (பெருங்.இலாவாண.4, 186).*

[மதி + பாகு.]

மதிப்பிராந்தி *madi-p-pirāndi,* பெ.(n.) மதிமயக்கம் பார்க்க (வின்.); see *madi-mayakkam.*

மதிப்பிள்ளை *madi-p-pil̤l̤ai,* பெ.(n.) பிறை நிலவு; crescent moon. *"திருச்சடைமேல் வாகைமா மதிப்பிள்ளை பாடி" (திருவாச.9, 17).*

[மதி + பிள்ளை.]

மதிப்பிளவு *madi-p-pil̤avu,* பெ.(n.) மதிப் பிள்ளை பார்க்க; see *madi-p-pil̤l̤ai. "வேக நஞ்சறா மதிப்பிளவு" (தகதயாகப்.155).*

[மதி + பிளவு.]

மதிப்பு[1] *madippu,* பெ.(n.) 1. அளவிடுகை; estimate, valuation. 2. மேன்மை படுத்துகை, பெருமைபடுத்துகை; esteem, respect, regard. *"உமையைச் சால மதிப்பொழிந்த வல்லமரர் மாண்டார்" (தேவா.1014, 7).* 3. கருத்து; intention, idea, purpose. *"மண்ணுலகாளு மதிப்பை யொழித்தே" (பிரமோத்.8, 99).*

[முள்→ முட்டு→ முட்டி = முடி. முடித்தல் = முற்றுவித்தல், நிறைவேறுதல். முடி→மடி. மடிதல் = சாதல், அழிதல். முட்டு→மட்டு = அளவு, நில அளவு வகை, எல்லை, குத்துமதிப்பு, ஒன்றோடொன்று முட்டுகிற நிலையிலேயே ஒன்றன் நீள அளவு தெரிதல் காண்க. மட்டு→மட்டம் = அளவு, சமநிலை, அளவுகோல், எல்லை. மட்டு→ மட்டி = தாழ்ந்த மதிநிலையுடைய மூடன், பரும்படி, மட்டிக்காரை, மக்கு. மட்டு→மட்டை = பயனற்ற–வள் –வன்–து. முத்துல்→(முட்டுதல்) = பொருந்துதல், ஒத்தல். முத்து →(முட்டு)→மத்து (மட்டு) = அளவு. மத்து→மத்தி. மத்தித்தல் = அளவிடுதல். மத்தி→மதி (வே.க. 4:66). மதி→ மதிப்பு.]

மதிப்பு[2] *madippu,* பெ.(n.) கடைகை (சங். அக.); churning, turning.

[முல் (பொருந்தற் கருத்து வேர்)→ முல் → முது→ முத்து. முத்துதல் = சேர்தல், ஒன்றை யொன்று தொடுதல். முத்து→ முத்தி = முத்தம். முத்து→ முத்தை = திரட்சி, சோற்றுருண்டை. முத்து→மொத்து = வலுத்த அடி. மொத்து→மத்து = பருப்பு, கீரை முதலியவற்றைக் கடையுங் கருவி, தயிர்கடையுங் கருவி. மத்து→மத்தி. மத்தித்தல் = மத்தினாற் கடைதல். மத்தி→ மதி (வே.க.4:50) மத்தி→மத்திப்பு→மதிப்பு. ஒநோ.கண்டி→ கண்டிப்பு →கடிப்பு.]

மதிப்பு[3] *madippu,* பெ.(n.) கொழுத்திருக்கை (வின்.); growing fat, as a person; growing leafy, as a plant.

[முல்→முது→மொது→மொத்து. மொத்துதல் = உரக்க அல்லது வலுக்க அடித்தல். மொத்து = வலுத்த அடி. மொத்து→மொத்தி = புடைப்பு. மொத்து = தடித்த–வன்–வள்–து. மொத்து→ மொத்தன் = தடித்தவன் (வே.க.4:49). மொத்து→மத்து→மத்தி →மத்திப்பு→மதிப்பு.]

மதிப்புருடம் *madi-p-purudam,* பெ.(n.) தொன்மணியுளொன்று; one of nine gems.

மதிபதி *madi-padi,* பெ.(n.) செந்திணை; red millet (சா.அக.).

மதிபதிச்சம் *madi-padiccam,* பெ.(n.) வாலுளுவை (மலை.); black - oil tree.

மதிபாணி *madi-pāṇi,* பெ.(n.) வட்டத்திருப்பி; a twiner (சா.அக.).

மதிமகன் *madi-magaṉ,* பெ.(n.) (நிலவின் புதல்வன்) அறிவன் (பிங்.); mercury, as the son of the moon-god.

[மதி + மகன். மதி = நிலவு.]

மதிமண்டலம் *madi-maṇḍalam,* பெ.(n.) 1. புருவநடுவம்; *(yōgā)* centre of the forehead, space between the eye-brows, as the mystic seat of the moon. *"அலர் மதிமண்டலத்தின் முகமார்க்க வமுது" (சி.சி.8, 21, ஞானப்.).* 2. நாபித்தானம் (சி.சி.8, 21, மறைஞா.); *(yōgā)* navel region. 3. பிரமரந்திரத்தின் நுனிப்பகுதி (சி.சி.8, 21, சிவாக்.); *(yōgā)* region at the top of pirama-rantiram.

[மதி + மண்டலம்.]

மதிமணல் *madi-maṇal,* பெ.(n.) வெள்ளி மணல் (சங்.அக.); white glittering sand, as silvery like the moon.

[மதி + மணல். மதி = நிலவு. நிலவின் வெண்மை போன்ற வெண்ணிற மணல்.]

மதிமந்தம் *madi-mandam,* பெ.(n.) கண் சிவந்து உறுத்தி, பீளை கட்டி, நீர் வடிந்து, பார்வை குன்றும் ஒருவகைக் கண்ணோய்; an eye disease accompanied with inflammation, pain dimness of sight etc. (சா.அக.).

மதிமயக்கம்[1] *madi-mayakkam,* பெ.(n.) 1. பித்தியம்; madness. 2. வெறி; chorea.

[மதி + மயக்கம்.]

மதிமயக்கம்[2] *madi-mayakkam,* பெ.(n.) அறிவு மாறாட்டம்; bewilderment; confusion; insobriety; dementia.

[மதி + மயக்கம்.]

மதிமயக்கி *madi-mayakki,* பெ.(n.) 1. கொன்றை (பாலவா.364); senna; cassia. 2. திகைப்பூடு (மூ.அ.); a plant supposed to cause confusion of mind and numbness of body when stepped upon. 3. ஊர்ந்து செல்லும் சிறு நச்சுயிரி வகை (மூ.அ.); a small poisonous reptile.

[மதி + மயக்கி.]

மதிமயங்கி *madi-mayaṅgi,* பெ.(n.) மதி மயக்கி, 1 பார்க்க (பாலவா. 364, உரை); see *madi-mayakki.*

[மதி + மயங்கி.]

மதிமரசம் *madi-marasam,* பெ.(n.) நிலவு; moon (சா.அக.).

மதிமலை *madi-malai,* பெ.(n.) வெள்ளி மலை; silver mountain.

[மதி + மலை. மதி = நிலவு. நிலவு போன்ற வெண்ணிற மலை.]

மதிமாறாட்டம் *madi-mārāṭṭam,* பெ.(n.) அறிவு தடுமாறுகை; perplexity of mind.

[மதி + மாறாட்டம்.]

மதிமான் *madimāṉ,* பெ.(n.) அறிவாளி (சங்.அக.); wise man.

[மதி + மான்.]

மதிமுகம் *madimugam,* பெ.(n.) 1. நிலவு போன்ற முகம்; moon-like face. *"மதிமுக மடந்தைய ரேந்தினர் வந்தே" (திவ். திருவாய்.10, 9, 10).* 2. மந்திரவிச்சை வகை; a kind of magic art. *"மதிமுக மறியு நாமே வாடுவ தென்னை" (சீவக.1708).*

[மதி + முகம். மதி = நிலவு.]

மதிமேகக்கல் *madi-mēga-k-kal,* பெ.(n.) குருவிந்தக் கல் (சங்.அக.); corundum.

மதிமை *madimai,* பெ.(n.) அறிவு; knowledge. *"மதிமை சாலா மருட்கை நான்கே" (தொல்.பொருள். 255).*

[மதி→மதிமை. மதி = அறிவு.]

மதிமோசம் *madi-mōšam,* பெ.(n.) அறிவின்மை lack of sense; stupidity, folly. *"மதிமோசமோ உன்றன் விதிவசமோ... அருவருக்கிறாய்" (இராமநா.உயுத்.2).*

[மதி + மோசம். மதி = அறிவு.]

மதியகந்தம் *madiya-kandam,* பெ.(n.) மாமரம்; mango tree (சா.அக.).

மதியங்காண்(ணு)–தல் *madiyaṅ-kāṉ-,* 16 செ.குன்றாவி.(v.t.) மதிப்பிடுதல் (வின்.); to make a rough estimate.

[மதி = மதிப்பு. மதியம் + காண்–,]

மதியங்கு *madiyaṅgu,* பெ. (n.) ஒரு வகை நறுமணப் பண்டம்; a kind of fragrant substance. *"அரக்கு மதியங்கு மரும்பெறற் பயினும்" (பெருங்.இலாவாண.18, 46, அரும்.).*

மதியநிறம் *madiya-niṟam,* பெ.(n.) நீலஞ் சோதிச் செடி; a plant (சா.அக.).

மதியப்பூப்பு *madiya-p-pūppu,* பெ.(n.) நிலவுத் தோற்றம்; moon rise. *"சகோரங் கலை மதியப்பூப்புக் கெதிராது போதுமோ" (திருவாரூ.394).*

[மதியம் + பூப்பு. மதி = நிலவு.]

மதியம்[1] *madiyam,* பெ. (n.) 1. நிலவு (பிங்.); moon. *"கொன்றை மதியமும்... துன்றிய சென்னியர்" (திருவாச.17, 10).* 2. முழு நிலவு; full moon. *"வானூர் மதியம்போல் வைகலுந்தேயுமே தானே சிறியார் தொடர்பு" (நாலடி, 125).* 3. நிறைமதி, முழுமதி; full moon day. 4. மாதம் (பிங்.); month.

மதியம்[2] *madiyam,* பெ.(n.) மதிப்பு (வின்.); estimate.

[மதி→மதியம். மதி = அளவிடு.]

மதியாநங்கை *madiyā-naṅgai,* பெ.(n.) சிறியாணங்கை பார்க்க; see *ciṟiyāṇaṅgai* (சா.அக.).

மதியாம்பல் *madi-y-āmbal,* பெ.(n.) சீந்தில் (மலை.); gulancha.

[மதி + ஆம்பல்.]

மதியில்மிக்கான் *madiyil-mikkāṉ,* பெ. (n.) ஒருவகைச் செய்நஞ்சு; a kind of prepared arsenic (சா.அக.).

மதியிலி *madiyili,* பெ. (n.) அறிவற்ற–வன்–வள்–து; fool. *"எம்மதியிலி மடநெஞ்சே" (திருவாச.5, 33).*

[மதி + இலி. மதி = அறிவு.]

மதியின்மை *madi-y-iṉmai,* பெ.(n.) மதி மோசம் பார்க்க; see *madi-mōšam.*

மறுவ. மதியீனம்.

[மதி + இன்மை.]

மதியுடம்படு–தல் *madi-y-uḍampaḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. தலைவி தலைவன் கருத்தோடு இணங்கியவளாதல் (அகப்.); to reciprocate love, as a heroine. *"மிதிலைமூதூ ரெய்திய ஞான்றே மதியுடம் பட்ட மாக்கட்சீதை" (தொல்.பொருள்.54, உரை).* 2. தலைவன் தலைவியரிருவர்க்குங் கூட்ட முண்மையை அவர்தம் கருத்தொற்றுமை பற்றித் தோழி யுணர்தல் (தொல்.பொருள்.128, உரை) (திருக்கோ.71, கொளு.) (அகப்.); to discover, as a maid, the love affair of her mistress.

[மதி + உடம்படு–,]

மதியுடம்படுத்தல் *madi-y-uḍampaḍuttal,* பெ.(n.) 1. (அகப்.) தலைவன் தலைவியிருவர் கருத்தொற்றுமையால் அவர்தம்முட் கூட்டமுண்மையைத் தோழி யுணரும் அகத்துறை (தொல்.பொருள்.127); theme of a maid discovering the love affair of her mistress. 2. (அகப்.) தலைவிமீது தான் கொண்ட காதலைத் தலைவன் தோழிக்கு உணர்த்தி அவளது அறிவை யொரு வழிப்படுத்தும் அகத்துறை (களவியற்.பக்.42); theme of a hero disclosing his love-affair to the maid of his lady - love and securing her help.

[மதி + உடம்படுத்தல்.]

மதியுடையான் *madi-y-uḍaiyāṉ,* பெ.(n.) முப்பூ செயற்பாட்டாளர்கள்; alchemists.

மதியுப்பு *madi-y-uppu,* பெ.(n.) 1. வளைய லுப்பு (மூ.அ.); a medicinal salt, impure carbonate of soda. 2. இந்துப்பு; rock salt.

மதியையழைத்தல் *madiyai-y-aḻaittal,* பெ.(n.) அம்புலிப்பருவம்; a section of *piḷḷai-t-tamiḻ*.

[மதியை + அழைத்தல்.]

மதிரம் *madiram,* பெ.(n.) மதிரை பார்க்க; see *madirai. "மதுக மதிர முதலா" (பெருங். வத்தவ.11, 87).*

[மதிரை→மதிரம்.]

மதிரவி *madiravi,* பெ.(n.) சாதிலிங்கத்தி னின்று வடித்த சாறு (சங். அக.); essence of vermilion.

மதிருணம் *madiruṇam,* பெ.(n.) கரும்பு; sugarcane (சா.அக.).

மதிரை *madirai,* பெ.(n.) கள் (சூடா.); toddy.

மதில் *madil,* பெ.(n.) 1. கோட்டைச் சுவர்; wall round a fort; fortification. *"நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லால்" (கலித்.67).* 2. சுவர்; wall. 3. சுவரின் மேற்கட்டு (C.E.M.); coping. 4. இஞ்சி (தைலவ. தைல.); jamaica ginger.

தெ. மதலு; க., ம. மதில்.

மதிலரண் *madil-araṇ,* பெ. (n.) நால்வகை அரண்களுள் ஒன்று (பிங்.) (குறள், 742, உரை); fortress, one of four *araṇ,* q.v., of a city.

[மதில் + அரண்.]

மதிலவணம் *madi-lavaṇam,* பெ.(n.) இந்துப்பு (மூ.அ.); rock salt.

மதிலுண்மேடை *madiluṇ-mēḍai,* பெ.(n.) கொத்தளம் (யாழ்.அக.); rampart in fortification.

[மதில் + உள் + மேடை.]

மதிலுறுப்பு *madil-uṟuppu,* பெ.(n.) 1. கோட்டை யரணைச் சார்ந்த ஒரு பகுதி (வின்.); bastion of a fortified wall. 2. மதிலின் சித்திரங்கள் (யாழ்.அக.); pictures drawn on a fort wall.

[மதில் + உறுப்பு.]

மதிவட்டை *madi-vaṭṭai,* பெ.(n.) ஒருவகை நோய்; a disease (சா.அக.).

மதிவல்லி *madi-valli,* பெ.(n.) கொத்தான் கொடி; a twiggy plant (சா.அக.).

மதிவல்லோர் *madi-vallōr,* பெ.(n.) 1. அறிவாளர்; wise men. *"அதனள வுண்டோர் கோண் மதிவல்லோர்க்கே" (அகநா.48).* 2. அமைச்சர் (வின்.); king's ministers, counsellers, statesmen.

[மதி + வல்லோர். மதி = அறிவு.]

மதிவாணனார் *madivāṇaṉār,* பெ.(n.) கடைச்சங்க காலத்தவனும் நாடகத் தமிழ் நூலியற்றியவனுமான பாண்டியன் (சிலப். உரைச் சிறப்புப்.); a *Pāṇḍya* king of the last *Śaṅgam* author of a dramatic work.

மதிவாணர் *madivāṇar,* பெ.(n.) மறைந்து போன நாடகத்தமிழ் என்னும் நூலின் ஆசிரியர்; author of *nāḍaga-t-tamiḻ* a lost book (சி.பெ.அக.).

மதிவாம்பல் *madi-v-āmbal,* பெ.(n.) சீந்தில்; moon creeper (சா.அக.).

மதிவாமியம் *madi-vāmiyam,* பெ.(n.) சீந்திற் கொடி; moon creeper.

மதிவாயிபம் *madi-vāyibam,* பெ.(n.) மரவுரி நாதாக்கள் சட்டை; a coat from the fibres of the tree worn by yogis to protect themselves from cold (சா.அக.).

மதிவாவி *madi-vāvi,* பெ.(n.) செம்பரத்தை; a shrub (சா.அக.).

மதிவீடு *madi-vīḍu,* பெ.(n.) நிலவுக் கலை; vital air passing through left nostril (சா.அக.).

மதிற்கள்ளி *madiṟ-kaḷḷi,* பெ.(n.) வேலிக் கள்ளி (சங்.அக.); a kind of spurge.

[மதில் + கள்ளி. மதில் = சுற்றுச்சுவர், சுற்றுச் சுவரைப் போன்றமைந்த வேலி.]

மதிற்சுற்று *madiṟ-šuṟṟu,* பெ.(n.) 1. சுற்று மதில் (திவா.); surrounding wall. 2. சுற்றாலை (பிரகாரம்) (insc.) arcade surrounding a shrine.

[மதில் + சுற்று.]

மதிற்சூட்டு *madiṟ-šūṭṭu,* பெ.(n.) கோட்டை மதிலின் தலையீடான உறுப்பு; coping of the wall of a fort.

[மதில் + சூட்டு.]

மதின்மரம் *madiṉ-maram,* பெ.(n.) கோட்டை மதிலின் கதவிலிடுங் கணைய மரம்; cross - bar on the door of a fortified wall. *"மதின்மர முருக்கி" (பதிற்றுப்.15:3).*

[மதில் + மரம்.]

மது *madu,* பெ.(n.) 1. தேன்; honey, nectar of flowers. *"மதுவின் குடங்களும்" (சிலப்.25, 38).* 2. கள் (பிங்.); toddy. *"மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சிபோல" (தொல்.பொருள். 114, பக்.495).* 3. இலுப்பைப் பூ முதலிய வற்றினின்று வடிக்கும் மயக்கம் தரும் எரிநீர் (திராவகம்) (சங்.அக.); intoxicating drink distilled from mahua flowers, etc. 4. பூந்தாது, மலர்த் துகள் (சங்.அக.); pollen of flowers. 5. இனிமை (அக.நி.); sweetness. 6. நீர் (சங்.அக.); water. 7. அமுதம் (சங்.அக.); nectar. 8. பால் (சங்.அக.); milk. 9. இளவேனில் (பிங்.); spring. 10. அசோகு (மலை.); asoka tree. 11. அதிமதுரம் (மலை.); liquorice - plant. 12. திருமாலாற் கொல்லப்பட்ட ஓரசுரன்; an *asura* slain by *Tirumāl.* *"மதுகைடவரும் வயிறுருகி மாண்டார்" (திவ்.இயற்.3, 66).*

[முள்→முட்டு→முடி. முடிதல் = இறுதியாதல், முற்றுப்பெறுதல். முடி→மடி. மடிதல் = சாதல், அழிதல். முட்டு→ மட்டு = அளவு, எல்லை, குத்துமதிப்பு. மட்டு→மட்டம் = அளவு, சமநிலை. மட்டு→மட்டி = தாழ்ந்த மதியுள்ள மூடன், மக்கு. மட்டு→மட்டை = பயனற்றவன்–வள்–து, மட்டமான நெல், மட்டமான அரிசி. முத்துதல்→ (முட்டுதல்) = பொருந்துதல், ஒத்தல். முத்து (முட்டு)→ மத்து (மட்டு) = அளவு. மத்து→மத்தி. மத்தித்தல் = அளவிடுதல். மத்தி→மதி. மதித்தல் = அளவிடுதல், கருதுதல். முத்து→மத்து = கலப்பு, கலக்கம், மயக்கம், மயக்கஞ் செய்யும் பித்தம், மயக்கம் தரும் கள். மத்து→மது (வே.க.4:67).]

மதுக்கடல் *madu-k-kaḍal,* பெ.(n.) எழுகடலு ளொன்றான கட்கடல்; sea of spirituous liquor.

[மது + கடல்.]

மதுக்காமம் *madu-k-kāmam,* பெ.(n.) ஈருள்ளி; onion (சா.அக.).

மதுக்காரை *madu-k-kārai,* பெ.(n.) 1. சிறு மரவகை (இலத்.); emetic-nut, s.tr., randia dumetorum. 2. காரை வகை (வின்.); a species of common honey-thorun.

மதுக்காளித்தைலம் *madukkāḷi-t-tailam,* பெ.(n.) ஆடாதோடை வேர் எண்ணெய்; oil prepared out of adathoda root (சா.அக.).

மதுக்கிரமம் *madu-k-kiramam,* பெ.(n.) தேன்கூடு (யாழ்.அக.); honeycomb.

[மது + கிரமம். மது = கள், தேன்.]

மதுக்கிருது *madu-k-kirudu,* பெ.(n.) தேனீ (சங்.அக.); bee.

மதுக்குடி *madu-k-kuḍi,* பெ.(n.) மதுகுக் குடிகை பார்க்க (மூ.அக.); see *madugu-k-kuḍigai.*

[மதுகுக்குடிகை→மதுக்குடி.]

மதுக்குடிகை *madu-k-kuḍigai,* பெ.(n.) மதுகுக்குடிகை (சங்.அக.) பார்க்க; see *madugu-k-kuḍigai.*

[மதுகுக்குடிகை→மதுக்குடிகை.]

மதுக்கெண்டை *madu-k-keṇḍai,* பெ.(n.) 1. செந்நீலக்கலப்பான பொன்னிறமுள்ளதும் எட்டங்குல நீளம் வளர்வதுமான கடல் மீன் வகை; gizzard-shad, golden shot with purple, attaining 8 in. in length. 2. சாம்பற் பச்சை நிறங் கொண்ட கடல் மீன் வகை; gizzard - shad, greyish green.

மதுக்கோட்டம்[1] *madu-k-kōṭṭam,* பெ.(n.) தேன்கூடு; honey comb.

[மது + கோட்டம்.]

மதுக்கோட்டம்[2] *madu-k-kōṭṭam,* பெ.(n.) மதுகண்டம் பார்க்க (சங்.அக.); see *madu-k-kaṇḍam.*

மதுகண்டம் *madu-kaṇḍam,* பெ.(n.) குயில்; Indian cuckoo.

[மது + கண்டம். மது = இனிமை. இனிய குரலுடைய குயில்.]



மதுகந்தம் *madu-kantam,* பெ.(n.) 1. மதுகம், 5 பார்க்க; see *madugam.* 2. மகிழமரம்; pointed leaved ape flower tree.

மதுகம் *madugam,* பெ.(n.) 1. வண்டு (பிங்.); bee. 2. அதிமதுரம்; liquorice plant. 3. தித்திப்பு (அக.நி.); sweetness. 4. தரா (பிங்.); alloy. 5. இருப்பை; South Indian mahwa. 6. மதிரை பார்க்க; see *madirai.* *"மதுக மதிரமுதலா" (பெருங்.வத்தவ.11, 87).* 7. எட்டி மரம் (சூடா.); strychnine - tree. 8. அழகு (பிங்.); beauty.

[மது→ மதுகம்.]

மதுகமாவிரம் *maduga-māviram,* பெ.(n.) அதிமதுரம்; liquorice plant.

மதுகரம்[1] *madu-karam,* பெ.(n.) 1. தேனீ; honey bee. *"மதுகர முரலுந் தாரோயை" (திருவாச.5:16).* 2. ஆண் வண்டு (சூடா.); male bee, drone.

[மது→ மதுகரம்.]

மதுகரம்[2] *madu-karam,* பெ.(n.) 1. கள் (திவா.); spirituous liquor. 2. நஞ்சுப் பூடுவகை (வச்சநாபி) (தைலவ.தைல.); nepal aconite. 3. மதுகம், 1 பார்க்க (தைலவ. தைல.); see *madugam, 1.*

[மது→ மதுகரம்.]

மதுகவடி *maduga-vadi,* பெ.(n.) வெட்டிவேர் (சங்.அக.); kuskus.

மதுகாதிதம் *madu-kātitam,* பெ.(n.) புன்னை; a tree (சா.அக.).

மதுகாயனம் *madu-kāyanam,* பெ.(n.) மது கண்டம் பார்க்க (சா.அக.); see *madu-kandam.*

மதுகாரி *madu-kāri,* பெ.(n.) தேனீ (சங்.அக.).; honey bee.

மதுகாரை *madu-kārai,* பெ.(n.) மதுக்காரை பார்கக; see *madu-k-kārai.*

[மதுக்காரை→ மதுகாரை.]

மதுகியகெந்தம் *madukiya-kendam,* பெ. (n.) வெள்ளுள்ளி; garlic (சா.அக.).

மதுகிருது *madu-kirudu,* பெ.(n.) மதுக்கிருது பார்க்க (யாழ்.அக.); see *madu-k-kirudu.*

மதுகுக்குடிகை *madugu-k-kudigai,* பெ. (n.) எலுமிச்சை (இ.வ.); sour lime.

[மது + குக்குடிகை. மது = சாறு.]

மதுகேசடம் *madu-kēšadam,* பெ.(n.) மதுகாரி பார்க்க (சங்.அக.); see *madu-kāri.*

மதுகை *madugai,* பெ.(n.) 1. வலிமை; strength. *"அறியுநர் கொல்லோ வனை மதுகையர் கொல்" (குறுந்.290).* 2. அறிவு; knowledge. *"வானுயர் மதுகை வாட்டும்" (சீவக.664).*

[முல்→ முள்→ முட்டு→ மட்டு = கள், தேன், இன்சாறு, காமக்குடிப்பு, தேனிற்குந் திங்களுக்கும் உரிய நறுமணம். மட்டு→ மத்து→ மத்தம் = மயக்கம், வெறி, களிப்பு, செருக்கு, கோட்டி, கருவூமத்தை. மத்து→ மது = கள், தேன், இனிமை. மத்து→ மத்தம்→ மத்தன் = மதிமயக்க மடைந்தவன், பித்தன், பேரூக்க முள்ளவன், கொழுப்புள்ளவன். மத்து→ மத்தி→ மதி = மயக்கஞ் செய்யும் திங்கள். மத்து→ மது = கள், மதுக்களிப்பு, வெறி, தேன், செருக்கு, நிலவளம், வீரியம், பெருமை. மது→ மதுகை (வே.க.4:68).]

மதுங்கு–தல் *madungu-*, 5 செ.கு.வி.(v.i.) இனிமையாதல்; to be sweet. *"மதுங்கிய வார்கனி" (திருமந்.2914).*

[மது = இனிமை. மது→மதுங்கு–தல்.]

மதுச்சாரம் *madu-c-cāram,* பெ.(n.) 1. நவச்சாரம்; chloride of ammonia a metallic cement. 2. ஆயுள் வேதப்படி செய்யும் குடிப்பு, வடிசாறு முதலியன; Aristam and Asavam prepared an ayurveda (சா.அக.).

மதுச்சிட்டம் *madu-c-ciṭṭam,* பெ.(n.) மெழுகு (சங்.அக.); wax.

மதுச்சிரம் *madu-c-ciram,* பெ.(n.) சீந்தில் கொடி (சங்.அக.); gulancha.

மதுசகன் *madu-šagaṉ,* பெ.(n.) (வசந்தனின் நண்பன்) மன்மதன் (யாழ்.அக.); *Kāmaṉ,* as the companion of the spring.

[மது + சகன்.]

மதுசகாயன் *madu-šagāyaṉ,* பெ.(n.) மது சகன் பார்க்க (யாழ்.அக.); see *madu-šagaṉ.*

[மதுகன்→மதுசகாயன்.]

மதுசஞ்சம் *madu-šañjam,* பெ.(n.) முந்திரி (சங்.அக.); cashew - nut.

மதுசஞ்சை *madu-šañjai,* பெ.(n.) கொடி முந்திரி; grapes (சா.அக.).

மதுசத்துருமம் *madu-šatturumam,* பெ.(n.) இலுப்பை மரம்; a tree with sweet fragrant flowers (சா.அக.).

[மது + சத்துருமம். மது = கள், தேன், இலுப்பைப்பூ முதலியவற்றினின்று காய்ச்சி யிறக்கும் வெறிநீர்.]

மதுசம் *madušam,* பெ.(n.) குங்கிலியம்; a kind of incense, resinous gum (சா.அக.).

மதுசர்க்கரை *madu-šarkkarai,* பெ.(n.) தேனிலிருந்து எடுக்கும் சருக்கரை; sugar obtained from honey.

[மது + சருக்கரை. சருக்கரை→சர்க்கரை.]

மதுசரவா *madu-šaravā,* பெ.(n.) பெருங் குரும்பை (சங்.அக.); bow string, hemp.

மதுசாரதி *madu-šāradi,* பெ.(n.) மன்மதன் (யாழ்.அக.); *Kāmaṉ.*

[மது + சாரதி. மது = மயக்கம்.]

மதுசாவா *madu-šāvā,* பெ.(n.) பெருங் குரும்பை; an hebacious plant (சா.அக.).

மதுசுவரம் *madu-šuvaram,* பெ.(n.) மது கண்டம் பார்க்க (யாழ்.அக.); see *madu-kaṇḍam.*

மதுத்தண்டு *madu-t-taṇḍu,* பெ.(n.) கள்ளடைக்கும் மூங்கிற் குழாய்; bamboo tube for holding liquor. *"தழங்கு வெம்மதுத்தண்டும்" (சீவக.863).*

[மது + தண்டு.]

மதுத்திருணம் *madu-t-tiruṇam,* பெ.(n.) கரும்பு (மலை.); sugarcane.

[மது + திருணம். மது = சாறு.]

மதுத்துருமம் *madu-t-turumam,* பெ.(n.) இலுப்பை மரம்; a tree with fragrant flowers (சா.அக.).

மறுவ. மதுத்தூரு.

[மது + துருமம்.]

மதுதிவன் *madu-tivaṉ,* பெ.(n.) காமன் (யாழ்.அக.); *Kāmaṉ,* the god of love.

மதுதூதம்[1] *madu-tūdam,* பெ.(n.) 1. தேன்; honey. 2. கள்; toddy (சா.அக.).

[மது + தூதம்.]

மதுதூதம்[2] *madu-tūdam,* பெ.(n.) மாமரம் (மலை.); mango tree.

மதுதூதிகம் *madu-tūdigam,* பெ.(n.) பனங்கள்; palmyra toddy (சா.அக.).

மதுதூலி *madu-tūli,* பெ.(n.) தேன்பாகு (சங்.அக.); molasses.

[மது + தூலி.]

மதுநாலிகேரம் *madu-nālikēram,* பெ.(n.) தெங்கு வகை (சங்.அக.); a kind of coconut tree.

[மது + நாலிகேரம்.]

மதுநீர் *madu-nīr,* பெ.(n.) வடித்த கள் (இக்.வ.); purified spirits.

[மது + நீர்.]

மதுநேதிரு *madu-nēdiru,* பெ.(n.) தேனீ (சங்.அக.); bee.

மதுநோலேகம் *madunōlēgam,* பெ.(n.) மதுநேதிரு பார்க்க (சங்.அக.); see *matunētiru.*

மதுப்பரணி *madu-p-paraṇi,* பெ.(n.) கொம்மட்டி மாதுளை; a kind of citron (சா.அக.).

மதுப்பலி *madu-p-pali,* பெ.(n.) மதுவாகிய பலி; oblation of wine. *"இன்மதுப்பலியும் பூவும்" (சீவக.471).*

மதுப்பிராசனம் *madu-p-pirāšaṉam,* பெ.(n.) பிறந்த குழந்தைக்குத் தேனூட்டுவதாகிய சடங்கு வகை (இ.வ.); the auspicious ceremony of the first feeding of a new born infant with a little honey.

[மது + Skt. பிரசானம்.]

மதுப்பிரியன் *madu-p-piriyaṉ,* பெ.(n.) 1. கள்ளுக்குடியில் விருப்பமுள்ளவன் (இ.வ.); one addicted to drink. 2. பலராமன்; god *Balarāmaṉ.*

[மது + Skt. பிரியன். மது = கள்.]

மதுப்பு *maduppu,* பெ.(n.) தேன்; honey (சா.அக.).

[மது→ மதுப்பு.]

மதுப்பொங்குதல் *madu-p-poṅgudal,* பெ.(n.) நன்னிமித்தமாகக் (நற்குறியாக) கருதப்படும் கட்குடம் பொங்குகை (இ.வ.); effervescence of toddy in *madu-k-kuḍam,* considered auspicious.

[மது + பொங்குதல்.]

மதுபக்கு *madu-pakku,* பெ.(n.) கோவைக் கொடி; a creeper (சா.அக.).

மதுபதி *madu-pati,* பெ. (n.) 1. காளி (சூடா.); *Kāḷi.* 2. மலைமகள் (நாமதீப.20); *Pārvati.*

மதுபம்[1] *madupam,* பெ.(n.) வண்டு; bee, as sucking honey. *"மதுப மூசுந் தேனொடு" (கம்பரா.மீட்சி.310).*

மதுபம்[2] *madupam,* பெ. (n.) மதுவம்[1] பார்க்க (யாழ்.அக.); see *maduvam.*

மதுபர்க்கம் *madu-parkkam,* பெ.(n.) மது பருக்கம் பார்க்க; see *madu-parukkam.* *"குளிர் மதுபருக்க மூட்டி" (திருவிளை. உக்கிர. வேல்வளை.47).*

[மது + பருக்கம்→பர்க்கம்.]

மதுபருக்கம் *madu-parukkam,* பெ.(n.) தெய்வத்திற்கேனும், விருந்தினர்க்கேனும், மணவாளப் பிள்ளைக்கேனும் தேன், பால், பழம் முதலியவற்றைச் சேர்த்து அளிக்கும் கூட்டுணவு (சீவக.2463, உரை); offering of honey and milk; mixed with fruits, as to a bridegroom on his arrival at the house of his father-in-law or to a guest or to a deity.

[மது + பருகு→பருகம்→பருக்கம்.]

மதுபருணிகை *madu-parunigai,* பெ.(n.) 1. அவுரி (மலை.); Indian indigo. 2. சீந்தில் (தைலவ.தைல.); gulancha.

மதுபலம் *madu-palam,* பெ.(n.) தென்னை வகை (மூ.அ.); a species of coconut.

மதுபலி *madu-pali,* பெ.(n.) 1. மதுப்பலி பார்க்க; see *madu-p-pali.* 2. கொற்றவை (யாழ்.அக.); *Kāli.*

மதுபலிதம் *madu-palidam,* பெ. (n.) நீர்ச் சோற்றுத் தண்ணீர்; water in which cooked rice is soaked (சா.அக.).

மதுபவம் *madu-pavam,* பெ.(n.) தேன் கற்கண்டு; sugarcandy formed in honey (சா.அக.).

மதுபன்னி *madu-panni,* பெ.(n.) மது பருணிகை, 2 பார்க்க (சங்.அக.); see *madu-parunigai.*

மதுபாகம்[1] *madu-pāgam,* பெ.(n.) 1. தேன் பாகம், தேன் மேல் வருகிற பாகம்; the scum on the surface of honey. 2. புங்க மரம்; a tree.

[மது + பாகம். பாகம் = பக்குவம்.]

மதுபாகம்[2] *madu-pāgam,* பெ.(n.) தேன் போலத் தெளிவும் இனிமையுமுடைய செய்யுள் நடை; simple and hoeny - like sweet style in poetic composition.

[மது + பாகம்.]

மதுபாயி *madu-pāyi,* பெ.(n.) வண்டு (சங்.அக.); bee.

[மது + பாயி.]

மதுபானம்[1] *madu-pānam,* பெ.(n.) தென்னங் கள்; coconut toddy (சா.அக.).

[மது + பானம்.]

மதுபானம்[2] *madu-pānam,* பெ.(n.) 1. கள் குடிக்கை; drinking intoxication liquor. *"விடுக மதுபானாதிக ளென்கை" (வேதா. சூ.116).* 2. கள் (வின்.); intoxicating liquor. *"கள்ளே புனலே புலவியிம் மூன்றினும் ஒள்ளொளி செய்தா வொளிகிளருண் கட்கெண்டை" (பரிபா. 16:39–40).*

[மது + பானம்.]

மதுபானி *madu-pāni,* பெ. (n.) கட்குடியன்; drunkard. *"மதுபானிக்குப் பரிகாரம்" (சிவதரு. பரிகார.55, உரை).*

[மது + பானி.]

மதுபிந்துகலகம் *madu-pindu-kalagam,* பெ. (n.) ஒரு கடையின் தரையில் விழுந்த தேன்றுளியால் விளைந்த கலகம் போலச் சிறு

நிகழ்ச்சியிலிருந்து விளையும் பெருஞ் சண்டை (ஈடு.); big quarrel arising from an insignificant matter, such as a drop of honey on the floor of a shop.

[மதுபிந்து + கலகம்.]

மதுபீசம் *madu-pīšam,* பெ.(n.) மாதுளை (சங்.அக.); pomegranate.

மதுபுரி *madu-puri,* பெ.(n.) மதுரை[1], 2 பார்க்க (யாழ்.அக.); see *madurai.*

மதுமஞ்சம் *madu-mañjam,* பெ.(n.) முந்திரி (சங்.அக.); cashew nut.

மதுமடந்தை *madu-maḍandai,* பெ.(n.) அத்தினிசாதிப் பெண்; one of the four classes of women divided according to thier lust (சா.அக.).

மதுமத்தை *madu-mattai,* பெ.(n.) கரு வூமத்தை (யாழ்.அக.); purple stramony.

[மது + மத்தை.]

மதுமதனன் *madu-madaṉaṉ,* பெ.(n.) திருமால் (யாழ்.அக.); *Tirumāl.*

மதுமயக்கம் *madu-mayakkam,* பெ.(n.) குடிவெறி; intoxication.

[மது + மயக்கம்.]

மதுமரம் *madu-maram,* பெ.(n.) நெய்மரம் பார்க்க; see *ney-maram.*

[மது + மரம்.]

மதுமராடம் *madi-marāḍam,* பெ.(n.) கொக்கு; stork.



மதுமருந்து *madu-marundu,* பெ.(n.) மயக்கந்தரும் மருந்துகள்; names of medicines containing intoxicants (சா.அக.).

மதுமல்லி *madu-malli,* பெ.(n.) 1. இரட்டை மல்லிகை; a kind of jasmine with two whirl of petals. 2. அடுக்கு மல்லிகை; jasmine with multi ring (whore) of petals.

[மது + மல்லி.]

மதுமல்லிகை *madu-malligai,* பெ.(n.) அடுக்கு மல்லிகை (மலை.); double flowered jasmine.

[மது + மல்லிகை.]

மதுமலாகம் *madu-malāgam,* பெ.(n.) பனங் கற்கண்டு; palmyra sugarcandy (சா.அக.).

மதுமா *madu-mā,* பெ.(n.) மாமரம் (தைலவ. தைல.); mango tree.

[மது + மா.]

மதுமாது *madu-mādu,* பெ.(n.) மதுமடந்தை பார்க்க; see *madu-maḍandai.*

[மது + மடந்தை.]

மதுமாமிசம் *madu-māmišam,* பெ.(n.) கள்ளும் இறைச்சியும் (வின்.); liquor and flesh, as offered together.

[மது + Skt.மாமிசம்.]

மதுமூத்திரம் *madu-mūttiram,* பெ.(n.) மது மேகமூத்திரம் (m.t.) பார்க்க; see *madu-mēga-mūttiram.*

[மது + மூத்திரம்.]

மதுமூலம்[1] *madu-mūlam,* பெ. (n.) சருக்கரை வள்ளிக் கிழங்கு; sweet potato.

[மது + மூலம்.]

மதுமூலம்[2] *madu-mūlam,* பெ. (n.) கிழங்கு வகை (யாழ்.அக.); a kind of root.

[மது + மூலம்.]

மதுமேகம் *madu-mēgam,* பெ. (n.) மதுமேக மூத்திரம் (இராசவைத்.150) பார்க்க; see *madu-mēga-mūttiram.*

மதுமோகி *madu-mōgi,* பெ.(n.) வண்டு; bee.

[மது + Skt. மோகி.]

மதுர்ச்சி *madurcci,* பெ.(n.) பொன்னிமிளை அல்லது மஞ்சள் நிமிளை; gold coloured bismuth (சா.அக.). *“தித்திப்புச் சுவையும் சாரச்சுவையும் கலந்தது”.*

மதுரக்கசப்பி *madura-k-kašappi,* பெ. (n.) வேம்பு; neem tree (சா.அக.).

மதுரக்கபம் *madura-k-kabam,* பெ.(n.) ஒருவகை நோய்; a kind of disease (சா.அக.).

மதுரகம் *maduragam,* பெ. (n.) 1. இலுப்பை மரம் ; a sweet fragrant flowering tree. 2. எட்டி மரம்; a tree. 3. அதிமதுரம்; liquorice. 4. குன்றிமணி; jeweller's bead (சா.அக.).

மதுரச்சம்பா *madura-c-cambā,* பெ.(n.) சம்பா நெல்வகை (C.G.); a species of sweet paddy.

மதுரசம் *madurašam,* பெ. (n.) மதுச்சாறம் பார்க்க; see *madu-c-cāṟam.*

[மது + Skt. ரசம்.]

மதுரை[1] *madurai,* பெ.(n.) 1. பாண்டியர் தலைநகரம்; *Madurai* the capital of the *Pāṇḍya* kingdom. *"மாட மதுரையுந் தருகுவன்" (புறநா.32).* 2. சத்தபுரிகளுள் ஒன்றானதும் கண்ணன் பிறந்ததுமான வடமதுரை; *Muttra* in Agra, sacred as the birth place of *Krisṇā,* one of *catta-puri,* (q.v.). *"மன்னு மதுரை தொடக்கமாக" (திவ்.நாய்ச்.12, 10).*

மதுரை[2] *madurai,* பெ.(n.) கள் (சூடா.); spirituous liquor.

மதுரை[3] *madurai,* பெ.(n.) இனிமையானது; that which is sweet to the taste.

மதுரைக்கணக்காயனார் *madurai-k-kaṇakkāyaṉār,* பெ.(n.) நக்கீரனார் தந்தையான புலவர் (இறை.1, பக்.8); a poet, father of *Nakkīraṉār.*

[மதுரை + கணக்காயனார்.]

மதுரைக்கழகம் *madurai-k-kaḻagam,* பெ. (n.) மதுரையில் இருந்த மூன்றாம் தமிழ்க் கழகம்; the third *Tamil-k-kaḻagam* of Madurai.

மதுரைக்காஞ்சி *madurai-k-kāñji*, பெ. (n.) பத்துப் பாட்டினுள் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடிமருதனார் பாடிய பாட்டு; a poem in *pattu-pāṭṭu* on the *Pāṇḍyaṉ* king *Neḍuñ-ceḻiyaṉ* of *Talaiyālaṅkāṉam* fame, by *Māṅkuḍi-marudaṉār*.

மதுரைக்கூலவாணிகன்சாத்தன் *madurai-k-kūlavāṇigaṉ-šāttaṉ*, பெ. (n.) மணிமேகலையாசிரியர்; a merchant and poet of Madurai, author of *Maṇi-mēgalai*. *"மதுரைக் கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்" (சிலப்.பதி, 89).*

[மதுரை + கூலவாணிகன்சாத்தன்.]

மதுரைச்சங்கம் *madurai-c-caṅgam*, பெ.(n.) மதுரைக்கழகம் பார்க்க; see *madurai-k-kaḻagam*.

மதுரைத்தொகை *madurai-t-togai*, பெ.(n.) மதுரைச்சங்கம் பார்க்க; see *madurai-c-caṅgam*. *"மதுரைத் தொகை யாக்கினானும்" (தேவா.1179, 11).*

[மதுரை + தொகை.]

மதுரைமாதெய்வம் *madurai-mā-teyvam*, பெ.(n.) மதுராபதி பார்க்க; see *madurā padi*. *"மதுரைமா தெய்வம் வந்து தோன்றி" (சிலப்.பதி.43).*

[மதுரை + மாதெய்வம்.]

மதுரைமாதேவி *maduraimā-dēvi*, பெ. (n.) மீனாட்சியம்மை (யாழ்.அக.); *Mīṉāksi*, as the Goddess of Madurai.

[மதுரை + மாதேவி.]

மதுரையுப்பூரிகுடிகிழான் *maduraiyu-p-pūrikuḍi-kiḻāṉ*, பெ.(n.) உருத்திரசன்மனின் தந்தை (இறை.1, பக்.4); father of *ūrut-tira-šaṉmaṉ*.

[மதுரை + உப்பூரிகுடிகிழான்.]

மதுரைவீரன் *madurai-vīraṉ*, பெ.(n.) ஒரு சிற்றூர்த் தெய்வம் (இ.வ.); a village deity.

[மதுரை + வீரன்.]

மந்தகதி *manda-kadi*, பெ. (n.) 1. சுணங்கிய நடை; slow pace. 2. மந்தக்குணம் பார்க்க; see *manda-k-kuṇam*.

[மந்தம் + கதி. கதி = செலவு (பயணம்).]

மந்தகாசம்[1] *manda-kāšam*, பெ.(n.) 1. மந்தாரகாசம் பார்க்க (M.L.); see *mandāra-kāšam*. 2. நோய் வகை; a species of consumption (வின்.).

[மந்தம் + காசம்.]

மந்தகாசம்[2] *manda-kāšam*, பெ.(n.) புன்சிரிப்பு; gentle laugh, smile (கொ.வ).

மந்தகுணம் *manda-guṇam*, பெ.(n.) மந்தக் குணம் பார்க்க; see *manda-k-kuṇam*.

[மந்தக்குணம் → மந்தகுணம்.]

மந்தசீற்காரம் *manda-šīṟkāram*, பெ.(n.) கலவிக் காலத்தில் மகளிர் வாயினின்றெழும் உறிஞ்சற் சிற்றோசை; the gentle hiss made by women in sexual enjoyment. *"மந்தசீற்காரம் வஞ்சியர் செய்து" (கொக்கோ. 2:12).*

[மந்தம் + சீற்காரம்.]

மந்தசெபம் *manda-šebam,* பெ.(n.) வாய்க்குள் ஓதும் செபம் (சிவதரு. சிவஞானயோ.81); prayer uttered inaudibly.

[மந்தம் + செபம்.]

மந்தச்சூடு *manda-c-cūḍu,* பெ.(n.) இயல்பினும் மிகுந்த சூடு; slight heat than normal.

[மந்தம் + சூடு.]

மந்தசம் *mandašam,* பெ.(n.) வெண்ணெய்; butter (சா.அக.).

மந்தசானம்[1] *manda-šāṉam,* பெ.(n.) தூக்கம்; sleep (சா.அக.).

மந்தசானம்[2] *manda-šāṉam,* பெ.(n.) தீ (சங்.அக.); fire.

மந்தரம் *mandaram,* பெ. (n.) 1. சோம்பல்; dullness. 2. வெண்ணெய்; butter (சா.அக.).

மந்தநாடி *manda-nāḍi,* பெ.(n.) மெதுவாய் ஓடும் நாடி நடை; slow pulse.

[மந்தம் + நாடி.]

மந்தப்படு-தல் *manda-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) செரியாதிருத்தல்; causing indigestion.

[மந்தம் + படு-.]

மந்தடைப்பன் *mandaḍaippaṉ,* பெ.(n.) கால்நடைக்கு வரும் நோய்களுள் ஒன்று (மாட்டுவை.சிந்.); a cattle disease.

[மந்து→ மந்தை = கால்நடைக் கூட்டம், கால்நடை. மந்து + அடைப்பன்.]

மந்தணம் *mandaṇam,* பெ.(n.) 1. மந்திரம்[1] பார்க்க; see *mandiram.* *"மந்தண முற்றுழீஇ"* (கம்பரா. விபீடண.36). 2. கமுக்கம்; secret. *"மந்தண மிகுந்துபுரி மாமடிதன் வேள்வி"* (தேவா.324:7).

மந்தப்பார்வை *manda-p-pārvai,* பெ.(n.) 1. குறைந்த பார்வை; short sightness. 2. கம்மலான பார்வை; dullness of vision.

[மந்தம் + பார்வை.]

மந்தம்[1] *mandam,* பெ.(n.) 1. சுணக்கம்; slowness, tardiness. *"மந்தத்தேகும்....... தேரே"* (இரகு.கடிமண.14). 2. அறிவு மழுக்கம்; dullness, stupidity, ignorance. *"மந்தமற வோதுவிக்க"* (திருமுறைகண்.5). 3. சோம்பல் (சூடா.); indolence, laziness. 4. புன்மை; meanness, worthlessness, smallness. 5. மென்மைத் தன்மை; softness, freshness. *"மந்த மலர்"* (தேவா.1009:6). 6. பாடற் பயன் எட்டனுள் ஒன்றான சமனிகை; medium note, one of eight *pāḍaṟ-payaṉ* (சிலப்.3:16, உரை). 7. படுத்தலிசை; lowness of tone. *"எண் படுத்தல் மந்தம்"* (சீவக.735, உரை). 8. தென்றல்; gentle wind, southern wind. *"மந்தம் வந்துலவுசீர் மழபாடியே"* (தேவா.316, 3). 9. மந்தச்சா பார்க்க; see *mandaccā.* 10. குதிரை நடை வகை; a pace of horse (சுக்கிரநீதி.72). 12. தனக்கு மட்டும் கேட்கும்படி மந்திரஞ் சொல்லுதல்; reciting a mantram in a tone audible to the reciter alone (சைவ.பொது.152). 13. செரியாமை; indigestion. *"குழந்தைக்கு வயிற்றில் மந்தந்தட்டியிருக்கிறது"* (உ.வ.). 14. குடிவெறி (வின்.); drunkenness.

மந்தம்[2] *mandam,* பெ.(n.) மத்து (வின்.); churning stick.

மந்தம்³ *mandam,* பெ.(n.) 1. செறிவு; density, crowdedness. *"மல்லிகை மந்தக் கோவை" (திவ்.திருவாய்.9, 9, 8).* 2. செவ்வி யழியாமை (திவ்.திருவாய்.9, 98, பன்னீ.); freshness.

மந்தமதி *manda-madi,* பெ.(n.) குறைவான அறிவு, அறிவுக்குறை; dull sense.

[மந்தம் + மதி.]

மந்தமந்தம் *manda-mandam,* வி.எ.(adv.) மெல்ல மெல்ல; gently, slowly. *"மந்த மந்த நடந்தது வாடையே" (கம்பரா. கிளைகண்டு. 14).*

[மந்தம் + மந்தம்.]

மந்தமந்திரம் *manda-mandiram,* பெ.(n.) தனக்கு மட்டும் கேட்கும்படி பலுக்கும் மந்திரம் (தணிகைப்பு.அகத்.179); mandram recited in a tone audible to the reciter alone.

[மந்தம் + மந்திரம்.]

மந்தமா *manda-mā,* பெ.(n.) யானை (சூடா.); elephant, as slow in gait.

[மந்தம் + மா. மெதுவாய் நடக்கும் விலங்காதலின் யானை மந்தமா எனப்பட்டது.]

மந்தமாருதம் *manda-mārudam,* பெ.(n.) தென்றல்; the southern breeze, as gentle. *"மந்தமாருத மூர்வதோர் கிரி" (கம்பரா. படைக்காட்சி.14).*

*[மந்தம் + **Skt.** மாருதம்.]*

மந்தரவரசன் *mandaravarašaṉ,* பெ.(n.) பெருங்கதைக் காவியத்தில் வரும் மாந்தன்; a character found in the epic *perungadai* (சி.பெ.அக.).

மந்தரை *mandarai,* பெ.(n.) கைகேயியின் தாதியான கூனி; a maid servent of *kaikēyi.* *"மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள்" (கம்பரா.மந்தரைசூழ்.60).*

மறுவ. கூனி.

மந்தல் *mandal,* பெ.(n.) மந்தம் பார்க்க; see *mandam.* *"மந்தலாய மல்லிகையும் புன்னை வளர்குரவின் பந்தல்" (தேவா.46, 7).*

மந்தவறிவு *manda-v-aṟivu,* பெ.(n.) மழுங்கலான அறிவு; dull intellect. *"மந்தவறி வாகியின்பம் வாயாதிருந் தலைந்தால்" (தாயு.பராபர.199).*

[மந்தம் + அறிவு.]

மந்தவாடை *manda-vāḍai,* பெ.(n.) இளவாடைக் காற்று; gentle northern breeze. *"மந்த வாடையு மலையத் தென்றலும்" (தெ.க.தொ.5:180).*

[மந்தம் + வாடை. தெற்கிலிருந்து வீசுவது தென்றல். வடக்கிலிருந்து வீசுவது வாடை.]

மந்தவாரம் *manda-vāram,* பெ.(n.) காரிக் கிழமை; Saturday, as Saturn's day.

[மந்தம் + வாரம்.]

மந்தவிசை *manda-višai,* பெ.(n.) (இசை.) மந்தரம்², 1 பார்க்க; see *mandaram.*

[மந்தம் + இசை.]

மந்தவாந்தி *manda-vāndi,* பெ.(n.) செரியாமை யாலுண்டாகும் வாந்தி; vomiting caused by indigestion.

[மந்தம் + வாந்தி.]

மந்தவிரோதி *manda-virōdi,* பெ.(n.) சுக்கு (பரி.அக.); dried ginger.

Skt. விரோதி > த. பகைவன்.

மந்தவெதுப்பு *manda-veduppu,* பெ.(n.) கால்நடைகளின் நோய் வகை (மாட்டுவை. சிந்.); a kind of cattle-disease.

[மந்தம் + வெதுப்பு.]

மந்தவைரி *manda-vairi,* பெ.(n.) மந்த விரோதி பார்க்க; see *manda-virōdi.*

[மந்தம் + வைரி.]

மந்தவோசை *manda-vōšai,* பெ.(n.) இசை மந்தரம்[2], 1 பார்க்க (வின்.); see *mandaram.*

[மந்தம் + ஓசை.]

மந்தளிச்சுறா *mandaḷi-c-cuṟā,* பெ.(n.) கடல்மீன் வகை; shark, dull brown, carcharias sorrah.

மந்தன் *mandaṉ,* பெ.(n.) 1. அறிவு மழுங்கியவன் (பிங்.); dull person. 2. சுணக்கமாய் வேலை செய்யும் பணியாளன் (சுக்கிரநீதி.108); servant who is slow in work. 3. கூற்றுவன் (யாழ்.அக.); yaman, God of death. 4. காரி (சனி) (இலக்.வி.883); the planet saturn, as slow.

[மந்தம் = அறிவுக்குறை. மந்தம்→மந்தன்.]

மந்தன்கள்ளி *mandaṉ-kaḷḷi,* பெ.(n.) கள்ளி வகை; cement plant, winged square plant.

[மந்தன் + கள்ளி.]

மந்தனகாந்தம் *mandaṉa-kāndam,* பெ.(n.) ஊசிக்காந்தம்; a magnet of load stone attracting needle (சா.அக.).

மந்தனம்[1] *mandaṉam,* பெ.(n.) கடைதல்; churning (சா.அக.).

மந்தனம்[2] *mandaṉam,* பெ.(n.) யானையின் முகபடாம் (வின்.); cloth thrown over the fore head of an elephant.

மந்தனம்[3] *mandaṉam,* பெ.(n.) மந்தணம் பார்க்க (யாழ்.அக.); see *mandaṇam.*

மந்தனி *mandaṉi,* பெ.(n.) மந்தினி[1] பார்க்க (வின்.); see *mandiṉi.*

மந்தகாசம் *manda-kāšam,* பெ.(n.) செம்மந்திக் குரங்கு; a kind of red faced monkey (சா.அக.).

மந்தாயுள் *mandāyuḷ,* பெ.(n.) குறைவான வாணாள்; short life (சா.அக.).

மந்தாரக்கணம் *mandāra-k-kaṇam,* பெ.(n.) குழந்தைகளுக்கு மழைக் காலத்தி லுண்டாகும் கண்ணோய்; an eye-diseases in rainy season for children (சா.அக.).

மந்தாரகம் *mandāragam,* பெ.(n.) 1. வெள் ளெருக்கு; white madar. 2. மந்தாரை; a tree (சா.அக.).

மந்தாரகெங்கையோன் *mandāra-gengai-yōṉ,* பெ.(n.) துரிசு; copper sulphate (சா.அக.).

மந்தாரப்புண் *mandāra-p-puṇ,* பெ.(n.) ஆறாப்புண் (சங்.அக.); festering sore.

மந்தாரப்பூ *mandāra-p-pū,* பெ.(n.) மந்தாரை பார்க்க; see *mandārai* (சா.அக.).

மந்தாரபீதம் *mandāra-pīdam,* பெ.(n.) பித்தளை மலை; mountain containing brass ore (சா.அக.).

மந்தாரம்[1] *mandāram,* பெ.(n.) கார்முகில் மூட்டமான நிலை; cloudiness, murkiness. *"மழையும் மந்தாரமும் வந்தன" (தஞ்சைவா. 99). "வானம் மப்பும் மந்தாரமுமாய் இருக்கிறது" (உ.வ.).*

தெ. மந்தாரமு.

[மந்தம்→மந்தாரம்.]

மந்தாரம்[2] *mandāram,* பெ.(n.) 1. ஐந்து மரங்களுள் ஒன்று; a tree of heaven, one of fire trees (q.v.). *"மந்தாரத்திற் றாரம்பயின்று மந்தம் முரல் வண்டு....... சடை வானத் தடலரைசே" (திருவாச.6, 36).* 2. முண்முருங்கை; Indian coral-tree (பதார்த்த.617). 3. செம்பரத்தை; shoe flower. *"மந்தாரமலை மலர்வேய்ந்து...... வண்டு முரன்று பாட" (சீவக.1959).*

[மந்தாரை→மந்தாரம்.]

மந்தாரமணிமுடிசருப்பம் *mandāra-maṇi muḍi-šaruppam,* பெ.(n.) நாக மலை; mountain containing zinc ore (சா.அக.).

மந்தாரி-த்தல் *mandāri-,*11 செ.கு.வி.(v.i.) மேகமூட்டமாயிருத்தல் (வின்.); to be over cast, cloudy.

[மந்தாரம்→மந்தாரி-.]

மந்தாரிகம் *mandārigam,* பெ.(n.) முள் முருங்கை; a tree (சா.அக.).

மந்தாரை[1] *mandārai,* பெ.(n.) 1. பூஞ்செடி; a flowering plant. 2. மரவகை; a kind of tree (சா.அக.).

வகைகள்: 1. கொக்கிறகு (அல்) வெள்ளை மந்தாரை; 2. மஞ்சள் மந்தாரை; 3. காட்டு மந்தாரை; 4. சிவப்பு மந்தாரை; 5. செம்மந்தாரை; 6. கிளியிறகு மந்தாரை; 7. பெருமந்தாரை அல்லது இலை மந்தாரை; 8. படர் மந்தாரை; 9. கொடி மந்தாரை; 10. அந்தி மந்தாரை; 11. மலை மந்தாரை; 12. கள்ளி மந்தாரை.

மந்தாரை[2] *mandārai,* பெ.(n.) 1. மரவகை; purple mountain ebony, m.tr., *Bauhinia purpurea*. 2. மர வகை; variegated mountian ebony, m.t.r. *Bakkinia variegata* purpurascens.

மந்தானம் *mandāṉam,* பெ.(n.) மத்து (வின்.); churning stick.

மந்தானிலம் *mandāṉilam,* பெ.(n.) தென்றல்; southern breeze, as gentle. *"மந்தானிலம் வந்தசை பந்தரின்" (பெரியபு.மூர்த்தி.6).*

மந்தி[1] *mandi,* பெ.(n.) 1. பெண்குரங்கு (தொல்.பொருள்.622, உரை); female monkey. 2. குரங்கு (பிங்.); monkey in general. *"மகமுயங்கு மந்தி வரைவரை பாய" (பரிபா.15:38).* 3. வண்டு (பிங்.); bee.

மந்தி[2]-த்தல் *mandi-,* 11 செ.கு.வி.(v.i.) 1. சுணங்குதல்; to be slow, to delay. *"திருமந்தி யாதருளும்" (திருவானைக். கோச்.1).* 2. செரியாமை; to be undigested, as food. 3. மந்தமாதல் (உ.வ.); to become dull.

மந்தி[3] *mandi,* பெ.(n.) ஆடுதின்னாப் பாளை (யாழ்.அக.); worm-killer.

மந்தி[4] *mandi,* பெ.(n.) கதிரவன்; sun. *"எயிறுந் துண்டமும்..... மந்தியும் வாணியும்...... இழப்ப" (ஞானா.33, 6) (திருமுரு.42, வேறுரை).*

மந்திக்கால் *mandi-k-kāl*, பெ.(n.) மாட்டு குற்றவகை (பெரியமா.); a defect in cattle.

[மந்தி + கால்.]

மந்திட்டி *manditti*, பெ.(n.) மஞ்சிட்டி[1] பார்க்க; see *mañjitti*.

[மஞ்சிட்டி→மந்திட்டி.]

மந்தித்தவயிறு *manditta-vayiru*, பெ.(n.) செரியா வயிறு; distempered stomach (சா.அக.).

[மந்தித்த + வயிறு.]

மந்திப்பு *mandippu*, பெ.(n.) 1. சுறுசுறுப்பின்மை; dulness, sluggishness. 2. செரியாமை; indigestion.

[மந்தம்→மந்திப்பு.]

மந்திபுரளு-தல் *mandi-puralu-*, பெ.(n.) கோடைப் புயலுக்கு முன்தோன்றும் அறிகுறி (க.ப.அக.); a symbol of storm in summer season.

[மந்தி + புரளு-.]

மந்திமூலைத்தலைவாரை *mandi-mūlai-t-talaivārai*, பெ.(n.) ஓலையாற் செய்த கவிப்பு வகை (யாழ்.அக.); a kind of *olai* head - cover.

[மந்திமூலை + தலைவாரை.]

மந்திரக்கலப்பை *mandira-k-kalappai*, பெ.(n.) மந்திரத்திற்குரிய பண்டம்; bag of article used while reciting a mantram. *"மானுரிமடியு மந்திரக் கலப்பையும்" (பெருங்.உஞ்சைக்.36, 226).*

[மந்திரக்கலம் + பை.]

மந்திரக்கலை *mandira-k-kalai*, பெ.(n.) மந்திரங்களைப் பற்றிய அறிவியல்; science of mandrams.

[மந்திரம் + கலை.]

மந்திரக்காரன் *mandira-k-kāran*, பெ.(n.) மந்திரத்தினால் செயல் செய்பவர் (வின்.); conjurer, wizard.

[மந்திரம் + காரன்.]

மந்திரக்காவி *mandira-k-kāvi*, பெ.(n.) செங்காவி தோய்த்த துறவியுடை; cloth dyed with red ochere and worn by ascetics.

[மந்திரம் + காவி.]

மந்திரக்கிழவர் *mandira-k-kilavar*, பெ.(n.) அறங்கூறு அவையத்தோர்; king's counsellors/ ministers. *"ஆனையாள்..... தான் மந்திரக் கிழவரை வருகென் றேவினான்" (கம்பரா. அயோத்.மந்திர.4).*

[மந்திரம் + கிழவர்.]

மந்திரக்குளியல் *mandira-k-kuliyal*, பெ.(n.) எழுவகைக் குளியலுள் ஒன்றான மந்திரநீர்க் குளியல் (வின்.); purification by sprinkling a few drops of water on the head with appropriate mandram, one of seven kinds of bath.

[மந்திரம் + குளியல்.]

மந்திரக்கூடம் *mandira-k-kūdam*, பெ.(n.) கருங்கல்; granite (சா.அக.).

மந்திரக்கூர்மை *mandira-k-kūrmai*, பெ.(n.) இந்துப்பு; rock salt (சா.அக.).

மந்திரக்கூறை *mandira-k-kūṟai,* பெ.(n.) பூசைப்பட்டு (வின்.); consecrated garment, silk or other ceremonially pure for wearing during *pušai.*

[மந்திரம் + கூறை.]

மந்திரக்கோட்டி *mandira-k-kōṭṭi,* பெ.(n.) உசாவற்குரிய அவை; council hall. *"மன முணக் கிளந்த மந்திரக் கோட்டியுள்" (பெருங்.உஞ்சைக்.36, 277).*

[மந்திரம் + கோட்டி. கோடகம்→ கோட்டி. கொளுத்தி→கோட்டி. கோட்டி பார்க்க; see kōṭṭi.]

மந்திரக்கோடி *mandira-k-kōḍi,* பெ.(n.) மந்திரங்களோடும் வாழ்த்துக்களோடும் மணமகள் பெறும் கூறைப் புடவை; the wedding cloth given to a bride, as consecrated with mantram. *"மந்திரக் கோடி யுடுத்தி" (திவ்.நாய்ச்.6, 5).*

[மந்திரம் + கோடி. கோடு→கோடி. விளிம்பில் கரை (கோடு) கட்டிய புத்தாடை.]

மந்திரகலை *mandira-kalai,* பெ.(n.) மந்திரக் கலை பார்க்க; see *mandira-k-kalai.*

[மந்திரம் + கலை.]

மந்திரம் என்பதை வட சொல்லென மயங்கியதால் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகரமுதலியில் வல்லெழுத்து மிகாது வந்துள்ளது. கலை என்பது கலைகளுக்கெல்லாம் பொதுப்பெயர். மந்திரம் என்பது சிறப்புப் பெயர். இஃது இருபெயரொட்டுப் பண்புப் பெயராதலின் வல்லெழுத்து மிகுந்தே வரும். மந்திரம் பார்க்க; see *mandiram.*

மந்திரகாவி *mandira-kāvi,* பெ.(n.) மந்திரக் காவி பார்க்க; see *mandira-k-kāvi.*

[மந்திரக்காவி→மந்திரகாவி.]

மந்திரச்சாலை *mandira-c-cālai,* பெ.(n.) மந்திரிகளுடன் உசாவல் செய்யும் தனி மண்டபம்; king's delibarative assembly. *"அரசவை விடுத்த வேந்தன்..... மாடக்கோயில் மந்திரசாலை சேர்ந்தான்" (சூளா.குமார.4).*

[மந்திரம் + சாலை.]

மந்திரச்சுற்றம் *mandira-c-cuṟṟam,* பெ.(n.) மந்திரக்கிழவர் பார்க்க; see *mandira-k-kiḻavar. "மந்திரச் சுற்றமொடு மன்னனும் விரும்பி" (மணிமே. 28:184).*

[மந்திரம் + சுற்றம்.]

மந்திரசத்திமூலி *mandiracatti-mūli,* பெ.(n.) கருந்தேக்கு; black teak (சா.அக.).

மந்திரசாலை *mandira-cālai,* பெ.(n.) மந்திரச்சாலை பார்க்க; see *mandira-c-cālai.*

[மந்திரம் + சாலை.]

மந்திரசித்தி *mandira-šitti,* பெ.(n.) மந்திர வுருவேற்றிப் பெற்ற பேறு; super natural power acquired by means of mantram. *"ஐயன் மந்திர சித்தியன்ன சிலைத் தொழில்" (கம்பரா.அதிகா.208).*

மந்திரசுத்தி *mandira-šutti,* பெ.(n.) ஐவகைத் தூய்மை யாக்கலுள் மந்திரத்தால் தூய்மை செய்கை (வின்.); ceremonial purification by sprinkling water consecrated by mandram, one of panja sutti.

[மந்திரம் + வ. சுத்தி.]

மந்திரஞ்செபி–த்தல் *mandirañ-sebi-*, 4 செ.கு.வி.(v.i.) மந்திரத்தை உருவேற்றுதல்; to recite or repeat mandra.

*[மந்திரம் + **Skt.** செபி–.]*

மந்திரத்துணைவர் *mandira-t-tuṇaivar*, பெ.(n.) மந்திரக்கிழவர் பார்க்க; see *mandira-k-kiḻavar*. *"மைத்துன மன்னரு மந்திரத் துணைவரும்" (பெருங்.உஞ்சைக்.38, 132).*

[மந்திரம் + துணைவர்.]

மந்திரத்தூண் *mandira-t-tūṇ*, பெ.(n.) நஞ்சு முதலியவற்றைத் தீர்க்க மந்திரத்துடன் நாட்டப்பட்ட தூண் (வின்.); post set up with incantations as an antidote for venomous bites or for magical purposes (வின்.).

[மந்திரம் + தூண்.]

மந்திரத்தோழி *mandira-t-tōḻi*, பெ.(n.) தலைவியின் நெருங்கிய தோழி; confidential maid of a lady. *"யாப்பியாயினியெனு மந்திரத் தோழியொடு" (பெருங்.மகத.9, 54).*

[மந்திரம் + தோழி.]

மந்திரபசு *mandira-paśu*, பெ.(n.) பூனை; cat (சா.அக.).

மந்திரபூதரத்துமன் *mandira-pūtarattu maṉ*, பெ.(n.) கழுலன்; a brahmini kite, king of birds (சா.அக.).

மந்திரம்¹ *mandiram*, பெ.(n.) 1. திண்ணிய எண்ணம், மனவுறுதி (பிங்.); strong thought. 2. சூழ்வு, கலந்தாய்வு (ஆலோசனை) (பிங்.); delibration, consultation. 3. அரசியல் பற்றிய அரசன் அல்லது அமைச்சன் சூழ்வு; political consultation by king or minister. 4. அமைச்சர் குழு, மந்திரிகள் அவை; royal council of advisers. *"மன்னவன்றனக்கு நாயேன் மந்திரத்துள்ளேன்" (கம்பரா.உருக்காட். 31).* 5. மறைமொழி; a commanding word. *"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப" (தொல். செய்.176).* 6. திருமூலர் எழுதிய திருமந்திரம்; treatise by *Tirumūlar*. 7. சிவபோற்றி (சிவாயநம) என்பது போன்ற திருமொழி; sacred formula of invocation of *Śivā*. 8. வசிய மந்திரம்; mandiram to attract. 9. சாவிப்பு மந்திரம்; mandiram to.

[முன்→மன் + திரம். முன்னுதல் = கருதுதல், சூழ்தல். மன் + திரம் – மந்திரம்.]

மந்திரம்² *mandiram*, பெ.(n.) 1. வீடு; house. *"மந்திரம் பலகடந்து" (கம்பரா.ஊர்தேடு.138).* 2. அரண்மனை (பிங்.); king's residence. 3. தேவர் கோயில் (பிங்.); temple. *"ஆதி தனது மந்திரத்து" (கந்தபு. காமதகன.67).* 4. மண்டபம்; public hall. 5. உறைவிடம்; dwelling place. *"மான்மதங் கமழ்கொடி மந்திரந்தொறும்" (பாரத. வேத்திர.29).* 6. குகை; den. *"அரிமந்திரம் புகுந்தால்" (நீதிவெண்.2).* 7. அறச்செய்கை பதினான்கனுள் பிறர்க்கு வசிக்க இடமளிக்கும் அறச்செயல் (வின்.); giving a place to dwell in, one of 14 *tayā-virutti*, q.v.

[முல் (பொருந்தற் கருத்து வேர்)→மல்→மன். மன்னுதல் = பொருந்துதல், மிகுதல், தங்குதல், நிலைபெறுதல், உறுதியாய் நிற்றல். மன்→மன்று = அவை, அம்பலம், அறங்கூறவை, ஆன்கணம், ஆன் தொழு, மரத்தடித் திண்ணைப் பொதுவிடம், மக்கள் கூடும் நாற்சந்தி, மணம்→மன்று→மன்றம்

= அவையம், அறங்கூறவையம், மரத்தடிப் பொதுவிடம். மன் → மனை = பலர்கூடி அல்லது நிலைத்து வதியும் வீடு, வீடு கட்டுதற்குரிய வெறுநிலம், அல்லும் பகலும் வீட்டில் வதியும் மனைவி, வீட்டில் வதியும் குடும்பம். மன் + திரம் = மன்றிரம் →மந்திரம்.]

மந்திரம் – வ. மந்திர.

மக்கள் உறைவிடத்தையும் அரிமாக் குகையையும் குதிரைக் கூடத்தையும் குறிக்கும் மந்திரம் என்னும் சொல் ஒன்றே. சென்னைப் பல்கலைக் கழக அகரமுதலி, குதிரைச் சாலையைக் குறிக்கும் மந்திரம் என்னும் சொல்லை வேறென மயங்கிப் பிரித்துக் கூறியது வழுவாகும். மக்கள் படுக்கை, விலங்கின் படுக்கை, பறவைக்கூடு ஆகிய மூன்றையும், சேக்கை யென்னும் ஒரே சொல் பொதுவாகக் குறித்தல் காண்க.

சூழ்வினையைக் குறிக்கும் மந்திரம் என்னும் சொல் வேறு. அது அமைப்பில் ஒத்திருப்பினும், அதன் முதனிலையான மன் என்னும் சொல் முன் என்பதன் திரிபாகும். முன்னுதல் = கருதுதல், சூழ்தல். மன் + திரம் = மன்றிரம் → மந்திரம் → வ. மந்த்ர. மன் = மந்திரம் (பிங்). இது முதனிலைத் தொழிற் பெயரும் தொழிலாகு பெயருமாகும் (வே.க.4:33).

மந்திரம்³ *mandiram*, பெ.(n.) 1. குதிரைச் சாலை; stable for horse. 2. குதிரைக் கூட்டம் (சூடா.); herd of horses.

[மன் + திரம்.]

மந்திரம்⁴ *mandiram*, பெ.(n.) கள் (பிங்.); toddy.

மந்திரம்⁵ *mandiram*, பெ.(n.) யானை வகை (சுக்கிரநீதி.307); a kind of elephant.

மந்திரம்பண்ணு-தல் *mandiram-paṇṇu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. மந்திரத்தால் கேடு (பில்லி சூனியம்) வைத்தல்; to practise sorcery. 2. மந்திரஞ்செபி– பார்க்க; see *mandirañ-sebi*.

[மந்திரம் + பண்ணு.]

மந்திரமாக்கள் *mandira-mākkaḷ*, பெ.(n.) மந்திரக்கிழவர் பார்க்க; see *mandira-k-kiḻavar*. *"மந்திரமாக்கள்.......... தெளிந்து செய்கென" (பெருங்.மகத.19, 108).*

[மந்திரம் + மாக்கள்.]

மந்திரமாடம் *mandira-māḍam*, பெ.(n.) உசாவல் செய்யும் மண்டபம்; hall where king's counsellors hold their delibration. *"மந்திரமாடத்து மறைந்தன னிருந்து" (பெருங்.இலாவண.9, 35).*

[மந்திரம் + மாடம்.]

மந்திரமாலிகை *mandira-māligai*, பெ.(n.) மந்திரமாலை பார்க்க; see *mandira-mālai*. *"மந்திரமாலிகை சொல்லு மியமநியமாதியா மார்க்கத்தில்" (தாயு. தேசோ.1).*

[மந்திரம் + மாலிகை. மாலை→ மாலிகா (Skt.) →மாலிகை.]

மந்திரமாலை *mandira-mālai*, பெ.(n.) சிவன், திருமால் இவர்களுக்குரிய ஐந்தெழுத்தும், எட்டெழுத்தும்; mystic formula sacred to *Śivaṉ* and *Tirumāl*. *"நற்றிரு மந்திர மாலை........ எனவெடுத்து" (பெரியபு.திருமூல.26).*

[மந்திரம் + மாலை.]

மந்திரமூர்த்தி *mandira-mūrtti,* பெ.(n.) 1. மந்திர வடிவான கடவுள்; god, as embodied in a mantram. *"அதிதேவதை யுமாய் மந்திர மூர்த்தியுமாய் ஓங்காரமாயே நின்று" (திருக்களிற்றுப்.25, உரை).* 2. மந்திர நாயகன் பார்க்க (யாழ்.அக.); see *mandira-nāyagaṉ.* 3. மந்திரவாதி, 1 பார்க்க; see *mandiravāti.*

*[மந்திரம் + **Skt.**மூர்த்தி.]*

மந்திரமைந்து *mandiram-aindu,* பெ.(n.) ஐந்தெழுத்து மந்திரம்; a mantram of five letters. *"மந்திரமைந்துமாதோ....... அதன் செவிச் செப்புகின்றான்" (சீவக.945).*

[மந்திரம் + ஐந்து.]

மந்திரயாகம் *mandira-yāgam,* பெ.(n.) மந்திரஞ்சொல்லி; reciting of a mantram considered a form of sacrifice (சிவதரு. ஐவகை.2, உரை).

*[மந்திரம் + **Skt.** யாகம்.]*

மந்திரர் *mandirar,* பெ.(n.) அமைச்சர் (சூடா.); king's ministers.

[மந்திரம்→மந்திரன்→மந்திரர்.]

மந்திரவசியம் *mandira-vaśiyam,* பெ.(n.) மயக்கு; spell (சா.அக.).

*[மந்திரம் + **Skt.**வசியம்.]*

மந்திரவாதம் *mandira-vādam,* பெ.(n.) 1. மந்திரஞ்சொல்லுதல்; uttering mantram. 2. மந்திரமே மூலபொருளெனக் கொள்ளும் ஒரு சமயம் (யாழ்.அக.); a religious system that holds mantram to be the supreme deity.

*[மந்திரம் + **Skt.** வாதம்.]*

மந்திரவாதி[1] *mandira-vādi,* பெ.(n.) மந்திரவாளி பார்க்க; see *mandiravāḷi.*

[மந்திரம் + வாதி.]

மந்திரவாதி[2] *mandira-vādi,* பெ.(n.) ஈ; fly (சா.அக.).

மந்திரவாள் *mandira-vāḷ,* பெ.(n.) 1. மந்திர ஆற்றல் வாய்ந்த வாள் (வின்.); magical sword. 2. அரசுக்கு அறிகுறியான வாள் (யாழ்.அக.); sword of royalty.

[மந்திரம் + வாள்.]

மந்திரவாளி *mandira-v-āḷi,* பெ.(n.) 1. மந்திர வல்லமையால் பேயோட்டுதல் முதலியன செய்பவன்; conjurer, sorcerer, wizard, diviner, juggler, magician, one who practises legerdemain. *"பேயகன்று குடிபோக வருள் செயொரு மந்திர வாதியாகி" (சிவப்.பிர.சிவஞா.பிள். வாரானை.2).* 2. மந்திரவாத சமயத்தோன் (யாழ்.அக.); follower of the *mandiravātam* religion.

[மந்திரம் + ஆளி. ஆள்→ஆளி.]

மந்திரவித்தை *mandira-vittai,* பெ.(n.) 1. மந்திரங்களைப் பற்றிய கல்வி; science of mantram. 2. மாயக் கல்வி; conjuration. 3. மந்திரோபாசனை பார்க்க (யாழ்.அக.); see *mandirō-pāśaṉai.*

*[மந்திரம் + **Skt.** வித்தை.]*

மந்திரவிதி *mandira-vidi,* பெ.(n.) மந்திரத்தைப் பயன்படுத்தும் முறை; rules for the use of mantram. *"மந்திர விதியின் மரபுளி வழாஅது" (திருமுரு.95).*

*[மந்திரம் + விதி. **Skt.** விதி > த.நெறி. மந்திரநெறி பார்க்க.]*

மந்திரவீதி *mandira-vīdi,* பெ.(n.) மாடவீதி; street, surrounding a temple. *"துறக்க மந்திர வீதியு நான்கெனத் தொடுத்தார்" (உபதேசகா. சிவபுண்.140).*

[மந்திரம் + வீதி.]

மந்திரவுச்சாடணம் *mandira-uccādaṇam,* பெ.(n.) மந்திரஞ் சொல்லுதல்; chantiny mantram.

மந்திரவோலை *mandira-v-ōlai,* பெ.(n.) அரசன் திருமுகம்; royal command in writing. *"மந்திரவோலை போக்கிய வண்ணமும்" (பெருங்.மகத.25:39).*

[மந்திரம் + ஓலை.]

மந்திராங்கம் *mandirāṅgam,* பெ.(n.) சவ்வு; mucus membrane (சா.அக.).

[மந்திரம் + அங்கம். மந்திரம் = மறைபொருள்.]

மந்திராய் *mandirāy,* பெ.(n.) கச்சந்திராய்; a species of bitter edible plant (சா.அக.).

மந்திராயுதம் *mandirāyudam,* பெ.(n.) மந்திரத் தன்மையுள்ள படைக்கலன்; weapon with magical powers.

[மந்திரம் + Skt. ஆயுதம்.]

மந்திராலோசனை *mandirālōšaṇai,* பெ.(n.) அரசன் மந்திரிகளுடன் ஆராய்கை; deliberation of a king with his ministers.

[மந்திரம் + Skt. ஆலோசனை. த. கலந்தாய்வு.]

மந்திரி¹-த்தல் *mandiri-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. மந்திர ஆற்றலால் அடக்குதல்; to keep spell bound, control or enchant by mandram. 2.மந்திரத்தால் வலுவுண்டாகச் செய்தல்;to consecrate with mandram. *நீரை மந்தரித்துக் கொடுத்தான் (உ.வ.).* 3. மந்திரத்தால் ஒருநிலைப்படுதல்; to recite mystic formulas or mandram in worship and to meditate. *"மந்திரிப்பார் மனத்துளானை" (தேவா.590, 4).* 4. உசாவல்; to consult, take counsel. *"மகட்பேசி மந்திரித்து" (திவ். நாய்ச்.6, 3).*

மந்திரி²-த்தல் *mandiri-,* 4 செ.கு.வி.(v.i.) 1. மந்திரஞ் சொல்லுதல்; to utter mandram for effecting cure, etc. *"சிரத்தினஞ்சுற்ற பின்னை மீண்டிட மந்திரிப்பார்" (பிரபோத.5, 7).* 2. தீய கருத்துகளைச் சொல்லுதல்; to give evil advice.

[மந்திரம்¹→மந்திரி.]

மந்திரி³ *mandiri,* பெ.(n.) 1. அமைச்சன்; counsellor, minister. *"பழுதெண்ணு மந்திரியின்" (குறள், 639).* 2. வியாழன்; jupiter, as Indra's minister (பிங்.). 3. வெள்ளி; *śukkiran,* as the minister of the Asuras. 4. குபேரன்; kuberan (பிங்.). 5. வருஞ்செயலுரைப்போன் (வின்.); one who foretells future events. *"மந்திரிக்கழகு வரும் பொருளுரைத்தல்" (வெற்றிவேற்கை, 8).* 6. ஆண்டின் நவநாயகர்களுள் ஒருவன் (பஞ்.); one of navanayagar. 7. படைத் தலைவன் (யாழ்.அக.); commander of an army. 8. அறிவன்; planet mercury. 9. பித்தம்; bile. *"மந்திரி நிறமாய் வரப்படுநீர்" (நீர்நிறக்.53).*

[மந்திரம்¹→மந்திரி. மந்திரம் – அமைச்சர்க் குழு.]

மந்திரி⁴ *mandiri,* பெ.(n.) 1. கள்விற்போன்; one who sells toddy. 2. செல்வந்தன் (குபேரன்); rich person (சா.அக.).

[மந்திரம்³→மந்திரி.]

மந்திரி[5] *mandiri*, பெ.(n.) திராய் (மலை.); a profusely branching prostrate herb.

மந்திரிகூடம் *mandiri-kūḍam*, பெ.(n.) கருங்கல் (சங்.அக.); black stone.

மந்திரிகை *mandirigai*, பெ.(n.) நூற்றெட்டுச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று (சங்.அக.); an upanisad, one of 108.

மந்திரினி[1] *mandiriṉi*, பெ.(n.) கருமானம்; black art, witch craft (சா.அக.).

மந்திரினி[2] *mandiriṉi*, பெ.(n.) பெண் அமைச்சர், பெண் மந்திரி; lady minister.

மந்திரோச்சாரணம் *mandirō-c-cāraṇam*, பெ.(n.) மந்திராசரணை பார்க்க; see *mandirā-šaraṇai*.

மந்திரோபதேசம் *mandirōpatēcam*, பெ.(n.) 1. மந்திரத்தைச் சொல்லுகை; instruction in mantram. 2. ஆசிரியன் திருவிலச்சினை செய்த பின் எட்டெழுத்தைப் பலுக்கச் சொல்லித் தருகை (மாலியம்); (vaisṇ) the ceremony of teaching the eight-lettered mandram, after initiation by a guru, one of *pañca-camskāram*, q.v.

[மந்திரம் + வ. உபதேசம்.]

மந்திரோபாசனை *mandirōpāšaṉai*, பெ.(n.) ஒரு தெய்வத்தை அதற்குரிய மந்திரத்தால் வழிபடுகை (வின்.); propitiation a deity by means of its appropriate mantram.

[மந்திரம் + வ. உபாசனை.]

மந்தில் *mandil*, பெ.(n.) கப்பற்பாய் தாங்கியைத் தூக்குங் கயிறு (Naut.); lift, rope from the masthead to the extremity of the yard below, used for raising or supporting the end of the yard.

மந்தினி[1] *mandiṉi*, பெ.(n.) தயிர்கடை தாழி (பிங்.); churning pot.

[மத்து →மந்தினி.]

மந்தினி[2] *mandiṉi*, பெ.(n.) ஆடு தின்னாப் பாளை (சங்.அக.); worm-killer.

மந்து[1] *mandu*, பெ.(n.) 1. ஆன் கணம்; herd of cows. 2. ஆன்தொழு; cow stall. 3. எருமை நிரை; herd of buffaloas. 4. நீலமலைத் துடவர் குடியிருப்பு; dwelling place of Tudavars of the Nilgris.

[முல்→மல்→மன். மன்னுதல் = பொருந்துதல், மிகுதல், நிலை பெறுதல், உறுதியாய் நிற்றல். மன்→மன்று = அவை, அம்பலம், ஆன்கணம், ஆன்தொழு, மக்கள் கூடும் நாற்சந்தி. மன்று→மந்து (வே.க.4:32). துடவர்க்கு எருமை நிறை யோம்பலே பிழைப்பு வழியாதலால், அவர் குடியிருப்பு மந்து எனப்பட்டது. ஆட்டுப் பட்டிகளும் மாட்டுப் பட்டிகளும் இருந்தவூர்கள் பட்டியென்றே பெயரீறு பெற்றிருத்தலை நோக்குக. ஒரே பெருங்கல் இருந்த மந்து ஒற்றைக்கல் மந்து (ootacamund) எனப்பட்டது. தெலுங்கு நாட்டில் ஒரு பகுதி ஒருகல் நாடு அல்லது ஓராங்கல் (warangal) நாடு எனப் பெயர் பெற்றிருத்தலைக் காண்க.]

மந்து[2] *mandu*, பெ.(n.) 1. அரசன்; king. 2. மனிதன்; man. 3. குற்றம்; fault.

[மன்→மந்து.]

மந்து[3] *mandu*, பெ.(n.) 1. காய்வேளை (வின்.); an annual herb. 2. மந்துகால் பார்க்க; see *mandu-kāl*.

மந்துகால் *mandu-kāl*, பெ.(n.) யானைக் கால் (நாஞ்.); cochin leg; elephantiasis.

மந்துரம் *manduram,* பெ.(n.) மந்துரை, 1, 2 பார்க்க; see *mandurai.*

மந்துரை *mandurai,* பெ.(n.) 1. குதிரை வரிசை; row of horses. *"வாசி மந்துரைக்குத் தலைவராய்" (பாரத. நாடுக.23).* 2. குதிரைச் சாலை; horse-stable. *"மந்துரை தன்னுட் கட்ட" (திரு வாலவா.29,16).* 3. தொழுவம் (யாழ்.அக.); manger. 4. படுக்கை (யாழ். அக.); bed.

மந்தேகர் *mandēgar,* பெ.(n.) கதிரவன் தோன்றும் போதும் மறையும் போதும் அக்கடவுளை நாள்தோறும் தடுத்து எதிர்த்து இறந்திறந்து பிறக்கும் ஒருசார் அரக்கர் (இராக்கதர்); a group of rākṣasas who are believed to perish in attacking the sun daily at sunrise and sunset and resurrect immediately. *"வெம்படைகளா லுடன்ற மந்தேகர்" (பாரத.கிருட்டிண.87).*

மந்தை *mandai,* பெ.(n.) 1. கால்நடைக் கூட்டம்; flock, herd. 2. ஊரின் பொது மேய்ச்சலிடம்; common pasture of a village. 3. ஊரிடையிலுள்ள பொது வெளியிடம்; open space in the middle of a village, common to the community. 4. சட்டையின் பின்பக்கத்து ஒட்டுத்துணி (parav.); back piece of a shirt. 5. தோட்டிய சாதியாருள் ஒரு பிரிவினர் (G.Tp.D.I, 123); a sub-caste of *tōṭṭiyaṉs.*

[முல்→மல்→மன். மன்னுதல் = பொருந்துதல், மிகுதல், நிலைபெறுதல், உறுதியாய் நிற்றல். மன்→மன்று = அவை, அம்பலம், அறங்கூறவை, ஆன்கணம், ஆன்தொழு. மன்று→மந்து→மந்தை (வே.க.4:33)]

மந்தைக்கரை *mandai-k-karai,* பெ.(n.) மந்தை, 2 பார்க்க (இ.வ.); see *mandai.*

மந்தைக்கல் *mandai-k-kal,* பெ.(n.) ஆவுரிஞ்சு தறி (வின்.), மாடுகள் தம் உடம்பைத் தேய்த்துக் கொள்ள அமைப்பான குத்துக்கல்; rubbing stone for cattle.

[மந்தை + கல்.]

மந்தைக்குத்துக்கல் *mandai-k-kuttu-k-kal,* பெ.(n.) மந்தைக்கல் (நெல்லை.); see *mandai-k-kal.*

[மந்தை + குத்துக்கல்.]

மந்தைப்பெருச்சாளி *mandai-p-peruccāḷi,* பெ.(n.) தூதுவளை; a thorny creeper plant.

மந்தைமறி-த்தல் *mandai-maṟi-,* 4 செ. குன்றாவி. (v.t.) மந்தையைக் காத்தல் (வின்.); to guard a herd.

[மந்தை +மறி.]

மந்தைமுறை *mandai-muṟai,* பெ.(n.) நிலக்கிழார்கள் தங்கள் ஊரிலுள்ள ஆடு மாடுகளைத் தத்தம் வயல்களில் உரத்தின் பொருட்டு முறை வைத்துக் கிடைவைக்கச் செய்யும் உரிமை; customary right of the mirasdars to have the cattle of the village penned on their fields for manure, by turn (R.F.).

[மந்தை + முறை.]

மந்தையன் *mandaiyaṉ,* பெ.(n.) மந்தன், 1 பார்க்க; see *mandaṉ.*

[மந்தன்→மந்தையன்.]

மந்தைவரிசை *mandai-varišai,* பெ.(n.) மந்தைமுறை பார்க்க (R.F.); see *mandai-murai.*

[மந்தைமுறை → மந்தைவரிசை. முறை = வரிசை.]

மந்தைவாசி *mandai-vāši,* பெ.(n.) கருஞ்சிவதை வேர்; black turpeth root (சா.அக.).

மந்தைவெளி *mandai-veḷi,* பெ.(n.) 1. மேய்ச்சல் திறந்தவெளி; village commons, used as posture ground. 2. கால்நடையை அடைத்து வைக்கும் அடைப்பிடம் (வின்.); pen for cattle.

[மந்தை + வெளி.]

மந்தோக்கினி *mandōkkiṉi,* பெ.(n.) முன்னை மரம்; a tree (சா.அக.).

மந்தோச்சம் *mandōccam,* பெ.(n.) கோள் வட்டத்தின் மிகு அருகான அல்லது மிகத் தொலைவான இடம் (வின்.); (Astron.) apsis of a planet's orbit.

மந்தோததி *mandōdadi,* பெ.(n.) பாற்கடல் (யாழ்.அக.); the ocean of milk.

மந்தோற்சாகம் *mandōṟ-šāgam,* பெ.(n.) இளஞ்சூடு; luke warmness (சா.அக.).

மப்பன் *mappaṉ,* பெ.(n.) மந்தன், 1 பார்க்க (இ.வ.); see *mandaṉ.*

மப்பு *mappu,* பெ.(n.) 1. முகில் மூட்டம்; being overcast or cloudy. 2. செரியாமை; indigestion. 3. மயக்கம்; bewilderment; beclouded state of the intellect, as by intoxication. 4. மட்டித்தனம்; dullness. 5. செருக்கு; arrogance. *"இந்த ஆள்களின் மப்பை எடுக்கவேணும்" (உ.வ.).*

மப்புகட்டியிரு-த்தல் *mappu-kaṭṭi-iru-,* 3 செ.குன்றாவி.(v.t.) மழை வருவதற்கு முந்தைய நிலையான முகில் திரண்டிருத்தல்; cloudy sky (க.ப.அக.).

[மப்பு + கட்டியிரு-.]

மப்புச்சோளம் *mappu-c-cōḷam,* பெ.(n.) மந்தத்தை யுண்டாக்குமொரு வகைச் சோளம்; Indian millet which is difficult for digestion (சா.அக.).

[மப்பு + சோளம்.]

மப்புண்டாகு-தல் *mappuṇḍāgu-,* 7 செ.கு.வி. (v.i.) மப்பு தோன்றுதல்; feeling loss of appetite.

[மப்பு + உண்டாகு-.]

மப்புமந்தாரம் *mappu-mandāram,* பெ.(n.) முகில் மூட்டநிலை (கொ.வ.); overcast and clouded state of the sky. *மேகம் மப்பும் மந்தாரமாக இருக்கிறது (பே.வ.).*

[மப்பு + மந்தாரம்.]

மம்புதா *mamputā,* பெ.(n.) கோரைக் கிழங்கு; a fragrant root (சா.அக.).

மம்மட்டி[1] *mammaṭṭi,* பெ.(n.) மண்வெட்டி (இ.வ.) பார்க்க; see *maṉ-veṭṭi.*

[மண்வெட்டி → மம்முட்டி → மம்மட்டி (கொ.வ.).]

மம்மட்டி[2] *mammaṭṭi,* பெ.(n.) சிற்றாமுட்டி (மலை.); rose-coloured sticky mallow.

மம்மத்திரி *mammattiri,* பெ.(n.) சிற்றாமுட்டி; a medicinal plant (சா.அக.).

மறுவ. மம்மட்டி.

மம்மர் *mammar,* பெ.(n.) 1. வருத்தம் (பிங்.); distress, sorrow, affliction. *"மம்ம ரறுக்கும் மருந்து கண்டாய்" (தேவா.845:8).* 2. மயக்கம்; delusion. *"மம்மர் கொண் மாந்தர்க் கணங்காகும்" (நாலடி, 14).* 3. கல்லாமை; illiteracy. *"காணாக் குருடராச் செய்வது மம்மர்" (நான்மணி.24).* 4. காமம்; lasciviousness lust.

[முள் → (மள்) → மரு → மருள் = மயக்கம். மருள் → மருட்கை = மயக்கம், வியப்பு. மரு → மருமம் → மம்மம் → மம்மர் (மு.தா.178). முள் → மும் → மய் → மை = கருப்பு, இருள். மைம்மை = கருமை, இருண்மை. மைம்மை → மைம்மைப்பு = கண்ணிருளல், கண் மங்கல், பார்வைக் குறை. மைம்மை → மைமை → மைமல் = மாலைநேரம். மைம்மை → மம்மல் = அந்தி நேரம். மம்மல் → மம்மர் (வே.க. 4:60).]

மம்மல் *mammal,* பெ. (n.) அந்தி நேரம் (இ.வ.); dusk.

[முள் → மள் → மரு → மருமம் → மம்மர் → மம்மல் (மு.தா.178). மைம்மை → மைமை → மைமல் = மாலை நேரம். மைம்மை → மம்மல் (வே.க.4:60).]

மம்முட்டிப்பூண்டு *mammuṭṭi-p-pūṇḍu,* பெ.(n.) மரவகை; serrata elliptic-leaved holly, l.tr. *Ilex denticulata (A.).*

மமுத்தை *mamuttai,* பெ.(n.) ஆதளை (சங். அக.); common physic nut.

மமைக்குறிஞ்சி[1] *mamai-k-kuṟiñji,* பெ.(n.) பெருங்குறிஞ்சி எனும் கொடிவகை (சங்.அக.); a species of conehead.

[மாமை → மமை + குறிஞ்சி.]

மமைக்குறிஞ்சி[2] *mamai-k-kuṟiñji,* பெ.(n.) 1. மயக்கம்; giddiness. 2. சோம்பு; withering.

[மாமை → மமை + குறிஞ்சி.]

மய-த்தல் *maya-,* 3 செ.குன்றாவி.(v.t.) மயங்குதல்; to mistake, misunderstand. *"மயந்துளேனுலக வாழ்க்கையை" (அருட்பா. 4, அபயத்திறன்.14).*

[முள் → முய → முயங்கு = கூடுதல். முய → மய (மு.தா.177).]

மயக்கடி *maya-k-kaḍi,* பெ.(n.) 1. மயக்கம் (இ.வ.); bewilderment. 2. குடிவெறி; intoxication.

[மயக்கு + அடி.]

மயக்கந்தாதி *mayakkandādi,* பெ.(n.) எழுத்து, அசை, சீர் இவற்றின் ஈறு தொடங்கிகள் (அந்தாதிகள்) விரவிவரப் பாடும் வகை (யாப்.வி.பக்.184); a *andādi,* in which *acai-y-andādi, cīr-andādi* and *eḻuttandādi* are found mixed.

[மயக்கு + அந்தாதி.]

மயக்கநெறி *mayakkaneṟi,* பெ.(n.) தமிழ்ச் சொல்லில் இன்ன மெய்யெழுத்து இன்ன மெய்யெழுத்தோடு சேர்ந்து வருமென்பது பற்றிய நெறிமுறை (நன்.எழுத்து.2297, விருத்.); the rule determining the sequences of consonants in word - formation.

மயக்கம் *mayakkam,* பெ.(n.) 1. அறிவின் திரிபு; mental delusion, stupor, bewilderment, aberration of mind, as from ignorance, fascination, etc. 2. அறியாமை; ignorance. *"காமம் வெகுளி மயக்க மிவை மூன்ற னாமங் கெட" (குறள், 360).* 3. பிழைபட வுணர்கை; mistaken knowledge, misunderstanding.

4. பிரிவுத் துன்பம் (அரு.நி.); pining due to separation from one's beloved. 5. உணர்விழப்பு, மூர்ச்சை (கொ.வ.); giddiness, unconsciousness. 6. கலப்பு; mixture. *"வடசொன் மயக்கமும் வருவன புணர்த்தி" (கல்லா.62, 18).* 7. எழுத்துப் புணர்ச்சி (இலக்.); combination of letters, coalescence. *"உடனிலை மயக்கம் வேற்றுநிலை மெய்ம்மயக்கம்". "மெய்ந்நிலை மயக்கம் மானமில்லை" (தொல்.எழுத்து.47).* 8. மரணச் சடங்கினுள் ஒன்று (யாழ்.அக.); a funeral rite. 9. சோம்பேறித்தனம் (யாழ். அக.); laziness. 10. இருபாற் கலப்பாகிய அலித்தன்மை (வின்.); confusion in nature, as in the blending of sexes among animals and vegetables.

[முள் → (முய்) → முய → முயங்கு → மயங்கு (மு.தா.166). மயங்கு (த.வி.) → மயக்கு (பி.அ.) → மயக்கு → மயக்கம்.]

மயக்கமுறு-தல் *mayakkam-uṟu-*, 9 செ.குன்றாவி.(v.t.) 1. மயக்கமுண்டாதல்; to be inconscious. 2. இளைப்படைதல்; faintiny.

[மயக்கம் + உறு.]

மயக்கமின்மை *mayakkam-iṉmai*, பெ.(n.) அறத்துறுப்பினுள் ஒன்றான மனத் தெளிவு (சூடா.); clarity of mental vision, one of *aṟatturuppu*.

[மயக்கம் + இன்மை.]

மயக்கமேறு-தல் *mayakkam-ēṟu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மயக்கங் கொள்ளல்; growing giddy. 2. வெறியேறுதல்; to be intoxicated.

[மயக்கம் + ஏறு-.]

மயக்கரவம் *mayakkaravam*, பெ.(n.) மயக்கரா (யாழ்.அக.) பார்க்க; see *mayakkarā*.

[மயக்கம் + அரவம்.]

மயக்கரா *mayakkarā*, பெ.(n.) ஒரு வகைப் பாம்பு (நாமதீப.257); a kind of serpent.

[மயக்கம் + அரவு. அரவு → அரா.]

மயக்கவணி *mayakka-v-aṇi*, பெ.(n.) ஒரு பொருளை வேறொரு பொருளென மயங்குவதாகக் கூறும்அணி (அணியி.6); (Rhet.) a figure of speech in which one object is mistken for another.

[மயக்கம் + அணி.]

மயக்கவிதி *mayakka-vidi*, பெ.(n.) மயக்கநெறி பார்க்க; see *mayakka-neṟi*.

*[மயக்கம் + விதி. மயக்கம் = கலப்பு, சேர்க்கை. த.நெறி > **Skt.** விதி.]*

மயக்கவொழிப்பு *mayakka-v-oḻippu*, பெ.(n.) ஒரு பொருளை மற்றொரு பொருளென மயங்குவதை யொழித்தற்கு வேற்றுமை கூறித் தெரிவிக்கும் அணி (யாழ்.அக.); a figure of speech in which the confusion between two things is removed by pointing out the differences.

[மயக்கம் + ஒழிப்பு.]

மயக்கி *mayakki*, பெ.(n.) அதிமதுரம் எனுஞ் செடி (சங்.அக.); liquorice plant.

[மயக்கம் → மயக்கி.]

மயக்கிடை *mayakkiḍai*, பெ.(n.) மயக்கம் (யாழ்.அக.) பார்க்க; see *mayakkam*.

மயக்கிமாலை *mayakki-mālai,* பெ.(n.) வஞ்சகி, சூழ்ச்சிக்காரி (நாஞ்.); artful woman.

[மயக்கி + மாலை.]

மயக்கு[1]-தல் *mayakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. மனங் குழம்பச் செய்தல்; to bewilder, confuse. *"குறளை பேசி மயக்கி விடினும்" (நாலடி,189).* 2. வியக்கச் செய்தல்; to puzzle, mystify, to make one wonder. *"மாயமயக்கு மயக்கானென்னை வஞ்சித்து" (திவ். திருவாய். 8, 7, 4).* 3. உணர்வுறச் செய்தல்; to fascinate, allure, charm. *"மயக்கிய முயக்கந் தன்னால்" (கம்பரா. இராவணன்சோ.51).* 4. கலத்தல்; to mixup. *"பாற்பெய் புன்கந் தோனொடு மயக்கி" (புறநா.34).* 5. சேர்த்தல்; to unite, join, as a wick with the oil in a can. *"உயிரெனுந் திரிமயக்கி" (தேவா.1189, 4).* 6. சிதைத்தல்; to ruin,destroy. *"எருமை கதிரொடு மயக்கும்" (ஐங்குறு.99).* 7. நிலை நெகிழ்த்துதல்; to disturb, unsettle. *"வள்ளை யாய்கொடி மயக்கி" (அகநா.6).* 8. மூர்ச்சையுறச் செய்தல்; to make one swoon. *"மதகரியை யுற்றரி நெரித்தென மயக்கி.... துகைத்தான்" (கம்பரா .மகுட.5).* 9. ஊடலுணர்த்துதல்; to clear one's misunderstatnding as in sulks. *"மயக்கிய வருதி மன்" (கலித்.73).*

[முள் → முய → முயங்கு → மயங்கு → மயக்கம் (மு.தா.171).]

மயக்கு[2]-தல் *mayakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) பண்படுத்துதல்; refine. *"மயக்கின நந்தாவினம்" (தெ.க.தொ.14, கல்.84-2).*

[மயக்கம் →மயக்கு.]

மயக்கு[3] *mayakku,* பெ.(n.) 1. மயக்கம் பார்க்க; see *mayakkam. "கனா மயக்குற்றேன்" (மணிமே.11:104).* 2. போர் செய்கை; fighting. *"இரும்புலி மயக்குற்ற" (கலித்.48).*

[மயக்கம் →மயக்கு.]

மயக்கு[4] *mayakku,* பெ.(n.) வியக்கச் செய்யும் செயல்; act of making one wonder. *"மாயமயக்கு மயக்கே" (திவ்.திருவாய்.8, 7, 3).*

[மயக்கம் →மயக்கு.]

மயக்குறை *mayakkuṟai,* பெ.(n.) 1. உணர்ச்சி யில்லாமற் செய்யுமருந்து; a medicine capable of depriving the feeling such as chloroform. 2. மயக்கத்தைத் தருமருந்து; stupefying drugs or medicines.

[மயக்கம் →மயக்கு + உறை. உறு→உறை.]

மயங்கக்கூறல் *mayaṅga-k-kūṟal,* பெ.(n.) மயங்கவைத்தல் பார்க்க (தொல். பொருள். 664); see *mayaṅga-vaittal.*

[மயங்க + கூறல்.]

மயங்கவைத்தல் *mayaṅga-vaittal,* பெ.(n.) நூற்குற்றம் பத்தனுள் பொருள் இன்னது என்று துணியக் கூடாமற் கூறும் குற்றம் (நன்.பொது.12); obscurity, in literary composition one of ten *nūṟ-kuṟṟam.* *"குன்றக் கூறல் மிகைபடக் கூறல் கூறியது கூறல் மாறுகொளக் கூறல் வழூஉச்சொற் புணர்த்தல் மயங்கவைத்தல் வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல் சென்றுதேய்ந் திறுத னின்றுபய னின்மை என்றிவை யீரைங் குற்ற நூற்கே" (நன்.பொது.12).*

[மயங்க + வைத்தல்.]

மயங்கிசைக்கொச்சகம் *mayaṅgicai-k-koccagam*, பெ.(n.) தரவு முதலிய உறுப்புகள் மயங்கியும் மிக்குங் குறைந்தும் வரும் கொச்சகக் கலி (வீரசோ.யாப்.12, உரை); a species of *koccaga-k-kali* verse.

[மயங்கிசை + கொச்சகம்.]

மயங்கியோர் *mayaṅgiyōr*, பெ.(n.) அறிவு திரிந்தோர்; persons suffering from mental aberration. *"மாலை யென்மனார் மயங்கியோரே" (கலித்.119).*

[மயங்கு →மயங்கியோர்.]

மயங்கு-தல் *mayaṅgu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. மருளுதல்; to be confused, bewildered. 2. பரவசமாதல்; to be charmed, allured. 3. வெறி கொள்ளுதல்; to be intoxicated. *தாமயங்கி யாக்கத் துட் டூங்கி... வாழ்நாளைப் போக்குவார்" (நாலடி, 327).* 4. மாறுபடுதல்; to be changed, as in one's mind or body. *"மேனியு முள்ளமும் மயங்காத் தேவர்" (கலித்.82:30).* 5. நிலையழிதல்; to be ruined disolated. *"ஆள்பவர் கலக்குற மயங்கிய நன்னாட்டு" (மணிமே.23:104).* 6. வருந்துதல்; to be distressed. *"முயங்கல் விடாஅ விவையென மயங்கி" (அகநா.26).* 7. தாக்கப்படுதல்; to be disturbed, tossed about, as sea. *"காலொடு மயங்கிய கவிழ் கடலென" (பரிபா.8, 31).* 8. ஐயமடைதல்; to be in doubt. 9. தயங்குதல்; to be overwhelmed with anxiety. *'அந்தச் செயலைச் செய்ய மயங்குகிறான்' (உ.வ.).* 10. கலத்தல்; to be mixed up. 11. போலுதல்; to resemble. *"காரிருள் மயங்கு மணி மேனியன்" (பரிபா.15:50).* 12. நெருங்குதல்; to be crowded together. *"முகிழ் மயங்குமுல்லை" (பரிபா.15:39).* 13. கைகலத்தல்; to engage in a fight. *"தமிழ் தலை மயங்கிய தலையாலங் கானத்து" (புறநா.19).* 14. அறிவுகெடுதல்; to lose one's sense. *"புலான் மயங்கான்" (ஏலாதி, 2).* 15. உணர்ச்சி யிழத்தல்; to become unconscious.

[முள் → (முய்) → முய → முயங்கு → மயங்கு (மு.தா.166) (வே.க.4:56).]

மயங்குகால் *mayaṅgu-kāl*, பெ.(n.) சுழல் காற்று; cyclone. *"மயங்குகா லெடுத்த வங்கம் போல" (மணிமே.4:34).*

[மயங்கு + கால். கால் = காற்று. குல் (தோன்றற்கருத்துவேர்)→கல்→கால்→(காலுதல்) = ஒழுகுதல், ஓடுதல், வெளிப்படுதல், தோன்றுதல்.]

மயங்குதிணைநிலைவரி *mayaṅgu-tiṇai-nilai-vari*, பெ.(n.) வரிப்பாட்டு வகை (சிலப். கானல்வரி.அரும்.); a kind of lyric song.

[மயங்குதிணை + நிலைவரி.]

மயசுபடில்தண்டவாளம் *mayaśupaḍil-taṇḍavāḷam*, பெ.(n.) வெள்ளீய மணல்; tinore (சா.அக.).

மயடம் *mayaḍam*, பெ.(n.) புல்லால் வேய்ந்த குடிசை (யாழ்.அக.); hut with grass-roof.



[முள் →மள் →(மய்)→ மை = கருமை, முகில், காராடு, கரிய குழம்பு (மு.தா.181). அள்→அடு→ அடர். அள்ளுதல் = நெருங்குதல், அடுத்தல் = நெருங்குதல், அடர்தல் = நெருங்குதல், புடைத்தல், தட்டியுருவாக்கல், அடர்-தல் பார்க்க. அடர்→ அடம். மய + அடம்.]

மயண்டை *mayaṇḍai,* பெ.(n.) மாலைநேரம் (யாழ்.அக.); evening.

[மயல்→மயண்டை.]

மயப்பு *mayappu,* பெ.(n.) 1. சாறு; essence. 2. செல்வமுடைமை; being wealthy. 3. வண்ணம்; colour.

[மயம்² →மயப்பு.]

மயம்¹ *mayam,* பெ.(n.) சிற்ப நூல் முப்பத்திரண்டனுள் ஒன்று (இருசமய. உலகவழக்.சிற்பசாத்.20); a treatise on architecture, one of 32 *cirpa-nūl.*

மயம்² *mayam,* பெ.(n.) 1. ஒட்டகம் (யாழ்.அக.); camel. 2. தன்மை; nature, quality, property. *"பெண்மயமோ பெரிதே" (சீவக. 228).* 3. நிறைவு; prevalence, fullness. *"எங்குந் தழன்மயமாய்"* (விநாயகபு.74, 128). 4. பொருள்; substance. *அவனிடத்தில் ஒரு மயமுமில்லை (உ.வ.).*

மயம்³ *mayam,* பெ.(n.) 1. மகிழ்ச்சி; pleasure, satisfaction. *"மயமுறு மனங்கொடு" (இரகு.கடிமண.36).* 2. அழகு (பிங்.); beauty. *"மயமிக்க மாக தத்தால்" (சூடா.9, 1).* 3. செருக்கு; arrogance. *"மூடந்தரித்தெண் மயத்து நின்றார்" (திருநூற்.62).*

மயம்⁴ *mayam,* பெ.(n.) ஆவின் சிறுநீர் (கோமயம்); cow-urine. *"மயமாதி யாட்டிடுக" (சிவதரு.பரிகார.76).*

மயர்¹-தல் *mayar-,* 4 செ.கு.வி.(v.i.) 1. மயங்குதல்; to be bewildered, confused. 2. உணர்வறுதல்; to lose consciousness. *"விடந்தனை யயின்றன ரெனும்படி மயர்ந்து" (கந்தபு.திருவி.80).* 3. சோர்தல்; to be fatigued, tired. *"மயரு மன்னவன்" (கம்பரா. இரணியன்வதை.13).* 4. திகைத்தல்; to wonder. *"வைது கொன்றனனோவென வானவர் மயர்ந்தார்" (கம்பரா.கும்பக.244).*

[முள் →முய →மய→ மச→மசகு = திகைப்பு, மயக்கம். மச→மசள்→மசண்டை = அந்திப்பொழுது. மச→மசக்கை = கருப்பிணிகள் அடையும் மயக்கம். மய→மயல் = மயக்கம், காதல். மயல்→மையல் = காதல் மயக்கம், மயல்→மயர் (மு.தா.178).]

மயர்² *mayar,* பெ.(n.) மயக்கம்; bewilderment, confusion. *"மயரறுக்குங் காமக்கடவுள்" (பரிபா.15: 37).*

[மயல் → மயர்.]

மயர்ப்பு *mayarppu,* பெ.(n.) மயர்வு பார்க்க; see *mayarvu.*

[மயல்→மயர்→மயர்வு→மயர்ப்பு.]

மயர்வு *mayarvu,* பெ.(n.) 1. அறிவு மயக்கம் (பிங்.); illusion of the senses, confusion, bewilderment. 2. அறியாமை, இருள், மருள்; ignorance. *"மயர்வற மதிநல மருளினன்" (திவ்.திருவாய்.1, 1, 1).* 3. சோர்வு; weariness.

[மயல்→ மயர்→மயர்வு = மயக்கம் (மு.தா.178).]

மயரி *mayari,* பெ.(n.) 1. உன்மத்தன்; person whose mind is confused. *"நின்பால் வாங்கா நெஞ்சின் மயரியை" (மணிமே.22:75).* 2. காமுகன்; lascivious person. *"மயரிகன் சொற்பொருட் கொண்டு" (திருநூற்.53).* 3. அறிவிலி; ignorant person. *"மயரிக ளல்லாதார்" (இனி.நாற்.13).*

[மயர் → மயரி.]

மயரை *mayarai,* பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish.

மயரைப்பூச்சி *mayarai-p-pūcci,* பெ.(n.) 1. நாகப்பூச்சி; a round worm. 2. கீரிப்பூச்சி; thread worm (சா.அக.).

மயல் *mayal,* பெ.(n.) 1. ஐயுறவு; doubt. *"மயலறு சீர்த்தி" (பு.வெ.9, 7).* 2. மயக்கம்; confusion, bewilderment, delusion. *"மயவிலங்குந் துயர்" (தேவா.121, 2). "இயல்பாகும் நோன்பிற்கொன்று இன்மை உடைமை மயலாகும் மற்றம் பெயர்த்து" (குறள், 344).* 3. மந்தம் (யாழ்.அக.); slowness. 4. ஆசை; desire. *"தண்டா மயல்கொடு வண்டு பரந் தரற்ற" (கல்லா.20, 6).* 5. காமவிழைவு; lust, sexsual infatuation. *"மாதர் மயலுறு வார்கண் மருள்கொண்ட சிந்தை" (திருமந்.203).* 6. கோட்டி, பித்து, வெறி (பைத்தியம்); madness. *"மயற்பெருங் காதலென் பேதைக்கு" (திவ். திருவாய்.4, 4, 10).* 7. மாயை; *māyā. "மயலாரும் யானுமறியேம்" (கம்பரா. நாகபா.258).* 8. அச்சம் (யாழ்.அக.); fear, dread. 9. பேய் (பிசாசம்) (பிங்.); demon, imp. 10. செத்தை; dried leaves, rubbish. *"வம்புண் கோதையர் மாற்றும் மயலரோ" (சீவக.128).* 11. நெருப்பு (அரு.நி.); fire.

தெ. மயல; க. மயமு; ம. மய்யல்.

[முள்→முய→மய→மயல் (மு.தா.178).]

மயவலக்கம் *mayavalakkam,* பெ.(n.) வெள்ளி; silver (சா.அக.).

மயற்கிழங்கு *mayar-kilangu,* பெ.(n.) மரவள்ளிக் கிழங்கு; tapioca (சா.அக.).

மயற்கை *mayarkai,* பெ.(n.) 1. மயக்கம்; confusion, bewilderment delusion. 2. செத்தை (சீவக. 1346); dried leaves.

[மயல்→மயற்கை (வே.க.4:58).]

மயற்பகை *mayar-pagai,* பெ.(n.) 1. கோட்டி, பித்து; insanity. *"வஞ்சமுண்டு மயற்பகை யுற்றோர்" (சிலப்.5:122).* 2. பித்துக்குக் கரணியமாகிய மருந்து; drug which causes insanity. *"மயற் பகை யூட்ட.... அயர்ப்பது செய்யா வறி வினளாகி" (மணிமே.23:41).*

மயறி *mayari,* பெ.(n.) மயறை (பதார்த்த.939) பார்க்க; see *mayarai.*

[மயறை→மயறி.]

மயறை *mayarai,* பெ.(n.) எட்டு விரல நீளம் வளர்வதும் கரு நிறமுள்ளதுமான கடல் மீன் வகை; a sea-fish, leadenblack, attaining 8 inch in length.

மயன்[1] *mayan,* பெ.(n.) 1. அசுரத் தச்சன்; a daitya, the architect of the asuras. *"மயன் விதித்தன்ன மணிக்கா லமளிமிசை" (சிலப். 2:12).* 2. தச்சன் (சூடா.); carpenter. 3. சிற்பி (வின்.); artificer, architect.

மயன்² *mayaṉ,* பெ.(n.) கின்னரன் (வின்.); Kinneran.

மயனத்தைலம் *mayaṉa-t-tailam,* பெ.(n.) இசிவு, வீக்கம் முதலியவற்றிக்குப் பூசும் நெய்மம்; a medicated oil distilled from bee's wax and other substances and in swelling, paralysis, injury, burns etc. (சா.அக.).

மயனபதம் *mayaṉa-padam,* பெ.(n.) மெழுகு பதம்; of the consistency of wax (சா.அக.).

மயனம் *mayaṉam,* பெ.(n.) மெழுகு, மை; wax (சா.அக.).

மயனமாயாட்டு-தல் *mayaṉam-āy-āṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) மயன மாயரைத்தல்; பொடியாகும்படி அரைத்தல்; to grind to powder, to grind as finely as wax.

[மயனமாய் + ஆட்டு-,]

மயனூல் *mayanūl,* பெ.(n.) மயம்¹ பார்க்க; see *mayam¹. "மயனூலின் முறையே" (திருவாலவா. 53:14).*

மயானக்கொள்ளை *mayāṉa-k-koḷḷai,* பெ.(n.) 1. காளி தேவி குறித்து மயானத்திற்கு நேர்ச்சிப் பொருள்களை மிகுதியாகக் கொண்டு வந்து குவித்துப் பின் மக்கள் அவற்றைக் கொள்ளையிடும்படி விடும் மீனவரின் சடங்கு; ceremony among fishermen of bringing offerings to the burning ground, heaping them and allowing them to be looted and carried off by the people, celebrated in memory of *Kāḷi.* 2. மசானக்கொள்ளை பார்க்க; see *maśāṉa-k-koḷḷai.*

[மயானம் + கொள்ளை.]

மயானச்சடங்கு *mayāṉa-c-caḍaṅgu,* பெ.(n.) ஈமச் சடங்கு (வின்.); ceremonies performed in the burning of burial ground.

[மயானம் + சடங்கு.]

மயானஞானம் *mayāṉa-ñāṉam,* பெ.(n.) 1. மயானத்தைக் கண்டதும் உடல் நிலையற்றதென்று இடைக்காலமாகத் தோன்றும் பற்றின்மை; temporary dislike of the world, on realising the evanescence of the body at the sight of a burial-ground one of three *vairākki-yams* (q.v.). 2. இறக்கும் வரை உண்மையாய் நடந்து கொள்வதாய் மணமக்கள் கூறும் உறுதி மொழி (வின்.); pledge of fidelity till death given by a bride or bridegroom.

*[மயானம் + **Skt.** ஞானம்.]*

மயானப்பூடு *mayāṉa-p-pūḍu,* பெ.(n.) எலும்பு; bone.

[மயானம் + பூடு.]

மயானம் *mayāṉam,* பெ.(n.) சுடுகாடு; burning or burial ground. *"மயானத்திலிடுவதன் முன்" (தேவா.812, 7).*

[முள் → மள் → மாள் → மாழ் → மாழ்கு → மாழ்குதல் = மயங்குதல் . முள் → முய → முயங்கு → மயங்கு. மயங்குதல் = கலத்தல், நிலை மாறுதல், மயங்கு → மய → மயானம். உயிரற்ற மாந்தவுடல் மண்ணோடு மண்ணாக அல்லது சாம்பலாக கலக்குமிடம்.]

மயானமரம் *mayāṉa-maram,* பெ.(n.) புன்க மரம்; pongamia tree.

*[மயானம் + மரம்.]

மயானவாசினி *mayāṉa-vāšiṉi*, பெ.(n.) கொற்றவை (தக்கயாகப்.80, உரை); *Koṟṟavai*, as having his abode in the burning ground.

[மயானம்+வாசினி. வாழ் → வாழினி → வாசினி.]

மயானவயிராக்கியம் *mayāṉa-vairākkiyam*, பெ.(n.) மயானஞானம் பார்க்க; see *mayāṉa-ñāṉam*.

[மயானம் + வயிராக்கியம்.]

மயிக்கம் *mayikkam*, பெ.(n.) பிரம்பு; rattan.

மயிசிக்கி *mayicikki*, பெ.(n.) ஆடு தின்னாப் பாளை (பரி.அக.); worm-killer.

மயிசுசி *mayišuši*, பெ.(n.) பெரும்பாக்கு (சங்.அக.); a species of arecanut.

மயிடம்[1] *mayiḍam*, பெ.(n.) எருமை (அக.நி.); buffalo.

[மை = கருப்பு. மை→மயி→மயிடம் = கருநிற எருமை.]



மயிடம்[2] *mayiḍam*, பெ.(n.) 1. பெருமை (அரு.நி.); greatness. 2. இலவம் பிசின் (சங்.அக.); gum of silk-cotten tree.

மயிடரோசனை *mayiḍa-rōšaṉai*, பெ.(n.) எருமையினின்றும் எடுக்கப்படும் கோராசனை (நாமதீப.214); bezoar taken from buffalo.

மயிடற்செற்றாள் *mayidāṟ-ceṟṟāḷ*, பெ.(n.) கொற்றவை (சூடா.); *Koṟṟavai*.

[மயிடம் + செற்றாள்.]

மயிடன் *mayiḍaṉ*, பெ.(n.) கொற்றவையால் கொல்லப்பட்ட ஓர் அசுரன் (அபி.சிந்.); an asura killed by *Koṟṟavai*.

மயிடாரி *mayiḍāri*, பெ.(n.) மலைமகள்; *Pārvati*.

மயிடி *mayiḍi*, பெ.(n.) மயிடம்[1] (சங்.அக.) பார்க்க; see *mayiḍam*.

[மயிடம் →மயிடி.]

மயிடோசனை *mayiḍōšaṉai*, பெ.(n.) மருந்து வகை (யாழ்.அக.); a compound medicine.

மயிந்தர் *mayindar*, பெ.(n.) ஒருசார் மக்கள் வகுப்பினர்; a tribe or clan. *"விராடர் மயிந்தர்" (கலிங்.317).*

மயிந்தன்[1] *mayindaṉ*, பெ.(n.) சோழ நாட்டில் ஆலஞ்சேரியில் வாழ்ந்த ஒரு வள்ளல் (சி.பெ.அக.); a philanthoropist of olden days who lived at *Alancheri* in *Chola nāḍu*. *"ஆலஞ்சேரி மயிந்தன்" (தொல். பொருள்.30, உரை).*

பாண்டிய நாடு வற்கடத்தினால் தொல்லை நேரிட்டபோது அங்கு வாழ்ந்த புலவர்கள் உட்பட

மக்கள் சோழ நாட்டிற்கு வந்தபோது அவர்களைப் புரந்த ஆலஞ்சேரிமைந்தனைக் கீழ்காணுமாறு பாராட்டினர்.

"தாயில்லாதவர்க்குத் தாயே யாகியும்
தந்தையில்லாதவர்க்குத் தந்தையே யாகவும்
இந்த ஞாலத் திடுக்கண் தீர
வந்து தோன்றினன் மாநிதிக் கிழவன்
நீலஞ் சேரும் நெடுமால் போல்வன்
ஆலஞ்சேரி மயிந்தன் என்பான்
ஊருண் கேணி நீரொப்பானே,
தன்குறை சொல்லான்
பிறர் பழி உரையான்
மறந்தும் பொய்யான், வாய்மையுங் குன்றான்
இறந்து போகாதெம் மையுங் காத்தான்".

மயிந்தன்² *mayindaṉ,* பெ.(n.) மீன் வகை; a kind of fish. *"குறவை வாளை யுளுவை மயந்தன்" (பறாளை.பள்ளு.74).*

மயிந்தன்³ *mayindaṉ,* பெ.(n.) மைந்தன் பார்க்க; see *maindaṉ.*

[மைந்தன் →மயிந்தன்.]

மயிந்து-தல் *mayindu-,* 5 செ.கு.வி.(v.i.) பதுங்குதல்; to sneak, slink away.

[மாள் →மாய் →மாயம் = மறைவு, வஞ்சனை. மாய்→மய்→மயிந்து-,]

மயிர் *mayir,* பெ.(n.) 1. முடி; hair of human beings or animals fur, fleece. *"மயிர் நீப்பின் வாழாக் கவரி மா" (குறள், 964).* 2. தூவி; down of birds. 3. சாமரை; tail of the yak. *"மயிரணியப் பொங்கி" (பு.வெ.5, 5).*

[முள் →மள் →மாள் → மாய் →மாயோன் = கரிய நிறமுடைய திருமால். மாயோள் = கரிய நிறமுடைய காளி. மாய் →மாயம் = கருமை. மள் →மய் →மை = கருமை, முகில், காராடு, கரிய குழம்பு. மை → மயில் = கரு (நீல) நிறத் தோகையுள்ள பறவை. மயில் →மயிலை = கருமை கலந்த வெள்ளைக் காளை. மை →மயிர் = கரியமுடி (மு.தா.181).]

மயிர்க்கட்டு¹ *mayir-k-kaṭṭu,* பெ.(n.) தலைமயிர் K o¢R ;lock of hair, hair bid up in a knot.

[மயிர் + கட்டு.]

மயிர்க்கட்டு² *mayir-k-kaṭṭu,* பெ.(n.) தலைப் பாகை (முல்லைப்.53, உரை); turban.

[மயிர் + கட்டு.]

மயிர்க்கடை *mayir-k-kaḍai,* பெ.(n.) மயிர்க் கிடை (யாழ்.அக.) பார்க்க; see *mayir-k-kiḍai.*

[மயிர் + கடை. கிடை →கடை.]

மயிர்க்கண் *mayir-k-kaṉ,* பெ.(n.) மயிர்க் கால் (வின்.) பார்க்க; see *mayir-k-kāl.*

[மயிர் + கண். கண் = துளை.]

மயிர்க்கண்முரசம் *mayir-k-kaṉ-muraša̋m,* பெ.(n.) புலியைக் கொன்ற ஆனேறு இறந்துழி அதன் உரிவையை மயிர் சீவாமற் போர்த்த வீர முரசம்; drum made of raw hide of a bull that has killed a tiger. *"மயிர்க்கண் முரசொடு வான் பலி யூட்டி" (சிலப்.5 : 88).*

[மயிர்க்கண் + முரசம்.]

மயிர்க்கத்தி *mayir-k-katti,* பெ.(n.) முகமழிக்கும் கத்தி (சீவக.2496, உரை); razor.

[மயிர் + கத்தி.]



மயிர்க்கம்பி *mayir-k-kambi,* பெ.(n.) ஊமத்தங்காய் (சங்.அக.); fruit of thorn-apple.

[மயிர் + கம்பி.]

மயிர்க்கருவி *mayir-k-karuvi,* பெ.(n.) அழுக்கெடுத்தற்குதவும் மயிர் கோத்த கருவி (வின்.); brush.

[மயிர் + கருவி.]

மயிர்க்கற்றை *mayir-k-kaṟṟai,* பெ.(n.) முகமழிப்பு செய்து கொள்ளுவதற்கு முகத்தில் பூசப் பயன்படும் மயிர்கள் நெருங்கக் கட்டிய தூரிகை; brush.

[மயிர் + கற்றை. கல் →கள். கள் + ஐ – கற்றை.]

மயிர்க்காம்பெறி–தல் *mayir-k-kāmbeṟi-,* 2 செ.கு.வி.(v.i.) மயிர்க் கூச்செறி–, (வின்.) பார்க்க; see *mayir-k-kūcc-eṟi-.*

[மயிர்காம்பு + எறி–.]

மயிர்க்கால் *mayir-k-kāl,* பெ.(n.) முடித்துளை; pore of the skin at the root of hair. *"அமுதம் மயிர்க்காறோறுந் தேக்கிடச் செய்தனன்" (திருவாச.3, 10).*

[மயிர் + கால்.]

மயிர்க்கிடுகு *mayir-k-kiḍugu,* பெ.(n.) மயிர் செறிந்த தோலால் மூடப்பட்ட கேடக வகை (சீவக.2218); shield covered with raw hairy hide.

[மயிர் + கிடுகு.]

மயிர்க்கிடை *mayir-k-kiḍai,* பெ.(n.) முடியின் அகல வளவு (வின்.); hair's breath.

[மயிர் + கிடை.]

மயிர்க்கிளர்ச்சி *mayir-k-kiḷarcci,* பெ.(n.) மயிர்க்கூச்செறி– (வின்.) பார்க்க; see *mayir-kūcceṟi-*

[மயிர் + கிளர்ச்சி.]

மயிர்க்குச்சு[1] *mayir-k-kuccu,* பெ(n.) மயிர்க்கூச்செறி– (குருபரம்.103) பார்க்க; see *mayir-k-kūcc-eṟi-.*

[மயிர் + குச்சு.]

மயிர்க்குச்சு[2] *mayir-k-kuccu,* பெ.(n.) 1. துகிலிகை; hair pencil for painting. 2. கொண்டையூசி; hair pin. 3. தலையணி வகை; a head ornament with pendants.

[மயிர் + குச்சு.]

மயிர்க்குச்செறி–தல் *mayir-k-kucceṟi,* 2 செ.கு.வி. (v.i.) மயிர்க்கூச்செறி–, (வின்.) பார்க்க; see *mayir-k-kūcceṟi-.*

[மயிர் + குச்செறி–.]

மயிர்க்குட்டம் *mayir-k-kuṭṭam,* பெ.(n.) மயிர் உதிரச் செய்யும் நோய் வகை (யாழ்.அக); a disease which makes the hair fall off.

[மயிர் + குட்டம்.]

மயிர்க்குட்டி *mayir-k-kuṭṭi,* பெ.(n.) கம்பளிப் பூச்சி; caterpiller. *"மயிர்க்குட்டி மேய வண்டுருவாய்" (தணிகைபு.நந்தியுப.30).*

[மயிர் + குட்டி.]



மயிர்க்குடி *mayir-k-kuḍi,* பெ.(n.) மயிர்ச் செறிவு; thick growth of tresses of hair. *"மயிர்க் குடி யழகாலே யாதல்" (ஈடு.அவ.ஜீ).*

[மயிர் + குடி.]

மயிர்க்குந்தம் *mayir-k-kundam,* பெ.(n.) மருந்து வகை (யாழ்.அக.); a kind of medicine.

[மயிர் + குந்தம்.]

மயிர்க்குரு *mayir-k-kuru,* பெ.(n.) மயிர்த் துளையில் தோன்றும் புண் (யாழ்.அக.); pimple at the root of hair, boil protruding from the follicles.

[மயிர் + குரு. குல்→குரு = கட்டி. ஒ.நோ. வியர்க்குரு.]

மயிர்க்குழற்சி *mayir-k-kuḻaṟci,* பெ.(n.)
1. மயிர்க் குழைவு (பிங்.); curling of hair.
2. மயிர்க்கூச்சு (யாழ்.அக.) பார்க்க; see *mayir-k-kūccu.*

[மயிர் + குழற்சி.]

மயிர்க்குறடு *mayir-k-kuṟaḍu,* பெ.(n.) முடியைக் களைவதற்குப் பயன்படும் குறடு; tweezer for pulling out hairs.

[மயிர் + குறடு.]



மயிர்க்கூச்சு *mayir-k-kūccu,* பெ.(n.) மயிர் சிலிர்த்தல் (புளகம்); rising of the hairs of the body, horripillation. *"மயிர்க்கூச்சுமறா" (திவ்.பெரியாழ்.5, 35).*

[மயிர் + கூச்சு.]

மயிர்க்கூச்செறி-தல் *mayir-k-kūccu-eṟi-,* 4 செ.கு.வி.(v.i.) உடல் முடி குத்திட்டு நிற்றல்; புல்லரித்தல்; get goose-flesh.

[மயிர் + கூச்செறி-,]

மயிர்க்கேடகம் *mayir-k-kēḍagam,* பெ.(n.) மயிர்க்கிடுகு பார்க்க; see *mayir-k-kiḍugu. "போர் மயிர்க் கேடகம் புளகத் தோற்பரம்" (சீவக.2218).*

[மயிர் + கேடகம்.]

மயிர்க்கொடி *mayir-k-kodi,* பெ.(n.) தலை மயிரோடு சேர்த்துப் பின்னுதற்கு உரிய (சவரி) இடுமயிர் (tinn.); switch.

[மயிர் + கொடி.]

மயிர்க்கொத்து *mayir-k-kottu,* பெ.(n.) மயிர்மாணிக்கக் கொத்து; bunch of *mayir manikkam.*

[மயிர் + கொத்து.]

மயிர்க்கொழுந்து *mayir-k-kolundu,* பெ. (n.) மருக்கொழுந்து (இ.வ.); southern nood.

[மயிர் + கொழுந்து.]

மயிர்க்கொன்றை *mayir-k-konrai,* பெ.(n.) மயிற்கொன்றை, 1, 2 பார்க்க (L.); see *mayir-konrai.*

[மயிர் + கொன்றை.]

மயிர்க்கோரை *mayir-k-kōrai,* பெ.(n.) கோரை வகை (யாழ்.அக.); a hairy sedge.

[மயிர் + கோரை.]

மயிர்க்கோள் *mayir-k-kōl,* பெ.(n.) மயிர்க் கூச்சு பார்க்க (ஈடு.); see *mayir-k-kūccu.*

[மயிர் + கோள்.]

மயிர்கழி-த்தல் *mayir-kali-,* 4 செ.குன்றாவி. (v.t.) மழிப்பு செய்தல் (இ.வ.); to shave.

[மயிர் + கழி-.]

மயிர்களை-தல் *mayir-kalai-,* 2 செ.குன்றாவி. (v.t.) மயிர்கழி-த்தல் பார்க்க; see *mayir-kali-.*

[மயிர் + களை-.]

மயிர்களைவோன் *mayir-kalaivōn,* பெ.(n.) முடிதிருத்தாளன் (யாழ்.அக.); barber.

[மயிர் + களைவோன்.]

மயிர்குறைகருவி *mayir-kurai-karuvi,* பெ. (n.) 1. மயிர்க்கத்திரி; hair-shears. *"மயிர்குறை கருவித் துணைகுழை யலைப்ப" (கல்லா.42, 16).* 2. மழிப்பு கத்தி (அக.நி.); razor.

[மயிர் + குறை + கருவி.]

மயிர்ச்சந்தனம் *mayir-c-candanam,* பெ.(n.) மயிர்ச்சாந்து பார்க்க (மதுரைக்.552, உரை); see *mayir-c-cāndu.*

[மயிர் + சந்தனம்.]

மயிர்ச்சாந்தம் *mayir-c-cāndam,* பெ.(n.) மயிர்ச்சாந்து (பிங்.) பார்க்க; see *mayir-c-cāndu.*

[மயிர் + சாந்தம்.]

மயிர்ச்சாந்து *mayir-c-cāndu,* பெ.(n.) கூந்தற்கிடும் நறுமணச் சாந்து (சிலப்.14:117, உரை); perfumed unguent for the hair.

[மயிர் + சாந்து.]

மயிர்ச்சாயம் *mayir-c-cāyam,* பெ.(n.) மயிர்க்கப்பு; hair dye.

[மயிர் + சாயம்.]

மயிர்ச்சிகைப்பூடு *mayir-c-cigai-p-pūdu,* பெ.(n.) மயிற்சிகை, 2 (மலை.அக.) பார்க்க; see *mayir-cigai.*

[மயிற்சிகை →மயிர்ச்சிகை + பூடு.]

மயிர்ச்சிகைப்பூண்டு *mayir-c-cigai-p-pūṇḍu,* பெ.(n.) அரிவாண்முனைப் பூண்டு (மலை. அக.); sickle - leaf.

[மயிர் + சிகை + பூண்டு.]

மயிர்ச்சிலிர்ப்பு *mayir-c-cilirppu,* பெ.(n.) மயிர்க்கூச்சு பார்க்க; see *mayir-k-kūccu.*

[மயிர் + சிலிர்ப்பு.]

மயிர்ச்சீலை *mayir-c-cīlai,* பெ.(n.) மயிர்ப் படம் (யாழ்.அக.) பார்க்க; see *mayir-p-paḍam.*

[மயிர் + சீலை.]

மயிர்ச்சுட்டசாம்பல் *mayir-c-cuṭṭa-šāmbal,* பெ.(n.) முடியை எரித்ததால் கிட்டும் சாம்பல்; ash of burnt hair (சா.அக.).

[மயிர் + சுட்ட + சாம்பல்.]

மயிர்ச்சுருள் *mayir-c-curuḷ,* பெ.(n.) 1. மயிர்க் குழற்சி, 1 பார்க்க; see *mayir-k-kuḻaṟci.* 2. மயிரின் சுருள் (வின்.); roll or curl of hair.

[மயிர் + சுருள்.]

மயிர்ச்சூட்டு *mayir-c-cūṭṭu,* பெ.(n.) மயிர்ச் சுருள், 2 (வின்.) பார்க்க; see *mayir-c-curuḷ.*

[மயிர் + சூட்டு.]

மயிர்ச்சூடு *mayir-c-cūḍu,* பெ.(n.) முடியினா லுண்டாகும் சூடு; warmth created by hair (சா.அக.).

[மயிர் + சூடு.]

மயிர்ச்சேணம் *mayir-c-cēṇam,* பெ.(n.) மயிரடைத்துச் செய்த மெத்தை (பிங்.); hair mattress.

[மயிர் + சேணம்.]

மயிர்சிங்கி *mayir-ciṅgi,* பெ.(n.) ஆடு தின்னாப் பாளை (சங்.அக.); warm-killer.

மயிர்த்தவிசு *mayir-t-tavišu,* பெ.(n.) மயிரடைத்துச் செய்த இருக்கை; cushion stuffed with hair, to sit on. *"பொங்கு மயிர்த் தவிசொடு பூமார் புனைஇ" (பெருங். இலாவாண.4:99).*

[மயிர் + தவிசு.]

மயிர்த்தோல் *mayir-t-tōl,* பெ.(n.) பெண்குறி அல்லது அல்குல்; vagina (சா.அக.).

[மயிர் + தோல்.]

மயிர்த்தோல்விடு-தல் *mayir-t-tōl-viḍu-,* 18 செ.கு.வி.(v.i.) பெண்ணாசையை நீக்குதல்; to get rid of the desire for woman.

[மயிர்த்தோல் + விடு-.]

மயிர்ப்பட்டு *mayir-p-paṭṭu,* பெ.(n.) மயிர்ப் படம் (யாழ்.அக.) பார்க்க; see *mayir-p-paḍam.*

[மயிர் + பட்டு. படம் →பட்டு.]

மயிர்ப்படம் *mayir-p-paḍam,* பெ.(n.) கம்பளி யாடை; woollen cloth. *"எலிப்பூம் போர்வையொடு மயிர்ப்படம் விரித்து" (பெருங்.உஞ்சைக்.47, 179).*

[மயிர் + படம்.]

மயிர்ப்படாம் *mayir-p-paḍām,* பெ.(n.) மயிர்ப்படம் (பிங்.) பார்க்க; see *mayir-p-paḍam.*

[மயிர் + படாம்.]

மயிர்ப்பாடு *mayir-p-pāḍu,* பெ.(n.) மயிர் செறிந்து தோன்றுகை (சீவக.1661, உரை); hairiness, dense growth of hair.

[மயிர் + பாடு.]

மயிர்ப்பாலம் *mayir-p-pālam,* பெ.(n.) நினைவில் தோன்றும் ஒரு காட்சி; an imaginary line forming an illusion described in yogo philosophy in Tamil (சா.அக.).

[மயிர் + பாலம்.]

மயிர்ப்பாம்பு *mayir-p-pāmbu,* பெ.(n.) மயிர்ப்பிளவு பார்க்க; see *mayir-p-piḷavu.*

மயிர்ப்பிளவு[1] *mayir-p-piḷavu,* பெ(n.) மயிரின் நுனியிலுண்டாகும் பிளவு; splitting of the hair.

[மயிர் + பிளவு.]

மயிர்ப்பிளவு[2] *mayir-p-piḷavu,* பெ(n.) கட்டடங்களின் காரைப் பூச்சில் ஏற்படும் மெல்லிய பிளவு; hair crack.

[மயிர் + பிளவு.]

மயிர்ப்பிளவை[1] *mayir-p-piḷavai,* பெ.(n.) ஒரு பரு; a carbuncle, a scurf on the hair.

[மயிர் + பிளவை.]

மயிர்ப்பிளவை[2] *mayir-p-piḷavai,* பெ.(n.) தலைப்பொடுகு (வின்.); scurf, dandruff.

[மயிர் + பிளவை.]

மயிர்ப்புழு *mayir-p-puḻu,* பெ.(n.) கம்பளிப் பூச்சி; cater-pillar. *"மயிர்ப் புழுவிலிருந்து வண்ணத்துப்பூச்சி பரிணமித் தாலென்ன" (ஈச்சுரநிச்சயம்).*

[மயிர் + புழு.]

மயிர்ப்புழுவெட்டு *mayir-p-puḻuveṭṭu,* பெ.(n.) கண்ணோய் வகை; an eye disease.

[மயிர்ப்புழு + வெட்டு.]

மயிர்ப்பொத்தி *mayir-p-potti,* பெ.(n.) மயிரொழுங்கு (யாழ்.அக.); line of hair-growth.

[மயிர் + பொத்தி.]

மயிர்ப்போக்கு *mayir-p-pōkku,* பெ.(n.) முடியுதிர்தல்; falling of hair.

[மயிர் + போக்கு.]

மயிர்பிடித்துக்கொள்(ளு)-தல் *mayir-piḍittu-k-koḷ-,* 16 செ.கு.வி.(v.i.) சண்டை போடுதல்; to quarrel, as holding each other's tuft. *அவ்விருவரும் மயிர் பிடித்துக் கொண்டார்கள் (பே.வ.).*

[மயிர் + பிடித்துக்கொள்-.]

மயிர்பிடுங்கி *mayir-piḍuṅgi,* பெ.(n.) சிமிட்டா; tweezers.

[மயிர் + பிடுங்கி.]

மயிர்பொடி-த்தல் *mayir-poḍi-,*4 செ.கு.வி. (v.i.) மயிர்க்கூச்செறிதல்; to bristle, as the hairs of the body, to horripillate. *"உடம்பெலா மயிர் பொடிப்ப" (சீகாளத்.பு. கண்ணப்ப. 148).*

[மயிர் + பொடி-.]

மயிர்மாட்டல் *mayir-māṭṭal,* பெ.(n.) மகளிர் காதணியிலிருந்து தலை மயிரில் மாட்டும் ஓரணி (இ.வ.); an ornament worn by women connecting the ear ornament with the tresses.

[மயிர் + மாட்டல்.]

மயிர்மாட்டி *mayir-māṭṭi,* பெ.(n.) மயிர் மாட்டல் (இ.வ.) பார்க்க; see *mayir-māṭṭal.*

[மயிர் + மாட்டி.]

மயிர்மாணிக்கம் *mayir-māṇikkam,* பெ.(n.) 1. அரிவாண்முனைப் பூண்டு (பதார்த்த.301); sickle-leaf. 2. பூடு வகை (m.m.67.); common balah. 3. பூடுவகை (A);serrate obcordate -leaved morning mallow. 4. மரவகை (L.); common snake - wood buck - thorn. 5. கொடி வகை (m.m.362); cypressvine. 6. ஆமணத்தி (கோரோசனை) (சங்.அக.); bezoar, concretion in the stomach of cows. 7. பற்படகம் (சங்.அக.); fever-plant.

[மயிர் + மாணிக்கம்.]

மயிர்முகிழ்-த்தல் *mayir-mugiḻ-,* 4 செ.கு.வி. (v.i.) மயிர்பொடி-த்தல் பார்க்க; see *mayir-poḍi-. "கான்விலங்கு மயிர் முகிழ்த்து வந்தணைய" (பெரியபு. ஆனாய. 30).*

[மயிர் + முகிழ்-த்தல்.]

மயிர்முடி *mayir-muḍi,* பெ.(n.) முடிச்சு விழுந்த மயிர் (சூடா.); knot of hair.

[மயிர் + முடி.]

மயிர்முள் *mayir-muḷ,* பெ.(n.) முள்ளம் பன்றியின் மயிர்; bristle of porcupine. *"சூழலுட் சூழ்மயிர் முள்ளுடை..... யேனம்" (யசோதர.3, 16).*

[மயிர் + முள்.]

மயிர்முளைச்சான்பூண்டு *mayir-muḷaiccāṉ -pūṇḍu,* பெ.(n.) ஓர் வகை இனிப்புக் கொடி; a variety of sweet creeper having bristles.

மயிர்முனை *mayir-muṉai,* பெ.(n.) மயிர்க் கிடை பார்க்க; see *mayir-k-kiḍai.*

[மயிர் + முனை.]

மயிர்வளர்க்குநீர் *mayir-vaḷarkku-nīr,* பெ. (n.) முடியைக் கழுவுகை; hair wash (சா.அக.).

மயிர்வாங்கி *mayir-vāṅgi,* பெ.(n.) சிமிட்டா; tweezers.

[மயிர் + வாங்கி.]

மயிர்வாரி *mayir-vāri,* பெ.(n.) சீப்பு (பிங்.); comb.

[மயிர் + வாரி.]



மயிர்வினை *mayir-viṉai,* பெ.(n.) 1. மழிப்பு; shaving, hair-dressing. *"சடையுமாற்றி மயிர் வினைமுற்றி" (கம்பரா.திருமுடி.1).* 2. மயிர்களைதல்; ceremony of shaving a child for the first time. *"மயிர்வினை செய்முன்" (கூர்மபு. சூதகா.6).* 3. கத்திரிக் கோல் (அக.நி.); scissors. 4. மழிப்புக் கத்தி (அக.நி.); razor. 5. மயிர்வினைஞன் பார்க்க (அக.நி.); see *mayir-viṉaiñaṉ.*

[மயிர் + வினை.]

மயிர்வினைஞன் *mayir-viṉaiñaṉ,* பெ.(n.) முடிதிருத்தாளன் (பிங்.); barber.

[மயிர் + வினைஞன்.]

மயிர்வெடிப்பு *mayir-veḍippu,* பெ.(n.) மயிர்ப்பிளவு[1] பார்க்க; see *mayir-p-piḷavu.*

[மயிர் + வெடிப்பு.]

மயிரகம் *mayir-agam,* பெ.(n.) 1. மயிர்ப்படம் (சூடா.) பார்க்க; see *mayir-p-paḍam.* 2. நாயுருவி (சங்.அக.); a plant.

மயிரங்காய் *mayiraṅgāy,* பெ.(n.) 1. மரி மாங்காய் பார்க்க; see *mari-māṅgāy.* 2. சிவப்பு காட்டு மாங்காய்; wild mango (சா.அக.).

மயிராகமம் *mayirāgamam,* பெ.(n.) ஊமத்தங்காய் (சங்.அக.); fruit of thorn-apple.

மயிரிடை *mayir-iḍai,* பெ.(n.) மயிரளவு; hair's breath.

[மயிர் + இடை.]

மயிரிழவு *mayiriḻavu,* பெ.(n.) இழவு குறியாக மயிர் நீக்குகை (வின்.); shaving the hair completed, in token of mourning.

[மயிர் + இழவு.]

மயிருதிர்–தல் *mayir-udir-,* 2 செ.குன்றாவி. (v.t.) முடிகொட்டுதல்; to loss of hair, baldness.

[மயிர் + உதிர்–.]

மயிரெறி–தல் *mayir-eṟi,* 2 செ.கு.வி.(v.i.) மயிர்பொடி–த்தல் பார்க்க; see *mayir-poḍi-. "உடம்பு மயிரெறிந்திருந்தது" (ஈ.டு.6, 2, ப்ர, பக்.61).*

[மயிர் + எறி–.]

மயிரெறிகருவி *mayir-eṟi-karuvi,* பெ. (n.) மயிர்குறைகருவி பார்க்க; see *mayir-kuṟai-k-karuvi. "மயிரெறிகருவி..... மஞ்சிக னுறை தூங்க" (திருவானைக். அகிலா.38).*

[மயிரெறி + கருவி.]

மயிரை *mayirai,* பெ.(n.) 1. அயிரை, ஆரல் மீன்; brownish or greenish sand eel. 2. தக்கோலம்; cubeb.

மயிரொதுக்கு-தல் *mayir-otukku-,* 5 செ.கு.வி.(v.i.) 1. மயிரைக்கையாற் கூட்டி யொதுக்குதல்; to adjust and smooth the hair with the hand. 2. மயிரை யொதுக்கி மழிப்புச் செய்தல் (இ.வ.); to shave close to the tuft of hair. 3. முடியின் பக்கத்தில் சிறிது விட்டு வைத்து மழிப்புச் செய்தல் (இ.வ.); to shave leaving a margin along the tuft of hair.

[மயிர் + ஒதுக்கு-.]

மயிரொழுக்கு *mayir-oḻukku,* பெ.(n.) கொப்பூழிலிருந்து மேற்செல்லும் மயிர்; line of hair growing on the abdomen of a person from the navel upward. *"மயிரொழுக் கென வொன்றுண்டால்" (கம்பரா.நாடவிட்.41).*

[மயிர் + ஒழுக்கு.]

மயிரொழுங்கு *mayir-oḻuṅgu,* பெ.(n.) 1. மயிரொழுக்கு பார்க்க; see *mayir-oḻukku. "அவ்வயிறணி மயிரொழுங்கே" (நைடத. அன்னத்தைத்தூ.19).* 2. மயிர்க் குழற்சி, 1 (யாழ்.அக.) பார்க்க; see *mayir-k-kuḻaṟci.*

[மயிர் + ஒழுங்கு.]

மயிரோசம் *mayirōšam,* பெ.(n.) அரிதாரம் (சங்.அக.); red orpiment.

மயிரோசனை *mayirōšaṉai,* பெ.(n.) ஆமணத்தி (கோரோசனை) (வின்.); bezoar.

மயில் *mayil,* பெ.(n.) 1. பறவை வகை; peacock, peafowl. *"பயில்பூஞ் சோலை மயிலெழுந் தாலவும்" (புறநா.116).* 2. மயிற் கொன்றை, 1 பார்க்க; see *mayiṟ-koṉṟai.* 3. மயிலடிக் குருந்து (மலை.); false peacock's -foot tree. 4. மயூராசனம் பார்க்க; see *mayirāšaṉam. "மலைய வினங்கலங்க மலைய் மயிலகவ மலைமாசு கழியக் கதழுமருவி யிழியும்" (பரிபா.6:45), "மணியுங் கயிறு மயிலுங் குடாரியும்" (பரிபா.8:100).*

[மயி→(மை) →மயில். கரு (நீல) நிறத் தோகையுடைய பறவை.]



மயில்கசப்பு *mayil-kašappu,* பெ.(n.) மயில் பித்து; bile of peacock (சா.அக.).

மயில்கண்டம் *mayil-kaṇḍam,* பெ.(n.) மயிலின் கழுத்து; neck of peacock.

[மயில் + கண்டம். கண்டு →கண்டம்.]

மயில்கழுத்துவண்ணம் *mayil-kaḻuttu-vaṇṇam,* பெ.(n.) மயில்கழுத்துநிறம் பார்க்க; see *mayil-kaḻuttu-niṟam*(சா. அக.).

[மயில்கழுத்து + வண்ணம்.]

மயில்கழுத்துநிறம் *mayil-kaḻuttu-niṟam,* பெ.(n.) கருப்பும் சிவப்பும் கலந்த ஊதா நிறம்; the colour of the peacock's neck (சா.அக.).

[மயில்கழுத்து + நிறம்.]

மயில்

ஆண் மயில்

வெள்ளை மயில்

பெண் மயில்

மயில்துத்தம் *mayil-tuttam*, பெ.(n.) மயிற்றுத்தம் பார்க்க; see *mayirruttam*.

[மயில் + துத்தம்.]

மயில்தோகை *mayil-tōgai*, பெ.(n.) மயிற்றோகை பார்க்க; see *mayirrōgai*.

[மயில் + தோகை.]

மயில்நீலமாசி *mayil-nīla-māši*, பெ.(n.) நிலப்பனை; ground palm.

[மயில் + நீலமாசி.]

மயில்நெய் *mayil-ney*, பெ.(n.) மயிலின் கொழுப்பு; fat of peacock. *"இஃது கந்தகத்தைச் சிவக்கச் செய்யும்".*

[மயில் + நெய்.]

மயில்புடம் *mayil-puḍam*, பெ.(n.) ஒருவகை மருந்துப்புடம்; one of the methods of calcining medicine (சா.அக.).

[மயில் + புடம்.]

மயில்மீன் *mayil-mīn*, பெ.(n.) 1. ஒன்பது அடி நீளம் வளர்வதும் மங்கின நீல நிற முடையதுமான கடல் மீன் வகை; sailfish, bluish grey, attaining 9 ft. in length. 2. ஏமங்கோலா (m.m.672); peacock-fish (சா.அக.).

[மயில் + மீன்.]

மயில்முட்டைக்கற்பம் *mayil-muṭṭai-k-karpam*, பெ.(n.) நரை திரையற்று நெடுங்காலமிருக்கச் சாப்பிடும் ஒரு செய் மருந்து; a medicine prepared out of the egg of peacock for rejuvenation.

[மயில்முட்டை + கற்பம்.]

மயில்முனிவன் *mayil-munivan*, பெ.(n.) அகத்தி மரம் (சங்.அக.); West India pea-tree.

மயில்வாகனன் *mayil-vāganan*, பெ.(n.) (மயில் ஏறி ஊர்பவன்) முருகக் கடவுள் (பிங்.); *Murugan*, as riding a peacock.

[மயில் + வாகனன்.]

Skt. வாகனம் > த. ஊர்தி.

மயில்விசிறி *mayil-viširi*, பெ.(n.) மயிற்றோகையால் அமைந்த ஆலவட்டம்; fan of peacock's feathers.

[மயில் + விசிறி.]



மயில்விரோதி *mayil-virōdi*, பெ.(n.) மயிற்பகை பார்க்க; see *mayir-pagai*

[மயில் + விரோதி.]

Skt. விரோதி > த. பகை.

மயில்உப்பு *mayil-uppu*, பெ.(n.) வெண்ணிறம் குறைந்த மங்கலான உப்பு; haze.

[மயில் + உப்பு.]

மயிலடி[1] *mayil-aḍi,* பெ.(n.) 1. காற்பீலி (வின்.); toering. 2. ஐவண்ணவணியுள் காலின் நடுவிரலணி (யாழ்.அக.); ring worn on the middle toe, by women, one of *aivaṇṇam,* q.v.

[மயில் + அடி.]

மயிலடி[2] *mayil-aḍi,* பெ.(n.) எருமை (சங்.அக.); buffalo.

[மயில் + அடி.]

மயிலடி[3] *mayil-aḍi,* பெ.(n.) 1. காட்டு நொச்சி (L.); tall chaste - tree. 2. மரவகை (L.); downy peacock's foot tree.

மயிலடிக்குருந்து *mayil-aḍi-k-kurundu,* பெ.(n.) ஒரு வகைச் சிறுமரம் (இலத்.); false peacock's foot - tree s.tr.

[மயிலடி + குருந்து.]

மயிலடிநொச்சி *mayil-aḍi-nocci,* பெ.(n.) காட்டு நொச்சி (L.); tall chaste - tree.

[மயிலடி + நொச்சி.]

மயிலம்[1] *mayilam,* பெ.(n.) 1. மயிலிறகு (யாழ்.அக.); peacock's feather. 2. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஒரு முருகன் கோயில் தளம்; a shrine sacred to *Murugan* in the *Villuppuram* District.

[மயி →மயில் →மயிலம்.]

மயிலம்[2] *mayilam,* பெ.(n.) 1. குப்பைமேனி (மலை.); indian acalypha. 2. பருத்தி வகை (G.Tn.D.i, 1623); a kind of coarse cotton.

மயிலாடுங்குருந்து *mayilāḍuṅ-kurundu,* பெ.(n.) மயிலடிக்குருந்து பார்க்க; see *mayilaḍi-kurundu.*

மயிலாடுதுறை *mayilāḍu-tuṟai,* பெ.(n.) நாகை மாவட்டத்தில் உள்ள காவிரி யாற்று வளம் நிறைந்த ஊர்; a town on the banks of *Cauvery* in *Nagapattinam* Dt. *"வாவிசூழ் திரு மயிலாடுதுறை" (பெரியபு. 34:437).*

[மயிலாடு + துறை.]

மயிலாத்தி *mayilātti,* பெ.(n.) வெள்ளைச் சாரணை; a prostate plant.

மயிலாப்பூர் *mayilāppūr,* பெ.(n.) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராற் பாடப்பெற்றதும், வாயிலார் நாயனார் பிறந்ததும், திருவள்ளுவர் வாழ்ந்த இடமாகக் கருதப்படுவதும், தோமையார் கிறித்துவ மதப் பரப்புதல் செய்த இடமாகக் கருதப்படுவதும், சென்னையின் பகுதியுமாகிய ஒரு ஊர்; Mylapore, a suburb of Chennai containing a *Śivaṉ* shirne sung by *St. Campantar,* reputed to be the place, where *St. Vāyilār* was born and *St. Tiruvaḷḷuvar* lived; also reputed to be the principal scene of the labours of St.Thomas.

மயில் + ஆர்ப்பு + ஊர் – மயிலார்ப்பூர் – மயிலாப்பூர். மயில்கள் ஆர்த்ததாக வழங்கும் செவிவழிச் செய்திகளால் இவ்வூர் இப்பெயர் பெற்றது.

மயிலாப்பூர்வெட்டு *mayilāppūr-veṭṭu,* பெ.(n.) நாணய வகை (பணவிடு.141); an ancient coin.

[மயிலாப்பூர் + வெட்டு.]

மயிலாபுரி *mayilāpuri*, பெ.(n.) மயிலாப்பூர் பார்க்க (பெரியபு. திருக்குறிப். 40); see *mayilāppūr*.

மயிலார் *mayilār*, பெ.(n.) 1. கன்னிப் பெண்கள் நோற்கும் சடங்கு வகை; ceremonial fast observed by maidens with a view to secure suitable husbands. 2. பொங்கல் பண்டிகையின் பின்பு வண்ணார் வணங்கும் கடவுள்; a deity worshipped by washerman after the *pongal* festival.

மயிலாளி *mayilāḷi*, பெ.(n.) (மயிலை ஏறி யாள்வோன்) முருகக் கடவுள் (திவா.); *Murugaṉ*, as riding a peacock.

[மயி → மயில் = கரு (நீல) நிறத் தோகையை யுடைய பறவை.. மயில் + ஆளி. ஒ.நோ. முதல் + ஆளி – முதலாளி.]

மயிலி *mayili*, பெ.(n.) மயில் போன்ற பெண்; woman, as resembling a peafowl. *"கானமலைக் குறவஞ்சிகள் மயிலி" (குற்றா. குற.76, 2).*

[மயில் →மயிலி.]

மயிலிகம் *mayiligam*, பெ.(n.) மருளூமத்தை பார்க்க (சங்.அக.); see *maruḷūmattai*.

மயிலியம்[1] *mayiliyam*, பெ.(n.) செம்பஞ்சு (மலை.); brazil cotton.

மயிலியம்[2] *mayiliyam*, பெ.(n.) 1. செம்பருத்தி; red cotton plant. 2. இலாமிச்சை; root of andropogon muricatus. 3. சோதிப்பூடு பார்க்க; see *śōti-p-pūḍu*.

மயிலியல் *mayiliyal*, பெ.(n.) மயில் போலுஞ் சாயலுள்ள பெண்; woman having the grace of a peafowl.

[மயில் + இயல்.]

மயிலிறகு *mayil-iṟagu*, பெ.(n.) மயிற்றோகை இறகு; peacock feather.

[மயில் + இறகு.]

மயிலுச்சிட்டம் *mayilu-c-ciṭṭam*, பெ.(n.) பாம்பு; snake (சா.அக.).

மயிலுள்ளான் *mayil-uḷḷāṉ*, பெ.(n.) சிவந்த மூக்குள்ள உள்ளான் வகை (m.m.611); painted snipe; *Rhynchaea bengalensis*.

[மயில் + உள்ளான்.]



மயிலூர்தி *mayil-ūrdi*, பெ.(n.) மயிலேறும் பெருமாள், 1 பார்க்க (உரி.நி.); see *mayil-ēṟum-perumāḷ*.

[மயில் + ஊர்தி.]

மயிலூர்தியன் *mayil-ūrdiyaṉ*, பெ.(n.) மயிலேறும்பெருமாள், 1 பார்க்க (உரி.நி.); see *mayil-ēṟum-perumāḷ*.

[மயில் + ஊர்தி.]

மயிலெண்ணெய் *mayil-eṇṇey*, பெ.(n.) மயிலின் கொழுப்பிலிருந்து எடுக்கும் மருந்து நெய் வகை (வின்.); medicinal oil from the fat of pea fowl.

[மயில் + நெய்→எண்ணெய்.]

மயிலெள் *mayil-eḷ,* பெ.(n.) ஒரு வகை எள் (சங்.அக.); a species of sesame.

[மயில் + எள். மயி →(மை)→மயில் = கருமை.]

மயிலேபம் *mayilēpam,* பெ.(n.) தக்கோலம் (சங்அங்.); cubeb.

மயிலேறும்பெருமாள் *mayil-ēṟum-perumāḷ,* பெ.(n.) 1. (மயில் மீது ஏறிச் செல்லும்) முருகக் கடவுள்; Murugan, as riding a peacock. 2. மயிலேறும்பெருமாள் பிள்ளை பார்க்க; see *mayil-ēṟum-perumāḷ-piḷḷai.* *"மயிலேறும் பெருமாண் மகிபதி" (இலக்.கொத்.பாயி.).*

[மயிலேறும் + பெருமாள்.]

மயிலேறும்பெருமாள்பிள்ளை *mayil-ēṟum-perumāḷ-piḷḷai,* பெ.(n.) சுவாமிநாத தேசிகரின் ஆசிரியரும் கல்லாடத்தின் முதன் முப்பத்தேழு பாடல்களுக்கு உரையிட்ட வருமான புலவர்; the teacher of *Šuvāminādā-tēšigar* and commentator of the first 37 stanzas of *Kallāḍam* 17th C.

மயிலை[1] *mayilai,* பெ.(n.) 1. அழுக்கு (வின்.); foulness, dirt. 2. வெண்மை கலந்த கருநிறம்; ash colour, grey, mixed colour of white and black, as of cattle. மயிலைக் காளை.

[முள் →மள்→மண்→மணி = கரியது, நீலக்கல். மணிவண்ணன், மணிமிடற்றோன் முதலிய பெயர்களை நோக்குக. மள்→மரு→மறு = உடம்பிலுள்ள கரிய புள்ளி. மள்→மல்→மலம் = அழுக்கு. மள்→மல்→மயல். மயல் →மயலை → மயிலை (மு.தா.182).]

மயிலை[2] *mayilai,* பெ.(n.) சென்னை மாநகரத்தினுள் அமைந்துள்ள கோயில் நகரம்; a temple town inside Chennai. *"ஊர்திரை வேலையுலாவும் உயர் மயிலை" (சம்பந்தர் தேவாரம்). மயிலை திருவல்லிக்கேணிக் கண்டேனே (திவ். பெரியதி.2, 3, 2).*

மறுவ. மயிலாப்பூர், மயிலார்ப்பூர்.

மயில் மிகுதியாக இப்பகுதியில் இருந்து ஆர்ப்பு செய்ததால் மயிலார்ப்பூர், மயிலாப்பூர், மயிலை எனப் பெயர்கள் பெற்றிருக்கும், "வடிவுடை மங்கையும் தாமுமெல்லாம் வருவோரை எய்திக் கண்டோம் மயிலாப்புள்ளே", "மங்குல் மதி தவழும் மாடவீதி மயிலாப்பிலுள்ளார்" என்பன தேவாரக் குறிப்புகள்.

மயிலை[3] *mayilai,* பெ.(n.) 1. மீன் (பிங்.); fish. *"மயிலை தீஞ்சுவை யுப்பிற் சிவணாதாங்கு" (ஞானா.37, 11).* 2. மீன ஓரை (பிங்.); pisces of the zodiac (சா.அக.).

மயிலை[4] *mayilai,* பெ.(n.) 1. இருவாட்சி (சிலப்.5, 181); tuscan jasmine. 2. வெட்சி (தைலவ.தைல.); scarlet ixora. 3. காட்டு நொச்சி (L.); tall chaste tree. 4. மரவகை (L.); peacock's - foot tree.

மயிலைச்சென்னை *mayilai-c-cennai,* பெ.(n.) செந்தினை; red millet (சா.அக.).

மயிலைச்சேபிகம் *mayilai-c-cēbigam,* பெ.(n.) கமலாப் பழம், கிச்சிலி; orange citrus variety (சா.அக.).

மயிலைநந்தி *mayilai-nandi,* பெ.(n.) மருதோன்றி (மலை.); henna.

மயிலைநாதர் *mayilai-nādar,* பெ.(n.) நன்னூலுரைக்காரருள் ஒருவரான சைன ஆசிரியர்; a jaina commentator on *nannūl.*

மயிலைநாதி *mayilai-nādi,* பெ.(n.) நாய்த் துளசி; a plant.

மயிலைப்பச்சை *mayilai-p-paccai,* பெ.(n.) கருமை கலந்த பச்சை (வின்.); green mingled with black.

[மய் →மயில் = கருமை. மயிலை + பச்சை.]

மயிலைப்பணம் *mayilai-p-paṇam,* பெ.(n.) எண்பது காசு மதிப்புள்ள நாணயம் (Rd.m.74); mailai = 80 kācu.

மயிலைபாய்–தல் *mayilai-pāy-,* 2 செ.கு.வி. (v.i.) கண்கூடுகளின் அடிப்புறத்து மயிலை நிறம் படர்ந்திருத்தல்; to be of a greened grey colour in the tower eye-lid.

[மயிலை + பாய்–.]

மயிற்கண் *mayiṟ-kaṇ,* பெ.(n.) மயிற் றோகையின் கண்; eye of peacock's tail.

[மயில் + கண்.]

மயிற்கண்ணுருமால் *mayiṟ-kaṇṇurumāl,* பெ.(n.) மயிற்கண்ணுரு அமைந்த ஒருவகைத் தலைப்பாகத் துணி; a kerchief for the head, having designs like the eyes of peacock's tail.

[மயிற்கள் + உருமால்.]

மயிற்கண்தாட்டுப்பத்திரி *mayiṟ-kaṇ-tāṭṭu--pattiri,* பெ.(n.) மகளிர் சீலை வகை; a kind of women's saree.

[மயிற்கண் + தாட்டுப்பத்திரி.]

மயிற்கண்வலை *mayiṟ-kaṇ-valai,* பெ.(n.) மீன் பிடிக்கும் வலை வகை (இ.வ.); a kind of fishing net.

[மயிற்கண் + வலை.]

மயிற்கழுத்து *mayiṟ-kaḻuttu,* பெ.(n.) மயிலின் கழுத்து உருவும் வண்ணமுமமைந்த மாலை வகை; a garland or necklace, perhaps in the form and colour of peacock's neck. *"மயிற்கழுத்து மனவுமணி வடமும் பூண்டு" (பெரியபு. கண்ணப்.47).*

[மயில் + கழுத்து.]

மயிற்கழுத்துச்சீலை *mayiṟ-kaḻuttu-c-cīlai,* பெ.(n.) மகளிர் சீலை வகை (இ.வ.); a kind of saree.

[மயிற்கழுத்து + சீலை. சீரை →சீலை→ சேலை.]

மயிற்கூத்து *mayiṟ-kūttu,* பெ.(n.) 1. ஒரு காலை ஊன்றி மற்றொரு காலைத் தூக்கி யாடுங் கூத்து வகை; a dance on one leg. 2. ஒன்றை நாட்டும் வழி மற்றொன்று விட்டுப் போவதைக் காட்டும் ஒருவகை முறைமை; *nyāyam* of peacock's dance, which illustrates the ignoring of one principle in the attempt to establish another (சிவசம.பக்.40).

[மயில் + கூத்து.]

மயிற்கொடி *mayiṟ-koḍi,* பெ.(n.) 1. கொண்டையங் கோட்டை மறவர் வகையைச் சார்ந்த பெண்டிர் திருமணத்திற் கட்டுந் தாலி (G.Tn. D.I, 136); a kind of marriage -badge worn by *Koṇḍaiyāṅ-kōṭṭai-maṟava* women. 2. முருகக் கடவுட்குரிய மயிலெழுதிய கொடி; flag of Lord Murugan, having the ensign

of a peacock. *"நீலமணி போலும் நிறத்தை யுடைய மயிற்கொடியை" (புறநா.56, உரை).*

[மயில் + கொடி,]

மயிற்கொண்டை *mayiṟ-koṇḍai,* பெ.(n.) செடிவகை (m.m.361); Indian maiden hair.

[மயில் + கொண்டை.]

மயிற்கொண்டைப்புல் *mayiṟ-koṇḍai-p-pul,* பெ.(n.) புல்வகை (m.m.916); trail grass.

[மயிற்கொண்டை + புல்.]

மயிற்கொன்றை[1] *mayiṟ-koṉṟai,* பெ.(n.) ஒரு பூமரம்; a flowering tree.

[மயிற் + கொன்றை.]

மயிற்கொன்றை[2] *mayiṟ-koṉṟai,* பெ.(n.) 1. செடிவகை; peacock'screst. 2. வாத நாராயண மரம்; flamboyant.

[மயிற் + கொன்றை.]

மயிற்சிக்கி *mayiṟ-cikki,* பெ.(n.) மயிற்சிகை, 2 பார்க்க; see *mayiṟ-cigai.*

மயிற்சிகி *mayiṟ-šigi,* பெ.(n.) மயிற்சிகை பார்க்க (இ.வ.); see *mayiṟ-šigai.*

[மயிற்சிகை→மயிற்சிகி.]

மயிற்சிகை *mayiṟ-šigai,* பெ.(n.) 1. மயிலின் கொண்டை (பிங்.); the crest of a peacock. 2. ஒரு வகைக் கொடி; peacock fern, a fern.

*[மயில் + **Skt.** சிகை.]*

மயிற்சூடு *mayiṟ-šūḍu,* பெ.(n.) மயிற் கொண்டை; peacock's crest.

[மயில் + சூடு.]

மயிற்பகை *mayiṟ-pagai,* பெ.(n.) பச்சோந்திப் பறவை; chameleon.

[மயில் + பகை.]

மயிற்பட்டை *mayiṟ-paṭṭai,* பெ.(n.) செங் கத்தாரிப்பட்டை பார்க்க; see *ceṅkattāri-p-paṭṭai*(சா.அக.).

மயிற்பிச்சம் *mayiṟ-piccam,* பெ.(n.) 1. மயிற் றோகை விசிறி (வின்.); ornamental fern of peacock feathers. 2. மயிலிறகாற் செய்த குடை (யாழ்.அக.); umbrella, made of peacock feathers.

[மயில் + பிச்சம்.]

மயிற்பீலி *mayiṟ-pīli,* பெ.(n.) 1. மயிலிறகு; peacock feathers. *"அணிமயிற் பீலி சூட்டி" (புறநா.264).* 2. மயிற்பிச்சம், 1 (வின்.) பார்க்க; see *mayiṟ-piccam.*

மயிற்பீலிக்குடை *mayiṟ-pīli-k-kuḍai,* பெ.(n.) மயிலிறகாற் செய்த குடை (யாழ்.அக.); umbrella, made of peacock feathers.

[மயிற்பீலி + குடை.]

மயிற்றுத்தம் *mayiṟṟuttam,* பெ.(n.) மருந்து வகை (சங்.அக.); sulphate of copper, blue vitriol, cupri sulphur.

[மயில் + துத்தம்.]

மயிற்றோகை *mayiṟṟōgai,* பெ.(n.) வாலாக நீண்ட மயிலினிறகு (பிங்.); peacock's tail.

[மயில் + தோகை.]

மயிலாட்டம்

மயின்முனிவன் *mayiṉ-muṉivaṉ,* பெ. (n.) மயில்முனிவன் பார்க்க (மூ.அ.); see *mayil-muṉivaṉ.*

[மயில்முனிவன் → மயின்முனிவன். ல>ன - போலி.]

மயினா *mayiṉā,* பெ.(n.) மைனாப் பறவை; myna.



மயுரம் *mayuram,* பெ.(n.) ஊமத்தை (பரி. அக.); thorn apple.

மர்க்கடப்பிப்பிலி *markkaḍa-p-pippili,* பெ.(n.) நாயுருவி; indian bur (சா.அக.).

மர்க்கடமுகம் *markkaḍa-mukam,* பெ.(n.) குரங்கு முகம்; monkey face (சா.அக.).

மர்க்கடிப்புனுகு *markkaḍi-p-puṉugu,* பெ. (n.) பூனைப் புனுகு; civet cat (சா.அக.).

மர்க்கவிகம் *maṟkkavigam,* பெ.(n.) மர்க்கடப்பிப்பிலி பார்க்க; see *markkaḍa-p-pippili* (சா.அக.).

மர-த்தல் *mara-,* 11 செ.கு.வி.(v.i.) 1. கால் முதலியன உணர்ச்சியறுதல்; to be numb or insensible, as legs. *கால் மரத்துப் போயிற்று (உ.வ.).* 2. விறைத்தல் (யாழ்.அக.); to be stiffended. 3. வியத்தல் (யாழ்.அக.); to be wonder - struck.

மரக்கண் *marakkaṇ,* பெ.(n.) 1. மரக்கணு பார்க்க; see *marakkaṇu. "மரக்கண்ணோ மண்ணாள்வார் கண்ணென்று" (முத்தொள். 90).* 2. புலனற்ற கண்; eye without the power of vision. *"மரக்கணேனையும் வந்திடப் பணியாய்" (திருவாச.23, 9).* 3. மரப்பாவையின் கண்; eyes of wooden puppet.

[மரம் + கண்.]

மரக்கணு *marakkaṇu,* பெ.(n.) மரத்திற் கிளையுண்டாகும் முடிச்சு (வின்.); knot in a tree.

[மரம் + கணு.]

மரக்கரி *marakkari,* பெ.(n.) அடுப்புக்குப் பயன்படுங்கரி (இக்.வ.); charcoal.

[மயிர் + கரி.]

மரக்கலப்பாய் *marakkala-p-pāy,* பெ.(n.) கப்பற் பாய் (திவா.); sail of a ship.

[மரக்கலம் + பாய்.]

மரக்கலம் *marakkalam,* பெ.(n.) கப்பல்; ship, vessel, boat. *"மரக்கலம் பிளக்குங் கடலிடத்து" (பு.வெ.8, 31, உரை).*

[மரம் + கலம்.]

மரக்கலன் *marakkalaṉ,* பெ.(n.) மீகாமன் (பிங்.); sailor, master of a ship.

மரக்களங்காய் *mara-k-kaḷaṅgāy,* பெ.(n.) சீனத்துக் காய்; a fruit native of China (சா.அக.).

மரக்களி *marakkaḷi,* பெ.(n.) களிப்பாக்கு; a preparation of areca nut (சா.அக.).

மரக்கற்றாழை[1] *mara-k-karrālai,* பெ.(n.) கருங்கற்றாழை; black variety of aloe (சா.அக.).

[மரம் + கற்றாழை.]

மரக்கற்றாழை[2] *mara-k-karrālai,* பெ.(n.) ஆனைக் கற்றாழை (சங்.அக.); american aloe.

[மரம் + கற்றாழை.]



மரக்கறி *mara-k-kari,* பெ.(n.) 1. காய்கறி; vegetable for curry. 2. சமைத்த காய்கறி யுணவு; vegetable curry. 3. புல்லுணா; vegetarian food.

[மரம் + கறி.]

மரக்கன்று *mara-k-kanru,* பெ.(n.) இளமரம் (பிங்.); young tree, sapling.

[மரம் + கன்று.]

மரக்கா *marakkā,* பெ.(n.) 1. பூஞ்சோலை (திவா.); flower garden, groves. *"இளமரக்கா முதலிய செய்தற்கும்" (குறள், 385, உரை).* 2. மரக்கால், 1, 2 பார்க்க; see *mara-k-kāl.*

[மரம் + கா.]

மரக்காயர் *marakkāyar,* பெ.(n.) 1. மரக்கல உடைமையாளர்; the owners of the boat. 2. தமிழ்த் துலுக்க வகையினர்; Tamil speaking musalman tribe, usually traders (E.T.V.I). 2. மரக்கல மோட்டுவோர்; boat men.

[மரக்கலராயர் → மரக்காயர்.]

மரக்கலத்துக்கு உரிமையுள்ளவர்கள். மரக்கலராயர்கள். இது மரக்காயர் என மாறிற்று.

த. மரக்கலம் >அரபு. மரகாம்.

மரக்காரை *marakkārai,* பெ.(n.) மருக்காரை (பதார்த்த.758); emetic-nut.

[மருக்காரை →மரக்காரை.]

மரக்கால்[1] *marakkāl,* பெ.(n.) 1. முகத்தலளவைக் கருவி வகை (பிங்.); a grain measure, varying in different places = 8 padi = 1/12 kalam = 400 cu. in., as originally made of wood. *"அருள்மொழி தேவன் மரக்காலால் நிசதம் நெல்" (தெ.இ.க.III-பாகம் I-II பக்கம்–7).* 2. ஒரு மரக்கால் விரைப்பாடு (இ.வ.); superfical measure = 3362 sq.ft. as requiring a *marakkal* of seed to sow it. 3. ஆண்டு மழையின் அளவு (கணியம்); measure of rain for the year, determined by the ruling planet (Astrol.). *"ஒரு மரக்கால் மழை இவ்வாண்டு" (பஞ்.).* 4. மரத்தாற் செய்த பாதம்; wooden leg. 5. திருமாலின் கூத்து வகை (சூடா.); a dance of *Tirumāl.* 6. கூத்துப் பதினொன்றனுள் வஞ்சத்தால் வெல்லுதல் கருதிப் பாம்பு தேள் முதலியவாய் அவுணர் புகுதலை யுணர்ந்த துர்க்கை அவற்றை யுழக்கிக் களைதற்கு

மரத்தால் செய்த காலைக் கொண்டு ஆடிய ஆட்டம் (சிலப்.3:14, உரை); a dance of *Durgā* on stilts, slaying the Asuras who attacked her assuming the shapes of reptiles one of eleven *"kūttu"*. 7. உப்பளம் (பிங்.); saltpan. 8. ஒன்பதாம் நாண்மீன் (சூடா.) (ஆயில்யம்); 9th naksatra. 9. சோதி நாள் (பிங்.); 15th naksatra.

[மரம் + கால்.]

மரக்கால்[2] *marakkāl,* பெ.(n.) தவசங்களை அளக்கும் கருவி; a grain measurement instrument made of wood.

மரத்தால் செய்யப்பட்ட முகந்து அளத்தற் கருவி.



மரக்கால்துண்டு *marakkāl-tuṇḍu,* பெ.(n.) ஒருமுறை அளந்த தவசத்தைத் திருப்ப அளக்கும் போது ஏற்படும் குறைபாடு; deficiency of grain on re-measurement.

[மரக்கால் + துண்டு. துண்டு = குறை, குறைபாடு.]

மரக்கால்கூத்து *mara-k-kālkūttu,* பெ.(n.) கால்களில் மரத்தூண் வைத்துக் கட்டிக் கொண்டு, நடனம் ஆடுதல், பொய்க்கால் குதிரை ஆட்டம் (சி.பெ.அக.); dancing with wooden sticks tied to the legs, dummy horse play.

[மரக்கால் + கூத்து.]

மரக்கால்வைப்பு *markkāl-vaippu,* பெ.(n.) 1. களத்திலே ஆண்டு முதலில் அறுவடையான நெல்லைக் கூட்டியளவிடுகை; first gathering and measuring of the annual yield on the threshing - floor.

[மரக்கால் + வைப்பு.]

மரக்காலாடல் *marakkāl-āḍal,* பெ.(n.) மரக்கால், 6 பார்க்க; see *marakkāl*. *"காய்சின வெ... டுந்தொழில் பொறாஅள் ... மரக்காலாடலும்"* **(சிலப்.6:59).**

[மரக்கால் + ஆடல்.]

மரக்காவிகம் *mara-k-kāvigam,* பெ.(n.) பாற்சாம்பிராணி; white dammer (சா.அக.).

மரக்காழ் *mara-k-kāḻ,* பெ.(n.) மரவயிரம் (திவா.); innercore of a tree.

[மரம் + காழ்.]

மரக்காளான் *mara-k-kāḷāṉ,* பெ.(n.) மரத்தில் முளைக்கும் காளான் வகை (வின்.); a hard fungus growing on trees.

[மரம் + காளான்.]

மரக்காற்கூட்டு *markkār-kūṭṭu,* பெ.(n.) விளைவை மட்டும் அளந்து பிரித்து நுகரும் பொது நிலம்; land held in common and enjoyed by its joint-owners dividing the produce.

[மரக்கால் + கூட்டு.]

மரக்காற்கூத்து *marakkār-kūttu,* பெ.(n.) மரக்கால், 5, 6 பார்க்க; see *marakkāl.* *"மன்றின் மரக்காற் கூத்தாடினான் காணேனடீ" (திவ்.பெரியதி.11, 5, 6).*

[மரக்கால் + கூத்து.]

மரக்காற்பறை *marakkār-parai,* பெ(n.) மரக்கால் வடிவுள்ள பறை வகை; a cylinderical drum.

[மரக்கால் + பறை.]

மரக்கானாரை *marakkānārai,* பெ.(n.) நாரை வகை (சிலப்.10, 117, உரை); a kind of heron.

[மரக்கால் + நாரை.]



மரக்குரங்காடல் *marakkuraṅgāḍal,* பெ.(n.) மரத்திலேறியவர்கள் கீழிறங்கும் போது பிடிக்க முயலும் சிறுவர் விளையாட்டு; boy's game in which all the players get upon a tree except one who tries to catch them when they come down.

[மரம் + குரங்கு + ஆடல்.]

மரக்குரங்கு *marakkuraṅgu,* பெ.(n.) மரக்குரங்காடல் பார்க்க; see *marak-kuraṅkāḍal.*

[மரக்குரங்காடல் →மரக்குரங்கு.]

மரக்கெட்டு *mara-k-keṭṭu,* பெ.(n.) மரக் கணு (யாழ்.அக.); knot in a tree.

மரக்கொல்லர் *mara-k-kollar,* பெ.(n.) தச்சர்; carpenter, as cutting trees and doing timber work.

[மரம் + கொல்லர்.]

மரக்கோல் *mara-k-kōl,* பெ.(n.) 1. கூரில்லாத அம்பு; blunt arrow, wooden shaft of an arrow without the arrow - head. 2. தோணியைத் தள்ளும் கழி; boatman's pole.

[மரம் + கோல்.]

மரக்கோலா *mara-k-kōlā,* பெ.(n.) மீன் வகை; a kind of fish.

மரக்கோவை *mara-k-kōvai,* பெ.(n.) கப்பல்; boat, ship. *"முச்சியே மரக்கோணி முயற்சியாற் கைச்சிடாது கடல்செலுங் கல்லனும்" (சிவதரு.பாவ.81).*

மரகடி *marakaḍi,* பெ.(n.) ஒட்டை மரம்; a tree (சா.அக.).

மரங்கொத்தி வகை

புள்ளி மரங்கொத்தி

கருஞ்சிவப்பு மரங்கொத்தி



மஞ்சள் பிடரி மரங்கொத்தி

மஞ்சள் நெற்றி மரங்கொத்தி

மேற்கத்திய மரங்கொத்தி

பொன்முதுகு மரங்கொத்தி

கரும்புள்ளி மரங்கொத்தி



பெரிய மரங்கொத்தி

செதிள் வயிற்று மரங்கொத்தி

மரங்கொத்தி *maraṅkotti,* பெ.(n.) பறவை வகை; wood pecker. *"மீன் கொத்திப் புள்ளு மரங்கொத்திப் பட்சியும்" (குற்றா.குற.87, 3).*

[மரம் + கொத்தி.]



மரச்சக்கை *mara-c-cakkai,* பெ.(n.) மரத்திலிருந்து சீவப்பட்ட சிராய் (ஈடு.5, 10, 11, ஜீ); wooden chip.

[மரம் + சக்கை.]

மரச்சம்பங்கி *mara-c-campaṅgi,* பெ.(n.) ஒரு வகைச் சம்பங்கி; a tree with fragrant flowers.

மரச்சாட்டை *mara-c-cāṭṭai,* பெ.(n.) மரக்கோல்வகை (வின்.); ferule, little wooden pallet.

[மரம் + சட்டை.]

மரச்சாம்பல் *mara-c-cāmbal,* பெ.(n.) மரத்தைக் கொளுத்தி அதினின்று எடுக்கும் சாம்பல்; wood ashes (சா.அக.).

[மரம் + சாம்பல்.]

மரச்சிலைக்கல் *mara-c-cilai-k-kal,* பெ.(n.) கண்டகிச் சிலை (யாழ்.அக.), வழிப்படப்படும் கருங்கல்; a fossil ammonite.

[மரச்சிலை + கல்.]

மரச்சீனி *mara-c-cīṉi,* பெ.(n.) மரவள்ளி பார்க்க (C.E.M.); see *mara-vaḷḷi.*

மரச்சுண்டெலி *mara-c-cuṇḍeli,* பெ.(n.) மரத்திலிருக்கும் சுண்டெலி வகை (M.M. 830); tree - mouse.

[மரம் + சுண்டெலி.]

மரச்சுரைக்காய் *mara-c-curaikkāy,* பெ.(n.) ஒரு வகைச் சுரைக்காய்; a variety of bottle gourd.

[மரம் + சுரைக்காய்.]

மரச்செப்பு *mara-c-ceppu,* பெ.(n.) 1. பரணி (இ.வ.); small wooden casket. 2. மரவை (யாழ்.அக.) பார்க்க; see *maravai.*

[மரம் + செப்பு.]

மரச்செரிந்தம் *mara-c-cerindam,* பெ.(n.) 1. சோலை; a grove. 2. கள்; toddy (சா.அக.).

மரச்செவி *mara-c-cevi,* பெ.(n.) 1. மரப் பாவையின் செவி; the ear of wooden doll or image. 2. சற்றும் கேளாக் காது; completely deaf ear. *"ஓட்டை மரச்செவியர் கேளார்" (சீவக.1552).*

[மரம் + செவி.]

மரச்செறிவு¹ *mara-c-ceṟivu,* பெ.(n.) மரப் பொது; tree in common.

[மரம் + செறிவு.]

மரச்செறிவு² *mara-c-ceṟivu,* பெ.(n.) சோலை (பிங்.); dense grove.

[மரம் + செறிவு.]

மரச்சோற்றியரிசி *mara-c-cōṟṟi-y-arišі*, பெ.(n.) சவ்வரிசி; sago (சா.அக.).

[மரச்சோற்று + அரிசி.]

மரண் *maraṇ*, பெ.(n.) மரணம் பார்க்க; see *maraṇam*. "மரணாய மன்னுயிர்கட்கு" (திவ். இயற்.1, 60).

[மரணம்→மரண்.]

மரணஅடி *maraṇa-aḍi*, பெ.(n.) சாமாறு விழும் வலுத்த அடி; severe blow that causes death.

[மரணம் + அடி.]

மரணஆவணம் *maraṇa-āvaṇam*, பெ.(n.) தனக்குப்பின் தன் சொத்தின் உரிமையைக் குறித்து எழுதி வைக்கும் ஆவணம்; the last will and testament.

[மரணம் + ஆவணம்.]

மரணஏதுக்கள் *maraṇa-ēdukkaḷ*, பெ.(n.) இறப்பதற்கு முன் காணுங் குறிகள்;the foreborings of death (சா.அக.).

[மரணம் + ஏதுக்கள்.]

மரணக்கண்குறி *maraṇa-k-kaṇkuṟi*, பெ.(n.) இறக்குங் காலத்தில் கண்கள் கறுப்பாகவும் பளபளப்பு இன்மையாயும் மங்கலடைந்து, பார்வை கம்மலாகவும் தோன்றும் அடையாளங்கள்; the eye symptoms of death - the eyes lose the lustre and become dull, sight becomes dim or lost, no eye reflex.

[மரணம் + கண்குறி.]

மரணக்களை *maraṇa-k-kaḷai*, பெ.(n.) மரணக்குறி பார்க்க (இ.வ.); see *maraṇa-k-kuṟi*.

[மரணம் + களை.]

மரணக்குறி *maraṇa-k-kuṟi*, பெ.(n.) இறக்குந்தறுவாயில் உண்டாகும் அறிகுறி (யாழ்.அக.); sign of impending death.

[மரணம் + குறி.]

மரணக்குறிகாட்டு-தல் *maraṇa-k-kuṟi-kāṭṭu-*, 5 செ.குன்றாவி.(v.t.) இறக்குங் குறி காட்டல்; death boding.

[மரணக்குறி + காட்டு-,]

மரணக்கெடி *maraṇa-k-keḍi*, பெ.(n.) மரண அச்சம் (வின்.); dread of death.

[மரணம் + கெடி.]

மரணகண்டசாத்திரம் *maraṇa-kaṇḍa-cāttiram*, பெ.(n.) மரணகண்டி பார்க்க (இ.வ.); see *maraṇa-kaṇḍi*.

[மரணகண்டி →மரணகண்டசாத்திரம்.]

மரணகண்டி *maraṇa-kaṇḍi*, பெ.(n.) பிச்சை பாக்கம் மார்க்கலிங்கக்கணியர் (சோதிடர்) செய்ததும் மரணக்குறிகளைத் தெரிவிப்பதுமான ஒரு நூல் (யாழ்.அக.); a work dealing with signs of death by *Mārkkaliṅga-cōtiḍar* of *Piccaipākkam*.

[மரணம் + கண்டி.]

மரணகண்டிகை *maraṇa-kaṇḍigai*, பெ.(n.) 1. மரணகண்டிதம் (வின்.) பார்க்க; see *maraṇa-kaṇḍidam*. 2. மரணகண்டி (யாழ்.அக.) பார்க்க; see *maraṇa-kaṇḍi*.

மரணகண்டிதம் *maraṇa-kaṇḍidam*, பெ.(n.) மரணகால அறுதி (யாழ்.அக.); determination of the time of death.

மரணகாயம் *maraṇa-kāyam,* பெ.(n.) சாவை விளைவிக்குங் கொடுங்காயம் (இ.வ.); mortal wound.

[மரணம் + காயம்.]

மரணகாலம் *maraṇa-kālam,* பெ.(n.) சாகும் வேளை (யாழ்.அக.); time of death.

[மரணம் + காலம்.]

மரணங்கிட்டல் *maraṇaṅ-kiṭṭal,* பெ.(n.) சாவு நெருங்கல்; approaching death.

[மரணம் + கிட்டல்.]

மரணசனி *maraṇa-šaṉi,* பெ.(n.) மரணத்தைக் குறிப்பதும் வாழ்நாளுள் மூன்றுமுறை வருவதுமான ஏழரையாண்டுச் சனி; the *ēḻarai-y-āṇḍu-c-caṉi* affecting a person for the third time in his life, when it is believed to cause his death.

[மரணம் + Skt. சனி.]

மரணசாசனம் *maraṇa-šāšaṉam,* பெ.(n.) மரணஆவணம் பார்க்க; see *maraṇa-āvaṇam.*

[மரணம் + Skt. சாசனம்.]

மரணசாதனம் *maraṇa-cādaṉam,* பெ.(n.) மரணஆவணம் பார்க்க; see *maraṇa-āvaṇam.*

[மரணம் + Skt. சாதனம்.]

மரணசிட்சை *maraṇa-šiṭcai,* பெ.(n.) மரண தண்டனை பார்க்க; see *maraṇa-daṇḍaṉai.*

[மரணம் + Skt. சிட்சை.]

மரணசீவன் *maraṇa-šivaṉ,* பெ.(n.) இறக்கக் கூடிய வாழ்வு (வின்.); mortal existence.

[மரணம் + Skt. சீவன்.]

மரணதண்டனை *maraṇa-taṇḍaṉai,* பெ.(n.) கொலை முதலிய கடுங்குற்றம் புரிந்தவரின் உயிரைப் போக்குமாறு முறைமன்றம் வழங்கும் தண்டனை; sentence of death.

[மரணம் + தண்டனை.]

மரணதண்டனைக்குற்றம் *maraṇa-taṉ ḍaṉai-k-kuṟṟam,* பெ.(n.) மரண தண்டனை விதித்தற்குரிய பெருங்குற்றம் (mod.); offence punishable with death or transportation for life.

[மரணதண்டனை + குற்றம்.]

மரணப்படுக்கை *maraṇa-p-paḍukkai,* பெ.(n.) சா நெருங்குங்கட்டம், இறக்குந் தறுவாய்; death bed.

[மரணம் + படுக்கை.]

மரணபத்திரம் *maraṇa-pattiram,* பெ.(n.) மரணஆவணம் பார்க்க; see *maraṇa-āvaṇam.*

[மரணம் + Skt. பத்திரம்.]

மரணபயங்கரம் *maraṇa-payaṅgaram,* பெ.(n.) மரணக்கெடி (வின்.) பார்க்க; see *maraṇa-k-keḍi.*

[மரணம் + Skt. பயங்கரம்.]

மரணம் *maraṇam,* பெ.(n.) 1. சாவு; death, mortality. *"மரணமானால் வைகுந்தங் கொடுக்கும் பிரான்" (திவ்.திருவாய்.9, 10, 5).*

2. ஐவகைத் துன்பநிலைகளுள் மிகு மயக்கமும் அயர்ச்சியும் உண்டாகும் நிலை; sinking in a dead faint, one of *aivagai-t-tunba-nilai*, q.v.

L. mori.

[மடி → மரி. ஒ.நோ: கடி → கரி. மரி + அணம் (வ.வ.54) (வே.க.4:106).]

மரணயாகம் *marana-yāgam*, பெ.(n.) ஒருவனுடைய மரணத்தைக் குறித்துச் செய்யப்படும் வேள்வி (வின்.); a sacrificial ceremony for causing the death of a particular person.

[மரணம் + Skt. யாகம்.]

மரணயோகம் *marana-yōgam*, பெ.(n.) கெடுதியைக் குறிக்கும் அழிவு யோக வகை (பஞ்.); an inauspicious yōga indicating one's ruin or failure.

[மரணம் + Skt. யோகம்.]

மரணவாக்குமூலம் *marana-vākku-mūlam*, பெ.(n.) மரணம் நேர்வதாகக் கருதப்படுங் காலத்தில் கொடுக்கும் உறுதிமொழி (legal); declaration of a dying person, dying declaration.

[மரணம் + வாக்குமூலம்.]

மரணவேதனை *marana-vēdanai*, பெ.(n.) சாத்துன்பம்; death-throes, pangs of death. *"உறுகின்றயான் மரண வேதனைபோல வுற்றேன்" (சிலப்.19:5–6, உரை).*

[மரணம் + Skt. வேதனை.]

மரணசூசம் *marana-śūšam*, பெ.(n.) மரணாசௌசம் (யாழ்.அக.) பார்க்க; see *maranā-caucam.*

[மரணம் + Skt. சூசம்.]

மரணசௌசம் *maranā-caucam*, பெ.(n.) சாதீட்டு; ceremonial pollution observed on the death of one's relation.

[மரணம் + Skt. சௌசம்.]

மரணி–த்தல் *marani-*, 11 செ.கு.வி.(v.i.) இறத்தல் (யாழ்.அக.); to die.

[மரணம் → மரணி–,]

மரணிப்பு *maranippu*, பெ.(n.) மரணம், 1 (யாழ்.அக.) பார்க்க; see *maranam.*

[மரணம் → மரணி → மரணிப்பு.]

மரணை[1] *maranai*, பெ.(n.) சாவு (யாழ்.அக.); death.

[மரணம் → மரணை.]

மரணை[2] *maranai*, பெ.(n.) 1. நினைவு கூர்தல் (ஞாபகம்) (சங்.அக.); memory. 2. உணர்ச்சி (இ.வ.); sensation.

மரத்தச்சர் *mara-t-taccar*, பெ.(n.) தச்சர் (நாமதீப.154, உரை); carpenter.

மரத்தலையாயக்கட்டு *mara-t-talai-y-āya-k-kattu*, பெ.(n.) மரந்தலையாயக் கட்டு (வின்.) பார்க்க; see *marantalai-y-āya-k-kattu.*

[மரந்தலையாயக்கட்டு → மரத்தலையாயக் கட்டு.]

மரத்தார் *marattār*, பெ.(n.) பகுத்தறிவில்லாதார்; block-heads, wooden - headed persons. *"மரத்தாரிம் மாணாக் குடிப் பிறந்தார்" (நாலடி, 145).*

[மரம் → மரத்தார்.]

மரத்தாலிகட்டியடி-த்தல் *mara-t-tāli-kaṭṭi-y-aḍi-*, 4 செ.குன்றாவி.(v.t.) மரத்தாற் செய்த தாலியைக் கட்டிக் கொள்ளச் செய்து குடியானவனுடைய மனைவியின் கழுத்தில் இருக்கும் பொற்றாலியை வரிக்காக வாங்குதல் போன்று வலக்காரமாகத் தண்டல் செய்தல் (இ.வ.); to extort, as by compelling a ryot's wife to wear a wooden *tāli* and surrender her golden *tāli*.

[மரத்தாலி + கட்டியடி-,]

மரத்துப்பால் *marattu-p-pāl*, பெ.(n.) கள் (கொ.வ.); toddy, as the milk of the palm-tree.

[மரம் + அத்து + பால். அத்து = சாரியை.]

மரத்துப்போ-தல் *marattu-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) மர-, பார்க்க; see *mara-*,

மரத்துவவாழை *marattuva-vāḻai*, பெ.(n.) மருத்துவவாழை பார்க்க; see *maruttuva-vāḻai*.

[மருத்துவவாழை→மரத்துவவாழை (கொ.வ.)]

மரத்துவெள்ளை *marattu-veḷḷai*, பெ.(n.) வெள்ளைக் குங்கிலியம் (மூ.அ.); *konkani* resign i.tr. *Boswellia serrata glabra.*

மரத்தூள் *mara-t-tūḷ*, பெ. (n.) வாளினால் அறுக்கும்போது மரத்தினின்று கிட்டும் தூள்; a very fine saw dust used in surgical dressings.

[மரம் + தூள்.]

மரத்தெண்ணெய் *marattеṇṇai*, பெ.(n.) சந்தனக் கட்டையிலிருந்து எடுக்கப்படும் சந்தன நெய் போன்று ஒவ்வொரு மரக்கட்டையிலிருந்து எடுக்கப்படும் மரநெய்; wood oil as in sandal wood oil.

[மரம் + நெய்→எண்ணெய்.]

மரத்தைலம் *marattailam*, பெ.(n.) மரத்தெண்ணெய் பார்க்க; see *marattеṇṇai.*

[மரம் + Skt. தைலம்.]

மரத்தொட்டு *marattoṭṭu*, பெ.(n.) மரக்கிளைகளில் ஒட்டி வளரும் பூடு வகை, புல்லுருவி (இ.வ.); Parasite plant, honey - suckle mustletoe.

[மரம் + ஒட்டு.]

மரத்தோல் *mara-t-tōl*, பெ.(n.) 1. மரப்பட்டை; bark of a tree. 2. மரவுரி (பிங்.); bark - garment. 3. இலை; leaf of a tree.

[மரம் + தோல்.]

மரந்தம் *marandam*, பெ.(n.) பூந்தேன் (யாழ். அக.); honey in flower.

மரந்தலை *marandalai*, பெ.(n.) 1. ஊரிலுள்ள மரங்கள்; trees in a village. 2. பட்டனவும் படாது நிற்பனவுமான மரங்கள்; living and dead trees, a term in conveyancing. *மரந்தலை வகையரா உள்பட (உ.வ.).*

மரந்தலையாயக்கட்டு *maran-talai-y-āya-k-kaṭṭu*, பெ.(n.) ஊரிலுள்ள மரங்களின் விளக்கங் குறிக்கும் பட்டி; account showing the number of trees of various kinds in a village, whether liable to revenue or not.

[மரந்தலை + ஆயக்கட்டு.]

மரந்துளைச்சி *maran-tuḷaicci*, பெ.(n.) மரங்கொத்தி பார்க்க; see *maraṅ-kotti.*

[மரம் + துளைச்சி. மரத்தைத் துளைக்கும் பறவை. துளை→துளைச்சி.]

மரநா[1] *maranā*, பெ.(n.) உணர்ச்சியற்றுப் போன நாக்கு (யாழ்.அக.); stiff, insensate tongue.

[மரம் + நா. மரம் = மரத்துப் போகை, நா = நாக்கு.]

மரநா[2] *maranā*, பெ.(n.) மரத்தாலாகிய மணியின் நாக்கு (வின்.); wooden clapper of a bell.

[மரம் + நா. நா = நாக்கு.]

மரநாய் *maranāy*, பெ.(n.) மரத்தில் வாழும் நாய் போன்ற விலங்கு வகை; toddy - cat, policat, fitchew, *paradoxurus musanga.* *"மரநா யகப்பட்ட வைபவ மாச்சுது" (குற்றா.குற. 110, 4).*

ம. மரநாய்

[மரம் + நாய்.]

மரநாரத்தை *mara-nārattai*, பெ.(n.) நாரத்தை வகை; a kind of tree. *கொடி நாரத்தைக்கு எதிரானது.*

மரநோய் *mara-nōy*, பெ.(n.) புல்லுருவி (சங்.அக.); honey - suckle mistletoe.

[மரம் + நோய்.]

மரப்பட்டை *mara-p-paṭṭai*, பெ.(n.) மரத்தின் மேலுள்ள தோல் (வின்.); bark of a tree.

[மரம் + பட்டை.]

மரப்பட்டை வகை : பட்டை புளி வேம்பு முதலியவற்றின் பட்டை; சிறாம்பு தென்னை பனை முதலியவற்றின் பட்டை; மட்டை அல்லது தடை வாழையின் பட்டை (பட்டை என்னும் பெயர் வாழைத் தடைக்கும் வழங்கும்) (சொல்.65).

மரப்படகு *mara-p-paḍagu*, பெ.(n.) படகு வகை; a kind of boat.

[மரம் + படகு.]

மரப்படிகட்டுகள் *mara-p-paḍi-kaṭṭugaḷ*, பெ.(n.) ஏணி; wooden ladder.

[மரம் + படிகட்டுகள்.]



மரப்பத்தல் *mara-p-pattal*, பெ.(n.) இறைமரம் (வின்.); wooden baling trough.

[மரம் + பத்தல்.]

மரப்பந்தர் *mara-p-pandar,* பெ.(n.) சோலை; grove. *"நன் மரப்பந்த ரிலவந்திகையின்" (மணிமே. 3: 44, அரும்.).*

[மரம் + பந்தர். பந்தல் → பந்தர். ல > ர போலி.]

மரப்பாச்சி *mara-p-pācci,* பெ.(n.) சிறுவர் விளையாட்டுக்குரிய மரப் பொம்மை (ஈடு.3, 1, 10, ஜீ); wooden doll.

ம. மரப்பாச்சி

[மரம் + பாச்சி. பாவை →பாச்சி. மரப்பாவை →மரப்பாய்→மரப்பாய்ச்சி→மரப்பாச்சி.]



மரப்பாசி *mara-p-pāši,* பெ.(n.) கற்பாசி; lichens, tree - moss.

[மரம் + பாசி.]

மரப்பாஞ்சி *mara-p-pāñji,* பெ.(n.) மரப் பாச்சி பார்க்க; see *mara-p-pācci.*

[மரப்பாவை→மரப்பாச்சி→மரப்பாஞ்சி.]

மரப்பாவை *mara-p-pāvai,* பெ.(n.) மரப் பொம்மை; wooden puppet. *"மரப்பாவை நாணா லுயிர்மருட்டி யற்று" (குறள், 1020).*

ம. மரப்பாவ.

[மரம் + பாவை.]

மரப்பிசின் *mara-p-pišiṉ,* பெ.(n.) மரத்தி லுண்டாம் பிசின்; gum resin.

[மரம் + பிசின்.]

மரப்பிள்ளைசுற்று–தல் *mara-p-piḷḷai-šuṟṟu-,* 5 செ.கு.வி.(v.i.) மத்தாடு–, பார்க்க; see *mattāḍu –,*

[மரப்பிள்ளை + சுற்று–,.]

மரப்புண் *mara-p-puṇ,* பெ.(n.) ஆறாது மேன்மேல் பெருகும் புண் (யாழ்.அக.); open, restering sore.

[மரம் + புண்.]

மரப்புணை *mara-p-puṇai,* பெ.(n.) தெப்பம்; float, raft. *"மாதவத் தாட்டியொடு மரப்புணை போகி" (சிலப்.13:179).*

[மரம் + புணை.]

மரப்பெட்டி *mara-p-peṭṭi,* பெ.(n.) மரத்தாலான பெட்டி (யாழ்.அக.); wooden box, chest or case.

[மரம் + பெட்டி.]

மரப்பொது *mara-p-podu,* பெ.(n.) சோலை (யாழ்.அக.); grove.

[மரம் + பொது. பொதும்பர் →பொது.]

மரப்பொந்து *mara-p-pondu,* பெ.(n.) மரத்தின் பொந்து (யாழ்.அக.); hallow in a tree.

[மரம் + பொந்து.]

பொள்ளல் – துளைத்தல். பொள் + து – பொந்து. உள்துளையுண்ட மரத்திலுள்ள பொந்து.



மரப்பொந்துதேன் *mara-p-pondu-tēṉ,* பெ.(n.) மரப்பொந்தில் ஈக்கள் கட்டும் தேன்; honey secreted from the hallow in the tree.

[மரம் + பொந்து + தேன்.]

மரப்போர் *mara-p-pōr,* பெ.(n.) மரப்பொந்து பார்க்க; see *mara-p-pondu.*

[மரம் + போர். பொள்ளல் = துளைத்தல். பொள் →போள்→போர்.]

மரபலா *marapalā,* பெ.(n.) வாழை; plantain tree (சா.அக.).

மரபார் *marapār,* பெ.(n.) மரபினோர் பார்க்க; see *marabinōr.*

[மரபு + ஆர்.]

மரபியல் *marabiyal,* பெ.(n.) முன்னோர் வழங்கிய சொல் வழக்கைக் கூறும் தொல்காப்பியப் பகுதி; a section of grammer which treats of the idiomatic use of words, as in *Tolkāppiyam.*

[மரபு + இயல்.]

மரபிலக்கணம்[1] *marabilakkaṉam,* பெ.(n.) மரபியல் பார்க்க (இலக்.); see *marabiyal.*

[மரபு + இலக்கணம்.]

மரபிலக்கணம்[2] *marabilakkaṉam,* பெ.(n.) மருத்துவத்திற்குண்டான சொற்களைத் தக்கபடி பயன்படுத்துதல்; the use of appropriate technical terms in medicine (சா.அக.).

மரபினோர் *marabinōr,* பெ.(n.) 1. வழித் தோன்றியோர்;descendants. 2. மூதாதையர் (வின்.); forefathers. 3. உறவினன் (வின்.); kinsfolk, relations. 4. ஒரு குடியினர்; people of one's own caste.

[மரபு + ஆர். இன் – சாரியை. மரபினார் → மரபினோர்.]

மரபு *marabu,* பெ.(n.) 1. முறைமை; rule, law, established usage or order, that which is sanctioned by custom. *"ஈண்டு செலன் மரபிற் றன்னியல் வழாது" (புறநா.25).* 2. (இலக்.) சான்றோரின் சொல் வழக்கு முறை (நன்.388); use of language sanctioned by ancient authors. 3. பழைமை (சூடா.); antiquity. 4. சரவடி; ancestral line. *"சூரியன் மரபுக்குமோர் தொன்மறு" (கம்பரா. வாலிவ. 81).* 5. தொன்றுதொட்ட வழக்கம்; lineage. *"மூலன் மரபில் வரு மௌனகுருவே" (தாயு.மௌன.1).* 6. இயல்பு; nature, property. *"துன்னியார் குற்றமுந் தூற்று மரபினார்" (குறள், 188).* 7. இலக்கணம்; characteristic. *"நடைமிகுந் தேத்திய குடைநிழன் மரபும்" (தொல். பொருள்.91).* 8. நல்லொழுக்கம்; good conduct, character. *"தங்கண் மரபில்லார்" (நாலடி, 336).* 9. பெருமை; name, fame.

"உன் மரபுசொல்ல" (பணவிடு.113). 10. மேம்பாடு; greatness. *"இசை மரபாக நட்புக்கந்தாக" (புறநா.217).* 11. முறைமை; justice. *"மரபுகொ லிது வென்பார்" (சேதுபு. இலக்கும.11).* 12. வழிபாடு; reverence, civility. *"மரபினா னோக்கு கின்ற" (சீவக.842).* 13. பருவம்; age, period of life. *"சேய்மரபிற் கல்வி மாண்பில்லாத மாந்தரும்" (திரிகடு.84).*

பல தலைமுறையாகத் தொடர்ந்து வரும் குலத்தொடர்ச்சி கொடியும் மரமும் போல் நீண்டும் தொடர்ந்தும் இருத்தலின் அதனைக் கொடி என்றும், கொடிவழி என்றும் மரபு என்றும் கூறுவது வழக்கம்.

வித்தும் வேரும் அடியும் கிளையும் குச்சுங் கொழுந்துமாகத் தொடர்ந்தோங்கும் மரம்போல மேன்மேல் தொடர்ந்து செல்லும் குலத் தொடர்ச்சி மரபு எனப்பட்டது.

தொடர்ந்து வரும் பழக்க வழக்கங்களையும் சொல் வழக்காற்றையும் மரபு என்பதுமுண்டு. தொல்காப்பியத்திலுள்ள மரபியல் என்னும் இயற்பெயர் இப்பொருள் பற்றியதே (சொல்.3).

மரபுச்சொல் *marabu-c-col,* பெ.(n.) மரபுப் பெயர் (இலக்.) பார்க்க; see *marabu-p-peyar.*

[மரபு + சொல்.]

மரபுப்பெயர் *marabu-p-peyar,* பெ(n.) ஒன்றற்குத் தொன்று தொட்டு வழங்கி வரும் பெயர் (நன்.274, உரை); appropriate name of a thing, as sanctioned by use.

[மரபு + பெயர்.]

மரபுமயக்கம் *marabu-mayakkam,* பெ.(n.) மரபுவழு (இலக்.) பார்க்க; see *marabu-valu.*

[மரபு + மயக்கம். மயக்கம் = கலக்கம், குற்றம், வழு.]

மரபுவழு *marabu-valu,* பெ.(n.) தொன்று தொட்டு வழங்கி வரும் முறைமைக்கு மாறானது (தொல்.சொல்.1, உரை); deviation from long established literary usage.

[மரபு + வழு.]

மரபுவழுவமைதி *marabu-valu-v-amaidi,* பெ.(n.) மரபு வழுவை அமைதி யுடைய தென்று சான்றோர் அமைத்துக் கொள்வது (தொல்.சொல்.11, உரை); permissible deviation from literary usage.

[மரபுவழு + அமைதி.]

மரபுளோர் *marabulōr,* பெ.(n.) மரபினோர் பார்க்க; see *marabinōr.* *"சடையன் தங்கள் மரபுளோர் கொடுக்க" (கம்பரா. திருமுடிசூ.38).*

மரம் *maram,* பெ.(n.) 1. தரைமட்டத்திலிருந்து சற்று தொலைவு இடைவிடாது வளர்ந்து பின் கிளைவிட்டுப் படர்ந்து வளர்ந்து நீண்ட காலம் உயிர் வாழும் பயிரி; perennial plant with a woody self-supporting main stem or trunk and usually unbranched for some distance above the ground , tree. *"வற்றன் மரந்தளித் தற்று" (குறள், 78).* 2. உள் வயிரமுள்ள பயிரி; endogenous plants *"அகக்காழனவே மரமென மொழிப" (தொல்.பொருள்.641).* 3. அறுக்கப்பட்ட மரம்; wood, timber. 4. மூலிகை (பிங்.); medicinal shrub or root. 5. மரக்கலம்; ship or boat. *"பெருங்கடனீந்திய மரம் வலியுறுக்கும்"*

(பதிற்றுப்.76:4). 6. இயமரம்; war-drum. *"மரமிரட்டவும்" (கலிங்.331).* 7. உழுத கழனியைச் சமன்படுத்தும் பரம்புப் பலகை (இ.வ.); board or roller for smoothing land newly ploughed.

மரம்அணை–த்தல் *maram-aṇai-,*4 செ.குன்றாவி.(v.t.) கட்டுமரத்தடிகளைச் சேர்த்தணைத்துக் கட்டுதல்; tide the wooden logs to make a boat.

மறுவ. மரம்கட்டல்.

[மரம் + அணை–,]

மரம்காவல் *maram-kāval,* பெ.(n.) மரம் காவுதல்; to carry the woods on the shoulder.

[மரம் + காவல்.]

கட்டுமரத்தடிகளைத் தோளில் தூக்கிச் செல்லுதல் என்பதன் திரிபு.

மரம்போற்கிட–த்தல் *maram-pōṟ-kiḍa-,* 3 செ.குன்றாவி.(v.t.) ஊதை நோயினால் உடம்பிற்கு ஏற்பட்ட ஒரு நிலை; prostratian of body due to rhematism affecting the joints.

[மரம்போல் + கிட–.]

மரம்வழுக்கை *maram-vaḻukkai,* பெ.(n.) 1. மரத்தின் இளங்காய்; tender fruits. 2. இளவழுக்கைச் சாறு; juice of tender fruits as tender coconut tree.

[மரம் + வழுக்கை.]

தென்னையின் இளங்காயை வழுக்கை என்றழைக்கும் மரபுண்மையைக் காண்க.

மரமஞ்சள் *mara-mañjaḷ,* பெ.(n.) கொடி வகை (பதார்த்த.413); tree turmeric s.cl. *Coscinium fenestratum.*

[மரம் + மஞ்சள்.]

மரமடி[1]–த்தல் *maramaḍi-,* 4 செ.கு.வி.(v.i.) உழவுக்குப் பின்னர் நிலத்தைச் சமப் படுத்துவதற்காகத் தடியாலடித்தல்; leveled the land after plough.

[மரம் + அடி–. மரத்தால் அடித்தல்.]

மரமடி[2]–த்தல் *maramaḍi-,* 4 செ.கு.வி.(v.i.) பரம்படித்தல் (நெல்லை.); to harrow a field.

[மரம் + அடி–. மரத்தைக் கொண்டு சமன்படுத்துதல்.]

மரமணி *mara-maṇi,* பெ.(n.) ஆடு மாடுகளை அழைப்பதற்கு இடையர் அரையிற் கட்டும் மணி (ஈடு.4, 8, 4, ஜீ); bell tied by herdsman around his waist to call the cattle.

[மரம் + மணி.]

மரமதம் *mara-madam,* பெ.(n.) கள்; toddy.

[மரம் + மதம்.]

மரமந்தாரை *mara-mandārai,* பெ.(n.) ஒரு பூ மரம்; a flower tree.

[மரம் + மந்தாரை.]

மரமரம் *maramaram,* பெ.(n.) மரமராஞ்சம் பார்க்க; see *mara-marāñjam.*

[மரமராஞ்சம்→மரமரம்.]

மரமரிவாள் *maram-arivāl*, பெ.(n.) ஈர் வாள் (யாழ்.அக.); saw.

[மரம் + அரிவாள்.]



மரமல்லி *mara-malli*, பெ.(n.) மரமல்லிகை பார்க்க; see *mara-malligai*.

[மரமல்லிகை →மரமல்லி.]

மரமல்லிகை *mara-malligai*, பெ. (n.) காட்டு மல்லி; Indian - cork.

[மரம் + மல்லிகை.]

மரமனோரஞ்சிதம் *mara-manōrañjidam*, பெ.(n.) சிறு செண்பகம்; cembaga flower tree.

*[மரம் + **Skt.** மனோரஞ்சிதம்.]*

மரமுந்திரி *mara-mundiri*, பெ.(n.) முந்திரி மரம்; cashew-nut tree. *கொடிமுந்திரிக்கு எதிரானது.*

[மரம் + முந்திரி.]

முன் + துரி – முந்துரி – முந்திரி. துருத்தல் – முன்தள்ளுதல். முன் தள்ளிக் கொண்டிருக்கும் கொட்டையுள்ள மரம்.

மரமுலை *mara-mulai*, பெ.(n.) ஆண், பெண் வேடங் கொள்ளும் போது கட்டிக் கொள்ளும் மரத்திலான பொய்ம் முலை (திவ்.பெரியதி.8, 1, 1, வ்யா.); false breast, used by male actor when assuming the character of a female.

[மரம் + முலை.]

மரமூலம் *mara-mūlam*, பெ.(n.) மரவேர்; the root of a tree.

[மரம் + மூலம்.]

மரமேறி *maram-ēṟi*, பெ.(n.) கள் இறக்குவதற்குத் தென்னை பனை முதலிய மரங்களில் மரமேறும் பிரிவினர்; the *cāṇar* caste, especially those who climb palm trees for drawing toddy.

[மரம் + ஏறி.]

மரயம் *marayam*, பெ.(n.) புளியம்புறணி, புளியம்பட்டை (பரி.அக.); outer skin of the tamarind tree.

[மரம் + அயம்.]

மரயெண்ணெய் *mara-eṇṇey*, பெ.(n.) மரத்தெண்ணெய் பார்க்க; see *mara-t-teṇṇey*.

[மரத்தெண்ணெய்→மரயெண்ணெய்.]

மரல்[1] *maral*, பெ.(n.) **1.** கடல்; sea. **2.** அரலை; a shrub. **3.** கற்றாழை; a kind of aloe. **4.** மருள் பார்க்க; see *maruḷ*.

மரல்[2] *maral*, பெ.(n.) பெருங்குரும்பை; bowstring hemp. *"மரையர் மரல் கவர" (கலித்.6).*

மரல்மஞ்சி *maral-mañji,* பெ.(n.) மரல்நார் (வின்.); fibre of bostring hemp.

[மரல் + மஞ்சி.]

மரலுகம் *maralugam,* பெ.(n.) குங்குமப்பூ (சங்.அக.); saffron flower.

மரவக்கட்டி *marava-k-katti,* பெ.(n.) பரு; tumour.

மரவக்கல்சத்து *maravakkal-cattu,* பெ.(n.) பலகல் சத்து; the essence of several stones.

மரவஞ்சறைப்பெட்டி *mara-v-añjarai-p-petti,* பெ.(n.) கடுகு முதலிய பொருள்கள் வைப்பதற்காக மரத்தாற் செய்த அஞ்சறைப் பெட்டி; small wooden box with partitions and a sliding lid, used for keeping spices and condiments.

[மரம் + அஞ்சறைப்பெட்டி.]



மரவசாதி *marava-cādi,* பெ.(n.) பயிரபதி சாதியாகிய ஆண் சாதி நால்வகையி லொன்று; one of the four classes of men (சா.அக.).

மரவட்டணம் *mara-vattanam,* பெ.(n.) 1. மரத்தட்டு (சங்.அக.); wooden tray. 2. நெடும் பரிசை (வின்.); wooden shield.

[மரம் + வட்டணம்.]

மரவட்டணை *mara-vattanai,* பெ.(n.) மரவட்டணம் (சங்.அக.) பார்க்க; see *maravattanam.*

[மரவட்டணம்→மரவட்டணை.]

மரவட்டம் *maravattam,* பெ.(n.) மரவட்டணம் (சங்.அக.) பார்க்க; see *mara-vattanam.*

[மரவட்டணம் →மரவட்டம்.]

மரவட்டு *mara-vattu,* பெ.(n.) 1. மரவட்டணம் (சங்.அக.) பார்க்க; see *mara-vattanam.* 2. மரத்தின் குருத்துள்ள பகுதி (யாழ்.அக.); thepartofa plant in which the tender shoot is found.

[மரவட்டணம்→மரவட்டு.]

மரவட்டை *mara-vattai,* பெ.(n.) 1. பூச்சி வகை; millipede, cambala amulta. 2. மரவகை; maroti, l.tr. Hydnocarpus wightiana.

[மரம் + அட்டை.]

மரவட்டைக்கடி *maravattai-k-kadi,* பெ.(n.) மரவட்டையின் கடி; bite of millipede.

[மரவட்டை + கடி.]

மரவடி *mara-v-adi,* பெ.(n.) மரச் செருப்பு; wooden sandals. *"நின்றால் மரவடியாம்... திருமாற்கரவு" (திவ்.இயற்.1, 53).*

[மரம் + அடி.]

மரவடை *mara-vaḍai,* பெ.(n.) 1. மரத்திற்குரிய வரி (S.I.I.ii, 24); tax on trees. 2. மரவிரை, 1 பார்க்க; see *mara-virai.*

[மரம் + அடை.]

மரவண்டு *mara-v-vaṇḍu,* பெ.(n.) மரத்தைக் குடையும் வண்டு வகை (வின்.); a kind of tree boring beetle.

[மரம் + வண்டு.]

மரவணில் *mara-v-aṇil,* பெ.(n.) 1. பெரிய அணில் வகை (வின்.); a grey flying squirrel, pateromys fimbriatus. 2. வெளவால் (யாழ்.அக.); bat.

[மரம் + அணில்.]

மரவத்தி *maravatti,* பெ.(n.) அத்தி வகை; a kind of *atti.*

[மரம் + அத்தி.]

மரவதம் *mara-vadam,* பெ.(n.) மரவம், 1 (பச்.மூ) பார்க்க; see *maravam.*

[மரவம் →மரவதம்.]

மரவம் *maravam,* பெ.(n.) 1. குங்கும மரம் (சூடா.); saffron. 2. வெண்கடம்பு; seaside Indian oak. *"மரவம் ஒப்ப" (ஐங்குறு. 357).* 3. கடம்பு; common cadamba. 4. செங்கடம்பு; indian oak.

மரவயிரம் *mara-vayiram,* பெ.(n.) மரக்காழ்; the inner core of the tree which has become very hard.

[மரம் + வயிரம்.]

மரவள்ளி *mara-vaḷḷi,* பெ.(n.) செடிவகை (சங்.அக.); tapioca l.sh., *Manihot utilissima.*

[மரம் + வள்ளி.]



மரவள்ளிக்கிழங்கு *mara-vaḷḷi-k-kiḻaṅgu,* பெ.(n.) ஒருவகைக் கிழங்கு; tapioca.

[மரவள்ளி + கிழங்கு.]

மரவாடி *maravāḍi,* பெ.(n.) மரக்கடை; timber yard.

[மரம் + வாடி. வாடை – பக்கம், வரிசை வரிசையாயமைந்த கடை.]

மரவாடையெலும்பு *maravāḍai-elumbu,* பெ(n.) கணுக்கால் எலும்பு; ankle bone (சா. அக.).

[மரவாடை + எலும்பு.]

மரவாணி *mara-v-āṇi,* பெ.(n.) மரத்தாலாகிய ஆணி (வின்.); wooden pin, plug.

[மரம் + ஆணி.]

மரவாரை *mara-v-ārai,* பெ.(n.) 1. உத்தர முதலிய மரக்கட்டை; joist, beam, sleeper. 2. சிலை முதலியவற்றைச் சுமந்து செல்ல உதவும் நீண்ட மரத்துண்டு; staff or pole for carrying idols.

[மரம் + வாரை.]

மரவிடம் *mara-viḍam,* பெ.(n.) பயிரி நஞ்சு (தைலவ.தைல); vegetable poison.

[மரம் + விடம். Skt. விஷம் த. விடம் – நஞ்சு.]

மரவிடை *maraviḍai,* பெ.(n.) ஆவண (பத்திர) மெழுதுவோர் விற்பனை நிலத்திலுள்ள மரங்களைக் குறித்தற்கு வழங்குஞ் சொல் (யாழ்.அக.); a term used in conveyancing to include all kinds of trees and plants on the property conveyed (R.F.).

[மரம் + விடை.]

மரவினைஞர் *mara-viṉaiñar,* பெ.(n.) தச்சர் (வின்.); carpenters.

[மரம் + வினைஞர்.]

மரவினையாளர் *mara-viṉai-y-āḷar,* பெ.(n.) மரவினைஞர் (பிங்.) பார்க்க; see *mara-viṉaiñar.*

[மரம் + வினையாளர்.]

மரவு *maravu,* பெ.(n.) மரா பார்க்க; see *mrā.* *"மரவு சேர் கடவூர் மயானத்தார்" (தேவா. 530, 8).*

[மரா→மரவு.]

மரவுப்பு *mara-v-uppu,* பெ.(n.) உப்பு வகை (வின்.); carbonate of potash-*Potassae carbonas.*

மரவுப்புக்காரம் *mara-v-uppu-k-kāram,* பெ.(n.) சோடாவுப்பு வகை; caustic potash, hydrate of pottasium-*Potassa caustica.*

[மரவுப்பு + காரம்.]

மரவுப்புச்சத்து *mara-v-uppu-c-cattu,* பெ.(n.) சாம்பலுப்புச் சத்து; potash impura.

[மரவுப்பு + சத்து.]

மரவுப்புச்சாயநீர் *mara-v-uppu-c-cāyanīr,* பெ.(n.) மரவுப்புக் காரங் கலந்த நீர் (இங்.வை.); solution of potash, *liquor potassae.*

[மரவுப்புச்சாயம் + நீர்.]

மரவுரல் *mara-v-ural,* பெ.(n.) மரத்தாலான உரல்; wooden mortar.

[மரம் + உரல். உல் – துளைத்தல் கருத்து வேர். உல்→உர்→உரல்.]



மரவுரி *mara-v-uri,* பெ.(n.) 1. முனிவர் முதலியோர் ஆடையாகக் கொள்ளும் மரப் பட்டை வகை; bark of tree used as clothing in ancient times by ascetics, etc. *"மரவுரி யுடையன்" (மணிமே, 17, 4).* 2. மரவகை; bark tree, 1, tr. *Antiaris toxicaria.* 3. சீரகம் (பரி.அக.); cumin.

[மரம் + உரி.]

மரத்தினின்று உரித்த பொருள் (பட்டை).

மரவெட்டி *mara-veṭṭi,* பெ.(n.) புல்லுருவி; parasitic plant. 2. நீரடிமுத்து பார்க்க; see *nīraḍi-muttu.*

[மரம் + வெட்டி.]

மரவெண்ணெய் *mara-v-eṇṇey,* பெ. (n.) 1. மரத்தினின்றெடுக்கும் எண்ணெய்; wood-oil (mod.). 2. தில்லை மரப் பிசின் (வின்.); gum from the sap of the tillai tree.

[மரம் + எண்ணெய்.]

மரவெலி *mara-v-eli,* பெ.(n.) எலி வகை (சங்.அக.); tree rat, mus brunniens.

[மரம் + எலி.]

மரவெள்ளை *mara-veḷḷai,* பெ.(n.) வெள்ளைக் குங்கலியம் பார்க்க; see *veḷḷai-k-kuṅgiliyam.*

[மரம் + வெள்ளை.]

மரவெறும்பு *mara-v-eṟumbu,* பெ.(n.) எறும்பு வகை (யாழ்.அக.); an ant .

[மரம் + எறும்பு.]

மரவேர் *mara-vēr,* பெ.(n.) மரத்தின் தன்மையை ஒத்திருக்கும் வேர்; root taking the characterics of a tree by reason of is long existence such a banyan.

[மரம் + வேர்.]

மரவை *maravai,* பெ.(n.) மரத்தாலான ஏனம்; wooden utensil or bowl.

[மரம் → மரவை.]

மரவைக்காசு *maravai-k-kašu,* பெ.(n.) பிச்சையெடுத்த பணம் (நாஞ்.); money got by begging.

[மரவை + காசு.]

மரவொட்டி *mara-v-oṭṭi,* பெ.(n.) புல்லுருவி; parasitic plant.

[மரம் + ஒட்டி.]

மரவொதுக்கு *mara-v-odukku,* பெ.(n.) வெயில் காற்று முதலியவற்றிற்கு ஒதுங்க வுதவும் மரநிழல் (வின்.); shade of a tree, as offering shelter from the sun.

[மரம் + ஒதுக்கு.]

மரவொல்லி[1] *mara-volli,* பெ.(n.) கதம்பை யொல்லி; a withered grass (சா.அக.).

மரவொல்லி[2] *mara-v-olli,* பெ. (n.) உள்ளீடற்ற தேங்காய் (யாழ்.அக.); blighted coconut in which the kernel is scanty through the fibrous rind in large.

[மரம் + ஒல்லி.]

மரா *marā,* பெ. (n.) 1. மரவம் 2, 3, 4 பார்க்க; see *maravam.* 2. மராமரம் பார்க்க; see *marā-maram.*

மராஅடி *marā-aḍi,* பெ.(n.) 1. மரச்செருப்பு (தொல்.எழுத்து.311, உரை); wooden sandals. 2. மராடி 1 பார்க்க; see *marāḍi.*

[மரம்→மரா+ அடி.]

மராஅம் *maraam,* பெ.(n.) மரவம் 2, 3, 4 பார்க்க; see *maravam.* *"இணர் சேர்ந்த மராஅமும்" (கலித்.26) (திருமுரு.110, உரை).*

[மரவம்→மராஅம்.]

மராகதம்பம் *marā-kadambam,* பெ.(n.) கடம்ப மரம்; cadamba tree in general (சா.அக.).

மராசகம் *marāšagam*, பெ.(n.) பன்னீர்; rose water (சா.அக.).

மராசகி *marā-šagi*, பெ.(n.) நிலக்கடலை; ground nut (சா.அக.).

மராசிகா *marāšigā*, பெ.(n.) வெண்கடம்பு; a tree (சா.அக.).

மராட்டம்[1] *marāṭṭam*, பெ.(n.) 1. புறமயிர் (திவா.); hair on the body of human beings or animals. 2. பெண் மயிர்; hair on women's head. *"மன்றன் மாதர்தனமு மாராட்டமும்" (இரகு.நகர்.49).*

மராட்டம்[2] *marāṭṭam*, பெ.(n.) 1. மராட்டிய மாநிலம்; the Maharastra state. *"மகத வினைஞரு மராட்டக் கம்மரும்" (மணிமே. 19, 107)* 2. இடம் (பிங்.); place.

[மராட்டியம்→மராட்டம்.]

மராட்டிமொக்கு *marāṭṭi-mokku*, பெ.(n.) போதைப் பொருள் வகை (பெரியமா.31); a intoxicating drug.

மராட்டியம் *marāṭṭiyam*, பெ.(n.) இந்தியாவி லுள்ள (30) மாநிலங்களு ளொன்று; one of the (30) states in India.

மராட்டியர் *marāṭṭiyar*, பெ.(n.) மராட்டிய மாநில மக்கள்; people of *Marāṭṭiya* state.

[மராட்டியம்→மராட்டியர்.]

மராட்டிரம் *marāṭṭiram*, பெ.(n.) மராட்டியம் பார்க்க; see *marāṭṭiyam.*

மராடம்[1] *marāḍam*, பெ.(n.) 1. ஐம்பத்தாறு தேசத்து ளொன்றான மராட்டியம் (திவா.); the maratiya country, one of 56 tēšams. 2. மராட்டிய மொழி; the language spoken in the marattiya country.

[மராட்டியம்→மராடம்.]

மராடம்[2] *marāḍam*, பெ.(n.) மருக்காரை (மலை.) பார்க்க; see *maru-k-kārai.*

மராடர் *marāḍar*, பெ.(n.) மராட்டியர்; the maharattas. *"சோளர் மராடர்" (கம்பரா. உலா.47).*

[மராட்டியர்→மராடர்.]

மராடி *marāḍi*, பெ.(n.) 1. மரத்தின் அடிப்பகுதி (நன்.256, மயிலை); root or stump of a tree. 2. மராஅடி[1] பார்க்க; see *marāḍi.*

[மரவடி→மராடி.]

மராடிகம் *marāḍigam*, பெ.(n.) நிலக்குமிழ்; a tree.

மராபம் *marābam*, பெ.(n.) மதுக்காரை (பரி.அக.) பார்க்க; see *madu-k-kārai.*

மராம் *marām*, பெ. (n.) மரவம் 2, 3, 4 பார்க்க; see *maravam. "மராமலர்த்தாரின் மாண் வரத் தோன்றி" (பரிபா.15, 20).*

[மரவம்→மராம்.]

மராமரம் *marāmaram*, பெ.(n.) 1. ஆச்சா (பிங்.) பார்க்க; see *āccā. "மராமர மேழ்துளை யெய்த" (கம்பரா.சிறப்புப்.5).* 2. அரசு (அக.நி.); pipal.

மராயம்[1] *marāyam*, பெ.(n.) மாதுளை; pomegranate.

மராயம்² *marāyam,* பெ.(n.) பழங்காலத்து வரிவகைகளுள் ஒன்று; a kind of ancient tax.

மராடம் *marāḍam,* பெ.(n.) பண்டகசாலை (யாழ்.அக.); godown, warehouse.

மராலம் *marālam,* பெ.(n.) 1. கண்ணிலிடும் மை; unguent for eyes. 2. குதிரை; horse. 3. தாரா; goose. 4. மாதுளை; pomegranate.

மராளகம் *marāḷagam,* பெ.(n.) நிலவாகை பார்க்க; see *nila-vāgai.*

மராளம்¹ *marāḷam,* பெ.(n.) 1. அன்னம்; swan. 2. பூ நாரை; flamingo. 3. மராலம், 4 (அக.நி.) பார்க்க; see *marālam.*

மராளம்² *marāḷam,* பெ.(n.) பாம்பு; snake.

மரி¹-தல் *mari-,* 4 செ.கு.வி.(v.i.) மரி²-, பார்க்க; see *mari-, "எய்தானம் மான்மரிய வேந்திழைக் காய்" (திவ்.இயற்.3, 52).*

மரி²-த்தல் *mari-,* 11 செ.கு.வி.(v.i.) சாதல்; to die. *"அரயன் உடையான் மரித்தமையில்" (S.I.I.ii, 311).*

[முல் – வளைதல் கருத்து. முல்→முண்டு→முடி→முடி–தல்→முடி→மடி→மரி–த்தல். மடிதல், மரி–த்தல் = இறத்தல்.]

மரி³-த்தல் *mari-,* 11 செ.கு.வி.(v.i.) நினைத்தல் (வின்.); to remember.

[மடி→மரி–. மீண்டும் திரும்ப நினைத்துப் பார்த்தல்.]

மரி⁴ *mari,* பெ.(n.) மரிமா பார்க்க; see *marimā.*

[மரிமா→மரி.]

மரிக்கன்மா *marikkaṉ-mā,* பெ.(n.) மைதா மா; corn flour.

[அமெரிக்கன்மா→மரிக்கன்மா.]

மரிக்கை *marikkai,* பெ.(n.) இறந்துவிடுகை; dying, death.

[மரி→மரிக்கை.]

மரிக்கொழுந்து *mari-k-koḻundu,* பெ.(n.) மருக்கொழுந்து பார்க்க; see *maru-k-koḻundu.*

[மருக்கொழுநது→மரிக்கொழுந்து.]

மரிகடகம் *mari-kaḍagam,* பெ.(n.) பெருங்குரும்பை (சங்.அக.); bowstring hemp.

மரிகம் *marigam,* பெ.(n.) முருங்கை; drumstic tree.

மரிகிரந்தி *mari-kirandi,* பெ.(n.) ஒருவகைக் கிரந்தி; a kind of ulcer or carbuncle resulting in death (சா.அக.).

மரிகோவை *mari-kōvai,* பெ.(n.) கோவைக் கொடி; a climber yielding red fruits (சா.அக.).

மரிச்சம் *mariccam,* பெ.(n.) மாமரம்; mango tree.

மரிச்சன் *mariccaṉ,* பெ.(n.) மரிச்சம் (பரி.அக.) பார்க்க; see *mariccam.*

[மரிச்சம்→மரிச்சன்.]

மரிச்சி *mariccai,* பெ.(n.) வரப்பு; ridge of a field.

[மறி→மறிச்சி→மரிச்சி.]

மரிசம் *marišam,* பெ.(n.) மிளகு (மலை.); black peper.

மரிசி *mariši,* பெ.(n.) 1. புதுவரம்பு வழி; newly formed ridge used as a path. 2. செடி (இ.வ.); shrub.

[மரிச்சி →மரிசி.]

மரிசு *marišu,* பெ.(n.) 1. வரம்பு; ridge. 2. வரம்பருகு; edge of a ridge.

[மறி→மறிச்சி→மரிச்சி→மரிசு.]

மரித்தபிண்டம் *maritta-pindam,* பெ.(n.) வயிற்றிலேயே இறந்த சிசு; dead foetus.

[மரித்த + பிண்டம்.]

மரித்தவப்பாசி *marittava-p-pāši,* பெ.(n.) கடற்பாசி பார்க்க; see *kadar-pāši.*

மரித்தான்கெண்டை *marittān-kendai,* பெ. (n.) ஆறு அங்குல நீளம் வளர்வதும் வெண்மையும் நீலமும் கலந்த நிற முள்ளதுமான கடல்மீன் வகை; a sea-fish, silvery shot with purple, attaining 6 inch. in length Barilius bendelisis.

மரிப்பு *marippu,* பெ.(n.) சாவு; death. *"மரிப்பொ டுதிப்பு" (பிரபுலிங்.முத்தாயி.23).*

[மரி→மரிப்பு. ஒ.நோ.அரி →அரிப்பு.]

மரிமா *marimā,* பெ.(n.) புளிமா; Hongplum (m.m).

மரிமாங்காய் *mari-māngāy,* பெ.(n.) 1. ஒரு வகை மாங்காய், அம்பாலம்; a variety of small mangoes. 2. காட்டு மாமரம்; wild mango tree. *"சாரப் பருப்பு தரும் மாவினின்றும் வேறுபட்டது" (சா.அக.).*

மரிமாஞ்செடி *mari-mañcedi,* பெ.(n.) மரி மாமரத்தின் செடி; plant of marima tree (சா.அக.).

மரியங்காய்ச்செடி *mariyangāy-c-cedi,* பெ.(n.) மரிமா (வைத்.ரத்.) பார்க்க; see *mari-mā.*

மரியங்கொழுந்து *mariyan-kolundu,* பெ.(n.) மரிமாமரத்தின் கொழுந்து; tender leaves of marimā tree.

மரியவர் *mariyavar,* பெ.(n.) பின்பற்றி யொழுகுபவர்; adherents followers. *"பெரிவன்றிருமொழி.... மரியவர்" (சீவக.1211).*

[மருவு→மருவியவர் → மரியவர்.]

மரு[1] *maru,* பெ.(n.) 1. ஒன்றிலிருந்து இன்னொன்றொடு கலக்கும் மணம்; mix the fragrances one to another. 2. நறுமணம்; fragrances. *"மருவா கொன்றை" (தேவா. 530, 1).* 3. நறுமணச் செடிவகை (மலை.); marjoram. 4. மருக்கொழுந்து 1, பார்க்க; see *maru-k-kolundu.* *"மருவுக்கு வாசனை போல் வந்ததால்" (வெங்கைக்கோ. 112).*

மரு[2] *maru,* பெ.(n.) 1. மணமகனுக்குப் பெண்வீட்டாரிடும் முதல் விருந்து (இ.வ.); first feast to a bridegroom in his father-in-law's house, soon after his marriage. 2. இடம் (பிங்.); place.

[முல்→ மல் →மர்→மரு (வே.க.4:41). மருவுதல் = கலத்தல்.]

மரு[3] *maru,* பெ.(n.) 1. மருநிலம் பார்க்க;see *maru-nilam.* 2. மலை; mountain.

மருக்கட்டி *maru-k-katti,* பெ.(n.) மறு[2], 5, 6 பார்க்க (இராசவைத்.16); see *maru.*

மருக்கடம் *maru-k-kaḍam,* பெ.(n.) குரங்கு; ape; monkey.

மருக்கடாசியம் *maru-k-kaḍā-ciyam,* பெ.(n.) செம்பு; copper.

மருக்கணம் *marukkaṇam,* பெ.(n.) மருத்துக்கள்; the host of maruts. *"மருக் கணங்களும் விசுவ தேவரும்" (தக்கயாகப். 253).*

மருக்கம்[1] *marukkam,* பெ.(n.) 1. காற்று; wind. 2. குரங்கு; monkey. 3. உடல்; body.

மருக்கம்[2] *marukkam,* பெ.(n.) 1. மருக் கொழுந்து பார்க்க; see *maru-k-koḻundu.* 2. மிளகு; pepper.

[மரு → மருக்கம். நறுமணமுடைய மருக்கொழுந்து, மணமுடைய மிளகு.]

மருக்களம் *mark-kaḷam,* பெ.(n.) மயிர் மாணிக்கம் எனும் கொடி; a creeper.



மருக்கன்காய் *marukkaṉ-kāy,* பெ.(n.) ஆதொண்டைக்காய்; unripe fruit of thorny caper (madr.).

மருக்காதிதம் *maru-k-kādidam,* பெ.(n.) நிலவேம்பு; a plant.

மருக்காரை *marukkārai,* பெ.(n.) மதுக்காரை 1, 2 பார்க்க (m.m.291); see *madu-k-kārai* 1, 2.

மருக்காளங்காய் *maru-k-kāḷaṅgāy,* பெ.(n.) ஒருவகைப் பேதிக்காய்; a fruit that causes motions (சா.அக.).

மருக்காளம் *maru-k-kāḷam,* பெ.(n.) மதுக்காரை 1 (m.m.291)பார்க்க; see *madu-k-kārai.*

மருக்கியாடு *marukki-y-āḍu,* பெ.(n.) மலட்டாடு; barren she-goat.

மருக்கிழங்கு *maru-k-kiḻaṅgu,* பெ.(n.) ஒரு வகைக் கிழங்கு; a variety of tuber.

மருக்கு-தல் *marukku-,* 5 செ.கு.வி. (v.i.) புளி முதலியன சேர்த்து எண்ணெயிலுள்ள கெடுதிகளை நீக்குதல்; to remove dirt. etc. from oil, by adding to it tamarind, etc. and heating it.

மருக்குருப்புல் *maru-k-kuru-p-pul,* பெ.(n.) ஒருவகைப் புல்; a kind of grass.

மருக்குலுபழம் *marukkulu-paḻam,* பெ.(n.) ஒரு வகை பழம்; a kind of fruit.

மருக்குறாப்புல் *maru-k-kuṟā-p-pul,* பெ.(n.) செடி வகை; large purple grass (m.m) panicum stagninum (m.m).

மருக்கூவிகம் *maru-k-kūvigam,* பெ.(n.) நீர்க் கடம்பு; female cadambam.

மருக்கொழுந்து *maru-k-kol̠undu,* பெ.(n.) 1. நறுமணச் செடிவகை; southern wood, s.sh. Artemisia abrotanum pallens. 2. மரு[1], 2 பார்க்க; see *maru.*

[மரு → மருக்கொழுந்து.]

மருக்கொழுந்துச்சக்களத்தி *maru-k-kol̠undu-c-cakkaḷatti,* பெ.(n.) நீருமரி; மருக்கொழுந்து போன்றதொரு செடி; Indian saltwort.

[மருக்கொழுந்து + சக்களத்தி.]

மருகம்[1] *marugam,* பெ.(n.) மான் வகை (சங்.அக.); a kind of stag.

மருகம்[2] *marugam,* பெ.(n.) ஆதொண்டை (இராசவைத்.142) பார்க்க; see *āttoṇḍai.*

மருகம்போகி *marugam-bōgi,* பெ.(n.) கற்றாழை; a plant.

மருகன் *marugaṉ,* பெ.(n.) 1. ஒருவரின் உடன் பிறந்தாளின் மகன் அல்லது ஒருத்தியின் உடன் பிறந்தவரின் மகன்; a man's sister's son or a woman's brother's son. *"வானவரைப் பணி கொண்ட மருகாவோ" (கம்பரா.சூர்ப்பண,111).* 2. மகன் போலப் பொருந்தும் மகளின் கணவன்; son - in - law. *"மலைக்கு மருகனைப் பாடிபாடி" (திருவாச.9, 6).* 3. வழித்தோன்றல்; descendant, scion, member of a clan. *"சேரலர் மருக" (பதிற்றுப்.63, 16).*

[மருமகன் → மருகன் (வே.க.4:40).]

மருகாந்தரம் *marugāndaram,* பெ.(n.) மருநிலம் பார்க்க; see *marunilam.*

மருகி *marugi,* பெ.(n.) 1. மருமகள் (யாழ்.அக);daughter-in-law. *"மெல்லியலென் மருகியையும்" (திவ். பெருமாள்.98).*

[மருகன்–மருமகன். மருகன் (ஆ.பா.)→ மருகி (பெ.பா.).]

மருகு[1] *marugu,* பெ.(n.) மருகன் (யாழ்.அக); son-in-law. *"மருகென்றே வவமதித்த தக்கன்" (கந்தபு.காமத. 110).*

[மருகன் → மருகு.]

மருகு[2] *marugu,* பெ.(n.) 1. காட்டு மல்லிகை; wild jasmine. 2. மரு[1], 2 பார்க்க; see *maru.* 2. மகரவாழை (பிங்.); a kind of plantain. *"மருகு பூக்குவ" (இரகு.குசன.74).* 3. தவனம் எனும் நறுமணச் செடி; a fragrant tree called tavaṉam.

[மரு → மருகு (வே.க.4:41).]

மருகை *marugai,* பெ.(n.) பஞ்சு மூட்டை; bale of cotton.

மருங்கு *maruṅgu,* பெ.(n.) 1. பொருந்தும் பக்கம்; side. *"கனையெரியுரறிய மருங்கு நோக்கி" (புறநா.23).* 2. விலாப்பக்கம்; side of the body. *"கயிறு பிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கின்" (புறநா.3).* 3. இடை (சூடா.); waist. 4. வடிவு; form. *"பொன்னனார் மருங்கு போன்றணி மாக்கவின் கொண்டதே" (சீவக.1195).* 5. எல்லை; limit. *"மருங்கறி வாரா மலையினும் பெரிது" (கலித்.48).* 6. இடம் (பிங்.); land, place. 7. சுவடு; track, trace. *"புல்லறிவாளர்*

பெருஞ்செல்வம்.... மருங்கறக் கெட்டுவிடும்" (நாலடி, 8). 8. சுற்றம்; relative. *"அவனின் மருங்குடையார் மாநிலத் தில்" (குறள், 526).* 9. குலம்; race, tribe, family. *"சூர் மருங்கறுத்த மொய்ம்பின் மதவலி" (திருமுரு.275).* 10. செல்வம்; wealth. *"மண்மேன் மருங்குடை யவர்க் கல்லால்" (சீவக.2924).* 11. நூல்; science. *"தொன் மருங்கறிஞர்" (குறிஞ்சிப்.18).* 12. தகுதி (வின்.); order, propriety.

[முல் → மல் → மர் → மரு → மருங்கு (வே.க.4:39).]

மருங்குசூலை *maruṅgu-šūlai,* பெ.(n.) பக்க சூலை; a disease marked by shooting pain in the sides chest or abdomen (சா.அக.).

[மருங்கு + சூலை.]

மருங்குல் *maruṅgul,* பெ.(n.) 1. இடை; waist, especially of women. *"கொம்பரார் மருங்குன் மங்கை கூற" (திருவாச.5, 67).* 2. மருங்குற்பக்கம் பார்க்க; see *maruṅguṟ-pakkam.* 3. வயிறு; stomach, abdomen. *"பசிபடு மருங்குலை" (புறநா.260).* 4. உடம்பு; body. *"யானை மருங்குலேய்க்கும் வண்டோட்டுத் தெங்கின்" (பெரும்பாண். 352).*

[மருங்கு → மருங்குல் (வே.க.4:46).]

மருங்குற்பக்கம் *maruṅguṟ-pakkam,* பெ.(n.) இடுப்பு (பிங்.); hip.

[மருங்குல் + பக்கம்.]

மருங்கை *maruṅgai,* பெ.(n.) ஈன்ற ஐந்தாம் நாள்; the fifth day after the delivery of a child.

மருச்சகம் *maruccagam,* பெ.(n.) கொம்மட்டி மாதுளை (மலை.) பார்க்க; see *kommaṭṭi-mādulai.*

மருட்கற்றாழை *maruṭ-kaṟṟāḻai,* பெ.(n.) காதுவலி நீக்கப் பயன்படும் கற்றாழை வகை; a kind of aloes used as medicine for ear ache (சா.அக.).

மருட்கனி *maruṭ-kaṉi,* பெ.(n.) எட்டிக்கனி, எட்டிக்காய்; nux-vomica fruit (சா.அக.).

மருட்காட்சி *maruṭ-kāṭci,* பெ.(n.) மயக்கவறிவு (நாமதீப.698); confused or bewildered vision, illusion.

[மருள் + காட்சி.]

மருட்காய் *maruṭ-kāy,* பெ.(n.) நோய் வகை; a disease with wort like eruptioms over the body (சா.அக.).

மருட்காவரிசி *maruṭkā-v-arisi,* பெ.(n.) கார்போக அரிசி; seeds of psoralea corylifolia (சாஅக.).

மருட்கிழங்கு *maruṭ-kiḻaṅgu,* பெ.(n.) மருளின்வேர்; root of marḷ (சா.அக.).

[மருள் + கிழங்கு.]

மருட்கிழங்குக்கற்றாழை *maruṭ-kiḻaṅgu-k-kaṟṟāḻai,* பெ.(n.) ஒருவகைக் கற்றாழையின் வேர்; root of a variety of aloes. *இஃது காது வலி போக்கும் மருந்தாய்ப் பயன்படும் (சா.அக.).*

மருட்கை *maruṭ-kai,* பெ.(n.) 1 மெய்ப்பாடு எட்டனுள் ஒன்றாகிய வியப்பு (தொல். பொருள். 651); astonishment, wonder, one

of eight mey-p-pāḍu, q.v. 2. மயக்கம்; bewilderement. "ஐயமு மருட்கையுஞ் செல்வதினீக்கி" (தொல். பொருள்.659).

[முல் → மல் → மர் → மரு. மருவுதல் = கலந்திருத்தல், தழுவுதல், பயிலுதல், புணர்தல். மரு →மருட்கை (வே.க.4:42).]

மருட்கையுவமை marutkai-y-uvamai, பெ.(n.) (அணியி.) ஒரு பொருட்குக் கூடாதபண்பினைக் கூடுவதாகக் கொண்டு அதனை யுவமையாக்கிக் கூறும் அணி வகை (மாறனலங். 101, உரை); simile in which a thing is taken for comparison on the basis of a non existent quality.

[முல் →மல் →மர் →மரு →மருட்கை. மருட்கை + உவமை.]

மருட்சி[1] marutci, பெ.(n.) அறிவின்மை; ignorance.

[மருள் →மருட்சி.]

மருட்சி[2] marūtci, பெ.(n.) 1. பொய்யுணர்வு; false understanding, perversion of the mind. 2. மயக்கம்; bewilderment. "மருட்சி செய் காமநோயால்" (திருவிளை. மூர்த்திவி. 16).

[முல் →மல் →மர் →மரு →மருட்கை →மருட்சி (வேக.4:42).]

மருட்டம் maruttam, பெ.(n.) 1. மயக்கந் தருவது (வின்.); that which intoxicates. 2. கள்; toddy. 3. ஏமாற்று (யாழ்.அக.); cheating.

[முல் = பொருந்தற் கருத்து வேர். முல் →மல் →மர் →மரு. மரு →மருள் = மயக்கம். மருள் →மருட்டம்.]

மருட்டி marutti, பெ.(n.) 1. மருட்டம், 1, 2 (சங்.அக.)பார்க்க; see maruttam. 2. மயங்கும்படி மினுக்குபவள்; temptress, blandishing woman, fascinating woman. "ஆசை கொடுத்து மருட்டிகள்" (திருப்பு.353).

[முல் → மல் → மர் → மரு. மரு → மருளி = மயக்கம், மதிமயங்கி. மருள் →மிரள். மிரளுதல் = மயங்கி யஞ்சுதல். மருள் → மருட்டு → மருட்டி (வே.க. 4:42).]

மருட்டிரம் maruttiram, பெ.(n.) பெருந் தும்பை பார்க்க; see perundumbai.

மருட்டு[1]-தல் maruttu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மயக்குதல்; to entice, fascinate, infatuate, bewitch. "வெல்லாம லெவரையு மருட்டிவிட" (தாயு.சித்தர்.10). 2. அச்ச மூட்டுதல் (வின்.); threaten, menace. 3. மாறுபடச் செய்தல்; to cause to be changed. "மாணல மருட்டும்" (ஐங்குறு.139). 4. ஒத்தல் (ஐங்குறு.அரும்.); to resemble. 5. மனங்கவியச் செய்தல்; to allure, coax. "மெல்லெனச் செல்க என மருட்டிக் கூறியவாறு" (தொல்.பொருள்.506, உரை). 6. ஏமாற்றுதல் (யாழ்.அக.); to cheat.

[மருள் → மருட்டு-.]

மருட்டு[2] maruttu, பெ.(n.) 1. அச்சமூட்டுகை; threatening. 2. மயக்குகை; enticing.

[மருள் → மருட்டு.]

மருட்டுப்பன்றி maruttu-p-panri, பெ.(n.) பன்றி வகை (திவா.); a species of pig.

[மருட்டு + பன்றி.]

மருட்டுவித்தை *maruṭṭu-vittai,* பெ.(n.) மயக்கு வித்தை; art of bewitching, hyprotising mesmerising.

[மருட்டு + வித்தை.]

மருட்பன்றி *maruṭ-paṉṟi,* பெ.(n.) மருட்டுப் பன்றி பார்க்க ; see *maruṭṭu-p-paṉṟi.*

[மருட்டுப்பன்றி → மருட்பன்றி.]

மருட்பா *maruṭpā,* பெ.(n.) வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலந்து வரும் செய்யுள் வகை (இலக்.வி.749); poem in which *veṇpā* and *āśiriyappā* occur alternately. *"மருட்பா ஏனை இருசா ரல்லது" (தொல். பொருள்.396).*

[முல் → மல் → மர் → மரு = ஒன்றிலிருந்து இன்னொன்றோடு கலக்கும் மணம். மரு → மருள் → மருள்தல்= ஒத்தல், வியத்தல், மயங்குதல். மருள் → மருட்கை = மயக்கம். மருள் → மருட்பா (வே.க.4:42).]

மருட்பார்வை *maruṭ-pārvai,* பெ.(n.) வெருண்ட பார்வை; bewidered look (சா.அக.).

[மருள் + பார்வை.]

மருடணம் *maruḍaṇam,* பெ.(n.) அகமருடணம்; a kind of ablution. *"மார்ச்சனமு மருடணமு நிறுத்தி" (தத்துவப். 50).*

மருண்டபார்வை *maruṇḍa-pārvai,* பெ. (n.) மானைப் போன்ற மிரண்ட பார்வை; shyness vision or look like deer.

[மருண்ட + பார்வை.]

மருண்டை *maruṇḍai,* பெ.(n.) மருந்துருண்டை; medicinal bolus (சா.அக.).

[மருந்துருண்டை → மருண்டை (கொ.வ.).]

மருண்மா *maruṇ-mā,* பெ.(n.) மதம்படு யானை (திவா.); elephant.

[முல் → மல் → மர் → மரு → மருள் = மருட்சி. மருள் + மா – மருண்மா (வே.க.4:42).]

மருண்மாலை *maruṇ-mālai,* பெ.(n.) புன்மாலைப் பொழுது, மயங்கும் மாலைப் பொழுது, மசண்டைப் பொழுது (யாழ்.அக.); evening twilight.

[மருள் + மாலை.]

மருணீக்கியார் *maru-nīkkiyār,* பெ.(n.) திருநாவுக்கரசரின் பிள்ளைத் திருப்பெயர்; name given to Thirunāvukkaracu by his parents. *"மலரு மருணீக்கியார் வந்தவதாரஞ் செய்தார்" (பெரியபு. திருநாவுக்.18).*

[மருள் + நீக்கியார்.]

மருத்தன்[1] *maruttaṉ,* பெ.(n.) மருத்துவன்; physician.. *"மருந்தொடுங் கூட்டி.... ஒற்றுவித் திருந்தனன் மருத்தன்" (உபதேசகா. சிவத்துரோகி. 320).*

[மருத்துவர் → மருத்துவன் → மருத்தன் (கொ.வ.).]

மருத்தன்[2] *maruttaṉ,* பெ.(n.) காற்றுக் கடவுள்; the God of wind. *"மருத்தன்றூண்டு... தடந்தேர்" (கந்தபு.ஏமகூ.7).*

மருத்தன்[3] *maruttaṉ,* பெ.(n.) ஔவையார் போற்றிப் பாடிய திருக்குடந்தையிலிருந்த வள்ளல் (சி.பெ.அக.); a philonthoropist of Thirukkudanthai, praised by Avvaiyar.

மருத்தாதி *maruttādi,* பெ.(n.) சீந்திற் கொடி; moon creeper.

மருத்தாது *maruttādu,* பெ.(n.) தேன்; honey.

மருத்திபொதி *marutti-podi,* பெ.(n.) நாயுருவி (பச்.மூ.); a plant growing in thickets and hedges.

மருத்தீடு *maruttīḍu,* பெ.(n.) 1. வயப்படுத்தும் மருந்திடுகை; administering a philter. 2. வயப்படுத்தும் மருத்திடுதலால் வரும் நோய்; effect supposed to result from a philter, as serious illness. *"தலைவலி மருத்தீடு காமாலை" (திருப்பு.153).*

[மருந்து + இடு – மருந்திடு →மருத்தீடு.]

மருத்தீண்டாமரம் *maruttīṇḍā-maram,* பெ.(n.) மராமரம் பார்க்க; see *marā-maram*(சா.அக.).

மருத்து *maruttu,* பெ.(n.) 1. காற்று; wind. *"விரைத்த மருத்து" (தணிகைப்பு.அகத்திய 20).* 2. மருத்தன்[2] பார்க்க; see *maruttaṉ. "மருத்தின் காதலன்" (கம்பரா.வேலேற்ற.40).* 3. ஊதைநோய் (இராசவைத்.113).; disease caused by the humour of the wind. *"நின், வருதலு மொடுக்கமு மருத்தினுள அதனால், இவ்வு முவ்வு மவ்வும் பிறவும் ஏம மார்ந்தநிற் பிரிந்து" (பரிபா.4:32, 3–4).*

[மரு →மருத்து. மரு = கலக்கும் மணம், காற்று]

மருத்துகன் *maruttugaṉ,* பெ.(n.) பண்டிதன்; one who is skilled in midwifery (சா.அக.).

மருத்துச்சஞ்சீவி *maruttu-c-cañjīvi,* பெ.(n.) மருந்தாக உதவும் புல்மரம், புதல், பூடு, கொடி முதலியன (பிங்.); medicinal shrubs and plants.

[மருந்து→மருத்து + Skt. சஞ்சீவி > த. உயிர் மருந்து.]

மருத்துண்ணி *maruttuṇṇi,* பெ.(n.) பாம்பு; snake.

[மருத்து = காற்று. மருத்து + உண்ணி = காற்றைப் புசிப்பது.]

மருத்துநீர் *maruttu-nīr,* பெ.(n.) முழுகுவதற்கான மருந்திட்ட நீர் (யாழ்.அக.); medicated water for bathing.

[மருந்து→மருத்து + நீர்.]

மருத்துநூல் *maruttu-nūl,* பெ.(n.) மருத்துவ நூல் பார்க்க; see *maruttuva-nūl. "வழுவில் சோதிட மருத்து நூல்" (பிரபோத.31, 37).*

[மருத்துவநூல் → மருத்துநூல்.]

மருத்துநெய் *maruttu-ney,* பெ.(n.) மருந்து சரக்குகளைக் காய்ச்சி எடுக்கும் நெய்; medicated ghee (சா.அக.).

[மருந்து→மருத்து + நெய்.]

மருத்துப்பதம் *maruttu-p-padam,* பெ.(n.) உண்ணுவதற்கு ஏதுவாகச் செய்யப்படும் மூலிகைகளாலான மருந்துகள்; well to do eat medical herbs.

[மருந்து→மருத்து + பதம்.]

மருத்துப்பாரதம் *maruttu-p-pāradam,* பெ.(n.) தேரையாரியற்றிய மருத்துவ நூல்; a book on Tamil medicine written allegorically by Theraiyar.

மருத்துப்பை[1] *maruttu-p-pai,* பெ.(n.) மருந்துச் சரக்கு; medicinal drug (சா.அக.).

மருத்துப்பை[2] *maruttu-p-pai,* பெ.(n.) 1. மருந்துகள் வைக்கும் பை (நன்.183, மயிலை); medicine chest. 2. வெடி மருந்திடுந் தோற்பை (வின்.); leather case for gunpowder.

[மருந்து→மருத்து + பை.]

மருத்துப்போதி *maruttu-p-pōdi,* பெ.(n.) நாயுருவி (மலை.); a plant growing in hedges and thickets.

மருத்துபலம் *maruttu-palam,* பெ.(n.) ஆலங்கட்டி மழை (சங்.அக.); hail-storm.

மருத்துமரம் *maruttu-maram,* பெ.(n.) மருந்துமரம் போல் அருமையானவன்–ள் (யாழ்.அக.); person of good qualities, as precious as medicinal tree.

[மருந்து→மருத்து + மரம்.]

மருத்துமலை *maruttumalai,* பெ.(n.) கடலூர், திருவகீந்திரபுரத்திற்கு அருகில் உள்ள மருத்துவ குணம் நிறைந்த மலை (சி.பெ.அக.); a hill, with many medicinal qualities situated near Thiruvagindhra puram in Cuddalore nearby.

[மருந்து→மருத்து + மாலை.]

மருத்துமாமலைவாழை *maruttu-mā-malai-vāḻai,* பெ.(n.) மருத்துவ வாழை பார்க்க; see *maruttuva-vāḻai.*

[மருத்துவவாழை→ மருத்துமாமலை வாழை.]

மருத்துமாவாழை *maruttu-mā-vāḻai,* பெ.(n.) மருத்துவ வாழை பார்க்க; see *maruttuva-vāḻai.*

[மருத்துவவாழை → மருத்துமாவாழை.]

மருத்துவக்கலைஞன் *maruttuva-k-kalaiñaṉ,* பெ.(n.) மருத்துவநூலோன் பார்க்க; see *maruttuva-nūlōṉ.*

[மருத்துவநூலோன்→ மருத்துவக் கலைஞன்.]

மருத்துவக்குறி *maruttuva-k-kuṟi,* பெ.(n.) நோயறிகுறி; clinical symptoms.

[மருத்துவம் + குறி.]

மருத்துவச்சி *maruttuvacci,* பெ.(n.) 1. மகப்பேறு பார்ப்பவள்; midwife. 2. பெண் மருத்துவர்; lady Doctor.

[மருந்து →மருத்து. மருத்துவன் (ஆ.பா.), மருத்துவச்சி (பெ.பா.).]

மருத்துவசாலை *maruttuva-šālai,* பெ.(n.) 1. மருத்துவக் கூடம்; medical hall. 2. மருத்துவமனை; hospital.

[மருத்துவம் + சாலை.]

மருத்துவதி *maruttuvadi,* பெ.(n.) தாமிர வருணியாறு (நாமதீப.325); the river *Tāmiravaruṇi.*

மருத்துவநாள் *maruttuva-nāḷ,* பெ.(n.) இரவை நாள் (பிங்.); the first naksatra aswini.

[மருத்துவம் + நாள்.]

மருத்துவநூல் *maruttuva-nūl,* பெ.(n.) 1. மருத்துவ அறிவியல்; medical science. *"உண்டால் நூறடி உலாவுதல் வேண்டுமென்று மருத்துவ நூல் கூறியதனை" (சீவக.2734, உரை).* 2. பேறு பார்த்தற்குரிய நூல்;treatise an midwifery (mod.).

[மருத்துவம் + நூல்.]

மருத்துவநூலோன் *maruttuva-nūlōṉ,* பெ.(n.) மருத்துவன் (திவா.); physician.

[மருத்துவம் + நூலோன்.]

மருத்துவப்பதம் *maruttuva-p-padam,* பெ.(n.) மாற்று செய்யக்கூடியதாகிய நோயின் நிலைமை; condition of being amenable to medical treatment, as an early stage of the disease. *"மருத்துவப்பத நீங்கினா ளென்னும் வார்த்தை படுவதன் முன்" (திவ்.பெரியாழ்.3, 7, 10).*

[மருத்துவம் + பதம்.]

மருத்துவப்பயிற்சி *maruttuva-p-payiṟci,* பெ.(n.) 1. மகப்பேற்றுக்குப் பயிற்சி; midwifery (சா.அக.). 2. மருத்துவப் படிப்பிற்குப் பிறகு எடுத்துக் கொள்ளும் பயிற்சி; practising as house surgeon.

[மருத்துவம் + பயிற்சி.]

மருத்துவப்பெண் *maruttuva-p-peṇ,* பெ.(n.) மருத்துவச்சி பார்க்க; see *maruttuvacci.*

[மருத்துவச்சி → மருத்துவப்பெண்.]

மருத்துவப்பேறு *maruttuva-p-pēṟu,* பெ.(n.) சிற்றூர் மருத்துவனுக்கு இறையிலியாக விடப்பட்ட நிலம் (S.I.I.ii.43); land granted free to the village physician.

[மருத்துவம் + பேறு.]

மருத்துவம்[1] *maruttuvam,* பெ.(n.) 1. மருத்துவம்; practice of medicine. 2. மருந்து; medicine. 3. மாற்று; remedy. *"எங்கட்பிணி தவிர்த்து வழுவா மருத்துவமாவன..... ஐயாறனடித்தலமே" (தேவா. 292, 5).* 4. பேறுபார்க்குந் தொழில்; midwifery (mod.).

[மரு→மருந்து→மருத்து →மருத்துவம்.]

மருத்துவம்[2] *maruttuvam,* பெ.(n.) ஒருவகை யாழ்; a kind of lute. *"மருத்துவப் பெயர் பெறும் வானைக் கருவி" (கல்லா.81).*

மருத்துவமலை *maruttuva-malai,* பெ.(n.) குமரி மாவட்டத்தில் நாகர்கோயிலிலிருந்து 8 கல் தொலைவில் உள்ள, நாராயண குரு பல காலம் வாழ்ந்த, மருத்துவ குணமுள்ள மலை (சி.பெ.அக.); a hill, with many medicinal herbs, situated 8 km from Nagarkoil, where saint Narayana guru lived for many years.

[மருத்துவம் + மலை.]

மருத்துவமுறைஉணவு *maruttuvamuṟai-uṇavu,* பெ.(n.) மருந்துக்கிசைந்த உணவு பார்க்க; see *marundu-k-kišainda-uṇavu.*

[மருந்து → மருத்து → மருத்துவர்.]

மருத்துவர் *maruttuvar,* பெ.(n.) 1. நோய் கண்டறிந்து மருத்துவம் செய்பவர்; medical practitioner. 2. அச்சுவினி தேவர்; the twin physicians of svarga. *"மருத்துவ ரிருவோர்" (திருவிளை. திருமண.85).*

[மருந்து → மருத்து → மருத்துவர்.]

மருத்துவர்நாள் *maruttuvar-nāḷ*, பெ.(n.) மருத்துவநாள் (நாமதீப.104) பார்க்க; see *maruttuva-nāḷ*.

[மருத்துவநாள் → மருத்துவர்நாள்.]

மருத்துவரை *maruttu-varai*, பெ.(n.) மருந்துச் செடிகளடங்கிய மலை, சஞ்சீவி மலை; mountains containing valuable medicinal plants (சா.அக.).

[மருந்து →மருத்து + வரை. வரை = மலை.]

மருத்துவவாழை *maruttuva-vāḻai*, பெ.(n.) வாழை வகை (யாழ்ப்.); a kind of plantain.

மருத்துவறை *maruttuvaṟai*, பெ.(n.) மகப் பேற்றறை; labour room.

[மருத்துவம் + அறை.]

மருத்துவன்[1] *maruttuvaṉ*, பெ.(n.) நோய் தீர்க்க பண்டுவம் செய்பவர்; physician. *"மருத்து வனாய்நின்ற மாமலை வண்ணா" (திவ்.பெரியாழ்.5, 3, 6).*

[மரு →மருந்து→மருத்து →மருத்துவன்.]

மருத்துவன்[2] *maruttuvaṉ*, பெ.(n.) மருத்துவான் பார்க்க; see *maruttuvāṉ*. *"மருத்துவன் றனைச் சசியொடு துரந்து" (கந்தபு. அவைபுகு.98).*

மருத்துவன்றாமோதரனார் *maruttuvaṉ-ṟāmōdaraṉār*, பெ.(n.) கடைச்சங்கப் புலவருள் ஒருவர் (புறநா.); a poet of the Third *Saṅgam*.

[மருத்துவன் + தாமோதரனார்.]

மருத்துவனாணை *maruttuvaṉ-āṇai*, பெ.(n.) நோயரிடம் உண்மையாக நடந்து கொள்வதாகவும், தப்பு வழியில் நடந்து கொள்ளாமலிருப்பதாகவும் ஆணை மேற்கொளல்; oath taken by physician promising to treat patients to the best of his knowledge ability and not to hurt them nor behave in wrong ways - Hippocratic oath (சா.அக.).

[மருத்துவன் + ஆணை.]

மருத்துவாகம் *maruttu-vāgam*, பெ. (n.) 1. நெருப்பு; fire. 2. புகை; smoke (சா.அக.).

மருத்துவான் *maruttuvāṉ*, பெ.(n.) இந்திரன்; Indiran. *"மருத்துவா னுருவமாறி வந்தவா றுணர் கிலாதான்" (பாரத. அருச்சுனன்றவ.69).*

மருத்துவி *maruttuvi*, பெ.(n.) மருத்துவஞ் செய்பவள்; female physician. *"ஆருயிர் மருத்துவி துன்னிய வென்னோய் துடைப்பா யென்றலும்" (மணிமே.17, 15).*

மறுவ. மருத்துவச்சி

[மருத்துவன்(ஆ.பா.)→மருத்துவி (பெ.பா.).]

மருத்துவிச்சி *maruttuvicci*, பெ.(n.) மருத்துவச்சி (யாழ்.அக.) பார்க்க; see *maruttuvacci*.

[மருத்துவச்சி → மருத்துவிச்சி.]

மருத்தெண்ணெய் *marutteṇṇey*, பெ.(n.) மருந்தெண்ணெய் (வீரசோ.தொகை.1, உரை) பார்க்க; see *marunteṇṇey*.

[மருந்தெண்ணெய் →மருத்தெண்ணெய்.]

மருதக்கருப்பொருள் *maruda-k-karu-p-porul,* பெ.(n.) மருத நிலத்தில் உற்பத்தியாகும் பொருள்கள்; men, animals and other things of the agricultural tracts.

[மருதம் + கருப்பொருள்.]

மருதக்கிழவன் *maruda-k-kilavan,* பெ.(n.) 1. மருத நிலத் தலைவன்; chief of an agricultural tract. 2. இந்திரன்; Indiran, as the presiding deity of marutam.

[மருதம் + கிழவன்.]

மருதங்கிளி *marudaṅ-kili,* பெ.(n.) கிளி வகை (யாழ்.அக.); a species of parrot.

[மருதம் + கிளி.]

மருதணி[1] *marudaṇi,* பெ.(n.) மருதம், 2 (யாழ்.அக.) பார்க்க; see *marudam.*

[மருதம் → மருதணி.]

மருதணி[2] *marudaṇi,* பெ.(n.) மருதோன்றி பார்க்க; see *marutōṉṟi.*

[மருதோன்றி → மருதாணி → மருதணி (இ.வ.).]

மருதத்திணை *maruda-t-tiṇai,* பெ. (n.) மருதம், 2 பார்க்க (இலக்.வி.391, உரை); see *marudam.*

[மருதம் + திணை.]

மருதத்துப்பெருந்துறை *marutattu-p-perunduṟai,* பெ.(n.) வைகையாற்றின் நீராடு துறையாகிய திருமருதமுன்றுறை (ஐங்குறு. 75); a bathing ghat of the vaigai at Madurai.

[மருதத்து + பெருந்துறை.]

மருதந்துவர் *marudan-tuvar,* பெ.(n.) புத்தத் துறவிகளின் ஆடைகளைத் தோய்ப்பதற் குரிய ஒரு வகைச் சாயம்; myrtle dye, used in dyeing cloth for use by Buddist monks.

[மருதம் + துவர்.]

மருதநாதன் *maruda-nātaṉ,* பெ.(n.) இந்திரன் (நாமதீப.61); Indiran, as lord of the agricultural tract.

[மருதம் + Skt.நாதன். மருதநிலத்துத் தலைவன்.]

மருதநிலப்பறை *maruda-nila-p-paṟai,* பெ.(n.) மருத நிலத்திற்குரிய பறை (இறை.1, 18, உரை); drum of the agricultural tract.

[மருதநிலம் + பறை.]

மருதநிலம் *maruda-nilam,* பெ.(n.) மருதம்,2 பார்க்க; see *marudam.*

[மருதம் + நிலம்.]

மருதநிலவேந்தன் *marudanila-vēndaṉ,* பெ.(n.) மருதநாதன் (சூடா.) பார்க்க; see *maruda-nādaṉ.*

[மருதநிலம் + வேந்தன்.]

மருதப்பறை *maruda-p-paṟai,* பெ.(n.) மருத நிலப்பறை பார்க்க; see *maruda-nila-p-paṟai.*

[மருதநிலப்பறை → மருதப்பறை.]

மருதபிரான் *marudapirāṉ,* பெ.(n.) பட்டினத்தாரின் மகன் (சி.பெ.அக.); son of Pattinathar.

மருதம் *marudam,* பெ.(n.) 1. மருது பார்க்க; see *marudu.* *"கரைசேர் மருதமேறி" (ஐங்குறு.74). "இருள்புனை மருதின் இன்நிழல் வதியும்" (நற்.330:5).* 2. ஐந்திணையு ளொன்றான வயலும் வயல் சார்ந்த இடமும் (தொல். பொருள்.6); agricultural tract one of ai-n-tinai q.v. 3. அகத்திணை ஏழனுளொன் றானதும் ஊடியுங் கூடியும் போகம் நுகர்வதுமான ஒழுக்கம்; love action in agricultural tracts, consisting of sexual union after sulks, one of seven aga-t-tiṉai. *மருதஞ் சான்ற மருதத் தண்பணை" (சிறுபாண்.186).* 4. (இசை) மருத நிலத்துக்குரிய காலைப் பண் வகை; morning melody -type peculiar to agricultural tracts. *"மாலை மருதம் பண்ணி.... வரவெமர் மறந்தனர்" (புறநா.149).* 5. வயல்; paddy field.

மருதம்பாடியஇளங்கடுங்கோ *marudam-pāḍiya-iḷaṅkaḍuṅgō,* பெ.(n.) இலக்கியப் புலமை பெற்ற சேர அரசன்; a Chera king who had made poems. *செங்காயபன் உறய் பெருங்கடுங்கோ மகன் ளங்கடுங்கோ ளங்கோ ஆக அறுத்த கல் (புகளூர் கல்வெட்டு) (அகநானூறு.96, 176, நற்றிணை 50 ஆகிய பாடல்களைப் பாடிய சேரவரசர்).*

மருதமரம் *maruda-maram,* பெ.(n.) மருது பார்க்க; see *marudu.*

[மருது →மருதமரம்.]

மருதமலை *maruda-malai,* பெ.(n.) கோயம்புத்தூருக்கு (கோவன்புத்தூர்) வடமேற்கே மேற்கு மலைத் தொடரில் முருகன் கோயில் அமைந்துள்ள மலைத்தலம் (சி.பெ.அக.); a hill station on the western ghats north west of Coimbatore, where there is a temple for Lord Muruga.

மருதயாழ் *maruda-yāḻ,* பெ.(n.) 1. மருத நிலத்துக்குரிய யாழ் வகை (இறை.1, பக்.18); a lute peculiar to agricultural tracts. 2. மருதம்[4] (பிங்.) பார்க்க; see *marudam.*

[மருதம் + யாழ்.]

மருதயாழ்த்திறம் *maruda-yāḻ-t-tiṟam,* பெ.(n.) (இசை.) நவிர், வடுகு, வஞ்சி, செய்திறம் என நால்வகைப்பட்ட மருதப் பண் வகை (பிங்.); secondary melody - types of the marutappan, of four kinds viz., *navir, vaḍugu, vañcicey-tiṟam.*

[மருதயாழ் + திறம்.]

மருதயாறு *maruda-yāṟu,* பெ.(n.) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள உடையார்பாளையம் வட்டத்திலோடும் ஒரு சிற்றாறு; an brackish stream in *Uḍaiyār-pāḷaiyam* Taluk in Perambalur (Dt.). *"மருதயாற்றின் தெற்கும்" (தொல். சொல். 398).*

[மருதம் + யாறு.]

மருதர் *marudar,* பெ.(n.) எழுவகைக் காற்றுகள்; the seven kinds of winds. *"மருதரும் வசுக்களும்" (திவ். திருவாய்.10, 97).*

மருதவேந்தன் *maruda-vēndaṉ,* பெ.(n.) மருதநாதன் (யாழ்.அக.) பார்க்க; see *maruda-nādaṉ.*

மருதவைப்பு *maruda-vaippu,* பெ.(n.) மருதம், 2 பார்க்க; see *marudam.* *"மரமனார் மருதவைப்பில்.... இடை மருதிடங் கொண்டாரே" (தேவா.543, 1).*

மருதாணி *marutāṇi,* பெ.(n.) மருதோன்றி பார்க்க; see *maru-tōṉṟi.*

[மருதோன்றி→மருதாணி.]

மருதாறு *marutāṟu,* பெ.(n.) அரியலூர் வட்டத்தில் இருந்த ஓர் ஆறு; a river in the Ariyalur taluk. *"தாந் வேண்டும் பயிர் செய்து மருதாற்றில் கரைகொண்ட இடங்களில் கமுகுநின்ற நிலம்" (ஆவணம் 10-ii (3).).*

மருதி *marudi,* பெ.(n.) சிலப்பதிகாரத்தில் வரும் கதை மகள் (சி.பெ.அக.); a character in the epic silappadhikaram.

மருதி *marudi,* பெ.(n.) மருது பார்க்க; see *marudu.*

மருது *marudu,* பெ.(n.) மருத மரம்; maruta tree.

வகைகள் : 1. பிள்ளை மருது அல்லது வெண்மருது; 2.கருமருது அல்லது கருப்பு மருது; 3. செம்மருது; 4. பூ மருது; 5. சூலமருது அல்லது பேய்க் கடுக்காய்; 6. குல மருது; 7. நீர் மருது; 8. வெள்ளை மருது;9. ஆற்று மருது அல்லது மருதை; 10. கலி மருது; 11. வடமருது; 12. புலவை மருது; 13. அட மருது.

மருதுமேற்புல்லுருவி *marudumēṟ-pulluruvi,* பெ.(n.) ஒருவகைச் செடி; a parasitic plant growing on marudu.

[மருதுமேல் + புல்லுருவி.]

மருதூணி *marutūṇi,* பெ.(n.) மருதோன்றி பார்க்க; see *maru-tōṉṟi.*

[மருதோன்றி→ மருதாணி→ மருதூணி (கொ.வ.).]

மருதை *marudai,* பெ.(n.) ஆற்று மருது; a kind of marudu tree on bank of the river.

'இதனின்று வடித்தெடுக்கப்படும் நீர்மம் குருதியழுத்த நோய்க்கு மருந்தாய்ப் பயன்படும்'.

மருதோன்றி *marutōṉṟi,* பெ.(n.) 1. செடி வகை; henna, 1 sh. Lawsonia alba. *"துறைச் சினறுவிரன் மருதோன்றி".* 2. முள்ளி; nail dye.

[முல்→மல்→மர்→மரு = கலக்கும் நறுமணம். மரு + தோன்றி.]

மருந்தம் *marundam,* பெ.(n.) நஞ்சு; poison.

[மருந்து→மருந்தம் = மருந்தாகப் பயன்படும் நஞ்சு (வே.க.4:41)..]

மருந்தனபானம் *marundaṉu-pāṉam,* பெ.(n.) மருந்துடன் பருகுவது; that which is taken along with the medicine, such as honey sugar, ghee, butter etc. (சா.அக.).

மருந்தாண்டர் *marundāṇḍar,* பெ.(n.) திருவான்மியூர் இறைவன் பெயர்; God name of *Tiruvānmiyūr. "திருவான்மியூருடையார் மருந்தாண்டாற்கு வைத்த திருநந்தா விளக்கு...." (செ.மா.கல்.-1967/137).*

மருந்திடல் *maruntiḍal,* பெ.(n.) 1. வயப்படுத்தும் மருந்து கொடுக்கை; administering a philter or love-podian. 2. கருவுற்றுள்ள பெண்ணுக்கு ஐந்தாம் மாதத்தில் ஐந்து பச்சிலைகளின் சாற்றை நாத்தூணார் பிழிந்து கொடுக்கும் சடங்கு; ceremony on an auspicious day in the fifth month of pregnancy, when the sister-in-law of the

pregnant woman extacts juice from the leaves of five plants and gives it to her to drink.

[மருந்து + இடல்]

மருந்திடுகள்ளி *maruntiḍu-kaḷḷi,* பெ.(n.) வசிய மருந்திடுபவள் (வின்.); intriguing woman who uses philters.

[மருந்திடு + கள்ளி.]

மருந்திடுபித்தம் *maruntiḍu-pittam,* பெ.(n.) இடு மருந்தாலேற்படும் பித்த நோய்; a disease created by iḍu-marundu.

[மருந்திடு + பித்தம்.]

மருந்திழை-த்தல் *maruntiḻai-,*4 செ.கு.வி. (v.i.) மருந்து உரைத்தல்; mixing or rubbing pills or medicine with the vehicle.

[மருந்து + இழை-.]

மருந்திற்காதி *marundiṟ-kādi,* பெ.(n.) வில்வம்; bale tree.

மருந்தின்வீறு *marundiṉ-vīṟu,* பெ.(n.) மருந்தின் வேகம்; the virulence or severity of medicine.

[மருத்து + இன் + வீறு.]

மருந்தின்வேகம் *marundiṉ-vēgam,* பெ.(n.) மருந்தினாலேற்பட்ட அழற்சி; irritation caused by the virulence of medicine.

[மருந்து + இன் + வேகம்.]

மருந்தீடு *marundīḍu,* பெ.(n.) மருத்தீடு (யாழ்.அக.) பார்க்க; see *maru-t-tīḍu.*

[மருத்து + இடு→ ஈடு. மருந்திடு→ மருந்தீடு.]

மருந்தீடுகள்ளி *maruntīḍu-kaḷḷi,* பெ.(n.) மருந்திடுகள்ளி பார்க்க; see *maruntiḍu-kaḷḷi.*

[மருந்திடுகள்ளி → மருந்தீடுகள்ளி.]

மருந்தீடுபித்தம் *maruntīḍu-pittam,* பெ.(n.) மருந்தீட்டினா லுண்டாகும் அடிவயிற்று வலி, தூக்கமின்மை; sleeplessness and pain in the lower abdomen caused by *maruntīḍu.*

மருந்து[1] *marundu,* பெ.(n.) 1. நோய் தீர்க்கும் பொருள் (குறள், அதி.95); medicine. *"ஆசை நோய்க்கு மருந்துமுண்டாங் கொலோ" (கம்பரா. மிதிலைக்.80). "விருந்தின் தீநீர் மருந்தும் ஆகும்" (நற்.53:8).* 2. மாற்று; remedy. *"மருந்தின்று மன்னவன் சீறில்" (கலித்.89).* 3. வயப்படுத்தும் மருந்து; philter, love-potion. 4. அமுதம்; nectar, ambrosia. *"கடல் கலக்கி மருந்து கைக்கொண்டு" (கல்லா.41, 26).* 5. சோறு; boiled rice. *"இருமருந்து விளைக்கு நன்னாட்டுப் பொருநன்" (புறநா.70).* 6. குடிநீர் (புறநா.70); drinking water. 7. இனிமை; sweetness. *"மருந் தோவா நெஞ்சிற்கு" (கலித்.81).* 8. வெடிமருந்து; gun powder. 9. முள்ளுக் கடம்பு; holly leaved berberry. 10. புதற்புல் என்னும் புல்வகை (அக.நி.); a kind of grass.

ம. மருன்னு; தெ. மந்து; க. மர்து.

[முல் → மல் → மர் → மரு. மருவுதல் = கலந்திருத்தல், தழுவுதல். மரு→மருகு = தவனம் என்னுஞ் செடி. மரு→மருந்து (வே.க. 4:41). மருந்து = நோய் தீர்க்கும் பொருள். மருந்தாகும் வேரும் தழையும் பெரும்பாலும் மணம் மிக்கிருப்பதால் நோய் நீக்கும் பொருள் மருந்தெனப்பட்டது).]

மருத்துவ வேரும் தழையும் அவற்றால் செய்யப்பட்ட கலவைகளும் பொதுவாகச் சிறப்பான நறுமண முடைமையால் மருந்து எனப்பெயர் பெற்றன. மரு என்பது நன்மணம். மருக்கொழுந்து என்னும் உலக வழக்கையும், "மருவார் கொன்றை" (தேவா. 530:1) என்னும் செய்யுள் வழக்கையும் நோக்குக.

மரு – மருந்து. சிறந்த மருந்துத் தழைகள் எல்லாம் மலைகளில் இருப்பதாலும், மலைகளில் வாழும் சித்தரே அவற்றைப் பற்றிய அறிவில் தேர்ச்சி பெற்றிருந்ததாலும், தமிழக மருத்துவ அகரமுதலி மலையகராதி என்றும் தமிழ மருத்துவம் சித்த மருத்துவம் என்றும் பெயர் பெற்றன (தி.ம.அதி.95).

மருந்து² *marundu,* பெ.(n.) உடம்பின் இயக்கத்திற்காக வேண்டிய உதவியைத் தரவும் நோயைக் கண்டித்தும் அல்லது வலுவைக் குறைத்தும் பழைய நிலைக்காவது அல்லது முன்னைவிட வலுவுண்டாகவாவது செய்யும் பொருள்; a substance that helps to alleviate or erradicate the disease, gives strength to the body and normalizes the function of the body.

வகைகள் : 1. அடி மருந்து – சவர்க்காரம்; 2. வடி மருந்து – சாறாயம்; 3. குடி மருந்து – கஞ்சா; 4. இடி மருந்து – வெடியுப்பு.

மருந்துஏறு–தல் *marundu-ēṟu-,*5 செ.கு.வி. (v.i.) மருந்தை உடம்பு ஏற்றுக் கொள்ளுதல்; accept the medicine.

[மருந்து + ஏறு–,.]

மருந்துக்கடை *marundu-k-kaḍai,* பெ.(n.) மருந்து விற்குமிடம்; chemist's shop, shop where medicinal drugs are sold.

[மருந்து + கடை.]

மருந்துக்கலப்பு *marundu-k-kalappu,* பெ.(n.) பல மருந்து சேர்க்கை; mixture.

[மருந்து + கலப்பு.]

மருந்துக்கள்ளி *marundu-k-kaḷḷi,* பெ.(n.) ஆடவரை வயப்படுத்துவதற்காக மருந்திடும் பெண்; an intriguing woman using philters for men.

மறுவ. மருந்திடுகள்ளி

[மருந்து + கள்ளி. கள்ளன் (ஆ.பா.) → கள்ளி (பெ.பா.).]

மருந்துக்கிசைந்தஉணவு *marundu-k-kiśainda-uṇavu,* பெ.(n.) மருத்துவ முறை உணவு (பத்திய உணவு); prescribed diet for a patient.

[மருந்துக்கிசைந்த + உணவு.]

மருந்துக்குணம் *marundu-k-kuṇam,* பெ.(n.) மருந்தின் தன்மை; the therapeutic effect of medicine, quality or effect of medicine.

[மருந்து + குணம்.]

மருந்துக்குக்கூட *marundukku-k-kūḍa,* வி.எ.(adv.) கொஞ்சமும்; even a little. *"மருந்துக்குக்கூட அவன் உண்மை பேசுவானில்லை" (உ.வ.).*

[மருந்துக்கு + கூட.]

மருந்து என்பது மிகக் குறைந்த அளவிலேயே கொடுக்கப்பெற்று பல பெரும் நோய்களைத் தீர்க்கவல்லது. குறைவான அளவு என்பதை 'மருந்துக்குக் கூட' என்ற சொல்லினைக் குறிக்கிறது.

மருந்துக்கும் *marundukkum,* பெ.(n.) மருந்துக்குக்கூட பார்க்க; see *marundukku-k-kūḍa.* *"மருந்துக்கு மெய்ம்மொழி புகன்றிடேன்" (தாயு. ஆனந்தமான.9).*

[மருந்துக்குக்கூட → மருந்துக்கும்.]

மருந்துக்கூட்டு *marundu-k-kūṭṭu,* பெ.(n.) மருந்துச் சரக்குகளின் சேர்க்கை (M.L.); medicinal preparation.

[மருந்து + கூட்டு.]

மருந்துக்கும்கூட *marundukkum-kūḍa,* வி.எ.(adv.) மிகச்சிறிய அளவிற்கும் கூட (இல்லாத நிலை); even little amount.

மருந்துகாட்டம் *marundu-kāṭṭam,* பெ.(n.) மருந்தின் செயற்பாடு; severity of medicine.

[மருந்து + காட்டம்.]

மருந்துகூட்டு-தல் *marundu-kūṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) மருந்து கலத்தல்; dispensing.

[மருந்து + கூட்டு-.]

மருந்துகூட்டுவோன் *marundu-kūṭṭuvōṉ,* பெ.(n.) மருந்து கலப்போன்; compounder - dispensing chemist.

[மருந்து + கூட்டுவோன்.]

மருந்துகொள்(ளு)-தல் *marundu-koḷ-(ḷu)-,* 13 செ.குன்றாவி.(v.t.) மருந்துண்ணல்; to take medicine.

[மருந்து + கொள்(ளு)-.]

மருந்துகொடு-த்தல் *marundu-koḍu-,* 4 செ.குன்றாவி.(v.t.) மருந்து செலுத்துதல்; to administer medicine.

[மருந்து + கொடு-.]

மருந்துகொடுப்போன் *marundu-koḍup pōṉ,* பெ.(n.) மருத்துவன்; medical practitioner.

[மருந்து + கொடுப்போன்.]

மருந்துச்சத்து *marundu-c-cattu,* பெ.(n.) மருந்தின் சாறும்; essence of medicine the active principle of a drug or medicine.

[மருந்து + சத்து.]

மருந்துச்சரக்கு *marundu-c-carakku,* பெ.(n.) மருந்து செய்ய உதவும் பண்டம் (வின்.); drug.

[மருந்து + சரக்கு.]

மருந்துச்சாலை *marundu-c-cālai,* பெ.(n.) 1. மருந்துக்கடை பார்க்க; see *marundu-k-kaḍai.* 2. வெடிமருந்துக் கிடங்கு; gun-powder magazine.

[மருந்து + சாலை.]

மருந்துச்சிலை *marundu-c-cilai,* பெ.(n.) அஞ்சனக்கல்; sulphuret of antimony.

[மருந்து + சிலை. சிலை = கல்.]

மருந்துச்சீலை *marundu-c-cīlai,* பெ.(n.) காரச்சீலை; lint.

[மருந்து + சீலை.]

மருந்துச்சூடு *marundu-c-cūḍu,* பெ.(n.) மருந்தின் வேகத்தினால் உடம்பு அடையும் வெப்பம்; body becoming hot due to virulity of the medicine taken internally.

[மருந்து + சூடு.]

மருந்துசெய்-தல் *marundu-cey,* 1 செ. குன்றாவி.(v.t.) மருந்து உருவாக்குதல்; preparation of medicine.

[மருந்து + செய்-.]

மருந்துசெய்வோன் *marundu-ceyvōṉ,* பெ.(n.) மருந்தைக் கலந்து கொடுப்பவன்; compounder.

[மருந்து + செய்வோன்.]

மருந்துசேர்-த்தல் *marundu-cēr,* 4 செ.குன்றாவி. (v.t.) மருந்துகல-த்தல் பார்க்க; see *marundu-kala-.*

[மருந்து + சேர்-.]

மருந்துசேர்வை *marundu-cērvai,* பெ.(n.) 1. கலப்பு மருந்து; mixture. 2. சீலை மருந்து; plaster.

[மருந்து + சேர்வை.]

மருந்துண்டவாய்க்கிரை *marunduṇḍa-vāykkirai,* பெ.(n.) மருந்து சாப்பிட்டவுடன் மருந்தின் சுவையை மாற்றுவதற்காக, மருந்தின் தன்மையைக் கெடுக்காதபடி உட்கொள்ளும் மாற்றுப் பொருள்; substance later taking medicine so that the medicines bad taste may disappear.

[மருந்துண்டவாய்க்கு + இரை.]

அவை : கொட்டைப் பாக்குச் சீவல், தேன், திராட்சை, வெற்றிலைக் காம்பு, கிராம்பு, பச்சைக் கருப்பூரத் தூள் முதலியன.

மருந்துண்பான் *marunduṇbāṉ,* பெ.(n.) நோயாளன்; patient.

[மருந்து + உண்பான்.]

மருந்துணைச்சாதி *marunduṇai-c-cādi,* பெ.(n.) மருந்து; medicine.

மருந்துதக்கு-தல் *marundu-takku-,* 5 செ.குன்றாவி.(v.t.) கக்கலிக்காமல் மருந்தைச் செரித்துக் கொள்ளுதல்; to contain or retain medicine in the stomach without vomiting.

[மருந்து + தக்கு-.]

மருந்துதாக்கு-தல் *marundu-tākku-,* 5 செ.குன்றாவி.(v.t.) மருந்தை மேன்மேலும் பயன்படுத்துதல்; to administer too many medicines, to stuff the body with medicine.

[மருந்து + தாக்கு-.]

மருந்துநியமம் *marundu-niyamam,* பெ.(n.) நோய்க்கேற்ற மருந்தின் குறிப்பு; prescription.

[மருந்து + நியமம்.]

மருந்துநீர் *marundu-nīr,* பெ.(n.) மருந்து கலந்த நீர்; medicated water, lotion.

[மருந்து + நீர்.]

மருந்துநெடி *marundu-neḍi,* பெ.(n.) மருந்தின் நாற்றம்; the smell or strong odour of the medicine.

[மருந்து + நெடி.]

மருந்துப்புரை *marundu-p-purai,* பெ.(n.) மருந்துச்சாலை, 2 (நாஞ்.) பார்க்க; see *marundu-c-cālai.*

[மருந்து + புரை.]

மருந்துப்பொடி *marundu-p-poḍi,* பெ.(n.) மருந்துத்தூள்; medicinal powder.

[மருந்து + பொடி.]

மருந்துப்போக்கு *marundu-p-pōkku,* பெ.(n.) மருந்து செயற்படும் வகை; the way of medicine acts.

[மருந்து + போக்கு.]

மருந்துப்போதை *marundu-p-pōdai,* பெ. (n.) கஞ்சா, அபினியாலுண்டாகும் மயக்கம்; intoxication through ganja, opium, aristans and asauams.

[மருந்து + Skt. போதை.]

மருந்துப்போதைப்பழக்கம் *marundu-p-pōdai-p-paḷakkam,* பெ.(n.) போதை தரும் மருந்துக்கு அடிமையாகுகை; drug adict.

[மருந்து + Skt. போதை + பழக்கம்.]

மருந்துபாய்ச்சு-தல் *marundu-pāiccu-,* 5 செ.குன்றாவி.(v.t.) மருந்தை உடம்பில் ஊசி மூலம் ஏற்றுதல்; injecting the medicine.

[மருந்து + பாய்ச்சு-.]

மருந்துபிடி-த்தல் *marundu-piḍi,* 4 செ. குன்றாவி.(v.t.) மருந்தை உடம்பு ஏற்றுக் கொள்ளுதல்; individual susceptibility to the action of a particular drug.

[மருந்து + பிடி-,]

மருந்துபூசு-தல் *marundu-pūšu,* 5 செ. குன்றாவி.(v.t.) மருந்தை மேலுக்குப் பூசுதல்; to smear or anoit medicine.

[மருந்து + பூசு-.]

மருந்துபொடி-த்தல் *marundu-poḍi-,* 4 செ. குன்றாவி.(v.t.) மருந்தைத் தூளாக்குதல்; to powder the medicine.

[மருந்து + பொடி-.]

மருந்துபோடு-தல் *marundu-pōḍu,* 19 செ.குன்றாவி.(v.t.) 1. மருந்துவை- பார்க்க; see *marundu-vai-.* 2. பூச்சு மருந்து தடவுதல்; to apply medicine externally.

[மருந்து + போடு-,]

மருந்துரம் *marunduram,* பெ.(n.) மருந்தின் ஊட்டம்; essence or power of the medicine.

[மருந்து + உரம்.]

மருந்துருண்டை *marundurunḍai,* பெ.(n.) 1. கல்பம்; bolus. 2. மாத்திரை; pill.

[மருந்து + உருண்டை.]

மருந்துவை-த்தல் *marundu-vai-,* 4 செ. குன்றாவி.(v.t.) வயப்படுத்தும் மருந்திடுதல் (இ.வ.); to administer philter or love - potion

[மருந்து + வை-,]

மருந்துறை *marunduṟai,* பெ.(n.) வெகுட்டல் மருந்துகளை எளிதில் விழுங்குவதற்காகப் பயன்படுத்தும் மூடிய குழாய்போல் செய்த உறை; a soluble case for enclosing certain bitter and nauseous medicines.

[மருந்து + உறை.]

மருந்தெண்ணெய் *marundennney*, பெ.(n.) மருந்துச் சரக்குகள் கூட்டிக் காய்ச்சிய நெய்மம்; medicinal oil. *"குழவியீன்றவட் கருமருந் தெண்ணெயுங் கொடுத்து" (செவ்வந்தி. பு. தாயான.37).*

[மருந்து + எண்ணெய்.]

மருந்தெண்ணெய்ப்பதம் *marundennney-p-padam*, பெ.(n.) 1. மருந்தெண்ணெய் காய்ச்சும் போது அமையும் குழம்புப் பதம், கடுகுப்பதம், மந்தப் பதம், மெழுகுப் பதம், முறுகுப் பதம் என்ற ஐவகைப் பக்குவநிலை (வின்.); stage in boiling a medicinal oil when it is to be taken off the fire, of five kinds, viz., *kulambu-p-padam, kadugu-p-padam, manda-padam, melugu-p-padam, murugu-padam.* 2. நோய் எளிதில் பற்றக் கூடிய பலவீனமான உடல்நிலை; delicate health rendering a person liable to disease at the least exposure. 3. முன்கோபம்; excessive irritability of temper, extreme sensibility.

[மருந்தெண்ணெய் + பதம்.]

மருந்தெரி-த்தல் *marunderi-*, 4 செ. குன்றாவி.(v.t.) புடமிடல்; calcining.

[மருந்து + எரி-.]

மருந்தெழுது-தல் *marundeludu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கண்ணில் மருந்து தீட்டல்; application of medicine such as collyrium to the eye with a copper, silver or glass rod. 2. அக்கி காணில் செம்மண் பூசுதல்; application of red-ochre in erysepelas.

[மருந்து + எழுது-.]

மருநாதிப்பூடு *marunādi-p-pūdu*, பெ.(n.) சிறியாணங்கை; a plant.

மருநிலம் *maru-nilam*, பெ.(n.) நீரும் நிழலுமற்ற நிலம்; wilderness, sandy waste, desert. *"மலையு மறிகடலும் வனமும் மருநிலமும்" (கம்பரா.மூலபல.158).*

[மரு + நிலம். முல் →மல்→ மர்→ மரு. மருவுதல் = கலத்தல்]

மருப்பவம் *maruppavam*, பெ.(n.) ஒட்டொட்டிப் புல்; a kind of grass which sticks to the clothes.

மருப்பறுகு *maruppaṟugu*, பெ.(n.) கருப்பறுகு; black variety of dub grass.

மருப்பு *maruppu*, பெ.(n.) 1. விலங்கின் கொம்பு; horn of a beast. *"கொல்லேற்றின் மருப்புப் போன்றன" (புறநா.4.).* 2. யானைக் கொம்பு (பிங்.); elephant's tusk. *"அசனிவேக மதன் மருப்பூசியாக...... எழுதுவித்திடுவல்" (சீவக. 1121).* 3. யாழினுறுப்பு வகை; part of a lute. *"நல்லியாழ் மருப்பின்" (புறநா.242).* 4. மரக்கொம்பு (யாழ்.அக.); branch of a tree. 5. பிறை நிலவின் இருகோடு (இ.வ.); horns of crescent moon. 6. இஞ்சி (அரு.நி.); ginger.

மருப்புத்தாடி *maruppu-t-tādi*, பெ.(n.) யானைத் தந்தத்தால் செய்த விரற்கவசம்; ivory covering for the fingers, ivory gloves. *"புனைகதிர் மருப்புத்தாடி மோதிரஞ் செறித்து" (சீவக.2279).*

*[மருப்பு + தாடி.]

மருப்புத்திரன் maruppputtiraṉ, பெ.(n.) மருச்சுதன் (யாழ்.அக.) பார்க்க; see maru-c-cudaṉ.

மருபுகா marupugā, பெ.(n.) வாழை வகை (மலை.); a kind of plantain.

மருபூருகம் maru-pūrugam, பெ.(n.) 1. குழலா தொண்டை; common caper. 2. அலரி (இலக்.அக.); oleander.

மருமக்கட்டாயம் maruma-k-kaṭṭāyam, பெ.(n.) ஒருவனுடைய செல்வம் அவனுக்குப் பிறகு அவனுடைய மக்களுக்கு உரிமை யாகாது, மருமக்களுக்கு உரிமையாகும் என்பது மலையாள நாட்டின் வழக்கு (சி.பெ.அக.); a tradition of Kerala, where one's wealth is inherited by his son in law that sisters son, instead of his son.

[மருமக்கள் + தாயம் – மருமக்கட்டாயம்.]

மருமக்கள் marumakkaḷ, பெ.(n.) 1. தமக்குப் பிறந்தவர்களை மணம் புரிந்தவர்கள்; son in law or daughter in law. 2. ஒருவனுடைய உடன்பிறந்தாளின் மக்கள் அல்லது ஒருத்தியின் உடன் பிறந்தானின் மக்கள்; sister's children of a man or brother's children of a woman. *"மக்களே பெண்டிர் மருமக்கடாய் தந்தை" (அறநெறிச். 207).*

[முல் →மல் →மர் →மரு = மணமக்கள் பெண் வீட்டில் முதன்முறையாகக் கலந்துண்ணும் விருந்து. மரு + மகன் – மருமகன் (ஒருமை) →மருமக்கள் (பன்மை).]

மருமகப்பிள்ளை marumaga-p-piḷḷai, பெ.(n.) மருமகன் (C.G.)பார்க்க; see marumagaṉ.

[மருமகன் →மருமகப்பிள்ளை.]

மருமகள் marumagaḷ, பெ.(n.) 1. தம் மகனைத் திருமணம் செய்து கொண்டவள்; daughter in law. 2. ஒருவனுடைய உடன் பிறந்தாளின் மகள் அல்லது ஒருத்தியின் உடன் பிறந்தானின் மகள்; a man's sister's daughter or a woman's brother's daughter.

[மருமகன் (ஆ.பா.) →மருமகள் (பெ.பா.).]

மருமகன் marumagaṉ, பெ.(n.) 1. மகன் போலப் பொருந்தும் மகளின் கணவன்; son-in-law. *"மலைக்கு மருகனைப் பாடி" (திருவாச.9, 6).* 2. ஒருவனுடைய உடன் பிறந்தாள் மகன் அல்லது ஒருத்தியின் உடன் பிறந்தான் மகன்; a man's sister's son or a woman's brother's son. *"வானவரைப் பணி கொண்ட மருகாவோ" (கம்பரா. சூர்ப்பண.111).* 3. வழித் தோன்றல்; descendant, scion, member of a clan. *"சேரலர் மருக" (பதிற்றுப்.63, 16).*

மருமதாரை maruma-tārai, பெ.(n.) மருமம், 1, 2 பார்க்க; see marumam. *"மருமதாரையி னெரியுண்ட மகரங்கள்" (கம்பரா. வருணனைவழி.21).*

[மருமம் →மருமதாரை.]

மருமம் marumam, பெ.(n.) 1. உயிர் நாடியான உறுப்பு, உயிர்நிலை; vital part, as of the body. *"எங்குமருமத் திடைக்குளிப்ப" (பு.வெ.7, 23).* 2. தழுவும் மார்பு; chest. *"மருமத்தி னெறிவேல்" (கம்பரா.கையடை.11).* 3. முலை; breast. 4. விதைப்பை (அண்டகோசம்) (வின்.); testes. 5. மறை பொருள் (இரகசியம்) (சங்.அக.); secret. 6. உடம்பு; body. *"மந்தரவலியின் மருமம்" (ஞானா.59, 20).*

[முல் →மல் →மர் →மரு →மருமம் (வே.க. 4:39).]

மருமா *marumā*,பெ.(n.) மகளிர் கொண்டை வகை (வின்.); a mode of doing up women's hair.

மருமாட்டி *marumātti*,பெ.(n.) 1. வழித் தோன்றியவள்; female descendant. *"கலைமதிமருமாட்டி" (திருவிளை. திருமணப். 62).* 2. மருமகள் (நிகண்டு) பார்க்க see *marumagal*.

[மருமகன் = வழித்தோன்றல். மருமகன் → மருமாட்டி.]

மருமாதிக்கொழுந்து *marumādi-k-kolundu*,பெ.(n.) நிலத்துளசி; a plant.

மருமாப்போடு–தல் *marumā-p-pōdu-*,19 செ.குன்றாவி.(v.t.) மருமாக்கொண்டை முடித்தல் (வின்.); to dress the hair in a particular mode.

[மருமா + போடு–.]

மருமாதுளை *marumādulai*,பெ.(n.) கொடி மாதுளை; a creeper of cirton variety (சா.அக.).

மருமாலிகை *maru-māligai*, பெ.(n.) மான் மணத்தி (கஸ்தூரி); musk (சா.அக.).

மருமான் *maru-mān*,பெ.(n.) மருமகன் பார்க்க; see *marumagan*.

[மருமகன்→மருமான்.]

மருமூச்சு *maru-mūccu*, பெ.(n.) திருமணமாகி முதலிரவுக்குப் பின் மணமகள் பிறந்தகத்துக்குப் போகுஞ் சடங்கு (இ.வ.); ceremony of the bride's returning to her parent's house after nuptials (brāh).

[மரு + மூச்சு.]

மருவகங்காபாத்திரம் *maruva-gangā-pāttiram*,பெ.(n.) கழுதை புள்ளி செடி; a plant (சா.அக.).

மருவகத்தி *maruvagatti*, பெ.(n.) தோத கத்தி பார்க்க; see *tōda-katti*(சா.அக.).

மருவகம் *maruvagam*, பெ.(n.) 1. மருக் கொழுந்து (யாழ்.அக.) பார்க்க; see *maru-k-kolundu*.2. கடாரநாரத்தை (நாமதீப.283); seville orange. 3. மருக்காரை (மலை.) பார்க்க; see *maru-k-kārai*.

[மரு → மருவகம்.]

மருவல் *maruval*,பெ.(n.) அணைத்தல்; embracing.

[மரு = கலத்தல், தழுவுதல். மரு →மருவல்.]

மருவலர் *maruvalar*,பெ.(n.) மருவார் பார்க்க; see *maruvār*. *"மருவலர் புரமெரியினின் மடிதர" (தேவா.568, 4).*

[மருவார் →மருவலர்.]

மருவலார் *maruvalār*,பெ.(n.) மருவார் பார்க்க; see *maruvār*. *"மருவலார் தம் மதிலெய்ததுவும்" (தேவா.366, 3).*

[மருவார்→மருவலார்.]

மருவவலி *maruva-vali*,பெ.(n.) மார்பு நோய்; chest disease.

[மரு →மருமம் = மார்பு. மருமம் →மருவம் (திரிபு). மருவம் + வலி.]

மருவழை–த்தல் *maruvalai-*,4 செ.குன்றாவி. (v.t.) மணமாகி முதலிரவுக்குப் பின் மணமக்களைப் பெண் வீட்டுக்கழைத்தல்; to

invite the married couple from the bridegroom's house to the bride's, soon after their nuptials.

[மரு + அழை–. மரு = மணமக்கள் பெண்வீட்டில் முதன் முறையாகக் கலந்துண்ணும் விருந்து.]

மருவள்ளி *maruvaḷḷi,* பெ.(n.) வெற்றிலை வள்ளிக்கொடி; a creeper.

[மரு + வள்ளி. மரு = மணம்.]

மருவளி *maruvaḷi,* பெ.(n.) பாலை மரம்; palai tree (சா.அக.).

மருவார் *maruvār,* பெ.(n.) பகைவர்; enemies as disunited. *"மருவார்.... மூன்றுபுர மெய்தவில்லி" (தேவா.37, 11).*

மருவாரி *maruvāri,* பெ.(n.) பாலை (மலை.); silvery - leaved ape-flower.

மருவாலிகம் *maruvāligam,* பெ.(n.) பிரண்டை; a climber.

மருவாளி *maru-vāḷi,* பெ.(n.) 1. பச்சைக் கருப்பூரம் (மூ.அ.); refined camphor. 2. வைப்புச்சூடன் வகை (இ.வ.); a preparation of camphor.

[மரு = ஒன்றிலிருந்து இன்னொன்றோடு கலக்கும் மணம். மரு →மருவாளி.]

மருவிதழ் *maruvidaḻ,* பெ.(n.) பூவிதழ் (அரு.நி.); petal.

[மரு + இதழ்.]

மருவியகாந்தி *maruviya-gāndi,* பெ.(n.) பூனைக்கண்மணி (யாழ்.அக.); cat-eye.

மருவீட்டுச்சடங்கு *maru-viṭṭu-c-caḍaṅgu,* பெ.(n.)திருமணத்திற்குப்பின் மணமக்களைப் பெண்வீடு அல்லது பிள்ளை வீட்டுக்கு அழைத்துச் செல்லும் சடங்கு; ceremony of inviting the married couple to the bridegroom's or bride's house, as the case may be, soon after the marriage.

[மருவீடு + சடங்கு.]

மருவீடு *maruviḍu,* பெ.(n.) மருவீட்டுச் சடங்கு (இ.வ.) பார்க்க; see *maru-viṭṭu-c-caḍaṅgu.*

[மரு + வீடு.]

மருவு¹–தல் *maruvu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கலந்திருத்தல்; to combine, join together,. to be united together in affection. *"மருவார் சாயல்" (சீவக.725).* 2. வழக்கப்படுதல்; to arise or be evolved, as a custom. *"மரீஇய பண்பே" (தொல்.பொருள்.308).* 3. தோன்றுதல்; to appear. *"இச்சாஞானக் காரியம் காயம் பெற்றான் மருவிடும்" (சி.சி.2, 83).*

[முல்→ மல்→ மர்→ மரு→ மருவு.]

மருவு²–தல் *maruvu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கிட்டுதல் (சூடா.); to come near, to approach. 2. தழுவுதல்; to embrace, to adopt, accept, follow. *"மருவுமின் மாண்டா ரறம்" (நாலடி, 36).* 3. பயிலுதல்; to become accustomed to. *"பாத்தூண் மரீஇ யவனை" (குறள், 227).* 4. புணர்தல்; to have sexual inter-course with. *"வெம்புலைமாதர்... மருவும் வேட்கையான்" (பிரமோத்.4, 5).* 5. ஊழ்கித்தல் (தியானித்தல்); to meditate upon. *"கழல்களை மருவாதவர்மேல் மன்னும்*

பாவமே" (தேவா.501, 1). 6. பதித்தல்; to encase, set, as a gem. "கல்லை மருவிவைத்திருக்கிறது" (உ.வ.).

[முல்→ மல்→ மர்→மரு→மருவு.]

மருவு[3] *maruvu*, பெ.(n.) 1. மருவுகை; combining, following, embracing. "மருவினிய மறைப் பொருளை" (தேவா.1072, 6). 2. மரு[1], 1, 2, 4 (வின்.)பார்க்க; see *maru*. 3. மரு[1], 3 (இ.வ.) பார்க்க; see *maru*.

[மரு → மருவு.]

மருவு[4] *maruvu*, பெ.(n.) கண்ணோய் வகை; an eye disease marked by redness of the eye and watering.

மருவு[5] *maruvu*, பெ.(n.) பெண்வீட்டில் மணமக்கள் கலந்துண்ணும் முதல் விருந்து; the first feast to a couple in bride's house.

[மரு → மருவு.]

மருவுகா *maruvugā-*, பெ.(n.) புடலை; snake gourd.

மருவுண்ணுதல் *maruvuṇṇu-*, பெ.(n.) பெண்வீட்டாரால் மாப்பிள்ளை முதன்முறை விருந்தில் பணிவிடை பெறுகை; dining and receiving presents for the first time after marriage, as a bridegroom in the house of his bride's parents.

[மரு + உண்ணுதல்.]

மருவூர்ப்பாக்கம் *maruvūr-p-pākkam*, பெ.(n.) காவிரிப்பூம்பட்டினத்தின் ஒரு பகுதி; a part of *kāviri-p-pūmpaṭṭiṉam*. "மறுவின்றி விளங்கும் மருவூர்ப்பாக்கமும்" (சிலப்.5:39).

[மருவூர் + பாக்கம்.]

மருவேம்பு *maruvēmbu*, பெ.(n.) கறிவேம்பு; curry leaves tree.

மருள்[1](ளு)-தல் *maruḷ(ḷu)-*, 2 செ.கு.வி.(v.i.) 1. மயங்குதல்; to be confused, bewildered, deluded. "பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு மாலை படர்தரும் போழ்து" (குறள், 1229). 2. வெருவுதல்; to be afraid, to be timid. "சிறார் மன்று மருண்டு நோக்கி" (புறநா.46). 3. வியத்தல்; to wonder. "இவ்வேழுலகு மருள" (பரிபா.5:35). 4. ஒப்பாதல்; to be similar. "அணைமரு ளின்றுயில்" (கலித்.14).

க. மருள்

[முல்→மல்→மர்→மரு→மருள்.]

மருள்[2] *maruḷ*, பெ.(n.) 1. மயக்கம் (பிங்.); bewilderment of mind, confusion. "வெருவுறு மருளின்" (சீவக.2290), "இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி மாசறு காட்சி யவர்க்கு" (குறள், 352). 2. திரிபுணர்ச்சி; ignorance of right and wrong, mistaking one for another, delusion, illusion. "மருடீர்ந்த மாசறு காட்சியவர்" (குறள், 199). 3. வியப்பு; wonder. "மருள்பரந்த வெண்ணிலவு" (திணைமாலை. 96). 4. உன் மத்தம் (யாழ்.அக.); intoxication, madness. 5. கள் (யாழ்.அக.); toddy. 6. குறிஞ்சியாழ்த் திறம் எட்டனுள் ஒன்று (பிங்.); (Mus.) a secondary melody-type of the *kuriñci* class, one of eight *kuriñci-yāḻ-t-tiram* (q.v.). 7. மருளிந்தளம் பார்க்க; see *maruḷ-intaḷam*. "மாலின் வரவு சொல்லி மருள் பாடுதல்" (திவ்.நாய்ச்.9, 8). 8. எச்சம் எட்டனுள் பிறவி முதல் அறிவின்றி

மயங்கியிருக்கும் நிலை; congenital idiocy, one of eight kinds of eccam (q.v.). *"மாவும் மருளும்" (புறநா.28).* 9. பெருங் குரும்பை (மலை.); bowstring hemp. 10. புதர் (பிங்.); bush. 11. பேய் (பிங்.); imp, devil. 12. மருள் உட்புகல் (ஆவேசம்) (இ.வ.); possession, as by a spirit or deity. 13. புல்லுரு (வின்.); scarecrow.

[மரு →மருள்.]

மருள *maru!a,* பெ.(n.) ஓர் உவமவுருவு; a particle of comparison. *"காய்ப்ப மதிப்பத் தகைய மருள" (தொல்.பொருள்.286).*

மருளங்கிழங்கு *maru!an-ki!angu,* பெ.(n.) மருட்கிழங்கு; a kind of root.

மருளல் *maru!al,* பெ.(n.) 1. எழுத்திலா வோசை (திவா.); inarticulate sound. 2. பேசலா லெழுமொலி (வின்.); murmur of voices. 3. அச்சம்; fear. 4. மயக்கம் (வின்.); infatuation.

[மரு →மருள் →மருளல்.]

மருளன் *maru!an,* பெ.(n.) 1. அறிவு மயக்கமுள்ளவன்; bewildered person. *"பட்டப்பகற்பொழுதை யிருளென்ற மருளர்" (தாயு.கருணாகரக்.4).* 2. தெய்வப் புனை வுற்றவன் (இ.வ.); person under possession of a spirit or diety. 3. மதவெறி பிடித்தவன் (வின்.); fanatic.

[மருள் →மருளன்.]

மருளாளி *maru!ā!i,* பெ.(n.) 1. பேயாகப் புனைவு கொண்டு குறிசொல்லும் பூசாரி (இ.வ.); priest acting as a medium through whom a deity is supposed to foretell. 2. ஒருசார் சிறு தெய்வங்களை வழிபடுவோன் (இ.வ.); worshipper of certain minor gods. 3. சிற்றூர்த் தெய்வங்களின் அருள் ஏறி ஆடுபவர்கள்; to give or a cular responses while possessed by spirit.

[மருள் → மருளாளி.]

மருளி *maru!i,* பெ.(n.) 1. மருள், 1 பார்க்க; see *maru!. "மருளிகொண் மடநோக்கம்" (கலித்.14).* 2. அறிவு மயக்கமுள்ளவன்; person in bewilderment. *"மருளிதான் மயங்கி" (யசோதர.2, 42).*

[மருள் → மருளி.]

மருளிந்தம் *maru!indam,* பெ.(n.) மருளிந்த ராகம் (வின்.) பார்க்க; see *maru!inda-rāgam.*

மருளிந்தராகம் *maru!inda-rāgam,* பெ.(n.) பண்வகை (வின்.); (Mus.) a melody type.

மருளிந்தளம் *maru!-inda!am,* பெ.(n.) பண்வகை (திவா.); (Mus.) a melody - type.

மருளூமத்தை *maru!ūmattai,* பெ.(n.) ஊமத்தை வகை (பதார்த்த.273); burduck datura, xathium strumarium.

[மருள் + ஊமத்தை.]

மரூஉ *marūu,* பெ.(n.) 1. (இலக்.) இயல்பு வழக்கு மூன்றனுள் இலக்கணம் சிதைந்து மருவி வழங்குஞ் சொல் முதலியன (நன்.267); word or phrase in a corrupt or contracted form, sanctioned by usage, one of three *iyalpu-va!akku.* 2. நட்பு; friendship, intimacy. *"மரூஉச்செய் தியார்மாட்டுந் தங்கு மனத்தார்" (நாலடி, 246).*

[மர் →மரு →மரூஉ (வே.க.4:40).]

மரூஉச்சொல் *marūu-c-col,*பெ.(n.) மரூஉ, 1 (வின்.) பார்க்க; see *marūu.*

மரூஉத்தொகை *marūu-t-togai,*பெ.(n.) முன்பின்னாக வந்த ஆறாம் வேற்றுமைத் தொகை (பி.வி.19); transposition of nouns, in a possessive compound, as *mun-tāṉai.*

[மரூஉ + தொகை.]

மரூஉமொழி *marū-u-moḻi,*பெ.(n.) மரூஉ, 1 பார்க்க; see *mariu.*

[மரூஉ + மொழி.]

மரை[1] *marai,*பெ.(n.) 1. மான்வகை; sambur, Indian elk. *"எருமையு மரையும்" (தொல். பொருள்.571).* 2. கவயம்; bison, wild cow. *"மானாதல் மரையாதலாம்" (ஈடு.4, 1, 10).* 3. தவளை (திவா.); frog. 4. மணிக்குற்றம் (இ.வ.); a flaw in precious stones. 5. திருகுவகை; nut of a screw. 6. விளக்கின் திரியை ஏற்றவு மிறக்கவும் உதவும் திருகுள்ள காய் (Mod.); burner, in a chimney lamp.

[மல் →மர்→ மரை.]

மரை[2] *marai,* பெ.(n.) தாமரை; lotus. *"மரையிலையின் மாய்ந்தார் பலர்" (நாலடி, 359).*

மரைக்காயர் *marai-k-kāyar,*பெ.(n.) கடல் வாணிகத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பாக இசுலாமியர்கள்; muslim, trading in the shiper boat especially. *"பெரிய வகுப்பு அருணாசல பிள்ளையவர்கள் பெரிய தனத்தில் கலுத்தா மரைக்காயர் அருணாசல பிள்ளை கொண்டு" (தஞ்.மரா.செப்.50, 28–9).*

[மரக்கலராயர்→மரக்காயர்→மரைக்காயர்.]

மரக்கலம் ஏறி வணிகம் செய்தவர் மரக்கலாயர். இச்சொல் மரக்காயர், மரைக்காயர் என மாறியிருக்கலாம்.

மரைக்கிட்டி *marai-k-kiṭṭi,*பெ.(n.) வில் முடுக்கி; (C.E.M.) spanner.

[மரை + கிட்டி.]

மரைக்கிட்டித்தகடு *marai-k-kiṭṭi-t-tagaḍu,* பெ.(n.) மரைக்கிட்டி பார்க்க; (C.E.M.) see *marai-k-kiṭṭi.*

[மரைக்கிட்டி + தகடு.]

மரைக்குளிரி *marai-k-kuḷiri,*பெ.(n.) நீர்ச் சேம்பு அல்லது குளிரி; a plant - water archer.

மரைநீகம் *marai-nīgam,* பெ.(n.) தவளை (வின்.); frog.

மரைப்புண் *marai-p-puṇ,*பெ.(n.) தவளைப் புண், தவளைச் சொறி; toad skin.

மரையா *maraiyā,*பெ.(n.) கவயம்; wild-cow. *"மரையா மரல்கவர" (கலித்.6).*

[மரை + ஆ.]

மரையாடு *marai-y-āḍu,*பெ.(n.) ஆட்டு வகை (இ.வ.); a kind of sheep.

[மரை + ஆடு.]

மரையாணி *marai-y-āṇi,* பெ.(n.) திருகாணி; (mod.) screw nail.



[முல்– வளைதற் கருத்து. முல்→முர்→முரு→மரு →மரை = திருகு வகை. மரை + ஆணி.]

மரையான் *marai-y-āṉ*, பெ.(n.) மரையா பார்க்க; see *marai-y-ā*. "*மலைத்தலை வந்த மரையான்" (மலைபடு.331).*

[மரையா →மரையான்.]

மல்[1] *mal*, பெ.(n.) 1. வளம்; fertility, richnes. "*மற்றுன்று மாமலரிட்டு" (திருக்கோ.178).* 2. வருவாய் (சூடா.); income.

[முல் (பொருந்தற் கருத்து வேர்). முல்→மல். பல அணுக்கள் அல்லது உறுப்புகள் அல்லது பொருள்கள் பொருந்துவதால் (ஒன்று சேர்வதால்) திரட்சி அல்லது பருமை உண்டாகும் (ஒ.நோ.) "சேரே திட்சி" (தொல்.உரி.65). மிகுதியால் வளமும் பருமையும் வலிமையும் உண்டாகும்.]

மல்[2] *mal*, பெ.(n.) 1. வலிமை (பிங்.); strength. 2. மற்றொழில்; wrestling, boxing, as bringing into play one's strength. "*மல்லலைத் தெழுந்து வீங்கி" (சீவக.268).* 3. மல்லன், 1 பார்க்க; see *mallaṉ*. "*மல்லொடு கஞ்சனுந் துஞ்சவென்ற மணிவண்ணன்" (திவ்.பெரியதி. 11, 2, 3).* 4. கூத்துப்பதினொன்றனுள் கண்ணபிரான் மல்லனாய்ப் பாணாசுரனை வென்றாடிய கூத்துவகை (பிங்.); a dance of Krisha after wrestling with and vanquishing *Bāmāsura*, on of 11 *kūttu*, q.v. 5. பருமை; (j.) robustness, stoutness, corpulence. 6. மல்லுச்சட்டம் பார்க்க (இ.வ.); see *mallu-c-caṭṭam*

மல்[3] *mal*, பெ.(n.) 1. களிப்பிரண்டை; a variety of vitis quadrangularis. 2. முந்திரிப் பழம்; cashewnut fruit.3. உப்பு; salt.

மல்கல் *malkal*, பெ.(n.) பெருகல்; increasing.

மல்கா–த்தல் *malkā-*,12 செ.கு.வி.(v.i.) மல்லா–த்தல் (வின்.) பார்க்க; see *mallā-*,

[மல்லா–த்தல் →மல்காத்தல்.]

மல்காத்து–தல் *mal-kāṭṭu-*,5 செ. குன்றாவி. (v.t.) 1. கொடி முதலியவற்றைப் படரவிடுதல்; to set of lay, as a vine. 2. மல்லாத்து–தல் பார்க்க; see *mallāttu-*,

[முல் (பொருந்தற் கருத்து வேர்) மல்→மல்கு. மல்குதல் = அதிகரித்தல், மிகுதல், செழித்தல். மல்கு →மல்கா→மல்லா. மல்லாத்தல் = மலர்ந்தாற்போல் முகம் மேனோக்கிக் கிடத்தல். மல்கா→மல்காத்து (வே.க.4:28)..]

மல்கு–தல் *malgu*, 5 செ.கு.வி.(v.i.) 1. அதிகமாதல்; to increase. "*மணிநிரை மல்கிய மன்று" (பு.வெ.1, 13).* 2. நிறைதல் (திவா.); to be filled with, to abound. "*திசையாவு மல்கின்றே" (சீவக.1607).* 3. செழித்தல்; to grow, flourish. "*உயிரனைத்து மல்க மழைமுகி லானாய்" (தணிகைப்பு.இந்திர.21).*

[மல் →மல்கு (வே.க.4:28).]

மல்லகசட்டி *mallaga-šāṭṭi*, பெ.(n.) மல்ல செட்டி பார்க்க; see *malla-šeṭṭi*.

மல்லகசாலை *mallaga-šālai*, பெ.(n.) மற் போர் பயிலுங் கூடம் (வின்.); gymnasium or place for boxing and for other athletic exercises.

[மல் →மல்லகம் + சாலை.]

மல்லகதி *malla-gadi*, பெ.(n.) குதிரை யோட்டம் ஐந்தனுள் நான்கு காலையுந் தூக்கியோடும் ஓட்ட வகை (திவா.); galloping pace of a horse, one of five *acuva-kadi* (q.v.).

மல்லகம் *mallagam,* பெ.(n.) வாலுளுவை (மலை.); black - oil tree.

மல்லகை *mallagai,* பெ.(n.) மல்லிகை பார்க்க; see *malligai.*

[மல்லிகை → மல்லகை.]

மல்லசம் *mallašam,* பெ.(n.) மிளகு (சங்.அக.); pepper.

மல்லசெட்டி *malla-ceṭṭi,* பெ.(n.) மற்போர் புரியும் வகுப்பார் (வின்.); professional wrestlers and gymnasts.

மல்லதேவன் *malla-dēvaṉ,* பெ.(n.) வாணர் குல அரசன் (சி.பெ.அக.); a king of the Bana race.

[மல் →மல்லன் + தேவன்.]

மல்லம்[1] *mallam,* பெ.(n.) 1. மற்போர் (வின்.); wrestling, boxing. 2. வலிமை (வின்.); strength. 3. மல்லகதி (சூடா.) பார்க்க; see *mallagadi.* 4. கிண்ணம் (வின்.); cup, porringer. 5. அகன்ற தட்டம் (அக.நி.); plate. 6. கதுப்பு (யாழ்.அக.); cheek. 7. யாகசேடம் (யாழ்.அக.); remnant of oblation.

[மல் →மல்லம் (வே.க.4:29).]

மல்லம்[2] *mallam,* பெ.(n.) பள்ளியறை; bed-chamber. *"மயன்விதி யன்ன மணிக்காழ் மல்லத்து" (பெருங்.உஞ்சைக்.33, 103).*

மல்லமார்க்கம் *malla-mārkkam,* பெ.(n.) மல்லகதி பார்க்க; see *malla-kadi.* *"மல்லமார்க்க மயில் மார்க்கங் குரங்கு மார்க்கம்....... முயலின் மார்க்கம்" (திருவாலவா.28, 58).*

[மல்லகதி → மல்லமார்க்கம்.]

மல்யுத்தக்கை *malyutta-k-kai,* பெ.(n.) மற்போர்க்கை பார்க்க; see *maṟpōrkkai.*

[மல் + Skt. யுத்தம் + கை.]

மல்லயுத்தம் *malla-yuttam,* பெ.(n.) மற்போர் பார்க்க; see *maṟ-pōr.*

*[மல் + **Skt.** யுத்தம்.]*

மல்லர்[1] *mallar,* பெ.(n.) 1. கழனி வேலை செய்யும் குடியினர்; an working race dependant on agriculture. 2. மற்போர் புரிவோர்; wrestler.

[முல் (பொருந்தற்கருத்து வேர்) →மல். மல் = பெருமை, வளம், வலிமை. மல்→மல்லர்.]

மல்லர்[2] *mallar,* பெ.(n.) திருக்குறளுரை யாசிரியருளொருவர்; a commentator of the *kuṟaḷ.* *"மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர்" (தொண்டைமண்.சத.40, மேற்கோள்.).*

மல்லரங்கம் *malla-raṅgam,* பெ. (n.) மல்லக சாலை பார்க்க; see *mallaga-šālai.*

[மல் + அரங்கம்.]

மல்லரி *mallari,* பெ.(n.) பறை வகை (சங்.அக.); a kind of drum.

[முல் (பொருந்தற்கருத்து வேர்) →முல் →மல் →மல்கு. மல்குதல் = அதிகரித்தல், நிறைதல், செழித்தல். மல்கு→மல்கா→மல்லா. மல்லாத்தல் = மலர்ந்தாற்போல் முகம் மேனோக்கிக் கிடத்தல். மல்லார்→மல்லாரி = பரந்த பறை வகை, அகன்று பருத்தவள். மல்லாரி→மல்லரி (வே.க.4:28).]

மல்லல்[1] *mallal,* பெ.(n.) வலு; power, strength. *"மல்லன் மழவிடை யூர்ந்தாற்கு" (சிலப்.17, கொளு.3).*

[முல் →மல் = வலிமை, பெருமை. மல் → மல்லல்.]

மல்லல்[2] *mallal,* பெ.(n.) 1. மிகுதி (சூடா.); abundance. 2. செல்வம்; wealth. *"மல்லற்கேண் மன்னுக" (பரிபா.11, 121).* 3. வளம்; fertility, richness. *"மல்லல் வளனே" (தொல். சொல்.305).* 4. பொலிவு (சூடா.); elegance, brilliance. 5. அழகு; beauty. *"மல்லற்றன் னிறமொன்றில்" (திருக்கோ.58, பேரா.).*

[மல் →மல்லல் (வே.க.4:28).]

மல்லன் *mallaṉ,* பெ.(n.) 1. மற்போர் செய்வோன்; wrestler, pugilist. *"மறத்தொடு மல்லர் மறங்கடந்த" (பு.வெ.9, 4).* 2. பெருமையிற் சிறந்தோன் (பிங்.); great, famous man.

[முல் → மல் = பருமை, வளம், வலிமை. பல அணுக்கள் அல்லது உறுப்புகள் அல்லது பொருள்கள் பொருந்துவதால் (ஒன்று சேர்வதால்) திரட்சி அல்லது பருமை உண்டாகும். மிகுதியால் வளமும் பருமையால் வலிமையும் உண்டாகும். இருவர் அல்லது இரு படைகள் பொருந்தி அல்லது கூடிப் பொருவது போர். மல் →மல்லன் (வே.க.4:28).]

மல்லா-த்தல் *mallā-,* 12 செ.குன்றாவி.(v.t.) 1. மேல் முகமாகக் கிடத்தல்; to fall on the back, lie on the face. *"நரகத்தின் மல்லாக்கத் தள்ளி" (திருமந்.199).* 2. தோற்றுப் போதல் (இ.வ.); to fail, to be defeated.

[முல் (பொருந்தற்கருத்து வேர்) → மல்→ மல்கு→மல்கா→மல்லா = மலர்ந்தாற் போல் முகம் மேனோக்கிக் கிடத்தல் (வே.க.4:28).]

மல்லாக்கடி-த்தல் *mallā-k-kaḍi-,* 4 செ.கு.வி.(v.i.) மல்லா-, பார்க்க; see *mallā-. 'மல்லாக்கடித்துப் படுத்துக் கொண்டான்' (உ.வ.)*

[மல்லா-→மல்லாக்கடி-,.]

மல்லாக்குப்பறி-தல் *mallākku-p-paṟi,* 4 செ.கு.வி.(v.i.) மல்லா-, (யாழ்.அக.) பார்க்க; see *mallā-,*

[மல்லா →மல்லாக்குப்பறி-.]

மல்லாக்கொட்டை *mallā-k-koṭṭai,* பெ.(n.) நிலக்கடலை; ground nut.

[மணிலாக்கொட்டை→மல்லாக்கொட்டை (கொ.வ.).]

மணிலா தேயத்திலிருந்து கொண்டு வந்து பயிர் செய்யப்பட்டமையால் மணிலாக்கொட்டை என்று பெயர் அமைந்து, பேச்சு வழக்கில் மல்லாக்கொட்டை என வழங்கி வருகிறது எனலாம்.

மல்லாட்டம் *mallāṭṭam,* பெ.(n.) சண்டை; wrestling, quarrelling, fighting. *"விம்பு சொன்ன பேர்களுக்கு வந்தது மல்லாட்டம்" (அருட்பா.vi, நாமாவளி, 164).*

[மல் = போர். மல் + ஆட்டம்.]

மல்லாடல் *mallāḍal,* பெ. (n.) மல்[2], 4 பார்க்க (சிலப்.6, 49, உரை); see *mal.*

[மல் + ஆடல்.]

மல்லாத்து-தல் *mallāttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) முதுகு கீழாக முகம்மேலாகக் கிடக்கச் செய்தல்; to make a person or thing to lie on the back (w.).

[மல் → மல்கு → மல்கா → மல்லா → மல்லாத்து-தல்.]

மல்லாந்துபோ-தல் *mallāndu-pō-,* 8 செ.கு.வி.(v.i.) இறத்தல்; to die.

[மல்லாந்து + போ-தல்.]

மல்லாய் *mallāy,* பெ.(n.) மல்லை^{2}, 1 (வின்.) பார்க்க; see *mallai.*

[மல்லை → மல்லாய்.]

மல்லார்-தல் *mallār-,* 3 செ.கு.வி.(v.i.) மல்லா-, பார்க்க; see *mallā-. "மல்லார்ந்து கிடக்கிறான்" (உ.வ.).*

[மல்லா →மல்லார்-. (வே.க.4:28).]

மல்லாரி[1] *mallāri,* பெ.(n.) 1. பரந்த பறை வகை; a kind of large drum. 2. சண்டைக்காரி (வின்.); quarrelsome woman. *மானங் கெட்ட மல்லாரி (உ.வ.).*

[முல் (பொருந்தற்கருத்து வேர்) → மல்→ மல்கு→மல்கா→மல்லா→ மல்லார். மல்லார்தல் = பரத்தல், விரிதல், முகம் மேனோக்கிக்கிடத்தல். மல்லார்→மல்லாரி = பரந்த பறைவகை, அகன்று பருத்தவள் (வே.க.4:28).]

மல்லாரி[2] *mallāri,* பெ.(n.) 1. பண்வகை; a musical mode. 2. மல்லரி பார்க்க; see *mallari.*

[மல் → மல்லாரி.]

மல்லி[1] *malli,* பெ.(n.) 1. தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர் (திருக்கலம், காப்பு, உரை); an Arhat, one of 24 *tirttankarar.* 2. மல்லிகை பார்க்க; see *malligai.* 3. காட்டு மல்லிகை (வின்.); wild jasmine. 4. பேரா மல்லிகை (வின்.); single - flowered *Arabian Jasmine* tree.

மல்லி[2] *malli,* பெ.(n.) கொத்தமல்லி (கொ.வ.) பார்க்க; see *kotta-malli.*

[முல்→மல்→மல்லி = உருண்டு திரண்ட தவச மணியையுடையது.]

மல்லி[3] *malli,* பெ.(n.) பருத்துத் தடித்தவள் (யாழ்ப்.); stout, corpulent woman.

[முல் →மல்→மல்லி (வே.க.4:29).]

மல்லிகம் *malligam,* பெ.(n.) 1. மல்லிகை, 1 பார்க்க; see *malligai.* 2. பிரம்பு; swichy rattan. 3. மருளூமத்தை (யாழ்.அக.)பார்க்க; see *marul-ūmatta.*

மல்லிகிழான்காரியாதி *malli-kilāṉ-kāriyādi,* பெ.(n.) ஆவூர் மூலங்கிழாரால் பாடப்பெற்ற வள்ளல் (சி.பெ.அக.); a philontharopist, praised by *Avūr mūlaṉkilār. "மல்லிகிழான் காரியாதியைப் பாடியது" (புறநா.77).*

[மல்லி + கிழான் + காரியாதி. மல்லி என்பது திருவில்லிபுத்தூருக்கு அருகிலுள்ள ஊர். காரியாதி என்பது வள்ளலின் பெயர்.]

மல்லிகை *malligai,* பெ.(n.) 1. பூங்கொடி வகை; Himalayan heart leaved smooth jasmine, m.cl. *jasminum anestomosans. "மல்லிகை மௌவன் மணங்கமழ் சண்பகம்" (பரிபா.12:77).* 2. மகரந்த மல்லிகை (L.); musk jasmine. 3. குடமல்லிகை (பிங்.); Arabian jasmine. 4. எருமைமுல்லை; white - brectid jasmine. 5. விளக்குத்தண்டு (பிங்.); lamp stand, standard. 6. ஏணம் (வின்.); vessel, cup, goblet. 7. இரப்போர் கலம் (வின்.); mendicant's bowl.

மல்லிகை

மரமஞ்சள்

மந்தாரை



மருக்காரை

[மல்→மலர்→மலர்தல். மொட்டுவிரிதல். நன்கு விரிந்த மலர் வகை. மல்→மல்லி→ மல்லிகை. கை–சிறுமைப்பொருள் பின்னொட்டு.]

மல்லிகைப்பூவின் வகைகள்: 1. மல்லிகை, 2. காட்டு மல்லிகை (முல்லை), 3. பவள மல்லிகை (பவள்கால் மல்லிகை), 4. மரமல்லிகை, 5. வாடா மல்லிகை, 6. இளஞ்சார மல்லிகை, 7. சீனமல்லிகை, 8. இரங்கூன் மல்லிகை, 9. சீமை மல்லிகை (சிமிக்கிப்பூ), 10. வன மல்லிகை, 11. படர் மல்லிகை, 12. பேரா மல்லிகை, 13. கத்தூரி மல்லிகை, 14. நாக மல்லிகை, 15. சிறுமல்லிகை, 16. குடமல்லிகை, 17. ஊசி மல்லிகை, 18. கரு மல்லிகை, 19. செப்பு மல்லிகை, 20. சாதி மல்லிகை, 21. சிற்றாமல்லிகை, 22. கொடி மல்லிகை, 23. செம்மல்லிகை, 24. கிரி மல்லிகை, 25. பிச்சி (மல்லிகைப்பூ).



மல்லிகைச்சம்பா *malligai-c-camba,* பெ.(n.) நெல் வகை (பதார்த்த.807); a kind of paddy.

[மல்லிகை + சம்பா. மல்லிகைப் பூப்போன்ற வெண்ணிற அரிசியையுடைய நெல்.]

மல்லிகைநந்தவனம் *malligainandavanam,* பெ.(n.) மல்லிகைத்தோட்டம்; jasmine garden. *"சிவபிச்சன் செய்த மல்லிகை நந்தவனத்துக்கு காற் செய்யும்" (தெ.க. தொ.13, கல்.270–12).*

[மல்லிகை + நந்தவனம்.]

மல்லிகைமொட்டு *malligai-moṭṭu,* பெ.(n.) 1. மலராத மல்லிகைப்பூ; unblossomed jasmine. 2. மகளிர் தலையணி வகை; a gold ornament worn on the head by women. 3. மொட்டம்பு (அக.நா.9, உரை); blunt-edged arrow.

[மல்லிகை + மொட்டு.]

மல்லிகையரிசி *malligai-y-ariši,* பெ.(n.) உருளரிசி, தனியா; coriander seeds of coriandrum sativum.

[மல்லிகை + அரிசி.]

மல்லிக்கீரை *malli-k-kīram,* பெ.(n.) கொத்த மல்லிச் செடியின் தழை; corriander leaves.

[மல்லிகை + கீரை.]

மல்லிதாசி *malli-dāši,* பெ.(n.) பல்லி; lizard.

மல்லிநாதர்[1] *malli-nādar,* பெ.(n.) சமண சமயத்தின் பத்தொன்பதாவது தீர்த்தங்கரார்; the 19th *theerthangara* of Jainism.

மல்லிநாதர்[2] *malli-nādar,* பெ.(n.) மல்லி[1], 1 பார்க்க; see *malli.*

மல்லிபத்திரம் *malli-pattiram,* பெ.(n.) காளான் வகை (மூ.அ.); a mushroom.

மல்லுக்கட்டு[1]–தல் *mallu-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. மற்போர் புரிதல்; to wrestle, to scuffle. 2. பொருதல்; to qurrel. *"எதிர்மல்லுக்கட்டு மரையரைப் பாடவோ" (தனிப்பா.i, 266, 3).*

[மல் →மல்லு + கட்டு–.]

மல்லுக்கட்டு[2]–தல் *mallu-k-kaṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) கட்டாயப்படுத்துதல் (கொ.வ.); to force, compel. *நாள்தோறும்*

அவனைப் பள்ளிக்கு அனுப்புவதற்கு மல்லுக்கட்ட வேண்டியதாகியது.

[மல் →மல்லு + கட்டு–.]

மற்போர் போல் செய்து வலியுறுத்துதல்.

மல்லுக்குநிற்றல் *mallukku-niṟṟal,* பெ. (n.) அடமாக வலியுறுத்துதல்; forcing, compelling. *புதுச்சட்டை எடுத்துத் தந்தாலே போயிற்று என்று மல்லுக்கு நிற்கிறான்.*

[மல் →மல்லு + கட்டு–.]

மல்லுச்சட்டம் *mallu-c-caṭṭam,* பெ.(n.) குறுக்குவிட்டம்; cross-ties, braces (C.E.M.).

[மல்லு + சட்டம். முல்→ மல் = போர், சண்டை (மு.தா.172). சண்டையிட்டுக் கொள்வோரின் கைகள் குறுக்காயிருப்பது போன்றிருக்கும் சட்டம்.]

மல்லுச்செட்டி *mallu-c-caṭṭi,* பெ.(n.) மற்போர்புரியும் வகுப்பார் (வின்.); professional wrestlers and gymnasts.

[மல்→ மல்லு + செட்டி.]

மல்லுப்பிடி–த்தல் *mallu-p-piḍi-,* 4 செ. குன்றாவி.(v.t.) மல்லுக்கட்டு–, (வின்.) பார்க்க; see *mallu-k-kaṭṭu-,*

[மல்லுக்கட்டு–→ மல்லுப்பிடி–.]

மல்லூகம் *mallūgam,* பெ.(n.) புழு (சங்.அக.); worm.

மல்லை[1] *mallai,* பெ.(n.) 1. வளம்; richness. *"மல்லைப் பழனத்து" (பதினொ.ஆளுடை. திருவுலா.8).* 2. பெருமை; greatness. *"மல்லைச் செல்வ வடமொழி மறைவாணர்" (திவ்.திருவாய்.8, 9, 8).*

[மல்→ மல்லை (வே.க.4:29).]

மல்லை[2] *mallai,* பெ.(n.) 1. இரப்போர் கலம் (வின்.) (தைலவ.தைல.); medicant's begging bowl. 2. வட்டம் (பிங்.); circle.

[முல்→மல்→மல்லி = அகன்று தடித்தவள் (யாழ்ப்.). மல்→மல்லம் = அகன்ற தட்டம். மல்லம் →மல்லை.]

மல்லை[3] *mallai,* பெ.(n.) மாமல்லபுரம் (திருமங்கையாழ்வார் பாசுரம்); *Mamalla puram. "மல்லையங் கானன் முதல்வனுக்கு" (நந்திக்.3).*

[மாமல்லபுரம்→மாமல்லை→மல்லை. ஒ.நோ. தஞ்சாவூர்→தஞ்சை. கோவன்புத்தூர் (கோயம் புத்தூர்) →கோவை.]

மல்லை[4] *mallai,* பெ.(n.) தீப்பூண்டு பார்க்க; see *tī-p-pūṇḍu* (சா.அக.).

மல்லைக்கழுவி *mallai-k-kaḻuvi,* பெ.(n.) வேலைக்காரனுக்குட்பட்டுத் தாழ்ந்த வேலை செய்வோன் (வின்.); menial servant, as a plate washer.

[மல்லை = இரப்போர் உண்கலம். கல்லை + கழுவி. கழுவு→ கழுவி (தொழிற்பெயர்) இரப்போர் உண்கலம் கழுவித் தருவதைப் போன்ற இழிசெயல்.]

மல்வென்றி *mal-veṉṟi,* பெ.(n.) வாகைத் திணையுள் மற்போரில் வெற்றியைக் கூறும் ஒரு புறத்துறை (பு.வெ.12, 3); theme describing victory in a wrestling match, one of *vāgai-t-tiṇai.*

[மல் = மற்போர் மல் + வென்றி.]

மலக்கட்டு *mala-k-kaṭṭu,* பெ.(n.) மல வடைப்பு; constipation.

[மலம் + கட்டு.]

மலக்கட்டுஇசிவு *mala-k-kaṭṭu-iśivu,* பெ. (n.) மலச்சிக்கலாலுண்டாகும் இசிவு (சன்னி) வகை (வின்.); fix of apoplexy caused by constipation.

[மலக்கட்டு + இசிவு.]

மலக்கடி *mala-k-kaḍi,* பெ.(n.) மனக்கலக்கம் (வின்.); confusion of mind, bewilderment.

[மயக்கம் → மலக்கம் → மலக்கடி.]

மலக்கம் *malakkam,* பெ.(n.) 1. மலக்கடி பார்க்க; see *mala-k-kaḍi. "மலக்கமற்ற நம்மல்லமன்" (பிரபுலிங்.வசவண்ணர்.5).* 2. துன்பம்; distress, misery. *"உற்ற மலக்க முண்டாகினாக" (கம்பரா.இராவணன் களங். 18).* 3. மாறு; contrast, juxtaposition. *"நவரத்தினங்களாற் கட்டி இடை நிலங்களை... பொற்றகட்டாலே செறிய மலக்கமாகக் கட்டி" (சிலப்.3:117, உரை).*

[முல் → மல் → மல → மலகு → மலங்கு → மலக்கு → மலக்கம் (வே.க.4:37).]

மலக்கரி *malakari,* பெ.(n.) குறிஞ்சிப்பண் வகை; a melody type of the *kuriñji* class.

மலக்கழிச்சல் *mala-k-kaḻiccal,* பெ.(n.) வயிற்றுப் போக்கு (கொ.வ.); diarrhoea purging.

[மலம் + கழிச்சல்.]

மலக்கழிவு[1] *mala-k-kaḻivu,* பெ.(n.) மலம் இறங்குகை; alvine discharge.

[மலம் + கழிவு.]

மலக்கழிவு[2] *mala-k-kaḻivu,* பெ.(n.) மலமாகிய கழிவு; faeces.

[மலம் + கழிவு.]

மலக்கனம் *malakkaṉam,* பெ.(n.) 1. பொன்னம்பர்; amber of a gold colour or yellow colour. 2. ஒரு மூலப் பொருள்; a mineral described in Tamil medical science (சா.அக.).

மலக்கனல் *malakkaṉal,* பெ.(n.) மணிவகை (யாழ்.அக.); a kind of precious stone.

மலக்காப்பழம் *malakkā-p-paḻam,* பெ.(n.) பொன்னாங்காய்; soap nut (சா.அக.).

மலக்கிருமி *mala-k-kirumi,* பெ.(n.) மலப்புழு (வின்.) பார்க்க; see *mala-p-puḻu.*

[மலப்புழு → மலக்கிருமி. த. புழு > Skt. கிருமி.]

மலக்கு[1]**–தல்** *malakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) கலக்குதல்; to bewilder, as the mind, to disturb, confuse. *"மலக்க நாவுடை யேற்கு" (திவ்.திருவாய்.6, 4, 9).*

[மலங்கு → மலக்கு (வே.க.4:37).]

மலக்கு[2] *malakku,* பெ.(n.) மயக்கம்; confusion.

[மயக்கம் → மயக்கு → மலக்கு. ய > ல.]

மலக்குடல் *mala-k-kuḍal,* பெ.(n.) மலம் தங்குமிடம்; that portion of the bowels containing faeces.

[மலப்பை → மலக்குடல்.]

மலக்குண்(ணு)–தல் *malakkuṇṇu-,* 12 செ.கு.வி.(v.i.) கலக்கப்படுதல்; to be churned, to be troubled, to suffer, affliction. *"கண்ணன் கையான் மலக்குண்டு" (திருவிருத்.57).*

[மலங்கு → மலக்கு → மலக்குண்(ணு)–.]

மலக்கொழுப்பு *malakkoḻuppu,* பெ.(n.) மலத்துடன் கலந்து வெளிவரும் கொழுப்பு; excretio, stercorin (சா.அக.).

[மலம் + கொழுப்பு.]

மலங்கரை *malaṅgarai,* பெ.(n.) மலஞ்சரிவு (நாஞ்.) பார்க்க; see *malañ-carivu.*

மலங்கல் *malaṅgal,* பெ.(n.) 1. குளம்; tank. 2. மலங்கு பார்க்க; see *malaṅgu.*

[மலங்கு → மலங்கல்.]

மலங்கழி¹-தல் *malaṅ-kaḻi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. ஆணவ முதலிய மல நீங்குதல்; to be freed from the effects of *mu-m-malam.* 2. வயிற்றினின்று மலம் வெளியேறுதல்; (C.G.) to pass stools.

[மலம் + கழி-.]

மலங்கழி²-த்தல் *malaṅ-kaḻi-,* 4 செ. குன்றாவி.(v.t.) வயிற்றினின்று மலத்தை வெளியேற்றுதல் (வின்.); to pass excrement.

[மலம் + கழி-.]

மலங்காடு *malaṅ-kāḍu,* பெ.(n.) மலைப் பாங்கு; mountainous region.

[மலம் + காடு.]

மலங்காரை *malaṅ-kārai,* பெ.(n.) நஞ்சுண்டம்; cape jasmine.

மலங்கி *malaṅgi,* பெ.(n.) நுரை; form, froth (சா.அக.).

மலங்கு¹-தல் *malaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நீர் முதலியன குழம்புதல்; to be agitated, to be made turbid, to be perturbed. *"மலங்கி வன்றிரை.... பெயர்ந்து" (தேவா.130, 9).* 2. மனங் கலங்குதல்; to be confused, bewildered, to be distressed. *"ஒன்பது வாயிற் குடிலை மலங்க" (திருவாச.1, 55).* 3. பிறழ்தல்; to shake, move, tremble, as the eyes. *"நெடுங்கண் புருவங்கண் மலங்க" (சீவக.1067).* 4. கெடுதல்; to perish, to be ruined. *"கதிர் வேன் மலங்க" (சிவக.1613).* 5. ததும்புதல்; to be full to the trim, as tears in the eyes. *"கண்ணினீர் மலங்கும் பொலந் தொடி" (தஞ்சைவா.243).*

[முல் (பொருந்தற் கருத்து வேர்) → மல் → மல → மலகு → மலங்கு (வே.க.4:37).]

பல பொருள்கள் பொருந்திச் சேர்வதால் குழம்பலும் குழப்பமும் கலக்கமும் மயக்கமும் உண்டாகும். நீரும் மண்ணும் சேரின் கலங்கல் அல்லது கலுழி எனப்படுவதும், நீரும் பிறபொருளும் சேர்ந்து திண்ணமாயின் குழம்பு அல்லது குழம்பல் எனப்படுவதும், பகலும் இரவும் மயங்கும் (கலங்கும்) வேளை மசங்கல் (மயங்கல்) எனப்படுவதும் காண்க.

மலங்கு² *malaṅgu,* பெ.(n.) விலாங்கு மீன்; true eel. *"மலங்கு மிளிர் செறு" (புறநா.61).*



மலங்குகண் *malaṅgu-kaṇ,* பெ.(n.) கண்ணோய் வகை; a kind of eye disease.

[மலங்கு + கண்.]

மலச்சிக்கல் *mala-c-cikkal,* பெ.(n.) மலவடைப்பு; constipation.

[மலம் + சிக்கல்.]

மலச்சிக்கு *mala-c-cikku,* பெ.(n.) மலச்சிக்கல் பார்க்க; see *mala-c-cikkal.*

மலசகிதர் *mala-šagidar,* பெ.(n.) மும்மலத்தோடு கூடியவர் (வின்.); person in whom all the three malams are present, opp, to mala-rakitar.

*[மலம் + **Skt.** சகிதர்.]*

மலசம் *malašam,* பெ.(n.) 1. தமிழும் மலையாளமும் கலந்த மொழி பேசுபவரும் கோயமுத்தூர் மாவட்டக் காடுகளில் வாழ்பவருமான மலைச்சாதியர்; a forest tribes, seeking a mixture of *Tamiḷ* and *Malayāḷam,* in *Coimbatore* District (E.T.iv.374). 2. கரையான் பார்க்க (யாழ்.அக.); see *karaiyāṉ.*

மலசலம் *mala-šalam,* பெ.(n.) மல மூத்திரம்; excrement and urine.

[மலம் + சலம்.]

மலசலாதி *mala-šalādi,* பெ.(n.) மலசலம் (வின்.) பார்க்க; see mala-šalam.

[மலசலம் →மலசலாதி.]

மலசனாதி *mala-šaṉādi,* பெ.(n.) வெள்ளைப் பூண்டு; garlic (சா.அக.).

மலசுத்தி *mala-šutti,* பெ.(n.) வயிற்றினின்று மலங்கழிகை (வின்.); evacuation of bowels.

*[மலம் + **Skt.** சுத்தி. சுத்தம்→சுத்தி = வயிற்றில் உள்ள மலத்தை முழுவதும் வெளியேற்றி, சுத்தப்படுத்துதல்.]*

மலஞ்சரிவு *malañ-carivu,* பெ.(n.) மலையின் சரிவு (நாஞ்.); slope of mountains.

[மலை + சரிவு = மலைச்சரிவு→மலஞ்சரிவு.]

மலஞ்சாரை *malañ-cārai,* பெ.(n.) மலைச் சாரை பார்க்க (M.M.751); see *malai-c-cārai.*

[மலைச்சாரை→மலஞ்சாரை.]

மலட்டா *malaṭṭā,* பெ.(n.) ஈனாப்பசு; sterile cow. *"மலட்டாவைப் பற்றிக் கறவாக்கிடப்பர்" (சடகோபரந்.37).*

[மலடு →மலட்டு + ஆ.]

மலட்டாக்குதம்பு *malaṭṭā-k-kudambu,* பெ.(n.) கருஞ்சீரகம் (சா.அக.); black cumin (சா.அக.).

மலட்டாறு *malaṭṭāṟu,* பெ.(n.) காடுகளி லோடுவதும் விரைவில் நீர் வற்றுவதுமான ஆறு (இ.வ.); jungle - stream as drying up for the most part of year.

[மலடு →மலட்டு + ஆறு.]

மலட்டுப்புழு *malaṭṭu-p-puḻu,* பெ.(n.) மலடாக்கும் புழு வகை (வின்.); worm said to cause sterility in woman.

[மலட்டு + புழு.]

மலட்டுப்பூச்சி *malaṭṭu-p-pūcci*, பெ.(n.) மலட்டுப்புழு (வின்.) பார்க்க; see *malaṭṭu-p-puḻu*.

[மலட்டுப்புழு →மலட்டுப்பூச்சி.]

மலடன் *malaḍaṉ*, பெ.(n.) மகப்பெறாதவன்; sterile man. *"மக்கட் பெறாத மலடனல்லையேல் வாகண்டாய்" (திவ். பெரியாழ். 1, 4, 4).*

[மலடு → மலடன்.]

மலடி *malaḍi*, பெ.(n.) மகப்பெறாதவள்; sterile woman. *"குழந்தையையுயிர்த்த மலடிக் குவமை கொண்டாள்" (கம்பரா. உருக்காட்.65).*

[மலடு → மலடி.]

மலடிமாந்தம் *malaḍi-māndam*, பெ.(n.) எட்டு மாந்தங்களில் ஒன்றாகிய குழந்தை நோய் வகை (வின்.); a disease in children, one of *eṭṭu-māndam*.

[மலடி + மாந்தம்.]

மலடு *malaḍu*, பெ.(n.) 1. கருவுருவாமை (மூ.அ.); sterility, barrenness, as a women. 2. ஈனாதவ–ன்–ள்–து; sterile person or animal. *"மலடு கறந் தெய்த்த வாறே" (தேவா.697, 6)*

[மல் → மலடு.]

மலத்திரயம் *mala-t-tirayam*, பெ.(n.) மும்மலம்; the three impurities of the soul. *"மலத்திரய பூரிபை" (திருப்பு.1266).*

[மலம் + Skt. திரயம்.]

மலத்தீர்வு *mala-t-tīrvu*, பெ.(n.) மும்மலம் நீங்குகை (சி.போ.பா.பக்.2); getting rid *mummalam*.

[மலம் + தீர்வு.]

மலத்துவாரம் *mala-t-tuvāram*, பெ.(n.) மலத்துளை பார்க்க; see *mala-t-tuḷai*.

*[மலம் + துவாரம். **Skt.** துவாரம் த. துளை.]*

மலத்துளை *mala-t-tuḷai*, பெ.(n.) உடலினின்று மலங்கழியும் வழி (C.E.M.); anus.

[மலம் + துளை.]

மலத்தூசிதம் *mala-t-tūšidam*, பெ.(n.) அழுக்கு; dirt.

[மலம் + தூசிதம். தூசி + தம். 'தம்' பின்னொட்டு.]

மலத்தைத்தள்ளிச்சி *malattai-t-taḷḷicci*, பெ.(n.) கற்றாழை ; aloes (சா.அக.).

மலத்தையறுப்போன் *malattai-y-aṟuppōṉ*, பெ.(n.) கடுக்காய் (சங்.அக.); chebulic myrobalam.

[மலம் + அத்து + அறுப்போன்.]

மலதிதம் *malatidam*, பெ.(n.) கஞ்சாங் கோரை; white basil.

மலதிரம் *malatiram*, பெ.(n.) மலதிதம் பார்க்க; see *malatidam*.

மலநாசினி *malanāšiṉi*, பெ.(n.) 1. பிரமிப்பூடு; prostate plant. 2. சாதி பத்திரி; mace (சா.அக.).

*[மலம் + **Skt.** நாசினி.]*

மலநானம் *malanāṉam*, பெ.(n.) தூய்மையான விடத்தில் எண் விரலுக்குக் கீழாக மண்ணையெடுத்து மந்திரஞ் சொல்லி உடம்பிற்றேய்த்து நீரில் மூழ்குகை (தத்துவப். 45); bathing in water after smearing

one's body with earth taken from a clean spot about six inches below the surface.

மலநீர் *malanīr*, பெ.(n.) மூத்திரம்; urine. *"வெண்ணீர் செந்நீர் மலநீர்" (தாயு. சச்சிதா.2).*

[மலம் + நீர்.]

மலப்பருத்தி *mala-p-parutti*, பெ.(n.) நீண்ட மரவகை (இலதி.); coral flowered ordure tree l.tr. structure colorala.

[மலை + பருத்தி.]

மலப்பற்றம் *mala-p-parram*, பெ.(n.) 1. மலபந்தம், 1 பார்க்க; see *mala-bandam*. 2. பந்தம், 2 (யாழ்.அக.) பார்க்க; see *bandam*.

[மலம் + பற்றம். பந்தம் →பற்றம்.]

மலப்பற்று *mala-p-parru*, பெ.(n.) 1. மலபந்தம், 1 பார்க்க (வின்.); see *mala-bandam*. 2. மலபந்தம், 2 பார்க்க (யாழ். அக.); see *mala-bandam*.

[மலம் + பற்று.]

மலப்பாதை[1] *mala-p-pādai*, பெ.(n.) மலத் துளை பார்க்க; see *mala-t-tuḷai*.

[மலம் + பாதை.]

மலப்பாதை[2] *mala-p-pādai*, பெ.(n.) மலைப்பாதை பார்க்க; see *malai-p-pādai*.

[மலைப்பாதை→ மலப்பாதை (கொவ.).]

மலப்பு *malappu*, பெ.(n.) கடவுள் திருமுன்னர் ஆடும் ஒருவகைக் கூத்து; a kind of dance before a deity. *"எம்பெருமானா ரடியாள் மலப்பு சேவிக்க" (கோயிலொ.80).*

மலப்புழு *mala-p-puḻu*, பெ.(n.) கீரைப்பூச்சி (வின்.); maw-worm, as living in excreta.

[மலம் + புழு.]

மலப்பை *malappai*, பெ.(n.) 1. மலம் தங்குமிடம் (சங்அக.); that portion of the bowels containing faeces. 2. மலபாண்டம் பார்க்க; see *mala-pāṇḍam*.

[மலம் + பை.]

மலபந்தம் *mala-pandam*, பெ.(n.) 1. மும் மலத்தாற் கட்டுண்கை; bondage of the soul in *mu-m-malam*. 2. மலச்சிக்கல் பார்க்க; see *mala-c-cikkal*.

[மலம் + Skt.பந்தம்.]

மலபந்தன் *mala-pandaṉ*, பெ.(n.) பாசக் கட்டுள்ளவன் (யாழ்.அக.); one who is subject to the bondage of mu-m-malam.

[மலம் + Skt.பந்தன்.]

மலபந்தனஞ்செய்–தல் *mala-pandaṉañ-cey-*,1 செ.குன்றாவி.(v.t.) மலத்தைக் கட்டுப்படுத்துதல்; to constipate.

மலபரிபாகம் *mala-paripāgam*, பெ.(n.) மலந்தேய்தற்குரிய காரணங்களோடு கூடிய நிலை; stage of a soul when its three malam meet with the causes of their removal. *"மலபரிபாகம் வரவும்" (தாயு. மலைவாள்.6).*

மலபாகம் *mala-pāgam*, பெ.(n.) மலபரி பாகம் (வின்.) பார்க்க; see *mala-paripāgam*.

மலபாண்டம் *mala-pāṇḍam*, பெ.(n.) உடல்; body. *"கிருமி சேர்ந்த மல பாண்டமோ" (தாயு.தேசோ.3).*

[மலம் + பாண்டம்.]

மலபாதை *mala-pādai,* பெ.(n.) மலங்கழிக்கு முன் வயிற்றுள் உண்டாகும் தொல்லை (இ.வ.); urgency to ease urenary sensation before evacuation.

[மலம் + Skt.உபாதை.]

மலம் *malam,* பெ.(n.) 1. பவ்வீ; encrement, faeces. *"சலமலம் விடுக்கும் போதும்" (காஞ்சிப்பு.ஒழுக்க.7).* 2. வெண்ணீர் மாதவிடாய் மூத்திர முதலிய உடல் மாசு (சூடா.); excretions of the body as semen, menstrual blood, urine, ordue, ear wax, phlegm, sweat. 3. அழுக்கு (பிங்.); dirt, filth. 4. வண்டல் (வின்.); dregs, sediment. 5. துரு (யாழ்.அக.) rust. 6. மும்மலம்; the three impurities of the soul. 7. கரிசு (யாழ்.அக.); sin. 8. மலநானம் பார்க்க; see *mala-nanam. "நானமோ ரெண் வகையா மலசலம்" (தத்துவப்.45).* 9. கற்பூரம் (யாழ்.அக.); camphor.

மலம்பருத்தி *malam-parutti,* பெ.(n.) மலைப் பருத்தி (வின்.) பார்க்க; see *malam-parutti.*

[மலைப்பருத்தி →மலப்பருத்தி →மலம்பருத்தி.]

மலம்பாதை *malam-pādai,* பெ.(n.) மலைவழி (நாஞ்.); path in hilly region.

[மலைவழி→மலைப்பாதை→மலப்பாதை → மலம்பாதை.]

மலம்பாம்பு *malam-pambu,* பெ.(n.) மலைப் பாம்பு (வின்.) பார்க்க; see *malai-p-pāmbu.*

மலம்பிஞ்சு *malam-piñju,* பெ.(n.) மலைப் பிஞ்சு (இ.வ.) பார்க்க; see *malai-p-piñju.*

[மலைப்பிஞ்சு → மலம்பிஞ்சு (கொ.வ.)]

மலமல—த்தல் *mala-mala-,* 11 செ.கு.வி. (v.i.) மலமலவென்றொலித்தல்; to produce the sound of bubbling of flowing abundantly.

மலமலெனல் *mala-malenal,* பெ.(n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு; onom. expression signifying bubbling, as a boiling water. 2. கண்ணீர் பெருகுதற் குறிப்பு; flowing abundantly as of tears.

மலமாசம் *mala-māšm,* பெ.(n.) அதிகமாதம்; intercalary month.

மலமாதிப்பூடு *mala-mādi-p-pūḍu,* பெ.(n.) 1. கத்திரி; plant brinjal. 2. கண்டங் கத்திரி; a thorny shurb.

மலமூத்திரம் *mala-mūttiram,* பெ.(n.) மலசலம் பார்க்க; see *mala-šalam.*

[மலம் + மூத்திரம்.]

மலயக்கால் *malaya-k-kāl,* பெ.(n.) 1. தென்றற் காற்று; the south wind, as blowing from the hills. *"மருங்கலை மலய மாருதமும்" (பாரத. குருகுல.81).* 2. பண்வகை (சங்கீத. பால.); a secondary melody - type. 3. மலய மாருதம் (திவா.) பார்க்க; see *malaya-mārudam.*

[மலயம் + கால். மலை→ மலயம். கால் = காற்று.]

மலயக்கோ *malaya-k-kō,* பெ.(n.) பாண்டியன்; *Pāṇḍiya* king. *"நிகரிலா மலயக் கோவே" (திருவாலவா.44, 2).*

[மல் →மலயம் + கோ.]

மலயசம் *malayašam,* பெ.(n.) 1. சந்தனம்; sandalwood tree. 2. மலயமாருதம், 1 பார்க்க; see *malaya-mārudam.*

மலயத்துருமம் *malaya-t-turumam*, பெ.(n.) சந்தன மரம்; sandal wood tree (சா.அக.).

மலயத்துவசன் *malaya-t-tuvašaṉ*, பெ.(n.) தடாதகையின் தந்தையாகிய பாண்டிய அரசன்; a *Pāṇḍiya*king, father of *Taḍātakai*. *"தென்னன் மலயத்துவசன்" (கடம்ப. பு. இலீலா.3).*

மலயம்[1] *malayam*, பெ.(n.) பொதியமலை; Mount *Potiyam*. *"ஓங்குயர் மலயத் தருத்தவ துனுரைப்ப" (மணிமே.1, 3).*

[மலை→மலையம் →மலயம். மலையென்பது பொதியையே குறிக்கும்.]

மலயம்[2] *malayam*, பெ.(n.) சந்தனம் (மலை.); sandal - wood tree.

[மலை→ மலையம்→ மலயம்.மலையில் விளைவது.]

மலயமாருதம் *malaya-mārudam*, பெ.(n.) மலையக்கால் பார்க்க; see *malaya-k-kāl*.

[மலயம் + Skt. மாருதம்.]

மலயமான் *malaya-māṉ*, பெ.(n.) திருக் கோவலூர் மன்னர்கள் வெளியிட்ட நாணயம்; a coin issued by the kings of *tiru-k-kōvalūr*.



திருக்கோவலூர் மன்னர்கள் தம் குடிப்பெயரான "மலயமான்" என்று பெயர் பொறித்த நாணயங்களை வெளியிட்டுள்ளனர். இரண்டு நாணயங்கள் கிடைத்துள்ளன. செப்பு; செவ்வகம்; 2 செ.மீ. X 2.3 செ.மீ அளவு; 3.9 நிறை (கிராம்) எடை, செப்பு, சதுரம் 1.5 செ.மீ. X செ.மீ. அளவு; 2 நிறை (கிராம்) எடை. 'மலயமா' தெரிகிறது. இரண்டு நாணயங்களிலும் 'லை' இல்லை. 'ல' மட்டுமே உள்ளது.

மலயமுனி *malaya-muṉi*, பெ.(n.) அகத்திய முனிவர்; sage Agattiyar, as living in Mt.Malayam.

[மலையமுனி →மலயமுனி.]

மலயன் *malayaṉ*, பெ.(n.) திருக்கோவலூர் மன்னர்கள் வெளியிட்ட நாணயம்; a coin issued by the kings of *tiru-k-kōvalūr*.



இரண்டு நாணயங்கள் கிடைத்துள்ளன. செப்பு; 1.9 செ.மீ. X 2 செ.மீ அளவு; 4.3 நிறை (கிராம்) எடை. மலயன் எழுத்துகள் தெரிகின்றன.

செப்பு; 1.6 செ.மீ. X 1.7 செ.மீ. அளவு; 3.5 நிறை (கிராம்) எடை. மலயன் எழுத்துகள் காணப்படுகின்றன.

[மலையன் →மலயன்.]

மலயானிலம் *malaya-ṉilam,* பெ.(n.) மலயக்கால் பார்க்க; see *malaya-k-kāl.* *"மலயானிலம் வந்து மோதுமுன்னே" (அஷ்டப்.அழகரந்.41).*

[மலயக்கால் →மலயானிலம்.]

மலர்[1]–தல் *malar-,* 2 செ.கு.வி.(v.i.) 1. பூவின் மொட்டவிழ்தல்; to open as a flower; to bloom. *"வரை மேற்காந்தள் மலராக்கால்" (நாலடி, 283).* 2. பரத்தல்; to be expanded, extended or spread. *"வையகமலர்ந்த தொழின்முறை யொழியாது" (பதிற்றுப்.88, 1).* 3. மனமகிழ்தல்; to be cheerful, to beam with joy. *"வரன்கைதீண்ட மலர்குலமாதர் போல்" (பெரியபு.தடுத்தாட்.161).* 4. தோன்றுதல் (திவா.); to appear, to rise to view. 5. எதிர்தல் (சூடா.); to happen, befall. 6. அகலுதல்; to be wide open, as a gate. *"மலரத் திறந்த வாயில்" (குறிஞ்சிப்.203).* 7. மிகுதல்; to abound, become full. *"செழுமல ராவி நீங்கு மெல்லையில்" (சீவக.3079).*

[முல் → மல் → மல்லார் → மலர்–தல் (வே.க.4:29).]

மலர்[2]–த்தல் *malar-,*2 செ.குன்றாவி.(v.t.) 1. மலரச் செய்தல்; to cause to flower. 2. வாய்ப்புறம் மேலாக நிமிரச் செய்தல்; to turn the face or mouth upward, as of a pot. *"மண்டை மலர்க்குநர் யாரென" (புறநா.103).*

[முல் → மல் → மல்லார் → மலர்–த்தல் (வே.க.4:29).]

மலர்[3] *malar,* பெ.(n.) 1. பூ; full-blown flower, blossom. 2. தாமரை; lotus. *"மலர்மிசை யேகினான்" (குறள், 3).* 3. ஒரு பேரெண் (பதுமம்); a great number. *"ஆயிர மலருடையாழி மாப்படை" (கம்பரா.நிகும்ப.57).* 4. படைக்கலக் கருவியின் மேற்குமிழ்; nut or head, as of a spike, knob, as of a scimitar. *"குற்றுடைவாள் ஆசுங்கண்டமும் மலரும் பொன்கட்டிற்று" (S.I.I.ii, 211).* 5. வெண்பாவின் இறுதிச் சீர் வாய்பாடுகளுள் ஒன்று (காரிகை.செய்.5, உரை); a formula of a foot of one nirai, accurring as the last cīr, in the last line of a veṇpā.

[முல் →மல் →மலர்.]

மலர்[4] *malar,* பெ.(n.) மலசகிதர் பார்க்க; see *mala-cagitar.* *"இன்றிந்நூன் மும்மை மலர்க்கு" (சி.போ.12, இறுதிச் செய்யுள்), "இருமலர்" (திருமந்.498).*

மலர்க்கடை *malar-k-kaḍai,* பெ.(n.) பூ விற்குங் கடை; flower-bazaar. *"மலர்க்கடை திறப்பவும்" (பெருங்.உஞ்சைக்.33, 83).*

[மலர் + கடை.]

மலர்க்கணையோன் *malar-k-kaṇaiyōṉ,* பெ.(n.) காமன் (பிங்.); *Kāmaṉ,* as having flowers for arrows.

[மலர் + கணையோன். பூக்களை அம்புகளாக உடையவன்.]

மலர்க்கா *malat-k-kā,* பெ.(n.) பூந்தோட்டம், பூஞ்சோலை (வின்.); flower garden.

[மலர் + கா.]

மலர்க்காம்பு *malar-k-kāmbu,* பெ.(n.) பூவிதழின் கீழுள்ள பகுதி (வின்.); flower stalk.

[மலர் + காம்பு.]

மலர்க்குழைக்கண்ணன் *malar-kulai-k-kannan,* பெ.(n.) சிறுகாடை; quail (சா.அக.).

மலர்க்கொன்றை *malan-k-konrai,* பெ.(n.) பூக்கும் கொன்றை மரம்; cassia tree yeilding flowers.

[மலர் + கொன்றை.]

மலர்ச்சயனம் *malar-c-cayanam,* பெ.(n.) மலர்ப்பள்ளி (திவா.) பார்க்க; see *malar-p-palli.*

மலர்ச்சி *malarcci,* பெ.(n.) 1. மலர்கை; blooming. 2. பொலிவு; bloom, freshness. 3. மகிழ்ச்சி (சூடா.); cheerfulness.

[மலர் →மலர்ச்சி.]

மலர்ச்சூடல் *malar-c-cūdal,* பெ.(n.) பூச்சூடிக் கொள்ளுதல்; adoring of flowers.

[மலர் + சூடல்.]

நிரைகவர்தல், நிரைமீட்டல், படையெடுத்தல், முற்றுகையிடல், மதில்காத்தல், பொருதல், ஊன்றிப் பொருதல், வெற்றி கொண்டாடல் முதலிய போர்வினைகட்கு ஆக்கந்தருவதாகக் கருதியே முறையே வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை மலர்களை முன்னைத் தமிழர் சூடியிருத்தல் வேண்டும். சில தழைகளும் பூக்களும் அவற்றில் மருத்துவ ஆற்றல் பற்றியும் அணியப்பட்டிருக்கலாம்.

மலர்த்தாது *malar-t-tādu,* பெ.(n.) பூந்தாது (திவா.); pollen.

[மலர் + Skt. தாது.]

மலர்த்தாள் *malar-t-tāl,* பெ.(n.) மலர்க் காம்பு பார்க்க (யாழ்.அக.); see *malar-k-kāmbu.*

[மலர் + தாள்.]

மலர்த்திரள் *malar-t-tiral,* பெ.(n.) பூங் கொத்து (யாழ்.அக.); bunch of flowers.

[மலர் + திரள்.]

மலர்த்து-தல் *malarttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. மலர்[2]- பார்க்க; see *malar-.* 2. மூடிய கை, குடை (இ.வ.); to open out unfold, as a closed hand, or umbrella. *குடையை மலர்த்து (உ.வ.).* 3. மல்லாத்துதல்; to throw one on one's back, as in wrestling.

[மலர்- → மலர்த்து-.]

மலர்த்துகள் *malar-t-tugal,* பெ.(n.) பூந்துகள்; pollen.

[மலர் + துகள்.]

மலர்த்தூள் *malar-t-tūl,* பெ.(n.) மலர்த்துகள் பார்க்க; see *malar-t-tugal.*

[மலர் + தூள்.]

மலர்த்தெங்கு *malar-t-tengu,* பெ.(n.) தென்னம்பாளையின் பூ; flowers of coconut palm.

[தெங்குமலர் →மலர்த்தெங்கு.]

மலர்த்தேவி *malar-t-tēvi,* பெ.(n.) மலர்மகள் பார்க்க; see *malar-magal.* *"மலர்த் தேவி நீங்காள் செம்பொற்றோளிணைகள்" (தண்டி. 112, உரைமேற்).*

[மலர் + தேவி.]

மலர்த்தேன் *malar-t-tēn,* பெ.(n.) 1. பூவிலுண்டாகுந் தேன் (பிங்.); honey from flowers. 2. பூவில் தாறு தங்கும் இடம் (வின்.); anther of flowers.

[மலர் + தேன்.]

மலர்தாங்கி *malar-tāṅgi,* பெ.(n.) மருந்துச் செடி வகை (வின்.); a medicinal creeper.

[மலர் + தாங்கி.]

மலர்தொடு–த்தல் *malar-toḍu-,* 4 செ. குன்றாவி.(v.t.) பூவிணைத்துக் கட்டுதல் (சூடா.); to string flowers together.

[மலர் + தொடு–.]

மலர்ந்தபூ *malarnda-pū,* பெ.(n.) விரிந்த பூ; full blown flower.

[மலர்ந்த + பூ.]

மலர்ப்பலி *malar-p-pali,* பெ.(n.) கைநிறையக் கொண்டு வழிபாடாக இடும் பூ; handful of flowers offered in worship. *"மண்விளக்கி மலர்ப்பலி சிந்தினார்" (சீவக.2394).*

[மலர் + பலி.]

மலர்ப்பள்ளி *malar-p-paḷḷi,* பெ.(n.) மலர்ப் படுக்கை; bed of flowers. *"மலர்ப்பள்ளி.. காமக் கடலாழ்ந்தாள்" (சீவக.2503).*

[மலர் + பள்ளி.]

மலர்ப்பு *malarppu,* பெ.(n.) 1. மலர்விக்கை; causing to bloossom. 2. வெளிப்படக் காட்டுகை; exposing, as one's chest. *"அகலம், மகளிர்க் கல்லது மலர்ப் பறியலையே" (பதிற்றுப்.63, 5).*

[மலர் → மலர்ப்பு.]

மலர்ப்பொடி *malar-p-poḍi,* பெ.(n.) பொரி நெல் மா (இ.வ.); flour of fried paddy.

[மலர் + பொடி.]

மலர்மகள் *malar-magaḷ,* பெ.(n.) திருமகள்; *Tirumagaḷ,* as seated on a lotus. *"மலர்மகள் விரும்புநம் மரும்பெற லடிகள்" (திவ்.திருவாய்.1, 3, 1).*

[மலர் + மகள்.]

மலர்மங்கை *malar-maṅgai,* பெ.(n.) மலர் மகள் பார்க்க; see *malar-magaḷ. "வண்டார் கூந்தன் மலர் மங்கை" (திவ்.பெரியதி. 8, 6, 1).*

[மலர் + மங்கை.]

மலர்மண்டபம் *malar-maṇḍabam,* பெ.(n.) பூத்தொடுக்கும் மண்டபம்; hall where flowers are strung into garlands. *"அணிமலர் மண்டபத் தகவயிற் செலீஇ" (மணிமே.2, 13),*

[மலர் + மண்டபம்.]

மலர்மிசைநடந்தோன் *malar-miśai-naḍandōṉ,* பெ.(n.) மலர்மிசையேகினான் பார்க்க; see *malar-miśai-ēgiṉāṉ. "மலர்மிசை நடந்தோன் மலரடியல்லது" (சிலப்.10:204).*

[மலர்மிசையேகினான் → மலர்மிசை நடந்தோன்.]

மலர்மிசையேகினான் *malar-miśai-y-ēki-ṉāṉ,* பெ.(n.) 1. பூமிசைநடந்தோன் (குறள், 3, உரை) பார்க்க; see *pūmiśai-naḍandōṉ.* 2. பரம்பொருள் (குறள், 3, உரை); Supreme being, as reaching the heart of him who meditates.

[மலர்மிசை + ஏகினான்.]

மலர்மிசையோன் *malar-miśai-yōṉ,* பெ. (n.) மலரோன் பார்க்க; see *malarōṉ.*

மலரசுனையாள் *malara-śuṉai-y-āḷ,* பெ.(n.) கருந்துளசி; black basil (சா.அக.).

மலரடி *malaradi,* பெ.(n.) பெரியோர் அல்லது தெய்வத்தின் தாமரை போன்ற திருவடி; foot of a divine or great personage, as lotus-like. *"மலர்மிசை நடந்தோன் மலரடி" (சிலப்.10: 204).*

[மலர் + அடி.]

மலரணை[1] *malar-anai,* பெ.(n.) மலர்ப்பள்ளி பார்க்க; see *malar-p-palli.*

[மலர் + அணை.]

மலரணை[2] *malaranai,* பெ.(n.) பேரிரவலான மலரணை (பினாமி); transaction entered into by one person in the name of another.

மலரந்திரம் *malarandiram,* பெ.(n.) பெருங் குடல்; colon (சா.அக.).

மலரமளி *malar-amali,* பெ.(n.) மலர்ப்பள்ளி பார்க்க; see *malar-p-palli. "தானிருந்த மலரமளிக்கண்ணே" (சிலப்.8, 117, உரை).*

[மலர்ப்பள்ளி →மலரமளி.]

மலரவன் *malaravan,* பெ.(n.) மலரோன் பார்க்க; see *malarōn. "மலரவனாசைப் படவும்" (திருவாச.20, 10).*

[மலலோன் →மலரவன்.]

மலரவிழி–த்தல் *malara-vili-,* 4 செ.கு.வி. (v.i.) பரக்க விழித்தல், விரிவாய் விழித்தல்; opening eyes fully, wide opening of the eyes.

[மலர + விழி.]

மலருக்குநாயகம் *malarukku-nāyagam,* பெ.(n.) கருவண்டு (சங்.அக.); black bee.

[மலருக்கு + நாயகம்.]

மலரேடு *malarēdu,* பெ.(n.) பூவிதழ்; petal.

[மலர் + ஏடு.]

மலரோகிணி *malarōgini,* பெ.(n.) கடுகு ரோகிணி; root of picrorhiza kurrooa (சா.அக.).

மலரோன் *malarōn,* பெ.(n.) (தாமரையி லிருப்பவன்) நான்முகன்; *Brahmā,* as seated on a lotus. *"மலரோ னெடுமா லறியா மனின்ற வரும் பெருமான்" (திருவாச. 24, 3).*

[மலர் →மலரோன்.]

மலவறட்சி *malavaratci,* பெ.(n.) வறட்சியினால் மலந் தடைபடல்; costive.

[மலம் + வறட்சி.]

மலவாகி *malavāgi,* பெ.(n.) மலத்துளையை அடுத்துள்ள குடற்பகுதி; rectum (C.G.).

[மலம் + வாகி.]

மலவாசயம் *malavāšayam,* பெ.(n.) மலப்பை (யாழ்.அக.) பார்க்க; see *mala-p-pai.*

மலவாதம் *mala-vādam,* பெ.(n.) மலச் சிக்கல் (பைஷஜ.) பார்க்க; see *mala-c-cikkal.*

[மலம் + வாதம்.]

மலவாதை *mala-vādai,* பெ.(n.) மலபாதை பார்க்க; see *mala-pādai.*

[மலபாதை → மலவாதை.]

மலவாய்மாங்காய் *mala-vāy-māngāy,* பெ.(n.) ஆசனவாயிற் றோன்றும் மாங்காயைப் போன்ற கட்டி; a swelling at the anus (சா.அக.).

[மலவாய் + மாங்காய்.]

மலவாயில் *mala-vāyil*, பெ.(n.) மலத்துளை பார்க்க; see *mala-t-tuḷai.*

[மலத்துளை →மலவாயில் – மலம் + வாயில்..]

மலவைரி *mala-vairi,* பெ.(n.) மும்மலங்களின் எதிரியாகிய சிவன் (போற்றிப்பஃ, உரை) பக்.18); *śiva*, as the enemy of *mu-m-malam.*

[மலம் + Skt. வைரி.]

மலற்கு *malarku,* பெ.(n.) மலையாமணக்கு பார்க்க; see *malai-y-āmaṇakku.*

மலறவம் *malaṟavam,* பெ.(n.) பிண்ணாக்கு; oil cake (சா.அக.).

மலாகை *malāgai,* பெ.(n.) 1. தூது செல்பவள்; female messenger. 2. காமமிக்கவள்; a morous woman. 3. பெண் யானை; female elephant.

மலாங்கு *malāṅgu,* பெ.(n.) விலாங்கு மீன்; true eel.

[மலங்கு →மலாங்கு (வே.க.4:37).]

மலாசயம் *malāšayam,* பெ.(n.) மலப்பை (ஞான.8, உரை) பார்க்க; see *mala-p-pai.*

மலாசு *malāšu,* பெ.(n.) சிறுபூளை (மலை.); a common way-side weed.

மலாஞ்சி *malāñji,* பெ.(n.) வெள்ளுள்ளி (சங்அக.); garlic.

மலாடு[1] *malāḍu,* பெ.(n.) மலையமான்கள் வாழ்ந்த பகுதி; the area of the Malayamans of *tiru-k-kōvalūr.* *"ராசராசவளனாட்டு மலாட்டுக் குறுக்கைக் கூற்றத்து" (தெ.க. தொ.26, கல்.416–2).*

மலாடு[2] *malāḍu,* பெ.(n.) மலையமானாடு பார்க்க; see *malaya-māṉāḍu.*

[மலையமானாடு →மலாடு.]

மலாடு[3] *malāḍu,* பெ.(n.) கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் திருக்கோவலூரைச் சூழ்ந்த நாடு (நன்.273, உரை); the region around *tiru-k-koyil-ūr,* where a provincial dialect of Tamil was formerly spoken, one of twelve *koḍum-tamiḻ-nāḍu.*

மலாந்திரம் *malāndiram,* பெ.(n.) பெருங் குடலின் கீழ்ப்பகுதி; descending colon, lower portion of the large intestiness (C.G.).

மலாமட்டி *malā-maṭṭi,* பெ.(n.) பேரிலுப்பை; a big variety of *iluppai* (சா.அக.).

மலார் *malār,* பெ.(n.) இளங்கொம்பு; tender branches, twink, switch.

[விளார்→மிளார்→மலார் (கொ.வ.).]

மலாரடி *malār-aḍi,* பெ.(n.) கலக்கம் (சங்.அக.); confusion, affliction.

மலாரம் *malāram,* பெ.(n.) வளையற் கோவை (வின்.); string or bunch of bracelets.

க. மலார; தெ. மலாரமு.

மலாரு *malāru,* பெ.(n.) மலையாமணக்கு (சங்.அக.); see *malai-y-āmaṇakku.*

மலாவகம் *malāvagam,* பெ.(n.) பிண்ணாக்கு (சூடா.); punnac, oil-cake.

மலாறு *malāṟu,* பெ.(n.) மலையாமணக்கு; the coral tree (சா.அக.).

மலி¹–தல் *mali-,* 2 செ.கு.வி.(v.i.) 1. மிகுதல்; to abound, to be plentiful. *"கனிப்பொறை மலிந்து நின்ற கற்பகப் பூங்கொம்பு" (சீவக.2541).* 2. நிறைதல்; to be full, to increase, to flow, as tide. *"மலிகடற் றண்சேர்ப்ப" (நாலடி, 98).* 3. நெருங்குதல் (தொல். சொல்.396, உரை); to be crowded. 4. புணர்ச்சியின் மகிழ்தல்; to be happy during coition. *"மலிதலுமூடலும்" (தொல். பொருள்.235).* 5. செருக்குதல்; to be proud. *"மகிழ்ந்தன்று மலிந்தன்று மதனினு மிலனே" (புறநா.77).* 6. விம்முதல்; to become large, swell. *"முலை மலிந்து" (பு.வெ.11, பெண்.2).* 7. பரத்தல்; to spread, expand. *"மலை மலிந்தன்ன மார்பும்" (பு.வெ.11, பெண்.2).* 8. விரைதல்; to move swiftly, to hasten. *"நீ மலிந்து செல்லாய்" (பு.வெ.12, பெண்.4).* 9. விலை நயத்தல் (கொ.வ.); to be cheap in price.

[முல்→மல் →மலி (வே.க.4:29).]

மலி²–தல் *mali-,* 2 செ.குன்றாவி.(v.t.) சொல்லுதல்; to express, tell. *"உறுபுகழ் மலிந்தன்று" (பு.வெ.10, 4, கொளு.).*

[முல்→மல் →மலி.]

மலிக்காரம் *mali-k-kāram,* பெ.(n.) அரிதாரம்; orpiment (சா.அக.).

மலிசம் *mališam,* பெ.(n.) அரசமரம் (சங்.அக.); pipal.

மலிபு *malibu,* பெ.(n.) மிகுதி;; excess, abundance. *"வாடையது மலிபு" (பு.வெ.8, 16).*

[மலி →மலிபு (வே.க.4:30).]

மலிர்–தல் *malir-,* 4 செ.கு.வி.(v.i.) 1. பெருகுதல்; to flood. *"ஓத மில்லிறந்து மலிர" (நற்.117).* 2. நீர் முதலியன ஒழுகுதல்; to leak, to drop. *"பின்னு மலிரும் பிசிர்போல" (பரிபா.6, 83).* 3. பயிலுதல்; to come frequently. *"கனியின் மலரின் மலிர்கால்" (பரிபா.8, 54).*

[முல்→மல்→மலி →மலிர்–, (வே.க.4:30)]

மலிர்நிறை *malir-niṟai,* பெ.(n.) 1. பெரு வெள்ளம்; full flood. *"காவிரி மலர்நிறை" (ஐங்குறு.42).* 2. நீரூற்று; copious flow of water, as in a spring. *"மணலாடு மயிர்நிறை" (ஐங்குறு.15).*

[மலிர் + நிறை.]

மலிலாதி *malilādi,* பெ.(n.) பச்சைக் கற்பூரம்; crude camphor (சா.அக.).

மலிவிடி *mali-viḍi,* பெ.(n.) கால்நடைகளின் முழங்காலிற் காணும் நோய்வகை; swelling of the knee-joints of cattle (M.Cm. D.247).

மலிவு *malivu,* பெ.(n.) 1. மிகுதி; abundance. 2. நிறைவு (பிங்.); fullness. *"மனைவேள்வி மலிவுரைத் தன்று" (பு.வெ.9, 27).* 3. காதலரின் புணர்ச்சியுவகை (அகப்.); happiness of lovers in sexual union. *"மலிவும் புலவியும்" (தொல்.பொருள்.500).* 4. உவகை; cheerfulness. *"மலிவுடை யுள்ளத்தான்" (பரிபா.19, 88).* 5. நயவிலை; cheapness. *"மலிவுகுறைவது விசாரித் திடுவர்" (அறப்.சத.83).* 6. தன்மை; nature, characteristics. *"முயக்கம் வேட்ட மக்கட் பெண்டிர் மலிவுரைத்தன்று" (பு.வெ.9, 46,

கொளு.). 7. மேன்மை; that which is best. *"இம் முப்பாலும், மாமலிவுடனே மற்ற மெலிவோடு சமனுமாமே" (சூடா.12, 10).*

[முல் (பொருந்தற் கருத்துவேர்) →மல்→ மலி → மலிவு (வே.க.4:29).]

மலினம் *malinam,* பெ.(n.) 1. மாசு (சூடா.); dirt, filth. *"மலினங்கொளும் பழையகந்தை யணிவோரிடத்தும்" (அறப்.சத.21).* 2. கறுப்பு (வின்.); blackness. 3. தீக்குணம் (வின்.); depravity, wickedness. 4. கரிசு; sin, guilt. *"என்கண் மலினமறுத்து" (திவ்.திருவாய்.5, 1, 4).* 5. கெடுதி (வின்.); badness. 6. குறைவு; defect, deficiency. 7. மோர் (யாழ்.அக.); buttermilk. 8. பச்சிலை (பிங்.); mysore gamboge.

மலினமுகன்[1] *malina-mugan,* பெ.(n.) இறந்தோன்; ghost, dead body.

மலினமுகன்[2] *malina-mugan,* பெ.(n.) 1. தீ; the god of fire. 2. தீய ஆவி; ghost, goblin. 3. கருங்குரங்கு; black monkey. 4. கொடியவன்; wicked, vile, cruel man. 5. கருவண்டு; black bee.

மலினவல்லி *malina-valli,* பெ.(n.) பீர்க்கங் காய்; lufa, ridge gourd (சா.அக.).

மலுக்கு *malukku,* பெ.(n.) சுருக்கு முடிச்சு (இ.வ.); slip - knot.

மலை[1]-தல் *malai-,*4 செ.குன்றாவி.(v.t.) 1. சூடுதல்; to wear, put on. *"மாபெருந் தானையர் மலைந்த பூவும்" (தொல். பொருள். 60).* 2. மேற்கொள்ளுதல்; to take upon oneself, to enter into, as war. *"பழிமலைந் தெய்திய வாக்கத்தின்" (குறள், 657).* 3. ஒத்தல்; to resemble. *"கவிகை மாமதிக் கடவுளை மலைய" (கந்தபு.சூரணரசிருக்.9).* 4. பறித்தல்; to pluck. *"கழுநீர் மலையு வயன்மா தினரே" (கல்லா.).* 5. எதிர்த்தல் (சூடா.); to oppose, fight against.

மலை[2]-தல் *malai-,* 2 செ.கு.வி.(v.i.) 1. பகைத்து மாறுபடுதல்; to fight, to become opposed. *"இகன் மலைந்தெழுந்த போழ்தில்" (சீவக.747).* 2. மயங்குதல்; to be staggered, to be doubtful or confused. *"வேறுவேறு எடுத்துக்காட்டுதல் பற்றி மலையற்க" (சி.போ.பா.62, பக்.146).* 3. வழக்காடுதல்; to wrangle, dispute. *"தத்த மதங்களே யமைவதாக வரற்றி மலைந்தனர்" (திருவாச.4, 5).*

[முல் (பொருந்தற்கருத்துவேர்)→மல்→மலை (வே.க.4:28).]

மலை[3]-த்தல் *malai-,*2 செ.கு.வி.(v.i.) 1. பொருதல்; to fight, go to war. *"வேந்தனோடு..... மலைத்தனையென்பது" (புறநா.36).* 2. மாறுபடுதல்; to become unfriendly. *"மடங்கலிற் சீறி மலைத் தெழுந்து" (பு.வெ.3, 24).* 3. மயங்குதல் (கொ.வ.); to be staggered, over weared to be confused, confounded. 4. வியத்தல் (கொ.வ.); to be amazed, thunderstruck.

[முல்→மல் →மலை.]

மலை[4]-த்தல் *malai-,* 11 செ.குன்றாவி. (v.t.) வருத்துதல்; to afflict, distress. *"மள்ளர் மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப" (புறநா.10).*

[முல்→மல் →மலை.]

மலை[5] *malai-,*பெ.(n.) 1. வளமுள்ள பெரிய இடம்; hill, mountain. *"மலையினு மாணப்

பெரிது" (குறள், 124), "வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே" (நன்.பொதுப்பா.28). 2. ஈட்டம்; collection, aggregation. *"சொன்மலை" (திருமுரு.263).* 3. மிகுதி (கொ.வ.); abundance, bigness, as a mountain.

[முல்→மல் →மலை.]

மலை[6] *malai-,* பெ.(n.) போர்த் தொழில்; occupation of war. *"மலைத்தலை வந்த மரையாள் கதழ் விடை" (மலைபடு.331).*

[மல் →மலை.]

மலைஊவை *malai-ūvai,* பெ.(n.) ஒருவகைப் பழம்; a kind of fruit.

மலலக்கஞ்சா *malai-kañjā,* பெ.(n.) ஒரு கொடிய நஞ்சு; a virulent poisonous plant (சா.அக.).

மலைக்கட்டுக்குளம் *malai-k-kaṭṭu-k-kuḷam,* பெ.(n.) மலையடிவாரத்தில் அமைக்கப் பெற்ற குளம் (நாஞ்.); tank at the base of a hill.

[மலைக்கட்டு + குளம்.]

மலைக்கடுகு *malai-k-kaḍugu,* பெ.(n.) கடுகு வகை (வின்.); a kind of mustard.

[மலை + கடுகு.]

மலைக்கரு *malai-k-karu,* பெ.(n.) மாழை மண் வகை (சங்.அக.); a kind of ore.

[மலை + கரு.]

மலைக்கருணை *malai-k-karuṇai,* பெ.(n.) அசோகு; asoka tree.

மலைக்கல் *malai-k-kal,* பெ.(n.) ஒருவகைத் தாது; a kind of mineral stone.

[மலை + கல்.]

மலைக்கலவாய் *malai-k-kalavāy,* பெ.(n.) மீன் கொத்திப் புள் வகை (வின்.); a species of kingfisher.

[மலை + கலவாய்.]



மலைக்கள்ளி *malai-k-kaḷḷi,* பெ.(n.) கள்ளி வகை; (M.M.104) navelwort, *kalanshoe laciniata.*

[மலை + கள்ளி.]

மலைக்களா *malai-k-kaḷā,* பெ.(n.) 1. செடி வகை; whortle berry, *vaccinium.* 2. நீண்ட செடி வகை; hill carondah. l.sh. *vaccinium leschenaultil.*

[மலை + களா.]

மலைக்கற்றாழை *malai-k-kaṟṟāḻai,* பெ.(n.) கற்றாழைச் செடி வகை (இலத்.); bastard aloe. m.sh. *agave vivipara.*

[மலை + கற்றாழை.]

மலைக்காக்கணத்தி *malai-k-kākkaṇatti,* பெ.(n.) பெருங்காக்கணங் கொடி; a large variety of twiner (சா.அக.).

[மலை + காக்கணத்தி.]

மலைக்காஞ்சிரம் *malai-k-kānciram,* பெ.(n.) வெள்ளைநாகை பார்க்க; see *veḷḷai-nāgai*(சா.அக.).

மலைக்காட்டுப்பருத்தி *malai-k-kāṭṭu-p-parutti,* பெ.(n.) செடி வகை; felt - leaved hilly rose - mallow l.sh. *Hibiscus Canescens.*

[மலைக்காடு + பருத்தி.]

மலைக்காய்ச்சல் *malai-k-kāiccal,* பெ.(n.) மலையிலிருந்து வரும் சுனை நீரைக் குடிப்பதினாலேற்படும் காய்ச்சல்; a kind of fever caused by drinking the mountain spring water.

[மலை + காய்ச்சல்.]

மலைக்கால்[1] *malai-k-kāl,* பெ.(n.) முடவாட்டுக் கல்; a kind of mineral stone (சா.அக.).

மலைக்கால்[2] *malai-k-kāl,* பெ.(n.) ஆட்டுக் கல் (யாழ்.அக.); grinding stone, mashing stone.

[மலை + கால்.]

மலைக்காவகி *malai-k-kāvagi,* பெ.(n.) பெருங்காக்கோளி; unidentified plant.

மலைக்காளான் *malai-k-kāḷāṉ,* பெ.(n.) பெருங்காளான்; a mushroom which is large.

[மலை + காளான். மலை = பெரியது.]

மலைக்கிட்டம் *malai-k-kiṭṭam,* பெ.(n.) எரிமலையினின்று வெளிவரும் உருக்குக் கிட்டம்; lava.

[மலை + கிட்டம்.]

மலைக்கிளுவை *malai-k-kiḷuvai,* பெ.(n.) 1. மலைமா; hill balsam tree. 2. மரவகை; downy hill balsam tree m.tr. *Balsamodendron pubescens.*

[மலை + கிளுவை.]

மலைக்குகை *malai-k-kugai,* பெ.(n.) மலையிலே தானாகவாவது குடையப் பட்டாவது அமைந்த உள்ளிடம் (வின்.); cave in a hill.

[மலை + குகை.]

மலைக்குடவு *malai-k-kuḍavu,* பெ.(n.) இரு மலைகளுக்கிடையே யுள்ள பள்ளம் (வின்.); hallow between two ridges or knolls.

[மலை + குடவு.]

மலைக்குடிக்கோல் *malai-k-kudi-k-kōl,* பெ.(n.) நீட்டலளவை முறையில் ஒன்று; a linear measurement. *"சுந்தரபாண்டிய (பு)த்துக் கண்டுழவான நிலத்திலெ ஒருபக்கமடைய மலைக்குடிக்கொலால் பெரும்பூவும் குறுவையும் விளையும் நிலத்து நிலம்" (தெ.க.தொ.4, கல்372/1986).*

மலைக்குடோரி *malai-k-kuḍōri,* பெ.(n.) உருக்கு; steel.

மலைக்குண்டுவேர் *malai-k-kuṇḍu-vēr,* பெ.(n.) அதிமதுரம்; liquorice plant.

மலைக்குரண்டநாயகம் *malai-k-kuraṇḍa-nāyagam,* பெ.(n.) மருதோன்றி வகை; large pink nail dye L.sh, *Barleria tomentosa acuminala.*

மலைக்குரண்டம் *malai-k-kuraṇḍam,* பெ.(n.) நீலச்செம்முள்ளி; shining leaved sepalled blue nail dye.

மலைக்குரவன் *malai-k-kuravaṉ,* பெ.(n.) நஞ்சு வகை; a kind of arsenic (சா.அக.).

மலைக்குருவி *malai-k-kuruvi,* பெ.(n.) குன்றிமணி; jeweller's bead.

மலைக்குறட்டை *malai-k-kuṟaṭṭai,* பெ.(n.) சிறுமர வகை; wavy leaved spindle - tree. s.tr. Erionynous dichotomus.

மலைக்குறிஞ்சா *malai-k-kuṟiñjā,* பெ.(n.) 1. செங்குறிஞ்சி; red *curinjy* tree. 2. கல் கிளிஞ்சி; red cedar (சா.அக.).

மலைக்குறுந்தாளி *malai-k-kuṟundāḷi,* பெ.(n.) அரிவாண்மணைப்பூண்டு; sickle leaf (சா.அக.).

மலைக்குறுப்பான் *malai-k-kuṟuppāṉ,* பெ.(n.) பறவை வகை (வின்.); mountain barbet, *megalocura.*

[மலை + குறுப்பான்.]

மலைக்குறுவி *malai-k-kuṟuvi,* பெ.(n.) மலைக்கரு பார்க்க; see *malai-k-karu.*

மலைக்குன்றிவேர் *malai-k-kuṉṟi-vēr,* பெ.(n.) அதிமதுரம்; liquorice (சா.அக.).

மலைக்கொடிமன்னன் *malai-k-koḍi-maṉṉaṉ,* பெ.(n.) மயலத்துவசன் பார்க்க; see *malaya-t-tuvašaṉ. "மன்னு மாதவம் பெருகிய மலைக்கொடி மன்னன்" (திருவாலவா.4, 1)*

மலைக்கொய்யா *malai-k-koyyā,* பெ.(n.) கொய்யா வகை; (M.M.) hill guava s.tr. *Rhodomyrtnsï tomntose.*

[மலை + கொய்யா.]

மலைக்கொழிஞ்சி *malai-k-koḻiñji,* பெ.(n.) வெட்பாலை வகை (இ.வ); wild durian, l.tr. *cullenia excelsa.*

மலைக்கொன்றை *malai-k-koṉṟai,* பெ.(n.) 1. மரவகை; shigle tree l.tr. *Acrocarpus fraxinifolius.* 2. கொன்றை வகை; bristle - tipped oblong leaved *eglandular senna, cassia montana.*

[மலை + கொன்றை.]

மலைக்கொன்னை *malai-k-koṉṉai,* பெ.(n.) மலைக்கொன்றை பார்க்க; see *malai-k-koṉṟai.*

[மலை + கொன்னை. கொன்றை → கொன்னை (கொ.வ.).]

மலைக்கோங்கு *malai-k-kōṅgu,* பெ.(n.) மரவகை; mountain silk cotton tree.

[மலை + கோங்கு.]

மலைக்கோஞ்சில் *malai-k-kōñjil,* பெ.(n.) மலைக்கொழிஞ்சி பார்க்க; see *malai-k-koḻiñji.*

[மலை + கொழிஞ்சில். கொழுஞ்சி → கொழுஞ்சில் →கோஞ்சில்.]

மலைக்கோரன் *malai-k-kōraṉ,* பெ.(n.) அசோகு மரம்; a tree *saraca Indica* (சா.அக.).

மலைக்கோன் *malai-k-kōṉ,* பெ.(n.) மலைக் கொன்றை (சா.அக.) பார்க்க; see *malai-k-koṉṟai.*

[மலை + கோன்.]

மலைகலக்கி *malai-k-kalakki,* பெ.(n.) பூடு வகை (வின்.); peacock-tailed adiantum, a maidenhair fern, *adiantum caudatum.*

மலைகுனியநின்றபிரான் *malai-kuniya-ninra-pirān,* பெ.(n.) மலைகுனிய நின்றான் பார்க்க; see *malai-kuniya-ninrāṉ. "மலைகுனிய நின்ற பிரான் போந்தானுலா" (திருவேங்கடவுலா.mss.).*

[மலைகுனியநின்றான் → மலைகுனியநின்ற பிரான்.]

மலைகுனியநின்றான் *malai-kuniya-ninrāṉ,* பெ.(n.) திருவேங்கடமுடையான் (S.I.I.iv.79); the God *Tirumāl* on the *Tirupati* hills.

[மலைகுனிய + நின்றான்.]

மலைச்சக்கரம் *malai-c-cakkaram,* பெ.(n.) சாளக்கிராமம் (சங்.அக.); black fossil ammonite.

[மலை + சக்கரம்.]

மலைச்சர்க்கரைவள்ளி *malai-c-cakkarai-vaḷḷi,* பெ.(n.) மரவள்ளி பார்க்க; see *mara-vaḷḷi.*

[மலை + சர்க்கரைவள்ளி.]

மலைச்சரக்கு *malai-c-carakku,* பெ.(n.) 1. மலையிலுண்டாம் மூலிகைகளிலிருந்து எடுத்த மருந்துச் சரக்கு (இ.வ.); medicinal drugs prepared from herbs growing on hills. 2. கருப்பூர வகை (சிலப்.14, 112, உரை); a kind of camphor.

[மலை + சரக்கு.]

மலைச்சார் *malai-c-cār,* பெ.(n.) மலைச் சார்வு (வின்.) பார்க்க; see *malai-c-cārvu.*

[மலைச்சார்வு → மலைச்சார்.]

மலைச்சார்பின்பூநீர் *malai-c-cārbin-pū-nīr,* பெ.(n.) குறிஞ்சி நிலத்துப் பூநீறு; efflorence of fuller's earth of mountainours region (சா.அக.).

[மலைச்சார்பின் + நீறு.]

மலைச்சார்பு[1] *malai-c-cārbu,* பெ.(n.) மலைச்சார்வு (திவா.) பார்க்க; see *malai-c-cārvu .*

[மலை + சார்பு. சார்வு → சார்பு.]

மலைச்சார்பு[2] *malai-c-cārbu,* பெ.(n.) குறிஞ்சி நிலம்; mountainous tract.

[மலை + சார்பு.]

மலைச்சார்வு *malai-c-cārvu,* பெ.(n.) மலைநாடு (வின்.); mountainous tract, hilly country.

[மலை + சார்வு.]

மலைச்சாரல் *malai-c-cāral,* பெ.(n.) 1. மலைப்பக்கம் பார்க்க; see *malai-p-pakkam. "பெருமலைச் சாரலெய்தி" (பெருங். இலாவாண.12, 41).* 2. மலையிற் சாரலாகப் பெய்து செல்லும் மேகம் (இ.வ.); rain clouds over the hills. 3. மலையில் விழும் மழை (வின்.); rain falling on the hills. 4. சாரற்காற்று (வின்.); cool wind from the hills.

[மலை + சாரல்.]

மலைச்சாரை *malai-c-cārai,* பெ.(n.) மலைப் பாம்பு வகை (வின்.); hill rat snake.

[மலை + சாரை.]

மலைச்சி *malaicci,* பெ.(n.) நச்சுப்புல்; a kind of poisonous grass (சா.அக.).

மலைச்சிகரம் *malai-c-cigaram,* பெ.(n.) மலையினுச்சி; summit of a mountain.

[மலை + சிகரம்.]

மலைச்சிமிக்கி *malai-c-cimikki,* பெ.(n.) சிமிக்கிப் பூ; mountain passion flower.

[மலை + சிமிக்கி.]

மலைச்சிறுகொய்யா *malai-c-ciṟukoyyā,* பெ.(n.) மலைக்கொய்யா பார்க்க; see *malaii-k-koyyā.*

[மலை + கொய்யா.]

மலைச்சுண்டை *malai-c-cuṇḍai,* பெ.(n.) சுண்டை வகை; Turkey berry.

[மலை + சுண்டை.]

மலைச்சுரம் *malai-c-curam,* பெ.(n.) முறைக் காய்ச்சல் வகை (இ.வ.); malaria.

[மலை + சுரம்.]

மலைச்சுருக்காய் *malai-c-curakkāy,* பெ.(n.) கட்டுக்கொடி பார்க்க; see *kaṭṭu-k-koḍi*(சா.அக.).

மலைச்சூலி *malai-c-cūli,* பெ.(n.) பெருஞ்சூலி மரம்; a tree (சா.அக.).

[மலை + சூலி.]

மலைச்செந்தொட்டி *mala-c-centoṭṭi,* பெ.(n.) பெருஞ்செந்தொட்டி, பேராமுட்டி; pavonia odorate (சா.அக.).

மலைச்செம்பு *malai-c-cembu,* பெ.(n.) தாம்பூரச் சிகை; a kind of mineral (சா.அக.).

மலைச்சேவிகம் *malai-c-cēvigam,* பெ.(n.) பெருமருந்து; a twiner (சா.அக.).

மலைச்சோம்பு *malai-c-cōmbu,* பெ.(n.) சீமைச்சோம்பு பார்க்க; see *cīmai-c-cōmbu* (சா.அக.).

[மலை + சோம்பு.]

மலைசாரி *malaicāri,* பெ.(n.) கிளிஞ்சல் (சங்.அக.); mussel.

மலைத்தகரை *malai-t-tagarai,* பெ.(n.) வண்டு கொல்லிச் செடி (இங்.வை.); ringworm shrub.

[மலை + தகரை.]

மலைத்தணக்கு *malai-t-taṇakku,* பெ.(n.)
1. வெள்ளைக் கடம்பு; bridal - couch plant.
2. நீண்ட மரவகை; obovate - leaved bridal - couch plant l.tr. *Hymenodiciyan obovatum.*

[மலை + தணக்கு.]

மலைத்தளிச்சுயம்பு *malai-taḷi-c-cuyambu,* பெ.(n.) பூரம்; subchloride of mercury (சா.அக.).

மலைத்தாமரை *malai-t-tāmarai,* பெ.(n.) திருநாமப்பாலை; oval - leaved china root.

[மலை + தாமரை.]

மலைத்தாரம் *malai-t-tāram,* பெ.(n.) மலைபடுபொருள் பார்க்க; see *malapaḍu-poruḷ. "மலைத்தாரமுங் கடற்றாரமும்" (புறநா.343).*

[மலை + தாரம்.]

மலைத்தாரிகம் *malai-t-tārigam,* பெ.(n.) பெருஞ்செந்தொட்டி; *pavonia odorata* (சா.அக.).

மலைத்திருக்கல் *mala-t-tirukkal,* பெ.(n.) மிளகு; pepper (சா.அக.).

மலைத்துத்தி *malai-t-tutti,* பெ.(n.) பெருந்துத்தி மரம்; a kind of tree (சா.அக.).

[மலை + துத்தி.]

மலைத்தும்பை *malai-t-tumbai,* பெ.(n.) கவிழ்தும்பை (சங்.அக.); a low annual plant.

[மலை + தும்பை.]

மலைத்தும்மட்டி *malai-t-tummaṭṭi,* பெ.(n.) கக்கரி (M.M.617); kakari-melon

[மலை + தும்மட்டி.]

மலைத்துவரை *malai-t-tuvarai,* பெ.(n.) துவரை வகை (சங்.அக.); hill dholl, 1.sh. *Cajanus indicus - bicolor.*

[மலை + துவரை.]

மலைத்துவிகம் *malai-t-tuvigam,* பெ.(n.) பெரு நாங்கில் மரம்; a tree

மலைத்துளசி *malai-t-tuḷaši,* பெ.(n.) கற்றுளசி; stone basil.

[மலை + துளசி. மலை = கல்.]

மலைத்தூசி *malai-t-tūši,* பெ.(n.) மலைச் சக்கரம் பார்க்க; see *malai-c-cakkaram*

[மலை + தூசி.]

மலைத்தேங்காய் *malai-t-tēṅgāy,* பெ.(n.) பீநாறி; fetid tree.

[மலை + தேங்காய்.]

மலைத்தேவதாரம் *malai-t-tēvadāram,* பெ.(n.) வெள்ளையகில் பார்க்க; see *veḷḷai-akil.*

மலைத்தேன் *malai-t-tēṉ,* பெ.(n.) 1. மலையிலுண்டாகுந்தேன்; pure honey, as from the hills. *"உலப்புறா தினிக்கு முயர்மலைத் தேனே" (அருட்பா.vi, அருட்பெருஞ்.1412).* 2. இன்சுவையுள்ள பலாப்பழம் (இ.வ.); delicious jack-fruit.

[மலை + தேன்.]

மலைத்தேனீ *malai-t-tēṉī,* பெ.(n.) தேனீ வகை (M.M.870); hill bee, *Apis dorsate.*

[மலை + தேனீ.]

மலைத்தொடக்கு *malai-t-toḍakku,* பெ.(n.) கன்மதம் (சங்.அக.); rock alum.

[மலை + தொடக்கு.]

மலைதல் *malaidal,* பெ.(n.) 1. போர் (பிங்.); war. 2. (Gram.) மலைவு, 4 (யாழ்.அக.) பார்க்க; see *malaivu.*

[மல் → மலை → மலைதல்.]

மலைதாங்கி[1] *malai-tāṅgi,* பெ.(n.) 1. ஒரு கொடி; a creeper. 2. பங்கம்பாளை; *aristolochia bractata.* 3. பொன் முசுட்டை; a twiner (சா.அக.).

மலைதாங்கி² *malai-tāṅgi,* பெ.(n.) 1. அறிவாண் முனைப்பூண்டு (பதார்த்த.292); sickle - leaf. 2. பொன்முசுட்டை; buckler leaved moon seed. 3. வட்டத்திருப்பி (சங்.அக.); kidney - leaved moonseed.

மலைநாகன் *malai-nāgaṉ,* பெ.(n.) நாகப் பாம்பு வகை; hill cobra.

[மலை + நாள். நாகப்பாம்பு→நாகன்.]

மலைநாங்கல் *malai-nāṅgal,* பெ.(n.) மலை நாங்கு பார்க்க; see *malai-nāṅgu.*

[மலை + நாங்கல். நாங்கு →நாங்கல்.]

மலைநாங்கு *malai-nāṅgu,* பெ.(n.) கரு நாங்கு; long pointed broad leaved ceylon iron wood

[மலை + நாங்கு.]

மலைநாடன் *malai-nāḍaṉ,* பெ.(n.) 1. மலை வளமுடைய நாட்டுக்கு அரசன்; king of a mountainous region. *"வான்றோய் மலைநாட உய்த்தீட்டுந் தேனீக் கரி" (நாலடி, 10).* 2. சேரன் (சங்.அக.); *cēra* king as ruling over a mountainous country.

[மலை + நாடன்.]

மலைநாடு¹ *malai-nāḍu,* பெ.(n.) வட பொதிகை; North Podigai (சா.அக.).

[மலை + நாடு.]

மலைநாடு² *malai-nāḍu,* பெ.(n.) 1. மலைப் பாங்கான நாடு; hilly country. 2. சேரநாடு; cērakingdom, as hilly. *"வரையின் வளனுமுடன் பெருகி மல்குநாடு மலைநாடு" (பெரியபு.விறன்மிண்டர்.1).*

[மலை + நாடு.]

மலைநாதம் *malai-nādam,* பெ.(n.) 1. கன்மதம்; rock alum. 2. மாழைமண் வகை; a kind of ore. 3. மாழை நஞ்சு; a mineral poison.

[மலை + நாதம்.]

மலைநாயக்கன் *malai-nāyakkaṉ,* பெ.(n.) தமிழ் மலையாளி (E.T.iv.393);Tamil malaiyali, a tribe.

[மலை + நாய்க்கன்.]

மலைநாரத்தை¹ *malai-nārattai,* பெ.(n.) கிடார நாரத்தை; mountain orange.

[மலை + நாரத்தை.]

மலைநாரத்தை² *malai-nārattai,* பெ.(n.) சிறுமரவகை (இலத்.); trifoliate winged lime, s.tr. *Limonia alata.*

[மலை + நாரத்தை.]

மலைநாவல் *malai-nāval,* பெ.(n.) சிறு மரவகை (இ.வ.); clove-like black plum, s.tr. *Eugenia caryophyllaca.*

[மலை + நாவல்.]

மலைநெல் *malai-nel,* பெ.(n.) நெல்வகை (சூடா.); a kind of paddy, as grown on the hills.

[மலை + நெல்.]

மலைநெல்லி *malai-nelli,* பெ.(n.) பெரு நெல்லி மரம்; a large species of Indian gooseberry tree growing in mountain.

[மலை + நெல்லி.]

மலைநொச்சி *malai-nocci,* பெ.(n.) மலையில் விளையும் நொச்சி; vitex negundo.

[மலை + நொச்சி.]

மலைநோய் *malai-nōy,* பெ.(n.) மச்சுக் காற்றின்மையால் மலையுச்சியில் ஏற்படும் நோய்; an abnormal condition due to breathing of an insufficient amount of oxygen or rarefied air found at high elevations on the mountain.

[மலை + நோய்.]

மலைப்பக்கம் *malai-p-pakam,* பெ.(n.) மலையின் சரிவான பக்கம் (பிங்.); slope of hill.

[மலை + பக்கம்.]

மலைப்பகா *malai-p-pagā,* பெ.(n.) பெரு முன்னை மரம்; a tree (சா.அக.).

மலைப்பச்சை[1] *malai-p-paccai,* பெ.(n.) 1. ஒரு வகை மூலிகை; a kind of wild jasmine yielding red flowers. 2. பச்சிலை மரம்; a tree bearing fruits like orange and white flowers. 3. குளவி; beetle (சா.அக.).

[மலை + பச்சை.]

மலைப்பச்சை[2] *malai-p-paccai,* பெ.(n.) பச்சிலை; Mysore gamboge.

[மலை + பச்சை.]

மலைப்பண்டம் *malai-p-paṇḍam,* பெ.(n.) மலைபடுபொருள் பார்க்க; see *malai-paḍu-poruḷ. "மலைப்பண்ட மண்டத் திரையுந்து நாங்கூர்" (திவ்.பெரியதி.3, 8, 3).*

[மலை + பண்டம்.]

மலைப்பண்ணைக்கீரை *malai-p-paṇṇai-k-kīrai,* பெ.(n.) ஒருவகைக் கீரை; a kind of green (சா.அக.).

[மலை + பண்ணைக்கீரை.]

மலைப்பரிதி *malai-p-paridi,* பெ.(n.) எருக்கிலை; leaf of *calotropis gigantia* (சா.அக.).

[மலை + பரிதி.]

மலைப்பருத்தி *malai-p-parutti,* பெ.(n.) கோங்கிலவு; false tragacanth.

[மலை + பருத்தி.]

மலைப்பழம் *malai-p-paḻam,* பெ.(n.) மலை வாழைப்பழம் (இ.வ.) பார்க்க; see *malai-vāḻai-p-paḻam.*

[மலை + பழம்.]

மலைப்பள்ளி *malai-p-paḷḷi,* பெ.(n.) அருந்தவர் வாழும் மலையிடம்; hermitage of asectics on the hills. *"இயன் மலைப்பள்ளியு ளருந்தவர்" (பெருங். இலாவாண. 15, 94).*

[மலை + பள்ளி.]

மலைப்பறச்சி *malai-p-paṟacci,* பெ.(n.) கலைச் செம்பு; a superior kind of copper (சா.அக.).

மலைப்பாகல் *malai-p-pāgal,* பெ.(n.) காட்டுப் பாகல்; wild bitter gourd (சா.அக.).

[மலை + பாகல்.]

மலைப்பாசி *malai-p-pāši,* பெ.(n.) கற்பாசி; stone or rock moss (சா.அக.).

[மலை + பாசி.]

மலைப்பாதம் *malai-p-pādam,* பெ.(n.) ஒருவகை நஞ்சு; a kind of arsenic (சா.அக.).

மலைப்பாதை *malai-p-pādai,* பெ.(n.) மலைமீது ஏறி இறங்க உதவும் வழித் தடம்; path ay of hills.

[மலை + பாதை.]

மலைப்பாம்பு *malai-p-pāmbu,* பெ.(n.) பாம்பு வகை; rock snake - *python molurus.* *"மலைப் பாம்பாக நகுடன் போய் வீழ்ந்த கதை" (குற்றா.தல.மந்தமா.38).*

[மலை + பாம்பு.]



மலைப்பாம்புவெட்டி *malai-p-pāmbu-veṭṭi,* பெ.(n.) கனலிப்பூடு; apple bladder nut (சா.அக.).

மலைப்பாரிசாதம் *malai-p-pāri-cādam,* பெ.(n.) பவள மல்லிகை அல்லது பவளக் கால் மல்லிகை; coral jasmine (சா.அக.).

மலைப்பாலை *malai-p-pālai,* பெ.(n.) பாலை வகை (பதார்த்த.234); a tree; mimusops.

[மலை + பாலை.]

மலைப்பாழி *malai-p-pāḻi,* பெ.(n.) மலைக் குகை (வின்.) பார்க்க; see *malai-k-kugai.*

[மலை + பாழி.]

மலைப்பிஞ்சு *malai-p-piñju,* பெ.(n.) சிறுகல் (இ.வ.); small piece of stone.

[மலை+பிஞ்சு. மல் → மலை. பிள் → பிள → பிஞ்சு.]

மலைப்பீலிகா *malai-p-pīligā,* பெ.(n.) மலையெறும்பு; mountain ant (சா.அக.).

மலைப்பிரண்டை *malai-p-piraṇḍai,* பெ.(n.) மணிப்பிரண்டை, சரணைப் பிரண்டை; a kind of vitis (சா.அக.).

[மலை + பிரண்டை.]

மலைப்பிரமி *malai-p-pirami,* பெ.(n.) பெரும் பிரமி; a plant (சா.அக.).

[மலை + பிரமி.]

மலைப்பிராசிதம் *malai-p-pirācidam,* பெ.(n.) பிராய் மரம்; paper tree (சா.அக.).

[மலை + பிராசிதம்.]

மலைப்பிளப்பு *malaip-piḷappu,* பெ.(n.) மலையில் உள்ள விடர் (திவா.); cleft in hills.

[மலை + பிளப்பு. மல் → மலை. பிள் → பிள → பிளப்பு.]

மலைப்பிறங்கம் *malai-p-piṟaṅgam,* பெ.(n.) மாழை மணல் (சங்.அக.); a kind of metalic ore obtained in mountains, iron - sand.

[மலை + பிறங்கம்.]

மலைப்பு *malaippu,* பெ.(n.) 1. அறிவு மயக்கம்; confusion of mind. *"மலைப்போ வொருவர் செய்த வஞ்சனையோ" (இராமநா. அயோத்.8).* 2. திகைப்பு (சங்.அக.); astonishment, amazement, wonder. 3. போர்; fighting, war. 4. மாறுபாடு; enmity, opposition. *"மலைப்பொழிய மறங்கடை இயன்று" (பு.வெ.4, 14, கொளு.).* 5. கூத்தின் வகை (பிங்.); a kind of dance. *"புறப்பாடு

முதலாக மலைப்பு கேளிக்கை.... முதலானதுகள் ஸேவிக்கிறதும்" (கோயிலொ. 95). 6. பெருவியப்பு; sumptuousness, as of meal, splendour, pomp. *"மலைப்பான சாப்பாடு" (உ.வ.).*

[மல் →மலை →மலைப்பு.]

மலைபுகையிலை *malai-pugai-ilai,* பெ.(n.) காட்டுப் புகையிலை; wild tobacco (சா.அக.).

[மலை + புகையிலை.]

மலைப்புங்கு *malai-p-pungu,* பெ.(n.) ஒரு வகைப் புங்கு மரம்; a kind of tree (சா.அக.).

[மலை + புங்கு.]

மலைப்புரசு *malai-p-purašu,* பெ.(n.) காட்டுப் புரசு; wild butea (சா.அக.).

[மலை + புரசு.]

மலைப்புல் *malai-p-puḷ,* பெ.(n.) கதிர்ப்புல்; sacred grass (சா.அக.).

[மலை + புல்.]

மலைப்புளி[1] *malai-p-puḷi,* பெ.(n.) மலையில் விளையும் புளி; hill tamarind (சா.அக.).

[மலை + புளி.]

மலைப்புளி[2] *malai-p-puḷi,* பெ.(n.) பச்சிலை (M.M.274); Mysore gambage.

[மலை + புளி.]

மலைப்புளிச்சை *malai-p-puḷiccai,* பெ.(n.) வெண்டை வகை (m.m.83); hill hemp bendy, m.sh. *hibiscus furcatus.*

[மலை + புளிச்சை.]

மலைப்புறம் *malai-p-puṟam,* பெ.(n.) மலைச் சரிவு பார்க்க (C.G.); see *malai-c-carivu.*

[மலை + புறம்.]

மலைப்புறா *malai-p-puṟā,* பெ.(n.) மாடப்புறா (சங்.அக.); blue rock pigeon.

[மலை + புறா.]

மலைப்புன்கு *malai-puṉgu,* பெ.(n.) நீண்ட மரவகை; wight's indian nettle, l.tr. *celtis wightili* (Nels.).

மறுவ. மலைப்புங்கு.

[மலை + புன்கு.]

மலைப்புனம் *malai-p-puṉam,* பெ.(n.) தினை விளை நிலம்; rocky soil in tiṉai fields on the mountains (R.T.).

[மலை + புனம்.]

மலைபூசிதம் *malai-pūšidam,* பெ.(n.) மலையாத்தி மரம்; a kind of mountain tree (சா.அக.).

[மலை + பூசிதம்.]

மலைப்பூடு[1] *malai-p-pūḍu,* பெ.(n.) மலை மூலிகை; mountain herb (சா.அக.).

[மலை + பூடு.]

மலைப்பூடு[2] *malai-p-pūḍu,* பெ.(n.) பூடு வகை (சங்.அக.); a plant.

[மலை + பூடு.]

மலைப்பூவரசி *malai-p-pūvarași,* பெ.(n.) காட்டுப் பூவரசு; a tree wild portia.

[மலை + பூவரசி.]

மலைப்பூவிகம் *malai-p-pūvigam,* பெ.(n.) சேங்கொட்டை; a tree - *Semecarpus-Anacardium* (சா.அக.).

[மலை + பூவிகம்.]

மலைப்பேரீச்சு *malai-p-pēriccu,* பெ.(n.) ஈச்சமரவகை; cuddapah fern palm, *cycas beddomei.*

[மலை + பேரீச்சு.]

மலைபடுகடாம்[1] *malai-paḍu-kaḍām,* பெ.(n.) பத்துப்பாட்டினுள் இறுதிப்பாட்டு; நன்னன் சேய் நன்னனைப்பற்றிப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியதும் கூத்தராற்றுப்படை என்ற மறுபெயருடையதும் பத்துப்பாட்டில் ஒன்றானதுமான ஆற்றுப்படை நூல்; a poem otherwise known as *kūttararru-p-paḍai,* one of the *pattu-p-pāṭṭu,* by *Perungunrūr-p-peruṅ-kncikaṇār,* with the chief *Naṇṇaṇ* as hero.

[மலைபடு + கடாம்.]

மலைபடுதிரவியம் *malai-paḍu-tiravium,* பெ.(n.) மலைபடுபொருள் பார்க்க; see *malai-paḍu-poruḷ.*

[மலைபடு + **Skt.** *திரவியம்.]*

மலைபடுபொருள் *malai-paḍu-poruḷ,* பெ.(n.) மலையிலுண்டாகும் அகில், மிளகு, கோட்டம், தக்கோலம் , குங்குமம் என்ற ஐவகை நறுமணப் பொருள் (பிங்.); products of the hills, of five kinds, viz. *akil, miḷagu, kōṭṭam, takkōlam, kuṅkumam.*

[மலைபடு + பொருள்.]

மலைபோரகை *malai-pōragai,* பெ.(n.) மலைப்போரவை (இ.வ.) பார்க்க; see *malai-p-pōravai.*

[மலைபோரவை → மலைபோரகை.]

மலைபோரவை *malai-pōravai,* பெ.(n.) கழுகு வகை (இ.வ.); black vulture *otogyps calvus.*

[மலை + போரவை.]

மலைமகள் *malai-magaḷ,* பெ.(n.) மலைமகள் (பார்வதி); *Malaimagaḷ(Pārvati),* as the daughter of the Himālayās. *"மலைமகளை யொருபாகம் வைத்தலுமே" (திருவாச.12, 7).*

[மலை + மகள்.]

மலைமஞ்சரளி *malai-mañjaraḷi,* பெ.(n.) மலையரளி; mountain oleander (சா.அக.).

[மலை + மஞ்சரளி.]

மலைமஞ்சி[1] *malai-mañji,* பெ.(n.) மருள் பார்க்க; see *maruḷ* (சா.அக.).

[மலை + மஞ்சி.]

மலைமஞ்சி[2] *malai-mañji,* பெ.(n.) பெருங் குரும்பை (m.m.477); bow string hemp.

[மலை + மஞ்சி.]

மலைமடந்தை *malai-maḍantai,* பெ.(n.) மலைமகள் பார்க்க; see *malai-magaḷ.*

[மலை + மடந்தை.]

மலைமண்சாடி *malai-maṇ-šāḍi,* பெ.(n.) மலைமஞ்சாடி பார்க்க; see *malai-mañcāḍi* (சா.அக.).

[மலை + மண்சாடி.]

மலைமண்டலம்[1] *malai-maṇḍalam,* பெ.(n.) திருவாங்கூர், கொச்சி பகுதியையுட் கொண்ட சேர நாடு (பிற்.சோழ.வர. சதாசிவ பண். பக்கம்.473); *cera* country consist of *Tiruvankur* and *Kochi* territary.

[மலை + மண்டலம்.]

மலைமண்டலம்[2] *malai-maṇḍalam,* பெ.(n.) மலைநாடு பார்க்க; see *malai-nāḍu.* *"மலை மண்டலத்து..... சிறைராமன் கேரளன்" (S.I.I.i.89).*

[மலை + மண்டலம்.]

மலைமதம் *malai-madam,* பெ.(n.) கன்மதம் (சங்.அக.); rock alum.

[மலை + மதம்.]

மலைமந்தாரை *malai-mandārai,* பெ.(n.) காட்டு மந்தாரை; wild butea (சா.அக.).

[மலை + மந்தாரை.]

மலைமந்திகா *malai-mandigā,* பெ.(n.) சாமந்திப்பூ பார்க்க; see *šāmandi-p-pū* (சா.அக.).

[மலை + மந்திகா.]

மலைமல்லிகை *malai-malligai,* பெ.(n.) காட்டுமல்லி; Indian cork. *"கூதாளி கவின்பெற்ற மலை மல்லிகை" (புறநா.168, உரை).*

[மலை + மல்லிகை.]

மலைமா *malai-mā,* பெ.(n.) மரவகை (இலத்.); hill balsam tree, m.tr. *Balasamadendron candalum.*

[மலை + மா.]

மலைமாணிக்கம் *malai-māṇikkam,* பெ.(n.) காட்டு வெக்கலி; a plant *anacolosa densiflora* (சா.அக.).

[மலை + மாணிக்கம்.]

மலைமாது *malai-mādu,* பெ.(n.) மலைமகள் பார்க்க; see *malai-magaḷ. "மலைமாதொரு பாகா" (திருவாச.23, 10).*

[மலை + மாது.]

மலைமாதுகம் *malai-mādugam,* பெ.(n.) கந்தகம்; sulphur.

[மலை + மாதுகம்.]

மலைமான் *malai-māṉ,* பெ.(n.) மலைமகள் (நாமதீப.19) பார்க்க; see *malai-magaḷ.*

[மலை + மான்.]

மலைமுசுட்டை *malai-mušuṭṭai,* பெ.(n.) ஒருவகைக் கொடி; a kind of creeper (சா.அக.).

[மலை + முசுட்டை.]

மலைமுருங்கை[1] *malai-muruṅgai,* பெ.(n.) கசப்பு முருங்கை; bitter drumstic tree (சா.அக.).

[மலை + முருங்கை.]

மலைமுருங்கை[2] *malai-muruṅgai,* பெ.(n.) செடி வகை (மலை.); prickly sesban, m.sh. *sesbonia aculeata.*

[மலை + முருங்கை.]

மலைமுல்லை *malai-mullai,* பெ.(n.) மலை மல்லிகை; mountain jasmine (சா.அக.).

[மலை + முல்லை.]

மலைமுலைக்கால் *malai-mulai-k-kāl,* பெ.(n.) முடவாட்டுக்கால் பார்க்க; see *muḍa-vāṭṭu-k-kāl*(சா.அக.).

மலைமுழக்கு *malai-muḻakku,* பெ.(n.) மலைகளினின்று கேட்கும் எதிரொலி; echo, as heard in the hills. *"மஞ்சாடு மலைமுழக்கும்" (பரிபா.8, 110).*

[மலை + முழக்கு.]

மலைமுழை *malai-muḻai,* பெ.(n.) மலைக் குகை (பிங்.) பார்க்க; see *malai-k-kugai.*

[மலை + முழை.]

மலைமுழைஞ்சு *malai-muḻaiñju,* பெ.(n.) மலைக்குகை (பிங்.) பார்க்க; see *malai-k-kugai.*

[மலை + முழைஞ்சு.]

மலைமுள்ளங்கி *malai-muḷḷaṅgi,* பெ.(n.) பூடுவகை (வின்.); a plant, *ornithogal gadense.*

[மலை + முள்ளங்கி.]

மலைமுன்னை *malai-muṉṉai,* பெ.(n.) பேய் முன்னை மரம்; a tree (சா.அக.).

[மலை + முன்னை.]

மலைமுனி *malai-muṉi,* பெ.(n.) மகிழமரம்; a tree bearing very fragrant flowers (சா.அக.).

[மலை + முனி.]

மலைமுனிவன் *malai-muṉivaṉ,* பெ.(n.) அகத்தியர்; Agattiyar (சா.அக.).

[மலை + முனிவன்.]

மலைமூங்கில் *malai-mūṅgil,* பெ.(n.) பெரு மூங்கில்; stout and large bamboo (சா.அக.).

[மலை + மூங்கில்.]

மலைமூலிகை *malai-mūligai,* பெ.(n.) மலையில் விளையும் மருந்துப் பூடு; mountain medicinal herb (சா.அக.).

[மலை + மூலிகை.]

மலைமேகசொர்ணக்கல் *malai-mēga-šorṇakkal,* பெ.(n.) ஒருவகை மணிக் கல்; a kind of gem (சா.அக.).

மலைமேல்கோல் *malai-mēl-kōl,* பெ.(n.) நில அளவை; measuring rod. *"பயிரேற்றி விளைஞ்ச நிலத்துக்கு மலை(க்)குடி மலைமெற்கொலால் நி(ல)ம் ஒருமாவுக்கு" (தெ.க.தொ.14, கல்.224-3).*

மலைய *malaiya,* பெ.(n.) ஓர் உவம வாய்பாடு (தொல்.பொருள்.286, உரை); a term of comparison.

மலையகத்தி *malai-y-agatti,* பெ.(n.) ஒரு வகைக் கசப்பு அகத்தி; a bitter kind sesbania (சா.அக.).

[மலை + அகத்தி.]

மலையகம் *malai-y-agam,* பெ.(n.) ஒரு சாதி (யாழ்ப்.); a caste.

[மலை + அகம்.]

மலையகராதி *malai-y-agarāti,* பெ.(n.) மூலிகைகளைப் பற்றிய ஓர் அகரமுதலி நூல்; a dictionary of medicinal plant.

[மலை + அகராதி.]

மலையசம்[1] *malai-y-ašam,* பெ.(n.) மலையாடு; mountain sheep.

[மலை + அசம்.]

மலையசம்[2] *malai-y-ašam,* பெ.(n.) மலயசம் (நாமதீப.278) பார்க்க; see *mala-y-ašam.*

[மலை + அசும்.]

மலையடி[1] *malai-y-aḍi,* பெ.(n.) 1. தாழ்வரை (வின்.); foot of a mountain. 2. கொங்கு வேளாளர் பிரிவினுளொன்று; a subdivision of the *KoṅguVēḷāḷa,* caste (E.T.iv,393).

[மலை + அடி.]

மலையடி[2] *malai-aḍi,* பெ.(n.) சேவற்கோழி; cock as fighting with its feet. *"மயிற்கழுத்து மலையடியும்" (கல்லா.30, 2).*

[மலை + அடி.]

மலையடிப்படி *malai-aḍi-p-paḍi,* பெ.(n.) குறிஞ்சி நிலத்தூர் (யாழ்.அக.); a village in *kuṟiñji* region.

[மலையடி + படி.]

மலையடிவாரம் *mala-y-aḍivāram,* பெ.(n.) மலையடி[1], 1 (வின்.) பார்க்க; see *malai-y-aḍi.*

[மலை + அடிவாரம்.]

மலையணில் *malai-y-aṇil,* பெ.(n.) அணில் வகை;mountain squirrel, *sciurus indicus.*

[மலை + அணில்.]

மலையத்தி[1] *malai-y-atti,* பெ.(n.) கல்லத்தி மரம்; a kind of tree ficus artissima (சா.அக.).

[மலை + அத்தி.]

மலையத்தி[2] *malai-y-atti,* பெ.(n.) நீண்ட கொடிவகை; downy climbing cluster fig. l.cl. *Ficus macrocarpa.*

[மலை + அத்தி.]

மலையப்பொருப்பன் *malaiya-p-poruppaṉ,* பெ.(n.) பாண்டியன் (பிங்.); *Pāṇḍyaṉ* king, as lord of the mount *potiyam.*

[மலையன் + பொருப்பன்.]

மலையம் *malaiyam,* பெ.(n.) பொதியமலை; Mount Potiyam near *Kaṉṉiyā-k-kumari* (Cape comorin). *"ஓங்குயர் மலையத் தருந்தவன் உரைப்ப" (மணிமே.1:3).*

[மலை →மலையம். மலை + அம் = மலையம். 'அம்' பெருமைப் பொருள் பின்னொட்டு.]

மலையம்[2] *malaiyam,* பெ.(n.) 1. மலையினுச்சி (பிங்.); summit of a mountain. 2. குறிஞ்சி யாழ்த் திறத்தொன்று; a secondary melody-type of the *kuṟiñci.*

[மலை → மலையம்.]

மலையமான் *malaiyamāṉ,* பெ.(n.) 1. சேரவரசன் (திவா.); *cēra* king, as lord of the hill country. 2. மலாடு ஆளும் அரசன்; title of the ruler of the *malāḍu* country. *"மலையமான் திருமுடிக் காரி" (புறநா.121).* 3. உடையார் சாதியின் உட் பிரிவினர் (E.T.vi.206); a sub division of the *uḍayār* caste.

[மலை →மலையன் →மலையமான்.]

மலையமான்சோழியஏனாதிதிருக்கண்ணன் *malaiyamāṉ-cōḻiya-ēṉādi-tirukkaṇṇaṉ,* பெ.(n.) கழகக் காலப் புலவர் மாறோக்கத்து நப்பசலையார் பாடிய புறநா.174ஆம் பாட்டின் பாட்டுடைத் தலைவன்; hero of the poem of *Puranāṉūṟu*174, by *Māṟōkkattu Nappajalaiyār* a classical poet.

[மலையமான் + சோழியஏனாதி + திரு முடிக்காரி.]

மலையமான்திருமுடிக்காரி *malaiyamāṉ-tirumuḍi-k-kāri,* பெ.(n.) கடையேழு வள்ளல்களில் ஒருவன்; திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவன்; one of the last seven philonthoropists, who ruled from *Thirukkovalūr.*

[மலை + மகன் = மலையமான். திருமுடி + காரி = திருமுடிக்காரி.]

காரி எனப்பொறித்த செப்பு நாணயங்கள் கிடைத்துள்ளன.

மலையமானாடு *malaiya-māṉāḍu,* பெ.(n.) மலாடு (நன்.266, மயிலை) பார்க்க; see *malāḍu.*

[மலையமான் + நாடு.]

மலையமுனி *malaiya-muṉi,* பெ.(n.) அகத்தியர்; Agattiyar.

[மலை →மலைய + முனி.]

மலையர் *malaiyar,* பெ.(n.) திருக்கோவலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி புரிந்த அரச மரபினர்; name of race who ruled with *Thirukkovalūr* as their head quarters.

மறுவ. முள்ளூர்மலையர்

[மலை →மலையர்.]

மலையரசம் *malai-y-arašam,* பெ.(n.) சந்தனமரம்; sandal wood tree.

[மலை + அரசம்.]

மலையரசர் *malai-y-arašar,* பெ.(n.) குரங்குதின்னி என்றழைக்கப்படும் மலை வாழ் மக்கள் (M.M.); an aboriginal tribe.

[மலை + அரசர்.]

மலையரசன் *malai-y-arašaṉ,* பெ.(n.) மலை யரையன் (வின்.) பார்க்க; see *malai-y-araiyaṉ.*

[மலையரையன் → மலையரசன்.]

மலையரசன்நகம் *malai-y-arašaṉ-nagam,* பெ.(n.) புலிநகம்; claw's of tiger (சா.அக.).

மலையரசி[1] *malai-y-araši,* பெ.(n.) கோடை வாழிடங்களில் தலைமையானதாகக் கருதப் படும் நீலமலை; the queen of hill-stations, the Neela malai (Nilgris).

[மலை + அரசி.]

மலையரசி[2] *malai-y-araši,* பெ.(n.) மலையரம் பார்க்க; see *malai-y-aram*(சா.அக.).

மலையரசு *malai-y-arašu,* பெ.(n.) மலை யரசர் பார்க்க; see *malai-y-arašar.*

[மலையரசர் → மலையரசு.]

மலையரண் *malai-y-araṇ,* பெ.(n.) 1. அரண் நான்கனுள் ஒன்றான மலையாகிய காப்பிடம் (குறள், 742, உரை); mountain, as a natural defence, one of four *araṇ,* q.v. 2. மலைமேற் கோட்டை; mountain fastness.

[மலை + அரண்.]

மலையரணை *malai-y-araṇai,* பெ.(n.) அரணை வகை; a kind of lizard.

[மலை + அரணை. மல்→ மலை. அரள் → அரளை→அரணை = அச்சத்தை யுண்டுபண்ணுவது. 'அரணை தீண்டினால் மரணம்' (பழ.). இனி, அரணை ஒரு மருங்கு பாம்பை யொத்திருப்பதனாலும் கொல்லுந் திறனுடையதா யிருந்தும் மக்கள் தங்கும் அல்லது வழங்கும் இடத்தில் அச்சமின்றித் தாராளமாய் வந்து திரிவதனாலும் அர (பாம்பு) + அணை (சார்பு) என்று கருத இடமிருப்பினும், அது அத்துணைக் கொள்ளத்தக்கதன்று. அரணை பார்க்க.]



மலையரளி *malai-y-araḷi,* பெ.(n.) மஞ்சள் அரளி; a tree derider bearing yellow flowers.

[மலை + அரளி.]

மலையரியான் *malai-y-ariyāṉ,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[மலை + அரியான். அரி = நெற்கதிர்.]

மலையருவி *malai-y-aruvi,* பெ.(n.) மலையினின்று வீழும் நீர்வீழ்ச்சி; mountain torrent, water fall.

[மலை + அருவி.]

மலையரையன்[1] *malai-y-araiyaṉ,* பெ.(n.) 1. மிளகு; pepper. 2. புலி; tiger (சா.அக.).

[மலை + அரையன்.]

மலைபடு பொருளில் தலையானது மிளகு, மலைவாழ் உயிரிகளுள் தலையானது புலி. அதனால் இவ்விரண்டும் மலையரையன் எனப்பட்டது. அரையன் = அரசன், தலைமையானவன்.

மலையரையன்[2] *malai-y-arayaṉ,* பெ.(n.) 1. இமயவான்; *Himālayas,* as king of mountains. *"மலையரையன் பொற்பாவை" (திருவாச.12, 13).* 2. மலையமான் பார்க்க; see *malaiyamāṉ. "மலையரையன் பணிய நின்ற பூங்கோவலூர்" (திவ்.திருநெடுந்.7).*

[மலை + அரையன். அரையன் = அரசன்.]

மலையலரி *malai-y-alari,* பெ.(n.) மஞ்சளலரி; yellow oleander.

[மலை + அலரி.]

மலையவரை *malai-y-avarai,* பெ.(n.) மலையில் விளையும் அவரை வகை; a kind of bean cultivated in hill tract.

[மலை + அவரை. அம்முதல் = அமுங்குதல், பள்ளமாதல், தாழ்தல், தட்டையாதல். அமல்→ அவல் = பள்ளம், தட்டையாக இடித்த அரிசி. அவல் → அவலை→ அவரை = தட்டையான அல்லது சப்பையான காய்வகை. கத்தரி, சுரை, பாகல், பீர்க்கு, புடலை, பூசணி, முருங்கை, வாழை, வெண்டை முதலிய பிற காய்கள் எல்லாவற்றோடும் ஒப்பு நோக்க அவரை யொன்றே தட்டையாயிருத்தல் காண்க.]

மலையழுவை *malai-y-aḻuvai,* பெ.(n.) புலி; tiger (சா.அக.).

மலையன் *malaiyaṉ,* பெ.(n.) 1. குறிஞ்சி நிலத் தலைவன் (சூடா.); chief of a hilly tract. 2. சேரவரசன்; *cēra* king. *"சேரன் பொறையன் மலையன்" (சிலப். வாழ்த்துக்கா. ஊசல்.2). "மறப்போர் மலையனும்" (புறநா.158).* 3. தமிழ்நாட்டுப் பணிக்கச் சாதி வகையினர் (E.T.iv.439); a division of the *Paṉikka*caste in theTamil country. 4. கடைவள்ளல்களுள் ஒருவனான மலையமான் திருமுடிக்காரி; a chief famed for liberality, one of seven *kaḍai-vaḷḷalgaḷ.* 5. காடரி; abiboral clies.

[மலை → மலையன்.]

மலையன்சாமை *malaiyaṉ-šāmi,* பெ.(n.) சாமை வகை (வின்.); a kind of little millet.

[மலையன் + சாமை.]

மலையாசலம் *malai-y-āšalam,* பெ.(n.) மலையம் பார்க்க; see *malaiyam*(சா.அக.).

மலையாசலவாசி *malai-y-āšalavāši,* பெ.(n.) அகத்தியர்; the great siddha named *Agattiyar* (சா.அக.).

மலையாட்டி *malai-y-āṭṭi,* பெ.(n.) மலை நாட்டுப் பெண் (நன்.141, உரை); woman of the mountainous region.

[மலை + ஆட்டி. ஆட்டி = பெண்பாலீறு.]

மலையாட்டுயர் *malai-y-āṭṭuyar,* பெ.(n.) தாமரையிலை; lotus leaf (சா.அக.).

மலையாடு *malai-y-āḍu,* பெ.(n.) வரையாடு (வின்.); four horned antelope, *Tetraciros quadricornis.*

[மலை + ஆடு.]



மலையாண்பிராமணர் *malai-y-āṇ-pirāmaṇar,* பெ.(n.) மலையாளப் பிராமணர் வகையார் (S.I.I.v.166); a class of Brahmins in *Travancore* and *Malabar.*

மலையாத்தி *malai-y-ātti,* பெ.(n.) மரவகை; *malabar* mountain ebony, m.tr. *Bauhinia malabarica.*

[மலை + ஆத்தி.]

மலையாமணக்கு *malai-y-āmaṇakku,* பெ.(n.) செடி வகை (m.m.) coral plant 1.sh. *Jatropha multifida.*

[மலை + ஆமணக்கு.]

மலையாமி *malai-y-āmi,* பெ.(n.) மலையாள மொழி (வின்.); the malayalam language.

[மலையாளம் → மலையாம் → மலையாமி (கொச்சை).]

மலையாமை¹ *malai-y-āmai,* பெ.(n.) மலையிற் காணப்படும் ஆமை வகை (நாஞ்.); mountain - tortoise.

[மலை + ஆமை.]

மலையாமை² *malai-y-āmai,* பெ.(n.) மலை யாழ்மை பார்க்க; see *malai-y-āḻmai.*

[மலையாழ்மை → மலையாமை.]

மலையாரம் *malai-y-āram*, பெ.(n.) மலைச் சந்தனம்; sandal wood. *"கோவா மலையாரம்" (சிலப்.17, உள்வரிவாழ்த்து, 1).*

[மலை + ஆரம். ஆர்தல் = பொருந்துதல், நிறைதல், பரவுதல், மணம் வீசுதல். ஆர் → ஆரம் = மணம் வீசும் பொருள், சந்தனம்.]

மலையாவிகம் *malai-y-āvigam*, பெ.(n.) மிளகு; pepper (சா.அக.).

மலையாவிரை *malai-y-āvirai*, பெ.(n.) 1. காட்டாவிரை; small, stipaled downy *rachis glandular* senne. 2. ஆவிரை வகை; purple flowered chinese pagoda-tree. m.sh.*sophora glaunca.*

[மலை + ஆவிரை.]

மலையாழ்மை *malai-y-ālmai*, பெ.(n.) வட்டெழுத்து வகை (நாஞ்.); an old script, a variety of *vaṭṭeluttu.*

மலையாழம் *malaiyāḷam*, பெ.(n.) மலையாளம் (வின்.) பார்க்க; see *malai-y-āḷam.*

[மலையாளம் → மலையாழம் (கொ.வ.)]

மலையாள் *malaiyāḷ*, பெ.(n.) மலைமகள்; *Pārvati*, daughter of the *Himālayas.* *"மலையாண் மணவாளா" (திருவாச.6, 40).*

[மலை + ஆள். 'ஆள்' = பெண்பாலீறு. இஃது இருபாற் பொதுமையின் நீங்கிப் பெண்பாற் குறித்த பெயர். 'ஆள்' என்னும் பெண்பாற் பெயர்ச் சொல்லாகி, நாளடைவில் பெண்பாற் குறித்த வினையீறும் பெயரீறும் ஆயிற்று.]

மலையாளக்கருவாப்பட்டை *malaiyāḷa-k-karuva-p-paṭṭai*, பெ.(n.) இலவங்கப் பட்டை; bark of cinnamon (சா.அக.).

[மலையாளம் + கருவாப்பட்டை.]

மலையாளச்சேப்பங்கிழங்கு *malaiyāḷa-c-cēppaṅ-kiḻaṅgu*, பெ.(n.) 4 அடி நீளமும் ஒரு அடி அகலமுமுள்ளதாய் மலையாளத்தில் விளையும் சேப்பங்கிழங்கு; a variety of very long and stout colocasia is grown in Malabar-malabar colocasia.

[மலையாளம் + சேப்பங்கிழங்கு.]

மலையாளச்சேனைக்கிழங்கு *malaiyāḷa-c-cēṉai-k-kiḻaṅgu*, பெ.(n.) மலையாளத்தில் விளையும் ஒருவகைக் கருணைக் கிழங்கு; Malabar yam (சா.அக.).

[மலையாளம் + சேனைக்கிழங்கு.]

மலையாளத்தாறு *malaiyāḷa-t-tāṟu*, பெ.(n.) மலையாளத்தில் விளையும் அறுவகைச் சரக்குகள்; six articles manufactured or grown in Malabar.

[மலையாளம் + அத்து + ஆறு.]

அவை : 1. கொச்சி வீரம், 2. மிளகு, 3. திப்பிலி, 4. ஏலம், 5. இலவங்கம், 6 சிற்றரத்தை.

மலையாளபகவதி *malaiyāḷa-pagavati*, பெ.(n.) 1. மந்திரங்களுக்கு மூலத் தெய்வமாகக் கருதப்படும் கொற்றவை (வின்.); *Koṟṟavai*, as the patron deity of sorcery and magic. 2. பெரு மோசக்காரன் (கொ.வ.); one who deceives by his ostentations.

[மலையாளம் + பகவதி.]

மலையாளம்[1] *malaiyāḷam*, பெ.(n.) கேரள நாட்டில் பேசப்படுவதும் திராவிட மொழிக் குடும்பத்துள் ஒன்றுமான ஒரு மொழி (சி.பெ.அக.); one of the Dravidian languages, now spoken in Kerala.

[மலை + ஞாலம் → மலையாளம்.]

அம்மொழியில் 'மலையாளம்' என்றே எழுதப்படுகிறது.

மலையாளப் பெயர் :

கேரளம், மலையாளம் என்பன தற்போது மலையாள நாட்டையும், அங்கு வழங்கும் மொழியையும் குறிக்கும் பெயர்களாம்.

கழக (சங்க)க் காலத்தில் முத்தமிழ் நாடுகளில் ஒன்றாயிருந்த சேரநாட்டின் மேல்பாகமே இப்போது மலையாள நாடாயிருக்கின்றது. கீழ்ப்பாகம் கொங்குநாடும் (கோயம்புத்தூர், சேலம், கோட்டகப் பகுதிகள்), கங்கநாடும் (சேலம் எருமையூர் (மைசூர்)ச் சீமைப் பகுதிகள்) ஆகும். மறன், திறன் முதலிய பெயர்கள் முறையே மறல், திறல் என்று திரிந்தாற் போல, சேரன் என்னும் பெயரும் சேரல் எனப் போலியாகிப் பின்பு 'அன்' ஈறுபெற்றுச் சேரலன் என வழங்கிற்று.

எ–டு: சேரன் செங்குட்டுவன்; களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், தகடூர் எறிந்த பெருஞ்சேரல், குடக்கோ இளஞ்சேரல்.

தென்னவன் சேரலன் சோழன் (திருவாசகம்)

செறுமா வுகைக்கும் சேரலன் காண்க

(திருமுகப்பாசுரம்)

சேரலன் என்னும் பெயர் முறையே கேரலன், கேரளன் என மருவிற்று, இம் மரூஉ வடிவங்கள் பழந்தமிழ் நூல்களில் ஓரிடத்துங் காணப்படவில்லை; பிந்திய நூல்களில்தாம் காணப்படுகின்றன. இதனால் இவை பிற்காலத்தன என்பது தெளிவு.

ச–க, போலி 'ஒ.நோ: சீர்த்தி–கீர்த்தி, செம்பு–கெம்பு (க.) ல–ள, போலி, ஒ.நோ:செதில்–செதிள், வேலை–வேளை.

பாண்டியன் என்னும் பெயர் பாண்டியம் என ஈறு திரிந்து பாண்டியன் செய்திகளைக் குறித்தாற்போல, கேரலன் கேரளன் என்னும் பெயர்களும், கேரலம் கேரளம் என ஈறு திரிந்து சேர நாட்டையும், அந் நாட்டு மொழியையுங் குறிக்கும்.

மலையாள நாட்டெல்லை:

மேற்குத் தொடர்ச்சி (குட) மலைக்கு மேற்கே, வடக்கில் மங்கலூரி (மங்களபுரம்)லிருந்து தெற்கில் திருவனந்தபுரம் வரைக்கும், தென்கன்னடம் மலபார் கொச்சி திருவிதங்கோடு (திருவாங்கூர்) என்னும் நான்கு சீமைகளில் தாய்மொழியாகப் பேசப்படுவது மலையாளம்.

தென்னை மரத்தின் வடமொழிப் பெயராகிய நாளிகேரம் என்பது, கேரம் என முதற்குறையாய்ப் பின்பு கேரளம் என விரிந்து அம் மரம் மிகுதியாய் வளரும் மலையாள நாட்டைக் குறித்ததென்பது பொருந்தக் கூறும் பொய்ம்மைக் கூற்றாகும். வட மொழிக்கும் வடமொழியாளர்க்கும் உயர்வும் அதனால் தமிழுக்கும் தமிழர்க்கும் இழிவும் கற்பிக்கப்பட்ட புராணக் காலத்தில், வடமொழித் தொடர்பை உயர்வென மயங்கிய மலையாள நாட்டார், கேரளம் என்னும் பெயர்க்கு வடமொழி மூலத்தையும், கேரள நாட்டிற்குப் பரசுராமக்ஷேத்திரம் என்னும் புதுப்பெயரையும் மகிழ்ச்சியாய் ஏற்றுக்கொண்டனர். பரசுராமர்க்கு முந்தியே வழங்கிய பெயர் சேரநாடு என்பதும், அவர் இறுதிக் காலத்தில் தவஞ் செய்த இடமாகக் கூறியிருப்பது சேரநாட்டிற்கு வடக்கிலுள்ள கடற்கரைப் பகுதி யென்பதும் அறிதல் வேண்டும். (பண்டைச் சேரநாடு கூர்ச்சரம் (குஜரத்) வரையில் தொடர்ந்திருந்ததாலும், வடநாட்டு ஆரியர் தென்னாட்டிலும் வந்து குடி புகுந்ததாலும், பரசுராமர் தவஞ்செய்த இடத்திற்கு ஏற்பட்ட 'பரசுராம க்ஷேத்திரம்' என்னும் பெயர் அவ்விடத்தோடு தொடர்ந்த தென்பாகத்தையும் பிற்காலத்தில்

தழுவலாயிற்று. இந்து (சிந்து) என்னும் வடநாட்டுப் பகுதியின் பெயர் தென்னாட்டையும் தழுவினாற்போல.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஒரு நம்பூதிரிப் பார்ப்பனரால் இயற்றப்பட்டதாகத் தெரிகின்ற கேரளோத்பத்தி என்னும் புராணத்தில், பிராமணர் பஞ்சாபினின்று பரசுராமரால் தென் கன்னடத்திலுள்ள கோகர்ணத்தில் முதல் முதல் குடியேற்றப்பட்டனர் என்னும் செய்தி கூறப்பட்டுள்ளது. இதை எசு.சீனிவாச ஐயங்கார் தமது தமிழாராய்ச்சி (Tamil Studies) என்னும் நூலில் (ப.348) மறுத்து, பிராமணரைக் கோகர்ணத்தில் குடியேற்றியவன் கடம்ப மரபினரில் முதல்வனான மயூரவர்மன் என்றும், அவன் காலம் கி.பி.6ஆம் நூற்றாண்டின் முற்பகுதி யென்றுங் கூறியுள்ளாார்.

மலையாளம் என்னும் பெயர் அண்மையில் தோன்றியதாகும். சேரநாடு மலைநாடாதலால் சேரநாட்டான் மலையாளி யெனப்பட்டான். மலை + ஆளி = மலையாளி. ஆளி = ஆள். முதலாளி. தொழிலாளி, வங்காளி, பங்காளி முதலிய பெயர்களை நோக்குக. மலையாளியின் நாடும் மொழியும் மலையாளம் எனப்பட்டன.

ஒ.நோ: வங்காளி → வங்காளம்.

சேரநாடு கி.பி.10ஆம் நூற்றாண்டு வரை செந்தமிழரசரும் செந்தமிழ்ப் புலவரும் திகழ்ந்த செந்தமிழ் நாடாயிருந்தது. (நன்னூற் சிறப்புப்பாயிரத்தில் "குணகடல் குடகம் குமரி வேங்கடம், எனும் நான்கெல்லையினிருந்தமிழ்க் கடலுள்" என்று கூறியிருத்தலால் 12ஆம் நூற்றாண்டில் சேரநாடு கொடுந்தமிழ் நாடாயிருந்தமை பெறப்படும்). ஐங்குறுநூறும் பதிற்றுப் பத்தும் ஆகிய கழக நூல்களும், சிலப்பதிகாரம் ஆகிய கழக மருவிய நூலும், புறப்பொருள் வெண்பாமாலையும், சேரமான் பெருமான் நாயனாரின் ஆதியுலாவும், குலசேகர ஆழ்வாரின் பெருமாள் திருமொழியும் மலையாள நாடெனப்படும் சேரநாட்டில் எழுந்த செந்தமிழ் நூல்களே.

பதினாலாம் நூற்றாண்டில் (கி.பி.1320) வீரராகவ சக்கரவர்த்தியால் பொறிக்கப்பட்ட கோட்டயம் செப்பேட்டு மொழி 'வாதில்' (வாயில்) 'ஒண்டாயில்' (உண்டாகில்), 'எழுந்நள்ளி' (எழுந்தருளி)' முதலிய சில மலையாளத் திரிபுகளுடன் கூடிய தமிழே. அதே நூற்றாண்டில் (கி.பி.1350) இயற்றப்பட்ட கண்ணச்சப் பணிக்கர் இராமயண மொழியும் இத்தகையதே.

எ–டு:

"கொண்டலிந் நேரிருண்டு சுருண்டு நீண்டொளி வார்ந்து
திங்஼ும், குந்தள பாரமோடு முகில் குலத்திட மின்னல்
போலே, புண்டரீகேக்ஷணந் நரிகெப் பொலிந்தவள
சீதசொந்நாள்"

இதில், குந்தளபாரம் புண்டரீகேக்ஷணன் என்னும் இரண்டே வடசொற்கள். ,இவற்றுள்ளும் குந்தளம் என்பது கூந்தல் – என்னும் தென்சொல் திரிபு; வார்ந்து – வார்ந்நு, திணுங்கும் – திங்஼ும் இடை – இட, அருகே – அரிகெ.

போர்த்துக்கீசிய விடைத் தொண்டர் (Missionaries) முதன்முதல் மலையாளக் கரையில் வந்திறங்கினர் என்றும், மலையாள நாட்டு மொழியைத் தமக்கு முந்திய அரபியர்போல மலபார் என்றழைத்தனர் என்றும், கீழ்க்கரையிலும் இலங்கைக் கரையிலும் வழங்கிய மொழி (தமிழ்) அதை யொத்திருக்கக் கண்டு அதையும் அப்பெயரால் அழைத்தனர் என்றும் அவர்கள் மலையாளக் கரையிலுள்ள அம்பலக்காட்டில் 1577அல்லது 9இல் முதன் முதல் தமிழெழுத்தில்

அச்சிட்ட புத்தக மொழியை 'மலவார் அல்லது தமிழ்' (Malabar or Tamil) என்று குறித்தனர் என்றும் கால்டுவெல் கண்காணியார் கூறுகின்றார் (முன்னுரை பக்.10–13).

இதனால், 16ஆம் நூற்றாண்டு வரை மலையாள நாட்டு மொழி கொடுந்தமிழாயிருந்த தென்றும், அதன் பின்னரே வடமொழிக் கலப்பால் மலையாளமாகத் திரியத் தொடங்கிற்றென்றும் அறியலாம். மலையாளம் மிகத் தெளிவாய்ப் பிரிந்து போனது 17ஆம் நூற்றாண்டில் (கி.பி.1650) ஆரியவெழுத்தை வகுத்தும், பெரு வாரியாய் ஆரியச் சொற்களையும் விகுதிகளையும் புகுத்தியும், சேரநாட்டு மொழியைச் சிதைத்தது துஞ்சத்து எழுத்தச்சனாலேயே.

1860ஆம் ஆண்டில்தான் முதல் மலையாள இலக்கணமும் எழுந்தது. 19ஆம் நூற்றாண்டு வரை மலையாளியர் தமிழையும் கற்றுவந்தன ரென்றும் அதன் பின்புதான் அவ் வழக்கம் அடியோடு விடப்பட்டதென்றும் முதியோர் கூறுகின்றனர்.

மலையாள நாட்டில் பார்ப்பனரொழிந்த மற்றக் குலத்தாரெல்லாம் தமிழர் அல்லது திரவிடரே. குயவர், பணிக்கர், பாணர், ஆயர், ஈழவர், கவுடர் (கவுண்டர்) முதலிய பல குலத்தினர் தமிழ் நாட்டிலும் உள்ளனர். நாயர், நாயாடி, வாரியர், செறுமன் முதலிய குலத்தினர் மலையாளத்திற்குச் சிறப்பாயிருந்த தாலும், அவர் குடிப்பெயரெல்லாம் தனித் தமிழே. தாழ்ந்தது உயர்ந்தது என்று முறையே பொருள் தரும் கிழக்கு மேற்கு என்னும் திசைப்பெயர்கள் குடமலைக் கீழ்நாட்டிற்கே ஏற்றவை. இவை மலையாளத்திலும் வழங்குவது மலையாளநாடு தமிழ்நாட்டுப் பகுதியே யென்பதையும் மலையாளியர் தமிழ் மரபினரே என்பதையும் உணர்த்தும். பிற்காலத்தில் மேற்குத் திசைக்குப் படு ஞாயிறு என ஒரு பெயரை அவர்கள் புனைந்து கொண்டாலும், அதுவும் தனித்தமிழே என்பதை அறிதல் வேண்டும்.

மலையாள நாட்டு அல்லது சேரநாட்டுத் துறைமுகங்கள் பழந்தமிழ் நூல்களில் பெருங்கடல் வாணிக நிலையங்களாகக் கூறப்பட்டுள்ளன.

செங்கோற், குட்டுவன் தொண்டி (ஐங்.178)

.... சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிரி யார்ப்பென (அகம்.148)

கலந்தந்த பொற்பரிசம்
கழித்தோணியாற் கரைசேர்க்குந்து
மலைத்தாரமும் கடற்றாரமும்
தலைப்பெய்து வருநர்க்கீயும்
புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்
முழங்குகடல் முழவின் முசிரி யன்ன
(புறம்.343)

இயற்றேர்க் குட்டுவன் வருபுனல் வாயில்
வஞ்சி (பத்.3)

மலையாள நாட்டிலுள்ள பல சிவநகரங்களும் விண்ணகரங்களும் நாயன்மாராலும் ஆழ்வாராலும் பாடப்பட்டுள்ளன. கோகர்ணம் திருச்செங்குன்றூர் (கொல்லத்திற் கருகிலுள்ளது) என்பன அப்பராலும் சம்பந்தராலும் 7ஆம் நூற்றாண்டிலும், திருவஞ்சைக்களம் சுந்தரரால் 9ஆம் நூற்றாண்டிலும், நேரிற் பாடப்பட்டுள்ளன. திருமுழிக்களம், திருநாவாய், திருவல்லவாழ் என்பன திருமங்கையாழ்வார் 8ஆம் நூற்றாண்டில் நேரிற் சென்று கண்டவை. இவற்றுடன் திருவனந்தபுரம், திருவண்பரிகாரம், திருக்காட்கரை, திருப்புலியூர், திருச்செங் குன்றூர், திருவண்வண்டூர், திருவத்தரு, திருக்கடித் தானம், திருவாறன் விளை என்பன நம்மாழ்வாரால் (கி.பி.920) குறிக்கப்படுகின்றன. வித்துவக்கோடு குலசேகராழ்வாரால் 8ஆம் நூற்றாண்டிற்

பாடப்பட்டது (தமிழாராய்ச்சி, ப.347) மேற்கூறிய திருநகரங்கள் 10ஆம் நூற்றாண்டுவரை செந்தமிழ் நிலையங்களா யிருந்திரா விட்டால் பாடல் பெற்ற நகரங்களாயிரா என்பது திண்ணம்.

மலையாளத்திலுள்ள பழைமையான ஊர்ப் பெயர்களெல்லாம் இன்றும் தனித்தமிழாயே யிருக்கின்றன. கோடு (கோழிக்கோடு – calicut), சேரி (தலைச்சேரி), குளம் (எர்ணாக்குளம்), புரம் (அங்காடிபுரம்), நாடு (வலையநாடு), ஊர் (கண்ணனூர்), குன்றம் (பூங்குன்றம்), கா (கன்னங்காவு), காடு (பாலைக்காடு – Palghat), குடி (சாக்குடி), வாசல் (பள்ளிவாசல்), அங்காடி (பரப்பனங்காடி), தோட்டம், பாடி, துறை (திருப்புனித்துறை), குறிச்சி, ஏரி, கரை (கொட்டாரக் கரை), களம் (திருவஞ்சைக் களம்), இருப்பு முதலியன தனித்தமிழ் ஊர்ப் பெயரீறுகளாம். கோடு = மலை. கா = சோலை.

பழஞ்சேரநாட்டின் கீழ்ப்பகுதியின் தென்பாகம் (கொங்குநாடு) இன்றும் தமிழ்நாடா யிருக்கின்றது; வடபாகத்திற் கன்னடம் புகுந்துள்ளது.

13ஆம் நூற்றாண்டில் கொடுந்தமிழ் நாடுகளாகக் குறிக்கப்பட்ட வேணாடு, பூமி நாடு, குட்ட நாடு, குட நாடு, மலை நாடு என்பன இற்றை மலையாள நாட்டுப் பகுதிகளாயுள்ளன.

பூமியன் உதியன் கொங்கன் பொறையன்
வானவன் கட்டுவன் வான வரம்பன்
வில்லவன் குடநாடன் வஞ்சி வேந்தன்
கொல்லிச் சிலம்பன் கோதை கேரளன்
போந்தின் கண்ணிக்கோன் பொருநைத் துறைவன்
சேரன் மலையமான் கோச் சேரன் பெயரே

என்பது திவாகரம்.

இவற்றுடன் கொங்கன், கொல்லிச் சிலம்பன், பொருநை (ஆன் பொருநை)த் துறைவன் என்னும் பெயர்கள், கோயம்புத்தூர் சேலம் ஆகிய இரு கோட்டகங்களும் சேரநாட்டைச் சேர்ந்தன என்பதை விளக்கும். கொங்கன் = கொங்கு நாட்டரசன், கொங்கு நாடு கோயம்புத்தூர்க் கோட்டகப் பகுதி. ஒரு கிளையினரான அதிகமான் மரபினர் சேலத்தைச் சேர்ந்த தகடூரை (தர்மபுரியை)த் தலைநகராகக் கொண்டு ஆண்டனர்.

குற்றியலுகரத்தைப் புள்ளியிட்டுக் காட்டல், திதியைப் பக்கமென்றல் முதலிய பழந்தமிழ் வழக்கங்கள் இன்றும் மலையாள நாட்டில் தானுள்ளன.

தொன்றுதொட்டுச் சேரநாட்டு மெலித்தல் திரிபுச் சொற்கள் சில சோழ பாண்டி நாடுகளிலும் இருவகை வழக்கிலும் வழங்கி வருகின்றன.

எ–டு : 'திரிநவும்' (தொல்.83) பழனி, (புறம் 113) பழுனிய (மணிமே.328) 'அறியுனன்' (புறம் 134) (திரிகின்ற திரிகுன்ன – திரியுன்ன – திரியுனி–திரிந) 'பழுத்து – பழுன்னு–பழுன்னு' – பழுநி – பழுதி, மகிழ்கின்றான் – மகிழுன்னான் – மகிழுநன் – மகிழ்நன். வாழ்கின்றான் – வாழுன்னான் – வாழுநன் – வாழ்நன் – வாணன். இனி, திரியும் – திரியுன் + அ = திரியுன – திரின – திரிந என்றுமாம். இங்ஙனமே பிறவும், னகரத்தினும் நகரம் முந்தினதெனக் கொள்ளவும் இடமுண்டு. ஆங்கனம் – அங்கனம் – அங்ஙனம் – அன்னணம்.

ஆஓ வாகும் பெயருமா ருளவே
ஆயிடன் அறிதல் செய்யு ளுள்ளே

(தொல்.680)

என்று கூறியதும் சேரநாட்டிற்கே சிறப்பாய் ஏற்கும். இவற்றால், பண்டை முத்தமிழ் நாட்டுத் தொடர்பையும், சேரநாட்டு வினைமுற்றுகள் பாலீறு பெற்றதையும், அறியலாம்.

.... வண்டமி ழிகழ்ந்த
காய்வேற் றடக்கைக் கனகனும் விசையனும்
செங்குட்டு வன்றன் சினவலைப் படுதலும்

என்று சிலப்பதிகாரத்திலும்,

வடதிசை யெல்லை யிமய மாகத்
தென்னங் குமரியொ டாயிடை யரசர்
முரசுடைப் பெருஞ்சமந் ததைய வார்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவி னழித்த
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ
(பதிற்.43)

என்று பதிற்றுப்பத்திலும் பாடப்பட்டுள்ள சேர நாட்டுச் சீரிய மறம் இன்று ஆரிய அடிமைப்பட்டு அணுவளவுத் தமிழுணர்ச்சியின்றிக் கிடப்பது நினைக்குந்தோறும் நெஞ்சைப் புண்படுத்துவதா யிருக்கின்றது.

மலையாளம் திரிந்ததற்குக் காரணங்கள் :

1. சேரநாடு பெரும்பாலும் மலைத்தொடரால் தடுக்கப்பட்டுப் பிற தமிழ்நாடுகளுடன் பெருந் தொடர்பு கொள்ளாதிருந்தமை.
2. 12ஆம் நூற்றாண்டோடு பாண்டிய மரபும் 13ஆம் நூற்றாண்டோடு சோழ மரபும் சேர மரபுடன் மணவுறவு நிறுத்தியமை.
3. வடமொழிக்கும் வடமொழியாளர்க்கும் தெய்வ உயர்வு கற்பிக்கப்பட்டமையும் வரம்பிறந்த வடசொற் கலப்பும்.
4. மிகு மழையால் மலையாளியர்க்கு மூக்கொலி சிறந்தமை.
5. மலையாளியர் முன்னோரின் செந்தமிழ் நூல்களைக் கல்லாமை.
6. மலையாளியரின் ஒலிமுறைச் சோம்பல்.

மலையாளம் திரிந்த முறைகள் :

1. முற்றுவினைகள் பால் காட்டும் ஈறிழத்தல். எ–டு: வந்தான் – வந்து.
2. மெலித்தல் திரிவு. எ–டு: எழுந்து – எழுந்நு, அங்கு – அங்ஙு, கழுகு – கழுங்ஙு. குஞ்சி – குஞ்ஞி, வீழ்ந்து – வீணு.
3. நிகழ்கால வினைமுற்றின் கின்றது என்னும் இடைநிலை உன்னு எனத் திரிதல். எ–டு: செய்கின்ற – கெய்குன்னு – செய்யுன்னு.
4. வேற்றுமை யுருபுத் திரிவு. எ–டு : அதினுக்கு – (அதின்கு) – அதின்னு, உடைய – உடே– டே – றே.
5. போலித் திரிவு. எ–டு : நரம்பு – ஞரம்பு, செய்ம்மின் – செய்வின்.
6. கொச்சைத் திரிவும் தொகுத்தலும், எ–டு: உள்ள – ஒள்ள, மலை – மல, அகற்றுக – அகத்துக இரு – இரி, புறா–, ப்ராவு, கனா – கினாவு, வேண்டும் – வேணம், செய்யவேண்டும் – செய்யேண்டு, போக வேண்டும் – போகேணம்.
7. றகர ரகர வேறுபாடின்மை. எ–டு: உறவு – உரவு.
8. நிகழ்கால வினையெச்சத்திற்குப் பதிலாக 'வான்' 'பான்' ஈற்று வினையெச்சங்களும் அவற்றின் திரிபுகளும் வழங்கல். எ–டு: குடிப்பான் = குடிக்க, நடப்பான் – நடக்கான் = நடக்க, வருவான் = வர.
9. சிறப்புச் சொற்கள் பொதுப் பொருளில் வழங்கல். எ–டு : வெள்ளம் (புதுப் பெருக்கு நீர்), = நீர். மூரி (கிழஎருது) – எருது, நோக்கு (கூர்ந்து பார்) = பார்.
10. சொற்களை ஒருமருங்கு பற்றிய பொருளில் வழங்கல். எ–டு: அதே = ஆம், வளரே = மிக, மதி = போதும்; வலிய = பெரிய.
11. ஒருபொருட் பல சொற்களில் தமிழில் வழங்காத ஒன்றை வழங்கல். எ–டு: சொல்(த.) – பறை (ம.) கூப்பிடு (த.) விளி (ம.).

12. ஆய் என்னும் வினையெச்ச வீறு ஆயிட்டு என வழங்கல். எ-டு: சிவப்பாய் - சிவப்பாயிட்டு.

13. நெடுஞ்சுட்டு வழக்கு வீழாமை. எ-டு: ஆயாள் (அவ் ஆள்), ஈமூரி (இம்மூரி).

14. ஏவல் வினைகள் பெரும்பாலும் வியங்கோள் வடிவில் வழங்கல். எ-டு: தா-தரிக, தர.

15. துணை வினை வேறுபாடு. எ-டு: பறையுவான் கழியும் (சொல்ல முடியும்). பறையுவான் கழியுன்னில்ல (சொல்லமுடியாது).

16. செய்யும் என்னும் முற்று மூவிடத்தும் வழங்கல். எ-டு: ஞான், நீ, அவன் - போகும்.

17. றன்னகரம் தந்நகரமாக எழுதப்படல்.

18. வழக்கற்ற சொல் வழங்கல். எ-டு : கைநீட்டக் காசு, தம்பிராட்டி.

19. புதுச்சொற்கள். எ-டு: மேடி = வாங்கு, வெடிப்பி = துப்புரவாக்கு.

20. வினைமரபு வேறுபாடு எ-டு : முட்ட புழுங்நுக (அவிக்க), விளக்கு கெடுக்க (அணைக்க), முட்டுக் குத்துக (கொடுக்க), காலுற முறிக்க (வெட்டுக), மடங்ஙி (திரும்பி) வருக.

குறிப்பு : சேரநாட்டுக் கொடுந்தமிழாகிய மலையாளத்திலுள்ள இருவகைத் தமிழ்ச் சொற்களையும் வழக்கு வீழ்த்தற்கும் மலையாளத்தார் தமிழ்ச் சொற்களைக் கடன்கொண்டு அதனால் அவர்க்கும் தமிழர்க்கும் தொடர்பு ஏற்படாதபடியும், ஆரியர் வடசொற்களை மிகுதியாய்க் கலந்து மலையாளத்தைக் கெடுத்துத் தமிழுக்கு மிக அயன்மைப்படுத்திவிட்டனர்.

மலையாளம்[2] *malaiyāḷam,* பெ.(n.) மலையாளத்து மிளகு; pepper grown in Malabar (சா.அக.).

மலையாளம்[3] *malaiyāḷam,* பெ.(n.) ஐம்பத்தாறு நாட்டினுள் ஒன்று; Malabar, one of 56 *tēcam*(q.v.).

மலையாளர் *malaiyāḷar,* பெ.(n.) மலை நாட்டார்; inhabitants of mountainous tracts as Travancore Cochin etc. *"அந்தணர்களான மலையாளர்" (தேவா.325).*

[மலையாளம்→மலையாளர்.]

மலையாளர்வளைப்பு *malaiyāḷar-vaḷaippu,* பெ.(n.) மலையாளியை போல ஒருவன் பக்கலில் ஒன்றை வாங்க நினைத்தால் வாங்கியல்லது போகாத் தன்மை; stubborn entreaty in order to gain one's end, as characteristic of the ancient *Malayāḷis.* *"நாழிகை முப்பது சென்றாலும் மலையாளர் வளைப்புப் போல ஓரடி பேராதாய்த்து" (ஈடு.10, 3, 30).*

[மலையாளர் + வளைப்பு.]

மலையாளரூட்டு *malaiyāḷar-ūṭṭu,* பெ.(n.) மலையாளிகளைப் போலப் பல நாளுண்ணவும் பலநாள் பட்டினி கிடக்கவும் வல்லராந் தன்மை; habit of feasting or fasting for days at a time as characteristic of ancient *Malayāḷis.* *"மலையாளரூட்டுப் போலே அனுபவிக்கவும் வல்லர்களாய்" (திவ். திருநெடுந்.1, 5).*

[மலையாளர் + ஊட்டு.]

மலையாளி *malai-y-āḷi,* பெ.(n.) 1. மலையில் வாழ்பவன்; native of mountainous regions. 2. மலையாள நாட்டான்; native of *Malabar.* 3. முகமதியர் தென்னாடு வந்த போது காஞ்சீபுரத்தி னின்றும் ஓடிச் சேர்வராய மலையிற் குடியேறிய வேளாள

வகுப்பினர்; Tamil - speaking caste on the Shevaroy hills, said to have been originally *Vēḷaḷa* cultivators who emigrated from *Canjeevaran.* when Muhammadans first invaded South India (E.T.iv.406). 4. மிளகு (தைலவ.தைல); black pepper.

[மலையாளம் → மலையாளி.]

மலையாறு *malai-y-āṟu,* பெ.(n.) தாம்பிர புட்பகம்; a kind of plant (சா.அக.).

மலையான் *malaiyāṉ,* பெ.(n.) மலையாளி பார்க்க; see *malaiyāḷi.*

[மலையாளி → மலையான்.]

மலையானிகம் *malaiyāṉigam,* பெ.(n.) மலைக்காளான்; mountain mushroom (சா.அக.).

மலையானிலம் *malaiyāṉilam,* பெ.(n.) தென்றல்; balmy southern breeze, as from the *Malayam* hills. *"நிலவும் விரையார் மலையா னிலமு மெரியாய் வருமால்" (பெரியபு.தடுத்தாள்.175).*

மலையானை *malaiyāṉai,* பெ.(n.) மலையில் உலாவும் யானை (திவா.); mountain elephant.

[மலை + யானை.]

மலையிச்சி[1] *malaiyicci,* பெ.(n.) கல்லிச்சி; shining leaved fig (சா.அக.).

மலையிச்சி[2] *malaiyicci,* பெ.(n.) மரவகை (இலத்.); oval leaved fig. l.tr. Ficus retusa.

[மலை + இச்சி.]

மலையிசம் *malaiyicam,* பெ.(n.) சந்தனமரம்; sandal wood tree.

மலையிஞ்சி *malai-y-iñci,* பெ.(n.) இஞ்சி வகை (நாஞ்.); a kind of ginger.

[மலை + இஞ்சி.]

மலையிடறு *malai-y-iḍaṟu,* பெ.(n.) பெருந் தடை (பி.வி.19, உரை); great obstacle.

[மலை + இடறு.]

மலையிருகுணத்தோன் *malai-y-iru-kuṇattōṉ,* பெ.(n.) காய்ச்சற் நஞ்சு; a kind of prepared poison (சா.அக.).

மலையிரும்பு *malai-y-irumbu,* பெ.(n.) மாழை மணல் (யாழ்.அக.); iron - sand.

[மலை + இரும்பு.]

மலையிருவேலி *malai-y-iruvēli,* பெ.(n.) ஒரு வகை மலைப்புல் (வின்.); a mountain grass.

[மலை + இருவேலி.]

மலையிலக்கு *malai-y-ilakku,* பெ.(n.) வெளிப்படையானது; that which is conspicious as a mountain. *"வார்த்தையினை மலையிலக் கென நம்பினேன்" (தாயு.மௌன.10).*

[மலை + இலக்கு.]

மலையிலுப்பை *malai-y-iluppai,* பெ.(n.) காட்டிலுப்பை மரம்; wild mowah.

[மலை + இலுப்பை.]



மலையிற்றிரண்டதீ *malayirriranda-ti*, பெ.(n.) கடனுரை (யாழ்.அக.); shell of cuttle fish.

[மலையில் + திரண்ட + தீ.]

மலையிறக்கம் *malai-y-irakkam*, பெ.(n.) மலையின் இறங்கு சரிவு (C.G.); declivity or descent of a mountain.

[மலை + இறக்கம்.]

மலையின்முனிமரம் *malai-yin-munimaram*, பெ.(n.) அகத்தி மரம்; a tree (சா.அக.).

மலையின்முனிவன் *malaiyin-munivan*, பெ.(n.) 1. அகத்தி மரம் (மலை.); west-indian pea tree. 2. மிளகு (மலை.); black pepper. 3. அத்தி வகை; cluster fig. l.tr. ficus glomerata.

[மலையின் + முனிவன்.]

மலையினுச்சி[1] *malaiyin-ucci*, பெ.(n.) மலைமுகடு; peak of a mountain.

[மலை + இன் + உச்சி.]

மலையினுச்சி[2] *malaiyin-ucci*, பெ.(n.) மாங்கிசபேதி (மலை.) பார்க்க; see *mānkica-pēti*.

[மலையின் + உச்சி.]

மலையீஞ்சு *malai-y-īñcu*, பெ.(n.) மலையீந்து (வின்.) பார்க்க; see *malai-y-īndu*.

[மலையீந்து →மலையீஞ்சு.]

மலையீந்து *malai-īndu*, பெ.(n.) ஈச்சம்பனை (வின்.); wild date-palm.

[மலை + ஈந்து. ஈச்சம் →ஈச்சு →ஈந்து.]

மலையீருள்ளி *malai-y-īrulli*, பெ.(n.) பெரு வெங்காயம்; big onion.

[மலை + ஈருள்ளி.]

மலையுதி *malai-y-udi*, பெ.(n.) 1. கருவேம்பு; black neem tree. 2. பாதிரி மரம்; white flowered trumpet flower tree.

மலையுதியம் *malai-yudiyam*, பெ.(n.) கதிர் வேம்பு; a tree (சா.அக.).

மலையுருக்கன் *malai-y-urukkan*, பெ.(n.) வெற்றிலை வகை (சங்.அக.); a kind of betel.

[மலை + உருக்கன்.]

மலையெருக்கலை *malai-y-erukkalai*, பெ.(n.) மரவகை; a kind of tree, s.tr. *felicium decipiens* (Nels.).

[மலை + எருக்கலை.]

மலையெருக்கு *malai-y-erukku*, பெ.(n.) செடிவகை (மலை.); mountain madar. *calotropis*.

[மலை + எருக்கு.]

மலையெலி *malai-y-eli*, பெ.(n.) ஒருவகை எலி; a kind of rat.

மலையெலுமிச்சை *malai-y-elumiccai*, பெ.(n.) பெரு எலுமிச்சை; a big variety of lime grown on the hills.

மறுவ. கொளுஞ்சி நாரத்தை, கொடி நாரத்தை, துரிஞ்சி.

[மலை + எலுமிச்சை. மலை - பெரியது.]

மலையேந்தி *malai-y-endi*, பெ.(n.) மலை தாங்கி பார்க்க; see *malai-tāngi* (சா.அக.).

[மலை + ஏந்தி.]

மலையேலம் *malai-y-ēlam,* பெ.(n.) பேரேலம் (பதார்த்த.1029); cardamom.

[மலை + ஏலம். மலை = பெரியது.]

மலையேற்றம் *malai-y-ērram,* பெ.(n.) மலையின் ஏற்றமான பகுதி (C.G.); acclivity or ascent of a mountain.

[மலை + ஏற்றம்.]

மலையேறு-தல் *malai-y-ēru-,* 5 செ.கு.வி. (v.i.) 1. தெய்வம் இடத்தினின்று நீங்குகை; to leave, abandon, as a deity from a place or person. 2. முடிவடைதல் (இ.வ.); to cease to exist, to come to an end. 3. மாவிளக்கு நெய்யற்று அணைந்து போதல் (இ.வ.); to be extinguished when the oil is consumed, as *māviḷakku.* 4. மலை மீது ஏறுதல்; claimbing the hills or mountain.

[மலை + ஏறு-.]

மலைவசம்பு[1] *malai-vašambu,* பெ.(n.) யானை வசம்பு; mountain sweet flag (சா.அக.).

[மலை + வசம்பு. மலை = பெரியது.]

மலைவசம்பு[2] *malai-vašambu,* பெ.(n.) 1. செடி வகை; a kind of medicinal plant, cortus speciosus (A.). 2. மிளகு (சங்.அக.); black pepper.

[மலை + வசம்பு.]

மலைவட்டை *malai-vaṭṭai,* பெ.(n.) ஆற்றுச் சஞ்சலை என்னும் நெய்ம மரம்; mountain Tamana oil tree-*Hydrocaspus alpina* (சா.அக.).

மலைவமைதி *malaivamaidi,* பெ.(n.) இடம், காலம், கலை முதலிய அறுவகை மலைவும் சில காரணங் கருதிப் பொருத்தமுடையனவாக அமைத்துக் கொள்ளப்படுவது (தண்டி.123, உரை); (Rhet.) error or impropriety of ideas considered proper in the context.

[மலைவு + அமைதி.]

மலைவள்ளி *malai-vaḷḷi,* பெ.(n.) மலையில் விளையும் வள்ளிச் செடி; mountain sweet potato (சா.அக.).

[மலை + வள்ளி.]

மலைவளம் *malai-vaḷam,* பெ.(n.) 1. மலை நிலத்தின் செழிப்பு; fertility of the mountainous region. *"அந்த மலைவள மெனக்குச் சொல்" (குற்றா.குற.51).* 2. மலைபடுபொருள் (பரிபா.18, 15, உரை) பார்க்க; see *malai-paḍu-poruḷ.*

[மலை + வளம்.]

மலைவளர்காதலி *malai-vaḷar-kādali,* பெ.(n.) மலைமகள்; *Pārvati,* as worshipped in *Ramēšvaram.* *"மலை வளர் காதலி மலர்த்தாள்" (சேதுபு.கடவு.3).*

[மலைவளர் + காதலி.]

மலைவன்வாசி *malaivan-vāši,* பெ.(n.) உடும்பு; guana.

மலைவன்னி *malai-vanni,* பெ.(n.) நச்சு மரம்; a poisonous tree (சா.அக.).

[மலை + வன்னி. வன்னி = வன்னிமரம்.]

மலைவாகை *malai-vāgai,* பெ.(n.) மரவகை; a species of unarmed curl-brush-bean, 1.tr., *pithecdobium corlaceum (L.).*

[மலை + வாகை.]

மலைவாசம்¹ *malai-vāšam,* பெ.(n.) மிளகு (சங்.அக.); pepper.

மலைவாசம்² *malai-vāšam,* பெ.(n.) உடல் நலத்திற்காக மலையின் சென்று வாழ்தல்; residing in hills for recouping health.

*[மலை + **Skt.** வாசம்.]*

மலைவாசி¹ *malai-vāši,* பெ.(n.) மலையில் வாழ்பவன்–வள்–து (வின்.); inhabitant of the hills.

[மலை + வாசி. வதி→வசி →வாசி.]

மலைவாசி² *malai-vāši,* பெ.(n.) 1. பன்றி; pig. 2. முள்ளம் பன்றி; procupine. 3. வசுவாசி; a tree (சா.அக.).

[மலை + வாசி.]

மலைவாசிக்கொம்பு *malai-vāši-k-kombu,* பெ.(n.) பன்றிக் கொம்பு (யாழ்.அக.); tooth of the pig.

[மலைவாசி² + கொம்பு.]

மலைவாணர் *malai-vāṇar,* பெ.(n.) மலைப் பகுதியில் வாழ்வோர் (வின்.); hill folk, hill men.

[மலை + வாணர். வாழ்நர்→வாணர்.]

மலைவாழை *malai-vāḻai,* பெ.(n.) தானாகவோ அல்லது பயிரிடப்பட்டோ மலையில் வளரும் வாழை வகை; a plantain tree growing on mountains.

[மலை + வாழை.]

மலைவாழைப்பழம் *malai-vāḻai-p-paḻam,* பெ.(n.) மதுரை மாவட்டத்தின் சிறுமலை முதலியவற்றில் உண்டாகும் சிறு வாழைக் கனி வகை (கொ.வ.); a kind of plantain fruit, as from *ciṟumalai,* in Madurai District.

[மலைவாழை + பழம்.]

மலைவிராலி *malai-virāli,* பெ.(n.) மரவகை; ochre flowered fish - poison cedar, L.tr. *walsura piscidia.*

[மலை + விராலி.]

மலைவீரியம் *malai-vīriyam,* பெ.(n.) அன்ன பேதி (மலை.); green vitriol.

மலைவு *malaivu,* பெ.(n.) 1. மயக்கம்; delusion, confusion of mind. 2. வியப்பு; amazement, fright. 3. உரை செயல்களில் முன்னுக்குப் பின் பகை; inconsistency, as in expression. *"வருமுன் பின்மலை வென்றார்" (சேதுபு.பிரமகத்.2).* 4. இடம், காலம், கலை, உலகம், நயம், ஆகமம் என்பவற்றைப் பொருத்தமின்றிக் கூறுகை யாகிய குற்றம்; (Gram.) error or impropriety in ideas of six kinds viz., *iḍam, kālam, kalai, ulagam, niyāyam, āgamam.* 5. உவமச் சொல் (சூடா.); word of comparison. 6. போர் (வின்.); opposition contention.

மலைவெக்கை *malai-vekkai,* பெ.(n.) மலையருகிலுள்ள வெப்பம் (நாஞ்.); heat radiated near hills.

[மலை + வெக்கை.]

மலைவெட்பு *malai-veṭpu,* பெ.(n.) மலை வேட்பு (சங்.அக.) பார்க்க; see *malai-vēṭpu.*

[மலை + வெப்பு.]

மலைவெட்புசம் *malai-veṭpušam,* பெ.(n.) சந்தனக் களபம்; mixture of sandal wood paste (சா.அக.).

மலைவெண்டை *malai-veṇḍai,* பெ.(n.) செடி வகை (வின்.); hill bendy s.tr. *hibiscus collinus.*

[மலை + வெண்டை.]

மலைவெருகு *malai-verugu,* பெ.(n.) காட்டுப் பூனை; calamomilam (சா.அக.).

[மலை + வெருகு. வெருகு = பூனை.]



மலைவெற்றிலை *malai-veṟṟilai,* பெ.(n.) காட்டு வெற்றிலை; wild betel.

மறுவ. மலையுருக்கன்

[மலை + வெற்றிலை.]

மலைவேங்கை *malai-vēṅgai,* பெ.(n.) மர வகை; spinous kino tree, l.tr. *Bridelia retusa.*

[மலை + வேங்கை. வேங்கை = மலையில் வளரும் வேங்கை மரம்.]

மலைவேசிகம் *malai-vēšigam,* பெ.(n.) மலைப்பச்சை பார்க்க; see *malai-p-paccai* (சா.அக.).

மலைவேட்பு *malai-vēṭpu,* பெ.(n.) சந்தனம் (மலை.); sandal wood.

[மலை + வேட்பு.]

மலைவேம்பு *malai-vēmbu,* பெ.(n.) 1. மர வகை; presian lilac, l.tr. *melia azedarach.* 2. வேப்ப மரவகை (பதார்த்த.229); mountain neem l.tr. *melia compasita.* 3. மதகரி வேம்பு; chittagong wood.

[மலை + வேம்பு.]

மலைவேர்க்காலி *malai-vēr-k-kāli,* பெ.(n.) வெள்ளாடு; goat (சா.அக.).

மவ்வம் *mavvam,* பெ.(n.) அழகு; beauty. *"மவ்வந்தோய் பொழில்" (தேவா.556, 8).*

[அம் = அழகு. அம்→அவ்→அவ்வம்→மவ்வம்.]

மவ்வல் *mavval,* பெ.(n.) மௌவல் (நன்.124, உரை) பார்க்க; see *mouvval.*

மவுணம் *mavuṇam,* பெ.(n.) கணவன்; husband. *"கயிரவ மலர்த்து மவுணனை" (சிலப்.6, 37, உரை, மேற்கோள்.), "நீடு மவுணர் வரவெண்ணி வாடலை" (குலோத். சோ.505).*

மவுரியர் *mavuriyar,* பெ.(n.) மௌரியர்; mauriya dynasty.

மழ *maḻa,* பெ.(n.) 1. இளமை (தொல். சொல்.311); youth, infancy, tender age. 2. குழந்தை; infant, youth child. *"அழுமழப் போலும்" (திருக்கோ.147).* 3. மனமயக்கம்; confusion of mind. *"மழகுழக்காகின்றே" (கலித்.108).*

[முள் →மள் →மள்ளன் = இளைஞன், வீரன். மள்→மழ = இளமை, குழவி. மழவுங்குழவுமிளமைப் பொருள (தொல்.உரி.14).]

மழநாடு *maḻa-nāḍu,* பெ.(n.) திருச்சிராப்பள்ளிக்கு மேற்பால் காவேரியாற்றுக்கு வடபுறத்திலுள்ள பகுதி; region north of the cauvery on the western side of Tricirappalli. *"மங்கல மென்பதோர் ஊருண்டு போலும் மழநாட்டுள்" (தொல். சொல்.273, இளம்பூ.) "வடகரை மழநாட்டு கிலாரக் கூற்றத்து அன்பில் தென்கரை இடையாற்று நாட்டுத் திருக்கடைமுடி" (தெ.க.தொ.7, கல்.504-5).*

[மழவர் + நாடு. முள் →மள்→மள→மழ→மழவு. மழவு→மழவன் = இளைஞன், வீரன்.]

மழபாடி *maḻa-pāḍi,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தேவாரப் பாடல் பெற்ற ஊர்; a place in Thanjavur District having *Devaram* hymns. *"மழபாடியுள் மாணிக்கமே" (தேவாரம்), "மழபாடி ஆண்டானை ஆரமுதை அன்றயன்மால் காணாமை நீண்டானை நெஞ்சே நினை" (சேத்திரக்கோவை.18).*

[மழவர்பாடி →மழபாடி.]

மழபுலம் *maḻa-pulam,* பெ.(n.) மழநாடு (அகநா.61, உரை) பார்க்க; see *maḻa-nāḍu.*

[மழ + புலம். புலம் = நாடு.]

மழபுலவஞ்சி *maḻapula-vañji,* பெ.(n.) பகைவர் புலம் பாழ்படக் கொள்ளை யூட்டுதலைக் கூறும் புறத்துறை (புறநா.7); (*Puṟap.*) theme describing the plunder and destruction of an enemy's country.

[மழபுலம் + வஞ்சி.]

மழபுலவர் *maḻa-pulavar,* பெ.(n.) பள்ளியிற் படிக்கும் சிறுவர்; youth pupils, as budding scholars. *"மையாடலாடன் மழபுலவர் மாறெழுந்து" (பரிபா.11, 88).*

[மழ + புலவர்.]

மழமழ-த்தல் *maḻa-maḻa-,*11 செ.கு.வி. (v.i.) வழவழப்பாதல்; to be soft or smooth.

[முழு → மொழு → மொழுக்கை = மழுக்கை. மொழு→மழு→மழ→மழமழ (மு.தா.105).]

மழமழப்பு *maḻamaḻappu,* பெ.(n.) 1. மெதுத் தன்மை; tenderness, softness, smooth ness. 2. உறுதியின்மை; indefiniteness in speech or action. *"செயலை மழமழப்பாய் விட்டுவிட்டான்" (உ.வ.).*

[மழமழ→மழமழப்பு.]

மழமழெனல் *maḻamaḻeṉal,* பெ.(n.) மெத்தெனற் குறிப்பு; expr. signifying softness, smoothness or glossy.

[மழமழ + எனல்.]

மழலை *maḻalai,* பெ.(n.) 1. குழந்தைகளின் திருந்தாச் சொல்; prattling, babbling lisping of children. *"தம்மக்கள் மழலைச்சொற் கேளாதவர்" (குறள், 66).* 2. மென்மொழி; gentle speech, as of woman. *"மழலைவாயின் முறுவற் றையலாள்" (சீவக.181).* 3. இளமை; childhood, tenderness in age. *"பெருமழலை வெளேற்றினர்" (தேவா.579, 5).* 4. மெல்லோசை; gentle sound, as humming of bees, as tinkling of anklets. *"மழலைத் தும்பி" (சிலப்.4, 16).*

[முள்→மள்→மள்ளன் = இளைஞன், வீரன். மள் →மழ = இளமை, குழவி. மழ→மழலை (மு.தா.42).]

மழலைத்தேன் *maḻalai-t-tēṉ,* பெ.(n.) புதுத் தேன் (ஈடு.6, 2, 5); fresh honey.

[மழலை + தேன். மழலை = இளமை, புதுமை, புதிய.]

மழலைப்பேச்சு *malalai-p-pēccu,* பெ.(n.) குதலைப்பேச்சு; prattling of children.

[மழலை + பேச்சு.]

மழவராயன் *malavarāyan,* பெ.(n.) கள்ளர் முதலிய ஒரு சார் சாதியினரின் பட்டப் பெயர் (இ.வ.); caste little of *kallar* and certain other castes.

[மழ→மழவு→மழவன் = வீரன், இளைஞன். மழவன் + ராயன். அரசன்→அரையன்→ராயன்.]

மழவன் *malavan,* பெ.(n.) 1. இளைஞன் (பிங்.); youth man. *"மழவர் தமனையன மணவொலி" (கம்பரா.நாட்டுப்.50).* 2. வீரன்; warrior. *"மழவர் பெரும" (புறநா.90).* 3. மழநாட்டான் (அக.நா.61, உரை); inhabitant of *malanādu.*

[மழ→மழவு→மழவன் (வே.க.4:5).]

மழவு *malavu,* பெ.(n.) மகன்; son.

[மழ→மழவு (வே.க.4:5).]

மழறு-தல் *malaru-,* 5 செ.கு.வி.(v.i.) 1. மென்மையாதல்; to be soft and gentle. *"மழறுதேன் மொழியாளர்கள்" (திவ். திருவாய். 6, 25).* 2. தெளிவில்லாதிருத்தல் (ஈடு.6, 2, 5, அரும்.); to be indistinct as speech.

[மழ = இளமை, மென்மை. மழவுறுதல் = மென்மையுறுதல், மென்மையாதல். மழவுறுதல்→ மழறு-.]

மழி-த்தல் *mali-,* 4 செ.குன்றாவி.(v.t.) தலையை மொட்டையடித்தல்; to shave, especially the head. *"மழித்தலும் நீட்டலும் வேண்டா" (குறள், 280).*

[வழி→மழி-.]

மழித்தலை *malittalai,* பெ.(n.) மொட்டைத் தலை; bald or shaven head. *"கொய்ம் மழித் தலையொடு கைம்மையுற" (புறநா.261).*

[மழி + தலை.]

மழு[1] *malu,* பெ.(n.) 1. பழுக்கக் காய்ச்சிய இரும்பு; red hot iron, used in ordeals. *"மழுவேந்திக் கொடுத்துக் காரியஞ் செய்யுபவன்" (ஈடு.2, 6, 9).* 2. கடல் (தக்கயாகப். 457); sea.

[முள்→(மள்) →மழு (மு.தா.98).]

மழு[2] *malu,* பெ.(n.) கோடரி (சூடா.); axe.

[முள்→(மள்) →மழு.]



மழு[3] *malu,* பெ.(n.) 1. மழுங்கிய; blent, bald, bare. மழுமட்டை. 2. அதிகமான (வின்.); intense, excessive.

மழுக்கம் *malukkam,* பெ.(n.) 1. கூரின்மை; bluntness, want of edge. 2. நிலைமைத் தாழ்வு; reduced circumstances. 3. ஒளி மழுங்குகை; dimness-cloudiness, obscurity, as of the son in an eclipse, fading as of colour. 4. அறிவுக் குறைவு; dullness of intellect, as from age or disease. 5. மொட்டை (இ.வ.); baldness.

[முள் → (மள்) → மழு → மழுகு → மழுங்கு → மழுக்கு → மழுக்கம் (மு.தா.98).]

மழுக்கல் *ma*l*ukkal*, பெ.(n.) நெல்லை ஒரு முறை குத்தி யெடுத்த தவிடு நீங்காத அரிசி (இ.வ.); husked rice with bran not removed.

[மழு → மழுக்கு மழுக்கம் = மொட்டை. ஒரு பொருளை மழுக்க அதன் தலையிலடிப்பர். அடித்தலாவது தட்டுதல், இடித்தல், குத்துத லெனவும்படும். நெல்லை உரலிலிட்டு உலக்கையினாற் குத்துவதை மழுக்கல் என்றனர்.]

மழுக்கலரிசி *ma*l*ukkal-ariši*, பெ.(n.) மழுக்கல் (இ.வ.) பார்க்க; see *ma*l*ukkal*

[மழுக்கல் + அரிசி.]

மழுக்கிவிடு-தல் *ma*l*ukki-vi*d*u-*, 18 செ.கு.வி. (v.i.) தேய்த்துவிடுதல்; to blunt.

[மழுக்கி + விடு-.]

மழுக்கு-தல் *ma*l*ukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கூர் மழுங்கச் செய்தல்; to blunt, dull the edge or point. 2. ஒளி குறையச் செய்தல்; to obscure, as lustre as glory. 3. அறிவைக் குறைத்தல்; to deprive the intellect of its keenness. 4. அடித்தல் (வின்.); to beat, pound. 5. நெற்குத்துதல்; to hull by pounding, as paddy.

[முள் → (மள்) → மழு → மழுகு → மழுக்கு (மு.தா.98).]

மழுக்குறுக்கு-தல் *ma*l*u-k-ku*r*ukku-*, 5 செ.கு.வி.(v.i.) மழுவெடு-, (யாழ்.அக.) பார்க்க; see *ma*l*u-v-e*d*u*.

மழுகு-தல் *ma*l*ugu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. மழுங்குதல்; to become blunt. *"நுதிமுக மழுகிய.... வெண்கோட்டு" (அகநா.24).* 2. ஒளி குறைதல்; to be dim or obscure. *"முத்துத் தொடை கவிழ்பு மழுக" (பரிபா.6, 16).*

[முள் → (மள்) → மழு → மழுகு- (மு.தா.98).]

மழுகூழை *ma*l*u-kū*l*ai*, பெ.(n.) 1. வாலிழந்த விலங்கு; animal deprived of its tail, bobtail. 2. மூடன்; block head.

[மழு + கூழை.]

மழுங்கல் *ma*l*uṅgal*, பெ.(n.) 1. மழுங்கினது (வின்.); that which is blunt, dim or unpolished. 2. மூடன் (வின்.); loggerhead, block head. 3. நாணிலி (வின்.); shameless person. 4. மட்டமான பொன் வகை (யாழ்.அக.); a kind of inferior gold.

[மழு → மழுங்கல்.]

மழுங்கன் *ma*l*uṅgan*, பெ.(n.) வேலைப்பாடில்லாத அணி (வின்.); plain ornament without any delicate workmanship.

[மழுங்கல் → மழுங்கன்.]

மழுங்கி *ma*l*uṅgi*, பெ.(n.) நாணமிழந்தவள்; shameless women. *"கொங்கையின் மூடுசீலை திறந்த மழுங்கிகள்" (திருப்பு.67).*

[மழுங்கல் → மழுங்கி.]

மழுங்கு-தல் *ma*l*uṅgu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. கூர் நீங்குதல்; to be blunt or dull, as an edge or point. *"நுதி மழுங்கிய" (புறநா.4).* 2. பொலிவழிதல் (திவ்.); to be obscured, deprived of lustre, of glory; to fade, as a colour, as the lustre of a jewel or the glory of a state. 3. கெடுதல்; to disappear, to be lost. *"உரவுத்தகை மழுங்கி" (கலித்.*

120). 4. அறிவுக் கூர்மை குறைதல்; to become dull in feeling, to lose keenness of intellect. *"உதிக்கின்ற புத்திய மழுங்கிடும்" (திருவேங்.சத.15).* 5. ஒளி குறைதல்; to be dim, obscure, as the sun or moon in an eclipse or behind a cloud. *"கதிர்கண் மழுங்கி மதியு மதிர்வது போல்" (கலித்.146).* 6. கவனிப்பின்றி மறைந்து போதல் (வின்.); to pass by without strict examination inquiry or notice.

[முள் → (மள்) → மழு → மழுகு → மழுங்கு (மு.தா.98).]

மழுங்குணி *maḷuṅguṇi,* பெ.(n.) அறிவற்றவன் (வின்.); dunce, good - for -nothing fellow.

[மழுங்கு → மழுங்குணி.]

மழுங்குணிமாங்காய் *maḷuṅguṇi-māṅgāy,* பெ.(n.) மழுங்குணி (வின்.) பார்க்க; see *maḷuṅguṇi.*

[மழுங்குணி = அறிவற்றவன், மூடன். மழுங்குணி + மாங்காய்.]

மழுங்குணிமாங்கொட்டை *maḷuṅguṇi-māṅ-koṭṭai,* பெ.(n.) மழுங்குணி (வின்.) பார்க்க; see *maḷuṅguṇi.*

[மழுங்குணி + மாங்கொட்டை.]

மழுப்பன் *maḷuppaṉ,* பெ.(n.) 1. செயலை மழுப்பி விடுவோன் (இ.வ.); one who is slipshod or ineffective in work. 2. சுணங்குவோன் (வின்.); delayer. 3. இழிவழக்கு பேசுவோன் (யாழ்.அக.); sophist, controversialist.

[மழு → மழுப்பு → மழுப்பன். அன் = ஆண்பாலீறு.]

மழுப்பு-தல் *maḷuppu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. நெகிழவிடுதல்; to slur or slip over. 2. செயலைப் பயனற்றதாக நெகிழ்த்துதல்; to bring to naught, make ineffective. 3. சுணக்கப்படுத்துதல் (வின்.); to put of, protract, delay, as in coming to a decision. 4. ஏமாற்றுதல்; to deceive. *"யாரையு மழுப்ப வல்லான்" (திருவாலவா.30, 24).*

[மழு → மழுப்பு.]

மழுமட்டை *maḷu-maṭṭai,* பெ.(n.) 1. மழுமொட்டை, 1 பார்க்க; see *maḷu-moṭṭai.* *"மழு மட்டையான கோடு" (அகநா. 24, உரை).* 2. முழுமூடத்தனம் (யாழ்ப்.); gross stupidity.

[மழு+ மட்டை. மழுவெனினும் மட்டையெனினு மொக்கும். மழுமட்டையென்றது இருபெயரொட்டு.]

மழுமாறி *maḷu-māṟi,* பெ.(n.) புரட்டன் (இ.வ.) (வின்.); artful rogue.

[மழு + மாறி.]

மழுமாறு-தல் *maḷu-māṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. அரைமனதாதல்; to be half-minded, undecided. 2. தந்திரம் பண்ணுதல்; to be artful, tricky.

[மழு → மழுமாறு-,]

மழுமொட்டை *maḷu-moṭṭai,* பெ.(n.) 1. கூர் மழுங்கியது; anything blunt edged. 2. முழு மொட்டையான தலை; abosolutely bald or clean - shaved head.

[மழு + மொட்டை. மழுவெனினும் மொட்டையெனினும் ஒக்கும். மழுமொட்டையென்றது இருபெயரொட்டு.]

மழுவலான் *maluvalāṉ,* பெ.(n.) 1. மழுவாளி, 1 பார்க்க; see *malu-vāli.* *"மழுவலான் திருநாம மகிழ்ந்துரைத்து" (தேவா.16:69).*

[மழு→மழுவலான்→மழுவாழி.]

மழுவன் *maluvaṉ,* பெ.(n.) 1. அஞ்சாதாவன்; fearless man. 2. விடாப்பிடியாளன்; obstinate person. 3. ஊர் காப்போன்; village watchman.

[மழு = கூரிய படைக்கருவி. அஞ்சாதவன் கையிற் படைகருவியிருத்தலே சிறப்பு. எனவே, படைக்கருவியுடையோன் அஞ்சாதவனாயும், ஊர்காப்போனாயும், பிடிவாதக் குணமுள்ளோனாயு மிருப்பர்.]

மழுவாள் *maluvāḷ,* பெ.(n.) கூரிய வாள் கருவி; sharp sword. *"மான் மறியும் மழுவாளும் விடாது" (திருக்கோ.170).*

[மழு→மழுவாள்.]

மழுவாளி *malu-v-āli,* பெ.(n.) 1. மழுவை ஆயுதமாகக் கொண்டவன்; one who is armed with battle-axel. 2. சிவன்; *Śivaṉ.* *"மழுவாளி யுன்னாகத்தான்" (திவ்.திருவாய். 9, 3, 10).* 3. பரசுராமன்; *Parašurāmaṉ.* *"முன்னொரு நாள் மழுவாளி சிலைவாங்கி" (திவ்.பெருமாள்தி.9, 9).*

[மழு + ஆளி. மழுவாகிய படைக்கருவியை ஆள்பவன்.]

மழுவி *maluvi,* பெ.(n.) மழுங்கி பார்க்க; see *maluvi.* *"நழுவிகள் மழுவிகள்" (திருப்பு.243).*

[மழுங்கி →மழுவி.]

மழுவெடு-த்தல் *malu-v-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) கை, நா முதலியவற்றில் மழுவை யேந்திச் சூளுரைச் செய்தல்; to undergo the ordeal of holding red-hot iron by the hand, tongue etc. *"நாவினான் மழுவெடுத்த ஞானப் பிரகாசர்".*

[மழு + எடு-.]

மழுவெண்ணெய் *malu-v-eṉṉey,* பெ.(n.) பழுக்கக் காய்ந்த பொருளைக் கைக்குக் குளிர்விக்கு மெண்ணெய் (யாழ்.அக.); a kind of medicinal oil, said to make hot things cool to the toch.

[மழு + எண்ணெய்.]

மழுவேந்தி *malu-v-ēndi,* பெ.(n.) 1. மழுவாளி (வின்.) பார்க்க; see *malu-v-āli.* 2. பொய்யன் (யாழ்.அக.); liar.

[மழு + ஏந்தி.]

மழுவேந்திக்கொடு-த்தல் *malu-v-ēndi-k-koḍu-,* 4 செ.கு.வி.(v.i.) மழுவெடு-, பார்க்க; see *malu-v-eḍu-.* *"மழுவேந்திக் கொடுத்துக் காரியஞ் செய்யுமவன்" (ஈடு.2, 6, 9).*

[மழு + ஏந்திக்கொடு-.]

மழுவேந்துங்கோபன் *malu-v-ēnduṅ-kōbaṉ,* பெ.(n.) சிவனார் வேம்பு; sivan's neem (சா.அக.).

மழுவோன் *maluvōṉ,* பெ.(n.) மழுவாளி, 1 பார்க்க; see *malu-v-āli.* *"வன்றாண் மழுவோனும் யாரும் வணங்கினரால்" (கம்பரா.இரணிய.161).*

[மழுவாளி → மழுவோன்.]

மழை¹-த்தல் *malai-,* 11 செ.கு.வி.(v.i.) 1. மழை நிறைந்திருத்தல்; to be charged with rain. *"மழைத்த வானமே" (கம்பரா.*

கார்கால.2). 2. கருநிறமாதல்; to darken, become dark, as a cloud. *"மழைத்திடு மெய்யுடை மாற்றலர்" (கந்தபு.சூரன்வதை. 132).* 3. குளிர்தல்; to be cool. *"மழைத்த மந்த மாருதத்தினால்" (பெரியபு.திருஞான. 150).*

[மால்→மழை (வே.க.4:43).]

மழை[2] *malai,* பெ.(n.) 1. முகிலினின்றும் பொழியும் நீர்; rain. *"கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" (குறள், 55). "மழை பெய்தே நிறையாத குடல் பனி பெய்தா நிறையப் போகின்றது?" (பழ.).*2. நீருண்ட மேகம்; cloud. *"மழை திளைக்கு மாடமாய்" (நாலடி, 361).* 3. மழைக்கால் பார்க்க; see *malai-k-kāl. "மழை வீழ்ந்தன்ன மாத்தாட் கழுகு" (பெரும்பாண். 363).* 4. நீர் (பிங்.); water. 5. கருமை; blackness, darkness. *"மழைதரு கண்டன்" (திருவாச.6, 46).* 6. குளிர்ச்சி (பிங்.); coolness. *"பெரு மழைக்கண்" (குறள், 1239).* 7. மிகுதி (வின்.); plenty.

[மல்→மால்→மழை (வே.க.4:43).]

மழைக்கண்ணி[1] *malai-k-kanni,* பெ.(n.) ஓயாது கண்ணினின்று நீர் வடியும் நோயை யுடையவர்; a women with always water in the eyes (சா.அக.).

[மழை + கண்ணி. கண்ணிலிருந்து இடையறாது நீர் வடிவதை மழையென்றும், அத்தகையக் கண்ணையுடையவரை மழைக் கண்ணி என்றும் குறித்தனர்.]

மழைக்கண்ணி[2] *malai-k-kanni,* பெ.(n.) பறவை வகை (யாழ்ப்.); a kind of bird.

மழைக்கரு *malai-k-karu,* பெ.(n.) கார்முகில்; cloud. *"மழைக் கருவுயிர்க்கும்.... அட்டில்" (சிலப்.10:143, அரும்.).*

[மழை + கரு.]

மழைக்காயிருட்டு *malai-k-kāyiruttu,* பெ.(n.) மழைக்காலிருட்டு (நெல்லை.) பார்க்க; see *malai-k-kāl-iruttu.*

[மழைக்காலிருட்டு →மழைக்காயிருட்டு.]

மழைக்கால் *malai-k-kāl,* பெ.(n.) பெய்யும் நிலையில் கரு நிறத்துடன் இறங்கும் மேகக் கால்; dark clouds descending in columns and indicating rain.

[மழை + கால்.]

மழைக்காலம் *malai-k-kālam,* பெ.(n.) மாரிக்காலம்; rainy season.

[மழை + காலம்.]

மழைக்காலிருட்டு *malai-k-kāl-iruttu,* பெ.(n.) மழைபெய்யுங் காலத்து இரவி லுண்டாம் செறிந்த இருள்; dense darkness of a rainy night. *"மழைக் காலிருட்டிலும் மந்தி கொம்பு விட்டுக் கொம்பு பாயும்" (பழ.).*

[மழைக்கால் + இருட்டு.]

மழைக்காலிருள் *malai-k-kal-irul,* பெ.(n.) மழைக்காலிருட்டு பார்க்க; see *malai-k-kāl-iruttu. "மழைக் காலிருளின் எதிர்ப்பட லருமையான்" (திருக்கோ.260, துறைவிளக்.).*

[மழைக்காலிருட்டு →மழைக்காலிருள்.]

மழைக்காற்று *malai-k-kārru,* பெ.(n.) சீந்தல் காற்று, குளிர்ந்த காற்று; moist and cold weather.

[மழை + காற்று.]

மழைக்கிளி *ma/ai-k-ki/i,* பெ.(n.) 1. மழை பெய்து விட்டவுடன் காணப்படும் வெட்டுக் கிளி வகை (வின்.); a kind of grasshopper, as appearing after the rains. 2. கிளி வகை; large Indian parakeet, *palacornis.*

[மழை + கிளி.]



மழைக்குணம் *ma/ai-k-kunam,* பெ.(n.) மழைத்தோற்றம் (வின்.) பார்க்க; see *ma/ai-t-tōrram.*

[மழை + குணம்.]

மழைக்குயில் *ma/ai-k-kuyil,* பெ.(n.) தலையிலாக் குருவி (பிங்.); swallow, as visitant in rainy season.

[மழை + குயில்.]

மழைக்குறி *ma/ai-k-kuri,* பெ.(n.) மழைத் தோற்றம் (வின்.) பார்க்க; see *ma/ai-t-tōrram.*

[மழை + குறி.]

மழைக்கோலம் *ma/ai-k-kōlam,* பெ.(n.) மழைத்தோற்றம் (வின்.) பார்க்க; see *ma/ai-t-tōrram.*

[மழை + கோலம்.]

மழைக்கோள் *ma/ai-k-kō/,* பெ.(n.) வெள்ளி (சுக்கிரன்) கோள்; Venus, as the rain indicating planet. *"மழைக்கோல் பொலியு நற்றினம்" (அரிசமய.பராங்.22).*

[மழை + கோல்.]

மழைக்கோளாறு *ma/ai-k-kō/āru,* பெ.(n.) 1. மழைத்தோற்றம் பார்க்க; see *ma/ai-t-tōrram.* 2. புயலெடுக்கை; changeable stormy weather, unfavourable to navigation.

[மழை + கோளாறு.]

மழைச்சாடை *ma/ai-c-cādai,* பெ.(n.) மழைத் தோற்றம் (இ.வ.) பார்க்க; see *ma/ai-t-tōrram.*

[மழை + சாடை.]

மழைச்சிலை *ma/ai-c-cilai,* பெ.(n.) வானவில்; rainbow. *"மழைச் சிலையால் வழி தோரண மிட்டனன் வாசவனே" (தக்கயாகப். 182).*

[மழை + சிலை. சிலை = வில்.]

மழைத்தண்ணீர் *ma/ai-t-tannīr,* பெ.(n.) மழைநீர் பார்க்க; see *ma/ai-nīr.*

[மழை + தண்ணீர். நீர்→தண்ணீர்.]

மழைத்தாரை *ma/ai-t-tārai,* பெ.(n.) விடாது பெய்யும் மழைநீர் (யாழ்.அக.); continuous shower of rain.

[மழை + தாரை.]

மழைத்துளி *ma/ai-t-tu/i,* பெ.(n.) மழை நீர்ச் சொட்டு (வின்.); rain drop.

[மழை + துளி.]

மழைத்தூவல் *malai-t-tūval,*பெ.(n.) மழைத் தூறல் (வின்.) பார்க்க; see *malai-t-tūral.*

[மழை + தூவல்.]

மழைத்தூற்றல் *malai-t-tūrral,* பெ.(n.) மழைத்தூறல் (வின்.) பார்க்க; see *malai-t-tūral.*

[மழை + தூற்றல்.]

மழைத்தூறல் *malai-t-tūral,*பெ.(n.) சிறு திவலையாகத் தூற்றும் மழை; drizzling rain.

[மழை + தூறல்.]

மழைத்தோற்றம் *malai-t-tōrram,* பெ.(n.) மழை வருவதற்குரியதான மந்தாரம், முகில் மூட்டம் (வின்.); clouded sky, as indicating rain.

[மழை + தோற்றம்.]

மழைதாங்கி *malai-tāṅgi,* பெ.(n.) கொங்காணி (இ.வ.); rain-cap, covering against rain made of palm leaf.

[மழை + தாங்கி.]



மழைதுமித்தல் *malai-tumittal,* பெ.(n.) மழைத்தூறல் (வின்.)பார்க்க; see *malai-t-tūral.*

[மழை + துமி–த்தல்.]

மழைநீர் *malai-nīr,* பெ.(n.) மழையினின்று கிடைத்த நீர்; rain water.

[மழை + நீர்.]

மழைப்பாட்டம் *malai-p-pāttam,* பெ.(n.) ஒருமுறை கனமாக மழை பெய்கை (வின்.); a shower of rain.

[மழை + பாட்டம்.]

மழைப்புகார் *malai-p-pugār,* பெ.(n.) மழைத்தோற்றம் பார்க்க; see *malai-t-tōrram.*

[மழை + புகார்.]

மழைப்பூங்காரம் *malai-p-pūṅgāram,* பெ.(n.) மழைத்தோற்றம் (யாழ்.அக.) பார்க்க; see *malai-t-tōrram.*

[மழை + பூங்காரம்.]

மழைபெய்–தல் *malai-pey-,* 1 செ.கு.வி. (v.i.) வானின்று நீர் விழுதல்; to rain. *"வான் மழை பெய்கிறது" (உ.வ.).*

[மழை + பெய்.]

மழைமரக்கால் *malai-marakkāl,* பெ.(n.) ஓராண்டில் பெய்யும் மழையை அளக்கும் அளவு வகை (வின்.); a kind of rain gauge, unit for computing rainfull during a year.

[மழை + மரக்கால்.]

மழைமரம் *malai-maram,* பெ.(n.) ஆப்பிரிக்காவிற்கு மேற்கேயுள்ள ஒரு தீவிலுள்ள அதிசய மரம்; region north side a miracle tree on a island to africa.

[மழை + மரம்.]

இது 40 முதல் 48 அடி உயர முள்ளதாயும் இரவில் இம்மரத்தைச் சுற்றி முகில்கள் கவிந்து கொண்டு ஈரம் வேரினின்று கிளைகளுக்கேறி இலைகளில் வழியாய் ஓர் இரவிற்கு 20,000 கல்லெடை (டன்.) நீர் வடிவதாகச் சொல்லப்படுகிறது.

மழைமாரிச்சண்டை *malai-māri-c-candai,* பெ.(n.) கடுஞ்சண்டை (இ.வ.); violent quarrel, like a rain storm.

[மழைமாரி + சண்டை.]

மழைமுகங்காணுதல் *malai-mugan-kāņudal,* பெ.(n.) மழை பெய்து தளிர்க்கை (வின்.); being enlivened by rain.

[மழைமுகம் + காணுதல்.]

மழையடை *malai-y-adai,* பெ.(n.) விடாது பெய்யும் மழை; incessant rain. *"மழை யடையிலே வரும் விருந்தாளி சத்துரு" (உ.வ.).*

[மழை + அடை. இல்முன் முன்றில் ஆனது போல அடைமழை மழையடையானது.]

மழையலர் *malai-y-alar,* பெ.(n.) நீர் (சூடா.); water.

[மழை + அலர்.]

மழையான் *malaiyāņ,* பெ.(n.) திருமால்; *Tirumāl. "மழை யானுந் திகழ்கின்ற மலரோனென் றிவர்கள்" (தேவா.1064, 9).*

[மழை →மழையான்.]

மழையேறு *malai-y-ēru,* பெ.(n.) இடி; thunder. *"நெடுந்தேரினன் மழையேறெ்ன வார்த்தான்" (கம்பரா.அதிகா.166).*

[மழை + ஏறு.]

மழையொறுத்தகாலம் *malai-y-orutta-kālam,* பெ.(n.) வறண்ட காலம் (வின்.); drought.

[மழை + ஒறுத்தகாலம்.]

மழைவண்ணக்குறிஞ்சி *malai-vanna-k-kuriñji,* பெ.(n.) முகில் வண்ணப் பூவுள்ள மருதோன்றி (பிங்.); western ghats blue nail dye.

[மழைவண்ணம் + குறிஞ்சி.]

மழைவண்ணன் *malai-vannan,* பெ.(n.) மழையான் (வின்.) பார்க்க; see *malaiyān.*

[மழை + வண்ணன்.]

மழைவறங்கூர்-தல் *malai-varan-kūr-,* 2 செ.கு.வி. (v.i.) மழை பெய்யாதொழிதல்; to become rainless. *"பாண்டியனாடு மழைவறங் கூர்ந்து வறுமையெய்தி" (சிலப். உரை பெறு கட்டுரை, பக்.30).*

[மழை + வறங்கூர்.]

மழைவீற்றிருத்தல் *malai-vīrriruttal,* பெ.(n.) பருவமழை பெய்கை (சிலப். உரைபெறு கட்டுரை, பக்.30); raining in season.

[மழை + வீற்றிருத்தல்.]

மள்கு-தல் *malgu-,* 5 செ.கு.வி. (v.i.) குறைதல்; to be deficient, defective. *"மல்கலில் பெருங் கொடை" (கம்பரா. கார்கால.104).*

[முள்→மள்→மள்கு- (வே.க.4:59).]

மள்ளம் *mallam,* பெ.(n.) மள்ளல் (பிங்.) பார்க்க; see *mallal.*

[மள்ளல் →மள்ளம்.]

மள்ளல் *ma*l*l*al,* பெ.(n.) வலிமை (திவா.); strength, power, robustness.

[மள் → மள்ளல்.]

மள்ளர் *maḷḷar,* பெ.(n.) மள்ளன் பார்க்க; see *maḷḷaṉ.*

[மள் →மள்ளர்.]

மள்ளன் *maḷḷaṉ,* பெ.(n.) 1. திண்ணியோன் (பிங்.); strong, powerful person. 2. படைவீரன்; warrior. *"களம்புகு மள்ளர்" (கலித்.106).* 3. படைத்தலைவன் (சூடா.); commander, millitary chief. 4. இளைஞன்; youth. *"பொருவிறல் மள்ள" (திருமுரு.262).* 5. மருத நிலத்தில் வாழ்வோன் (திவா.); inhabitant of agricultural tracts. *"மள்ளருழுபக டுரப்புவார்" (கம்பரா.நாட்.18).* 6. குறிஞ்சி நிலத்தில் வாழ்வோன் (சூடா.); inhabitant of hilly tracts.

[முள்→மள் →மள்ளன் (வே.க.4:5).]

மள்ளான் *maḷḷāṉ,* பெ.(n.) குதிரை வகை (அசுவசா.152); a species of horse.

மள்ளு *maḷḷu,* பெ.(n.) கைம்மரம் (வின்.); rafter.

மளமள-த்தல் *maḷa-maḷa-,* 4 செ.கு.வி. (v.i.) மரக்கொம்பு முதலியன முறியும்போது ஒலியெலுப்புதல்; to crash, rattle, sound loudly, as branches in snaping.

மளமளப்பு *maḷa-maḷappu,* பெ.(n.) முறிதற் குறிப்புள்ள ஒலி; snapping noise.

[மளமள →மளமளப்பு.]

மளமளெனல் *maḷa-maḷeṉal,* பெ.(n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying rattling, crashing. 2. விரைவுக் குறிப்பு quickness. *"மளமளென நொறுக்கி" (இராமநா.சுந்.20).*

[மளமள + எனல்.]

மளாரட்டியெனல் *maḷāraṭṭi-y-eṉal,* பெ.(n.) மளாரெனல் (யாழ்.அக.) பார்க்க; see *maḷār-eṉal.*

[மளாரெனல் →மளாரட்டியெனல்.]

மளாரெனல் *maḷār-eṉal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying crashing, cracking. *"மளாரென முறிந்தது" (உ.வ.).*

[மளார் + எனல்.]

மளிக்காரம் *maḷi-k-kāram,* பெ.(n.) அரிதாரம்; yellow orpiment (சா.அக.).

மளிகாரம் *maḷigāram,* பெ.(n.) வெண்காரம் (சங்.அக.); borax.

மளிகை *maḷigai,* பெ.(n.) பலசரக்கு; grocery.

தெ. மளிகா

[வணிகம்→ வணிகை→மளிகை.]

மளிகைக்கடை *maḷigai-k-kaḍai,* பெ.(n.) பலசரக்குக் கடை (இக்.வ.); grocery shop.

[மளிகை + கடை.]

மளிகைச்செட்டி *maḷigai-c-ceṭṭi,* பெ.(n.) 1. பலசரக்கு வணிகர்; grocer. 2. செட்டிச் சாதி வகை; a *Cheṭṭi* caste.

[மளிகை + செட்டி.]

மளுக்கெனல் *maḷukkeṉal,* பெ.(n.) மளாரெனல் பார்க்க; see *maḷār-eṉal.* *"மரக்கிளை மளுக்கென முறிந்தது" (உ.வ.).*

[மளுக்கு + எனல்.]

மளுங்கு *maḷuṅgu,* பெ.(n.) ஓர் உயிரி; a creature (சா.அக.).

மளை *maḷai,* பெ.(n.) கற்றாழை; aloe (சா.அக.).

மற்கடம் *maṟkaḍam,* பெ.(n.) மர்க்கடம் பார்க்க; see *mar-k-kaḍam.* *"வாதமாமகன் மற்கடம் விலங்கு" (திவ்.பெரியதி.5, 8, 2).*

மற்கடி *maṟkaḍi,* பெ.(n.) பூனைக் காஞ்சொறி; a plant, cowhage (சா.அக.).

மற்கரை *maṟkarai,* பெ.(n.) 1. குகை; cave. 2. மலடி; barren woman.

மற்கலி *maṟkali,* பெ.(n.) ஆசீவக மதத்தார் வணங்கும் இறைவன்; Lord of the *Ajīvakas. "என்றது மற்கலிதானே யிறை" (நீலகேசி, ஆசிவக.3).*

மற்கலிநூல் *maṟkaḷa-nūl,* பெ.(n.) ஆசீவகமத நூல்; the scriptures of the *Ajīvakas* by *makkhalidēva. "மற்கள நூலின் வகையாது வென்ன" (மணிமே. 27:165).*

மற்கு *maṟku,* பெ.(n.) சினம் (அக.நி.); wrath, anger.

மற்குணம்[1] *maṟkuṇam,* பெ.(n.) முகட்டுப் பூச்சி; bug. *"மற்குணத் தொகுதிபோற் பிசைந்து" (பாரத.வாரண.9).*

மற்குணம்[2] *maṟkuṇam,* பெ.(n.) போர்க் குணம்; war attitude.

[மல் + குணம்.]

மற்கூத்து *maṟ-kūttu,* பெ.(n.) மல்[2], 4 (சிலப். 3:14, உரை) பார்க்க; see *mal.*

[மல் + கூத்து.]

மற்கோல் *maṟkōl,* பெ.(n.) பகை (அக.நி.); hatred, enmity.

மற்சரம் *maṟcaram,* பெ.(n.) 1. பொறாமை (சங்.அக.); envy. 2. போட்டி (இ.வ.); rivalry.

[மாச்சரியம்→மற்சரம் (கொச்சை).]

மற்சரி-த்தல் *maṟcari-,* 4 செ.கு.வி.(v.i.) போட்டியிடுதல் (இ.வ.); to compete.

மற்சாதனம் *maṟ-šādaṉam,* பெ.(n.) ஒரு காலை வயிற்றில் அழுத்தி மடித்தும் மற்றைக் காலைத் தொடையருகே யூன்றியும் கைமாறிப் புறங்காலைக் கட்டியிருக்கும் ஆசன வகை (தத்துவப்.107, உரை); a posture which consists in sitting with one foot pressed against the abdomen and with the other foot pressed close to the thigh against the ground, the hands passing behind the clasping the feet crosswise.

மற்பயிலிடம் *maṟ-payiliḍam,* பெ.(n.) மற் போர் கற்குங் கூடம் (பிங்.); ground where athletic exereise are practised wrestling.

[மல் + பயிலிடம்.]

மற்புறு *maṟ-puṟu,* பெ.(n.) கார்போகவரிசி; babehi seeds (சா.அக.).

மற்ற *maṟṟa,* வி.அ.(adj.) மற்றை (கொ.வ.) பார்க்க; see *maṟṟai.*

[மற்றை→மற்ற.]

மற்றஞ்செரிச்சான் *maṟṟañcericcāṉ,* பெ.(n.) உப்பு; salt (சா.அக.).

மற்றது *maṟṟadu,* பெ.(n.) ஏனையது; the other.

[மற்று →மற்றது.]

மற்றநாள் *marra-nāḷ*, பெ.(n.) 1. மற்றாநாள்,1 பார்க்க; see *marrā-nāḷ*. 2. நாளை நின்று மறுநாள் (நாஞ்.); day after tomorrow.

[மற்று → மற்ற + நாள்.]

மற்றப்படி *marra-p-paḍi*, பெ.(n.) வேறு வகையில் (இக்.வ.); else, otherwise. *"மற்றப்படி வேறு எதுவும் இல்லை" (உ.வ.).*

[மற்று →மற்ற + படி.]

மற்றம் *marram*, பெ.(n.) ஆற்றோரத்தில் சரிந்து தாழ்ந்துள்ள நிலம் (செந்.xiii.172); low-lying land sloping towards a river.

[மற்று → மற்றம்.]

மற்றமாகாள் *marra-māgāḷ*, பெ.(n.) மருளுமத்தை; a kind of dhatura (சா.அக.).

மற்றவன் *marravaṉ*, பெ.(n.) ஏனையவன்; the other one.

[மற்று → மற்றவன்.]

மற்றாநாள் *marrā-nāḷ*, பெ.(n.) 1. மறுநாள்; next day, morrow. 2. பிற்றை நாளின் மறுநாள் (இ.வ.); day after the next.

[மறு→மற்றா + நாள்.]

மற்று[1] *marru*, பெ.(n.) 1. ஓர் அசைநிலை (தொல்.சொல்.264); an expletive. 2. வினை மாற்றுக் குறிப்பு (நன்.433). 3. பிறிதுப் பொருட் குறிப்பு (நன்.433); a term meaning other, another.

[மறு→மற்று (வே.க.4:77).]

மற்று[2] *marru*, பெ.(n.) 1. மறுமையும் (வின்.); again. 2. பின்; subsequently, afterwards. 3. மற்றப்படி பார்க்க; see *marra-p-paḍi*.

மற்றும் *marrum*, பெ.(n.) 1. மேலும்; besides. 2. மீண்டும்; again. *"உடைமை மயலாகு மற்றும் பெயர்த்து" (குறள், 344).*

[மற்று→மற்றும்.]

மற்றும்படி *marrum-paḍi*, வி.எ.(adv.) மற்றப்படி பார்க்க; see *marra-p-paḍi*.

[மற்றபடி →மற்றும்படி.]

மற்றை *marrai*, வி.அ.(adj.) பிற (நன்.434); other.

[மற்று →மற்றை.]

மற்றைப்படி *marrai-p-paḍi*, பெ.(n.) மற்றப்படி பார்க்க; see *marra-p-paḍi*.

[மற்றப்படி →மற்றைப்படி.]

மற்றொழில் *marroḻil*, பெ.(n.) மற்போர்; art of wrestling. *"மற்றொழிலுந் தேர்த் தொழிலும்" (சீவக.1795).*

[மல் + தொழில்.]

மற்றொன்று *marroṉru*, பெ.(n.) பிரிதொன்று; another thing or matter. *"மற்றொன்று சூழினும்" (குறள், 380).*

[மற்று + ஒன்று.]

மற்றொன்றுவிரித்தல் *marroṉru-virittal*, பெ.(n.) நூற்குற்றம் பத்தனுள் எடுத்துக் கொண்ட பொருளை விடுவித்துப் பிறிதொன்று கூறுதலாகிய குற்றம் (நன்.12); digression, introducing extraneous matter, one of ten *nūr-kurram*(q.v.).

[மற்றொன்று + விரித்தல்.]

மற்றோ *marrō*, (int.) வியப்பு, இரக்கங்களைக் குறிக்குஞ் சொல் (யாழ்.அக.); a word indicative of surprise or pity.

[மற்று →மற்றோ.]

மற்றோதயமூலி *marrōdaya-mūli*, பெ.(n.) நிலப்பனை; ground palm (சா.அக.).

மற-த்தல் *mara-*, 3 செ.குன்றாவி.(v.t.) 1. அயர்த்தல்; to forget. *"மறவற்க மாசற்றார் கேண்மை" (குறள், 106).* 2. அசட்டை செய்தல்; to neglect, disregard. 3. ஒழித்தல்; to put an end to, to give up. *"மறத்தல் வெகுளியை யார்மாட்டும்" (குறள், 303).*

[முல்→மல்→மல. மலத்தல் = மயங்குதல். மல →மலங்கு→மலக்கு→மலக்கம். மலக்கம் = மயக்கம், கலப்பு. மலங்கு = பாம்புடம்பும் மீன்வாலுங் கலந்த நீருயிரி. மலங்கு→மதங்கு→மதக்கம் = மயக்கம். மதங்கு→மறங்கு, மறங்குதல் = மயங்குதல். மல்→ மலை→மலைவு. மலைத்தல்→மயக்குதல். மலம்→ மதம்→மறம் = மயக்கம். மறம்→மற (மு.தா.177). முள்→மள்→மரு→மறு = குற்றம். மறுத்தல் = இல்லையென்று சொல்லாமல் மறைத்தல். மறு→மற. மறத்தல் = மனத்தில் மறையப் பெறுதல்.]

மறக்கருணை *mara-k-karunai*, பெ.(n.) அருட்கருணை; divine grace that chastise. *"சூரனை மறக்கருணை யீந்து பணிகொண்டில யெனில்" (அருட்பா. v, தெய்வமணி.21).*

*[மறம் + **Skt.** கருணை.]*

மறக்களம் *mara-k-kalam*, பெ.(n.) போர்க் களம்; battle field. *"மறக்கள மருங்கின்... உயிர்த் தொகை யுண்ட" (சிலப். 27:11).*

[மறம் + களம்.]

மறக்களவழி *mara-k-kala-vali*, பெ.(n.) போரிற் பகையழிக்கும் அரசனை உழும் வேளாளனாக மிகுத்துக் கூறும் புறத்துறை (புறநா.373); theme describing a kings as ploughing the field of battle.

[மறக்களம் + வழி.]

மறக்களவேள்வி *mara-k-kala-vēlvi*, பெ.(n.) களவேள்வி (புறநா.372); theme praising a warrior killing his enemies, opp. to *ara-k-kala-vēlvi*. *"யாங்கணு மறக்கள வேள்வி செய்வோ யாயினை" (சிலப். 28:131).*

[மறக்களம் + வேள்வி.]

மறக்கற்பு *mara-k-karpu*, பெ.(n.) தன் சீற்றத்தாற் கடுஞ்செயல் தோற்றுவிக்குங் கற்பு; militant chastity, which impels a woman to do terrible deeds, opp. to ara-k-karpu. *"வீரபத்தினி மறக் கற்புடையாள்" (சிலப்.பதிக. 42, உரை).*

[மறம் + கற்பு.]

மறக்காஞ்சி *mara-k-kāñji*, பெ.(n.) போரில் விழுப்புண் பெற்ற வீரன் தன் வாழ்க்கை வேண்டாது அப்புண்ணைக் கிழித்துக் கொண்டு இறத்தலைக் கூறும் புறத் துறை (தொல்.பொருள். 79, உரை); (Purap.) theme describing a warrior who had received a wound on his breast in battled tearing open that wound and dying in utter disdain of life.

[மறம் + காஞ்சி.]

மறக்குடி *mara-k-kudi*, பெ.(n.) 1. வீரகுலம்; warrior tribe. *"பழைய மறக்குடியிற் பேதையானவள்" (பு.வெ.21, உரை).*

2. மறப்பண்பு நிறைந்த தமிழர்கள்; warrior of Tamilar race.

[மறம் + குடி.]

மறங்கு–தல் *marangu-*, 5 செ.கு.வி.(v.i.) கலங்குதல்; to be bewildered. *"கீழ்தான்.... மறங்குமா மற்றொன் றுரைத்து (நாலடி, 342).*

[முல் → மல் → மல. மலத்தல் = மயங்குதல். மல → மலங்கு → மலக்கு → மலக்கம். மலக்கம் = மயக்கம். மலங்கு = பாம்புடம்பும் மீன்வாலுங் கலந்து நீருயிரி. மலங்கு → மதங்கு → மதக்கம் = மயக்கம். மதங்கு → மறங்கு (மு.தா.177).]

மறச்செவி *mara-c-cevi*, பெ.(n.) கரிசு (பாவம்) பயக்கும் மொழிகளைக் கேட்குங் காது; ear that listens, to sinful things. *"அறச்செவி திறந்து மறச்செவி யடைத்து" (மணிமே.9:60).*

[மறம் + செவி.]

மறத்தி *maratti*, பெ.(n.) 1. வீரப்பெண்; woman of courage. 2. மறக்குடிப் பெண்; a woman one of Tamilar race. 3. பாலை நிலப் பெண் (திவா.); woman of desert tracts. *"கரியகண்ணை யுடைய மறத்தி" (புறநா.181, உரை).* 4. குறிஞ்சி நிலப் பெண் (பிங்.); woman of hilly tracts.

[மறம் → மறத்தி]

மறத்துப்போ[1]–தல் *marattu-p-pō-*, 8 செ.கு.வி.(v.i.) மறுத்துப்போ–, (வின்.) பார்க்க; see *maruttu-p-pō.*

[மறுத்துப்போ– → மறத்துப்போ–.]

மறத்துப்போ[2]–தல் *marattu-p-pō-*, 8 செ.கு.வி.(v.i.) உணர்வு குன்றுதல்; insensation.

மறத்துறை *mara-t-turai*, பெ.(n.) 1. கரிசு (பாவ) நெறி; sinful way. *"மறத்துறை கடிந்தவேன் மன்னர் மன்னனே" (பாகவத.1, பரீட்சித்துச் சாப.40).* 2. வீரச்செயல்கள்; heroic exploits. *"மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்" (சிலப்.14:12).*

[மறம் + துறை.]

மறதி *maradi*, பெ.(n.) நினைவின்மை; forgetfulness.

[மற → மறதி.]

மறதிக்காரன் *maradi-k-kāran*, பெ.(n.) நினைவாற்றல் குறைந்தவன் (வின்.); forgetful person.

[மறதி + காரன்.]

மறந்துதூங்கு–தல் *marandu-tūngu-*, 8 செ.கு.வி.(v.i.) நினைவற்றுத் தூங்குதல்; deep sleep due to exhaution.

[மறந்து + தூங்கு.]

மறநிலை *mara-nilai*, பெ.(n.) வீரத்தின் படி நிலை; stages of bravery.

மறநிலைகள் : மறம் = வீரம்; துணிவு = வினை முயற்சிக் கேற்ற வீரம்; துணிச்சல் = நிலைமைக்கு மிஞ்சிய வீரம்; உரன் அல்லது திடம் அல்லது திண்மை = மனவுறுதி; திடாரிக்கம் = தைரியம்; திண்ணக்கம் = நெஞ்சழுத்தம்; தறுகண்மை = இறப்பிற்கஞ்சாத வீரம் (சொல்.58).

மறநிலைப்பொருள் *mara-nilai-p-poruḷ*, பெ.(n.) வெற்றி, திறை, தண்டம் முதலியவற்றால் அரசன் தேடிய பொருள் (பிங்.); wealth of a king obtained by victory, tribute, penality, fine etc.

[மறநிலை + பொருள்.]

மறநிலையறம் *mara-nilai-y-aram,* பெ.(n.) அரசன் பகையறுத்து நாட்டினைக் காவல் புரியும் அறச்செயல் (பிங்.); kingly virtue of vanquishing enemies in the interests of his country.

[மறநிலை + அறம்.]

மறநிலையின்பம் *mara-nilai-y-inbam,* பெ.(n.) வீரச்செயல், ஏறுதழுவல், இலக்க மெய்தல், வலிதிற்கோடல் முதலியவற்றால் விரும்பிய பெண்ணை அரசன் அடையும் இன்பம் (பிங்.); happiness of a king who wins his bride by feat of arms, as bull-baiting, archery, etc.

[மறநிலை + இன்பம்.]

மறப்பிலி *marappili,* பெ.(n.) கடவுள் (யாழ். அக.); god.

[மறப்பு + இலி.]

மறப்பு¹ *marappu,* பெ.(n.) மறதி பார்க்க; see *maradi.* *"மறப்பறியே னொள்ளமர்க் கண்ணாங் குணம்" (குறள், 1125).*

[மற→ மறப்பு.]

மறப்பு² *marappu,* பெ.(n.) மறுப்பு பார்க்க; see *maruppu.*

[மறுப்பு→ மறப்பு (கொ.வ.).]

மறப்புகழ் *marappugal,* பெ.(n.) வீரச் செயலால் வரும் புகழ்; renown got by valourous deeds. *"மறப்புகழ் நிறைந்த மைந்தினோன்" (புறநா.290).*

[மறம் +புகழ்.]

மறப்புலி *mara-p-puli,* பெ.(n.) 1. கொடிய புலி; ferocious tiger. *"மேற்சென்று பாய்தல் மறப்புலி தனக்கு மாமோ" (சீவக.752).* 2. அரிமா; lion.

[மறம் + புலி.]

மறம்¹ *maram,* பெ.(n.) 1. வீரம்; valour, bravery. *"மறவா ளேந்திய நிலந்தரு திருவி னெடியோன்" (சிலப்.28:2).* 2. சினம் (பிங்.); anger, wrath. *"மேவார் மறத்தொடு...... கடந்த காளை" (புவெ.9:4).* 3. பகை; enmity, hatred. *"செங்களத்து மறங்கருதி" (பு.வெ.:1, கொளு).* 4. வலி (பிங்.); power, strength. *"மறங்கெழு மதிலே" (கல்லா.73:29).* 5. வெற்றி; victory. *"மற வைத்தனித் திகிரி" (தக்கயாகப்.462).* 6. போர் (பிங்.); war. 7. கொலைத் தொழில்; killing, murder. *"மறந்திருந்தார்" (கலித்.38).* 8. கூற்றுவன் (பிங்.); *yaman.* 9. கெடுதி (வின்.); injury. 10. கரிசு (பாவம்) (பிங்.); vice, evil, sin. *"மறக்குறும்பறுப்ப" (ஞானா.25:8).* 11. தம் குலத்துப் பெண்ணை விரும்பிய அரசற்கு மறவர் உடம்படாது மறுத்துக் கூறுவதாகப் பாடுங் கலம்பகவுறுப்பு (இலக்.வி.812); a limb of kalambagam describing the refusal by *maravars* to give a girl of their clan to a king, in marriage. 12. மறக்குடி, 2 பார்க்க; see *mara-k-kudi.*

[மல்→ மர்→மறம்..]

மறம்² *maram,* பெ.(n.) 1. மயக்கம் (பிங்.); bewilderment. 2. பிணக்கு; disagreement.

[முல்→மல்→மல. மலத்தல் = மயங்குதல். மல →மலங்கு→மலக்கு→மலக்கம் = மயக்கம். மலங்கு = பாம்புடம்பும் மீன்வாலுங் கலந்த நீருயிரி. மலங்கு →மதங்கு→மதக்கம் = மயக்கம். மதங்கு→மறங்கு. மறங்குதல் = மயங்குதல். மல→மலை→மலைவு. மலைத்தல் = மயங்குதல். மலம்→மதம்→மறம் = மயக்கம் (மு.தா.177).]

மறம்³ *maṟam*, பெ.(n.) கலம்பக வுறுப்பு; part of kalambagam literature.

மறம் என்னுங் கலம்பகவுறுப்பு, அரசன் பெண் கேட்டு விடுத்த திருமுகத்தைக் கொணர்ந்த தூதனை நோக்கி, மறவர் எச்சரித்தும் அச்சுறுத்தியும் விடுப்பதாகக் கூறும் (த.தி.11).

மறமலி *maṟamali*, பெ.(n.) யானை (திவா.); elephant.

[மறம் + மலி.]

மறமறெனல் *maṟa-maṟeṉal*, பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு (யாழ்.அக.); onom. expr. of crashing.

[மற + மற + எனல்.]

மறமுல்லை *maṟa-mullai*, பெ.(n.) வேந்தன் வேண்டியது கொடுப்பவும் கொள்ளாத வீரனது பயன் கருதாநிலையைக் கூறும் புறத்துறை (பு.வெ.8, 27); theme describing the wrath of a warrior resenting the act of his king in trying to reward his selfless heroic deeds in a battle.

[மறம் + முல்லை.]

மறல்¹ *maṟal*, பெ.(n.) 1. பகை (சூடா.); hate, enmity. 2. பிணக்கு (சூடா.); disagreement. 3. போர்; fight, war. 4. கூற்றுவன் (சூடா.); yama. 5. சாவு (சங்.அக.); death. 6. எழுச்சி (பிங்.); height, elevation. 7. கூத்துவகை (வின்.); a dance.

[மறம் →மறல்.]

மறல்² *maṟal*, பெ.(n.) 1. மறதி; forgetfulness. 2. மயக்கம்; delusion.

[மற → மறல்.]

மறல்³ *maṟal*, பெ.(n.) 1. மறுக்கை; refusal, declining. *"மறலிணை மாற்று" (பரிபா.20, 84).* 2. வறுமை (பிங்.); poverty. 3. குற்றம் (வின்.); fault.

[மறு →மறல்.]

மறலி¹ *maṟali*, பெ.(n.) 1. மறல்², 1 (பிங்.) பார்க்க; see *maṟal*. 2. மறல்², 2 (சூடா.) பார்க்க; see *maṟal*.

[மறல் → மறலி.]

மறலி² *maṟali*, பெ.(n.) 1. கூற்றுவன் (திவா.); *yamaṉ*. *"மறலி யன்ன களிற்று மிசையோனே" (புறநா.13).* 2. பொறாமை (பிங்.); envy, jealousy.

மறலு¹-தல் *maṟalu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. மாறுபடுதல்; to oppose. *"மன்னரோ டினையவர் மறலி" (சீவக.791).* 2. போர் செய்தல்; to give fight. *"தெம்முனையுள்.... மறலுங்கால்" (பு.வெ.10, 5).*

[மற →மறல்→ மறலு-தல்.]

மறலு²-தல் *maṟalu*, 5 செ.குன்றாவி.(v.t.) கொல்லுதல்; to kill. *"வேதியனை மறலப்புகுந் தாருன்னுழையோர்" (உபதேசகா. சிவநாம. 24).*

[மற→மறல்→மறலு-தல்.]

மறலை *maṟalai*, பெ.(n.) புல்லறிவாளன்; person of mean understanding. *"பொய்யே..... பயனிலசொ னான்கும் மறலையின் வாயினவாம்" (ஏலா.28).*

[மற→மறல்→மறலை.]

மறவணம் *maṟavaṇam*, பெ.(n.) கரிசு (பாவ) குணம்; sinful trait. *"மறவண நீத்த மாசறுகேள்வி அறவணவடிகள்" (மணிமே.2: 60).*

மறவன் *maṟavaṉ,* பெ.(n.) 1. பாலை நிலத்தான்; inhabitant of the desert tract. 2. மலை வேடன்; inhabitant of the hilly tract, hunter, one belonging to the caste of hunters. *"நம்முடைய குலமறவர் சுற்றத்தாரை" (பெரியபு.கண்ணப்ப.55).* 3. மறக்குடியான்; person of *Maṟava* caste. 4. வீரன்; warrior, hero. *"உறினுயி ரஞ்சா மறவர்" (குறள், 778).* 5. படைத் தலைவன் (சூடா.); commander, military, chief. 6. கொடியோன்; cruel, wicked person. *"மறவர் மறவ" (பெரும்பாண்.455).*

[மறம்→மறவன்.]

மறவாணர் *maṟavāṇar,* பெ.(n.) மலைவேடர்; inhabitants of the hilly tract. *"வெற்படியின் மேவுகற்றை மறவாணர் கொடிகோவே" (திருப்பு.357).*

[மறம் + வாணர்.]

மறவி[1] *maṟavi,* பெ.(n.) 1. மறதி; forgetfull ness. *"பெருமறவியையோ" (நற்.70).* 2. கள் (சூடா.); intoxication liquor. 3. தேன்; honey. *"மறவி பாய் வருக்கை" (அரிச்.பு.நாட்.39).* 4. பதநீர் (சங்.அக.); sweet toddy. 5. மறதியுள்ளவன்; forgetful person. *"மடிவஞ்சனையின் மறவி" (சைவச. ஆசாரிய.18).*

[மற→மறவி.]

மறவி[2] *maṟavi,* பெ.(n.) 1. இழிவு (சூடா.); meanness. 2. குற்றம் (பிங்.); fault.

[மற→மறவி.]

மறவி[3] *maṟavi,* பெ.(n.) அழுக்காறு (பிங்.); envy.

[மற→மறவி.]

மறவுரை *maṟa-v-urai,* பெ.(n.) தீய அறிவுரை மொழி; unrighteous precept. *"மறவுரை நீத்த மாசறு கேள்வியர்" (சிலப்.10: 56).*

[மறம் + உரை.]

மறவை *maṟavai,* பெ.(n.) வன்கண்மை யுடையது; anything cruel by nature. *"மறவையா யென்னுயிர்மேல் வந்தவிம் மருள் மாலை" (சிலப்.7:42).*

[மறம்→மற→மறவை.]

மறவோன் *maṟavōṉ,* பெ.(n.) 1. வீரன்; warrior. *"மறவோன் சேனை" (பெருங். உஞ்சைக்.33, 78).* 2. பத்துக்கு மேற் பதினான்கிற்குட்பட்ட வயதுள்ள ஆண்மகன் (பன்னிருபா.229); boy between the ages of ten and fourteen.

[மறம்→மறவோன்.]

மறனுடைப்பாசி *maṟaṉuḍai-p-pāśi,* பெ.(n.) எயில் காத்த சின மன்னர் வீர (சொர்க்க) த் துறக்கமடைந்ததைக் கூறும் புறத்துறை (பு.வெ.5, 2, கொளு.); theme describing the attaining of *vira-svarga* by valourous kings who die defending their forts.

[மறனுடை + பாசி.]

மறாங்கெண்டை *maṟāṅkeṇḍai,* பெ.(n.) பசிய நீலநிறமுடையதும் 22 1/2 விரலம் வரை வளரக் கூடியதுமான கடல் மீன் வகை; a sea - fish, bluish green, attaining 22 1/2 in. in length, *megalops cypriroides.*

மறாட்டியர் *maṟāṭṭiyar,* பெ.(n.) மராட்டியர் (வின்.); the *mahaṟāṭṭās.*

[மராட்டியர்→மறாட்டியர் (இ.வ.).]

மறாதிக்காய் *maṟādi-k-kāy,* பெ.(n.) சிறு தும்மட்டிக்காய்; a creeper (சா.அக.).

மறி[1]-தல் *maṟi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கீழ் மேலாதல்; to be turned upside down. *"மலைபுரை யானை மறிந்து" (பு.வெ.7:9).* 2. மீளுதல் (திவா.); to return, recede. *"மறிதிரை" (கலித்.121).* 3. முதுகிடுதல்; to turn back, retreat. *"மைந்தர் மறிய மறங்கடந்து" (பு.வெ.6:14).* 4. விழுதல்; to fall down. *"நிழன்மணிப் பன்றி யற்று மறியுமோ" (சீவக.2201).* 5. சாய்தல்; to bend. *"எரி மறிந்தன்ன நாவின்" (சிறுபாண்.196).* 6. கிளர்தல்; to rise up, as a wave. *"மறிகடல் போன்று" (திவ்.இயற். திருவிருத். 57).* 7. முறுக்குண்ணுதல்; to be twisted. *"திரிந்து மறிந்துவீழ் தாடி" (கலித்.15).* 8. பலகாலுந் திரிதல்; to go about often, to walk to and fro. *"நயனாடி நட்பாக்கும் வினைவர்போன் மறிதரும்" (கலித்.46).* 9. தடைப்படுதல்; to be checked, arrested. 10. நிலைகுலைதல்; to be ruined in circumstances. *"ஆம்பன் முகவரக்கன் கிளையொடு மறிய" (கல்லா.கணபதி.வாழ்.).* 11. அறுபடுதல்; to be torn, injured. *"உன்காது மறியும்" (திவ்.பெரியாழ்.2, 3, 6, அரும்.).* 12. மரிதல், சாதல்; to die. *"மறிந்த மகன் றனைச்சுட" (அரிச்.பு.மயான.38).* 13. துள்ளுதல் (கொ.வ.); to frisk about, gambol.

[மல்→மறி-தல்.]

மறி[2]-த்தல் *maṟi-,* 11 செ.குன்றாவி.(v.t.) 1. தடுத்தல்; to stop, detain, arrest, check. *"மறுபிறப்போட மறித்திடுமே" (திருவாச.36, 2).* 2. திருப்புதல்; to turn about, to return. 3. மேல்கீழாக்குதல் (வின்.); turn upside down, upset. 4. அழித்தல்; to destroy. *"மாகமார் புரங்களை மறித்த மாண்பினர்" (தேவா.97, 4).* 5. தடுத்தற் குறியாகக் கையசைத்தல்; to wave the hand, as an indication of disapproval. *"மாற்றருங் கரதல மறிக்குமாது" (கம்பரா. உண்டாட்.21).* 6. திரும்பச் செய்தல் (இ.வ.); to repeat.

[மல்→மறி-த்தல்.]

மறி[3] *maṟi,* பெ.(n.) 1. ஆடு, மான், குதிரை முதலியவற்றின் இளமை (தொல்.பொருள். 568); young of sheep, deer, horse, etc. 2. ஆடு, குதிரை, மான் முதலியவற்றின் பெட்டை (யாழ்.அக.); female of sheep, horse, deer, etc. 3. ஆடு; sheep. *"மறியுடையாயர் மாதர்" (கம்பரா.ஆற்று.15).* 4. மேழ ஓரை (சூடா.); aries of the zodiac. 5. அழுங்கு (பிங்.); pangolin. 6. அழுங்கின் குட்டி (பிங்.); young of pangolin. *"மறிகொள் கையன்" (தேவா.980:10).*

மறி[4] *maṟi,* பெ.(n.) மறியல், 1 பார்க்க; see *maṟiyal.*

மறிக்கல் *maṟikkal,* பெ.(n.) சுக்கான்கல் (யாழ்.அக.); lime kunkar.

மறிக்குளம்பு *maṟi-k-kuḷambu,* பெ.(n.) மான்குளம்பு; loof of deer.

[மறி + குளம்பு.]

மறிகாணுதல் *maṟi-kāṇudal,* பெ.(n.) குதிரை, மான் முதலியன குட்டிபோடுகை (வின்.); foaling, as of a mare, deer, etc.

[மறி + காணுதல்.]

மறிகால் *maṟi-kāl,* பெ.(n.) மறுகால்[1] (இ.வ.) பார்க்க; see *maṟu-kāl.*

[மறுகால்→மறிகால்.]

மறிசல் *mariśal,* பெ.(n.) அணை (இ.வ.); dam, weir.

[மறி = தடு. மறி→மறியல் →மறிசல் = தடுத்துக்கட்டும் அணை.]

மறிஞ்சிப்பாரை *mariñci-p-pārai,* பெ.(n.) மீன் வகை; a kind of fish, *caranx diedaba.*



மறித்து *marittu,* வி.எ.(adv.) மறித்தும் பார்க்க; see *marittum. "மறித்தாங் கிழிந்து" (மணிமே.10:88).*

[மறித்தும்→மறித்து.]

மறித்தும் *marittum,* வி.எ.(adv.) மீட்டும்; again, besides. *"வேலானை மறித்துங் காண்க" (சீவக.1225).*

[மறு→மறி→மறித்தும்.]

மறிதரல் *mari-daral,* பெ.(n.) மீளுகை (பிங்.); returning, coming back.

[மறு→மறி→மறிதரல்.]

மறிந்து *marindu,* பெ.எ. (adv.) மறித்தும் பார்க்க; see *marittum. "மறிந்து வந்தனரே மாற்றோர்" (பெருங்.மகத.19, 80).*

[மறித்தும்→மறித்து→மறிந்து.]

மறிப்பு *marippu,* பெ.(n.) மறியல் (இ.வ.); strike.

[மறு→மறி→மறிப்பு.]

மறிபடு–தல் *mari-padu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. தடுக்கப்படுதல்; to be stopped, as the water of a river. 2. இடையூறுபடுதல் (கோயிலொ.13); to be hindered, as a business.

[மறு→மறி + படு–.]

மறிமலம் *mari-malam,* பெ.(n.) மறிபட்ட மலம்; constipated bowels.

[மறி + மலம்.]

மறிமாங்காய் *mari-māṅgāy,* பெ.(n.) ஒருவகை மாங்காய்; a kind of mango.

[மறுமாங்காய்→மறிமாங்காய் (கொ.வ.) பருவமல்லாக் காலத்துப் பூத்துக் காய்க்கும் மாவை மறுமாங்காய் என்பர்.]

மறியல் *mariyal,* பெ.(n.) 1. நிறுத்துகை; stopping, detaining, checking, confining. 2. தடை (வின்.); detention. 3. வழக்கிற் செய்யும் தடையுத்தரவு; injunction. 4. காவற்கூடம்; prison, jail. 5. செயல்பாடு நடக்கவொட்டாதபடி தடுத்து நிறுத்துகை (கொ.வ.); picketting (colloq.). 6. வேலை நிறுத்தம்; strick. *ஆலைப் பணியாளர்கள் வாயிலை அடைத்து மறியல் செய்தனர்.* 7. போராட்ட வகை, பணியாளர்கள் வேலைக்குச் செல்லாமல் தடுத்து நிறுத்தும் போராட்டம்; a kind of agitation.

[மறு→மறி→மறியல்.]

மறியற்கடுதாசி *mariyar-kadudāsi,* பெ.(n.) சிறையிலடைக்கக் கொடுக்கும் உத்தரவு (சப்.); warrant of commitment, order for imprisonment.

[மறியல் + கடுதாசி.]

மறிவு *marivu,* பெ.(n.) 1. திரும்புகை; return. *"மறிவிலாச் சிவகதி" (அருட்பா.V, செவியறி. 6).* 2. கேடு (ஐங்குறு.அரும்.); ruin.

[மறு→மறி→மறிவு.]

மறு¹-த்தல் *maru-,*11 செ.குன்றாவி.(v.t.) 1. இல்லை யென்னுதல்; to refuse, deny, disown. *"அவர் மறுத்தகறல் காணா" (கம்பரா.மிதிலைக்.125).* 2. தடுத்தல்; to object, check, contradict. *"மறுத்து மறுத்து மைந்தர் சார" (கலித்.104).* 3. எதிர்ப்பு எழுப்புதல்; to confute, refute the opinion or argument of another. *"உடன்படன்மறுத்தல்" (நன்.11).* 4. நீக்குதல்; to put away, reject. *"கொல்லான் புலாலை மறுத்தானை" (குறள், 260).* 5. மறி²-2, 6 பார்க்க; see *mari²-2,6.*

மறு²-த்தல் *maru-,* 3 செ.கு.வி.(v.i.) 1. வெட்குதல் (சூடா.); to be ashamed. 2. இல்லாமற்போதல்; to cease to be. *"இப்பேறுதான் ஒரு நாளுண்டாய் மற்றை நாள் மறுக்கையின் றிக்கே" (ஈடு.2, 7, 7).*

மறு³ *maru,*பெ.(n.) 1. குற்றம் (பிங்.); stigma, blemish, fault. *"மனுவில் செய்தி" (தொல்.பொருள்.75).* 2. களங்கம்; stain, blot, spot, especially on the moon. *"மதிமறுச் செய்யோள்" (பரிபா.2, 30).* 3. தீமை; harm, injury. *"நடுக் கடற் போனாலும் மறுப்படாமல் வரக் கடவீர்" (பழ.).* 4. அடையாளம்; sign, symbol. 5. மச்சம்; mole, freekle. *"மறுவாயிரத்தெட் டணிந்து" (சீவக.2).* 6. பாலுண்ணி (வின்.); wart.

மறு⁴ *maru,* வி.அ.(adj.) மற்ற; another, other, next, beyond. *"மறுபிறப்போட" (திருவாசக. 36, 2).*

க. மரு.

மறுக்க *marukka,*(adv.) திரும்ப (இ.வ.); again. *"மறுக்க நீ வரக்கூடாது" (உ.வ.).*

[மறுகால் →மறுக்கா→மறுக்க (வே.க.4:70)]

மறுக்கடி *marukkadi,* பெ.(n.) 1. மறுக்கம், 2 (நாஞ்.) பார்க்க; see *marukkam, 2.* 2. துன்பம்; whirling.

[மறுக்கம் → மறுக்கடி. ஒ.நோ.நெருக்கம் →நெருக்கடி.]

மறுக்கம் *marukkam,*பெ.(n.) 1. சுழற்சி; whirling, unsteadiness. 2. துன்பம்; distress. *"திறைகொடா மன்னவரை மறுக்கஞ்செய்யும் பெருமையார்" (தேவா.17, 4).* 3. மனக்கலக்கம்; perplexity. *"மன்பதை மறுக்கத் துன்பங் களைவோன்" (பரிபா.15, 52).*

[முள்→மள்→மரு→மருள் = மயக்கம். மருள் →மருட்கை = மயக்கம், வியப்பு. மரு→மருமம்→மம்மம் →மம்மர் = மயக்கம். மம்மம்→மம்மல் = அந்திநேரம், மயக்கம், காமம், கல்லாமை. மரு→மறு→மறுகு→ மறுக்கம் = மய்க்கம் (மு.தா.178).]

மறுக்களி¹-த்தல் *marukkali-,*4 செ.கு.வி. (v.i.) மறுத்தல்; to deny.

[மறு→மறுக்களி-.ஒ.நோ.ஒரு→ஒருக்களி-.]

மறுக்களி²–த்தல் *marukkali-,* 11 செ.கு.வி. (v.i.) நோய் முதலியன திரும்புதல்; to return, relapse, as disease.

[மறு→மறுக்களி–;]

மறுக்களித்துப்பேசு–தல் *marukkalittu-p-pēšu-,* 5 செ.குன்றாவி.(v.t.) தான் சொன்னதை மறுத்துப் பேசுதல் (இ.வ.); to go back upon one's words, to retract, to contradict.

[மறுக்களித்து + பேசு–.]

மறுக்காரங்காய் *maru-k-kārangāy,* பெ. (n.) ஒருவகைக் காய்; a kind of fruit (சா.அக.).

மறுக்காரை *maru-k-kārai,* பெ.(n.) மருக்காரை (வின்.) பார்க்க; see *marukkārai.*

[மருக்காரை→மறுக்காரை (கொ.வ.).]

மறுக்கு¹–தல் *marukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) மறுக்கம் பார்க்க; see *marukkam.* *"மறுக்கினோ டிரியல் போயுற" (கம்பரா. பள்ளிபடை.108).*

[மறுக்கம்→மறுக்கு–.]

மறுக்கு²–தல் *marukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. மனத்தைக் கலக்குதல் (திவ். திருவாய்.4, 9, 6); to perplex. 2. மருக்கு–, பார்க்க; see *marukku-.*

[முறுகு→மறுகு→மருக்கு– (வே.க.4:73).]

மறுக்கு³–தல் *marukku-,* 5 செ.கு.வி.(v.i.) எண்ணெய் முதலியவற்றால் தொண்டை கரகரத்தல் (இ.வ.); to be irritated in the throat.

[மறுக்கம்→மறுக்கு–.]

மறுக்குத்து *marukkuttu,* பெ.(n.) செடிவகை (சங்.அக.); a shrub, *chlrongia globra.*

மறுக்கை *marukkai,* பெ.(n.) மரிக்கனிரும்பு (இ.வ.) பார்க்க; see *marikkan-irumbu.*

மறுக்கொள்ளி *marukkolli,* பெ.(n.) தீயான் (இ.வ.); dishonest person.

[மறு + கொள்ளி. கொள்ளி = கொண்டவன். மறு = குற்றம். ஒ.நோ. அச்சங்கொள்ளி.]

மறுக *maruga,* வி.எ.(adv.) மறுக்க (இ.வ.) பார்க்க; see *marukka.*

[மறுக்க→மறுக.]

மறுகரை *maru-karai,* பெ.(n.) எதிர்க்கரை; opposite shore, shore beyond. *"குலைகட்டி மறுகரையை யதனாலேறி" (திவ்.பெருமாள்.10, 7).*

[மறு + கரை.]

மறுகல் *marugal,* பெ.(n.) 1. சுழற்சி; whirling, unsteadiness. 2. கலங்குகை (திவ். திருவாய்.9, 4, 4); perplexity. 3. நோய் திரும்புகை (வின்.); relapse of disease.

[மறுகு→மறுகல் (வே.க.4:73).]

மறுகலி–த்தல் *marugali-,* 4 செ.கு.வி. (v.i.) நோய் முதலியன திரும்புதல் (யாழ்.அக.); to return, relapse, as disease.

[மறுகு→மறுகல்→மறுகலி–, (வே.க.4:73).]

மறுகறி *marukari,* பெ.(n.) விருந்தில் பரிமாறப்படும் இரண்டாவது கறி (வின்.); a second served in the feast curry of vegetables.

[மறு + கறி.]

மறுகாய்ச்சல் *maru-kāyccal,* பெ.(n.) 1. திரும்பிவருங் காய்ச்சல்; relapse of fever. 2. மா, புழுக்கிய நெல் முதலியவற்றை இரண்டாமுறை காயப்போடுகை; second drying, as of parboiled paddy. 3. இரும்பின் இரண்டாமுறைக் காய்வு; second heating iron.

[மறு + காய்ச்சல்.]

மறுகால்[1] *marukāl,* பெ.(n.) 1. அதிக நீரை வெளியேற்றும் வாய்க்கால்; surplus channel. 2. மதகு (I.M.P.cd.186); sluice.

[மறு + கால்.]

மறுகால்[2] *marukāl,* வி.எ.(adv.) 1. மறுபடி; again, a second time. 2. மாறாக (வின்.); on the other hand.

[மறு→மறுகால்.]

மறுகால்[3] *maru-kāl,* பெ.(n.) இரண்டாமுறை சாகுபடி செய்த பயிர்; crop raised a second time. *"சிறுதினை மறுகால்....... அவரை பூக்கும்" (குறுந்.82).*

[மறு→மறுகால்.]

மறுகால்வெற்றிலை *marukāl-verrilai,* பெ.(n.) இரண்டாமுறை கொய்தெடுக்கும் வெற்றிலை (வின்.); betel leaves of the second crop, consolidated more tender than those of the first.

[மறுகால் + வெற்றிலை.]

மறுகு[1]–தல் *marugu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. சுழலுதல்; to whirl. *"மறுகக் கடல் கடைந்தான்" (திவ்.இயற்.2, 68).* 2. பலகாலுந் திரிதல்; to go about often, to wander. *"மலிவன மறுகி" (குறிஞ்சிப்.97).* 3. மனங் கலங்குதல்; to be bewildered, confused, to be unsteady, unsettled. *"நெஞ்சின் மறுகல் நீ" (சீவக.946).* 4. வருந்துதல்; to be distressed. *"கிடந்துயிர் மறுகுவதாயினும்" (அகநா.29).* 5. சிதைதல்; to be shattered, torn up. *"குடன் மறுகிட" (கம்பரா. இந்திரசித்.19).* 6. அரைபடுதல்; to be ground into paste, as sandlewood. *"நறுஞ்சாந்து மறுக" (மதுரைக்.553).*

[முல்→முள்→மள்→மரு→மருள் = மயக்கம். மருள் →மருட்கை = மயக்கம், வியப்பு, வியப்புச் செயல். மரு →மருமம்→மம்மம்→மம்மர் = மயக்கம். மம்மம்→மம்மல் = அந்திநேரம், மயக்கம், காமம், கல்லாமை. மரு→மறு→ மறுகு→மறுக்கம் = மயக்கம். மறுகுதல் = கலத்தல், மயங்குதல் (மு.தா.178).]

மறுகு[2]–தல் *marugu-,* 5 செ.குன்றாவி.(v.t.) கொண்டுபோதல்; to carry. *"அவல் வகுத்தோர்.... மது மறுகவும்" (பொருந.27).*

மறுகு[3] *marugu,* பெ.(n.) 1.தெரு; street, road. *"என்காம மறுகின் மறுகு மருண்டு" (குறள், 1139).* 2. குறுந்தெரு (சூடா.); narrow street, lane. 3. தெரு ஓரம்; side of the street or road.

[முள்→மள்→மரு→மறு→மறுகு = கலத்தல், மயங்குதல். மறுகு = பல தெருக்களும் மக்களும் கூடும் பெருந்தெரு (மு.தா.178).]

மறுகு[4] *marugu,* பெ.(n.) அறுத்த தாளினின்று உண்டாம் இரண்டாம் விளைச்சல் (யாழ்ப்.); second crop of grain from the stubble.

[மறு→மறுகு.]

மறுகுசிறை *marugu-cirai,* பெ.(n.) வீதியின் இருபுறத்துமுள்ள வீட்டு வரிசை; row of houses on either side of a street. *"பண்ணமைத் தெழீஇ..... மறுகுசிறை பாடும்" (பதிற்றுப்.20).*

[மறு→மறுகு + சிறை.]

மறுகுருப்பாய்-தல் *maruguru-p-pāy-,* 2 செ.கு.வி.(v.i.) மறுமுள்பாய்-தல் (இ.வ.) பார்க்க; see *maru-muḷ-pāy-.*

[மறு→மறுகுரு + பாய்-.]

மறுகூர்பாய்-தல் *maru-kūr-pāy-,* 5 செ.கு.வி.(v.i.) மறுமுள்பாய்-, (இ.வ.) பார்க்க; see *maru-muḷ-pāy-.*

[மறு + கூர்.]

மறுகை[1] *marugai,* பெ.(n.) மறுகு[2], 1 பார்க்க; see *marugu[2], 1. "மாட நிரைத்த மறுகை" (பெருங்.உஞ்சைக்.50, 43).*

[மறு→மறுகு→மறுகை.]

மறுகை[2] *marugai,* பெ.(n.) 1. மாட்டின் பொதிச் சுமையிற் பாதியளவு; half of a bullock-load. 2. நுங்கு; kernel of palmyra fruit.

மறுசன்மம் *maru-canmam,* பெ.(n.) மறு பிறப்பு பார்க்க; see *maru-pirappu.*

[மறு + Skt. ஜன்மம்→சன்மம்.]

மறுசனனம் *maru-cananam,* பெ.(n.) மறுபிறப்பு பார்க்க; see *maru-pirappu.*

[மறு + Skt. ஜனனம்→சனனம்.]

மறுசாமத்தியம் *maru-cāmattiyam,* பெ.(n.) பூப்பிற்குப் பின் வரும் முதற் பூப்பு (நாஞ்.); first menstruation after puberty.

[சமைதல்→ சாமத்தியம். மறு = சாமத்தியம்.]

மறுசுற்றாணி *maru-šurrāṇi,* பெ.(n.) ஆணி வகை (இக்.வ.); bolt and nut, screw (mod.).

[மறு + சுற்று + ஆணி.]

மறுசுற்று[1] *maru-šurru,* பெ.(n.) இரண்டாம் முறை செயல்பாடு; the second turn. *மறுசுற்று வாக்கு எண்ணிக்கையில் வெற்றி பெற்றான் (உ.வ.)..*

[மறு + சுற்று.]

மறுசுற்று[2] *maru-šurru,* பெ.(n.) மறை; screw.

மறுசெய்தி *maru-šeydi,* பெ.(n.) மறுசொல் (இ.வ.) பார்க்க; see *maru-šol.*

[மறு + செய்தி.]

மறுசொல் *maru-šol,* பெ.(n.) மறுமொழி, விடை; reply, answer. *"மறுசொ லெத்திறத்தினாற் சொல்லுதும்" (சீகாளத். பு.கண்ணப்ப.120).*

[மறு + சொல்.]

மறுத்தரவு *maru-t-taravu,* பெ.(n.) திருப்புகை, மீட்கை; bringing back. *"யாதொன்று மென்கண் மறுத்தர வில்லாயின்" (கலித்.81).*

[மறு + தரவு (வே.க.4:76).]

மறுத்தா-தல் (மருத்தருதல்) *maru-t-tā-,* 15 செ.குன்றாவி.(v.t.) மீட்டல்; to restore, recover, bringing back. *"மையற்ற படிவத்தான் மறுத்தர லொல் வதோ" (கலித்.15).*

மறுத்து *maruttu,* வி.எ.(adv.) 1. மீள; in return. *"மறுத்தின்னா செய்யாமை" (குறள், 312).* 2. மறுபடியும்; again. *"மறுத்துக் கேள்வி கொள்ள வேண்டாதபடி" (ஈடு.1, 3, 3).* 3. மேலும்; morever. *"மறுத்து மின்னு மொன் றுரைத்திடக்கேள்" (அரிச்.பு.சூழ்வி.128).*

[மறு→மறுத்து (வே.க.4:76).]

மறுத்துப்போ-தல் *maruttu-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) 1. ஆவு கறவை நின்று போதல், பலன் கொடுக்காமற் போதல் (வின்.); to cease giving milk, as a cow, to stop bearing as a tree. 2. எதிர்ப்பு தெரிவித்துப் போதல்; to oppose.

[மறு→மறுத்து + போ-.]

மறுத்துமொழிநிலை *maruttu-moḻi-nilai,* பெ.(n.) ஓர் அணிவகை (பிங்.); a figure of speech.

[மறுத்துமொழி + நிலை.]

மறுத்துரை-த்தல் *maruttural-,* 4 செ.குன்றாவி. (v.t.) தடை கூறல், எதிர்த்துரைத்தல்; to contradict. *"மறுத்துரைப்பதுபோ னெஞ்சொடு புணர்த்தும்" (தொல். பொருள். 196).*

[மறுத்து + உரை-.]

மறுதண்டமூலி *maru-tanda-mūli,* பெ.(n.) கருஞ்செம்பை; a shrub bearing blue papilionaceous flowers (சா.அக.).

மறுதரவு *maru-taravu,* பெ.(n.) மறுத்தரவு பார்க்க; see *maru-t-taravu. "மறுதர வில்லாளை யேத்திநாம் பாட" (சிலப்.24, பாட்டுமடை, இறுதி).*

[மறுத்தரவு→மறுதரவு (வே.க.4:76).]

மறுதலி¹-த்தல் *marutali-,* 4 செ.கு.வி. (v.i.) 1. வேறுபடுதல்; to vary, deviate. 2. மாறுபடுதல்; to contradict. *"இவை யொன்றிற் கொன்று தம்மின் மறுதலித்தமையான்" (வீரசோ.அலங்.14, உரை).* 3. மறுக்களி²-, பார்க்க; see *maru-k-kali²-.* 4. (கிறித்.) மார்க்கத்தைவிட்டு நீங்குதல்; to apostatize.

[மறு→மறுதலி.]

மறுதலி²-த்தல் *marutali-,* 4 செ. குன்றாவி. (v.t.) மறுத்தல்; to deny, disavow.

மறுதலிப்பு *maru-talippu,* பெ.(n.) 1. மறுக்கை; denial, refusal. 2. வேறுபடுகை; deviation from the original.

[மறு→மறுதலிப்பு.]

மறுதலை¹ *maru-talai,* பெ.(n.) 1. எதிர்க் கட்சி; opposite side. *"தன்னை மறுதலை பழித்த காலையும்" (நன்.53).* 2. மாறுபடு பொருள்; sense of contrariety. *"இன்மையன்மை மறுதலை யென்னும் முப்பொருள்" (சி.போ.சிற்.2, 1, பக்.34).* 3. பகை; enemy, antagonist. *"மறுதலை சுற்ற மதித்தோம்பு வானேல்" (ஏலாதி.16).* 4. நிகர்; equal. *"அரிமாவிற்கு மறுதலை போல்வா ரொருவர்" (திருக்கோ.225, உரை).* 5. இரண்டாம் முறை; second time. *"மறுதலை இங்கு வராதே" (உ.வ.).* 6. எதிரியின் தருக்கம்; opponent's point of view or argument. *"மறுதலைக் கடாஅ" (தொல். பொருள்.659).*

[மறு + தலை.]

மறுதலை வகை : 1. எதிர் - Opposite, 2. திரித்தல் - Alteration, 3. பகை - Enmity, 4. மறுதலிப்பு - Denial, 5. மாற்றுமை அல்லது

மறுதலை – Contrariety, 6. மறுப்பு – Refuation, 7. மறை – Negation, 8. எதிர்மறை – Strong negation, 9. மாற்றம் – Transference, 10. மாற்று – Antidote, 11. மாறு – Exchange, 12. முரண் – Contradiction, 13. விலக்கு – Prohibition, 14. வேற்றுமை – Difference, 15. வேறுபாடு – Change (சொல்.41).

மறுதலை²–த்தல் *maṟu-talai-*, 4 செ.கு.வி. (v.i.) எதிரிட்டுத் தோன்றுதல்; to appear on the opposite side, to balance. *"நாணமுத னான்கு மண்டியொருசார் மறுதலைப்ப" (திருவிளை.வளையல்.23).*

மறுதலை³–த்தல் *maṟu-talai-*, 4 செ. குன்றாவி. (v.t.) மறுத்தல்; to deny, disavow. *"மறுதலைத் துறைக்கு மெல்லை" (அரிச்.பு.நகர்நீ.146).*

[மறு→மறுதலை–, (வே.க.4:76).]

மறுதலைக்காய் *maṟu-talai-k-kāy*, பெ.(n.) பருவ விளைச்சலுக்குப் பின் காய்க்கும் காய்கறி முதலியன (இ.வ.); second yield or crop of vegetables etc. after the seasonal yield.

[மறுதலை + காய்.]

மறுதலைப்பெண் *maṟu-talai-p-peṇ*, பெ.(n.) மறுமனைவி; second wife. *"அரவ மறுதலைப் பெண் கூட்டுவிக்கும்" (சினேந். 267).*

[மறுதலை + பெண்.]

மறுதலையாக *maṟu-talaiyāga*, பெ.(n.) மாற்றாக; alternative. *"புலியனுக்கு விற்ற நால் கோலுக்கும் மறுதலைஆக" (தெ.க. தொ.6, கல்.290–6).*

[மறு→மறுதலை→மறுதலையாக.]

மறுதா–தல் (மறுதருதல்) *maṟu-tā-*, 15 செ.குன்றாவி.(v.t.) 1. மறுத்தா–, பார்க்க; see *maṟu-t-tā*. 2. மறு–, பார்க்க; see *maṟu-*. *"மறுதரற் கரிய" (நற்.32).*

[மறு→மறுத்தா–→மறுதா–.]

மறுதாக்கல் *maṟu-tākkal*, பெ.(n.) 1. எதிருரை; rejoinder. 2. விடை; reply.

[மறு + தாக்கல்.]

மறுதாய் *maṟu-tāy*, பெ.(n.) மாற்றாந்தாய் (இ.வ.); step-mother.

[மறு + தாய்.]

மறுதாரம் *maṟu-tāram*, பெ.(n.) இரண்டாம் மனைவி (இ.வ.); second wife.

[மறு + தாரம்.]

மறுதுடை *maṟu-tuḍai*, பெ.(n.) மறுமாங்காய் பார்க்க; see *maṟu-māṅgāy(சா.அக.).*

மறுதேசம் *maṟu-tēšam*, பெ.(n.) மறுதேயம் பார்க்க; see *maṟu-tēyam.*

[மறு + தேசம்.]

மறுதேயம் *maṟu-tēyam*, பெ.(n.) வெளிநாடு; foreign country.

[மறு + தேசம்.]

மறுதொழில் *maṟu-toḻil*, பெ.(n.) 1. கரிசு; sin. *"மறுதொழிலும் புரியும்...... நிருதர்" (சேதுபு. சங்கர.86).* 2. செய்து கொண்டிருக்கும் தொழிலின் பிறிதொரு தொழில்; additional profession.

[மறு + தொழில். அறத்திற்கும் முறைமைக்கும், நேர்மைக்கும் மாறானது.]

மறுநனை-தல் *maṟu-naṉai-,* 2 செ.கு.வி. (v.i.) மறுபாடுருவ நனைதல்; to be drenched, to be completely wet. *"நான் மறுநனைந்து ப்ரீதிப்ரேரிதனாய்" (ஈடு.2, 6, 4).*

[மறு + நனை-.]

மறுநாள் *maṟu-nāḷ,* பெ.(n.) அடுத்த நாள்; next day, morrow.

[மறு + நாள்.]

மறுநோய் *maṟu-nōy,* பெ.(n.) 1. மறுக்களித்த நோய்; disease in the relapsed stage. *"மறுநோய் மக்களி னாழந்த மனத்தன்" (பெருங்.மகத.19, 48).* 2. முற்பிறவிப் பயன்; sub-conscious impression due to past karma. *"பின்னும் மறுநோய் செறுவான் வலி" (திவ்.இயற்.2, 67).*

[மறு + நோய்.]

மறுப்ப *maṟuppa,* இடை.(part.) ஓர் உவம வாய்பாடு (தொல்.பொருள்.291); a term of comparison.

[மறு→மறுப்ப (வே.க.4:76).]

மறுப்படு-தல் *maṟu-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. வசையுறுதல்; to be blamed. 2. சிதைவுறுதல்; to be injured, spoiled. 3. புள்ளியுடைத்தாதல்; to be spotted. 4. துன்பப்படுதல் (யாழ்.அக.); to suffer.

[மறு→மறுப்பு→மறுப்படு-.]

மறுப்பு *maṟuppu,* பெ.(n.) 1. மறுக்கை; refusal, denial. 2. எதிர்க்கை; objection, opposition. 3. கண்டனம் (சப்.); refutation. 4. மறுவுழவு; re-ploughing. 5. முன்னுழுத சாலுக்குக் குறுக்காக உழுகை; ploughing cross wise to the first ploughing *Nāñ.*

[மறு→மறுப்பு (வே.க.4:76).]

மறுப்பு வகை: மறுப்பு – பிறர் கொள்கையை அல்லது கூற்றை மறுத்தல் (Refutation). கண்டனம் – பிறர் கொள்கையையாவது கூற்றையாவது கண்டித்தல் (Censure): அங்கதம்–பிறர் கொள்கையையேனும் கூற்றையேனும் பழித்தல் (Staire) (சொல்:60).

மறுபடி[1] *maṟu-paḍi,* பெ.(n.) 1. விடை (நாஞ்.); answer, reply. 2. மற்றொருபடி; another copy.

[மறு→மறுபடி.]

மறுபடி[2] *maṟu-paḍi,* வி.எ.(adv.) மறுபடியும் பார்க்க; see *maṟu-paḍiyum.*

மறுபடியும் *maṟu-paḍiyum,* வி.எ.(adv.) மீளவும்; again.

மறுபத்தியம் *maṟu-pattiyam,* பெ.(n.) மருந்துண்டலை விட்டபின் உணவுக் கட்டுப்பாட்டையும் விட்டு, சில நாள் வரை அளவாக உட்கொள்ளும் உணவு (பைஷஜ.); light diet or regimen after a course of medicine.

[மறு + பத்தியம்.]

மறுபாடு *maṟu-pāḍu,* பெ.(n.) பின்பக்கம்; back the other side. *"மறுபாடுருவத் தைத்து" (ஈடு.5, 6, 7).*

[மறு + பாடு.]

மறுபாடுருவ *maṟu-pāḍuruva,* வி.எ.(adv.) நன்றாக; completely, well. *"மறுபாடுருவ வேத்தி" (ஈடு.2, 6, 3).*

[மறுபாடு→மறுபாடுருவ.]

மறுபாடுருவு-தல் *maṟu-pāḍuruvu-,* 7 செ.கு.வி.(v.i.) ஊடுருவிப் போதல்; to penetrate to the other side. *"மராமரங்களேழும் மறுபா டுருவும் படியாக" (ஈடு.2, 6, 9).*

[மறுபாடு→மறுபாடுருவு.]

மறுபாவி *maṟu-pāvi,* பெ.(n.) பகைவன் (வின்.); enemy.

[மறு + பாவி.]

மறுபிழைப்பு *maṟu-piḻaippu,* பெ.(n.) கடுநோய் முதலிய இடர்ப்பாட்டினின்று தப்பிப் பிழைக்கை (வின்.); narrow escape from series accident, recovery from serious illness, as re-birth.

[மறு + பிழைப்பு.]

மறுபிறப்பு *maṟu-piṟappu,* பெ.(n.) 1. இனி யுண்டாகப் போகும் பிறப்பு; future birth. *"மதுரையர் மன்னர் மறுபிறப்போட மறித்திடுமே" (திருவாச.36, 2).* 2. பழம் பிறப்பு; past birth. *"மன்னா நின்றன் மறபிறப் புணர்த்தி" (மணிமே.25, 223).*

[மறு + பிறப்பு.]

மறுபிறவி *maṟu-piṟavi,* பெ.(n.) 1. மறுபிறப்பு, 1 பார்க்க; see *maṟu-piṟappu, 1.* 2. புதுப் பிறப்பு (கிறித்.); new birth, regeneration.

[மறு + பிறவி.]

மறுபுலம் *maṟu-pulam,* பெ.(n.) பாலை நிலம் (பிங்.); desert tract.

[மறு + புலம்.]

மறுபுலிபாய்தல் *maṟu-puli-pāydal,* தொ.பெ. (vbl.n.) பகலில் புலியினின்றும் தப்பிய கால்நடை அன்றிரவே புலி பாய்வதாக எண்ணங் கொண்டு அந்த அச்சத்தால் இறக்கை (நாஞ்.); death of cattle due to terror in thinking that it was caught by the tiger from which it escaped during the day.

[மறு + புலி + பாய்தல்.]

மறுபுறமுகம் *maṟu-puṟa-mugam,* பெ.(n.) குரங்கு; monkey (சா.அக.).

மறுபேச்சு *maṟu-pēccu,* பெ.(n.) 1. மாற்றிக் கூறும் சொல் (வின்.); countermand; word that annuals or cancels. 2. தடுத்துரைக்கை; gainsaying. *மன்னன் பேச்சுக்கு மறு பேச்சில்லை (பழ.).* 3. மறுசொல் பார்க்க; see *maṟu-col. "நான் சொன்னதற்கு அவன் மறுபேச்சுப் பேசவில்லை" (உ.வ.).*

[மறு + பேச்சு.]

மறுபொருளுவமை *maṟu-poruḷ-uvamai,* பெ.(n.) ஓர் அணி வகை (தண்டி.30, உரை); a fiare of speech.

[மறுபொருள் + உவமை.]

மறுபோகம் *maṟu-pōgam,* பெ.(n.) ஆண்டின் இரண்டாமுறை விளைச்சல் (வின்.); second crop in the year.

[மறு + போகம்.]

மறுமணம் *maṟu-maṇam,* பெ.(n.) கணவன் இறந்தபின் மனைவியோ,, மனைவி இறந்த பின் கணவனோ மீண்டுஞ் செய்து கொள்ளும் திருமணம் (இக்.வ.); remarriage, as of a widow or widower.

[மறு + மணம்.]

மறுமணிப்பிள்ளை *maṟu-maṇi-p-piḷḷai,* பெ.(n.) கீரிப்பிள்ளை; mungoose (சா.அக.).



மறுமனசுபடு-தல் *maṟu-maṉašu-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) முன்னிருந்த எண்ணம் மாறுதல்; to change mind, to abandon one's decision. *"அவன் மறுமனபடுவதற்கு முன்னே எல்லை நடந்துகொண்டானாய்த்து" (திவ்.பெரியதி.6, 8, 1, உரை).*

[மறு + மனசு + படு-.]

மறுமாடி *maṟu-māḍi,* பெ.(n.) 1. வீட்டின் உத்தரமட்டத்துக்கு மேலுள்ள அடைப்புச் சுவர் (வின்.); gable of a house. 2. மாடிக்கு மேல் மாடி; second storey. *"வீட்டிற்கு மறுமாடி வைத்துக் கட்டியிருக்கிறான்" (உ.வ.).* 3. வரம்பு; ridge. 4. மலைப்பிளவு (யாழ்.அக.); cleft in a mountain.

[மறு + மாடி.]

மறுமாலைசூடுதல் *maṟu-mālai-šūḍudal,* பெ.(n.) அறுபதாமாண்டு நிறைவில் நடக்கும் மணவிழாச் சடங்கு (இ.வ.); marriage ceremony repeated on the sixtiath marriage day function.

[மறு + மாலை + சூடுதல்.]

மறுமாற்றம் *maṟu-māṟṟam,* பெ.(n.) 1. மறு சொல் பார்க்க; see *maṟu-šol. "மறுமாற்ற மற்றொருவர் கொடுப்பாரின்றி" (பெரியபு. திருஞான.474).* 2. கறிவகை (வின்.); curry.

தெ. மருமாட; க. மருமாடு.

[மறு + மாற்றம்.]

மறுமுகம் *maṟu-mugam,* பெ.(n.) 1. வேறு பக்கம் (வின்.); different direction. 2. புதிய (அந்நியன்) முகம்; face of a stranger. *"மறுமுகம் பார்த்தறியாதவன்" (உ.வ.).*

[மறு + முகம்.]

மறுமுட்டுப்பெறு-தல் *maṟu-muṭṭu-p-peṟu-,* 20 செ.கு.வி.(v.t.) வேறோரிடத்துப் பயன் பெறுதல்; to have a hold or advantage elsewhere. *"மறுமுட்டுப் பெறாதபடி உடைந்தோடும்" (ஈடு.1, 7, 11).*

[மறு + முட்டு + பெறு-,]

மறுமுள் *maṟumuḷ,* பெ.(n.) 1. பாலுண்ணி; wart (M.L.). 2. அம்மை முத்தின் மேல் உண்டாம் மறுமுத்து (வின்.); excrescence formed on pocks left by small pox, Lichen pilanis.

[மறு + முள்.]

மறுமுள்பாய்-தல் *maṟu-muḷ-pāy-,* 2 செ.கு.வி.(v.i.) அம்மையில் மறுமுள் உண்டாதல்; to form *maṟu-muḷ. "அவனுக்கு வந்த அம்மை மறுமுள் பாய்ந்திருக்கிறது" (உ.வ.).*

[மறுமுள் + பாய்-,]

மறுமுறை *maru-murai,* பெ.(n.) 1. மறுதடவை; next turn. 2. மறுபிறப்பு; next birth. *"நங்கேண்மை மறுமுறையானு மியைக" (பரிபா.பக்.173).*

[மறு + முறை.]

மறுமை *marumai,* பெ.(n.) 1. மறுபிறவி; the next birth opp. to immai. *"மன நலத்தினாகு மறுமை" (குறள், 459).* 2. மறுவுலகம் (சூடா.); the next world, svarga. *"இம்மையே மறுமைதானும் நல்கினை" (கம்பரா. உருக்காட்டு.71).*

[மறு→மறுமை.]

மறுமொழி *maru-moli,* பெ.(n.) 1. மறுசொல் பார்க்க; see *maru-šol. "மறுமொழி பெயர்த்தலாற்றாள்" (நற்.106).* 2. அனுப்புஞ் செய்தி (யாழ்ப்.); message.

[மறு + மொழி. மொழி = சொல்.]

மறுமொழிபேசாதாள் *maru-moli-pēšādāl,* பெ.(n.) சாயா மரம்; a tree which does not cast it shadow (சா.அக.).

மறுவல்[1] *maruval,* பெ.(n.) மறுவி, 1 (திவா.) பார்க்க; see *maruvi.*

[மறு→மறுபிறவி→மறுவி →மறுவல்.]

மறுவல்[2] *maruval,* வி.எ.(adv.) திரும்ப; again.

[மறு→மறுவல்.]

மறுவலிடு-தல் *maruval-idu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. திரும்புதல்; to return, come back. 2. சிறிது எஞ்சி நிற்றல்; to leave a trace. *"மல்லிகை... கமழ்தென்றல் மறுவ விடுகை யாலே" (ஈடு.10, 3, 5).*

[மறுவல் +இடு-,]

மறுவலும் *maruvalum,* வி.எ.(adv.) திரும்பவும், மீட்டும்; again, once more. *"மறுவலும் புல்லிக் கொண்டு" (சீவக.1052).*

[மறு→மறுவலும்.]

மறுவலை *maruvalai,* பெ.(n.) வலை வகை; a kind of fishing net.

மறுவ. இழுப்பு வலை.

[மறு + வலை.]

இஃது நண்டு பிடிக்கப் பயன்படும். தடச்சி என்னும் நூலாலானது. கண் 2 அங்குல அளவினது. வலையின் வாய்ப்பகுதியில் இரு பெரிய தடிகள் இணைக்கப்பட்டிருக்கும். வலை இறக்கிய பின்பு ஒரு மணி நேரம் கழித்து வலை கிளப்புவர் (க.ப.சொ.).

மறுவா-தல் (மறுவருதல்) *maruvā-,* 18 செ.கு.வி.(v.i.) மனஞ்சுழலுதல்; to be distressed, confused. *"அறியான் மறுவரற் பொழுதில்" (அகநா.22).*

[மறு + வா-.]

மறுவி *maruvi,* பெ.(n.) 1. மான்மணத்தி (தைலவ.தைல.); musk.

[மறு→மறுவி. முள்→(மள்)→மறு = மணம், வாசனை.]

மறுவிசை *maru-višai,* பெ.(n.) மறுபடியும் (வின்.) பார்க்க; see *maru-padiyum.*

[மறு + விசை.]

மறுவிவாகம் *maru-vivāgam,* பெ.(n.) மறுமணம் (இக்.வ.) பார்க்க; see *maru-manam.*

[மறு + Skt. விவாகம்.]

மறுவீடு *maṟu-vīḍu,* பெ.(n.) மரு, 4 பார்க்க; see *maṟu.*

[மறு + வீடு.]

மறுவு *maṟuvu,* பெ.(n.) மரு¹, 2 பார்க்க; see maṟu¹, 2.

[மரு→மறு→மறுவு.]

மறுவுத்தரம் *maṟuvu-t-taram,* பெ.(n.) மறுமொழி (வின்.) பார்க்க; see *maṟu-moḻi.*

[மறு + உத்தரம்.]

மறுவுலைபாய்ச்சு-தல் *maṟu-v-ulai-pāyccu-,*5 செ.குன்றாவி.(v.t.) வெந்த சோற்றைப் பத்திய வுணவுக்காக மறுமுறை கொதிக்க வைத்தல் (இ.வ.); to boil the rice over again, as for a patient.

[மறு + உலை + பாய்ச்சி.]

மறுவொத்தி *maṟu-v-otti,* பெ.(n.) மறு வொற்றி (கொ.வ.) பார்க்க; see *maṟu-v-oṟṟi.*

[மறு + ஒத்தி. ஒற்றி→ஒத்தி.]

மறுவொற்றி *maṟu-v-oṟṟi,* பெ.(n.) ஒருமுறை அடைமானம் வைத்து மீட்காத பொருளை இரண்டாமுறையும்அடைமானம் வைத்தல் (இ.வ.); second mortgage.

[மறு + ஒற்றி.]

மறுவோலை *maṟu-v-ōlai,* பெ.(n.) விடை மடல் (வின்.); reply in writing.

[மறு + ஓலை.]

மறை¹-தல் *maṟai-,* 2 செ.கு.வி.(v.i.) 1. ஒளிந்து கொள்ளுதல்; to be hidden, shrouded. *"புதன் மறைந்து வேட்டுவன் புட்சிமிழ்த்தன்று" (குறள், 274).* 2. தோன்றா தொழிதல்; to disappear, vanish, to become invisible, to recede, as from sight. *"ஞாயிறு குடமலை மறைய" (நற்.239).*

[முள்→மள்→மரு→மறு = குற்றம். மறுத்தல் = இல்லையென்று சொல்லால் மறைத்தல். மறு→மற. மறத்தல் = மனத்தில் மறையப் பெறுதல். மற→மறை (மு.தா.182).]

மறை²-தல் *maṟai-,*2 செ.குன்றாவி.(v.t.) 1. ஒளித்தல்; to hide, conceal, keep back. *"மறைப்பேன்மற் காமத்தை யானோ" (குறள், 1253).* 2. மூடுதல்; to cover, to shroud, to shelter. *"அற்ற மறைத்தலோ புல்லறிவு" (குறள், 846).* 3. தீது வாராமற் காத்தல்; to protect, as from harm or danger. *"குடும்பத்தைக் குற்றமறைப்பான்" (குறள், 1029).*

[மறு→மறை-, (வே.க.4:63)]

மறை³ *maṟai,* பெ.(n.) 1. மறைக்கை; concealment. *"வெயின் மறைக் கொண்ட" (புறநா.60).* 2. மந்தணம்; secret. *"புறப் படுத்தானாகு மறை" (குறள், 590).* 3. அவையாய்வு; consultation in council, as by kings. *"இராம னருமறைக்கு" (அகநா.70).* 4. மறைநூல்; the *vēdās* as secret. *"அளபிற் கோட லந்தணர் மறைத்தே" (தொல்.எழுத்து.102).* 5. சிற்றிலக்கியம்; the upanisads. *"வேதத்து மறை நீ" (பரிபா.3, 66).* 6. ஆகமம்; the Agamās, as sacred. *"மறைமுறை யுணர்ந்த வறிவின் கிழவரும்" (ஞானா.35).* 7. மந்திரம் (உரி.நி.); *mantram. "மதியொடு புணர்ந்த மறையினோர்க்கே" (ஞானா.37, 4).* 8. உபதேச பொருள்; esoteric teaching. *"அருமறை சோரு மறிவிலான்" (குறள், 847).*

9. களவுப் புணர்ச்சி (அகப்.); clandestine union of lovers. *"மறையலராகி மன்றத் தஃதே" (குறுந்.97).* 10. பெண்குறி; pudendum muliebre. *"அடியிலிருந்த மறை மாண்பை" (அருட்பா.i, இங்கித.90).* 11. உருக்கரந்த புனைவு; disguise. 12. புகலிடம் (பிங்.); refuge, shelter. *"வாசவன்... மறை புகாது" (குற்றா.தல. தக்கன். வேள்வி.44).* 13. சிறைக்கூடம்; prison, jail. *"மறையிடை வந்து" (கந்தபு. வீரவாகுசயந். 22).* 14. மறைவிடம் (சங்.அக.); place of concealment. 15. வஞ்சனை; fraud, enticing. *"மறையிற்றன் யாழ்கேட்ட மானை யருளாது" (கலித்.143).* 16. கேடகம் (அக.நி.); shield.

[முள்→மள்→மரு→மறு = உடம்பிலுள்ள கரிய புள்ளி. மள்→மரு→மறு = குற்றம். மறு→மற. மறத்தல்= மனத்தில் மறையப் பெறுதல். மறை = பொதுமக்களுக்கு மறைந்திருக்கும் செய்திகளையும், உண்மைகளையும் கொண்ட நூல் (மு.தா.182).]

மறை[4] *marai,* பெ.(n.) 1. எதிர்மறை; negative. *"தொழாநிர் என்பது மறையின்றித் தொழுது என்று பொருள் தருமேனும்" (மலைபடு. 231, உரை).* 2. விலக்குகை; abstinence, relinquishment. *"பொய்ம்மை புலாற்கண் மறையுடைமை" (ஏலாதி, 6).* 3. இரண்டாம் உழவு (யாழ்ப்.); second ploughing.

[மரு→மறு→மற→மறை (வே.க.76).]

மறை[5] *marai,* பெ.(n.) 1. புள்ளி; freckle, mole, spot. *"மறையேற்றின்" (கலித்.103).* 2. சிவப்புப் புள்ளிகளை யுடைய மாடு, ஆடு முதலியன (கொ.வ.); cattle or other animal with red spots. *மறையாடு (பே.வ.).*

[முள→மள்→மரு→மறு →மறை.]

மறை[6] *marai,* பெ.(n.) 1. மரை[1], 5, 6 பார்க்க; see *marai.* 2. சங்கின் முறுக்கு (யாழ்.அக.); spiral of conch.

தெ. மர.

[மறு→மறை.]

மறைக்காடு *marai-k-kādu,* பெ.(n.) இன்று வேதாரண்யம் என்ற பெயரில் உள்ள ஊரின் முன்னைப் பெயர்; the previous name of the present *Vēdāraṇyam.* *"முத்தம் கொழிக்கும் மறைக்காடு" (பெரியபு. திருநா.264). "மறைக் காட் டுறையு மணாளன் றானே" (தேவா.843, 1).*

[மறை + காடு.]

மரை எனில் மான். மறை எனில் சிவப்புப் புள்ளிகளையுடைய மாடு. மான், மாடுகளின் மிகுதியால் மரைக்காடு அல்லது மறைக்காடு என்றழைக்கப்பட்டிருந்தது. ஊர்பெயர்கள் வடமொழியாக்கத்தால் பொருளும் திரிபுற்று வேதத்துடன் தவறாகத் தொடர்புபடுத்தப் பட்டுள்ளது.

மறைக்காடு *marai-k-kādu,* பெ.(n.) மரைக்காடு பார்க்க; see Marai-k-kādu.

மறைக்கிட்டி *marai-k-kiṭṭi,* பெ.(n.) மறை முடுக்கி (இ.க்.வ.) பார்க்க; se *marai-muḍukki.*

[மறை + கிட்டி.]

மறைக்கிழவன் *marai-k-kiḻavaṉ,* பெ.(n.) மறைக்கோ (கூர்மபு.பிரகிருதி.18) பார்க்க; see *marai-k-kō.*

[மறை + கிழவன்.]

மறைக்கொடியோன் *marai-k-kodiyōn*, பெ.(n.) 1. அயன்; *Brahmān*. 2. பார்ப்பனன்; brahmin. 3. துரோணர் (சூடா.); *Drōnācarya*.

[மறை + கொடியோன்.]

மறைக்கோ *marai-k-kō*, பெ.(n.) அயன்; *Brahmān*. *"புத்தேளு மறைக்கோவும்" (காஞ்சிப்பு.கடவு.1).*

[மறை + கோ.]

மறைச்சி[1] *maraicci*, பெ.(n.) புள்ளியுள்ள பெண் விலங்கு (யாழ்ப்.); female of any spotted animal, as cow, bitch etc.

[மரு→மறு→மறை→மறைச்சி.]

மறைச்சி[2] *maraicci*, பெ.(n.) 1. பிராமணப் பெண்; brahmin woman. 2. துரும்பப் பெண்; woman of the lowest caste, washer woman of the Parayas.

[மறை→மறைச்சி.]

மறைச்சிரம் *maraicciram*, பெ.(n.) சிற்றிலக்கியம்; the upanisads. *"அருமறைச் சிரத்தின் மேலாம்" (பெரியபு.தில்லைவாழ்.2).*

[மறை →மறைச்சிரம்.]

மறைசை *maraišai*, பெ.(n.) மரைக்காடு பார்க்க; see *marai-k-kādu*.

[மறை→மறைசை.]

மறைசையந்தாதி *maraicai-y-andādi*, பெ.(n.) 18ஆம் நூற்றாண்டில் யாழ்ப் பாணத்துச் சின்னத்தம்பிப் புலவர் மறைசையிற் கோயில் கொண்ட சிவபெருமான் மீது இயற்றிய அந்தாதி நூல்; an *antāti*, poem on *Šivan* at maraicai by *Cinna-tambi-p-pulavar* of Jaffna, 18th c.

[மறைசை + அந்தாதி.]

மறைசொல் *marai-col*, பெ.(n.) மறைமொழி (உரி.நி.) பார்க்க; see *marai-moli*.

[மறை + சொல்.]

மறைஞானசம்பந்தசிவாசாரியார் *marai-ñāna-šambanda-šivā-cāriyār*, பெ.(n.) 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும் அருணந்தி சிவாசாரியாரின் சீடரும் உமாபதி சிவாசாரியரின் குருவுமான ஒரு சந்தான குரவர்; a *Šaiva ācārya* disciple of *Arunanti-šivācāriyar* and guru of *Umāpati-šivācāriyar* of 13th C. one of *Šantāna-muravar*(q.v).

மறைஞானசம்பந்தர் *maraiñāna-šambandar*, பெ.(n.) 16ஆம் நூற்றாண்டினரும் சைவ சமயநெறி சிவதருமோத்தரம் கமலாலய புராணம் முதலிய நூல்களி யற்றியவருமான ஆசிரியர்; author of *Šaiva-Šamayaneri, Šivataru-mōttaram, Kamalālaya-purānam* and other works of 16th C.

மறைத்தலைவி *marai-t-talaivi*, பெ.(n.) திருமகள் (பிங்.); Laxmi.

[மறை + தலைவி.]

மறைத்துமொழிகிளவி *maraittu-moli-kilavi*, பெ.(n.) இடக்கரடக்கல் (திவா.); euphemism.

[மறைத்துமொழி + கிளவி.]

மறைநீலி *marai-nili*, பெ.(n.) கொத்து மல்லி; seed of coraiander (சா.அக.).

மறைப்பில்லை *maṟai-p-pillai,* பெ.(n.) மறையாணியின் சுரை (இக்.வ.); nut of a screw.

மறைப்பு *maṟaippu,* பெ.(n.) 1. ஒளிப்பு; concealment/ obscuration. 2. நிரைச்சல்; screen, temporary enclosure.

[மறை→மறைப்பு.]

மறைப்புச்சுவர் *maṟaippu-c-cuvar,* பெ.(n.) வீட்டுக்குள் கட்டப்படும் தடுப்புச் சுவர் (இக்.வ.); curtain wall.

[மறைப்பு + சுவர்.]

மறைபுகல் *maṟai-pugal,* பெ.(n.) அடைக்கலம் புகல் (பிங்.); taking refuge.

[மறை + புகல்.]

மறைபொருள் *maṟai-poruḷ,* பெ.(n.) 1. ஒளிக்கத் தக்கது (சுக்கிரநீதி, 163); secret. 2. உட்கருத்து (வின்.); inner meaning. 3. அறியவியலாத மந்தணம் (வின்.); mystery. *"நாவ லந்தண ரருமறைப் பொருளே" (பரிபா.1, 13).*

[மறை + பொருள்.]

மறைமலையடிகள் *maṟai-malai-y-aḍigaḷ,* பெ.(n.) தனித்தமிழ் இயக்கத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த தமிழ் அறிஞர்; pioneer of puritan Tamil Scholar.

மறைமலையடிகளாரைப் பற்றி மொழி ஞாயிறு குறிப்பிட்ட குறிப்புகள் :

"தேனும் பாலும் போன்ற தூய தீந்தமிழ்ச் சொற்களால் உரைநடையுஞ் செய்யுளுமாகிய இருவடிவிலும் பல்துறை தழுவி ஐம்பதிற்கு மேற்பட்ட அருநூலியற்றி முதலிரு கழக நிலைக்குத் தமிழைப் புதுக்கி அதற்குப் புத்துயிரளித்தவர், மாநிலத்தில் மக்களுள்ளவரை மறையாப் புகழ்பெற்ற மறைமலையடிகளே" (வ.வ.முன். பக்.53).

உலக மொழிகள் (ஏறத்தாழ) மூவாயிரத்துள், ஒருபோதும் வழங்கா இலக்கியப் பெருமொழி யென்னும் வகையிற் சமற்கிருதமும், என்றுமுள்ள உலக முதல் உயர் தனிச் செம்மொழி யென்னும் வகையில் தமிழும், உலகப் பொதுக் கலவைப் பெருமொழி யென்னும் வகையில் ஆங்கிலமும், தலைசிறந்த மொழிகளாகும். இம் மூன்றும் ஒருங்கே, கைவந்தார் பலர் இருந்தாரேனும், அவரனைவருள்ளும், எவரெத்து (Everest) என்னும் வெள்ளி மலை போலுயர்ந்தும், அமேசான் (Amazon) என்னும் அமெரிக்க ஆறு போலகன்றும், அமைதி வாரியின் (Pacific Ocean) தென்னகழி போலாழ்ந்தும், பிறங்கித் தோன்றிய பெரும் புலமை வாய்ந்தவர் மறைமலையடிகளே யென்பது, மிகையாகாது.

சொல்வன்மை, உரைநடை வன்மையும், செய்யுள் வன்மையும் என இரு திறத்தது. அவ்விரு திறனும் உடையாரான அடிகள், நாவலரும், பாவலருமாகவும், நூலாசிரியர், நுவலாசிரியர், உரையாசிரியர், இதழாசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், பெயர்ப்பாசிரியர் முதலிய பல்வகை யாசிரியராகவுமிருந்ததொடு தலைசிறந்த ஆராய்ச்சியாளராகவும் விளங்கினமை நாடறிந்தது, உலகறிந்தது.

அடிகளார் ஆங்கிலப் புலமையும் பேச்சாற்றலும் பெற்றவர். தமிழர் மதம், மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை, சைவ சித்தாந்த ஞான போதம், வேளாளர் நாகரிகம், சாதி வேற்றுமையும் போலிச் சைவரும், கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா. பழந்தமிழ்க்

கொள்கையே சைவ சமயம், முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை முதலிய பல நூல்களில் ஆங்கில முகவுரை வரைந்ததோடு, 133 பக்கங் கொண்ட "The Saiva Siddhanta as a Philosophy of Practical Knowledge" என்னும் ஆங்கில நூலையும் வெளியிட்டுப் போந்தார். "Ancient and modern Tamil poets can Hindi be the lingua Franca of India" என்பனவும் அவரியற்றிய ஆங்கில நூல்களாகும்.

ஆங்கிலத்தினும் மிக மிகக் கடினமானது சமற்கிருதம். எழுத்துப் பெருக்கம் (51) ஒலிக் கடுமை, மூவெண், இலக்கணப்பால், பிரியா வேற்றுமையுருபு, புணர்ச்சி நெறிகளின் பல்வேறு விலக்கு, பெயர்களின் வேற்றுமைப்பாடும், வினைகளின் புடைபெயர்ச்சியும் பல்வேறு முறைப்படல், பேச்சு வழக்கின்மை, பன்மொழிச் சொற்கலப்பு, வேர் தெரியாச் சொற்சிதைவு முதலியன பொதுவாக மொழி வெறியரும் கடுவுழைப் பாராய்ச்சியாளருமன்றிப் பிறர் கற்க முடியாதவாறு சமற்கிருதத்தைக் கடினமாக்குங் கூறுகளாம். ஆயினும் அடிகள் அம்மொழியையும் அதன் இலக்கியத்தையும் அமைவுறக் கற்றுத் தேர்ந்தது வியக்கத் தக்கதே. அடிகளின் சமற்கிருதப் புலமை, காளிதாசனின் சாகுந்தல நாடகத் தெள்ளிய தமிழ் மொழி பெயர்ப்பு நூலாலும்; ஆரிய வேத நூற்கல்வி, சிவநெறி தமிழரதே என்று நிலைநாட்டும் வண்ணம் தம் மதம் பற்றிய நூல்களிலெல்லாம் வேத பிரமான உபநிடத இதிகாசப் புராணங்களினின்று எடுத்துக்காட்டும் சான்றுகளாலும், "தென்புலத்தார் யார்? என்பது போன்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளாலும் தெற்றெனத் தெரியலாகும். இதுகாறும் எவரும் அவற்றைப் பற்றிக் குறை கூறாமையும் இதனை உறுதிப்படுத்தும். பாவாணருக்கு வழிகாட்டியாக விளங்கி வேர்ச்சொல் ஆய்விற்கு வித்திட்டவர் மறைமலையடிகளே என்பதை பாவாணர் தம் நூல்களில் பலவிடங்களில் போற்றுகிறார்" (மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர் - 1977).

தமிழர் தொன்மையை உலகிற்கு அறிவித்தவர் கால்டுவெல் பெருமகனார்; தனித்தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமாற் கலைஞர்; செடியாகத் தழைக்கச் செய்தவர் நிறைதமிழ் மலையாம் மறைமலையடிகள்; நானே மரமாக வளர்த்து வருகிறேன் (பாவாணர்.). - (மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர் 1973).

மறைமுடிக்கி *maṟai-muḍikki,* பெ.(n.) மறை முடுக்கி பார்க்க; see *maṟai-muḍukki.*

[மறை + முடிக்கி. முடுக்கி→முடிக்கி (திரிபு).)]

மறைமுடுக்கி *maṟai-muḍukki,* பெ.(n.) வில்முடுக்கி; spanner, wrench.

[மறை + முடுக்கி.]

மறைமுடிவு *maṟai-muḍivu,* பெ.(n.) 1. வேதாந்தம்; *vēdānta,* as the conclusion of the *Vēdās.* 2. கடவுள் (யாழ்.அக.); God.

[மறை + முடிவு.]

மறைமுதல் *maṟai-mudal,* பெ.(n.) 1. கடவுள் (வின்.); God, as lord of the *Vēdās.* 2. சிவன் (திவா.); God *Śivaṉ.* 3. பிரணவம்; the mystic incantation 'om'. *"மறை முதற் கொரு வடிவமாகி" (கந்தபு. கடவுள் வாழ்த்து.4).*

[மறை + முதல்.]

மறைமுதல்வன் *maṟai-mudalvaṉ,* பெ.(n.) 1. மறைமுதல், 1 பார்க்க; see *maṟai-mudal.* 2. வேதம் ஓத வல்ல பிராமணன்; brahmin, as well versed in the Vēdās. *"மாமறை முதல்வ" (சிலப்.11: 58).*

[மறை + முதல்வன்.]

மறைமுதலி *maṟai-mudali,* பெ.(n.) 1. மறைமுதல், 1 (வின்.) பார்க்க; see *maṟai-mudal.* 2. மறைமுதல், 2 (சூடா.) பார்க்க; see *maṟai-mudal.*

[மறை + முதலி.]

மறைமூலம் *maṟai-mūlam,* பெ.(n.) குழந்தையின் உச்சிமென் படலம்; fontanelle. *"மறை மூலந் திறப்ப" (பெரியபு. பெருமிழலை. 10).*

[மறை + மூலம்.]

மறைமொழி *maṟai-moḻi,* பெ.(n.) 1. மந்திரம்; *Mandiram,* as secret word. *"மறைமொழி தானே மந்திரமென்ப" (தொல்.பொருள்.491).* 2. மறைத்துமொழி கிளவி (பிங்.) பார்க்க; see *maṟaittu-moḻi-kiḷavi.*

[மறை + மொழி.]

மறையவன் *maṟaiyavaṉ,* பெ.(n.) 1. மறையோன் பார்க்க; see *maṟaiyōṉ.* 2. முனிவன் (வின்.); sage. 3. துரும்பன் (யாழ்.அக.); man of lowest caste.

[மறை மறையவன்.]

மறையன் *maṟaiyaṉ,* பெ.(n.) மறை[5] (வின்.) பார்க்க; see *maṟai.*

[மறை →மறையன்.]

மறையாணி *maṟai-y-āṇi,* பெ.(n.) திருகாணி (இ.வ.); screw.

[மறை + ஆணி.]

மறையாதிக்குழைச்சாறு *maṟai-ādi-k-kuḻai-c-cāṟu,* பெ.(n.) பசளைச் சாறு; juice of pacalai (சா.அக.).

மறையான் *maṟaiyāṉ,* பெ.(n.) 1. அயன்; *Brahmaṉ.* *"செய்ய மறையானின் னுந்தியான்" (திவ்.இயற்.1, 28).* 2. மறைபதி பார்க்க; see *maṟai-padi.* *"தன்மறையானோடு வைகுமோ" (யசோதர. 3, 4, 1).*

[மறை →மறையன்→மறையான்.]

மறையிருகுளத்தோன் *maṟai-y-iru-kuḷattōṉ,* பெ.(n.) காய்ச்சிய நஞ்சு; a kind of prepared arsenic (சா.அக.).

மறையிலார் *maṟai-y-ilār,* பெ.(n.) இழிந்தோர் (வின்.); mean persons.

[மறை + இலார்.]

மறையிறை *maṟai-y-iṟai,* பெ.(n.) மறைவிடை (நன்.386) பார்க்க; see *maṟai-viḍai.*

[மறை + இறை. இறு→இறை. இறு = சொல்.]

மறையீறு *maṟai-y-īṟu,* பெ.(n.) மறைச்சிரம் பார்க்க; see *maṟai-c-ciram.* *"மறையீறி றறியா மறையோனே" (திருவாச.5, 85).*

[மறை + ஈறு.]

மறையோர்விந்து *maṟai-yōr-vindu,* பெ.(n.) வாலைச் சாறு; quick silver extracted from cinnabar by a special process (சா.அக.).

மறையோன் *maṟaiyōṉ,* பெ.(n.) 1. பிரம்மன் (அயன்) (திவா.); *Brahmaṉ.* 2. வியாழன் (திவா.); Jupiter, as the preceptor of the celestials. 3. பிராமணன்; *Brāhmiṉ.* *"மறையோ ராறே" (தொல்.பொ. 499).*

[மறை →மறையோன்.]

மறைவாணர் *maṟai-vāṇar,* பெ.(n.) பிராமணன்; brahmins. *"மறை வாணர் பலர் நின்று பெறவே" (கலிங்.268).*

[மறை + வாணர்.]

மறைவிடம் *marai-vidam,* பெ.(n.) 1. ஒளிப்பிடம்; hiding or lurking place. 2. வெளியிலிருந்து காணவியலாத இடம்; place hidden from view. 3. கழிப்பறை (இ.வ.); privy.

[மறைவு + இடம்.]

மறைவிடை *marai-vidai,* பெ.(n.) மறுத்துக் கூறும் விடை (நன்.386, உரை); negative answer.

[மறை + விடை. மறு →மறை.]

மறைவு *maraivu,* பெ.(n.) 1. மறைகை; vanishing, disappearance. 2. ஒளிப்பிடம்; covert, hidding place, den. 3. மந்தணம்; secret. 4. நிரைச்சல்; shelter, screen. 5. கோள்கள் ஒன்றாலொன்று மறைகை (வின்.); occultation.

[மறை → மறைவு.]

மன்[1] *man,* இடை.(part.) 1. ஓர் அசை நிலை; an expletive. *"ஆயிருதிணையி னிசைக்குமன்" (தொல்.சொல்.1).* 2. எதிர் காலங்காட்டும் இடைநிலை (தொல்.சொல்.1, சேனா. கீழ்க். குறிப்பு.) (சி.போ.பா.1, உரை); affix indicative of (a) future tense. 3. ஒழியிசைக் குறிப்பு; ellipsis. *"கூரியதோர் வாண்மன்" (தொல். சொல்.252, உரை).* 4. மிகுதிக் குறிப்பு; greatness, abundance. *"சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே" (புறநா.75).* 5. பிறிதொன்றாகைக் குறிப்பு; change or transformation. *"பண்டு காடுமனின்று கயல்பிறழும் வயலாயிற்று" (தொல்.சொல். 252, உரை).* 6. ஆக்கக் குறிப்பு; prosperity. *"திருநிலைஇய பெருமன்னெயில்" (பட்டினப். 291).* 7. கழிவுக் குறிப்பு; what is past and gone. *"சிறியகட் பெறினே யெமக்கியு மன்னே" (புறநா.235).* 8. நிலைபேற்றுக் குறிப்பு; permanence. *"மன்னே.... நிலையே றாகும்" (நன்.432).* 9. ஒரு பெயர் விகுதி; a personal suffix, as in *vaṭaman.*

OE. manig; **OHG.** manag; **Goth.** manags; **E.** many.

[முன் →மன் (வே.க.4:34).]

மன்[2] *man,* பெ.(n.) 1. அரசன்; king. *"மன்னுடை வேலினாய்" (சீவக.1200).* 2. அரச குலத்தார் (சத்திரியன்); *ksattriya,* warrior. *"மன்னாகி மறையவனாய்" (சேதுபு.சேதுபல.69).* 3. தலைவன், பெரியோன்; lord, chief. *"மன்னுயிர் நீத்தவேலின்" (பு.வெ.4, 23, கொளு.).* 4. கணவன்; husband. *"மன்னொடுங் கூடி.... வானகம் பெற்றனர்" (சிலப்.25:59).* 5. உத்திரட்டாதி (பிங்.); the 26th naksatra. 6. பெருமை (யாழ்.அக.); greatness. 7. இழிவு (சூடா.); meanness, inferiority.

[முன் →மன் = கருதும் ஆறாம் அறிவுள்ள மாந்தன் (வே.க.4:34).]

மன்[3] *man,* பெ.(n.) மந்திரம் (பிங்.); mantra.

மன்[4] *man,* பெ.(n.) எட்டு விசை கொண்ட நிறை; மணங்கு (நாஞ்.); maund.

மன்பது *manbadu,* பெ.(n.) மன்பதை, 1 பார்க்க; see *manbadai. "மன்பது மறுக்கத் துன்பங் களைவோன்" (பரிபா.15:52).*

[மன்பதை →மன்பது. முன் →மன் = கருதும் ஆறாம் அறிவுள்ள மாந்தன். மன்பது = மக்களினம்.]

மன்பதை *manbadai,* பெ.(n.) 1. மக்கட் பரப்பு (சூடா.); humanity. *"மன்பதை காக்கு நின்புரைமை" (புறநா.210). "மன்பதை*

காக்குந் தென்புலங் காவல்" (சிலப். வழக்குரை.73-77). 2. படை; army. *"மன்பதை பெயர" (பதிற்றுப்.73, 3).*

[முன் → மன் = கருதும் ஆறாம் அறிவுள்ள மாந்தன்.]

மன்மகளிர் *maṉ-magaḷir,* பெ.(n.) அரசனால் தலைக்கோல் பெற்ற ஆடல் மகளிர்; dancing girls distinguished by a royal grant of *talai-k-kōl. "மன்மகளிர் சென்னியராடல்" (பரிபா.7, 80).*

[மன் + மகளிர்.]

மன்ற[1] *maṉṟa,* வி.எ.(adv.) 1. தெளிவாக (தொல்.சொல்.267); clearly. 2. உறுதியாக; certainly. *"சென்று நின்றோர்க்குந் தோன்று மன்ற" (புறநா.114).* 3. மிக; abundantly, plentifully. *"மன்றவவுணர் வருத்திட" (கந்தபு.தேவ.போற்.6).*

மன்ற[2] *maṉṟa,* இடை.(part.) ஓர் அசைச் சொல் (யாழ்.அக.); an expletive.

மன்றகம் *maṉṟagam,* பெ.(n.) அவை; assembly. *"மன்றகத்தே நம்பி மாடமெடுத்தது" (திருமந்.148).*

[மன்று + அகம்.]

மன்றப்பொதியில் *maṉṟa-p-podiyil,* பெ.(n.) மன்றமாகிய பொதுவிடம்; public place. *"கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியில்" (சிலப்.பதிக.41).*

[மன்றம் + பொதியல்.]

மன்றம் *maṉṟam,* பெ.(n.) 1. அவை (பிங்.); hall, assembly. 2. முறைமன்றம்; court. *"அறனவின் மன்றத்துள்ளோர்" (திருவிளை. மாமனாக.35).* 3. ஊருக்கு நடுவாயுள்ள மரத்தடிப் பொதுவிடம்; meeting place under a tree, in a village. *"மன்றமும் பொதியிலும்" (திருமுரு.226).* 4. குதிரை களைப் பயிற்றும் செண்டுவெளி; open place used for riding horses. *"பேரிசை மூதூர் மன்றங் கண்டே" (புறநா.220, உரை).* 5. மக்கள் கூடும் வெளியிடம் (பிங்.); plain, open space. *"மன்றம்போழு மணிவுடை நெடுந்தேர்" (குறுந்.301).* 6. போர்க்களப் பரப்பின் நடுவிடம்; central place in a battlefield. *"செஞ்சுடர் கொண்ட குருதி மன்றத்து" (பதிற்றுப்.35, 8).* 7. பொன்னம்பலமுள்ள தில்லை; Chidambaram. 8. வீடு; house. *"வதியுஞ்சில மன்றமே" (இரகு.நகரப்.71).* 9. மாட்டுத்தொழு; cow shed. *"மன்றலை மன்றம்"(குறுந்.64).* 10. நெடுந் தெரு (சூடா.); long street. 11. மெய்ம்மை (பிங்.); truthfulness, honesty. 12. பேய்கள் கூடுமிடம்; assembly of devils. *"காய்பசிக்கடும்பேய் கணங்கொண் மீண்டு மாலமர் பெருஞ்சினை வாகை மன்றமும்" (மணிமே. 6:82-3).* 13. பறவைகள் கூடுமிடம்; place of birds assembling.

[முல் - பொருந்தற் கருத்துவேர். முல் → மல் = மிகுதல். மல் → மன் = மிகுதல், கூடுதல். மன் → மன்று = அம்பலம், கூடுமிடம். மன்று → மன்றம். பெருமைப் பொருள் பின்னொட்டு.மன் → மன்று → மன்றம்.]

மன்றல் *maṉṟal,* பெ.(n.) 1. நறுமணம் (பிங்.); scent, perfume. 2. திருமணம்; marriage. *"அந்தண ரருமறை மன்ற லெட்டினுள்" (இறை.1). "மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்" (தொல்.பொருள்.92).* 3. புணர்ச்சி; copulation. *"மன்றன் மாமயில்" (சீவக.2171).* 4. நெடுந்தெரு; long street. *"மன்றல்*

வருஞ்சேனை" (குற்றா.குற.73, 2). 5. பாலைப் பண் வகை (பிங்.); melody type of the desert tract.

[மன்→மன்று→மன்றல்.]

மன்றவாணன் *manra-vāṇan,* பெ.(n.) தில்லை யிலுள்ள சிவன்; *Śivan* as the lord of Chidambaram. *"மன்றவாணன் மலர் திருவருளால்" (தனிப்பா.).*

[மன்றம் + வாணன்.]

மன்றன் *manran,* பெ.(n.) சிவன்; *Śivan. "மன்றனு மாங்கே மலர்திரு வருளால்" (திருமந்.2277).*

[மன்று→மன்றன்.]

மன்றாட்டம் *manrāṭṭam,* பெ.(n.) 1. வேண்டு கோள் (வின்.); petition, request, entreaty, prayer. 2. தொல்லை (இ.வ.); trouble, brother.

தெ. மன்டாடமு.

[மன்று→மன்றாடு→மன்றாட்டம்.]

மன்றாட்டு *manrāṭṭu,* பெ.(n.) மன்றாட்டம், 1 (வின்.) பார்க்க; see *manrāṭṭam.*

[மன்றாட்டம்→மன்றாட்டு.]

மன்றாட்டுவேண்டுதல் *manrāṭṭu-vēṇḍudal,* தொ.பெ.(vbl.n.) குறையிரந்து வேண்டுகை; supplication and prayer R.C.

[மன்றாட்டு + வேண்டுதல்.]

மன்றாடி[1] *manrāḍi,* பெ.(n.) 1. சிவன்; *Śivan* as dancing in the open. *"என்று மன்றாடி சொல்ல" (திருவாலவா.52, 6) (உரி.நி.).* 2. பிறருக்காக வழக்கெடுத்துரைப்போன்; intermediary, one who pleads the cause of another. *"வானகத்து மன்றாடிகள் தாமே" (திவ்.பெரியாழ்.4, 5, 7).* 3. அவையில் வழக்காடுபவன்; one who brings a dispute before a court for adjudication. *"பழைய மன்டறாடி போலுமிவன்" (பெரியபு. தடுத்தாட்.48).* 4. சில சாதியார் பட்டப் பெயர்; tittle of certain castes of *Pallas, muttāns.* 5. ஆட்டிடையன் IS.I.I.iii.157ĭ 7); shepherd.

[மன்று + ஆடி.]

மன்றாடி[2] *manrāḍi,* பெ.(n.) இடையன்; shepherd. *"இவ்வூர் மன்றடி தெவடி திருவியலூரும் கொற்றன்" (S.I.I.Vol.XIX, No.7).*

மன்றாடு-தல் *manrāḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. குறையிரந்து வேண்டுதல்; to pray, entreat, implore, petition, supplicate. *"வஞ்சியை யாவி வெளவலை யென்றான் மன்றாடா" (சேதுபு.சோழ.39).* 2. வழக்காடுதல் (பெரியபு. தடுத்தாட்.48); to carry on litigation. 3. பிறருக்காக வழக்கெடுத் துரைத்தல்;to intercede, plead the cause of another. *"நித்யசூரிகள் காலி பத்துக்கும்...... மன்றாடுவர்களிறே" (திவ். பெரியாழ்.4, 5, 7, வியா.).*

[மன்று→மன்றாடு-.]

மன்றில் *manril,* பெ.(n.) வாயில்முற்றம்; courtyard of a house. *"செடிச்சிகள் மன்றிவிடைப் பலிதேர" (தேவா.991, 7).*

[மன்று→மன்றில்.]

மன்று[1] *manru,* பெ.(n.) 1. அவை; hall of assembly. 2. தில்லையிலுள்ள பொன்னவை; golden hall of Chidambaram.

"தென்றில்லை மன்றினு ளாடினை போற்று" (திருவாச.4, 92). 3. முறைமன்றம்; court of justice, arbitration court. *"நெடுமன்றில் வளனுண்டு" (கம்பரா. மூலபல.145).* 4. மாட்டுத்தொழு; cow-stall. *"ஆன்கணம்... மன்று நிறை புகுதர" (குறிஞ்சிப்.218).* 5. மாட்டுமந்தை; herd of cows. *"மன்றாடி சொல்ல" (திருவாலவா.52, 5, கீழ்க்குறிப்பு).* 6. மரத்தடியுள்ள திண்ணைப் பொதுவிடம்; raised platform under a tree for village meeting. *"மன்றும் பொதியினும்" (தஞ்சைவா.31).* 7. தோட்டத்தின் நடு; centre of a garden. *"மன்றிற் பையு டீரும்" (ஐங்குறு.246).* 8. நாற்சந்தி; junction of four roads or streets. *"மன்றிலே தன்னுடைய வடிவழகை முற்றூட்டாக அனுபவிப்பிக்கு மவனை" (ஈடு.3, 6, 3).* 9. நறுமணம்; fragrance. *"மன்றலர் செழுந்துதுளவு" (கம்பரா. திருவை.24).*

[மள்→மன்று (வே.க.4:31).]

மன்று²–தல் *manṟu-,*5 செ.குன்றாவி.(v.t.) தண்டஞ் செய்தல்; to fine, punish. *"அடிகெட மன்றிவிடல்" (பழ.288). "முட்டில் ஐங்கழஞ்சு பொன்மன்ற ஒட்டிக் கொடுத்தோம்"* (S.I.I.iii, 99).

[மன்→மன்று–,]

மன்றுபடு–தல் *manṟu-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) வெளிப்படுதல்; to become public. *"காம மறையிறந்து மன்றுபடும்" (குறள், 1138).*

[மன்றம் = வெளி. மன்று + படு–,]

மன்றுபாடு *manṟu-pāḍu,* பெ.(n.) அறப் பலகையின் முன் இறுக்கும் தண்டப் பொருள்; fine, penalty imposed by a court. *"இம் மன்றுபாடு இறுத்தும்...... முட்டாமை செலுத்தினோம்"* (S.I.I.iii, 95, 35).

[மன்று + பாடு.]

மன்றுளாடி *manṟuḷ-āḍi,* பெ.(n.) சிவன் (யாழ்.அக.); *Śivaṉ.*

[மன்று = அவை, அம்பலம், வெளி. மன்று →மன்றுள் + ஆடி.]

மன்னகுமரன் *manna-kumaraṉ,* பெ.(n.) அரசமகன்; kings's son, prince. *"மன்ன குமரனை வஞ்சம் புணர்த்த" (மணிமே.24, 1).*

[மன்னன் + குமரன்.]

மன்னர்பின்னர் *mannar-pinnar,* பெ.(n.) மன்னர்பின்னோர் (சூடா.) பார்க்க; see *mannar-pinnōr.*

[மன்னர் + பின்னர். பின்னோர் →பின்னர்.]

மன்னர்பின்னோர் *mannar-pinnōr,* பெ.(n.) வணிகர்; the *vaisya* caste, as being next to the *ksattriya. "மன்னர்பின்னோர்க் கென்னிலை யுணர்த்தி" (சிலப்.14 : 21).*

[மன்னர் + பின்னோர்.]

மன்னர்மன்னவன் *mannar-mannavaṉ,* பெ.(n.) 1. பேரரசன்; emperor, as king of kings. 2. துரியோதனன் (பிங்.); *Duryōdhanan.*

[மன்னர் + மன்னவன்.]

மன்னர்மன்னன் *mannar-mannaṉ,* பெ.(n.) மன்னர்மன்னவன் (வின்.) பார்க்க; see *mannar-mannavaṉ.*

[மன்னர் + மன்னன்.]

மன்னர்விழைச்சி *mannar-viḷaicci,* பெ.(n.) அரசன் நுகர்ச்சிக்குரியது (சிலப்.2 : 2, உரை); that which is fit for king's enjoyment.

[மன்னர் + விழைச்சி.]

மன்னல் *mannal,* பெ.(n.) 1. நிலைபேறு (பிங்.) (நாமதீப.607); permanence, stability, steadiness. 2. வலிமை; strength. 3. பெருமை; greatness. 4. உயர்ச்சி (நாமதீப.771); height. 5. விடாமுயற்சி; perseverance.

[மன் = நிலைபேறு. மன்→மன்னல்.]

மன்னவமுனிவன் *mannava-munivan,* பெ.(n.) அரச முனிவன்; royal sage. *"தேவி யொடு மாதவம் புரிந்த மன்னவமுனிவன்" (பெருங்.இலாவாண.15, 51).*

[மன்னவன் + முனிவன்.]

மன்னவன் *mannavan,* பெ.(n.) 1. மன்னன் பார்க்க; see *mannan. "முறை செய்து காப்பாற்று மன்னவன்" (குறள், 388).* 2. இந்திரன்; Indiran. *"மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்" (சிலப்.5 : 1, 73).*

[மன்→மன்னன்→மன்னவன் (வே.க.4:34).]

மன்னறம் *mannaram,* பெ.(n.) அரச அறம்; duties of sovereignty. *"மன்னறஞ் சிறிது நோக்கலை" (கம்பரா.பிணிவீ.92).*

[மன்னன் + அறம்.]

மன்னன் *mannan,* பெ.(n.) 1. அரசன்; king. *"மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்" (புறநா.186).* 2. எப்பொருட்கு மிறைவன் (பிங்.); the universal lord. 3. தலைவன்; chief. *"சேனை மன்னர்கள்" (கந்தபு. சூர. இரண்டநாள்யுத்.47).* 4. கணவன்; husband. *"மங்கை யுன்றன் மன்னனுய்ந்து வந்தது" (பிரமோத்.111).* 5. ஆடவன் (வின்.); man in his prime, between the ages of 32 and 48. 6. 26வது விண்மீன் (பிங்.); the 26th naksatra.

[மன்→மன்னன் (வே.க.4:34).]

மன்னனார் *mannanār,* பெ.(n.) திருமால் *(S.I.I.iii.87);* Tirumāḷ.

மன்னாகுடிச்செட்டி *mannā-kuḍi-c-ceṭṭi,* பெ.(n.) வணிகக்குடி (E.T.ii.92); a merchant caste.

மன்னாசாதிமரம் *mannā-cādi-maram,* பெ.(n.) ஒதுக்கப்பட்ட காட்டிலுள்ள மரம்; tree in a reserved forest (C.G.).

மன்னாட்டு *mannāṭṭu,* பெ.(n.) மன்றாட்டு (வின்.) பார்க்க; see *manrāṭṭu.*

[மன்றாட்டு→மன்னாட்டு.]

மன்னாடி *mannāḍi,* பெ.(n.) 1. மலைநாட்டு சிற்றூர்த் தலைவன்; headman of a hill village. 2. பழனிப் பகுதியிலுள்ள ஒரு மலைச்சாதி; the kuvvava caste of the Palani hills. 3. மன்றாடி[4] பார்க்க; see *manrāḍi.*

[மன்→மன்றாடி.]

மன்னாடு-தல் *mannāḍu-,* 5 செ.கு.வி.(v.i.) மன்றாடு-, (இ.வ.) பார்க்க; see *manrāḍu.*

[மன்றாடு→மன்னாடு.]

மன்னாப்புக்குற்றவாளி *mannāppu-k-kurravāḷi,* பெ.(n.) அரசால் மன்னிப்புப் பெற்றுச் சாட்சி கூறும் குற்றவாளி; approver, accused who has been tendered a pardon.

[மன்னாப்பு + குற்றவாளி. மன்னிப்பு → மன்னாப்பு (கொ.வ.).]

மன்னார் *mannār,* பெ.(n.) பகைவர் (சூடா.); enemies, foes.

[முன் → மன். மன்னுதல் = பொருந்துதல். மன் → மன்னார் = பகைவர்.]

மன்னார்சாமி *mannār-šāmi,* பெ.(n.) 1. சிற்றூர்த் தெய்வம் (இ.வ.); a village deity. 2. அரசனுருக் கொண்ட சிவ வடிவம் (இ.வ.); *Šivān* in the form of a king.

[மன்னார் + சாமி.]

மன்னாவுலகம் *mannā-v-ulagam,* பெ.(n.) துறக்கம்; svarga. *"மன்னாவுலக மறுத்தோய் நீ" (சீவக.1243).*

[முன் → மன் = பொருந்துதல்., நிலைபெறுதல். மன் → மன்னா. 'ஆ' எதிர்மறை இடைநிலை. மன்னா + உலகம்.]

மன்னான் *mannān,* பெ.(n.) திருவிதாங்கூர்ச் சீமையில் தமிழ் பேசும் ஒரு மலைச்சாதி (E.T.iv.452); a Tamil - speaking hill tribe fo Travancore.

மன்னி-த்தல் *manni,* 4 செ.குன்றாவி.(v.t.) குற்றத்தைப் பொறுத்தல்; to forgive, pardon. *"கொடியேன் குற்றமெலா மன்னித்தருளி" (அருட்பா.)*

மன்னிப்பு *mannippu,* பெ.(n.) குற்றத்தைப் பொறுக்கை (இ.வ.); pardon, forgiveness.

மன்னியர் *manniyar,* பெ.(n.) மதிக்கத் தக்கவர்; exteemed, worthy person. *"பல மன்னியர் மண்டலிகர்" (உத்தரரா. திருவோலக்.11).*

[முன் → மன். மன்னுதல் = பொருந்துதல். மன் → மன்னியர்.]

மன்னியை *manniyai,* பெ.(n.) 1. பிடர் நரம்பு; nerve in the nape of the neck. 2. விசை நரம்பு; vital nerve.

மன்னிறைதருதல் *mannirai-tarudal,* பெ.(n.) வேளாண் மாந்தரியல்புகளு ளொன்றான அரசனுக்குரிய வரிப் பொருளைத் தருகை (திவா.); paying taxes due to the king, a characteristic of the *Vēlālas.*

[மன் + இறை + தருதல்.]

மன்னினை *manninai,* பெ.(n.) வரித் தள்ளுபடி; remission of tax. *"வரி மன்னினைக் குடி".*

மன்னு¹-தல் *mannu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நிலை பெறுதல்; to be permanent, to endure. *"மன்னர்க்கு மன்னுதல் செங்கோண்மை" (குறள், 556).* 2. தங்குதல்; to remain long, to stay. *"உத்திரை வயிற்றின் மன்னிய குழவி" (பாகவத.1, பரிட்சத்துவின்றோ.1).* 3. பொருந்துதல்; to agree. *"மன்ன சொகினம்" (பு.வெ.10, 11).* 4. விடாது முயலுதல் (வின்.); to persevere. 5. உறுதியாய் நிற்றல் (வின்.); to be steady. 6. மிகுதல்; to abound. *"மன்னிய வேதந்தரும்" (ஆசாரக்.96).*

L. manere = stay. L. remanere; E. remain.

[முல் → மல் → மன் → மன்னு-, (வே.க.4:31).]

மன்னு²-தல் *mannu,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. அடுத்தல்; to go near, approach. 2. ஆடையை தூக்கிப் பிடித்துக் கொள்ளுதல் (இ.வ.); to pull or tuck up one's clothes, as in crossing a river. *சீலையை மன்னிக்கொள் (உ.வ.).*

மன்னும்[1] *mannum,* வி.எ.(adv.) பெரும்பான்மை யையும் (திருக்கோ.131, உரை); probably, exceedingly.

[மன் →மன்னும்.]

மன்னும்[2] *mannum,* இடை.(part.) ஓரிடைச் சொல்; an expletive. *"காதலார் பெயர் மன்னும்" (சிலப்.மங்கலவா.29).*

மன்னுமான் *mannu-māṉ,* பெ.(n.) கடவுள் (வின்.); god, as the eternal being.

[மன்னு + மான்.]

மன்னுயிர் *mannuyir,* பெ.(n.) 1. மாந்தவினம்; humanity. *"நின்னளந் தறிதன் மன்னுயிர்க் கருமையின்" (திருமுரு.278).* 2. விலங்கினம் (வின்.); animal life. 3. ஆதன் (வின்.);soul.

[மன் + உயிர்.]

மன்னுயிர்முதல்வன் *mannuyir-mudalvaṉ,* பெ.(n.) கடவுள்; god.

[மன்னுயிர் + முதல்வன்.]

மன்னுலகம் *mannulagam,* பெ.(n.) மன்னுலகு பார்க்க (வின்.); see *mannulagu.*

[மன் + உலகம்.]

மன்னுலகு *mannulagu,* பெ.(n.) (பிங்.) துறக்கம்; svarga.

[மன் + உலகு.]

மன்னுறுதொழில் *mannuṟu-toḻil,* பெ.(n.) வீரன் அரசன் கட்டளை பெற்றுப் பகைவரின் ஆநிரை கவர்தலைக் கூறும் புறத்துறை (பு.வெ.1, 1); theme describing the capture of enemies cows by kings soldiers under his orders, dist. fr. *taṉ-ṉ-uṟu-toḻil.*

[மன்னுறு + தொழில்.]

மன்னெச்சி *mannecci,* பெ.(n.) 1. சினக் குறிப்பு; gruff, surly, pouting countenance. 2. மனத்தொல்லை (யாழ். அக.); mental trouble.

மன்னை[1] *mannai,* பெ.(n.) மன்னைக் காஞ்சி (தொல்.பொருள்.79) பார்க்க; see *mannai-k-kāñji.*

[மன்னைக்காஞ்சி→மன்னை (குறுக்கம்).]

மன்னை[2] *mannai,* பெ.(n.) 1. தொண்டை; throat. *துவர்ப்புச் சுவை மன்னையைப் பிடிக்கிறது (பே.வ.).* 2. கதுப்பு (யாழ்.அக.); cheek.

மன்னை[3] *mannai,* பெ.(n.) சினம் (யாழ்ப்.); displeasure.

மன்னைக்கட்டி *mannai-k-kaṭṭi,* பெ.(n.) பொன்னுக்கு வீங்கி என்னும் நோய்; mumps.

[மன்னை + கட்டி.]

மன்னைக்காஞ்சி *mannai-k-kāñji,* பெ.(n.) இறந்தவனைப் பற்றிச் சிறப்பித்து ஏனையோர் இரங்கிக் கூறும் புறத்துறை (தொல். பொருள்.79, உரை); theme describing the excellence of the qualities of a deceased person and mourning his loss.

[மன்னை + காஞ்சி.]

மன்னைப்பிடி[1] *mannai-p-piḍi,* பெ.(n.) தொண்டையை இறுகப் பிடிக்கை; seizing by the throat. *"மண்டிப்பொரு விசயன் மன்னைப் பிடி பிடிக்க" (தேவை.80).*

[மன்னை + பிடி.]

மன்னைப்பிடி²–த்தல் *mannai-p-piḍi-,* 4 செ.கு.வி.(v.t.) 1. தொண்டையைப் பிடித்தல்; to seize one by the throat. 2. ஒருவனைத் தாங்கிக் கேட்டுக் கொள்ளுதல் (இ.வ.); to beseech a person, as by holding him by his cheek.

[மன்னை + பிடி–,]

மன¹ *mana,* வி.எ.(adv.) மிகவும்; exceedingly. *"அஃதவல் மன்று மன" (கலித்.108).*

மன² *mana,* இடை.(part.) வினைமுற்று வினையெச்சங்கட்கு இறுதியாக வரும் இடைச்சொல் (தொல்.எழுத்து.210); affix to a participle or finite verb.

மனக்கசப்பு *mana-k-kacappu,* பெ.(n.) வெறுப்பு (கொ.வ.); rancour, hatred, bitterness of mind.

[மனம் + கசப்பு.]

மனக்கசிவு *mana-k-kacivu,* பெ.(n.) மனவுருக்கம் (இ.வ.) பார்க்க; see *mana-v-urukkam.*

[மனம் + கசிவு.]

மனக்கடினம் *mana-k-kaḍinam,* பெ.(n.) நெஞ்சழுத்தம் (வின்.); strenness, handness of heart.

[மனம் + கடினம்.]

மனக்கடுப்பு *mana-k-kaḍuppu,* பெ.(n.) உட்சினம்; indignation, resentment. *"சீற்றவெந் தீயினான் மனக் கடுப்பினன்" (கம்பரா.சினைகண்டு.3).*

[மனம் + கடுப்பு.]

மனக்கண் *mana-k-kaṇ,* பெ.(n.) மனமாகிய கண் (வின்.); mind's eye, mental vision.

[மனம் + கண்.]

மனக்கயக்கம் *mana-k-kayakkam,* பெ.(n.) மனத்துயர் (யாழ்.அக.) பார்க்க; see *mana-t-tuyar.*

[மனம் + கயக்கம். கய–த்தல் → கயக்கும்.]

மனக்கயம் *mana-k-kayam,* பெ.(n.) முசுறுப் புல்; a kind of grass (சா.அக.).

மனக்கரு *mana-k-karu,* பெ.(n.) மனத்தின் மூலம்; the origin of mind (சா.அக.).

மனக்கருவி *mana-k-karuvi,* பெ.(n.) மனத்தின் வலு; intellectual faculty (சா.அக.).

[மனம் + கருவி.]

மனக்கலக்கம் *mana-k-kalakkam,* பெ.(n.) மனந்தடுமாறுகை (வின்.); perturbation, agitation of mind.

[மனம் + கலக்கம்.]

மனக்கவலை *mana-k-kavalai,* பெ.(n.) ஒன்றைப் பற்றி மனத்திலுண்டாம் கவலை; anxiety, care. *"மனக்கவலை மாற்றலரிது" (குறள், 7).*

[மனம் + கவலை.]

மனக்கவற்சி *mana-k-kavaṟci,* பெ.(n.) மனக்கவலை பார்க்க; see *mana-k-kavalai. "மனக் கவற்சியை யுடைய பெண்டிர்" (மதுரைக்.166, உரை).*

[மனம் + கவற்சி. முன் → மன் → மனம். கவல் = பிளவு, வருத்தம். கவல் + சி = கவற்சி. 'சி' பண்புப் பெயரீறு.]

மனக்களிப்பு *maṉa-k-kaḷippu,* பெ.(n.) அகமகிழ்ச்சி (வின்.); elation of spirits, heart - felt joy.

[மனம் + களிப்பு. முன் →மன்→மனம். களி = மகிழ்ச்சி. களி + பு = களிப்பு.]

மனக்கறுப்பு *maṉa-k-kaṟuppu,* பெ.(n.) பகை (வின்.); hatred, enmity.

[மனம் + கறுப்பு. முன்→மன்→மனம். கல்→கர்→கரு→கறு. கறு→கறுப்பு = கருமை, சினம், குற்றம்.]

மனக்கனிவு *maṉa-k-kaṉivu,* பெ.(n.) மனவுருக்கம் பார்க்க; see *maṉa-v-urukkam.*

[மனம் + கனிவு. முன்→மன்→மனம்.கனி→கனிவு.]

மனக்காட்சி *maṉa-k-kāṭci,* பெ.(n.) மனத்தால் உன்னும் காட்சி; mind perception. *"மனாதிகளினாற் காண்டன் மனக்காட்சி" (தத்துவப்.2).*

[மனம் + காட்சி.]

மனக்காய்ச்சல் *maṉa-k-kāyccal,* பெ.(n.) மனவெரிச்சல் (யாழ்.அக.) பார்க்க; see *maṉa-v-ericcal.*

[மனம் + காய்ச்சல்.]

மனக்காவல் *maṉa-k-kāval,* பெ.(n.) கற்பினைக் காக்கும் மனநிறை; strength of mind, as the guard of chastity. *"கற்புக்கு மதிட் காவலா, மனக்காவலா" (பழ.).*

[மனம் + காவல்.]

மனக்கிடக்கை *maṉa-k-kiḍakkai,* பெ.(n.) உள்ளக் கருத்து (வின்.); idea, inclination, thought.

[மனம் + கிடக்கை.]

மனக்கிடை *maṉa-k-kiḍai,* பெ.(n.) மனக் கிடக்கை (வின்.) பார்க்க; see *maṉa-k-kiḍakkai.*

[மனம் + கிடை.]

மனக்கிளர்ச்சி *maṉa-k-kiḷarcci,* பெ.(n.) உள்ளக் கிளர்ச்சி; mental emotion.

[மனம் + கிளர்ச்சி.]

மனக்குத்து *maṉa-k-kuttu,* பெ.(n.) மனத் துயர் (யாழ்.அக.); பார்க்க; see *maṉa-t-tuyar.*

[மனம் + குத்து.]

மனக்குரங்கு *maṉa-k-kuraṅgu,* பெ.(n.) மனம்போன போக்கின்படி செய்யத்தூண்டும் தன்மை; a state of mind which is not firm but goes in many diverse ways.

[மனம் + குரங்கு.]

மனக்குருடு *maṉa-k-kuruḍu,* பெ.(n.) அறிவின்மை (வின்.); mental blindness.

[மனம் + குருடு.]

மனக்குலைவு *maṉa-k-kulaivu,* பெ.(n.) மனத்தடுமாற்றம்; perturbation of mind.

[மனம் + குலைவு.]

மனக்குவிவு *maṉa-k-kuvivu,* பெ.(n.) 1. மனம் ஒருப்படல்; unity of mind. 2. மனதின் ஒருமை; concentration or oneness of mind.

[மனம் + குவிவு.]

மனக்குழப்பம்[1] *mana-k-kulappam,* பெ.(n.) 1. மனத் தெளிவின்மை; confusion of mind. 2. ஒருமிப்பின்மை; diversion of mind.

[மனம் + குழப்பம்.]

மனக்குழப்பம்[2] *mana-k-kulappam,* பெ.(n.) மனக்கலக்கம் (கொ.வ.) பார்க்க; see *mana-k-kalakkam.*

[மனம் + குழப்பம்.]

மனக்குள்ளம் *mana-k-kullam,* பெ.(n.) 1. தந்திரம்; trick. 2. வஞ்சகம்; deceit.

[மனம் + குள்ளம்.]

மனக்குறிப்பு *mana-k-kurippu,* பெ.(n.) 1. உட்கருத்து; idea, intention. *"நின் மனக்குறிப்பை நின் முகந்தானே காட்டிக் கொடாநிற்கும்" (கள.95, உரை).* 2. மனத் திட்டம், 1 பார்க்க; see *mana-t-tittam.*

[மனம் + குறிப்பு.]

மனக்குறை *mana-k-kurai,* பெ.(n.) 1. வருத்தம்; grief. *"மனக்குறையைச் சகியே சொன்னேன்" (தனிப்பா.1, 326, 24).* 2. பொந்திகையின்மை (வின்.); dissatisfac tion, discontent, unbrage.

[மனம் + குறை.]

மனக்கூர்மை *mana-k-kūrmai,* பெ.(n.) கூர்த்த அறிவு (யாழ்.அக.); sagacity, acumen.

[மனம் + கூர்மை.]

மனக்கொதி *mana-k-kodi,* பெ.(n.) மன வெரிச்சல் (யாழ்.அக.) பார்க்க; see *mana-v-ericcal.*

[மனம் + கொதி.]

மனக்கொதிப்பு *mana-k-kodippu,* பெ.(n.) சினம்; anger.

[மனம் + கொதிப்பு.]

மனக்கொள்(ளு)-தல் *mana-k-kol-,* 16 செ.கு.வி.(v.i.) நன்கறிதல்; to understand, to realise. *"இதனை மனக் கொணீ" (கம்பரா.சூளை.29).*

[மனம் + கொள்-.]

மனக்கோட்டம் *mana-k-kōttam,* பெ.(n.) 1. அறிவின் கோணல்; crookednes of mind. *"மாந்தர் மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு " (நன்.25).* 2. அழுக்காறு (பிங்.); envy, jealousy.

[மனம் + கோட்டம்.]

மனக்கோட்டரவு *mana-k-kōttaravu,* பெ.(n.) துணிவுக் குறைவு (வின்.); lowness of spirits.

[மனக்கோட்டம் + அரவு.]

மனக்கோட்டை[1] *mana-k-kōttai,* பெ.(n.) புலவி நீட்டம்; long sulks. *"அழிந்த மனக் கோட்டையர்" (பரிபா.10, 57).*

[மனம் + கோட்டை.]

மனக்கோட்டை[2] *mana-k-kōttai,* பெ.(n.) வீணெண்ணம் (கொ.வ.); building castles in the air, vain imaginings. *"அருப்ப மழிப்ப வழிந்த மனக் கோட்டையர்" (பரிபா.10:57).*

[மனம் + கோட்டை.]

மனக்கோண் *mana-k-kōn,* பெ.(n.) அழுக்காறு (நாமதீப.615); envy.

[மனம் + கோண். மன்→மனம். கோணல் →கோண்.]

மனக்கோழை *mana-k-kōlai,* பெ.(n.) துணிவற்றவ–ன்–ள்; coward. *"எதிரி வரினோடிப் பதுங்கிடு மனக்கோழை" (அறப்.சத.12).*

[மனம் + கோழை.]

மனக்கோள் *mana-k-kōl,* பெ.(n.) மனக்குறிப்பு பார்க்க; see *mana-k-kurippu. "மனக் கோளினக்கென வடிவு வேறிலையே" (பரிபா.4, 56).*

[மனம் + கோள்.]

மனக்கோளாறு *mana-k-kōlāru,* பெ.(n.) மனக்கேடு; mental disorder.

[மனம் + கோளாறு.]

மனங்கசி–தல் *manaṅ-kaši-,* 2 செ.கு.வி. (v.i.) மனமிறங்குதல்; to melt, as the heart, to be tender.

[மனம் + கசி–,]

மனங்கருகு–தல் *manaṅ-karugu-,* 5 செ.கு.வி. (v.i.) வெறுப்படைதல் (வின்.); to be displeased.

[மனம் + கருகு–,]

மனங்கரைதல் *manaṅ-karai-,* பெ.(n.) 1. நெஞ்சிளகுகை; to melt, as the heart. 2. பின்னிரங்குகை (வின்.); to relent. 3. துயரப்படுகை (யாழ்.அக.); to be sorry.

[மனம் + கரை.]

மனங்கனி–தல் *manaṅ-kani-,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. அறிவு முதிர்ச்சி; maturity of mind. 2. சினந்தணிதல்; changing from angry. 3. இரக்கங் கொள்ளுதல்; to have sympathy.

[மனம் + கனி–,]

மனங்கு *manaṅgu,* பெ.(n.) தோட்பட்டை (யாழ்.அக.); shoulder blade.

மனங்குத்துதல் *manaṅ-kuttudal,* பெ.(n.) தன் குற்றம் பற்றி மனத்தில் தோன்றும் கழிவிரக்கம் (வின்.), குற்றவுணர்வு; remorse, compunction of mind, prick of conscience, guilty.

[மனம் + குத்துதல்.]

மனங்குவி–தல் *manaṅ-kuvi-,* 2 செ.கு.வி. (v.i.) 1. மனவமைதி கொள்ளுதல் (யாழ்.அக.); to attain peace of mind or tranquillity. 2. மனமொடுங்குதல்; to be depressed in spirits. *"நின்னைக் கண்டு மனங்குவிந்த என்னுடைய" (கலித்.118, உரை).*

[மனம் + குவி–,]

மனங்குழை–தல் *manaṅ-kulai-,* 2 செ. குன்றாவி. (v.t.) மனமிளகுதல்; to melt, as the heart.

[மனம் + குழை–,]

மனங்குறாவு–தல் *manaṅ-kurāvu-,* 5 செ.கு.வி. (v.i.) வெறுப்படைதல் (வின்.); to be piqued or dissatisfied, to take umbrage.

[மனம் + குறாவு–,]

மனங்குன்று–தல் *manaṅ-kunru-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. மனம் ஒடுங்குதல்; converging of mind. 2. மனத் தளர்ச்சி; dejection of mind.

[மனம் + குன்று–,]

மனங்கூசு–தல் *manaṅ-kūšu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மனம் பின்னடைதல்; to be shy,

diffident. 2. ஒரு செயலைச் செய்ய தயக்கம் காட்டுதல்; repugnance of action.

[மனம் + கூசு–,]

மனங்கூம்பு–தல் *manaṅ-kūmbu-*,5 செ.கு.வி. (v.i.) 1. ஊக்கங் குன்றுதல்; to be weary or dejected. 2. மனங்குவி–, 1 (யாழ்.அக.) பார்க்க; see *manaṅ-kuvi.*

[மனம் + கூம்பு–,]

மனங்கொதி–த்தல் *manaṅ-kodi-*, 4 செ.கு.வி.(v.i.) 1. சினங் கொள்ளுதல்; to fret with anger. 2. துயருறுதல்; to grieve. 3. பேராவல் கொள்ளுதல்; to yearn.

[மனம் + கொதி–,]

மனங்கொள்(ளு)–தல் *manaṅ-koḷ-*, 7 செ.குன்றாவி.(v.t.) 1. மனத்திற் கொள்ளுதல்; to will. 2. விரும்புதல்; to desire.

[மனம் + கொள்–,]

மனங்கோணு–தல் *manaṅ-kōṇu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. மனம் மாறுதல்; to be changed in mind. *"மற்றவர் மனங்கோணாதவாறு நடந்து கொள்ள வேண்டும்" (உ.வ.).* 2. வெறுப்படைதல்; to be offended, to be discontented, to be cross or vexed. 3. சினங் கொள்ளுதல் (இ.வ.); to be angry.

[மனம் + கோணு–தல்,]

மனச்சஞ்சலம் *mana-c-cañcalam*, பெ.(n.) மனக்குழப்பம் (வின்.); mental worry, wavering of mind.

[மனம் + Skt. சஞ்சலம்.]

மனச்சலனம் *mana-c-calanam*, பெ.(n.) மன அமைதியின்மை; unrest of mind.

[மனம் + Skt. சலனம்.]

மனச்சலிப்பு *mana-c-calippu*, பெ.(n.) 1. வெறுப்பு; vexation, annoyance, displeasure. 2. துயரம் (வின்.); grief.

[மனம் + சலிப்பு.]

மனச்சாட்சி *mana-c-cāṭci*, பெ.(n.) மனச்சான்று பார்க்க; see *mana-c-cāṉṟu.*

[மனம் + Skt. சாட்சி.]

மனச்சாய்ப்பு *mana-c-cāyppu*, பெ.(n.) மனச்சாய்வு பார்க்க; see *mana-c-cāyvu.*

[மனம் + சாய்ப்பு.]

மனச்சாய்வு *mana-c-cāyvu*, பெ.(n.) 1. மனப்போக்கு பார்க்க; see *mana-p-pōkku.* 2. ஒரு தலைச்சார்பு; partiality, prejudice.

[மனம் + சாய்வு.]

மனச்சார்பு *mana-c-cārbu*, பெ.(n.) 1. மனப்பற்று; attachment. 2. மனச்சாய்வு,1 (வின்.) பார்க்க; see *mana-c-cāyvu.*

[மனம் + சார்பு.]

மனச்சான்று *mana-c-cāṉṟu*, பெ.(n.) சரியா, தவறா என்று முடிவு கொள்ளும் உள் மனம்; conscience.

[மனம் + சான்று.]

மனச்சிலை *mana-c-cilai*, பெ.(n.) காரமும் கசப்பும் கலந்த சுவை; mixture of pungent and bitter taste (சா.அக.).

[மனம் + சிலை.]

மனச்செருக்கு *mana-c-cerukku,* பெ.(n.) 1. திமிர்; haughtiness. 2. மனக்களிப்பு பார்க்க; see *mana-k-kalippu.* *"மனச் செருக்கினை யுடைய குதிரை" (கலித்.75, உரை).*

[மனம் + செருக்கு.]

மனச்சோர்வு[1] *mana-c-cōrvu,* பெ.(n.) மனத்தளர்ச்சி; mental langour.

[மனம் + சோர்வு.]

மனச்சோர்வு[2] *mana-c-cōrvu,* பெ.(n.) ஊக்கக் குறைவு; disheartenment, weariness of mind, flagging of interest.

[மனம் + சோர்வு.]

மனசிரங்குதல் *manacirangu,* பெ.(n.) மனமிறங்கு-தல் பார்க்க; see *manam-irangu.*

[மனமிறங்கு →மனசிறங்கு.]

மனஞ்சலிக்கவுண்(ணு)-தல் *manañ-calikka-un-,* 16 செ.குன்றாவி.(v.t.) தன் ஆசைக்கேற்ப வுண்ணுதல்; eat to on's own desire.

[மனம்சலிக்க + உண்-,]

மனத்தழுக்கம் *mana-t-talukkam,* பெ.(n.) மனத்தழுக்கு (வின்.) பார்க்க; see *mana-t-talukku.*

[மனது +அழுக்கம்.]

மனத்தழுக்கு *mana-t-talukku,* பெ.(n.) பொறாமை (பிங்.); envy, jealous.

[மனம் + அத்து + அழுக்கு.]

மனத்தளர்ச்சி *mana-t-talarcci,* பெ.(n.) மனச்சோர்வு (யாழ்.அக.) பார்க்க; see *mana-c-cōrvu.*

[மனம் + தளர்ச்சி.]

மனத்தாங்கல் *mana-t-tāngal,* பெ.(n.) மனவருத்தம்; displeasure.

[மனம் + தாங்கல்.]

மனத்தாராளம் *mana-t-tāralam,* பெ.(n.) 1. பெருந்தன்மை; generosity. 2. மனத்தில் களங்கமின்மை; frankness open heartedness.

[மனம் + தாராளம்.]

மனத்தாழ்மை *mana-t-tālmai,* பெ.(n.) 1. பணிவான எண்ணத்துடனிருக்கை (வின்.); humility. 2. தன்னைத் தாழ்வாக மதித்துக் கொள்ளும் மனப்பான்மை; inferiority complex.

[மனம் + தாழ்மை.]

மனத்திட்டம் *mana-t-tittam,* பெ.(n.) 1. மதிப்பு; mental estimate, as of a person's abilities. 2. மனநேர்மை; sincerity.

[மனம் + திட்டம்.]

மனத்திட்பம் *mana-t-titpam,* பெ.(n.) மனத்திடம் பார்க்க; see *mana-t-tidam.*

[மனம் + திட்பம்.]

மனத்திடம் *mana-t-tidam,* பெ.(n.) மனவுறுதி; firmnes of mind, resoluteness.

[மனம் + திடம்.]

மனத்திரிபு *mana-t-tiribu,* பெ.(n.) மனத்திரிவு பார்க்க; see *mana-t-tirivu.*

மனத்திரிவு *maṉa-t-tirivu,* பெ.(n.) 1. மன மாற்றம்; change of mind. 2. திரிபான எண்ணங்கள்; oblique thinking.

[மனம் + திரிவு.]

மனத்திருத்தி *maṉa-t-tirutti,* பெ.(n.) மனப் பொந்திகை பார்க்க; see *maṉa-p-pondigai.*

[மனம் + திருத்தி.]

மனத்துக்கம் *maṉa-t-tukkam,* பெ.(n.) மனத்துயர் பார்க்க; see *maṉa-t-tuyar.*

[மனம் + துக்கம்.]

மனத்துடிப்பு *maṉa-t-tuḍippu,* பெ.(n.) 1. மிகுந்த ஆசை; desire, fretting. 2. விரைவு (இ.வ.); hurry.

[மனம் + துடிப்பு.]

மனத்துப்புரவு *maṉa-t-tuppuravu,* பெ.(n.) மனத்தூய்மை (யாழ்.அக.) பார்க்க; see *maṉa-t-tūymai.*

[மனம் + துப்புரவு.]

மனத்துயர் *maṉa-t-tuyar,* பெ.(n.) துயரம்; grief or sorrow. *"மனத்துயரை மாய்க்கும் வகை" (திவ்.இயற்.பெரியதி.43).*

[மனம் + துயர்.]

மனத்துன்பம் *maṉa-t-tuṉbam,* பெ.(n.) துயரம்; distress of mind.

[மனம் + துன்பம்.]

மனத்தூய்மை *maṉa-t-tūymai,* பெ.(n.) 1. எண்ணத் தூய்மை; purity of mind. 2. மனத்தின் நேர்மை; sincerity.

[மனம் + தூய்மை.]

மனத்தெளிவு *maṉa-t-teḷivu,* பெ.(n.) மனத்தேற்றம் பார்க்க; see *maṉa-t-tēṟṟam.*

[மனம் + தெளிவு.]

மனத்தேற்றம் *maṉa-t-tēṟṟam,* பெ.(n.) 1. மனம் கலங்குதலின்மை (வின்.); clearness of mind. 2. உறுதியான எண்ணம்; firmness of mind.

[மனம் + தேற்றம்.]

மனதுருக்கம் *maṉaturukkam,* பெ.(n.) மனவுருக்கம் பார்க்க; see *maṉa-v-urukkam.*

[மனம் →மனது + உருக்கம்.]

மனந்தளம்பு-தல் *maṉan-taḷambu-,* 5 செ.கு.வி.(v.i) 1. மனம் நிலை தடுமாறுதல்; to vacillate, to be unstablein mind. 2. கவலையால் உள்ளம் வருந்துதல்; to be distressed with cases.

[மனம் + தளம்பு-,]

மனந்தளர்-தல் *maṉan-taḷar-,* 2 செ.கு.வி. (v.i.) 1. ஊக்கங் குறைதல்; to grow discouraged or dispirited. *"பித்தன் மனந்தளர்ந்தான்" (கம்பரா.நிகும்பலை.127).*

[மனம் + தளர்-,]

மனந்திருந்து-தல் *maṉan-tirundu-,* 5 செ.கு.வி.(v.i.) மன நேர்மைப்படுதல்; to change one's mind for the better, to reform in character.

[மனம் + திருந்து-,]

மனந்திரும்பு-தல் *maṉan-tirumbu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. மனம் மாறுதல் (வின்.); to

change in mind, to be converted. 2. (கிறித்.) செய்த குற்றத்திற்காக வருத்தப்படுதல்; to repent.

[மனம் + திரும்பு-,]

மனந்தீய்-தல் *manan-tīy-,* 2 செ.கு.வி. (v.i.) 1. ஏங்குதல்; to pine, languish. 2. மனம் புழுங்குதல்; to be distressed.

[மனம் + தீய்-.]

மனநசிவு *mana-naśivu,* பெ.(n.) மனக்குறை, 2 பார்க்க; see *mana-k-kurai,* 2.

[மனம் + குறை.]

மனநடுக்கம் *mana-naḍukkam,* பெ.(n.) அச்சம்; fear.

[மனம் + நடுக்கம்.]

மனநிதானம் *mana-nidāṉam,* பெ.(n.) 1. மனத்திட்டம் பார்க்க; see *mana-t-tiṭṭam.* 2. மனத்திடம் பார்க்க; see *mana-t-tiḍam.*

[மனம் + Skt.நிதானம்.]

மனநியாயம் *mana-niyāyam,* பெ.(n.) மனச் சான்றுக்குரிய நயமை (யாழ்.அக.); dictates of conscience.

[மனம் + Skt. நியாயம்.]

மனநிலை *mana-nilai,* பெ.(n.) 1. உளப்பாங்கு; state of mind. *"தோன் குன்றி னுமுயர்ந்த தென்றான் மனநிலை கூறலாமோ" (கம்பரா. அங்கதன்றூ.10).* 2. மனம் ஒரு நிலையில் நிற்கை (வின்.); steadiness of mind, firmness of will.

[மனம் + நிலை.]

மனநிறை *mana-nirai,* பெ.(n.) 1. மனநிலை, 2 (யாழ்.அக.) பார்க்க; see *mana-nilai.* 2. மனங் கோடாமை (வின்.); imparitiality. 3. மனவடக்கம்; restraint of mind.

[மனம் + நிறை.]

மனநெகிழ்ச்சி *mana-negilcci,* பெ.(n.) பிறர் துயரம் அச்சம் முதலியவற்றின் உண்டாம் மன வேறுபாடு; emotion.

[மனம் + நெகிழ்ச்சி.]

மனநெரிடு *mana-neriḍu,* பெ.(n.) வஞ்சகம் (யாழ்.அக.); deceit, cunning.

[மனம் + நெரிடு.]

மனநெரிவு *mana-nerivu,* பெ.(n.) மனக்குறை, 2 (யாழ்.அக.) பார்க்க; see *mana-k-kurai.*

[மனம் + நெரிவு.]

மனநெருடு *mana-neruḍu,* பெ.(n.) துயரத்தில் மனமகிழ்ச்சி இழக்கை (வின்.); crabbedness moroseness, sullenness.

[மனம் + நெருடு.]

மனநேர்மை *mana-nērmai,* பெ.(n.) மனத்தின் வஞ்சகமற்ற நிலை; sincerity, truthfulness.

[மனம் + நேர்மை.]

மனநோ-தல் *mana-nō-,* 17 செ.கு.வி.(v.i.) வருந்துதல் (வின்.); to regret, to feel remove.

[மனம் + நோ-.]

மனநோக்கம் *mana-nōkkam,* பெ.(n.) மனக்குறிக்கோள்; mental impression.

[மனம் + நோக்கம்.]

மனநோய் *mana-nōy,* பெ.(n.) 1. மன நலங்குன்றுதல்; mental disorder. 2. புறச்சிக்கல்களால் ஏற்படும் மன அழுத்தம்; depression of mind. 3. மன வருத்தம்; regret remorse distress of mind.

[மனம் + நோய்.]

மனநோவு *mana-nōvu,* பெ.(n.) மனநோய் பார்க்க; see *mana-nōy.*

[மனம் + நோவு. நோய் →நோவு (கொ.வ.)]

மனப்படுத்து-தல் *mana-p-paduttu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. இணக்குதல்; to cause to agree, to persuade. 2. மனப்பாடஞ் செய்தல் (இக்.வ.); to get by heart.

[மனம் + படுத்து-.]

மனப்பதற்றம் *mana-p-padarram,* பெ.(n.) மனநடுக்கம் (யாழ்.அக.) பார்க்க; see *mana-nadukkam.*

[மனம் + பதற்றம்.]

மனப்பதிப்பு *mana-p-padippu,* பெ.(n.) மனவிருப்பம் (இ.வ.) பார்க்க; see *mana-viruppam.*

[மனம் + பதிப்பு.]

மனப்பதைப்பு *mana-p-padaippu,* பெ.(n.) 1. மனக்கவலை; anguishï intense anxiety. 2. மனவிருப்பம், 2 பார்க்க; ee *mana-viruppam.*

[மனம் + பதைப்பு.]

மனப்பரிப்பு *mana-p-parippu,* பெ.(n.) மனத்துயர் பார்க்க; see *mana-t-tuyar.* *"பகலிராப் பரவப் பெற்றேனினி யென்ன மலைப்பரிப்பே" (திவ்.திருவாய்.6, 4, 6).*

[மனம் + பரிப்பு.]

மனப்பற்று *mana-p-parru,* பெ.(n.) 1. விருப்பு; desire. 2. மனம் அழுந்தியிருக்கை; attachment of mind.

[மனம் + பற்று.]

மனப்பாங்கு *mana-p-pāngu,* பெ.(n.) மனநிலை (வின்.) பார்க்க; see *mana-nilai.*

[மனம் + பாங்கு.]

மனப்பாடம் *mana-p-pādam,* பெ.(n.) கற்றதை மறதியின்றிச் சொல்லும்படி நினைவில் பதிவு செய்து கொள்ளும் பாடம்; lesson learned and retained in the memory.

[மனம் + பாடம்.]

மனப்பால்குடி-த்தல் *mana-p-pāl-kudi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கை கூடாதவற்றைப் பற்றி நெடுக எண்ணி அகமகிழ்தல்; to live in a fool's paradise. 2. பால் சுரத்தல் போன்று மனத்திற் சுரக்கும் எண்ணங்களைச் சுவைத்தல்; lit., to drink the milk of mind.

[மனப்பால் + குடி-.]

மனப்பான்மை *mana-p-pāṉmai,* பெ.(n.) எண்ணப்போக்கு; cast of mind, attitude.

[மனம் + பான்மை.]

மனப்பிடிப்பு *mana-p-pidippu,* பெ.(n.) மனப் பற்று (இ.வ.) பார்க்க; see *mana-p-parru.*

[மனம் + பிடிப்பு.]

மனப்பிரமை *mana-p-piramai,* பெ.(n.) மனமயக்கம் பார்க்க; see *mana-mayakkam.*

[மனம் + Skt. பிரமை.]

மனப்பிராந்தி *maṉa-p-pirāndi,* பெ.(n.) மனமயக்கம் பார்க்க; see *maṉa-mayakkam.*

*[மனம் + **Skt.** பிராந்தி.]*

மனப்பிரிப்பு *maṉa-p-pirippu,* பெ.(n.) மனக்கலக்கம் பார்க்க; see *maṉa-k-kalakkam. "மயக்கிவிடினும் மனப்பிரிப் பொன்றின்றித் துளக்க மிலாதவர்" (நாலடி, 189).*

[மனம் + பிரிப்பு.]

மனப்பிணி *maṉa-p-piṇi,*பெ.(n.) மனநோய் ; mental aborration.

[மனம் + பிணி.]

மனப்பித்து *maṉa-p-pittu,*பெ.(n.) மனக் குழப்பம், அறிவுப் பிறழ்ச்சி; a mental disease characterised by systenatised delusion - *paranoia* (சா.அக.).

*[மனம் + **Skt.** பித்து.]*

மனப்பூர்வமாய் *maṉa-p-pūrvamāy,* வி.எ. (adv.) மனமார பார்க்க; see *maṉamāra.*

மனப்பூரணம் *maṉa-p-pūraṇam,*பெ.(n.) 1. முழுமனம்; whole - heartedness. 2. மனத்திருத்தி; contentment. 3. மிகு களிப்பு (வின்.); exquisite joy, hilarity. 4. மன நேர்மை (வின்.); ingenousness.

*[மனம் + **Skt.** பூரணம்.]*

மனப்பேய் *maṉa-p-pēy,* பெ.(n.) அறிவு மயக்கம் (யாழ்.அக.); delusion.

[மனம் + பேய்.]

மனப்பைத்தியம் *maṉa-p-paittiyam,* பெ.(n.) நினைவு தடுமாற்றம்; mental aberration.

*[மனம் + **Skt.** பைத்தியம்.]*

மனப்பொருத்தம் *maṉa-p-poruttam,* பெ. (n.) தன் மனத்துக்கு ஏற்றதாகை (வின்.); being in accordance with one's mind.

[மனம் + பொருத்தம்.]

மனப்பொறுப்பு *maṉa-p-poṟuppu,* பெ.(n.) பொறுத்துக் கொள்ளும் மனப்பான்மை (வின்.); forbearance.

[மனம் + பொறுப்பு.]

மனப்போக்கு *maṉa-p-pōkku,* பெ.(n.) மனம்போகும் வழி; inclination, prospensity.

[மனம் + போக்கு.]

மனம் *maṉam,*பெ.(n.) 1. நெஞ்சம்; mind, will, the reasoning faculty. *"மனத்தொடு வாய்மை மொழியின்" (குறள், 295).* 2. எண்ணம்; purpose, intention, sentiment. *"போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" (பழ.).* 3. நினைவு கூர்கை (வின்.); memory. 4. விருப்பம்; desire. 5. இந்துப்பு (யாழ்.அக.); rock salt.

[முள் → முல் → முன் → முன்னுதல் = பொருந்துதல், கருதுதல். முன் →முன்னம் = கருத்து, குறிப்பு. முள் → மள். மன்னுதல் = பொருந்துதல், கருதுதல். மன் → மனம் = கருதும் அகக்கரணம் (மு.தா.185).]

மனம்பேதி–த்தல் *maṉam-pēdi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. கருத்து வேறுபடுதல்; to be at variance, to disagree in opinion. 2. மனங்கலங்குதல்; to be distracted in mind.

[மனம் + பேதி–.]

மனம்பொங்கு—தல் *manam-pongu-,* 7 செ.கு.வி.(v.i.) 1. மனம் அலைவுறுதல்; to be excited in mind, as from joy or sorrow. 2. சினங் கொள்ளுதல்; to be enraged. 3. உணர்ச்சி மேலிடுதல்; to feel more.

[மனம் + பொங்கு–,]

மனம்பொருந்து—தல் *manam-porundu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. ஒத்துக்கொள்ளுதல்; to consent. 2. ஏற்பிசைவுசெய்தல்; to approve, to accept. 3. மனமொற்றுமை யாதல்; to be in accordance with one's mind.

[மனம் + பொருந்து–.]

மனம்போனபோக்கு *manam-pōna-pōkku,* பெ.(n.) சிந்தை சென்ற வழியே செல்லுகை; attitude of go-as-you-please. *"மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்" (உலகநீதி.).*

[மனம்போன + போக்கு.]

மனமகிழ்ச்சி *mana-magilcci,* பெ.(n.) அகக்களிப்பு; cheerfulness, joy, hilarity.

[மனம் + மகிழ்ச்சி.]

மனமடிவு *mana-madivu,* பெ.(n.) 1. மனச் சோர்வு பார்க்க; see *mana-c-cōrvu.* 2. மனம் அழிகை; pain of mind, mortification, disgust.

[மனம் + மடிவு.]

மனமலர்ச்சி *mana-malarcci,* பெ.(n.) மனமகிழ்ச்சி (வின்.) பார்க்க; see *mana-magilcci.*

[மனம் + மலர்ச்சி.]

மனமறிய *manamariya,* பெ.(n.) 1. நெஞ்சறிய, நினைவு தெறிந்த நிலையில்; knowingly, wilfully. *"மனசறியக் குற்றஞ் செய்ய மாட்டான்".* 2. மனச்சான்றுபடி; conscientiously. *"மனசறியத் தெரிந்ததை ஒளிக்கக் கூடாது".*

[மனம் → மனசு + அறிய.]

மனமறுக்கம் *mana-marukkam,* பெ.(n.) மனத்துயர் பார்க்க; see *mana-t-tuyar.*

[மனம் + மறுக்கம்.]

மனமாசு *mana-māšu,* பெ.(n.) மனக்குற்றம்; impurity of mind. *"சினமா சொழித்து மனமாசு தீர்த்தாங்கு" (மணிமே.9:59).*

[மனம் + மாசு.]

மனமாதகி *mana-mādagi,* பெ.(n.) மலை; mountain (சா.அக.).

மனமாயிரு—த்தல் *manamā-y-iru,* 4 செ.கு.வி.(v.i.) 1. எண்ணங் கொள்ளுதல் (வின்.); to be willing. 2. ஒப்புதல்; to agree. 3. பொந்திகையாதல்; to get satisfied.

[மனம் →மனசு (கொ.வ.)→மனசாயிரு–.]

மனமிடுக்கு *mana-midukku,* பெ.(n.) மனத்திடம் (யாழ்.அக.) பார்க்க; see *mana-t-tidam.*

[மனம் + மிடுக்கு.]

மனமிளகு—தல் *manam-ilagu-,* 7 செ.கு.வி. (v.i.) மனமிறங்கு பார்க்க; see *mana-mirangu.*

[மனம் +இளகு–.]

மனமிறங்கு-தல் *maṉam-iraṅgu-,*5 செ.கு.வி. (v.i.) இரக்கத்தின் காரணியமாகவோ நற்செயல்காரணியமாகவோ ஒருவர் மேல் கொண்ட விடாப்பிடியான சினத்தைத் தவிர்த்தல்; to melt or to become soft as of mind.

[மனம் + இறங்கு-,]

மனமிறுகு-தல் *maṉam-irugu,*5 செ.கு.வி. (v.i.) 1. மனம் கடினமாதல்; to be hardened in mind. 2. கருமி குணங் கொள்ளுதல்; to be miserly or ungenerous. *"மனமிறுகியாசை யானராய்" (திருப்பு.790).*

[மனம் + இறுகு-,]

மனமுடை-தல் *maṉam-uḍai-,* 2 செ.கு.வி. (v.i.) மனமுறி-, பார்க்க; see *maṉa-muṟi.*

[மனம் + உடை-,]

மனமுளை-தல் *maṉam-uḷai-,*2 செ.கு.வி. (v.i.) மனம் வருந்துதல்; to be pained in mind.

[மனம் + உளை-,]

மனமுறி-தல் *maṉam-muṟi-,*2 செ.கு.வி. (v.i.) துன்பத்தால் மனமகிழ்வு குன்றுதல்; to be broken hearted, dispirited or discouraged. *"பொருட்சேத நேரவே அவன் மனமுறிந்தான்" (உ.வ.).*

[மனம் + முறி-.]

மனமுறிவு *maṉam-muṟivu,* பெ.(n.) ஊக்கமிழக்கை (யாழ்.அக.); discourage ment, broken-heartedness.

[மனம் + முறிவு.]

மனமுறுத்து-தல் *maṉam-uṟuttu-,*5 செ. குன்றாவி.(v.t.) பிறர் மனத்தைப் புண்படுத்துதல் (வின்.); to wound one's feelings.

[மனம் + உறுத்து-,]

மனமேட்டிமை *maṉamēṭṭimai,* பெ.(n.) மனச்செருக்கு; haughtiness.

[மனம் + மேட்டிமை.]

மனவஞ்சனை *maṉavañjaṉai,* பெ.(n.) ஓரம் (யாழ்.அக.); partiality.

[மனம் + அஞ்சனை.]

மனவலி *maṉavali,* பெ.(n.) மனத்திடம் பார்க்க; see *maṉa-t-tiḍam. "மனவலி யிளைத்தும்" (பிரமோத்.4, 11).*

[மனம் + வலி.]

மனவிருப்பம் *maṉa-viruppam,* பெ.(n.) 1. ஆசை; heart's desire. 2. மனத்திற்கு உகந்தது (வின்.); choice learning.

[மனம் + விருப்பம்.]

மனவிழி *maṉa-viḻi,* பெ.(n.) இசைப்பாட்டு வகை (சது.); a kind of song.

[மனம் + விழி.]

மனவு *maṉavu,* பெ.(n.) 1. மணி; gem. *"மனவிரி யல்குலார்தம்" (சீவக.466).* 2. அக்கமணி; mock pearl, chank bead. *"மனவுச்சூலு டும்பின்வறை" (பெரும்பாண். 132).* 3. சங்கு (சூடா.); conch. 4. அறையிற்கட்டும் பட்டிகை; girdle for the waist. *"மனவேயக லல்குல் வல்லியன்னாள்" (தஞ்சைவா.373).* 5. புடவை (சங்.அக.); woman's saree.

மனவுருக்கம் *maṉa-v-urukkam*, பெ.(n.) மனமிளகுகை; tenderness of mind.

[மனம் + உருக்கம்.]

மனவுறுதி *maṉa-v-uṟudi*, பெ.(n.) உறுதியான எண்ணம்; firmness of mind, resoluteness.

மனவூக்கம் *maṉa-v-ūkkam*, பெ.(n.) மனத்திடம் (வின்.) பார்க்க; see *maṉa-t-tiḍam.*

[மனம் + ஊக்கம்.]

மனவெரிச்சல் *maṉa-v-ericcal*, பெ.(n.) பொறாமை (வின்.); jealousy, heart-burning.

[மனம் + எரிச்சல்.]

மனவெழுச்சி *maṉa-v-eḻucci*, பெ.(n.) பெருமகிழ்ச்சி; excitement, exultation. *"தலைவன் இன்ப நுகர்கின்ற மன வெழுச்சியை" (கலித்.41, உரை).*

[மனம் + எழுச்சி.]

மனவெளி *maṉa-veḷi*, பெ.(n.) மன ஆளுமைக்குரிய இடம்; the mustic region of the mind. *"என் மன வெளியிற் கலந்து" (தாயு.பொருள்வணக்.10).*

[மனம் + வெளி.]

மனவேகம் *maṉa-vēgam*, பெ.(n.) 1. மனத்தின் விரைவு; swiftness, as of the mind. 2. சினம் (யாழ்.அக.); anger.

[மனம் + வேகம்.]

மனவொடுக்கம் *maṉa-v-oḍukkam*, பெ.(n.) 1. மனவொன்றிப்பு,1 பார்க்க; see *maṉa-v-oṉṟippu.* 2. அடக்கம்; modesty. 3. அமைதி; tranquillity.

[மனம் + ஒடுக்கம்.]

மனவொருக்கம் *maṉa-v-orukkam*, பெ.(n.) 1. ஐம்புலனடக்கம்; (yoga) withdrawal of the senses from external objects. 2. மனவொன்றிப்பு பார்க்க; see *maṉa-v-oṉṟippu.*

[மனம் + ஒருக்கம்.]

மனவொருமிப்பு *maṉa-v-orumippu*, பெ.(n.) மனவொன்றிப்பு (வின்.) பார்க்க; see *maṉa-v-oṉṟippu.*

[மனம் + ஒருமிப்பு.]

மனவொன்றிப்பு *maṉa-v-oṉṟippu*, பெ.(n.) 1. மனத்தை யொருமுகப்படுத்துகை; concentration. 2. மனவொற்றுமை (வின்.); union, harmony, concord.

[மனம் + ஒன்றிப்பு.]

மனனம்[1] *maṉaṉam*, பெ.(n.) 1. சிந்திக்கை; consideration, contemplation. *"மேன் மனனம்" (காசிக.இல்லொழு.7).* 2. நினைவில் வைக்கை; memorising. *"சிரவண மனனாதிகள் வேண்டாவோ" (கைவல்.சந். 3, 28).* 3. எல்லாமறிகை (அஷ்டப்பிரக. தத்துவ. பக்.121); omniscience.

[மனம்→மனனம்.]

மனா *maṉā*, பெ.(n.) 1. மனவு பார்க்க; see *maṉavu. "மங்கை மனாவனைய மென்சூன் மடவுடும்பு" (சீவக.2781).* 2. மனவு, 4 பார்க்க; see *maṉavu, 4.*

[மனவு→மனா.]

மனாவு *maṉāvu*, பெ.(n.) மனவு, 4 (யாழ். அக.) பார்க்க; see *maṉāvu.*

[மனவு→மனாவு.]

மனிச்சடி–த்தல் *maṉi-c-caḍi-*,4 செ.கு.வி. (v.i.) பெருமை பேசுதல்; to speak proudly or in a manly way. *"மனிச்சடித்துச் சொல்லாதே" (திருவிருத்.30, வியா.பக்.189).*

மனிதன் *maṉidaṉ*,பெ.(n.) 1. ஆண்மகன்; man. 2. மாந்தன் பார்க்க; see *māndaṉ.*

மனிலாக்கொட்டை *maṉilā-k-koṭṭai*, பெ. (n.) மணிலாக்கொட்டை (வின்.) பார்க்க; see *maṉilā-k-koṭṭai.*

[மணிலாக்கொட்டை→மனிலாக்கொட்டை.]

மனிலாப்பயறு *maṉilā-p-payaṟu*,பெ.(n.) மணிலாக்கொட்டை (வின்.) பார்க்க; see *maṉilā-k-koṭṭai.*

[மணிலாக்கொட்டை→ மணிலாப்பயறு →மனிலாப்பயறு.]

மனெப்படப்பு *maṉe-p-paḍappu*, பெ.(n.) 1. வீட்டை சுற்றியுள்ள தோட்டம்; the house garden. 2. மனைப்படப்பை பார்க்க; see *maṉai-p-paḍaippai. "இ(வ)ன் பெறும (ெ)னயும் மனெப்படப்பும் இரண்டு பட்டி நிலனும்" (தெ.க.தொ.2, பக்.353, (37).*

க. மனெப்படப்பு

[மனைப்படப்பை→ மனைப்படப்பு →மனெப்படப்பு.]

மனை¹–தல் *maṉai-*,2 செ.குன்றாவி.(v.t.) உருவாக்கல்; to make, create, form, fashion, shape. *"ஒருவன் மனைந்து கொண்டு வர ஒருவன் அழித்துக் கொண்டு வரும்படி" (ஈடு.6, 9, 1).*

ம. மன; க. மனெ.

E. manor; **ME., AF.** maner; **OF.** manoir; **E.** manse; **ME.** med; **L.** mansus = house; **E.** mansion = large residence.

[மன்→மனை (வே.க.4:33).]

மனை² *maṉai*, பெ.(n.) 1. பலர் கூடி அல்லது நிலைத்து வதியும் வீடு; house, dwelling, mansion. *"சீர்கெழு வள்மனை திளைத்து" (சீவக.828).* 2. வீடு கட்டுதற்குரிய வெற்றிடம்; house site. 3. நிலவளவு வகை; ground, a land measure = 40'x60' = 2400 sq.ft. = 1/12 kāṇi. *"நூறு மனைக்கீழ் நால்கூறாக அடைப்பதாகவும்" (S.I.I.i.64).* 4. அல்லும் பகலும் வீட்டில் வதியும் மனைவி; wife. *"பிறர்மனை நோக்காத பேராண்மை" (குறள், 148).* 5. வீட்டில் வதியும் குடும்பம்; family, houselhold. 6. துறவுக்கு எதிரான இல்வாழ்க்கை; domestic life. *"மனைத்தக்க மாண்புடையாளாகி" (குறள், 51).* 7. சூதாட்டிற்கு அல்லது கணியத்திற்கு வரையும் அறை (வின்.); square, as of a chess, board. 8. நற்றாய்; mother. *"கவர் மனை மருட்சி" (இலக்.வி.537).*

மனைக்கட்டு *maṉai-k-kaṭṭu*, பெ.(n.) வீடு கட்டற்குரிய இடம்; house - site, building site.

[மனை + கட்டு.]

மனைக்கட்டுநிவேசனம் *maṉai-k-kaṭṭu-nivēśaṉam*,பெ.(n.) வீடு கட்டப்பட்ட இடம் (வின்.); ground on which a house stands.

*[மனைக்கட்டு + **Skt.** நிவேசனம் > த. மனையகம்.]*

மனைக்கடையான் *maṉai-k-kaḍaiyāṉ*, பெ.(n.) வீட்டிற் கடை வைத்து வணிகஞ் செய்வோன்; shop - keeper one who opens a shop in his place of residence (M.E.R.1915, p.108).

[மனை + கடையான்.]

மனைக்கிழத்தி *maṉai-k-kiḻatti,* பெ.(n.) மனைவி; wife, as mistress of the house. *"தொல்குடியின் மக்கட் பெறலின் மனைக்கிழத்தி" (திரிகடு.64).*

[மனை + கிழத்தி.]

மனைக்கிழவன் *maṉai-k-kiḻavaṉ,* பெ.(n.) கணவன்; husband, as master of the house.

[மனை + கிழவன்.]

மனைக்குழி *maṉai-k-kuḻi,* பெ.(n.) குடியிருப்பு நிலம்; housing-ground. *"காணிமனைக்குழி பதினெட்டும் தெந் கிழக்கும் நாந் (ஸ்த்ரீத) நம் பெற்ற மனை" (த.க.தொ.2, தொ.எண்.210).*

மனைக்கோள் *maṉai-k-kōḷ,* பெ.(n.) பல்லி (வின்.); lizard (சா.அக.).

[மனை + கோள்.]

மனைகட்டு-தல் *maṉai-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) சொக்கட்டானில் ஓர் ஆட்டம் வெல்லுதல்; to win a game, as in dice-play. *"முற்பட இடுகின்ற தாயம் முன்னே மனை கட்டலாம்படி" (கலித்.136, உரை).*

[மனை + கட்டு-.]

மனைகோலு-தல் *maṉai-kōlu-,* 5 செ.கு.வி. (v.i.) வீடு கட்டுதல்; to build a house.

[மனை + கோலு-.]

மனைச்சீட்டு *maṉai-c-cīṭṭu,* பெ.(n.) மனை விற்பனை ஆவணம்; title deed of a house - site.

[மனை + சீட்டு.]

மனைத்தாயம் *maṉai-t-tāyam,* பெ.(n.) இல்லறவொழுக்கம் (யாழ்ப்.); domestic life.

[மனை + தாயம்.]

மனைத்தீர்வை *maṉa-t-tīrvai,* பெ.(n.) நிலத்துக்கு மட்டும் கொடுக்கப்படும் வாடகை (இ.வ.); ground - rent.

[மனை + தீர்வை.]

மனைப்படப்பு *maṉa-p-paḍappu,* பெ.(n.) மனைபடைப்பை பார்க்க; see *maṉai-paḍaippai. "வழிபாடு செய்வார்க்கு மனையும் மனைப்படப்பும் நீக்கி" (S.I.I.i.151).*

[மனை + படப்பு. படப்பை →படப்பு.]

மனைப்படப்பை *maṉai-p-paḍappai,* பெ.(n.) வீட்டுக் கொல்லை; house garden (S.I.I.i, 86).

[மனை + படப்பை.]

மனைப்பணம் *maṉai-p-paṉam,* பெ.(n.) வீட்டு வரி (S.I.I.viii, 139); house - tax.

[மனை + பணம்.]

மனைப்பலி *maṉai-p-pali,* பெ.(n.) மனையுறை தெய்வங்கட்கிடும் பலி; sacrifice to household gods. *"மனைப் பலியூட்டினமை கண்டுண்க வூண்" (ஆசாரக்.40).*

[மனை + Skt.பலி.]

மனைப்பாம்பு *maṉai-p-pāmbu,* பெ.(n.) 1. பாம்பு வகை; common brown snake. 2. அகவை மிகுதியால் குள்ளமாய் வீடுகளில் வாழும் பாம்பு; cobra which has grown short with age and lives in houses.

[மனை + பாம்பு.]

மனைபுழக்கடை *maṉai-p-puḻa-k-kaḍai,* பெ.(n.) வீட்டின் பின்புறம்; backyard of a house.

[மழை + புழக்கடை.]

மனைமரம் *manai-maram,* பெ.(n.) தேற்றா மரம் (பரிபா.11, 19, உரை); clearing -nut tree.

[மனை + மரம்.]

மனைமுதல் *manai-mudal,* பெ.(n.) மனைக் கிழத்தி பார்க்க; see *manai-k-kiḻatti.* *"நாளு மனைமுதல் வினையொடு முவப்ப" (அகநா.51).*

[மனை + முதல்.]

மனைமுறி *manai-muri,* பெ.(n.) மனைச் சீட்டு (வின்.) பார்க்க; see *mana-c-cīṭṭu.*

[மனை + முறி.]

மனையடிசாத்திரம் *mana-y-aḍi-cāttiram,* பெ.(n.) வீடு கட்டும் முறைகளை யுணர்த்தும் நூல்; treatise on house building.

*[மனையடி + **Skt.** சாத்திரம்.]*

மனையறம் *mana-y-aram,* பெ.(n.) இல்லறம்; domestic or married life. *"வான்றரு கற்பின் மனையறம் பட்டேன்" (மணிமே.22:53).*

[மனை + அறம்.]

மனையறம்படுத்தகாதை *mana-y-aram-paḍutta-kādai,* பெ.(n.) சிலப்பதிகாரத்தின் இரண்டாம் காதை; chapter of cilappatikāram.

[மனையறம்படுத்த + காதை.]

மனையாட்டி *mana-y-āṭṭi,* பெ.(n.) மனையாள் (சூடா.) பார்க்க; see *manaiyāḷ.*

[மனை + ஆட்டி.ஆளன் – ஆண்பால். ஆட்டி – பெண்பால்.]

மனையாள் *manayāḷ,* பெ.(n.) மனைவி; wife. *"மனையாளை யஞ்சு மறுமையிலாளன்" (குறள், 904). "காதல் மனையாளும் காதலனும் மாறின்றித் தீதில் ஒருகருமம்" (நன்னெறி, 6).*

[மனை + ஆள்.]

மனையிறை *manai-y-irai,* பெ.(n.) வீட்டு வரி; house tax. *"மனையிறை காலே யரைக்கால் பழங்காசு" (Pd.Insc.288).*

[மனை + இறை.]

மனையுறைமகள் *manai-y-urai-magaḷ-,* பெ.(n.) மணமான பெண்; married woman. *"வான்தரு கற்பின் மனையுறை மகளிரில்" (மணிமே.15, 77).*

[மனை + உறைமகள்.]

மனையோள் *manaiyōḷ,* பெ.(n.) மனையாள் பார்க்க; see *manaiyāḷ. "மனையோள் விரும்பி" (புறநா.333).*

[மனை →மனையோள்.]

மனைவரி[1] *manai-vari,* பெ.(n.) வீட்டுவரி (வின்.); house tax, quit-rent.

[மனை + வரி. மனை = வீடு.]

மனைவரி[2] *manai-vari,* பெ.(n.) வீடு கட்டாமல் வெறுமையாக இருக்கும் இடத்திற்குத் தண்டப்படும் வரி (தெ.கல்.தொ.26, எண்.656); tax for empty plot.

மனைவழி *manai-vaḻi,* பெ.(n.) வீட்டுக்குரிய இடம்; house - site. *"மனைவழி கூறிடாது நகரப் பொதுவாய்க் கிடந்த" (S.I.I.iii.25).*

[மனை + வழி.]

மனைவாழ்க்கை *manai-vāḻkkai,* பெ.(n.) இல்வாழ்க்கை; house holder's life.

"ஊரன்றன் மனைவாழ்க்கை பொலிக" (ஐங்குறு.3).

க. மனெவாழ்டெ

[மனை + வாழ்க்கை.]

மனைவானீளம் *manai-vānīlam,* பெ.(n.) மனையைச் சேர்ந்த வால்வீச்சு; longitudinal piece of land at the back of a house. *"மடைவாளகத்து மனை வானீளத்துக்குக் கிழக்கும்" (S.I.I.iii.214).*

மனைவி *manaivi,* பெ.(n.) 1. மனையி லுறையும் வாழ்க்கைத் துணைவி; இல்லாள்; wife. *"இன்ப மருந்தினாள் மனைவி யொத்தும்" (சீவக.1895).* 2. முல்லை மருத நிலங்களின் தலைவி (திவா.); heroine of a pastoral or agricultural tract. 3. மனையை யுடையவள்; female, owner or resident of a house. *"பூமுளரி மனைவி" (உபதேசகா. சிவவிரத. 245).*

[மனை → மனைவி.]

மனைவீடு *manai-vīdu,* பெ.(n.) 1. மனையும் வீடும்; house and grounds. 2. சிற்றூர் நத்தம் (இ.வ.); land reserved as house sites.

[மனை + வீடு.]

மனைவேலி *manai-vēli,* பெ.(n.) வீட்டின் எல்லைச் சுவர்; boundary wall of a house.

[மனை + வேலி.]

மனைவேள்வி *manai-vēlvi,* பெ.(n.) இல்லறம்; domestic life. *"மனை வேள்வி மலிவுரைத் தன்று" (பு.வெ.9, 27, கொளு.).*

[மனை + வேள்வி.]

மா

மா[1] *mā,* பெ.(n.) மகரமெய்யும் ஆகார உயிரும் சேர்ந்த உயிர்மெய் நெட்டெழுத்து; the compound of m and ā.

[ம் + ஆ – மா.]

மா[2] *mā,* பெ.(n.) இயற்சீர் இறுதியிலுள்ள நேரசையைக் குறிக்கும் சொல்; symbolic expression for nēr, ending an *iyar-cīr.* *மாமுன் நிரையும் விளமுன் நேரும்.*

மா[3] *mā,* பெ.(n.) 1. பெருமை; greatness. *"அங்கண் மாஞாலம்" (நாலடி, 148).* 2. வலி (பிங்.); strength.

மா[4] *mā,* கு.பெ.எ.(adj.) 1. ஒருவரின் அல்லது ஒன்றின் நல்ல, கெட்ட குணங்களை மிகுதிப்படுத்தும் பெயரடை; an adjective indicating the highest degree of anything good or bad. 2. பெரிய; extensive. 3. மிகவும்; very.

மா[5] *mā,* பெ.(n.) மாமரம் (பிங்.); mango tree.

மா[6] *mā,* பெ.(n.) அழைக்கை (பிங்.); calling, call.

மா[7]–த்தல் *mā-,* பெ.(n.) அளத்தல்; to measure.

மான் – மா. மாத்தல் = அளத்தல். இவ் வினை இன்று வழக்கற்றது. ஆயின், மா என்னும் முதனிலைத் தொழிலாகுபெயர் 1/20 என்னும் கீழ்வாயிலக்கத்தைக் குறித்து வழங்குகின்றது. அதனால், நிலவளவையில் ஒரு வேலியின் 1/20 பாகம் மா எனப்படுகின்றது. "மாநிறை வில்லதும் பன்னாட்காகும்" (புறம்.184) என்பது, இதன் தொன்றுதொட்ட வழக்கை யுணர்த்தும்.

மா⁸ *mā,* பெ.(n.) 1. விலங்கு; animal, beast. *"மாவும் மாக்களுமையறி வினவே" (தொல். பொருள்.587).* 2. குதிரை; horse. *"அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா" (குறள், 814).* 3. யானை (அக.நி.); elephant. 4. குதிரை, பன்றி, யானைகளின் ஆண் (சூடா.); male of horse, pig, elephant. 5. மடங்கலோரை (சூடா.); leo of the zodiac. 6. வண்டு; bee. *"மாவுடைத் தார்" (பு.வெ.6-7. கொளு).* 7. அன்னம்; swan. *"மடநடை மாயினம்" (கலித்.92:17).* 8. விலங்கு வடிவமாய்ப் பிறக்கும் மானுடம்; human being born with the shape of an animal. *"மாவு மருளு முளப்பட வாழ்நர்க் கெண் பேரெச்சம்" (புறநா.28).*

மா⁹ *mā,* பெ.(n.) 1. சீலை, துணி (அக.நி.); cloth. 2. ஆணி (அக.நி.); nail.

மா¹⁰ *mā,* பெ.(n.) துன்பம் பொறுக்கை (அரு.நி.); bearing with patience.

மா¹¹ *mā,* பெ.(n.) வெறுப்பு (சூடா.); dislike, disquest.

மா¹² *mā,* இடை.(part.) ஓர் அசைச் சொல்; an expletive. *"விளிந்தன்று மாதவ" (நற்.178).*

மா¹³ *mā,* பெ.(n.) 1. திருமகள்; Tirumagaḷ. *"மாமறுத்த மலர்மார்பின்" (புறநா.7).* 2. செல்வம் (யாழ்.அக.); treasure. 3. கலைமகள் (சங்.அக.); Saraswathi.

மா¹⁴ *mā,* பெ.(n.) ஒரு முகத்தல் அளவுக்கலம்; name of a measuring vessel. *"மாத்தால் அறுகலமும்" (தெ.க.தெ.8.211-6).*

மா¹⁵ *mā,* பெ.(n.) 1. மாற்று; degree of fineness of gold assayed by a touch - store. *"ஒட்டறும் செம்பொன் னொக்க வொருமாவுங் குறையாமல்" (பெரிபு. ஏயர் கோன்.137).* 2. ஒரு நிறை (தொல்.எழுத்து.170, உரை); a measure of weight. 3. கீழ்வாயிலக்கத்துளொன்று (பிங்.); the fraction 1/20.

மா¹⁶ *mā,* பெ.(n.) 1. வயல் (பிங்.); field. 2. நிலம்; land, tract of land. *"மருதமாவின் தலையன" (இரகு.நாட்டுப்.56).* 3. இருபதில் ஒரு பகுதி கொண்ட நிலவளவை; a superficial measure 1/20 veli = 100 kuḷi. *"மாநிறை வில்லதும் பன்னாட் காகும்" (புறநா.184).*

மா¹⁷ *mā,* பெ.(n.) கானல் (அரு.நி.); mirage.

மா¹⁸ *mā,* பெ.(n.) 1. அழகு; beauty. *"மாவீழ் பள்ளி" (ஞானா.10:6).* 2. கருமை; blackness. *"மாயிரும் பீலி" (சிலப்.2:53).* 3. வண்ணம்; colour. *"காமரு குவளைக் கழுநீர் மாமலர்" (சிலப்.4:40).* 4. மாமைநிறம்; paleness caused by love-sickness. *"அம்மா வரிவை" (புறநா.147).*

மா¹⁹ *mā,* பெ.(n.) 1. அரிசி முதலியவற்றின் மாவு; flour, meal, dough, powder. *"காயங் கொண்டன மாவிருந்து" (மலைபடு.126).* 2. துகள்; dust.

[மாவு→மா.]

மா²⁰ *mā,* பெ.(n.) நஞ்சுக்கொடி (வின்.); after - birth.

தெ. மாவீ.

மா²¹ *mā,* பெ.(n.) உறுதிமொழி; source of perception, authority. *"தெளிந்ததெல்லாம் மாவென்று கொண்டு" (நீலகேசி.5).*

மாக்கசங்கு *mākka-śaṅgu,* பெ.(n.) இந்துப்பு (சங்.அக.); sodium chloride.

[மா + கசங்கு.]

மாக்கட்டு *mā-k-kaṭṭu,* பெ.(n.) மாவைக் கொண்டு கட்டுங் கட்டு; a soft pasty application made of flour.

[மாவு →மா + கட்டு.]

மாக்கடற்பிறந்தகோதை *mā-k-kaḍaṟ-piṟanda-kōdai,* பெ.(n.) திருமகள்; Goddess *Tirumagaḷ* (Lakshmi) as born out of the ocean.

[மா + கடல் + பிறந்த + கோதை.]

மாக்கடு *mākkaḍu,* பெ.(n.) மாக்கடுக்காய் பார்க்க; see *mā-k-kaḍukkāy.*

[மா + கடு. கடுக்காய் →கடு.]

மாக்கடுக்காய் *mā-k-kaḍukkāy,* பெ.(n.) சூரத்துக் கடுக்காய் (தைலவ.தைல.); a kind of myrobalan from Surat (சா.அக.).

[மா + கடுக்காய்.]

மாக்கருவி *mā-k-karuvi,* பெ.(n.) குதிரைச் சேணம் (சது.); saddle.

[மா + கருவி. மா = விலங்கு, குதிரை.]



மாக்கல் *mā-k-kal,* பெ.(n.) 1. எழுத்துக்குச்சி முதலிய செய்தற்குரிய கல் (கொ.வ.); potstone, greyish blue soft stone used for making pots, slate - pencils, etc. 2. சவுக்காரக் கல் (வின்.); soap stone.

[மாவு →மா + கல்.]

மாக்கள் *mākkaḷ,* பெ.(n.) 1. மாந்தர்; men, people, mankind. *"தவத்துறை மாக்கள்" (மணிமே.6, 97). "கொலை வினையராகிய மாக்கள்" (குறள், 329). "ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர் மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை" (மணிமே.).* 2. பகுத்தறிவிலார்; persons wanting in discrimination. *"மாவு மாக்களு மையறிவினவே" (தொல்.பொருள்.587). "செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் அவியினும் வாழினும் என்" (குறள், 420).* 3. குழந்தைகள்; children. *"தத்தமாக்களைத் தம்படையாற் சிலர் தடிந்தார்" (கம்பரா. கிங்கர.42).*

மாக்கள்பத்தோன் *mākkaḷ-pattōṉ,* பெ.(n.) வெள்ளிகோள் (நாமதீப.101); the planet Venus.

மாக்களிக்கட்டு *mā-k-kaḷi-k-kaṭṭu,* பெ.(n.) மாவைக் களியாகச் செய்து புண், கட்டி இவற்றின் மீது வைத்துக் கட்டுகை; a soft pasty external application made by boiling any flour as basis with water.

[மா + களி + கட்டு.]

மாக்கனுடையாள்மூலி *mā-k-kaṉuḍaiyāḷ-mūli,* பெ.(n.) சதுரக்கள்ளி; a species of euphorbia (சா.அக.).



மாக்கா *mākkā,* பெ.(n.) குதிரைப் பற்களின் நிறவேறுபாடுகளிலொன்று (அசுவசா.6); a colour of horse's teeth.

மாக்காப்பு *mākkāppu,* பெ.(n.) தெய்வத் திருமேனிக்குச் சாத்தும் அரிசிமாச் சாத்துப்படி; rice flour mixed with water, used in the ceremonial bath of an idol.

[மாவு→மா + காப்பு.]

மாக்குசம் *mākkušam,* பெ.(n.) தேன்; honey (சா.அக.).

மாக்குமாக்கெனல் *mākku-mākkeṉal,* பெ.(n.) 1. கதறும் ஒலிக்குறிப்பு; sobbing violently. *"மாக்கு மாக்கென்று கதறும்" (மாட்டுவா.49).* 2. வலிமையோடு செய்தற் குறிப்பு; doing anything violently. *"மாக்குமாக்கென்று இடித்தான்" (உ.வ.).*

[மாக்கு + மாக்கு + எனல் (மாக்கு = ஒலிக்குறிப்புச் சொல்).]

மாக்குளித்தல் *mā-k-kaūḷittal,* பெ.(n.) மகளிர் விளையாட்டு வகை (வின்.); a kind of girl's play.

மாக்கூடம் *mākkūḍam,* பெ.(n.) பல்; tooth.

மாக்கொடி *mā-k-koḍi,* பெ.(n.) பெரிய கொடி; large climber.

[மா = பெரிய. மா + கொடி.]

மாக்கோதை¹ *mākkōdai,* பெ.(n.) கரூர் அமராவதி ஆற்றுப்படுகையில் கிடைத்த வெள்ளிக் காசில் உள்ள பெயர்; name found on the silver coin collected from *Amarāvati* river bed.

[மா + கோதை – மாக்கோதை.]

கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை (புறநா.245)யின் நாணயமாக இருக்கலாம். சேரமான் கோக்கோதை மார்பன் (அகநா.346) சேரமான் குட்டுவன்கோ (புறநா.54) போன்ற பல மன்னர்கள் கோதை என்ற பொதுப்பெயர் பெற்றுள்ளனர் (அளக்குடி.தமிழகத் தொல்லியல் சான்றுகள்).

மாக்கோதை² *mākkōdai,* பெ.(n.) ஒரு சேர அரசன் பெயருடன் வெளியிட்ட நாணயங்கள்; coins of a *Cērā* king, with name engraved. *"கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை" (புறநா.245).*

மாக்கோதை என்று பெயர் பொறித்த ஏழு நாணயங்களும் 3 முத்திரைகளும் கிடைத்துள்ளன. நாயணங்களில் எழுத்துகள் நேர் வடிவிலும்,

முத்திரைகளில் இடவலமாறியும் உள்ளன. அரசனின் தலை பொறிக்கப்பட்டுள்ளது. வெள்ளி நாணயங்கள், வட்ட வடிவம். சுமார் 1.9 செ.மீ. விட்டம், எடை 2.1 கிராம். மெல்லிய தகட்டில் அழுத்திய முறையில் செய்யப்பட்டது. கி.மு.100 முதல் கி.பி.100 வரை ஆன காலமாக இருக்கலாம்.



மாக்கோலம் *mā-k-kōlam*, பெ.(n.) நீர் சேர்த்த அரிசிமாவால் தரையிலிடும் கோலங்கள்; decorative drawings on the floor with rice flour mixed with water.

[மாவு →மா + கோலம்.]

மாகக்கல் *māga-k-kal*, பெ.(n.) கானகக்கல் (யாழ்.அக.); a kind of metallic ore.

மாகட்டகம் *māgaṭṭagam*, பெ.(n.) செந்நாயுருவி (சங்.அக.); a kind of dog-prick.

மாகடம்பு *mā-kaḍambu*, பெ.(n.) நீண்ட செடி வகை (L.); Indian lantana.

[மா = பெரிய, நீண்ட. மா + கடம்பு.]

மாகண்டம் *mā-kaṇḍam*, பெ.(n.) அதிகண்டம் (யாழ்.அக.); a division of time.

மாகத்தார் *mā-kattār*, பெ.(n.) 1. மாகர் பார்க்க; see *māgar*. *"மாகத்தார் தேவிமாரும்" (கம்பரா.திருவடிதொழுத.66).* 2. ஒரு குழுவினர் (தொல்.சொல்.167, உரை); persons belonging to a particular class.

மாகத்தி¹ *māgatti*, பெ.(n.) தில்லை மரம்; a tree (சா.அக.).

[மா + கத்தி.]

மாகத்தி² *mā-katti*, பெ.(n.) மாகந்தி, 1 பார்க்க; see *mākandi*.

மாகதம்¹ *māgadam*, பெ.(n.) 1. செங்குளவி; a red-beetle. 2. சீரகம்; cumin (சா.அக.).

[மா + கதம்.]

மாகதம்² *māgadam*, பெ.(n.) 1. மகதநாடு தொடர்பானது; that which pertains to Magadha or South Bihar. 2. மகதம்; naḍunāḍu. *"மாகதக் கொங்கர் கோமான்" (பாரத. பதினாறாம்.90).*

மாகதமுருகி *māgada-murugi*, பெ.(n.) மனமுருகி; a plant (சா.அக.).

[மாகதம் + உருகி.]

மாகந்தி *māgandi*, பெ.(n.) 1. நெல்லி (மூ.அ.); emblic murobalan. 2. அமுக்கிரா (சங்.அக.); Indian winter cherry.

மாகந்திகம் *māgandigam*, பெ.(n.) நெல்லி; a tree *emblica officinalis* (சா.அக.).

[மா + கந்திகம்.]

மாகம்¹ *māgam*, பெ.(n.) எருக்கு; a milky shrub - *calotropis gigantea* (சா.அக.).

மாகம்² *māgam*, பெ.(n.) 1. மேலிடம்; upper space. *"மாக மாடத்து" (கம்பரா. மிதிலைக். 83).* 2. விண்; sky, air, atmosphere. *"மாக*

விசும்பின்" (புறநா.35). 3. திக்கு; point of the compass. *"மாகநீள் விசும்பிடை" (சீவக. 569).* 4. முகில் (சீவக.569, உரை); cloud.

மாகயம் *māgayam,* பெ.(n.) செய்நஞ்சு (மூ.அ.); a prepared arsenic.

மாகர் *māgar,* பெ.(n.) தேவர்; celestials. *"மாகரந்தணர் மற்றுள மானுடர்" (உபதேசகா. சிவபுண்.15).*

மாகரணி *māgaraṇi,* பெ.(n.) கருங்குன்றி; black jewellers bead black variety of abrus-precatories (சா.அக.).

[மா + கரணி.]

மாகரி *mā-kari,* பெ.(n.) ஆண்யானை (யாழ். அக.); male elephant.

[மா + கரி.]

மாகலூர்க்கிழான் *māgalūr-k-kiḻāṉ,* பெ.(n.) புறப்பொருள்வெண்பாமாலைக்கு உரை எழுதியவர்; commentator for *pura-p-poruḷveṇbāmālai.*

மறுவ. சாமுண்டிதேவ நாயனார்.

[மாகலூர் + கிழான்.]

மாகறல் *māgaṟal,* பெ.(n.) செங்கல்பட்டு மாவட்டத்தில் சேயாற்றின் கரையில் உள்ள ஊர்; a town on the banks of *cēyāru* in the Cheṅgalpaṭṭu Dt. *"மஞ்சுமலி பூம் பொழிலின் மயில்கண்ட மாடமலி மாகறலுளான" (பெரியபு.330, 5, சம்பந்தர்) (இல.ஊ.பெ.).*

[மா + அறல் →மாஅறல்→மாகறல். அறல் =மணல்.]

மாகாணம் *māgāṇam,* பெ.(n.) மாநிலம் பார்க்க; see *mānilam.*

[மா + காணம். காணம் = கண்காணிக்கப் படுவது.]

மாகாணி[1] *māgāṇi,* பெ.(n.) பட்டணம்படி என்ற பெயரில் வழங்கிய முகத்தல் அளவை; madras capacity measure. *"மாகாணி அரிசி" (உ.வ.).*

மாகாணி[3] *māgāṇi,* பெ.(n.) பதினாறில் ஒன்றான கீழ்வாயிலக்கவெண்; the fraction 1/16, as a sum of māand *kāṇi.*

மாகாதிமெழுகு *māgāti-meḻugu,* பெ.(n.) அண்டமுடியினால் செய்யும் ஒரு மெழுகு; a wax like preparation prepared out of skull bone (சா.அக.).

[மாகாதி + மெழுகு.]

மாகாலன் *māgālaṉ,* பெ.(n.) சிவன்; *Śivaṉ.*

மாகாளி[1] *māgāḷi,* பெ.(n.) 1. கொற்றவை (பிங்.); Durgā.2. எழுவகைப் பெண்டிரு லொருத்தி; one of *catta-mātar* q.v. 3. களா வகை (தைலவ.தைல.); a species of bengal currant.

[மா = பெரிய. மா + காளி.]

மாகாளி[2] *mākāḷi,* பெ.(n.) மாகாளிக் கிழங்கு பார்க்க; see *mākāḷi-k-kiḻaṅgu.*

மாகாளிக்கிழங்கு *mākāḷi-k-kiḻaṅgu,* பெ.(n.) மலையில் விளையும் நன்னாரி வகை; a kind of sarsaparilla with tubers, growing in hilly tracts.

[மாகாளி[2] + கிழங்கு.]

மாகீர்த்தி *mā-kirtti,* பெ.(n.) பாண்டியர்களின் சிறப்புப் பெயர்; name speciality of *Pāṇḍiyaṉ* king. *"போர்த் திருவினையுடைய பாண்டியன் மாகீர்த்தி அவையின் கண்ணே" (தொல்.பாயி.உரை.).*

[மா + கீர்த்தி.]

மாகு *māgu,* பெ.(n.) 1. வலை; net. *"மாகு சூழவுந் தப்பிய வரிநிறமா" (பாரத.நிரை.69).* 2. வலையிற் கோத்தமணி; sinker attached to a net. *"மாகுசேர் வலை" (பெரியபு. அதிபத்த.12).*

மாகுக்கி *māgukki,* பெ.(n.) பெருவயிறு; a big stomach (சா.அக.).

[மா = பெரிய. மா + குக்கி.]

மாகுஞ்சம் *mā-kuñjam,* பெ.(n.) தேவதாரு; a kind of fragrant tree, eagle wood (சா.அக.).

[மா + குஞ்சம்.]

மாகுட்டம் *mā-kuṭṭam,* பெ.(n.) பெருங் குட்டம்; leprosy (சா.அக.).

[மா + குட்டம்.]

மாகுடி *māguḍi,* பெ.(n.) திருநாவுக்கரசர் தம் திருத்தாண்டகப் பதிகத்தில் சுட்டும் சிவன் கோயில் உள்ள ஊர் (திருத்தாண்டகப் பதிகம்.285); a town with Siva shrined, mentioned by *Tirunāvukkarašu* in his *Tiruttāṇḍaga-p-padigam.* *"புற்குடி மாகுடி தேவன்குடி நிலக்குடி" (தேவா. திருத்.285).*

மாகுணத்தி *māguṇatti,* பெ.(n.) புளி கறணைக் கொடி; a creeper.

மாகுத்தம் *māguttam,* பெ.(n.) பூனைக்காலி எனும் செடிவகை; cowhage (சா.அக.).

மறுவ. மாகுதி.

பூனைக்காலை யொத்ததாய் இருக்கும் ஒரு கொடி.

மாகுலர் *māgular,* பெ.(n.) வேடர் (நாமதீப. 156); hunters, savages.

மாகுலவர் *māgulavar,* பெ.(n.) மாகுலர் (சூடா.) பார்க்க; see *māgular.*

[மாகுலர் →மாகுலவர்.]

மாகுலி *māguli,* பெ.(n.) உயர் குடியிற் பிறந்தவள்; lady of noble birth. *"மாகுலி மந்திர சண்டிகை" (திருமந்.1216).*

மாகேசம் *māgēšam,* பெ.(n.) வரிக்கூத்து வகை (சிலப்.3:13, உரை); a masquerade dance.

மாகோசரி *māgōšari,* பெ.(n.) பேராமல்லி; a species of jasmine (சா.அக.).

[மா + கோசரி.]

மாங்கரியான் *māṅgariyāṉ,* பெ.(n.) குப்பைமேனி; rubbish plant (சா.அக.).

மாங்கன்[1] *māṅgaṉ,* பெ.(n.) படகின் முற்பாகம் போன்ற வடிவுள்ள மீன் வகை (யாழ்ப்.); a fish that resemble the prow of a boat.

மாங்கன்[2] *māṅgaṉ,* பெ.(n.) மாங்காய் பார்க்க; see *māṅgāy.*

மாங்கன்று *māṅgaṉṟu,* பெ.(n.) மாஞ்செடி (வின்.); young mango plant.

[மா + கன்று.]

மாங்காய் *māṅgāy*, பெ.(n.) 1. மாவின் காய்; unripe mango fruit. *"மாங்காய் நறுங்கடி கூட்டுவேம்" (கலித்.109, 23).* 2. நடுவில் வைரமும் சுற்றிப் பதினொரு சிவப்புக் கல்லும் பதித்துச் செய்த கழுத்தணி யுறுப்பு வகை; a mango - shaped ornamental piece in a necklace, consisiting of a central diamond surrounded by eleven rubies. 3. விலங்குகளின் விரைக்காய் (இ.வ.); testicle of quadrupeds. 4. விலங்குகளின் சிறுநீரகம்; kidney of quadrupeds.

[மா + காய்.]

மாங்காய்நாண் *māṅgāy-nāṉ*, பெ.(n.) மாங்காய்மாலை பார்க்க (S.I.I.ii, 93, 28); see *māṅgāy-mālai.*

[மா→மாங்காய் + நாண். மாவினது காய் வடிவில் செய்யப்பட்ட அணி.]

மாங்காய்ப்பட்டடை *māṅgāy-p-paṭṭaḍai*, பெ.(n.) காலணி வகை (mod.); a kind of ankle ornament.

[மா→மாங்காய் + பட்டடை.]

மாங்காய்ப்பால்[1] *māṅgāy-p-pāl*, பெ.(n.) பாலோடு முப்பழமும் சர்க்கரையுஞ் சேர்த்துக் காய்ச்சிய சாறு; boiled mixture of milk, three kind of fruits and sugar.

[மா→மாங்காய் + பால்.]

மாங்காய்ப்பால்[2] *māṅgāy-p-pāl*, பெ.(n.) மாங்காய்ப்பிசின் பார்க்க; see *māṅgāy-p-piśiṉ.*

மாங்காய்ப்பிசின் *māṅgāy-p-piśiṉ*, பெ.(n.) மாமரத்தின் பிசின்; a gum of mango tree (சா.அக.).

[மா→மாங்காய் + பிசின்.]

மாங்காய்ப்பிஞ்சு *māṅgāy-p-piñju*, பெ.(n.) மாவடு பார்க்க; see *māvaḍu*(சா.அக.).

[மா→மாங்காய் + பிஞ்சு.]

மாங்காய்ப்பூட்டு *māṅgāy-p-pūṭṭu*, பெ.(n.) பூட்டு வகை; a kind of padlock (C.E.M.).

[மா→மாங்காய் + பூட்டு.]

மாங்காய்மாலை *māṅgāy-mālai*, பெ.(n.) மாங்காய் வடிவமான உருக்கள் சேர்த்த கழுத்தணி; necklace containing mango shaped pieces.

[மா→மாங்காய் + மாலை.]



மாங்காய்வற்றல் *māṅgāy-vaṟṟal*, பெ.(n.) உப்பில் ஊறவைத்து உலர வைத்த மாவடு; dried pieces of salt pickled mango.

[மா→மாங்காய் + வற்றல்.]

மாங்காயிஞ்சி *māṅgā-y-iñji*, பெ.(n.) மாங்காய் போன்று மணமுள்ள இஞ்சி; ginger smelling like mango fruit.

[மா→மாங்காய் + இஞ்சி.]

மாங்காயீரல் *māṅgāy-īral*, பெ.(n.) சிறு நீரகம்; (C.G.) kidney.

[மாங்காய் + ஈரல்.]

ஈரல் போன்று மென்மையாயும் மா போன்று வடிவுடையதாயுமிருப்பதால் இவ்வாறழைக்கப்பட்டு இருக்கலாம்.

மாங்கிளுவை *māṅgiḷuvai,* பெ.(n.) மாம்பூ; mango balsam (சா.அக.).

மாங்கிசக்கல் *māṅgiša-k-kal,* பெ.(n.) மருந்து வகையில் ஒன்று; one of the mineral stones (சா.அக.).

மாங்கு[1] *māṅgu,* பெ.(n.) பாத்திகளில் படியும் தூள் உப்பு; a dry salt spread over the land part.

மாங்கு[2] *māṅgu,* பெ.(n.) மீன் வகை; a kind of fish.

மாங்கு[3] *māṅgu,* பெ.(n.) பிறந்த குழந்தையின் மேற் பற்றியிருக்கும் ஒரு வகைப் பசை (நாஞ்.); the sticky coating over the body of a new born baby.

மாங்குடிமருதனார் *māṅguḍi-marudaṉār,* பெ.(n.) தலையாலங்கானத்துச் செறுவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் புலவர் குழுவின் தலைவராக இருந்த பெரும்புலவர்; a great poet and chairman of the poets forum during period of *TalayālaṅgānattucceṟuveṉṟaPāṇḍiyaṉ Neḍuñceḻiyaṉ.*

[மாங்குடி + மருதனார்.]

பத்துப் பாட்டில் ஆறாம் பாடல், அகநானூற்றில் 1, குறுந்தொகையில் 3, நற்றிணையில் 2, புறநானூற்றில் 6 ஆகிய பாடல்களின் ஆசிரியர்.

மாங்கொட்டை *māṅgoṭṭai,* பெ.(n.) மாம்பழத்தின் விதை; mango seed.

[மா + கொட்டை.]

மாங்கொட்டைப்பார் *māṅgoḍai-p-pār,* பெ.(n.) வெண் சிவப்பு நிறமுடைய கல் வகைகளுள் மிக்க வலுவுடைய ஒன்றாகும்; kind of stone formed under the ground in pale red colour (சா.அக.).

[மாங்கொட்டை + பார்.]

மாச்சக்காய் *mācca-k-kāy,* பெ.(n.) மாசக்காய், 1 பார்க்க; see *māša-k-kāy.*

[மாசக்காய்→மாச்சக்காய்.]

மாச்சத்து *mā-c-cattu,* பெ.(n.) புரதச் சத்து; starch.

[மா + சத்து. Skt. சத்து. த. ஊட்டம்.]

மாச்சரேகம் *mācca-rēgam,* பெ.(n.) மிளகாய் நங்கைச் செடி; a plant.

மாச்சல் *māccal,* பெ.(n.) 1. சாவுகை (வின்.); dying, mortality. 2. மிக்க வருத்தம் (சங்.அக.); great suffering. 3. சோம்பல்; laziness, sloth. *"இந்த வேலை செய்ய இத்தனை மாச்சலா" (நெல்லை வழக்கு).*

[மாய்ச்சல்→மாச்சல். ஒ.நோ. பாய்ச்சல் → பாச்சல். ஓய்ச்சல்→ஓச்சல்.]

மாச்சாதம் *mā-c-cādam,* பெ.(n.) கூழ்; paste, gruel.

[மா + சாதம். Skt. சாதம்.]

மாச்சி[1] *mācci,* பெ.(n.) பாம்புக் கொல்லி; a plant which cures snake bites.

மாச்சி[2] *mācci,* பெ.(n.) கை விலங்கு; fetters (யாழ்ப்.).

மாச்சிலை *māccilai*, பெ.(n.) மாக்கல்; pot stone.

[மா + சிலை. சிலை = ஒலி, கல், மலை. சில் = ஒலிக்குறிப்பு. சில் → சிலை.]

மாச்சீர் *mā-c-cīr*, பெ.(n.) நேரசையால் இறும் இயற்சீர்; metrical foot of two *aśai* ending in *nēr*.

[மா + சீர்.]

மாச்சீனி *mā-c-cīṉi*, பெ.(n.) குழந்தைக்குரிய மருந்துகளில் ஒன்று; a kind of childish medicine (சா.அக.).

[மா + சீனி.]

மாச்சு[1] *māccu*, பெ.(n.) விலங்கு (வின்.); fetters.

மாச்சு[2] *māccu*, பெ.(n.) குற்றம்; fault. *"மாச்சற்ற சோதி" (திருமந்.1160).*

[மாசு → மாச்சு.]

மாச்சுக்கு *mā-c-cukku*, பெ.(n.) மாவைப் போல் நொருங்கும் வெண்மையான சுக்கு; dired ginger without fibre.

[மா + சுக்கு.]

மாச்சுமாச்சுத்தம்பலம் *māccu-māccu-t-tambalam*, பெ.(n.) பிள்ளை விளையாட்டு வகை (யாழ்ப்.); a kind of child's play.

மறுவ. கிச்சுகிச்சுதம்பலம்.

மாசக்கடன் *māša-k-kaḍaṉ*, பெ.(n.) மாதக் கடன் பார்க்க; see *māda-k-kaḍaṉ*.

[மாதக்கடன் → மாசக்கடன்.]

மாசக்காய் *māša-k-kāy*, பெ.(n.) 1. மருந்துச் சரக்கு வகை; galls. 2. செடி வகை; dyers oak. 3. நீண்ட மரவகை; british oak (சா.அக.).

மாசக்காயுப்பு *māšakkāy-uppu*, பெ.(n.) உப்பு வகை (C.E.M.); tannic acid (சா.அக.).

மாசகணி *māša-kaṇi*, பெ.(n.) ஊதாப்பூ; cuspidate leaved jungle geranium (சா.அக.).

மாசகதாசகம் *māšaga-dācagam*, பெ.(n.) பசப்புகை (இ.வ.), குழைத்து செயல்படுத்திக் கொள்ளுதல்; coaxing. *"மாசகதாசகம் பண்ணித் தன்கையிற் போட்டுக் கொண்டான்" (உ.வ.).*

தெ. மாசிகதாசிக.

மாசகந்தாயம் *māša-kandāyam*, பெ.(n.) மாதகந்தாயம் பார்க்க; see *māda-kandāyam*.

[மாதக்கந்தாயம் → மாசக்கந்தாயம்.]

மாசங்கம் *māšaṅgam*, பெ.(n.) மாதவிடாய் (வின்.); menses.

மாசச்சந்துக்கட்டு *māša-c-candu-k-kaṭṭu*, பெ.(n.) மாதச்சந்துக்கட்டு பார்க்க; see *mada-c-candu-k-kaṭṭu*.

மாசச்சித்திரம் *māša-c-cittiram*, பெ.(n.) வரகு; a millet (சா.அக.).

மாசசிவராத்திரி *māša-šiva-rāttiri*, பெ.(n.) மாதசிவனிரா பார்க்க; see *māda-šivaṉirā*.

மாசடி *māšaḍi*, பெ.(n.) வால் மிளகு; cubebs (சா.அக.).

மாசடையான் *māšadai-y-āṉ,* பெ.(n.) 1. வன்னி மரம்; suma tree - prosopis spicigera. 2. கஞ்சா; narcotic leaves of a plant (சா.அக.).

மாசத்தி *māšatti,* பெ.(n.) 1. கரு நொச்சி; a dark green ever green plant found in gardens in hedge row. 2. பூநாகம்; a small snake in flowers specially of fragrant screw pine (சா.அக.).

மாசத்துவம் *māšattuvam,* பெ.(n.) மொச்சை; field bean.

மாசதிசை *māša-tišai,* பெ.(n.) மாததிசை பார்க்க; see *māda-tišai.*

[மாததிசை→மாசதிசை.]

மாசதிர் *māšadir,* பெ.(n.) பெரிய வியப்பு; great wonder. *"மாசதிரிது பெற்று" (திவ். திருவாய்.2, 7, 10).*

[மா + சதிர்.]

மாசந்தினி *māšandiṉi,* பெ.(n.) சாம்பல் நிறச் செடிவகை; a ash coloured plant (சா.அக.).

மாசப்பிசகு *māša-p-pišagu,* பெ.(n.) மாதப்பிசகு பார்க்க; see *māda-p-pišagu.*

[மாதப்பிசகு→மாசப்பிசகு.]

மாசப்பிரவேசம் *māša-p-piravēšam,* பெ.(n.) மாதவிடாய் பார்க்க; see *māda-viḍāi.*

மாசப்பிறப்பு *māša-p-piṟappu,* பெ.(n.) மாதப்பிறப்பு பார்க்க; see *māda-p-piṟappu.*

[மாதப்பிறப்பு→மாசப்பிறப்பு.]

மாசம் *māšam,* பெ.(n.) மாதம் பார்க்க; see *mādam.*

[மாதம்→மாசம் (இ.வ.).]

மாசமாசம் *māša-māšam,* பெ.(n.) மாதாமாதம் பார்க்க; see *mādā-mādam.*

[மாதாமாதம்→மாசாமாசம்→மாசமாசம்.]

மாசயணி *māšayaṇi,* பெ.(n.) உடம்பிலே சிதைந்த அணுக்களை பிரித்து அரத்தத்திலே செலுத்துங் குழல்; lymphatics - lymphatic vessels (சா.அக.).

மாசரம் *māšaram,* பெ.(n.) கஞ்சிமேற் படரும் மேல் ஏடு; the thin creame like coaling on the surface of the rice water (சா.அக.).

மாசலன் *māšalaṉ,* பெ.(n.) கள்வன் (சங். அக.); thief.

மாசவிடாய் *māša-viḍāy,* பெ.(n.) மாதவிடாய் பார்க்க; see *māda-viḍāi.*

[மாதம்→மாசம் + விடாய்.]

மாசற்ற *māšaṟṟa,* பெ.(n.) 1. அழுக்கில்லாத; without impurities. 2. புடமிட்ட; calcined.

[மாசு + அற்ற.]

மாசற்றகதலம் *māšaṟṟa-kadalam,* பெ.(n.) இரும்பு; iron (சா.அக.).

மாசற்றசோதி *māšaṟṟa-šōdi,* பெ.(n.) சூடம், கற்பூரம்; camphor.

[மாசற்ற + Skt. சோதி.]

Skt. ஜோதி >த. சோதி.

மாசற்றநீர் *māšaṟṟa-nīr,* பெ.(n.) பனிக் குடத்து நீர்; liquor amni a discharge in woman just before delivery.

[மாசற்ற + நீர்.]

மாசற்றமலை *māšaṟṟa-malai,* பெ.(n.) நாக மலை; mountain containing zinc ore.

[மாசற்ற + மலை.]

மாசற்றரூபி *māšaṟṟa-rūbi,* பெ.(n.) கற்பூரம்; camphor (சா.அக.).

[மாசற்ற + உரூபி.]

மாசற்றலிங்கம் *māšaṟṟa-liṅgam,* பெ.(n.) கொண்டகச் சீலை; a kind of pure black stone without impurities used for making idols as lingam (சா.அக.).

[மாசற்ற + இலிங்கம்.]

மாசற்றவண்ணம் *māšaṟṟa-vaṇṇam,* பெ.(n.) அன்னபேதி; green vitriol - sulphate of iron (சா.அக.).

[மாசற்ற + வண்ணம்.]

மாசற்றவண்ணத்தூள் *māšaṟṟa-vaṇṇa-t-tūḷ,* பெ.(n.) ஏமமணல்; gold ore (சா.அக.).

[மாசற்ற + வண்ணத்தூள்.]

மாசற்றவாளம் *māšaṟṟa-vāḷam,* பெ.(n.) தூய்மை செய்த நேர்வாளம்; purified cotton seed (சா.அக.).

[மாசற்ற + வாளம்.]

மாசறு-தல் *māšaṟu-,* 15 செ.கு.வி.(v.i.) குற்றம் நீங்குதல்; to be blameless or spotless. *"மாசற்றார் கோள்" (குறள், 311). "மாசறு பொன்னே வலம்புரி முத்தே" (சிலப். 2:73).*

[மாசு = குற்றம். மாசு + அறு-தல் =நீங்கு-தல்.]

மாசனம்[1] *māšaṉam,* பெ.(n.) கஞ்சாவைக் கொண்டு செய்யும் ஒரு வகை மயக்கப் பொருள்; intoxicant prepared from Indian hemp.

மாசனம்[2] *māšaṉam,* பெ.(n.) 1. மக்கள் தொகுதி; multitude of people. *"மாசனங் கார்கெழு கடலெனக் கலந்த" (சீவக.828).* 2. மந்திரி, போற்றாளி முதலியோர்; royal conunsellors including ministers and priests. *"சிங்காசன மாசனஞ் சாதுரங்கம்" (திருநூற்.44).*

[மா + சனம்.]

மாசாத்தன் *māšāttaṉ,* பெ.(n.) ஐயனார் (சிலப்.9, 12, அரும்.); *aiyaṉār.*

[மா + சாத்தன்.]

மாசாத்தனார் *māšāttaṉār,* பெ.(n.) சிற்றூர்களில் உள்ள சிலை வடிவான அய்யனார் படிவங்களின் மூலவர்; the original source of Ayyanar in the form of terracotta or sudhai forms in the villages.

மாசாத்துவன் *māšāttuvaṉ,* பெ.(n.) வணிகருள் ஒரு குடியினர் (சிலப்.1:33, உரை); a trading family.

மாசாத்துவான் *māšāttuvāṉ,* பெ.(n.) சிலப்பதிகாரக் கதைத் தலைவன் கோவலனின் தந்தையார்; father of *Kovalaṉ,* the hero of silappathikaram. *"வருநிதி பிறர்கர்ந்தும் மாசாத்துவான் என்பான் இருநிதிக் கிழவன்" (சிலப்.1:33, உரை).*

மாசாதம் *māšādam,* பெ.(n.) கூழ்; poridge semi liquid food.

[மா + சாதம்.]

மாசாதி *māšādi,* பெ.(n.) ஆண் சாதி நான்கு வகையில் ஒன்று; one of four division of men.

[மா + சாதி.]

மாசாந்தம்¹ *māšandam,* பெ.(n.) பெரும் பொறுமை (வின்.); great patience.

[மா + சாந்தம். மா = பெரிய.]

மாசாந்தம்² *māšandam,* பெ.(n.) மாதாந்தம் பார்க்க; see *mādāndam.*

[மாதாந்தம் →மாசாந்தம் (கொ.வ.).]

மாசாந்தரம் *māšandaram,* வி.எ.(adv.) மாதந்தோறும் (கொ.வ.); monthly, every month, per mensem.

[மாதந்தோறும் → மாசந்தோறும் → மாசாந்தரம்.]

மாசாமாசம் *māšā-māšam,* பெ.(n.) மாதா மாதம் (கொ.வ.) பார்க்க; see *mādā-mādam.*

[மாதாமாதம் →மாசாமாசம்.]

மாசாலம் *māšālam,* பெ.(n.) ஓர் மாயக் காட்சி; a kind of magic.

மாசி¹ *māši,* பெ.(n.) 1. முகில்; mist, cloud. *"ஆதி சோவுடைமாசி யவனென" (பிரபுலிங். முனிவர.19).* 2. புது வரம்பு; new ridge of paddy field. 3. கடல் மீன் வகை (இ.வ.); a sea fish.

[மாய் →மாயை →மயக்கம் – பொய்த்தோற்றம். மாயை → மாசி – மயக்கத் தோற்றம், மங்கிய தோற்றம், காட்சியை மங்கலாக்கும் முகில்.]

மாசி² *māši,* பெ.(n.) 1. பதினோராம் மாதம்; the 11th solar month - February - March. *"மாசிநின்ற மாகூர் திங்கள்" (பதிற்றுப்.59, 2).* 2. மகம்² (சிலப்.3, 123, உரை) பார்க்க; see *magam.* *முகில்கள் அடர்ந்து காட்சியை மங்கலாக மயங்கத் தெரியும் மாதம்.*

மாசி³ *māši,* பெ.(n.) ஒரு வகை மீனைக் காய வைத்து இடித்துத் தயாரிக்கும் பொடி; powdered dry fish.

மாசிக்கடா¹ *māši-k-kaḍā,* பெ.(n.) மாசி மாதத்தில் மிகுதியாகக் கிடைக்கும் வைக்கோலைத் தின்று கொழுத்த காளை (இ.வ.); fat bull, as fed on straw available in plenty in the month of māši. *"மாசிக் கடாவும் மார்கழி நம்பியானும் (உ.வ.)".*

[மாசி + கடா.]

மாசிக்கடா² *māši-k-kaḍā,* பெ.(n.) சிற்றூர் தெய்வங்களுக்கு மாசி மாதத்தில் நேர்த்திக் கடனுக்காக வெட்டப்படும் ஆட்டுக்கிடா; ram to be solained during māšimonth to village deities to fulfil vow.

[மாசி + கடா.]

மாசிக்காய்¹ *māši-k-kāy,* பெ.(n.) ஒரு வகை மருத்துவ குணம் கொண்ட மரம்; a kind of herb tree, useful for medicine.

[மாசி + காய்.]

மாசிக்காய்² *māši-k-kāy,* பெ.(n.) மாசக்காய் (பதார்த்த.1015) பார்க்க; see *māša-k-kāy.*

[மாசக்காய் →மாசிக்காய்.]

மாசிக்காய்களிம்பு *māši-k-kāy-kaḷimbu,* பெ.(n.) ஓக் மரத்திலிருந்து உருவாக்கப்படும் ஒரு வகைக் களிம்பு; an ointment prepared from oak gall.

[மாசிக்காய் + களிம்பு.]

மாசிக்காயுப்பு *māši-k-kā-y-uppu,* பெ.(n.) மாசிக்காயிலிருந்து திரட்டும் உப்பு; tannic acid.

[மாசிக்காய் + உப்பு.]

மாசிக்கார் *māši-k-kār,* பெ.(n.) கார் நெல் வகை (இ.வ.); a kind of *kār* paddy.

[மாசி + கார்.]

மாசிக்கால்வார்-த்தல் *māši-k-kāl-vār-,* 4 செ.கு.வி.(v.i.) வெற்றிலைக் கொடி படர்தற்காக அகத்தி மரம் உண்டாக மாசி மாதத்தில் அகத்தி விதையைப் பதித்தல் (இ.வ.); to sow agatti seeds in the month of February - Marchfor raişing agatti plants to serve as supports for betel - vines.

[மாசிக்கால் + வார்-.]

மாசிக்கோடை *māši-k-kōḍai,* பெ.(n.) 1. மாசி மாதத்து நெல்விளைவு; summer crop of paddy as harvested in February - March. 2. வெயிற் காலப் பகுதியான மாசிமாதம்; the month of *māci,* as part of the summer season.

[மாசி + கோடை.]

மாசிகம்[1] *māšigam,* பெ.(n.) ஒரு மருந்து; a medicine.

மாசிகம்[2] *māšigam,* பெ.(n.) இறந்தோர் பொருட்டு இறந்த ஆண்டில் திங்கள்தோறும் செய்யும் சடங்கு (வின்.); monthly ceremony for a deceased person, performed during the first year after death.

மாசிகை *māšigai,* பெ.(n.) பறவை (சங்.அக.); bird.

மாசிங்கம் *māšiṅgam,* பெ.(n.) கலைமான் கொம்பு (சங்.அக.); horn of a stag.



மாசித்தகன்னி *māšitta-kaṉṉi,* பெ.(n.) நாறு கரந்தை, கொட்டைக் கரந்தை; indian globe thistle (சா.அக.).

மாசித்தண்ணீர் *māši-t-taṇṇīr,* பெ.(n.) 1. மாசி மாதத்துப் பனித் தண்ணீர்; dew water collected in the month of māši (Feb. and March). 2. பனி கலந்த தண்ணீர்; water mixed with dew water.

[மாசி + தண்ணீர்.]

மாசித்தர்மோசம் *māšittar-mōšam,* பெ.(n.) 1. பேரோசனை; a kind of peculiar stone used by siddhars while flying in the aerial regions to afford stability. 2. ஒரு வகைத் துணைச் சரக்கு; a kind of

mineral stone described in Tamil medicinal science (சா.அக.).

மாசித்திக்கல் *māšitti-k-kal,* பெ.(n.) கருங்கல்; black granite stone (சா.அக.).

மாசிதறிருக்கை *māšitaṟirukkai,* பெ.(n.) பகைவரிடத்துக் கவர்ந்த யானை, ஆ முதலிய விலங்குகளை இரப்போர்க்கு அளவிறந்து கொடுக்கும் பாசறை; camp for the bibaral distribution of animals captured from one's enemy. *"இரப்போர்க் கீதறண்டா மாசிதறிருக்கை" (பதிற்றுப்.76, 8).*

[மா + சிதறு + இருக்கை.]

மாசிப்பச்சை *māši-p-paccai,* பெ.(n.) பூச்செடி வகை (இ.வ.); a plant (சா.அக.).

[மாசி + பச்சை.]

மாசிப்பச்சோபிதம் *māši-p-paccōbidam,* பெ.(n.) மரமல்லிகை; jasmine tree (சா.அக.).

மாசிபத்திரி *māši-pattiri,* பெ.(n.) 1. வாசனைப் பூடு வகை (பதார்த்த.322); Indian absinth. 2. பூடு வகை; worm wood, aromatic herb. 3. கொட்டைக் கரந்தை வகை ((M.M.4); madras absinth (சா.அக.).

[மாசி + பத்திரி.]

மாசிமகம் *māši-magam,* பெ.(n.) மாசி வெள்ளுவாவும், மக நாண் மீனும் கூடிய நன்னாள் (வின்.); the full-moon day in māši, when the moon is generally in magam.

[மாசி + மகம்.]

மாசிமழை *māši-maḻai,* பெ.(n.) 1. மாசித் திங்களில் உதிரும் மாம்பூக்கள்; mango flowers, as falling in māši. *"மாசி மழை யுருட்டு".* 2. மாசி மாதத்தில் பெய்யும் மழை; rain of māši month.

[மாசி + மழை.]

மாசியம்[1] *māšiyam,* பெ.(n.) மாசிகம் (வின்.) பார்க்க; see *māšigam.*

மாசியம்[2] *māšiyam,* பெ.(n.) மாசனம் (இ.வ.) பார்க்க; see *māšaṉam.*

மாசிலம் *māšilam,* பெ.(n.) மனோசிலை; red orpiment impure bisphurate of arsenic (சா.அக.).

மாசிலாமணி *māšilā-maṇi,* பெ.(n.) 1. மறுவற்ற மணி; spotless gem. 2. கடவுள்; god of *Šivaṉ.*

[மாசு = குற்றம். மாசு + இலா + மணி.]

மாசினி *māšiṉi,* பெ.(n.) மீன் வகை; a kind of fish. *"மாசினி செங்கண்ணன்" (பறாளைப். பள்ளு.74).*

மாசு *māšu,* பெ.(n.) 1. மறு; spot. *"உள்ள மாசறக் களைவோர்" (ஞானா.39, 14).* 2. அழுக்கு; stain, taint, tarnish. *"மாசி றாவுடை" (திருமுரு.138).* 3. குற்றம்; defect, fault, flaw. *"மாசறு காட்சியவர்க்கு" (குறள், 352).* 4. கெடுநேர்ச்சி (விபரீதம்) (சி.சி. அளவை.2); perversity. 5. கருமை (யாழ். அக.); blackness. 6. இருள்; darkness. *"மடியென்னு மாசூர" (குறள், 601).* 7. மேகம் (பிங்.); cloud. 8. கரிசு; sin. 9. தீமை; evil. *"மாசெனக் கெய்தவும்" (கம்பரா. சிறப்புப்.6).* 10. தூளி; dust. *"நெரிந்தன மாசுண நெற்றியே" (தக்கயாகப்.24).* 11. பால் வீதி

மண்டலம்; the milky way. 12. சிறுமை, இழிவு (சூடா.); trifle. 13. மெய்ம்மலம் (பிங்.); ordure. 14. நஞ்சுக் கொடி; after birth. 15. பித்தநீர் (பிங்.977); bile. 16. கோழை (அக.நி.); phlegm. 17. கண்ணின் காசபடலம்; film in the eye. *"மாசு மிகுதியாற் கண்ணொளி யிழந்தார்" (சி.போ.பா.8, 4, பக்.186, சுவாமிநா.).* 18. வலைவடம் (நாமதீப.448); cord of a net.

தெ. மாசி; க., ம. மாசு; து. மாயெ.

[மாய்–தல் = மறைதல், மாய்→மாயம் = திடுமறைவு, மயக்கம், நிலையின்மை. மாய்→மாயை = பொய்த்தோற்றம், பிழைத்தோற்றம். மாயை→மாசி = மயக்கத் தோற்றம். மாசி→மாசு = மறு, இருள், தீமை.]

மாசுகம் *māšugam,* பெ.(n.) பீர்க்கு; ribbed gound.

மாசுகி *māšugi,* பெ.(n.) மிளகாய்; chilly (சா.அக.).

மாசுணம் *māšuṇam,* பெ.(n.) 1. பெரும் பாம்பு; rock - snake. *"துஞ்சு மரங் கடுக்கு மாசுணம் விலங்கி" (மலைபடு.261).* 2. பாம்பு; snake. *"மாசுண மகிழ்ச்சி மன்றல்" (சீவக.189). "ஐந்தலைய மாசுணங் கொண்டு" (தேவா.257, 3).*

மாசுணி *māšuṇi,* பெ.(n.) நாய்ப் பாகல்; a creeper (சா.அக.).

மாசுதீர்ப்பான் *māšu-tīrppāṉ,* பெ.(n.) மயிர் வினைஞன் (சது.); barber.

[மாசு + தீர்ப்பான்.]

மாசுபடர்தல் *māšu-paḍar,* பெ.(n.) கண்ணில் படருமோர் நோய்; an eye disease marked by growth of film (சா.அக.).

[மாசு + படர்தல்.]

மாசுமறு *māšu-maṟu,* பெ.(n.) குற்றம் (பதார்த்த.870); spot, fault.

[மாசு + மறு.]

மாசுமறுவற்ற *māšu-maṟuvaṟṟa,* கு.பெ.எ. (adj.) 1. எந்த வகை அழுக்கும் இல்லாத, தூய்மையான; pure. 2. எந்த வகைக் களங்கமும் இல்லாத; blemishless.

[மாறு + மறு + அற்ற.]

மாசுரசுரம் *māšura-šuram,* பெ.(n.) அம்மைச் சுரம்; pox fever (சா.அக.).

மாசுவாங்கி *māšu-vāṅgi,* பெ.(n.) மையொற்றுந் தாள் (பாண்டி.); blotting paper.

[மாசு + வாங்கி.]

மாசூரசுரம் *māšūra-šuram,* பெ.(n.) ஒரு வகைக் காய்ச்சல் (பைஷஜ.); cruptive fever.

மாசெடி *mâšeḍi,* பெ.(n.) வால்மிளகு; cubebs (சா.அக.).

மாசேனன் *māšēṉaṉ,* பெ.(n.) 1. கடவுள் (யாழ்.அக.); god. 2. அருகன் (சூடா.); Arhat. 3. குமரக் கடவுள் (யாழ்.அக.); Lord *Murugaṉ.* 4. திருமால் (யாழ்.அக.); *Tirumāl.*

மாசேனை *māšēṉai,* பெ.(n.) மிகுதி; surplus, mickle much.

[மா + சேனை.]

மாசை *māšai,* பெ.(n.) 1. பொன்; gold. *"மாசை மாக்கடல்" (சீவக.911).* 2. உழுந்து நிறையளவுள்ள பழைய நாணய வகை; an ancient coin of the weight of a grain of

māsa or blackgram. *"மாசையொடு தக்கணை யுதவி" (பெருங். உஞ்சைக்.39, 11).*

மாஞ்சாதம் *māñjādam,* பெ.(n.) அளறு வகை (சி.போ.பா.2, 3, பக்.204); a hell.

மாஞ்சி¹ *māñji,* பெ.(n.) சடாமாஞ்சி; spikenard herb. *"துத்தமாஞ்சி" (பெருங். மகத.17, 147).* 2. மணமுள்ளப் பண்ட வகை (திவா.); a fragrant substance.

மாஞ்சி² *māñji,* பெ.(n.) 1. சணல்; sunn-hemp. 2. ஓர் இசை வகை (சங்கீத.காய.21); (mus.) a specific melody type.

மாஞ்சிரோகணி *māñji-rōgaṇi,* பெ.(n.) கண்புகைச்சலை நீக்கும் ஓர் பூண்டு; a herb useful for eye diseases (சா.அக.).

மாஞ்சில் *māñjil,* பெ.(n.) மாஞ்சி, 1 (யாழ்.அக.) பார்க்க; see *māñji.*

மாஞ்சோறு *māñjōṟu,* பெ.(n.) கடலடிச் சேறு (செங்கை.மீன.); under sea marsh.

மாஞாலம்¹ *māñālam,* பெ.(n.) பெரிய நிலம்; earth.

[மா + ஞாலம்.]

மாஞாலம்² *māñālam,* பெ.(n.) 1. மாசாலம்; a kind of magical art. 2. பேரூமத்தை; a big variety of dhatura (சா.அக.).

[மா + ஞாலம்.]

மாட்சி *māṭci,* பெ.(n.) 1. உயர் தன்மை; glory, greatness. *"எனை மாட்சித் தாகியக் கண்ணும்" (குறள், 750).* 2. விளக்கம்; clearness, clarity. *"மூலவோலை மாட்சியிற் காட்ட வைத்தேன்" (பெரியபு.தடுத்தாட்.56).* 3. அழகு; beauty. *"நூலோர் புகழ்ந்த மாட்சிய.... புரவி" (பெரும்பாண்.487).* 4. இயல்பு; nature. *"மரபுநிலை தெரியா மாட்சியவர்" (தொல்.மரபி.648).*

[முல் (பொருந்தற் கருத்துவேர்) → மல் → மால். மால் = பெருமை, பெருமையுடையவன், மலை, வளமை. மால் → மாள் → மாளிகை = மாடமுள்ளவீடு, பெருவீடு, அரண்மனை, கோயில். மாள் → மாண் → மாணுதல் = மிகுதல், பருத்தல், நிறைதல், நன்றாதல், சிறத்தல். மாண் → மாட்சி (வே.க.4:30).]

மாட்சிகம் *māṭcigam,* பெ.(n.) ஓர் வகைத் தேன்; a kind of honey secreted by tawny bee's and considered best (சா.அக.).

[மாட்சி → மாட்சிகம்.]

மாட்சிகற்பம் *māṭci-kaṟpam,* பெ.(n.) நிமிளை பற்பம்; calcined pyrite (சா.அக.).

மாட்சிமை *māṭcimai,* பெ.(n.) மாட்சி, 1 பார்க்க; see *māṭci. "மாட்சிமை யுடையோர் கொடுக்கு மரபு போல" (சிலப்.16 : 23, உரை).*

[மாட்சி → மாட்சிமை (வே.க.4:30).]

மாட்டடி¹ *māṭṭaḍi,* பெ.(n.) மாட்டின் அடி வைப்பு (வின்.); step or tract of cattle.

[மாடு → மாட்டு + அடி. மாட்டின் அடி.]

மாட்டடி² *māṭṭaḍi,* பெ.(n.) கடுமையான அடி (வின்.); severe blow, as in beating an ox.

[மாடு → மாட்டு + அடி. மாட்டை அடிப்பதைப் போன்று கடுமையான அடி.]

மாட்டம் *māṭṭam,* பெ.(n.) சீரகம்; cumin seed (சா.அக.).

மாட்டல்¹ *māṭṭal,* பெ.(n.) 1. மூட்டல் (சூ.நிக. 9-29); joint. 2. வருத்தல் (ஐங்குறு.); sympathise.

[மாட்டு → மாட்டல்.]

மாட்டல்² *māṭṭal,* பெ.(n.) பெண்கள் அணியும் அணி (இ.வ.); a woman's ornament.

[முல் → முள் → மூள் → மூட்டு → மாட்டு → மாட்டல்.]



மாட்டறி-தல் *māṭṭaṟi-,* 2 செ.கு.வி.(v.i.) சான்றுக் கையெழுத்திடுதல்; to sign as witness. *"சேனை யோக நாச்சண்ணனும் மாட்டறிந்தது" (S.I.I.iv, 134).*

[முல் →முள் →மூள் →மூட்டு →மாட்டு+அறி-.]

மாட்டறை-தல் *māṭṭaṟai-,* 2 செ.கு.வி. (v.i.) ஆவண முதலியவற்றின் பின்பக்கத்திற் குறிப்பெழுதுதல் (யாழ்ப்.); to endorse, as on the back of a note.

[மாட்டு + அறை-.]

மாட்டாங்காரப்பயல் *māṭṭāṅgāra-p-payal,* பெ.(n.) மாட்டுக்காரப்பயல் (வின்.) பார்க்க; see *māṭṭu-k-kāra-p-payal.*

[மாட்டுக்காரப்பயல் → மாட்டாங்காரப்பயல் (கொ.வ.)]

மாட்டாங்கோல் *māṭṭāṅgōl,* பெ.(n.) 1. மாட்டை யோட்டுங் கழி (வின்.); goad, or stick used in driving cattle. 2. மாட்டுக்கோல் பார்க்க; see *māṭṭu-k-kōl.*

[மாட்டு + கோல் = மாட்டுக்கோல் →மாட்டாங்கோல் (கொ.வ.).]

மாட்டாதார்¹ *māṭṭādār,* பெ.(n.) வன்மை யில்லாதவர் (திவா.); incapable, incompetent persons.

[மாட்டுதல் = இயலுதல். மாட்டு →மாட்டாதார்.]

மாட்டாதார்² *māṭṭādār,* பெ.(n.) அகப்படாதோர், சிக்கிக்கொள்ளாதோர்; those who entangled.

[மாட்டுதல் = சிக்குதல். மாட்டு →மாட்டாதார்.]

மாட்டாமை¹ *māṭṭāmai,* பெ.(n.) இயலாமை (தண்டி.பொ அணி.69, சூ.உரை); incapable.

[முல் → முள் →மூள் →மாள் →மாட்டு. ஒ.நோ. நீள் →நீட்டு. மாளுதல் = முடிதல், செய்யமுடிதல். மாட்டுதல் = முடித்தல், செய்து முடித்தல். மாட்டு →மாட்டாமை. 'ஆ' எதிர்மறை இடைநிலை.]

மாட்டாமை² *māṭṭāmai,* பெ.(n.) மாட்டிக் கொள்ளாமை; not tangled, not catch.

மாட்டார் *māṭṭār,* பெ.(n.) மாட்டாதார் பார்க்க; see *māṭṭādār. "வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே" (அருட்பா. vi. அருள் விளக்க.39).*

[மாட்டுதல் = இயலுதல். மாட்டு = இயலுதல். மாட்டு →மாட்டார். 'ஆ' எதிர்மறை இடைநிலை. ஆர் = பலர்பாலீறு.]

மாட்டி *māṭṭi,* பெ.(n.) 1. அழித்து (முல்லை.); destroy. 2. எரித்து (சிறுபா.); burn up. 3. பொருத்தி (வழ.); joining.

மாட்டிக்கொடு-த்தல் *māṭṭi-k-koḍu-,* 4 செ.குன்றாவி.(v.t.) மாட்டிவிடு¹- பார்க்க; see *māṭṭi-viḍu-.*

மாட்டிக்கொள்(ளு)-தல் *māṭṭi-k-koḷ-,* 16 செ.கு.வி.(v.i.) சிக்கிக் கொள்ளுதல்; to be entangled, ensnared or involved.

[முள்→மூள்→மூட்டு.மூட்டுதல் =பொருந்துதல். மூட்டு→மாட்டு. மாட்டுதல் = கொளுவுதல், தீப்பற்ற வைத்தல். மாட்டு→மாட்டி (மு.தா.194). மாட்டி + கொள்(ளு)-,]

மாட்டிடையன் *māṭṭiḍaiyaṉ,* பெ.(n.) மாடு மேய்க்கும் இடையன்; cowherd.

[மாடு→மாட்டு + இடையன்.]

மாட்டிலையான் *māṭṭilaiyāṉ,* பெ.(n.) பெரிய ஈ (வழக்குச் சொல்); fly big in size.

[மாடு = விலங்கு. மாடு→மாட்டு + இலையான்.]

மாட்டீ *māṭṭī,* பெ.(n.) பெரிய ஈ; big size fly.

[மாடு = விலங்கு. மாடு→மாட்டு+ ஈ.]

மாட்டிவிடு[1]-தல் *māṭṭi-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. தொழுக்கட்டை முதலியவற்றில் சேரவிணைத்தல்; to put in stocks, to shackle. 2. அகப்படுத்துதல்; to involve one in, to subject one to.

[முள்→மூள்→மூட்டு.மூட்டுதல்= பொருந்துதல். மூட்டு→மாட்டு→மாட்டி (மு.தா.194). மாட்டி + விடு.]

மாட்டிவிடு[2]-தல் *māṭṭi-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) போக்குதல்; to remove. *"மாட்டிவிடு நம்மனத்துமை" (திருவாய் மொழி.நூற்.83).*

[முள்→மூள்→மூட்டு→மாட்டு. மாட்டுதல் = கொளுவுதல், தீப்பற்ற வைத்தல். மாட்டு→மாட்டி + விடு (மு.தா.194). மாட்டும் பொருள் மாட்டப்பட்டதன் வழி போகும் இயல்புடையது.]

மாட்டிவை-த்தல் *māṭṭi-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) மாட்டிவிடு[1]- (வின்.) பார்க்க; see *māṭṭi-viḍu-.*

[மாட்டுவிடு→மாட்டிவை-.]

மாட்டிறக்கம் *māṭṭirakkam,* பெ.(n.) மாடு முதலியவை ஆற்றைக் கடந்து செல்லுதற்குரிய இறங்கு துறை (வின்.); ford across a river for cattle to cross.

[மாடு + இறக்கம்.]

மாட்டிறைச்சி *māṭṭiraicci,* பெ.(n.) மாட்டுக் கறி; beef.

[மாடு + இறைச்சி.]

மாட்டு[1]-தல் *māṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. இணைத்தல் (சூடா.); to fasten on, button, tackle, hook. *"சிறுபொறி மாட்டிய பெருங் கல்லடாஅர்" (நற்.19).* 2. தொடுத்தல்; to fix, attach. *"அம்பினை மாட்டியென்னே" (கம்பரா. நிகும்பலை.96).* 3. செருகுதல்; to put in, thrust, as fuel. *"அடுப்பினின் மாட்டு மிலங்ககில்" (காஞ்சிப்பு.நகர்.73).* 4. பயன்படுத்துதல்; to use, bring into play. *"வள்ளறான் வல்லவெல்லா மாட்டினன்" (சீவக.1274).* 5. மனத்திற் கொள்ளுதல்; to grasp, comprehend. *"சொன்மாலை யீரைந்து மாட்டிய சிந்தை" (திருவிசை. கருவூ.8, 10).* 6. கற்றுவல்லனாதல்; to be proficient in. *"கல்வியை மாட்டாராயினும்" (புறநா.57, உரை).* 7. அடித்தல்; to beat violently. *"வின்முறிய மாட்டானோ" (தனிப்பா.i, 41, 80).* நன்றாய் மாட்டுமாட்டென்று மாட்டிவிட்டான் (உ.வ.). 8. விளக்கு முதலியன கொளுத்துதல்; to kindle as a fire, to light, as a lamp. *"நெய் பெய்து மாட்டிய சுடர்" (குறுந்.398).* 9. தீப்பற்றவைத்தல்; to burn. *"விறகிற்... செந்தீ மாட்டி" (சிறுபாண்.156).*

மாட்டு²-தல் *māṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கூடியதாதல்; to be able. *"தேவரு நண்ணவு மாட்டா விழுப்பொருளை" (திருவாச.20, 9).* 2. வலிபெறுதல்; to be competent, to have necessary strength. *"மாட்டா மனிதன்றன்" (கம்பரா.அதிகா.270).*

[முள் (பொருந்தற் கருத்து வேர்) →மூள்→ மூட்டு. மூட்டுதல் = பொருந்துதல். மூட்டு →மாட்டு (மு.தா.194). மாள்→மாட்டு (பி.வி. ஒ.நோ. நீள் →நீட்டு. மாளுதல் = முடிதல், செய்ய முடிதல். மாட்டுதல் = முடித்தல், செய்து முடித்தல் (வே.க.4:62)]

மாட்டு³-தல் *māṭṭu-,*5 செ.குன்றாவி.(v.t.) 1. மாளச் செய்தல்; to kill. *"மாட்டிய பிள்ளை மறவர் நிறந் திறந்து" (பு.வெ.2, 9).* 2. அழித்தல்; to destroy. *"வேட்டுப் புழையருப்ப மாட்டி" (முல்லைப்.26).* 3. போக்குதல்; to remove, to cause, to disappear. *"மாயை யவுயவ மாட்டி" (ஞானா. 58, 12).*

[முள்→மூள்→மூட்டு→மாட்டு-தல்.]

மாட்டு⁴ *māṭṭu,*பெ.(n.) 1. அகன்று கிடப்பினும் அணுகிய நிலையிற் கிடப்பினும் பொருள் முடியுமாற்றாற் கொண்டு கூட்டிச் சொல் முடிபு கொள்ளும் முறை; a mode of construction in verse, which consists in taking together words connected in sense, whether far removed from each other or in close proximity. *"அகன்று பொருள் கிடப்பினும்..... அணுகிய நிலையினும் இயன்று பொருள் முடியத் தந்தன ருணர்த்தல் மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்" (தொல். பொருள்.522).* 2. அடி (இ.வ.); blow, stroke.

[முள்→மூள்→மூட்டு→மாட்டு.]

மாட்டு⁵ *māṭṭu,*பெ.(n.) சொல்; word. *"எனதென்ற மாட்டின்" (சி.போ.3:2).*

[முள்→மூள்→மூட்டு→மாட்டு.]

மாட்டுஅயிரை *māṭṭu-ayirai,*பெ.(n.) பெரிய அயிரை மீன் (மீன.பொ.வ.); a kind of small fish.

[மாடு + அயிரை. மாடு = பெரிய.]



மாட்டுக்கட்டை *māṭṭu-k-kaṭṭai,*பெ.(n.) மாடு கட்டுந் தறி (இ.வ.); stake for tying cattle.

[மாடு + கட்டை.]

மாட்டுக்கறை *māṭṭu-k-kaṟai,*பெ.(n.) வரி வகை (S.I.I.v, 499); a tax.

மாட்டுக்காரப்பையன் *māṭṭukkāra-p-paiyaṉ,*பெ.(n.) 1. மாடு மேய்ப்பவன் (இ.வ.); neat - herd, cow-boy. 2. பயனற்றவன (வின்.); worthless fellow.

[மாட்டுக்காரன் + பையன்.]

மாட்டுக்காரன் *māṭṭu-k-kāraṉ,*பெ.(n.) 1. மாட்டிற்குரியவன்; owner of cattle. 2. மாடு மேய்ப்பவன் (கொ.வ.); one who tends cattle.

[மாடு + காரன். காரன் = உடைமையீறு.]

மாட்டுக்காலிற்போடு-தல் *māṭṭu-k-kāliṟ-pōḍu-*,19 செ.குன்றாவி.(v.t.) களத்திற் சூடடித்தல் (நாஞ்.); to tread sheaves on the threshing - floor, by using cattle.

[மாட்டுக்காலில் + போடு-.]

மாட்டுக்கிடை *māṭṭu-k-kiḍai,* பெ.(n.) 1. மாட்டுமந்தை (இக்.வ.); herd of cattle. 2. மாட்டுக்கொட்டில் (வின்.) பார்க்க; see *māṭṭu-k-koṭṭil.*

[மாடு + கிடை.]

மாட்டுக்கிடைபோடு-தல் *māṭṭu-k-kiḍai-pōḍu-,* பெ.(n.) உரத்திற்காக மாட்டு மந்தையை நிலத்தில் நிறுத்தி வைத்தல்; herd of cattle to be waive due to manure.

[மாடு→மாட்டு + கிடை + போடு-,]

மாட்டுக்குளம்பு[1] *māṭṭu-k-kuḷambu,* பெ.(n.) மாட்டின் பாதநுனி; toa of bulls.

[மாடு→மாட்டு + குளம்பு.]



மாட்டுக்குளம்பு[2] *māṭṭu-k-kuḷambu,* பெ.(n.) பச்சிலைக் கொடி; cow's hoof (சா.அக.).

[மாடு + குளம்பு. மாட்டின் குளம்பு போன்ற வடிவுடையது.]

மாட்டுக்கொட்டகை *māṭṭu-k-koṭṭagai,* பெ.(n.) மாட்டுக்கொட்டில் (வின்.) பார்க்க; see *māṭṭu-k-koṭṭil.*

[மாட்டுக்கொட்டில்→மாட்டுக்கொட்டகை.]

மாட்டுக்கொட்டில் *māṭṭu-k-koṭṭil,* பெ.(n.) மாடு கட்டுமிடம் (வின்.); cow-shed, cattle shed.

[மாடு + கொட்டில்.]

மாட்டுக்கொம்பு *māṭṭu-k-kombu,* பெ.(n.) 1. மாட்டின் கொம்பு; horn of cattle. 2. கடல்படு பயிரிற் சிறியது. அணிகலனாய்க் கோத்து அணிதற்குரியது (முகவை. மீன்.); sea-small plant which is used on ornament.

[மாடு + கொம்பு.]

மாட்டுக்கொம்பு[2] *māṭṭu-k-kombu,* பெ.(n.) ஓர் மருந்துச் சரக்கு; horns of cattle, a kind of natural body.

மாட்டுக்கொழுப்பு *māṭṭu-k-koḻuppu,* பெ.(n.) மாட்டின் நிணம்; tallow.

[மாடு + கொழுப்பு.]

மாட்டுக்கோல் *māṭṭu-k-kōl,* பெ.(n.) மாடோட்டுஞ் சாட்டைக் கழி; goad or stick used in driving cattle.

[மாடு→மாட்டு +கோல்.]

மாட்டுச்சாபிகம் *māṭṭu-c-cābigam,* பெ.(n.) கோரோசினை; bezor orientale (சா.அக.).

மாட்டுச்சிணி *māṭṭu-c-ciṇi,* பெ.(n.) மாட்டு நாற்றம் (வின்.); the smell of cattle.

மாட்டுச்செறையா *māṭṭu-c-ceṟaiyā,* பெ.(n.) மிகப்பெரிய செறையா மீன் (முகவை.மீன.); a big size of *ceṟaiya* fish.

மாட்டுச்சோளி *māṭṭu-c-cōḷi,* பெ.(n.) மாட்டின் நெற்றிப் பட்டையில் கோத்துக் கட்டுதற்குரிய சோளி (தஞ்சை.மீன.); forehead ornament arround the cattle made up of oyster.

[மாடு → மாட்டு + சோளி]



மாட்டுண்ணி *māṭṭuṇṇi,* பெ.(n.) பெரிய அளவிலான உண்ணி; acarus, tick on dogs, sheep and cattle which is big in size.

[மாடு + உண்ணி.]

மாட்டுணி *māṭṭuṇi,* பெ.(n.) மாட்டுண்ணி பார்க்க; see *māṭṭuṇṇi.*

[மாட்டுண்ணி→மாட்டுணி.]

மாட்டுத்தனம் *māṭṭu-t-taṉam,* பெ.(n.) விலங்கின் தன்மை (வின்.); bruitishness.

[மாடு + தனம். மாடு = விலங்கு. தனம் = தன்மையைக் குறிக்கும் பெயரீறு.]

மாட்டுத்தாவணி *māṭṭu-t-tāvaṇi,* பெ.(n.) மாடுகளை வாங்கவும், விற்கவும் உரிய இடம்; cattle fair.

[மாடு + தாவணி. தாழ்வு →தாவு = வாழிடம், தங்குமிடம். தாவு →தாவணி.]

கோயில் நகரமாம் மதுரை மாநகரில் வெளியூர் பேருந்துகள் நிற்குமிடத்திற்கு மாட்டுத் தாவணி என்று அழைக்கப்படுகிறது. ஒரு காலத்தில் மாடுகள் வாங்கவும், விற்கவும் உரிய இடமாக இருந்தமையால் இப்பெயர் பெற்றுள்ளது எனலாம்.

மாட்டுத்தாள் *māṭṭu-t-tāḷ,* பெ.(n.) கரட்டுத் தாள்; coarse paper of மட்டித்தாள்.

[மட்டித்தாள்→மாட்டுத்தாள்.]

மாட்டுத்தும்பு *māṭṭu-t-tumbu,* பெ.(n.) மாடு கட்டுவதற்கான கவையுள்ள புரிக்கயிறு; tether for cattle.

[மாடு + தும்பு.]

மாட்டுநீறு *māṭṭu-nīṟu,* பெ.(n.) ஒரு பொதிமாடு சுமக்கக் கூடிய நான்கு கலங்கொண்ட சுண்ணாம்பு நீறு (G.Tj. D.I.134); four kalam of quick -lime, as one bullock - load.

[மாடு + நீறு. நூறு→நூள். நூறு→நீறு.]

மாட்டுப்பட்டி *māṭṭu-p-paṭṭi,* பெ.(n.) மாடடைக்குங் கொண்டித் தொழு; cattle pond. *"மாட்டுப்பட்டிக் கோரைந்து பணமென்று" (சரவண.பணவிடு.110).*

[மாடு + பட்டி.]

மாட்டுப்பல் *māṭṭu-p-pal,* பெ.(n.) அகன்று பெரியதான பல்; large teeth.

[மாடு + பல்.]

மாட்டுப்பறங்கிக்காய் *māṭṭu-p-paṟaṅgi-k-kāy*, பெ.(n.) சாம்பற் பூசணி; ash gourd. *"மாட்டுப் பறங்கிக்காய்..... தினங் கறியாய்க் கூட்டிக் கொண்டு" (விறலிவிடு.246).*

[மாடு + பறங்கிக்காய்.]



மாட்டுப்பிலாச்சை *māṭṭu-p-pilāccai*, பெ.(n.) பெரிய பிலாச்சை மீன்; a large size of *pilāccai* fish (சா.அக.).

[மாடு + பிலாச்சை.]

மாட்டுப்புத்தி *māṭṭu-p-putti*, பெ.(n.) மாட்டறிவு பார்க்க; see *māṭṭaṟivu.*

*[மாடு + புத்தி. **Skt.** புத்தி. த. அறிவு.]*

மாட்டுப்பூசணி[1] *māṭṭu-p-pūšaṇi*, பெ.(n.) நஞ்சு நீங்குவதற்காகக் கொடுக்கும் ஒருவகைப் பழம்; a kind of fruit given as antidote against poison.

[மாட்டு + பூசினி.]

மாட்டுப்பூசணி[2] *māṭṭu-p-pūšaṇi*, பெ.(n.) சாம்பற்பூசணி பார்க்க; see *šāmbar-pūšaṇi.*

[மாடு + பூசணி.]

மாட்டுப்பெண் *māṭṭu-p-peṇ*, பெ.(n.) மருமகள்; daughter-in-law.

[மணாட்டுப் பெண்→மாட்டுப் பெண்.]

மாட்டுப்பொங்கல் *māṭṭu-p-poṅgal*, பெ.(n.) சுறவத்திங்கள் முதல்நாள் வரும் பொங்கல் நாளையடுத்து வருவதும் கால்நடைகளின் நன்மையைக் கருதிப் பொங்கலிடப் படுவதுமான திருநாள்; festival of ceremonial boiling of rice performed on the second day of the month of *Šuṟavam* in order to ensure prosperity of cattle.

[மாடு + பொங்கல்.]

மாட்டுமழு *māṭṭu-maḻu*, பெ.(n.) சூடுபோடுகை; branding.

[மாட்டு + மழு.]

சிற்றூர்த் தெய்வங்களுக்கு நேர்ச்சிக்கடனாக விடப்படும் மாடுகளுக்கு அடையாளமாக காய்ச்சிய இரும்பினால் மாட்டின் மீது சூடு போடுவதும், மந்தை மாடுகளில் தங்களுடையது என அடையாளம் காணுவதற்காக சூடுபோடுவதும், சிற்றூர் மக்களிடையே காணப்படும் பழக்கமாகும்.

மாட்டுமீன் *māṭṭu-mīṉ*, பெ.(n.) மாடு போன்று தலையில் கொம்புடைய ஒரு வகைக் கடல் மீன்; coffer fish with two horn like growths on the head, it is a sea fish.

[மாடு→மாட்டு + மீன்.]

மாட்டுமுலைக்காளான் *māṭṭu-mulai-k-kāḷāṉ*, பெ.(n.) பசுவின் மடிபோன்றிருக்கும் காளான் வகை (வின்.); a kind of fungus, as resembling the teat of a cow's udder.

[மாட்டுமுலை + காளான்.]

மாட்டுவண்டி *māṭṭu-vaṇḍi,* பெ.(n.) ஒரு மாடு அல்லது இரு மாடுகள் இழுத்துச் செல்லும் மரத்தால் செய்த வண்டி; bullock cart.

[மாடு + வண்டி.]



மாட்டுவலை *māṭṭu-valai,* பெ.(n.) வலை வகை, பெருவலையின் ஒரு உறுப்பாகப் பிணைக்கப்பட்டிருக்கும் வலை; a kind of net, a part of net in large net.

[மாட்டு + வலை.]

மாட்டுவாகடம் *māṭṭu-vāgaḍam,* பெ.(n.) மாட்டின் நோய்களைப் பற்றிக் கூறும் மருத்துவ நூல்; indigenous veterinery science.

மாட்டுவாரம் *māṭṭu-vāram,* பெ.(n.) குடியானவன் உதவும் உழுவு மாட்டுக்குத் தக்கபடி மேல்வாரக்காரன் அவனுக்குக் கொடுக்கும் விளைச்சலின் பங்கு (இ.வ.); system of sharing nañja produce in which the tenent's portion is determined by the number of yoke of oxen that he furnishes.

[மாட்டு + வாரம்.]

மாட்டுவி-த்தல் *māṭṭuvi-,* 4 செ.குன்றாவி. (v.t.) அழியச் செய்தல்; to cause to be ruined. *"மதுவனந் தன்னை யின்னே மாட்டுவித்தனை நீ யென்னா" (கம்பரா. திருவடி.23).*

[மாட்டு→மாட்டுவி-.]

மாட்டெறி[1]-தல் *māṭṭeṟi-,* 2 செ.கு.வி. (v.i.) ஏறிட்டுக் கூறுதல்; to ascribe, attribute, to apply. *"பரத்வத்தை அவன் தலையிலே மாட்டெறிந்தார்" (ஈடு.2, 2, 4).*

மாட்டெ[2]-றிதல் *māṭṭeṟi-,* பெ.(n.) 1. மாட்டு[3], 1 பார்க்க; see *māṭṭu.* 2. மாட்டெறிந் தொழுகல் பார்க்க; see *māṭṭeṟin-doḻugal.* 3. ஆவணத்தில் மேற்புறத்தே விவரக் குறிப்பு எழுதுகை (வின்.); docketing on a deed.

[மாட்டு + எறிதல்.]

மாட்டெறிந்தொழுகல் *māṭṭeṟin-doḻugal,* பெ.(n.) முப்பத்திரண்டு உத்திகளுள் ஒன்றானதும், ஒரு நூற்பாவிற் கூறிய நெறியை அதனை யொத்த நூற்பாவிதரும் இணைத்துக் கொள்வதுமான உத்தி (நன்.14); (Gram.) application of the principle of one *sūtra,* to another when their subjects are similar, one of 32 utti, (q.v.).

[மாட்டெறிந்து + ஒழுகல்.]

மாட்டேற்று *māṭṭēṟṟu,* பெ.(n.) 1. மாட்டெறிந் தொழுகல் பார்க்க; see *māṭṭeṟindoḻugal.* 2. மாட்டெறிதல் பார்க்க; see *māṭṭeṟidal.* 3. குறிப்பாகக் கூறுகை (வின்.); allusion, reference.

மாட்டேறு *māṭṭēṟu,* பெ.(n.) மாட்டெறிதல், 1, 2 (நன்.164, உரை) பார்க்க; see *māṭṭeṟidal.*

மாடக்கனி *māḍa-k-kaṉi,* பெ.(n.) தேவாங்கு; sloth.

மாடக்கனிவாய் *māḍa-k-kaṉivay,* பெ.(n.) கருங்குளவி; a black beetle.

மாடக்குழி *māḍa-k-kuḻi,* பெ.(n.) வீடுகளில் விளக்கு வைப்பதற்கு அமைக்கப்படும் இடம் (இக்.வ.); a small niche in the wall of a house to keep an oil lamp.

[மாடம் + குழி.]



மாடக்கோயில் *māḍa-k-kōyil,* பெ.(n.) மேட்டிடத்தில் குறுகிய வழியுள்ளதாகக் கோச் செங்கணான் கட்டிய சிவக்கோயில் (தேவா.467, 10); *Śivaṉ* temple with narrow passage built on mounds by *kōcceṅgaṇaṉ.*

[மாடம் + கோயில்.]

மாடகம்[1] *māḍagam,* பெ.(n.) பாலிகை வடிவான வாசிக்குந் கருவி (நச்.சீவ.1697); pot shaped musical instrument.

[மாடம் + அகம்.]

மாடகம்[2] *māḍagam,* பெ.(n.) யாழின் முறுக்காணி; screw-pin of a lute. *"இடக்கை நால்விரல் மாடகந் தழீஇ" (சிலப்.8, 78).*

மாடகூடம் *māḍa-kūḍam,* பெ.(n.) மாடிவீடு; storied house. *"இம்மாட கூடம்...... அளகையினுமிலது" (பாரத.இராசசூ. 12).*

[மாடம் + கூடம்.]

மாடச்சிவிகை *māḍa-c-civigai,* பெ.(n.) சிவிகை வகை; a kind of Palanquin.

[மாடம் + சிவிகை.]

மாடநிலை *māḍa-nilai,* பெ.(n.) உப்பரிகை; terrace. *"மாடநிலை தெற்றியினிருந்தவர்" (பாரத.வாராணா.57).*

[மாடம் + நிலை.]

மாடப்புரை *māḍa-p-purai,* பெ.(n.) மாடக்குழி (இ.வ.) பார்க்க; see *māḍa-k-kuḻi.*

[மாடம் + புரை.]

மாடப்புறா *māḍa-p-puṟā,* பெ.(n.) புறா வகை (தக்கயாகப்.607, உரை); blue rock - pigeon, species of columba.



மாடப்புறாக்கண்ணிறம் *māḍa-p-puṟā-k-kaṇṇiṟam,* பெ.(n.) அமுக்கிரா என்னும் மருந்துச் செடி; a medicinal plant called amukkira, Indian winter cherry, s.sh. *withania somnifera.*

[மாடப்புறா + கண் + நிறம்.]

மாடபூபதி *māḍa-pūbadi,* பெ.(n.) கொச்சி யரசர்க்குரிய பட்டப் பெயர் (நாஞ்.); a title of the *Rājā* of Cochin.

மாடம்¹ *māḍam,* பெ.(n.) 1. மாடி வீடு; storied house. *"மாட மாளிகைகோபுரங் கூடங்கள்" (தேவா.797, 7).* 2. வீடு (பிங்.); house, mansion, hall. *"மஞ்சுதோய் மாடமணி உத்தரகோச மங்கை" (திருவாச.16, 4).* 3. மாடக்கோயில் பார்க்க; see *māḍa-k-kōyil. "எண்டோளீசற் கெழின் மாட மெழுபது செய்து" (திவ்.பெரியதி.6, 6, 8).* 4. குடிசை (நாஞ்.); hut. *"தோட்டக் காவலுக்காக ஒலை மாடம் மடக்கினான்" (நாஞ்.).* 5. மாடக்குழி பார்க்க; see *māḍa-k-kuḻi.*

[முல் (பொருந்தற் கருத்து வேர்) →மல்→மால் = பெருமை, பெருமையுடையவன், வளமை, மலை. மால் →மாள்→மாளிகை = மாடமுள்ள பெருவீடு, அரண்மனை, கோயில். மாள்→மாண். மாணுதல் = மிகுதல், பருத்தல், நிறைதல், நன்றாதல், சிறத்தல், மாட்சிமைப்படுதல். மாண்→மாணம் = மாட்சிமை, மாணம்→மாடம் (வே.க.4:30).]

மாடம்² *māḍam,* பெ.(n.) 1. சுவரிலுள்ளடங்கிய புரை; niche. 2. சுவரிற் பொத்தகம் முதலியன வைக்க உதவும் புரை அல்லது புரைவரிசை; shelf.

[மடு→மடம்→மாடம் (வே.க.4:92).]

மாடம்³ *māḍam,* பெ.(n.) 1. உளுந்து (பிங்.); black gram. 2. குன்றி பத்துக் கொண்ட ஒரு நிறை (சுக்கிரநீதி, 105); a measure of weight of 10 *kuṉṟi.*

மாடம்⁴ *māḍam,* பெ.(n.) சரக்கறை (சிலப். 6:122); store room, godown.

மாடமாளிகை *māḍa-māḷigai,* பெ.(n.) மாடகூடம் (கொ.வ.) பார்க்க; see *māḍa-kūḍam.*

[மாடம் + மாளிகை.]

மாடமுட்டை *māḍa-muṭṭai,* பெ.(n.) கண்பீளை; discharge from the eye.

[மாடம் + முட்டை. மாடம் = புரை. கண்குழி சுவற்றுப் புரை போன்றிருப்பதாகக் கொண்டு, அதன் மருங்கு ஒதுங்கும் அழுக்கு முட்டை வடிவினதாயிருப்பதாய்க் கருதி மாடமுட்டை என்றொரு சொல்லை யமைத்தனர் போலும்.]

மாடலன்¹ *maḍalaṉ,* பெ.(n.) சிலப்பதிகாரத்தில் வரும் கதைமாந்தருள் ஒருவன்; one of the character of *Silappadigāram. "மாமறை முதல்வன் மாடல னென்போன்" (சிலப்.15, 13).*

மாடவாழை *māḍa-vāḻai,* பெ.(n.) பேயன் வாழை (இ.வ.); Manilla hemp.

மாடவீதி *māḍa-vīdi,* பெ.(n.) கோயிலைச் சுற்றியுள்ள தெரு; main street surrounding a temple. *"விண்ணுயர் மாளிகை மாட வீதி" (தேவா.418, 1).*

[மாடம் + வீதி.]

மாடன்¹ *māḍaṉ,* பெ.(n.) 1. சிற்றூர்த் தெய்வம்; a village deity. 2. மூடன்; ignorant, stupid man.

[மாடம்→மாடன். மாடம் =கோயில்.]

நெல்லை மாவட்டத்தில் ஏராளமான சுடலை மாடன் என்ற பெயரில் சிற்றூர்த் தெய்வங்கள் காணப்படுகிறது.

மாடன்² *māḍaṉ,* பெ.(n.) துருசு; blue vitriol - sulphate of copper (சா.அக.).

மாடன்விற்கொடிச்சி *māḍaṉ-viṟ-koḍicci,* பெ.(n.) கற்பூரம்; camphor (சா.அக.).

மாடனம் *māḍaṉam,* பெ.(n.) முட்டைக்கோசு; cabbage (சா.அக.).

மாடாக்குழி *māḍā-k-kuḻi,* பெ.(n.) மாடக் குழி (வின்.) பார்க்க; see *māḍa-k-kuḻi.*

[மாடக்குழி→மாடாக்குழி.]

மாடி¹ *māḍi,* பெ.(n.) 1. கட்டடத்தின் மேல் தளம்; terrace. 2. மேனிலையுள்ள வீடு; storied house.

[முல்→மல்→மால் = பெருமை, வளமை, மலை. மால்→மாள்→மாளிகை = மாடமுள்ள பெரு வீடு, கோயில், அரண்மனை. மாள்→மாண்→மாணுதல் = மிகுதல், பருத்தல், நிறைதல். மாண்→மாணம் = மாட்சிமை. மாணம்→மாடம்→மாடி (வே.க.4:31).]

மாடி² *māḍi,* பெ.(n.) 1. இக்கட்டு; distress. 2. சினம்; anger, passion. 3. புடவையின் விளிம்பு; hem or border of a garment.

மாடி³ *māḍi,* பெ.(n.) சிற்றூர்த் தேவதை (நாஞ்.); a village goddess.

[மாடன் (ஆ.பா.) → மாடி (பெ.பா.).]

மாடிகை *māḍigai,* பெ.(n.) மெய்யுறை (பிங்.); armour.

மாடிப்படி *māḍi-p-paḍi,* பெ.(n.) மேல்மாடிக் கட்டடத்திற்கு செல்வதற்கான படிக்கட்டு; flight of stairs and the supporting structure, stair-case.

[மாடி + படி.]



மாடிமுற்றம் *māḍi-muṟṟam,* பெ.(n.) மாடியில் அமைந்த முகப்புத் தட்டு; balustraded platform on the outside o a building with access from an upper floor, balcony. *"மேல்மாடி முற்றத்திலே" (உ.வ.).*

[மாடி + முற்றம்.]

மாடியம் *māḍiyam,* பெ.(n.) மாடிகை பார்க்க; see *māḍigai. "மாடியந் தானை மன்னர்" (சீவக.537).*

மாடிவீடு *māḍi-vīḍu,* பெ.(n.) மேல்தளமுள்ள வீடு; mansion with upper terrace, terraced or storied house.

[மாடி + வீடு.]

மாடு¹ *māḍu,* பெ.(n.) எருது; ox. *"பகட்டின மாடுகள்" (கம்பரா.பள்ளி.14). "அடியாத மாடு படியாது" (பழ.). "துள்ளுகிற மாடு பொதி சுமக்குமா?" (பழ.).*

மாடு² *māḍu,* பெ.(n.) 1. இடம்; place. *"மாட்டு மாட்டோடி மகளிர்த் தரத்தர" (கலித்.98).* 2. பக்கம் (சூடா.); side. *"மா டெல்லாங் கருங்குவளை வயலெல்லா நெருங்குவளை" (பெரியபு.திருநாட்.17).*

மாடு³ *māḍu,* இடை.(part.) (இலக்.) ஓர் ஏழனுருபு; a ending of the oblative of place. *"மெய் பிரிந் தன்னவர் மாட்டு" (கலித்.87).*

மாடு⁴ *māḍu,* பெ.(n.) 1. செல்வம்; treasure, wealth. மாடல்ல மற்றை யவை (குறள், 400). 2. பொன் (சூடா.); gold. 3. சீர் வரிசை; dowry. 4. அகன்மணி (அக.நி.); large gem.

முற்காலத்தில் ஆவும் காளையும் எருமையும் ஆகிய மாடுகளே செல்வமாகக் கருதப்பட்டதனால், மாடு என்னும் பெயர் செல்வப் பெயராயிற்று. மேலை நாடுகளிலும் இங்ஙனமே மாடு செல்வமாகக் கொள்ளப் பெற்றது.

L. pecu = cattle, pecunia = money. E. Pecuniary (consisting) of money.

மாடுசாய்-த்தல் *māḍu-šāy-,* 4 செ.கு.வி. (v.i.) மாடுகளை ஒரு சேர ஓட்டிச் செலுத்துதல் (வின்.); to drive cattle in herds.

[மாடு¹ + சாய்-த்தல்.]

மாடுசாய்தல் *māḍu-šāydal,* பெ.(n.) மாடுகள் மாலையில் ஒருசேர வீடு நோக்கி வருகை; return home of cattle - herds at dusk.

[மாடு¹ + சாய்தல்.]

மாடுசாயும்வேளை *māḍu-šāyum-vēḷai,* பெ.(n.) மாடுவரும்வேளை பார்க்க; see *māḍu-varum-vēḷai.*

[மாடு + சாயும்வேளை.]

மாடுதின்னி *māḍu-tiṉṉi,* பெ.(n.) ஆத்தின்னி; pulaiya.

[மாடு + தின்னி.]

மாடுபிடுங்கி *māḍu-piḍuṅgi,* பெ.(n.) கழுகு வகை (m.m.); common brown vulture.

[மாடு + பிடுங்கி.]

மாடுபெயர்-த்தல் *māḍu-peyar-,* 4 செ.கு.வி. (v.i.) மாடுசாய்-, (வின்.) பார்க்க; see *māḍu-šāy.*

[மாடு¹ + பெயர்.]

மாடுமீன் *māḍu-mīṉ,* பெ.(n.) மாட்டுமீன் பார்க்க; see *māṭṭu-mīṉ.*

[மாடு¹ + மீன்.]

மாடுவரும்வேளை *māḍu-varum-vēḷai,* பெ.(n.) மாலை வேளை; evening, as the time when cattle return home after grazing.

[மாடு + வரும்வேளை.]

மேய்ச்சலான பின் மாடுகள் திரும்பி வரும் காலம்.

மாடுன்னிப்பாசம் *māḍu-p-paṉṉi-p-pāšam,* பெ.(n.) அணிப்பிள்ளை; squirrel (சா.அக.).

[மாடு + உன்னி + பாசம்.]

மாடை¹ *māḍai,* பெ.(n.) 1. அரை வராகன் (வின்.); an ancient coin = 1/2 pagoda. 2. பழைய நாணய வகை; an ancient gold coin. *வந்த மாடை நெல்லாக்கி (S.I.I.iii, 137).* 3. பத்துக் குன்றி எடையுள்ள நாணய வகை (சுக்கிரநீதி, 25); a gold coin weighing ten *kuṉṟi.*

[மாழை →மாடை.]

மாடை² *māḍai,* பெ.(n.) 1. மாட்டுக் கொம்பு முதலியவற்றின் கீழ்நோக்கிய வளைவு; being bent downwards as horns of cattle. 2. சாய்வு; slop.

[உல்→குள்→முள்→முட→முடங்கு→முடங்கி = மூலை. மூலைமுடங்கி என்பது வழக்கு. மாள்→மாடு →மாடை. சாடைமாடை என்பது வழக்கு. நேராகப் பழிக்காமல் சாய்வு போன்ற நேரல் முறையில் பழித்தல் சாடை மாடையாய்த் திட்டுதல் எனப்படும் (மு.தா.226).]

மாடைக்குமாறி *māḍaikku-māṟi,* பெ.(n.) மாடை என்னும் பொற்காசுக்கு ஒத்த மதிப்பீடு கொண்ட மாற்றமுடைய பொன்; a gold like thing carrying equal value to that of a gold coin.

[மாடைக்கு + மாறி.]

மாடைக்கூலி *māḍai-k-kūli,* பெ.(n.) வரி வகை (S.I.I.iii, 16, 1); a kind of tax.

[மாடை + கூலி.]

மாடைக்கொம்பன் *māḍai-k-komban,* பெ.(n.) கீழ்நோக்கி வளைந்த கொம்புள்ள மாடு (வின்.); bullock with horns bent downwards.

[மாடை = வளைந்தது. மாடைக் கொம்பு = வளைந்த கொம்பு. மாடைக் கொம்பு→மாடைக் கொம்பன்.]

மாடொதுக்கு-தல் *māḍodukku-,* 5 செ.கு.வி. (v.i.) மாடுசாய்-, (வின்.) பார்க்க; see *māḍu-šāy.*

[மாடு¹ + ஒதுக்கு-.]

மாடோட்டும்வேளை *māḍōṭṭum-vēḷai,* பெ.(n.) மாடுகளை மேய்ச்சலுக்கு விடும் காலை வேளை; (C.G.) early morning as the time when cattle are turned out for pasture.

[மாடு¹ + ஓட்டும்வேளை.]

மாண்¹(ணு)-தல் *māṇ-,* 12 செ.கு.வி.(v.i.) 1. மாட்சிமைப்படுதல்; to become excellent, glorious. *"மாண்டார் வினைத் திட்பம்" (குறள், 665).* 2. நன்றாதல்; to be good, worthy. *"மாண்டற் கரிதாம் பயன்" (குறள், 177).* 3. நிறைதல்; to be full, abundant. *"மாணாப் பிறப்பு" (குறள், 1002).* 4. மிகுதல்; to be great. *"மாணப் பெரிது" (குறள், 124).*

[மால்→மாண்(ணு)-. மால் = பெருமைப் பொருள்.]

மாண்² *māṇ,* பெ.(n.) மாட்சிமை; greatness, glory, splendour, excellence, dignity. *"மாணெழில்...... தோளாய்" (கலித்.20, 15).*

[மா = பெருமை. மால்→மாள்→மாண் (பு).]

மாண்³ *māṇ,* பெ.(n.) 1. பள்ளிச் சிறுவன்; school boy. *"மாணாகி வைய மளந்ததுவும்" (திவ்.பெரியதி.8, 10, 8).* 2. குறள்வடிவம், குறளன்; dwarf. *"குறுமாணுருவன் தற் குறியாகக் கொண்டாடும்" (தேவா.164, 5).*

[மண் →மாண் (வே.க.44:7).]

மாண்⁴ *māṇ,* பெ.(n.) மடங்கு; turn, time. *"பன்மாண்" (பரிபா.13, 62).*

[முள்→மூள்→(மாள்)→மாண் (மு.தா.235).]

மாண்டது *māṇḍadu,* பெ.(n.) சிறப்பிக்கப்பட்டது; that which is glory.

[மாண்→மாண்டது.]

மாண்டல்[1] *māṇḍal,* பெ.(n.) மாட்சியாகை (சூடா.); being great, being worthy.

[மால்→மாண்→ மாண்டல்.]

மாண்டல் *māṇḍal,* பெ.(n.) இறத்தல் (பிங்.); dying.

[மாள்→மாண்டல்.]

மாண்டவர் *māṇḍavar,* பெ.(n.) மாண்டார்[1] பார்க்க; see *māṇḍār.*

[மாண்டார்→மாண்டவர்.]

மாண்டவர்குழி *māṇḍavar-kuḻi,* பெ.(n.) முதுமக்கட்டாழி புதைக்கும் குழி (இ.வ.); kistvaens containing earthen jars with fragments of human bones.

[மாண்டவர் + குழி.]

மாண்டார்[1] *māṇḍār,* பெ.(n.) மாட்சிமையுள்ளவர்; the illustrious, the great. *"வீறெய்தி மாண்டார்" (குறள், 665).*

[மா = பெரிய. மா→மால்→மாண்→மாண்டார்..]

மாண்டார்[2] *māṇḍār,* பெ.(n.) இறந்தவர்; the dead. *"மாண்டார் வருவரோ மாநிலத்தீர்" (நல்வழி, 10).*

[மாள்→மாண்டார்.]

மாண்டுக்கியம் *māṇḍūkkiyam,* பெ.(n.) நூற்றெட்டுச் சிற்றிலக்கியங்களுளொன்று; an upanisad, one of 108.

மாண்டுகம் *māṇḍūgam,* பெ.(n.) மாண்டுக்கியம் (யாழ்.அக.) பார்க்க; see *māṇḍūkkiyam.*

மாண்பு *māṇbu,* பெ.(n.) 1. மாட்சிமை; honour, dignity. *"இல்லவண் மாண்பானால்" (குறள், 53).* 2. அழகு; beauty. *"அரன் மிடற்றின் மாண்பதென்றே" (திருக்கோ.323).* 3. பெருமை (யாழ்.அக.); greatness, excellence. 4. நன்மை (அரு.நி.); goodness.

[குள் = பெருமை கருத்துவேர். அறிவாற்றலதிகார செல்வங்களின் பருமையே பெருமை. குள் → முள் → மள் → மண் → மாண் → மாண்பு (மு.தா.217).]

மாண்புமிகு *māṇbu-migu,* கு.பெ.எ.(adj.) அமைச்சர் முதலியோரை அழைக்கும்போது அல்லது குறிப்பிடும் போது பயன்படுத்தும் மதிப்புத் தொடர்; a form of address for a minister. *"மாண்புமிகு முதலமைச்சர்" (உ.வ.).*

[மா = பெருமை. மால்→மாள்→மாண்பு + மிகு.]

மாண்மகன் *māṇ-magaṉ,* பெ.(n.) பள்ளிச் சிறுவன்; school boy. *"பண்டு மாண் மகன்றன் செயல் பார்த்தவோ" (தக்கயாகப். 672).*

மாணம் *māṇam,* பெ.(n.) மாட்சிமை (அக.நி.); greatmess, excellence.

[குள்→முள்→மள்→மண் = மாண்பு. மண் = மாட்சிமை. மண்→மாண்→மாணம் (மு.தா.217).]

மாணல்[1] *māṇal,* பெ.(n.) மாட்சிமை (பிங்கல. 1792); splendour, greatness.

[மல்→மால்→மாண்→மாணல் (வே.க.4:30).]

மாணல்[2] *māṇal,* பெ.(n.) 1. சாய்வு; slope. 2. வளைவு; curved, angular.

[முள்→(மூள்)→(மாள்)→மாண்→மாணல். கோணல் மாணல் என்பது வழக்கு (மு.தா.225)..]

மாணவ்வியம்[1] *māṇav-viyam,* பெ.(n.) சிறுவர் கூட்டம்; croud of childrens.

மாணவ்வியம்[2] *māṇavviyam,* பெ.(n.) 1. பிள்ளைத் தன்மை (யாழ்.அக.); childhood, boyhood. 2. மாணவர்குழு (இலக்.அக.); company of students.

[மண் → மாண் → மாணி = இளமை. மாண் → மாணவன் = பள்ளிச் சிறுவன்.]

மாணவகம்[1] *māṇavagam,* பெ.(n.) கல்வி (சிந்தாமணி நிகண்டு); learning.

மாணவகம்[2] *māṇavagam,* பெ.(n.) பதினாறு கோவையுள்ள முத்தாரம் (சங்.அக.); a pearl necklace of sixteen strings.

[மாண் → மாணவன் → மாணவகம் (மு.தா.131).]

மாணவகன் *māṇavagaṉ,* பெ.(n.) 1. மணமாகாதவன்; celibate, student. *"பொச்ச மொழுகு மாணவகன்" (பெரியபு. சண்டேசுர.40).* 2. பயிலும் மாணவன்; pupil, scholar, roligious student. *"ஆசான் முன்னே துயில் மாணவகரை" (திருமந்.2163).* 3. 8 முதல் 16 ஆண்டிற்குட்பட்ட சிறுவன் (யாழ்.அக.); lad more than eight less than sixteen years of age. 4. அறிவிலி (யாழ்.அக.); fool, inexperienced person.

[மாண் → மாணவன் → மாணவகன் (வே.க.4:7).]

மாணவர்மன் *māṇavarmaṉ,* பெ.(n.) நரசிம்மவர்மப் பல்லவனிடம் அதிகாரியாகப் பணியாற்றிய ஈழவேந்தன் (சி.பெ.அக.); prince of ceylon, who worked with Pallava Narasimhavarmar.

மாணவன் *māṇavaṉ,* பெ.(n.) 1. கல்வி நிறுவனத்தில் பயிலும் சிறுவன் அல்லது இளைஞன்; student. 2. மாணவகன், 1 பார்க்க; see *māṇavagaṉ.* *"மஞ்சனைக் குறுகி யொரு மாணவப் படிவ மொடு" (உத்தரரா.அனுமப்.6).*

[மாண் → மாணவகன். மாணவனைக் குறிக்கும் வேறு சில பெயர்களும் சிறுவன் சிறுமியைக் குறிப்பனவாகவேயுள்ளன. ஒ.நோ. பிள்ளை = மாணவன், மாணவி, பள்ளிப்பிள்ளை என்னும் வழக்கைக் காண்க.]

E. pupil, from **L.** Pubillus, Pupilla, dims of pulas, a boy, pupa - a girl. **E.** Pedant from **Gr.** Pais, Paidos a child.

மாணாக்கன் மாணாக்கி என்னும் வடிவங்களும் மாணவன் என்னும் சொல்லுக்கு நேர் மூலமான மாண் என்னும் வடிவமும் அதன் திரிபான மாணி என்பதும் இவற்றுக்கு அடிவழியான கொடி வழிச் சொற்களும் வடமொழியிலில்லை (மு.தா.131).

மாணவி *māṇavi,* பெ.(n.) மாணாக்கி பார்க்க; see *māṇākki.*

[மாணவன் (ஆ.பா.) → மாணவி (பெ.பா.).]

மாணவை *māṇavai,* பெ.(n.) கற்கும் பெண் (நீலகேசி, 531, உரை). ; female disciple, lady pupil.

[மாண் → மாணவி → மாணவை.]

மாணாக்கன் *māṇākkaṉ,* பெ.(n.) மாணவகன், 2 பார்க்க; see *māṇākkaṉ.* *"இவனோ ரிளமாணாக்கன்" (குறுந்.33).*

[மாணவகன் → மாணாக்கன்.]

மாணாக்கி *māṇākki,* பெ.(n.) கற்கும் பெண்; female disciple. *"நும்மகன் மாணாக்கி வணங்கும்" (பெருங்.உஞ்சைக்.37, 110).*

[மாணவன் → மாணாக்கன். மாணாக்கன் (ஆ.பா.), மாணாக்கி (பெ.பா.).]

மாணாமை¹ *māṇāmai,* பெ.(n.) மாட்சிமைப் படாமை; that which is not honour.

[மாண்→மாணாமை.]

மாணாமை² *māṇāmai,* பெ.(n.) ஒரு நிலையில் நில்லாமை (பரிமே.திருக்.1297); unstable in one condition.

மாணார் *māṇār,* பெ.(n.) பகைவர்; enemies, as those who are without excellence. *"மாணார்ச் சுட்டிய வாண்மங்கலமும்" (தொல்.பொருள்.91).*

[மாண்→மாணார்.]

மாணி¹ *māṇi,* பெ.(n.) 1. மணமாகாதவன்; student, bachelor. *"கருமாணியா யிரந்த கள்வனே" (திவ்.இயற்.2, 61).* 2. குறள் வடிவம் (திவ்.பெரியாழ்.1, 4, 1, ஸ்வா.); dwarf. 3. அழகு; beauty. *"மாணிக் குறளுருவாய மாயன்" (திவ்.பெரியாழ்.5, 2, 5, அரும்).* 4. ஆண்குறி (யாழ்.அக.); penis.

க. மாணி.

[முள்→(மள்)→மண்→மணி = சிறியது. மண் → மாண் = குறள், குறளன், சிவன், இளைஞன், மணமிலி. மாண்→மாணி (மு.தா.131.).]

மாணி² *māṇi,* பெ.(n.) மாணவகன்; disciple. *"புத்தனார் முதன் மாணி...... மொக்கலனெனச் சொன்னான்" (நீலகேசி, 266).*

[மாணவகன்→மாணி.]

மாணிக்கச்சம்பா *māṇikka-c-cambā,* பெ.(n.) சம்பா நெல் வகை (குருகூர்ப்.58); a kind of *cambā* paddy.

[மாணிக்கம் + சம்பா.]

மாணிக்கத்தாள் *māṇikka-t-tāḷ,* பெ.(n.) தாசி (M.M.354) dancing girl.

[மாண்→மாணி→மாணிக்கத்தாள்.]

மாணிக்கப்பட்டி *māṇikka-p-paṭṭi,* பெ.(n.) சிவப்புப் பட்டிப் பூ; pink trumpet flower. *"மாணிக்கப்பட்டிப் பூவை மாதேவர்க்கு" (புட்பபலன்.96).*

[மாணிக்கம் + பட்டி.]

மாணிக்கப்பட்டை *māṇikka-p-paṭṭai,* பெ.(n.) கோயிலின் திருமதில் முதலியவற்றில் அடிக்கும் சிவப்பு வண்ணப் பட்டை (இ.வ.); red stripes painted on a temple wall or front wall of a house.

[மாணிக்கம் + பட்டை.]



மாணிக்கப்படி *māṇikka-p-paḍi,* பெ.(n.) மணிகள் கோத்த மேலாடை (இரத்தினங்கி), மணியாடை; jewelled garment. *"தனக்காக ஒரு மாணிக்கப்பட்டி சாத்தி" (ஈடு.4, 4, 3).*

[மாணிக்கம் + படி.]

மாணிக்கப்பீடம் *māṇikka-p-pīḍam,* பெ.(n.) மணி வைத்திழைத்த மோதிர வகை (சிலப்.6 : 96, உரை); a kind of ring set with rubies.

[மாணிக்கம் + பீடம்.]

மாணிக்கப்பூடு *māṇikka-p-pūḍu,* பெ.(n.) பிண்டம்; foetus (சா.அக.).

மாணிக்கம் *māṇikkam,* பெ.(n.) தொன் மணியிலொன்றும் நான்கு பகுப்பினை யுடையதுமான செந்நிறமணி (திருவிளை. மாணி.38); ruby, carbuncle of which there are four kinds viz. *cāturaṅgam, guruvindam, caukantigam, kōvaṅgam* of *navamaṇi* (q.v.). *"குப்பையிலே கிடந்தாலும் மாணிக்கம் மாணிக்கம்தான்" (பழ.).*

மாணிக்கமாலை *māṇikka-mālai,* பெ.(n.) வெள்ளை, சிவப்பு வளையங்கள் மாறி மாறி வரத் தொடுத்த பூமாலை வகை (இ.வ.); a garland with rings of white and red flowers alternating.

[மாணிக்கம் + மாலை.]

மாணிக்கமின்சேய் *māṇikka-miṉ-cēy,* பெ.(n.) முருகக் கடவுளது படைவீரருள் ஒருவரான வீரவாகு (நாமதீப.37); *vīravāgu* a hero in the retinue of *Murugaṉ.*

[மாணிக்கம் + மின்சேய்.]

மாணிக்கவாசகர் *māṇikka-vāšagar,* பெ.(n.) ஒன்பதாம் நூற்றாண்டினராகக் கருதப்படுபவரும் திருவாசகம், திருக் கோவையார் என்பவற்றின் ஆசிரியரும் சைவசமயக்குரவர் நால்வருளொருவருமான பெரியவர்; a famous Saiva saint, author of *Tiru-vācagam*, and *Tirukkōvaiyār*, one of four *camayakkuravar*, probably of the ninth century.

மாணிக்கவாளி *māṇikkā-vāḷi,* பெ.(n.) காதணி வகை; an ear ornament.

[மாணிக்கம் + வாளி.]

மாணிக்காத்தாள் *māṇikkāttāḷ,* பெ.(n.) நடன மங்கையருள் ஒரு சாரார் (E.T.ii.162); a class of dancing girls.

[மாணிக்கம்→மாணிக்காத்தாள்.]

மாணிக்குறி *māṇikkuṟi,* பெ.(n.) ஆண்குறி; penis, male organ.

[மாணி + குறி.]

மாணிகை *māṇigai,* பெ.(n.) எட்டுப் பலம் கொண்ட நிறை; a weight of 8 *palams.*

[மாணி + வகை.]

மாணிச்சாறு *māṇi-c-cāṟu,* பெ.(n.) இலைப் பிழிவு; juice of leaf.

[மாணி + சாறு.]

மாணிப்புண் *māṇi-p-puṇ,* பெ.(n.) ஆண் குறியிலுண்டாகும் புண் (M.L.); venereal sore in the penis, chancre.

[மாணி + புண்.]

மாணிபந்தம் *māṇi-bandam,* பெ.(n.) உப்பு; salt (சா.அக.).

[மாணி + பந்தம்.]

மாணிமலைப்படை *māṇimalai-p-paḍai,* பெ.(n.) காட்டுக் காடை; a bird - glide (சா.அக.).

மாணியரி-தல் *māṇi-ari-,* 2 செ. குன்றாவி. (v.t.) 1. இனப்பெருக்க அழிவு செய்தல்; to circumcise. 2. விதையெடுத்து ஆண் பிள்ளையைப் பேடியாக்குதல் (வின்.); to castrate a man.

[மாணி + அரி-.]

மாணீர்ச்சாறு *māṇīr-c-cāṟu,* பெ.(n.) இலைச்சாறு; juice from the leaf.

மாணு-தல் *māṇu-,* 12 செ.கு.வி.(v.i.) மாண்-பார்க்க; see *māṇ-.*

மாணை *māṇai,* பெ.(n.) ஒருவகைக் கொடி; a climber. *"துறுக லயலது மாணை மாக்கொடி" (குறுந்.36).*

மாத்தகை *māttagai,* பெ.(n.) பெருந்தகுதி யுள்ளவன் (யாழ்.அக.); person of great worth.

[மா = பெரிய. தகை→தகைவு. மா + தகை. ஒ.நோ.பெருந்தகை, ஆண்டகை.]

மாத்தம் *māttam,* பெ.(n.) அலரி; oleander.

மாத்தல் *māttal,* பெ.(n.) மா ஒன்றுக்கு இவ்வளவு என்று நெல் அளக்கை; measure the paddy as for mā. *"நிலம் யாண்டு பதினாறாவது முதல் கைக்கொண்டு உழுது அச்சுவற்கம் இறுத்தும் மாத்தல் பதினறு கலனே தூணியாக வந்த பாட்டம் அளக்கவும்" (தெ.க.தொ.5, கல்.243). "இந்நிலத்தால் மாத்தல் இருபத்து இருகலமாகவுந் நெல் குடுப்போமானோம்" (தெ.க.தொ.5, கல்.244).*

[மான்→மா→மாத்தல். இவ்வினை இன்று வழக்கற்றது. ஆயின், மா என்னும் முதனிலைத் தொழிலாகுபெயர் 1/20 என்னும் கீழ் வாயிலக்கத்தைக் குறித்து வழங்குகின்றது. அதனால் நிலவளவையில் ஒருவேலியின் 1/20 பாகம் மா எனப்படுகிறது. "மாநிறைவில்லதும் பன்னாட்காகும்" (புறநா.184) என்பது இதன் தொன்று தொட்ட வழக்கை யுணர்த்தும் (வே.க.4:35).]

மாத்தான் *māttāṉ,* பெ.(n.) பெரியோன்; great person. *"மால் பிரம னறியாத மத்தானை" (தேவா.818, 4).*

[மா= பெரிய. மா→மாத்தான்.]

மாத்திக்கு *māttikku,* பெ.(n.) முத்திநெறி; path of salvation as the great path. *"மாத்திக்கே செல்லும் வழியது" (திருமந். 1841).*

மாத்தியாகி *māttiyāgi,* பெ.(n.) துறவிற் பெரியராகிய ஞானி வகையார் (யாழ்.அக.); a class of sages, as great in renouncing.

[மா + தியாகி.]

மாத்திரத்தில் *māttirattil,* வி.எ.(adv.) உடனே; instantaneously. *"அவன் கேட்ட மாத்திரத்திற் கொடுத்தான்" (உ.வ.).*

[மாத்தரம்→மாத்திரத்தில் (வே.க.4:36).]

மாத்திரம்[1] *māttiram,* பெ.(n.) தனிமை (சங்.அக.); loneliness.

மாத்திரம்[2] *māttiram,* வி.எ.(adv.) மட்டும்; only, solely, exclusively, merely, alone. *அதை மாத்திரம் எடு (உ.வ.).*

[மட்டு = அளவு. மட்டும் = மாத்திரம் (வே.க.4:36).]

மாத்திரம்[3] *māttiram,* பெ.(n.) அளவு; limit, extent. *"வெளவினன் முயங்கு மாத்திரம்" (கலித்.47, 22).*

மாத்திரம்[4] *māttiram,* பெ.(n.) தும்பி (சங்.அக.); wasp.

மாத்திரி[1] *māttiri,* பெ.(n.) வசம்பு; a plant - sweet flag acorus calamus, it has under ground stem used in mediane.

மாத்திரி[2] *māttiri,* பெ.(n.) நீட்டலளவு; linear measurement, meter.

[மா = அளவு. மா→மாத்திரி (இக்.வழ.).]

மாத்திரை[1] *māttirai,* பெ.(n.) 1. நொடிப்பொழுது; moment, measure of time 2/5 of a second = 1/60 nāḻigai. *"சகமூன்றுமொர் மாத்திரை பார்க்குமெங்கள் கண்ணவனார்" (திருநூற்.25).* 2. கண்ணிமைத்தல் அல்லது கை நொடித்தலளவான நேரம் (தொல். எழுத்து.6); the time of winking one's eyes or of snapping one's fingers. *"கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை" (தொல். எழுத்து.6).* 3. செய்யுளில் வரும் எழுத்தொலியினளவு; (Pros.) mora or prosodial unit of sound. *"மாத்திரை எழுத்தியல்" (தொல். பொருள். 313).* 4. குற்றெழுத்து (யாழ்.அக.); short vowel. 5. குருவிற் பாதி (அரு.நி.); a syllabic instant, half of kuru. 6. காலவிரைவு (பிங்.); swiftness of time. 7. அளவு; measure, limit, as of time. *"மாத்திரையின்றி நடக்குமேல்" (நாலடி, 242).* 8. மிகச் சுருக்கமான இடம்; minute portion of space. *"அரை மாத்திரையிலடங்குமடி" (தேவா.970, 7).* 9. குளிகை (அரு.நி.); medicinal pill. 10. துறவியின் தண்டக மண்டல முதலியன; staff, water bowl and other articles of ascetics. *"சந்யாசிகள்... மாத்திரை தொடக்கமானவற்றைக் கையிலே கூடக்கொண்டு திரிவார்களாயிற்று" (ஈடு.4, 8, 4).* 11. நல்வாய்ப்பு (யாழ்.அக.); luck, fortune.

[மா=அளவு.மா→மாத்திரை (வே.க.4:36).]

மாத்திரை[2] *māttirai,* பெ.(n.) இரண்டரை நாழிகையை எட்டுக் கூறிட்ட அளவு; the time measure of 2 1/2 *nāḻigai* is divided by eight, i.e. 7 1/2 minutes. *"இரண்டரை நாழிகையை எட்டுக் கூறிட்டு ஒரு கூறென்றறிக" (சிலப்.3:26).*

மாத்திரை[3] *māttirai,* பெ.(n.) 1. காதணி வகை; an ear ornament. *"செம்பொன் மாத்திரை செரீஇய காதினர்" (பெருங்.மகத.17, 157).* 2. இசைச்சுரப் பகுதி (திவா.); interval in the musical scale, quartertone.

மாத்திரை[4] *māttirai,* பெ.(n.) சிறிய வில்லை வடிவ மருந்து; tablet, pill.

மறுவ. குளிகை.

[மா=அளவு.மா→மாத்திரை. ஒரே அளவினது.]

மாத்திரைக்கோல் *māttirai-k-kōl,* பெ.(n.) இறும்பர் (சித்தர்) முதலியோர் கையிற் கொள்ளும் வரையிட்ட மந்திரக் கோல்; magic staff carried by cittar, etc. *"விளங்கு செங்கையின் மாத்திரைக் கோலும்" (திருவாலவா.13, 4).* 2. மந்திரவாதியின் கைக்கோல் (வின்.); conjuror's wand. 3. அளவுகோல்; measuring rod. *"மாத்திரைக் கோலொக்குமே" (நல்வழி).*

[மாத்திரை + கோல் (வே.க.4:36).]

மாத்திரைச்சுதகம் *māttirai-c-cudagam,* பெ.(n.) மாத்திரைச்சுருக்கம் பார்க்க; see *māttirai-c-curukkam.*

[மாத்திரை + சுதகம்.]

மாத்திரைச்சுருக்கம் *māttirai-c-curukkam,* பெ.(n.) ஒரு பொருள் தந்து நிற்கும் ஒரு சொல் ஒரு மாத்திரை குறையுமிடத்து வேறொரு பொருள் தந்து நிற்குஞ்

சொல்லணி (தண்டி.95, உரை); (Rhet.) a literary device in which a word becomes a different word by shortening its sound - value by a *mātrā.*

மாத்திரைதிரட்டல் *māttirai-tiraṭṭal,* பெ.(n.) அளவுப்படி உருண்டை உருட்டுகை; making pills with fingers.

[மா = அளவு. மா→மாத்திரை = ஒரே அளவுடையது. மாத்திரை + திரட்டல்.]

மாத்திரைவருத்தனம் *māttiraik-varuttaṉam,* பெ.(n.) ஒரு பொருள் தந்து நிற்கும் ஒரு சொல் ஒரு மாத்திரை கூடுமிடத்து வேறொரு பொருள் தந்து நிற்குஞ் சொல்லணி (தண்டி.95, உரை); (Rhet.) a literary device in which a word becomes a different word by lengthening its sound value by a *mātrā.*

[மாத்திரை + வருத்தனம்.]

மாத்து[1] *māttu,* பெ.(n.) 1. செருக்கு; arrogance. *"மாமாத்தாகிய மாலயன்" (தேவா.1019, 1).* 2. அடித்தல் அல்லது உதைத்தல் (இக்.வ.); beating or kicking. *அவனை அவன் தந்தை ஒரு மாத்து மாத்திவிட்டார்.*

மாத்து[2] *māttu,* பெ.(n.) பெருமை; greatness. *"பெறுமாத் தொடும்" (திருக்கோ.373).*

[மா = பெருமை. மா→மாத்து.]

மாத்து[3] *māttu,* பெ.(n.) சதுரங்க ஆட்டத்தில் அரசனை யசைய வொண்ணாது தடுத்து நிறுத்துகை (இ.வ.); mate with pawns.

மாத்து[4] *māttu,* பெ.(n.) தங்கம்; refined gold.

மாத்துப்பொதி *māttu-p-podi,* பெ.(n.) நெருஞ்சி; a prostate plant with thorny fruits-small caltrops (சா.அக.).

மாத்துருகம் *mātturugam,* பெ.(n.) பசுவை போன்ற ஓர் வகை மான்; a species of deer resembling cow (சா.அக.).

மாத்துவம் *māttuvam,* பெ.(n.) பெருமை; greatness. *"மாத்துவத் தான் மறைந்தார் மற்று" (சிலப்.21, இறுதி வெண்பா).*

[மா→மாத்து→மாத்துவம்.]

மாத்துவிகம் *māttuvigam,* பெ.(n.) இலுப்பைப் பூவிலிருந்து எடுக்கப்படும் வெறியம் (சாறாயம்) (சங்.அக.); arrack extracted from mahua flowers.

மாதங்கம்[1] *mādaṅgam,* பெ.(n.) 1. யானை (சூடா.); elephant. *"வாம்பரி தேர் மாதங்கத் தானை" (அஷ்டப்.திருவரங்கத்தந்.11).* 2. அரச மரம் (யாழ்.அக.); pipal tree.

மாதங்கம்[2] *mādaṅgam,* பெ.(n.) 1. இளமை (அக.நி.); youth. 2. உருவம் (அக.நி.); shape, figure. 3. கடல் (அக.நி.); sea. 4. உத்தி[1] (யாழ்.அக.); a head ornament.

மாதங்கன் *mādaṅgaṉ,* பெ.(n.) 1. அரசகுலப் பெண்ணுக்கும் வேடனுக்கும் பிறந்தோன்; person of mixed caste, the mother being of the ksattiriya caste and the father of the hunter tribe. 2. சாதியற்றவர் (சண்டாளன்); out caste. 3. கீழ்மகன்; base, mean man. 4. வேடன்; hunter, fowler.

மாதங்காரி *mādaṅgāri,* பெ.(n.) சிவன்; *Śivaṉ,* as the destroyer of elephant.

மாதங்கி *mādaṅgi,* பெ.(n.) 1. காளி (சூடா.); *Kāḷi.* 2. மலைமகள் (நாமதீப.22); *malai magaḷ.* 3. யாழ்த் தெய்வம் (சிலப்.7, 1, உரை); the Goddess of *yāḷ.* 4. மதங்கி; singing danseuse. *"கதிர்வேல் பாடு மாதங்கி" (காரிகை, செய்.9, உரை).*

மாதச்சுரம் *māda-c-curam,* பெ.(n.) மாதத்திற்கொருமுறை வரும் சுரம் (சீவரட்.); intermittend fever, with monthly intervals.

[மாதம் + சுரம்.]

மாதசுரூபி *māda-šurūbi,* பெ.(n.) கருவண்டு; black beetle (சா.அக.).

மாதசுரூபிதம் *māda-šurūbidam,* பெ.(n.) எலி; rat.

மாதண்டம் *mādaṇḍam,* பெ.(n.) அரசவீதி (வின்.); principal road, king's high - way.

மாதத்தகை *māda-t-tagai,* பெ.(n.) மிகு சிறப்பு, மிகுதகை; the great.

மாதத்தீட்டு *māda-t-tiṭṭu,* பெ.(n.) மாதவிடாய் பார்க்க; see *māda-viḍāi.*

மறுவ. மாதவிலக்கு.

[மாதவிடாய்→மாதத்தீட்டு.]

மாததூரம் *māda-dūram,* பெ.(n.) மாதவிடாய் பார்க்க; see *māda-viḍāi.*

[மாதவிடாய்→மாததூரம்.]

மாதநம் *māda-nam,* பெ.(n.) இலவங்கம்; clove (சா.அக.).

மாதநாலி *māda-nāli,* பெ.(n.) ஏலவரிசி; cardamon seed (சா.அக.).

மாதப்படி[1] *māda-p-paḍi,* பெ.(n.) வரிவகை; a kind of tax (S.I.I.vii, 403).

[மாதம் + படி.]

மாதப்படி[2] *māda-p-paḍi,* பெ.(n.) கோயில் முதலியவற்றுக்கு உதவும் மாதப்படிக் கட்டளை; monthly allowances as to a temple (Insc.).

மாதப்பலன் *māda-p-palan,* பெ.(n.) பிறந்த மாதம், விண்மீன் கொண்டு இன்ப துன்பம் அறிவது; find out luck and unluck the birth of month.

[மாதம் + பலன்.]

மாதப்பிறப்பு *māda-p-pirappu,* பெ.(n.) 1. திங்களின் முதனாள்; the first day of a month. 2. கதிரவன் ஓர் ஓரை (இராசி) யிலிருந்து அடுத்த ஓரை (இராசி)யில் செல்லுவதான மாதத் தொடக்கத்தின் சமயம் (பஞ்.); beginning of a month, being the moment when the sun passes from one *rāši* to the next.

[மாதம் + பிறப்பு.]

மாதப்புறா *māda-p-purā,* பெ.(n.) மாரி காலத்தில் நாட்டில் வாழும் நீர்ப்பறவை வகை (வின்.); a great black - headed gull, as remaining in the coutry during the rainy season.

[மாதம் + புறா.]

மாதம் *mādam,* பெ.(n.) 1. முப்பது நாள் கொண்ட காலப் பகுதி; month. 2. ஆண்டின் பன்னிரண்டிலொரு பகுதி; a twelth part of a year.

[மதித்தல் = அளவிடுதல். மதி = அளவு, அளவிடப் பெற்ற பொருள். ஏற்றுமதி, இறக்குமதி என்னும் சொற்களை நோக்குக. பக்கம், மாதம் முதலிய அளவிற்குத் துணையான நிலா, நிலாவினாற் கணிக்கப் பெறும் கால அளவு, ஓரை. மதி →மாதம். ஒ.நோ.மானம் = அளவு.]

As. mono; **E.** moon; **Gk.** men, mere. **L.**mensis, mena. **Ger.** mano, mane, mond. **Goth**.mena. **Lith.** menu, menesis, slav.meseci.

இனி, மத்து→மத்தி→மதி = மயக்கஞ் செய்யும் நிலா என்றுமாம். ஒ.நோ. L.luna = moon. lunatic = insane, lunacy = insanity. வடவர் மா[3] (அள) என்னுஞ் சொல்லை மூலமாகக் காட்டுவர். அதன் பொருந்தாமையையும், ஒருகாற் பொருந்துவதாகக் கருதினும் அதுவும் தென்சொல்லே யாதலையும் காண்க. சென்னைப் பல்கலைக்கழகப் பேரகரமுதலி. மாஸ → மாதம் என்று தலைகீழாகக் காட்டும். மதி என்னும் மூலத்தினின்று மாதம் என்னும் தகரச் சொல்லன்றி மாஸ என்னும் ஸகரச் சொல் எங்ஙனம் தோன்றும் (வ.வ.60).

மாதர்[1] *mādar,* பெ.(n.) 1. பெண்; woman. *"மறுவுண்டோ மாதர் முகத்து" (குறள், 1117).* 2. அழகு (பிங்.); beauty. *"மாதர்கொண் மாதரெல்லாம்" (திருவாத.பு.திருவம்பல.40).* 3. பொன் (அக.நி.); gold. 4. காதல் (தொல். சொல்.328); love.

[மா = அழகு. மா→மாது = அழகு, அழகுள்ள பெண், பெரும்பாலும் அழகினால் ஏற்படும் காதல். மாது→மாதர்.]

பெண்கள் பெரும்பாலும் தாய்மாராதலாலும், தெய்வப் பெண்டிர் தாய்போற் கருதப் பெறுவதாலும், பெண்ணின் பெயர் தாய்க்கருத்தையுங் கொள்ளும். எ–டு. மலைமகள், மலை மடந்தை, மலைமாது. இம்முறையிலேயே, மாதர் என்னும் சொல்லும் தாய்ப் பொருளைப் பெற்றது.

GK. mater, **L.**marer, **E.**mother, **G.**.muotar, mutter, ther, Litemote, slav.mati.

வடவர் காட்டும் மூலம் மா[3]=அள. derivation from 3 *mā* very doubtful என்று மானியர் வில்லியம்சு சமற்கிருத அகரமுதலி குறித்திருத்தல் காண்க (வ.வ.60).

மாதர்[2] *mādar,* பெ.(n.) ஓரிடைச் சொல் (சூடா.); an expletive.

மாதர்காய் *mādar-kāy,* பெ.(n.) தேங்காய்; cocoanut.

மாதர்காய்ச்சல் *mādar-kāyccal,* பெ.(n.) காமக் காய்ச்சல்; fever due to passion.

[மாதர் + காய்ச்சல்.]

மாதர்குணச்சலம் *mādarguṇa-c-calam,* பெ.(n.) கந்தகம்; sulphur.

மாதர்குலம் *mādarkulam,* பெ.(n.) மகளிர் பிரிவு; class of women.

[மாதர் + குலம்.]

மாதர்பால் *mādar-pāl,* பெ.(n.) முலைப்பால்; human breast milk.

[மாதர் + பால்.]

மாதர்பிணி *mādar-piṇi,* பெ.(n.) பெண் நோய்; venereal disease.

[மாதர் + பிணி.]

மாதர்லிங்கம் *mādar-liṅgam,* பெ.(n.) பெண் குறியின் நடுவிலிருக்கும் ஓர் நரம்புப் பகுதி; clitoris (சா.அக.).

[மாதர் + லிங்கம்.]

மாதரம் *mādaram,* பெ.(n.) எலுமிச்சம் பழம்; lime fruit (சா.அக.).

மாதரழகி *mādaraḻagi,* பெ.(n.) பெருந்துளசி; large ocimum somotum (சா.அக.).

[மாதர் + அழகி.]

மாதராள் *mādarāḷ,* பெ.(n.) மாதர்[1], 1 பார்க்க; see *mādar. "மடமொழி மாதராள்" (நாலடி, 384).*

[மாதர்→மாதராள்.]

மாதரி[1] *mādari,* பெ.(n.) சிலப்பதிகாரத்தில் மதுரையில் கண்ணகிக்கு அடைக்கலம் கொடுத்த ஆயர் முதுமகள் (சி.பெ.அக.); a shepherd old lady who took care of Kannagi at Madurai as per Silappathikaram.

மாதரி[2] *mādari,* பெ.(n.) காளி (பிங்.); *kāḷi.*

மாதரிச்சை *mādariccai,* பெ.(n.) பெண்கள் மேல் உண்டாகும் இச்சை; sexual desire in female.

[மாதர் + இச்சை.]

மாதருதரக்கட்டி *mādaru-tara-k-kaṭṭi,* பெ.(n.) கருப்பாயாசக்கட்டி; abscess in the ulerus (சா.அக.).

மாதவக்கோன் *mādava-k-kōṉ,* பெ.(n.) காட்டில் ஆநிரைகளை மேய்க்கும் இடைச் சாதியர்; idaiyar caste.

மாதவசுந்தரி *mādava-śundari,* பெ.(n.) நிலம்; earth.

மாதவசுரன் *mādava-śuraṉ,* பெ.(n.) தொன் மணியுளொன்று; one of the nine gems - *Topaz.*

மாதவசூரி *mādavaśūri,* பெ.(n.) மாலிய வரலாறு (அபி.சிந்.); a biography of *Tirumāl.*

மாதவதாசர் *mādava-tāšar,* பெ.(n.) திருமால் பத்தர்; a devotee of Tirumal.

மாதவம்[1] *mātavam,* பெ.(n.) 1. இளவேனில் (பிங்.); spring. 2. விடை (வைகாசி) (விதான. குணாகுண.28, உரை); vaikāši, the Tamil month. 3. இனிமை (யாழ்.அக.); sweetness. 4. மது (பிங்.); spirituous or fermented liquor.

மாதவம்[2] *mātavam,* பெ.(n.) பெருந்தவம்; great penance. *"என்ன மாதஞ் செய்ததிச் சிறுகுடில்" (பாரத.கிருட்.80).*

[மா + தவம். மா = பெரிய.]

மாதவம்பரிவாள் *mādavam-parivāḷ,* பெ.(n.) காட்டு முருங்கை; a tree - wild moringa (சா.அக.).

மாதவம்புரிவாள் *mādavam-purivāḷ,* பெ.(n.) தாமரையிலை; a leaf of lotus (சா.அக.).

[மாதவம் + புரிவாள்.]

மாதவமனோகரி *mādava-maṉōgari,* பெ.(n.) இராக வகை (பரத.ராக.பக்.103); a specific - melody type (சா.அக.).

மாதவர் *mādavar,* பெ.(n.) முனிவர்; asceties risi, as performing austere penance. *"மாதவர் நோன்பு மடவார் கற்பும்" (மணிமே.22, 208).*

[மாதவம்→மாதவர்.]

மாதவர்பள்ளி *mā-davar-paḻḻi,* பெ.(n.) முனிவரின் பாழி (ஆசிரமம்) இருப்பிடம்; hermitage. *"மாதவி மாதவர் பள்ளியு ளடைந்தது" (மணிமே.18, 8).*

[மாதவர் + பள்ளி.]

மாதவரொட்டி *mādava-roṭṭi,* பெ.(n.) கருந்துளசி; black species of holy basil (சா.அக.).

மாதவல்லி *māda-valli,* பெ.(n.) சித்தினி சாதிப் பெண்; one of the four classes of women divided according to their lust (சா.அக.).

மாதவழகி *māda-vaḻagi,* பெ.(n.) வட்டக் கிலுகிலுப்பை; round rattle wort, one of varities of crolalaria laburnifollia (சா.அக.).

மாதவழிச்செலவு *māda-vaḻi-c-celavu,* பெ.(n.) மாதச் செலவு; monthly expenses. *"மாதவழிச் செலவுக் கன்று சொன்ன நூறு பொன்னும்" (தெய்வச்.விறலி.380).*

[மாதம் + வழிச்செலவு.]

மாதவறுதி *māda-v-aṟudi,* பெ.(n.) திங்கள் முடிவு (யாழ்.அக.); end of a month.

[மாதம் + அறுதி.]

மாதவன் *mādavaṉ,* பெ.(n.) 1. திருமால்; Tirumāl. *"மாதவற்கு நான்முகற்கும் வரதன் கண்டாய்" (தேவா.247, 7).* 2. வசந்தன் (யாழ்.அக.); god of spring.

[மா + தவன். மா = பெரிய.]

மாதவாக்கியம் *māda-vākkiyam,* பெ.(n.) ஆண்டுத் தொடக்கத்திலிருந்து ஒவ்வொரு மாதத்தின் இறுதிவரையுள்ள காலத்தை நாளாகவும் நாழிகையாகவும் கணக்கிட்டுக் காட்டும் வாய்பாடு; (Astron) table giving the duration of a period beginning with the commencement of a year and ending with each month, expressed in days and nāḻikai.

*[மாதம் + வாக்கியம். **Skt.** வாக்கியம். த. சொற்றொடர்.]*

மாதவி[1] *mādavi,* பெ.(n.) சிலப்பதிகாரக் காவியத்தில் வரும் கோவலனின் காதல் மனைவி (சி.பெ.அக.); concupine of Kovalan as per Silappathikaram.

மாதவி[2] *mādavi,* பெ.(n.) 1. கிருட்டிணன் தங்கையான சுபத்திரை; *Subhadrai,* sister of Krishna. *"மாதவி தான்பெற்ற மதகயம்" (பாரதவெண்.782).* 2. கண்ணன் மனைவி (யாழ்.அக.); Krishna's wife. 3. துளசி (சங்.அக.); sac`red basil. 4. கொற்றவை, (யாழ்.அக.); Durga.

மாதவி[3] *mādavi,* பெ.(n.) 1. பனைவெல்லம்; jaggery, treacle from sweet toddy. 2. சருக்கரை (சீனி) (யாழ்.அக.); sugar. 3. கூட்டிக் கொடுப்பவள் (வின்.); procuress. 4. குருக்கத்தி செடி; common delight of the woods. *"கோதை மாதவி கொழுங் கொடி யெடுப்ப" (சிலப்.14:113).* 5. கள்ளி; spurge.

மாதவி[4] *mādavi,* பெ.(n.) வசந்த மல்லிகை; jasmine.

மாதவிக்கொடி *mādavi-k-koḍi,* பெ.(n.) ஒரு வகைக் கொடி; a tall climber.

மாதவிகை *mādavigai,* பெ.(n.) வசந்தமல்லிக் கொடி; the jasmine grown in the spring season.

மாதவிகொழுநன் *mādavi-kolunan,* பெ.(n.) அருச்சுனன் (பிங்.); Arjunan.

[மாதவி + கொழுநன்.]

மாதவிடாய் *māda-viḍāy,* பெ.(n.) மகளிர் மாதப்பூப்பு; menses. *"மானேர் விழியணங்கு மாதவிடாயானக்கால்" (விறலிவிடு.836).*

[மாதம் + விடாய்.]

மாதவிடாய்சன்னி *mādaviḍāy-canni,* பெ.(n.) மாதவிடாய் காலத்தில் ஏற்படும் ஒரு வகைக் காய்ச்சல்; fever with attends during menses (சா.அக.).

[மாதவிடாய் + சன்னி.]

மாதவிடாய்ச்சூலை *mādaviḍāy-c-cūlai,* பெ.(n.) மாதவிடாய் காலத்தில் உண்டாகும் நோய்; pain in the abdomen during the periods (சா.அக.).

[மாதவிடாய் + சூலை.]

மாதவிடை *māda-viḍāy,* பெ.(n.) மாதவிடாய் (யாழ்.அக.) பார்க்க; see *māda-viḍāy.*

[மாதவிடாய்→மாதவிடை (கொ.வ.)]

மாதவிப்பந்தல் *mādavi-p-pandal,* பெ.(n.) குருக்கத்திக் கொடிகளாலான பந்தல்; arbour formed by *mādavi* creepers. *"மாதவிப் பந்தல் மேல் பல்காற் குயிலினங்கள் கூவின காண்" (திவ்.திருப்பா.18).*

[மாதவி + பந்தல்.]

மாதவியசங்கிதை *mādaviya-sangidai,* பெ.(n.) கால உறுதி; determination of period (சா.அக.).

மாதளை *mādaḷai,* பெ.(n.) மாதுளை, 1 பார்க்க; see *māduḷai.*

[மாதுளை→மாதளை.]

மாதளைச்சிலை *mādaḷai-c-cilai,* பெ.(n.) மாந்தளிர்க்கல் (யாழ்.அக.) பார்க்க; see *māndaḷir-k-kal.*

[மாதளை + சிலை. சிலை = கல்.]

மாதறி *mādari,* பெ.(n.) விட்டம், உத்தரம் முதலியவற்றிற்கு உதவும் பெரிய மரத்துண்டு (வின்.); large timber, beam.

[மா + தறி. மா = பெரிய. தறி = மரம், மரத்துண்டு.]

மாதனம் *mādanam,* பெ.(n.) கிராம்பு (யாழ்.அக.); clove.

மாதாந்தசஞ்சீவி *mādānda-cañjivi,* பெ.(n.) 1. மாதவிடாய்; menstruation. 2. நாதநீர்; menstrual fluid (சா.அக.).

மாதாந்தம்[1] *mādāndam,* பெ.(n.) 1. மாத முடிவு (வின்.); the end of a month. 2. (அமாவாசை) காருவா (யாழ்.அக.); new moon. 3. மாதவிறுதியில் வரும் கிழமை யொன்றில் கோவிலிற் செய்யும் வழிபாடு (வின்.); worship performed at a shrine on a particular day of the week, as Friday, occuring last in a month.

[மாதம் + அந்தம்.]

மாதாந்தம்[2] *mādāndam,* பெ.(n.) மாதந் தோறும் கோயிலுக்குச் சென்று வழிபடுகை

(இ.வ.); pilgrimage to a temple for worship once in every month. *"மாதாந்தம் போய் வந்தார்கள்" (சா.அக.).*

மாதாந்தரம் *mādāndaram,*பெ.(n.) மாதந் தோறும் (கொ.வ.); month by month.

மாதாந்தவெள்ளம் *mādānda-veḷḷam,* பெ.(n.) மகளிர் பூப்புநீர்; the menstrual discharge of woman.

[மாதாந்தம் + வெள்ளம்.]

மாதானுபங்கி *mādāṉubaṅgi,* பெ.(n.) திருவள்ளுவர்; Tiruvalluvar. *"மாதானு பங்கி மறுவில் புலச் செந்நாப் போதார்" (வள்ளுவமா.21).*

மாதி[1] *mādi,*பெ.(n.) 1. வட்டமாயோடல் (சூடா.); circular motion. *"மாதி வட்ட மோடினார்" (கம்பரா.பிரமாத்திர.135).* . 2. கோள் சுற்று (வின்.); (Astron.) revolution of a planet.

மாதி[2] *mādi,* பெ.(n.) மாமரம்; mango tree. *"மாதி மணங்கமழும் பொழில்" (திருவிசை. சேந்த.2, 2).*

மாதிகம் *mādigam,* பெ.(n.) குதிரை மார்க்கம்; race course.

மாதிகா *mādigā,*பெ.(n.) முட்பலா; jack tree (சா.அக.).

மாதிசை[1] *mādicai,*பெ.(n.) நான்கு திக்குகள்; the four cardinal points of the campas.

[மா + திசை.]

மாதிசை[2] *mādicai,*பெ.(n.) ஒருவனுக்கு, பிறப்பியத்தில் ஒருகோளின் நடப்புக் காலம் (மகாதிசை); period of influence of a planet with reference to the natal house in a horoscope.

மாதிபம் *mādibam,*பெ.(n.) நெருஞ்சில்; small caltrops (சா.அக.).

மாதிபோதி *mādi-pōdi,*பெ.(n.) நெருஞ்சில் வகை (மலை.); a species of cowthorn (சா.அக.).

மாதிமி *mādimi,* பெ.(n.) மாமரம்; mango tree.

மாதிமை *mādimai,*பெ.(n.) 1. தகுதி; fitness, propreity, appropriateness. *"பிச்சை கொண்டுண்பது மாதிமையோ" (தேவா.672, 7).* 2. காதல்; love. *"வேதியின் மாதிமையால் விரும்புமிடம்" (தேவா.798, 1).*

மாதியாடையான் *mādiyāḍaiyāṉ,* பெ.(n.) சிவபெருமான்; *śivaṉ.*

மாதிரசித்தி *mādir-citti,* பெ.(n.) நஞ்சு; poison (சா.அக.).

மாதிரம்[1] *mādiram,*பெ.(n.) 1. திக்கு; point of the compass. *"மாதிரத் தீண்டிய விருளு முண்டோ" (புறநா.90).* 2. யானை (பிங்.); elephant. 3. மலை; mountain. *"மழை தொழிலுதவ மாதி.,ங் கொழுக்க" (மதுரைக். 10, உரை).*

மாதிரம்[2] *mādiram,*பெ.(n.) விண்வெளி; atmosphere, air. *"வாலமாதிரத்தான் வளி கொட்ப" (மதுரைக்.5).*

மாதிரம்[3] *mādiram,*பெ.(n.) நிலம் (சூடா.); earth, ground.

மாதிரம்[4] *mādiram,* பெ.(n.) மண்டிலம் (அக.நி.); circle, sphere.

மாதிரவாடையான் *mādira-vāḍaiyāṉ,* பெ. (n.) சிவன்; *Śivaṉ.*

[மாதிரம் + ஆடையான்.]

மாதிரி[1] *mādiri,* பெ.(n.) 1. உண்மைக்கு ஒத்த நிலையில் இருப்பது; pattern, sample, specimen, model. 2. முறை; manner, way. 3. தன்மை; kind.

[மா = அளவு. மா→மாதிரி. ஒரே அளவுடையது, ஒன்று போலிருப்பது.]

மாதிரி[2] *mādiri,* பெ.(n.) அதிவிடை (தைலவ. தைல.) பார்க்க; see *adi-viḍai.*

மாதிரிகை *mādirigai,* பெ.(n.) 1. மாதிரி[1] பார்க்க; see *mādiri,[1]. "மாதிரிகை யாகவுனும் வாய்ப்பினாள்" (வெங்கையு.232).* 2. மூலப்படி (இ.வ.); the original, as distinguished from a copy.

மாதிலகம் *mādilagam,* பெ.(n.) பொன்னூமத்தை; dhalura bearing yellow or gold coloured flowers (சா.அக.).

மாதினி *mādiṉi,* பெ.(n.) சிறுவழுதலை; brinjal plant (சா.அக.).

மாதீர்த்தன் *mādīrttaṉ,* பெ.(n.) குறுந்தொகைப் பாடல் (113) இயற்றிய புலவர் (சி.பெ.அக.); a poet who had contributed to kurunthogai.

மாது[1] *mādu,* பெ.(n.) பெருமை; greatness. *"மாதுபடு நோக்கினவர்" (சீவக.499).*

மாது[2] *mādu,* பெ.(n.) குற்றம் (அருநி.); fault, defect.

மாது[3] *mādu,* பெ.(n.) 1. கன்னி ஓரை; virgo, a zodiacal sign. 2. ஓர் அசைச்சொல் (தொல்.சொல்.281); an expletive.

மாதுக்களெழுவர் *mādukkaḷ-eḻuvar,* பெ.(n.) எழுவகைப் பெண்டிர் (சங்.அக.); the seven divine mothers.

மாதுகாமம் *mādukāmam,* பெ.(n.) பவளம்; coral (சா.அக.).

மாதுகுத்துதல் *mādu-kuttudal,* பெ.(n.) பிள்ளை விளையாட்டு வகை (இ.வ.); a children's game.

மாதுங்கம் *māduṅgam,* பெ.(n.) மாதுளை, 2 (மூ.அ.) பார்க்க; see *māduḷai.*

மாதுங்கராகம் *māduṅga-rāgam,* பெ.(n.) மருதப்பண் வகை (பிங்.); a melody type of the agricultural tract.

மாதுநாதம் *mādu-nādam,* பெ.(n.) பெண்கள் மாதவிலக்கின் போது காணும் அரத்தம்; menstrual blood.

[மாது + நாதம்.]

மாதுநீர் *mādu-nīr,* பெ.(n.) மகப்பேறு முன் பனிக்குடம் உடைந்து பிறப்புறுப்பு வழியாக வெளிப்படும் நீர்; liquor amni.

[மாது + நீர்.]

மாதுபாகம் *mādubāgam,* பெ.(n.) பெண் பக்கம்; woman's side.

[மாது + பாகம்.]

மாதுபாதியன் *mādu-pādiyaṉ,* பெ.(n.) உடலின் ஒரு பகுதி பெண்ணாகவுள்ள சிவன் (சி.பெ.அக.); Siva, as having Parvathi as one part of his body.

[மாது + பாதியன்.]

மாதுமை *mādumai,* பெ.(n.) 1. பெண் தன்மை; womanliness. *"மாதுமைக் குணங்களான சௌந்தர்யாதிகள்" (திவ்.திருவாய். 4, 2, 7, பன்னீ.).* 2. அறிவின்மை; ignorance. *"ஞால மாதுமை யுடைத்து" (கம்பரா.பிணிவீ.88).*



மாதுளை



மாசி பத்திரி

மாவிலங்கை

மாதுலங்காதிக்கிருதம் *mādulaṅgādi-k-kirudam,* பெ.(n.) மாதுலங்காய்ச் சாறால் செய்த ஓர் மருந்து நெய்; a medicated ghee prepared with the juice of the citron fruit as chief ingredient (சா.அக.).

மாதுலநாதம் *mādula-nādam,* பெ.(n.) கருந்துளசி; black variety of holy basil (சா.அக.).

மாதுலம் *mādulam,* பெ.(n.) அடுக்கு ஊமத்தை; dhatura bearing multi coralled petals (சா.அக.).

மாதுலர் *mādular,* பெ.(n.) மாமன்மார்; uncles.

மாதுவசை *mādu-vašai,* பெ.(n.) பெண் வசம்பு (தைலவ.தைல.); a kind of sweet flag.

மாதுவம் *māduvam,* பெ.(n.) மாதுலர் பார்க்க; see *mādular.*

மாதுளை *mādu*ḷ*ai,* பெ.(n.) 1. மரவகை (திவா.); pomegranate. 2. பேரெலுமிச்சை; ciron lemon.

மாதுளைரசம் *māduḷai-rašam,* பெ.(n.) மாதுளம் பழத்தின் சாறு; juice of pomegranate ruit, extremely pleasant to taste and refreshing.

[மாதுளை + ரசம். **Skt.** *ரசம். த. சாறு.]*

மாதுளைவித்து *māduḷai-vittu,* பெ.(n.) மாதுளைவிதை; seeds of pomegranate fruit.

மாதுறுப்பு *māduṟuppu,* பெ.(n.) மகளிரணியும் உத்தி யென்னும் தலையணி (யாழ்.அக.); a head ornament of women.

[மாது + உறுப்பு.]

மாதூகம் *mādūgam,* பெ.(n.) இலுப்பை மரம்; mowah tree (சா.அக.).

மாதூர்காரகன் *mādūrkāragaṉ,* பெ.(n.) நிலவு; the moon (சா.அக.).

மாதேசி *mādēši,* பெ.(n.) எலுமிச்சை; lime (சா.அக.).

மாதேவன் *mādēvaṉ,* பெ.(n.) 1. சிவன்; *Šivaṉ. "மாதேவன் வார் கழல்கள்" (திருவாச. 7, 1).* 2. ஏகாதசருத்திரருள் ஒருவர் (திவா.); a rudran, one of *ēkātaca-ruttirar.*

[மா + தேவன்.]

மாதேவி *mādēvi,* பெ.(n.) 1. மலைமகள் (கூர்மபு.திரு.20); pārvati. 2. அரசி; queen. *"புரவலன் துயில மாடே..... மாதேவி யிருப்ப" (பெரியபு.மெய்ப்பொரு.10).* 3. செங்கழுநீர் (மலை.); purple Indian water lily.

[மா + தேவி.]

மாதை *mādai,* பெ.(n.) திருவாமத்தூர் என்னும் சிவத்தலம்; a *Šivaṉ* shrine. *"மாந்தமுமாகி நின்றார் மாதை நாதர்" (தமிழ்நா.111).*

மாதொருபாகனார் *mādoru-bāgaṉār,* பெ.(n.) சிவன்; *Šivaṉ. "மாதொரு பாகனார் தாம் வருவர்" (சி.சி.2, 25).*

மாதோ *mādō,* பெ.(n.) அசைச் சொல்; expletive article.

மாதோசம்நீக்கி *mātōšam-nīkki,* பெ.(n.) புளியாரை; sour sorrel.

மாந்தக்கட்டி *mānda-k-kaṭṭi,* பெ.(n.) குழந்தைகளுக்கு வரும் கட்டி வகை (சாரங்க. 236); a kind of tumour, in children.

[மாந்தம் + கட்டி.]

மாந்தக்கொதி *mānda-k-kodi,* பெ.(n.) குழந்தைநோய் வகை (யாழ்.அக.); fever from indigestion, chiefly in children.

[மாந்தம் + கொதி.]

மாந்தகணம் *mānda-kaṇam,* பெ.(n.) குழந்தைகளுக்கு வரும் கணை நோய் வகை (பைஷஜ.); a wasting disease, in children, Table mesenterica.

[மாந்தம் + கணம்.]

மாந்தசன்னி *mānda-šaṉṉi,* பெ.(n.) மாந்த இசிவு பார்க்க; see *mānda-išivu.*

[மாந்தம் +சன்னி.]

மாந்தஇசிவு *mānda-išivu,* பெ.(n.) மாந்தத்தால் குழந்தைகளுக்கு வரும் இசிவு நோய்; infantile convulsions with delirium due to indigestion.

[மாந்தம் + இசிவு.]

மாந்தத்தையறுக்கி *māndattaiyaṟukki,* பெ (n.) பாவட்டை; a tree - *pavattai Indica.*

மாந்தப்புல் *mānda-p-pul,* பெ.(n.) காவட்டம் புல் (பதார்த்த.375); citronella grass.

[மாந்தம் + புல்.]

மாந்தபத்திரம் *mānda-pattiram,* பெ.(n.) வில்வயிலை; bael leaf, aegle marmeleps.

மாந்தம் *māndam,* பெ.(n.) 1. குழந்தை நோய் வகை; infantile diarrhoea. 2. மந்தத்தால் குழந்தைகட்கு வரும் கணைநோய் (வின்.); infantile convulsion due to indigestion. 3. மாந்தப்புல் பார்க்க; see *mānda-p-pul.* 4. செரியாமை (யாழ்.அக.); indigestion.

[மொத்து = தடித்த - வன் - வள் - து, சுறுசுறுப்பில்லாத- வன் - வள் -து. மொத்து → மத்து → மந்து → மந்தம் = செரிமான உறுப்பின் சுறுசுறுப்பின்மை, செரியாமை. மந்தம் → மாந்தம் = செரியமையாற் குழந்தைகட்குண்டாகும் நோய். வடவர் காட்டும் மூலமும் இதுவே (வ.வ.61).]

மாந்தமாத்திரை *mānda-māttirai,* பெ.(n.) செரியாமை, பசியின்மை, முதலிய மாந்த நோய்களுக்குக் கொடுக்கும் மாத்திரை; pill given for diseases caused by *māndam.*

[மாந்தம் + மாத்திரை.]

மாந்தர் *māndar,* பெ.(n.) 1. மக்கள்; human beings. *"மாந்தர் மக்களென்னும் பெயரும்" (தொல்.சொல்.163).* 2. ஆடவர்; male persons. *"தோள் சேர்ந்த மாந்தர் துயர்கூர" (கலித்.145, 13).* 3. ஊர்க்காவலர்; watchman. *"நல்லிருள் மாந்தர் கடிகொண்ட கங்குல்" (கலித்.142, 33).*

மாந்தர்போகம் *māndar-pōgam,* பெ.(n.) மாதர் போகம்; intercourse with woman.

*[மாதர் + **Skt.** போகம்.]*

மாந்தரஞ்சேலிரும்பொறை *māndarañ-cēral-irumpoṟai,* பெ.(n.) சேர மன்னன் (புறநா.53, 125); a *Cēra* king.

மாந்தரன் *māndaraṉ,* பெ.(n.) பழைய சேரவரசன் (பதிற்றுப்.90); an ancient *Cēra* king.

மாந்தரோகம் *mānda-rōgam,* பெ.(n.) மாந்த நோய்; a disease in children caused by the fermentation of acids in the stomach due to fermentation.

*[மாந்தம் + **Skt.** ரோகம் > த. நோய்.]*

மாந்தல் *māndal*, பெ.(n.) 1. குடித்தல்; drinking. 2. உண்ணுதல்; eating. 3. ஊழ்வினைப் பயனை நுகர்தல்; experiencing the sorrows and pleasures being the result or outcome of what he had done (bad or good) in the previous birth.

[மாந்து→மாந்தல்.]

மாந்தலை *māndalai*, பெ.(n.) கன்னமுது (பாயச) முதலியவற்றில் சுவை பெருக இடுவதற்காக காய வைத்த மாம்பழச் சாறு (நாஞ்.); a jelly like preparation of dried mango-juice.

மாந்தவலி *māndavali*, பெ.(n.) மாந்தத்தினால் குழந்தைகளுக்குக் காணும் இசிவு; trismus noscentium.

[மாந்தம் + வலி.]

மாந்தவிரைப்பு *mānda-viraippu*, பெ.(n.) குழந்தைகளுக்கு வரும் இரைப்பு நோய் (இங்.வை.); infantile laryngitis, child - crowing.

[மாந்தம் + இரைப்பு.]

மாந்தவிழுப்பு *mānda-v-iḻuppu*, பெ.(n.) மாந்தஇசிவு பார்க்க; see *mānda-iśivu*.

[மாந்தம் + இழுப்பு.]

மாந்தளிர் *māndaḷir*, பெ.(n.) துவர்ப்புச் சுவைப் பத்தனுள் ஒன்றாகிய மாமரத்துளிர் (யாழ்.அக.); tender leaf of mango, one of ten tuvar taste (q.v.).

[மா + தளிர்.]

மாந்தளிர்க்கல் *māndaḷir-k-kal*, பெ.(n.) ஒருவகை மணிக்கல் (இ.வ.); a kind of precious stone.

[மாந்தளிர் + கல்.]

மாந்தளிர்ச்சிலை *māndaḷir-c-cilai*, பெ.(n.) காவிக்கல் (யாழ்.அக.); red ochre.

[மாந்தளிர் + சிலை.]

மாந்தளிர்நாணான் *māndaḷir-nāṉāṉ*, பெ.(n.) மன்மதன் (நாமதீப.59); god of love.

[மாந்தளிர் + நாணான்.]

மாந்தளிர்ப்பச்சை *māndaḷir-p-paccai*, பெ.(n.) சிலமான் கல் (சங்.அக.); agate.

[மாந்தளிர் + பச்சை.]

மாந்தன்[1] *māndaṉ*, பெ.(n.) நமரை வாழை; green banana.

மாந்தன்[2] *māndaṉ*, பெ.(n.) ஆண்மகன்; male person. *"அறைக்கண் மாந்தனுக் கதிதியந் தொழிலினி லமைந்தார்" (சூளா.தூது.40).*

மாந்தனாதி *māndaṉādi*, பெ.(n.) சூடாலைக் கல்; a kind of load stone.

மாந்தா *māndā*, பெ.(n.) மாந்தாதா பார்க்க; see *māndādā*. *"மாந்தா முதன் மன்னவர்" (கம்பரா.அயோமுகி.73).*

மாந்தாதா *māndādā*, பெ.(n.) சூரிய குலத்திற் புகழ்பெற்ற ஓர் அரசன்; a famous king of solar race. *"மாந்தாதா வென்பான் வழி பட்டான்" (காஞ்சிப்பு.அந்தர்வே.46).*

மாந்தாளி *māndāḷi*, பெ.(n.) பண் வகை (பரத. ராக.பக்.104); a specific melody type.

மாந்தாளிப்பச்சை *māndāḷi-p-paccai*, பெ.(n.) பச்சைக்கல் வகை (இ.வ.); a variety of green stone.

[மாந்தாளி + பச்சை.]

மாந்தி[1] *māndi,* பெ.(n.) 1. மாமரம் (சூடா.); mango. 2. திருமணச் சடங்கினுளொன்று (வின்.); a marriage ceremony.

மாந்தி[2] *māndi,* பெ.(n.) குளிகன் (அக.நி.); a invisible planet.

மாந்தித்தை *mānditțai,* பெ.(n.) மாவிலிங்கம்; a tree - crataeva roxurghil.

மாந்தியம் *māndiyam,* பெ.(n.) மந்தமா யிருக்கை (யாழ்.அக.); becoming dull.

[மந்தம்→மாந்தம்→மாந்தியம்.]

மாந்திரவஞ்சி *māndira-vañji,* பெ.(n.) சாப்பிரவிரை; monkey turmeric - *Bixa orellana* (சா.அக.).

மாந்திரை *māndirai,* பெ.(n.) மாந்தலை பார்க்க; see *māndalai.*

[மாந்தலை→மந்தரை→மாந்திரை.]

மாந்திவிழுப்பு *māndi-viḷuppu,* பெ.(n.) குழந்தைகளுக்கு உண்டாகும் இழுப்பு நோய்; fits in children.

[மாந்தம்→மாந்தி + இழுப்பு.]

மாந்து[1]-தல் *māndu-,* 16 செ.குன்றாவி.(v.t.) 1. உண்ணுதல்; to eat, feed. *"மடமந்தி..... வாழைத் தீங்கனி மாந்தும்" (தேவா.909, 5).* 2. குடித்தல்; to drink. *"தேம்பிழி நறவ மாந்தி" (கம்பரா.நாட்டுப்.8).* 3. நுகர்தல்; to experience as pleasure and pain, to enjoy. *"கன்னியின் நல மாந்தினள்" (பாகவத.).*

மாந்து[2]-தல் *māndu-,* 16 செ.கு.வி.(v.i.) 1. வருந்துதல்; to be distressed. *"மணி பிரியரவின் மாந்தி" (கம்பரா.தைல.63).* 2. இறத்தல்; to be ruined, to perish, die. *"மயிர்பட மாந்தும் படியிறே இவள்படி" (ஈடு.7, 3, 2).* 3. அவிந்தடங்குதல்; to be extinct. 4. ஊக்கமழிதல் (யாழ்.அக.); to become dispirited.

மாந்துளிர் *mānduḷir,* பெ.(n.) மாமரத்தின் இளந்தளிர்; the tender leaves of the mango tree which are red in colour.

[மா + துளிர்.]

மாந்தை[1] *māndai,* பெ.(n.) 1. நோய் வகை (யாழ்.அக.); a disease. 2. சேரனுக்குரிய ஒரு நகரம் (அகநா.127); an ancient town of the *cēra*kingdom.

மாந்தை[2] *māndai,* பெ.(n.) இலங்கையில் இன்று மாதோட்டம் என வழங்கும் ஊரின் பண்டைப் பெயர்; old name of the present *Mādhōṭṭam* in Sri Lanka. *இராவணனின் மனைவி மண்டோதரி பிறந்த ஊர். அவளுடைய தந்தையான மயனின் தலைநகரம்.*

மாந்தை[3] *māndai,* பெ.(n.) பெண்கள் அணியும் பல வண்ணங்களால் அமைந்த மேலாடை; a colourful dress of women.

மாந்தோட்டுப்பச்சை *māndōṭṭu-p-paccai,* பெ.(n.) மரகத வகை; a kind of emerald (S.I.I.vii, 22).

மாந்தோட்டுப்பொத்தி *māndōṭṭu-p-potti,* பெ.(n.) மாந்தோட்டுப்பச்சை பார்க்க; see *māndōṭṭu-p-paccai.*

மாந்தோப்பு *māntōppu,* பெ.(n.) மாமரங்களின் தொகுப்பு; crowd of mango tree.

[மா + தோப்பு. மா = மாமரம். தொகுப்பு → தோப்பு.]

மாநகரம் *mānagaram,* பெ.(n.) பத்து இலக்கத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட பெரிய நகரம்; city.

[மா + நகரம்.]

மாநகரத்தந்தை *mānagara-t-tandai,* பெ.(n.) மாநகராட்சியின் ஆளுகைக் குழுத்தலைவர்; Mayar.

[மாநகரம் + தந்தை.]

மாநகராட்சி *mānagarāṭci,* பெ.(n.) மாநகரத்தை ஆளும் உள்ளாட்சி அமைப்பு; corporation of a city.

[மா + நகராட்சி.]

மாநடன் *mānaḍaṉ,* பெ.(n.) சிவன் (சங்.அக.); *Šivaṉ.*

[மா + நடன்.]

மாநரகம் *mānaragam,* பெ.(n.) மாந்தப் பிறப்பில் பெருங்கேடு புரிந்தோர் இறப்பிற்குப் பின் சென்று சேர்வதாகக் கருதப்படுவது, அளறு; the great hell.

[மா + நரகம். மா = பெரிய.]

மாநாகம் *mānāgam,* பெ.(n.) பாம்பு வகை (நாமதீப.261); a kind of snake.

[மா + நாகம்.]

மாநாட்டுப்பந்தல் *mānāṭṭu-p-pandal,* பெ.(n.) திரளான மக்கள் அமர்வதற்கேற்ற வகையில் அமைக்கப்படும் மிகப் பெரிய பந்தல்; temporary shelter for the conference.

[மாநாடு + பந்தல்.]

மாநாடு *mānāḍu,* பெ.(n.) 1. பேரளவிலான மக்கள் கலந்து கொள்ளும் கூட்டம்; conference. 2. ஒரு பொருண்மை குறித்து கலந்துரையாடும் கூட்டம்; a place where consult in a meaning.

[மா + நாடு.]

மாநாதன் *mānādaṉ,* பெ.(n.) திருமால்; Tirumāl.

மறுவ. மாமணாளன்

[மா + நாதன்.]

மாநிலங்களவை *mānilaṅgaḷavai,* பெ.(n.) சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களோடு குடியரசுத் தலைவரால் அமர்த்தப்பட்டவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட இந்தியப் நாடாளுமன்றத்தின் அவை; upper house of the Indian parliament.

[மாநிலங்கள் + அவை.]

மாநிலங்களவைஉறுப்பினர் *mānilaṅgaḷ-avai-uṟuppiṉar,* பெ.(n.) இந்திய நாடாளு மன்றத்தின் மேலவை உறுப்பினர்; member of parliament (Rajyashabha) in India.

மாநிலம் *mānilam,* பெ.(n.) 1. இந்தியாவின் அரசியலமைப்பிற்காகப் பிரிக்கப்பட்ட பகுதி; state. 2. நிலம்; earth. *"மாநிலஞ் சேவடியாக" (நற்.கடவுள்).*

[மா + நிலம்.]

மாநிறக்கல் *māniṟa-k-kal,* பெ.(n.) நீலக்கல்; a gem of blue colour.

[மாநிறம் + கல்.]

மாநிறம் *mānịram,* பெ.(n.) பொது நிறம்; (C.G.) brown colour, tan colour.

[மா + நிறம்.]

மாநீர்[1] *mānīr,* பெ.(n.) கடல் (மணிமே.14:73); sea.

[மா + நீர். மா = பெரிய.]

மாநீர்[2] *mānīr,* பெ.(n.) தண்ணீர்; water.

[மா + நீர்.]

மாநோன்பு *mānōṉbu,* பெ.(n.) 1. காருவா (அமாவாசை) நாளன்று நோற்கப்படும் நோன்பு; the feast on the new moon day. 2. மகாநோன்பு (கொ.வ.); the festival of *nava-rāttiri.*

[மா + நோன்பு.]

மாப்பட்டாடை *māppaṭṭāḍai,* பெ.(n.) வரி வகை; a tax (S.I.I.vii, 404).

[மா + பட்டாடை.]

மாப்பண்டம் *māppaṇḍam,* பெ.(n.) மாவினால் செய்த பலகாரம்; cakes prepared with rice flour.

[மா + பண்டம். மா = மாவு.]

மாப்பணம்[1] *mā-p-paṇam,* பெ.(n.) பண்டைக்கால காசு வகைகளுள் ஒன்று; a kind of coin. *"நெய்விலைக்கு எருதுக்கு ரண்டு மாப்பணமும் எண்வகைப் பலரையும்" (திருமலை. செப்.2/1646, பக்.89).*

மாப்பணம்[2] *mā-p-paṇam,* பெ.(n.) 1. நாணய வகை; a coin (S.I.I.v.224). 2. வரி வகை; a tax (S.I.I.VIII, 139).

[மா + பணம்.]

மாப்பதக்கு *mā-p-padakku,* பெ.(n.) வரி வகை; a tax (S.I.I.vii.30).

[மா + பதக்கு.]

மாப்பலகை *mā-p-palagai,* பெ.(n.) மாக்கல் (யாழ்.அக.); pot-stone, pumice stone.

[மா + பலகை. மா = மாவு. பலகை = பலகை வடிவானகல்.]

மாபிசை-தல் *mā-pišai-,* 2 செ.குன்றாவி. (v.t.) பிசறுதல்; mixing.

[மா + பிசை-,]

மாப்பிடி *mā-p-piḍi,* பெ.(n.) மாவினாற் பிடிக்கப்பட்ட பண்ணியாரம் (யாழ்.அக.); cake made of flour.

[மா + பிடி. மா = மாவு.]

மாப்பிலாச்சை *mā-p-pilāccai,* பெ.(n.) நீல நிறமுடையதும் நான்கடி வளரத் தக்கதுமான கடல் மீன் வகை; sea - fish, bluish attaining 4 ft. in length.

[மா + பிலாச்சை. மா = பெரிய.]



மாப்பிள்ளை[1] *mā-p-piḷḷai,* பெ.(n.) 1. மணமகன்; bridegroom. *"உனக்கு நல்ல மாப்பிள்ளை வருவானம்மே" (குற்றாலக்.*

குற.63). 2. மகளின் கணவன்; daughter's husband. 3. அளியன் (நாமதீப.198); brother-in-law. 4. மாமன் மகன் (நாமதீப. 198); maternal uncle's son. 5. அத்தை மகன் (நாமதீப.198); paternal aunt's son. 6. தங்கையின் கணவன்; younger sister's husband.

[மணாட்டுப்பிள்ளை → (மாட்டுப்பிள்ளை) → மாப்பிள்ளை. ஒ.நோ. மணாட்டுப்பெண் → மாட்டுப்பெண்.]

மாப்பிள்ளை[2] *mā-p-piḷḷai,* பெ.(n.) 1. கேரள நாட்டிலுள்ள கிறித்தவருக்கும், அரபியருக்கும் வழங்கும் பட்டப் பெயர்; honourary title given to colonists in the west coast, as syrian Christians or Arabs (G.s.D.I.190). 2. மலையாள முதலிய மேலைக்கடற்கரையில் வாழும் ஒருசார் மகமதிய வகுப்பார்; moppḷlah, a class of muhammadans on the west coast (G.s.D.I.26).

மாப்பிள்ளை[3] *mā-p-piḷḷai,* பெ.(n.) மந்திரங்களுக்காக மாவினாற் செய்து வைக்கும் பொம்மையுருவம் (இ.வ.); a small figure of rice flour, used in magic rites. *"மாப்பிள்ளை மஞ்சட்பிள்ளை".*

[மா + பிள்ளை. மா = மாவு. பிள்ளை வடிவத்தை மாவில் வடித்துவைத்தல்.]

மாப்பிள்ளைஅழைப்பு *mā-p-piḷḷai-aḻaippu,* பெ.(n.) திருமணம் நடக்கும் இடத்துக்கு மாப்பிள்ளையை உரிய மதிப்புடன் ஊர்வலமாக அழைத்து வரும் நிகழ்வு; the ceremony of receiving and taking the bridegroom in a procesion to the wedding.

[மாப்பிள்ளை + அழைப்பு.]

மாப்பிள்ளைஆணி *mā-p-piḷḷai-āṇi,* பெ.(n.) மாப்பிள்ளையாணி பார்க்க; see *māppiḷḷai-y-āṇi.*

மாப்பிள்ளைக்கடா *mā-p-piḷḷai-k-kaḍā,* பெ.(n.) பொலியெருது (கொ.வ.); covering bull.

[மாப்பிள்ளை[1] + கடா.]



மாப்பிள்ளைச்சம்பா *mā-p-piḷḷai-c-cambā,* பெ.(n.) உயர்ந்த சம்பா நெல் வகை (இ.வ.); a superior kind of paddy.

[மாப்பிள்ளை + சம்பா.]

மாப்பிள்ளைமுறுக்கு *mā-p-piḷḷai-muṟukku,* பெ.(n.) மணமகனிடத்துக் காணப்படுவது போன்ற போலி மிடுக்கான நடத்தை (இ.வ.); stiffness of manners, as of a bridegroom.

[மாப்பிள்ளை[1] + முறுக்கு.]

மாப்பிள்ளையாணி *mā-p-piḷḷai-y-āṇi,* பெ.(n.) 1. மாட்டு வண்டியின் நடுப்பகுதியில் இருந்து மாடுகள் பூட்டுவதற்குரிய இடத்தில் வைக்கும் ஆணி; nail in bullock cart. 2. கலப்பைக் குற்றியோடு மேழியைச் சேர்க்கும் ஆணி; a nail joining the plough share to the plough.

[மாப்பிள்ளை + ஆணி.]

மாப்பிள்ளைவீரன் *mā-p-piḷḷai-vīraṉ,* பெ. (n.) ஒரு சிற்றூர் தேவதை (இ.வ.); a village demon.

[மாப்பிள்ளை + வீரன்.]

மாப்பு *māppu,* பெ.(n.) 1. மிகுதி; abundance. 2. மீன்றிரள்; shoal of fish. 3. மன்னிப்பு; excuse. *இந்தத் தடவை மட்டும் உனக்கு மாப்பு விடுகிறேன் (பே.வ.).*

[மா→மாப்பு.]

மாப்புக்காரன் *māppu-k-kāraṉ,* பெ.(n.) (குழூஉக்குறிச்சொல்) பறக்கோலா மீன்; a kind of fish.

மாப்புநெத்திலி *māppu-nettili,* பெ.(n.) கடற்பரப்பில் கூட்டமாய் மேயும் நெத்திலி மீன்; a group of nettili fish go surface of the sea.

[மாப்பு + நெத்திலி.]

மாப்புமீன் *māppu-mīṉ,* பெ.(n.) கூட்டமாய்க் கடற்பரப்பின் மேல் மேயும் மீன்கள் (செங்கை. மீனவ.); a group of fish roming their foods on the surface of the sea.

[மாப்பு + மீன். மாப்பு = திரள்.]

மாப்புவலை *māppu-valai,* பெ.(n.) மீன் திரளைப் பிடிக்கும் வலை (இ.வ.); net for catching fish in shoals.

[மாப்பு + வலை.]

மாப்புவிடு–தல் *māppu-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) மன்னித்தல் (முகவை. மீன.); to excuse, pardon.

[மாப்பு + விடு–தல்.]

மாப்பூச்சி *māppūcci,* பெ.(n.) பேன் வகை (அபி.சிந்.); a kind of louse.

[மா + பூச்சி.]

மாப்பெடுக்காதமீன் *māppeḍukkāda-mīṉ,* பெ.(n.) தனியொன்றாய் மேயும் மீன் (செங்கை.மீன.); a single fish catching the foods in lonely.

மாப்பெருத்தல் *mapperuttal,* பெ.(n.) மீன் கூட்டம் சேர்த்தல் அல்லது சேர்தல் (செங்கை. மீன.); a unity of fishes.

மாபகம் *mābagam,* பெ.(n.) தண்ணீர்; water.

மாபத்தியன் *mābattiyaṉ,* பெ.(n.) 1. காமன்; *Kāmaṉ.* 2. மாமகன்[1] (யாழ்.அக.) பார்க்க; see *māmagaṉ.*

[மா + பத்தியன்.]

மாபதுமம் *mā-padumam,* பெ.(n.) எண் வகை நிரய (நரக)த் தொன்று (சி.போ.பா. பக்.203); a hell one of eight *naragam* (q.v.).

மாபலம் *mā-balam,* பெ.(n.) 1. மிக்க வலு; immense strength. 2. மாம்பழம்; mango ripe fruit.

*[மா + **Skt.** பலம். த. வலு.]*

மாபலன் *mā-palaṉ,* பெ.(n.) காற்று (பிங்.); a wind.

[மா + பலன்.]

மாபலி *mā-bali,* பெ.(n.) மாவலிவாணன் பார்க்க; see *māvali-vāṇaṉ.*

மாபலிவாணன் *mā-balivāṇaṉ,* பெ.(n.) மாவலிவாணன் பார்க்க; see *māvali-vāṇaṉ.*

மாபனம் *mā-baṉam,* பெ.(n.) 1. அளவு; measure. 2. எடைக்கல்; balance unit.

மாபாதகம் *mā-pādagam,* பெ.(n.) பெருங்கரிசு; the five great sins. *"மாபாதகத்தைத் தவிர்த்தா னன்றே" (கடம்ப.பு.இலீலா.344).*

[மா + Skt. பாதகம்.]

மாபாரதம் *mā-bāradam,* பெ.(n.) 1. பெரும் பாரதம்; the great epic. 2. கௌரவ பாண்டவர்க்குள் நிகழ்ந்த பெரும்போர்; the great war between the *Pāṇḍavās* and the *Kouravas. "தேவாசுர ராமாயண மாபாரத முளவென்று" (கலிங். 459).*

[மா + பாரதம். மா = பெரிய.]

மாபாவி *mā-pāvi,* பெ.(n.) தீயோன் (பெரும்பாவி) (திவ்.திருவாய்.5, 1, 7); great sinner.

[மா + பாவி.]

மாபுராணம் *mā-purāṇam,* பெ.(n.) இடைச் சங்கத்து வழங்கிய இலக்கண நூல் (இறை.1, பக்.5); a grammer of the middle sangam.

மாபுலி *mā-puli,* பெ.(n.) அரிமா (யாழ்.அக.); lion.

மாபுறயாகம் *mā-puṟa-yāgam,* பெ.(n.) வெளிப்பூசை (யாழ்.அக.); external worship.

[மா + புறயாகம்.]

மாபூதி *mā-pūdi,* பெ.(n.) நிரயங்களில் ஒன்று; a hell.

[மா + பூதி.]

மாம் *mām,* பெ.(n.) மாமரம்; mango tree.

[மாமரம் →மாம்.]

மாம்படை *mām-paḍai,* பெ.(n.) வாழை; plantain tree.

மாம்பம் *māmbam,* பெ.(n.) நெல்லிப் பருப்பு; the kernel of the fruit of indian goose berry (சா.அக.).

மாம்பருப்பு *mām-paruppu,* பெ.(n.) மாங் கொட்டையினுள்ளிருக்கும் பருப்பு; the seed or kernel inside the mango nut.

[மா + பருப்பு.]

மாம்பழக்கட்டு *māmbaḻa-k-kaṭṭu,* பெ.(n.) புடவை உடுக்கும் வகையிலொன்று; a mode of wearing saree.

மாம்பழக்கெளிறு *māmbaḻa-k-keḻiṟu,* பெ.(n.) மீன் வகை; a kind of fish. *"சாலு மாம்பழக் கெளிறு" (பறாளை. பள்ளு.16).*

[மாம்பழம் + கெளிறு.]

மாம்பழக்கொடுக்கு *māmbaḻa-k-koḍukku,* பெ.(n.) மாம்பழக்கட்டு பார்க்க; see *māmbaḻa-k-koḍukku.*

[மாம்பழம் + கொடுக்கு.]

மாம்பழக்கொன்றை *māmbaḻa-k-koṉṟai,* பெ.(n.) மஞ்சட்கொன்றை; siamese tree.

[மாம்பழம் + கொன்றை.]

மாம்பழச்சிட்டு *māmbaḻa-c-ciṭṭu,* பெ.(n.) ஒருவகை சிறு பறவை (வின்.); a kind of little bird.

[மாம்பழம் + சிட்டு.]



மாம்பழம்[1] *māmbaḻam,* பெ.(n.) மாங்கனி; mango fruit.

மாம்பழம்[2] *māmbaḻam,* பெ.(n.) புடவை யுடுத்தும் போது செருகும் முடிப்பு (இ.வ.); a kind of knot made when wearing a saree.

மாம்பழவண்டு *māmbaḻa-vaṇḍu,* பெ.(n.) சிலவகை மாம்பழங்களுள் வாழும் வண்டு வகை (அபி.சிந்.); an insect inside some species of mango fruits.

[மாம்பழம் + வண்டு.]

மாம்பழவுண்ணி *māmbaḻa-v-uṇṇi,* பெ.(n.) பெரிய உண்ணி வகை; a species of big cattle-tick. *"மாம்பழத்தின் கந்தமும் அறியாதவற்றை மாம்பழவுண்ணி யென்று சொல்லுமா போல" (ஈடு.9, 9, 6).*

[மாம்பழம் + உண்ணி.]

மாம்பால்[1] *mā-m-pāl,* பெ.(n.) மாங்காய்க் காம்பிலிருந்து கசியும் பால்; milky exudence in the stalk of unripe mangoes.

[மா + பால். மா = மாங்காய்.]

மாம்பால்[2] *mā-m-pāl,* பெ.(n.) சருக்கரை, அரிசிமா, மாம்பழம் முதலியவற்றாற் செய்த கூழ்; a jelly of mangoes with sugar, rice-flour, etc. nāñ.

[மா + பால். மா = மாவு.]

மாம்பாலிருள் *mām-bāliruḷ,* பெ.(n.) இரும்பகம் எனும் மரவகை; a kind of tree.

மாம்பிசின் *māmpišiṉ,* பெ.(n.) மாமரத்துப் பால்; gum of mango - tree.

[மா + பிசின். மா = மாமரம்.]

மாம்பிஞ்சு *mām-piñju,* பெ. (n.) 1. மாவடு; tender mango. 2. மாவடு போன்ற வடிவிற் செய்த கழுத்தணி யுரு; a pendant in a necklace, shaped like tender mango fruit.

[மா + பிஞ்சு. மா = மாமரம்.]

மாம்பிரம் *māmbiram,* பெ.(n.) சிறுதேக்கு (சங்.அக.); beetle - killer.

மாம்புளி *mām-puḷi,* பெ.(n.) புளிமா; indian hog plum.

மாம்புளிச்சி *mām-pulicci,* பெ.(n.) மாம்புளி பார்க்க; see *mām-puli.*

[மா + புளிச்சி.]

மாம்பூ *māmbū,* பெ.(n.) மாமரத்தின் பூ; flower of the mango tree.

[மா + பூ.]

மாம்பூச்சி *mā-m-pūcci,* பெ.(n.) சருக்கரை முதலியவற்றில் விழும் வெண்ணிறமுள்ள சிறுபூச்சி வகை (இ.வ.); a small white insect infesting sugar etc.

[மா + பூச்சி.]

மாம்போழ் *mā-m-pōl,* பெ.(n.) மாவடுவின் பிளவு; section of a tender mango, cut lengthwise. *"மாம்போழு மெழுதிற்று" (திருக்கோ.79).*

[மா + போழ்.]

மாமகம்[1] *māmagam,* பெ.(n.) காசாய வகை; an ancient tax in cash (S.I.I.I.82).

[மா + மகம்.]

மாமகம்[2] *mā-magam,* பெ.(n.) மகாமகம்; a great luni-solar festival. *"கங்கை மாமகந் தோறும் வந்து" (திருவிளை.அருச்சனை.25).*

[மா + மகம்.]

மாமகன்[1] *mā-magan,* பெ.(n.) மன்மதன் (யாழ்.அக.); god of love, as son of Laksmi.

[மா + மகன்.]

மாமகன்[2] *mā-magan,* பெ.(n.) 1. அம்மான்; maternal uncle. 2. இவறன் மரலையன், ஈயாமாரி, பேராசையுடையவன்; miser.

[மா + மகன்.]

மாமடி *mā-madi,* பெ.(n.) 1. மாமன், 1 பார்க்க; see *māman. "மாமடி ஸ்ரீவல்லப தேவர்" (T.A.S.i, 257).* 2. மாமனார் பார்க்க; see *māmanār. "மந்தண மிருந்துபுரி மாமடிதன் வேள்வி" (தேவா.324, 7).*

மாமடிகள் *māmadigal,* பெ.(n.) மாமடி பார்க்க; see *māmadi. "மற்றை மாமடிகளிடு சாபமும்" (குமர.பிர.மீனாட்.பிள்.67).*

மாமணி *māmani,* பெ.(n.) மாணிக்கம் (சூடா.); ruby.

[மா + மணி.]

மாமதக்காணம் *mā-mada-k-kāṇam,* பெ.(n.) பேய்க்கொள்; wild horsegram.

மாமம் *mā-mam,* பெ.(n.) மஞ்சள்; turmeric.

மாமரத்தின்புல்லுருவி *māmarattin-pulluruvi,* பெ.(n.) மாமரத்தை அழிக்கும் ஒருவகை பூச்சிகள்; parasitic plant growing on mango tree.

[மாமரம் + அத்து + இன் + புல்லுருவி.]

மாமரம்[1] *māmaram,* பெ.(n.) மரவகை (பிங்.); mango tree. *"வளிவாங்கு சினைய மாமரம் வேர்கீண் டுயர்ந்துழி யுள்ளன பயம்பிடைப் பரப்பி" (பரிபா.7:14–5).*

மாமருத்துநூலோர் *māmaruttu-nūlōr,* பெ.(n.) மருத்துவர்; physicians.

[மா + மருத்து + நூலோர். மா = பெரிய. மருந்து →மருத்து. நூலோர் = நூலின் பொருளுணர்ந்தோர். நூலறிவுடையோர், அறிஞர்.]

மாமறையோன் *mā-maraiyōn,* பெ.(n.) இதளியம் (இரசம்); mercury.

மாமல்லபுரம் *māmallapuram*, பெ.(n.) கிழக்குக் கடலோரச் சாலையில் சென்னைக்குத் தெற்கே 60 அயிரமாத்திரி (கிலோமீட்டர்) தொலைவில் அமைந்துள்ள சிற்பக் கலை நகரம்; a town with stone sculptures, 60 kilometer south of Chennai on the East Coast Road.

மறுவ. மகாபலிபுரம், மல்லை, கடல்மல்லை, மாமலைபுரம்.

[மா + மல்லன் + புரம் = மாமல்லபுரம்]

இவ்வூர் "உலகப் பண்பாட்டுச் சின்னம்" உள்ள ஊராக அறிவிக்கப்பட்டுள்ளது. நரசிம்மவர்மப் பல்லவனின் பட்டப் பெயரால் அமைந்துள்ளது. பல குடைவரைக் கோயில்களும், கட்டுக் கற்றளிகளும் சிறப்பாக வுள்ளன. அர்ச்சுனன் தவம் என்னும் பாறை செதுக்குச் சிற்பம் பெரும்புகழ் பெற்றுள்ளது. அண்மையில் கழகக் காலத் துறைமுகம் அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளது. மாமலைபுரம் என்றும் நாட்டுப்புறக் கதைகள் கூறுகின்றன. திருமங்கையாழ்வாரின் பாடல் பெற்ற ஊர்.

மாமல்லன் *māmallaṉ*, பெ.(n.) மகேந்திர வர்மப் பல்லவனின் மகன் நரசிம்மவர்மனின் பட்டப் பெயர்களுள் ஒன்று; one of the titles of Narasimhavarman, son of Mahendravarma Pallavan.

[மா + மல்லன். மா = பெரிய.]

மாமல்லை *mā-mallai*, பெ.(n.) மாமல்லபுரம் பார்க்க; see *māmallapuram*. *"மாமல்லை கோவில்" (திவ்.இயற்.2, 70).*

[மாமல்லபுரம் →மாமல்லை (மரூஉ).]

மாமலகம் *māmalagam*, பெ.(n.) நெல்லிக் காய்; fruit indian gooseberry.

மாமலத்து *māmalattu*, பெ.(n.) மாமிலத்து (வின்.) பார்க்க; see *māmilattu*.

மாமலர் *māmalar*, பெ.(n.) சரக்கொன்றை பார்க்க; see *cara-k-koṉṟai*. *"மாமலர்த் தெரியலான்" (சீவக..220038).*

[மா + மலர்.]

மாமலற்கண்ணி *mā-malaṟ-kaṇṇi*, பெ.(n.) சங்கிலை; leaves of the plant.

மாமலி *māmali*, பெ.(n.) அத்தி; fig- *Ficus-racemosa*.

மாமலைபுரம் *māmalai-puram*, பெ.(n.) மாமல்லபுரத்தின் பழைய பெயர்களுள் ஒன்று; one of the old names of mamallapuram (சுவடிப்பதிப்பு நூல்).

[மா + மலை + புரம்.]

மாமறையோன் *mā-maṟaiyōṉ*, பெ.(n.) ஈசுவரமூலி என்னும் பெருமருந்து; a twining plant - indian birthwort.

மாமன் *mamaṉ*, பெ.(n.) 1. தாயின் உடன் பிறந்தோன்; mother's brother, maternal uncle. *"மாமனு மருகனும் போலு மன்பின" (சீவக.432.)*. 2. மாமனார் பார்க்க; see *māmaṉār*. *"மாமனே விமவான்" (திருவிசை. கருவூ.பதி.8, 5).* 3. அத்தையின் கணவன் (வின்.); father's sister's husband. 4. பெண்கள் தங்கள் கணவரை அழைக்கும் பெயர்; a term used by women in addressing their husbands (C.G.).

தெ. மாம; ம. மாமன்.

[அம்மான் →மாமன்.]

மாமன்கிடா *māmaṉ-kiḍā,* பெ.(n.) மண மக்களுக்கு தாய்மாமன் சீர்வரிசையில் ஒன்றாக கொடுக்கப்படும் ஆட்டுக்கிடா; ram gift given by maternal uncle to his sister's son or daughter marriage occasion.

[மாமன் + கிடா.]

மாமன்னன் *māmaṉṉaṉ,* பெ.(n.) பேரரசன்; emperor.

[மா + மன்னன். மா = பெரிய.]

மாமனார் *māmaṉār,* பெ.(n.) கணவன் அல்லது மனைவியின் தந்தை (பிரபோத.11, 93); father-in-law, wife's or husband's father.

[மாமன் →மாமனார்.]

மாமா *māmā,* பெ.(n.) மாமன், 1, 2, 3 பார்கக; see *māmaṉ.*

[மாமன் →மாமா.]

மாமாங்கக்குழி *māmāṅga-k-kuḻi,* பெ.(n.) திருமுருகன்பூண்டியில் பிள்ளையார் கோயிலுக்கு எதிரில் 12 ஆண்டுகட்கு ஒருமுறை நீர் சுரக்கும் குழி; a small spring in the sheet rock in front of pillaiyar koil at *Tirumurugaṉpūṇḍi* where holy water is supposed to spring in (சி.பெ.அக.).

[மாமாங்கம் + குழி.]

மாமாங்கக்குளம் *māmāṅga-k-kuḷam,* பெ.(n.) கும்பகோணத்தில் 12 ஆண்டுகட்கு ஒரு முறை புண்ணிய நதிகளின் நீர் ஊறுவதாகக் கருதப்படும் ஒரு கோயில் குளம்; a temple tank at *Kumbakōṇam* where the waters from sacred rivers are supposed to spring in.

[மாமாங்கம் + குளம்.]

மாமாங்கம்¹ *māmāṅgam,* பெ.(n.) 1. பன்னிரண்டு ஆண்டுகள் கொண்ட காலம்; a period of twelve years. 2. நீண்ட காலம்; long period.

[மா + மாங்கம்.]

மாமாங்கம்² *māmāṅgam,* பெ.(n.) மகாமகர் பார்க்க; see *magāmagar.*

மாமாங்கம்³ *māmāṅgam,* பெ.(n.) சேலம் புறநகரில் அமைந்துள்ள ஊர்; a sub urban village of salem city.

மாமாசி *māmāśi,* பெ.(n.) சடாமாஞ்சில்; root of a medicinal grass.

மாமாத்தியன் *mā-māttiyaṉ,* பெ.(n.) மாமாத்திரன் (நாமதீப.177) பார்க்க; see *māmāttiraṉ.*

மாமாத்திரன் *mā-māttiraṉ,* பெ.(n.) மருத்துவன் (பிங்.); physician. *"மலர்புகழ் மாமாத்திரர்தங் குலம் பெருக" (பெரியபு. சிறுதொண்ட.2).*

மாமாத்து¹ *mā-māttu,* பெ.(n.) மிகப் பெரியது; that which is very great. *"மறையோர் தமையும் பசவினையும் மாமாத்தென வெண்" (சிவதரு. பாவ.50)*

மாமாத்து² *mā-māttu,* பெ.(n.) 1. பெருஞ் செருக்கு; great arrogance. *"மாமாத்தாகிய மாலயன்" (தேவா.1019, 1).* 2. மாய்மாலம் (இ.வ.); pretension, sham.

மாமாயி *mā-māyi,* பெ.(n.) 1. மலைமகள்; *Malaimagal.* 2. பெரியம்மைக்குரிய தேவதை; the Goddess of small-pox.

[மா + மாயி. மா = பெரிய. மகமாயி→மாமாயி.]

மாமாயை *mā-māyai,* பெ.(n.) 1. மலைமகள் (கூர்மபு.திருக்கல்.20); *Malaimagal.* 2. சுத்த மாயை (சி.போ.பா.2, 2, பக்.133, புதுப்.); pure *māyā.*

[மா + மாயை.]

மாமாலம் *mā-mālam,* பெ.(n.) 1. பெரு வஞ்சனை; great deceitfulness. 2. போலி பகட்டு (கொ.வ.); pretension.

[மா + மாயம்.]

மாமாலை *mā-mālai,* பெ.(n.) செடி வகை (பதார்த்த.251); a plant.

மாமான் *mā-māṉ,* பெ.(n.) 1. மாமன், 1 பார்க்க; see *māmaṉ.* *"மாமான் மகளே" (திவ்.திருப்பா.9).* 2. மாமனார் பார்க்க; see *māmaṉār.* *"மாமான் சூட்டொடு கண்ணி" (சீவக.484).*

[மாமன் →மாமான்.]

மாமி *māmi,* பெ.(n.) 1. அம்மான் மனைவி; maternal uncle's wife. *"அன்புடைய மாமனு மாமியு நீ" (தேவா.1228, 1).* 2. மனைவி யினுடைய அல்லது கணவனுடைய தாய்; mother-in-law, wife's or husband's mother. *"சிறக்கு மாமியர் மூவர்க்கும்" (கம்பரா.சூளா.33).* 3. அத்தை (வின்.); father's sister.

[மாமன் (ஆ.பா.) →மாமி (பெ.பா.).]

மாமிசி *māmiśi,* பெ.(n.) சடாமாஞ்சி பூண்டு (தைலவ.தைல); spikenard herb.

மாமியார் *māmiyār,* பெ.(n.) மாமி, 2 பார்க்க; see *māmi.*

மாமியார்வீடு *māmiyār-viḍu,* பெ.(n.) 1. மனைவியின் அல்லது கணவனின் தாய்வீடு; mother-in-law's house. 2. சிறை; prison, jail (பே.வ.).

[மாமியார் + வீடு.]

மாமிலத்து *māmilattu,* பெ.(n.) அரசிறைக் குரியது (வின்.); that which pertains to revenue.

மாமுகத்தன் *mā-mugattaṉ,* பெ.(n.) மாமுகவன் (உரி.நி.)பார்க்க; see *māmugavaṉ.*

மாமுகவன் *mā-mugavaṉ,* பெ.(n.) யானை முகத்தவன்; பிள்ளையார்; *Piḷḷaiyār,* God with Elephant face. *"மாமுகவ ரர்ச்சிக்க" (பூவண.உலா.21).*

மாமுகன்கை *māmugaṉ-kai,* பெ.(n.) ஐந்து; five.

[மா + முகன் + கை.]

மாமுகி *māmugi,* பெ.(n.) நாயுருவி; a plant indian burr.

மாமுகிலை *māmugilai,* பெ.(n.) துளசி; a sacred plant, holy basil.

மாமுடி *māmuḍi,* பெ.(n.) நெட்டி (மலை.); sola pith.

மாமுனி[1] *māmuṉi,* பெ.(n.) 1. பெருந்துறவி; great ascetic. *"இராமநுசனென்னும் மாமுனியே" (திவ்.இராமாநுச.16).* 2. அருகன்

(பிங்.); *Arhan*. 3. வசிட்டன் (யாழ்.அக.); *vasistta*.

[மா + முனி. மா = பெரிய.]

மாமுனி^{2} *māmuni*,பெ.(n.) நாயுருவி (மலை.); a plant growing in hedges and thickets.

மாமூலர் *māmūlar*,பெ.(n.) அகநானூற்றில் 27 பாடல்களும், குறுந்தொகையில் ஒரு பாடலும் நற்றிணையில் இரண்டு பாடலும் பாடிய கழகக்காலப் பெரும்புலவர்; a great poet of *śangam* period whose verses 27 of *Agaṉāṉūru* one of *Kuṟundogai* and two of *Naṟṟiṉai* were available.

மாமூலனார் *māmūlaṉār*,பெ.(n.) மாமூலர் பார்க்க; see *māmūlar*.

மாமூலி *māmūli*,பெ.(n.) வெண் காக்கட்டான்; a twiner learning white flowers.

மாமேதம் *māmēdam*,பெ.(n.) குதிரை வேள்வி; horse-sacrifice. *"மாமேதமுன் மகமுள்ளன" (சேதுபு.அனும.8).*

மாமேரு *māmeru*,பெ.(n.) மேருமலை; Mt.*Mēru*. *"மாமேரு விடையை நூறி" (தக்கயாகப்.108).*

[மா + மேரு. மா = பெரிய.]

மாமை *māmai*,பெ.(n.) 1. அழகு; beauty. *"மணி மிடை பொன்னின் மாமை சாய" (நற்.304). "மாந்தளிர்போன் மின்னிய மாமை விளர்ப்பதென்" (தஞ்சைவா.22).* 2. கருமை; black colour. *"மாமைக் களங்கனி யன்ன" (மலைபடு.35).* 3. வண்ணம்; colour. *"நெடுந்தகை தற்கண்டு மாமைத் தகையிழந்த" (பு.வெ.12, 2).* 4. மேனி; form. *"மாமை பொன்னிறம் பசப்ப" (பு.வெ.11, பெண்பாற்.6).* 5. துன்பம் (அரு.நி.); grief, distress.

மாமோகம் *mā-mōgam*,பெ.(n.) ஐம்புல நுகர்ச்சியிற் பற்று (சி.போ.பா.2, 2, பக்.169); attachment to the objects of the senses.

மாய்^{1}–தல் *māy-*, 2 செ.கு.வி.(v.i.) 1. மறைதல்; to hide, vanish. *"களிறுமாய் செருந்தியொடு" (மதுரைக்.172).* 2. அழிதல்; to perish, to be annihilated, terminated. *"குடியொடுமாய்வர் நிலத்து"* (குறள்.898). 3. இறத்தல்; to die. *"தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்" (மலைபடு.553).* 4. ஒளி மழுங்குதல்; to become lustreless, as the setting sun. *"பகன்மாய" (கலித்.143).* 5. கவலை மிகுதியால் வருந்துதல்; to suffer from over, annexiety as in love-sickness. 6. அறப்பாடுபடுதல்; to wear oneself to death. *"அந்த வேலையில் மாய்ந்து கொண்டிருக்கிறேன்" (உ.வ).*

[முல் ([illegible]ந்தற் கருத்துவேர்) →முள்→முய் மய் →[illegible] கருப்பு, இருள். மைம்மை = கருமை, இருண்மை. மய→மயப்பு→மப்பு = மயக்கம், மட்டித் தன்மை, செருக்கு, செரியாமை. மள்கு→மட்கு. மட்குதல் = மயங்குதல், ஒளி மங்குதல், அழுக்கடைதல், வலி குன்றுதல். மள்கு→மாழ்கு. மாழ்குதல் = கலத்தல், மயங்குதல், சோம்புதல், மங்குதல், கெடுதல். மாள்கு→மாள். மாள்தல் = கெடுதல், கழிதல், அழிதல், சாதல், முடிதல், இயலுதல். மாள்→மாய். ஒ.நோ. நோள்→நோய். நோளையுடம்பு = நோயுண்டவுடம்பு (வே.க.4:61).]

மாய்–^{2}தல் *māy-*, 2 செ.குன்றாவி.(v.t.) மறத்தல்; to forget. *"மாயா வுள்ளமொடு பரிசிறுன்னி" (புறநா.139).*

[மாய்தல் = மறைதல். மறத்தல் = நினைவிலிருந்து மறைதல்.]

மாய்³–த்தல் *māy-*,2 செ.குன்றாவி.(v.t.) 1. மறைத்தல்; to hide. *"களிறு மாய்க்குங் கதிர்க் கழனி"* (மதுரைக்.247). 2. கொல்லுதல்; to kill. *"மாய்த்த லெண்ணி வாய் முலை தந்த" (திவ்.திருவாய்.4, 3, 4).* 3. அழித்தல்; to destroy, put an end to. *"குரம்பை யிது மாய்க்க மாட்டேன்" (திருவாச.5, 54).* 4. வருத்துதல் (கொ.வ.); to afflict. 5. தீட்டுதல்; to grind and sharpen. *"மாய்த்தபோல மழுகு நுனை தோற்றி" (அகநா.5).*

[மாள் → மாய். ஒ.நோ. நோள் → நோய். நோளையுடம்பு = நோயுண்டவுடம்பு.]

மாய்⁴ *māy*, பெ.(n.) நரி (இராசவைத்.146); jackle.

மாய்⁵ *māy*, பெ.(n.) ஆச்சா மரம் (மலை.); sal tree.

மாய்கை¹ *māygai*, பெ.(n.) 1. வெண்ணீர்; semen. 2. கருக்குழந்தையின் நஞ்சுக் கொடி; naval cord (சா.அக.).

மாய்கை² *māygai*, பெ.(n.) 1. பொய்த் தோற்றம் (கொ.வ.); illusion. 2. மயக்கம்; giddiness.

[மாய் → மாய்கை (வே.க.4:61).]

மாய்கைவல்லவன் *māygai-vallavan*, பெ.(n.) சித்தரில் தேறினவன்; best of siddhars who had conquered passions.

மாய்ச்சல்¹ *mayccal*, பெ.(n.) சோம்பல்; laziness.

[மாய் → மாய்ச்சல்.]

மாய்ச்சல்² *mayccal*, பெ.(n.) 1. சாவு (யாழ்.அக.); death. 2. மறைவு (சது.); hiding, vanishing. 3. வருத்தம் (வின்.); great difficulty or trouble.

[மாய் → மாய்ச்சல் (வே.க.4:61).]

மாய்ச்சி *māycci*, பெ.(n.) பூட்டுவிலங்கு (யாப்.); manacles, shackles.

மாய்ப்பு *māyppu*, பெ.(n.) மாய்ச்சல்², 1, 2 (வின்.) பார்க்க; see *māyccal.*

[மாய் → மாய்ச்சல் → மாய்ப்பு (வே.க.4:61).]

மாய்மாலம் *māymālam*, பெ.(n.) 1. போலி நடிப்பு (கொ.வ.); hypocrisy, dissimulation, pretension. 2. மோசடி (யாழ்.அக.); deceit.

[மாய் + மாலம் (வே.க.4:61).]

மாய்வு *māyvu*, பெ.(n.) 1. மாய்ச்சல், 1 பார்க்க; see *māyccal. "மாய்வு நிச்சயம் வந்துழி" (கம்பரா.இராவணன்வதை.182).* 2. மாய்ச்சல் 2 பார்க்க; see *māyccal.*

[மாய் → மாய்வு (வே.க.4:61).]

மாயக்கள்ளி *māya-k-kaḷḷi*, பெ.(n.) மயக்கி ஏமாற்றுபவள் (வின்.); artful women.

[மாயம் + கள்ளி.]

மாயக்காய்¹ *māyakkāy*, பெ.(n.) ஓக் மரத்தின் கொட்டை; oak nut.

மாயக்காய்² *māya-k-kāy*, பெ.(n.) மாசிக் காய் (இ.வ.) பார்க்க; see *māši-k-kay.*

மாயக்காரன் *māya-k-kāran*, பெ.(n.) 1. வஞ்சகம்; hypocrite. 2. செப்பிடு வித்தைக்காரன்; conjurer, juggler.

[மாயம் + காரன்.]

மாயக்காரி *māya-k-kāri*, பெ.(n.) 1. மாயக் கள்ளி பார்க்க; see *māya-k-kaḷḷi.* 2. மாயக்காரன் பார்க்க; see *māya-k-kāraṉ.*

[மாயக்காரன் (ஆ.பா.) →மாயக்காரி (பெ.பா.)]

மாயக்குரம்பை *māya-k-kurambai*, பெ.(n.) உடல் (நிலையற்றது); body, as unstable. *"மாயக் குரம்பை நீங்க வழி வைத்தார்க்கு" (தேவா.29, 3).*

[மாயம் + குரம்பை.]

மாயக்கூத்தன் *māya-k-kūttaṉ*, பெ.(n.) திருமால்; Tirumāl, as one whose actions are wonderful. *"வண்குட பானின்ற மாயக் கூத்தன்" (திவ்.திருவாய்.8, 2, 4).*

[மாயம் + கூத்தன்.]

மாயகம் *māyagam*, பெ.(n.) விளாமரம் (சங். அக.); wood apple tree.

மாயக்கலை *māya-k-kalai*, பெ.(n.) சந்திரக் கலை; the vital air passing through the left nostril.

மாயக்கன்னி *māya-k-kaṉṉi*, பெ.(n.) குப்பைமேனி; a plant acalypha indica a vermifuge and expectorant.

மாயச்செயல் *māya-c-ceyal*, பெ.(n.) 1. மாயையின் தோற்றமாகிய உலகம்; the effects of *māyam*, its various changes and manifestations in nature. 2. மாயையின் விளைவுகள்; the body, accessory instruments, world and enjoyments, considered as the products of *māyam*.

மாயாசாலம் *māyā-šālam*, பெ.(n.) வஞ்சனை (வின்.); dissimulation, deceit.

[மாயம் + சாலம்.]

மாயசிகிச்சை *māya-šigiccai*, பெ.(n.) காந்தப்பண்டுவம் (மாந்திர சிகிச்சை); magnetic healing.

*[மாயம் + **Skt.** சிகிச்சை.]*

மாயத்தி[1] *māyatti*, பெ.(n.) முத்திருக்கஞ் செவி; a plant asaram europacun.

மாயத்தி[2] *māyatti*, பெ.(n.) மாயக்கள்ளி (இ.வ.) பார்க்க; see *māya-k-kaḷḷi.*

மாயப்புணர்ச்சி *māya-p-puṇarcci*, பெ.(n.) தலைவன் தலைவியரது களவுக் கூட்டம் (தொல்.பொருள்.92, உரை); (Akap.) clandestine union of lovers.

[மாயம் + புணர்ச்சி.]

மாயப்பெண் *māya-p-peṇ*, பெ.(n.) 1. மாறு வேடம் பூண்ட பெண்; disguised woman. 2. பெண்வேடமிட்ட ஆண்; man in the garb of a woman.

[மாயம் + பெண்.]

மாயப்பொடி *māya-p-poḍi*, பெ.(n.) மாயத் தன்மை செய்யும் பொடி (உபதேசகா. சிவபுண்.288); powder with magic properties.

[மாயம் + பொடி.]

மாயப்போர் *māya-p-pōr*, பெ.(n.) 1. வியப்பான (அற்புதமான) போர்; wonderful, miraculous warfare. *"மாயப் போர் வல்லானை" (தேவா.698, 3).* 2. ஏய்ப்பு (வஞ்சக)ப் போர்; treacherous warfare. *"மாயப்போர் மன்னன் மதில்" (பு.வெ.6:11).*

[மாயம் + போர்.]

மாயம் *māyam,*பெ.(n.) 1. மாயை; illusion false appearance. *"வருந்திட மாயஞ் செய்து நிகும்பலை மருங்கு புக்கான்" (கம்பரா. மாயா சீதை.96).* 2. வஞ்சனை (திவா.); deception. *"மாய மகளிர் முயக்கு" (குறள்.918).* 3. போலி நடிப்பு; hypocrisy. 4. பொய்; falseness, treachery. *"வந்த கிழவனை மாயஞ் செப்பி" (தொல்.பொ.114).* 5. அறிவியலுக்குப் புறம்பானது; spritual ignorance. *"மாய நீங்கிய சிந்தனை" (கம்பரா.சித்திர.51).* 6. கனவு; dream. *"மாயக் கொல்லோ வல்வினை கொல்லோ" (சிலப்.16, 61).* 7. நிலையின்மை; uncertainty, instability. *"என் மாயவாக்கை யிதனுட் புக்கு" (திவ்.திருவாய்.10, 7, 3).* 8. வியப்பு; wonder, astonishment. *"மாயவன் செற்றள்ளற் பொய்ந்நிலத்தே" (திருவிருத். 100, உரை).* 9. அழகு (சூடா.); beauty. 10. தீமை; wickedness. 11. காமம் கலந்தத் தன்மை; lasciviousness. *"கண்டேனின் மாயங் களவாதல்" (கலித்.90).* 12. கருப்பு (சூடா.); blackness.

[முல் (பொருந்தற்கருத்துவேர்) →முள் →மள் →மள்கு→மள்குதல் = ஒளி குறைதல், குறைதல். மள்கு→மழுகு→மழுகுதல் = ஒளி குறைதல். மழு →மழுங்கு. மழுங்குதல் = ஒளி குறைதல், பொலிவழிதல், கவனிப்பின்றி மறைந்து போதல், கெடுதல். மழுங்கு →மங்கு. மங்குதல் = ஒளி குறைதல், நிறங்குன்றுதல், பெருமை குறைதல், குறைதல், கெடுதல், சாதல். மள்கு→மட்கு. மட்குதல் = மயங்குதல், ஒளி மங்குதல், அழுக்கடைதல், வலி குன்றுதல், கருத்துப் போதல். மள்கு→மாள்கு →மாழ்கு. மாழ்குதல் = கலத்தல், மயங்குதல், சோம்புதல், மங்குதல், கெடுதல். மாள் →மாய். ஒ.நோ. நோள்→நோய். நோளையுடம்பு = நோயுண்டவுடம்பு. மாய் →மாயம் (வே.க.4:61).]

மாயம்[2] *māyam,*பெ.(n.) 1. உயரம்; height. 2. நீளம்; length. 3. தொகை; sum.

[மாய் →மாயம்.]

மாயம்[3] *māyam,*பெ.(n.) பித்தளை; brass. *"மாயமேகலா பாரம் வாரியே" (தக்கயாகப். 502).*

மாயமந்திரம் *māya-mandiram,*பெ.(n.) 1. மாயம் பண்ணும் மந்திரம்; mantram having magic powers. *"உன்முகம் மாய மந்திரந்தான் கொலோ" (திவ்.நாய்ச்.2, 4).* 2. மந்திரம் பார்க்க; see *mandiram.*

[மாயம் + மந்திரம்.]

மாயமயக்கி *māya-mayakki,* பெ.(n.) மயக்கஞ் செய்பவர்; artful, bewitching woman. *"மாயமயக்கி மருமகளே" (நாஞ்.).*

[மாயம் + மயக்கி.]

மாயமாமூலி *māya-māmūli,* பெ.(n.) உடம்பிலிருக்கும் பித்து, அங்கப் பிச்சு; the bile in human body.

[மாயம் + மாமூலி.]

மாயமாலம் *māya-mālam,*பெ.(n.) 1. மாய் மாலம் பார்க்க; see *māy-mālam.* 2. வஞ்சனை யுள்ள பேய் (வின்.); deceitful devil.

[மாயம் + மாலம்.]

மாயயாக்கை *māya-yākkai,*பெ.(n.) மாய உடம்பு; magic body.

[மாயம் + யாக்கை.]

மாயரூபம் *māya-rūbam,*பெ.(n.) மாயரூவம் பார்க்க; see *māya-rūvam.*

[மாய + உருவம் →ரூபம்.]

த. உருவம் > வ. ரூப.

மாயரூவம் *māya-rūvam,* பெ.(n.) மெய் போலத் தோன்றும் பொய்யுருவம் (யாழ்.அக.); form which is seamingly realistic, phantom, shadow.

[மாயம் + உருவம்.]

மாயவண்ணன் *māya-vaṇṇaṉ,* பெ.(n.) திருமால்; *Tirumāl,* as dark-coloured. *"மாய வண்ணனை மனனுறப் பெற்று" (பதிற்றுப்.7, பதி.).*

[மாயம் + வண்ணன்.]

மாயவள் *māyavaḷ,* பெ.(n.) 1. கரிய நிறமுடையவள்; woman of dark complexion. 2. கொற்றவை; durga. *"மாயவளாடிய மரக்கா லாடலும்" (சிலப்.6, 59).* 3. தெய்வப் பெண் (பிங்.); female goddess. 4. இடாகினி (சூடா.); a female goblin.

[மாயம்→மாயவள் (வே.க.4:61).]

மாயவன் *māyavaṉ,* பெ.(n.) கருநிறமுடைய திருமால்; *Tirumāl.* *"மாயவன் மாய மதுவால்" (பு.வெ.9:40). "பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்" (சிலம்பு. படர்க்கைப். பரவல்.2).*

[மாய் →மாயவன் (வே.க.4:62).]

மாயவன்சோதரி *māyavaṉ-śōdari,* பெ.(n.) துர்க்கை; durgai.

[மாயவன் + Skt. சோதரி.]

மாயவன்மூலி *māyavaṉ-mūli,* பெ.(n.) 1. திருமால்கரந்தை எனும் செடி; a plant - *Sphoeranthus idnicus.* 2. துளசி; holy basil plant.

[மாயவன் + மூலி.]

மாயவன்மேனி *māyavaṉ-mēṉi,* பெ.(n.) நாகப் பச்சை (சங்.அக.); a green stone.

[மாயவன் + மேனி.]

மாயவன்விந்து *māyavaṉ-vindu,* பெ.(n.) 1. திருமால்கரந்தை எனும் செடி; a herb. 2. வெள்ளரி விதை; cucumbar seed.

[மாயவன் + விந்து.]

மாயவாழ்க்கை *māya-vāḻkkai,* பெ.(n.) நிலையில்லா உலக வாழ்க்கை; worldly life which is not real.

[மாயம் + வாழ்க்கை.]

மாயவாழ்வு *māya-vāḻvu,* பெ.(n.) நிலையற்ற வாழ்வு; transitory life.

[மாயம் + வாழ்வு.]

மாயவிஞ்சை *māya-viñcai,* பெ.(n.) மாய வித்தை பார்க்க; see *māya-vittai.* *"மாயவிஞ்சை மந்திரமோதி" (மணி.18, 148).*

[மாயவித்தை →மாயவிஞ்சை.]

மாயவித்தை *māya-vittai,* பெ.(n.) இந்திரசால வித்தை; magical art, sleight of hand, art of producing illusion, sorcery.

[மாயம் + வித்தை.]

மாயவித்தைக்காரன் *māya-vittai-k-kāraṉ,* பெ.(n.) இந்திர சாலஞ் செய்வோன்; sorcerer, magician.

[மாயவித்தை + காரன்.]

மாயவேடம் *māya-vēḍam,* பெ.(n.) பொய்யுரு; disguise. *"வெகுளி பொங்கவிட்டது மாயவேடம்" (கம்பரா. சடாயுவுயிர்.64.).*

[மாயம் + வேடம். Skt. வேடம். த. புணைவு. மாயப்புணைவு பார்க்க.]

மாயன் *māyaṉ,*பெ.(n.) 1. கரியன்; dark complexioned person. *"வண்ணமு மாய வைனிவன் சேயன்" (தொல்.பொ.307, உரை).* 2. திருமால்; *Tirumāl.* *"மாயனாய்..... மலரவனாகி" (தேவா.1050, 6).* 3. வஞ்சகன் (பிங்.); deceitful person.

[மாயம் →மாயன் (வே.க.4:62).]

மாயன்மாலை *māyaṉ-mālai,*பெ.(n.) துளசி; holy basil plant.

[மாயன் + மாலை. மாயன் = திருமால்.]

மாயன்வித்து *māyaṉ-vittu,*பெ.(n.) வெள்ளரி விதை; seeds of cucumber fruit.

[மாயன் + வித்து.]

மாயன்விந்து *māyaṉ-vindu,*பெ.(n.) முகப் பூச்சு; yellow orpiment.

[மாயன் + விந்து.]

மாயாகாரியம் *māya-kāriyam,*பெ.(n.) மாயச்செயல் பார்க்க; see *māya-c-ceyal.*

மாயாசாலம் *māyā-šālam,*பெ.(n.) மாய வித்தை (வின்.) பார்க்க; see *māya-vittai.*

[மாயம் + சாலம்.]

மாயாதி *māyādi,*பெ.(n.) மாந்தக்காவு (நரபலி); human sacrifice.

மாயாதேவி *māyā-dēvi,* பெ.(n.) 1. மாயையாகிய தேவி (தக்கயாகப்.616, உரை); the goddess of *māyā.*2. புத்தரின் தாய் (சூடா.); the mother of Goutama buddha. *"மாயாதேவி சுதன்".*

[மாயை + தேவி.]

மாயாபாசம் *māyā-pāšam,* பெ.(n.) மாயையாகிய உறவு (யாழ்.அக.); the bondage of *māyā.*

[மாயம் + Skt. பாசம்.]

மாயாமந்திரம் *māyā-mandiram,*பெ.(n.) மந்திர வகை (யாழ்.அக.); a mantram.

[மாயம் + மந்திரம்.]

மாயாமம் *māyāmam,*பெ.(n.) புளி; tamarind.

மாயாமாலம் *māyā-mālam,*பெ.(n.) மும் மலத்துளொன்றான மாயையாகிய மலம் (சி.சி.2, 85, உரை); *māyā,* one of *mu-m-malam* (q.v.).

[மாயம் + மலம்.]

மாயாவாதி *māyā-vādi,*பெ.(n.) மாயக் கொள்கையுடையவன்; follower of *maya-vādam.* *"சதசத் விலக்ஷணம் என்று..... மாயாவாதி சொல்லுமா போலே" (திவ்.இயற். திருவிருத்.22, வியா.145).*

[மாயம் + வாதி.]

மாயாவிமோசனம் *māyā-vimōšaṉam,* பெ.(n.) மாயையினின்று நீங்குகை (யாழ். அக.); freedom from *māyai.*

[மாயை→ மாயா + Skt. விமோசனம்.]

மாயாவீடு *māyā-vīḍu,*பெ.(n.) முத்தி; heaven.

மாயாள் *māyāḷ,* பெ.(n.) மாயோள்[1], 3 பார்க்க (நாமதீப.117); see *māyōḷ.*

[மாயோள் →மாயாள்.]

மாயாளம் *māyāḷam,*பெ.(n.) பாசாங்கு (இ.வ.); pretension.

[மாயம் →மாய்மாலம் →மாயாளம் (கொ.வ.).]

மாயாளி *māyāḷi,*பெ.(n.) வட்டத் திருப்பி (தைலவ.தைல.33); kidney leaved bracteate moon-seed.

மாயி[1] *māyi,*பெ.(n.) மாயாவதி; adherent of *māyāvātām. "மாயியை நிசேதிக்கைக்காக அர்த்தம் அருளிச் செய்கிறார்" (ஈடு.1, 5, 4, ஜீ.).*

மாயி[2] *māyi,*பெ.(n.) ஆண் பெண்களைக் களவிற் புணர்ப்பிக்கும் ஆண் மகன் (சுக்கிரநீதி, 369); go-between, panderer.

மாயி[3] *māyi,*பெ.(n.) கொற்றவை; *Korravai. "என்னன்னையா மாயியை" (பிரபோத.18, 73).*

[மய் →மாய் →மாயி (கொ.வ.).]

மாயிகாஞ்சனம் *māyi-kāñjaṉam,* பெ.(n.) வித்தியாதரருடைய தந்திர வகை (பெருங்.இலாவாண.1, 67); a magic art of the *vidyādharan. "செவியிற்கேட்கு மாயிகாஞ்சனம்" (பெருங்.இலாவண.1, 67).*

மாயிடம் *māyidam,*பெ.(n.) எருமை; buffalo. *"வந்து மாயிட மாகி வளர்ந்ததே" (யசோதர.3, 45).*

[மை = கருப்பு. மை→மகி→மகிஷ→மயிஷ →மயிஷம்→மயிடம்→மாயிடம்.]

மாயிரம் *māyiram,*பெ.(n.) புறமாயுள்ளது; that which is outside, outward. *"மாயிர நேமியாதி" (தக்கயாகப்.440).*

மாயிலி *māyili,*பெ.(n.) படகு வகை (வின்.); a kind of boat.

மாயு *māyu,*பெ.(n.) பித்தம் (யாழ்.அக.); bile.

மாயுச்சம் *māyuccam,*பெ.(n.) நாகமணல்; sand containing zinc ore.

மாயுநாடி *māty-nāḍi,*பெ.(n.) பித்தநாடி (வின்.); a pulse indicating bilious humour.

மாயை *māyai,*பெ.(n.) 1. மூலப் பொருள்; primordian matter. *"பூதலயமாகின்ற மாயை முதலென்பர் சிலர்" (தாயு. பரிபுரணா.6).* 2. மும்மலத்துள் விந்து, மோகினி, மாயேயம் என்று மூவகைப்பட்ட மலம்; matter, one of mu-m-malam, (q.v.) of three kind of *vindu, mōgiṉi, māyēyam. "இவற்றுண் மாயை தெருளும் விந்து மோகினி, மாயேய மென விவை மூன்று திறமாய்" (பிரபோத.46, 7).* 3. பொய்த்தோற்ற வுரு; unreal or illusory image, phantom, apparition. 4. மாயவித்தை; sorcery, withc croft magic. *"மாயை யினொளித்த மணி மேகலை தனை" (மணிமே.18, 155).* 5. வஞ்சகம் (சூடா.); deception, fraud, trick. 6. மீமாந்த திறன்; extra ordinary or super human power. 7. மாயாதேவி பார்க்க; see *māyā-dēvi.* 8. மாயாபுரி பார்க்க; see *māyāburi.* 9. நிரயவகை (சிவதரு. சுவர்க்க. நரகவி.117); a hell. 10. தூய்மையற்ற மாயை; *śaiva*impure *māyai. "ஆதியோதிய மேதகு மாயை" (ஞான.).* 11. மாய பஞ்சகத்துள் ஒன்றாகிய மாயை; *māyai,* one of *māyai-pañjakam.* 12. பொய்த்தோற்றம்; illusion, unreality. 13. கொற்றவை; kali. 14. உமையம்மை (நாமதீப.22); Umaiyammai.

15. திரோதான சத்தி (நாமதீப.753); a boom of siva's energy, which hides spiritual truth from the souls.

[மள்→ மய்→மாய்→மாயை. ஒ.நோ. சாய் →சாயை (வே.க.4:62).]

மாயைமலம் *māyai-mālam*, பெ.(n.) மும் மலத்துளொன்றான மாயையாகிய மலம்; *māyai*one of the *mummalam*.

[மாயை + மலம்.]

மாயையுற்றாள் *māyai-y-uṟṟāḷ*, பெ.(n.) மாயை (வின்.) பார்க்க; see *māyai*.

[மாயை + உற்றாள்.]

மாயோள்[1] *māyōḷ*, பெ.(n.) 1. கரு நிறமுடையவள்; dark coloured woman. *"மாயோள் முன்கை ஆய்தொடி" (பொருந. 14).* 2. மாமை நிறமுடையவள்; woman of dark-brown colour. *"மாயோர் பசனை நீக்கினன்" (ஐங்குறு.145).* 3. பெண் (திவா.); woman. *"ஒடுங்கீ ரோதி மாஅயோளே" (அகநா.86).*

[மாய் →மாயம்→ மாயோள் (வே.க.4:62).]

மாயோள்[2] *māyōḷ*, பெ.(n.) வஞ்சகி (வின்.); dissembling woman.

[மாய்→மாயோள். மாய் = வஞ்சகம், கருமை, மயக்கம்..]

மாயோன் *māyōṉ*, பெ.(n.) 1. கரு நிறமுடையவன் (பரிபா.3, 1, உரை); dark coloured person. 2. திருமால்; *Tirumāl*. *"மாயோன் மேய காடுறை யுலகமும்" (தொல். பொருள்.5).*

[மாய்→மாயோன். மாய் = கருமை.]

மாயோன்பூடு *māyōṉ-pūḍu*, பெ.(n.) துளசி (சங்.அக.); sacred basil.

[மாயோன் + பூடு.]

மாயோன்மருகன் *māyōṉ-marugaṉ*, பெ.(n.) முருகக் கடவுள் (சூடா.); *Murugaṉ*, as of nephew *Tirumāl*.

[மாயோன் + மருகன்.]

மாயோன்விந்து *māyōṉ-vindu*, பெ.(n.) முகப்பூச்சு (சங்.அக.); yellow orpiment.

[மாயோன் + விந்து.]

மாயோனாடல் *māyōṉāḍal*, பெ.(n.) அல்லியம், மற்கூத்து, குடக்கூத்து எனத் திருமாலாடிய கூத்து வகைகள் (சிலப்.6: 48, 49, 55); dances of *Tirumāl*, viz. *alliyam, maṟkūttu, kuḍa-k-kūttu.*

[மாயோன் + ஆடல்.]

மாயோனாள் *māyōṉāḷ*, பெ.(n.) இருபத் திரண்டாம் நாண்மீனான திருவோணம் (சூடா.); *tiruvōṇam* the 22nd *nāṇmīṉ*.

[மாயோன் + நாள்.]

மார்[1] *mār*, பெ.(n.) 1. மார்பு, 1, 2 பார்க்க; see *mārbu*. *"இப்பாதகன் மாரினெய் வனென்று" (கம்பரா.இராவணன்வதை.192).* 2. நான்கு முழவளவான நீட்டலளவை; measure of the distance between the tips of the middle fingers when the arms are outstretched = 1 fathom = 4 cubits = 2 yards.

[முல் (பொருந்தற் கருத்துவேர்)→ மல் →மர்→மரு. மருவுதல் = கலந்திருத்தல், தழுவுதல், பயிலுதல், புணர்தல். மரு→மருமம் = தழுவும் மார்பு, உயிர்நாடியான உறுப்பு, உடம்பு, மறை பொருள். மரு →மார் (வே.க.4:39).]

மார்² *mār*, பெ.(n.) 1. ஓர் அசை (தொல். எழுத்து.186); an expletive. 2. பல்லோர் படர்க்கை விகுதியுள் ஒன்று (தொல். சொல்.209); a plural ending of verbs in the third person. 3. ஒரு வியங்கோள் விகுதி (நன்.); honorific termination in the optative mood. 4. ஒரு பன்மை விகுதி; a plural ending of nouns. *"தாய்மார் மோர் விற்கப் போவர்" (திவ்.பெரியாழ்.3, 1, 9).*

[முல் (இளமைக் கருத்துவேர்)→முள்→மள்→மழ→மக = இளமை, பிள்ளை, மகன் அல்லது மகள். மக→மகன் = குழந்தை, ஆண் பிள்ளை, புதல்வன், விளையாடும் பருவத்துப் பெயரீறு. மகன்→மகார் = புதல்வர், சிறு பிள்ளைகள். மகன்→மான் = ஆண்பாற் பெயரீறு. எ-டு. திருமகன்→திருமான். பெருமகன்→பெருமான். மகள் →மாள். (எடு) பெருமகள்→பெருமாள் →பெருமா (கொச்சை.)→வேண்மாள்.]

மகன்→மகர்→மார் (வே.க.4:7).

மார்க்கட்டி *mār-k-kaṭṭi*, பெ.(n.) மார்பில் வரும் புண் (M.L.); abcess in the breast, cancer of the breast.

[மார் + கட்டி.]

மார்க்கட்டு¹ *mār-k-kaṭṭu*, பெ.(n.) 1. மார்பின் உறுதியமைப்பு; healthy development of the chest. 2. மார்புக் கச்சை (இ.வ.); bodice.

[மார் + கட்டு.]

மார்க்கட்டு² *mār-k-kaṭṭu*, பெ.(n.) மார்பின் குறுக்கேயிடும் வேட்டிக் கட்டு (இ.வ.); fastening of a cloth over the chest.

[மார் + கட்டு.]

மார்க்கடம் *mār-k-kaḍam*, பெ.(n.) குரங்குக் கூட்டம்; crowd of monkeys. *"மார்க்கடஞ் சூழ்ந்த வைப்பின்" (கம்பரா. விபீடண.132).*

மார்க்கண்டம்¹ *mār-k-kaṇḍam*, பெ.(n.) மார்க்கண்டவெலும்பு பார்க்க; see *mār-k-kaṇḍa-v-elumbu.*

[மார் + கண்டம்.]

மார்க்கண்டம்² *mār-k-kaṇḍam*, பெ.(n.) 1. மார்புப் பகுதி; breast, chest. *"மார்க்கண்டந் துடிக்குதிங்கே மணவாளன் மாண்பிருக்க" (கோவ.க.).* 2. மாரின் கறி; flesh of the chest.

[மார் + கண்டம்.]

மார்க்கண்டவெலும்பு *mār-k-kaṇḍa-v-elumbu*, பெ.(n.) மார்பெலும்பு; breast bone, sternum. *"அவனுக்கு மார்க்கண்ட வெலும்பு தெரிகின்றது" (உ.வ.).*

[மார்க்கண்டம் + எலும்பு.]

மார்க்கண்டவைத்தியன் *mārkkaṇḍa-vaittiyaṉ*, பெ.(n.) போலி வைத்தியன் (இ.வ.); quack doctor.

மார்க்கண்டன் *mār-k-kaṇḍaṉ,* பெ.(n.) என்றென்றும் பதினாறகவை யுடையானா யிருக்குமாறு வரம் பெற்ற ஒரு முனிவன் (கந்தபு.மார்க்கண்.252); a sage blessed with the boon of eternal youth of sixteen years.

மார்க்கண்டி[1] *mārkkaṇḍi,* பெ.(n.) மாரெலும்பு; sternum.

மார்க்கண்டி[2] *mārkkaṇḍi,* பெ.(n.) மார்க் கண்டன் பார்க்க; see *mārkkaṇḍaṉ.* *"உலந்த மார்க்கண்டிக்காகி யக்காலனை யுதை கொண்ட" (திருவிசைப். திருவாலி. கோயில்.2, 3).*

மார்க்கண்டேயபுராணம் *mārkkaṇḍēya-ppurāṇam,* பெ.(n.) பதினெண் தொன்மத்து ளொன்று; a chief *purāṇa*, one of *patiṉeṉ-purāṇam.*

மார்க்கண்டேயம் *mārkkaṇḍēyam,* பெ.(n.) மார்க்கண்டேயபுராணம் (அபி.சிந்.) பார்க்க; see *mārkkaṇḍēya-purāṇam.*

மார்க்கண்டேயன் *mārkkaṇḍēyaṉ,* பெ.(n.) மார்க்கண்டன் பார்க்க; see *mārkkaṇḍaṉ.* *"தொழுதெழு மார்க்கண்டேயன்" (தேவா. 42, 1).*

மார்க்கண்டேயனார் *markkaṇḍēyaṉār,* பெ.(n.) தலைக் கழகத்திருந்தவருள் ஒருவராகக் கருதப்படுபவரும் புறநானூற்றின் 365–ஆம் பாட்டியற்றியவருமாகிய புலவர்; a poet ascribed to the first kaḻagam, author of the 365th verse in *puṟāṉāṉūṟu.*

மார்க்கணம் *mārkkaṇam,* பெ.(n.) 1. அம்பு (உரி.நி.); arrow. 2. இரப்பு; asking, begging. 3. தேடுகை (வின்.); search, inquiry.

மார்க்கணன் *mārkkaṇaṉ,* பெ.(n.) இரப்போன் (வின்.); mendicant, begger.

மார்க்கவம் *mārkkavam,* பெ.(n.) கையாந்தகரை (தைலவ.தைல.); a plant found in wet places.

மார்க்குழி *mārkkuḻi,* பெ.(n.) மார்புக்குழி பார்க்க; see *mārbu-k-kuḻi.*

[மார்பு + குழி.]

மார்க்கூடு *mār-k-kūḍu,* பெ.(n.) மார்பெலும்புக் கூடு; ribs, as enclosing the chest.

[மார் + கூடு.]



மார்க்கூடுபின்னுதல் *mār-k-kūḍu-piṉṉudal,* பெ.(n.) 1. மார்க்கூடு சதைப் பற்றின்றி எலும்பு மயமாயிறுகித் தட்டையா யிருக்கை (M.L.); ossification of costal cartilages of ribs and consequent flattening and rigidity of the chest-wall. 2. உடல் மெலிவால் மார்பெலும்பு வெளித் தோன்றுகை; projection of breast bones outward on account of emaciation of the body.

[மார் க்கூடு + பின்னுதல்.]

மார்க்கபம் *mārkkabam*, பெ.(n.) மார்புச் சளி; phlegm in the chest.

[மார் + கபம்.]

மார்க்கல் *mārkkal*, பெ.(n.) ஒரு வகை மாக்கல்; a kind of soft stone.

[மாக்கல்→மார்க்கல் (கொ.வ.)]

மார்கோல்தண்டு *mārkōl-tandu*, பெ.(n.) கடலில் மரக்கலத்தைத் திருப்ப ஏதுவாகும் துடுப்பு (தஞ்சை.மீனவ.); a paddle to which turn the boat.

[மார்கோல் + தண்டு.]

மார்ச்சலம் *mār-c-calam*, பெ.(n.) மார் நீர்க்கோவை; bronchial catarrh or cold in the chest.

*[மார் + **Skt.** சலம்.]*

மார்ச்சிரங்கு *mar-c-cirangu*, பெ.(n.) மார்ச்சிலந்தி பார்க்க (M.L.); see *mār-c-cilandi.*

[மார்ச்சிலந்தி→மார்ச்சிரங்கு.]

மார்ச்சிலந்தி *mar-c-cilandi*, பெ.(n.) முலைப்பக்கத் துண்டாகும் புண்; mammary abscess.

[மார் + சிலந்தி.]

மார்த்தோல் *mār-t-tōl*, பெ.(n.) கள் இறக்கும் மரமேறிகள் மார்பிலிடுந் தோல் (இ.வ.); toddy-drawer's breast-leather.

[மார் + தோல்.]



மார்தட்டு-தல் *mār-tattu-*, 4 செ.கு.வி.(v.i.) 1. போட்டிப்போடுதல்; to challenge, to complete with. *"அவர்களையும்........ சிவனோட மார்தட்டுகிறார்" (திருவிருத்.96, வியா.பக். 455, அரும்.).* 2. குறித்த துறையில் தான் மேம்பட்டவனென்பதைக் குறிப்பிக்குமாறு மார்பைத் தட்டுதல்; to boast of one's powers in a particular line, as by striking the chest. *"அன்னதானத்துக்கு மார்தட்டிய துரை" (தனிப்பா.ii, 236, 4).* 3. தற்பெருமை யடைதல்; to pride oneself. *"நானென்று மார்தட்டும்" (திருப்பு..1223).*

[மார் + தட்டு-.]

மார்நீர்க்கோவை *mār-nir-k-kkōvai*, பெ.(n.) 1. நுரையீரலைச் சுற்றியிருக்கும் மென்படலத்தின் இடையில் நீர் தங்குவதால் ஏற்படும் ஒருவகை நோய்; a kind of diseases affecting the memberanous coating of the lungs by causing inflammation and the collection of fluid. 2. பக்க சூலை; pleuritic effusion.

[மார் + நீர்க்கோவை.]

மார்நோவு *mār-nōvu*, பெ.(n.) மார்வலி பார்க்க; (M.L.) see *mārvali.*

[மார்வலி →மார்நோவு.]

மார்பகம் *mārbagam,* பெ.(n.) மார்பு பார்க்க; see *mārbu.* *"சீதை கொண்கனைத் திருவுறை மார்பகஞ் சேர்த்தான்" (கம்பரா. அயோத்.மந்திரப்.59).*

[மார் →மார்பம்→மார்பகம் (வே.க.4:39).]

மார்பம் *mārbam,* பெ.(n.) மார்பு[1, 2] பார்க்க; see *mārbu.* *"பொன்றுஞ்சு மார்பம்" (சிலப்.19, 61).*

[மார் →மார்பு →மார்பகம் (வே.க.4:39).]

மார்பாணி *mārbāṇi,* பெ.(n.) 1. ஒரு வகை மார்புப் புண் (வின்.); a kind of eruption on the breast. 2. தலைமையாணி (வின்.); capital or principal nail, king pin. 3. தண்டனையாக மார்பில் தைக்கும் ஆணி; nail driven into one's chest, as a punishment. *"எதிர்த்தவர் மார்பாணி" (தமிழ்நா.293).*

[மார்பு + ஆணி.]

மார்பின்னுதல் *mār-pinnudal,* பெ.(n.) மார்க்கூடுபின்னுதல் பார்க்க (M.L.); see *mār-k-kūḍu-pinnudal.*

[மார்க்கூடு + பின்னுதல்→மார்பின்னுதல்.]

மார்பு *mārbu,* பெ.(n.) 1. நெஞ்சு; bosom, breast, chest. *"கள்ளற்றே கள்வநின் மார்பு" (குறள்,1288).* 2. முலை (வின்.); woman's breast. 3. வடிம்பு; rim, top. *"ஏணி யெய்தா நீணெடு மார்பின்..... கூடு" (பெரும்பாண்.245).* 4. தடாகம்; tank. *"மார்பின்மை படி... குலவரை" (பரிபா.15, 9).* 5. அகலம் (சது.); breadth. 6. மார்[1] (இ.வ.) பார்க்க; see *mār.* 7. கருப்பூர வகை (சிலப்.14, 109, உரை); a kind of camphor.

ம. மார்பு

[மருவுதல் = கலந்திருத்தல், தழுவுதல். மரு→ மருமம் = தழுவும் மார்பு. மரு→மார்→மார்பு (வே.க. 4:39).]

மார்புக்குழி *mārbu-k-kuḻi,* பெ.(n.) 1. மார் பெலும்பின் கீழுள்ள குழி; heart pit. 2. நெஞ்சங்குலை உறுப்புக்களடங்கிய நெஞ்சின் அறை; thoracic cavity.

[மார்பு + குழி.]

மார்புச்சளி *mārbu-c-caḷi,* பெ.(n.) மார்ச்சளி பார்க்க; (M.L.) see *mār-c-caḷi.*

[மார்ச்சளி →மார்புச்சளி.]

மார்புநோவு *mārbu-nōvu,* பெ.(n.) 1. மார்பி லுண்டாம் வலி வகை; breast-pang, angina pectoris. 2. மார்பின் சதையி லுண்டாம் நோவு வகை; pleurodynia, pain in the chest.

[மார்பு + நோவு.]

மார்புவீக்கம் *mārbu-vīkkam,* பெ.(n.) நெஞ்சு வீங்கியிருக்கை; (M.L.) inflammation of the breast.

[மார்பு + வீக்கம்.]

மார்புற *mārbuṟa,* கு.வி.எ.(adv.) மார்போடு சேர்த்து; close to the chest.

[மார்பு + உற.]

மார்பெலும்பு *mārbelumbu,* பெ.(n.) நெஞ்செலும்பு, விளா; rib.

[மார்பு + எலும்பு.]

மார்பூசி *mārbūśi,* பெ.(n.) மேலாடை யிலணியும் ஊசி (வின்.); breast - pin, brooch.

[மார்பு + ஊசி.]

மார்பெலும்பு *mārbelumbu,* பெ.(n.) மார்க்கண்டவெலும்பு (வின்.) பார்க்க; see *mārkkanda-v-elumbu.*

[மார்பு + எலும்பு.]

மார்வம் *mārvam,* பெ.(n.) மார்பு, 1 பார்க்க; see *mārbu. "கோளரியா யொண்டிறலோன் மார்வத்துகிர் வைத்தது" (திவ்.இயற்.2, 18). "மைந்தர் மார்வம் வழிவந்த செந்தளிர் மேனியார் செல்ல நீர்ப்ப" (பரிபா.8:122-3).*

[மார்→மார்பு→மார்வம்.]

மார்வலி *mārvali,* பெ.(n.) மார்புநோவு (இ.வ.) பார்க்க; see *mārbu-nōvu.*

[மார் + வலி.]

மார்வு *mārvu,* பெ.(n.) மார்பு, 1 பார்க்க; see *mārbu. "நின்மார் விற் றார்கோலி மழை" (பு.வெ.9, 16).*

[மார்பு→மார்வு (கொ.வ.)]

மார்வுதட்டு-தல் *mārvu-taṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) ஒன்று செய்ய ஊக்கத்துடன் முன் வருதல்; to be ready, to be prepared, to be eager to act. *"இவர்களுக்கு வந்த தொன்றுக்கு அவன் மார்வு தட்டிக் கொண்டு வரும்" (ஈடு.10, 2, 1).*

[மார்வு + தட்டு-,]

மார்வெழுத்து *mārveḻuttu,* பெ.(n.) ஒருவனுக்கு அடிமை என்பதற்குக் குறியாக அவ்வடிமையின் மார்பிற் பொறிக்கப்பட்ட தலைவன் பெயர் அல்லது சூட்டுக் குறி (ஈடு.5, 10-ப்ர.); name or mark of a lord imprinted on the breast of his slave.

[மார்பு + எழுத்து.]

மார *māra,* பெ.(n.) மகிழமரம்; a tree with very fragrant flowers (சா.அக.).

மாரக்கம் *mārakkam,* பெ.(n.) கையாந்தகரை; a prostate plant (சா.அக.).

மாரகன் *māragaṉ,* பெ.(n.) 1. மரணத்தை யுண்டாக்குவோன் (யாழ்.அக.); one who causes death. 2. மரணத்திற்குக் காரணியமான கோள்நிலை (கிரகம்); (Astrol.) the planet which causes or indicates death.

மாரகாகளம் *mārakākaḷam,* பெ.(n.) குயில்; a bird indian cuckoo, as the trumpet of *Kāmaṉ. "மாரகாகள மெழுவதோர் மதுமலர்க் காவில்" (பாரத. குருகுல.8).*

மாரசம் *mārašam,* பெ.(n.) வெள்ளி துகள் (சங்.அக.); calcinated silver.

மாரசயன் *māra-šayaṉ,* பெ.(n.) (மாரனை வென்றோன்) புத்தன் (வின்.); the buddha, as conqueror of *māraṉ.*

மாரட்டம் *māraṭṭam,* பெ.(n.) மராட்டிய நாடு; the Maharatta country. *"மாலை மாரட்டதித் தகதித்தன... குதிரை" (சீவக. 2161).*

மாரடம் *māraḍam,* பெ.(n.) மருக்காரை; a plant gardenia.

மாரடி¹-த்தல் *māraḍi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. இழவில் அழும்பொழுது மார்பில் மகளிர் அடித்துக் கொள்ளுதல்; to beat the breast, as when bewail the dead. *"மாரடித்*

திரியும்" (அரிச்.பு.நாட்.36). 2. வருந்துதல்; to worry oneself.

[மார் + அடி–.]

மாரடி² *māradi,* பெ.(n.) மாரடிநோன்பு பார்க்க; (madr.) see *māradi-nōnbu.*

மாரடித்திருநாள் *māradii-t-tirunāl,* பெ.(n.) மாரடிநோன்பு பார்க்க; see *māradi-nōnbu.*

மாரடிநோன்பு *māradi-nōnbu,* பெ.(n.) மொகரம் பண்டிகையில் முகம்மதியரில் ஒரு வகுப்பார் மாரடித்துக் கொள்வதாகிய சடங்கு; a religious observance of a sect of muhammadans during the mohurrum festival, characterised by beatings on the breast.

[மாரடி + நோன்பு.]

மாரடிப்பாட்டு *māradi-p-pāttu,* பெ.(n.) மாரடித்து அழும் போது பாடும் ஒப்பாரிப் பாட்டு; mourning song sung.

[மாரடி + பாட்டு.]

மாரடிப்பு *māradippu,* பெ.(n.) 1. பெரும் ஏதம்; great affliction, as leading to the beating of breasts. 2. பெருந்துன்பம்; great worry.

[மாரடி →மாரடிப்பு.]

மாரண்டம் *mārandam,* பெ.(n.) 1. பாம்பு முட்டை; eggs of snake. 2. பாதை; way, path.

[மார் + அண்டம்.]

மாரடைப்பு *māradaippu,* பெ.(n.) 1. மூர்ச்சை; fainting, swooning. 2. நெஞ்சாங்குலையில் ஏற்படும் குருதி யடைப்பு; heart attack. 3. மார்புநோவு, 1 (வின்.) பார்க்க; see *mārbu-nōvu.*

[மார் + அடைப்பு.]

மாரணி *mārani,* பெ.(n.) காஞ்சுரை (நாமதீப.299) பார்க்க; see *kāñjurai.*

மாரத்துச்சாமை *mārattu-c-cāmai,* பெ.(n.) சாமை வகை (வின்.); a kind of millet.

மாரதந்தி *māratandi-,* பெ.(n.) காமனின் யானை; elephant of *Kāman.*

மாரதன் *māradan,* பெ.(n.) தேர்ப்படை வீரன்; a warrior on a chariot. *"அதிரதரே மாரதரே" (பாரதவெண்.உத்தி.455).*

[மா + ரதன். (வ) ரதம் >த. தேர். ரதம் → ரதன்.]

மாரதனுசு *māradanušu,* பெ.(n.) காமன்வில்; bow of *Kāman.*

[மார் + தனுசு.]

மாரப்பற்று *māra-p-parru,* பெ.(n.) கருப்பூர வகை (சிலப்.14, 109, உரை); a kind of camphor.

மாரபேரி *māra-pēri,* பெ.(n.) காமன் முரசு; drum of *Kāman.*

[மாரன் + பேரி.]

மாரம் *māram,* பெ.(n.) 1. கோடக சாலை எனும் செடி (மலை.); a very small plant. 2. மரணம்; death.

மாரவேள் *māra-vēl,* பெ.(n.) மாரன், 1 பார்க்க; see *māran.* *"தேவன்மேன் மாரவே ளிங்குநின் றெய்யவும்" (கம்பரா.தாடகை.1).*

[மார் + வேள்.]

மாரளிடுக்கி *māraḷiḍukki*,பெ.(n.) 1. மோகம்; lust. 2. போகம்; sexual union (சா.அக.).

மாரன் *māraṉ*,பெ.(n.) 1. காமன் (பிங்.); *Kāmaṉ. "மாரனார் வரிவெஞ் சிலைக்கு" (திவ்.பெருமாள்.3, 3).* 2. புத்தரை மயக்க முயன்று அவரால் தோல்வியுண்ட ஒரு தேவன்; a god who tempted the Buddha but was vaniquished by him. *"மாரனை வென்று வீரணாகி" (மணிமே.30, 11).*

மாரன்புட்பம் *māraṉ-puṭpam*, பெ.(n.) காமனுடைய பூ; flower of kāmaṉ.

[மாரன் + புட்பம். வ. புட்பம் > த. மலர்.]

மாரனாலயம் *māraṉālayam*, பெ.(n.) (காமனிருக்கை) பெண்குறி; pudendum muliebre.

[மாரன் + ஆலயம்.]

மாராசன் *mārāšaṉ*,பெ.(n.) அரசன் (இ.வ.); king.

மாராசி *mārāši*,பெ.(n.) அரசி (colas.11, 238); queen.

மாராசு *mārāšu*,பெ.(n.) அலரி; a flower-oleander.

மாராட்டகம் *mārāṭṭagam*,பெ.(n.) மராட்டிய மாநிலத்துக் குதிரை (திருவாலவா. 27, 73); Maharatta horse.

மாராட்டம்[1] *mārāṭṭam*,பெ.(n.) 1. மாரட்டம் (திருவிளை.நரிபதி.106) பார்க்க; see *māraṭṭam.* 2. ஊர்; town.

[மாரட்டம்→மாராட்டம்.]

மாராட்டம்[2] *mārāṭṭam*,பெ.(n.) 1. துன்பம்; trouble. 2. ஆள் மாறாட்டம்; false impersonation.

மாராட்டு *mārāṭṭu*,பெ.(n.) மாரட்டம்[2], 2 பார்க்க; see *māraṭṭam[2], 2. "மாராட்டரசை யிறக்கி" (விக்கிரம.உலா.).*

[மாரட்டம் →மாராட்டு.]

மாராணி *mārāṇi*,பெ.(n.) மார்பாணி, 1 (M.L.) பார்க்க; see *mārbāṇi.*

[மார்பாணி→மாராணி.]

மாராதம் *mārādam*,பெ.(n.) மன்மதன் தேர்; chariot of maṉmadaṉ.

மாராப்பு *mārāppu*,பெ.(n.) 1. பெண்கள் தம் மார்பின் மேலிடுஞ் சீலைப்பகுதி; the portion of a saree, covering the bosom of women. 2. முதுகுடன் இணைத்து மூட்டைக் கட்டுங் கச்சை (சீதக்.36); band for holding a pack on the back, fastened over the chest.

[மார் + யாப்பு →மாராப்பு.]

மாராப்புக்கடா *mārāppu-k-kaḍā*, பெ.(n.) உடல் முழுதும் கருநிறமும் வலது மார்பு அல்லது இடது மார்பில் மட்டும் சிறிது

வெண்ணிறமும் கொண்ட ஆட்டுக்கடா (நாஞ்.); black sheep or goat with white spots in its right or left breast.

[மாராப்பு + கடா.]

மாராப்புக்கொட்டகை *mārāppu-k-koṭṭagai,* பெ.(n.) பந்தலின் பக்கச் சுவர் போல் முன்னும் பின்னும் மாற்றியமைக்கப் பயன்படும் தட்டி (செங்கை.வழ.); a screen used as side wall of pandal, and make turn front and back.

[மாராப்பு + கொட்டகை.]

மாராப்புச்சீலை *mārāppu-c-cīlai,* பெ.(n.) 1. மாராப்பு, 1 (வின்.) பார்க்க; see *mārāppu.*2. மாராப்பு, 2 (யாப்.) பார்க்க; see *mārāppu.*

[மாராப்பு + சீலை.]

மாராப்புப்பட்டை *mārāppu-p-paṭṭai,* பெ.(n.) 1. மாராப்பு, 2 பார்க்க; see *mārāppu.*2. கத்தியின் கச்சை; sword belt.

[மாராப்பு + பட்டை.]

மாராப்புமல் *mārāppumal,*பெ.(n.) கை மரங்களை இணைக்கும் குறுக்கு மரம் (நெல்லை.வழக்.); a wooden gross frame joint the frame.

மாராயக்குறி *mārāya-k-kuṟi,* பெ.(n.) மாராயச்சீட்டு (நாஞ்.) பார்க்க; see *mārāya-c-ciṭṭu.*

[மாராயச்சீட்டு →மாராயக்குறி.]

மாராயச்சீட்டு *mārāya-c-ciṭṭu,* பெ.(n.) மாராயப்பணம் பெற்றுக் கொண்டதற்குரிய பற்றுச் சீட்டு (நாஞ்.); receipt acknowledging payment of *mārāya-p-paṇam.*

[மாராயம் + சீட்டு.]

மாராயஞ்சொல்(லு)-தல் *mārāyañ-collu-,* 8 செ.குன்றாவி.(v.t.) நற்செய்தி கூறுதல் (வின்.); to given good news.

[மாராயம் + சொல்-,]

மாராயஞ்சொல்லுபவன் *mārāyañ-collubavaṉ,*பெ.(n.) வண்ணான் (இ.வ.); washerman, as the bearer of good news.

[மாராயம் + சொல்லுபவன்.]

மாராயம் = நற்செய்தி. சிற்றூர்களில் பெண்கள் பூப்பெய்தல் முதலிய நன்னிகழ்வுகளை வண்ணான் சென்று சொல்வதால் வந்த பெயராகலாம்.

மாராயப்பணம் *mārāya-p-paṇam,* பெ.(n.) நிலத்துக்குரியவன் பாட்டக் காரனிடமிருந்து பாட்டவுறுதியின் பொருட்டு முற்பட வாங்கும் பணம் (நாஞ்.); advance money received by the owner of a fixed from the lessee thereof as security for the due payment of rent.

[மாராயம் + பணம்.]

மாராயப்பாட்டம் *mārāya-p-pāṭṭam,* பெ.(n.) மாராயப் பணம் வாங்கும் பாட்ட வகை (நாஞ்.); a lease in which a sum is received in advance from the lessee as security for the due payment of rent, dist. fr. *veṉ-pāṭṭam.*

[மாராயம் + பாட்டம்.]

மாராயம் *mārāyam*, பெ.(n.) 1. வேந்தனாற் பெறுஞ் சிறப்பு; honour bestowed by a king. *"மாராயம் பெற்ற நெடு மொழியானும்" (தொல்.பொருள்.63).* 2. மகிழ்ச்சி; happiness, gladness. *"சிவன் மாராய மிங்கண் மிக்குறுக" (திருவாணைக். நானவழி.36).* 3. நற்செய்தி (இ.வ.); good news, auspicious tidings. 4. பாராட்டுச் சொல் (வின்.); compliment, congratulations. 5. பெண்ணின் பூப்புச் செய்தியைச் சுற்றத்தார்க்கு அறிவிக்கை (இ.வ.); announcement of a girl's puberscence to her relatives.

[மா + அரையன்→மாராயன்→மாராயம் .]

மாராயவஞ்சி *mārāya-vañji*, பெ.(n.) அரசனாற் சிறப்பெய்திய வெற்றி வீரரின் பெற்றிமையைக் கூறும் புறத்துறை (பு.வெ.3, 11); (Purap.) theme describing the honours conferred on victorious warriors by their king.

[மாராயம் + வஞ்சி.]

மாராயன் *mārāyan*, பெ.(n.) 1. அரசன்; king. 2. அரசனாற் பெறும் பட்டப் பெயர்; honorary title bestowed by a king. *"பஞ்சவ மாராயன்.... கொங்காள்வான்"* (Insc.). 3. திருவிதாங்கூரில் உவச்சரை யொத்த ஒரு சாதி (நாஞ்.); a caste in Travancore, corresponding to uvaccarai.

[மா + அரையன்.]

மாராழம் *mārāḻam*, பெ.(n.) மார்பளவுள்ள ஆழம்; depth up to one's breast, as of water.

[மார் + ஆழம்.]

மாரி[1] *māri*, பெ.(n.) 1. நீர் (பிங்.); water. 2. மழை (பிங்.); rain, shower. *"மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்" (புறநா.35).* 3. மேகம்; cloud. *"மாரி மாட் டென்னாற்றுங் கொல்லோ வுலகு" (குறள், 211).* 4. மாரிக் காலம் பார்க்க; see *māri-k-kōlam*. *"மாரி மலைமுழைஞ்சின் மன்னிக் கிடந்துறங்கும்" (திவ்.திருப்பா.23).* 5. பூராடம் (பிங்.); the 20th nakstra. 6. கள் (பிங்.); toddy, liquor. 7. புள்வகை (பிங்.); a bird.

[முல் (பொருந்தற்கருத்து வேர்) →மல்→மால் →மார்→மாரி (வே.க.4–43).]

மாரி[2] *māri*, பெ.(n.) 1. மரணம் (பிங்.); death. 2. சின்னம்மை; small-pox. 3. சின்னம்மைக்குரிய தேவதை; the goddess of small pox. 4. கொற்றவை (பிங்.); Durgai.

[மால்→மார்→மாரி.]

மாரி[3] *māri*, பெ.(n.) (பெயர்ச் சொற்களோடு இணைந்து) தொடர்ச்சியாக அதிக அளவில் என்ற பொருளைத் தரும் சொல்; a word (which combines with nouns) to mean a shower of something.

மாரிக்கார் *māri-k-kār*, பெ.(n.) கார் நெல் வகை (R.T.) a kind of paddy that grows and matures in the rainy season.

[மாரி + கார்.]

மாரிக்காலம் *māri-k-kālam*, பெ.(n.) மழைக்காலம்; the monsoon, rainy season.

[மாரி + காலம்.]

மாரிக்குடா *māri-k-kuḍā,*பெ.(n.) வடகீழ்த் திசை (வின்.); north-east.

[மாரி + குடா. குடக்கு=கிழக்கு. குடக்கு→குடம் →குடா.]

மாரிக்குருவி *māri-k-kuruvi,*பெ.(n.) மாரி[1], 7 (வின்.) பார்க்க; see *māri.*

[மாரி + குருவி.]

மாரிகாலம் *māri-kālam,*பெ.(n.) மாரிக் காலம் (வின்.) பார்க்க; see *māri-k-kālam.*

[மாரிக்காலம்→மாரிகாலம்.]

மாரிசம்[1] *mārišam,*பெ.(n.) 1. வஞ்சகம்; hypocrisy. *"மாரிசமும் சூதுமிட்ட" (நெல்விடு. 214).* 2. ஒய்யாரம்; affectation.

மாரிசம்[2] *mārišam,*பெ.(n.) ஒருவகைக் கீரை; edible green (சா.அக.).

மாரிசாதம் *māri-šādam,*பெ.(n.) வானம்பாடி; a bird-sky lark (சா.அக.).

[மாரி + சாதம்.]



மாரிசி *mārišī,*பெ.(n.) மிளகு (இராசவைத். அரும்.பக்.92); pepper.

மாரித்தாய் *māri-t-tāy,*பெ.(n.) பரதவர்கள் வழிபடும் கடவுள்; a name of paradava's god. *"மாரித்தாயே ஏலே லோ" (நாட்டார் பாடல்) (மட்டக்களப்பு. பரத.கலைச்சொ.).*

[மாரி + தாய்.]

மாரிநாள் *māri-nāḷ,*பெ.(n.) பன்னிரண்டாம் நாண்மீன் (பிங்.); the 12th naksatra.

[மாரி + நாள்.]

மாரிப்பண் *māri-p-paṇ,*பெ.(n.) மாரிக்காலம் பார்கக; see *māri-k-kālam.*

[மாரி + பண்.]

மாரிப்போகம் *māri-p-pōgam,*பெ.(n.) புன்செய் விளைவு (வின்.); produce of dry cultivation.

[மாரி + போகம்.]

மாரிபத்து *māri-pattu,*பெ.(n.) மாரிபம் பார்க்க; see *māribam.*

[மாரிபம் →மாரிபத்து.]

மாரிபம் *māribam,*பெ.(n.) மூலம்; part, side, behalf, mean, medium. *'அவன் மாரிபமாகக் கொடுத்தார்' (உ.வ.).*

மாரிமழை *māri-maḻai,*பெ.(n.) வேனிற் காலத்திற் பெய்யும் மழை (நாஞ்.); rain during the summer.

[மாரி + மழை.]

மாரிமறுத்தல் *māri-maṟuttal,*பெ.(n.) 1. மழையில்லாமை; want of rain. 2. மழை நின்று விடுகை (வின்.); cessation of rain.

[மாரி + மறுத்தல்.]

மாரிமா *māri-mā*, பெ.(n.) 1. காட்டுமா; Indian hog plum. 2. நீண்ட மரவகை; South sea Islands hog plum.

மாரிமுத்து *māri-muttu*, பெ.(n.) மாரி² பார்க்க; see *māri*..

[மாரி + முத்து.]

மாரியம்மன்¹ *māriyammaṉ*, பெ.(n.) வெப்பு நோயிலிலிருந்து மக்களைக் காப்பதாக நம்பப்படும் தமிழ்நாட்டுத் தெய்வம்; a rural female diety who is behind to save the people from the disceases of heat. *"எங்கள் முத்து மாரியம்மா, எங்கள் முத்துமாரி" (பாரதியார்).*

[மாரி + அம்மன்.]

மாரியம்மன்² *māriyammaṉ*, பெ.(n.) மாரி², 3 பார்க்க; see *māri*.

[மாரி →மாரியம்மன்.]

மாரியம்மன்கொண்டாடி *māriyammaṉ-koṇḍāḍi*, பெ.(n.) மாரியம்மனின் அருள் பெற்று ஆடுபவன் (வின்.); one possessed by the spirit of māri-y-ammaṉ.

மறுவ. மாரியம்மன் மருளாடி.

[மாரியம்மன் + கொண்டாடி.]

மாரியம்மை *māriyammai*, பெ.(n.) மாரியம்மன் (வின்.) பார்க்க; see *märri-y-ammaṉ*.

[மாரியம்மன் →மாரியம்மை.]

மாரியாத்தாள் *māria-y-āttāḷ*, பெ.(n.) மாரியம்மன் (இ.வ.) பார்க்க; see *māri-y-ammaṉ*.

[மாரியம்மன் →மாரியாத்தாள். அம்மன்→ அம்மா →ஆத்தா (கொ.வ.).]

மாரியாயி *māri-y-āyi*, பெ.(n.) மாரியம்மன் (இ.வ.) பார்க்க; see *māri-y-ammaṉ*.

[மாரியம்மன்→மாரியாயி. அம்மன்→அம்மா →ஆயி (இ.வ.).]

மாரியுள்ளான் *māri-y-uḷḷāṉ*, பெ.(n.) உள்ளான் வகை; common snipe, *Gallingo scopacinus*, as a bird of cold water (m.m.).

[மாரி + உள்ளான்.]



மாரிவலை *māri-valai*, பெ.(n.) மீன் பிடிக்க உதவும் வலையின் பெயர்; a kind of fishing net.

[மாரி + வலை.]

மாரிவெண்கோ *māriveṇkō*, பெ.(n.) ஒளவையாரால் பாடப்பெற்ற சேரவரசன்; a Chera king, praised by Avvaiyar. *"மாரிவெண்கோவும், பாண்டியன் கானப்பேர் கடந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்தாரைப் பாடியது" (புறநா.367, அடிக்குறிப்பு.).*

மாரிழவு *mār-iḻavu,* பெ.(n.) இழவில் மாரடித்துக் கொள்ளுகை (வின்.); bewailing the dead by beating one's breast.

[மார் + இழவு.]

மாருசி *māruši,* பெ.(n.) மிளகு (இராசவைத். அரும்.பக்.92) பார்க்க; see *miḷagu.*

மாரெரிச்சல் *mār-ericcal,* பெ.(n.) செரியாமையாலுண்டாகும் மார்பெரிச்சல் நோய் (M.L.); heart burn, chest burn due to indigesting food.

[மார் + எரிச்சல்]

மாரோடம் *mār-ōḍam,* பெ.(n.) செங்கருங்காலி; red catechu. *"ஆய்பூந் தில்லையு மணிமாரோடமும்" (பெருங். உஞ்சைக்.50, 31).*

மால்[1](லு)-தல் *māl-,* 16 செ.கு.வி.(v.i.) மயங்குதல்; to be confused, perturled. *"மான்று வேட்டெழுந்த செஞ்செவி யெருவை" (அகநா.3).*

[மல் → மல்லல் = மிகுதி, வளம், செல்வம், வலிமை, பொலிவு, அழகு. மல் → மலை. மலைதல் = ஒத்தல், எதிர்த்தல், பகைத்து மாறுபடுதல், போராடுதல். மல் → மலை → மலைத்தல் = மாறுபடுதல், பொருதல், வருந்துதல். மல் → மால்(லு). மலைதல் = மயங்குதல். மலைத்தல் = மயங்குதல். மல் → மால் (வே.க.4:37]

பல பொருள்கள் ஒன்று சேர்வதால் குழம்பலும் குழப்பமும் கலக்கமும் மயக்கமும் உண்டாகும். நீரும் மண்ணும் சேரின் கலங்கல் அல்லது கலுழி யெனப்படுவதும், நீரும் பிற பொருளும் சேர்ந்து திண்ணமாயின் குழம்பு அல்லது குழம்பல் எனப்படுவதும், பகலும் இரவும் மயங்கும் (கலக்கும்) வேளை மசங்கல் (மயங்கல்) எனப்படுவதும் காண்க. ஒ.நோ: கல → கலகு → கலங்கு → கலக்கு → கலக்கம். ஒரு கவர்த்த வழியைக் காணின் எது வழியென்று தெரியாது கலங்கவும், அறியாதார் பலர் கூடியிருக்கக் காணின் அவருட் காண வேண்டியவர் யாரென்று தெரியாது மயங்கவும் நேரும். இதனால் பொருட் கலக்கம் மனக் கலக்கத்திற்கும் ஏதுவாம்.

அமைதியான மனத்தில் கவலை அல்லது அச்சம் கலப்பின் மனக்கலக்கம் உண்டாகும். மனத்தெளிவு முற்றும் நீங்குவதே மயக்கம். அது தீய பொருள் உடம்பிற் கலப்பதாலும் உண்டாகும் (வே.க.4:37).

மால்[2](லு)-தல் *māl-,* 16 செ.கு.வி.(v.i.) மாட்சிப்படுதல்; to be magnified, glorified. *"மான்ற பூண் முலையினாள்" (காஞ்சிப்பு. திருக்கண்.174).*

[மல் → மால்.]

மால்[3](லு)-தல் *māl-,* 16 செ.கு.வி.(v.i.) எழுதகம் அமைத்தல் (வின்.); to form mouldings on a pillar or wall *"மால்கிறேன், மாலினேன்".*

மால்[4] *māl,* பெ.(n.) 1. மயக்கம்; illusion, delusion, aberration of mind, dullness, stupor, confusion. *"பரேரம் புழகுடன் மாலங் குடைய மலிவன மறுகி" (குறிஞ்சிப்.96).* 2. ஆசை (பிங்.); desire. *"என் பேய் மன மால் கொண்டதே" (திருநூற்.1).* 3. காமம்; love, lust. *"மடப்பிடி கண்டு வயக்கரி மாலுற்று" (பரிபா.10, 42).* 4. கருமை (பிங்.); blackness. *"மால்கடல்" (பெரும்பாண்.487).*

[மல் → மால் (வே.க.4:37)]

மால்[5] *māl,* பெ.(n.) 1. பெருமை (பிங்.); greatness. *"சினமால் விடை யுடையான்"*

(திருவாச.34, 3). 2. பெருமையுடையவன்; great man. *"மாமஞ்ஞை யூர்ந்து நின்றமால்" (சீவக.286).* 3. திருமால்; Tirumal. *"நீர் செல நிமிர்ந்த மாஅல் போல" (முல்லைப்.3).* 4. அருகன் (சூடா.); arhat. *"இன்பக் கடலாக்கித் தரு மாலை" (சீவக.961).* 5. வானவத்தலைவன் (இந்திரன்) (பிங்.); *Indiran.* *"தன்றிரு மகனெனப் பெற்றமால்" (குமர.பிர.முத்து. காப்.6).* 6. காற்று (பிங்.); wind. 7. அறிவன் கோள் (பிங்.); the planet mercury. 8. சோழன் (பிங்.); Cola king. 9. மலை (அக.நி.); mountain. 10. வளமை (அக.நி.); plenty, fertility. 11. பழமை (அக.நி.); antiquity. 12. மேகம் (பிங்.); cloud. 13. மால்பு (பிங்.)பார்க்க; see *mālbu.*14. விட்டிணு கரந்தை (மூ.அக.); a plant that grows only in hot and dry places.

[முல் (பொருந்தற் கருத்து வேர்)→மல்→மால் (வே.க.4:30)]

மால்[6] *māl,* பெ.(n.) 1. எழுதகக் கருவி (வின்.); wooden mould for forming the mouldings of a pillar or cornice of wall. 2. செங்கற்கட்டளை (இ.வ.); mould for making bricks. 3. காளவாய் (இ.வ.); brick-kiln. 4. மாதிரி (வின்.); form, plan, fashion. 5. எல்லை; demarcation, limit. 6. வலை வகை (வின்.); a kind of net. 7. கொட்டடி (இலாயம்); stable, stall. 8. அரசிறை வகை (வின்.); quit, rent. 9. சொத்து; property.

மால்[7] *māl,* பெ.(n.) 1. வலையின் ஒரு கூறு (மீனவ.வழக்.); section of a fishing net. 2. செல்வம்; wealth.

மால்கங்கணி *māl-kaṅgaṉi,* பெ.(n.) வாலுளுவை (இ.வ.); black-oil.

மால்கங்கணிவிதை *māl-kaṅgaṉi-vidai,* பெ.(n.) வாலுளுவைரிசி; seed of intellect plant.

மால்கண்டகன் *māl-kaṇḍagaṉ,* பெ.(n.) புட்பராகம்; one of the nine germs.

மால்கந்தி *māl-kandi,* பெ.(n.) அரிதாரம்; yellow orpiment (சா.அக.).

மால்கயிறு *māl-kayiṟu,* பெ.(n.) வலையை வாங்குதற்குரிய வலைக்கயிறு (செங்கை. மீனவ.); twaist of the fishing net.

[மால் + கயிறு.]

மால்கரந்தை *māl-karandai,* பெ.(n.) திருமால்கரந்தை எனுஞ் செடி (மூ.அ.); a plant that grows only in hot and dry places.

[மால் + கரந்தை. மால் = திருமால்]

மால்காரை *māl-kārai,* பெ.(n.) கருந்துளசி; black variety of holy basil.

மால்குறி-த்தல் *māl-kuṟi-,*4 செ.கு.வி. (v.i.) மனை கட்டுவதற்கு முன்பாக எல்லையை வரையறை செய்து அடையாளமாக குச்சி நடுதல் (முது.வழ.); to plant a small stick as pole, to determine the boundry of the housing plot, before construction.

[மால் =எல்லை. மால் + குறி-,]

மால்சந்தனம் *māl-šandaṉam,* பெ.(n.) செஞ்சந்தனம்; red sandal wood.

மால்சமயத்தோர் *māl-šamayattōr,* பெ.(n.) திருமாலையே முதற்கடவுளாக வணங்கும் கொள்கையோர் (பிங்.); *Vaisnavaites* as devotees of *Tirumāl.*

[மால் + சமயத்தோர். மால் = திருமால்.]

மால்தங்கை *māl-taṅgai,* பெ.(n.) 1. உமை; *Pārvati.* 2. நஞ்சு வகை (யாழ்.அக.); a kind of mineral poison.

[மால் + தங்கை]

மால்தாயம் *māl-tāyam,* பெ.(n.) கருநெய்தல் எனும் கொடி; a kind of creeper (சா.அக.).

மால்தீபலம் *māl-tīpalam,* பெ.(n.) சாதிக்காய்; net meg (சா.அக.).

மால்துயில் *māl-tuyil,* பெ.(n.) ஆலமரம்; banyan tree (சா.அக.).

மால்தேவி *māl-dēvi,* பெ.(n.) அரிதாரம்; yellow orpiment (சா.அக.).

மால்தேவிமச்சினி *māldēvi-maccini,* பெ.(n.) அப்பிரகம்; mica (சா.அக.).

மால்தொடை *māl-todai,* பெ.(n.) துளசி (மலை.); sacred basil.

[மால் + தொடை. மால் = திருமால். தொடை = தொடுக்கப்பட்டது, மாலை. ஒ.நோ. உடுக்கப்படுவது உடை.]

மால்நிறம் *māl-niram,* பெ.(n.) பச்சை; green (சா.அக.).

[மால் + நிறம். மால் = திருமால்]

மால்பரிதி *māl-paridi,* பெ.(n.) உடம்பின் கொழுப்பு; fat of the human body (சா.அக.).

மால்பாகலட்சுமி *māl-pāga-latcumi,* பெ.(n.) அரிதாரம்; yellow orpiment (சா.அக.).

மால்பு *mālbu,* பெ.(n.) கண்ணேணி, மூங்கில் ஏணி; bamboo ladder. *"நிலை பெய்திட்டமால்பு நெறியாக" (மலைபடு.316).*

மால்போடு-தல் *māl-pōdu-,* 20 செ.கு.வி. (v.i.) எல்லை வரைதல் (இ.வ.); to draw a plan, to demarcate.

[மால் + போடு-, மால் = எல்லை]

மால்முடி-தல் *māl-mudi-,* 4 செ.கு.வி.(v.i.) வலைபின்னுதல் (இ.வ.); to make a net.

[மால் + முடி-, மால் = வலை. முடி = முடிச்சு போடுதல், பின்னுதல், கட்டுதல், தென்னை யோலைப் பின்னுதலை தென்னை முடிதல் என்றும், பையின் தலைப்பைக் கட்டிக் கொடுத்தலை முடிந்து கொடு என்றும் வழங்கும் வழக்குண்மையை யறிக.]

மால்முப்பு *māl-muppu,* பெ.(n.) தலைப் பிண்டம்; foetus of first confinement (சா.அக.).

மால்முருகு *māl-murugu,* பெ.(n.) துளசி (மலை.); sacred basil.

[மால் + முருகு. மால் = திருமால்]

மால்மேனி *māl-mēni,* பெ.(n.) துருசு; copper sulphate (சா.அக.).

மால்மைத்துனன் *māl-maittunan,* பெ.(n.) 1. சிவன்; *Šivan.* 2. துருசு; blue vitriol.

[மால் + மைத்துனன். மால் = திருமால்]

மால்மைந்தன் *māl-maindan,* பெ.(n.) காமன் (நாமதீப.57); *Kāman,* a son of *Tirumāl.*

[மால் + மைந்தன். மால் = திருமால்]

மால்விளக்கு *māl-viḷakku,*பெ.(n.) தோணியின் பின்னால் கட்டும் விளக்கு (நெல்லை.); a lamp fixed in backside of the boat.

[மால் + விளக்கு. மால் = வலை, மீன்பிடி வலை.]

மால்விளையாட்டு *māl-viḷaiyāṭṭu,*பெ.(n.) இன்ப நுகர்ச்சி; sexual intercourse. *"இழந்து போகாத வாழ்வை ஈயும் முத்தையனார் கைவேல் வழங்கு நல்லூரண் உண்ணும் போதும், மால்விளையாட்டின் போதும்" (பாம்பன்சுவாமிகள் – சண்முகக் கவசம்).*

மால்வார் *mālvār,* பெ.(n.) பழச்சாறு; a kind of fruits juice.

மால்வீடு *māl-vīḍu,* பெ.(n.) சாளக்கிராமம் (யாழ்.அக.); black fossil ammonite.

மால்வெட்டு–தல் *māl-veṭṭu-,* 5 செ. குன்றாவி.(v.t.) 1. மாதிரி செய்தல் (வின்.); to cut out a form or pattern make a plan or diagram. 2. பாத்தியமைத்தல் (யாழ்.அக.); to form plots bounded by ridges.

[மால் + வெட்டு–.]

மாலக்கண்ணி *māla-k-kaṇṇi,*பெ.(n.) நீள, அகல வேறுபாடுடைய ஒரு வகை மீன்பிடி வலை; fishing net with a different length and breath.

[மால + கண்ணி.]

மாலகம்[1] *mālagam,* பெ.(n.) செம்பருத்தி வகை; lotus bendy.

மாலகம்[2] *mālagam,* பெ.(n.) வேம்பு (மூ.அ.); neem.

மாலதீவு *māla-tīvu,* பெ.(n.) மலையாளக் கடற்கரையை அடுத்துள்ள மாலை போன்றமைந்துள்ள தீவுகள் (வின்.); Māldive islands.

[மாலை + தீவு]

மாலதீவுத்தேங்காய் *māla-tīvu-t-tēṅgāy,* பெ.(n.) கடற்றெங்கு (வின்.); double coconut.

[மாலைத்தீவு + தேங்காய்]

மாலந்து *mālandu,*பெ.(n.) கீழ்க்காய் நெல்லி; a plant - *phyllanthus niruri.*

மாலபதி *mālapati,* பெ.(n.) உடம்பின் கொழுப்பு; fat of the human body.

மாலம் *mālam,*பெ.(n.) 1. பேய்; devil. 2. குங்குமம் (மூ.அ.); saffron.

[மால் = மாலம். மால் = கருமை, செம்மை]

மாலமத்திரி *māla-mattiri,* பெ.(n.) வட்டத்திருப்பி; a twiner - *cissampelos paneira.*

மாலமாயம் *māla-māyam,* பெ.(n.) பேயின் தந்திரம் (வின்.); deceit or trick of a devil.

[மாலம் + மாயம்]

மாலயம்[1] *mālayam,* பெ.(n.) சந்தனம் (மலை.); sandal wood.

மாலயம்[2] *mālayam,* பெ.(n.) மாளயம் பார்க்க; see *māḷayam.*

மாலயற்கரியான் *mālayaṟ-kariyāṉ,* பெ.(n.) சிவபெருமான்; *Śivaṉ.*

[மால் + அயன் + அரியான். மால் = திருமால். அயன் = பிரமண். அரியான் = இருவராலும் அடிமுடி காண இயலாப் பரம்பொருள்]

மாலர்[1] *mālar,* பெ.(n.) 1. பிராமணப் பெண்ணுக்குஞ் சூத்திரனுக்கும் பிறந்தோர் (வின்.); children born of a brahmin mother and a sudra father. 2. வேடர் (அக.நி.); hunters, savages. 3. புலைஞர் (அக.நி.); out castes.

தெ. மால.

மாலர்[2] *mālar,* பெ.(n.) மெய்யுறை (அக.நி.); armour.

மாலரும்பு *mālarumbu,* பெ.(n.) மயக்கம் தரும் பொருள் வகை (தைலவ.தைல.); an intoxicating drug.

மாலலங்கல் *māla-laṅgal,* பெ.(n.) துளசி; holy basil.

மாலவம் *mālavam,* பெ.(n.) ஒரு நாடு; a country.

மாலவன் *mālavaṉ,* பெ.(n.) அறிவன் கோள் (திவா.); the planet mercury.

மாலவன்குன்றம் *mālavaṉ-kuṉṟam,* பெ.(n.) திருப்பதிக் குன்றம்; a hill shrine *Tiruppati.*

[மாலவன் + குன்றம். மாலவன் = திருமால்.]

தமிழ்நாட்டின் வட எல்லையாகத் திகழ்ந்தது திருவேங்கட மலையாகும். இம்மலை மாலவன்குன்றம்.

மாலவித்தை *māla-vittai,* பெ.(n.) வஞ்சகம்; deceit, cunning. *"மாலவித்தைப் பெண்கள் மன்னக் கேசாள்" (விறலிவிடு. 506).*

[மால் + வித்தை. மால் = மயக்கம், கருமை, ஏமாற்று, வஞ்சகம்]

மாலன்[1] *mālaṉ,* பெ.(n.) திருமால்; *Tirumāl.*

[மால் → மாலன். மால் = கருமை, கருநிற திருமால்]

மாலன்[2] *mālaṉ,* பெ.(n.) வேடன்; hunter.

[மால் = வஞ்சகம், ஏமாற்று. மால் → மாலன் ஏமாற்றிக் கொல்பவன், வேடன்.]

மாலா *mālā,* பெ.(n.) நடுமுள் மட்டுமேயுள்ள வெண்ணிறக் கடல் மீன் (நெல்லை.மீனவ.); a kind of sea fish which is white in colour with middle spine.



மாலாகாரன் *mālākāraṉ,* பெ.(n.) மாலைக்காரன் பார்க்க; see *mālai-k-kāraṉ.*

[மாலைக்காரன்→மாலாக்காரன் (கொ.வ.)]

மாலாதுரிசினம் *mālā-duriśiṉam,* பெ.(n.) பூனை; cat (சா.அக.).

மாலாபலம் *mālāpalam,* பெ.(n.) உருத்திராக்க மணி (சங்.அக.); rudraksa bead.

[மாலா + பலம்]

மாலாணி *mālāṇi,* பெ.(n.) சிறு சண்பகம்; small flowers which are fragrant michelia nilagirica.

மாலி[1] *māli,* பெ.(n.) மாலையணிந்தோன்; one who wears a garland.

[மாலை→மாலி]

மாலி[2] *māli,* பெ.(n.) 1. கள் (சூடா.); toddy. 2. ஓர் அரக்கன் (அரு.நி.); a wicked gigantic person.

மாலி[3] *māli,* பெ.(n.) பகலவன்; sun.

மாலி[4] *māli,* பெ.(n.) தோட்டக்காரன்; gardener.

மாலிகாரேகை *māligā-rēgai,* பெ.(n.) மாலிகாவரிகை பார்க்க; see *māligā-varigai.*

[மாலிகை→மாலிகா + ரேகை]

த. ரேகை > வ. வரிசை.

மாலிகாவரிகை *māligā-varigai,* பெ.(n.) நல்வாழ்வைக் குறிக்கும் கைவரிகை (திருவாரூர்க்குற. mss.); a kind of distinctive mark on the palm, believed to indicate prosperity.

[மாலிகை→மாலிகா + வரிகை]

மாலிகை[1] *māligai,* பெ.(n.) 1. சிறு மாலை (சூடா.) (இரகு.திக்குவி.9); garland, string of flowers. 2. வரிசை (வின்.); row, series.

[முல் (பொருந்தற்கருத்து வேர்) →மல்→மால் →மாலை = தொடுக்கப்பட்டது, வரிசையாகப் பொருந்தியது. மாலை→மாலிகை. 'கை' சிறுமைப் பொருட் பின்னொட்டு. ஒ.நோ. குடி = குடிகை (சிறுகோயில்) (வே.க.4:38.]

மாலிகை[2] *māligai,* பெ.(n.) சீமைச் சணல்; flax.

மாலிகைத்துவரை *māligai-t-tuvarai,* பெ.(n.) சின்ன துவரை; small sized red - gram.

[மாலிகை + துவரை]

மாலிமி *mālimi,* பெ.(n.) இளமையிற் செய்யும் நட்பு (சது.); youthful friendship.

மாலிமை *mālimai,* பெ.(n.) பெருமிதம்; dignity, eminence, honour. ***"ஒருவன்கீழ் மாலிமையாய்ப் பெண்டிருந்து வாழ்ந்ததல்லால்" (தெய்வச். விறலி விடு.289).***

மாலியம்[1] *māliyam,* பெ.(n.) பூ (சங்.அக.); flower. *"பிந்தைக் காட்டு மாலியற்கள்"* ***(காஞ்சிப்பு. நகரப்.35).***

மாலியம்[2] *māliyam,* பெ.(n.) திருமாலை வழிபடுபவர்; *vaishnavitties.*

மாலியாங்கம் *māliyāṅgam,* பெ.(n.) பல வகை மாலைகளைத் தொடுக்க உதவுந் தெய்வ மரம் (தக்கயாகப்.757, கீழ்க்குறிப்பு); a celestial tree which gives various kinds of garlands.

மாலிருஞ்சோலை *māl-iruñ-cōlai,* பெ.(n.) மதுரை மாவட்டத்திலுள்ள அழகர்மலை (திவ்.பெரியாழ்.2, 7, 11); the *Aḻagar* hills near *Madurai*.

[மால் = திருமால். மால் + இருஞ்சோலை.]

மாலின்தாரம் *mālin-tāram,* பெ.(n.) அரிதாரம்; yellow orpiment.

மாலின்நேத்திரம் *mālin-nēttiram,* பெ.(n.) கல்தாமரை; dry lotus found in the crevices of rocks and mountains (சா.அக.).

மாலினி¹ *mālini,* பெ.(n.) பூமாலைக்காரி; flower wearing women.

மாலினி² *mālini,* பெ.(n.) 1. கொற்றவை; Durgai. 2. மலைமகள் (நாமதீப.20); *Malaimagaḷ*.

மாலினியாமாதா *māliniyā-mādā,* பெ.(n.) கீழ்க்காய் நெல்லி; *phyllanthus niruri* (சா.அக.).

மாலினுக்கிளையநங்கை *māliṉuk-k-iḷaiya-naṅgai,* பெ.(n.) மாலினி, 1 (சூடா.) பார்க்க; see *māliṉi*.

மாலினுக்கிளையாள் *māliṉukkiḷayāḷ,* பெ.(n.) மாலினி, 1 (பிங்.) பார்க்க; see *māliṉi*.

[மாலினுக்கு + இளையாள்]

மாலினுடல்மேனி *māliṉuḍal-mēṉi,* பெ.(n.) நாகப்பச்சை; a kind of gem.

மாலுக்கிளையாள் *mālu-k-kiḷaiyāḷ,* பெ.(n.) 1. கொற்றவை; *Durgai*. 2. மால் தங்கை; sister of *Tirumāḷ*.

மாலுங்கம் *māluṅgam,* பெ.(n.) புளி மாதுளை; sour pomegranate fruit.

மாலுடைக்கண்டன் *māluḍai-k-kaṇḍaṉ,* பெ.(n.) நவமணிகளிலொன்றான புட்பராகம் (யாழ்.அக.); topaz.

மாலுதல் *mālutal,* பெ.(n.) மயங்குதல்; getting giddy, being charmed.

[முல் → மால் → மாலுதல் (வே.க.4:37)]

மாலுந்திவந்தோன் *mālundi-vandōṉ,* பெ.(n.) திருமாலின் உந்தியில் தோன்றிய பிரமன் (பிங்.); Brahmaṉ, as born of the naval of *Tirumāl*.

[மால் + உந்தி + வந்தோன்.]

மாலுமாருதம் *mālumārudam,* பெ.(n.) நாரை; crane.



மாலுறல்¹ *māluṟal,* பெ.(n.) மாறுபாடாய் நினைக்கை; negative thinking.

[மால் + உறல்]

மாலுறல்² *māluṟal,* பெ.(n.) மயங்கல்; getting giddy.

மாலூகம் *mālūgam*, பெ.(n.) 1. பேரேலம்; greater cardamom. 2. வால் மிளகு; tail pepper (சா.அக.).

மாலூர் *mālūr*, பெ.(n.) துவரை; redgram (சா.அக.).

மாலூர்தி *māl-ūrti*, பெ.(n.) திருமாலின் ஊர்தியாகிய கருடன் (யாழ்.அக.); kite, as the vehicle of *Tirumāl*.

[மால் = திருமால். மால் + ஊர்தி]

மாலை[1] *mālai*, பெ.(n.) 1. பகலும் இரவுங் கலக்கும் அந்திப் பொழுது (பிங்.); evening. *"மாலை யுழக்குந் துயர்" (குறள், 1135). "காரும் மாலையும் முல்லை" (தொல். பொருள். 61).* 2. இரா (பிங்.); night, midnight. *"மாலையும்படா விழித்திரளது" (தக்கயாகப். 155).* 3. இருள்; darkness. *"மாலை மென்கேசம்" (திருப்பு.32).* 4. காலம்; time, opportunity. *"வஞ்சமென் றுணர்ந்த மாலைவாய்" (கம்பரா. திருவவ.51).* 5. குற்றம் (தொல்.சொல்.396, - உரை); fault. 6. பச்சைக்கற் குற்றவகை (சிலப்.14, 184, உரை); a flaw in emerald. 7. இயல்பு; nature, natural, quality. *"கைசெய்தூண் மாலையவர்" (குறள், 1035).* 8. பண்பு (பிங்.); disposition. 9. தொடுக்கப்பட்டது, வரிசையாகப் பொருந்தியது; anything strung together. 10. தொடுத்த பூந்தொடை; garland, wreath of flowers. *"மாலை போற்றூங்குஞ் சினை" (கலித்.106, 27).* 11. மணமாலைபோல தொடுத்த அல்லது கட்டிய மணிமாலை அல்லது முத்து மாலை; மகளிரணி வடம் (பிங்.); woman's necklace or string of jewels, beads, etc. 12. பூமாலை போன்ற பாமாலை (சிற்றிலக்கிய வகை); a kind of poem. *திருவரங்கத்து மாலை.* 13. வரிசை; line, row. *"மாலை வண்டினம்" (சீவக.2397).* 14. கயிறு; cord, bond. *"மாலையு மணியும்" (பரிபா.5, 67).* 15. பண்குடிப் பெண்ணாகிய விறலி; woman who sings and dances. *"பாணர் மாலையர் மாலை யெய்தி" (திருவாலவா.54, 26).* 16. பெண் (திருக்கோ.1, உரை.பக்.9); woman. 17. முத்துமாலை போன்ற வடிவம்; string shape. *மாலைமாலையாய்க் கண்ணீரை வடித்தாள் (உ.வ.).*

[முல் (பொருந்தற்கருத்து வேர்)→மல்→மால் = மயக்கம், மயக்கும் ஆசை, ஆசை வகையுள் கடுமையான காமம், இடம் பொருள் தெரியாவண்ணம் கண்ணை மயக்கும் இருட்டு, இருள் நிறமான கருமை, கருநிறமான திருமால், கருமுகில், ஆரிய முத்திருமேனிக் கொள்கைப்படி காவல்தொழிலால் திருமாலை யொத்தவனான மாலியச் சோழன்.]

மால்→மாலை.

பூமாலையையும் பொழுது மாலையையுங் குறிக்கும் மாலை யென்னுஞ் சொல் ஒன்றே. சென்னைப் பல்கலைக்கழகப் பேரகரமுதலியில் அவ் விரண்டையுங் குறிக்குஞ் சொல் வெவ்வேறென்று, காட்டப்பட்டுள்ளது. இது பூமாலையைக் குறிக்குஞ் சொல்லை வடசொல்லென்று காட்ட வகுத்த சூழ்ச்சியே (வே.க.41:38)]

மாலை[2] *mālai*, பெ.(n.) ஒருவகை வலை; a kind of net.

மாலை[3] *mālai*, பெ.(n.) கல்லறைக் கட்டடம் (முகவை.வழக்.); sepulchre building.

மாலைக்கண் *mālai-k-kaṇ*, பெ.(n.) 1. இரவிற் கண் தெரியாமை; night blindness. 2. பார்வைக் குறைவு; defective sight. *"மாலை வண்டின மாலைக்கண் கொண்டவே" (சீவக.2397).*

[மாலை + கண். மாலை = அந்திநேரம்.]

மாலைக்கண்ணன் *mālai-k-kaṇṇaṉ,* பெ. (n.) 1. இரவுக்குருடன்; person suffering from night- blindness. 2. பார்வைக் குறைவுள்ளவன்; purblind man.

[மாலை + கண்ணன். மாலை = அந்தி நேரம்]

மாலைக்கயிறு *mālai-k-kayiṟu,* பெ.(n.) பந்தல் அமைக்கப் பயன்படும் கயிற்று முடிச்சு வகை (சென்னை.வழ.); a kind of knot in rope.

மாலைக்கல் *mālai-k-kal,* பெ.(n.) படிகக்கல்; crystal.

[மாலை + கல்.]

மாலைக்கல்லூரி *mālai-k-kallūri,* பெ.(n.) 1. அலுவற்பணி செய்வோரும் பகலில் சென்று பயில இயலாதோரும் பயிலும் வகையில் பாடவேளை அமைக்கப்பட்ட கல்லூரி; evening college. 2. கல்லூரி இட நெருக்கடியைக் கரணியங் காட்டியும், பிறவற்றைக் காட்டியும் பிற்பகல் வேளையில் பாடம் நடத்தப் பெறுங் கல்லூரி (இக்.வழ.); evening session in colleges.

[மாலை + கல்லூரி.]

மாலைக்காசம் *mālai-k-kāśam,* பெ.(n.) கண் நோயால் மாலை நேரத்தில் தீவ ஒளி வேறாய்க் காட்டும் ஒருவகைக் கண்நோய்; an eye disease affecting the sight.

[மாலை + காசம்]

மாலைக்காதம் *mālai-k-kādam,* பெ.(n.) மாலைநேரம்; evening time.

[மாலை + காதம்]

மாலைக்காமாலை *mālai-k-kāmālai,* பெ.(n.) மாலைக்கண், 1 (யாழ்.அக.) பார்க்க; see *mālai-k-kaṇ*

[மாலை + காமாலை]

மாலைக்காரர் *mālai-k-kārar,* பெ.(n.) மாலை தொடுப்போர்; garland makers. *"மாலைக்காரருங் காலக் கணிதரும்" (மணிமே.28, 40).*

[மாலை + காரர். 'காரர்' உடைமை குறித்த ஈறு.]

மாலைக்காலம் *mālai-k-kālam,* பெ.(n.) மாலை நேரம்; evening time.

[மாலை + காலம்]

மாலைக்குளி *mālai-k-kuḷi,* பெ.(n.) மாலைக் குளியல் (பதார்த்த.1307) பார்க்க; see *mālai-k-kuḷiyal.*

[மாலைக்குளியல்→மாலைக்குளி]

மாலைக்குளியல் *mālai-k-kuḷiyal,* பெ.(n.) அந்தி நேரத்துக் குளியல் (பதார்த்த, 130, தலைப்பு); evening bath.

[மாலை + குளியல். மாலை = அந்தி வேளை]

மாலைக்குளியன் *mālai-k-kuḷiyaṉ,* பெ.(n.) மாலையிற் குளித்து அழகுபடுத்திக் கொள்பவன் (விறலிவிடு.237); fob, dandy, as bathing in the evenings.

[மாலை + குளியன். மாலை = அந்திவேளை]

மாலைக்கோவில் *mālai-k-kōvil,* பெ.(n.) உருவம் வகுக்காத சிலையை வைத்து வணங்கும் கோயில் (இ.வ.); shrine where a shapeless stone is worshipped.

[மாலை + கோவில்]

மாலைகட்டி *mālai-kaṭṭi,* பெ.(n.) கோயிலுக்குப் பூமாலை கட்டுவோன் (இ.வ.); one who makes garlands of flowers for use in temples.

[மாலை + கட்டி]

மாலைச்சுரம் *mālai-c-curam,* பெ.(n.) சாயுங்காலத்தில் காணும் காய்ச்சல்; fever that comes in the evening (சா.அக.).

[மாலை + சுரம்]

மாலைசாத்து-தல் *mālai-šāttu-,* 5 செ.கு.வி.(v.i.) மாலையால் அழகுபடுத்திக் கொள்ளல் (வின்.); to adorn with garlands as a deity.

[மாலை + சாத்து-]

மாலைசூட்டு-தல் *mālai-šūṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) மாலையிடு-தல் பார்க்க; see *mālai-iḍu.*

[மாலையிடு→மாலைசூட்டு-,]

மாலைத்தீவகம் *mālaii-t-tivagam,* பெ.(n.) மாலாதீபகம்[3] பார்க்க; see *mālā-tipagam.*

மாலைத்தீவு *mālai-t-tivu,* பெ.(n.) மேற்குக் கடற்கரையை யடுத்து மாலைபோல் அமைந்துள்ள தீவுக் கூட்டம்; Maldives.

[மாலை + தீவு]

மாலைநிலை *mālai-nilai,* பெ.(n.) இறந்த கணவனுடைய எரியில் தீப்பாயும் பொருட்டு அவன் மனைவி மாலைக் காலத்து நின்றநிலை கூறும் புறத்துறை (தொல். பொருள்.77, இளம்பூ.) (பு.வெ.10, 8); theme describing the condition of a wife preparing to immolate herself, in an evening, on the funeral pyre of her deceased husband.

[மாலை + நிலை]

மாலைநுழைஞ்சான் *mālai-nuḻaiñcāṉ,* பெ.(n.) மாலையில் மணல் தரையில் தங்குவதும் கரியவுடலும் வெண்மார்பு முடையதுமான குருவி வகை (வின்.); a dark white-breasted little bird which nestles in the sand at dusk.

[மாலை + நுழைஞ்சான்]



மாலைநேரம் *mālai-nēram,* பெ.(n.) அந்தி வேளை (வின்.); evening.

[மாலை + நேரம்]

மாலைப்படிகம் *mālai-ṭp-paḍigam,* பெ.(n.) பளிங்கு (யாழ்.அக.); crystal.

[மாலை + படிகம்]

மாலைப்பண் *mālai-p-paṉ,* பெ.(n.) அந்திக்குரிய பண்; melody type suited to the evenings.

[மாலை + பண்.]

மாலைப்பதநீர் *mālai-p-padanīr,* பெ.(n.) மாலையிலிறக்கிய பதநீர் (வின்.); sweet toddy fresh drawn in the evening.

[மாலை + பதநீர்.]

மாலைப்பதனி *mālai-p-padaṉi,* பெ.(n.) மாலைப்பதநீர் (வின்.) பார்க்க; see *mālai-p-padanīr.*

[மாலை + பதனி. பதநீர்→பதனி (இ.வ.)]

மாலைப்பொழுது *mālai-p-poḻudu,* பெ.(n.) அந்திப்பொழுது; evening time.

[மாலை + பொழுது]

மாலைப்பூத்தல் *mālai-p-pūttal,* பெ.(n.) மணக்காலம் நேருகை; arrival of the time of marriage.

[மாலை + பூத்தல்]

மாலைமசங்கல் *mālai-maśaṅgal,* பெ.(n.) மாலைமயங்குநேரம் (இ.வ.) பார்க்க; see *mālai-mayaṅgu-nēram.*

[மாலை + மசங்கல்.]

மாலைமசங்குநேரம் *mālai-maśaṅgu-nēram,* பெ.(n.) மாலைமயங்குநேரம் பார்க்க; see *mālai-mayaṅgu-nēram.*

[மாலைமயங்குநேரம்→மாலைமசங்குநேரம்]

மாலைமயங்குநேரம் *mālai-mayaṅgu-nēram,* பெ.(n.) அந்திக் காலத்து மங்கற் பொழுது (இ.வ.); dusk of evening.

[மாலை + மயங்கும் நேரம். மயங்குதல் = கலத்தல், கலங்குதல். பகலும் இரவும் கலக்கும் காலம்.]

மாலைமாடப்புரவி *mālai-māḍa-p-puravi,* பெ.(n.) குரங்கு; monkey (சா.அக.).

மாலைமாற்று[1] *mālai-māṟṟu,* பெ.(n.) மணமக்கள் தத்தம் கழுத்திலணிந்த மாலைகளை மாற்றிக் கொள்ளும் மணவினை; the ceremony of exchanging garlands by the bride and the bridegroom. 2. மணவிழாவில் மணமக்கள் ஒருவருக்கொருவர் மாறி மாறி மாலை யிடுதல்; to exchange garlands, as bridegroom and bride in a marriage.

[மாலை + மாற்று.]

மாலைமாற்று[2] *mālai-māṟṟu,* பெ.(n.) எழுத்துக்களை ஈறு முதலாகப் படிக்குமிடத்தும் பாட்டு மாறாமல் இருக்கும் மிறைக்கவி வகை (யாப்.வி.பக்.493); (Pros.) a kind of verse that remains identical when its letters are read in the reverse direction. *"திருமாலை மாற்று" (தேவா.123, தலைப்பு).*

[மாலை + மாற்று.]

மாலையணி[1]**–தல்** *mālai-y-aṇi-,* 2 செ.கு.வி. (v.i.) புணர்ச்சியின்பந் துய்த்தல்; to enjoy sexual pleasure, lit. to adorn with a garland. *"மாலையணிய விலைதந்தான்" (பரிபா.20, 79).*

[மாலை +அணி–.]

மாலையணி[2] *mālai-aṇi,* பெ.(n.) அணி வகை (சங்.அக.); a figure of speech.

[மாலை + அணி.]

மாலையந்தி *mālai-y-andi,* பெ.(n.) பகலும் இரவும் சந்திக்கும் அந்தி வேளை; evening twilight, dusk, dist. fr. *kālai-y-andi.* *"காலையந்தியும் மாலையந்தியும்" (புறநா. 34).*

[மாலை + அந்தி.]

மாலையாகாலம் *mālai-y-āgālam,* பெ.(n.) மாலையந்தி (யாழ்.அக.) பார்க்க; see *mālai-y-andi.*

[மாலை + ஆ + காலம்.]

மாலையிட்டவன் *mālai-y-iṭṭavaṉ,* பெ.(n.) கணவன் (கொ.வ.); husband, as one who garlanded his bride.

[மாலை + இட்டவன்.]

மாலையிட்டுப்பிறத்தல் *mālai-y-iṭṭa-p-piṟattal,* பெ.(n.) தொப்புள் கொடி குழந்தையின் கழுத்தில் சுற்றிப் பிறத்தல்; child born with the naval cord round the neck.

[மாலையிட்டு + பிறத்தல்.]

மாலையிடு-தல் *mālai-iḍu-,* 17 செ.குன்றாவி. (v.t.) மாலை சூட்டி மணத்தல்; to marry, as the bride garlanding the bridegroom. *"கரித்தோலையிட்டாடுந் தொழிலுடை யோனை முன்னாண் மாலையிட்டாயி தென்னே" (அருட்பா.1, வடிவுடை.13).*

[மாலை + இடு-.]

மாலையீடு *mālai-y-īḍu,* பெ.(n.) 1. மாலை சூட்டு பார்க்க; see *mālai-šūṭṭu.* *"மாலையீட்டுப் படலம்" (இரகு.).* 2. உடன் கட்டையேறியவளுக்கு எழுப்பிய நினைவுக் கட்டடம் (இலக்.வி.619); monument for wife who immolates herself in the funeral pyre of her deceased husband. 3. அரசர் முதலியவரின் நினைவுச் சின்னம் அமைந்த ஈமம்; cremation ground where monuments for deceased chiefs are erected (Rd).

[மாலையிடு→மாலையீடு.]

மாலையுவமை *mālai-y-uvamai,* பெ.(n.) பூமாலைபோல் உவமை பல ஒன்றற் கொன்று தொடர்புடையதாய் வரும் அணி வகை (தண்டி.30, 24); (Rhet) a figure of speech in which a number of similes are strung together, as resembling a garland.

[மாலை + உவமை.]

மாலைவடம் *mālai-vaḍam,* பெ.(n.) தேர் இழுத்தற்கான பெரிய வடக்கயிறு (இ.வ.); large, long rope for dragging a temple car. *"இந்தத் தேருக்கு மாலை வடம் இன்னும் பூட்டவில்லை" (உ.வ.).*

[மாலை + வடம்.]



மாலைவரச்செட்டி *mālaivara-c-ceṭṭi,* பெ.(n.) பல்லி; lizard (சா.அக.).

மாலைவன்னி *mālai-vaṉṉi,* பெ.(n.) அதி மதுரம் (சங்.அக.); liquorice plant.

மாலைவாங்கு–தல் *mālai-vāṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) பரிசங் கொடுத்தல்; to pay for sexual pleasure lit. to purchase a garland. *"மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென" (சிலப்.3 : 166).*

[மாலை + வாங்கு–.]

மாலைவாரம் *mālai-vāram,* பெ.(n.) அந்திப் பொழுது; evening time.

[மாலை + வாரம்.]

மாலைவெயில் *mālai-veyil,* பெ.(n.) அந்திப் பொழுதின் மஞ்சள் வெயில் (பதார்த்த.1297); yellow glow of the evening sun.

[மாலை + வெயில்]

மாலைவெள்ளி *mālai-veḷḷi,* பெ.(n.) அந்தியிற் றோன்றும் (சுக்கிரன்) வெள்ளி விண்மீன் (வின்.); venus, when it appears as the evening star.

[மாலை + வெள்ளி]

மாலோன் *mālōṉ,* பெ.(n.) 1. திருமால் (சூடா.); *visṇu. "அப்புரவலனு மாலோனெனி லவளுந் திருவாமெனில்" (தஞ்சைவா.366).* 2. இந்திரன் (சங்.அக.); *Indiraṉ.* 3. அறிவன் கோள் (சங்.அக.); the planet mercury.

[மால் →மாலோன்]

மாவகம் *māvagam,* பெ.(n.) 1. இலுப்பை; a long leaved bassia. 2. சுராலை (சாம்பிராணி); frakincense. 3. காஞ்சிரை; a tree yielding a very poisonous nut nuxvomica (சா.அக.).

மாவச்சிரம் *māva-c-ciram,* பெ.(n.) குங்கும மரம்; *european saffron.*

மாவட்டஆட்சியர் *māvaṭṭa-āṭciyar,* பெ.(n.) ஒரு மாவட்டத்தில் வரி தண்டுதல், ஆளுமை, சட்டம், ஒழுங்கு முதலியவற்றுக்கான முதன்மைப் பொறுப்பில் உள்ள உயர் அரசு அதிகாரி; highest official in the district for revenue collection law and order, development programmes, etc. district collector.

[மாவட்டம் + ஆட்சியர்]

மாவட்டணம் *māvaṭṭaṇam,* பெ.(n.) நெடும் பரிசை, பரிசுக்கேடயம் (பிங்.); long shield.

மாவட்டம்[1] *māvaṭṭam,* பெ.(n.) பெரு வட்டம்; long circle.

[மா= பெரிய. மா + வட்டம்]

மாவட்டம்[2] *māvaṭṭam,* பெ.(n.) ஆளுகைக் கெளிதாயிருக்கும் பொருட்டு மாநிலத்தின் பரப்பில் ஏற்படுத்திக் கொள்ளும் பிரிவு; district.

மாவட்டை *māvaṭai,* பெ.(n.) செவ்வட்டை (சங்.அக.); a species of leech.

[மா + அட்டை]

மாவடம் *māvaḍam,* பெ.(n.) மாம்பலகை (இ.வ.); mango plank.

[மா + வடம்.]

மாவடி *māvaḍi,* பெ.(n.) 1. மாவடு பார்க்க; see *māvaḍu.* 2. மாம்போழ் பார்க்க; see *mām-pōḷ. "மாவடி மடக்கண் மாதர்" (பெருங். மகத.25, 149).*

மாவடு *māvaḍu*, பெ.(n.) மாவின் பிஞ்சு; tender, unripe mango. *"மாவடு வகிரன்ன கண்ணி" (திருவாச.24, 8).*

[மா + வடு.]

மாவடை *māvaḍai*, பெ.(n.) 1. நிலத்திலடங்கிய விலங்குகள்; game found on the land conveyed, a term used in conveyancing. *"மாவடை மரவடை" (உ.வ.).* 2. சிற்றூரில் கால்நடை அடையும் இடம்; pen for village cattle (R.F.).

[மா + அடை. மா = விலங்கு.]

மாவடைகடமை *māvaḍai-kaḍamai*, பெ.(n.) கிராமத்தில் கால்நடைகள் அடையும் பொதுவிடத்திற்கான வரி; tax for cattle stall.

[மா + அடை + கடமை]

மாவடைமரவடை *māvaḍai-maravaḍai*, பெ.(n.) ஆவணங்களில் நிலத்திலடங்கிய விலங்கு மரங்களைக் குறிக்க வழங்கும் மரபுத் தொடர் (கோயிலொ.64); an expression used, in conveyancing to denote game and trees on the land conveyed.

[மாவடை+ மரவடை]

மாவண்டூர்சிங்கன் *māvaṇḍūr-šiṅgaṉ*, பெ.(n.) கம்பருக்கு எழுத்தாணி செய்து கொடுத்த கம்மியர்; a blacksmith who made a stylus for kambar.

[மாவண்டூர் - ஊர்ப்பெயர்; சிங்கன் - ஆள்பெயர்]

ஆழியான் ஆழி ஆயனெழுத் தாணி யென்பான்.
கோழியான் குன்றெறிய வேலென்பான் - பூழியான். அங்கை மழுவென்பான் அருள் பெரிய மாவண்டூர்ச் சிங்கன் உலைக்களத்திற் சென்று.

மாவணங்கி *māvaṇaṅgi*, பெ.(n.) குங்குமப்பூ; *crocus sativus* (சா.அக.).

மாவதம் *māvadam*, பெ.(n.) கரிசுகள் யாவும் விலகக் கைக்கொள்ளும் சூளி (அருங்கலச். 87); vow to abstain from all sins.

மாவதை *māvadai*, பெ.(n.) தேனற்ற தேன் கூடு (யாழ்.அக.); empty honey - comb.

மாவயிரக்கல் *māvayira-k-kal*, பெ.(n.) நிலத்தினடியில் அகப்படுங் மாழைப் பொருள் வகை; felspar (M.M.159).

மாவரி *māvari*, பெ.(n.) சல்லடை (யாழ்ப்.); sieve.

மாவலன் *māvalaṉ*, பெ.(n.) மாவலான் (சூடா.) பார்க்க; see *māvalāṉ*.

மாவலா *māvalā*, பெ.(n.) கடல் மீன் வகை; a kind of sea fish.



மாவலான் *māvalāṉ*, பெ.(n.) 1. குதிரை யேற்றத்தில் வல்லவன்; one skilled in horsemanship. *"கைக்கொண்டான் மாவலான்" (பு.வெ.6, 24).* 2. குதிரைப் பாகன்;

groom. 3. யானைப் பாகன் (நிகண்டு); mahout.

[மா + வலான். மா = விலங்கின் பொதுப் பெயர், குதிரை. வல்லவன்→வலான்]

மாவலி *māvali,* பெ.(n.) 1. திருமாலால் ஒடுக்கப்பட்ட ஓர் அசுரன்; an asuran subdued by *Tirumāl.* "*மூரிவார் சிலை மாவலி" (மணிமே.19 : 54).* 2. தீப்பொறி சிதறும் கார்த்திகை வாண வகை (இ.வ.); a kind of home made fireworks, encased in cloth and throwing out sparks.

மாவலிக்கிழங்கு *māvali-k-kiḻaṅgu,* பெ.(n.) மாகாளிக்கிழங்கு (பதார்த்த.428) பார்க்க; see *māgāḷi-k-kiḻaṅgu.*

மாவலிகங்கை *māvali-gaṅgai,* பெ.(n.) ஈழத்திலுள்ள பேராறு (திருவாலவா.25, 12); a large river in Ceylon.

மாவலிபுரம் *māvalipuram,* பெ.(n.) மாமல்லபுரம் பார்க்க; see *māmallapuram.*

மாவலிவாணன் *māvali-vāṇaṉ,* பெ.(n.) 1. மாவலியின் மரபினராய்க் கருதப்படும் தமிழ்நாட்டுச் சிற்றரசு பரம்பரை; a dynasty of ruling chiefs in Tamil country, said to be the descendants of *māvali.* "*வையமொரு கோலாற் புரந்தருண் மாவலி வாணன்" (S.I.I.iv.98).* 2. பெருந் தீனிக்காரன் (நாஞ்.); glutton. "*அவன் மாவலி வாணன் அப்பம் ஆயிரமானாலும் ஒரு நொடியில் தீர்த்துவிடுவான்" (நாஞ்.).*

மாவளத்தான் *māvaḷattāṉ,* பெ.(n.) சோழன் நலங்கிள்ளியின் தம்பி; younger brother of *Cōḻaṉ Nalaṅgiḷḷi.* "*சோழன் நலங்கிள்ளி தம்பி மாவலித்தாறும் தாமப்பல் கண்ணனும் வட்டுப் பொருவுழி" (புறநா.43).*

மாவளவன் *māvaḷavaṉ,* பெ.(n.) மருத்துவர் தாமோதரனாரால் பாடப் பெற்ற சோழ மன்னன் (சி.பெ.அக.); a *Cōḷa* king praised by the poet *Maruttuvaṉ Dāmodaranār.*

மாவாகம் *māvāgam,* பெ.(n.) மாவகம், 3 பார்க்க; see *māvagam.*

மாவாட்டு[1]-தல் *māvāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) மாவாக ஆகும்படி அரைத்தல்; grind to paste.

[மா + ஆட்டு-, மா = மாவு.]

மாவாட்டு[2]-தல் *māvāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) செய்த செயலையே திரும்பத் திரும்பச் செய்து காலம் போக்குதல்; repeat the same action to delay the things.

[மாவு + ஆட்டு-.]

மாவாட்டுதலைப் போலச் செய்ததையே திரும்ப திரும்பச் செய்தல்.

மாவிசாலி *māvi-šāli,* பெ.(n.) பாசிப்பயறு; a variety of green gram (சா.அக.).

மாவிஞ்சி *mā-v-iñji,* பெ.(n.) மாங்காயைப் போல் மணமுடைய ஒரு வகை இஞ்சி; ginger smelling like mango, mango - ginger.

[மா + இஞ்சி]

மாவிட்டம் *māviṭṭam,* பெ.(n.) கடனுரை (சங்.அக.); cuttle - bone.

மாவிடக்கட்டி *māviḍa-k-kaṭṭi,* பெ.(n.) காட்டு மருக்கொழுந்து; wild variety of maid's loue (சா.அக.).

மாவிடை[1] *māviḍai*, பெ.(n.) மாவடை பார்க்க; see *māvaḍai*.

மாவிடை[2] *māviḍai*, பெ.(n.) மரச்செறிவு; grove.

மாவிடைமரவிடை *māviḍai-maraviḍai*, பெ.(n.) மாவடைமரவடை பார்க்க; see *māvaḍai-maravaḍai*(w.G.).

[மாவடைமரவடை → மாவிடைமரவிடை]

மாவிதை *māvidai*, பெ.(n.) மாம் பருப்பு; seed or kernel of mango fruit which can used as astringent.

[மா + விதை. மா = மாமரம்]

மாவிப்பட்டை *māvi-p-paṭṭai*, பெ.(n.) மாவிலிங்கமரப் பட்டை (சங்.அக.); bark of *liṅgam* tree.

மாவியம் *māviyam*, பெ.(n.) பற்பம்; calcined medicinal powder (சா.அக.).

மாவிரதம் *māviradam*, பெ.(n.) 1. சிவனிய மதத்தின் உட்பிரிவு (பிங்.); a sect of saivaism. *"வந்தணைந்த மாவிரத முனிவரைக் கண்டு" (பெரியபு.மானக்கஞ். 26).* 2. மாவதம் பார்க்க; see *mā-vadam*.

மாவிருக்கம் *mävirukkam*, பெ.(n.) சதுரக் கள்ளி (மலை.); squar spurge.

மாவிலங்கு[1] *māvilaṅgu*, பெ.(n.) ஒரு வகை மரம்; a kind of tree.

இதன் பட்டை, வேர் ஆகிய பகுதிகள் மருத்துவக் குணமுடையது.

மாவிலங்கு[2] *māvilaṅgu*, பெ.(n.) மாவிலிங்கம் (நாமதீப.327) பார்க்க; see *mā-v-iliṅgam*.

மாவிலங்கை *māvilaṅgai*, பெ.(n.) அருவா நாடும், அருவா வடதலைநாடும் சேரும் இடத்தில் இருந்த ஒய்மாநாட்டு நல்லியக் கோடன் ஊர்; place of *Oymānāṭṭu Nalliyakkōḍaṉ*, located between *Aruvā Nadu* & *Aruvā vadatalai nāḍu*. *"பொருபுனல் தரூஉம் போக்கருமரபின் தொன்மாவிலங்கைக் கருவொடு பெயரிய நன்மா விலங்கை மன்னருள்ளும்" (சிறுபா. 120).*

மாவிலங்கை[2] *māvilaṅgai*, பெ.(n.) மாவிலங்கம்[2] (சங்.அக.) பார்க்க; see *māvilaṅgam*.

மாவிலந்தம் *māvilandam*, பெ.(n.) விடத்தேர் (மலை.); a thorny tree.

மாவிலி *mävili*, பெ.(n.) மாவுலிங்கம்; a tree- *Crataevanutvala*.

மாவிலிங்கப்பட்டை *māviliṅga-p-paṭṭai*, பெ.(n.) அரைத்து மோரில், கலந்து குடித்தால் மேகம், கல்லடைப்பு போன்ற நோய்களை நீக்கும் தன்மையுடைய மரப்பட்டை; bark of the tapia it taken with butter milk stone in the bladder, megam will disappear (சா.அக.).

[மாவிலிங்கம் + பட்டை.]

மாவிலிங்கம் *māviliṅgam*, பெ.(n.) 1. மர வகை; round - *berried cuspidate*-leaved lingam tree. 2. பெரியமாவிலங்கம் பார்க்க; see *periya-māvilaṅgam*. 3. மகாலிங்கம் பார்க்க; see *magāliṅgam*.

மாவிலிங்கு *māviliṅgu*, பெ.(n.) மாவி லிகங்கம் பார்க்க; see *māviliṅgam*.

மாவிலிங்கை *māviliṅgai*, பெ.(n.) மாவி லிங்கம்[2] பார்க்க; see *māviliṅgam*.

மாவிலுப்பைத்தோணி *māviluppai-t-tōṇi*, பெ.(n.) இலுப்பை மரத்தில் செய்யப்பட்ட பெருந்தோணி; a boat made up of illuppai tree.

[மா + இலுப்பை + தோணி.]

மாவிலைத்தண்டு *māvilai-t-taṇḍu*, பெ.(n.) வாசல் நிலைக்கால் சட்டத்தில் மாவிலைத் தண்டு போன்று செதுக்கப்படும் ஓவியம்; a sculpture of mango leaves engrave in door-frame entrance.

[மா + இலை + தண்டு.]

மாவிலைத்தோரணம் *māvilai-t-tōraṇam*, பெ.(n.) மங்கலமாக வீடு முதலியவற்றின் முகப்பில் மாவிலையாற் கட்டுந்தோரணம் (இ.வ.); festoon of mango leaves hung over the door of a house, temple etc., as a sign of auspiciousness.

[மா = மாமரம் . மா + இலை = மாவிலை. மாவிலை + தோரணம்.]



மாவிளக்கு *māviḷakku*, பெ.(n.) திருக் கோயில் முன்பு சருக்கரை சேர்த்துப் பிசைந்த மாவில் அகல் போலும் குழி செய்து அதில் நெய்யூற்றிப் பஞ்சுத் திரியிட்டு ஏற்றுந் திருவிளக்கு (இ.வ.); flour, light lamp made of sugared dough with cotten wick, fed with ghee and placed in the presence of a deity.

[மா + விளக்கு. மா = மாவு.]

மாவிளக்குமா *māviḷakkumā*, பெ.(n.) மாவிளக்கேற்ற உதவும் மாவகை (இ.வ.); dough used for *mā-viḷakku*.

[மாவிளக்கு + மா. மா = மாவு.]

மாவிளம் *māviḷam*, பெ.(n.) 1. வில்வம் (பிங்.); bael tree-*Aegle marmelos*. 2. மாம்பருப்பு; kernel or seed of mango fruit.

மாவிறை *māviṟai*, பெ.(n.) ஊர்களிலும் நெடுஞ்சாலைளிலும் அரசு அமைக்கும் குதிரை கொட்டடி போன்ற கட்டுத்தறிகட்கு அரசு பெறும் வரி; tax on cattle stall, horse-stable on highways and villages.

[மா = விலங்கு, குதிரை.]

மாவீதல் *mā-vīdal*, பெ.(n.) நிலம் பங்கிடுகை (இ.வ.); apportionment of land.

[மா + ஈதல். மா = நிலம்.]

மாவீர்க்கு *māvīrkku*, பெ.(n.) மாவிலையின் நடுத்தண்டு; the mid rib mango leaf.

[மா + ஈர்க்கு.]

மாவீரன்[1] *māvīraṉ*, பெ.(n.) பெருவீரன்; great warrior.

[மா + வீரன்.]

மாவீரன்[2] *māvīraṉ*, பெ.(n.) சிவன்; *Śivaṉ*.

மாவு[1] *māvu*, பெ.(n.) 1. அரிசி முதலியவற்றின் அரைத்த தூள்; flour, meal, powder. 2. மேற்படியும் நுண்தூசி, துகள்; dust.

மாவு² *māvu,*பெ.(n.) மா⁶ பார்க்க; see *mā⁶.*

மாவுக்கல் *māvu-k-kal,*பெ.(n.) ஒருவகை மென்மையானக் கல்; soft stone used for making vessels etc.

[மாவு + கல்.]

மாவுக்காய் *māvu-k-kāy,*பெ.(n.) மாவகம், 3 பார்க்க (இ.வ.); see *māvagam.*

மாவுச்சத்து *māvu-c-cattu,*பெ.(n.) அரிசி, கோதுமை, சோளம், உருளைக் கிழங்கு முதலியவற்றில் உள்ளதும் உடல் உழைப்புக்குத் தேவையான ஊட்டத்தைத் தருவதுமான மாவூட்டப் பொருள்; carbohydrate, starch.

[மாவு + சத்து.]

மாவுச்சுக்கு *māvu-c-cukku,* பெ.(n.) மாவைப்போல் மெல்லிய ஒரு வகைச் சுக்கு; dry ginger which has not much of fibre (சா.அக.).

[மாவு + சுக்கு.]

மாவுப்பு *māvuppu,*பெ.(n.) தலைமுடியுப்பு; a kind of salt extracted from the human skull (சா.அக.).

மாவுரம் *māvuram,*பெ.(n.) வலிமை; strength.

[மா + உரம்.]

மாவுலாச்சி *māvulācci,* பெ.(n.) மாவுளாச்சி (இ.வ.) பார்க்க; see *māvuḷācci.*

மாவுலாசி *māvu-lāśi,*பெ.(n.) மாவுளாச்சி (இ.வ.) பார்க்க; see *māvuḷācci.*

மாவுளாச்சி *māvuḷācci,*பெ.(n.) நீலநிற முடையதும் 4 அடி நீளம் வளர்வதுமான கடல் மீன் வகை; a sea fish bluish, attaining 4 ft. in length.



மாவெனல் *mäveṉal,*பெ.(n.) அழைத்தற் குறிப்பு (பிங்.); onom. expr. signifying calling.

[மா + எனல்.]

மாழ்கி *māḻgi,*பெ.(n.) தொட்டாற் சுருங்கி எனுஞ்செடி; a sensitive plant. *"யாதினு மாழ்குமம் மாழ்கியும்" (நீலகேசி, 365).*

மாழ்கு¹-தல் *māḻgu-,*7 செ.கு.வி.(v.i.) 1. மயங்குதல்; to be bewildered, to be fascinated. *"குழறி மாழ்கி" (கம்பரா. மாரீசன்வதை.237).* 2. கெடுதல்; to be spoiled or lost. *"ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை" (குறள், 653).* 3. சோம்புதல் (திவா.); to grow lazy. 4. கலத்தல் (வின்.); to mingle, to hold, intercourse. 5. மூழ்குதல், மாய்தல்; to be engrossed.

க. மாழ்கு.

[முல் (பொருந்தற் கருத்துவேர்)→முள்→மள் → மள்கு→மள்குதல் = ஒளி குறைதல். மள்கு → மாள்கு→மாழ்கு (வே.க.4:60).]

மாழ்கு[2] *māḻgu*,பெ.(n.) சுருள்; curl. *"அட்டை முதலாயினவும் மாழ்கு நீங்கினாற் காரணமின்றி முன்பு போலேயாம்" (நீலகேசி, 365, உரை).*

மாழ்கு[3] *māḻgu*,பெ.(n.) ஐந்தாம் நாண்மீன் (பிங்.); the fifth naksatra.

மாழா-த்தல் *māḻā-*, 4 செ.கு.வி.(v.i.) 1. மயங்குதல்; to be fascinated, to be confused, be wildered. *"மனங்கவில் பின்றி மாழாந் தெழுந்து" (பொருந.91).* 2. ஒளி மங்குதல்; to fade, to become dim. *"நாண்மதியே... மாழாந்து தேம்புதியால்" (திவ்.திருவாய்.2, 1, 6).*

[மாழ்கு →மாழா-, (வே.க.4:60)]

மாழாம்பலம் *māḻāmbalam*,பெ.(n.) தூக்கம் (அக.நி.); sleep.

[மாழா →மாழாம்பலம் (வே.க.4:61).]

மாழை[1] *māḻai*,பெ.(n.) 1. இளமை; youth. *"மாழை மடமான் பிணையியல் வென்றாய்" (கலித்.131).* 2. அழகு; beauty. *"மாழை நோக்கொன்றும் வாட்டேன்மினே" (திவ். திருவாய். 2, 4, 10).* 3. பேதைமை; innocence, ignorance. *"மாழை மென்னோக்கி" (திருக்கோ.61).* 4. மாமரம் (பிங்.); mango. *"மாழை யிளந்தளிரே" (கம்பரா. வரைக்காட்சி. 55).* 5. மாவடு; green tender mango fruit. *"மாழை யொண்கண் பரவை" (தேவா.740, 10).* 6. புளிமா (பிங்.); Indian hog plum. 7. மகளிர்க்கூட்டம் (அக.நி.); assembly of women. 8. ஓலை (பிங்.); palm leaf.

[முள்→மள்→மள்ளன் = இளைஞன். மள்→மள →மழ - இளமை (வே.க.4-5) மழ (மாழ)→மாழை.]

மாழை[2] *māḻai*,பெ.(n.) 1. மாழை (உலோக)க் கட்டி (பிங்.); lump of metal. *"கனகமாழையால்" (சீவக.913).* 2. பொன் (பிங்.); gold. *"உருகி மாழையும் வெள்ளியும்" (தணிகைப்பு. சீரி.374).* 3. திரட்சி (பிங்.); roundness.

[முல் (பொருந்தற் கருத்துவேர்) →மல். மல் = பருமை, வளம், வலிமை, மற்போர், மல்லன். பல அணுக்கள் அல்லது உறுப்புகள் அல்லது பொருள்கள் பொருந்துவதால் (ஒன்று சேர்வதால்) திரட்சி அல்லது பருமை உண்டாகும். ஓ.நோ.சேரே திரட்சி (தொல்.25-65) மிகுதியால் வளமும் பருமையால் வலிமையும் உண்டாகும். இருவர் அல்லது இருபடைகள் பொருந்தி அல்லது கூடிப் பொருவதே போர். மல்→மால் = பெருமை, பெருமையுடையவர், வளமை, மலை. மால் →மாள்→மாழை (வே.க.4:31).

மாள்(ளு)-தல் *māḷ-*,16 செ.கு.வி.(v.i.) 1. சாதல்; to die. *"வஞ்சமுண்மையேன் மாண்டிலேன்" (திருவாச.5, 93).* 2. அழிதல்; to perish. *"அனுபவித்தாலும் மாளாதபடியான பாபங்கள்" (ஈடு.4:7, 3).* 3. கழிதல்; to be exhausted, expended or finished. *"மாளாவின்ப வெள்ளம்" (திவ்.திருவாய்.4, 7, 2).* 4. இயலுதல்; to be within one's ability. *"அது செய்ய மாளாது" (உ.வ.).*

க. மாள்; ம. மாள்குக.

[முல் (பொருந்தற் கருத்துவேர்)→முள்→மள் →மள்கு→மட்கு. மட்குதல் = மயங்குதல், ஒளி மயங்குதல், அழுக்கடைதல், வலி குன்றுதல். மள்கு→ மாள்கு→மாழ்கு = கலத்தல், மயங்குதல், சோம்புதல், மங்குதல், கெடுதல். மாள்கு→மாள் (வே.க.4:61).]

மாள *māḷa*, இடை.(part.) ஒரு முன்னிலையசை (தொல்.சொல்.298, உரை); an expletive used with verbs in second person.

மாளசப்பிளவை *māḷaša-p-piḷavai*, பெ.(n.) ஆறாத பிளவை; conhealing (சா.அக.).

மாளவம் *māḷavam*, பெ.(n.) பண்டிருந்த ஐம்பத்தாறு நாடுகளுள் ஒன்று; the country of *Malwa* one of 56, (q.v). *"வான் குளம்புடையன மாளவத் தகத்த" (சீவக.2159).*

மாளவி *māḷavi*, பெ.(n.) ஒரு பண் (பரத. இராக.56); a specific melody - type.

மாளிகை[1] *māḷigai*, பெ.(n.) மாடி வீட்டின் மேல் நிலம் (திவ்.பெரியாழ்.2, 7, 3, வ்யா, பக்.393); top floor of a storied building.

[மால்→மாள்→மாளிகை.]

மாளிகை[2] *māḷigai*, பெ.(n.) 1. அரண்மனை (பிங்.); palace. 2. கோயில்; temple. *"உத்த ரகோசமங்கை... மாளிகை பாடி" (திருவாச.16, 3).* 3. மாடமுள்ள பெருவீடு (பிங்.); mansion. *"மறையவர்க்கு மாளிகைகள் பல சமைத்தார்" (பெரியபு.கோச்செங்.16).* 4. வீடு (உரி.நி.); house.

[முல் (பொருந்தற் கருத்துவேர்)→மல்→மால் = பெருமை, பெருமையுடையவன், வளமை, மலை. மாலுதல் = மாட்சிப்படுதல். மால் →மாள்→மாளிகை (வே.க.4:30). வ. மாளிகா. வடவர் மாலிமா என்னுஞ் சொல்லை மாலா என்பதனொடு தொடர்புபடுத்தி மேன்மாடியுள்ள வீடு என்று பொருளுரைப்பர். மலரடுக்குப் போன்ற மாடியடுக்கு என்பது அவர் கருத்துப் போலும். "a white washed upper, storied house" என்னும் பொருளை மோனியர் வில்லியம்சு அகரமுதலி எங்ஙனம் பெற்றதோ அறிகிலம் (வ.வ.64).]

மாளிகைக்கோல் *māḷigai-k-kōl*, பெ.(n.) நீட்டலளவைக் கருவி வகை; (L.M.P. Tp.726); a measuring rod.

[மாளிகை + கோல்.]

மாளிகைச்சாந்து *māḷigai-c-cāndu*, பெ.(n.) உயர்ந்த கலவைச் சந்தனம்; scented sandal paste of superior quality. *"இவள் ஆதரித்துச் சாத்தின மாளிகைச் சாந்தை" (திவ்.திருப்பல்.8, வியா.).*

[மாளிகை + சாந்து (வே.க.4:30).]

மாளிகைநாயகம் *māḷigai-nāyagam*, பெ.(n.) அரண்மனை முறைமை (விசாரணை) மண்டபம் (S.I.I.iv, 336); the office of a seneschal or chamberlain.

[மாளிகை + நாயகம்.]

மாளிகைவாழ்பவன் *māḷigai-vāḻbavaṉ*, பெ.(n.) ஊர்க்குருவி; sparrow bird (சா.அக.).



மாளிமந்தம் *māḷi-mandam*, பெ.(n.) இந்துப்பு (சங்.அக.); rock salt.

மாளுவம் *māḷuvam,* பெ.(n.) மாளவம் பார்க்க; see *māḷuvam.* *"குடகக் கொங்கரு மாளுவ வேந்தரும்" (சிலப்.30: 159).*

[மாளவம் → மாளுவம்.]

மாளுளுவை *māḷuḷuvai,* பெ.(n.) கடல் மீன் வகை; a kind of sea fish.



மாளை *māḷai,* பெ.(n.) புளியம் பட்டை (சங்.அக.); bark of tamarind tree.

மாற்கடலன் *māṟ-kaḍalaṉ,* பெ.(n.) போரில் உயிர் நீத்த ஒரு வீரன்; name of a hero, who lost his life in a battle. *"வாணகோ முத்தரைசரு நாடு பாவிய மேற்கோவலூர் மேல் வந்து தஞ்சிற்றப் படிகளை எறிந்த ஞான்று பட்டான் சேவர்பரி அட்டுங் கொள்ளி துருமாவனார் மகன் மாற்கடலன்" (த.நா.தொ.1971/69).*

[மால் + கடல் + அன்.]

மாற்கண்டன் *māṟ-kaṇḍaṉ,* பெ.(n.) மார்க் கண்டன் பார்க்க; see *mār-k-kaṇḍaṉ.* *"மாற்கண்டன் கண்ட வகையே வரும்" (திவ்.இயற்.நான்மு.15).*

மாற்சாலம் *māṟ-šālam,* பெ.(n.) 1. கோமேதகம்; one of the nine gems. 2. பூனை; cat (சா.அக.).

மாற்சாலமோகினி *māṟ-šāla-mōgiṉi,* பெ.(n.) குப்பைமேனி; a plant (சா.அக.).

மாற்பித்தியார் *māṟ-pittiyār,* பெ.(n.) புறநா.251, 252 ஆகிய பாடல்களைப் பாடிய கழகக் காலப் புலவர்; sangam age poet with verses 251, 252 of Purananuru to his credit.

மாற்பேறு *māṟ-pēṟu,* பெ.(n.) வேலூர் மாவட்டத்தில் திருமால்பூர் என்று வழங்கும் ஊரின் முன்னைப் பெயர்; a town in velur Dt. with the present name *Tirumālpur.* *"செப்பரிய புகழ் பாலித் திருநதியின் தென்கரைபோய் மைப்பொலியும் கண்டர் திருமாற்பேறு மகிழ்ந்து இறைஞ்சி" (பெரியபு.34–1002). "மருவு கங்கை வாழ் சடையவர் மகிழ்ந்த மாற்பேறு" (பெரியபு.25–31–3–4).*

[மால் + பேறு.]

மாற்ற *māṟṟa,* இடை.(part.) ஒருவமைச் சொல் (தொல்.பொருள்.286); a term of comparison.

மாற்றம் *māṟṟam,* பெ.(n.) 1. மாறுபட்ட நிலை; diversity. *"மாற்றமாம் வையகத்தின்" (திருவாச.1, 81).* 2. வஞ்சின மொழி; word of challenge, vow. *"மாற்ற மாறான் மறவிய சினத்தன்" (புறநா.341).* 3. பகை; hatred, enmity. *"மாறுகொளுழுவையு மாற்றந் தீர்ந்தவே" (நைடத. காண்புகு.3).* 4. கடிவு (பரிகாரம்) (வின்.); remedy. 5. மாறி சொல்லும் விடை; answer. *"மாறுதலைக் கடாஅ மாற்றமும்" (தொல்.பொருள். 659).* 6. சொல்; word. *"விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான்" (குறள், 689).* 7. பேச்சு; speech. *"மாற்ற முரைக்கும் வினைநலம்" (நான்மணி.*

45). 8. தருக்கம்; logic, debate. *"மன்பெரியான் றிருந்தவையுண் மாற்றந் தாவெனச் சொன்னாள்" (நீலகேசி, 169).*

தெ. மாட; க. மாடு; ம. மாட்டம்.

[முள் (வளைதற் கருத்துவேர்) →முர்→ முரு→முரி. முரிதல் = வளைதல், வளைந்து ஒடிதல். முரு →முறு→முறுகு→முறுகுதல் = திருகுதல், விரைதல், முறு →மறு→மாறு. மாறுதல் = வேறுபடுதல், பின்வாங்குதல், குறைதல். மாறு→மாற்று = வேறுபடுத்துகை, ஒழிக்கை மாற்று மருந்து, பண்டமாற்று, விலை, மாற்றுடை, பொன்வெள்ளி உரைமாற்று, மாற்று நிறம், எதிர், ஒப்புமை, வலிமை, ஓரேர்மாடு ஒரு நாளில் உழக்கூடிய நிலம். மாற்று→மாற்றம் (வே.க.4:79).]

மாற்றமிலி *mā*r*r*a-mili,* பெ.(n.) வாய் வாளாயிருப்போன், பேசாதிருப்போன்; silent ascetic.

[மாற்றம் + இலி. மாற்றம் = சொல்.]

மாற்றரசன் *mārrarašan,* பெ.(n.) பகை வேந்தன்; hostile king. *"மாற்றரசர் மணிமுடியும்" (திவ்.பெரியதி.4, 4, 1).*

[மாற்று + அரசன். மாற்று = பகை.]

மாற்றல்[1] *mārral,* பெ.(n.) ஒரு பணியிடத்தி லிருந்து மற்றொரு பணியிடத்திற்கு அல்லது ஓர் அலுவலகத்தில் இருந்து மற்றொரு அலுவலகத்திற்குச் செல்லுதல்; transfer.

[மாற்று → மாற்றல்.]

மாற்றல்[2] *mārral,* பெ.(n.) கொடாமை (பிங்.); refusing to give.

மாற்றலர் *mārralar,* பெ.(n.) பகைவர்; enemies, foes. *"முனைமுகத்து மாற்றலர் சாய" (குறள், 749).*

[மாற்று = பகை. மாற்று →மாற்றலர்.]

மாற்றவள் *mārraval,* பெ.(n.) மாற்றாள் பார்க்க; see *mārrāl. "மாற்றவளைக் கண்டக்கா லழலாதோ மனமென்றாள்" (கம்பரா.சூர்ப்ப.122).*

[மாற்றாள்→மாற்றவள்.]

மாற்றவன்[1] *mārravan,* பெ.(n.) உடன் கிழவன் (யாழ்.அக.); rival lover.

[மாற்று→மாற்றவன்.]

மாற்றவன்[2] *mārravan,* பெ.(n.) மாற்றான், 1 பார்க்க; see *mārrān. "மாற்றவற் காகிவந்து" (கம்பரா.வாலிவ.19).*

[மாற்றான் →மாற்றவன்.]

மாற்றற்சுரம் *mārrar-šuram,* பெ.(n.) முறை சுரம்; intermittent fever.

[மாற்று →மாற்றல் + சுரம்.]

மாற்றாஞ்சகோதரன் *mārrāñ-šagōdaran,* பெ.(n.) மாற்றாந்தாய்மகன் (இ.வ.); step brother, step mother's son.

மாற்றாட்டி *mārrātti,* பெ.(n.) மாற்றாள் பார்க்க; see *mārrāl. "அந்த மாற்றாட்டிக் கன்பாய்" (உத்தரரா.இலவண.4).*

[மாற்றாள் →மாற்றாட்டி.]

மாற்றாடிச்சி *mārrādicci,* பெ.(n.) மாற்றாள் (யாழ்.அக.) பார்க்க; see *mārrāl.*

மாற்றாண்மை *mārrānmai,* பெ.(n.) பகைமை; enmity, hatred. *"மாற்றாண்மை நிற்றியோ வாழி கனையிருளே" (திவ். திருவாய்.2, 1, 7).*

[மாறு→மாற்று→மாற்றாண்மை.]

மாற்றாந்தகப்பன் *mā̠r̠r̠ān-tagappan̠,* பெ.(n.) தன் தந்தைக்குப் பின் தாயை மறுமணஞ் செய்து கொண்டதால் தகப்பனாகக் கருதப்படுபவன்; step father.

[மாறு→மாற்று→மாற்றாம் + தகப்பன்.]

மாற்றாந்தாய் *mā̠r̠r̠āntāy,* பெ.(n.) தன் தந்தையின் மறுதாரம் (கொ.வ.); step mother.

[மாறு→மாற்று→மாற்றாம் + தாய்.]

மாற்றாந்தாய்மனப்பான்மை *mā̠r̠r̠āntāy-man̠a-p-pān̠mai,* பெ.(n.) சமமாகக் கருதி நடத்தப்பட வேண்டியவர்களில் தான் விரும்பியவருக்கு மட்டும் எல்லாச் சலுகையும் அளித்து விரும்பாதவரை முற்றாக ஒதுக்கும் போக்கு, ஒருதலையான நடத்தை; stepmotherly attitude, partiality.

[மாற்றாந்தாய் + மனப்பான்மை.]

மாற்றாள்[1] *mā̠r̠r̠āḷ,* பெ.(n.) உடன்கிழத்தி; co-wife, rival wife. *"மாலதி மாற்றாண் மகவுக்குப் பாலளிக்க" (சிலப்.9:5).*

[மாற்று→மாற்றாள்.]

மாற்றாள்[2] *mā̠r̠r̠āḷ,* பெ.(n.) 1. ஒரு ஆளுக்கு மாற்றாக நிறுத்தப்படும் ஆள்; install another man as spare. 2. சுழற்சி முறைப் பணியில் ஒருவரை விடுவிக்க வரும் அடுத்த ஆள்; reliever.

[மாற்று + ஆள்.]

மாற்றான் *mā̠r̠r̠ān̠,* பெ.(n.) 1. பகைவன்; enemy. *"தன்வலியு மாற்றான் வலியும்" (குறள், 471). "மாற்றானுக்கு இடம் கொடேல்" (நீதிநூல். ஆத்திச்சூடி).* 2. ஒட்டுப் பலகை; a piece of wood, joined to a board of insufficient length. 3. மாற்று மருந்து (நாஞ்.); antidote, neutra liusing agent. *"எட்டிக்கு மாற்றான் நவ்வல்". "மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்" (உலக நீதி.3).*

[மாற்று = பகை. மாற்று→மாற்றான்.]

மாற்றிலக்கம் *mā̠r̠r̠ilakkam,* பெ.(n.) கணக்கு வகை; logarithm.

[மாற்று + இலக்கம்.]

மாற்று[1]-தல் *mā̠r̠r̠u-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. வேறுபடுத்துதல்; to change, alter. *"பிறப்பு மாற்றினை" (கம்பரா.வீடண.8).* 2. செம்மைப்படுத்துதல் (வின்.); to rectify, convert, cure, set right. 3. நீக்குதல்; to dispel, relieve, remove. *"அப்பசியை மாற்றுவார்" (குறள், 225).* 4. கெடுத்தல் (வின்.); to derange, change or alter for the worse. 5. ஓடச் செய்தல்; to repel, expel. *"வில்லோர் மாற்றி" (ஐங்குறு. 267).* 6. தடுத்தல்; to hinder, prevent. *"மாற்றருங் கூற்றம்" (தொல்.பொருள்.79).* 7. மறுத்துரைத்தல்; to deny, refuse. *"உள்ளதின் றென்று மாற்றலன்" (கம்பரா. பள்ளியடை.113).* 8. அழித்தல்; to destroy, to cancel, repeal. *"புலிபடைத் தளித்து மாற்றி" (கந்தபு.யுத்தகாண்.ஏமகூ..1).* 9. ஒடுக்குதல் (வின்.); to cause involution, reduce the universe to its primitive elements. 10. மறைத்தல்; to conceal, hide. *"பூழிமாலை தள்ளருஞ் சுடர்கண் மாற்றி" (கந்தபு. யுத்தகாண். ஏமகூ.22).* 11. நாணயம் மாற்றுதல்; to change, as money. 12. பண்ட மாற்றுதல்; to exchange, barter, traffic, trade. 13. இருப்பிட வேறுபடுத்துதல்; to shift, to transfer, as from a place. *அவன் வீட்டை மாற்றிவிட்டான் (உ.வ.).*

14. (மாலியம்) ஓரிடத்துச் சமைத்த வுணவை வேற்றிடத்துக்கு அனுப்புதல்; to send food from one place to another (vaisn). 15. பெருக்கிச் சுத்தஞ் செய்தல் (வின்.); to sweap, cleanse, as a house. *"நுண்டுகளோடு சுண்ண மாற்றுதி" (கந்தபு. அரசுசெய்.7).*

[மாறு→மாற்று (வே.க.4:78).]

மாற்று²–தல் *mārru-,* 5 செ.கு.வி.(v.i.) 1. இடைவிடுதல்; to be interrupted. *"மாற்றாதே பால் சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்" (திவ்.திருப்பா.21).* 2. ஒழிதல்; to fail, as rains. *"வறந்தெற மாற்றிய வானமும்" (கலித்.146).* 3. சுணங்குதல் (வின்.); to detain.

[மாறு →மாற்று–.]

மாற்று³ *mārru,*பெ.(n.) 1. வேறுபடுத்துகை; changing. 2. ஒழிக்கை; removal, destruction. *"மாற்றே மாற்றலிலையே" (பரிபா.4, 53).* 3. மாற்றுமருந்து பார்க்க; see *mārru-marundu.* 4. பண்டமாற்று; barter-exchange, sale. 5. விலை (யாழ்.அக.); price. 6. வண்ணான் வெளுத்த உருப்படி (இ.வ.); clothes freshly washed by washerman. 7. சிறப்பு செய் காலங்களில் பந்தல் நடைபாவாடை முதலியவற்றுக்காக ஊரார் பயன்படுத்த வண்ணானாற் கொடுக்கப்படும் துணிகள் (இ.வ.); clothes supplied by washerman to villagers, to be used by them for pandal, etc. on auspicious or inauspicious occasions. 8. மாற்றுப்புடவை (இ.வ.) பார்க்க; see *mārru-p-pudavai.* 9. பொன் வெள்ளிகளின் உரைமாற்று; degree of fineness of gold or silver, as indicated the touchstone. *"மாற்றளவற்ற பொன்னுடுத்தாய்" (அஷ்டப். அழகரந்.2).* 10. தங்கம் (சங்.அக.); gold. 11. ஓரணை மாடு ஒரு நாளில் உழும் நிலம் (வின்.); measure of land as much as a yoke of oxen can plough in a day. 12. எதிர் (யாழ்.அக.); rival. 13. உவமை; similarity, resemblance. *"மாற்றிரி யாடிப் பாவையோடு" (ஞானா.6, 20).* 14. வலிமை; strength, power. *"மாற்றாரை மாற்றழிக்க வல்லானை" (திவ்.திருப்பா.15).* 15. வண்ணம் (ஈடு.4, 3, 7, ஜீ); colour.

[முல் (வளைந்தற் கருத்து வேர்)→முர்→முரு→ முரி. முரிதல் = வளைதல், வளைந்து ஒடிதல். முரு→ முறு→முறுகு→முறுகுதல் = திருகுதல், விரைதல் .முறு →மறு→மாறு→மாறுதல் = வேறுபடுதல், பின் வாங்குதல், குறைதல். மாறு→மாற்று (வே.க.4:78).]

மாற்றுஒற்றையர்ஆட்டம் *mārru-orrāiyar-āttam,*பெ.(n.) விளையாட்டுப் போட்டிகளில் ஒருவர் விளையாடிய பின் மீண்டும் மற்றொருவருடன் விளையாடும் போட்டி; reverse singles.

[மாற்று + ஒற்றையர் + ஆட்டம்.]

மாற்றுக்கட்டுச்சாகுபடி *mārru-k-kattu-c-cāgubadi,*பெ.(n.) ஒரு ஆண்டு விட்டு மறு ஆண்டு வேளாண்மை செய்யும் முறை (இ.வ.); cultivation in alternate years.

[மாற்று + கட்டு + சாகுபடி.]

மாற்றுக்கட்டை *mārru-k-kattai,*பெ.(n.) 1. பொன் முதலியவற்றின் தாழ்ந்த தரம்; inferiority in quality, as of gold. 2. கெட்ட நடத்தையுடையவ–ன்–ள் (இ.வ.); dissolute man or woman.

[மாற்று + கட்டை.]

மாற்றுக்கதை *māṟṟu-k-kadai,* பெ.(n.) எதிர் மாறாகச் சொல்லும் விடுகதை (வின்.); conundrum proposed in return.

[மாற்று + கதை.]

மாற்றுக்குறைச்சல் *māṟṟu-k-kuṟaiccal,* பெ.(n.) மாற்றுக்கட்டை, 1 பார்க்க; see *māṟṟu-k-kaṭṭai. "திருவாங்கோட்டு மின்னல் மாற்றுக் குறைச்சலென்றும்" (பணவிடு.137).*

[மாற்று + குறைச்சல்.]

மாற்றுக்கொடி *māṟṟu-k-koḍi,* பெ.(n.) மாற்றுக்கதை (வின்.) பார்க்க; see *māṟṟu-k-kadai.*

[மாற்று + கொடி.]

மாற்றுக்கொடு-த்தல் *māṟṟu-k-koḍu-,* 4 செ.கு.வி.(v.i.) பேற்றுக் காலங்களில் மாற்றுடையாகக் கொடுக்கப்படும் புடவை; to supply a change of clothes, commonly to womens in their confinement, etc.

[மாற்று + கொடு. மாற்று = உடை.]

மாற்றுடை *māṟṟuḍai,* பெ.(n.) 1. மாற்றி யுடுத்தும் ஆடை (வின்.); change of clothes. 2. விலையுயர்ந்த ஆடை (யாழ்.அக.); costly saree or garment.

[மாற்று + உடை.]

மாற்றுத்தாய் *māṟṟu-t-tāy,* பெ.(n.) மாற்றாந்தாய் பார்க்க; see *māṟṟān-tāy. "மாற்றுத்தாய் சென்று வனம்போகே யென்றிட" (திவ்.பெரியாழ்.3, 9, 4).*

[மாற்றாந்தாய் →மாற்றுத்தாய்.]

மாற்றுப்புடவை *māṟṟu-p-puḍavai,* பெ.(n.) மாற்றியுடுத்தும் புடவை; change of saree, spare saree.

[மாற்று + புடவை.]

மாற்றுதவி *māṟṟu-udavi,* பெ.(n.) கைம்மாறு; help rendered in return.

[மாற்று + உதவி.]

மாற்றுபகாரம் *māṟṟubakāram,* பெ.(n.) மாற்றுதவி பார்க்க; see *māṟṟu-udavi. "நின்னருள் நிகர்க்கு மாற்றுபகாரம்" (பெருங்.நரவாண.3, 143).*

[மாற்று + Skt. உபகாரம் > த. உதவி.]

மாற்றுமருந்து *māṟṟu-marundu,* பெ.(n.) கொடிய மருந்து நஞ்சு முதலியவற்றின் தன்மையை நீக்கக் கொடுக்கும் மருந்து (வின்.); antidote; medicine given to nullify the injurious effect of another medicine.

[மாற்று + மருந்து.]

மாற்றுமாலை *māṟṟu-mālai,* பெ.(n.) மாலை மாற்றில் பயன்படுத்தும் பூமாலை (இ.வ.); garland exchanged between the bridal pair.

[மாற்று + மாலை.]

மாற்றுமை *māṟṟumai,* பெ.(n.) மாறுபாடு; contrariety, diversity. *"மாற்றுமை கொண்ட வழி" (கலித்.12).*

[மாற்று →மாற்றுமை.]

மாற்றுயர்பொன் *māṟṟuyar-poṉ,* பெ.(n.) தங்கம்; gold (சா.அக.).

[மாற்று + உயர்பொன்.]

மாற்றுயர்வுவேதை *māṟṟuyarvu-vēdai,* பெ.(n.) பொன்னுக்குப் பழுப்பேற்றி மாற்றுயர்ந்த தங்கம் போலச் செய்யும் மருந்து; a device to increase the degree of fineness in gold (சா.அக.).

[மாற்றுயர்வு + வேதை.]

மாற்றுவேந்தன் *māṟṟu-vēndaṉ,* பெ.(n.) மாற்றரசன் பார்க்க; see *māṟṟarašaṉ.* *"மாற்றுவேந்தர் எயிற் புறத்து" (சிலப்.3 : 14, அரும்.உரை).*

[மாறு→மாற்று + வேந்தன். மாறு = பகை.]

மாற்றெண் *māṟṟeṉ,* பெ.(n.) மாற்றிலக்கம் பார்க்க; see *māṟṟilakkiyam.*

[மாற்று + எண்.]

மாற்றேர் *māṟṟēr,* பெ.(n.) தனக்குப் பிறனொருவன் விட்ட ஏருக்குப் பதிலாக விடும் ஏர்; ploulgh lent to a person in return for a loan of his plough.

[மாற்று + ஏர்.]

மாற்றேர்விடுதல் *māṟṟēr-viḍu-,* பெ.(n.) தனக்கு ஒருவன் ஏர் உதவி உழுது கொடுத்ததற்கு மாற்றாக அவன் நிலத்தைத் தன்னேர்விட்டு உழுது கொடுத்தல் (நாஞ்.); ploughing in exchange.

[மாற்றேர் + விடுதல்.]

மாற்றோர் *māṟṟōr,* பெ.(n.) பகைவர்; enemies, foes. *"மாற்றோர் கூற்றே" (திருமுரு.257). "மாற்றோ ரும்மிலர் கேளிரு மிலரெனும் வேற்றுமை யின்றது போற்றுநர்ப் பெறினே" (பரிபா.4:54–5).*

[மாறு→ மாற்று →மாற்றோர். மாறு = பகை.]

மாற்றோலைப்படு-தல் *māṟṟōlai-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) ஓர் அட்டவணையினின்றும் நீக்கி வேறோரட்டவணையிற் சேர்க்கப் பெறுதல்; to be transferred from one list to another. *"எம்மை மாற்றோலைப் பட்டவர் கூட்டத்து வைத்துக் கொள்கிற்றிரே" (திவ்.நாய்ச்.10, 2).*

[மாற்று + ஓலைப்படு-.]

மாறல் *māṟal,* பெ.(n.) மூலக்கரணியம் (வின்.); reason, cause.

[மாறு →மாறல் (வே.க.4:78).]

மாறல்சுரம் *māṟal-šuram,* பெ.(n.) காய்ச்சல் வகை (தஞ்சை.சர.11, 307); a kind of fever (சா.அக.).

[மாறு→மாறல் + சுரம்.]

மாறவச்சிரம் *māṟa-vacciram,* பெ.(n.) வஞ்சிரக்கல்; diamond (சா.அக.).

மாறவர்மன்அரிகேசரி *māṟa-varmaṉ-ari-kēšari,* பெ.(n.) சுந்தரபாண்டியன் என்ற பெயரில் அரசாண்ட பாண்டிய மன்னன்; a pandya king who ruled at Madurai with the title *Sundara Pāṇḍyaṉ.*

இவன் தந்தை சேந்தன் செழியன், கூன் பாண்டியன் என்று பெயரும் கூன் மாறிய பின் நின்ற சீர் நெடுமாறன் என்ற பெயரும் கொண்டவன். சமண சமயத்தைச் சேர்ந்தவன். தனக்கு வந்த வெப்பு நோயைத் தீர்க்க முடியாமையால், தனக்கு மருத்துவம் பார்த்த எண்ணாயிரம் என்ற ஊரைச் சேர்ந்த ஒரு சில சமணரைக் கழுவிலேற்றியவன். பின்னர் சமணத்தை மறந்து, ஞானசம்பந்தரின் வரவால் சைவ சமயத்தைத் தழுவியவன். அதற்கு உறுதுணையாக அவனது மனைவி சோழன் மகள் மங்கையர்க்கரசியும் அவனது அமைச்சர் குலச்சிறையாரும் இருந்தார்கள்.

மாறவர்மன்அவனிசூளாமணி *māṟavarmaṉ-avaṉi-šūḷāmaṇi,* பெ.(n.) பாண்டியன் கடுங்கோனுடைய மகன்; son of *Pāṇḍya Kaḍuṅgōṉ.*

மாறன்[1] *māṟaṉ,*பெ.(n.) 1. வலிய பாண்டியன்; *Pāṇḍiyaṉ*king. *"பூந்தார் மாற" (புறநா.55).* 2. சடத்திற்கு மாறான நம்மாழ்வார் (சடகோபன்); a *vaisṇava*saint.

[மாறு→மாறன் (வே.க.4:78).]

மாறன்[2] *māṟaṉ,*பெ.(n.) மாற்றான், 1 பார்க்க; see *māṟṟāṉ. "வல்வினைக்கோர் மாறன்" (திருவரங்கத்தந்.காப்.5).*

[மாறு→மாறன். மாறு = பகை.]

மாறன்எயினான் *māṟaṉ-eyiṉāṉ,*பெ.(n.) மாறன்காரி என்ற பாண்டிய அமைச்சரின் தம்பி (சி.பெ.அக.); brother of *Māraṉkāri,* a minister in *Paṇḍya* kingdom.

[மாறன் + எயினாள்.]

மாறன்காரி *māṟāṉ-kāri,* பெ.(n.) நெடுஞ் சடையன் பராந்தகனின் அமைச்சர்; a minister in the court of *Neduñjaḍayaṉ.*

மாறன்சடையன் *māṟaṉ-šaḍaiyaṉ,*பெ.(n.) வரகுண பாண்டியனின் வேறுபெயர்; other name of *Varaguṇa Pāṇḍiyaṉ.*

மாறன்பொறையனார் *māṟaṉ-poṟaiyaṉār,* பெ.(n.) பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றான ஐந்திணை ஐம்பது என்னும் நூலின் ஆசிரியர்; author of *Aindiṉai-Aymbadu* classified in *pathineṉ-kīḻkkaṇakku.*

மாறனகப்பொருள் *māṟaṉaga-p-perumāḷ,* பெ.(n.) திருக்குருகைப் பெருமாட்கவிராயர் இயற்றிய அகப் பொருணூல்; a treatise on *Agapporuḷ* by *Tiru-k-kurukkai-pperumaṭ-kavirāyar.*

[மாறன் + அகப்பொருள்.]

மாறனலங்காரம் *māṟaṉalaṅgāram,*பெ.(n.) கி.பி.1525இல் திருக்குருகைப் பெருமாட் கவிராயர் இயற்றிய அணி நூல்; a treatise on poetics by *Tiru-k-kurugai-p-permāṭ-kavirāyar,* written in 1525 A.D.

[மாறன் + அலங்காரம்.]

மாறனாடு *māṟa-nāḍu,*பெ.(n.) மாறை பார்க்க; see *māṟai.*

மாறாக *māṟāga,*வி.அ.(adj.) 1. எதிரான வகையில்; on the contrary. 2. எதிர்பார்த்தற்கு வேறான வகையில்; on different one.

[மாறு = எதிர். மாறு→மாறாக..]

மாறாசநீர் *māṟāša-nīr,*பெ.(n.) வடபுல நீர்; the water of the northern region (சா.அக.).

மாறாட்டம்[1] *māṟāṭṭam,*பெ.(n.) தவறு; error. *"பார்வை மாறாட்ட மின்றி" (மகாராசதுறவு.54).*

[மாறு →மாறாட்டம்.]

மாறாட்டம்[2] *māṟāṭṭam,*பெ.(n.) 1. மாற்றுகை; changing. 2. புரட்டு; fraud, trickery, cheating, swindling. 3. தடுமாற்றம்; stumbling, stuttering halting. 4. பித்து (வின்.); craziness, aberration of mind.

[மாறு + மாறாட்டம்.]

மாறாட்டு *māṟāṭṭu,* பெ.(n.) மாறாட்டம் பார்க்க; see *māṟāṭṭam.*

[மாறாட்டம் →மாறாட்டு.]

மாறாடி *māṟāḍi,* பெ.(n.) புரட்டன் (வின்.); cheat, swindler.

[மாறு→மாறாடி.]

மாறாடு[1]–தல் *māṟāḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. உருவம் முதலியன மாறுதல்; to change, vary, as from. *"ஒருவடி வுற்றது மாறாடுறுகாலை" (கம்பரா.முதற்போர்.179).* 2. தடுமாறுதல்; to waver in mind. *"மாறாடுதி பிண நெஞ்சே" (திருவாச.5, 32).* 3. மாறிப் புகுதல்; to change places with one another. *"விடலை யொடுநெஞ்சு மாறாடி" (பெருங். மகத.6, 76).*

[மாறு→மாறாடு–,]

மாறாடு[2]–தல் *māṟāḍu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. எதிர்த்து நிற்றல் (இ.வ.); to oppose. 2. புரட்டுதல் (வின்.); to derange, invert. *"அவன் அதை மாறாடப் பார்க்கிறான்" (உ.வ.).*

[மாறு →மாறாடு–,]

மாறாநீர் *māṟā-nīr,* பெ.(n.) கடல்; sea, ocean. *"மாறாநீர் வையக்கணி" (குறள், 707, மணக்.).*

மாறாப்பு *māṟāppu,* பெ.(n.) 1. முந்தானையைத் தோள்களில் மாறியிடுகை; throwing the upper garment across the shoulder, in dressing. 2. மாராப்பு, 1 பார்க்க; see *mārāppu.*

[மாராப்பு→மாறாப்பு.]

மாறாப்புணர்ச்சி *māṟā-p-puṇarcci,* பெ.(n.) இடைவிடாத நுகர்ச்சி; indulgence without interval.

[மாறா + புணர்ச்சி.]

மாறாப்புமாலை *māṟāppu-mālai,* பெ.(n.) தோள்களில் மாறிக் குறுக்காக இடும் மாலை (நெல்லை.); garland worn across the shoulders.

[மாறாப்பு + மாலை.]

மாறி *māṟi,* பெ.(n.) 1. பண்டமாற்றுவோன் (வின்.); one who barters goods. 2. இரண்டகஞ் செய்வோன் (வின்.); double -dealing person. 3. பொன்மாற்று; degree of fineness of gold. *"திருக்கண்மலர் இரண்டு ஒன்பது மாறி"* (S.I.I.ii, 339).

[மாறு →மாறி. மாறு = விற்றல், பொய்படுதல்.]

மாறிக்காண்(ணு)–தல் *māṟi-k-kāṇ-,* 16 செ.குன்றாவி.(v.t.) பெருக்குதல் (இ.வ.); to multiply.

[மாறி + காண்–.]

மாறிப்போடு–தல் *māṟi-p-pōḍu-,* 19 செ.குன்றாவி.(v.t.) மாற்றுதல் (வின்.); to change

[மாறு→மாறி + போடு–.]

மாறிமாறி *māṟi-māṟi,* பெ.(n.) 1. முதலில் ஒன்று பிறகு மற்றொன்று என்ற முறையில் மீண்டும் தொடர்ந்து, அடுத்தடுத்து; alternately, one and then the other. 2. மீண்டும் மீண்டும், திரும்பத் திரும்ப; again and again, repeatedly.

[மாறி + மாறி. மாறு →மாறி.]

மாறியடி[1]–த்தல் *māṟi-y-aḍi-,* 4 செ.கு.வி.(v.i.) காற்றுத் திருப்பி வீசுதல் (வின்.); to whiffle, shift about, as wind.

[மாறு→மாறி + அடி–.]

மாறியடி²–த்தல் *māṟi-y-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஏவினவனையே பேய் திருப்பித் தாக்குதல் (இ.வ.); to return and attack, as a devil, the very person who incited it.

[மாறு→மாறி + அடி–.]

மாறியாடு–தல் *māṟi-y-āḍu-,* 4 செ.கு.வி. (v.i.) காலை மாற்றி நடனமாடுதல்; to change the leg in dancing, as *Śiva* at Madurai. *"கூத்தனார்....... மாறி யாடினார்" (திருவாலவா. 52, 13).*

[மாறு→மாறி + ஆடு–,]

மாறிருமார்பினள் *māṟiru-mārbinaḷ,* பெ.(n.) திருமகள் (பிங்.); Tirumagal.

[மால் + திருமார்பினள்.]

மாறிவிழு–தல் *māṟi-viḻu-,* 2 செ.கு.வி. (v.i.) 1. தலைகீழாய் விழுதல்; to fall headlong. 2. பேச்சு முன்னுக்குப் பின் முரண்படுதல்; to inconsistent.

[மாறு→மாறி + விழு–.]

மாறு¹–தல் *māṟu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. வேறுபடுதல்; to become changed, exchanged, altered, reversed. *"மாறா மனங்கொண்டு" (திருநூற்.47).* 2. பின் வாங்குதல்; to withdraw. *"சூன்மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை" (பெரும்பாண்.136).* 3. குணமாதல்; to be cured. *"நோய் இப்போது கொஞ்சம் மாறியிருக்கிறது" (உ.வ.).* 4. இருப்பிடம் வேறுபடுதல் (இ.வ.); to have a change of residence. 5. நீங்குதல்; to cease, as from sleep. *"உறக்கம் மாறினான்" (கம்பரா. ஆறுசெ.7).* 6. முதுகிடுதல்; to retreat, as showing one's back. *"மாறாமைந்தின்" (மலைபடு.332).* 7. கூத்தாடுதல்; to dance. 8. இறத்தல்; to die. *"இவ்வான் மாக்கள் மாறிப் பிறந்துவரும்" (சி.போ.சிற்.2, 3, பக்.47).* 9. இல்லையாதல்; to be non-existent. *"பரப்புமாறப் பூத்துக்குளிர்ந்த புனலை" (ஈடு.2, 8, 2).* 10. பொய்படுதல்; to become false. *"நாவிற் புனைந்த நன்கவிதை மாறாமை மேவி" (பரிபா.6, 8).* 11. சரிப்படுதல்; to be corrected in state, place, form or appearance.

க. மாறு.

[முல் (வளைதற் கருத்துவேர்) →முர்→முரு →முருகு = பிறைபோல் வளைந்த காதணி. முரு→முரி. முரிதல் = வளைதல், வளைந்து ஒடிதல், கெடுதல், தோல்வியுறுதல், சிதறுதல், தளர்தல், தவறுதல், நீங்குதல், நிலை கெடுதல், குணங் கெடுதல். முரி=வளைவு, துண்டு, முழுதிற் குறைவானது, எழுதிய ஒலை நறுக்கு, இசைப்பாவில் இறுதிப் பகுதி, முறிவு = மடிப்பு, சுருக்கை. முரு→முறு→முறுகு. முறுகுதல் = திருகுதல், விரைதல், முதிர்தல். முறு→முற்று. முற்றுதல் = சூழ்தல், கோட்டையைச் சூழ்ந்து பொருதல். முறு →மறு. மறுத்தல் = திருப்புதல், திரும்பச் செய்தல், மாற்றுதல், தடுத்தல், நீக்குதல், தடை கூறுதல், இல்லையென்னுதல். மறு→மாறு– (வே.க.4:71).]

மாறு²–தல் *māṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. விற்றல்; to sell, to exchange, as goods, barter. *"நாண்மோர் மாறும்" (பெரும்பாண். 160).* 2. பணிசெய்தல்; to comply with, as an order. *"முன்னின பணிமுறை மாற முந்துவார்" (கம்பரா.ஊர்தேடு.49).* 3. கைவிடுதல்; to forsake, cease to support. *"புரிபுநீ புறமாறி" (கலித்.15).* 4. பிறனுக்குதவுதல்; to give, or render help.

"பனவனுக்காப் பாமாறியார்க்கு" (குமர.பிர. மீனாட்.இரட்.5). 5. கழித்தல்; to remove, caste away. *"மாறுமென் மலரும்" (பரிபா.6, 46).* 6. மறுத்தல் (யாழ்ப்.); to deny. 7. எண் பெருக்குதல்; to multiply. *"ஐம்பாலும் பொதுவுமான ஆளானும் மாற நூற்றெட்டாம்" (நன்.269, மயிலை).* 8. அடித்தல் (இ.வ.); to belabour, thrash.

[மறு→மாறு-, (வே.க.4:78)]

மாறு³ *māṟu*,பெ.(n.) 1. வேறுபாடு; mutation, change. *"மாறிலாத மாக்கருணை வெள்ளமே" (திருவாச.5, 91).* 2. எதிர்; contradiction. *"அவன் எதற்கும் மாறாயிருக்கிறான்" (உ.வ.).* 3. பகை; enmity, hostility. *"மாற்றிரு வேந்தர்" (புறநா.42).* 4. ஒவ்வாதது; anything which disagrees or is unsuitable. *"மாறல்ல துய்க்க" (குறள், 944).* 5. ஒப்பு; similarity, equality. 6. மாற்றுருப்படி; change or substitute, as of garment, alternative. *"மாறுசாத்தி யென்பிழை பொறுப்பீர்" (பெரியபு. அமர்நீதி. 24). "ஈதலான் மாறு வேறுண்டோ" (கம்பரா.உருக்கா.24).* 7. கைம்மாறு; recompense, return. *"வழக்கொடு மாறுகொளன்று" (திவ்.இயற். பெரிய. திருவந்.13).* 8. மறுமொழி (உத்தரம்); reply. *"மாறெதிர் கூறி மயக்குப்படுகுவாய்" (கலித்.116, 15).* 9. இம்மை நீங்கும் இறப்பு; death. *"நகாஅ லெனை வந்தமாறே" (புறநா. 273).* 10. இறப்பின் பின் பிறப்பு; birth. *"மாற்றிடைச் சுழலு நீரார்" (மேருமந்.136).* 11. குப்பை கூளம் நீக்கும் துடைப்பம்; broom. *"சல்லிகளை மாறெடுத்துத் தூர்த்தும்" (பணவிடு.285).* 12. துடைப்பம் போலுதவும் பருத்தி முதலியவற்றின் தூறு; dried stock, as of cotton plant. 13. தூறு போன்றமிலாறு; twing or branch without leaves. 14. வளாறு போன்ற பிரம்பு; rattan. *"மாற்றாலாற்றுப் புடையுண்டும்" (சீவக.2794).* 15. மாறுதல் நேரும் வகை; manner, method. *"விளங்கக் கேட்ட மாறு கொல்" (புறநா.5).*

க. மாறு.

[முல் (வளைதற் கருத்து வேர்) →முர்→முரு→ முறு→மறு→மாறு.]

மாறு⁴ *māṟu-*, இடை.(part.) 1. காரணப் பொருளுணர்த்தும் ஓரிடைச் சொல் (தொல். சொல்.252, உரை); a suffix meaning cause. 2. தொறுப் பொருளில் வரும் ஓர் இடைச் சொல்; an adverbial suffix meaning continuity. *"பகல்மாறு வருகிறான்" (உ.வ.).*

[மறு→மாறு.]

மாறுகண் *māṟu-kaṇ*,பெ.(n.) கோணல் (வக்கிரக்) கண்; squint eye. *"மாறு கண்ணாகியு மிருந்திடில்" (காசிக. மகளிர். 50).*

[மாறு + கண்.]

மாறுகம் *māṟugam*,பெ.(n.) சீலை (சது.); cloth.

மாறுகால் *māṟu-kāl*,பெ.(n.) 1. தேசிக் கூத்திற்குரிய கால் வகை (சிலப்.3, 16, உரைக்கீழ்க் குறிப்பு, பக்.90); a leg-pose in *teci-k-kūttu*. 2. ஒரு கைக்கு எதிர்த் திசையில் உள்ள கால்; opposite direction of leg to one side hand.

[மாறு + கால்.]

மாறுகால்மாறுகை *māṟukāl-māṟukai,* பெ.(n.) ஒரு பக்கத்துக் கையும் மறு பக்கத்துக் காலும்; one hand and opposite direction of the leg.

மாறுகால்மாறுகைவாங்கு-தல் *māṟu-kāl-māṟukai-vāṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ஒரு பக்கத்துக் கையையும் மறு பக்கத்துக் காலையும் தண்டனையாக வெட்டுதல்; to cut off a leg and a hand on the opposite sides of a person's body, by way of punishment.

[மாறுகால் + மாறுகை + வாங்கு-.]

மாறுகாலம் *māṟu-kālam,* பெ.(n.) பெண்ணின் மாதவிடாய் நிற்பாடு; meno pause (சா.அக.).

[மாறு + காலம்.]

மாறுகூலி *māṟu-kūli,* பெ.(n.) மரமேறுவார் பெறுங் கூலி; wages paid to climbers of palm trees.

மாறுகொள்(ளு)-தல் *māṟu-koḷ-,* 16 செ.கு.வி.(v.i.) பண்டமாற்றாகக் கொள்ளுதல்; exchange the things.

[மாறுபடு →மாறுகொள்.]

மாறுகொள்ளாவுணவு *māṟu-koḷḷāvuṇavu,* பெ.(n.) மாறுபாடில்லா உணவு; not in compatible diet.

[மாறுகொள்ளா + உணவு.]

மாறுகொளக்கூறல் *māṟu-koḷa-k-kūṟal,* பெ.(n.) நூற்குற்றம் பத்தனுள் முன்னொடு பின் முரணாகக் கூறும் குற்றவகை (நன்.12); inconsistency in statements, one of ten *nūṟ-kuṟṟam.*

[மாறுகொளல் + கூறல்.]

மாறுகோள் *māṟu-kōḷ,* பெ.(n.) 1. மாறுபாடு பார்க்க; see *māṟu-pāḍu.* *"இது மாறுகோளுறை" (சி.போ.பா.பக்.11, சுவாமிநா.).* 2. மாறுபாடு, 3 பார்க்க; see *māṟupāḍu.* *"மூவகை மாறு கோளும் இல்லாத உணவை" (குறள், 945, உரை).*

[மாறுகொள் →மாறுகோள்.]

மாறுத்தரம் *māṟuttaram,* பெ.(n.) மறுமொழி (வின்.); answer, reply.

மாறுதண்டு *māṟu-taṇḍu,* பெ.(n.) தோணியின் வலப்பக்கத்தே வலிக்கப்படும் துடுப்பு; drive the left side of boat. *"மாறுதண்டு ஏலேலோ" (நாட்டார் பாடல்).*

[மாறு + தண்டு.]

மாறுபடப்புணர்-தல் *māṟupaḍa-p-puṇar-,* 2 செ.குன்றாவி.(v.t.) சரி நுகர்ச்சி விளையும்படி செய்யாமல் புணருதல்; without mutual satisfaction, coitous.

[மாறுபடல் + புணர்-.]

மாறுபடு-தல் *māṟu-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. மாறிப்போதல் (சங்.அக.); to be changed. 2. முரணுதல்; to be opposed, to disagree, differ, to be discordant, to be in contrst. 3. பகைமை கொள்ளுதல்; to be inimical. *"மாறுபட்டஞ்சென்னை வஞ்சிப்ப" (திருவாச.6, 11).*

[மாறு + படு-.]

மாறுபடுபுகழ்நிலை *māṟupaḍu-pugaḻ-nilai,* பெ.(n.) சொல்லக் கருதிய பொருளை விடுத்து அதனைப் பழிக்கும் பொருட்டு வேறொன்றை வெளிப்படையாகப் புகழும்

அணி வகை (தண்டிபொருள். 28); (Rhet.) a figure of speech which consists in formally praising a person or thing implying thereby disparagement of another person or thing.

[மாறுபடு + புகழ்நிலை.]

"கருதிய பொருடொகுத் தாங்கது பழித்தற்கு
வேறொன்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை"
(தண்டிபொருள்.28).

புலவர் தான் கருதிய பொருளை மறைத்து அதனைப் பழித்தற்கு வேறொன்றினைப் புகழ்வது மாறுபடு புகழ்நிலை என்னும் அணியாகும்.

"இரவறியா யாவரையும் பின்செல்லா நல்ல
தருநிழலுந் தண்ணீரும் புல்லும் – ஒருவர்
படைத்தனவுங் கொள்ளாவிப் புள்ளிமான்
பார்மேற் என வரும்
றுடைத்தனவே யன்றோ துயர்"

இப்பாடலில் மானைப் புகழ்தலால் இரப்போரின் இழிநிலையைப் பழிக்குமாறு பாடுவதால் இது மாறுபடு புகழ்நிலை யணியாகும்.

மாறுபடுபொருண்மொழி *māṟupaḍu-poruṉ-moḻi*, பெ.(n.) முன் மொழிந்ததற்கு மாறாகப் பொருள் தோன்றிவருஞ் சொல்லுடையதாகிய அணி வழு (தண்டி.100); (Rhet.) a defect in composition which consists in making contradictory statements.

[மாறுபடு + பொருண்மொழி.]

மாறுபாட்டுக்காரன் *māṟupāṭṭu-k-kāraṉ*, பெ.(n.) 1. புரட்டன்; double -dealer. 2. மறுத்துப் பேசுபவன்; one who contradicts.

[மாறுபாடு + காரன்.]

மாறுபாடு *māṟu-pāḍu*, பெ.(n.) 1. பகைமை; opposition. 2. முறைகேடு; perverseness. 3. ஒவ்வாமை; unsuitability, disagreeble ness, discrepancy. *"மாறுபாடில்லாத வுண்டி" (குறள், 945).* 4. புரட்டு; double dealing.

[மாறு→மாறுபாடு.]

மாறுமுகம் *māṟumugam*, பெ.(n.) நினைத்தவாறு மாற்றிக் கொள்ளும் முகவடிவு; face changeable at will. *"மாறுமுகக் கொண்டு பொருவல் லவுணர்" (கந்தபு.தேவர்கள் போற்.4).*

[மாறு + முகம்.]

மாறுரை *māṟurai*, பெ.(n.) மறுமொழி; reply. *"தர்க்கமவைக் கெலாம்....... கன்னி மாறுரை கூறினாள்" (திருவாத.பு, புத்தரை.86).*

[மாறு + உரை.]

மாறுவார்க்கை *māṟu-vārkkai*, பெ.(n.) ஒன்றிலிருப்பதை மற்றொன்றில் வார்த்தல்; to transfer by pouring from one to the other as blood from one animal to the other (சா.க.அ.).

[மாறு + வார்க்கை.]

மாறுவேடப்போட்டி *māṟu-vēḍa-p-pōṭṭi*, பெ.(n.) மாறுவேடத்தில் வந்து நடித்துக் காட்டும் பலரில் சிறப்பாகச் செய்தவரைத் தேர்ந்தெடுக்கும் போட்டி; fancy dress competition.

[மாறுவேடம் + போட்டி.]

மாறுவேடம் *māṟu-vēḍam*, பெ.(n.) உண்மையான தோற்றத்தை மறைத்துப் போட்டுக் கொள்ளும் புனைவு; disguise fancy dress.

[மாறு + வேடம்.]

மாறேவி *mārēvi,*பெ.(n.) அரிதாரம் (சங். அக.); yellow orpiment.

மாறை *mārai,*பெ.(n.) பாண்டி மண்டலத்துள்ள ஒரு நாடு (தஞ்சைவா.14); a division of the Pāṇḍiya country.

மாறொடை *mārodai,*பெ.(n.) துளசி (சங். அக.); holy basil.

மாறொலி *māroli,*பெ.(n.) எதிரொலி (இ.வ.); echo.

[மாறு + ஒலி.]

மாறோக்கம் *mārōkkam,*பெ.(n.) மாறோகம் (புறநா.37) பார்க்க; see *mārōgam.*

மாறோகம் *mārōgam,*பெ.(n.) பாண்டி நாட்டிற் கொற்கையைச் சூழ்ந்த பகுதி (தொல்.சொல். 164, சேனா.புதுப்.கீழ்க்குறிப்பு); the portion of the *Pāṇḍya* country round *korkai* in *Tinnevelly* District.

மாறோதியம்பன் *mārōdi-ambaṉ,* பெ.(n.) சாரைப் பாம்பு; a kind of snake (சா.அக.).

மான்[1] *māṉ,*பெ.(n.) 1. ஒருவகை விலங்கு; deer, hart, antelope, fawn. *"மானினுரிவை தைஇய வூன் கெடு மார்பின்" (திருமுரு. 128).* 2. விலங்கின் பொது (பிங்.); animal, beast. 3. குதிரை; horse. *"தெம்முனையுண் மானொடு தோன்றி" (பு.வெ.10, பொது.5).* 4. அரிமா; lion. *"விலங்கு மான்குரல் கேட்பின் வெருவுவை" (கலித்.13).* 5. மகரமீன் (பிங்.);magara fish. 6. மகரவோரை (பிங்.); capricorn of he zodiac.

தெ., க., ம., து. மான்.

[மா →மான்.]



மான்[2] *māṉ,*இடை.(part.) 1. பெயர் விகுதி; affix to nouns. *"வேண்மான்".* 2. படியாக என்னும் பொருளில் வரும் இடைச் சொல் (தொல்.சொல்.463, உரை); particle meaning ways, times etc.

மான்[3] *māṉ,*பெ.(n.) 1. பெருமை; (phil.) the principle of Intellect. *"மானென்றுரைத்த புத்தி வெளிப்பட்டு" (மணிமே.27:207). "மானாங்காரமனங் கெட" (திவ்.திருவாய். 10, 7, 11).* 2. மூலப் பகுதி; (Saiva) the manifest primordial cause of the material world. 3. மாந்தன்; human being. *"மானுடம்பு விடா" (மேருமந்.72).* 4. பெரியோன்; great person or being. *"மானே தொழுகை வலி" (சி.போ.12, 4 வெண்பா.3).* 5. மலை (பிங்.); mountain.

[மன் →மான்.]

மான்[4](னு)-தல் *māṉ-,*16 செ.குன்றாவி. (v.t.) ஒத்தல்; to resemble, to equal. *"மன்னர் சேனையை மானு மன்றே" (கம்பரா.ஆற்று.14).*

[மன்→ மான் (வே.க..4:34).]

மான்[5] *māṉ,*பெ.(n.) ஒப்பு (பிங்.); likeness.

[மான →மான்.]

மான் வகை

மான்⁶-தல் (மான்றல்) *māṉ-*,16 செ.கு.வி. (v.i.) 1. ஐயுறுதல் (திவா.); to be doubtful. 2. மயங்குதல் (சூடா.); to be confused.

மான்களங்கம் *māṉ-kaḷaṅgam*, பெ.(n.) நிலவிலுள்ள மானுருப் போன்ற மறு (யாழ். அக.); spot on the moon, fancied to resemble a deer.

[மான் + களங்கம்.]

மான்களிக்கண் *māṉ-kaḷi-k-kaṇ*, பெ.(n.) இருவட்டக்கம்பி (யாழ்.அக.); a kind of wire.

மான்கீரை *māṉ-kīraaii*, பெ.(n.) கீரை வகை (மூ.அ.); a kind of pot - herb.

[மான் + கீரை.]

மான்குளம்பு *māṉ-kuḷambu*, பெ.(n.) 1. மானின் பாதம்; foot of a deer. *"மான்குளம்பு அழுத்திய இடத்தை யொத்த" (பொருந.4, உரை).* 2. அடம்பு; hare-leaf.

[மான் + குளம்பு.]



மான்கை *māṉkai*, பெ.(n.) சாறாயம்; arrack (சா.அக.).

மான்கையன் *māṉ-kaiyaṉ*, பெ.(n.) சிவ பெருமான்; *Śivaṉ*.

[மான் + கையன்.]

மான்கொடி *māṉ-koḍi*, பெ.(n.) கொடிவகை (யாழ்.அக.); a creeper.

[மான் + கொடி.]

மான்கொம்பு¹ *māṉ-kombu*, பெ.(n.) பாதிரி; white flowered trumpet tree.

[மான் + கொம்பு.]

மான்கொம்பு² *māṉ-kombu*, பெ.(n.) மானின் தலையில் சுருண்டு திரண்ட கொம்பு; deer's horn.

[மான் + கொம்பு.]



மான்சாணம் *māṉ-šāṇam*, பெ.(n.) மானின் சாணி; funette (சா.அக.).

[மான் + சாணம்.]

மான்சாரை *māṉ-šārai*, பெ.(n.) 1. நீண்ட மரவகை; auricled leaved glabrous marking-nut. 2. மரவகை; a species of *croton indigo*.

மான்செவி *māṉ-ševi*, பெ.(n.) மான்செவிக் கள்ளி (வின்.) பார்க்க; see *māṉ-ševi-k-kaḷḷi.*

[மான்செவிக்கள்ளி→மான்செவி.]

மான்செவிக்கள்ளி *māṉševi-k-kaḷḷi,* பெ.(n.) இலைக்கள்ளி (மலை.); five tubercled spurge.

[மான்செவி + கள்ளி. மானின் செவி போன்ற இலையையுடைய கள்ளி.]



மான்புள்ளிகண்டாங்கி *māṉ-puḷḷi-k-kaṇḍāṅgi,* பெ.(n.) சேலை வகை (இ.வ.); a kind of saree.

[மான்புள்ளி + கண்டாங்கி.]

மான்புள்ளிச்சேலை *māṉ-puḷḷi-c-cēlai,* பெ.(n.) சேலை வகை (இ.வ.); a kind of saree.

[மான் + புள்ளி + சேலை. சீரை→சீலை →சேலை.]

மான்மகன் *māṉ-magaṉ,* பெ.(n.) 1. அயன்; Brahman. 2. மான்மைந்தன் பார்க்க; see *māṉ-maindaṉ.* *"மான்மகன் போல் வருதிரைய" (சிலப்.7 : 28).*

[மான் + மகன்.]

மான்மதச்சாந்து *māṉ-mada-c-cāndu,* பெ.(n.) மான்மதச்சேறு பார்க்க; see *māṉ-mada-c-cēṟu.* *"மான்மதச் சாந்தொடு வந்ததை" (சிலப்.2 : 68).*

[மான்மதச்சேறு →மான்மதச்சாந்து.]

மான்மதச்சேறு *māṉmada-c-cēṟu,* பெ.(n.) (கத்தூரி) மான் மதத்தாற் செய்த நறுமணக் குழம்பு (சிலப்.6 : 81, உரை); unguient of musk.

[மான்மதம் + சேறு.]

மான்மதம் *māṉ-madam,* பெ.(n.) 1. கத்தூரி (திவா.); musk. 2. சவ்வாது (சிலப்.6, 81, உரை); civet.

மான்மறி *māṉ-maṟi,* பெ.(n.) 1. மான்குட்டி; fawn. *"மான்மறி விழுந்தது கண்டு" (மணிமே.23 : 115).* 2. பெண்மான் (மணிமே.23 : 115, அரும்.); doe. 3. வள்ளி நாயகி; *Vaḷḷi-nāyagi* the wife of Murugan, as born of a doe. *"மான்மறி தோண் மணந்த ஞான்று" (பரிபா.9, 8).*

[மான் + மறி. மறி = குட்டி.]

மான்மறிக்கரத்தான் *māṉmaṟi-k-karattāṉ,* பெ.(n.) சிவன்; *Šivaṉ.*

மான்மியம் *māṉmiyam,* பெ.(n.) 1. மகிமை; glory, greatness. 2. இடப் பெருமையைக் கூறும் நூல்; treatise on the greatness of a sacred place. *"சிதம்பர மான்மியம்".* 3. மகத்துவம் பார்க்க; see *magattuvam.*

மான்முருகு *māṉmurugu,* பெ.(n.) 1. துளசி; sacred basil. 2. துரிசு; blue vitriol (சா.அக.).

மான்மைத்துனன் *māṉ-maittuṉaṉ,* பெ.(n.) 1. சிவன்; *Šivaṉ.* 2. மான்முருகு, 2 பார்க்க; see *māṉ-murugu.*

[மால் + மைத்துனன்.]

மான்மைந்தன் *mān-maindan,* பெ.(n.) மன்மதன் (திருமாலின் மைந்தன்) (சூடா.); *Kāman,* as the son of *Tirumāl.*

மான்வேடன் *mān-vēdan,* பெ.(n.) மாரீசன்;

[மான் + வேடன்.]

மான்றல் *mānral,* பெ.(n.) மயக்கம்; bewilderment. *"மான்றறீர் மதியினான்" (அரிசமய குலசே.129).*

[மால்→மான்→மான்றல் (வே.க.4:38).]

மான்றலை *mānralai,* பெ.(n.) 1. பெரு விரலுஞ் சிறுவிரலு மொழிந்த இடைவிரல் மூன்றுந் தம்மிலொத்து ஒன்றி முன்னே இறைஞ்சி நிற்கும் இணையாவினைக்கை வகை (சிலப்.3, 18, உரை, பக்.96); (Nātya) a gesture with one hand in which the three fingers other than the thumb and the little finger are joined and bent forward, as resembling the head of a deer, one of 33 *inaiyā-vinai-k-kai.* 2. ஐந்தாம் விண்மீன்; the fifth naksatra.

[மான் + தலை.]

மான்றார் *mānrār,* பெ.(n.) அறிவு மயங்கினவர்; those who are confused in mind. *"மான்றார் வளியான் மயங்கினார்க்கு" (ஏலாதி, 55).*

[மன்→மான்→மான்றார்.]

மான்றூதி *mānrūdi,* பெ.(n.) காஞ்சிரை; a tree nux-vomic.

மான்றோல் *mānrōl,* பெ.(n.) மான் தோலாகிய இருக்கை (பு.வெ.8, 14, உரை); deer skin, used by ascetics, etc.

[மான் + தோல்.]

மான *māna,* இடை.(Part.) ஓர் உவமைச் சொல் (தொல்.பொருள்.287); a word of comparison.

[மான் = ஒப்பு. மான்→மான.]

மானக்கஞ்சாறநாயனார் *mānakkañcāra-nāyanār,* பெ.(n.) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் (பெரியபு.); a canonized šaivasaint, one of 63.

மானக்கலை *mānakkalai,* பெ.(n.) அரையாடை; waist cloth.

[மான + கலை.]

மானக்கவரி *māna-k-kavari,* பெ.(n.) 1. கவரிமான்; yak, bos grunnieus as too sensitive to survive the loss of a single hair. 2. சாமரை; ornamental whisk, made of yak's tail. *"மானக்கவரி மணிவண்டகற்ற" (சீவக.2120).*

[மான்→மான + கவரி.]

மானக்குருடன் *māna-k-kurudan,* பெ.(n.) முழுக்குருடன் (வின்.); totally blind man.

[மான்→மானம் + குருடன். மானம் = ஒப்புமை, அளவு.]

மானக்குறை *māna-k-kurai,* பெ.(n.) மானக் கேடு (வின்.) பார்க்க; see *māna-k-kēdu.*

[மான்→மானம் + குறை. மானம் = ஒப்புமை, அளவு, மதிப்பு, பெருமை, வலிமை.]

மானக்கேடு *māna-k-kēdu,* பெ.(n.) பெருமைக்கேடு (வின்.); dishonour, disagree, ignominy.

[மானம் + கேடு. மானம் = பெருமை.]

மானகம் *māṉagam*, பெ.(n.) ஒரு வகை மலையாள சேம்பு; *colacasia indica* (சா.அக.).

மானகவசன் *māṉaga-vašaṉ*, பெ.(n.) மானத்தையே காப்பாகத் தாங்கியோன்; man whose armour is self-respect. *"பராக்ரமக் கைதவன் மானகவசன் கொற்கை வேந்தன்" (பெருந்தொ.949).*

[மானம் + கவசன்.]

மானங்கா-த்தல் *māṉaṅ-kā-*, 4 செ. குன்றாவி. (v.t.) ஒருவன் அல்லது ஒருத்தியின் மானத்தைப் பேணுதல்; to preserve one's self-respect, chastity or honour.

[மானம் + கா-.]

மானங்காட்டு-தல் *māṉaṅ-kāṭṭu-*, 5 செ.கு.வி.(v.i.) கூரைக்கு முட்டுக் கொடுத்தல் (இ.வ.); to support roof by struts.

[வானம் → மானம் + காட்டு-.]

மானங்கெட்டவள் *māṉaṅ-keṭṭavaḷ*, பெ.(n.) 1. வெட்கங் கெட்டவள் (வின்.); shameless woman. 2. கற்பிழந்தவள் (கொ.வ.); unchaste woman.

[மானம் + கெட்டவள்.]

மானங்கெட்டவன் *māṉaṅ-keṭṭavaṉ*, பெ. (n.) மானமிழந்தவன் (கொ.வ.); person devoid of shame or self-respect.

[மானம் + கெட்டவள்.]

மானசாரம் *māṉa-šāram*, பெ.(n.) கட்டடச் சிற்பநூல் முப்பத்திரண்டனுள் ஒன்று (இருசமய. சிற்பசாத்.); a treatise on architecture, one of 32 *ciṟpa-nūl*.

மானசாலயம் *māṉa-šālayam*, பெ.(n.) அன்னப் பறவை; a bird swan.

[மான + சாலயம்.]

மானசிகநரம்பு *māṉašiga-narambu*, பெ.(n.) விதான நரம்பு; phrenic nerve (சா.அக.).

மானட்கி *māṉaṭki*, பெ.(n.) பூசணிக்காய்; pumpkin (சா.அக.).

மானத்தாட்சி *māṉa-t-tāṭci*, பெ.(n.) மானக்கேடு பார்க்க; see *māṉa-k-kēḍu.*

[மானம் + தாழ்ச்சி. தாழ்ச்சி→தாட்சி.]

மானத்தாழ்ச்சி *māṉa-t-tāḻcci*, பெ.(n.) மானக்கேடு; ignominy.

[மானம் + தாழ்ச்சி.]

மானத்தாழ்வு *māṉa-t-tāḻvu*, பெ.(n.) மானக்கேடு (வின்.) பார்க்க; see *māṉa-k-kēḍu.*

[மானம் + தாழ்வு.]

மானத்தைவாங்கு-தல் *māṉattai-vāṅgu-*, 7 செ.கு.வி.(v.i.) மதிப்பை இழக்கச் செய்தல்; cause or bring disgrace.

[மானத்தை + வாங்கு-.]

மானத்தோல் *māṉa-t-tōl*, பெ.(n.) பீசம்; testicle (சா.அக.).

மானதண்டு *māṉa-taṇḍu*, பெ.(n.) அளவைக் கோல்; measuring rod. *"விண்ணினுக் களவாய் வைத்த மானதண் டனைய வெற்பில்" (இரகு.திக்கு.144).*

[மானம் + தண்டு. மானம் = அளவு, அளவுக்கருவி.]

மானபோதம் *māṉa-bōdam*, பெ.(n.) சிற்ப நூல் முப்பத்திரண்டனுள் ஒன்று (இருசமய. சிற்பசாத்.3); a treatise on architecture, one of 32 *ciṟpa-nūl*.

மானம்[1] *māṉam*, பெ.(n.) 1. மதிப்பு; honour, dignity. *"நன்றேகாண் மான முடையார் மதிப்பு" (நாலடி, 294).* 2. கற்பு; chastity. 3. பெருமை; pride, eminence. *"புகழு மானமு மெடுத்து வற்புறுத்தலும்" (தொல். பொருள்.41).* 4. புலவி; bouderie, sulks. *"மான மங்கையர் வாட்டமும்" (சீவக.2382).* 5. வலிமை (சூடா.);strength. 6. சூளுரை (சபதம்); vow. *"அப்படியே செய்வேனென மானஞ் செய்து" (இராமநா.அயோத்.7).* 7. கணிப்பு; computation. 8. அளவுக் கருவி; instrument or means of measurment. 9. மாற்றாணி (திருக்கோ.335, உரை); touch - needle. 10. பட்டணம்படியில் அரைப்படி கொண்ட அளவு (G.Sm.D.I.I.286) half a Madras measure. 11. ஒப்புமை; comparison. *"மானமில்லுயர் மணிவண்ணன்" (சீவக..2747).* 12. அன்பு; love, affection. *"பாலும் நீரும்போல மானம் வைத் தாண்டீரே" (இராமநா.அயோத்.7).* 13. ஒட்டுறவு; attachment. *"மறத்திடை மானமேற் கொண்டு" (பு.வெ.5, 6).* 14. அவமானம்; disgrace. *"மானத் தலைவருவ செய்பவோ" (நாலடி, 198).* 15. இலச்சை; shame. *"வஞ்சியை மீட்கிலே னென்னு மானமும்" (கம்பரா. சடாயுவுயிர்நீ. 145).* 16. குற்றம்; fault. *"மெய்ந்நிலை மயக்க மான மில்லை" (தொல்.எழுத்து.47).* 17. வானூர்தி; aerial chariot. *"மானமிசையூர்ந்து" (கந்தபு. அசுரர்யா.14).* 18. கோவில் விமானம்; vaulted roof o the inner shrine of a temple. *"பொன்மானந் தனக்கு வடமேற்றிசை" (திருவிளை. கல்லானைக்.3).* 19. மண்டபம் (பிங்.); pillared hall.

[முல் (பொருந்தற் கருத்து வேர்) →மல்→மன். மன் = பெருமை, பெரியோன், கணவன், அரசன், அரசு. மன்→மான்→மானுதல் = ஒத்தல். மான்→ மானம் (வே.க.4:34).]

மானம்[2] *māṉam*, பெ.(n.) அளவு, மதிப்பீடு; measurement, estimation.

மானம்[3] *māṉam*, பெ.(n.) 1. மான்மதம் (கத்தூரி); musk. 2. புனுகு (சவ்வாது); civet.

மானம்[4] *māṉam*, பெ.(n.) வான்; sky. *"செம்மானஞ் செற்று...... மிளிருஞ் சடைக்கற்றை வேதியனே" (தேவா.1200, 10).*

[மால்→மான்→மானம் (வே.க.4:38).]

மானம்[5] *māṉam*, பெ.(n.) 1. ஒரு தொழிற் பெயர் விகுதி; a nominal suffix. *'பிடிமானம்', 'சேர்மானம்'.* 2. தொறுப் பொருளில் வரும் இடைச்சொல்; an adverbial suffix meaning continuity. *"தினமானம் இது நடந்து வருகிறது".*

[மன்→மான்→மானம்.]

மானம்[6] *māṉam*, பெ.(n.) நிலை, தன்மை போன்ற பொருளில் வரும் பின்னொட்டு; a suffix meaned for state of a thing.

[மா→மான்→மானம்.]

ஓண்டமிழ் மொழியில் ஓரெழுத்து ஒருமொழியாய் நிற்பவை 42 எழுத்துகள். அவற்றுள் மா என்பது ஓர் எழுத்து மொழியாகும். அதற்கு அழகு, அறிவு, ஆணி, அரைத்த மாவு, இருபதில் ஒரு பங்கான ஒரெண், மரம், குதிரை, செல்வம்,

நிறம், பெரிய, பெருமை, மிகுதி, மேன்மை, விலங்கு, அளவு என்ற பொருள்களுடன் நிலை என்ற பொருளும் உண்டென உணர்க.

1. அடிமானம் = கீழ் மட்டத்தின் நிலை, அடிப்படை நிலை; 2. அடைமானம் = ஒரு பொருளுக்கு ஈடாக அடைவு செய்யும் நிலை; 3. அவமானம் = தன் மதிப்பின் தாழ்நிலை; 4. இனமானம் = இனப்பற்றின் நிலை; 5. கட்டுமானம் = கட்டப்படுகின்ற கட்டடப் பணியின் நிலை; 6. கனபரிமானம் = பலகை, தகடு போன்ற தட்டையான பொருள்களின் தடித்த நிலை; 7. காலமானம் = காலத்தின் நிலை; 8. செரிமானம் = உண்ட உணவு செரிக்கும் நிலை; 9. தன்மானம் = தன் தகுதியின் நிலை; 10. தீர்மானம் = ஒரு கருத்தைப் பற்றிய தீர்வு செய்த நிலை; 11. தேய்மானம் = ஒரு பொருள் தேய்ந்து, குறைந்த நிலை; 12. படிமானம் = கீழ்ப்படிதலின் நிலை; 13. பிடிமானம் = ஒன்றைப் பற்றிக் கொண்ட நிலை; 14. பெறுமானம் = ஒன்றன் மதிப்பீட்டு நிலை; 15. மொழிமானம் = ஒருமொழியைப் பற்றிய நிலை; 16. வருமானம் = ஒன்றன் மூலம் வருகின்ற வரவின் நிலை.

மானம்⁷ *mānam*, பெ.(n.) 1. ஆமணக்கு; castor plant. 2. ஆண் அல்லது பெண்குறி; male or female genital.

மானம்கீழ்மாறுவாங்கு-தல் *mānam-kīḻmāṟu-vāṅgu-*,5 செ.கு.வி.(v.i.) அதிகாலைப் பொழுது; early morning.

[மானம் + கீழ்மாறுவாங்கு-தல்]

மானம்பாடி *mānam-pāḍi*, பெ.(n.) வானம்பாடி (வின்.); the Indian skylark.

[மானம் + பாடி. வானம்பாடி→ மானம்பாடி (இ.வ.)]

மானம்பார்-த்தல் *mānam-pār-*, 4 செ.கு.வி. (v.i.) இறத்தல்; to die.

[வானம்→மானம் (கொ.வ.) மானம் + பார்-]

மானம்பார்த்தபூமி *mānam-pārtta-būmi*, பெ.(n.) மழைநீரால் மட்டுமே பயிர் செய்யப்படும் நிலம்; rain-fed arable land.

மறுவ. மானாவாரி நிலம்.

[மானம் + பார்த்தபூமி. வானம் →மானம் (இ.வ.)]

மானமர் *mānamar*, பெ.(n.) கள்ளி; spurge.

மானமரியாதை *māna-mariyādai*, பெ.(n.) மதிப்பு (வின்.); honour, dignity.

[மானம் + மரியாதை]

மானமா *māna-mā*, பெ.(n.) கவரிமான்; yak, as extremely sensitive. *"மானமா வனைய மாட்சியர்" (கம்பரா.உருக்காட்.19).*



மானமாரி *māna-māri*, பெ.(n.) வானம் பார்த்தநிலம் பார்க்க; see *vāṉam-pārtta-nilam.*

[மானம் + மாரி]

மானமுறு-தல் *māṉa-muṟu-*,18 செ.குன்றாவி. (v.t.) பார்த்தல்; to see. *"நும்மாண் மானமுற லுற்றது கொல்" (சேதுபு.காசிப.9).*

[மானம் + உறு-]

மானமூடு[1]-தல் *māṉa-mūḍu,* 5 செ.கு.வி. (v.i.) உடை முதலியவற்றால் உடலை மறைத்து மானம் பேணுதல்; to conceal one's shame by covering the body with dress.

[மானம் + மூடு-]

மானமூடு[2]-தல் *māṉa-mūḍu,* பெ.(n.) வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகை; cloud sky. *இரண்டு நாளாக மானம் மூடிக்கிட்டு கிடக்குது (பே.வ.)மூ*

[வானம்மூடுதல்→மானமூடுதல் (கொ.வ.).]

மானல்[1] *māṉal,*பெ.(n.) 1. மயக்கம் (சூடா.); confusion. 2. ஐயப்படுதல் (வின்.); doubting.

[மால்→மான்→ மானல். மால் = மயக்கம்]

மானல்[2] *māṉal,*பெ.(n.) 1. ஒப்பு (சூடா.); comparison, resemblance. 2. இலிச்சை (அக.நி.); see shame..

[மான்→மானல்]

மானவட்டில் *māṉa-vaṭṭil,*பெ.(n.) அளவுக் கிண்ணம்; measuring cup. *"பொன்னின் மானவட்டில் ஒன்று" (S.I.I.ii, 4).*

[மானம் + வட்டில். மானம் = அளவு]

மானவன்[1] *māṉaṉ,*பெ.(n.) மாந்தன்; man.

மானவன்[2] *māṉavaṉ,* பெ.(n.) 1. பெருமை யுடையவன்; man of honour. *"ஆர்த்தடு மானவன்" (கந்தபு.துணைவ.32).* 2. அரசன்; king. *"மானவன் மந்திரி" (கலிங்.365).* 3. சேனைத் தலைவன் (திவா.); commander of army. 4. வீரன் (சது.); hero, champion.

[மானம் = பெருமை, பெரியோன், வலிமை. மானம்→மானவன்]

மானவாரி *māṉa-vāri,* பெ.(n.) 1. மானவாரி நிலம் பார்க்க; see *māṉavāri-nilam.* 2. மழையை நம்பி விளையும் விளைச்சல் (வின்.); cultivation, whether wet or dry, dependent upon rain. 3. சுறவத் திங்களில் விளையும் நெல் (வின்.); a kind of paddy that matures in the month of *Šuṟavam.*

[மானம் + வாரி. வானம் > மானம்.]

மானவாரிக்குளம் *māṉa-vāri-k-kuḷam,* பெ.(n.) மழை பெய்து நிரம்பும் ஏரி; rain fed tank.

[மானவாரி + குளம்]

மானவாரிநிலம் *māṉavāri-nilam,* பெ.(n.) மானம்பார்த்தநிலம் பார்க்க; see *māṉam -pārtta-nilam.*

[மானவாரி + நிலம்]

மானவாரிப்பத்து *māṉavāri-p-pattu,* பெ.(n.) மானவாரிப்பற்று பார்க்க; see *māṉavāri-p-paṟṟu.*

[மானவாரிப்பற்று→மானவாரிப்பத்து. பற்று >பத்து]

மானவாரிப்பற்று *māṉavāri-p-paṟṟu,* பெ.(n.) மானவாரிக் குளத்து நீரால் விளையும் நிலங்களின் மொத்த விளைச்சலிற் பேர் பாதியை அரசு தீர்வையாகக் கைக் கொண்டு தண்டும் முறை; a method of collecting revenue of land under rainfed tanks,

whereby the Government takes one half of the gross produce (R.T.).

[மானவாரி + பற்று]

மானவாரிப்புன்செய் *mānavāri-p-punšey,* பெ.(n.) மழையால் மட்டுமே விளையும் புன்செய் நிலம்; rain fed dry land.

[மானவாரி + புன்செய்]

மானவிலங்கு *māna-vilangu,* பெ.(n.) கவரிமான்; the yak.

மானவிறல்வேள் *māna-viral-vēḷ,* பெ.(n.) முற்காலத்துச் சிற்றரசர் சிலருக்கு வழங்கிய பட்டப் பெயர்; an ancient title of certain chiefs. *"மான விறல்வே ளழும்பி லன்ன" (மதுரைக்.344). "மானவிறல்வேள் வயிரிய மெனினே" (மலைபடு.164).*

மானவு *mānavu,* பெ.(n.) தெளிவு (சது.); clearness.

மானவெளி *māna-veḷi,* பெ.(n.) திறந்த வெளியாயிருக்கும் வீட்டின் உள்முற்றம்; open quandrangle in a house.

[மானம் + வெளி]

மானவேதியன் *māna-vēdiyan,* பெ.(n.) வேதங்கற்றவன் (வின்.); one learned in the *Vēdas.*

மானன்[1] *mānan,* பெ.(n.) 1. மானி[2], 1 (சங்.அக.) பார்க்க; see *māni.* 2. தலைவன் (யாழ்.அக.); chief.

மானன்[2] *mānan,* பெ.(n.) 1. வேடன்; hunter. 2. மூடன்; dullard.

மானாகம் *mānāgam,* பெ.(n.) பெருநாரை (வின்.); cyrus crane.



மானாகிமூலி *mānāgi-mūli,* பெ.(n.) இஞ்சி; ginger (சா.அக.).

மானாங்காணி *mānāng-kāṇi,* பெ.(n.) உத்தரத்தின் மேல் நோக்கிய அமைப்பு (கம்.வழ.); upright pattern of a pillar.

[மானம் = வானம். மானம் + காணி. மானங்காணி →மானாங்காணி (கொ.வ.)

மானாங்குலம் *mānāngulam,* பெ.(n.) நீட்டலளவு வகை (சிற்பரத்.18); a linear measure, one-six of a talam.

மானாதிபட்சி *mānādi-paṭci,* பெ.(n.) 1. கருங்காக்கை; black crow. 2. நால்வகைச் சாதியில் கடைச்சாதியர்; the last class of human being.

மானாமதுரை *mānā-madurai,* பெ.(n.) சிவகங்கை வட்டத்தில் வைகையாற்றின் கரையில் அமைந்துள்ள ஊர்; it is in *Sivagangai* (Dt.) river bank of vaigai.

பெயர்க்காரணம்: 14ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை மானவீரன் என்ற பாண்டிய மன்னன் ஆட்சி செய்தான். இவன் பெயரால் மானவீரன் மதுரை என்பது நாளடைவில் மானாமதுரை என வழங்கலாயிற்று.

மானார்¹ *māṉār,* பெ.(n.) பெண்டிர்; woman. *"மட்டுப் படாக் கொங்கை மானார் கலவி மயக்கத்திலே" (தனிப்பா.i, 149, 54).*

மானார்² *māṉār,* பெ.(n.) பகைவர் (சங்.அக.); enemies.

மானார்³ *māṉār,* பெ.(n.) இலைக்கள்ளி; leaf spurge (சா.அக.).

மானாவாரி¹ *māṉāvāri,* பெ.(n.) மானவாரி பார்க்க; see *māṉa-vāri.*

[மானவாரி→மானாவாரி]

மானாவாரி² *māṉā-vāri,* பெ.(n.) 1. மனப் போக்கு (இ.வ.); whim, fancy. 2. பெருவாரி, தாந்தின்னி (இ.வ.); absolue or exclusive enjoyment. *"அவன் அதை மானாவாரியாய் பயன்படுத்துகிறான்" (உ.வ.).* 3. பொறுப்பின்மை; want of attention or care.

மானாவாரி³ *māṉāvāri,* பெ.(n.) மழை நீரை மட்டுமே நம்பி விளையும் விளைச்சல்; dry cropping, cultivation in rain fed tracts.

மானாவி *māṉāvi,* பெ.(n.) 1. ஒன்பான் இரவு (நவராத்திரி)த் திருவிழா; the *Navarātri* festival. *"மானாவி சமைப்பாரைப் போலே" (ஈடு.10, 9, 4).* 2. மானாவிச்சோலை பார்க்க; see *māṉāvi-c-cōlai. "மானாவிபோலே ஆவதழிவதாம் விபூதி" (திருவிருத்.66, வ்யா.).*

க. மானானி

மானாவிச்சோலை *māṉāvi-c-cōlai,* பெ.(n.) ஒன்பான் இரவு (நவராத்திரி) விழாவில் அமைக்கும் (அலங்கார) ஒப்பனைச் சோலை; pleasure grove, temporarily formed for the *Navarātri* festival. *"மானாவிச் சோலை போல ஆவதழிவதான" (ஈடு.6, 9, 1).*

மானாள் *māṉāḷ,* பெ.(n.) பெண்; woman, girl. *"ஒருத்தர்கிட்ட மானாளை விட்டேனோ" (விறலிவிடு.).*

மானி¹-த்தல் *māṉi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. நாணுதல்; to be bashful, to become ashamed. *"கூற்றமும்... மானித்தது" (பு.வெ.7, 25, உரை).* 2. செருக்குதல், இறுமாப்புக் கொள்ளுதல்; to be proud. *"நின்னைப் பணியாது மானித்து நின்ற அரசன்" (நீலகேசி, 529, உரை).*

[முல்→மல்→மன் = பெருமை, பெரியோன். மன்→மான். மானுதல் = ஒத்தல். மான்→மானி (வே.க.4: 35)]

மானி²-த்தல் *māṉi-,* 4 செ.குன்றாவி.(v.t.) பெருமைப்படுத்துதல்; to respect, honour, treat reverently. *"நாணிமானித் தோமே நாமென்பார்" (காளத்.உலா.243).*

[மான் = பெருமை. மான்→மானி-,]

மானி³ *māṉi,* பெ.(n.) 1. மதிப்புள்ளவ-ன்-ள்; person of honour. 2. செருக்குள்ளவ-ன்-ள், இறுமாப்புள்ளவ-ன்-ள்; proud person. *"களி மடி மானி" நன்.39).*

[மானம்→மானி]

மானி⁴ *māṉi,* பெ.(n.) மங்கையர்க்கரசியார்; a canonized *Śaiva* saint. *"வரிவளையாள் மானிக்கு நேசனுக்கு மடியேன்" (தேவா.738, 11).*

மானி⁵ *māṉi,* பெ.(n.) அளவைக்கருவி; instrument of measurement, meter.

1. அழுத்தமானி = உடலின் குறை—மிகை அழுத்தங்களை அளக்கும் கருவி; 2. உப்புமானி = ஓரிடத்தில் இருக்கும் உப்பின் அளவை அளக்கும் கருவி; 3. ஒலிமானி = ஒலியின் அளவை அளக்கும் கருவி; 4. குடிநீர்மானி = குழாய் மூலம் பயன்படுத்தும் குடிநீரை அளக்கும் கருவி; 5. கோணமானி = கோணங்களை அளக்கும் கருவி; 6. சுரமானி = உடலின் சுரத்தை அளக்கும் கருவி; 7. நில அதிர்வுமானி = நில நடுக்கத்தை அளக்கும் கருவி; 8. நீர்மமானி = நீர்மப் பொருள்களை அளக்கும் கருவி; 9. பாகைமானி = வட்டச் சிறுபகுதியை அளக்கும் கருவி; 10. பால்மானி = பாலில் கரைந்துள்ள நீரை அளக்கும் கருவி; 11. மழைநீர்மானி = பெய்யும் மழை நீரை அளக்கும் கருவி; 12. மின்மானி = பயன்படுத்திய மின்சாரத்தை அளக்கும் கருவி; 13. வெப்பமானி = வெப்பத்தை அளக்கும் கருவி. 14. பால்மானி = பாலில் நீரளவை அளக்கும் மானி.

மானி⁶ *māṉi,* பெ.(n.) மாமன் (இ.வ.); uncle.

மானிகை *māṉigai,* பெ.(n.) வெறியம் (சாறாயம்) (சங்.அக.); spirituous liquor.

மானியார் *māṉiyār,* பெ.(n.) மானி³ பார்க்க; see *māṉi.* *“மானியார் தாமு மஞ்சி” (பெரியபு. திருஞான.696).*

மானிறம் *māṉiṟam,* பெ.(n.) வெளிறின மஞ்சள் நிறம் (இ.வ.); fawn colour, tawny colour.

[மான் + நிறம்]

மானிறைச்சி *māṉiṟaicci,* பெ.(n.) மான்கறி; flesh of deer.

[மான் + இறைச்சி]

மானினி *māṉiṉi,* பெ.(n.) பெண் (சூடா.); woman.

மானு—தல் *māṉu-,* 16 செ.குன்றாவி.(v.t.) மான்⁵— (வின்.) பார்க்க; see *māṉ-.*

மானுயர் *māṉuyar,* பெ.(n.) மக்கட் பிறப்பினர்; human beings. *“மானுயரென்னப்படுபவர்” (நீலகேசி, 86).*

[மான் + உயர்.]

மானேந்தி *māṉēndi,* பெ.(n.) நிலவு; moon.

மானேந்திமூலி *māṉēndi-mūli,* பெ.(n.) ஈசுர மூலி; a twicer.

மானேறு *māṉēṟu,* பெ.(n.) 1. கலைமான்; stag. 2. பன்னிரண்டாம் விண்மீன்; the 12th naksatra.

மானோட்டி *māṉōṭṭi,* பெ.(n.) மான்கள் பயிரை மேயாமல் வெருட்டும் ஊழியத்திற்காகக் கொடுக்கப்பட்ட நிலம் (R.T.); land given as service-inam for driving the deer away from crops.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ஏழாம் மடலம் - இரண்டாம் பாகம்

(மி - மூ)

Vol. VII - Part - II

து. இராசேந்திரன், இ.ஆ.ப.
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு
2007

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

ஏழாம் மடலம் - இரண்டாம் பாகம்

(மி - மூ)

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

VOL. VII - PART II

துு. இராசேந்திரன், இ.ஆ.ப.
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும்
செய்தித் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு

2007

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 20

முதற் பதிப்பு : 2007

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. VII, Part - II

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு
Government of Tamilnadu

விலை : உருபா 400/–

குறியீட்டெண் : Colon No. P.J1-J, 314"K.M4

வெளியிட்டோர் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

அச்சீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை 600 113.

நூல் கிடைக்குமிடம் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை – 600 113.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி
A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE
VOL. VII- PART II

ஏழாம் மடலம் - இரண்டாம் பாகம்
(மி - மூ)

பதிப்புக் குழு

து. இராசேந்திரன், இ.ஆ.ப.
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும்
செய்தித் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

கூர்ந்தாய்வாளர்
திரு.மா.பூங்குன்றன்

தொகுப்பாளர்கள்
திரு.முத்து.பிச்சை
முனைவர் மு.கண்ணன்
முனைவர் பா.வெற்றிச்செல்வன் (பகுதிப் பொறுப்பாளர்)
முனைவர் ச.செந்திலாண்டவன்
முனைவர் இரா.கு.ஆல்துரை
திரு.கா.இளமுருகு
திரு.ச.கி.கணேசன் (ஓவியர்)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 20.4.2007

அணிந்துரை

அகரமுதலி திட்டத்தின் ஏழு மற்றும் எட்டாம் மடலங்கள் இதழ்களை விரிப்பது கண்டு என் இதயம் பெருமிதம் எய்துகிறது. ஒவ்வொரு மொழியிலும் அதன் சொற்களுக்கு வேர் மூலம் காண முற்படும்போது, பெரும்பாலான சொற்களின் வேர்மூலங்கள் அடுத்த மொழிகளில் சென்று நிற்கும். ஆனால், தமிழில் உள்ள சொற்களின் மூலங்கள் அனைத்தும் தமிழிலேயே அமைந்துள்ளன. இப்போது நடைமுறையில் வழங்குகிற தமிழ்ச் சொற்களும், உருவாகி வருகின்ற கலைச் சொற்களும், தொழில்நுட்பச் சொற்களும் ஏற்கனவே வழங்கிய வேர் மூலங்களிலிருந்து விரிந்தும் பெருகியும் வந்தனவும் வருவனவும் ஆகும்.

அறிவியல் வளர்ச்சி மிகுந்துள்ள இந்நாளில், செய்தித் தொடர்பாலும் தொழில் நுட்ப வளர்ச்சியாலும் உலகம் சுருங்கிவிட்ட நிலையில், ஒரு மொழியில் அண்டையயல் மொழிச் சொற்களெல்லாம் கலந்து விடுவது இயல்பு. இத்தகைய சூழ்நிலையிலும் தமிழ் தனித்தியங்க வல்லதாக நெடுங்காலமாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. இதைத்தான் பாவேந்தர் பாரதிதாசனார் 'தனித்தியங்கும் தன்மை தமிழினுக்கு உண்டு; தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு' என்று ஆணித்தரமாகப் பாடி வைத்தார்.

அவ்வாறு, தமிழ், தான் தனித்தியங்குவது மட்டுமல்லாமல், பிற மொழிகளுக்கும் சொற்களை வாரி வழங்கிக் கொண்டுள்ளது. தமிழகத்திற்கு அப்பால் தனித்தனியே பிரிந்து வழங்கிவரும் திராவிட மொழிகளுக்கெல்லாம் தமிழ்மொழி வேர் மூலங்களை வழங்கியுள்ளதால், அவற்றின் அடிப்படையிலேயே அம்மொழிகளில் சொற்கள் பெருகியுள்ளமையைக் காண்கிறோம். அதனாலேயே, 'தமிழ் திரவிடத்திற்குத் தாய்' என்று தேவநேயப் பாவாணர் பறை சாற்றினார்.

இன்னும் பல மொழிகளிலுமுள்ள சொற்களின் வேர் மூலங்களும் தமிழிலேயே இருப்பதைக் காண நேர்கிறது. இது மொழியியல் உலகின் ஆய்வுப் போக்கைப் பல திருப்பங்களுக்கு உள்ளடக்குகின்றது. நெடுங்காலமாக வழக்கத்தில் இருப்பதும், தனித்தியங்க வல்லதும், பிறமொழிகளுக்குச் சொற்களை வழங்கவல்லதுமான மொழியே 'செம்மொழி' எனச் செம்மொழி இலக்கணம் வரையறுக்கப்படுகின்றது. தமிழின் இலக்கண இலக்கிய நூல்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு மறைக்கப்பட்டிருந்த காலமான கி.பி. 1857 அளவில் தமிழகம் வந்திருந்த கால்டுவெல் பெருமகனார் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் ஓர் ஒப்புமையைக் கண்டறிந்து, "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" (The comparative grammar of Dravidian Languages) என்ற நூலை வெளியிட்டார். அதன் வழி அவர் தன் ஆராய்ச்சியில் கண்ட முடிவுதான், "தமிழ் ஒரு செம்மொழி" என்பதாகும்.

அதன்பின், ஆங்கில அறிஞர்களான, "மெக்ஸின்" போன்றவர்கள் த்மிழ்மொழியில் உ.ள்ள பதிவுகளையும், தமிழர்களின் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றையும் அறிவியல், வானியல் போன்றவற்றில் அவர்கள் பெற்றிருந்த அறிவாற்றலையும் ஆராய முற்பட்டனர். அவற்றின்வழி அந்த அறிஞர் பெருமக்கள் எல்லாம், 'தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழி' (Primary Classical) என்று வழிமொழிந்து சென்றனர்.

இவற்றின் தொடர்ச்சியாகத் தமிழை ஒரு செம்மொழி என அரசே அறிவிக்க வேண்டுமென்று பரிதிமாற் கலைஞர் தன் கோரிக்கையை முதன்முதலில் அரசின் முன்வைத்து வலியுறுத்தினார்.

ஆனால், இதை முழுவதுமாக அறிவியல் வழியாக மொழியியலில் நிறுவுவதற்குச் சொற்களுக்கு உரிய வேர் மூலம் காணும் சொற்பிறப்பியல் பணியே துணை நிற்கும் என்று, தன் வாழ்நாளையே சொல்லாய்வுக்கென ஒப்புவித்துக் கொண்டவர் 'மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்'. இத்தகைய பலரது தொடர்ச்சியான சிந்தனைகளின், செயல்பாடுகளின் மூலமாகத்தான் தமிழ் ஒரு செம்மொழி என்பதற்கான அங்கீகாரத்தை இன்று நாம் வென்றெடுத்துள்ளோம்; வெற்றிவாகை சூடியுள்ளோம்.

தமிழ்மொழியில் வழங்கும் சொற்களுக்கெல்லாம் வேர்மூலம் காண்பது என்பது ஆழ்கடலில் முத்தெடுக்கும் பணியினும் கடினமானது; இந்தப் பணியொன்றே தமிழ் செம்மொழி என்பதை ஏற்கச் செய்யும் முதன்மைப் பணியாகும். இப்பணியில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பல ஆண்டுகள் உழைத்து ஆராய்ச்சி நூல்கள் பலவற்றை உருவாக்கி வெளியிட்டுள்ளார்; 'உயர்தனிச்செம்மொழி' (The Primary Classical Language of the World) என்ற நூலைப் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே வெளியிட்டுள்ளார்.

தேவநேயப் பாவாணரின் இந்தச் சொல்லாராய்ச்சித் திறனை அறிந்து, அவர்தம் பணி தமிழ் உலகிற்குத் தேவை என்று நான் கருதியதால் 8.5.1974 அன்று, 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்ககம்' என்னும் ஒரு துறையைப் புதிதாக நிறுவி, அதற்குப் பாவாணர் அவர்களையே இயக்குநராகவும் நியமனம் செய்து அகர முதலித் தொகுதிகள் வெளிவர ஆவன செய்ததை இவ்வேளையில் மகிழ்வுடன் நினைவு கூர்கிறேன். அதன் பயனாக, பணிகள் சிறப்பாக நிகழ்ந்து முதல் தொகுதி அணியமாகிக் கொண்டிருக்கும் நிலையில் பாவாணர் அவர்கள் திடீரென மறைந்தார்கள். அதற்குப்பின் அவர்தம் நூல்களை அடிப்படையாகக் கொண்டு, அவரின் அணுகுமுறையிலேயே தொடர்ந்து அகர முதலித்திட்டத்தின் அடுத்தடுத்தத் தொகுதிகள் வெளிவரலாயின.

பாவாணர் மறைவுக்குப் பின்னும், ஒவ்வொரு முறையும் அரசுப்பொறுப்பு ஏற்கிற போதும் இந்தத் துறையின் வளர்ச்சியில் நான் மிகுந்த அக்கறை செலுத்தி வந்துள்ளேன். 1996ஆம் ஆண்டில் தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாட்டுக்கு எனத் தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டுச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்திற்குத் தேவையான கூடுதல் பணியாளர்கள், கணிப்பொறியமைப்பு போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

இதுவரை, மும்மூன்று தொகுதிகள் கொண்ட ஆறு மடலங்களாக மொத்தம் 18 தொகுதிகள் சென்ற ஆண்டுவரை வெளிவந்து முடிந்துள்ளன. இப்போது 'ம', 'ய', 'வ' வரிசையில் ஆறு பகுதிகள் வெளிவருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். எஞ்சிய பகுதிகளும் விரைந்து வெளிவர வேண்டும் என்பது என் அவா. இந்த அகரமுதலிப் பகுதிகள் வெளிவர உறுதுணையாய் நின்ற தமிழ் வளர்ச்சி–பண்பாடு (ம) அறநிலையத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் மற்றும் அகரமுதலித் திட்ட இயக்கத்தின் பொறுப்பு இயக்குநர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப. அவர்களுக்கும், நூல்களை உருவாக்கியுள்ள அகரமுதலித் திட்டத்தின் ஆசிரியர், பணியாளர் குழுக்களுக்கும் எனது உளமார்ந்த பாராட்டுகள் உரித்தாகுக.

என்றும்,
அன்புடன்

(மு. கருணாநிதி)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

"முத்தமிழறிஞர்"

கலைஞர் மு. கருணாநிதி



மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

து. இராசேந்திரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையம் (ம) செய்தித் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்,

பதிப்புரை

ஞால முதன்மொழி – தமிழ்!

திராவிடத்திற்குத் தாய் – தமிழ்!!

ஆரியத்திற்கு மூலமொழி – தமிழ்!!!

என்ற கொள்கையைத் தம் வாழ்நாள் முழுக்க நிலை நாட்டியவர் பாவாணர். தமிழ்மொழிக்குச் சொற்பிறப்பியல் அகரமுதலி யொன்று உருவாக்க வேண்டுமென்று 1974ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உணர்ந்து, சொற்பிறப்பியல் அகரமுதலி உருவாக்க வேண்டி, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் தலைமையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தை உருவாக்கினார். அது வளர்ந்து உயிரெழுத்துக்களுக்கு மூன்று பகுதியும், க, ச, த, ந, ப ஆகிய எழுத்துகளுக்கு மும்மூன்று பகுதிகள் மேனி பதினைந்து பகுதிகளுமாகப் பதினெட்டு பகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. அடுத்து 'ம' மடலத்தின் மூன்று பகுதிகளில் மி–மூ வரிசை என்ற இப்பகுதி இரண்டாம் பகுதியாகும். அகரமுதலி வெளியீட்டில் இந்த மி–மூ பகுதி இருபதாவது பகுதியாக வெளியிடப்படுகிறது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி எல்லோருக்கும் பயன்படும் பொது வகையான சொற்பொருளகரமுதலியும் (General purpose Dictionary) ஆய்வாளர்க்கே பயன்படும் சொற்பிறப்பியல் அகரமுதலியும் (Etymological Dictionary) இணைந்த பேரகரமுதலி (Comprehensive Dictionary) யாகையால் பல சொற்களுக்கு நீண்ட விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக *"முக்கழகம், முக்கூடற்பள்ளு, முகம்"* போன்ற சொற்கள் அமைந்துள்ளன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி ஒவ்வொரு மடலமும் அரைக் கலைக் களஞ்சிய வடிவில் அமைந்துள்ளது. வெளிவரவிருக்கும் மடலங்களும் அவ்வாறே அமையவிருக்கின்றன.

மாந்தவினம் அறிவியல் வளர்ச்சியில் வேகமாய் முன்னேற்றமடைந்து வருவது கண்கூடேயாகும். இக்காலத்தில் நகரத்தில் தோன்றும் நாகரிக வளர்ச்சி ஒரு நொடிக்குள் சிற்றூர் மக்களிடையே சென்றடைகிறது. சிற்றூர் மக்கள் முற்காலத்தில் பயன்படுத்திய ஏனங்கள் போன்ற பிறபொருட்களெல்லாம் இன்றைக்குக் காட்சிப் பொருளாக அருங்காட்சியகத்தில் வைக்கப்பட வேண்டிய நிலைக்கு வந்துவிட்டன. ஏழாம் மடலமாகிய மி, மீ, மு, மூ வரிசையில் அரிய படவிளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. பழங்காலத் திருமணத்தின்போது மணமகன், அணிந்த 'மிஞ்சி' என்ற அணிகலனை இன்றைக்குப் பெரும்பாலும் யாரும் அணிவதில்லை. 'மிஞ்சி' என்ற அணிகலன் படமாக வரையப்பட்டு பக்கம் 12இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதுபோலவே மிதிகட்டை (பக்.22), முக்காணி[2] (பக்.81), முக்காலி (பக்.83) போன்ற படங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சிற்றூர் மக்கள் அறிவு சார்ந்த வகையில் வாழ்க்கையோடு ஒட்டி உறவாடும் நல்ல தமிழ்ச் சொற்களும், பயன்படுத்திய பழமொழிகளும் தலைப்புச் சொற்களின் விளக்கத்தில் கையாளப்பட்டுள்ளன.

பழம் பண்பாட்டின் நிலைக்களனாகச் சில சொற்கள் இடம் பெற்றுள்ளன. 'முச்சந்தி மண்' : கண்ணேறு கழிக்கப் பயன்படும் மண். நம் நாட்டில் மூலிகையைப் பற்றிய ஆய்வு கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து வரும் நிலையில் முசுட்டை, முசுமுசுக்கை போன்ற பல மூலிகைகளின் சிறப்புகளும், அவைபோக்கும் நோய்களும் இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

முட்டு என்னும் சொல்லின் கூட்டுச் சொற்களிடையே காணப்படும் சிறு சிறு வேறுபாடுகள் சுட்டிக்காட்டப்படுவது செந்தமிழுக்குச் சிறப்புச் சேர்ப்பதாகும். முட்டுக்கால், முட்டுக்கொடுத்தல், முட்டுச்சட்டம், முட்டுச்சுவர் முதலிய தொடர்ச் சொற்கள். தாங்கல் கொடுத்தலையும்; *முட்டுக்கட்டை, முட்டுத்தொய்வு (மூச்சு விடமுடியாமை), முட்டுப்பாடு* முதலிய தொடர்ச் சொற்கள் தடைபண்ணுதலையும்; *முட்டுமுடுகு, முட்டிடை* முதலிய சொற்கள் வழியிடுக்கத்தையும்; *முட்டுச் சீலை, முட்டுப் பட்டினி, முட்டுப்பாந்தை* முதலிய தொடர்ச் சொற்கள் தீட்டுப்பாட்டையும் விளக்கமாக காட்டுவது தமிழுக்குச் சிறப்புச் சேர்ப்பதுவாகும். தலைப்புச் சொல்லின் விளக்கத்திற்கு அரணாக இலக்கியங்களிலிருந்து மேற்கோள்களும் இணைக்கப்பட்டுள்ளன.

கழகப் புலவர்களின் பெயர்கள் கூடியவரை கிடைத்த தரவுகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன. சிலரின் இயற்பெயர்கள் தெரியாததால் அவர்கள் பாடிய பாடல்களில் காணப்படும் சிறப்பான தொடராட்சிகளையே பெயராகக் கையாண்டனர். இத்தொகுதியில் இவ்வாறு சிறப்புப் பெயர் பெற்ற புலவர்களின் பெயரும் பெயர்க் கரணியமும் விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

மின்மானி, மின்மாற்றி, மின் விசிறி, மின் வாங்கி போன்ற நடைமுறையிலுள்ள புதிய அறிவியற் கருவிகளின் பெயர்களும் படங்களும் இம்மடலத்தில் இடம்பெற்றுள்ளன.

முகம் – என்ற சொல் (பக்.109) தமிழா? வடமொழியா? என்ற ஐயம் அறிஞர் பெருமக்களிடம் காணும் குழப்பமாகும். இக்குழப்பத்திற்கு இப்பகுதியில் விளக்கம் காணப்படுகிறது. இச்சொல் தூய தமிழ்ச் சொல்லே என்பதற்குத் தகுந்த வேர் விளக்கம் சான்றுகளுடன் கூறப்படுகிறது. மேலும் *மிழலை நாடு (பக்.29), முக்குற்றம் (பக்.90), முகத்தலளவை (பக்.102), முத்திரை (பக்.207)* போன்ற சொற்களுக்கு வரலாற்று முறையில், வேர்ச்சொல் விளக்கங்கள் கூறப்படுகின்றன. இனச்சொற்களாகத் திரவிட மொழிகளில் காணும் வடிவங்களும் மேலை ஆரிய மொழிகளில் காணும் வடிவங்களும் எடுத்துக் காட்டப்படுகின்றன (முட்டு^{3} பக்.154).

தமிழ் வளர்ச்சிக்குப பல்லாற்றானும் ஊக்கம் அளித்து வரும் நம் ***மாண்புமிகு முதலமைச்சர்*** அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பகுதியை உருவாக்குவதில் உறுதுணையாக நின்ற பதிப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர்கள், பகுதிப் பொறுப்பாளர், தொகுப்பாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.

7/3/2000

து. இராசேந்திரன்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

மி

மி *mi,* மகர மெய்யும் (ம்) இகர உயிரும் (இ) சேர்ந்து பிறந்த கூட்டெழுத்து; the compound of 'ம்' and 'இ'.

[ம் + இ – மி.]

இவ்வெழுத்து கி.மு.3ஆம் நூற்றாண்டு தொடங்கி இன்றுவரை அடைந்துள்ள மாற்றங்கள்.

கி.மு.3–ஆம் நூற்றாண்டுக் குகைக் கல்வெட்டுகளில் என்பது போன்றும் கி.பி.5ஆம் நூற்றாண்டில்  என்பது போன்றும் கி.பி.7ஆம் நூற்றாண்டில் என்பது போன்றும் கி.பி.8ஆம் நூற்றாண்டில்  என்பது போன்றும் கி.பி.12ஆம் நூற்றாண்டில்  என்பது போன்றும் கி.பி.17ஆம் நூற்றாண்டு முதல் மி என்றும் வழங்கி வருகிறது.

மிக்க[1] *mikka,* கு.பெ.எ.(adj.) 1. மிகுந்த; great much. *"மிக்க பெரும்புகழ் மாவலி" (திவ். பெரியாழ்.1.8:7). "குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்" (குறள், 504).* 2. உயர்ந்த; excellent, superior. *"மிக்க வேதியர்" (திவ். கண்ணிநுண்.9). "மாலைநீ தகைமிக்க தாழ்சினைப் பதிசேர்ந்து புள் ஆர்ப்ப" (கலித்.118:17).*

க. மிக்க

[மிகு →மிக்க.]

மிக்க[2] *mikka,* வி.அ.(adv.) மிக; very. *நீ கூறியது மிக்க சரி.*

[மிகு →மிக்க.]

மிக்ககுளிர்ந்தநிலம் *mikka-kuḷirnda-nilam,* பெ.(n.) மிகவும் குளிர்ச்சியான நிலம்; a kind of chilled land.

[மிக்க + குளிர்ந்த + நிலம்.]

ஆசியாவின் நிலப்பிரிவில் (கண்டம்) உள்ள சைபீரிய நாட்டின் வடபகுதியில் இருக்கும் (வர்க்கோயான்ஸ்பர்க்) இடம்; எல்லாப் பகுதிகளைக் காட்டிலும் குளிர்ச்சி மிகுந்த நிலம் (அபி.சிந்.).

மிக்ககுளிர்வாதம் *mikka-kuḷir-vādam,* பெ.(n.) உடம்பு வியர்த்துக் குளிர்க் காய்ச்சலுடன் தாகமுண்டாகி, பசியற்று சோர்வையுண்டாக்கும் ஒருவகை நோய்; a disease marked by fever, excessive perspiration, thirst, chillness etc. *அவன் பாட்டி மிக்க குளிர்வாதத்தினால் துன்பப்படுகின்றார்.*

[மிக்க + குளிர் + Skt. வாதம்.]

மிக்கசெயல் *mikka-šeyal,* பெ.(n.) 1. அளவிறந்த ஆற்றல்; extraordinary power. 2. பெருந்தன்மை; magnanim y.

[மிக்க + செயல்.]

மிக்கதண்ணீர்வேட்கை *mikka-taṇṇīr-vēṭkai,* பெ.(n.) மிகுதியான தண்ணீர்த் தாகம்; excessive thirst. *மிக்க தண்ணீர் வேட்கை மாடுகளுக்கு இருந்த போதிலும் கூவம் ஆற்றில் ஓடும் அழுக்கு நீரைக் குடிக்காது.*

[மிக்க + தண்ணீர் + வேட்கை.]

மிக்கது *mikkadu,* பெ.(n.) 1. மிகுதியா யிருப்பது; that which is abundant or excessive. 2. சிறந்தது; that which is excellent. *"அதன்கணின்று மீடல் மிக்கது"*

(இறை.3, பக்.44). **3.** ஒன்றின் மேம்பட்டது; that which is superior. **4.** எஞ்சியது; that which remains, as of food after a meal. **5.** மீறுகை (அதிக்கிரமச் செய்கை); that which oversteps the limits, excess; transgression. *"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம் தகுதியான் வென்று விடல்" (குறள், 158).* **6.** வேறானது; that which is different. *"ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்" (திருமந். 1467).* **7.** முறையற்றது (சது.); that which is unjust.

க. மிக்கது; தெ. மிகடா.

[மிகு →மிக்கது.]

மிக்கபெயல் *mikka-peyal,* பெ.(n.) மிகு பெயல் (குறள், 732, உரை) பார்க்க; see *migu-peyal.*

[மிக்க + பெயல்.]

மிக்கவர் *mikkavar,* பெ.(n.) **1.** மிக்கார், 1 பார்க்க; see *mikkār.* **2.** பார்ப்பனன் (திவா.); Brahmins.

[மிகு →மிக்க →மிக்கவர்.]

மிக்கவை *mikkavai,* பெ.(n.) **1.** அடிசில் (அக.நி.), சோறு; cooked rice. **2.** ஊன் (அக.நி.); meat. **3.** நிறைகை; being full; abundance.

க. மிக்கவு.

[மிகு →மிக்க →மிக்கவை.]

மிக்கார் *mikkār,* பெ.(n.) **1.** பெரியோர்; great persons. *"மிக்கா ராரடியானென்னின்" (திருவாச.6:48). "கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற மிக்காருள் மிக்க கொளல்" (குறள், 724).* **3.** மிக்கோர் பார்க்க; see *mikkōr.* **4.** பெரும்பாலோர்; majority of persons, most people. *"மிக்கீரு நொந்தீர்கள் போலும்" (கந்தபு. சிங்கமு.374).* **5.** தீமை செய்பவர்; evil-doers. *"மிக்கார்க் குதவார் விழுமியோர்" (நன்னெறி.36).* **6.** பகைவர் (திவா.); foes, enemies.

[மிகு →மிக்க →மிக்கார்.]

மிக்கான் *mikkāṉ,* பெ.(n.) மிக்கார் பார்க்க; see *mikkār.*

[மிக்கார் →மிக்கான்.]

மிக்கிது *mikkidu,* வி.எ.(adv.) மிகுதியான பொருளை, இதனில் மிக்கதை; that which is too much. *'மாவின் போகத்தில், ஸ்ரீ கோயிலில் கணபதியார்க்கு அமுது செய்வதாகவும், மிக்கிது கொண்டு சித்திரை உத்திரத்திந் நான்று அமுது செய்வதாகவும்' (செந்தலைக் கல்வெட்டு. கல்வெட்டு அறிக்கை எண்.7/1899) (கல்.அக.)*

மிக்கிளமை *mikkiḷamai,* பெ.(n.) மிகுந்த கட்டிளமை (வின்.); extreme youth.

[மிகு → மிக்கு + இளமை.]

மிக்கு¹ *mikku,* பெ.(n.) கரும்பு; sugarcane - *Saccharam officinarum* (சா.அக.).

[மிகு → மிக்கு. இனிப்புச் சுவை மிகுந்தது.]

மிக்கு² *mikku,* கு.வி.எ.(adv.) மிக பார்க்க; see *miga.* *"அச்ச மிக்குற்றுழியும்" (சி.போ. பா.6:1/ பக்.120).*

தெ. மிக்கிலி; க. மிக்கு.

[மிகு → மிக்கு.]

மிக்குண்டம் *mikkuṇḍam,* பெ.(n.) மிகுண்டம் பார்க்க; see *miguṇḍam* (சா.அக.).

மிக்கோர் *mikkōr,* பெ.(n.) அறிஞர்; அறிவுடையோர்; பெரியோர் (திவா.); wise person. *"மிக்கோ ருறையும் விழுப்பெருஞ் செல்வத்து" (மணிமே.22:105).*

[மிகு →மிக்கு→மிக்கோர்.]

மிக்கோன் *mikkōṉ,* பெ.(n.) பெரியோன்; great person. *"மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்வாக" (நள.கலிநீங்கு.71). "மிக்கோன் கூறிய மெய்ம்மொழி ஓம்பி" (சிலப்.15:174). "மிக்கோன் பாதம் விழுந்தனர் இரப்ப" (மணிமே.12:74).*

[மிகு →மிக்கு→மிக்கோன்.]

மிக[1] *miga,* கு.வி.எ.(adv.) மிகவும்; very much; abundently. *"மிகத்தாம் வருந்தியிருப்பரே" (நாலடி, 31). "அரும்பே முன்னும் மிகச் சிவந்தனவே" (குறுந்.94:2). "உகந்தவை மொழியவு மொல்லான் மிகக் கலுழ்ந்து" (நெடுநல்.156).*

[மிகு → மிக..]

மிக[2] *miga,* கு.வி.எ.(adv.) 1. தன்மையின் மிகுதியைக் காட்டுவதற்கும் ஒன்றிற்கு அழுத்தம் தந்து கூறுவதற்கும் பயன்படுத்தப் படுவது; used to indicate the highest degree of that which it qualifies or to intensify something which qualities. *அவர் மிக நல்லவர். நீ கூறியது மிகச்சரி.* 2. அடைக்கு அடையாக வரும்போது மிகுதியைக் காட்டுவது; when it precedes an attribute used to indicate the enormity or immensity of something. *மிகப் பெரிய பொறுப்பு.*

[மிகு → மிக.]

மிகச்சடைச்சி *miga-c-caḍaicci,* பெ.(n.) வாய்க்காற் சடைச்சி; a pith plant found grown on the sides of canals, *Aeschynomene Palurose* (சா.அக.).

மிகப்படச்சொல்லல் *miga-p-paḍa-c-collal,* பெ.(n.) மிகைப்படக்கூறல் (யாழ்.அக.) பார்க்க; see *migai-p-paḍa-k-kūṟal.*

[மிகை+படு+சொல்லல்–மிகைப்படுசொல்லல் →மிகப்படச்சொல்லல் (உ.வ.).]

மிகல் *migal,* பெ.(n.) 1. மிகுகை; being plentiful or abundant. 2. பெருமை; greatness. *"வேத்தவை காவார் மிகன் மக்கள்" (நீதிநெறி.26). "இகலதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே மிகலூக்கும் தன்மை யவர்" (குறள், 855). "வருதார் தாங்கி யமர் மிகல் யாவது" (புறநா.62.1). "மேனிலை மிகலிகலின் மிடைகழி பிழிவு மேற்சென்று" (கலித்.104:32).* 3. வெற்றி; victory. *"மிகன் மேவன் மெய்ப் பொருள் காணார்" (குறள், 857).* 4. மிகற்கை பார்க்க; see *migaṟkai. "வல்லெழுத்து மிகலே" (தொல்.எழுத்து.412).*

க. மிகில்; தெ. மிக்கிலி.

Goth. mikilis; **Icel.** mjok; **A.S.**micel, **O.E.** Michel, muchel; **E.**much.

[மிகு →மிகல்.]

மிகவல்லோர் *miga-vallōr,* பெ.(n.) 1. அதி வீரர்; warrior. 2. அறிஞர்; wisemen.

[மிகு → மிக + வல்லோர்.]

மிகவு *migavu,* பெ.(n.) மிகுதி, 1 பார்க்க; see *migudi,* 1. *'தன்வலி மிகவின்கண்' (குறள், 471, உரை).*

[மிகு →மிக→மிகவு.]

மிகவும் *migavum,* வி.அ.(adv.) மிக பார்க்க; see *miga.*

[மிக → மிகவும்.]

மிகற்கை *migaṟkai,* பெ.(n.) வல்லின எழுத்து இரட்டிக்கை; doubling, as of hard consonant. *"இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்" (தொல்.எழுத்து.157).*

[மிகல் → மிகற்கை.]

மிகன்மக்கள் *migaṉ-makkaḷ,* பெ.(n.) பெருமையிற் சிறந்தோர்; great man.

[மிகன் + மக்கள்.]

மிகனித்தபம் *migaṉi-t-tabam,* பெ.(n.) மூத்திரக் குழலில் எற்படும் அழற்சி; inflammation of the urinary passage, *Uretheritis* (சா.அக.).

மிகாவண்ணம் *migāvaṇṇam,* பெ.(n.) தேரையர் செய்த தமிழ் மருத்துவ (வைத்திய) நூல்; a medical treatise in Tamil by Theraiyar (சா.அக.)

மிகு[1]–தல் *migu,* 21 செ.கு.வி.(v.i.) 1. அதிகமாதல்; to exceed, surpass; to be in excess. *"முந்திரிமேற் காணி மிகுவதேல்" (நாலடி, 346). "செருமிகு சினவேந்தன் சிவந்திறுத்த புலம் போல" (கலித்.13:1).* 2. பெருகுதல்; to grow, increase. *"காப்பு மிகின்" (இறை.16).* 3. பொங்குதல் (பிங்.); to swell. 4. எழுத்து இரட்டித்தல்; to be doubled, as a letter. *"மெல்லெழுத்து மிகினும்" (தொல்.எழுத்து.341). இகர ஈற்று வினையெச்சத்தின் பின் ஒற்று மிகும்.* 5. நெருங்குதல்; to crowd. *"தலைத்தலை மிகூஉம்" (பரிபா.16:14).* 6. சிறத்தல்; to be great, to be excellent. *"அதன்க ணின்று மீடல் மிக்கது" (இறை.3 பக்.44).* 7. ஒன்றின் மேம்படுதல்; to be superior. 8. எஞ்சுதல்; to remain; to be left over; to be super fluous. 9. செருக்குறுதல்; to be self-conceited arrogant. *"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம் தகுதியான் வென்று விடல்" (குறள், 158).* 10. தீமையாதல்; to be evil. *"மிக்கவை செய்தாரை" (குறள்.158).*

க. மிகுற்; தெ. மிகுலு.

[மீ →மிகு →மிகு–தல் (சு.வி..)]

மிகு[2]–த்தல் *migu-,* 18 செ.குன்றாவி.(v.t.) 1. அதிகப்படுத்துதல்; to augment, make large. *"பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம் சாலமிகுத்துப் பெயின்" (குறள், 475).* 2. விஞ்சுதல்; to excel, surpass. 3. பெருக்குதல்; to increase. 4. பெருமையாகக் கருதுதல்; to regard with pride. *'இவ்வாறு செய்தேமென்று தன்னை மிகுத்ததுவும்' (புறநா.77, உரை).* 5. மிகுத்து–தல் பார்க்க; see *miguttu-.*

க. மிகிசு.

[மீ →மிகு→ மிகு–த்தல்.]

மிகு[3] *migu,* இடை.(part.) நிறைந்த; full of; ful. *வண்ணமிகு படை அணிவகுப்பு. அருள் மிகு தெய்வம்.*

[மீ → மிகு.]

மிகு[4] *migu,* கு.பெ.எ.(adj.) பெரிய; great. *மிகு உயரமான ஆள்.*

[மீ →மிகு.]

மிகு[5] *migu,* இடை.(part.) ஓர் உவம உருபு; a word of comparison. *"மிகுதலுங் குறைதலும் தாழ்தலும் பான்மாறு படுதலும் பாகுபாடுடைய" (தண்டி.34).*

[மீ → மிகு.]

மிகுக்கு–தல் *migukku-*,18 செ.குன்றாவி. (v.t.) மிகு–த்தல் பார்க்க; see *migu-*.

[மிகு →மிகுக்கு→மிகுக்கு–தல்.]

மிகுகடும்பத்தியம் *migu-kaḍum-pattiyam,* பெ.(n.) உப்பு, புளி காரமில்லாமல் வெந்நீர் மட்டும் சோற்றுடன் கலந்து உண்ணுகை; very strict diet without salt, tamarind and chilly.

*[மிக + கடும் + **Skt.** பத்தியம்.]*

மிகுகளிப்பு *migu-kaḷippu,* பெ.(n.) பெரு மகிழ்ச்சி; pleasure, great pleasure.

[மிகு + களிப்பு. களிப்பு = மகிழ்ச்சி.]

மிகுகொடையாளன் *migu-koḍai-y-āḷaṉ,* பெ.(n.) 1. கொடையிற் சிறந்தவன் (பிங்.); great in bounty. 2. கன்னன் (கர்னன்); *kaṉṉaṉ*.

[மிகு[1] + கொடையாளன்.]

மிகுண்டம் *miguṇḍam,* பெ.(n.) சாரணை (சங்.அக.); a pungent medicinal creeper - *Trianthema mongyna.*

மிகுண்டாகிதம் *miguṇḍāgidam,* பெ.(n.) பெரும் பூனைக்காலி; a climbing plant used in medicine (சா.அக.).

மிகுத்தம் *miguttam,* பெ.(n.) மிகுதி (வின்.); abundance.

[மிகு → மிகுத்தம்.]

மிகுத்திகம் *miguttigam,* பெ.(n.) வில்வம் (மூ.அ.); bael tree - *Aegle marmelos.*

மிகுத்தியல்[1] *miguttiyal,* பெ.(n.) மிகுத்திகம் பார்க்க; see *miguttigam.*

மிகுத்தியல்[2] *miguttiyal,* பெ.(n.) பெரிய மாவிலிங்க வகை (L.); a species of garlic pear.

மிகுத்து–தல் *miguttu-*,5 செ.குன்றாவி. (v.t.) மிச்சப்படுத்துதல்; to save, spare; to leave over.

[மிகு[1] →மிகுத்து →மிகுத்து–தல்.]

மிகுத்துச்சொல்லல் *miguttu-c-collal,* பெ.(n.) 1. மிகைபடுத்திக் கூறுகை; making emphatic mention. 2. புகழ்ந்து கூறுகை (யாழ்.அக.); prise, appreciation.

[மிகுத்து + சொல்லல்.]

மிகுதம் *migudam,* பெ.(n.) மிகுதி (வின்.); abundance; profusion; redundance.

[மிகு[1] →மிகுதம்.]

மிகுதி *migudi,* பெ.(n.) 1. அதிகம்; much, abundance. *"மிகுதிகண் டன்றோ விலனே நீநின் பல்பொருள் வேட்கையிற் சொல்வரை நீவி" (அகநா.379:16, 17). இந்தப் பகுதியில் துணி நெய்வதைத் தொழிலாகக் கொண்ட மக்கள் மிகுதி. வலி மிகுதியால் துடித்தாள். எப்போதும் கணக்கில் மட்டும் மிகுதியான மதிப்பெண்கள் வாங்கி விடுவான்.* 2. மிகற்கை (தொல்.எழுத்து.411) பார்க்க; see *migaṟkai.* 3. நிறைவு (வின்.); fulness, satiety. 4. திரள் (வின்.); crowd. 5. பொலிவு (வின்.); increase. 6. மீதி; excess, remainder, surplus. 7. ஒண்மை (திவா.); excellence. 8. செருக்கு; arrogance. *"மிகுதியான் மிக்கவை செய்தாரை" (குறள், 158).*

[மிகு → மிகுதி.]

மிகுதிக்குறை *migudi-k-kuṟai,* பெ.(n.) ஏறத்தாழ நிலத்தை நேரில் அளந்து கணக்கிட்டு எழுதும்போது இவ்வாறு குறித்தல் ஆவண வழக்காகும்; a

measurement of land unite more or less as on script. *"இன்னான்கெல்லையிலும் உட்பட்ட கருத்தளவில் மிகுதிக் குறை உள்ளடங்க ஊர்க்கொல்லையும்" (சிதம்பரம் கல்வெட்டு.தெ. கல்.தொ.12, கல்.171) (கல்.அக.).*

[மிகுதி + குறை.]

மிகுதிக்குறைமை *migudi-k-kuṟaimai,* பெ.(n.) மிகுவதும் குறைவதும்; excess or deficiency. *"மிகுதிக் குறைமையும்" (தெ.இ. கல்.2:425).*

[மிகுதி + குறைமை. குறைவு →குறைமை.]

மிகுதிச்சொல் *migudi-c-col,* பெ.(n.) வரம்பு கடந்த சொல்; vaunt, boast. *"விழுமியோ ரெக்காலுஞ் சொல்லார்" (நாலடி, 346).*

[மிகுதி + சொல்.]

மிகுதியாய் *migudi-y-āy,* கு.வி.எ.(adv.) மிகுதியும் பார்க்க; see *migudi-y-um.*

[மிகுதி → மிகுதியாய்.]

மிகுதியும் *migudi-y-um,* கு.வி.எ.(n.) 1. மிகவும் (வின்.); greatly, exceedingly. 2. பெரும்பாலும் (உ.வ.); usually, generally.

[மிகுதி →மிகுதியும்.]

மிகுந்த *migunda,* பெ.எ.(adj.) 1. அதிக அளவிலான, அதிக நிறைவான; used to express the excess of something, extreme, much. *தலைவர் மிகுந்த சினங்கொண்டு பேசினார். அவர் அறிவில் மிகுந்தவர். பசி மிகுந்து காணப்பட்டார். உதவிக்கு மிகுந்த நன்றி. "மிகுந்தும் குறைந்தும் நோய் செய்யும்" (பழ.). "வண்ணம் மிகுந்த அண்ணல் யானை" (நற்.273:6).*

2. மிச்சமான; remaining. *மிகுந்த பொருளை என்ன செய்வது? (உ.வ.).*

மறுவ. மீந்த.

[மிகு → மிகுந்த.]

மிகுந்தபண்டம் *migunda-paṇḍam,* பெ.(n.) 1. எஞ்சிய பண்டம்; remaining substance after using. 2. அதிகமான பொருள்; excessive substance (சா.அக.).

[மிகு → மிகுந்த + பண்டம்.]

மிகுந்தவணம் *migunda-vaṇam,* பெ.(n.) தண்ணீர் விட்டான் கொடி (மலை.); thorny claimber, water root-*Asparagusracemosa* (சா.அக.).

[மிகுந்த + வணம்.]

மிகுந்திகா *migundigā,* பெ.(n.) பெரு மூங்கில்; large bamboo (சா.அக.).

[மிகு →மிகுந்திகா = நீளம் மிகுந்த மூங்கில்.]

மிகுந்திகி *migundigi,* பெ.(n.) மிகுந்த வணம் பார்க்க; see *migundavaṇam* (சா.அக.).

மிகுப்பலத்தம் *migu-p-palattam,* பெ.(n.) காற்றோட்டி என்னும் செடிவகை (மலை.); Ceylon caper-*Capparis Zeylanica.*

மிகுபத்தம் *migu-pattam,* பெ.(n.) பொன்னாவிரை; tanners cassia - *Cassia auriculata* (சா.அக.).

மிகுபத்தரி *migu-pattari,* பெ.(n.) காற்றோட்டி என்னும் கொடி வகை; thorny caper-*Capparis horrida* (சா.அக.).

மிகுபலம் *migu-palam,* பெ.(n.) கோதுமை; wheat-*Triticum vulgare* (சா.அக.).

மிகுபலவந்தம் *migu-palavandam,* பெ.(n.) ஆதொண்டை; a thorny shrub, thorny caper, - *Capparis horrida alias C.zeylanica* (சா.அக.).

மிகுபித்தர் *migu-pittar,* பெ.(n.) பூனைக்காஞ் சொறி; small climbing nettle (சா.அக.).

மிகுபெயல் *migu-peyal,* பெ.(n.) மிகுமழை பார்க்க; see *migu-maḻai.*

[மிகு + பெயல். பெயல் =மழை.]

மிகுமணம் *migu-maṇam,* பெ.(n.) விரிந்த பூ; blossomed flower. *உலகம் சிரித்தது என்ற தொடரில் உலகம் என்பது அதில் வாழும் மக்களைக் குறித்தது போல, இங்கு மிகுந்த மணம் என்பது, மணமுடைய மலரைக் குறித்தது எனலாம் (சா.அக.).*

[மிகு + மணம்.]

மிகுமழை *migu-maḻai,* பெ.(n.) அதிக மழை (சூடா.); excessive rains.

[மிகு + மழை.]

மிகுமின்கடத்தி *migu-miṉ-kaḍatti,* பெ.(n.) மிகக் குறைந்த வெப்ப நிலையில் மின்சாரத்தைத்தடை இல்லாமல் கடத்தும் பொருள்; super conductor.

[மிகு + மின் + கடத்தி.]

மிகுவெறி *migu-veṟi,* பெ.(n.) பெருங் கிறுக்கு, கோட்டி (பைத்தியம்); great lunacy. *அவன் மிகுவெறி கொண்டவன்; அவனிடத்தில் பார்த்து பேசு (சா.அக.).*

[மிகு + வெறி. வெறி = கிறுக்கு, கோட்டி.]

மிகை[1] *migai,* பெ.(n.) 1. மிகுதி; abundance, excess. *"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்" (குறள், 504).* 2. சிறந்த பொருள்; excellent thing. *"மிகையிரண்டுள" (இரகு.நகரப்.5).* 3. மேன்மை; excellence. *"காரியங்கள் மிகை படர்ந்து" (விநாயகபு.நைமி.25).* 4. பெருமை; greatness. *"மிகை மக்களால்" (நாலடி, 163).* 5. தேவையற்றது; that which is unnecessary, superfluous. *"யான் மிகையோ" (கம்பரா. ஆரணிய. சூர்ப்.139).* 6. வேண்டு மளவின் மிக்கதென்னுங் குற்றம்; superfluity; redundancy, a defect in argumentation. *"முதற் கடவு ளொருவனே யமையுமாகலின் வேறும் அத்தன்மைய ருண்டெனின் மிகையென்னுங் குற்றமாம்" (சி.போ.பா.1:3, பக்.52, சுவாமிநா.).* 7. மிஞ்சு பொருள் (உரி.நி.); that which remains or is left over, remainder. 8. அதிகப்படியானது; extra. *"மிகைக்கை காணாது" (பெருங். உஞ்சைக். 43:149). "உழைக்கோர் புள்ளி மிகையன்று" (திவ்.பெரியாழ்.5, 1, 2). மிகைப்படச் சொல்லேல் (பழ.).* 9. செருக்கு; arrogance. *"மிகை நடுக்கெனா" (தொல். பொருள்.260).* 10. தீச்செயல்; evil deed. *"மிகை பல செய்தேன்" (தேவா.1115, 6).* 11. தவறு; fault, defect, error. *"மிகை சீறுபு" (சீவக.281).* 12. தண்டனை; punishment. *"தந்தை யின்ன மென்ன மிகை செய்யினும்" (பிரபோத.4:18).* 13. துன்பம் செய்கை (அக.நி.); troubling, torturing. 14. வருத்தம் (அ.க.); pain. 15. துன்பம் (யாழ்.அக.); sorrow, affliction. 16. கேடு (வின்.); destruction. 17. உண்மையில் இருப்பதைக் காட்டிலும் அதிகப்படுத்தப் பட்டது, ஒவ்வாத முறையில் அதிகப்படுத்தப் பட்டது; exaggeration, to excess, too much, that which is over

done. *அவர் எழுத்தாளருக்கெல்லாம் எழுத்தாளர் என்றால் அது சற்றும் மிகை இல்லை. அந்த குணச்சித்திர நடிகரின் மிகையான நடிப்பு எரிச்சலைத்தான் கிளப்பியது. கற்றோர் தன்னைத்தானே மிகைப்படுத்திப் பேசுதல் கல்வி கற்றதற்கு அழகல்ல.*

க. மிகெ.

[மிகு → மிகை.]

மிகை²–த்தல் *migai-*, 4 செ.கு.வி.(v.i.) 1. அதிகமாதல்; to increase, swell. 2. செருக்குறுதல்; to be proud. *'மிகைத்துச் செல்லும் படை' (புறநா.71, உரை).*

[மிகு → மிகை.]

மிகைசொல்(லு)–தல் *migai-col-*, 13 செ.கு.வி.(v.i.) பொய்க்குற்றஞ்சாட்டுதல் (வின்.); to bring a false accusation.

[மிகைக + சொல்(லு)–தல்.]

மிகைபடக்கூறல் *migai-paḍa-k-kūṟal*, பெ.(n.) நூற்குற்றம் பத்தனுள் வேண்டுமளவின் மிக்கதைக் கூறுங் குற்றம் (நன்.12); redundancy, a defect in literary composition, one of ten *nūṟ-kuṟṟam.*

[மிகைபடு + கூறல் – மிகைபடுகூறல் → மிகைபடக்கூறல்]

'குன்றக் கூறன் மிகைபடக் கூறல்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தல் மயக்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
சென்று தேய்ந் திறுத னின்றுபய னின்மை
என்றிவை யீரைங் குற்ற நூற்கே' (நன்.12).

மிகைபடு–தல் *migai-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. அதிகப்படுதல்; to increase; to be excessive. 2. குற்றத்திற்கு உள்ளாதல் (யாழ்.அக.); to be at fault.

[மிகை + படு–தல்.]

மிகைபோடு–தல் *migai-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) மிகைசொல்(லு)–தல் பார்க்க; see *migai-col-.*

[மிகை + போடு–தல்.]

மிகைமொழி *migai-moḻi*, பெ.(n.) உயர்வு நவிற்சியணி (பிங்.); hyperbole.

[மிகை + மொழி.]

மிகையுவமை *migai-uvamai*, பெ.(n.) உவமானம் உவமேயம் இரண்டிற்கும் அடிப்படை வேறு என்பதன்றி வேற்றுமை யில்லையென்னும் உவமையணி (வீரசோ. அலங்.14, உரை); a simile which states that there is no difference between *uvamāṉam* and *uvamēyam* except in their *loci.*

[மிகை + உவமை.]

உவமையின் வகைகள்: 1. புகழ்ச்சி உவமை; 2. பழிப்புவமை; 3. விரோத உவமை; 4. கருத்துவமை; 5. இசையுவமை; 6. உண்மை உவமை; 7. ஐயவுவமை; 8. இகழ்ச்சியுவமை; 9. எதிர்ப்பொருளுவமை; 10. அற்புதவுவமை; 11. நோக்குவமை; 12. இதரே தரவுவமை; 13. மிகையுவமை; 14. பண்புவமை; 15. உயர்வுவமை; 16. நியமவுவமை; 17. அநியமவுவமை; 18. தடையுவமை; 19. தெற்றுவமை; 20. சிலேடை உவமை; 21. துணிவுவமை; 22. உம்மையுவமை; 23. பொருளுவமை; 24. ஒப்புவமை; 25. கூட்டவுவமை; 26. அபூதவுவமை; 27. வாக்கியப் பொருளுவமை; 28. கோவையுவமை; 29. காரணவுவமை;

30. மயக்க வுவமை; 31. பலவியலுவமை; 32.விக்கிரியவுவமை; 33. சந்தானவுவமை (வீரசோ. அலங்.14).

மிகையுவமைக்கு எடுத்துக்காட்டு: *"நின்முகங் கண்டதுவு நின்கண்ணே திங்களையும் விண்மிசையே கண்டதுவு மிக்கு"* இது மிகையுவமை.

"இவ்வயிற் கண்டது பொருளையும் பொருவையு மிவ்வயிற் கண்டதென் பதுமிகையுவமை" எனக் கொள்க.

இவ்வுவமையைத் தண்டியாசிரியர் அதிசய வுவமை என்று சொல்லுவர் (வீரசோ.அலங்.14) தண்டியலங்காரம் கூறும் உவமை வகைகள்:

1. விரியுவமை; 2. தொகையுவமை, 3. இதரவிதரவுவமை; 4. சமுச்சயவுவமை; 5. உண்மையுவமை; 6. மறுபொருளுவமை; 7. புகழுவமை; 8. நிந்தையுவமை; 9. நியமவுவமை; 10. அநியம வுவமை; 11. ஐயவுவமை; 12. தெரிதருதேற்ற வுவமை; 13. இன்சொல்லுவமை; 14. விபரீத வுவமை; 15. இயம்புதல் வேட்கை யுவமை; 16. பலபொருளுவமை; 17. விகார வுவமை; 18. மோலக வுவமை; 19. அபூத வுவமை; 20. பலவயிற்போலி யுவமை; 21. ஒருவயிற்போலி யுவமை; 22. கூடாவுவமை; 23. பொது நீங்குவமை; 24. மாலையுவமை (தண்டி.32).

இவ்வுவமை அணி மேலும் அற்புதம், சிலேடை, அதிசயம், விரோதம், ஒப்புமைக் கூட்டம், தற்குறிப்பேற்றம், விலக்கு, ஏது என்னும் எட்டு அணிகளோடும் சேர்ந்து வரும் (தண்டி.33).

மிச்சகம் *miccagam,*பெ.(n.) எலுமிச்சை; lime fruit (சா.அக.).

மிச்சங்காய் *miccangāy,* பெ.(n.) எலுமிச்சங்காய்; lime fruit (சா.அக.).

மிச்சஞ்சொச்சம் *miccañ-joccam,*பெ.(n.) மீதி (வின்.); anything left over, that which can be spared. *"மிச்சஞ் சொச்சம் வைக்காமல் உண்டு விட்டான்".*

[மிச்சம் + சொச்சம் (மரபுத் தொடர்).]

மிச்சப்படுத்து-தல் *micca-p-paḍuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) செலவாவதைத் தவிர்த்தல், சேமித்தல்; to save. *குளிர் காலத்தில் குறைந்த விலையில் மின் விசிறி வாங்கிப் பணத்தை மிச்சப்படுத்தலாம். எங்கள் குறிப்பைப் பின்பற்றினால் எரிபொருளை மிச்சப்படுத்தலாம். ஒரு சிறந்த பெண்ணானவள் தன் கணவனின் மாத ஊதியத்தில் ஒரு பங்கை மிச்சப்படுத்தி குடும்பம் நடத்துவாள். காக்கையானது தான் உண்ணும் உணவில் ஒரு பகுதியை மிச்சப்படுத்தித் தன் குஞ்சுக்கு ஊட்டும்.*

[மிச்சம் + படுத்து-தல்.]

மிச்சம்[1] *miccam,*பெ.(n.) 1. செலவழித்தது, எடுத்தது, கழித்தது போக தங்கியிருப்பது; மீதி; what is left over. *காய்கறி வாங்கியபின் இரண்டு ரூபாய் தான் கையில் மிச்சம் இருந்தது. சாப்பாட்டுத் தட்டில் உள்ள உணவு வகைகளில் எதையும் மிச்சம் வைக்காமல் சாப்பிடு.* 2. ஒரு முழுவேலையில் கொஞ்சம் செய்யப்படாமல் இருக்கும் எஞ்சிய வேலை; remainder. *இந்த வேலையை இதோடு நிறுத்திக் கொண்டு மிச்சத்தை நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம். படத்தில் மிச்சத்தையும் வரைந்து முடி.* 3. ஒரு செயலுக்கு எதிர்பார்ப்பது ஒன்றாகவும் கிடைப்பது வேறொன்றாகவும் இருப்பதைச் சுட்டிக் காட்டுவது, ஒட்டு மொத்தமாகக் கடைசியில் கிடைத்த பயன்; all that remains. *சந்து (சமாதானம்) செய்யப் போய்*

நான் அடி வாங்கியதுதான் மிச்சம். பணத்துக்காக அலைந்ததுதான் மிச்சம். 4. அதிகம்; excess. *அவன் மிச்சமாய் எடுத்துக்கொணடான்.*

ம. மிச்சம்

[மிஞ்சு + அம் – மிச்சம் (சு.வி.).]

மிச்சம்² *miccam,* வி.அ.(adv.) 1. மிக; very. *மிச்சம் பெரிய வீடு. மிச்சம் நல்ல சாப்பாடு.* 2. நிறைய; many. *உங்களைப் பார்த்து மிச்சம் நாளாச்சே?*

[மிஞ்சு + அம் – மிச்சம் (சு.வி.).]

மிச்சம்³ *miccam,* பெ.(n.) 1. பொய்; lie; falsity. *'மிச்ச நீங்குதலும்' (திருநூற்.13, உரை).* 2. பொய்யறிவு; false knowledge.

மிச்சம்பிடி–த்தல் *miccam-pidi-,* 4 செ. குன்றாவி. (v.t.) 1. சேமித்தல்; செட்டாயிருந்து பொருள் சேர்த்தல் (கல்வி.வி.1, 1, 2); to scrape up, save by means of one's thrift. 2. மிச்சப்படுத்துதல்; save money. *இப்போதே மிச்சம் பிடித்துக் காசு சேர்த்தால் பிற்காலத்தில் உனக்கு உதவும்.*

[மிச்சம் + பிடி–த்தல்.]

மிச்சம்மீசாடி *miccam-mīšādi,* பெ.(n.) தேவைக்கும் அதிகமானப் பொருள்; remaining product (வட்.வழ.அக.).

[மிச்சம் + மீசாடி.]

மிச்சமீதி *miccamīdi,* பெ.(n.) மிகக் குறைந்த அளவில் அல்லது எண்ணிக்கையில் எஞ்சியிருப்பது; the left-overs; the remains of something. *மாலையில் சோற்றுப் பானையில் மிச்சமீதி ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தாள். எனது தாய் மிச்சமீதி உள்ள காசினை நான் செலவு செய்து விடுவேன் என்று சொல்லி வாங்கிக் கொண்டாள்.*

[மிச்சம் + மீதி.]

மிச்சவாரம் *micca-vāram,* பெ.(n.) பயிரிடுஞ் செலவு தீர்வை முதலியன கழித்து வயலிலிருந்து கிடைக்கும் வருவாய் (நாஞ்.); net income from a field.

[மிச்சம் + வாரம். வாரம் = வருவாய்.]

மிச்சிரகம் *micciragam,* பெ.(n.) கணித வகையுளொன்று (யாப்.வி.528); a mode of calculation.

மிச்சிரகெந்தகம் *miccira-kendagam,* பெ.(n.) அரிதாரம்; yellow orpiment (சா.அக.).

மிச்சில் *miccil,* பெ.(n.) 1. எஞ்சிய பொருள்; remainder. *"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்" (குறள், 85). "கொள்ளாமிச்சில்" (புறநா.23:6). "சேடுசினை யுரீஇ உண்ட மிச்சில்" (அகநா. 331:4). "வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்" (குறுந்.56:1). "ஆர்ந்தன வொழிந்த மிச்சில் சேய்நாட்டு" (நற்.43:4).* 2. எச்சில் (பிங்.); leavings, what is left after a meal. *"உண்டொழி மிச்சிலும்" (சிலப்.15:169).* 3. கரி (தைலவ.தைல.); charcoal, as the remains of fire.

[மிஞ்சு + இல் – மிச்சில் (சு.வி.57).]

மிச்சில்சீப்பவர் *miccil-cīppavar,* பெ.(n.) எச்சில் இலை முதலியன வெடுத்து இடத்தைத் தூய்மை செய்வோர்; servants who remove the leaves, plates, etc., and clean the floor after a meal. *"மிச்சில் சீப்பவர்" (சீவக.832).*

[மிச்சில் + சீப்பவர்.]

மிச்சு *miccu*, பெ.(n.) விலாமிச்சு; a grass with fragrant roots-*Khus khus - Vetiveria zizanioides* (சா.அக.).

மிச்சை¹ *miccai*, பெ.(n.) 1. மிச்சம் ², 1 பார்க்க (பிங்.); see *miccam², 1*. 2. அறியாமை; ignorance. 3. வறுமை (திவா.); poverty.

மிச்சை² *miccai*, பெ.(n.) 1. எலுமிச்சை; lime. 2. விலாமிச்சை; a grass with fragrant roots-*Khus khus - Vetiveria zizanioides*. 3. உத்தாமணி; a twining shrub - *Demia extensa* (சா.அக.).

மிச்சை³ *miccai*, பெ.(n.) இலாமிச்சை (தைலவ. தைல.); cuscus-grass.

[இலாமிச்சை → மிச்சை.]

மிசாதாரம் *miśādāram*, பெ.(n.) மரமஞ்சள்; tree turmeric (சா.அக.).

மிசி *miśi*, பெ.(n.) 1. தாளிசபத்திரி; a medicinal leaf of a shrub - *Flacourtia cataphracta*. 2. சதகுப்பை; dill seed - *Anethum A.sowa* (சா.அக.).

மிசிகம் *miśigam*, பெ.(n.) பாம்புவளை; snake hole (சங்.அக.).

மிசிசாரம் *miśi-śāram*, பெ.(n.) ஒருவகைச் சிற்பநூல்; a kind of architectural book (அபி.சிந்.).

மிசிரகம் *miśiragam*, பெ.(n.) தாழ்ந்த வங்கம்; low grade lead (சா.அக.).

மிசிரா *miśirā*, பெ.(n.) சின்ன முள்ளங்கி; a kind of radish (சா.அக.).

மிசிரிப்பருப்பு *miśiri-p-paruppu*, பெ.(n.) சாலாமிசிரி; salep orchid (சா.அக.).

சாலாமிசிரி = எகிப்து நாட்டு கிழங்கு வகை.

மிசுக்கன் *miśukkaṉ*, பெ.(n.) 1. ஈனன்; vile or worthless person. 2. வறியவன்; poor man.

[பிசுக்கர் = இழிந்தவன், பயனற்றவன், ஏழை. பிசுக்கர் →பிசுக்கன் →மிசுக்கன்.]

மிசுக்கு *miśukku*, பெ.(n.) கணக்கு; computation. *புள்ளிமிசுக்கு, ஒப்படிமிசுக்கு.*

மிசுக்கை *miśukkai*, பெ.(n.) இழிவானது (வின்.); trifle, vile or worthless thing.

[பிசுக்கு = சிறியது, இழிவானது, எந்தப் பொருள் வாங்கினாலும் பிசுக்குக் கேட்பான். பிசுக்கு → மிசுக்கு →மிசுக்கை.]

மிசை¹-தல் *miśai-*, 2 செ.குன்றாவி.(v.t.) 1. உண்ணுதல்; to eat a meal. *"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்?"* (குறள், 85). 2. நுகர்தல் (யாழ்.அக.); to taste, enjoy, experience.

[மீ →மி →மிசை →மிசை-தல் = உண்ணல்.]

மிசை² *miśai*, பெ.(n.) 1. உணவு; food. *"அரிப்பறை வினைஞ ரல்குமிசைக் கூட்டும்" (ஐங்குறு.81).* 2. சோறு (சூடா.); boiled rice.

Cf.E. mess, to eat; **O.Fr.** mes; **Fr.** mets.

[மீ →மி →மிசை = மிஞ்சியதை உண், உண் (சு.வி.பக்.57).]

மிசை³ *miśai*, பெ.(n.) 1. உயர்ச்சி (சூடா.); eminence, elevation. 2. மேலிடம் (பிங்.); elevated place. 3. மேடு; hill, mound. *"அவலா கொன்றோ மிசையா கொன்றோ" (புறநா.187).* 4. வானம்; sky. *"மிசைபாடும்*

புள்ளின்" (கலித்.46). 5. முன்னிடம்; front. *"ஈற்றுமிசை யகர நீடலு முரித்தே" (தொல். எழுத்து.312).*

[மீ = மேலிடம், உயரம், வானம். மீ →மி→மிசை.]

மிசை[4] *miśai,* இடை.(part.) ஏழாம் வேற்றுமை யுருபு; a locative ending. *"மலைமிசைத் தோன்றும் மதியம் போல்" (நாலடி, 21).*

[மிசை[3] →மிசை[4].]

மிசைஞர் *miśaiñar,* பெ.(n.) உண்பவர்; eaters. *"இரும்பிணா மிசைஞரின்" (ஞானா. 17:31).*

[மிசை (= உணவு, சோறு)→மிசைஞர்.]

மிசைத்திரள் *miśai-t-tiraḷ,* பெ.(n.) காற்கரடு (பிங்.); ankles.

[மிசை + திரள்.]

பாதத்திற்குமேல் திரண்ட தசைத்திரள்.

மிசைபாடும்புள் *miśai-pāḍum-puḷ,* பெ.(n.) வானம்பாடி; the Indian skylark. *"துளிநசை வேட்கையான் மிசைபாடும் புள்ளின்" (கலித்.46).*

[மிசை + பாடு + புள் (மிசை = வானம்).]

மிசைவடம் *miśai-vaḍam,* பெ.(n.) வீரக்கழல் (வின்.); warrior's ankle-ring.

[மிசை + வடம்.]

பாதத்திற்கு மேலுள்ள கணுக்காலில் அணியும் வடம், அணி. வடம் = கனமான கயிறு, கயிறு போன்று மாழையால் செய்த அணிகலன்.

மிசைவு *miśaivu,* பெ.(n.) 1. உண்கை; eating. 2. உணவு; food. *"முழவு மருள் பெரும் பழஞ் சிலைகெழு குறவர்க் கல்கு மிசைவாகும்" (புறநா.236:2).*

[மிசை→மிசைவு. மிசை = உணவு.]

மிஞ்சகம் *miñjagam,* பெ.(n.) எலுமிச்சை; lime (சா.அக.).

மிஞ்சி[1] *miñji,* பெ.(n.) கையில் கணையாழி (மோதிர) விரலிலும் காலில் இரண்டாவது விரலிலும் அணியும் கணையாழி வகை; ring worn on the ring - finger or the second toe. *"கால் மிஞ்சிக்காரன் பின் போனாள்" (தனிப்பா.ii, 138:351).*

க. மிஞ்சு

[மீ →மிச்சு →மிஞ்சி.]

திருமணமான ஆண் கால்விரலில் அணியும் அணிகலன் மிஞ்சி, திருமணமானப் பெண் கால் விரலில் அணிவது மெட்டி என்னும் அணிகலன்.



மிஞ்சி[2] *miñji,* பெ.(n.) முஞ்சிப் புல்லால் செய்த அரைஞாண்; waist-cord made of *muñja* grass.

[முஞ்சி[1] →மிஞ்சி[2]. முஞ்சி = ஒருவகை நாணல் புல்.]

மிஞ்சிகம் *miñjigam,* பெ.(n.) பெண்களின் மயிர்முடி (பிங்.); lock of women's hair.

மிஞ்சிகை *miñjigai*, பெ.(n.) 1. குண்டலம் (அக.நி.); a kind of ear-ring. 2. பேழை (அரு.நி.); box.

[மஞ்சிகை (= பெட்டி)→மிஞ்சிகை.]

மிஞ்சிப்போ–தல் *miñji-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) எல்லை மீறிப் போதல்; to exceed limits; to go to far. *'அவர் செயல் மிஞ்சிப் போய் விட்டது' (உ.வ.).*

[மிஞ்சு →மிஞ்சி + போ–தல்.]

மிஞ்சிபோனால் *miñji-pōṉāl*, வி.அ.(adv.) மிக அதிகமாகக் கணித்தால் கூட; at the most. *அந்தப் பெண்ணுக்கு மிஞ்சிப்போனால் பதினேழு வயது தான் இருக்கும்; மிஞ்சி போனால் அவன் ஒரு கல் தொலைவு கூடப் போயிருக்க மாட்டான்.*

[மிஞ்சி + போனால்.]

மிஞ்சினவன் *miñjiṉavaṉ*, பெ.(n.) 1. அடங்காதவன் (வின்.); perverse, unmanageble man. 2. மேற்பட்டவன் (இ.வ.); one who is pre-eminent.

[மிஞ்சுதல் = வரம்பு மீறுதல், செருக்குக் கொள்ளுதல். மிஞ்சு→மிஞ்சினவன்.]

மிஞ்சு[1]–தல் *miñju-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. மீதமாதல்; be left over; remain. *விற்றது போக இரண்டு காணி நிலம் மட்டும்தான் நமக்கு மிஞ்சுகிறது. நான்கு பேருக்குத்தான் சமைத்தேன் இருந்தாலும் சோறு (சாதம்) மிஞ்சி விட்டது. இவ்வளவு செய்தும் பயன் இல்லை, வருத்தம் தான் மிஞ்சுகிறது.* 2. திறன், இயல்பு, அளவு போன்றவற்றை அதிகம் கொண்டிருப்பதால் முன்நிலையில் இருத்தல், முந்துதல், விஞ்சுதல்; excel, outdo. *திரைப்படத் துறையில் தன்னை யாரும் மிஞ்சக்கூடாது என்ற எண்ணம் அந்த இயக்குநருக்கு இருந்தது. நீ குருவை மிஞ்சிய சீடனா?* 3. குறிப்பிட்ட வரம்பை, ஒழுங்கை கடத்தல், கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் போதல், மீறுதல்; exceed; go beyond limits. *அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் (அமிர்தமும்) நஞ்சு. காலம் தாழ்த்தினால் காரியம் மிஞ்சிவிடும். அவன் என் பேச்சையும் மிஞ்சிப் போய்விடுவான் போலிருக்கிறது. தேர்தலில் வழக்கமாக வெற்றிபெறும் தலைவரை விட இந்த முறை புதியதாக தேர்தலில் நின்றவர் ஓட்டு எண்ணிக்கையில் மிஞ்சிப் போனார்.*

தெ., க. மிஞ்சு.

[மீ→மி→மிஞ்சு →மிஞ்சு–தல் (சு.வி.57).]

மிஞ்சு[2]–தல் *miñju-*, 5 செ.கு.வி.(v.i.) 1. மிகுதல்; to increase. *"பகல்கண் மிஞ்சி" (சீவக.255). "மிஞ்சிய கருமம் அஞ்சச் செய்யும்" (பழ.).* 2. செருக்குதல் (வின்.); to become proud; to be elevated.

தெ., க. மிஞ்சு.

[மிஞ்சு[1] →மிஞ்சு[2]–தல்.]

மிஞ்சு[3] *miñju*, பெ.(n.) 1. மிகுவது (அக.நி.); excess. *"மிஞ்சினது கொண்டு மேற்கே போகல் ஆகாது" (பழ.).* 2. வண்டு (அக.நி.); beetle.

[மிஞ்சு[1] →மிஞ்சு[3].]

மிஞிறு *miñiṟu*, பெ.(n.) 1. வண்டு (திவா.); beetle. *"மிஞிறுமூசு கவுள சிறுகண் யானை" (அகநா.159:16).* 2. தேனீ; honey bee. *"மீனேற்றுக் கொடியோன்போன் மிஞிறார்க்குங் காஞ்சியும்" (கலித்.26:3). "மிஞிறார்க்குங் கமழ் கடாத்த" (புறநா.22:6).*

[ஞிமிறு → மிஞிறு. ஞிமிறு = வண்டு, தேனீ.]

மிஞிறுணவு *miñiṟuṇavu,* பெ.(n.) தேன் (சா.அக.); honey.

[மிஞிறு + உணவு.]

மிட்டா *miṭṭā,* பெ.(n.) 1. நாட்டின் உட்பகுதி, வட்டம்; sub-division of a district. 2. ஊர்க்கிழமை, குறுநில ஆட்சி; possession. 3. சொத்து; property. 4. உரிமை; responsibility.

த. மிட்டா > இ. மிட்டா (mittha.)

[முட்டா → மிட்டா. முட்டா = 1. ஊர்க்கிழமை, குறுநில ஆட்சி. 2. சொத்து (வே.க.4, பக்.53).]

மிட்டாதார் *miṭṭā-dār,* பெ.(n.) மிட்டாவுக்கு உரியவன்; male proprietor of a *miṭṭā.*

[மிட்டா + தார். தார் = வடமொழிப் பின்னொட்டு.]

மிட்டாதார்னி *miṭṭā-tārṉi,* பெ.(n.) மிட்டாவுக்கு உரியவள் (C.C); female proprietor of a *miṭṭā.*

[மிட்டா + தார்னி. தாரி (ஆ.பா.) தாரினி (பெ.பா.). தாரினி → தார். தார்னி = வடமொழிப் பின்னொட்டு.]

மிட்டாதாரி *miṭṭā-tāri,* பெ.(n.) மிட்டாதாருக் குரியது (R.T); that which belongs to a *miṭṭātāri.*

[மிட்டா + தாரி. தாரி = வடமொழிப் பின்னொட்டு.]

மிடல் *miḍal,* பெ.(n.) 1. வலி; strength. *"மிடல் புக் கடங்காத வெம்முலையோ பாரம்" (சிலப்.7:17).* 2. மிடன், 2, 3 பார்க்க; see *miḍaṉ,* 2, 3. *"அடங்காதார் மிடல்சாய அமரர்வந் திரத்தலின்" (கலித்.2:2). "நெடுமிடல் சாய்த்த பசும்பூட் பொருந்தலர்" (அகநா. 266:12). "நள்ளாதார் மிடல் சாய்த்த" (புறநா.125:5).*

மிடற்றுக்கருவி *miḍaṟṟu-k-karuvi,* பெ.(n.) இன்னிசையெழுப்பும் கண்டம் (தக்கயாகப். 638, சிறப்புக் குறிப்பு); throat, considered, a musical instruments.

[மிடறு + கருவி.]

மிடற்றுத்துவாரம் *miḍaṟṟu-t-tuvāram,* பெ. (n.) குரல்வளைத் துளை; entrance of the larynx-Adifus (சா.அக.).

*[மிடறு + **Skt.** துவாரம்.]*

மிடற்றுநோவு *miḍaṟṟu-nōvu,* பெ.(n.) தொண்டை வலி (M.L.); laryngites.

[மிடறு + நோவு.]

மிடறு *miḍaṟu,* பெ.(n.) 1. கழுத்து; neck. *"கறைமிட றணியலு மணிந்தன்று" (புறநா.1:5). "வரிமிடறு யாத்த பகுவாய்த் தெண்மணி" (குறுந்.279:2).* 2. ஒலியெழும் கண்டவுறுப்பு; trachea, windpipe. *"தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇ" (தொல்.எழுத்து.83).* 3. தொண்டை; throat. *"மிடறு மெழுமெழுத்தோட வெண்ணெய் விழுங்கி" (திவ்.பெரியாழ்.3, 2:6).* 4. மிடற்றுக் கருவி பார்க்க; see *miḍaṟṟu-k-karuvi.* *"நரம்பு நம்பியூழ் மணிமிடறு மொன்றாய்" (சீவக.728).* 5. கீழ்வாய் (வின்.); lower jaw. 6. ஒருவாய் கொண்ட நீர்மப் பண்டம்; draught, a quantity of liquid taken at one swallow.

[மிழறு → மிடறு.]

மிடறுகம்மல் *miḍaṟu-kammal,* பெ.(n.) தொண்டைக்கம்மல்; sore throat (சா.அக.).

[மிடறு + கம்மல்.]

மிடறுசெய்–தல் *miḍaṟu-šey-,*1 செ.கு.வி. (v.i.) பெருங்குரலெடுத்தல் (ஈடு, 3. 8, பிர.); to raise one's voice.

[*மிடறு + செய்–தல்.*]

மிடறுதண்ணீர் *miḍaṟu-taṇṇīr,* பெ.(n.) ஒரு முறை விழுங்கும் நீரளவு; a gulp or a draught of water - *Haustus* (சா.அக.).

[*மிடறு + தண்ணீர்.*]

மிடறுதின்(னு)–தல் *miḍaṟu-tiṉ-,* 13 செ.கு.வி.(v.i.) தொண்டையில் அரிப்புண்டாதல்; to irritate in the throat. *"மிடறு தின்றால் சொறிய வொண்ணாதாற் போல" (திவ்.பெரியதி.1. 1:5, வியாக். பக்.37).*

[*மிடறு + தின்னு–தல்.*]

மிடன் *miḍaṉ,*பெ.(n.) 1. வலிமை; strength. 2. மகன்; son. 3. நிலவு; moon.

[*மிடல்→மிடன்.*]

மிடா *miḍā,*பெ.(n.) 1. வெறியம் (சாராயம்) காய்ச்சுதல் முதலியவற்றுக்குப் பயன்படும் பெரிய மண் பானை; large earthen pot used especially for keeping fermented country liquor. *"சோறு செப்பினாயிரம் மிடா" (சீவக. 692). மாந்தரை மிரட்டும் பேய்கள் மிடா சோறு தின்னும் வல்லமை படைத்தவை.* 2. பானை; pot.

[*முழா→முடா→மிடா (வே.க.முல்.4:47)*]

மிடாச்சு *miḍāccu,*பெ.(n.) ஒருவகை மரம் (சங்.அக.); tripterocarp dammar.

[*மிடா→மிடாச்சு.*]

மிடாபோல் பெரிய அடிப்பகுதியை யுடைய மரம்.

மிடாத்தவளை *miḍā-t-tavaḷai,* பெ.(n.) பெருந்தவளை (M.M.90); bull frog.

[*முழா→முடா→மிடா + தவளை= பெருந்தவளை (வே.க.முல்.4).*]



மிடி[1] *miḍi,*பெ.(n.) 1. வறுமை (சூடா.); poverty, want. 2. துன்பம்; affliction. *"மிடியென்னுங் காரணத்தின்" (நாலடி, 56).*

மிடி[2]**–த்தல்** *miḍi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. வறுமையுறுதல்; (சூடா.); to be poverty-stricken, destitute. *'மிடித்தார்க்குச் சுற்ற மின்றா யிருந்தது' (சீவக.2535, உரை).* 2. குறைவுறுதல்; to be scanty.

மிடிமை *miḍimai,*பெ.(n.) வறுமை (யாழ். அக.); poverty, want. *"மிடிமையிலும் படிமை நன்று" (பழ.).*

[*மிடி →மிடிமை.*]

மிடியன் *miḍiyaṉ,*பெ.(n.) வறியன்; poor, indigent person. *"அமுதினை மிடியன் மேவியே யுண்டனனென" (பிரபுலிங்.மருள.5).*

[*மிடி →மிடியன்.*]

மிடிவு *miḍivu,*பெ.(n.) மிடிமை (யாழ்.அக.) பார்க்க; see *miḍimai.*

[*மிடி →மிடிவு.*]

மிடுக்கன் *miḍukkaṉ*, பெ.(n.) 1. வலிமை யுடையோன்; strong, powerful man. 2. முருடன்; rough, coarse person. 3. இறுமாப்புடையவன் (இ.வ.); proud conceited man. 4. முருட்டுத்தனம் (வின்.); coarseness.

[மிடுக்கு → மிடுக்கன்.]

மிடுக்கு *miḍukku*, பெ.(n.) 1. வலிமை; strength. *"மிடுக்கிலாதானை வீமனே....... என்று" (தேவா.647, 2).* 2. செருக்கு (வின்.); pride; stiffness of manners. *மிடுக்காகப் போ.* 3. இளமைத் துடிப்பு; youthful, vitality. *வாலிப மிடுக்கு.* 4. தோற்றம்; imposing appearance.

தெ., க. மிடுகு; ம. மிடுக்கு.

மிடுபுடலை *miḍu-puḍalai*, பெ.(n.) பேய்ப் புடலை; a bitter kind of wild snake gourd - *Tricosanthus laciniosa* (சா.அக.).

மிடுமிடு-த்தல் *m ḍu-miḍu-*, 4 செ.கு.வி. (v.i.) விரைதல் (யாழ்.அக.); to hasten.

[மிடுமிடெனல் → மிடுமிடு-த்தல்.]

மிடுமிடுப்பு *miḍu-miḍuppu*, பெ.(n.) விரைவு (யாழ்.அக.); haste.

[மிடுமிடு→மிடுமிடுப்பு.]

மிடுமிடெனல் *miḍu-miḍeṉal*, பெ.(n.) விரைவுக்குறிப்பு (யாழ்.அக.); onom. expr. of haste.

மிடை[1]-தல் *miḍai-*, 2 செ.கு.வி.(v.i.) 1. செறிதல்; to be close set or crowded. *"வேன்மிடைந்த வேலியும் பிளந்து" (சீவக. 279).* 2. நிறைதல் (அரு.நி.); to be full. 3. கலத்தல்; to be mixed, mingled. *"பொய்யோ டிடைமிடைந்த சொல்" (நாலடி, 80).* 4. வருந்துதல் (சங்.அக.); to be distressed.

க. மிடுகு

[மிசை→மிடை →மிடை-தல்.]

மிடை[2]-தல் *miḍai-*,2 செ.குன்றாவி.(v.t.) 1. செறிதல்; to set closely; to crowd. 2. பின்னுதல்;to weave, as mat, etc. 3. மிகுத்திடல்; to increase.

[மிசை→மிடை →மிடை-தல்.]

மிடை[3] *miḍai*, பெ.(n.) 1. பரண்; platform for watching, loft in a corn-field. *"நல்லவர் கொண்டார் மிடை" (கலித்.103).* 2. புணர்ச்சி; sexual union. *"மிடையொடு விழைவு வேறுத்த வீரர்கள்" (சூளா.முத்.5).* 3. தூறு (வின்.); bush, small shrub.

[மிசை→மிடை. மிசை = மேல், மேலிடம்.]

மிடை[4] *miḍai*, பெ.(n.) நெருக்கம்; closeness. *"பசுக்களை மிடையற மேய்க்கும்படி பண்ணினலனே" (திவ்.பெரியாழ். 2. 3 : 7 வியா. பக்.292).*

[மிசை→மிடை.]

மிடைதூறு *miḍai-tūṟu*, பெ.(n.) நெருங்கிய காடு; thick forest.

[மிடை[4] + தூறு. தூறு = காடு.]

மிண்டன் *miṇḍaṉ*, பெ.(n.) 1. திண்ணியோன் (சூடா.); strong man. 2. அறிவில்லாதவன்; ignorance. *"மிண்டர் பாய்ந்துண்ணுஞ் சோற்றை" (திவ். திருமாலை.14).*

[மிண்டு→மிண்டன்.]

மிண்டி[1] *miṇḍi*, வி.எ.(adv.) நெருங்கி; dense, compact close together. *"சிரத்தினிற் கனத்து மிண்டி" (பரராச சேகரம்) (சா.அக.).*

[மிண்டு→மிண்டி.]

மிண்டி[2] *miṇḍi*, பெ.(n.) நெம்பு தடி (யாழ்.அக.); staff or post used as a lever.

க. மிண்டு.

[மிண்டு → மிண்டி.]

மிண்டிபோடு-தல் *miṇḍi-pōḍu-,* 19 செ. குன்றாவி.(v.t.) நெம்பு தடியாலெடுத்தல் (யாழ்.அக.); to raise by a lever; to break up.

[மிண்டி + போடு-தல்.]

மிண்டிமரம் *miṇḍi-maram,* பெ.(n.) உலுக்கு மரம்; ulukku tree.

[மிண்டி + மரம்.]

மிண்டு[1]-தல் *miṇḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நெருங்குதல்; to throng. *"பொதும்பிடை வரிவண்டு மிண்டி" (திவ்.பெரியதி.4. 10 : 2).* 2. நிறைதல்; to be full. 3. வலியதாதல்; to be hard. *"மிண்டு மனத்தவர்" (சேந்.திருப்பல்.2).* 4. மதங்கொள்ளுதல்; to be exultant, vain. *"கருணை மட்டுப் பருகிக் களித்து மிண்டுகின்றேனை" (திருவாச.6:33).* 5. போரில் கலத்தல்; to join battle. *"தேர்மிசைக் கண்டு மிண்டுவீர்" (பாரத. நிரை.54).*

மிண்டு[2]-தல் *miṇḍu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. நெம்புதல்; to try, lift, as with a lever. 2. குத்திக் கிளப்புதல்; to thrust. *"மிளிர மிண்டி" (பெரும்பாண்.92).* 3. செருக்காகப் பேசுதல்; to talk harshly or arrogantly. *"பிண்டியர்கள் மிண்டுமொழி" (தேவா.49, 10).* 4. முன்தள்ளுதல் (வின்.); to push, to force forward.

மிண்டு[3] *miṇḍu,* பெ.(n.) 1. வலிமை; strength. *"விரலூன்றி மிண்டது தீர்த்த" (தேவா. 510, 8).* 2. முட்டு (யாழ்.அக.); prop. support. 3. துணிவு; bravery, courage. *"இராவணன் கொண்டு மிண்டாய்ப் போகையில்" (இராமநா.ஆரணி.26).* 4. அறிந்து செய்யும் குற்றம்; wilful fault, crime. 5. துடுக்கு; mischief. *"மிண்டுகள் செய்து பின்பு வீண்பழி போடுவானை" (ஆதியூரவதானி.61).* 6. இடக்கர்ப் பேச்சு; vulgar talk; vulgarity. *"மிண்டுறு கயவ னோர்நாள்" (திருவாலவா. 35:9).* 7. செருக்கிக் கூறும் மொழி; presumptuous speech. *"வானோரர் தானவர் துற்று மிண்டுகள் பேசி" (திருவாலவா. 4:7).*

மிண்டை *miṇḍai,* பெ.(n.) கண்ணின் கருவிழி; apple of the eye. *'விழித்திருக்க மிண்டையைக் கொள்வான்' (கலித்.108, உரை).*

[முண்டை → மிண்டை = கருவிழி (வே.க. முல்.5).]



மிணர் *miṇar,* பெ.(n.) மிணறு பார்க்க; see *miṇaṟu.*

மிணறு *miṇaṟu,* பெ.(n.) ஒருவாயளவு கொண்ட நீர்மப் பண்டம்; draught, a quantity of liquid taken at one swallow.

[மிடறு → மிணறு.]

மிணாட்டி *miṇāṭṭi,* பெ.(n.) மணாட்டி (மனைவி) என்னும் சொல்லின் திரிபு; other word of a wife (கல்.அக.). *"இது மாறுவான் தந் மிணாட்டியை பரைமாயன்றுக்குக் குடுப்பான் (தெ.இ.கல். தொ.12, கல்.164).*

[மனையாட்டி → மிணாட்டி.]

மிணுமிணு–த்தல் *minu-minu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. வாய்க்குள் தானே சொல்லுதல்; to mumble, speak with a low reiterated sound. *"தீமுகந்தனில் வாய் மிணுமிணுத்து நெய்சிந்தி" (பிரபோத.10:8).* 2. கமுக்கம் பேசுதல் (யாழ்.அக.); to murmur, as a secret. 3. மந்திரஞ் சொல்லுதல் (இ.வ.); to utter incantations.

மிணுமிணுப்பு *minu-minuppu,* பெ.(n.) முணுமுணுப்பு (யாழ்.அக.); mumbling.

[மிணுமிணு → மிணுமிணுப்பு.]

மிணுமிணுப்புக்காரன் *minu-minuppu-k-kāran,* பெ.(n.) மந்திரஞ் செய்வோன் (இ.வ.); magician.

[மிணுமிணுப்பு + காரன்.]

மித்திரம் *mittiram,* பெ.(n.) வெங்காரம்; borax (சா.அக.).

மித்துருப்பதமை *mitturu-p-padamai,* பெ.(n.) ஈய மணல்; lead ore (சா.அக.).

மித–த்தல் *mida-,* 3 செ.கு.வி.(v.i.) 1. நீர் முதலியவற்றின் மேற்பரப்பில் மூழ்காமல் நிலைகொள்ளுதல்; to float. *"சுரையாழ அம்மி மிதப்ப" (நன்.152, விருத்.). நீ தண்ணீரில் எவ்வளவு நேரம் மிதப்பாய்? இரும்பு நீரில் மிதக்காது.* 2. மேலெழுப்புதல் (வின்.); to rise high in the sky. 3. அளவில் மேற்குவிதல்; to be heaped in a measure, as corn. மிதக்க அள. 4. வீண் பெருமை பண்ணுதல் (வின்.); to assume, to pretend to a character above the reality. 5. மிகுதல்; to be abundant; to be in excess. *"வெம்பு நீர் மிதப்ப மாந்தி" (விநாயகபு.74:226).* 6. கீழ் இறங்காமல் காற்றில் அலைதல்; to be borne in the air. *பறவைகளின் இறகுகள் காற்றில் மிதந்து சென்றன. அவன், கற்பனையில் மிதக்கிறான்.*

[மீ → மீது → மித → மித–த்தல் = மேற்கிடத்தல் (சு.வி.57).]

மிதக்கங்காய் *midakkankāy,* பெ.(n.) தும்மட்டி (யாழ்.அக.); country cucumber.



மிதக்கு–தல் *midakku-,* 5 செ.கு.வி.(v.i.) மித–த்தல் பார்க்க; see *mida-.*

[மித–த்தல் → மிதக்கு–தல்.]

மிதசுரம் *mida-šuram,* பெ.(n.) எழுவகைப் பண்களில் (சுரம்) நான்காவதாகிய 'ம' என்ற பண்; middle tone.

*[மித + **Skt.** சுரம்.]*

மிதடி *midadi,* பெ.(n.) நீர் (பிங்.); water.

[மித → மிதடி. மிதப்பதற்குப் பயன்படும் பொருள்.]

மிதடு *midadu,* பெ.(n.) மூளை (C.G.); brain.

தெ. மெதடு; க. மிதுளு.

மிதந்தபுத்தி *midanda-putti,* பெ.(n.) மிதந்தவறிவு பார்க்க; see *midanda-v-arivu.*

மிதந்தவறிவு *midanda-v-arivu,* பெ.(n.) மேலெழுந்த அறிவு (இ.வ.); superficial knowledge.

[மிதந்த + அறிவு.]

மிதப்பு *midappu,* பெ.(n.) 1. நீர் முதலியவற்றின் மேற் கிடக்கை; floating. *"பால்கடை நுரையின் பரூஉ மிதப் பன்ன" (அகநா.224:6).* 2. தெப்பம்; boat, ship, raft, as floating. *"கடலி லமிழ்ந்துவார் அங்கே ஒரு மிதப்புப் பெற்றுத் தரிக்குமா போலே" (ஈடு. 5:8 பிர.).* 3. தூண்டில், வலை முதலியவற்றில் நீர் மேல் மிதக்குமாறு அமைத்த மரச்சக்கை; float of a finishing line, net, etc. *"தூண்டிற்காரனுக்கு மிதப்புமேலே கண்" (பழ.).* 4. மேலெழுந்த தன்மை; superficiality. 5. செழிப்பு; plenty. 6. துன்பம் (வின்.); sulkiness. *'தம்பிக்குக் கொஞ்சம் மிதப்பாயிருக்கிறது'.* 7. உயர்ச்சி (யாழ்.அக.); height, loftiness. 8. மேடு (சங்.அக.); elevated place. 9. திடீர் மேல்நிலை அல்லது வெற்றி தந்த நிலை; மமதை, செருக்கு; euphoria, elation, gloating with pride. *அந்தக் கட்சியினர் இன்னும் வெற்றியின் மிதப்பிலிருந்து விடுபடவில்லை. பணம் போனால் மிதப்பும் போய்விடும்.*

[மித →மிதப்பு = செருக்கு (சு.வி.57).]

மிதப்புக்கட்டை *midappu-k-kaṭṭai,* பெ.(n.) 1. நங்கூரம் கற்பாறை மீன்பிடிவலை முதலியன நீரின் கீழ்க் கிடப்பதை யுணர்த்தும் பொருட்டு அவற்றிற்கு நேர் மேலாக மிதக்கவிடுங் கட்டை; buoy. 2. மரக்கட்டை; தக்கை; cark.

[மிதப்பு + கட்டை.]

மிதப்புப்புத்தி *midappu-p-putti,* பெ.(n.) மிதந்தவறிவு பார்க்க; see *midanda-v-aṟivu.*

மிதப்புவலை *midappu-valai,* பெ.(n.) நீரின் மேல் மிதந்துக் கொண்டிருக்கும் மீன்பிடி வலை; a fishing net which floats on the surface of the water.

[மிதப்பு + வலை.]



மிதம் *midam,* பெ.(n.) 1. அதிகமாகவோ, குறைவாகவோ இல்லாத நிலை, அளவானது, நடுநிலை; moderation, sensible limits. *மிதமான குளிர். மிதமான பழக்க வழக்கங்கள். அதிக வேகம் வேண்டாம் மிதமாகச் செல்!* 2. பொறுமை (நிதானம்); moderation. 3. நடுத்தரமானது (சங்.அக.); medium quality.

[மெது→மிது→மிதம்.]

மிதமான *midamāṉa,* பெ.எ.(adj.) நடுத்தரமானது (மீனவ.); medium quality. *மிதமான வெப்பம் நிலவியது.*

[மிதம் →மிதமான.]

மிதமிஞ்சிக்கொழுத்தல் *midamiñji-k-koḷuttal,* பெ.(n.) அளவு கடந்து கொழுத்த நிலை; excessive copulency - obesity.

[மிதமிஞ்சி + கொழுத்தல்.]

மிதமிஞ்சு-தல் *mida-miñju-,* 5 செ.கு.வி. (v.i.) அளவுக்கு அதிகமாதல், அளவு கடந்து போதல்; be immoderate, gobeyond reasonable limits. *மிதமிஞ்சிய மகிழ்ச்சி.*

மிதலை *midalai,* பெ.(n.) கொப்பூழ் (சது.); navel.

[இதலை → மிதலை. இதலை = கொப்பூழ்.]

மிதவல் *midaval,* பெ.(n.) மீன்பிடிக்க ஏதுவாய் அல்லது இதமாய் இருக்கை; fit or warmness condition of fishing. *காற்றும் கடலும் மிதவலாயிருப்பதால் மீன்பிடிக்கப் போகலாம் (மீனவ.).*

[மிதம்→மிதவல்.]

மிதவல்காற்று *midaval-kāṟṟu,* பெ.(n.) கடற்பரப்பில் காற்று குறைவாய் இருக்கை; airless at the seashore. *கடற்பரப்பில் மிதவல் காற்று குறைவாய் வீசுகிறது.*

[மிதவல் + காற்று.]

மிதவாதி *mida-vādi,* பெ.(n.) பொறுமையான கொள்கையாளன்; moderate.

*[மெது→மிது→மிதம் + **Skt.** வாதி.]*

மிதவை[1] *midavai,* பெ.(n.) 1. நீரில் மிதந்து செல்லக் கூடிய தெப்பம் போன்ற அமைப்பு; raft or raft like structure which floats on the water. *"வெண்கிடை மிதவையர்" (பரிபா.6:35). தண்ணீரில் தெப்பம் கொண்டு பயணம் செய்யலாம்.* 2. கடல், பெரிய கால்வாய் முதலியவற்றில் ஊறு நேரும் இடங்களைச் சுட்டிக் காட்டுவதற்காக மிதக்க விடப்பட்டிருக்கும் பொருள்; buoy. 3. நீரில் விழுந்தவர்களைக் காப்பாற்றும் பொருட்டு வைக்கப்பட்டிருக்கும், நீரில் மிதக்கக் கூடிய வளையம்; lifebuoy.

[மித →மிதவை.]

கடல் மற்றும் ஆறு முதலியவற்றின் நீரில் மூழ்கி உள்ள பாறைகளையும், ஆழம் குறைந்த இடங்களையும் தெரிந்து கொள்ள பயன்படுவது மிதவை.

மிதவைகளை மாழை (உலோகம்)யால் உண்டாக்கி பலவண்ண நிறங்கள் பூசி, வரிசை எண்களையும் குறிப்பிட்டு இருப்பர்.

மிதவைகளில் விளக்குகள் இருக்கும். மிதவைகளில் உள்ள விளக்கு நிறங்களின் மூலம் மாலுமிகளுக்கு எச்சரிக்கை செய்வர். மிதவைகளை ஒருவகையில் கலங்கரை விளக்கம் என்றே சொல்வர். மிதவைகளில் மணியோசையும் உண்டு, ஊதல் ஓசையும் உண்டு. கடலில் உண்டாகும் நிகழ்வுகளுக்கு ஏற்ப அதனைப் பயன்படுத்துவர் (குழ.கலை.கள.).



மிதவை[2] *midavai,* பெ.(n.) 1. சோறு (சூடா.); boiled rice. 2. கூழ்; porridge, gruel. *"ஆய்மக ளட்ட வம்புளி மிதவை" (புறநா. 215:4).* 3. கும்மாயம்; a preparation of dhal. *"உழுந்து தலைப் பெய்த கொழுங்களி மிதவை" (அகநா.86:1).*

[மித →மிதவை.]

மிதவைப்பயிரிகள் *midavai-p-payirigaḷ,* பெ.(n.) நீரில் மிதந்து வாழும் பயிரிகள்; phytoplankton.

[மிதவை + பயிரிகள்.]

மிதவைப் பயிரிகள் பச்சை நிறத்தில் இருக்கும். நீரில் உள்ள உப்புகள், போன்றவற்றை உறிஞ்சி கதிரவன் ஒளி உதவியுடன்தான் உயிர்வாழ்வதற்கேற்ற உணவினை ஆக்கிக் கொள்ளும் தன்மையுடைவை (குழ.கலை.க.).

மிதவையுயிரிகள் *midavai-uyirigaḷ,* பெ.(n.) கடல், ஏரி, குளம், குட்டை முதலிய நீர்நிலைகளில் மிதந்து கொண்டே அலைந்து திரிந்து வாழும் உயிரிகள்; plankton.

[மிதவை + உயிரிகள்.]

மிதவைவலை *midavai-valai,* பெ.(n.) மீன்பிடி வலை வகை; a kind of fishing net.

[மிதவை + வலை.]

மிதவைவிலங்குகள் *midavai-vilaṅgugaḷ,* பெ.(n.) மிதவைப் பயிரிகளை உணவாக உண்டு வாழும் மிதவைச் சிற்றுயிரிகள்; zoo plankton.

[மிதவை + விலங்குகள்.]

வகைகள்: புரோட்டோ சோவா என்னும் ஓரணு உயிர், செல்லி மீன், கடல் வண்ணத்தி, நீர்த்தெள்ளு, கடல் சாமந்தி, நண்டு, இறால், ஈர்க்கிறால் போன்ற மெல்லுடலிகள்; ஒட்டு மீன்கள், ஒடி விண்மீன், கடல் முள்ளெலி, கடல் வெள்ளரி போன்ற முட் டோலிகள் (குழ.கலைக்கள.).

மிதழ் *midaḻ,* பெ.(n.) மிதடு (C.G.) பார்க்க; see *midaḍu.*

மிதி[1]–த்தல் *midi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. காலின் அடிப்பகுதிபடும் வகையில் ஒன்றின் மீது காலைப் பதித்தல்; ஒன்றின் மீது வேகத்துடன் காலை இறக்குதல்; உதைத்தல்; step on, tread or stamp. *சாணியை மிதித்து விடாதே. பார்த்து நடந்து வா! சண்டையில் வேகமாக அவனைக் கீழே தள்ளி நெஞ்சில் மிதித்தான். கோழி மிதித்து குஞ்சு சாகுமா?* 2. மிதிவண்டியை இயங்கச் செய்வதற்காக அதற்கான பாகத்தில் காலை வைத்து விசையுடன் அழுத்துதல்; pedal (a bicycle) hard. *மழை வருவது போல இருந்ததால் மிதிவண்டியை அவன் வேகமாக மிதித்தான். அந்த மேட்டைக் கடக்க மிதிவண்டியை மிதித்ததில் அவனுக்கு வியர்த்துக் கொட்டிவிட்டது.* 3. அடிவைத்தல்; to tread on. *மிதித்தாரைக் கடியாத பாம்பு உண்டா? (பழ.). சேற்றை மிதிக்காதே.* 4. காலால் துவைத்தல்; to tread down, trample on. *"மிதித்தேறி யீயுந் தலைமே லிருத்தலால்" (நாலடி, 61).* 5. இகழ்தல்; to insult, dishonour. *"மிதித்திறப்பாரு மிறக்க" (நாலடி, 61).* 6. பாய்தல்; to rush or dash against, to attack, as a door of a fort. *"போரார் கதவ மிதித்த தமையுமோ" (கலித்.90:12).*

[மொத்துதல்=வலுக்க அடித்தல். மொத்து → மத்து. மத்தித்தல் = வலுவாக பொருதல். மத்து → மத்தி→மதி→மதித்தல் = மோதுதல், அழுத்துதல். மதி→மிதி→மிதி–த்தல் = காலால் மோதுதல்.]

மிதி[2]–த்தல் *midi-,* 4 செ.கு.வி.(v.i.) குதித்தல் (சூடா.); to jump.

[மித→மிதி→மிதி–த்தல்.]

மிதி[3] *midi,* பெ.(n.) 1. மிதிக்கை; treading. *"மிதியின் றிடைபொலி சென்றன" (இரகு. யாகப்.21). "குருகுஊது மிதியுலைப் பிதிர்விற் பொங்கி" (அகநா.202). "உலைவாங்கு மிதிதோல் போல" (குறுந்.172:6).* 2. அடிவைப்பு; tread. *"மகனார்தம் மிதியாம்" (இரகு. தசரதன்சாப.109).* 3. படிக்கல் (C.G.); step in a tank or well. 4. நெய்வார் கருவிகளு ளொன்று (சங்.அக.); treadle of weaver's loom. 5. மிதித்துத் திரட்டப் பெற்ற கவளம்; food trampled and formed into a ball. *"நெய்ம்மதி பெறாஅது" (புறநா.44).* 6. நடை; walking; gait. *"பலதுரக மிதியிற் றகுபல தாளவிதம் பெற்றிட" (இரகு.யாகப்.18).*

க. மிதி

மிதி[4] *midi,* பெ.(n.) 1. அளவு; measure. 2. அறிவு (சங்.அக.); knowledge. 3. அறிவாற்றல்; intellect. 4. சான்று (யாழ். அக.); evidence. 5. அழகு; beauty.

[மதி → மிதி. மதி = அளவு.]

மிதிக்கட்டில் *midi-k-kaṭṭil,* பெ.(n.) மிதிக் கட்டையைத் தாங்கும் மரம் (நெசவு); a wooden rod which bears the treadles.

[மிதி + கட்டில்.]

மிதிக்கரணைக்கோல் *midi-k-karaṇai-k-kōl,* பெ.(n.) நெசவுத் தறியில் பன்னைக்குக் கீழ் மிதிக்கட்டையை மிதிக்கும் நேரத்தில் புணிமாறி வரப் பயன்படுத்துப்படும் நீளத்தில் குறைந்த இருகோல்கள்; two short poles which helps to change the `*puṇi*' when treading the treadles in the loom.

[மிதி + கரணை + கோல்.]

மிதிகட்டை *midi-kaṭṭai,* பெ.(n.) கால் குழியில் புணிமாற்றுவதற்காக மிதிக்கப்படும் கட்டை (நெசவு); wooden log which is tread for the purose of changing the `*puṇi*'.

[மிதி + கட்டை.]



மிதிகல் *midi-kal,* பெ.(n.) ஏற்றத்தில் நீர் இறைப்பவர் நிற்பதற்குரிய நீண்ட இரு கருங்கற்கள்; படிகல் (கிணற்றில் மேற்பக்கத்தில் மூன்றடியில் பொருத்தப் படுவது) (நெசவு); stone laid on the upper side of the well to stand, for the person who bail water from the lift.

[மிதி + கல்.]

மிதிகீரை *midi-kīrai,* பெ.(n.) பூடுவகை (இ.வ.); a plant - *Asystasia coromandelina.*

[மிதி + கீரை.]

மிதிகோரை *midi-kōrai,* பெ.(n.) கோரை வகை (வின்.); a kind of sedge.

[மிதி + கோரை.]

மிதிதோல் *midi-tōl,* பெ.(n.) துருத்தி; bellows. *"உலை வாங்கு மிதி தோல்" (குறுந்.172).*

[மிதி + தோல்.]

மிதிபட்டடை *midi-paṭṭaḍai,* பெ.(n.) மிதி பலகை (யாழ்.அக.) பார்க்க; see *midi-palagai.*

[மிதி + பட்டடை. பட்டடை = பாதம் வைக்கும் படிபலகை.]

மிதிபயறு *midi-payaṟu,* பெ.(n.) வயலிற் கதிரறுக்குமுன் விதைக்கப்பட்டு அறுவடையான பின் விளைந்து முதிரும் பயறு வகை (நாஞ்.); seeds of pulse sometimes sown in paddy-fields just before harvest and maturing after harvest, as being trampled upon by reapers.

[மிதி + பயறு.]

மிதிபலகை *midi-palagai,* பெ.(n.) பாதம் வைக்கும் படிப் பலகை (வின்.); foot - stool.

மறுவ. மிதிபட்டடை

[மிதி + பலகை.]

மிதிபாகல் *midi-pāgal,* பெ.(n.) நஞ்சை முறிக்கும் ஒருவகைப் பாகல்; small variety of bitter gourd which is useful as antidote to arsenical and mercurial poisoning. The plant is a prostate creeper.

[மிதி + பாகல்.]

மிதிபாவை *midi-pāvai,* பெ.(n.) மிதிபாகல் பார்க்க; see *midi-pāgal.*

[மிதி + பாவை. பாகல்→பாகை→பாவை.]

மிதிமரம் *midi-maram,* பெ.(n.) 1. படியாயுள்ள பலகை; step-board. 2. நெசவுக் கருவியுறுப்புளொன்று; treadle of a loom. 3. ஏற்றக்காரன் கிணற்றின் மேல் நின்று கொண்டு நீரிறைக்குமாறு அமைக்கப்படும் மரம்; tread in a well for one to stand on, when baling. 4. மிதிபலகை (யாழ்.அக.) பார்க்க; see *midi-palagai.*

[மிதி + மரம்.]

மிதிமுளைக்குச்சி *midi-muḷai-k-kucci,* பெ.(n.) நெசவுத் தறியில் மிதிக்கட்டையில் உள்ள சிறுகுச்சிகள் (நெசவு); small poles in the treadles of the weavers loom.

[மிதி + முளைக்குச்சி.]



மிதியடி *midi-y-aḍi,* பெ.(n.) 1. காலில் உள்ள தூசு முதலியவற்றை அகற்றிக் கொள்வதற்காக கயிறு, நார் போன்றவற்றால் செய்யப்படும் சொரசொரப்பான பரப்புடைய சிறு விரிப்பு; door mat. 2. செருப்பு, மரப் பலகையாலான காலணி; sandal, foot wear. *நடக்கும் போதே மிதியடியின் வார் அறுந்து விட்டது. "திருவடியின் மிதியடியும்" (கோயிற்பு. பதஞ்.11).*

[மிதி + அடி.]

மிதியடிக்கொட்டை *midiyaḍi-k-koṭṭai,* பெ.(n.) பாதுகைக் குமிழ் (பிங்.); knob in sandals.

[மிதியடி + கொட்டை.]

மிதியல் *midiyal,* பெ.(n.) மிதிக்கை (யாழ்.அக.); treading.

[மிதி → மிதியல்.]

மிதியிடல் *midi-y-iḍal,* பெ.(n.) எண்ணெய் பூசித் தேய்க்கை; to mollify contracted or diseased limbs by rubbing them with oil and massaging (சா.அக.).

மிதியிடு[1]–தல் *midi-y-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) காலடியால் குறி செய்தல்; to make a tract or impression by one's foot.

[மிதி + இடு–தல்.]

மிதியிடு[2]–தல் *midi-y-iḍu-,* 18 செ. குன்றாவி. (v.t.) காலால் துவைத்தல்; to tread under foot.

[மிதி + இடு–தல்.]

மிதியுழல்கோல் *midi-y-uḻal-kōl,* பெ. (n.) இருமிதிக்கட்டைகளையும் இணைத்து இயக்க உதவும் இரும்பாலான கோல் (நெசவு); an iron rod, which helps to join the two treadle of weavers loom to activate.

[மிதி + உழல் + கோல்.]

மிதிலை *midilai,* பெ.(n.) 1. இராமாயணக் கதையில் விதேகநாட்டின் தலைநகர்; the

capital of *Vidēha* in Ramayana Story. *'பொன்மதின் மிதிலை புக்கார்' (கம்பரா. மிதிலைக்.5).* 2. விதேகநாடு (வின்.); the ancient realm of Mithilai, now identified with Champaran and Darbhanga districts.

மிதிலைநாடி *midilai-nāḍi,* பெ.(n.) மிதிலை நகரில் பிறந்த சீதை; Šita as born in the country of Mithilai. *"மிதிலை நாடியை" (கம்பரா.பிணிவீட்.21).*

[மிதிலை + நாடி.]

மிதிவண்டி *midi-vaṇḍi,* பெ.(n.) மிதித்து ஓட்டப்படும் வண்டி, ஈருருளி வண்டி; bicycle, as being propelled by pedalling.

[மிதி + வண்டி.]



மிதுக்காங்காய் *midu-k-kāṅgāy,* பெ.(n.) வெள்ளரிக்காய்; cucumber (சா.அக.).

மிதுக்காய் *midukkāy,* பெ.(n.) மிதுக்கை பார்க்க; see *midukkai.*

மிதுக்கு *midukku,* பெ.(n.) மிதுக்கை பார்க்க; see *midukkai.*

மிதுக்கை *midukkai,* பெ.(n.) 1. வெள்ளரிக் கொடி; cucumber's creeper. 2. தும்மட்டி; country cucumber.

மிதுகயம் *midukayam,* பெ.(n.) கையாந்தகரை; a prostate plant - *Eclipta prostata* (சா.அக.).

மிதுகெந்தா *midukendā,* பெ.(n.) மகிழம்பூ; a very fragrant flower of a tree - *Mimusops elengi* (சா.அக.).

மிதுரி¹ *miduri,* பெ.(n.) வெள்ளை நீலாம்பரம் (சங்.அக.); crested purple nail dye.

மிதுரி² *miduri,* பெ.(n.) செம்முள்ளி (சா.அக.); a thorny plant - *Barleria prionitis.*

மிதுனக்குடைமூலி *miduṉa-k-kuḍai-mūli,* பெ.(n.) பிரண்டை; a medicinal climber - *Vitis quardrang ularis* (சா.அக.).

மிதுனி *miduṉi,* பெ.(n.) கரிக்குருவி (சங்.அக.); king crow.

மிந்தாச்சொல் *mindā-c-col,* பெ.(n.) இந்துப்பு (சு.வை.ர.125); rock salt.

மிமிதை *mimidai,* பெ.(n.) கல்லுப்பைக் கட்டும் ஒருவகைப் பூடு (சா.அக.); a herb, it is said to consolidate rock salt.

மியா *miyā,* இடை.(part.) ஒரு முன்னிலையசைச் சொல் (தொல். சொல். 276); a suffix added to verbs in second person, imperative mood.

மியூல் *miyūl,* பெ.(n.) பூடுவகை (யாழ்.அக.); a plant.

மியூலசீவி *miyūla-šīvi,* பெ.(n.) மியூல் பார்க்க; see *miyūl* (சங்.அக.).

மிரசன் *mirašaṉ,* பெ.(n.) பெருங்காயம்; asafoetida (சா.அக.).

மிரட்சி¹ *miraṭci,* பெ.(n.) அச்சம் நிறைந்த கலக்கம், மருட்சி; fright, dismay; be wilderment. *நேராய்வில் அவன் மிரட்சியுடன் பதில் சொன்னான்.*

[மிரள்→மிரட்சி.]

மிரட்சி² *miraṭci,* பெ.(n.) அடிக்கடி மிரளும் மாட்டு வகை (அபி.சிந்.); a class of bull.

மிரட்டல் *mirattal,* பெ.(n.) செய்கையால், பேச்சால் அச்சப்படச் செய்தல்; threat; intimidation. *தந்தை, மகனை வரும் காலாண்டுத் தேர்வில் மதிப்பெண் கூடுதலாக எடுக்கவில்லை என்றால் உதைப்பேன் என்று மிரட்டினார்.*

[மிரள் (த.வி.)→ மிரட்டு (பி.வி.).]

மிரட்டி *miratti,* பெ.(n.) பேய்மிரட்டி; a plant - Malabar catmint, - *Anisomeles mala barica* (சா.அக.).

மிரட்டிவாங்கு-தல் *miratti-vāṅgu-,* 5 செ.குன்றாவி.(v.t.) அச்சுறுத்திக் கைப்பற்றுதல் (C.G.); to extort.

[மிரள்→மிரட்டு + வாங்கு-தல் - மிரட்டி வாங்கு-தல். வாங்கு - துணை வினை.]

மிரட்டினி *mirattini,* பெ.(n.) சொக்குப் பொடி (சங்.அக.); magic powder.

[மிரட்டு →மிரட்டி →மிரட்டினி.]

மிரட்டு[1]-தல் *mirattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தன்நோக்கம் நிறைவேற அல்லது பிறர் நோக்கத்தை முறியடிக்கச் செய்கையாலோ அல்லது பேச்சாலோ அச்சப்பட வைத்தல், அச்சுறுத்துதல்; threaten by word or act intimidate. *வேலை நிறுத்தத்தைக் கைவிடாவிட்டால் கதவடைப்பு செய்வோம் என்று நிருவாகம் தொழிலாளர்களை மிரட்டியது. நள்ளிரவில் திருடன் கத்தியைக் காட்டி மிரட்டி வீட்டில் உள்ளப் பொருள்களைக் கொள்ளையடித்தான்.* 2. மயக்குதல்; to fascinate, to deceive. *"விழித்து மிரட்டி" (திருப்பு.219).* 3. ஓட்டுதல்; to drive away. *"இருநோய் மலத்தைச் சிவவொளியால் மிரட்டி" (திருப்பு.1042).*

[மிரள்-தல் →மிரட்டு-தல்.]

மிரண்டபார்வை *miranda-pārvai,* பெ.(n.) நடுக்கம் உள்ள பார்வை; treambled look (சா.அக.).

மிரண்டுபோ-தல் *mirandu-pō-,* 8 செ.கு.வி. (v.i.) அச்சத்தினால் செயலிழந்து நிலை குலைந்துபோதல்; get frightened. *துமுக்கி (துப்பாக்கி)யைக் கண்டதும் பயணிகள் மிரண்டு போனார்கள்.*

[மிரண்டு + போ-தல்.]

மிரதம் *miradam,* பெ.(n.) பாம்பு; snake (சா.அக.).

மிரழ்-தல் *miral-,* 2 செ.கு.வி.(v.i.) மிரள்-தல் (யாழ்.அக.) பார்க்க; see *miral-.*

மிரள்(ளு)-தல் *miral-,* 16 செ.கு.வி.(v.i.) 1. அச்சத்தினால் கலக்கமடைந்து கட்டுப்பாடு இழத்தல்; get frightened or scared, lose control when scared. 2. மயங்கி அஞ்சுதல்; to be freightened, startled. *குடையைக் கண்டால் மாடு மிரளும்.*

மிரளமிரள *mirala-mirala,* வி.அ.(adv.) விழிகளை அங்குமிங்கு உருட்டியபடி; to look at someone or something in perplexity. *கனவு கண்டு அஞ்சி எழுந்து மிரள மிரள விழித்தான். வகுப்பறையில் தூங்கியிருந்து ஆசிரியர் கேட்ட கேள்விக்கு மாணவன் ஒன்றும் புரியாமல் மிரள மிரளப் பார்த்தான்.*

மிரிகி *mirigi,* பெ.(n.) காக்கைவலிப்பு; a disease; epilepsy.

மிரிகை *mirigai,* பெ.(n.) யாழ்ப்பிருடை (வின்.); tuning key for the cords of a lute.

மிரிசபத்திரி *mirisa-pattiri,* பெ.(n.) வறட்சுண்டி; a sensitive plant - *Mimosa triprictra* (சா.அக.).

மிரிசம் *mirišam,* பெ.(n.) மிளகு; pepper-*Piper nigrum.*

[மிரியல் → மிரிசம்.]

மிரிசனம் *mirišanam,* பெ.(n.) மிரிசம் பார்க்க; see *mirišam*(சா.அக.).

மிரிசி *miriši,* பெ.(n.) மிரிசம் பார்க்க; see *mirišam*(சா.அக.).

மிரிஞ்சி *miriñji,* பெ.(n.) செம்முருங்கை; red Indian laburnum - *Hyperanthera moringa* (சா.அக.).

மிரிநாளம் *mirināḷam,* பெ.(n.) தாமரை (மலை.); lotus.

மிரியம் *miriyam,* பெ.(n.) மிளகு (பிங்.); pepper.

தெ. மிரியமு

[மிரியல் →மிரியம் (மு.தா.155).]

மிரியல் *miriyal,* பெ.(n.) மிளகு; pepper.

[(நுள்) → நெள் → நெரி → நெரியல் → மெரியல் →மிரியல் (மு.தா.155).]

மிரியலகம் *miriyalagam,* பெ.(n.) மிரியல் பார்க்க; see *miriyal* (சா.அக.).

[மிரியல் + அகம்.]

மிரியற்கொடி *miriyaṟ-koḍi,* பெ.(n.) மிளகுக் கொடி; pepper creeper-*Piper nigrum* (சா.அக.).

[மிரியல் + கொடி.]

மிரியாகூந்தல் *miriyā-kūndal,* பெ.(n.) குதிரை வாலி தவசம், ஒருவகைப் புன்செய்ப் பயிர்; poor man's horse millet.

மிரியாதியெண்ணெய் *miriyādi-eṇṇey,* பெ.(n.) கண் புகைச்சல் முதலிய கண் நோய்களுக்குப் பயன்படுத்தும் ஒருவகை எண்ணெய்; a medicated oil for eye disease (சா.அக.).

மிரியார்கூந்தல் *miriyār-kūndal,* பெ.(n.) சவுரிக் கொடி; a big creeper - *Trichosanthes Palmata* (சா.அக.).

மிரியால் *miriyāl,* பெ.(n.) மிரியம் (சங்.அக.) பார்க்க; see *miriyam.*

தெ. மிரியாலு

மிரியாலிகம் *miriyāligam,* பெ.(n.) சித்தரத்தை (சங்.அக.); lesser galangal - *Alpinia galang.*

மிருக்கெண்ணெய் *miru-k-keṇṇey,* பெ. (n.) ஒருவகை எண்ணெய், மெருகெண்ணெய்; a kind of oil for polish (சா.அக.).

[மெருகு →மிருகு + எண்ணெய்.]

மிருகக்கொட்டை *mirugakkoṭṭai,* பெ.(n.) கும்பாதிரி மரம்; lac tree.

மிருககாமினி *miruga-kāmiṉi,* பெ.(n.) வாய் விளங்கம் (மூ.அ.); common windberry.

மிருகண்மூலம் *mirugaṇ-mūlam,* பெ.(n.) திப்பிலிவேர் (சங்.அக.); long-pepper root.

மிருகபத்திரி *miruga-pattiri,* பெ.(n.) வறட்சுண்டி; floating sensitive - plant.

மிருகமதவாசை *miruga-mada-vāšai,* பெ.(n.) கத்தூரி மல்லிகை (மூ.அ.); musk jasmine.

மிருகாலா *mirugālā,* பெ.(n.) நன்னீர்மீன்; cirrhina mrigala (mingal) (சா.அக.).

மிருங்கம் *miruṅgam,* பெ.(n.) கையாந்தகரை (மலை.); a plant.

மிருஞ்சி *miruñji*, பெ.(n.) செம்முருங்கை; a red species of hyperanthera moringa (சா.அக.).

மிருடாகம் *mirudāgam*, பெ.(n.) மாமரம்; mango tree - *Mangifera indica* (சா.அக.).

மிருடாலகம் *mirudālagam*, பெ.(n.) மிருடாகம் பார்க்க; see *mirudāgam*.

மிருடி *mirudi*, பெ.(n.) மான்; deer (சா.அக.).

மிருணாலம் *mirunālam*, பெ.(n.) தாமரை நூல் (யாழ்.அக.); lotus - fibre.

மிருணாலி *mirunāli*, பெ.(n.) தாமரை (மூ.அ.); lotus.

மிருத்திகம் *miruttigam*, பெ.(n.) கொடி முந்திரி (சங்.அக.); grape vine.

மிருத்திகை *miruttigai*, பெ.(n.) 1. மண்; earth. 2. ஒருவகை உவர்மண்; a kind of fuller's earth (சா.அக.).

மிருத்தியகெந்தம் *miruttiya-kendam*, பெ.(n.) 1. கல்லுப்பு; rock salt. 2. சிறு செண்பகம்; small champauk - *Michelia nilagirica* with small flowers (சா.அக.).

மிருத்தியம் *miruttiyam*, பெ.(n.) மிருத்திகை பார்க்க; see *miruttigai*(சா.அக.).

மிருத்தியல் *miruttiyal*, பெ.(n.) தூதுவளை (சங்.அக.); climbing brinjal.

மிருத்தியுபலம் *miruttiyupalam*, பெ.(n.) இலந்தை (மூ.அ.); jujube-tree.

மிருத்தியுபலை *miruttiyupalai*, பெ.(n.) 1. வாழை (மூ.அ.); plantain. 2. மூங்கில்; bamboo (சங்.அக.).

மிருத்தியுபிரசூனம் *miruttiyupirašūnam*, பெ.(n.) கரும்பு (யாழ்.அக.); sugar-cane.

மிருத்தியுபுட்பம் *miruttiyuputpam*, பெ.(n.) கரும்பு; sugar-cane - *Saccharum officinarum* (சா.அக.).

மிருத்துசம் *miruttušam*, பெ.(n.) மூங்கில்; bamboo (சா.அக.).

மிருத்துவிகா *miruttuvikā*, பெ.(n.) புளி கொடி முந்திரி; sour grapes - *Vitis vinifera* (சா.அக.).

மிருத்துவீசம் *miruttuvišam*, பெ.(n.) மூங்கில் (மலை.); spiny bamboo.

மிருதங்கம் *mirudańgam*, பெ.(n.) மூங்கில் (யாழ்.அக.); bamboo.

மிருதபலி *mirudapali*, பெ.(n.) பேய்ப்புடல்; wild snake gourd - useful for fever (சா.அக.).

மிருதம் *mirudam*, பெ.(n.) தண்ணீர்விட்டான் (மலை.); climbing asparagus.

மிருதவள்ளி *mirudavalli*, பெ.(n.) வள்ளிக் கிழங்கு; sweet potato - *Ipomoca batatas* (சா.அக.).

மிருதாசியம் *mirudāšiyam*, பெ.(n.) கருப்பறுகு; a black variety of rub grass.

மிருதுபலம் *mirudupalam*, பெ.(n.) பேரீந்து (மூ.அ.); date palm.

மிருதுபலா *mirudupalā*, பெ.(n.) நெல்லி (மலை.); emblic myrobalan.

மிருதுமம் *mirudumam*, பெ.(n.) இலாமிச்சை (சங்.அக.); cuscus grass.

மிருதூவிகம் *mirutūvigam*, பெ.(n.) மூங்கில்; bamboo (சா.அக.).

மிருதூற்பலம் *mirudūṟpalam,* பெ.(n.) கரு நெய்தல்; blue Indian water-lilly.

மிருந்தாலகம் *mirundālagam,* பெ.(n.) 1. உவர் மண் (சங்.அக.); fuller's earth. 2. துவரை (மலை.); dholl.

மிருநாளம் *mirunāḷam,* பெ.(n.) 1. தாமரைத் தண்டு; stalk of the lotus. 2. இலாமிச்சை (தைலவ.தைல.); cuscus grass.

மிருநாளீசம் *mirunāḷīšam,* பெ.(n.) தாமரையின் நரம்பு (தாமரைத் தாது); filaments of lotus flower, fibres of lotus (சா.அக.).

மிருநாறம் *mirunāṟam,* பெ.(n.) தாமரை; lotus (சா.அக.).

மிருமணி *mirumaṇi,* பெ.(n.) சுவர் முள்ளங்கி (சங்.அக.); a parasitic plant growing on walls.

மில்லாங்கயிறு *millāṅgayiṟu,* பெ.(n.) படகில் பயன்படுத்தும் ஒருவகைக் கயிறு; a kind of rope used in boat.

பாய்மரக்கப்பலிற் பாயை நிறுத்துதற் பொருட்டு கட்டப்பெறுவது மில்லாங் கயிறு.

மிலாங்கிலி *milāṅgili,* பெ.(n.) 1. செங்காந்தள் (மலை.); red species of Malabar glory-lilly. 2. திருநீற்றுப் பச்சை (சங்.அக.); sweet basil.

மிலாடு *milāḍu,* பெ.(n.) மலையமான் நாடு (M.P.S.A.525); country of *Malaiyamāṉ.*

[மலையமான் நாடு→மலைநாடு→மலாடு→ மிலாடு.]

இச்சொல் கல்வெட்டுக்களில் 'மலாடு' என்று குறிக்கப்பெற்றுள்ளது. நடுநாட்டின் வளநாடுகளில் ஒன்று.

நடுவில் மண்டலத்துப் பெண்ணை வடகரை மலாடாகிய ஐந்நாத வளநாட்டுக் குறுக்கைக் கூற்றத்துத் திருக்கோயிலூர் (தெ.கல்.தொ.7, கல்.936).

மிலாடுடையார் *milāḍuḍaiyār,* பெ.(n.) மலையமான் நாட்டின் அரசன், மெய்ப்பொருள் நாயனார்; *Malaiyamāṉ NāḍuMey-p-poruḷ nāyaṉār. "இரண்டு கையுடையாராகக் கனமாகச் செய்த தத்தா நமரேகாண் என்ற மிலாடுடையார் ஒருவர்" (தெ.கல்.தொ.2:2, கல்.40).*

[மிலாடு + உடையார்.]

மிலார் *milār,* பெ.(n.) விளாறு; twig.

[வளார் →விளார்→மிலார். வளார் = வளைந்த சிறு போத்து (மு.தா.70).]

மிலாரடி *milāraḍi,* பெ.(n.) 1. கலக்கம்; perturbation; dilamma. 2. உன்மத்தன்; unfeelingness; stupor, stupefaction.

[மலாரடி → மிலாரடி. மலாரடி = கலக்கம்.]

மிலாறு *milāṟu,* பெ.(n.) விளாறு (C.G.); twig, switch.

[மிலார் →மிலாறு (மு.தா.70).]

மிலை¹–தல் *milai-,* 2 செ.கு.வி.(v.i.) சூடுதல்; to put on wear. *"உழிஞைப் பவரொடு மிலைந்து" (புறநா.77).*

[மலை → மிலை. மலை–தல் = சூடுதல்.]

மிலை²–த்தல் *milai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. மயங்குதல்; to be bewildered. *"மிலைத்தலைந்தேனை" (திருவாச.6:40).* 2. கனைத்தல்; to low, as a cow. *"எப்படி யூரா மிலைக்கக் குருட்டா மிலைக்கு மென்னும்" (திவ்.இயற்.திருவிருத்.94).*

[மலை–த்தல் → மிலை–த்தல்.]

மிலை³ *milai,* பெ.(n.) தலைமேலணி; head ornament.

[மிலை¹ →மிலை³.]

மிலைச்சம் *milaiccam,* பெ.(n.) சாதிலிங்கம் (சங்.அக.); vermilian.

மிலைச்சு-தல் *milaiccu-,* 5 செ.குன்றாவி. (v.t.) மிலை¹-தல் பார்க்க; see *milai-.* *"நலம்பெறு சென்னி நாமுற மிலைச்சி" (குறிஞ்சிப்.116).*

[மிலை¹ →மிலைச்சு→மிலைச்சு-தல்]

மிழலை¹ *miḻalai,* பெ.(n.) மழலைச் சொல் (சூடா.); prattle, lisp.

[மிழற்று→மிழலை. மிழற்று-தல் = மழலைச் சொல் பேசுதல்.]

மிழலை² *miḻalai,* பெ.(n.) மிழலைக்கூற்றம் பார்க்க; see *miḻalai-k-kūṟṟam.* *"புனலம் புதவின் மிழலையொடு" (புறநா.24).*

மிழலைக்கூற்றம் *miḻalai-k-kūṟṟam,* பெ.(n.) சோணாட்டின் ஒரு பகுதி (புறநா.24, உரை); a division of *Coḻa-nāḍu.* *"மிழலைக் கூற்றத்து வடபாம்பாற்றுச் சுந்தர பாண்டிய நல்லூர் சிறுவம்பூர்" (தெ.கல்.தொ.5, கல். 987).*

[மிழலை + கூற்றம்.]

தஞ்சை, மதுரை மாவட்டங்களைச் சேர்ந்த பகுதி மிழலைக் கூற்றம். இது வேள்எவ்வி ஆண்ட பகுதி. பாண்டி நாட்டின் இராசேந்திர சோழ வளநாட்டின் உட்பிரிவுகளுள் ஒன்று.

மிழலைச்சதகம் *miḻalai-c-cadagam,* பெ.(n.) 16ஆம் நூற்றாண்டில் சர்க்கரைப் புலவர் மிழலை நாட்டின் பெருமையைப் பற்றிப் பாடிய சதகம்; a *śadagam* on the greatness of *miḻalai,* by Cakkarai-*pulavar.*

[மிழலை² + சதகம். சதகம் = 100 பாடல்கள் கொண்ட சிற்றிலக்கிய வகை.]

மிழலைநாடு *miḻalai-nāḍu,* பெ.(n.) பழந்தமிழ்ச் சோழ நாடுகளுள் ஒன்று; an ancient *Cōḻā* country in Tamil nadu. *"வடகரை மிழலை நாடு" (திருவிசலூர் கல்வெட்டு. தெ.கல். தொ.23, கல்.22). "நீதி வழுவா நெறியினராய் நிலவுங் குடியால் நெடுநிலத்து மீது விளக்கும் தொன்மையது மிழலை நாட்டுப் பெருமிழலை" (பெரியபு.23:1).*

[மிழலை + நாடு.]

கும்பகோணம் வட்டத்தின் கிழக்குப் பகுதியில் காவிரியின் வடகரையிலுள்ள சோழபுரம், சேய்ஞ்ஞலூர், திருவாய்பாடி மிழலை, திருத்தேவன்குடி ஆகிய ஊர்களடங்கிய பகுதி மிழலை நாடாகும். மிழலைநாடு பற்றிய தமது ஆய்வில் அறிஞர் ஒருவர் இராசேந்திர சிங்க வளநாடு என்பது காவிரியாற்றின் வடகரையில் இருந்த ஒரு பெரிய நிலப்பரப்பாகும். இவ் வளநாட்டில் 20 உள்நாடுகள் இருந்தன என்றும், அதில் ஒன்றே மிழலை நாடு என்றும், அம்மிழலை நாடு தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கும்பகோணம் வட்டத்தில் காவிரியாற்றுக்கு வடக்கே மண்ணியாற்றின் தென்கரை வரையில் அமைந்திருந்ததோர் வளநாடு என உரைக்கிறார். மேலும் பெருமிழலை அந்நாட்டின் தலைநகர் என்றும் கழகக் காலத்தில் (சங்க காலத்தில்) சுட்டப்படும் மிழலைக் கூற்றம் பாண்டிய நாட்டுப் பகுதி என்பது இவர் எண்ணம் (செந்தமிழ்ச் செல்வி சிலம்பு-23, பக்.163:66).

மிழற்றல் *miḻaṟṟal,* பெ.(n.) 1. சொல்லுகை (சூடா.); speaking. 2. மிழலை¹ பார்க்க (யாழ்.அக.); see *miḻalai.* 3. பேசுவதால் எழும் மொழி (யாழ்.அக.); noise of speaking.

[மிழற்று → மிழற்றல்.]

மிழற்று–தல் *milarru-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. மழலைபோல் இனிமையாகப் பேசுதல்; to prattle as a child. *"பண்கள் வாய்மிழற்றும்" (கம்பரா.நாட்டு.10).* 2. மெல்லக் கூறுதல்; to speak softly. *"யான் பலவும் பேசிற் றானொன்று மிழற்றும்" (சீவக.1626).*

மிழறு–தல் *milaru-,* 5 செ.குன்றாவி.(v.t.) மிழற்று–தல் பார்க்க; see *milarru.*

[முழா → மிழா (வே.க.முல்.4).]

மிழா *milā,* பெ.(n.) பருத்த ஆண்மான்; stag, male of red deer or of other large kinds of deer.

[முழா → மிழா (வே.க.முல்.4).]

மிளகம்மை *milagammai,* பெ.(n.) ஒரு வகை அம்மை நோய்; a kind of pox (சா.அக.).

[மிளகு + அம்மை. மிளகு போன்ற கொப்புளம் உண்டாக்கும் அம்மை நோய்.]

மிளகரணை *milagaranai,* பெ.(n.) மிளகு கரணை (வின்.) பார்க்க; see *milagu-karanai.*

மிளகரந்தி *milagarandi,* பெ.(n.) மிளகு கரணை (வின்.) பார்க்க; see *milagu-karanai.*

மிளகறுப்பான் *milagaruppān,* பெ.(n.) நெல் வகை; a kind of paddy.

மிளகறையன் *milagaraiyan,* பெ.(n.) புடவை வகை (யாழ்.அக.); a kind of saree.

மிளகாணம் *milagāṇam,* பெ.(n.) மிளகாய்க்குப் பதிலாக மிளகு சேர்த்துச் சமைத்த குழம்பு (யாழ்ப்.); sauce prepared with pepper instead of chillies.

[மிளகு + ஆணம்². ஆணம் = குழம்பு.]

மிளகாய் *milagāy,* பெ.(n.) 1. காரமுள்ள காய் விளையும் செடி வகை; chilly plant - *Capsicum frutescens.* 2. கறி மிளகாய்; chilly used for curry preparations - *Capsicum annum - Spanish pepper,* red pepper. 3. மிளகுகாய்; carienne pepper.

தெ. மெரப்பக்காய்

வகைகள்: 1. மிளகாய், 2. சிவப்பு மிளகாய், 3. பச்சை மிளகாய், 4. கொள்ளி மிளகாய், 5. சீமை மிளகாய், 6. காந்தாரி மிளகாய், 7. சீனத்து மிளகாய், 8. ஈர மிளகாய், 9. சீமைப் பச்சை மிளகாய், 10. ஊசி மிளகாய். மிகு உறைப்பான மிளகாய். இது கதிர் வெப்பத்தைப் புசிப்பதனால் மிக உறைப்பாக இருக்கும் (சா.அக.).

மிளகாய் காரமுடையப் பொருள். ஊசிமிளகாய், குடைமிளகாய் முதலியன நடு ஆசியாவில் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இச்செடி நம் நாட்டினதன்று. அயல்நாட்டினின்று இந்திய முன்னோர் நம்நாட்டிற்குக் கொண்டுவந்துப் பயிராக்கினர். இக்காயினைக் காயாகவும், பழமாகவும் உலர்த்தியும், கறி முதலியவற்றிற்குப் பயன்படுத்துவர் (அபி.சிந்.).

நம் நாட்டில் காரத்திற்கு மிளகையே பயன்படுத்தி வந்தனர். இதே போல் காரமுடைய காயை இங்கு இறக்குமதி செய்தபின் மிளகு போன்ற காரமுடைய காயானதால் மிளகாய் என்ற வழங்கினர்.

முள் போன்று மேற்பரப்புடையதானதால் முள் → முளகு என்றானது.

[முள் → முளகு → முளகாய் → மிளகாய் (மு.தா.ப.155).]

மிளகாய்ச்சக்களத்தி *milagāy-šakkalatti,* பெ.(n.) மிளகாய் செடி போன்று தோற்றமுடைய களைச் செடிவகை (மூ.அ.); a weed, vinea pusilla.

[மிளகாய் + சக்களத்தி . சக்களத்தி = போலி, போலிபொருள்.]

மிளகாய்ப்பழம் *milagāy-p-palam,* பெ.(n.) காய்ந்த அல்லது பழுத்த மிளகாய்; ripe and dried red chilly as opposed to (பச்சை மிளகாய்) green chilly.

[மிளகாய் + பழம்.]

மிளகாய்ப்புள் *milagāy-p-pul,* பெ.(n.) நீள் சிறகும் தோலடியும் உடைய கடற் பறவை வகை (வின்.); a kind of gull.

[மிளகாய் + புள்.]

மிளகாய்ப்பூண்டு *milagāy-p-pūṇḍu,* பெ.(n.) மிளகாய்ச்சக்களத்தி பார்க்க; see *milagāy-c-cakkalatti.*

[மிளகாய் + பூண்டு.]

மிளகாய்ப்பொடி *milagāy-p-poḍi,* பெ.(n.) குழம்புக்குத் துணைப்பொருளாய்ப் பயன்படும் மிளகாய்த் தூள்; powder of chillies with spices, used as a relish.

[மிளகாய் + பொடி.]

மிளகாய்மீன் *milagāy-mīṉ,* பெ.(n.) ஒருவகை மீன்; a kind of fish.



மிளகாய்வற்றல் *milagāy-varral,* பெ.(n.) வெயிலில் காய வைத்த மிளகாய்; dried chilli.

[மிளகாய் + வற்றல்.]

மிளகாயரை-த்தல் *milagāy-arai-,* 4 செ.கு.வி.(v.i.) ஏமாந்தவனை ஆட்டிப் படைத்தல்; one who credulous to distribute. *கொஞ்சம் அயர்ந்தால் போதும் தலையிலே மிளகாய் அரைத்துவிடுவாயே (உ.வ.).*

[மிளகாய் + அரை-த்தல்.]

மிளகாயிலை *milagāy-ilai,* பெ.(n.) மிளகாயினிலை; மிளகாய் இலைகளில் உள்ள சாற்றைச் செப்புக் காசுகளின் மேல் தடவி இலைகளில் பொதிந்து புடம்போடப் பயன்படுத்துவர்; leaf of chilly plant a piece of copper is covered by the paste of this leaf, luted and subjected to [புடம்/pudam] calcination fire, it become calcined powder (சா.அக.)

[மிளகாய் + இலை.]

மிளகி *milagi,* பெ.(n.) மிளகுச்சம்பா (நாமதீப.351) பார்க்க; see *milagu-c-cambā.*

[முல் → முள் → முளகு → முளகி → மிளகி (மு.தா.155)]

மிளகு *milagu,* பெ.(n.) 1. சமையலில் பயன்படுத்தும் சின்னஞ்சிறிய காரமான கருப்பு நிறக்காய்; black pepper. 2. கொடிவகை; black pepper, *Piper nigrum.* 3. திரிகடுகத் தொன்றான மிளகுக் கொடியின் காய்; pepper-corn, one of *tiri-kaḍugam. "மிளகறி யுலக்கையின்" (பதிற்றுப்.41). "மிளகு சிறுத்தாலும் வீரியம் போகாது", "மிளகுபெய் தனைய சுவைய*

புன்காய்" (நற்.66:1). 4. மிளகுச்சம்பா பார்க்க; see *miḷagu-c-cambā.* 5. கிச்சிலிக் கரணை (வின்.); lopez root.

ம. மிலகு; க. மெழசு.

வகைகள்: 1. வெள்ளை மிளகு, 2. கருப்பு மிளகு, 3. கொச்சி மிளகு, 4. பச்சை மிளகு (சா.அக.).

[முல்→ முள்→முளகு→மிளகு (மு.தா.).]

கொடியாகப் படரும் ஒரு பயிரின் கனிதான் மிளகு. இது மிகுதியாக கேரளநாட்டில் பயிராகிறது. மிளகுக் கொடி நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் பலன் கொடுக்கத் தொடங்கும் வாழ்நாள் 50 ஆண்டுகள் என்பர். அதற்கு மேலும் வாழ்வதுண்டு. போர்த்துக்கீசியர் பரப்பிய மிளகாய்க்கு முன் மிளகையே தமிழர் பயன்படுத்தி வந்தனர். வெளிநாட்டினர் இந்நாட்டிற்கு வழிகண்டுபிடிக்க முற்பட்டது மிளகு போன்ற நறுமணப் பொருளுக்காகவே என்பர் (குழந்.கலை.).

மிளகுக்கஞ்சி *miḷagu-k-kañji,* பெ.(n.) குரங்கு; monkey (சா.அக.).

[மிளகு + கஞ்சி.]

மிளகுக்கரணை *miḷagu-k-karaṇai,* பெ.(n.) கிச்சிலிக்கரணை; lopez root.

[மிளகு + கரணை.]

மிளகுக்கருக்கு *miḷagu-k-karukku,* பெ.(n.) மிளகுப் பொடியால் செய்யும் குடிநீர் (கருக்கு); tincture of pepper.

[மிளகு + கருக்கு.]

மிளகுக்கறி *miḷagu-k-kaṟi,* பெ.(n.) 1. மிளகுங் காடியுஞ் சேர்ந்த கறி (பரவ.); curry containing black pepper and vinegar. 2. மிளகாணம் பார்க்க; see *miḷagāṇam.*

[மிளகு + கறி.]

மிளகுக்காய் *miḷagu-k-kāy,* பெ.(n.) ஒருவகைக் காரமான காய், அழற்காய்; a kind of pungent fruit (சா.அக.).

[மிளகு + காய்.]

மிளகுக்காயின்காம்பு *miḷagu-k-kāyiṉ-kāmbu,* பெ.(n.) மிளகுச் செடியில் மிளகு நீங்கிய உலர்ந்த காம்பு; the stalk of the pepper bunch (சா.அக.).

[மிளகு + காய் + இன் + காம்பு.]

மிளகுக்கியாழம் *miḷagu-k-kiyāḻam,* பெ.(n.) மிளகைக் கொண்டு வடித்த கருக்கு நீர் (கஷாயம்); pepper decoction prepared without frying it relieves kapha diseases; decoction prepared after charing it is used for pitha diseases (சா.அக.).

[மிளகு + கியாழம்.]

மிளகுக்குத்தல் *miḷagu-k-kuttal,* பெ.(n.) மிளகை ஊசியில் குத்தி நெருப்பில் காட்டி புகை பிடிக்கை; inhalation of the pepper smoke (சா.அக.).

[மிளகு + குத்தல்.]

மிளகுக்குழம்பு *miḷagu-k-kuḻambu,* பெ.(n.) மிளகாணம் பார்க்க; see *miḷagāṇam.*

[மிளகு + குழம்பு.]

மிளகுச்சம்பா *miḷagu-c-cambā,* பெ.(n.) மிளகு போன்ற சிறுமணிகளையுடைய உயர்ந்த சம்பா நெல்வகை (பதார்த்த.813); *Cambā* paddy of superior quality, as having grains like pepper-corn.

[மிளகு + சம்பா.]

மிளகு

மீனாங்கண்ணி

முசுமுசுக்கை

முன்னை

மிளகுச்சாரணை *miḷagu-c-cāraṇai,* பெ. (n.) ஒருவகைச் செடி; a plant (சா.அக.).

[மிளகு + சாரணை.]

மிளகுச்சாறு *miḷagu-c-cāṟu,* பெ.(n.) மிளகுத்தண்ணீர் (யாழ்.அக.) பார்க்க; see *miḷagu-t-taṇṇīr.*

[மிளகு + சாறு.]

மிளகுச்சோறு *miḷagu-c-cōṟu,* பெ.(n.) மிளகுப்பொடி, சீரகம் முதலியன சேர்த்து செய்த பொங்கல் வகை (யாழ்.அக.); boiled rice, prepared with pepper powder cumin etc.

[மிளகு + சோறு.]

மிளகுத்தக்காளி *miḷagu-t-takkāḷi,* பெ.(n.) காரற் கத்திரி; brinjal.

[மிளகு + தக்காளி.]

மிளகுத்தண்ணீர் *miḷagu-t-taṇṇīr,* பெ.(n.) மிளகு மிகுதியாகச் சேர்த்த சாறு (ரசம்); mulligatawny, a soup highly seasoned with pepper.

[மிளகு + தண்ணீர்.]

மிளகுத்தரகு *miḷagu-t-taragu,* பெ.(n.) மிளகு வணிகர்கள் கொடுக்கும் வரி (I.M.P.S. A.140); an ancient tax on pepper.

[மிளகு + தரகு.]

மிளகுத்துவரை *miḷagu-t-tuvarai,* பெ.(n.) சின்னத் துவரை; small leaved ebony - *Diospyros microphylas* (சா.அக.).

[மிளகு + துவரை.]

மிளகுத்தூள் *miḷagu-t-tūḷ,* பெ.(n.) மிளகின் தூள்; powder of pepper (சா.அக.).

[மிளகு + தூள்.]

மிளகுத்தைலம் *miḷagu-t-tailam,* பெ.(n.) மிளகு சேர்த்து வடித்த எண்ணெய் (இராசவைத்.159); a medicinal oil prepared from pepper.

*[மிளகு + **Skt.** தைலம்.]*

மிளகுதிரி *miḷagu-tiri,* பெ.(n.) அம்மை நோய் வகை (வின்.); a species of small pox.

[மிளகு + உதிரி. மிளகை உதிரியாகப் போட்டாற்போல் கொப்புளம் போடும் அம்மை வகை.]

மிளகுநங்கை *miḷagu-naṅgai,* பெ.(n.) செடிவகை (M.M.562); pepper *naṅgay, Polygala chinensis.*

[மிளகு + நங்கை.]

மிளகுநீர் *miḷagu-nīr,* பெ.(n.) மிளகுத் தண்ணீர் பார்க்க; see *miḷagu-t-taṇṇīr.*

[மிளகு + நீர்.]

மிளகுப்பட்டுமணி *miḷagu-p-paṭṭumaṇi,* பெ.(n.) கழுத்தணி வகை (பரவ.); kind of necklace.

மிளகுப்புளிப்பு *miḷagu-p-puḷippu,* பெ.(n.) எலுமிச்சைச் சாறு கலந்த மிளகு ஊறுகாய்; pepper pickle in the juice of lime (சா.அக.).

[மிளகு + புளிப்பு.]

மிளகுப்பெட்டி *miḷagu-p-peṭṭi,* பெ.(n.) அஞ்சறைப் பெட்டி (இ.வ.); box of condiments.

[மிளகு + பெட்டி.]

மிளகுப்பொடி *miḷagu-p-poḍi,* பெ.(n.) 1. மிளகுத்தூள் (தெ.இ.கல்.தொ.2:127); powdered pepper. *முட்டை அடையில் மிளகுத் பொடியைத் தூவிக் கொடு.* 2. மிளகும் சீரகமும் உப்புங் கலந்து சோற்றோடு உண்ண உதவும் பொடி; powdered pepper with cumin and salt used as a relish.

[மிளகு + பொடி.]

மிளகுபட்டினி *miḷagu-paṭṭiṉi,* பெ.(n.) மகப்பேறு வேண்டிச் சில மிளகு மட்டும் உட்கொண்டு பசிபொறுத்திருக்கும் நோன்பு; a fast which consists in taking only a few grains of pepper as food, undertaken by a childless person with a view to be blessed with a child.

[மிளகு + பட்டினி.]

மிளகுரசம் *miḷagu-rašam,* பெ.(n.) மிளகுத் தண்ணீர் பார்க்க; see *miḷagu-t-taṇṇīr.*

*[மிளகு + **Skt.** ரசம்.]*

மிளகுவட்டம் *miḷagu-vaṭṭam,* பெ.(n.) கழுத்தணி வகை (பரவ.); a kind of necklace.

[மிளகு + வட்டம். மிளகு போல் செய்யப்பட்ட உருக்களையுடைய கழுத்தணி.]



மிளகுவல்லி *miḷagu-valli,* பெ.(n.) மிளகுக் கொடி; pepper creeper - *Piper nigrum* (சா.அக.).

[மிளகு + வல்லி. வல்லி = கொடி.]

மிளகெண்ணெய் *miḷageṇṇey,* பெ.(n.) மிரியாதியெண்ணெய் பார்க்க; see *miriyādi-eṇṇey.*

[மிளகு+ எண்ணெய். மிளகை முதன்மையாகக் கொண்டு செய்யப்படும் மருந்தெண்ணெய்.]

மிளகெலி *miḷageli,* பெ.(n.) மிளகுக் கொடிகளைக் கடித்தழிக்கும் எலி வகை (M.M.676); pepper rat as damaging pepper vine.

[மிளகு + எலி.]

மிளகோதனம் *miḷagōdaṉam,* பெ.(n.) மிளகுச்சோறு (பதார்த்த.1404) பார்க்க; see *miḷagu-c-cōṟu.*

[மிளகு + ஓதனம். ஓதனம் = சோறு, உணவு.]

மிளகோரை *miḷagōrai,* பெ.(n.) மிளகுச் சோறு பார்க்க; see *miḷagu-c-cōṟu.*

[மிளகு + ஓரை³. ஓரை = சோறு.]

மிளப்பு *miḷappu,* பெ.(n.) இலவங்கம் (சங். அக.); wild cinnamon.

மிளாறு *miḷāṟu,* பெ.(n.) சவுக்கு, புளி முதலிய மரத்தின் வளைந்து கொடுக்கும் தன்மையுள்ள இளங்கொம்பு; the flexible twig of certain trees, such as tamarind. *மாணவன் தவறு செய்துவிட்டான் என்பதற்காக இப்படியா புளிய மிளாறினால் அடிக்க வேண்டும்.*

[வளாறு→மிலாறு→மிளாறு.]

மிளிர்¹-தல் *miḷir-,* 2 செ.கு.வி.(v.i.) 1. புரளுதல்; to turn, roll, as eyes. *"மீநில மெய்தி மிளிர்ந்துருகா" (சீவக.1384). "கெண்டை யொண்கண் மிளிர" (திவ். பெரியதி.3. 7:2).* 2. கீழ்மேலாதல்; to be upset,

to be turned topsy turvy. *"உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி" (பெரும்பாண்.92).* 3. குதித்தல்; to jump. *"மிளிர்ந்துவீ ழுருவியும்" (சீவக.148).* 4. ஒளிர்தல்; to shine, gleam. *"மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே" (திருவாச.1: 38).* 5. பெருமை யடைதல் (வின்.); to become famous.

[முல் (மில்) → மின் → மின்னல். (மில்) வில் = ஒளி. முல் → முள் → மள் → மண் → மணி = விளங்கும் கல். முள் → (மிள்) → மிளிர் = ஒளிர்தல் (மு.தா.ப.139).]

மிளிர்²–த்தல் *miḷir-,* 2 செ.குன்றாவி.(v.t.) 1. புரட்டுதல்; to roll, turn over. *"மால்வரை மிளிர்க்கு முருமினும்" (நற்.2).* 2. கீழ் மேலாக்குதல்; to upset. *"பெருமலை மிளிர்ப்பன்ன காற்றுடைக் கன பெயல்" (கலித்.45).*

[மிளிர்¹–தல் → மிளிர்²–த்தல்.]

மிளிர்³ *miḷir,* பெ.(n.) 1. ஒளி (ஆ.நி.8:11); light, splendndour. 2. பெருமை (யாழ்.அக.); greatness.

[மிளிர்¹–. → மிளிர்³.]

மிளிர்வை *miḷirvai,* பெ.(n.) குழம்பிலிடுங் கறித்துண்டு; pieces of flesh and vegetables in sauce. *"கருங்கண் வராஅற் பெருந்தடி மிளிர்வை யொடு" (நற்.60).*

[மிளிர் → மிளிர்வை.]

மிளிறு *miḷiṟu,* பெ.(n.) 1. கரடி (சது.); bear. 2. காகம்புல்; a grass.

மிளிறை *miḷiṟai,* பெ.(n.) அரிவாள் மூக்குப் பூண்டு; bill-hook nose.

மிளை *miḷai,* பெ.(n.) 1. காவற்காடு; wood, forest, serving as a defence. *"செல்லா வருமிளை புகுமின்" (சீவக.1142).* 2. குறுங்காடு; thicket copse. *"அருமிளைக் குண்டகழி" (பு.வெ.6:5).* 3. சிறுதூறு; bush. *"முயறுளர் மிளை முயறுள" (திவ். பெரியதி. 8.7:3).* 4. கட்டுவேலி (சிலப்.13:183, உரை); fenced enclosure. 5. காவல்; guard, watch. *"மிளைசூழ் கோவலர்" (மலைபடு. 409).* 6. ஊர்ப்பெயர்; a village name.

க. மிளே.

[மிடை → மிளை. மிடை = தூறு.]

மிளைக்கந்தனார் *miḷai-k-kandaṉār,* பெ.(n.) குறுந்தொகை 196ஆம் பாடலைப் பாடிய கழகக் காலப் புலவர்; a *Šaṅgam* poet.

[மிளை + கந்தனார்.]

இவரின் இயற்பெயர் கந்தனார். மிளை என்னும் ஊரினைச் சேர்ந்தவராதலின் மிளைக் கந்தனார் என வழங்கப்பட்டார். பாரி வள்ளலின் பறம்பு மலையின் சுனைநீரைப் பற்றிப் பாடியுள்ளதால் பாரியின் காலத்தைச் சேர்ந்தவராகலாம்.

"வேம்பின் பைங்காயென் தோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனிர் இனியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய அற்றால் அன்பின் பாலே" (குறுந்.196).

மிளைகிழான்நல்வேட்டனார் *miḷai-kiḻāṉ-nal-vēṭṭaṉār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a *Šaṅgam* poet.

[மிளை + கிழான் + நல்வேட்டனார். மிளை என்பது ஊர்ப்பெயர்.]

நல்வேட்டனார் என்று வேறு அடையின்றியும் இவர் பெயர் காணப்படுகின்றது. வேளாண் மரபினர். இவர் பேய்க் காஞ்சியைத் தலைமகன் தனக்கு உவமை கூறியதாகப் பாடியுள்ளார் (நற்.349). இவர் ஐந்து திணையையும் பாடுவதில் வல்லவர். அடைக்கலமாக

வந்தோர்க்கு ஏற்படும் துன்பத்தைப் போக்குவதே செல்வம் எனப்படும். ஏனையச் செல்வம் தவப்பயனால் எய்துவன வாமென்கிறார் (நற்.210). நற்றிணையில் 4 பாடல்களும் குறுந்தொகையில் 1 பாடலும் இவர் பாடியவையாகும்.

"பல்வீ படரிய பசுநனைக் குரவம்
பொரிப்பூம் புன்கொடு பொழிலணிக்
கொளாஅச்
சினையினி தாகிய காலையுங் காதலர்
பேணா ராயினும் பெரியோர் நெஞ்சத்துக்
கண்ணிய ஆண்மை கடவ தன்றென
வலியா நெஞ்சம் வலிப்ப
வாழ்வேன் தோழியென் வன்க ணானே"

(குறுந்.341).

மிளைப்பெருங்கந்தனார் *miḷai-p-peruṅ kandaṉār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a *thamizh-k-kazhagam* poet.

[மிளை + பெரும் + கந்தனார்.]

காமத்தின் இயல்பை குறுந்தொகை 136, 204, 234 ஆகிய பாடல்களில் அழகாக எடுத்தியம்பும் பாங்கு போற்றுதற்குரியது.

"சுடர்செல் வானஞ் சேப்பப் படர்கூர்ந்து
எல்லுறு பொழுதின் முல்லை மலரும்
மாலை என்மனார் மயங்கி யோரே
குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்
பெரும்புலர் விடியலும் மாலை
பகலும் மாலை துணையிலோர்க்கே"

(குறுந்.234)

மாலைக் காலத்தில் மட்டுமே காமநோய் மிகுதியாக வருத்தும். காதலர் பிரிந்து தமியராயினார்க்கு எல்லாச் சிறுபொழுதும் மாலைக்காலம் போன்றே நோயை மிகுவிக்கும் என்பது கருத்து. மிளைக் கந்தனரும் இவரும் வேறுவேறு என்றும் கூறப்படுகிறது.

மிளைவேள்தித்தனார் *miḷai-vēḷ-tittaṉār*, பெ.(n.) குறுந்தொகை 284ஆம் பாடலைப் பாடிய கழகக் காலப் புலவராவார்; a *Śaṅgam* poet.

[மிளை + வேள் + தித்தனார்.]

"பொருத யானைப் புகர்முகங் கடுப்ப
மன்றத் துறுகல் மீமிசைப் பலவுடன்
ஒண்செங் காந்தள் அவிழும் நாடன்
அறவ னாயினும் அல்ல னாயினும்
நம்மே சுவரோ தம்மிலர் கொல்லோ
வரையிற் றாழ்ந்த வால்வெள் ளருவி
கொன்னிலைக் குரம்பையின் இழிதரும்
இன்னா திருந்தஇச் சிறுகுடி யோரே"

(குறுந்.284)

இவர் உழுவித்துண்ணும் வேளாண் மரபைச் சேர்ந்தவர்.

மிற்கு *miṟku,* பெ.(n.) 1. இரை (அக.நி.); food. 2. பேசுகை (அரு.நி.); speaking. 3. மென்மை (அக.நி.); softness.

மிறல் *miṟal,* பெ.(n.) பெருமை (யாழ்.அக.); greatness.

[விறல் → மிறல். விறல் = பெருமை, வீரம்.]

மிறுக்கு *miṟukku,* பெ.(n.) 1. துன்பம்; sorrow, trouble. 2. தொல்லை; difficulty. *"சாலமிறுக் குடைத்து" (ஈடு.2. 5:10).* 3. மிடுக்கு (திவ். பெரியாழ்.3. 4:10 வியா.); stiffness of manners.

[மிறை→மிறுக்கு. மிறை = துன்பம், வருத்தம்.]

மிறுங்கம் *miṟuṅgam,* பெ.(n.) கையாந்தகரை; a prostate plant - *Eclipta prostata* (சா.அக.).

மிறுங்காவியம் *mir̠uṅgāviyam,* பெ.(n.) பெருந்தேட் கொடுக்கி; *perundēṭkoḍukki* (சா.அக.).

மிறுங்கு–தல் *mir̠uṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. இறுகுதல்; to harden. 2. மாறுபடுதல் (திவ். பெரியாழ்.2:6, பிர.பக்.358); to be opposed or inimical.

மிறுசீரம் *mir̠u-šīram,* பெ.(n.) இலாமிச்சை (மலை.); cuscus grass.

மிறுத்தாரி *mir̠uttāri,* பெ.(n.) யானை கற்றாழை அல்லது பெருங் கற்றாழை; large aloe-*Agave veracruz* (சா.அக.).

மிறுத்தாலகம் *mir̠uttālagam,* பெ.(n.) துவரை; red-gram (சா.அக.).

மிறுத்தாவிகம் *mir̠uttāvigam,* பெ.(n.) பெருநாரத்தை; a large citrus variety (சா.அக.).

மிறுதார்சிங்கி *mir̠utār-šiṅgi,* பெ.(n.) சிங்கி நஞ்சு (பாஷாணம்); a kind of arsenic.

மிறுந்திகம்[1] *mir̠undigam,* பெ.(n.) மிறுந்து பார்க்க; see *mir̠undu.*

மிறுந்திகம்[2] *mir̠undigam,* பெ.(n.) கொடி முந்திரி; a creeper grapes - *Vitis vinifera* (சா.அக.).

மிறுந்து *mir̠undu,* பெ.(n.) நெல்லி; Indian gooseberry tree -*Emblica officinalis* (சா.அக.).

மிறுதுஞ்சம் *mir̠u-tuñjam,* பெ.(n.) பெருங்காயம்; asafoetide (சா.அக.).

மிறுதுபலா *mir̠udu-palā,* பெ.(n.) மிறுந்து பார்க்க; see *mir̠undu.*

மிறுதுபலிகம் *mir̠udu-paligam,* பெ.(n.) பெருஞ்சீரகம்; common anise (சா.அக.).

மறுவ. சோம்பு



மிறுதுபுட்பம் *mir̠udu-puṭpam,* பெ.(n.) வாகை; vāgaitree - *Albizzialebbek* (சா.அக.).

மிறுதுபூகம் *mir̠udu-pūgam,* பெ.(n.) பெருங் குரும்பை; bowstring, hemp, stemless plant - *Sansaviera zeylanica* (சா.அக.).

மிறை[1]–த்தல் *mir̠ai-,* 4 செ.குன்றாவி.(v.t.) துன்புறுத்துதல்; to oppress, harass. *"மிறைத்தார் புரமெய்த வில்லிமை" (பதினோ. திருவே.தி.59).*

மிறை[2]–த்தல் *mir̠ai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. விறைத்தல்; to become stiff, as a limb. *"குறைத்தலை மிறைத்துக் கூத்து நின்றாடின" (கம்பரா.வேள்வி.54). "ஒருகை யிரும்பிணத் தெயிறு மிறையாக" (புறநா. 284:6).* 2. மிடுக்காயிருத்தல்; to be stuck up with pride, to be stiff in manners. *"அமரர்கள் விரும்பித் தொழ மிறைத்து" (திவ்.பெரியார்.3. 4:10).* 3. துன்பப்படுதல் (சூடா.); to suffer; to be afflicted. 4. பாடுபடுதல் (யாழ்.அக.); to labour hard.

மிறை[3] *mirai,* பெ.(n.) 1. அச்சம் (திவா.); fear. 2. குற்றம் (திவா.); fault, defect. 3. வருத்தம்; trouble. *"அறிவிலான் செய்யும் பெருமிறை தானே தனக்கு" (குறள், 847).* 4. துன்பம்; torment. 5. அரசிறை (சூடா.); tax. 6. வளைவு; bend, curve. *"மிறைக்கொளி திருத்தினானே" (சீவக.284).*

தெ. மெர.

[முல் = வளைதற்கருத்து. முல்→முரு = வளைவு. முருகுதல் = வளைதல். முரு→முறு→முறை = வளைவு. முறை→மிறை = வளைவு (வே.க.4:75). ஒ.நோ. முண்டு→மிண்டு. முடுக்கு→மிடுக்கு.]

மிறைக்கவி *mirai-k-kavi,* பெ.(n.) சித்திரக் கவி (திவா.); variety of metrical composition.

*[மிறை + **Skt.** கவி.]*

மிறைக்கொளிதிருத்து-தல் *mirai-k-koli-tiruttu-,* 5 செ.குன்றாவி.(v.t.) ஆய்தத்தை வளைவு நீக்குதல்; to straighten out, as a bent weapon. *"மிறைக் கொளி திருத்துவார்" (சீவக.2293).*

[மிறை + கொள் + திருத்து-தல்.]

மிறைக்கொளுவு-தல் *mirai-k-koluvu-,* 5 செ.குன்றாவி.(v.t.) மிறைக்கொளி திருத்து-தல் பார்க்க; see *mirai-k-koli-tiruttu-. "எஃக மிறைக் கொளீஇ" (பு.வெ.8:21).*

[மிறை + கொளுவு-தல். கொளுவுதல் = கூறாக்குதல், வளைவு நீக்குதல்.]

மின்[1] *min,* பெ.(n.) 1. ஒளி (சூடா.); flash, glitter. *"மின்மின் கொள் கவசம்" (கம்பரா. நிகும்பலை.84). "மின்னின் றூவி இருங்குயில் பொன்னின்" (குறுந்.192:3). "மின்னுகு தளிரன்ன மெலிவுவந் துரைப்பதால்" (கலித்.48:19). "மின்னிலைப் பொலிந்த விளங்கிணர் அவிழ்பொன்" (அகநா.80 :11).* 2. மின்னல்; lightning. *"மின்னிநிகழ்ந் தாகாசத்திற் காணாது" (மணிமே.29:238). "மின்கம்பிகள் அறுந்து கிடந்தன".*

தெ. மின்னுகு; க. மின்னு; ம.மின்.

மின்[2] *min,* இடை.(part.) முன்னிலை யேவற்பன்மை ஈறுகளில் ஒன்று (விகுதி யுளொன்று); a verbal suffix of the imperative plural. *"இர் ஈர் மின் என வரூஉம் மூன்றும் பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும் சொல்லோ ரனைய என்மனார் புலவர்" (தொல்.சொல்.வினை.27).*

மின்[3] *min,* பெ.(n.) பெண்; woman. *"மின்னன்மை விபசாரத்து........ மடிந்திடும்" (நீதிசாரம்.60).*

மின்[4] *min,* பெ.(n.) தாழைவேர்; shrup - screw pine found grown near seashore - *Pandanam oderatisima* (சா.அக.).

மின்[5] *min,* பெ.(n.) 1. மின்னாற்றல், மின்சாரம்; electricity. 2. மின்சாரத்தால் இயங்கும் பொருளின் பெயர்களுக்கு முன் இடம்படும் அடைச்சொல்; a suffix of the things those operated by electricity. *மின்காந்தம், மின்தொடர் வண்டி.*

மின்கசிவு *min-kašivu,* பெ.(n.) கம்பியில் செல்லும் மின்சாரம் அருகில் உள்ள ஈரப்பகுதி சுவரிலோ பொருத்தியிருக்கும் கூரையிலோ பரவுதல்; electrical leakage. *மின் கசிவினால் தீப்பிடித்தல் முதலான ஏதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.*

[மின் + கசிவு.]

மின்கடமாலை *minkaḍa-mālai,* பெ.(n.) மின்னூக்கி; battery (சா.அக.).

மின்கலம் *minkalam,* பெ.(n.) வேதியியல் முறையில் மின்சாரம் செய்யும் அமைப்பு; battery, cell.

[மின் + கலம்.]

மின்காந்தம் *min-kāndam,* பெ.(n.) கம்பிச் சுருள் வழியாக மின்சாரம் பாய்ந்து கொண்டு இருக்கும் வரை காந்த ஆற்றலைப் பெற்றிருக்கும் மாழைத் துண்டு; electromagnet.

[மின் + காந்தம்.]

மின்கொடி *min-koḍi,* பெ.(n.) பெண்; woman (சா.அக.).

[மின் + கொடி.]

மின்னலைப் போன்ற கொடி இடையை யுடைய பெண்.

மின்சாரக்கம்பி *minšāra-k-kambi,* பெ.(n.) மின்னாற்றலைக் கடத்தும் கம்பி (வின்.); electric wire.

[மின்[1] + சாரம் + கம்பி.]

மின்சாரக்காந்தம் *minšāra-k-kāndam,* பெ.(n.) மின்காந்தம் பார்க்க; see *min-kāndam.*

[மின்சாரம் + காந்தம்.]

மின்சாரக்காந்தி *minšāra-k-kāndi,* பெ.(n.) மின்விளக்கு; electric light (சா.அக.).

மின்சாரக்குப்பி *minšāra-k-kuppi,* பெ.(n.) மின் ஆற்றலைப் பெருக்கக் கூடிய மின்கலம்; electric cell (சா.அக.).

மின்சாரத்திருக்கை *minšāra-t-tirukkai,* பெ.(n.) கடலில் வாழும் ஒரு வகைத் திருக்கை மீன்; a fish - *Torpedo Ray. மின்சாரத்தைத் தொட்டால் எப்படிக் கை முழுவதும் சிறிது நேரம் உணர்ச்சியற்றுப் போகிறதோ அதைப் போன்ற ஆற்றலை உடைய மீன் (சா.அக.).*

[மின்சாரம் + திருக்கை.]



மின்சாரம் *minšāram,* பெ.(n.) விளக்குகளை ஒளிரச் செய்தல், இயந்திரங்களை இயக்குதல் முதலியவற்றிற்குப் பயன்படும் மின் அணுக்களின் வழி கிடைக்கும் ஆற்றல், வடிவம்; electricity.

[மின் + சாரம். சாறு→சாரு→சாரம்.]

மின்சாரமருத்துவம் *minšāra-maruttuvam,* பெ.(n.) மின்சார ஆற்றலை உடம்பில் ஊட்டி செய்யும் மருத்துவம்; electric treatment or magnetic cure.

[மின்சாரம் + மருத்துவம்.]

மின்சாரமானி *minšāra-māni,* பெ.(n.) மின்னோட்டத்தை யளக்குங் கருவி (பாண்டி.); volt meter.

[மின்சாரம் + மானி.]

மின்சாரயந்திரம் *minšāra-yandiram,* பெ. (n.) மின்னாற்றலை யுண்டாக்கும் பொறி; eletric machine or generator.

[மின்சாரம் + எந்திரம்.]

மின்சாரவண்டி *minšāra-vaṇḍi,* பெ. (n.) மின்னாற்றலால் இயங்கும் வண்டி; electric tram or train.

[மின்சாரம் + வண்டி.]

மின்சாரவிளக்கு *minšāra-viḷakku,* பெ. (n.) மின்விளக்கு பார்க்க; see *min-viḷakku.*

[மின்சாரம் + விளக்கு.]

மின்சாரவெளிச்சம் *minšāra-veḷiccam,* பெ. (n.) மின் ஆற்றலைக் கொண்டு ஆக்கும் ஒளி (வெளிச்சம்); electric light (சா.அக.).

[மின்சாரம் + வெளிச்சம்.]

மின்தடங்கல் *min-taḍaṅgal,* பெ. (n.) தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் மின்னோட்டம் இடையே நின்று விடுகை; power failure. *நிகழ்ச்சியின் போது கிட்டத்தட்ட ஐந்து மணித்துளி மின் தடங்கல் ஏற்பட்டதற்கு வருந்துகிறோம்.*

[மின் + தடங்கல்.]

மின்தடை *min-taḍai,* பெ. (n.) 1. மின் அளவைக் குறைத்துப் பாய்வதற்காகப் பயன்படுத்தும் தடையமைப்பு; resistance. 2. மின்தடங்கல் பார்க்க; see *min-taḍaṅgal.*

[மின் + தடை.]

மின்துகள் *min-tugaḷ,* பெ. (n.) அணுக் கருவினுள் மின்னோட்டத்திற்குக் கரணியமான துகள்கள்; atomic particles circulated in Nucleus caused for electricity.

[மின் + துகள்.]

மின்தொகுப்பு *min-toguppu,* பெ. (n.) வெவ்வேறு மின் நிலையங்களில் இருந்து வரும் மின் ஆற்றலைப் பெற்று, அதைப் பயன்படுத்துவதற்கெனப் பிரித்து அனுப்பும் அமைப்பு; grid.

[மின் + தொகுப்பு.]

மின்தொடர்வண்டி *min-toḍar-vaṇḍi,* பெ. (n.) மின்சாரத்தின் மூலமாக ஓடும் தொடர்வண்டி; electric train.

[மின் + தொடர் + வண்டி.]



மின்பிரவாகம் *min-piravāgam,* பெ. (n.) மின்னோட்டம் பார்க்க; see *minnōṭṭam* (சா.அக.).

மின்மணல் *min-maṇal,* பெ. (n.) வெள்ளி மணல்; silver ore (சா.அக.).

[மின் + மணல்.]

மின்மயமாக்கு–தல் *min-mayam-ākku-,* 5 செ.குன்றாவி. (v.t.) எரியாற்றலாலோ வேறு வகையிலோ இயங்கும் பொறிகளை முழுவதுமாக மின்சாரத்தால் இயங்குமாறு மாற்றி அமைத்தல்; electrification. *இருபெரும் நகரங்களுக்கு இடையே உள்ள தொடர் வண்டிப் பாதை மின் மயமாக்கப்பட்டு வருகிறது.*

[மின் + மயம் + ஆக்கு–தல்.]

மின்மாற்றி *min-mārri,* பெ.(n.) நெடுந் தொலைவு கம்பிகளின் மூலம் கொண்டு செல்வதற்கு அல்லது பயன்படுத்தும் அளவிற்கு ஏற்ற வகையில் மின்சாரத்தின் அழுத்தத்தையும், அளவையும் கூட்டவோ அல்லது குறைக்கவோ செய்யும் பொறி; transformer.

[மின் + மாற்றி.]

மின்மானி *min-māni,* பெ.(n.) மின்சாரமானி பார்க்க; see *minšāra-māni.*

மின்மினி *min-mini,* பெ.(n.) இரவில் ஒளிவீசும் ஒருவகைப் பூச்சி; fire-fly. *"மதியாதவன் கதிர் மின்மினிபோ லொளிர்" (அஷ்டப். திருவேங்கடத்தந்.20). "நிலம் படு மின்மினி போல் பலவுடன்" (அகநா.67:16). "பன்மர உயர்சினை மின்மினி விளக்கத்து" (நற். 44:10).*

[மினுமினு → மின்மினி. மினுமினுத்தல் = ஒளிவிடுதல்.]

இருட்டில், பறக்கும்போது ஒளிவிட்டு மின்னும் உறுப்பை வயிற்றுப் பகுதியில் கொண்ட ஒரு சிறு பூச்சி.

மின்மினிநெல் *minmini-nel,* பெ.(n.) நெல் வகை (பெரும்பாண்.305, உரை); a kind of paddy.

மின்மினிப்பூச்சி *minmini-p-pūcci,* பெ.(n.) மின்மினி பார்க்க; see *min-mini.*

[மின்மினி + பூச்சி.]

மின்மினிபற-த்தல் *minmini-para-,* 3 செ.கு.வி.(v.i.) ஒளிமிகுதியாற் கண்ணொளி மழுங்குதல்; to grow dim; to be dazed, as the eye. *"மின்மினி பறவா நின்றது காணும்" (ஈடு, 3. 7:4).*

[மின்மினி + பற-த்தல்.]

மின்முலாம் *min-mulām,* பெ.(n.) பொருள்களின் மேல் மின்னியல் (வேதி.) முறைப்படி பூசப்படும் மாழைப் பூச்சு; electroplating. *பாண்டங்களின் மீது மின் முலாம் பூசினால் நீண்ட நாட்களுக்கு அழியாமல் இருக்கும்.*

[மின் + அரபு. முலாம்.]

அரபு. முலம் மா > த. முலாம்.

மின்வாகி *min-vāgi,* பெ.(n.) மின்வாய்; electrode (சா.அக.).

மின்வாங்கி *min-vāngi,* பெ.(n.) மின்னலைத் தன்னிடம் பெற்றுக் கொள்ளும் கருவி; lightning conductor.

மறுவ. மின்தாங்கி, இடிதாங்கி.

[மின் + வாங்கி.]

இக்கருவி மாழைகளால் செய்யப்பட்டக் கம்பிகளைக் கொண்டது. கட்டடங்களின் வழியே நிலத்திற்குள் அழுந்தப்பதித்திருப்பது. இவ்வாறு செய்வதால் கம்பிகளின் வழியே மின்சாரம் நிலத்திற்குள் சென்று விடுவதால் இடி விழுவது தடுக்கப்படுகிறது (அபி.சிந்.).

மின்விசிறி *min-viširi,* பெ.(n.) காற்று வீசச் செய்யக் கூடிய இறக்கைகளை மின்சாரத்தால் இயக்கும் பொறி; electric fan.

[மின் + விசிறி.]



மின்விளக்கு *min-viḷakku,* பெ.(n.) மின்சார ஆற்றலால் ஒளிதரும், ஒளிரும் விளக்கு; electric light. *மின் விளக்கு ஒப்பனை செய்த வீடு.*

[மின் + விளக்கு.]

மின்வெட்டு *min-veṭṭu,* பெ.(n.) மின்சாரம் தேவையான அளவு கிடைக்காத காலங்களில் மின்சாரத்தைக் குறிப்பிட்ட கால அளவு நிறுத்தி விடுகை; current cut.

[மின் + வெட்டு.]

மின்னஞ்சல் *min-n-añjal,* பெ.(n.) இணைய வழி நடைபெறும் அஞ்சல் சேவை; electronic mail, e-mail.

[மின் + அஞ்சல்.]

மின்னல்[1] *minnal,* பெ.(n.) 1. மழை முகிலில் தோன்றும் மின்னொளி (சூடா.); lightning. *மின்னினால் மழை பெய்யுமா?* 2. ஒளிமிக்க காசு (நாணயம்); bright coin. *"திருவாங்கோட்டு மின்னல்" (பணவிடு.137).*

[முல்→(மில்) →மின்→மின்னல் (மு.தா.).]

பெரும்பாலும் மழைக்காலத்தில் முகில்களுக் கிடையே ஏற்படும் மின்னோட்டத்தின் விளைவாக உண்டாகக் கூடியது; வானில் சில நொடிப் பொழுதில் மிகுந்த வேகத்துடன் பரவி மறையும் தன்மை வாய்ந்தது; இடியுடன் கூடிய ஒளிப்பிழம்பு.

மின்னல்[2] *minnal,* பெ.(n.) 1. நாகமணல்; zinc ore. 2. அறிவன் (புதன்) கோள்; mercury (சா.அக.).

மின்னல்கொடி *minnal-koḍi,* பெ.(n.) மின்னற்கொடி பார்க்க; see *minnaṟ-koḍi.*

[மின்னல் + கொடி.]

மின்னலி-த்தல் *minnali-,*4 செ.கு.வி. (v.i.) மின்னுதல்; to flash as lightning. *"மின்னலிக்கும் வணக்கத் திடையாளையும்" (பதினோ. திருவேகம். திருவந்.74).*

[மின்னு-தல் → மின்னலி-த்தல்.]

மின்னற்கொடி *minnaṟ-koḍi,* பெ.(n.) 1. நீண்ட கொடி போல் தோன்றும் மின்னல் ஒளி; flash of lighting. 2. மின்னலின் ஒளிக்கொடி (சூளா.தூது.11); streak of lightning.

[மின்னல் + கொடி.]

மின்னணு *min-n-aṇu,* பெ.(n.) மின்துகள் பார்க்க; see *min-tugaḷ.*

[மின் + அணு.]

மின்னணுவியல் *min-n-aṇuviyal,* பெ.(n.) மின்னணுவின் இயக்கம் குறித்தும், அதனை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த அறிவியல் குறித்தும் விளக்கும் துறை; electronics.

[மின்னணு + இயல்.]

மின்னற்றழுக்கு *minnaṟṟaḻukku,* பெ.(n.) நாகமணல் (யாழ்.அக.); lead ore.

மின்னாக்கி *minnākki,* பெ.(n.) மின்சாரத்தை உருவாக்கும் கருவி; generator.

[மின் + ஆக்கி.]

மின்னாம்பூச்சி *min-n-ām-pūcci,* பெ.(n.) மின்மினி பார்க்க (இ.வ.); see *minmini.*

[மின் + ஆம் + பூச்சி.]

மின்னார் *minnār,* பெ.(n.) அழகிய பெண்டிர்; women with dazzling beauty. *"மின்னார்க ளின்பமே மெய்யென்றும்" (தாயு. மௌன.4).*

[மின் → மின்னார்.]

மின்னாற்றல் *minnāṟṟal,* பெ.(n.) மின்சாரத்தின் ஆற்றல்; electric power.

[மின் + ஆற்றல்.]

மின்னி *minni,* பெ.(n.) 1. கருங்காக்கணம்; mussell-shell creeper. 2. நீர்ப்பயறு; a leguminous plant.

[முன்→முன்னி→மின்னி = முல்லை நிலத்தில் இயற்கையாக விளையும் ஒரு சிறு பயறு (வே.க.4.)]

மின்னிட்டான்புழு *minniṭṭāṉ-puḻu,* பெ. (n.) மின்மினி பூச்சி; fire fly (சா.அக.).

மறுவ. மினுக்கட்டான்பூச்சி.

[மினிட்டான் + புழு.]

மின்னிடை *min-n-iḍai,* பெ.(n.) மின்னல் போன்ற கொடி இடையை யுடையவளான பெண்; woman as having a waist like a streak of lightning.

[மின் + இடை.]

மின்னிப்பயறு *minni-p-payaṟu,* பெ.(n.) மின்னி, 2 பார்க்க (வின்.); see *minni, 2.*

[மின்னி + பயறு.]

மின்னியல் *minniyal,* பெ.(n.) மின்சார ஆக்கம், பயன்பாடு முதலியவைக் குறித்தும் மின்சாரத்தால் இயங்கும் பொறிகள் குறித்தும் விளக்கும் துறை; the study of electricity; electrical engineering.

[மின் + இயல்.]

மின்னியார்-த்தல் *minni-y-ār-,* 4 செ.கு.வி. (v.i.) ஒளிவீசுதல் (யாழ்.அக.); to dazzle.

[மின்னு + ஆர்-த்தல்.]

மின்னியிலை *minni-y-ilai,* பெ.(n.) முன்னை யிலை; leaf of *munnai.*

[முன்னி→மின்னி + இலை.]

மின்னு-தல் *minnu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மின்னல் பளீரெனத் தோன்றுதல்; flash. *மின்னுவதெல்லாம் பொன்னல்ல (பழ.). "மின்னுவிடச் சிறிய வொதுங்கி மென்மெல" (அகநா.8:14).* 2. ஒளி பட்டுப் பளபளத்தல்; விட்டு விட்டு ஒளிர்தல்; shine; glitter; dazzle. *கதிரவன் ஒளியில் அவள் கூந்தல் மின்னியது. சாணை தீட்டியவுடன் கத்தி பளபளவென மின்னியது. இருட்டில் பூனையின் கண்கள் மின்னின.* 3. கண்களில் முகத்தில் ஆர்வம், ஆசை முதலியவை தெளிவாகப் புலப்படும் வகையில் வெளிப்படுதல்; மிளிர்தல்; glitter, brighten up. *அவன் சொன்ன கதையைக் கண்களில் மகிழ்ச்சி மின்னக் கேட்டுக் கொண்டு இருந்தது குழந்தை.*

[மின்→மின்னு→மின்னு-தல்.]

மின்னுக்கொடி *minnu-k-koḍi,* பெ.(n.) மின்னற்கொடி பார்க்க; see *minnaṟ-koḍi. "மின்னுக் கொடி யொன்று மீவிசும்பில் தோன்றுமால்" (சிலப்.29:9).*

மின்னூட்டம் *minnūṭṭam,* பெ.(n.) மின்னாற்றலை மின்கலத்தில் ஏற்றுகை; charge the cell or battary.

[மின் + ஊட்டம்.]

மின்னூது-தல் *minnūdu-,* 5 செ.கு.வி.(v.i.) நகையில் அதனுருக்களைப் பொடி வைத்துச் சேர்த்தல் (இ.வ.); to solder in making jewel.

[மின் + ஊது-தல்.]

மின்னூல்[1] *minnūl*, பெ.(n.) மெய்ந்நூல் (வின்.); sacred writing.

[மெய்ந்நூல் → மின்னூல்.]

மின்னூல்[2] *minnūl*, பெ.(n.) 1. பூநூல்; sacred thread. 2. மகளிர் கழுத்தணி வகை; woman's necklace of three strands.

[முந்நூல் → மின்னூல்.]



மின்னெறி-தல் *minneri-*, 2 செ.கு.வி.(v.i.) மின்னு-தல் பார்க்க (யாழ்.அக.); see *minnu-*.

[மின்[1] + எறி-தல்.]

மின்னேற்றம் *minnērram*, பெ.(n.) மின்னூட்டம் பார்க்க; see *minnuttam*.

மின்னைவேர் *minnai-vēr*, பெ.(n.) முன்னை வேர் (சா.அக.); root of *munnai*.

[மின்னை + வேர்.]

மின்னொழுக்கு *minnolukku*, பெ.(n.) 1. மின்னல் பாய்கை (M.L.); stroke of lightning. 2. மின்கசிவு; electrical leakage.

[மின் + ஒழுக்கு.]

மின்னொழுகுதல் *minnolugudal*, பெ.(n.) மின்னல் பாய்கை (இ.வ.); stroke of lighting.

[மின் + ஒழுகுதல்.]

மின்னோட்டம் *minnōttam*, பெ.(n.) மின்சாரம் பாய்தல்; flow of current.

[மின் + ஓட்டம்.]

மினக்கெடு-தல் *minakkedu-*, 20 செ.கு.வி. (v.i.) காலம் வேலை முதலியன வீணாகுதல் (உ.வ.); to waste time, labour, etc.

மறுவ. மெனக்கெடுதல்

[வினைகெடு-தல் → மினைகெடு-தல் → மினக்கெடு-தல்.]

மினக்கேடு *mina-k-kēdu*, பெ.(n.) காலம் வேலை முதலியன வீணாகுகை (உ.வ.); waste of time, labour, etc.

[மினக்கெடு → மினக்கேடு.]

மினவு-தல் *minavu-*, 5 செ.குன்றாவி.(v.t.) நலமறிதல் (யாழ்.அக.); to greet; to make kindly enquiries of.

[வினவு-தல் → மினவு-தல்.]

மினான் *minān*, பெ.(n.) ஊர்க் கணக்கன் (வின்.); a village accountant.

ம. மேனவன்

மினிக்கி *minikki*, பெ.(n.) ஒருவகை மரம் (பச்.மூ.); a kind of tree.

மினிச்சி *minicci*, பெ.(n.) ஒருவகை நஞ்சு (இரசித பாஷாணம்); a kind of arsenic acting on mercury and copper.

மினிப்பூச்சி *mini-p-pūcci*, பெ.(n.) மின் மினிப்பூச்சி; fire fly (சா.அக.).

[மினி + பூச்சி.]

மினிரம் *miniram*, பெ.(n.) காரீயக்கல்; graphite (சா.அக.).

மினுக்கம் *minukkam,* பெ.(n.) 1. ஒளி; polish, brightness. 2. சிறப்பு; excellence. *"சில மினுக்கங்களுண்டிறே" (ஈடு,7. 6:4).* 3. பகட்டு (வின்.); showiness, show.

[மினுக்கு → மினுக்கம்.]

மினுக்கல் *minukkal,* பெ.(n.) மினுக்கம் (சங். அக.) பார்க்க; see *minukkam.*

மினுக்கன்வளையல் *minukkan-valaiyal,* பெ.(n.) வளையல் வகை; a kind of bangle. *"இத்தேவர்க்குக் கொடுத்த மினுக்கன் வளையல் இரண்டினால்" (தெ.இ. க.தொ. vii, 8:128).*

[மினுக்கன் + வளையல். ஒளிவீசும் வளையல்.]

மினுக்கி *minukki,* பெ.(n.) 1. தன்னை அழகுபடுத்திக்கொள்பவ–ன்–ள்; one who beautifies one self. *"மீதோலெங்கு மினுக்கிகள்" (திருப்பு.623).* 2. பகட்டுபவள் (இ.வ.); showy, attractive woman.

[மினுக்கு → மினுக்கி.]

மினுக்கு[1]–தல் *minukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. பளபளப்புண்டாக்குதல், மிளிர்தல்; to polish brighten, beautify. *"தண் புனலின் மினுக்கி யுளைவகிர்ந்தன" (அழகர்கல.10). ஏனத்தைத் தேய்த்துக் கழுவி மினுக்கி வைத்திருந்தாள்.* 2. அரிசி தீட்டுதல்; to remove bran from rice in polishing.

[மினங்கு–தல் → மினுக்கு–தல்.]

மினுக்கு[2]–தல் *minukku-,* 5 செ.கு.வி.(v.i.) 1. மிளிர்தல்; polish, brighten. 2. பகட்டுதல், பகட்டுக்காட்டுதல்; be glamorous; flaunt. *குலுக்கி மினுக்கி வருவதைப்பார்!* 3. துணி முதலியவற்றைத் தேய்த்தல்; press clothes. *இந்த வேட்டியைக் கஞ்சி போட்டு மினுக்க வேண்டும்.*

[மினுங்கு–தல் → மினுக்கு–தல்.]

மினுக்கு[3] *minukku,* பெ.(n.) மினுக்கம் பார்க்க; see *minukkam.*

[மினுங்கு → மினுக்கு.]

மினுக்குத்தகடு *minukku-t-tagadu,* பெ. (n.) காக்காய்ப் பொன்; tinsel, mica.

[மினுக்கு + தகடு.]

மினுக்குத்தொடர் *minukku-t-todar,* பெ.(n.) அணிகலன் வகை; a kind of jewel. *"தேவர்பூணும் மினுக்குத் தொடராலும்" (தெ. இ.கல்.தொ.5:234).*

மினுக்குப்பசை *minukku-p-pasai,* பெ.(n.) நெய்வார் இடும் பசை வகை (வின்.) (நெசவு); a varnish used by weavers.

[மினுக்கு + பசை.]

நெய்யும் துணி பளபளக்க வேண்டி பசையூட்டுதல்.

மினுக்குமினுக்கென்று *minukku-minu-k-kenru,* வி.அ.(adv.) ஒளிர்தல் குன்றித் தோன்றுகை; glimmering. *நெடுந் தொலைவில் உள்ள கோவிலின் விளக்கு மினுக்குமினுக்கென்று எரிந்து கொண்டு இருந்தது.*

[மினுக்கு + மினுக்கு + என்று.]

மினுக்குமினுக்கெனல் *minukku-minu-kenal,* பெ.(n.) ஒளி குன்றுகை; glimmering; flickering. *விளக்கு மினுக்கு மினுக்னெ எரிகின்றது.*

[மினுக்கு + மினுக்கு + எனல்.]

மினுக்கெண்ணெய் *minukkenney,* பெ.(n.) 1. உடலுக்குப் பளபளப்புண்டாகும் எண்ணெய்

வகை; an oil used in toilet. 2. மரச் சாமான்களுக்குரிய பூச்செண்ணெய்; a varnish.

[மினுக்கு + எண்ணெய்.]

மினுங்கு–தல் *minungu-*,5 செ.கு.வி.(v.i.) 1. ஒளிவீசுதல்; to glitter, shine. *"வனமாலை மினுங்க" (திவ்.நாய்ச்.14:2).* 2. விளக்கமாய்த் தோன்றுதல்; to appear bright. *"அழகு மினுங்கியிருப்பது" (திவ்.திருமாலை, 23, வியா, பக்.81).*

க. மினுகு

[மின் →மின்னு →மினுங்கு →மினுங்கு–தல்.]

மினுங்குபொழுது *minungu-poludu*,பெ.(n.) மாலை வேளை (யாழ்.அக.); dusk.

[மினுங்கு + பொழுது.]

மினுங்குவாரப்பொழுது *minungu-vāra-p-poludu*,பெ.(n.) மினுங்குபொழுது (யாழ். அக.) பார்க்க; see *minungu-poludu.*

[மினுங்கு + வாரம் + பொழுது.]

மினுமினு–த்தல் *minuminu*,4 செ.கு.வி. (v.i.) 1. ஒளிர்தல் (உ.வ.); to glitter, dazzle. 2. ஒளி குன்றுதல் (இ.வ.); to glimmer, flicker. 3. விட்டு விட்டு, முழு வெளிச்சத்துடன் ஒளிர்தல்; shine brightly but intermittently, glitter. *விளக்கொளியில் அவள் நகைகள் மினுமினுத்தன. பட்டுச் சட்டை மினுமினுக்க நடந்து வந்தான்.*

மினுமினுப்பு¹ *minu-minuppu*,பெ.(n.) விட்டு விட்டுப் புலப்படும் ஒளிர்வு; polish, glitter.

[மினுமினு →மினுமினுப்பு.]

மினுமினுப்பு² *minu-minuppu*,பெ.(n.) சளி மிகுதியினால் உடம்பின் தோலின் மேல் ஏற்படும் ஒருவகை நிலைமை; good lustre caused by phlegm humour in the body.

மீ

மீ¹ *mī*,பெ.(n.) மகர ஒற்றும் ஈகார உயிரும் இணைந்து ஒலிப்பதனால் இவ்வெழுத்துப் பிறக்கும்; the compound of 'ம்' and 'ஈ'.

[ம் + ஈ.]

வாயைச் சற்று நீட்டி இசைப்பதால் இவ்வொலி தோன்றும்.

பல்வேறு காலங்களில் இவ்வெழுத்து அடைந்த வரி வடிவ மாற்றங்கள்.

மீ² *mī*,பெ.(n.) 1. மேலிடம்; top, surface. *"நாண் மலர் வான்மீ யகத்தே வர" (திருநூற். 84). "காழ்விரி வகையார மீவரு மிளமுலை" (கலித்.4:9).* 2. உயரம் (திவா.); height, elevation, eminence, loftiness. 3. வானம் (பிங்.); sky, heavens. *"மீப்பாவிய விமையோர் குலம்" (கம்பரா.நிகும்பலை.149).* 4. மேன்மை; greatness, dignity, eminence, esteem, honour, nobility. *"வெற்றிக் கருளக் கொடியான்றன் மீமீதாடா வுலகத்து" (திவ்.நாய்ச்.13:7).*

தெ. மீ; க. மே.

மீ³–தல் *mī-*,2 செ.கு.வி.(v.i.) மீந்திருத்தல்; to remain.

மீ⁴–த்தல் *mī-*,4 செ.கு.வி.(v.i.) மீத்து வைத்தல்; to save for future use. *சம்பளத்தில் மீத்தத் தொகையில் தான் மகளுக்குத் திருமணம் செய்து வைத்தான் (உ.வ.).*

மீக்கல் *mikkal*,பெ.(n.) காக்கைப் பொன் (அப்பிரகம்); mica (சா.அக.).

மீக்குணம் *mī-k-kuṇam,* பெ.(n.) பெரு மிதமாய் நடக்குந் தன்மை; superciliousness. *"மீட்பில்லோரை மீக்குணம் பழியார்" (முது.காஞ்.22).*

[மீ + குணம்.]

மீக்குவம் *mīkkuvam,* பெ.(n.) 1. மருத மரம்; marudhu tree - *Terminalia paniculata.* 2. பெரும் பருத்தி; a plant. 3. கருமருது; black mardhu-*Terminalia tomentosa.*

மீக்கூர்-தல் *mī-k-kūr-,* 2 செ.கு.வி. (v.i.) அதிகமாதல், பெருகுதல்; to increase, to multiply, to surplus. *"நாண் மீக்கூரி" (பெருங்.உஞ்ஞைச்.55:94).*

[மீ² + கூர்-தல்.]

மீக்கூற்றம் *mīkkūṟṟam,* பெ.(n.) 1. புகழ் (பிங்.); praise. *"பொது மீக்கூற்றத்து நாடு கிழவோயே" (புறநா.135).* 2. மேலாக மதிக்கப்படும் சொல்; speech or word which wins high regard. *"புகழ் செல்வ மீக்கூற்றஞ் சேவகம்" (ஏலாதி.1). "யாதுமீக் கூற்றம் யாமில மென்னும்" (கலித்.87:14).*

[மீக்கூறு → மீக்கூற்றம். மீக்கூறுதல் = உயர்வாகக் கூறுதல்.]

மீக்கூற்று *mīkkūṟṟu,* பெ.(n.) மீக்கூற்றம் பார்க்க; see *mī-k-kūṟṟam. "மீக் கூற்றாளர்" (சிலப்.28:149).*

[மீக்கூற்றம் → மீக்கூற்று.]

மீக்கூறல் *mīkkūṟal,* பெ.(n.) மேம்பாடு (அக. நி.); superiority, pre-eminence value.

[மீக்கூறு → மீக்கூறல்.]

மீக்கூறு¹-தல் *mī-k-kūṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) உயர்வாகக் கூறுதல்; to praise high of oneself. *"காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்" (குறள், 386).*

[மீ + கூறு-தல். கூறு-தல் = சொல்லுதல், புகழ்ந்து சொல்லுதல்.]

மீக்கூறு² *mī-k-kūṟu,* பெ.(n.) மீக்கூற்றம், 1 பார்க்க; see *mīkkūṟṟam.*

மீக்கொள்(ளு)¹-தல் *mī-k-koḷ-,* 13 செ.கு.வி. (v.i.) 1. உயர்தல்; to ascend, to rise high. *"அகின்மா புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின் மீக்கொள" (திருவாச.3:92).* 2. மிகுதல்; to increase. *"வசையுங் கீழ்மையு மீக்கொள" (கம்பரா. யுத்த. மந்திரப்.99).*

[மீ + கொள்(ளு)-தல்.]

மீக்கொள்(ளு)²-தல் *mī-k-koḷ-,* 13 செ. குன்றாவி. (v.t.) 1. மேலாக மதித்தல்; to esteem, to honour; to be noble. *"மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க" (நன்னெறி, 22).* 2. மிகுதியாகக் கொள்ளுதல்; to possess in abundance. *"ஊற்ற மீக்கொண்ட வேலையான்" (கம்பரா.வருணனைவழி.7).* 3. மேலே அணிதல்; to put on. *"பாப்புரி யன்ன மீக்கொ டானை" (பெருங்.உஞ்சைக். 42:244).*

[மீ + கொள்(ளு)-தல்.]

மீக்கோழை *mī-k-kōḻai,* பெ.(n.) பாண்டிய வளநாட்டின் பிரிவுகளுள் அடங்கியவொரு நாடு; a country in *Pāṇḍiya*kingdom. *"பாண்டிய குலாசனி வளநாட்டு மீகோழை தேவதான பிரம தேயம் திருவானைக்காவில்" (கல்.அக.).*

[மேற்கு → மேல்+கோழை-மேக்கோழை → மீக்கோழை.]

ஒருகா. வளங்கொழித்த இடம் கோழை எனப்பட்டிருக்கலாம்.

இன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் பகுதி. திருவானைக்கா மீக்கோழை நாட்டுள் அடங்கிய ஊர்களுள் ஒன்றாகும் (கல்.அக.).

மீக்கோள் *mīkkōḷ*, பெ.(n.) 1. ஏறுகை (பிங்.); ascent. 2. மேற்றாங்குகை (வின்.); upholding. 3. பொலிவு (அரு.நி.); abundance, plenty. 4. மேற்போர்வை; upper garment. *"மீக்கோ ளுடற்கொடுத்துச் சேர்தல் வழி" (ஆசாரக்.31). (பிங்.).*

[மீக்கொள்→மீக்கோள்.]

மீகக்கல் *mīka-k-kal*, பெ.(n.) மீக்கல் பார்க்க; see *mīkkal.*

மீகண் *mī-kaṇ*, பெ.(n.) 1. கண்ணின் மேலிடம் (தொல்.எழுத்து.250, உரை); the region above or over the eye. 2. மேலிடம் (சங்.அக.); top, upper or outer surface.

[மேல் + கண் – மேக்கண்→மீக்கண்→மீகண்.]

மீகாமன் *mīkāmaṉ*, பெ.(n.) கப்பலைச் செலுத்தும் தலைவன் (மாலுமி); pilot, captain of a vessel. *'மரக்கல மீகாமர்' (மதுரைக்.321, உரை). "மீகாமன் இல்லா மரக்கலம் ஒருகாலும் ஓடாது" (பழ.).*

மீகாமன்வலங்கை *migāmaṉ-valaṅgai*, பெ.(n.) 18ஆம் நூற்றாண்டில் அறிவானந்த சித்தியார் என்னும் நூலை இயற்றியவர்; author of *Aṟivāṉanda śiddiyār.*

[மீகாமன் + வலங்கை.]

வலங்கை என்பது ஊர்ப்பெயர். இவ்வூர் கும்பகோணம் எனப்படும் குடமுக்குக்கு அருகில் உள்ளது. அரண்மனையில் அரசர்க்கு வலப்புறம் அமர்ந்திருப்போர்க்காக ஒதுக்கப்பட்ட குடியிருப்பு.

மீகாரம் *mī-kāram*, பெ.(n.) மாளிகையின் மேலிடம்; upper storey or terrace of a mansion. *"மீகார மெங்கணு நறுந்துகள் விளக்கி" (கம்பரா.ஊர்தே.3).*

[மீ + Skt.ஆகாரம்.]

மீகான்[1] *mīkāṉ*, பெ.(n.) ஒரு பெரிய ஏனம் (மீனவ.); big vessel or utensil.

மீகான்[2] *mīkāṉ*, பெ.(n.) மீகாமன் பார்க்க; see *mī-kāmaṉ. 'நான்முகன் மீகானா' (தண்டி.37, உரை, எடு.).*

[மீகாமன் → மீகான்.]

மீகை[1] *mīkai*, பெ.(n.) மேலெடுத்த கை; uplifted arm. *"வென்றி யாடிய தொடித்தோண் மீகை" (பதிற்றுப்.40:12).*

[மீ + கை.]

மீகை[2] *mīkai*, பெ.(n.) புலி தடுக்கிக் கொடி வகை (மலை.); Mysore thorn - a creeper.

மீச்சிதக்களி *mī-c-cidakkaḷi*, பெ.(n.) வெள்ளாவிப்பானை; earthern pot used by washer man for boiling clothes with fuller's earth.

மீச்சிதம் *miccidam*, பெ.(n.) மீச்சிதக்களி பார்க்க; see *miccida-k-kaḷi.*

மீச்செலவு *mī-c-celavu*, பெ.(n.) 1. வரம்பு மீறிய நடத்தை; arrogant conduct, presumption, forward behaviour. *"சிறியா ரிடைப்பட்ட மீச்செலவு காணின்" (நீதிநெறி. 17).* 2. மேற்போகை (யாழ்.அக.); advancing, progressing.

[மீ + செலவு. செலவு = நடை, போக்கு, ஓட்டம்.]

மீசப்பரவை *mīša-p-paravai,* பெ.(n.) ஒருவகை மீன் (மீனவ.); a kind of fish. *கெண்டைமீன் வகையைச் சார்ந்தது.*

மீசரம் *mīšaram,*பெ.(n.) 1. மேலானது; that which is superior or great. *இந்தத் தவசம் மீசரமாயிருக்கிறது (வின்.).* 2. மிகுதி (வின்.); plenty. 3. விரைவு (யாழ்ப்.); speed, hurriedness.

தெ. மீசரமு.

[மீ + தரம் – மீதரம்→மீசரம்.]

மீசரன் *mīšaran,* பெ.(n.) மேலானவன்; superior, great person. *"கெம்பீரந் தன்னில் மீசரா" (இராமநா.உயுத்.31).*

[மீசரம் → மீசரன்.]

மீசவாரம் *mīša-vāram,* பெ.(n.) நில வுடைமையாளரின் முதல் பங்கு (அ) கண்டு முதலில் மேல் வாரப் பங்கு (W.G.); the landholder's share of the crop yield.

[மீசு + வாரம். மீசு = மிகுதி.]

மீசு *mīšu,* பெ.(n.) 1. மீது பார்க்க; see *mīdu.* *"துவராடை மீசுபிறக்கிய மெய்யினாரும்" (தேவா.38, 10).* 2. மிகுதி (யாழ்.அக.); abundance, copiousness.

[மீது → மீசு.]

மீசுபொலி *mīšu-poli,*பெ.(n.) அறச் செலவின் பொருட்டு முதலிற் கொள்ளுங் களநெல் (யாழ்ப்.); grain first taken from the grain - heap at the threshing floor for charitable purposes.

[மீசு + பொலி. பொலி = நெற்குவியல். களத்தில் நெல்லளக்கும் போது முதல் மரக்காலுக்கு நற்சொல்லாக வழங்கும் பெயர். பொல்→பொலி = செழித்தல், பெருகுதல். நெல்லளக்கும் போது முதலில் அளக்கும் அளவையை, பொலி வளர என்று நற்சொல்லாகக் கூறுவர்.]

மீசுமீட்டல் *mīšu-mīṭṭal,*பெ.(n.) மேலாக எடுக்கை (யாழ்.அக.); taking superficially.

[மீசு + மீட்டல்.]

மீசுரம் *mīšuram,*பெ.(n.) 1. மீசரம் பார்க்க; see *mīšaram.* *"மயல் மீசுரமாகுது" (தனிப்பா.1, 377:20).* 2. மிகவும் கடுமை (உக்கிரம்)யானது (யாழ்.அக.); that which is extremely severe of or fierce.

[மீசரம் →மீசுரம். மீசரம் = மேலானது, மிகுதி.]

மீசுவைத்தல் *mīšu-vaittal,* பெ.(n.) மேலே வைக்கை (யாழ்.அக.); placing at the top, priority.

[மீசு + வைத்தல். மீசு = மேலே, மேற்புறம், மேடு.]

மீசெங்கிலிநாடு *mīšeṅgili-nāḍu,* பெ.(n.) புதுக்கோட்டை நாட்டினுள் அடங்கிய குளத்தூர் வட்டத்தைச் சார்ந்த மலையம்பட்டி முதலான ஊர்கள் அடங்கிய நாடு; villages or townships in *Malayampaṭṭi,* in *Pudukkoṭṭai* dist. *இந்நாடு மீசெங்கிலி நாடு, கீழ்ச்செங்கிலி நாடு என்றும் பிரிக்கப்பட்டிருந்தது (புதுக்கோட்டை கல்வெட்டு.116) (கல்.அக.).*

மீசை *mīšai,*பெ.(n.) 1. ஆண்களின் மேல் உதட்டின்மேல் இருக்கும் முடி; moustache. *"துடித்த தொடர்மீசைகள் சுறுக்கொள" (கம்பரா. மாரீச.49). மீசை வளர்க்க ஆசை.* 2. பூனை, புலி போன்ற விலங்குகளின் வாயின் மேல் புறத்தில், பக்கவாட்டில் நீண்டிருக்கும் முடி; whiskers. 3. கரப்பான்

போன்ற பூச்சிகளின் தலையின் இருபுறமும் உள்ள விறைப்பான நீண்ட முடி போன்ற உணர்வு கொம்பு; antenna. 4. மேலிடம்; upper part. *"மீசைநீள் விசும்பில்" (சீவக.911).*

தெ. மீசமு; க. மீசெ; ம. மீசா.

[மிசை → மீசை.]

மீசைக்காரன் *mīšai-k-kāraṉ,* பெ.(n.) இறால் மீன் (மீனவ.) (குழூஉக்குறிச்சொல்); prawn fish.

[மிசை + காரன்.]



மீசைக்குத்தா *mīšai-k-kuttā,* பெ.(n.) ஒருவகைக் கடல் மீன் (மீனவ.); a kind of sea fish.

மீசைக்கொம்பு *mīšai-k-kombu,* பெ.(n.) ஒருவகைக் கொம்பு; horns which are in an elaborated position.

[மீசை + கொம்பு. விரிந்து மீசைபோல் இருக்கும் கால்நடைக் கொம்பு.]

மீசைமுறுக்கு–தல் *mīšai-muṟukku-,* 5 செ.கு.வி.(v.i.) வீரக் குறிப்பாக மீசையைப் பக்கவாட்டில் விரலால் திருகுதல்; to twist the moustache in anger, defiance or challenge. *"மீசை முறுக்கிச் சினந்து" (தனிப்பா.1, 296 : 6). எதற்கெடுத்தாலும் மீசையை முறுக்காதே.*

[மீசை + முறுக்கு–தல். வீரத்தோடு எதிர்த்துச் சண்டையிட அணியமாக இருத்தல்.]

மீசையைமுறுக்குகிறான் *mīšaiyai-muṟuk kugiṟāṉ,* பெ.(n.) சண்டைக்கு வருகிறான்; coming for a fight or a combat.

[மீசை + ஐ + முறுக்குகிறான்.]

மீட்சி¹ *mīṭci,* பெ.(n.) 1. திரும்புகை; turning, returning. *"மீட்சியுங் கூஉக்கூஉ மேவு மடமைத்தே" (பரிபா.19:65). வறுமையில் இருந்து மீட்சி பெற வழிதான் என்ன?* 2. உடன்போக்கின் வகையுள் ஒன்று (செவிலி, தலைவியைக் காணாது மீண்டு வருதலும், உடன்போய் தலைவனுந் தலைவியு மீண்டு வருதலுமாம்; a kind of accompaniment.

[மீள் → மீட்சி.]

மீட்சி² *mīṭci,* பெ.(n.) 1. திருப்புகை; turning (bringing) back, causing to return. 2. விடுதலை செய்கை (உ.வ.); releasing redeeming. 3. கைம்மாறு; recompense. *"மீட்சிசெய் திறமிலை" (கம்பரா.நாகபா.267).*

[மீள் → மீட்சி. ஒரு நிலையிலிருந்து விடுபடுதல், மீளுதல்.]

ஒருவர் ஒரு பதவியில் இருக்கும்போது பணி முடியாமலோ, தவறிச் செயற்படும் போதோ மேல் அதிகாரிகள் செய்யும் ஒருவகை நடவடிக்கை.

மீட்டிடம் *mīṭṭiḍam,* பெ.(n.) மீட்பதற்கு உரிய இடம்; place of return. *"மீட்டிடம் பெற்றுக் கூட்டிடங் கூடி" (பெருங்.உஞ்சைக்.57:75).*

[மீள் + இடம் – மீட்டிடம்.]

மீட்டு¹–தல் *mīṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. மீளச் செய்தல்; to cause to return. *போனவனை மீட்டுக் கொண்டு வந்தான்.*

2. ஒத்தி முதலியவற்றைத் திருப்புதல் (யாழ்.அக.); to redeem, as mortgaged property. 3. காத்தல் (யாழ்.அக.); to save. 4. யாழ் முதலியவற்றின் நரம்பை விரலால் தெறித்தல்; to fillip the strings of lute, etc. *யாழ் மீட்டினான் (உ.வ.).* 5. வீணை போன்ற இசைக்கருவிகளின் நரம்பை விரலால் அதிரச் செய்தல்; to play on the lute. *வீணையை மீட்டிக் கொண்டு பாடத் தொடங்கினான்.* 6. நாணேற்றுதல்; to fasten the string of a bow. 7. அள்ளுதல் (யாழ். அக.); to take a handful of. 8. நினைவு கூர்தல்; to recall. *நீங்கள் சொன்னதைத் திரும்பவும் மீட்டிப் பார்க்கிறேன்.*

க., தெ. மீடு.

[மீள்–தல் → மீட்டு–தல்.]

மீட்டு² *mīṭṭu,* வி.அ.(adv.) திரும்ப; again, further. *"சொல்பவோ மேன்மக்கள் தம் வாயால் மீட்டு" (நாலடி, 70). "கேட்டவை தோட்டியாக மீட்டாங்(கு)" (அகநா.286:6). "கோட்டினத் தாயர் மகனன்றே மீட்டொரான்" (கலித்.103:33).*

[மீள் → மீட்டு.]

மீட்டுணர்வு *mīṭṭuṇarvu,* பெ.(n.) ஒத்த தன்மையுடைமை; recognition of identity or similarity. *"நினைவு மீட்டுணர்வு நேர்தரும்" (நீலகேசி.119).*

[மீட்டு + உணர்வு.]

மீட்டுப்பட்டான் *mīṭṭu-p-paṭṭāṉ,* பெ.(n.) ஆனிரைகளை மீட்டபொழுது இறந்தவன்; person who died, while collecting back (recovering) the captured cattles. *ஆநிரைகளைப் பகைவரோடு போரிட்டு மீட்டுவிட்டானெனினும், பகைவரால் கொல்லப்பட்டான். மீட்டல் – கரந்தை என்ற புறத்திணைக்கு இச்செய்தி இலக்காகி நிற்கின்றது. "ஆந்தைப்பாடி ஈசைபெரும் பாணாரைசரு மருமக்கள் தொறுக் கொண்ட ஞான்று மீட்டுப்பட்டான்" (செங்கம்நடு கற்கள் – கி.பி.7ம் நூற்றாண்டு) (கல்.அக.).*

[மீட்டு + பட்டான்.]

மீட்டும் *mīṭṭum,* கு.வி.எ.(adv.) மீட்டு பார்க்க; see *mīṭṭu. "மீட்டு மினி யெண்ணும் வினை" (கம்பரா.பொழிலிறு.5).*

[மீட்டு → மீட்டும்.]

மீட்டுமுறி *mīṭṭu-muṟi,* பெ.(n.) ஒத்தியுரிமை நீங்கியதைக் குறிக்கும் ஆவணம் (நாஞ்.); redemption deed.

[மீட்டு + முறி.]

மீட்டுருவாக்கம் *mīṭṭuruvākkam,* பெ.(n.) கிடைக்கும் வடிவங்களைக் கொண்டு முன்பு இருந்த வடிவங்களைக் கண்டறியும் முறை; reconstruction.

[மீள் → மீட்டு + உருவாக்கம்.]

மீட்டெடு¹–த்தல் *mīṭṭeḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. காத்தல்; to redeem, rescue, save. 2. மேலாக எடுத்தல்; to take out superficially.

[மீட்டு + எடு–த்தல்.]

மீட்டெடு²–த்தல் *mīṭṭeḍu-,* 4 செ.கு.வி. (v.i.) இரையெடுத்தல்; to chew the cud.

[மீட்டு + எடு–த்தல்.]

மீட்பர் *mīṭpar,* பெ.(n.) காப்பவர் (இரட்சகர்); saviour, redeemer. *உலக மீட்பர் வந்து விட்டார். மீட்பர் இன்றி உய்ய முடியாது. மீட்பரே அனைத்துக்கும் கரணியமாவர்.*

[மீள் → மீட்பு → மீட்பர்.]

மீட்பு[1] *mīṭpu,* பெ.(n.) 1. காப்பாற்றும் நடவடிக்கை; rescue operation. *வெள்ளம் மற்றும் நில அதிர்வால் பாதிக்கப்பட்ட ஊர்களைக் காப்பாற்ற மீட்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இரவு பகலாக மீட்பு வேலைகள் நடைபெற்றன.* 2. ஒருவர் சட்டத்திற்கு முரணாக வைத்திருக்கும் பொருள்களைக் கைப்பற்றுதல்; confiscation, recovery. *பல இலக்க உருபா மதிப்புள்ள தங்கக் கட்டிகள் மீட்பு.*

[மீள் → மீட்பு.]

மீட்பு[2] *mīṭpu,* பெ.(n.) மீட்கை (யாழ்.அக.); releasing, redemption, salvation.

[மீள் → மீட்பு.]

மீடம் *mīḍam,* பெ.(n.) சிறுநீர் (சங்.அக.); urine.

[மீள் → மீடம் = குடித்த நீர் சிறுநீராக வெளி வருதல்.]

மீண்செயல் *mīṇ-šeyal,* பெ.(n.) எதிர்த் தாக்கம்; reaction.

[மீள் → மீண் + செயல்.]

மீண்டு *mīṇḍu,* பெ.(n.) மீட்டு பார்க்க; see *mīṭṭu. "மீண்டு வாராவழி யருள் புரிபவன்" (திருவாச.2:117).*

[மீள்→மீண்டு.]

மீண்டும் *mīṇḍum,* வி.அ.(adv.) மறுபடியும், திரும்பவும், மேலும்; again, repeatedly, moreover. *"மீண்டு வாராவழி யருள்புரிபவன்" (திருவாச.2:117). "மீண்டும் பீடுயர் பீண்டி அவற்றிற்கும்" (பரிபா.2:11). சற்று ஓய்வு எடுத்த பிறகு மீண்டும் எழுதத் தொடங்கினார். முதல் பத்தியை மீண்டும் ஒரு முறை படியுங்கள்! மீண்டும் மீண்டும் அதையே சொல்லிக் கொண்டு இருக்காதே!*

[மீள் →மீண் →மீண்டும்.]

மீத்துவை-த்தல் *mīttu-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) மீதப்படுத்துதல் (உ.வ.), மிச்சப்படுத்துதல்; to save for future use; to be thrifty; to lay by. *மீத்து வைத்த சொத்தெல்லாம் நெருப்புக்கு இரையாயிற்று.*

[மிகு → மிகுத்து → மீத்து + வை (துணை வினை)-த்தல்.]

மீத்தோல் *mīttōl,* பெ.(n.) மேலேயிருக்கும் தோல், பீத்தோல்; epidermis - scarf.

[மீ + தோல்.]

மீதம் *mīdam,* பெ.(n.) மீதி, மிச்சம்; balance, remainder. *மீதம் வைக்காமல் சாப்பிட வேண்டும்.*

[மீதி →மீதம்.]

மீதாட்சி *mīdāṭci,* பெ.(n.) மீயாட்சி பார்க்க; see *mīyāṭci. "காராண்மை மீதாட்சி உள்ளடங்க"* (T.A.S.1, 6:14).

[மீது + ஆட்சி – மீதாட்சி.]

மீதாடு-தல் *mīdāḍu-,* 5 செ.கு.வி.(v.i.) கடந்து செல்லுதல்; to transcend, surpass, go beyond. *"வெற்றிக்கருளக் கொடியான்றன் மீமீதாடா வுலகத்து" (திவ். நாய்ச்.13:7).*

[மீது + ஆடு-தல்.]

மீதாரி[1] *mīdāri,* பெ.(n.) மிச்சம்; that which remains; remainder, balance. *உன்னிடத்து ஏதேனும் மீதாரியிருக்கிறதா?*

[மீது + ஆர் – மீதார் → மீதாரி.]

ஒருகால் ஊதாரி என்ற வடசொல்லுக்கு எதிர்ச்சொல்லாக மீதத்திலிருந்து மீதாரி என்ற சொல் வழக்குக்கு வந்திருக்கலாம்.

மீதாரி² *mīdāri,*பெ.(n.) ஒருவகைக் கலப்பு மணப்புகை (வாசனைத் தூபம்) (சைவச. மாணா.9, உரை); incense composed of various substances.

[மீது + ஆர் – மீதார் → மீதாரி.]

மீதான *mīdāṉa,*பெ.அ.(adj.) 1. ஒருவர் மேல் உள்ள; against some one. *ஒருவர் தொழிலாளர் மீதான வழக்குகளை நிருவாகம் திரும்பப் பெற வேண்டும் என்று கோரினார்.* 2. முன்பு குறிப்பிட்டதைக் கரணியமாகக் கொண்டு, நிகழ்கிற; concerning, relating to, regarding. *புது திட்ட அறிக்கை மீதான வழக்கு இன்று மக்களவையில் கொண்டு வரப்பட்டது.*

[மீது → மீதான.]

மீதி¹ *mīdi,* பெ.(n.) 1. மிச்சம், மீதம்; that which is left over, that which remains, surplus. *மீதி வைக்காமல் சாப்பிடு. செலவு போக மீதி இவ்வளவுதானா?* 2. எஞ்சியிருப்பது; remainder. *எட்டில் மூன்று போனால் மீதி ஐந்து.*

மறுவ. மிச்சம்

[மிகுதி → மீதி.]

மீதி² *mīdi,*பெ.(n.) 1. காட்டுக் கத்தரி (மலை.); hedge caper. 2. எட்டி (சங்.அக.); strychnine tree, nux-vomica. 3. கருஞ்சூரை; aspecies of black thorny shrub (சா.அக.).

மீதிகி *mīdigi,*பெ.(n.) மீதி² பார்க்க; see *mīdi²* (சா.அக.).

மீதிடல் *mīdiḍal,*பெ.(n.) வளர்கை (இலக். அக.); growth.

[மீது + இடல்.]

மீதிரா *mīdirā,*பெ.(n.) பெருலவங்கப் பட்டை; thick cinnamon, a bark.

மீதிரை *mīdirai,*பெ.(n.) சூரைச் செடி; *Šūrai* plant.

மீதீந்து *mīdīndu,*பெ.(n.) பேரரத்தை; greater galangal - *Alpinia galangal* (major).

மீது¹ *mīdu,*பெ.(n.) 1. மேற்புறம்; top, outer or upper surface. 2. மேடு (நாமதீப.535); elevated or raised place.

[மீ → மீது.]

மீது² *mīdu,*இடை.(part.) இடவேற்றுமைப் பொருளில் வழங்கும் சொல்லுருபு; மேல்; word used as a locative sign, `on' `at'. *"பூவிரி புன்னை மீது தோன்று பெண்ணை" (அகநா.310:12). "தண்வயலூரன் மீது" (நாலடி,389). 'புத்தகத்தை நாற்காலியின் மீது வை'. அவர் மீது பழி சொல்லாதே! அவர் மீது வழக்குத் தொடர்ந்தார்.*

[மீ → மீது.]

மீது³ *mīdu,*வி.அ.(adv.) அதிகம் (வின்.); over, excess, that which exceeds; extra, surplus. *"மிகவரினு மீதினிய வேழப் பிணவும்" (பரிபா.10:15).*

[மீ → மீது.]

மீதுந்து *mīdundu,*பெ.(n.) நெல்லி; Indian gooseberry - *Emblica myrobalam* (சா.அக.).

மீதுபொலி *mīdu-poli,*பெ.(n.) மீசுபொலி பார்க்க; see *mīšu-poli.*

[மீசுபொலி → மீதுபொலி.]

மீதுரை *midurai,* பெ.(n.) விளம்பல்; பலகால் திரும்பத் திரும்பச் சொல்லுதல் (சூடா.); repetition, tautology.

[மீது + உரை.]

மீதுரைவேர் *midurai-vēr,* பெ.(n.) ஒருவகை நறுமண மஞ்சள்; musk turmeric - *Curcuma aromatica.*

[மீதுரை + வேர்.]

மீதூண் *midūṇ,* பெ.(n.) அளவுக்கு அதிகமான உணவு; to eat in excess. *"மீதூண் விரும்பேல்" (பழ.).*

[மிகுதி + ஊண். ஊண் = உணவு.]

மீதூணருந்தல் *midūṇ-arundal,* பெ.(n.) மிதமிஞ்சி உண்ணுகை; glut to eat in excessive eating.

[மீதூண் + அருந்தல்.]

மீதூணன் *midūṇaṉ,* பெ.(n.) பெருந்தீனி தின்போன்; glutton.

[மீதூண் → மீதூணன்.]

மீதூர்[1]-தல் *midūr-,* 2 செ.கு.வி.(v.i.) 1. மேன்மேல் வருதல்; to increase, to aggravate, to come crowded. *"துன்பமே மீதூரக் கண்டும்" (நாலடி, 60).* 2. அடர்தல்; to press hard. *"மெய்யைந்து மீதூர" (பு.வெ.8:33).*

[மீது + ஊர்-தல்.]

மீதூர்[2]-தல் *midūr-,* 2 செ.குன்றாவி.(v.t.) அடர்த்தல்; to subdue. *"ஒளியாரை மீதூர்ந் தொழுகுவ தல்லால்" (பழ.248).*

[மீது + ஊர்-தல்.]

மீதோல் *mi-tōl,* பெ.(n.) மீந்தோல் பார்க்க; see *mi-n-dōl. "மீதோ லெங்கு மினுக்கிகள்" (திருப்பு.623).*

[மீந்தோல் → மீதோல்.]

மீந்தது *mindadu,* பெ.(n.) மீதி[1] பார்க்க; see *midi.*

[மிகு →மிகுதி →மீதி →மீந்தது.]

மீந்தோல் *mi-n-dōl,* பெ.(n.) மேற்றோல் (தொல்.எழுத்து.251, உரை); epidermis, superficial skin.

[மீ + தோல்.]

மீநீர் *mi-nir,* பெ.(n.) நீரின் மேற்பரப்பு; surface of water. *"மீநீர் நிவந்த விறலிழை" (பரிபா.21:40).*

[மீ + நீர்.]

மீப்பாய் *mi-p-pāy,* பெ.(n.) மீன்பிடிப் படகில் பயன்படும் ஒரு வகைப் பாய்; mast used in the fishing boat. *பாய்ப் பருமலின் மேலே விரிக்கப்படும் பாய் (நெல்லைமீனவ.).*

[மீ + பாய்.]

மீப்பு *mippu,* பெ.(n.) 1. மிகுதி (புறநா.104, உரை); abundance. 2. மேன்மை; excellence, greatness, esteem, honour. *"மீப்பில்லோரை" (முது.காஞ்.22).*

[மீ → மீப்பு.]

மீப்போர்-த்தல் *mi-p-pōr-,* 4 செ.குன்றாவி. (v.t.) மேலே போர்த்தல்; to put on, cover with, as a shawl. *"மீப்போர்த்த கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு" (நாலடி, 47).*

[மீ + போர்-த்தல்.]

மீப்போர்வை *mī-p-pōrvai,* பெ.(n.) மேற் போர்வை; outer covering, coat. *"பொய்ம்மறைக்கு மீப்போர்வை மாட்சித் துடம்பானால்" (நாலடி, 42).*

[மீ + போர்வை.]

மீபார்க்கெல்லை *mī-p-pārkkellai,* பெ.(n.) மேற்புற எல்லை; western side boundary (கல்.அக.).

மீமகன் *mī-magaṉ,* பெ.(n.) இப்போதைய முறைமையை முற்றிலும் அழித்துப் புதிய நிலையை உண்டாக்குபவனாக இருப்பவன்; one who creates new once in supersession of existing customs.

மீமிசை[1] *mī-mišai,* பெ.(n.) 1. மிக்கது (பிங்.); that which exceeds or abounds. 2. மீமிசைச்சொல் பார்க்க; see *mī-mišai-c-col. "மீமிசை யென்று பெயராய் அர்த்தத் தினுடைய அதிசயத்தைக் காட்டக் கடவது" (திவ். பெரியதி.8. 1:7, வியா.).*

[மீ + மிசை.]

மீமிசை[2] *mī-mišai,* வி.அ.& இடை.(adv. & prep.) மேலிடத்தில்; above, over. *"கள்ளி மீமிசைக் கலித்த வீநறு முல்லை" (நற்.169:5). "கொல்களிற்று மீமிசை" (புறநா.9:7) "நெய்த்தோர் மீமிசை நிணத்திற் பரிக்கு" (அகநா.9:9). "மீமிசைத் தாஅய வீஇ சுமந்து" (குறுந்.200:2).*

[மீ + மிசை.]

மீமிசைச்சொல் *mīmišai-c-col,* பெ.(n.) சிறப்புப் பொருளைத் தெரிவித்தற்கு முன்னுள்ள சொல்லின் பொருளிலேயே, அடுத்து வருஞ்சொல்; pleonasm, word redundantly used.

[மீமிசை + சொல்.]

மீமிசையண்டம் *mīmišai-y-aṇḍam,* பெ.(n.) துறக்கம் (மோட்சம்); the highest heaven, celestial. *"மீமிசை யண்ட மாண்டி ருப்பாற்கு" (திவ்.பெரியதி.2.1:4).*

[மீமிசை + அண்டம். அண்டம் = உலகம்.]

மீயச்சூர் *mī-y-accūr,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊரின் பெயர்; a village in Thanjavur Dist. *"தோற்றும் கோயிலும் தோன்றிய கோயிலும் வேற்றுக் கோயில் பலவுள மீயச்சூர்" (இலக் .ஊர்.).*

மீயடுப்பு *mī-y-aḍuppu,* பெ.(n.) புடையடுப்பு (தொல்.சொல்.17, உரை); side oven, supplemental oven.

மறுவ. கொடியடுப்பு.

[மீ + அடுப்பு.]



மீயாட்சி *mī-y-āṭci,* பெ.(n.) 1. நிலங்களின் குத்தகைப் பங்குரிமை; right for share in the land lease. 2. நில முதலியவற்றின் மேலதிகாரம் (கல்.); pro-prietorship, overlordship, as of land.

[மீ + ஆட்சி.]

நிலத்திற்கு உரிமையாளராகிய ஆட்சியாளர், தன்னிடம் குத்தகைக்குப் பெற்றுப் பயிரிடுபவரிடம் விளைச்சலில் பங்குரிமை ஆட்சி பெறுதலின், ஆட்சி மேல் ஆட்சி பெறுதலின் மீயாட்சி என்று கூறப்பட்டது (கல்.அக.).

மீயாள்(ளு)-தல் *mī-y-āḷ-*, 10 செ. குன்றாவி. (v.t.) மேலதிகாரஞ் செலுத்துதல்; to exercise overlordship, to boss over. *"உத்திரவேதிச் சதுர்வேதி மங்கல மீயாளுங் கணத்தாருள்" (தெ.இ.கல்.தொ.3:2).*

[மீ + ஆள்(ளு)-தல்.]

மீயாளுங்கணத்தார் *mī-y-āḷuṅgaṇattār*, பெ.(n.) மேற்பார்வை செய்யும் கூட்டம்; members of the supervising body.

[மீயாள் + கணத்தார்.]

மீயான் *mīyāṉ*, பெ.(n.) மீகாமன் (சங்.அக.) பார்க்க; see *mī-kāmaṉ.*

[மீகான் →மீயான்.]

மீயை *mīyai*, பெ.(n.) செங்குடை (பிங்.); umbrella made of red cloth.

மீரம் *mīram*, பெ.(n.) கடல் (யாழ்.அக.); sea.

மீராசு *mīrāśu*, பெ.(n.) 1. ஆதாயம்; gain. 2. வருமானம்; income, profit. 3. பயன்படுகை; usefulness.

மீலம் *mīlam*, பெ.(n.) வானம் (சங்.அக.); sky.

மீவான் *mīvāṉ*, பெ.(n.) மீகாமன் (நாமதீப. 172) பார்க்க; see *mīkāmaṉ.*

[மீகாமன் →மீவான். மீகாமன் = மாலுமி.]

மீள்[1](ளு)-தல் *mīḷ-*, 16 செ.கு.வி.(v.i.) 1. திரும்புதல்; to return. *"போகத்து மன்னியும் மீள்வர்கள்" (திவ்.திருவாய்.4. 1:8). வளையம் மீளும் தன்மையை இழந்துவிட்டது.* 2. இல்லையாதல்; to disappear, vanish. *"பேதைமை மீளச் செய்கை மீளும்" (மணிமே. 30:119).* 3. காப்பாற்றப்படுதல்; to be cured, as of a disease; to be rescued, redeemed, liberated. *சாகும் தறுவாயில் இருந்த பெரியவரை மருத்துவர்கள் பாடுபட்டு மீளக் கொண்டுவந்தனர்.*

மீள்[2]-தல் (மீட்டல்) *mīḷ-*, 13 செ.குன்றாவி. (v.t.) 1. சிறையினின்று வெளியேற்றுதல்; to liberate, extricate, release. 2. திரும்பக் கொணர்தல்; to bring, back, recover. *"எயில்...... இரும்புண்ட நீரினு மீட்டற் கரிதென" (புறநா.21).* 3. போக்குதல்; to remove; to eradicate, to cause to disappear. *"தொண்டர் வருத்த மீட்பாராய்" (பெரியபு. திருநா. 304).* 4. செலுத்துதல்; to cause to go. *"மீளாவழியின் மீட்பனவே" (பெரியபு. நமிநந்தி.33).* 5. காத்தல்; to redeem, restore, rescue. 6. விடுபடுதல்; recover from, get over. *அதிர்ச்சியில் இருந்து அவர் இன்னும் மீளவில்லை. மீளாத் துயரில் ஆழ்ந்தார்.*

மீள்[3]-தல் *mīḷ-*, 16 செ.கு.வி.(v.i.) அசையிடுதல் (யாழ்.அக.); to chew the cud.

மீள்[4](ளு)-தல் *mīḷ-*, 16 செ.குன்றாவி.(v.t.) கடத்தல் (பிங்.); to pass beyond, to kidnap.

மீள்[5]-தல் *mīḷ-*, 16 செ.கு.வி.(v.i.) 1. விடுவித்துத் தம் வயம் பெறுதல்; to recover, regain, taken aback. *கடத்தப்பட்ட சிலையை மீட்க நடவடிக்கை எடுத்தனர். கடத்தல் காரனிடமிருந்து குழந்தையை மீட்டனர். நம் எல்லைப் பகுதியை மீட்கத்தான் இந்தப் போர்.* 2. திரும்பப் பெறுதல்; redeem, retain. *வீட்டை இந்த ஆண்டாவது மீட்க வேண்டும்.*

மீள *mīḷa*, கு.வி.எ.(adv.) மறுபடியும்; once again. *"உன் வயிற்றுட் கடைநாட் சென்றுறைந்து மீள வருந்தேவரை" (திருவேங்கடக்கலம்.11).*

[மீள் → மீள.]

மீளக்கொடு-த்தல் *mīḷa-k-koḍu-*, 4 செ. குன்றாவி. (v.t.) திரும்பக் கொடுத்தல்; to return. *"மீளக் கொடுக்குமாப் போலே" (ரஹஸ்ய.410).*

[மீள் → மீள + கொடு-த்தல்.]

மீளவும் *mīḷavum*, கு.வி.எ.(adv.) மீள பார்க்க; see *mīḷa*.

[மீள → மீளவும்.]

மீளாக்கடன் *mīḷā-k-kaḍaṉ*, பெ.(n.) தீராக் கடன் (கூட்டுறவு.1); irredeemable debt.

[மீள் + ஆ + கடன்.]

மீளாக்கதி *mīḷā-k-kadi*, பெ.(n.) வீடுபேறு (மோட்சம்) (பிங்.); salvation, as a state from which there is no return, attainment, emancipation.

[மீள் + ஆ + கதி. கதி = பற்றுக்கோடு, நிலைமை, இயல்பு.]

மீளாக்காட்சி *mīḷā-k-kāṭci*, பெ.(n.) மீளாக் கதி பார்க்க; see *mīḷā-k-kadi*. *"மீளாக் காட்சி தருதி" (கல்லா.முருகக்.).*

[மீள் + ஆ + காட்சி.]

மீளாநரகம் *mīḷā-naragam*, பெ.(n.) மீளாவளறு பார்க்க; see *mīḷā-v-aḷaṟu*.

[மீளா + Skt. நரகம்.]

மீளாநோய் *mīḷā-nōy*, பெ.(n.) குணமாகாத நோய்; an incurable or chronic disease.

[மீளா + நோய்.]

மீளாவழி *mīḷā-vaḻi*, பெ.(n.) மீளாக்கதி பார்க்க; see *mīḷā-k-kadi*. *"கழல்க ணினைவாரை மீளாவழியின் மீட்பனவே" (பெரியபு. நமிநந்தி. 33).*

[மீள் + ஆ + வழி.]

மீளாவளறு *mīḷā-v-aḷaṟu*, பெ.(n.) மீட்சி யில்லாத நிரய வகை; a hell, considered a region of eternal damnation.

[மீள் + ஆ + அளறு.]

மீளி[1] *mīḷi*, பெ.(n.) 1. மீளுகை; retrieval, returning. *"இரவில் வந்து மீளியுரைத்தி" (திருக்கோ.151).* 2. இரங்கல் (அரு.நி.); pity, sympathy. *"மீளி மொய்ம்பொடு நிலனெறியாக் குறுகி" (அகநா.93:18).*

[மீள்→மீளி.]

மீளி[2] *mīḷi*, பெ.(n.) 1. தலைவன்; lord, chieftain. *"மீளி... ஆகோள் கருதின்" (பு.வெ.1:20).* 2. பாலைநிலத் தலைவன் (சூடா.); chief of a desert tract. 3. இறை (அரு.நி.); king, sovereign. 4. படைத் தலைவன் (நாமதீப. 139); commander of an army. 5. திண்ணியன் (பிங்.); strong man. 6. பெருமையிற் சிறந்தோன் (பிங்.); great man, worthy man. 7. வலிமை (பிங்.); strength. 8. வீரம்; valour, bravery. *"மீளி முன் பினாளிபோல" (புறநா.207).* 9. பெருமை; greatness. 10. தலைமை; merit, distinction. *"மீளிக் கடற்றானை"* (பு.வெ.7:5). 11. கூற்றுவன்; Yama, king of Dharma. *"மீளியுடம்பிடித் தடக்கை" (பெரும்பாண்.75).* 12. பேய்; devil, spirit. *"சீயமாவு மீளியும்" (கம்பரா. மூலபல.80).* 13. இளைஞன்; youth, young man, lad. *"வீவி லாற்றலொர் மீளி" (சீகாளத். பு.கண்ணப்ப.50).* 14. ஏழகவை முதல் பத்தகவை முடியுமளவுள்ள பருவம் (பன்னிருபா. 228); period of life between the seventh and tenth years.

[மீள் → மீளி.]

மீளிமை *mīḷimai,* பெ.(n.) 1. வலிமை; strength, prowess. *"அடக்க முடையவன் மீளிமை" (இன்.நாற்.40).* 2. வீரம்; bravery, heroism, valour. *"வன்படை.... மீளிமைக் கடையாளமோ" (திருவானைக்.நகரப்.35).*

[மீளி → மீளிமை.]

மீளும்நோய் *mīḷum-nōy,* பெ.(n.) குணமாகும் நோய்; curable disease.

[மீள் → மீளும் + நோய்.]

மீறல் *mīṟal,* பெ.(n.) சட்டம், உரிமை முதலியவற்றை மீறும் செய்கை; violation of rules, rights, etc, infrigement. *மனித உரிமை மீறல்கள் அதிகமாகி வருவதை எதிர்த்துப் போராடினார்கள்.*

[மீறு →மீறல்.]

மீறான்கனியண்ணாவி *mīṟāṉ-kaṉi-y-aṇṇāvi,* பெ.(n.) 19ஆம் நூற்றாண்டில் குறமாது என்னும் நூலை இயற்றியவர்; an author who wrote *`kuramāḍu',* during 19th century.

மீறு¹-தல் *mīṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. ஆணை முதலியன கடத்தல் (உ.வ.); to break, as a law, to violate, infringe, as a right, tresspass. 2. மேற்போதல் (நாமதீப. 763); to go beyond, exceed ones limit. 3. அதிகாரஞ் செய்தல்; to dominate.

க. மிறு

[மீள்⁴ →மீறு.]

மீறு²-தல் *mīṟu-,*5 செ.கு.வி.(v.i.) 1. எஞ்சியிருத்தல் (வின்.); to be in excess, to remain over. 2. மிகுதல்; to be great. *"மீறுகாத லளிக்கும்" (திருப்பு.923).* 3. பெரிதாய் வளர்தல்; to grow lofty, as a tree, to grow stout, as a person. 4. செருக்கடைதல் (இ.வ.); to be haughty, to be arrogant. 5. சட்டம், நெறி (விதி) போன்றவற்றைப் பின்பற்றாமல் விடுதல்; புறக்கணித்தல்; transgress, violate, break rules, etc. *வேகக் கட்டுப்பாட்டை மீறிச் செல்வது தண்டனைக்குரிய குற்றமாகும். தடை ஆணையை மீறி ஊர்வலம் செல்ல முயன்றவர்கள் கைது செய்யப்பட்டனர்.*

க. மிறு.

[மீள்→மீறு.]

மீன்¹ *mīṉ,* பெ.(n.) 1. விண்மீன்; star. *"பதியிற் கலங்கிய மீன்" (குறள், 1116).* 2. பதினான்காம் விண்மீனாகிய நெய்ம்மீன் (சித்திரை); the 14th naksatra. 3. பதின்மூன்றாம் விண்மீனாகிய கைம்மீன் (அத்தம்); the 13th naksatra.

க. மீன்.

[மின்→மீன். மீன் = மின்னும் வெண்ணிற மீன்.]

மீன்² *mīṉ,*பெ.(n.) 1. உடலில் அமைந்திருக்கும் சிறகு போன்ற செதிலாலும், வாலாலும் நீந்திச் செல்லக் கூடிய நீர் வாழ் உயிரினம் (பிங்.); fish. 2. மீனவோரை (சூடா.); pisces of the zodiac. 3. மீன்கோட்பறை (யாழ்.அக.) பார்க்க; see *mīṉ-kōṭpaṟai.* 4. சுறா (வின்.); shark.

[மின்→மீன்.]

மீன் வகைகள் : 1. விரால் மீன், 2. குறவை மீன், 3. அயிரை மீன், 4. இறால் மீன், 5. கெண்டை மீன், 6. சன்னக் கெண்டை, 7. பேராரல் மீன், 8. சிற்றாரல் மீன், 9. கச்சல் மீன், 10. உழுவை மீன், 11. கொடுவா மீன், 12. வாளை மீன், 13. சேல்

கெண்டை, 14. கெளிற்று மீன், 15. ஓலை வாளை, 16. சுறா மீன், 17. கொள்ளி மீன், 18. சன்ன கூலி, 19. திருக்கை மீன், 20. மடவை மீன், 21. சுரும்பு மீன், 22. உல்ல மீன், 23. கற்றலை மீன், 24. வெள்ளை வெளவால், 25. கருவெளவால், 26. நெய்த் தோலி, 27. மயிறி மீன், 28. விலாங்கு மீன், 29. கிழங்கான் மீன், 30. வஞ்சிரம் மீன்.

மீன்அமர்வு *mīṉ-amarvu,* பெ.(n.) சம தரையில் தாமரை அமர்வு நிலையில் அமர்ந்து பின்புறம் கைகளைக் கட்டியபடி செய்யும் அமர்வு வகை; a kind of *yogā* positure.

[மீன் + அமர்வு.]

மீன்ஆயம் *mīṉ-āyam,* பெ.(n.) மீன் பிடித்தலுக்கு வாங்கும் வரி; tax, a levy. *மீன் ஆயம் கட்டி விட்டீர்களா?*

[மீன் + ஆயம்.]

சோழர் காலத்தில் மீனவர்களிடம் வாங்கிய வரி.

மீன்கட்டை *mīṉ-kaṭṭai,* பெ.(n.) கட்டுமரம் (இ.வ.); catamaran, fishing raft.

[மீன் + கட்டை.]

மீன்கண் *mīṉ-kaṇ,* பெ.(n.) ஒருவகை மணிக்கல் (சங்.அக.); pearl, a kind of gem.

[மீன் + கண். மீனின் கண் போன்ற மணிக்கல், முத்து.]

மீன்கண்டம் *mīṉ-kaṇḍam,* பெ.(n.) மீன் துண்டு; piece of fish (meat) curry.

[மீன் + கண்டம்.]

மீன்கண்ணணிந்தோன் *mīṉkaṇ-ṇ-aṇindōṉ,* பெ.(n.) சிவன் (நாமதீப.12); Šiva.

[மீ + கண் = மேலுள்ள கண், நெற்றிக்கண். மீ + கண்→மீங்கண்→மீன்கண் + அணிந்தோன்.]

மீன்கருவாப்பு *mīṉ-karuvāppu,* பெ.(n.) மீன் கூட்டம் (மீனவ.); mass of fishes.

மீன்கல் *mīṉ-kal,* பெ.(n.) மீனின் தலையி லுண்டாகும் கெட்டியான வெளுத்த கல். இதைத் தண்ணீரிலுரைத்து குடிக்க கல்லடைப்புப் போகும்; a white stone grown in the head of some fish. It is a good diuretic, even it removes stone in the bladder and kidney.

[மீன் + கல்.]

மீன்கவிச்சு *mīṉ-kaviccu,* பெ.(n.) மீன் நாற்றம்; unpleasant smell of fish, stink.

[மீன் + கவிச்சு. கவிச்சு = புலால் நாற்றம்.]

மீன்காட்சியகம் *mīṉ-kāṭci-y-agam,* பெ.(n.) வகைவகையான மீன்களும் பிற நீர் வாழ் உயிரினங்களும் நீர் நிறைந்த கண்ணாடிப் பெட்டிக்குள் உயிருடன் காட்சிக்கு வைக்கப்பட்டு இருக்கும் இடம்; aquarium.

[மீன் + காட்சியகம்.]

மீன்காரன் *mīṉ-kāraṉ,* பெ.(n.) 1. மீன் விற்போன்; fish - monger. 2. செம்படவன் (வின்.); one who belongs to fisherman caste.

மறுவ. மீனவர், பரவர்.

க. மீனுகாரா.

[மீன் + காரன்.]

மீன்காரி *mīṉ-kāri,* பெ.(n.) 1. மீன் விற்பவள்; fish woman. 2. செம்படத்தி (வின்.); woman of the fisherman caste.

[மீன்காரன் (ஆ.பா.)→மீன்காரி (பெ.பா.).]

மீன்குஞ்சு *mīṉ-kuñju,* பெ.(n.) மீனின் இளமை; young fishes, minnow. *"மீன் குஞ்சுக்கு (குட்டிக்கு) நீச்சல் பழக்க வேண்டுமா?" (பழ.).*

[மீன் + குஞ்சு.]

மீன்கள் முட்டையிட்டுப் பொரித்த குஞ்சு.

மீன்குத்தி *mīṉ-kutti,* பெ.(n.) 1. மீன் கொத்தி (வின்.) பார்க்க; see *mīṉ-kotti.* 2. பாரைக் கோல் (பிங்.); crowbar, pick-axe.

[மீன் + குத்தி. கொத்தி →குத்தி.]

மீன்குத்திக்குருவி *mīṉ-kutti-k-kuruvi,* பெ.(n.) மீன்குத்தி பார்க்க; see *mīṉ-kutti.*

[மீன் + குத்தி + குருவி.]

மீன்குழம்பு *mīṉ-kuḻambu,* பெ.(n.) மீன் அல்லது மீன் துண்டம் இட்ட குழம்பு (வின்.); fish - sauce. *"மீன் குழம்போ தேன் குழம்போ?" (பழ.).*

[மீன் + குழம்பு.]

மீன்கூடு *mīṉ-kūḍu,* பெ.(n.) மீன்பிடிக்குங் கருவி வகை (வின்.); fishing contrivance.

[மீன் + கூடு.]

மீன்கொடியோன் *mīṉ-koḍiyōṉ,* பெ.(n.) 1. மீன் வடிவம் பொறித்த கொடியையுடைய காமன் (யாழ்.அக.); Kaman, one who has the fish as the emblem of his banner. 2. பாண்டியன் (வின்.); *Paṇḍiya*king.

[மீன் + கொடியோன்.]

மீன்கொத்தி *mīṉ-kotti,* பெ.(n.) 1. சிச்சிலிப் பறவைப் பொது (குற்றா.குற.87:3); kingfisher, darters. 2. சிச்சிலிப் பறவை வகை; lesser, kingfisher, species of *alcedo.* 3. சிச்சிலிப் பறவை வகை; pied kingfisher, species of *ceryle.* 4. சிச்சிலிப் பறவை வகை; white-breasted or larger kingfisher, *Halcyon smyrnensis.*

மறுவ. பொன்னான்தட்டான்.

[மீன் + கொத்தி.]

ஆறுகுளம் முதலிய நீர் நிலைகளில் உள்ள மீன்களைப் பிடித்துத் தின்னும் நீண்ட அலகுடன் நீலமும், பழுப்பும் கலந்த நிறத்தில் இருக்கும் ஒரு சிறு பறவை.



மீன்கொல்லி *mīṉ-kolli,* பெ.(n.) 1. செடி வகை; rattlewort, *Crotalaria pulcherrima.* 2. செடிவகை; rattlewort, *Crotalaria laburnifolia.*

[மீன் + கொல்லி.]

மீனைத் தன் இதழ்களால் வளைத்துப் பிடித்துத் தனக்கு இரையாக்கிக் கொள்ளும் செடிவகை.

மீன்கொல்லிப்பூனை *mīṉ-kolli-p-pūṉai,* பெ.(n.) மீன் பிடித்துண்ணும் பூனை வகை; fishing tiger-cat, *Felis viverrina.*

[மீன் + கொல்லி + பூனை. கொல்→கொல்லி.]

மீன்கொத்தி வகை

பெரிய அலகு மீன்கொத்தி

சிரால் மீன்கொத்தி

கருந்தலை மீன்கொத்தி

வெண்மார்பு மீன்கொத்தி

சிறுமீன்கொத்தி

கருப்பு வெள்ளை மீன்கொத்தி

மீன்கொழுப்பு *mīṉ-koḻuppu,* பெ.(n.) திமிங்கிலத்தின் எண்ணெய் (தைலம்) (இங்.வை.); spermaceti-*Cetaceum.*

[மீன் + கொழுப்பு.]

மீனிலிருந்து எடுக்கப்படும் கொழுப்பு. இது சத்து மருந்தாகவும் பயன்படுகிறது.

மீன்கொள்ளி *mīṉ-koḷḷi,* பெ.(n.) மீன்கொல்லி பார்க்க; see *mīṉ-kolli.*

[மீன் + கொள்ளி. கொல்லி→கொள்ளி.]

மீன்கோட்பறை *mīṉ-kōṭ-paṟai,* பெ.(n.) நெய்தனிலப் பறை (இறை.1, பக்.17); drum of the maritime tract.

[மீன் + கோட்பறை.]

மீன்சாறு *mīṉ-šāṟu,* பெ.(n.) மீன்குழம்பு; fish curry, saucy.

[மீன் + சாறு.]

மீன்சிதள் *mīṉ-šidaḷ,* பெ.(n.) மீன்செதிள் பார்க்க; see *mīṉ-šediḷ.*

[மீன் + சிதள். செதிள்→சிதள்]

மீன்சிலாம்பு *mīṉ-šilāmbu,* பெ.(n.) கணவாய் மீன் ஓடு; cuttle fish bone.

[மீன் + சிலாம்பு.]

இதைத் தவறுதலாய்க் கடல் நுரையென்றும் சொல்லிக் கடையில் விற்பதுண்டு.

மீன்சிறகு *mīṉ-šiṟagu,* பெ.(n.) சிறகு போலக் காணப்படும் மீனின் உறுப்பு (வின்.); fin.

[மீன் + சிறகு.]

மீன்சினை *mīṉ-šiṉai,* பெ.(n.) 1. மீன் முட்டை; fish-spawn, roe - corn. *"சிறுமீன் சினையினு நுண்ணிதே யாயினும்" (நறுந்.).* 2. மீனின் கொழுப்பு (யாழ்.அக.); fat extracted from fish.

[மீன் + சினை. சினை = முட்டை.]

மீன்சினைப்பாடு *mīṉ-šiṉai-p-pāḍu,* பெ.(n.) கருவுற்ற மீனின் முட்டைகள் (செங்கை. மீனவ.); fertilized eggs of fish.

[மீன் + சினை + பாடு.]

மீன்சீவுதல் *mīṉ-šīvudal,* பெ.(n.) மீனைப் பதப்படுத்துகை; to be seasoned of fishes.

[மீன் + சீவுதல்.]

மீன்சூடு *mīṉ-šūḍu,* பெ.(n.) சுட்ட மீன்; fish fry.

மறுவ. கருவாடு

[மீன் + சூடு.]

மீன்சூப்பு *mīṉ-šūppu,* பெ.(n.) மீனிலிருந்து செய்யப்பட்ட கருக்கு நீர்; fish soup.

[மீன் + சூப்பு. E. soup > த. கருக்கு நீர்.]

மீன்செகிள் *mīṉ-šegiḷ,* பெ.(n.) மீன்செதிள் (வின்.) பார்க்க; see *mīṉ-šediḷ.*

[மீன் + செகிள். செதில் → செகிள்.]

மீன்செடி *mīṉ-šeḍi,* பெ.(n.) மீன்கவிச்சு (மாட்டுவா.160) பார்க்க; see *mīṉ-kaviccu.*

[மீன் + செடி.]

மீன்செதில் *mīṉ-šedil,* பெ.(n.) மீன்செதிள் (வின்.) பார்க்க; see *mīṉ-šediḷ.*

[மீன் + செதில். செதிள் →செதில்.]

மீன்செதிள் *mīṉ-šediḷ,* பெ.(n.) மீனின் மேற்புறத்துள்ள தகடு போன்ற அமைப்புகள் (வின்.); fish scales.

[மீன் + செதிள்.]

மீன்செய்குளம் *mīṉ-šey-kuḷam,* பெ.(n.) மீன்காட்சியகம் பார்க்க; see *mīṉ-kāṭciyagam.*

[மீன் + செய் + குளம்.]

மீன்செலு *mīṉ-šelu,* பெ.(n.) மீன்செதிள் (வின்.) பார்க்க; see *mīṉ-šediḷ.*

[மீன் + செலு. செதிள் →செலு.]

மீன்செவுள் *mīṉ-ševuḷ,* பெ.(n.) மீன் முதலிய நீர்வாழ் உயிரிகளின் கன்னத்தினருகேயுள்ள மூச்சு உறுப்பு; gill.

[மீன் + செவுள்.]

மீன்தலைக்கல் *mīṉ-talai-k-kal,* பெ.(n.) மீன்கல் பார்க்க; see *mīṉ-kal.*

[மீன் + தலை + கல்.]

மீன்தலைவாளம் *mīṉ-talai-vāḷam,* பெ.(n.) மீனெலும்பு (யாழ்.அக.); fish - bone.

மீன்தெளித்தல் *mīṉ-teḷittal,* பெ.(n.) மீனைப் பரப்புகை; spreading of fishes for drying.

[மீன் + தெளித்தல்.]

மீன்தென்படுதல் *mīṉ-teṉpaḍudal,* பெ.(n.) கண்ணிற் காணுமாறு நீர்ப்பரப்பின் மேல் மீன் தெரிகை; fishes as seen on the surface of water.

[மீன் + தென்படுதல்.]

மீன்தைத்தல் *mīṉ-taittal,* பெ.(n.) வலையில் நெருக்கமாய் மீன் அகப்படுகை; trapping of fishes in large quantity in net.

மறுவ. மீன்பாடு

[மீன் + தைத்தல்.]

மீன்படப்பு *mīṉ-paḍappu,* பெ.(n.) மீன்களை வெய்யிலிற் காய வைப்பதற்காக உண்டாக்கப் பட்ட பனை நாரானான விரிப்பு; a spread, made from palmyra fibres to dry fishes.

[மீன் + படப்பு.]

மீன்படுதல் *mīṉ-paḍudal,* பெ.(n.) வலையில் மீன் அகப்படுகை; to entrap fishes into fishing net.

மறுவ. மீன்தைத்தல், மீன்பாடு.

[மீன் + படுதல்.]

மீன்படுபள்ளம் *mīṉ-paḍu-paḷḷam,* பெ.(n.) மீன் தங்குவதற்குரியதாக கடலில் இயற்கையாக அமைந்த பள்ளம்; naturally formed ditch in the sea where the fishes hide.

[மீன் + படு + பள்ளம்.]

மீன்படை *mīṉ-paḍai,* பெ.(n.) மீன் கூட்டம்; thick fish population.

[மீன் + படை.]

மீன்பண்ணை *mīṉ-paṇṇai,* பெ.(n.) மீன் வளர்க்குமிடம்; fish farm.

[மீன் + பண்ணை.]

மீன்பரத்துதல் *mīṉ-parattudal,* பெ.(n.) மீன் தெளித்தல் பார்க்க; see *mīṉ-teḷittal.*

[மீன் + பரத்துதல்.]

மீன்பரவர் *mīṉ-paravar,* பெ.(n.) மீன்பிடி தொழில் செய்வாருள் ஒரு வகுப்பினர்; a sect of fishermen community.

[மீன் + பரவர்.]

மீன்பரிசம் *mīṉ-parišam,* பெ.(n.) மீன் விலை; fish (rate) price.

[மீன் + பரிசம்.]

மீன்பலுக்கு–தல் *mīṉ-palukku-,* 5 செ.கு.வி. (v.i.) மீன் இனப்பெருக்கம் செய்தல்; fish productivity.

[மீன் + பலுக்கு–தல்.]

மீன்பறி *mīṉ-paṟi,* பெ.(n.) மீன்பிடிக்குங் கூட்டுப் பொறி; fish-pot, basket - trap for fishing.

[மீன் + பறி. பறி = மீன் பிடிக்குங் கருவி.]



மீன்பறிசல் *mīṉ-paṟišal,* பெ.(n.) மீன்பறி பார்க்க; see *mīṉ-paṟi.*

[மீன்+பறி. பறி = மீன் பிடிக்குங் கருவி கூடை.]

மீன்பாட்டம் *mīṉ-pāṭṭam,* பெ.(n.) மீன் பிடிப்பதற்கு வாங்கும் வரி (தெ.இ.க.தொ.3, 115); tax on fishing.

[மீன் + பாட்டம். பாட்டம் = வரி.]

மீன்பாடு *mīṉ-pāḍu,* பெ.(n.) மீன்கள் வலையுட் படுகை (யாழ்ப்.); catch of fish in the net. *"பாவி போன இடம் மீன்பாடு அத்துப் போச்சு".*

மறுவ. மீன் தைத்தல், மீன் படுகை.

[மீன் + பாடு. பாடு = மீன்பிடிக்கை.]

மீன்பாய் *mīṉ-pāy,* பெ.(n.) பனைநாரால் செய்யப்பட்ட விரிப்பு, பனைபாய்; a spread or mat made of palmyrah fibres.

மறுவ. பனைபாய்

[மீன் + பாய்.]

மீனைக் கருவாடாக்குதற்காகப் பனை நாரினால் செய்யப்பட்ட விரிப்பு.

மீன்பாய்–தல் *mīṉ-pāy-,* 1 செ.கு.வி.(v.i.) கடற்பரப்பில் நீந்தும் மீன் நீர் மட்டத்தின் மேல் துள்ளிப் பாய்தல்; leaping and galloping of the fish while swimming on the surface of water.

[மீன் + பாய்–தல்.]

மீன்பிசினி *mīṉ-pišiṉi,* பெ.(n.) மீன் கொழுப்பிலிருந்து செய்யப்படும் பொருள்; glue taken from fish fat.

[மீன் + பிசினி.]

மீன்பிடி¹ *mīṉ-piḍi,* பெ.(n.) பாணருள் ஒரு சாரார் (E.T.4:31); a sub-division of the *Pāṇar* caste.

[மீன்+ பிடி. மீன் பிடிக்கும் பாணர் இனத்தவர்.]

மீன்பிடி²–த்தல் *mīṉ-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) வலை மற்றும் தூண்டிலின் மூலம் மீன் பிடித்தல்; catching of fish with the help of net and fish - hook.

[மீன் + பிடி–த்தல்.]

மீன்பிடிக்கருவி *mīṉ-piḍi-k-karuvi,* பெ.(n.) மீனைப்பிடிக்கப் பயன்படும் தூண்டில், வலை, கட்டுமரம், படகு, மரக்கலம் போன்றவை; catching of fish with the help of fish-hook, net, catamaran, etc.

[மீன்பிடிக்கும் + கருவி.]

மீன்பிடிகாரர் *mīṉ-piḍikārar,* பெ.(n.) வலைஞர் (யாழ்.அக.); fishermen, men of the fishermen caste.

[மீன்பிடி + காரர்.]

மீன்பிடித்தட்டு *mīṉ-piḍi-t-taṭṭu,* பெ.(n.) மீன்களைப் பிடித்து வைப்பதற்காக உடன் வைத்துக் கொள்ளும் ஒருவகைக் கூடை; a kind of basket to collect fishes, caught.

[மீன்பிடி + தட்டு.]

மீன்பிடித்துறைமுகம் *mīṉ-piḍi-t-tuṟai mugam,* பெ.(n.) மீன்பிடிபாட்டிடம்; fishing harbour.

[மீன் + பிடி + துறைமுகம்.]

மீன்பிரால் *mīṉ-pirāl,* பெ.(n.) மீன்செதிள் (யாழ்.அக.) பார்க்க; see *mīṉ-šediḷ.*

மீன்பிலால் *mīṉ-pilāl,* பெ.(n.) மீன் செதிள் பார்க்க; see *mīṉ-šediḷ.*

மீன்பீலி[1] *mīṉ-pīli,* பெ.(n.) காற்சிறு விரலில் அணியும் மீனுருவான கணையாழி (வின்.); fish shaped ring worn on the little toe.

[மீன் + பீலி. பீலி = மகளிர் அணியும் கால் விரலணி.]

மீன்பீலி[2] *mīṉ-pīli,* பெ.(n.) கெண்டைப் பீலி மீன்; a kind of fresh water fish.

மீன்புகையூட்டல் *mīṉ-pugai-y-ūṭṭal,* பெ.(n.) புகையூட்டி மீன் பதனிடுகை; tanning of fishes by smoking.

[மீன் + புகை + ஊட்டல்.]

மீன்புளி *mīṉ-puḷi,* பெ.(n.) மலையாத்தி; Malabar mountain ebony.

மீன்பொறுக்கு-தல் *mīṉ-poṟukku-,* 5 செ.குன்றாவி.(v.t.) வலையிலிருந்து மீனை இனம், அளவு வாரியாகத் தனித்தனியாகப் பொறுக்கிப் பிரித்தல்; to sort out the fishes from the mass or heap according to their species, and size.

[மீன் + பொறுக்கு-தல்.]

மீன்மடை *mīṉ-maḍai,* பெ.(n.) குளங் குட்டைகளில் மீன்பிடித்தற்கு அமைத்த சிறிய மண்ணணை (இ.வ.); small bund of mud made across a stream or pond for catching fish.

[மீன் + மடை. மடை = மதகு, மதகுப்பலகை, சிறிய அணை.]

மீன்மண்டியாள் *mīṉ-maṇḍiyāḷ,* பெ.(n.) மீன் மொத்த வணிகர் (நெல்லைமீனவ.); wholesale fish merchant.

[மீன் + மண்டி+ஆள். மண்டி = பொருள்கள் விற்குமிடம்.]

பொருள்கள் மண்டியிருத்தலால் மண்டி எனப்பட்டது.

மீன்மலம் *mīṉ-malam,* பெ.(n.) மீனம்பர் (யாழ்.அக.) பார்க்க; see *mīṉambar.*

[மீன் + மலம்.]

மீன்மிதப்பு *mīṉ-midappu,* பெ.(n.) மீனிற் குள்ளிருக்கும் காற்றுப் பை; air bladder of fish.

[மீன் + மிதப்பு. மிதப்பு = மிதக்கப் பயன்படும் உறுப்பு.]

மீன்மீசை *mīṉ-mīšai,* பெ.(n.) மீனின் வாய்ப்புறம் நீட்டிக் கொண்டிருக்கும் இழைகள்; string or fibre like part in front of the fish mouth.

[மீன் + மீசை.]

மீன்முள் *mīṉ-muḷ,* பெ.(n.) மீனெலும்பு; fish bone, fish spine or thorn.

[மீன் + முள்.]

மீன்முளைத்தல் *mīṉ-muḷaittal,* பெ.(n.) விடியல் வேளையில் விண்மீன் வெளிப்படத் தோன்றுகை (உ.வ.); visible appearance of the stars in the sky, at morning twilight.

[மீன் + முளைத்தல்.]

மீன்வச்சிரம் *mīṉ-vacciram,* பெ.(n.) மீன்பிசின் வகை (இங்.வை.); isinglass, fish-glue, Ilthyocolla.

[மீன் + Skt. வச்சிரம்.]

மீன்வலையர் *mīṉ-valaiyar,* பெ.(n.) வலையர், வலைஞர், பரதர், பரதவர், பரவர், பரவா என்னும் பெயர்களாலும் அழைக்கப்படும் மீன் பிடிப்பவர்; people who do fishing.

மறுவ. செம்படவன்

[மீன் + வலையர்.]

மீன்வளம் *mīṉ-vaḷam,* பெ.(n.) தரமான மீன்கள் இருக்கும் இடத்தையும், மீன்களின் பெருக்கத்தையும் கூறுகை; place of qualitative fishes and good fishes.

[மீன் + வளம்.]

மீன்வெட்டி *mīṉ-veṭṭi,* பெ.(n.) சுறாமீன் (சங்.அக.); shark.

[மீன் + வெட்டி. வெட்டு→வெட்டி.]



மீன்வெளிச்சம் *mīṉ-veḷiccam,* பெ.(n.) மீனிலா (இ.வ.) பார்க்க; see *mīṉilā.*

[மீன் + வெளிச்சம்.]

மீன்வேட்டுவர் *mīṉ-vēṭṭuvar,* பெ.(n.) மீன்பிடிதொழிலை அதிக ஈடுபாட்டுடன் வேட்டைத் தொழிலாகக் கருதி விரும்பிச் செய்வோர்; those who desires to engage themselves in fishing as hunting.

[மீன் + வேட்டுவர்.]

மீன்வேட்டை *mīṉ-vēṭṭai,* பெ.(n.) மீன் பிடிக்கை (வின்.); fishing, angling.

[மீன் + வேட்டை. வேட்டை = மீன்பிடித்தல்.]

மீன்வேடன் *mīṉ-vēḍaṉ,* பெ.(n.) 1. சிவன்; God Šivā. 2. செம்படவன்; fisherman.

[மீன் + வேடன்.]

மீனக்காரி *mīṉa-k-kāri,* பெ.(n.) மீன ஓரையில் உள்ள காரிகோள் (வின்.); *Šaturn* in pisces, considered unpropitious.

[மீன் → மீனம் + காரி.]

மீனகாதி *mīṉa-kādi,* பெ.(n.) கொக்கு; stork, crane.

மீனுக்குப் பகையான கொக்கு.

மீனக்கொடியோன் *mīṉa-k-koḍiyōṉ,* பெ. (n.) 1. பாண்டியன்; *Pāṇḍiyaṉ.* 2. காமன்; *Kāmaṉ*

[மீன்கொடியோன் →மீனக்கொடியோன்.]

மீனங்கம் *mīṉaṅgam,* பெ.(n.) மீன்முள் பார்க்க; see *mīṉ-muḷ.*

*[மீன் + **Skt.**அங்கம்.]*

மீனங்கு *mīṉaṅgu,* பெ.(n.) விரியன் பாம்பு (சங்.அக.); a viper.

மீனச்சனி *mīṉa-c-caṉi,* பெ.(n.) மீனக்காரி பார்க்க; see *mīṉa-k-kāri.*

*[மீனம் + **Skt.** சனி.]*

மீனஞ்சு *mīṉañju,* பெ.(n.) மீன் கொல்லிப் பூடு; a kind of plant killing fish - *ratle wort-Crotolaria paniculata.*

[மீன் + நஞ்சு.]

மீனஞ்சுவள்ளி *mīṉañju-vaḷḷi,* பெ.(n.) மீனஞ்சுவன்னி பார்க்க; see *mīṉañju-vaṉṉi.*

[மீனஞ்சு + வள்ளி.]

மீனஞ்சுவன்னி *mīṉañju-vaṉṉi,* பெ.(n.) கடல் நுரை; bone of cuttle fish.

[மீனஞ்சு + வன்னி.]

மீனத்துவசன் *mīṉa-t-tuvašaṉ,* பெ.(n.) மீன்கொடியோன் பார்க்க; see *mīṉ-koḍiyōṉ.* *"வரிபயின் மீனத்துவசன் முன்னே" (திருவிளை.பயகர.29).*

*[மீன் + அத்து + **Skt.** துவசன்.]*

மீனநிலயம் *mīṉa-nilayam,* பெ.(n.) 1. மீன்களின் இருப்பிடமான கடல்; sea, as the abode of fish. *"மூதூர் மீனநிலயத்தி னுகவீசி" (கம்பரா.பொழிலிறுத்.2).* 2. மீன் காட்சியகம்; aquarrium.

[மீன் + நிலையம்.]

மீனம்¹ *mīṉam,* பெ.(n.) விண்மீன்; star. *"மீனத் திடை நிலை" (மணிமே.11:42).*

[மின் → மீன் → மீனம். மின் = மின்னுதல், ஒளிவீசுதல்.]

மீனம்² *mīṉam,* பெ.(n.) 1. மீன் (திவா.); fish. 2. மேழத்திலிருந்து பன்னிரண்டாம் வோரை (பிங்.); pisces of the zodiac. 3. பன்னிரண்டாவது தமிழ் மாதம் (பங்குனி); the 12th month of Tamil. *"மீனமதி யுத்தரத்தங் கெழுந் தருளி" (திருவாலவா. 4:16).*

[மீன்→ மீனம்.]

மீனம்பர் *mīṉ-ambar,* பெ.(n.) மீன் வயிற்றிலகப்படும் ஒருவகை மணப்பொருள்; ambergris, grey amber, *Ambragrisea.*

[மீன் + U. அம்பர்.]

மீனம்பல் *mīṉ-ambal,* பெ.(n.) மீனம்பர் (யாழ்.அக.) பார்க்க; see *mīṉ-ambar.*

மீனம்பாக்கம் *mīṉam-bākkam,* பெ.(n.) சென்னை மாநகரிலுள்ள ஓர் ஊர்; a part of city in Chennai.

[மீனம் + பாக்கம்.]

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த ஊர். வானூர்தி நிலையம் (உள்நாடு மற்றும் வெளிநாட்டு) உள்ளது.

மீனமரம் *mīṉa-maram*, பெ.(n.) மலைவேம்பு; a species of margosa tree.

மீனமாதம் *mīṉa-mādam*, பெ.(n.) பன்னிரண்டாவது தமிழ் (பங்குனி) மாதம்; Tamil month of *paṅguṉi*.

[மீனம் + மாதம்.]

மீனரசு *mīṉ-arašu*, பெ.(n.) 1. விண் மீன்களின் அரசான நிலவு; moon, as king of the stars. *"மீனர சாண்ட வெள்ளி விளக்கஃ்து" (சிலப்.4:26).* 2. மீனைக் கொடியாகக் கொண்ட பாண்டிய அரசு; *Pāṇḍya* government.

[மீன் + அரசு.]

மீனராசி *mīṉa-rāši*, பெ.(n.) மீனவோரை பார்க்க; see *mīṉa-v-ōrai*.

*[மீனம் + **Skt.** இராசி.]*

மீனவக்கெளுத்தி *mīṉava-k-keḷutti*, பெ. (n.) ஒருவகைக் கெளுத்தி மீன்; a species of fish - *Macrene*.

மீனவல்லிகை *mīṉavalligai*, பெ.(n.) மீன்கொத்திக் குருவி; a bird with long beak - kingfisher, darter.

மீனவன்[1] *mīṉavaṉ*, பெ.(n.) 1. மீன்கொடி யுடையவனான பாண்டியன்; *Pāṇḍya* king, as flying the fish - banner. *"தேனார் கமழ் தொங்கன் மீனவன் கேட்ப" (காரிகை. பாயி.2).* 2. மீன் பிடிக்கும் இனத்தவர்; fisher man caste. 3. மீன் பிடிக்கும் தொழிலாளி; a man who take fishing as his vocation.

[மீன் → மீனவன்.]

மீனவன்[2] *mīṉavaṉ*, பெ.(n.) மீனைக் கொடியாகக் கொண்டோன் – காமன்; Kama, as having the fish-emblem on his banner. *"மாதர் மேனியல்லால் வில்லில்லை மீனவர்க்கு" (தேசிகப்.4:15).*

[மீன் → மீனவன்.]

மீனவிராசி *mīṉa-v-irāši*, பெ.(n.) மீன வோரை பார்க்க; see *mīṉa-v-ōrai*.

மீனவுச்சன் *mīṉa-v-uccaṉ*, பெ.(n.) மீன வோரையை உச்சவிடமாகக் கொண்ட வெள்ளி (சுக்கிரன்) (நாமதீப.101); *Šukkiraṉ*, as having his exaltation in pisces.

[மீனம் + உச்சன்.]

மீனவோரை *mīṉa-v-ōrai*, பெ.(n.) மேழவோரையிலிருந்து பன்னிரண்டாம் ஓரை; pisces of the zodiac.

[மீனம் + ஓரை.]

மீனறுவடைக்காலம் *mīṉ-aṟuvaḍai-k-kālam*, பெ.(n.) மீன் பிடிக்கும் காலம்; fish catching season. *தற்போது கழிமுகப் பண்ணையில் மீன் அறுவடைக் காலம்.*

[மீன் + அறுவடை + காலம்.]

மீனன் *mīṉaṉ*, பெ.(n.) மீனவோரையை வீடாகவுடையவான வியாழன் (நாமதீப.100); Jupiter, as the lord of pisces.

[மீன் → மீனன்.]

மீனா *mīṉā*, பெ.(n.) வயிரம் பாய்ந்த ஒரு மரவகை (Nels.); a kind of hard wood, *Spondia aurentalis*.

மீனாங்கன் *mīṉāṅgaṉ,* பெ.(n.) காமன் (சங்.அக.); *Kāmaṉ.*

மீனாஞ்சு *mīṉāñju,* பெ.(n.) 1. மீனஞ்சு பார்க்க; see *mīṉañju.* 2. நெருப்புக் கட்டி; an abscess wtih burning sensation (சா.அக.).

மீனாட்சி[1] *mīṉāṭci,* பெ.(n.) மதுரையை உறைவிடமாகக் கொண்ட தெய்வம்; *Umā,* the tutelary Goddess of Madurai.

[மீன் + ஆட்சி. மீனைக் கொடியில் சின்னமாகக் கொண்டவள்.]

மீனாட்சி[2] *mīṉāṭci,* பெ.(n.) பொன்னாங் கண்ணி; a medicinal prostate plant - *Illecebrum sessile* (சா.அக.).

மீனாட்சிசுந்தரக்கவிராயர் *mīṉāṭci-šundara-k-kavirāyar,* பெ.(n.) 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a Tamil poet, who belongs to the 19th centuary.

இவர் கழுகுமலைத் திரிபந்தாதி, முருகர் அனுபூதி, எட்டையபுரம் இளவரசர் ஒருதுறைக் கோவை, வண்டுவிடு தூது, குதிரைமலைப் பதிகம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார். பாண்டிய நாட்டு முகவூரைச் சேர்ந்தவர். தந்தைப் பெயர் சுந்தசாமி புலவர்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை *mīṉāṭci-šundaram-piḷḷai,* பெ.(n.) தமிழ்ப் புலவர்; a Tamil poet who lived in the 19 centuary.

திருச்சிக்கருகில் எண்ணெயூரில் 1815ல் பிறந்தவர். உறையூர் புராணம், சீகாழிக் கோவை முதலிய நூல்களை எழுதியவர்.

மீனாட்சிசுந்தரனார் தெ.போ. *mīṉāṭci-šundaraṉār te, pō,,* பெ.(n.) பலராலும் பாராட்டப் பெற்ற தமிழ் அறிஞர்; a famous Tamil scholar, felicitated by many.

மீனாண்டி *mīṉāṇḍi,* பெ.(n.) சருக்கரை (சங்.அக.); sugar.

மீனாம்பூச்சி *mīṉām-pūcci,* பெ.(n.) ஒளி வீசும் ஒருவகைப் பூச்சி; fire - fly.

மறுவ. மின்மினிப் பூச்சி, மின்மினி.

[மின்னாம்பூச்சி →மீனாம்பூச்சி.]

மீனாய் *mīṉāy,* பெ.(n.) 1. நீர்நாய் (யாழ்.அக.); otter, *Lutra vulgaris.* 2. ஒரு வகை மீன்; a kind of fish. *நீரில் வாழும் நாய் வடிவில் உள்ள நீர்வாழ் விலங்கு.*

[மீன் + நாய்.]

மீனாலயம் *mīṉālayam,* பெ.(n.) மீனநிலயம் (யாழ்.அக.) பார்க்க; see *mīṉa-nilayam.*

[மீன் + ஆலயம்.]

மீனிரைதல் *mīṉiraidal,* பெ.(n.) மீன் நீந்துதலாலும் வால் துடுப்பைச் சுழற்றி யடித்தலாலும் உண்டாகும் ஒலி; sound created by fish while swimming and twisting its tail paddle.

[மீன் + இரைதல்.]

மீனிலா *mīṉilā,* பெ.(n.) விண்மீன் ஒளி (இ.வ.); star light.

[மீன் +நிலா.]

மீனிறக்கம் *mīṉ-iṟakkam,* பெ.(n.) மீன்கள் இயல்பாய் மேயும் இடத்தினின்று கரையை நோக்கி வருகை; migration of fish from its natural abode towards coastal areas. *மீனிறக்கம் கண்டேன் வலையை விரி (மீனவ.).*

[மீன் + இறக்கம்.]

மீனீரலெண்ணெய் *mīṉ-īral-eṇṇai,* பெ. (n.) மீனெண்ணெய் பார்க்க; see *mīṉeṇṇey.*

[மீன் + ஈரல் + எண்ணெய்.]

மீனு *mīṉu,*பெ.(n.) வாலேந்திர போளம்; myrrh - agum - resin used in medicines.

மீனுணங்கல் *mīṉ-uṇaṅgal,*பெ.(n.) கருவாடு; salted, dried fish. *"பன்மீ னுணங்கற் படுபுள் ளோப்புதும்" (அகநா.80:6).*

[மீன் + உணங்கல்.]

மீனுரசுதல் *mīṉ-uraśudal,* பெ.(n.) குழம்புக்காக மீன்களின் செதில்கள் நீங்குமாறு செய்கை; removal of scales of fishes. *குழம்புக்கு மீனுரசிவிட்டாயா?*

[மீன் + உரசுதல்.]

மீனூர்தி *mīṉ-ūrdi,*பெ.(n.) மீனை ஊர்தியாக உடையவனான வருணன் (நாமதீப.82); *Varuṇa*, as having a fish as his vehicles.

[மீன் + ஊர்தி.]

மீனெண்ணெய்[1] *mīṉ-eṇṇey,* பெ.(n.) 1. மீனிலிருந் தெடுக்கும் நெய் (M.M.462); Malabar oil, Oleum pisces. 2. ஒருவகை மீனின் கல்லீரலிலிருந்து எடுக்கும் நெய்; cod liver oil, *Oleum morrhuae.*

[மீன் + எண்ணெய்.]

மீனெண்ணெய்[2] *mīṉ-eṇṇey,*பெ.(n.) காட் என்ற மீனின் கல்லீரலிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்; codliver oil (fish oil).

[மீன் + எண்ணெய்.]

மீனெய் *mīṉey,*பெ.(n.) மீனிலிருந்து வடிக்கும் நெய்; fish-oil. *"மீனெய்யொடு நறவு மறுகவும்" (பொருந.215).*

[மீன் + நெய்.]

மீனெரிஞ்சான் *mīṉ-eriñjāṉ,*பெ.(n.) மீன் கொல்லி (மலை.) பார்க்க; see *mīṉ-kolli.*

[மீன் + எறிஞ்சான் – மீனெறிஞ்சான் → மீனெரிஞ்சான்.]

மீனெலும்பு *mīṉ-elumbu,*பெ.(n.) மீன்முள் பார்க்க; see *mīṉ-muḷ.*

[மீன் + எலும்பு.]

மீனெறி *mīṉeṟi,*பெ.(n.) மீன்கொத்திக் குருவி; a bird with long beak - king fisher.

மீனெறிதூண்டிலார் *mīṉeṟi-tūṇḍilār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; *Śaṅgam* poet.

[மீனெறி + தூண்டிலார்.]

இவர் யானை இழுத்துவிட்ட மூங்கிலுக்கு, மீன் பிடிப்பவர் மேலே இழுத்த தூண்டிலை உவமை கூறியதனால் இப்பெயர் பெற்றார். இவர் இயற்பெயர் தெரியவில்லை. இவர் பாடிய பாடலொன்று குறுந்தொகையில் உள்ளது.

"யானே யீண்டை யேனே யென்னலனே
ஏனல் காவலர் கவணொலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலின் நிவக்கும்
கானக நாடனொடு ஆண்டொழிந்தன்றே"
(குறுந்.54).

மீனெறிபறவை *mīṉeṟi-paṟavai,* பெ.(n.) மீன்கொத்தி (திவா.) பார்க்க; see *mīṉ-kotti.*

[மீன் + எறி + பறவை.]

மீனேறு *mīṉ-ēṟu,*பெ.(n.) சுறாமீன் (திவா.); shark. *"மீனே றுயர்த்த கொடிவேந்தனை வென்ற பொற்பிற் றானே றனையா னுளன் சீவக சாமி யென்பான்" (சீவக.6).*

[மீன் + ஏறு.]

மு

மு *mu,* பெ.(n.) மகரமெய்யும்(ம்) உகர உயிரும் (உ) இணைந்து பிறக்கும் உயிர்மெய்யெழுத்து; the compound of ம்and உ.

[ம் + உ - மு.]

'மு' மகரமெய்யும் உகர உயிரும் சேர்ந்து பிறந்தது; உதடுகளை அழுத்தி பின் மூக்கொலியாக வெளிப்படும்.

'மு' பல்வேறு காலங்களில் வரிவடிவில் ஏற்பட்ட மாற்றங்கள்.

கி.மு.3–ஆம் நூற்றாண்டு – 

கி.பி.5–ஆம் நூற்றாண்டு – 

கி.பி.7–ஆம் நூற்றாண்டு – 

கி.பி.17–ஆம் நூற்றாண்டு–

முக்கட்சுழி *mukkaṭ-šuḻi,* பெ.(n.) மாட்டின் நெற்றியில் உள்ள தாச்சுழிக்கும், குடைமேல் குடைச்சுழிக்கும் கீழுள்ள சுழி; circular or curved mark on the forhead of the cow situated beneath the *tāccuḻi*and *kuḍai mēl kuḍai.*

[மூன்று + கண் + சுழி.]

முக்கட்செல்வன் *mukkaṭ-šelvaṉ,* பெ.(n.) மூன்று கண்களையுடைய சிவன் (திவா.); *Šivaṉ,* as having three eyes. *"முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே" (புறநா.6:18).*

[மூன்று + கண் + செல்வன்.]

முக்கட்டு[1] *mukkaṭṭu,* பெ.(n.) 1. முச்சந்தி (இ.வ.) பார்க்க; see *muccandi.* 2. இக்கட்டு நிலை (தஞ்சை.); difficult situation.

[மூன்று +கட்டு – முக்கட்டு. கட்டு = கட்டுப்பாடு. மூன்றுகட்டு→முக்கட்டு = மூன்று வழிகள் சேருமிடம்.]

முக்கட்டு[2] *mukkaṭṭu,* பெ.(n.) விரலின் பொருத்து (இ.வ.); knuckle.

[முன் + கட்டு.]

முக்கட்டெண்ணெய் *mukkaṭṭeṉṉey,* பெ.(n.) முக்கூட்டெண்ணெய் (நெல்லை.) பார்க்க; see *mukkūṭṭeṉṉey.*

[முக்கூட்டெண்ணெய் → முக்கட்டெண்ணெய்.]

முக்கட்பகவன் *mu-k-kaṭ-pagavaṉ,* பெ.(n.) முக்கட்செல்வன் பார்க்க; see *mukkaṭ-šelvaṉ. "முக்கட் பகவனடி தொழாதார்க் கின்னா" (இன்.நாற்.1).*

[மூன்று + கண் + பகவன்.]

முக்கடுகம் *mu-k-kaḍugam,* பெ.(n.) சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று வகை மருந்துச் சரக்குகள் (வின்.); the three medicinal stuffs.

[மூன்று + கடுகம்.]

முக்கடுகு *mu-k-kaḍugu,* பெ.(n.) முக்கடுகம் (வின்.) பார்க்க; see *mu-k-kaḍugam.*

முக்கடுப்பு *mu-k-kaḍuppu,* பெ.(n.) சினக் குறிப்பினைக் காட்டும் முகம்; frowning of the face.

[முகக்கடுப்பு → முக்கடுப்பு.]

முக்கடை *mu-k-kaḍai,* பெ.(n.) ஆறு விரலம் கொண்ட ஒருபிடி யுயரம் (இ.வ.); height of the fist with thumb raised vertically = 6 inches.

[மூன்று + கடை.]

முக்கண்டகம் *mu-k-kaṇḍagam,* பெ.(n.) நெருஞ்சி (தைலவ.தைல.); cow's thorn.

[மூன்று + கண்டகம்.]

முக்கண்டலி *mu-k-kaṇḍali,* பெ.(n.) முக்கண்டகம் (பரி.அக.) பார்க்க; see *mu-k-kaṇḍagam.*

முக்கண்ணப்பன் *mu-k-kaṉ-ṉ-appaṉ,* பெ.(n.) மூன்று கண்களையுடைய சிவன்; *Šivaṉ* three eyed god. *"முனியே நான்முகனே முக்கண்ணப்பா" (திவ். திருவாய். 10, 10:7).*

[மூன்று + கண் + அப்பன்.]

முக்கண்ணன் *mukkaṇṇaṉ,* பெ.(n.) 1. மூன்று கண்களை உடையவன்; one who has three- eyed. 2. மூன்று கண்களை உடைய சிவன் (சூடா.); *Šivaṉ.* 3. வீரபத்திரன்; *Vīrabhadraṉ.* 4. பிள்ளையார்; *Gaṇēšaṉ.*

[மூன்று + கண்ணன்.]

முக்கண்ணான் *mu-k-kaṇṇāṉ,* பெ.(n.) முக்கண்ணன், 2 பார்க்க; see *mu-k-kaṇṇaṉ.* *"கடந்தடு முன்பொடு முக்கண்ணான்" (கலித்.2).*

[மூன்று + கண்ணான்.]

முக்கண்ணி *mu-k-kaṇṇi,* பெ.(n.) 1. காளி (திவா.); *Kāḷi.* 2. மலைமகள் (பிங்.); *Pārvati.* 3. தேங்காய் (வின்.); coconut.

[மூன்று + கண்ணி.]

முக்கண்ணின்பால் *mu-k-kaṇṇiṉ-pāl,* பெ.(n.) தேங்காய்ப் பால்; milky juice of coconut kernel.

[மூன்று + கண் + பால்→ மூன்று கண்ணின் பால்→முக்கண்ணின்பால்.]

முக்கண்ணிளையோன் *mu-k-kaṉ-ṉ-iḷai-yōṉ,* பெ.(n.) இளநீர்; tender coconut.

[முக்கண் + இளையோன்.]

முக்கண்ணொருகண் *mukkaṉ-ṉ-orukaṉ,* பெ.(n.) பச்சைக் கருப்பூரம்; crude camphor.

[முக்கண் + ஒருகண்.]

முக்கண்பால் *mu-k-kaṉ-pāl,* பெ.(n.) தேங்காய்ப்பால்; milk of coconut kernel.

[முக்கண் + பால்.]

முக்கணச்சுழி *mu-k-kaṇa-c-cuḻi,* பெ.(n.) இரு கண்களின் (சற்று) மேலுள்ள தீமையைத் தரும் மாட்டுச் சுழி (கோவை.); a curve found above the eyes of the cow, suppose tobe a bad-sign.

[முக்கணம் + சுழி.]

முக்கணவன் *mukkaṇavaṉ,* பெ.(n.) கொடி வகை (யாழ்.அக.); a climber.

முக்கணன் *mukkaṇaṉ,* பெ.(n.) முக்கண்ணன் பார்க்க; see *mu-k-kaṇṇaṉ.* *"முக்கணா போற்றி" (தேவா.968, 10).*

முக்கணி *mu-k-kaṇi,* பெ.(n.) முக்கண்ணி (வின்.) பார்க்க; see *mu-k-kaṇṇi.*

முக்கந்தம் *mukkandam,* பெ.(n.) முருங்கை மரம்; drumstick tree - *Moringa oleifera.*

முக்கந்தன் *mukkan daṉ,* பெ.(n.) இடையருள்ளும் கொடிக்காற் காரருள்ளும் ஒரு சாரார்க்கு வழங்கும் பட்டப் பெயர்; title of a sect of shepherds and of betel vine cultivators.

முக்கப்பு *mu-k-kappu,* பெ.(n.) முக்கவராய்தம் (சூலாயுதம்); three - pronged dart; trident. *"பருமுக் கப்பினரே" (தக்கயாகப். 98).*

[மூன்று + கப்பு. கப்பு = கவர்கொம்பு, கிளை, பிளவு.]

முக்கம் *mukkam,*பெ.(n.) முற்கம், 1 பார்க்க; see *murkam.*

[முற்கம் →முக்கம்.]

முக்கம்பாலை *mukkam-pālai,* பெ.(n.) மரவகை (நாஞ்.); a kind of tree.

முக்கரணம்[1] *mu-k-karaṇam,*பெ.(n.) 1. குட்டிக் கரணம் (தனிப்பா.2, 3:5); somersault. 2. விடாப்பிடி; stubborn.

[மூன்று + கரணம்.]

முக்கரணம்[2] *mu-k-karaṇam,*பெ.(n.) மனம், வாக்கு, காயம்; three classes of organs - mind, speech and action.

*[மூன்று + **Skt.** கரணம்.]*

முக்கரணம்போடு-தல் *mukkaraṇam-pōḍu-,*20 செ.கு.வி. (v.i.) 1. குட்டிக்கரணம் போடுதல்; to turn a somersault. *"முக்கரணம்.... போட்டு முயன்றிடினும்" (தனிப்பா.2, 3:5).* 2. விடாபிடியாக இருத்தல்; to be stubborn.

[முக்கரணம் + போடு-தல்.]

முக்கருணை *mu-k-karuṇai,* பெ.(n.) காறுகருணை, காறாக்கருணை, புளிக் கருணை என்ற மூவகைக் கருணைச் செடிகளின் கிழங்குகள் (தைலவ.தைல.); the three species of *karuṇai* roots, viz., *kāṟu-, karuṇai, kāṟā-k-karuṇai, puḷi-k-karuṇai.*

[மூன்று + கருணை.]

முக்கருவு *mukkaruvu,*பெ.(n.) 1. முட்டை; egg. 2. தொப்புள் கொடி; placental cord (சா.அக.).

முக்கல்[1] *mukkal,* பெ.(n.) 1. முயற்சி முதலியவற்றில் இறுகப் பிடித்த மூச்சைச் சிற்றொலிபட வெளிவிடுகை; straining, as in travail. 2. பெரு முயற்சி (உ.வ.); great effort. 3. எடுத்தலோசை (பிங்.); high pitch. 4. பேசுவதால் எழுமொலி (சது.); voice.

[முக்கு →முக்கல்.]

முக்கல்[2] *mukkal,* பெ.(n.) ஈரமிகுதி முதலியவற்றாற் பொருள்களில் வீசும் கெட்ட நாற்றம்; stench of things owing to dampness etc. *இந்த அரிசி முக்கலடிக்கிறது.*

[மக்கல் → முக்கல்.]

முக்கல்[3] *mukkal,*பெ.(n.) முக்கும் செய்கை; groan made while struggling; straining.

[முக்கு → முக்கல்.]

முக்கலாசான்நல்வெள்ளையார் *mukkal-āšāṉ-nalveḷḷaiyār,*பெ.(n.) கழகக்காலப் புலவர்; a *Šaṅgam* poet.

[முக்கல் + ஆசான் + நல் + வெள்ளை + ஆர்.]

முக்கல் என்பது ஒரூராகும். இஃது எங்குளது எனப் புலப்படவில்லை. ஆசான் என்பது சிறப்புப் பெயராக இருக்கலாம். இவர் பாடிய பாடலொன்று நற்றிணையில் உள்ளது (நற்.272).

"கடலங் காக்கைச் செவ்வாய்ச் சேவல்
படிவ மகளிர் கொடிகொய் தழித்த
பொம்மல் அடும்பின் வெண்மணல்
ஒருசிறைக்
கடுஞ்சூல் வதிந்த காமர் பேடைக்

கிருஞ்சேற் றயிரை தேரிய தெண் கழிப்
பூவுடைக் குட்டந் துழவுந் துறைவ
னல்கா மையி னசைபழ தாகப்
பெருங்கை யற்றவென் சிறுமை யலர்வாய்
ஆம்பல் மூதூ ரலர்தந்த
நோயா கின்றது நோயினும் பெரிதே"

(நற்.272).

முக்கலிப்பு *mukkalippu,* பெ.(n.) மணங் கமழும் ஒருவகைச் செடி (கோட்டம்); costus shrub, *Saussurea lappa.*

முக்கவர்த்தடி *mukkavar-t-tadi,* பெ.(n.) மீன், பன்றி முதலியவற்றைக் குத்த உதவும் ஈட்டி வகை (மண்டா.); harpoon, gaff.

[முக்கவர் + தடி.]

மூன்று கிளைகளைக் கொண்ட ஈட்டி வகை.

முக்கவெளி *mukkaveḷi,* பெ.(n.) ஒன்பான் மணிகளில் ஒன்று (புட்பராகம்); one of nine gems - Topaz (சா.அக.).

முக்கழகம் *mukkaḻagam,* பெ.(n.) பாண்டிய அரசின் கீழ் அமைந்த தமிழ்ப் புலவர்களாலாகிய தலைக்கழகம், இடைக் கழகம், கடைக்கழகம் என்ற மூன்று தமிழ்க் கழகங்கள்; the three ancient Tamil academies which flourished under the partronage of the *Pandiya* kings viz. *talai-k-kaḻagam, iḍai-k-kaḻagam, kaḍai-k-kaḻagam. "கண்ணுதற் பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து" (திருவிளை. திருநாட்.56).*

[குல் – கூடற்கருத்து. குல்→குள்→கள்→களம் = 1. கூட்டம், 2. கூடுமிடம். களம்→கழகு→கழகம்= 1. பேரவை, 2. புலவரவை.]

த. கழகம் > வ. சங்கம்.

முக்கழகம் பற்றிய தேவனேயப் பாவாணர் கருத்து :–

முக்கழக வுண்மை :

ஆரிய வருகைக்கு முற்பட்ட தனித்தமிழ் நூல்கள் அத்தனையும், முன்னைத் தமிழர் நாகரிகத்திற்குச் சான்றும் பின்னைத் தமிழர் முன்னேற்றத்திற்குத் துணையும் ஆகாதவாறு, அழிக்கப்பட்டுவிட்டன. மொழியாராய்ச்சியும் நடுநிலையும் நெஞ்சுரமும் இல்லாத தொடை நடுங்கிகட்கு, இவ்வுண்மையைக் காணும் அகக்கண் இல்லை.

தமிழ், வரலாற்றில் கெட்டாத உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழி யாதலாலும், ஆரிய வருகை முன்னைத் தமிழிலக்கியம் அனைத்தும் அழிக்கப்பட்டுவிட்டதனாலும், இறையனார் அகப்பொருள் உரையிற் கூறப்பட்டுள்ள முக்கழக வரலாறு, முற்காலச் செய்திகளும் பிற்காலச் செய்திகளும் மயங்கி, நடுநிலையாராய்ச்சி வல்லுநர் அல்லாதார் சிக்கறுக்க முடியாப் பெருமுடிச்சாய்க் கிடக்கின்றது.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன்" என்னும்

இளங்கோவடிகள் கூற்று, பொல்லாப் புன்சிறு பொய்ம் மொழியாய் இருத்தல் எவ்வகையிலும் இயலாது.

அடியார்க்குநல்லார் தம் சிலப்பதிகார வுரையில், முழுகிப் போயினவாகப் பெயர் குறித்துக் கூறிய ஏழேழ் நாடுகளும் பிறவும் பற்றிய செய்தியும், கட்டுக் கதையாய் இருத்தல் முடியாது.

வைகை மதுரையைத் தென்மதுரை யென்னும் பெருவழக்கில்லை. ஆதலால், தென்மதுரை யென்பது பஃறுளி மதுரையே.

"முதற்சங் கமுதூட்டும் மொய்குழலா ராசை
நடுச்சங்கம் நல்விலங்கு பூட்டும்--
கடைச்சங்கம்
ஆம்போ தது வூதும்" என்னும் பட்டினத்தடிகள் பாட்டு, சங்காகிய சங்கத்தைப் பற்றிய தேனும், முக்கழகத்தே முன்னிய தென்பது வெளிப்படை.

காலத்தால் மட்டுமன்றிக் கருத்தாலுங் கடைப்பட்ட வைகை மதுரைப் பாண்டியரே தமிழ்வளர்ச்சிக் கழகம் நிறுவினரெனின், அவர்க்கு முற்பட்ட தலையிடைக்காலப் பாண்டியர் ஏன் கழகம் நிறுவியிரார்?

முக்கழக வுண்மையை இற்றை இலக்கியச் சான்றின்மை பற்றி நம்பாதார் பாட்டனைப் பெற்ற பூட்டனைக் கண்டிராமையால் அவன் இவ்வுலகி லிருந்ததை நம்பாதாரே.

முக்கழகமும் நிறுவியர் பாண்டியரே

"மோனையாந் தெய்வத் தமிழ்மொழி நிறீஇய
சங்கத் தலைவர்கள் தலைமை பூண்டங்
கறம்வள ரவையில்அரங்கே றியநாள்
வழுதியர் வளர்த்தது சங்க காலம்" என்பது பேரிசைச் சூத்திரம் என்னும் திரட்டில், தமிழ் மொழி விளக்கம் என்னும் பகுதியைச் சேர்ந்த ஒரு நூற்பா.

பாண்டியன் பராந்தக வீரநாராயணனின் (கி.பி.9ஆம் நூற்.) தளவாய்புரச் செப்பேடு,

"மன்னெதிரா வகைவென்று தென்மதுரா
புரஞ்செய்தும்
அங்கதனி லருந்தமிழ்நற் சங்கம் இரீஇத்
தமிழ்வளர்த்தும்"

என்றும், அவன் மகனான பாண்டியன் இராசசிம்மனின் சின்னமனூர்ப் பெரிய செப்பேடு,

"மகாபாரதந் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்"

என்றும், முன்னோர் செயலைப் பின்னோர்மேல் ஏற்றிக் கூறுகின்றன. வைகை மதுரையைத் தென்மதுராபுரம் என்றது, கண்ணன் மதுரையை வடமதுரை யெனக் கருதியதாகல் வேண்டும்.

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும்
சவுந்தர பாண்டியன் எனுந்தமிழ் நாடனும்
சங்கப் புலவருந் தழைத்தினி திருந்தது
மங்கலப் பாண்டி வளநா டென்ப."

"உங்களிலே நானொருவ னொப்பேனோ
வொவ்வேனோ
திங்கட் குலனறியச் செப்புங்கள் – சங்கத்துப்
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழு
மொக்குமோ
ஏடவிழ்தா ரேழெழுவீ ரின்று."

"பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையன்றிப்
பாவேந்த ருண்டென்னும் பான்மைதான் –
மாவேந்தன்
மாற னறிய மதுரா புரித்தமிழோர்
வீறணையே சற்றே மித"

என்பவை, 12ஆம் நூற்றாண்டினரான பொய்யாமொழிப் புலவர், மதுரையிற் கடைக்கழகப் புலவரின் கற்படிமையையும் கழகப் பலகையையும் நோக்கிப் பாடியன.

இவையெல்லாம் கடைக்கழகத்தையே பற்றியவை யேனும், முதலிரு கழகமும் பாண்டியர் நிறுவினவேயென்பதைக் குறிப்பாக வுணர்த்துவன வாகும், இந்துமாவாரியில் மூழ்கிப் போன தமிழ் நிலமெல்லாம் பாண்டிநாடேயாதலின், அதில் சேர சோழர் எவ்வகை யிலேனும் இருந்திருக்க முடியாது. இறையனா ரகப்பொருளுரை முக்கழக வரலாறு, "தலைச்சங்கம் இடைச்சங்கங் கடைச்சங்கமென மூவகைப்பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள்" என்றே தொடங்குதல் காண்க.

தலைக்கழகம் (தோரா. கி.மு.10,000 – 5,000)

இறையனா ரகப்பொருளுரையிலுள்ள முச்சங்க வரலாறு :

தலைச்சங்கம் :

"தலைச்சங்கம் இடைச்சங்கங் கடைச் சங்கமென மூவகைப்பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் குன்றெறிந்த முருகவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையும் என இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தார் என்ப. அவர்களைச் சங்கமிரீஇயினார் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத்தொண்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்து கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப அவர்க்கு நூல் அகத்தியம்."

இதன் விளக்கம் :

கழகத்தைக் குறிக்கும் சங்கம் என்பது பிற்காலத்துச் சமற்கிருதச் சொல்லாதலால், அச் சொல்லே அக்காலத்தில் தமிழகத்தில் வழங்கியிருக்க முடியாது. ஆரியர் இந்தியாவிற்குட் புகுந்தகாலம் தோரா கி.மு.1500. அதற்கு நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டிற்குப் பின்னரே, வேத ஆரியமுந் தமிழுங் கலந்து சமற்கிருதம் என்னும் இலக்கிய வழக்கு வகைமொழி (Dialect) தோன்றிற்று. சமற்கிருதம் என்னுஞ் சொல்லே கலந்து செய்யப்பட்டது என்னும் பொருளதே.

அம்பலம், அமை–அவை, ஆயம், கடிகை, களம், களரி, கழகு–கழகம், குழு, குழாம், குழுமல்–குழுவல், குறி, கூட்டு–கூட்டம், கூடல், கோட்டி, சேகரம், தொகை, பண்ணை, பொது–பொதியம், மன்று–மன்றம் என்னம் சொற்களுள் ஒன்றே அக்காலத்துக் கழகத்தைக் குறிக்க வழங்கியிருத்தல் வேண்டும்.

முதலிரு கழகமும் மூழ்கிய பின்னரே அகத்தியர் தென்னாடு வந்ததனால், அவர் தலைக்கழகத்தில் இருந்திருக்க முடியாது. இடைக்கழக விருக்கையை மூழ்குவித்த இரண்டாங் கடல் கோளுக்குத் தப்பிய மாவேந்த (மகேந்திர) மலையும், அகத்தியர் வந்தபின் முழுகிவிட்டது. அதனால் அவர் பொதிய மலையிலேயே நிலையாக வதிய நேர்ந்தது.

"அந்த மலய மலையினது உச்சியில் வீற்றிருக்கிறவரும், சூரிய பகவானைப் போல மிகுந்த ஒளியுடன் விளங்குபவருமான, அகஸ்திய முனிவர் பெருமானைக் காண்பீர்கள்....... சாகரத்தின் மத்தியில் அகஸ்தியரால் வைக்கப்பட்டதும் அழகிய பல மரங்களடர்ந்ததும், அழகிய பொன்மயமானதும், மலைகளில் சிறந்ததெனத் திரிலோகப் பிரசித்தி பெற்றதுமான, மகேந்திரம் என்னும் பர்வதம் பெருங்கடலில் மூழ்கிக் கிடக்கின்றது" என்று சுக்கிரீவன் சீதையைத் தேடித் தென்றிசை சென்ற வானரப் படையை நோக்கிக் கூறியதாக, வான்மீகியார் தம் வடமொழி யிராமாயணத்தில் வரைந்திருத்தல் காண்க.

அகத்தியர் இராமர் காலத்தவராதலாலும் அவர் மகேந்திர மலையை வாரியிடை வைத்தார் என்பதனாலும், அனுமன் மகேந்திர மலையினின்று கடலைத் தாண்டினான் என்பதனாலும் அகத்தியர் காலத்தில் அம் மலையின் மேற் பகுதி ஒரு தீவாக இருந்ததெனக் கருதலாம்.

திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள் என்றது, இறையனார் போலச் சிவபெருமான் பெயர் தாங்கிய

ஒரு புலவரையே. இது குணசாகரர் தம் யாப்பருங்கல விரிவுரையில் திரிபுரமெரித்தவர் பெயர் மகிழ்ந்த பேராசிரியர் என்றும், திரிபுரமெரித்த விரிசடை நிருத்தர் பெயர்மகிழ்ந்த பேராசிரியர் என்றும், ஒரு புலவர் பெயரைக் குறித்ததை ஒருபுடை யொத்தாகும்.

குன்றெறிந்த முருகவேள் என்றது முருகன் என்னும் பெயர் கொண்ட புலவரையே. பெயரொப்புமை பற்றி மாந்தரைத் தேவரெனக் கொண்டது, எழுதப்பட்ட வரலாறின்மையையும் அப் புலவரின் சேணெடுந் தொன்மையையும் காட்டும்.

"ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை யென்பார் செந்தமிழில் வெளியிட்ட ஈழமும் தமிழ்ச்சங்கமும் என்னுமொரு கட்டுரையில், கி.மு. ஐந்நூற்று நாற்பத்து மூன்றாவது ஆண்டில் விசயன் என்னும் அரசன் சிங்கள அரசினை நிலைபெறுத்துவதற்கு முன், தமிழரது அரசு இலங்கையில் இருந்ததென்றும், அந் நாட்டிற்கே நாகத்தீவு என்ற பெயர் வழங்கிய தென்றும், நாகர்கோயில், முசிறி என்ற பெயர்கள் ஈழநாட்டில் வழங்கினவென்றும், சோழன் மணந்த நாககன்னிகை அந்நாட்டு அரசன் மகளென்றும், இளநாகன் என்னும் அரசன் கி.பி.38-ல் அவண் அரசாண்டா னென்றும் கூறுதலால் உதியஞ் சேரலாதனைப் பாடிய முடிநாகராயர் ஈழமன்னர் மரபினராயிருத்தல் கூடுமென்று கருதுதற்கு இடமுண்டு."[2] என்று கூறியுள்ளார் பேரா.கா.சுப்பிரமணியப் பிளளை. பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் இடைக்கழகத்திற்குப் பிற்பட்ட பாரதக் காலத்தவனாதலால், அவனைப் பாடிய முடிநாகராயர் தலைக்கழகத்தில் இருந்திருத்தல் முடியாது. அப் பெயரார் ஒருவர் அக் கழகத்தில் இருந்திருப்பின், அவர் வேறொருவராயிருந்திருத்தல் வேண்டும் என்ரி, சியார்சு, எட்வார்டு என்னும் பெயரினர் பலர் இங்கிலாந்தரசரா யிருந்ததை நோக்குக.

முடிநாகர் என்பார் சூட்டுநாகர் என்னும் நாகர் வகுப்பார். நாகவுருவைத் தலையில் அணிந்திருந்ததனால் அப் பெயர் பெற்றதாகத் தெரிகின்றது. முடிநாகரின் அரையர் முடிநாகராயர்.

"கீண்டது வேலை நன்னீர் கீழுறக் கிடந்த நாகர்
வேண்டிய வுலக மெங்கும் வெளிப்பட மணிகள் மின்ன
ஆண்டகை யதனை நோக்கி யரவினுக் கரசர் வாழ்வுங்
காண்டகு தவத்த னானேன் யானெனக் கருத்துட் கொண்டான்"

என்னும் கம்பராமாயணக் கடல்தாவு படலச் செய்யுள் (20) ஈண்டுக் கவனிக்கத் தக்கது.

நிதியின் கிழவன் என்றது அளகையாளி அல்லது திருமாவளவன் என்பது போன்ற பெயருடைய ஒரு புலவரை.

தலைக்கழகக் காலத்துப் பாண்டிநாடு குமரிமுனைக்குத் தெற்கில் ஏறத்தாழ ஈராயிரங்கல் தொலைவு பரந்திருந்ததனால், அக்கழகப் புலவர் ஐந்நூற்று நாற்பத் தொன்பதின்மர் என்பதிலும் அவருள்ளிட்டுப் பாடினார், நாலாயிரத்து நானூற்று நாற்பத் தொன்பதின்மர் என்பதிலும், இம்மியும் ஐயுறவிற்கு இடமில்லை. கழகமிருந்தார் நிலையான உறுப்பினர்; உள்ளிட்டுப் பாடினார் இடையிடை வந்து பாடிச்சென்ற பிறர்.

அவர் பாடியதாகச் சொல்லப்படும் பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையும் அக்காலத்துப் பொதுவிலக்கியமே. அவற்றுள், முதலது இசையிலக்கியமும் இடையிரண்டும் இசையிலக் கணமுமாகும். அந்நான்கனுள் ஒன்றுகூட இக்காலத்தில்லை. கலிப்பாவின் திரிபான பரிபாடல் தலைக்கழகக் காலத்திற் பாடப்பட்ட தென்பது ஐயத்திற்கிட மானதே.

தலைக்கழகத்தைப் புரந்த பாண்டியர் எண்பத்தொன்பதின்மர் என்பதிலும், அவர் ஆண்ட

காலம் நாலாயிரத்து நானூற்று நாற்பதியாண்டு என்பதிலும், அவருட் பாவரங்கேறினார் எழுவர் என்பதிலும், எவ்வகை ஐயத்திற்கும் இடமில்லை. அக்காலத்து மக்கட்கு வாழ்நாள் நீண்டிருந்ததனால், தலைக்கு ஐம்பதியாண்டு நிரவலாக வைத்துக் கணிப்பின், மொத்தம் நாலாயிரத்து நானூற்று ஐம்பதாக, பத்தாண்டு கூடியே வருதல் காண்க.

கடுங்கோன் என்பவன், களப்பாளர் (களப்பிரர்) காலத்தின் பின் பாண்டி நாட்டைக் கைப்பற்றிய கடுங்கோன் அல்லன். பெயரொப்பு மையைத் தீதாகப் பயன்படுத்தித் தமிழினத்தின் தொன்மையையும் தலைமையையும் மறைப்பதும் குறைப்பதும், தமிழ்ப் பகைவரான ஆரிய வரலாற்றாசிரியரின் வழக்கமான குறும்பாகும். காய்சின வழுதி என்னும் பெயரினன் ஒருவனும் பிற்காலப் பாண்டியருள் இன்மை காண்க. தலைக்கழகப் பாண்டியர் எண்பத்தொன்பதின்மர் பெயரும் குறித்திருப்பின், அவரனைவரும் குமரிநாட்டின் ரென்பது வெள்ளிடை மலையாகும்.

தலைக்கழக இருக்கை கடல் கொள்ளப்பட்ட மதுரை என்று தெளிவாக அடைகொடுத்துப் பிரித்திருத்தலை ஊன்றி நோக்குக.

அகத்தயம் தலைக்கழக நூலன்று. முதலிரு கழக நூல்கள் அத்தனையும் அழிக்கப்பட்டுவிட்டன. தமிழ் உலக முதன் மொழி. அதன் இலக்கியமும் உலக முதல் அறிவியற் படைப்பு. ஆதலால் வரலாற்றிற் கெட்டாத தொன்மைத்தது. நெடுகலும் தொடர்ந்து தமிழகப் பொது வரலாறெழுதும் வழக்கம் பண்டை நாளிலில்லை. நாடுவாரியாகவும் ஆட்சி வாரியாகவும் பகுதிபகுதியாக எழுதப்பட்ட வரலாறுகளும் வரலாற்றுச் சான்றுகளும், அவ்வப்போது நேர்ந்த போர்களில் அழிக்கப்பட்டு விட்டன. கி.மு.1200 போல் எழுதப்பட்ட அகத்தியமே கி.பி.7ஆம் நூற்றாண்டில் முதற் பண்டை நூலாக இருந்தனால், அது தலைக்கழக இலக்கண நூலாக இறையனாரகப் பொருளுரையிற் குறிக்கப்பட்டது. தலைக்கழகக் காலமோ கி.மு.52 நூற்றாண்டுக்கு முந்தியது.

அவர் சங்கமிருந்து செய்யுள் செய்தது அல்லது நூலியற்றியது என்னாது, "அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது" என்று தலைக்கழகத்திற்குங் கூறியதனால். அக் கழகத் தோற்றத்திற்கு முன்பே நல்லிசைப் புலவர் பலர் செய்யுள் செய்திருந்தனரென்பதும் அவற்றை ஆராய்வதே கழகத்தின் முதல் நோக்கமும் முதன்மையான நோக்கமு மென்பதும், அறியப்படும். இதனால் தமிழின் தொன்மையும் பண்பாடும் ஒருங்கே விளங்கும்.

இடைக்கழகம் :

இடைச்சங்கம்

இனி, இடைச்சங்க மிருந்தார் அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் இருந்தையூர்க் கருங் கோழியும் மோசியும் வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும் திரையன் மாறனும் துவரைக்கோனும் கீரந்தையுமென இத் தொடக்கத்தார் ஐம்பத் தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்தெழுநூற்றுவர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும் குருகும் வெண்டாளியும் வியாழமாலையகவலுமென இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூத புராணமுமென இவை யென்ப. அவர் மூவாயிரத் தெழுநூற்றி யாண்டு சங்கமிருந்தார் என்ப. அவரைச் சங்கமிரீஇயினார் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் ஐவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்து கபாட புரத்தென்ப. அக்காலத்துப்போலும் பாண்டியனாட்டைக் கடல் கொண்டது.

இதன் விளக்கம் :

அகத்தியர் தென்னாடு வந்தது கி.மு.12ஆம் நூற்றாண்டென்று முன்னரே கூறப்பட்டது. அதற்குள் முதலிரு கழக விருக்கையும் மூழ்கிவிட்டன. தொல்காப்பியர் காலம் கி.மு.6ஆம் அல்லது 7ஆம் நூற்றாண்டு. ஆகவே, அகத்தியரும் தொல்காப்பியரும் ஒருகால வாணராகவோ இடைக்கழகப் புலவராகவோ இருந்திருக்க முடியாதென்பது வெள்ளிடை மலை.

தமிழ்ப் புலவர் வரலாற்றில், அகத்தியரையும் தொல்காப்பியரையும் ஆசிரியரும் மாணவருமாக இணைத்தது, உண்மை வரலாற்றிற்கு ஒரு பெரிய இடறுகட்டை யாகும். முதலிரு கழக இலக்கிய மனைத்தும், நூற்பெயரும் நூலாசிரியர் பெயரும் எதிர்காலத்தில் எவருக்கும் தெரியாதவாறு கூட்டுக் கட்டுப்பாட்டுடன் அழிக்கப்பட்டுவிட்டமையால், அகத்தியரே முதல் தமிழாசிரியரும் அகத்தியமே முதல் தமிழிலக்கணமும் ஆகக் கருத நேர்ந்துவிட்டது. அகத்தியம் மாபிண்டம் என்னும் முத்தமிழிலக்கணம். இலக்கணத்திற்கு முந்தியது இலக்கியம் என்பதும், இலக்கணத்துள்ளும் முத்தமிழிலக்கணத்திற்கு முந்தியது இயற்ற மிழிலக்கணம் என்பதும், இயற்றமிழிலக் கணத்துள்ளும் பொருளுக்கு முந்தியது சொல்லும் சொல்லிற்கு முந்தியது எழுத்தும் ஆகும் என்பதும், ஒவ்வொரு துறையிலும் அதன் படிநிலைகளிலும் முதலும் வழியும் சார்பும் சார்பிற் சார்புமாகப் பல நூல்கள் பன்னூற்றாண்டு வழங்கிய பின்னரே, பெரும்பாலும் நிறைவான அளவை நூல் தோன்றுமென்பதும், பண்டையாசி ரியர்க்குத் தெளிவாகத் தெரிந்ததில்லை.

அகத்தியர்க்குத் தொல்காப்பியர் நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டு பிற்பட்டவர். அகத்தியத்திற்கு அடுத்துத் தோன்றிய இயற்றமிழ் இலக்கண நூல் தொல்காப்பியமாதலின், பிற்காலத்தார் தொல்காப்பியரை அகத்தியரின் மாணவராகக் கருதிவிட்டனர். அகத்தியரைத் தொல்காப்பியத்தில் குறிப்பாக வேனும் ஓரிடத்துங் குறிப்பிடாமையும், "என்ப", "என்மனார் புலவர்", "எனமொழிப" என்றும், பிறவாறும், முன்னூலா சிரியரைப் பன்மையிலேயே தொல்காப்பியர் நெடுகலுங் குறித்துச் செல்லுதலும், அவர் உடன் மாணவரான பனம் பாரனார்,

"முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்"

என்றும் தம் சிறப்புப்பாயிரத்திற் கூறியிருத்தலும், தொல்காப்பியர்க்கு அகத்தியரொடு தொடர் பின்மையைத் தெளிவாகக் காட்டும். ஆயினும் நச்சினார்க்கினியர்,

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்"

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் சிறப்புப் பாயிரத்தை நம்பி, பகுத்தறிவிற் கொவ்வாத ஒரு கதையைக் கட்டிவிட்டார்.

அகத்தியம் இறந்துபட்டமைக்குத் தொல் காப்பியரின் எதிர்ச் சாவிப்பு கரணியமன்று. அது முத்தமிழ் முழு நூலாயிருந்து தமிழின் பெருமையைச் சிறப்பக் காட்டினதனாலும், தொல்காப்பியம் போல் ஆரியக் கருத்துகளைப் புகுத்தாமையாலும், வடசொல்லைச் செய்யுட் சொல்லாகக் கொள்ளாமையாலுமே, முதுகுடுமிப் பெருவழுதி போன்றார் காலத்தில் தமிழ்க் கடும் பகைவரான ஆரிய வெறியரால் அழிக்கப்பட்டு விட்டது.

அகத்தியரையும் தொல்காப்பியரையும் முதலிற் குறித்ததனால் இருந்தையூர்க் கருங்கோழி, மோசி, வெள்ளூர்க் காப்பியன் சிறு பாண்டரங்கன், திரையன் மாறன், துவரைக் கோன், கீரந்தை என்பவரும் பிற்காலத்தவரே.

துவரைக்கோன் என்றது, எருமையூர் (மைசூர்) நாடென்னும் கன்னட நாட்டில் இன்று துவாரசமுத்திரம் என வழங்கும் துவரை நகரைத் தலைநகராகக் கொண்ட, இருங்கோவேளின் முன்னோன்.

கழகமிருந்தார் தொகை ஐம்பத் தொன்பதாகவும் உள்ளிட்டுப் பாடினார் தொகை மூவாயிரத்து எழுநூறாகவும் குறைந்து போனமைக்கு, பனிமலைவரை வடக்கிலுள்ளது போன்ற ஒரு பெரு நிலப்பரப்பு முழுகிப்போனமையே கரணியம்.

அவர் பாடியதாகச் சொல்லப்படும் கலியும் குருகும் வெண்டாளியும் வியாழமாலையகவலும் பிறவும் இறந்துபட்டன. அவையும் அக்காலத்துப் பொதுவிலக்கியமே.

அவர்க்கு இலக்கண நூலென்ற ஐந்தும் இடைக்கழகத்திற்கும் கடைக்கழகத்திற்கும் இடைப்பட்டவையே மாபுராணமும் பூதபுராணமும் இறந்துபட்டன. இசைநுணுக்கம் இன்றும் கையெழுத்துப் படியாயிருப்பதாகச் சொல்லப் படுகின்றது. ஆயின், அச்சேறி வெளிவராமையோடு மறைவாகவும் உள்ளது. புராணம் என்னும் வட சொல்லே, மாபுராணமும் பூத புராணமும் ஆரியம் வழக்கூன்றிய பிற்காலத்தன வென்பதைத் தெரிவிக்கும். அதே சமயத்தில், அவை கூறும் இலக்கணச் செய்தியின் தொன்மையையும் உணர்த்தும்.

புராணம் என்னும் பெயர் வட மொழியிலக்கியத்திற் பழங்கதை அல்லது அதுபற்றிய பனுவலையே குறிக்கும். பிற்காலத்தில் படைப்பு, துணைப்படைப்பு, மன்னூழி (மன் வந்தரம்), அரச மரபுகள், அவற்றின் வரலாறுகள் ஆகிய ஐந்தையும் பற்றிக் கூறுவதே புராணம் என்று ஒரு வரையறை செய்யப்பட்டது. அவ் வரையறைக்கு முந்தி மாபுராணமும் பூதபுராணமும் தோன்றி யிருக்கலாம்.

இடைக் கழகத்தைப் புரந்த பாண்டியர் வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் வரை ஐம்பத்தொன்பதின்மர். தலைக்கு நாற்பதாண்டு நிரவலாக வைத்துக் கொள்ளின். அவர் ஆண்ட காலம் ஈராயிரத்து முந்நூற்றறுப தாண்டாகும். முக்கழக வரலாற்றில் அது மூவாயிரத்தெழு நூறாண்டென்றது, கழகமில்லாத இடைக் காலத்தையும் சேர்த்ததாகல் வேண்டும். ஏனெனின், தலைக்கழக விருக்கையை உட்டெகாண்ட ஒரு பெரு நிலப்பரப்பு திடுமென மூழ்கியபின், உடனடியாக ஆட்சி ஏற்பட்டிருக்க முடியாது. ஆட்சி ஏற்பட்டபின்னும், நாடு முழுதுந் தழுவிய தலைமைப் புலவர் கழகம் உடன் தோன்றியிருக்க முடியாது. ஆதலால், ஆயிரத்து முந்நூற்று நாற்பதாண்டு இடையீடு பட்டிருத்தல் வேண்டும். கடல்கோளுக்குத் தப்பிய குடிகளைக் குடியேற்றவும், புதிய அரசமைக்கவும் ஆட்சிக்கு மருதநிலத்தலைநகரும் வணிக வளர்ச்சிக்கு நெய்தல்நிலத்தலைநகரும் எடுப்பிவிக்கவும், எதிர்காலக் கடல்கோள் தடுப்பிற்கான ஏற்பாடுகளைச் செய்யவும், மீண்டும் புலவர் கழகந் தோற்று வித்தற்கேற்ற செழிப்பும் அமைதியும் நாட்டில் நிலவவும், அத்துணைக் கால இடையீடும் வேண்டியது இயற்கையே.

வெண்டேர்ச் செழியன் முடத்திருமாறன் என்னும் பெயர்கள் பிற்காலத்துப் பாண்டியர் பெயர் போலாது தூய தமிழாயிருத்தல், ஆரிய வருகைக்கு முந்திய நிலையைக் காட்டும்.

சிலர், முடத்திருமாறன் கடல்கோளுக்குத் தப்பும் முயற்சியில் முடம்பட்டு அப் பெயர் பெற்றானென்று கூறுவர். வன் பிறப்பிலேயே முடம்பட்டு மிருந்திருக்கலாம்.

புலவர் தொகை போன்றே, பாண்டியர் தொகையும் அவருட் பாவரங்கேறினார் தொகையும் குறைந்தமை, பழம் பாண்டியநாடு மிகக் குறுகிப் போனமையைக் காட்டும்.

கபாடபுரம் என்னும் பெயர் வான்மீகி யிராமாயணத்தினின்று அறிந்தது. அச் சொல்லிற்கு வடமொழியில் வாயில் அல்லது கதவு என்பதே பொருள். அண்மையில் வெளிவந்த (P.S.) கிருட்டிணசாமி ஐயரின் மொழிபெயர்ப்பிலும், கபாட என்பது வாயிலின் கதவு என்றே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (பாண்டயாநாம் கபாடம் த்ரக்ஷ்யத = பாண்டிய நாடுகளின் உட்புகும் வாயிலின் கதவைக் காண்பீர்கள்).

ஆரிய வருகைக்கு முற்பட்ட பழம் பாண்டி நாட்டு நகருக்கு வேற்றுமொழிப் பெயர் அமைந்திருத்தல் இயலாது. கபாட என்னும் சொல்லிற்கு வடமொழியில் மூலமும் இல்லை. ஆறு, கடலொடு கலக்குமிடம் வாய போன்றிருத்தலால், அதற்குக் கயவாய் என்று பெயர். (ஒ.நோ.: Portsmouth, Plymouth) கயம் = கடல். குமரியாறு கடலொடு கலந்த இடத்திலேயே கபாடபுரம் என்னும் பட்டினம் இருந்திருத்தல் வேண்டும். அதன் பெயரும் அதனொடு முழுகிப் போயிற்று.

ஒருகால், புகார் (ஆறு கடலிற் புகுமிடம்) என்பது போன்றே கயவாய் என்பதும் சிறப்புப் பெயராய் வழங்கி யிருக்கலாம்; அல்லது, புதவம் (வாயில்) என்று பெயரிருந்திருக்கலாம். கபாட என்னும் சொல் கதவம் என்னும் தென்சொல்லின் முறைமாற்றுத் திரிபாயுமிருக்கலாம்.

கடைக்கழகக் காலத்தின் முற்பகுதியிலும் குமரியாறிருந்ததாகத் தெரிவதால், காவிரி யாறிருக்கவும் காவிரிப்பூம்பட்டினம் முழுகிப் போனதுபோன்றே, குமரியாறிருக்கவும் கபாடபுரம் என்னும் பட்டினமும் முழுகிப் போயிருத்தல் வேண்டும். அம் முழுக்கும் ஒரு பகுதி முன்னும் ஒரு பகுதி பின்னுமாக இருந்திருக்கலாம்.

தென்னாட்டார் வடதிசையிற் கங்கையாடச் சென்றது போன்றே, வடநாட்டார் தென்றிசையிற் குமரியாட வந்ததும், பண்டைக்காலத்திற் பெருவழக்காயிருந்தது.

"தெனா அது உருகெழு குமரியின் தெற்கும்"
(புறம்.6).

"தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின் காறும்"
(சிலப்.8:1, அடியார், உரை).

என்பன குமரியாற்றின் பெருமையைக் காட்டும்.

இடைக்கழக விருக்கையைக் கொண்டது இரண்டாம் அல்லது மூன்றாங் கடல்கோள். அது கி.மு.1500 போல் நிகழ்ந்திருக்க வேண்டும். ஏறத்தாழ அதுவே கீழையாரியர் இந்தியாவிற்குட் புகுந்த காலமும்.

ஆகவே, முதலிரு கழகமும் முற்றும் ஆரியத் தொடர்பற்றன என்பதை அறிதல் வேண்டும் (தமிழிலக்கிய வரலாறு – பக்.62–73).

முக்கனி *mu-k-kaṉi*, பெ.(n.) மா, பலா, வாழை என்ற மூவகைப் பழங்கள்; the three kinds of fruits, viz. *mā, palā, vāḻai*. *"முந்து முக்கனியி னானா முதிரையின்" (கம்பரா. நாட்டு.19). "தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாய்க் கூட்டிச் சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே" (அருட்பா.345).*

[மூன்று + கனி.]

முக்காட்டங்கி *mukkāṭṭaṅgi*, பெ.(n.) மகளிருடைய தலைமறைவுச் சீலை (வின்.); hood or veil, worn by women.

[முக்காடு + அங்கி. தலையை மறைத்துக் கொள்ளப்பயன்படும் துணி.]

முக்காட்டுக்கூறை *mukkāṭṭu-k-kūṟai*, பெ.(n.) 1. மணப் பெண்ணுக்குப் பெற்றோர் கொடுக்கும் தலைமறைவுச் சீலை (வின்.); garment given by the parents to the bride to cover her head. 2. ஒருத்தி கைம்பெண்ணாகும் போது அவளது

பெற்றோர் கொடுக்கும் சீலை (இ.வ.); garment given by the parents of a woman on the occasion of her widowhood.

[முக்காடு + கூறை. கூறை = ஆடை, துணி.]

முக்காட்டுச்சீலை *mukkāṭṭu-c-cīlai,* பெ.(n.) முக்காட்டங்கி (வின்.) பார்க்க; see *mukkāṭṭaṅgi.*

[முக்காடு + சீலை. சீலை = துணி.]

முக்காட்டுநித்திரை *mukkāṭṭu-nittirai,* பெ.(n.) முகத்தையும் உடம்பையும் மூடித் தூங்குவது; sleeping covering the face.

*[முக்காட்டு + **Skt.** நித்திரை. .]*

முகத்தை மூடித் தூங்குவதால் இரண்டு கண்களுக்கும், தோள்களுக்கும் வலிவுண்டாகும். அன்றியும் குளிர்வாடை, வெயில், வேகம், தூசி, பனிக்காற்று இதனால் விளையும் நோய்கள் நீங்கும்.

முக்காட்டுப்பூச்சி *mukkāṭṭu-p-pūcci,* பெ.(n.) சிவப்புக் கம்பளிப் பூச்சியின் தாய்ப்பூச்சி (கோவை.); mother of red caterpillar.

[முக்காட்டு + பூச்சி.]

முக்காடு *mukkāḍu,* பெ.(n.) மறைவுச் சீலை, தலையை மூடிக் கொள்ள உதவும் துணி; veil or cloth worn to cover one's head. *"கவலையுட் கொடு போர்த்த முக்காடு" (பிரபோத.3:55). அவள் கெட்ட கேட்டுக்கு முக்காடு வேறா? முக்காட்டின் கீழே கைகாட்டுகிறது (பழ.அக.). முக்காட்டுக்குள்ளே மூடுமந்திரமா? (பழ. அக.).*

ம. முக்காடு

[முட்டாக்கு → முக்காடு. முட்டாக்கு பார்க்க.]

முக்காணி[1] *mu-k-kāṇi,* பெ.(n.) எண்பதில் மூன்று பங்குடைய பின்ன வெண்; the fraction 3/80 as three *kāṇi.*

[மூன்று + காணி[1] – முக்காணி.]

முக்காணி[2] *mu-k-kāṇi,* பெ.(n.) தன்னிச்சையாய் ஓடாமலிருப்பதற்கும் தன்பால் மூத்திரம் முதலியவற்றைக் குடியாமலிருப்பதற்கும் மாட்டின் கழுத்திலிடும் முக்கோண வடிவாயமைந்த சட்டகம், தளை (இ.வ.); triangular frame on the neck of cattle to prevent them from going astray or drinking their own milk or urine.

[மூன்று + கோணம் – முக்கோணம் → முக்காணி.]



முக்காணி[3] *mukkāṇi,* பெ.(n.) முக்காணியர் பார்க்க; (G.Tn.D.I.507) see *mu-k-kāṇiyar.*

முக்காணிக்கொம்பு *mukkāṇi-k-kombu,* பெ.(n.) ஏற்றக் கோலின் அடிப்பகுதியில் உள்ள துளையில் பொருத்தப்பட்டிருக்கும் கொம்பு; wooden pole, joined in the hole of the lift at the bottom.

[முக்காணி + கொம்பு.]

முக்காணியர் *mukkāṇiyar,* பெ.(n.) முன்குடுமி தரிப்பவரும் திருநெல்வேலி மாவட்டத்தில் முக்காணி ஊரைச் சார்ந்தவருமாகிய பார்ப்பன வகையார்; a class of Brahmins, who wear the hair - tuft in front of the head, as belonging to the Village *Mukkāṇi* in Tirunelveli District.

[முக்காணி – ஊர்ப்பெயர். முக்காணி→ முக்காணியர் = முக்காணி என்னும் ஊரில் வாழ்பவர்.]

முக்காத்துட்டு *mukkā-t-tuṭṭu,* பெ.(n.) பழங்காலக் காசு வகை; an ancient coin. *"முக்காத்துட்டுக்கு மூன்று தரம் காலில் விழுவான். முக்காத்துட்டுக்குப் பயனில்லாதவன்".*

[முக்கால் + துட்டு.]

முக்காதம் *mukkādam,* பெ.(n.) மூன்று காத தூரம்; three *kādam* distance. *"முக்காதம் சுமந்தாலும் முசல் கைதூக்குதான்" (பழ.அக.).*

[மூன்று + காதம்.]

முக்காதலர் *mu-k-kādalar,* பெ.(n.) கணவன், தோழன், மகன் என்ற மூன்று நட்பாளர்கள் (வின்.); the triple friends viz. *kaṉavaṉ, tōḻaṉ, magaṉ.*

[மூன்று + காதலர் – முக்காதலர்.]

முக்காய் *mu-k-kāy,* பெ.(n.) கடுக்காய், நெல்லி, தான்றி என்னும் மூன்று வகைக் காய்கள்; three kinds of fruits viz. gallnut, Indian gooseberry, bellerica.

[மூன்று + காய்.]

முக்காய்வேளை *mukkāy-vēḷai,* பெ.(n.) மருந்துச் செடி வகை; five leaved wild indigo - *Tephrosia senticosa.*

முக்காரக்கல் *mukkāra-k-kal,* பெ.(n.) குத்துக்கல்லின் கீழுள்ள கல்; stone standing on edge as a prop in a lift used for irrigation.

முக்கால்[1] *mu-k-kāl,* பெ.(n.) 1. நான்கில் மூன்று பங்குடைய பின்னவெண்; the fraction 3/4 as three quarters. *மணி ஒன்றே முக்கால். "முக்காற் பணத்துக் குதிரை மூன்று பணத்துப் புல் தின்றாற் போல" (பழ.அக.).* 2. ஒருவகை இசை (சந்தம்); a kind of metre. *"திருமுக்கால்" (தேவா.86, பதிகத் தலைப்பு).*

[மூன்று + கால். கால் = ஒரு பொருளின் நான்கில் ஒரு பாகம்.]

முக்கால்[2] *mu-k-kāl,* பெ.(n.) 1. மும்முறை; three times. *"ஆரியனை முக்காலும் வலங்கொடு" (கம்பரா.அதிகாய.87).* 2. மூன்றாவது முறை; a third time. *"முக்காலின் முடிந்திடுவான் முயல்வான்" (கம்பரா.மாரீச.212).* 3. முக்காலம், 1 பார்க்க; see *mu-k-kālam,1*

[மூன்று + கால். கால் = ஒரு பொருளின் நான்கில் ஒரு பாகம்.]

முக்கால்நோக்கு *mukkāl-nōkku,* பெ.(n.) நால்வகை கோள் (கிரக) நோக்குக் கூறுள் ஒரு கோள் (கிரகம்) முக்கால் பார்வையோடு நோக்குகை; aspect of a planet having three- quarters of a sight one of four *kiraka-nōkku.*

[முக்கால் + நோக்கு.]

முக்கால்புள்ளி *mu-k-kāl-pulli,* பெ.(n.) எழுதும் போதோ, அச்சிடும் போதோ விளக்கம், எடுத்துக்காட்டு முதலியவைத் தரப்படுவதற்கு முன் பயன்படுத்தப்படும் (:என்னும்) குறி; colon. *கட்டுரையில் முக்கால் புள்ளியை அடிக்கடி பயன்படுத்துகின்றார்.*

[முக்கால் + புள்ளி.]

முக்கால்வட்டம் *mu-k-kāl-vaṭṭam,* பெ.(n.) கோயில் (T.A.S.3, 193); temple, shrine.

[முக்கால் + வட்டம்.]

முக்கால்வளையம்வேர் *mukkāl-vaḷaiyam-vēr,* பெ.(n.) மூக்காய்வேளை வேர்; root of *mūkkāy-vēḷai.*

முக்காலம்[1] *mu-k-kālam,* பெ.(n.) 1. இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலங்கள்; the three divisions of time, viz. *iṟappu, nigaḻvu, etirvu. "அம்முக்காலமுங் குறிப்பொடுங் கொள்ளும்" (தொல்.சொல். 200).* 2. விரைவு (துரிதம்), நடுநிலை (மத்திமம்), காலத்தாழ்வு (விளம்பம்) என்னும் இசைக்குரிய மூன்று காலம் (திரிகாலம்); tempo, a measure of time, three in number.

[மூன்று + காலம்.]

முக்காலம்[2] *mu-k-kālam,* பெ.(n.) மூன்று வேளை; காலை, நண்பகல், மாலை; the three times a day morning, noon and evening. *கோயிலில் முக்காலமும் பூசை நடைபெறுகிறது.*

[மூன்று + காலம்.]

முக்காலமறிந்தவன் *mukkālam-aṟindavaṉ,* பெ.(n.) மூன்று காலங்களையு மறிந்த அறிஞர் (ஞானி); sage, as knowing the past, the present and the future.

[முக்காலம் + அறிந்தவன்.]

முக்காலி *mukkāli,* பெ.(n.) 1. மூன்று கால் கொண்ட இருக்கை; three footed stool, triped. *"பெண்ணையும் கொடுத்து முக்காலியும் சுமந்தாப்பலே" (கோவை.).* 2. தீ (தைலவ.பாயி.61); fire.

[மூன்று + (கால் →) காலி..]



முக்காலும் *mukkālum,* கு.வி.எ.(adv.) எப்போதும் (இ.வ.); for ever. *முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்கு ஆகுமா? (பழ.அக.).*

[முக்கால் → முக்காலும்.]

முக்காலேமூன்றுவீசம்[1] *mukkālē-mūṉṟu-vīšam,* கு.வி.எ.(adv.) பெரும்பாலும்; almost certainly. *முக்காலே மூன்று வீசம் வந்துவிடுவான் (உ.வ.).*

[முக்கால் + மூன்று + வீசம்.]

முக்காலேமூன்றுவீசம்[2] *mukkālē-mūṉṟu-vīšam,* பெ.(n.) கீழ்வாய் இலக்கத்தில் ஒன்று (15/16); a fraction number 15/16.

[முக்கால் + மூன்று + வீசம். வீசம் = 1/16 பதினாறில் ஒன்று. முக்கால் என்பது 12/16, மூன்று வீசம் 3/16; 12/16 + 3/16 –15/16 முக்காலும் மூன்று வீசமும்.]

முக்காலேயரைக்கால்முழம் *mukkālē-y-araikkāl-muḻam,* பெ.(n.) நீட்டலளவை (முழத்தால் அளக்கும்) முறையில் ஒருவகை; linear measurement of measuring a statue by elbow. *முதல் இராசராசனுடைய மனைவியருள் சோழமாதேவியார் திருஇராச ராசேசுவரத்தில் செய்து அமைத்த மாழையாலான ஆடவல்லான் திருமேனியை இம்முறையால் அளந்தனர்.*

[முக்கால் + அரைக்கால் + முழம்.]

முக்காவல்நாட்டுஆமூர்மல்லன் *mu-k-kāval-nāṭṭu-āmūr-mallaṉ,* பெ.(n.) தித்தனுடைய மகன்; Tittan's son. *இவன் சோழன் தித்தனுடைய மகன். மற்போரிற் சிறந்தவன். சோழன் போர்வைக் கோப்பெரு நற்கிள்ளியாற் போரிட்டு கொல்லப்பட்டவன். சாத்தந்தையரால் பாடல் பெற்றவன் (புற.நா.80).*

[முக்காவல் + நாட்டு + ஆமூர் + மல்லன்.]

முக்காவனாடு *mukkāvaṉāḍu,* பெ.(n.) தமிழகத்துப் பழைய சிறு நாடுகளுள் ஒன்று; a small district in ancient *Tamiḻagam.* *"முக்காவனாட்டு ஆமூர்மல்லனை" (புறநா. 80, தலைப்பு).*

[மூன்று + காவல் + நாடு.]

முக்காவெள்ளாமை *mukkā-veḷḷāmai,* பெ.(n.) சரியான விளைச்சலின் அளவில் முக்கால் பாகம் (கோவை); as three quarters of yielding.

[முக்கால் + வெள்ளாமை.]

முக்காவேளை *mukkā-vēḷai,* பெ.(n.) முக்காய்வேளை (பதார்த்த.472) பார்க்க; see *mukkāy-vēḷai.*

[முக்காய்வேளை → முக்காவேளை.]

முக்காழ் *mu-k-kāḻ,* பெ.(n.) மூன்று கோவையாலான முத்துவடம்; pearl necklace of three strands. *"மயிர்ப்புறஞ் சுற்றிய கயிற்கடை முக்காழ்" (மணிமே.3:135).*

[மூன்று + காழ்.]

முக்காழி *mu-k-kāḻi,* பெ.(n.) மூன்று கொட்டையுள்ள பனம்பழம் முதலியன; fruit containing three stones or seeds, as of the palmyra palm. *முக்காழி யிருப்பை.*

[மூன்று + (காழ் →) காழி.]

முக்காழிபனங்காய் *mukkāḻi-paṉaṅgāy,* பெ.(n.) முக்காழி பார்க்க; see *mu-k-kāḻi.*

[முக்காழி + பனங்காய்.]

முக்கானோக்கு *mukkāṉōkku,* பெ.(n.) முக்கால்நோக்கு (வின்.) பார்க்க; see *mukkāl-ṉōkku.*

[முக்கால் + நோக்கு.]

முக்கிமுக்கி *muki-muki,* வி.எ.(adv.) பெரு முயற்சி செய்து; to make great efforts. *துணியை நாலு முக்கிமுக்கிக் காயப்போடு. முக்கி முக்கி உண்டான்.*

முக்கிமுனகி *mukki-muṉagi,* வி.அ.(adv.) ஒன்றைச் செய்வதற்கு மிகவும் இடர்பட்டு; with much difficulty, groaning. *முக்கிமுனகி எப்படியோ வீட்டுக்கான முன்பணத்தைக் கொடுத்துவிட்டேன். குழந்தை முக்கி முனகி சோறு தின்றது.*

முக்கிமுனகு–தல் *mukki-muṉagu-,* 5 செ.கு.வி. (v.i.) முக்கிமுனங்கு–தல் பார்க்க; see *mukki-muṉaṅgu-.*

[முக்கு + முனகு–தல் →முக்கிமுனகு–தல்.]

முக்கிமுனங்கு–தல் *mukki-muṉaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. மனமின்மை காட்டி முணுமுணுத்தல்; to grumble. 2. மிகத் துன்புறுதல் (உ.வ.); to suffer much. 3. மிகையாக உண்ணுதல்; to eat large quantity of food. *"திரையணற் கொடுங்கவுள் நிறைய முக்கி" (நற்.22:5). "பாசவன் முக்கித் தண்புனற் பாயும்" (புறநா.63:13).*

[முக்கு + முணங்கு–தல் →முக்கிமுனங்கு–தல்.]

முக்கிளைக்கள்ளி *mukkiḷai-k-kaḷḷi,* பெ.(n.) உறைப்பான பால் போன்ற சாறுடைய செடிவகை; a kind of spurge.

[முக்கிளை + கள்ளி.]

முக்கீச்சாரம் *mukkī-c-cāram,* பெ.(n.) கோயில்; temple. *சோழநாட்டு உறையூரில் உள்ள கோயில். மூவேந்தரும் சேர்ந்து வழிபட்டக் கோயில். "சீரினால் அங்கொளிர் தென்வன் செம்பியன் வில்லவன் சேரும் முக்கீச்சரத் தடிகள் செய்கின்றதோர் செம்மையே" (சம்ப.தேவாரம்).*

முக்கீரம் *mukkīram,* பெ.(n.) ஒரு வகைச் செடி; a kind of plant.

முக்கு[1]–தல் *mukku-,* 5 செ.கு.வி.(v.i.) 1. முயற்சியால் இறுகப் பிடித்து மூச்சினை ஒலிபட வெளிவிடுகை; to strain, as a woman in travail. 2.பெருமுயற்சி செய்தல் (உ.வ.); to make great efforts. *எவ்வளவு முக்கியும் மூட்டையைத் தூக்க முடியவில்லை.* 3. ஒரு செயலைச் செய்வதற்காக மூச்சை உள்ளிழுத்து நிறுத்தி அழுத்தம் தருதல்; strain in order to do something, groan. *எடை அதிகம் உள்ள பாறையை முக்கிமுக்கித்தான் தள்ள வேண்டி இருந்தது.*

தெ. முக்கு; க. முக்கிரி; ம. முக்குக.

[முற்கு → முக்கு →முக்கு–தல். முற்கு – எழுத்திலா ஒலி.]

முக்கு[2]–தல் *mukku-,*5 செ.குன்றாவி. (v.t.) நிரம்ப வாயிற் பெய்து உண்ணுதல்; to eat in large mouthfuls. *"பாசவன் முக்கி" (புறநா.63). உணவை ஒரு முக்கு முக்கினான்.*

[முழுகு →முழுங்கு; முழுங்கு–தல் = தொண்டைக்குள் வயிற்றுக்குள் முழுகச் செய்தல். முழுகு →முக்கு–தல்.]

முக்கு[3]–தல் *mukku-,*5 செ.குன்றாவி.(v.t.) மூழ்குவித்தல்; to press anything under water, to immerse. *"தீர்த்தம்...... அதிலெனை முக்கியெடுத்து" (தணிகைப்பு. நந்தி.60). குளத்தில் நன்கு முக்கிக் குளித்தான்.*

[முழுக்கு–தல் →முக்கு–தல். முழுக்கு–தல் = அமிழ்த்துதல்.]

முக்கு[4]–தல் *mukku-,* 5 செ.கு.வி.(v.i.) மூழ்குதல்; to immerse one's self. *"முத்துப் படுந் துறையில் முக்குவார் முகத்தைக் கொடுத்துப் பழங் கொள்ளுவார்கள்" (திவ்.திருமாலை.1, வியாக்.பக்.14). நீரில் மூழ்கி எழுந்தான்.*

[முழுங்கு–தல்→ முங்கு–தல்→ முக்கு–தல் = தண்ணீர் முதலிய நீர்மத்தில் ஒருபொருளை முழுவதுமாக நனையச் செய்தல்.]

முக்கு[5] *mukku,* பெ.(n.) 1. முக்கல், 1, 2 (உ.வ.) பார்க்க; see *mukkal,1, 2.* 2. மூச்சுத் திணறுகை (வின்.); suffocation. 3. நோய் வகை; a disease. *"முக்கு நோயற வோட்டு மருந்தென" (சிவதரு.பாவ.69).*

[முற்கு → முக்கு.]

முக்கு[6] *mukku,* பெ.(n.) சாலை, தெரு, சந்து முதலியவற்றின் முனை; corner, of a street, etc. *முக்கு அங்காடி வரை போய் வருகிறேன். தெரு முக்கில் என்ன கூட்டம்?*

ம. முக்கு

[முடுக்கு → முக்கு. முடுக்கு = மூலை, கோணல் தெரு.]

முக்குக்கடுக்கன் *mukku-k-kaḍukkaṉ,* பெ.(n.) கடுக்கன் வகை (இ.வ.); a kind of ear- ring.

[முக்கு + கடுக்கன்.]

முக்குக்கணம் *mukku-k-kaṇam,* பெ.(n.) குழந்தைகளுக்கு குதம் (ஆசனம்) வெளிப்பட்டு முக்கலுடன் அரத்தமும் சீழும் ஒழுகி உடல் வாட்டமடையும் ஒருவகை நோய்; a disease in children causing hard breathing, *Tabes mesentric.*

[முக்கு + கணம்.]

முக்குடுமி *mu-k-kuḍumi,* பெ.(n.) **1.** குடுமி வகை (வின்.); triple lock of hair. **2.** முக்கவராய்தம் (சூலம்) (பெரியபு. உருத்திர. 10); trident.

[மூன்று + குடுமி → முக்குடுமி.]

முக்குடுமியெறிவேல் *mukkuḍumi-y-eṟivēl,* பெ.(n.) முக்குடுமி, 2 (தக்கயாகப். 461) பார்க்க; see *mukkuḍumi, 2.*

[முக்குடுமி + எறிவேல்.]

முக்குடை *mu-k-kuḍai,* பெ.(n.) அருகனுக்குரிய குடை; an umbrella peculiar to Arhat. *"குளிர் முக்குடையி னிழலோய் நீ" (சீவக.1244).*

[மூன்று + குடை.]

முக்குடைக்கல் *mukkuḍai-k-kal,* பெ.(n.) சமணச் சமைய அறச்செயல்களுக்காக விடப்பட்ட நிலத்தின் எல்லையைக் குறிக்கும் முக்குடை வடிவில் செதுக்கப் பெற்ற கல் (கல்வெட்டு); boundary stone for lands granted to Jaina institution, as marked by *mukkuḍai.*

[முக்குடை + கல்.]

முக்குடைச்செல்வன் *mukkuḍai-c-celvaṉ,* பெ.(n.) முக்குடை உடையவனான அருகக் கடவுள் (சூடா.) ; Arhat, as having *mukkuḍai.*

[முக்குடை + செல்வன்.]

முக்குடையான் *mukkuḍaiyāṉ,* பெ.(n.) முக்குடைச்செல்வன் பார்க்க; see *mukkuḍai-c-celvaṉ. "முக்குடையான் றாளினை" (சீவக.3142).*

[முக்குடை → முக்குடையான்.]

முக்குடையோன் *mu-k-kuḍaiyōṉ,* பெ.(n.) முக்குடைச்செல்வன் (திவா.) பார்க்க; see *mukkuḍai-c-celvaṉ.*

[முக்குடை → முக்குடையோன்.]

முக்குணம்[1] *mu-k-kuṇam,* பெ.(n.) மூன்று குணம்; the three fundamental qualities. *"முக்குணவசத்தான் முறைமறந்தறைவரே" (இலக்.கொ.6).*

[மூன்று + குணம் – முக்குணம். மூன்று குணமாவது தேவிகம் (சாத்துவம்), மாந்திகம் (இராசதம்), பேயிகம் (தாமதம்) (பாவாணர் தமிழர் மதம்).]

முக்குணம்[2] *mu-k-kuṇam,* பெ.(n.) ஊதை (வாதம்), பித்தம், கோழை (சிலேட்டுமம்) என்ற

மூன்று குணங்கள்; the three humours in the human system namely *vatham*(wind humour) *pitham* (bile humour) *kapham* (phlegm humour).

[மூன்று + குணம்.]

முக்குணவேளை *mu-k-kuṇa-vēḷai,* பெ.(n.) கிழமைகளை ஒன்றரை மணிக் கூறுகளாகப் பிரிக்கும் காலப்பகுதி (பஞ்.); the divisions of a day into periods of one and a half hours, named successively as *tāmašam*, and *šātvigam, rājasam.*

[முக்குணம் + வேளை.]

முக்குணுக்கிடு–தல் *mu-k-kuṇu-k-kiḍu-,*18 செ.குன்றாவி. (v.t.) மூன்று வளைவு உண்டாகும்படி செய்தல் (திவ்.பெரியதி. **8. 2:5** வியா.); to cause three bendings, as in a pose of the body.

[மூன்று + குணுக்கு + இடு–தல்.]

முக்குணுக்கு *mu-k-kuṇukku-,* பெ.(n.) மூன்று வளைவு; three bendings.

[மூன்று + குணுக்கு. குணுக்கு = வளைவு.]

முக்குந்துருக்கம் *mu-k-kunturukkam,* பெ.(n.) மூன்று வகை நறுமணப் புகை (குங்கிலியம்); the three kinds of incenses.

முக்குமாந்தம் *mukku-māndam,* பெ.(n.) குழந்தைகளுக்கு உடல் மெலிந்து முக்கி முக்கி வெளிப்படும் அரத்தக் கழிச்சலுடன் காய்ச்சலையும் உண்டாக்கும் ஒருவகைச் செரியாமை நோய் (மாந்தம்); a disease in children accompanied by fever hard breathing and dysentery and purging.

*[முக்கு + **Skt.** மாந்தம் = செரியாமை.]*

முக்குமீன் *mukku-mīṉ,*பெ.(n.) சுறா மீன் வகை; a kind of shark fish.



முக்குமூலம் *mukku-mūlam,* பெ.(n.) மூலச்சூடு நோய்; heat near the rectal region.

[முக்கு + மூலம். மூலம் = ஒருவகை நோய்.]

முக்குராணிபோடு–தல் *mukkurāṇi-pōḍu-,*20 செ.கு.வி.(v.i.) நீர் குடிக்கும் போது மாடு முதலியவை மூக்கை நீருட் செலுத்தி யுறிஞ்சுதல்; to immerse the nose deeply in water when drinking, as bulls. *மாடு முக்குராணி போட்டுக் குடிக்கிறது (உ.வ.).*

[மூக்கு + உறிஞ்சு + போடு–தல்→முக்குராணி போடு–தல்.]

முக்குருந்து *mukkurundu,* பெ.(n.) காட்டெலுமிச்சை; wild lime.

முக்குலம் *mu-k-kulam,* பெ.(n.) பழங் காலத்திலிருந்த மூன்று அரச குலங்கள்; the three ancient lines of kings. *"முக்குலத்தினு மதிக்குல முதன்மை பெற்றது வென்று" (பாரத.குருகுல.28).*

[மூன்று + குலம். மூன்றுகுலம் → முக்குலம்.]

முக்குலைச்சு *mu-k-kulaiccu,* பெ.(n.) 'தெ' என்ற குறியுள்ளதும் நான்கில் மூன்று பங்குடையதுமான பின்னவெண் (யாழ்ப்.); the fraction 3/4, as three - quarters.

முக்குவர் *mukkuvar,* பெ.(n.) குமரி, முகவையில் வாழும் மீனவக் குடியினருள் ஒரு வகுப்பினர் (மீனவ.); sect of people in fisherman community.

க. முக்குவர்.

[முக்கு →முக்குவர். முக்கு–தல் = மூழ்கு–தல்.]

'முக்குவர்' இலங்கையிலும் பழஞ்சேர நாடாகிய கேரளத்திலும் உள்ளனர். சேரநாட்டு முக்குவர் ஈழவருடனும் முகவருடனும் இலங்கையினின்று வந்ததாகச் சொல்லப்படுவர்' என்று குண்டர்ட்டு தம் மலையாள – ஆங்கில அகரமுதலியிற் கூறுவர் (தேவநேயம்.12, பக்.96).

முக்குவன் *mukkuvaṉ,* பெ.(n.) நுளையன்; fisherman.

[முக்கு →முக்குவன்.]

முக்குழி *mu-k-kuḻi,* பெ.(n.) வேள்வித் தீயை வளர்க்குங் குழிகள்; sacrificial pits for maintaining the three *Vēdic* fires. *"சமிதை முக்குழிக் கூட்டத்துட்பட்ட வோக்கி" (பெருங்.இலாவாண.3:15).*

[மூன்கு + குழி.]

முக்குழியாட்டம் *mu-k-kuḻi-y-āṭṭam,* பெ.(n.) சிற்றூர் சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு வகை; a village game which children plays.

முக்குழிப்பாய்ச்சு–தல் *mu-k-kuḻi-p-pāyccu-,* 5 செ.குன்றாவி.(v.t.)1. முக்கோண வடிவாக நடவு அமையும்படி நாற்று நடுதல் (இ.வ.); to transplant seedlings in triangular shapes. 2. தந்திரத்தால் கேட்டிற்குள்ளாதல் (இ.வ.); to entrap and ruin. *அவனை முக்குழிப் பாய்ச்சிவிட்டான்.*

[முக்குழி + பாய்ச்சு–தல். பாய்ச்சுதல் = நீர்ப் பாய்ச்சுதல்.]

முக்குளம்[1] *mu-k-kuḷam,* பெ.(n.) கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய மூன்று ஆறுகளும் கூடுமிடம் (வின்.); the confluence of the rivers, the *Jumṉā,* the Šaraswathy and the Ganges. *"முக்குளம் செற்றார் பாதம் சேருமுக்குளமும் பாடி உளமகிழ்ந் தேத்தி வாழ்ந்தார்" (சேக்கிழார்).*

[மூன்று + குளம் – முக்குளம். குளம் = நீர் நிலையைக் குறித்தது ஆற்றையும் குறித்தது.]

முக்குளம்[2] *mukkuḷam,* பெ.(n.) இருபதாவது விண்மீனான முற்குளம் (பூராடம்) (வின்.); the 20th naksatra.

முக்குளி[1]–த்தல் *mukkuḷi-,* 4 செ.கு.வி. (v.i.) முழுகுதல்; to dive. *அவன் முக்குளிக்க நீரில் பாய்ந்தான். "இரைகவர் ஞெண்டு முக்குளித்தூறு மளறு கிடங்கில்" (திருச்செந். பிள்ளை. செங்கீரை.10).*

தெ. புக்கிளிஞ

[முங்கிக்குளி–த்தல்→முக்குளி–த்தல் = நீரில் அமிழ்ந்து உள்ளே செல்லுதல்.]

முக்குளி[2] *mukkuḷi,* பெ.(n.) கோழி முளையான் பூடு (பதார்த்த.607); large flowered purslane.

முக்குளிக்காரை *mukkuḷi-k-kārai,* பெ.(n.) சதக்காரைச் செடி; a kind of webera - *Canthium genus.*

முக்குளிக்கீரை *mukkuḷi-k-kīrai,* பெ.(n.) உப்புக்கீரை; a kind of vegetable greens - *Portulaca pilosa.*

முக்குளிப்பான் *mukkuḷippāṉ,* பெ.(n.) 1. உள்ளான் என்னும் சிறிய நீர்ப்பறவை வகை (வின்.); dabchick, a small grebe. 2. நோய் வகை (சங்.அக.); a kind of disease.

[முங்குளிப்பான் → முக்குளிப்பான்.]



முக்குற்றக்கலப்பு *mukkuṟṟa-k-kalappu,* பெ.(n.) ஊதை (வாதம்) பித்தம், கோழை (சிலேட்டுமம்) முதலியவற்றின் கலப்பு; the mixture of the three humours in the body (சா.அக.).

[முக்குற்றம் + கலப்பு.]

முக்குற்றங்கடிந்தோன் *mukkuṟṟaṅ-kaḍindōṉ,* பெ.(n.) முக்குற்றத்தையும் ஒழித்த புத்தன் (திவா.); the Buddha, as having, eradicated *mukkuṟṟam.*

[முக்குற்றம் + கடிந்தோன். காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூவகைக் குற்றங்களிலிருந்து விடுபட்டவன்.]

முக்குற்றம் *mu-k-kuṟṟam,* பெ.(n.) காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூவகை உயிர்க் குற்றங்கள் (பிங்.); the three evils pertaining to the soul viz. *kāmam, veguḷi, mayakkam.* *"முக்குற்ற நீக்கி" (நாலடி.190).*

[மூன்று + குற்றம்.]

ஆதனின் (ஆன்மாவின்) அல்லது மாந்தனின் குற்றங்களை யெல்லாம் மூன்றாக அடக்கி, அவற்றை ஆசை, சினம், அறியாமை என முறைப்படுத்திக் கூறினர் நம் முன்னோர். அவற்றையே,

"காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமங் கெடக்கெடு நோய்" (குறள், 360)

என்றார் திருவள்ளுவர். காமம், ஆசை : வெகுளி, சினம்; மயக்கம், அறியாமை. வெகுளி, சினம் என்பன ஒருபொருட் சொல்லாயினும், வேகும் நெருப்பைப் போல வெம்மை மிக்க சினமே வெகுளி என அறிக.

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது" (குறள், 29)

என்னும் குறளை நோக்குக.

பொதுவாக, அறியாமையே துன்பத்திற் கெல்லாம் மூலமாகச் சொல்லப்படுகின்றது. ஒரு பொருளைத் தவறாகப் பயன்படுத்துவதாலும், ஒரு கொடிய உயிரியிடம் அல்லது பொறியிடம் அல்லது இயற்கையிடம் அகப்பட்டுக் கொள்வதாலும், ஒரு தீயபொருளை நல்லதென்று நுகர்வதாலும், துன்புறுவது மெய்யே. ஆயின், அவற்றை அண்டாமலும் நுகராமலும் இருந்த விடத்திற் பாதுகாப்பாக விருப்பின், பெரும்பாலும் துன்பத்திற்குத் தப்பிக்கொள்ளலாம். ஒரு பொருளைத்தேடிச் சென்று அது கிடையாக்கால் துன்புறுவதற்கு, அது பற்றிய அறிவும் ஓரளவு கரணியமாம். ஆகவே, உண்மையில் துன்பத்திற்கு மூலக்கரணியமா யிருப்பது ஆசையேயன்றி வேறன்று. இன்ப துன்பங்களை விளைவிக்கும் நல்வினை தீவினைகளைச் செய்விப்பதும், ஒருவனுடைய ஆசையே யன்றி அறியாமையன்று. அதனாலேயே,

"அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து" (குறள், 361)

"அவாவிலார்க் கில்லாகுந் துன்ப மஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்" (குறள், 368)

"இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துள் துன்பங் கெடின்" (குறள், 369).

"ஆரா வியற்கை யவர்நீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்" (குறள், 370) என்றார் திருவள்ளுவர். அவாவறுத்தல் என்னும் அதிகாரத்தைத் துறவறவியலின் இறுதியில் வைத்திருப்பதும் கவனிக்கத்தக்கதாம்.

காமம் அல்லது ஆசை துன்பத்திற்கு மூலக் கரணியமா யிருப்பத னாலேயே அது முன்வைக்கப்பட்டது. விரும்பியதொன்று கிடையாமையால் அல்லது வெறுப்பான தொன்றை இன்னொருவன் செய்ததனால், சினம் அல்லது வெகுளி பிறப்பது இயல்பே. ஆயின், காமத்திற்கும் வெகுளிக்கும் இடை நிலம் (middle ground) இருப்பதனால், வெகுளி என்பது காமம் என்பதன் எதிர்ச்சொல்லே (contrary term) யன்றி மறுதலைச் சொல் (contradictory term) அன்று. விரும்பாத பொருள்மே லெல்லாம் ஒருவனுக்கு வெறுப்புண்டாகாது. அம் மனப்பான்மை நொதுமல் நிலை யொத்ததே. காமத்தொடு எதிர்நிலைத் தொடர்பு கொண்டிருப்பதால், வெகுளி அதன்பின் வைக்கப்பட்டது.

மயக்கம் என்றது அறியாமையே. அறிவு முற்றறிவும் சிற்றறிவும் என இருவகைப்பட்டிருப்பது போன்றே. அறியாமையும் முற்றறியாமையும் சிற்றறியாமையும் என இருதிறப்படும். ஒன்றைப்பற்றி ஒன்றும் தெரியாமை முற்றறியாமை. ஒன்றை இன்னொன்றாகப் பிறழ வுணர்தல் சிற்றறியாமை. ஒன்றை அதுவோ இதுவோ என மயங்கல்; அறிவிற்கும் அறியாமைக்கும் இடைப்பட்ட ஐயநிலை. சிற்றறியாமை திரிபு என்றும், முற்றறிவு தெளிவு என்றும், சொல்லப்பெறும். காம வெகுளி மயக்கம் என்னும் மூன்றையும் வடவர் ஐந்தாக விரிப்பர்.

"குற்றங்க ளைந்தாவன: அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பென்பன: இவற்றை வடநூலார் பஞ்சக் கிலேசமென்பர் என்று 38ஆம் குறளுரையிலும்,

"அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யானென மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கிது வேண்டுமென்னும் அவாவும். அதுபற்றி அப் பொருட்கட் செல்லுமாசையும், அதுபற்றி அதன் மறுதலைக்கட் செல்லுங் கோபமுமென வடநூலார் குற்ற மைந்தென்றார். இவர் அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கண்ணும் அவாவதல் ஆசைக்கண்ஞு மடங்குதலான், மூன்றென்றார்" என்று 360ஆம் குறளுரையிலும், பரிமேலழகர் கூறியிருத்தல் காண்க.

அகங்காரம் என்னும் சொல், வடமொழியில் வினை முதனிலையின்றி அஹம்–கார என நின்று, நான் என்னும் அகப்பற்றை யுணர்த்துமென்றும், தமிழில் அகங்கரி என்னும் முதனிலையடிப் பிறந்து அகங்கரிப்பு அல்லது செருக்கு என்று பொருள்படும் தொழிற்பெயர் அல்லது தொழிற் பண்புப் பெயராகுமென்றும். வேறுபாடறிக. அகம், மனம், கரித்தல், கடுத்தல் அல்லது மிகுதல். அகம் + கரி = அகங்கரி – அகங்கரிப்பு. அகங்காரம் வடமொழியில், அஹம்–கார என்பது எனது என்னம் புறப்பற்றை யுணர்த்தும் மமகார என்பதன் மறுதலைச் சொல்லாம். தமிழில் அத்தகைய நிலை யின்மையை நோக்குக. இதனால் இருசொல்லும் வெவ்வேறெனவும், வடிவொப்புமையினாலும் ஆராய்ச்சியின்மையாலும் தமிழரால் அறியாதும், வடவரால் அறிந்தும், ஒன்றோடொன்று மயக்கப் படுகின்றன வென்றும் அறிக.

இனி, ஆரியச் சார்பான சிவனியக் கொண்முடிபில் (சைவ சித்தாந்தத்தில்), ஆணவம், மாயை, காமியம் எனக் கூறியிருக்கும் மும்மலப் பெயரும், காம வெகுளி மயக்கம் என்பவற்றின் திரிப்பே யென்பது, என் 'தமிழர் மதம்' என்னும் நூலில் விளக்கப்பெறும். ஆணவம் என்பது ஆண் என்னும் அடிப்பிறந்து அறியாமையைக் குறிப்பதன்று. மயக்கம் என்பதே அறியாமையை (உயிரொடு நிலையான தொடர்பற்ற உடம்பை நான் என உணரும் திரிபுணர்ச்சியை) உணர்த்தும். ஐம்பூதங்கட்கும் மூலமான மாயை வேறு; பிறழ்வுணர்ச்சியைக் குறிக்கும் மயக்கம் வேறு. மாய் + ஐ = மாயை (மாய்ந்த அல்லது மறைந்த நிலை). ஒ.நோ. சாய் + ஐ = சாயை = சாயா (வ), மாயை – மாயா (வ.) காமம் – காமியம் = விருப்பமானவை. கார்மிய என்பதன் திரிபாகக் கொண்டு இருவகை வினையென்று கூறுவது பொருந்தாது.

திருவள்ளுவர் இல்லறத்தாலும் வீடுபேறுண் டெனக் கூறியிருத்தலாலும் சிவனடியார் பலர் இல்லறத்தில் நின்றே வீடுபெற்றதாகப் பெரிய புராணங் கூறுதலாலும் நுகர்ச்சியினாலும் நல்வினையாலும் பழந்தீவினை போக்கப்படு மாதலாலும் தீவினை கலவாது இறைவழிப்பாட்டோடு கூடிய நல்வினைத் தொகுதியும் பிறவிக்குக் கரணியமாம் என்பது உத்திக்குப் பொருந்தாமையாலும், இவ் வுலகிற் பிறந்து வளர்ந்து கற்றுத் துறந்து ஒரு வினையும் செய்யாமல் வீடுபெறாமென்பது இயலாத தாதலும், "நல்வினை தீவினைகள் மேற்குறித்தவாறு தூலமாச் செய்யப்படும்பொழுது 'ஆகாமியம் என்றும் பின் சூக்குமமாய நிலைபெற்று நிற்கும்பொழுது 'சஞ்சிதம்' என்றும், பின் இன்ப துன்பங்களாய் வந்து பயன்படும்பொழுது 'பிரார்த்தம்' என்றும் பெயர் பெறும் 'பிரார்த்தமே' ஊழ் எனப்படுகின்றது. 'நல்வினை தீவினை' என இருவகைப்பட்டு விரியால் எண்ணிறந்தனவாய் நிற்றலின் சடமாயும் பலவாயும் உள்ள இவை 'காரியம், என்பதும். அதனால் இவை *"தோற்றமும் அழிவும் உடையன"* என்பதும், அதனால் மூல கன்மமே காரண கன்மமாய்த் 'தோற்றக் கேடின்றி நிற்கும்' என்பதும், பெறப்படும்" என்று அறப்புரவளாகம் (தருமையாதீனம்) வெளியிட்டுள்ள 'சித்தாந்தத் தெளிவியல்' என்னும் கொண்முடிபுத் தெளிவியல் கூறுவது (பக்.160) அறிவாராய்ச்சி மிக்க இக் காலத்திற் கேற்காது.

ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்னும் மூன்றையும் முறையே எதிர்வு. இறப்பு, நிகழ்வு எனத் தூய தமிழிற் கூறலாம் (பாவாணர் தமிழியற் கட்டுரைகள், பக்.145–147).

முக்குறட்டை *mukkuraṭṭai,* பெ.(n.) பூனை முட்குறட்டைச் செடி; a variety of *kuraṭṭai,* small korattai - *Trichanthesgenus.*

முக்குறுணி *mu-k-kuṟuṇi,* பெ.(n.) மூன்று குறுணி தவசவளவு, மூன்று மரக்கால்; a grain measure.

[மூன்று + குறுணி → முக்குறுணி. குறுணி = எட்டுப் படி கொண்ட தவசவளவு, ஒரு மரக்கால்.]

முக்குறுணிப்பிள்ளையார் *mu-k-kuṟuṇi-p-piḷḷaiyār,* பெ.(n.) முக்குறுணியரிசிப் பிள்ளையார் பார்க்க; see *mu-k-kuṟuṇi-y-ariši-p-piḷḷaiyār.*

[மூன்று + குறுணி + பிள்ளையார்.]

முக்குறுணியரிசிப்பிள்ளையார் *mu-k-kuṟuṇi-y-ariši-p-piḷḷaiyār,* பெ.(n.) மூன்று குறுணியரிசி சமைத்து வழிபடப்பெறும் பிள்ளையார்; an image of *Gaṇēša* to whom an offering prepared of three *kuṟuṇi* of rice is made.

[மூன்று + குறுணி + அரிசி + பிள்ளையார்.]

முக்குறும்பு *mu-k-kuṟumbu,* பெ.(n.) முக்குற்றம் பார்க்க; see *mu-k-kūṟṟam.* *"காம முதலா முக்குறும் பற" (கம்பரா. விராதன்.2).*

[மூன்று + குறும்பு. குற்றம் →குறும்பு.]

முக்கூட்டரத்தம் *mukkūṭṭarattam,* பெ.(n.) வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு மூன்றையும் மெல்லுதலால் உண்டாகுஞ் செந்நிறம்; red colour produced by chewing betel, arecanut and lime. *"முக்கூட்டரத்த வொண்பசை விலங்கி" (பெருங்.நரவாண.1,205).*

[முக்கூட்டு + அரத்தம் – முக்கூட்டரத்தம்.]

முக்கூட்டு *mu-k-kūṭṭu,* பெ.(n.) 1. மூன்று சரக்குக்களாலாகிய மருந்து; a medicine compounded of three drugs. *"கைபுனைந் தியற்றிய முக்கூட்டமிர்தும்" (பெருங். இலாவாண.4:91).* 2. மூன்று கட்டிகளைக் கூட்டியமைத்த அடுப்பு (வின்.); oven, as formed of three stones or lumps of earth placed triangularly. 3. முக்கூட்டெண்ணெய் (வின்.) பார்க்க; see *mu-k-kūṭṭeṇṇey.* 4. தாழி விண்மீன் (பரணி); the 2nd naksatra. 5. மூன்று வழிகள் சேருமிடம்; junction, where three paths meet. *முக்கூட்டில் நிற்காதே.*

[மூன்று + கூட்டு.]

முக்கூட்டுத்தைலம் *mu-k-kūṭṭu-t-tailam,* பெ.(n.) முக்கூட்டெண்ணெய் பார்க்க; see *mu-k-kūṭṭeṇṇey.*

*[முக்கூட்டு + தைலம். **Skt.** தைலம் = எண்ணெய்..]*

முக்கூட்டுநெய் *mu-k-kūṭṭu-ney,* பெ.(n.) முக்கூட்டெண்ணெய் பார்க்க; see *muk-kūṭṭeṇṇey.*

[முக்கூட்டு + நெய்.]

முக்கூட்டெண்ணெய் *mukkūṭṭeṇṇey,* பெ.(n.) நல்லெண்ணெய், சிற்றாமணக் கெண்ணெய், ஆவின் நெய் ஆகிய இம்மூன்றோடு மற்ற மருந்து சரக்குகளையும் சேர்த்துப் போகர் முறைப்படி செய்தவோர் தலைமுழுக்குக் கெண்ணெய்; medicated bathing oil prepared with gingelly oil, castor oil and ghee with other drugs according to *Bōgar.*

[முக்கூட்டு + எண்ணெய். முக்கூட்டு = மூன்றும் கலந்தது.]

முக்கூடல் *mu-k-kūḍal,* பெ.(n.) 1. மூன்று ஆறுகள் கூடும் நன்னீர்த் துறை; a place where three rivers meet, generally considered sacred. *"திருமுக்கூட லென்றி சைப்ப" (கருவூர்ப்பு.ஆமிரா.45).* 2. நெல்லை மாவட்டத்தில் சித்திரா ஆறும் உப்போடையும் தாமிரபருணியுடன் கூடும் இடத்துள்ளதோர் மாலியத் தலம்; a shrine in Tinnevelly District at the confluence of the *Tāmiraparuṇi,* the *Cittirānadi* and the *Uppōḍai,* sacred to *Visṇu.* *"வடி வார்வேல் முக்கூடல் அம்மா முருகமருங் கொன்றையந்தார் முக்கூட மாட்டா முலை" (சிவபெருமான் திருவந்தாதி. 50).*

[மூன்று + கூடு–தல் → முக்கூடல்.]

முக்கூடற்பள்ளு *mukkūḍaṟ-paḷḷu,* பெ.(n.) முக்கூடல் அழகர் பேரில் 17ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பள்ளுப் பனுவல்; a *paḷḷu* poem on *Visṇu*at *Mukkūḍal,* 17th century.

[முக்கூடல் + பள்ளு → முக்கூடற்பள்ளு.]

பள்ளுப்பாட்டு நூல்களில் தலைசிறந்தது முக்கூடற்பள்ளு. இது 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. தாமிரபருணி ஆற்றோடு சிற்றாறும், கயத்தாறும் கலந்து கூடும் இடத்தை முக்கூடல் என்பர். முக்கூடலில் கோயில் கொண்ட அழகர் மீது பாடப்பட்டது இந்நூல். முக்கூடலில், ஒரு பண்ணையாரிடத்தில் பயிர்த்தொழில் செய்யும் பள்ளன் ஒருவனுக்கு இரு மனைவியர். மூத்த மனைவி முக்கூடற்பள்ளி, பெருமாளை வணங்குபவள். இளையவள் மருதூர் பள்ளி, சிவனை வணங்குபவள். இவ்விரு மனைவியருக்குள் நிகழும் போட்டி, சண்டை, சச்சரவு, உரையாடல்கள் போன்றவற்றை இந்நூலில் காணலாம். அதிலே நாட்டைப் பற்றியும் ஊரைப் பற்றியும், இருவரின் மதத்தைப் பற்றியும் ஏச்சுகளும் பேச்சுகளும் நகைச் சுவையுடன் அமையக் காணலாம்.

இத்தகைய நயமிக்க முக்கூடற் பள்ளு நூலை எழுதிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை நாடகமாக்கித் தந்தவர் 'வேளான் சின்னத் தம்பி' என்னும் பெயருடைய என்னயினாப் புலவர். (திரு.மு.அருணாசலப் பிள்ளை, முக்கூடற்பள்ளு நூல் ஆராய்ச்சி) இந்நூலில் அமைந்துள்ள நயமிக்க பாடல்கள் சில,

"ஆற்று வெள்ளம் நாளைவரத் தோற்றுதே
குறி–மலை
யாளமின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே
நேற்றுமின்றும் கொம்புசுற்றிக்
காற்றடிக்குதே–கேணி
நீர்ப்படு சொறித்தவளை கூப்பிடுகுதே!
சேற்றுநண்டு சேற்றைக்குழைத்
தேற்றடைக்குதே–மழை
தேடியொரு கோடிவானம் பாடி யாடுதே
போற்றுதிரு மாலழகர்க்கேற்ற
மாம்பண்ணைச்–சேரிப்
புள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக்
கொள்வோமே"

"உள்ளத்தில் ஊசலிடும் உல்லாசப்
பார்வைவிழிக்
கள்ளத்தி னாலிரும்புங் கல்லுங் கரையாதோ
வெள்ளத்தி லேதுயில்கார் மெய்யழகர் முக்கூடற்
பள்ளத்தி யாரழகு பார்க்க முடியாதே"

இத்தகைய வளமுள்ள பாடல்கள் சிந்தும் விருத்தமும் விரவி வரப் பாடப்பட்டுள்ளன. இந்நூலில், சித்திரக் காலி, வாலான் சிறை மீட்டான், மணல் வாரி, செஞ்சம்பா, கருஞ்சூறை, பொற்பாளை, கத்தூரிவாணன், பூம்பாளை, கருங்குறுவை, புனுகுச் சம்பா போன்ற நெல்லின் வகைகளையும், குடைக்கொம்பன், செம்மறையன், குத்துக் குளம்பன், மோழை, குடைச் செவியன், குற்றாலன், கூடு கொம்பன் போன்ற மாட்டின் வகைகளையும் காணலாம்.

முக்கூறிடல் *mu-k-kūṟiḍal,*தொ.பெ. (vbl.n.) மூன்று பங்காய்ச் செய்கை; make in to three equal parts (சா.அக.).

[மூன்று + கூறிடல்.]

முக்கூறிலை *mu-k-kūṟilai,*பெ.(n.) மூன்று முனைகளை உடைய இலை; tricuspidate leaf (சா.அக.).

[மூன்று + கூறு + இலை.]

முக்கூறு *mu-k-kūṟu,*பெ.(n.) மூன்று பங்கு; three parts.

[மூன்று + கூறு.]

முக்கூறுபோடல் *mukkūṟu-pōḍal,* பெ.(n.) முக்கூறிடல் பார்க்க; see *mukkūṟiḍal.*

முக்கை *mu-k-kai,*பெ.(n.) மூன்று (உ.வ.); three, a term used in games.

[மூன்று + கை.]

முக்கைப்புனல் *mu-k-kai-p-puṉal,* பெ.(n.) மூன்று முறை குடங்கையால் நீர் முகந்து முன்னோர்க்கு (பிதிரர்க்கு)ச் செய்யும் நீர்க்கடன்; the three handfuls of water poured out as offerings to the manes. *"குருதியால் முக்கைப் புனலுருப்பன்" (கம்பரா.மாயாசனக.91).*

[மூன்று + கை + புனல். புனல் = நீர்.]

முக்கோட்டான்நடவு *mukkōṭṭāṉ-naḍavu,* பெ.(n.) வரிசையில்லாமல், ஒழுங்கின்றி நடவு செய்கை (உழவு); transplanting the seedlings without any order.

[முக்கோட்டான் + நடவு.]

முக்கோட்டை *mu-k-kōṭṭai,* பெ.(n.) வழிபட்டோர்க்குப் பாட்டியற்றும் ஆற்றலை அளிக்கும் கொற்றவை கோயில்; a shrine of *Durgā* who is said to endow Her votaries with poetic power. *"பாடுவித்த முக்கோட்டை யிருக்கிறபடி" (ஈடு, 4. 5:2).*

[மூக்கோட்டை → முக்கோட்டை.]

முக்கோடியேகாதசி *mu-k-kōḍi-y-ēkādaśi,* பெ.(n.) சிலை (மார்கழி) மாதத்து வளர்பிறையில் வரும் பதினோராம் நாள் (ஏகாதேசி); the 11th titi of the bright fortnight of *Mārkaḻi.*

*[மூன்று + கோடி + **Skt.** ஏகாதசி.]*

முக்கோண் *mu-k-kōṇ,* பெ.(n.) முக்கோணம், 1 பார்க்க; see *mu-k-kōṇam,1. "வட்டமுஞ் சதுரமு முக்கோண் வடிவமும்" (பெருங். உஞ்சைக்.42:29).*

[முக்கோணம் →முக்கோண்.]

முக்கோணம் *mu-k-kōṇam,* பெ.(n.) 1. மூன்று கோணங்களையுடைய வடிவம்; triangle. 2. நிரய வகை; a hell. *"அதன்கீழ்க் குலிச முக்கோணம்" (சிவதரு. சுவர்க்கநரக. 109).*

[மூன்று + கோணம். கோணம் = மூன்று கோணங்களையும் மூன்று பக்கங்களையும் உடைய வடிவம்.]

முக்கோணவாரி *mukkōṇa-vāri,* பெ.(n.) உட்காதினுள்ளிருக்கும் பள்ளம்; the oval cavity of the internal ear - *Vestibule* (சா.அக.).

முக்கோணி *mukkōṇi,* பெ.(n.) மலைமகள் (பார்வதி); Malaimagal (Parvadi), as residing in the mystic triangle. *"சக்தி கௌரி முக்கோணி" (பேரின்பக்கீர்த்.பக்.55).*

[முக்கோணம்→முக்கோணி.]

முக்கோதனம் *mukkōdaṉam,* பெ.(n.) தோதகத்தி; a tree (சா.அக.).

முக்கோல் *mu-k-kōl,* பெ.(n.) 1. மாலிய குரவர்கள் கையில் வைத்திருக்கும் மூன்று கவையுடைய கோல்; trident -staff carried by *Vaisṇava* ascetics. *"நூலே கரக முக்கோன் மணையே" (தொல்.பொருள். 625).* 2. இருபத்திரண்டாவது விண்மீன் (திருவோணம்); the 22nd naksatra.

[மூன்று + கோல்.]

முக்கோற்பகவர் *mukkōṟ-pagavar,* பெ.(n.) முத்தண்டமேந்திய துறவிகள்; a class of ascetics who carry *tiritaṇḍam. "முக்கோற் பகவரைக்கண்டு" (கலித்.9, துறைக்குறிப்பு).*

[முக்கோல் + பகவர். பகவன் → பகவர் = திருமாலடியவரான முனிவர்.]

முக¹–த்தல் *muga-,*2 செ.குன்றாவி.(v.t.) 1. நீரைக் குழித்தல் அல்லது துளைத்தல் போல மொள்ளுதல்; to draw, as water; to bale. *"கனையிருள் வானங் கடன்முகந்து" (கலித்.145).* 2. நீர்ப்பொருளையும் கூலப் பொருளையும் கலத்தால் அல்லது படியால் மொண்டளத்தல்; to measure, as grain or liquid. 3. நிரம்பப் பெறுதல்; to obtain in full measure. *படியால் முகந்து நெல்லை சணல் பையில் போட்டார்கள். முந்நீர் முகந்து செல்லும் முகில் (மேகங்கள்). "முகந்தனர் திருவருள்" (கம்பரா.எழுச்சி.2).* 4. தாங்கி யெடுத்தல்; to lift, take up. *"முகந்துயிர் மூழ்கப் புல்லி" (கம்பரா.கும்பகர்ண.129).* 5. விரும்புதல்; to desire, like. *"மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்" (நல்வழி.24).*

க. மொகெ.

[முழு→முகு→முக→முக–த்தல். நீர் முதலிய நீர்மங்களை (திரவங்களை) அல்லது தவசங் (தானியங்)களைக் கையால் அல்லது கொள்கலனால் நிறைத்து எடுத்தல்.]

முக²–த்தல் *muga-,*2 செ.குன்றாவி.(v.t.) மூக்கால் நுகருதல் (உ.வ.); to smell.

[முகம்→முக→முக–த்தல்.]

முகக்கட்டு *muga-k-kaṭṭu,* பெ.(n.) நாணமின்மை; shameless.

[முகம் + கட்டு.]

முகக்கட்டை *muga-k-kaṭṭai,* பெ.(n.) 1. மோவாய்க் கட்டை (வின்.); chin. 2. தாடி; beard.

[முகம் + கட்டை. கட்டை = உடல்.]

முகக்கடுப்பு *muga-k-kaḍuppu,* பெ.(n.) 1. முகத்தில் தோன்றும் கடுமைக்குறி (வின்.); severity of countenance. 2. முகச் சினப்பு; a swelling or pimple on the face.

[முகம் + கடுப்பு. கடுப்பு = வெகுளி, முகஞ்சுளிக்கை.]

முகக்கண்ணாடி *muga-k-kaṇṇāḍi,* பெ.(n.) முகம் பார்க்குங் கண்ணாடி; mirror, looking glass. *"முட்டிணை வட்டு முகக் கண்ணாடியும்" (பெருங்.உஞ்சைக்.38:170).*

[முகம் + கண்ணாடி.]

முகக்கயில் *muga-k-kayil,* பெ.(n.) உடைந்த தேங்காயின் கண்ணுள்ளதாகிய மேன்மூடி (யாழ்ப்.); upper half of a coconut shell with the kernal.

[முகம் + கயில். கயில் = தேங்காயில் பாதி.]

முகக்கருவி *muga-k-karuvi,* பெ.(n.) கடிவாளம்; bit of a bridle. *"குதிரைகள்.... முகக் கருவி பொரப்பட்ட செவ்வாயை உடைமையான்" (புறநா.4:8, உரை).*

[முகம் + கருவி.]

முகக்கவர்ச்சி *muga-k-kavarci,* பெ.(n.) 1. முகத்தின் அழகு; charm of face. நடிகைக்கு முகக்கவர்ச்சி தேவை (அவசியம்). 2. பார்வையால் மயக்கும் மாயக்கலை; bewitching by looks, a magic art.

[முகம் + கவர்ச்சி.]

முகக்களை *muga-k-kaḷai,* பெ.(n.) முகத்தின் அழகு (உ.வ.); charm or brightness of countenance attractiveness of face.

[முகம் + களை. களை = அழகு.]

முகக்காறை *muga-k-kāṟai,* பெ.(n.) அணிகலன் வகை; (M.E.R.720 of 1916 - B) a kind of ornament.

[முகம் + காறை. காறை = பெண்களும், குழந்தைகளும் அணியும் அணிகலன்.]

முகக்கிளர்ச்சி *muga-k-kiḷarcci,* பெ.(n.) முகமலர்ச்சி (வின்.) பார்க்க; see *muga-malarcci.*

[முகம் + கிளர்ச்சி. கிளர்ச்சி = மகிழ்ச்சி, செழிப்பு.]

முகக்குறி *muga-k-kuṟi,* பெ.(n.) 1. முகத்திற் றோன்றுங் குறிப்பு; facial expression, indication of the face. 2. நோயாளியின் முகத்தில் தோன்றும் நோயறிகுறிகள்; symptoms in the face of a patient. 3. ஒருவகை முகச்சாயல்; a kind of face feature (சா.அக.).

[முகம் + குறி.]

முகக்கொம்பு *muga-k-kombu,* பெ.(n.) கால் நடையின் முன்பக்கமாக வளைந்த கொம்பு (வின்.); horn bent forward.

[முகம் + கொம்பு.]

முகக்கொள்(ளு)-தல் *muga-k-koḷ-,* 7 செ.குன்றாவி. (v.t.) அளந்து கொள்ளுதல்; to take in; to comprehend. *"கண்ணுக்கு முகக்கொள்ள வொண்ணாத போக்யதை யுடையவன்" (ஈடு, 5.8:7).*

[முக + கொள்-தல். முக-த்தல் = அளத்தல்.]

முகக்கொள்ளி *muga-k-koḷḷi,* பெ.(n.) கொள்ளிவாய்ப்பேய்; will-o-the-wisp, ignis fatus. *"முடைக் கொள்ளு முதிர வூன்செம் முகக் கொள்ளி கொண்டு நேடி" (இரகு. சூசனயோ.22).*

[முகம் + கொள்ளி.]

முகக்கோட்டம் *muga-k-kōṭṭam,* பெ.(n.) வெறுப்பு, வருத்தம் முதலியவற்றின் குறியாக முகங்கோணுகை; expression of face, indicating grief, dislike, reluctance, etc.

மறுவ. முகவாட்டம்

[முகம் + கோட்டம்.]

முககட்டணம் *muga-kaṭṭaṇam,* பெ.(n.) 1. கோயில் முகப்பிலமைந்த கற்கட்டிடம், மண்டபம்; stone pavilion in the edifice of the temple. *"திருநாவுக்கரசு தேவன் திருமடத்து நாயனார், அழகிய திருவையாறுடையார் கீழைத் திருவாசல் முககட்டணத்து எழுந்தருளி இருந்து" (தெ.கல்.தொ.8, கல்.43). (கல்.அக.).* 2. கட்டடமுகப்பு (தெ.இ.கல்.தொ.3, 21); porch.

[முகம் + கட்டணம். கட்டடம்→கட்டணம்.]

முககந்தம் *muga-kandam,* பெ.(n.) முருங்கை மரம் (பரி.அக.); Indian horse radish tree.

முகங்கடு-த்தல் *mugaṅ-kaḍu-,* 4 செ.கு.வி. (v.i.) சினம், வெறுப்பு முதலியவற்றின் குறியாக முகத்திற் கடுமை தோற்றுவித்தல்; to set one's face in anger; to frown.

[முகம் + கடு-த்தல். கடுத்தல் = சினத்தல்.]

முகங்கரு-த்தல் *mugaṅ-karu-,* 4 செ.கு.வி. (v.i.) முகங்கடு-த்தல் பார்க்க; see *mugaṅ-kaḍu-.*

[முகம் + கரு-த்தல்.]

முகங்கருகு-தல் *mugaṅ-karugu-,* 5 செ.கு.வி. (v.i.) சீற்றம், சினம் முதலியவற்றின் குறியாக முகத்தில் கடுமை தோற்றுவித்தல் (வின்.); to

show the rages of reluctance in face foaming with extreme anger.

[முகம் + கருகு–தல். கருகுதல் = சின மிகுதியால் முகத்தில் கடுமை தோன்றுதல்.]

முகங்கவிழ்–தல் *mugaṅ-kaviḻ-*, 2 செ.கு.வி. (v.i.) நாணம் முதலியவற்றால் தலை குனிதல்; to bend down one's face, as when put to shame or disgrace; coyness as a feminine.

[முகம் + கவிழ்–தல். கவிழ்தல் = நாண முதலியவற்றால் தலையிறங்குதல்.]

முகங்காட்டு[1]–தல் *mugaṅ-kāṭṭu-*,5 செ.கு.வி. (v.i.) காட்சி கொடுத்தல்; to appear, to assume a visible form. *"அவன் முகங் காட்டுகைக்காக" (ஈடு, 10. 11: 3).*

[முகம்+காட்டு–தல். காட்டுதல் = காண்பித்தல்.]

முகங்காட்டு[2]–தல் *mugaṅ-kāṭṭu-*,5 செ. குன்றாவி. (v.t.) பெரியோரைச் சென்று காணுதல் (நாஞ்.); to pay a visit to a great man.

[முகம் + காட்டு–தல். காட்டுதல் = காணுதல்.]

முகங்காண்(ணு)–தல் *mugaṅ-kāṇ-*, 16 செ.கு.வி. (v.i.) கட்டி உடைவதற்கு முன் வாய் வைத்தல்; கட்டி உடைவதற்கான முன் குறியீடு; to gather, as a head of a boil.

[முகம் + காண்(ணு)–தல்.]

முகங்காண்பி–த்தல் *mugaṅ-kaṇbi-*, 4 செ.குன்றாவி. (v.t.) முகங்காட்டு[2]–தல், பார்க்க; see *mugaṅ-kāṭṭu*[2]*-*. *"நாட்டார் மன்னனை முகங் காண்பிக்க வந்திருக்கிறார்கள்" (நாஞ்.).*

[முகம் + காண்பி–த்தல்.]

முகங்குப்புறு–தல் *mugaṅ-kuppuṟu-*, 20 செ.கு.வி.(v.i.) முகங்கவிழ்–தல் பார்க்க; see *mugaṅ-kaviḻ-*.

[முகம் + குப்புறு–தல். குப்புறு–தல் தலைகவிழ்தல், தலைகுனிதல்.]

முகங்குறாவு–தல் *mugaṅ-kuṟāvu-*, 5 செ.கு.வி.(v.i.) துன்பத்தால் முகம் பொலிவிழத்தல் (வின்.); lent face due to distress.

மறுவ. முகக்கோட்டம்.

[முகம் + குறாவு–தல். குறாவுதல் = வாடுதல், ஒடுங்குதல், பொலிவிழத்தல்.]

முகங்கொடு–த்தல் *mugaṅ-koḍu-*, 4 செ.கு.வி.(v.i.) 1. இன்முகங் காட்டுதல்; to show a kindly face. *"ஆசாலேச முடையார்க்கு முகங்கொடாதவனாய்" (ஈடு,4. 7:9).* 2. முகங்காட்டு–தல், 1 பார்க்க; see *mugaṅ-kāṭṭu-*,1. *"இன்னானுக்கு இன்ன தோப்பிலே முகங்கொடுக்கக் கடவோம்" (திவ்.பெரியதி.5:1, பிர.).* 3. செவிசாய்த்தல் (வின்.); to grant a kind hearing. 4. செல்லங் கொடுத்தல் (வின்.); to fondle, treat wtih indulgence. *பிள்ளைக்கு முகங் கொடுக்காதே (வின்.).*

[முகம் + கொடு–த்தல்.]

முகங்கொள்(ளு)[1]–தல் *mugaṅ-koḷ-*, 16 செ.கு.வி. (v.i.) 1. இசைவு பெறுதல்; to obtain consent. *'இரவுக்குறி யேற்பித்து முகங் கொண்டு' (திருக்கோ.156, உரை).* 2. இசைவுக் குறி காட்டுதல்; to indicate consent. *'பொதுப்பட விலக்கி முகங் கொண்டு' (திருக்கோ.81, உரை).*

[முகம் + கொள்ளு–தல்.]

முகங்கொள்(ளு)²–தல் *mugaṅ-koḷ-*, 16 செ.கு.வி.(v.i.) கட்டி அல்லது பரு உடைவதற்கு முன் வாய் வைத்தல்; obtain formtion of cone in an abscess ulcer or carbuncle - shoot forth as in boils (சா.அக.).

[முகம் + கொள்(ளு)–தல்.]

முகங்கோடு–தல் *mugaṅ-kōḍu-*, 5 செ.கு.வி. (v.i.) முகங்கோணு–தல், பார்க்க; see *mugaṅ-kōṇu-*.

[முகம் + கோடு–தல். கோடுதல் = வளைதல்.]

முகங்கோணு–தல் *mugaṅ-kōṇu-*, 5 செ.கு.வி. (v.i.) முகத்தில் வெறுப்புக்குறி காட்டுதல்; to indicate dissatisfaction by one's countenance.

[முகம் + கோணு–தல். கோணுதல் மாறுபடுதல், வெறுப்புக் கொள்ளுதல்.]

முகச்சரக்கு *muga-c-carakku*, பெ.(n.) கடைக்குமுன்னால் பார்வைக்காக வைக்கப்படும் பண்டம் (வின்.); commodities exhibited for show.

[முகம் + சரக்கு. சரக்கு = வணிகப் பண்டம், வணிகப் பொருள்கள்.]

முகச்சவரம் *muga-c-cavaram*, பெ.(n.) முகத்தில் செய்து கொள்ளும் மழிக்கை (சவரம்); shaving of the face.

[முகம் + சவரம். **Skt.** *ksaura > த. சவரம்.]*

முகச்சாடு *muga-c-cāḍu*, பெ.(n.) முக்காடு (இ.வ.); veil, covering for the face.

[முகம் + சாடு. சாடு = கையில் மாட்டிக் கொள்ளும் உறை; தலையில் போட்டுக் கொள்ளும் துணி.]

முகச்சாடை *muga-c-cāḍai*, பெ.(n.) 1. முகச்சாயல் பார்க்க; see *muga-c-cāyal.* 2. முகக்குறிப்பு; indication of the face. 3. கண்டுங் காணாமை (வின்.); slight notice, pretended half notice; winking.

[முகம் + சாடை. சாடை = சாயல், ஒப்பு, சைகை (வே.க.உ.பக்.107).]

முகச்சாய்ப்பு *muga-c-cāyppu*, பெ.(n.) 1. விருப்பமின்மை (வின்.); slight aversion. 2. வருத்தம் (இ.வ.); displeasure. 3. வெகுளி (வின்.); anger.

[முகம் + சாய்ப்பு. சாய் → சாய்ப்பு = முகங்கொடாமை, வெறுப்பு, வெகுளி.]

முகச்சாயல் *muga-c-cāyal*, பெ.(n.) 1. முகத்தின் அழகு தோற்றம்; features, lineaments of the face. 2. முகஒற்றுமைத் தோற்றம்; facial resemblance. *இந்தப் பையன் அவன் தாத்தாவின் முகச் சாயலில் இருக்கிறான்.*

[முகம் + சாயல். சாயல் = அழகு, ஒப்புமை, நிழல்.]

முகச்சாயை *muga-c-cāyai*, பெ.(n.) முகச்சாடை (உ.வ.); facial features.

[முகம் + சாயை. சாயை = நிழல், ஒப்பு, சாயல், முகஒப்புமை.]

முகச்சார்த்து *muga-c-cārttu*, பெ.(n.) சார்த்துவரி என்னும் இசைப்பாட்டு (சிலப்.7, பக்.207); a kind of *cārttu-vari*.

முகச்சிரட்டை *muga-c-ciraṭṭai*, பெ.(n.) கண்ணுள்ள தேங்காய் மூடி; upper half of a coconut shell.

[முகம் + சிரட்டை. சிரட்டை = தேங்காய் மூடி.]

முகச்சுருக்கம் *muga-c-curukkam,* பெ.(n.) முகத்திரை; wrinkless of the face.

[முகம் + சுருக்கம்.]

முகச்செழிப்பம் *muga-c-ceḻippam,* பெ.(n.) முகக்களை பார்க்க; see *muga-k-kaḷai.*

[முகம் + செழிப்பு + அம். 'அம்' பெருமைப் பொருள் பின்னொட்டு.]

முகச்செழிப்பு *muga-c-ceḻippu,* பெ.(n.) மகிழ்ச்சி; cheerful, countenance.

[முகம் + செழிப்பு. செழிப்பு = வளம், வளமை, தெளிவு.]

முகசந்தி *muga-šandi,* பெ.(n.) நாடக சந்தி ஐந்தனுள் முதலில் உள்ள சந்தி (சிலப்.3:13, உரை); the first juncture or opening of a drama, one of five *nāḍaga-c-candi.*

[முகம் + சந்தி. சந்தி = இணைவு.]

நாடகசந்தி = 1. முகம், 2. படி (பிரதி) முகம், 3. தருப்பம், 4. வளைவு. 5. துய்த்தல்.

அந்தி→சந்தி. அந்தி = கூடுகை. பகலும் இரவும் கூடும் நேரம். ஒ.நோ.அவை→சவை.

முகசம் *mugašam,* பெ.(n.) பல்; tooth.

முகசரம் *muga-šaram,* பெ.(n.) கூரையின் அடிப்பகுதியைத் தாங்க விட்டுள்ள நீட்டு மரம்; beam or log supporting the lower part of a roof.

[முகம் + சரம். சரம் = கூரையைத் தாங்கும் மரம்.]

முகசன்னி *muga-šaṉṉi,* பெ.(n.) முகத்திற் காணும் இசிவு நோய் (சன்னி) வகை (இங்.வை.); facial neuralgia - *Ticdouloureux.*

[முகம் + சன்னி. சன்னி = இசிவு நோய்.]

முகசின்னம் *muga-šiṉṉam,* பெ.(n.) முகக்குறி பார்க்க; see *muga-k-kuṟi.*

முகசீரி *muga-šīri,* பெ.(n.) நாக்கு; tongue (சா.அக.).

முகசுரம் *muga-šuram,* பெ.(n.) பனங்கள் (பரி.அக.); toddy.

முகசோதனம் *muga-šōtaṉam,* பெ.(n.) முகங் கழுவுகை; cleaning of the face (சா.அக.).

[முகம் + Skt. சோதனம்.]

முகசோதி *muga-šōdi,* பெ.(n.) எலுமிச்சை (ம.வெ.); lime - fruit.

முகஞ்சா-தல் *mugañ-jā-,* 19 செ.கு.வி. (v.i.) முகஞ்சுண்டு-தல் பார்க்க; see *mugañ-juṇḍu-.*

[முகம் + சா-தல்.]

முகஞ்சிறுத்துப்போ-தல் *mugañ-jiṟuttu-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) சினம், ஏமாற்றம் முதலியவற்றால் முகம் சுருங்கிப் போதல்; face becoming wan-smallar through anger and perplexity.

[முகம் + சிறுத்துப்போ-தல்.]

முகஞ்சின்னம்போ-தல் *mugañ-jiṉṉam-pō-,* 8 செ.கு.வி.(v.i.) வெட்கப்படுதல் (வின்.); to be put out of countenance, to be ashamed.

[முகம் + சின்னம் +போ-தல்.]

முகஞ்சுண்டுதல் *mugañ-juṇḍudal,* பெ.(n.) 1. முகங்கருகு-தல் பார்க்க; see *mugaṅ-karugu-.* 2. முகங்கடு-த்தல் பார்க்க; see *mugaṅ-kaḍu-.* 3. முகஞ்சின்னம்போ-தல்

பார்க்க; see *mugañ-jinnam-pō-*.

[முகம் + சுண்டு–தல்.]

முகஞ்சுளி–த்தல் *mugañ-juḷi-*, 4 செ.கு.வி. (v.i.) முகங்கடு–த்தல் பார்க்க; see *mugaṅ-kaḍu-*.

[முகம் + சுளி–த்தல்.]

முகஞ்சூம்பு–தல் *mugañ-jūmbu-*, 5 செ.கு.வி. (v.i.) முகத்திற் களைப்புத் தோன்றுதல் (வின்.); to look worn out and exhausted.

[முகம் + சூம்பு–தல். சூம்புதல் = மெலிதல், மெலிந்து வாடுதல், களைத்தல்.]

முகஞ்செத்துப்போ–தல் *mugañ-jettu-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) தவறு செய்ததால் வெட்கமடைந்து முக வாட்டமடைதல்; face becoming wan- pale through shame (சா.அக.).

[முகம் + செத்து + போ–தல்.]

முகஞ்செய்[1]–தல் *mugañ-jey-*, 1 செ. குன்றாவி. (v.t.) நோக்குதல்; to face, to look toward. *"முன்னினான் வடதிசை முகஞ்செய்து" (சீவக.1408).*

[முகம் + செய்–தல்.]

முகஞ்செய்[2]–தல் *mugañ-jey-*, 1 செ.கு.வி. (v.i.) 1. தோன்றுதல்; to appear. *"முகஞ்செய் காரிகை" (பெருங். உஞ்சைக்.35:49).* 2. முன்னாதல்; to be first. *"தோன்றினாண் முகஞ்செய் கோலம்" (சீவக.675).*

[முகம் + செய்–தல்.]

முகக்கொம்பு, முகதலை, முகமண்டபம், முகவாசல், முகவுரை, உரைமுகம், கழிமுகம், துறைமுகம், நூன்முகம், போர்முகம் என்னும் கூட்டுச் சொற்களில் முகம் என்னுஞ் சொல் முன்புறத்தையே குறித்தல் காண்க (வே.க.முல்[1]).

முகஞ்செய்[3]–தல் *mugañ-jey*, தொ.பெ. (vbl.n.) சிலந்தி (கட்டி) குழித்தல்; formation of the point in an abscess.

[முகம் + செய்–தல்.]

முகஞ்செழி–த்தல் *mugañ-jeḻi-*, 4 செ.கு.வி. (v.i.) முகமலர்–தல் (வின்.) பார்க்க; see *muga-malar-*.

[முகம் + செழி–த்தல். முகப்பொலிவு கொள்ளுதல்.]

முகட்டறை *mugaṭṭaṟai*, பெ.(n.) முகட்டு வீட்டில் உத்தரமட்டத்திற்கு மேலுள்ள அறை (புதுச்.); garret.

[முகடு + அறை.]

முகட்டாணி *mugaṭṭāṇi*, பெ.(n.) கூரையின் உச்சியிலுள்ள மர ஆணி வகை; ridge peg.

[முகடு + ஆணி. முகடு = உச்சி, வீட்டின் மேற் கூரை.]

முகட்டுக்கால்[1] *mugaṭṭu-k-kāl*, பெ.(n.) வீட்டின் மேல்முகட்டு வளையைத் தாங்க, வைக்குங் கால்; small upright post below the ridge piece.

[முகடு + கால்.]

முகட்டுக்கால்[2] *mugaṭṭu-k-kāl*, பெ.(n.) மேட்டு மடையின் கால் (தெ.இ.கல். தொ.iii:347); high level channel.

[முகடு + கால்.]

முகட்டுக்காவணம் *mugaṭṭu-k-kāvaṇam,* பெ.(n.) முகட்டுப்பந்தல் பார்க்க (நாஞ்.); see *mugaṭṭu-p-pandal.*

[முகடு + காவணம் – முகட்டுக்காவணம். காவணம் = பந்தல்.]

முகட்டுத்துவாரம் *mugaṭṭu-t-tuvāram,* பெ. (n.) முகட்டுத்துளை பார்க்க; see *mugaṭṭu-t-tuḷai.*

*[முகடு + **Skt.** துவாரம்.]*

முகட்டுத்துளை *mugaṭṭu-t-tuḷai,* பெ.(n.) கூரையிற் காற்றுச் செல்லவிடும் வழி; ventilator in a slopping roof.

[முகடு + துளை.]

முகட்டுப்பந்தல் *mugaṭṭu-p-pandal,* பெ.(n.) முகடு வைத்த சாய்வு பந்தல் (நாஞ்.); a pandal with a ridged roof.

[முகடு + பந்தல்.]

முகட்டுப்பாய்ச்சு *mugaṭṭu-p-pāyccu,* பெ. (n.) முகட்டுவளை (யாழ்.அக.) பார்க்க; see *mugaṭṭu-vaḷai.*

முகட்டுப்பூச்சி *mugaṭṭu-p-pūcci,* பெ.(n.) மூட்டுப்பூச்சி (வின்.) பார்க்க; see *muṭṭu-p-pūcci.*

[முகடு + பூச்சி.]

முகட்டுவளை *mugaṭṭu-vaḷai,* பெ.(n.) கூரை முகட்டின் நீட்டுவளை; ridge - piece.

[முகடு + வளை. வளை = சிறிய உத்தரம், சிறிய மரத்துண்டு.]

முகட்டோடு *mugaṭṭōḍu,* பெ.(n.) முகட்டை மூடும் ஓடு; ridge - tile.

[முகடு + ஓடு.]



முகடமறியோன் *mugaḍamaṟiyōṉ,* பெ.(n.) பச்சோந்தி; green lizard chameleon.

முகடன் *mugaḍaṉ,* பெ.(n.) உள்ளான் குருவி; a bird, snipe.

முகடி *mugaḍi,* பெ.(n.) மூதேவி; goddess of misfortune. *"மடிஉளாள் மாமுகடி என்ப மடிஇலான் தாள்உளான் தாமரையி னாள்" (குறள், 617).*

[முகடு → முகடி.]

கூரை முகட்டில் தங்குவதாகக் கருதப்படுவதால் மூதேவி முகடி எனப்பட்டாள். இனி முகடு என்னும் சொற்குப் பாழ் என்னும் பொருள் இருப்பதால் பாழான நிலைமையுண்டு பண்ணுபவள் முகடி என்றுமாம். அவளது பேய்த் தன்மையாலும் வறுமைப் பஞ்சத்தன்மையாலும் அவளுக்குக் கருமை நிறம் கொள்ளப்பட்டது (பாவாணர்).

முகடிக்கொடி *mugaḍi-k-koḍi,* பெ.(n.) காக்கை; crow.

முகடு *mugaḍu,* பெ.(n.) 1. உச்சி; top, highest part. *"முகடுதுமித் தடுக்கிய பழம்பல் லுணவின்" (பெரும்பாண்.246). "திரைப்பிதிர் கடுப்ப முகடுகந் தேறி" (நற்.89:2).* 2. வீட்டின் மேற்கூரை (வின்.); ridge of a roof. 3. முகட்டுவளை பார்க்க; see *mugaṭṭu-*

vaḷai. "இகழ்ந்தார் முகட்டுவழி கட்டிற்பாடு" (ஆசாரக்.23). 4. துறக்கவுலக (அண்ட) முகடு; roof the heavens. *"வானெடு முகட்டை யுற்றனன்" (கம்பரா. மருத்து.30).* 5. உயர்வு; superiority, excellence, acme. *"முனிமை முகடாய மூவா முதல்வன்" (சீவக.1609).* 6. வீட்டின் வாயில்; entrance of a house. *"முகட்டு வழியூண் புகழ்ந்தார்"* (ஆசாரக்.23). 7. சபைக்குறடு; platform, as of an assembly. *"பெரியோர்கள் சபையிலே முகடேறி வந்தது பிதற்றிடும் பெருமூடரும்" (அறப்.சத.35).* 8. தலை; head. *"முகடூர் மயிர்கடிந்த செய்கையாரும்" (தேவா.936, 10).* 9. ஒட்டகம் முதலியவற்றின் உயர்ந்த முதுகுப்புறம்; hump, as of camel etc. *"சொல்லத்தகு முகட் டொட்டகம்" (கனா.15).* 10. பாழ்; the region of Chaos,as beyond the worlds. *"நீர்மலிய முகடுபடு மண்ட கோளகை" (தக்கயாகப்.140).* 11. வீடுபேறு (தக்கயாகப்.140, உரை); salvation. 12. முலை முகம்; nipple.

தெ., க. மொகடு.

முகடுதெற்று–தல் *mugaḍu-teṟṟu-,* 5 செ.கு.வி.(v.i.) கூரை வீட்டில் மோடு கட்டுதல் (வின்.); to construct the ridge of an ola roof.

[முகடு + தெற்று–தல். தெற்றுதல் = மாற்றுதல், பின்னுதல், தொடுத்தல், மேடாக்குதல்.]

முகடுபடு–தல் *mugaḍu-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) பாழாதல்; to be devastated, ruined. *"புறம்புநீர் மலிய முகடுபடு மண்டகோளகை" (தக்கயாகப்.140).*

[முகடு + படு–தல். படுதல் = அழிதல், சாதல், சாய்தல், பாழாதல்.]

முகடுமுறி–த்தல் *mugaḍu-muṟi-,* 4 செ.கு.வி.(v.i.) முகடுதெற்று–தல், (வின்.) பார்க்க; see *mugaḍu-teṟṟu-.*

முகடோடி *mugaḍōḍi,* பெ.(n.) முகட்டுவளை பார்க்க; see *mugaṭṭu-vaḷai.*

[முகடு + ஓடு – முகடோடு → முகடோடி.]

முகண்டம் *mugaṇḍam,* பெ.(n.) கடலை; gram, pulse.

முகத்தல் *mugattal,* பெ.(n.) முகத்தலளவை பார்க்க; see *mugattal-aḷavai.*

[முக → முகத்தல்.]

முகத்தலளவு *mugattal-aḷavu,* பெ.(n.) முகத்தலளவை (வின்.) பார்க்க; see *mugattal-aḷavai.*

[முகத்தல் + அளவு.]

முகத்தலளவை *mugattal-aḷavai,* பெ.(n.) நால்வகை யளவைகளுள் தவசம் முதலியவற்றை முகந்தளக்கும் அளவை (நன்.290, உரை); measure of capacity, one of four *aḷavai.*

[முகத்தல் + அளவை.]

நால்வகை அளவை : நீட்டலளவை, நிறுத்தல் அளவை, முகத்தல் அளவை, எண்ணல் அளவை.

முகந்தளக்கப்படும் பொருள்களுள் நெல் பெரும்பான்மையாகவும் சிறந்ததாகவுமிருத்தல் பற்றி முகத்தலளவை நெல்லிலக்கம் எனப்படும்.

கீழ் வருவது முகத்தலளவை :

2 செவிடு	–	1 பிடி
4 செவிடு	–	1 ஆழாக்கு

2 ஆழாக்கு	–	1 உழக்கு
2 உழக்கு	–	1 உரி
2 உரி	–	1 நாழி
8 நாழி	–	2 குறுணி (மரக்கால்)
2 குறுணி	–	1 பதக்கு
12 பதக்கு	–	1 தூணி (காடி)
3 தூணி	–	1 கலம்
400 குறுணி	–	1 கரிசை (பறை)

அரசு முத்திரையிட்ட அளவை நாழியும் மரக்காலும், அரச பண்டாரத்தில் அரசன் பெயரையும், கோயிற் பண்டாரத்தில் தெய்வப் பெயரையும் தாங்கியிருந்தன. சோழாந்தகன் நாழி, அருண்மொழித் தேவன் மரக்கால் என்பன அரசன் பெயரையும், ஆடவல்லான் மரக்கால் செப்புக்கால் திருச்சிற்றம்பலமுடையான் மரக்கால் என்பன தெய்வப் பெயரையும் தாங்கியவையாகும் (பழ. தமிழாட்சி. பக்.72)

முகத்தலளவையாகுபெயர் *mugattalaḷavai-āgu-peyar,* பெ.(n.) அளத்தற்குரிய பெயர் அளக்கும் கருவிக்கு ஆகி வருவது; the measurement's instrument name. *(எ.கா.) நாழி.*

[முகத்தல் + அளவை + ஆகுபெயர்.]

முகத்தலை *mugattalai,* பெ.(n.) முகதலை[1], 2 பார்க்க; see *mugatalai.* *"முகத்தலை யறிந்து உடுத்தாயிருந்ததே" (ஈடு, 8. 9:5).*

[முகம் + தலை.]

முகத்தாணி *muga-t-tāṇi,* பெ.(n.) அவல்; flaked rice (சா.அக.).

முகத்தாராளம் *muga-t-tārāḷam,* பெ.(n.) முகமலர்ச்சி (வின்.); cheerfulness.

[முகம் + தாராளம்.]

முகத்தாலடி–த்தல் *mugattāl-aḍi-,* 4 செ.கு.வி.(v.i.) முகத்திலடி–த்தல் (வின்.) பார்க்க; see *muga-t-til-aḍi-.*

முகத்தாவு *mugattāvu,* பெ.(n.) முன்னிலை; presence of a person.

முகத்தான் *mugattāṉ,* வி.அ.(adv.) பொருட்டு; with the intention of, for the purpose of. *வழிபாடு இயற்றும் முகத்தான் தென்னாட்டு பயணம் மேற்கொண்டோம்.*

முகத்திரியக்குநாடி *muga-t-tiriyakku-nāḍi,* பெ.(n.) முகத்தில் குறுக்காயோடும் அரத்தக் குழாய் வகை (வின்.); transverse facial artery.

[முகம் + திரியக்குநாடி.]

முகத்திரை[1] *mugattirai,* பெ.(n.) 1. முகத்தை மறைக்கும் முறையில் போட்டுக் கொள்ளும் மெல்லிய துணி; veil. 2. உண்மை நோக்கத்தை மறைத்திருப்பது; mask. *அவன் முகத்திரை ஒரு நாள் விலகும்.*

[முகம் + திரை.]

முகத்திரை[2] *mugattirai,* பெ.(n.) முகத்தில் ஏற்படும் தோல் சுருக்கம்; furrous in the face - wrinkles in the face (சா.அக.).

[முகம் + திரை.]

முகத்திலடி[1]–த்தல் *mugattil-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. நேரே பழித்தல்; to abuse or reproach another to his face. 2. நேருக்கு நேர் கடுமுகங் காட்டிக் கண்டித்தல் (வின்.); to condemn or forbid by one's countenance. *முகத்தில் அடிப்பதுபோல் சொல்லி விட்டான்.*

[முகத்தில் + அடி–த்தல்.]

முகத்திலடி²–த்தல் *mugattil-aḍi-*,4 செ.கு.வி. (v.i.) அருவருப்பாதல் (இ.வ.); to be replusive or disgusting.

[முகத்தில் + அடி–த்தல்.]

முகத்திலருப்பமிறங்குகை *mugattil-aruppam-iṟaṅgugai,* பெ.(n.) முகத்திலரும்புகை பார்க்க; see *mugattil-arumbugai.*

[முகத்தில் + அருப்பம் + இறங்குகை.]

முகத்திலரும்புகை *mugattil-arumbugai,* பெ.(n.) மேலுதட்டில் மயிர் தோன்றுகை (வின்.); sprouting of hairs in the upper lip.

[முகத்தில் + அரும்புகை.]

முகத்திலீயாடாமை *mugattil-i-y-āḍāmai,* பெ.(n.) 1. கவலை கொண்ட முகங் கொள்ளுகை (உ.வ.); having a very anxious look. 2. அதிர்ச்சியாலோ உணர்ச்சி மேலீட்டாலோ முகம் நிலைக்குத்தி அசையாது நிற்றல்; due to shock or over feelings the face stunning.

[முகத்தில் + ஈ + ஆடாமை.]

முகத்திற்கரிக்கோடிடுகை *mugattiṟ-kari-k-kōḍiḍugai,* பெ.(n.) முகத்திலரும்புகை பார்க்க; see *mugattil-arumbugai.*

[முகம் →முகத்தில் + கரிக்கோடிடுகை.]

முகத்திற்கரிபூசு–தல் *mugattiṟ-kari-pūsu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. அவமானப் படுத்தல்; to despise, disgrace. 2. நம்ப வைத்து ஏமாற்றுதல்; deceit, treachery. *அவனை நம்பியிருந்தேன். முகத்தில் கரிபூசிவிட்டான்.*

[முகத்தில் + கரிபூசு–தல். முகத்திற்கரிபூசி அழகைக் கெடுப்பது போல் அவமானம் செய்தல்.]

முகத்தீடு *muga-t-tīḍu,* பெ.(n.) பிணத்தின் முகமூடிச் சீலை (வின்.); face cloth.

[முகம் + இடு – முகமிடு →முகத்திடு → முகத்தீடு.]

முகத்துக்குமுகம் *mugattukku-mugam,* பெ.(n.) நேருக்குநேர்; face to face.

முகத்துநாடி *mugattu-nāḍi,* பெ.(n.) முகத்திலோடும் அரத்தக் குழாய் (இங்.வை.); facial artery.

[முகம் + அத்து + நாடி.]

முகத்துரை *muga-t-turai,* பெ.(n.) தானே நேரில் நின்று பேசுகை; direct speech of a person. *'கொண்டெடுத்து மொழியப்படுவ தல்லது முகத்துரையாக நிகழ்த்தும் நிகழ்ச்சி...... இல்லாமை' (இலக்.வி.563, உரை).*

[முகம் + அத்து + உரை.]

முகத்துவாரம் *muga-t-tuvāram,* பெ.(n.) 1. கழிமுகம் (உ.வ.); mouth of a firth or river. 2. நுழைவு வாயில்; enterance. 3. முகத்தில் உள்ள துளைகள் (வாய், மூக்கு); face holes.

[முகம் + Skt. துவாரம். Skt. துவாரம் →த. துளை, வழி.]

முகத்தூண் *muga-t-tūṇ,* பெ.(n.) முகப்புத் தூண் (பெருங்.உஞ்சைக்.58:54); front pillar.

[முகம் + அத்து + தூண்.]

முகத்தெளிவு *muga-t-teḷivu,* பெ.(n.) முகக்களை பார்க்க; see *muga-k-kaḷai.*

[முகம் + தெளிவு.]

முகத்தேங்காய் *muga-t-tēṅgāy,* பெ.(n.) முகக்கயில் (யாழ்ப்.) பார்க்க; see *muga-k-kayil.*

[முகம் + தேங்காய். உடைந்த தேங்காயில் கண்ணுள்ளதாகிய மேல் மூடி.]

முகத்தைக்காட்டு-தல் *mugattai-k-kāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) இசைவின்மையை முகக் குறிப்பால் தோற்றுவித்தல்; to express unwillingness by facial signs. *'ஒரு செயலை ஏவினால் முகத்தைக் காட்டுகிறான்'.*

[முகம்→முகத்தை + காட்டு-தல்.]

முகத்தைத்துடை-த்தல் *mugattai-t-tuḍai-,* 4 செ.கு.வி.(v.i.) தேற்றுதல்; console.

[முகம் →முகத்தை + துடை-த்தல்.]

முகத்தைமுறித்தல் *mugattai-muṟittal,* பெ.(n.) நேருக்கு நேராக, முகத்தில் அடித்தாற்போல பேசிவிடுகை, எடுத்தெறிந்து பேசுகை; it's given abuse speech.

[முகத்தை + முறித்தல்.]

முகத்தோற்றம் *muga-t-tōṟṟam,* பெ.(n.) உணர்ச்சியைக் காட்டும் முகம்; facial expression, look. *நாட்டியக் கலையில் முகத்தோற்றம் என்பது இன்றியமையாத ஒன்றாகும். அவர் எப்போது பேச்சை நிறுத்துவார், வீட்டுக்கு எப்போது போவோம் என்கிற முகத்தோற்றத்துடன் காத்திருந்தனர்.*

[முகம் + தோற்றம்.]

முகதரிசனம் *muga-tarišaṉam,* பெ.(n.) பெரியோர் (அ) மதிப்புமிக்கவரின் முகத்தைக் காண்கை; sight as of a great person's face.

[முகம் + Skt.தரிசனம். Skt. தரிசனம்→ த. காட்சி, தோற்றம்]

முகதலை[1] *muga-talai,* பெ.(n.) 1. மகளிரின் சீலை முந்தானை (வின்.); the front or outer end of a saree. dist. fr. camatalai. 2. எதிர் முகமாக்குகை (வின்.); confrontation.

[முகம் + தலை. தலை = நுனி, முடிவு.]

முகதலை[2]**-த்தல்** *mugatalai-,* 4 செ. குன்றாவி. (v.t.) எதிர் முகமாக்குதல் (வின்.); to confront, face. *எங்களை முகதலைத்துவிடும் (வின்.).*

[முகதலை[1] → முகதலை[2]-த்தல்.]

முகதலைப்பு *muga-talaippu,* பெ.(n.) முகதலை[1] பார்க்க; see *muga-talai*[1].

[முகம் + தலைப்பு.]

முகதவசம் *muga-tavašam,* பெ.(n.) மொச்சை; field bean - *Dolichos lablab.*

முகதா *mugada,* பெ.(n.) முன்னிலை; presence of a person. *அவன் முகதாவிற் பேசினேன்.*

[முகம் + தாவு - முகத்தாவு→முகதா.]

முகதாட்சிணியம் *muga-tāṭciṇiyam,* பெ. (n.) ஒருவர் முன்னிலையிற் காட்டும் கண்ணோட்டம் (உ.வ.); delicacy, consideration for the feelings of a person in his presence.

[முகம் + Skt. தாட்சிணியம். Skt. தாட்சிணியம் > த. கண்ணோட்டம், இரக்கம்.]

முகதாட்சிணை *muga-tāṭciṇai,* பெ.(n.) முகதாட்சிணியம் (வின்.) பார்க்க; see *muga-tāṭciṇiyam.*

[முகம் + Skt. தாட்சிணை.]

முகதாவு *muga-tāvu,* பெ.(n.) முகதா (வின்.) பார்க்க; see *mugatā.*

முகந்தகம் *mugandagam,* பெ.(n.) ஈர வெங்காயம் (மூ.அ.); onion.

முகந்தண்டு *mugantaṇḍu,* பெ.(n.) முதுகின் நடுவேயுள்ள மணிக் கோவையைப் போன்ற எலும்பு; the vertibral column (சா.அக.).

[முதுகுத்தண்டு → முகந்தண்டு.]

முகந்தம் *mugandam,* பெ.(n.) முககந்தம் (அரு.அக.) பார்க்க; see *muga-kandam.*

[முககந்தம் → முகந்தம். முககந்தம் = முருங்கை.]

முகந்தரு-தல் *mugandaru-,* 20 செ.கு.வி. (v.i.) இரக்கம்காட்டுதல் (பட்சங்காட்டுதல்); to show favour.

[முகம் + தரு-தல்.]

முகந்திகா *mugandikā,* பெ.(n.) முருங்கை; drumstick.

மறுவ. முககந்தம்

முகந்திரி-தல் *mugan-diri-,* 2 செ.கு.வி. (v.i.) முகமாறு-தல் பார்க்க; see *muga-māṟu-.* *"முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து" (குறள், 90).*

[முகம் + திரி-தல்.]

முகந்திருத்து-தல் *mugan-diruttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) முகவாட்டந் தவிர்த்தல்; to compose one's countenance. *"இருந்து முகந்திருத்தி" (தனிப்பா.1, 94:11).*

[முகம் + திருத்து-தல்.]

முகந்துடை-த்தல் *mugan-tuḍai-,* 4 செ. குன்றாவி. (v.t.) முகமழி-த்தல் (புதுக். கல்.909) பார்க்க; see *mugam-maḻi-.*

[முகம் + துடை-த்தல்.]

முகநகை *muga-nagai,* பெ.(n.) முகமலர்ச்சி; laughing face.

[முகம் + நகை.]

முகநட்பு *muga-naṭpu,* பெ.(n.) வெளி நட்பு (உ.வ.); pretended, outward friendship.

[முகம் + நட்பு.]

முகநாடி[1] *muga-nāḍi,* பெ.(n.) முகக்குறி பார்க்க; see *muga-k-kuṟi.*

[முகம் + நாடி.]

முகநாடி[2] *muga-nāḍi,* பெ.(n.) முகத்தையும் மூக்கில் ஓடும் வளிநிலையையும் பார்த்து நோயின் தன்மை கூறும் நூல் (தஞ்.சர.3:191); a treatise on the diagnosis of diseases by an examination of the face and of the breath of the nostrils.

[முகம் + நாடி.]

முகநாளம் *mugaṉāḷam,* பெ.(n.) முகத்தின் குருதிக் குழாய்; facial vein.

[முகம் + நாளம். நாளம் = குழல்]

முகநிலை *muga-nilai,* பெ.(n.) இசைப் பாட்டு வகை (சிலப்.6:35, உரை); a kind of song.

முகநிலைப்பசாசம் *muga-nilai-p-paśā śam,* பெ.(n.) பெருவிரலும் சுட்டு விரலும் முகங்கூடி உகிர் விட்டு நிற்கும் நிலை (சிலப்.3:18, உரை); a gesture in which the thumb and forefinger are joined just below the nails.

*[முகநிலை + **Skt.** பசாசம்.]*

முகநிறம் *muga-niṟam*, பெ.(n.) முகத் தோற்றம்; complexion.

முகநோக்கு-தல் *muga-nōkku-*, 5 செ.கு.வி. (v.i.) நோக்கெதிர் நோக்குதல் (இலக்.வி.580, உரை, பக்.530); to meet face to face, to exchange glances.

[முகம் + நோக்கு-தல். முகநோக்குதல் = முகத்தை நேருக்குநேர் நோக்குதல்.]

முகப்பட்டா *muga-p-paṭṭā*, பெ.(n.) குதிரையின் முகத்திற்கு மாட்டும் அணிகலன் (கோவை.); an ornamental on the face of horse.

[முகம் + பட்டா. படம் → பட்டா.]



முகப்படு-தல் *muga-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) முன்றோன்றுதல்; to appear in front. *"விழி யிணைக்கு முகப்பட்டிடும்" (பாரத. நச்சுப்.19).*

[முகம் + படு-தல்.]

முகப்படை *muga-p-paḍai*, பெ.(n.) முகத்தில் ஏற்படும் தோல் நோய்; eczema.

[முகம் + படை. முகத்தில் உண்டாகும் ஒருவகை நோய்.]

முகப்பணி *muga-p-paṇi*, பெ.(n.) முகச்சவரம் பார்க்க; see *muga-c-cavaram.*

[முகம் + பணி.]

முகப்பந்தல் *muga-p-pandal*, பெ.(n.) வீட்டின் முன் போடும் பந்தல்; pandal in front of a house. *"முத்து வளைத்து முகப் பந்தலிட்டார்கள்" (சித்.நாய.46).*

[முகம் + பந்தல்.]

முகப்பரு *muga-p-paru*, பெ.(n.) இளைஞரின் முகங்களில் வெங்காயப் பூ போலும், இலவமுள்ளைப் போலும் அடி பருத்து முனையுள்ளதாகிய கொப்புளங்கள்; facial pimples amongst lads attaining maturity - *Acne.*

[முகம் + பரு.]

முகப்பழக்கம் *muga-p-paḻakkam*, பெ.(n.) அறிமுகம் (வின்.); acquaintance.

[முகம் + பழக்கம்.]

முகப்பாக்கு *muga-p-pākku*, பெ.(n.) பாக்கின் மேற்பகுதி (யாழ்ப்.); the upper part of an arecanut.

[முகம் + பாக்கு.]

முகப்பிரியம்¹ *muga-p-piriyam*, பெ.(n.) நாரத்தை; a citron fruit.

முகப்பிரியம்² *muga-p-piriyam*, பெ.(n.) மதிப்பு, மதிப்புரவு (மரியாதை) (வின்.); respect for persons.

*[முகம் + **Skt.** பிரியம்.]*

முகப்பு *mugappu*, பெ.(n.) 1. முன்னிலை; front. *"இருந்திடா வெங்கள் கண்முகப்பே" (திவ். திருவாய்.9. 2:7).* 2. முற்பகுதி; forepart,

frontis piece. 3. வீட்டின் முன்புறக் கட்டிடம்; porch, facade. *"முகத்தணிந்த முகப்பு" (அரிச்.பு. இந்திர.20).* 4. அணிகலன்களில் முன்புறத்தி லெடுப்பாகச் செய்யப்பட்ட பொருத்துவாய் முதலியன; front piece of a jewel. 5. முகதலை[1], 1 பார்க்க; see *muga-talai*[1],1. 6. வீடு, கட்டடம் முதலியவற்றின் வாயிலும் வாயிலை ஒட்டிய பகுதியும்; front part of a house, etc. *வீட்டின் முகப்பில் ஒரு நாய் ஓடியது.* 7. பார்வைக்கு முதலில் படும்படியாக அமைந்திருக்கும் பகுதி; face, facade of a house. *பழைய திரையரங்கம் எடுப்பான முகப்புக் கொண்டதாகப் புதுப்பிக்கப்பட்டது. விண்ணப்பிக்கும் பணியின் பெயரை உறையின் மேல் முகப்பில் எழுதவும். தலைவர் படத்தைச் சிற்றுந்தின் முகப்பில் வைத்துக் கட்டியிருந்தார்கள்.*

க. மொகப்பு

[முல் → முள் → முளு → முழு → முகு → முக → முகப்பு (வே.க.).]

முகப்புமடை *mugappu-madai,* பெ.(n.) தலைமடை; ridged cut.

[முகப்பு + மடை. மடை = மதகு, மதகுப் பலகை.]

முகப்புற்று *muga-p-purru,* பெ.(n.) முகத்திற் கட்டி வெடிக்கும் நோய் வகை; lupus.

[முகம் + புற்று.]

முகப்பூச்சு *muga-p-pūccu,* பெ.(n.) 1. முகத்தில் பூசிக் கொள்ளும் பசை அல்லது மாவுப் பொருள்; painting or powder for the face. *தெருக்கூத்தில் முகப்பூச்சு இன்றியமையாத ஒன்று. இரவு நாடகங்களில் கோமாளிக்கு மட்டுமல்லாமல் அரசனுக்கும் முகப்பூச்சு பூசப்படுகிறது.* 2. வெளிப்பகட்டு; ostentalious.

[முகம் + பூச்சு.]

முகப்பொருத்தம் *muga-p-poruttam,* பெ.(n.) 1. முகநட்பு (வின்.) பார்க்க; see *muga-natpu.* 2. முகராசி (யாழ்.அக.) பார்க்க; see *muga-rāši.*

[முகம் + பொருத்தம்.]

முகப்பொலி *muga-p-poli,* பெ.(n.) கதிரினின்று உதிர்ந்த நெல்; paddy dropped from ears of corn.

[முகம் + பொலி. பொலி = தூற்றாத நெற் குவியல்.]

முகப்பொலிவு *muga-p-polivu,* பெ.(n.) முகக்களை பார்க்க; see *muga-k-kalai.*

[முகம் + பொலிவு. பொல்→பொலி. பொலிவு = தோற்றப் பொலிவு, அழகு, முகமலர்ச்சி.]

முகப்போதரவு *muga-p-pōtaravu,* பெ.(n.) இச்சகம் (வின்.); coaxing, flattery.

[முகம் + போதரவு. போதரவு = இச்சகம், முகமன்.]

முகபங்கம் *muga-bangam,* பெ.(n.) இலச்சை (வின்.); shame.

[முகம் + பங்கம். Skt. பங்கம் > த. குறை, பழுது, கேடு. இலச்சை = வெட்கம், நாணக் கேடு, மானக்கேடு.]

முகபடாம் *muga-padām,* பெ.(n.) யானையின் முகத்தில் இடும் ஒப்பனை செய்த (அலங்காரத்) துணி; ornamental cloth on

the face of an elephant. *"முகபடாமன்ன மாயை நூறி" (தாயு. மௌன.1).*

[முகம் + படாம். படாம் = சீலை, திரைச்சீலை, முகபடாம்.]



முகபரிச்சயம் *muga-pariccayam,* பெ.(n.) முகப்பழக்கம் (வின்.) பார்க்க; see *muga-p-paḻakkam* .

*[முகம் + **Skt.** பரிச்சயம்.]*

முகபாகம் *muga-bāgam,* பெ.(n.) முகத்தின் பகுதி; facial region.

[முகம் + பாகம்.]

முகபாடம் *muga-bāḍam,* பெ.(n.) வாய்ப் பாடம் (வின்.); that which is learnt by heart.

[முகம் + பாடம். பாடம் = படிக்கும் நூற்பகுதி, மூலபாடம், படிப்பு.]

முகபாவம் *muga-bāvam,* பெ.(n.) முகத் தோற்றம் பார்க்க; see *muga-t-tōṟṟam.*

*[முகம் + **Skt.** பாவம்.]*

முகபூரணம் *muga-pūraṇam,* பெ.(n.) முகக்களை பார்க்க; see *muga-k-kaḷai*

*[முகம் + **Skt.** பூரணம்.]*

முகம்[1] *mugam,* பெ.(n.) 1. தலையில் நெற்றி முதல் மோவாய் வரையுள்ள முன்புறம்; face. *"முகத்தா னமர்ந் தினிது நோக்கி" (குறள், 93). முகம் பார்க்கும் கண்ணாடி, அரிமா முகம் பொறித்த காசு.* 2. வாய்; mouth. *"மொழிகின்ற முகத்தான்" (கம்பரா. வாலிவ.74). "வாண்முகந் துமிப்ப வள்ளிதழ் குறைந்த" (குறுந்.227:2). "விம்முறு கிளவியை ளென்முக நோக்கி" (நற்.33:10).* 3. முன்பு; front. *"ஈன்றாள் முகத்தேயு மின்னாதாம்" (குறள், 923).* 4. குத்துவிளக்கு போன்றவற்றில் திரியிட்டு எரிக்கும் பகுதி; that part of the lamp, such as *kuttu-viḷakku. ஐந்து முக விளக்கு, முற்றத்தைப் பார்க்கும்படி விளக்கினைத் திருப்பி வை.* 5. இயல்பு, குணம்;one's nature. *இது அவளுடைய முகம் இல்லை. முகத்திலே விழித்தாலும் மூன்று நாளைக்கு சோறு அகப்படாது (பழ.). முகத்துக்கு அஞ்சி மூத்தா ரோடு போனால் குலத்துக்கெல்லாம் ஈனமாம் (பழ.). முகத்துக்கு முகம் கண்ணாடி (பழ.).*

[முல் – தோன்றுதல் கருத்து. முள்→முள→முளை = வித்திலிருந்து வெளிப்படும் முதல் வெளிப்பாடு. முள்→முளு→முழு→முகு = முகிழ். முகிழ்–தல் = அரும்புதல். முகு→முகம் = மூக்கும் வாயும் சேர்ந்த முன்பகுதி. முகம்→முகமை = முதன்மை, தலைமை.முகம் = முன்பக்கம், தலையின் முன்பக்கம், முகத்தின் முன் நீண்டுள்ள மூக்கு, நுனி, தொடக்கம், முன்பு, முதன்மை. இவையெல்லாம் முன்மைக் கருத்தைப் பொதுவாகக் கொண்டவை. இப்பொருள்கட்கெல்லாம் அடிப்படை தோன்றற் கருத்தே. இயல்பான தோற்றமும் இயக்கமும் முன்னோக்கியே நிகழ்வதால். ஒரு பொருள் தோன்றம் போது அதன் முன்புறமே தெரியும். வடமொழியில் முக என்னுஞ் சொற்கு மூலமில்லை. வடவர் அச்சொற்கு முகம் என்பதைவிட வாய் என்பதையே சிறப்புப்

பொருளாக் கொள்வதால் பின்வருமாறு பொருந்தப் பொய்த்தலாக மொழிப் பொருட் காரணங் கூறுவதுண்டு. முக = மு + க (kha). க = கன் = தோண்டு. முக = தோண்டப்பட்ட கிடங்கு போன்ற வாய். இது ஒரு நகையாட்டுச் செய்தியாக இருப்பதொடு, கன் (khan) என்னும் சொல்லும் தென் சொல்லாகவே இருத்தல் காண்க. கல்லுதல் = தோண்டுதல். கல்→கன்→கன்னம் = சுவரில் தோண்டும் துளை (வ.மொ.வ.236, 237).]

தமிழ், கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக அகப்பகையாலும் புறப்பகையாலும், மறையுண்டும் குறையுண்டும் வந்திருந்தும் ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் ஒருசில நடுநிலை மொழி யாராய்ச்சியாளர் தமிழ் முகம் திரும்பி அதன் தொன்மையையும் முன்மையையும் வடமொழிக்குச் சொல் வழங்கிய வன்மையையும் உணர்ந்து, அதை உலகனுக்குணர்த்த முன் வந்திருப்பது மிக மகிழத்தக்கதே. ஆயினும்; ஏமாற்றுவதிலும் அறைபோவதிலும் துறைபோய ஒருசில புறத்தமிழரும் போலித் தமிழரும், இன்றும், முகம் என்னும் சொல் வடசொல்லென்று வலிக்கத் துணிவது எத்தனை இரங்கத்தக்க செய்தியாம்!

முகம் என்னும் சொல் தென்சொல்லேயென ஒன்பான் ஆண்டுகட்கு முன்னரே என் ‘முதற்றாய்மொழி’யில் விளக்கியிருப்பினும், அதனைப் பாராமையாலோ, ஆராய்ச்சி யின்மையாலோ, வடமொழி வெறிபற்றிய தமிழ் வெறுப்பாலோ, அடிமைத்தனத்தினாலோ, ‘முகம்’ வடசொல்லென இன்றும் ஒருசார் தமிழாசிரியர் வகுப்பிற் சொல்வதும், அதுகேட்டு மாணவர் மயங்குவதும், சில தேர்வாளர் மாணவர் போட்டித் தேர்வுகளில் முகம் எம்மொழிச் சொல் என வினவி உண்மையுரைப்பாரைத் தவறுவிப்பதும் வழக்கமாயிருந்து வருகின்றன. இது பலர்க்கும் இடர்ப்பாட்டை விளைத்தலின், இனிமேல் இப் பொருள்பற்றி ஐயுறவும் ஏமாற்றும் தருக்கமும் இல்லாதவாறு, முகம் என்பது தென்சொல்லேயென முடிந்த முடிபாக நாட்டுதற்கு எழுந்ததிக் கட்டுரையென்க.

முகம் என்பது தென்சொல்லேயெனக் கோடற்கு மறுக்கொணாச் சான்றுகள் வருமாறு :–

(1) தமிழில் மூலமும் பொருளும் முற்றும் பொருந்துதல் :–

முகம் (முகு + அம்) = முன்பு, முன்னுறுப்பு, முன்பக்கம்.

முனை, நுனி, தோற்றம்.

முகப்பு, முகனை, முகச்சரக்கு, முகதலை, முகமண்டபம், முகமனை, முகவாசல், முகவுரை, உரைமுகம், துறைமுகம், நூன்முகம், போர்முகம் முதலிய வழக்குகளை நோக்கின் முன்மைக் கருத்தே முகம் என்னும் சொல்லின் வேர்ப்பொருள் என்பது விளங்கும்.

உயிரிகளின் (பிராணிகளின்) முன்பக்கத்திற் சிறந்த உறுப்பு தலையின் முன்புறமாதலின், அது முகம் எனப்பட்டது.

உயிரிகளின் இயல்பான இயக்கம் அல்லது தோற்றம் முன்னோக்கியே நிகழ்தலின் முன்மைக் கருத்தில் தோற்றக் கருத்துத் தோன்றிற்று. எ–டு:

முகம் = தோற்றம்

முகஞ்செய்தல் = தோன்றுதல்

முகம்பெறுதல் = தோன்றுதல்

முகு + உள் = முகுள்–முகிள் = அரும்பு

முகிள் + அம் – முகிளம் = அரும்பு.

அரும்புதல் = தோன்றுதல்

முகுள் – (முகுர்) – முகுரம் = தளிர்

முகிள் – முகிழ் = அரும்பு. முகிளம் – முகிழம் = மலரும் பருவத்தரும்பு.

முகிழ்த்தல் = தோன்றுதல்

"மூவகை யுலகு முகிழ்த்தன முறையே" (ஐங்குறுநூறு கடவுள் வாழ்த்து).

முகு + ஐ – முகை = அரும்பு, முகைதல் = அரும்புதல், முகைத்தல் = அரும்புதல்.

முகு–முக்கு–மொக்கு = அரும்பு. மொக்கு – மொக்குள் = அரும்பு.

முகம் என்னும் சொல்லில் முகு என்னும் பகுதியும், முகு என்னும் பகுதியில் மு என்னும் எழுத்தும், மு என்னும் உயிர்மெய்யில் உ என்னும் உயிரும், உயிர்நாடியான உறுப்புகளாம்.

முன், முந்து முதலிய சொற்களில் முகரமும், ஊங்கு, உங்கு, உங்ஙன், உது, உவன் முதலிய சொற்களில் ஊகார உகரங்களும், அடிப்படையாயிருந்து முன்மைக் கருத்தை யுணர்த்துதல் காணக்.

முகம் – முகர் – முகரை – மோரை.

முகர் – முகரி = முன்புறம், தொடக்கம்

முகம் – முகன் – முகனை – மோனை.

முகு – முக – முகப்பு.

2) வடமொழியிற் கூறும் மூலமும் பொருளும் ஒரு சிறிதும் பொருந்தாமை :

வடமொழியில் முகம் என்பது முக்ஹ (mukha) என்றே வழங்கினும், அதனை வடசொல்லாகக் காட்டல் வேண்டி, னகர (நகர) மெய்யை ஈற்றிற் சேர்த்து முக்ஹன் (mukhan) என்னும் வடிவைப் படைத்து; அதில் 'மு' என்னும் முதன்மையான பகுதியைப் பொருளற்ற முன்னொட்டாக (Prefix)த் தள்ளி, எஞ்சிய க்ஹன் (khan) என்னும் கூற்றைத் தோண்டுதற் பொருள் தரும் வினைப்பகுதியாக்கி, தோண்டுதல், தோண்டப்பட்ட கிடங்கு, கிடங்கு போனற் வாய், வாயுள்ள இடம் (முகம்) என, முறையே முகம் என்னும் சொற்குப் பொரு ளுரைப்பர் வடநூலார்.

இது பகுத்தறிவிற்குச் சற்றும் பொருந்தாமையொடு.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று,

சூழினுந் தான்முந் துறும்" (குறள், 380)

என்னும் தெய்வத் திருமறைக்கேற்ப, மீண்டும் முகம் என்பது தென்சொல்லே யென்பதை வலியுறுத்தல் காண்க.

முகம் – முகன் (கடைப்போலி)

இனி, கன் என்னும் சொல்லும் தென் சொல்லே.

கல் – கன். கல்லுதல் = தோண்டுதல். கன் – கன்னம் = தோண்டுதல், சுவரைத் துளைத்துத் திருடுதல்.

லகரம் னகரமாகத் திரிதல் இயல்பு.

ஒ.நோ: ஆல் – ஆன் (3ஆம் வேற்றுமை யுருபு).

மேல – மேன.

(3) வடமொழியிலும் முக்ஹ என்பது முகம் என்னும் பொருளில் வழங்கல்

எ–டு: முக்ஹ + கமல = முகத் தாமரை (தாமரை முகம்)

முக்ஹ என்னும் சொற்கு வடமொழியில் வாய் என்பதேர முதன்மைப் பொருளாகக் கொள்ளினும், முகம் என்னும் பொருட்கும் வட்டஞ்சுற்றி வழியே வருதல் காண்க.

(4) தொடர்புடைய தென் சொற்கள்:

தலையில் முகம் முன்புறமா யிருத்தல்போல் முகத்தில் மூக்கு முன்னுறுப்பா யிருத்தலால், முன்மைக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட முகம் என்னும் சொல் தமிழில் மூக்கையும் உணர்த்தும்.

முகம் – முக, முகத்தல் = மூக்கால் மணம் நுகர்தல்.

முக – மோ – மோப்பு – மோப்பம்

முகம் – முகர், முகர்தல் = மோத்தல், முகர் – மோர்.

முகு – முக்கு – மூக்கு

மூக்கு – முக்கை = ஆறு திரும்பும் மூலை.

(5) எதுகை வடிவான இனப்பொருட் சொற்கள் :

முகு என்னும் அடிக்கு எதுகையான நுகு, புகு முதலிய அடிகளும், முன்மைக் கருத்தின் வழிப்பட்ட தோன்றற் கருத்தை யுணர்த்துவதாகும்.

நுகு – நுகும்பு = பனையின் இளமடல்

நுகு – நுங்கு = இளம் பனங்காய்ச் சுளை அல்லது கொட்டை.

நுகு – (நகு) – நாகு = இளமை

புகு – பூ, பூத்தல் = தோன்றுதல்

"பூந்தலிற் பூவாமை நன்று"

பூ – போ – போத்து = இளங்கிளை.

போத்து – போந்து = பனங்குருத்து

போந்து – போந்தை = பனங்குருத்து

புகு – (பொகு) – பொகில் = அரும்பு

பொகில் –போகில் = அரும்பு

முகரம் சில சொற்களில் ககரமாகத் திரியும்.

எ–டு : தொழுதி – தொகுதி. முழை – முகை.

இங்ஙனமே, நுழு, புழு, முழு முதலிய ழகர உயிர்மெய்யீற்றுச் சொற்களும் ககர வுயிர் மெய்யீற்றினவாய்த் திரிந்திருத்தல் வேண்டும்.

முள்–முழு–முகு. நுள்–நுழு–நுகு.

முள்–முளை, முளைத்தல் = தோன்றுதல்.

நுழுந்து = இளம்பாக்கு, நுழாய் = இளம்பாக்கு.

ஆயிரக்கணக்கான பழந் தென்சொற்கள் அழிந்துபோயினமையால், பல கருத்துகளை இணைக்கும் அண்டுகளை எல்லா மொழிமுதல் அடிகட்கும் காட்டமுடிந்திலது.

(6) வடமொழியிற் பிற சொல்லிருத்தல் :

முகத்தைக் குறித்தற்கு ஆனனம், வதனம், முதலிய பிறசொற்கள் வடமொழியிலுள.

(7) தென்மொழியிற் பிற சொல்லின்மை :

தென்மொழியில் முகத்தைக் குறித்தற்குத் தொன்றுதொட்டு வழங்குவதுக முகம் என்னும் சொல் ஒன்றே.

(8) தென்சொல்வளம் :

இலை, தாள், தோகை, ஓலை என ஒரே, நிலைத்திணைச் சினையை நால் வகைப்படுத்தவும், வடு (மா), மூசு (பலா), கச்சல் (வாழை) என முக்கனிகட்கும் பிஞ்சுநிலையில் சிறப்புச்சொல் வழங்கவும் தெரிந்த மதிமாண் பண்டைத் தமிழர்க்கு முகத்தைக் குறித்துச் சொல்லில்லையென்பது, பகுத்தறிவுடையார்க்குக் கூறும் கூற்றன்று.

(9) வடமொழியில் தென்சொலுண்மை :

ஆயிரக்கணக்கான தென்சொற்கள் வடமொழியில் வெளிப்படையாய் வழங்கிவருவதால்

வடமொழி தென்சொல்லைக் கடன் கொள்ளா தென்னும் பித்தர் கூற்றை எள்ளி யிகழ்க.

(10) மேலையாரியத்தில் முகம் என்னும் சொல்லின்மை :

மேலையாரிய மொழிகளுள் ஒன்றிலேனும் முகம் என்னும் சொல்லின்மையால், முகம் என்பது தென்பாலி முகத்துத் தோன்றிய தென் சொல்லேயென ஓங்கி அறைக.

"பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே
மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையாற்
பொய்போ லும்மே பொய்போ லும்மே" – பாவாணர் தமிழ்ப்பொழில் மடங்கல் (ஆவணி) 1958.

முகம்[2] *mugam,* இடை.(part.) 1. இயங்குவதை அல்லது இருப்பதைக் குறிப்பிடும் போது திசை என்ற பொருள் வரும்படிச் சொல்வது; direction, side to which one turns or keeps one's face. *அவர் என் முகமாகத் திரும்பி ஏதோ சொன்னார். ஆறு தென்முகமாக ஓடுகிறது.* 2. பெயரெச்சத்தின் பின் வகை அல்லது வண்ணம் என்ற பொருள்வரும்படி பயன்படுத்துவது; by way of. *வரிகட்டாமல் ஏய்ப்பவர்களை எச்சரிக்கும் முகமாக இந்த ஆணை வெளியிடப் பட்டுள்ளது. கடற்கரைக்கு மக்கள் வந்தமுகமாக இருந்தனர்.*

[முகு→முகம்.(வே.க.).]

முகம்[3] *mugam,*பெ.(n.) 1. வாயில் (சங்.அக.); entrance, as of a house. 2. சுழி (பிங்.); back water. 3. இடம் (திருக்கோ.356, உரை); place.

[முகு→முகம் (வே.க.).]

முகம்[4] *mugam,*பெ.(n.) 1. கட்டியின் முனை; point of the abscess or boil etc. 2. இந்திர கோபப் பூச்சி; cochineal insect (பரி.அக.). 3. தொடக்கம்; commencement as in 'urukkumugam' (உருக்குமுகம்).

[முகு → முகம் (வே.க.).]

முகம்[5] *mugam,* பெ.(n.) முகப்பு, அணிகலன்களின் முன்புறத் தோற்றம்; facet of the ornaments. *அணிகலன்களின் தோற்றப் பொலிவாகவும், புடைப்பாகவும் மணிகள் (இரத்தினங்கள்) வைத்து இழைக்கப்படும் முகப்பு. "முத்தின் பட்டிகை ஒன்றினால்... பொன்னின்பூ ஆறும்முகம் ஒன்றும்" (தெ.கல். தொ.5, கல்.521).*

[முகு→முகம் (வே.க.).]

முகம்[6] *mugam,*பெ.(n.) 1. நோக்கு; look, sight. *'புகுமுகம் புரிதல்' (தொல். பொருள். 261).* 2. ஊழ்கம் (தியானம்); meditation. *"செல்வன்... இரண்டுருவ மோதி நேர்முக நோக்கினானே " (சீவக.1289).* 3. முகமன்; praise, flattery. *"முகம் பலபேசி யறியேன்" (தேவா.742, 2).* 4. மூலம்; instrumentality. 5. வேள்வி (யாகம்); sacrifice. *"மறைவழி வளர்முகமது சிதைதர" (தேவா.573, 5).*

[முகு→முகம் (வே.க.).]

முகம்[7] *mugam,*பெ.(n.) 1. கரணியம் (உ.வ.); cause, reason. 2. ஏழாம் வேற்றுமையுருபு; ending of seventh case. *"இனிய செய்தி நின்னார் வலர் முகத்தே" (புறம்.12).* 3. நாடகச் சந்தி ஐந்தனுள் முதலிலுள்ள சந்தி (சிலப்.3:13, உரை); the first juncture or opening of a drama, one of five *nāṭaka-canti.* 4. உவம உருபு (சீவக.298); particle

of comparison. *கிளிமுகக் கிளவி (சீவக. 298).*

[முகு→முகம் (வே.க.).]

முகம்[8] *mugam,* பெ.(n.) 1. நடிகர்கள் அரங்கத்திற்கு வருமுன் நிகழும் கூத்து (சிலப்.3:147, உரை); opening dance before the appearance of the actors on the stage. 2. இயல்பு; character, nature. *"களி முகச் சுரும்பு" (சீவக.298).* 3. நிலை (வின்.); state, condition. 4. பக்குவம்; full-growth, maturity. *"பயம்பின்வீழ் முகக்கேழல்" (மதுரைக்.295).*

[முகு→முகம் (வே.க.).]

முகம்[9] *mugam,* பெ.(n.) 1. முதன்மை (வின்.); chieftaincy. 2. ஊர் (கிராம) முதலியவற்றின் பகுதி (நாஞ்.); part, as of a town or village.

[முகு→முகம் (வே.க.)]

முகம்[10] *mugam,* பெ.(n.) வகை; kind, class. *"பலமுகங்களான கலக்கங்கள் நேரிட்ட சமயத்தில்" (ரகஷ்ய.4).*

[முகு→முகம் (வே.க.)]

முகம்[11] *mugam,* பெ.(n.) 1. மேலிடம் (வின்.); head, top. 2. நுனி; point. *"அமின் முகக்கணை" (கம்பரா.ஆற்றுப்.14).* 3. வடிவு; form, shape. *"கூன்முகமதி" (பிரபுலிங். கைலாச.3).* 4. தோற்றம்; aspect, appearance. *"சுளிமுகக் களிறன்னான்" (சீவக.298).*

[முகு →முகம் (வே.க.)]

முகம்குளுப்பைதட்டல் *mugam-kuḷuppai-taṭṭal,* தொ.பெ.(vbl.n.) முகம் வீங்கல்; face becoming swollen.

[முகம் + குளுப்பை + தட்டல்.]

முகம்கொடுத்துப்பேசு-தல் *mugam-koḍuttu-p-pēšu-,* 5 செ.குன்றாவி.(v.t.) ஈடுபாடு காட்டி மதித்துப் பேசுதல்; talk directly and in a friendly way. *அவர் என்னிடம் முகம் கொடுத்துப் பேசி நீண்ட நாட்கள் ஆகிறது என வருத்தப்பட்டுக் கொண்டான்.*

[முகம் + கொடுத்து + பேசு-தல்.]

முகம்சுண்டல் *mugam-šuṇḍal,* பெ.(n.) முகம் சுளிக்கை; frowning.

முகம்சுளி-த்தல் *mugam-šuḷi-,* 4 செ. குன்றாவி.(v.t.) அருவருப்பு முதலியவற்றால் முகத்தில் ஏற்படும் சுருக்கம்; screw up one's face as an expression of dislike, disgust, etc. *தன் முது சேறுபட்டுவிட்டது கண்டு முகம் சுளித்தான்.*

[முகம் + சுளி-த்தல்.]

முகம்செத்துப்போ-தல் *mugam-šettu-p-pō-,* 8 செ.கு.வி.(v.i.) முகம் களை இழத்தல்; fall of the face. *திருமண வீட்டில் நுழைந்தவரை 'நீங்கள் யார்' என்று கேட்டதும் அவருடைய முகம் செத்துப் போயிற்று.*

[முகம் + செத்து + போ-தல்.]

முகம்பார்-த்தல் *mugam-pār-,* 4 செ. குன்றாவி.(v.t.) 1. நேர்நோக்குதல்; to look one in the face. 2. அன்பு செய்தல் (வின்.); to show kindness to. 3. நன்கு மதித்தல் (சிலப்.11:182, அரும்); to treat with regard. 4. முகம் நோக்கி இனம் அறிதல் (உ.வ.); to recognise faces of persons, as a child.

[முகம் + பார்-த்தல்.]

முகம்பார்வை *mugam-pārvai,* பெ.(n.) பழைய வரிவகை; an ancient tax. *"ஜோடி முகம்பார்வை, சுங்க சாலை, சம்படம்" (I.M.P. Cg.1095).*

[முகம் + பார்வை.]

முகம்புகு–தல் *mugam-pugu-,* 2 செ.கு.வி. (v.i.) 1. முகமலர்–தல் பார்க்க; see *mugam -malar-. "முகம்புகன் முறைமையின்" (தொல்.பொருள்.152).* 2. இரக்கத்திற்காக (தயைக்காக) எதிர் சென்று நிற்றல்; to approach for favours. *"முகம் புகுத லாற்றுமோ மேல்" (நாலடி, 306). "முகம் புகுகின்ற தோழிக்கு" (ஐங்குறு. 20, துறைக் குறிப்பு).*

[முகம் + புகு–தல். புகுதல் = அடைதல், தாழ்நிலை அடைதல், செல்லுதல், நுழைதல்.]

முகம்புடை–த்தல் *mugam-puḍai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. துயரக் (துக்கக்) குறியாக முகத்திலடித்துக் கொள்ளுதல்; to beat one -self on the face, as an expression of grief. *"பலசன முகம்புடைத் தகங்குழைந் தழவே" (சீவக.2758).* 2. கட்டி உடைவதற்கு முன் வாய் வைத்தல்; to gather, as the head of a boil.

[முகம் + புடை–த்தல். புடைத்தல் = அடித்தல், குத்துதல்.]

முகம்புதை–த்தல் *mugam-p-udai-,* 4 செ.கு.வி. (v.i.) முகத்தை மூடிக்கொள்ளுதல்; to cover one's face. *"கையா னகை முகம் புதைத்த தோற்றம்" (சீவக.2461).*

[முகம் + புதை–த்தல். புதைத்தல் = மறைத்தல், ஒளித்து வைத்தல். வாய்புதைத்தல், அமிழ்த்துதல்.]

முகம்பெறு–தல் *mugam-peṟu-,* 21 செ. கு.வி.(v.i.) தோன்றுதல்; to rise, as the sun; to appear. *"சுடர் முகம் பெற்றபோதே" (சீவக.1404).*

[முகம் + பெறு–தல். பெறுதல் = அடைதல், பிறப்பித்தல், தோன்றுதல்.]

முகம்மதியர் *mugammadiyar,* பெ.(n.) இசுலாம் மதத்தினர்; followers of the religion of Muhammad.

[முகம்மது → முகம்மதியர்.]

முகம்மது[1] *mugammadu,* பெ.(n.) முகமதுநபி பார்க்க; see *mugammadu-nabi.*

முகம்மது[2] *mugammadu,* பெ.(n.) 20ஆம் நூற்றாண்டில் மெய்ஞானக் குறவஞ்சி என்ற நூலை இயற்றியவர் புலவர்; author of *mey-ñāṉa-k-kuṟavañji.*

முகம்மதுஉசேன் *mugammadu-ušēṉ,* பெ.(n.) 18ஆம் நூற்றாண்டில் தவுக்கிடு மாலை, பெண்புத்தி மாலை, ஆகிய நூல்களை இயற்றிய புலவர்; author of *peṉ-putt-mālai* and *tavukkidu-mālai.*

[முகம்மது + உசேன்.]

முகம்மதுநபி *mugammadu-nabi,* பெ.(n.) முகமதிய மத அருட்பணிப் பெருந்தகையான முகமது நபிகள் நாயகம்; Muhammad the Prophet of Islam.

[முகமது + நபி.]

முகம்மழி–த்தல் *mugam-maḻi-,* 4 செ. குன்றாவி.(v.t.) முகத்திலுள்ள மயிரை (தாடி, மீசை) நீக்குதல்; to shave one's face.

[முகம் + மழி–த்தல்.]

முகம்வை–த்தல் *mugam-vai-,* 4 செ.கு.வி. (v.i.) முகங்காண்(ணு)–தல் பார்க்க; see *mugan-kāṇ-,*

[முகம் + வை–த்தல்.]

முகமண்டகம் *muga-maṇḍagam,* பெ.(n.) முகமண்டபம் பார்க்க; see *muga-maṇḍabam. "விட்டுணுக் கிருகத்து முகமண்டகத்தே கூடியிருந்து" (தெ.இ. கல்.தொ.3:12).*

[முகம் + மண்டகம். மண்டகம் = மண்டபம், கற்கட்டடம்.]

முகமண்டபம் *muga-maṇḍabam,* பெ.(n.) கோயிலின் முன்மண்டபம்; front hall in a temple. *"முகமண்டபஞ் செய்து நிரந்தளித்தான்" (செந்.4, பக்.335).*

[முகம் + மண்டபம். மண்டபம் = கற்கட்டடம்., சாவடி, ஒப்பனை செய்யப்பட்ட பந்தல்.]

முகமண்டலம் *muga-maṇḍalam,* பெ.(n.) தலையில் நெற்றிமுதல் மோவாய் வரையுள்ள முன்புறம்; face.

[முகம் + மண்டலம்.]

முகமதியர் *mugamadiyar,* பெ.(n.) முகமது நபியை முழுமுதற்கடவுளாக எண்ணி வழிபடுபவர்கள்; followers of the Prophet muhammad.

[முகமது → முகமதியர்.]

முகமயக்கு *muga-mayakku,* பெ.(n.) 1. பார்வையால் மயக்கும் கலை (வித்தை) (சங்.அக.); bewitching by looks, a magic art. 2. முகமாயம் பார்க்க; see *muga-māyam.*

[முகம் + மயக்கு.]

முகமலர்–தல் *muga-malar-,* 2 செ.கு.வி. (v.i.) முகப் பொலிவு கொள்ளுதல்; to wear a cheerful countenance. *"பூம்புன லூரன் புக முகமலர்ந்த..... கோதை" (திருக்கோ.363, கொளு.).*

[முகம் + மலர்–தல். மலர்தல் = தோன்றுதல், பொலிவு கொள்ளுதல்.]

முகம் மலர் போன்றதென்பதும் முகம் மேனோக்கிக் கிடத்தல் மொட்டு விரிந்த நிலையையும் முகங் குப்புறக் கிடத்தல் மலர்ந்த பூக்குவிந்த நிலையையும் ஒக்குமென்பதும் கருத்து (வே.க.)

முகமலர்ச்சி *muga-malarcci,* பெ.(n.) முகத்தில் மகிழ்ச்சி தோன்றுகை; cheerfulness of countenance. *"முக மலர்ச்சி கூறல்" (திருக்கோ.363, தலைப்பு).*

[முகம் + மலர்ச்சி. மலர்ச்சி = மகிழ்சி, மலர்கை.]

முகமழி–த்தல் *mugamaḻi-,* 4 செ.குன்றாவி. (v.t.) முகம்மழி–த்தல் பார்க்க; see *mugam-maḻi-.*

[முகம் + அறி–தல். அறிதல் = புதியதாய்க் கண்டுபிடித்தல், பட்டறிதல், தோன்றுதல்.]

முகமறி–தல் *mugam-aṟi-,* 2 செ.குன்றாவி. (v.t.) அறிமுகமாதல்; to be acquainted with. *"முகமறியா விருந்தொன்று" (இலக். வி.555, உதா).*

முகமறு–த்தல் *mugam-aṟu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. இரக்கமின்றிப் பேசுதல்; to speak impartially. *முகமறுத் துறவாடு.* 2. கணக்காய்ப் பேசுதல்; to speak accurately.

[முகம் + அறு–த்தல்.]

முகமன் *mugamaṉ,* பெ.(n.) 1. ஒருவரைப் புகழ்ந்து கூறும் சொற்கள், முகப்புகழ்ச்சி; flattery. *"முருகென உணர்ந்து முகமன் கூறி" (அகநா.272:13).* 2. ஒருவரை நலம் உசாவி வேண்டியோ அல்லது விருந்து போன்றவை கொடுப்பதற்காகவோ சொல்லப்படுவது; civilities, greetings. *விருந்தினர்களை முகமன் கூறி வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர்.* 3. பண்பட்ட பழக்க வழக்கம்; civility, politeness. *"முன்னையிற் புனைந்து முகம னளித்தும்" (கல்லா.13).* 4. வழிபாடு (துதி); praise. *"புகழ்ந்துமுன் னுரைப்பதென் முகம்மனே" (தேவா.863, 3).*

[முகம் → முகன்.]

முகமா-தல் *mugam-ā-,*6 செ.கு.வி. (v.i.) ஏற்றுக் கொள்ளுதல், உடன்படுதல்; to agree. *'தான் முற்கூறியதற்கு முகமாகாமை கண்டு' (சீவக.1120, உரை).*

[முகம் + ஆ-தல்.]

முகமாட்டம் *mugam-āṭṭam,* பெ.(n.) 1. முகத்தைக் காட்டுகை (வின்.); showing one's face. 2. ஒருதலைச் சார்பு (பாரபட்சம்) (வின்.); partiality. 3. மதிப்பு (வின்.); respect for persons. 4. முகமன், 1 (யாழ்.அக.) பார்க்க; see *mugamaṉ.*

[முகம் + ஆட்டம்.]

முகமாயக்காரி *muga-māya-k-kāri,* பெ.(n.) முகக்கவர்ச்சியுள்ளவள் (வின்.); woman of a fascinating looks or charming face.

[முகம் + மாயக்காரி. மாயக்காரி = மாயக்கள்ளி, மயக்கி ஏமாற்றுபவள்.]

முகமாயம் *muga-māyam,*பெ.(n.) முகவழகில் உண்டாம் கவர்ச்சி (வின்.); charm of fascinating face, as of a woman.

[முகம் + மாயம்.]

முகமாற்று *muga-māṟṟu,* பெ.(n.) முக மயக்கு, 1 பார்க்க (சங்.அக.); see *muga-mayakku,1.*

[முகம் + மாற்று.]

முகமாறு-தல் *muga-māṟu-,* 5 செ.கு.வி. (v.i.) முகங்கோணு-தல் பார்க்க; see *mugaṅ-kōṇu-.* *'தம்பால் இரந்தவர்களுக்கு... முகமாறாது ஈதலை' (கலித்.61:11, உரை).*

[முகம் + மாறு-தல்.]

முகமில்வரி *mugam-il-vari,* பெ.(n.) இசைப் பாட்டு வகை (சிலப்.7:4, அரும்.); a kind of song.

[முகம் + இல்^{2}+வரி. முகமில் வரி = முகமொழிந்து ஏனை உறுப்புக்களான் வருவது. வரி = இசை, இசைப்பாட்டு.]

முகமினுமினுப்பு *muga-miṉu-miṉuppu,* பெ.(n.) எண்ணெய் கசிவினால் முகம் பளபளப்பாயிருக்கை; face that glows due to the oil secretion.

[முகம் + மினுமினுப்பு.]

முகமுகங்கணோக்கு-தல் *muga-mugaṅga-ṉōkku-,* 5 செ.கு.வி. (v.i.) முகமுகம்பார்-த்தல், பார்க்க; see *mugamugam-pār-.* *"கண்மல்குநீரார் முகமுகங்க ணோக்கினார்" (சீவக.1808).*

[முகம் + முகம் + கண் + நோக்கு-தல்.]

முகமுகம்பார்–த்தல் *muga-mugam-pār-*, 4 செ.கு.வி. (v.i.) முகத்தை முகம் பார்த்தல்; to look one another in the face. *"மதுரைநகர் நின்ற மாயவினைப் புரவி முகமுகம் பார்த்து" (திருவாலவா.29:1).*

[முகம் + முகம் + பார்–த்தல்.]

முகமுகமாய் *muga-mugam-āy,* கு.வி.எ. (adv.) நேருக்கு நேராய் (வின்.); face to face, personally.

[முகம் + முகம் + ஆய்.]

முகமுகெனல் *muga-mugenal,* பெ.(n.) 1. வண்டு எழுப்பும் (ரீங்காரஞ் செய்யும்) ஒலிக்குறிப்பு; onom. expr. signifying humming of bees. 2. குடத்துள் நீர்புகும் ஒலிக்குறிப்பு; gurgling of water.

முகமுடைவரி *muga-muḍai-vari,* பெ.(n.) மூன்றடி முதல் ஏழடி வரை வரும் இசைப்பாட்டு வகை (சிலப்.7:4, அரும்.); a kind of song, of four to seven lines.

[முகமுடை + வரி.]

முகமுதல் *muga-mudal,* பெ.(n.) முகமும் கண்களும் கிட்டத்தட்ட மெல்லிய (சிறிய) வீக்கமுடன் இருக்கை; soft swelling about the face and the eyes - *urticaria gigantea* (சா.அக.).

[முகம் + முதல்.]

முகமுறி[1]–தல் *muga-muṟi-,*4 செ.கு.வி. (v.i.) 1. கண்ணோட்டமின்மை (தாட்சணிய மறுதல்); to be discourteous; to be unsympathetic. 2. மனநோதல் (வின்.); to be offended. *ஒருவனை முகமுறியப் பேசாதே.*

[முகம் + முறி–தல்.]

முகமுறி[2]–த்தல் *muga-muṟi-,* 4 செ. குன்றாவி.(v.t.) 1. ஈவு இரக்கமின்றி துன்புறுத்துதல் (வின்.); to wound one's feelings; to offend. 2. சின மூட்டுதல் (யாழ். அக.); to provoke another to anger.

[முகம் + முறி[2]–த்தல்.]

முகமுறிவு *muga-muṟivu,* பெ.(n.) 1. சிறிதும் இரக்கமின்றி துன்புறுத்துகை;discourteous behaviour, want of consideration for the feelings of others. 2. வெறுப்பு (சங்.அக.); dislike, hatred.

[முகமுறி →முகமுறிவு.]

முகமுன்னிலை *muga-munnilai,* பெ.(n.) நேர்முகம் (வின்.); one's presence.

[முகம் + முன்னிலை.]

முகமூடி *muga-mūḍi,* பெ.(n.) 1. பிறக்கும் போது குழந்தையின் முகத்தை மூடியுள்ள பை (வின்.); covering often found on the face of children when born. 2. முக்காடு; veil. 3. பிணத்தின் முகத்தை மூடும் ஆடை (இ.வ.); face-cloth. 4. முகத்தை மறைத்து அணிந்து கொள்ளும் துணி அல்லது தோல்; mask of cloth, paper, etc. *முகமூடிக் கொள்ளை புறநகர் பகுதிகளில் அதிகம்.*

[முகம் + மூடி. முகமூடி = முகத்தை மறைத்து அணிந்து கொள்ளும் துணி அல்லது தோல்.]

முகமை *mugamai,* பெ.(n.) முகாமை பார்க்க; see *mugāmai. அவன் முகமையாயிருந்து செயலைச் செய்தான்.*

[முகம்→முகமை. முகமை = முதன்மை, தலைமை.]

முகமொட்டு–தல் *mugam-oṭṭu-,* 5 செ. குன்றாவி.(v.t.) சேவல்களைச் சண்டைக்கு எதிர்முகமாக்குதல் (யாழ்ப்.); to turn the face of one cock towards another rousing them to fight.

[முகம் + ஒட்டு–தல்.]

முகர்[1]–தல் *mugar-,* 2 செ.குன்றாவி. (v.t.) மூக்கால் மோத்தல், மணமறிதல்; to smell.

[முகம்→முகர்→முகர்–தல்.]

முகர்[2]–த்தல் *mugar-,* 4 செ.கு.வி.(v.i.) முகத்தல்; take water in a vessel.

முகர்[3] *mugar,* பெ.(n.) 1. முகம்; face. 2. மூக்கு; nose.

[முகம்→முகர்.]

முகர்வுக்கணு *mugarvukkaṉu,* பெ.(n.) பரு (T.U.L.M.); tubercle.

முகரதம் *muga-radam,* பெ.(n.) முகத்திற் புணர்கை; carnal intercourse in the mouth. *"தன் மனையாளை முகரதஞ் செய்வித்து" (கடம்ப.பு.இலீலா.108).*

[முகம் + Skt. ரதம்.]

முகரம் *mugaram,* பெ.(n.) 1. தொடர்ஒலி; noise, continuous sound. *முகரப்பாய்மா (கம்பரா. அதிகாய.186).* 2. சங்கு; conch. *"முகரத் திடை...... சுறவங் கொணர்ந்தெற்று மறைக்காடே" (தேவா.846, 2).* 3. காகம் (சங்.அக.); crow.

முகரன் *mugaraṉ,* பெ.(n.) பயனிற்சொல் சொல்லுவோன் (சங்.அக.); chatter-box; one who speaks without purpose.

முகராசி *muga-rāśi,* பெ.(n.) 1. முகக் கவர்ச்சி பார்க்க; see *muga-k-kavarcci.* 2. ஆகூழ் (அதிர்ஷ்டம்); luck.

[முகம் + Skt. ராசி.]

முகரி[1] *mugari,* பெ.(n.) 1. மல்லிகைப்பூ (வின்.); jasmine flower. 2. தாழைச் செடி (மலை.); fragrant screw-pine.

தெ. மொகலி

[முகம் → முகரி.]

முகரி[2] *mugari,* பெ.(n.) ஆரவாரஞ் செய்வோன்; one who makes noise. *"பஞ்சேந்திரிய வஞ்ச முகரிகாள்" (தேவா. 719 :9).*

முகரி[3] *mugari,* பெ.(n.) 1. முகனை, 1, 2, 3 பார்க்க; see *mugaṉai, 1, 2, 3.* 2. மூக்கினடி; bottom of the nose.

[முகம்→முகர்→முகரி.]

முகரி[4] *mugari,* பெ.(n.) மூரி (யாழ்.அக.) பார்க்க; see *mūri.*

முகரி[5] *mugari,* பெ.(n.) முகலி பார்க்க; see *mugali.*

முகரிகுளித்தல் *mugari-kuḷittal,* பெ.(n.) அள்ளுகொள்ளை, பெருங்கொள்ளை (யாழ். அக.); plunder, pillage.

[முகரி[3] + குளித்தல்.]

முகரிமை *mugarimai,* பெ.(n.) 1. பேரறிவு (பிங்.); wisdom, knowledge of divine things. *"முகரிமைசா னற்றவர்" (சேதுபு. பலதீ.30).* 2. தலைமை; chieftaincy, lordship. *"முகரிமை யடைந்தவன் றோல்முகத்தவன்" (கந்தபு. கயமுகனுற்.49).*

[முகரி[3] → முகரிமை.]

முகரியோலை *mugari-y-ōlai,* பெ.(n.) முறியோலை பார்க்க; see *muri-y-ōlai.*

முகரு-தல் *mugaru-,* 2 செ.குன்றாவி. (v.t.) நுகருதல்; smelling (சா.அக.).

[முகர்[1]-தல் → முகரு-தல்.]

முகரூபம் *muga-rūbam,* பெ.(n.) 1. முகச்சாயல் (வின்.) பார்க்க; see *muga-c-cāyal.* 2. முகத்தின் அழகு (யாழ்.அக.); beauty of face.

*[முகம் + **Skt.** ரூபம். த. உருவம்→வ. ரூப.]*

முகரூபு *muga-rūbu,* பெ.(n.) முகத்தின் அழகு (யாழ்.அக.); beauty of face.

*[முகம் + **Skt.** ரூபு. த. உருவம்→வ. ரூப - ரூபு.]*

முகரெனல் *mugarenal,* பெ.(n.) ஒலிக் குறிப்பு வகை (வின்.); onom. expr. of humming, as of bees.

முகரை *mugarai,* பெ.(n.) 1. முகவாய்க் கட்டை; chin. அவன் முகரையில் ஒரு குத்து விட்டான். 2. மூக்கினடி; bottom of the nose. *"முகரை யாலுழுத தொய்யில்" (திருக்காளத். பு.கண்ணப்ப.3).* 3. முகம், பழிக்கப்படும் முகம்; face, face as ugly. *'அவன் முகரையைப் பார் எப்படி இருக்கிறதென்று' (உ.வ.).*

தெ. மோர; க. மோரெ; **Hind.** mukhrā.

[முகம்→முகர்→முகரை. முகரை = மூக்கும் வாயும் சேர்ந்த பகுதி.]

முகரைக்கட்டை *mugarai-k-kaṭṭai,* பெ.(n.) முகரை, 1 பார்க்க; see *mugarai,* 1. *சண்டையில் அவன் முகரைக் கட்டை உடைந்தது.*

[முகரை + கட்டை.]

முகரையெலும்பு *mugarai-y-elumbu,* பெ. (n.) மோவா யெலும்பு; lower - jaw, bone.

[முகரை + எலும்பு.]

முகரோமம் *muga-rōmam,* பெ.(n.) மீசை மயிர் (சித்.மரபுகண்.பக்.6); moustache.

*[முகம் + **Skt.** ரோமம்.]*

முகலட்சணம் *muga-laṭšaṇam,* பெ.(n.) முகத்தோற்றம்; visage (சா.அக.).

*[முகம் + **Skt.** லட்சணம்.]*

முகலாங்கலம் *mugalāṅgalam,* பெ.(n.) பன்றி; hog (சா.அக.).

முகலி[1] *mugali,* பெ.(n.) 1. தாழை; a wild shrub growing near the sea shore - fragrant screw pine -pan - dana oderatissima. 2. நிலப்பனை; ground palm - *Curculigo - Corchioides.*

முகலி[2] *mugali,* பெ.(n.) சீகாளத்திப் பக்கத்தோடும் ஓர் ஆறு (தேவா.1095, 3); a river flowing by *Kļahasti.*

முகவங்கு *muga-vaṅgu,* பெ.(n.) முகத்தில் படரும் கருந்தேமல்; a skin disease rendering the face black (சா.அக.).

[முகம் + வங்கு.]

முகவசனம் *muga-vašaṇam,* பெ.(n.) வாய்ச் சொல்; talk, words. *"சுப்பு ஒதுவார் முகவசனத்தாலும் விசதமாகுமே" (மீனாட். சரித்.2:310).*

*[முகம் + **Skt.** வசனம்.]*

முகவசிகரம் *muga-vašigaram,* பெ.(n.) முகக்கவர்ச்சி பார்க்க; see *muga-k-kavarcci.*

*[முகம் + **Skt.** வசிகரம்.]*

முகவசியம் *muga-vaśiyam,* பெ.(n.) முகக்கவர்ச்சி பார்க்க; see *muga-k-kavarcci.*

[முகம் + வசியம். வயம் →வசியம்.]

முகவசீகரம் *muga-vaśigaram,* பெ.(n.) முகக்கவர்ச்சி பார்க்க; see *muga-k-kavarcci.*

[முகம் + **Skt.***வசீகரம்.]*

முகவட்டம் *muga-vattam,* பெ.(n.) முக மண்டலம் பார்க்க; see *muga-mandalam.*

[முகம் + வட்டம்.]

முகவட்டி *muga-vatti,* பெ.(n.) அரச முத்திரை இடும் அலுவலர்; officer of the Royal sealed. *"புரவரிசி காணத்து முகவட்டி மகட மங்கலமுடையான் எழுத்து"* (புது.கல். 183:6).

முகவட்டு *muga-vattu,* பெ.(n.) விலங்கின் நெற்றியுச்சியில் அணியும் அணிவகை; an ornament worn on the forehead of an animal. *"நெற்றி முன்னாப் பூட்டுத் தரள முகவட்டும் பொலிய" (திருவிளை. மாயப்பசு. 15).*

[முகம் + வட்டு. வட்டு = வட்டமான அணிகலன்.]

முகவணை[1] *muga-vanai,* பெ.(n.) இசைக் கருவி வகை; a kind of Indian darionet. *"முகவணையை வாசி"* (பணவிடு.183).

முகவணை[2] *muga-vanai,* பெ.(n.) 1. முகப்பு; facade, porch. 2. முகவுரை (வின்.); preface. 3. வண்டியின் முகப்பில் வண்டிக்காரன் இருந்தோட்டும் இடம்; driver's seat in front of a cart. 4. முகவணைக்கல் பார்க்க; see *mugavanai-k-kal. "நிலைகால் அருகனை முகவனை.... கட்டினதும்" (கோயிலொ.138).*

[முகம் + அணை.]

முகவணைக்கல் *muga-v-anai-k-kal,* பெ. (n.) வாயிலின் மேலுள்ள உத்தரப்படிக்கல், முகப்புக்கல்; stone placed at the top across the pillars of a gate. *"மண்டபத்தில் வாசலில் முகவணைக்கல்லு பழூவு ருடையான் செம்போ உய்யிவந்த பெருமாள்" (புது.கல்.612 : 3).*

[முகவணை + கல்.]

முகவர் *mugavar,* பெ.(n.) ஓர் அமைப்பின், நிறுவனத்தின் சார்பாக பொருள் வாங்கி விற்பனை செய்து கழிவுத் தொகை பெறுபவர்; agent of an organisation, firm, etc. *ஆயுள் காப்பீடு முகவர்கள். சிறுசேமிப்பு முகவர்கள்.*

முகவரி *muga-vari,* பெ.(n.) ஒரு பெயருக்குரியவரின் அல்லது ஒரு நிறுவனத்தின் இருப்பிடம்பற்றிய விளத்தம்; address, superscription.

[முகம் + வரி. முகம் = இடம். வரி = எழுத்து.]

முகவரை *mugavarai,* பெ.(n.) அணிகலனின் நடுவில் பதிக்கும் கல்; central stone in a jewel. *'முகவரை என்று பாடமாம் போது, நாயகக்கல்லுப் போலே பாட்டுக்களுக் கெல்லாம் பிரகாசமாயிருக்கும்' (திவ். திருப்பல்.2, வியா. பக்.34)*

[முகம் + அரை. முகம் = இடம், நடுவிடம். அரை = அரைதல், பதித்தல்.]

முகவல்லபம் *muga-vallabam,* பெ.(n.) மாதுளை (பரி.அக.); pomegranate.

முகவலிப்பு *muga-valippu,* பெ.(n.) முகத்தைக் கோணச் செய்யும் இசிவு (சன்னி) நோய் வகை (வின்.); facial paralysis.

மறுவ. முகவதாசன்னி, முகவூதை.

[முகம் + வலிப்பு. வலிப்பு = இசிவு, இழுப்பு நோய்..]

முகத்தைப் பற்றிய நோய். தலைவலி கண்டு, முகம் சுளுக்கி கண் சிவந்து பிடரியுளைந்து பழைய முகமாறி ஒரு முகமாய்த் திருகி வாங்கி வலித்திடுமோர் ஊதை (வாதம்) நோய்.

முகவவ்வால் *muga-vavvāl,* பெ.(n.) சிவப்பும் சாம்பனிறமுங் கலந்த மீன்வகை; white pomfret, brownish grey, *Stromatens sinensis.*

[முகம் + வவ்வால். வவ்வால் = மீன்வகை.]



முகவழி *muga-vaḻi,* பெ.(n.) மூலம்; means. *அவன் முகவழியாகப் போக வேண்டும்.*

[முகம் + வழி.]

முகவளை *muga-vaḷai,* பெ.(n.) வளைகள் கழலாதிருக்க அணியும் தடை வளையல்; bangle of shorter size, worn as a keeper. *"வளைக்கு முகவளை" (குலோத்.கோ.505).*

[முகம் + வளை. வளை = கைவளை.]

முகவாச்சியம் *muga-vācciyam,* பெ.(n.) 1. கையால் வாயை அடித்து இசையெழுப்புகை; playing on the mouth by striking it with the hand. 2. முகவீணை பார்க்க; see *muga-viṇai.*

[முகம் + வாச்சியம். வாச்சியம் = முழக்கி இசையெழுப்பும் கருவி.]

முகவாசச்செப்பு *muga-vāša-c-ceppu,* பெ.(n.) முகவாசம் வைக்கும் பரணி; casket or box for spices used with betel. *"இன் முகவாசச் செப்பும்....... இளையவ ரேந்தினாரே" (சீவக.838).*

மறுவ. வெற்றிலைப்பெட்டி.

[முகவாசம் + செப்பு. செப்பு = பெட்டி.]

முகவாசம்[1] *muga-vāšam,* பெ.(n.) 1. நறுமணத்து (வாசனை)க்காக வாயில் இட்டுக் கொள்ளுதற்குரிய தக்கோலம், தீம்பூ, இலவங்கம், கருப்பூரம், இனவகை (சாதி) என்ற ஐவகை நறுமணப் பண்டங்கள் (சீவக.838, உரை); fragrant spices, of which there are five viz. *takkōlam, tīmbū, ilavaṅgam, karuppūram, šāti.* 2. வெற்றிலை (சீவக. 1055); betel. *"கொண்டாரின் முகவாசம்" (சீவக.1055).* 3. முகப்பழக்கம் (யாழ்.அக.); familiarity, acquaintance.

[முகம் + Skt. வாசம்.]

முகவாசம்[2] *muga-vāšam,* பெ.(n.) பிணத்தின் முகத்தை மூடும் ஆடை (உ.வ.); face-cloth.

முகவாசல் *muga-vāšal,* பெ.(n.) தலைவாசல்; front gate.

[முகம் + வாசல்.]

முகவாசை[1] *muga-vāšai,* பெ.(n.) ஒருதலைச் சார்பு (வின்.); partiality.

முகவாசை[2] *muga-vāšai,* பெ.(n.) முகவாசம்[2] பார்க்க; see *muga-vāšam*[2].

முகவாட்டம் *muga-vāṭṭam,* பெ.(n.) முகத்தில் தோற்றுஞ் சோர்வு (வின்.); jaded countenance; fatigued appearance.

[முகம் + வாட்டம்.]

முகவாடல் *muga-vāḍal,* பெ.(n.) முகவாட்டம் (வின்.) பார்க்க; see *muga-vāṭṭam.*

[முகம் + வாடல்.]

முகவாத்தியம் *muga-vāttiyam,* பெ.(n.) முகவாச்சியம் பார்க்க; see *muga-vācciyam.*

*[முகம் + **Skt.** வாத்தியம்.]*

முகவாதசன்னி *muga-vāda-šaṉṉi,* பெ.(n.) முகத்தைக் கோணச் செய்யும் ஒருவகை இசிவு நோய் (வின்.); facial paralysis.

மறுவ. முகவலிப்பு

*[முகம் + **Skt.** வாதசன்னி.]*

முகவாதம் *muga-vādam,* பெ.(n.) முகவூதை பார்க்க; see *muga-v-ūdai.*

*[முகம் + **Skt.** வாதம்.]*

முகவாதை *muga-vādai,* பெ.(n.) முகவூதை பார்க்க; see *muga-v-ūdai.*

முகவாய்[1] *muga-vāy,* பெ.(n.) முகவாய்க் கட்டை பார்க்க; see *muga-vāy-k-kaṭṭai.*

முகவாய்[2] *muga-vāy,* பெ.(n.) ஏற்றச்சால் முகப்பதற்கு ஏற்புடையதாகக் கரை முகப்பிடத்தில் தோண்டுவிக்கும் மடைநீர் வாய்; channel.

[முகம் + வாய்.]

முகவாய்க்கட்டை *muga-vāy-k-kaṭṭai,* பெ.(n.) மோவாய்; chin.

[முகவாய் + கட்டை.]

முகவாய்நீட்சி *muga-vāy-nīṭci,* பெ.(n.) கீழ்த் தாடை எலும்பு; prominent lower jaw.

[முகவாய் + நீட்சி.]

முகவாயு *muga-vāyu,* பெ.(n.) முகவலிப்பு பார்க்க; see *muga-valippu.*

*[முகம் + **Skt.** வாயு.]*

முகவார்[1] *muga-vār,* பெ.(n.) குதிரை முதலியவைகட்கு முகத்திலிடுங் கயிறு; head-stall, halter.

[முகம் + வார்.]

முகவார்[2] *muga-vār,* பெ.(n.) மிதியடியின் கட்டைவிரல் பகுதியையும், நடுப்பகுதியையும் இணைக்கும் வார்; a kind of shoe lether.

[முகம் + வார்.]

முகவாள் *muga-vāḷ,* பெ.(n.) கலப்பைக்கூர் (செந்.4, பக்.212); plough share.

[முகம் + வாள். வாள் = கூர்மை.]

முகவிகாரம் *muga-vigāram,* பெ.(n.) முகவேறுபாடு பார்க்க; see *muga-vēṟupāḍu.*

*[முகம் + **Skt.** விகாரம்.]*

முகவியர் *mugaviyar,* பெ.(n.) இன்முகமாயுள்ளோர்; those who look pleased. *"முன்பட்ட தொழிந்து நுங்கண் முகவியர் முனிவு தீர்ந்தார்" (சீவக.2045).*

[முகம் →முகவியர்.]

முகவிலாசம் *muga-vilāšam,* பெ.(n.) முகப் பொலிவு (வின்.); beaming countenance.

*[முகம் + **Skt.** விலாசம்.]*

முகவிழி *muga-viḻi,* பெ.(n.) முகத்தில் விழிக்கை; facing, meeting. *அவனுடன் முகவிழி கிடையாது.*

[முகம் + விழி. விழி = விழித்தல்.]

முகவிழுப்பு *muga-v-iḻuppu,* பெ.(n.) முகவலிப்பு பார்க்க; see *muga-valippu.*

[முகம் + இழுப்பு.]

முகவீணை *muga-vīṇai,* பெ.(n.) ஒரு வகை இசைக் கருவி; Indian clarionet. *"தித்திசிறு முகவீணை... மிழற்ற" (குற்றா. தல. தருமசா. 54).*

[முகம் + வீணை.]

முகவு *mugavu,* பெ.(n.) 1. மாளிகை முகப்பு; facade, porch. 2. ஒளி, காந்தி; brilliance.

[முகம் →முகவு = முன்மண்டபம்.]

முகவுரை[1] *muga-v-urai,* பெ.(n.) முன்னுரை (நன்.1); introduction, preface.

[முகம் + உரை.]

நூல் முதலியவற்றில் நூலின் மூலப் பகுதி தொடங்குமுன் எழுதப்பெறும் நூல் எழுதப் புகுந்த கரணியம், நூல் அமைப்பு, நூலின்தேவை, நன்றியுரை வரை அடக்கிய உரை.

முகவுரை[2] *muga-v-urai,* பெ.(n.) 1. கணக்குப் புத்தக முதலியவற்றின் தலைப்பில் எழுதும் ஆண்டு, மாதம், நாள் முதலிய குறிப்பு; introductory entry of date, etc. in daily account. 2. திருமுகம் முதலியவற்றின் தொடக்கத்தில் எழுதும் நற்சொல்; auspicious expression, at the commencement of an epistle etc.

[முகம் + உரை.]

முகவூதை *muga-v-ūdai,* பெ.(n.) முகவலிப்பு பார்க்க; see *muga-valippu.*

[முகம் + ஊதை.]

முகவெட்டி *muga-veṭṭi,* பெ.(n.) சோழர் ஆட்சியில் இறைவரி முதலிய பல துறைகளிலும், அரசும், அதிகாரிகளும் செலுத்தி வந்த ஆணைக்குரிய ஓலைகளைத் தணிக்கை செய்து முத்திரையிட்டு உரியவர்க்கு ஆணை வழி அனுப்பும் அதிகாரி; an auditor of *Chōla* period. *"இவை புரவுவரி சீகரணத்து முகவெட்டி தெங்கூருடையா னெழுத்து" (தெ.கல்.தொ. 5, கல்.662).*

முகவெட்டிநாயகம் *muga-veṭṭi-nāyagam,* பெ.(n.) புரவு வரித் திணைக் களத்தில் அடங்கிய முகவெட்டி என்னும் வரி திட்ட அதிகாரிகள் எழுதிய ஆணை ஓலைகளை ஆய்வு செய்து அனுமதிக்கும் தலைமை அதிகாரி; chief auditor of *Chōḻa* period.

[முகவெட்டி + நாயகம்.]

முகவெட்டு *muga-veṭṭu,* பெ.(n.) பெரும்பாலும் திரைப்படத்தில், நாடகத்தில் பங்கு (பாத்திரம்) ஏற்பவருக்கு வேண்டிய முகத்தோற்றம்; facial features. *கதைத் தலைவனுக்கு நல்ல முகவெட்டு இருக்க வேண்டும் என்று*

எதிர்பார்த்த காலம் போய் விட்டது. புகழ்பெற்ற நடிகைக்கு இருப்பது போன்ற முகவெட்டு வேண்டும்.

[முகம் + வெட்டு.]

முகவெண்டலை *muga-veṇḍalai,* பெ.(n.) முகமட்டும் வெள்ளையாயிருக்கும் மாட்டுக் குற்றம் (மாட்டுவா.15); a blemish in cattle, of having the face alone white.

[முகம் + வெண்மை + தலை.]

முகவெழுத்து *muga-v-eḻuttu,* பெ.(n.) முகத்தில் எழுதிப் புனையும் ஒப்பனை (பெருங்.வத்தவ.13, தலைப்பு); painting on the face.

[முகம் + எழுத்து.]

முகவெள்ளைப்பருந்து *muga-veḷḷai-p-parundu,* பெ.(n.) முகம் மட்டும் வெளுத்திருக்கும் ஒரு வகைப் பருந்து; a species of kite with white face.

[முகம் + வெள்ளை + பருந்து.]



முகவேலை *muga-vēlai,* பெ.(n.) முகத்தில் மட்டும் முடி மழிக்கை; shaving of the face alone without shaving the head.

[முகம் + வேலை.]

முகவேறுபாடு *muga-vēṟupāḍu,* பெ.(n.) முகத்தில் ஏற்படும் வேறுபாடு; facial deformity.

[முகம் + வேறுபாடு.]

முகவை *mugavai,* பெ.(n.) **1.** மொண்டு கொள்ளுகை; drawing, as water; taking up, as grain. *"பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்" (அகநா.126:11). "முகவை யின்மையி னுகவை யின்றி" (புறநா.368:11).* **2.** மிகுதியாகக் கொடுக்கப்படும் பொருள்; anything which is given in large quantities. *"புகர்முக முகவை" (புறநா.371).* **3.** நீர் முகக்குங் கருவி; bucket for drawing water. *"கயிறுகுறு முகவை" (பதிற்றுப். 22:14).* **4.** அகப்பை (வின்.); ladle. **5.** நெற்பொலி (சிலப்.10:137, உரை); heap of paddy on the threshing-floor. **6.** இராமநாதபுரம்; Ramnad. *"தென் முகவையின் சேதுபதி" (தனிச்.சிந். பக்.456: 34).*

[முழு→ முகு→முக→முகவை (வே.க.).]

முகவைக்கண்ணமுருகனார் *mugavai-k-kaṇṇa-muruganār,* பெ.(n.) 19ஆம் நூற்றாண்டில் குருவாசகக் கோவை என்னும் நூலை இயற்றிய புலவர்; a poet, author of *kuruvāšaga-k-kōvai.*

[முகவை + கண்ணன் + முருகனார்.]

முகவைப்பாட்டு *mugavai-p-pāṭṭu,* பெ.(n.) களத்திற் சூடடிக்கும் போது பாடும் பொலிப்பாட்டு; song sung during the treading of grain on the threshing-floor by cattle. *"பெருஞ் செய்ந்நெல்லின் முகவைப் பாட்டும்" (சிலப்.10: 137). "முகக்கக் கொடுத்தலின் முகவை யாயிற்று" (மேற்படி உரை).*

[முகவை + பாட்டு.]

முகவோலை *muga-v-ōlai,* பெ.(n.) மன்னர் முதலியோர் எழுதும் திருமுகம்; ola letter of a king or of a great person. *"கன்னிதன்னை முன்னர்ப் பயந்தோன் முகவோலை...... மன்னர்க் கெழுத" (பாரத. சம்பவ.43).*

[முகம் + ஓலை.]

முகனை *muganai,* பெ.(n.) 1. முன்புறம்; fore - part, front. 2. தொடக்கம்; beginning, introduction. 3. முதன்மை, தலைமை; headship, leadership. *அவன் முகனை பண்ணுகிறான் (வின்.).* 4. உடனடியாகச் செயற்படுத்துகை; instantaneousness. *நான் வந்த முகனையிலே அவன் போய்விட்டான் (வின்.).* 5. கடுஞ்சினம்; irritability, irascibility. *ஏன் இவ்வளவு முகனை உனக்கு? (இ.வ.).* 6. முதலெழுத்து; first letter.

[முகம்→முகன்→முகனை.]

முகனைக்கல் *muganai-k-kal,* பெ.(n.) கோயில் முதலியவற்றின் வாசற் காலின் மேலுள்ள உத்திரக்கல்; stone lintel, as of a temple gateway.

[முகனை + கல்.]



முகனைக்காரன் *muganai-k-kāran,* பெ.(n.) முதலாளி (வின்.); manager, superintendent, headman.

[முகனை + காரன்.]

முகனைமுடிவு *muganai-mudivu,* பெ.(n.) தொடக்கமும் முடிவும் (ஆதியந்தம்) (வின்.); beginning and end.

[முகனை + முடிவு.]

முகாத்தமஞ்சரி *mugātta-mañjari,* பெ.(n.) திப்பிலி; long pepper -*Piper longum.*

முகாம்புரி *mugām-puri,* பெ.(n.) சிற்றூர் தேவதை (நாஞ்.); a village goddess.

முகாமயம் *mugāmayam,* பெ.(n.) முகத்தில் உண்டாகும் நோய்; disease of the face.

[முகம்→முகாம் +மயம்.]

முகாமிடல் *mugām-idal,* பெ.(n.) மகிழ்ச்சி யூட்டும் ஒரு பொழுது போக்கு; recreation.

[முகாம் + இடல்.]

இதில் இடம் தேர்வு, தலைவர், ஊதல், எழுதுகோல், ஊசி நூல் முதல், உணவுப் பொருட்கள் வரை கொண்டு வந்து தீயால் உணவு ஆக்குவர். சாரணர் பயிற்சி இதில் அடங்கும் (கலை.கள.).

முகாமுகமாய் *mugā-mugamāy,* பெ.(n.) முகமுகமாய் (வின்.) பார்க்க; see *muga-mugamāy.*

முகாமை *mugāmai,* பெ.(n.) முதன்மை, தலைமை (வின்.); headship, superiority, pre-eminence, precedence.

[முகம் = முதன்மை. முகம்→முகமை →முகாமை.]

முகாமைக்காரன் *mugāmai-k-kāraṉ,* பெ. (n.) முன்னின்று நடத்துவோன் (வின்.); manager, headman, president, as of a society; agent.

[முகாமை + காரன்.]

முகாமையாளர் *mugāmai-y-āḷar,* பெ. (n.) மேலாளர்; manager. *வங்கி முகாமையாளர்.*

[முகாமை + ஆளர்.]

முகாமொத்தைமூலி *mugāmottai-mūli,* பெ. (n.) முடக்கொற்றான்; a medicinal creeper, balloon vine - *Cardio - spermum halicacabum* (சா.அக.).

முகாயி *mugāyi,* பெ. (n.) 1. திப்பிலி; long pepper - *Piperlongum*. 2. கருமுகில் நஞ்சு (பாஷாணம்); a prepared arsenic (சா.அக.).

முகாரவிந்தம் *mugāra-vindam,* பெ. (n.) முகத்தாமரை; lotus like face (சா.அக.).

முகாரி *mugāri,* பெ. (n.) இசைவகை; a musical mode.

முகி¹-த்தல் *mugi-,* 4 செ.குன்றாவி. (v.t.) முடித்தல்; to finish, conclude; to achieve, accomplish. *"ஆற்றிற் பாலத்தை முகித்தே னல்லேன்" (குற்றா.தல.கண்டக.39).*

[முடி-த்தல் →முகி-த்தல்.]

முகி²-தல் *mugi-,* 2 செ.கு.வி. (v.i.) முடிதல்; to end, terminate, to be finished. *"முகியாத பகுதி புருடர்" (திருப்பு.681).*

தெ. முகியு; க. முகி.

[முடி-தல்→முகி-தல்.]

முகில் *mugil,* பெ. (n.) 1. கடல் நீரை முகந்து கொள்ளுவதாகக் கருதப்பட்ட மழைவான்; cloud. *"முகிலுரிஞ்சுஞ் சூழி" (பு.வெ.6:22).* 2. திரள் (பிங்.); gathering, mass.

தெ. மொகுலு; க. முகில்.

[முக-→முகில். முகத்தல் = மொள்ளுதல்.]

முகில்வண்ணன் *mugil-vaṇṇaṉ,* பெ. (n.) கார்முகில் நிறமுடைய திருமால்; *Visṇu,* as cloud-cloured. *"முகில் வண்ணன் பேர்பாட" (திவ்.திருப்பா.11).*

[முகில் + வண்ணன்.]

முகில்நிறம் *mugil-niṟam,* பெ. (n.) நீலமும் கருமையும் கலந்த நிறம்; combined colour of blue and black.

[முகில் + நிறம்.]

முகிவு *mugivu,* பெ. (n.) முடிவு; end, termination.

[முகி → முகிவு.]

முகிவுகாலம் *mugivu-kālam,* பெ. (n.) முடிவுகாலம் பார்க்க; see *muḍivu-kālam.*

[முகிவு + காலம்.]

முகிழ்¹-த்தல் *mugiḻ-,* 4 செ.கு.வி. (n.) 1. அரும்புதல்; to bud, put forth buds. *"அருமணி முகிழ்த்தவேபோ லிளங் கதிர் முலையும்.... பரந்த" (சீவக.551). "குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப" (குறுந்.17:2).* 2. தோன்றுதல்; to appear. *"மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே" (ஐங்குறு. கடவுள்). "முளியிலை கழித்தன முகிழிண ரொடுவரு" (நற்.53:7).* 3. கூம்பும் மலர்போல் குவிதல்; to fold or close up, as a flower its petals,

to shut, as the eyes. *"மகவுகண் முகிழ்ப்ப" (கல்லா.7).*

க. முகுல்.

[முல் → முள் → முளு → முழு → முகு → முகிழ் → முகிழ்–த்தல். ஒ.நோ. தொழு → தொகு.]

முகிழ்²–த்தல் *mugil-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஈனுதல்; to bear, bring forth beget. *"அமராராதி யரை முகிழ்த்து" (விநாயகபு. 81:154).* 2. தோற்றுவித்தல்; to display, to cause to appear. *"அற்புத முகிழ்த்தார்" (காஞ்சிப்பு. பன்னிரு.163).*

க. முகுல்

[முல் → முள் → முளு → முழு → முகு → முகிழ் → முகிழ்–த்தல் (வே.க.).]

முகிழ்³–தல் *mugil-*, 4 செ.கு.வி.(v.i.) முகிழ்³, 1 பார்க்க; see *mugil³,1. "முகிழ்ந்து வீங்கிள முலை" (சீவக.1004).*

முகிழ்⁴ *mugil*, பெ.(n.) 1. அரும்பு; bud. *"குறுமுகிழ வாயினுங் கள்ளிமேற் கைந்நீட்டார்" (நாலடி, 262).* 2. குமிழி (மொக்குள்); bubble. *"பெயறுளி முகிழென" (கலித்.56).* 3. தேங்காய் முதலியவற்றின் மடல் (யாழ்ப்.); integument, as of a coconut or palmyra fruit. 4. முகிழ்ப்புறம் பார்க்க; see *mugil-p-puram. 'அனிச்சப் பூவை முகிழ் களையாது சூடினாள்' (குறள், 1115, உரை).* 5. தயிர் முதலியவற்றின் கட்டி; mass, as of curds. *"குவிந்த முகிழ்களை யுடைய உறையாலே இறுகத் தோய்ந்த இனிய தயிர்" (பெரும்பாண்.157, உரை).* 6. முகுளம், 3 பார்க்க; see *mugulam,3.*

[முல் → முள் → முளு → முழு → முகு → முகிழ். ஒ.நோ.தொழு → தொகு.]

முகிழ்காங்கூலம் *mugil-kāṅgūlam*, பெ.(n.) காங்கூலக் கைவகை (சிலப்.3: 18, உரை, பக்.94); a kind of *kāṅgūlam* pose.

[முகிழ் + காங்கூலம்.]

முகிழ்த்தம் *mugilttam*, பெ.(n.) முழுத்தம் (முகூர்த்தம்) பார்க்க; see *muluttam. "பெரியோரைச் சேர்ந்த முகிழ்த்தத்தினால்" (திருவிளை.பயகர.63).*

[முழுத்தம் → முகிழ்த்தம்.]

முகிழ்நகை *mugil-nagai*, பெ.(n.) புன்சிரிப்பு; smile. *"முள்ளெயி றிலங்கு முகிழ்நகை" (பு.வெ.11, ஆண்பாற்.9).*

[முகிழ் + நகை.]

முகிழ்ப்புறம் *mugil-p-puram*, பெ.(n.) காய் பூ, முதலியவற்றின் காம்படி (வின்.); that part of flower or fruit to which the stalk is attached.

[முகிழ் + புறம்.]

முகிழ்விரியாக்கத்திரி *mugil-viriyā-k-kattiri*, பெ.(n.) கத்தரிப் பிஞ்சு; tender brinjal.

[முகிழ் + விரியா + கத்திரி.]

முகிழம் *mugilam*, பெ.(n.) மலரும் பருவத்துப் பேரரும்பு (சது.); flower bud about to bloom.

[முகழ் → முகிழம் (வே.க.)]

முகிழரும்பு *mugil-arumbu*, பெ.(n.) 1. ஆல், அரசு, அத்தி இவற்றின் மலரும் பருவ மொட்டு; flower buds of banyan, ficus religiosa and fig. 2. மலரும் பருவத்தரும்பு; flower bud about to bloom.

[முகிழ் + அரும்பு.]

முகிழி–த்தல் *mugiḻi-*, 4 செ.கு.வி.(v.i.) குவிதல்; to fold or close up, as a flower its petals.

[முகிழ் →முகிழி→முகிழி–த்தல்.]

முகிழிதம் *mugiḻidam,* பெ.(n.) முகிழ், 1 பார்க்க; see *mugiḻ, 1. "பொன்னின் முகிழிதம் விளைத்து" (குற்றா.தல.நாட்டுச்.9).*

[முகிழ் → முகிழி → முகிழிதம் = அரும்பல், அரும்பு (வே.க.).]

முகிள் *mugiḷ,* பெ.(n.) முகிழ்[1], 1 பார்க்க; see *mugiḻ,*[1]*, 1. "முகிண் முலை" (கம்பரா. காப்பு.3).*

[முகிழ் → முகிள் (வே.க.)]

முகிளம் *mugiḷam,* பெ.(n.) முகிழ்[1], 1 பார்க்க; see *mugiḻ*[1]*.,1.*

[முகிழ் →முகிழம்→ முகிளம் (வே.க.)..]

முகிளிதம் *mugiḷidam,* பெ.(n.) 1. முகிழ்[1], 1 பார்க்க; see *mugiḻ*[1]*, 1.* 2. அரைப்பகுதி குவிகை; half - closing, as of flowers or of eyes. *"முகிளிதங் கொண்டு வாட்கண் மொழிதரா" (விநாயகவு. திருநகரப்.126).*

[முகிழ் → முகிழி → முகிழிதம் → முகிளிதம் (வே.க.).]

முகிற்குன்மம் *mugiṟ-kuṉmam,* பெ.(n.) முகிற்குன்றம் பார்க்க; see *mugiṟ-kuṉṟam.*

முகிற்குன்றம்[1] *mugiṟ-kuṉṟam,* பெ.(n.) செய்நஞ்சு (மு.அ.); a mineral poison.

முகிற்குன்றம்[2] *mugiṟ-kuṉṟam,* பெ.(n.) முகில் மூடிய மலை; cloudy mountain.

[முகில் + குன்றம்.]

முகின்மேனி *mugiṉ-mēṉi,* பெ.(n.) திருமால்; *Visṇu. "முகின்மேனி வேதன்றேட" (திருவாலவா.காப்பு.3).*

மறுவ. முகில்வண்ணன்.

[முகில் + மேனி. முகில்வண்ண உடம்புடைய திருமால்.]

முகினாயகன் *mugiṉāyagaṉ,* பெ.(n.) வருணன்; *Varuṇaṉ. "முகினாயகனை நினைப்பிட்டான்" (திருவாலவா.30:2).*

[முகில் + நாயகன். மழை தரும் முகிலின் தலைவன்.]

முகினி *mugiṉi,* பெ.(n.) புளிய மரம் (மலை.); tamarind tree - *Tama rindus indica* (சா.அக.).

முகுட்டை *muguṭṭai,* பெ.(n.) மூட்டைப் பூச்சி; bug. *"உண்ணி முகுட்டை யெறும்பு" (நீலகேசி.79).*

முகுடம்[1] *muguḍam,* பெ.(n.) கோபுரப் பூடு; a kind of unidentified plant (சா.அக.).

முகுடம்[2] *muguḍam,* பெ.(n.) 1. மணிமுடி (மகுடம்); crown. *"முகுடமும் பெருஞ் சேனையும்" (பாரத.குரு.14).* 2. முடியுறுப்பு ஐந்தனுளொன்று (திவா.); a part of the crown, one of five *muḍi-y-uṟuppu.*

வ. முக்குட்ட

[மகுடம்→முகுடம்.]

பேராசிரியர் பரோ தம் 'சமற்கிருத மொழி' என்னும் நூலின் இறுதியில் முகுடம் (மகுடம்) என்பது திரவிடச் சொல்லென்று குறித்திருத்தல் காண்க (வே.க. முல்.1). முடியுறுப்புகள் : 1. முகுடம் (மகுடம்), 2. கயிறு (தாமம்), 3. தாமரை (பதுமம்), 4. கேடகம், 5. கிம்புரி (ஆ.நி.).

முகுத்தம் *muguttam*, பெ.(n.) முழுத்தம் பார்க்க; see *muluttam*. *"உதித்த நன் முகுத்தத் தானும்" (திருவாலவா.3:12).*

முகுந்தநாயகர் *mugunda-nāyagar*, பெ.(n.) 'பஞ்சரத்திரனம்' எனும் நூலை இயற்றிய புலவர்; a poet, author of *"Pañjarattinam"*.

முகுந்தநிதி *mugunda-nidi*, பெ.(n.) குபேரனது ஒன்பான் பொருட்குவையுள் ஒன்று (நவநிதியு லொன்று) (வின்.); a treasure of *Kubēra*, one of *nava-nidi*.

[முகுந்தன் + நிதி.]

முகுந்தம் *mugundam*, பெ.(n.) இதளியம் (பாதரசம்); mercury (சா.அக.).

முகுந்தன் *mugundan*, பெ.(n.) திருமால் (பிங்.); *Visnu*.

முகுரம் *muguram*, பெ.(n.) 1. கண்ணாடி (திவா.); mirror. *"முகமுகரம்புரை முதலொடு சொன்னான்" (பாரத.வாரணா.102).* 2. பெரு மல்லிகை (மூ.அ.); single flowered Arabian Jasmine. 3. தளிர் (சங்.அக.); tender leaf.

முகுலம் *mugulam*, பெ.(n.) 1. உடம்பு; body. 2. ஆதன் (ஆன்மா); soul (சா.அக.).

முகுலி *muguli*, பெ.(n.) தாழை (பரி.அக.); fragrant screwpine.

[முசலி→முகுலி.]

முகுள் *mugul*, பெ.(n.) மலரும் பருவ மொட்டு; flower bud about to bloom.

[முகிழ்→முகிள்→முகுள் (வே.க.).]

முகுளம் *mugulam*, பெ.(n.) 1. அரும்பு; bud. *"பங்கய முகுளந் தன்னைக் கொங்கையாப் படைத்த" (திருவாலவா.4:14) (சூடா.).* 2. தாமரைத் தண்டு (தைலவ.தைல); lotus stalk. 3. ஒரு கையின் ஐந்து விரலும் நிமிர்ந்து நுனிபொருந்திக் கூம்பி நிற்கும் இணையா வினைக்கை வகை (சிலப்.3:18, உரை); a gesture with one hand in which all the fingers are held upright with the tips joined together, one of 33 *iṇaiya-viṇaikkai*. 4. இரண்டு காலும் ஒக்க வைத்து மண்டலமாக இருக்கும் இருக்கை (ஆசன) வகை (தத்துவப். 109, உரை);a squatting posture in which the two legs are joined to form a horizontal circle. 5. முகுளாதனம் (தத்துவப்.108) பார்க்க; see *mugulādanam*. 6. மூளையின் பின் பகுதியாகிய முள்ளந்தண்டுக் கொடியின் உச்சி (இங்.வை.பக்.27); medulla oblongata, hindmost segment of the brain.

வ. முகுல.

[முகிழ்→முகிள்→முகுள்→ முகுளம் (வே.க.).]

முகுளமண்டலாதனம் *mugula-mandalā danam*, பெ.(n.) முகுளம், 4 பார்க்க (தத்துவப்.109, உரை); see *mugulam, 4.*

[முகுளம் + மண்டலாதனம்.]

முகுளாதனம் *mugu!ādanam,* பெ.(n.) இரண்டு கையும் முதுகிலே கூட்டி கும்பிட்டிருக்கும் இருக்கை (ஆசனம்) வகை (தத்துவப்.108, உரை); a pose in which a devotee's hands are joined together on his back in a praying attitude.

[முகுளம் + ஆதனம்.]

முகுளி-த்தல் *muguli-,* 4 செ.கு.வி.(v.i.) குவிதல்; to close, as a flower. *"முகுளிக்கும்..... அரவிந்த நூறாயிரம்" (தண்டி.62).*

[முகிழ் → முகிள் → முகுள் → முகுளி → முகுளி-த்தல் (வே.க.).]

முகூலகம் *mukūlagam,* பெ.(n.) நேர்வாளம் (அரு.அக.); true croton.

முகேரெனல் *mugērenal,* பெ.(n.) ஒலிக் குறிப்பு வகை; onom. expr. signifying humming, splashing. *"தடம்பொய்கை புக்கு முகேரென்னக் கையாற் குடைந்து" (திருவாச.7 :11).*

முகை[1] *mugai,* பெ.(n.) 1. அரும்பு; opening bud. *"முகை மொக்கு ளுள்ளது நாற்றம் போல்" (குறள், 1274). முல்லை அரும்புவதற்குள் தான் திரும்பி வருவதாக தலைவன் தலைவியிடம் சொன்னான். நறுமுகையே.... நறுமுகையே.. நீ ஒரு நாழிகை நில்லாய்.* 2. குகை; cave. *"கன்முகை வயப்புள" (ஐங்குறு.246).* 3. கூட்டம் (பிங்.); crowd. 4. மிடா (பிங்.); large earthen vessel.

[முகுள் →முகு →முகை (வே.க.).]

முகை[2]-தல் *mugai-,* 2 செ.கு.வி.(v.i.) அரும்புதல்; to bud. *"பொய்கை முகைந்த தாமரை" (ஐங்குறு.6).*

[முகுள் →முகு →முகை → முகை-தல் (வே.க.).]

முகை[3]-த்தல் *mugai-,* 4 செ.கு.வி.(v.i.) முகை[2]-தல் (வின்.) பார்க்க; see *mugai[2]-.*

[முகுள் → முகு → முகை → முகை-த்தல் (வே.க.).]

முகைதிற-த்தல் *mugai-tira-,* 2 செ.கு.வி. (v.i.) அரும்பு மலர்தல்; to blossom. *'பொரிப் புன்கும்... முருக்கினொடு முகைதிறந்து' (இலக்.வி.487, உரை).*

[முகை + திற-த்தல்.]

முகைதீன்பிச்சைப்புலவர் *mugaitīn-piccai-p-pulavar,* பெ.(n.) தரிச்சீர் கப்பல் சிந்து, வழிநடைச் சிந்து ஆகிய நூல்களை இயற்றிய புலவர்; Islamic poet.

முகைதீன்புலவர் *mugaitīn-pulavar,* பெ.(n.) மெய்ஞானச் சிந்து என்னும் நூலை இயற்றிய புலவர்; a Muslim poet one who wrote a book called *"Meyñānaśindu".*

முகைப்பால் *mugai-p-pāl,* பெ.(n.) முலைப் பால்; breast milk.

மறுவ. தாய்ப்பால்

[முகை + பால்.]

முகையலூர் *mugaiyalūr,* பெ.(n.) சோழ நாட்டில் இருந்த ஓர் ஊர்; a village in *Chōlā* country.

முகையலூர்ச்சிறுகருந்தும்பியார் *mugaiyalūr-c-ciru-karundumbiyār,* பெ.(n.) கழகப் புலவர்; *Šaṅgam* poet.

[முகையலூர் + சிறு + கருந்தும்பியார்.]

முகையூர் *mugaiyūr,* பெ.(n.) சிதம்பரம் வட்டம் திருநாகையூருக்கருகில் இருந்த சிறிய ஊர்களில் ஒன்றின் பண்டைய பெயர்; ancient name of an village near *Tirunāgaiyūr,* which is now in Chidambaram Taluk. *'பிடாகை முகையூரில் திருணமத்துக் காணியாக' (தெ.இ.க.தொ.12, க.எண்.153:21).*

முங்காச்சி *muṅgācci,* பெ.(n.) நீருள் அமுங்கி முழுகுகை; plunging in water.

[முங்கு → முங்காச்சி.]

முங்காச்சு *muṅgāccu,* பெ.(n.) முங்காச்சி (இ.வ.) பார்க்க; see *muṅgācci.*

முங்கு-தல் *muṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நீரில் மூழ்குதல்; to plunge into water. *"கிள்ளை.... முங்கி யெழும்" (இரகு.தேனு.14).* 2. அமிழ்தல்; to sink. *"முன்னிய வங்க முங்கிக் கேடுற" (மணிமே.29:16).* 3. நிரம்பியிருத்தல்; to be full. *"கொலை முங்குங் களவிடுமால்" (இரகு. நகரப்.25).*

தெ. முங்கு; ம. முங்நு

[முழுங்கு → முங்கு → முங்கு-தல்.]

முங்குளிப்பான் *muṅguḷippāṉ,* பெ.(n.) நீரில் மூழ்கி யிரை தேடும் உள்ளான் என்னும் பறவை; common snipe.

[முங்கு + குளிப்பான் – முங்குளிப்பான்.]

முங்கொசவம் *muṅgośavam,* பெ.(n.) பெண்கள் சேலை கட்டும் போது முன்னால் வைக்கும் மடிப்பு (கோவை.); ornamental pleating in a woman's dress hanging from the right hip.

[முன் + கொசவம். கொசவம் = சேலை மடிப்பு வகை. கொய்சகம் → கொசவம்.]

முச்சக்கரம் *muccakkaram,* பெ.(n.) முப்புவனம் பார்க்க; see *muppuvaṉam.* *"முச்சக்கரமு மளப்பதற்கு நீட்டியகால்" (பொருந.இறுதி வெண்பா.3).*

[மூன்று + சக்கரம்.]

முச்சகம் *muccagam,* பெ.(n.) முப்புவனம் பார்க்க; see *muppuvaṉam.* *"முச்சக நிழற்று முழுமதி முக்குடை" (நன்.258).*

[மூன்று + Skt. சகம்.]

முச்சங்கம் *muccaṅgam,* பெ.(n.) முக்கழகம் பார்க்க; see *mukkaḻagam.* *"ஆதிமுச்சங்கத் தருந்தமிழ்க் கவிஞர்" (சிலப்.பக்.8, கீழ்க் குறிப்பு).*

[மூன்று + சங்கம்.]

முச்சட்டை[1] *muccaṭṭai,* பெ.(n.) 1. அழகு; elegance, beauty. 2. ஒழுங்கு; neatness, order.

தெ. முட்சட

முச்சட்டை[2] *muccaṭṭai,* பெ.(n.) மூன்று சட்டை; three shirts. *ஒன்றே போல முச்சட்டை வாங்கினேன்.*

[மூன்று + சட்டை.]

முச்சடை *muccaḍai,* பெ.(n.) விபீடணன் மகளாய் இலங்கையில் சீதைக்குத் துணையா யிருந்து உதவியவள், திரிசடை; the daughter of *Vibhīṣaṇa* and companion of *Sītā* during her captivity in *laṅgā.* *"முச்சடை யென்பாளவள் சொல்ல" (கம்பரா. நித்தனை. 82).*

[மூன்று + சடை.]

முச்சத்தி *muccatti,* பெ.(n.) அரசர்க் குரியதாகக் கருதப்பட்ட மூவகை ஆற்றல் (இரகு.திக்கு.25); the three powers of a king.

[மூன்று + சத்தி.]

அரசர்க்குரிய மூவகை ஆற்றல் : 1) பொருள், படைகளால் அமையும் ஆற்றல் (பிரபு சத்தி), 2. அமைச்சரின் சூழ்ச்சி வன்மையால் அரசர்க்கு உண்டாகும் ஆற்றல் (மந்திர சத்தி), 3. முயற்சியின் பயனால் விளையும் ஆற்றல், ஊக்கம் (உற்சாக சத்தி).

முச்சதுரம் *mu-c-caduram,* பெ.(n.) 1. முக்கோணம்; triangle. *'நாற்சதுரமும் முச்சதுரமும் வில்வடிவமாகிய மூன்றுலகை' (திருமுரு.181, உரை).* 2. சதுரக்கள்ளி (மூ.அ.); square spurge.

[மூன்று + சதுரம்.]

முச்சந்தி *mu-c-candi,* பெ.(n.) 1. ஒரு நாளின் மூன்று பகுதியாகிய காலை, பகல், மாலை (திரிசந்தி); the three periods of the day. 2. மூன்று தெரு அல்லது மூன்று வழி கூடுமிடம் (திருமுரு.225, உரை); junction of three streets or three ways. 3. முற்காலத்தில் வட்டாட்சி அலுவலகப் பணியாளன் (நாஞ்.); a petty taluk officer of old days.

[மூன்று + சந்தி. சந்தி = கூடுகை, கூடுமிடம்.]

முச்சந்திமண் *muccandi-maṇ,* பெ.(n.) மூன்று தெரு கூடுமிடத்தில் உள்ள தரை மண்; mud at the junction of three streets.

[முச்சந்தி + மண்.]

குழந்தைகளுக்கு நோய் ஏற்படின் கண்ணேறு பட்டு விட்டதாகக் கருதி முச்சந்தி மண்ணை எடுத்து வந்து உப்பு, மிளகாய், மண் சேர்த்து குழந்தையின் தலையைச் சுற்றி நெருப்பில் போட கண்ணேறு போய் விடும் என்ற நம்பிக்கை இன்றளவும் ஊர்களில் காணும் பழக்கமாகும்.

முச்சந்திமூப்பன் *muccandi-mūppaṉ,* பெ.(n.) முச்சந்தியிலுள்ள ஒரு சிறு தெய்வம் (இ.வ.); a village deity, having its abode at the junction of three streets or ways.

[முச்சந்தி + மூப்பன்.]

முச்சரக்கு *muccarakku,* பெ.(n.) சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய முப்பண்டம்; the three pungents - dry ginger, pepper and long pepper (சா.அக.).

[மூன்று + சரக்கு.]

முச்சலாடு *muccalāḍu,* பெ.(n.) காது மிகச் சிறியதாய் உள்ள செம்மறியாடு; brown sheep which has very small size of ears.

மறுவ. மொச்சி ஆடு.

[முச்சல் + ஆடு.]



முச்சலீலிகை *muccaliligai,* பெ.(n.) வாய்நீர் (உமிழ்நீர்), சிறுநீர், விந்துநீர் (நாதநீர்) என்னும் மூவகை நீர்; the three liquids, viz. *vāy-nīr, śiṟu-nīr, nāda-nīr* *"முச்சலீலிகை சொக்கிடுவார்" (திருப்பு.603).*

*[மூன்று + **Skt.** சலிலம் (நீர்)→சலீலிகை.]*

முச்சாரிகை *muccārigai,* பெ.(n.) குதிரை, தேர், யானை என்ற மூன்று படையும் ஒருங்குசேர்ந்து செல்லும் அணிவகுப்பு; parade of horses, chariots and elephants. *"முச்சாரிகை யொதுங்கு மோரிடத்தும்" (ஏலாதி.12).*

[மூன்று + சாரிகை. சாரிகை = அணிவகுப்பு, வட்டமாயோடுகை.]

முச்சி[1] *mucci,* பெ.(n.) 1. தலையுச்சி; crown of head. *"மகளை.... முச்சிமோந்து" (சூளா. இரதநூ.102).* 2. கொண்டை முடி; tuft of hair on the head. *"இவள் போதவிழ் முச்சியூதும் வண்டே" (ஐங்குறு.93).* 3. சூட்டு; creast. *"வாகையொண்பூப் புரையு முச்சிய தோகை" (பரிபா.14:7).*

ம. முச்சி.

[உச்சி→ முச்சி.]

முச்சி[2] *mucci,* பெ.(n.) முச்சில் (வின்.) பார்க்க; see *muccil.*

முச்சிமரம் *mucci-maram,* பெ.(n.) கலியாண முருக்கமரம்; a tree with prickles - *Erythrina indica* one bearing red flowers; the other white flowers (சா.அக.).

[முச்சி[1] + மரம்.]

முச்சிமுச்சிக்கல் *mucci-mucci-k-kal,* பெ.(n.) மணலில் பொருளை ஒளிக்கும் விளையாட்டு (கோவை.); a kind of children play.

மறுவ. கிச்சுக்கிச்சு தாம்பலம்.

[முச்சி + முச்சி + கல்.]

முச்சியமான்சுரம் *mucciya-māṉ-śuram,* பெ.(n.) விட்டுவிட்டு வரும் காய்ச்சல்; intermittent fever. *காய்ச்சல் விட்டுவிட்டு வரும்பொழுது வியர்வை, நடுக்கம், பிதற்றல், கழிச்சல், கக்கல் (வாந்தி) முதலிய குணங்கள் உண்டாகும்* (சா.அக.).

முச்சியன் *mucciyaṉ,* பெ.(n.) 1. தச்சன் (யாழ்ப்.); carpenter, cabinet maker. 2. வண்ணக்காரன் (வின்.); painter.

ம. முச்சியன்

முச்சிரம்[1] *mucciram,* பெ.(n.) சூலம் (வின்.); trident.

*[மூன்று + **Skt.** சிரம்.]*

முச்சிரம்[2] *mucciram,* பெ.(n.) பெருஞ்சீரகம் (பரி.அக.); anise seed.

முச்சில் *muccil,* பெ.(n.) சிறுமுறம் (பிங்.); toy winnow.

[முற்றில்→ முச்சில். முற்றில் = சிறுமுறம்.]



முச்சினி *muccini*, பெ.(n.) மூன்றாம் மாதம் (க.அக.); third month.

முச்சீரடி *mucciradi*, பெ.(n.) சிந்தடி (மூன்று அடிகளைக் கொண்ட செய்யுள்); metrical line of three feet.

[மூன்று + சீர் + அடி.]

முச்சீரம் *mucciram*, பெ.(n.) மூன்று வகை சீரகம் (1. சீரகம், 2. பெருஞ்சீரகம், 3. கருஞ் சீரகம்); the three kinds of cumin (சா.அக.).

[மூன்று + சீர் + அம்.]

முச்சு-தல் *muccu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. மூடுதல்; to cover. *"தாட்செருப்புலகெலாந் தோன்முச்சுந் தரம்போல்" (ஞானவா. மாவலி.8).* 2. செய்தல்; to make. *"முச்சியே மரக்கோவை முயற்சியால்" (சிவதரு.பாவ.81).*

தெ. மீயூ; க., து. முச்சு.

[மூய் = மூடுதல், முடிதல். மூய் → மூச்சு → முச்சு → முச்சு-தல்.]

முச்சுக்கருவளி *muccu-k-karuvali*, பெ.(n.) ஊர்க்குருவி; a bird - sparrow (சா.அக.).

முச்சுடர் *mu-c-cudar*, பெ.(n.) ஞாயிறு, திங்கள், தீ ஆகிய மூன்று சுடர்கள்; the three luminaries viz., *nāyiru, tingal, tī*. *"அந்திச் சேதியொளி முச்சுடர் முக்கணும்" (தக்கயாகப்.281).*

[மூன்று + சுடர்.]

முச்சுடும் *muccudum*, கு.வி.எ.(adv.) முச்சூடும் பார்க்க; see *muccūdum*.

முச்சுரம் *muccuram*, பெ.(n.) ஊதை (வாதம்), பித்தம், சளி (சிலேட்டுமம்) முதலியவற்றால் உண்டான காய்ச்சல்; *vāta* fever, *pitta* fever and *kapa* fever (சா.அக.).

[மூன்று + சுரம்.]

முச்சூடும் *muccūdum*, கு.வி.எ.(adv.) முழுவதும்; fully. *நாள் முச்சுடும் காத்திருந்தேன், ஆனால் அவனைப் பார்க்க முடியவில்லை.*

ம. முச்சூடும்.

முச்சை *muccai*, பெ.(n.) காற்றாடிப் பட்டத்தில் முக்கோணமாகக் கட்டி நூலுடன் இணைத்து முடிச்சிடும் மூன்று சிறுதுண்டு நூல்கள் (யாழ்ப்.); the three strings tied to a paper kite in a triangular form with their free ends knotted together with the line.

முச்சொல்லலங்காரம் *mu-c-col-alangāram*, பெ.(n.) ஒரு தொடர் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு மூன்று பொருள் கொண்டு நிற்கும் சொல்லணி வகை (வின்.); a figure of speech in which an expression is capable of three meanings when divided in three different ways.

*[மூன்று + சொல் + **Skt.** அலங்காரம்.]*

முசகம் *mušagam*, பெ.(n.) எலி; rat (சா.அக.).

முசங்கி *mušangi*, பெ.(n.) ஒருவகைக் கொவ்வைக் கொடி; a common creeper of the hedges (சா.அக.).

முசர் *mušar*, பெ.(n.) 1. மோர் (பிங்.); butter milk. 2. தயிர் (சது.); curd.

க. மொசரு

முசரு *mušaru*, பெ.(n.) முசர் (தைலவ.தைல.) பார்க்க; see *mušar*.

முசருகம் *mušarugam,* பெ.(n.) பவளம்; coral (சா.அக.).

முசரை *mušarai,* பெ.(n.) வெள்ளாட்டுக்கு உண்டாகும் தொற்று நோய்; a contagious disease occures to goats.

முசல்[1] *mušal,* பெ.(n.) முயல் பார்க்க; see *muyal*(சா.அக.).

[முயல் → முசல்.]

முசல்[2] *mušal,* பெ.(n.) 1. கொம்மட்டி; gourd. 2. ஓர் பூண்டு; a plant.

முசல்காதிலை *mušal-kādilai,* பெ.(n.) முயற்காதிலை பார்க்க; see *muyar-kādilai* (சா.அக.)

[முசல் + காது + இலை. முயற்காது போன்ற இலையை யுடைய கொடி.]

முசல்செவிக்கள்ளி *mušal-ševi-k-kaḷḷi,* பெ.(n.) முயற்செவிக்கள்ளி பார்க்க; see *muyar-ševi-k-kaḷḷi.*

[முசல் + செவி + கள்ளி. முயற்காது போன்ற இலையுடைய கள்ளிச் செடி.]

முசல்மான் *mušal-māṉ,* பெ.(n.) முகம்மதியன்; Muhammed.

முசல்மூலி *mušal-mūli,* பெ.(n.) முயல் தின்னும் மூலிகை, அறுகம்புல்; harialli grass or devil's grass, *Cynodon dactylon* (சா.அக.).

[முசல் + மூலி.]

முசல்வலி *mušal-vali,* பெ.(n.) முசல் வலிப்பு பார்க்க; see *mušal-valippu.*

முசல்வலிப்பு *mušal-valippu,* பெ.(n.) வலிப்பு நோய் வகை (மூ.அ.); a kind of recurring fit or spasm, epilepsy.

[முசல் + வலிப்பு.]

முசலகன் *mušalagaṉ,* பெ.(n.) 1. முயலகன் பார்க்க; see *muyalagaṉ. "கனமாகச் செய்த முசலகன் ஒன்று" (தெ.இ.கல்.தொ.ii, 135:30).* 2. ஒரு நோய்; a disease. *"அகங்காரமாகிய முசலகனேறி" (திவ். திருமாலை.43, வியா.140).*

முசலம் *mušalam,* பெ.(n.) 1. உலக்கை (பிங்.); wooden pestle for pounding paddy. 2. போரில் பயன்படுத்தும் ஒரு படைக்கருவி (திவா.); a pestle like weapon of war, club. *"நெடு முசலங் கொண்டடிப்ப" (கம்பரா. கும்பகருண.56).*

முசலி[1] *mušali,* பெ.(n.) உலக்கையைப் (முசலத்தை) படையாகக் கொண்ட பலராமன் (பிங்.); Balarama as wielding a pestle-like weapon.

முசலி[2] *mušali,* பெ.(n.) 1. பல்லி (வின்.); house lizard. 2. ஓந்தி; blood sucker. 3. பச்சோணான்; chameleon. 4. உடும்பு; a large kind of lizard. 5. முதலை (திவா.); alligator. 6. கபில நிறமும் 2 1/2 விரல வளர்ச்சியும் உள்ள கடல் மீன்வகை; a sea fish, brassy brown, attaining 2 1/2 in. in length, *Lobotes Surinamensis.*

முசலி[3] *mušali,* பெ.(n.) 1. தாழை (சூடா.); fragrant screwpine-*Pandanus.* 2. நிலப் பனை; ground palm plant, *Curculigo Orchioides.* 3. வெருகன் கிழங்கு; a bulbous root.

தெ. மெகலி

முசலிகா *mušaligā*, பெ.(n.) செந்தாழை; a red or deep yellow variety and very fragrant screw pine shrub - *Pandanus.*

முசலிகை¹ *mušaligai*, பெ.(n.) உடும்பு; guana.

முசலிகை² *mušaligai*, பெ.(n.) முசலிகை யாதனம் பார்க்க; see *mušaligai-y-ādaṉam.*

முசலிகையாதனம் *mušaligai-y-ādaṉam*, பெ.(n.) இரண்டு கையுங் காலுஞ் சம்மணங் கூட்டுவது போல் மடக்கி மார்பு நிலத்திலே தோயக் கிடக்குமாறு செய்யும் இருக்கை (ஆசனம்) வகை (தத்துவப்.108, உரை); a kind of yogic posture which consists in lying on one's chest with hands and legs folded in a peculiar way (சா.அக.).

[முசலி² → முசலிகை + Skt. ஆதனம்.]



முசலிகொங்கை *mušali-koṅgai*, பெ.(n.) தாழை விழுது; adventitious roots of screw pine (சா.அக.).

[முசலி² + கொங்கை.]

முசலை *mušalai*, பெ.(n.) ஒருவகைக் கோரைக் கிழங்கு; a kind of fragrant root as that of nut grass - *Cyperus rotundus* (சா.அக.).

முசற்காது *mušaṟ-kādu*, பெ.(n.) 1. மருந்துப் பூடு வகை; a medicinal plant, Ludwigia. 2. ஆட்டுக் காலடம்பு; goat's-foot creeper. *"வீக்கம்..... ஏகும் முசற்கா திலையிருக்கும் ஊரைவிட்டு" (பதார்த்த.573).*

[முயல் → முசல் + காது.]

கை, கால், விரை வீக்கத்தைப் போக்கும் ஒருவகைப் பூண்டு (சா.அக.).

முசற்கொம்மட்டி *mušaṟ-kommaṭṭi*, பெ.(n.) ஒருவகை முலாம்பழம் (கொம்மட்டி) (வின்.); a kind of melon, *convoloulus.*

[முசல் + கொம்மட்டி.]

முசற்செவி *mušaṟ-ševi*, பெ.(n.) 1. முயற் காது; ear's of the hare. 2. முயற் செவிக்கள்ளி பார்க்க; see *muyaṟ-ševi-k-kaḷḷi.* 3. முயற்காதிலை பார்க்க; see *muyaṟ-kādilai* (சா.அக.).

[முயல் → முசல் + Skt. செவி.]

முசற்றழை *mušaṟṟaḻai*, பெ.(n.) முயல் என்னும் பெயர் கொண்ட காட்டுப் புதர்ச் செடி; rabbit weed - *Hare leaf - Ipomoea biloba* (சா.அக.).

[முயல் → முசல் + தழை.]

முசற்றாழை *mušaṟṟāḻai*, பெ.(n.) முசற்றழை பார்க்க; see *mušaṟṟaḻai* (சா.அக.).

முசற்றிசை *mušaṟṟišai*, பெ.(n.) முயற்றிசை (வின்.) பார்க்க; see *muyaṟṟišai.*

முசாதகம் *mušādagam*, பெ.(n.) வெண்டாமரை (பரி.அக.); white lotus.

முசி¹-தல் *muši-*, 2 செ.கு.வி.(v.i.) 1. அறுதல்; to be torn. *"மகுடந் தேய்ப்ப*

முசிந்து... தழும்பேறி" (பதினொ. காரை. அற்பு.76). 2. கசங்குதல்; to be crumpled, as a garment. *'முசிந்த புடைவையை யுடைய' (கலித். 96, உரை).* 3. களைத்தல் (இ.வ.); to be tired. 4. ஊக்கங் குன்றுதல்; to feel discouraged. *"முசியாத அத்விதீய காரணமா யென்னுதல்" (ஈடு, 2. 8:5).* 5. முசி², 1, 3 பார்க்க; see *muši², 1, 3.* 6. முசி²–, 4 பார்க்க; see *muši², 4. மூங்கில்போல் அன்னை சுற்றம் முசியாமல் வாழ்ந்திடுவீர்.*

முசி²–த்தல் *muši-,* 4 செ.கு.வி.(v.i.) 1. களைத்தல் (வின்.); to faint, become tired. 2. துன்பம் கொள்ளுதல் (கிலேசித்தல்) (திவ்.பெரியதி.1. 9:4, அரும்.); to be distressed. 3. மெலிதல்; to grow thin. *"என்னை வரவிட்ட பாவி முசித்துச் சதை கழியாமல்" (தனிப்பா.1, 236:3).* 4. அழிதல்; to perish. *"முசித்திடாமல் வாழ்ந்திருத்தி" (பிரபோத.3: 66).* 5. முசி¹, 2 பார்க்க; see *muši¹, 2. "திருவரையிலே முசிக்கையாலும்" (திவ்.திருப்பல்.9, வியா.).*

முசி³–த்தல் *muši-,* 4 செ.குன்றாவி.(v.t.) திருகுதல்; to wrench, twist. *"அன்னவன் முடித்தலை முசித்து" (கம்பரா.பொழிலிறு.7).*

முசிட்டெறும்பு *mušiṭṭeṟumbu,* பெ.(n.) முசிற்றெறும்பு பார்க்க; see *mušiṟ-ṟ-eṟumbu.*

[முசிடு + எறும்பு.]

முசிடி *mušiḍi,* பெ.(n.) தன்னிறத்தை அடிக்கடி மாற்றும் ஒரு வகைக் கடல் மீன்; a sea fish which changes its colour.

முசிடு *mušiḍu,* பெ.(n.) முசிறு, 1, 2 (வின்.) பார்க்க; see *mušiṟu, 1, 2.*

க. முசுடு

[முசிறு→ முசிடு.]

முசிப்பாற்றி *muši-p-pāṟṟi,* பெ.(n.) இளைப்பாற்றுகை (வின்.); rest; refreshment.

[முசிப்பு + ஆற்றி. ஆற்று→ ஆற்றி.]

முசிப்பாறு–தல் *mušippāṟu-,* 5 செ.கு.வி. (v.i.) இளைப்பாறுதல் (வின்.); to rest, receive, take comfort.

[முசிப்பு + ஆறு–தல்.]

முசிப்பு *mušippu,* பெ.(n.) 1. மெலிவு; thinness, emaciation. *"விலாப்புடை முசிப்பற வீங்க" (உத்தரரா. சந்திரகே.71).* 2. களைப்பு (வின்.); languor, debility, fatigue, weariness. 3. அழிவு; destruction. *"போகந் துய்த்து முசுப்பின்றி வாழ்தல் வாழ்வு" (பிரபோத.38:30).* 4. இடை (வின்.); waist.

[முசி²→ முசிப்பு.]

முசிரி *muširi,* பெ.(n.) முசிறி பார்க்க; see *mušiṟi. "முகையவிழ் தார்க்கோதை முசிரியார் கோமான்" (முத்தொள்.6).*

[முசிறி→ முசிரி.]

முசிலாப்பு *mušil-āppu,* பெ.(n.) ஒடுக்கிக் கட்டுகை (யாழ்ப்.); compression to a small bulk.

முசிவு¹ *mušivu,* பெ.(n.) முசிப்பு, 2 பார்க்க; see *mušippu, 2. "அரிமுசிவொடு மெழ" (தேவா.832:3).*

[முசி→ முசிவு.]

முசிவு² *mušivu,* பெ.(n.) கசங்குகை; crumpling. *"திருப்பரியட்டத்தைக் கொண்டு வசைவும் முசிவுமற விரித்துச் சாத்தி" (திவ். பெரியாழ். 3. 4:2, வியா.பக்.594).*

[முசி→ முசிவு.]

முசிற்றெறும்பு *muširrerumbu,* பெ.(n.) முசிறு பார்க்க; see *muširu.*

முசிறி *muširi,* பெ.(n.) மேற்கடற் கரையிலுள்ள பழைய துறைமுகப் பட்டினம்; Muziris, an ancient sea-port, near Cranganore. *"முழங்கு கடன் முழவின் முசிறியன்ன" (புறநா.343, பி-ம்.). "முதுநீர் முன்றுறை முசிறி முற்றி" (அகநா.57:15).*

வால்மீகி இராமாயணம் இப்பட்டினத்தை முரசீபத்தனம் என்று கூறுகிறது. சுள்ளி என்னும் பேரியாறு கடலில் கலக்குமிடத்து இருந்த பட்டினம். முற்காலத்து யவனர் முதலியோர் மிளகு முதலிய சரக்குகளை மேனாட்டிற்குக் கொண்டு செல்லும் துறைமுகம் எனத் தாலமி முதலிய யவன யாத்திரிகரால் புகழப்பட்டது. சேரனது தலைநகரமாகவும் இருந்தது (அபி.சிந்.).

முசிறு *muširu,* பெ.(n.) 1. செந்நிறமுள்ள எறும்பு வகை; red ant, Formica smaragdina. 2. கடுகடுப்புள்ளவ-ன்-ள்; one easily enraged; surly, irritable person. 3. முசு[1] பார்க்க (வின்.); see *mušu[1].*

[முயிறு → முசிறு.]

முசு[1] *mušu,* பெ.(n.) கருங்குரங்கு வகை; langur-Semnopithecus priamus. *"கருமை மெழுகியவை போன்றினிய வல்லா முகத்த முசுவுங் குரங்கு மிரிய" (சீவக.1414). "மைபட் டன்ன மாமுக முசுக்கலை" (அகநா.267:9). "மெய்யோ வாழிதோழி சாரல் மைபட்டன்ன மாமுக முசுக்கலை" (குறுந்.121:1, 2). "இன்முசுப் பெருங்கலை நன்மேயல் ஆரும்" (நற்.119:5).*

க. முசு; ம. மொச்ச; து. முஜ்ஜு (mujju).



முசு[2] *mušu,* பெ.(n.) திமில்; hump.

முசுக்கட்டை *mušu-k-kaṭṭai,* பெ.(n.) 1. கம்பளிப் பூச்சி; hair caterpiller or silk worm. 2. அரம்பத்தின் பற்களைப் போன்ற இலைகளையும், கம்பளிப் பூச்சி போன்ற பழங்களையும் உடைய ஒருவகைக் குத்துச் செடி; mulberry, *Morus indica - Indian mulberry* plant.

முசுக்கட்டைப்பூச்சி *mušukkaṭṭai-p-pūcci,* பெ.(n.) கம்பளிப் பூச்சி; hairy caterpiller.

[முசுக்கட்டை + பூச்சி.]

முசுக்கை *mušukkai,* பெ.(n.) முசுமுசுக்கை (மூ.அ.) பார்க்க; see *mušumušukkai.*

முசுக்கொட்டைச்செடி *mušu-k-koṭṭai-c-ceḍi,* பெ.(n.) முசுக்கட்டை, 2 பார்க்க; see *mušu-k-kaṭṭai,* 2. *இதன் இலை பட்டுப்புழுவிற்கு உணவாகப் பயன்படுகிறது.*

[முசுக்கட்டை → முசுக்கொட்டை + செடி.]

முசுகுந்தன் *mušukundan,* பெ.(n.) தேவர்கள் அசுரரொடு பொருதபொழுது தேவர்களுக்கு உதவிய ஒரு மன்னன்; an emperor, who assisted the *Dēvas* in their wars against the Asuras. *'வெற்றி பொருந்திய வேலையுடைய முசுகுந்த னென்னும் மன்னனுக்கு வரும் இடையூற்றை' (சிலப்.5:65, உரை).*

முசுட்டுமுட்டைத்தைலம் *mušuṭṭu-muṭṭai-t-tailam,* பெ.(n.) முசுற்றெறும்பின் முட்டைகளினின்று வடித்தெடுக்கும் எண்ணெய்; a medicinal oil prepared from the eggs of red ants.

[முசுடு + முட்டை + Skt. தைலம்.]

முசுட்டை *mušuṭṭai,* பெ.(n.) கொடி வகை (வின்.); a kind of creeper - *Iponoea candicans.*

மறுவ. பஞ்சி.

க. முசுடெ.

இது ஒரு வகைக் கொடி, தென்னிந்தியாவிலெங்கும் கிடைக்கக் கூடியது. இதன் கொடி மருத்துவ குணமுடையது. கைப்பு, கார்ப்புச் சுவையுடையது. இக் கொடியைக் குடிநீரிட்டாவது அல்லது பொடி செய்து இதர மருந்துகளுடன் சேர்த்தாவது கொடுக்க வளி, வெள்ளை, நீர்த்தினவு, புடை, சிறு சிரங்கு இவைகளை நீக்கும் குணமுடையது. இதை அரைத்து எண்ணெய்விட்டுக் காய்ச்சி சொறி, சிரங்கு, நமைச்சல் முதலியவைகட்குப் பூசிவர அவை குணமாகும். இது நுட்புழுக் கொல்லி (Germicide), ஊதை (வாத) மடக்கி (Anti-vata) மலமிளக்கி (Laxalive), ஆகியவற்றிற்குச் சிறந்த மருந்தாகும். இக்கொடியின் மருத்துவக் குணங்களைப் பற்றிய குறிப்புக்களை 'அகத்தியர் குணபாடப் பாடலால் அறிய முடிகிறது.

"மாதே முசுட்டையது வாதமொடு ஐயத்தைத்
தீதே புரிநீரைத் தீர்க்குங்காண் –
வேதனைசெய்
வன்மலத்தைத் தள்ளும் வறட்சி
சொறிசிரங்கைச்
சன்மமறப் போக்கிலிடுஞ் சாற்று"
(பொருட்பண்புநூல்–குணபாடம் – 1 பக்.599)

முசுட்டைப்பெண் *mušuṭṭai-p-peṇ,* பெ.(n.) ஒருவகைப் புழு; a kind of worm (சா.அக.).

முசுடர் *mušuḍar,* பெ.(n.) முசுண்டர் (சூடா.) பார்க்க; see *mušuṇḍar.*

முசுடு[1] *mušuḍu,* பெ.(n.) முசிறு (வின்.) பார்க்க; see *muširu. மரங்களில் அதிகமாக இருக்கும் பழுப்பு நிறப் பெரிய எறும்பு.*

[முசிறு→முசுடு.]

முசுடு[2] *mušuḍu,* பெ.(n.) சிடுமூஞ்சி, சடுதியில் சினங்கொள்வோன் (முன்கோபி); irritable person. *அவர்முசுடாக இருந்தாலும் நல்லவர்.*

முசுண்டர் *mušuṇḍar,* பெ.(n.) கீழ்மக்கள்; low, mean people. *"தவிர்தி யினி முசுண்டரவர் சங்கந் தன்னை" (சேதுபு.துரா.65).*

[முசுடு→முசுண்டர் = முசுடு எறும்பு போல் தாழ்ந்த, கீழ்மக்கள்.]

முசுண்டி *mušuṇḍi,* பெ.(n.) படைக்கலக் கருவி வகைகளுள் ஒன்று (வின்.); a sledge - like weapon of war. *"முழு முரட்டண்டுவேன் முசுண்டி" (கம்பரா. பிரமாத்திர.48).*

முசுண்டை *mušuṇḍai,* பெ.(n.) கொடி வகை; leather - berried bindweed - *Rivea ornata. "புல்கொடி முசுண்டையும்" (நெடு நல்.13). "முன்றின் முஞ்ஞையொடு முசுண்டை பம்பி" (புறநா.320:1). "குவையிலை முசுண்டை வெண்பூக் குழைய" (அகநா.94:2).*

க. முசுடே.

முசுப்பதி *mušuppadi,* பெ.(n.) போர் வீரருறையுமிடம் (வின்.); barracks for soldiers.

முசுப்பாத்தி[1] *mušuppātti,* பெ.(n.) 1. முசிப்பாற்றி பார்க்க; see *muši-p-pāṟṟi.* 2. வேலை; work.

முசுப்பாத்தி[2] *mušuppātti,* பெ.(n.) வேடிக்கை, வியப்பு, பொழுதுபோக்கு; amusement, good fun. *குழந்தைகள் விளையாடிக் கொண்டு இருப்பதைப் பார்க்க முசுப்பாத்தியாக இருந்தது. இந்த ஊரில் ஒரு முசுப்பாத்தியும் இல்லை.*

[முசிப்பு→முசுப்பு + ஆற்றி. முசுப்பாற்றி →முசுப்பாத்தி.]

முசுப்பிரா *mušu-p-pirā,* பெ.(n.) நரிக் கொன்னை; a variety of cassia (சா.அக.).

முசுப்பு *mušuppu,* பெ.(n.) முசு[2] (உ.வ.) (திருவிருத்.21, வியா.) பார்க்க; see *mušu*[2].

தெ. முபு

[முசு→முசுப்பு.]

முசும்பு-தல் *mušumbu-,*5 செ.கு.வி.(v.i.) முணமுணத்தல் (வின்.); to mumble, mutter murmur.

[உசும்பு-தல்→ முசும்பு-தல்.]

முசுமக்கி *mušu-makki,* பெ.(n.) மஞ்சட் காளான்; yellow mushroom.

முசுமல்லிகை *mušu-malligai,* பெ.(n.) காட்டு மல்லிகை; wild jasmine (சா.அக.).

முசுமாலினி *mušu-māliṉi,* பெ.(n.) மஞ்சட் காசி தும்பை; yellow balsam (சா.அக.).

முசுமுசு[1]**-த்தல்** *mušu-mušu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. நீர் முதலியன கொதித்தல் (வின்.); to bubble up, as boiling water. 2. குறட்டை விடுதல் (வின்.); to snore. 3. தினவெடுத்தல் (சங்.அக.); to feel a sensation of itching.

[முசுமுசெனல்→ முசுமுசு-த்தல்.]

முசுமுசு[2]**-த்தல்** *mušu-mušu-,* 4 செ. குன்றாவி.(v.t.) உறிஞ்சுதல்; to snuff up, as a hog.

[முசுமுசெனல் → முசுமுசு-த்தல்.]

முசுமுசுக்கை *mušu-mušukkai,* பெ.(n.) சுனையுள்ள இலைகளையும் அரத்தநிறப் பழங்களையும் உடைய மருந்துக் கொடிவகை; bristly bryony, creeper, *Mukia scabrella.* *"முசுமுசுக்கை மாமூலி" (பதார்த்த.57).*

ம. முசுமுசுக்க.

முசுமுசு க்கைக்கீரை *mušu-mušukkai-k-kīrai,* பெ.(n.) முசுமுசுக்கையிலை; leaf of *mušumušukai* (சா.அக.).

தெ. முசுமுசுகய; இந். பிலவி; மரா.சித்ரதி.

[முசுமுசுக்கை + கீரை.]

மூச்சு இருமல் (அ) ஈளை நோய் (சுவாசகாசம்), கோழை முதலியவற்றிற்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

முசுமுசுச்சாலை *mušu-mušu-c-cālai,* பெ.(n.) பழைய புதைகுழி வகை (இ.வ.); kistvaen, ancient grave.

[ஒருகா.முதுமக்கட்சால்→ முசுமுசுச்சால் →முசுமுசுச்சாலை.]

முசுமுசுப்பு[1] *mušu-mušuppu,* பெ.(n.) 1. நீர் முதலியன கொதிக்கும் ஒலி; sound of boiling. 2. சொறியும் போது உண்டாகும் ஒலி; sound of scratching provoked by itching.

[முசுமுசு→ முசுமுசுப்பு.]

முசுமுசுப்பு[2] *mušu-mušuppu,* பெ.(n.) விருப்பம், அன்பு (சிரத்தை); eager of attention; earnestness. *"சீராட்டி வளர்த்த முசுமுசுப் பெல்லாம் திருநிறத்திலே தோன்றும்படி யிருக்கும்" (திவ்.பெரியாழ்.1. 2:12 வியா.பக்.38).*

முசுமுசெனல் *mušu-mušeṉal,* பெ.(n.) 1. நீர் முதலியன கொதித்தற் குறிப்பு; sound of boiling. 2. தினவெடுத்தற் குறிப்பு; itching sensation.

[முசுமுசு → முசுமுசெனல்.]

முசுரம் *mušuram,* பெ.(n.) புற்றுக் காளான்; mushroom growing on ant hill (சா.அக.).

முசுலி *mušuli,* பெ.(n.) குதிரையின் கணைக்காற் குழைச்சில் வீக்கங் கண்டு நொண்டச் செய்யும் நோய் வகை (அசுவசா. 107); a disease of swelling in the ankles of horse which makes it limp.

முசுவல் *mušuval,* பெ.(n.) முசுண்டை (மலை.) பார்க்க; see *mušuṇḍai.*

முசுறி *mušuṟi,* பெ.(n.) முசிறி பார்க்க; see *mušiṟi. "முசிறியன்ன நலஞ் சால் விழுப் பொருள்" (புறநா.343).*

முசுறு *mušuṟu,* பெ.(n.) 1. முசு[1] பார்க்க; see *mušu*[1]. 2. முசிறு, 1, 2 பார்க்க; see *mušiṟu,1, 2.*

[முசிறு + முசுறு.]

மரங்களில் அதிகமாக இருக்கும் பழுப்பு நிறப் பெரிய எறும்பு வகை.

முசுறுப்புல் *mušuṟu-p-pul,* பெ.(n.) முயிற்றுப் புல் பார்க்க; see *muyiṟṟu-p-pul.*

மறுவ. அளத்துப்புல்

[முசுறு + புல்.]

முசுறுமுட்டை *mušuṟu-muṭṭai,* பெ.(n.) மரங்களில் இருக்கும் கட்டெறும்பைப் போன்ற சிவந்த எறும்பின் முட்டை. இலுப்பை மரத்தின் முசுறு முட்டை சிறப்பு குணம் எனக் கருதுவர். இதனால் காற்று பிடிப்பு நோய் நீங்கும் என்பர்; the egg of a red ant which has its nest in trees. The one on the tree Bassia longifolia is considered best for medicinal use (சா.அக.).

[முசுறு + முட்டை.]

முசுறுமுட்டைத்தைலம் *mušuṟu-muṭṭa-t-tailam,* பெ.(n.) சிவப்பெறும்பின் முட்டையி னின்று எடுக்கும் எண்ணெய்; a medicated oil extracted from the eggs of red ants.

*[முசுறுமுட்டை + **Skt.** தைலம்.]*

முசுறுமுட்டைப்பால் *mušuṟu-muṭṭai-p-pāl,* பெ.(n.) நஞ்சு (விஷம்) முறிவதற்காக வேண்டி பயன்படுத்தும் சிவப்பெறும்பின் முட்டையில் இருந்து எடுக்கப்பட்ட பால்; the juice from the eggs of red ants used as an antidote in poisons (சா.அக.).

[முசுறு + முட்டை + பால்.]

முசுறுமூலி *mušuṟu-mūli,* பெ.(n.) ஒருவகைத் தழுவு கொடி மூலம் தயாரிக்கும் பெரு மருந்து; a twiner - *Aristolochia indica.*

[முசுறு + மூலி.]

முசைப்பேயெட்டி *mušai-p-pēyeṭṭi,* பெ.(n.) மைலாலக்கடி மரம் (L.); common grey mango laurel, *Tetracantha rex-burghil.*

முஞ்சம் *muñjam*, பெ.(n.) குழந்தைகளின் தலை உச்சியிலணியும் அணி வகை; ornament worn in the crown of head by children. *"திணைபிரி புதல்வர் கயந்தலை முச்சிய முஞ்சமொடு தழீஇ" (பரிபா.16:8).*

[முச்சி→ முஞ்சம்.]

முஞ்சரம் *muñjaram*, பெ.(n.) தாமரைக் கிழங்கு (பரி.அக.); lotus root.

முஞ்சல் *muñjal*, பெ.(n.) இறப்பு; dying (சா.அக.).

முஞ்சி *muñji*, பெ.(n.) 1. ஒருவகை நாணல் (L.); reedy sugarcane-*Saccharum arundinaceum*. 2. மணமாகாத அந்தணர்கள் (பிரமசாரிகள்) அரையிற் கட்டும் நாணற் கயிறு; girdle formed of the reed, worn by Brahmin celibate - students. *"முப்புரி நூலினன் முஞ்சியன்" (கம்பரா.வேள்வி.22).*

முஞ்சு-தல் *muñju-*, 5 செ.கு.வி. (v.i.) 1. சாதல்; to die. *"அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்" (திருவாச.4:19).* 2. முடிதல் (உ.வ.); to end.

[முடி-தல் → முஞ்சு-தல்.]

முஞ்சை *muñjai*, பெ.(n.) தருப்பைப் புல்; sacrificial grass (சா.அக.).

முஞ்ஞை *muññai*, பெ.(n.) முன்னை² பார்க்க; see *munnai²*. *"மறிமேய்ந் தொழிந்த குறுநறு முஞ்ஞை..... அடகு" (புறநா.197).*

முஞல் *muñal*, பெ.(n.) கொசுகு (வின்.); mosquito, gnat.

முட்கடு *muṭ-kaḍu*, பெ.(n.) கடுமரவகை (அ.அ.); a species of *kaḍu* tree.

முட்கத்திரி *muṭ-kattiri*, பெ.(n.) முள்ளங் கத்திரி (மூ.அ.) பார்க்க; see *muḷḷaṅgattiri*.

[முள் + கத்திரி.]

முட்கரணை *muṭ-karaṇai*, பெ.(n.) காட்டுக் கரணை; wild yam.

[முள் + கரணை.]

முட்கரம் *muṭkaram*, பெ.(n.) ஓராய்தம்; club, mace, club. *"கணிச்சி முட்கரங் கோடாரி" (குற்றா.தல.தக்கன்வேள்விய.14).*

[முள் + கரம் – முட்கரம் = முள் வடிவில் செய்யப்பட்ட ஓராய்தம், குண்டாந்தடி, தண்டாய்தம்.]

முட்கலப்பை *muṭ-kalappai*, பெ.(n.) முனையிற் பற்களையுடைய நிலத்தை உழப் பயன்படுத்தும் கலப்பை வகை (யாழ்ப்.); a kind of harrow. *உழுவதற்கு முட்கலப்பை ஒன்று வாங்கி வந்தான்.*

[முள் + கலப்பை.]



முட்கா *muṭ-kā*, பெ.(n.) பச்சைப் பயிறு; greengram - *Phaseolus aureus*.

முட்காசிகம் *muṭ-kāśigam*, பெ.(n.) குருக்குச்செடி; a plant prickly poppy - *Argemone mexicana*.

முட்காபரணி *muṭkā-baraṇi,* பெ.(n.) ஒரு வகைப் பருப்பின் விதை, பாசிப்பயிறு; a kind of edible seed-*Phaseolustrilobus.*

முட்காய்வேளை *muṭ-kāy-vēḷai,* பெ.(n.) செடிவகை (L.); five - leaved wild indigo-*Tephrosia senticosa.*

முட்கிளுவை *muṭ-kiḷuvai,* பெ.(n.) கிளுவை செடிவகை (வின்.); Indian balm of gilead common hedge plant - *Balsamodendron- berryi.*

[முள் + கிளுவை.]

முட்கீரை *muṭ-kīrai,* பெ.(n.) கீரை வகை (வின்.); thorny spinach - *Amaranthus spinosus.*

[முள் + கீரை.]

முட்குடப்பழம் *muṭ-kuḍa-p-paḻam,* பெ.(n.) பலாப்பழம்; jack fruit. *"முட்குடப் பழமெல்லா மிடறி" (திருச்செந்தூர். பிள்ளை. செங்.4).*

[முள் + குடம் + பழம். குடம் போன்றதும் மேல் பகுதியில் முள் போன்ற அமைப்புடையதுமான பலாப் பழம்.]

முட்கொடுச்சி *muṭ-koḍucci,* பெ.(n.) தூதுவளை; a thorny climber - *Solanum trilobatum* (சா.அக.).

[முள் + கொடுச்சி.]

முட்கொன்றை *muṭ-koṉṟai,* பெ.(n.) கொடி வகை (வின்.); a species of prickly brasiletto - *Caesalpinia nuga.*

[முள் + கொன்றை.]

முட்கோல் *muṭ-kōl,* பெ.(n.) குதிரையைத் தூண்டும் தாற்றுக் கோல்வகை; a kind of goad for horses. *"முட்கோல் வலக்கையாற் றாங்கி" (சீவக.794).*

[முள் + கோல்.]

முட்சங்கம் *muṭ-caṅgam,* பெ.(n.) முட்சங்கு பார்க்க; see *muṭ-caṅgu.*

[முள் + சங்கம். சங்கம் = சங்கு, சங்கஞ் செடி.]

முட்சங்கு *muṭ-caṅgu,* பெ.(n.) 1. முள்ளுள்ள சங்கு வகை (வின்.); chank with thorn - like points. 2. சங்கஞ்செடி; mistletoe berry thorn.

[முள் + சங்கு.]



முட்சவள் *muṭ-cavaḷ,* பெ.(n.) கவைக்கோல் வகை (யாழ்ப்.); spade fork.

[முள் + சவள்.]

முட்சீதா *muṭ-cītā,* பெ.(n.) சீதா பழவகை; a variety of custard apple.

[முள் + சீதா.]

முட்சீரிதம் *muṭ-cīridam,* பெ.(n.) கிளுவை மரவகை; a kind of tree - *Balsmodendron berry* (சா.அக.).

முட்சங்கன்



முடக்கத்தான்

முதுக்கன் கிழங்கு



முருங்கை

முட்சுண்டை *mut-cundai,* பெ.(n.) தூதுவளை அல்லது பேய்ச்சுண்டை; prickly *Šundai-Solanum trilobatum* (சா.அக.).

[முள் + சுண்டை. சுண்டை = செடி வகை.]



முட்செடி *mut-cedi,* பெ.(n.) முட்களுடையச் செடி, முட்பூண்டு; a thorny shrub (சா.அக.).

[முள் + செடி.]

முட்செம்பை *mut-cembai,* பெ.(n.) ஒருவகை முட்செடி, செங்கிடை (L.); prickly sesban-*Sesbania aculeata.*

[முள் + செம்பை. செம்பை = முள்ளுள்ள செடிவகை.]

முட்செவ்வந்தி *mut-še-v-vandi* பெ.(n.) ஒருவகைச் செவ்வந்தி; a kind of flower - *Chrysanthemum genus* (சா.அக.).

[முள் + செவ்வந்தி. செவ்வந்தி பூச்செடி வகை. முட்செவ்வந்தி என்பதற்கு ரோசா என்ற பொருள் யாழ்ப்பாணத்தில் வழங்குவதாக சென்னைப் பல்கலைக்கழகப் பேரகரமுதலி குறிப்புத் தருகின்றது.]

முட்ட *mutta,* வி.அ.(adv.) 1. நிறைந்து காணும்படி; filling up the entire space of something. *கை முட்ட வளையல்.* 2. முற்ற, முடிய, முழுவதுமாக; fully. *"முட்ட நித்தில நிரைத்த பந்தரின்" (பாரத. கிருட்.103). வயிறுமுட்ட சாப்பிட்டேன். "முட்ட நனைந்தவனுக்கு ஈரமில்லை, முழுவதும் கெட்டவனுக்குத் துக்கம் இல்லை" (பழ.). "முட்டநனைந்தார்க்குக் குளிரில்லை" "முட்டற்ற நாரிக்கு இரட்டைப் பரியமா" (பழ.). "முட்ட நனைந்தவனுக்கு முக்காடு எதற்கு?" (பழ.).*

[முற்று→முற்ற→முட்ட.]

முட்டகம் *muttagam,* பெ.(n.) வெண்ணீ றாக்குதற்குரிய எருமுட்டை, பசுஞ்சாண உண்டை (நாஞ்.); ball of dried cow-dung, used in preparing sacred ashes.

மறுவ. எருவாட்டி

முட்டடி[1] *muttadi,* பெ.(n.) அண்மை (வின்.); nearness, propinquity. 2. முட்டிடை பார்க்க; see *muttidai.*

[முட்டு + அடி.]

முட்டடி[2]–த்தல் *muttadi-,* 4 செ.கு.வி.(v.i.) கோலியாட்டத்தில் தோற்றவனுடைய முட்டியில் வென்றவன் கோலியாலடித்தல் (நெல்லை.); to strike the knuckles of a defeated player with the balls, at a game of marbles.

[முட்டு + அடி–த்தல்.]

முட்டடி[3]–த்தல் *muttadi-,* 4 செ.குன்றாவி. (v.t.) முட்டாடு–தல் பார்க்க; see *muttādu-*

[முட்டு + அடி–த்தல்.]

முட்டடைப்பான் *muttadai-p-pān,* பெ.(n.) வயிற்றை வீங்கச் செய்யும் மாட்டு நோய் வகை (M.Cm.D.I.248); a cattle disease, flatulent distension, of the belly

Tympanites. 2. கருங்கால் (மாட்டுவா.84); black leg.

[முட்டு + அடைப்பான்.]

முட்டத்தட்ட *muṭṭa-t-taṭṭa,* கு.வி.எ.(adv.) முழுவதற்கு நெருக்கமாக, கிட்டத்தட்ட; nearly, to full.

[முட்ட + தட்ட.]

முட்டத்தட்டு–தல் *muṭṭa-t-taṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) 1. முழுதும் பறித்தல்; to shake down completely, as fruits from a tree. 2. முழுதும் இல்லையாதல்; to be wanting entirely.

[முட்ட + தட்டு–தல்.]

முட்டத்தனம் *muṭṭa-t-taṉam,* பெ.(n.) மூடத் தன்மை (வின்.); ignorance, stupidity.

[முட்டன் + தனம். முட்டன் = மூடன்.]

முட்டம்[1] *muṭṭam,* பெ.(n.) 1. பொருந்திய பக்கம், பக்கச் சரிவு; slope. *"நளிமலை முட்டமும்" (பெருங்.வத்தவ.2:43).* 2. காக்கை; crow. *'குரங்கணின் முட்டம் போக்கு நீற்றும்' (கச்சி.வண்டு.75, உரை).*

[முட்டு→ முட்டம்.]

முட்டம்[2] *muṭṭam,* பெ.(n.) முட்டான்[1] பார்க்க; see *muṭṭāṉ[1].*

முட்டம்[3] *muṭṭam,* பெ.(n.) 1. கடலூர் (தென்னார்க்காடு) மாவட்டத்திலுள்ள (ஸ்ரீமுஷ்ணம்) திருமுட்டம் என்னும் ஒரு மாலியத்தலம்; Vaisṇava, shirine in Cuddalore (South Arcot) District. *"முட்டத்துப் பன்றி முளரித் திருப்பதத்தை" (பெருந்தொ.26).* 2. கன்னியாகுமரி மாவட்டம் அகத்தீசுவரம் வட்டத்தில் உள்ள ஊர்; a village in *Kaṉṉiyā-kumari* District *இவ்வூரில் கடல் உள்நோக்கி வந்து முட்டிக் கொண்டிருப்பதால் பெற்ற பெயர்.* 3. மலையாள நாட்டில் உள்ள வள்ளுவ நாட்டில் இருந்த ஊர்; a village in Cērā country. *முதல் இராசராசன் இவ்வூருக்கு மும்முடிச் சோழ நல்லூர் எனப் பெயரிட்டு இவ்வூரில் உள்ள கோயிலுக்கு இறையிலி நிலம் வழங்கியுள்ளான் (பிற்காலச் சோழர் வரலாறு–சதாசிவம்).* 4. பலர்கூடி வாழும் ஊர் (சூடா.); village, town.

[முட்டு→ முட்டம்.]

முட்டம்[4] *muṭṭam,* பெ.(n.) மதி முட்டுப்பாடு (மதிக்குறைவு) ஆகிய மடமை; stupidity, ignorance.

[முட்டு→ முட்டம். முட்டு = குறைவு.]

முட்டமுட்ட *muṭṭa-muṭṭa,* வி.அ.(adv.) 1. அடிக்கடி; frequently. 2. எப்பொழுதும் (கோவை.); when, at what time. 3. முழுதும் (கோவை); wholly. *முட்ட முட்ட நீ இப்படியே தாண்டா சீரழிவுபண்றே (கோவை). வயிறு முட்ட முட்ட சாப்பிடாதே.*

முட்டமுடிபோக *muṭṭa-muḍi-pōga,* கு.வி.எ.(adv.) முட்ட பார்க்க; see *muṭṭa.*

[முட்ட + முடிபோக – முட்டமுடிபோக = முழுவதும்.]

முட்டமுடிய *muṭṭa-muḍiya,* வி.அ.(adv.) முட்ட பார்க்க; see *muṭṭa.*

[முட்ட + முடிய – முட்டமுடிய = முற்றிலும், முடிவுவரை.]

முட்டரிசி *muṭṭārisi,* பெ.(n.) நன்றாய் வேகாத சோறு (உ.வ.); rice not fully boiled. *சோறு முட்டரிசியாகாமல் நன்றாகப் பார்த்து வடி.*

மறுவ. நொறுக்கரிசி

[முட்டு + அரிசி - முட்டரிசி = வேக்காடு குன்றிய அரிசி.]

முட்டவம் *muṭṭavam,* பெ.(n.) முட்டகம் பார்க்க; see *muṭṭagam.*

முட்டவும் *muṭṭavum,* வி.அ.(adv.) முற்ற (வின்.) பார்க்க; see *muṟṟa.*

[முட்ட → முட்டவும்.]

முட்டளவுகுழி *muṭṭaḷavu-kuḻi,* பெ.(n.) முழங்காலளவு ஆழமான குழி; knee deep, depth of a pit.

[முட்டு + அளவு + குழி.]

முட்டறிவோர் *muṭṭaṟivōr,* பெ.(n.) கடலடியில் காணும் பாறையின் தன்மை அல்லது இருப்பிடம் அறிந்தவர்; one who knows the quality of a rock and its abode beneath the sea.

[முட்டு + அறிவோர்.]

முட்டன் *muṭṭaṉ,* பெ.(n.) மூடன் (வின்.); dunce.

[முட்டம் → முட்டன்.]

முட்டா *muṭṭā,* பெ.(n.) 1. ஊர்க்கிழமை (பண்ணை), குறுநில ஆட்சி (தேவநேயம் 12:59); estate. 2. சொத்து (வின்.); property.

[முட்டம் = பொருந்திய பக்கம், சுற்றடைப்பு. முட்டம்→ முட்டா.]

முட்டாக்கிடு-தல் *muṭṭākkiḍu-,* 5 செ. குன்றாவி. (v.t.) முகத்தைப் போர்த்தல்; to cover the face, as a veil. *'வையை யென்னு மகள் மலராகிய ஆடையை முட்டாக்கிட்டு' (சிலப்.13:173, அரும்).* 2. உள்ளடக்குதல்; to subordinate. *"தன்னழகாலே அல்லாத வழகை முட்டாக்கிடுந் திருவபிடேகத்தை யுடையவன்" (ஈடு, 8. 8:1).*

[மூடு + ஆக்கு - மூடாக்கு →முட்டாக்கு + இடு-தல்.]

முட்டாக்கு *muṭṭākku,* பெ.(n.) 1. தலையை மூடும் துணி; veil. *முட்டாக்கை இழுத்து மூடு.* 2. போர்வை (சிலப்.13:173, அரும்.); overall mantle.

மறுவ. முக்காடு

[மூடு + ஆக்கு - மூடாக்கு→முட்டாக்கு.]

முட்டாட்டம்[1] *muṭṭāṭṭam,* பெ.(n.) 1. முட்டாள் தன்மை; stupidity. 2. அறிவின்மை யாலுண்டாகும் செருக்கு; pertinacity or conceit arising from ignorance. *அவன் முட்டாட்ட மாடுகிறான்.*

[முட்டம் + ஆட்டம்.]

முட்டாட்டம்[2] *muṭṭāṭṭam,* பெ.(n.) முட்டுகை (வின்.); butting.

[முட்டு+ ஆட்டம். ஒ.நோ.E.butt, meet end to end.]

முட்டாடு-தல் *muṭṭāḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) குவித்தல் (இ.வ.); to form into a pile or heap.

[முட்டு + ஆடு-தல்.]

முட்டாபலம் *muṭṭā-balam,* பெ.(n.) சங்கஞ் செடி; misllitoe berry thorn - *Azima tetracatha* (சா.அக.).

முட்டாவாள் *muṭṭāvāḷ*, பெ.(n.) இடையறாமல் தொடர்ந்து ஊர்ப் பொது வேலை நிகழ்வதற்கு ஆள் எடுக்க அளிக்கும் வரி வகை (கடமை); an ancient tax collected for the purpose of appointing labourers for uninterrupted village work.

மறுவ. முட்டி, முட்டையாள்.

முட்டாள்¹ *muṭṭāḷ*, பெ.(n.) மூடன்; dunce, simpleton, stupid fellow. *"முட்டாளரக்கர்" (திருப்பு.141). "முட்டாளை நம்பி எந்த வேலையும் செய்யாதே". "முட்டாளுக்கு இரண்டு ஆள்". "முட்டாளுக்கு சினம் (கோபம்) மூக்கின் மேலே". "முட்டாளுக்கு என்ன சொன்னாலும் காது கொடுத்துக் கேளான்". "முட்டாள் தனத்திற்கு முதல் பங்குக்காரன்". "முட்டாள் பயலுக்கு இரட்டைப் பரியம்".*

ம. முட்டாள்.

[முட்டு + ஆள். அறிவைப் பயன்கொள்ளத் தெரியாததால் பிறரால் குறைவாக மதிப்பிடப்படும் ஆள்.]

முட்டாள்² *muṭṭāḷ*, பெ.(n.) 1. ஊர்தியினடியில் அதைத் தாங்குவது போல் வைக்கும் படிமை; image placed underneath a vehicle as if in support. 2. கொத்து வேலைச் சிற்றாள்; mason's assistant, boy or girl cooly. *"செங்கலுக்கு நீறெடுத்து முட்டாளாய் நிற்பாரும்" (பணவிடு.285).*

க. முட்டாள்

[முட்டு + ஆள் – முட்டாள் = முட்டும் ஆள், முட்டித் தாங்கும் ஆள், தாங்கும் உருவம்.]

முட்டாள்வேலை *muṭṭāḷ-vēlai*, பெ.(n.) மூடச் செயல் (வின்.); work of a blunderer.

[முட்டாள் + வேலை]

முட்டாற்றுக்கோல் *muṭṭāṟṟu-k-kōl*, பெ.(n.) தூக்குக் கோல் (இ.வ.); steel-yard.

[முள் +தாற்றுக்கோல். தாற்றுக்கோல் = இருப்பு முட்கோல், துலைக்கோல், நிறைகோல்.]

முட்டாறு *muṭṭāṟu*, பெ.(n.) முட்கோல் பார்க்க; see *muṭ-kōl*. *"முட்டாற்றிற் குத்தி யுழுப்பெருது பொன்றப் புடைத்து" (சீவக.2783).*

[முள் + தாறு. எருது, குதிரை, யானை ஆகியவற்றைத் தூண்டி செலுத்தப் பயன்படும் கூரிய முனையுள்ள கோல்.]

முட்டான்¹ *muṭṭāṉ*, பெ.(n.) 1. அணையாது எரிந்து கொண்டிருக்கும் நெருப்பு மூட்டம் (இ.வ.); fuel placed over the flame to keep it steadily burning. *'குளிருக்கு முட்டான் போடு'.* 2. திருநீறு நீற்றுவதற்குரிய சாணவுருண்டை; ball of cow dung used in preparing sacred ashes. *திருநீறுக்கு முட்டான் போடு.*

[முள்→ முட்டு→ முட்டான் (வே.க.).]

முட்டான்² *muṭṭāṉ*, பெ.(n.) முட்டான் மஞ்சள் (நெல்லை.) பார்க்க; see *muṭṭāṉ-mañjaḷ*.

[முட்டு→ முட்டான்.]

முட்டான்³ *muṭṭāṉ*, பெ.(n.) சிறிய மேசை; stool.

[முட்டு→ முட்டான்.]



முட்டான்மஞ்சள் *muṭṭāṉ-mañjaḷ,* பெ.(n.) மஞ்சட்கிழங்கு; root of turmeric.

[முட்டான்² + மஞ்சள்.]

முட்டி¹ *muṭṭi,* பெ.(n.) 1. விரல்களை மடக்கியதும் மேடாகத் தெரியும் எலும்பு; முழங்காலில் உள்ள வட்டமான ஓடு (சில்லு); knuckle, knee cap. *கால் முட்டியிலும் கை முட்டியிலும் அடித்துத் துன்புறுத்தினார்கள்.* 2. விரற் பொருத்துத் தெரியும்படி முடக்கிய கை; fist. 3. முட்டிக்கையாற் குத்துங் குத்து; blow with the fist. *"முட்டிகள் படப்பட" (பாரத. வேத்திர.56).* 4. நான்கு விரல்களை யிறுக முடக்கி அவற்றின் மீது கட்டை விரலை முறுகப் பிடிக்கும் இணையா வினைக்கை (சிலப்.3:18, உரை); a gesture with one hand in which the four fingers are closed tightly and the thumb is pressed over them one of 33 *iṉaiyā-viṉaikkai.* 5. கைப்பிடியளவு; handful. *"முட்டி மாத்திரமேனும்" (சேதுபு. இராமதீ.3).* 6. பிடியளவாக இடும் ஐயம் (பிச்சை); alms. *"முட்டிபுகும் பார்ப்பார்" (தனிப்பா.1, 142:39).* 7. படைக்கலன் பிடிக்கும் வகை; a mode of holding a weapon. *"துய்ய பாசுபதத் தொடையு முட்டியும்" (பாரத. அருச்சுனன்றவ. 129).* 8. அறுபத்து நாலு கலைகளுள் கையுள் மறைத்ததை இன்னதென்று அறிந்து கூறும் கலை; art discovering anything concealed in the closed hand, one of aṟupattu-nālu-kalai. *நட்டமுட்டி சிந்தனை.* 9. உடைந்த செங்கலின் துண்டு (நெல்லை.) (இ.வ.); broken brick. 10. முட்டிகை (யாழ். அக.) பார்க்க; see *muṭṭigai.* 11. கைமுட்டி போல் செய்யப்படும் வெல்லம்; jaggery.

[முட்டு→ முட்டி. முட்டுதல் = எதிர்ப்படுதல், பொருந்துதல், மோதுதல்.]

வடவர் காட்டும் மூலம் முஷ். முஷ் = திருடு, கொள்ளையடி சிறைகொண்டுபோ, உளங்கவர், மகிழ்ச்சியால் மயக்கு, உடை, அழி என்று பொருள்.

"Musṭi, m.f. stealing, filching W., the clenched hand, fist (perhaps ovig, the hand closed to grasp anything stolen)" (வ.மொ.வ.) எனவே வடமொழி மூலம் இந்தப் பொருளுக்கு முற்றிலும் பொருந்தாது.

முட்டி² *muṭṭi,* பெ.(n.) 1. நஞ்சு தீர்க்கும் மந்திர பண்டுவ வகை (பெரியபு.திருஞா.1060); a magic cure for poison. 2. வரிவகை (புதுக். கல்.504); a tax.

முட்டி³ *muṭṭi,* பெ.(n.) 1. பெரும்பாலும் 'கள்' இறக்குவதற்குப் பயன்படும் கலயம்; an earthen pot with a narrow mouth used mostly for collecting toddy from palm trees. *கள்ளு முட்டி.* 2. சிறுபானை; small earthen pot. *'சட்டி முட்டிகளை சடுதியில் கழுவிப்போடு' (உ.வ.)*

முட்டி⁴ *muṭṭi,* பெ.(n.) 1. எட்டி மரம்; a poisonous tree - *Strychnos nux-vomica.* 2. சிற்றாமுட்டி; pavomia zeylanica. 3. பேராமுட்டி; pavonia odorata. 4. பேய்த் தும்மட்டி; bitter apple.

[முள்→ முட்டு→ முட்டி (வே.க.).]

முட்டி⁵ *muṭṭi,* பெ.(n.) 1. சம்மட்டி எனப்படும் மீன் வகை; a kind of fish called *šammaṭṭi. சம்மட்டி போன்ற தோற்றம்*

உடைய மீன் வகை. 2. சிப்பி வகை; (M.M.); cockle - *Cardium ekule.*



முட்டி[6] *muṭṭi,* பெ.(n.) 1. ஒரு பலவளவு (தைலவ.தைல.1.); a standard weight 1 palam. 2. இருபது கவளி கொண்ட அளவு; quantity consisting of 20 kavaḷi. *முட்டி வெற்றிலை (தஞ்.).* 3. திருவிழாவில் ஊரெல்லைத் தெய்வத்திற்குப் படைக்கும் பலிச்சோறு (M.M.); oblation of ball of rice deposited on the boundary line of a village in a festival.

[முள்→ முட்டு→ முட்டி (வே.க.).]

முட்டிக்கத்திரி *muṭṭi-k-kattiri,* பெ.(n.) ஒருவகைக் கத்தரிக்காய்; a species of brinjal.

மறுவ. முட்டைக் கத்திரி.

[முட்டி + கத்திரி.]

முட்டிக்கல் *muṭṭi-k-kal,* பெ.(n.) 1. எல்லை யறியும் கல்; boundary stone. 2. சுவர் (பாது)காப்பிற்காக மூலையில் போடப்படும் 'ட' வடிவக் கல் (கோவை); 'L' shaped stone built in corner for the safty of wall.

[முட்டி + கல்.]

முட்டிக்கால் *muṭṭi-k-kāl,* பெ.(n.) 1. முழங்கால்; knee. முட்டிக்கால் தட்டும்படி நடக்காதே. 2. முழங்காற் சிப்பி அல்லது பொருத்து; knee - pan, knee cap. 3. முட்டிக்காற் பின்னல்; knock-knee. *"கழுதையின் முட்டிக் கால் வீரம் உதை பட்டவர்க்குத்தான் தெரியும்" (பழ.).*

[முட்டி + கால்.]

முட்டிக்கால்தட்டு–தல் *muṭṭi-k-kāl-taṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) முட்டுக்கால்தட்டு–தல் பார்க்க; see *muṭṭu-k-kāl-taṭṭu-.*

[முட்டி + கால் + தட்டு–தல். முழங்காற் சிப்பிகள் ஒன்றோடொன்று உரசுதல்.]

முட்டிக்கால்போடு–தல் *muṭṭi-k-kāl-pōḍu,* 20 செ.கு.வி.(v.i.) தண்டனையாக மண்டி போடுதல்; kneel down as punishment. *வீட்டுப் பாடம் எழுதிக் கொண்டு வராததால் ஆசிரியர் முட்டிபோடச் சொன்னார்.*

[முட்டி + கால் + போடு–தல்.]

முட்டிக்காலன் *muṭṭi-k-kālaṉ,* பெ.(n.) முட்டுக்கால் தட்டும்படி நடப்போன் (வின்.); knock knee person.

[முட்டி + கால் + அன்.]

முட்டிக்காற்கழுதை *muṭṭi-k-kāṟ-kaḻudai,* பெ.(n.) பின்னங்கால் முட்டிகள் தட்டும்படி நடக்குங் கழுதை; donkey.

[முட்டி + கால் + கழுதை.]

முட்டிக்கீரை *muṭṭi-k-kīrai,* பெ.(n.) குமுட்டிக் கீரை; a kind of greens - *Celosia nodiflora.*

[முட்டி + கீரை.]

முட்டிக்கை *mutti-kai,* பெ.(n.) 1. விரல் மடக்கியுள்ளகை; clenched fist. 2. முழங்கை பார்க்க; see *mulangai.*

[முட்டி + கை.]

முட்டிக்கால் என்பது போன்றே முட்டிக்கை என்பதும் பொருத்தையே சிறப்பாகக் குறிக்கும். முன்னது காற்பொருத்தும் பின்னது விரற் பொருத்தும் ஆகும் (வே.க.முல்[4]). ஆசிரியர் மாணவனின் முட்டிக்கையிலேயே அடித்தார் (உ.வ.).

முட்டிக்கொள்(ளு)–தல் *mutti-k-kol (lu)-,* 16 செ.கு.வி. (v.i.) 1. இருட்டு கரணியமாக பார்வை குறைவால் எதிர் இருப்பவற்றில் மோதிக்கொள்ளுதல்; to hit the opposite things when moving in dark. *இருட்டில் எதிலும் முட்டிக்கொள்ளாமல் நடந்துவா (உ.வ).* 2. சினம், கவலை முதலியவற்றால் தலையை மோதிக் கொள்ளுதல் (வின்.); to hit or dash one's head, as in despair or in anger. 3. பெரு முயற்சி யெடுத்தல் (உ.வ.); to put forth great efforts to try one's utmost.

[முட்டு →முட்டி + கொள்(ளு)–தல்.]

முட்டிகை *muttigai,* பெ.(n.) தட்டார் சிறு சுத்தி; jeweller's small hammer. *"முட்டிகை போல..... கொட்டி யுண்பாரும்" (நாலடி, 208).*

ம. முட்டி.

முட்டிச்சண்டை *mutti-c-candai,* பெ.(n.) முட்டிக்கைப்போர் (வின்.), குத்துச் சண்டை; boxing, pugilism.

[முட்டி[1] + சண்டை.]

முட்டிச்சுரை *mutti-c-curai,* பெ.(n.) மகிடி வாச்சியம் செய்வதற்குப் பயன்படும் சுரை (M.M.293); calabash, climber, lagenaria vulgaris, as used by snake charmers for a wind instrument.

[முட்டி[1] + சண்டை.]

முட்டிச்சுழி *mutti-c-culi,* பெ.(n.) மாட்டின் முதுகில் பின் முட்டியின் இருபுறமும், நான்கு விரலத்திற்குள்ளிருக்கும் தீமையை உண்டாக்குவதாகக் கருதப்படும் சுழி; circular or curved form mark four inches, on either side of the back joint at the back region of the cow which is considered to be a bad sign.

[முட்டி + சுழி.]

முட்டிடு–தல் *muttidu-,* 20 செ.கு.வி.(v.i.) நோய் முதலியன மிகுதல் (இ.வ.); to come to a crisis.

[முட்டு + இடு–தல்.]

முட்டிடை *muttidai,* பெ.(n.) 1. நெருக்கடி (இ.வ.); hardship, straits. 2. நெருக்கம்; over crowding.

[முட்டு + இடை. முட்டு = இடுக்கம், நெருக்கம்.]

முட்டிப்பிச்சை *mutti-p-piccai,* பெ.(n.) பிடியரிசியாகப் பெறும் ஐயம்; begging handful of rice.

[முட்டி[1] + பிச்சை]

முட்டிப்போர் *mutti-p-pōr,* பெ.(n.) கைகுத்துப் போர்; boxing.

[முட்டி + போர்.]

முட்டிபோடு–தல் *mutti-pōdu-,* 20 செ.கு.வி. (v.i.) முட்டிக்கால்போடு–தல் பார்க்க; see *mutti-k-kāl-pōdu-. நாள் தோறும் அந்த மாணவன் காலதாமதமாக*

வருவதனால் தலைமை ஆசிரியர் அவனை முட்டி போடச் சொன்னார்.

[முட்டி + போடு-தல்.]

முட்டிமுரண்டு-தல் *mutti-murandu-*, 5 செ.கு.வி. (v.i.) அருமுயற்சி யெடுத்தல்; to endeavour with persistence, struggle with stubbornness. *முட்டிமுரண்டி பார்த்தாலும் கிடைக்க வேண்டியதுதான் கிடைக்கும்.*

[முட்டு + முரண்டு-தல்.]

முட்டிமோது-தல் *mutti-mōdu-*,5 செ.கு.வி. (v.i.) 1. கூட்டத்தில் நெரிந்து முன்னேறி முயல்தல்; surge up. *திரை அரங்கத்தில் படத்தைப் பார்ப்பதற்காக மக்கள் முட்டி மோதுகின்றனர். சிற்றம்பலத்தானைக் காண மக்கள் முட்டி மோதுகின்றனர்.*

மறுவ. முட்டிமுரண்டு-தல்

[முட்டி + மோது-தல்.]

முட்டியடி-த்தல் *mutti-y-adi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. முட்டிச்சண்டையிடுதல்; boxing. 2. முட்டிப்போர் செய்தல் போல் வருந்தித் திண்டாடுதல்; to struggle hard. *வேலைக்கு முட்டியடிக்கிறான் (உ.வ.).*

[முட்டி + அடி-த்தல்.]

முட்டியுத்தம் *mutti-y-uttam*, பெ.(n.) முட்டிப்போர் பார்க்க; see *mutti-p-pōr.*

முட்டிரட்டி *muttiratti*, பெ.(n.) முட்டிரட்டு பார்க்க; see *muttirattu.* *"நிசதி கலவரை அரிசி பத்தெட்டுக் குத்தல் ஸ்ரீகோயிலுக்கே கொண்டு சென்று அளப்போமானோம், அளப்போமாயின் முட்டிரட்டி பந்மாகேசுவரர் தண்டிக் கொள்ள ஒட்டிக் குடுத்தோம்" (தெ.கல்.தொ.12, கல்.61).*

[முட்டி + இரட்டி.]

முட்டிரட்டு *muttirattu*, பெ.(n.) தடை பெற்றால் இரட்டிப்பாக கொடுப்பது; giving in double due to interdict. *"பொன்.... இறுத்து முட்டிரட்டி அட்டுவோமானோம்" (திருத்துறைப் பூண்டி கல்.29-37).*

[முட்டி + இரட்டு.]

முட்டிருமல் *muttirumal*, பெ.(n.) விட்டு விட்டு வரும் ஒருவகைத் தொடர் இருமல் (குத்திருமல்); irritating cough caused by inflammation.

மறுவ. தொண்டைப்புகைச்சல், கக்குவான் இருமல்.

[முட்டு + இருமல்.]

முட்டிவெற்றிலை *mutti-verrilai*, பெ.(n.) மட்டமான வெற்றிலை வகை; betel leaves, of a coarse variety.

[முட்டி + வெற்றிலை.]

முட்டு¹-தல் *muttu-*,5 செ.குன்றாவி.(v.t.) 1. தலையை அல்லது தலையால் ஒன்றின் மீது மோதுதல்; knock one's head against something, bump one's head against, butt. *மஞ்சுவிரட்டு விழாவினை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருந்தவர்களில் சிலர் மாடு முட்டி இறந்தனர். கன்று ஆ(பசு)விடம் முட்டி முட்டிப் பால் குடித்தது. சுவரில் தலையை முட்டிக் கொண்டு கதறி அழுதான். "துள்ளித் தூண் முட்டுமாங்கீழ்" (நாலடி, 64).* 2. தடுத்தல்; to oppose, hinder. 3. எதிர்த்தல்; to assault, attack. 4. எதிர்ப்படுதல்; to meet. *"வரையா நாளிடை வந்தோன் முட்டினும்" (தொல். பொருள்.112) (சூடா.).* 5. பிடித்தல்; to grip,

grasp. "குழல்லாள்... கையினைக் கையாலவன் முட்டிடலும்" (உத்தரரா. திக்குவி.16). 6. தேடுதல்; to seek. "நாடிநாங் கொணருது நளினத் தாளைவான் மூடிய வுலகினை முற்றுமுட்டி யென்று" (கம்பரா.சம்பாதி.7).

க. முட்டு; ம. முட்டுக.

[முல் (பொருந்தல்) →முது→முத்து→முட்டு →முட்டு–தல்.]

முட்டு²–தல் *muṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. குன்றுதல்; to be deficient. "முட்டா வின்பத்து முடிவுல கெய்தினர்" (சிலப். 15:197). 2. முடிதல்; to end. "முட்டடி யின்றிக் குறைவு சீர்த்தாகியும்" (தொல். பொருள். 435). 3. தடைப்படுதல்; to be hindered, prevented. "வெண்ணெல்லி னரிசிமுட்டாது... பெறுகுவீர்" (மலைபடு. 564). "இத்தன்ம முட்டில்" (தெ.கல்.தொ.3, 95). 4. பொருதல்; to fight, attack. "குலப் பகைஞன் முட்டினான்" (கம்பரா.நட்புக்.50). 5. வழுவுதல்; to fail, stray away. "புண்ணிய முட்டாள்" (மணிமே.16:49). 6. அழுகை, கண்ணீர், சினம் முதலியவை வெளிப்படுகிற வகையில் நிறைதல், நிரம்புதல்; surge up of tears, anger, etc. brim with tears, etc, to be full. "தோயமுட்டிய தோடவிர் மலர்த்தடம்" (காஞ்சிப்பு.கழுவாய்.79). பேசப்பேச அவன் கண்களில் நீர் முட்டியது. அவனுக்குச் சினம் முட்டிக் கொண்டு வந்தது. 7. நெருங்குதல்; to be close.

[முட்டு¹–தல்→முட்டு²–தல்.]

முட்டு³ *muṭṭu,* பெ.(n.) 1. முழங்கால், முழங்கை விரல்கள், இவற்றின் பொருத்து; knee, elbow, knuckle. 2. குவியல் (உ.வ.); heap. பண்டங்கள் முட்டு முட்டாய்க் கிடக்கின்றன. 3. பற்றுக்கோடு; prop, support. விலங்குகள் கொம்பால் தாக்குகை. 4. தடை; hindrance, obstacle, impediment. "முட்டுவயிற் கழறல்" (தொல்.பொருள்.271). "பன்முட்டின்றாற் றோழி நங்களவே" (அகநா.122). 5. முட்டுப்பாடு, 1, 2 பார்க்க; see *muṭṭu-p-pāḍu, 1, 2.* 6. உட்சென்று கடத்தலருமை; difficulty, as in passing. "முட்டுடை முடுக்கரும்" (சீவக.1216). 7. குறைவு; shortness, deficiency. "மூவேழ் துறையு முட்டின்று போகிய" (புறநா.166). 8. கண்டு முட்டுக் கேட்டுமுட்டு முதலிய தீட்டுக்கள் (பெரியபு.திருஞான.692); pollution. 9. மாதவிடாய் (வின்.); menses. 10. விலங்கு முதலியன கொம்பு முதலியவற்றால் தாக்குகை; battering, butting. 11. சில்லறைப் பொருள்கள்; sundry things. 'கட்டினேம் முட்டுக்களை' (புறநா. 206, உரை). வீட்டில் உள்ள தட்டு முட்டு சாமான்கள் கூட விடாமல்திருடர்கள் எடுத்துச் சென்று விட்டனர். 12. மேடு (வின்.); rising ground, high,ground. 13. ஒன்று விழாமல் தாங்கும் அல்லது நகராமல் தடுக்கும் கட்டை முதலியவை; prop, block. வண்டியை நிறுத்திச் சக்கரங்களுக்குக் கல்லால் முட்டுக் கொடுத்துவிட்டுக் கடைக்குள் சென்றான். விளம்பரப் பலகை சாய்ந்து விடாமல் இருக்க முட்டு வைத்தான். 14. கருவி; tool, instrument. "கொற்றரு மிருப்பு முட்டு" (திருவாலவா.45:8). 15. சந்தி; junction. போகவர இடையூறாக முட்டில் நிற்காதே. 16. கடலடியில் உள்ள குன்று மற்றும் பாறை போன்ற தடைகள் (மீனவ.); hindrance of rock and hill under the sea. கடலில் எங்கெங்கு முட்டுகள் உள்ளன வென்று கண்டறிந்தவரே தொழில் திறனுடையவராய்க் கருதப்படுவார்.

தெ., க., ம., து. முட்டு.

*[முல் → முது → முத்து → முட்டு=தாங்கல். ஒ.நோ.**ME.** buttress; **OF.** bouterez; **mod. F.** bouteret; **F.** bouter; **E.** buttress; **F.** butt; **OF.** abutex (but, end), end on, **E.** abut, border upon, abutment, a lateral support (வே.க.).]*

முட்டுக்கால், முட்டுக்கொடுத்தல், முட்டுச் சட்டம், முட்டுச்சுவர் முதலிய தொடர்ச் சொற்கள் தாங்கல் கொடுத்தலையும்; முட்டுக்கட்டை, முட்டுத்தொய்வு (மூச்சுவிட முடியாமை), முட்டுப்பாடு முதலிய தொடர்ச்சொற்கள் தடைபண்ணுதலையும், முட்டுமுடுகு, முட்டிடை முதலிய தொடர்ச் சொற்கள் வழி யிடுக்கத்தையும்;

முட்டுச்சீலை, முட்டுப் பட்டினி, முட்டுப் பாந்தை முதலிய தொடர்ச்சொற்கள் தீட்டுப் பாட்டையும்

முட்டுக்கால் தட்டுதல், முட்டுக்குட்டு, முட்டுக் குத்துதல் (முழங்கால் மேல் நிற்றல்), முட்டுப்பிடிப்பு, முட்டுவலி, முட்டு வீக்கம் முதலிய தொடர்ச்சொற்கள் முழங்கால் வினையையும் உணர்த்தும் (வே.க.முல்⁴).

முட்டு⁴–தல் *muṭṭu-*, 5 செ.கு.வி.(v.i.) **1.** கூடுதல்; to meet, assemble, together. **2.** பொருந்துதல்; to be suitable.

*[முத்து → முட்டு → முட்டு–தல். ஒ.நோ.**O.E.** mitan; **O.S.** motian; **ON.** moeta; **Goth.** (ga) motjan; **E.**meet; **OE.** motian; **E.** moot, assembly. **E.** wikenagemot = Anglo - Saxon national council or parliament. **OE.**witena, wisemens (ge) mot, meeting (வே.க.).]*

முட்டுக்கட்டியாடு–தல் *muṭṭu-k-kaṭṭi-y-āḍu-*, 5 செ.கு.வி.(v.i.) பொய்க் கால்களில் நின்று நடத்தல் (வின்.); to go on stilts.

[முட்டுக்கட்டு + ஆடு–தல். பொய்க்காற் கட்டையில் நின்று நடத்தல்.]

முட்டுக்கட்டு–தல் *muṭṭu-k-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) **1.** பற்றுக்கோடாகக் (ஆதாரமாகக்) கட்டை முதலியன கொடுத்தல்; to prop, buttress. **2.** வழியை யடைத்தல் (வின்.); to blockade, shut up a place or an entrance, shut or beset the avenues of a town. **3.** வயல் முதலியவற்றுக்கு வரப்பு (எல்லை) கட்டுதல் (யாழ்ப்.); to form ridges as in a field; to limit or confine within bounds. **4.** முழந்தாளைக் கைகளாற் கட்டுதல்; to sit cross - legged with arms folded round the knees. *முட்டுக் கட்டி உட்காராதே.*

[முட்டு + கட்டு–தல்.]

முட்டுக்கட்டை *muṭṭ-k-kaṭṭai*, பெ.(n.) **1.** தேர் போன்ற இழுக்கப்படும் ஊர்திகளை நிறுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் சாய்வு அமைப்பிலுள்ள கட்டை; stumbling block wood used as break to stop the pulling car. *தேரை நிறுத்த முட்டுக்கட்டைபோடு.* **2.** தாங்கு கம்பம்; block or stake, as a prop. or support. *வாழைக்கு முட்டுக்கட்டை கொடுக்க வேண்டும்.* **3.** தடைசெய்பவன்–பவள்–வது; person or object which is a hindrance. **4.** மேற்கொண்டு செயல்பட முடியாதவாறு தடுப்பது; stumbling block. *உன் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாக இருப்பது எது?*

[முட்டு + கட்டை. முட்டு = தடை செய்கை.]

முட்டுக்காடு *muṭṭu-k-kāḍu*, பெ.(n.) கடற்கரை ஓரம் சென்னைக்கு அருகில் உள்ள ஊர்; a village, near in chennai.

இது ஒரு சுற்றுலா தலம். இங்குப் படகுத்துறை முதலியவை அமைந்துள்ளன.

முட்டுக்காய் *muṭṭu-k-kāy*, பெ.(n.) 1. முட்டுக்குரும்பை பார்க்க; see *muṭṭu-k-kurumbai*. 2. பனி (பரி.அக.); ice.

[முட்டு + காய்.]

முட்டுக்காய்த்தேங்காய் *muṭṭu-k-kāy-t-teṅgāy*, பெ.(n.) முட்டுக்குரும்பை பார்க்க; see *muṭṭu-k-kurumbai*.

[முட்டுக்காய் + தேங்காய்.]

முட்டுக்காரன் *muṭṭu-k-kāraṉ*, பெ.(n.) மத்தளமடிப்பவன் (தஞ்சை); one who plays on *mattaḷam*.

[முட்டு + காரன். முட்டுதல் = தாக்குதல்.]

முட்டுக்கால் *muṭṭu-k-kāl*, பெ.(n.) 1. தாங்கு கால்; support, pedestal, beam to support an old wall or tree. *'தேவருலகுக்கு முட்டுக்காலாக ஊன்றிவைத்த' (பெரும்பாண். 346, உரை).* 2. முட்டிக்கால் பார்க்க; see *muṭṭi-k-kāl*.

மறுவ. கட்டைக்கால்

[முட்டு + கால். முட்டு = தாங்கல்.]

முட்டுக்கால்தட்டு-தல் *muṭṭu-k-kāl-taṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) முழங்கால் ஒன்றோடொன்று இடித்தல்; to have one's knees knocking together, as a donkey.

மறுவ. முட்டி தட்டுதல், முட்டிக்கால் தட்டுதல்.

[முட்டுக்கால் + தட்டு. முட்டுக்கால் = முழங்கால்.]

முட்டுக்குச்சி *muṭṭu-k-kucci*, பெ.(n.) தொண்டானையும், தொண்டாங் கயிற்றையும் இணைக்கும் பகுதியில் உள்ள குச்சி (உழவு); block of wood which helps in the water lift.

[முட்டு + குச்சி.]

தொண்டன் = தோலால் செய்யப்பட்டு கவலைச் சாலின் கீழ்ப்புறம் நீர் வெளியேறும் பகுதியில் கட்டப்பட்டிருப்பது. தொண்டாங்கயிறு = தொண்டானுடன் பிணைக்கப்பட்டு நுகத்தடியில் கட்டப்படும் கயிறு.

முட்டுக்குட்டு *muṭṭu-k-kuṭṭu*, பெ.(n.) முட்டுவலி (பைஷஜ.257); பார்க்க; see *muṭṭu-vali*.

தெ. முட்டுகுட்டு.

[முட்டு + குட்டு. முட்டு = முழங்கால்.]

முட்டுக்குடிசை *muṭṭu-k-kuḍišai*, பெ.(n.) மாதவிலக்குக் காலத்தில் இருளர் இனப் பெண்கள் தங்கும் குடிசை; a cottage of Erular ladies to stay at the period of menses time.

[முட்டு + குடிசை. முட்டு = மாதவிலக்கு.]

முட்டுகுத்து-தல் *muṭṭu-kuttu-*, 5 செ.கு.வி. (v.i.) முழங்கால் மேல் நிற்றல் (வின்.); to fall upon one's knees.

[முட்டு + குத்து-தல். முட்டு = முழங்கால்]

முட்டுக்குரும்பை *muṭṭu-k-kurumbai*, பெ. (n.) முற்றாத இளநீர் (இ.வ.); very immature coconut.

[முட்டு + குரும்பை. முள் →முட்டு = குறைவு, முற்றாதது. குரும்பை = இளநீர். தெங்கு, பனைகளின் இளங்காய். முட்டுக்குரும்பை = சிறு தென்னம் பிஞ்சு அல்லது பனம் பிஞ்சு (வே.க.).]

முட்டுக்கொடு-த்தல் *muṭṭu-k-koḍu*, பெ.(n.) 1. சாய்வுக்கு எதிர்ப்புறமாகக் கொம்பு நிறுத்துதல்; to put up a prop. *வாழை*

காற்றில் சாயாமல் இருக்க ஒரு மூங்கில் கொம்பை முட்டுக் கொடு. 2. இடையூறு செய்தல்; to put an obstacle in the way.

[முட்டு + கொடு–த்தல். முட்டு = தாங்குதல்.]

முட்டுக்கொம்பு *muttu-k-kombu,* பெ.(n.) ஏற்றக்கோல் (சால்கோல்) கயிறு துலானில் கீழ் இறங்காமல் இருக்கப் பயன்படும் கொம்பு (உழவு); a wooden pole which helps the picotah not to descend from its position.

[முட்டு + கொம்பு. கால்கோல் = ஏற்றக்கோல். துலான் = அடிப்பக்கம் பருத்தும் மேற்பக்கம் சிறுத்தும் உள்ள மரம். அடிப்பக்கத்தில் ஏற இறங்க மிதிப்படி இருக்கும். இது நீரிறைக்கும் ஏற்றத்தில் பயன்படும்.]

முட்டுக்கோல் *muttu-k-kōl,* பெ.(n.) கிட்டி (இறுக்குங்கோல்); clamps. *"முட்டுக்கோல் கொண்டு அபகரித்த தனத்தை" (ஈடு, 5. 3:9 ஜீ).*

[முட்டு + கோல்.]

முட்டுச்சட்டம் *muttu-c-cattam,* பெ.(n.) துளைக்கருவிகளைத் திருப்பும் சட்டம் (உதைமானச் சட்டம்) (C.E.M.); brace, strut.

[முட்டு = கருவி. முட்டு + சட்டம்.]

முட்டுச்சந்து *muttu-c-candu,* பெ.(n.) மேற்கொண்டு செல்ல முடியாமல் முடிந்து விடுகிற சிறு தெரு; blind alley, dead end street. *முட்டுச் சந்தில் வண்டியை நிறுத்தி வை.*

[முட்டு + சந்து. முட்டு = தடை.]



முட்டுச்சீலை *muttu-c-cilai,* பெ.(n.) மாதவிலக்குக் காலத்தில் அணிந்து கொள்ளும் புடவை (வின்.); cloth worn by a woman in her periods. *"வகையறியாதே வண்ணான் பொறவுக்குப் போனா முட்டுச் சீலையை வெளுக்கச் சொன்னான்" (பழ.).*

[முட்டு = தீட்டு, மாதவிலக்கு. முட்டு + சீலை.]

முட்டுச்சுவர் *muttu-c-cuvar,* பெ.(n.) உதைமானச் சுவர் (C.E.M.); buttress.

[முட்டு + சுவர். முட்டு = தாங்கல் (தாங்குதல்)]

முட்டுச்சேலை *muttu-c-cēlai,* பெ.(n.) முட்டுச்சீலை பார்க்க; see *muttu-c-cilai.*

[முட்டு + சேலை.]

முட்டுத்தலைக்கல் *muttu-t-talai-k-kal,* பெ.(n.) மீன்பிடி வலையின் கீழ்ப்பகுதி கடலடியில் உட்காரும் பொருட்டு வலையின் கீழ்ப்பகுதியிற் கட்டப் பெறும் கல் (தஞ்சை. மீனவ.); a stone tied at the bottom of the fishing net to make it sit under the sea.

[முட்டு + தலை + கல்.]

முட்டுத்தொய்வு *muttu-t-toyvu,* பெ.(n.) மூச்சு நோயால் மூச்சுவிடுதலில் ஏற்படும்

இடர்ப்பாடு (வின்.); difficulty in breathing, as from pulmonary disease.

[முட்டு + தொய்வு. முட்டு = தடைசெய்கை, இடையூறு. தொய்வு = மூச்சு (சுவாசம்) முட்டு.]

முட்டுப்பட்டினி *muttu-p-pattini,* பெ.(n.) கண்டு முட்டுக் கேட்டு முட்டுக்களால் நேரிடும் பட்டினி; fasting to a tone for meeting a heretic or hearing about heretics. *"பறி தலைக்கையர்.... முட்டுப் பட்டினிகளோடும்... பாழிசெல்ல" (திருவாலவா. 37:74).*

[முட்டு + பட்டினி. பட்டினி = உணவு கொள்ளாமை. முட்டு = தீட்டு.]

முட்டுப்படு-தல் *muttu-p-padu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. துன்புறுதல்; to be pressed, perplexed, to be in difficulty or extremity, as one beset by creditors. 2. தடைப்படுதல்; to be hindered. *'அறத் தொழில்கள் முட்டுப்படாத..... நன்னெஞ்சினோர்' (பட்டினப். 204, உரை).*

[முட்டு + படு-தல்.]

முட்டுப்பாடு *mutt-p-pādu,* பெ.(n.) 1. தடுமாற்றம்; dilemma. எதைத் தேர்வு செய்வது என்பதில் அவருக்கு முட்டுப்பாடு. 2. தட்டுப்பாடு; need, want. *'கூடும் பொருள்கள் கூடாமையாலுள்ள முட்டுப்பாடு' (கலித்.93, பக்.565, உரை). அவருக்குப் பொருள் முட்டுப்பாடு.* 3. இடையூறு; trouble, distress. *'பரத்தையரெல்லார்க்கும் முட்டுப்பாடு உண்டாதலும் உண்டு' (கலித்.93, உரை, பக்.564). ஒருவர் முன்னேறும்போது எத்தனையோ முட்டுப்பாடுகள் வரும்.* 4. முட்டு², 6 (சிலப்.15, 164, உரை) பார்க்க; see *muttu², 6.* 5. தீது (சூடா.); evil.

[முட்டுப்படு→ முட்டுப்பாடு. முட்டு தடைசெய்கை.]

முட்டுப்பாந்தை *muttu-p-pāndai,* பெ.(n.) முட்டுச்சீலை (பரவ.) பார்க்க; see *muttu-c-cilai.*

[முட்டு + பாந்தை. முட்டு = தீட்டு.]

முட்டுப்பிடிப்பு *muttu-p-pidippu,* பெ.(n.) மூட்டுப் பகுதியில் ஏற்படும் ஊதை நோய் (கீல்வாயுநோய்) (M.L.); formation of a stiff joint, Anchylosis.

[முட்டு + பிடிப்பு. முட்டு = முழங்கால்.]

முட்டுமுடுகு *muttu-mudugu,* பெ.(n.) உட்சென்று கடத்தலருமை (நாஞ்.); difficulty, as in passing.

[முட்டு + முடுகு. முட்டு = வழி இடுக்கம்.]

முட்டுயுத்தம் *muttu-yuttam,* பெ.(n.) கைக்குத்துச் சண்டை; boxing, pugilism.

மறுவ. முட்டிச்சண்டை

*[முட்டு + **Skt.** யுத்தம். **Skt.** yuddha > த. யுத்தம் = போர்.]*

முட்டுவலி *muttu-vali,* பெ.(n.) பெண்களுக்கு மாதவிலக்குக் குற்றத்தால் ஏற்படும் ஒருவகைக் கருப்பப்பை நோய்; a disease of the uterus in females - *Dysmenorrhoea.*

[முட்டு = மாதவிலக்கு. முட்டு + வலி.]

முட்டுவாள் *muṭṭu-vāḷ,* பெ.(n.) கைவாள் (C.E.M.); hand saw.

[முட்டு + வாள். முட்டுவாள் = நீளம் குறைவான வாள்.]



முட்டுவாதம் *muṭṭu-vādam,* பெ.(n.) முட்டியில் காற்று பிடிப்பு ஏற்படுவதால் முடக்கவும் நீட்டவும் முடியாமல் சிறிது தூரம் நடந்தாலும் கவிழ்ந்து விழுவதைப் போல தோன்றும் ஒருவகைக் காற்று பிடிப்பு நோய்; a disease of the knee joint- *Rheumatism.*

*[முட்டு + வாதம். **Skt.** வாதம் > த. ஊதை நோய், வளிநோய்.]*

முட்டுவாளை *muṭṭu-vāḷai,* பெ.(n.) அடித் தொடையிற் புறப்படும் கட்டி வகை; abscess in the thigh or near the groin.

மறுவ. தொடை வாழைநோய்.

முட்டுவீக்கம் *muṭṭu-vīkkam,* பெ.(n.) 1. முழங்கால் வீங்குகை (M.L.); inflammation of the synovial membrane the knee - joint - *Synovitis.* 2. கணுக்களின் வீக்கம்; swelling the joints.

[முட்டு + வீக்கம். முட்டு = முழங்கால், முழங்கை விரல்கள் இவற்றின் பொருத்து. வீக்கம் = உடல் உறுப்பு வீங்குகை, நீர்ச்சுரப்பால் உடல் வீங்கும் நோய்.]

முட்டுளசி *muṭṭuḷaši,* பெ.(n.) ஒருவகைத் துளசி (பதார்த்த.308); a kind of basil - *Acanthospexmum his pidum.*

[முள் + துளசி. முள்ளுள்ள துளசி வகை.]

முட்டுளி *muṭṭuḷi,* பெ.(n.) தச்சுக் கருவி வகை (கோவை); a kind of carpenter's instrument.

[முட்டு + உளி.]



முட்டுற்றவன் *muṭṭuṟṟavaṉ,* பெ.(n.) 1. குறைவுள்ளவன்; needy person. 2. அறிவீனன்; ignorant or foolish person.

[முட்டு + உறு – முட்டுறு→ முட்டுற்றவன்.]

முட்டுறடு *muṭṭuṟaḍu,* பெ.(n.) முட்டொறடு (பைபிள்) பார்க்க; see *muṭṭoṟaḍu.*

[முள் + துறடு.]

முட்டை[1] *muṭṭai,* பெ.(n.) 1. பறவைகளில், ஊர்வனவற்றில் பெண்ணினம் இடும், குஞ்சு வளர்வதற்கான கருவைக் கொண்ட நீள்

கோள அல்லது உருண்டை வடிவப் பொருள்; குறிப்பாக உண்பதற்குப் பயன்படுத்தும் கோழி முட்டை; egg, especially, egg of a hen. *"புலவுநாறு முட்டையை.....கிழங்கொடு பெறூஉம்" (புறநா.176). பறவைகள் மரங்களில் கூடுகட்டி முட்டை இடுகின்றன. முதலை மணலில் முட்டை இடுகிறது. முட்டைப் பொரியல், முட்டைக் குழம்பு.* 2. பாலூட்டிகளில், பெண்ணின் இனப் பெருக்க மண்டலத்தில் உருவாகும், விந்துவை ஏற்றுக் கருவாக மாறும் சிறு உருண்டை; ovum. 3. முட்டை வடிவ எண், சுழி; zero. *பையன் எல்லாப் பாடங்களிலும் முட்டை.* 4. முட்டை வடிவ சிறு கரண்டி அளவு; measure of a teaspoon (which is egg shaped). *"ஒரு முட்டை நெய்" (பதினொ. சேத்.16). "நெய்முட்டை யொன்று" (தெ.கல். தொ.2, 91, 115). ஒரு முட்டை எண்ணெய் ஊற்றித் தாளிக்கவும் வாங்கியுள்ளான்.* 5. முட்டை வடிவ உலகம் (உலக கோளம்); world as a globe. *"திசைமுகன செய்த முட்டை கீண்டிலது" (கம்பரா.திருவடி.66).* 6. உடம்பு; body. *"முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்" (திருமந்.163).* 7. சாணி யுருண்டையை வட்டமாகத் தட்டிக் காயவைத்த வறட்டி; dry cake of cowdung. *"நெருப்புக்கு முட்டையும்" (அருட்பா.i, திருவருள்.105). மண்ணுகுடம் கொண்டு போகும் மாமா நீ மச்சினிய பார்க்கணும்னா? முட்டை வறட்டிய தட்டனுமா.*

ம. முட்டை; க. முட்டெ.

[முல் (வளைதல்)→முள்→முட்டு→முட்டை.]

முட்டை² *muṭṭai,* பெ.(n.) தவிடு; bran.

முட்டைக்கண் *muṭṭai-k-kaṇ,* பெ.(n.) 1. பிதுங்கியுள்ள விழி; goggle eye. 2. உருண்டை விழி; large rolling eye.

[முட்டை + கண் (வே.க.).]

முட்டைக்கண்ணீர் *muṭṭai-k-kaṇṇīr,* பெ. (n.) 1. சொட்டுச் சொட்டாய் விழும் கண்ணீர்; dropping of tears. 2. கண்ணீர்ப் பெருந்துளி (வின்.); large drops of tears.

[முட்டை + கண்ணீர்.]

முட்டைக்கத்தரி *muṭṭai-k-kattari,* பெ. (n.) முட்டை போன்ற வடிவமுடைய கத்தரி; brinjal.

மறுவ. முட்டிக்கத்தரி

[முட்டை + கத்தரி.]

முட்டைக்கார் *muṭṭai-k-kār,* பெ.(n.) கார்காலத்தில் விளையும் நெல்வகை (C.G.); a kind of paddy.

[முட்டை + கார்.]

முட்டைக்கால் *muṭṭai-k-kāl,* பெ.(n.) முட்டை போன்ற சிறுகரண்டி; small spoon.

[முட்டை + கால்.]

முட்டைக்காளான் *muṭṭai-k-kāḷāṉ,* பெ. (n.) முட்டை வடிவத்தைப் போன்ற ஒருவகைக் காளான்; an ovaly shaped mush room.

மறுவ. குடைக்காளான்

[முட்டை + காளான்.]

முட்டைக்கூடு *muṭṭai-k-kūḍu,* பெ.(n.) முட்டையின் வெளிப்புறக் கூடு; egg shell.

[முட்டை + கூடு.]

முட்டைக்கோங்கு *muṭṭai-k-kōṅgu,* பெ.(n.) தணக்கு மரவகை (L.); whirling nut- *Gyrocarpus jacquini.*

[முட்டை + கோங்கு.]

முட்டைக்கோசு *muṭṭai-k-kōšu,* பெ.(n.) வெளிர்ப் பச்சை நிற இலைகளை அடுக்கடுக்காகக் கொண்ட முட்டை வடிவுடைய இலை கறி தரும் செடி வகை; cabbage - *Brassica oleracea capitata.*

[முட்டை + கோசு. H.cosh.]

முட்டைக்கோழி *muṭṭai-k-kōḻi,* பெ.(n.) 1. முட்டையிடும் கோழி; fowl. 2. பெட்டைக் கோழி; hen.

[முட்டை + கோழி. முட்டை இடும் பெட்டைக் கோழி.]

முட்டைச்சாம்பல் *muṭṭai-c-cāmbal,* பெ. (n.) 1. வரட்டிச் சாம்பல் (வின்.); ash of burnt cowdung. 2. வரட்டிச் சாம்பலும் விளக்கெண்ணெயுங் குழைத்திடும் மருந்து; mixture of cowdung, ash and castrol oil, used medicinally.

[முட்டை + சாம்பல்.]

முட்டைத்தகுத்தல் *muṭṭai-t-taguttal,* தொ. பெ.(vbl.n.) முள் தைத்தது போன்ற குத்தல் வலி; acute piercing pain, like the run of a thorn.

[முள் + தைத்தல் + குத்தல்.]

முட்டைத்தயிலம் *muṭṭai-t-tayilam,* பெ. (n.) முசுட்டுமுட்டைத்தயிலம் (நாஞ்.) பார்க்க; see *mušuṭṭu-muṭṭai-t-tayilam.*

*[முட்டை + **Skt.** தயிலம்.]*

முட்டைத்தோல் *muṭṭai-t-tōl,* பெ.(n.) முட்டைக் கருவின் மேலாக உரைபோல இருக்கும் மெல்லிய தோல்; a membrane lining inside the egg.

[முட்டை + தோல்.]

முட்டைநாறி *muṭṭai-nāṟi,* பெ.(n.) 1. வெதுப்படக்கி (மூ.அ.); false nettle. 2. நீண்ட மரவகை; fetid - tree.

[முட்டை + நாறி.]

முட்டைப்பாசி *muṭṭai-p-pāši,* பெ.(n.) ஒருவகை நீர்ப்பூடு (M.M.609); aquatic plants with inflated appendages to roots, especially - *Utricularia stellaris.*

[முட்டை + பாசி. பாசி = நீர்ப்பாசி, கடற்பாசி.]

முட்டைப்பாரை *muṭṭai-p-pārai,* பெ.(n.) ஐந்து விரலம் நீளமுள்ள கடல்மீன் வகை (யாழ்ப்.); a sea fish, attaining 5 in. in length.

[முட்டை + பாரை. பாரை = மீன் வகை.]

முட்டைப்பை *muṭṭai-p-pai,* பெ.(n.) சினைப்பை; ovarium.

[முட்டை + பை.]

முட்டைமுடக்கெலும்பு *muṭṭai-muḍa-k-kelumbu,* பெ.(n.) முழங்காலெலும்பு; knee bone - *Patella.*

[முட்டை + முடக்கு + எலும்பு. முட்டை வடிவ முழங்காலெலும்பு.]

முட்டையோடு *muṭṭai-ōḍu,* பெ.(n.) 1. முட்டையின் மேலோடு; egg shell. 2. கோழி முட்டையோடு; fowl egg shell.

[முட்டை + ஓடு. கோழி முட்டையின் ஓடு மாழைத்துகள்களைச் சுண்ணகமாக்கும் தன்மையுடையது.]

முட்டைவடிவு *muṭṭai-vaḍivu,* பெ.(n.) நீண்ட உருண்டை வடிவம் (வின்.); spheriod, elliptical shape.

[முட்டை + வடிவு.]

முட்டைவெண்கரு *muṭṭai-veṇ-karu,* பெ. (n.) முட்டைக்குள்ளிருக்கும் வெள்ளைக் கரு; white of an egg - the albumen.

[முட்டை + வெண்கரு.]

முட்டைவெள்ளை *muṭṭai-veḷḷai,* பெ.(n.) முட்டையின் வெண்கரு கலந்த சுதை; white lime mixed with the white of eggs.

[முட்டை + வெள்ளை.]

முட்டொளை *muṭṭoḷai,* பெ.(n.) வீணைத் தண்டின் நடுவே செல்லுந்தொளை; foramen spinale.

[முள் + தொளை.]

முட்டொறடு *muṭṭoṟaḍu,* பெ.(n.) இறைச்சியைத் தொங்கவிடும் முள் (வின்.); flesh - hook.

[முள் + துறடு – முட்டுறடு→ முட்டொறடு.]

முட்பரம்பு *muṭ-parambu,* பெ.(n.) முட்களுள்ள பரம்புப் பலகை (இ.வ.); harrow.

[முள் + பரம்பு. முட்களுள்ள பரம்புப் பலகை.]



முட்பலா *muṭ-palā,* பெ.(n.) ஆண்மையை உண்டாக்கும் ஒருவகைப் பலா, வேர்ப்பலா; a species of jack that promotes the potency of men.

[முள் + பலா.]

முட்பலாசு *muṭ-palāšu,* பெ.(n.) 1. முள் முருக்கு; a tree - *Erythrina indica.* 2. இலைப் புரசு; butea frondosa.

[முள் + பலாசு.]

முட்பலுகு *muṭ-palugu,* பெ.(n.) முட்பலுவு பார்க்க; see *puṭ-paluvu.*

[முள் + பலுகு. பலுவு→ பலுகு. பலுவு = பரம்புப் பலகை.]

முட்பலுவு *muṭ-paluvu,* பெ.(n.) முட்பரம்பு பார்க்க; see *muṭ-parambu.*

[முள் + பலுவு. பலுவு = பரம்புப் பலகை.]

முட்பன்றி *muṭ-paṉṟi,* பெ.(n.) முள்ளம் பன்றி; an animal porcupine - *Hedge hog - Echinus.*

[முள் + பன்றி.]

முட்பாகல் *muṭ-pāgal,* பெ.(n.) முள்ளுள்ள பாகற்காய்; a variety of bitter gourd.

[முள் + பாகல்.]

முட்புளிச்சை *muṭ-puḷiccai,* பெ.(n.) புளிச்சை வகை (L.); thorny hemp bendy - *Hibiscus surattensis.*

[முள் + புளிச்சை. புளிச்சை = ஒருவகைச் செடி.]

முட்புறக்கனி *muṭ-puṟa-k-kaṉi,* பெ.(n.) பலாப்பழம்; jack fruit. *"முட்புறக்கனி யின்றேனும்" (நைடத. நாட்டுப்.20).*

[முள் + புறம் + கனி. புறத்தே முள்ளோடு இருக்கும் பழம்.]

முட்பூல் *muṭ-pūl,* பெ.(n.) முட்பூலா பார்க்க; see *muṭ-pūlā.*

முட்பூலா *miṭ-pūlā,* பெ.(n.) பூலாச் செடி வகை; black berried feather foil - *Phyllanthus reticulatus.*

[முள் + பூலா.]

முட்பூலாஞ்சி *muṭ-pūlāñji,* பெ.(n.) முட்பூலா பார்க்க; see *muṭ-pūlā.*

முடக்கடி *muḍakkaḍi,* பெ.(n.) 1. தடை (வின்.); hindrance, objection, thwarting. 2. வருத்தம் (இ.வ.); straits, difficulties.

[முடக்கு+ அடி.]

முடக்கத்தான் *muḍakkattāṉ,* பெ.(n.) முடக்கொற்றான் பார்க்க; see *muḍa-k-koṟṟāṉ*(சா.அக.).

மறுவ. முடக்கறுத்தான் கொடி, இந்திர வல்லி.

முடக்கம்[1] *muḍakkam,* பெ.(n.) 1. தடை; restraint, hindrance, obstacle. *"எய்து மது முடக்கமானால்" (அரிச்.பு.நகர்நீங்.21).* 2. அடக்கம் (பிங்.); contraction. 3. கைகால் முடங்குகை; lameness, being crippled by paralysis. 4. வளைவு; bend, curve. *'வாளையினது பகுத்தவாயை யொக்க முடக்கத்தை உண்டாக்கி... விரலிடத்தேயிட்ட முடக்கென்னு மோதிரம்' (நெடுநல்.143-4, உரை).* 5. பணமுடை; want, as of money. 6. பணம் முதலியன தேங்கிக் கிடக்கை; lying idle, as money in a bank.

[முடக்கு → முடக்கம்.]

முடக்கம்[2] *muḍakkam,* பெ.(n.) 1. தடை ஏற்பட்ட அல்லது தடுக்கும் நிலை; stoppage. *பணி முடக்கத்தால் பொருளாக்கம் நின்றுவிட்டது.* 2. பயனாகாத வகையில் தங்கிவிட்ட நிலை; freeze. *அரசு நடவடிக்கையால் அயல்நாட்டு வங்கியில் போட்டிருந்த பணம் முடக்கமாகிவிட்டது.*

[முடக்கு → முடக்கம்.]

முடக்கம்செய்தல் *muḍakkam-šeydal,* தொ.பெ.(vbl.n.) நொண்டியாகச் செய்கை; to cripple or mutilate or maim a person.

[முடக்கம் + செய்தல்.]

முடக்கம்மை *muḍakkammai,* பெ.(n.) முடக்குமாரி பார்க்க; see *muḍakku-māri.*

[முடக்கு + அம்மை.]

முடக்கற்றான் *muḍakkaṟṟāṉ,* பெ.(n.) முடக்கொற்றான் (தைலவ.தைல.93) பார்க்க; see *muḍakkoṟṟāṉ.*

முடக்கறுத்தான் *muḍakkaṟuttāṉ,* பெ.(n.) முடக்கொற்றான் பார்க்க; see *muḍak koṟṟāṉ.*

[முடக்கு + அறுத்தான்.]

முடக்கறை *muḍakkaṟai,* பெ.(n.) மறைந்து அம்பெய்தற்குரிய மதிலுறுப்பு; inner mound of a fortification, as cover for bowmen. *'பகழியினை யுடைய முடக்கறையாற் சிறந்த எயிலிடத்து' (பு.வெ.6:24, உரை).*

[முடக்கு + அறை.]

முடக்கன் *muḍakkaṉ,* பெ.(n.) தாழை; a fragrant screw pine.

[முடங்கல் → முடக்கன். முடங்கல் = தாழை.]

முடக்கு[1]–தல் *mudakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. மடக்குதல்; to bend, as knee, arm, etc. *"முடக்கிச் சேவடி" (திவ்.பெருமாள்.7:2).* 2. சுற்றிக் கொள்ளுதல்; to wind round, wrap, as one's person. *"நாகங்கச்சா முடக்கினார்" (தேவா.955, 1).* 3. தடுத்தல் (அக.நி.); to prevent, hinder. 4. முடங்கச் செய்தல்; to cause to bend or contract, to disable, as one's limbs. *'வளிநோய் அவனை முடக்கி விட்டது' (வின்.).* 5. நிறுத்துதல்; to cease activity, to stop, discontinue. *பணமுடையால் சீட்டை முடக்கிவிட்டான்.* 6. வேய்தல்; to roof in, as a hut; to cover. *குடிசை முடக்கி வைத்தேன் (வின்.).*

[முடங்கு–தல்→ முடக்கு–தல்.]

முடக்கு[2]–தல் *mudakku-,* 5 செ.கு.வி.(v.i.) படுத்துக் கொள்ளுதல் (உ.வ.); to lie down.

[முடங்கு–தல்→ முடக்கு–தல்.]

முடக்கு[3] *mudakku,* பெ.(n.) 1. வளைவு; curve, bend. *'மகளிர் காலிற் பாடகம் ஒரு கம்பியாய்ப் பல முடக்காலே போக்கும் வரவும் உண்டானாற் போல' (சீவக.510, உரை).* 2. முடங்கும் நாக்கு; tongue. *"அண்ண மூடெழ முடக்கினை யழுத்தி" (தணிகைப்பு. அகத்தியனருள்.280).* 3. தெருவின் கோணம்; corner of a winding street. *அத்தெரு மூலை முடக்காயிருக்கிறது (வின்.).* 4. முடக்கு மோதிரம் (நெடுநல்.143–4, உரை); a kind of ring. 5. முடக்கறை (பு.வெ. 5: 1, கொளு.) பார்க்க; see *muda-k-karai.* 6. தடை (இ.வ.); hindrance. 7. சுணக்கம் (இ.வ.); delay. 8. வேலையின்மை; unemployment. 9. சீற்றம் (இ.வ.); anger, wrath. 10. நோய் வகை (வை.மூ.); a disease. 11. மூலை; corner. 12. கோடித் திருப்பம்; last turning. *'முடக்குத் தூம்பினின்றும் வடக்கு நோக்கிப் போன வாய்க்கால்' (தெ.கல். தொ.7:137).* 13. நெரிந்த வளைவு; bend, curve.

க. முடுக்கு.

[முடங்கு→ முடக்கு.]

முடக்கு[4]–தல் *mudakku-,* 5 செ.கு.வி.(v.i.) 1. செயல்பாடு தொடர முடியாதபடி தடைப்படுத்துதல்; stop, so as not to proceed further, cripple. *சிக்கன நடவடிக்கையைக் கரணியம் காட்டி வேலை வாய்ப்புத் திட்டங்களை முடக்கிவிடுதல் கூடாது. போக்குவரத்து நெரிசல் கரணியமாக வழக்கமான பணி சிறிது நேரம் முடக்கப்பட்டது.* 2. பணத்தை, பயன்பாடு குறைவான ஒன்றில் முதலீடு செய்தல்; lock up capital, funds, etc, make a dead investment. *செயலாக்கத் திறன் இல்லாத திட்டத்தில் பல கோடி உருபாவை இந்த நிறுவனம் முடக்கிவிட்டது.* 3. நுழைவு ஆவணம் முதலியவற்றைப் பயன் படுத்தாதவாறு அல்லது வங்கியில் உள்ள பணத்தைப் பெறமுடியாதவாறு தடுத்தல்; confiscate, freeze an account. *இரு வங்கிகளில் அவர் கணக்கில் உள்ள பணத்தை முடக்கி வைக்க அரசு ஆணை பிறப்பித்தது.* 4. ஒருவரின் நடவடிக்கைகளைக் குறிப்பிட்ட இடத்துக்குள் இருக்கும் வகையில் ஒடுக்குதல்; confine one's activities. *இவ்வளவு படித்தவளை வீட்டிற்குள் முடக்கி வைப்பது மடமை.*

[முடங்கு–தல்→ முடக்கு–தல்.]

முடக்குக்காய்ச்சல் *muḍakku-k-kāyccal,* பெ.(n.) முடக்கம்மை (M.L.) பார்க்க; see *muḍakkammai.*

[முடக்கு + காய்ச்சல்.]

முடக்குக்குடர் *muḍakku-k-kuḍar,* பெ.(n.) முடக்குக்குடல் பார்க்க; see *muḍakku-k-kuḍal.*

[முடக்கு + குடர். குடல்→குடர்.]

முடக்குக்குடல் *muḍakku-k-kuḍal,* பெ.(n.) சிறுகுடல் (யாழ்.அக.); small intestines.

[முடக்கு + குடல்.]

முடக்குச்சரக்கு *muḍakku-c-carakku,* பெ.(n.) 1. விலைப்படாது, விற்கப்படாது கிடக்குஞ் சரக்கு (வின்.); dead stock, unsaleable goods. 2. பாழான சரக்கு; damaged goods.

[முடக்கு+சரக்கு. சரக்கு = வணிகப் பண்டம்.]

முடக்குச்சுரம் *muḍakku-c-curam,* பெ.(n.) முடக்குக்காய்ச்சல் பார்க்க; see *muḍakku-k-kāyccal.*

மறுவ. முடக்குமாரி

[முடக்கு + சுரம். சுரம் = காய்ச்சல்.]

முடக்குப்பனை *muḍakku-p-paṉai,* பெ.(n.) கோணலாக வளர்ந்த பனை (வின்.); crooked palmyra.

[முடக்கு + பனை.]

முடக்குமாரி *muḍakku-māri,* பெ.(n.) அம்மை நோயின் கரணியமாகக் கைகால்களை முடக்கிக் காய்ச்சலை உண்டாக்கும் ஊதை நோய் (வாதம்); fever causing pain in the joints and cripple the person.

மறுவ. முடக்கம்மை

[முடக்கு + மாரி.]

முடக்குமோதிரம் *muḍakku-mōdiram,* பெ.(n.) நெளி மோதிரம் (சிலப்.6: 95, அரும்); a kind of ring.

[முடக்கு + மோதிரம். மோதிரம் = விரலணி – வளைந்த விரலணி.]

முடக்குவாதம் *muḍakku-vādam,* பெ.(n.) முடக்கூதை பார்க்க; see *muḍakkūdai.* *"முடக்கு வாதத்தர்" (கடம்ப.பு.இலீலா.131).*

[முடக்கு + Skt. வாதம். Skt. vāda > த. வாதம் = காற்று.]

முடக்குவாயு *muḍakku-vāyu,* பெ.(n.) முடக்கூதை பார்க்க; see *muḍa-k-kūdai.*

[முடக்கு + Skt. வாயு. Skt. vāyu > த. வாயு = காற்று.]

முடக்குற்றான் *muḍakkuṟṟāṉ,* பெ.(n.) முடக்கொற்றான் (வின்.) பார்க்க; see *muḍa-k-koṟṟāṉ.*

முடக்கூதை *muḍakkūdai,* பெ.(n.) 1. கை கால் முதலிய உறுப்புக்களை முடங்கச் செய்யும் பக்கவூதை நோய்; paralysis. அவனுடைய தாத்தாவுக்கு முடக்கூதை வந்து ஒருகையும் ஒரு காலும் விழுந்து விட்டது. 2. மூட்டுக் கடுகடுத்ததைப் போலவும் முறிந்தது போலவும் நடக்க வொண்ணாமல் தவழ்ந்து போகும்படி செய்யும் காற்றுப்பிடிப்பு நோய்; a disease that cripples the person rheumatic and gout disease. 3. மூட்டு வீக்கம்; arthritis.

[முடக்கு + ஊதை. ஊதை = வளிநோய்.]

முடக்கெடு–த்தல் *mudakkedu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. வளைவை நேராக்குதல்; to straighten, as anything bent. 2. சீற்றத்தைத் தணித்தல்; to appease.

[முடக்கு + எடு–த்தல்.]

முடக்கொத்தான் *muda-k-kottān,* பெ.(n.) முடக்கொற்றான் பார்க்க; see *muda-k-korrān.*

முடக்கொற்றான் *muda-k-korrān,* பெ.(n.) 1. கொடிவகை; balloon-vine-*Cardios permum halicacabam.* 2. கொடிவகை; lesser balloon - vine - *Cardiospermum canescens.*

மறுவ. முடக்குற்றான், முடக்கறுத்தான்.

Tel. Budda-boosara; **Mal.**ulinja; **Kan.** Kanakai; **Hind.** Kanphata.

[முடம் + கொற்றான்–முடக்கொற்றான் = முடச்சூலையைப் போக்கும் கொடிவகை.]

இப்பூண்டு இந்தியா முழுவதும் பயிராகின்றதெனினும் தமிழ்நாடு, வங்காளம், இலங்கை போன்ற இடங்களில் மிகுதியாய் வளருகின்றன. துவர்ப்பு, கார்ப்புச் சுவை மிக்கது. இதன் இலை, வேர் முதலியன கீல், சினைப்பு, புண் கரப்பான் ஆகிய நோய்களை நீக்கும் தன்மையுடையது என்பதை அகத்தியர் குண்பாடம் என்னும் நூலால் அறியலாம்.

"சூலைப் பிடிப்பு சொரி சிரங்கு வன்கரப்பான்
காலைத் தொடுவாய்வுங் கன்மலமுஞ் – சாலக்
கடக்கத்தா னோடிலிடுங் காசினியை விட்டு
முடக்கொற்றான் றன்னை மொழி"

(அக.குண.)

இதன் இலை, வேர் முதலியவைகளை குடிநீரிலிட்டு குடிக்க வளிமூலம், நாட்பட்ட இருமல் நீங்கும். மேலும் இதன் இலைகளை வதக்கி அடிவயிற்றில் கட்டச் சூதகத்தை மிகுதிப்படுத்தி சூலக அழுக்குகளை வெளிப்படுத்தும். இதன் இலைச் சாற்றைக் காதில் விட காதுவலி, சீழ் வடிதல் நீங்கும் (பொருட்பண்பு நூல் –குணபாடம்.1, பக்.600).

முடங்கசாலி *mudanga-šāli,* பெ.(n.) காரைச்செடி; carri - a wild plant (சா.அக.).

முடங்கர் *mudangar,* பெ.(n.) ஈன்றணிமையில் உண்டாம் நலிவு; physical exhaustion, as in confinement. *"குருளை மூன்றுட னீன்ற முடங்கர் நிழத்த" (அகநா.147).*

[முடங்கு → முடங்கர்.]

முடங்கல்[1] *mudangal,* பெ.(n.) 1. வில்போல் மடங்குகை (சூடா.); being bent, as a bow. 2. பணம் முதலியன தேங்கிக் கிடக்கை (தாயு. சிற்சுகோதய.1); lying idle, as money in a bank. 3. தடைப்படுகை; being hindered. *"முயலுநோன்பு முடங்க லிலான்" (சேதுபு. முத்தீர்.6).* 4. முடக்கூதை பார்க்க; see *muda-k-kūdai.* 5. சுருளோலைக் கடிதம்; roll of palm-leaf used in letter-writing. *"மண்ணுடை முடங்கல்" (சிலப்.13:96).*

6. சிறுமை; smallness. *"முடங்கன் மனாலையமே யினிதாயிற்று" (திருநூற்.30).* 7. ஓர் அணா மதிப்புள்ள சிறுகாசு (இ.வ.); small coin, equivalent to 1 anna.

[முடங்கு → முடங்கல்.]

முடங்கல்² *mudaṅgal,* பெ.(n.) 1. முடத்தாழை; fragrant screw-pine. 2. முள்ளி (மலை.); Indian nightshade. 3. மூங்கில்; spiny bamboo.

[முடங்கு → முடங்கல்.]

முடங்கன்முலை *mudaṅgaṉ-mulai,* பெ.(n.) தாழை விழுது (தைலவ.தைல.); switch of the fragrant screw - pine.

[முடங்கல் + முலை.]

முடங்கி¹ *mudaṅgi,* பெ.(n.) 1. நோயாற் கிடையாய்க் கிடப்பவன் (யாழ்.அக.); bed - ridden person. 2. முடவன் (பாண்டி.); lame person.

[முடங்கு → முடங்கி.]

முடங்கி² *mudaṅgi,* பெ.(n.) நிலத்தின் மூலை நீட்டம் (நெல்லை.); elbow or jutting part of a piece of land.

[முடங்கு → முடங்கி.]

முடங்கிக்கிடந்தநெடுஞ்சேரலாதன் *mudaṅgi-k-kidanda-neduñ-jēralādaṉ,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a *Šaṅgam* poet.

[முடங்கி + கிடந்த + நெடுஞ்சேரலாதன்.]

இவர் சேரர் குடியைச் சேர்ந்தவர். முடங்கிக் கிடந்த என்ற அடைமொழியால் நடக்கவியலாது இருந்தார் போலும். இவர் நெய்தலைப் புனைந்து பாடுவதில் வல்லவர். இவர் பாடிய பாடல் அகநானூற்றில் கிடைக்கிறது.

"நெடுங்கயிறு வலந்தன குறுங்க
ணவ்வலைக்
கடல்பா டவிய வினமீன் முகந்து
துணைபுண ருவகையர் பரத மாக்க
ளிளையரு முதியருங் கிளையுடன் துவன்றி
யுப்பொ யுமண ரருந்துறை போக்கு
மொழுகை நோன்பக டொப்பக் குழீஇ
யயிர்திணி யடைகரை யொலிப்ப வாங்கிப்
பெருங்களந் தொகுத்த வுழவர் போல
விரந்தோர் வறுங்கல மல்க வீசிப்
பாடுபல வமைத்துக் கொள்ளை சாற்றிக்
கோடுயர் திணிமணற் றுஞ்சுந் துறைவ
பெருமை யென்பது கெடுமோ வொருநாண்
மண்ணா முத்த மரும்பிய புன்னைத்
தண்ணறுங் கானல் வந்து நும்
வண்ண மெவனோ வென்றனிர் செலினே"
(அகநா.30).

முடங்கிறை *mudaṅgiṟai,* பெ.(n.) கூரையின் கூடல்வாய்; valley of a roof. *"முடங்கிறைச் சொறிதரு மாத்திர எருவி" (முல்லைப்.87).*

[முடங்கு + இறை. முடங்குதல் = சுருங்குதல். இறை = உடலுறுப்பின் மூட்டு வாய், கூரையின் கூடல்வாய்.]

முடங்கு¹-தல் *mudaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. சுருங்குதல்; to contract. *"இடங்குறை வாயிலின் முடங்கி யிருந்துழி" (பதினோ. திருவிடைமும்.22).* 2. கைகால் இயங்காமற் போதல், ஊனமாதல்; to become lame or maimed crippled at paralsed. *அவருக்கு அந்த நேர்ச்சி (விபத்து)க்குப் பின் கால் முடங்கி விட்டது. "கைகால் முடங்கு பொறியிலி" (பிரபுலிங். துதி.1).* 3. வளைதல்;

to bend. *"அடங்கினன் முடங்கியலம் வந்து" (உத்திரரா. வரையெடுத்த.72).* 4. கெடுதல்; to be spoiled. *"சிறுமை பொருந்திப் பெருமை முடங்கி" (திருப்பு.372).* 5. தங்குதல்; to abide, remain, stay. *"அறுகாற் பறவை முடங்கிய செஞ்சடை முக்கண னார்க்கு" (பதினொ.பொன்வண்.64).* 6. படுத்துக் கொள்ளுதல்; to lie down. *"பசியட முடங்கிய பைங்கட் செந்நாய்" (நற்.103).* 7. செயல் தொடராதபடி தடைப்படுதல்; to be hindred, be crippled. *வேலை நிறுத்தத்தால் மருத்துவமனைப் பணிகளும் முடங்கியுள்ளன. செயல் முடங்கி விட்டது.* 8. பயன்பாடு குறைவான ஒன்றில் முதலீடு செய்யப்படுதல், தேங்குதல்; get locked up. *என் பணம் முழுவதும் நூல் வெளியிட்டதினால் முடங்கி விட்டது.* 9. ஒருவரின் நடவடிக்கைகள் குறிப்பிட்ட இடத்துக்குள் இருக்கும் வகையில் ஒடுங்குதல்; be confined to something. *எனது அம்மா நோய்வாய்ப்பட்டு முடங்கி விட்டார். அவள் பட்டப் படிப்புப் படித்தும் மடப்பள்ளியில் முடங்கிவிட்டாள்.*

தெ., க. முடுகு.

[முடம்→முடங்கு→ முடங்கு–தல்.]

முடங்கு² *mudaṅgu,* பெ.(n.) 1. முடக்கூதை (திவா.) பார்க்க; see *muḍakkūdai.* 2. தெருச் சந்து; lane. 3. தெருவளைவு; turning in a street.

[முடம்→முடங்கு.]

முடங்கு³ *muḍaṅgu,* பெ.(n.) 1. நிலத்தின் மூலை நீட்டம்; elbow or jutting part of a field. *"மேற்கு முடங்கு குழி" (தெ.கல்.தொ.4, 194).* 2. வளைவு; corner, turning.

[முடம்→முடங்கு.]

முடங்குவாதம் *muḍaṅgu-vādam,* பெ.(n.) முடக்கூதை பார்க்க; see *muḍakkūdai.*

[முடங்கு + வாதம். Skt. vāda> த. வாதம் = ஊதை நோய்.]

முடங்குளை *muḍaṅgulai,* பெ.(n.) 1. பிடரி மயிர் (சது.); mane, as of horse. 2. பிடரி மயிருடைய அரிமா; lion, as having a mane. *"முடங்குளை முகத்து...... அவுணனொடும்" (கல்லா.முருக. துதி.) (பிங்.).*

முடங்கொன்றான் *muḍaṅgoṟṟāṉ,* பெ.(n.) முடக்கொற்றான் பார்க்க; see *muḍa-k-koṟṟāṉ.*

[முடம் + கொன்றான்.]

முடஞ்சம் *muḍañjam,* பெ.(n.) நிலவேம்பு; a plant - the creat - *Andrographis paniculata alias justicia paniculata cures fevers* (சா. அக.).

முடத்தாமக்கண்ணியார் *muḍa-t-tāma-k-kaṇṇiyār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a *Śaṅgam* poet.

[முடத்தாமம் + கண்ணியார்.]

எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றான பொருநராற்றுப்படையை இயற்றியவர். "இயற் பெயர் முன்னர்" (தொல்.சொல்.இடை.22, சேனா.) என்னும் நூற்பாவினடியில் 'ஆர்' ஈறு (விகுதி) பன்மையொடு முடிதற்கு முடத்தாமக்கண்ணியார் வந்தாரென்பது எடுத்துக்காட்டாகக் காட்டப் பெற்றிருத்தலால் இவர் பெயர் முடத்தாமக்கண்ணி என்று தெரிகின்றது. இப்பெயர் உறுப்பால் வந்ததென்றும், இவர் பெண்பாலரென்றும் கூறுவாரும் உளர். 'ஆர்' ஈறு பெற்ற பல பெயர்கள் இருப்ப, இவர் பெயரை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டியது இவரின் சிறப்பைப்

புலப்படுத்தும். காவிரின் பெருமையைப் பொருநராற்றுப்படையில் சிறப்பாகக் கூறுகின்றார்.

"எல்லை தருநன் பல்கதிர் பரப்பிக்
குல்லை கரியவும் கோடெரி நைப்பவும்
அருவி மாமலை நிழத்தவு மற்றக்
கருவி வானம் கடற்கோண் மறப்பவும்
பெருவற னாகிய பண்பில் காலையும்
நறையு நரந்தமு மகிலு மாரமுந்
துறைதுறை தோறும் பொறையுயிர்த்
தொழுகி
நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம்
புகுதொறும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடையக்
கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறுங்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையி னிடங்கெடக்
கிடக்குஞ்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கு நாடுகிழ வோனே"
(பொருந.233-248).

முடத்தி *mudatti*, பெ.(n.) 1. முடமானப் பெண்; lame woman. 2. வளைவுள்ளது; anything bent.

[முடவன் (ஆ.பா.)→ முடத்தி (பெ.பா.).]

முடத்திருமாறன் *muda-t-tirumāṟaṉ*, பெ. (n.) இடைச் சங்கத்திறுதியில் வாழ்ந்த பாண்டியன் (இறை. 1:5); the last of the Pāṇḍyakings of the Middle Šaṅgam.

[முடம் + திருமாறன்.]

இவர் இடைக் கழக இறுதியில் பாண்டிய நாட்டை ஆண்டவர். இவர் காலத்துக் கழகமிருந்த கபாடபுரம் கடல் கொள்ளப்பட்டுக் கழகம் அழிந்தபோது, உடனே இப்பொழுது உள்ள மதுரையில் கடைக் கழகத்தை நிறுவினார். இவர் பாண்டிய மரபினர். சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் மகனாகிய குட்டுவன் சேரலைப் பாராட்டியுள்ளார். இவர் பாலைத் திணையையும், குறிஞ்சித் திணையையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் தாம் பாடியுள்ள செய்யுளில் சாபம் என்ற வடசொல்லைக் (நற்.228) கையாண்டுள்ளார். இவர் பாடியதாக நற்றிணையில் இரண்டு பாடல்கள் காணப்படுகின்றன.

"என்னெனப் படுமோ தோழி மின்னுவசிபு
அதிர்குரல் எழிலி முதிர்கடன் தீரக்
கண்தூர்பு விரிந்த கனையிருள் நடுநாள்
பண்பில் ஆரிடை வரூஉம் நந்திறத்து
அருளான் கொல்லோ தானே கானவன்
சிறுபுறம் கடுக்கும் பெருங்கை வேழம்
வெறிகொள் சாபத் தெறிகணை வெரீஇ
யழந்துபட விடரகத் தியம்பும்
எழுந்துவீழ் அருவிய மலைகிழ வோனே
(நற்.228).

முடத்தெங்கு *muḍa-t-teṅgu*, பெ.(n.) கோணலாக வளர்ந்த தென்னை; crooked coco-palm. *"முடத்தெங் கொப்பன" (நன்.31).*

[முடம் + தெங்கு. வளைந்து பிறர் நிலத்துச் சென்று நிற்பது.]

நல்லாசிரியர் இலக்கணத்தை நான்கு உவமைகளால் (நிலம், மலை, நிறைகோல், மலர்) காட்டிய நன்னூலார், ஆசிரியர் ஆகத் தகாதவர் இலக்கணத்தையும் நான்கு உவமைகளால் கூறுகின்றார். அவற்றுள் ஒன்று 'முடத்தெங்கு'. *"கழற்குடம், மடற்பனை, பருத்திக் குண்டிகை முடத்தெங்கொப்பன" (நன்.31).* நீரூற்றல் முதலிய பல்வகை உதவிகளையும் செய்து தன்னைப் பேணி வளர்க்காத இயல்புடைய பிறருக்குத் தன்னிடத்துள்ள காய்களைத் தரும் குற்றமுடையது

முடத்தெங்கு. அதாவது வளைந்து பிறர் நிலத்துச் சென்று பயன் தரும் இயல்புடையது முடத்தெங்கு.

கொடுத்தல் முதலிய பலவகை யுதவிகளையும் செய்து தமக்கு வழிபாடு செய்யும் இயல்பில்லாத மாணாக்கருக்கு தம்மிடத் திலுள்ள கல்விப் பொருளைத் தருங் குற்றமுடையவர் ஆசிரியராகாதார். ஆதலால் அவருக்குப் பிறர் நிலத்தில் வளைந்து சென்று பயன்தரும் முடத்தெங்கு உவமையாகியது.

முடந்தை *mudandai,* பெ.(n.) 1. முடம்; lameness. 2. வளைந்தது; anything bent. *"முடந்தை நெல்லின் கழையமல் கழனி" (பதிற்றுப்.32:13).* 3. மாதவிலக்குத் தடைபடும் நோய் (M.L.); failure or suspended flow of the menses - *Amenorrhoea.*

[முடம்→ முடந்தை. முடம் = தடைபடுதல்.]

முடம் *mudam,* பெ.(n.) 1. வளைவு; bent. *"முடத்தொடு துறந்த வாழா வன்பகடு" (புறநா.307).* 2. வளைந்தது; anything bent. *"முடத்தாழை" (கலித்.136).* 3. கை கால் ஊனமுடன் இருப்பது; leprosy. 4. ஆடல்பாடல் முதலியவற்றின் குற்றம்; defects in singing and dancing. *"பண்ணே பாணி தூக்கே முடமே" (சிலப்.3: 46).* 5. கை அல்லது கால் செயல்படாத நிலை; crippled condition of leg or arm. *முடப்பிள்ளை யானாலும் மூத்தப் பிள்ளை. கோழி மிதித்துக் குஞ்சு முடமாவது இல்லை.* 6. உறுப்புக் குறை; defective limbs or organs. 7. நொண்டி; lameness. 8. கீழ் பிடிப்பு (கீல் பிடிப்பு); orthritic.

[முடங்கு→ முடம். முள்→முண்→முணம்→ முடம். முள் (வளைவு)]

முடமயிர் *muda-mayir,* பெ.(n.) 1. இரண்டு இமைகளும் ஒட்டிக் கொண்டு காயம் (விரணம்) உண்டாகி கருமணிகள் வெளுத்துக் காணும் ஒருவகைக் கண் நோய்; a disease affecting the pupil of the eye caused by the sticking of the eye lids togethers. 2. தொண்டையில் முடி முளைப்பதல் உண்டாவதாகக் கருதப்படும் நோய் வகை; a disease said to be caused by the growth of hairs in the throat (சா.அக.).

[முடம் + மயிர்.]

முடமா *mudamā,* பெ.(n.) காட்டுமா அதாவது சாரப் பருப்பு; wild mango seed - *Buchanania angustifolia* (சா.அக.).

முடமுடெனல் *muda-mudenal,* பெ.(n.) ஒலிக்குறிப்பு வகை (யாழ்.அக.); onom. expr. signifying cracking noise.

முடமோசியார் *muda-mōśiyār,* பெ.(n.) கழகப் புலவர்; *Śaṅgam*poet.

மறுவ. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்.

[முடம் + மோசியார்.]

இவர் சோழநாட்டு உறையூரை அடுத்த ஏணிச்சேரியைச் சார்ந்தவர். முட மோசியார் என்பது உறுப்பால் வந்த பெயராகலாம். இவர் பிறப்பால் அந்தணர் என்பதை தொல்காப்பிய மரபியல் நூற்பா 74-இல் நச்சினிார்க்கினியர் கூறியுள்ளார். சேரமான் அந்துவஞ் சேரலிரும்பொறையால் ஆதரிக்கப்பட்டவர். இவரால் பாடப்பட்டோர் சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி, ஆய். புறநானூற்றில் 13, 127, 128, 129, 130, 131, 132, 133, 134, 135, 241, 374, 375 ஆகிய எண்ணுள்ள பாடல்களைப் பாடியுள்ளார். போர்க்களத்திற் பகைவரது சேனையைப் பிளந்து

கொண்டு வாள் வீரர்க்கிடையே தன் தலைமை தோன்றச் செல்லும் சோழன் களிற்றிற்குக் கடலைக் கிழித்துச் செல்லும் நாவாயையும், விண் மீன்களுக்கு இடையே விளங்கும் திங்களையும் இவர் உவமை கூறியிருக்கின்றார் (புறநா.13). ஆய் என்னும் வள்ளலுடைய கொடைச் சிறப்பு, வீரச் சிறப்பு முதலியனவும் இவராற் பலவகைகளில் பாராட்டப் பெற்றுள்ளன. இதுபற்றியே, *"திருந்துமொழி மோசி பாடிய ஆயும்" (புறநா.158)* எனப் பெருஞ்சித்திரனார் இவரைப் பாராட்டியுள்ளார்.

"இவனியா ரென்குவை யாயி னிவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்
மறலி யன்னகளிற்று மிசை யோனே
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பன்மீ னாப்பட் டிங்கள் போலவும்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோர் அறியாது மைந்துபட் டன்றே
நோயில னாகிப் பெயர்கதி லம்ம
பழன மஞ்ஞை யுகுத்த பீலி
கழனி யுழவர் சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே" (புறநா.13).

முடரோமம் *muḍa-rōmam*, பெ.(n.) முடமயிர், 2 பார்க்க; see *muḍa-mayir, 2.*

[முடம் + Skt. ரோமம்.]

முடலை[1] *muḍalai*, பெ.(n.) 1. உருண்டை (பிங்.); ball, globe. 2. முறுக்கு; twist in the fibre, as of firewood. *"முடலை விறகின்" (மணிமே. 16:26).* 3. முருடு (திவா.); roughness. 4. கழலை (அக.நி.); wen, tubercle, excrescence. 5. மனவன்மை; hardness of heart. *"நன்றுணரா ராய முடலை முழுமக்கள்" (பழ.25).* 6. பெருங் குறடு (அக.நி.); large pincers.

[முடம் → முடல் → முடலை.]

முடலை[2] *muḍalai*, பெ.(n.) புலால் நாற்றம்; bad smell, as of flesh. *"முடலை யாக்கையின்" (ஞானா.23:5).*

[முடை = புலால்நாற்றம். முடை → முடலை.]

முடலை[3] *muḍalai*, பெ.(n.) 1. வலிமை; strength. 2. பெருமை; greatness.

[மிடல் = வலிமை. மிடல் → முடல் → முடலை.]

முடவன் *muḍavaṉ*, பெ.(n.) 1. நொண்டி; lame person. *'காலான் முடவன்' (தொல்.சொல். 73, இளம்பூ.). "முடவரல்லீர்" (தேவா.919, 8). "முடவனுக்குக் கோபம் விட்ட இடத்திலே" (பழ.). "முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டாற் போல" (பழ.).* 2. அருணன் (அக.நி.); *Aruṇaṉ.* 3. காரிகோள் (சனி.) (பிங்.); the planet Saturn.

[முடம் → முடவன்.]

முடவன்முழுக்கு *muḍavaṉ-muḻukku*, பெ.(n.) காவிரியில் கடைமுகத்து முழுக்காட்டுப் பலனை அளிக்கும் நளி (கார்த்திகை) மாத முதல் நாள் முழுக்கு; bath in the Cauvery on the first day of *Naḷi (Kārthigai)*, considered as meritorious as bath on *Kaḍai-mugam*day.

[முடவன் + முழுக்கு.]

முடவாட்டுக்கல்[1] *muḍa-vāṭṭukkal*, பெ.(n.) ஆட்டின் வயிற்றினின்று எடுக்கப்படும் மஞ்சணிறமுள்ள மணப்பண்டம் (ஆட்டு ரோசனை) (வின்.); bezoar found in sheep.

[முடை + ஆட்டுக்கல். முடை = புலால், புலால் நாற்றம்.]

முடவாட்டுக்கால்[2] *muḍa-vāṭṭu-k-kal,* பெ.(n.) ஆட்டுக்கால் மரம்; a tree (சா.அக.).

முடவாண்டி *muḍa-v-āṇḍi,* பெ.(n.) கொங்கு நாட்டில் கொங்கு வேளாளர் கூட்டத்துட் பிறக்கும் பிறவிக் குருடு முடங்களான குழந்தைகளை வலிய எடுத்து வளர்த்து வரும் இரப்போர் (பிச்சைக்கார) வகையினர் (E.T.5: 84); a class of beggars in Koṅgu country, who voluntarily take and bring up all children born blind or lame in the *Koṅgu Vēḷāla* caste.

[முடம் + ஆண்டி. ஆண்டி = இரப்போன், துறவி.]

முடவு–தல் *muḍavu-,* 5 செ.கு.வி. (v.i.) நொண்டுதல் (யாழ்ப்.); limp.

[முடம் → முடவு → முடவு–தல்.]

முடனத்திமூலி *muḍaṉatti-mūli,* பெ.(n.) செம்பருத்தி; red cotton - *Gossypium* (சா.அக.).

முடி[1]–த்தல் *muḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. முற்றுவித்தல்; to end, terminate. *"நின்னன்னை சாபமு முடித்தென் னெஞ்சத்திடர் முடித்தான்" (கம்பரா. மிதிலை.88). நூல் முழுவதையும் மும்மாதத்திற்குள் எழுதி முடித்துவிட்டார்.* 2. நிறைவேற்றுதல்; to effect, accomplish. *"அருந்தொழில் முடியரோ திருந்துவேற் கொற்றன்" (புறநா.171).* 3. அழித்தல்; to destroy. *"சேனையை... முடிக்குவன்" (கம்பரா.மிதிலை.98).* 4. கட்டுதல்; to fasten tie. *"பாஞ்சாலி கூந்தன் முடிக்க" திவ்.பெரியதி.6. 7:8).* 5. தலையில் பூவைச் சூட்டிக் கொள்ளுதல்; to decorate with, put on, as flowers. *"கூழையுளே திலாள் கைபுனை கண்ணி முடித்தான்" (கலித். 107:15). பூ முடித்து பொட்டுவைத்து அழகு செய்து கொள்ளுதல்.* 6. செயலை, நிகழ்ச்சியை நிறைவுக்குக் கொண்டு வருதல், நிறைவு பெறும்படி செய்தல்; complete or finish a work, one's studies, etc., end one's speech. *சமையலை முடித்து விட்டு வந்து பேசுகிறேன். முடிக்க வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. என்னுடைய பையன் இப்போதுதான் பள்ளிப் படிப்பை முடித்திருக்கிறார். அவர் பேச்சை முடிப்பது போல் தெரியவில்லை.* 7. குறிப்பிட்டவாறு இறுதி நிலை அமைத்தல்; conclude, end. *"கனவு நனவாகட்டும்" என்ற தொடரோடு கதையை முடித்திருக்கிறார்.* 8. ஒருவரை இல்லாதபடி ஆக்குதல், கொல்லுதல்; bump off some one, put an end to some one. *கெடுதி (அநீதி) செய்பவரை அவர்கள் முடித்து விடுவார்கள் போலிருக்கிறது.*

[முல் → முள் → முண்டு → முண்டி → முடி → முடி–த்தல். முல் = வளைதல், சுற்றுதல். முட்டு → முட்டி → முடி → முடி–த்தல்.]

முடி[2]–தல் *muḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. சேர்த்து முடிச்சிடுதல், சுற்றிக்கட்டுதல்; gather up something in to a knot; tie up, something keeping it in a cloth, etc. *கூந்தலை அழகாக முடித்திருந்தாள். தலையில் துணியை முடிந்து கொண்டாள். கீரை விற்பவள் காசை முந்தாணையில் முடிந்திருந்தாள்.* 2. தலையில் பூ முதலியவற்றை செருகுதல், அணிதல்; put flowers, etc, on some one's hair. *தலையில் பூ முடிந்து விடுகிறேன், வா.* 3. செயல், நிகழ்ச்சி முற்றுப் பெறுதல்,

முடிவுக்கு வருதல்; of an act, an event come to an end, come to a close. *"சொன்முறை முடியாது" (தொல்.சொல்.233). விழா இனிதே முடிந்தது. முதல் ஆட்டம் முடிய இன்னும் சிறிது நேரம் தான் இருக்கிறது.* 4. ஒருவருக்குக் குறிப்பிடப்படும் வயது முழுமை பெறுதல், நிறைவு அடைதல்; turn specified age complete. *அவனுக்கு இருபத்தியெட்டு வயது முடிந்து இருபத்தியொன்பது நடக்கிறது. குழந்தைக்கு மூன்று வயது முடிந்து விட்டது.* 5. குறிப்பிட்டதில், குறிப்பிடப்படுவதோடு இறுதி நிலை அமைதல்; end in or with something. *தேர்வில் இரண்டாம் எண்ணில் முடியும் அனைத்துத் தேர்வாளர்களும் வெற்றி பெற்றதாய்க் கூறப்படுகிறது. வாய்ப் பேச்சு கைகலப்பில் முடிந்தது.* 6. மூன்றாம் வேற்றுமை அல்லது நான்காம் வேற்றுமை உருபோடு கூடியதான தன்மையில் அமைதல், இயலுதல்; with instrumental or dative case be able to, have the ability to, can. *"என்னால் முடியாது" என்று சொல்லாதே. "முடியும்" என்று சொல்! யாராலும் மறுக்க முடியாத உண்மை! அவருக்கு முடிந்ததை அவர் செய்துவிட்டார்.* 7. எதிர்மறை வடிவங்களில் உடம்புக்கு ஆற்றல் இருத்தல்; have energy or health; feel fit. *உடம்புக்கு முடியவில்லை என்று அம்மா படுத்துவிட்டாள்.* 8. நிறைவேறுதல்; to be effected or accomplished. *"முட்டின்றி மூன்று முடியுமேல்" (நாலடி, 250).* 9. அழிதல்; to be destroyed, to perish. *மூவேந்தர் குலமும் 16ஆம் நூற்றாண்டோடு முடிந்து விட்டது.* 10. வாழ்நாள் முடிந்து சாதல்; to die. *"கயலேர் கண்ணி கணவனொடு முடிய" (பு.வெ.10, சிறப்பிற்.9, கொளு.).* 11. தோன்றுதல்; to appear. *"முடிந்தது முடிவது முகிழ்ப்பதுமவை மூன்றும்" (பரிபா. 13:46).* 12. இயலுதல்; to be possible, capable. *என்னால் அதனைச் செய்ய முடியும்.* 13. சண்டை மூட்டுதல்; to incite persons to a quarrel. *அவனுக்கும் இவனுக்கும் முடிந்து விட்டான்.* 14. தொடர்புபடுத்துதல்; to make a marriage alliance. *அவளுக்கும் இவனுக்கும் முடிந்துவிட்டார்கள்.*

ம. முடிக; க. முடி.

[முட்டு→முட்டி→முடி →முடி-தல்.]

'முடி' என்னுஞ் சொல் ஒரு பொருளின் முடிவான இறுதிப் பகுதியைக் குறித்தலால், ஒரு வினை முடிதலைக் குறிக்கும் வினைச் சொல்லாகவும் அஃது ஆளப்பட்டது (வே.க.).

முடி[3] *muḍi*, பெ.(n.) 1. தலை; head. *"அதுவே சிவன் முடிமேற்றான் கண்டு" (திவ். திருவாய்.2, 8:6) (திவா.).* 2. குடுமி (பிங்.); man's hair tuft. 3. பெண்டிர் கொண்டை போடும் வகை ஐந்தனுள் உச்சியில் முடிக்கும் மயிர்க்கட்டு வகை (திவா.); tuft or coil of hair on the head, one of ai-m-pāl. 4. உடம்பில் குறிப்பாகத் தலையில் வளரும் தொடுவுணர்வு இல்லாத மெல்லிய இழை, தலை மயிர்; head hair. *"முடிமுடியாய் நட்டால் பிடிபிடியாய் விளையுமா?" (பழ.அக.). "முடிவைத்த தலைக்குச் சுழிக் குற்றம் பார்க்கிறது, கொண்டு குலம் பேசுகிறது போலிருக்கின்றது" (பழ.அக.). "முடி வைத்த தலைமேலே சுழிக் குற்றம் பார்க்கிறதா?" (பழ.அக.). முடிக்காணிக்கை (உ,வ.)* 5. மயிர்; hair. *பன்றி முடி.* 6. தெய்வத் திருமேனிகட்கும், அரசர்கட்கும் தலையில் அணிவிக்கும், உயர் மணிகளால் ஒப்பனை செய்யப்பட்ட திருமுடி, மணிமுடி; crown.

"ஞாயிற்றணி வனப்பமைந்த..... புனைமுடி" (பரிபா.13:2). "முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒருபிடி சாம்பாராகிப் போகிறதுதான்" (பழ.அக.). 7. மலை உச்சி; crown, as of a mountain. *"முடியை மோயின னின்றுழி" (கம்பரா.மீட்சி. 186).* 8. தேங்காயிற்பாதி (வின்.); half of a coconut. 9. முடிச்சு; knot, tie. *"கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்" (மதுரைக். 256).*10. முடிவு (வின்.); end. 11. நாற்றுமுடி; bundle, as of a paddy seedlings for transplantation. *"நிரை நிரை விளம்பி வழிமுடி நடுநரும்" (கல்லா.46:14).* 12. பறவை பிடிக்குங் கண்ணி, சுருக்குக் கண்ணி; noose. *"துறவாம் பறவை மயன் முடியிற் படுதல்" (பிரபுலிங். மாயையுற்.56).* 13. துளசி (பிங்.); sacred basil. 14. தேங்காய் குடுமி (யாழ்ப்.); tuft of fibre left on the upper part of the coconut.

[முட்டு→முட்டி→முடி.முண்டு→முண்டி→முடி (வே.க.முல்5).]

மாந்தரும் அஃறிணைப் பொருள்களும் மாந்தரை அல்லது அஃறிணைப் பொருள்களை முட்டுவது தலையாலேயே யாதலால், தலையும் தலைபோன்ற உச்சிப் பகுதியும் தலையிலுள்ள உறுப்பும் அணிகலமும் முடியெனப் பெயர் பெறும்.

விலங்கு மயிரையும் முடியென்றது, மயிர் என்பது இடக்கர்ச் சொல்லாகி மயிரை முடியென்னும் இடக்கரடக்கல் வழக்கொழிந்த பிற்காலத்ததாகும்.

நாற்றுமுடி, மூட்டை முடிச்சு முதலிய கூட்டுச் சொற்களிலுள்ள முடியென்னும் சொல் வளைத்தல் அல்லது சுற்றுதல் என்பதை வேர்ப் பொருளாகக் கொண்ட வேறொரு சொல்லினின்று தோன்றியதாகும்.

நட்டமாக நிற்கும் பொருள்களின் உச்சிப் பகுதி அவற்றிற்கு முடிபோன் றிருத்தலால் அது முடியெனப்பட்டது. மலையுச்சி வான் முகட்டை முட்டிக் கொண்டிருப்பதாகப் பாடவும் சொல்லவும் படுதல் காண்க. மலைமுடிகளுள் உயர்ந்தது கொடுமுடி (வே.க.முல்⁴).

முடி⁴ *mudi*, து.வி.(aux.v.) 1. செய்வித்தல், தீர்த்தல் என்னும் பொருள் தரும்படியான வினைப்படுத்தும் வினை; verbalizer used in the sense of settle, perform, accomplish, etc. *பெண்ணுக்குக் கல்யாணம் முடிக்க வேண்டும். பழி முடிக்காமல் வாழப் போவதில்லை.* 2. முதன்மை வினையின் செயலை நிறைவுறச் செய்வதாகக் குறிப்பிடும் ஒரு துணை; an auxiliary verb used to indicate that the work, action indicated in the main verb has reached a state of completion. *இந்தப் புத்தகத்தை நான் படித்து முடித்து விட்டேன். ஆறே மாதத்தில் வீட்டைக் கட்டி முடித்தார்.*

[முட்டு→ முட்டி →முடி.]

முடிக்கண்ணி *mudi-k-kanni*, பெ.(n.) முடிமாலை பார்க்க; see *mudi-mālai*. *"கங்கை காணக் கொடார்முடிக் கண்ணியை" (தேவா.456:6).*

[முடி + கண்ணி. கண்ணி = மாலை வகை.]

முடிக்கயிறு *mudi-k-kayiru*, பெ.(n.) கண்ணேறு நீங்க மாட்டுக்குப் போடும் முடிசேர்த்து முடிந்த கறுப்புக் கயிறு (கோவை.); a black rope tied around the cow neck due to evil eyes.

[முடி + கயிறு.]

முடிக்கலம் *mudi-k-kalam,* பெ.(n.) மணிமுடி; crown. *'ஆண்டு அரசருடைய முடிக்கல முதலியவற்றை வாங்கிக் கொண்டு' (பெரும்பாண்.451, உரை).*

[முடி + கலம்.]

முடிக்காணிக்கை *mudi-k-kāṇikkai,* பெ.(n.) தெய்வத்திற்கு நேர்ந்துகொண்டு மயிர் முடியை வளர்த்து, மழித்துக் காணிக்கையாக இடுகை (உ.வ.); offering of the hair of a person's head which has been allowed to grow for a certain time, in fulfilment of a vow.

[முடி + காணிக்கை. காணிக்கை = கடவுளர்கேனும் பெரியோர்க்கேனும் அளிக்கப்படும் பொருள்.]

முடிக்கீரை *mudi-k-kīrai,* பெ.(n.) முளைக் கீரை (வின்.); young greens, tender potherbs.

[முடி + கீரை.]

முடிக்கொத்துநோய் *mudi-k-kottu-nōy,* பெ.(n.) வாழைப் பயிரில் ஏற்படும் நோய் (கோவை.); a kind of plantain disease.

[முடிக்கொத்து + நோய்..]

முடிக்கோரை *mudi-k-kōrai,* பெ.(n.) 1. ஒருவகைக் கோரைப் புல்; a variety nut grass. 2. தலை மயிர்; hair on the head (சா.அக.).

[முடி + கோரை.]

முடிகத்தரிக்கிறவன் *mudi-k-kattarik-kiṟavaṉ,* பெ.(n.) கத்திரி கள்வன் (வின்.); cut-purse, pick pocket.

[முடி + கத்தரிக்கிறவன்.]

முடிகம் *mudigam,* பெ.(n.) பெருச்சாளி; bandi coot (சா.அக.).

முடிகயறுபோடல் *mudi-kayaṟu-pōdal,* பெ.(n.) பூச்சிக்கடி, கக்குவான் முதலிய நோய்களுக்கு மந்திர ஆற்றலால் ஒருகயிறு முடிந்து உடம்பில் அணிவது; wearing of the magic thread to ward off or cure certain diseases-morbid conditions of infants, insect bites, whooping cough, etc. *குழந்தைக்கு முடிகயறுபோட மசூதிக்குச் சென்றான் (உ.வ.).*

மறுவ. முடிகயிறுபோடல்.

[முடி + கயறு + போடல்.]

முடிகயிறுபோடல் *mudi-kayiṟu-pōdal,* பெ.(n.) முடிகயறுபோடல் பார்க்க; see *mudi-kayaṟu-pōdal.*

முடிகவி-த்தல் *mudi-kavi-,* 4 செ.குன்றாவி. (v.t.) முடிசூட்டு-தல் பார்க்க; see *mudi-šūṭṭu-, "இன்னா னென வறியா வென்னை முடிகவித்து" (பாரத வெண்.315).*

[முடி + கவி-த்தல். கவித்தல் = சூட்டுதல்.]

முடிகொண்டசோழப்பேராறு *mudi-koṇda-cōḻa-p-pērāṟu,* பெ.(n.) முதல் இராசேந்திர சோழனால் பழையாறையில் வெட்டப்பட்ட ஆறு; a river digged in *Paḻayāṟai* by *Rajendra Chōḻā- I.* *பழையாறை இவன் காலத்தில் முடிகொண்ட சோழபுரம் என வழங்கப்பட்டது. (முதல் இராசேந்திரன் கி.பி.1012–1044 பிற்.சோழ. வர. சதாசிவபண். பக்.181).*

[முடி + கொண்ட + சோழப்பேராறு.]

முடிகொண்டசோழபுரம் *mudi-konda-cōḻa-puram,* பெ.(n.) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள சோழர் தலைநகர் (I.M.P.Rd. 285); capital of *Cōḻā* in *Trichirāppaḻḻi* district.

மறுவ. முடிகுண்டம்.

[முடிகொண்டசோழன் + புரம்.]

முடிகொண்டசோழமண்டலம் *mudi-konda-cōḻa-mandalam,* பெ.(n.) எருமையூர் (மைசூர்) பகுதியின் தென் பகுதியும் சேலம் மாவட்டத்தின் வடபகுதியும் கொண்ட கங்கபாடி நாடு *(பிற்.சோழ.வர. சதாசிவபண். பக்.472)*; *Kaṅgapāḍi,* which includes the southern part of Mysore and northern part of Salem.

[முடிகொண்டசோழன் + மண்டலம்.]

முடிகொண்டசோழன் *mudi-konda-cōḻan,* பெ.(n.) முதல் இராசேந்திர சோழனது பட்டப் பெயர் (தெ.இ.கல். தொ. 2:107); a title of *Rajendra Cōḻā-I.*

[முடிகொண்ட + சோழன்.]

முடிகொண்டநல்லூர் *mudi-konda-nallūr,* பெ.(n.) சோழநாட்டு ஊர்ப்பெயர்; a village in *Cōḻa* country.

[முடிகொண்ட + நல்லூர்.]

முடிச்சடைமுனிவன் *mudi-cadai-munivan,* பெ.(n.) வீரபத்திரன்; *Vīrabattiran,* as wearing matted locks. *"முடிச்சடை முனிவனன்று வேள்வியிற் கொண்ட" (சீவக. 2285).*

[முடி + சடை + முனிவன். சடைமுனிவன் = சடை முடியை யுடையவன்.]

முடிச்சவிழ்[1]-த்தல் *mudiccaviḻ-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஒன்றைத் திருடுதற்கு அதை முடிந்து வைத்துள்ள துணி முடிச்சை அவிழ்த்தல் (வின்.); to untie money knotted in a cloth, with a view to theft. 2. திருடுதல் (இ.வ.); to steal.

[முடிச்சு + அவிழ்-த்தல்.]

முடிச்சவிழ்[2]-த்தல் *mudiccaviḻ-,* 4 செ. குன்றாவி.(v.t.) சிக்கலான ஒன்றைத் தீர்ப்பதற்கு முயலுதல்; to find a solution for a problem.

[முடிச்சு + அவிழ்-த்தல்.]

முடிச்சை அவிழ்த்து அதனுள் உள்ள பொருள்களை வெளியாக்குதல் போல் சிக்கலான ஒரு செய்தியைப் பலரும் அறியும்படி செய்தல்.

முடிச்சவிழ்க்கி *mudiccaviḻkki,* பெ.(n.) 1. முடிச்சை அவிழ்ப்பவன் (வின்.), பணமூட்டையை அவிழ்த்துத் திருடுபவன்; one who secretly removes money tied in a cloth. 2. திருடன்; thief.

[முடிச்சு + அவிழ்-. முடிச்சவிழ் → முடிச்சவிழ்க்கி.]

முடிச்சன் *mudiccan,* பெ.(n.) சூழ்ச்சித் திறமுடையான் (இ.வ.); scheming fellow.

[முடிச்சு → முடிச்சன்.]

முடிச்சாத்து *mudi-c-cāttu,* பெ.(n.) தலைப் பாகை; turban. *"தனி முடிச்சாத்துஞ் சாத்தி" (திருவாலவா.54:14 (பி-ம்.)).*

[முடி + சாத்து.]

முடிச்சு[1] *mudiccu,* பெ.(n.) 1. கட்டு; tie. *இப்படியா முடிச்சுப் போடுவார்கள், கட்டைப் பிரிக்கவே முடியவில்லையே? தலைமயிர்*

முடிச்சு முடிச்சாக இருந்தது. 2. மயிர்முடி; tuft of hair. 3. கணு; knot in wood. 4. மகளிர் காதணி வகை (நெல்லை.); an ear-ring worn by women. 5. கண்டறிந்து தீர்த்தற்கரிய தந்திரம்; deep scheme, cunning plan, stratagem. *'அவன் போட்டது நல்ல முடிச்சு'.*

[முடி → முடிச்சு =அவிழவோ பிரித்து வாரவோ முடியாதபடி ஒன்றோடு ஒன்றைச் சேர்த்து அல்லது ஒன்றைச் சுற்றிப் போடப்பட்டிருப்பது.]

முடிச்சு² *muḍiccu,* பெ.(n.) 1. மூட்டை என்பதோடு இணைந்து வரும் சொல்; a word which occurs in combination with *mūṭṭai. மூட்டை முடிச்சுடன் பேருந்தில் ஏற வேண்டும்.* 2. சிறு மூட்டை; small bundle.

[முடி → முடிச்சு.]

முடிச்சுக்கஞ்சி *muḍiccu-k-kañji,* பெ.(n.) கொதிக்கும் கஞ்சிச் சோற்றில் சுக்கை சீவி, துணியில் முடிந்து அதில் போட்டு காய்ச்சி வடித்த கஞ்சியின் தெளிவு; rice gruel or porridge made by adding small cloth bundle containing dry ginger in addition to the usual ingredients.

[முடி + சுக்குக்கஞ்சி→முடிச்சுக்கஞ்சி]

முடிச்சுக்காரன் *muḍiccu-k-kāraṉ,* பெ.(n.) 1. சிறுமூட்டைகளையுடையவன்; one who possesses small bundle. 2. பணமுள்ளவன்; one who has money. 3. சூழ்ச்சித் திறமுடையோன் (தந்திரி); scheming person.

[முடிச்சு + காரன். காரன் – சொல்லாக்க ஈறு]

முடிச்சுக்காறை *muḍiccu-k-kāṟai,* பெ.(n.) பெண்களின் கழுத்தணி வகை (இ.வ.); a kind of gold necklet, worn by women.

[முடிச்சு + காறை. காறை = கழுத்தணி வகை. முடிச்சுகளோடு செய்யப்பட்ட கழுத்தணி.]

முடிச்சுக்கோரை *muḍiccu-k-kōrai,* பெ.(n.) முடிக்கோரை பார்க்க; see *muḍi-k-kōrai.*

[முடிச்சு + கோரை.]

முடிச்சுப்போடு-தல் *muḍiccu-p-pōḍu,-* 20 செ.கு.வி. (v.i.) 1. சண்டை மூட்டுதல்; to incite persons to a quarrel. *அவனுக்கும் இவனுக்கும் முடிச்சுப் போடுகிறான்.* 2. தொடர்புபடுத்துதல்; to connect the two various matters. *என்ன மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறாய்.* 3. திருமணம் செய்து வைத்தல்; to make a marriage alliance. *அவளுக்கும் இவனுக்கும் முடிச்சுப் போட்டாச்சு.*

[முடிச்சு + போடு-தல்.]

முடிச்சுமாறி *muḍiccu-māṟi,* பெ.(n.) முடிச்சவிழ்க்கி பார்க்க (வின்.); see *muḍiccaviḻkki.*

[முடிச்சு + மாறி. மாறி = இரண்டகஞ் செய்வோன்.]

முடிச்சுவலை *muḍiccu-valai,* பெ.(n.) முடிச்சு முடிச்சாக உள்ள மீன் பிடி வலை; a kind of fishing net.

[முடிச்சு + வலை.]

முடிச்சுற்று *muḍi-c-cuṟṟu,* பெ.(n.) தலைப் பாகை; turban, as tied about the head. *"தொகுமுடிச்சுற்றுஞ் சுற்றி" (திருவாலவா.54: 14).*

[முடி+ சுற்று. முடி = தலை. சுற்று = சுற்றிக்கட்டப்படுவது. தலையைச் சுற்றிக் கட்டப்படும் தலைப்பாகை.]

முடிச்சு வகைகள்

கப்பல் முன்புறக் கயிறு



இருமடி கொளுவி முடிச்சு

சாரக்கட்டு



நெருக்கடி முடிச்சு

மீனவ முடிச்சு



இயல்பு முடிச்சு

இரட்டை முடிச்சு

கப்பற் பாய்க்
கயிற்று முடிச்சு

குறுக்கு முடிச்சு



ஒருமுனை
முடிச்சு



இருமுனை
முடிச்சு

மரச்சட்டத்துடன்
இணைக்கும் முடிச்சு

முடிச்சுற்றுமாலை *muḍi-c-cuṟṟu-mālai,* பெ.(n.) முடிச்சூட்டு பார்க்க (தக்கயாகப்.119, உரை); see *muḍi-c-cūṭṭu.*

[முடி + சுற்று + மாலை = தலையில் அணியும் மாலை.]

முடிச்சூட்டு *muḍi-c-cūṭṭu,* பெ.(n.) முடியில் (தலையில்) அணியும் மாலை; garland worn on the head. *"முடிச்சூட்டு முல்லையோ" (தக்கயாகப்.119).*

[முடி + சூட்டு. முடியில் அணியும் மாலை.]

முடிசம் *muḍišam,* பெ.(n.) முடிசரம் பார்க்க; see *muḍi-šaram.*

முடிசரம் *muḍi-šaram,* பெ.(n.) சரக்கொன்றை மரம்; a tree - *Cassia fistula.*

[முடி + சரம்.]

முடிசாய்[1]-தல் *muḍi-šāy-,* 1 செ.கு.வி.(v.i.) இறத்தல் (வின்.); to die, as having the head droop.

[முடி + சாய்-தல் = தலைசாய்தல், இறத்தல்.]

முடிசாய்[2]-த்தல் *muḍi-šāy-,* 1 செ.கு.வி. (v.i.) 1. படுத்துக்கொள்ளுதல்; to lie down; to rest, as lowering the head. *"முகுந்தனுடன் பாண்டவரு முடி சாய்த்து" (பாரத.முதற்.77).* 2. தலை வணங்குதல்; to pay homage, bow one's head in reverence. *"முனிந்தருள லென்று முடிசாய்த்து நின்றான்" (நள. கலிநீங்கு.63).* 3. ஒருபக்கமாகத் தலையைச் சாய்த்தல்; to incline the head sideways.

[முடி + சாய்-த்தல்.]

முடிசுருளைஎலும்பு *muḍi-šuruḷai-elumbu,* பெ.(n.) மார்பெலும்பு; breast bone - *Sternum.*

முடிசூட்டு[1]-தல் *muḍi-šūṭṭu-,* 5 செ. குன்றாவி.(v.t.) அரசுக்குரிய மணி முடியைச் சூட்டுதல்; to crown, as king. *"முன்றின் முரசமுழங்கமுடி சூட்டி" (கம்பரா. இரணிய.174).*

[முடிசூடு-தல் → முடிசூட்டுதல். சூட்டுதல் = அணிவித்தல்.]

முடிசூட்டு[2] *muḍi-šūṭṭu,* பெ.(n.) அரசன் மணிமுடி சூடுகை; coronation. *"முடிசூட்டு மங்கல நாள்" (தமிழ்நா.171, தலைப்பு).*

[முடிசூடு → முடிசூட்டு.]

முடிசூட்டுவிழா *muḍi-šūṭṭu-viḻā,* பெ.(n.) அரசக்குடி வழியில் வந்த ஒருவர் ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு அடையாளமாக அவருக்கு மணி முடி சூட்டும் நிகழ்ச்சி; coronation.

[முடிசூட்டு + விழா.]

முடிசூடு-தல் *muḍi-šūḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. அரசன் மணிமுடி சூடுதல்; to be crowned as king. 2. மகுடம் அணிதல்; to wear a crown. *"முடிசூடு முடியொன்றே" (கலிங். 525). அரசனுக்குப் பின் அவன் மகன் முடிசூடுதலே வழக்கம்.*

[முடி + சூடு-தல்.]

முடித்தகேள்வி *muḍitta-kēḷvi,* பெ.(n.) கரை கண்ட கேள்வி; complete learning. *"முடித்தகேள்வி முழுதுணர்ந்தோரே" (சிலப். 1:19).*

[முடி → முடித்த + கேள்வி.]

முடித்தலைக்கொண்டசோழபுரம் *muḍi-t-talai-k-koṇḍa-cōḻapuram,* பெ.(n.) மதுரை; Madurai city.

[முடி + தலை + கொண்ட + சோழபுரம்.]

3–ஆம் குலோத்துங்கச் சோழன் பாண்டி மண்டலத்திற்குச் சோழ பாண்டி மண்டலம் என்றும், மதுரைக்கு முடித்தலைக் கொண்ட சோழபுரம் என்றும், பாண்டியனது ஒலக்க மண்டபத்திற்குச் சேரபாண்டியர் தம்பிரான் என்றும் பெயர் மாற்றினான் (பழ.த.ஆ.பக்.87).

முடித்தலைக்கோபெருநற்கிள்ளி *mudit talai-k-kō-perunaṟ-kiḷḷi,* பெ.(n.) சோழ அரசன்; Cōḻa king.

[முடி + தலை + கோ + பெருநற்கிள்ளி.]

இவன் அந்துவஞ் சேரலிரும்பொறையின் காலத்தவன் இவனை முடமோசியார் வாழ்த்திப் பாடியுள்ளார் (புறநா.13).

முடித்துக்காட்டல் *mudittu-k-kāṭṭal,* பெ.(n.) உத்தி முப்பதிரண்டனுள் மேலோர் முடித்தவாறு முடித்துக் காட்டுவது (நன்.145, உரை); a literary device which consists in showing that the author's statements are in line with the ancient authorities, one of 32 utti.

[முடித்து + காட்டல்.]

முடித்துக்கொடு–த்தல் *mudittu-k-kodu-,* 4 செ.குன்றாவி.(v.t.) நிறைவேற்றித் தருதல்; to accomplish, complete, as a piece of business.

[முடித்து + கொடு–த்தல்.]

முடித்தேங்காய் *mudi-t-tēṅgāy,* பெ.(n.) குடுமியுள்ள தேங்காய் (வின்.); coconut with the husk removed, leaving a small part of the the fibre on the upper part of the nut.

[முடி + தேங்காய்.]



முடித்தைலம் *mudi-t-tailam,* பெ.(n.) முடியெண்ணெய் பார்க்க; see *mudi-y-eṇṇey.*

[முடி + Skt.தைலம்.]

முடிதட்டு–தல் *mudi-taṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) வலைமுடியைக் களைதல் அல்லது அறுத்து நீக்குதல் (மீனவ.); remove or cut off of the fishing net.

[முடி + தட்டு–தல். தட்டுதல் = அகற்றுதல், நீக்குதல்.]

முடிதலைச்சுன்னம் *muditalai-c-cuṉṉam,* பெ.(n.) தலையின் முடியினின்று செய்யப்படும் ஒருவகைச் சுண்ணாம்பு; calcined powder prepared from the black hair of the head.

[முடி + தலை + சுன்னம். சுன்னம் = சுண்ணாம்பு. தலைமுடியிலிருந்து செய்யப்படும் சுண்ணாம்பு.]

முடிதிருத்தகம் *mudi-tiruttagam,* பெ.(n.) மாந்தரின் தலையில் உள்ள முடியைக் குறைத்து அல்லது திருத்தி அழகுபடுத்தும் கடை; hair dressing saloon. *பள்ளி மாணவர்கள் முடிதிருத்தகம் சென்று*

அழகாக முடிதிருத்தி வகுப்பறைக்குச் செல்ல வேண்டும்.

[முடி + திருத்தகம்.]

முடிதீட்டு—தல் *muḍi-tīṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) தலை, காலில்படும்படி வணங்குதல்; to prostrate, as touching with one's head another's feet. *"பாதத் தெழின்முடி தீட்டினானே" (சீவக.2641).*

[முடி+தீட்டு—தல். காலில் விழுந்து வணங்குதல்.]

முடிதும்பை *muḍi-tumbai,* பெ.(n.) ஒரு வகைத் தும்பைச் செடி; white dead nettle-*Leucas* (சா.அக.).

[முடி + தும்பை.]

முடிதுளக்கு¹—தல் *muḍi-tuḷakku-,* 5 செ.கு.வி. (v.i.) தலையசைத்தல்; to assent, show appreciation, as by a nod. *"திருமுடி துளக்கி நோக்கி" (சீவக.1881).*

[முடி + துளக்கு—தல். துளக்குதல் = அசைதல். முடி = தலை.]

முடிதுளக்கு²—தல் *muḍi-tuḷakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) முடிதீட்டு—தல் பார்க்க; see *muḍi-tīṭṭu-.* *"முனைவற் றொழுது முடிதுளக்கி" (சீவக.2357).*

[முடி + துளக்கி. முடி = தலை. துளக்குதல் = வணங்குதல்.]

முடிந்தகணம் *muḍinda-kaṇam,* பெ.(n.) நிகழ்காலம்; present time. *"முன்னைக் கணத்தி னிறந்தவனு முடிந்த கணத்து நின்றவனும் (மேருமந்.662).*

[முடி¹ + கணம். கணம் = காலநுட்பம், காலம்.]

முடிந்தகொள்கை *muḍinda-koḷgai,* பெ.(n.) முடிந்த முடிவு; final conclusion.

[முடி →முடிந்த + கொள்கை. கொள்கை = முடிவு.]

முடிந்தது முடித்தல் *muḍindadu-muḍittal,* பெ.(n.) உத்தி முப்பத்திரண்டனுள், முன்னர் விளக்கிக் கிடந்தவற்றைத் தொகுத்துக் கூறுவது (நன்.382, உரை); recapitulation, briefly restating the point discussed, one of 32 utti.

[முடி →முடிந்தது + முடித்தல்.]

முடிந்தது முற்றும் *muḍindadu-muṟṟum,* பெ.(n.) நூலிறுதியில் முடிவைக் குறிக்க எழுதப்படுந் தொடர் (வின்.); expression indicating conclusion, used at the end of a treatise, 'finis'. *இப்புதினம் முடிந்தது முற்றும்.*

[முடிந்தது + முற்றும்.]

முடிந்தநூல் *muḍinda-nūl,* பெ.(n.) முழுதுங் கூறும் நூல்; exhaustive treatise. *"முடிந்த நூலிற் கண்டு கொள்க" (இறை. 1, பக்.2).*

[முடி → முடிந்த + நூல்.]

முடிந்தபொழுது *muḍinda-poḻudu,* பெ.(n.) முதிர்ந்த அகவை; old age. *"முடிந்த பொழுதிற் குறவாண ரேனம் படிந்துழு சால் பைந்தினைகள் வித்த" (திவ்.இயற்.3: 89).*

[முடி → முடிந்த + பொழுது.]

முடிநடை *muḍi-naḍai,* பெ.(n.) தலையால் நடக்கை; walking on one's head. *"அங்க வுடலிழந்து முடி நடையா லேறி" (திருத். பு.சா.28).*

[முடி + நடை. முடி = தலை.]

முடிநர் *muḍinar,* பெ.(n.) கட்டுபவர்; those who tie knots. *"வம்புநிறை முடிநரும்" (மதுரைக்.514).*

[முடி → முடிநர்.]

முடிநாதம் *muḍinādam,* பெ.(n.) இந்திர கோபப் பூச்சி; cochineal insect.

முடிநாறு *muḍināṟu,* பெ.(n.) நாற்றுமுடி; sheaf or bundle of seedlings. *"முடிநாறழுத்திய நெடுநீர்ச்செறு" (பெரும் பாண்.212).*

[முடி + நாறு. நாற்று →நாறு. இடைக்குறை.]

முடிநீர் *muḍinīr,* பெ.(n.) 1. மூளை நீர்; liquid extracted from brain. 2. ஒளி (விந்து) நீர்; semen (சா.அக.).

[முடி + நீர்.]

முடிநீர்த்தான் *muḍinīrttāṉ,* பெ.(n.) சரக்கொன்றை மரம்; a kind of tree - *Cassia fistula* (சா.அக.).

முடிநீலம் *muḍinīlam,* பெ.(n.) மயிற்றுத்தம்; blue vitriol (சா.அக.).

மறுவ. துருசு.

முடிப்பானை *muḍi-p-pāṉai,* பெ.(n.) பொன் முதலிய அரும்பண்டங்களை வைக்கும் பெரிய பானை அல்லது பெரிய மட்கலம்; large earthen vessel for storing money or treasure.

[முடி + பானை.]

முடிப்பிசைக்குறி *muḍi-p-pišai-k-kuṟi,* பெ.(n.) சொற்றொடர் முடிவைக் காட்டும் முற்றுக்குறி (நான்.பால.169); full - stop.

[முடிப்பு + இசை + குறி.]

முடிப்பிரி *muḍi-p-piri,* பெ.(n.) முடிப்புரி பார்க்க; see *muḍi-p-puri.*

முடிப்பு *muḍippu,* பெ.(n.) 1. முடிபோடுகை; tying, fastening. 2. முடிச்சு; tie, knot. 3. கட்டு; bundle. 4. தலையில் அணியும் பொருள்; that which is worn on the head. 5. இருசாற்பணம்; remittance as kist into the treasury. *இன்று முடிப்புச் செலுத்தியாக வேணும்.* 6. சொத்து; money, wealth. *அவனுக்கு முடிப்பொன்று மில்லை.* 7. மொத்தத் தொகை (யாழ்.அக.); total amount. 8. தீர்ப்பு (யாழ்.அக.); decision. 9. பணம் நகை முதலியவற்றைத் தொகுத்து, துணி போன்றவற்றில் கட்டி வைப்பது; money, pieces of jewellery wrapped in a cloth or tied up. *கோவில் உண்டியலில் கிடந்த ஒரு முடிப்பில் ஓர் ஆயிரம் ரூபாய் இருந்தது. "ஒரு பொன்முடிப்பு வைத்தேன்" (விறலிவிடு.899).* 10. முடிவு (வின்.); end, result.

[முடி →முடிப்பு.]

முடிப்புக்கட்டு¹–தல் *muḍippu-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) முடிவு செய்தல் (யாழ். அக.); to conclude.

[முடிப்பு + கட்டு–தல்.]

முடிப்புக்கட்டு²–தல் *muḍippu-k-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) பணமுடிப்புச் சேர்த்து வைத்தல்; to set apart, as a provision for a future expenditure. *பெண் பிறந்திருப்பதனால் இனி முடிப்புக் கட்டி வைக்க வேண்டும். கோயிலுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் முடிப்புக் கட்டி வைக்க வேண்டும்.*

[முடிப்பு + கட்டு–தல்.]

முடிப்புக்காரன் *muḍippu-k-kāraṉ,* பெ.(n.) 1. பண்டைக் காலத்து அரசிறை வாங்கும் அலுவலர்; collector of the revenue of a village, in ancient times. 2. பணமுள்ளவன்; one who keeps money.

[முடிப்பு + காரன். காரன் சொல்லாக்க ஈறு.]

முடிப்புமாறி *muḍippu-māṟi,* பெ.(n.) முடிச்சுமாறி பார்க்க; see *muḍiccu-māṟi.*

[முடிச்சுமாறி → முடிப்புமாறி.]

முடிப்புரி *muḍippuri,* பெ.(n.) 1. அரசிறை வாங்குபவன்; receiver of rents and taxes. 2. வட்டி வாங்குபவன்; shroff.

[முடிப்பு + உரி. உரி→உரிதல் = தானே எடுத்துக் கொள்ளல், வாங்குதல்.]

முடிபு *muḍibu,* பெ.(n.) முடிவு பார்க்க; see *muḍivu.* *"முனிவரார் வெகுளியின் முடிபென்றார் சிலர்" (கம்பரா.மாரீச.34).*

[முடி → முடிபு.]

முடிபெழுத்து *muḍipeḻuttu,* பெ.(n.) எழுத்து வகையுள் ஒன்று (நன்.256, மயிலை); a class of letters.

[முடிபு + எழுத்து.]

முடிபொருட்டொடர்நிலை *muḍi-poruṭ-ṭoḍar-nilai,* பெ.(n.) பொருட்டொடர் நிலைச் செய்யுள்; epic or narrative poem. *'முடிபொருட் டொடர் நிலையுள் தானப் பயன்கூறும் வழி' (சிலப்.2:9, உரை).*

[முடி + பொருள் + தொடர்நிலை.]

முடிபொருட் டொடர் நிலை யென்றது அறம் முதலிய நாற்பயனையும் கூறும் நூல்களான சீவகசிந்தாமணி முதலியவை (சிலப்.2:9, அடியார்க்கு நல்லார் உரை).

முடிபோடு[1]-தல் *muḍi-pōḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) ஒன்றோடொன்று மாட்டிப் புணைத்தல்; to tie into a knot.

[முடி + போடு-தல்.]

முடிபோடு[2]-தல் *muḍi-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. கணவனும் மனைவியுமாதற்கு நெறி (விதி)யமைதல்; to be pre-destined or ordained to be married to each other. *அவனுக்கும் இவளுக்கும் முடிபோட்டிருக்கிறது.* 2. சண்டை மூட்டுதல்; to incite persons to a quarrel. *அவனுக்கும் இவனுக்கும் முடிபோடுவதே அவர் வேலை.*

[முடி + போடு-தல்.]

முடிமயிர்[1] *muḍi-mayir,* பெ.(n.) 1. சேர்த்து முடித்த தலை மயிர் (வின்.); lock of hair. 2. மகளிர் தலைமயிரோடு சேர்த்து முடித்துக் கொள்ளும் கட்டுமயிர் (வின்.); switch.

மறுவ. இடிமயிர்

[முடி + மயிர்.]

முடிமயிர்[2] *muḍi-mayir,* பெ.(n.) தெய்வத்துக்குக் காணிக்கையாக மழித்து இடும் தலைமயிர் (இ.வ.); hair offered to a deity in pursuance of a vow.

[முடி + மயிர்.]

முடிமன்னன் *muḍi-maṉṉaṉ,* பெ.(n.) மணிமுடி சூடிய மன்னன்; crowned monarch. *'முடிமன்னர் மூவருங் காத்தோம்பும்' (சிலப்.29, பக்.575).*

[முடி + மன்னன்.]

முடிமாமிசம் *muḍi-māmišam,* பெ.(n.) தலையில் உள்ள நார் போன்ற நீண்ட மெல்லிய தோல்; an elastic membrane of the head.

[முடி + Skt.மாமிசம்.]

முடிமார் *muḍi-mār,* பெ.(n.) முடிப்பவர்; those who accomplish things. *"தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்" (திருமுரு.89).*

[முடி →முடிமார்.]

முடிமாலிகம் *muḍi-māligam,* பெ.(n.) மஞ்சள் கொன்றை; a cassia (சா.அக.).

முடிமாலை *muḍi-mālai,* பெ.(n.) தலையில் அணியும் மாலை (திவா.); garland for the head, chaplet.

[முடி + மாலை.]

முடிமூளை *muḍi-mūḷai,* பெ.(n.) தலைக்குள் ளிருக்கும் மூளை; brain of the human head (சா.அக.).

[முடி + மூளை. முடி = தலை.]

முடிமேல்முடி *muḍi-mēl-muḍi,* பெ.(n.) மர வகை (மலை.); panicled golden - blossomed pear tree.

முடிமேலழகி *muḍi-mēl-aḻagi,* பெ.(n.) கோடக சாலை (மலை.); a very small plant.

முடிய *muḍiya,* கு.வி.எ.(adv.) முழுதும் (திவா.); unto the end finally. *'என்று முடியக் கட்டுரைப்பது' (தக்கயாகப்.728).*

[முடி → முடிய.]

முடியண்டம் *muḍi-y-aṇḍam,* பெ.(n.) தலை மண்டையோடு; cranial bone, human skull (சா.அக.).

[முடி + Skt.அண்டம். முடி = தலை.]

முடியண்டசவ்வு *muḍi-y-aṇḍa-šavvu,* பெ.(n.) இழுத்தால் நாரைப் போல் நீளும்படியான தலையில் உள்ள மெல்லிய தோல்; a membrane covering the head (சா.அக.).

[முடியண்டம் + Skt.சவ்வு.]

முடியரசன் *muḍi-y-arašaṉ,* பெ.(n.) முடி மன்னன் பார்க்க; see *muḍi-maṉṉaṉ.*

[முடி + அரசன்.]

முடியரசு *muḍi-y-arašu,* பெ.(n.) அரசரால் அல்லது அரசியால் நடத்தப்படும் ஆட்சி; monarchy. *இன்றும் சில நாடுகளில் பெயரளவில் முடியாட்சி இருக்கிறது.*

மறுவ. முடியாட்சி

[முடி + அரசு. முடிசூடி நாட்டை ஆளுவது.]

முடியல் *muḍiyal,* பெ.(n.) எல்லாம் (சது.); all, whole.

[முடி →முடியல்.]

முடியறுத்தல் *muḍi-y-aṟuttal,* பெ.(n.) குடுமி வைக்குஞ் சடங்கு (இ.வ.); the first shaving of a baby, ceremonially observed (செ.அக.).

[முடி + அறுத்தல்.]

முடியன் *muḍiyaṉ,* பெ.(n.) கழகக்காலக் குறுநில மன்னன்; a king in šaṅgam period.

முடியனூர் *muḍiyaṉūr,* பெ.(n.) தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள ஊர்; a village in South arcot district in

kaḷḷakkuṟicci Taluk. *சங்ககாலக் குறுநில மன்னர்களில் ஒருவனான முடியன் என்பவரின் பெயரால் அமைந்த ஊர்.*

[முடியன் + ஊர்.]

முடியாட்சி *muḍi-y-āṭci,* பெ.(n.) முடிசூடி ஆட்சி புரிகை; monarchy.

மறுவ. முடியரசு.

[முடி + ஆட்சி. முடி சூடி ஆளும் ஆட்சி.]

தலைமுறை தலைமுறையாக நாட்டை ஆளுகை.

முடியில்தரித்தான் *muḍiyil-tarittāṉ,* பெ.(n.) சரக்கொன்றை; cassia fistula (சா.அக.).

*[முடியில் + **Skt.** தரித்தான்.]*

முடியிறக்கு[1]–தல் *muḍi-y-iṟakku-,* 5 செ. கு.வி. (v.i.) நேர்ச்சிக் கடனாக தெய்வங்களுக்கு வேண்டிக்கொண்டு மயிர் மழித்தல் (இ.வ.); to shave the hair of the head in fulfilment of a vow.

[முடி + இறக்கு–தல்.]

முடியிறக்கு[2]–தல் *muḍi-y-iṟakku-,* 5 செ. குன்றாவி.(v.t.) இழிவுபடுத்துதல் (யாழ்.அக.); to put to disgrace.

[முடி + இறக்கு–தல்.]

முடியுப்பு *muḍi-y-uppu,* பெ.(n.) கல்லுப்பு (மூ.அ.); rock salt.

முடியுயர்–தல் *muḍi-y-uyar-,* 2 செ.கு.வி. (v.i.) ஆட்சிச் செழிப்புடன் இருத்தல்; to grow prosperous as a king. *குடியுயர முடியுயரும்.*

[முடி + உயர்–தல்.]

முடியுலகம் *muḍi-y-ulagam,* பெ.(n.) முடியுலகு பார்க்க; see *muḍi-y-ulagu.* *"முடியுலக மூர்த்தி" (சீவக.1847).*

[முடி+ உலகம்.]

முடியுலகு *muḍi-y-ulagu,* பெ.(n.) மேலுலகம்; Heaven, celestial world, as the highest world. *"வால்விளை முடியுலகுற" (சீவக. 1847).*

[முடி + உலகு.]

முடியுறுப்பு *muḍi-y-uṟuppu,* பெ.(n.) மாலை (தாமம்), முகுடம், தாமரை (பதுமம்), கோடகம் கிம்புரி என ஐவகைப்பட்ட மகுடவுறுப்புகள் (திவா.); ornamental parts of a crown, five in number, viz., *mālai (tāmam), muguḍam, tāmarai (padumam), kōḍagam, kimburi.*

[முடி + உறுப்பு.]

முடியூர் *muḍi-y-ūr,* பெ.(n.) பெண்ணை யாற்றங்கரையில் உள்ள ஊர்; a village name. *பெண்ணையாற்றங்கரையில் இந்நாளில் கிராமம் என்று வழங்கப்படும் இவ்வூர் முதல்பராந்தகன் காலத்தில் முடியூர் என்று அழைக்கப்பட்டது. பராந்தகனின் முதல் படைத் தலைவன் பெரும் படையுடன் இவ்வூரில் தங்கியிருந்தான் (பிற்கால. சோழர் வரலாறு சதாசிவபண்டாரத்தார், பக்கம்.48).*

[முடி + ஊர்.]

முடியெடு–த்தல் *muḍi-y-eḍu-,* 4 செ. குன்றாவி.(v.t.) 1. முடியிறக்கு–தல் பார்க்க; see *muḍi-y-iṟakku-.* 2. தலையெடுத் தோங்குதல்; to become, prominent. *"மறையவர் முடியெடுத்தனர்" (கலிங்.251).*

[முடி + எடு–த்தல்.]

முடியெண்ணெய் *muḍi-y-eṇṇey,* பெ.(n.) 1. தலைக்குத் தேய்த்துக் கொள்ளும் எண்ணெய் (தைலம்); bathing oil. 2. தலைக்கிட்டு முழுகும் எண்ணெய்; hair oil (சா.அக.).

[முடி + எண்ணெய்.]

முடியைப்பிய்த்துக்கொள்(ளு)-தல் *muḍiyai-p-piyttu-k-koḷ-,* 13 செ.குன்றாவி. (v.t.) எளிதில் தீர்வு காண முடியாமல் அல்லல்படுதல்; rack one's brains to solve a problem, to driven mad. *மாணவன் முழு ஆண்டுத் தேர்வு எழுதிக் கொண்டு இருக்கும்போது ஒருசில கேள்விகளுக்கு விடை தெரியாமல் முடியைப் பிய்த்துக் கொண்டான்.*

[முடியை + பிய்த்து + கொள்-தல்.]

முடிவறி-தல் *muḍi-vaṟi-,* 2 செ.குன்றாவி. (v.t.) நன்றாக உணர்தல் (யாழ்.அக.); to be advanced in knowledge, to master completely.

[முடிவு + அறி-தல்.]

முடிவாங்கு-தல் *muḍi-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) முடியிறக்கு-தல் பார்க்க; see *muḍi-y-iṟakku-.*

[முடி + வாங்கு-தல்.]

முடிவாழை *muḍi-vāḻai,* பெ.(n.) இலாமிச்சை (பிங்.); cuscus-grass.

[முடி + வாழை.]

முடிவிடங்கூறல் *muḍi-viḍaṅ-gūṟal,* பெ.(n.) உத்தி முப்பத்திரண்டனுள் தான் சொல்லும் இலக்கணத்திற்கு நெறி (விதி) கூறும் இடத்தைக் குறிப்பது (நன்.97, உரை); giving particular reference to the rule followed in the context one of 32 utti.

[முடிவு + இடங்கூறல்.]

முடிவிலாற்றல் *muḍivil-āṟṟal,* பெ.(n.) முடிவிலாற்றலுடைமை பார்க்க (திவா.); see *muḍivil-āṟṟal-uḍaimai.*

[முடிவு + இல் (எ.ம.) + ஆற்றல்.]

முடிவிலாற்றலுடைமை *muḍivil-āṟṟal-uḍaimai,* பெ.(n.) எண் குணத்துள் ஒன்று (குறள், 9, உரை); omnipotence, one of eight natures.

[முடிவிலாற்றல் + உடைமை.]

எண்குணங்களாவன : 1. தன்வயத்தன் ஆதல், 2. தூய உடம்பினன் ஆதல், 3. இயற்கை உணர்வினன் ஆதல், 4. முற்றும் உணர்தல், 5. இயல்பாகவே கட்டு (பாசம்)களில் இருந்து நீங்குதல், 6. பேரருள் உடைமை, 7. முடிவு இல் ஆற்றல் உடைமை, 8. வரம்பு இல் இன்பம் உடைமை.

முடிவினை *muḍiviṉai,* பெ.(n.) கருமம் மூன்றனுள் இம்மையிற் பலனளிக்கும் பழவினை; past Karma whose effect has begun to operate. *ஆகாமிய வினையும் முடிவினையும் ஒத்தல் வேண்டும் (சி.பொ.பா. 8, 1 பக்.175 சுவாமிநா.).*

[முடி[1] + வினை.]

முடிவு *muḍivu,* பெ.(n.) 1. தொடங்கியதற்கு இறுதி; end of something. *மாநாட்டின் முடிவில் சிறப்பு அறிக்கை வெளியிடப்பட்டது. இவர் எழுதும் கதைக்கு முடிவு என்பதே இல்லையா?* 2. போட்டிகள், தேர்வுகள் முதலியவை எவ்வாறு முடிந்தது என்பது பற்றிய விளத்தம்; result of a competition,

examination, etc. *பத்தாம் வகுப்பு தேர்வின் முடிவுகள் நாளை வெளியிடப்படும். மக்களவைத் தேர்தல் முடிவுகள் வெளியான பத்திரிகை இருக்கிறதா?* **3.** இறுதி; that which is final. *இதுதான் உன் முடிவான கருத்து என்றால் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. முடிவாக நீ என்ன விலைச் சொல்கிறாய்? நான் அதை வாங்கியே தீரவேண்டும்.* **4.** சட்டப்படியான தீர்ப்பு; அறிவான தீர்மானம்; verdict, decision. *முறை மன்றத்தின் முடிவை மதிக்காமல் காவல் துறையினர் நடந்து கொண்டதாகக் குறை கூறினர். தாத்தாவை மருத்துவ மனையில் சேர்த்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். சரியா? தவறா? கேள்விகளுக்கு என்னால் சரியாக முடிவு எடுக்க முடியவில்லை.* **5.** பயன்; issue, result. **6.** தீர்மானம்; conclusion, decision. *முடிவென்ன சொல்கிறீர்?* **7.** முடிவான உட்கோள்; resoluteness. *"அக்கணை..... முடுகிய முடிவை நோக்கி" (கம்பரா. நிகும்ப.177).* **8.** இசைப் பாகுபாட்டினுள் ஒன்று (சிலப்.3:41–2, உரை, பக்.108); a kind of note in music. **9.** இறப்பு; death. *முடிவு காலம்.* **10.** எல்லை; limit. *"சூழ்ச்சி முடிவு துணிவெய்தல்" (குறள், 671).* **11.** பண் (இராகம்) முடிவில் அமையும் இசைச் சுரம்; tonic at the conclusion of a piece.

[முடி → முடிவு.]

முடிவுகட்டு–தல் *muḍivu-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) **1.** ஒன்றைக் குறித்து முடிவு எடுத்தல், தீர்மானித்தல்; take a decision, decide on something, finalize. *நிருவாகத்தைச் சந்தித்துப் பேசுவதற்கு முன் என்னென்ன கோரிக்கைகளை முன் வைக்கப் போகிறோம் என்று முடிவு கட்டிக் கொள்வோம்.* **2.** தொல்லை விளைவிக்கும் ஒன்று தொடர முடியாத இறுதி நிலையை அடையச் செய்தல்; put an end to something. *'அவனுடைய கொட்டத்திற்கு முடிவு கட்டுகிறேனா இல்லையா பார்' என்று சூளுரைத்தான். கொடுஞ் செயல்களுக்கு இனியும் முடிவுகட்டாவிட்டால் நாடு சிதறிவிடும்.* **3.** எண்ணித்துணிதல்; to come to a conclusion.

[முடிவு + கட்டு–தல்.]

முடிவுகாலம் *muḍivu-kālam,* பெ.(n.) சாக்காடு; time of death.

[முடிவு + காலம்.]

முடிவுசெய்–தல் *muḍivu-šey-,* **1** செ.கு.வி. (v.i.) முடிவுகட்டு–தல், 1 பார்க்க; see *muḍivu-kaṭṭu-,1. உன்னை அயல்நாட்டில் படிக்க வைக்க முடிவு செய்திருக்கிறோம். இந்தப் புதியச் சிக்கலுக்குக் கரணியம் அவர்கள்தான் என்று கட்சி மேலிடம் முடிவு செய்தது.*

[முடிவு + செய்–தல்.]

முடிவுசொல்(லு)–தல் *muḍivu-col-,* **13** செ.கு.வி. (v.i.) தீர்ப்புச் சொல்லுதல்; to give a decision, to deliver, judgement.

[முடிவு + சொல்(லு)–தல்.]

முடிவுபோ–தல் *muḍivu-pō-,* **8** செ.கு.வி. (v.i.) நிறைவேறுதல்; to be accomplished, fulfilled. *'முடிவு போகாமையின்' (குறள், 262, உரை).*

[முடிவு + போ–தல்.]

முடிவுபோக்கு–தல் *muḍivu-pōkku-,* **5** செ. குன்றாவி.(v.t.) நிறைவேற்றுதல்; to accomplish, fulfil. *'தான் சூளுற்ற காரியத்தினை முடிவு போக்காது' (கலித்.149 : 10, உரை).*

[முடிவு + போக்கு–தல்.]

முடிவுரை *muḍivurai,* பெ.(n.) 1. முடித்து வைக்கும் முறையில் பேசும் பேச்சு அல்லது எழுதும் எழுத்து; concluding speech or remark. *விழாவின் இறுதியில் தலைவர் முடிவுரை ஆற்றினார்.* 2. நூலிறுதியில் அமையும் கட்டுரை; epilogue, concluding section of a work. *கட்டுரையின் முடிவில் எழுதியிருப்பது படிப்பவரை உண்மையாகச் சிந்திக்கத் தூண்டும்.*

[முடிவு + உரை.]

முடிவெட்டு-தல் *muḍi-veṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) தலைமுடியைக் கத்தரித்துச் சீர்செய்தல்; have or do a hair cut. *சிறுவர்களுக்கு முடிவெட்டக் கட்டணம் உருபாய் நான்கு.*

[முடி + வெட்டு-தல்.]

முடிவெழுத்து *muḍiveḻuttu,* பெ.(n.) முடிபெழுத்து பார்க்க; see *muḍibeḻuttu.*

[முடிவு + எழுத்து.]

முடிவேந்தர் *muḍi-vēndar,* பெ.(n.) முடி மன்னன் பார்க்க; see *muḍi-mannan.* *'முடிவேந்தர் மன்னும் அரண்களை' (சிறுபாண். 247, உரை).*

[முடி + வேந்தர்.]

முடிவேர் *muḍi-vēr,* பெ.(n.) வெட்டிவேர்; khuskhus (சா.அக.).

முடுக்கடி *muḍukkaḍi,* பெ.(n.) நெருக்கடி; busy time; critical moment. *திருமண முடுக்கடியில் துணிகள் வாங்காதே.*

[முடுக்கு + அடி. முடுக்குதல் = விரைவு படுத்துதல்.]

முடுக்கம் *muḍukkam,* பெ.(n.) 1. விலை யேற்றம்; high price, dearness. 2. இறுகல் (நாஞ்.); tightness.

[முடுக்கு →முடுக்கம்.]

முடுக்கர் *muḍukkar,* பெ.(n.) 1. குறுந்தெரு; short street. *"முடுக்கரும் வீதியும்" (சிலப்.5 : 187).* 2. அருவழி; pathway difficult to pass. *"முட்டுடை முடுக்கரு மொய்கொள் குன்றமும்" (சீவக.1216).* 3. தெருச்சந்து; lane. *"முடுக்கர் தோறும் புகுந்த வல்லிருளின் பொம்மல்" (இரகு.இலவ.55).* 4. மலைக்குகை (பிங்.); mountain cavern. 5. நீர்க் குத்தான இடம்; place where water presses against a bank and erodes. *"குண்டுகய முடுக்கர்..... யாற்று" (மலைபடு.213).* 6. இடைவெளி; interstice, interspace. *"முடத்தாழை முடுக்கருள்" (கலித்.136).*

[முடுக்கு →முடுக்கர் = குறுந்தெரு. (வே.க.)]

முடுக்கன் *muḍukkaṉ,* பெ.(n.) வலியோன் (யாழ்.அக.); strong man.

[மிடுக்கு →முடுக்கு →முடுக்கன்.]

முடுக்காணி *muḍukkāṇi,* பெ.(n.) ஆணி வகை (இ.வ.); screw.

[முடுக்கு + ஆணி.]



முடுக்கிவிடு–தல் *muḍukki-viḍu-*, 20 செ.கு.வி. (v.i.) தீவிரமாக அல்லது வேகமாகச் செயல்படும்படி இயக்குதல்; to gear up, step up, accelerate. *தேர்தல் நெருங்கியதும் அனைத்துக் கட்சிகளும் தங்களின் கொள்கைகளைப் பரப்பும் பணிகளை முடுக்கிவிட்டன. போட்டி வேட்பாளருக்கு எதிராக அவதூறான மேடைப் பேச்சைப் பரப்ப ஆளும் கட்சி முடுக்கி விடப்பட்டிருக்கிறது.*

[முடுக்கி + விடு–தல்.]

முடுக்கு[1]–தல் *muḍukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. பாவை, பொறிகள் முதலியவற்றை இயங்குவதற்காக திருகுதல்; to set in motion, wind. *சீறுந்தில் திறவுகோலை நுழைத்து முடுக்கினான்.* 2. மாடு முதலியவற்றை விரட்டி ஓட்டுதல்; to drive away. *வேலிதாண்டி மேயும் மாட்டை முடுக்காமல் வேடிக்கையா பார்த்துக் கொண்டு இருக்கிறாய்?* 3. திருகாணி முதலியவற்றை உட்செலுத்துதல்; to screw something. *மரைதேய்ந்திருப்பதனால் ஆணியைச் சரியாக முடுக்க முடியவில்லை. "கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து" (நெடுநல்.85).* 4. விரைவுபடுத்துதல் (வின்.); to urge, bring pressure on. 5. விரைவாகச் செலுத்துதல்; to drive, cause to run, as a horse; to set in motion, as a potter's wheel. *"கடுகி முடுக்கிலும்" (விநாயகபு.55 : 7).* 6. விரைந்து கடித்தல்; to bite off hurriedly. *"பிணவு நாய் முடுக்கிய தடியொடு" (மலைபடு.177).* 7. உழுதல்; to plough. *"மூரிதவிர முடுக்கு முதுசாடி" (பரிபா.20:54).* 8. தூண்டி விடுதல் (உ.வ.); to induce, urge on. *ஏன் அவனுடன் சண்டை செய்யும்படி முடுக்குகிறாய்?*

க. முடுக்கு.

[முள் = முற்படு, விரை. முள்→முடு→முடுகு → முடுக்கு→முடுக்கு–தல் (சு.வி.42).]

முடுக்கு[2]–தல் *muḍukku-*, 5 செ.கு.வி. (v.i.) 1. உணர்ச்சி மிகுதல்; to feel urgently, as the call of nature. *ஒன்றுக்கு முடுக்குகிறது.* 2. மிகுதியாதல்; to increase, as in price. *விலைமுடுக்கிப் போகிறது.* 3. விரைதல்; to hasten. *"முடுக்கிவந்து" (உத்திரரா. இலங்கை யழி. 20).*

[முடுக்கு[1]–தல் →முடுக்கு[2]–தல்.]

முடுக்கு[3] *muḍukku*, பெ.(n.) 1. விரைவுப் படுத்துகை; urging, pressing hard. 2. மூலை; corner. *தெருமுடுக்கில் ஒரு பெட்டிக் கடை உண்டு.* 3. கோணல் தெரு; narrow, winding street. *"முட்டுமுடுக்கு மிட்டிடை கழியும்..... வீதியும்" (பெருங். உஞ்சைக்.33 : 16).* 4. மிகுதி; increase, dearness, as of price. *தங்கம் விலை வெகு முடுக்கு.*

க. முடுக்கு.

[முள் = விரை. முள்→முடு→முடுகு→முடுக்கு (சு.வி.42).]

முடுக்கு[4] *muḍukku*, பெ.(n.) 1. வலிமை (வின்.); strength, power. 2. அகந்தை (இ.வ.); pride, arrogance, stiffness of manners.

முடுக்குச்சந்து *muḍukku-c-candu*, பெ.(n.) சிறு சந்து (உ.வ.); alley, narrow lane.

[முல் → முள் → முண் → முண → முணுக்கு → முடுக்கு + சந்து.]

முடுக்குத்தெரு *mudūkku-t-teru,* பெ.(n.) ஒடுங்கிய சிறு தெரு; small, narrow street. *"நெடுந்தெருவே போகிறவர்கள் நான் இருந்த முடுக்குத் தெருத் தேடி வந்த போதே" (ஈடு, 1. 2:6).*

[முடுக்கு + தெரு.]

முடுக்குவழி *muḍukku-vaḻi,* பெ.(n.) முடுக்குச்சந்து பார்க்க; see *muḍukku-c-candu.*

[முடுக்கு + வழி.]

முடுக *muḍuga,* கு.வி.எ. (adv.) 1. விரைவாய்; swiftly, quickly. 2. கிட்ட (யாழ்.அக.); near.

முடுகடி *muḍugaḍi,* பெ.(n.) அண்மை (யாழ்.அக.); nearness.

[முடுக்கடி→முடுகடி.]

முடுகல் *muḍugal,* பெ.(n.) 1. விரைவு; quickness. 2. வலிமை; strength.

[முடுகு→முடுகல்.]

முடுகியல் *muḍugiyal,* பெ.(n.) கலிப்பா வகைகளின் உறுப்புக்களுள் ஒன்று (தொல். பொருள்.464); a part of *Kali* verse, characterised by rapid movement.

[முடுகு→முடுகியல்.]

முடுகியல்வண்ணம் *muḍugiyal-vaṇṇam,* பெ.(n.) முடுகியல் (பிங்.) பார்க்க; see *muḍugiyal.*

[முடுகியல் + வண்ணம்.]

முடுகு[1]-தல் *muḍugu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. விரைந்து செல்லுதல்; to hasten, to be in haste, to move quickly. *"முடுகழலின் முந்துறுதல்" (பு.வெ.3 : 6).* 2. நெருங்கி வருதல்; to become urgent; to come to a head; to throng and surge. *"வெம்மைக் கூற்ற முடுகாதே" (தேவா.116, 7).* 3. வலிமையாதல் (வின்.); to be strong.

தெ., க. மிடுகு; ம. முடுகு.

[முடுக்கு→முடுகு→முடுகு-தல்.]

முடுகு[2]-தல் *muḍugu-,* 5 செ.குன்றாவி.(v.t.) எதிர்தல் (பிங்.); to meet; to advance against.

[முடுகு[1]-தல்→முடுகு[2]-தல்.]

முடுகு[3] *muḍugu,* பெ.(n.) 1. முடுகிச் செல்லும் ஓசை வகை (வின்.); a rapid movement in verse. 2. நாற்றம்; bad odour, stench. *"முடுகு நாறிய வடுகர்" (தேவா.918, 1).* 3. அரக்காற் செய்யப்பட்ட கங்கணம் (நெல்லை.); bracelet made of lac. 4. அரக்குவளை செய்யுங் கட்டளை (இ.வ.); mould in which lac bracelets are made. 5. மோதிர வகை (நாஞ்.); a ring.

[முடுக்கு→முடுகு.]

முடுகு[4] *muḍugu,* பெ.(n.) கடமை விலங்கின் பெண் (வின்.); female elk.

முடுகு[5] *muḍugu,* பெ.(n.) தோணி வகை (குருகூர்ப்.19); a kind of boat.

முடுகுவண்ணம் *muḍugu-vaṇṇam,* பெ.(n.) அராகந் தொடுத்த அடியோடு பிற அடிசேர்ந்து தொடர்ந்தோடுஞ் சந்தம் (தொல்.பொருள்.545); a rhythm effected by mixing lines of short syllables in rapid succession with those of a different type.

[முடுகு + வண்ணம்.]

முடுகுவெண்பா *mudugu-venbā*, பெ.(n.) ஓசை (சந்த) முடுகுள்ள வெண்பாவகை; a species of *venbā* verse composed either wholly or partly in quick rhythm.

[முடுகு + வெண்பா.]

முடுங்கனல் *mudunganal*, பெ.(n.) செங்குளவி; red wasp (சா.அக.).

முடுத்தார் *muduttār*, பெ.(n.) மூடுகை; act of covering. *அந்தப் பிணத்திற்கு முடுத்தார் பண்ணினீர்களா?*

[மூடு →முடு→முடுத்தார்.]

முடுதம் *mududam*, பெ.(n.) தலைமை (நாஞ்.); leadership.

முடுவல் *muduval*, பெ.(n.) 1. நாய் (பிங்.); dog. *"சினமுடுவல் நரி கழுகு" (திருப்பு.519).* 2. பெண்நாய் (பிங்.); bitch. *"முடுவறந்த பைந் நிணத் தடியொடு" (மலைடு.563).* 3. செந்நாய் (அக.நி.); a brown - coloured dog.

[முடுகு→முடுவல் = விரைவாக ஓடும் இயல்புள்ள நாய்.]

முடுவல்வெம்படையோன் *muduval-vem-padaiyōn*, பெ.(n.) நாய்ப்படையுடையவனான வயிரவன் (சூடா.); Bhairava, as having an army of dogs.

[முடுவல் + வெம்மை + படையோன்.]

முடை[1]-தல் *mudai-*, 2 செ.குன்றாவி. (v.t.) பாய், கூடை முதலியவை பின்னுதல்; to plait a basket; weave a mat. *கூடை முடைவோர்க்குக் குறைந்த கூலியே கிடைக்கிறது. எங்கள் பள்ளியில் பாய் முடையக் கற்றுக் கொடுக்கிறார்கள். 'உலர்ந்த பழுத்தலை முடைந்து வேய்ந்த தனிமனை' (பெரும்பாண்.353, உரை).*

[மிடை→முடை→முடை-தல்.]

முடை[2]-தல் *mudai-*, 2 செ.கு.வி.(v.i.) மெலிதல் (வின்.); to become lean.

[மிடை→முடை→முடை-தல்.]

முடை[3] *mudai*, பெ.(n.) 1. புலால்; flesh. *"முடைச் சாகாடு" (நாலடி, 48).* 2. கெட்ட மணம்; stench, offensive odour. *"முடையரைத் தலைமுண்டிக்கு மொட்டரை" (தேவா.423, 4).* 3. புளித்த மோர் முதலியவற்றின் வீச்சம்; smell of sour buttermilk or curds. *"இடைப்பேச்சு முடைநாற்றமுமாய் விட்டது" (திவ்.திருப்பா. வியா.அவ.).* 4. தவிடு (பிங்.); bran.

முடை[4] *mudai*, பெ.(n.) 1. நெருக்கடி, தட்டுப்பாடு; financial straits, constraint, shortage, squeeze. *பணத்துக்கு இப்போது கொஞ்சம் முடையாக உள்ளது.* 2. பற்றாக்குறை; need not enough scarcity.

முடை[5] *mudai*, பெ.(n.) 1. குடையோலை (திவா.); ola basket. 2. ஓலைக்குடை (வின்.); umbrella of palm leaves.

[மிடை→முடை.]

முடைச்சேரி *mudai-c-cēri*, பெ.(n.) முல்லை நிலத்தூர் (யாழ்.அக.); village in the forest tracts.

முடைசல் *mudaišal*, பெ.(n.) 1. முடைகை; plaiting, braiding. 2. முடையப்பட்டது; that which is plaited. 3. வெள்ளத்தால் கரை உடைந்து போகாதவாறு மூங்கில் முதலியவற்றால் இடும் அணைப்பு (இ.வ.);

screen of bamboo or palm leaves for protecting the banks of rivers from erosion by floods.

[மிடை → முடை → முடைசல்.]

முடைஞ்சல் *muḍaiñjal,* பெ.(n.) 1. இடையூறு (நாமதீப.631); trouble, distress. 2. பொருளில்லாதத் திண்டாட்டம்; poverty.

[முட்டு →முடை → முடைஞ்சல் (சு.வி.42).]

முடைநாற்றம் *muḍai-nāṟṟam,* பெ.(n.) 1. கெட்டுப்போன இறைச்சி, புளித்த மோர் முதலியவற்றில் இருந்து வரும் கெட்ட மணம்; foul smell of meat, sour milk, etc. 2. புலால்; flesh. *"முடைச் சாகாடு" (நாலடி, 48).*

[முடை + நாற்றம்.]

முடைநாறி *muḍai-nāṟi,* பெ.(n.) கொடி வகை (L.); small downy-lobed vine, *Vitis linnaei.*

[முடை + நாறி.]

முடைப்படு-தல் *muḍai-p-paḍu-,* 20 செ. கு.வி.(v.i.) நெருக்கடி உண்டாதல்; to be in straits.

[முடை + படு-தல்.]

முடைமா *muḍaimā,* பெ.(n.) காட்டுமா; forest mango, *Buchanania lutifolia.*

முடையிருப்பு *muḍai-y-iruppu,* பெ.(n.) எதிர்காலத்தில் பற்றாக்குறை ஏற்படும் சமயங்களில் பயன்படுத்துவதற்கான தவச சேமிப்பு; reserve of food grains, buffer stock. *நுகர் பொருள் வணிகக் கழகத்திடம் நான்கு ஆயிரம் மூட்டை அரிசி முடையிருப்பில் உள்ளது.*

[முடை + இருப்பு.]

முண்டக்கட்டை *muṇḍa-k-kaṭṭai,* பெ.(n.) மயிரில்லாத் தலைபோல் ஆடையில்லா வுடம்பு; nacked body.

[முண்டம் + கட்டை.]

முண்டக்கண்[1] *muṇḍakkaṇ,* பெ.(n.) முண்டக்கண்கறவா பார்க்க; see *muṇḍa-k-kaṇ-kaṟavā.*

[முண்டம் + கண்.]

முண்டக்கண்[2] *muṇḍakkaṇ,* பெ.(n.) வெளியில் பிதுங்கியுள்ள பருத்த விழி (உ.வ.); goggle eye. *அவனுக்கு முண்டக்கண்.*

[முண்டம் + கண்.]

முண்டகக்கண்கரவை *muṇḍaga-k-kaṇ-karavai,* பெ.(n.) முண்டைக்கண்[1] பார்க்க; see *muṇḍai-k-kaṇ.*

[முண்டகம் + கண் + கரவை. கரவை = மீன் வகை.]

முண்டக்கண்கறவா *muṇḍakkaṇ-kaṟavā,* பெ.(n.) நீலமும் பழுப்பும் கலந்த நிறமுள்ள கடல்மீன் வகை; sea fish, violet - brown, *Pempheris malabarica.*

[முண்டக்கண் + கறவா.]

முண்டக்கண்காக்காச்சி *muṇḍakkaṇ-kākkācci,* பெ.(n.) மஞ்சள் கலந்த பசுமை நிறமுள்ளதும் மூன்று விரலம் வளர்வதுமான கடல்மீன் வகை; sea-fish, yellowish green, attaining 3 in. in length, *Apogan glaca.* 2. செந்நிறமுள்ள கடல் மீன் வகை; sea-fish scarlet, *Myripristis botche.*

[முண்டக்கண் + காக்காச்சி.]

முண்டக்கண்பாரை *muṇḍa-k-kaṇ-pārai,* பெ.(n.) மீன் வகை; a kind of fish.

[முண்டக்கண் + பாரை.]



முண்டகத்துறை *muṇḍaga-t-tuṟai,* பெ. (n.) குளம்; pond.

[முண்டகம் + துறை. துறை = நீர்த்துறை, கடல், தாமரை மலர் நிறைந்த குளம்.]

முண்டகநாயகம் *muṇḍaga-nāyagam,* பெ.(n.) சூரிய காந்திபூ; sun flower (சா.அக.).

முண்டகம்[1] *muṇḍagam,* பெ.(n.) 1. முள்; thorn. *"முண்டக விறும்பி னுற்று" (அரிச்.பு. வேட்டஞ்.36).* 2. முள்ளுடைத்தூறு (பிங்.); thorn bush. 3. தாழை (பிங்.); fragrant screw - pine. *"கூன்முண் முண்டகக் கூர்ம்பனி மாமலர்" (குறுந்.51).* 4. தாமரை; lotus. *"முண்டக வதன மழகெழ" (திருவாலவா.37 : 58).* 5. நீர்முள்ளி (திவா.); water - thorn. *"முண்டகங் கரும்பெனத் துய்த்து" (கல்லா.62 : 14). "முண்டகம் கலித்த முதுநீர் அடைகரை" (அகநா.80).* 6. கழிமுள்ளி; Indian night-shade. *"மணிப்பூ முண்டகங் கொய்யே னாயின்" (நற்.191). "மணிப்பூ முண்டகத்து" (மதுரைக். 96).* 7. கருக்கு வாய்ச்சி (அக.நி.); jagged jujube. 8. பதநீர் (சங்.அக.); sweet toddy. 9. கள் (பிங்.); toddy. 10. கருப்புக்கட்டி; jaggery from palmyra. 11. தேன்; honey of flowers.

[முள் + அகம்.]

முண்டகம்[2] *muṇḍagam,* பெ.(n.) 1. நெற்றி (பிங்.); forehead. *"முண்டகக் கண்ணா போற்றி" (குற்றா. தல.திருமால்.141).* 2. தலை (அரு.நி.); head. 3. நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று; an Upanisad one of 108. 4. வாழை (மலை.); plantain.

முண்டகம்[3] *muṇḍagam,* பெ.(n.) கடல் (அக.நி.); sea.

முண்டகம்[4] *muṇḍagam,* பெ.(n.) மார்பின் கீழ் 4 விரலம் வீங்கி வலி கொடுக்கும் நோய்; a disease marked by swelling and pain just, below the chest.

முண்டகவேணி *muṇḍaga-vēṇi,* பெ.(n.) பொன்னாவாரை; a plant - *Cassia auriculata* (சா.அக.).

முண்டகன் *muṇḍagaṉ,* பெ.(n.) தாமரையில் பிறந்ததாகக் கருதப்படும் நான்முகன் (இலக்.அக.); Brahma, as lotus born.

[முண்டகம் →முண்டகன்.]

முண்டகாசனன் *muṇḍagāšaṉaṉ,* பெ.(n.) முண்டகன் (யாழ்.அக.) பார்க்க; see *muṇḍagaṉ.*

[முண்டகம் + Skt. ஆசனன்.]

முண்டகாசனி *muṇḍagāšaṉi,* பெ.(n.) முண்டகாசனை (யாழ்.அக.) பார்க்க; see *muṇḍagāšaṉai.*

முண்டகாசனை *muṇḍagāšaṉai,* பெ.(n.) தாமரைப் பூவிலிருப்பவள் – திருமகள் (இலக்குமி); Lakshmi, as seated on a Lotus. *முண்டகாசனை கேள்வன் (சூடா.).*

*[முண்டகம் + **Skt.** ஆசனை. ஆசனம் → ஆசனை.]*

முண்டச்சி *muṇḍacci,* பெ.(n.) கைம்பெண் (முண்டை); widow.

[முண்டை →முண்டைச்சி.]

முண்டப்பங்கி *muṇḍa-paṅgi,* பெ.(n.) தன்னை உணரும் பொருட்டு செய்யும் பூசையில் (ஆன்மார்த்த பூசையில்) இலிங்கவுருவமாயுள்ள சிவனை ஐந்து முகங்களோடு கூடியவராக மனதில் எண்ணி வழிபடுதல் (தியானிக்கை); meditation of *Šiva-liṅgam* as having five faces in *āṉmārtta-pūšai.* *"முறைமை யிற்றண்டபங்கி முண்டபங்கியு மியற்றி" (சூத.சிவமான்.4:18) (தத்துவப்.64, 203).*

முண்டப்பாட்டு *muṇḍa-p-pāṭṭu,* பெ.(n.) மிறைக்கவிவகை (யாப்.வி.பக்.510); variety of metrical composition.

[முண்டம் + பாட்டு.]

முண்டபலம் *muṇḍa-palam,* பெ.(n.) தேங்காய் (யாழ்.அக.); coconut.

[முண்டம் + பலம். முண்டம் = உருண்டை.]

முண்டம்¹ *muṇḍam,* பெ.(n.) 1. தலை; head. *"முண்டம் வெம்பு" (திருவாலவா.44:31).* 2. நெற்றி; forehead. *"முண்டத்துற்ற கண்ணெரியினான்" (இரகு. தேனுவ.86).* 3. மழித்த தலை; clean shaven head. *"சடையு முண்டமுஞ் சிகையும்" (அரிச். பு.விவாக.2).* 4. வழுக்கைத் தலை (வின்.); bald head. 5. மண்டையோடு (கபாலம்); skull. *"இறையான் கையினிறையாத முண்டந் நிறைத்த வெந்தை" (திவ்.பெரியதி. 5. 1:8).* 6. உடற்குறை (யாழ்.அக.); headless trunk. 7. உறுப்புக் குறை (யாழ்.அக.); limbless body. *கைமுண்டம், கால்முண்டம்.* 8. நிரம்பாக் கருப்பிண்டம்; undeveloped foetus. *முண்டம் விழுந்தது.* 9. மயிரில்லாத் தலைபோல் ஆடையில்லா அம்மண உடம்பு (உ.வ.); naked body. 10. அறிவில்லாதவன்; useless person, block head.

[முள் →முண் →முண்டு → முண்டம்.]

முண்டம்² *muṇḍam,* பெ.(n.) 1. திரட்சி (சூடா.); sphere, globe. 2. இரும்புக்கிட்டம் (அக.நி.); iron dross. 3. குற்றி (இலக்.அக.); stump, stake. 4. உபநிடதங்கள் 108ல் ஒன்று; an upanisad. 5. முண்டபங்கி பார்க்க; see *muṇḍapaṅgi.* *"நலத்த வுருவது காண்டல் முண்டம்" (தத்துவப். 64).* 6. சந்தனம் நீறு முதலியவற்றால் நெற்றியில் இடும் குறி; caste mark on the forehead. *"ஆட்கொண்டான்றிரு முண்டந் தீட்ட மாட்டாது" (திருவாச.35 : 9).* 7. பிட்டு (அக.நி.); a preparation of rice flour cooked in steam. 8. மரத்துண்டு; piece, as of timber. 9. கட்டி; mass. *பேராறு பெருகிவர பெருமுண்டம் மிதந்துவர.* 10. கணுக்காற் பொருத்து; ankle.

[முள் →முண் →முண்டு → முண்டம்.]

மொட்டைத் தன்மையைக் குறிக்கும் முண்டம் என்னும் சொல்லும், உருட்சியைக் குறிக்கும் முண்டம் என்னும் சொல்லும் வெவ்வேறென அறிக.

வடவர் காட்டும் முண்ட் (muṇḍ) என்னும் மூலம் செயற்கையென்பது தெளிவு.

"muṇḍ (prob. artificial, to serve as the supposed of the words below), cl, I.P. to cut (Khaṇḍave-chidi), Dhātup.IX, 40; to cursh, grind, IX, 38 (V.I.for muṭ); cl.I.A. to cleanse `or to sink' or `to shave' என்று மா.வி.அ. குறித்தல் காண்க (தேவநேயம் 11, பக்.297).

முண்டம்³ *muṇḍam,* பெ.(n.) சீட்டாட்டத்தில் ஒருவர் கையிலுள்ள ஒரு இனத்தைச் சார்ந்த ஒற்றைச் சீட்டு (உ.வ.); a single card of a suit, in the hands of a player.

முண்டன்¹ *muṇḍaṉ,* பெ.(n.) 1. மழித்த தலையன்; shaven headed person. *"கண்டராய் முண்டராகி" (தேவா.269, 3).* 2. கையில் மண்டையோடுடைய (கபால முடைச்) சிவன்; Šiva. *"முண்டனீறன்" (திவ். திருச்சந்.71).* 3. சிவனியன் (சைவன்) (திவ். திருமாலை, 8, வியா.); *Šaivite.* 4. சமணர் (திவ். திருமாலை. 8, வியா.); Jain. 5. மஞ்சிகன் (நாவிதர்) (யாழ்.அக.); barber. 6. கரும்பாம்பு (இராகு) ; ascending node.

[முண்டம்→ முண்டன்.]

முண்டன்² *muṇḍaṉ,* பெ.(n.) 1. வலியவன் (திவ். திருமாலை.8, வியா.); strong, powerful person. 2. கிழங்கின் இறுக்கமான பகுதி; hard portion of a tuber. *சேப்பம் முண்டன்.*

[மிண்டு→முண்டு→முண்டன்.]

முண்டன்³ *muṇḍaṉ,* பெ.(n.) விடாப்பிடியன் (உ.வ.); obstinate man.

[முண்டன்² →முண்டன்³.]

முண்டன்சுரா *muṇḍaṉ-šurā,* பெ.(n.) சுறா மீன் வகை; a species in fish.

[முண்டன் + சுரா.]

முண்டனம் *muṇḍaṉam,* பெ.(n.) தலை மழிக்கை; shaving of the head.

[முண்டம் + அனம்.]

முண்டனி *muṇḍaṉi,* பெ.(n.) 1. கொட்டாங் கரந்தை; a plant, *Spheranthes hirtus.* 2. நொச்சிவேர்; the root of vitex negundo (சா.அக.).

முண்டாகாரம் *muṇḍākāram,* பெ.(n.) 1. உடற் குறை; headless trunk. 2. உருவிளங்காத பொருள் (உ.வ.); shapeless mass.

[முண்டு→முண்டம்→முண்டாகாரம்.]

முண்டாணி *muṇḍāṇi,* பெ.(n.) மூன்றுவீசம் பார்க்க (நெல்லை.); see *mūṉṟu-vīšam.*

முண்டாரி *muṇḍāri,* பெ.(n.) வலிமையானவன்; strong, powerful person.

[மிண்டு→முண்டு→முண்டாரி.]

முண்டான் *muṇḍāṉ,* பெ.(n.) மஞ்சட்கிழங்கு; turmeric tuber.

முண்டி¹-த்தல் *muṇḍi-,* 4 செ. குன்றாவி. (v.t.) மொட்டையாய் மழித்தல்; to shave the head completely. *"தலை முண்டிக்கு மொட்டரை" (தேவா.423, 4).*

[முண்டு→முண்டி→முண்டி-த்தல்.]

முண்டி² *muṇḍi,* பெ.(n.) கல்லுளிமங்கன் (இ.வ.); pertinacious beggar.

தெ. முண்டி; க. மொண்டு.

முண்டி³ *muṇḍi,* பெ.(n.) 1. மழித்த தலையினன் (திருவாலவா.குறிப்பு); person with a clean - shaven head. 2. மஞ்சிகன் (நாவிதன்)

(இலக்.அக.);barber. 3. நெற்றியில் மதக்குறி (திரிபுண்டாரம்) அணிந்தவன்; one who wears a caste mark on his forehead. *"நீற்றுப் பூண்டகு முண்டியேடா" (திருவாலவா.13, 14).*

[முண்டு → முண்டி.]

முண்டி⁴ *mundi,* பெ.(n.) முண்டனி பார்க்க (நாமதீப.329); see *mundani.*

முண்டி⁵ *mundi-,* பெ.(n.) வளைவு; crooked ness, bend.

[முள்→முண்டு→முண்டி (சு.வி.44).]

முண்டிதம் *mundidam,* பெ.(n.) 1. மொட்டை யடிக்கை; shaving the head clean. *முண்டிதப்படு சென்னியன் (கந்தபு. மார்க். 117).* 2. வரிக்கூத்து வகை (சிலப்.3: 18, உரை); a masquerade dance.

[முண்டி → முண்டிதம்.]

முண்டிதை *mundidai,* பெ.(n.) உடலிளைத்துத் தோன்றும் தேவாங்கு (நாமதீப.); the Indian sloth.

முண்டியடி-த்தல் *mundiyadi-,* 4 செ.கு.வி. (v.i.) கூட்டத்தில் முன்னேற ஒருவரை ஒருவர் நெருக்கித் தள்ளுதல்; jostle against, push around. *பேருந்தில் முண்டியடித்து ஏறினார். நடிகரைப் பார்க்கக் கூட்டம் முண்டியடித்துக் கொண்டு வந்தது.*

[முண்டி + அடி-த்தல்.]

முண்டினி *mundini,* பெ.(n.) ஒரு வகை மரம்; a kind of tree useful in alchemy (சா.அக.).

முண்டீரம் *mundiram,* பெ.(n.) கீரை வகை (சங்.அக.); a kind of greens.

முண்டு¹-தல் *mundu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. முரண்டு பண்ணுதல்; to be unruly, refractory; to act saucily. 2. முனைந்து நிற்றல்; to attack vehemently. *ஒரு முண்டு முண்டிப் பார்த்தான்.* 3. சண்டை செய்யும் முனைப்போடு இருத்தல்; be aggressive.

[முள் →முண்டு →முண்டுதல் = முற்படுதல், முட்டுதல், தாக்குதல், துளைத்தல் (சு.வி.42).]

முண்டு² *mundu,* பெ.(n.) 1. முருட்டுத் தன்மை (யாழ்.அக.); petulance, obstinacy. 2. முனைந்து செய்யும் எதிர்ப்பு; vehement attack. 3. மடமை (யாழ்.அக.); stupidity. 4. மரம் முதலியவற்றின் கணு; knot, as in a tree. 5. திரட்சி; bulging or protuberance. 6. உருண்ட கட்டை (இ.வ.); short log; wooden prop. *முண்டும்முடிச்சும்.* 7. உடற்சந்து (உ.வ.); joint of the body. *முண்டிலே பட்டது.* 8. திமில் (இ.வ.); hump.

க. மொண்டு.

[முண்டு¹ →முண்டு².]

முண்டு³ *mundu,* பெ.(n.) சிறுவேட்டி (நாமதீப. 780); short-sized cloth.

க., ம. முந்டு.

முண்டுகொடு-த்தல் *mundu-kodu-,* 4 செ.கு.வி. (v.i.) முட்டுகொடுத்தல்; give a support or prop. *சாய்ந்து கிடந்த வாழைமரத்திற்கு முண்டு கொடுத்து நிமிர்த்தியிருக்கிறார்கள்.*

[முண்டு + கொடு-த்தல்.]

முண்டுபலகை *muṇḍu-palagai,* பெ.(n.) கடலில் கட்டு மரத்தைச் செலுத்த உதவும் துடுப்பு (இ.வ.); paddle.

[முண்டு²+ பலகை.]



முண்டை¹ *muṇḍai,* பெ.(n.) முட்டை; egg. *"முண்டை விளை பழம்" (பதிற்றுப்.60 : 6).*

[முண்டு → முண்டை.]

முண்டை² *muṇḍai,* பெ.(n.) கண்ணின் கருவிழி (உ.வ.); apple of the eye.

[மிண்டை → முண்டை.]

முண்டை³ *muṇḍai,* பெ.(n.) தலைமழித்த கைம்பெண்; widow, as having a shaven head. *"மொட்டை முண்டை" (தனிச்.சிந்.376 : 4).*

[முண்டன் → முண்டை (பெ.பா.)]

முண்டைக்கட்டை *muṇḍai-k-kaṭṭai,* பெ.(n.) முண்டக்கட்டை பார்க்க; see *muṇḍai-k-kaṭṭai.*

[முண்டம் + கட்டை.]

முண்டைக்கண் *muṇḍai-k-kaṇ,* பெ.(n.) முண்டக்கண் பார்க்க; see *muṇḍa-k-kaṇ.*

[முண்டை² + கண்.]

உருண்டு பெருத்த விழிகளை உடையதால் முட்டைக் கண் என்பது முண்டைக்கண் என வழங்குகின்றது.

முண்டைச்சி *muṇḍaicci,* பெ.(n.) முண்டை³ பார்க்க; see *muṇḍai³. "முண்டைச்சிக்குச் சொந்தக்காரன் முன்னுக்கு வருவானா" (பழ). "முண்டைச்சி பெற்றது மூன்றும் அப்படியே" (பழ.).*

[முண்டை³ → முண்டைச்சி]

முண்டைமோப்பி *muṇḍai-mōppi,* பெ.(n.) 1. கைம்பெண் (வின்.); widow. 2.கைம்பெண்ணுக்குப் பிறந்த பிள்ளை (சென்னை); son born to a widow.

[முண்டை + மோப்பி.]

முண்ணாக்கு *muṇṇākku,* பெ.(n.) முள் பாய்ந்த நாக்கு; tongue with inflamed papillae (சா.அக.).

[முள் + நாக்கு.]

முண்ணாயகி *muṇṇayagi,* பெ.(n.) பாம்பு தின்னி என்னும் மூலிகை (வின்.); a kind of poisonous herb.

[முள் + நாயகி.]

முண்ணாவல் *muṇṇāval,* பெ.(n.) நாவல் வகை; a species of rose- apple.

[முள் + நாவல்.]

முண்மா *muṇmā,* பெ.(n.) முள்ளம்பன்றி (யாழ்.அக.); porcupine.

[முள் + மா. மா = விலங்கு.]

முண்முரண்டை *muṇ-muraṇḍai,* பெ.(n.) கொடி வகை; necklace berried climbing caper, *Marua arenaria.*

முண்முருக்கு *mun-murukku,* பெ.(n.) முள்ளுமுருக்கு (மூ.அ.) பார்க்க; see *mullu-murukku.*

[முள் + முருக்கு]

முண்முருங்கை *mun-murungai,* பெ.(n.) முள்ளுமுருக்கு பார்க்க; see *mullu-murukku.*

[முள் + முருங்கை.]

முணக்கு-தல் *munakku-,*5 செ.குன்றாவி. (v.t.) உள் வளைத்தல்; to contract, withdraw, bend. *"வள்ளுகிர் முணக்கவும்" (நற்.114).*

[முணங்கு → முணக்கு →முணக்கு-தல்.]

முணங்கு[1]-தல் *munangu-,*5 செ.கு.வி. (v.i.) 1. உள் வளைதல், உள்ளடங்குதல்; to be contracted, withdrawn, bent. 2. அடங்குதல் (வின்.); to be subject to. 3. தெளிவற்ற வகையில் மெல்லிய குரலில் பேசுதல், குரலையடக்கிப் பேசுதல் (வின்.); to speak in a suppressed tone, mutter in a low tone, murmur. *காய்ச்சலால் இரவு முழுவதும் முணங்கிக் கொண்டே இருந்தான்.*

[முல் → முள் → முண் → முண → (முணவு → முணகு →)முணங்கு →முணங்கு-தல் (வே.க.).]

முணங்கு[2] *munangu,* பெ.(n.) 1. அடக்கம் (சூடா.); withdrawing, contracting, bending. 2. சோம்பல் முறிப்பு; shaking off drowsiness or laziness by stretching one's limbs. *"முணங்கு நிமிர் வயமான்" (புறநா.52). "வியலறை சிவப்ப வாங்கி முணங்கு நிமிர்ந்து" (அகநா.357 : 5).* 3. சோம்பலால் ஏற்படும் உடம்பு வளைவு, முடக்கம், சோம்பு (இலக்.அக.); idleness.

[முல் → முள் → முண் → முண → (முணவு →முணகு →)முணங்கு (வே.க.).]

முணங்குநிமிர்-தல் *munangu-nimir-,* 2 செ.கு.வி.(v.i.) உடம்பை நீட்டிச் சோம்பல் முறித்தல்; to shake off drowsiness or laziness. *"முணங்குநிமிர்ந் தளைச் செறி யுழுவை யிரைக்குவந் தன்ன" (புறநா.78).*

[முணங்கு + நிமிர்-தல்.]

முணமுண-த்தல் *muna-muna-,* 4 செ. குன்றாவி. (v.t.) வாய்க்குள் மெல்லப் பேசுதல் (உ.வ.); to mutter, murmur.

[முல் →முள் →முண் →முண →முணமுண-த்தல் (வே.க.).]

முணுக்குமுணுக்கெனல் *munukku-munukkenal,* பெ.(n.) குழவி தாய்ப்பாலைச் சிறிது சிறிதாக உறிஞ்சிக் குடிக்கை; in a way that a child suck milk from its mother's breast.

[முல் → முள் → முண் → முண → முணு → முணுக்கு →முணுக்குமுணுக்கெனல் (வே.க.).]

முணுமுணு-த்தல் *munumunu-,* 4 செ. குன்றாவி. (v.t.) 1. வெறுப்பு, நிறைவின்மை (அதிருப்தி) முதலியவற்றை வெளிப்படுத்தும் வகையில் தாழ்ந்த குரலில் பேசுதல்; grumble, mutter, talk in whispers. *எதற்கு முணுமுணுக்கிறாய்? கடைக்குப் போக முடியாது என்று சொல்லிவிடு. நான் வரும்போது அவன் காதில் ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தாயே.* 2. வாய்க்குள்ளாகப் பேசுதல்; recite mantras, prayers softly. *ஏதோ மந்திரத்தை முணுமுணுத்தவாறே கூடத்தில் நடந்து கொண்டு இருந்தார்.*

[முல் → முள் → முண் → முண → முணு → முணுமுணு →முணுமுணு-த்தல் (வே.க.1:3).]

முணுமுணுப்பு *muṇumuṇuppu,* பெ.(n.) வெறுப்பு, நிறைவின்மை (அதிருப்தி) முதலியவற்றை வெளிப்படுத்தும் வகையில் முணுமுணுக்கை; grumbling. *மனைவியின் முணுமுணுப்புத் தாங்காமல் கணவர் மளிகைக் கடைக்குப் புறப்பட்டார். முணுமுணுப்பு இல்லாமல் கேட்ட போதெல்லாம் அப்பா பணம் கொடுத்திருக்கிறார்.*

[முல் → முள் → முண் → முண → முணு → முணுமுணுப்பு (வே.க.).]

முணவல் *muṇaval,* பெ.(n.) சினம் (நாமதீப. 637); anger.

[முணவு→முணவல்.]

முணவு–தல் *muṇavu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. வெறுத்தல்; to dislike, feel aversion to. *'களிறு நிலை முணவுதற்குக் காரணம் இருஞ்சேறாடுதல்' (பதிற்றுப்.64 : 7, உரை).* 2. சினத்தல்; to be angry.

[முள்→முண்→முண→முணவு→முணவு–தல்.]

முணை¹–தல் *muṇai-,* 2 செ.குன்றாவி. (v.t.) வெறுத்தல்; to dislike, feel aversion to. *"களிறுநிலை முணைஇய" (பதிற்றுப்.64 : 7).*

[முண்→முண→முணை→முணை–தல்.]

முணை² *muṇai,* பெ.(n.) 1. வெறுப்பு; aversion. *"முணையில் கொடை" (சிவப்.பிரபந். சிவஞான. பிள்.முத்தப்.5).* 2. மிகுதி; abundance. *"முணையினாற் கடலக முழக்க மொத்தவே" (சீவக.2222).*

[முணை¹→முணை²]

முத்தக்காசு *mutta-k-kāšu,* பெ.(n.) 1. கோரை வகை (M.M.228); straight sedge. 2. கோரைக் கிழங்கு; straight sedge tuber. *முத்தக்காசை அமுது செய்விப்பது (ஈடு, 1. 6 : 1).*

முத்தகம்¹ *muttagam,* பெ.(n.) 1. தனித்து நின்று பொருள் முடியுஞ் செய்யுள் (தண்டி.2); a stanza which, by itself, is complete in sense. 2. இசைப் பாவகையுள் ஒன்று (சிலப்.6 : 35); a kind of literary composition adapted to singing. 3. ஏவுகணை (எறியாய்தம்) (யாழ்.அக.); missile.

முத்தகம்² *muttagam,* பெ.(n.) 1. குருக்கத்தி; common delight of the woods. 2. கருக்குவாய்ச்சி; jagged jujube.

முத்தங்கி *muttaṅgi,* பெ.(n.) முத்தாலாகிய தளர்ச்சியான மேல் சட்டை, முத்துச் சட்டை; cloak made of pearls.

*[முத்து² + **Skt.** அங்கி]*

முத்தங்கொஞ்சு–தல் *muttaṅ-goñju-,* 5 செ.கு.வி.(v.i.) முத்தமிடு–தல் பார்க்க; see *muttam-iḍu-.*

[முத்தம்¹ + கொஞ்சு–தல்]

முத்தங்கொடு–த்தல் *muttaṅ-goḍu-,* 4 செ.குன்றாவி.(v.t.) முத்தமிடு–தல் பார்க்க; see *muttam-iḍu-.*

[முத்தம் + கொடு–த்தல்]

முத்தங்கொள்(ளு)–தல் *muttaṅgoḷ-,* 13 செ.குன்றாவி.(v.t.) 1. முத்தமிடு–தல் பார்க்க; see *muttam-iḍu-. "தாய் வாய் முத்தங் கொள்ள" (பெரியபு. கண்ணப்ப. 23).* 2. பொருந்துதல்; to touch, come in contact with. *"சிலை முத்தங் கொள்ளுந் திண்டோள்" (சீவக.2312).* 3. தழுவுதல்,

புல்லுதல்; to embrace. *"முலை முத்தங் கொள்ள" (சீவக.2312).*

[முத்தம் + கொள்(ளு)-தல்]

முத்தடுப்பூசி *muttadu-p-pūši,* பெ.(n.) தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், தசை விறைப்பு இசிவு ஆகிய மூன்று நோய்களுக்கான தடுப்பு மருந்து; triple antigen.

[முத்தடுப்பு + ஊசி.]

முத்தண்டு *muttaṇḍu,* பெ.(n.) துறவிகள் வைத்திருக்கும் மூன்று பிரிவான தண்டம் (திரி தண்டம்); triple staff of an ascetic. *"முத்தண்டு தொட்டிமுத்தாய்" (உபதேசகா. உருத்திராக்.86).*

[மூன்று + தண்டு.]



முத்தண்ணா *muttaṇṇā,* பெ.(n.) 1. தமையன்; elder brother. 2. அசடன்; dullard, a term of abuse.

[மூ + அண்ணா. அண்ணன் →அண்ணா. மூ மூத்தவன். மூத்தண்ணன்→ மூத்தண்ணா → முத்தண்ணா]

முத்தத்தீபம் *mutta-t-tibam,* பெ.(n.) கோயிலிலுள்ள விளக்கு வகை (தமிழ்விடு. முகவுரை.பக்.12); a kind of temple lamp. ஒருகா. முற்றம்→முத்தம்.

[முத்தம் + Skt. தீபம். த. தீ→தீவம்→வ. தீபம்]

முத்தந்தா-தல் *muttan-tā-,* 18 செ.கு.வி. (v.i.) முத்தமிடுமாறு கன்னம் முதலியவற்றைக் காட்டுதல்; to offer one's cheek for a kiss. *"என் குட்டனே முத்தந்தா" (திவ்.பெரியாழ்.3.3: 2).*

[முத்தம் + தா-தல்.]

முத்தப்பசெட்டியார் *muttappa-ceṭṭiyār,* பெ.(n.) 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்; Tamil Poet.

இவர், கலித்துறை அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, நேமக் கலம்பகம், செயங்கொண்டார் சதகம், செயங்கொண்ட சோழீசர் பிள்ளைத் தமிழ், செயங்கொண்டார் வழக்கம், திருமுக விலாசம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

முத்தப்பருவம் *mutta-p-paruvam,* பெ.(n.) பிள்ளைத் தமிழ்ப் பருவங்களுள் குழந்தையை முத்தந் தரும்படியாகப் பாடும் பகுதி; a section of *pillai-t-tamil* which describes the stage of childhood in which the child is asked to offer its cheek for a kiss.

[முத்தம் + பருவம்.]

முத்தம்[1] *muttam,* பெ.(n.) 1. உதடு (பிங்.); lip. 2. அன்பிற்கறிகுறியாக ஒருவகை யொலி யுண்டாக உதடுகளால் தொடுகை (சூடா.); kiss. *"மணிவாயிடை முத்தம் தருதலும்" (திவ்.பெருமாள்.7: 5). "முறிமேனிமுத்த முறுவல்" (குறள், 1113).* 3. முத்தப்பருவம் (இலக்.வி.806) பார்க்க; see *mutta-p-paruvam.* 4. மருதநிலம் (சூடா.); agricultural tract.

[முல் → முது → முத்து → முத்தம். 'அம்' பெருமைப் பொருட் பின்னொட்டு.]

முத்தம்² *muttam,* பெ.(n.) 1. முத்து; pearl. *"சீர்மிகு முத்தந் தைஇய" (பதிற்றுப்.39). "மண்ணாமுத்த மரும்பிய புன்னை" (அகநா. 30:13). "ஒலிபன் முத்தம் ஆர்ப்ப வலி சிறந்தது" (நற்.202, 2).* 2. பேராமணக்குக் கொட்டை (தைலவ. தைல.); castor bean. 3. பச்சைக்கல்லின் குணங்களுளொன்று (திருவிளை. மாணிக்.67); a superior quality of emerald. 4. முத்தாபலம், 2 பார்க்க; see *muttāpalam.*

வ. முக்த.

[முத்து→முத்தம். முத்து + அம் – முத்தம். 'அம்' பெருமைப் பொருட் பின்னொட்டு. ஒ.நோ. விளக்கு→விளக்கம்.]

முத்தம்³ *muttam,* பெ.(n.) ஆண் குறி; penis. *"அச்சுதன் முத்த மிருந்தவா காணீரே" (திவ்.பெரியாழ்.1. 2 : 6).*

முத்தம்⁴ *muttam,* பெ.(n.) 1. அன்பு (சூடா.); love, endearment. 2. மகிழ்ச்சி (அரு.நி.); joy.

[முத்து →முத்தம்.]

முத்தம்⁵ *muttam,* பெ.(n.) 1. முத்தாசனம் பார்க்க; see *muttāšaṉam. "முத்தமென விடப்பரட்டாற் சீவனியை யழுத்தி வலக்காலொத்த பரடப் பரட்டின் கீழழுந்த வைகுதல்" (பிரபோத.44 : 9).* 2. வீடுபேறு; salvation. *"எய்திய பெத்தமு முத்தமும்" (திருமந்.2256).* 3. விடுதலை (யாழ்.அக.); release.

முத்தம்⁶ *muttam,* பெ.(n.) 1. கோரை (நாமதீப.); sedge. 2. முத்தக்காசு (பாலவா.761) பார்க்க; see *muttakkāšu.*

முத்தம்⁷ *muttam,* பெ.(n.) முற்றம் என்ற சொல்லின் பேச்சுவழக்கு; correction of word *`muṟṟam'* the court yard of house.

முத்தமாலை *mutta-mālai,* பெ.(n.) முத்து மாலை; garland of pearl. *"முத்தமாலை முடிமுதல் வருட" (பெருங். இலாவண.4 : 136).*

[முத்து + மாலை.]

முத்தமிடு–தல் *muttam-iḍu-,* 18 செ. குன்றாவி. (v.t.) அன்பிற்கறிகுறியாக ஒருவகை யொலி யுண்டாக உதடுகளாற் பயிறல்; to kiss.

[முத்தம் + இடு–தல்.]

முத்தமிழ் *muttamiḻ,* பெ.(n.) இயல், இசை, நாடகம் என்னும் மூவகையான தமிழ்; the three kinds of literature in Tamil viz., *iyal, išai, nāḍagam. "மும்முரசு முத்தமிழும்" (வள்ளுவ மா.10).*

[மூன்று + தமிழ்.]

முத்தமிழ்க்கவிராயர் *muttamiḻ-k-kavirāyar,* பெ.(n.) சுசீந்திரத் தலபுராணம் என்னும் நூலை இயற்றிய புலவர்; a poet, author of *šušīndira-t-talapurāṇam.*

[முத்தமிழ் + கவிராயர்.]

முத்தமிழ்க்கவிவீரராகவமுதலியார் *muttamiḻ-k-kavi-vīrarāgava-mudaliyār,* பெ.(n.) பிற்காலத் தமிழ்ப் புலவர்; a Tamil poet who belongs to the later period.

[முத்தமிழ்க்கவி + வீரராகவ + முதலியார்.]

இவர் வரலாற்றைத் திருவேங்கடக் கலம்பகம் முகவுரையில் வை.மு.சடகோப ராமானுசாச்சாரியர் எழுதியிருக்கிறார். இவர் 500 ஆண்டுக்கு முன்பிருந்தவர். இவர் பொன் விளைந்த களத்தூரிற் பிறந்தவர். திருக்கழுக்குன்றப் புராணஞ் செய்தவர். ஈழம் போய் யானைக் கன்றும் வளநாடும் பெற்றவர்.

கண்டசுத்தி பாடுபவர். இவர் செய்த நூல்கள் 1. திருவேங்கடக் கலம்பகம், 2. திருக்கண்ண மங்கை மாலை, 3. கச்சிப் பெருந்தேவித் தாயார் பஞ்சரத்தினம், 4. பாலூர்க் கலம்பகம், 5. செய்யூர் பிள்ளைத் தமிழ்.

முத்தமிழ்முனிவன் *muttamiḻ-muṉivaṉ,* பெ.(n.) அகத்தியன்; Agastya as the exponent of *muttamiḻ.* *"முத்தமிழ் முனிவன் கேட்ப" (காஞ்சிப்பு.வீரராக.6).*

[முத்தமிழ் + முனிவன்.]

முத்தமிழுரியோன் *muttamiḻ-uriyōṉ,* பெ.(n.) 1. முத்தமிழ்முனிவன் (யாழ்.அக.) பார்க்க; see *muttamiḻ-muṉivaṉ.* 2. வயிரவன் (சது.); Bhairava.

[முத்தமிழ் + உரியோன்.]

முத்தமுண்(ணு)–தல் *muttam-uṇ(ṇu)-,* 13 செ.குன்றாவி. (v.t.) முத்தமிடு–தல் பார்க்க; see *muttamiḍu-.* *"தணிவற முத்த முண்டாள்" (திருவாலவா.45 : 15).*

[முத்தம் + உண்(ணு)–தல்.]

முத்தர் *muttar,* பெ.(n.) மேடு, திடர் (வின்.); mound, hillock.

முத்தரதி *muttaradi,* பெ.(n.) 1. கோரைக் கிழங்கு; a grass - *Cyperus rotundus.* 2. அமுக்கிராக் கிழங்கு; a shrub-*Withania coagulens.*

முத்தரை *muttarai,* பெ.(n.) அரையிலணியும் முத்துவடம்; waist band made of pearls. *"பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்" (சிலப்.6 : 87).*

[முத்து + அரை.]



முத்தரையர் *muttaraiyar,* பெ.(n.) வேளிரின் உறவு முறையினராகவும் பல்லவர் ஆட்சியில் சிற்றரசர்களாகவும் இருந்த மன்னர் குலமரபினர்; tutelary heritage of *Vēḷir* and the petty of Pallava king. *"பெருமுத்தரையர் பெரிதுவந் தீயும்" (நாலடி, 200).*

[ஒருகால்: மூன்று + தரை – முத்தரை → முத்தரையர்.]

தஞ்சைக்கு அருகில் உள்ள செந்தலையை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர்கள். தஞ்சைக்கருகே உள்ள வல்லம் என்ற ஊரும் இவர்களுக்கு தலைநகராக இருந்தது. பல்லவர்களுக்குக் கீழ் சிற்றரசர்களாக இம்மரபினர் வாழ்ந்துள்ளனர். பெரும்பிடுகு, மாற்பிடுகு, விடேல் பிடுகு, பகாபிடுகு போன்ற பல்லவ மரபிற்குரிய பட்டங்களை இவர்களும் கொண்டிருந்தனர். இம்மரபினரின் வரையா வண்மை பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றான நாலடியாரில் கூறப்பட்டுள்ளது (பிற்.சோழ.வர.சதாசிவப்பண்டார, பக்கம் 14).

முத்தலாபுரம் *muttalāpuram,* பெ.(n.) தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வட்டத்தில் வைப்பாற்றின் கரையில் எட்டையாபுரம் அருப்புக்கோட்டைச் சாலையிலுள்ள ஊர்; a city in Tuticorin

district in *Kovilpaṭṭi* taluk, on the way from *Aruppukkoṭṭai* to *Eṭṭaiya-puram*, situated on the banks of Vaipparu.

முத்தலை *muttalai,* பெ.(n.) முத்தலைக் கழு பார்க்க (திவா.); see *muttalai-k-kaḻu.*

[மூன்று + தலை.]

முத்தலைக்கழு *muttalai-k-kaḻu,* பெ.(n.) முக்கோல் (சூலம்) (பிங்.); the trident, as having three heads or spikes. *"முத்தலைக் கழுக்கள் வீசுவன" (திருவிளை. திருநகர.24).*

[முத்தலை + கழு.]

முத்தலைவேல் *muttalai-vēl,* பெ.(n.) முத்தலைக்கழு பார்க்க (பிங்.); see *muttalai-k-kaḻu.*

[மூன்று + தலை + வேல்.]

முத்தலைவேலோன் *muttalai-vēlōṉ,* பெ. (n.) வைரவன் (சது.); god of Bhairava.

[மூன்று + தலை + வேலோன்.]

மூன்று பிரிவாக உள்ள வேலை, படையாகக் கொண்டவன்.

முத்தவள்ளி *mutta-vaḷḷi,* பெ.(n.) முத்துக் கோத்த கொடிபோல் அமைந்த கழுத்தணி; a garland of pearls, as shaped like a creeper. *"முத்த வள்ளியொடு மும்மணி சுடர" (பெருங்.உஞ்சைக்.34:203).*

[முத்தம் + வள்ளி.]

முத்தவி *muttavi,* பெ.(n.) ஆமணக் கெண்ணெய் (சங்.அக.); castor oil.

[முத்து² + அவி. அவி = அவித்தல், ஆமணக்குக் கொட்டையை அவித்துப் பெறும் எண்ணெய்.]

முத்தழல் *muttaḻal,* பெ.(n.) முத்தீ பார்க்க; see *muttī.* *"முத்தழல் வேள்வி" (காசிக. சிவசன். தெய்.23).*

[முன்று + தழல். தழல் = நெருப்பு, தணல்.]

முத்தழலோர் *muttaḻalōr,* பெ.(n.) பிராமணர்; Brahmins. *"முத்தழலோர் மனைகடொறும்" (தேவா.113, 2).*

முத்தளகி *muttaḷagi,* பெ.(n.) முருங்கை பார்க்க; see *muruṅgai.*

முத்தன்¹ *muttaṉ,* பெ.(n.) 1. முத்தி பெற்றவன்; one who has attained salvation, Jivan-mukta. *"முத்தனாய்ப் பிரகாச னாமே" (சி.சி. 4 : 19).* 2. இயல்பாகவே தளைகளிலிருந்து (பாசங்களிலிருந்து) நீங்கிய சிவன்; Siva, as being by nature free from bonds. *"அத்தன் முத்தன்" (திருக்கோ.358).* 3. திருமால் (வின்.); *Viṣṇu.* 4. வைரவன் (பிங்.); Bhairava. 5. அருகன் (பிங்.); Arhat. 6. புத்தன் (பிங்.); the Buddha.

[முத்தி → முத்தன்.]

முத்தன்² *muttaṉ,* பெ.(n.) 1. அன்பன் (பாரத. சூது.14); one who gives pleasure, as a child. 2. மூடன் (சது.); fool.

முத்தன் ஆசாரியார் *muttaṉ-āšāriyār,* பெ.(n.) 20ஆம் நூற்றாண்டில் பழனிக் குறவஞ்சி என்னும் நூலை இயற்றிய தமிழ்ப் புலவர்; a Tamil poet in 20th century, author of *paḻaṉi-k-kuṟavañji.*

[முத்தன் + ஆசாரியார்.]

முத்தா *muttā,* பெ.(n.) தமையன் (மாலியம்); elder brother.

[முத்தண்ணா → முத்தா.]

முத்தாகாரம் *muttākāram*, பெ.(n.) முத்துச் சிப்பி (வின்.); pearl-oyster.

*[முத்து + காரம் – முத்துகாரம் →முத்தாகாரம். **Skt.** கார→த. காரம்.]*

முத்தாசனம் *muttāšaṉam*, பெ.(n.) இருக்கை (ஆசனம்) ஒன்பதனுள் இடது கணுக்காலை மலவாயின் (குதத்தின்) கீழும், வலது கணுக்காலை இடது கணுக்காலின் கீழும் வைத்துத் தலை முதலியவை நேர் நிமிர இருக்கும் ஒக (யோக) இருக்கை வகை; a yogic posture which consists in placing the left ankle beneath the region of the anus and the right ankle under the left so placed, while the head and neck are held straight with the body, one of nine *āšaṉam*.

முத்தாடு–தல் *muttāḍu-*, 5 செ.குன்றாவி. (v.t.) முத்தமிடுதல்; to kiss. *"முகத்தின் முத்தாடியும்" (காஞ்சிப்பு.திருக்கண்.பு.137).*

தெ. முத்தாடு

[முத்து + ஆடு–தல்.]

முத்தாத்துக்கோல் *muttāttu-k-kōl*, பெ. (n.) தூக்குக் கோல் ((G.Sm.D.I., 284); balance.

[முள் + தாற்றுக்கோல்.]



முத்தாத்துமா *muttāttumā*, பெ.(n.) வீடு பெற்ற உயிர் (வின்.); soul which has attained salvation.

*[முத்தி + **Skt.** ஆத்துமா. ஆத்துமா →த. ஆதன்.]*

முத்தாதனம் *muttādaṉam*, பெ.(n.) 1. முத்தாசனம் பார்க்க (வின்.); see *muttāšaṉam*. 2. காலிரண்டும் நீட்டி யிருக்கும் ஓகவகை (தத்துவப்.107, உரை); a yogic posture which consists in sitting with both legs stretched out.

[முத்தாசனம் → முத்தாதனம்.]

முத்தாதி *muttādi*, பெ.(n.) 1. முத்தக்காசு பார்க்க; see *mutta-k-kāšu*. 2. அமுக்கிரா; Indian winter cherry.

[முத்தம் + ஆதி.]

முத்தாந்தம் *muttāndam*, பெ.(n.) முத்தியாகிய உயர் நிலை; salvation, as the highest state. *"அவமாகாச் சித்தர் முத்தாந்தத்து வாழ்வர்" (திருமந்.497).*

*[முத்தி + **Skt.** ஆந்தம்.]*

முத்தாபலம் *muttābalam*, பெ.(n.) 1. முத்து (இலக்.அக.); pearl. 2. சங்கஞ்செடி (திவா.); mistle-toe berry thorn.

*[முத்து + **Skt.** ஆபலம்.]*

முத்தாபி *muttābi*, பெ.(n.) மாட்டுத் தரகர் பேச்சு மொழி. இது ஒரு குழூஉக்குறி. நூற்றுக்கு மேல் வரும் எழுபத்தைந்தைக் குறிக்க கறவலில் வழங்கும் சொல்; a cant used by cow brokers, to indicate seventy five rupees, that counts after hundred.

முத்தாமணக்கு *muttāmaṇakku*, பெ.(n.) ஆமணக்கு வகை (சங்.அக.); a kind of castor plant.

[முத்து[2] + ஆமணக்கு.]

முத்தாய்ப்பு *muttāyppu*, பெ.(n.) தொடர்ந்து நிகழ்ந்தவற்றில் சிறப்பான, கச்சிதமான முடிவு; effective or precise end. *மாநாட்டுக்கே முத்தாய்ப்பாக இருந்தது தலைவரின் முடிவுரை.*

[முத்து + ஆய்ப்பு.]

முத்தாரம் *muttāram*, பெ.(n.) முத்து மாலை; garland of pearls. *"கவரியுங் கடகமுங் கதிர்முத் தாரமும்" (பெருங்.உஞ்சைக். 32 : 74).*

[முத்து + ஆரம். ஆரம் = மாலை.]



முத்தாலத்தி *muttālatti*, பெ.(n.) ஆலத்தி வகை (அன்னாலத்தி); waving balls of boiled rice coloured with saffron, as before an idol. *"முத்தாலத்திகொண் டெண்ணாயிர மடவார்சூழ" (தமிழ்நா.240).*

[முத்து + ஆலத்தி.]

முத்தாலதை *muttāladai*, பெ.(n.) முத்தாரம் பார்க்க (யாழ்.அக.); see *muttāram.*

முத்தாவணம் *muttāvaṇam*, பெ.(n.) சோழர் காலத்தில் வாங்கப்பட்ட வரி வகை (M.E.R.1916, P.119); a kind of tax.

முத்தாவலி *muttāvali*, பெ.(n.) முத்தாவளி பார்க்க (இலக்.அக.); see *muttāvaḷi.*

முத்தாவளி *muttāvaḷi*, பெ.(n.) 1. முத்து மாலை; garland of pearls. 2. பண் வகை; a musical mode.

[முத்து + ஆவளி.]

முத்தாளம் *muttāḷam*, பெ.(n.) 1. காலை; morning. 2. காலை யுணவு; morning meal dist. fr. *attāḷam.* 3. காலைப் படையல்; morning offerings. *"பூசை நமக்காரம் அத்தாளம் முத்தாளம் வச்சு" (T.A.S.5: 116).*

[முன் + தாலம் – முன்தாலம் →முத்தாளம்.]

முத்தான்மா *muttāṉmā*, பெ.(n.) முத்தாத்துமா பார்க்க (வின்.); see *muttāttumā.*

முத்தானந்தர் *muttāṉandar*, பெ.(n.) குறவஞ்சி நூலை எழுதிய புலவர்; a poet, author of *Kuṟavañji.*

இவர் 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். ஆற்றூரில் வாழ்ந்தவர்.

முத்தானம் *muttāṉam*, பெ.(n.) அடுப்பு (நாமதீப.496); oven.

முத்தி[1] *mutti*, பெ.(n.) முத்தம்; kiss. *"மணிவாயில் முத்தி தரவேணும்" (திருப்பு.183). " புதல்வர் பூங்கண் முத்தி மனையோட்கு" (புறநா.41:14).*

[முல்→முது→முத்து→முத்தி.]

முத்தி² *mutti,* பெ.(n.) 1. விடுபடுகை; release. 2. துறக்கம் (மோட்சம்); final beatitude or emanicipation, release of the soul from metempsychosis. *"முத்திக் குழன்று" (திருவாச.11 : 12).* 3. 'பதமுத்தி பரமுத்தி யென்ற இருவகை முத்திநிலை' (வேதா.சூ.56, உரை); stage in salvation, of two kinds, viz. *padamutti, paramutti.*

பிராக். முத்தி.

[முத்துதல் = பொருந்துதல், சேர்தல். முத்து →முத்தி. ஆதன் இறைவனை அடையும் இறுதிநிலை.]

முத்தி³ *mutti,* பெ.(n.) திசை (யாழ்.அக.); direction.

முத்தி⁴ *mutti,* பெ.(n.) 1. திருமகள்; Laksmi. 2. தேமல்; yellow spreading spots on the breasts of women.

முத்திக்கை *muttikkai,* பெ.(n.) அரண் வளைப்பு (யாழ்.அக.); siege.

க. முத்திகெ

[முற்றுகை → முத்திக்கை.]

முத்திகம் *muttigam,* பெ.(n.) 108ல் உபநிட தங்களுள் ஒன்று; an Upanisad one of 108.

முத்திதசை *mutti-tašai,* பெ.(n.) உலகத் தொடர் அனைத்தினின்றும் விடுபட்ட நிலை; a stage when one is free from all worldly attachments.

[முத்தி + தசை.]

முத்திதாசாரியன் *muttitāšāriyan,* பெ. (n.) கொள்கை பின்பற்றும் மாணாக்கனுக்கு வீடளிக்கவல்ல குரு (சைவச. ஆசா.31, உரை); guru, who is able to secure final beatitude for his disciple.

[முத்து →முத்தி + தா + ஆசாரியன்.]

முத்திதிசை *mutti-tišai,* பெ.(n.) முத்திதசை (வின்.) பார்க்க; see *mutti-tašai.*

[முத்தி + திசை.]

முத்திநாடு *mutti-nāḍu,* பெ.(n.) புத்தேளிர் வாழும் துறக்க உலகு; heaven. *"முத்திநாட்டின் முகத்தினை முட்டுற" (கம்பரா. முதற்போர்.41)*

[முத்தி + நாடு.]

முத்திநெறி *mutti-neṟi,* பெ.(n.) துறக்கநெறி; way to final beatitude. *"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு" (திருவாச. 51:1)*

[முத்தி + நெறி.]

முத்திப்பழுது *mutti-p-paḻdu,* பெ.(n.) மலம் முற்றும் நீங்கிய முத்திநிலை இல்லை யென்னுங் கொள்கை (சிவப்பிர.36); doctrine which holds that there is no absolute salvation.

[முத்தி + பழுது.]

முத்திப்பேறு *mutti-p-pēṟu,* பெ.(n.) துறக்க வாழ்வு (மோட்ச வாழ்வு) (யாழ்.அக.); attainment of final beatitude.

மறுவ. வீடுபேறு.

[முத்தி + பேறு.]

முத்திபஞ்சாட்சரம் *mutti-pañjāṭcaram,* பெ. (n.) 'ஓம்' சேர்ந்த ஐந்தெழுத்து மந்திரம் (பஞ்சாக்கர. 45, உரை); a form of *pañjākaram* with *praṇava.*

[முத்தி + Skt.பஞ்சாட்சரம்.]

முத்திபதம் *mutti-padam,* பெ.(n.) 1. வீடுபேறு (மோட்சபதவி); the state of final beatitude. 2. அறிவுநிலை (யாழ்.அக.); the state of spiritual knowledge.

[முத்தி + பதம்.]

முத்திமார்க்கம் *mutti-mārkkam,* பெ.(n.) 1. முத்திநெறி பார்க்க; see *mutti-neṟi.* 2. கருமநெறிவழி; the course of karma.

*[முத்தி + **Skt.** மார்க்கம். மார்க்கம்=வழி.]*

முத்திமுத்திரை *mutti-muttirai,* பெ.(n.) தாமிரபருணியாறு (நாமதீப.525); a river *Tāmiraparuṇi.*

முத்திமுதல் *mutti-mudal,* பெ.(n.) முத்தியைப் பெறுதற்கு முதலாகிய ஆதன்; soul, as eligible for salvation. *"முத்திமுதற்கே மோகக் கொடி படர்ந்து" (திருவுந்தி.41).*

[முத்தி + முதல்.]

முத்தியெறி–தல் *mutti-y-eṟi-,* 2 செ. குன்றாவி. (v.t.) கழித்தல்; to remove entirely, put away. *"முத்தியெறிந்து விடற்கு" (கலித்து. 64).*

[முத்து + எறி–தல்.]

முத்திரமம் *muttiramam,* பெ. (n.) இலவங்கப் பட்டை (சங்.அக.); cinnamon.

முத்திரா *muttirā,* பெ.(n.) சின்ன முள்ளங்கி; a kind of small radish.

முத்திராசர் *mutti-rāšar,* பெ.(n.) 18ஆம் நூற்றாண்டில் கைலாய மாலை என்னும் நூலை இயற்றிய தமிழ்ப் புலவர்; a Tamil poet author of *Kailāya-mālai* in 18th century.

முத்திராசாலை *muttirā-sālai,* பெ.(n.) அச்சுக்கூடம்; printing press.

[முத்திரைசாலை→முத்திராசாலை.]

முத்திராதாரணம் *muttirā-tāraṇam,* பெ.(n.) சங்கு சக்கர முதலிய முத்திரைகளை உடம்பில் ஒற்றிக் கொள்ளுகை; wearing the emblems of *Visṇu* impressed on one's body.

*[முத்திரை + **Skt.** தாரணம்.]*

முத்திராதானம் *muttirā-tāṉam,* பெ.(n.) நெருப்பில் சூடேற்றப்பெற்ற சங்கு சக்கர முத்திரைகளைத் தோள்களில் ஒற்றும் சடங்கு; ceremony of initiation by branding the emblems of *Šaṅgu* and *Šakkaram* on a person's shoulders. *"சாத்திமேன் முத்திராதானம்" (பிரபோத.11 : 11).*

*[முத்திரை + **Skt.** தானம்.]*

முத்திராவதாரம் *muttirāvatāram,* பெ.(n.) காதணி வகை (MER.222 of 1921); an ear - ornament.

முத்திரி¹–த்தல் *muttiri-,* 4 செ.குன்றாவி. (v.t.) முத்திரையிடுதல்; to seal.

[முகம் + திரம்–முகத்திரம்→ முகத்திரி. முத்திரி.]

முத்திரி² *muttiri,* பெ.(n.) 1. உட்டுளை யமைந்த காதணிவகை; a kind of ear ornament, in the form of a hollow cylinder. 2. அடையாளம் (யாழ்.அக.); sign, seal.

[முகம் + திரம்–முகத்திரம்→ முகத்திரி→ முத்திரி.]

முத்திரிகை *muttirigai,* பெ.(n.) எழுத்து வெட்டப் பெற்ற மோதிரம் (பிங்.); engraved signet or seal.

[முகம் + திரம் - முகத்திரம்→ முகத்திரி →முத்திரி→முத்திரிகை.]

முத்திரிவள்ளம் *muttiri-vaḷḷam,* பெ.(n.) ஒருவகை முகத்தல் அளவை; a kind of measure of capacity.

[முத்திரை→முத்திரி + வள்ளம்.]

நில உரிமையாளர்கள் குத்தகைப்படி வாங்கப் பயன்படுத்தும் சரியான அளவுள்ள முத்திரையிட்ட பழைய முகத்தல் அளவை (கோவை).

முத்திருக்கஞ்செடி *muttirukkañ-jeḍi,* பெ. (n.) செந்துருக்கஞ் செடி (யாழ்.அக.); safflower -*Spiny saffron.*

முத்திருக்கன் *muttirukkaṉ,* பெ.(n.) 1. இலைக் கள்ளி; leaf spurge-Euphorbia nirulia. 2. நிலக் கடம்பு; justicia acaulis (சா.அக.).

முத்திருக்கன்செவி *muttirukkaṉ-ševi,* பெ.(n.) 1. நிலக்கடம்பு (மூ.அ.); justicia acaulis. 2. ஓர் செடி; a plant - *Asara bucca, Asarum Europacum.* 3. எழுத்தாணிப்பூடு; launea pinnati fida.

முத்திரை *muttirai,* பெ.(n.) 1. அரசு, அமைப்பு முதலியவற்றின் சின்னம், ஒரு அலுவலகத்தை அல்லது அதிகாரியை முதன்மைப்படுத்தும் குறியீடு; seal, emblem. *சோழர் முத்திரை பொறித்த காசுகள். உதவித் தொகைக்கான விண்ணப்பத்தில் கல்லூரி முதல்வரின் கையெழுத்துடன் முத்திரையும் இருக்க வேண்டும்.* 2. நேரி (வாக்கு)ச் சீட்டு முதலியவற்றில் குறிப்பிட்ட வடிவத்தில் பதிக்கும் குறியீடு; mark that is to be placed on a ballot paper, etc. *நாற்காலிச் சின்னத்தில் முத்திரையிடுங்கள் என்று ஒலி பரப்பிக் கொண்டு வண்டி சென்றது.* 3. அஞ்சல் தலை; postage stamp. *ஐந்து உரூபாய் முத்திரை ஒட்டியது போதவில்லை.* 4. கடிதங்களின்மேல் ஒட்டப்பட்டுள்ள அஞ்சல் தலையைச் சரிபார்த்து அதன் மீதும் கடிதங்களைப் பிரித்துக் கொடுக்கும்போது கடிதங்களின் மேலும் அஞ்சலகங்களில் இடப்படும் நாளிட்ட சிறு அச்சு; a small date seal print laid in post offices, at that time of taken to verify the postal stamp and at the time of deliveries. *அஞ்சலக முத்திரையைப் பார்த்தால் அது என்றைக்கு அஞ்சல் செய்யப்பட்டது எனப்து தெரியும்.* 5. உறை முதலியவை பிரிக்கப்படாமல் இருப்பதற்கான அரக்குப் பதிவு; wax seal. *முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள்.* 6. ஒருவரின் நடத்தை, தனித்தன்மை முதலியவற்றைத் தெரிவிக்கக் கூடிய அடையாளம்; mark or stamp, brand. *நாமாக உதவி செய்யப் போனால் இளிச்சவாயன் என்று முத்திரை குத்திவிடுவார்கள். திரைப்படத்தின் காதல் காட்சிகளில் இயக்குநரின் முத்திரை தெரிகிறது.* 7. ஒரு கருத்தைக் குறிப்பாகத் தெரிவிக்கும் கை அசைவு; stylized sign made with hands expressive of one's thoughts, feelings, etc. 8. அடையாளம்; impress, mark. *"அசாதாரண முத்திரை யோடே வரவேணு மென்கிறார்" (திவ். பெரியாழ்.1. 8 : 9, வியா.).* 9. இலச்சினை; seal signet. *"பொறித்த முத்திரையும் வேறாய்" (திருவாலவா.24:8).* 10. போர் வீரன் அல்லது அவனது ஏவலர்க்குரிய அடையாள வில்லை; badge of a soldier or peon. 11. பதிகம் சிற்றிலக்கியம் முதலியவற்றின் இறுதியில்

வரும் ஆக்கியோன் பெயர்ப்பதிவு; composer's name introduced at the end of a song or poem, as his mark. 12. காதிலணியும் குண்டல வகை; ear ornament. *"காதின் மேற் செய்ய முத்திரையும்" (திருவாலவா.13 : 4).* 13. பூசை செய்யும் போது காட்டும் கையடையாளம்; hand–pose in worship. *"திருந்த முத்திரை சிறப்பொடு காட்டி" (பதினொ.நக்கீர. திருக்கண் மறம். அடி.55).* 14. கையாற் காட்டும் நாட்டியக் குறி; hand-pose. *'இறைவன் மோன முத்திரையத்தனாய்' (திருமுரு.112, உரை).* 15. வங்கியம், (நாதசுரம்) வாசிக்கும்போது தொழிற்படாத துளை (சிலப்.17, 3, உரை); the hole in a flute or pipe which is not fingered while playing. *"முத்திரையே முதலனைத்து முறைத்தானஞ் சோதித்து" (பெரியபு. ஆனாய.24).*

[முகம் + திரம். முகத்திரம் (முத்திரம்) →முத்திரை. ஒ.நோ.மாத்திரம்→மாத்திரை. வடவர் முத்ர (மகிழ்ச்சியான) என்னுஞ்சொல்லை மூலமாகக் காட்டுவர் (வ.மொ.வ.72).]

முத்திரை யென்பது அரசனுடைய திருமுகத்தில் மையாலும் அரக்காலும் மண் என்னும் சாந்தாலும் பொறிக்கப்படும் அடையாள வடிவம். மூவேந்தர்க்கும் அவரவர் கொடியிலெழுதப்பட்ட வடிவமே முத்திரையாகவுமிருந்தது.

ஓர் அரசன் தன்னால் வெல்லப்பட்ட அரசரின் முத்திரைகளையும் தன் முத்திரையுடன் சேர்த்துப் பொறிப்பது வழக்கம். செங்குட்டுவன் மும்முத்திரைகளையும் அதிகமான் ஏழு முத்திரை களையும் உடையராயிருந்தனர் (பழ.த.ஆ. பக்.22).

முத்திரைக்கடுதாசி *muttirai-k-kaḍudāśi,* பெ.(n.) முத்திரையிட்ட ஆவணம் (C.G.); stamped paper.

[முத்திரை + கடுதாசி.]

முத்திரைக்கணக்கர் *muttira-k-kaṇakkar,* பெ.(n.) கோயிற்பணியாளருள் ஒரு வகையினர் (மீனாட்.சரித்.1 : 2); a class of temple servant.

[முத்திரை + கணக்கர்.]

முத்திரைக்கம்பு *muttirai-k-kambu,* பெ.(n.) முத்திரையச்சு (வின்.); seal.

[முத்திரை + கம்பு.]

முத்திரைக்குத்திப்பார்ப்பார் *muttirai-k-kutti-p-pārppār,* பெ.(n.) சங்கு சக்கர முதலிய அடையாளங்களை உடலில் சந்தனத்தாற் பதித்துக் கொள்வோரான மாத்துவப் பார்ப்பனர் (இ.வ.); *Mādhava* Brahmins who impress, with sandal paste, the marks of *pañjāyudam* of *Visṇu* on different parts of their persons.

[முத்திரை + குத்து + பார்ப்பார்.]

முத்திரைக்கூடம் *muttirai-k-kūḍam,* பெ.(n.) 1. காவலறை (யாழ்.அக.); prison. 2. பண்டங்களின் மேல் முத்திரையிடும் இடம் (வின்.); place where goods are stamped.

[முத்திரை + கூடம்.]

முத்திரைக்கோல் *muttirai-k-kōl,* பெ.(n.) 1. முத்திரையச்சு (வின்.); seal. 2. கூலக் குவியலிற் குறியிடுவதற்குதவும் மரத்தினா லியன்ற அடையாளக் கோல்; wooden seal for marking a heap of grain.

[முத்திரை + கோல்.]

முத்திரைச்சங்கு *muttirai-c-caṅgu,* பெ.(n.) சங்கு வகை; a kind of conch. *"முத்திரைச் சங்கொன் றூத" (தெ.இ.கல். தொ.ii, 275 : 11).*

[முத்திரை + சங்கு.]

முத்திரைச்சூடு *muttirai-c-cūḍu,* பெ. (n.) கால்நடைகளுக்கு இடும் குறியீடு (வின்.); branding of animals.

[முத்திரை + சூடு.]



முத்திரைச்சேவகன் *muttirai-c-cēvagaṉ,* பெ.(n.) முத்திரை வில்லையை அணியும் பணியாள்; peon wearing a badge.

[முத்திரை + சேவகன்.]

முத்திரைத்தலை *muttirai-t-talai,* பெ.(n.) அஞ்சற்கட்டணம் முதலிய கட்டணத் திற்காக ஏற்பட்ட தலை பதிக்கப்பட்ட முத்திரை; postage stamp; court fee stamp.

[முத்திரை + தலை.]

முத்திரைத்தாள் *muttirai-t-tāḷ,* பெ.(n.) விருப்பாவணம், ஒப்பந்தம், உடன்பாடுகள் முதலியவற்றை அதிகார முறையாக எழுதப் பயன்படுத்தும் குறிப்பிட்ட விலைமதிப்புடைய, அரசினுடைய முத்திரை அச்சிடப்பட்டத் தாள்; stamp-paper for writing deeds. *முத்திரைத்தாள் விற்பனையில் தவறான வழியில் பணம் சேர்த்தவர்கள் சிறைப்படுத்தப்பட்டனர்.*

[முத்திரை + தாள்.]

முத்திரைப்படி *muttirai-p-paḍi,* பெ.(n.) அரசு அடையாளமிடப்பட்ட படி; Madras measure, as stamped as the standard measure.

[முத்திரை + படி.]

முத்திரைப்பல்லவம் *muttirai-p-pallavam,* பெ.(n.) இசைப்பதத்தினடி தோறும் ஒட்டப் படிக்கும் பல்லவி (யாழ்.அக.); a Pallavi repeated at the end of each *paḍam.*

[முத்திரை + பல்லவம். பல்லவம் = பல்லவியில் திரும்பத் திரும்ப பாடப்படும் முதலுறுப்பு.]

முத்திரைப்பல்லவி *muttirai-p-pallavi,* பெ. (n.) முத்திரைப்பல்லவம் பார்க்க (வின்.); see *muttirai-p-pallavam.*

[முத்திரை + பல்லவி.]

முத்திரைப்பலகை *muttirai-p-palagai,* பெ.(n.) கூலக் குவியலில் முத்திரையிடுதற்கு உரிய எழுத்து அல்லது அடையாளமமைந்த பலகை (C.G.); plank with some writing or mark thereon, used as a seal on the heap of grain.

[முத்திரை + பலகை.]

முத்திரைமண் *muttirai-maṇ,* பெ.(n.) 1. கூலக் குவியலிலிடும் மண்குறி; seal of earth affixed to a grain heap. 2. முத்திரை யிடுவதற்குரிய மண் முதலிய பொருள்; any soft substance that will hold an impression, in sealing.

[முத்திரை + மண்.]

முத்திரைமனிதன் *muttirai-maṉidaṉ,* பெ. (n.) அரசின் தூதுவர் (R.); King's ambassador.

[முத்திரை + மனிதன்.]

முத்திரைமெழுகு *muttirai-meḻugu,* பெ.(n.) முத்திரை வைக்கப் பயன்படும் அரக்கு (பாண்டி.); sealing wax.

[முத்திரை + மெழுகு.]

முத்திரைமோதிரம் *muttirai-mōdiram,* பெ.(n.) முத்திரை பதிக்கப்பட்ட கணையாழி (மோதிரம்); seal - ring.

[முத்திரை + மோதிரம்.]

முத்திரையரக்கு *muttirai-y-arakku,* பெ. (n.) முத்திரை பதித்தற்குரிய அரக்கு வகை (வின்.); sealing wax.

[முத்திரை + அரக்கு.]

முத்திரையிலாஞ்சனை *muttirai-y-ilāñjaṉai,* பெ.(n.) முத்திரைக்குறி (வின்.); impress of seal.

[முத்திரை + இலாஞ்சனை. இலாஞ்சனை = குறி, முத்திரை, அடையாளம்.]

முத்திரையுட்சிக்கு *muttiraiyuṭ-śikku,* பெ. (n.) காசு (நாணய) முத்திரையில் உள்ள கேடு வகை (பணவிடு.179); defect in the impress of a coin.

[முத்திரை + உள் + சிக்கு.]

முத்திரைவித்து *muttirai-vittu,* பெ.(n.) 1. அக்கமணி (உருத்திராட்சம்); a sacred bead of a tree - *Elaeocarpus lanciolatus.* 2. அறிவு (ஞானம்); wisdom.

[முத்திரை + வித்து.]

முத்திரைவை-த்தல் *muttirai-vai-,* 4 செ. குன்றாவி.(v.t.) அரிபின்னலில் ஈரமண் வைத்து அதன் மேல் முத்திரைப் பலகையை ஊன்றி எடுத்தல்; keep the wet sand in the heap and press the mark on it by a block of wood.

[முத்திரை + வை-த்தல்.]

முத்திவிக்கினம் *mutti-vikkiṉam,* பெ.(n.) முத்திக்கு இடையூறுகளான ஐயம், திரிபு, அறியாமைகள் (வின்.); obstacles to salvation, three in number, viz. *aiyam, tiribu, aṟiyāmai.*

[முத்தி + Skt. விக்கினம்.]

முத்திவிலக்கு *mutti-vilakku,* பெ.(n.) முத்திவிக்கினம் பார்க்க (வின்.); see *mutti-vikkiṉam.*

[முத்தி + விலக்கு.]

முத்திளம் *muttiḷam,* பெ.(n.) கக்கரிகாய் (சங்.அக.); kakkari-melon.

முத்திற்கோத்தமுத்து *muttiṟ-kōtta-muttu.* பெ.(n.) வட்டமான பருமுத்து ஒவ்வொன்றின் அடியிலும் குறுமுத்து ஒவ்வொன்றினைக் கோத்த அமைப்பில் உருவாக்கப்பட்ட முத்து மாலை; string of pearls which is threaded each connected in between a small pearl in coherent. *"முத்திற்கோத்த முத்து- தொளாயிரத் தெண்பத் தொன்றினால்" (தெ.கல்.தொ.2, கல்.1).*

[முத்தில் + கோத்த + முத்து.]

முத்திறங்குதல் *muttiraṅgudal,* பெ.(n.) அம்மை முத்துக்கள் பால் வடிந்து மறைகை (வின்.); waning of pustules, in small pox.

[முத்து[2] + இறங்கு-தல்.]

முத்திரமணி *muttira-maṇi,* பெ.(n.) பௌத்தர் வணங்கற்குரிய முத்திறப் பொருள்கள் (திரிமணி) (புத்தம்); the three objects of veneration. *"முத்திறமணியை..... வணங்கி" (மணிமே.30 : 4).*

[மூன்று + திறமணி.]

முத்தின்குற்றவகை *muttiṉ-kuṟṟa-vagai,* பெ.(n.) குறைபாடுகளுடன் உள்ள வகையில் ஒன்றான முத்து; blemish in a pearl.

[முத்தி + இன் + குற்றவகை.]

அக்குற்றங்கள் முறையே வரை, கறை, குரு, கறடு, அப்பிரம், திரங்கல், தோல் முதலியன (தெ.இ.கல்.தொ.2, கல்.3, 86, 93).

முத்தின்சலாபம் *muttiṉ-šalābam,* பெ.(n.) முத்துக் குளிக்கும் இடம்; place of pearl fishery. *"முத்தின் சலாபமு முத்தமிழ்ப் பொதியிலும்" (முதற்குலோத்துங்கன் – மெய்க்கீர்த்தி).*

*[முத்து + இன் + **Skt.** சலாபம்.]*

முத்தின்சிடுக்கு *muttiṉ-šiḍukku,* பெ.(n.) முத்தாலான காதணி; pearl ear-ring. *"முத்தின் சிடுக்கு, ஓரணையிற் கோத்த முத்து பதினெட்டும் பொன்னும் உட்பட" (தெ.கல். தொ.2 : 2, கல்.51).*

[முத்து + இன் + சிடுக்கு. சிடுக்கு = காதணி வகை.]

முத்தின்சூடகம் *muttiṉ-šūḍagam,* பெ.(n.) சிவப்புக்கல் மணி வைத்திழைக்கப்பட்ட பொன் வளையல்; golden bangles decorated and set up with gem. *"முத்தின் சூடகம் ஒன்றில் துண்டம் இரண்டிற் கறடிகை ஆறும் கேவணம் வைத்து விளக்கிக் கட்டின பளிங்கு எழுபத்தொன்பதும்" (தெ.இ.கல். தொ.2 : 2 கல்.51).*

[முத்து + இன் + சூடகம். சூடகம் = கைவளை.]

முத்தின்வளையல் *muttiṉ-vaḷaiyal,* பெ.(n.) முத்துக்கள் பதித்தும் கட்டியும் செய்யப்பெறும் பொன் வளையல்; golden bangles decorated and set up with pearls. *"பொன்கொடு செய்த முத்தின்வளையல் ஒன்று–கோத்த முத்து முன்னூறு ஐம்பத்து மூன்றினால்" (தெ.இ.கல். தொ.2, கல்.3).*

[முத்து + இன் + வளையல்.]

முத்தீ *muttī,* பெ.(n.) **1.** இல்லறத் தீ, தெய்வத்தீ, தென்புலத்தீ, (காருகபத்தியம், ஆகவனீயம், தட்சிணாக்கினி) என்ற மூவகைத் தீ; the three sacrificial fires, viz., *karugapattiyam, akavaṉīyam, daṭciṇākkiṉi. "இருபிறப்பாளர் முத்தீப் புரைய" (புறநா.367).* **2.** வயிற்றுத் தீ, காமத்தீ, சினத் தீயென்னும் மூவகைத் தீ (சூடா.); the three-fold fires of the body, viz. *vayiṟṟu-t-tī, kāma-t-tī, šiṉa-t-tī.* **3.** ஆயுர்வேதத் தீ; fire used in preparing medicines, of three kinds of degrees.

[மூன்று + தீ.]

முத்தீமரபினர் *muttī-marabiṉar,* பெ.(n.) வேள்வித்தீ (வேதாக்கினி) மூன்றையும் பேணும் குலத்தவரான பிராமணர் (பிங்.); Brahmins, as guardians of the sacrificial fires.

[முத்தீ + மரபினர்.]

முத்தீரமம் *muttīramam,* பெ.(n.) முத்திரமம் பார்க்க; see *muttiramam.*

முத்து¹-தல் *muttu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. சேர்தல்; to unite, join. *"திருமுத்தாரம்" (சீவக.504).* 2. முத்தமிடுதல்; to kiss. *"புதல்வர் பூங்கண் முத்தி" (புறநா.41).*

[முல் (பொருந்துதல்) → முது → முத்து → முத்து-தல்.]

முத்து² *muttu,* பெ.(n.) 1. சிப்பியில் இருந்து எடுக்கப்படும் விலை மதிப்பு உடைய உருண்டை வடிவ வெந்நிறப் பொருள்; pearl. *முத்துமாலை, முத்துப் பற்கள். முத்துமுத்தாக எழுதியிருக்கிறான். "முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறை" (நற்.23). "பனைமருடடக்கையொடு முத்துப்பட முற்றிய" (புறநா.161). "முல்லை முகை முறுவல் முத்தென்று" (நாலடி, 45).* 2. சில வகை மரங்களின் செடிகளின் மேல்தோல் நீக்கப்பட்ட கொட்டை; seeds of certain trees without outer skin. *முத்துக்கொட்டை.* 3. வெண்மணி போன்ற கண்ணீர்த்துளி; pearl like tears. *"பருமுத் துறையும்" (சீவக. 1518).* 4. ஆமணக்கு வித்து; castor bean. *"முத்திருக்குங் கொம்பசைக்கும்" (தனிப்பா.1, 3:2).* 5. வெண்முத்துப் போன்ற அம்மை நோய்க் கொப்புளம் (உ.வ.); pock of small pox, pustule. *பிள்ளைக்கு உடம்பு முழுதும் முத்துப் போட்டிருக்கிறது.* 6. ஆமணக்கு விதை போன்ற நெய்யுள்ள விதை (நாமதீப. 373); oil seed, as rape, castor, etc. 7. கிளிஞ்சில் முத்துப் போன்ற மாதுளையின் விதை; succulent seed of pomegranate. 8. வெண்முத்துப் போன்ற வெள்ளரிசி; rice. 9. 7/8 பணவெடை கொண்டதோர் பொன்னிறை; a gold smith's weight= 7/8 *paṇa-v-eḍai.* 10. ஆட்டக் காய்கள் (இ.வ.); seeds, shells, etc. used in games. 11. சங்கு முதலியவற்றின் முட்டை; the egg of a conch. 12. பருப்பு; dhal, pulp. 13. சிப்பிமுத்து; oyster pearl. 14. பெண் காமக்களை; the semen of a female. 15. 120 வகையான இயற்கைப் பொருட்களில் இதுவும் ஒன்று; one of the 120 kinds of natural substances. 16. மேலானது (யாழ்.அக.); that which is excellent or praise worthy. *முத்தான பேச்சு.*

ம., தெ., க. முத்து; து. முத்த; பிரா. முத்தா.

[முள்→முட்டு→முத்து (வ.மொ.வ.)]

முத்துப் பற்றிய பழமொழிகள் : "முத்தளந்த கையால் முசப்பயறு அளக்க வந்தது", "முத்தளந்த கையாலே மோர் விற்கிறதா?", "முத்தால் நத்தை பெருமைப்படும் மூடர் எத்தாலும் பெருமைப்படார்", "முத்து அளக்கிறவளும் பெண்பிள்ளைதான், மூசப் பயறு அளக்கிறவளும் பெண்பிள்ளைதான்", "முகத்துக்கு முத்தா யிருக்கிறது", "முத்தும் பவளமும் முறை முறையாய்க் கோத்தது போல", "முத்தைத் தெளித்தாலும் கலியாணந்தான், மோரைத் தெளித்தாலும் கலியாணந்தான்". "முத்திலும் சொத்தை உண்டு; பவழத்திலும் பழுதுண்டு" (பழ.).

முத்துப் பிறக்கும் இடங்கள்: சிப்பி, மீன், முதலை, உடும்பு, தாமரை, வாழை, கமுகு, கரும்பு, பன்றிக்கொம்பு, ஆவின் பல், பாம்பு, கொக்கு, மங்கையர் கழுத்து.

ஆமணக்கு முத்து (கொட்டைமுத்து), குருக்குமுத்து, புளியமுத்து, வேப்பமுத்து என்பன ஓரளவு உருண்டை வடிவான விதைகள்.

முத்துச்சம்பா, முத்துச்சோளம், முத்து மாதுளை என்பனவும் அத்தகையனவே.

முத்துக்குளிப்பு மன்னார்குடாக் கடலில் தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றது.

முத்தூர்க்கூற்றம் என்பது பாண்டி நாட்டின் கீழ்கரைப் பகுதி. உரோம நாட்டிற்கு ஏற்றுமதியான பாண்டிநாட்டு முத்து வரலாற்றுப் புகழ் பெற்றது.

"வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து – பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து தெண்ணீர்
வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து" என்பது பிற்காலத்து ஔவையா ரொருவரின் பாட்டு.

வடவர், முக்தா என்னும் சொல்லை ((முச்(C)) என்னும் வினை முதனிலையொடு தொடர்புபடுத்தி, சிப்பியினின்று விடுதலை பெற்றது என்று பொருட் காரணம் கூறுவது பொருந்தாது (வ.மொ.வ.2:72).

முத்து³ *muttu,* பெ. (n.) 1. அழகு; beauty. *"அடியாற் படியளந்த முத்தோ" (திவ்.இயற். பெரியதிருவந்.27).* 2. மகிழ்ச்சி (திவ்.இயற். பெரியதிருவந்.27, வியா.); joy, happiness. 3. அன்பு; love, endearment. *வேலை முத்தோ, பிள்ளை முத்தோ?*

முத்து⁴ *muttu,* பெ.(n.) முத்தம் (உ.வ.); kiss.

முத்து⁵ *muttu,* பெ.(n.) வெண்குருகு (அரு.நி.); a water - bird.

முத்து⁶ *muttu,* பெ.(n.) 19ஆம் நூற்றாண்டில் 'ஞானக் கப்பல்' என்னும் நூலை இயற்றிய புலவர்; a poet, author of *'ñāṉa-k-kappal'.*

முத்துக்கடுக்கன் *muttu-k-kaḍukkaṉ,* பெ.(n.) முத்துக் கட்டிய கடுக்கனென்னுங் காதணி (வின்.); pearl ear-ring.

[முத்து + கடுக்கன்.]

முத்துக்கண்டி *muttu-k-kaṇḍi,* பெ.(n.) முத்தாலாகிய கழுத்தணி வகை; pearl necklace.

[முத்து + கண்டி.]

முத்துக்கணேசன் *muttu-k-kaṇēšaṉ,* பெ.(n.) 20ஆம் நூற்றாண்டில் 'நல்லுரை வெண்பா' என்னும் நூலினை இயற்றிய புலவர்; a poet, author of *'Nalluraiveṇbā'.*

முத்துக்கம்பயறு *muttu-k-kam-payaṟu,* பெ.(n.) கடலை; Bengal gram.

முத்துக்கம்பி *muttu-k-kambi,* பெ.(n.) முன்தானையில் செய்யப்படும் நெசவு முறை; a method of weaving in the outer and of a saree or cloth.

[முத்து + கம்பி.]

முத்துக்கற்கம் *muttu-k-kaṟkkam,* பெ.(n.) 1. முத்துக் கொட்டைப் பிண்ணாக்கு; oil cake of castor beans. 2 முத்தைப் புடமிட்டுச் செய்யும் மருந்து வகை; medicine prepared by calcining pearls.

[முத்து + கற்கம்.]

முத்துக்கறுப்பன் *muttu-k-kaṟuppaṉ,* பெ. (n.) ஊர்த் தெய்வம்; a village deity.

முத்துக்கறுப்பன்செட்டியார் *muttiu-k-kaṟuppaṉ-šeṭṭiyār,* பெ.(n.) 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்; a Tamil poet in 19th century.

இவர் உலகநாத சுவாமி பேரில் விருத்தம், குன்றக்குடி சுப்பிரமணியர் விருத்தம், தணிகை மலை வடிவேலர் விருத்தம், நெல்லையம்பதி உலகநாயகியம்மன் விருத்தம், பினாங்கு தண்ணிமலை வடிவேலர் விருத்தம், வங்காளம் தண்டாயுதபாணி விருத்தம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

முத்துக்குட்டிப்புலவர் *muttu-k-kuṭṭi-p-pulavar,* பெ.(n.) 18ஆம் நூற்றாண்டில் கண்ணுடையம்மன் பள்ளு என்னும் நூலை

இயற்றிய புலவர்; a poet in 18th century, author of *kaṉṉuḍai-y-ammaṉ-paḷḷu.*

முத்துக்குடை *muttu-k-kuḍai,* பெ.(n.) அருகனது மூன்று குடையுளொன்று (வின்.); one of the three umbrellas of Arhat.

[முத்து + குடை.]

முத்துக்குத்து–தல் *muttu-k-kuttu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. தாழ்ந்த முத்தை நீக்குதல்; to reject inferior pearls which may readily break. 2. கடவுட் பலிக்காக மந்திரஞ் சொல்லி அரிசி குத்துதல்; to pound rice, for using it for sacred purposes, chanting mantras.

[முத்து + குத்து–தல்.]

முத்துக்குமரக்கவிராயர் *muttu-k-kumara-k-kavirāyar,* பெ.(n.) 18–19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர் 'ஞானக்கும்மி' என்னும் நூலின் ஆசிரியர்; a poet, author of *ñāṉa-k-kummi* lived 18-19 century.

இவர் ஐயனாரூஞ்சல், நடராசர் பதிகம், ஞானக்கும்மி போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

முத்துக்குமரன் *muttu-k-kumaraṉ,* பெ.(n.) முத்துக்குமாரன் பார்க்க; see *muttu-k-kumāraṉ.*

முத்துக்குமாரசாமிபுலவர் *muttu-k-kumāra-šāmi-pulavar,* பெ.(n.) தமிழ்ப் புலவர்; a Tamil poet. *இவர் இயற்றிய நூல் திரிபுரசுந்தரி பிள்ளைத் தமிழ்.*

முத்துக்குமாரசுவாமிகள் *muttu-k-kumāra-šuvāmigaḷ,* பெ.(n.) 19–20ஆம் நூற்றாண்டில் கதிர்காமத்தந்தாதி, கதிர்காம மாலை ஆகிய நூல்களை இயற்றிய புலவர்; a poet in 19-20th century, author of *kadir-kāmattandādi, kadir-kāmamālai.*

முத்துக்குமாரத்தம்பிரான் *muttu-k-kumāra-t-tambirāṉ,* பெ.(n.) 19ஆம் நூற்றாண்டில் போரூர் என்னும் ஊரில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்; a Tamil poet who lived *Pōrūr* in 19th century.

இவர் பூசாவிதி அகவல், திருப்போரூர்க் கலித்துறை அந்தாதி, சமரபுரி மாலை, பிரணவசைல மாலை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

முத்துக்குமாரதாசர் *muttu-k-kumāra-dāšar,* பெ.(n.) 20ஆம் நூற்றாண்டில் வேளூர் முத்துக்குமாரசாமி அந்தாதி, கந்த புராண சதகம் ஆகிய நூல்களை இயற்றிய புலவர்; a poet author of *'muthu-k-kumārašamyAndādi'* and *Kandapurāṉa Šadakam.*

முத்துக்குமாரதேசிகர் *muttu-k-kumāra-dēšigar,* பெ.(n.) 20ஆம் நூற்றாண்டில் சூரியனார்க் கோயில் குரு தோத்திரப் பதிகம் என்னும் நூலை இயற்றிய புலவர்; a poet in 20th century, author of *Šuriyaṉār-k-kōyil-kuru-tōttira-p-padigam.*

முத்துக்குமாரர் *muttu-k-kumārar,* பெ.(n.) 18ஆம் நூற்றாண்டில் வலைவீசு புராணம் என்னும் நூலை இயற்றிய புலவர்; a poet in 18th century, author of *Valai-višu-purāṇam.*

முத்துக்குமாரன் *muttu-k-kumāraṉ,* பெ.(n.) முருகக் கடவுள்; God Murugaṉ. *"முத்துக் குமாரனைத் தனிப்புரக்க" (குமர. பிர. முத்துக்குமார. பிள்.2).*

முத்துக்குளி[1]–த்தல் *muttu-k-kuḷi-,* 4 செ.கு.வி. (v.i.) முத்துச்சிப்பி எடுப்பதற்காகக் கடலுள் மூழ்குதல்; to dive for pearl-oysters.

முத்துக் குளிப்பவர்களுக்கு நீண்ட நேரம் மூச்சடக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

[முத்து + குளி–த்தல்.]

முத்துக்குளி² *muttu-k-kuḷi,* பெ.(n.) நீரில் மூழ்கி முத்தெடுக்கை (வின்.); pearl-fishery.

[முத்து + குளி.]

முத்துக்குறி *muttu-k-kuṟi,* பெ.(n.) கையிலுள்ள முத்துக்களைக் கணக்கிட்டுப் பலன் சொல்லுங் குறி; divination by means of a handful of pearls.

[முத்து + குறி.]

முத்துக்கொட்டை *muttu-k-koṭṭai,* பெ.(n.) ஆமணக்கு விதை; castor seed.

[முத்து + கொட்டை.]

முத்துக்கொட்டைச்செடி *muttu-k-koṭṭai-c-ceḍi,* பெ.(n.) ஆமணக்குச் செடி; castor plant.

[முத்துகொட்டை + செடி.]

முத்துக்கொண்டை *muttu-k-koṇḍai,* பெ.(n.) கடவுள் திருமேனியின் தலையில் அணியும் முத்தாலான தலையணி வகை; head-dress of pearls, as for idols.

[முத்து² + கொண்டை.]

முத்துக்கொதி *muttu-k-kodi,* பெ.(n.) முதற் கொப்புளங் கிளம்பும் அரிசிக் கொதி; stage in the boiling of rice, when bubbles begin to appear.

[முத்து + கொதி. முத்துப்போல் கொப்புளம் கிளப்பும் கொதி.]

முத்துக்கொம்பன் *muttu-k-kombaṉ,* பெ.(n.) 1. முத்துநிறக் கொம்புள்ள யானை; elephant with pearly white tusks. 2. கடல் மீன் வகை (யாழ்ப்.); a sea-fish.

[முத்து + கொம்பன்.]

முத்துக்கொறித்தல் *muttu-k-koṟittal,* பெ.(n.) பல்லி சத்தமிடுகை (நாஞ்.); chirp of a lizard.

[முத்து + கொறித்தல்.]

முத்துக்கோவை *muttu-k-kōvai,* பெ.(n.) முத்துமாலை (வின்.) பார்க்க; see *muttu-mālai.*

[முத்து + கோவை.]

முத்துகம் *muttugam,* பெ.(n.) கடலை; gram - Bengal - gram.

முத்துச்சம்பா *muttu-c-cambā,* பெ.(n.) ஐந்து மாதங்களில் விளையும் ஒருவகை நெல் (A.); a kind of paddy that matures in five months.

[முத்து + சம்பா.]

முத்துச்சல்லி *muttu-c-calli,* பெ.(n.) முத்துக் கோத்த தொங்கல் (சங்.அக.); ornamental hangings of strung pearls.

[முத்து + சல்லி.]

முத்துச்சலாபம் *muttu-c-calābam,* பெ.(n.) 1. முத்துக்குளிக்கை; pearl-fishery.

2. முத்துக் குளிப்பில் அடையும் பேறு (யாழ்.அக.); the out-turn in pearl - fishery.

*[முத்து + **Skt.**சலாபம்.]*

முத்துச்சனிப்பு *muttu-c-caṉippu,* பெ.(n.) முத்து உண்டாகும் இடம் (யாழ்.அக.); place where pearls are formed.

[முத்து + Skt. சனிப்பு.]

முத்துச்சாமி *muttu-c-cāmi,* பெ.(n.) சிற்றூர் தெய்வம் (கோவை.); village deity.

முத்துச்சாமிஐயங்கார் *muttu-c-cāmi-aiyaṅgār,* பெ.(n.) 19–20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a Tamil poet lived in 19-20th century.

இவர் மணவாள மாமுனிகள் நூற்றந்தாதி குருகைக் கலம்பகம், நூற்றெட்டுத் திருப்பதித் திருப்பதிகங்கள் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

முத்துச்சாமிஐயர் *muttu-c-cāmi-aiyar,* பெ.(n.) 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a poet lived in 19th century.

இவர் மயூரநாதர் அந்தாதி, ஆசிரியர் துதிப்பாக் கோவை, முருகன் துதிப்பாக் கோவை, அன்புவிடு தூது, அலங்கார நாயகி பதிகம், கசாரணியேசுரர் பதிகம், காமாட்சியம்மைப் பதிகம், வரகூர் வேங்கடேசர் பதிகம், சிதம்பர விநாயகர் மாலை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

முத்துச்சாமிக்கவிராயர்[1] *muttu-c-cāmi-k-kavirāyar,* பெ.(n.) 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a Tamil poet, who lived in 20th century.

இவர் காரணக்கும்மி, ஞானக்கும்மி முருகன் ஏயிற் கும்மிப்பாட்டு, சிங்காரவேலர் சதகம், வடிவேலர் சதகம் ஆகிய நூற்களை இயற்றியுள்ளார்.

முத்துச்சாமிக்கவிராயர்[2] *muttu-c-cāmi-k-kavirāyar,* பெ.(n.) 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a Tamil poet, lived in 19th century.

இவர் கருங்காலக்குடிக் காதல், புரவி பாளையத்தார் கும்பி, அன்னம்விடு தூது, சங்கிலி வீரப்பப் பாண்டியன் பள்ளு ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

முத்துச்சாமிக்கோனார் (1858–1944) *muttu-c-cāmi-k-kōṉār,* பெ.(n.) தமிழ்ப் புலவர்; a Tamil poet.

சேலம் மாவட்டம் திருச்செங்கோட்டைச் சார்ந்தவர். தெலுங்கு, சமற்கிருதம் பயின்றவர். திருச்செங்கோடு மான்மியம், திருப்பணிமாலை, கொங்கு மண்டல சதக உரை ஆகிய நூல்களை இயற்றியவர்.

முத்துச்சாமிப்பிள்ளை[1] *muttu-c-cāmi-p-piḷḷai,* பெ.(n.) 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a Tamil poet, who lived in 19th century.

தருமை சொக்கநாத மாலை, திருப்பனந்தாள் சிலேடை வெண்பா ஆகிய நூல்களை இயற்றிய புலவர்.

முத்துச்சாமிப்பிள்ளை[2] *muttu-c-cāmi-p-piḷḷai,* பெ.(n.) 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a Tamil poet, lived in 19th century.

சிவபெருமான் இரட்டை மணிமாலை, திருக்கழுகு மாமலை, சிவக்கொழுந்து மாலை ஆகிய நூல்களை இயற்றியவர்.

முத்துச்சாமிமுதலியார் *muttu-c-cāmi-mudaliyār,* பெ.(n.) 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a Tamil poet, belong to 19th century.

19ஆம் நூற்றாண்டில் திருவொற்றியூர் வடிவுடையம்மன் கலித்துறை அந்தாதி, இடும்பன் கவசம் ஆகிய நூல்களை இயற்றிய புலவர்.

முத்துச்சிப்பி *muttu-c-cippi,* பெ.(n.) 1. முத்துள்ள ஓட்டினையுடைய நீர்வாழ் உயிரி; pearl-oyster. 2. முத்துத் தங்கிய சிப்பியோடு; mother of pearl.

[முத்து + சிப்பி.]



முத்துச்சிலாகம் *muttu-c-cilāgam,* பெ.(n.) முத்துச்சலாபம் பார்க்க; see *muttu-c-calābam.*

[முத்து + சிலாகம்.]

முத்துச்சிவிகை *muttu-c-civigai,* பெ.(n.) முத்துக்களால் அழகூட்டப்பட்ட பல்லக்கு (வின்.); planquin adorned with pearls.

[முத்து + சிவிகை.]

முத்துச்சுண்ணம் *muttu-c-cuṇṇam,* பெ.(n.) முத்தை நீற்றிய சுண்ணம் (பதார்த்த. 135); lime obtained by calcining pearls.

[முத்து + சுண்ணம்.]

முத்துச்சுண்ணாம்பு *muttu-c-cuṇṇāmbu,* பெ.(n.) முத்துச்சுண்ணம் பார்க்க; see *muttu-c-cuṇṇam.*

முத்துச்சொரிதல்[1] *muttu-c-coridal,* பெ.(n.) சோற்றுப் படையல்; offering of boiled rice to a deity.

[முத்து + சொரிதல்.]

முத்துச்சொரிதல்[2] *muttu-c-coridal,* பெ.(n.) அழகொழுகப் பேசுகை (இ.வ.); talking in an excellent manner, rhetorical talk. *அவன் வாயிலிருந்து முத்துச் சொரிகிறது.*

[முத்து + சொரிதல்.]

முத்துச்சோளம் *muttu-c-cōḷam,* பெ.(n.) முத்தைப் போன்ற வெள்ளைச் சோளம் (யாழ்.அக.); Indian corn, maize - *Zca mays.*

மறுவ. கோடைச்சோளம்.

[முத்து + சோளம்.]

முத்துடக்கன் *muttuḍakkaṉ,* பெ.(n.) நிலக்கடம்புச் செடி (A.) ; a plant - *Justicia accaulis.*

முத்துத்தம்பி *muttu-t-tambi,* பெ.(n.) தமிழ்ப் பெரும்புலவர்; a great Tamil poet.

இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர். தந்தையார் ஆறுமுகம். 1880இல் இந்தியாவுக்கு வந்தார். பாரத சுருக்கம், அபிதான கோசம், நன்னூல் இலகுபோதம், தென்மொழி வரலாறு ஆகிய நூல்களை எழுதியவர்.

முத்துத்தரியம் *muttu-t-tariyam,* பெ.(n.) முத்தினால் ஒப்பனை செய்த மேலாடை; upper garment decorated with pearls. *"முத்துத் தரியமும் பவழப் பிணையலும்" (பெருங். இலாவண. 1: 5).*

*[முத்து + **Skt.** தரியம்.]*

முத்துத்தாண்டவர் *muttu-t-tāṇḍavar,* பெ. (n.) இசைத்தமிழ் வளர்த்தவர்களுள் ஒருவர்; a poet who foster Tamil verse set to music.

முத்துத்தாமம் *muttu-t-tāmam,* பெ.(n.) 1. முத்துமாலை பார்க்க; see *muttu-mālai.* *"கோலமாமணி யாரமு முத்துத்தாமமும்" (திவ்.அமலனாதி.9).* 2. முத்துச்சல்லி பார்க்க; see *muttu-c-calli.* *"முத்துத்தாம முறையொடு நாற்றுமின்" (மணிமே.1 : 49).*

[முத்து + தாமம்.]

முத்துத்தாழ்வடம் *muttu-t-tāḻvaḍam,* பெ. (n.) முத்துமாலை (வின்.)பார்க்க; see *muttu-mālai.*

[முத்து + தாழ்வடம். தாழ்வடம் = நீண்டு தாழ்ந்த மாலை.]

முத்துநாயக்கன்பட்டி *muttu-nāyakkaṉ-paṭṭi,* பெ.(n.) சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டத்தில் சேலத்திற்கு வடமேற்கே ஏறத்தாழ 15 கல்லன் மாத்திரியிலுள்ள ஊர்; a city in Salem district in *ōmalūr* Taluk in 15 k.m. away from Salem in North West direction.

[முத்துநாயக்கன் + பட்டி.]

நாயக்கர் ஆட்சி காலத்தில் ஆண்ட முத்து நாயக்கன் என்பவர் பெயரால் ஏற்பட்ட ஊராக இருக்கலாம்.

முத்துநிரப்பம் *muttu-nirappam,* பெ.(n.) ஒற்றைச்சரமாலை (தக்கயாகப்.340, உரை); necklace of a single string.

மறுவ. ஏகாவலி வடம்.

[முத்து + நிரப்பம். நிரம்பு →நிரப்பு →நிரப்பம் = முழுமை.]

முத்துநீர் *muttu-nīr,* பெ.(n.) பனிநீர்த் திவலை; dew drop. *"முத்து நீர்ச் சாந்தடைந்த மூஉய்த்தத்தி" (பரிபா.10 : 13).*

[முத்து + நீர்.]

முத்துநெய் *muttu-ney,* பெ.(n.) சிற்றாமணக்கு நெய் (பதார்த்த.162); castor oil.

[முத்து + நெய்.]

முத்துப்பந்தர் *muttu-p-pandar,* பெ.(n.) முத்துமாலைகளால் ஒப்பனை செய்யப்பட்ட கூரையையுடைய பந்தல் (தமிழ்நா.119); canopy decorated with strings of pearls.

[முத்து + பந்தர்.]

முத்துப்பல்லக்கு *muttu-p-pallakku,* பெ.(n.) முத்துச்சிவிகை பார்க்க; see *muttu-c-civigai.*

[முத்து + பல்லக்கு. முத்துக்கள் பதித்து அழகு செய்யப்பட்ட பல்லக்கு.]

முத்துப்பற்பம் *muttu-p-paṟbam,* பெ.(n.) உடலின் இயற்கையான வெப்பத்தினால் உண்டாகும் நெஞ்சத் துடிப்பு, விந்தணுக்கள் தொடர்பான நோய்கள், அரத்த காசம், முறையற்ற அரத்தப் போக்கு முதலிய நோய்களுக்கான மருந்து; the calcined white powder of pearl cures congenital heat, palpitation of the heat, due to the heat, seminal disorders, haemoptisis, aemorrhagic disorders etc.

[முத்து + பற்பம். பற்பம் = பொடி.]

முத்துப்புரி *muttu-p-puri,* பெ.(n.) முத்துச்சல்லி பார்க்க; see *muttu-c-calli.* *"முத்துப் புரிநாற்று" (பெருங்.வத்தவ. 5 : 48).*

[முத்து + புரி.]

முத்துப்பூவாழி *muttu-p-pū-vāḻi,* பெ.(n.) வெங்காயம்; onion - *Allium cepa* (சா.அக.).

முத்துப்பேட்டை *muttu-p-pēṭṭai,* பெ.(n.) ஓர் ஊர்; a village.

கடலில் மூழ்கி முத்தெடுக்கும் பரதவரின் ஊர். முத்து வேலை நிகழ்ந்த இடம். தற்போது முகமதியர் சங்கு வணிகம் செய்கின்றனர்.

முத்துப்பேய்ச்சி *muttu-p-pēycci,* பெ.(n.) ஊர் பெண் தெய்வம்; a village Goddess. *"முத்து ராக்கு முத்துப்பேய்ச்சி" (பஞ்ச. திருமுக.671).*

[முத்து + பேய்ச்சி.]

முத்துப்போட்டுப்பார்–த்தல் *muttu-p-pōṭṭu-p-pār-,* 4 செ.குன்றாவி.(v.t.) கணிய வகையுள் ஒன்று; a kind of astrology. *கொட்டை முத்தினைப் போட்டுப் பார்த்து ஒற்றையெண்வரின் நல்லது, இரட்டை யெண்வரின் தீயது (கெட்டது) என அறியும் கணிய வகை (கோவை).*

[முத்து + போட்டு + பார்–த்தல்.]

முத்துப்போடு–தல் *muttu-p-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) அம்மை நோயில் முத்துத் தோன்றுதல் (வின்.); to break out in pustules, as in small pox, or measles.

[முத்து + போடு–தல்.]

முத்துமணல் *muttu-maṇal,* பெ.(n.) மணல் போன்ற சிறிய முத்து; small pearl resembling a grain of sand. *"நற்பெரும் பந்தருள் முத்து மணல் பரப்பி" (பெருங். உஞ்சைக்.48 : 88).*

[முத்து + மணல்.]

முத்துமணிமாலை *muttu-maṇi-mālai,* பெ.(n.) முத்துமாலை பார்க்க; see *muttu-mālai.*

[முத்து + மணி + மாலை.]

முத்துமழை *muttu-maḻai,* பெ.(n.) பருவ மழை (இ.வ.); seasonal rain.

[முத்து + மழை.]

முத்துமழைபெய்–தல் *muttu-maḻai-pey-,* 1 செ.கு.வி.(v.i.) செல்வம் பொங்குதல் (உ.வ.); to prosper, to amass wealth.

[முத்து + மழை + பெய்–தல்.]

முத்துமாதுளை *muttu-māduḷai,* பெ.(n.) மாதுளை வகை (யாழ்.அக.); a species of pomegranate.

[முத்து + மாதுளை.]

முத்துமாலை *muttu-mālai,* பெ.(n.) முத்துக் கோத்த கழுத்தணி வகை (திவ். அமலனாதி. 9, வியா.); garland of pearls. *நாய்க்குத் தெரியுமா முத்து மாலை (பழ.).*

[முத்து + மாலை.]

முத்துமாலைக்குறுவை *muttu-mālai-k-kuṟuvai,* பெ.(n.) ஒருவகை நெல்; a kind of paddy. *"முத்துமாலைக் குறுவை" (பறாளை. பள்ளு.24).*

[முத்து + மாலை + குறுவை. குறுவை = குறுகிய காலத்தில் விளையும் நெல்வகை]

முத்துமுறி *muttu-muṟi,* பெ.(n.) முத்துப் போல் வெண்மையான உயர்ந்த வெண்கலம் (இ.வ.); bestbell-metal, as pearl - white.

[முத்து + முறி.]

முத்துமுறிவெண்கலம் *muttumuṟi-veṇ galam,* பெ.(n.) முத்துமுறி பார்க்க; see *muttu-muṟi.*

[முத்துமுறி + வெண்கலம்.]

முத்துரதம் *muttu-radam,* பெ.(n.) கோயிலைச் சுற்றி இழுக்கும் சிறுதேர் (கோவை.); small car, chariot.

[முத்து + Skt. ரதம்.]

முத்துராக்கு *muttu-rākku,* பெ.(n.) சிற்றூர் பெண் தெய்வம்; a village goddess. *"முத்துராக்கு முத்துப் பேய்ச்சி" (பஞ்ச. திருமுக.671).*

[முத்து + ராக்கு. Skt. rākku > த. ராக்கு.]

முத்துராசாக்கவிராயர் *mutturāšā-k-kavirāyar,* பெ.(n.) மயிலாசல மாலை என்னும் நூலை இயற்றிய புலவர்; Tamil poet, author of *mayilāšala-mālai.*

முத்துராமக்கவிராயர் *muttirāma-k-kavirāyar,* பெ.(n.) பிற்காலப் புலவர்; Tamil poet, belongs to the later period.

இவருடைய ஊர் திருப்போரூருக்கு வடக்கே ஆறு கல் தொலைவிலுள்ள கோவளம் என்பது. இவ்வூர் ஒரு துறைக் கோவையில் 'சென்றத்தை' என்னும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது. இவர் நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்தவர். பெட்டுராசா இராமச்சந்திர கவிராசருடைய மாணாக்கர். இவருடைய தமையனாருள் ஒருவராகிய சண்முக முதலியார் பெரிய முறைமன்றத்தில் பணியாற்றியவர். இவர் செய்த தனிப்பாடல்கள் பல. பாரத கீர்த்தனம். திருத்தணி கை நொண்டி என்னும் நூல்களை எழுதியவர்.

முத்துராமலிங்கசேதுபதி *muttu-rāmalinga-sēdupati,* பெ.(n.) 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a poet in 19th century.

இவர் முருகர் அனுபூதி, நீதிபோத வெண்பா, சடாட்சர சாரப்பதிகம், சரசசல்லாப மாலை, பிரபாகரமாலை, வள்ளி மணமாலை என்னும் நூல்களை இயற்றியவர்.

முத்துருட்சிமணி *mutturuṭci-maṇi,* பெ.(n.) முத்துப்போலுருண்ட பொன்மணி (வின்.); pearl-like gold bead.

[முத்து[2] + உருட்சி + மணி.]

முத்துருவி *mutturuvi,* பெ.(n.) மகளிர் காதணி வகை (யாழ்.அக.); an ear-ornament for women.

முத்துருளைமணி *mutturuḷai-maṇi,* பெ.(n.) முத்துருட்சிமணி பார்க்க; see *mutturuṭci-maṇi.*

[முத்து + உருளை + மணி.]

முத்துலையிடு-தல் *muttulai-iḍu-,* 20 செ.கு.வி.(v.i.) ஒன்றுக்கு மூன்று கற்பித்தல்; to exaggerate three-fold. *"முத்துலை யிட்டுக் கொண்டு" (திருவிருத்.71, வியா. பக்.37)).*

[மூன்று → மு + துலை + இடு-தல்.]

முத்துவட்டம் *muttu-vaṭṭam,* பெ.(n.) 1. ஒருவகை யுருண்டை முத்து (தெ.இ.க. தொ.ii, 143, 3); a kind of round pearl. 2. முத்தெண்ணிக்கையின் வகை; unit consisting of a certain number of pearls.

[முத்து + வட்டம்.]

முத்துவடம் *muttu-vaḍam,* பெ.(n.) 1. முத்து மாலை பார்க்க; see *muttu-mālai.* *"முத்துவடமு முழுமணிக் காசும்" (பெருங். மகத.17 : 164).* 2. ஓர் புடவை வகை; a kind of saree.

[முத்து + வடம். வடம் = சரம்]

முத்துவண்ணச்சேலை *muttu-vaṇṇa-c-cēlai,* பெ.(n.) பழங்காலத்துப் புடைவை வகை (பணவிடு.303); a kind of saree, of olden days.

[முத்து + வண்ணம் + சேலை.]

முத்துவண்ணம் *muttu-vaṇṇam,* பெ.(n.) வெண்ணிறம்; pearl - like colour, as of teeth.

[முத்து + வண்ணம்.]

முத்துவர்ணம் *muttu-varnam,* பெ.(n.) முத்துவண்ணம் பார்க்க; see *muttu-vaṇṇam. "முத்துவர்ண மூரனல்லாள்" (விறலிவிடு. 717).*

[முத்து + வர்ணம். வண்ணம் →வர்ணம்]

முத்துவீரக்கவிராயர் *muttu-vīra-k-kavirāyar,* பெ.(n.) 19ஆம் நூற்றாண்டில் சங்கர நாராயண கோயில் புராணம் என்னும் நூலை இயற்றிய புலவர்; author of *śaṅkara-nārāyaṇa-kōil-purāṇam.*

முத்துவீரவாத்தியார் *muttu-vīra-vāttiyār,* பெ.(n.) முத்துவீரியம் என்னும் இலக்கண நூலாசிரியர்; author of *muttu-vīriyam.*

முத்துவீரியம் *muttu-vīriyam,* பெ.(n.) ஐந்து வகை இலக்கணங்களையும் கொண்ட நூல்; the book a treatise which says about five kinds of grammar.

[முத்து + வீரியம்.]

இந்நூல் முத்துவீர (உபாத்தியாய)ர் இயற்றியது. இதில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களும் விளக்கப் பட்டுள்ளது.

முத்துவெள்ளை *muttu-veḷḷai,* பெ.(n.) 1. ஈய வெள்ளி; white lead, *Ceruse.* 2. நெல்வகை; a kind of paddy.

[முத்து + வெள்ளை.]

முத்துளம் *muttuḷam,* பெ.(n.) மூங்கில் (சங்.அக.); bamboo.

[முத்து + உள் – முத்துள் →முத்துளம்.]

மூங்கிலிலிருந்து முத்து தோன்றுவதாகக் கருதப்படுவதுண்டு.

முத்தூர் *muttūr,* பெ.(n.) பாண்டி மண்டலத்து ஊரின் பெயர்; name of the place. *"பாண்டி மண்டலத்து முத்தூற்றுக் கூற்றத்து" (A.R.E. 438/1913).*

முத்தூர்க்கூற்றம் *muttūr-k-kūṟṟam,* பெ.(n.) முத்தூற்றுக்கூற்றம் (சிலப்.11 : 22, உரை) பார்க்க; see *muttūṟṟu-k-kūṟṟam.*

[முத்தூர் + கூற்றம்.]

முத்தூற்றுக்கூற்றம் *muttūṟṟū-k-kūṟṟam,* பெ.(n.) வேளிர்க்குரியதாயிருந்த பாண்டி நாட்டின் பகுதியான நிலப்பிரிவு (புறநா.24, உரை); a tract of land belonging to the *Vēḷir* and annexed to the *Pāṇḍiya* kingdom later on.

[முத்தூறு + கூற்றம்.]

முத்தூறு *muttūṟu,* பெ.(n.) முத்தூற்றுக் கூற்றம் பார்க்க; see *muttūṟṟu-k-kūṟṟam. "முத்தூறு தந்த கொற்ற நீள்குடை" (புறநா. 24: 22).*

முத்தெட்டு *muttețțu,* பெ.(n.) பண்ணையாருக்குப் பண்ணையாட்கள் கூலியின்றிப் பயிரிடும் நிலம் (யாழ்ப்.); field cultivated free of wages for the proprietor by his farm labourers.

முத்தெண்ணெய் *mutteṇṇey,* பெ.(n.) ஆமணக்கெண்ணெய்; oil of castor seed.

[முத்து + எண்ணெய்.]

முத்தெயில் *mutteyil,* பெ.(n.) பழமையான மதில்; ancient fortress. *"முத்தெயின் மதுரைதன்னில்" (திருவாலவா.62 : 7).*

[முதுமை + எயில்.]

முத்தெருக்கன்செவி *mutterukkaṉ-ševi,* பெ.(n.) நிலக்கடம்பு (பாலவா.886); a plant.

மறுவ. முத்திருக்கன்செவி.

முத்தெழும்பு-தல் *mutteḻumbu-,* 5 செ.கு.வி. (v.i.) முத்துப்போடு-தல் பார்க்க; see *muttu-p-pōḍu-.*

[முத்து + எழும்பு-தல்.]

முத்தெறி-தல் *mutteṟi-,* 2 செ.கு.வி.(v.i.) முத்துப்போடு-தல் (யாழ்.அக.); see *muttu-p-pōḍu-.*

[முத்து + எறி-தல்.]

முத்தை[1] *muttai,* பெ.(n.) முன்னிடம்; front. *"முத்தை வரூஉங் காலந் தோன்றின்" (தொல்.எழுத்து.164).*

[முந்தை →முத்தை.]

முத்தை[2] *muttai,* பெ.(n.) 1. திரட்சி (சூடா.); lump, large mass. 2. சோற்றுருண்டை (வின்.); boiled rice gathered into a ball.

தெ. முத்த.

[முத்து →முத்தை (வே.க.).]

முத்தை[3] *muttai,* பெ.(n.) பேதைப் பருவத்தாள் (யாழ்.அக.); innocent girl; girl between the ages of five and seven.

[முந்தை →முத்தை.]

முத்தை[4] *muttai,* பெ.(n.) முத்தக்காசு பார்க்க (சங்.அக.); see *mutta-k-kāšu.*

[முந்தை →முத்தை.]

முத்தையன் *muttaiyaṉ,* பெ.(n.) முத்துக் குமாரன் (யாழ்.அக.) பார்க்க; see *muttu-k-kumāraṉ.*

[முத்து + ஐயன்.]

முத்தையா *muttaiyā,* பெ. (n.) 19-20ஆம் நூற்றாண்டில் சுங்குரும்மை அந்தாதி, பதிற்றுப் பத்தந்தாதி ஆகிய நூல்களை இயற்றிய புலவர்; a poet, author of *šuṅgurummai-andādi, padiṟṟu-p-pattandādi.*

முத்தொகைவினா *mu-t-togai-viṉā,* பெ. (n.) முதல் எண்ணுக்கும் இரண்டாம் எண்ணுக்குமுள்ள ஏற்றத்தாழ்வுக்கொத்தபடி மூன்றாவது எண் ஒன்றுக்குரிய மற்றோர் எண்ணைக் காணும் கணக்கு முறை (வின்.); rule of three, rule of proportion.

[மூன்று + தொகைவினா.]

முத்தொருகன் *muttorugaṉ,* பெ.(n.) முத்தடக்கன் (சங்.அக.) பார்க்க; see *muttaḍakkaṉ.*

முத்தொழில் *mu-t-toḻil,* பெ.(n.) படைப்பு, காப்பு, அழிப்பு என்ற கடவுளின் மூவகைச் செயல் (பிங்.); the triple functions of God -head viz. *paḍaippu, kāppu, aḻippu.*

[மூன்று + தொழில்.]

முத்தொழிலர் *mu-t-toḻilar,* பெ.(n.) 1. கடை மகன் (சூத்திரர்) (பிங்.); *Šūdras.* 2. உழவு வாணிகம் ஆநிரை காத்தலாகிய

மூன்று தொழில்கள் உடையவரான வணிகர் (வைசியர்) (வின்.); *Vaiśyas,* as engaged in three pursuits, viz. agriculture, trade, herding cattle.

[மூன்று + தொழிலர்.]

முத்தொழிற்பகவன் *muttoḻiṟ-pagavaṉ,* பெ.(n.) கடவுள் (யாழ்.அக.); God, the Supreme Being.

[முத்தொழில் + பகவன்.]

ஆக்கல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழிலைச் செய்வதாகக் கருதப்படும் கடவுள் என்றறிக.

முத்தொள்ளாயிரம் *mu-t-toḷḷāyiram,* பெ.(n.) சேரர், சோழர், பாண்டியர் ஒவ்வொருவருக்கும் 300 செய்யுட்களாக தொள்ளாயிரம் வெண்பாக்களாலியன்ற ஒரு பழைய நூல்; a poem of 900 *Veṇbā* in honour of the *Chēra, Chōḷā* and *Pāṇdiya*, kings having 300 each.

[மூன்று→மூ→மு + தொள்ளாயிரம். மூன்று வகையானதாகிய தொள்ளாயிரம் பாடல்கள்.]

பண்டைத் தொகை நூல்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டுகளுக்குப் பின்னர் இயற்றப்பட்டதாகக் கருதப்படுவது முத்தொள்ளாயிரம். இந்நூலின் பாடல் எண்ணிக்கை தொள்ளாயிரம் என்றும், இரண்டாயிரத்து எழுநூறு என்றும் இருவேறு கருத்துக்கள் இருந்தாலும் இன்று நூல் வடிவில் கிடைப்பது நூற்று முப்பது பாடல்கள் மட்டுமே. அவையும் இருவேறு வகையில் கிடைத்தவையே.

புறத்திரட்டு என்னும் தொகை நூலின் இடையிடையே நூற்றெட்டுப் பாடல்களும், பழைய உரைகளினிடையே இருபத்திரண்டு பாடல்களும் கிடைத்துள்ளன. ஆகவே இந்நூலின்கண் அமைந்து உரையொடு வருவனவாகிய நூற்றுமுப்பது பாடல்களும் படிப்பவர்க்கு இன்சுவை படைப்பனவாக அமைந்துள்ளன.

இந்நூலின் பெயர்ப்பொருள் ஆய்வுக்குரியது. மூன்று என்னும் சொல்லும் தொள்ளாயிரம் என்னும் சொல்லும் சேருங்கால் *"மூன்றும் ஆறும் நெடு முதல் குறுகும்", "மூன்றனொற்றே பகாரம் ஆகும்"* என்ற தொல்காப்பிய (தொல்.எழுத்து.140, 141) இயல்நூலின் முறைப்படி முதல் நெடில் குறுகி வருமொழியிலுள்ள தகரத்திற்கு இயைந்த தகரவொற்றும் பெற்று முத்தொள்ளாயிர மாயிற்று; மூன்று வகையினதாகிய தொள்ளாயிரம் பாடல்களை உடைய நூல் என்பது பொருள். மூன்று வகை யென்பது சேர, சோழ, பாண்டியன் என்ற மூவேந்தரைப் பற்றியது. இவ்வாறு கொள்ளாது மூவேந்தரைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களை உடையது என்று பொருள் விரித்து இரண்டாயிரத்து எழுநூறு பாடல்களை உடையது என்று பொருள் கூறுவது பொருந்தாது.

இலக்கண விளக்க நூலுடையார் தாம் எழுதிய பாட்டியலினகத்து எண் செய்யுளாமாறு உணர்த்துவா னெடுத்துக் கொண்டு,

"ஊரையும் பெயரையும் உவந்தெண்ணாலே சீரிதற் பாடலெண் செய்யு ளாகும்" என்ற நூற்பா கூறி, "பாட்டுடைத் தலைவன் ஊரினையும் பெயரினையும் உவந்து எண்ணாலே பத்து முதல் ஆயிரமாகவும் பொருட் சிறப்பினாலே பாடுதல் அவ்வவ்வெண்ணாற் பெயர்பெற்று நடக்கும் எண்செய்யுளாம்; அவை முத்தொள்ளாயிரம், அரும்பைத் தொள்ளாயிரம் முதலியன " என்று உரையும் வரைந்துள்ளனராதலால் அதனைப் பின்பற்றித் தொள்ளாயிரம் பாடல்களே இந்நூலில் அமைந்திருத்தல் கூடும் என்று கருதுதல் வேண்டும்.

இந்நூலாசிரியர் யார் என தெரியவில்லை. இந்நூல் அமைந்துள்ள நூற்றுமுப்பது பாடல்களும் பயில்பவருக்கு இனிய சுவை தருவன. நினைக்குந் தோறும், நினைக்குந்தோறும்,

"காமமிகு காதலன்தன் கலவியினைக்
கருதுகின்ற ஏமமிகு கற்புடையாளின்"
இன்பத்தினும் மிகுவதாய இன்பத்தினைத் திருவாசகம் நல்குவது போன்று இந்நூலும் நல்குமென்று கூறுவது மிகையாகாது.

இந்நூலில் அமைந்துள்ள பாடல்கள், பெரும்பாலும் விருந்து என்ற முறையினைப் பின்பற்றி அமைந்துள்ளன. பேராசிரியரும், நச்சினார்க் கினியரும் புதுவதாகத் தொடுக்கப்படுந் தொடர்நிலை மேலதாகிய விருந்து என்பதற்கு இந்நூலை எடுத்துக் காட்டுதலானும் அது நன்கு உணரப்படும். இந்நூல் வெண்பாக்கள் பெரும்பான்மை நான்கடியானும் சிறுபான்மை ஐந்து ஆறு அடிகளானும் வந்தன என்பதும் உணரக்கிடத்தலால் யாப்பருங்கலக் காரிகையி னுரையில் மேற்கோளாக வந்துள்ள, "பன்மாடக் கூடல்" என்ற ஆறடிச் செய்யுளாக விருத்தல் கூடுமென்று கருதி இதனகத்துச் சேர்த்தனர். இந்நூலில் சுட்டியொருவர் பெயர்கொண்ட பாடாண்திணைப் புறப்புறக் கைக்கிளைச் செய்யுள் பல அமைந்துள்ளன. கைக்கிளைப் பாடல்கள் பெரும்பாலும் பெண்பாற் கைக்கிளைப் பாடலாகவே அமைந்துள்ளன.

இந்நூலில் கடல் வாழ்த்துப்பாடல் ஒன்றும், சேரனைப் பற்றி இருபத்து மூன்று பாடல்களும், சோழனைப் பற்றி நாற்பத்து ஆறு பாடல்களும், பாண்டியனைப் பற்றி அறுபது பாடல்களும் உள்ளன.

இந்நூலில் அமைந்துள்ள சுவைமிக்கப் பாடல்கள் சில :

"கொடிபாடித் தேர்பாடிக் கொய்தண்டார் மாறன்
முடிபாடி முத்தாரம் பாடித் – தொடியுலக்கை
கைம்மனையுள் ஒச்சப் பெறுவேனோ? யானுமோர்
அம்மனைக் காவல் உளேன்" (34)

"நந்தி னிளஞ்சினையும் புன்னைக் குவிமொட்டும்
பந்த ரிளங்கமுகின் பாளையும் – சிந்தித்
திகழ்முத்தம் போற்றோன்றுஞ் செம்மற்றே தென்னன்
நகைமுத்த வெண்குடையா னாடு" (8)

"நாணாக்கால் பெண்மை நலனழியும் முன்னின்று
காணாக்கால் கைவளையுஞ் சோருமால் – காணேனான்
வண்டெவ்வந் தீர்தார் வயமான் வழுதியைக்
கண்டெவ்வந் தீர்வதோர் ஆறு" (28)

"பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்றார் இருவர் அவருள்ளும்
பொன்னோடை நன்றென்றாள் நல்லளே பொன்னோடைக்
கியானைநன் றென்றாளும் அந்நிலையள் யானை
எருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன்" (58)

முதங்கி[1] *mudangi,* பெ.(n.) வெள்ளகத்தி; sesbania grandiflora, bearing white flowers (சா.அக.).

முதங்கி[2] *mudangi,* பெ.(n.) கத்தரி வகை (சங்.அக.); a kind of brinjal.

முதம் *mudam,* பெ.(n.) உவகை; pleasure, delight. *"புந்தியின் முதமெய்தி" (கந்தபு. மீட்சிப்.11).*

முதல்[1] *mudal,* பெ.(n.) 1. தொடக்கம்; begining. *'முதலூழியிறுதிக் கண்' (சிலப்.8:1, உரை). "கழனி நெல்லின் கவைமுத லலங்க"*

(அகநா.13:19) "கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி" (குறுந்.69:3). "சுரன்முதல் வந்த உரன்மாய் மாலை" (நற்.3:6). 2. இடம் முதலியவற்றில் முதலாயிருப்பு; first, as in rank, place, etc. *"முதல் நீடும்மே" (தொல்.எழுத்து.458).* 3. கரணியம்; cause. *"நோய்முத னாடி" (குறள், 948).* 4. மூலக் கரணியனான கடவுள்; god, as the first cause. *"மூவா முதலாய் நின்ற முதல்வா" (திருவாச.27 : 10).* 5. முதலாவான்; one who is first or oldest. *"முதலாய நல்லானருளல்லால்" (திவ்.இயற்.1 : 5).* 6. தலைமை, வரிசை, மேன்மை, உயர்வு (சிலாக்கியம்) அல்லது ஏற்றம்; best, that which is superior. *முதன் மாணாக்கன்.* 7. அடைகொளி (விசேடியம்) (சைவப்.); that which is qualified. 8. செலவுக்குரிய வருவாயாக அமைத்துவைக்கும் பொன்னும் பொருளும் நிலமுமாகிய மூலவைப்பு, வைப்பு; principal, fund, capital, money yielding interest. *"முதலிலார்க் கூதியமில்லை" (குறள், 449).* 9. வேர்; root. *"முதலினூட்டு நீர்" (அரிச். பு.மீட்சி.17).* 10. கிழங்கு; tuber. 11. அடிப்பாகம்; base, foot, bottom or lowest part of anything. *"வாடிய வள்ளி முதலரிந் தற்று" (குறள், 1304).* 12. அடிமரம்; stump; lowest part of stem. *"வேங்கையைக் கறுவு கொண்டதன் முதற் குத்திய மதயானை" (கலித்.38).* 13. இடம்; place. *"சுரன்முதன் மராத்தவரி நிழல்" (சிறுபாண்.8).* 14. முதற்பொருள், 2 பார்க்க; see *mudaṟ-poruḷ*, 2. *"முதலெனப்படுவது நிலம் பொழுதிரண்டின் னியல்பென மொழிப" (தொல்.பொருள்.4).* 15. பிண்டப் பொருள்; whole, integral thing. *"முதலுஞ் சினையும்" (தொல்.சொல்.89).* 16. செலவுக்காகச் சேமிக்கும் பொருள்; stock, store. *"திருப்பூ மண்டபத்துக்கு முதலாக அளக்கவும்" (தெ.இ.கல்.தொ.iii, 215 : 11).* 17. இசைப்பாட்டு வகையுள் ஒன்று (சிலப்.3 : 41–2, உரை); a variety of tune. 18. முதலெழுத்து (நன்.59) பார்க்க; see *mudaleḻuttu.* 19. சொத்தின் கொள்முதல் விலை; cost price. *"முதல் எழுத்திலே வெள்ளெழுத்தா?", "முதல் எடுக்கும்போதே தப்பட்டைக்காரன் செத்தான்", "முதல் இல்லார்க்கு ஊதியமில்லை", "முதலை வைத்துப் பெருக்காத வணிகரைப் போல", "முதற் கோணல் முற்றும் கோணல்", "முதற்பிள்ளை மூத்திரத்திற்கு அழும்போது இரண்டாம் பிள்ளை பாலுக்கு அழுகிறதாம்", "முதலில் பிறந்த பிள்ளை முத்துப் பிள்ளை பின்னே பிறந்த பிள்ளை பீப்பிள்ளை", "முதல்ல எடுத்து செலவிடாதே", "முதலுக்கு மோசமாக இருக்கிறபோது, இலாபத்துக்குச் சண்டை போடுகிறதா?" (பழ.).*

[முன்→முந்து→முந்தல்→முதல் = முதன்மை, முதலி, முதலாளி (சு.வி.28). முந்து→முது→முதல் (வே.க.முல்.2).]

முதல்[2] *mudal,* இடை.(prep.) 1. ஏழாம் வேற்றுமையுருபு (நன்.302); termination of the locative case. *"குணமுதற் றோன்றிய... மதியின்" (மதுரைக்.195).* 2. ஐந்தாம் வேற்றுமை யுருபு; termination of the ablative case, meaning 'from henceforth'. *அடிமுதல் முடிவரை (உ.வ.).*

க. முதல்

[முதல்[1] →முதல்[2].]

முதல்[3] *mudal,* பெ.(n.) ஆவணம்; document. *இந்த முதல் இற்றைநாள் முதலியான காட்டுகையில்" (தெ.இ.கல். தொ.ப.90).*

[முதல்[1] →முதல்[3].]

முதல்⁴ *mudal,* கு.பெ.எ.(adj.) முதலான (வின்.); beginning with. *முதலாயிரம்.*

[முதல்¹ →முதல்⁴.]

முதல்⁵ *mudal,* கு.வி.எ.(adv.) முதலில்; first. *முதல்வந்தவன்.*

[முதல்¹→ முதல்⁵.]

முதல்⁶ *mudal,* பெ.(n.) உடம்பு; body. *முதலாயிரம்.*

[முழு→ (முது)→ முதல் = உடம்பு.]

முதல்செயநீர் *mudal-šeyanir,* பெ.(n.) வழலையுப்பு செயநீர்; pungent liquid prepared from quint essence salt (சா.அக.).

முதல்செலவு *mudal-šelavu,* பெ.(n.) வரவு செலவு (நாஞ்சில்); income and expenditure.

[முதல் + செலவு.]

முதல்தகவலறிக்கை *mudal-tagaval-arikkai,* பெ.(n.) காவல் நிலையத்தில் முதன்முதலில் பெறப்பட்ட குற்ற நிகழ்வைப் பற்றிய விளத்தங்கள் அடங்கிய பதிவு அல்லது குறிப்பு; information of an offence first received and recorded by the police, abbreviated to F.I.R. *இந்தக் கொலைக் குற்றத்தின் முதல் தகவல் அறிக்கையைப் பார்வையிடக் கூட வழக்கறிஞர் அனுமதிக்கப் படவில்லை.*

[முதல் + தகவல் + அறிக்கை. ***Arab.****dakhal > த. தகவல்]*

முதல்தரம் *mudal-taram,* பெ.(n.) முதற்றரம் பார்க்க; see *madarraram.*

[முதல் +தரம்.]

முதல்தீர்த்தம் *mudal-tirttam,* பெ.(n.) திருமால் கோயிலில் முதன்முதற் பெறும் தூயநீர் உயர்மதிப்பு; honour of receiving holy water first in a congregation in a *Visṇu* temple.

[முதல் + ***Skt.*** *தீர்த்தம்.]*

முதல்நிலை *mudal-nilai,* பெ.(n.) ஒரு சொல்லின் முதலில் நிற்கும் எழுத்துகள்; a letters stand first in a word.

[முதல் + நிலை]

தமிழ்மொழி அமைப்பின்படி பன்னிரண்டு உயிரும் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ ஆகிய ஒன்பதும் முதல் நிலையாக வருவது, நன்னூலார் 'நு' கரத்தையும் முதல்நிலையாக கொள்வார்.

முதல்நீட்சி *mudal-niṭci,* பெ.(n.) ஒரு சொல்லில் உள்ள முதல் உயிர் நீண்டு அந்தச் சொல்லின் இலக்கண நிலை மாற்றம் பெறுவது; grammatical change of lengethening a short vowel into a long vowel when it stands in the begining of a word.

[முதல் + நீட்சி.]

பொதுவாகச் சொன்னால் ஒரு சொல்லின் முதலுயிர் நீண்டு ஒலிப்பது; முதல் உயிர் குறிலாக இருந்து நெடிலாக மாறுவது.

(எ.கா.) உண் → ஊண்
விடு → வீடு
கெடு → கேடு (இலக்.கலை.கள.)

முதல்நிலைத்தொழிற்பெயர் *mudal-nilai-t-toḻir-peyar,* பெ.(n.) முதனிலைத் தொழிற்பெயர் பார்க்க; see *mudanilai-t-toḻirpeyar.*

[முதல்நிலை + தொழிற்பெயர்.]

முதல்நிலைதிரிந்ததொழிற்பெயர் *mudal-nilai-t-tirinda-tolirpeyar,* பெ.(n.) முதனிலைதிரிந்ததொழிற்பெயர் பார்க்க; see *mudanilai-tirinda-tolirpeyar.*

[முதல்நிலை + திரிந்த + தொழிற்பெயர்.]

முதல்நூல் *mudal-nūl,* பெ.(n.) 1. தொடக்கப் பாடநூல்; primer. *கூட்டுறவு முதல் நூல்.* 2. முதனூல் பார்க்க; see *mudanūl.*

[முதல் + நூல்.]

சிறந்த அறிவுடையவரால் இயற்றப்பட்டு அதன் வழியில் பல நூல்கள் எழுதப்படுவதற்கான அடிப்படை நூல்.

முதல்பிடி *mudal-pidi,* பெ.(n.) 1. சீட்டு நிறுவனம் நடத்துவோன் (நெல்லை.); conductor of a chit fund. 2. காசாளர்; treasurer.

[முதல் + பிடி.]

முதல்மந்திரி *mudal-mandiri,* பெ.(n.) முதலமைச்சர் பார்க்க; see *mudal-amaiccar.*

*[முதல் + **Skt.**மந்திரி.]*

முதல்மரியாதை *mudal-mariyādai,* பெ.(n.) கோயில் முதலியவற்றில் முதலாவதாகப் பெறும் மதிப்புரவு (மரியாதை); first preference in doing the honours, as at a temple.

*[முதல் + **Skt.** மரியாதை.]*

முதல்முதலாக *mudal-mudalāga,* பெ.(n.) முதன்முதலாக பார்க்க; see *mudan-mudalāga.*

முதல்வஞ்சி *mudal-vañji,* பெ.(n.) முதுமொழி வஞ்சி (புறநா.37, முதற்குறிப்பு) பார்க்க; see *mudal-vañji.*

[முதல் + வஞ்சி.]

முதல்வடி *mudal-vadi,* பெ.(n.) 1. முதலில் வடிக்கும் சாறு (இ.வ.); juice obtained in the first distillation. 2. முதலில் வடித்த சாராயம் (வின்.); alcohol obtained in the first distillation.

[முதல் + வடி.]

முதல்வர் *mudalvar,* பெ.(n.) 1. முதலாயினார் persons begining with. *"முந்தை முதல்வர்" (பு.வெ.1: 19). "நான்மறை முதல்வர் சுற்ற மாக" (புறநா.26:13).* 2. வானவர் (சது.); celestials.

[முதல் → முதல்வர்.]

முதல்வள்ளல்கள் *mudal-vallalgal,* பெ.(n.) வரையாது கொடுப்போராகிய செம்பியன், காரி அல்லது சகாரி (ஆ.நி.) விராடன், நிருதி, துந்துமாரி, சகரன், நளன் என ஏழு வள்ளல்கள் (சூடா.); the liberal chiefs of the first order whose bounty knows no limit seven in number, viz *Šembiyan, Kāri* or *Šakāri* according to *Aciriyanikandu, Virādan, Nirudi, Dandumāri, Šagaran, Nalan.*

[முதல் + வள்ளல்கள்.]

முதல்வன் *mudalvan,* பெ.(n.) 1. தலைவன்; one who is first, chief, head. *"மூவர்க்கு முதல்வ ரானார்" (தேவா. 453 : 2).* 2. எல்லாப் பொருட்கும் மூலமான இறைவன்; god, as the First Cause. *"ஞாலமூன் றடித்தாய முதல்வன்" (கலித்.124). "முதுமுதல்வன்*

வாய்போகா" (புறநா.166:2). 3. அரசன் (திவா.); king. 4. தந்தை; father. *"தன்முதல்வன் பெரும்பெயர்" (கலித்.75).*

[முதல் → முதல்வன்.]

முதல்வன்சேய் *mudalvan-šēy,* பெ.(n.) முருகன் (உரி.நி.); god Murugaṉ.

[முதல்வன் + சேய்.]

முதல்வன்வாக்கு *mudalvaṉ-vākku,* பெ.(n.) தோன்றியம் (ஆகமம்) (பிங்.); the *Agamas.*

[முதல்வன் + வாக்கு.]

முதல்வாடாக்கடன் *mudal-vāḍā-k-kaḍaṉ,* பெ.(n.) முதல் அழியாத நிலையில் வட்டி மட்டும் தொடர்ந்து செலுத்தும் கடன் தொகை; loan which is paid continuously only with interest not along with principal. *"இவர் பக்கல் நாங்கள் முதல் வாடாக் கடனாக பொரிசை இடகைக் கொண்ட காசு நாலாயிரம்" (தெ.இ.கல்.தொ.8, கல்.345).*

[முதல் + வாடா + கடன். முதல் குறையாமல் வட்டி மட்டும் தொடர்ந்து செலுத்தும் கடன்.]

முதல்வாடை *mudal-vāḍai,* பெ.(n.) முதன் முதலிற் நீர்ப்பாயும் வயல்கள் (W.G.); block of fields nearest the source of irrigation.

[முதல் + வாடை. வாடை = வரிசை.]

முதல்வாதி *mudal-vādi,* பெ.(n.) மாழை; metal (சா.அக.).

முதல்வி *mudalvi,* பெ.(n.) தலைவி (சூடா.); lady of first rank; mistress. *"மனுஷ்யப் பெண்களுக்கும் இவளே முதல்வி யென்றவாறு" (தக்கயாகப்.321, உரை).*

[முதல்வன் →முதல்வி.]

முதல்வினை *mudal-viṉai,* பெ.(n.) முதற் பெயருக்கு உரிய வினை; personal noun in the form of a finite verb or personal noun derived from a verbal root.

[முதல் + வினை.]

ஒரு முற்றுத்தொடரில் முதற்பெயரும் சினைப் பெயரும் பயன்படும் பொழுது அந்தப் பெயர்களுக்குத் தனித்தனியே வினைகள் அமைவதுண்டு. முதற்பெயருக்கு உரிய வினையை முதல்வினை என்றும் சினைப் பெயருக்கு உரிய வினையைச் சினைவினை என்றும் கூறுவர்.

(எ.டு.) யானை கால் ஒடிந்து விழுந்தது.

ஒடிந்து – சினைவினை

விழுந்தது – முதல்வினை (இலக்.கலை.கள.)

முதல்வெண்குருத்து *mudal-veṇ-kuruttu,* பெ.(n.) முதன்முதலில் தோன்றும் குருத்து (பிங்.); first sprout.

[முதல் + வெண் + குருத்து.]

முதல்வேதம் *mudal-vēdam,* பெ.(n.) முதல் மறையாகிய இருக்கு (பிங்.); Rig *Vēda,* as the first *Vēda.*

[முதல் + Skt. வேதம்.]

முதல்வேர் *mudal-vēr,* பெ.(n.) அடி வேர்; tap root.

[முதல் + வேர்.]

முதலக்கரம் *mudal-akkaram,* பெ.(n.) முதலெழுத்து பார்க்க; see *mudal-eḻuttu.*

[முதல் + அக்கரம். Skt. a-ksara> த. அக்கரம் = எழுத்து.]

முதலடி *mudal-aḍi*, பெ.(n.) 1. தொடக்கம் (இ.வ.); beginning. 2. ஆண்டின் முதல் விளைச்சல் (மகசூல்) (தஞ்சை.); first corp. of the year.

[முதல் + அடி.]

முதலடிப்பருவம் *mudalaḍi-p-paruvam*, பெ.(n.) உழுவதற்கேற்ற முதற் பருவம் (தஞ்சை.); first ploughing season.

[முதலடி + பருவம்.]

முதலமைச்சர் *mudal-amaiccar*, பெ.(n.) இந்தியாவில் மாநிலத்தை அல்லது நடுவண் அரசின் நேரடிப் பார்வைக் கீழ்வரும் பகுதியை ஆளும் அமைச்சரவையில், முதன்மைப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர்; in India chief minister of a state, etc.

[முதல் + அமைச்சர்.]

"அறநிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோ செய்தே னாகுக" (புறநா.71)
"நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்குகக்
கொடிதோர்த்த மன்னவன்" (கலித்.8)

என்னும் பகுதிகள் முதலமைச்சன் அரசியலில் எவ்வளவு தனிப் பொறுப்பும் அதிகாரமும் வாய்ந்தவன் என்பதை உணர்த்தும். உயர்குடிப் பிறப்பும் ஒழுக்கமும் மதிநுட்பமும் இலக்கண இலக்கிய திறனும், நெஞ்சுரனும், அரசியல் வினைத் திட்பமும் அரசனது குறிப்பறிந்து ஒழுகும் ஆற்றலும், அரசன் சிறப்பாக நுகரும் பொருளை விரும்பா இயல்பும், அரசனிடத்துங் குடிகளிடத்தும் அன்பும் எவ்வகையினும் அறைபோகா உள்ளமும், அறவுணர்ச்சியும் சொல்வன்மையும், தோற்றப் பொலிவும், மகப்பேற்றுடன் சுற்றமும் உடையவனே, முதலமைச்சனாக அமர்த்தப் பெறுவான் (பழந்தமிழாட்சி பக்.33).

முதலவன் *mudalavaṉ*, பெ.(n.) குல முதல்வன்; patriarch. *"முதலவன் முதலிய முந்தையோர்" (கம்பரா.பள்ளிபடை 50).*

[முதல்வன் →முதலவன்.]

முதலற்றுப்போ–தல் *mudalaṟṟu-p-pō-*, 8 செ.கு.வி.(v.i.) அடியோடழிதல் (வின்.); to be totally extinguished, as family; to be eradicated.

[முதல் + அற்றுப்போ–தல். அற்றுப்போதல் = அழிந்து போதல்.]

முதலறவு *mudalaṟavu*, பெ.(n.) முதலற்றுப்போ–தல் பார்க்க; see *mudal-aṟṟu-p-pō*. *"முற்பாற்கிழமை முதலறவின்றி" (பெருங். மகத.தருச.18, 25).*

முதலனுமானம் *mudal-aṉumāṉam*, பெ.(n.) முதற் காரணத்தைக் கொண்டு அனு மானிக்கை (வின்.); direct inference of an effect from a root-cause, as that the rain-clouds will rain.

[முதல் + அனுமானம்.]

முதலாய் *mudal-āy*, கு.வி.எ.(adv.) கூட; even. *தண்ணீர் முதலாய் இங்கே கிடையாது (வின்.).*

[முதல் →முதலாய்.]

முதலாயிரம் *mudal-āyiram*, பெ.(n.) நாலாயிரப் பனுவலில் (நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்) முதலாவது பகுதி; the first of the four sections of *Nālāyira-p-pirabandam*.

[முதல் + ஆயிரம்.]

முதலாழ்வார்கள் *mudalāḻvārgaḷ*, பெ.(n.) மாலிய ஆழ்வார்களில் முதலில்

தோன்றியதாகக் கருதப்படும் பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்; *Vaiṣṇava* canonised saints.

[முதல் + ஆழ்வார்கள்.]

முதலாளி *mudalāḷi,* பெ.(n.) 1. ஆட்களை வேலைக்கு அமர்த்திச் சொந்தத் தொழிலோ வணிகமோ செய்பவர்; one who invests in and runs a business, industry, etc; proprietor; owner. *முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையே நல்லுறவு நிலவுகின்றது. தேயிலைத் தோட்ட முதலாளி.* 2. மூலவைப்புள்ளவன் (மூலதனம்); capitalist. 3. தொழிற்சாலை அல்லது வணிகநிலைய உரிமையாளர்,சொந்தக்காரர்; proprietor. 4. பெருநிலக்கிழார்; land lord. 5. தலைவன்; chief, president, responsible person.

[முதல் + ஆளி. ஆள் →ஆளி.]

முதலாளித்துவம் *mudalāḷittuvam,* பெ.(n.) நாட்டின் பொருளியலை அளவிடும் உருவாக்கப் பொருள்கள் பெருமளவில் தனியார் உடைமைகளாக இருக்கும் அமைப்பு; capitalism. *முதலாளித்துவம் இல்லாத நாடு உலகினில் இல்லை.*

[முதலாளி → முதலாளித்துவம்.]

முதலான *mudal-āṉa,* கு.வி.எ.(adj.) தொடக்கமாகவுடைய; beginning with.

[முதல் →முதலான.]

முதலி[1] *mudali,* பெ.(n.) 1. தலைவன்; head, chief. *எங்கண் முன்பெருமுதலி யல்லை யோவென (பெரியபு.கண்ணப்.177).* 2. பெரியோன்; saint, religious teacher. *"மூவர் முதலிகளுந் தேவாரஞ்செய்த திருப்பாட்டும்" (ஏகாம். உலா, 78) (ஈடு, 6. 1: 1).* 3. முதலியார், 3 பார்க்க (E.T.I, 84); see *mudaliyār,* 3.

க.மொதலிக

[முதல் → முதலி.]

முதலி[2] *mudali,* பெ.(n.) 1. தாழை (பரி.அக.); fragrant screw pine. 2. சீமையிலுப்பை (இ.வ.); sapodilla.

[முசலி → முதலி.]

முதலி[3] *mudali,* பெ.(n.) அரசின் முதன்மை அலுவலர் (MER.1923-24, p,103); chief officer of the state.

[முதல் → முதலி.]

முதலிடைப்போலி *mudal-iḍai-p-pōli,* பெ. (n.) செந்தமிழ் வழக்கில் வழங்கிவரும் ஒரு சொல் அதே பொருளில் உருவில் சில மாற்றங்களோடு வழங்குவது; letter or syllable substituted for another different in sound as in ஐயர் – அய்யர்.

[முதல் + இடை + போலி.]

வகை – 6

1. முதல்போலி–ஐயர்–அய்யர்
2. இடைப்போலி–உடைமை–உடமை
3. கடைப்போலி–பந்தல்–பந்தர்
4. முதலிடைப்போலி–ஐந்தாறு –அஞ்ஞூறு
5. இடைகடைப்போலி–புலையச்சி–புலைச்சி
6. முற்றுப்(முழுவதும்) போலி-ஐந்து–அஞ்சு

(இலக்.கலை.கள.)

முதலிமை *mudalimai*, பெ.(n.) தலைமை (புதுக்.கல்.361); head-ship.

[முதலி → முதலிமை. முதலி = தலைவன்.]

முதலிய *mudaliya*, பெ.அ.(adj.) ஒரு தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவைத் தொடக்கமாக உடைய; beginning with. *புகையிலை, பொறிகள் (இயந்திரங்கள்), மருந்துப் பொருட்கள் முதலியவற்றின் மீது புதிய வரி சுமத்தப்பட்டுள்ளது. இந்தியா, இலங்கை முதலிய நாடுகள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும்.*

[முதல் → முதலிய.]

முதலியாண்டான் *mudali-y-āṇḍāṉ*, பெ.(n.) 1. இராமானுசரின் முதன் மாணாக்கருள் ஒருவரான திருமாலடியார் (அஷ்டப். திருமரங்க .ஊச.21); a Vaisṇava *Acārya* the chief disciple of *Rāmāṉuja*. 2. வழிபடுவோர் தலையில் வைக்கப்படுவதும் இராமனுசரின் திருவடி நிலையுள்ளதுமான மகுடம்; a crown bearing the image of *Rāmāṉuja's* sandals, used in temples of *Rāmāṉuja* for blessing worshippers by placing it on their heads.

[முதலி + ஆண்டான்.]

முதலியார் *mudaliyār*, பெ.(n.) 1. தலைவன்; head, chief. *முதலியார் என்னவும் பண்ணி (ஈடு, 4. 1:7) (I.M.P. Tj.1634).* 2. இலங்கையரசால் வழங்கப்படும் பட்டப் பெயர்; a honorific tittle bestowed by the Ceylon Government. 3. வேளாளருள் ஒரு பிரிவினர்க்கும், செங்குந்தருக்கும், தஞ்சை மாவட்டத்திலுள்ள சமணருள் ஒரு பிரிவினருக்கும் உரிய குலப் பட்டப் பெயர்; a caste title of a sect of *Vēḷaḷar*, of *Šeṅgundar* and of a sect of Jains in the Tanjore District.

[முதலி → முதலியார்.]

முதலியோர் *mudaliyōr*, கு.வி.எ.(adv.) முதலிய பிறர்; and such other. *கட்டாய இந்தியை எதிர்த்துத் தமிழைக் காத்தவர், மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார் முதலியோராவர்.*

[முதல் → முதலியோர்.]

முதலிரவு *mudal-iravu*, பெ.(n.) மணமகனும் மணமகளும் திருமணம் முடிந்தபின் முதன்முதலில் கலந்து கொள்ளும் இரவு; the night fixed for consummation of marriage.

[முதல் + இரவு.]

முதலில் *mudalil*, வி.அ.(adv.) ஆரம்பிப்பதற்கு முன், தொடக்கமாக; at first, first of all; to begin with. *நான் முதலில் உங்களுக்கு வணக்கம் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் முதலில் எங்குச் செல்ல வேண்டும்.*

[முதல் → முதலில்.]

முதலில்வருஞ்சனி *mudalil-varuñ-jaṉi*, பெ.(n.) பத்தாவது விண்மீனான கொடுநுகம் (மகம்); the 10th naksatra.

முதலிற்கூறும்சினையறிகிளவி *mudaliṟ-kūṟum-šiṉai-y-aṟi-kiḷavi*, பெ.(n.) தொல்காப்பியரின் கோட்பாட்டின்படி முதலுக் குரிய பெயர் சினையை உணர்த்தும் வகையில் ஆளப்படும் சொல்; a kind of metonymy, where the whole is put for its part.

[முதலில் + கூறும் + சினையறி + கிளவி.]

நன்னூலார் இதனை முதலாகுபெயர் என்பர். 'இப்பூ தாமரை' என்ற வழி தாமரை என்ற முதலின் பெயர் 'பூ' என்ற சினையை உணர்த்தினமையால் இது முதலிற் கூறும் சினையறி கிளவி (கிளவி – சொல்) (இலக்.கலை.கள.).

முதலீடு *mudal-īḍu,* பெ.(n.) 1. முதலி விடுகை; placing first. 2. முதலிலிட்ட பொருள்; that which is placed first. 3. முதலில் செலுத்துந் தொகை (இ.வ.); the first instalment. 4. ஆண்டின் முதலறுவடை (இ.வ.); the first crop of the year. 5. வணிக முதல் (சிலப்.9 : 74, அரும்); capital invested in trade. 6. அசல் கடன் தொகைக்குப் பணஞ் செலுத்துகை; repayment of principal amount of a loan. *கொடுப்பதை முதலீடாக வைத்துக் கொள்ளலாம்.*

[முதல் + ஈடு.]

முதலீற்று *mudal-īṟṟu,* பெ.(n.) 1. முதன் முதலாக ஈனுகை; first calving. 2. தலையீற்றுக் கன்று; first born calf, firstling.

[முதல் + ஈற்று.]

முதலு¹-தல் *mudalu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. முதலாதல்; to commence, begin, come first. *"முதலா வேன தம்பெயர் முதலும்" (தொல்.எழுத்து.66).* 2. தொடக்க முடையதாதல்; to have a beginning. *"மூவா முதலா வுலகம்" (சீவக.1).*

[முதல் → முதலு-தல். முதலில் தோன்றுவது அல்லது முதலாக வருதல்.]

முதலு²-தல் *mudalu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தலைமை உடைத்தாதல்; to have as the origin; to begin with. *"அகரமுதல வெழுத்தெல்லாம்" (குறள், 1).*

[முதல் → முதலு-தல்.]

முதலுதவி *mudal-udavi,* பெ.(n.) காய முற்றவருக்கு அல்லது திடீரென நோயுற்றவருக்கு மருத்துவரிடம் காட்டும் வரை பயனளிக்கக் கூடியதாக அளிக்கப்படும் உடனடி மருத்துவம்; first aid. *தற்கால மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் முதலுதவி செய்வதற்குத் தாமாகவே முன் வர வேண்டும் என முதலமைச்சர் கூறினார்.*

[முதல் + உதவி.]

முதலூழி *mudal-ūḻi,* பெ.(n.) ஊழிமுதல்; first yuga. *"முதலூழி யின்பம்வர" (தஞ்சைவா. 286).*

[முதல் + ஊழி. ஊழி = கடற்கோளால் உலகம் முடியுங் காலம்.]

முதலெழுஞ்சனி *mudal-eḻuñ-jaṉi,* பெ.(n.) முதலில்வருஞ்சனி பார்க்க; see *mudalil-varuñjaṉi.*

[முதல் + எழும் + சனி.]

முதலெழுத்து *mudal-eḻuttu,* பெ.(n.) தமிழ் மொழியின் பயன்பாட்டிற்கு முதலாக உள்ள உயிரெழுத்துப் பன்னிரண்டும் மெய்யெழுத்து பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகள்; the primary letters comprising the twelve vowels and the eighteen consonants.

[முதல் + எழுத்து.]

முதலை¹ *mudalai,* பெ.(n.) நீரில் வாழும் நீணாள் உயிரி; crocodile. *"நெடும் புனலுள் வெல்லு முதலை" (குறள், 495). "இருங்கழி முதலைமே எந்தோ லன்ன" (அகநா.3:1), "கொடுங்கால் முதலைக் கோள்வ லேற்றை" (குறுந்.324). "முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா", "முதலைவாய் பிள்ளை மீண்டுவருமா" (பழ.).*

ம. முதல.

[முதல் → முதலை = திரண்ட மர அடி போன்ற நீருயிரி.]

முதலை வகை : 1. முதலை (gavial) = தென்னாசியாவிற் பெரும்பான்மையாகக் காணப்படும் முதலை. 2. இடங்கர் (Crocodile) = வட ஆப்பிரிக்காவில் பெரும்பான்மையாகக் காணப்படும் முதலை. 3. கராம் (allegator) = தென் அமெரிக்காவில் பெரும்பான்மையாகக் காணப்படும் முதலை (சொ.ஆ.க.38).



முதலை² *mudalai,* பெ.(n.) 1. இறகின் அடிக்குருந்து; quill of a feather. 2. செங்கிடை; prickly sesban.

[முதல் → முதலை.]

முதலை³ *mudalai,* பெ.(n.) திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டத்திலுள்ள ஊர்; a village in Tirunelveli district in *Nāṅgunēri* Taluk. *முதலைக் குளம் என்ற ஊர்ப் பெயரே முதலை என்று குறுகி வழங்குகிறது.*

[முதல் → முதலை.]

முதலைக்கண் *mudalai-k-kaṇ,* பெ.(n.) முன் தள்ளிய விழி (இ.வ.); protuberant eye, as of a crocodile, goggle eye.

[முதலை¹ + கண்.]

முதலைக்கண்ணீர் *mudalai-k-kaṇṇīr,* பெ.(n.) இரக்கப்பட வேண்டிய ஒரு செய்தியால் வருத்தம் இல்லாமல், வருந்துவதாகக் காட்டி வெளிப்படுத்தும் போலிக் கண்ணீர் அல்லது செய்கை; crocodile tears. *அவனுக்குக் கெடுதி செய்துவிட்டு முதலைக் கண்ணீர் வடிக்கிறான். அவரது பேச்சு வெறும் முதலைக் கண்ணீர் தான், நம்பி விட வேண்டாம்.*

[முதலை + கண்ணீர்.]

முதலைக்கு இமைகள் கிடையாது. அதன் கண்கள் காய்ந்து போகாவண்ணம் அதன் கண்ணில் நீர் சுரந்து வழிந்து கொண்டிருக்கும். அதைக் கண்டு முதலை அழுவதாகக் கொள்ளக் கூடாது. அதுபோல் யாராவது போலியாகக் கண்ணீர் வடித்தால் அதை முதலையின் கண்ணீர்க்கு ஒப்பிடுவது உலக வழக்கு.

முதலைக்கோரை *mudalai-k-kōrai,* பெ.(n.) கோரை வகை (வின்.); a tall sedge - *Cyperusdubius.*

[முதலை + கோரை.]

முதலைதள்ளு-தல் *mudalai-taḷḷu-,* 5 செ.கு.வி.(v.i.) கண் வெளிப் பிதுங்குதல் (இ.வ.); to have bulging eyes.

[முதலை + தள்ளு-தல்.]

முதலைநெய் *mudalai-ney,* பெ.(n.) முதலையினின்று எடுக்கும் நெய், இது இழுப்பு மற்றும் காற்று பிடிப்பு (சன்னி, வாதம்) நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகிறது; fat extracted from crocodile, used for delirium and rheumatism (சா.அக.).

[முதலை + நெய்.]

முதலைப்பூண்டு *mudalai-p-pūṇḍu,* பெ.(n.) 1. நீரரளி; red shanks - *Polygonum genus.* 2. ஆற்றலரி; alligators' nose -

முதலை வகைகள்



polygonum barbatum, leaves used in infusion in colic, seeds carminative, another species is glaborum (சா.அக.).

[முதலை + பூண்டு.]

முதலையார் *mudalaiyār*, பெ.(n.) வன்மீன் பிடிப்பவர்; one who catches dangerous fishes.

[முதலை → முதலையார்.]

முதலைவாதக்காய்ச்சல் *mudalai-vāda-k-kāyccal*, பெ.(n.) காற்று பிடிப்பினால் (வாதம்) உண்டாகும் காய்ச்சல்; a kind of rheumatic fever.

*[முதலை + **Skt.** வாதம் + காய்ச்சல்.]*

முதலோன் *mudalōṉ*, பெ.(n.) கடவுள்; god, as the First Cause. *"செஞ்சடை முதலோன்" (கம்பரா.நிகும்பலை.142).*

[முதலவன் → முதலோன்.]

முதள் *mudaḷ*, பெ.(n.) மொக்கு (சங்.அக.); bud.

மறுவ. போது, மொட்டு, அரும்பு.

[முகிழ் → முதள்.]

முதளை *mudaḷai*, பெ.(n.) ஆற்றலரி (வின்.); alligator's nose - *Polygonum barbatum*.

முதற்கடவுள் *mudaṟ-kaḍavuḷ*, பெ.(n.) முதல் தெய்வம்; the Supreme Being.

[முதல் + கடவுள்.]

முதற்கடன் *mudaṟ-kaḍaṉ*, பெ.(n.) 1. தலைமையான கடமை; prime duty. 2. உழவுத் தொழிற்காக முன் கொடுக்கும் பணம்; advance of money to ryots, agricultural loan.

[முதல் + கடன்.]

முதற்கண் *mudaṟkaṇ*, கு.வி.எ.(adv.) முதலில்; at first, at the outset, first of all. *அவையில் இருப்போருக்கு முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறைகளை எவ்வாறு நீக்குவது என்பது பற்றி முதற்கண் ஆராய்வோம்.*

[முதல் + கண்.]

முதற்கரு[1] *mudaṟ-karu*, பெ. (n.) நஞ்சுக் கொடி; அதாவது பிண்டத்தில் சேர்ந்து நின்ற (சவ்வு) கொடி; placental cord.

[முதல் + கரு.]

முதற்கரு[2] *mudaṟ-karu*, பெ.(n.) மூளை (அரு.அக.); brain-matter.

[முதல் + கரு.]

முதற்கருவி *mudaṟ-karuvi*, பெ.(n.) 1. முதற்காரணம் பார்க்க; see *mudaṟ-kāraṇam*. 2. ஆடல் பாடல்களின் தொடக்கத்தில் இசைக்கும் மத்தளம் (சிலப். 3:27, உரை); a kind of drum used to introduce music and dancing.

[முதல் + கருவி.]

முதற்கற்பம் *mudaṟ-kaṟbam*, பெ.(n.) 1. வங்கச் செந்தூரம்; calcined red powder of white lead. 2. அயக்காந்தச் செந்தூரம்; calcined red powder of iron and lead stone.

முதற்காரணகாரியம் *mudaṟ-kāraṇa-kāriyam*, பெ.(n.) செயற்படும் காரணப் பொருள் (வின்.); primary or material cause.

[முதல் + காரணகாரியம்.]

முதற்காரணம் *mudar-kāraṇam,* பெ.(n.) காரிய நிகழ்ச்சிக்கு இன்றியமையாத காரணம் (நன்.296, மயிலை); primary or material cause.

[முதல் + காரணம்.]

முதற்காரன் *mudar-kāraṉ,* பெ.(n.) முதலாளி (வின்.); capitalist.

[முதல் + காரன்.]

முதற்காலம் *mudar-kālam,* பெ.(n.) 1. இசையின் விளம்ப காலம்; slow measure in beating time, as the first or starting measure of a song. 2. கோயிலிற் காலையிற் செய்யும் முதற் பூசை; first pooja in a temple in the morning.

[முதல் + காலம்.]

முதற்குட்டம் *mudar-kuṭṭam,* பெ.(n.) உடம்பில் சொறியுண்டாகி மயிர் சிலிர்த்து திமிருண்டாகி நிறம் மாறும் ஒருவகைக் குட்டம்; a kind of leprosy in its first stage causing itches all over the body with benumbing (சா.அக.).

[முதல் + குட்டம்.]

முதற்குறிப்புமொழி *mudar-kurippu-moḻi,* பெ.(n.) முதல் நூல் முதற் செய்யுளைக் குறிப்பது; mention, first book and first poem.

[முதல் + குறிப்பு + மொழி.]

முதற்குறை *mudar-kurai,* பெ.(n.) 1. சொன் முதலில் எழுத்துக் குறைந்து வரும் செய்யுள் உறழ்ச்சி (விகார.) வகை (நன்.156. உரை); poetic licence which consists in the shortening of a word by one or more letters at the beginning as *marai* for *tāmarai.* 2. காரிய தொடக்கத்திற்றானே யுள்ள குறை; Initial defect or mistake. *முதற்குறை முற்றுங்குறை.* 3. முதலாவதாயுள்ள தேவை; primary need.

[முதல் + குறை.]

முதற்கைகொடு–த்தல் *mudar-kai-koḍu-,*4 செ.கு.வி.(v.i.) கையால் தழுவி அன்புகாட்டுதல் (புறநா.24, உரை) (திருமுரு. 216, உரை); to show one's great love by taking in one's arms.

[முதல் + கைகொடு–த்தல்.]

முதற்கொடி *mudar-koḍi,* பெ.(n.) இளந்தளிர் (வின்.); the first sprout of a creeper.

[முதல் + கொடி.]

முதற்கொண்டு *mudar-koṇḍu,* இடை. (part.) குறிப்பிடுவது தொடங்கி வரிசையாக அல்லது தொடர்ச்சியாக; from some thing on words to. *இந்தக் கடையில் 'கடுகு' முதற்கொண்டு அனைத்தையும் வாங்க முடியும். புதிய பாடத்திட்டம் இவ்வாண்டு முதற்கொண்டு நடைமுறைக்கு வருகிறது.*

[முதல் + கொண்டு.]

முதற்சங்கம் *mudar-caṅgam,* பெ.(n.) முக்கழகங்களில் முதலாவது கழகம்; the first of the three *Šaṅgams.*

[முதல் + சங்கம்.]

முதற்சீர் *mudar-cīr,* பெ.(n.) ஈரசைச்சீர் (வீரசோ.யாப்.2); metrical foot of two syllables.

[முதல் + சீர்.]

முதற்தூசு *mudar-tūšu,* பெ.(n.) முதற்பூப்பு; the first menses.

[முதல் + தூசு.]

முதற்பட்சம் *mudar-paṭcam,* பெ.(n.) முதலில் வைத்து எண்ணத் தக்கது (உ.வ.); first thing to be considered.

முதற்பா *mudarpā,* பெ.(n.) முற்பா (பிங்.); see *murbā.*

முதற்பாதம் *mudar-pādam,* பெ.(n.) 1. கோள்கள் (கிரகங்கள்), விண்மீனின் (நட்சத்திரங்கள்) நான்கு பாதங்களுள் முதற்காலில் செல்லுங் காலம்; time taken by a heavenly body to pass the first quarter of a naksatra. 2. வலது முன்னங் கால்; foreleg of cattle. 3. முதல்தர போக்கிலி (உ.வ.); rogue of the first order.

[முதல் + பாதம்]

முதற்பாவாடை *mudar-pāvāḍai,* பெ.(n.) வேலைக்காரர் தலைவன் (I.M.P. Cg.146); chief servant.

[முதல் + பாவாடை.]

முதற்பிண்டம் *mudar-piṇḍam,* பெ.(n.) தலைப்பிண்டம்; the first foetus.

[முதல் + பிண்டம்.]

முதற்பெயர் *mudar-peyar,* பெ.(n.) முழுப் பொருளைக் குறிக்கும் பெயர் (நன்.281); name which denotes the whole object.

[முதல் + பெயர்.]

முதற்பேர் *mudar-pēr,* பெ.(n.) தலைமை வேலைக்காரன் (நாஞ்.); head peon.

ம. முதற்பேர்

[முதல் + பேர்.]

முதற்பேறு *mudar-pēṟu,* பெ.(n.) 1. தலைப் பிள்ளை; first-born child. 2. முதற்பலன்; first fruits.

[முதல் + பேறு.]

முதற்பொருள் *mudar-poruḷ,* பெ.(n.) 1. கடவுள்; god. 2. அகப்பொருட்குரிய நிலம் பொழுதுகளின் இயல்பு (தொல்.பொருள்.4); nature of land and seasons. 3. முதலீடு (சங்.அக.); capital invested in a business. 4. முதற்பெயர் (தொல்.சொல்.59, தெய்வச்.) பார்க்க; see *mudar-peyar.*

[முதல் + பொருள்.]

முதற்போலி *mudar-pōli,* பெ.(n.) மூவகைப் போலிகளுள் பொருள் வேறுபாடின்றி ஒத்து நடப்பது (இலக்.); one of the three kinds of *`pōli'* (gramm.).

சொல்லுக்கு முதலிலும் சகர ஞகர யகரங்களுக்கு முன்னும் அகரமும் ஐகாரமும் ஒத்து நடப்பது (நன்னூல்.123, உரை).

பசல் – பைசல்; மஞ்சு மைஞ்சு, மயல் – மையல்.

முதற்றரம் *mudarraram,* பெ.(n.) 1. முதற்றடவை; first time. 2. முதன்மை யானது; first class or grade; that which is first rate.

[முதல் + தரம்.]

முதற்றிரமம் *mudarriramam,* பெ.(n.) சோழர் காலத்தில் வாங்கிய வரி வகை (சோழ.ii : 334); a tax.

முதற்றிருவந்தாதி *mudarriru-v-andādi,* பெ.(n.) நாலாயிரத் தெய்வப் பனுவில் உள்ளதும் பொய்கையாழ்வாரால்

இயற்றப்பட்டதுமான அந்தாதி நூல்; a poem in *Nālāyira-p-pirapandam* by *poygai-āḻvār*.

[முதல் + திருவந்தாதி.]

முதன்மடை *mudaṉ-maḍai,* பெ.(n.) 1. தலை வாய்க்கால்; head of a water channel. 2. முதன்மடை பாயும் நிலம்; field near the head of an irrigation source.

[முதல் + மடை.]

முதன்மரியாதை *mudaṉ-mariyādai,* பெ.(n.) முதலிற் செய்யும் சிறப்பு, மதிப்புரவு; first honours.

[முதல் + Skt. மரியாதை.]

முதன்மறிநிலை *mudaṉ-maṟi-nilai,* பெ.(n.) சினைப் பெயர் முதற்கும் முதற்பெயர் சினைக்கும் வரும் அணி வகை (யாழ்.அக.); a figure of speech which consists in applying *Śiṉai-p-peyar* instead of *mudaṟ-peyar* and vice versa.

[முதல் + மறிநிலை.]

முதன்முதல் *mudaṉ-mudal,* பெ.(n.) தொடக்க காலம்; the very first time.

[முதல் + முதல்.]

முதன்முதலாக *mudaṉ-mudalāga,* வி.அ. (adv.) இதற்கு முன் இல்லாமல் முதல் முறையாக; at first, for the first time. *இந்தக் கலை முதன் முதல் எங்கு உருவானது? கிராமத்தில் இருந்து வந்த எனது தாத்தா இப்போது தான் முதன்முதலாக வானூர்தியைப் பார்க்கிறார்.*

[முதல் + முதலாக.]

முதன்முன்னம் *mudaṉ-muṉṉam,* பெ.(n.) தொடக்கம்; the very beginning. *"அடியே னடைந்தேன் முதன் முன்னமே" (திவ். திருவாய்.2. 3 : 6).*

[முதல் + முன்னம்.]

முதன்மை *mudaṉmai,* பெ.(n.) 1. முன்னுரிமை பெற்று முதலிடம் வகிப்பது அல்லது குறிப்பிடத்தக்கதாக அமைவது; primary importance. *நம் நாட்டில் உழவுத் தொழிலே முதன்மைத் தொழிலாக உள்ளது. இன்றையக் கல்வியில் அறிவியல் முதன்மையாக உள்ளது.* 2. பதவியில், அலுவலகத்தில் தலைமை; officials chief, one who is in a high designation in a office. *முதன்மைப் பொறியாளர் வந்தார். அவர்தான் முதன்மை வழக்குறைஞர். இதுதான் வங்கியின் முதன்மை அலுவலகம்.* 3. தலைமை; priority; superiority; supremacy. *"கணித மாக்களை முடிவுற நோக்கியோர் கூறி முதன்மை" (கம்பரா. மந்தரை.1).*

[முதல் → முதன் →முதன்மை.]

முதன்மைவினை *mudaṉmai-viṉai,* பெ.(n.) தொடர் நிலையிலும் பொருள் நிலையிலும் தனித்து இயங்கக் கூடியதும் வினை யடையையும் துணை வினையையும் ஏற்கக் கூடியதுமான வினைச்சொல்; main verb.

[முதன்மை + வினை.]

முதனடை *mudaṉaḍai,* பெ.(n.) இயக்கம் நான்கனுள் மிகத் தாழ்ந்த செலவினை யுடைய பாடல் (சிலப்.3 : 67, உரை); slow-measured song, one of the four varieties of *iyakkam*.

[முதல் + நடை.]

இயக்கம் நான்கு = முதனடை, வாரம், கூடை, திரள்.

முதனா *mudaṉā,*பெ.(n.) நாக்கின் அடிப்பகுதி; base or innermost part of the tongue. *"ஙகார முதனா அண்ணம்" (தொல். எழுத்து.89).*

[முதல் + நா².]

முதனாள் *mudaṉāḷ,*பெ.(n.) 1. முதல் விண்மீனான இரலை (அசுவினி); the first naksatra. 2. முதல் நாள்; the first day. 3. முந்தின நாள் (சங்.அக.); previous day.

[முதல் + நாள்.]

முதனிலை *mudaṉilai,*பெ.(n.) 1. முதலில் நிற்பது; that which stands first. *"முதனிலை மூன்றும்" (தொல்.சொல்.230).* 2. பகுதி (நன்.144, சங்கர); root form. 3. காரணியம்; cause. *"ஆ யெட் டென்ப தொழின் முதனிலையே" (தொல்.சொல்.112).* 4. தலைவாயில்; outer door.

[முதல் + நிலை.]

முதனிலைத்தீவகம் *mudaṉilai-t-tīvagam,* பெ.(n.) ஒரு சொல் செய்யுளின் முதலில் நின்று குணமுதலிய பொருள் குறித்து ஏனையிடத்துஞ் சென்று பொருள் விளக்கும் அணி வகை; a figure of speech in which a word used in the begining of a sentence is understood in other parts also. *"குணந் தொழில் சாதி பொருள்குறித் தொருசொல் ஒருவயி னின்றும் பலவயிற் பொருடரிற் றீவகஞ் செய்யுண் மூவிடத்தியலும்" (தண்டி.38).*

[முதனிலை + தீவகம்.]

ஓரிடத்து வைக்கப்பட்ட விளக்கானது பலவிடங்களில் பரவி பொருள்களை விளக்குதல் போல் தீவகவணி செய்யுளின் ஓரிடத்து நின்று, குணத்தானும், தொழிலானும், இனத்தானும் (சாதியானும்), பொருளானும் பலவிடத்து நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள் விளக்கும் தன்மையது. அது முதனிலைத் தீவகம், இடை நிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என மூன்று வகைப்படும்.

முதனிலைத் தீவகம், முதனிலைக் குணத் தீவகம், முதனிலை தொழிற்றீவகம், முதனிலை இனத்தீவகம் (சாதித் தீவகம்), முதனிலை பொருட்டீவகம் என நால்வகையாக வரும்.

முதனிலைக் குணத் தீவகம் : எ-டு.

"சேந்தன் வேந்தன் திருநெடுங்கண் டெவ்வேந்தர்
ஏந்து தடந்தோ ளிழிகுருதி – பாய்ந்து
திசையனைத்தும் வீரச் சிலைபொழிந்த வம்பும்
மிசையனைத்தும் புட்குலமும் வீழ்ந்து" (தண்டி.38)

அரசனது அழகிய நீண்ட கண்கள் சினத்தால் சிவந்தன; அவை சிவந்த அளவில் பகைவேந்தர்களினுடைய உயர்ந்த பெரிய தோள்கள் அம்புகள்பட்டு அரத்தங் குழம்பிச் சிவந்தன; அத்தோள்களினின்று பெருகிவருகின்ற அரத்தம் பாய்தலால் திசைகள் சிவந்தன; அந்த அரத்தத்திற் படிதலால் வலிமையினையுடைய வில்லினாற் சொரியப்பட்ட அம்புகள் சிவந்தன; அந்த அரத்தம் மேலே வீழ்தலால் பறவைக் கூட்டங்கள் யாவும் சிவந்தன.

இச்செய்யுளின் முதலில் உள்ள சேந்தன என்னும் பண்புச்சொல் கண், தோள், திசை முதலியவற்றோடுஞ் சென்று சேர்ந்து பொருள் விளைத்தலால் முதனிலைக் குணத் தீவகமாம். சேந்தன என்பது வினைச் சொல்லாயினும்

அதனாற் பெறும் பொருள் செந்நிறமாகிய பண்பாகலின் அது பண்பெனப்பட்டது. சேந்தன என்பது செம்மை என்னும் பண்புப் பெயரினடியாகப் பிறந்த வினையாதலையும் நோக்குக.

முதனிலைத்திரிந்ததொழிற்பெயர் *mudaṉilai-t-tirinda-toḻiṟpeyar,* பெ.(n.) வினையடி முதலெழுத்துத் திரிந்து வருவதனால் தொழிற் பெயராய் நிற்பது; verbal noun formed by modifying the initial letter of a verbal root as *kēḍu*, from *keḍu.*

[முதனிலை + திரிந்த + தொழிற்பெயர். வினையடிச் சொற்கள் சற்றுத் திரிந்து பெயராகவும் ஆளப்படுவதுண்டு. எ.டு. உண் → ஊண், படு →பாடு.]

முதனிலைத்தொழிற்பெயர் *mudaṉilai-t-toḻiṟpeyar,* பெ.(n.) தன்னியல்பின் மாறாத வினையடியே தொழிற் பெயராக நிற்பது (குறள், 117, உரை); verbal noun formed from a verbal root without any suffix and without any variation of the root form, as *kuṟi.*

[முதனிலை + தொழிற்பெயர். வினையடிச் சொற்கள் மட்டுமே பெயராக அமைவது. எ.டு.அடி, பிடி, உதை.]

முதனிலைவிளக்கு *mudaṉilai-viḷakku,* பெ.(n.) முதனிலைத்தீவகம் பார்க்க (வின்.); see *mudaṉilai-t-tīvagam.*

[முதனிலை + விளக்கு.]

முதனிறம் *mudaṉiṟam,* பெ.(n.) மாங்கிசச் சிலை (யாழ்.அக.); a kind of block stone.

முதனினைப்பு *mudaṉiṉaippu,* பெ.(n.) நூல் அல்லது எடுத்துக் காட்டுப் பாடல்களை நினைப்பூட்டும் அப்பாடல்களின் முதற் குறிப்புச் செய்யுள்; mnemonic formed of initial syllables of stanzas of a poem or work. *"பாட்டின் முதனினைப் பாகுமன்றே" (காரிகை, ஒழிபி. ஈற்றுச் செய்யுள்).*

[முதல் + நினைப்பு.]

முதனூல் *mudaṉūl,* பெ.(n.) 1. நூல் வகை மூன்றனுள் பிற நூலைப் பின்பற்றாது தானே விளங்கியவழி இயற்றப்பட்டது (தொல். பொருள்.649); original or primary work regarded as divine, one of three kinds of *nūl.* 2. வழிநூலுக்கு மூலமாகவுள்ள நூல் (நன்.7, விருத்.); source of a *vaḻi-nūl.*

[முதல் + நூல்.]

புலமை சான்ற ஆசிரியன் ஒருவன் ஒரு துறையில் முதன் முதலாகப் படைக்கும் நூல்.

நூல் வகை மூன்று : 1. முதன்நூல், 2. வழி நூல், 3. சார்பு நூல்.

நமது இலக்கண நூல்கள், நூல் என்ற சொல்லால் பொதுவாக இலக்கணங்களையே சுட்டுகின்றன. வினையின் நீங்கி விளங்கிய அறிவினை உடைய முனைவனால் படைக்கப்பட்டது முதனூல். இதனைத் தொடர்ந்து எழுந்த நூல் வழி நூல்.

முதார்மாடு *mudār-māḍu,* பெ.(n.) பால் மறுக்கு நிலையிலுள்ள ஆன் (மாடு) (இ.வ.); milk cow almost dry.

[முது→ முதார்→முதார்மாடு = பால் முற்றிய ஆன்.]

முதாரி[1] *mudāri,* பெ.(n.) 1. முதுமை; being old or ancient. *"முதாரிப் பாண" (புறநா.138).* 2. பால் மறக்குங் கன்று (வின்.); calf almost weaned. 3. முதார்மாடு பார்க்க; see

mudār-māḍu. 4. முற்றியது; that which is ripe. *'முதாரிக் காய்' (சிலப்.16 : 24,* அரும்).

[முது + ஆரி. ஆர் →ஆரி.]

முதாரி² *mudāri,*பெ.(n.) முன்கை வளையல்; bracelet. *"முன்கை முதாரியு மொளிகால" (முத்துக்.பிள்.17).*

[முது→முதார்→முதாரி.]

முதாரு *mudāru,*பெ.(n.) 1. பால் மறக்குங் கன்று (வின்.); calf almost weaned. 2. பால் மறுக்கு நிலையிலுள்ள ஆன் (பசு); milk cow, almost dry.

[முதாரி →முதாரு.]

முதாருப்பால் *mudāruppāl,* பெ.(n.) கறப்பதற்கு மறுக்கு நிலையிலுள்ள ஆவின் பால் (வின்.); milk of a cow that is almost dry.

[முதாரு + பால்.]

முதிகம் *mudigam,* பெ.(n.) வேம்பு; margosa tree.

முதிசம் *mudišam,* பெ.(n.) மூதாதையர் சொத்து (யாழ்ப்.); ancestral property.

[முதுசொம் → முதிசம்.]

முதிசல் *mudišal,* பெ.(n.) அரத்தை; galangal.

முதிதபாவனை *mudida-pāvaṉai,* பெ.(n.) தணியாத சினத்தை (செற்றம்) நீக்கும் பொருட்டு புத்தமதத்தைச் சார்ந்தவர்களால் செய்யப்படும் ஊழ்கம் (மணிமே.30:256); a set mode of meditation practised by Buddhist asectics to free themselves from anger.

முதிதம் *mudidam,* பெ.(n.) முதம் (சங்.அக.) பார்க்க; see *mudam.*

முதிதை *mudidai,* பெ.(n.) 1. மகிழ்ச்சி; joy, delight, happiness. *"அறிவருண் முதிதை" (ஞானவா.வீதக.62).* 2. மனத்தூய்மை (பரிபா.4:1, உரை); a virture which cleanses the mind, one of four citta-parikarmam. 3. செற்றத்தை நீக்கும் பொருட்டுப் புத்தர்களாற் செய்யப்படும் ஊழ்கம்; a set of meditation practised by Buddhist ascetics to free themselves from anger. *"மைத்திரி கருணா முதிதை" (மணிமே.30 : 256).*

முதியகுழல் *mudiya-kuḻal,* பெ.(n.) குதிரைவாலிப் புல் (தைலவ.தைல.76); a species of grass.

முதியம் *mudiyam,* பெ.(n.) நாய்வேளை (மலை.); a sticky plant that grows best in sandy places.

முதியவன் *mudiyavaṉ,*பெ.(n.) 1. மூத்தோன்; elder, senior. *"மக்களுள் முதியவன்" (கலித்.25).* 2. அகவை முதிர்ந்தவன்; aged man. 3. நான்முகன்; Brahma. *"தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக" (கலித்.2).*

க. முதுக

[முது → முதியவன்.]

முதியன் *mudiyaṉ,*பெ.(n.) முதியவன் பார்க்க; see *mudiyavaṉ.* *"இளையரு முதியருங் கிளையுடன் றுவன்றி" (அகநா.30), "செல்வுழி யெழாஅ நல்லேர் முதிய" (புறநா.389:12).*

[முது → முதியன்.]

முதியாக்கிழங்கு *mudiyā-k-kiḷaṅgu,* பெ. (n.) மஞ்சட்கிழங்கு; turmeric.

முதியார்குழல் *mudiyār-kuḷal,* பெ.(n.) முதியார்கூந்தல் பார்க்க; see *mudiyār-kūndal.*

[முதியார் + குழல்.]

முதியார்கூந்தல் *mudiyār-kūndal,* பெ.(n.) கொடியார் கூந்தலென்னும் பூண்டு (சங். அக.); a kind of plant called *koḍiyārkūndal.*

[முதியார் + கூந்தல்.]

முதியாரிகம் *mudiyārigam,* பெ.(n.) மஞ்சள்; turmeric.

முதியாள் *mudiyāḷ,* பெ.(n.) 1. மூத்தவள்; elderly woman. 2. தேவராட்டி; woman possessed by a spirit. *"தெய்வ நிகழ் குறமுதியாள் சென்ற பின்பு" (பெரியபு. கண்ணப்ப.52).*

க. முதுகி.

[முது → முதியாள்.]

முதியான் *mudiyāṉ,* பெ.(n.) 1. முதியவன் பார்க்க; see *mudiyavaṉ.* 2. பறவை வகை (சங்.அக.); a bird. 3. முதுகன்று (யாழ்.அக.); full grown calf.

முதியோர் *mudiyōr,* பெ.(n.) அறிஞர்; persons of ripe wisdom.

[முது–மை →முதியோர்.]

முதியோர்கல்வி *mudiyōr-kalvi,* பெ.(n.) அகவை முதிர்ந்தோர்க்கு அளிக்கப்படும் கல்வி; adult education. *தமிழகத்தில் முதியோர் கல்வி வளர்ச்சி யடைந்துள்ளது.*

[முதுயோர் + கல்வி.]

முதியோள் *mudiyōḷ,* பெ.(n.) 1. கிழப் பருவமடைந்தவள்; old woman. 2. பெண் தெய்வம்; Goddess. *"முதியோள் கோட்டம்" (மணிமே.17:88), "முளரி மருங்கின் முதியோள் சிறுவன்" (புறநா.278:2).*

[முது→முதியோள்.]

முதிர்[1]**–தல்** *mudir-,* 2 செ.கு.வி.(v.i.) 1. மரம், காய் முதலியவை இளமைத் தன்மை நீங்கி முற்றுதல்; to grow old, to have the qualities of age. *முதிர்ந்த மரங்களை வெட்டுவார். "முதிராக் கிளவியள்" (மணிமே. 22:181).* 2. பதமாதல், கருநிரம்புதல்; to become mature, to grow ripe. *"கொண்மூ.... சூன் முதிர்பு" (புறநா.161).* 3. நிறைதல்; to excel, surpass, to become satiated, to be saturalted. *"உறைமுதிரா நீரால்" (திணைமாலை.103).* 4. முற்படுதல்; to procede. *"முதிர்வினை" (சிலப்.பதி).* 5. ஒழிதல்; to end, cease. *"கதிரொழி காறும் கடவுட் டன்மை முதிராது" (சிலப்.30:66).* 6. உலர்தல்; to become dry.

தெ. முதுரு; க. முது; L. maturar; F. maturer; M.E. maturus (ripe); E. mature (வே.க. முல்[2]).

[முது→முதிர்→முதிர்–தல் (சு.வி.).]

முதிர்[2]**–தல்** *mudir-,* 2 செ.குன்றாவி.(v.t.) 1. சூழ்தல்; encompass, surround. *"தீவினை முதிர்வலை" (சிலப்.16:156).* 2. அகவை நிரம்புதல்; old; advance-in years. *அவர் வயதிலும் அறிவிலும் முதிர்ந்தவர் என்றே நினைக்கிறேன்.*

[முது→முதிர்→முதிர்–தல் (சு.வி.).]

முதிர்காடு *mudir-kāḍu,* பெ.(n.) பழங்காடு (சூடா.); wild jungle, ancient forest.

[முதிர் + காடு.]

முதிர்காய் *mudir-kāy,* பெ.(n.) கனி; riped fruit.

[முதிர் + காய்.]

முதிர்காற்று *mudir-kāṟṟu,* பெ.(n.) கடுங் காற்று (வின்.); gale, strong wind.

[முதிர் + காற்று.]

முதிர்ச்சி *mudircci,* பெ.(n.) 1. பழுத்த பருவம்; maturity, ripened condition. 2. அகவை முதுமை; great age, old age. 3. முதுக்குறைவு (திவா.); excellence in learning or experience. 4. செருக்கு (யாழ்ப்.); arrogance.

[முதிர் → முதிர்ச்சி.]

முதிர்ச்சிக்காரன் *mudircci-k-kāraṉ,* பெ.(n.) செருக்குள்ளவன் (வின்.); arrogant man.

[முதிர்ச்சி + காரன்.]

முதிர்ந்தகுறிஞ்சி *mudirnda-kuṟiñji,* பெ.(n.) பண்வகை (திவ்.திருவாய்.1:1 தலைப்பு); a melody type of the *Kuṟiñji* class.

[முதிர் →(முதிர்ந்த) + குறிஞ்சி.]

முதிர்ந்தநீர் *mudirnda-nīr,* பெ.(n.) சிறுநீர் (அமுரி); urine (சா.அக.).

முதிர்ந்தவிந்தளம் *mudirnda-v-indaḷam,* பெ.(n.) குறிஞ்சியாழ்த்திறவகை (பிங்.); a secondary melody type of the *kuṟiñji* class.

[முதிர்ந்த + விந்தளம்.]

முதிர்ந்தோர்கல்வி *mudirndōr-kalvi,* பெ.(n.) முதியோர்கல்வி பார்க்க; see *mudiyōr-kalvi.*

[முதிர்ந்தோர் + கல்வி.]

முதிர்ப்பு *mudirppu,* பெ.(n.) 1. மனக் கலக்கம் (திவா.); perturbation. *"சினைப் பசும்பாம்பின் சூன் முதிர்ப் பன்ன" (குறுந். 35:2).* 2. முதிர்ச்சி, 1, 2 (யாழ்.அக.) பார்க்க; see *mudircci,* 1, 2.

[முதிர் → முதிர்ப்பு.]

முதிர்பாகு *mudir-pāgu,* பெ.(n.) முதிர்ந்த வெல்லப்பாகு; over heated jaggery syrup.

[முதிர் + பாகு.]

முதிர்பிறை *mudir-piṟai,* பெ.(n.) காருவாவிற்குப் பின்வரும் நான்காம் நாள் முதல் எண்ணாள் வரையான வளர்பிறைத் திங்கள் (வின்.); the second quarter of the waxing moon.

[முதிர் + பிறை.]

முதிர்பு *mudirbu,* பெ.(n.) முதிர்வு (சங்.அக.) பார்க்க; see *mudirvu.*

ம. முதிர்ப்பு

[முதிர் → முதிர்பு.]

முதிர்வு *mudirvu,* பெ.(n.) 1. முதிர்ச்சி 1, 2 பார்க்க; see *mudircci* 1, 2. *"கைக்கொண்டு முற்றிய முதிர்வும்" (தொல்.பொருள்.68). "பெருங்களிற்று மருப்பின் அன்ன வரும்பு முதிர்பு" (நற்.19:3). "பெருமலை யன்ன தோன்றல சூன்முதிர் புருமுரறு கருவியொடு பெயல்கட னிறுத்து" (புறநா.161:3, 4).* 2. மிகுதி; excess, plenty. *"மான்மத முதிர்வுறக் கமழ்வன" (கம்பரா.நகரப். 60).* 3. சேமிப்புத் தொகை குறிப்பிட்டக் காலத்திற்குப் பின் அடையும் அதிக அளவு; date of maturity of a deposite. *ஐந்து ஆண்டுகளக்குப் பிறகு இந்தத் தொகை இருமடங்காக முதிர்வு அடையும்.*

[முதிர் → முதிர்வு.]

முதிர்மரம் *mudir-maram,* பெ.(n.) பட்டை யுரிக்கக் கூடிய மரம்; tree aged enough to peal off the bark.

[முதிர் + மரம்.]

முதிர்வாதக்கட்டு *mudir-vāda-k-kaṭṭu,* பெ.(n.) உடம்பில் ஓர் இடத்தில் நில்லாது ஓடிக்கொண்டிருந்து ஆங்காங்கு வீக்கத்தை ஏற்படுத்தும் நோய்; swelling that traverses the whole body.

*[முதிர் + **Skt.** வாதம் + கட்டு.]*

முதிர்வேனில் *mudir-vēṉil,* பெ.(n.) முதுவேனில் (சங்.அக.) பார்க்க; see *mudu-vēṉil.*

[முதிர் + வேனில்.]

முதிரம்[1] *mudiram,* பெ.(n.) முகில் (பிங்.); cloud.

முதிரம்[2] *mudiram,* பெ.(n.) குமணனுக்குரிய மலை; a mountain belonging to the ancient chief *kumaṇaṉ.* *"நல்லிசைக் குமணன்..... முதிரத்தோனே" (புறநா.160:13).*

முதிரன் *mudiraṉ,* பெ.(n.) 1. தாந்தோன்றி (யாழ்.அக.); libertine. 2. போக்கிலி (வின்.); vile or wicked person.

முதிராச்செவ்வந்தி *mudirā-c-ce-v-vandi,* பெ.(n.) மஞ்சள் செவ்வந்தி; yellow chryanthum.

முதிராப்பிண்டம் *mudirā-p-piṇḍam,* பெ.(n.) முற்றாத கரு (வின்.); embryo.

[முதிர் + ஆ + பிண்டம்.]

முதிரி *mudiri,* பெ.(n.) அவரை வகை; dolichos lab.

முதிரிமை *mudirimai,* பெ.(n.) முதுமை (யாழ்.அக.) பார்க்க; see *mudumai.*

[முதிர் →முதிரி →முதிரிமை.]

முதிரை *mudirai,* பெ.(n.) 1. அவரை, துவரை முதலிய பயறுகள்; pulse or other leguminous plant. *"முதிரை வாலூன் வல்சி மழவர்" (பதிற்றுப்.55:7).* 2. துவரம் பருப்பு; pigeon - pea, dholl. *"முதிரையின் முழுத்த நெய்யில்" (கம்பரா.நாட்டுப். 19).* 3. மரவகை (வின்.); East Indian satin-wood, chloroxylon swietenia.

[முதிர் →முதிரை.]

முதிரைப்பில்லை *mudirai-p-pillai,* பெ.(n.) கண்ணுக்குள் வரும் நோய்; a chronic eye diseases (சா.அக.).

முதிரைமண்டம் *mudirai-maṇḍam,* பெ.(n.) பல்லி; lizard (சா.அக.).

முதினி *mudiṉi,* பெ.(n.) ஒட்டை மரம்; a tree (சா.அக.).

முது *mudu,* பெ.(n.) 1. பேரறிவு; vast knowledge. *"முதுவா யிரவல" (சிறுபாண். 40). "முருக யர்ந்து வந்த முதுவாய் வேல சினவ லோம்பு மதி" (குறுந்.362:1).* 2. முதுமை; oldness.

[முதல்→முது (சு.வி.).]

இளமையில் அறிவின்மையும் முதுமையில் அறிவுண்மையும், பட்டறிவின்மை யுண்மையால் ஏற்படும் இயற்கை நிலைமை யென்பதை மடம், முது என்னுஞ் சொற்கள் உணர்த்தும்.

முதுக்கங்காய் *mudukkaṅkāy,* பெ.(n.) தும்மட்டிக்காய் (இ.வ.); country cucumber.

முதுக்கள் *mudukkaḷ*, பெ.(n.) முன்னோர்; ancestors. *"எங்கள் முதுக்கள் ஒற்றி வைக்கையில்" (புதுக்.கல்.317).*

[முதல்→முது→முதுக்கள்.]

முதுக்கு *mudukku*, பெ.(n.) 1. அறிவு; knowledge. 2. தெருட்சி; wisdom. 3. பேரறிவு; great wisdom.

[முது→முதுக்கு.]

முதுக்குடி *mudukkuḍi*, பெ.(n.) முதுகுடி பார்க்க; see *mudukuḍi*. *"முரசு கடிப்பிகூஉ முதுக்குடிப் பிறந்தோன்" (மணிமே.1:31).*

[முது–மை + குடி.]

முதுக்குறை¹–தல் *mudukkuṟai-*, 2 செ.கு.வி. (v.i.) அறிவு மிகுதல்; to become ripe in wisdom. *"முகத்தின் முதுக்குறைந்த துண்டோ" (குறள், 707). "முதுக்குறைக் குரீஇ முயன்றுசெய் குடம்பை" (நற்.366:9).*

[முது→முதுக்கு + உறை – முதுக்குறை →முதுக்குறை–தல் (சு.வி.).]

முதுக்குறை² *mudukkuṟai-*, பெ.(n.) முதுக்குறைவு பார்க்க; see *mudu-k-kuṟaivu*. *"முதுக்குறை நங்கை" (சிலப். 15:202).*

[முது→முதுக்கு + உறை. உறைதல் = தங்குதல்.]

முதுக்குறைமை *mudukkuṟaimai*, பெ.(n.) முதுக்குறைவு பார்க்க; see *mudu-k-kuṟaivu*. *"போற்றாய்களை நின் முதுக்குறைமை" (கலித்.62). "கழிமுதுக் குறைமையும் பழியுமென் றிசினே" (குறுந். 217:7).*

[முது→ முதுக்கு + உறைமை.]

முதுக்குறைவி *mudukkuṟaivi*, பெ.(n.) பேரறிவுள்ளவள்; wise woman. *"சிறுமுதுக் குறைவி..... சேயிழைக் காற்றி" (பெருங். மகத.22:68). "சிறுமுதுக் குறைவி சிலம்பார் சீறடி" (அகநா.17:9).*

[முதுக்குறை →முதுக்குறைவி.]

முதுக்குறைவு¹ *mudukkuṟaivu*, பெ.(n.) 1. பேரறிவு (பிங்.); great wisdom. *"ஏதிலார் யாதும் புகல விறைமகள் கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு" (குமர.பிர. நீதிநெறி.33).* 2. மகளிர் பருவமடைதல் (வின்.); pubescence of girls.

[முதுக்குறை →முதுக்குறைவு.]

முதுக்குறைவு² *mudukkuṟaivu*, பெ.(n.) பேதைமை (சூடா.); innocence.

[முது + குறைவு.]

முதுகண்¹ *mudu-kaṇ*, பெ.(n.) 1. முதன்மைப் பற்றுக்கோடு; chief support. *"முற்றிழை மகளிர்க்கு முதுக ணாமென" (பெருங். உஞ்சைக்.36:198).* 2. பேரறிவுரைஞன்; wiseman.

[முந்து→முது→ முதுகண் (வே.க.)..]

முதுகண்² *mudu-kaṇ*, பெ.(n.) காப்பாளர்; guardian. *"சுந்தரபட்டனையே முதுகண்ணாக வுடைய" (தெ.இ.கல்.தொ: 5:272).*

[முது + கண்.]

முதுகண்³ *mudu-kaṇ*, பெ.(n.) வழியுரிமை (வாரிசு); property rights of the legal heridity. *"ஸ்ரீ மூலத்தான முடையார்க்கு நொட்டூர், திரு வாண்டாள் சாநியேன், எந் மகந் தாமோதிரப்பட்ட நாந வீரகத்திரபிள்ளையை முதுகண்ணாக*

கொண்டு – தண்ணீர்ப்பட்டி ஒரு மாவரையும், தலைப்பாடகம் அரைமாவும் களர் ஒரு மாவரையும் கீழைத் தெருவில் மனை அமையும் தேவர்க்கு தேவதாநமாகக் குடுத்தேன்" (தெ.இ.கல்.தொ.12, கல்.184).

முதுகயம் *mudu-kayam,* பெ.(n.) கடல்; sea. *"முதுகயந் தீப்பட" (திவ்.பெரியதி.8. 5:6).*

முதுகலை *mudukalai,* பெ.(n.) பல்கலைக் கழகத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள் படிக்கும் மேல் பட்டப் படிப்பு; master of arts, course leading to the degree of master of arts.

[முது + கலை.]

முதுகன்றிருமல் *mudu-kaṉṟirumal,* பெ. (n.) கன்றுகட்கு வரும் நோய் வகை (M.L.); hoose, a disease incident to cattle, especially calves.

[முது + கன்று + இருமல்.]

முதுகன்று *mudu-kaṉṟu,* பெ.(n.) பால்குடி மறந்த கன்று (வின்.); weaned calf.

[முது + கன்று.]

முதுகாஞ்சி *mudu-kañji,* பெ.(n.) 1. அறிவின் மிக்க மூத்தோர் அறிவில்லாத இளையோர்க்கு இளமை நிலையாமை முதலியவற்றை எடுத்து மொழியும் புறத்துறை (தொல்.பொருள்.79, உரை); theme of admonition and instruction by men of ripe wisdom to inexperienced youths. 2. முதுகாஞ்சித் துறை பற்றிய சிற்றிலக்கிய வகை (சது.); a poem on the *mudukāñji* theme.

[முது + காஞ்சி.]

முதுகாட்டுத்தரிசு *mudu-kāṭṭu-t-tarišu,* பெ.(n.) 1. பதினைந்து ஆண்டுக்கு மேலாக சாகுபடி செய்யப்படாத நிலம் (வின்.); land left waste for over 15 years. 2. சுடுகாட்டுக்காக விடப்பட்ட நிலம் (இ.வ.); waste land used as a burial or cremation ground.

[முதுகாடு + தரிசு.]

முதுகாடு *mudu-kāḍu,* பெ.(n.) 1. முதையல் பார்க்க (திவா.); see *mutaiyal.* 2. சுடுகாடு (திவா.); cremation or burial ground. *"முதுகாட்டிடை.... நடமாடி" (தேவா.773, 1). "அஞ்சுவந் தன்றிம் மஞ்சுபடு முதுகாடு" (புறநா.356:4).*

[முது + காடு.]

முதுகால்[1] *mudu-kāl,* பெ.(n.) ஓராண்டுக்கு மேற்பட்ட வெற்றிலைக் கொடிகளையுடைய தோட்டம் (யாழ்.அக.); garden of betel vines more than a year old.

[முது + கால்.]

முதுகால்[2] *mudu-kāl,* பெ.(n.) வெற்றிலைக் கொடியின் நடுவிலுள்ள இலை (மதி.க.ii.55); leaves at the middle of the betel wine.

[முது + கால்.]

முதுகால்வெற்றிலை *mudu-kāl-veṟṟilai,* பெ.(n.) முதிர்ந்த கொடியி னின்று பறித்த வெற்றிலை (C.G.); betel leaf plucked from a full-grown creeper.

[முதுகால் + வெற்றிலை.]

முதுகிடு–தல் *mudugiḍu-,* 20 செ.கு.வி.(v.i.) புறங்காட்டுதல்; to be defeated and flee. *"முகில் வண்ணன் றனக்கஞ்சி முதுகிட்டோடி" (கம்பரா.உத்தர. இராவணன். பிறப்.39).*

[முதுகு + இடு–தல்.]

முதுகில்குத்து-தல் *mudugil-kuttu,* 5 செ.கு.வி.(v.i.) இனிமை காட்டி ஏய்த்தல்; stab some one in the back. *முதுகில் குத்துதல் மற வேந்தர்க்கு அழகல்ல.*

[முதுகு →முதுகில் + குத்து-தல்.]

முதுகு[1] *mudugu,* பெ.(n.) 1. மனித உடலில் பின் கழுத்தில் இருந்து இடுப்புவரை உள்ள பக்கம், விலங்கின் உடலில் கழுத்திலிருந்து வால்வரை உள்ள மேல் பகுதி; back, the region of the spine. *"முதுகிற் றைத்த வாளிகள்" (கம்பரா. யுத்த.மந்திர.116.). அணிலின் முதுகில் மூன்று கோடுகள் உண்டு. "முதுகிலே புண் உண்டானால் செடியிலே நுழைய பயம்", "முதுகிலே புண் இருந்தால் குனியப் பயம்", "முதுகில் அடித்தால் ஆறும், வயிற்றில் அடித்தால் ஆறுமா?".* 2. நாற்காலி முதலியவற்றில் சாய்ந்து கொள்வதற்குரிய பகுதி; back portion; back, as of a chair. 3. முதுகு ஒடிந்த நாற்காலி, நடுவிடம்; middle place. *"தவள மாடத்தகன் முதுகு பற்றி" (கல்லா.19 : 22).* 4. வரப்பு மேடு; ridge, mound. *"மிடைந்து வயல் திரிந்து முதுகு சரிந்துடைந்து" (கல்லா.53:33).* 5. பொத்தகத்தின் பக்கங்கள் ஒன்று சேர்ந்து அமைந்திருக்கும் தட்டையான நீண்ட பக்கவாட்டுப் பகுதி; spine of a book.

ம. முதுகு.

முதுகு[2] *mudugu,* பெ.(n.) முருடு (வின்.); coarseness grossness.

தெ. முதுகு

முதுகுகாட்டு-தல் *mudugu-kāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) முதுகிடு-தல் பார்க்க; see *mudugiḍu-.*

[முதுகு + காட்டு-தல்.]

முதுகுகாண்(ணு)-தல் *mudugu-kāṇ-,* 16 செ.குன்றாவி.(v.t.) தோல்வியுறச் செய்தல்; to defeat. *"இந்திரன் முதுகுகண்ட விராவணற் கேயச் சொன்னான்" (கம்பரா. இலங்கை காண்.5).*

[முதுகு + காண்(ணு)-தல்.]

முதுகுகொடு-த்தல் *mudugu-koḍu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. முதுகிடு-தல் பார்க்க; see *mudugiḍu-. "போர்க்களத்தே சென்று முதுகு கொடாமல்" (பட்டினப்.பக்.538, உரை).* 2. துணை செய்தல் (வின்.); to help, assist. 3. குதிரை, யானை முதலியன தன்மேலேற இடங் கொடுத்தல் (இ.வ.); to allow one to mount, as a riding horse, etc. 4. விளையாட்டாகவும் தண்டனையாகவும் முதுகிற் பிறரைத் தூக்கிச் சுமத்தல் (இ.வ.); to carry a person on one's back, as a punishment or in a game.

[முதுகு + கொடு-த்தல்.]

முதுகுச்சுண்ணாம்பு *mudugu-c-cunnāmbu,* பெ.(n.) மணல் மிகுதியாய்ச் சேர்த்த சுண்ணாம்பு (C.E.M.); coarse chunnam.

[முதுகு + சுண்ணாம்பு.]

முதுகுடி *mudu-kuḍi,* பெ.(n.) கற்றோன்றி மண்டோன்றாக் காலத்து வாளொடு முற்றோன்றிய மூத்த குலம்; ancient and respectable family as of warriors. *"முதுகுடி மகட் பாடஞ்சிய மகட் பாலானும்" (தொல். பொருள்.79).*

மறுவ. மூத்தகுடி.

[முது + குடி.]

முதுகுத்தண்டு *mudugu-t-taṇḍu,* பெ.(n.) தண்டுவடம்; spinal-cord. *ஒவ்வொருவருக்கும் முதுகுத் தண்டு நன்றாக இரு ந்தால் மட்டுமே அவர்களால் வலியில்லாமல் உட்கார, நடக்க, படுக்க முடியும்.*

[முதுகு + தண்டு.]



முதுகுத்துணி *mudugu-t-tuṇi,* பெ.(n.) முருட்டுச் சீலை (C.E.M.); coarse cloth.

[முதுகு + துணி.]

முதுகுதாங்கி *mudugu-tāṅgi,* பெ.(n.) சார்மணை (வின்.); support to lean back on, as in a planquin, in a chair or on a pial.

[முதுகு + தாங்கி.]

முதுகுநீர்குத்தல் *mudugu-nīr-kuttal,* பெ.(n.) முதுகுநீர்ச்சடங்கு பார்க்க; see *mudugu-nīr-c-caḍaṅgu.*

[முதுகு + நீர் + குத்தல்.]

முதுகுநீர்ச்சடங்கு *mudugu-nīr-c-caḍaṅgu,* பெ.(n.) முதுகில் நீரூற்றிச் செய்யுஞ் சீமந்தச் சடங்கு (வின்.); a purificatory ceremony of pouring water upon the back of a woman in her first pregnancy.

[முதுகு + நீர் + சடங்கு.]

முதுகுநூல் *mudugu-nūl,* பெ.(n.) முருட்டு நூல் (வின்.); coarse yarn.

[முதுகு + நூல்.]

முதுகுநெளி–த்தல் *mudugu-neḷi-,* 3 செ.கு.வி.(v.i.) வேலைக்குச் சோம்புதல் (உ.வ.); to shirk work; to be indolent.

[முதுகு + நெளி–த்தல்.]

முதுகுப்பிடிப்பு *mudugu-p-piḍippu,* பெ.(n.) முதுகில் வலியுண்டாக்கும் ஊதை (வாயு) நோய் வகை (M.L.); sprain of the back.

[முதுகு + பிடிப்பு.]

முதுகுப்பிளவு *mudugu-p-piḷavu,* பெ.(n.) முதுகுப்பிளவை (M.L.) பார்க்க; see *mudugu-p-piḷavai.*

[முதுகு + பிளவு.]

முதுகுப்பிளவை *mudugu-p-piḷavai,* பெ.(n.) முதுகிலுண்டாம் அரச பிளவை (வின்.); carbuncle appearing on one's back.

[முதுகு + பிளவை.]

முதுகுமண்காட்டு–தல் *mudugu-maṇ-kāṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) மற்போரில் தோல்வியுறச் செய்தல் (இ.வ.); to defeat in wrestling.

மறுவ. புறமுதுகுக்காட்டுதல்

[முதுகு + மண்காட்டு–தல்.]

முதுகுமண்கொடு–த்தல் *mudugu-maṇ-koḍu-,* 4 செ.கு.வி.(v.i.) மற்போரில் தோல்வியுறுதல் (இ.வ.); to be defeated in wrestling.

[முதுகு + மண்கொடு–த்தல்.]

முதுகுமுள் *mudugu-muḷ,* பெ.(n.) முதுகெலும்பு (வின்.) பார்க்க; see *mudugelumbu.*

[முதுகு + முள்.]

முதுகுமுள்ளணைதசை *mudugu-muḷ-ḷ-aṇai-tašai,* பெ.(n.) முதுகெலும்பினை யடுத்துள்ள தசை (வின்.); a muscle-*semispinalis dorsi.*

[முதுகு + முள்ளணை + தசை.]

முதுகுரவர் *mudu-kuravar,* பெ.(n.) தாய் தந்தையர்; parents. *"எம்முது குரவ ரென்னுற் றனர் கொல்" (சிலப்.16:60).*

[முது + குரவர்.]

முதுகுருகு *mudu-kurugu,* பெ.(n.) தலைக் கழகத்து இறந்துபட்ட நூல்களுள் ஒன்று (இறை.1, உரை, 4); an ancient poem of the first *Šaṅgam*-not now extant.

[முது + குருகு.]

முதுகுவாளை *mudugu-vāḷai,* பெ.(n.) முதுகில் உண்டாகும் ஒருவகைக் கழலை; deep abscess on the back.

[முதுகு + வாளை.]

முதுகுளத்தூர் *mudu-kuḷattūr,* பெ.(n.) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டத்தில் அவ்வட்டத்தின் தலைநகராய் விளங்கும் ஊர்; a town in Ramnad district in *Mudukuḷattur* Taluk, 25 k.m. away from Paramakkudi.

[முது + குளத்தூர்.]

முதுகுன்றம் *mudu-kuṉṟam,* பெ.(n.) கடலூர் (தென்னார்க்காடு) மாவட்டத் திலுள்ள சிவ தலம்; a Siva shrine in the *Kaḍalūr.* *தற்போது விருத்தாசலம் என்று அழைக்கப்படுகிறது. திரு என்னும் அடைமொழி சேர்த்துத் திருமுதுகுன்றம் என்றும் அழைக்கப்படுகிறது. "முத்தாறு.... நித்திலம் வாரிக்கொழிக்கு முதுகுன்றமே" (தேவா.981, 1).*

[முது + குன்றம்.]

முதுகுன்று *mudu-kuṉṟu,* பெ.(n.) முதுகுன்றம் பார்க்க; see *mudu-kuṉṟam.* *"முத்தாறு வந்தடி வீழ்தரு முது குன்றடை வோமே" (தேவா.978:1).*

[முது + குன்று.]

முதுகூற்றனார் *mudu-kūṟṟaṉār,* பெ.(n.) கழகக்காலப் புலவர்; ancient *Šaṅgam* poet.

[முது + கூற்றனார்.]

முதுகெலும்பு *mudu-kelumbu,* பெ.(n.) முதுகின் நடுவில் அமைந்திருப்பதும் உடலைத் தாங்கிநிற்பதுமான, ஒன்றன் கீழ் ஒன்றாக, வரிசையாக முள் எலும்புகளால் ஆன நீண்ட உறுதியான எலும்புத் தண்டு; back bone, spine, vertebral column. *உழவர்கள் தான் நாட்டின் முதுகெலும்புகள்.*

மறுவ. தண்டெலும்பு, முள்ளந்தண்டு, வீணாத்தண்டு தண்டுவடம்.

[முதுகு + எலும்பு.]

முதுசம் *mudušam,* பெ.(n.) மரபு வழியாக வரும் சொத்து; inherited property. *இது எனக்கு முதுசமாகக் கிடைத்த வீடு.*

[முதுசொம்→ முதுசம்.]

முதுசாயம் *mudu-šayam,* பெ.(n.) அழுத்தமான சாயம் (வின்.); deep dye.

[முது + சாயம்.]

முதுசார்வு *mudu-šārvu,* பெ.(n.) இளஞ் சார்வையடுத்திருக்கும் பனையோலை (யாழ்ப்.); palmyra or talipot leaves next to *ilañ-jārvu.*

[முது + சார்வு.]

முதுசூரியர் *mudu-šūriyar,* பெ.(n.) இரட்டைப் புலவருள் ஒருவர் (தமிழ்நா.113, தலைக்குறிப்பு); one of the two poets known as *iraṭṭai-p-pulavar.*

[முது + சூரியர்.]

முதுசொம் *mudu-šom,* பெ.(n.) முதுபொருள் பார்க்க; see *mudu-poruḷ.*

[முது + சொம்.]

முதுசொல் *mudu-šol,* பெ.(n.) முதுமொழி, 1 பார்க்க; see *mudumoḻi, 1.* *"தம்பானை சாய்ப்பற்றா ரென்னு முது சொல்லும்" (திருவிசை.வேணாட்.2) (திவா.). "முது நெல்லிக்கனியும், மூத்தோர் சொல்லும் முன்னே கசக்கும் பின்னே இனிக்கும்" (பழ.).*

[முது + சொல்.]

முதுதரிசு *mudu-tarišu,* பெ.(n.) முதுகாட்டுத் தரிசு, 2 பார்க்க; see *mudukāṭṭu-t-tarišu, 2.*

[முது + தரிசு.]

முதுதலை *mudu-talai,* பெ.(n.) மரத்தின் முற்றிய அடிப்பாகம்; lower end of the trunk or stem of a tree, as hardened by growth. *"மரமிசைக்கும்போது முதுதலை கீழாகவும் இளந்தலை மேலாகவும்" (சர்வா.சிற்.68).*

[முது + தலை.]

முதுதவம் *mudu-tavam,* பெ.(n.) முற்பிறப்பிலோ இப்பிறப்பில் முன்போ செய்த தவம் (வின்.); penance performed in previous birth or long ago in this birth.

[முது + தவம்.]

முதுதறை *mudu-daṟai,* பெ.(n.) பாழ்நிலம்; barren ground. *"நீர்நிலமும் முதுதறையும்" (புதுக்.கல்.361. பக்.233).*

[முது + தறை.]

முதுநாரை *mudu-nārai,* பெ.(n.) தலைக் கழகத்து (தலைச் சங்கத்து) இறந்துபட்ட நூல்களுள் ஒன்று (இறை.1, உரை.4); an ancient poem of the first Šaṅgam, not now extant.

[முது + நாரை.]

முதுநிலம் *mudu-nilam,* பெ.(n.) 1. களர் நிலம்; brackish ground. 2. பெரும் பாழ் நிலம் (வின்.); large extent of barren ground. 3. பாலை (யாழ்.அக.); desert tract. 4. இயற்கை மாறாமல் காடும் மேடுமாக உள்ள நிலம்; waste land, uncultivated land.

[முது + நிலம்.]

முதுநிலை *mudu-nilai,* பெ.(n.) 1. பல நிலைகளைக் கொண்ட பதவி வரிசையில் உயர்நிலை; senior grade. *முதுநிலை மேலாளர். முதுநிலைப் பொறியாளர்.* 2. பள்ளிகளில் முதுகலைப் பட்டம் பெற்று அடைந்திருக்கும் தகுதி; post graduate

grade. *மேனிலைப் பள்ளி முதுநிலை ஆசிரியர்.*

[முது + நிலை.]

முதுநீர் *mudu-nīr,*பெ.(n.) முன்னீர் பார்க்க; see *munnīr.* *"சுடர்படு முது நீரில்" (திவ். பெரியதி.8. 5:5). "முதுநீர் முன்றுறை முசிறி முற்றி" (அகநா.57:15).*

[முது + நீர்.]

முதுநீர்மலையாளர் *mudu-nīr-malaiy āḷar,* பெ.(n.) மலையில் வாழும் ஒருவகைப் பழங்குடி இனத்தார்; a sect of hill-men.

[முதுநீர் + மலையாளர்.]

முதுப்போக்கன் *mudu-p-pōkkan,*பெ.(n.) மடைத்தொழிலாளர்; cook person skilled in culinary.

முதுபயிர் *mudu-payir,*பெ.(n.) 1. முற்றிய பயிர் (வின்.); full - grown crop. 2. கனி தரக்கூடிய மரம் (வின்.); tree full-grown and ready to bear fruit. 3. முதுகால் பார்க்க; see *mudu-kāl.*

[முது + பயிர்.]

முதுபாலை *mudu-pālai,*பெ.(n.) கணவனை இழந்த தலைவி மூங்கில் ஓங்கி வளர்ந்த காட்டில் தனி நின்று புலம்புவதைக் கூறும் புறத்துறை; theme of a lonely woman bewailing the loss of her husband in a desert. *"நனிமிக சுரத்திடைக் கணவனை யிழந்து தனிமகள் புலம்பிய முதுபா லையும்" (தொல்.பொருள்.79).*

[முது + பாலை.]

முதுபாழ் *mudu-pāḻ,* பெ.(n.) முதுநிலம் பார்க்க; see *mudu-nilam.* *"முதுபாழ் பெயல்பெய்தன்ன" (புறநா.381).*

[முது + பாழ்.]

முதுபுண் *mudu-puṇ,*பெ.(n.) நெடு நாட்களாக குணமாகாதப் புண்; festering sore. *"மெய்ப்படு முதுபுண் டீர்ப்பான்" (சீவக.2881).*

[முது + புண்.]

முதுபெண்டு *mudu-peṇḍu,* பெ.(n.) 1. மகளிரின் எழுவகைப் பருவங்களுள் 32 முதல் 40 அகவை வரையுள்ள பேரிளம் பெண்; woman between the ages of 32 and 40. 2. மாதவிடாய் நீங்கிய பெண்; woman past menstruation. 3. அகவை முதிர்ந்தவள்; old woman.

[முது + பெண்டு.]

எழுவகைப் பருவம் : 1. பேதை, 2. பெதும்பை, 3. மங்கை, 4. மடந்தை, 5. அரிவை, 6. தெரிவை, 7. பேரிளம் பெண்.

முதுபொருள் *mudu-poruḷ,* பெ.(n.) முன்னோர் தேட்டு (மூதாதையர் சொத்து); ancestral property. *"ஒரு முதலாகி முதுபொருளாயிருந்த தனங்களும்" (பட்டினத். உடற்கூற்றுவ.11).*

[முது + பொருள்.]

முதுபோத்து *mudu-pōttu,*பெ.(n.) முதிய ஆண் ஓணான் (ஓந்தி); old blood - sucker - calotes verisicotor. *"வேதின வெரிநின் ஓதிமுது போத்து" (குறுந்.140:1).*

[முது+போத்து. போத்து = ஓணான்.]

முதுமக்கட்சாடி *mudumakkaṭ-šāḍi,* பெ.(n.) முதுமக்கட்டாழி பார்க்க; see *mudu makkaṭ-ṭāḻi.* *"முதுமக்கட் சாடி வகுத்த தராபதியும்" (விக்கிரம.உலா), (தக்கயாகப். 376, உரை).*

[முதுமக்கள் + சாடி.]

முதுமக்கட்டாழி *mudu-makkaṭṭāḻi,* பெ.(n.) 1. முற்காலத்தில் இறந்த வீரர் உடல்களை அடக்கம் செய்யப் பயன்படுத்திய மட்பாண்டம் (புறநா.256, உரை); a large earthen jar where in corpses of warriors were interred in ancient times. 2. ஆசீவக முனிவர் புக்கிருந்து நோற்கும் பெருந்தாழி வகை; a large pot into which *Aśivaga* ascetics enter for performing penance. 3. மிகவும் அகவை முதிர்ந்தவர்களை வைத்துப் பாதுகாக்குஞ் சாடி வகை; a large earthen jar in which persons were kept and looked after in their extreme old age.

[முதுமக்கள் + தாழி.]

முதுமக்கள் *mudu-makkaḷ,* பெ.(n.) அகவை முதிர்ந்தோர்; elders, aged persons. *"நரை முதுமக்க ளுவப்ப" (பழ.).*

[முது + மக்கள்.]

முதுமகள் *mudu-magaḷ,* பெ.(n.) முது பெண்டு பார்க்க; see *mudu-peṇḍu. "பார்ப்பன முதுமகள்" (பெருங்.இலாவாண. 3:30).*

[முது + மகள்.]

முதுமகன் *mudu-magaṉ,* பெ.(n.) 1. அகவை முதிர்ந்தவன்; man of advanced years. *"முந்து புள்ளுரைத்த முதுமகன்" (பெருங். உஞ்சைக் 56:234).* 2. முப்பதுக்கு மேற்பட்ட அகவையுடையவன் (பன்னிருபா. 232); man past the age of thirty. 3. காரி (சனி.) (பிங்.); the planet Saturn. *"முதுமகனு நீளரவு மொன்பா னிற்கில்" (சினேந்.272).*

[முதுமை + மகன்.]

முதுமரம் *mudu-maram,* பெ.(n.) ஆலமரம்; banyan. *"பறவை..... பகலுறை முதுமரம்" (குறுந். 352).*

[முது + மரம்.]

முதுமாணி *mudu-māṇi,* பெ.(n.) கல்லூரிப் பட்டப் படிப்பில் முதுகலை; post graduate.

மறுவ. முதுகலை, முதுநிலை.

[முது + மாணி.]

முதுமுறை *mudu-muṟai,* பெ.(n.) மூத்த முறைமை; seniority in age. *"முதல்வற்கு முதுமுறைப் பாலன்ன மேனியான்" (கலித்.124).*

[முது + முறை.]

முதுமூப்பு *mudu-mūppu,* பெ.(n.) மிக முதிர்ந்த அகவை; ripe old age. *"முதுமூப்பாய மக்களை" (திருவிளை. எல்லாம்வல்ல.9).*

[முது + மூப்பு.]

முதுமை *mudumai,* பெ.(n.) 1. பழமை (பிங்.); antiquity, oldness. 2. அகவை முதிர்ந்து உடல் பலமும் தோற்றக் கவர்ச்சியும் இழந்த கூட்டம், மூப்பு; old age. *"இளமை நாணி முதுமை யெய்தி" (மணிமே.4 : 107), "முதுமை யெள்ளலஃதமைகுந் தில்ல" (அகநா.6:15), "முதியை என்போர்க்கு முதுமை தோன்றலும்" (பரிபா.2:23).* 3. முதுமொழி, 1 (சூடா.) பார்க்க; see *mudu-moḻi,* 1. 4. முற்றின நிலை (பிங்.); maturity. 5. முதுகாஞ்சி பார்க்க; see *mudu-kāñji. "கழிந்தோ ரொழிந் தோர்க்குக் காட்டிய முதுமையும்" (தொல்.பொருள்.79).*

தெ. முதிமி; ம. முதும.

[மூ → முதுமை.]

முதுமொழி *mudu-moḻi,* பெ.(n.) 1. பழமொழி (தொல்.பொருள்.489); proverb, old saying. 2. பெரியோர் வாக்கு, அறிவுரை; words of wisdomaxiom. *"முதுமொழி கூற முதல்வன் கேட்டு" (மணிமே.25:119).* 3. சான்றோர் செய்யுள்கள்; poems of ancient poets. *"செவி செறுவாக முதுமொழி நீரா" (கலித்.68).* 4. மறைநூல்; the *Vēdas. "முன்னை மரபின் முதுமொழி முதல்வ" (பரிபா.3:42).* 5. திருக்குறள் (வள்ளுவமா.31); *T iru-k-kuṟaḷ.*

[முது + மொழி.]

முதுமொழிக்காஞ்சி *mudu-moḻi-k-kāñji,* பெ.(n.) 1. அறிவுடையோர் அறம் பொருளின்பங்களைப் பலரும் அறியச் சொல்லும் புறத்துறை (பு.வெ.10, காஞ்சிப்.1); theme of wise men giving instruction on *aṟam, poruḷ* and *iṉbam* to the people at large. 2. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றானதும் கூடலூர் கிழார் இயற்றியதுமான அறநூல் (நீதி நூல்); an ancient didactic poem of 100 verse by *Kūḍalūr-kiḻār,* one of *patiṉeṉ-kīḻ-k-kaṇakku.*

[முதுமொழி + காஞ்சி.]

முதுமொழிவஞ்சி *mudu-moḻi-vañji,* பெ.(n.) மகன் தந்தையினுடைய வீரச் செயலைக் கூறும் புறத்துறை (பு.வெ.3:13); theme of a son describing the heroic acts of his father.

[முது + மொழி + வஞ்சி.]

பழைய வரலாற்றினையும், வாளினையும் உடைய மறக்குடியில் பிறந்த தந்தையின் நிலைமையை மகன் சொல்லும் புறத்துறை.

முதுவர்[1] *muduvar,* பெ.(n.) 1. மூத்தோர்; elders, old persons. *"தமராகிய முதுவர்" (கந்தபு.வள்ளியம்.43).* 2. அறிவாற்றல் (ஞான) மிக்கோர்; persons of ripe wisdom; men of experience. *"முதுவருண் முந்து கிளவாச் செறிவு" (குறள், 715) (பிங்.).* 3. அமைச்சர், அறிவுரைஞர் (பிங்.); counsellors. 4. புலவர் (திவா.); poets. 5. மலைவாழ் பழங்குடி (E.T.5:86); a hill tribe.

[முது → முதுவர்.]

முதுவர்[2] *muduvar,* பெ.(n.) உழவர்; a cultivator, farmer pesant.

[முது → முதுவர்.]

கோவை, திருவாங்கூர் மலையை அடுத்த நிலத்தில் வேளாண் பயிர் தொழிலைச் செய்பவர்களை முதுவர் என்பர்.

முதுவல் *muduval,* பெ.(n.) பழமையாற் பழுதானது (இ.வ.); that which is time-worn.

[முது → முதுவல்.]

முதுவானாள் *muduvāṉāḷ,* பெ.(n.) மலையில் வாழும் ஒருவகைப் பழங்குடியினர் (E.T.5, 86); a hill tribe.

முதுவு *muduvu,* பெ.(n.) முதுகு[2] பார்கக; see *mudugu[2].*

முதுவுழிஞை *mudu-v-uḻiñai,* பெ.(n.) 1. இரை கண்ட பறவை பாய்வது போல, எதிரிகளைக் கண்டு பாயும் வீரர்களைக் குறித்துக் கூறும் துறை; a theme, says about the warrior who attack the enemies, like the bird that tantivy when seeing its prey. *"வேய் பிணங்கிய மிளையரணம் பாய்புள்ளிற் பரந்திழிந்ததன்று"*

(பு.வெ.6:20). 2. போரைச் செய்யும் எயிலினுள்ளோருடைய மிகுதியைக் கூறுவதும் வெல்லுதற்குரிய மாறுபாட்டைக் கூறுவதுமான உழிஞைத்துறை; a kind of *uliñjai-t-turai.* *"செருமதிலோர் சிறப்புரைத்தலும் அருமுரணான அத் துறையாகும்" (பு.வெ.6:21).*

[முது + உழிஞை.]

முதுவெழுத்து *mudu-v-eluttu,* பெ. (n.) தேறின எழுத்து (வின்.); settled, well-formed handwriting.

[முது + எழுத்து.]

முதுவேனில் *mudu-vēnil,* பெ. (n.) பருவம் ஆறனுள் ஆடவை (ஆனி), கடக(ஆடி)த் திங்களடங்கிய கடுங்கோடைக் காலம் (பிங்.); summer, the month of Ani and ādi as the season of extreme heat, one of *āmparuvam* (six season).

[முது + வேனில்.]

பருவம் : 1. கார்காலம், 2. கூதிர் காலம், 3. முன்பனிக்காலம், 4. பின்பனிக் காலம், 5. இளவேனில் காலம், 6. முதுவேனில் காலம்.

முதுவோர் *muduvōr,* பெ. (n.) 1. முதுவர் 1, 2, 3 பார்க்க; see *muduvar, 1, 2, 3.* 2. அரசன், ஆசிரியர், தாய், தந்தை, அண்ணன் முதலிய பெரியோர்; the great; the noble; the elders, as king, teacher, mother, father, elder brother. *"முதுவோர்க்கு முகிழ்த்த கையினை" (சிறுபாண்.231).* 3. புலவர் (திவா.); poets.

[முது →முதுவோர்.]

முதூசன் *mudūšan,* பெ. (n.) கொட்டைப் பாக்கு; areca-nut (சா.அக.).

முதை *mudai,* பெ. (n.) 1. முதைப்புனம் (பிங்.) பார்க்க; see *mudai-p-punam. "முதைச் சுவற்கலித்த முற்றா இளம்புல்" (குறுந்.204).* 2. சங்கஞ் செடி (பரி.அக.); mistle toe berry-thorn.

[முது →முதை (வே.க.).]

முதைப்புனம் *mudai-p-punam,* பெ. (n.) 1. பழங்கொல்லை (திவா.); ground long under cultivation, dist. fr. *idai-p-punam. "முதைப் புனங் கொன்ற ஆர்கலி உழவர்" (குறுந்.155:1).* 2. பயிரிடுவதற் குரித்தான பண்பட்ட நிலம் (வின்.); ground cleared and prepared for tillage.

[முது→முதை + புனம்.]

முதையல் *mudaiyal,* பெ. (n.) 1. பழங்காடு (சூடா.); wild jungle; ancient forest. *"விதையர் கொன்ற முதையற் பூமி" (நற்.121). "முளிந்த வோமை முதையலங் காட்டு" (அகநா.5:8).* 2. கடுகு (சங்.அக.); mustard.

[முது→முதை→முதையல்.]

முந்தண்டுக்கால் *mundandu-k-kāl,* பெ. (n.) நெசவில் முன்தண்டைத் தாங்கும் கால்; stand which bears the front pole in weaver's instrument.

[முன்தண்டு + கால்.]

முந்தல்¹ *mundal,* பெ. (n.) 1. முற்படுகை (உ.வ.); being first or before. 2. முனை (வின்.); projection, promontory.

[முந்து → முந்தல்.]

முந்தல்² *mundal,* பெ. (n.) முச்சந்தி (யாழ். அக.); junction of three roads.

முந்தல்[3] *mundal,* பெ.(n.) முகவை மாவட்டக் கடற்புறத்து அலைவாய் துருத்தியிலுள்ளதோர் ஊர்; a name of a seashore village in Ramanad District.

முந்தன் *mundan,* பெ.(n.) கடவுள்; God, as the First Being *"முந்தனை யான்மா வென்றும்" (சி.சி.4 : 28).*

[முந்து →முந்தன்.]

முந்தாங்கி *mundāṅgi,* பெ.(n.) 1. நீளத்திற் கோடிட்ட மகளிர் சீலை வகை; a kind of saree striped lengthwise. 2. விரலாழிக்கு முன்னிடும் வளையம்; keeper, ring that keeps another on the finger or toe. 3. வண்டிச் சக்கரங் கழலாமல் இருப்பதற்காக அதன் முன் இடும் வளையம்; axle-ring of a cart.

[முன்[1] + தாங்கி.]

முந்தாணி *mundāṇi,* பெ.(n.) முந்தானை (வின்.) பார்க்க; see *mundāṉai.*

[முந்தானை →முந்தாணி.]

முந்தாநாள் *mundā-nāḷ,* பெ.(n.) நேற்றெனச் சொல்லப்படுவதற்கு முந்திய நாள்; day before yesterday. *"முந்தா நாளிரவு கண்ட கனா" (விறலிவிடு.501).*

[முந்து + ஆ + நாள்.]

முந்தானை *mundāṉai,* பெ. (n.) முன்றானை பார்க்க; see *muṉṟāṉai. சேலை முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.*

[முன்றானை →முந்தானை.]

முந்தானைபோடு–தல் *mundāṉai-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) முன்றானைவிரி–த்தல் பார்க்க; see *muṉṟāṉai-viri-.*

[முந்தானை + போடு–தல்.]

முந்தானைவிரி–த்தல் *mundāṉai-viri-,* 4 செ.கு.வி.(v.i.) 1. முன்றானைவிரி–த்தல் பார்க்க; see *muṉṟāṉai-viri-.* 2. முந்தி விரி–த்தல், 2 பார்க்க; see *mundi-viri-, 2.*

[முந்தானை + விரி–த்தல்.]

முந்தி[1] *mundi,* பெ.(n.) 1. முன்னிடம்; front. 2. முன்றானை பார்க்க; see *muṉṟāṉai.* *"பொதுமாதர் முந்தியே தொடு மிடங்கள்" (குற்றா.தல.மந்தமா.21).*

[முந்து → முந்தி.]

முந்தி[2] *mundi,* கு.வி.எ.(adv.) 1. காலத்தில் முன்பு, முன்னால்; of time earlier. *இரண்டு நாள் முந்தி வந்திருக்கக் கூடாதா? இது முந்தியே பார்த்த திரைப்படம் தான்.* 2. வேகமாக; faster. உன் கடிகாரம் அரை மணி நேரம் முந்திப் போகிறது. 3. முற்காலம்; some time before. *"முந்தி வானோர்கள் வந்து" (தேவா.477, 8).*

[முந்து →முந்தி.]

முந்திசினோர் *mundišiṉōr,* பெ.(n.) முன்னோர்; the ancients. *"இலங்குகதிர்த் திகிரி முந்திசினோரே" (பதிற்றுப்.69:17).*

[முந்தி + ஈயினோர் = முந்தியீயினோர் →முந்தீயினோர் →முந்தீசினோர் →முந்திசினோர் (வே.க.).]

முந்திய *mundiya,* பெ.அ.(adj.) காலத்தில் முற்பட்ட, முன்னிருந்த; previous; pre-. *முந்திய தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர். இதற்கு முந்திய கருத்தரங்கம்*

சென்னையில் நடந்தது. வரலாற்றுக்கு முந்திய காலம்.

[முந்து → முந்திய.]

முந்தியவட்டி *mundiya-vaṭṭi,* பெ.(n.) கடன் கொடுக்கும்போது முன்னதாகப் பிடித்துக் கொள்ளும் வட்டி (C.G.); interest taken in advance at the time of the loan.

[முந்து + வட்டி.]

முந்திரி[1] *mundiri,* பெ.(n.) 1/320 என்ற குறியுள்ள பின்னயெண்; the fraction 1/320. *"முந்திரிமேற் காணி மிகுவதேல்" (நாலடி, 346).*

ம. முந்திரி.

[முந்து + இரி = முந்திரி. இரிதல் = விலகுதல், பிளத்தல், கெடுதல். இரிசல் = பிளவு. ஒ.நோ. = பின்னம் = 1. பின்னம், 2. கீழ்வாயிலக்கம். E. fraction, f.l. frang, break. கீழ்வாய் இலக்கங்களுள் முந்தியது முந்திரி எனப்பட்டது (வே.க.முல்.[2]]

மேல்வாய்ச் சிற்றிலக்கத்தில் அடிமட்ட எண் மேல் முந்திரி என்னும் முந்திரி (1/320)யும் கீழ்வாய்ச் சிற்றிலக்கத்தில் அடிமட்ட எண் கீழ்முந்திரி (1/102, 1/400)யும் ஆகும் (பழந்த.ஆ.பக்.72).

முந்திரி[2] *mundiri,* பெ.(n.) 1. அகன்ற இலை உடையதும் மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறத்தில் பழத்தைக் கொடுக்கக் கூடியதுமான ஒரு மரம், அண்டிமா; cashew tree, *Anacardium occidentale*. 2. முந்திரிப் பருப்பு; cashew nut. 3. முந்திரிகை[2],1 பார்க்க; see *mundirigai[2],1.*

தெ. முந்தமாமிதி; ம. முந்திரி.

[முன் + துரி – முந்துரி→முந்திரி. துருத்தல் = முன் தள்ளுதல் (த.வி.). துருத்துதல் = முன் தள்ளுதல் (பி.வி.). முந்திரிக் கொட்டை பழத்திற்கு வெளியே முன்தள்ளிக் கொண்டிருத்தலால், அதன் பழமும் மரமும் முந்திரியெனப்பட்டன. அண்டிமா என்பதும் இப் பொருளதே. அண்டியில் கொட்டை யுடைய பழம் அண்டிமா.]

வகைகள் : 1. கொடிமுந்திரி, 2. காட்டு முந்திரி, 3. கொட்டை முந்திரி, 4. மலாக்கா முந்திரி, 5. சிறிய கொடி முந்திரி (சா.அக.).

முந்திரிக்கொட்டை *mundiri-k-koṭṭai,* பெ.(n.) 1. முந்திரிப் பழத்தின் கீழ்ப் பகுதியிலிருந்து வெளியே நீண்டு இருக்கும் கொட்டை; cashew-nut which protrudes from the fleshy party of the stalk. 2. தேவையில்லாமல் அடுத்தவர் கருத்துப் பரிமாற்றத்தில் தலையிட்டு பேசுபவர்; one who talks or acts presumptuously. *அந்த முந்திரிக் கொட்டையைக் கூப்பிடாதே.*

[முந்திரி + கொட்டை.]



முந்திரிகை[1] *mundirigai,* பெ.(n.) முந்திரி[1] பார்க்க; see *mundiri[1]. 'காணியே முந்திரிகை' (தொல்.எழுத்து.164, உரை).*

[முந்திரி →முந்திரிகை.]

முந்திரிகை² *mundirigai,* பெ.(n.) 1. கொடி முந்திரி (திராட்சை); common grape vine. *"முந்திரிகைப் பழச்சோலைத் தேன்" (சீவக. 3063).* 2. முந்திரி², 1 பார்க்க; see *mundiri², 1.*

[முந்திரி →முந்திரிகை.]

முந்திரிகைக்கள்(ளு) *mundirigai-k-kaḷ,* பெ.(n.) முந்திரிகை மது; wine brandy (சா.அக.).

[முந்திரிகை + கள்.]

முந்திரிப்பருப்பு *mundiri-p-paruppu,* பெ.(n.) முந்திரிக் கொட்டையில் இருந்து எடுக்கப்படும் பருப்பு; cashew kernel. *சுவையில் முந்திரிப் பருப்பை முந்தும் பருப்பு ஏதுமில்லை.*

மறுவ. அண்டிப்பருப்பு

[முந்திரி + பருப்பு.]

முந்திரியணா *mundiri-y-aṇā,* பெ.(n.) ஓர் அணா (செட்டிநாடு); one anna.

[முந்திரி¹ + அணா.]

முந்திவிரி-த்தல் *mundi-viri-,*4 செ.கு.வி. (v.i.) 1. முன்றானைவிரி-த்தல் பார்க்க; see *muṉṟāṉai-viri-. முந்தி விரித்தவள் சீதேவி, முலைப்பால் கொடுத்தவள் மூதேவியா?* 2. பிச்சை வாங்க துணி விரித்தல்; to unfold or spread one's cloth to receive alms.

[முந்தி + விரி-த்தல்.]

முந்தின *mundiṉa,* இடை.(part.) முந்திய பார்க்க; see *mundiya. "முந்தினோர் பிந்தினோராவர், பிந்தினோர் முந்தினோ ராவர்", "முந்தி வந்த செவியைப் பிந்தி வந்த கொம்பு மறைத்ததாம்" (பழ.), "முந்தின சோற்றைத் தட்டினால் பிந்தின சோறு பீயும் சோறும்" (பழ.).*

[முந்திய →முந்தின.]

முந்து¹-தல் *mundu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. காலம், இடம் முதலியவற்றால் முற்படுதல்; to be prior in time, place, etc. *"முதுவருண் முந்துகிளவாச் செறிவு" (குறள், 715), "முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி" (நற்.22:2).* 2. எதிர்ப்படுதல்; to come in front; to advance; to meet. *"முந்தின னருமறைக் கிழவன்" (கம்பரா. தாடகை.28).* 3. விரைதல்; to go fast. *"முந்தா நின்ற வேட்கை" (ஞானவா.சுக்கி.7).* 4. மேலெழுதல்; to rise up. *"உந்தி முதலா முந்துவளி தோன்றி" (தொல்.எழுத்து.83).* 5. முதன்மை யாதல்; to take precedence; to take the lead; to be first. *"அவையத்து முந்தி யிருப்பச் செயல்" (குறள், 67).* 6. சிறத்தல்; to surpass, excel. 7. பழமையாதல்; to be old; to be long-standing. 8. வண்டி முதலியவற்றைக் கடந்து செல்லுதல், கடந்து முன் செல்லுதல்; go past, over take. *பேருந்தை முந்தும் போது சீறுந்து இடி மோதலுக்கு உள்ளானது. முன்னால் ஓடிக்கொண்டு இருந்தவரையும் கடைசி நிமயத்தில் முந்திவிட்டார்.* 9. ஒன்றைப் பெறவோ செய்யவோ பிறரைக் காட்டிலும் விரைதல்; over take some one, rush to get, to do something. *எனக்குத்தான் அந்த வேலை கிடைத்து இருக்க வேண்டும்; ஆனால் அவர் முந்திக் கொண்டார். முந்துங்கள், இன்னும் சில மனைகளே விற்பனைக்கு உள்ளன என்று விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.*

க. முந்து

[முல்→முன்→முன்று→முந்து→முந்து-தல்.]

முந்து² *mundu,* பெ.(n.) 1. முற்காலம்; antiquity. *"முந்துறை சனகனாதி" (கந்தபு. மேருப்.10).* 2. முன்பு; priority. 3. தொடக்கம் (ஆதி); beginning. *"முந்துநடுவு முடிவு மாகிய....... சேவடியானை" (திருவாச.18:5).*

[முந்து¹→முந்து².]

முந்து³ *mundu,* பெ.(n.) வெண்ணாரை (அக.நி.); a kind of white heron.

முந்துநீர்ப்போக்கு *mundu-nīr-p-pōkku,* பெ.(n.) மிகை சிறு நீர்; passing excess of urine - *Nocturia.*

[முந்து + நீர்ப்போக்கு.]

முந்துநூல் *mundu-nūl,* பெ.(n.) 1. முன்னூல்; original treatise as distinguished from subsequent works or commentaries. *"முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணி" (தொல்.சிறப்புப்.).* 2. மறைநூல்; the Vedas. *"முந்துநூலு முப்புரிநூலு முன்னீந்த வந்தணாளன்" (திவ்.பெரியதி.6 : 5, 7).*

[முந்து + நூல்.]

முந்துறு¹-தல் *munduṟu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. முன்னிலையாதல்; to be in front, as of a person. *"மொய்வளைத் தோளி முந்துற மொழிந்தன்று" (பு.வெ.12, பெண்பாற்.1, கொளு.).* 2. முற்படுதல்; to be first; to be in advance. இல்லைகனா முந்துறாத வினை (பழமொ.12). *"யாமுந் துறுதல் செல்லேம் ஆயிடை" (அகநா.261:11).*

[முந்து + உறு¹-தல்.]

முந்துறு²-த்தல் *munduṟu-,* 18 செ. குன்றாவி. (v.t.) 1. தோற்றுவித்தல்; to cause to appear. *"நோய் முந்துறுத்து நொதுமன் மொழியல்" (அகநா.39).* 2. காட்டிக் கொள்ளுதல்; to show, assume. *"பற்றா மாக்களிற் பரிவு முந்துறுத்து" (புறநா.29).* 3. ஒருவன் முன்னிலையில் அறிவித்தல்; to disclose in one's presence. *"வேட்கை முந்துறுத்தல்" (பு.வெ. 12, பெண்பாற்.1).*

[முந்து + உறு-த்தல்.]

முந்துறு³-த்தல் *munduṟu-,* 20 செ.கு.வி. (v.i.) முதலாதல்; to begin with. *"அச்சமு நாணு மடனு முந்துறுத்த" (தொல். பொருள். 99).*

[முந்து + உறு-த்தல்.]

முந்தூழ்¹ *mundūḻ,* பெ.(n.) மூங்கில் (திவா.); spiny bamboo. *"முந்தூழ் வேலிய மலை கிழவோற்கே" (குறுந்.239:6).*

மறுவ. முந்தூழ்கம், முந்தூள், முந்தூளம்.

முந்தூழ்² *mundūḻ,* பெ.(n.) பழவினை (வின்.); fate, destiny.

[முந்து + ஊழ்.]

முந்தூழகம் *mundūḻagam,* பெ.(n.) மூங்கில்; bamboo.

[முந்தூழ் + அகம்.]

முந்தூள் *mundūḷ,* பெ.(n.) முந்தூழகம் பார்கக; see *mundūḻagam.*

[முந்தூழ் → முந்தூள்.]

முந்தூளம் *mundūḷam,* பெ.(n.) முந்தூழகம் பார்க்க; see *mundūḻagam.*

முந்தை¹ *mundai,* பெ. (n.) 1. முற்காலம்; the past, former time. *"முந்தைத் தான் கேட்டவாறே" (சீவக.545).* 2. பழைமை (பிங்.); antiquity. 3. முன்னோன்; ancestor.

"அந்தணர்.... தந்தை தாயென் றிவர்க்கு.... முந்தைவழி நின்று" (பு.வெ.9:33).

தெ. முந்துகி; க. முந்தெ.

[முந்து →முந்தை.]

முந்தை[2] *mundai,*கு.வி.எ.(adv.) முன்; in front of. *"வந்தடி பொருந்தி முந்தை நிற்பின்" (புறநா.10). "தேர்வண் மலையன் முந்தைப் பேரிசை" (நற்.100:9), "முந்தை யுணர்ந்தோர் வந்து நினக் குரைப்ப" (பெருங்.உஞ்சை. சாங்கி.36:169).*

[முந்து →முந்தை.]

முந்தை[3] *mundai,*பெ.(n.) சிறு ஏன வகை (வின்.); a small vessel.

தெ. முந்த; க. முந்தெ.

[மொந்தை→முந்தை.]

முந்தைநாள் *mundai-nāḷ,* பெ.(n.) 1. முந்தாநாள் (வின்.); day before yesterday. 2. முந்தை[1], 2 பார்க்க; see *mundai*[1], 2.

[முந்தை[1] + நாள்.]

முந்தைய *mundaiya,* கு.பெ.எ.(adj.) முந்திய பார்க்க; see *mundiya.*

[முந்திய →முந்தைய.]

முந்நாடி *mu-n-nāḍi,*பெ.(n.) வளி, பித்தம், கோழைக்குரிய நாடிள்; the three pulses.

[மூன்று + நாடி.]

முந்நிரை *mun-nirai,*பெ.(n.) ஆடு, மாடு, எருமை என்னும் மூன்றன் மந்தை அல்லது கூட்டம்; a flock of cattle.

[மூன்று + நிரை.]

முந்நீர்[1] *mu-n-nīr,*பெ.(n.) ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர் என்ற மூன்று நீர்களை உடைய கடல்; sea, as consisting of three waters, viz., river water, spring water and rain water. *"முந்நீர் விழவி னெடியோன்" (புறநா.9). முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை (தொல்.அகத்.34).*

க. முந்நிர்; தெ. முந்நீரு.

[மூன்று + நீர்.]

முந்நீர்[2] *mu-n-nīr,*பெ.(n.) இளநீர், சருக்கரை நீர், கன்னலினீர்; the three kinds of liquids, viz., milk of tender coconut, sugared water and juice of sugarcane. *"முந்நீ ரடைக்காயும் படைத்து" (ஞானதீக்ஷை. 4).*

[மூன்று + நீர்.]

முந்நூல் *mu-n-nūl,*பெ.(n.) 1. ஆண்கள் மார்பில் அணியும் மூன்று பிரிவான நூல் (பூணூல்); the sacred thread, as containing three strands. *"மார்மிடை முந்நூல் வனையா முன்னர்" (மணிமே.13:23).* 2. மகளிர் கழுத்தணி வகை (இ.வ.); woman's necklace, as having three strands.

[மூன்று + நூல்.]

முந்நூற்றுநாலு *mu-n-nūṟṟu-nālu,*பெ.(n.) சீட்டாட்டத்தில் ஒருவகை; a game of cards.

[முந்நூறு + நாலு. நான்கு→நாலு (பே.வ.)]

முந்நூறு *mu-n-nūṟu,*பெ.(n.) மூன்று நூறு; the number 300. *"முந்நூறூர்த்தே தண்பறம்பு நன்னாடு" (புறநா.110:3).*

[மூன்று + நூறு.]

முப்பகை *mu-p-pagai,* பெ.(n.) 1. ஆதனைக் (ஆன்மாவைக்) கெடுக்கின்ற மூன்று குற்றங்களாகிய காமம், வெகுளி, மயக்கம்; the three evil qualities of the soul, viz., *kāmam, vekuḷi, mayakkam. "முப்பகை வென்றார்" (கம்பரா. கார்மு.26).* 2. பேய் (பிசாசு), உலகு, உடலாகிய மாந்தனின் மூன்று பகைவர்கள் (சது.); the three enemies of mankind, viz. *pēy (piśāšu), ulagu, uḍal.*

[மூன்று + பகை.]

முப்பட்டகம் *mu-p-paṭṭagam,* பெ.(n.) கண்ணாடி போன்றவற்றால் முக்கோண வடிவில் செய்யப்பட்டதும் தன்னுள் பாயும் ஒளியை நிறமாலையாகப் பிரிக்கக் கூடிய தன்மை உடையதுமான பொருள்; prism.

[மூன்று + பட்டகம்.]



முப்பட்டையரம் *mu-p-paṭṭai-y-aram,* பெ.(n.) மூன்று பட்டைகள் அமைந்த அரம் (இ.வ.); corner file.

[மூன்று + பட்டை + அரம்.]

முப்படலம் *muppaḍalam,* பெ.(n.) ஒருவகைக் கண்ணோய்; an eye disease.

முப்படை *mu-p-paḍai,* பெ.(n.) ஒரு நாட்டின் தரைப்படை, கப்பல் படை, வான்படை ஆகிய மூன்று படை; the armed forces comprising of army, navy and air force. *முப்படைத் தளபதி யார்?*

[மூன்று + படை.]

முப்பணி *muppaṇi,* பெ.(n.) மூன்று வகை வேலை; three kinds of work. *"முப்பணியிட்ட பெண்ணுக்குக் கொப்பு ஒன்றுதான் குறை" (பழ.).*

[மூன்று + பணி.]

முப்பத்தாறாயிரப்படி *muppattāṟāyira-p-paḍi,* பெ.(n.) ஈடு முப்பத்தாறாயிரம்; a commentary on *Tiruvāymoḷi.*

[முப்பது + ஆறு + ஆயிரப்படி.]

முப்பத்திமண்டபம் *mu-p-patti-maṇḍabam,* பெ.(n.) மூன்று பத்திகளுள்ள மண்டபம்; pillared hall containing four rows of pillars, as having three vestibules.

[மூன்று + பத்தி + மண்டபம்.]

நான்கு வரிசையாக உள்ள தூண்களுக்கு இடைப்பட்ட மூன்று பத்திகளையுடைய மண்டபம்.

முப்பத்திரண்டறம் *mu-p-pattiraṇḍāṟam,* பெ.(n.) ஆதுலர்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தோர்க்குணவு, ஆவுக்கு (பசுவுக்கு) வாயுறை, சிறைச்சோறு, ஐயம், நடைத் தின்பண்டம், மகச்சோறு, மகப்பெறுவித்தல், மகவளர்த்தல், மகப்பால், அறவைப் பிணஞ்சுடல், அழிந்தோரை நிறுத்தல், வண்ணார், முடிதிருத்துவோர் (நாவிதர்), வதுவை, பூணூல், நோய் மருந்து, கண்ணாடி, நாளோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்ணுகர்வு, அட்டூண், பிறரறங்காத்தல், தண்ணீர்ப்பந்தர், மடம், தடம், கா, ஆவுரிஞ்சு நடுதறி,

ஏறுவிடுத்தல், விலையுயிர் கொடுத்துக் கொலையுயிர் மீட்டல் என்னும் முப்பத்திரண்டு வகையான அறம் (திவா.Mss.); thirty two kinds of charity.

[முப்பது + இரண்டு + அறம்.]

முப்பத்துமுக்கோடிதேவர் *mu-p-pattu-mukkōḍi-tēvar,* பெ.(n.) முப்பத்து மூன்று கோடியாகக் கணக்கிடப்படும் தேவர் (தக்கயாகப்.183, உரை); celestials numbering thirty-three crores. 2. முப்பத்துமூவர் பார்க்க; see *mu-p-pattu-mūvar. "செருக்கொண்ட முப்பத்து முக்கோடி தேவருஞ் சேனையுமே" (அஷ்டப். திருவரங்கத்துமா.64).*

[முப்பது + மூன்று + கோடி + தேவர்.]

முப்பத்துமுத்தேவர் *mu-p-pattu-muttēvar,* பெ.(n.) முப்பத்துமூவர் (திவா.) பார்க்க; see *muppattu-mūvar. "அதிதி புதல்வராய முப்பத்து முத்தேவர்" (தக்கயாகப்.16).*

[மூன்று + பத்து + முத்தேவர்.]

முப்பத்துமூவர் *mu-p-pattu-mūvar,* பெ.(n.) முப்பத்துமூன்று தேவர் (பிங்.); the 33 celestials in four groups viz, *aṣṭa-vašukkaḷ, ēkātaša-ruttirar, tuvāta-šātittar, ašuviṉi-tēvar. "முப்பத்து மூவரமரர்க்கு" (திவ். திருப்பா.20).*

[மூன்று + பத்து + மூவர்.]

முப்பதம் *mu-p-padam,* பெ.(n.) 'அது நீயாயிருக்கிறாய்' என்னும் பொருளுடைய மூன்று வடசொல் (தத்துவமசி); *tat-tuvam-aši,* as comprising three words. *"முப்பதப் போதாந்தமான பிரணவத்துள்" (திருமந். 225).*

*[மூன்று + **Skt.** பதம்.]*

முப்பதாம்பூசை *mu-p-padām-pūšai,* பெ.(n.) பண்டார இனத்தவரின் சடங்குகளில் ஒரு வகை (கோவை.); a rite of *paṇḍāra* caste.

[முப்பதாம் + பூசை.]

பிணக் குழிக்குப் பந்தலிட்டு உட்கார்ந்து மந்திரம் சொல்லிப் பின் வீட்டிலும் மந்திரம் சொல்லிச் செய்யும் சடங்கு.

முப்பது *muppadu,* பெ.(n.) மூன்று பத்து (திவ்.திருப்பா.30); thirty. *"முப்பது செருப்புத் தின்றவனுக்கு மூன்று செருப்பு பணிகாரம்" (பழ.), "முப்பது பணம் கொடுத்தாலும் மூளிபட்டம் போகாது" (பழ.), "முப்பதும் போய் மூன்றும் தள்ளினவள் போலப் பேசுகிறாள்" (பழ.), "முப்பது ஆண்டு வாழ்ந்தவனும் இல்லை முப்பது ஆண்டு தாழ்ந்தவனும் இல்லை" (பழ.அக.).*

[மூன்று + பத்து.]

முப்பதுநோன்பு *mu-p-padu-nōṉbu,* பெ.(n.) 1. முகமதியர் நாளும் நோற்கும் நோன்பு (உ.வ.); fast observed by Muhammadans daily in the month of *Ramzāṉ.* 2. தமிழ்நாட்டில் வாழும் தெலுங்கரில் மணம் செய்துகொண்ட பெண்கள் மணநாள் முதல் முப்பது நாள் நோற்கும் நோன்பு (இ.வ.); ceremonial observance practised by newly married Telugu girls in Tamil districts, as lasting for thirty days from the date of marriage.

[முப்பது + நோன்பு.]

முப்பதெருப்புடம் *muppateruppuḍam,* பெ.(n.) 30 வரட்டிகளால் போடும் புடம்; cowdung fire with 30 cakes for calcination.

[முப்பது + எரு + புடம்.]

முப்பலம் *mu-p-palam,* பெ.(n.) முப்பலை (வின்.) பார்க்க; see *mu-p-palai.*

முப்பலை *mu-p-palai,* பெ.(n.) திரிபலை (யாழ். அக.); three myrobalans.

முப்பழம் *mu-p-paḻam,* பெ.(n.) 1. முக்கனி (சிலப்.6. 76. உரை.) பார்க்க; see *mu-k-kaṉi.* 2. திரிபலை; the three myrobalans. *"முப்பழ நீர்ப்பளிங்களைஇ" (சீவக.2356).*

[மூன்று + பழம்.]

முப்பறமுந்நாழி *muppaṟa-munnāḻi,* பெ.(n.) வரி வகை (T.A.S., iii.216); a tax.

முப்பாட்டன்¹ *mu-p-pāṭṭaṉ,* பெ.(n.) பாட்டனுக்குத் தந்தை (வின்.); great-grand father. *உன்னுடைய முப்பாட்டனுடைய பெயர் என்ன?*

[முன் + பாட்டன்.]

முப்பாட்டன்² *mu-p-pāṭṭaṉ,* பெ.(n.) பாட்டனுக்குப் பாட்டன் (வின்.); grand father's grand father. *எங்கள் முப்பாட்டன் காலத்திருந்தே இந்தச் சொத்து எங்களிடமே உள்ளது.*

[முன் + பாட்டன்.]

முப்பாட்டி *mu-p-pāṭṭi,* பெ.(n.) பாட்டியின் தாய்; great-grand mother.

[முன் + பாட்டி. முப்பாட்டன்² (ஆ.பா.) → முப்பாட்டி (பெ.பா.).]

முப்பாட்டி² *mu-p-pāṭṭi,* பெ.(n.) பாட்டனுக்குப் பாட்டி (யாழ்.அக.); grand father's grand-mother.

[முப்பாட்டன்² → முப்பாட்டி².]

முப்பாத்துக்காரர் *muppāttu-k-kārar,* பெ.(n.) தாழ்ந்த இனத்தவர்களின் தலைவன் (கோவை.); a headmanship of low caste people.

முப்பாரிதம் *muppāridam,* பெ.(n.) மிளகு; pepper-*Pipernigrum.*

முப்பால்¹ *mu-p-pāl,* பெ.(n.) 1. அறம், பொருள், இன்பமெனும் மூன்று பகுப்புகள்; the three division, *aṟam, poruḷ, iṉbam.* 2. முப்பாலை விரித்துக் கூறும் திருக்குறள்; *Tiru-k-kuṟaḷ,* as dealing with *mu-p-pāl.* *"வள்ளுவர் முப்பாலாற் றலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு" (வள்ளுவமா.11).* 3. ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்பன; the three genders, viz., *āṇ-pāl, peṇ-pāl, ali-p-pāl.* *"அத்திணை மருங்கின் முப்பாற்கு முரித்தே" (தொல்.சொல்.212).* 4. காய்ச்சுப் பால், திரட்டுப்பால், குழம்புப்பால் என்ற மூன்று வகைப்பட்ட பால் (யாழ்.அக.); the three preparations of milk, viz., *kāyccu-p-pāl, tiraṭṭu-p-pāl, kuḻambu-p-pāl.* 5. தாய்ப் பால், ஆவின் பால், ஆட்டுப்பால் என்னும் மூவகைப் பால் (தமிழ்விடு.25, உரை); the three kinds of milk, viz., mother's milk, cow's milk, goat's milk.

தெ. முப்பாலு

[மூன்று + பால்.]

முப்பால்² *muppāl,* பெ.(n.) வன்பால், மென்பால், சமப்பால் என்ற மூவகை நிலங்கள்; the three kinds of land, viz., *vaṉpāl, meṉpāl,* and *Šama-p-pāl.*

[மூன்று + பால். பால் = நிலம்]

முப்பாலகர் *mu-p-pālagar,* பெ.(n.) பால் குடிப்பவர், பாலும் சோறும் உண்பவர், சோறுமட்டு முண்பவரென மூவகைப்பட்ட குழந்தைகள் (தைலவ.தைல,117. உரை); children of three kinds, viz., those who drink milk alone, those who take milk and rice and those who take rice only.

[மூன்று + பாலகர். பாலகன் → பாலகர்.]

முப்பாலர் *mu-p-pālar,* பெ.(n.) முப்பாலகர் (தைலவ.தைல,117) பார்க்க; see *mu-p-pālagar.*

[மூன்று + பாலர். பாலன் → பாலர்.]

முப்பாழ் *mu-p-pāl̤,* பெ.(n.) 1. நிலத்திற் குண்டாம் வெயிற்பாழ், வெள்ளப்பாழ், குடிப்பாழ் என்ற மூவகைக் கேடுகள்; the three forms of ruin which a land is subject to viz., *veyir̠-pāl̤, vel̤l̤a-p-āl̤, kuḍi-pāl̤.* 2. உள்பொருள் (சீவேசுவர ஜகத்துக்கள்) (சங்.அக.); the three entities, viz., *Šivaṉ, Išuvaraṉ, Šakam.*3. உடம்புக்குள் வெறுமையான மூன்றிடம் (வின்.); the three vacant regions believed to exist in the body.

[மூன்று + பாழ்.]

முப்பாற்புள்ளி *mu-p-pār̠-pul̤l̤i,* பெ.(n.) 1. ஆய்தவெழுத்து (தொல்.எழுத்து.2); the letter ஃ, as having three dots. 2. குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்ற புள்ளியுள்ள மூன்றெழுத்துகள் (தொல். விருத்.பக்.26); the three letters *kur̠r̠iyalugaram, kur̠r̠iyaligaram* and *āydam,* as written with dots.

[முப்பால் + புள்ளி.]

முப்பான் *mu-p-pāṉ,* பெ.(n.) முப்பது; thirty.

முப்பிடாரி *mu-p-piḍāri,* பெ.(n.) சிற்றூர் பெண் தெய்வம்; a village goddess.

[மூன்று + பிடாரி. பிடாரி = சிற்றூர்த்தெய்வம்]

முப்பிணி *mu-p-piṇi,* பெ.(n.) வளி, பித்தம், கோழையாகிய மூன்று குற்றத்தினால் உண்டாகும் நோய்கள்; disease caused by the three kinds of human system (vatham) wind humours, (pittham) bile humour, (kapam) phlegm humour.

[மூன்று + பிணி.]

முப்பிரண்டை *mu-p-piranḍai,* பெ.(n.) மூன்று முகப் பிரண்டை; vitis with three faced stem (சா.அக.).

[மூன்று + பிரண்டை. மூன்று பிரிவாக இருக்கும் பிரண்டை.]

முப்பிரி *mu-p-piri,* பெ.(n.) மூன்று கயிறை ஒன்றாகத் திரிக்கும் கருவி (கோவை.); an instrument used for three coir ramble.

[மூன்று + பிரி.]

முப்பிள்ளைப்பேறு *mu-p-pil̤l̤ai-p-pēr̠u,* பெ.(n.) மூன்று குழந்தைகளைக் குறிப்பிட்ட காலத்தில் ஈனுகை; giving birth to triplets at a time.

[மூன்று + பிள்ளை + பேறு.]

முப்பிறைக்காண்பான் *mu-p-pir̠ai-k-kāṇbāṉ,* பெ.(n.) கக்குவான்; whooping cough (சா.அக.).

முப்பிறைச்சுமை *mu-p-pir̠ai-c-cumai,* பெ.(n.) முப்பிறைக்காண்பான் பார்க்க; see *mu-p-pir̠ai-k-kāṇbāṉ.*

[மூன்று + பிறை + சுமை.]

முப்பு *muppu,* பெ.(n.) 1. முப்பூ பார்க்க; see *muppu.* 2. அகத்தியர் இயற்றிய வாகடநூல் (மூ.அ.); a medical treatise by Agattiyar..

முப்புக்குரு *muppu-k-kuru,* பெ.(n.) கரைப்பான்; quint essence salt - *universal solvant* (சா.அக.).

முப்புடம் *mu-p-puḍam,* பெ.(n.) மூன்றுபுடம்; submitting thrice to the cowdung fire (சா.அக.).

முப்புடி *mu-p-puḍi,* பெ.(n.) 1. திரிபுடி (வின்.); the three factors of knowledge. 2. முக்குணம் (யாழ்.அக.) பார்க்க; see *mukkuṇam.*

முப்புடைக்கனி *mu-p-puḍai-k-kaṉi,* பெ. (n.) முப்புடைக்காய் பார்க்க; see *mu-p-puḍai-k-kāy.* *"முப்புடைக்கனிசிந்த மோதி" (மீனாட். பிள்ளைத்.55).*

[மூன்று + புடை + கனி.]

முப்புடைக்காய் *mu-p-puḍai-k-kāy,* பெ.(n.) மூன்று பிரிவுகளுடைய தேங்காய் (பெரும்பாண்.364); coconut as having three vertical sections.

[மூன்று + புடை + காய். தேங்காய் மூன்று பிரிவுகளையுடையது.]

முப்புநூல் *muppu-nūl,* பெ.(n.) பதினெண் வகையான குட்ட நோய்களையும் அவற்றைக் குணமாக்கும் மருத்துவ முறைகளையும் சொல்லும் அகத்தியர் இயற்றிய ஒரு தமிழ் மருத்துவ நூல்; a Tamil treatise of Agattiyar on 18 kinds of leprosy and their cures (சா.அக.).

[மூன்று + நூல்.]

முப்புரக்கனி *muppura-k-kaṉi,* பெ.(n.) பலாப்பழம்; jack fruit.



முப்புரம் *mu-p-puram,* பெ.(n.) திரிபுரம்; the three aerial cities burnt by Śiva. *"ஒக்க முப்புர மோங்கெரி தூவ" (தேவா.485, 5).*

[மூன்று + புரம்.]

முப்புரமாலி *muppura-māli,* பெ.(n.) சிவனார் வேம்பு; siva's neem - *Indigofera asphalathi folia alias asphalathoides indicus* (சா.அக.).

முப்புரமெரித்தான் *muppuram-erittāṉ,* பெ.(n.) 1. சிவன்; Śiva. 2. சிவனார் வேம்பு; wiry indigo. 3. ஆடுதின்னாப்பாளை; worm killer.

[முப்புரம் + எரித்தான்.]

முப்புரி¹ *mu-p-puri,* பெ.(n.) முப்புரம் (வின்.) பார்க்க; see *mu-p-puram.*

முப்புரி² *mu-p-puri,* பெ.(n.) மூன்று நூல் சேர்த்துத் திரித்த கயிறு; cord of three strands. *'முந்நூல்கொண்டு முப்புரி யாக்குதலின்' (திருமுரு.183, உரை).*

தெ. முப்பிரி; க. முப்புரி.

[மூன்று + புரி.]

முப்புரிச்சவுக்கம் *muppuri-c-cavukkam,* பெ.(n.) முப்புரிநூலாலமைந்த சிறிய ஆடை (இ.வ.); cloth woven from yarn of three strands.

[முப்புரி + (Skt. catuska > த.) சவுக்கம்.]

முப்புரிநூல் *muppuri-nūl,* பெ.(n.) பூணூல்; thread with three strands worn by men of certain castes. *"முப்புரி நூலொடு மானுரி யிலங்கு மார்வினின்" (திவ்.இயற். திருவெழு.வரி. 7).*

[மூன்று + புரி + நூல்.]

முப்புரிநூலோர் *muppurinūlōr,* பெ.(n.) பிராமணர் (திவா.); Brahmins, as wearing the sacred thread.

[முப்புரி + நூலோர்.]

முப்புரிமுண்டு *muppuri-muṇḍu,* பெ.(n.) முப்புரிச்சவுக்கம் (இ.வ.) பார்க்க; see *muppuri-c-cavukkam.*

[முப்புரி + முண்டு.]

முப்புவனம் *mu-p-puvaṉam,* பெ.(n.) துறக்கவுலகம், நிலவுலகம், பாதாளவுலகம் ஆகிய மூன்று உலகங்கள் (திருவிளை. தலவிசேட.2); the three worlds *Šuvarkkam, pūmi, pātāḷam.*

[மூன்று + (Skt. bhuvana > த.) புவனம்.]

முப்புள்ளி *mu-p-puḷḷi,* பெ.(n.) ஆய்த வெழுத்து (இலக். அக.); the letter ஃ, as having three dots.

[மூன்று + புள்ளி.]

முப்பூ[1] *mu-p-pū,* பெ.(n.) ஒருவகை உப்பு; a kind of salt.

[மூன்று + உப்பு.]

காரமான பூநீற்றைப் பனி நீரில் கரைத்து வைத்து மூன்றாம் நாள் தெளிவெடுத்து பரிதியில் பத்துமுறை காய வைத்து, கல்லுப்பு, கற்சுண்ணாம்பு, மண்டையோட்டு உப்பு, கற்பூரம் ஆகியவற்றை முட்டையின் வெள்ளைக் கருவில் ஆட்டிப் புடமிட உண்டான உப்பு (அபி.சிந்.).

முப்பூ[2] *mu-p-pū,* பெ.(n.) இரும்பு முதலியவற்றைப் பொன்னாக்கவும் ஒரிலக்க மாண்டுகள் உயிர்வாழச் செய்யும் என நம்பப்படுவதான ஒருவகையுப்பு; a salt believed to have the power of transmiting baser metals into gold, and to enable one to live 1,00,000 years.

[மூன்று + உப்பு.]

முப்பூநீறு *mu-p-pū-nīṟu,* பெ.(n.) முப்புச் சுண்ணம்; calcined powder prepared from muppu consisting of three salts (சா.அக.).

[முப்பு + நீறு.]

முப்பூப்புடம் *mu-p-pūppuḍam,* பெ.(n.) மணவைப்பூப்புடம், குழிப்பூப்புடம், பூபதனப் பூப்புடம் என்ற மூவகைப் பூப்புடங்கள் (தைலவ.தைல); the three modes of calcining medicines, viz., *maṇavai-p-pūppuḍam, kuḻi-p-pūppuḍam, pūpadaṉa -p-pūppuḍam.*

[மூன்று + பூப்புடம்.]

முப்பூரம் *mu-p-pūram,* பெ.(n.) கணை, முற்குளம், முற்கொழுங்கால் (பூரம், பூராடம், பூரட்டாதி) என்னும் மூன்று விண்மீன்கள்; the three naksatras viz., *pūram, pūrāḍam, pūraṭṭādi. "ஆயில் முப்பூரஞ் சோதி" (சூடா. உள்.165).*

[மூன்று + (Skt. pūrva-phalguni >pūra> த.) பூரம்.]

முப்பேர்நாகனார் *muppēr-nāgaṉār,* பெ. (n.) கழக காலப் புலவர்; an ancient Śaṅgam poet.

[முப்பேர் + நாகனார். முப்பேர் என்பது ஊரின் பெயர்.]

ஒழிந்த இளமையை முதிர்ந்தோர் எய்தாரெனவும், வாழ்நாள் வகையறிந்த அறிஞரும் இல்லையெனவும் நற்றிணை 314ஆம் பாடலில் கூறுகின்றார்.

"முதிர்ந்தோர் இளமை ஒழிந்தும் எய்தார்
வாழ்நாள் வகையளவு அறிஞரும் இல்லை
மாரிப் பித்திகத்து ஈரிதழ் அலரி
நறுங்காழ் ஆரமொடு மிடைந்த மார்பிற்
குறும் பொறிக் கொண்ட கொம்மையம் புகர்ப்பிற்
கருங்கண் வெம்முலை ஞெமுங்கப் புல்லிக்
கழிவ தாக கங்குல் என்றுதாம்
மொழிவன் மையிற் பொய்த்தனர் வாழிய
நொடிவிடு வன்ன காய்விடு கள்ளி
அலங்கலம் பாவை ஏறிப் புலம்புகொள்
புன்புறா வீழ்பெடைப் பயிரும்
என்றூழ் நீளிடைச் சென்றிசி னோரே"
(நற்.314).

முப்பேன் *mu-p-pēṉ,* பெ. (n.) மனிதர் தலைமுடியில் வாழும் சிற்றுயிர்; louse. *"முப்பேன் பிடிப்பது மூதேவி உறவுக்கு அடையாளம்" (பழ.).*

முப்பொருள் *mu-p-poruḷ,* பெ. (n.) கடவுள், உயிர், தளை (பதி, பசு, பாசம்) என்னும் மூன்று முதற்பொருள்கள் (சி.போ.பா.6:2, பக்.328); the three fundamental entities, *kaḍavuḷ, uyir, taḷai (padi, pašu, pāšam).*

[மூன்று + பொருள்.]

முப்பொழுது *mu-p-poḻudu,* பெ. (n.) முப்போது பார்க்க; see *mu-p-pōdu. "முப்பொழு தேத்திய நால்வர்க்கு" (தேவா.திருவெழுகூற. 142, வரி.7).*

[மூன்று + பொழுது.]

முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார் *mup poḻudun-tiru-mēṉi-tīṇḍuvār,* பெ. (n.) தொகையடியாருள் காலை, உச்சி, மாலை என்ற மூன்று பொழுதுகளிலும் சிவனது திருமேனியைத் தொட்டுப் பூசனை செய்தற்குரிய ஆதிசைவப் பிராமணர் (தேவா.378. 10); *Adi-Šaiva* Brahmins, as entitled to touch the sacred idol of *Šiva* morning, noon and evening for anointing and decorating, one of *togai-y-aḍiyār.*

[முப்பொழுது + திருமேனி + தீண்டுவார்.]

முப்பொறி *mu-p-poṟi,* பெ. (n.) மனம், வாக்கு, காயம்; the three organs refersing to mind, mouth and body thought speech and action (சா.அக.).

[மூன்று + பொறி.]

முப்போகம் *mu-p-pōgam,* பெ. (n.) ஆண்டில் மூன்று முறை விளைவு (மகசூல்) பெறுகை (கோவை.); three time crop in a year.

[மூன்று + போகம்.]

முப்போது *mu-p-pōdu,* பெ. (n.) காலை, உச்சி, மாலை என்ற மூன்று வேளைகள்; the three portions of a day, viz., *kālai, ucci, mālai. "முப்போதுங் கடைந்தீண்டிய வெண்ணெயி னோடு" (திவ்.பெரியாழ்.3.1: 5).*

[மூன்று + போது.]

முப்போதுந்திருமேனிதீண்டுவார் *muppōdun-tirumēṉi-tīṇḍuvār,* பெ.(n.) முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார் பார்க்க; see *muppoḻudun-tirumēṉi-tīṇḍuvār.*

[முப்போது + திருமேனி + தீண்டுவார்.]

மும் *mum,* பெ.(n.) முருங்கைப்பட்டை; bark of drum stick tree - *Moringa obeitera* (சா.அக.).

மும்பாடெபிம்பாடெ *mumbāḍē-pimbāḍē,* பெ.(n.) மாடுகளுக்கு உள்ள இரண்டு சுழிகள் (கோவை); two curl-marks of cows. *அரச (இராச) சுழிக்கும் மந்திரச் சுழிக்கும் குறுக்கே உள்ள சுழிகள் (கோவை.).*

மும்பாரம் *mumbāram,* பெ.(n.) முன்பாரம் பார்க்க; see *muṉ-pāram.*

[முன்பாரம் → மும்பாரம்.]

மும்மடங்கு *mu-m-maḍaṅgu,* பெ.(n.) மூன்று பங்கு; three times over, three-fold. *"மும்மடங்கு பொலிந்த முகத்தினன்" (கம்பரா. காட்சிப்.19).*

தெ. மும்மடுகு

[மூன்று + மடங்கு.]

மும்மடி *mu-m-maḍi,* பெ.(n.) 1. மும்மடங்கு பார்க்க; see *mu-m-maḍaṅgu. "பதாதி மும்மடி சேனா முகமே" (பிங்.6:540).* 2. அழகின் குறியாக மகளிர் வயிற்றிற் காணப்படும் மூன்று மடிப்பு (இ.வ.); three creases in a woman's abdomen, considered as a sign of beauty.

க. மும்மடி

[மூன்று + மடி.]

மும்மடியாகுபெயர் *mummaḍi-y-āgupeyar,* பெ.(n.) கருமையென்று பொருள்படுங் கார் என்பது முகிலை (மேகத்தை)யுணர்த்திப் பின் மழைக்காலத்தை யுணர்த்திப் பின் மழைக்காலத்துப் பயிரை யுணர்த்துவதுபோல ஒன்றன் மேலொன்றாக மும்முறை சென்று பொருளுணர்த்தும் ஆகுபெயர் வகை (நன்.290, உரை); an *āgu-peyar* of treble transference, as kār which literally means black and figuratively means first cloud, secondly rainy season and thirdly the crop of the rainy season.

[மும்மடி + ஆகுபெயர்.]

மும்மண்டலம் *mu-m-maṇḍalam,* பெ. (n.) 1. கதிரவ (சூரிய) மண்டலம், திங்கள் (சந்திர) மண்டலம், நெருப்பு (அக்கினி) மண்டலமென்ற மூன்று பகுதிகள்; the three regions viz., *šūriyamaṇḍalam, šandira maṇḍalam, akkiṉi maṇḍalam.* 2. நிலம், வானம், மேலுலகம் (பூமி அந்தரம், சுவர்க்கம்) என்ற மூன்று பகுதிகள்; the triple regions viz., *pūmi, andaram, šuvarkkam.*

[மூன்று + மண்டலம்.]

மும்மணி *mu-m-maṇi,* பெ.(n.) 1. புருடராகம், வயிடூரியம், கோமேதகம் எனும் மூவகை மணி; the three gems, viz., *puruḍa-rāgam, vayiḍūriyam, kōmēdagam. "மும்மணி யாவன சொன்ன புருடராக முறுவயிடூரியங் கோமேதகமே" (திருவாலவா. 25:22).* 2. மும்மணிக்காசு பார்க்க; see *mu-m-maṇi-k-kāšu. "முத்தவள்ளியொடு மும்மணி சுடர" (பெருங்.உஞ்சை.34 : 203).* 3. திரிமணி (மணிமே.அரும்.); the three objects of veneration.

[மூன்று + மணி.]

மும்மணிக்காசு *mu-m-maṇi-k-kāšu,* பெ. (n.) அணிகலன் வகை; an ornament. *"மும்மணிக்காசும் பன்மணித் தாலியும்" (பெருங்.நரவாண.9 : 49).*

[மும்மணி + காசு.]

மும்மணிக்கோவை *mummaṇi-k-kōvai,* பெ.(n.) 1. மூன்று கொத்துள்ள கழுத்தணி வகை (வின்.); necklace of three strings of beads. 2. சிற்றிலக்கியம் 96–இல் அகவலும் வெண்பாவும் கலித்துறையும் முறையே மாறிவர அந்தாதித் தொடையாகப் பாடப்பெறும் முப்பது பாடல்களையுடைய இலக்கிய வகை (இலக்.வி.815); a poem of 30 stanzas, in which agaval, *veṉ-bā* and *kali-t-tuṟai* occur serially one after another in *andāti-t-toḍai,* one of 96 *pirapandam.*

[மும்மணி + கோவை.]

மும்மணிக்கோவை என்னும் சிற்றிலக்கிய வகையில் பல நூல்கள் உள்ளன. முனைவர் ந.வீ. செயராமன் தொகுத்த சிற்றிலக்கிய அகராதியில் 38 மும்மணிக்கோவை நூல்கள் இடம்பெற்றுள்ளன. மும்மணிக் கோவை என்பது விருந்து என்னும் வனப்பு வகையைச் சார்ந்தது. 8–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சேரமான் பெருமாள் நாயனார் திருவாரூர் மும்மணிக் கோவை என்னும் நூலை இயற்றியுள்ளார். பெரும்பான்மையான, மும்மணிக்கோவை நூல்கள், ஊர்ப்பெயருடன் சேர்ந்து வருகின்றன. சில ஆசிரியர் பெயருடன் வருகின்றன. எ–டு: சிதம்பர மும்மணிக்கோவை, குமரகுருபரர் மும்மணிக்கோவை.

மும்மணிமண்டலம் *mummaṇi-maṇḍalam,* பெ.(n.) மும்மண்டலம் (பொருட்.நி.) பார்க்க; see *mu-m-maṇḍalam.*

[மும்மணி + மண்டலம்.]

மும்மணிமாலை *mummaṇi-mālai,* பெ.(n.) சிற்றிலக்கியம் 96–இல் வெண்பாவும் கலித்துறையும் அகவலும் முறையே மாறிவர அந்தாதித் தொடையாகப் பாடப் பெறும் முப்பது பாடல்களைக் கொண்ட இலக்கிய வகை (இலக்.வி.820); a poem of 30 stanzas in which *veṇbā, kali-t-tuṟai* and agaval occur serially one after another in *andāti-t-toḍai,* one of 96 *pirapandam.*

[மும்மணி + மாலை.]

இதன் ஆசிரியர் த.செய்யப்பர். இவர் 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் (சிற்றிலக்கிய அகராதி).

மும்மதக்கோடு *mummada-k-kōḍu,* பெ.(n.) செயற்கையாகக் கனிச்சாரங்களைக் கலந்த நஞ்சு (யாழ்.அக.); a mineral poison.

மும்மதத்தன் *mummadattaṉ,* பெ.(n.) பிள்ளையார்; *Gaṇēšaṉ. "மும்மதத்த னால்வாயைங்கரத்தன்" (சி.சி.காப்பு).*

[மும்மதம் →மும்மதத்தன்.]

மும்மதம் *mu-m-madam,* பெ.(n.) மத யானையின் கன்னமதம், கைமதம், கோசமதம் என்ற மூவகைப்பட்ட மதநீர்; exuation of a must elephant, as from three places, viz., *kaṉṉa-madam, kai-madam, kōša-madam. "பொழிந்திழி மும்மதக் களிற்றின் மருப்பும்" (தேவா.184, 5).*

[மூன்று + மதம்.]

மும்மதன் *mummadaṉ,* பெ.(n.) மும்மதத்தன் (பிங்.) பார்க்க; see *mummadattaṉ.*

மும்மதில் *mu-m-madil,* பெ.(n.) முப்புரம் (பிங்.) பார்க்க; see *mu-p-puram.*

[மூன்று + மதில்.]

மும்மரம் *mummaram,* பெ.(n.) 1. கடுமை; impetuosity, severity, vehemence, fierceness. *நோய் மும்மரமாயிருக்கிறது.* 2. விரைவு; swiftness. *மும்மரமாய்ப் போனான்.* 3. பகட்டாரவாரம்; pomp. *திருமணம் மும்மரமாய் நடக்கிறது.* 4. கவனம்; attentiveness, concentration of mind, eagerness. *மும்மரமாய்ப் படிக்கிறான்.*

தெ. மும்மர.

மும்மரி-த்தல் *mummari,* 4 செ.கு.வி.(v.i.) மும்முரி-த்தல் பார்க்க; see *mummuri-.*

[மும்மரம் → மும்மரி-த்தல்.]

மும்மலக்கரு *mum-mala-k-karu,* பெ.(n.) பன்றி மலம், மனிதர் மலம், தீட்டுச் சீலை; excreta of pig, man and menses cloth (சா.அக.).

[மூன்று + மலம் + கரு.]

மும்மலத்தார் *mummalattār,* பெ.(n.) 1. பிறவிப் பிணியர் (சகலர்); souls of the lowest class. 2. மலம் ஐந்துள் (ஆணவம், மாயேயம், திரோதானம் என்னும்) மூன்று மலமுடையவர் (விஞ்ஞானகலர்) (தத்துவப்.21, உரை); *viññāṉakalar,* as having three of the *aindu malam,* viz., *āṇavam, māyēyam, tirōdāṉam.*

[மூன்று + மலத்தார்.]

மும்மலம் *mu-m-malam,* பெ.(n.) ஆணவ மலம், கன்மமலம், மாயாமலம் என்ற மூவகை மலங்கள்; the three impurities of the soul which cling to it until it attains final liberation viz *āṇava-malam, kaṉma-malam, māyā-malam.* *"மயக்கமாயதோர் மும்மலப் பழவல் வினைக்குள்" (திருவாச. 30:7).* 2. ஐம்மலத்துள் ஆணவம், மாயேயம், திரோதானம் என்ற மூவகை மலங்கள்; the three out of the five impurities of the soul, viz., *āṇavam, māyēyam, tirōtāṉam.* 3. முக்குற்றம் பார்க்க (சீவக.96, உரை); see *mu-k-kuṟṟam.*

[மூன்று + மலம்.]

மும்மறை *mu-m-maṟai,* பெ.(n.) இருக்கு, எசூர், சாமம் எனும் மூன்று மறை; the three *vedās,* viz., *irukku, ecūr, šāmam.*

[மூன்று + மறை.]

மும்மா *mu-m-mā,* பெ.(n.) 8/20 என்ற பின்னவெண்; the fraction 8/20 as three *mās.*

[மூன்று + மா.]

மும்மாங்காய் *mu-m-māṅgāy,* பெ.(n.) மூன்று ஆண்டு வரை வெளிப்படாது இருக்கும் கருப்பம் (சீவரட்.); rare cases of pregnancy, believed to extend to three years.

[மும்மா → மும்மாங்காய்.]

மும்மாமுக்காணி *mummā-mukkāṇi,* பெ.(n.) 8/16 என்ற பின்னவெண்; the fraction 8/16 as a sum of *mummā* and *mukkāṇi.*

[மும்மா + முக்காணி.]

மும்மாமுந்திரி *mummā-mundiri,* பெ.(n.) 40/820 என்ற பின்னவெண்; the fraction 40/820 as a sum of *mummā* and *muṇdiri.*

[மும்மா + முந்திரி.]

மும்மாரி *mu-m-māri,* பெ.(n.) திங்களொன்றிற் பெய்யும் மூன்று மழை; three showers in a month. *"வான மும்மாரி பொழிக" (மணிமே. 1: 33).*

[மூன்று + மாரி.]

மும்மீன் *mu-m-mīṉ,* பெ.(n.) ஐந்தாவது விண் மீனான மாழ்கு (மிருக சீரிடம்) (திவா.); the fifth naksatra.

[மூன்று + மீன்.]

மும்முக்காணி *mu-m-mukkāṇi,* பெ.(n.) மும்மாமுக்காணி பார்க்க; see *mummā-mukkāṇi.*

[மூன்று + முக்காணி.]

மும்முட்டி *mu-m-muṭṭi,* பெ.(n.) சிற்றாமுட்டி பேராமுட்டி நாக முட்டி யெனும் செடிகள் (தைலவ.தைல76); the three plants whose names end in *muṭṭi*, viz *ciṟṟāmuṭṭi, pērāmuṭṭi, nākamuṭṭi.*

[மூன்று + முட்டி.]

மும்முடிச்சோழன் *mu-m-muḍi-c-cōḻaṉ,* பெ.(n.) தமிழ்நாட்டு வேந்தர் மூவருக்குமுரிய முடிகளை அணிந்த சோழன் முதல் இராசராசன் (கல்.); *Rājarāja* I, as wearing the crowns of the three kings of the Tamil country.

[மூன்று + முடி + சோழன்.]

மும்முரசு *mu-m-murašu,* பெ.(n.) 1. நாயமுரசு (நியாய முரசு), வீர முரசு, ஈக (தியாக) முரசாகிய மூன்று முரசுகள்; the three drums, viz., *niyāya-murašu, vīra-murašu, tiyāga-murašu. "மும்முரசு முத்தமிழும்" (வள்ளுவமா. 10) (கலித்.132, உரை).* 2. வீரமுரசு, நாய (நியாய) முரசு, மணமுரசாகிய மூன்று முரசுகள்; the three drums, viz. *vīra-murašu, niyāya-muracu, maṇa-murašu.* 3. சேர, சோழ பாண்டியர்க்குரிய மூன்று முரசுகள் (கலித். 132, உரை); the drums of *Cēraṉ, Cōḻaṉ* and *Pāṇḍiyaṉ.*

[மூன்று + முரசு.]

மும்முரம் *mummuram,* பெ.(n.) 1. செயல் செய்தல், செயல் நடைபெறுதல் முதலியவற்றில் விரைவு, கவனம், ஆகியவற்றுடன் கூடியவை; excitement, briskness. *வேலை மும்முரத்தில் சாப்பிடக் கூட மறந்துவிட்டேன். தேர்தலுக்கான ஏற்பாடு மும்முரமாக நடந்து வருகிறது.* 2. மும்மரம் பார்க்க; see *mummaram.*

மும்முரி-த்தல் *mummuri-,* 4 செ.கு.வி.(v.i.) கடுமை (உக்கிரம்) கொள்ளுதல்; to rage, storm, to be violent, vehement or impetuous.

தெ. மும்மரின்சு.

[மும்முரம் → மும்முரி-த்தல்.]

மும்முறை *mu-m-muṟai,* பெ.(n.) மூன்று முறை; three times. *'திருந்தடி மும்முறை வணங்கி' (மணிமே.12:6, உரை).*

[மூன்று + முறை.]

மும்முறைகுதித்துத்தாண்டுதல் *mummuṟai-kudittu-t-tāṇḍudal,* பெ.(n.) ஓடி வந்து காலால் உந்தி மூன்று முறைத் தாண்டிக் குதித்து முடிக்கும் ஒரு வகை விளையாட்டுப் போட்டி; tripple jump.

[மூன்று + முறை + குதித்து + தாண்டுதல்.]

மும்மூடம் *mu-m-mūḍam*, பெ.(n.) மூவகை அறிவின்மை, மடமை; the three kinds of folly.

[மூன்று + மூடம்.]

1. கனிம மூடம் (உலோக மூடம்), 2. தேவதா மூடம், 3. பாசண்ட மூடம்.

மும்மூடர் *mu-m-mūḍar*, பெ.(n.) முழுமூடர் (திருநூற்.53, உரை); downright fools.

[மும்மூடம் → மும்மூடர்.]

மும்மூர்த்தி *mu-m-mūrtti*, பெ.(n.) 1. திரிமூர்த்தி; the Hindu triad. *"பொற்பூடணர் மும்மூர்த்திகளாம் விமலனார்க்கே" (சிவரக. கணபதிவந்தனை.15).* 2. திரிகடுகம் (தைலவ. தைல.); three medicinal stuffs.

[மூன்று + மூர்த்தி.]

மும்மூலி *mu-m-mūli*, பெ. (n.) 1. மூன்று வகை மூலிகைகள்; the three kinds of herbs. 2. ஒரு தசையின் பெயர்; triceps.

[மூன்று + மூலி.]

மும்மூன்று *mu-m-mūṉṟu*, பெ.(n.) 1. ஒன்பது; three times three. 2. தனித்தனி மூன்று; three by three, threes.

[மூன்று + மூன்று.]

மும்மை *mummai*, பெ.(n.) 1. மூன்றாயிருக்குந் தன்மை (யாழ்.அக.); the state of being three. 2. மூன்று; three, three fold. *'தெரிமாண் டமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' (குறள், 23, உரை).* 3. உம்மை, இம்மை மறுமையாகிய மூவகை நிலைபேறு (திவா.); the three states of existence, viz., *ummai, immai, maṟumai.* 4. இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற மூன்று காலங்கள்; the three tenses, viz., *iṟappu, nigaḻvu, edirvu. "எதிர்மறை மும்மையு மேற்கும்" (நன்.145).*

க. மூமெ

[மூன்று → மும்மை.]

மும்மைத்தமிழ் *mummai-t-tamiḻ*, பெ.(n.) 1. முத்தமிழ் பார்க்க; see *mu-t-tamiḻ.* 2. எழுத்து, சொல், பொருள் என்னும் முக்கூறுடைய தமிழிலக்கணம் (மாறனலங். சிறப்புப்பாயிரம்); the three sections of Tamil grammar, viz., *eḻuttu, šol, poruḷ.*

[மும்மை + தமிழ்.]

மும்மையணு *mummai-y-aṇu*, பெ.(n.) காணக்கூடிய நிறையளவில் மிக நுண்ணிய தெனக் கருதப்படுவதும் சாளர வாயிலில் கதிரொளியில் தோன்றும் துகள் வடிவானதும் ஆகிய அணு (சி.போ.பா.1 : 1, பக்.30, சுவாமிநா.); mote in a sunbeam.

[மும்மை + அணு.]

மும்மொழி *mu-m-moḻi*, பெ.(n.) பழி கூறல், புகழ் கூறல், மெய்கூறல் ஆகிய மூன்று வகைப்பட்ட மொழி (சூடா.); the three kinds of speech, viz., *paḻi-kūṟal, pugaḻ kūṟal, mey-kūṟal.*

[மூன்று + மொழி.]

முமுக்கு *mumukku*, பெ.(n.) முமுட்சு, 1 (நாமதீப.134) பார்க்க; see *mumuṭšu, 1.*

முமுட்சு *mumuṭšu*, பெ.(n.) 1. வீடுபேறடைய விழைவோர்; one who is eager for salvation. *"முத்தனா மவனே நாடரிய முமுட்சு" (வேதா.சூ.14).* 2. துறவு (யாழ்.அக.); renunciation.

முமுடம் *mumuḍam,* பெ.(n.) முழுத்துறவு (வின்.); total or complete renunciation.

முமூட்சு *mumūṭšu,* பெ.(n.) முமுட்சு, 1 (வின்.) பார்க்க; see *mumuṭšu, 1.*

முயக்கம் *muyakkam,* பெ.(n.) 1. தழுவுகை; embrace. *"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்" (குறள், 913).* 2. புணர்ச்சி; copulation. *'முயக்கம் பெற்றவழி' (ஐங்குறு. 93, உரை).* 3. தொடர்பு; connection; uniting, joining. *"ஆணவத்தின் முயக்கமற்று" (தணிகைப்பு.நந்தி.110).*

[முயக்கு →முயக்கம்.]

முயக்கிடைமலைவு *muya-k-kiḍai-malaivu,* பெ.(n.) தழுவுதற்கு இடையே உள்ள மாறுபாடு; variation of embrace. *"எனைத்தென் றெண்ணுகோ முயக்கிடை மலைவே" (குறுந்.237:7).*

[முயக்கு + இடை + மலைவு.]

முயக்கு *muyakku,* பெ.(n.) முயக்கம் பார்க்க; see *muyakkam. "வளியிடை போழப் படாஅ முயக்கு" (குறள், 1108). "முன்பு மாதவப் பயத்தினாலவன் முயககமர்வார்" (தணிகைப்பு. நாட்டுப்.48).*

[முயங்கு→முயக்கு.]

முயங்கிக்கொள்(ளு)-தல் *muyaṅgi-k-koḷ(ḷu)-,* 16 செ.கு.வி.(v.i.) கணவனு மனைவியுமாய் வாழ்தல் (வின்.); to live together as husband and wife.

[முயங்கு + கொள்(ளு)-தல்.]

முயங்கு-தல் *muyaṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. பொருந்துதல்; to join, to cling to. *"முலையு மார்பு முயங்கணி மயங்க" (பரிபா.6:20).* 2. தழுவுதல்; to embrace. *'முயங்கிய கைகளை யூக்க" (குறள், 1238).* 3. புணர்தல்; to copulate with. 4. செய்தல்; to do, perform. *"மணவினை முயங்க லில்லென்று" (சூளா.தூது.100).*

[முள்→முய்→முய→முயங்கு→முயங்கு-தல்.]

முயல்¹(லு)-தல் *muyl-,* 14 செ.குன்றாவி. (v.t.) 1. விடாதுபற்றி ஊக்கத்தோடு செய்தல்; to practise, persevere, make continued exertion. *"செய்தவ மீண்டு முயலப்படும்" (குறள், 265).* 2. வருந்துதல்; to take pains. *"தவங்கள் முயன்று செய்தாலும்" (தஞ்சைவா.19).* 3. தொடங்குதல் (வின்.); to begin, undertake.

முயல்² *muyal,* பெ.(n.) நீண்ட காதுக ளுடையதும் வேகமாக ஓடக் கூடியதும் கிழங்கு முதலியவற்றை உண்டு வாழ்வதுமான சிறு விலங்கு; hare, rabbit, *Lepus nigricollis. "காண முயலெய்த வம்பினில்" (குறள், 772). முயல் வேகத்தை ஆமை வென்றது.*

க. மொல.

புல் நிறைந்த இடங்களில் வாழும் சிறிய விலங்கு, தண்ணீர் கிடைக்காவிடின் பனிநீரை உண்ணும்.



முயல்[3] *muyal,* பெ.(n.) போர் (சது.); war.

முயல்கண்டன் *muyal-kaṇḍaṉ,* பெ.(n.) முயல்வலி பார்க்க; see *muyal-vali.*

முயல்காதுக்கீரை *muyal-kādu-k-kīrai,* ஒருவகைக் கொடி; a kind of creeper - *Ipomoea biloba.*

[முயல் + காது + கீரை. முயல் காதைப் போன்ற நீண்ட இலையையுடைய கீரை.]

முயல்கிறுக்கு *muyal-kiṟukku,* பெ.(n.) குணப்படுத்த முடியாத நாட்பட்ட நோய்; an incurable chronical, disease.

முயல்புல் *muyal-pul,* பெ.(n.) ஒருவகைப் புல்; hare's grass.

[முயல் + புல்.]

முயல்புழுக்கைக்களிம்பு *muyal-puḻukkai-k-kaḷimbu,* பெ.(n.) கண்ணோய் மருந்து; a medicine for eye diseases.

[முயல் + புழுக்கை + களிம்பு.]

முயல்மீன் *muyal-mīṉ,* பெ.(n.) கடல்மீன் வகை; a sea fish.

[முயல் + மீன்.]



முயல்வலி *muyal-vali,* பெ.(n.) வாயால் மண்ணைக் கவ்வி நுரை தள்ளி துள்ளத் துள்ள வலிக்கும் ஒரு வகை வலிப்பு; a kind of rhegmatic disease. *"பெருவியாதி முயல்வலி பீனசம்" (குற்றா. தல.மந்தமா.102).*

ம. முயல்வலிப்பு

[முயல் + வலி.]

இந்த வலிப்புத் தண்ணீரைக் கண்டாலும், தண்ணீரைத் தலையில் தெளித்தாலும், நெருப்பைக் கண்டாலும் நெருப்பின் சூடுபட்டாலும் மற்றும் மக்கள் கூட்டத்தைக் கண்டாலும் அடிக்கடி உண்டாகும் ஒருவகை நோய்.

முயல்வாதம் *muyal-vādam,* பெ.(n.) முயல் வலி (இ.வ.) பார்க்க; see *muyal-vali.*

[முயல் + வாதம். Skt. vāta > த. வாதம்.]

முயல்வு *muyalvu,* பெ.(n.) முயலுகை; endeavouring, persevering, exercising, effort. *"முயல்வா ளளித்த நின்னருளால்" (ஞானவா.இட்சு.10).*

[முயல் →முயல்வு.]

முயலகநோய் *muyalaga-nōy,* பெ.(n.) முயல்வலி பார்க்க; see *muyal-vali.*

முயலகன்[1] *muyalagaṉ,* பெ.(n.) கெந்தக நஞ்சு; a kind of arsenic.

முயலகன்[2] *muyalagaṉ,* பெ.(n.) 1. நடவரசப் பெருமான் ஏறி நடிக்கும் பூதம்; a *Būta* over whose body *Naḍarājā* dānces. *"மூடாய முயலகன்" (தேவா.878, 3).* 2. முயல்வலி பார்க்க; see *muyal-vali. "மன்னு பெரும் பிணியாகும் முயலகன் வந்தணைவுற" (பெரியபு.திருஞான.311).*

[முயல்[1] → முயலகன்.]

முயலடி *muyal-aḍi,* பெ. (n.) கலவியில் நிகழும் நகக்குறி ஆறனுள் மகளிரின் உடம்பில் முயலடிபோன்று ஆடவர் நகத்தினாற் பதிக்கும் அடையாளம்; nail mark resembling a hare's foot, made on the body of a woman, during sexual union, one of six *naga-k-kuṟi.* *"முயலடி யென்னவே மொழிய வேண்டுமால்" (கொக்கோ. 5:61).*

[முயல் →முயலடி.]

முயலாக்கிரம் *muyalākkiram,* பெ. (n.) உலக்கைத்தலை (யாழ்.அக.); head of pestle.

முயலின்கூடு *muyaliṉ-kūḍū,* பெ. (n.) முயற்கூடு (சூடா.) பார்க்க; see *muyaṟ-kūḍu.*

[முயல் + கூடு.]

முயலுப்பு *muyal-uppu,* பெ. (n.) வளையலுப்பு (மூ.அ.); glass-gall.

[முயல் + உப்பு.]

முயலை *muyalai,* பெ. (n.) முசலை (யாழ்ப்.) பார்க்க; see *mušalai.*

முயற்களங்கம் *muyaṟ-kaḷaṅgam,* பெ. (n.) முயற்கறை பார்க்க; see *muyaṟ-kaṟai.*

[முயல் + களங்கம்.]

முயற்கறை *muyaṟ-kaṟai,* பெ. (n.) நிலவினிடத்துள்ள களங்கம்; spots on the moon, as like a hare. *"முயற்கறை மதிதவழ் முன்றிற் குன்றுகள்" (கம்பரா.சேது.10).*

[முயல் + கறை.]

நிலவில் காணப்படும் முயல்போன்ற உருவம்.

முயற்காதிலை *muyaṟ-kādilai,* பெ. (n.) முயலின் காதைப் போன்ற இலை; a plant having leaves resembling the ears of hare.

[முயற்காது + இலை.]

முயற்காது *muyaṟ-kādu,* பெ. (n.) இரு பக்கமும் காதுள்ள மரை வகை; fly-nut (செ.அக.).

முயற்கூடு *muyaṟ-kūḍu,* பெ. (n.) நிலவு (பிங்.); moon. *"முயற்கூடு கண்டு சாலத்தாம் பனிக்கும் பொய்கைத் தாமரை" (சீவக. 2284).*

[முயல் + கூடு.]

முயற்கொம்பு *muyaṟ-kombu,* பெ. (n.) உலகில் இல்லாத பொருள்; non-existing as the horns of rabbit. *"கான்முயற் கொம்பே யென்கோ" (தாயு.தேன்முகம்.1).*

[முயல் + கொம்பு.]

இல்லாதனவற்றிற்கு இப்பொருளை ஏற்றிச் சொல்வது, முயலுக்கு கொம்பில்லாதது போல் இன்மையைக் காட்டும்.

முயற்கோடு *muyaṟ-kōḍu,* பெ. (n.) முயற்கொம்பு (வின்.) பார்க்க; see *muyaṟ-kombu.*

[முயல் + கோடு.]

முயற்சாதி *muyaṟ-šāti,* பெ. (n.) உடற்கூற்றை வைத்துப் பிரிக்கப்படும் ஆண் இனத்தி லொன்று; one of the four divisions of men.

முயற்சி[1] *muyaṟci,* பெ. (n.) 1. விடாமுயற்சி; effort, exertion, activity, application. *"முயற்சி மெய்வருத்தக் கூலி தரும்" (குறள், 619). முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்.*

மருத்துவர் எவ்வளவோ முயற்சி செய்தும் நோயாளியைக் காப்பாற்ற முடியவில்லை. 2. ஊக்கம் (சூடா.); perseverence, diligence, industry. 3. வேலை; employment. *உனக்கு முயற்சி என்ன?* 4. குறிப்பிட்டநேரத்தில் முனைப்புடன் மேற்கொண்ட செயல்; attempt. *பேருந்தைக் கடத்த மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.*

[முயல் →முயற்சி= ஒன்றிற்காக மேற்கொள்ளும் உழைப்பும் செயல்பாடும்.]

முயற்சி^{2}–த்தல் *muyarci-*, 4 செ.குன்றாவி. (v.t.) முயலுதல், முயற்சி செய்தல்; try hard. *எவ்வளவோ முயற்சித்தும் அவனுக்கு வேலை வாங்கிக் கொடுக்க முடியவில்லை.*

[முயல் →முயற்சி →முயற்சி–த்தல்.]

முயற்செவி *muyar-cevi*, பெ.(n.) செடி வகை (M.M.339); hare's-ear, shrub, *Emilia sonchifolia.*

ம. முயல்செவி

[முயல் + செவி. முயற்செவியைப் போன்ற இலைகளையுடைய செடிவகை.]

முயற்செவிக்கள்ளி *muyar-cevi-k-kalli*, பெ.(n.) இலைக்கள்ளி; five - tubercled spurge.

[முயல் + செவி + கள்ளி.முயற்செவியைப் போன்ற இலைகளையுடைய செடிவகை.]

முயற்சேவிதம் *muyar-cēvidam*, பெ.(n.) மயிற்கொன்னை; caesal pinia pulcherrima alias poinciana regia.

முயற்சை *muyarcai*, பெ.(n.) முயற்சி, 1, 2 பார்க்க; see *muyarci* 1, 2.

[முயற்சி →முயற்சை.]

முயற்புல் *muyar-pul*, பெ.(n.) 1. மூவகைப் புல்; creeping panic grass, couch grass, harialli grass - *Cynodon dact ylon* (சா.அக.). 2 அறுகம் புல் (மூ.அ.) (M.M.349); harialli grass.

[முயல் + புல்.]

முயற்புழுக்கைக்களிம்பு *muyar-pulukkai-k-kalimbu*, பெ.(n.) கண்புகைச்சல் நோயைத் தீர்க்கும் மருந்து; an eye medicine for eye disease (சா.அக.).

[முயற்புழுக்கை + களிம்பு. முயற்புழுக்கைப் போல் இருக்கும் களிம்பு மருந்து.]

முயற்பேலகம் *muyar-pēlagam*, பெ.(n.) முயற்செவிக்கள்ளி பார்க்க; see *muyar-cevi-k-kalli* (சா.அக.).

முயற்றி *muyarri*, பெ.(n.) முயற்சி, 1, 2 பார்க்க; see *muyarci*, 1, 2. *"முயற்றியா லிடர்கள் வந்தால்" (தேவா.1104, 9).*

[முயற்சி →முயற்றி.]

முயற்றிசை *muyarrišai*, பெ.(n.) வடகீழ்த் திசை (வின்.); the north-eastern quarter, as the region, of the hare.

முயற்று *muyarru*, பெ.(n.) முயற்சி, 1, 2 பார்க்க; see *muyarci*, 1, 2. *"முயற்றின்மை யின்மை புகுத்தி விடும்" (குறள், 616).*

[முயற்சி →முயற்று.]

முயன்மார்க்கம் *muyan-mārkkam*, பெ.(n.) குதிரை நடை வகை ஐந்தனுள் முயலின் ஓட்டம் போன்ற நடை (சசகதி) ; a pace of horse.

[முயல்+மார்க்கம். மார்க்கம்=குதிரையின் நடை.]

முயனோய் *muyaṉōy,* பெ.(n.) முயல்வலி (கூர்மபு.நித்தியகன்ம, 10) பார்க்க; see *muyal-vali.*

[முயல் + நோய்.]

முயிற்றுப்புல் *muyiṟṟu-p-pul,* பெ.(n.) புல் வகை (மூ.அ.); ant-grass - *Pommereulla.*

[முயிறு + புல் – முயிறுபுல்→முயிற்றுப்புல்]

முயிற்றுமுட்டை *muyiṟṟu-muṭṭai,* பெ.(n.) முயிறுமுட்டை பார்க்க; *muyiṟu-muṭṭai* (சா.அக.).

முயிற்றெறும்பு *muyiṟṟeṟumbu,* பெ.(n.) முசிறு, 1 பார்க்க; see *mušiṟu,* 1.

[முயிறு + எறும்பு.]

முயிறு *muyiṟu,* பெ.(n.) முசிறு, 1 பார்க்க; see *mušiṟu. "முயிறுமூசு குடம்பை" (நற்.180).*

[முசிறு →முயிறு.]

முயிறுமுட்டை *muyiṟu-muṭṭai,* பெ.(n.) முயிற்றெறும்பு முட்டை; the egg of a red ant (சா.அக.).

[முயிறு + முட்டை.]

முரகரி *murakari,* பெ.(n.) முராந்தகன் (சங்.அக.) பார்க்க; see *murāndagaṉ.*

முரங்கினம் *muraṅgiṉam,* பெ.(n.) மிளகு; pepper - *Pipernigrum* (சா.அக.).

முரச்சு–தல் *muraccu-,* 5 செ.குன்றாவி. (v.t.) முற்றுவித்தல்; to accomplish, make ready. *"முரசுசெய முரச்சி" (பதிற்றுப்.44:16)*

[முரஞ்சு–தல் → முரச்சு–தல்.]

முரசக்கொடியோன் *muraša-k-koḍiyōṉ,* பெ.(n.) முரசத்தைக் கொடியிலுடைய தருமன் (பிங்.); Dharmaputra, as having the emblem of a drum on his banner.

[முரசம் + கொடியோன்.]

முரசகேது *muraša-kēdu,* பெ.(n.) முரசக் கொடியோன் பார்க்க; see *muraša-k-koḍiyōṉ. "கேட்டிநீ முரசகேது" (பாரத. அருச்சுனன்றவ.16).*

[முரசம் + Skt. கேது.]

முரசபந்தம் *muraša-bandam,* பெ.(n.) மிறைக்கவி வகை (தண்டி, 96, உரை); a kind of cittira-kavi.

முரசபலம் *muraša-balam,* பெ.(n.) பலா மரம் (யாழ்.அக.); jack-tree.

[முரசம் + பலம். பழம்→பலம்.]

முரசம் *murašam,* பெ.(n.) 1. பறைப் பொது (சூடா.); drum, tabour. *"ஆனக முரசஞ் சங்க முருட்டொடு மிரட்டவாடி" (கம்பரா. களியாட்டு.3).* 2. மருத நிலப்பறை வகை (பிங்.); a drum of the agricultural tracts. 3. பெருமுரசு, போர்ப்பறை; war drum. *"முரச மிடைப்புலத் திரங்க வாரமர் மயங்கிய ஞாட்பில்" (புறநா.288)., "இரங்கிசை முரசம் ஒழியப் பரந்தவர்" (அகநா.116:17).*

வ. முரஜ.

[முரசு →முரசம் = பெருமுரசு.]

முரசல் *murašal,* பெ.(n.) ஒடியக்கூடிய, முருடுள்ளது; that which is brittle. *இந்த வெற்றிலை முரசல் (இ.வ.).*

[முரஞ்சு–தல்→முரசல்.]

முரசவாகை *murašá-vāgai,* பெ.(n.) அரசனது மாளிகையில் ஆடுவெட்டிப் படையல் செய்திடும் வீரமுரசினது தன்மையைக் கூறும் புறத்துறை (பு.வெ.8:4); theme describing the ceremony of offering oblations to the *vira-murašu* in a king's palace.

[முரசம் + வாகை.]

முரசவுழிஞை *murašá-v-uḷiñai,* பெ.(n.) பொன்னாலே செய்த உழிஞைமாலை யணிந்து ஆடுவெட்டியிடும் காவுதனை நுகரும் வீரமுரசின் நிலைமையைக் கூறும் புறத்துறை (பு.வெ.6:4); theme describing the *vira-murašu* being decorated with a garland of *uḷiñai* flowers made of gold and being offered goat-sacrifice.

[முரசம் + உழிஞை.]

முரசறை–தல் *murašaṟai-,* 2 செ.கு.வி. (v.i.) 1. செய்தியை யாவரும் அறிய பறையடித்துச் சொல்லுதல்; to announce by beat of drum. 2. வெளியிடுதல்; to proclaim. *"அருமறைகள் முரசறையவே" (தாயு. திருவருள்.3).*

[முரசு + அறை–தல்.]

முரசன் *murašaṉ,* பெ.(n.) கந்தக நஞ்சு; a kind of arsenic.

முரசு¹ *murašu,* பெ.(n.) 1. பல்லினீறு; gum. 2. பல்லை இணைத்திருக்கும் உறத்த தோல்; the hard fleshy substance which invests the teeth (சா.அக.).

முரசு² *murašu,* பெ.(n.) முற்காலத்தில் வேந்தர்கள் தங்கள் ஆணையை மக்களுக்கு அறிவிக்கப் பயன்படுத்திய அரைகோள வடிவத்தில் பெரிதாக இருக்கும் ஒருவகைத் தோற் கருவி; a kind of drum formely used for royal proclamations etc. *"முரசுடைச் செல்வர் புரவிச் சூட்டு" (அகநா.156:1), "ஆண்டலை மதில ராகவும் முரசுகொண்டு" (நற்.39:8), "முரசுமுழங்கு நெடுநக ரரசுதுயி லியாது" (பதிற்றுப்.12:7). "இடியென முழங்கு முரசின்" (புறநா.17).*

[முருள்→முருடு→(முருசு)→ முரசு (வ.மொ.வ.). முருடு = பறைப்பொது.]

முரசாவது ஏதேனமொன்றை அறிவிப்பதற்கோ அல்லது யாரேனும் ஒரு சாரரை அழைப்பதற்கோ அடிக்கப்படும் பேரிகை என்னும் பெரும்பறையாகும். அது கொடை (தியாக) முரசு, முறை (நியாய) முரசு, போர் (வீர) முரசு என மூவகைப்பட்டதாகக் கூறப்படும். இவற்றுள் சிறந்தது போர்முரசாகும். அதற்குத் தனியாக ஒரு கட்டில் உண்டு. இதை முரசுகட்டில் என்றழைப்பர்.

போர்முரசு, படை திரட்டுவதற்கு நகரத்திலும் பொருநரை ஊக்குவதற்குப் போர்க்களத்திலும், வெற்றி குறித்து இரண்டு இடங்களிலும் இடியோசை போல் முழக்கப்படும். இம் முரசாவது புலியை வென்ற கொல்லேற்றின் சீவாத தோலால் போர்க்கப் பெறுவது மரபாகும். இதனை,

"புனைமருப் பழுந்தக் குத்திப் புலியொடு
பொருது வென்ற
கனைகுர லுருமுச் சீற்றக் கதழ்விடையுரிவை
போர்த்த
துணைகுரல் முரசம்" (சீவக.2899) எனும் பாடல் வரியிலும்.

"கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த
மாக்கண் முரசம்" (மதுரை.732–3) எனும் பாடல் வரியிலும் அறியலாம்.

போர்முரசு தெய்வத்தன்மை யுள்ளதாகவும், வெற்றியைத் தருவதாகவுங் கருதுவதால் அதற்கு மாலையும் பீலியும் அணிந்து பலியிட்டும் நீராட்டுவதும் வழக்கமாம் (பழ.த.ஆ.பக்.23).



முரசு³ *murašu,* பெ.(n.) இருபத்தாறாவது விண் மீனான முற்கொழுங்கால் (உத்திரட்டாதி); the 26th naksatra.

[முரசம் → முரசு.]

முரசுகட்டில் *murašu-kaṭṭil,* பெ.(n.) அரசர்க்குரிய முரசு வைக்கும் இருக்கை (புறநா.50, தலைப்பு); dais for the royal drum.

[முரசு + கட்டில்.]

முரசுயர்த்தோன் *murašuyarttōṉ,* பெ.(n.) முரசக்கொடியோன் பார்க்க; see *muraša-k-koḍiyōṉ. "முரசுயர்த்தோ யுனதருளுக் கஞ்சினேனே" (பாரத.கிருட்டிணன்றூ.13).*

[முரசு + உயர்ந்தோன்.]

முரசுவெட்டி *murašu-veṭṭi,* பெ.(n.) பல்லீறைப் பிளக்க உதவும் ஆய்தம்; a knife for incising the gums - Gum ancet (சா.அக.).

[முரசு + வெட்டி.]

முரசுவைத்தல் *murašu-vaittal,* பெ.(n.) பேரிகையுடன் செல்லும் மதிப்புயர்வு டைமை (வின்.); possessing or being allowed to keep drums, as a paraphernalia.

[முரசு + வைத்தல்.]

முரசை *murašai,* பெ.(n.) குபேரன் மனைவி (அபி.சிந்.); wife of Kubera.

முரஞ்சியூர்முடிநாகராயர் *murañji-y-ūr-muḍi-nāgarāyar,* பெ.(n.) தலைக்கழகப் புலவர்; first *Šaṅgam* poet (அபி.சிந்.).

[முரஞ்சி + ஊர் + முடி + நாகராயர்.]

முரஞ்சு¹-தல் *murañju-,* 5 செ.கு.வி.(v.i.) 1. முதிர்தல்; to mature, to be old, ancient. *"முரஞ்சன் முதிர்வே" (தொல்.சொல்.333).* 2. வலி பெறுதல்; to gain strength. *"நோயுடல் முன்செயல் முரஞ்சியதெவண்" (ஞானா.59).* 3. நிரம்புதல்; to be full or abundant. *"பூண்களெல்லா முரஞ்சொளி கான்று மின்ன" (காஞ்சிப்பு. தீர்த்த.89).*

முரஞ்சு² *murañju,* பெ.(n.) 1. முதிர்கை; maturing. *"முரஞ்சுகொண் டிறைஞ்சின வலங்குசினைப் பலவே" (மலைபடு.144).* 2. பாறை (சூடா.); rock, ledge.

முரட்கை *muraṭkai,* பெ.(n.) *முரற்கை, 3* (சது.) பார்க்க; see *muraṟkai, 3.*

முரட்டடி *muraṭṭaḍi,* பெ.(n.) இணக்கமற்ற குணம்; rough, rude, reckless, lawless behaviour. *"முரட்டடித் தவத்தக் கன்றன் வேள்வி" (தேவா.710, 5).*

[முரடு + அடி.]

முரட்டாட்டம் *muraṭṭāṭṭam,* பெ.(n.) முரட்டடி (யாழ்.அக.) பார்க்க; see *muraṭṭaḍi.*

[முரடு + ஆட்டம்.]

முரட்டுக்கழுத்து *muraṭṭu-k-kaḻuttu,* பெ. (n.) 1. நுகம்பூணா எருத்தின் கழுத்து (வின்.); stiff neck, as of an ox not broken to the yoke. 2. முரட்டடி (யாழ்.அக.)பார்க்க; see *muraṭṭaḍi.*

[முரடு + கழுத்து.]

முரட்டுக்குணம் *muraṭṭu-k-kuṇam,* பெ.(n.) முரட்டடி (வின்.) பார்க்க; see *muraṭṭaḍi.*

[முரடு + குணம்.]

முரட்டுத்தனம் *muraṭṭu-t-taṉam,* பெ.(n.) முரட்டடி பார்க்க; see *muraṭṭaḍi.*

[முரடு + தனம்.]

முரட்டுப்பாட்டு *muraṭṭu-p-pāṭṭu,* பெ.(n.) 1. இனிமையற்ற இசைப்பாட்டு; music harsh to the ear. 2. அரிதிற்பாடும் பாட்டு; melody difficult to be sung.

[முரடு + பாட்டு.]

முரட்டுப்பெண் *muraṭṭu-p-peṇ,* பெ.(n.) பிடிகொடாப் பெண்; obstinate, unyielding woman. முரட்டுப் பெண்ணும் சுருட்டுப் பாயும் (பழ.).

[முரடு + பெண்.]

முரட்டுமயிர் *muraṭṭu-mayir,* பெ.(n.) பருமயிர்; coarse hair.

[முரட்டு + மயிர்.]

முரட்டோலை *muraṭṭōlai,* பெ. (n.) வளைந்திருக்கும் ஓலைமுறி (வின்.); uneven strip of palm-leaf.

[முரடு + ஓலை.]

முரட்பயம்பு *muraṭ-payambu,* பெ.(n.) ஏற்றிழிவையுடைய நிலத்திலுள்ள குழி; pit or trench in an uneven tract. *"பரண்முரட் பயம்பிடை" (சீவக.1900).*

[முரண் + பயம்பு.]

முரடன் *muraḍaṉ,* பெ.(n.) 1. பண்பு தெரியாதவன்; rude man. *சிறுவனாயிருந்த போதே முரடன் என்று பெயர் வாங்கியவன்.* 2. ஒட்டாரம்பிடித்தவன் (பிடிவாதக்காரன்); obstinate man. 3. முருடன், 3 பார்க்க; see *muruḍaṉ, 3.*

க. மொரட

[முரடு →முரடன் = மென்மையும் நளினமும் இல்லாமல் சினமுடன் நடந்து கொள்பவன்.]

முரடு[1] *muraḍu,* பெ.(n.) 1. உறுதியும் கடினத் தன்மையும் கொண்டது, கரடு; roughness, unevenness; ruggedness. *முரட்டுக் கட்டை, முரட்டுக்கை, முரட்டுத்துணி.* 2. மரக்கணு; knob or knot, as in timber. 3. உடம்பின் மூட்டு (வின்.); joint of the body. 4. மதிப்புரவு (மரியாதை) இன்மை; ill-temper, wildness, rudeness. 5. ஒட்டாரம் (பிடிவாதம்); obstinancy. 6. பருமை; largeness, bigness. முரட்டுப்பாம்பு. 7. அறிவின் வழி இல்லாத, மடத்தனம்; unreasonableness. *முரட்டு வலிமையில் அவன் குதிக்கிறான்.* 8. சினமுடன் நடந்து கொள்ளும் ஆள்; rough and tough person. *அவன் சரியான முரடு.*

[முருடு→முரடு.]

முரடு[2] *muraḍu,* பெ.(n.) பெரியது, திரண்டது; that which is big, cumulative.

[முள்→முர→முரள்→முரண்→முரடு.]

முரண்¹–தல் (முரண்டல்) *muraṇ-,* 12 செ.கு.வி.(v.i.) பகைத்தல்; to be at variance; to be opposed. *"முரண்டு மாய்க்கவே" (பாரத.குரு.49).*

[முள்→முர→முரள்→முரண்→முரண்–தல்.]

முரண்² *muraṇ,* பெ.(n.) 1. எதிரானதாகவோ மாறுபட்டதாகவோ அமைவது, மாறுபாடு; variance, opposition; perversity. *"கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சி" (புறநா.37), "பரல்மட் சுவல முரணில முடைத்த" (அகநா.21:21), "அரண்பல கடந்த முரண்கொள் தானை" (நற்.150:3). சட்டத்திற்கு முரணாகச் செய்யக் கூடாது.* 2. பகைமை (திவா.); spite, hatred. *"முரணியோர் முரண்டப" (கலித்.132).* 3. போர் (திவா.); fight, battle. 4. முரண்டொடை (தொல்.பொருள்.407) பார்க்க; see *muraṇḍoḍai.* 5. வலிமை (திவா.); strength. 6. பெருமை (மாறனலங். 265, உதா.749); greatness. 7. முருட்டுக் குணம் (வின்.); roughness, stubbornness. 8. கொடுமை (வின்.); fierceness. 9. மாணிக்கக் குற்றங்களுளொன்று (திருவாலவா.25 : 14); a flaw in rubies.

ம. முரண்.

[முள்→முர→முரள்→முரன்→முரண்.]

முரண்³ *muraṇ,* பெ.(n.) திண்ணமான சிப்பி; strength shell.

[முள்→முர→முரள்→முரண்.]

முரண்களரி *muraṇ-kaḷari,* பெ.(n.) குத்துச்சண்டைக் களம்; boxing stadium.

[முரண் + களரி.]

முரண்டன் *muraṇḍaṉ,* பெ.(n.) 1. மாறுபாடுள்ளவன் (சங்.அக.); cross-tempered, quarrelsome person. 2. ஒட்டாரம் பிடித்தவன் (பிடிவாதக்காரன்) (இ.வ.); obstinate person. 3. பொறுமையில்லாதவன் (யாழ்.அக.); impatient person. 4. பரபரப்புடையவன், துடுக்குக்காரன் (அவசரக்காரன்) (யாழ்.அக.); hasty, impetuous person.

[முரண் → முரண்டு → முரண்டன்.]

முரண்டு¹–தல் *muraṇḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. விடாப்பிடியாதல்; to be obstinate, persistent. 2. மாறுபடுதல்; to be opposed, cross-grained.

[முரண் →முரண்டு–தல்.]

முரண்டு² *muraṇḍu,* பெ.(n.) 1. விடாப்பிடி (உ.வ.); persistence, obstinancy. *பள்ளிக்குச் செல்ல முடியாது என்று முரண்டு பிடித்தான்.* 2. மாறுபாடு (நாமதீப.628) (யாப். வி.3, உரை, பக்.38); variance, opposition. 3. அமையாமை (யாழ்.அக.); disagreement. 4. வளையாமை (யாழ்.அக.); unyielding nature.

[முள் → முர → முரள் → முரண் → முரண்டு. பெரும்பாலும் பிறர் கூறும் அல்லது எதிர்பார்க்கும் ஒன்றைச் செய்ய எதிர்ப்புக் காட்டுவது.]

முரண்டொடை *muraṇ-ḍoḍai,* பெ.(n.) தொடையைந்தனுள் மொழியானும் பொருளானும் மறுதலைப்படப் பாடல் தொடுப்பது (இலக்.வி.723, உரை); a mode of versification in which there is antithesis of words or ideas, one of five *toḍai.*

[முரண் + தொடை.]

இருள்பரந் தன்ன மாநீர் மருங்கில்
நிலவுக்குவித் தன்ன வெண்மண
லொருசிறை
இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னி னன்ன நுண்டா துறைக்கும்
(யா.கா.மேற்கோள்.)

இப்பாடலில் இருள், நிலவு, இரும்பு, பொன் என்று அடிதோறும் பொருள் மாறுபட வந்திருப்பதால் இது முரண்தொடை எனப்படும்.

முரண்படு-தல் *muraṇ-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) எதிராக இருத்தல், மாறுபடுதல்; to contradict, to be opposed. *நூலில் தெரிவித்திருக்கும் கருத்துக்களோடு முரண்படுகிறேன். ஒன்றிற்கொன்று முரண்பட்ட நிலை.*

[முரண் + படு-தல்.]

முரண்பாடு *muraṇ-pāḍu,* பெ.(n.) மாறுபாடு; contradiction, difference. *எங்களுக்குள் ஏற்பட்ட கருத்து முரண்பாடு எங்கள் நட்பைப் பாதிக்கவில்லை. உன்னுடைய முந்தியப் பேச்சுக்கும் இப்போதைய பேச்சுக்கும் நிறைய முரண்பாடுகள் இருக்கின்றன.*

[முரண் + பாடு. படு→பாடு..]

முரண்மொழி¹ *muraṇ-moḻi,* பெ.(n.) 1. பொருள் மாறுபடும் சொல்; contrast, antithesis. 2. எதிர்மொழி (யாழ்.அக.); contradictory statement.

[முரண் + மொழி.]

முரண்மொழி² *muraṇ-moḻi,* பெ.(n.) செய்யுட் குற்றங்களுளொன்று (யாப்.வி. பக்.525); a defect in versification.

[முரண் + மொழி.]

முரண்விளைந்தழிவணி *muraṇ-viḷainda ḻivaṇi,* பெ.(n.) மேனோக்கில் மாறுபாடு தோன்றக் கூறும் அணி; a figure of speech in which there is an apparent contradiction.

[முரண் + விளைந்தழிவணி. இரண்டு வகை அறங்களையும், தோன்றி அழியும் பகைமையையும் பற்றிக் கூறுவது.]

முரண்வினைச்சிலேடை *muraṇ-viṇai-c-cilēḍai,* பெ.(n.) மொழியப்பட்ட வினைப் பொருள் முரண இரட்டுறப்படுத்தும் அணி வகை (மாறனலங்.152); a figure of speech which consists in *śilēḍai* in verbs relating to persons or objects of opposite characteristics.

[முரண்வினை + சிலேடை.]

முரணணி *muraṇ-aṇi,* பெ.(n.) சொல்லேனும் பொருளேனும் முரண அமையும் ஓர் அணி (வீரசோ.அலங்.12); a figure of speech in which words or ideas are used in antithesis.

[முரண் + அணி.]

முரணமணல் *muraṇa-maṇal,* பெ.(n.) வெள்ளி மணல்; silver ore.

முரணர் *muraṇar,* பெ.(n.) பகைவர்; enemies. *"அரணையுறு முரணர் பலர்" (தேவா.148:7).*

[முரண் → முரணர்.]

முரணு¹-தல் *muraṇu-,* 12 செ.கு.வி.(v.i.) மாறுபடுதல்; to be at variance. *"தீ முரணிய நீரும்" (புறநா.2).*

[முரண் → முரணு-தல்.]

முரணு[2]–தல் *muraṇu-,* 13 செ.குன்றாவி. (v.t.) பெருக்குதல்; to multiply. *'இரு திணையும் பொதுவுமான மூன்றினானும் முரணப் பதினெட்டாம்' (நன்.269, உரை).*

[முரண் → முரணு–தல்.]

முரணை *muraṇai,* பெ.(n.) இலை சுருட்டை விழுந்து முரட்டுக் குணம் அடைவது (கோவை.); roughness leaves.

[முரண் → முரணை.]

முரப்பு *murappu,* பெ.(n.) கைக்கு மென்மை யற்றுத் தோன்றுந் தன்மை; roughness. *"தோல் முரப்பேறி" (அசுவசா. 66).*

[முரம்பு → முரப்பு = கடினமான சொர சொரப்புத் தன்மை.]

முரம் *muram,* பெ.(n.) கருங்கற் பொடி (C.E.M.) granite crushed to dust for road-making.

[முரம்பு → முரம்.]

முரம்பு *murambu,* பெ.(n.) 1. பருக்கைக் கல்லுள்ள மேட்டு நிலம்; mound of gravel or stone. *"முரம்பு கண்ணுடைந்த நடவை" (மலைபடு.432).* 2. மேடு (சூடா.); mound, elevation. 3. பாறை (பிங்.); rock. 4. வன்னிலம்; rough hard ground. *"பரன்முரம்பாகிய பயமில் கானம்" (அகநா.5). "முரம்பு கன்உடைய வேகிக் கரம்பை" (குறுந்.400 : 4).* 5. கழி (சூடா.); backwater, creek, small arm of the sea. 6. உப்பளம் (யாழ்.அக.); salt-pan. 7. கற்பாங்கான மேட்டு நிலத்தூர்; a village.

தெ. மொரமுர்

மறுவ. கரம்பு நிலம்

முரமுரவெனல் *muramura-veṉal,* பெ.(n.) முரமுரெனல் பார்க்க; see *muramureṉal.*

முரமுரெனல் *muramureṉal,* பெ.(n.) 1. நுரைத்தற் குறிப்பு; onom. expr. of foaming, effervescing. *"முரமுரெனவே புளித்த மோரும்" (தனிப்பா.i, 103:34).* 2. வாய்க்குள் கரகரப்பாயிருத்தற் குறிப்பு; cracking in the mouth. 3. தூய்மையாயிருத்தற் குறிப்பு; being clean and neat.

முரரை *murarai,* பெ.(n.) மரத்தின் முருட்டரை; hard, stout trunk of a tree. *"முரரை முழுமுத றுமியப் பண்ணி" (பதிற்றுப்.5ஆம் பத்.பதி.).*

[முரடு + அரை.]

முரல்[1](லு)–தல் *mural-,* 13 செ.கு.வி.(v.i.) 1. ஒலித்தல்; to make sound. *"மதுகர முரலுந் தாரோயை" (திருவாச. 5:16).* 2. கதறுதல்; to cry. *"குடுமிக் கூகை குராலொடு முரல" (மதுரைக்.170).*

க. மெரல்

முரல்[2](லு)–தல் *mural-,* 14 செ.குன்றாவி. (v.t.) பாடுதல்; to sing. *"ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை" (கலித்.9).*

முரல்[3] *mural,* பெ.(n.) மீன் வகை (கொக்கு மீன்) (நாமதீப.271); needle-fish *Syngnathus.*

முரல்வு *muralvu,* பெ.(n.) யாழின் மெல்லோசை; soft sound, as of a lute. *"வண்டின் றொழுதி முரல்வு" (பரிபா.8:36).*

[முரல் → முரல்வு.]

முரலல் *muralal*, பெ.(n.) 1. ஒலிக்கை (வின்.); sounding. 2. கலப்போசை (சது.); confused noise. 3. எடுத்தலோசை (சூடா.); high pitch.

தெ. மொர; க. மொரெகி; ம. முரலு.

[முரல் →முரலல்.]

முரவம் *muravam*, பெ.(n.) 1. பறைவகை; a drum. *"முரவ மொந்தை" (தேவா.385, 5).* 2. முழக்கம்; noise, reverberation, resonance. *"முரவம்படு மண்ணாமலை" (தேவா.1025, 5).*

[முரல்→முரவம்.]

முரவு[1] *muravu*, பெ.(n.) முரிவு; break; broken condition, as of the mouth of a pot. *"முரவுவாய்க் குழிசி" (பெரும்பாண்.99). "மின்மினி மொய்த்த முரவுவாய்ப் புற்றம்" (அகநா.72:3).*

[முரி →முரவு.]

முரவு[2] *muravu*, பெ.(n.) 1. முரவம், 1 பார்க்க; see *muravam*, 1. *"முரவுந் தூம்பு முழங்குபு துவைப்ப" (பெருங்.மகத.25:16).*

முரவை *muravai*, பெ.(n.) கைக்குத்தல் அரிசியிலுள்ள வரி; streaks in unpolished rice. *"முரவை போகிய முரியா வரிசி" (பொருந.113).*

[முரி → முரவை.].

முரள் *mura!*, பெ.(n.) சிப்பிவகை (தொல். பொருள்.584); a shell-fish.

[முரல் → முரள்.]

முரற்கை *murarkai*, பெ.(n.) 1. ஒலி; sound. *"பாணர் நரம்புளர் முரற்கைபோல" (ஐங்குறு.402). "நின்ற முரற்கை நீக்கி நன்றும்" (புறநா.376).* 2. முரற்சி, 2 பார்க்க; see *murarci*, 2. *"பாணர் நயம்படு முரற்கையின்" (ஐங்குறு.407).* 3. கலிப்பா (தொல். பொருள். 382); *Kali* verse. 4. தாளவகை; a time - measure. *"இன்புறு முரற்கை நும்பாட்டு" (மலைபடு.390).*

[முரல்→முரற்கை.]

முரற்சி[1] *murarci*, பெ.(n.) 1. ஒலி; sound. *"கொன்றைத் தீங்குழன் முரற்சியர்" (கலித்.106).* 2. பாட்டு; song. *"நரம்பின் முரலும் நயம்வரு முரற்சி" (மதுரைக்.217).*

[முரல் →முரற்சி.]

முரற்சி[2] *murarci*, பெ.(n.) கயிறு; cord. *"பெண்டிர் கூந்தன் முரற்சியால்" (பதிற்றுப். 5ஆம் பத்.பதி.), "வடுக்கொளப் பிணித்த விடுமுரி முரற்சி" (நற்.222:2).*

[முரண் →முரற்சி.]

முரற்று–தல் *murarru-*, 5 செ.கு.வி.(v.i.) 1. ஒலித்தல்; to make sound. *"கிடப்பதோ முரற்றலின்றி" (கம்பரா.மீட்சி.308).* 2. கதறுதல்; to cry. *"அரற்றியு மயர்ந்து முரற்றியு முயிர்த்தும்" (பெருங். இலாவண. 19:208). (பிங்.).*

[முரல் →முரற்று →முரற்று–தல்.]

முரற்றுமம் *murarrumam*, பெ.(n.) குடம் (அக.நி.); water-pot.

முரன்றுபாடு–தல் *muranru-pādu-*, 5 செ. குன்றாவி.(v.t.) இன்னொலி செய்தல் (ஆலாபனஞ் செய்தல்); to elaborate a musical note or melody. *"களிவண்டு முரன்றுபாட" (சீவக.1959).*

[முரல்→முரண்→முரன்→முரன்று+பாடு–தல்.]

முரி¹-தல் *muri-,* 2 செ.கு.வி.(v.i.) 1. வளைதல்; to bend. *"முரிந்து கடைநெரிய வரிந்த சிலைப்புருவமும்" (மணிமே.18:161).* 2. கரும்பு கம்பு முதலியவை வளைந்து ஒடிதல் (சூடா.); to break off, snap off. *"மூத்துவினை போகிய முரிவாய் அம்பி" (நற்.315:3), "நல்லெழி னெடும்புதவு முருக்கிக் கொல்லு பேன மாகிய நுனைமுரி மருப்பிற்" (பதிற்றுப்.16:6,7).* 3. கெடுதல்; to perish, to be ruined. *"இடைக்கண் முரிந்தார் பலர்" (குறள், 473).* 4. தோல்வியுறுதல்; to be defeated. *"முற்றிய வமரர்சேனை முரிந்தன" (விநாயகபு.34:15).* 5. சிதறுதல்; to be scattered. *"பஞ்சினம் பகைமுரிந் தெழுந்தன விண்ணத் தலமர" (கல்லா.7).* 6. தளர்தல்; to lack in strength, to be gentle, as in gait. *"முரிந்தநடை மடந்தை யர் முழங்கொலியும் வழங்கொலியும்" (திருவிசை. கருவூ.5:10).* 7. தவறுதல்; to go wrong. *"முரியுங்காலைத் தெரிய மற்றதிற் றட்டினள்.... எழுப்பி" (பெருங்.வத்தவ.12:99).* 8. நீங்குதல் (சீவக.172); to separate, leave. 9. நிலைகெடுதல்; to lose one's position. *"இடைமுரிந்து வேந்தனும் வேந்து கெடும்" (குறள், 899).* 10. குணங்கெடுதல்; to be spoiled. *"ஒழுகுபால் கதிர்வெயிற் படமுரிந்து" (திருச்செந்தூர். பிள்ளைத். செங்கீரை.1).*

ம., க. முரி.

[முரு →முரி →முரி-தல் (வே.க.).]

முரி²-த்தல் *muri-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. வளைத்து ஒடித்தல்; to break off, snap off. *"நன்சிலை முரித்திட்டம்பை வாடினன் பிடித்துநின்றான்" (சீவக.2185).* 2. அழித்தல்; to ruin. *"மதிலொடு வடவாயிலை முரித்து" (திருவாலவா.24:4).* 3. தோற்கச் செய்தல் (யாழ்.அக.); to defeat. 4. திறமையாக நடத்துதல் (வின்.); to manage, as a business. *வெட்டி முரித்தல் என்னும் வழக்கை நோக்குக.*

தெ. முரியு; ம. முரிக்க.

[முரு →முரி →முரி-த்தல்.]

முரி³ *muri,* பெ.(n.) 1. வளைவு; curve, bend. *"முரியா ரளகத் தடாதகை" (திருவிளை. பயகர.8).* 2. துண்டு; piece, bit, half. 3. நொய்யரிசி; broken rice, semolina. *"குத்திய வரிசியெல்லா முரியறக் கொழிக்க வாரீர்" (தக்கயாகப்.736).* 4. முழுதிற் குறைவானது; anything short or dwarfish. *"மக்கண் முரியே" (கலித்.94).* 5. சிதைவு (சிலப்.25:146, அரும்.); scratch, blemish. 6. எழுதிய ஓலை நறுக்கு, முறி (இ.வ.); written bond. 7. இசைப்பாவின் இறுதிப் பகுதி (சிலப்.6:35, உரை); the closing section of a musical composition. 8. நாடகத் தமிழின் இறுதியில் வருஞ் சுரிதகம் (தொல்.பொருள். 144, உரை); the *Śuridagam* at the close of a poem in *nāḍaka-t-tamiḻ.*

ம., தெ., க., து. முரி.

[முரு →முரி.]

முரிகம் *murigam,* பெ.(n.) மயிர்ப்படாம் (சூடா.); woollen blanket.

தெ. முரி.

[முரி →முரிகம்.]

முரிகிரந்தி *muri-kirandi,* பெ.(n.) பத்தியம் முறிந்ததால் தீராததாகும் நோய் (வின்.); disease becoming incurable because of the non-observance of the prescribed diet.

[முரி + கிரந்தி. Skt. granthi > த. கிரந்தி.]

முரிகிரந்திப்படு-தல் *muri-kirandi-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) பத்தியக் குறைவால் நோய் மிகுதல் (வின்.); to grow worse from neglect of the prescribed diet.

[முரிகிரந்தி + படு-தல்.]

முரிச்சார்த்து *muri-c-cārttu,* பெ.(n.) சார்த்துவரிப் பாட்டுவகை (சிலப்.கானல். அரும். பக்.205); a kind of *cārttu-vari.*

[முரி + சார்த்து.]

பாட்டுடைத் தலைவன் பதியொடும் பேரோடுஞ் சார்த்திப் பாடும் வரிப்பாட்டு வகை.

சார்த்துவரி மூன்று வகைப்படும். முகச்சார்த்து, முரிச்சார்த்து, கொச்சகச்சார்த்து.

முகச்சார்த்து : மூன்றடி முதல் ஆறடி ஈறாக வரும். இடை நான்கடியானும் ஐந்தடியானும் வரும்.

முரிச்சார்த்து : அடித்தொகை மூன்றும் இரண்டும் வரும்.

கொச்சகச் சார்த்து : கொச்சகம் போன்று முடியும்.

மறையில் மணந்தாரை வன்பரதர் பாக்கத்து
மடவார் செங்கை
இறைவளைகள் தூற்றுவதை ஏழையம்
எங்ஙனம் யாங்கு அறிகோம் ஐய
நிறைமதியும் மீனும் என அன்னம்
நீள்புன்னை அரும்பிப் பூத்த
பொறைமலி பூங்கொம்பேற வண்டாம் பல்
ஊதும் புகாரே எம்மூர்
(சிலப்.7:29ஆம் பாடல்).

முரித்தல் *murittal,* பெ.(n.) 1. நகை; laughter. 2. இலங்குகை; shining.

முரித்தாளை *murittāḷai,* பெ.(n.) பட்டாசுத் தொழிலில் பயன்படுத்தும் வாணகெந்தி; a kind of sulphur used in fire works (சா.அக.).

முரிநிலை *muri-nilai,* பெ.(n.) இயற்பாவின் இறுதியில் பாடுந் தரவு (சிலப்.6 : 35, உரை); closing part of a song.

[முரி + நிலை.]

முரிப்பு[1] *murippu,* பெ.(n.) 1. முரிக்கை (வின்.); breaking, bruising, cracking from external force. 2. திமில் (திவா.); hump of an ox.

தெ. மூப்பு

[முரி→ முரிப்பு.]

முரிப்பு[2] *murippu,* பெ. (n.) நேர் திருப்பம், ஒடிந்த வளைவு, கட்டடங்களின் மூலைத் திருப்பம்; bend curve, corner turning in the building. *"திருநந்தாவனத்துக்கு எல்லையாவது நள்ளாற்று முரிப்புக்கு மேற்கும்" (தெ.இ.கல்.தொ.5, கல்.251).*

[முறி→முரி→ முரிப்பு.]

முரிமுரி[1]**-தல்** *muri-muri-,* 2 செ.கு.வி. (v.i.) வளைதலைச் செய்தல்; to bend, curve. *"புருவமும் முரிமுரிந்தவே" (சீவக. 2310).*

[முரி + முரி – முரிமுரி→ முரிமுரி-தல்.]

முரிமுரி[2] *muri-muri,* பெ.(n.) எட்டி (சங்.அக.); nūx vomica.

முரியல் *muriyal,* பெ.(n.) 1. துண்டு (யாழ். அக.); bit, fragment. 2. எளிதில் முரிவது; that which is brittle.

[முரி→ முரியல்.]

முரிவரி *muri-vari*, பெ.(n.) வரிப்பாட்டு வகை (சிலப். 3 :16, அரும்.); closing part of a dance song.

[முரி + வரி.]

"எடுத்த வியலு மிசையுந் தம்மில், முரித்துப் பாடுதன் முரியெனப்படுமே" (சிலப்.7:14. அரும்.).

எ-டு:

"பொழில்தரு நறும்லரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணைஇள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுரு வில்இணையே
எழுதரும் மின்னிடையே எனையிடர்
செய்தவையே"

"திரைவிரி தருதுறையே திருமணல் விரியிடமே
விரைவிரி நறுமலரே மிடைதரு பொழிலிடமே
மருவிரி புரிகுழலே மதிபுரை திருமுகமே
இருகயல் இணைவிழியே எனையிடர்
செய்தவையே" (சிலப்.7:14, 15)

முரிவாய் *muri-vāy*, பெ.(n.) 1. இடித்து உண்டாக்கின வாசல்; opening made in a wall, used as entrance. *"கண்டவெயின் முரிவாயாற் கொண்டு புக்கான்" (திருவாலவா.24 : 4).* 2. கன்னவாயில்; opening made in house - breaking. *"களவுபோகின்ற வென்றுந் தப்பிய முரிவாயில்லை" (திருவாலவா. 55 : 5).* 3. முரிந்த குறடு; pitted pial. *"முரிவாய் முற்றம்" (புறநா.261).*

[முரி + வாய்.]

முரிவு *murivu*, பெ.(n.) 1. மடிப்பு (யாழ்.அக.); fold. 2. வளைந்து ஒடிகை (யாழ்.அக.); breaking, snapping. 3. சுருங்குகை; contracting. *"புருவமுரிவு கண்டஞ்சி" (முத்தொள்.களம்.).* 4. நீங்குகை; leaving, separation. *"இளையர் மார்ப முரிவில ரெழுதி வாழும்" (சீவக.372).* 5. வருத்தம்; trouble, difficulty. *"பாவைமார் முரிவுற்றார்களின் மூர்ச்சனை செய்பவால்" (சீவக.1627).* 6. சோம்பு (அரு.நி.); laziness. 7. ஊழ் (அரு.நி.); fate. 8. பெருமை (அரு.நி.); greatness.

க. முரிவு

[முல் → முர் → முரு → முரி → முரிவு.]

முருக்கஞ்சேரி *murukkañjēri*, பெ.(n.) செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம், திருவாரூர் ஆகிய வட்டங்களில் இருக்கும் ஊர்ப்பெயர்கள்; name of this village is found in *Cheṅgalpaṭṭu* district, *Madurāndagam* and *Thiruvārūr*. *முருங்கை மரங்கள் மிகுதியாக இருந்ததால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.*

[முருங்கை + சேரி- முருங்கைச்சேரி → முருக்கஞ்சேரி.]

முருக்கதாபம் *murukka-tābam*, பெ.(n.) ஒருவகை இசிவு (சன்னி) நோய்; a kind of delirium.

முருக்கம் *murukkam*, பெ.(n.) கலியாண முருக்க மரம்; bastard teak-rootch wood tree-Red been - *Erythrina indica*.

[முருக்கு → முருக்கம்.]

இதன் பூ சிவப்பாகவும், நறுமண மில்லாததாகவும் இருக்கும். மரம் முட்களை உடையது. இது மருத்துவத்திற்கு மிகையாகப் பயன்படுகிறது. பழம், பூ போன்றவை ஒரு வகை நாற்றமுடையவை, உண்பதற்குப் பயன்படாது. பூ முயல் இரத்தத்தைப் போல் இருக்கும். இதன் பட்டைச் சாறு மருத்துவத்தில் பயன்படுகிறது. இதன் பூவை, திருவள்ளுவர் "இனரூழ்த்து நாறா மலர்" என்று கூறியுள்ளார் (சா.அக.).

முருக்கம்பிசின் *murukkam-pišiṉ,* பெ.(n.) முருக்க மரத்தின் பிசின்; gum of the tree *Butea frondosa - B.superba Bengal kino.*

[முருக்கம் + பிசின்.]

முருக்கம்புளி *murrukkam-puḷi,* பெ.(n.) எலுமிச்சம் புளிப்பு (அமுதாகரம்); citric acid.

[முருகு→முருக்கம் + புளி.]

முருக்கம்விரை *murukkam-virai,* பெ.(n.) முருக்க மரத்தின் கொட்டை; the seed of *Butea-frondosa.* It is anthel-mentic (சா.அக.).

[முருக்கம் + விரை.]

முருக்கல் *murukkal,* தொ.பெ.(verbn.) 1. அழிக்கை; destroying. *"முன்யானிவனை முருக்கலும் வேண்டினென்" (பெருங். உஞ்சை. விழா.37:199).* 2. கொல்லுகை; killing (சா.அக.).

[முருக்கு→முருக்கல்.]

முருக்கவரை *murukkavarai,* பெ.(n.) கோழியவரை; a kind of bean (சா.அக.).

[முருக்கு + அவரை.]

முருக்கள்ளி *muru-k-kaḷḷi,* பெ.(n.) துறட்டிச் செடி; prickly climbing cockspur, *Pisonia aculeata* (சா.அக.).

மறுவ. காரிண்டு.

முருக்கன்மரம் *murukkaṉ-maram,* பெ.(n.) மரவகை; Bengal kino tree, *Butea frondoso.*

[முருக்கு→முருக்கன் + மரம்.]

முருக்கி *murukki,* பெ.(n.) சதுரக்கள்ளி; square spurge-*Euphorbia antiquorum* (சா.அக.).

முருக்கிதழ் *murukkidaḻ,* பெ.(n.) சிவந்த உதடு; red lip.

[முருக்கு + இதழ். முருக்கம் மலர் போன்ற சிவந்த உதடு.]

முருக்கு¹-தல் *murukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. அழித்தல்; to destroy, crush, ruin. *"விறல்வேன் மன்னர் மன்னெயில் முருக்கி" (சிறுபாண்.247).* 2. கொல்லுதல் (திவா.); to kill. *"எற்றி முருக்குவ ரரக்கர் முன்பர்" (கம்பரா.மகரக்.12).* 3. முறித்தல்; to break in pieces. *"காப்புடைய வெழுமுருக்கி" (புறநா. 14).* 4. உருக்குதல் (வின்.); to melt. 5. கரைத்தல் (வின்.); to dissolve.

[முருங்கு-தல்→முருக்கு-தல்.]

முருக்கு² *murukku,* பெ.(n.) கொலை (அரு. நி.); killing.

[முருக்கு¹→முருக்கு².]

முருக்கு³ *murukku,* பெ.(n.) 1. முள்ளு முருக்கு, 1 பார்க்க; see *muḷḷu-murukku,* 1. 2. புரசமரம்; palas-tree, *Butea frondoso. "முருக்குத்தாழ் பெழிலிய நெருப்புற ழடைகரை" (பதிற்றுப்.23 : 20), "முருக்கரும் பன்ன வள்ளுகிர் வயப்பிணவு" (அகநா. 362:5).* 3. எலுமிச்சை (தைலவ. தைல.); sour lime. 4. கொடியெலுமிச்சை (வின்.); Italian lemon. 5. குருகு (குறிஞ்சிப்.73, உரை); white fig. 6. அகில்; a fragrant wood tree-*Agallochum.*

முருக்குக்கள்ளி *murukku-k-kaḷḷi,* பெ. (n.) ஒருவகைக் கள்ளி (கோவை.); a kind of square spurge.

[முருக்கு + கள்ளி.]

முருக்குத்தடி *murukku-t-taḍi,* பெ.(n.) பனையேறிகள் பனைமூட்டிற் சார்த்தி மிதித்தேறுவதற்கு வைக்குந் தடி (நாஞ்சில்.); a wooden stand used to climb palm-tree.

[முருக்கு + தடி.]

முருக்குமித்திரி *murukku-mittiri,* பெ. (n.) அழகுக்காக வளர்க்கும் தோட்டச் செடியின் விதை (நேர்வாளம்); croton seed (சா.அக.).

முருகக்கடவுள் *muruga-k-kaḍavuḷ,* பெ. (n.) குறிஞ்சி நிலத் தெய்வமான முருகன்; Murugan, god of *Kuriñji* tract.

[முருகன் + கடவுள்.]

முருகநாயனார் *muruga-nāyaṉār,* பெ.(n.) 63 நாயன்மார்களுள் ஒருவர் (பெரியபு.); a canonized *Šaiva* saint one of sixty three.

[முருகன் + நாயனார்.]

சோழ நாட்டில் திருப்புகலூரைச் சேர்ந்தவர். பிராமணர் குலத்தில் பிறந்தவர். சிவன் மீது ஆழ்ந்த பற்றுள்ளவர். திருஞானசம்பந்தரின் நண்பர்.

முருகபம் *murugabam,* பெ.(n.) உயர்ந்த முத்து; a superior pearl.

முருகயர்-தல் *murugayar-,* 4 செ.கு.வி. (v.i.) 1. முருகக் கடவுளுக்குப் பூசை செய்தல்; to offer worship to *Kandan.* 2. வெறியாடுதல்; to dance while under possession by *Kandan.* *"முருகயர்ந்து வந்த முதுவாய் வேந்தன்" (குறுந்.362).* 3. விருந்திடலாகிய வேள்வி செய்தல்; to give feast, as in sacrifice. *"படையோர்க்கு முருகயர" (மதுரைக்.38).*

[முருகு + அயர்-தல்.]

முருகவுருட்டிசுறா *murugavuruṭṭi-šuṟā,* பெ.(n.) கடல்மீன் வகை (யாழ்ப்.); a sea - fish.

முருகவேள் *muruga-vēḷ,* பெ.(n.) 1. சிவனுடைய மகன்; *Šiva's* son. 2. முருகக்கடவுள் (பட்டினப். 158, உரை) பார்க்க; see *muruga-k-kaḍavuḷ.*

[முருகன் + வேள்.]

முருகன் *murugaṉ,* பெ. (n.) 1. கட்டிளைஞன் (திவா.); youth buck. 2. குமரன் என்னும் குறிஞ்சி நிலத் தெய்வம்; *Kumaraṉ,* god of *kuriñji* tract. *"முருக னற்போர் நெடுவே ளாவி" (அகநா.1:3), "முருகற் சீற்றத் துருகெழ குருசில்" (புறநா.16:12).* 3. வெறியாடும் வேலன் (பிங்.); one possed by *Vēlaṉ.* *"முதியாளோடு முருகனை முறையிற் கூவி" (கந்தபு. வள்ளி.155).* 4. பாலைநிலத் தலைவன் (அரு.நி.); chief of the desert tract.

க. முருக; ம. முருகன்.

[முருகு→முருகன்.]

குறிஞ்சி நிலத் தேவனை இளைஞனென்று கருதியே குறிஞ்சி நில மக்கள் முருகன் என்றனர். ஒ.நோ. குமரன் = இளைஞன், முருகன்.

முருகன்மரம் *murugaṉ-maram,* பெ.(n.) புரசு; a kind of tree - *Butea frondosa.*

மறுவ. முருக்கன் மரம்.

முருகனாடல் *muruga-ṉāḍal,* பெ.(n.) துடி குடை என்ற இருவகைக் கூத்து (பிங்.); Kanda's dance, of two kinds, viz., *tuḍi* and *kuḍai.*

[முருகன் + ஆடல்.]

முருகா *murugā*, பெ.(n.) 1. அகில்; a kind of fragrant wood-*Agallochum*. 2. எலுமிச்சை; lime. 3. அழகு; beauty. 4. இளமை; tender age. 5. கள்; toddy. 6. மணம் (வாசனை); smell (சா.அக.).

[முருகு→முருகா.]

முருகாநோய் *murugā-nōy*, பெ.(n.) மிளகாய்ச் செடிக்கும், காய்க்கும் வரும் ஒருவகை நோய் (கோவை.); a kind of disease that attacks chilly plant.

முருகியம் *murugiyam*, பெ.(n.) குறிஞ்சி நிலத்தில் முருகனுக்குரிய வெறியாட்டுப் பறை (தொல்.பொருள்.18, உரை); drum played in the worship of Kanda, in hilly tracts.

[முருகு→முருகியம்.]

முருகியல் *murugiyal*, பெ.(n.) அழகியல்; aesthetic.

[முருகு→முருகியல்.]

முருகு[1] *murugu*, பெ.(n.) 1. இளமை (திவா.); tenderness, tenderage, youth. 2. அழகு (பிங்.); beauty. 3. குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகன்; Kandan, god of *kuriñji* tract. *"அருங்கடி வேலன் முருகொடு வளைஇ" (மதுரைக்.611).* 4. தெய்வம்; divinity, god. *"முருகு மெய்ப்பட்ட புலத்திபோல" (புறநா.259). "முருகாற்றுப் படுத்த வுருகெழு நடுநா" (அகநா.22:11). "மடவை மன்ற வாழிய முருகே" (நற்.34:11).* 5. வேலன் வெறியாட்டு; dancing while under possession by Kanda. *"முருகயர்ந்து வந்த முதுவாய் வேலன்" (குறுந். 362).* 6. மணம்; fragrance. *"முருகமர்பூ முரண்கிடக்கை" (பட்டினப்.37).* 7. திருவிழா (திவா.); festival. *"முருகயர் பாணியும்" (சூளா.நாட்.7).* 8. படையல் விருந்து (வேள்வி); sacrificial feast. *"படையோர்க்கு முருகயர" (மதுரைக். 38).*

[முல்→முள்→முரு→முருகு (வே.க.).]

இளமை என்பது ஓர் உயிரியின் பிறப்பிற்கும் முழுவளர்ச்சிக்கும் இடைப்பட்ட நிலைமை அல்லது காலம். இளமைப் பருவத்திலேயே உருவச் சிறுமையும் உடல் மென்மையும் அழகு நிறைவும் மறவுணர்ச்சியும் வலிமை மிகுதியும் பொதுவாக அமைந்திருத்தலால் இளமைக் கருத்திற் சிறுமை, மென்மை, அழகு, மறம், வலிமை முதலிய கருத்துகளும் தோன்றும் (வே.க.).

முருகு[2] *murugu*, பெ.(n.) 1. பூத்தட்டு (நாமதீப.429); flower-salver. 2. தேன்; honey. *"முருகு வாய்மடுத்துண்டளி மூசும்" (நைடத. மணம்புரி.23).* 3. கள் (பிங்.); toddy. 4. எலுமிச்சை (பிங்.); sour lime. 5. எழுச்சி (திவா.); elevation, height. 6. நறுமண மரம் (திவா.); eagle wood. 7. விறகு (திவா.); fuel. 8. திருமுருகாற்றுப்படை; *Tirumurugāṟṟu-p-paḍai. "முருகு பொருநாறு" (பத்துப்பாட்டு. தனிப்பா.).*

[முருகு[1]→முருகு[2].]

முருகு[3]–தல் *murugu-*,5 செ.கு.வி.(v.i.) 1. முதிர்தல்; to be ripe or mature. *"முருகு காதலின்" (கம்பரா.அகலிகை.54).* 2. காய்ச்சுதலிற் பக்குவம் மிஞ்சுதல்; to exceed the proper limit in heating. *நெய் முருகிவிட்டது.*

[முறுகு–தல்→முருகு–தல்.]

வெல்லம், சருக்கரை ஆகியவற்றைக் காய்ச்சும் பொழுது, இளங் கம்பிப்பதம், கம்பிபதம் என்று ஒவ்வொரு இனிப்புப் பண்டத்தின் நிலைக்குத் தக்கவாறு காய்ச்சுவர். இதையெல்லாம் தாண்டி இறுகி விடும் பதத்தை முற்றிய பதம் என்பர்.

முருகு⁴ *murugu,* பெ.(n.) பிறைபோல் வளைந்த காதணிவகை; an ornament worth in the helix of the ear. *"வச்ர முருகை யெந்தக் கோனான்றன் கையிற் கொடுத்தானோ" (விறலிவிடு.703).*

தெ., க. முருகு.

[முல்→முர்→முரு→முருகு.]

முருகுகாது *murugu-kādu,* பெ.(n.) காதின் எதிர்ப்புறம் உள்ள சிறுமடல் (முருகாது) (கோவை.); ear lobe.

முருகுகாந்தி *murugu-gāndi,* பெ.(n.) மல்லிகை; jasmine flower (சா.அக.).

முருகேசன் *murugēšan,* பெ.(n.) முருகக் கடவுள் பார்க்க; see *muruga-k-kaḍavuḷ.*

[முருகு + ஈசன்.]

முருகை *murugai,* பெ.(n.) ஒருவகைக் கல் (யாழ்ப்.); a kind of stone.

முருகைக்கல் *murugai-k-kal,* பெ.(n.) பவளம்; coral (சா.அக.).

[முருகை + கல்.]

முருகைநண்டு *murugai-naṇḍu,* பெ.(n.) நண்டுவகை (யாழ்ப்.); a kind of crab.

முருங்கக்கீரை *muruṅga-k-kīrai,* பெ.(n.) முருங்கைக்கீரை பார்க்க; see *muruṅgai-k-kīrai.*

[முருங்கை + கீரை.]

முருங்கச்சார் *muruṅga-c-cār,* பெ.(n.) முருங்கை மரப் பட்டையின் சாறு; juice of the bark of Moringa oleifer.

[முருங்கை + சார். சாறு→சாரு→சார்.]

முருங்கன் *muruṅgaṉ,* பெ.(n.) மடங்கல் மாதத்தில் (ஆவணி)யில் விதைக்கப்பட்டு நான்கு மாதங்களில் விளைவாகும் கார்நெல் வகை; a coarse kind of *kār* paddy sown in *Avaṇi* and maturing in four months.

முருங்கு¹-தல் *muruṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. அழிதல்; to perish; to be destroyed. *"அமரு ளேற்றார் முரண் முருங்க" (பு.வெ.1:7).* 2. முறிதல்; to break. *"கூம்பு முதன் முருங்க" (மதுரைக்.377).* 3. அடங்கியெரிதல்; to simmer. *"முருங்கெரியிற் புக" (கம்பரா. கார்முக.29).*

தெ. முருகு

முருங்கு² *muruṅgu,* பெ.(n.) முருக்கு³, 1, 2 பார்க்க; see *murukku³, 1, 2.*

முருங்கை¹ *muruṅgai,* பெ.(n.) உணவில் பயன்படுத்தும் இலைகளையும் காய்களையும் உடைய, எளிதில் ஒடியக் கூடிய ஒரு மரம்; horse radish tree-*Moringa pterygosperma. வெண்ணெய் உருக்கும் போது முருங்கைக் கீரை போடுவதுண்டு. "முருங்கா வென்னுஞ் சிங்களச் சொல் முருங்கையென வந்தவாறும்" (வீரசோ. தத்.8). "நாரின் முருங்கை நவிரல் வான்பூ" (அகநா.1:16), "முருங்கைப்பூ சிவந்ததினால் கூந்தலில் முடிப்பார்களா?", "முருங்கைக்காய் என்றதும் முறிந்ததாம் பத்தியம்" (பழ.).*



தெ. முநக; ம. முரிஞ்ஞு.

Sinh. muruṅga.

முருங்கை வகை : 1) காட்டு முருங்கை, 2) தவசு முருங்கை, 3) பூனை முருங்கை, 4) கலியாண முருங்கை, 5) புனல் முருங்கை, 6) முள் முருங்கை, 7) செம்முருங்கை, 8) நல்முருங்கை (சா.அக.).

முருங்கை² *muruṅgai,* பெ.(n.) 1. புன்னை மரம்; a tree - *Alexandrian laurel.* 2. அழிஞ்சில்; sage - leaved alangium - *Alangium lamareck.*

முருங்கைக்காய் *muruṅgai-k-kāy,* பெ. (n.) குச்சி போன்று நீண்டதும் உட்பகுதியில் சதைப் பற்றுள்ளதுமான, முருங்கை மரத்தின் காய்; fruit of the horse-radish tree which looks like a small stick in India drum stick. *காய்கறிகளில் முருங்கைக்காய் போல் சத்தானது எதுவும் இல்லை.*

[முருங்கை + காய்.]

முருங்கைக்கீரை *muruṅgai-k-kīrai,* பெ.(n.) முருங்கை மரத்தின் கீரை; greens of the drumstick tree - *Moringa oleifera* (சா.அக.).

[முருங்கை + கீரை.]

முருங்கைப்பிஞ்சு *muruṅgai-p-piñju,* பெ.(n.) 1. முருங்கைக் காயின் இளமைப் பிஞ்சு; tender drumstick. 2. குழந்தைக் கணை, எலும்புருக்கிக் காய்ச்சல் மேலும் ஒளிநீர் (விந்து) இழப்பு முதலியவை நீங்கும் என்பர்; tender drumstick, it is useful in rickets, bone fever, loss of semen nausea etc.

[முருங்கை + பிஞ்சு.]

முருங்கைப்பூ *muruṅgai-p-pū,* பெ.(n.) முருங்கை மரத்தின்பூ; flowers of drumstick tree. It aphrodisiac.

[முருங்கை + பூ.]

முருங்கையீர்க்கு *muruṅgai-y-īrkku,* பெ.(n.) முருங்கைக் கீரையின் காம்பு; the rip of the tripinnate of Moringa Oleifera.

[முருங்கை + ஈர்க்கு.]

முருங்கைவித்து *muruṅgai-vittu,* பெ.(n.) முருங்கைக் காயின் விதை; drumstick seeds.

[முருங்கை + வித்து.]

நீற்றுப்போன ஒளிநீரை (விந்தை) இறுக்கிப் பிசின் போலாக்கும் குணமுடையது முருங்கை வித்து.

முருங்கைவேர் *muruṅgai-vēr,* பெ.(n.) முருங்கை மரத்தின் வேர்; pungeant root of drumstick tree - used as a substitute for horse radish.

[முருங்கை + வேர்.]

முருட்டுக்கையர் *muruṭṭu-k-kaiyar,* பெ.(n.) அடங்கா வொழுக்க முள்ளவர்; persons of rude behaviour. *"முருட்டுக்கையர் புறப்பட்டார் புரட்டுப் பேசி" (திருவாலவா.38 : 14).*

[முருடு + கையர்.]

முருட்டுத்தன்மை *muruṭṭu-t-taṉmai,* பெ. (n.) ஓராது செய்யுங் குணம் (குறள், 1063, உரை); recklessness.

[முருடு + தன்மை.]

முருடன் *muruḍaṉ,* பெ.(n.) 1. முரட்டுக் குணமுள்ளவன்; obstinate person. *"முருடரான ராவணாதிகளை" (ஈடு, 2. 7 : 10).*

2. முன்பின் ஆராயாதவன்; reckless person. 3. மூடன்; ignorant, foolish person. *"கல்லா முருடரும்" (அஷ்டப். அழக.30).* 4. வேடன் (சூடா.); hunter. 5. நாகரிகமற்றவன்; rude person, savage.

க. மொரட

[முருடு→முருடன்.]

முருடு *murudu,* பெ.(n.) 1. கரடுமுரடு; coarseness, roughness. *"முருட்டுச் சிரமொன் றுருட்டினை" (சங்கற்ப. ஈசுவர விவகார. வரி.26).* 3. கொடுமை; cruelty. *"அரக்கர் குலம் முருடு தீர்த்தபிரான்" (திவ். திருவாய்.2. 7 : 10).* 4. முடிச்சுள்ள மரக்கணு (திருவாலவா.23:4); knot in wood. 5. வெட்டிய மரத்தினடி (சங்.அக.); stump. 6. விறகு (பிங்.); fire wood. 7. உருண்ட மரக்கட்டை; piece of wood. *"வன்பராய் முருடொக்கு மென் சிந்தை" (திருவாச.23: 40).* 8. பறைப்பொது (பிங்.); drum. *"முரசுஞ் சங்கு முருடு மொலிப்ப" (பெருங்.மகத. படைதலை. 19:195).* 9. பெரு மத்தளம்; hand drum with two faces. *"முருடதிர்ந்தன" (சிலப்.மங்கல.).* 10. பத்தல் (சங்.அக.); a kind of bucket. 11. பருமை; largeness. *"முருட்டு மோத்தைத் தலை பெற்றமை" (தக்கயாகப். 47).* 12. பெருங்குறடு (வின்.); large tongs.

க. மெரடு; வ. முரஜ.

[முரண்→முருடு.]

முருதகுசம் *muruda-kušam,* பெ.(n.) சேங்கொட்டை; marking nut - *Semicarpus anacardium* (சா.அக.).

முருதல் *murudal,* பெ.(n.) நாக நஞ்சு; a kind of arsenic (சா.அக.).

முருதாறு *murudāṟu,* பெ.(n.) பன்றி (கோவை.); pig.

முருந்தபாலி *murundapāli,* பெ.(n.) 1. குந்திரிக்கம்; vateri indica. 2. குங்கிலி மரம்; boswbllia glabra (சா.அக.).

முருந்தம் *murundam,* பெ.(n.) முருந்து, 5 (சூடா.) பார்க்க; see *murundu, 5. "குருந்த நின்றரும்பின முருந்தம்" (கம்பரா. வனம்புகு. 45).*

[முருந்து→முருந்தம்.]

முருந்தழற்சி *murundalarci,* பெ.(n.) குருத்தெலும்பினுடைய அழற்சி; inflam mation of cartilage.

[முருந்து + அழற்சி.]

முருந்தன் *murundaṉ,* பெ.(n.) 1. திறமுடையான்; person of ability. *"பெருந்தகைப் பெரியோனைப் பிணித்த போர் முருந்தன்" (கம்பரா.பிணிவீட்.37).* 2. புகழுடையான் (இலக்.அக.); famous person.

[முருந்து→முருந்தன்.]

முருந்து[1] *murundu,* பெ.(n.) 1. இறகினடிக் குருத்து (பிங்.); quill of a feather. 2. மயிலிறகின் அடிக்குருத்து; root of peacock's feather. *"முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய்" (ஏலா.7). "முருந்தெனத் திரண்ட முள்ளெ யிற்றுத் துவர் வாய்" (அகநா.179:11), "முருந்தேர் வெண்பல் முகிழ்நகை திறந்தே" (நற்.179:10).* 3. தென்னை முதலியவற்றின் அடிவெண் குருத்து (சூடா.); white and fresh sprout of a palm. 4. கொழுந்து (சங்.அக.); tendril. 5. இளந்தளிர் (அரு.நி.); tender leaf. 6. வேரின் மேற்றண்டு; stalk of plant just

above the roots. *"பைஞ்சாய்க் கோரையின் முருந்தினன்ன" (அகநா.62).* 7. எலும்பு; bone. *"முருந்தின் காறுங் கூழையை" (சீவக. 1661).* 8. வெண்மை (சூடா.); whiteness. 9. முத்து (அரு.நி.); pearl. 10. வெண்மையும் அழுத்தமும் கொண்டு எலும்பின் தலைப்புகளை மூடும் குருத்தெலும்பு; a white elastic substance forming the tissue from which bone is formed by calcification - *Cartilege* (சா.அக.).

முருந்து² *murundu,*பெ.(n.) பூவின் தாள்; stalk of flower. *"பூமுருந்துங் குருந்துஞ் செருந்தும் பொருந்து மூட்டுடன்" (குருகூர்ப்.6).*

முருந்துசாலங்கள் *murundu-šālaṅgaḷ,* பெ.(n.) குருத்தெலும்பு உயிர்மங்கள்; cartilagenous cells (சா.அக.).

முருந்துத்தாபிதம் *murundu-t-tābidam,* பெ.(n.) குருத்தெலும்புக்கு உண்டாகும் அழற்சி; inflammation of the cartilage.

*[முருந்து + **Skt.** தாபிதம்.]*

முருந்துநார் *murundu-nār,*பெ.(n.) குருத்தெலும்பின் இழைநார் தோற்றம்; fibro cartilage.

[முருந்து + நார்.]

முருந்தெலும்பு *murundelumbu,* பெ.(n.) குருத்தெலும்பு; cartilage bone.

[முருந்து + எலும்பு.]

முருநடைப்பூதி *murunaḍai-p-pūdi,* பெ.(n.) கருங்குளவி; a black wasp (சா.அக.).

முருமுரு-த்தல் *murumuru-,*4 செ.குன்றாவி. (v.t.) முறுமுறு-த்தல் பார்க்க; see *muṟumuṟu-.*

முருவிலி *muru-vili,*பெ.(n.) 1. முருவிளிக் கொடி பார்க்க; see *muruviḷi-k-koḍi.* 2. ஊதை (வாதம்)யடக்கி (சங்.அக.); wind killer.

க. முரிகில்; ம. முரல்.

[முருகு + வல்லி–. முருகுவல்லி →முருவிலி.]

முருவிளிக்கொடி *muruviḷi-k-koḍi,* பெ.(n.) துறட்டிச் செடி (காரிண்டு); prickly climbing cock-spur.

[முருவிலி→ முருவிளி + கொடி.]

முருவு *muruvu,*பெ.(n.) ஆடவர் காதணி (கோவை.); men's ear ornament.

முரைசு *muraišu,*பெ.(n.) முரசு பார்க்க; see *murašu. "முரைசு மூன்றாள் பவர்" (கலித். 132)., "உரைசால் சிறப்பின் முரைசொழிந் தனவே" (புறநா.62:9).*

[முரசு →முரைசு.]

முல்லங்கிமோகரா *mullaṅgi-mōgarā,* பெ.(n.) பழைய நாணய வகை (சரவண. பணவிடு.62); an ancient coin.

முல்லை¹ *mullai,*பெ.(n.) 1. பச்சைநிறக் காம்பில் சிறிய வெண்ணிற இதழ்களைக் கொண்ட நறுமணம் மிகுந்த பூ; Arabian jasmine, *Jasminum sambac. "முல்லை வைந்நுனை தோன்ற" (அகநா.4). "பாசிலை முல்லை முகைக்கும்" (புறநா.117:9), "கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை" (குறுந்.62:1), "உள்ளினள் உறைவோள் ஊரை முல்லை" (நற்.59:8).* 2. கொடிவகை (L.); trichotomus-flowering smooth jasmine, *Jasminum trichotomum.* 3. காட்டு மல்லிகை; wild jasmine. 4. ஊசிமல்லிகை; eared jasmine. 5. கொடிவகை; pointed leaved wild jasmine, *Jasminum malabaricum.*

6. ஈசுரமூலி; Indian birthwort. 7. ஐந்திணையுள் ஒன்றான காடும் காடு சார்ந்த முல்லைநிலம் (தொல்.பொருள்.5); forest, pastoral tract, one of *ai-n-dinai.* 8. முல்லைநிலப் பண்வகை; a melody type of the forest tracts. 9. சாதாரிப்பண் (பிங்.); a secondary melody type. 10. உரிப் பொருளில் ஒன்றாகிய இருத்தல்; patient endurance of a lady during the period of separation from her lover. *"முல்லைசான்ற புரவு" (மதுரைக். 285).* 11. கற்பு; chastity. *"தானுடை முல்லை யெல்லாந் தாதுகப் பறித்திட்டானே" (சீவக.686).* 12. சிறப்பியல்பு (பு.வெ.8 : 17, உரை); chief characteristic. 13. வெற்றி; victory. *"முல்லைத்தார்ச் செம்பியன்" (பு.வெ.9 : 34).* 14. முல்லைப் பாட்டு பார்க்க; see *mullai-p-pāṭṭu.* *"பாணிரண்டு முல்லை" (பத்துப்பாட்டு, தனிப்பா.) (தக்கயாகப்.54, உரை).* 15. முல்லைக்குழல் பார்க்க (சிலப்.17, பாட்டு 3); see *mullai-k-kuḻal.*

தெ. முல்ல; க. முல்லெ; ம.முல்ல.

[முல் → முல்லை. முல் = மென்மை.]

முல்லை² *mullai,* பெ.(n.) குத்தகை (யாழ்ப்.); contract of lease.

[முல் → முல்லை.]

ஒருபொருள் முழுவதையும் குறித்த காலத்திற்குப் பயன்படுத்தச் செய்துகொள்ளும் ஒப்பந்தமே குத்தகை.

முல்லைக்கருப்பொருள் *mullai-k-karu-p-poruḷ,* பெ.(n.) முல்லை நிலத்தில் இருக்கும் பொருள்கள்; men beasts and other living creatures and other things peculiar to wood land districts such as mullai *nīr* etc. *முல்லை நீர், முல்லைப்புள், முல்லை நில மாக்கள், முல்லை யாழ், முல்லைப் பூ.*

முல்லைக்குரியகருப்பொருள் : தெய்வம் – மால்; உயர்ந்தோர் – குறும்பொறை நாடன், தோன்றல்; தாழ்ந்தோர் – இடையர் இடைச்சியர்; புள் – காட்டுக் கோழி; விலங்கு – மான், முயல்; ஊர் – பாடி; நீர் – குறுஞ்சுனை, கான்யாறு; பூ – முல்லை. கொன்றை, காயா; மரம் – குருந்து; உணவு – வரகு, சாமை; பறை – ஏற்றுப்பறை; யாழ் – முல்லையாழ்; பண் – சதாரி; தொழில் – சாமை, வரகு விதைத்தல், கடாவிடுதல், விடைதழுவல், குரவையாடல் முதலாயின (அகநா.).

முல்லைக்காரன் *mullai-k-kāraṉ,* பெ.(n.) 1. குத்தகைக்காரன் (யாழ்ப்.); lessee. 2. பண்ணை வேலை பார்ப்பவன்; one who cultivates the land and looks after the cattle, etc., of a land - owner.

[முல்லை + காரன்.]

முல்லைக்காலம் *mullai-k-kālam,* பெ.(n.) மடங்கல், கன்னி (ஆவணி, புரட்டாசி) மாதமாகிய மழைக் காலம்; the two rainy months of August and September.

[முல்லை + காலம்.]

முல்லைக்குழல் *mullai-k-kuḻal,* பெ.(n.) முல்லைக்கொடியால் அமைத்த வளையத்தை வாயினிடத்தே செறித்த இசைக் குழல் (சிலப்.17, பாட்டு, 3, உரை); a flute or pipe with mouth - piece made of *mullai* creeper.

[முல்லை + குழல்.]

முல்லைச்சிலந்தி *mullai-c-cilandi,* பெ.(n.) முலைச்சிலந்தி (இராசவைத்.98, உரை) பார்க்க; see *mulai-c-cilandi.*

[முலைசிலந்தி → முல்லைச்சிலந்தி.]

முல்லைச்சூட்டு *mullai-c-cūṭṭu,* பெ.(n.) கற்பிற்கறிகுறியாக தலையிலணியும் முல்லைப் பூவாலான மாலை; chaplet of *mullai* flowers, as the emblem of chastity. *"பனிமுல்லைச் சூட்டு வேய்ந்தார்" (சீவக. 624).*

[முல்லை + சூட்டு.]

முல்லைநிலப்பயிர் *mullai-nila-p-payir,* பெ.(n.) காராமணி, சாமை, வரகு; important pulses and millets grown in wood tracts (சா.அக.).

[முல்லை + நிலம் + பயிர்.]

முல்லைநிலப்புள் *mullai-nila-p-puḷ,* பெ.(n.) காட்டுக் கோழி; a bird jungle bowl (சா.அக.).

[முல்லை + நிலம் + புள்.]



முல்லைநிலமரம் *mullai-nila-maram,* பெ.(n.) முல்லை நிலத்து மரம்; plants growing in wood or silvan tracts.

[முல்லை + நிலம் + மரம். கொன்றை, துளசி, காந்தள் முதலிய மரம்.]

முல்லைநிலவிலங்கு *mullai-nila-vilaṅgu,* பெ.(n.) மான், முயல் போன்ற விலங்குகள்; deer, rabbit etc. animals that live in silvan tracts.

[முல்லை + நிலம் + விலங்கு.]

முல்லைப்பண் *mullai-p-paṇ,* பெ.(n.) முல்லை நிலத்துக்குரிய பெரும்பண் வகை (திவா.); primary melody - type of the forest tract.

[முல்லை + பண்.]

முல்லைப்பாட்டு *mullai-p-pāṭṭu,* பெ.(n.) பத்துப்பாட்டினுள் நப்பூதனார் பாடிய பாட்டு; a poem in *Pattu-p-pāṭṭu* by *Nappūdaṉār.*

[முல்லை + பாட்டு.]

பதினெண் மேற் கணக்கில், தலைவனைப் பிரிந்து இருக்கும் தலைவியின் இயல்பைக் கூறும் நூல்.

பத்துப்பாட்டிலே மிகச் சிறிய அடியளவை உடைய பாடல் இது; 103 அடிகளையுடையது; ஆசிரியப்பாவால் இயன்றது. ஆசிரியர் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் ஆவர். இது முல்லைத் திணைக்கு உரிய இருத்தல் ஒழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறுகிறது. போர்மேற் சென்ற தலைவன் திரும்பி வருமளவும் அவன் கூறிய சொல் திறம்பாது ஆற்றியிருந்த தலைவியின் செயலைக் கூறுகிறது. இடையே அகத்திணையான முல்லைக்குத் தொடர்பான புறவொழுக்கமாகிய வஞ்சினையும் கூறுகிறது. முல்லைத் திணையை வருணிக்கும் மற்றப் பாடல்கள் எல்லாவற்றினும் இம் முல்லைப்பாட்டு நுட்ப மிகவுடையதாய்க் காணப்படுகிறது.

பாட்டின் தொடக்கத்தில் கார்கால வருணனையும், இறுதியில் முல்லை நிலத்தின் இயல்பும், இடையில் அரசனின் பாசறை அமைப்பும் நுவலப்படுகின்றன. 'கானம் நந்திய செந்நிலப் பெருவழி'யின் அழகு சுவைபடக் கூறப்படுகிறது.

மன்னன் பாசறையில், இடையில் வாளேந்திக் கையில் விளக்கேந்தி, அணையும் விளைக்கை அணையாது காக்கும் மங்கையர் உள்ளனர். கண்ணைக் காக்கும் இமை போல அரசனுக்குப் பாதுகாவலராய்ப் பெருமூதாளர் உள்ளனர். நாழிகை வட்டில் கொண்டு நாழிகை அறியும் நாழிகைக் கணக்கர் உள்ளனர். அடுத்து யவனர்களும் உள்ளார்கள்.

'மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்'

–முல்லை : 59–61

யவணர் இயற்றிய புலித்தொடர் சங்கிலியும், பாவை விளக்கும் முல்லைப்பாட்டில் இடம் பெறுகின்றன.

'உடம்பின் உரைக்கும் உரையா நாவின்
படம்புகு மிலேச்சர்' என மிலேச்சர்கள் வருணிக்கப்படுகிறார்கள்.

இப் பாட்டு கருத்தாழம் மிகுந்து, முல்லையின் முதல், கரு, உரிப்பொருள்களைத் திறம்பட வருணிக்கிறது. முல்லைப் பாட்டின் தலைவி, நெஞ்சை ஆற்றி நிற்பதால், 'நெஞ்சாற்றுப்படை' என்றும் பிறிதொரு பெயர் கூறுவர் சிலர் (சி.பா. இலக்கிய வரலாறு).

முல்லைப்பல் *mullai-p-pal,* பெ.(n.) முல்லை யரும்பு போன்ற பல்; teeth resembling the jasmine bud (சா.அக.).

[முல்லை + பல்.]

முல்லைமாறி *mullai-māṟi,* பெ.(n.) 1. கற்பு நிலை பிறழ்ந்த–வன்–வள்; a person not stable with chastity. 2. முடிச்சுமாறி (இ.வ.); pickpocket.

[முல்லை + மாறி.]

முல்லை, கற்புக்குக் குறியீடாக மக்கள் வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் குறிப்பிடப் பெறும் மலர்.

முல்லையர் *mullaiyar,* பெ.(n.) முல்லையாளர் (திவா.) பார்க்க; see *mullai-y-āḷar* .

[முல்லை → முல்லையர்.]

முல்லையாழ் *mullai-yāḻ,* பெ.(n.) 1. முல்லைப் பண் (பிங்.); primary melody type of the forest tract. 2. முல்லை நில மக்களால் இசைக்கப்படும் இசைக் கருவி; a musical instrument played by the people of the mullai-tract called penta-chord. *ஐந்து நரம்புகளுள்ள யாழ் முல்லை நிலத்தில் இசைக்கப்பட்டது (சென்னைப் பல்கலைக் கழக ஆங்கில–தமிழ்ச் சொற்களஞ்சியம், பக்.723).*

[முல்லை + யாழ்.]

முல்லையாழ்த்திறம் *mullai-yāḻ-t-tiṟam,* பெ.(n.) செவ்வழிப் பண்ணினம் (பிங்.); secondary melody type of *cevvaḻi* class.

[முல்லையாழ் + திறம்.]

முல்லையாளர் *mullai-y-āḷar,* பெ.(n.) முல்லைநிலமக்கள் (திவா.); herdsmen and shepherds, as inhabitants of the forest tract.

[முல்லை + ஆளார்.]

முல்லையுரிப்பொருள் *mullai-y-uri-p-poruḷ,* பெ.(n.) முல்லை[1], 10 பார்க்க; see *mullai [1], 10.*

[முல்லை + உரி + பொருள்.]

முல்வயன் *mulvayaṉ,* பெ.(n.) முல்வாயன் (யாழ்.அக.) பார்க்க; see *mul-vāyaṉ.*

முல்வாயன் *mul-vāyaṉ*, பெ.(n.) கறையான் வகை (யாழ்.அக.); a kind of white ant.

[முள் + வாயன் – முள்வாயன் →முல்வாயன்.]

முலங்கம்[1] *mulaṅgam*, பெ.(n.) சல்லிக்கொடி, சல்லிக்குடல்; mesentry.

முலங்கம்[2] *mulaṅgam*, பெ.(n.) அதிமதுரம், பூடு வகை; liquorice - plant, *Glycy rrhiza glabra.*

முலத்தி *mulatti*, பெ.(n.) இலந்தை; a small thorny tree jujubatree - *Zizyphus jujuba* (சா.அக.).

முலமுலெனல் *mula-muleṉal*, பெ.(n.) ஒரொலிக் குறிப்பு (வின்.); onom. expr. signifying humming buzzing, as of flies.

முலவை *mulavai*, பெ.(n.) நாய் (சங்.அக.); dog.

[முல்வை → முலவை.]

முலாகலம் *mulākalam*, பெ.(n.) பொடுதலை; a prostate plant - *Lippia nadiflora* (சா.அக.).

முலாங்காய் *mulāṅgāy*, பெ.(n.) கும்மட்டிக் காய்; a kind of fruit of melon variety.

[முலாம் + காய்.]

முலாங்கொடிவேர் *mulāṅ-goḍi-vēr*, பெ.(n.) முலாங்கொடியினுடைய வேர்; root of the *mulām* creeper.

[முலாங்கொடி + வேர்.]

முலாம்பழம் *mulām-paḻam*, பெ.(n.) சந்தன நிறத்தோலையும் நீர்ச்சத்து மிகுந்த சதைப் பகுதியையும் உடைய, அளவில் சிறிய பூசணி போன்ற பழம்; musk - melon.

E. melon



முலாம்பன்னி *mulām-paṉṉi*, பெ.(n.) பன்றி வகைகளுள் ஒன்று; a kind of pig.

முலாயம் *mulāyam*, பெ.(n.) ஒருவகைப்பூடு; a kind of herb (சா.அக.).

முலை *mulai*, பெ.(n.) 1. பெண்ணின் மார்பகம்; woman's breast. *"முலையு முகனுஞ் சேர்த்திக் கொண்டேன்" (தொல். பொருள். 77). "முலையிடை முனிநர் சென்ற ஆறே" (குறுந்.39:4), "சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திமிரி" (நற்.9:6), "முலைபொலியாக மருப்ப நூறி" (புறநா.25:10).* 2. பெண் விலங்குகளின் உடலில் பாலுண்டாகுமிடம்; beast's dug.

க. மேலெ; ம. முல; துளு. முரிரெய்.

முலைக்கச்சு *mulai-k-kaccu*, பெ.(n.) பெண்களணியும் மார்புச் சட்டை; bodice, stays for the breast.

[முலை + கச்சு.]

முலைக்கட்டி *mulai-k-kaṭṭi*, பெ.(n.) முலையிலுண்டாகுங் கட்டி; mammary abscess.

[முலை + கட்டி.]

முலைக்கட்டு *mulai-k-kaṭṭu*, பெ.(n.) 1. முலைக்கச்சு பார்க்க (வின்.); see *mulai-k-kaccu*. 2. முலையிற் திரண்டு நிற்கும்

பாற்கட்டு; accumulation of milk in the breast.

[முலை + கட்டு.]

முலைக்கடுப்பு *mulai-k-kaḍuppu,* பெ. (n.) குழந்தை பால் குடிக்காமல் பால் அதிகம் தங்குவதால் முலையிலேற்படும் வலி; pain in the breast or udder, due to excessive secretion of milk. *'முலைக்கடுப்புக் கெடக் கறந்து' (திவ். திருப்பா.11, உரை).*

[முலை + கடுப்பு.]

முலைக்கண் *mulai-k-kaṇ,* பெ.(n.) முலைக்காம்பு பார்க்க; see *mulai-k-kāmbu. "துணைமுலைக் கண்கடோய் சுவடு" (திருவாச.29:5).*

ம. முலக்கண்

[முலை + கண்.]

முலைக்கருத்தல் *mulai-k-karuttal,* தொ. பெ.(vbl.n.) கருப்பக்குறி; blacking or pigmentation of the areola and nipple - a sign of pregnancy.

[முலை + கருத்தல்.]

முலைக்கருப்பு *mulai-k-karuppu,* பெ.(n.) முலையின் முன்னுள்ள கருப்பு பாகம்; the black or brownish space surrounding the nipple of the female breast, this is called *Areola papillaris.*

[முலை + கருப்பு.]

முலைக்காம்பு *mulai-k-kāmbu,* பெ.(n.) முலை முகம், கொங்கையின் நுனிப் பகுதி (C.G.); nipple, teat - *Acromastrum.*

[முலை + காம்பு.]

முலைக்காம்புவாதம் *mulai-k-kāmbu-vādam,* பெ.(n.) முலைக்காம்பை வாளால் அறுப்பது போல் வலியை உண்டாக்கும் ஒருவகைக் காற்று பிடிப்பு (வாத) நோய்; a disease of the breast marked by intense pain as if cut by a saw (சா.அக.).

[முலைக்காம்பு + Skt.வாதம்.]

முலைக்காம்புவிரணம் *mulai-k-kāmbu-viraṇam,* பெ.(n.) முலைக்காம்புவீக்கம் பார்க்க; see *mulai-k-kāmbu-vīkkam.*

[முலைக்காம்பு + Skt.விரணம்.]

முலைக்காம்புவீக்கம் *mulai-k-kāmbu-vīkkam,* பெ.(n.) முலைக்காம்பு வெடித்துப் புண்ணாகும் ஒருவகை நோய்; inflammation of the nipple - *Acromastitis.*

மறுவ. முலைக்காம்புவிரணம்

[முலைக்காம்பு + வீக்கம்.]

முலைக்கால்¹ *mulai-k-kāl,* பெ.(n.) முலை பார்க்க; see *mulai. "தடமுலைக் கால்கள்சாய" (சீவக.2542).*

[முலை + கால்.]

முலைக்கால்² *mulai-k-kāl,* பெ.(n.) ஆட்டுக்கல் (யாழ்.அக.); grinding stone.

முலைக்கிரந்தி¹ *mulai-k-kirandi,* பெ.(n.) முலைப்புண் பார்க்க; see *mulai-p-puṇ.*

[முலை + கிரந்தி.]

முலைக்கிரந்தி² *mulai-k-kirandi,* பெ. (n.) பூடுவகை; a plant, *Barleria vitida.*

[முலை + கிரந்தி.]

முலைக்குத்து *mulai-k-kuttu,* பெ.(n.) 1. முலைக்கடுப்பு பார்க்க; see *mulai-k-kaḍuppu.* 2. முலையில் ஊசியினால் குத்தினாற்போல் வலி உண்டாகும் நோய் வகை; piercing pain or lancinating pain in the breast - Mammary neuralgia - or may occur before the abscess is formed. *"முலைக்குத்து சவலைப் பிள்ளைக்குத் தெரியுமா?" (பழ.)* (சா.அக.).

[முலை + குத்து. முலையில் ஊசி குத்தினாற் போன்று வலியுண்டாக்கும் நோய் வகை.]

முலைக்கோள் *mulai-k-kōḷ,* பெ.(n.) முலைப் பால் உண்ணுகை; suckling. *"முலைக்கோள் விடாஅ மாத்திரை" (பொருந.141), "முலைக்கோண் மறந்த புதல்வனொடு" (புறநா.211:21).*

[முலை + கோள்.]

முலைகுடி *mulaikuḍi,* பெ.(n.) 1. முலைகுடிப்பிள்ளை (வின்.) பார்க்க; see *mulai-kuḍi-p-piḷḷai.* 2. பேதையன் (இ.வ.); simpleton, inexperienced person.

ம. முலகுடி.

[முலை + குடி.]

முலைகுடிப்பிள்ளை *mulai-k-kuḍi-p-piḷḷai,* பெ.(n.) 1. கைக்குழந்தை; infant. 2. பெண்ணின் மார்பில் பால் குடிக்கும் பிள்ளை; suckling child.

[முலைகுடி + பிள்ளை.]

முலைகுயன்மீன் *mulai-kuyaṉ-mīṉ,* பெ.(n.) ஒருவகைக் கடல் மீன் (யாழ்ப்.); a kind of sea - fish.

[முலை + குயன் + மீன்.]



முலைகொடு-த்தல் *mulai-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) குழந்தைக்கு முலைப்பால் ஊட்டுதல் (C.G.); to suckle a child.

[முலை + கொடு-த்தல்.]

முலைச்சிலந்தி *mulai-c-cilandi,* பெ.(n.) கொங்கையில் உண்டாகும் புண்கட்டி வகை (வின்.); a kind of tumour in the breasts.

[முலை + சிலந்தி. சிலந்தி = புண், புண் கட்டி.]

முலைசப்பல் *mulai-šappal,* பெ.(n.) முலைகுடிப்பிள்ளை பார்க்க; see *mulai-kuḍi-p-piḷḷai.*

முலைசூப்பல் *mulai-šūppal,* பெ.(n.) குழந்தை தாய் முலையுண்ணல்; to suck the breast (சா.அக.).

முலைத்தடம் *mulai-t-taḍam,* பெ.(n.) ஒரு வகை மார்பணி (M.E.R.720 of 1916-B); a kind of chest ornament.

மறுவ. முலைத்தளம்

[முலை + தடம்.]

முலைத்தாசி *mulai-t-tāši,* பெ.(n.) இலைக் கள்ளி; leaf spurge - *Euphorbia nerifolia* (சா.அக.).

முலைத்தளம் *mulai-t-taḷam,* பெ.(n.) கோவில் சிலைகளுக்கு அணிவிக்கும் பொன் முதலிய மாழைகளால் செய்த முலைக்கச்சு (நாஞ்.); a kind of metal stays for the breast, used for images in temples.

[முலை + தளம்.]

முலைத்தாய் *mulai-t-tāy,* பெ.(n.) ஐவகைத் தாயரில் குழந்தைக்குப் பால் தருபவள்; wet nurse, one of *ai-vagai-t-tāyar.* *"பல்வினைக்கும் முலைத்தாய் பயந்தார்" (சீவக. 3096) (பிங்.).*

[முலை + தாய்.]

ஐவகைத் தாயர் : 1. ஈன்ற தாய், 2. ஊட்டுந்தாய், 3. முலைத்தாய், 4, செவிலித்தாய், 5. கைத்தாய் (சா.அக.).

முலைப்பரிசம் *mulai-p-parišam,* பெ.(n.) முலைப்பாற்கூலி (இ.வ.) பார்க்க; see *mulai-p-pāṟ-kūli.*

[முலை + பரிசம். பரிசு→பரிசம்.]

முலைப்பால் *mulai-p-pāl,* பெ.(n.) தாய்ப் பால்; mother's milk. *"முலைப்பாற் காலத்து முடிமுறையெய்தி" (பெருங்.உஞ்சைக்.33:52).*

[முலை + பால்.]

முலைப்பால்கூலி *mulai-p-pāl-kūli,* பெ.(n.) முலைப்பாற்கூலி பார்க்க; see *mulai-p-pāṟ-kūli.*

[முலைப்பால் + கூலி.]

முலைப்பால்மீன் *mulai-p-pāl-mīṉ,* பெ. (n.) ஒருவகைக் கடல்மீன் (யாழ்ப்.); a kind of sea-fish.

[முலைப்பால் + மீன்.]

முலைப்பால்விரை *mulaippāl-virai,* பெ.(n.) கருப்புக்கொள்(ளு) (M.M.658); black horse - gram.

முலைப்பாலி *mulai-p-pāli,* பெ.(n.) புற்றிலுள்ள கறையான் திரள் (யாழ்.அக.); termites in an ant-hill.

[முலை + பாலி.]

முலைப்பாலெண்ணெய் *mulai-p-pāl-eṉṉey,* பெ.(n.) 1. தாய்ப்பாலுடன் கலந்து பச்சைக் குழந்தைகளுக்கு ஊட்டும் ஆமணக்கெண்ணெய் (வின்.); mixture of mother's milk and castor oil, given to babies. 2. தலையில் தேய்த்துக் கொள்ளும் மருந்து கலந்த எண்ணெய் (இ.வ.); a medicinal oil used for the head.

[முலைப்பால் + எண்ணெய்.]

முலைப்பாற்கூலி *mulai-p-pāṟ-kūli,* பெ.(n.) மணப்பெண்ணின் தாய்க்கு, அவளை வளர்த்ததன் பொருட்டு மணமகன் கொடுக்கும் பரிசப்பணம் (G.Tj.D.I,73); bride - price, money presented by the bride - groom to the bride's mother as compensation for having nourished her during her infancy.

[முலைப்பால் + கூலி.]

முலைப்புண் *mulai-p-puṇ,* பெ.(n.) கொங்கையில் உண்டாகும் புண் (கிரந்தி); venereal eruption in the breasts.

[முலை + புண்.]

சிற்றின்ப ஒழுக்கக் கேட்டினால் முலையில் உண்டாகும் புண். இது முலைச் சிலந்தியின் வேறானது.

முலைப்புற்று *mulai-p-purru,* பெ.(n.) கொங்கையில் வரும் புற்று நோய்; cancer breast (சா.அக.).

முலைமற–த்தல் *mulai-mara-,* 4 செ.கு.வி. (v.i.) குழந்தை, பால்குடி மறத்தல் (வின்.); to be weaned.

மறுவ. பால்மறத்தல்

[முலை + மற–த்தல்.]

முலைமறு–த்தல் *mulai-maru-,* 4 செ.கு.வி. (v.i.) ஆ(ன்) முதலியன பால் கொடுக்க மறுத்தல் (இ.வ.); to cease to give milk, as a cow.

[முலை + மறு–த்தல்.]

முலைமார்பு *mulai-mārbu,* பெ.(n.) 1. இதயம்; heart. 2. மார்பு; breast.

[முலை + மார்பு.]

முலைமுகம் *mulai-mugam,* பெ.(n.) 1. முலைக்காம்பு (C.G.) பார்க்க; see *mulai-k-kāmbu.* 2. கொங்கை; woman's breast. *"முத்தார மார்பின் முலை முகந்திருகி" (சிலப். பதிக.34).*

[முலை + முகம்.]

முலைமூக்கரிவாள் *mulaimūkkarivāḷ,* பெ.(n.) வெற்றிலைக் காம்பை அரிய உதவும் இலை மூக்கரிகத்தி (நாமதீப.421); a knife for cutting the stems of betel leaf.

[முலை + மூக்கரிவாள்.]

முலையமுது *mulai-y-amudu,* பெ.(n.) முலைப்பால்; mother's milk.

[முலை + அமுது.]

முலையழற்சி *mulai-y-aḻarci,* பெ.(n.) பால் மடியிலுண்டாகும் வலி (M.L.); inflammation of the udder, garget.

[முலை + அழற்சி.]

முலையெழு–தல் *mulai-y-eḻu-,* 2 செ.கு.வி. (v.i.) பெண் பருவமடைதல்; to become an adolescent girl. *"பிராட்டி முலையெழுந்தாப் போலேயோ நான் முலையெழுந்தபடி" (திவ்.நாய்ச்.8:4, வியா.)*

[முலை + எழு–தல்.]

முலைவித்திரதி *mulai-vittiradi,* பெ.(n.) பிள்ளை பெற்ற பெண்களுக்கு பாலிருந்தாலும் இல்லா விட்டாலும் முலையின் நரம்புகளில் உண்டாகும் ஒருவகையான சீழ்க்கட்டி; a kind of abscess in the breast of woman (சா.அக.).

*[முலை + **Skt.** வித்திரதி.]*

முலைவிலை *mulai-vilai,* பெ.(n.) முலைப் பாற்கூலி பார்க்க; see *mulai-p-pār-kūli.* *"வரைந் தெய்துதற்கு முலைவிலையோடு புகுந்து பொன்னணிவா னின்றாரு முளர்" (இறை. களவி.23, பக்.715), "முலைவிலையும் பள்ளியாரே கொள்ளப் பெறுவார்".* (T.A.S.ii, 81).

[முலை + விலை.]

முலைவெடிப்பு *mulai-vedippu,* பெ.(n.) முலைக்காம்பு புண்படுகை; sore teats.

மறுவ. முலைக்காம்பு வீக்கம்

[முலை + வெடிப்பு.]

முவ்வை *muvvai,* பெ.(n.) நாய் (பரி.அக.); dog.

முவட்டிபண்டு *muvaṭṭipaṇḍu,* பெ.(n.) எட்டிப்பழம் (பரி.அக.); fruit of nux vomica.

தெ. முஷ்டிபண்டு

முவலம் *muvalam,* பெ.(n.) அவுபல செய் நஞ்சு (யாழ்.அக.); a mineral poison.

முழ *muḻa,* பெ.(n.) முழவு, 1, 2 3 பார்க்க; see *muḻavu,* 1, 2, 3. *"தின்வளி விசித்த முழவொடா குளி" (மலைபடு.3).*

முழக்கட்டை *muḻa-k-kaṭṭai,* பெ.(n.) நீளக் குறைவானது (வின்.); anything short of the full meausre, as a piece of cloth.

[முழம் + கட்டை.]

சட்டை, சேலை, வேட்டி.... முதலியவை உடுப்பதற்குப் போதிய நீளம் இல்லாமல் இருக்கை.

முழக்கம் *muḻakkam,* பெ.(n.) 1. பேரொலி; loud sound, as of thunder or of drums. *"துருமிடி சேர்ந்த முழக்கம் புரையும்" (பரிபா.7:82).* 2. ஆரவாரம்; clamour, hubbub, roar.

[முழங்கு→முழக்கு→முழக்கம்.]

முழக்கு[1]-தல் *muḻakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. பேரொலி எழுப்புதல்; roar. *இடி முழங்கியது.* 2. நீட்டி முழக்கமிடுதல் (கோசமிடுதல்); shout slogans; thunder. *தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை முழங்கினார்கள்.* 3. இசைக் கருவியை ஒலிப்பித்தல்; to sound, to beat a sounding instrument. *"குணில் வலத் தேந்தி முழக்கினாலென" (கம்பரா. கும்பக. 346).* 4. பெருஞ்சிறப்பு (விமரிசை) பெறச் செய்தல்; to do a thing pompously.

[முழங்கு→முழக்கு→முழக்கு-தல்.]

முழக்கு[2] *muḻakku,* பெ.(n.) ஒலி (வின்.); sound noise.

க. முழகு

[முழங்கு→முழக்கு.]

முழக்குழி *muḻa-k-kuḻi,* பெ.(n.) மருந்து புடம் போடுவதற்காகத் தோண்டும் ஒருமுழ ஆழக்குழி; a pit one cubic deep dug up for purpose of calcining medicines (சா.அக.).

[முழம் + குழி.]

முழக்கோல் *muḻa-k-kōl,* பெ.(n.) 1. அளவு கோல்; measuring rod. 2. எட்டு முழங் கொண்ட அளவுகோல்; a measuring rod of eight cubits. 3. இரண்டு தச்சு முழமுள்ள அளவுகோல்; mason's rule of two cubits, about 33 inches.

[முழம் + கோல்.]

முழங்கால்[1] *muḻaṅ-gāl,* பெ.(n.) 1. தொடைக்குக் கீழே காலை மடக்கி நீட்டக் கூடிய மூட்டு அமைந்திருக்கும் பகுதி; knee part of the leg from knee to ankle. *'முழங்கால் தெரியும்படி அவன் அரைக்கால் சட்டை அணிந்திருந்தான்', 'முழங்காலில் சரியான அடி'.* 2. முட்டிக்காற் பின்னல்; knock-knee.

தெ. மோகாலு; க. மொழகாலு; ம. முழக்கால்.

[முழம் + கால் – முழங்கால் = நடுப்பொருத்தி னின்று அடிவரைப்பட்ட அல்லது முழ அளவான கால். முழங்கால் மூட்டுக்கும் கணுக்காலுக்கும் இடையிலுள்ள உறுப்பு.]

முழங்கால்படியிடு-தல் *muḻaṅgāl-paḍiyiḍu-,* 20 செ.கு.வி.(v.i.) முழங்காலிடு-தல் பார்க்க; see *muḻaṅ-kāliḍu-.*

[முழங்கால் + படியிடு-தல்.]

முழங்கால்பிடிப்பு *mulaṅgāl-piḍippu,* பெ.(n.) பால்வினை நோய் தாக்கப்பட்டதால் உண்டான முழங்கால் பிடிப்பு வலிநோய்; a painful disease affecting the knee from venereal causes - *Gout* (சா.அக.).

[முழங்கால் + பிடிப்பு.]

முழங்கால்பொருத்து *mulaṅgāl-poruttu,* பெ.(n.) முழங்காலின் மூட்டு; knee joint (சா.அக.).

[முழங்கால் + பொருத்து. பொருத்து = முழங்கால் மூட்டு.]

முழங்கால்முட்டி *mulaṅgāl-muṭṭi,* பெ.(n.) 1. முட்டிக்கால், 2 பார்க்க; see *muṭṭi-k-kāl;* 2. 2. முழங்காற் சில்லைத் தரையிலூன்றிப் போடுவதாகிய தோப்புக் கரணத் தண்டனை (இ.வ.); coming down heavily on the knees as a punishment.

[முழங்கால் + முட்டி.]

முழங்கால்முட்டு *mulaṅgāl-muṭṭu,* பெ.(n.) 1. தொடையும் காலும் சேருமிடம் (M.L.); knee. 2. முழங்கால்முட்டி, 1 பார்க்க; see *mulaṅgāl-muṭṭi, 1.*

[முழங்கால் + முட்டு.]

முழங்கால்வலி *mulaṅgāl-vali,* பெ.(n.) முழங்கால் முட்டில் உண்டாகும் வலி (M.L.); arthritis, inflammation of the knee.

[முழங்கால் + வலி.]

முழங்கால்வாதம் *mulaṅgāl-vādam,* பெ.(n.) முழங்காற்பிடிப்பு பார்க்க; see *mulaṅgāṟ-piḍippu.*

[முழங்கால் + Skt. வாதம்.]

முழங்கால்வீக்கம் *mulaṅgāl-vīkkam,* பெ.(n.) முழங்காலில் உண்டான வீக்கம்; swelling of the knee joint through inflammation - *House maid's knee* (சா.அக.).

[முழங்கால் + வீக்கம்.]

முழங்காலிடு-தல் *mulaṅ-gāliḍu-,* 20 செ.கு.வி.(v.i.) முழங்காற்படியிடு-தல் பார்க்க; see *mulaṅgāṟ-paḍi-y-iḍu.*

[முழங்கால் + இடு-தல்.]

முழங்காற்கரப்பான் *mulaṅgāṟ-karappāṉ,* பெ.(n.) கரப்பானோய்வகை (தஞ்.சர.iii:92); a kind of *karappāṉ*disease.

[முழங்கால் + கரப்பான். முழங்காலில் ஏற்படும் கரப்பான் நோய்.]

முழங்காற்சிப்பி *mulaṅgāṟ-cippi,* பெ.(n.) முழங்காற்சில் (வின்.) பார்க்க; see *mulaṅgāṟ-cil.*

[முழங்கால் + சிப்பி.]

முழங்காற்சில் *mulaṅgāṟ-cil,* பெ.(n.) காலையும் தொடையையும் சேர்க்கும் எலும்புப் பூட்டின் மேற்பாகம் (வின்.); knee - cap-*patella.*

[முழங்கால் + சில்.]

முழங்காற்சில்லி *mulaṅgāṟ-cilli,* பெ.(n.) முழங்காற்சில் பார்க்க; see *mulaṅgāṟ-cil.*

முழங்காற்சில்லு *mulaṅgāṟ-cillu,* பெ.(n.) முழங்காற்சில் பார்க்க; see *mulaṅgāṟ-cil.*

[முழங்கால் + சில்லு. சில் → சில்லு.]

முழங்காற்படியிடு—தல் *muḻaṅgāṟ-paḍi-y-iḍu-,* 20 செ.கு.வி.(v.i.) முழந்தாளைக் கீழிட்டு வணங்குதல் (வின்.); to kneel down.

[முழங்கால் + படி + இடு—தல்.]

முழங்காற்பிடிப்பு *muḻaṅgāṟ-piḍippu,* பெ.(n.) 1. முழங்கால் வீங்கிக் கடுத்து நடக்க முடியாமற் போகை; rheumatism affecting the knee joint swelling of the knee joint due to gonorrheal rheumatism. 2. முழங்காலில் கெட்ட நீர் வந்து தங்குவதாலேற்பட்ட ஒரு வகையானக் காற்றுப் பிடிப்பு நோய்; collection of morbid fluid in synovial cavity of the knee - *Synovitis* (சா.அக.).

[முழங்கால் + பிடிப்பு.]

முழங்கு—தல் *muḻaṅgu-,*5 செ.கு.வி.(v.i.) 1. இடி, பீரங்கி போன்றவை அல்லது வாச்சியங்கள் பேரொலி எழுப்புதல்; thunder, cannon, etc. roar, rumble, of an ensemble sound loudly. *இடி முழங்கி மின்னல் வெட்டிப் பலத்த மழை பெய்தது. பீரங்கிகள் முழங்கத் தரப்பட்ட அணிவகுப்பு மதிப்புரவை இந்திய முதன்மை அமைச்சர் ஏற்றுக் கொண்டார். மேளம் முழங்க மிகவும் அழகாக நடந்தது ஊர்வலம். "எழிலி முழக்குந் திசையெல்லாம்" (நாலடி.392), "முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை" (அகநா.70:14), "முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்" (புறநா.18:1), "நொதுமல் வானத்து முழங்கு குரல் கேட்ட" (குறுந்.251:7), "முழங்குதிரை கொழீஇய மூரியெக்கர்" (நற்.15:1).* 2. உரக்க மேடையில் பேசுதல்; thunder out a speech. *நிருவாகத்திற்கு எதிரான செய்திகளைத் தொழிலாளர்கள் முழங்கினார்கள். கூட்டத்தில் முழங்கி என்ன பயன்? "தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார் முன்றினு முழங்கும்" (இலக். கொத்.7).*

க. முழகு.

[முழா → முழ → முழங்கு → முழங்கு—தல்.]

முழங்கை *muḻaṅ-gai,* பெ.(n.) 1. கையில் மணிக்கட்டுக்கும் தோளுக்கும் இடையிலுள்ள பாகம்; forearm. *"முழங்கைப் புண்போல முனை குலைந்த நிற்கிறது" (பழ.), "முழங்கையிற் பட்ட சுகம் போல" (பழ.).* 2. கையின் மேற்பாகமும் அதன் கீழ்ப்பாகமும் கூடுமிடம் (வின்.); elbow.

க. மொழகை.

[முழம்+கை—முழங்கை : கையின் நடுப் பொருத்தினின்று நுனி வரைப்பட்ட அல்லது முழு அளவான கை.]



முழங்கைப்பிடிப்பு *muḻaṅgai-p-piḍippu,* பெ.(n.) முழங்கையில் ஏற்படும் காற்றுப்பிடிப்பு நோய்; arthrtic pain at the elbow - *Anconagra* (சா.அக.).

[முழங்கை + பிடிப்பு.]

முழத்தின்கீழளவை *muḻattiṉ-kīḻ aḷavai,* பெ.(n.) நீட்டலளவையுள் ஒன்று. முழம் என்ற அளவைக்குக் கீழ்ப்பட்ட சாண், விரல், தோரை முதலிய அளவைகள்; a measurement in linear measurement, which is below the measurement of cubit as *Sāṉ, viral, tōrai.*

[முழம் + அத்து + இன் + கீழ் + அளவை. முழத்திற்குக் கீழ்ப்பட்ட அளவுகள்.]

முழந்தாட்கச்சு *mulantāṭ-kaccu,* பெ.(n.) 1. முழங்காலிற் கட்டும் கச்சை; garter. 2. சல்லடம்; short drawers; half pantaloons.

[முழந்தாள் + கச்சு.]

முழந்தாள் *mulan-tāḷ,*பெ.(n.) முழங்கால் (சூடா.) பார்க்க; see *mulaṅgāl.* *"முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி" (குறு.394:1).*

முழந்து *mulandu,* பெ.(n.) முழங்கால் (சூடா.) பார்க்க; see *mulaṅ-gāl.*

[முழந்தாள் (முழம் + தாள்) → முழந்து = முழங்கால் (சூடா.) (வே.க.).]

முழம் *mulam,*பெ.(n.) இருசாண் கொண்டதான முழங்கை நீள அளவு; cubit, measure from the elbow to the tip of the middle finger = 2 span. *இரண்டு முழம் மல்லிகைப்பூக் கொடு. "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்" (நல்வழி.28).*

தெ. முர; க. மொழ; ம., து. முழம்.

[முள் → முழி → முழம் = கைந்நடுப் பொருத்தினின்று அதன் நுனிவரையுள்ள நீட்டளவு.]

முழம்போடு[1]–தல் *mulam-pōḍu,* 19 செ. குன்றாவி.(v.t.) 1. கையால் முழவளவாக அளத்தல் (வின்.); to measure with the fore arm. 2. ஆழம் பார்த்தல்; to sound a person. 3. ஆளின் தன்மையை ஆய்ந்து மதிப்பிடுதல்; to measure a person's quality.

[முழம் + போடு–தல்.]

முழம்போடு[2]–தல் *mulam-pōḍu-,* 20 செ.கு.வி.(v.t.) பொருந்தாப் பொய் பேசுதல் (இ.வ.); to utter baseless falsehood.

[முழம் + போடு–தல்.]

முழமிடு–தல் *mulam-iḍu,*18 செ.குன்றாவி. (v.t.) முழம்போடு[1]–தல், 1 (வின்.) பார்க்க; see *mulam-pōḍu-*[1], 1.

[முழம் + இடு–தல்.]

முழல் *mulal,*பெ.(n.) 1. புதர்கள் செறிந்த இடத்தில் உள்ள முட்கொடி; a thorny bushy creeper - *Caesalpina bonducella.* 2. கெச்சக்காய்; nut of bond ucella - fever nut. 3. கழற்சிக்காய்; bondue-nut.

முழவம் *mulavam,* பெ.(n.) 1. முழவு, 1 (பிங்.) பார்க்க; see *mulavu. "மண்கனை முழவம் விம்ம" (சீவக.628).* 2. முழவு, 2 பார்க்க; see *mulavu. "தண்ணுமைப்பின்வழி நின்றது முழவே" (சிலப்.3:141). "நாறுகமழ் வீயும் கூறுமிசை முழவமும்" (பரிபா.8:99).*

[முழா → முழவு → முழவம். ஒ.நோ. முரசு → முரசம். 'அம்' பெருமைப் பொருட்பின்னொட்டு.]

முழவரிசை *mulavariśai,* பெ.(n.) சோழர் காலத்தில் வாங்கிய வரிவகை (தெ.இ.கல். தொ.7: 51); a kind of tax in Chōḻāperiod.

முழவு[1] *mulavu,* பெ.(n.) 1. முரசு; drum. *"முழவின் முழக்கீண்டிய"(சீவக.2399). "முழவுறழ் திணிதோள் நெடுவே ளாவி" (அகநா.61:15), "முழவிசைப் புணரி எழுதரும்" (நற்.67:11), "மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென" (புறநா.50:12).* 2. குடமுழா (பிங்.); large loud-sounding drum, hemispherical in shape. 3. தம்பட்டம் (பிங்.); tomtom. 4. பால்கறத்தற்குரிய ஏனம்; vessel for milk. *"முழவிற் பிழிந்த பால்வழிநுரை" (கம்பரா. கார்கால.47).* 5. ஏனம் முதலியன வார்த்தற்குரிய கரு; mould for casting a vessel.

ம. முழாவு.

[முழா→முழவு.]

முழவு²–தல் *muḻavu-,* 5 செ.கு.வி.(v.i.) நெருங்கிப் பழகுதல் (இ.வ.); to move on intimate terms.

[முழுவு→முழவு→முழவு–தல்.]

முழவு³ *muḻavu,* பெ.(n.) பனைமரத்தின் அடிப்பகுதி; bottom of the palmara tree. *"முழவுமுத லரைய தடவுநிலைப் பெண்ணை" (குறுந்.301:1).*

[முழவு¹ →முழவு³.]

முழவுக்கனி *muḻavu-k-kaṉi,* பெ.(n.) திரண்ட பலாப்பழம் (சங்.அக.); jack-fruit.

[முழவு¹ + கனி.]

முழவுகட்டு–தல் *muḻavu-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) ஏனஞ் செய்யக் கருகட்டுதல் (இ.வ.); to prepare mould for casting vessels.

[முழவு + கட்டு–தல்.]

முழவுமண் *muḻavu-maṇ,* பெ.(n.) 1. இனிது ஒலிக்க முழவில் வாய்ப் பூச்சிடும் கரிய சாந்து (யாழ்.அக.); black paste smeared on the head of a drum. 2. கருக்கட்டுங் களிமண்; clay used in making moulds.

[முழவு + மண்.]

முழவுமேளம் *muḻavu-mēḷam,* பெ.(n.) 1. முழவு முதலிய கருவிகளின் கூட்டம் (இ.வ.); band of musical instruments, including *muḻavu.* 2. பறைவகை (வின்.); kettle - drum.

[முழவு + மேளம்.]

முழா¹ *muḻā,* பெ.(n.) முழவு பார்க்க; see *muḻavu.*

[முழு→ முழா.]

முழா² *muḻā,* பெ.(n.) திரட்சி; accumulation.

[முள்→முழு→முழா = திரட்சி.]

முழாசு¹–தல் *muḻāšu-,* 5 செ.கு.வி.(v.i.) கொழுந்துவிட்டெரிதல் (சுவாலித்தல்) (யாழ்ப்.); to burst into a flame, blaze up.

[முழா→முழாசு→முழாசு–தல் = பெருநா விட்டு எரிதல்.]

முழாசு² *muḻāšu,* பெ.(n.) தீக்கொழுந்து (சுவாலை) (யாழ்ப்.); blaze, conflagration.

[முழா→முழாசு = பெருநா தீநா..]

முழால் *muḻāl,* பெ.(n.) தழுவுகை; embracing. *"சிறார் முலை முழாலிற் பில்கி" (சீவக.2541).*

[முழுவல்→முழால்.]

முழாவு¹–தல் *muḻāvu-,* 5 செ.கு.வி.(v.i.) முழவு–தல் (இ.வ.) பார்க்க; see *muḻavu-.*

முழாவு²–தல் *muḻāvu-,* 5 செ.கு.வி.(v.i.) நெருங்கிப் பழகுதல் (இ.வ.); familiarity.

[முழவு→முழாவு→முழாவு–தல் (வே.க.)]

முழாவுசால் *muḻāvy-šāl,* பெ.(n.) நிறை உழவு சால் (யாழ்ப்.); the last or exterior furrow in ploughing.

[முழாவு + சால்.]

முழாள் *muḻāḷ,* பெ.(n.) 1. வளர்ச்சியடைந்த பெரிய ஆள்; adult person. 2. வயது வந்த வேலையாள் (வின்.); adult workman.

*[முழு + ஆள்.]

முழி[1]–தல் *muḻi-,* 4 செ.குன்றாவி.(v.t.) உமிழ்தல்; to spit.

முழி[2] *muḻi,* பெ.(n.) 1. எலும்புப்பூட்டு; joint, as of the body. 2. கரும்பு, மூங்கில் முதலியவற்றின் கணு; joint of bamboo, sugarcane node.

தெ.மேட; க., து. முடி; ம. முளி

[மொழி→முழி.]

முழி[3] *muḻi,* பெ.(n.) விழி; eye, eye-ball. *சும்மா முழிக்கவே கண்ணைக் காணோம் சிமிட்டி முழிக்கிற தெங்கே (கோவை.).*

முழி[4]–த்தல் *muḻi-,*4 செ.கு.வி.(v.i.) 1. கண் திறத்தல்; to open the eyes. 2. தூக்கத்திலிருந்து எழுதல்; to wake up from sleep.

[விழி–த்தல்→முழி–த்தல்.]

முழிக்குருடு *muḻi-k-kuruḍu,* பெ.(n.) முழுக்கண் குருடு; complete blindness (சா.அக.).

முழித்துக்கொள்ளு–தல் *muḻittu-k-koḻḻu-,* 13 செ.கு.வி.(v.i.) விழித்துக் கொள்ளுதல்; to wake up.

முழிப்பு *muḻippu,* பெ.(n.) விழிப்பு; waking up.

[முழி→முழிப்பு.]

முழியாங்கண்ணன் *muḻiyāṅ-kaṇṇaṉ,* பெ. (n.) பெரிய கண்களையுடையவன் (கோவை.); one who has got large eyes.

மறுவ. முண்டக்கண்ணன்

முழு[1]–த்தல் *muḻu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. முழுமையாதல் (இலக்.அக.); to be whole, entire. *"முழுவலி முள்ளெயி றழுத்திய கதவிற்" (நற்.18:3), "முணங்குநிமிர் வயமான் முழுவலி யொருத்தல்" (புறநா.52:2).* 2. திரளுதல், பருத்தல்; conglomeration.

[முள்→முழு→முழு–த்தல்.]

முழு[2] *muḻu,* கு.பெ.எ.(adj.) 1. பிரிக்கப்படாத, குறைக்கப்படாத நிலையில் உள்ள அனைத்தும், எல்லாம்; all, entire, whole. *"முழுவலி முதலை" (திவ்.பெரியதி.5.8:3). குழந்தை முழுப் பழத்தையும் சாப்பிட்டு விட்டது. தேர்தல் நேர்மையான முறையில் நடைபெற மக்களின் முழு ஒத்துழைப்பும் தேவை. அவர்தன் முழுப்பலத்தையும் பயன்படுத்தித் தூக்கினார்.* 2. பருத்த; large. *"முழுமத றொலைந்த கோளி யாலத்து" (புறநா.58), "முழுமுதல் துமிய உருமெறிந் தன்றே" (அகநா.68:7), "கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி" (குறுந்.80:1), முழுமூடன், முழுத்தொகை, முழுமதி, முழுப் பூசினிக்காயைச் சோற்றோடு மறைப்பது போல, "முழுமணிப் பூணுக்குப் பூண் வேண்டுமா?"* 3. குறையே இல்லாத, நிறைவான; complete. *வேலை நிறுத்தம் முழுவெற்றி. செயல்முறை அறிவுபெற்ற பின்புதான் மருத்துவக்கல்வி பயின்ற மாணவன் முழு மருத்துவன் ஆகிறான்.* 4. விடுபடுதல் இல்லாத; total. *இதற்கு முழு விற்பனை வரி உண்டு. நாளை நாடு முழுவதும் கடை அடைப்புக் கடைபிடிக்கப்படும்.*

[முள்→முழு. முல்→முள். முல் = பொருந்துதல்.]

முழுக்க *muḻukka,* கு.வி.எ.(adv.) முழுதும்; wholly, entirely, altogether, completely. *'உயிரை முழுக்க சுடுதலின்' (சீவக.1966, உரை). நான் மழையில் முழுக்க நனைந்துவிட்டேன். ஊர் முழுக்க உன்னைப்*

பற்றித்தான் பேசுகிறார்கள். குடம் சாய்ந்ததில் சமையல் அறை முழுக்கத் தண்ணீர்!

[முழு→முழுக்க.]

முழுக்கட்டி *muḷu-k-kaṭṭi,* பெ.(n.) 1. உடையாத ஓர் உருண்டை வடிவம்; thing that unbreakable globally form. 2. பனி, பால், தயிர் முதலியவை கல்லைப் போல் இறுகிய நிலை; stone like formation of mist, milk and curd. *"முழுக்கட்டி பெயர்க்கிற பன்றிக்கு கொழுக் கட்டி விட்டதுபோல" (பழ.).*

[முழு + கட்டி.]

முழுக்கமுழுக்க *muḷukka-muḷukka,* வி.அ. (adv.) வேறு யாரையும் எதையும் சார்ந்து இருக்காமல் முழு அளவில்; entirely not depending others for anything, complete self-dependent. *இந்தத் தொழிற்சாலை முழுக்க முழுக்க இந்தியாவில் தயாரிக்கும் பொருட்களைக் கொண்டே உருவாக்கப்பட்டது. கல்யாணச் செலவு முழுக்கமுழுக்க என்னையே சார்ந்தது.*

முழுக்கருப்புப்பனிநீர் *muḷukkaruppu-p-paṉinīr,* பெ.(n.) சேங்கொட்டையிட்டுப் பதப்படுத்திய நிலத்தில் 8 மாதம் சென்ற பிறகு அவுரிச் செடியை விளைத்து நான்காம் தரத்தில் விளைந்த பயிரின் மேல் தங்கிய நீர்; இப்பனி நீரில் கொக்கினுடைய இறகைப் போட காக்கையின் இறகைப்போல கருப்பாகும் கழுவினாலும் நிறம் போகாது; dew water obtained by certain method dyes the white feather of the stork into permanent black, the method of obtaining the dew is given above (சா.அக.).

[முழு + கருப்புப்பனிநீர்.]

முழுக்களவாளி *muḷu-k-kaḷavāḷi,* பெ.(n.) பெருந்திருடன்; great thief, robber.

[முழு + களவாளி.]

முழுக்காட்டு[1]–தல் *muku-k-kāṭṭu-,* 5 செ. குன்றாவி.(v.t.) எண்ணெய்க் குளிப்பு செய்வித்தல்; to take oil bathe. *"கடல்வேந்தை யவன்புனலான் முழுக்காட்டு முறைமை யென்கோ" (சௌந்த.103).*

[முழுக்கு + ஆட்டு–தல்.]

முழுக்காட்டு[2]–தல் *muḷu-k-kāṭṭu-,* 5 செ. கு.வி.(v.i.) குளிக்கச் செய்தல்; to bathe some one. *குழந்தைக்கு எண்ணெய் தேய்த்து முழுக்காட்டினேன்.*

[முழுக்கு + ஆட்டு–தல்.]

முழுக்காடு–தல் *muḷu-k-kāḍu,* 5 செ.கு.வி. (v.i.) எண்ணெய் தேய்த்துக் குளித்தல்; oil bathing. *"எண்ணெய் சேர்த்தே முழுக்காடுவார்" (அறப்பளீச்.50).*

க. முழுகாடு

[முழுக்கு + ஆடு–தல்.]

முழுக்காப்பு *muḷu-k-kāppu,* பெ.(n.) கோயில்களில் கடவுட் திருமேனியின் மீது சந்தனஞ்சாத்தி ஒப்பனை செய்யுஞ் சடங்கு (இ.வ.); ceremony of daubing the idol completely with sandal paste, in temples.

[முழு + காப்பு.]

முழுக்காய் *muḷu-k-kāy,* பெ.(n.) பழுக்கும் பருவத்தின் காய் (வின்.); fruit almost ripe; ripening stage of a fruit.

[முழு + காய்.]

முழுக்காளி *muḻu-k-kāḻi,* பெ.(n.) 1. முத்துக் குளிப்போன் (வின்.); diver for pearls. 2. இழவுக்குக் குளிக்க வேண்டிய நெருங்கிய உறவினன் (இ.வ.); a near relation of a person, as one who is under obligation to bathe on his death.

[முழுக்கு + ஆளி.]

முழுக்கு[1]-தல் *muḻukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) முழுத்து-தல் பார்க்க; see *muḻuttu-.* *"அயில்களும் வாளுந் தோள்களின் முழுக்கினர்" (கம்பரா. அதிகாய.98).*

க. முழுகிசு.

[முழுகு → முழுக்கு → முழுக்கு-தல்.]

முழுக்கு[2] *muḻukku,* பெ.(n.) 1. நீரில் தலை அமிழக் குளிக்கை; bath, bathing. *பல தீட்டுக்கு ஒரு முழுக்கு.* 2. மாதவிடாய் (இ.வ.); menses.

தெ. முனுகு; க. முழுகு; ம. முலுகு; து. முலு.

[முழுகு → முழுக்கு.]

முழுக்குநிற்பாடு *muḻukku-niṟpāḍu,* பெ.(n.) 45ஆவது வயதில் பெண்களுக்கு மாதவிடாய் நிற்றல்; stoppage of menses at the age of 45 - Menopause.

[முழுக்கு + நிற்பாடு.]

முழுக்குப்போடு-தல் *muḻukku-p-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) இதுவரை இருந்து வந்த தொடர்பைத் துண்டித்துக் கொள்ளுதல்; sever one's connection, bid farewell to something, leave something one for all. *தன் பேச்சை யாரும் கேட்கவில்லை என்ற சினத்தின் காரணமாக கழகத்திற்கு முழுக்குப் போட்டு விட்டார். படிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டுத் தந்தையின் தொழிலில் இறங்கிவிட்டான்.*

[முழுக்கு + போடு-தல்.]

முழுக்குமுறை *muḻukku-muṟai,* பெ.(n.) 1. பிள்ளைப்பேற்றின்பின் ஒன்றுவிட்டொரு நாள் முறையாக குளிக்குங் காலம்; the period soon after child-birth, during which the mother takes baths on alternate days. 2. பிள்ளைப் பேற்றின்பின் முறையாகக் குளிக்கும் நாள்; the alternate days when a woman after child-birth takes baths.

[முழுக்கு + முறை.]

முழுக்குழவி *muḻu-k-kuḻavi,* பெ.(n.) முது கன்று; full-grown or weaned calf. *"மோட்டெருமை முழுக்குழவி" (பட்டினப்.14).*

[முழு + குழவி.]

முழுக்கூழ் *muḻu-k-kūḻ,* பெ.(n.) கலக்கம்; utter confusion. *"செய்தாய் முழுக்கூழ்" (நீலகேசி.399).*

[முழு + கூழ்.]

முழுக்கெண்ணெய் *muḻu-k-keṇṇey,* பெ.(n.) தலைமுழுகும் நெய்மம் (தைலம்); bathing oil (சா.அக.).

[முழுக்கு + எண்ணெய்.]

முழுக *muḻuga,* கு.வி.எ.(adv.) முழுவதும்; wholly, entirely. *"மதிலுமாடமு மாடகச்செய் குன்று முழுகக் குழாமீண்டி" (திருவாரூ.142).*

[முழுகு → முழுக (வே.க.முல்[6]).]

முழுகல் *muḷugal*, தொ.பெ.(vbl.n.) 1. தலை முழுகல்; oil bath after menses. 2. குளித்தல்; bathing (சா.அக.).

[முழுகு → முழுகல்.]

முழுகவிடு–தல் *muḷuga-viḍu-,* 18 செ. குன்றாவி.(v.t.) 1. பொருள் முதலியன தொலையும்படி விடுதல்; to let a thing go to ruin. 2. அடைவு வைத்த பொருளை மீட்க முடியாதிருத்தல் (இ.வ.); to be unable to redeem, as a pledged thing.

[முழுகு + விடு–தல்.]

முழுகாமலிரு–த்தல் *muḷugāmal-iru-,* 3 செ.கு.வி.(v.i.) கருவுற்றிருத்தல்; to be pregnant. *அவன் மனைவி மூன்று மாதமாய் முழுகாமலிருக்கிறாள்.*

மறுவ. உண்டாயிருத்தல், மாதமாயிருத்தல், பிள்ளையாண்டிருத்தல்.

[முழுகாமல் + இரு–த்தல்.]

முழுகிக்கிட–த்தல் *muḷugi-k-kiḍa-,* 3 செ.கு.வி.(v.i.) 1. முழுவதும் முடங்கிக் கிடத்தல்; to be involved completely. *அவன்சொத்து முழுவதும் வணிகத்தில் முழுகிக் கிடக்கிறது.* 2. ஆழ்ந்து ஈடுபட்டிருத்தல்; to be absorbed, engrossed. *அவன் காமக் களியாட்டில் முழுகிக் கிடக்கிறான்.* 3. நீரில் அமிழ்ந்திருத்தல்; to be under water. *அடைமழையினாற் பயிர் முழுகிக் கிடக்கிறது.*

[முழுகு → முழுகி + கிட–த்தல்.]

முழுகிப்போ–தல் *muḷugi-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) 1. அமிழ்ந்து போதல்; to sink, founder; to be drowned. *நேற்று வந்த பெருவெள்ளத்தில் ஊர் முழுவதும் முழுகிப் போயிற்று (உ.வ.).* 2. அடியோடு கெடுதல்; to be ruined, swallowed up. *சூதாட்டினால் அவன் குடி முழுகிப் போயிற்று.* 3. அடைவு வைத்த சொத்து மீட்கமுடியாது கடனுக்கு உட்பட்டுவிடுதல் (இ.வ.); to be entirely lost beyond redemption. *அவன் அடைவு வைத்த நகை முழுவதும் முழுகிப் போய்விட்டது (உ.வ.).*

[முழுகு → முழுகி + போ–தல்.]

முழுகு–தல் *muḷugu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. குளித்தல்; to bathe the entire body by dipping or pouring. 2. வினை முயற்சித்தல், அழுந்தியிருத்தல்; to be entirely immersed, as in business. 3. அமிழ்ந்து போதல்; to sink. *கப்பல் முழுகிவிட்டது.* 4. மாதவிடாயடைதல் (வின்.); to be in menses. 5. தீர்க்க முடியாத அளவு கடன் மிகுந்ததால் சொத்து மீட்க முடியாமல் கடனுள் அமிழ்து போதல் (இ.வ.); to be irretrievably involved in debts. *அவன் கடனில் முழுகி விட்டான்.*

தெ. முனுகு; க. முழு; ம. முழுகுக.

முழுகு = L. mergo, mergere, F. merger, E. merge. இதினின்று emerge, submerge முதலிய சொற்கள் பிறக்கும். L. mers. இதினின்று immerse, submerse முதலிய சொற்கள் பிறக்கும் (வே.க.முல்[6]).

[முள் → முழு → முழுகு → முழுகு–தல் (வ.மொ.வ.).]

முழுங்கல் *muḷuṅgal,* தொ.பெ.(vbl.n.) விழுங்குகை; to swallow (சா.அக.).

[முழு → முழுகு → முழுங்கு → முழுங்கல்.]

முழுங்கித்தொலை–த்தல் *mulungi-t-tolai-,* 4 செ.கு.வி.(v.i.) சினத்துடன் சாப்பிடச் சொல்லுதல் (கோவை.); abusing word, used in anger, to command a person to eat.

[முழுங்கு→முழுங்கி + தொலை–த்தல்.]

முழுங்கு[1]–தல் *mulungu-,* 5 செ.கு.வி. (v.i.) முழுகுதல்; to sink. *குடம் தண்ணீரில் முழுங்கி விட்டது.*

[முழுகு→முழுங்கு→முழுங்கு–தல்.]

முழுங்கு[2]–தல் *mulungu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தொண்டைக்குள் அல்லது வயிற்றிற்குள் முழுகச் செய்தல், விழுங்குதல்; to swallow, gulp, as food. *மாத்திரை முழுங்கினான்.*

தெ. மிங்கு

[முழுகு→முழுங்கு→முழுங்கு–தல்.]

முழுச்சவரம் *mulu-c-cavaram,* பெ.(n.) மயிர் முற்றுமாக மழிக்கை (உ.வ.); shaving the body and not merely the head.

[முழு + Skt. சவரம் > த. மழி–த்தல்.]

முழுச்செம்பு *mulu-c-cembu,* பெ.(n.) தென்னிந்தியாவில் வழங்கிய பழைய நாணய வகை (பணவிடு.140); an ancient South Indian coin.

[முழு + செம்பு.]

முழுச்செவிடு *mulu-c-cevidu,* பெ.(n.) சிறிதும் ஓசை கேளாமை; complete deafness - *Anacusia* (சா.அக.).

[முழு + செவிடு.]

முழுச்சோம்பேறி *mulu-c-cōmbēri,* பெ.(n.) மிகுந்த சோம்பலுள்ளவ–ன்–ள்; great sluggard. *"முழுச்சோம்பேறி முள்ளுள்ள வேலி" (பழ.).*

[முழு + சோம்பேறி.]

முழுச்சௌரம் *mulu-c-cauram,* பெ.(n.) முழுச்சவரம் (வின்.) பார்க்க; see *mulu-c-cavaram.*

[முழு + Skt. சௌரம்.]

முழுசு[1]–தல் *mulusu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. முட்டுதல்; to rub, strike against. *"பிள்ளைகள் முலைக்கீழ் முழுசினவாறே பால்சுரக்கும்" (ஈடு, 5. 3 : 3).* 2. முத்தமிடுதல்; to kiss. *"அழுத்தந் தழுவாதே முழுசாதே" (திவ்.பெருமாள்.9 : 6).*

[முல் (பொருந்தல்)→முள்→முழு→முழுவு. முழுவு→முழுசு→முழுசு–தல். ஒ.நோ. பரவு→பரசு; விரவு→விரசு.]

முழுசு[2]–தல் *mulusu-,* 5 செ.கு.வி.(v.i.) உட்புகுதல்; to dive, dip, get in, entire. *"முழுசி வண்டாடிய தண்டுழாயின்" (திவ். பெரியதி.2.8:7).*

[முல்(துளைத்தல்)→முள்→முழு→முழுசு →முழுசு–தல் (வே.க.முல்.[6]).]

முழுசு[3] *mulusu,* பெ.(n.) முழுமை, 1 (உ.வ.) பார்க்க; see *mulumai, 1.*

[முழுது→முழுசு.]

முழுசு[4] *mulusu,* பெ.எ.(adj.) முழுமை; whole, entireness. *எல்லாப் பணியாரத்தையும் முழுசாய்த் தின்று விட்டான் (உ.வ.).*

[முழுது→முழுசு.]

முழுத்த[1] *mulutta,* பெ.எ.(adj.) முதிர்ச்சி பெற்ற; fully developed. *"முழுத்த வின்பக்கடல்" (திருக்கரு.கலித்.அந்.).*

[முழு→முழுத்த.]

முழுத்த[2] *mu̱lutta,* வி.எ.(adv.) முழுதும் பார்க்க; see *mu̱ludum.* *"ஏத்தி வந்த தெல்லா முழுத்த" (புறநா.372:2).*

[முழு→முழுத்த.]

முழுத்தக்கம்பு *mu̱lutta-k-kambu,* பெ.(n.) முழுத்தக்கால் (இ.வ.) பார்க்க; see *mu̱lutta-k-kāl.*

[முழுத்தம் + கம்பு.]

முழுத்தக்கால் *mu̱lutta-k-kāl,* பெ.(n.) மணப்பந்தர்க்கு நல்வேளையில் முதலாக நாட்டும் கால் (வின்.); first post fixed at an auspicious moment for erecting a pandal for a marriage.

[முழுத்தம் + கால்.]

மணமனையில், மணநாளுக்கு முன் 3, 5, 7, 9 ஆகிய ஒற்றித்த நாட்களுள் ஒன்றில், நல்ல வேளையில் முழுத்தக் கால் நாட்டிப் பந்தல் அல்லது கொட்டகை போடப்படும்.

முழுத்தசுரம் *mu̱lutta-šuram,* பெ.(n.) சுரநோய் வகை (யாழ்.அக.); a kind of fever.

*[முழுத்த + சுல் = வெப்பப்பொருள். சுல்→சுர் →சுரம். த.சுரம் > **Skt.** jvara.]*

முழுத்தநாடி *mu̱lutta-nāḍi,* பெ.(n.) நல்லோரை (வின்.); auspicious time.

[முழுத்தம் + நாடி.]

முழுத்தநாள்குறி-த்தல் *mu̱lutta-nāḷ-kuṟi-,* 4 செ.கு.வி.(v.i.) திருமணச் சடங்கிற்காக நல்ல நாள் பார்த்தல்; fix an auspicious day for marriage. *மகளுக்கு இன்று முழுத்த நாள் குறித்தல் விழா நடைபெற்றது.*

மறுவ. மணவுறுதி நாள்.

[முழுத்தம் + நாள் + குறி-த்தல்.]

முழுத்தநெல்போடு-தல் *mu̱luttanel-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) இரண்டு புதுப் பானைகளில் ஒன்றில் நெல்லையும் மற்றொன்றில் நீரையும் இடுதல் (கோவை.); just two days before the marriage its the custom of Senthalai Kounder caste the priest to take two pots, and place paddy in one and water in another. *செந்தலைக் கவுண்டர் இனத்தில் திருமணத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு காலையில் சீர்க்காரர்கள் இரண்டு புதுப் பானைகளில் ஒன்றில் நெல்லையும் மற்றொன்றில் நீரையும் இடுவர்.*

[முழுத்தம் + நெல் + போடு-தல்.]

முழுத்தம் *mu̱luttam,* பெ.(n.) 1. திருமணத்தில் குறித்த நல்வேளையில் நடத்தும் தாலிகட்டும் நிகழ்வு; the main event of tying the *tāli,* in a wedding ceremony in an auspicious hour. *முழுத்தம் முடிந்த பிறகு வருகிறாயே!* 2. நல்ல சடங்கு நிகழ்த்துவதற் குரிய நேரம்; auspicious hour. *நாளைக் காலை எட்டு மணிக்கு நல்ல முழுத்தம் இருக்கிறது.* 3. நேரம்; moment, time. 4. ஒன்றரை மணி அல்லது மூன்றே முக்கால் நாழிகை நேரங் கொண்ட ஒரு காலவளவை; a division of time = 3 3/4 *nāḻigai* = 1 1/2 hours. 5. இரண்டு நாழிகை கொண்ட காலப்பகுதி; a division of time of two nāḻigai. 6. திருமணம்; marriage, wedding.

முழுத்தம்பார்-த்தல் *mu̱luttam-pār-,* 4 செ.கு.வி.(v.i.) 1. திருமணம் முதலிய நல்நிகழ்வுகளுக்கு நல்ல நேரம் ஆய்ந்தறிதல்; to find out an auspicious time,

like marriage, house-warning etc. 2. முழுத்தம்வை-த்தல் பார்க்க; see *mu!uttam-vai-*.

[முழுத்தம் +ண் பார்-த்தல்.]

முழுத்தம்வை-த்தல் *mu!uttam-vai-*, 4 செ.கு.வி.(v.i.) மணவிழா முதலிய நற்செயல்களுக்கு நேரங்குறித்தல்; to fix an auspicious time, as for a wedding.

[முழுத்தம் + வை-த்தல்.]

முழுத்து-தல் *mu!uttu-*, 5 செ.குன்றாவி.(v.t.) அமிழ்த்துதல்; to plunge, dip in, drown. *"துதிக்கை முழுத்திற்று" (ஈடு, 3.5: 1).*

[முல் (துளைத்தல்)→முள்→முழு→முழுகு→முழுசு→முழுது→முழுத்து→முழுத்து-தல் (வே.க.).]

முழுத்தும் *mu!uttum*, வி.எ.(adv.) முழுதும் பார்க்க; see *mu!udum*. *"முழுத்தும் பழுதற்ற முத்தமிழின்" (சிலப்.உரைச்சிறப்.பக்.1).*

முழுத்துவரை *mu!u-t-tuvarai*, பெ.(n.) உடைக்கப்படாத முழுத்துவரை; redgram pulse-*Cajamuscajan*.

[முழு + துவரை.]

முழுத்துவி-த்தல் *mu!uttuvi-*, 4 செ.குன்றாவி.(v.t.) முழுத்து-தல் பார்க்க; see *mu!uttu-*. *"மன்னவரை..... முழுத்துவிப்பன் செங்குருதிமுன்" (பாரதவெண்.126).*

[முழுத்து → முழுத்துவி → முழுத்துவி-த்தல் (வே.க.முல்[6]).]

முழுத்தேங்காய் *mu!u-t-tēṅgāy*, பெ.(n.) உடைபடாத தேங்காய் (வின்.); unbroken coconut.

[முழு + தேங்காய்.]

முழுத்தொகை *mu!u-t-togai*, பெ.(n.) 1. வட்டியுடன் கூடிய முதல்; capital and interest. 2. மொத்தம்; total.

[முழு + தொகை.]

முழுது[1] *mu!udu*, பெ.(n.) எஞ்சாமை; all, whole, entirely. *"வேர்முழு துலறி நின்ற புழற்காற்" (அகநா.145:1), "முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ" (குறுந்.210:3), "சுடர்முழு தெறிப்பத் திரங்கிச் செழுங்காய்" (நற்.26:5), "திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி" (புறநா.2:19). கனவு முழுதும் நினைவில் வைத்துக் கொள்ள முடியாது.*

[முழு→முழுது.]

முழுது[2] *mu!udu*, வி.எ.(adv.) முழுதும் (தொல்.சொல்.326) பார்க்க; see *mu!udum*. *"முழுதும் நனைந்தவருக்கு முக்காடு எதற்கு?" (பழ.).*

[முழு→முழுது.]

முழுதுகண்டராமன் *mu!udu-kaṇḍa-rāmaṉ*, பெ.(n.) ஒரு பாண்டிய மன்னன் பெயர்; name of a *Pāṇḍiyā* king.

முழுதும் *mu!udum*, வி.எ.(adv.) எஞ்சுதலின்றி; wholly, entirely. *"முழுதும் வெண்ணெயளைந்து தொட்டுண்ணும்" (திவ்.பெருமாள். 7:8).*

முழுதொருங்குணர்ந்தோன் *mu!udoruṅg-uṇarndōṉ*, பெ.(n.) 1. அருகன் (திவா.); Arhat. 2. கடவுள் (யாழ்.அக.); God. 3. சிவன் (யாழ்.அக.); *Śiva*.

[முழுது + ஒருங்கு + உணர்ந்தோன்.]

முழுதோன் *muḻudōṉ,* பெ.(n.) கடவுள்; God. *"முழுதோன் காண்க" (திருவாச.3 : 29).*

[முழுவது →முழுது→முழுதோன் = கடவுள்.]

முழுந்து[1] *muḻundu,* பெ.(n.) முழுமை, 1 பார்க்க; see *muḻumai, 1. "முழுந்து சுகவடிவாம்" (ஞானவா.சனக.14).*

[முழுது →முழுந்து.]

முழுந்து[2]-தல் *muḻundu-,* 5 செ.குன்றாவி. (v.t.) விழுங்குதல்; to swallow. *"முத்திப் பராமிழ்த முழுந்திட" (பாடு.92 : 7).*

[முழுகு →முழுங்கு →முழுந்து→ முழுந்து-தல்.]

முழுநாயகம் *muḻunāyagam,* பெ.(n.) கொடி வகை (சங்.அக.); a creeper.

முழுநாள் *muḻu-nāḷ,* பெ.(n.) ஓர் ஓரைக்குள்ளாகவே முழுதும் அமையும் விண்மீன் (சங்.அக.); naksatra falling entirely within a zodiacal sign.

[முழு + நாள். நாள் = விண்மீன்.]

முழுநீள *muḻu-nīḷa,* பெ.அ.(adj.) கதை, திரைப்படம், முதலியவை குறித்து வருகையில் வழக்கமாக எதிர்பார்க்கப்படும் நீளத்திலும் குறிப்பிடப்படும் தன்மையிலும் உள்ள; ful length of story, film, etc. *காதல் கதைகளை மட்டும் எழுதிக் கொண்டிருந்தவர் இப்போது முழுநீளத் துப்பறியும் கதை எழுத தொடங்கி யிருக்கிறார். முழு நீள நகைச் சுவைப்படம்.*

[முழு + நீள. நீளம்→ நீள.]

முழுநீறுபூசியமுனிவர் *muḻu-nīṟu-pūšiya-muṉivar,* பெ.(n.) தொகையடி யாருள் ஒருசாராரும் உடல் முழுவதும் திருநீற்றை அணிபவருமான சிவனடியார் (தேவா.738, 10); *Šaiva* devotees who besmear sacred ashes all over their bodies, one of *togai-y-aḍiyār.*

[முழு + நீறு + பூசியமுனிவர்.]

இறைவனுடைய அடியவர்களின் மேனியில் அழகு செய்யும் சிவச் சின்னங்கள் திருவெண்ணீறும், அக்கமணியும் (உருத்திராட்சமும்) ஆகும்.

திருநீறு (கற்பகம், அநுகற்பகம், உபகற்பகம் என்று) மூன்று வகைப்படும்.

இம்மூன்று வகையான திருநீற்றையும் அணிவதினால் பிறவிப் பிணியைப் போக்கி நலம் பெற வழி உண்டாகிறது.

நோயின்றியும் கன்றையுடையதுமான ஆவின் சாணத்தை ஐந்தெழுத்து (பஞ்சாக்ஷர) மறைமொழியைச் சொல்லி ஏற்று ஆனைந்து (பஞ்சகவ்யம்) விட்டுப் பிசைந்து உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். சிவனிரா (சிவராத்திரி) அன்று சிவ மறைமொழியில் வேள்விகள் நடத்தி நெருப்பில் இட வேண்டும்.

கொழுந்துவிட்டு எரியும் ஓமத்தீயில் சாணம் வெள்ளைப் பொடியாக - நீராக எரிந்து விடுகின்றது.

இத்திருநீற்றை சிவபெருமானார் திரு வடிகளை வாழ்த்தி வணங்கி, பயபக்தியுடன் எடுத்தல் வேண்டும். இத்தகைய திருவெண்ணீறு 'கற்பகம்' என உரைக்கப்படும்.

காட்டிலே உலர்ந்து கிடக்கும் ஆவின் சாணத்தைப் பொடி செய்து, ஆவின்நீரை ஊற்றி, நன்றாக பிசைந்து உலர்த்த வேண்டும். திருஓமம் வளர்த்துக் கொழுந்து விட்டு எரியும் ஓமத்தீயில் இட்டு எரிக்க வேண்டும். இத்திருவெண்ணீறு இரண்டாம் வகை (அநுகற்பகம்).

ஆக்கள் மேயும் காட்டில் மரங்கள் பற்றி எரிந்து அதனால் உண்டான நீரும், ஆக்கள் கட்டி வைத்த இடங்களில் தீப்பற்றி வெந்துபோன நீரும், செங்கல் சுட்ட காளவாயிலில் உண்டான நீரும், ஆகிய இவற்றைத் தனித்தனியே ஆவின் நீரினால் நன்றாகப் பிசைந்து உலர்த்த வேண்டும். அவற்றை மறைமொழி ஓதி உருண்டை உருண்டையாக உருட்டி வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு செய்யப்பட்ட உருண்டைகளை மடங்களில் உள்ள நெருப்பில் (சிவாக்கினியில்) இட்டு வேக வைத்தல் வேண்டும். இப்படித் தீயில் இட்டு எடுத்த திருநீறு மூன்றாம் வகைத் திருநீராகும் ('உபகற்பம்').

இவற்றுள் எந்த வெண்ணீற்றையாயினும் உடல் முழுவதும் பூசிக் கொள்ளலாம். ஆனால் திருநீற்றை பூசிக் கொள்வதற்கென்று சில நெறிமுறைகள் உண்டு. அதைத் தட்டாமல் கடைப்பிடித்தல் வேண்டும்.

தூய்மையில்லாத இடங்களில் நடக்கும் போது திருநீறு அணியவே கூடாது. திருநீற்றை அணியும் போது அவற்றைக் கீழே சிந்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு முழுநீறு பூசிய முனிவர்களைச் சுந்தர மூர்த்தி நாயனார் தொகையடியார்களில் ஒருவராக்கிச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

முழுநெறி *mulu-neri,* பெ.(n.) 1. இதழொடிக்கப்படாத முழுப்பூ (சிலப்.2:14, உரை); full flower with the calyx. 2. புறவிதழொடிக்கப்பட்ட முழுப்பூ; full flower without the calyx. *"குவளைக் கூம்பவிழ் முழுநெறி" (புறநா.116 : 2).* 3. முற்றிய இலைகளால் நெருக்கமாகக் கட்டப்பட்ட தழையுடைய பூ; a dress made of dry leaves with dense cumulative. *"கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி" (குறுந்.80:1).*

[முழு + நெறி.]

முழுநோக்கு *mulu-nōkku,* பெ.(n.) 1. ஒன்றை அனைத்துக் கோணங்களிலும் நோக்குதல்; viewing the thing by all angle and aspect. 2. கோளொன்று முழுமையாக நோக்குகை; full aspect of a planet, one of four *Kiraga-nōkku. "கன்னிமதி முழுநோக் கெய்தி" (பிரபுலிங். மாயை யினுற்பத்தி.58).*

மறுவ. முழுப்பார்வை

[முழு + நோக்கு.]

முழுப்பங்கு *mulu-p-pangu,* பெ.(n.) நிலத்துரிமையில் உட்பிரிவில்லாத தனிப்பங்கு (வின்.); whole or undivided share, as in land owned in definite shares. *"முழுப் பங்குக்காரனுக்கு முந்திரிப் பங்குக்காரன் மிண்டன்" (பழ.).*

[முழு + பங்கு.]

முழுப்பாய்சுருட்டி *mulu-p-pāy-šurutti,* பெ.(n.) ஏமாற்றுக்காரன் (பெரு மோசக்காரன்); swindler, great cheat, traitor.

[முழு + பாய்சுருட்டி.]

முழுப்பார்வை *mulu-p-pārvai,* பெ.(n.) முழுநோக்கு (மங்களே.3 : 32, உரை) பார்க்க; see *mulu-nōkku.*

மறுவ. முழுநோக்கு.

[முழு + பார்வை.]

முழுப்புரட்டன் *mulu-p-purattan,* பெ.(n.) 1. முழுப்புளுகன் பார்க்க; see *mulu-p-pulugan.* 2. முழுப்பாய்சுருட்டி பார்க்க; see *mulu-p-pāy-šurutti.*

[முழு + புரட்டன்.]

முழுப்புளுகன் *mu|u-p-pu|ugan,* பெ.(n.) பெரும்பொய்யன் (வின்.); downright liar.

[முழு + புளுகன்.]

முழுப்பொய் *mu|u-p-poy,* பெ.(n.) பெரும் பொய்; downright lie.

[முழு + பொய்.]

முழுப்பொருள் *mu|u-p-poru|,* பெ.(n.) கடவுள்; the Supreme being. *"மனவாக்கினுக்கு மெட்டாத முழுப்பொருளா முதல்வா" (சிவரக.கணபதிகுமர.7).*

[முழு + பொருள்.]

முழுமக்கள் *mu|u-makka|,* பெ.(n.) அறிவிலார்; fools, as barely satisfying the definition of human beings. *"முழுமக்கள் காதலவர்" (திரிகடு.9).*

[முழு + மக்கள்.]

முழுமகன் *mu|u-magan,* பெ.(n.) அறிவிலி (திவா.); fool.

[முழு + மகன்.]

முழுமணி *mu|u-mani,* பெ.(n.) 1. துளையிடாத மணி; unpierced gem. 2. குற்றமற்ற மணி (இரத்தினம்); flawless gem. *"முற்ற முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா" (நீதிநெறி.13).*

[முழு + மணி.]

முழுமதி *mu|u-madi,* பெ.(n.) முழுநிலவு, உவா; full moon. *"முழுமதி புரைமுகமே" (சிலப்.7, பாட்டு.14).*

மறுவ. நிறைமதி, முழுநிலா, வெண்ணிலா.

[முழு + மதி.]

முழுமன்¹ *mu|u-man,* பெ.(n.) முழுமகன் பார்க்க; see *mu|u-magan. "சனகியைக் கவர்ந்துபோய முழுமனை" (அரிசமய. குலசேகர.143).*

[முழு → முழுமன்.]

முழுமன்² *mu|u-man,* பெ.(n.) அரைக்கும் பொழுது சிதைபடாது விழும் முழுக்கூலமணி (இ.வ.); grain escaping unbroken in the process of grinding.

[முழு → முழுமன்.]

முழுமனசு *mu|u-manašu,* பெ.(n.) முழு வொப்புதல் (உ.வ.); entire willingness, full accord, whole-heartedness.

[முழு + மனசு.]

முழுமனத்தோடு *mu|u-manattōḍu,* வி.அ. (adj.) தயக்கமோ, நிறைவின்மையோ இல்லாமல் முழு விருப்பத்தோடு; whole heartedly. *இந்தத் திட்டத்தை முழு மனத்தோடு வரவேற்கிறோம்.*

[முழு + மனத்தோடு.]

முழுமனதாக *mu|u-manadāga,* வி.அ. (adj.) முழுமனத்தோடு, முழு ஒப்புதலோடு; whole heartedly, whole hearted. *முழு மனதாகச்சொல்.*

[முழு + மனதாக.]

முழுமனதான *mu|u-manadāna,* பெ.அ. (adj.) முழு ஒப்புதலோடு; whole hearted. *முழுமனதான ஒத்துழைப்பு.*

[முழு + மனதான.]

முழுமனை *mulu-manai,* பெ.(n.) 2400 ச.அடி கொண்ட நிலப்பகுதி (வின்.); ground measuring 2400 sq.ft.

[முழு + மனை.]

முழுமிடறுசெய்–தல் *mulu-midaru-cey-,* 1 செ.குன்றாவி.(v.t.) வாய்நிறையக் குடித்தல்; to drink in large mouthfuls. *"முழுமிடறு செய் தனுபவித்து" (ஈடு, 2. 3 : 9).*

[முழு + மிடறு + செய்–தல்.]

முழுமுதல் *mulu-mudal,* பெ.(n.) 1. கடவுள்; God, as the Sole Cause. *"பொன்னம்பலத்தெம் முழுமுதலே" (திருவாச. 21: 3).* 2. மரத்தின் அடிப்பகுதி; stem, as of a tree. *"யாஅத்து..... முழுமுதல்" (குறுந்.255), "நல்லரை முழுமுதல் அவ்வயின் தொடுத்த" (நற்.354:6), "நொன்னிலை முழுமுத றுமியப் பண்ணி" (அகநா.145:10).*

[முழு + முதல்.]

முழுமுற்றும் *mulu-murrum,* கு.வி.எ.(adv.) முழுதும் பார்க்க; see *muludum. "முழு முற்றுந் தானே விளக்காய்" (சீவக.1870).*

[முழு + முற்றும்.]

முழுமூச்சாக *mulu-mūccāga,* வி.அ.(adv.) ஆற்றலை எல்லாம் ஒன்று திரட்டி ஒன்றினுள் செலுத்தி; doing a thing with full involvement. *வணிகத்தில் முழுமூச்சாக இறங்கிவிட்டார்.*

[முழு + மூச்சாக.]

முழுமூச்சு *mulu-mūccu,* பெ.(n.) 1. முழுத் திறனுடன் செய்யும் முயற்சி (உ.வ.); utmost effort, as with full breath. 2. விடாத் தீர்மானம் (இ.வ.); inflexible determination. 3. மூச்சுத் திணறுகை (வின்.); breathlessness.

[முழு + மூச்சு.]

முழுமூச்சுடன் *mulu-mūccudan,* வி.அ.(adv.) முழுமூச்சாக பார்க்க; see *mulu-mūccāga.*

முழுமூடன் *mulu-mūdan,* பெ.(n.) பெரு முட்டாள் (திருவேங்.சத.49); great fool.

[முழு + மூடன்.]

முழுமை *mulumai,* பெ.(n.) 1. குறைகளோ தடங்கலோ இல்லாத இயல்பான இறுதி, நிறைவு; completion, wholeness. *ஓவியத்தை முழுமையாக வரைந்து விடு, பாதியில் நிறுத்திவிடாதே. நூல் முழுமை பெறவில்லை.* 2. எல்லாம் அமைந்த மொத்தம், எதுவும் விட்டுப் போகாத தன்மை; completeness, totality. *இசையைப் போல முழுமையான கதை வேறு எதுவும் இல்லை. புரட்சியை முழுமையாக ஒடுக்க முடியாது.* 3. எல்லாம் (பிங்.); entireness. 4. பருமை; great size. *"துங்க முழு வுடற்சமணச் சூழ்ந்து மகிழ்வார்" (பெரியபு.திருநாவு.39).*

[முழு → முழுமை.]

முழுவதற்கும் *muluvatarkum,* வி.அ.(adv.) மொத்த அளவிற்கும், முழுமைக்கும்; to the whole or entire. *இந்தச் சட்டம் நாடு முழுவதற்கும் பொருந்தும்.*

[முழு → முழுவதற்கும்.]

முழுவது *muluvadu,* பெ.& கு.வி.எ.(n. & adv.) முழுவதும் பார்க்க; see *muluvadum. "அகலாச் செல்வ முழுவதுஞ் செய்தோன்" (புறநா.34:15).*

[முழு → முழுவது.]

முழுவதும்[1] *muḻuvadum,* பெ.(n.) முழுமை; whole. *"முழுவதும் படைப்போற் படைக்கும் பழையோன்" (திருவாச.3:12).*

[முழு → முழுவதும்.]

முழுவதும்[2] *muḻuvadum,* கு.வி.எ.(adv.) முழுமையாக; wholly, totally, completely. *"நின்னையேத்த முழுவதுமே" (திருவாச.5:6), "முருங்கக் கலிங்க முழுவதும் வளைஇப்" (அகநா.136:20). நான்கு கிழமையாகப் பூட்டிக்கிடந்ததில் வீடு முழுவதும் தூசி. சாலை முழுவதும் கூட்டம். இரவு முழுவதும் தூங்கவில்லை.*

[முழு →முழுவதும்.]

முழுவல்[1] *muḻuval,* பெ.(n.) நீர்ப்பறவை வகை; an aquatic bird. *"ஒடுங்கு சிறை முழுவலும்" (மணிமே.8:29).*

[முழுகு → முழுவல்.]

முழுவல்[2] *muḻuval,* பெ.(n.) விடாது தொடர்ந்த அன்பு; perfect love. *"முழுவற்கடல் பெருத்தான்" (தணிகைப்பு. நந்தியு.6).*

[முள்→முழு→முழுவு→முழுவல்.]

முழுவலயம்[1] *muḻu-valayam,* பெ.(n.) முழுமையான வட்டம் (யாழ்.அக.); full circle.

[முழு + வளையம் - முழுவளையம் → முழுவலயம்.]

முழுவலயம்[2] *muḻu-valayam,* பெ.(n.) வெற்றி (யாழ்.அக.); victory.

[முழுவலம் → முழுவலயம்.]

முழுவலி *muḻu-vali,* பெ.(n.) 1. மிக்க வலிமை; great strength. *"முழுவலி வயவர்" (பு.வெ.7:17).* 2. நிறைந்த வலிமையுள்ளவ-ன்–ள்; powerful person, person of great strength.

[முழு + வலி.]

முழுவன் *muḻuvaṉ,* பெ.(n.) முழுது; whole. *கடன் முழுவனும் தீர்த்து விட்டான் (உ.வ.).*

[முழுமன்→முழுவன் (வே.க.).]

முழுவாசி *muḻu-vāśi,* பெ.(n.) 1. முழுமை (வின்.); whole. 2. முற்றின நென்மணி (இ.வ.); fully developed grain.

[முழு + வாசி. வாய் = இடம். வாய்→வாயி→வாசி.]

முழுவாசியும் *muḻu-vāśiyum,* கு.வி.எ. (adv.) பெரும்பகுதியும்; to a great extent, almost completely. *வீட்டு வேலை முழுவாசியுந் தீர்ந்து விட்டது (உ.வ.).*

[முழுவாசி →முழுவாசியும்.]

முழுவீச்சில் *muḻu-viccil,* வி.அ.(adv.) ஒரு செயல் வேகமாகவும் மும்முரமாகவும்; in full swing. *தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப் பட்டவுடன் செய்தி பரப்புதல் பணி முழு வீச்சில் நடந்து வருகிறது.*

[முழு + வீச்சில். வீச்சு→வீச்சில் = வலிமை.]

முழுவு-தல் *muḻuvu-,* 5 செ.கு.ன்றாவி.(v.t.) 1. முத்தமிடுதல்; to kiss. *"வந்தென் முலை முழுவித் தழுவி" (திருக்கோ.227).* 2. பொருந்தித் தொடுதல்; to touch. 3. தழுவுதல்; entwine.

[முள்→முழு→முழுவு→முழுவு–தல்.]

முழுவெலும்பு *muḻu-v-elumbu,* பெ.(n.) முழுவென்பு பார்க்க; see *muḻu-v-enbu.*

[முழு + எலும்பு.]

முழுவென்பு *muḻu-v-eṉbu,* பெ.(n.) எலும்புக் கூடு (திவா.); skeleton.

[முழு + என்பு. எலும்பு→என்பு.]

முழை[1]–த்தல் *muḻai-,* 4 செ.குன்றாவி. (v.t.) துளைத்தல்; to pierce, bore. *"முழைத்த வான்புழை" (பாரத. காண்டவ.17).*

[முழு→முழை→முழை–த்தல்.]

முழை[2]–தல் *muḻai-,* 2 செ.கு.வி.(v.i.) நுழைதல் (இ.வ.); to enter.

[முழு→முழை→முழை–தல்.]

முழை[3] *muḻai,* பெ.(n.) 1. குகை; large mountain cave, cavern, den. *"அவ்விசை முழை யேற்றழைப்ப" (பரிபா.19:63), "வாள்வரி வயப்புலி கன்முழை யுரற" (அகநா.168:12), "கன்முழை யருவிப் பன்மலை நீந்தி" (புறநா.147:1).* 2. துளை; bore. 3. துளைத்தல் போல் துழாவும் துடுப்பு (வின்.); spatula ladle.

[முழு→முழை (வே.க.).]

முழைஞ்சு *muḻaiñju,* பெ.(n.) 1. துளை; hole. *"குழன் முழைஞ்சு களினூடு குமிழ்த்து" (திவ். பெரியாழ்.3. 6 : 11).* 2. குகை; den. *"மாரிமலை முழைஞ்சில் மன்னி" (திவ்.திருப்பா.23).*

[முழை[3] → முழைஞ்சு.]

முழைத்தல் *muḻaittal,* பெ.(n.) 1. எழுத்திலா வோசை (சது.); inarticulate sound, vocal sound having no corresponding written character. 2. எழுத்தில்லா மொழி (வின்.); language not possessing a written alphabet or characters.

முள்[1] *muḷ,* பெ.(n.) 1. மரஞ்செடி, கொடிகளில் கூர்மையுடையதாய்ச் சிறுகுச்சி போற் காணப்படும் பகுதி; thorn, brier, thistle, bristle, spine. *"இளைதாக முண்மரங் கொல்க" (குறள், 879), "முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்" (அகநா.6:19), "முழுவலி முள்ளெயி றழுத்திய கதவி" (நற்.18:3). காலில் முள் குத்திவிட்டது.* 2. குத்தக் கூடிய கூர்மையுடைய பொருள்; anything sharp or pointed, as fish - bone, porcupine's quill, etc. *மீன் முள் தொண்டையில் சிக்கிக் கொண்டுவிட்டது.* 3. தாற்றுக்கோல்; goad, spur. *"முள்ளிட் டூர்மதி வலவ" (ஐங்குறு.481).* 4. கடிவாளம்; bit. *"முள்ளுறீஇச் செய்கயி றாய்ந்தன" (சீவக. 2214).* 5. இறகினடி; quill or springing point of feather. *"இதன் முட் செந்நனை" (அகநா.23).* 6. பலாக்காய்மேற் காணப்படும் கூரிய முனைகள் (வின்.); the rough points on the rind of the jack fruit. 7. முள் வடிவாகச் செய்யப்பட்ட கருவி; fork; sharp-pointed instrument. 8. துலாக் கோலின் நடுவில் சம நிலையைக் காட்டும் ஊசி; index of a balance. 9. கடிகாரத்தில் காலத்தைக் காட்டும் ஊசி; hand of a clock or time-piece. 10. கூர்மை; sharpness. *"முள்வாய்ச் சங்கம்" (சிலப்.4:78).* 11. நுண்மை (சூடா.); minuteness. 12. புறாவின் ஆண்குறி (இ.வ.); male organ of a pigeon.

தெ., க., ம. முள்ளு; து. முள்.

[முல் = கூர்மை. முல்→முள்.]

"முள்ளுமேல் சீலை போட்டால் மெல்ல மெல்ல தான் எடுக்க வேண்டும்", "முள்ளுக்குக் கூர்மையும் துளசிக்கு மணமும் இயற்கை" (பழ.), "முள்ளுக்கு முனை சீவி விடுவார்களா?" (பழ.).

முள்கரண்டி *mu̱l-karaṇḍi,* பெ.(n.) உணவுப் பொருளைக் குத்தி எடுத்துச் சாப்பிடுவதற்குப் பயன்படக் கூடிய வகையில் முன்பகுதியில் கூரிய முனைகளை உடைய கருவி; fork.

[முள் + கரண்டி.]



முள்கா-த்தல் *mu̱lkā-,* 6 செ.கு.வி.(v.i.) குந்தியிருத்தல்; to sit with arms and legs folded. *"சான்றோர் முசுப்போல முள்காந்திருப்பர்" (நன்.96, விருத்.)*

[முள்கு + ஆ-த்தல்.]

முள்கு-தல் *mu̱lgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. முயங்குதல்; to embrace. *"இளமுலை முகிழ்செய முள்கிய" (கலித்.125).* 2. உட்செல்லுதல்; to enter, pierce. *"அமர்க்க ணாமா னருநிற முள்காது" (நற்.165).*

தெ. மெலிகொநு, மெலகு.

முள்கொடிச்சி *mu̱l-koḍicci,* பெ.(n.) கண்டங்கத்திரி; thorny plant - *Solanum jacquini* (சா.அக.).

முள்சீதா *mu̱l-šītā,* பெ.(n.) முள்ளுச்சீத்தா பார்க்க; see *mu̱llu-c-cittā.*

[முள்ளுச்சீத்தா → முள்சீதா.]

முள்பட்டறை *mu̱l-paṭṭaṟai,* பெ.(n.) வார்படக் கருவிகள் செய்யும் பட்டறை (முள்ளுப் பட்டறை) (கோவை.); factory where, casting metals, and manufacturing, instrument from it.

முள்மகிழ் *mu̱l-magi̱l,* பெ.(n.) ஒருவகை மரம் (L.); a kind of woolly ironwood, *Sideroxylon tomentosum.*

[முள் + மகிழ்.]

முள்முரண்டை *mu̱l-muraṇḍai,* பெ.(n.) கொடிவகை (L.); necklace berried climbing caper, *Muma arenaria.*

[முள் + முரண்டை.]

முள்மூவிதழ் *mu̱l-mūvida̱l,* பெ.(n.) சப்பாத்துக் கற்றாழை; இலைக்கற்றாழை; prickly aloe - *Spiked aloe* (சா.அக.).

[முள் + மூவிதழ்.]

முள்வறையன் *mu̱l-vaṟaiyaṉ,* பெ.(n.) மரத்தை அரிக்கும் கறையான் வகை (யாழ்ப்.); termite that gnaws the wood.

முள்வாங்கி *mu̱l-vāṅgi,* பெ.(n.) முள்ளெடுக்குங் கருவி; thorn pincers.

[முள் + வாங்கி. வாங்கு → வாங்கி.]



முள்வாங்கி. கால் பாதங்களில் தைத்த முள்ளை எடுக்கப் பயன்படுத்தும் ஒரு சிறு கருவி.

முள்வாயன் *muḷ-vāyaṉ,* பெ.(n.) முள் வறையன் பார்க்க; see *muḷ-vaṟaiyaṉ* (சா.அக.).

[முள் + வாய் – முள்வாய் → முள்வாயன்.]

முள்வாழ்வேலி *muḷ-vāḻ-vēli,* பெ.(n.) உயிர் வேலி; fence made by thorny plants.

முள்வாளி *muḷ-vāḷi,* பெ.(n.) முள்வேலி (நாஞ்.) பார்க்க; see *muḷ-vēli.*

முள்வாளை *muḷ-vāḷai,* பெ.(n.) நீலங் கலந்த பச்சை நிறமுடையதும் 12 அடி வரை வளர்வதுமான வாளை மீன் வகை; large herring - like fish, bluish green, attaining 12 ft. in length, *Chirocentrus dorab.*

முள்வெண்டை *muḷ-veṇḍai,* பெ.(n.) சுணையுள்ள வெண்டைக்காய்; hairy lady's finger - *Hibicus esculentus* (சா.அக.).

[முள் + வெண்டை.]

முள்வெள்ளரி *muḷ-veḷḷari,* பெ.(n.) கொடிவகை (சூடா.); kakri - melon.

[முள் + வெள்ளரி.]

முள்வேங்கை *muḷ-vēṅgai,* பெ.(n.) மலை வேங்கைமரம் (L.); spinous kino tree.

[முள் + வேங்கை.]

முள்வேல் *muḷ-vēl,* பெ.(n.) 1. நீருடை குடைவேல் மரம்; buffalo thorn cutch. 2. முள்ளுடைய வேல மரவகை; entire leaved staff - tree, *Gymnosporia emarginata.*

[முள் + வேல்.]

முள்வேலி *muḷ-vēli,* பெ.(n.) 1. முள்ளால் செய்யப்பட்ட அடைப்பு; fence of thorn. *"அமரினிட்ட வரு முள்வேலி" (புறநா.301).* 2. முட்களை யுடைய இரும்புக் கம்பியாலான வேலி; fence of barbed wire. 3. முள் நிறைந்த கிளைகளால் ஏற்படுத்திய தடுப்பு; fence made of thorny branches of trees. *அரசுக்குச் சொந்தமான இடத்தில் முள்வேலி அமைத்தது யார்?* 4. வேளாண்மை செய்த நிலத்திற்குப் பாதுகாப்புக்காக அமைக்கப்படும் முள்ளால் ஆன வேலி (கோவை.); thorny fence made to protect the farm.

[முள் + வேலி.]

முள்ளங்கத்தரி *muḷḷaṅ-kattari,* பெ.(n.) கத்தரி வகை (L.); woolly sinuate bluish-flowered prickly nightshade, *Solanum melongena.*

[முள் + அம் + கத்தரி.]

முள்ளங்கி *muḷḷaṅgi,* பெ.(n.) சமையலில் பயன்படுத்தும் வெள்ளை நிறத்தில் அல்லது வெளிர்ச் சிவப்பு நிறத்தில் கூம்பு போன்ற வடிவத்தில் உள்ள கிழங்கு; a kind of radish, *Raphanus sativus. முள்ளங்கிக் குழம்பு.*

தெ. முள்ளங்கி; க. மூலங்கி; ம. முள்ளங்கி.

வேர்ப்பகுதியில் உணவைச் சேர்த்து வைக்கும், சமையலுக்குப் பயன்படும் காய்கறி வகை.

முள்ளங்கி வகைகள்: 1) முள்ளங்கி, 2) வெள்ளை முள்ளங்கி, 3) மஞ்சள் முள்ளங்கி, 4) சிவப்பு முள்ளங்கி, 5) சுவற்று முள்ளங்கி அல்லது ஆற்று முள்ளங்கி, 6) பெரிய முள்ளங்கி, 7) சின்ன முள்ளங்கி, 8) சதுர முள்ளங்கி, 9) வன முள்ளங்கி (சா.அக.).

முள்ளங்கிழங்கு *mullan-kilangu,* பெ.(n.) 1. முள்ளங்கிக் கிழங்கு; root tuber of radish. 2. ஒரு வகை வள்ளிக் கொடி (வின்.); thorny yam, *Dioscorea tomentosa.*

[முள்ளங்கி + கிழங்கு.]

முள்ளங்கீரை *mullan-kirai,* பெ.(n.) முட்கீரை (வின்.) பார்க்க; see *mut-kirai.*

[முள் + அம் + கீரை.]

முள்ளஞ்சங்கு *mullañ-jangu,* பெ.(n.) முட்களை யுடைய சங்குவகை (வின்.); a conch armed with spikes.

[முள் + அம் + சங்கு.]

முள்ளடி *mul-l-adi,* பெ.(n.) துப்பு (இ.வ.); clue; trace.

[முள் + அடி.]

முள்ளடிக்கூலி *mulladi-k-kūli,* பெ.(n.) துப்புக்கூலி (இ.வ.); payment for furnishing clue, as to a theft.

[முள்ளடி + கூலி.]

முள்ளந்தண்டு *mullan-tandu,* பெ.(n.) முதுகிலுள்ள நடு எலும்பு (C.G.); vertebral column, backbone, spine.

மறுவ. தண்டுவடம்

[முள் + அம் + தண்டு.]

முள்ளந்தண்டுக்கொடி *mulla-n-tandu-k-kodi,* பெ.(n.) முள்ளந்தண்டிற்குள் ஓடும் ஒரு வெண்மையான கயிறு போன்ற நரம்புக் கொடி; a long cord or column of nervous matter contained in the canel of the spine - Spinal cord (சா.அக.).

[முள்ளந்தண்டு + கொடி.]

முள்ளந்திருக்கை *mullan-tirukkai,* பெ.(n.) 1. பச்சை நிறமுடையதும் குறுக்கில் 2 அடியும் நெடுக்கில் 5 அடியும் வளர்வதான திருக்கை வகை; sting-ray, greenish, attaining 5 ft. in length and 2 ft. across the disc, *Urogymnus asperrimus.* 2. வெண் சிவப்பு நிறமும் 8 விரலம் வரை வளர்ச்சியுமுடைய கடல் மீன்; sea - fish, pinkish, attaining 8 inch. in length, *Halieutea stellata.*

[முள் + அம் + திருக்கை.]

முள்ளம்பலாச்சை *mullam-palāccai,* பெ.(n.) 1. வெளிறின பழுப்பு நிறமும் இரண்டு அடி வரை வளர்வதுமான கடல் மீன் வகை; sea-fish, light brown, attaining 2 feet in length, *Dioden hystrix,* as covered with spines. 2. பழுப்பு அல்லது கறுப்பு நிறமுடையதும் 13 விரலம் (அங்குலம்) வரை வளர்வதுமான கடல் மீன் வகை; sea-fish, brown or black, attaining 13 inch in length, *Tetrodon patoca.*

[முள் + அம் + பலாச்சை. பலாச்சை = மீன்வகை.]

முள்ளம்பன்றி *mullam-panri,* பெ.(n.) தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஏற்றவாறு உடலின் மேல் பகுதி முழுவதும் முள் போன்ற கூர்மையான மயிர்கள்



முள்ளங்கி

முரளம்



மூங்கில்

மூவிலை

நிறைந்ததும் குட்டையான கால்களை உடையதுமான ஒரு சிறிய காட்டு விலங்கு; porcupine, *Hystrix hirsutirostris*. *அவனுடைய தலைமுடி முள்ளம்பன்றி போல உள்ளது.*

தெ. முள்ளம்பந்தி; ம. முள்ளம்பந்நி.

[முள் + அம் + பன்றி.]

முள்ளரிகொக்கி *mullari-kokki*, பெ.(n.) தூண்டிலில் புழுவை மாட்டப் பயன்படும் கொக்கி (கோவை.); fist-hook.

[முள்ளரி + கொக்கி.]

முள்ளருகல் *mullarugal*, தொ.பெ.(vbl.n.) சிறுநீர்க் குழாயில் முள் குத்துவதுபோல் வலிக்கை; a disease inflammation in the tip of the penis.

[முள் + அருகல். முள்ளருகல் போல் வலிக்கை.]

முள்ளல் *mullal*, பெ.(n.) 1. கருவாடு; dry fish. 2. மீன் வகை (கோவை.); a kind of fish.

முள்ளழுவேணை *mullalu-vēṇai*, பெ.(n.) அழுவணை மரம்; law sonia spinosa.

[முள் + அழுவேணை. அழுவணை → அழுவேணை.]

முள்ளன்பலாச்சை *mullan-palāccai*, பெ.(n.) முள்ளம்பலாச்சை பார்க்க; see *mullam-palāccai*.

[முள்ளம்பலாச்சை → முள்ளன்பலாச்சை.]

முள்ளாங்கத்தரி *mullāṅ-gattari*, பெ.(n.) முள்ளங்கத்தரி (மூ.அ.) பார்க்க; see *mullaṅ-kattari*.

[முள்ளங்கத்தரி → முள்ளாங்கத்தரி.]

முள்ளாணி *mullāṇi*, பெ.(n.) 1. பாதத்தில் குத்திய முள் உள்ளே தங்கி அந்த இடம் கருப்பாக மாறுகை; Blackening of the skin in the sole, where the thorn is priched. 2. பாதத்தில் தானாகவே ஆணி வருகை; callosity of the sole caused by the frequent pricking of thorns and sharp edged stones.

முள்ளாம்பன்னிச்செடி *mullām-panni-c-cedi*, பெ.(n.) முட்செடி வகைகளுள் ஒன்று (கோவை.); a kind of plant.

[முள்ளம் + பன்னிசெடி.]

முள்ளாறு *mullāṟu*, பெ.(n.) வெள்ளை நிறமுடைய ஒருவகைக் கடல் மீன் (இராமமுழியன்); silvery sea-fish.

முள்ளி[1] *mulli*, பெ.(n.) 1. முள்ளுள்ள செடி (நன்.62, உரை); thorny plant. *"கள்ளி யேய்ந்த முள்ளியம் புறங்காட்டு" (புறநா. 363:20).* 2. கத்தரி வகை; Indian nightshade. *"முள்ளுச் செழுமல ரோன்" (திவ்.இயற். சிறிய.ம. தனியன்).* 3. மருதோன்றி (L.); nail dye, *Barleria*. 4. கழுதை முள்ளி; holly - leaved bear's-breech. 5. தாழைச் செடிவகை; fragrant screw-pine. *"கூர்முண் முள்ளி" (அகநா.26).* 6. கள் (பரி.அக.); toddy.

தெ. முலக; க., ம. முள்ளி.

[முள் → முள்ளி.]

வகைகள்: 1) அடுக்கு முள்ளி, 2)ஆற்றுமுள்ளி (அ) கழுதைமுள்ளி, 3) செம்முள்ளி, 4) வெள்ளை முள்ளி, 5) நீர் முள்ளி, 6) கறிமுள்ளி, 7) பப்பர முள்ளி (சா.அக.).

முள்ளி² *muḷḷi,* பெ.(n.) வற்றிய பொருள்; that which is dry.

முள்ளிக்காய் *muḷḷi-k-kāy,* பெ.(n.) ஒரு வகைச் செடி; a plant - *Solanum xanthocarpum.*

முள்ளிக்கீரை *muḷḷi-k-kīrai,* பெ.(n.) முட்கீரை (மூ.அ.) பார்க்க; see *muṭ-kīrai.*

முள்ளிச்சங்கு *muḷḷi-c-caṅgu,* பெ.(n.) புறப்பரப்பு முழுவதும் கூரான முட்கள் போன்ற அமைப்புடைய சங்கு; conch which has thorn like structure on its top.

[முள்ளி + சங்கு.]

முள்ளிடுக்கி *muḷ-ḷ-iḍukki,* பெ.(n.) முள் வாங்கி (வின்.) பார்க்க; see *muḷ-vāṅgi.*

[முள் + இடுக்கி.]

முள்ளித்தலாதி *muḷḷi-t-talāti,* பெ.(n.) வெங்காயம்; onion - *Alliumcepa.*

முள்ளிப்பிஞ்சு *muḷḷi-p-piñju,* பெ.(n.) பிஞ்சு முள் கத்திரி; tender thorned brinjal - *Solonum melongena* (சா.அக.).

முள்ளிப்பூ *muḷḷi-p-pū,* பெ.(n.) வரிக்கூத்து வகை (சிலப்.3:13, உரை); a masquerade dance.

முள்ளியார் *muḷḷiyār,* பெ.(n.) ஆசாரக் கோவை நூலின் ஆசிரியரான பெருவயின் முள்ளியார்; author of *āšāra-k-kōvai.*

முள்ளியூர்பூதி *muḷḷiyūr-pūti,* பெ.(n.) கடைக்கழகப் புலவர்; *Šaṅgam* poet.

முள்ளில்லாக்கற்றாழை *muḷḷillā-k-kaṟṟāḻai,* பெ.(n.) நாகபடக் கற்றாழை; snake hood aloe.

முள்ளிலவம் *muḷ-ḷ-ilavam,* பெ.(n.) முள்ளிலவு பார்க்க; see *muḷ-ḷ-ilavu.*

[முள்ளிலவு → முள்ளிலவம்.]

முள்ளிலவம்பட்டை *muḷḷilavam-paṭṭai,* பெ.(n.) இலவமரத்தின் பட்டை; bark of silk cotton tree, *Bombax malabaricum* (சா.அக.).

[முள் + இலவம் + பட்டை.]

முள்ளிலவு *muḷ-ḷ-ilavu,* பெ.(n.) ஒருவகை இலவமரம் (சீவக.788); a kind of red flowered silk - cotton tree.

[முள் + இலவு.]

முள்ளிலைச்சாறு *muḷḷilai-c-cāṟu,* பெ.(n.) எட்டிச்சாறு; juice of the leaves of nux vomica tree (சா.அக.).

முள்ளிவேர் *muḷḷi-vēr,* பெ.(n.) நீர் முள்ளி வேர்; root of hygrophila auricalata alias *Astercantha longifolia* (சா.அக.).

[முள்ளி + வேர்.]

முள்ளிழைப்புளி *muḷ-ḷ-iḻai-p-puḷi,* பெ.(n.) இழைப்புளி வகை; plane with serrated bit.

[முள் + இழைப்பு + உளி.]

முள்ளிற்கச்சிகம் *muḷḷiṟ-kaccigam,* பெ.(n.) கொழுமிச்சை, நாரத்தை; bitter orange (சா.அக.).

முள்ளிறால் *muḷ-ḷ-iṟāl,* பெ.(n.) பாரையிறால்; spiny lobster (சா.அக.).

[முள் + இறால்.]

முள்ளியூர்ப்பூதியார் *mu<u>ll</u>iyūr-p-pūdiyār,* பெ.(n.) கழக காலப் புலவர்; *Šaṅgam*poet.

[முள்ளியூர் + பூதியார்.]

நன்னனுடைய நவிர மலையைச் சிறப்பித்துத் தம் செய்யுளில் பாடியுள்ளார் (அகநா.173). இச்செய்யுளைப் பாடியவர் முன்னியூர் வழுதியார் எனவும் பாட வேறுபாடு உண்டு.

"அறந்தலைப் பிரியா தொழுகலுஞ் சிறந்த
கேளிர் கேடு பல வூன்றலும் நாளும்
வருந்தா வுள்ள மொடிருந்தோர்க் கில்லெனச்
செய்வினை புரிந்த நெஞ்சினர் நறுநுதன்
மையீ ரோதியரும் பட ருழத்தல்
சின்னாட் டாங்கல் வேண்டுமென்று நின்
நன்மா ணெல்வளை திருத்தினராயின்
வருவர் வாழி தோழி பலபுரி
வார் கயிற் றொழுகை நோன் சுவற்கொளீஇப்
பகடுதுறை யேற்றத் துமண்விளி வெரீஇ
உழைமா னம்பிணை யினனிரிந்தோடக்
காடுகவி னழிய வுரைஇக் கோடை
நின்றுதின விளிந்த வம்பணை நெடுவேய்க்
கண்விடத் தெறிக்கு மண்ணா முத்தங்
கழங்குறழ் தோன்றல் பழங்குழித் தாஅம்
இன்களி நறவி னியறோர் நன்னன்
விண்பொரு நெடுவரைக் கவாஅற்
பொன் படு மருங்கின் மலையிறந்தோரே"

(அகநா.173).

முள்ளுக்கடம்பு *mu<u>ll</u>u-k-kaḍambu,* பெ.(n.) ஒருவகைச் செடி (L.); Nepal berberry.

[முள் + கடம்பு.]

முள்ளுக்கடம்பை *mu<u>ll</u>u-k-kaḍambai,* பெ.(n.) முள்ளுக்கடம்பு பார்க்க; see *mu<u>ll</u>u-k-kaḍambu.*

[முள்ளுக்கடம்பு → முள்ளுக்கடம்பை.]

முள்ளுக்கத்திரி *mu<u>ll</u>u-k-kattiri,* பெ.(n.) முள்ளங்கத்தரி (இ.வ.) பார்க்க; see *mu<u>ll</u>aṅ-kattari.*

[முள்ளங்கத்தரி → முள்ளுக்கத்தரி.]

முள்ளுக்கரப்பன் *mu<u>ll</u>u-k-karappa<u>n</u>,* பெ.(n.) முள்ளுக்கரப்பான் (வின்.) பார்க்க; see *mu<u>ll</u>u-k-karappā<u>n</u>.*

[முள்ளுக்கரப்பான் → முள்ளுக்கரப்பன்.]

முள்ளுக்கரப்பான் *mu<u>ll</u>u-k-karappā<u>n</u>,* பெ.(n.) மேல் தோலில் படரும் நோய் வகை (உ.வ.); a kind of eruption with pimples.

[முள் + கரப்பான் - முள்கரப்பான் → முள்ளுக்கரப்பான்.]

முள்ளுக்களா *mu<u>ll</u>u-k-ka<u>l</u>ā,* பெ.(n.) 1. ஒரு வகைக் களாச் செடி (நெல்லை.); fascicled leaved spinous berberry. 2. முள்ளுக் கடம்பு (L) பார்க்க; see *mu<u>ll</u>u-k-kaḍambu.*

[முள் + களா →முள்ளுக்களா..]

முள்ளுக்கற்றாழை *mu<u>ll</u>u-k-ka<u>rr</u>ā<u>l</u>ai,* பெ.(n.) முள்ளுடைய கற்றாழை. இதன் இரு பக்கத்திலும் முனையிலும் முட்கள் பொருந்தியிருக்கும்; prickly aloe, spiked aloe (சா.அக.).

முள்ளுக்காரை *mu<u>ll</u>u-k-kārai,* பெ.(n.) சிறு மரவகை (வின்.); common emetic nut, *Randia dumetorum.*

[முள் + காரை→முள்ளுக்காரை.]

முள்ளுக்கீரை *mu<u>ll</u>u-k-kīrai,* பெ.(n.) முட்கீரை (வின்.) பார்க்க; see *muṭ-kīrai.*

[முட்கீரை → முள்ளுக்கீரை.]

முள்ளுக்குப்பை *mullu-k-kuppai,* பெ.(n.) கொட்டையிலந்தை; seed jujube - *Zizyphus zylopyra* (சா.அக.).

முள்ளுக்கூலி *mullu-k-kūli,* பெ.(n.) முள்ளடிக் கூலி பார்க்க; see *mulladi-k-kūli.*

[முள் + கூலி→முள்ளுக்கூலி.]

முள்ளுக்கொடிச்சி *mullu-k-kodicci,* பெ.(n.) தூதுவளை; a climber - *Solanum trilobatum.*

[முள் + கொடிச்சி →முள்ளுக்கொடிச்சி.]

முள்ளுச்சங்கு[1] *mullu-c-cangu,* பெ.(n.) சங்கஞ்செடி (L.); mistletoe berry thorn.

[முள் + சங்கு → முள்ளுச்சங்கு.]

முள்ளுச்சங்கு[2] *mullu-c-cangu,* பெ.(n.) முள்ளஞ்சங்கு பார்க்க; see *mullañ-jangu.*

[முள்ளஞ்சங்கு →முள்ளுச்சங்கு.]

முள்ளுச்சம்பா *mullu-c-cambā,* பெ.(n.) ஒருவகை நெல் (நாமதீப.351, குறிப்பு); a kind of paddy.

[முள் + சம்பா→முள்ளுச்சம்பா.]

முள்ளுச்சிரங்கு *mullu-c-cirangu,* பெ.(n.) நாய்முள் (M.L.); urticoria.

[முள் + சிரங்கு→முள்ளுச்சிரங்கு.]

முள்ளுச்சீங்கை *mullu-c-cīngai,* பெ.(n.) முள்ளுச் சீயக்காய் மரம்; soap nut tree - *Acacia pinnata* (சா.அக.).

முள்ளுச்சீத்தா *mullu-c-cīttā,* பெ.(n.) புளிப்பலா; a plant, *Anona muricata* (சா.அக.).

[முள் + சீத்தா.]

முள்ளுச்சீயக்காய் *mullu-c-cīyakkāy,* பெ.(n.) சீயக்காய்; soap-nut tree, *Acacia pinnata* (சா.அக.).

[முள் + சீயக்காய்.]

முள்ளுச்சுண்டெலி *mullu-c-cundeli,* பெ.(n.) முட்போன்ற மயிருள்ள வயற் சுண்டெலி வகை; spiny mouse, a kind of field mouse, as having fine spinous fur.

[முள் + சுண்டெலி → முள்ளுச்சுண்டெலி.]

முள்ளுச்சுறா *mullu-c-curā,* பெ.(n.) சுறா மீன் வகை; a kind of shark fish.

[முள் + சுறா.]

முள்ளுச்சூலி *mullu-c-cūli,* பெ.(n.) சதுரக் கள்ளி; a spurge, *Euphorbia quadrangularis* (சா.அக.).

முள்ளுடுப்பை *mulludu-p-pai,* பெ.(n.) கொட்டையிலந்தை (L.); woody - fruited jujube.

முள்ளுடைமூலம் *mulludai-mūlam,* பெ.(n.) 1. முட்செடிப் பொது (பிங்.); thorny plant. 2. முட்கள் பொருந்திய வேர் (வின்.); spiked root.

[முள் + உடை + மூலம்.]

முள்ளுநங்கை *mullu-nangai,* பெ.(n.) பாம்பு கடிக்குப் பயன்படுத்தும் ஒருவகை வேர்; a kind of root used as an antidote in snake poisons.

முள்ளுநாயகம் *mullu-nāyagam,* பெ.(n.) தைத்த முள்ளை வெளிப்படுத்துங் குணமுள்ள இலைகளை யுடைய கொடி வகை; a creeper whose leaves are used in extracting thorns.

முள்ளுப்பபடுகளம் *mu!!u-p-padukalam*, வேண்டுதலை நிறைவேற்றுதற்கு மக்கள் படுக்கும் முள்ளாலான படுக்கை (இ.வ.); bed of thorns or spikes on which people lie in fulfilment of vows.

[முள் + படுகளம்.]

முள்ளுப்பலகை *mu!!u-p-palagai*, பெ.(n.) கொத்துப் பலகையின் மறுபெயர்; other name for the wooden plank which helps to grub salt from the salt - pan.

[முள் + பலகை.]

முள்ளுப்பலா *mu!!u-p-palā*, பெ.(n.) பலா மரவகை (யாழ்.அக.); a kind of jack-fruit tree.

[முள் + பலா.]

முள்ளுப்பலாச்சி *mu!!u-p-palācci*, பெ.(n.) வெளிறின பழுப்பு நிறமுள்ளதும் 25.5 விரலம் (அங்குலம்) நீளம் வளர்வதுமான கடல் மீன் வகை; sea - porcupine, light brown, attaining 25.5 inch in length.

முள்ளுப்போட்டடை-த்தல் *mu!!u-p-pōttadai-*, 4 செ.குன்றாவி.(v.t.) முட்கள் நிறைந்த பூண்டுகளைக் கொண்டு வேலி வைத்தல் (வின்.); to hedge with thorny shrubs.

[முள் + போடு + அடை-த்தல்.]

முள்ளுப்போடு-தல் *mu!!u-p-pōdu-*, 20 செ.கு.வி.(v.i.) இடையூறு செய்தல்; to throw obstacles in one's way.

[முள் + போடு-தல்.]

முள்ளுமுருக்கு *mu!!u-murukku*, பெ.(n.) 1. ஒருவகை மரம்; East Indian coral tree, *Erythrina indica*. 2. வெள்ளைக் கலியாண முருக்கு (L.); coral tree of the Eastern Ghats. 3. முண் முருக்கு (L.); coral tree of the Western Ghats. 4. புரசமரம்; palas tree. 5. மரவகை; holly leaved berberry.

[முள் + முருக்கு.]

முள்ளுமுருங்கை *mu!!u-murungai*, பெ.(n.) 1. முள்ளுமுருக்கு பார்க்க; see *mu!!u-murukku*. 2. மரவகை; holly - leaved berberry, *Berberis nepalensis*.

[முள் + முருங்கை.]

முள்ளுவாங்கி *mu!!u-vāngi*, பெ.(n.) முள் வாங்கி பார்க்க; see *mu!-vāngi*.

[முள் + வாங்கி → முள்ளுவாங்கி.]

முள்ளுவாடி *mu!!u-vādi*, பெ.(n.) தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரியிலிருந்து ஏறத்தாழ 30 கல்லண்மாத்திரி (கிலோ மீட்டர்) தொலைவிலுள்ள ஊர்; a city in Tarmapuri district, 30 k.m. away from Tarmapuri. *அக்காலத்தில் முட்செடிகள் நிறைந்த காடாக இருந்தமையால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.*

முள்ளுவாயு *mu!!u-vāyu*, பெ.(n.) முள் குத்தினால் உண்டாகும் வலியைப் போல, வலியை உண்டாக்கும் ஒரு வகைக் காற்றுப் பிடிப்பு நோய்; a kind of rheumatism attended with shooting pin prick pain.

[முள் + Skt. வாயு.]

முள்ளுவாளை *mu!!u-vālai*, பெ.(n.) மீன் வகை; a kind of fish.

முள்ளுவெள்ளரி *mu!!u-vellari*, பெ.(n.) முள்வெள்ளரி பார்க்க; see *mu!-vellari*.

ஆண் உறுப்புக்கு பெருஞ்சுரப்பியை உண்டாக்கும் காய் (சா.அக.).

முள்ளுவேங்கை *mu!!u-vēṅgai,* பெ.(n.) மலைவேங்கை மரம் (L.); spinous kino-tree.

[முள் + வேங்கை.]

முள்ளுளி *mu!-!-u!i,* பெ.(n.) கற்றச்சரின் உளி வகை; stone - cutter's smoothing chisel.

[முள் + உளி.]

முள்ளூர்க்கானம் *mu!!ūr-k-kāṉam,* பெ.(n.) முள்ளூர் என்னும் ஊரையடுத்த காடு; a forest near *Mu!!ūr. "முள்ளூர்க் கான நாற வந்து நள்ளென் கங்குல்" (குறுந்.312:3).*

முள்ளூர்மலை *mu!!ūr-malai,* பெ.(n.) மலையமான் திருமுடிக்காரியின் மலை; a mountain belonging to *Malayamāṉ Tirumuḍi-k-kāri. "முள்ளூர் மன்னன் கழல் தொடிக்காரி" (அகநா.209:12), "பயன்கெழு முள்ளூர்" (புறநா.123).*

[முள்ளூர் + மலை.]

இம்மலை தற்போது செஞ்சி வட்டத்தில் உள்ளது. கடையேழு வள்ளல்களில் ஒருவரான மலையமான் திருமுடிக்காரியின் மலை. சோழன் இராயசூயம்வேட்ட பெருநற்கிள்ளி பகைவர்க்கஞ்சி இம்மலையில் பல நாள் மறைந்திருந்தான் என்று புறநானூறு கூறுகிறது.

முள்ளெடுக்கி *mu!-!-eḍukki,* பெ.(n.) முள்வாங்கி பார்க்க; see *mu!-vāṅgi.*

[முள் + எடுக்கி.]

முள் எடுக்கும் சிறிய இடுக்கியும், காதில் அழுக்கு எடுக்கும் குச்சி போன்ற தகடும் இணைந்த கருவி (முள் இடுக்கி).

முள்ளெலி *mu!-!-eli,* பெ.(n.) எலிவகை (M.M.290); a hedge-hog, *Erinaceus micropus.*

[முள் + எலி.]

முள்ளெலும்பு *mu!-!-elumbu,* பெ.(n.) முள்ளந்தண்டின் எலும்பு; vertebra.

மறுவ. தண்டுவடம்.

[முள் + எலும்பு.]

நடுவில் துளை உடையதும் ஒன்றன் கீழ் ஒன்றாக அடுக்கி அமைந்து இருப்பதுமான வளைய வடிவிலான எலும்பு.

முளகரணை *mu!akaraṇai,* பெ.(n.) மிளகு கரணை (வின்.); lopez root.

தெ. மொளககூர.

[மிளகுகரணை → முளகரணை.]

முளகரியம் *mu!akariyam,* பெ.(n.) அகத்தி (சங்.அக.); West Indian pea- tree.

முளகாய் *mu!a-kāy,* பெ.(n.) மிளகாய்; chilly (சா.அக.).

[மிளகாய்→முளகாய் (கொ.வ.).]

முளகி *mu!agi,* பெ.(n.) மிளகுச்சம்பா நெல் வகை; a Šambā paddy of superior quality (சா.அக.).

[மிளகி → முளகி.]

முளகு *mu!agu,* பெ.(n.) கருப்பு மிளகு; black pepper (சா.அக.).

[மிளகு → முளகு (கொ.வ.).]

முளச்சூரிச்சி *mu!a-c-cūricci,* பெ.(n.) தூதுவளை; a prickly Climber - *Solanum trilobatum* (சா.அக.).

முளராவள்ளி *mu!arā-va!!i,* பெ.(n.) மரவள்ளி; tapioca - *Mani hot utilissima* (சா.அக.).

முளரி *muḷari,* பெ.(n.) 1. தாமரை; lotus. *"முளரிமுக நாகம்" (சீவக.2870), "முளரி மருங்கின் முதியோள் சிறுவன்" (புறநா. 278:2).* 2. கோடாகோடி; ten million crores. *"கடாமுகத்த முளரிக் கணக் கவால்" (கம்பரா.வானரர்க.32).*3. நான்முகனு லகம் (தக்கயாகப்.240, உரை); Brahma's world. 4. முட்செடி (பிங்.); bramble. 5. காடு (பிங்.); jungle. 6. முட்கள்ளி; thorny twig, used by birds in building nests. *"முளரியங் குடம்பை"* (நற்.384). 7. விறகு; firewood. *"தகரமுளரி நெருப்பமைத்து" (நெடுநல்.55).* 8. வேள்வி விறகு (யாழ்.அக.); sacrificial fuel. 9. நெருப்பு (பிங்.); fire. 10. கடைக் கொள்ளி (பிங்.); firebrand. 11. காய்ச்சல் (இராசவைத்.163); fever. 12. நுண்மை (சூடா.); subtletly.

தெ. முளலரு; க., ம. முளலர்.

[முள் + அலரி.]

முளரிநாளம் *muḷari-nāḷam,* பெ.(n.) தாமரை வளையம்; the coil of the stalk of the lotus.

[முளரி + நாளம்.]

முளரிப்பகை *muḷari-p-pagai,* பெ.(n.) நிலவு; moon, as the enemy of the lotus.

[முளரி + பகை.]

முளரிப்பாவை *mulari-p-pāvai,* பெ.(n.) செந்தாமரை மலரில் இருக்கும் அலைமகள் (இலக்குமி); Laksmi, as seated on a lotus. *"பவளவாய் முளரிப்பாவை" (பாகவத.i, பரிட்சித்துவின்.64).*

[முளரி + பாவை.]

முளரியான் *muḷariyāṉ,* பெ.(n.) தாமரை மலரில் இருக்கும் நான்முகன்; *Brahmā,* a seated on a lotus.

[முளரி → முளரியான்.]

முளவு¹ *muḷavu,* பெ.(n.) 1. முள்ளம் பன்றி; porcupine, *Hystrix leucura. "முளவுமாத் தொலைச்சிய" (புறநா.325:5).* 2. முட்கோல்; goad. *"முளவுகோல் கயிறுபற்றி" (கந்தபு. சூர. வதை.45).*

[முள் → முளவு.]

முளவு² *muḷavu,* பெ.(n.) 1. முள்; thorn. 2. முட்புதர்; thorn shrub. 3. முண் முருங்கை; East Indian coral tree. *"முளவு முருக்கு முருங்க வொற்றி" (பெருங். உஞ்சை. நரும.51:44).*

[முள் → முளவு.]

முளா *muḷā,* பெ.(n.) முள்ளம் பன்றி (நாமதீப. 221); porcupine.

மறுவ. முளவு

[முள் → முளா.]

முளா² *muḷā,* பெ.(n.) முள்ளங்கி (மலை.) பார்க்க; see *muḷḷaṅgi.*

முளி¹–தல் *muḷi-,*2 செ.கு.வி.(v.i.) 1. உலர்தல்; to dry. *"முளிமுதல் மூழ்கிய வெம்மை" (கலித்.16), "முளிபுற் கானங் குழைப்பக் கல்லென" (புறநா.160:2), "முளியிலை கழித்தன முகிழிணை ரொடுவரு" (நற்.53:7).* 2. வேதல்; to burn; to be scorched. *"ஆரெயி லோரழ லம்பின் முளிய" (பரிபா.5:25).* 3. கெடுதல்; to perish. *"முளிந்த தீவினையான்" (விநாயகபு. 22:2).* 4. முற்றுதல்; to mature. *"முளிபுல்லுங் கானமுஞ் சேரார்" (ஆசாரக்.57).* 5. தோய்தல்; to curdle. *"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்" (குறுந்.167).*

க. முளி.

முளி²–த்தல் *muḷi-*, 4 செ.கு.வி.(v.i.) 1. உலர்தல் (நாமதீப.757); to dry. 2. வறத்தல் (யாழ்.அக.); to become dried. 3. காய்தல் (யாழ்.அக.); to become scorched.

முளி³–தல் *muḷi-*, 2 செ.கு.வி.(v.i.) பொங்குதல்; to boil up. *சோறு முளிந்து வருகிறது (உ.வ.).*

[மிளிர் →மிளி →முளி →முளி–தல்.]

முளி⁴ *muḷi*, பெ.(n.) 1. உலர்ச்சி; dryness. *"முளிவெள்ளெலும்பும்" (தேவா.326, 6).* 2. வாட்டம் (பிங்.); faded condition. 3. வற்றிய பொருள்; that which is dry. *நெல்லிமுளி.*

முளி⁵ *muḷi*, பெ.(n.) 1. உடல் மூட்டு; joint of the body. *"திகழ்முச் சாணென்பு முளியற" (தத்துவப்.133).* 2. மரக்கணு (யாழ்.அக.); knot in trees. 3. கணுக்கால் (வின்.); ankle.

[முழி → முளி⁵.]

முளி⁶ *muḷi*, பெ.(n.) செம்முள்ளிச் செடி வகை (தைலவ. தைல.72); thorny nail-dye.

[முள் → முளி⁶.]

முளிதயிர் *muḷi-tayir*, பெ.(n.) இறுகிய கட்டித்தயிர்; thick curd. *"முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்" (குறுந்.167:1).*

[முளி + தயிர்.]

முளிவெதிர் *muḷi-vedir*, பெ.(n.) உலர்ந்த மூங்கில்; tried bamboo. *"முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ் தாங்கரு நீர்ச்சுரத் தெறிந்து வாங்குவிசை" (குறுந்.304:2).*

[முளி + வெதிர். வெதிர் = மூங்கில்.]

முளு–தல் *muḷu-*, 2 செ.கு.வி.(v.i.) முளி³–தல் பார்க்க; see *muḷi³-*. *சோறு முளுந்து வருகிறது (இ.வ.).*

[முளி →முளு→ முளு–தல்.]

முளை¹–த்தல் *muḷai-*, 4 செ.கு.வி.(v.i.) 1. பயிரில் முளை முதலியன தோன்றுதல்; to spring, to sprout, as shoots; to germinate as seeds. *நிலத்தில் போட்ட விதை முளைத்துவிட்டது (உ.வ.). "ஒன்றாய் முளைத்தெழுந்து" (திருவாச.10: 8).* 2. கதிரவன் தோன்றுதல்; to rise, appear, come to light. *"காலை ஞாயிறு கதிர்விரித்து முளைப்ப" (மணிமே.8:18). வெள்ளி முளைத்துவிட்டது.* 3. உடலில் புதிதாக உறுப்புகள் வளர்தல்; to grow as teeth, horns, hair. *மாட்டுக்குக் கொம்பு முளைத்து விட்டது (உ.வ.), பையனுக்கு மீசை முளைக்க ஆரம்பித்துவிட்டது (உ.வ.).*

ம. முளை; க. மொளெ; தெ. மொலத்சு.

[முல் →முள் →முளை →முளை–த்தல்.]

முளை²–தல் *muḷai*, 2 செ.கு.வி.(v.i.) முளை¹–த்தல் பார்க்க; see *muḷai¹-*. *போட்ட விதை இன்னும் முளையவில்லை (உ.வ.).*

[முல் →முள் →முளை →முளை–த்தல்.]

முளை³ *muḷai*, பெ.(n.) 1. வித்தினின்று முளைத்த சிறு வெளிப்பாடு; shoot, tender shoot of trees or plants, seed - leaf. *"வித்திய வெண்முளை" (ஐங்குறு.29). "முற்றா மூங்கில் முளைதரு பூட்டும்" (அகநா.85:8). "இருவெதிர் ஈன்ற ஏற்றிலைக் கொழுமுளை" (நற்.116:4). "வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்" (புறநா. 73:10). பயறு முளைவிட்டுள்ளது. வயலில் போட்ட உளுந்து முளைத்துவிட்டது. அந்த இடத்தில் புல்கூட முளைக்கவில்லை.* 2. மரக்கன்று; young tender plant, seedling. *"அதன்றாள் வழியே*

முளையோங்குபு" (சீவக.223). 3. மூங்கில் (பிங்.); bamboo.

தெ. மொலக; க. மொளெ; ம. முள; து. முளெ.

E. shoot, to dart; to thrust forward; to send forth new parts, as a plant (சு.வி.42).

[முள் → முளை = முற்படும் அல்லது முட்டும் வேர் (சு.வி.42).]

முளை[4] *mu!ai,* பெ.(n.) 1. தண்டாய்தம் (பிங்.); club with knobs. *"முசுண்டியு முளையும்" (கம்பரா.பிரமாத்.108).* 2. குறுந்தறி; peg, stake. *"குத்து முளை செறித்த விதானத்து" (பெருங்.இலாவாண.5:24). கன்றை முளை அடித்துக்கட்டு.* 3. திரிகையின் அச்சு (இ.வ.); pivot, as of a millstone. 4. திரிகையின் கைப்பிடி (இ.வ.); handle, as of a millstone. 5. பிளப்பில் அடிக்க உதவும் கூர்மையான சிறிய மரத்துண்டு; wedge-shaped piece of wood used for tightening or securing. *மரப்பிளப்பில் ஒரு முளையை அடித்துப் பையை மாட்டு.* 6. முனை; sharp end or point. *"முள் ளுறழ் முளை யெயிற்று" (கலித்.4).*

[முளை[3] → முளை[4].]

முளை[5] *mu!ai,* பெ.(n.) 1. தோலில் எழும் கட்டியின் முளை; core of a boil. *கட்டி உடைந்தாலும் முளை வெளிவரவில்லை.* 2. மூலமுளை; piles.

[முளை[3] → முளை[5].]

முளை[6] *mu!ai,* பெ.(n.) 1. கதவு முதலியவற்றின் குடுமி; pivot, pin of a door. 2. நாதாங்கி மாட்ட உதவும் கதவுறுப்பு (வின்.); staple of a padlock. 3. முத்திரையச்சு (யாழ்.அக.);die. 4. ஒரு பழைய நாணயம்; an ancient coin.

[முளை[3] → முளை[6].]

முளை[7] *mu!ai,* பெ.(n.) 1. இளமை; tenderness. *"முளையமை திங்கள்" (கம்பரா.கும்பக.16).* 2. சிறுகுழந்தை; little child. 3. மகன் (பிங்.); son.

ம.முள; து.முளெ; க.மொளெ; தெ. மொலக்க.

[முல் → முள் → முளை. முல் – இளமைக் கருத்துவேர்.]

முளைக்கட்டு–தல் *mu!ai-k-kattu-,* 5 செ. குன்றாவி.(v.t.) 1. செம்மண்ணால் துவரை முதலிய பயறுவகைகளைப் பதம் செய்தல்; to season pigeon - pea by mixing it with wet red loam, in preparing dholl. 2. ஊறவைத்த விதையை நீரில்லாமல் மூடி வைத்து முளை வரும்படி செய்தல்; process pulses by making them sprout. *முளைக்கட்டிய கொத்துக் கடலையில் புரதச் சத்து அதிகம்.*

[முளை[3] + கட்டு–தல்.]

முளைக்காசரி *mu!ai-k-kāšari,* பெ.(n.) மரக்காளான்; mushroom growing on a tree (சா.அக.).

முளைக்காம்பு *mu!ai-k-kāmbu,* பெ.(n.) சிறு தடி; pole or stake set up on the ground to tie the cow, and other cattles, yoke. *கொட்டகையில் மாடு கட்டுவதற்காகத் தரையில் அறையப் பட்டிருக்கும் சிறுதடி. தறி முள்ளங் குச்சி என்றும் கூறுவர். தரையில் மாடுகட்ட முளைக்காம்பு அடிச்சிட்டியா?*

[முளை + காம்பு.]

முளைக்காற்கோதை *mu!ai-k-kār-kōdai,* பெ.(n.) நெல் முளைகளால் தொடுக்கப்பட்ட மாலை; a garland of

paddy-sprouts. *"முளைக்காற் கோதை துயல்வர" (பெருங். இலாவாண.5:23).*

[முளை³ + கால் + கோதை.]

முளைக்கீரை *muḷai-k-kīrai,* பெ.(n.) உணவுக்குப் பயன்படும் கீரை வகை; a kind of edible greens.

தெ. மொலக்கீர

[முளை³ + கீரை.]

இது இளஞ்சிவப்பு நிறக்காம்புகளையும் சிறு சிறு இலைகளையும் உடைய கீரை வகை.

முளைக்குச்சி *muḷai-k-kucci,* பெ.(n.) நுகத்தடியில் பூட்டுங்கோல் (உ.வ.); pin, as of a yoke.

[முளை + குச்சி.]

முளைக்குச்சு *muḷai-k-kuccu,* பெ.(n.) முளைக்குச்சி பார்க்க; see *muḷai-k-kucci.*

[முளை + குச்சு.]

முளைக்குடம் *muḷai-k-kuḍam,* பெ.(n.) திருமணம் போன்ற விழாக்களில் வைக்கப்படும் முளைவிட்ட ஒன்பான் தவசங்கள் நிறைந்த மட்பாண்டம்; pot in which nine kinds of pulses are sown and allowed to sprout on auspicious occasions. *"முளைக்குடந் தூபம்... வைம்மின்" (திருவாச.9:1).*

[முளை + குடம்.]

முளைக்கூச்சு *muḷai-k-kūccu,* பெ.(n.) முளைக்குச்சி (யாழ்.அக.) பார்க்க; see *muḷai-k-kucci.*

[முளைக்குச்சி → முளைக்கூச்சு.]

முளைக்கூர்ச்சு *muḷai-k-kūrccu,* பெ.(n.) முளைக்குச்சி (வின்.) பார்க்க; see *muḷai-k-kucci.*

[முளைக்குச்சி → முளைக்கூர்ச்சு.]

முளைக்கேசிகம் *muḷai-k-kēšigam,* பெ.(n.) வெண்துத்திப் பூக்கள்; abutilon with white flowers (சா.அக.).

முளைக்கொட்டு¹-தல் *muḷai-k-koṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) முளைக் கட்டு-தல் பார்க்க; see *muḷai-k-kaṭṭu-.*

[முளை + கொட்டு-தல்.]

முளைக்கொட்டு² *muḷai-k-koṭṭu,* பெ.(n.) 1. கரகமெடுத்தல் போன்ற விழாக்களின் இறுதியில் மகளிர் முளைப் பாலிகையை எடுத்துக் கொண்டு போய் நீரில் விடுஞ்செயல் (இ.வ.); ceremony of women taking the muḷai-k-kuḍam to a river or tank and casting it away, as at the close of a *karagam* festival. 2. மகளிர் முளைப் பாலிகையைச் சுற்றி ஆடும் கும்மிக் கூத்து (வின்.); singing and dancing by women around pots of growing sprouts (w.).

மறுவ. முளைப்பாலிகை கொட்டு

[முளை + கொட்டு.]

முளைக்கோடு *muḷai-k-kōḍu,* பெ.(n.) மூங்கில் முளை போன்ற கொம்பு; horn as like a bamboo bud. *"நாகுபிடி நயந்த முளைக்கோட்டிளங்களிறு" (குறுந்.346: 1).*

[முளை + கோடு.]

முளைக்கோல் *muḷai-k-kōl,* பெ.(n.) நிலத்தில் அடித்த கோல்; pole or stake set

up on the ground. *"முளைக்கோற் பெருந்திரை வளைத்த வட்டத்து" (பெருங். உஞ்சைக். 47:45).*

[முளை + கோல்.]

முளைகட்டல் *mulai-kattal,* பெ.(n.) திருமணம் முதலிய நிகழ்வின் போது ஒன்பான் தவசங்களைப் பாலிகைளில் விதைக்கும் ஒரு சடங்கு; ceremony of sowing nine kinds of seeds in pots and allowing them to sprout, as in weddings, festivals, etc.

[முளை + கட்டல். கட்டல் = முளை தோன்றுவதற்காக தவசத்தை விதைத்தல்.]

முளைகட்டு-தல் *mulai-kattu-,* 5 செ.கு.வி. (v.i.) முளைக்கட்டு-தல் பார்க்க; see *mulai-k-kattu-.*

முளைகடாவு[1]-தல் *mulai-kadāvu-,* 5 செ.கு.வி. (v.i.) ஆப்படித்தல்; to drive a wedge.

[முளை + கடாவு-தல்.]

முளைகடாவு[2]-தல் *mulai-kadāvu-,* 5 செ. குன்றாவி. (v.t.) அடக்கி வைத்தல்; to restrain, restirct.

[முளை + கடாவு-தல்.]

முளைச்சாறுமூலி *mulai-c-cāru-mūli,* பெ.(n.) பாலூட்டி வகைகளில் ஆண்பால் உறுப்புக்கு இணையான சுரப்பிக் கூட்டத்தால் ஆன பெருஞ்சுரப்பிச் செடி; a prostate plant - *Gratiola moniera* (சா.அக.).

முளைத்தண்டு *mulai-t-tandu,* பெ.(n.) முளைக்கீரை (இ.வ.) பார்க்க; see *mulai-k-kīrai.*

[முளை + தண்டு.]

முளைத்தண்ணீர் *mulai-t-tannīr,* பெ. (n.) 1. நெல் முளைக்குப் பாய்ச்சிய நீர்; water for seedings. 2. முளை கிளம்பியதும் வயலினின்று வடிக்கும் நீர் (இ.வ.); water drained from fields after the sprouting of the seeds.

[முளை + தண்ணீர்.]

முளைத்தவசம் *mulai-t-tavašam,* பெ.(n.) 1. ஒன்பான் தவசம் (நவதானியம்); the nine kinds of grain. 2. ஊற வைத்து முளையுண்டான பின் உலர்த்தி வறுத்த தவசம்; malt; grain steeped in water and dried in a kiln.

[முளை + தவசம்.]

முளைத்தாலி *mulai-t-tāli,* பெ.(n.) 1. கழுத்தணியிற் கோக்கும் முளைபோன்ற பொன்னகை (திவ்.திருப்பா.7, வியா. பக்.99); a kind of gold bead for stringing in a necklace, shaped like tender shoots. 2. சிறுமியர் கழுத்திலணியப் பெறும் சிறுமணி மாலை; a kind of neck-lace worn by girl-child.

[முளை + தாலி.]

முளைத்தாழ்வு *mulai-t-tālvu,* பெ.(n.) விதை முளையாமை (வின்.); failure of seeds to sprout.

[முளை + தாழ்வு.]

தரம் தாழ்வான, குறைவான விதையாகையால் முளைப்பதில்லை.

முளைத்தானியம் *mulai-t-tāniyam,* பெ.(n.) முளைத்தவசம் பார்க்க; see *mulai-t-tavašam.*

[முளை + Skt. தானியம்.]

முளைத்திங்கள் *mul̥ai-t-tiṅgal̥,* பெ.(n.) பிறை நிலவு; crescent moon. *"முளைத் திங்கள் சூடி" (தேவா.257, 2).*

[முளை + திங்கள்.]

முளைத்தேங்காய் *mul̥ai-t-tēṅgāy,* பெ. (n.) முளைவிட்ட தேங்காய் (உ.வ.); coconut that has sprouted before planting.

[முளை + தேங்காய்.]

முளைதெளி-த்தல் *mul̥ai-tel̥i-,*4 செ.கு.வி. (v.i.) 1. திருமணம் போன்ற விழாக்களில் பாலிகைகளில் ஒன்பான் தவசங்களை விதைத்தல் (இ.வ.); to perform the ceremony of sowing nine kinds of seeds in pots, as at wedding, festivals, etc. 2. முளைத்த விதையை வயலில் விதைத்தல் (வின்.); to sow a field with grains that have been allowed to sprout.

[முளை + தெளி-தல்.]

முளைப்பயறு *mul̥ai-p-payaṟu,* பெ.(n.) முளையுடன் கூடிய பயறு; pulses which have just sprouted.

[முளை + பயறு.]

முளைப்பருப்பு *mul̥ai-p-paruppu,* பெ.(n.) செம்மண் கொண்டு முளைகட்டிய பருப்பு; dholl prepared from pigeon - pea seasoned by mixing it with wet red loam.

[முளை + பருப்பு.]

முளைப்பாரி *mul̥ai-p-pāri,* பெ.(n.) 1. முளைப் பாலிகை பார்க்க; see *mul̥ai-p-pāligai.* 2. வீட்டில் யாராவது இறந்தபின் ஒன்பான் தவசங்களை (நவதானியங்களை) விதைத்து, அது வளரும் செழிப்பை பொருத்து, குடும்ப நன்மை தீமைகள் கணிக்கப்படும்; a custom of sowing the nine pulses in a pot, after one's death in a house and foretell the good or bad times that come's to the following years by its growth.

[முளை + பாரி.]

முளைப்பாலிகை *mul̥ai-p-pāligai,* பெ. (n.) திருமணம் போன்ற விழாவுக்காக ஒன்பான் தவசங்கள் (நவதானியம்) முளைக்க வைத்த மட்பாண்டம்; pot in which nine kinds of seeds are sown, as at weddings, festivals, etc. *"வெண்டாமரை முளைப் பாலிகை" (வெங்கைக்கோ.97).*

மறுவ. முளைப்பாரி

[முளை + பாலிகை.]

சிற்றூர்த் தெய்வங்களுக்குக் குறிப்பாகப் பெண் தெய்வங்களுக்கு கன்னி (புரட்டாசி) மாதத்தில் மழை வேண்டி மட்பாண்டங்களில் ஒன்பான் தவசங்களை முளையிட்டு வழிபடும் பழக்கம் இன்றும் கிராம மக்களிடம் காணப்படுகிறது.

முளைப்பு *mul̥aippu,* பெ.(n.) விதைகள் முளைக்கும் செயல்; seeds germination. *புழுதியாக உழுதால் எள் முளைப்புச் சிறப்பாக இருக்கும். வேளாண் அலுவலகம் மூலமாக நல்ல முளைப்புத் திறன் உள்ள விதைகளைப் பெற வேண்டும்.*

[முளை → முளைப்பு.]

முளைப்புழுதிச்செய் *mul̥ai-p-pul̥udi-c-cey,* பெ.(n.) நாற்றங்கால் நிலம்; seedling bed. *"இத்தேவர் திருமுளைப்புழுதி செய்க்குத் தெற்கும்" (தெ.இ.கல்.தொ.8, கல்.585).*

[முளை + புழுதி + செய். நாற்றங்கால் விழுவதற்கு ஏற்ற வகையில் பண்படுத்திய நிலம்.]

முளைமால் *mulai-māl,* பெ.(n.) 1. ஏரியில் நீர்பெருகும் அளவைக் குறித்தற்கு முளையடித்த எல்லைக் கட்டு (இ.வ.); boundary fixed by pegs, marking the utmost spread of water in a tank. 2. ஏரியின் உள்வாயில் விளைச்சல் செய்யக் கூடாதென வரையறுத்த எல்லை (R.T.); a certain limit in the bed of a tank within which cultivation is prohibited.

[முளை + மால்.]

முளைமூலம் *mulai-mūlam,* பெ.(n.) மலவாயில் முளையோடு கூடிய மூல நோய் (பதார்த்த.416, உரை); piles, fistula in ano.

[முளை + மூலம்.]

முளையடி-த்தல் *mulai-y-adi-,*4 செ.கு.வி. (v.i.) 1. முளையை அடித்து உட்செலுத்துதல்; to nail, to drive pegs. 2. காசில் (நாணயத்தில்) முத்திரை பதித்தல் (வின்.); to coin; to stamp metal.

[முளை + அடி-த்தல்.]

முளையரில் *mulai-y-aril,* பெ.(n.) மூங்கிற்றூறு; thicket of bamboos. *"முளையரிற் பிணங்கிய முள்ளுடை யிலவத்து" (பெருங்.உஞ்சைக்.56:9).*

[முளை + அரில்.]

முளையாணி *mulai-y-āni,* பெ.(n.) 1. கதவு நின்றாடும் இரும்புக் குடுமி (யாழ்.அக.); iron pin of a door. 2. தாழ்ப்பாள் விழும் இரும்புக் கூடு (வின்.); staple.

[முளை + ஆணி.]

முளையான் *mulai-y-āṉ,* பெ.(n.) சிறு குழந்தை; little child. *'இந்த முளையான் பேச்சை யார் கேட்கிறது' (வின்.).*

[முளை → முளையான் (வே.க.).]

முளையுருளி *mulai-y-uruli,* பெ.(n.) 1. வாடி யழிந்த பயிர்; withered crops. 2. இளமையிற் கேடடைந்தவன்; person spoilt even in his boyhood.

[முளை + உருள் - முளையுருள் → முளையுருளி.]

முளையெறி-தல் *mulai-y-eṟi-,*2 செ.கு.வி. (v.i.) முளைத்த விதையை வயலில் விசிறுதல்; to sow grain that has been allowed to sprout.

[முளை + எறி-தல்.]

முளைவாளெயிற்றள் *mulai-vāleyiṟṟal,* பெ.(n.) நாணல் முளை போன்ற ஒளியுடைய பல்லினள்; brightness of teeth as like kaus spilt. *"இளையள் முளைவாள் எயிற்றள்" (குறுந்.119:3).*

[முளை + வாள் + எயிற்றள்.]

முளைவிடு-தல் *mulai-vidu-,*20 செ.கு.வி. (v.i.) விதை போன்றவற்றில் இருந்து முளை கிளம்புதல்; germinate, put forth shoots. *அவரைவிதை முளைத்து விட்டது.*

[முளை + விடு-தல்.]

முற்கட்டு *muṟ-kaṭṭu,* பெ.(n.) பாட்டின் தொடக்கத்தில் உள்ள எடுப்பு; the opening section of a song. *"முற்கட்டும் பாகமுஞ் சீர்மோனைகளும்" (விறலிவிடு.493).*

[முள் + கட்டு - முற்கட்டு.]

முற்கந்தெறி-த்தல் *muṟkan-deṟi-,* 4 செ. கு.வி.(v.i.) 1. பல்லி கொட்டுதல்; to cluck, as a lizard. 2. நாவாற் கொட்டுதல் (வின்.); to make a sound with the tongue, like the

cluck of a lizard. 3. உடன்பாடின்மை (சம்மதமின்மை)க் குறிப்பாக ஓசை யெழுப்புதல் (யாழ்.அக.); to express disapprobation by a clucking sound.

[முற்கம்[1] + தெறி-த்தல்.]

முற்கம்[1] *murkam,* பெ.(n.) 1. பல்லி யெழுப்பும் ஒலி; the cluck of a lizard. 2. பல்லியின் ஓசைப் போல் நாவாற் கொட்டும் ஒலி (வின்.); a sound made with the tongue, like the cluck of a lizard. 3. பெருங்குரல் ஓசை (யாழ்.அக.); loud noise.

[முற்கு → முற்கம். முற்கு = எழுத்தில்லாஒலி.]

முற்கம்[2] *murkam,* பெ.(n.) 1. அவரை, துவரை முதலிய பருப்பு வகை; pulse or other leguminous plant. 2. பச்சைப் பயறு, சிறுபயறு; green gram. *"முற்கந் தருவாரும்" (உத்தரரா.அசுவ.30).*

முற்கரம் *murkaram,* பெ.(n.) 1. முசுண்டி என்னும் ஆய்த வகை; sledge - like weapon of war. *"முற்கரங்களு முசலமும்" (கம்பரா. பிரமாத்திர.108).* 2. பெரிய தடி (இலக்.அக.); large club. 3. சம்மட்டி (யாழ்.அக.); hammer.

முற்கரவன் *murkaravan,* பெ.(n.) குபேரன் (திவா.Mss.); Kubera.

முற்கலம் *murkalam,* பெ.(n.) 108 உபநிடதங்களுள் ஒன்று (யாழ்.அக.); an Upanisad, one of 108.

மறுவ. முத்கலை.

முற்காசு *murkāšu,* பெ.(n.) கோரைக் கிழங்கு (சங்.அக.); sedge - tuber a fragrant root of a grass - *Cyperous rot andus.*

முற்கார் *murkār,* பெ.(n.) மடங்கல் மாதத்தில் (ஆவணியில்) விதைக்கும் கார்ப்பயிர் (G.Sm.D.I, i.213); a kār paddy sown in *Avani.*

[முன் + கார் – முன்கார் → முற்கார்.]

முற்கான்னம் *murkānnam,* பெ.(n.) அரிசியும் சிறுபயறும் தேங்காய்த் துருவலுங் கூட்டிச் செய்த சோறு (இலக்.அக.); a kind of preparation made of rice, green-gram and coconut - scrapings.

[முற்கார் + அன்னம்.]

முற்கு *murku,* பெ.(n.) 1. எழுத்திலா ஒலி; inarticulate sound. *'முற்கு வீளை முதலியன' (தொல்.சொல்.1, உரை).* 2. நாவால் கொட்டும் ஒலி (வின்.); a sound made with the tongue, like the cluck of a lizard.

[முக்கு → முற்கு.]

முற்குலத்தோர் *mur-kulattōr,* பெ.(n.) பிராமணர் (பிங்.); Brahmins.

[முன் + குலத்தோர்.]

முற்குளம் *mur-kuḷam,* பெ.(n.) 20வது விண்மீன் (பூராடம்); the 20th naksatra.

[முள் + குளம்.]

முற்கூறு *mur-kūru,* பெ.(n.) 1. முன்பகுதி; earlier part. *"முற்கூற்றால்.... உபாயமாகப் பற்றுகிறது" (அட்டாதச.முமுட்சுப்.திவ்ய.6).* 2. தொடக்கம் (யாழ்.அக.); beginning.

[முன் + கூறு.]

முற்கொழுங்கால் *mur-kolungāl,* பெ.(n.) 25வது நாண்மீன் (பூரட்டாதி) (சூடா.); the 25th naksatra.

மறுவ. முற்கொளுங்கால்

[முன் + கொழுங்கால்.]

முற்கொழுங்கோல் *muṟ-koḻuṅgōl,* பெ. (n.) முற்கொழுங்கால் (யாழ்.அக.) பார்க்க; see *muṟ-koḻuṅgāl.*

மறுவ. முற்கொளுங்கால்

[முன் + கொழுங்கால்.]

முற்கொள்(ளு)–தல் *muṟ-koḷ-,* 10 செ. குன்றாவி. (v.t.) முந்துதல்; to go ahead of; to anticipate. *"முற்கொண்டா னரக்க னென்னா" (கம்பரா.நாகபாச.116). "இவரென் மேல் விடாமுன் முற்கொள்வேன்" (கம்பரா. பிரமாத்.85).*

[முன் + கொள்(ளு)–தல்.]

முற்கொளுங்கால் *muṟ-koḷuṅgāl,* பெ.(n.) முற்கொழுங்கால் (இலக்.அக.) பார்க்க; see *muṟ-koḻuṅgāl.*

[முற்கொழுங்கால் → முற்கொளுங்கால்.]

முற்கோபம் *muṟ-kōbam,* பெ.(n.) முன் கோபம் பார்க்க; see *muṉ-kōbam.*

முற்சனி *muṟ-caṉi,* பெ.(n.) பத்தாவது விண்மீன் (மகம்) (நாமதீப.107); the 10th naksatra.

[முன் + சனி.]

முற்சீர் *muṟ-cīr,* பெ.(n.) முதற்சீர் பார்க்க; see *mudaṟ-cīr. "அசையிரண்டொன்றின் முற்சீர்" (வீரசோ.யாப்.1).*

[முதற்சீர் → முற்சீர்.]

முற்பக்கம் *muṟ-pakkam,* பெ.(n.) 1. முன் பகுதி; the front part. 2. வளர்பிறை (பரிபா.11:31, உரை); bright fortnight, as the earlier part of a lunar month.

[முன் + பக்கம்.]

முற்பகல் *muṟ-pagal,* பெ.(n.) 1. பகற் காலத்தின் முற்பகுதி; forenoon. *"பிறர்க்கின்னா முற்பகற் செய்யின்" (குறள், 319).* 2. முன்னாள் (வின்.); the preceding day. 3. முற்காலம் (வின்.); former time. *முற்பகல் 10.00 மணிக்குத் தேர்வு நடைபெறும். "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" (பழ.).*

தெ.முந்பகலு

[முன் + பகல்..]

முற்பட்ட *muṟpaṭṭa,* பெ.அ.(adj.) காலத்தில் முந்திய; prior in time. *தொல்காப்பியம் கழகக்காலத்துக்கு முற்பட்ட நூல் எனக் கூறலாம்.*

முற்பட்டவகுப்பு *muṟpaṭṭa-vaguppu,* பெ. (n.) கல்விக்கும் பொருளியல் முன்னேற்றத்துக்கும் அரசின் சிறப்புக் கவனம் தேவை இல்லை என்று குறிப்பிடப்பட்ட இனம்; the communities not included in the list of backward communities, scheduled castes and tribes; other communities.

[முற்பட்ட + வகுப்பு.]

முற்படர்–தல் *muṟ-paḍar-,* 2 செ.கு.வி. (v.i.) 1. முன்னே செல்லுதல்; to go before. 2. மேம்படுதல்; to become exalted. *"முற்படர்ந்த மொழி மிகுத்தன்று" (பு.வெ. 9:32).*

[முன் + படர்–தல்.]

முற்படிரம் *muṟ-paḍiram,* பெ.(n.) சந்தனம்; sandal wood.

முற்படு–தல் *muṟ-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. ஒரு செயலைச் செய்ய முயலுதல் அல்லது

தொடங்குதல்; attempt or begin to do something. *கையை ஓங்கிக் கொண்டு அடிக்கப் போனவனைத் தடுக்க முற்பட்டார். எரிபொருள் பற்றாக்குறை என்பதற்காகக் காடுகளை அழிக்க முற்படக் கூடாது.* **2.** காலத்தில் முன்னதாக அமைதல்; precede in time. *இந்த இலக்கண நூல் பதினெட்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகக் கருதப் படுகிறது.* **3.** முந்துதல்; to precede, go ahead. **4.** முன் அமைதல்; to come before. *"பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்" (தொல். சொல்.286).* **5.** எதிர்ப்படுதல்; to meet. *"சிறுமந்தி முற்பட்ட தந்தையை" (நாலடி, 237).*

[முன் + படு–தல்.]

முற்பணம் *muṟ-paṇam,* பெ.(n.) எதையும் வாங்கியதற்கு அடையாளமாகக் கொடுக்கும் முன்பணம் (அச்சாரம்); advance, earnest money. *"முற்பணந் தாரும்" (திருப்பு.730).*

[முன் + பணம்.]

முற்பவம்[1] *muṟ-pavam,* பெ.(n.) முற்பிறப்பு; past birth. *"முற்பவத்திற் செய்த வினை" (வாக்குண்.20).*

[முன் + Skt. பவம்.]

முற்பவம்[2] *muṟ-pavam,* பெ.(n.) **1.** இப்பிறப்பில் முன்செய்த தீவினை; past sins of the present birth. **2.** முற்பிறவியில் செய்த தீவினை; sins of past birth.

[முன் + Skt. பவம்.]

முற்பழி *muṟ-paḻi,* பெ.(n.) முற்பவம்[2] (யாழ்.அக.) பார்க்க; see *muṟ-pavam*[2].

[முன் + பழி.]

முற்பனி *muṟ-paṉi,* பெ.(n.) முன்பனி (பிங்.) பார்க்க; see *muṉ-paṉi.*

[முன்பனி → முற்பனி.]

முற்பா *muṟ-pā,* பெ.(n.) செய்யுளியற்றும் நான்கு வகைப் பாவினுள் முதலாவதாகிய வெண்பா (சூடா.); *Veṇpā* as the first of the four main metres in Tamil.

மறுவ. வெண்பா.

[முன் + பா.]

முற்பாடன் *muṟ-pāḍaṉ,* பெ.(n.) முற்பட்டவன்; one who is ahead of others or first. *"ஆர்த்திக்கு முற்பாடனாய்" (திவ்.திருப்பா.4, வியா.பக்.73).*

[முற்பாடு → முற்பாடன்.]

முற்பாடு *muṟ-pāḍu,* பெ.(n.) **1.** முற்படுகை; being first or in advance. *'இன்பனா மிடத்தில் முற்பாடு இங்கேயாய்' (ஈடு, 4. 5:8).* **2.** முன்னிடம்; front. *'பகைவர்நாட் டெல்லையின் முற்பாடு சென்றுவிட்ட தூசிப்பெரும்படை' (பதிற்றுப்.33:5, உரை).*

[முன் + படு – முற்படு → முற்பாடு.]

முற்பாடை *muṟ-pāḍai,* பெ.(n.) மாட்டுக் குற்றம் (பெ.மாட்.21); a defect in cattle.

முற்பாதி *muṟ-pādi,* பெ.(n.) முந்திய பகுதி (வின்.); the first or earlier half.

[முன் + பாதி. பகுதி →பாதி.]

முற்பார் *muṟ-pār,* பெ.(n.) முற்பாதி (யாழ். அக.) பார்க்க; see *muṟ-pādi.*

முற்பால் *muṟ-pāl,* பெ.(n.) முன்பு பார்க்க; see *muṉbu. "முற்பானிகழ்ந்தவும்" (பெருங். இலாவாண.11:162).*

[முன் + பால்.]

முற்பாற்கிழமை *muṟ-pāṟ-kiḻamai,* பெ. (n.) பழமையான நட்புரிமை; long standing attachment, enduring friendship. *"முற்பாற் கிழமை முதலற வின்றி" (பெருங். மகத.18:25).*

[முற்பால் + கிழமை.]

முற்பிறப்பு *muṟ-piṟappu,* பெ.(n.) இந்து மத நம்பிக்கையின்படி இப்போதைய பிறவிக்கு முந்தைய பிறவி; previous birth. *அவன் முற்பிறப்பில் செய்த நல்வினை. "முற்பிறப்பில் செய்தவினை இப்பிறப்பில் மூண்டது" (பழ.).*

[முன் + பிறப்பு.]

முற்பிறவி *muṟ-piṟavi,* பெ.(n.) இந்து மத நம்பிக்கையின்படி இப்போதைய பிறவிக்கு முந்தைய பிறவி; past birth.

[முன் + பிறவி.]

முற்பூண் *muṟ-pūṇ,* பெ.(n.) திருமங்கல நாண்; marriage-badge. *"தெம்மாதர் முற்பூண்கவர் மன்னன்" (பாரத. திரௌபதி. 87).*

[முன் + பூண்.]

முற்பெரியான் *muṟ-periyāṉ,* பெ.(n.) நான்முகன்; *Brahmā. "முற்பெரியானை யாகத்திருப்பை யான்முடிந்து" (சீவக.2464).*

[முன் + பெரியான்.]

முற்போக்கு *muṟ-pōkku,* பெ.(n.) முன்னேற்றத்திற்குத் தேவையான மாற்றங்களை ஏற்கத் தயங்காத போக்கு; being progressive. *முற்போக்கான எண்ணம். அரசின் முற்போக்குக் கொள்கைகள்.*

[முன் + போக்கு.]

முற்ற *muṟṟa,* கு.வி.எ.(adv.) 1. முழுதும்; entirely, fully, totally. *"முற்ற மண்ணிடந்தாவி" (திவ்.நாய்ச்.2:9).* 2. மிகவும்; exceedingly. *"முற்ற மூத்து" (திவ். பெரியதி. 1. 3:1).* 3. முடிய; unto the end.

தெ. முட்ட.

[முற்று → முற்ற.]

முற்றகப்படு-தல் *muṟṟaga-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) முற்றுகையில் அகப்படுதல்; to be caught in a siege. *'முற்றகப்பட்டோனை முற்றுவிடுத்தலும்' (தொல்.பொருள்.181, உரை).*

தெ. முட்டதிபடுத.

[முற்று + அகப்படு-தல்.]

முற்றத்திற்குப்போ-தல் *muṟṟattiṟku-p-pō-,* 8 செ.கு.வி.(v.i.) சிறுநீர் போதல் (பிராமணர் வழக்கு); to pass urine.

[முற்றம் + போதல் - முற்றம்போ-தல் → முற்றத்திற்குப்போ-தல்.]

முற்றத்துற-த்தல் *muṟṟa-t-tuṟa-,* 3 செ. குன்றாவி.(v.t.) முழுதுந்துறத்தல்; to renounce completely. *'முற்றத்துறந்தார் வீட்டினைத் தலைப்பட்டார்' (குறள், 348, உரை).*

[முற்ற + துற-த்தல்.]

முற்றம் *muṟṟam,* பெ.(n.) 1. வீட்டுள் முன்னிடம்; courtyard of a house. *"மணன் மலிமுற்றம் புக்க சான்றோர்" (புறநா.178).* 2. தொட்டி முற்றம், வீட்டின் நான்கு கட்டுகளுக்கு நடுவில் கூரையில்லாமல் இருக்கும் பகுதி; inner yard of a house without roof. 3. ஊரின் வெளியிடம்; esplanade, open space.

"வஞ்சி முற்றம் வயக்கள னாக" (புறநா.373). **4.** பரப்பு; expanse. *"ஏந்து முலைமுற்றம் வீங்க" (அகநா.51).*

[முன்றில் →முற்றில்→ முற்றம் (வே.க.)]

முற்றமுடிய *murra-mudiya,* கு.வி.எ.(adv.) முழுதும் முடியும் வரை, கடைசிவரை (வின்.); to the very end.

[முற்ற + முடிய. முடி →முடிய]

முற்றரநாதம் *murrara-nādam,* பெ.(n.) பெண்களுக்கு முதல் பூப்பின் போது வரும் அரத்தம்; menstrual fluid obtained on the day of puberty, the first menses.

முற்றல் *murral,* பெ.(n.) **1.** மூப்பு (சூடா.); old age. **2.** முதிர்ச்சி; maturing. **3.** முற்றியது; anything that is fully grown or developed. *"முற்றன் மூங்கில்" (திவ்.திருச்சந்.52), "இறுகுபுல் மேய்ந்த அறுகோட்டு முற்றல்" (நற்.265:1).* **4.** வயிரம்; hardness, as of the core of a tree. **5.** பழுக்கும் நிலையிலுள்ள முற்றினகாய்; fruit almost ripe. *"முற்றற் சிறுமந்தி.... குற்றிப் பறிக்கும்" (நாலடி, 237).* **6.** முடிகை (சூடா.); completing; ending. **7.** திண்மை; strength. *"முற்றல் யானை" (திவ்.திருச்சந்.52).* **8.** முற்றுகை பார்க்க; see *murrugai. "அரண முற்றலும்" (தொல். பொருள்.65).* **9.** வளைவு (யாழ்.அக.); surrounding, encircling. **10.** வெறுக்கை (யாழ்.அக.); hating. **11.** நெற்று; dried nut.

க. முய்து.

[முற்று →முற்றல்.]

முற்றவிடு-தல் *murra-vidu-,* 18 செ. குன்றாவி. (v.t.) **1.** முதிரும்படிவிடுதல் (உ.வ.); to allow to mature or ripen, as fruits. **2.** முற்றத்துற-த்தல், பார்க்க; see *murra-t-tura-. "மற்றவன் பாசங்கள் முற்றவிட்டு" (திவ்.திருவாய்.8. 2:11).*

[முற்ற + விடு-தல்.]

முற்றவும் *murravum,* கு.வி.எ.(adv.) முழுவதும்; entirely, fully. *"வீடுமின் முற்றவும்" (திவ். திருவாய். 1. 2:1).*

[முற்று→முற்றவும்.]

முற்றவெளி *murra-veli,* பெ.(n.) வெளியிடம்; open space; esplanade. *திருமுற்றவெளி.*

மறுவ. வெட்டவெளி

[முற்றம் + வெளி.]

முற்றவை[1] *murravai,* பெ.(n.) அறிவால் முதிர்ந்தோர் கூடிய அவை; assembly of wise men. *"கற்றோர் மொய்த்த முற்றவை நடுவண்" (பெருங்.உஞ்சைக்.36:245).*

[முற்று + அவை.]

முற்றவை[2] *murravai,* பெ.(n.) பாட்டி; grand mother. *"நற்றவை யென்னைப் பெற்ற முற்றவை" (தேவா.186, 7).*

க. முத்தவ்வெ

[முற்று + அவ்வை.]

முற்றளபெடை *murralabedai,* பெ.(n.) அடியின் எல்லாச் சீர்க் கண்ணும் அளபெடை வரத்தொடுப்பது (யாப்.வி.48); lengthening of sound by *alapedai* in all the feet of a line.

[முற்று + அளபெடை.]

எ.டு. ஆஅ னாஅ நீஇ ணீஇர்.

முற்றறிவன் *muṟṟaṟivaṉ*, பெ.(n.) எல்லாமறிந்த கடவுள்; God, as the omniscient.

மறுவ. முழுமுதற்பொருள்

[முற்று + அறிவன்.]

முற்றறிவு *muṟṟaṟivu*, பெ.(n.) முழுதுணரும் அறிவு; omniscience.

[முற்று + அறிவு.]

முற்றன் *muṟṟaṉ*, பெ.(n.) முழுமையானவன் (பூர்ணன்); perfect being. *"முற்றிலாதானை முற்றனே யென்று மொழியினும்" (தேவா. 648:9).*

[முற்று → முற்றன் = முழுநிறைவானவன்.]

முற்றாக *muṟṟāga*, வி.அ.(adj.) முற்றிலும்; entirely; in its entirety. *எந்த நாகரிகத்தையும் முற்றாக அழித்துவிட முடியாது. இப்படிப்பட்டக் கருத்துக்கள் மக்களைவிட்டு முற்றாக நீங்க வேண்டும்.*

[முற்று → முற்றாக.]

முற்றாமை *muṟṟāmai*, பெ.(n.) 1. முடிவு பெறாமை (சங்.அக.); incompleteness. 2. ஏலாமை (உ.வ.); impossibility.

[முற்று + ஆ – முற்றா → முற்றாமை.]

முற்றாய்தம் *muṟṟāydam*, பெ.(n.) தன் மாத்திரையில் குறையாமல் ஒலிக்கும் ஆய்தவெழுத்து; the letter 'k̲' in its full quantity. *"முற்றாய்த மெட்டு" (நன்.90, விருத்.).*

[முற்று + ஆய்தம்.]

எ.டு. எஃகு, கஃசு, அஃகான்.

முற்றாவுரு *muṟṟā-v-uru*, பெ.(n.) குழந்தை; child. *"ஓர் முற்றாவுருவாகி யாலம் பேரிலை யன்னவசஞ்செய்யு மம்மானே" (திவ். திருவாய்.8.3:4).*

[முற்று + ஆ + உரு.]

முற்றி-த்தல் *muṟṟi-*, 4 செ.குன்றாவி.(v.t.) முடித்தல்; to complete, finish. *"முடியாக் கருமமாயினும் முடியும் வாயின் முற்றித்து" (பெருங்.மகத.1:69).*

[முற்று → முற்றி → முற்றி-த்தல்.]

முற்றிக்கை *muṟṟikkai*, பெ.(n.) முற்றுகை, 1 (வின்.) பார்க்க; see *muṟṟugai, 1*.

தெ. முத்ததி; க. முத்திகெ (g.).

[முற்றுகை → முற்றிக்கை.]

முற்றிகரம் *muṟṟikaram*, பெ.(n.) முற்றிய லிகரம் பார்க்க; see *muṟṟiya-ligaram.*

[முற்று + இகரம்.]

முற்றிகை *muṟṟigai*, பெ.(n.) முற்றுகை, 1 (இ.வ.) பார்க்க; see *muṟṟugai, 1.*

[முற்றிக்கை → முற்றிகை.]

முற்றிமை *muṟṟimai*, பெ.(n.) முதிர்ந்த அறிவு (ஞானம்); mature wisdom. *"முற்றிமை சொல்லின்" (சீவக.2511).*

[முற்று → முற்றி → முற்றிமை.]

முற்றியலிகரம் *muṟṟiyal-igaram*, பெ.(n.) தன்மாத்திரையிற் குறையாத இகரம் (யாழ்.அக.); the letter 'i' in its full quantity or sound value.

எ.டு. வேலி, செடி, கூலி.

[முற்று + இயல் + இகரம்.]

குற்றியலிகரம் அல்லாதென எல்லாம் முற்றியலிகரம்.

முற்றியலுகரம் *muṟṟiyal-ugaram,* பெ.(n.) தனது மாத்திரை ஓசையில் குறையாத உகரம் (நன்.164, விருத்.); the letter 'u' in its full quantity or sound value.

எ.டு. அது, இது, எது.

[முற்று + இயல் + இகரம்.]

குற்றியலுகரம் அல்லாதென எல்லாம் முற்றியலுகரம்.

[முற்று + இயல் + உகரம்.]

முற்றியார் *muṟṟiyār,* பெ.(n.) முற்றுகை செய்தவர்; besiegers. *"முற்றியார் முற்றுவிட" (பு.வெ.6:25).*

தெ. முத்ததீந்சுவாரு

[முற்று→முற்றியார்.]

முற்றியைபு *muṟṟiyaipu,* பெ.(n.) அடியின் எல்லாச் சீரிலும் இயைபு வரத் தொடுப்பது (யாப்.வி.48); rhyming of the last letter in all the feet of a line.

எ.டு. புயலே குழலே மயிலே யியலே.

[முற்று + இயைபு.]

முற்றில்[1] *muṟṟil,* பெ.(n.) 1. சிறுமுறம்; small winnow. *"முற்றில் சிற்றிலுண்ணொந்து வைத்து" (சீவக.1099).* 2. முறம் போன்ற பதினாறாவது விண்மீன் (விசாகம்) (திவா.); the 16th naksatra, as resembling a winnow. 3. சிப்பி வகை (தொல். பொருள். 584, உரை); a kind of shell - fish.

[முற்று→முற்றில்.]

முற்றில்[2] *muṟṟil,* பெ.(n.) முற்றம், 1 பார்க்க; see *muṟṟam, 1.*

[முன்றில்→முற்றில்.]

முற்றிலும் *muṟṟilum,* கு.வி.எ.(adv.) 1. முழுவதும்; entirely, fully, totally. *நான் சொல்வது முற்றிலும் உண்மை. சில வகை மீன் இனங்கள் முற்றிலும் அழிந்துவிட்டன. அவருடைய இலக்கிய நோக்கு முற்றிலும் மாறுபட்டது.* 2. எல்லா வகையிலும்; wholly, completely. *அவருடையக் கோரிக்கை முற்றிலும் மறுக்கப்பட்டது.*

[முற்று→ முற்றிலும்.]

முற்றிழை *muṟṟiḻai,* பெ.(n.) 1. வேலைப் பாடுடன் கூடிய அணிகளை அணிந்த பெண்; lady, as bedecked with ornaments of finished work-manship. *"பெற்றிலேன் முற்றிழையை" (திவ்.பெரியதி.3.7:8).* 2. வேலைப்பாடு திருந்திய அணிகலன்; bedecked ornaments.

[முற்று + இழை.]

முற்றின *muṟṟiṉa,* பெ.எ.(adj.) நன்றாக விளைந்து காய்த்தது; which is well fertilited became callous. *"முற்றின தேங்காய்".*

[முற்று→முற்றி→முற்றின.]

முற்றினநோய் *muṟṟiṉa-nōy,* பெ.(n.) நாட்பட்ட நோய்; chronic diseases.

[முற்றின + நோய்.]

முற்றினவெள்ளை *muṟṟiṉa-veḷḷai,* பெ.(n.) தோல் (மேக) நோய் வகை (M.L.); gleet.

[முற்றின + வெள்ளை.]

முற்று[1]–தல் *muṟṟu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. முதுமையடைதல் (பிங்.); to be advanced in age. 2. முதிர்தல்; to become mature, to ripen. *"முற்றி யிருந்த கனியொழிய" (நாலடி.19). கத்தரிக்காய் முற்றினால் கடைத் தெருவுக்கு வந்து தானே ஆக வேண்டும் (பழ.).* 3. முழுவளர்ச்சி யுறுதல்; to be fully grown. *"ஓர் முற்றா வுருவாகி" (திவ். திருவாய். 8.3:4).* 4. வயிரங் கொள்ளுதல் (சூடா.); to become hardened, as the core of a tree. 5. முடிதல்; to come to an end, to be finished. *"தங்கரும முற்றுந் துணை" (நாலடி, 231).* 6. இறத்தல்; to die. *"மாற்றமுந் தாரானா லின்று முற்றும்" (திவ்.பெரியாழ்.2.10:1).*

தெ. முதுரு; க. முது; ம. முத்துக.

[முது→(முத்து)→முற்று→முற்று–தல்.]

முற்று[2]–தல் *muṟṟu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. மூண்டெழுதல், பெருகுதல்; to abound, increase. *"முற்றெரிபோற் பொங்கி" (பு.வெ.8:16).* 2. தங்குதல்; to abide, dwell. *"குடகடன் முற்றி" (மதுரைக்.238).* 3. நிறைவேறுதல்; to be fulfilled, as one's desire. *"இமையோர்க் குற்ற குறைமுற்ற" (கம்பரா.கடல்காண்.11).* 4. போலுதல்; to be similar. *"எழுமுற்றுந் தோளார்" (சீவக. 1870).*

[முற்று[1]–தல்→முற்று[2]–தல்.]

முற்று[3]–தல் *muṟṟu-*, 5 செ.கு.ன்றாவி.(v.t.) 1. செய்து முடித்தல்; to complete, finish. *"வேள்வி முற்றி" (புறநா.15).* 2. அழித்தல்; to destroy, kill. *"முற்றினன் முற்றின னென்று முன்புவந்து" (கம்பரா.கும்பகர்.311).* 3. மேற்கொள்ளுதல்; to get upon. *"களிமுகத் துவாவின் முற்றி" (ஞானா.26).* 4. தேர்ச்சி பெறுதல்; to become expert in. *"புரவிப் போருங் கரப்பறக் கற்று முற்றி" (சீவக.1678).*

[முற்று[1]–தல்→முற்று[3]–தல்.]

முற்று[4]–தல் *muṟṟu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. சூழ்தல்; to surround. *"பாண்முற்றுக நின்னாண்மகி ழிருக்கை" (புறநா.29).* 2. கோட்டையைச் சூழ்ந்து பொருதல், வளைத்தல்; to besiege, blockade. *"முற்றிய வகத்தோன் வீழ்ந்த நொச்சியும்"* (தொல்.பொருள்.68). 3. அடைதல்; to approach, reach. *'அணிகிள ரடுக்கன் முற்றிய வெழிலி' (இலக்.வி.754, உரை).*

க. முத்து

[முறு→முற்று→முற்று–தல்.]

முற்று[5]–தல் *muṟṟu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. சில மரங்கள், காய்கள் மிகுதியான வளர்ச்சி அடைதல்; certain vegetables become over ripe, of coconut, become ripe. *முருங்கைக் காய் முற்றுவதற்கு முன்பே பறித்துவிடு. முற்றிய தேங்காயாகப் பார்த்து வாங்கிவா.* 2. நோய் குணப்படுத்த முடியாத நிலையை அடைதல்; of illness get to an advanced state. *நோயை முற்றவிட்டு விடாதே.* 3. சண்டை முதலியவை உச்சக்கட்ட நிலையை அடைதல்; of issues, problem, etc., get aggravated, reach a critical stage. *அவர்களுக்குள் ஏற்பட்ட வாய்ச்சண்டையானது முற்றிக் கை கலப்பில் முடிந்தது. வேலை நிறுத்தம் செய்யும் அளவுக்கு தொழிலாளர் கோரிக்கை எப்படி முற்றியது?* 4. முடிவுக்கு வருதல், முடிதல்; come to an end, be finished. *கதை இந்த இதழோடு முற்றிற்று. அடுத்த ஆண்டோடு படிப்பு முற்றும்.*

[முற்று[1]–தல்→முற்று[5]–தல்.]

முற்று[6] *muṟṟu*, பெ.(n.) 1. முழுமை; perfection, completeness. *"முற்றிலாதானை முற்றனே யென்று மொழியினுங் கொடுப்பாரிலை" (தேவா.648, 9).* 2. முழுமையானது (அக.நி.); that which is complete. 3. முதிர்ச்சி; ripeness, maturity. *"கற்றை யீந்தின் முற்றுக்குலை யன்ன" (நற்.174), "கோடுமுற் றிளந்தகர் பாடுவிறந் தியல" (அகநா.378: 7).* 4. முடிவு (சூடா.); end.

[முற்று¹→முற்று⁵.]

முற்று[7] *muṟṟu*, பெ.(n.) வினைமுற்று; finite verb. *"வினையொடு முடியினும் விளம்பிய முற்றே" (நன்.333).*

முற்று[8] *muṟṟu*, பெ.(n.) முற்றுகை பார்க்க; see *muṟṟugai*. *"முற்றியார் முற்று விட" (பு.வெ.6:25).*

[முறு→முற்று.]

முற்றுகரம் *muṟṟugaram*, பெ.(n.) முற்றிய லுகரம் (நன்.94, உரை) பார்க்க; see *muṟṟiyal-ugaram*.

எ.டு. அது, இது, எது.

[முற்று + உகரம்.]

முற்றுகை *muṟṟugai*, பெ.(n.) 1. கோட்டையைப் பகைவர் படை வளைக்கை; blockade, siege. 2. சூழ்கை; surrounding. 3. நிறைவேறுகை; completion. 4. நெருக்கடி (வின்.); distress, want.

[முற்று→முற்றுகை.]

முற்றுச்சொல் *muṟṟu-c-col*, பெ.(n.) வினை முற்றாகிய சொல் (பதம்) (திருமுரு.102, உரை); finite verb. *(எ-டு.) வந்தான்.*

[முற்று + சொல்.]

முற்றுணர்வு *muṟṟuṇarvu*, பெ.(n.) எல்லா மறியுந்தன்மை; omniscience. *'முற்றுணர்வி னனாதல்' (சூடா.).*

[முற்று + உணர்வு.]

முற்றுத்தொடர் *muṟṟu-t-toḍar*, பெ.(n.) வினை முற்றினை முதலாகக் கொண்டு அமையும் சொற்றொடர்; a complete sentence, as consisting of a finite verb.

மறுவ. வினைமுற்றுத் தொடர். (எ.கா.) வந்தான் கண்ணன் (தெரிநிலைவினை முற்றுத் தொடர்). நல்லன் கண்ணன் (குறிப்பு வினை முற்றுத் தொடர்).

[முற்று + தொடர்.]

முற்றுத்தொடர்மொழி *muṟṟu-t-toḍar-moḻi*, பெ.(n.) எழுவாயும் பயனிலையுங் கொண்டு பொருள் முடிவுபெற்று வரும் தொடர் (யாழ்.அக.); a complete sentence, as consisting of a subject and a predicate.

எ.டு. கண்ணன் வந்தான். கந்தன் அழகன்.

[முற்று + தொடர்மொழி.]

முற்றுத்தொடை *muṟṟu-t-toḍai*, பெ.(n.) அளவடி நான்குசீர்களிலும் மோனை முதலாயின வரத்தொடுப்பது (இலக்.வி.723, உரை); versification in which *mōṉai* etc., occur in all the feet of an *aḷavaḍi* verse.

[முற்று + தொடை.]

முற்றுப்புள்ளி *muṟṟu-p-puḷḷi*, பெ.(n.) 1. பொருள் நிறைவான தொடரின் இறுதியில் இடப்படும் புள்ளி; a punctuation full stop.

2. இறுதி, முடிவு; end. *இந்தச் சிக்கலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவு செய்து விட்டாயா?*

[முற்று + புள்ளி.]

முற்றுப்பெறு-தல் *muṟṟu-p-peṟu-,* 13 செ.கு.வி.(v.i.) முடிவடைதல்; to be finished. *மக்கட் தொகைக் கணக்கெடுக்கும் பணி முற்றுப்பெற்றுவிட்டது.*

[முற்று + பெறு-தல்.]

முற்றும்[1] *muṟṟum,* பெ.(n.) 1. முழுதும், முற்றிலும்; wholly, entirely. *"இன்று முற்று முதுகுநோவ" (திவ்.நாய்ச்.2:2). முற்றும் நனைந்தபின் முக்காடு எதற்கு? (பழ.). முற்றும் துறந்த முனிவர்.* 2. எல்லாம் (சூடா.); all.

[முற்று → முற்றும்.]

முற்றும்[2] *muṟṟum,* வி.அ.(adv.) சுற்றும் என்பதோடு இணைந்து வரும் சொல்; a word which occurs in combination with *śuṟṟum. சுற்றும் முற்றும் நன்றாகப் பார்.*

முற்றும்மை *muṟṟummai,* பெ.(n.) பெரும் பான்மையும் எச்சப் பொருளில்லாமல் வரும் உம்மிடைச் சொல்; connective particle. *எல்லாரும் வந்தார் என்பதில் எஞ்சாப் பொருள் தருதலால் முற்றும்மை. "முற்றும்மை யொரோவழி யெச்சமு மாகும்" (நன்.426).*

[முற்று + உம்மை.]

முற்றுமடக்கு *muṟṟu-maḍakku,* பெ.(n.) ஒரு செய்யுளின் முதலடி முழுதும், பின் மூன்றடியாக மடங்கி வேறுவேறு பொருளைத் தரும் சொல்லணி வகை (தண்டி.சொல்.4, உரை); repetition of the whole of the first line of a stanza, as the second, third and fourth lines, though conveying different meanings.

எ.டு. *பிரம புரத்தவன் பெம்மான் எம்மான்*
பிரம புரத்தவன் பெம்மான் எம்மான்
பிரம புரத்தவன் பெம்மான் எம்மான்
பிரம புரத்தவன் பெம்மான் எம்மான்

[முற்று + மடக்கு.]

முற்றுமுடுகுவெண்பா *muṟṟu-muḍugu-veṇbā,* பெ.(n.) நான்கடியும் முடுக்கு ஓசையாக வரும் வெண்பா (சங்.அக.); a *veṇbā,* which has a quick flowing rhythm in all the four lines.

[முற்று + முடுகு + வெண்பா.]

எ.டு.

கடலை பயறொடு துவரையெள் அவல்பொரி
சுகியன் வடைகனல் கதலியின் அமுதொடு
கனியு முதுபல கனிவகை நலமிவை இனிதாகக்
கடல்கொள் புவிமுதல் துளிர்வொடு வளமுற
அமுது துதிகையில் மனமது களிபெற
கருணை யுடனளி திருவருள் மகிழ்வுறநெடிதான

(திருப்புகழ்)

முற்றுமுணர்தல் *muṟṟum-uṇardal,* பெ.(n.) சிவனுடைய எண்குணத் தொன்றாகிய எல்லாம் அறியுந்தன்மை (குறள், 80, உரை); being omniscient, one of *Śivaṉ-eṇ-kuṇam.*

[முற்றும் + உணர்தல்.]

முற்றுமுதிர்வு[1] *muṟṟu-mudirvu,* பெ.(n.) மதிற்குள்ளிருந்த நொச்சி மன்னனின் முரசம் காலையிலேயே முழங்கக் கேட்ட மதிற்கு வெளியே இருந்த உழிஞை மன்னனின் வெகுளியைக் கூறும் புறத்துறை (பு.வெ.

உழி.23); a theme in puram which shows the fury of the *Uḷiñai* king, who was outside the fortress, when he hears the early morning pealing of drums from the Nocchi king fortress.

[முற்று + முதிர்வு.]

முற்றுமுதிர்வு² *muṟṟu-mudirvu,* பெ.(n.) இளமையிலேயே கேள்வி, கல்வி அறிவு மிகையாக பெற்று இருக்கை; a person who has youth knowledge of literate question, one who is pedantic at youth. *அவன் முற்றும் முதிர்வு பெற்றவன்.*

[முற்று + முதிர்வு.]

முற்றுமுரண் *muṟṟu-muraṇ,* பெ.(n.) அளவடியின் சீர்முழுவதும் முரண்வரத் தொடுப்பது (யாப்.வி.48); versification in which *muraṇ* occurs in all the feet of an *aḷavaḍi* verse.

எ.டு. துவர்வாய்த் தீஞ்சொலு முவந்தெனை முனியாது.

[முற்று + முரண்.]

முற்றுமோனை *muṟṟu-mōṉai,* பெ.(n.) அளவடியின் எல்லாச்சீர்களிலும் மோனை வரப்பாடுவது (யாப்.வி.48); versification in which alteration of the initial letter occurs in all of feet of an aḷavaḍi verse.

[முற்று + மோனை.]

எ.டு. *"அயில்வேல் அனுக்கி யம்பலைத் தமர்ந்த".*

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு.

முற்றுருவகம் *muṟṟuruvagam,* பெ.(n.) உவமான உவமேயங்கள் முழுவதும் உருவகம் செய்யப்படும் அணி (தண்டி.35:13); complete metaphor; metaphor in which there is similarity in all respects between the objects of comparison.

எ.டு.

"விழியே களிவண்டு மென்னகையே தாது
மொழியே முருகுலாந் தேறல் – பொழிகின்ற
தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே
தாமரையென் னுள்ளத் தடத்து"

தேன் மருவிய கூந்தலை யுடைய தெரிவையின் திருமுகமே தாமரை; விழிகளே களிக்கப் படாநின்ற வண்டு; மெல்லியவாகிய நகையே தாது; மொழியே நறுநாற்ற முலாவுகின்ற மது என்று உவமான உவமேயங்கள் முழுவதும் உருவகம் செய்யப்பட்டதால் முற்றுருவகம்.

[முற்று + உருவகம்.]

முற்றுவமை *muṟṟuvamai,* பெ.(n.) எல்லா வகையாலும் உவமையும் பொருளும் ஒத்துவர அமைக்கும் உவமை; simile, in which comparison holds good in all respects.

[முற்று + உவமை.]

முற்றுவிடு-த்தல் *muṟṟu-viḍu-,* 18 செ. குன்றாவி.(v.t.) முற்றுகையை நீக்குதல்; to cause a siege to be raised. *'முற்றகப்பட்டோனை முற்றுவிடுத்தலு' (தொல்.பொருள்.181, உரை).*

[முற்று + விடு-த்தல்.]

முற்றுவினை *muṟṟu-viṉai,* பெ.(n.) வினை முற்று; finite verb. *"முற்றுவினைப் பதமொன்றே" (நன்.324). 'அவன் வந்தான்'.*

[முற்று + வினை.]

முற்றுவினைப்பதம் *murru-vinai-p-padam,* பெ.(n.) வினைமுற்றுச் சொல்; finite verb. *"முற்றுவினைப்பதம் ஒன்றே மூவொன்பானாம்" (நன்.324).*

[முற்று + வினை + பதம்.]

நன்னூலார் கருத்துப்படி வினை முற்றுச் சொற்கள் 27. படர்க்கையில் – 5 பால். தன்மையில் ஒருமை, பன்மை–2 பால், முன்னிலையில் ஒருமை பன்மை 2–பால். இவ்வொன்பது பாலினையும் மூன்று காலத்தினும் முரண இருபத்தேழு.

முற்றுழிஞை *murruliñai,* பெ.(n.) முப்புரங்களை சிவன் அழித்த போது அணிந்திருந்த உழிஞைப் பூமாலையின் சிறப்புரைக்கும் புறத்துறை (பு.வெ.6:8); a theme describing the excellence of the *uliñai* garland which *Śivā* wore when He destroyed *tiri-puram.*

[முற்று + உழிஞை.]

உழிஞை ஒழுக்கம் இறைவனாலும் மேற்கொள்ளப்பட்ட தெனஅவ்வொழுக்கத்தினைப் பாராட்டுதலே கருத்தாகக் கொள்க.

முற்றூட்டு[1] *murrūṭṭu,* பெ.(n.) 1. முழுமையும் நுகர்வுடைய நிலம்; land in the exclusive possession and enjoyment of the owner. *இவ்விடம் எந்தையது முற்றூட்டு (திருக்கோ. 252, உரை).* 2. வரியில்லாநிலம் (சர்வ மானியம்); land given in endowment, free of tax. *'இவ்வரைமா நிலமும் இறையிலி முற்றூட்டாக இந்நாயனார்க்குத் தேவதான மாவதாகவும்' (தெ.இ.கல்.தொ.3:45).* 3. முழுமையும் நுகர்வுடையது; anything which is exclusively enjoyed, as of right. *"அப்புகரை எனக்கு முற்றூட்டாக் கினவன்" (ஈடு,1. 7:3).* 4. புலவர், கணியன், கலைஞர் ஆகிய முத்திறத் தோர்க்கும் இறையிலியாக அளிக்கப் பெறும் நிலம்; tax free land, donated for pandit, astrologer, and artist. *"பூம்புலியூர் நாடகஞ்செய் நாவலன் பெற்ற நிலம்" (முதற் குலோத்துங்கன். தெ.இ.கல். தொ.7, கல்.753).*

[முற்று + ஊட்டு.]

அரசியல் வினைஞர், பொருநர் (போர் மறவர்) பொதுநலவூழியர், புலவர், கலைஞர், வணிகர், மறையோர் முதலியோர்க்கும் அறைச்சாலை, மடம், கோயில் முதலியவற்றுக்கும் அளித்த நிலம் நிலக் கொடையாகும். அது முற்றூட்டு, இறையிலி, இறை நிலம், நிலவிறை ஆகிய நால்வகை நிலைமையிலும், நிலம் ஊர் நாடு என்னும் மூவகையளவிலும் கொடுக்கப்பட்டது. ஒருவகை வரியுமில்லாதது முற்றூட்டு அது உறாவரை, காசுகொள்ளா, இறையிலி எனவும் படும். அரசிறை மட்டும் நீங்கியது இறையிலி. இறையிறுக்கும் நிலம் இறைநிலம். நிலத்தில் வரும் இறையை மட்டும் நுகர்வது நிலவிறை (பழ.த.ஆ.பக்.90).

முற்றூட்டு[2] *murrūṭṭu,* பெ.(n.) அறுவடை முடிவில் தவசமாகச் செலுத்தும் குத்தகை; lease paid as grains after reaing. *கார், சம்பா, நவிரை ஆகிய பட்டங்களின் முடிவில், குத்தகைக்குரிய நெல்லளவை அவ்வக் காலங்களில் செலுத்துதல். "இந்நிலம் அடைகொண்டோனே, இந்நிலம் உழுது பயிர் ஏற்றி முற்றூட்டும் கொண்டு வந்து திருமுற்றத்து அளப்பதாகவும்" (முதல் இராசேந்திரன்.தெ.கல்.தொ.5, கல்.678).*

முற்றெச்சம் *murreccam,* பெ.(n.) எச்சப் பொருளில் வரும் முற்று (நன்.351); finite verb, used participially. *வினைமுற்றே எச்சப் பொருளில் ஆளப்படுவது. "கண்டனன் மகிழ்ந்தனன்"* என்னும் தொடர்

முற்றெச்சத்தில், "கண்டு மகிழ்ந்தான்" என வருவது.

[முற்று + எச்சம்.]

முற்றெதுகை *muṟṟedugai,* பெ.(n.) அளவடியின் எல்லாச்சீர்க் கண்ணும் எதுகைவரத் தொடுப்பது (யாப்.வி.48); rhyming of the second letter in all the feet of an *aḷavaḍi* verse.

எ.டு. தன்னியம் புன்னை யின்னிழல் துன்னிய.

[முற்று + எதுகை.]

முற்றெருத்தின்செவி *muṟṟeruttiṉ-šēvi,* பெ.(n.) எழுத்தாணி போன்ற பூவுள்ள ஒருவகைப் பூண்டு (யாழ்.அக.); style plant, having a style - like flower.

முற்றை *muṟṟai,* கு.வி.எ.(adv.) முன்பு; formerly, before. *"முற்றையு முடையமோ மற்றே" (நற்.374).*

ம. முத்த.

[முன் → முற்றை.]

முற்றொண்டை *muṟṟoṇḍai,* பெ.(n.) முள்ளுள்ள ஒரு வகைப் பூடு; thorny creeper - *Capparis horrida alias c. quadriflora* (சா.அக.).

முற்றொப்பு *muṟṟoppu,* பெ.(n.) முழுவதும் ஒத்திருக்கை (சிவசமவா.55); complete resemblance.

[முற்று + ஒப்பு.]

முறக்கன்னன் *muṟa-k-kaṉṉaṉ,* பெ.(n.) முறம் போன்ற காதுடைய பிள்ளையார் (நாமதீப.27); *Piḷḷaiyār,* as having winnow-like ears.

[முறம் + கன்னன்.]

முறண்டு *muṟaṇḍu,* பெ.(n.) முரண்டு (யாழ். அக.) பார்க்க; see *muraṇḍu.*

முறண்டுகம் *muṟaṇḍugam,* பெ.(n.) ஒரு வகையான நஞ்சு (அவுபல பாடாணம்) (யாழ்.அக.); a kind of arsenic, a mineral poison.

முறப்பா *muṟappā,* பெ.(n.) இஞ்சி முதலியவைக் கூட்டிக் காய்ச்சிய சருக்கரைப் பாகு; a preserve in honey or sugar syrup. *இஞ்சி முறப்பா சாப்பிட பித்தம் போகும் (சா.அக.).*

முறபம் *muṟabam,* பெ.(n.) செங்கழுநீர்ப் பூ; a kind of flower, water lily (சா.அக.).

முறம் *muṟam,* பெ.(n.) தவசங்களைப் புடைக்கப் பயன்படுங் கருவி; winnow. *"முறஞ்செவியானை" (புறநா.339). "முறஞ் செவி யானைத் தடக்கையில் தடைஇ" (நற்.376:1).* 2. 16வது விண்மீன் (விசாகம்) (சிலப்.3:123, உரை); the 16th naksatra as resembling a winnow. *'முறத்தடி பட்டாலும் முகத்தடி படக்கூடாது' (பழ.).*

மறுவ. சொளகு

க. மொர; ம. முரம்.



முறமுற—த்தல் mura-mura-,4 செ.கு.வி. (v.i.) 1. தூய்மையாக இருத்தல்; to be neat. 2. முறுமுறுப்பாதல்; to be rough or stiff; to be crisp.

முறமுறக்க mura-murakka, கு.வி.எ.(adv.) தூய்மையாக (இ.வ.); neatly, cleanly.

[முறமுற → முறமுறக்க.]

முறமுறப்பு mura-murappu, பெ.(n.) 1. தூய்மை; cleanliness. 2. முறுமுறுப்பு; roughness, stiffness, as of washed cloth; crispness.

[முறமுற → முறமுறப்பு.]

முறவளைவு mura-valaivu, பெ.(n.) கட்டட நிலை, பலகணி முதலியவற்றின் மீது முறம்போல் வளைவாய்க் கட்டும் கட்டட வேலை (C.E.M.); elliptcal arch.

[முறம் + வளைவு.]

முறளச்சிப்பி murala-c-cippi, பெ.(n.) சிப்பி வகை (வின்.); a kind of shell.

[முரல் + சிப்பி – முரல்சிப்பி → முறளச்சிப்பி.]

முறாக்கத்தலை murākkattalai, பெ.(n.) கடல்மீன்வகை (யாழ்ப்.); a sea-fish.

[முறால் + கத்தலை.]

முறால் murāl, பெ.(n.) கடல்மீன் வகை (யாழ்ப்.); a sea - fish.

முறி¹—த்தல் muri-,4 செ.குன்றாவி.(v.t.) 1. ஒடித்தல்; to break, as a stick. *"பொருசிலை முறித்த வீரன்" (பாரத. கிருட்டிண.141).* 2. தன்மை மாற்றுதல்; to change the nature of, as milk, medicine. *"ஆசைப்பிணி பறித்தவனை யாவர் முறிப்பவர்" (கம்பரா. அங்கத.18).*

க. முரி

[முறி²—தல்→முறி¹—த்தல்.]

முறி²—த்தல் muri-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. கிழித்தல், வெட்டுதல்; to cut. *வேட்டியை இரண்டாக முறி.* 2. நிறுத்திவிடுதல்; to close, to discontinue. *ஏலச்சீட்டை முறித்துவிட்டான்.* 3. நெசவுத் தறியில் உண்டை மறித்தல்; to fold, turn back, as the warp in a loom.

[முறி³—த்தல்→முறி¹—த்தல்.]

முறி³—தல் muri-, 2 செ.கு.வி.(v.i.) 1. வளைந்து ஒடிதல்; to break, give way, as a branch. *"அச்சு முறிந்ததென் றுந்தீபற" (திருவாச.14: 2).* 2. நிலை கெடுதல்; to be discomfited. *"அரக்க னெடுத்து முறிந்து" (பெரியபு. திருஞா.77).* 3. அழிதல்; to perish, cease to exist. *"வீரமுறிந்த நெஞ்சினர்" (விநாயகபு. 79:66).* 4. தன்மை கெடுதல்; to change in one's nature; to be spoiled. *பால் முறிந்து போயிற்று.* 5. பதந்தப்புதல்; to exceed the proper stage, as in boiling or heating. *நெய் முறியக் காய்ந்ததனாற் கசக்கின்றது.* 6. பயனறுதல்; to become ineffectual, as medicine. *விட முறிய மருந்து சாப்பிட்டான் (வின்.).* 7. குலைதல் (உ.வ.); to fail, as a business concern.

ம. முரிக்; தெ. முரிக்கொனு; க. முரி.

[முரு→முறு→முறி→முறி—தல் (வே.க.).]

முறி⁴—தல் muri-, 2 செ.கு.வி.(v.i.) 1. தோற்றல்; to be defeated, as an army. 2. அருள்மாறுதல் (இ.வ.); to be ungracious.

[முறி³—தல்→முறி³—தல்.]

முறி[5] *muṟi,*பெ.(n.) 1. துண்டு; piece. *"கீண்ட வளையின் முறியொன்று கிடப்ப" (ஞானவா. சிகித்.107).* 2. உடைத்த தேங்காயிற் பாதி; broken half of a coconut. *தேங்காய் முறி.* 3. பாதி; half. 4. துணி; piece of cloth. *"கொள்ளி முறிப் பாதியேது" (அரிச்சந். மயான.41).* 5. முருட்டுத் துணி (G.Tn.D.I, 216); rough cloth.

தெ., க., ம. முறி.

[முறு→முறி.]

முறி[6] *muṟi,* பெ.(n.) 1. ஆவணம் (பத்திரம்); deed, written bond. *"மோக வாசை முறியிட்ட பெட்டியை" (தாயு.சிற்ப.1).* 2. ஒலையில் எழுதிய பற்றுச்சீட்டு (R.F.); receipt written on a piece of ola.

[முறு→முறி.]

முறி[7] *muṟi,* பெ.(n.) 1. தளிர்; sprout, shoot. *"முறிமேனி முத்தம் முறுவல்" (குறள், 1113). "பொரிப்பூம் புன்கி னெழில்தகை யொண்முறி" (நற்.9:5). "கவைமுறி யிழந்த செந்நிலை" (அகநா.33:3). "வாழைப் பூவின் வளைமுறி சிதற" (புறநா.237:11).* 2. கொழுந்திலை; tender leaf. *"இலையே முறியே தளிரே தோடே" (தொல். பொருள். 642).* 3. இலை (யாழ்.அக.); leaf.

[முல் →முள்→முரு→முறு →முறி(வே.க.).]

முறி[8]-தல் *muṟi-,* 2செ.கு.வி.(v.i.) 1. துண்டாதல்; break, snap, fracture. *புயலில் மரம் முறிந்து சாய்ந்தது. கை எலும்பு முறிந்து படுக்கையில் இருக்கும்படி ஆகிவிட்டது.* 2. பேச்சுத் தொடர்பு, உறவு தொடராமல் நிற்றல்; அறுபடுதல்; break up. *அவர்களிடையே இருந்த நல்லுறவு முறியக் கரணியம் என்ன?*

[முறு→முறி →முறி-தல்.]

முறி[9]-த்தல் *muṟi-,*4 செ.கு.வி.(v.i.) சில்லறை மாற்றுதல்; change the rupees into coins. *ஐந்து ரூபாய்க்கு சில்லறை முறித்துக் கொண்டுவா!*

[முறு→முறி →முறி-த்தல்.]

முறி[10] *muṟi,*பெ.(n.) 1. நகர் பகுதி, சேரி (பிங்.); part of a village or town. 2. அறை (நாஞ்.); room. 3. மூலையிடம் (யாழ்.அக.); corner.

[முறு→முறி.]

முறி[11] *muṟi,*பெ.(n.) முறிதிரிசூலை (மூ.அ.) பார்க்க; see *muṟi-tiri-šūlai.*

[முறு→முறி.]

முறி[12] *muṟi,*பெ.(n.) உயர்ந்த வெண்பொன் (வெண்கலம்) (யாழ்.அக.); alloy of a superior quality, especially bell - metal. *"தழையும் தட்டையும் முறியுந்தந்திவை" (குறுந்.223).*

[முறு→முறி.]

முறி[13]-தல் *muṟi-,* 2 செ.கு.வி.(v.i.) துளிர்த்தல்; to sprout. *"முறிந்தகோல முகிழ் முலையார்" (சீவக.2358).*

[முல் →முள்→ முரு →முறு→முறி→முறி-தல் (வே.க.).]

முறிக்கட்டி *muṟi-k-kaṭṭi,*பெ.(n.) உயர்ந்த வெண்பொன் (வெண்கலம்) (யாழ்.அக.); bell - metal of superior quality.

[முறி[12] + கட்டி.]

முறிக்கலைச்சுருக்கு *muṟi-k-kalai-c-curukku,* பெ.(n.) துறவியின் முக்கோலிற் சுருக்கிக் கட்டிய சிறு துணி (கல்லா.கண.); a piece of cloth usually kept tied to the trident - staff of an ascetic.

[முறி + கலை + சுருக்கு.]

முறிகதவு *muṟi-kadavu,* பெ.(n.) மேற்பகுதி தனியாகவும் கீழ்ப்பகுதி தனியாகவும் திறந்து மூடும்படி அமைந்த கதவு (நாஞ்.); half - doors.

[முறி + கதவு.]

முறிகரை *muṟi-karai,* பெ.(n.) இடிந்த கரை (யாழ்.அக.); broken bank or dam.

[முறி + கரை.]

முறிகிரந்தி *muṟi-kirandi,* பெ.(n.) முரி கிரந்தி (வின்.) பார்க்க; see *muri-kirandi.*

முறிகுளம் *muṟi-kuḷam,* பெ.(n.) 1. கரை யுடைந்த குளம் (பிங்.); a tank with a broken bund. 2. வடிகால் நீர் தேங்கும் குளம்; drainage tank. 3. 20வது நாண்மீன் (பூராடம்) (பிங்.); the 20th naksatra.

தெ. முருகு.

[முறி + குளம்.]

முறிச்சல் *muṟiccal,* பெ.(n.) 1. முறிகை; breaking. 2. குறைவு; indigence, want. *"எனக்கு இப்போது முறிச்சலா யிருக்கிறது" (வின்.).*

[முறி →முறிச்சல்.]

முறிச்சாதனம் *muṟi-c-cādaṉam,* பெ.(n.) முறிச்சீட்டு, 1 (யாழ்.அக.) பார்க்க; see *muṟi-c-ciṭṭu, 1 .*

[முறி + Skt.சாதனம்.]

முறிச்சி *muṟicci,* பெ.(n.) அடிமைப் பெண் (வின்.); female slave.

[முறியன் (ஆ.பா.)→முறிச்சி (பெ.பா.).]

முறிச்சீட்டு *muṟi-c-ciṭṭu,* பெ.(n.) 1. உடன்படிக்கைச் சீட்டு (வின்.); written bond or agreement. 2. அடிமையோலை; bond of slavery.

[முறி + சீட்டு.]

முறிச்சூலை *muṟi-c-cūlai,* பெ.(n.) ஆண் குறியிலும் மலவாய் (குதம்)க்கு மேலும் அடிக்குடலிலும் ஒடிஒடி குத்தலும் கீழ் வயிற்றில் தொப்புளைச் சுற்றி சுற்றி இழுத்தலுமாகிய இக்குணங்களோடு கூடிய ஒருவகைச் சூலை நோய்; a kind of rheumatism affecting the penis abdomen and the navel causing intense pin prick pain.

மறுவ. முறிதிரிசூலை

[முறி + சூலை.]

முறிச்சேலை *muṟi-c-cēlai,* பெ.(n.) 1. நெசவில் உண்டை மறித்த சேலை (இ.வ.); a kind of chequered saree. 2. நேர்த்தியான வெண்ணிறப் புடவை வகை (வின்.); a kind of fine white cloth for women.

[முறி + சேலை.]

முறிசாதனம் *muṟi-śādaṉam,* பெ.(n.) 1. முறிச்சீட்டு, 1 பார்க்க; see *muṟi-c-ciṭṭu, 1.* 2. முறிச்சீட்டு, 2 பார்க்க; see *muṟi-c-ciṭṭu, 2.*

[முறி + Skt. சாதனம்.]

முறிசெய்-தல் *muṟi-šey-,* 1 செ.குன்றாவி. (v.t.) அடிமையாக்குதல்; to enslave. *"ஆண்ட பிரான் குணம்பரவி முறிசெய்து நம்மை" (திருவாச.13:8).*

[முறி + செய்-தல்.]

முறித்தற்கள்ளி *muṟittaṟ-kaḷḷi,* பெ.(n.) சதுரக்கள்ளி; square spurge - *Euphorbia ant, quorum* (சா.அக.).

முறித்துவெட்டு-தல் *muṟittu-veṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. வாய்க்காலின் நீரைத் தடுத்து வேற்றிடத்திற் பாயும்படி செய்தல்; to divert the water of a channel. *வாய்க்காலை முறித்து வெட்டி முழு நிலத்திற்கும் பாயும்படி செய்தான்.* 2. வாய்க்காலின் வளைவை நேராக்குதல்; to straighten the course of a channel.

[முறித்து + வெட்டு-தல்.]

முறித்தேன் *muṟi-t-tēṉ,* பெ.(n.) தெளிந்த தேன் (யாழ்ப்.); clarified honey.

[முறி + தேன்.]

முறிதிரிசூலை *muṟi-tiri-šūlai,* பெ.(n.) 1. சூலை நோய் வகை (வின்.); a disease of the spinal nerves. 2. ஒருவகை வயிற்றுவலி; a kind of rheumatism.

[முறி + திரிசூலை.]

முறிந்தஎலும்புக்கூட்டி *muṟinda-elumbu-k-kūṭṭi,* பெ.(n.) முறிந்த எலும்பை மீண்டும் ஒட்ட வைக்கும் ஒரு வகை மருந்து எண்ணெய்; the preparation of an oil which can be applied for fractures burns and rheumatic affections is given above.

[முறிந்த + எலும்பு + கூட்டி.]

செருபடை யிலைச் சாறு; தேள் கொடுக்கி; வெண்பூவுள்ள வட்டமான கிலுகிலுப்பை இலை, ஊமத்தன் இலை, துளசி இலை இவற்றின் சாறு, சம எடையுடன் ஆல், அரசு, இச்சி, பாலை மருதோன்றி, முருங்கை கல்லிச்சி மைக் கொன்றை, பொன் முருங்கை இவற்றின் பட்டைகளை இடித்து நீர் விட்டுக் காய்ச்சி இறுத்து மேற்படி சாறுகளுடன் கலந்து இத்துடன் காசுக் கட்டி, களிப்பாக்கு பொடித்துப் போட்டு பிறகு பூதக்கரப்பான் பட்டை நற்சங்கம் வேர்பட்டை இடித்துக் காய்ச்சி முன் குறிப்பிட்டச் சாறுகளுடன் கலந்து விளக் கெண்ணெய் இலுப்பெண்ணெய், புங்கெண்ணெய், நல்லெண்ணெய், வேப் பெண்ணெய் இவைகளைச் சேர்த்து 3 நாள் ஒரு பானையில் வைத்து பிறகு இலவங்கத்தைப் பொடி செய்து போட்டுக் காய்ச்சி திரளும் பதத்தில் வடிகட்டி வெள்ளைத் துணியில் நனைத்துப் போட்டு சுடுநீர் விட்டுறுவ எலும்பு பொருந்தும். முழங்கால் காற்றுபிடிப்பு நோய் (வாதம்), நெருப்புச் சுட்ட புண்ணுக்கும் போட குணமாகும் (சா.அக.).

முறிப்பட்டையம் *muṟi-p-paṭṭaiyam,* பெ. (n.) 1. முறிச்சீட்டு, 1 பார்க்க; see *muṟi-c-ciṭṭu.* 2. முறிச்சீட்டு, 2 (W.G.) பார்க்க; see *muṟi-c-ciṭṭu.*

[முறி + பட்டையம்.]

முறிப்பத்திரம் *muṟi-p-pattiram,* பெ.(n.) 1. முறிச்சீட்டு, 2 பார்க்க; see *muṟi-c-ciṭṭu, 2.* 2. ஓலை ஆவணம் (வின்.); ola document.

[முறி + Skt. பத்திரம்.]

முறிப்பு *muṟippu,* பெ.(n.) 1. மாற்று மருந்து; antidote. 2. கடுமை; harshness. 3. செருக்கு (கர்வம்); pride. *"முறிப்பான பேசி மலையெடுத்தான்" (தேவா.684, 10).* 4. தோழமை மாறுகை (வின்.); estrangement, breach of friendship. 5. முரிப்பு (யாழ்.அக.) பார்க்க; see *murippu.*

[முறி → முறிப்பு.]

முறிப்பெட்டி *muṟi-p-peṭṭi,* பெ.(n.) ஆவணம் வைக்கும் பெட்டி (இவ); box for documents.

[முறி + பெட்டி.]

முறிபலகை *muri-palagai,* பெ.(n.) போர்வை நெய்யும் கருவி; an instrument for weaving carpet.

முறியடி-த்தல் *muri-y-adi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஒருவரின் கெட்டத் திட்டத்தை தோல்வியடையச் செய்தல், நடக்கவிடாமல் செய்தல்; outman work, to rout, break, crush. *தங்கக் கடத்தல் முயற்சி வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது. எதிர்க் கட்சிகளின் பொய்யான செய்தி பரப்பும் வேலையை முறியடிப்போம்.* 2. விரட்டியடித்தல்; beat off; break down. *நாட்டைப் பிரிக்கும் ஆற்றல்கள் முறியடிக்கப்பட்டன. கொள்ளைக் கூட்டத்தை முறியடித்தனர்.* 3. புதிய முயற்சி (சாதனை) செய்து முந்திய முயற்சியை (சாதனையை) பின்னடையச் செய்தல்; break old records. *இந்தப் போட்டித் தொடரில் பல பழைய முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.*

[முறி + அடி-த்தல்.]

முறியல் *muriyal,* பெ.(n.) முறிவு (வின்.) பார்க்க; see *murivu.*

[முறி → முறியல்.]

முறியன் *muriyan,* பெ.(n.) 1. ஆண் அடிமை (வின்.); male slave. 2. பயிரிற்காணும் ஒருவகை நோய்; a disease of crops.

தெ. முரிக்கது; க. முறுவ; ம. முரியன்.

[முறி → முறியன்.]

முறியெழுது-தல் *muri-y-eludu-,* 5 செ. கு.வி.(v.i.) ஆவணம் எழுதுதல்; to write a bond or document.

[முறி + எழுது-தல்.]

முறியோலை *muri-y-ōlai,* பெ.(n.) முடங்கின பனையோலை (வின்.); uneven palm - leaf.

[முறி + ஓலை.]

முறிவு[1] *murivu,* பெ.(n.) 1. மக்கள் குடிக்கும் மருந்து வகைகளுள் ஒன்று; a kind of medicine causing reaction. 2. நஞ்சுக்கு மாற்று மருந்து; antidode (சா.அக.).

மறுவ. முறிமருந்து

[முறி → முறிவு.]

முறிவு[2] *murivu,* பெ.(n.) 1. எலும்பு உடைகை; bone fracture. *இதற்குக் காரணம் எலும்பு முறிவுதான்.* 2. பேச்சு ஒப்பந்தம், உறவு நீடிக்காமல் போகும் நிலை; break down of negotiations, etc. *இந்தப் பேச்சு ஒப்பந்த முறிவுக்கு யார் கரணியம்?* 3. பிளப்பு (வின்.); breach; rupture. 4. பிணக்கம்; enmity, misunderstanding.

ம. முரிவு

[முறி→முறிவு.]

முறிவுமருந்து *murivu-marundu,* பெ.(n.) மாற்று மருந்து (M.L.); antidote.

[முறிவு + மருந்து.]

முறிவுரை *muri-v-urai,* பெ.(n.) மருந்தை முறிக்கும் பொருள்; antagonist medicine (சா.அக.).

முறிவெட்டியான் *muri-veṭṭiyān,* பெ.(n.) கடற்காளான் வகை (யாழ்.அக.); a kind of sea - fungus resembling sponge.

முறுக்கச்சு *muru-k-kaccu,* பெ.(n.) முறுக்குக்குழல் பார்க்க; see *murukku-k-kuḻal.*

[முறுக்கு + அச்சு.]

முறுக்கடி-த்தல் *muṟu-k-kaḍi-,* 4 செ. குன்றாவி. (v.t.) மறுத்தல் (வின்.); to oppose, disobey, as a command.

[முறுக்கு + அடி-த்தல்.]

முறுக்கம் *muṟukkam,* பெ.(n.) 1. திருகல்; twist. 2. முடுக்கு; pressing hard. 3. கடுமை; rigour.

[முறுக்கு→முறுக்கம்.]

முறுக்கம்பாகம் *muṟukkam-bāgam,* பெ. (n.) மிகத் தொல்லைப்பட்டுப் புரிந்து கொண்ட பின்பே சுவைக்கும்படியாக செய்யுள் நடை வகை; ; difficult style of composition.

மறுவ. நாரிகேளபாகம் (கம்பரந்.93)

[முறுக்கு → முறுக்கம் + பாகம்.]

முறுக்கரவு *muṟukkaravu,* பெ.(n.) முறுக்கரா (சங்.அக.); பார்க்க; see *muṟukkarā.*

[முறுக்கு + அரவு.]

முறுக்கரா *muṟukkarā,* பெ.(n.) பாம்பு வகை (நாமதீப.261); a kind of snake.

[முறுக்கு + அரா.]

முறுக்கல்[1] *muṟukkal,* பெ.(n.) வளைந்து வளைந்து மடங்குதல், திருப்புதல்; twisting, distorting (சா.அக.).

முறுக்கல்[2] *muṟukkal,* பெ.(n.) பொல்லாங்குக் குற்றம்; tort (சா.அக.).

முறுக்கவரை *muṟukkavari,* பெ.(n.) வளையம் வளையமாக இருக்கும் அவரை; Goa bean, *Psophocarpus tetra gonolobus.*

[முறுக்கு + அவரை.]

முறுக்கவிழ்-தல் *muṟukkaviḻ-,* 2 செ.கு.வி. (v.i.) 1. அரும்பு மலர்தல்; bloom as a flower. 2. முறுக்காறு பார்க்க; see *muṟukkāṟu.*

[முறுக்கு + அவிழ்-தல்.]

முறுக்காணி *muṟukkāṇi,* பெ.(n.) வீணை முதலியவற்றின் நரம்பை முறுக்குங் கருவி (வின்.); peg of stringed musical instruments, as of violin, or veeṇai.

[முறுகு→முறுக்கு + ஆணி.]

முறுக்காற்று-தல் *muṟukkāṟṟu-,* 5 செ. குன்றாவி.(v.t.) கூடுதலாக முறுக்கிய நூற்புரியை நெகிழ்த்தல் (வின்.); to loosen or unwind what is over - twisted.

[முறுக்கு + ஆற்று-தல்.]

முறுக்காறு-தல் *muṟu-k-kāṟu-,* 5 செ.கு.வி. (v.i.) கயிற்றின் புரி ஒருநிலைப்பட்டு நேராதல்; to be straightened, smoothed out, as a twisted rope.

[முறுக்கு + ஆறு-தல்.]

முறுக்கான் *muṟukkāṉ,* பெ.(n.) 1. முறுக்கிய புகையிலை (இ.வ.); tobacco. 2. புகையிலையுடன் போட்டுக் கொள்ளும் வெற்றிலைப் பாக்கு (நாஞ்.); betel leaves chewed with tobacco.

ம. முறுக்கான்

[முறுக்கு → முறுக்கான்.]

முறுக்கி *muṟukki,* பெ.(n.) முறுக்குங் கருவி; spanner.

[முறுக்கு→முறுக்கி.]

முறுக்கிக்கொள்(ளு)¹–தல் *muṟukki-k-koḷ-*,16 செ.கு.வி. (v.i.) 1. கயிறு முதலியன திரித்தல்; to twist, as a rope. 2. திருகுதல்; to wirl. 3. ஒடித்தல்; to break.

[முறுக்கு + கொள்(ளு)–தல்.]

முறுக்கிக்கொள்(ளு)²–தல் *muṟukki-k-koḷ-*, 13 செ.குன்றாவி.(v.t.) வெற்றிலை யுண்ணுதல்; to chew betel.

[முறுக்கு + கொள்–தல்.]

முறுக்கித்தாபம் *muṟukki-t-tābam*, பெ.(n.) நரம்புகளை முறுக்கும் ஒரு வகை இசிவு (சன்னி) நோய்; a kind of delirium marked by twitching of the nerves (சா.அக.).

*[முறுக்கு + **Skt.** தாபம்.]*

முறுக்கியபால் *muṟukkiya-pāl*, பெ.(n.) பிழிந்த பால்; squeezed juice or milk (சா.அக.).

[முறுக்கி + பால்.]

முறுக்கிவிடு–தல் *muṟukki-viḍu-*,18 செ. குன்றாவி. (v.t.) 1. சுழற்றிவிடுதல்; to spin, as a potter his wheel, to wind, to cause to rotate. *"முறுக்கி விட்ட குயமகன் றிகிரிபோல" (சீவக.786).* 2. திருகிவிடுதல்; to twirl, as the moustache. *மீசையை முறுக்கிவிட்டான்.* 3. தூண்டிவிடுதல் (வின்.); to induce, instigate. 4. பகை யுண்டாக்குதல் (இ.வ.); to create ill-feeling between, to set one against another.

மறுவ. முடுக்கி விடுதல், சீண்டி விடுதல்.

[முறுக்கு + விடு–தல்.]

முறுக்கிழைச்சேலை *muṟukkiḻai-c-cēlai*,பெ.(n.) முறுக்கு நூலாலான புடவை (வின்.); saree of twisted thread.

[முறுக்கு + இழை + சேலை.]

முறுக்கு¹–தல் *muṟukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கயிறு, நார் முதலியவற்றைத் திரித்தல்; to twist, as a rope. *"வாய்மடித் திரண்டு கையு முறுக்கி" (கம்பரா.மருத்து.10). "ஐதுணங்கு வல்சி பெய்துமுறுக் குறுத்த" (அகநா.224:12).* 2. முறுக்காணியைத் திருகுதல்; to twirl. 3. மிகைபட முறுக்கி ஒடித்தல்; to break. *"பிடிபடி முறுக்கிய பெருமரப்பூசல்" (அகநா.8).* 4. சுழற்றுதல்; to spin, as a potter his wheel. *"முறுக்கிவிட்ட குயமகன் றிகிரிபோல" (சீவக.786).* 5. வெற்றிலையுண்ணுதல் (நாஞ்.); to chew betel. 6. கை கால்களைப் பிசைந்து தேய்த்தல் (வின்.); to chafe, as the hands and legs. 7. துணி முதலியவற்றைச் சுருளும்படி திரும்புதல்; wring clothes, twist. *முழுக்கால் சட்டையை நன்றாக முறுக்கி பிழிந்து காயப் போடு. மீசையை முறுக்கிக் கொண்டே பேசினார்.* 8. பிறர் தன் அருமை தெரிந்து மதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிற வகையில் ஒருவகை இறுக்கத்துடன் நடந்து கொள்ளுதல்; get in an affected manner be stiff. *புது மாப்பிள்ளை கொஞ்ச நாள் அப்படித்தான் முறுக்கிக் கொள்வார்!*

தெ. முரகட்டு; க., ம. முருக்கு.

[முறுகு → முறுக்கு → முறுக்கு–தல்.]

முறுக்கு²–தல் *muṟukku-*, 5 செ.கு.வி.(v.i.) 1. செருக்குதல் (உ.வ.); to be proud, haughty, arrogant. 2. மாறுபடுதல்; to disagree. 3. சினத்தல் (யாழ்.அக.); to be angry.

[முறுகு → முறுக்கு → முறுக்கு–தல்.]

முறுக்கு³ *muṟukku,* பெ.(n.) 1. திரிக்கை; twisting. 2. திருகாணியின் சுற்று (இ.வ.); turn or thread of a screw. 3. மாறுபாடு (வின்.); disagreement, discord, rancour. 4. நூலுருண்டை (இ.வ.); ball of thread.

தெ. முரிகாது; க. முறுகு.

[முறுகு → முறுக்கு.]

முறுக்கவரை, முறுக்காணி, முறுக்குமீசை, முறுக்கு வட்டம், முறுக்கு விரியன் முதலிய கூட்டுச் சொற்கள் முறுக்கவியல் பற்றியன.

முறுக்கு⁴ *muṟukku,* பெ.(n.) 1. செருக்கு; arrogance, impertinence. 2. மிடுக்கு; stiffness of manners. *வாலிப முறுக்கில் பேசுகிறான். "கிழமாய் நரைத்து முகந்திரைந்து மிந்தமுறுக்கேன்" (தனிப்பா.1, 88 : 173).* 3. இதழ் முறுக்குள்ள அரும்புத் தன்மை; compact, unblown condition of bud. *"முறுக்குடைந் தலர்ந்த மலர்களும்" (காஞ்சிப்பு. திருக்கண்.180).* 4. கடுமை (இலக்.அக.); vehemence. 5. வலிப்பு (இலக்.அக.); convulsion. 6. நெறிப்பு (வின்.); stiffness, as of a person in full dress. 7. முறுக்கப்பட்ட நிலை; twisted state. *முறுக்கு மீசை. முறுக்குக் கயிறு.* 8. உடல் வலிமைக்கு உரிய இறுக்கம்; robustness of body. *வயதாகி விட்டாலும் உடல் முறுக்கு இன்னும் தளரவில்லை.*

[முறுகு → முறுக்கு.]

முறுக்கு⁵ *muṟukku,* பெ.(n.) ஒரு வகையான வலிப்பு; a kind of twisting pain.

[முறுகு → முறுக்கு.]

முறுக்கு⁶ *muṟukku,* பெ.(n.) மாவைப் பிசைந்து நெளிவு வரும்படி கையால் சுற்றிப் பொரித்துச் செய்யப்படும் ஒரு தின்பண்டம்; a kind of snack prepared from rice dough twisted by hand to form a ring and fried in oil.

[முள் → முறு → முறுகு → முறுக்கு: திருகலாகவுள்ள பலகாரம் (மு.தா.).]

முறுக்குக்கட்டை *muṟukku-k-kaṭṭai,* பெ.(n.) 1. நரம்புகள் முறுக்கேறிய உடம்பு; robutness of body. 2. வலியுள்ள உடம்பு; painful body.

[முறுக்கு + கட்டை.]

முறுக்குக்குழல் *muṟukku-k-kuḻal,* பெ.(n.) முறுக்குச் செய்யப் பயன்படும் குழல்; an instrument that helps to squeeze the batter as '*muṟukku*'.

[முறுக்கு + குழல்.]

முறுக்குக்கொம்பு *muṟukku-k-kombu,* பெ.(n.) திருகிய கொம்பு (வின்.); twisted horn.

[முறுக்கு + கொம்பு.]

முறுக்குக்கொலுசு *muṟukku-k-kolušu,* பெ.(n.) பெண்கள் காலில் அணியும் ஒரு வகை அணிகலன்; twisted form of anklets worn in the ankle.

[முறுக்கு + கொலுசு.]

முறுக்குச்சர்ப்பம் *muṟukku-c-carppam,* பெ.(n.) ஒரு வகை நச்சுப் பாம்பு; a poisonous snake.

*[முறுக்கு + **Skt.** சர்ப்பம்.]*

முறுக்குடை—த்தல் *muṟukkuḍai-,* 4 செ.குன்றாவி.(v.t.) முறுக்குவாங்கு—தல் (வின்.) பார்க்க; see *muṟukku-vāṅgu-.*

[முறுக்கு + உடை—த்தல்.]

முறுக்குத்தட்டை *muṟukku-t-taṭṭai,* பெ. (n.) முறுக்குப் பிடியின் உள்ளே போட்டுப் பிழிய உதவும் தகடு (கோவை.); an instrument for making twisted cake.

[முறுக்கு + தட்டை.]

முறுக்குத்திருப்பு *muṟukku-t-tiruppu,* பெ. (n.) 1. சினம்; anger. 2. புறக்கணிப்பது போல் (அலட்சியமாக) உடலை முறுக்கிக் கொண்டு முகமெடுத்துப் பாராது திரும்புகை (இ.வ.); twisting one-self and averting one's face, as in contempt.

[முறுக்கு + திருப்பு.]

முறுக்குத்திருவட்டம் *muṟukku-t-tiru-vaṭṭam,* பெ. (n.) முறுக்குவட்டம் பார்க்க; see *muṟukku-vaṭṭam.*

[முறுக்கு + திருவட்டம்.]

முறுக்குநூல் *muṟukku-nūl,* பெ. (n.) இரு இழைகளைச் சேர்த்து முறுக்கி உண்டாக்கிய நூல்; twisted yarn.

[முறுக்கு + நூல்.]

முறுக்குநோய் *muṟukku-nōy,* பெ. (n.) வயிற்றிலுண்டாகும் ஒரு வகை வலி; griping pain in the stomach.

[முறுக்கு + நோய். வயிற்றிலுள்ள உறுப்புக்களை முறுக்கி வலியை உண்டாக்கும் நோய்.]

முறுக்குப்பண்ணு–தல் *muṟukku-p-paṇṇu-,* 5 செ.கு.வி. (v.i.) செருக்குக் காட்டுதல்; to be stiff in manners, to be haughty.

[முறுக்கு + பண்ணு–தல்.]

முறுக்குப்பணிகாரம் *muṟukku-p paṇigāram,* பெ. (n.) மாவினால் செய்த தின்பண்ட வகை; a kind of cake, made of flour.

[முள் →முறு →முறுகு →முறுகல். முறுகு →முறுக்கு = திருகலாகவுள்ள பலகாரம் (மு.தா.). முறுக்கு + பணிகாரம்.]

முறுக்குப்புடி *muṟukku-p-puḍi,* பெ. (n.) முறுக்குக்குழல் பார்க்க; see *muṟukku-k-kuḻal.*

[முறுக்கு + புடி.]

முறுக்குபீன்சு *muṟukku-pīṉšu,* பெ. (n.) சதுரமான திருகலான அவரை வகை; square bean, tursted bean psophocarpus teragonolobus, a large plant with blue flowers - 6-8 inches long and 1/2 in wide.

[முறுக்கு + Eng.பீன்சு.]

முறுக்கும்கள்ளி *muṟukkum-kaḷḷi,* பெ. (n.) ஒருவகைச் செடி; a plant - *Pisonia ciculata.*

முறுக்குமீசை *muṟukku-mīšai,* பெ. (n.) முறுக்கிவிட்ட மீசை (வின்.); twisted moustache.

[முறுக்கு + மீசை.]

முறுக்குவட்டம் *muṟukku-vaṭṭam,* பெ. (n.) நூலை முறுக்குங் கருவி; revolving frame for spinning threads.

[முறுக்கு + வட்டம்.]

முறுக்குவலி *muṟukku-vali,* பெ. (n.) சூலை, கடும் வயிற்று வலி; torminia (சா.அக.).

[முறுக்கு + வலி. வயிற்றில் ஏற்படும் வலி.]

முறுக்குவளையல் *muṟukku-vaḷaiyal,* பெ. (n.) வளைவு வளைவாக உள்ள வளையல் வகை; a kind of bangle in twisted form.

[முறுக்கு + வளையல்.]



முறுக்குவாங்கு[1]–தல் *muṟukku-vāṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) புரி (முறுக்கை) நெகிழ்த்துதல்; to untwine.

[முறுக்கு + வாங்கு–தல்.]

முறுக்குவாங்கு[2]–தல் *muṟukku-vāṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) உடல் கட்டுவிடுதல்; to be weakened in body; loosened body.

[முறுக்கு + வாங்கு–தல்.]

முறுக்குவாயு *muṟukku-vāyu,* பெ.(n.) உடலில் வளைந்து வளைந்து சென்று வலியை உண்டாக்கும் ஒருவகை ஊதை நோய்; a disease which causes twisting pain in the body (சா.அக.).

[முறுக்கு + **Skt.** *வாயு.]*

முறுக்குவிடல் *muṟukku-viḍal,* பெ.(n.) எழும்போது கைகால்களை நீட்டி வளைக்கை; the action made while yawning.

மறுவ. சோம்பல் முறித்தல்

[முறுக்கு + விடல். விடுதல்→விடல்]

முறுக்குவிரியன் *muṟukku-viriyaṉ,* பெ.(n.) விரியன் பாம்பு வகை; a kind of viper.

[முறுக்கு + விரியன்.]

முறுக்கெடு–த்தல் *muṟu-k-keḍu-,* 4 செ. குன்றாவி.(v.t.) முறுக்குவாங்கு[1]–தல் (இ.வ.) பார்க்க; see *muṟukku-vāṅgu-.*

[முருக்கு + எடு–த்தல்.]

முறுக்கேற்றல் *muṟu-k-kēṟṟal,* தொ.பெ. (vbl.n.) நரம்பை வலுவுள்ளதாகச் செய்கை; stimulating the nerves (சா.அக.).

[முறுக்கு + ஏற்றல்.]

முறுக்கேறல் *mūṟu-k-kēṟal,* தொ.பெ. (vbl.n.) நரம்பு வலுவுடையதாகை; nerves becoming strong (சா.அக.).

[முறுக்கு + ஏறல்.]

முறுகல் *muṟugal,* பெ.(n.) 1. தோசை போன்ற சில உணவுப் பொருள்கள் சூட்டால் அடையும் மொரமொரப்புத் தன்மை; the condition of being roasted crisp. *முறுகலான இரண்டு தோசை.* 2. காய்ந்து கரிந்தது; that which is scorched or overheated. 3. திருகல்; twist. *திருகல் முறுகல். பிரண்டைபோல திருகல் முறுகலானது (உ.வ.).*

[முறுகு → முறுகல்.]

முறுகனாற்றம் *muruganāṟṟam,* பெ.(n.) காந்தின (கருகின) மணம் (உ.வ.); smell of being scorched, charred or scalded.

[முறுகல் + நாற்றம்.]

முறுகு¹–தல் *murugu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. திருகுதல் (பிங்.); to wriggle, twist. 2. விரைதல்; to accelerate, to hasten. *"முறுகிய விசையிற்றாகி" (சீவக.796).*

ம. முருக்கு

[முரு → முறு → முறுகு → முறுகு–தல்.]

முறுகு²–தல் *murugu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. முதிர்தல்; to ripen, mature. *"கனி முறுகி விண்டென" (சூளா. சீய.7).* 2. மிகுதல்; to increase. *"வேட்கையின் முறுகி யூர்தர" (சீவக.1183).* 3. கடுமையாதல்; to become vehement or intense. *"வெயின் முறுக" (நாலடி, 171).* 4. சுண்டிப் போதல் (கருகிப் போதல்) (உ.வ.); to be scorched or charred, as in frying. 5. செருக்குதல்; to be haughty or insolent, to bluster. *"வரையெடுக்கலுற்று முறுகினான்" (தேவா. 289, 10).*

[முரு → முறு → முறுகு → முறுகு–தல்.]

முறுகு³–தல் *murugu-,* 5 செ.குன்றாவி.(v.t.) மீறுதல் (பிங்.); to violate or infringe, as a right.

ம. முறுகு

[முரு → முறு → முறுகு → முறுகு–தல்.]

முறுகு⁴–தல் *murugu-,* 5 செ.கு.வி.(v.i.) பாகு சூட்டினால் நீர்த்தன்மை குறைந்து இறுகுதல்; to become thick when over heated of treacle, etc. *சருக்கரைப் பாகு முறுகாமல் பார்த்துக்கொள்!.*

[முரு → முறு → முறுகு → முறுகு–தல்.]

முறுகு⁵ *murugu,* பெ.(n.) திண்மை, வன்மை; firmness, hardness, as the core of tree. *"மீளாதபடி முறுகு கொளுந்துகை" (திருவிருத்.88, வியா.பக்.426). "முறுகினபுரி அறும்" (பழ.).*

[முரு → முறு → முறுகு.]

முறுகுகஞ்சா *murugu-kañjā,* பெ.(n.) சடைக்கஞ்சா வகை; variety of Bangal hemp.

[முறுகு + கஞ்சா. கஞ்சா = செடிவகை.]

முறுகுகொளுந்து–தல் *murugu-kolundu-,* 5 செ.கு.வி.(v.i.) வலிமை பெறுதல்; to become firm, to gain strength. *"காதல் முறுகு கொளுந்தினார்க்கும்" (திருவிருத்.97, வியா. பக்.459).*

[முறுகு + கொளுந்து–தல்.]

முருகுசடை *murugu-šadai,* பெ.(n.) சிக்கலுள்ள தலைமயிர்; matted or entangled curls of hair. *முறுகுசடை முடிய வியலாது (வின்.).*

[முறுகு + சடை.]

முறுகுநெய் *murugu-ney,* பெ.(n.) பதங்கெடக் காய்ந்த நெய்; ghee spoiled by over - heating.

[முறுகு + நெய்.]

முறுகுபதம் *murugu-badam,* பெ.(n.) மருந்தெண்ணெய்ப்பதம் ஐந்தனுள் அதிகமாகக் காய்ச்சும் பக்குவநிலை (யாழ். அக.); excessive heating, a stage in the preparation of medicinal oils, one of five *marundenney-p-padam.*

[முறுகு + பதம்.]

மருந்தெண்ணெய்ப்பதம் ஐந்து: 1) குழம்பு பதம், 2) கடுகு பதம், 3) மந்த பதம், 4) மெழுகு பதம், 5) முறுகுபதம்.

முறுகுவெல்லம் *murugu-vellam,* பெ.(n.) பதங்கெடும் வண்ணம் மிகக் காய்ச்சிய வெல்லம்; jaggery spoiled by over - heating.

[முறுகு + வெல்லம்.]

முறுமுறு–த்தல் *muru-muru-,* 4 செ.கு.வி. (v.i.) முணுமுணுத்தல் (யாழ்.அக.); to murmur, grumble.

மறுவ. முணங்குதல்.

தெ., ம. முருமுரு

முறுவஞ்சி *muruvañji,* பெ.(n.) முத்து (மூ.அ.); pearl.

முறுவல்¹ *muruval,* பெ.(n.) 1. புன்முறுவல், புன்னகை; smile. *"புதியதோர் முறுவல் பூத்தாள்" (கம்பரா.சூர்ப்ப.5). "முள்ளெ யிற்றுத் துவர்வாய் முறுவ லழுங்க" (அகநா.39:3). "சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை" (குறுந். 162 : 4). "குறியா நோக்கமொடு முறுவல் நல்கி" (நற்.44:3).* 2. மகிழ்ச்சி; happiness. *"பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்" (தொல்.பொருள். 111).* 3. பல்; tooth. *"முத்த முறுவல்" (குறள், 1113).*

தெ.முருபு; க. முருவ.

முறுவல்² *muruval,* பெ.(n.) முறுகல், 1 பார்க்க; see *murugal, 1.*

முறுவல்³ *muruval,* பெ.(n.) இறந்து பட்டதொரு பழைய நாடகத்தமிழ் நூல் (சிலப்.உரைப்பாயிரம், பக்.9); an ancient treatise on dancing, not extant.

முறுவல்⁴ *muruval,* பெ.(n.) முறுவற்செடி பார்க்க; see *muruvar-cedi.*

முறுவலித்தல் *muruvalittal,* தொ.பெ.(vbl.n.) புன்னகை செய்கை; to smile. *'அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலும் என மூன்றென்ப' (தொல்.பொருள்.251, உரை).*

[முறுவல் → முறுவலி–த்தல்.]

முறுவற்செடி *muruvar-šedi,* பெ.(n.) சுண்டி மரம்; lettuce - tree.

முறுவிலி *muruvili,* பெ.(n.) வவ்வாலோட்டி (பாலவா.400); cock's spur.

முறுவெங்கண்ணனார் *muru-veṅgaṇṇaṉār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a *Šaṅgam* poet.

இவர் வெங்கண்ணனார் எனவும் அழைக்கப்படுவர். குறிஞ்சித்திணையைப் பாடுவதில் வல்லவர். இவர் பாடியதாக நற்றிணையில் ஒன்றும், அகநானூற்றில் ஒன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைக்கின்றன.

சிறுகண் யானைப் பெருங்கை ஈரினம்
குளவித் தண்கயங் குழையத் தீண்டிச்
சோலை வாழை முணைஇ அயலது
வேரல் வேலிச் சிறுகுடி அலறச்
செங்கால் பலவின் தீம்பழ மிசையும்
மாமலை நாட தாமம் நல்கென
வேண்டுதும் வாழிய எந்தை வேங்கை
வீயுக விரிந்த முன்றில்
கல்கெழு பாக்கத்து அல்கினை செலினே"
(நற்.232).

முறை¹–த்தல் *murai-,* 9 செ.கு.வி.(v.i.) 1. இப்படி இத்தன்மையில் இருக்க வேண்டும் என்ற ஒழுங்கு; பொருத்தமான வரையறையோடு கூடியது; proper manner, propriety, normal course. *ஒருவனுக்கு ஒருத்தி என்ற முறை குமுகாயத்தில்*

(சமுதாயத்தில்) தொன்று தொட்டு இருந்து வருகிறது. முறையாக இசை கற்றுக் கொள்ள வேண்டும் என்று அவருக்கு நெடுநாளாக ஆசை. புதிய மருத்துவமனை முறைப்படி நாளை தொடக்கப்படும். 2. ஒன்று நடைபெறும் தன்மை; way, manner. *பொருளியல் அமைப்பு மாறும்போது வாழ்க்கை முறையும் மாறும். மனதுக்கு ஆறுதல் அளிக்கும் முறையில் அன்புடன் பேசினார்.* 3. இத்தனையாவது எனக்கூறும் வரிசை ஒழுங்கு, தடவை; times. *நகரத்தையே இப்போது தான் முதன் முறையாகப் பார்ப்பது போல் பார்த்தான். எத்தனை முறை படித்தாலும் கொஞ்சம் கூட வெறுப்புத் தட்டாத கதை.* 4. ஒன்றையடுத்து ஒன்று, ஒருவரையடுத்து ஒருவர் என வரையறுத்து அமைக்கும் வரிசை, வரிசையில் ஒன்றின் அல்லது ஒருவரின் தடவை; turn. *வயல்களுக்கு முறை வைத்துத்தான் தண்ணீர் விடப்படும். மருத்துவமனையில் மருத்துவரைப் பார்க்க வரிசையில் தன் முறைக்காகக் காத்திருந்தார்.* 5. இருவருக்கும் இடையில் இப்படிப்பட்டது என்று வரையறுக்கும் உறவு; relationship. *அவர் எனக்கு மாமா முறை.*

[முறு→முறை→ முறை–த்தல்.]

முறை²–த்தல் *murai-*, 4 செ.கு.வி.(v.i.) 1. நெறித்து நிமிர்தல்; to become stiff, hard. 2. செருக்குறுதல் (உ.வ.); to be stiff-necked, haughty. 3. ஏறவிழித்து நோக்குதல்; to stare.

தெ. முரி; க. முரித்து.

முறை³ *murai*, பெ.(n.) 1. குணம்; deposition. 2. முறைமை; system as in. 3. மருத்துவ முறை; medicine methode. 4. மறத்துப் போகை; becoming stiff (சா.அக.).

[முறு→முறை.]

முறை⁴ *murai*, பெ.(n.) 1. அடைவு; order, manner, plan, arrangement. *"முறை முறை... கழியு மிவ்வுலகத்து" (புறநா.29).* 2. நியமம்; regularity, system, routine. 3. ஆள்மாறி மாறி வேலை செய்யும் நியமம்; turn by which work is done. *"பணிமுறை மாற முந்துவார்" (கம்பரா.ஊர்தேடு. 49).* 4. தடவை; time, as once, twice. *"எழுமுறை யிறைஞ்சி" (சீவக.3052).* 5. ஒரு வரிசையில் ஒருவனுக்கு ஒழுங்குப்படி ஒரு வினை நிகழும் தடவை; turn. *இருமுறை.*

தெ. மொர; க.முரெ; ம.முர.

[முறு→முறை.]

முறை⁵ *murai*, பெ.(n.) 1. பிறப்பு; birth. *"மறுமுறை யமையத்தும்" (பரிபா.11:139).* 2. உறவு; relationship by blood or marriage. *"பொருட்டுமுறை யாதியி னிதற்கிதெனல் பொருளே" (நன்.298). "எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்" (குறுந்.40:12).* 3. உறவுமுறைப்பெயர்; term of relationship. *"பெரியாரையென்று முறைகொண்டு கூறார்" (ஆசாரக்.91).*

[முறு→முறை.]

முறை⁶ *murai*, பெ.(n.) 1. ஒழுக்கம்; manners. *"முறையிலோயைத் தென்புலத் துய்ப்பன்" (கம்பரா.வாலிவதை.117).* 2. செங்கோல் நெறி; justice. *"முறைகோடி மன்னவன் செய்யின்" (குறள், 559).* 3. பழமை; antiquity. 4. ஊழ்; fate. *"ஆருயிர் முறைவழிப் படூஉம்" (புறநா.192).* 5. தன்மை; nature. *"முத்தீப் பேணு முறையெனக் கில்லென" (மணிமே. 22:48).* 6. கற்பு; chastity. *"முகிழ்மயங்கு முல்லை முறைநிகழ்வு காட்ட" (பரிபா.15:39).*

[முறு→முறை.]

முறை[7] *murai*, பெ.(n.) 1. நூல்; treatise. *"இளைய பாலகன் முறைவரை வேனென முயல்வது" (கந்தபு.அவைய.1).* 2. கூட்டு (பிங்.); things gathered together.

[முறு→முறை.]

முறை[8] *murai*, பெ.(n.) எழுத்திலக்கண வகையில் ஒன்று; a kind of orthography. *நன்னூலாரின் எழுத்திலக்கணத்தில் எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல்நிலை, ஈற்றுநிலை, இடைநிலை, போலி, பதம், புணர்ப்பு என்னும் 12 வகையில் ஒன்று. தமிழில் 'அ'கரம் முதல் 'ன'கரம் ஈறாக எழுத்துக்கள் அமைந்துள்ள முறையினைப் பற்றிப் பேசும் பகுதி (இலக்.கலை.கள.).*

முறைக்கட்டு *murai-k-kaṭṭu*, பெ.(n.) மரபு வழக்கத்திலுள்ள உறவுமுறைப்படி செய்யும் திருமணம் (யாழ்ப்.); marriage between persons of specific relationship, as being in accordance with the caste rules.

[முறை + கட்டு.]

முறைக்காய்ச்சல் *murai-k-kāyccal*, பெ.(n.) இடைவிட்டு முறையாக வரும் காய்ச்சல்; intermittent fever. *"முறைக்காய்ச்சறப்பாதவிடமாய்" (அறப்பளீச். 49).*

[முறை + காயச்சல்.]

முறைக்காரன் *murai-k-kāraṉ*, பெ.(n.) முறைகாரன் பார்க்க; see *murai-kāraṉ*.

முறைக்காற்று *murai-k-kāṟṟu*, பெ.(n.) பருவக்காலங்களில் வீசும் பருவக் காற்று (யாழ்ப்.); trade winds; monsoon.

[முறை + காற்று.]

முறைகாரன் *murai-kāraṉ*, பெ.(n.) 1. முறைப்படி வேலை பார்ப்போன் (கோயிலொ.78); one employed to attend to a job, by turns. 2. முறைமாப்பிள்ளை (உ.வ.) பார்க்க; see *murai-māppiḷḷai*. 3. கோயில் முதலியவற்றில் வேலை செய்யும் உரிமையுடையவன் (சங்.அக.); one who is entitled to an office, as in a temple.

[முறை + காரன்.]

முறைகேடு *murai-kēḍu*, பெ.(n.) 1. நேர்மைத் தவறு; injustice. 2. தகுதியற்ற செயல் (வின்.); unbecoming act. 3. ஒழுங்கின்மை (இ.வ.); irregularity, disorder. 4. கெட்ட நடத்தை (வின்.); depravity, indecency.

[முறை + கேடு.]

முறைச்சடங்கு *murai-c-cadaṅgu*, பெ.(n.) 1. பிராமணர்கள் நோன்பிருந்து நீரில்நின்று மறையோத திருவிதாங்கூர் அரசாங்கத்தார் ஆறு ஆண்டுக்கு ஒருமுறை நாற்பத்தொன்று அல்லது ஐம்பத்தொரு நாள் நடத்தும் ஒரு பெருஞ்சடங்கு; a religious ceremony lasting for 41 or 51 days, celebrated by the Travancore State once in six years, with fasting and recitation of the *vēdas* by Brahmins standing in water. 2. மழை வேண்டி வருணனைக் குறித்துச் செய்யும் தெய்வ வணக்கம்; a prayer invoking *Varuṇa* for rain in times of drought.

[முறை + சடங்கு.]

முறைச்சுரம் *murai-c-curam*, பெ.(n.) முறைக்காய்ச்சல் பார்க்க; see *murai-k-kāyccal*.

[முறை + சுரம்.]

முறைசபம் *muṟai-šabam*, பெ.(n.) முறைச் சடங்கு பார்க்க; see *muṟai-c-caḍaṅgu.*

[முறை + Skt. சபம்.]

முறைசாரா *muṟai-šārā*, பெ.அ.(adj.) பல்கலைக் கழகத்திலும் பள்ளிக் கூடத்திலும் கற்பிக்கும் முறையிலிருந்து வேறுபட்டது; non-formal. *முறைசாரா கல்விமுறை தமிழ் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.*

[முறை + சாரா.]

முறைசிறத்தல் *muṟai-šiṟattal*, தொ.பெ. (vbl.n.) ஒன்று மற்றொன்றனிற் சிறந்து வருதல், மேம்படுகை; to excel. *"நுவலுங் காலை முறைசிறந் தனவே" (தொல். பொருள்.3).*

[முறை + சிற-த்தல்.]

முறைசெய்-தல் *muṟai-šey-*, 1 செ. குன்றாவி.(v.t.) 1. செங்கோல் நெறி (இராச நீதி) அளித்தல்; to do justice. *"முறைசெய்து காப்பாற்று மன்னவன்" (குறள், 388).* 2. தண்டித்தல்; to punish, as the guilty. *"கழுவிலேற்றி முறைசெய்க வென்று கூற" (பெரியபு.திருஞான.853).*

[முறை + செய்-தல்.]

முறைசெய்வோர் *muṟai-šeyvōr*, பெ.(n.) கட்டளை நிறைவேற்றும் ஏவலாளர்; executive officers. *"வேந்தன்.... விட்டனன் முறைசெய் வோரை" (திருவாலவா.13:10).*

[முறை + செய்வோர்.]

முறைத்தண்ணீர் *muṟai-t-taṉṉīr*, பெ.(n.) முறைநீர் (இ.வ.) பார்க்க; see *muṟai-nīr.*

[முறை + தண்ணீர்.]

முறைத்து *muṟaittu*, வி.எ.(adv.) 1. கடுமையாக; severely, frowningly. *நீ முறைத்துப் பார்க்கிறாய் என்பதற்காக நான் பேசாமல் இருந்து விடுமுடியுமா?* 2. கூர்ந்து, உற்று; intently. *அந்தக் கடையையே ஏன் முறைத்துப் பார்த்துக் கொண்டு நிற்கிறாய்? பட்டிக்காட்டான் இனிப்புக் கடையை முறைத்துப் பார்த்ததுபோல் (பழ.).*

[முறை→முறைத்து.]

முறைத்துக்கொள்ளு-தல் *muṟaittu-k-koḷḷu-*, 16 செ.குன்றாவி.(v.t.) பகைத்தல்; make an enemy of some one, antagonize. *நீ எல்லாரையும் முறைத்துக் கொண்டு வாழ முடியாது.*

[முறைத்து + கொள்-தல்.]

முறைத்துப்பார்[1]-த்தல் *muṟaittu-p-pār*, 4 செ.குன்றாவி. (v.t.) ஏற விழித்து நோக்குதல்; to stare.

[முறைத்து + பார்-த்தல்.]

முறைத்துப்பார்[2]-த்தல் *muṟaittu-p-pār*, 4 செ.கு.வி. (v.i.) 1. குதிரை முதலியன வெகுண்டு நோக்குதல் (வின்.); to stare in bewilderment, as cattle, horses. 2. செருக்குறுதல்; to be stiff-necked, haughty.

[முறைத்து + பார்-த்தல்.]

முறைநிரனிறை *muṟai-niraṉiṟai*, பெ.(n.) பெயர்களை நிறுத்த முறைக்கேற்ப அவற்றிற்குரிய வினை முதலியவற்றை அடைவே நிறுத்துகை (மாறனலங்.172); arrangement of a series of verbs in the same order as their respective nouns, opp. to *edir-niraṉiṟai.*

[முறை + நிரனிறை.]

முறைநிலைப்பெயர் *murai-nilai-p-peyar,* பெ.(n.) முறைப்பெயர் (தொல். சொல். 165) பார்க்க; see *murai-p-peyar.*

[முறை + நிலைப்பெயர்.]

முறைநீர் *murai-nīr,* பெ.(n.) வயலுக்கு முறைப்படிவிடப்படும் பாய்ச்சல்நீர் (C.G.); water allowed to irrigate fields, in turn or in a regulated manner.

[முறை + நீர்.]

முறைப்படு-தல் *murai-p-paḍu-,*20 செ. கு.வி.(v.i.) 1. அடைவுசெய்தல்; to be in order; to be systematised. *"முறைப்படச் சூழ்ந்து" (குறள்,640).* 2. முறையிடுதல்; to complain. *"அழியச் செய்யா நின்றார்களென்று... முறைப்பட்டால்" (திவ். திருப்பா.11, வியா. பக்.127).*

[முறை + படு-தல்.]

முறைப்படுத்து-தல் *murai-p-paḍuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. வரிசைப்படுத்துதல், ஒழுங்குபடுத்துதல்; to arrange, put in an order. *நடந்த நிகழ்ச்சிகளை முறைப்படுத்தி எழுதிக் கொடுங்கள்.* 2. நெறிமுறைக்கு உட்பட்டதாக்குதல்; systematize, regulate. *தனியார் பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பது இன்னும் முறைப்படுத்தப்படவில்லை.*

[முறை + படுத்து-தல்.]

முறைப்பாடு *murai-p-pāḍu,* பெ.(n.) 1. முறையீடு பார்க்க; see *murai-īḍu.* *"பேய்முறைப்பாடு" (தக்கயாகப்.7-ஆம் உறுப்பு).* 2. அரசிறை (கல்.); duty, tax.

தெ. முர.

[முறைபடு→முறைபாடு.]

முறைப்பாடுதீர்-த்தல் *muraippāḍu-īr-,* 4 செ.கு.வி.(v.i.) இருவர் தமக்குள்ள பகையைத் தெய்வத்தின் முன் தீர்த்துக் கொண்டு நட்பாதல் (இ.வ.); to become reconciled to each other and resume friendly relations in the presence of a deity.

[முறைப்பாடு + தீர்-த்தல்.]

முறைப்பு *mūraippu,* பெ.(n.) 1. கடுமை நிறைந்த பார்வை; stern look; glower. *தம்பியின் முணுமுணுப்பை ஒரு முறைப்பில் அடக்கினான். உன் முறைப்பை வேறு யாரிடமாவது வைத்துக் கொள் என்று என் அக்கா சொன்னாள்.* 2. வளைது கொடுக்காமல் இருக்கும் தன்மை, விறைப்பு; stiffness, as of a corpse. *முறைப்பு ஏறவில்லை (உ.வ.). உன் முறைப்பு என்னை என்ன செய்யும்.* 3. விலையின் ஏற்றம் (இ.வ.); high price, as of goods. 4. செருக்கு (வின்.); haughtiness, impudence.

தெ., க. முரி; ம. முரை; து.முரெய்.

[முறை → முறைப்பு.]

முறைப்பெண் *murai-p-peṇ,* பெ.(n.) 1. தான் திருமணம் செய்து கொள்வதற்குக் குடும்ப மரபுப்படி தகுதி உள்ள நெருங்கிய உறவுடைய பெண்; a girl on whom a boy has a customary claim to marry. 2. அத்தை அல்லது அம்மான் மகள்; the daughter of a maternal uncle or paternal aunt. *அத்தை மகளும் முறைப்பெண் தான். மாமன் மகளும் முறைப்பெண் தான்.*

[முறை + பெண்.]

அத்தை அல்லது அம்மான் மகள்போல் ஒருவனை மணம்புரியும் உறவுமுறையுள்ளவன்.

முறைப்பெயர் *muṟai-p-peyar,* பெ.(n.) உறவுமுறைகாட்டும் பெயர்ச் சொல் (தொல்.சொல்.138); words indicating akin relationship. *எ.கா. தாய், தந்தை, மகன், மகள், பாட்டி, பாட்டன்.*

[முறை + பெயர்.]

முறைப்பெயர்க்கிளவி *muṟai-p-peyar-k-kiḷavi,* பெ.(n.) முறைப்பெயர் பார்க்க; see *muṟai-p-peyar.*

[முறைப்பெயர் + கிளவி.]

முறைபிறழ்வைப்பு *muṟai-piṟaḻ-vaippu,* பெ.(n.) செய்யுட் குற்றங்களு ளொன்று (யாப்.வி.பக்.525); a defect in poetic composition.

[முறை + பிறழ் + வைப்பு.]

முறைமசக்கு *muṟai-mašakku,* பெ.(n.) கெட்ட நடத்தை; depravity. *'அவன் முறை மசக்காய்த் திரிகிறான்'* (வின்.).

[முறை + மசக்கு.]

முறைமயக்கி *muṟai-mayakki,* பெ.(n.) குப்பைமேனி (மலை.); Indian acalypha.

[முறை + மயக்கி.]

முறைமயக்கு[1]-தல் *muṟai-mayakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) ஒழுங்கின்மையாக்குதல் (இ.வ.); to put out of order, disarrange.

[முறை + மயக்கு-தல்.]

முறைமயக்கு[2] *muṟai-mayakku,* பெ.(n.) ஒழுங்கின்மை; disorderliness, irregularity.

[முறை + மயக்கு.]

முறைமயங்கி *muṟai-mayaṅgi,* பெ.(n.) முறைமயக்கி (யாழ்ப்.) பார்க்க; see *muṟai-mayakki.*

முறைமாப்பிள்ளை *muṟai-māppiḷḷai,* பெ.(n.) அத்தை அல்லது அம்மான் மகன் போல ஒருத்தியை மணம்புரியும் உறவுமுறை யுள்ளவன்; boy related in a particular manner to a girl and allowed by caste rules to marry her, as the father's sister's son or mother's brother's son.

தான் திருமணம் செய்து கொள்வதற்குக் குடும்ப மரபின்படி தகுதி உள்ள நெருங்கிய உறவுடைய ஆண்.

[முறை + மாப்பிள்ளை.]

முறைமாறு-தல் *muṟai-māṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ஒழுங்கு தப்பி வருதல்; to fail in propriety or order. 2. முறைப்படி தண்ணீர் பாய்ச்சுதல் (வின்.); to regulate the supply of water for irrigation by turns. 3. குல வழக்கத்திற்கு மாறாக மணம் புரிதல் (இ.வ.); to marry against recognised custom.

[முறை + மாறு-தல்.]

முறைமுதற்கட்டில் *muṟai-mudaṟ-kaṭṭil,* பெ.(n.) அரியணை (சிங்காதனம்), அரசுக்கட்டில்; throne. *"மன்பதை காக்கு முறைமுதற் கட்டிலின்" (சிலப்.27 : 134).*

[முறை + முதற்கட்டில்.]

முறைமூலம் *muṟai-mūlam,* பெ.(n.) திப்பிலி நாவல்; a kind of *Nāval* tree.

[முறை + மூலம்.]

முறைமை *muṟaimai,* பெ.(n.) 1. அடைவு; order. 2. ஒழுக்கம்; manners, conduct. *"முறைமையின் புகழு மன்றே மறமி"*

(புறநா.39:10). **3.** செங்கோல் நெறி (அரச நீதி); justice. *"உணர்கிலை முறைமை நோக்காய்" (கம்பரா.மாயாசன.19).* **4.** உரிமை; right, propriety. *"முறைமை யென்ப தொன்றுண்டு" (கம்பரா. நகர் நீங்கு.5).* **5.** உறவு; relationship by blood or marriage. **6.** ஊழ்; fate. **7.** தன்மை; nature.

[முறை→முறைமை.]

முறையம்பிள்ளை *muṟaiyam-piḷḷai,* பெ.(n.) முறையாம்பிள்ளை பார்க்க; see *muṟaiyām-piḷḷai. "மோட்டுக்கால் முறையம்பிள்ளை கேட்டால்" (குருகூர்ப்.23).*

[முறையாம்பிள்ளை → முறையம்பிள்ளை.]

முறையாம்பிள்ளை *muṟaiyām-piḷḷai,* பெ.(n.) ஊர்வேலைக்காரன் (நாஞ்.); a village servant.

[முறை + ஆம் + பிள்ளை.]

முறையிடு[1]–தல் *muṟai-y-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) உரியவர்களிடம் சொல்லிக் கவனிக்க வேண்டுதல், குறை தீர்க்க வேண்டுதல்; appeal to the authorities, petition. *குடிநீர் வேண்டி சென்னை நகர மக்கள் அமைச்சரிடம் முறையிட்டுக் கொண்டார்கள். நகராட்சி அதிகாரிகளிடம் பல முறை சொல்லியும், முறையிட்டும் சாலை செப்பனிடப்படவில்லை.*

[முறை + இடு–தல்.]

முறையிடு[2]–தல் *muṟai-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) குறை சொல்லிக் கொள்ளுதல்; to complain, express grievance. *"சகந்தானறிய முறையிட்டால்" (திருவாச. 21:3).*

தெ., ம. மொரயிடு; க. மொரெயிடு.

[முறை + இடு–தல்.]

முறையிலார் *muṟai-y-ilār,* பெ.(n.) கீழ் மக்கள் (சூடா.); base people, inferior people.

[முறை + இலார். முறையான வாழ்வு வாழாத மக்கள்.]

முறையின்வைப்பு *muṟaiyiṉ-vaippu,* பெ.(n.) நன்னூலார் கூறும் நூலின் அழகு பத்தினுள் ஒன்றாகிய எடுத்துக் கொண்ட பொருள்களை வரிசைப்படி வைப்பது; logical order in the treatment of a subject, systematic treatment, one of ten *nūl-aḻagu.*

"சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை யாழமுடைத் தாதல்
முறையின் வைப்பே யுலகமலை யாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுத னூலிற் கழகெனும் பத்தே" (நன்.13).

[முறை→முறையின் + வைப்பு.]

முறையீடு *muṟai-y-īḍu,* பெ.(n.) குறை தீர்க்கக் கோரிக்கை; appeal, petition, prayer. *ஒழுங்கு முறை விற்பனைக் கடைகளில் பொருள் விற்பனை குறித்து மக்களுடைய முறையீட்டைக் கேட்டறிந்தார் அதிகாரி.*

[முறையிடு → முறையீடு.]

முறையுடையரசன் *muṟai-y-uḍai-y-arašaṉ,* பெ.(n.) செங்கோல்நெறி தவறாத அரசன்; a king who rules his country in a moral path and perform good deeds to his subjects. *"தொய்யில் காப்போர் அறிதலும் அறியார் முறையுடையரசன் செங்கோல் அவைய" (குறுந்.276:5).*

[முறையுடை + அரசன்.]

முறையுளி *muṟai-y-uḷi,* கு.வி.எ.(adv.) நியமப்படி; according to order. *"மூவகை யியக்கமு முறையுளி கழிப்பி" (சிலப்.8:42).*

[முறை + உளி.]

முறையூர் *muṟai-y-ūr,* பெ.(n.) சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் பாலாற்றின் தென்கரையிலுள்ள ஊர்; a village in *Šivagaṅgai* district in *Tiruppattūr* Taluk, situated on the banks of *Pālāṟu.*

[முறை + ஊர்..]

மக்கள் தங்களுடைய வழக்குகளைத் தெரிவித்து முறை வேண்டி வந்தவர்கட்கு இந்த ஊர்ப்பெரியவர்கள் முறையாகவும், நேர்மையாகவும், நடுவுநிலை தவறாமலும் அறங்கூறியதால் இவ்வூர் முறையூர் எனப்பட்டிருக்கலாம்.

முறையே *muṟaiyē,* வி.அ.(adv.) சொல்லப்பட்டிருக்கும் வரிசையில் தனித் தனியாக; respectively. *குற்றம் செய்தவருக்கும் குற்றம் செய்யத் தூண்டியவருக்கும் முறையே ஐந்தாண்டு, மூன்றாண்டுக் கடுங்காவல் தண்டனை தரப்பட்டது.*

[முறை→ முறையே.]

முறையோர் *muṟaiyōr,* பெ.(n.) முறைசெய்வோர் பார்க்க; see *muṟai-šeyvōr. "மன்னவன் முறையோர்தம்மை முன்விடுப்ப" (திருவாலவா.37:60).*

[முறை → முறையோர்.]

முறைவன் *muṟaivaṉ,* பெ.(n.) 1. சிவன்; *Šivā. "நான்மறை முக்கண் முறைவனுக்கே" (பதினொ.பொன்வண்.52).* 2. ஓட்டுநர்; driver. 3. நடத்துநர்; conductor. 4. யானைப் பாகன்; mahout of an elephant. *"மேலியன் முறைவர் நூலிய லோசை" (பெருங்.உஞ்சைக்.44:79).*

[முறை → முறைவன்.]

முறைவாசல் *muṟai-vāšal,* பெ.(n.) பல குடித்தனங்கள் இருக்கிற ஒரு வீட்டில் வாசல் தெளித்துக் கூட்டும் வேலையைக் குறிப்பிட்ட நாளைக்குக் குறிப்பிட்ட குடித்தனக்காரர் செய்ய வேண்டும் என்று தங்களுக்குள் பிரித்துக் கொள்ளும் முறை; the turn duty of each resident to keep the front -yard clean.

[முறை + வாசல்.]

முன்[1] *muṉ,*கு.பெ.எ.(adj.) & கு.வி.எ.(adv.) 1. இடத்தைக் குறித்து வருகையில் முகத்தை நோக்கி இருப்பது; இடத்தால் முன்னாவது; in front of someone. *"என்னை முன்நில்லன் மின்தெவ்விர்" (குறள், 771). "முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்க" (தனிப்பா.) "மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்" (தொல். எழுத்து.28). புத்தகம் உனக்கு முன்தானே இருக்கிறது. பேருந்து திடீரென்று நின்றதால் முன் இருக்கையில் தலை மோதியது. யானைமுன் கால் (பிங்.).* 2. காலத்தால் முன்னாவது (நன்.123, உரை); previous prior. *"முற்றுற்றுந் துற்றினை" (நாலடி, 190). "உடைதிரைப் பிதிர்விற் பொங்கிமுன்" (அகநா.1:18). "பின்தூங்கி முன்னெழூஉம் பேதையே" (தனிப்பா.). "யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே" (பழ.).* 3. முன்னால்; forward. *காலை முன்வைத்தவன் திடுக்கிட்டு நின்றான்.* 4. காலத்தை குறித்து வருகையில், குறிப்பிட்டதற்கு முதலில் அமைவது அல்லது வந்தது; of time before; first part, etc. *ஐந்து*

ஆண்டுகட்கு முன் நடந்த நிகழ்ச்சி. 5. வெளிப்புறம் அமைவது; பயன்பாட்டில் முதன்மையாக அமைவது; front side, part, etc. *கதவின் முன்பக்கத்தைத் துடை.*

தெ. முனு; க. மு.

[முல்→ முன். முல் = முன்மை (கருத்து).]

முன்² *muṉ*,பெ.(n.) 1. பழமை (சூடா.); antiquity. *"கற்றோன்றி மண்றோன்றாக் காலத்தே வாளோடு முன்றோன்றி மூத்தகுடி" (பு.வெ.2:15).* 2. முதல் (பிங்.); that which is first or chief. 3. உயர்ச்சி (திவா.); eminence. 4. முன்றோன்றல் பார்க்க; see *muṉṟōṉṟal*. *"அறுமுகேசன் முன்" (திருவாலவா. காப்பு, 2).*

[முல்→ முன். முல் = முன்மை.]

முன்³ *muṉ*,இடை. (part.) ஏழனுருபுள் ஒன்று (நன்.302); sign of the locative.

முன்⁴ *muṉ*, பெ.(n.) 1. மனக்குறிப்பு; meaning, idea. *"முன்னுற வுணர்தல்" (தொல். பொருள்.127).* 2. பக்கம்; side. 3. உப்பு; salt.

க. முந்நு

[முன்னு→முன்.]

முன்கட்டு *muṉ-kaṭṭu*, பெ.(n.) 1. வீட்டின் முற்பகுதி; front apartments of a house (lobby). 2. கைகளை முன்னாக வைத்துக் கட்டுகை; pinioning the hands in front.

[முன் + கட்டு.]

பின்கட்டுக்கு எதிர்ச்சொல்.

முன்கடை *muṉ-kaḍai*,பெ.(n.) வீட்டுவாயில்; vestibule. *"தேரெம் முன்கடை நிற்க" (ஐங்குறு.5).*

தெ. முந்கட

[முன் + கடை.]

முன்கலந்தவிருட்சத்தி *muṉ-kalanda-viruṭšatti*,பெ.(n.) வில்வம்; a sacred tree-Bael tree-*Aegle marmelos* (சா.அக.).

முன்கழுத்துக்கழலை *muṉ-kaḻuttu-k kaḻalai*,பெ.(n.) கழுத்திலுள்ள (தைராய்டு) சுரப்பி வீங்குவதால் ஏற்படும் நோய்; goitre.

[முன் + கழுத்து + கழலை.]

முன்கால் *muṉ-kāl*, பெ.(n.) முன்னங்கால் பார்க்க; see *muṉṉaṅgāl*.

[முன் + கால்.]

முன்குடுமி *muṉ-kuḍumi*, பெ.(n.) தலையின் முன்பக்கமாக வைத்துக் கொள்ளுங் குடுமி; tuft of hair in front. *"சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா" (தனிப்பா.1, 29:54). "சோழியன் குடுமி சும்மா ஆடுமா?" (பழ.).*

[முன் + குடுமி.]

முன்கூட்டியே *muṉ-kūṭṭiyē*, வி.அ.(adv.) 1. முன்பே; in advance. *பணம் வேண்டும் என்று முன் கூட்டியே சொல்லக்கூடாதா?* 2. ஏற்கெனவே, முன்னரே; early, already. *அவர் யார் என்பது முன்கூட்டியே உனக்குத் தெரியுமா?*

[முன் + கூட்டியே.]

முன்கை *muṉ-kai,* பெ.(n.) 1. கையின் முன்பகுதி, முன்னங்கை; forearm. *"முன்கை யிறை யிறவா நின்ற வளை" (குறள், 1157). "யரம்பபோ ழவ்வளைப் பொலிந்த முன்கை" (அகநா.6:2). "அரிமயிர்த் திரண்முன்கை" (புறநா.11:1). "வளையணி முன்கை நின் இகுளைக்கு உணர்த்தென" (நற்.71:2). "தொகு வளை முன்கை மடந்தையொடு நட்பே" (குறுந்.15:6).* . 2. கை; hand. *"முன்கை நீண்டால் முழங்கை நீளும்" (பழ.).*

க. முந்கை.

[முன் + கை.]

முன்கைவாதம் *muṉkai-vādam,* பெ.(n.) முன்னங்கை இரண்டோடு முகமும் வீங்கி வலிக்கும் ஒரு வகையான காற்றுப் பிடிப்பு நோய்; a kind of rheumatism affecting the fore arms (சா.அக.).

*[முன்கை + **Skt.**வாதம்.]*

முன்கொம்பு *muṉ-kombu,* பெ.(n.) 1. விலங்கின் முன்வளைந்த கொம்பு (வின்.); horn bent forwards. 2. பல்லக்கு முதலியவற்றின் முன்தண்டு; front pole, as of palanquin.

[முன் + கொம்பு.]

முன்கோபம் *muṉ-kōbam,* பெ.(n.) முழுக்கத் தெரிந்து கொள்ளும் முன்பே தோன்றும் சினம்; short temper. *தன்னுடைய முன்கோபத்தினால் பல நல்ல வேலைகளை இழந்திருக்கிறார். முன் கோபம் பின்னிரக்கம்.*

*[முன் + **Skt.** கோபம்.]*

முன்கோபி *muṉ-kōbi,* பெ.(n.) விரைவில் சினங்கொள்ளக்கூடியவர்; person with a short temper. *முன் கோபியைக் கண்டால் மூன்றடி தள்ளியே நின்று பேசுதல் நலம்.*

*[முன் + **Skt.** கோபி.]*

முன்கோலம் *muṉ-kōlam,* பெ.(n.) நிலப் பனை; ground palm - *Curculigo orchioides* (சா.அக.).

முன்சிகை *muṉ-šigai,* பெ.(n.) முன்குடுமி பார்க்க; see *muṉ-kuḍumi.*

முன்சொல் *muṉ-šol,* பெ.(n.) பழமொழி (பிங்.);. old saying, proverb.

மறுவ. சொலவடை, முதுமொழி.

[முன் + சொல்.]

முன்தட்டு *muṉ-taṭṭu,* பெ.(n.) மரக்கலத்தின் முகப்புத் தட்டு; deck across the bow of a vessel.

[முன் + தட்டு.]

முன்தள்ளு-தல் *muṉ-taḻḻu-,* 5 செ.கு.வி. (v.i) ஒரு வரிசையில் இருந்து, முன் பக்கமாக நீண்டிருத்தல், துருத்துதல், வெளியே தள்ளி அமைதல்; stick out, project. *அவளுக்குச் சற்று முன்தள்ளிய பல். தெருவில் முன் தள்ளியிருக்கிற வீடுதான் அவருடைய வீடு.*

[முன் + தள்ளு-தல்.]

முன்தானை *muṉ-tāṉai,* பெ.(n.) முன்றானை பார்க்க; see *muṉṟāṉai.*

[முல்→ முன் + தானை. தானை = ஆடை.]

முன்தேர்க்குரவை *muṉ-tēr-k-kuravai,* பெ.(n.) முன்றேர்க்குரவை பார்க்க; see *muṉṟēr-k-kuravai.*

முன்தொடரி *mun-todari,* பெ.(n.) ஒரு வகைத் தொடரிப் பூண்டு; a thorny shrub.

முன்நிறுத்து-தல் *mun-niruttu-,*5 செ.கு.வி. (v.i.) ஒருவரை அல்லது ஒரு கருத்தை அல்லது ஒரு செய்தியை முதன்மைப்படுத்துதல், முதன்மை அளித்தல்; bring to the fore, project some one, keep something in focus. *மக்களுக்கு நன்றாக தெரிந்த ஒரு தலைவரை முன்நிறுத்தி செய்தி பரப்பும் பணியைச் செய்தால் தேர்தலில் வெற்றி பெறலாம். மக்களின் நிலையை முன் நிறுத்திப் பார்க்கையில் இதுபோன்ற திருவிழாக்கள் பயனற்றது.*

[முன் + நிறுத்து-தல்.]

முன்நேரம் *mun-nēram,* பெ.(n.) 1. ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னமேயே உள்ள நேரம்; the time before the particular time. *தேர்வுக்கு முன்நேரத்திலேயே சென்றுவிடு.* 2. விடியற்காலை; early morning. *காலை முன்நேரமாக எழுதல் உடலுக்கு நலம்.* 3. கடந்த நாழிகை அல்லது மணித் துளிகளைக் கூறுவது; past minute or time. *"முன் நேரம் கப்பற்காரன். பின் நேரம் பிச்சைக்காரன்" (பழ.).*

[முன் + நேரம்.]

முன்பகை *mun-pagai,* பெ.(n.) இருவரிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுச் சில நாட்கள் (அ) மாதங்கள் (அ) ஆண்டுகள் கழிந்தும் மனத்தாங்கல் உள்ள நிலை; enmity. *"முன்பகை செய்தால் பின் பகை விளையும்". "அவர்கள் இருவரும் முன்பகை கரணியமாக பேசுவதில்லை" (பழ.).*

[முன் + பகை.]

முன்பணம் *mun-panam,* பெ.(n.) 1. முன்கூட்டியே வைப்புத் தொகையாகப் பெறப்படும் பணம்; caution deposit. *அந்த நூலகத்தில் சேர ஐம்பது ரூபாய் முன்பணம் கட்ட வேண்டும். வங்கியில் இந்த வேலைக்குப் பத்தாயிரம் ரூபாய் முன்பணம் செலுத்த வேண்டும்.* 2. கூலியாக உள்ள தொகையில் முன் கூட்டியே தரப்படும் பணம்; advance payemnt. *வேலையாள் முன்பணம் வாங்கிக் கொண்டு போனார்.* 3. ஒரு பொருளை வாங்குவதற்கு அடையாளமாக முன்னே கொடுக்கும் சிறுதொகை, முன்னீட்டுத் தொகை; advance, earnest.

[முன் + பணம்.]

முன்பதிவுசெய்-தல் *munpadivu-šey-,* 1 செ.கு.வி. (v.i.) திரையரங்கம், தொடர் வண்டி நிலையம் முதலியவற்றில் முன்கூட்டியே இருக்கைகளைப் பதிவு செய்தல்; reserve seats, etc. in a cinema, train, etc. *நான் நாளை தொடர்வண்டி மூலமாக மதுரை செல்ல நேற்றே முன் பதிவு செய்துவிட்டேன்.*

[முன் + பதிவு + செய்-தல்.]

முன்பன் *munban,* பெ.(n.) 1. வலிமையுடையவன்; powerful man. *"செருச்செய் முன்ப" (புறநா.41).* 2. தலைவன்; leader; master. *"முன்பனை முன்பு நோக்கி" (கம்பரா.நாகபாச.90).* 3. ஏலச்சீட்டு நடத்துபவன் (நாஞ்.); conductor of a chit-fund. 4. நிலம் வாங்கி வீடுகள் விற்க முதலீடு செய்து செயற்படுபவன்; promoter.

[முன்பு→முன்பன்.]

முன்பனி *mun-pani,* பெ.(n.) பருவகாலங்கள் ஆறனுள் இரவின் முற்பகுதியிற் பனி மிகுதியுடைய சிலை (மார்கழி), சுறவம் (தை)

மாதங்கள் (தொல்.பொருள்.10, உரை) (பிங்.); the months of *Mārkaḻi* and Tai, being the season in which dew falls during the early part of the night, one of six *paruvam*. *"முளரி கரியும் முன்பனிப் பானாட்" (அகநா.163:8). "பின்பனி அமையம் வருமென முன்பனி" (நற்.224:2).*

[முன் + பனி]

முன்பால் *muṉ-pāl,* கு.வி.எ.(adv.) முன்னாக; in front. *'அகத்தியன் முன்பாலிட்ட சாபம்' (சிலப்.3:2, உரை).*

[முன்பு→முன்பால்]

முன்பாலைநாடு *muṉ-pālai-nāḍu,* பெ.(n.) கடல் கோளால் அழிந்ததாகக் கருதப்படும் தமிழ் நாட்டுப் பகுதி; a division of the Tamil country, supposed to have been submerged in a deluge. *'ஏழ் முன்பாலை நாடும்' (சிலப்.8:2, உரை).*

[முன் + பாலை + நாடு]

முன்பில் *muṉpil,* கு.பெ.எ.(adj.) & கு.வி.எ. (adv.) முன்[1] பார்க்க; see *muṉ*[1]. *'முன்பிற் காதையில்' (சிலப்.7:1, அரும்.).*

[முன்பு→முன்பில்]

முன்பிலாண்டு *muṉpil-āṇḍu,* பெ.(n.) முன் சென்ற ஆண்டு, கடந்த ஆண்டு; previous year. *'முன்பிலாண்டை ஒழுகினபடி' (தெ.இ.க.தொ.i, 129).*

[முன்பில் + ஆண்டு]

முன்பிற்படி *muṉpiṟ-paḍi,* கு.வி.எ.(adv.) முன்போல; as before. *'முன்பிற் படியே....... செம்பாலையு மாயின' (சிலப்.3:86–9, உரை).*

[முன்பில் + படி]

முன்பிறந்தாள் *muṉ-piṟandāḷ,* பெ.(n.) 1. அக்கை, அக்காள் (திவா.); elder sister. 2. மூதேவி (பிங்.); goddess of misfortune.

[முன் + பிறந்தாள்]

முன்பிறந்தான் *muṉ-piṟandāṉ,* பெ.(n.) அண்ணன், தமையன்; elder brother.

[முன் + பிறந்தான்]

முன்பின்[1] *muṉ-piṉ,* கு.வி.எ.(adv.) 1. முந்தியும் பிந்தியும்; before and after, before and behind. 2. முன்பழக்கம், அறிமுகம்; familiar. *முன்பின் அறியாமல் ஒருவனுடன் சேராதே. முன்பின் விசாரித்துச் செய்.*

[முன் + பின்]

முன்பின்[2] *muṉ-piṉ,* பெ.(n.) வலிமை; strength. *"அடுபுலி முன்பின் தொடுகழல் மறவர்" (அகநா.75:6). "ஆனிற் பரக்கும் யானைய முன்பின்" (புறநா.5:2). "கடாஅஞ் செருக்கிய கடுஞ்சின முன்பின்" (நற்.103:3).*

[முன் + பின்]

முன்பின்தெரியாத *muṉpiṉ-teriyāda,* பெ.எ. (adj.) பழக்கம் இல்லாத; அறிமுகம் இல்லாத; unfamiliar, unknown, strange. *முன்பின் தெரியாத ஊரில் சரியான முகவரி இல்லாமல் நண்பனின் வீட்டை எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? முன்பின் தெரியாத ஆட்களிடம் மனம்விட்டுப் பேசக்கூடாது.*

[முன் + பின் + தெரியாத]

முன்பின்நினைத்துப்பார்க்காமல் *muṉpiṉ-niṉaittu-p-pārkkāmal,* கு.வி.எ.(adv.) விளைவுகளை எண்ணிப் பார்க்காமல்; thoughtlessly; without fore thought.

முன்பின் நினைத்துப் பார்க்காமல் ஒரு செயலில் இறங்கிவிடாதே.

[முன் + பின் + நினைத்து + பார்க்காமல்.]

முன்பின்பார்–த்தல் *munpin-pār-*,4 செ. குன்றாவி.(v.t.) நன்கு ஆராய்ந்து முடிவு செய்தல்; to consider carefully, as looking about; to weigh the pros and cons.

[முன்பின் + பார்–த்தல்]

முன்பு[1] *munbu*,பெ.(n.) 1. முற்காலம்; former time, ancient time. 2. முன்னிடம்; front. *"தோட்டியான் முன்பு துரந்து சமந்தாங்கவும்" (புறநா.14).* 3. பழமை (வின்.); antiquity.

தெ. முநுபு; க. முந்து; ம. மும்பு.

[முன் → முன்பு]

முன்பு[2] *munbu*,பெ.(n.) 1. உடல்வலிமை; physical strength. *"முன்பாலுடல் சினஞ்செருக்கி" (குறிஞ்சிப்.159). "முளிசினை பிளக்கு முன்பின் மையின்" (குறுந்.388:5).* 2. பெருமை; greatness.

[முன் → முன்பு]

முன்பு[3] *munbu*,கு.வி.எ.(adv.) 1. முன்னாக; before; infront of. *"தலையில் வணங்கவுமாங் கொலோ தையலார் முன்பே" (திவ்.திருவாய்.5. 3:7).* 2. முன்காலத்தில்; formerly. *"முன்புநின் றம்பி வந்து சரண்புக" (கம்பரா.வாலிவதை.117).*

[முன் → முன்பு]

முன்புத்தை *mun-puttai*, கு.வி.எ.(adv.) முன்பு[3] (திவ்.திருவாய்.1, 4, 2, பள்ளி.) பார்க்க; see *munbu*[3].

முன்புருவம் *mun-puruvam*, பெ.(n.) அடிக்கை எலும்பின் முனைப்பாகம் (வின்.); anterior bicipital ridge.

[முன் + புருவம்]

முன்புள்ளார் *munbuḷḷār*, பெ.(n.) மூதாதை; the ancients; forefathers, predecessors; ancestors. *"முன்புள்ளார்... என்பார்கள்" (திருவிருத். 34, வியா.பக்.206).*

[முன்பு + உள்ளார்]

முன்புற்றை *munpuṟṟai*, கு.வி.எ.(adv.) முன்பு[3] பார்க்க; see *munbu*[3]. *"முன்புற்றையிற் காட்டில்" (ஈடு, 7. 9:4).*

முன்மடி *mun-maḍi*, பெ.(n.) ஆடையின் மடியிற் செய்து கொள்ளும் பை (வின்.); tuck or fold in the cloth serving the purpose of a bag or receptacle.

து. முந்மடி.

[முன் + மடி]

முன்மணி[1] *mun-maṇi*, பெ.(n.) ஒரு மணிமாலையில் சேர்க்கப்பட்டு இருக்கும் மணிகளுக்கு எல்லாம் முதலாவதாகச் சேர்க்கப்பட்டு இருக்கும் மணி; first bead string in a garland of bead.

[முன் + மணி]

முன்மணி[2] *mun-maṇi*,பெ.(n.) கொட்டை கரந்தை; a plant, Indian globe thistle - *Sphaer anthus hirtus.*

முன்மற–த்தல் *mun-maṟa-*,3 செ.கு.வி.(v.i.) கடுமை (உக்கிரம்) கொள்ளுதல் (வின்.); to grow vehement; to burst into a passion.

[முன்மறம் → முன்மற–த்தல்]

முன்மறம் *mun-maram,* பெ.(n.) முன்கோபம் பார்க்க; see *mun-kōbam.* *"முன்மறத்திலே சொல்லாதே" (வின்.).*

முன்மாதிரி *mun-mādiri,* பெ.(n.) 1. கட்டுமானத்திற்கு அடிப்படையாக முதலில் எடுத்துக் கொள்ளப்படுவது அல்லது சிறு அளவில் உருவாக்கப்படுவது; model; miniature. *தலைவர் சிலைக்கு முன்மாதிரி இந்த நிழற்படம்தான். அமைக்கப்படவிருக்கும் அனல் மின்சார நிலையத்தின் முன்மாதிரியை அமைச்சர் பார்வையிட்டார்.* 2. பின்பற்றக் கூடிய வகையில் எடுத்துக்காட்டாக அமையும் ஒருவர் அல்லது ஒன்று; something exemplary, something worth following. *பொருளியல் வளர்ச்சியில் நம்நாடு பிற சிறு நாடுகளுக்கு முன்மாதிரியாக இருக்கலாம். இளம் அறிவிலாருக்கு அவர் நல்ல முன்மாதிரி.*

[முன் + மாதிரி]

முன்மாரி *mun-māri,* பெ.(n.) பருவமழைக்கு முன் செய்யும் விதைப்பு (யாழ்ப்.); cultivation when the seed is sown before the monsoon.

[முன் + மாரி]

முன்முகப்பு *mun-mugappu,* பெ.(n.) நுழைவு வாயில் அமைப்பு (யாழ்.அக.); entrance, as of a palace; facade.

[முன் + முகப்பு]

முன்முகனை *mun-muganai,* பெ.(n.) தொடக்கம் (யாழ்.அக.); commencement.

[முன் + முகனை]

முன்முடுகுவெண்பா *munmuḍugu-veṇbā,* பெ.(n.) முன்னிரண்டடிகள் முடுகிய ஓசை (சந்தங்) கொண்டு வரும் வெண்பா வகை; a kind of *veṇbā* having a quick flowing rhythm in the first two lines.

[முன் + முடுகு + வெண்பா]

முன்முறை *mun-murai,* பெ.(n.) முன்பிறப்பு; previous or past birth. *"முன்முறை செய்தவத்தினிம் முறை யியைந்தேம்" (பரிபா.11:138).*

[முன் + முறை]

முன்மொழி *mun-moli,* பெ.(n.) 1. பழமொழி (வின்.); old saying, proverb, adage. 2. தொகைமொழியில் இரண்டாவதாக வரும் மொழி; the second member of a compound word. *"முன்மொழி நிலையலும்" (தொல்.சொல்.419).* 3. முன்மொழி நிலையல் பார்க்க; see *munmoli-nilaiyal.*

மறுவ. முதுமொழி, சொலவடை.

[முன் + மொழி]

முன்மொழி-தல் *mun-moli-,* 2 செ.கு.வி. (v.i.) ஒருவரின் பெயரை அல்லது தீர்மானம் முதலியவற்றை உரியோரின் கவனத்திற்கு முன் வைத்தல்; propose someone's name, etc. for consideration in a formal meeting. *செயலாளர் பதவிக்குக் கூட்டத்தில் உங்கள் பெயரை நான் முன்மொழிகிறேன். நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை எதிர்க் கட்சித் தலைவர் முன்மொழிந்தார்.*

[முன் + மொழி-தல்]

முன்மொழிந்துகோடல் *munmolindu-kōḍal,* பெ.(n.) உத்தி முப்பத்திரண்டனுள் பின்னர் அடிக்கடி கூற வேண்டியவற்றை முன்னர் எடுத்துக் கூறும் உத்திவகை (நன்.14); mention at the commencement

of what must needs be stated frequently in the course of a treatise, one of 32 utti.

நுதலில் புகுதல் ஒத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
முடித்துக் காட்டல் முடிவிடங் கூறல்
தானெடுத்து மொழிதல் பிறன் கோட்கூறல்
சொற்பொருள் விரித்தல் தொடர்ச்சொற் புணர்த்தல்
இரட்டுற மொழிதல் ஏதுவின் முடித்தல்
ஒப்பின் முடித்தல் மாட்டெறிந் தொழுகல்
இறந்தது விலக்கல் எதிரது போற்றல்
முன்மொழிந்துகோடல் பின்னது நிறுத்தல்
விகற்பத்தின் முடித்தல் முடிந்தது முடித்தல்
உரைத்து மென்றல் உரைத்தாம் என்றல்
ஒருதலை தணிதல் எடுத்துக்காட்டல்
எடுத்த மொழியின் எய்த வைத்தல்
இன்ன தல்லதிதுவென மொழிதல்
எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்
பிறநூல் முடிந்தது தானுடன்படுதல்
தன்குறி வழக்கமிகவெடுத் துரைத்தல்
சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்
ஒன்றின் முடித்தல் தன்னினமுடித்தல்
உய்த்துரை வைப்பென உத்தி எண்ணான்கே
(நன்.14)

[முன் + மொழிந்து + கோடல்]

முன்மொழிநிலையல் *munmoli-nilaiyal,* பெ.(n.) தொகைமொழியுள் இரண்டாவது மொழிக்கண்ணே பொருள் சிறந்து நிற்கை; compound word in which there is emphasis of meaning on the second member.

[முன்மொழி + நிலையல்]

முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்
அம்மொழி நிலையா தன்மொழி நிலையலும்
எனநான் கென்ப பொருணிலை மரபே
(தொல்.சொல்.414)

தொல்காப்பியர் கூறும் நான்கு வகை மொழிநிலையல்: 1. முன்மொழி நிலையல், 2. பின்மொழி நிலையல், 3. இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையல், 4. அன்மொழி நிலையல்.

எ.கா. வேங்கைப்பூ, தாமரைப்பூ முதலான சொற்களில் வேங்கை, தாமரை முதலாய முன்மொழிகளில் பொருள் சிறந்து நிற்பது.

முன்வழுக்கை *munvalukkai,* பெ.(n.) தலையின் முன் பக்கத்தின் மயிர் உதிர்ந்துவிட்டப் பகுதி (வழுக்கை); baldness infornt of the head-*Calvities.*

[முன் + வழுக்கை]

முன்வளம் *mun-valam,* பெ.(n.) 1. தோணியின் முன் பக்கம்; prow or bow of a ferry. 2. முன்னிடம்; front, forepart.

[முன் + வள்ளம் – முன்வள்ளம் → முன்வளம்]

முன்வா– *munvā-,* 18 செ.கு.வி.(v.i.) ஒன்றைச் செய்ய தாமே உடன்பட்டு ஆர்வத்துடன் அணியமாக இருத்தல்; come forward; express willingness. *தேர்தலைப் பற்றிப் பலர் தாமே முன்வந்து தங்கள் கருத்துக்களைக் கூறினர். ஆற்றைச் சுத்தப்படுத்தும் பணியை நடத்தப் பல சேவை அமைப்புகள் முன்வந்துள்ளன.*

[முன் + வா]

முன்வாய் *mun-vāy,* பெ.(n.) 1. வாயின் முன்பக்கம்; fore-part of the mouth. 2. உதடு (வின்.); lips. 3. பொலி தூற்றுவதில் காற்றுக்கு எதிர்ப்பக்கம் (வின்.); the direction opposite to that whence the

wind blows, in winnowing. 4. பொலியிற் பதருடன் கலந்துள்ள தவசக் குவியல் (இ.வ.); grain found mixed with chaff even after winnowing.

[முன் + வாய்]

முன்வாய்ப்பல் *munvāy-p-pal,* பெ.(n.) முன்னம்பல் (M.L.); incisor.

[முன்வாய் + பல்]

முன்விட்டுவிடு-தல் *munviṭṭu-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) முதன் முறையில் ஒரு செயலை செய்ய மறந்து விட்டு அதன் பிறகு அச்செயலை நினைத்து வருந்துதல்; repenting later, for an undone deed or action. *"முன்விட்டு விட்டுப் பின்நின்று கழுத்தறுக்கலாமா?" (பழ.).*

[முன் + விட்டு + விடு-தல்]

முன்வை-த்தல் *mun-vai-,*4 செ.கு.வி.(v.i.) முன்னிடுகை, திட்டம் முதலியவற்றை ஆய்வுக்காகத் தக்க முறையில் கவனத்திற்குக் கொண்டு வருதல்; purpose; put forward resolution, demand, etc. *தொழிலாளர்கள் முன்வைத்த கோரிக்கைகளை நிருவாகம் ஏற்கவில்லை. 'முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டேன்' (பழ.).*

[முன் + வை-த்தல்.]

முன்வைப்புத்தொகை *mun-vaippu-t-togai,* பெ.(n.) ஏலம், ஒப்பந்தப் புள்ளி முதலியவற்றுக்காக ஒருவர் கட்ட வேண்டிய முன்பணம்; earnest money deposit.

[முன் + வைப்பு + தொகை.]

முன்றணிவு *munṟaṇivu,* பெ.(n.) மாட்டுக் குற்ற வகை (பெரியமாட்.17); a defect in cattle.

[முன் + தணிவு]

முன்றளை *munṟaḷai,* பெ.(n.) கொண்டி மாட்டுக்கு முன்னங்காலிற் கட்டுந்தளை (யாழ்.அக.); clog or cord fastening the forelegs of a refractory animal.

[முன் + தளை]

முன்றாங்கி *munṟāṅgi,* பெ.(n.) மகளிர் கால்விரல்களிலணியும் அணி வகை, மெட்டி (நாஞ்.); a kind of ring worn by women, on the toes.

[முன் + தாங்கு - முன்றாங்கு →முன்றாங்கி]

முன்றாதை *munṟādai,* பெ.(n.) பாட்டன் (யாழ்.அக.); grand-father.

[முன் + தாதை]

முன்றாய் *munṟāy,* பெ.(n.) பாட்டி (யாழ்.அக.); grand - mother.

[முன் + தாய்]

முன்றானை *munṟāṉai,* பெ.(n.) 1. புடவை முதலியவற்றின் தலைப்பு; the outer end of a saree or cloth. *"முன்றானையிலே முடிந்தாளலாம்படி" (ஈடு, 1. 10:11).* 2. மேற் போர்வை (யாழ்.அக.); upper garment.

[முன்தானை→முன்றானை = சேலைக்கடை முனை (வே.க.)]

முன்றானைபோடு–தல் *munṟāṉai-pōḍu-*, 20 செ.கு.வி.(v.i.) முன்றானைவிரி–த்தல், பார்க்க; see *munṟāṉai-viri-*.

[முன்றானை + போடு–தல்]

முன்றானைவிரி–த்தல் *munṟāṉai-viri-*, 4 செ.கு.வி.(v.i.) ஒருவனுக்கு மனைவியாய் இருத்தல் (இ.வ.); to be one's wife; to yield to a man's embrace.

[முன்றானை + விரி–த்தல்]

முன்றிணைமுதல்வன் *munṟiṇai-mudalvaṉ*, பெ.(n.) குலமுன்னோரில் முதல்வன்; progenitor, ancestor. *"நின்முன்றிணை முதல்வர் போல நின்று" (பதிற்றுப்.14:20).*

[முன் + திணை+முதல்வன்]

முன்றில் *munṟil*, பெ.(n.) 1.வீட்டின் முன்னிடம்; front of a house. *"பலவின் சுளையுடை முன்றில்" (நற்.77). "தேம்பிழி நறவின் குறவர் முன்றில்" (அகநா.78:7). "வாரசும் பொழகு முன்றில்" (புறநா.114:5). "பல்கிளைக் குறவர் அல்கயர் முன்றில்" (நற்.44:8).* 2. வெளியிடம்; space. *"சிகரப்படர் முன்றிறொறும்" (கம்பரா. கடறா.47).*

தெ. முந்கிலி, முங்கிலி.

[முன்→முன்று→முன்றில்.]

இல்முன், முன்றில் என்பன ஒருபொருள் குறித்து வந்த சொல்லென்றறிக.

முன்றுடரி *munṟuḍari*, பெ.(n.) முன்றொடரி பார்க்க; see *munṟoḍari*.

முன்றுடரிபின்றி *munṟuḍari-piṉṟi*, பெ.(n.) முன்றொடரி (பரி.அக.) பார்க்க; see *munṟoḍari*.

[முன்றொடரி→ முன்றுடரி + பின்று – முன்றுடரிபின்று→முன்றுடரி + பின்றி.]

முன்றுடரிபின்றுடரி *munṟuḍari-piṉṟuḍari*, பெ.(n.) முன்றொடரி (கரு.அக.) பார்க்க; see *munṟoḍari*.

[முன்றொடரி→முன்றுடரி + பின்றுடரி]

முன்றுறை *munṟuṟai*, பெ.(n.) துறைமுகம்; port, harbour. *"முழங்குநீர் முன்றுறைக் கலம்புணர் கம்மியர்" (மணிமே.7:70).*

[முன் + துறை.]

முன்றுறையரையர் *munṟuṟai-y-araiyar*, பெ.(n.) முன்றுறை என்னுமூரில் வாழ்ந்த பழமொழி நானூறின் ஆசிரியர்; a poet, author of *Paḻamoḻi-Nāṉūṟu*, as a native of *Munṟuṟai*.

[முன்றுறை + அரையர்]

முன்றூதன் *munṟūdaṉ*, பெ.(n.) முன்னே சென்று செய்தியைக் கூறுபவன் (வின்.); herald, forerunner.

[முன் + தூதன்]

முன்றேர்க்குரவை *munṟēr-k-kuravai*, பெ.(n.) போரில் வெற்றியடைந்த அரசன் வெற்றிக் களிப்பால் தன் தேர்த்தட்டிலே நின்று போர்த்தலைவரோடு கைபிணைந்து ஆடுவதைக் கூறும் புறத்துறை (தொல். பொருள்.76); theme describing the dance of a king on the dais of his chariot, joining hands with his victorious warriors, in celebration of his victory.

[முன் + தேர் + குரவை]

முன்றொடரி *munṟoḍari,* பெ.(n.) நாயுருவி (சங்.அக.); a plant growing in hedges and thickets - *Achyranthus aspera.*

[முன் + தொடரி. தொடர் →தொடரி]

முன்றோல் *munṟōl,* பெ.(n.) ஆண்குறியின் நுனியை மூடி இருக்கும் தோல்; prepuce of the penis.

[முன் + தோல்]

முன்றோன்றல் *munṟōṉṟal,* பெ.(n.) 1. உடன் பிறந்தாருள் மூத்தவன்; first - born among brothers. *"பாண்டவரின் முன்றோன்றல் பார்முழுதுந் தோற்று" (நள.சுயம்.1).* 2. தமையன்; elder brother. *"தன்னுடைய முன்றோன்றல் கொண்டேக" (திவ்.இயற். பெரிய.ம.53).*

[முன் + தோன்றல்]

முன்னங்கால் *muṉṉaṅ-gāl,* பெ.(n.) 1. விலங்கின் கழுத்தை ஒட்டி அமைந்திருக்கும் முன்பக்கத்துக் கால்; foreleg of a quadruped. 2. முழங்காலின் முன்பக்கம் (வின்.); shin, the forepart of the leg. 3. பாதத்தின் மேற்பக்கம் (இ.வ.); instep.

[முன் + கால் – முன்கால்→ முன்னங்கால்.]

முன்னங்கால்சப்பை *muṉṉaṅgāl-šappai,* பெ.(n.) விலங்குகளின் முன்கால் தசை; animals fore leg muscle.

[முன்னங்கால் + சப்பை.]

முன்னங்கை *muṉṉaṅgai,* பெ.(n.) கையின் முன்பாகமான உறுப்பு; forearm.

[முன் + கை – முன்கை→ முன்னங்கை.]

முன்னடி[1] *muṉ-ṉ-aḍi,* பெ.(n.) 1. வீட்டின் முகப்பிடம் (வின்.); portion of a house near its entrance. 2. அருகில்; proximity. *அது முன்னடியிலே யிருக்கிறது.* 3. விளிம்பு; brink, edge. *கிணற்று முன்னடி.* 4. பாட்டின் முதலடி; first line of a poem. 5. முன்னடியான் பார்க்க; see *muṉṉaḍiyāṉ.*

[முன் + அடி]

முன்னடி[2] *muṉṉaḍi,* கு.வி.எ.(adv.) முன்பு (யாழ்.அக.); before.

[முன் + அடி.]

முன்னடிபின்னடிசேவித்தல் *muṉṉaḍi-piṉṉaḍi-šēvittal,* பெ.(n.) தெய்வப் பனுவல்களின் (திவ்வியப் பிரபந்தப் பாடல்களின்) முன்பாதிபின்பாதிகளின் முதல் நினைப்புகளை மட்டும் சொல்லுகை (அனுசந்திக்கை); a short method of reciting *Tivviya-p-pirabandam*, by which a portion only of each half of a stanza is recited.

[முன்னடி + பின்னடி + சேவித்தல்.]

முன்னடிமாது *muṉṉaḍi-mādu,* பெ.(n.) இலந்தை; jujube tree- *Zizphus jujube* (சா.அக.).

முன்னடியார் *muṉṉaḍiyār,* பெ.(n.) முன்னோர் (வின்.); ancestors.

[முன்னடி →முன்னடியார்]

முன்னடியான் *muṉṉaḍiyāṉ,* பெ.(n.) கோயிலின் வாயிலில் உள்ள சிறு தெய்வம்; minor deity in front of a shrine. *'சுவாமி வரங்கொடுத்தாலும் முன்னடியான் வரங்கொடான்' (வின்.).*

[முன்னடி →முன்னடியான்]

முன்னடியில் *munnaḍiyil,* கு.வி.எ. (adv.) 1. சிறிது நேரத்தில்; shortly. *முன்னடியில் வந்துவிட்டேன் (இ.வ.).* 2. அண்மையில்; near.

[முன்னடி→முன்னடியில்]

முன்னடிவிளக்கு *munnaḍi-viḷakku,* பெ. (n.) முன்கொண்டு செல்லும் கைவிளக்கு; light carried in front. *"சுடர்வேன் முன்னடி விளக்கா" (பதினொ.திருவாரூ.7).*

[முன்னடி + விளக்கு]

முன்னடைப்பன் *mun-n-aḍaippan,* பெ.(n.) அசை போடாமற் செய்யும் மாட்டு நோய் வகை (வின்.); a disease which prevents cattle from chewing the cud.

[முன் + அடைப்பான்]

முன்னடையாளம் *mun-n-aḍaiyāḷam,* பெ. (n.) முன்னறிகுறி (வின்.); portent, indication.

[முன் + அடையாளம்]

முன்னணி[1] *mun-n-aṇi,* பெ.(n.) 1. விளையாட்டு, தேர்தல் முதலியவற்றில் வெற்றி அடையும் வாய்ப்புடன் இருக்கும் நிலை, முன்னிலை; position ahead of others; the lead. *அந்த வேட்பாளர் ஐயாயிரம் ஓட்டு முன்னணியில் உள்ளார்.* 2. முதன்மை வகிக்கும் நிலை; fore front; leading writers, etc. *தொழில் வளர்ச்சியில் நம் நாடு முன்னணியில் உள்ளது. அந்தக் கட்சியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவர் இவர். அந்த முன்னணி நடிகர் பேட்டி தர மறுத்துவிட்டார்.* 3. குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பலர் அல்லது பல அமைப்புகள் இணைந்து ஏற்படுத்தும் கூட்டமைப்பு; of political parties, etc. forming a front. *தேர்தலில் தமிழ் முன்னணி வெற்றிபெற வாய்ப்பு உள்ளது.*

[முன் + அணி]

முன்னணி[2] *munnaṇi,* பெ.(n.) தூசிப்படை (வின்.); van of an army.

க. முந்நணி

[முன் + அணி]

முன்னணிசு *mun-n-aṇišu,* பெ.(n.) தலை முண்டாசு வகை; a kind of head -dress. *"முத்துராயன் கொடுத்தான் முன்னணிசு" (விறலிவிடு.1108).*

[முன் + அணிசு]

முன்னணை[1] *mun-n-aṇai,* பெ.(n.) மாட்டுத் தொட்டி (வின்.); crib, manger.

மறுவ. கழனித்தொட்டி.

[முன் + அணை]

முன்னணை[2] *mun-n-aṇai,* பெ.(n.) 1. முதலில் பிறந்த குழந்தை அல்லது கன்று (திவ். திருமாலை, 19, வியா. பக்.71); elder-born child or calf. 2. முதலிற் செல்லும் ஏர்; leading plough, in ploughing. 3. கொண்டி மாட்டுக்கு முன்னங்காலிற் கட்டுந்தளை (இ.வ.); clog or cord fastening the forelegs of a refractory animal. 4. அணைக்குமுன் தற்காலிகமாகப் போடும் அணை (இ.வ.); ring - bund.

[முன் + அணை]

முன்னத்தின்கால் *munnattin-kāl,* பெ.(n.) முன்னங்கால் பார்க்க; see *munnaṅgāl.*

முன்னத்தின்கால்சப்பை *munnattinkāl-šappai,* பெ.(n.) முன்னனங்கால்சப்பை பார்க்க; see *munnaṅgāl-šappai.*

முன்னத்தினருங்கிளவி *munnattin-aruṅ-giḷavi,* பெ.(n.) குறிப்பினால் உணரப்படும் ஒரு சொல் (நன்.); a word of implication (அபி.சிந்.).

[முன்னத்தின் + அருங்கிளவி.]

முன்னதம் *munnadam,* பெ.(n.) நாட்டியத்தில் ஆட்காட்டிவிரலை மற்றை விரல்களினின்றும் பிரித்துச் செய்யும் மெய்ப்பாடு வகை (வின்.); a kind of hand-pose in which the fore-finger is held separate from the rest.

முன்னதாக *munnadāga,* வி.அ.(adv.) குறிப்பிடப்படும் நேரத்திற்கு அல்லது குறிப்பிடப்படுவதற்கு முன்பு; before; previously. *மின் தொடர் வண்டி புறப்படுவதற்கு இரண்டு மணி நேரம் முன்னதாகவே தொடர்வண்டி நிலையம் வந்து விட்டேன். இரு அணிகளுக்கு இடையே இதற்கு முன்னதாக நடைபெற்ற ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.*

க. முந்தாகி

[முன்னது + ஆக – முன்னதாக.]

முன்னது *munnadu,* பெ.(n.) வரிசையில் ஒழுங்கில் முன் இருப்பது அல்லது முதலில் வருவது; the former; that which is first or in front. *இந்த இரு திரைப்படங்களில் முன்னதுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்திருக்கிறது.*

[முன் → முன்னது]

முன்னந்தம் *mun-n-andam,* பெ.(n.) முன் பார்வை (வின்.); front view.

[முன் + அந்தம்]

முன்னந்தலை *munnan-dalai,* பெ.(n.) நெற்றியிலிருந்து உச்சி வரையுள்ள தலைப்பாகம் (C.G.) forepart of the head, sinciput.

[முன் + தலை→முன்னந்தலை]

முன்னந்தொடை *munnan-doḍai,* பெ.(n.) 1. தொடையின் மேற்பகுதி; upper part of the thigh. 2. முன்தொடை இறைச்சி; fore-quarter of mutton.

[முன் + தொடை→முன்னந்தொடை]

முன்னபாவம் *mun-n-abāvam,* பெ.(n.) இன்மை (அபாவம்) நான்கனுள் முன்பு இல்லாமை (தருக்கசங்.96); previous non-existence, one of four *abāvam.*

*[முன் + **Skt.** அபாவம்]*

முன்னம்¹ *munnam,* கு.பெ.எ.(adj.) & கு.வி.எ. (adv.) முன்¹ பார்க்க; see *mun¹*. *"நம்மினு முன்ன முணர்ந்த வளை" (குறள், 1277).*

க. முந்நம்

[முன் →முன்னம்.]

முன்னம்² *munnam,* பெ.(n.) 1. கருத்து; thought, intention. *"முன்ன முகத்தினுணர்ந்து" (புறநா.3).* 2. மனம் (திவா.); mind.

[முன்னு→முன்னம்.]

முன்னம்³ *munnam,* பெ.(n.) 1. குறிப்பு; sign, indication. *"முன்னத்தா னொன்று குறித்தாய் போற் காட்டினை" (கலித்.61). "முன்னங் காட்டி முகத்தி னுரையா" (அகநா. 5:19).* 2. குறிப்புப் பொருள்; implication, suggestion. *முன்னவிலக்கு.*

[முன்னு→முன்னம்.]

முன்னம்[4] *munnam,* பெ.(n.) இம்மொழி சொல்லுதற்கு உரியாரும் கேட்டற்கு உரியாரும் இன்னாரெனப் படிப்போர் அறியுமாறு செய்யப்படுவதாகிய செய்யு ளுறுப்பு (தொல். பொருள்.519); indication of the person speaking and the person addressed, in a stanza.

[முன்னு→முன்னம்]

முன்னம்[5] *munnam,*பெ.(n.) அரிமா; lion.

முன்னம்[6] *munnam,*பெ.(n.) சீக்கிரி; black sirissa.

முன்னம்பல் *munnam-pal,* பெ.(n.) வாயின் முன்வரிசைப் பல் (C.G.); front tooth, incisor.

[முன்னம்[1] + பல்]

முன்னமரம் *munna-maram,* பெ.(n.) முன்னை; a small tree.

முன்னர் *munnar,*கு.வி.எ.(adv.) 1. முன்பு (பிங்.); before; inadvance; in front of. *"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை" (குறள், 435). "அன்னை முன்னர்யாம் என்னிதற் படலே" (அகநா.95:15). "தெறலருங் கடவுள் முன்னனர்ச் சீறியாழ்" (நற்.189:3). "தெண்கிணை முன்னர்க் களிற்றி னியலி" (புறநா.79:3).* 2. முற்காலத்தில்; in former times.

க. முந்ந

[முன் → முன்னர்]

முன்னர்விலக்கு *munnar-vilakku,* பெ.(n.) முன்னவிலக்கு பார்க்க; see *munna-vilakku.*

முன்னல் *munnal,*பெ.(n.) 1. நினைவு; thinking. 2. மனம்; mind.

தெ. முந்நு.

[முன்னு → முன்னல்]

முன்னவள் *munnaval,*பெ.(n.) 1. அக்கை (தமக்கை) (பிங்.); elder sister. 2. மூதேவி; goddess of Misfortune. *"முன்னவள் பதாகையோடு..... வந்துற்றவா போல்" (கந்தபு.சிங்கமு.443).*

[முன் → முன்னவள்]

முன்னவன் *munnavan,*பெ.(n.) 1. தேவன், கடவுள்; the first Being God. *"முன்னவன் போதியில்" (மணிமே.28:141).* 2. சிவன் (பிங்.); *Śiva. "முன்னவன் கூடல்" (கல்லா.32:10).* 3. அண்ணன் (சூடா.); elder brother. *"முன்னவன் வினவ" (கம்பரா.வேள்.4). "முன்னவனே முன் நின்றால் முடியாத பொருள் உளதோ" (பழ.).*

[முன் → முன்னவன்]

முன்னவிலக்கு *munna-vilakku,* பெ.(n.) குறிப்பினால் ஒன்றனை மறுத்து மேன்மை தோன்றச் சொல்லும் விலக்கணிவகை; a figure of speech in which a statement is heightened in effect by the suggestion of an apparent contradiction. *"முன்னத்தின் மறுப்பினது முன்னவிலக்கே மூவகைக் காலமு மேவிய தாகும்" (தண்டி. 43).*

[முன்னம் + விலக்கு]

முன்னவிலக்கணி வகைகள்: 1. இறந்த வினை விலக்கு, 2. எதிர்வினை விலக்கு, 3. நிகழ்வினை விலக்கு, 4. பொருள் விலக்கு, 5. குணவிலக்கு, 6. காரண விலக்கு, 7. காரிய விலக்கு, 8. வன்சொல் விலக்கு, 9. வாழ்த்து

விலக்கு, 10. தலைமை விலக்கு, 11. இகழ்ச்சி விலக்கு, 12. துணைசெயல் விலக்கு, 13. முயற்சி விலக்கு, 14. பரவச விலக்கு, 15. உபாய விலக்கு, 16. கையறல் விலக்கு, 17. உடன்படல் விலக்கு, 18. வெகுளி விலக்கு, 19. இரங்கல் விலக்கு, 20.ஐயவிலக்கு, 21. வேற்றுப் பொருள்வைப்பு விலக்கு, 22. சிலேடை விலக்கு, 23. ஏது விலக்கு.

முன்னறிகுறி *mun-n-arikuri,* பெ.(n.) பின் னிகழ்ச்சிக்கு அறிகுறியாக முன்னிகழ்வது; portent, presage.

[முன் + அறிகுறி]

முன்னறிவிப்பு *mun-n-arivippu,* பெ.(n.) 1. முன்கூட்டியே தெரிவிக்கும் நடவடிக்கை; fore warning; notice; notification. *தொழிலாளர்கள் முன்னறிவிப்புத் தராமல் வேலை நிறுத்தத்தில் இறங்கியதாக நிருவாகம் கூறியது. அடகு வைத்த நகைகளை முன்னறிவிப்பு இல்லாமல் ஏலம் போட முடியாது.* 2. வானிலையைப் பற்றிய முன்கணிப்பு; weather forecast. *கடற்கரை ஓரப் பகுதிகளில் மழை பெய்யும் என்பது இன்றைய வானிலை முன்னறிவிப்பு.*

[முன் + அறிவிப்பு.]

முன்னன் *munnan,* பெ.(n.) அண்ணன்; elder brother. *"பெட்பொடு முன்னனைக் காணும்" (இரகு.அவதாரநீங்.13).*

[முன் →முன்னன்.]

முன்னா—தல் *munnā-,* 6 செ.கு.வி.(v.i.) முன்னதாதல்; to be first; to be early. *"முன்னான பூதங்கள்" (கம்பரா. இரணியன் வதை.170).*

[முன் →முன்னா—தல்]

முன்னாகக்கொடி *munnāga-k-kodi,* பெ. (n.) பிள்ளைத் தாய்ச்சிக் கொடி; placental cord (சா.அக.).

மறுவ. நஞ்சுக்கொடி, தொப்புள் கொடி.

முன்னாடி¹ *munnādi,* பெ.(n.) முன்பக்கம்; infront portion. *'கீழ்த் தாடையிலுள்ள தீய மாட்டுச்சுழி முன்னாடியிருந்தா பண்ணாடிக்காகாது' (பழ.).*

[முன் → முன்னாடி]

முன்னாடி² *munnādi,* கு.வி.எ.(adv.) முன்னமே (உ.வ.); formerly, previously, already.

[முன் → முன்னாடி]

முன்னாடி³ *munnādi,* வி.அ.(adv.) முன்னால்¹ பார்க்க; see *munnāl¹.*

[முன் → முன்னாடி]

முன்னால்¹ *munnāl,* வி.அ.(adv.) 1. முன் பக்கமாக; forward; infront of. *கண்ணாடிக் கதவை முன்னால் தள்ளுதல்.* 2. முன்னர்; years ago; preceding; before. *இது நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சி. எனக்கு முன்னால் பேசியவர் யார்? முன்னால் போனா கடிக்கும். பின்னால் போனா ஒதைக்கும்.*

[முன் → முன்னால்]

முன்னால்² *munnāl,* இடை.(part.) முன் பக்கத்தில்; before some one or something. *எனக்கு முன்னால் கழுதை ஒடியது. 'முன்னால் பார்த்தால் சேவகன் குதிரை, பின்னாலே பார்த்தால் செட்டியார் குதிரை' (பழ.).*

[முன் →முன்னால்]

முன்னாலே *muṉṉālē,* கு.வி.எ.(adv.) முன்னாடி² பார்க்க; see *muṉṉāḍi²*.

[முன் → முன்னாலே]

முன்னாள்¹ *muṉṉāḷ,* கு.பெ.எ.(adj.) பொறுப்பு, பதவி முதலியவை குறித்து வருகையில் கடந்த காலத்தில் இருந்ததைக் குறிப்பது; former; ex. *முன்னாள் அமைச்சர் ஒருவர் விழாவுக்குத் தலைமையேற்றார். இவன் என்னுடைய முன்னாள் மாணவன்.*

[முன் + நாள்]

முன்னாள்² *muṉṉāḷ,* பெ.(n.) 1. முன்தினம்; yesterday; previous day. 2. முற்காலம்; former days. *"முன்னாள் பாய்விடைக ளேழடர்த்து" (திவ். பெரியதி.3. 4:4).*

மறுவ. மேனாள்

[முன் + நாள்.]

முன்னாள்³ *muṉṉāḷ,* பெ.(n.) தமக்கை (வின்.); elder sister.

[முன் → முன்னாள்]

முன்னி *muṉṉi,* பெ.(n.) முல்லை நிலத்தில் இயற்கையாக விளையும் ஒரு சிறு பயறு; a small size green gram grown in *mullai* tract.

[முல் → முன் → முன்னி (வே.க.). முல் = சிறுமை.]

ஒ.நோ. L. min, small. இதனின்றே minify, minim, minimum, minish, minor, minute முதலிய பல சொற்கள் திரிந்துள்ளதாகத் தெரிகிறது (வே.க.).

இயற்கையான தோற்றம் அல்லது இயக்கமெல்லாம் முன்னோக்கியே நிகழ்தலால் தோற்றக் கருத்தில் முன்னோக்கல் அல்லது முகங்காட்டற் கருத்து இரண்டறக் கலந்துள்ளது (வே.க.).

முன்னிசிவு *muṉ-ṉ-iśivu,* பெ.(n.) உடம்பை முன்பக்கமாக வளையச் செய்யும் ஒருவகை ஊதைநோய் (தம்பவாதநோய்) (சீவரட்.165); a kind of rheumatism in which the body is bent forward.

[முன் + இசிவு.]

முன்னிட்டி *muṉṉiṭṭi,* பெ.(n.) விலங்குகளுக்கு உணவு வைக்குந் தொட்டி (வின்.); crib, manger, trough for fodder.

[முன்னிடு → முன்னிட்டி]

முன்னிட்டு *muṉṉiṭṭu,* வி.அ.(adv.) 1. ஒரு கரணியத்தை முன்வைத்து; advancing or offering any reason. *எந்தக் காரணத்தை முன்னிட்டும் விழாவிற்கு வராமல் இருந்து விடாதீர்கள்.* 2. ஒன்றைக் கரணியமாகக் கொண்டு; on account of. *தலைவர் இறந்ததை முன்னிட்டு வண்டிகளில் கறுப்புக் கொடி கட்டியிருந்தனர்.*

[முன் + இட்டு.]

முன்னிடு¹-தல் *muṉṉiḍu-,*20 செ.கு.வி.(v.i.) 1. முந்துதல்; to advance; to go in front. 2. அணியமாயிருத்தல்; to be ready, prompt. 3. வெற்றியாதல் (அனுகூலமாதல்); to succeed, be successful. *உனக்குக் காரியம் முன்னிடும்.*

தெ. முந்நிடு; க. முந்திடு; ம. முந்நிடுக.

[முன் + இடு-தல்.]

முன்னிடு²-தல் *munniḍu-*, 18 செ.குன்றாவி. (v.t.) 1. முன் வைத்தல்; to put before. 2. எதிர்ப்படுதல் (வின்.); to meet. 3. முன்னே போகவிடுதல் (வின்.); to let one go before or in advance. 4. நோக்கமாகக் கொள்ளுதல்; to bear in mind. *அந்தச் செயலை முன்னிட்டு வந்தான்.* 5. துணைக் கொள்ளுதல்; to invoke the aid of. *இவன் முன்னிடுமவர்களை அவன் முன்னிடும் (ஸ்ரீவசநு.2:151).*

[முன் + இடு-தல்.]

முன்னிருட்டு *munniruṭṭu*, பெ.(n.) இருட் பக்க (அபரபட்சம்) இரவின் முற்றேரத்திலுள்ள இருள் (உ.வ.); darkness in the early hours of the night, as during the dark fortnight.

[முன் + இருட்டு.]

முன்னிருப்பு *mun-n-iruppu*, பெ.(n.) 1. முன்னிலைமை; former condition. 2. குடிவழிச் சொத்து (பூர்வ சொத்து); ancestral property. 3. கையிருப்புத் தொகை; balance on hand. 4. கணக்கில் முன்னேட்டிலிருந்து எடுத்தெழுதும் இருப்புத் தொகை; balance brought forward.

[முன் + இருப்பு.]

முன்னில்-தல் (முன்னிற்றல்) *munnil-*, 14 செ.கு.வி.(v.i.) 1. முன்தோன்றுதல்; to appear before. *"முன்னின்றாண்டாய்" (திருவாச.21:2).* 2. துணைநிற்றல்; to stand by; to assist, guide. *"முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ" (பெரியபு.மனுநீதி.47).* 3. தலைமையேற்றல்; to take the lead. 4. பொறுப்பேற்றுக் கொள்ளுதல்; to assume responsibility.

[முன் + நில்-தல்.]

முன்னிலவு *munnilavu*, பெ.(n.) முன்னிலா (வின்.) பார்க்க; see *munnilā.*

[முன் + நிலவு. முழுநிலவு நாள் (வெள்ளுவா) வருவதற்கு முந்திய நாட்கள்.]

முன்னிலா *munnilā*, பெ.(n.) ஒளிப்பக்கத்து (பூர்வ பட்சம்) இரவின் முன்னேரத்திலுள்ள நிலவு; moonlight in the early hours of the night, as during the bright fortnight.

[முன் + நிலா]

முன்னிலை¹ *munnilai*, பெ.(n.) 1. முன்னிற்ப -வள்-வன்-து; person or thing that stands in front. *"முன்னிலையாக்கல்" (தொல். பொருள்.101).* 2. தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூவிடங்களுள் ஒன்று; second person, the person or thing spoken to. *"உயிரீறாகிய முன்னிலைக் கிளவியும்" (தொல்.எழுத்து.152). "பெருவளக் கரிகாள் முன்னிலைச் செல்லார்" (அகநா.125:18). "ஒன்னார் முன்னிலை முருககிப் பின்னின்று" (புறநா.262:4).* 3. கரணியம் (தஞ்சைவா.7, தலைப்பு, உரை); cause. 4. முதன்மையானது; that which is essential. *"கலவிக்கு முன்னிலையாய்" (திருவிருத்.16, வியா.பக்.113).* 5. நேர்முகம் (சமுகம்); presence. *அவர் முன்னிலையிற் சொல்லியுள்ளேன்.* 6. வெளிப்படுமிடம்; place of manifestation. *"முன்னிலை கமரேயாக" (பெரியபு.அரிவாட்டாய.23).*

[முன் + நிலை.]

முன்னிலை² *munnilai*, பெ.(n.) 1. விளையாட்டு, தேர்தல் முதலியவற்றில் வெற்றி பெறுவதற்குரிய முதல் இடம்; முன்னணி; leading position in a race, etc.

அந்த வேட்பாளர் பத்தாயிரம் நேரி (வாக்கு)கள் அதிகம் பெற்று முன்னிலையில் இருக்கிறார். இந்தப் போட்டித் தொடரில் எந்த நாடு முன்னிலையில் உள்ளது என்று தெரியவில்லை. 2. ஒருவர் இருக்கும் இடத்தின் முன்பு; presence of someone. *இறைவன் முன்னிலையில் பூக்கட்டிப் போட்டுப் பார்த்தார்கள்.* 3. பேசுபவரின் முன் இருப்பவர்; person who is addressed; second person.

[முன் + நிலை.]

முன்னிலைஅசைச்சொல் *munnilai-ašai-c-col,* பெ.(n.) முன்னிலையசை பார்க்க; see *munnilai-y-ašai.*

[முன்னிலை + அசை + சொல்]

முன்னிலைக்காட்சி *munnilai-k-kāṭci,* பெ.(n.) இறைவனை முன்னால் (அணித்துறக்) காணும் காட்சி (பிரபஞ்சவி.); realising God as being immediately present.

[முன்னிலை + காட்சி.]

முன்னிலைக்காரன் *munnilai-k-kāran,* பெ.(n.) 1. கம்மாளர், வண்ணார் முதலிய குலங்களின் தலைவன் (யாழ்.அக.); headman of the caste, as of *Kammāḷar, Vaṇṇār,* etc. 2. ஒருவகைக் கீழ்த்தர வேலைக்காரன் (நாஞ்.); a petty officer.

[முன்னிலை + காரன்]

முன்னிலைக்கிளவி *munnilai-k-kiḷavi,* பெ.(n.) முன்னிலை[1], 2 பார்க்க; see *munnilai*[1], 2.

[முன்னிலை + கிளவி.]

முன்னிலைப்படர்க்கை *munnilai-p-paḍarkkai,* பெ.(n.) முன்னிலைப் பொருளில் வழங்கும் படர்க்கைச் சொல்; word which in form is in the third person, but is used in the second person. *'எம்பி முன்னிலைப் படர்க்கை (சீவக.1760, உரை).*

[முன்னிலை + படர்க்கை]

முன்னிலைப்படுத்து-தல் *munnilai-p-paḍuttu-,* 5 செ.கு.வி.(v.i.) தன்னை முதன்மை நிலையில் வைத்தல்; project one self; bring oneself to the fore front. *அவர் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதில் கவனமாக இருந்தனர்.*

[முன்னிலை + படுத்து-தல்.]

முன்னிலைப்பரவல் *munnilai-p-paraval,* பெ.(n.) கடவுளை முன்னிலைப் படுத்திப் புகழுகை (சீவக.17, பக்.448); praise addressed the God.

[முன்னிலை + பரவல்]

முன்னிலைப்பாடு *munnilai-p-pāḍu,* பெ.(n.) பிணைப்பொருள் (வின்.); bail, security, pledge.

[முன்னிலை + பாடு. படு→பாடு.]

முன்னிலைப்புறமொழி *munnilai-p-pura-moḻi,* பெ.(n.) முன்னிலையாக நிற்பாரைக் குறித்துப் பிறனைக் கூறுமாறு போலக் கூறுஞ்சொல் (தொல்.பொருள்.165, இளம்.); speech intended for one who is present but spoken as if to a third person.

[முன்னிலை + புறமொழி]

முன்னிலைப்பெயர் *muṉṉilai-p-peyar,* பெ.(n.) முன்னிலை யிடத்துவரும் பெயர்ச் சொல் (தொல்.எழுத்து.321); second person pronoun or noun.

எ-டு: நீ, நீர், நீங்கள்

[முன்னிலை + பெயர்]

முன்னிலையசை *muṉṉilai-y-ašai,* பெ. (n.) முன்னிலையில் வழங்கும் அசைச் சொல் (புறநா.40, உரை); expletive used with the second person sing., as *miyā*in *Šeṉmiyā.*

[முன்னிலை + அசை]

முன்னிலையில் *muṉṉilaiyil,* பெ.எ.(adj.) நிகழ்ச்சிக் கூட்டம் முதலியவைக் குறித்து வருகையில் ஒருவர் அல்லது பலர் முன்னின்று பொறுப்பேற்ற நிலையில்; ஒருவர் அல்லது பலர் முன்னின்று கவனிக்கும் நிலையில்; in the presence of. *மேலதிகாரியின் முன்னிலையில் ஞாயம் கேட்கப்பட்டது. தரைப்படைத் தலைவரின் முன்னிலையில் வன்முறையாளர்கள் படைக்கலன்களை ஒப்படைத்தனர். விருந்தினர் முன்னிலையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று கூடத் தெரியாதா?*

[முன்னிலை → முன்னிலையில்]

முன்னிலையேவலொருமைவிளைமுற்று *muṉṉilai-y-ēval-orumai-viṉaimuṟṟu,* பெ.(n.) ஆய், உ, ஆல், எல், காண் என்னும் ஐந்து ஈறு (விகுதி)களையும் அகர முதல் ஔகாரவிறுதி நின்ற பன்னீருயிரையும் ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்னும் பதினொரு மெய்களையும் ஈறாக உடைய இருதிணை முக்கூற்று ஒருமை முன்னிலையேவல் வினைச் சொற்கள்; second person singular imperative finite verb.

[முன்னிலை+ஏவல்+ ஒருமை + வினைமுற்று.]

முன்னிலையேவல்பன்மைவினைமுற்று *muṉṉilai-y-ēval-paṉmai-viṉai-muṟṟu,*பெ.(n.) மின் உம் என்னும் ஈறுகளை இறுதியில் உடையதாய் இடைநிலையேலாது எதிர் காலத்தைக் காட்டி வருமொழிகள்; second person plural imperative finite verb.

முன்னிலையொருமைவினைமுற்று *muṉṉilai-y-orumai-viṉaimuṟṟu,* பெ. (n.) ஐ, ஆய், இ என்னும் ஈறு (விகுதி)களை உடைய இருதிணை முக்கூற்றொருமை வினைமுற்று; second person singular finite verb.

முன்னிலைவினை *muṉṉilai-viṉai,* பெ. (n.) முன்னிலைப் பெயர் எழுவாயாக வரும் பொழுது அதனோடு சென்று இணையும் வினை; second person verb.

[முன்னிலை + வினை]

முன்னிளவல் *muṉṉiḷaval,* பெ.(n.) முன்றோன்றல் (திவா.) பார்க்க; see *muṉ-ṟōṉṟal.*

[முன் + இளவல்]

முன்னின்மை *muṉṉiṉmai,*பெ.(n.) முன்ன பாவம் பார்க்க; see *muṉṉa-pāvam. "முன்னின்மையோடு பின்னின்மை யன்றி" (வேதா.சூ.35).*

[முன் + இன்மை]

முன்னீட்டுத்தொகை *muṉṉīṭṭu-t-togai,* பெ.(n.) முன்பணம் பார்க்க; see *muṉ-paṇam.*

[முன் + ஈட்டுத்தொகை]

முன்னீடு[1] *muṉ-ṉ-īḍu,* பெ.(n.) 1. முன் செல்லுகை; going before. 2. முன்னிடுகை; placing before. 3. தலைமை (யாழ்.அக.); leadership. 4. பொறுப்பாளி (வின்.); responsible person.

[முன்னிடு→முன்னீடு]

முன்னீடு[2] *muṉ-ṉ-īḍu,* பெ.(n.) பெண்டிர் காதணி வகை (வின்.); an ear-ornament, worn by women.

[முன்னிடு→முன்னீடு]

முன்னீடு[3] *muṉ-ṉ-īḍu,* பெ.(n.) முதல் அடைமானம்; first or prior mortgage.

[முன்→முன்னீடு]

முன்னீர்[1] *muṉṉīr,* பெ.(n.) நிலத்திற்கு முன் தோன்றிய கடல்; sea, as having been formed before land. *"முன்னீர் விழவி னெடியோன்" (புறநா.9, பாடபேதம்). "முன்னீராயினு முகந்துடன் புகுவோர்" (பெருங்.மகத.மேல்வீ.24:76).*

தெ. முந்நீரு; க. முந்நீர்.

[முன் + நீர்]

முன்னீர்[2] *muṉṉīr,* பெ.(n.) 1. சோற்றுக் கற்றாழைச் சாறு; juice of aloes. 2. வெடியுப்பு எரிநீர்; nitric acid. 3. முதலில் உண்டாகும் நீர்; first formed water (சா.அக.).

முன்னீர்க்கோவை *muṉṉīr-k-kōvai,* பெ.(n.) நீர்க்கோவை (ஜலதோஷம்) வகை (சீவரட்.); catarrh.

[முன் + நீர்க்கோவை]

முன்னீர்ப்பழந்தீவு *muṉṉīr-p-paḻantīvu,* பெ.(n.) கடலிலுள்ள இசை பன்னீராயிரம் தீவுகளடங்கிய கூட்டமாகும்; very old islands in the Indian ocean called as *Iśai panniṟāyiram.* *தமிழகத்தின் தென் மேற்கில் இந்துமாக்கடலில் அமைந்த மாலத் தீவுகள் என்று கூறப்படும், பழமையான தீவுகளாகும். இதனை இலக்கத் தீவுகள் என்றும் கூறுவர். இத்தீவுகள் கடல் கொண்ட தமிழகத்தின் எஞ்சிய பகுதிகளாகும். முதல் இராசராசன் இத்தீவுகளைக் கடற்படையால் வென்று கைப்பற்றியுள்ளான். "முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்" (முதல் இராசராசன் – மெய்க்கீர்த்தி).*

[முன்னீர் + பழந்தீவு]

முன்னு[1]-தல் *muṉṉu-,* 5 செ.குன்றாவி.(v.t.) கருதுதல்; to think, contemplate. *"வேறுபுல முன்னிய விரகறி பொருந" (பொருந.3).*

க. முந்நு

[உன்னு-தல்→முன்னு-தல்.]

முன்னு[2]-தல் *muṉṉu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. எதிர்ப்படுதல்; to meet. *"கதிர்முலைக் கன்னி மார்ப முன்னினர் முயங்கி னல்லால்" (சீவக.483).* 2. அடைதல்; to reach, arrive at. *"முனிவன் முன்னினானால்" (சூளா.தூது.123).* 3. அணுகுதல்; to approach. *"நகர் நெறியின் முன்னினான்" (சீவக.1249).* 4. பொருந்துதல்; to get to, join. *"முன்னுபு கீழ்த்திசை நோக்கி" (சீவக.2636).* 5. பின்பற்றுதல்; to adhere to; to follow. *"முற்றுட னுணர்ந்தவ னமுத முன்னினார்" (சீவக.2639).*

[முன்→முன்னு→முன்னு-தல்]

முன்னு³–தல் *munnu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கிளர்தல்; to swell, rise, as the waves. *"நளிகடன் முன்னியது போலும்" (பரிபா.12:7).* 2. படர்ந்து செல்லுதல்; to spread. *"முன்னுங் கருவிடமுண்ட..... முன்னோன்" (திருக்கோ. 236).* 3. முற்படுதல்; to precede, go before. *"முன்னியாடு பின்யான்....... உங்ஙனே வந்து தோன்றுவனே" (திருக்கோ.16).* 4. நிகழ்தல் (சம்பவித்தல்); to happen. *'மடந்தைக்கு முன்னியதறிய" (திருக்கோ.229, கொளு.).*

[முன்→முன்னு–தல்]

முன்னுக்கு *munnukku,* வி.அ.(adv.) ஓர் இடத்தின் முன்பாக; forward; to the fore. *நாற்காலியை கொஞ்சம் முன்னுக்கு இழுத்து போடு.*

[முன்→முன்னுக்கு]

முன்னுக்குக்கொண்டுவா–தல் (முன்னுக்குக்கொண்டுவரு–தல்) *munnukku-k-koṇḍu-vā-,* 18 செ.கு.வி. (v.i.) வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வரச் செய்தல்; முன்னேற்றுதல்; cause to come up; help someone rise to in the world. *நன்றாகப் படித்துக் குடும்பத்தை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும்.*

[முன்னுக்கு + கொண்டு +வா–தல்]

முன்னுக்குப்பின்முரணாக *munnukku-p-pin-muraṇāga,* வி.அ.(adv.) முரண்பாடான முறையில்; ஒன்றை ஒன்று மறுக்கிற வகையில்; in a self contradict way. *முன்னுக்குப் பின் முரணாகப் பேசுபவரை எப்படி நம்புவது?*

[முன்னுக்கு + பின் + முரணாக.]

முன்னுக்குவா–தல் (முன்னுக்குவருதல்) *munnukku-vā-,* 18 செ.கு.வி.(v.i.) 1. வளர்ச்சியடைதல்; to come to the fore; to advance, progress. 2. வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வரச் செய்தல்; முன்னேற்றுதல்; come up; progress or advance in life. *பல இடர்களைத் தாண்டி முன்னுக்கு வந்தவனுக்குத்தான் பணத்தின் அருமை தெரியும். நன்றாகப் படித்து முன்னுக்கு வர வேண்டும் என்று வாழ்த்தினார்.*

[முன்→முன்னுக்கு + வா–தல்]

முன்னுச்சி *mun-n-ucci,* பெ.(n.) தலையுச்சியின் முன்பகுதி; front part of the head, sinciput.

[முன்→ முன்னுச்சி]

முன்னுச்சிப்பூ *munnucci-p-pū,* பெ.(n.) உச்சிப்பூ; an ornament for the forehead of a child.

மறுவ. தலைச்சுட்டிப்பூ

[முன்னுச்சி + பூ]

முன்னுடையாரும்பழம்பேரும்நீக்கி *munnuḍaiyārum-paḻampērum-nīkki,* வி.எ.(adv.) நிலம் முன் யாருக்குச் சொந்தமாய் இருந்ததோ, அதைப் பொருள் கொடுத்துத் தனதாக்கிய பின், அவர் பெயரையும், நிலத்திற்கமைந்த அவரது உரிமைப் பெயரையும் வரி கணக்கில் இருந்து நீக்கித் தன் பெயரால் பதிவு செய்வது; removing the name of the seller from the tax account book and registering the name of the buyer, after owning the

property. *"இந்நிலம் ஏழுவேலியும், இறையிலி காராண்மையு முட்பட முன்னுடையாரும் பழம்பேரும் நீக்கி" (திருவாரூர் கல்வெட்டுத் தொகுதி.2:1 பக்.18).*

முன்னுதாரணம் *munnudāranam,* பெ.(n.) முன்மாதிரி பார்க்க; see *mun-mādiri.*

முன்னுரிமை *mun-n-urimai,* பெ.(n.) 1. பலவற்றுள் சிலவற்றிற்கு முதன்மை கருதி அளிக்கும் இடம்; priority. *அரசின் திட்டங்களில் வேளாண்மைக்கு முன்னுரிமை தரப்பட்டிருக்கிறது.* 2. சலுகை அளித்து ஏற்படுத்தும் வாய்ப்பு; preference. *பகுதி நேர வேலைக்குப் பெரும்பாலும் பெண்களுக்குத் தான் முன்னுரிமை.*

[முன் + உரிமை]

முன்னுரை[1]-த்தல் *mun-n-urai-,* 4 செ. குன்றாவி.(v.t.) 1. முற்பட அறிவிப்புச் செய்தல்; to indicate before hand. *"முகம்போல முன்னுரைப்பதில்" (நான்மணி. 47).* 2. வருவது கூறுதல் (வின்.); to foretell, predict.

[முன்→முன்னுரை-த்தல்.]

முன்னுரை[2] *mun-n-urai,* பெ.(n.) 1. பழமொழி; ancient saying adage, proverb. 2. பழைய வரலாறு; ancient history. *"முன்னுரையிற் கேட்டறிவதில்லையே" (திவ்.இயற்.பெரிய. 6:59).* 3. முகவுரை; preface. *கட்டுரைகளில் முன்னுரை இடம் பெற்றிருக்கும்.*

[முன்→முன்னுரை.]

முன்னுற *munnura,* கு.வி.எ.(adv.) முன்பாக; previously, beforehand, already. *"முன்னுறக் காவா திழுக்கியான்" (குறள், 535). "மின்னொளிர் நெடுவேல் இளையோன் முன்னுற" (அகநா.203:10). "கூறுவன் வாழி தோழி முன்னுற" (நற்.233:6). "முறைநற் கறியுநர் முன்னுறப் புகழ்ந்த" (புறநா.224:5).*

[முன் + உறு - முன்னுற]

முன்னுறவுணர்தல் *mun-n-ura-v-unartal,* பெ.(n.) தலைவிக்கு முன்னுற்ற களவு நிலையைத் தோழி அறிதலைக் கூறும் அகத்துறை (திருக்கோ.62, கொளு.); theme describing a maid getting to know of the secret love-affair of her mistress.

[முன் + உறு + உணர்தல்]

முன்னுறுகிளவி *mun-n-uru-kilavi,* பெ.(n.) குறிப்பு மொழி; abstract language. *"முன்னுறு கிளவியிற் பண்ணுறப் பணிக்கலும்" (பெருங். உஞ்சை.கரடு.32:71).*

[முன் + உறு + கிளவி]

முன்னுறுபுணர்ச்சி *mun-n-uru-punarcci,* பெ.(n.) இயற்கைப் புணர்ச்சி (இறை.2, பக்.33); first union of lovers.

[முன் + உறு + புணர்ச்சி.]

முன்னூர் *munnūr,* பெ.(n.) தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் திண்டிவனத்திலிருந்து 22 கல்லன் மாத்திரி தொலைவிலுள்ள ஊர்; a city in South Arcot district in *Tindivanam* Taluk 22 km away from *Tindivanam. ஒரு பகுதியில் பல ஊர்கள் அமைந்திருக்கும்பொழுது முதலில் இருப்பது முன்னூர் எனப்படும் கரணியம் பற்றி இப்பெயர் வந்தது. இப்பகுதியில் முந்நூறு கோயில்கள் இருந்ததாகவும், அதனால் முந்நூறு என்று பெயர் பெற்று நாளடைவில் முன்னூறு ஆயிற்று என்றும் கூறுவர். இன்று இங்கு 75 கோயில்கள் உள்ளன.*

[முன் + ஊர்.]

முன்னூல் *munnūl,* பெ.(n.) 1. ஆதி நூல்; original treatise, as distinguished from subsequent works or commentaries. 2. மறை (வேதம்) (வின்.); the Vēdās.

[முன் + நூல்.]

முன்னூற்கேள்வன் *munnūr-kēḷvaṉ,* பெ. (n.) கடவுள் (யாழ்.அக.); god.

[முன்னூல் + கேள்வன்.]

முன்னூற்றுவன்திருவாரூரன் *munnūṟṟuvaṉ-tiruvārūraṉ,* பெ.(n.) தமிழகத்தில் சோழர் பாண்டியர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த சிவாகம நெறியுடைய சிவாச்சாரியார்கள் 48,000 பேர்களுள் முன்னூற்றுவர் அடங்கிய குழுவினருள் ஒருவரான திருவாரூரன் என்பவர் (தெ.இ.கல்.தொ.14, கல்.64); one among 48,000 *Šaiva Šivaccarryar's* called *Tiruvārūraṉ*during the region of *Cōḻā, Paṇḍiya.*

முன்னெச்சரிக்கை *muṉ-ṉ-eccarikkai,* பெ.(n.) 1. பேரிடர், கலவரம் முதலியவை நேரக் கூடிய சூழ்நிலையில் அவை நிகழாமல் தடுக்கும் ஏற்பாடு; precaution. *குடியரசு தலைவரின் வருகையை ஒட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பலர் கைது செய்யப்பட்டனர்.* 2. முன்னறிவிப்பு; fore warning. *மார்புவலி ஒரு கடுமையான நோய்க்கான முன்னெச்சரிக்கையாகும்.*

[முன் + எச்சரிக்கை]

முன்னெண்ணம்¹ *muṉ-ṉ-eṇṇam,* பெ.(n.) 1. முன்னிகழ்ச்சி பற்றிய நினைவு; thoughts about the past. 2. முன் ஆய்வு; fore thought.

[முன் + எண்ணம்]

முன்னெண்ணம்² *muṉṉeṇṇam,* பெ.(n.) விளைவு குறித்து அல்லது நடக்கப் போவது குறித்து அணியமாக இருப்பதற்கு ஏற்ற வகையில் முன்னரே செய்யும் சிந்தனை; fore thought, thoughtfulness. *காலையிலேயே முகில் கூட்டம் வானத்தில் நிரம்பி இருந்ததனால் முன்னெண்ணத்துடன் குடை கொண்டு வந்திருந்தான். முன்னெண்ணம் (யோசனை) இல்லாமல் கடன் வாங்கி விட்டு இப்போது வருத்தப்பட்டு என்ன பயன்?*

[முன் + எண்ணம்.]

முன்னெழுச்சி *muṉ-ṉ-eḻucci,* பெ.(n.) முன்னெண்ணம்¹, 1 பார்க்க; see *muṉ-ṉ-eṇṇam¹*, 1.

[முன் + எழுச்சி]

முன்னெற்றி *muṉṉeṟṟi,* பெ.(n.) நெற்றியின் மேற்பகுதி; upper part of the forehead. *"முன்னெற்றி நரைத்தன போல" (திவ். பெரியாழ்.3. 5:10).*

[முன் + நெற்றி]

முன்னெற்றிமயிர் *muṉṉeṟṟi-mayir,* பெ. (n.) தலையின் முன்பக்க மயிர் (இ.வ.); fore-lock.

[முன்னெற்றி + மயிர்]

முன்னே¹ *muṉṉē,* கு.வி.எ.(adv.) 1. முன்னால்; முன்னர்; ago; earlier; ahead. *நான்கு நாட்களுக்கு முன்னே அந்த நிகழ்ச்சி நடந்தது. ஒரு நாள் முன்னேயே வந்துவிட்டீர்களே? "முன்னே ஆட்டைப்பிடி பின்னே மாட்டைப் பிடி". "முன்னே ஒரு குறுணி பின்னே ஒரு முக்குறுணி". "முன்னே பார் பின்னே பார் உன்னைப் பார் என்னைப் பார்". "முன்னே பிறந்த காதைப் பார்க்கிலும்*

பின்னே பிறந்த கொம்பு பலம்" (பழ.). 2. முன்பு; before. *"முன்னே கொடுத்தா ருயப்போவர்" (நாலடி, 5).* 3. எதிரில்; in the presence of. *"முன்னே யுரைத்தான் முகமனே யொக்கும்" (தேவா.1199, 3).*

ம., க. முந்ந

[முன் → முன்னே]

முன்னே² *muṉṉē*, இடை.(part.) முன்னால்; முன்னர்; before someone or something.

[முன் → முன்னே]

முன்னேபின்னே *muṉṉē-piṉṉē*, வி.அ. (adv.) முன்பின்; before and after. *"முன்னேபின்னே செத்தால்தான் சுடுகாடு தெரியும்" (கோவை.).*

முன்னேர் *muṉ-ṉ-ēr*, பெ.(n.) உழவில் முதலிற் செல்லும் ஏர் (உ.வ.); leading plough, in ploughing. *"முன்னேர் போன வழியே பின்னேர் போகும்" (கோவை).*

[முன் + ஏர்]

முன்னேர்க்குண்டை *muṉṉēr-k-kuṇḍai*, பெ.(n.) உழவில் முந்திச் செல்லும் ஏர்மாடு (வின்.); leading team of oxen, in ploughing.

[முன்னேர் + குண்டை]

முன்னேரம் *muṉṉēram*, பெ.(n.) 1. இளம் பகல்; early times, as forenoon. 2. விடியற் பொழுது; morning twilight. 3. அந்திவேளை (வின்.); evening twilight.

[முன் + நேரம்]

முன்னேற்பாடு *muṉ-ṉ-ēṟpāḍu*, பெ.(n.) ஆயத்தப் பணி; preparatory work; preliminaries. *தேர்தல் முன்னேற்பாடுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஊருக்குச் செல்வதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யத் தொடங்கினாள்.*

[முன் + ஏற்பாடு]

முன்னேற்றம் *mu-ṉ-ṉēṟṟam*, பெ.(n.) 1. உயர்நிலை; மேம்பாடு; வளர்ச்சி; வளர்ச்சியடைகை; progress; betterment; improvement. *நாட்டின் பொருளியல் முன்னேற்றத்திற்காகப் பல புதிய திட்டங்கள் போடப்பட்டன. அறிவியல் முன்னேற்றங்கள் குமுதாயத்தை மேம்படுத்துவனவாக இருக்க வேண்டும்.* 2. உடல் நலம் சீர்பெறுதல்; improvement in health. *நோய்வாய்ப்பட்ட தலைவரின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்படுகிறது என்று மருத்துவ அறிக்கை தெரிவிக்கிறது. உடல்நிலை முன்னேற்றம் அடைந்ததும் வேலைக்கு வருவார்.*

[முன்னேறு → முன்னேற்றம்.]

முன்னேற்று-தல் *muṉ-ṉ-ēṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) உயர்நிலையை அடையச் செய்தல்; மேம்படச் செய்தல்; advance. *பொருளியல் துறையில் நாட்டை முன்னேற்றத் திட்டங்கள் போடப்பட்டுள்ளன.*

[முன் + ஏற்று-தல்.]

முன்னேறு-தல் *muṉ-ṉ-ēṟu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. தடையைக் கடந்து முன் செல்லுதல்; to make headway against something. *போரில் படைகள் முன்னேறியிருப்பதாகச் செய்திகள் வந்தன. சுற்றி நின்ற கூட்டத்தைப் பிளந்து கொண்டு முன்னேற முயன்றனர் காவலர்கள்.* 2. உயர்நிலைக்குச் செல்லுதல்; மேம்படச் செய்தல்; progress; go forward; develop. *வாழ்க்கையில் முன்னேற வேண்டும்*

என்ற எண்ணம் இருக்கிறது. நாடு தொழிற்துறையில் முன்னேற என்ன செய்ய வேண்டும்? 3. உடல்நிலை சீரடைதல்; improve of health. *தந்தையின் உடல்நிலை முன்னேறுவதை நினைத்து ஆறுதல் கொண்டேன்.* 4. முந்திக்கொள்ளுதல் (வின்.); to anticipate, forestall.

[முன் + ஏறு–தல்.]

முன்னை¹ *munnai*, பெ.(n.) 1. பழமை; former times, antiquity. *"முன்னைப் பழம் பொருட்கும்" (திருவாச.7:9). "முன்னை நின் றாங்கே விலக்கிய எல்லாநீ" (கலித்.116:3).* 2. தமக்கை; elder sister. *"என்ற னன்னை நும்முன்னை" (கம்பரா. மிதிலைக்.124).* 3. தமையன் (திவா.); elder brother.

க., ம. முந்நெ

[முன் → முன்னை]

முன்னை² *munnai*, பெ.(n.) 1. முன்னைமரப் பொது; firebrand teak, *Premna*. 2. ஆ (பசு) முன்னை; headache-tree. 3. எருமை முன்னை; dusky-leaved firebrand teak. 4. பீநாறி மரம்; woolly - leaved firebrand teak. 5. முன்னை மர வகை; charcoal-tree.

முன்னைக்கணம் *munnai-k-kanam*, பெ.(n.) கடந்த காலம்; past time. *"முன்னைக் கணத்தி னிறந்தவனும்" (மேருமந்.662).*

[முன் → முன்னை + கணம்]

முன்னைக்கீரை *munnai-k-kirai*, பெ.(n.) முன்னை மரத்தின் இலை; leaves of *munnai* tree.

[முன்னை + கீரை]

முன்னைக்கூட்டி *munnai-k-kūtti*, கு.வி.எ. (adv.) முன்னைக்கூடி (நெல்லை) பார்க்க; see *munnai-k-kūḍi*.

[முன்னை + கூட்டி]

முன்னைக்கூட *munnai-k-kūḍa*, கு.வி.எ. (adv.) முன்னைக்கூடி (இ.வ.); see *munnai-k-kūḍi*.

[முன்னை + கூட.]

முன்னைக்கூடி *munnai-k-kūḍi*, கு.வி.எ. (adv.) முன்னமே (இ.வ.); before, already.

[முன்னை + கூடி.]

முன்னைய *munnaiya*, பெ.எ.(adj.) முந்திய; previous. *முன்னைய ஆண்டுகளை விட இந்த ஆண்டு நல்ல மழை பெய்துள்ளது.*

[முன் → முன்னை → முன்னைய]

முன்னையோர் *munnaiyōr*, பெ.(n.) 1. முன்னோர்; predecessors, ancestors. *"முன்னையோரிறந்தார்" (கம்பரா. இந்திரசித். 8).* 2. பெரியோர்; elders. *"முன்னையோர் கொடுத்த நன்மனைக் கிழத்தி யாகிய வந்நிலை" (பதினொ. திருவிடை.7).*

[முன்னை → முன்னையோர்]

முன்னைவினை *munnai-vinai*, பெ.(n.) பழவினை; past karma, destiny. *"உழல்வதெல்லாம்...... முன்னை வினையாய் விடும்" (நாலடி, 107).*

[முன்னை + வினை.]

முன்னொட்டு *mun-n-oṭṭu*, பெ.(n.) ஒரு சொல்லாகத் தனித்து வராமல் ஒரு சொல்லுக்கு முன்னால் இணைக்கப்படும் இடைச்சொல்; prefix.

பொருள் – மென்பொருள்

மென் – முன்னொட்டு

[முன் + ஒட்டு.]

முன்னொற்றி *mun-n-orri*, பெ.(n.) முதல் அடைமானம்; first or prior mortgage.

[முன் + ஒற்றி]

முன்னோக்கி *munnōkki*, வி.எ.(adv.) 1. முன்பக்கமாக இருக்கும்; thrusting forward. *முன்னோக்கி நீண்ட பற்கள். முதுகுத் தண்டின் முன்னோக்கிய வளைவு.* 2. வருங்காலத்தைக் கருத்தில் கொண்டு; looking forward. *முன்னோக்கிய பார்வை இல்லையென்றால் முன்னேற்றமும் இல்லை.*

[முன் + நோக்கி.]

முன்னோட்டம் *mun-n-ōṭṭam*, பெ.(n.) 1. பின்னர் முறையாக நடக்கவிருப்பது எப்படியிருக்கும் என்று தெரிவிக்கும் வகையிலான கணிப்பு; ஒன்றின் செயல்பாடு முதலியவற்றைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு நிகழ்த்தப்படும் ஆய்வு; trial; preview; trial run. *வரும் பொதுத் தேர்தல் பற்றிய முன்னோட்ட ஆய்வு. போக்குவரத்து ஏற்பாடுகள் குடியரசு தலைவரின் வருகைக்குப் போதுமானதா என்பதை அறியக் காவல்துறையினர் முன்னோட்டம் பார்த்தனர்.* 2. மேலெழுந்தவாரியாகப் பார்வையிடுகை; cursory glance or perusal.

[முன் + ஓட்டம்.]

முன்னோட்டுக்கொள்(ளு)-தல் *mun-n-ōṭṭu-k-koḷ-*, 13 செ.குன்றாவி. (v.t.) ஆராய்ந்து கொள்ளுதல்; to learn by investigation. *"அவதாரங்களை முன்னேட்டுக் கொண்டு" (ஈடு, 1: 3, பிர.).*

[முன் + ஒடு + கொள்(ளு)-தல். ஒடு → ஓடு.]

முன்னோடி[1] *mun-n-ōḍi*, பெ.(n.) கொள்ளை நோயுள்ள காலத்தில் தெருவில் உலாவுவதாகக் கருதப்படும் பேய் (வின்.); an evil spirit, supposed to walk the streets in times of pestilence.

[முன் + ஓடு – முன்னோடு → முன்னோடி.]

முன்னோடி[2] *mun-n-ōḍi*, பெ.(n.) 1. இன்றைய விரிவான வளர்ச்சிக்கு அன்று அடிப்படையாக இருந்தது; pioneer, precursor. *நாடகத்தின் முன்னோடி தெருக்கூத்து என்று அவர் குறிப்பிட்டார்.* 2. விரிவாக அமைக்க முன்கூட்டியே சிறு அளவில் ஆய்வு முறையில் செய்யப்படுவது; pilot. *சோயா அவரையில் இருந்து எண்ணெய் எடுக்கும் முன்னோடி ஆலை இது.* 3. முன்மாதிரி; பின்பற்றக் கூடியது; worth following; model. *அந்த எழுத்தாளர் இளைய தலைமுறைக்கு முன்னோடி.*

[முன் + ஓடி.]

முன்னோடும்பிள்ளை *mun-n-ōḍum-piḷḷai*, பெ.(n.) 1. வீட்டு வேலைகளைச் செய்வதில் வலிய வந்து உதவி செய்பவன் (இ.வ.); one who voluntarily helps in managing the affairs of a family. 2. குட்டியாண்டவனது முன்னடியான் (E.T.vi, 182); an attendant god of *kuṭṭi-y-āṇḍavan*.

[முன் + ஓடும் + பிள்ளை.]

முன்னோர் *munnōr*, பெ.(n.) 1. முன் தலைமுறையினர்; predecessors, ancestors. *நமது முன்னோர் சில துறைகளில் மேம்பட்ட நிலை அடைந்திருந்தார்கள். அவர்களுடைய முன்னோர்களைப் பற்றி உசாவிய போது பல சுவையான செய்திகள்*

(தகவல்கள்) கிடைத்தன. 2. மந்திரித் தலைவர் (பிங்.); chief ministers. 3. பண்டையவர் (பூர்விகர்); the ancients. *"முன்னோர் மொழி பொருளே யன்றி" (நன்.9).*

[முன் → முன்னோர்]

மனித குலத்தில் முன் வாழ்ந்தோர்; ஒரு குடிவழியின் (பரம்பரையின்) மூதாதையர்.

முன்னோலை *mun-n-ōlai*, பெ.(n.) எழுதிக் கொடுத்திருப்பதற்கு முன்னுள்ள மூலச்சீட்டு (நாஞ்.); previous records or deeds.

[முன் + ஓலை.]

முன்னோன்¹ *munnōn*, பெ.(n.) 1. பிள்ளையார் (சூடா.); god Gaṇēśa. 2. அருகன் (யாழ்.அக.); Arhat. 3. கடவுள்; God.

[முன் → முன்னோன்]

முன்னோன்² *munnōn*, பெ.(n.) 1. முன் தலைமுறையினன்; predecessor, ancestor. *"தாதைக் கொன்பது வழிமுறை முன்னோன்" (மணிமே.28:123–4).* 2. தகப்பன்; father. *"வாட்குடியின் முன்னோனது நிலை" (பு.வெ. 3:13, கொளு.).* 3. தமையன்; elder brother. *"தம்முன்னோர் தந்தை தாய்" (பு.வெ.9:33).*

[முன் → முன்னோன்]

முனக்கம் *munakkam*, பெ.(n.) 1. முணுமுணுக்கை (நாஞ்.); muttering, murmuring; grumbling. 2. புலப்பம், வேதனைக்குரல்; moan.

[முனங்கு → முனக்கு → முனக்கம்.]

முனகர் *munagar*, பெ.(n.) கீழ்த்தரமானவன்; low, mean person. *"வினையின் முனகர் துன்னு மின்னாக் கடறு" (திருக்கோ.217).*

[முனகு → முனகர்]

முனகல் *munagal*, பெ.(n.) மெல்லிய குரலில் வெளிப்படுத்தும் ஒலி; groan. *குழந்தையின் முனகலைக் கேட்டு விழித்துக் கொண்டாள்.*

[முனகு → முனகல்]

முனகு¹-தல் *munagu-*, 5 செ.கு.வி.(v.i.) துன்பம் முதலியவை தாங்காமல் மெல்லிய குரலில் தெளிவற்ற வகையில் பேசி எதிர்ப்பைத் தெரிவித்தல்; விருப்பமின்மை, எதிர்ப்பு, சலிப்பு முதலியவற்றை வெளிப்படுத்தும் வகையில் தெளிவில்லாமல் மெல்லிய குரலில் பேசுதல்; முணுமுணுத்தல்; groan with pain; mutter something, as a protest, etc. *இரவு முழுவதும் காய்ச்சலால் முனகிக் கொண்டிருந்தான். எடுபிடி வேலைக்கு நான்தான் கிடைத்தேனா என்று முனகியவாறே சென்றேன். வாய்க்குள்ளே முனகாதே உரக்கப் பேசு!*

[முணகு → முனகு → முனகு-தல்.]

முனகு² *munagu*, பெ.(n.) குற்றம்; defect, fault. *"முனகு தீரத் தொழுதெழு மின்கள்" (தேவா.356, 2).*

[முனகு¹ → முனகு.]

முனங்கு¹-தல் *munangu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. குரலையடக்கிப் பேசுதல்; to mutter, murmur; to grumble. 2. வேதனையாற் புலம்புதல்; to moan.

[முணகு → முனகு → முனங்கு → முனங்கு-தல்.]

ஒ.நோ. **OE.** moen, Obs. mean, **E.** moan, to make along low murmur of physical or mental suffering, to complain, to lament misfortune, to lament for dead person (வே.க.முல்⁵).

முனங்கு² *munangu*, பெ.(n.) ஓரம் (இ.வ.); edge, border, side.

முனல் *munal,* பெ.(n.) 1. முல்லைக் கொடிவகை; Arabian jasmine. 2. காட்டு மல்லிகை; wild jasmine.

முனாக்கம் *munākkam,* பெ.(n.) சுரை; a creeper or climber, bottle gourd - *Calabash - Logenaria Vulgaris* (சா.அக.).

முனாது *munādu,* பெ.(n.) 1. முன்னிடத் துள்ளது; that which is in front. *"சித்திரகூட முனாதென" (சீவக.1421).* 2. முன்புள்ளது; that which is earlier. *"எழுவினி வாழியென் னெஞ்சே முனாது" (குறுந்.11:4).*

[முன்→ முனாது]

முனி[1]-தல் *muni-,* 2 செ.குன்றாவி.(v.t.) 1. வெறுத்தல்; to dislike. *"முனித னினைதல் வெரூஉதன் மடிமை" (தொல்.பொருள்.260). "முனிதக நிறுத்த நல்கல் எவ்வம்" (அகநா.98:4). "முனிபடர் உழந்தபாடில் உண்கண்" (குறு.357:1). "துளிகூர் மனத்தார் முனிபடர் உழக்கும்" (நற்.262:5). "முனித்தலைப் புதல்வர் தந்தை" (புறநா.250:8).* 2. சினங் கொள்ளுதல்; to be angry with. *"முடிபொரு ளன்று முனியன் முனியல்" (பரிபா.20:93).*

ம., க., து. முனி.

[முன்→ முனி→ முனி-தல்.]

முனி[2] *muni,* பெ.(n.) 1. முனிவன் (பிங்.); saint, sage. *"முனியுந் தம்பியும்...... இனிய பள்ளிகளெய்திய பின்" (கம்பரா. மிதிலைக். 139).* 2. புத்தன் (யாழ்.அக.); the Buddha. 3. அகத்திய முனி; Agastiya - *Šiddar.* 4. தெய்வம்; god.

[முன்→ முனி. வடவர் காட்டும் மூலம் 'மன்' = கருது. இது முன் என்னும் தென் சொற்றிரிபு.]

முனி[3] *muni,* பெ.(n.) 1. வில் (திவா.); bow. *"முனிநாண் கோத்து" (உபதேசகா. பஞ்சாக். 96).* 2. யானைக் கன்று; young elephant. *"முனியுடைக் கவளம்போல்" (நற்.360).* 3. சடைப்பேய் (இ.வ.); devil, goblin.

[முல்→முன்→முனி (வே.க.). முல் = வளைதற் கருத்துவேர். சாய்தல் கோணுதல், வளைதல், நெளிதல், மடங்குதல், திருகுதல், வட்டமாதல், முடிதல், சுற்றுதல், சுழலுதல், புரளுதல், உருளுதல், உருண்டையாதல், திரிதல், திரும்புதல், சூழ்தல் முதலிய பலவும் வளைதற் கருத்தொடு தொடர்புள்ளவையாம்.]

முனி[4] *muni,* பெ.(n.) 1. அகத்தி; a tree - *Coronilla grand flora.* 2. தேன்; honey.

[முன்→ முனி.]

முனிசடிலம் *muni-šaḍilam,* பெ.(n.) மருக்கொழுந்து (மூ.அ.); southernwood.

முனிசுவ்விரதர் *muni-šuvviradar,* பெ.(n.) தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர் (திருக்கலம்.காப்பு, உரை); an Arhat, one of 24 *Tirttaṅkarar.*

முனித்துருமம் *muni-t-turumam,* பெ.(n.) அகத்தி (மூ.அ.); West Indian pea-tree.

[முனி[4] → முனித்துருமம்]

முனித்துறை *muni-t-turai,* பெ(n.) விழா சடங்கு; rites and ceremonies. *"முனித்துறை முதல்வியர்" (பரிபா.11:82).*

[முனி + துறை]

முனிதளம் *muni-taḷam,* பெ.(n.) அகத்தி; a tree - *Sesbania grandi flora.*

முனிந்துரை *munintu̱rai*, பெ.(n.) வெந்தயம்; a plant - *Fenu greek - Trigonella foe numgraecum* (சா.அக.).

முனிநன் *mun̠inan̠*, பெ.(n.) வெறுப்பவன்; one who dislikes or hates. *"நந்தோளிடை முனிநர் சென்ற வாறே" (ஐங்குறு.314).*

[முனி→முனிநன்]

முனிப்பூண்டு *mun̠i-p-pūṇḍu*, பெ.(n.) முனிதளம் பார்க்க; see *mun̠i-taḷam.*

முனிபகா *mun̠ipagā*, பெ.(n.) வரகு; a millet - kodo millet-*Paspalum Scrobicu latum* (சா.அக.).

முனிபட்சி *mun̠i-paṭci*, பெ.(n.) அவல்; flacked rice.

முனிபடர் *mun̠i-paḍar*, பெ.(n.) வெறுத்தற்குரிய துன்பம்; despise grief. *"முனிபடர் உழந்த பாடில் உண்கண்" (குறுந்.357:1).*

முனிபத்திரி *mun̠i-pattiri*, பெ.(n.) செவ்வகத்தி; red variety of Sesbania grandi flora (சா.அக.).

முனிபித்தலம் *mun̠i-pittalam*, பெ.(n.) தாமிரம் (அரு.அக.); copper.

முனிமரபு *mun̠i-marabu*, பெ.(n.) இறைமை; Godhead, divinity. *"அருமுனி மரபி னான்றவர்" (பரிபா.19:3).*

[முனி + மரபு]

முனிமூத்திரம் *mun̠i-mūttiram*, பெ.(n.) 1. கல்லுப்பு (யாழ்.அக.); rock salt. 2. கூர்மை, கல்லுப்பு முதலியவை கலந்த உப்புக்கட்டி (வின்.); salt in lumps, composed of *kūrmai*, kalluppu etc.

[முனி + மூத்திரம்]

முனிமை *mun̠imai*, பெ.(n.) முனிவருக்குரிய தன்மை; saintliness. *"முனிமை முகடாய மூவா முதல்வன்" (சீவக.1609).*

[முனி →முனிமை]

முனிமையின்வடிவு *mun̠imaiyin̠-vaḍivu*, பெ.(n.) சமணர்கள் நோன்பேற்கும் வகை (சைனதீட்சை வகை); a kind of *tiṭcai.* *"முனிமையின் வடிவினை முடியநின்று" (மேருமந்.1200).*

[முனிமை + இன் + வடிவு]

முனியகத்தி *mun̠iya-katti*, பெ.(n.) பிரம்பு; rattan-*Calamus rotang* (சா.அக.).

முனியன் *mun̠iyan̠*, பெ.(n.) சிற்றூர் சிறு தெய்வம் (உ.வ.); a village demon.

மறுவ. முனியாண்டி

[முனி →முனியன்]

முனிவர் *mun̠ivar*, பெ.(n.) 1. இருடிகள்; hermits, ascetics. *"முனிவர்களும் யோகிகளும்" (திவ்.திருப்பா.6). "பணியிய ரத்தைநின் குடையே முனிவர்" (புறநா.6:17).* 2. பதினெண் கணத்துள் ஒரு தொகுதியினர் (பிங்.); a class of sages, one of *patin̠en̠-kaṇam.* 3. உலகப் பற்றைத் துறந்து தவம் புரிந்து பல ஆற்றல்கள் பெற்றவர்; ascetic sage.

[முனி → முனிவர்]

முனிவரன் *mun̠ivaran̠*, பெ.(n.) சிறந்த உயர்வான முனிவர் (முனிசிரேட்டன்); eminent sage. *"தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்" (பு.வெ.சிறப்).*

[முனி →முனிவரன்]

முனிவறாமை *muṉi-vaṟāmai,* பெ.(n.) உயிர்த்துன்பம் பன்னிரண்டனுள் ஒன்றான தீராச் சினம் (கோபம்) (பிங்.); unappeasable wrath, as a cause of distress, one of 12 *yuir-t-tuṉbam.*

[முனிவு + அறு + ஆ(மை)]

முனிவன் *muṉivaṉ,* பெ.(n.) 1. உலகப்பற்றைத் துறந்த அறிவன் (ஞானி); sage. *"வந்தெதிர்ந்த முனிவனை" (கம்பரா. மிதிலைக்.85). "நீயே வடபான் முனிவன் றடவினுட் டோன்றி" (புறநா.201:8).* 2. கடவுள்; god. *"முனிவன் புத்திரன்" (திருவாலவா. காப்பு, 2).*

[முனி→முனிவன்]

முனிவிலனாதல் *muṉivilaṉ-ādal,* பெ.(n.) வணிகர் குணம் எட்டனுள் ஒன்றான சினமின்மை (பிங்.); being without anger, one of eight qualities of merchants.

வணிகர் குணங்கள் : 1. தனிமையாற்றல், 2. முனிவிலனாதல், 3. இடனறிந்தொழுகல், 4. பொழுதொடு புணர்தல், 5. வறுவது தெரிதல், 6. இறுவதஞ்சாமை, 7. ஈட்டல், 8. பகுத்தல்.

[முனிவு + இலன் + ஆதல்]

முனிவு *muṉivu,* பெ.(n.) 1. வெறுப்போடு கூடிய சினம்; anger, wrath. *"முனிவு தீர்ந்தோன்" (கம்பரா. வருண.82).* 2. வெறுப்பு (தொல். சொல்.386); dislike, aversion. 3. களைப்பு; fatigue. 4. வருத்தம்; suffering. *"முனிவிகந்திருந்த........ இரவல" (சிறுபாண். 40).* 5. முயற்சி (சிவதரு. சிவத.1, உரை); endeavour.

க. முனிபு, ம. முனிவு.

[முனி→முனிவு]

முனிவோன் *muṉivōṉ,* பெ.(n.) நாரை; heron (சா.அக.).

முனீந்திரன் *muṉīndiraṉ,* பெ.(n.) 1. சிறந்த முனிவர்; eminent sage. 2. புத்தன் (சூடா.); the Buddha. 3. அருகன் (சீவக.3094, உரை); Arhat.

[முனி→ முனீந்திரன்]

முனை¹-தல் *muṉai-,* 2 செ.கு.வி.(v.i.) பொருதல்; to fight. *"வில்லோர் உழவர் வெம்முனைச் சீறூர்" (நற்.3:5).*

க., து. முநி.

முனை²-தல் *muṉai-,* 2 செ.கு.வி.(v.i.) ஊக்கங் கொள்ளுதல்; to be zealous, enthusiastic. *'அவன் அந்தச் செயலில் முனைந்திருக்கிறான்' (உ.வ.).*

முனை³-தல் *muṉai,* 2 செ.குன்றாவி.(v.t.) 1. சினத்தல்; to be angry with; to resent. 2. வெறுத்தல்; to dislike. *"இன்றீம்பாலை முனையின்" (பெரும்பாண்.180).*

க., து. முநி.

முனை⁴-த்தல் *muṉai-,* 4 செ.குன்றாவி. (v.t.) எதிர்த்தல்; to attack. *"முனைப்பது நோக்கிவேல் முனையவி ழற்றத்து" (கல்லா.70:16).*

முனை⁵-த்தல் *muṉai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. செயலில் முனைந்து இறங்குதல்; to be active, busy oneself in, bestir oneself. *"முனைத்திடா தசத்துச் சத்தின்முன்" (சி.சி.7:1).* 2. மூண்டு நிற்றல்; to be deeply engaged. 3. எடை கூடுதல்; to be of over-weight. *சருக்கரையைக் கொஞ்சம் முனைக்கப் போடு (உ.வ.).* 4. முயற்சி மேற்கொள்ளுதல்; முயலுதல்; take efforts;

attempt. *சிறுகதைகளைத் தொகுத்து நூலாக வெளியிட முனைந்தார். ஒன்றைப் பற்றிச் சிந்திக்க முனையும் போது தான் அதில் உள்ள இன்னல்கள் தெரிய வரும்.*

முனை[6] *munai,* பெ.(n.) 1. போர்; battle, war. *"கடுநெறி முனையகன் பெரும்பாழ்" (பதிற்றுப்.25:9). "முனைதிறை கொடுக்குந் துப்பிற் றன்மலை" (அகநா.13:2).* 2. போர்க் களம்; battle field. *"முனையான் பெருநிரை போல" (குறுந்.80:6). "முனைமுருங்கத் தலைச் சென்றவர்" (புறநா.16:3).* 3. பகைப் புலம்; enemy country. *"முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பின்" (குறிஞ்சிப். 128).* 4. பகை; hatred. 5. வெறுப்பு (சூடா.); dislike, aversion. 6. துணிவு (வின்.); boldness, valour. 7. கூட்டம், திரள் (ஈடு, 10. 5:10); crowed, collectiion. 8. குறிப்பிடப்படும் செயல்பாடு நிகழும் ஓர் இடம்; front as the place of action. *போர் முனை.*

க. மொநெ

முனை[7] *munai,* பெ.(n.) தவம்; austerity. *"முனைத் திறத்து மிக்கசீர் முனைவர்" (சீவக.707).*

முனை[8] *munai,* பெ.(n.) 1. முன்; front. *"அத்தி னகர மகர முனையில்லை" (தொல். எழுத்து.125).* 2. முகம் (ஈடு, 10. 5:10); face. 3. நுனி; point, sharpened end, edge. *"வெய்ய முனைத் தண்டு" (சீவக.1136, பாடபேதம்).* 4. கடலுட் செல்லும் நீண்ட கூரிய தரைப்பகுதி; cape, head-land. 5. ஓரம்; கோடி; விளிம்பு; corner of something. *குமரிமுனை.* 6. நீளமுடைய ஒரு பொருளில் அல்லது இணைக்கப்பட்ட ஒன்றின் தொடங்கும் இடம் அல்லது முடியும் இடம்; beginning or end part of a rope, street, etc. or anything connected. *நூலின் ஒரு முனையை எடுத்து ஊசியில் கோத்தான். தெருமுனையில் அந்தக் கடை உள்ளது. தொலைபேசியின் மறுமுனையில் பேசுவது யார் என்று தெரியவில்லை*

தெ. முந, க.மொநெ.

முனை[9] *munai,* பெ.(n.) தலைமை (அக.நி.); superiority, eminence.

முனைகாரன் *munai-kāran,* பெ.(n.) முனைப்புள்ளவன் (வின்.); courageous person; valiant, brave man.

[முனை[6] + காரன்]

முனைகுலை-தல் *munai-kulai-,* 2 செ.கு.வி.(v.i.) ஊக்கங் குன்றுதல் (வின்.); to be dispirited, discouraged.

[முனை + குலை-தல்]

முனைகேடு *munai-kēḍu,* பெ.(n.) மதிப்புரவின்மை (மரியாதையின்மை) (வின்.); disrespect, insult.

[முனை + கேடு]

முனைசுனை *munaišunai,* பெ.(n.) 1. ஒழுங்கற்ற வேறுபாடு (யாழ்.அக.); invidious distinction. 2. ஏய்ப்பு (வஞ்சகம்) (இ.வ.); double dealing.

முனைஞர் *munaiñar,* பெ.(n.) படைத் தலைவர்; commander of an army. *"வேந்துவிடு முனைஞர்" (தொல்.பொருள். 57).*

[முனை → முனைஞர்]

முனைந்தோர் *munaindōr,* பெ.(n.) பகைவர் (திவா.); enemies.

[முனை→முனைந்தோர்]

முனைப்பதி *munai-p-padi,* பெ.(n.) பாசறை (பிங்.); military encampment.

[முனை + பதி]

முனைப்பாடி *munaippāḍi,* பெ.(n.) வட ஆர்க்காடு தென்னார்க்காடு மாவட்டங்கள் அடங்கிய பகுதி, பழைய நாடுகளுள் ஒன்று; an ancient province comprising portions of North and South Arcot Districts. *"சிறந்த திருமுனைப்பாடித் திறம் பாடுஞ் சீர்ப்பாடு" (பெரியபு. திருநாவு.11) (I.M. P.N.A.387: S.A.737).*

மறுவ. திருமுனைப்பாடி

முனைப்பாடியார் *munai-p-pāḍiyār,* பெ.(n.) அறநெறிச்சாரம் என்ற நூலின் ஆசிரியராகிய புலவர்; a poet, author of *A ṟaneṟi-c-cāram.*

[முனை + பாடியார்]

முனைப்பு *munaippu,* பெ.(n.) ஒரு செயல், பணி முதலியவற்றைச் செய்வதில் காட்டும் மும்முரம்; கவனம்; determination; drive. *நம் அணியினர் இன்னும் சற்று முனைப்பாக விளையாடி யிருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம். எழுத்தாளன் ஆகிவிட வேண்டும் என்பது அவன் குறிக்கோள், அதே முனைப்பாக இருக்கிறான்.*

[முனை→முனைப்பு]

முனைப்புலம் *munai-p-pulam,* பெ.(n.) முனைப்பதி பார்க்க (தொல்.பொருள்,57, உரை); see *munai-p-padi.*

[முனை + புலம்]

முனைமழுங்கு[1]-தல் *munai-maḻuṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) கூர்மை கெடுதல்; to become blunt, as the edge of an instrument.

[முனை + மழுங்கு-தல்]

முனைமழுங்கு[2]-தல் *munai-maḻuṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) ஊக்கங் குன்றுதல்; to become dispirited, lose courage.

[முனை + மழுங்கு-தல்]

முனைமுகம் *munai-mugam,* பெ.(n.) 1. போர்க் களத்தின் முன்னிடம்; front of battle. *"முனைமுகத்து நில்லேல்" (ஆத்திசூ.).* 2. போர்க்களம்; battle field. 3. போரின் தொடக்கம்; commencement of battle. *"முனைமுகத்து மாற்றலர் சாய" (குறள், 749).*

[முனை + முகம்]

முனைமேற்செல்(லு)-தல் *munai-mēṟ-cel-,* 13 செ.கு.வி.(v.i.) பகைமேற் படையெடுத்தல்; to invade an enemy country. *"முனைமேற் சென்றோ ருறைபதி" (திவா.).*

[முனை + மேற்செல்-(லு)தல்]

முனையடுவார்நாயனார் *munai-y-aḍuvār-nāyanār,* பெ.(n.) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் (பெரியபு.); a canonized *Šaiva* saint, one of 63.

இவர் இயற்பெயர், முனையடுவார். பொன்னித் திருநாட்டின் திருநீடுரைச் சார்ந்தவர்.

முனையதரையன் *munaiya-taraiyan,* பெ.(n.) ஓர் அரசன்; a king (அபி.சிந்.).

முனையம் *munaiyam,* பெ.(n.) வானூர்தி நிலையத்தைக் குறிப்பிடும்போது ஒரே நேரத்தில் பல வானூர்திகள் இறங்கும் ஓடுபாதை கொண்ட நிலையம்; airport terminal.

[முனை→முனையம்]

முனையர் *munaiyar,* பெ.(n.) முனையரையர் பார்க்க; see *munaiyaraiyar. "இம்முனையர் பெருந்தகையார்" (பெரியபு. நரசிங்க.2).*

முனையரையர் *munaiyaraiyar,* பெ.(n.) முனைப்பாடி நாட்டை ஆண்ட சிற்றரசர்; a dynasty of chiefs who ruled in *Munai-p-pāḍi.* "காவல னார்நரசிங்க *முனையரையர்" (பெரியபு.நரசிங்க.1).*

இவரின் சிறப்புப் பெயர் நரசிங்க முனையரையர். சமயம் சிவனியம். சுந்தர மூர்த்தி நாயனாரைத் தத்தெடுத்து வளர்த்தவர்.

முனையிடம் *munai-y-iḍam,* பெ.(n.) 1. போர்க் களம்; battle-field. 2. பாலை நிலத்தூர் (பிங்.); town in a desert tract.

[முனை + இடம்]

முனையுள்ளோன் *munai-y-uḷḷōn,* பெ.(n.) முனைகாரன் (வின்.) பார்க்க; see *munai-kāran.*

[முனை + உள்ளோன்]

முனையூர் *munai-y-ūr,* பெ.(n.) பெருங் கதையில் இடம்பெறும் தலைநகரத்தின் பெயர்; capital city. *இடவகனுக்கு உதயணன் கொடுத்த நாடுகளுள், ஒரு நாட்டின் தலைநகரத்தின் பெயர் (அபி.சிந்.).*

முனையோர் *munaiyōr,* பெ.(n.) பகைவர்; enemies. *"ஒன்னா முனையோர்க் கொழிக வினித்துயில்" (பு.வெ.4 : 21).*

[முனை → முனையோர்]

முனைவர் *munaivar,* பெ.(n.) குறிப்பிட்ட துறையில் ஆராய்ச்சி செய்து ஆய்வுக் கட்டுரை அளித்துப் பெறும் உயர்ந்த பட்டம்; Doctorate of Philosophy.

முனைவன்[1] *munaivan,* பெ. (n.) 1. கடவுள்; god, as the First Being. *"வினையினீங்கி விளங்கிய வறிவின் முனைவன்" (தொல். பொருள்.649).* 2. முனிவன்; saint, sage. *"முனைத்திறத்து மிக்கசீர் முனைவர்" (சீவக.707).* 3. தலைவன்; chief. *"முனைவற் குற்றுழி வினைமுற்றி வருவோன்" (திருக்கோ. 329, கொளு.).* 4. புத்தன் (பிங்.); the Buddha. 5. அருகன்; Arhat. *"முனைவனுக் கிறைஞ்சினான் முருக வேளனான்" (சீவக. 1943).*

[முனை→முனைவன்]

முனைவன்[2] *munaivan,* பெ.(n.) பகைவன் (சது.); enemy.

[முனை →முனைவன்]

முனைவு *munaivu,* பெ.(n.) 1. வெறுப்பு (தொல்.சொல்.386); aversion, dislike, detest. 2. அவாவின்மை (சூடா.); freedom from desire. 3. வெறுப்போடு கூடிய சினம்; anger, wrath.

[முனை→முனைவு]

மூ

மூ[1] *mū*, பெ.(n.) மகரமெய்யும் ஊகார உயிரும் சேர்ந்து பிறக்கும் உயிர் மெய்யெழுத்து; the compound of ம் and ஊ = மூ.

[ம் + ஊ – மூ]

மூ[2] *mū*, பெ.அ.(adj.) மூன்று (வின்.); three. *"மூவேறு தாரமும் ஒருங்குடன் கொண்டு" (அகநா.282:8). "ஒருகணை கொண்டு மூவெயி லுடற்றி" (புறநா.55:2).*

க. மூ.

மூ[3]–த்தல் *mū-*, 4 செ.கு.வி.(v.i) 1. அகவை யுயர்தல்; to be senior in age. *"மூத்தோன் வருக வென்னாது" (புறநா.183).* 2. முதுமை யுறுதல்; to become old; to be older than another. *"தமியள் மூத்தற்று" (குறள், 1007).* 3. முடிதல்; to end. *"மூவா முதலா வுலகம்" (சீவக.1).* 4. கேடுறுதல்; to be damaged or spoiled. *"மதிலெய்த மூவாச்சிலை முதல்வர்க்கு" (தேவா.936, 4).*

க. மூது

[முது → மூ → மூ–த்தல்]

மூ[4] *mū*, பெ.(n.) மூப்பு (யாழ்.அக.); old age.

[முது → மூ]

மூ[5] *mū*, பெ.அ.(adj.) மூன்று என்னும் எண்ணின் பெயரடை; the adjectival form of *mūṉṟu*(மூன்று). *மூவேந்தர், மூவுலகு.*

மூக்கக்காவலம் *mūkka-k-kāvalam*, பெ.(n.) புரசு; a tree - *Butea frondosa* (சா.அக.).

மூக்கடிச்சதைநோய் *mūkkaḍi-c-cadai-nōy*, பெ.(n.) உள்நாக்கின் பின்புறம் தொண்டைக்கும் மூக்குக்கும் இடையில் உள்ள தொண்டைச் சதை (tonsil) அழன்று வீங்கும் நோய்; adenoids.

[மூக்கடி + சதை + நோய்]

மூக்கடைப்பான் *mūkkaḍai-p-pāṉ*, பெ.(n.) 1. நீர்க் கோவையினால் ஏற்படும் மூக்கடைப்பு (மருத்.); hindrance to breathing through the nostrils, due to cold. 2. மூக்கு நோய் வகை; polypus in the nose. 3. மாட்டு நோய் வகை; quinsy in cattle.

[மூக்கு + அடைப்பான்]

மூக்கடைப்பு *mūkkaḍaippu*, பெ.(n.) மூக்கடைப்பான் (இ.வ.) பார்க்க; see *mūkkaḍaippāṉ*.

[மூக்கு + அடைப்பு]

மூக்கணத்தாஞ்சாறு *mūkkaṇattāñjāṟu*, பெ.(n.) மூலிகை நீர் (கோவை.); medicinal herb water.

[மூக்கணத்தாம் + சாறு]

மூக்கணாங்கயிறு *mūkkaṇāṅ-gayiṟu*, பெ(n.) மாட்டின் மூக்கில் நுழைத்துத் தலையைச் சுற்றிக் கட்டியிருக்கும் கயிறு;



rope or string drawn through the bridge of the nose of the bullock as a bridle. *மூக்கணாங்கயிற்றைப் பிடித்து இழுத்ததும் மாடு நின்றது.*

[மூக்கு + கயிறு]

மூக்கணாங்கயிறுபோடு¹–தல் *mūkkaṇāṅ-gayiṟu-pōḍu-*, 20 செ.கு.வி.(v.i.) வண்டி யிழுக்கும் மாட்டிற்கு மூக்கின் ஒரு துளையில் நுழைத்து மறுதுளையில் வாங்கி தலையைச் சுற்றிக் கட்டுதல்; drawning the rope or string through the bridge of the nose of the bullock.

[மூக்கணாங்கயிறு + போடு–தல்.]

மூக்கணாங்கயிறுபோடு²–தல் *mūkkaṇāṅ-gayiṟu-pōḍu-*, 20 செ.கு.வி.(v.i.) திருமணம் நடைபெறுதல் (கோவை.); to marriage. *உன் பிள்ளைக்கு மூக்கணாங்கயிறு போடணும் (கோவை.).*

[மூக்கு + அணாம் + கயிறு + போடு–தல்]

நாட்டுப்புற வழக்காக இச்சொல் பயன் படுத்தப்படுகிறது. ஆண்மகனாய் இருந்தால் கால்கட்டு போடுதல் அதாவது மணம் செய்வித்தலைக் குறித்ததாயிற்று. வீட்டுக்கு அடங்கி சொற்படி கேளாமல் தம் மனம் போன போக்கில் செல்லுபவர்களை நல்வழிப்படுத்தும் கரணியமாக வந்த சொல்லாகும். மேலும் பெண்களாய் இருப்பின் மணம் செய்வித்தலைக் குறித்து தாலிக் கயிறு மூக்கணாங்கயிறாயிற்று. இஃது பெண்ணடிமைக் கொள்கையையொட்டி எழுந்த சொல் எனலாம்.

மூக்கணாஞ்சுண்டு *mūkkaṇāñ-juṇḍu*, பெ.(n.) எருமையின் முகத்தில் கட்டும் கயிறு; a rope to tie arround the face of buffalo.

[மூக்கு + அணாம் + சுண்டு]

மூக்கணாஞ்சுண்டு இல்லாத மாட்டைப் போல அவன் பிள்ளைத் திரிகிறான் (கோவை.).

மூக்கணை *mūkkaṇai*, பெ.(n.) 1. மூக்காங்கயிறு பார்க்க; see *mūkkāṅ-gayiṟu*. 2. கட்டை வண்டியின் முன் பக்கம் உள்ள ஓட்டுநருடைய இருக்கை; driver's seat in front of the cart. 3. முகவணை (இ.வ.) பார்க்க; see *mugavaṇai*.

[மூக்கு + அணை]

மூக்கணைமரம் *mūkkaṇai-maram*, பெ.(n.) வண்டியின் ஏர்க்கால் மரம்; pole of a cart.

[மூக்கணை + மரம்]

மூக்கந்தண்டு *mūkkandaṇḍu*, பெ.(n.) மூக்குத்தண்டு (செங்கை.) பார்க்க; see *mūkku-t-taṇḍu*.

[மூக்கு¹ + தண்டு]

மூக்கநாகம் *mūkka-nāgam*, பெ.(n.) கொம்பேறிமூக்கன் பாம்பு; whip snake.

மறுவ. கண்குத்திப் பாம்பு

மூக்கப்பன் *mūkka-p-paṉ*, பெ.(n.) நீதிசாரம் நூலாசிரியர் (அபி.சிந்.); author of Nītiśāram.

மூக்கப்பூயம் *mūkka-p-pūyam*, பெ.(n.) மூக்கம்பூயம் பார்க்க; see *mūkkam-pūyam*(சா.அக.).

மூக்கம் *mūkkam*, பெ.(n.) சீற்றம்; rage. *"படமூக்கப் பாம்பணையானோடு" (தேவா. 1232, 8).*

மூக்கம்பூயம் *mūkkam-pūyam*, பெ.(n.) புரசு; a tree - *Butea frondosa* (சா.அக.).

மூக்கர் *mūkkar,* பெ.(n.) கீழ்மக்கள் (திவா.); low, vulgar people.

மூக்கரசா *mūkkaraśā,* பெ.(n.) பனிப்பயறு; dew gram-*Phaseolus aconitifolius* (சா.அக.).

மூக்கரட்டை *mūkkaraṭṭai,* பெ.(n.) மூக்கிரட்டை (இ.வ.) பார்க்க; see *mūkkiraṭṭai* (சா.அக.).

மூக்கரண்டி *mūkkaraṇḍi,* பெ.(n.) கொடி வகை; spreading hogweed (சா.அக.).

மூக்கரணைமூலம் *mūkkaraṇai-mūlam,* பெ.(n.) மூக்கரணை வேர்; root of *mūkkaraṇai* (சா.அக.).

மூக்கரத்தவொழுக்கு *mūkkaratta-v-oḻukku,* பெ.(n.) மூக்கின் வழியே அரத்தம் வெளிப்படுகை; bleeding nose - *Epistaxis* (சா.அக.).

[மூக்கு + அரத்தம் + ஒழுக்கு.]

மூக்கரிகத்தி *mūkkarikatti,* பெ.(n.) வெற்றிலையினுடைய உடற்பகுதி, நடுத் தண்டு முதலியவற்றை வெட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு வகைச் சிறப்புக் கத்தி; a special kind of knife for cutting the stem of betel leaf.

[மூக்கு[1] + அரி[1] + கத்தி]

மூக்கரிசியுடை-தல் *mūkkariśi-yuḍai-,* 4 செ.கு.வி.(v.i.) சில்லுமூக்குடைதல்; to bleed in the nose.

[மூக்கு + அரிசி + உடை-தல்]

மூக்கரைச்சாரணை *mūkkarai-c-cāraṇai,* பெ.(n.) வெண்மையான ஒரு வகைக் கொடி; a creeper (சா.அக.).

மூக்கறட்டை *mūkkaṟaṭṭai,* பெ.(n.) 1. ஒரு பூடு; a prostate plant - hog weed - *Bauhavia procumbens* (சா.அக.). 2. மூக்கிரட்டை (யாழ்.அக.) பார்க்க; see *mūkkiraṭṭai.*

மூக்கறிவு *mūkkaṟivu,* பெ.(n.) மோப்பத் தாலறிகை (வின்.); scent, sense of smell.

[மூக்கு[1] + அறிவு]

மூக்கறு[1]-த்தல் *mūkkaṟu-,* 4 செ.கு.வி. (v.i.) மூக்கை அறுத்தல்; to disfigure one by cutting off one's nose. *"தங்கையும் மூக்கறுத்தாள் தான் தானே" (இராமநா. உயுத்.44).*

[மூக்கு[1] + அறு-த்தல்]

மூக்கறு[2]-த்தல் *mūkkaṟu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. ஒரு சூழ்நிலையில் தெரிந்தோ தெரியாமலோ ஒன்றை வெளிப்படுத்துவதன் மூலம் ஒருவரை இழிவுபடுத்துதல்; humiliate; snub. 2. மானக்கேடு (அவமானம்) செய்தல் (இராமநா.உயுத்.44); to put one to disgrace. *"முதலாளி சொன்னது முத்தாபோச்சு தொழிலாளி சொன்னது மூக்கறுந்து போச்சு" (பழ.).*

[மூக்கு + அறு-த்தல்]

மூக்கறுத்தான் *mūkkaṟuttāṉ,* பெ.(n.) மூக்கிரட்டை (சங்.அக.) பார்க்க; see *mūkkiraṭṭai.*

[மூக்கு + அறுத்தான்]

மூக்கறுப்பான் *mūkkaṟuppāṉ,* பெ.(n.) மூக்குத் தொடர்புடைய ஒரு நோய்; a disease of the nose.

[மூக்கு + அறுப்பான். மூக்கை அறுப்பது போன்று வலியைத் தரும் நோய்.]

மூக்கறுப்பு *mūkkaṟuppu,* பெ.(n.) மானக் கேடு; disgrace. *"என் குடிக்கு ஒரு மூக்கறுப்பா" (இராமநா.உயுத்.44).*

மூக்கறுபடு-தல் *mūkkaṟu-paḍu-,*20 செ. கு.வி.(v.i.) இழிவுபடுத்துதல்; get snubbed; degrade one by nose-cut. *பக்கத்து வீட்டுக்காரருக்காக ஞாயம் பேச வந்து மூக்கறுபட்டுப் போனேன்.*

[மூக்கு + அறு-படுதல்]

மூக்கறை *mūkkaṟai,* பெ.(n.) குறைபாடு உடைய மூக்கினைப் பெற்ற-வன்-வள்-து; person or animal with a defective nose. *"மூக்கறை மட்டை மகாபல காரணி" (திருப்பு.266). 'மூக்கறையானுக்கு வாழ்க்கைப்பட்டால் முன்னும் போக விடான்; பின்னும் போக விடான்' (பழ.). 'மூக்கறைக்கு முகுரம் கட்டினால் சினம் (கோபம்) வரும்' (பழ.). 'மூக்கறையன் கண்ணாடியைப் பகைத்தது போல' (பழ.).*

க. மூகொறெ.

[மூக்கு + அறை. அறு→அறை]

மூக்கறைச்சி[1] *mūkkaṟaicci,* பெ.(n.) குறை மூக்குள்ளவள்; woman with a defective nose. *"உன்னைத் தனித்து உகப்பாள் மூக்கறைச்சியன்றோ" (ஈடு, 10. 3:9).*

க. முகொறதி

[மூக்கறையன்→மூக்கறைச்சி]

மூக்கறைச்சி[2] *mūkkaṟaicci,* பெ.(n.) 1. அரிதாரம்; yellow orpiment. 2. செடி வகை; a plant.

மூக்கறையன் *mūkkaṟaiyaṉ,* பெ.(n.) குறை மூக்குள்ளவன் (உ.வ.); man with a defective nose. *"மூக்கறையன் கண்ணாடியைப் பகைத்தது போல" (பழ.).*

க. மூகொறெய.

[மூக்கறை→மூக்கறையன்]

மூக்கன்[1] *mūkkaṉ,* பெ.(n.) பெரிய மூக்குள்ளவன் (வின்.); man with a large or prominent nose.

[மூக்கு→மூக்கன்]

மூக்கன்[2] *mūkkaṉ,* பெ.(n.) மீன்கொத்தி; king fisher. *"ஒல்காச் சிவல்மூக்க னொண் புறவு" (சினேந்.261).*

[மூக்கு→மூக்கன்]

மூக்கு நீண்ட பறவை வகை.

மூக்கன்[3] *mūkkaṉ,* பெ.(n.) 1. கீழ் மகன் (திவா.); low, vulgar man. 2. கடுஞ்சினம் (இ.வ.); rage.

மூக்கன்[4] *mūkkaṉ,* பெ.(n.) கொம்பேறி மூக்கன் எனும் பாம்பு வகை; a kind of snake. (சா.அக.).

[மூக்கு→மூக்கன்]

மூக்கு நீண்ட பாம்பு.

மூக்கன்சம்பா *mūkkaṉ-šambā,* பெ.(n.) சம்பா நெல்வகை; a kind of *šambā* paddy. *"மூக்கன் சம்பாச் சிறிய முள்ளுச்சம்பா" (நெல்விடு.181).*

மூக்கன்வாளை *mūkkaṉ-vāḷai,* பெ.(n.) மீன்வகை; a kind of fish. *"பவளைவாளை மூக்கன் வாளை" (பறாளை.பள்ளு.16).*

[மூக்கன் + வாளை]

மூக்காங்கயிறு *mūkkāṅgayiṟu,* பெ.(n.) எருத்தின் மூக்கைத் துளைத்துப் பூட்டுங் கயிறு (வின்.); rope or string put through a bullock's nose as a curb.

மறுவ. மூக்கணாங்கயிறு

[மூக்கு + ஆம் + கயிறு.]

மூக்காங்கொழுந்து *mūkkāṅgoḻundu,* பெ. (n.) மூக்கின் நுனி (வின்.); tip of the nose.

[மூக்கு + ஆம் + கொழுந்து.]

மூக்காணி *mūkkāṇi,* பெ.(n.) மாட்டு வண்டி நிலத்தில் ஊன்ற உதவும் கட்டை (கோவை.); pole use to instal a cart.

[மூக்கு + ஆணி]



மூக்காந்தண்டு *mūkkāntaṇḍu,* பெ.(n.) மூக்கினுடைய நடுத்தண்டு; bridge of the nose.

மறுவ. மூக்குத்தண்டு

[மூக்கு + ஆம் + தண்டு = மூக்கின் எலும்புள்ள பாகம்.]

மூக்காமண்டை *mūkkā-maṇḍai,* பெ.(n.) மூக்குத்தண்டு (இ.வ.) பார்க்க; see *mūkku-t-taṇḍu.*

[மூக்கு + ஆ + மண்டை.]

மூக்கால்நீரருந்தல் *mūkkāl-nīr-arundal,* பெ.(n.) மூக்கின் மூலம் தண்ணீர் குடிக்கை; to take water through nostrils - this is a cure for eye diseases (சா.அக.).

[மூக்கு + ஆல் + நீர் + அருந்தல்.]

மூக்காலழு–தல் *mūkkāl-aḻu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. சிணுங்குதல் (உ.வ.); to whine, snivel, indicating discontent or unwillingness. 2. சிறிய செயலுக்குப் பெருமுயற்சி யெடுத்துக் கொள்ளுதல்; to take more effort for less work. *இந்தச் சிறிய வேலை செய்வதற்கே நீ மூக்காலழுகிறாய். நான் இதற்குமேல் செய்திருக்கிறேன் (உ.வ.).*

[மூக்கால் + அழு–தல்.]

மூக்காவளை[1] *mūkkā-vaḷai,* பெ.(n.) ஒரு வகை முள் பூடு; a thorny plant (சா.அக.).

மூக்காவளை[2] *mūkkā-vaḷai,* பெ.(n.) மர வகை (யாழ்.அக.); a tree.

மறுவ. மூக்காவனை

மூக்காவனை *mūkkāvaṉai,* பெ.(n.) கற்சூரை (வின்.); spurious wild indigo.

மூக்காவேளை *mūkkāvēḷai,* பெ.(n.) மூக்காய்வேளை பார்க்க; see *mūkkā-y-vēḷai.*

மூக்கிகம் *mūkkigam,* பெ.(n.) வசம்பு ; a plant, sweet flag - *Acorus Calamus* (சா.அக.).

மறுவ. மூக்கில்

மூக்கிரட்டை *mūkkiraṭṭai,* பெ.(n.) கொடி வகை (வின்.); spreading hog weed- *Boer haavia diffusa.*

மூக்கில் *mūkkil,* பெ.(n.) மூக்கிகம் பார்க்க; see *mūkkigam.*

மூக்கில்நீர்பாய்-தல் *mūkkil-nir-pāy-,* 1 செ.கு.வி.(v.i.) மூக்கில் நீர்வடிதல்; running nose - *Catarrh* of the nose (சா.அக.).

[மூக்கில் + நீர் + பாய்-தல்.]

மூக்கில்விரலைவை-த்தல் *mūkkil-viralai-vai-,* 4 செ.குன்றாவி.(v.t.) வியப்படைதல்; be pleasantly surprised. *பாவாணரின் மொழி ஆராய்ச்சியை உணர்ந்த மூதறிஞர்கள் தமது மூக்கில் விரலை வைத்தனர்.*

[மூக்கில் + விரல் + வை-த்தல்]

மூக்கில்வேர்[1]-த்தல் *mūkkil-vēr-,* 4 செ.கு.வி.(v.i.) இரையின் மோப்பத்தால் கழுகுக்கு மூக்கில் வேர்வை யுண்டாதல்; to sweat in the nose like a vulture which scents its prey.

[மூக்கில் + வேர்-த்தல்]

மூக்கில்வேர்[2]-த்தல் *mūkkil-vēr-,* 4 செ.கு.வி.(v.i.) ஒருவர் பிறருக்குத் தெரிந்திருக்காது என்று நினைக்கிற செய்தியை மற்றொருவர் எப்படியோ தெரிந்திருத்தல், முன்னடையாளந் தெரிதல்; sense instinctively something one is after; nose out something; to get aclue or scent. *கடன் கேட்டு வந்துவிட்டானா? எனக்கு நேற்று பணம் வந்தது இவனுக்கு மூக்கில் வேர்த்திருக்கும்.*

[மூக்கில் + வேர்-த்தல்]

மூக்கிலழகி *mūkkil-aḻagi,* பெ.(n.) நிலக் குமிழ் மரம்; Kashmere tree - *Gmelina arborea.*

மூக்கிலி *mūkkili,* பெ.(n.) 1. குறை மூக்கு உள்ள-வன்-வள்-து; person or animal with a defective nose. *"மூக்கிலி முகத்தில்" (பிரபுலிங்.வசவண்.31).* 2. பசலை வகை, சிறு பசளை; large-flowered purslane. 3. நடைவழியில் முளைக்கும் ஒரு வகைப்பூடு, சிறுபூளை; a common wayside weed. 4. செடிவகை (கோஷ்டம்); Arabian costum.

தெ. முக்கிடி.

[மூக்கு→மூக்கிலி]

மூக்கிழந்தான் *mūkkiḻandāṉ,* பெ.(n.) ஒருவகை வெண்கொடி (மூக்கரைச் சாரணை); a white creeper - *Trianthima monogyna* (சா.அக.).

மூக்கிற்கரியார் *mūkkiṟkariyār,* பெ.(n.) குன்றிமணி; a twiner - *Abrus precatorius* (சா.அக.).

மூக்கிற்கல் *mūkkiṟ-kal,* பெ.(n.) காந்த ஆற்றல் உள்ள ஒருவகை இரும்புக்கட்டி (வின்.); black loadstone, magnetic oxide of iron.

மறுவ. காகச்சீலை

மூக்கிறைச்சி *mūkkiṟaicci,* பெ.(n.) ஒரு பூடு; a plant (சா.அக.).

மூக்கினி *mūkkiṉi,* பெ.(n.) 1. முந்திரி மரவகை; cashew tree - *Anacardium occidentale.* 2. கொடிமுந்திரி (திராட்சை); common grape vine.

மூக்கு[1] *mūkku,* பெ.(n.) 1. மூச்சு இழுத்து விடுதற்கும் நறுமணத்தை உணர்வதற்கும் பயன்படுகின்ற உடல் உறுப்பு; nose, nostril. *"மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே" (தொல். பொருள். 582). "உள்ளூன் வாடிய சுரிமூக்கு நொள்ளை" (அகநா53:8). "கதிர்மூக் காரல் கீழ்ச்சேற் றொளிப்ப" (புறநா.249:1). "அத்தக் குமிழின் கொடுமூக்கு விளைகனி" (நற்.6:7).* 2. பறவையலகு (திவா.); bird's beak bill. *கோழி குப்பையைக் காலால் கிளறி மூக்கால் புழுவைக் கொத்திற்று. அவன் கிளி மூக்குக்காரன்.* 3. யானைத் துதிக்கை; elephant's trunk. *"மூரி யேழ் கடலுந்தரு மூக்கின" (தக்கயாகப்.273).* 4. ஏன வாயிலுள்ள மூக்கு போன்ற உறுப்பு; nose - shaped part of a cup, etc. spout of kettle or pot. *"கலசலப்பானை யொன்று மூக்குமடியுமுட்பட" (தெ.இ.கல்.தொ.2:5).* 5. வண்டிப்பாரின் தலைப்பகுதி; nose - shaped end of the pole of a cart. *"காடி வைத்த கலனுடை மூக்கின்" (பெரும்பாண். 57).* 6. முளை தோன்றும் வித்தின் முனை; germinating end of seeds. *"குன்றி மூக்கிற் கரியாருடைத்து" (குறள், 277).* 7. இலைக்காம்பு; base or stem of a leaf. *"மாஅத்து மூக்கிறு புதிர்ந்த" (ஐங்குறு.213).* 8. குறுநொய்; குறுநொய்யரிசி (இ.வ.); broken ends of rice.

தெ. மூக்கு; க. மூகு; ம. மூக்கு; து. மூகு.

[முகத்தல் = மூக்கால் மணத்தை நுகர்தல். முக→முகு→முக்கு→மூக்கு = முகரும் உறுப்பு. முக→முகர்–தல் = மணத்தை நுகர்தல் (மு.தா. 44).]

மூக்கு[2] *mūkku,* பெ.(n.) முரட்டுப் பேச்சு; rude talk. *"மூக்குப் பேசுகின்றா னிவனென்று" (திவ்.பெரியாழ்.5. 1:1).*

மூக்குக்கண்ணாடி *mūkku-k-kaṇṇāḍi,* பெ.(n.) பார்வைக் குறையுடையவர்கள் தங்கள் பார்வையைச் சரியாக்கிக் கொள்ள கண்களுக்குமுன் அணியும் ஒருவகை ஆடி; spectacles.

[மூக்கு + கண்ணாடி]

மூக்கின் மீது பொருத்தி ஒரு சட்டகத்தின் மூலம் இரண்டு கண்களுக்கும் நேராக நிற்குமாறு உள்ள ஆடி அமைப்பு. மூக்கின்மேல் பொருந்தியிருத்தலால் மூக்குக்கண்ணாடி எனப்பட்டது.



மூக்குக்கணம் *mūkku-k-kaṇam,* பெ.(n.) கணை நோய் வகை (பாலவா.41); a disease.

[மூக்கு + கணம்]

மூக்குக்குத்து–தல் *mūkku-k-kuttu-,* 5 செ.கு.வி.(v.i.) சிறுமியின் மூக்கில் மூக்குத்தி போன்ற நகைகளை மாட்டுவதற்காக துளையிடுதல்; to perforate the nose as of a girl - child to fix the nose-jewel.

[மூக்கு + குத்து–தல்]

சிற்றூர்களில் சிறுமிகளுக்கு மட்டுமின்றி, தொடர்ந்து மூன்று குழந்தைகள் பெற்று இறந்துவிடின் மூன்றாவதாகப் பிறக்கும் குழந்தைக்கு பெண் குழந்தையாக இருந்தால்

பிறந்தவுடனே மூக்குக்குத்தி மூக்கம்மாள், மூக்காயி எனப் பெயரிடுவதும், ஆண் குழந்தையாக இருந்தாலும் மூக்குக் குத்தி மூக்கன், பிச்சை எனப் பெயரிடுவதும் வழக்காம்.

மூக்குக்கொழுந்து *mūkku-k-kolundu,* பெ.(n.) மூக்கினுடைய நுனிப்பகுதி (வின்.); tip of the nose.

மறுவ. மூக்காங்கொழுந்து

[மூக்கு + கொழுந்து.]

மூக்குக்கோலா *mūkku-k-kōlā,* பெ.(n.) பெரிய மூக்கினை உடைய கோலா மீன் (தஞ்சைமீன்.); a kind of sword fish with long nose.

[மூக்கு + கோலா.]

மூக்குச்சட்டி *mūkku-c-catti,* பெ.(n.) சாறு முதலியன ஊற்றுவதற்குப் பயன்படும் மூக்குள்ள ஏன வகை (உ.வ.); a vessel with a projecting lip, used to pour liquid food.

[மூக்கு + சட்டி.]

நீர்வடிய உதவும் மூக்கு போன்ற ஏன வகை.



மூக்குச்சதை *mūkku-c-cadai,* பெ.(n.) மூக்கில் வளர்ந்த தசை; adenoids - *Polypus* (சா.அக.).

[மூக்கு + சதை.]

மூக்குச்சலாகை *mūkku-c-calāgai,* பெ.(n.) தமிழ் மருத்துவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 26 வகையான கருவிகளில் மூக்கினுள் பயன்படுத்தப்படும் இடுக்கிக் கருவி; one of the 26 surgical instruments mentioned in Tamil Medicine - *Nasal forceps.*

[மூக்கு + சலாகை.]

மூக்குச்சளி *mūkku-c-cali,* பெ.(n.) மூக்கில் இருந்து வெளிவரும் சளி; mucus of the nose, snivel, catarrhal discharge. *மூக்கிருக்கிற மட்டும் சளி உண்டு (பழ.).*

[மூக்கு + சளி.]

மூக்குச்சாத்திரம் *mūkku-c-cāttiram,* பெ.(n.) மூக்கு வழியாக மூச்சுக்காற்று வெளி வருவதைக் கொண்டு குறி சொல்லுவதைப் பற்றிய நூல்; art of divination by a study of respiration.

[மூக்கு + சாத்திரம்.]

மூக்குச்சிந்து-தல் *mūkku-c-cindu-,* 5 செ.கு.வி.(v.i.) மூக்குச்சளியை வெளிப் படுத்துதல்; to blow the nose.

[மூக்கு + சிந்து-தல்.]

மூக்குச்சீறு-தல் *mūkku-c-ciru-,* 5 செ.கு.வி. (v.i.) மூக்குச்சிந்து-தல் பார்க்க (வின்.); see *mūkku-c-cindu-.*

[மூக்கு + சீறு-தல்.]

மூக்குச்சுழி-த்தல் *mūkku-c-culi-,* 4 செ.கு.வி.(v.i.) இகழ்ச்சிக் குறியாக மூக்கை நெரித்துத் திருப்புகை (யாழ்.அக.); to turn up one's nose in contempt.

[மூக்கு + சுழி-த்தல்.]

மூக்குச்செள்ளு *mūkku-c-cel̥l̥u*, பெ.(n.) அரிசிமாவு முதலியவற்றில் இருக்கும் சிறிய கருப்புப் பூச்சி (கோவை.); a black pest found in flour.

மறுவ. மூக்குவண்டு.

[மூக்கு + செள்ளு.]

மூக்குடைபடு-தல் *mūkkuḍaipaḍu-*, 20 செ.கு.வி.(v.i.) மூக்கறுபடு-தல் பார்க்க; see *mūkkaṟu-paḍu-*.

[மூக்கு + உடைபடு-தல்.]

மூக்குண்ணி *mūkkuṇṇi*, பெ.(n.) மூக்குப் புண்; ulcer destroying the nose (சா.அக.).

மூக்குத்தடை *mūkku-t-taḍai*, பெ.(n.) பெண்டிர் பூணும் மூக்கணி, மூக்குத்தி; nose - jewel worn by women.

[மூக்கு + தடை.]

மூக்குத்தண்டு *mūkku-t-taṇḍu*, பெ.(n.) மூக்கின் எலும்புள்ள மேற்பாகம்; bridge of the nose.

[மூக்கு + தண்டு]

மூக்குத்தழுக்கி *mūkku-t-tal̥ukki*, பெ.(n.) மூக்குத்தளுக்கு (யாழ்.அக.) பார்க்க; see *mūkku-t-tal̥ukku*.

மூக்குத்தளுக்கு *mūkku-t-tal̥ukku*, பெ.(n.) மூக்குத்தி, 1 பார்க்க; see *mūkkutti, 1*.

[மூக்கு + தளுக்கு]

மூக்குத்தி[1] *mūkkutti*, பெ.(n.) 1. பெண்கள் மூக்கு நுனியின் பக்கவாட்டுப் பகுதியில் துளையிட்டு அணிந்து கொள்ளும் சிறிய அணி (தெ.இ.கல்.தொ.2:339); nose - jewel worn by women. *"முத்தமிட வொட்டாத மூக்குத்தியைக் கழற்றி" (விறலி விடு.569).* 2. கொடி வகை; blunt leaved hogweed, *Boerhaavia verticillata*. 3. மூக்கொற்றி, 3 பார்க்க; see *mūkkoṟṟi, 3*.

மறுவ. மூக்குவாளி, மூக்கொற்றி

க., து. மூகுதி; ம. மூக்குத்தி.

[மூக்கொற்றி→மூக்குத்தி]



மூக்குத்தி[2] *mūkkutti*, பெ.(n.) மரவகை (கோவை); a kind of wood.

மூக்குத்திக்காய் *mūkkutti-k-kāy*, பெ.(n.) மருதன் காய்; a creeper (சா.அக.).

மூக்குத்திச்செடி *mūkkutti-c-ceḍi*, பெ.(n.) ஒருவகைச் செடி; a shrub - *Lantana indica*.

[மூக்குத்தி + செடி]

மூக்குத்திப்பூ *mūkkutti-p-pū*, பெ.(n.) மூக்குத்தி வடிவிலானப்பூ; flower of Lantana indica.

[மூக்குத்தி + பூ.]

மூக்குத்திப்பூடு *mūkkutti-p-pūḍu*, பெ.(n.) ஒருவகைப் பூண்டு; a plant (சா.அக.).

[மூக்குத்தி + பூடு]

மூக்குத்திருகு *mūkku-t-tirugu,* பெ.(n.) மூக்குத்தி, 1 பார்க்க; see *mūkkutti, 1.*

[மூக்கு + திருகு]

மூக்குத்தூள் *mūkku-t-tūḷ,* பெ.(n.) மூக்குப்பொடி பார்க்க; see *mūkku-p-poḍi. "மூக்குத்தூள் போடாத முண்டத்துக்கு, முப்பது பணத்தில் வெள்ளி டப்பி" (பழ.).*

[மூக்கு + தூள்]

மூக்குநீர் *mūkku-nīr,* பெ.(n.) மூக்குச்சளி; the watery mucus from the nostrils due to snot.

[மூக்கு + நீர்]

மூக்குநீர்ப்பாய்ச்சல் *mūkkunīr-pāyccal,* பெ.(n.) மூக்கிலிருந்து நீர் வடியும் சளி நோய்; a kind of cool disease.

மறுவ. நீர்க்கோர்வை, தடுமன்.

[மூக்குநீர் + பாய்ச்சல்]

மூக்குநீர்வடிதல் *mūkkunīr-vaḍidal,* பெ.(n.) மூக்கில் வழியும் சளி; watery discharge from the nostrils.

[மூக்குநீர் + வடிதல்.]

மூ க் கு ப் பி டி க் க *mūkku-p-piḍikka,* வி.அ.(adv.) அளவுக்கு அதிகமாக குடித்தல்; அளவுக்கு அதிகமாக உண்ணுதல்; eat to one's fill or to surfeit. *திருமண வீட்டில் மூக்குப் பிடிக்க சோறு உண்டு வந்தாயா?*

[மூக்கு + பிடிக்க]

மூக்குப்பிடிக்கவுண்(ணு)-தல் *mūkku-p-piḍikka-v-uṇṇu-,* 16 செ.கு.வி.(v.i.) அளவுக்கதிகமாக உண்ணுதல்; அளவுக்கு அதிகமாக குடித்தல் (உ.வ.); to eat to surfeit.

[மூக்குப்பிடிக்க + உண்ணு-தல்.]

மூக்குப்பிழிதல் *mūkku-p-piḻidal,* பெ.(n.) ஆண்பிள்ளையாய்ப் பிறக்க வேண்டுமென்று கருப்பமான பெண்களுக்கு நான்கு, ஆறு அல்லது எட்டாவது மாதத்தில் செய்யப்படும் சடங்கு (புஞ்சவனம்); a ceremony during the pregnancy of a woman, performed with a view of securing a male child.

[மூக்கு + பிழிதல்.]

மூக்குப்பிளவை *mūkku-p-piḷavai,* பெ.(n.) மூக்கில் வரும் ஒருவகைப் புண் (யாழ்.அக.); an abscess in the nose.

[மூக்கு + பிளவை.]

மூக்குப்பீ *mūkku-p-pī,* பெ.(n.) மூக்கில் உள்ள உலர்ந்த சளிப்பொருக்கு (இ.வ.); dried mucus of the nose.

[மூக்கு + பீ.]

மூக்குப்பீனசம் *mūkku-p-pīṉaśam,* பெ.(n.) 1. மூக்கில் உண்டாகும் ஒருவகை எரிச்சல் (பீனசரோகம்) நோய்; inflammation of the nose. 2. மூக்கில் சதை வளரும் நோய்; polypus in the nose.

[மூக்கு + பீனசம்]

மூக்குப்புத்து *mūkku-p-puttu,* பெ.(n.) மூக்கில் ஏற்படும் புற்றுநோய்; cancer of the nose (சா.அக.).

[மூக்கு + புத்து. புற்று→புத்து).]

மூக்குப்புலாக்கு *mūkku-p-pulākku,* பெ. (n.) மூக்கில் தொங்கவிடப்படும் ஓர் அணி (கோவை.); hanging ornament of nose worn by women.

[மூக்கு + புலாக்கு]

பெண்கள் காதுகளில் அணியும் அணிகலன்களுள் தோடு என்பது காதுகளில் ஒட்டினாற் போன்றும் தொங்கட்டான், தோலாக்கு, லோலாக்கு போன்றவை காதுகளில் தொங்கினாற் போன்றும் அணியும் அணிகலன்களாகும். இவை போன்றே மூக்கின் தண்டுப் பகுதியில் துளையிட்டு தொங்கினாற் போன்று அணியும் அணிகலன் மூக்குப்புலாக்கு. இஃது பழங்குடி மக்கள் அணியும் அணிகலனாகும்.



மூக்குப்புழு *mūkku-p-pulu,* பெ.(n.) ஒரு வகை புழு; maggot in the nose (சா.அக.).

மூக்குப்பூரி *mūkku-p-pūri,* பெ.(n.) 1. முதலிரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தவுடன் இறக்க, மூன்றாவது பிறந்தப் பிள்ளையும் அவ்வாறே இறந்து விடுமோ என்ற பயத்தில் அதைத் தடுப்பதற்காக மூக்குக் குத்தப் பெற்ற ஆண் குழந்தை; male child who is born after the early death of the first two previous male children of the same parents and whose nose is perforated in the belif that its death in childhood will thereby be averted. 2. பிளந்த மேலுதடு உள்ளவன்; hare - lipped.

[மூக்கு + பூரி. பீறு→பூறு→பூறி→பூரி.]

மூக்குப்பூரு-தல் *mūkku-p-pūru-,* 5 செ.கு.வி.(v.i.) மூக்குக்குத்து-தல் பார்க்க; see *mūkku-k-kuttu-.*

[மூக்கு + பூரு-தல்]

மூக்குப்பூறி *mūkku-p-pūṟi,* பெ.(n.) மூக்குப்பூரி பார்க்க; see *mūkku-p-pūri.*

மூக்குப்பொட்டு *mūkku-p-poṭṭu,* பெ.(n.) மூக்குத்தி, 1 பார்க்க; see *mūkkutti, 1.*

[மூக்கு + பொட்டு]

மூக்குப்பொடி *mūkku-p-poḍi,* பெ.(n.) 1. (மூக்கால் உறிஞ்சப்படும்) புகையிலைத் தூள் (பொடி); snuff. 2. மூக்கிற்காகப் பயன்படுத்தும் ஒருவகைப் பொடி; a medicated powder used as a snuff in diseases.

[மூக்கு + பொடி.]

மூக்கும்முழியுமாக *mūkkum-muḻi yumāga,* வி.அ.(adv.) முக அழகோடு, முகப் பொலிவாக; with well - pronounced features. *உனக்குப் பார்த்திருக்கும் பெண் மூக்கும் முழியுமாக அழகாக இருக்கிறாள். குழந்தை மூக்கும் முழியுமாக இருக்கிறது.*

[மூக்கு + முழியுமாக.]

அளவான மூக்கும் விழியமைப்பும் உடைய பெண்ணை மூக்கு முழியுமாக இருக்கிறாள் என்று கூறுவது வழக்கு. 'விழிக்கிறாய்' என்பதை 'முழிக்கிறாய்' என்பது உலக வழக்கு. 'மூக்கும் விழியுமாக' என்பது 'மூக்கும் முழியுமாக' என்று வழங்குகிறது.

மூக்குமீன் *mūkku-mīṉ,* பெ.(n.) சுறா வகையைச் சேர்ந்த மீன்; a kind of sword fish.

[மூக்கு + மீன்]



மூக்குமுட்ட *mūkku-muṭṭa,* வி.எ.(adv.) மூக்குப்பிடிக்க பார்க்க; see *mūkku-p-piḍikka.*

[மூக்கு + முட்ட]

மூக்குயர்[1]–தல் *mūkkuyar-,* 2 செ.கு.வி.(v.i.) மூக்கு நீண்டு காணுகை; இது ஒரு வகை இறப்பிற்கான குறி என்பர்; nose appearing to be elongated, this is one of the symptoms of death.

[மூக்கு + உயர்–தல்]

மூக்குயர்[2]–த்தல் *mūkkuyar-,* 2 செ.கு.வி. (v.i.) பிறந்த குழந்தையின் மூக்கைச் சப்பையாகாமலிருக்க இழுத்து விடுதல்; to pinch up the nose of a new - born infant to prevent it being flat - nosed. *"அண்ணா உரிஞ்சி மூக்குயிர்த்தார்" (சீவக.2703).*

[மூக்கு + உயர்–த்தல்]

மூக்குரட்டை *mūkkuraṭṭai,* பெ.(n.) மூக்கிரட்டை பார்க்க; see *mūkkiraṭṭai.*

மூக்குரணம் *mūkkuraṇam,* பெ.(n.) மூக்குப்புண்; ulcer nose (சா.அக.).

*[மூக்கு + இரணம். **Skt.** rṇa > த. இரணம்.]*

மூக்குரத்தம் *mūkku-rattam,* பெ.(n.) மூக்கிலிருந்து அரத்தம் வழிகை; bleeding from the nose.

[மூக்கு+அரத்தம்–மூக்கரத்தம்→மூக்குரத்தம்.]

மூக்குரி–த்தல் *mūkkuri-,* 4 செ.குன்றாவி. (v.t.) மூக்கறு–த்தல் பார்க்க; see *mūkkaṟu-.* *'அவனை மூக்குரித்து விட்டான்'.*

[மூக்கு + உரி–த்தல்.]

மூக்குவட்டகை *mūkku-vaṭṭagai,* பெ.(n.) விளிம்பில் மூக்குடன்கூடிய குவளை; cup with a nose - shaped lip. *"ஸ்ரீ ராஜராஜ தேவர் – சேரமானையும், பாண்டியர்களையும், மலைநாட்டு எறிந்து கொண்ட வெள்ளியின் திருப்பரி கலங்கள் – மூக்கு வட்டகை ஒன்று" (தெ.கல்.தொ.2, கல். 91).*

[மூக்கு + (வட்டிகை→) வட்டகை]

மூக்குவாளி *mūkku-vāḷi,* பெ.(n.) மூக்கணி வகை (வின்.); a ring worn in the nose.

[மூக்கு + வாளி. வாளி = ஒருவகைக் காதணி.]

மூக்குவேர்–த்தல் *mūkku-vēr-,* 4 செ.கு.வி. (v.i.) மூக்கில்வேர்–த்தல் பார்க்க; see *mūkkil-vēr-.*

[மூக்கு + வேர்–த்தல்.]

மூக்குறட்டை *mūkkuṟaṭṭai,* பெ.(n.) மூக்கிரட்டை பார்க்க; see *mūkkiraṭṭai.*

மூக்குறாங்காற்று *mūkkuṟāṅ-gāṟṟu,* பெ.(n.) சுழல் காற்று (இ.வ.); cyclone.

[மூக்கு[5] + உறு + ஆம் + காற்று.]

மூக்குறிஞ்சு-தல் *mūkkuṟiñju-,* 5 செ.கு.வி. (v.i.) ஓசை உண்டாக மூக்கினால் மூச்சை உள்வாங்குதல்; to sniff. *"மூக்குறிஞ்சி முலையுணாயே" (திவ். பெரியாழ்.2. 2 : 2). சளி அதிகமானதால் குழந்தை மூக்குறிஞ்சிக்கிட்டேயிருக்கு.*

[மூக்கு + உறிஞ்சு-தல்]

மூக்கூளை *mūkkūḷai,* பெ.(n.) மூக்குச்சளி (யாழ்.அக.) பார்க்க; see *mūkku-c-caḷi.*

[மூக்கு + ஊளை.]

மூக்கை *mūkkai,* பெ.(n.) மொட்டு (சங்.அக.); bud.

க. மக்கெ

[மொக்கு→மூக்கை.]

மூக்கைச்சிந்து-தல் *mūkkai-c-cindu-,* 5 செ.கு.வி.(v.i.) ஒன்றை நினைத்த மாத்திரத்தில் கண்ணீர் விடுதல், அழுதல்; shed tears, weep fainty at the slightest prompting.

[மூக்கு→ மூக்கை + சிந்து-தல்]

மூக்கைச்சுளி-த்தல் *mūkkai-c-cuḷi-,* 4 செ.கு.வி.(v.i.) மூக்குச்சுழி-த்தல் (வின்.) பார்க்க; see *mūkku-c-cuḷi-.*

மூக்கைச்சொறி-தல் *mūkkai-c-coṟi-,* 2 செ.கு.வி.(v.i.) எளிமை காட்டுதல்; to plead poverty or abject condition, as by rubbing the tip of one's nose. *"தயங்க வைத்தாய் எனப் பேசி மூக்கைச் சொறிந்து" (திருப்பு.695).*

[மூக்கு + ஐ + சொறி-தல்.]

மூக்கைத்துளை-த்தல் *mūkkai-t-tuḷai-,* 4 செ.கு.வி.(v.i.) மணம், நாற்றம் போன்றவை மூக்கை பாதித்தல்; excite the sense of smell of fragrance or flavour; stink to high heaven of bad smell nosy aroma which excity a nose. *வெங்காயக் குழம்பு மணம் மூக்கைத் துளைத்தது. மூக்கைத் துளைக்கும் சாக்கடை நாற்றம்.*

[மூக்கு + ஐ + துளை-த்தல்]

மூக்கைநுழை-த்தல் *mūkkai-nuḻai-,* 4 செ.கு.வி.(v.i.) பிறருடைய செய்கையில் அழைப்பில்லாமல் தலையிடுதல்; poke one's nose. *நீ அடுத்தவர் வழக்கில் மூக்கை நுழைக்காதே?*

[மூக்கு→மூக்கை + நுழை-த்தல்.]

மூக்கைநெறி-த்தல் *mūkkai-neṟi-,* 4 செ.கு.வி.(v.i.) மூக்குச்சுழி-த்தல் (வின்.) பார்க்க; see *mūkku-c-cuḷi-.*

மூக்கைப்பிடி-த்தல் *mūkkai-p-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மூச்சுப் பயிற்சி செய்தல் (பிரணாயமஞ் செய்தல்); to control the breath, as in devotional exercises. 2. மந்திரம் சொல்லுதல் (இ.வ.); to mutter mantras. 3. கெட்ட நாற்றம் தாங்காமல் மூக்கைப் பிடித்தல்; bad smell stink to nose.

[மூக்கு→மூக்கை + பிடி-த்தல்]

மூக்கொலியன்[1] *mūkkoliyaṉ,* பெ.(n.) மெல்லிய ஒலியன்; nasal phoneme.

[மூக்கு + ஒலியன்]

மூக்கொலியன்[2] *mūkkoliyaṉ*, பெ.(n.) சங்கு (மூ.அ.); chank.

[மூக்கு + ஒலியன்]

மூக்கொற்றி *mūkkoṟṟi*, பெ.(n.) 1. மூக்குத்தி (வின்.) பார்க்க; see *mūkkutti*. 2. மூக்கொற்றிக்கோரை (சங்.அக.) பார்க்க; see *mūkkoṟṟi-k-kōrai*. 3. கொடிவகை (வின்.); a climber-*Thumbergia racemosa*.

[மூக்கு+ஒற்று-மூக்கொற்று→மூக்கொற்றி.]

மூக்கொற்றிக்கோரை *mūkkoṟṟi-k-kōrai*, பெ.(n.) புல்வகை (வின்.); a kind of club grass - *Scirpus antaracticus*.

[மூக்கொற்றி + கோரை]

மூக்கொற்றிப்பூடு *mūkkoṟṟi-p-pūḍu*, பெ.(n.) சிறுசெடி வகை (வின்.); a plant *Inula Indica*.

தெ. மூக்கிதி

[மூக்கொற்றி + பூடு]

மூக்கொற்றிப்பூண்டு *mūkkoṟṟi-p-pūṇḍu*, பெ.(n.) மூக்கொற்றிப்பூடு (வின்.) பார்க்க; see *mūkkoṟṟi-p-pūḍu*.

மூக்கொற்றைக்கோரை *mūkkoṟṟai-k-kōrai*, பெ.(n.) மூக்கொற்றிக்கோரை (வின்.) பார்க்க; see *mūkkoṟṟi-k-kōrai*.

[மூக்கொற்றி + கோரை]

மூக்கோட்டை[1] *mūkkōṭṭai*, பெ.(n.) மூக்குத் துளை; nostril.

[மூக்கு + ஓட்டை]

மூக்கோட்டை[2] *mūkkōṭṭai*, பெ.(n.) வழிபட்டோர்க்கு பாடலியற்றும் ஆற்றலை அளிக்கும் கொற்றவைக் கோயில்; a shrine of *Durgā* who is said to endow Her votaries with poetic power.

மூக்கோலம் *mūkkōlam*, பெ.(n.) புழுங்கலரிசி; boiled rice (சா.அக.).

மூக்கோலியன் *mūkkōliyaṉ*, பெ.(n.) சங்கு; chank; conch-shell.

மூகம் *mūgam*, பெ.(n.) 1. ஊமை; dumbness. 2. வாய்பேசாநிலை (மௌனம்) (சூடா.); speechlessness, silence. 3. வறுமை (யாழ்.அக.); poverty. 4. ஒருவகை மீன் (யாழ்.அக.); a kind of fish. 5. பேய் வகை (யாழ்.அக.); a class of devils.

மூகரன் *mūgaraṉ*, பெ(n.) 1. காது கேட்காதவன், செவிடன்; a deaf man. 2. ஊமையன்; a dumb man.

[மூகன் →மூகரன்.]

மூகன்[1] *mūgaṉ*, பெ.(n.) கீழ்மகன் (திவா.); low, mean person.

[மூக்கன்[2] →மூகன்.]

மூகன்[2] *mūgaṉ*, பெ.(n.) 1. ஊமையன்; dumb man. *"சீறிச்சமண்மூகன்" (தக்கயாகப்.189).* 2. ஓர் அசுரன்; an *Aśuraṉ*. *"மூக நாமதானவன்" (பாரத.அருச்சுனன்றவ.79).* 3. ஏழை (வறிஞன்) (யாழ்.அக.); poor man.

[மூழ்→மூகு→மூகன் = ஊமையன்.]

மூகா-த்தல் *mūgā-*, 4 செ.கு.வி.(v.i.) பேசாமலிருத்தல் (மௌனமாக) (யாழ்.அக.); to be silent.

[மூகம் + ஆ - மூகா →மூகா-த்தல்.]

மூகி *mūgi*, பெ.(n.) கேழ்வரகு (நாமதீப.354); ragi.

மூகை[1] *mūgai*, பெ.(n.) ஊமை (பிங்.); dumb person.

மூகை[2] *mūgai*, பெ.(n.) 1. ஈரற் குலை (பிங்.);liver. 2. படைக்கூட்டம்; vast horde. *"நான்முகத்தன மூகை சூழ வமைந்த" (தக்கயாகப்.621).*

தெ. மூக = படைக்கூடம்.

மூகை[3] *mūgai*, பெ.(n.) சங்கஞ்செடி (சங்அக.); mistletoe berrythorn.

மூகைச்சிலேட்டுமம் *mūgai-c-cilēṭṭumam*, பெ.(n.) கழுத்துக்குள் ஊமையைப் போல உண்டாக்கும் இரைச்சலை உண்டாக்கி கோழையை வெளியேத் தள்ளும் ஒருவகை நோய்; a diseases marked by the sound dumb, in the throat and copious phlegm which is thrown out.

*[மூகை + **Skt.** சிலேட்டுமம்.]*

மூகைமை *mūgaimai*, பெ.(n.) ஊமையாய் இருக்கும் தன்மை; dumbness. *"மூகைமைக் கொள்கையே மிக்கான்" (தணிகைப்பு. வீராட்ட.43).*

[மூகை → மூகைமை.]

மூகையலரி *mūgai-y-alari*, பெ.(n.) அலரி மரம்; a tree - *Nerium Odorum* (சா.அக.).

மூகையெழுத்து *mūgai-y-eḷuttu*, பெ.(n.) ஊமையெழுத்து (வின்.); consonant being mute.

[மூகை + எழுத்து]

மூங்கமார்ப்படல் *mūṅgamār-p-paḍal*, பெ.(n.) பட்டி போட உதவும் மூங்கில் (கோவை.); bamboo which is used to make cow-shed.

[மூங்கமார் + படல்]

மூங்கர் *mūṅgar*, பெ.(n.) ஊமையர்; dumb persons. *"கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டு வித்து" (தேவா.1040, 2).*

மூங்கா[1] *mūṅgā*, பெ.(n.) 1. கீரிவகை; a species of mongoose. *"மூங்கா வெருகுஎலி மூவரி அணிலோடு ஆங்கு அவை நான்கும் குட்டிக்குரிய" (தொல்.பொருள். மரபு.6).* 2. கீரி (மூ.அ.); mongoose.

தெ., க. முங்கி; ம. மூங்னா.

[மூக்கு → (மூங்கு) → மூங்கா = மூக்கு நீண்ட கீரி வகை.]

மூங்கா[2] *mūṅgā*, பெ.(n.) ஆந்தை (நாஞ்.); owl.

ம. முங்ஙா

மூங்காப்பிள்ளை *mūṅgā-p-piḷḷai*, பெ.(n.) கீரிப்பிள்ளை; mongoose.

[மூங்கா[1] + பிள்ளை.]

மூங்கி *mūṅgi*, பெ.(n.) பாசிப்பயறு (மலை.); green gram.

மூங்கிடப்பை *mūṅgiḍappai*, பெ.(n.) நீளவாட்டில் பிளந்த மூங்கிற்றுண்டு (உ.வ.); splint, splinter, lath of bamboo.

[மூங்கில் + தப்பை – மூங்கிற்றப்பை → மூங்கிடப்பை.]

மூங்கில் *mūṅgil*, பெ.(n.) உள்ளீடற்ற குழாய் போன்ற தண்டுப் பகுதியில் கணுக்களைக் கொண்டதும் நீண்டு வளர்வதுமான புறக்காழுள்ள பெரும்புல் வகை; bamboo-

Bambusa arundinacea. "அம்பணை மூங்கிற் பைம்போழ்" (பெருங்.உஞ்சைக்.42: 48). "முற்றா மூங்கில் முளைதரு பூட்டும்" (அகநா.85:8). "ஆடுகழை நிவந்த பைங்கண் மூங்கில்" (நற்.28:7). "கூழை மூங்கிற் குவட்டிடை யதுவே" (குறுந்.179:7). "கான்முளை மூங்கிற் கவர்கிளை போல" (பதிற்றுப்.84:12). 2. கழை (புனர்பூச) நாள் (திவா.); the seventh naksatra.

ம. மூங்கில்

வகைகள்: 1. மூங்கில், 2. கல் மூங்கில், 3. வேசி மூங்கில், 4. காட்டுமூங்கில், 5. சிறுமூங்கில், 6. பொன் மூங்கில், 7. கெட்டி மூங்கில், 8. நெட்டை மூங்கில், முள் மூங்கில், 9. உக்கா மூங்கில் (சா.அக.).

மூங்கில்துறைப்பட்டு *mūṅgil-tuṟai-p-paṭṭu,* பெ.(n.) தென்னார்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில், திருவண்ணா மலையிலிருந்து சற்றொப்ப 30 கல்லன்மாத்திரி தொலைவிலுள்ள ஊர்; a city in South Arcot dist., about 30 km away from *Tiruvaṇṇāmalai.*

[மூங்கில் + துறைப்பட்டு]

தென் பெண்ணையாற்றின் கரையில் அமைந்துள்ள ஊர். ஆற்றங்கரையில், மூங்கில்கள் நிறைந்திருந்தமையால் மூங்கில் துறைப்பட்டு என்று பெயர் பெற்றது.

மூங்கில்நாடா *mūṅgil-nāḍā,* பெ.(n.) மூங்கிலால் செய்யப்பட்ட, பட்டுத்தறிக்குரிய நாடா; weaver's instrument for silk loom made of bamboo.

[மூங்கில் + நாடா]

மூங்கில்புல்லூரி *mūṅgil-pullūri,* பெ.(n.) மூங்கிலின் மேற் படரும் புல்லுருவி வகை; bamboo parasite.

[மூங்கில் + புல்லூரி]

மூங்கில்போத்து *mūṅgil-pōttu,* பெ.(n.) மூங்கிற்போத்து பார்க்க; see *mūṅgiṟ-pōttu.*

[மூங்கில் + போத்து.]

மூங்கில்முத்து *mūṅgil-muttu,* பெ.(n.) மூங்கின்முத்து பார்க்க; see *mūṅgiṉ-muttu.*

[மூங்கில் + முத்து]

மூங்கில்முளை *mūṅgil-muḷai,* பெ.(n.) மூங்கிலின் முளை; shoot of bamboo.

[மூங்கில் + முளை]

மூங்கில்மோவு *mūṅgil-mōvu,* பெ.(n.) மூங்கில் கணு; joints of bamboo.

[மூங்கில் + மோவு]

மூங்கிலடி *mūṅgil-aḍi,* பெ.(n.) நெல்லை மாவட்டச் சிற்றூர்; a village name, in Nellai Dt.

[மூங்கில் + அடி]

மூங்கிலம்மா *mūṅgil-ammā,* பெ.(n.) சிற்றூர் பெண் தெய்வம் (தேவதை) (இ.வ.); village deity.

[மூங்கில் + அம்மா]

மூங்கிலரிசி *mūṅgil-arisi,* பெ.(n.) மூங்கிலினின்று உண்டாகும் விதை (சீவக. 1422, உரை); the seed of the bamboo.

[மூங்கில் + அரிசி]

மூங்கிலரிசிதேன்கொழுக்கட்டை *mūṅgil-ariši-tēṉ-koḻu-k-kaṭṭai,* பெ.(n.) மலைவாழ் இனத்தவரின் சிறப்பு உணவு (கோவை.); food of the inhabitant in hills.

[மூங்கிலரிசி + தேன் + கொழு + கட்டை]

மூங்கிலாடை *mūṅgil-āḍai,* பெ.(n.) மூங்கிலின் உட்புறத்தில் மெல்லியதாக உள்ள தாள் (சிறுபாண்.236, உரை); paper - like tissue inside bamboos.

[மூங்கில் + ஆடை]

மூங்கிலிலை *mūṅgil-ilai,* பெ.(n.) மூங்கிலின் இலை; bamboo leaves. *"மூங்கில்இலை மேலே தூங்கும் பனிநீரே" (பழ.).*

[மூங்கில் + இலை.]

குடற் சூலை; வயிற்று நோய்; அரத்தத்துடிப்பு, குழந்தைப் பேறு அழுக்கு, இருமல், கண்ணின் சிவப்பு முதலிய நோய்களை மூங்கிலிலை நீக்கும்.

மூங்கிலுப்பு *mūṅgil-uppu,* பெ.(n.) மூங்கிலிலிருந்து எடுக்கப்படும் ஒரு மருத்துவ குணமுள்ள உப்பு; a medicinal salt found in bamboo (சா.அக.).

[மூங்கில் + உப்பு]

மூங்கிலூமத்தை *mūṅgil-ūmattai,* பெ.(n.) ஒரு வகை ஊமத்தை; a plant - *Dhatura milal* (சா.அக.).

[மூங்கில் + ஊமத்தை]

மூங்கிற்கழி *mūṅgiṟ-kaḻi,* பெ.(n.) இலை, முட்கிளை நீக்கப்பட்ட மூங்கிற் கொம்பு; bamboo stick.

[மூங்கில் + கழி.]

மூங்கிற்குத்து *mūṅgiṟ-kuttu,* பெ.(n.) 1. மூங்கிற்புதர் பார்க்க (இ.வ.); see *mūṅgiṟ-pudar.* 2. மூங்கிற்போத்து பார்க்க (வின்.); see *mūṅgiṟ-pōttu.*

[மூங்கில் + குத்து]

மூங்கிற்குருத்து *mūṅgiṟ-kuruttu,* பெ.(n.) அடிபட்ட அரத்த வீக்கங்களைப் போக்கும் தளிர்; the tender leaves of bamboo is capable of curing contused swelling - Bamboo plast (சா.அக.).

[மூங்கில் + குருத்து]

மூங்கிற்குழல் *mūṅgiṟ-kuḻal,* பெ.(n.) மூங்கிற்குழாய் (யாழ்.அக.) பார்க்க; see *mūṅgiṟ-kuḻāy.*

[மூங்கில் + குழல்]

மூங்கிற்குழாய்¹ *mūṅgiṟ-kuḻāy,* பெ.(n.) புல்லாங்குழல் (வின்.); flute of bamboo.

[மூங்கில் + குழாய்]

மூங்கிற்குழாய்² *mūṅgiṟ-kuḻāy,* பெ.(n.) பண்டை காலத்தில் மருந்து, தேன் முதலியவைக் கெடாதபடிக்கு வைப்பதற்காகச் செய்யும் மூங்கிற் குழாய்; a hallow bamboo used for preserving honey, medicines etc. *'மூங்கிற் குழாய்க்குள்ளே பெய்தலை*



உடைய....... கட் டெளிவை' (மலைபடு.171, உரை).

[மூங்கில் + குழாய்]

மூங்கிற்கொட்டை *mūṅgiṟ-koṭṭai,* பெ.(n.) மூங்கிலரிசி (யாழ்.அக.) பார்க்க; see *mūṅgil-arisi.*

[மூங்கில் + கொட்டை]

மூங்கிற்கொத்து *mūṅgiṟ-kottu,* பெ.(n.) மூங்கிற்குத்து, 1 (இ.வ.) பார்க்க; see *mūṅgiṟ-kuttu, 1.*

மூங்கிற்கோல் *mūṅgiṟ-kōl,* பெ.(n.) மூங்கிற்கழி பார்க்க; see *mūṅgiṟ-kaḻi. 'மூங்கிற் கோலைத் தலையிலே வலித்துக் கட்டின' (பெரும்பாண்.285, உரை).*

[மூங்கில் + கோல்]

மூங்கிற்சம்பா *mūṅgiṟ-šambā,* பெ.(n.) சம்பா நெல் வகை; a kind of *šambā* paddy. *"நெடு மூக்கன் அரிக்கராவி மூங்கிற் சம்பா" (முக்கூடற்.97).*

[மூங்கில் + சம்பா.]

மூங்கிலரிசி போன்ற அரிசியைக் கொண்ட சம்பா நெல்.

மூங்கிற்பட்டை *mūṅgiṟ-paṭṭai,* பெ.(n.) 1. மூங்கிற்பிளாச்சு பார்க்க; see *mūṅgiṟ-piḷāccu.* 2. மூங்கிற் கணுவின் மேலுள்ள உறை (உ.வ.); sheath at the knot of a bamboo.

[மூங்கில் + பட்டை]

மூங்கிற்பண்ணை *mūṅgiṟ-paṇṇai,* பெ.(n.) அடர்த்தியான மூங்கிற்காடு (நாஞ்.); dense clump of bamboo.

[மூங்கில் + பண்ணை]

மூங்கிற்பத்தை *mūṅgiṟ-pattai,* பெ.(n.) மூங்கிற்பிளாச்சு (இ.வ.) பார்க்க; see *mūṅgiṟ-piḷāccu.*

[மூங்கில் + பத்தை]

மூங்கிற்பாய் *mūṅgiṟ-pāy,* பெ.(n.) மூங்கிலால் செய்யப்பட்ட பாய்; mat made up of bamboo tree. *மூங்கிற் பாயும் முரட்டுப் பெண்டாட்டியும் (பழ.).*

[மூங்கில் + பாய்]

மூங்கிற்பிளாச்சு *mūṅgiṟ-piḷāccu,* பெ.(n.) நீளத்தில் பிளந்த மூங்கில் துண்டு (கொ.வ.); splint, splinter, lath of bamboo.

[மூங்கில் + பிளாச்சு]

மூங்கிற்பிளிச்சு *mūṅgiṟ-piḷiccu,* பெ.(n.) 1. மூங்கிற்பிளாச்சு (இ.வ.) பார்க்க; see *mūṅgiṟ-piḷāccu.* 2. ஒல்லியான மூங்கிற் கழி (சீவக.634, உரை); thin bamboo stick.

[மூங்கில் + பிளிச்சு]

மூங்கிற்புதர் *mūṅgiṟ-pudar,* பெ.(n.) நெருங்கி வளர்ந்த மூங்கில் தொகுதி (வின்.); cluster of bamboos.

[மூக்கில் + புதர்]

மூங்கிற்புல் *mūṅgiṟ-pul,* பெ.(n.) புல்வகை (மூ.அ.); a kind of grass.

[மூங்கில் + புல்]

மூங்கிற்போத்து *mūṅgiṟ-pōttu,* பெ.(n.) கொத்தாக உள்ள மூங்கிற் கன்று (வின்.); cluster of bamboo saplings.

[மூங்கில் + போத்து]

மூங்கிற்றண்டு *mūṅgiṟṟaṇḍu,* பெ.(n.) மூங்கிற்கழி (யாழ்.அக.) பார்க்க; see *mūṅgiṟ-kaḻi.*

[மூங்கில் + தண்டு]

மூங்கிற்றப்பை *mūṅgiṟṟa-p-pai,* பெ.(n.) மூங்கிற்பிளாச்சு (வின்.) பார்க்க; see *mūṅgiṟ-piḷāccu.*

[மூங்கில் + தப்பை]

மூங்கின்முத்து *mūṅgiṉ-muttu,* பெ.(n.) மூங்கிலிலிருந்து தோன்றுவதாகக் கருதப் படும் முத்து வகை (வின்.); a kind of pearl said to be obtained from the bamboo.

[மூங்கில் + முத்து]

மூங்கினெல் *mūṅgiṉel,* பெ.(n.) மூங்கிலரிசி (வின்.) பார்க்க; see *mūṅgil-ariśi.*

[மூங்கில் + நெல்]

மூங்கு[1] *mūṅgu,* பெ.(n.) மூங்கி (வின்.) பார்க்க; see *mūṅgi.*

மூங்கு[2] *mūṅgu,* பெ.(n.) சிறுபயறு; small pulse.

மூங்கை *mūṅgai,* பெ.(n.) மூகை[1] பார்க்க; see *mūgai[1]. "தீய புறங்கூற்றின் மூங்கையாய்" (நாலடி, 158).*

மூங்கைநோய் *mūṅgai-nōy,* பெ.(n.) நோய் வகை (கடம்ப.பு.இலீலா.127); a kind of disease.

மூங்கைமை *mūṅgaimai,* பெ.(n.) ஊமைத் தன்மை; dumbness. *"தலைசாய்த் தங்கிருந்தார் மூங்கை மையால்" (நீலகேசி, 271).*

[மூங்கை→மூங்கைமை]

மூங்கையர் *mūṅgaiyar,* பெ.(n.) ஊமையர்; dumb person (சா.அக.).

[மூங்கை→ மூங்கையர்.]

மூங்கையான் *mūṅgaiyāṉ,* பெ.(n.) ஊமையன்; dumb person. *"மூங்கையான் பேசலுற்றான்" (கம்பரா.நாட்.1).*

[மூங்கை→மூங்கையான்]

மூங்கையூசி *mūṅgai-y-ūśi,* பெ.(n.) வலை பின்னுதற்கு ஏற்றவாறு மூங்கிலாலான ஒரு வகை ஊசி; a needle manufactured from bamboo to knit fish net.

மூங்கைரோகம் *mūṅgai-rōgam,* பெ.(n.) மூங்கைநோய் பார்க்க; see *muṅgai-nōy.*

மூச்சடக்கம் *mūccaḍakkam,* பெ.(n.) 1. உயிரடங்கி நிற்கை; suspended animation. 2. ஒரு வகை நோய்; a disease in which breath is restrained (சா.அக.).

[மூச்சு + அடக்கம்]

மூச்சடக்கு-தல் *mūccaḍakku-,* 5 செ. குன்றாவி.(v.t.) மூச்சுக் காற்றை உள் அடக்குதல்; to control and hold the breath. *"மூச்சடக்கி யென்றும் வார்புனலிடையே நின்று" (குற்றா.தல. வடவருவி.28).*

[மூச்சு + அடக்கு-தல்]

மூச்சடை-த்தல் *mūccaḍai-,* 4 செ. குன்றாவி. (v.t.) மூச்சுத் திணறச் செய்தல்; to cause choking.

[மூச்சு + அடை-த்தல்]

மூச்சடைப்பான் *mūccaḍaippāṉ,* பெ.(n.) மூச்சடைப்பு, 2 பார்க்க; see *mūc-c-aḍaippu,* 2.

[மூச்சடை →மூச்சடைப்பான்.]

மூச்சடைப்பு *mūccaḍaippu,* பெ.(n.) 1. மூச்சு வாங்குகை; difficulty in respiration; hard breathing; panting for breath. 2. முட்டு மூச்சு வாங்குகை; choking, asphyxia (செ.அக.).

[மூச்சடை →மூச்சடைப்பு]

மூச்சன் *mūccaṉ,* பெ.(n.) வலியவன் (யாழ்ப்.); powerful, strong person.

மூச்சிழுப்பு *mūcciḻuppu,* பெ.(n.) ஈளை நோய் (சுவாசகாசம்), இருமல் நோய்; asthma.

[மூச்சு + இழுப்பு]

மூச்சு *mūccu,* பெ.(n.) 1. உயிர் வாழ்வதற்காக நுரையீரலுக்குள் இழுத்து வெளிவிடும் காற்று, உயிர்ப்பு; respiration, breath. *"மூச்சுவிடு முன்னே முந்நூறு நானூறும்" (தனிச்.சிந்.111:1). மூச்சுவிட மறந்தவர் யாருமிலர்.* 2. ஆண்மை (யாழ்.அக.); manliness. 3. வலிமை, பலம் (யாழ்.அக.); strength. 4. ஆக்கம், முயற்சி; effort. *முதல் மூச்சில் (இ.வ.).*

ம. மூச்சு

மூச்சுக்காட்டாமை *mūccu-k-kāṭṭāmai,* பெ.(n.) அமைதியாக இருக்கை (நிச்சத்தமா யிருக்கை); breathless silence. *இதைப்பற்றி அவளிடம் மூச்சுக் காட்டாதே.*

[மூச்சுக்காட்டு + ஆ + மை.]

மூச்சுக்காட்டு-தல் *mūccu-k-kāṭṭu-,* 5 செ.கு.வி.(v.t.) 1. ஆளரவஞ் செய்தல்; to show signs of life. 2. ஆண்மை காட்டுதல் (யாழ்.அக.); to show signs of courage. 3. எதிர்மறை வடிவங்களில் தான் ஓர் இடத்தில் இருப்பதற்கான அறிகுறியை வெளிப்படுத்துதல்; utter a sound or word as a sign of one's presence. பொய் *வெளிப்பட்டதும் அவன் மூச்சுக் காட்டவில்லை.*

[மூச்சு + காட்டு-தல்.]

மூச்சுக்காண்கை *mūccu-k-kāṇgai,* பெ.(n.) இறப்புக் குறியாக மேல் மூச்சுத் தோன்றுகை (இ.வ.); breathing hard, as a sign of expiring.

[மூச்சு + காண்கை.]

மூச்சுக்கிளைக்குழலழற்சி *mūccu-k-kiḷai-k-kuḻal-aḻaṟci,* பெ.(n.) நுரையீரல் நோய் வகை; a kind of lungs disease.

[மூச்சு + கிளை + குழல் + அழற்சி.]

மூச்சுக்குத்து *mūccu-k-kuttu,* பெ.(n.) ஒருவகைக் காற்றுப் பிடிப்பு நோய் (வின்.); a kind of gout.

[மூச்சு + குத்து.]

மூச்சுக்குப்பி *mūccu-k-kuppi,* பெ.(n.) முத்துக் குளியாளும், சங்குக் குளியாளும், கடலில் மூழ்க புது முறையில் கையாளும் உயிர்ப்புக் குப்பி; aspirator bottle handled by pearl divers, and conch divers.

[மூச்சு + குப்பி.]

மூச்சுக்குழல் *mūccu-k-kuḻal,* பெ.(n.) தொண்டையில் இருந்து நுரையீரல் வரை அமைந்திருக்கும் மூச்சுப் போகும் குழல் போன்ற பாதை; windpipe, trachea.

[மூச்சு + குழல்.]



மூச்சுக்குழாய்விரிவழற்சி *mūccu-k-kuḻāy-viri-vaḻaṟci,* பெ.(n.) நுரையீரலின் அடிப்பகுதியில் உண்டாகும் ஒருவகை நோய்; bronchi-ectasis.

[மூச்சுக்குழாய் + விரிவழற்சி.]

மூச்சுண்டை *mūccuṇḍai,* பெ.(n.) மூசுண்டை பார்க்க; see *mūšuṇḍai. "மூச்சுண்டை விற்று..... பாடுபட்டு" (ஆதியூரவதானி, 3).*

மூச்சுத்தாங்கல் *mūccu-t-tāṅgal,* பெ.(n.) மூச்சடைப்பு (யாழ்.அக.) பார்க்க; see *mūccaḍaippu.*

[மூச்சு + தாங்கல்.]

மூச்சுத்திணறல் *mūccu-t-tiṇaṟal,* பெ.(n.) சீராக மூச்சுவிட முடியாத அளவில் மூச்சுத் தடைபடும் நிலை; suffocation in breathing. *அவனுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது (உ.வ.).*

[மூச்சு + திணறல்.]

மூச்சுப்பறிதல் *mūccu-p-paṟidal,* பெ.(n.) 1. மூச்சுக்காற்று வெளியே செல்கை; breathing out, exhalation. 2. உடல் நலம் குறைவுபடுகை (பலவீனப்படுகை); becoming weak.

[மூச்சு + பறிதல்.]

மூச்சுப்பிடி-த்தல் *mūccu-p-piḍi-,*4 செ.கு.வி. (v.i.) 1. மூச்சுக்காற்றை உள்ளடக்குதல் (வின்.); to control or suppress the breath. 2. மூச்சுத் திணறுதல் (வின்.); to be short of breath. 3. இடுப்பில் சுளுக்கிக் கொள்ளுதல்; to be sprained at the hip. *மூட்டையைத் தூக்கினேன். மூச்சுப் பிடித்துக் கொண்டு விட்டது.* 4. முழுமூச்சாக முயலுதல்; to strain one's powers.

[மூச்சு + பிடி-த்தல்.]

மூச்சுப்பிடிப்பு *mūccu-p-piḍippu,* பெ.(n.) 1. ஒரு வகை மூச்சு உயிர்ப்பு நோய்; pleurisy; pleurodynia. 2. மூச்சுக் காற்றை உள் அடக்குகை (வின்.); suppression of breath. 3. இடுப்பில் உண்டாகும் சுளுக்குநோய் (M.L.); sprain at the hip.

[மூச்சு + பிடிப்பு.]

மூச்சுப்பேச்சு *mūccu-p-pēccu,* பெ.(n.) 1. பேசுகை (வின்.); talk. 2. உயிரோடு இருப்பதற்கான அடையாளம்; sign of life. *மூச்சுப் பேச்சு இல்லை (யாழ்.அக.).*

[மூச்சு + பேச்சு.]

மூச்சுப்பொறு-த்தல் *mūccu-p-poṟu-,* 4 செ.குன்றாவி.(v.t.) மூச்சை உள் அடக்குதல் (வின்.); to suppress breath.

[மூச்சு + பொறு-த்தல்.]

மூச்சுமுட்டல் *mūccu-muṭṭal,* பெ.(n.) 1. மூச்சுத் திணறுகை; suffocation. 2. மூச்சு இருமல் நோய் (பைஷஜ.); asthma.

[மூச்சு + முட்டல்.]

மூச்சுமுட்டு–தல் *mūccu-muṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) மூச்சுத் தடைப்பட்டுத் திணறுதல்; suffocate; breathe hard. *சமையல் அறையின் புகையால் அம்மாவுக்கு மூச்சு முட்டியது (உ.வ.).*

[மூச்சு + முட்டு–தல்.]

மூச்சுவாங்கு[1]–தல் *mūccu-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) மூச்சு இரைத்தல்; gasp for breath; pant. *பத்து அடி நடப்பதற்குள் உனக்கு மூச்சு வாங்குகிறதே!*

[மூச்சு + வாங்கு–தல்.]

மூச்சுவாங்கு[2]–தல் *mūccu-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மூச்சுக் காற்றை உள்ளே அடக்குதல் (யாழ்.அக.); to restrain breath, as in making an effort or dragging a heavy thing. 2. பெருமூச்சு விடுதல்; to breathe hard. *மூச்சு வாங்க ஓடி வந்தான்.* 3. வெடிப்புக் காணுதல்; to crack, split open, to give way, as a wall. *இந்தக் கட்டடம் மூச்சு வாங்கி விட்டது.*

[மூச்சு + வாங்கு–தல்.]

மூச்சுவாங்குதல் *mūccu-vāṅgudal,* பெ. (n.) 1. இளைப்பினால் பெருமூச்சு வருகை; panting, breathing hard, as in fatigue. 2. இறப்புக் காலத்தில் பெருமூச்சு விடுகை; long-drawn breathing at the moment of death.

[மூச்சு + வாங்குதல்.]

மூச்சுவிடாமல் *mūccu-viḍāmal,* வி.அ. (adv.) 1. வாய்திறவாமல்; in breathless silence. 2. இடைவிடாமல்; without break or intermission. *மூச்சுவிடாமல் பாடுகிறாள். மூச்சுவிட நேரமில்லை. மூச்சுவிடாமல் மழைபெய்கிறது.*

மூச்சுவிடு[1]–தல் *mūccu-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) இயற்கையான காற்றை மூக்கின் வழியே உள்ளே இழுத்து, இழுத்த காற்றை வெளியே விடுதல் (ஆசுவாசப்படுத்திக் கொள்ளுதல்); to breathe respire. *மூன்று மாடி ஏறி வந்திருக்கிறேன், கொஞ்சம் மூச்சு விட்டுக் கொள்கிறேன். "மூச்சு விடுமுன்னே" (தனிப்பா. i, 80:160).*

[மூச்சு + விடு–தல்.]

மூச்சுவிடு[2]–தல் *mūccu-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. எதிர் மறையில் அல்லது எதிர்மறைப் பொருளில் சிறிதளவு தெரிவித்தல்; make even a mention of say not to breathe a word. *அப்பாவிடம் எழுதுகோலைத் தொலைத்தது பற்றி மூச்சு விடாதே!. நேரில் சந்தித்த போது தனக்கு வேலை கிடைத்தது குறித்து அவர் மூச்சு விடவில்லை.* 2. மூச்சுவாங்கு[2]–தல், 3 பார்க்க; see *mūccu-vāṅgu[2], 3.*

[மூச்சு + விடு–தல்.]

மூச்செடுத்தல் *mūcceḍuttal,* பெ.(n.) 1. மேல் மூச்சு எழுகை (யாழ்.அக.); gasping one's last breath. 2. மூச்சடக்குகை (இ.வ.); holding one's breath.

[மூச்சு + எடுத்தல்.]

மூச்செறி–தல் *mūcceṟi-,* 2 செ.கு.வி.(v.i.) மூச்சுவிடு[1]–1, (வின்.) பார்க்க; see *mūccu-viḍu[1]-, 1.*

[மூச்சு + எறி–தல்.]

மூச்சை *mūccai,* பெ.(n.) மூர்ச்சை (வின்.) பார்க்க; see *mūrccai.*

மூச்சொடுங்குகை *mūccoḍuṅgugai,* பெ.(n.) உயிர்ப்பு (பிராணன்) ஒடுங்குகை (வின்.); ceasing to breathe, as when dying.

[மூச்சு + ஒடுங்குகை.]

மூசடை *mūšaḍai,* பெ.(n.) 1. பழுதாய்ப் போகை; rancidity. 2. பழுதாய்ப் போன பண்டம் (இ.வ.); anything that has become rancid, anything unclean.

க. முசரி

மூசணம் *mūšaṇam,* பெ.(n.) மிளகு; pepper - *Piper nigrum* (சா.அக.).

மூசரச்சாரம் *mūšara-c-cāram,* பெ.(n.) சவுட்டுப்பு; salt extracted from fuller's earth (சா.அக.).

மூசல் *mūšal,* பெ.(n.) 1. மொய்க்கை (பிங்.); swarming, thronging. 2. இறப்பு (பிங்.); death. 3. கெடுகை (வின்.); being spoiled.

[மூசு → மூசல்.]

மூசாந்தம் *mūšāndam,* பெ.(n.) வெண்டாமரை (மலை.); white lotus.

மூசாம்பரம் *mūšāmbaram,* பெ.(n.) 1. கரிய போளம்; scarlet flowered aloe. 2. கரிய போளப் பிசின்; resinous inspissated juice of aloe. 3. கூட்டு மருந்துச் சரக்கு; a compound of catechu formed with the juice of young coconuts, arecanuts and other spices.

உரு. முசாம்பர்

மூசி[1] *mūši,* பெ.(n.) பொன்னாங்கண்ணி; a prostate plant - Illec brumsessile (சா.அக.).

மூசி[2]**-த்தல்** *mūši-,* 4 செ.கு.வி.(v.i.) மூச்சிழைத்தல்; gasp.

[முசு → முசி → மூசி → மூசி-த்தல்.]

மூசு[1]**-தல்** *mūšu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. மொய்த்தல்; to swarm about, gather round. *"வண்டு மூசுதேறன் மாந்தி" (நெடுநல்.33). "மிஞிறுமூசு கவுள சிறுகண் யானை" (அகநா.159:16). "புன்மூசு கவலைய முண்மிடை வேலி" (புறநா.116:4). "மூசு வண்டறை பொய்கையும் போன்றதே" (அப்பர் தேவாரம்).* 2. மூச்சு விடுதல்; to respire.

தெ. மூசுறு

மூசு[2]**-தல்** *mūšu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கெடுதல் (வின்.); to go bad, to be spoiled, rancid. 2. சாதல் (பிங்.); to die. 3. மோப்பம் பிடித்தல் [தெ.மூட்சூட்சு]; to sniff. *"நாசிமூசி" (திருவாலவா. 36 : 22).*

மூசு[3] *mūšu,* பெ.(n.) இடவகையில் நெருக்கமாக இருக்கை (மொய்க்கை); swarming, thronging. *"வண்டு மூசறா" (சீவக.418). "வியன்பணை முழங்கும் வேன்மூ சழுவத்து" (பதிற்று.31:30). "வளவ னென்னும் வண்டுமூசு கண்ணி" (புறநா.227:9).*

மூசு[4] *mūšu,* பெ.(n.) இளங்காய், பிஞ்சு; green or unripe fruit. பலாமூசு.

தெ. முசுரு; க. முசுரு.

[முள் → முளு → முசு → மூசு. ஒ.நோ.உளு → உசு. ள- ச போலித் திரிபு (வே.க.முல்¹).]

மூசுண்டை *mūšuṇḍai,* பெ.(n.) 1. தின்பண்டம் (செ.வழ.); eatables. 2. கேடுற்ற பணிகாரம் (வின்.); spoiled cake.

மூசுமல்லிகை *mūšu-malligai,* பெ.(n.) ஊசி மல்லிகை (பதார்த்த.331); eared jasmine.

[ஊசிமல்லிகை→மூசுமல்லிகை]

நல்ல தரமான இனப்பெருக்கத்தை உண்டாக்கும், ஒரு வகைப் பூ (சா.அக.).

மூசுமூசெனல் *mūšu-mūšeṉal,* பெ.(n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு; onom. expr. of crunching sound, as of cattle eating seeds. 2. பெருமூச்சு விடுதற் குறிப்பு; onom. expr. of breathing hard, as when intensely at work; panting, as in running.

மூசெனல் *mūšeṉal,* பெ.(n.) மூசுமூசெனல் (இ.வ.) பார்க்க; see *mūšu-mūšeṉal.*

மூசை *mūšai,* பெ.(n.) 1. மண்ணாலான குகை; crucible. 2. மாழை (உலோகங்கள்)களை உருக்கி வார்ப்பதற்கான மட்கரு; earthen mould for casting molten metal.

[மூழை→மூசை.]

முள்→முழை. முழைத்தல் = துளைத்தல். முழை = குகை. முழை→மூழை = குழிந்த இடம். மூழை →மூசை = மண்குகை, மட்கரு (தேவநேயம்.12:101).

வடமொழியில் இச்சொல்லுக்கு மூலமில்லை. மா.வி.அ. இச்சொல்லை 'மூஷ' (சுண்டெலி) என்னும் சொல்லோடிணைக்கிறது (வ.மொ.வ.).

மூசைப்புல் *mūšai-p-pul,* பெ.(n.) முட்செடி (சங்கஞ்செடி); mistle-toe berry thorn.

[மூசை + புல்.]

மூஞ்சான் *mūñjāṉ,* பெ.(n.) கடல் மீன் வகை; sea -fish, scarlet-*Serranus miniatus.*

மூஞ்சி *mūñji,* பெ.(n.) 1. மூக்கும் வாயும் சேர்ந்த பகுதி; muzzle. 2. முகம்; face. *"பிணி கொண்ட மூஞ்சிப் பிசாசகன்" (நீலகேசி, பூதவாதச்.3). தவறு செய்தால் மூஞ்சிமேலே அடிப்பேன்.*

தெ., க. மூதி; ம. மூச்சி.

[முந்து→(மூந்து)→மூஞ்சு→மூஞ்சி.]

முகத்தில் நீண்டிருப்பது மூக்கு.

மூஞ்சிகாட்டு[1]–தல் *mūñji-kāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) எளிமையைக் காட்டுதல்; to wear a long face. *"கணக்கு கேட்டால் மூஞ்சியைக் காட்டுகிறான்" (உ.வ.).*

[மூஞ்சி + காட்டு–தல்.]

மூஞ்சிகாட்டு[2]–தல் *mūñji-kāṭṭu-,* 5 செ. குன்றாவி.(v.t.) மூஞ்சியாலடி–த்தல் பார்க்க; see *mūñjiyāl-aḍi-.*

[மூஞ்சி + காட்டு–தல்.]

மூஞ்சிக்குண்டையம் *mūñji-k-kuṇḍaiyam,* பெ.(n.) சுறா மீன் வகை (நெல்லைமீன.); a kind of shark fish-*Selachoidei.*

மூஞ்சிச்சுவர் *mūñji-c-cuvar,* பெ.(n.) நெற்றிச்சுவர் (கட்டட.நாமா.15); gable wall.

[மூஞ்சி + சுவர்.]

மூஞ்சிசுண்டு–தல் *mūñji-šuṇḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. முகத்தைச் சுளித்தல்; to be wry - faced. 2. முகங்கருகுதல்; to look small or withered.

மறுவ. முகவாட்டம்

[மூஞ்சி + சுண்டு–தல்.]

மூஞ்சித்திருக்கை *mūñji-t-tirukkai,* பெ. (n.) திருக்கை மீன் வகையுளொன்று; a kind of ray - fish.

[மூஞ்சி + திருக்கை.]



மூஞ்சியாலடி—த்தல் *mūñjiyāl-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) உடன்படாமைக் குறிப்புத் தோன்ற எரிந்து விழுதல் (இ.வ.); to show irritability or bad temper, show the sign of disagreement by irritation.

[மூஞ்சியால் + அடி—த்தல்.]

மூஞ்சியிலடி—த்தல் *mūñjiyilaḍi-,* 4 செ.கு.வி. (v.i.) மூஞ்சியாலடி—த்தல் பார்க்க; see *mūñjiyāl-aḍi-. மூஞ்சியில் அடித்தாற்போல் விடை சொல்லி அனுப்பிவிட்டான் (கோவை.).*

[மூஞ்சியில் + அடி—த்தல்.]

மூஞ்சிவாளை *mūñji-vāḷai,* பெ. (n.) முகவழகுடையதொரு வாளை மீன்; scabbard fish silvery, attaining 16 inch in length.

[மூஞ்சி + வாளை.]

மூஞ்சு—தல் *mūñju-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. நக்கியுண்ணுதல்; to lick. 2. மூசு—தல் (வின்.) பார்க்க; see *mūšu-.*

[மூசு—தல் → மூஞ்சு—தல்.]

மூஞ்சுறு *mūñjuṟu,* பெ. (n.) மூஞ்சூறு (வின்.) பார்க்க; see *mūñjūṟu.*

மூஞ்சூற்றுமுள்ளன் *mūñjūṟṟu-muḷḷaṉ,* பெ. (n.) கிழங்குள்ள கொடி வகை (யாழ்.அக.); a bulbous-rooted creeper.

[மூஞ்சூறு + முள்ளன்.]

மூஞ்சூறு *mūñjūṟu,* பெ. (n.) 1. உயிரி வகை (பிராணி) (உ.வ.); musk-rat, *Sorex indicus.* 2. மாட்டுநோய் வகை (இ.வ.); a cattle disease. 3. எலி வகைகளுள் ஒன்று; a kind of shrew mouse.

[மூஞ்சுறு → மூஞ்சூறு.]

மூஞ்சூறுவாணம் *mūñjūṟu-vāṇam,* பெ. (n.) உந்து கூண்டு வாணம், ஒருவகை ஏவுகணை; a kind of rocket.

[மூஞ்சூறு + வாணம்.]

மூஞ்சூறு வடிவில் செய்யப்பட்ட வாணம்.

மூஞ்சை *mūñjai,* பெ. (n.) 1. கோணியமுகம் (வின்.); pouting, sullen countenance. 2. நீண்ட முகம் (யாழ்.அக.); longish face. 3. நீண்ட மூக்கு (யாழ்.அக.); longish nose.

[மூஞ்சி → மூஞ்சை.]

மூஞ்சையன் *mūñjaiyaṉ,* பெ. (n.) முகங் கோணியவன் (வின்.); pouter, sulky fellow. *"மூஞ்சையப்பன் முகத்தைப் பார்" (பழ.).*

[மூஞ்சை → மூஞ்சையன்.]

மூட்கு[1]–தல் *mūṭku-,*5 செ.குன்றாவி.(v.t.) அகப்பையால் எடுத்தல் (இ.வ.); to ladle out, as rice from a pot.

[மூழ்கு–தல்→மூட்கு–தல்.]

மூட்கு[2]–தல் *mūṭku-,*5 செ.குன்றாவி.(v.t.) சிக்கலை விடுவித்தல் (இ.வ.); to unravel, to free, as from an encumbrance.

[மீள்–தல்→மூள்–தல்→மூட்கு–தல்.]

மூட்சி *mūṭci,* பெ.(n.) சினமிகுதி; violent temper; rage. *"மூட்சியிற் கிழித்த வோலை" (பெரியபு.தடுத்தாட்.56).*

[மூள்→மூட்சி. மூள்–தல் = சினம் மிகுதல்.]

மூட்டங்கட்டு[1]–தல் *mūṭṭaṅ-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மாழை (உலோக) உருக்கக் குழி யுண்டாக்குதல் (வின்.); to make a pit or cavity to serve as a crucible for melting metals. 2. முகில் ஒருங்கு சேர்தல்; to gather, as clouds. *முகில் மூட்டங் கட்டுகிறது.*

[மூட்டம் + கட்டு–தல்.]

மூட்டங்கட்டு[2]–தல் *mūṭṭaṅ-kaṭṭu-,*5 செ. குன்றாவி.(v.t.) 1. மண் முதலியவற்றால் மூடுதல் (இ.வ.); to cover with mud etc., as a corpse in the funeral pyre. 2. ஆயத்தப்படுத்துதல், ஒழுங்கு பண்ணுதல், தக்க திறமையுடன் இருத்தல்; to prepare, fit, arrange. 3. தொடங்குதல் (வின்.); to set going, commence as an undertaking.

[மூட்டம் + கட்டு–தல்.]

மூட்டங்கலை[1]–தல் *mūṭṭaṅ-galai-,* 4 செ.கு.வி.(v.i.) வானம் வெளிவாங்குதல்; to release the rain cloud.

[மூட்டம் + கலை–தல்.]

மூட்டங்கலை[2]–த்தல் *mūṭṭaṅ-kalai-,* 4 செ.குன்றாவி.(v.t.) மூடியுள்ள மூட்டத்தை நீக்குதல் (வின்.); to break open or break up, as a covering or coating of mud.

[மூட்டம் + கலை–த்தல்.]

மூட்டம்[1] *mūṭṭam,*பெ.(n.) முகில், புகை போன்றவை பெருமளவில் திரண்டிருத்தல்; thick mass of clouds, smoke, etc. *முகில் மூட்டம் ஞாயிறு ஒளியை மறைத்திருந்தது. பனி மூட்டத்துக்குள் சிக்கி வழி தெரியாமல் திண்டாடினோம்.*

[மூடு→மூட்டம்.]

மூட்டம்[2] *mūṭṭam,*பெ.(n.) 1. மூடியிருப்பது (சது.); which is covered. 2. உலை முகம் (யாழ்.அக.); furnace. 3. மூடுதழல்; smouldering fire. 4. மூடிய தவசக் குவை; heap of corn protected by a cover of straw and mud. 5. மகளிர் மகபேறுக் காலத்திற்குப் பின்னும் அடுத்து வரும் மாதவிடாய்க்கு முன்னுமுள்ள காலம்; interval between a woman's delivery and the first subsequent menstruation. *அவள் மூட்டத்திலேயே கருக்கொண்டாள் (இ.வ.).* 6. விறகு (யாழ்.அக.); fuel. 7. சொக்கப்பனை (வின்.); bon fire. 8. ஆயத்தம்; readiness. *மூட்டம் பண்ணுகிறான் (வின்.).* 10. கம்மக் கருவி வகை (யாழ்.அக.); a smith's tool.

[மூடு→மூட்டம்.]

மூட்டம்[3] *mūṭṭam,* பெ.(n.) மூளல்; kindling fire (சா.அக.).

மூட்டம்பண்ணு–தல் *mūṭṭam-paṇṇu-,* 5 செ.கு.வி.(v.i.) ஒரு செயல் செய்வதற்கு அணியப்படுத்துதல் (வின்.); to prepare, as for a journey.

[மூட்டம் + பண்ணு–தல்.]

மூட்டம்பிரி-த்தல் *mūṭṭam-piri-,* 4 செ. குன்றாவி.(v.t.) மூட்டங்கலை-தல் (வின்.) பார்க்க; see *mūṭṭaṅ-kalai-.*

மூட்டம்பொதி-தல் *mūṭṭam-podi-,*4 செ. குன்றாவி.(v.t.) மூட்டங்கட்டு-தல், 3 பார்க்க; see *mūṭṭaṅ-kaṭṭu-, 3.*

[மூட்டம் + பொதி-தல்.]

மூட்டம்போடு-தல் *mūṭṭam-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) மரக்கட்டளைகளை அடுக்கி தீயிட்டுக் கொளுத்திக் கரி உண்டாக்குதல்; to assemble the wooden logs for charred wood.

[மூட்டம் + போடு-தல்.]

தென்தமிழ் நாட்டில் குறிப்பாக மதுரை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் மானாவாரிப் பகுதி மிகுந்திருப்பதால் அங்கு வேலிக்காத்தான் எனும் செடி மரமாகவும் செடியாகவும் வளர்ந்து காணப்படும். பயிர்த் தொழில் இல்லாத வேனிற்காலங்களில் இவற்றை வெட்டி துண்டுகளாக்கி மொத்தமாக அடுக்கி வைத்துச் சருகு முதலியவற்றால் மூடி மண்ணால் பூசி தீயிட்டு எரிப்பர். தீ கொழுந்து விட்டு எரியாவண்ணம் நீரால் அணைத்துப் புகை மட்டும் வரும்படி செய்தால், மரத்துண்டுகளனைத்தும் கரியாகி விடும். இது பல்வேறு வகையில் பயன்படும்.

மூட்டாங்கயிறு *mūṭṭāṅ-kayiṟu,* பெ.(n.) மரக்கலத்தைக் கட்டுதற்குரிய கயிறு; catamaran, boat tieing rope.

[பூட்டாங்கயிறு→மூட்டாங்கயிறு.]

மூட்டாதஅக்கினி *mūṭṭāda-akkiṉi,* பெ.(n.) காமத்தீ; fire of passion (சா.அக.).

மூட்டாள் *mūṭṭāḷ,* பெ.(n.) மூட்டை தூக்கி; porter. *சீட்டாளுக் கொரு மூட்டாளா? (உ.வ.).*

க. மூடேயாளு

[மூட்டு→மூட்டை + ஆள்.]

மூட்டு¹-தல் *mūṭṭu-,*5 செ.குன்றாவி.(v.t.) 1. தீ உண்டாக்குதல்; அடுப்பில் நெருப்பு பற்ற வைத்தல்; make fire kindle; fire in the hearth. *"கல்லா உமணர்க்குத் தீமூட் டாகும்" (அகநா.257:17). "மூட்டிய தீ" (நாலடி, 224). தீ மூட்டி குளிர் காய்ந்தனர். அடுப்பை மூட்டி உலை வைத்தல்.* 2. சிரிப்பு, சினம் முதலியவற்றை உண்டாக்குதல் அல்லது ஏற்படுத்துதல்; make some one laugh or angry; create mischief. *தண்ணீர் குடிக்கும் போது சிரிப்பு மூட்டாதே! உங்களுக்குள் வாய்ச்சண்டை மூட்டி விட்டது யார்?*

[மூள்→மூட்டு→மூட்டு-தல்.]

மூட்டு²-தல் *mūṭṭu-,*5 செ.குன்றாவி. (v.t.) சணற்பை, துணி முதலியவற்றில் இரு விளிம்புகள் இணையும்படி சேர்த்தல்; சேர்த்துத் தைத்தல்; bring closer; sew together. *மிக எளிமையாக நெல் கூலத்தை மூட்டினான். நிறவேட்டி (லுங்கி)யை மூட்டித் தைத்துத்தர ஐந்து ரூபாயா?*

[மூள்→மூட்டு→மூட்டு-தல்.]

மூட்டு³-தல் *mūṭṭu-,*5 செ.குன்றாவி.(v.t.) 1. ஒன்றைச் செலுத்துதல்; to cause to enter, to put into. *"கடுபுகு கதிர் மூட்டி" (கலித்.8).* 2. பொருந்துதல், கூடுதல்; to join, link. *"கால் கொடுத்தெலும்பு மூட்டி" (தேவா.631:3).* 3. பகையை ஏற்படுத்தி சண்டைக்குத் தூண்டி விடுதல்; to stimulate, as a quarrel, to stir up, as feelings. *அவனைப் பற்றி*

இவனிடத்தில் மூட்டினான். 4. தைத்தல்; to stitch, sew together. 5. மிகைப்படுத்துதல் (வின்.); to increase. *இருவருக்கும் நன்றாய் மூட்டிவிட்டு விட்டான் (உ..வ.).*

தெ. முட்டிஞ்சு; ம. மூட்டுக.

[மூள் →மூட்டு (பி.வி.) →மூட்டு-தல்.]

மூட்டு[4] *mūṭṭu-,* பெ.(n.) உடல், அணி முதலியவற்றின் பொருத்து; joint, articulation. *"கவசத்தையும் மூட்டறுத்தான்" (கம்பரா. சடாயுவ.113).* 2. சந்திப்பு (யாழ்.அக.); junction. 3. குதிரைக் கடிவாளம் (பிங்.); bridle, bit. 4. கோள் (யாழ்.அக.); tale - bearing. 5. கட்டு; tie, bond. *"வன்றாண் மிசைப் பிணித்த வல்லிகளின் மூட்டறுத்து" (கந்தபு.மீட்சிப்.8).* 6. கட்டப்பட்டது (வின்.); that which is tied. 7. தையல்; stitch. 8. மனவெழுச்சி (வின்.); excitement provocation. 9. வாழையிலைக் கற்றை; bundle of banana leaves. *மூட்டுமூட்டாய்ப் பிரிந்து போய்விட்டது (உ.வ.).* 10. பொத்தகக் கட்டடப் பகுதி; binding of books. 11. எலும்புகளின் இணைப்பு; bone joint. *முழங்கால் மூட்டு விலகியிருக்கலாம் என்று முதலுதவி அளித்தவர் கூறினார்.*

ம., தெ. மூட்டு; க. மூட்டை.

[மூள் →மூட்டு.]

மூட்டு[5] *mūṭṭu,* பெ.(n.) வளையம், தோல், சாட்டைவார் மூன்றும் சேர்ந்த மதங்கத்தின் பகுதி (கலைமகள்.xii, 399); comprising the *vaḷayam, tōl* and *šāṭṭaivār.*

[மூள் →மூட்டு.]

மூட்டு[6] *mūṭṭu,* பெ.(n.) 1. மூடுகின்ற பொருள்; that which forms a cover, coating, wrapper. *"மாலையை மூட்டாகப் பெய்து வெயிலை மறைத்து" (சீவக.1267, உரை).* 2. மூட்டம், 1 (வின்.) பார்க்க; see *mūṭṭam, 1.*

[மூள் →மூட்டு.]

மூட்டுக்கயிறு *mūṭṭu-k-kayiṟu,* பெ.(n.) நெசவு ஆலையில் பாவு கீழே விழாமல் இருக்கக் கட்டியுள்ள கயிறு; rope tied, to prevent the warp falling down.

[மூட்டு + கயிறு.]

மூட்டுக்காயம் *mūṭṭu-k-kāyam,* பெ.(n.) உடற்பொருத்திலுள்ள காயம் (C.E.M.); wound at a joint.

[மூட்டு + காயம்.]

மூட்டுச்சாட்டு *mūṭṭu-c-cāṭṭu,* பெ.(n.) 1. கோள் (யாழ்ப்.); scandal; backbiting. 2. சந்து (இ.வ.); joint.

[மூட்டு + சாட்டு.]

மூட்டுச்சூலை *mūṭṭu-c-cūlai,* பெ.(n.) மூட்டுச்சூலைவளி பார்க்க; see *mūṭṭu-c-cūlai-vaḷi.*

[மூட்டு + சூலை.]

மூட்டுச்சூலைவளி *mūṭṭu-c-cūlai-vaḷi,* பெ.(n.) சூலை நோய் வகை; inflammation of the joints.

மறுவ. மூட்டுச்சூலைவாயு

[மூட்டுச்சூலை + வளி.]

மூட்டுச்சேலை *mūṭṭu-c-cēlai,* பெ.(n.) மூட்டித் தைத்த புடைவை (இ.வ.); patched saree.

[மூள் →மூட்டு + சேலை.]

மூட்டுத்தாபனரோகம் *mūṭṭu-t-tābaṉa-rōgam,* பெ.(n.) மூட்டுகள் வீங்கும் ஒருவகை நோய்; inflammation of the joints - *Acroarthiritis* (சா.அக.).

*[மூட்டு + **Skt.** தாபனரோகம்.]*

மூட்டுத்திமிர்வாயு *mūṭṭu-t-timir-vāyu,* பெ.(n.) மூட்டுத்திமிரூதை பார்க்க; see *mūṭṭu-t-timir-ūdai.*

மூட்டுத்திமிரூதை *mūṭṭu-t-timir-ūdai,* பெ.(n.) மூட்டிற் பிடிப்பு உண்டாக்கும் ஒருவகை ஊதை நோய் வகை (M.L.); anchylosis of joint.

[மூட்டு + திமிர் + ஊதை.]

மூட்டுநழுவல் *mūṭṭu-naḻuval,* பெ.(n.) உடற்பொருத்துப் பிசகல் (M.L.); dislocation of a joint.

மறுவ. மூட்டுப்பிசகல்.

[மூட்டு + நழுவல்.]

மூட்டுப்பூச்சி[1] *mūṭṭu-p-pūcci,* பெ.(n.) படுக்கைக்கட்டில், நாற்காலி முதலியவற்றின் இடுக்குகளில் இருந்து கொண்டு மாந்தனின் அரத்தத்தை உறிஞ்சி வாழும் ஒருவகைப் பூச்சி; bed-bug - *Cimex lectularius.*

[மூடு→மூட்டு + பூச்சி. மூடு = முகடு.]

மூட்டுப்பூச்சி[2] *mūṭṭu-p-pūcci,* பெ.(n.) கம்பளிப்பூச்சி (G.S.A.D.I.126); hairy caterpillar.

[மூடு→ மூட்டு + பூச்சி.]

மூட்டுப்பூச்சிமருந்து *mūṭṭu-p-pūcci-marundu,* பெ.(n.) கீரைப்பூச்சி மருந்து; vermifuge - for bugs (சா.அக.).

[மூட்டுப்பூச்சி + மருந்து.]

மூட்டுவலி *mūṭṭu-vali,* பெ.(n.) மூட்டில் உண்டான துன்பம்; pain in the joints - *Arthralgia, arthro dynia.*

[மூட்டு + வலி.]

மூட்டுவாய் *mūṭṭu-vāy,* பெ.(n.) பொருத்து (இலக்.வி.640, உரை, பக்.643); joint, clasp.

[மூட்டு[4] + வாய்.]

மூட்டுவிலகல் *mūṭṭu-vilagal,* பெ.(n.) மூட்டுநழுவல் (இங்.வை.) பார்க்க; see *mūṭṭu-naḻuval.*

[மூட்டு + விலகல்.]

மூட்டை[1] *mūṭṭai,* பெ.(n.) 1. தவசம் முதலியவை நிரப்பப்பட்டு கட்டப்பட்ட அல்லது தைக்கப்பட்ட சணற்பை; sack holding grain etc. *கூடத்தில் நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.* 2. எடுத்துச் செல்ல எளிமையாக இருக்கக் கட்டி வைத்திருப்பது அல்லது பொதிந்து வைத்திருப்பது; anything which is bundled up so as to be carried easily. *அழுக்குத் துணி மூட்டையை மிதிவண்டியில் வைத்திருந்தான். சிறுவர்கள் நூல்கள் அடங்கிய மூட்டையைத் தூக்க முடியாமல் திணறுகிறார்கள்.* 3. சணற் பையின் கொள்ளளவாகிய ஏறக்குறைய இருபத்து நான்கு மரக்காலைக் குறிப்பிடுவது; a term referring to the capacity of a sack, approximately twenty four measures. *எத்தனை மூட்டை நெல் விளைந்தது. அரிசி மூட்டை என்ன விலை?* 4. உள்ளே பண்டம் வைத்துக் கட்டப்பட்ட கட்டு அல்லது பொட்டணம்; bundle, that which is tied up, bag, wallet, satchel. *இந்தத் துணிகளையும் மூட்டையில்*

வைத்துக்கட்டு (உ.வ.). 5. பொதி; load carried in a sack, bale. *அரிசி மூட்டைகளையெல்லாம் வண்டியிலேற்றிக் கொண்டு போய்விட்டார்கள்.* 6. 48 பட்டணம்படி கொண்ட ஒரு கோணி அளவு; a large measure of capacity, bag, as of rice, containing generally 48 Madras measures (G.Tj.P.I.134). 7. பெரும் பொய் (இ.வ.); great lie. *அவன் மூட்டை யளக்கிறான்.*

ம. மூட்ட; தெ. மூட; க. மூடே.

[முள் → மூள் → மூட்டு → மூட்டை = கட்டு, பொட்டணம், பொருள் நிறைந்த கோணி (தேவநேயம் 12:102)]

மூட்டை² *mūṭṭai,* பெ.(n.) மூட்டுப்பூச்சி¹ பார்க்க; see *mūṭṭu-p-pūcci*¹. *"மூட்டை கலம் புழுதி முக்கலம்" (தமிழ்நா.பக்.228).*

ம. மூட்ட.

[மூடு → மூட்டை.]

மூட்டைக்காரன் *mūṭṭai-k-kāraṉ,* பெ.(n.) 1. பொதி சுமக்கும் தொழிலாளி; porter. *"மூட்டைக்காரனுக்கு முழங்காலிலே அறிவு" (பழ.).* 2. பெரும் பொய் கூறுவோன் (இ.வ.); great liar.

மறுவ. மூட்டைத்தூக்கி

[மூட்டை + காரன்.]

மூட்டைக்கொல்லி *mūṭṭai-k-kolli,* பெ. (n.) சிறுதும்பை; small dead nettle, a kind of plant (சா.அக.).

மூட்டைகட்டு–தல் *mūṭṭai-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. படிப்பு, வணிகம் முதலியவற்றை இனித் தொடர்வதில் பயன் இல்லை என்று நிறுத்துதல்; stop or discontinue studies, business, etc. *படிப்பை மூட்டை கட்டி வைத்துவிட்டு அப்பாவோடு சேர்ந்து வணிகத்தைக் கவனித்தான்.* 2. ஓர் இடத்திலிருந்து வெளியேறுதல்; quit, leave. *இனிமேல் இங்கு உனக்கு வேலை இல்லை, மூட்டைகட்டு!*

[மூட்டை + கட்டு–தல்.]

மூட்டைத்தூக்கி¹ *mūṭṭai-t-tūkki,* பெ.(n.) முடக்கற்றான்; palsy curer - *Cardiospermum halicacabum* (சா.அக.).

மூட்டைத்தூக்கி² *mūṭṭai-t-tūkki,* பெ.(n.) பொருள்களைத் தூக்கிச் செல்லுங் கூலியாள்; porter.

[மூட்டை + தூக்கி.]

மூட்டைநாறி *mūṭṭai-ṉāṟi,* பெ.(n.) ஓம வல்லி; a plant - *Country borage* (சா.அக.).

மூட்டைப்பூச்சி *mūṭṭai-p-pūcci,* பெ.(n.) மூட்டுப்பூச்சி¹ பார்க்க; see *mūṭṭu-p-pūcci*¹. *"மூட்டைப் பூச்சியைப் போல கடிக்கிறாயே" (பழ.).*

[மூட்டை + பூச்சி.]

மாந்தனின் அரத்தத்தை உறிஞ்சி இடுக்குகளில் வாழும் சிறு பூச்சி.

மூட்டைமுடிச்சு *mūṭṭai-muḍiccu,* பெ.(n.) பயணத்திற்கான பொருள்; bag and baggage. *பாட்டியின் மூட்டை முடிச்சுகளை வைக்கவே வண்டியில் இடம் போதவில்லை.*

[மூட்டை + முடிச்சு.]

மூட்டையவிழ்–த்தல் *mūṭṭai-y-aviḻ-,* 4 செ.கு.வி. (v.t.) மூட்டைவிடு–தல் (இ.வ.) பார்க்க; see *mūṭṭai-viḍu-.*

[மூட்டை + அவிழ்–த்தல்.]

மூட்டைவிடு–தல் *mūṭṭai-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) பொய்ச் செய்தி கூறுதல் (இ.வ.); to give out a fictitious account; to start false rumours.

[மூட்டை + விடு–தல்.]

மூட *mūḍa,* பெ.அ.(adj.) அறிவுக்கு ஒவ்வாத, முட்டாள்தனமான; absurd, foolish. *மூடப்பழக்கம், மூடக் கொள்கை, மூடச்சொல்.*

மூடக்காய் *mūḍa-k-kāy,* பெ.(n.) நோய் விழுந்து சரியாக வெடிக்காதப் பருத்தி (கோவை.); uncracked diseased cotton.

மூடக்கொத்தான் *mūḍa-k-kottāṉ,* பெ.(n.) முடக்கொற்றான்; balloon vine a creeper - *Cardiospermum halicacabum* (சா.அக.).

மூடகபாணி *mūḍaga-bāṇi,* பெ.(n.) இலைக் கள்ளி; leafy spurge - *Euphorbia nerifolia.*

மூடகருப்பம் *mūḍa-karuppam,* பெ.(n.) 1. கருப்பத்திலிறந்த குழந்தை (சிசு) (யாழ்.அக.); still - born child. 2. மகப்பேறு காலத்தில் குழந்தையை எளிதில் வெளியேறாமல் செய்யும் நோய் வகை (சீவரட். 208); a disease in which a pregnant woman is not easily delivered of her child.

மூடத்தட்டு–தல் *mūḍa-t-taṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) உப்பளப் பாத்திகளில் தேங்கியிருக்கும் உப்புநீர் மீது படியும் பாசி போன்ற ஆடையை, வாருபலகையினால் கலைத்து அப்புறப்படுத்துதல்; remove the layer like fungus settled on the top of the salt water stagnant in the salt - pan.

மூடத்தனம் *mūḍattaṉam,* பெ.(n.) முட்டாள்தனம்; சோர்வுடன் கூடிய தன்மை; அறிவீனம்; stupidity, dullness, ignorance.

[மூடம் + தனம்.]

மூடதை *mūḍadai,* பெ.(n.) மூடத்தனம் (யாழ்.அக.) பார்க்க; see *mūḍa-t-taṉam.*

மூடநம்பிக்கை *mūḍa-nambikkai,* பெ.(n.) பழக்கத்தினால் ஏற்றுக் கொள்ளும், அறிவுக்கு ஒவ்வாத நம்பிக்கை; supersititious belief. *மூடநம்பிக்கையால் கிராமத்தில் பெண்கள் பிறந்த குழந்தையின் எடையைப் பார்க்க அனுமதிப்பதில்லை. அறிவியலாளரிடையிலும் மூடநம்பிக்கைகள் உண்டு.*

[மூடம் + நம்பிக்கை.]

மூடபத்தி *mūḍa-patti,* பெ.(n.) காரணியம் அறியாமல் செய்யும் இறையன்பு (உ.வ.); superstition, blind zeal, bigotry.

[மூடம் + (பக்தி)→பத்தி.]

மூடம்¹ *mūḍam,* பெ.(n.) 1. முகில்சூழ்ந்த வனம் (மந்தாரம்); dark, clouded sky. *வானம் இன்று மூடமாயிருக்கிறது (பே.வ.).* 2. குளிர் (யாழ்.அக.); chillness; cold. 3. மறைந்த இடம்; place of concealment, secret place. *"வேட்கைவிட்டார் நெஞ்சின் மூடத்துளே நின்று முத்தி தந்தானே" (திருமந்.2614).*

க. மோட.

[மூடு→மூடம்.]

மூடம்² *mūḍam,* பெ.(n.) 8 மரக்கால் கொண்ட முகத்தலளவை (தைலவ.தைல.); a measure of capacity = 8 marakkal.

மூடம்³ *mūḍam*, பெ.(n.) 1. அறிவின்மை (பிங்.); foolishness, stupidity. 2. மயக்கவுணர்வு; confusion; error. *"பாசண்டி மூடம்" (அறநெறி.16)*. 3. ஐயம் (யாழ்.அக.); doubt.

மூடமா *mūḍamā*, பெ.(n.) காட்டுமா; wild mango - *Buch anania latifolia* (சா.அக.).

மூடர் *mūḍar*, பெ.(n.) மூடன் பார்க்க; see *mūḍaṉ*. *மூடர்கள் சேர்க்கையில் தப்பாமல் கெடுதி வரும். மூடர் கூட்டுறவு முழுதும் கேடு. மூடர் முன்பு மூர்க்கம் பேசாதே (பழ.).*

[மூடன் → மூடர்.]

மூடல் *mūḍal*, பெ.(n.) 1. மூடுகை; covering. 2. மூடி; cover; lid. *சாடியின் மூடல்.*

[மூடு → மூடல்.]

மூடலை *mūḍalai*, பெ.(n.) மதிகேடு; lack of sense. *"மூடலையாவதன் காரண மென்னை" (நீலகேசி.380).*

மூடவாதம் *mūḍa-vādam*, பெ.(n.) 1. மலமும் நீரும் சேர்ந்து கொப்பூழ் இருக்கும் இடத்தில் குடலை இழுத்துப் பிடித்து வயிற்றுக்குள் துன்பத்தை உண்டாக்கும் ஒரு வகை ஊதை நோய்; a disease marked by constipation suppession of urine, pain and stiffness round the novel (சா.அக.).

மூடன் *mūḍaṉ*, பெ.(n.) 1. அறிவிலான்; fool, ignoramus, stupid person. *"பயன் றெரித றேற்றாத மூடர்" (நாலடி, 316)*. 2. கீழ்மகன் (திவா.); low, mean man. *மொட்டைக் கடிதத்தை வைத்து மனைவிமேல் ஐயப்படுகிறான் மூடன் (உ.வ.).*

மூடனம்¹ *mūḍaṉam*, பெ.(n.) மூடம்³, 1 (இ.வ.) பார்க்க; see *mūḍam³, 1*.

[மூடம் → மூடனம்.]

மூடனம்² *mūḍaṉam*, பெ.(n.) மிளகு (மலை.); black pepper.

மூடாக்கு *mūḍākku*, பெ.(n.) முக்காடு பார்க்க; see *mukkāḍu*.

[மூடு + ஆக்கு.]

மூடாத்துமா *mūḍāttumā*, பெ.(n.) மூடன் (உ.வ.); fool, stupid person.

மூடாதியந்தம் *mūḍādiyantam*, பெ.(n.) முட்டைச் சிலந்தி; a kind of abscess (சா.அக.).

மூடாந்தகாரம் *mūḍānda-kāram*, பெ.(n.) மிகை அறிவின்மை (வின்.); excessive mental darkness.

மூடாம்பரக்கண் *mūḍāmbarakkaṉ*, பெ.(n.) அரைக்கண் பார்வையான மெய்ப்பாட்டுக் கண் (அவிநயக்கண்) வகை (பரத.பாவ.94); seeing with half- closed eyes; squinting eyes.

[மூடு + அம்பரம் + கண்]

மூடி¹ *mūḍi*, பெ.(n.) 1. ஒரு கொள்கலனின் திறப்பை மூடுவதற்கு அந்தத் திறப்பின் அளவே இருக்கும் ஒரு சிறிய தட்டு; anything that is designed for closing or covering a container. *'சாடிக்கேற்ற மூடி'.* 2. எழுதுகோல் போன்றவற்றில் மேல் பகுதியைப் பாதுகாக்க செருகி மூடும் அமைப்பு; cap of a pen, etc. *எழுதுகோலின் மூடி தொலைந்துவிட்டது. "மூடி வைத்தாலும் முணுமுணு என்னும், தைத்து வைத்தாலும் டமடம என்னும்", "மூடாத உடைமை முக்காற் காசும் பெறாது" (பழ.).*

[மூடு → மூடி.]

மூடி² mūḍi, பெ.(n.) 1. மூடு கருவி; that which covers, cover, lid top. 2. தேங்காய் மூடி (கொ.வ.); half of a split coconut. 3. கொத்து மல்லி (மலை.); coriander.

தெ. மூட; ம. மூடி.

[மூடு→மூடி.]

மூடி³ mūḍi, பெ.(n.) மூடத்தன்மை யுள்ளவள்; stupid, foolish woman. *"ஏடி மூடி" (அரிச். பு.மயான.37).*

மூடிக்கீரை mūḍi-k-kīrai, பெ.(n.) எலிச் செவிக் கீரை; a prostate weed - *Merremia gangetica (emargineta)* (சா.அக.).

மூடிகநஞ்சு mūḍiga-nañju, பெ.(n.) எலி நஞ்சு; rat poison.

மூடிகம் mūḍigam, பெ.(n.) 1. பெருச்சாளி; bandicoot. *"மீனு மானேன் மாய்ந்து மூடிகமு மானேன்" (பிரமோத்.15:29).* 2. எலி (யாழ்.அக.); rat.

மூடிகாராதி mūḍikārādi, பெ.(n.) பூனை (யாழ்.அக.); cat.

மூடிமறை-த்தல் mūḍ-maṟai-, 4 செ.கு.வி. (v.i.) நடந்து விட்ட ஒன்றைப் பிறர் அறிந்துவிடாதவாறு செயல்படுதல்; cover up. *கொலையை மூடி மறைக்க முயற்சி செய்கிறார்கள். எவ்வளவு மூடி மறைத்தாலும் உண்மை ஒருநாள் தெரியாமலா போகும்?*

[மூடி + மறை-த்தல்.]

மூடியம்மன் mūḍiyammaṉ, பெ.(n.) பெண் கடவுள்; goddess. *'மூடியம்மனை வழிபட மும்மாரி மழைபொழியும் மக்கள் குறை தீரும்' (கோவை.).*

[மூடி + அம்மன்.]

மூடிவை-த்தல் mūḍi-vai-, 4 செ. குன்றாவி.(v.t.) 1. சேமித்துப் பாதுகாத்தல்; to preserve, keep safe. *"ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி மூடி வைத்திட்ட மூர்க்கனொ டொக்குமே" (தேவ.1218, 9).* 2. கமுக்கமாக (இரகசியம்) மறைத்து வைத்தல்; to conceal, hide, as secrets.

[மூடு→மூடி + வை-த்தல்.]

மூடு¹-தல் mūḍu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கதவு, பலகணி (சன்னல்) போன்றவற்றை அடைத்தல்; close of doors, etc., shut a door, etc. *பலகணியை (சன்னலை) மூடாதே!* 2. பெட்டி, பை முதலியவற்றின் திறப்பை (ஒரு பொருளை உள்ளே போட முடியாத அளவுக்கு) அடைத்தல்; be in closed condition of a case, box, etc.; close a case, box, etc. *நான் பார்த்த போது பெட்டி மூடித்தான் இருந்தது. தண்ணீர்த் தவலையை மூட மறந்து விட்டேன்.* 3. கண், வாய் முதலியவற்றின் இமைகளை, உதடுகளை ஒன்று சேர்த்தல்; close, close the eyes, mouth. *ஊழ்கத்தின் (தியானத்தின்) போது அவருடைய கண்கள் மூடி இருந்தன. வாயை மூடித்தூங்கு!* 4. நீட்டிய நிலையில் இருக்கும் புத்தகம் போன்றவற்றை மடக்கியோ, இணைத்தோ ஒன்று சேர்த்தல்; close, close the fingers, the book, etc. *பிறந்த குழந்தையின் கை மூடி இருக்கும். கொட்டாவி வந்ததும் புத்தகத்தை மூடினான்.* 5. மறைக்கப்பட்டிருத்தல் அல்லது மறைத்தல்; to hide, screen; to obscure. *"மூடி மேனியை" (கம்பரா.பிரமாத்திர.173). பனிமூடிய மலை. கையால் காதை மூடினான்.* 6. கல்வி நிறுவனம், தொழிற்சாலை முதலியவை இடைக்காலமாகவோ நிலையாகவோ செயல்படாமல் நிறுத்தி வைத்தல்; be closed, shut down for the

day or permanently, close a shop, instituions, factory etc, for the day or permanently. *விரைந்து போ, கடை மூடிவிடும். நிருவாகம் தொழிற் சாலையை மூடிவிட முடிவு செய்துள்ளது.* 7. வெளியேறும் நீர் முதலிய நீர்மங்களைக் குழாய் அல்லது அதன் அமைப்பிலிருந்து வெளியேறாமல் நிறுத்துதல்; stop, close, turn off the flow of water etc. from a tap etc. *குழாயை மூடிவிட்டாயா?* 8. போர்த்தல்; to cover, shroud, veil. *"மூடித்தீக் கொண்டெழுவர்" (நாலடி, 24). "மூடி முக்காட்டுக்குள்ளே போகிறவள்தான் ஓடி, ஓடி மாப்பிள்ளை கொள்வாள்" (பழ.).* 9. அடைத்தல்; to shut in, enclose; to close, as the eyes; to shut, as the mouth. *கண்மூடித் திறந்தான்.* 10. சுற்றிக் கொள்ளுதல்; to surround, encompass. *"ஆர்த்துமண்டி மூடினான்" (கம்பரா. நாகபாச. 92).*

தெ. மூயு; க. முச்சு; ம. முடுக.

மூடு²–தல் *mūḍu-*,5 செ.கு.வி.(v.i.) நோய் முதலியன மிகுதல்; to reach a critical stage, as a disease, to come to a head.

மூடு³ *mūḍu,*பெ.(n.) 1. வேர்; root. *"மன்னு புனன் மூட்டில்விடக் கொப்பெலாந் தழைத் தோங்கும்" (குற்றா.தல.மூர்த்தி.17).* 2. கரணியம்; cause; origin. *இவற்றிற் கெல்லாம் அவன்தான் மூடு.* 3. சிறுதூறு; small bush. 4. பெட்டையாடு (தொல். பொருள்.619); ewe. 5. நிலை; stand, as of a chariot. *தேர் மூடு (இ.வ.).*

தெ. மோடு; ம. மூடு.

மூடு⁴ *mūḍu,* பெ.(n.) மூட்டுப்பூச்சி பார்க்க; see *mūṭṭu-p-pūcci. "மூட்டுக்குங் கொதுகுக்கும்" (அருட்பா.vi, தனிப்பா. பக்.750).*

[முகடு→மூடு.]

மூடு⁵ *mūḍu,*பெ.(n.) மூடன், 1 பார்க்க; see *mūḍaṉ, 1. "மூடாய முயலகன்" (தேவா. 878, 3).*

மூடுகுப்பாயம் *mūḍu-kuppāyam,* பெ.(n.) 1. நீண்ட சட்டை (அங்கி) (யாழ்ப்.); mantle; long coat. 2. மேற் போர்வை (யாழ்.அக.); overcoat.

[மூடு + குப்பாயம். குப்பாயம் = சட்டை.]

மூடுசன்னி *mūḍu-šaṉṉi,*பெ.(n.) ஒரு வகை இசிவு (சன்னி) நோய்; catalepsy.

[மூடு + சன்னி.]

மூடுசாந்து *mūḍu-šāndu,*பெ.(n.) தளம் முதலியவற்றிற்குப் பயன்படுத்தும் அரைத்த சாந்து (யாழ்ப்.); lime mortar used in flooring, terracing, etc.

[மூடு + சாந்து.]

மூடுசீலை *mūḍu-šīlai,* பெ.(n.) 1. மூடுவதற்குப் பயன்படும் ஒருவகைத் துணி; cloth to cover medicine or medicinal vesael. 2. போர்த்தும் ஆடை (வின்.); wraper, cloth-cover.

[மூடு + சீலை.]

மூடுசுரம் *mūḍu-šuram,*பெ.(n.) காமக் காய்ச்சல்; fever due to passion.

[மூடு + சுரம்.]

மூடுசூளை *mūḍu-šūḷai,* பெ.(n.) செங்கற் காளவாய் வகை (வின்.); a kind of brick kiln.

[மூடு + சூளை.]

மூடுடமரம் *mūḍuḍa-maram,* பெ.(n.) மரவகை; East Indian stainwood-*Chloroxylon swietenia.*

[மூடு + உடைமரம்.]

மூடுதார் *mūḍu-tār,* பெ.(n.) மூடுசீலை (வின்.) பார்க்க; see *mūḍu-šīlai.*

[மூடு + தார். தாறு→தார்.]

மூடுதிரை *mūḍu-tirai,* பெ.(n.) மூடுசீலை (வின்.) பார்க்க; see *mūḍu-šīlai.*

[மூடு + திரை.]

மூடுதூறு *mūḍu-tūṟu,* பெ.(n.) பிணத்தை மூடிவைப்பதற்கானப் போர்வை (பிரேதச் சீலை); winding sheet.

[மூடு + தூறு. தூறு = புதர், காடு.]

மூடுபல்லக்கு *mūḍu-pallakku,* பெ.(n.) மூடிய பல்லக்கு வகை; a kind of covered palanquin.

[மூடு + பல்லக்கு]

மூடுபனி *mūḍu-paṉi,* பெ.(n.) பொருள்களைத் தெளிவாகப் பார்க்க முடியாதபடி அடர்த்தியாகப் பெய்யும் பனி; fog, mist. *மூடுபனி கரணியமாகப் பாதை தெரியாததால் வண்டிகள் மெதுவாகச் சென்றன. நேற்று அதிகாலை மூடுபனி அதிகமாக இருந்ததனால் வழக்கமாகச் செல்ல வேண்டிய வானூர்திகள் செல்லவில்லை.*

[மூடு + பனி.]

மூடுபாறை *mūḍu-pāṟai,* பெ.(n.) வாய்க்கால், கண்மாய் மேல் மூடும் கல்; covering stone of a tunnel or a sluice.

[மூடு + பாறை.]

மூடுமந்திரம் *mūḍu-mandiram,* பெ.(n.) 1. கமுக்கமாக நடக்கும் செயல்பாடு; profound secret. 2. இன்னது நடக்கிறது என்பது தெளிவாக தெரியாத, உணர்ந்து கொள்ள முடியாத நிலை; veiled activity, secrecy. *யார் அமைச்சராகப் போகிறார் என்பது மூடு மந்திரமாகவே இருக்கிறது.*

[மூடு + மந்திரம்.]

மூடுவழி *mūḍu-vaḻi,* பெ.(n.) கோட்டை முதலியவற்றில் கட்டடத்தால் மூடிக் காக்கப்பட்ட வழி (கட்டட.நாமா.);subterranean passage, as in a fort.

[மூடு + வழி.]

மூடை *mūḍai,* பெ.(n.) பொதி, பண்ட மூட்டை; sack, sack-load, pack. *"பொதிமூடைப் போரேறி" (பட்டினப்.137). "மனைக்குவைஇய கறிமூடையாற்" (புறநா.343:3).* 2. மிகச் செறிந்த கூலக் கோட்டை; packed bundle, as of paddy. *"கடுந்தெற்று மூடை" (புறநா.285).* 3. கூலக் குதிர்; a large receptacle for grains. *"கடுந்தெற்று மூடையின்" (பொருந.245).*

தெ. முட; க. மூடெ; ம. மூட.

[முள் →மூள்→மூட்டு→மூட்டை→மூடை.]

மூண்டன் *mūṇḍaṉ,* பெ.(n.) மிளகு (மலை.); black pepper.

மூண்டாணி *mūṇḍāṇi,* பெ.(n.) மூன்று வீசம் (நாஞ்.) பார்க்க; see *mūṉṟu-višam.*

[முண்டாணி →மூண்டாணி.]

மூணான் *mūṇāṉ*, பெ.(n.) கொடிய நஞ்சு வாய்ந்த மீன்; a highly poisionous fish. *இம்மீன் கடற்பரப்பில் பஞ்சு போல மிதக்கும்.*



மூத்த *mūtta*, பெ.அ.(adj.) 1. உறவு முறைச் சொற்களோடு வருகையில் முதலில் பிறந்தவர், குறிப்பிடப்படும் பலரில் முதலாவதாக அமைந்து இருப்பவர்; with kinship terms born first, elder first among many. *"நின்று மூத்த யாக்கை யன்னநின்" (புறநா.24:27). "ஐந்தலை அவிர்பொறி அரவ மூத்த" (பரிபா.19:72). "மூத்த யாக்கையொடு பிணியின்று கழிய" (பதிற்று.22:10). மூத்த மகன். மூத்த மருமகள். "மூத்தது மோழை; இளையது காளை" (பழ.).* 2. முதன்மைப் பதவியில் இருப்பவரைக் குறிக்கையில், இருப்பவர்களில் நீண்ட காலமாகப் பணிபுரியும் அல்லது பட்டறிவுள்ள; of officials senior or experienced. *மூத்த அதிகாரிகளுடன் கலந்து முடிவு எடுக்க வேண்டும். மூத்த தலைவர்.*

[முது →மூ→மூத்த.]

மூத்தகுடி[1] *mūtta-kuḍi*, பெ.(n.) பழமையான குடி; ancient citizens, who have come from a respectable family. *"கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முற்றோன்றி மூத்தகுடி" (பு.வெ. 2:14.).*

[மூத்த + குடி.]

மூத்தகுடி[2] *mūtta-kuḍi*, பெ.(n.) முதல் மனைவி (கோவை.); first wife. *மூத்தகுடியிருக்க இன்னொரு முந்தானை குடி எதுக்கு (கோவை.).*

மறுவ. மூத்தாள்

[மூத்த + குடி.]

மூத்தகுடிமகள் *mūtta-kuḍi-magaḷ*, பெ.(n.) முதல் மனைவியின் மகள் (கோவை.); a daughter of first wife.

மறுவ. மூத்தாள் மகள்

[மூத்தகுடி + மகள்.]

மூத்தண்ணா *mūttaṇṇā*, பெ.(n.) பெரியண்ணன், தமையன் (இ.வ.); eldest brother.

[மூத்த + அண்ணா.]

குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உடன் பிறந்த ஆண்மக்கள் இருக்க அதில் முதலாவதாகப் பிறந்தவனை மூத்த அண்ணா என்பர்.

மூத்ததிகாரம் *mūttadikāram*, பெ.(n.) தலைமை அதிகாரம் (T.A.S.); supreme authority.

[மூ→மூத்த + அதிகாரம்.]

மூத்ததிருப்பதிகம் *mūtta-tiruppadigam*, பெ.(n.) காரைக்கால் அம்மையார் இயற்றியதும் பதினோராந் திருமுறையில் உள்ளதுமான ஒரு பதிகம் (பெரியபு. காரைக்கா.63); a poem in *Patiṉōrāṉ-tirumuṟai* by *Kāraikkāl-ammaiyār.*

[மூ→மூத்த + திருப்பதிகம்.]

மூத்தநயினார் *mūtta-nayiṉār,* பெ.(n.) சிவனின் மூத்த மகனான பிள்ளையார்; *Piḷḷaiyār,* as the eldest son of *Śivā. "பெருச்சாளியை மூத்த நயினார் மொடுவாய்க் கொடுபோனார்" (குற்றா. குற. 93:2).*

[மூ→மூத்த + நயினார். நாயனார்→நயினார்.]

மூத்தநாயனார் *mūtta-nāyaṉār,* பெ.(n.) மூத்தநயினர் பார்க்க; see *mūtta-nayiṉār. "மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை" (பதினொ.).*

[மூ→மூத்த + நாயனார்.]

மூத்தப்பன் *mūttappaṉ,* பெ.(n.) பாட்டன்; father's father. *"எம்மு னெந்தை மூத்தப்பன்" (தேவா.1086, 9). "தம் மூத்தப்பன்" (திவ். திருப்பல்.6).*

ம. முத்த ப்பன்

[முது→ மூ→மூத்த + அப்பன்.]

மூத்தபிள்ளை *mūtta-piḷḷai,* பெ.(n.) திருவாங்கூர் அரசரால் நாஞ்சில் நாட்டு வேளாளர்க்குக் கொடுக்கப்படும் பட்ட வகை (நாஞ்.); a title conferred on the *Vēḷāḷas* of *Nāñcilnāḍu,* by Travancore kings.

[மூ→மூத்த + பிள்ளை.]

மூத்தபிள்ளையார் *mūtta-piḷḷaiyār,* பெ.(n.) மூத்தநயினார் பார்க்க; see *mūtta-nayiṉār. "மூத்த பிள்ளையார் திருமும் மணிக்கோவை" (பதினொ.).*

[மூ→மூத்த + பிள்ளையார்.]

மூத்தம் *mūttam,* பெ.(n.) முழுத்தம் பார்க்க; see *muḻūttam. "மூத்தமொன்றின் முடிந்தவர்" (கம்பரா. கரன்வதை.189).*

[முழுத்தம்→மூத்தம்.]

மூத்தமாமியார் *mūtta-māmiyār,* பெ.(n.) 1. மாமனாரின் மூத்த மனைவி; first wife of one's father-in-law. 2. மனைவியின் தமக்கை (செ.வ.); elder sister-in-law.

[மூ→மூத்த + மாமியார்.]

மூத்தவர் *mūttavar,* பெ.(n.) மூத்தவன் பார்க்க; see *mūttavaṉ. வீட்டில் மூத்தவர்களைக் கலந்து கொண்டு பிறகு சொல்கிறேன்.*

[மூ→மூத்தவர்.]

மூத்தவன் *mūttavaṉ,* பெ.(n.) 1. அகவையிற் பெரியவன்; one who is senior in age. 2. அண்ணன்; elder brother. *"மூத்தவற் கரசு வேண்டி முன்பு தூதெழுந்தருளி" (திவ்.பெரியதி. 4. 6 : 7).* 3. மேலோன் (வின்.); superior.

[மூ→மூத்தவன்.]

மூத்தவாரை *mūttavārai,* பெ.(n.) பச்சோந்தி; chameleon (சா.அக.).

மறுவ. பச்சோணான், பச்சோந்தி.

மூத்தார் *mūttār,* பெ.(n.) 1. மூத்தோர், 1 பார்க்க; see *mūttōr, 1. "மூத்தா ரிளையார் பசுப் பெண்டிர்" (ஆசாரக்.65).* 2. கணவனுடைய தமையன் (இ.வ.); husband's elder brother.

[மூ→மூத்தார்.]

மூத்தாள் *mūttāḷ,* பெ.(n.) 1. முதியவள் (பிங்.); aged woman. 2. தமக்கை (பிங்.); elder sister. 3. மூதேவி (யாழ்.அக.) பார்க்க; see *mūdēvi.* 4. முதல் மனைவி; first wife.

[மூ→மூத்தாள்.]

மூத்தானுப்பு *mūttāṉ-uppu,* பெ.(n.) மூத்திரவுப்பு பார்க்க; see *mūttiravuppu.*

மூத்திர அமிலம் *mūttira-amilam,* பெ.(n.) சிறுநீர் புளியம் (அமிலம்); uric acid (சா.அக.).

*[மூத்திரம் + **Skt.** அமிலம்.]*

மூத்திரக்கட்டி *mūttira-k-kaṭṭi,* பெ.(n.) சிறுநீர்ப்பையில் உண்டாகும் கட்டி; urinary abscess (சா.அக.).

[மூத்திரம் + கட்டி.]

மூத்திரக்கடுப்பு *mūttira-k-kaḍuppu,* பெ. (n.) சிறுநீர் தொடர்புடைய நோய்; disurea - *Urrodynia* (சா.அக.).

மறுவ. நீர்கடுப்பு, நீர்ச்சுருக்கு.

[மூத்திரம் + கடுப்பு.]

மூத்திரக்கல் *mūttira-k-kal,* பெ.(n.) மூத்திரப் பையில் உண்டாகும் கல் அடைப்பு நோய் (இங்.வை.); stone in the bladder, a disease.

மறுவ. சிறுநீர்க்கல்

[மூத்திரம் + கல்.]

மூத்திரக்கழலை *mūttira-k-kaḻalai,* பெ. (n.) சிறுநீர் வரும் வழியில் உண்டாகும் கட்டி; a tumour or growth in the urethra - *Urethropyma* (சா.அக.).

[மூத்திரம் + கழலை.]

மூத்திரக்கழிச்சல் *mūttira-k-kaḻiccal,* பெ.(n.) 1. உடம்பில் உள்ள நுட்பமான மாசுகளையும், ஈரல், நீர்ப்பை அழுக்குகளையும், நீர்க்கட்டு முதலிய நச்சுக்களையும் வெளிப்படுத்தும் ஒருவகைக் கழிச்சல்; a urinary disease. 2. சிறுநீரை மிகைப்படுத்தும் மருந்து; diuretic (சா.அக.).

[மூத்திரம் + கழிச்சல்.]

மூத்திரக்காதம் *mūttira-k-kādam,* பெ. (n.) சிறுநீர் கொஞ்சங் கொஞ்சமாய் வருதல் அல்லது சொட்டுச் சொட்டாய் விழல்; retention of urine and intermittent flow of urine during micturition.

*[மூத்திரம் + **Skt.** காதம்.]*

மூத்திரக்கிரிச்சரம் *mūttira-k-kiric caram,* பெ.(n.) 1. கல்லடைப்பு; blocking the passage of urine by the urinary calculus. 2. நீர்ச்சுருக்கு; burning sensation or scalding pain white passing urine due to calculus (சா.அக.).

*[மூத்திரம் + **Skt.** கிரிச்சரம்.]*

மூத்திரக்கிருச்சம் *mūttira-k-kiruccam,* பெ.(n.) 1. மூத்திரக்கல் பார்க்க; see *mūttira-k-kal.* 2. மூத்திரக்கிருச்சிரம் (வின்.) பார்க்க; see *mūttira-k-kirucciram.*

மூத்திரக்கிருச்சிரம் *mūttira-k-kiruc ciram,* பெ.(n.) துன்பப்பட்டுச் சிறிது சிறிதாக மூத்திரம் போகச் செயும் நோய்வகை; strangury, scant urination, difficulty in passing urine.

*[மூத்திரம் + **Skt.** கிருச்சிரம்.]*

மூத்திரக்கிறீச்சனம் *mūttira-k-kiṟiccaṉam,* பெ.(n.) மூத்திரக்கிருச்சம் பார்க்க; see *mūttira-k-kiruccam.*

[மூத்திரம் + கிறீச்சனம்.]

மூத்திரக்குடல்விருத்தி *mūttira-k-kuḍal-virutti,* பெ.(n.) வழக்கமாக வருகின்ற சிறுநீரை அடக்கியடக்கி அகாலத்தில் பெய்வதினால் அம்மூத்திரம் உள்ளே தங்கி, பையில் கட்டுண்ட நீரைப்போல் துளி துளியாய்க் கலங்கி நீர்ச் சுருக்குடன் வெளிப்படும் ஒரு வகை நோய்; a kind of urinary disease caused by suppression and detention of urine in the bladder - *Retention of urine* (சா.அக.).

*[மூத்திரம் + குடல் + **Skt.** விருத்தி.]*

மூத்திரக்குடுக்கை *mūttira-k-kuḍuk kai,* பெ.(n.) சிறிது நேரம் கூட சிறுநீரை வெளியேற விடாமல் அடக்கும் தன்மையில்லாதவ–ன்–ள் (வின்.); person incontinent of urine.

[மூத்திரம் + குடுக்கை.]

மூத்திரக்குண்டி *mūttira-k-kuṇḍi,* பெ.(n.) சிறுநீரைத் தூங்கும்போது படுக்கை யிலேயே வெளியேற்றுபவ–ன்–ள் (உ.வ.); person who passes urine in bed during sleep.

[மூத்திரம் + குண்டி.]

மூத்திரக்குண்டிக்காய் *mūttira-k-kuṇḍi-k-kāy,* பெ.(n.) அரத்தத்தில் உள்ள கெட்ட நீரைப் பிரித்து சிறுநீராக மாற்றும் உடல் உறுப்பு (இங்.வை.); kidney.



[மூத்திரம் + குண்டி + காய்.]

மூத்திரக்குண்டிக்காய்க்குழல் *mūttira-k-kuṇḍi-k-kāy-k-kuḻal,* பெ.(n.) மூத்திரக் குண்டிக்காயினின்றும் மூத்திரப் பைக்குச் சிறுநீர் செல்லும் சிறுநீர்க் குழல் (இங்.வை.); ureter.

[மூத்திரக்குண்டிக்காய் + குழல்.]

மூத்திரக்குண்டிக்காய்நோய் *mūttira-k-kuṇḍi-k-kāy-nōy,* பெ.(n.) மூத்திரக் குண்டிக்காயைப் பற்றிய நோய் வகை (M.L.); bright's disease, *Albuminuria.*

[மூத்திரக்குண்டிக்காய் + நோய்.]

மூத்திரக்குழல் *mūttira-k-kuḻal,* பெ.(n.) 1. மூத்திரக் குண்டிக்காயுள் சிறுநீர் சுரக்குங் குழல்; tubulus urinifer. 2. மூத்திரக்குண்டிக்காய்குழல் பார்க்க; see *mūttira-k-kuṇḍi-k-kāy-k-kuḻal.*

[மூத்திரம் + குழல்.]

மூத்திரக்குழல்வாதம் *mūttira-k-kuḻal-vādam,* பெ.(n.) சிறுநீர்ப் பையில் உண்டாகும் காற்றுப் பிடிப்பு நோய்; paralysis of the ureter - *Ureterolysis* (சா.அக.).

*[மூத்திரக்குழல் + **Skt.** வாதம்.]*

மூத்திரக்குளவி *mūttira-k-kuḷavi,* பெ.(n.) மூத்திரங் குடிப்பதாகக் கருதப்படும் குளவி வகை (யாழ்.அக.); a kind of hornet, said to lick urine.

[மூத்திரம் + குளவி.]

மூத்திரக்கோசம்[1] *mūttira-k-kōšam,* பெ. (n.) 1. அண்டப்பை; scrotum. 2. மூத்திரா சயம் பார்க்க; see *mūttirā-šayam.*

*[மூத்திரம் + **Skt.** கோசம்.]*

மூத்திரக்கோசம்[2] *mūttira-k-kōšam,* பெ. (n.) மூத்திரக்குண்டிக்காய்; kidney.

*[மூத்திரம் + **Skt.** கோசம்.]*

மூத்திரச்சங்கம் *mūttira-c-caṅgam,* பெ. (n.) நீரிழிவு நோய் (வின்.); diabetes.

*[மூத்திரம் + **Skt.** சங்கம்.]*

மூத்திரச்சங்கிரகணம் *mūttira-c-caṅgiragaṇam,* பெ.(n.) சிறுநீரைக் கட்டுப்படுத்தும் மருந்து; drug or medicine that suppresses urine.

*[மூத்திரம் + **Skt.** சங்கிரகணம்.]*

மூத்திரச்சுக்கிலம் *mūttira-c-cukkilam,* பெ.(n.) மூத்திரத்துடன் விந்து இறங்கும் வெட்டை நோய் (யாழ்.அக.); the whites, a disease in which semen is discharged along with urine, leucorrhea.

*[மூத்திரம் + **Skt.** சுக்கிலம்.]*

மூத்திரத்தங்கல் *mūttira-t-taṅgal,* பெ. (n.) சிறுநீரைத் தேக்கி வைத்திருக்கை; retention of the urine - *Auria.*

[மூத்திரம் + தங்கல்.]

மூத்திரத்தடை *mūttira-t-taḍai,* பெ.(n.) சிறுநீர் அடைப்பு; stricture.

[மூத்திரம் + தடை.]

மூத்திரத்தாரை *mūttira-t-tārai,* பெ.(n.) 1. சிறுநீர் கீழ் இறங்குகை (மூத்திர நீரோட்டம்); flow of urine. 2. மூத்திரத் துளை (பைஷஜ.291) பார்க்க; see *mūttira-t-tuḷai.*

[மூத்திரம் + தாரை.]

மூத்திரத்தாரைகடுப்பு *mūttira-t-tārai-kaḍuppu,* பெ.(n.) சிறுநீர் இறங்கும் வழியில் உண்டாகும் எரிச்சல்; irritability of the urethra - *Urethrism.*

[மூத்திரத்தாரை + கடுப்பு.]

மூத்திரத்தாரைச்சுருக்கம் *mūttira-t-tārai-c-curukkam,* பெ.(n.) சிறுநீர் இறங்கும் வழியில் ஏற்படும் அடைப்பு முதலிய நோய்; stricture of the urethra - *Urethrostenosis.*

[மூத்திரத்தாரை + சுருக்கம்.]

மூத்திரத்தாரைப்புண் *mūttira-t-tārai-p-puṇ,* பெ.(n.) சிறுநீர் இறங்கும் வழியில் உண்டாகும் புண்; ulceration of the urinary passage.

[மூத்திரத்தாரை + புண்.]

மூத்திரத்தாரையடைப்பு *mūttira-t-tārai-y-aḍaippu,* பெ.(n.) சிறுநீர் இறங்கும் வழியில் உண்டாகும் அடைப்பு; obstruction of the passage in the urethra - *Urethro phraxis.*

[மூத்திரத்தாரை + அடைப்பு.]

மூத்திரத்தாரையழற்சி *mūttira-t-tārai-y-aḻaṟci,* பெ.(n.) சிறு நீர் இறங்கும் வழியில் ஏற்படும் எரிச்சல்; inflammation of the urethra - *Urethritis.*

[மூத்திரத்தாரை + அழற்சி.]

மூத்திரத்தாரைவலி *mūttira-t-tārai-vali,* பெ.(n.) சிறுநீர் இறங்கும் வழியில் உண்டாகும் வலி; pain in the urethra - *Urethralgia.*

[மூத்திரத்தாரை + வலி.]

மூத்திரத்துவாரம் *mūttira-t-tuvāram,* பெ.(n.) மூத்திரத்துளை பார்க்க; see *mūttira-t-tuḷai.*

*[மூத்திரம் + **Skt.** துவாரம்.]*

மூத்திரத்துளை *mūttira-t-tuḷai,* பெ.(n.) சிறுநீர் வெளிவரும் வழி; urethra.

[மூத்திரம் + துளை.]

மூத்திரநாளம் *mūttira-nāḷam,* பெ.(n.) மூத்திரப்பையில் ஓடும் நாடி நரம்புகள்; rend arteries and venis.

[மூத்திரம் + நாளம்.]

மூத்திரநெய்ப்பற்று *mūttira-ney-p-paṟṟu,* பெ.(n.) சிறுநீரில் காணப்படும் மஞ்சள் நிற நெய்மப் பொருள்; a yellowish oily substance in the urine - *Urein.*

[மூத்திரம் + நெய்ப்பற்று.]

மூத்திரநோய் *mūttira-nōy,* பெ.(n.) சிறுநீர் தொடர்புடைய நோய்; a urinary disease.

[மூத்திரம் + நோய்.]

மூத்திரப்பந்தம் *mūttira-p-pandam,* பெ.(n.) சிறுநீர்ப் பிரியாமை; suppression of urine (சா.அக.).

[மூத்திரம் + பந்தம்.]

மூத்திரப்பரீட்சை *mūttira-p-parīṭcai,* பெ.(n.) நோயாளியின் உறக்கத்தில் இருந்து விழித்தபின்பு வருகின்ற சிறுநீரை ஆராய்கை; the urine which is passed by the patient before day break after awaking from sleep should be selected for Examination. That which comesout in the middle of discharge should be the proper urine for examination.

*[மூத்திரம் + **Skt.** பரீட்சை.]*

மூத்திரப்பலா *mūttira-p-palā,* பெ.(n.) முள் வெள்ளரி, கக்கரிக்காய்; cucumber with thorny edges (சா.அக.).

மூத்திரப்பவுந்திரம் *mūttira-p-pavundiram,* பெ.(n.) சுரந்த சிறுநீரை வெளி வராமல் கட்டும் ஒரு வகை நோய் (M.L.); urinary fistula.

*[மூத்திரம் + **Skt.** பவுந்திரம்.]*

மூத்திரப்பாதை *mūttira-p-pādai,* பெ.(n.) சிறுநீர் இறங்கும் வழி; urethra.

[மூத்திரம் + பாதை.]

மூத்திரப்பாலை *mūttira-p-pālai,* பெ.(n.) ஒரு வகை மூத்திர நோய்; a kind of urinary disease (சா.அக.).

[மூத்திரம் + பாலை.]

மூத்திரப்பாளம் *mūttira-p-pāḷam,* பெ.(n.) மூத்திர நோய் வகை (தஞ்.சரசு. iii, 140); a disease of the urninary-organs.

மூத்திரப்பாளை *mūttira-p-pāḷai,* பெ. (n.) ஒருவகையான சிறுநீர் நோய்; a kind of urinary disease (சா.அக.).

மூத்திரப்பிந்து *mūttira-p-pindu,* பெ.(n.) சொட்டுச் சிறுநீர்; a urinary disease - *Stricture of urethra* or the enlargement of the prostate glad (சா.அக.).

மூத்திரப்பிரளயம் *mūttira-p-piraḻayam,* பெ.(n.) மிகைச் சிறுநீர்; excess of urine (சா.அக.).

[மூத்திரம் + **Skt.** *பிரளயம்.]*

மூத்திரப்புடம் *mūttira-p-puḍam,* பெ.(n.) கீழ் வயிறு; the lower region of the abdomen (சா.அக.).

மூத்திரப்புரட்டு *mūttira-p-puraṭṭu,* பெ.(n.) சிறுநீர், மலவாய் வழியாக வெளியேறுகை; the discharge of urine through the anus - *Urochesia.*

மூத்திரப்புரீடங்கள் *mūttira-p-purīḍaṅgaḷ,* பெ.(n.) சிறுநீரும் மலமும் (சலமலங்கள்) (இறை.1, உரை, பக்.9); urine and faeces (சா.அக.).

[மூத்திரம் + **Skt.** *புரீடங்கள்.]*

மூத்திரப்புளிப்பு *mūttira-p-puḷippu,* பெ.(n.) புளிப்பு சிறு நீர்; uric acid.

[மூத்திரம் + புளிப்பு.]

மூத்திரப்பேதி *mūttira-p-pēti,* பெ.(n.) மூத்திரக்கழிச்சல் பார்க்க; see *mūrttira-k-kaḻiccal.*

[மூத்திரம் + **Skt.** *பேதி.]*

மூத்திரப்பை *mūttirappai,* பெ.(n.) உடலில் மூத்திரந்தங்கும் உறுப்பு; bladder.



[மூத்திரம் + பை.]

மூத்திரப்பைக்கல் *mūttirappai-k-kal,* பெ.(n.) மூத்திரக்கல் பார்க்க; see *mūttira-k-kal.*

[மூத்திரப்பை + கல்.]

மூத்திரப்பைக்கழலை *mūttirappai-k-kaḻalai,* பெ.(n.) சிறுநீர்ப்பையில் உள்ள ஒருவகைக் கட்டி; tumour of the bladder.

[மூத்திரப்பை + கழலை.]

மூத்திரப்பைகுத்தல்வலி *mūttirappai-kuttal-vali,* பெ.(n.) சிறுநீர்ப் பையில் ஏற்படும் ஒரு வகைக் குத்தல் வலி; neuralgia of bladder.

[மூத்திரப்பை + குத்தல்வலி.]

மூத்திரப்பைசோர்வு *mūttirappai-šōrvu,* பெ.(n.) சிறுநீர்ப்பையை முடக்கும் காற்றுப் பிடிப்பு நோய்; paralysis of the bladder.

[மூத்திரப்பை + சோர்வு.]

மூத்திரப்பைதாபிதம் *mūttirappai-tābidam,* பெ.(n.) மூத்திரப்பைநோய் பார்க்க; see *mūttirappai-nōy.*

மூத்திரப்பைநோய் *mūttirappai-nōy,* பெ.(n.) சிறுநீர்ப்பையில் உண்டாகும் ஒரு வகை எரிச்சல் நோய்; inflammation of the bladder, *Cystitis.*

[மூத்திரப்பை + நோய்.]

மூத்திரப்பைரோகம் *mūttirappai-rōgam,* பெ.(n.) மூத்திரப்பைநோய் பார்க்க; see *mūttirappai-nōy.*

[மூத்திரப்பை + ரோகம்.]

மூத்திரப்பைவலி *mūttirappai-vali,* பெ. (n.) சிறுநீர்ப்பையில் ஏற்படும் ஒருவகை வலி; cramps in the bladder (சா.அக.).

[மூத்திரப்பை + வலி.]

மூத்திரப்பைவீக்கம் *mūttirai-p-pai-vikkam,* பெ.(n.) மூத்திரப்பைநோய் பார்க்க; see *mūttirappai-nōy.*

மூத்திரம் *mūttiram,* பெ.(n.) சிறுநீர்; urine. *ஆத்திரத்தை அடக்கினாலும் மூத்திரத்தை அடக்க முடியாது. "உங்கள் மூத்திரப் பிள்ளையை" (திவ்.பெரியாழ்.4 : 6 : 9).*

ம. முள்; வ. மூத்ர.

[முள் → (மொள்) → மோள் → மோளுதல் = சிறுநீர்விடுதல். மோள் + திரம் – (மோட்டிரம்) → மோத்திரம் → மூத்திரம். மோள் என்னும் வினையும் மோத்திரம் என்னும் பெயர் வடிவும் இன்றும் பாண்டி நாட்டி வழக்கென அறிக.]

மூத்திரம்பெய்[1]–தல் *mūttiram-pey-,*1 செ. கு.வி.(v.i.) சிறுநீர் கழித்தல்; to make water, to urinate. *'மூத்திரம் பெய்கிறதற் குள்ளே முப்பத்தெட்டுக் குணம்' (பழ.).*

[மூத்திரம் + பெய்–தல்.]

மூத்திரம்பெய்[2]–தல் *mūttiram-pey-,* 1 செ.குன்றாவி.(v.t.) புறக்கணிப்பு செய்தல்; to disregard. *மேலிருந்து வந்த ஆணையை மூத்திரம் செய்தான்.*

[மூத்திரம் + பெய்–தல்.]

மூத்திரமஞ்சள் *mūttira-mañjal,* பெ.(n.) மஞ்சள் நிறமுடைய சிறுநீர்; yellow pigment of the urine which gives the urine its yellow colour - *Urochrome.*

[மூத்திரம் + மஞ்சள்.]

மூத்திரமடக்கமுடியாமை *mūttiram-aḍakka-muḍiyāmai,* பெ.(n.) சிறுநீர் வெளியேறாமல் அடக்க இயலாமை; inability to retain the urine - *Enuresis or Urrcratia* (சா.அக.).

[மூத்திரம் + அடக்கமுடியாமை.]

மூத்திரமதிகப்படுத்தல் *mūttiramatiga-p-paDuttal,* பெ.(n.) சிறுநீர் மிகைப் படுகை; increase of urinary secreation - *Uragogue* (சா.அக.).

[மூத்திரம் + அதிகப்படுத்தல்.]

மூத்திரமருந்து *mūttira-marundu,* பெ.(n.) சிறுநீர் கழிச்சல் மருந்து; diuretics (சா.அக.).

[மூத்திரம் + மருந்து.]

மூத்திரமார்க்கம் *mūttira-mārkkam,* பெ.(n.) மூத்திரத்துளை பார்க்க; see *mūttira-t-tuḷai* (சா.அக.).

[மூத்திரம் + மார்க்கம்.]

மூத்திரமிகுதி *mūttira-migudi,* பெ.(n.) சிறுநீர் அதிகமாக வெளியேறுகை; passing excess of urine (சா.அக.).

[மூத்திரம் + மிகுதி.]

மூத்திரமுரித்தல் *mūttira-murittal,* பெ.(n.) கற்றாழையினால் சிறுநீரை முரிக்கும் செய்முறைகளில் ஒன்று; a process in the course of alchemy (சா.அக.).

[மூத்திரம் + முரித்தல்.]

மூத்திரரோகம் *mūttira-rōgam,* பெ.(n.) மூத்திரநோய் பார்க்க; see *mūttira-nōy.*

*[மூத்திரம் + **Skt.** ரோகம்.]*

மூத்திரலம்[1] *mūttiralam,* பெ.(n.) மூத்திர வர்த்தனகாரி பார்க்க; see *mūttira-varattaṉakāri.*

மூத்திரலம்[2] *mūttiralam,* பெ.(n.) சிறுநீர் கடுப்பு; inflammation of the urethra (சா.அக.).

மூத்திரவடைப்பு *mūttira-v-aḍaippu,* பெ.(n.) மூத்திரக்கிருச்சரம் (M.L.) பார்க்க; see *mūttira-k-kiruccaram.*

[மூத்திரம் + அடைப்பு.]

மூத்திரவண்டல் *mūttira-vaṇḍal,* பெ.(n.) சிறுநீர் மாசு; deposits in the urine, precipitated urine (சா.அக.).

[மூத்திரம் + வண்டல்.]

மூத்திரவண்டவிருத்தி *mūttira-vaṇḍa-virutti,* பெ.(n.) சிறுநீர் மாசு வளர்ச்சி அடைகை; enlargement of the scrotum due to extravation of urine - *Urocele* (சா.அக.).

*[மூத்திரவண்டல் + **Skt.** விருத்தி.]*

மூத்திரவமிலம் *mūttiravamilam,* பெ.(n.) சிறுநீர் புளியம்; uric acid (சா.அக.).

*[மூத்திரம் + **Skt.** அமிலம்.]*

மூத்திரவர்த்தனகாரி *mūttira-varttaṉa kāri,* பெ.(n.) சிறுநீர் மிகையாகச் சுரப்பதற்கான மருந்து (இங். வை.); diuretic.

மூத்திரவாதம் *mūttira-vādam,* பெ.(n.) மூத்திரவோதம் பார்க்க; see *mūttira-v-ōdam*(சா.அக.).

*[மூத்திரம் + **Skt.** வாதம்.]*

மூத்திரவாய்ப்போக்கு *mūttira-vāy-p-pōkku,* பெ.(n.) சிறுநீர் வெளியேற்றும் வாய்; urethral discharge (சா.அக.).

[மூத்திரம் + வாய் + போக்கு.]

மூத்திரவிசர்ச்சனி *mūttira-višar-c-caṉi,* பெ.(n.) மூத்திரப்பையை ஒட்டிய தசை வகை (வின்.); a urinary muscle - *Accelerator urini.*

மூத்திரவியக்கம் *mūttira-viyakkam,* பெ.(n.) சிறுநீர் தேக்கம்; retention of urine - *Uroschesis* (சா.அக.).

மூத்திரவியர்வை *mūttira-viyarvai,* பெ.(n.) வியர்வைப் பொருட்களில், சிறுநீரில் உள்ள உப்புகள் கலந்திருக்கை; presence of urinous materials in the sweat - *Uridrosis* (சா.அக.).

[மூத்திரம் + வியர்வை.]

உடம்பிலுள்ள கழிவுப் பொருட்கள் சிறுநீரின் மூலமாக வெளியேற்றப்படுகிறது. இதில் உப்பும் ஒரு கழிவுப் பொருளாகும். வேர்த்தலின் போது உடம்பின் மீது உப்புத் துகள் படிந்துள்ளதால் வந்த பெயராகலாம்.

மூத்திரவிருத்தி *mūttira-virutti,* பெ.(n.) சிறுநீர் வெளியே பாய்ந்து வடிகை; extravasation of urine (சா.அக.).

[மூத்திரம் + விருத்தி.]

மூத்திரவிரேசனீயம் *mūttira-virēšaṉīyam,* பெ.(n.) மூத்திரவர்த்தனக்காரி பார்க்க; see *mūttira-varttaṉakkāri.*

மூத்திரவிலக்கணம் *mūttira-v-ilakkaṇam,* பெ.(n.) சிறுநீரின் தன்மை; nature of urine (சா.அக.).

[மூத்திரம் + இலக்கணம்.]

மூத்திரவுப்பு *mūttira-v-uppu,* பெ.(n.) சிறுநீரின் உப்பு (பைஷஜ.); urea acid.

[மூத்திரம் + உப்பு.]

மூத்திரவெச்சம் *mūttira-v-eccam,* பெ.(n.) மூத்திரப் பையில் இருந்து மூத்திரம் முழுவதும் வெளியேறாமல் எஞ்சியிருப்பது; residual urine (சா.அக.).

[மூத்திரம் + எச்சம்.]

மூத்திரவெரிச்சல் *mūttira-vericcal,* பெ.(n.) சிறுநீர் கழிக்கும் போது உண்டாகும் எரிச்சல் (M.L.); irritation of the bladder.

[மூத்திரம் + எரிச்சல்.]

மூத்திரவெரிப்பு *mūttira-verippu,* பெ.(n.) சிறுநீரின்காரம்; alkalinity of the urine-*Alkalinuria* (சா.அக.).

[மூத்திரம் + எரிப்பு.]

மூத்திரவெள்ளை *mūttira-vellai,* பெ.(n.) பால்நிறம் கொண்ட சிறுநீர்; milky urine-*Chyluria* (சா.அக.).

[மூத்திரம் + வெள்ளை.]

மூத்திரவோதம் *mūttira-v-ōdam,* பெ.(n.) சிறுநீர்ப்பையில் இருந்து வெளிவராது தினம் தினம் தேங்கிய மூத்திரம் அதிகமாகி குடலைப் பெருக்கச் செய்யும் ஒருவகை நோய்; a disease caused by retention of urine (சா.அக.).

மறுவ. மூத்திரவாதம்

[மூத்திரம் + வோதம்.]

மூத்திராசயம் *mūttirāšayam,* பெ.(n.) மூத்திரப்பை பார்க்க; see *mūttira-p-pai.*

மூத்திராசயவாதரோகம் *mūttirā-šayavāda-rōgam,* பெ.(n.) மூத்திரப் பையின் வீக்கம்; inflammation of the bladder.

*[மூத்திரம் + **Skt.** சயவாதரோகம்.]*

மூத்திராதிக்கியம் *mūttirātikkiyam,* பெ.(n.) சிறுநீர் தொடர்புடைய நோய்; urinary disease (சா.அக.).

[மூத்திரம் + ஆதிக்கியம்.]

மூத்திராதிசாரம் *mūttirādi-šāram,* பெ.(n.) நோயாளியின் உடலில் சிறுநீர் அதிகரித்து அடிக்கடி வெளியேரும் ஒருவகை நோய்; a urinary disease in which large quantity of urine is passed-*Diabetes insipidus* (சா.அக.).

மறுவ. நீரிழிவுநோய்.

*[மூத்திரம் + **Skt.** ஆதிசாரம்.]*

மூத்திரோற்சங்கம் *mūttirōṟšangam,* பெ.(n.) சிறுநீர் அரத்தமாக இறங்குகை (யாழ்.அக.); painful and bloody discharge of urine.

மூத்தோர் *mūttōr,* பெ.(n.) 1. முதியவர், அகவை முதிர்ந்த பெரியவர்; aged persons; elders. *"விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை" (ஆசாரக்.22). மூத்தோர் சொல் (வார்த்தை) அமிழ்தம் (பழ.). "மூத்தோர் சொல்லும் முழு நெல்லிக்காயும் முன்னே கசக்கும் பின்னே இனிக்கும்" (பழ.).* 2. பண்டிதர் (திவா.); learned persons. 3. அமைச்சர்; ministers.

[முது→மூ→ மூத்தோர்.]

மூத்தோன் *mūttōn,* பெ.(n.) 1. அகவை மேற்பட்டவன்; aged person. 2. அண்ணன் (பிங்.); elder brother. 3. பிள்ளையார் (பிங்.); *Gaṇēšaṉ* as the eldest of *šivā's* sons. 4. 48 அகவை முதல் 64 அகவைக்குட்பட்ட

மனிதன் (வின்.); man between 48 and 64 years age. 5. முதியவன்; elderly man, senior.

[முது→மூ→ மூத்தோன்.]

மூத்தோன்கைக்கொம்பு *mūttōṉ-kai-k-kombu,* பெ.(n.) யானைக் கொம்பு; elephant's tusk (சா.அக.).

[மூத்தோன் + கை + கொம்பு.]

மூதண்டக்கொடி *mūdaṇḍa-k-koḍi,* பெ.(n.) சீந்திற்கொடி; moon creeper - *Tinosphora Cordifolia* (சா.அக.).

மூதண்டகசாயம் *mūdaṇḍa-kašāyam,* பெ.(n.) அறுகம் வேரும் மிளகும் சேர்த்துக் காய்ச்சிய கருக்கு நீர் (கஷாயம்); decoction of pepper and the internodes of the dub-grass - *Cynodon dactylon.*

[மூதண்டம் + கசாயம்.]

மூதண்டகன்னி *mūdaṇḍa-kaṉṉi,* பெ.(n.) 1. தூதுவளை; a prickly climber - *Solanum trilobatum.* 2. பிரமியிலை; bramia plant - *Gratiola moniera* (சா.அக.).

மூதண்டசத்தி *mūdaṇḍa-šatti,* பெ.(n.) கந்தக நஞ்சு; a kind of arsenic.

மூதண்டசித்திச்சி *mūdaṇḍa-šitticci,* பெ.(n.) கருமத்தை; a black or blue variety of dhatura (சா.அக.).

மூதண்டசூதகளிகம் *mūdaṇḍa-šudakaḷigam,* பெ.(n.) பிரண்டை; a climber - *Vitis quadrangularis* (சா.அக.).

மூதண்டம்[1] *mūdaṇḍam,* பெ.(n.) 1. முட்டை வடிவமான பேருலகம் (பிரமாண்டம்); the universe, believed to be egg-shaped. *"உந்திக்கமலம் விரிந்தால் விரியும்...... இம் மூதண்டமே" (அஷ்டப்.திருவாங்க.மா.19).* 2. பேருலகத்தின் கூரை(பிரமாண்டத்தின் முகடு) (பிங்.); roof of the universe.

[மூது + Skt. அண்டம்.]

மூதண்டம்[2] *mūdaṇḍam,* பெ.(n.) 1. கொம்மட்டி; a melon. 2. அறுகம் வேர்; dub -grass. 3. சரக்கொன்றை; a tree - *Cassia fistula.* 4. பெண் கருவகத்தில் உண்டாகும் சினை; ovum (சா.அக.).

மூதண்டமூலி *mūdaṇḍa-mūli,* பெ.(n.) வில்வம்; a sacred tree - bael tree - *Aegle marmelos* (சா.அக.).

மூதணங்கு *mūdaṇaṅgu,* பெ.(n.) காளி (துர்க்கை) (சூடா.); Durgā.

[மூது + அணங்கு.]

மூதம் *mūdam,* பெ.(n.) விந்து (இந்திரியம்) (சங்.அக.); semen.

மூதரி-த்தல் *mūtari-,* 4 செ.குன்றாவி. (v.t.) மூதலி-த்தல் பார்க்க (உ.வ.); see *mūdali-.*

[மூதலி-த்தல்→ மூதரி-த்தல்.]

மூதலி-த்தல் *mūdali-,* 4 செ.குன்றாவி. (v.t.) மெய்ப்பித்தல், நிறுவுதல் (நிரூபித்தல்); to establish with evidence to confront with proof. *"அவன் படியை நெஞ்சுக்கு மூதலிக்கிறார்" (ஈடு,1. 10 : 5).*

தெ. மூதலிந்சு; க. மூதலிசு.

மூதலிப்பி-த்தல் *mūdali-p-pi-,* 4 செ. குன்றாவி. (v.t.) மெய்ப்பித்தல்; to cause to prove.

மூதறி-தல் *mūdaṟi-,* 2 செ.கு.வி.(v.i.) 1. அறிவு முதிர்தல்; to be ripe in wisdom.

2. பழமையான செய்திகளை அறிதல்; to know the past. *"மூதறியு மம்மனை மார் சொல்லுவார்" (திவ்.இயற்.சிறிய.ம.19).*

[முது→மூது→மூதறி→மூதறி-தல்.]

மூதறிஞர் *mūdariñar*, பெ.(n.) அகவை நிரம்பிய அறிஞர், பெரும் அறிஞர்; scholar of great repute. *நேற்று மூதறிஞர் இராசாசி அவர்கள் வருகை தந்தார்.*

[மூது + அறிஞர்.]

மூதறிவாளன் *mūdarivāḷan*, பெ.(n.) அறிவு முதிர்ந்தோன்; man of ripe wisdom. *"மூதறிவாளர் முதல்வன்" (திவ்.பெரியாழ். 5.2:2).*

[முது→மூது→மூதறி→மூதறிவாளன்.]

மூதறிவு *mūdarivu*, பெ.(n.) மெய்யறிவு, பேரறிவு; mature understanding, ripe wisdom.

[மூது + அறிவு.]

மூதா¹ *mūdā*, பெ.(n.) கிழ ஆன் (பசு, கிழமாடு); aged cow. *"வளைதலை மூதா" (பதிற்றுப். 13:6).*

[முதிய + ஆ – மூதா = முதியமாடு.]

மூதா² *mūdā*, பெ.(n.) தம்பலப் பூச்சி (இந்திர கோபம்); the cochineal insect.

மறுவ. மூதாய்.

[மூதாய்² →மூதா.]

மூதாக்கள் *mūdākkaḷ*, பெ.(n.) மூதாட்கள் (சங்.அக.) பார்க்க; see *mūdāṭkaḷ*.

மூதாட்கள் *mūdāṭkaḷ*, பெ.(n.) முன்னோர் (யாழ்.அக.); forefathers, ancestors.

[மூது + ஆள் – மூதாள்→மூதாட்கள்.]

மூதாட்டி *mūdāṭṭi*, பெ.(n.) 1. அகவை முதிர்ந்த பெண், முதியவள்; respectable old woman. *"நரை மூதாட்டி ஒருத்தியை" (மணிமே.20:40).*

[மூதாளன் (ஆ.பா.)→மூதாட்டி (பெ.பா.).]

மூதாதை *mūdādai*, பெ.(n.) பாட்டன், தாத்தா, தந்தையைப் பெற்ற தந்தை, தாயைப் பெற்றத் தந்தை; grand father. *"மூதாதை மாதாளும் பாகத்தெந்தை" (திருவாச.5:30).*

[முது(மை) + தாதை.]

மூதாதையர் *mūdādaiyar*, பெ.(n.) தன் மரபில் அல்லது குடிவழியில் முன் வாழ்ந்தோர்; ancestors. *நாகரிகத்தின் ஒவ்வொரு படியையும் நம் மூதாதையர் கடந்து வந்திருக்கின்றனர்.*

[மூதாதை→மூதாதையர்.]

மூதாய்¹ *mūdāy*, பெ.(n.) பாட்டி, தாயைப் பெற்றத் தாய், தந்தையைப் பெற்றத் தாய்; grand mother, maternal, and paternal grand-mother.

[மூது + ஆய்.]

மூதாய்² *mūdāy*, பெ.(n.) தம்பலப்பூச்சி; cochineal insect.

[ஈயன்மூதாய்→மூதாய்.]

மூதாளன் *mūdāḷaṉ*, பெ.(n.) முதியவன், அகவை முதிர்ந்தவன்; aged person. *"நரை மூதாளர் நாயிடக் குழிந்த" (புறநா.52). "மூதாளர் கைபிணி விடுத்து" (அகநா. 366:10).*

[மூது + ஆள் – மூதாள்→மூதாளன்.]

மூதானந்தம் *mudāṉandam,* பெ.(n.) 1. மாபெரும் மகிழ்ச்சி; Supreme Bliss. *"மூதானந்த வாரிதியே" (அருட்பா, 5, முறையிட்ட.9).* 2. தன் கணவன் இறந்த போதே மனைவி உயிர்நீங்கிய பேரன்பை நினைந்து கண்டோர் கூறும் புறத்துறை (தொல்.பொருள்.79); theme in which the bystanders describe the great love of a wife dying immediately on her husband's death.

மறுவ. பேரானந்தம்

*[மூது + **Skt.**ஆனந்தம்.]*

மூதிக்கம் *mūdikkam,* பெ.(n.) சிவனார் வேம்பு (மலை.); wiry indigo.

மூதிகா *mūdigā,* பெ.(n.) மூதிக்கம் பார்க்க; see *mūdikkam.*

மூதிசகம் *mūdišagam,* பெ.(n.) மூதிக்கம் (மூ.அ.) பார்க்க; see *mūdikkam.*

மூதிதம் *mūdidam,* பெ.(n.) எருக்கிலை; leaf of a plant calotrophis, *Gigantia* (சா.அக.).

மூதியோலை *mūdi-yōlai,* பெ.(n.) முகரியோலை (நாஞ்.); uneven palm-leaf.

மறுவ. முறியோலை.

[மூறியோலை→மூதியோலை.]

மூதிரம் *mūdiram,* பெ.(n.) அவரை; a twiner - *Dolichor lablab* (சா.அக.).

மூதிரி[1]-த்தல் *mūdiri-,* 4 செ.குன்றாவி. (v.t.) மூதலி-த்தல் பார்க்க; see *mūdali-.*

[மூதலி-த்தல்→மூதிரி-த்தல்.]

மூதிரி[2] *mūdiri,* பெ.(n.) 1. கிழமாடு, எருது; aged ox. 2. கிழ எருமை; aged buffalo. 3. எருமை; buffalo.

[முது→ மூது →மூதிரி.]

மூதிரை *mūdirai,* பெ.(n.) 1. ஆறாவது விண்மீனான யாழ் (திருவாதிரை) (பிங்.); the sixth naksatra. 2. சிவபிரான் (சூடா.); god *Šivaṉ.*

மூதில் *mūdil,* பெ.(n.) 1. பழங்குடி; ancient family. 2. பழைய மறக்குடி; ancient warrior - tribe. *"தமியன் வந்த மூதிலாள" (புறநா.284). "மூதில் அருமன் பேர் இசைச் சிறுகுடி" (நற்.367:6). "சிவந்த காந்தண் முதல் சிதைமூதிற்" (பதிற்று.15:11).*

[முது→மூது→மூதில்.]

மூதிற்பெண்டிர் *mūdiṟ-peṇḍir,* பெ.(n.) மறக்குடி மகளிர்; women of warrior - tribes. *"மூதிற்பெண்டிர் கசிந்தழ நாணி" (புறநா.19).*

[மூதில் + பெண்டிர்.]

மூதின்முல்லை *mūdiṉ-mullai,* பெ.(n.) மறக்குடியிற் பிறந்த ஆடவர்க்கேயன்றி அக்குடியில் உள்ள மகளிர்க்கும் மறம் (வீரம்) உண்டாதலைச் சிறப்பித்துக் கூறும் புறத்துறை (பு.வெ.8 : 21); theme describing the spirit of valour manifested among women of warrior tribes.

[மூதின் + முல்லை.]

மூது[1] *mūdu,* பெ.(n.) முதுமை; oldness, elderliness. *"மூதானவன் முன்னர் முடிந்திடும்" (கம்பரா.பிராட்டி களங்கான்.18).*

க. மூதி

[முது→மூது.]

மூது² *mūdu*, பெ.(n.) ஈகை (அரு.நி.); gift.

மூதுகரி *mūdukari*, பெ.(n.) எலிப்பயறு; a pulse (சா.அக.).

மூதுணர்-தல் *mūdunar-*, 2 செ.குன்றாவி. (v.t.) நன்றாக உணர்தல்; to know thoroughly, to have ripe knowledge of. *"மூதுணர்ந்தவ ரன்றி மொழிவரோ" (உபதேசகா.சிவபுண்.229).*

[முது→ மூது + உணர்-தல்.]

மூதுணர்ந்தோர் *mūdunarndōr*, பெ.(n.) அறிவு முதிர்ந்தோர் (சூடா.); persons of ripe knowledge.

[மூதுணர்-→மூதுணர்ந்தோர்.]

மூதுணர்வு *mūdunarvu*, பெ.(n.) முதிர்ந்த அறிவு; ripe knowledge or wisdom. *"மூதுணர்வின் மிக்கான் மதிவீடணன்" (கம்பரா.அதிகாயன்.87).*

[மூதுணர்-→மூதுணர்வு.]

மூதுரை *mūdurai*, பெ.(n.) 1. பழமொழி, காலம்காலமாக வழங்கிவருவதும் எடுத்துக்காட்டாகக் கூறப்படுவதுமான பெரியோர் சொல்; proverb. *"மூழை யுப்பறியாத தென்னு மூதுரையு மிலளே" (திவ்.பெரியாழ்.3.7: 4).* 2. பிற்கால ஔவையார் இயற்றியதாகக் கருதப்படும் அற நூல்; a didactic poem attributed to *Auvaiyār*. 3. மறை (வேதம்); the *Vēdās*. *"முற்று மோர்ந்தவர் மூதுரை யர்த்தமே" (தாயு. பொன்னைமாதரை.51).*

[முது→மூது + உரை.]

மூதுவர் *mūduvar*, பெ.(n.) முன்னோர்; elders, ancients. *"விண்ணாட்டவர் மூதுவர்" (திருவிருத்.2).*

[முது→மூது → மூதுவர்.]

மூதூர் *mūdūr*, பெ.(n.) 1. பழைய ஊர்; ancient village. *"பொற்கொடி மூதூர்ப் பொழிலாட்ட மர்ந்தாங்கு" (சிலப்.14 : 82). "செறிந்தசேரிச் செம்மண் மூதூர்" (அகநா.15:7). "மல்லன் மூதூர் வயவேந்தே" (புறநா.18:12). "நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்" (நற்.45:4). "ஆதி யருமன் மூதூ ரன்ன" (குறுந்.293:4).* 2. திருவள்ளூர் மாவட்டத்தில் கடம்பத்தூர் ஊராட்சியில் உள்ள ஊர்; a Village in Tiruvalluvar District. *இப்பகுதியிலுள்ள ஊர்களுள் மிகவும் பழமையான காலத்தில் தோன்றியதால் மூதூர் எனப் பெற்றது போலும்.*

[மூது + ஊர்.]

மூதேவி *mūdēvi*, பெ.(n.) 1. திருமகளுக்கு முந்திப் பிறந்த, தீவினைப் பயன் விளைவிப்பதாகக் கருதப்படும் பெண் தெய்வம்; goddess of Misfortune, as the elder sister of Lakshmi. *மூதேவியின் பிறந்த வீடு. "சீதேவியாள் பிறந்த செய்யதிருப்பாற் கடலில் மூதேவியேன் பிறந்தாள் முன்" (தனிப்பா.1, 179:1).* 2. அருவருப்பான தோற்றம் கொண்டவள் (வின்.); deformed person. 3. ஆக்கங் கெட்ட சோம்பெறிப் பெண்; sloth woman. *'மூதேவியடைந்து முடங்கிக் கிடக்கிறாள்' (உ.வ.).* 4. பெரும்பாலும் ஒரு பெண்ணைத் திட்டுவதற்குப் பயன்படுத்தும் சொல்; a word used mostly to scold a woman with. *பத்து மணி வரை தூங்காதே, மூதேவி!*

[மூ + தேவி.]

மூதேவிகொடி *mūdēvikoḍi,* பெ.(n.) மூதேவி கொடியின் சின்னமாக உள்ள காகம் (பிங்.); crow, as the emblem on the banner of *Mūdēvi.*

[மூதேவி + கொடி.]

மூதேவிபடை *mūdēvipaḍai,* பெ.(n.) மூதேவியின் ஆய்தமாகவுள்ள துடைப்பம் (பிங்.); broom, as the weapon of *Mūdēvi.*

[மூதேவி + படை.]

மூதேவிமூலி *mūdēvi-mūli,* பெ.(n.) சிறு பூளை; a plant woolly caper - *Achyranthes lanata* (சா.அக.).

மூதேவியூர்தி *mūdēvi-y-ūrdi,* பெ.(n.) மூதேவியின் ஊர்தியாகிய கழுதை (பிங்.); donkey as the vehicle of *Mūdēvi.*

[மூதேவி + ஊர்தி.]

மூதை[1] *mūdai,* பெ.(n.) 1. வேளாண்மைச் செய்வதற்காக வெட்டித் திருத்திய காடு (அக.நி.), பழங்கொல்லை; ground cleared of wood and prepared for tillage. 2. மூதணங்கு பார்க்க; see *mūdaṇaṅgu.*

[முது→மூது→ மூதை.]

மூதை[2] *mūdai,* கு.பெ.எ.(adj.) முந்தை; old, past, ancient. *"மூதைவினை கடைக்கூட்ட" (சிலப்.9, இறுதிவெண்பா.).*

[முது→மூது→ மூதை.]

மூதை[3] *mūdai,* பெ.(n.) இசங்கு (மலை.); mistletoe berrythorn.

மறுவ. சங்கஞ்செடி.

[மூகை→ மூதை.]

மூதைச்சுவல் *mūdai-c-cuval,* பெ.(n.) பழைய மேட்டு நிலம்; elevated land. *"மூதைச்சுவற் கலித்த முற்றா இளம்புல்" (குறுந்.204:3).*

[மூதை + சுவல்.]

மூந்திக்கருக்கல் *mūndi-k-karukkal,* பெ.(n.) அந்திநேரம், மாலைக்காலம், பகலின் முடிவு நேரம்; evening twilight.

[முந்தி→மூந்தி + கருக்கல்.]

மூப்பமார் *mūppamār,* பெ.(n.) தேனெடுத்தல் மற்றும் வேட்டையாடுந் தொழிலில் திறனுடைய, ஒருவகை இனத்தவர்; a caste, in which people are experts in collecting honey from bee-hives, and in hunting.

[மூ→மூப்பு→ மூப்பமார்.]

மூப்பர் *mūppar,* பெ.(n.) 1. பெரியோர்; elders in age; superiors. *"மூப்பரை யிகழ்ந்தே மாகில்" (அரிச்.பு.நகர்நீ.151).* 2. கிறித்துவ மதத் தலைவருள் ஒருவகையார் (வின்.); deacons.

[மூ →மூப்பு→மூப்பர் (வே.க.).]

மூப்பறுக்கும்திரி *mūpparukkum-tiri,* பெ.(n.) சிறு குழந்தைகளுக்கு மலக்கட்டுண்டான போது மலவாயினின்று மலத்தை வெளிப்படுத்தப் பயன்படுத்தும் ஒரு மருத்துவ திரி; a medicinal wick used as suppository to expel the faeces from the rectum of children (சா.அக.).

[மூப்பறுக்கும் + திரி.]

மூப்பன் *mūppaṉ,* பெ.(n.) 1. நகரப் பரதவன்; city fishermen. 2. பரதவர் தலைவர்; head of fishermen. 3. கிறித்துவ மதத்

தலைவருள் ஒரு வகையார்; christian pastor. 4. ஒரு குலத்தாரின் ஊர்த்தலைவன்; head man, in some castes. 5. இலைவாணியர் முதலான சில குலங்களின் பட்டப் பெயர்; title of *Ilaivāṇiyar* and other castes. *"வருஞ்சனிக்கு மூப்பராம்" (சினேந்.141) (E.T.5, 118).*

[மூ→மூப்பு→ மூப்பன்.]

மூப்பான் *mūppāṉ,* பெ.(n.) 1. அகவை முதிர்ந்தவன்; aged person. 2. முதியவன்; elder. 3. சிவன்; *Śivāṉ. "மூப்பான் மழுவும்" (தனிபா.1, 32 : 61).*

[மூ→மூப்பு→ மூப்பான்.]

மூப்பானசுவாமி *mūppāṉa-šuvāmi,* பெ.(n.) திருவிதாங்கூரில் ஒரு தலைமைப் பணியாளன் (வின்.); a principal officer in Travancore.

*[மூப்பான் + **Skt.** சுவாமி.]*

மூப்பி *mūppi,* பெ.(n.) 1. முதுமகள்; aged woman; elderly woman. *'மூப்பி மாராலே..... நீராட்டி' (சீவக.1892, உரை).* 2. தலைவி (வின்.); woman of distinction; mistress.

ம. மூப்பி

[மூ→மூப்பு→மூப்பி.]

மூப்பு *mūppu,* பெ.(n.) 1. அகவை, முதுமை; seniority in age; old age. *"முனிதக்க மூப்புள" (நாலடி, 92). மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய (அகநா.7:4).* 2. தலைமை (யாழ்.அக.); power of management, leadership. 3. ஒட்டாரச் செருக்கு (பிடிவாதம்) (இ.வ.); wilfulness.

ம. மூப்பு; தெ., க.முப்பு.

[மூ→ மூப்பு.]

மூப்புக்கழிவு *mūppu-k-kaḻivu,* பெ.(n.) 1. ஊர்த் தலைவனுக்குச் சேர வேண்டிய பொருள்; dues payable to the village headman (M.M.509). 2. வரித் தொகையிலிருந்து ஊர்த் தலைவனுக்கு உரியதைக் கொடுத்ததால் கழிக்கப்படும் பகுதி (இ.வ.); deduction from the revenue on account of the dues paid to the village headman.

[மூப்பு + கழிவு.]

மூப்புக்களவு *mūppu-k-kaḷavu,* பெ.(n.) மூப்புக்கழிவு, 1 பார்க்க; see *mūppu-k-kaḻivu, 1.*

[மூப்பு + களவு.]

மூப்புமுகனை *mūppu-mugaṉai,* பெ.(n.) தலைமை பற்றிவரும் சொற் செலவு (செல்வாக்கு) (யாழ்ப்.); influence due to age, rank, etc.

[மூப்பு + முகனை.]

மூய்¹–தல் *mūy-,* 1 செ.குன்றாவி.(v.t.) 1. மூடுதல் (திவா.); to cover. *"பருமணன் மூஉய்" (பரிபா.10 : 4).* 2. நிரப்புதல்; to full. *"கயிறுகுறு முகவை மூயின" (பதிற்றுப்.22).*

தெ. மூயு.

மூய்²–தல் *mūy-,*1 செ.கு.வி.(v.i.) 1. நெருங்கிச் சூழ்தல்; to surround closely. *"ஆயிரரு மங்கண் மூயினர்க ளண்ணலை" (கந்தபு. சகத் திரவா.18).* 2. முடிதல்; to end. *கதை மூய்ந்தது.*

மூய்³–தல் *mūy-,* 2 செ.குன்றாவி.(v.t.) துப்புதல் (இ.வ.); to spit.

[உமிழ்→(மூழ்)→முழி→மூய்→மூய்–தல்.]

மூய்[4] *mūy*, பெ.(n.) 1. மூடி; cover. *"பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன" (குறுந்.233).* 2. பூப்பெட்டி; flower basket. *"முத்துநீர்ச் சாந்தடைந்த மூஉய்" (பரிபா. 10:14).*

மூர்க்கண்டவன் *mūrkkaṇḍavaṉ*, பெ.(n.) கொட்டைப் பாக்கு; arecanut.

மூர்க்கி *mūrkki*, பெ.(n.) மூவிலைக் கொழுந்து; three leaved wild lime - *Trichilia spinosa* (சா.அக.).

மூர்ச்சனம் *mūrccaṉam*, பெ.(n.) பித்தத்தினால் நினைவு தவறுதல்; loss of consciousness due to excess of bile humour.

[மூச்சு→மூர்ச்சை→மூர்ச்சனம்.]

மூர்ச்சனை *mūrccaṉai*, பெ.(n.) 1. மூர்ச்சை, 1 பார்க்க; see *mūrccai, 1*. *"முந்திய வுயிர்ப்புமற மூர்ச்சனை யடைந்தான்" (பிரமோத்.5 : 22).* 2. பெருமூச்சு விடுகை, ஆழ்துயர்படுகை, நெட்டுயிர்ப்பு; sigh, deep breath. *"முரிவுற்றார்களின் மூர்ச்சனை செய்பவால்" (சீவக.1627).* 3. கமகம் பத்தனுளொன்று (பரத.இராக.24); the regulated rise and fall through the musical scale, modulation, one of ten kamagam.

[மூர்ச்சை→மூர்ச்சனை.]

மூர்ச்சி-த்தல் *mūrcci-*, 4 செ.கு.வி.(v.i.) 1. மயக்கமடைதல், உணர்விழத்தல்; to swoon, faint. *"அன்பினால் மூர்ச்சித்த வன்பருக்கு" (தாயு.சுகவாரி.4).* 2. பெருமூச்சு விடுதல்; to sigh. *"துயர் சிறிதாறி மூர்ச்சியா" (கம்பரா. சடாயுவு.139).*

[மூச்சு→மூர்ச்சை→மூர்ச்சி→மூர்ச்சி-த்தல்.]

மூர்ச்சிதம் *mūrccidam*, பெ.(n.) 1. அறிவின்மை; ignorance. 2. மூர்ச்சை, 1, 2 பார்க்க; see *mūrccai, 1, 2*. 3. உயரம்; height.

[மூச்சு→மூர்ச்சை→மூர்ச்சி→மூர்ச்சிதம்.]

மூர்ச்சை[1] *mūrccai*, பெ.(n.) 1. மயக்கமடைகை, அறிவு இழக்கை, உணர்வு இழக்கை (பிரக்ஞை) (உ.வ.); fainting, loss of consciousness, swoon, syncope. 2. வாட்டம் (யாழ்.அக.); languioshing. 3. மூர்ச்சனை, 3 (இசை.) பார்க்க; see *mūrccaṉai,3*. *அந்தப் பாட்டில் மூர்ச்சை நன்றாகயிருந்தது.* 4. கூர்மை; sharpness. *கத்தியின் மூர்ச்சை.*

[மூச்சு→(மூச்சை)→மூர்ச்சை.]

ஒ.நோ. கோத்தல்→கோர்த்தல்

மூர்ச்சை[2] *mūrccai*, பெ.(n.) ஓர் இசையின் சிறப்பியல்பு (கனம் கிருஷ்ணையர், 16); distinguishing marks of a musical mode.

[மூச்சு→மூர்ச்சை.]

மூர்ச்சைசுரம் *mūrccai-šuram*, பெ.(n.) மயக்கம் உண்டாக்கும் ஒருவகைக் காய்ச்சல்; fever that causes unconsciousness (சா.அக.).

[மூர்ச்சை + சுரம்.]

மூர்ச்சைதெளி-தல் *mūrccai-teḷi-*, 2 செ.கு.வி. (v.i.) மயக்கத்திலிருந்து தெளிதல்; to recover from swoon (சா.அக.).

[மூர்ச்சை + தெளி-தல்.]

மூர்ச்சைப்புழு *mūrccai-p-puḻu*, பெ.(n.) பாக்குகளில் இருக்கும் ஒருவகைப் புழு, இப்பாக்கை வாயில் போட்டுக் கொண்டால்

மயக்கம் உண்டாகும்; a worm in the areca nut that causes fainting (சா.அக.).

[மூர்ச்சை + புழு.]

மூர்ச்சைபித்தம் *mūrccai-pittam,* பெ.(n.) மார்பு எரிச்சல், வாய்க் கசப்பு, முழங்கால், தொடை வலி, வாந்தி, செரிமானம் சரியில்லாமை முதலிய நோய் வகை; a disease marked by bitterness in the mouth, burning sensation in the chest, pain in the knee and thighs, vomitting and indigestion (சா.அக.).

[மூர்ச்சை + பித்தம்.]

மூர்ச்சைரோகம் *mūrccai-rōgam,* பெ.(n.) மயக்கம். மூக்கின் துளைகளில் 4 துளி முலைப்பால் விடத் நீங்கும் இம் மயக்கம்; the faint or swoon is relieved by dropping breast milk into the nostrils (சா.அக.).

[மூச்சு→மூர்ச்சை + Skt. ரோகம்.]

மூர்ச்சைவலி *mūrccai-vali,* பெ.(n.) மயக்க வலிப்பு; fainting fits (சா.அக.).

[மூர்ச்சை + வலி.]

மூர்ச்சைவாயு *mūrccai-vāyu,* பெ.(n.) மூர்ச்சை உண்டுபண்ணுவதாகக் கருதும் காற்று (வாயு) (வின்.); a wind in the body, supposed to cause swooning.

[மூர்ச்சை + Skt. வாயு.]

மூர்ச்சைவிழல் *mūrccai-viḻal,* பெ.(n.) மயங்கி விழுகை; get swooned (சா.அக.).

[மூர்ச்சை + விழல்.]

மூர்த்தம் *mūrttam,* பெ.(n.) முழுத்தம் (முகூர்த்தம்) பார்க்க; see *muḻuttam.*

"பிறந்த நாளும் பெற்ற மூர்த்தமும்" (பெருங்.நரவான.6, 73).

மூர்த்திசெட்டிவெட்டு *mūrtti-šeṭṭi-veṭṭu,* பெ.(n.) பழைய நாணய வகை (பணவிடு.141); an ancient coin.



மூர்த்திநாயனார் *mūrtti-nāyaṉār,* பெ.(n.) சிவனடியார் அறுபத்து மூவரில் ஒருவர்; one among 63 canonized šaivasaints.

[மூர்த்தி + நாயனார்.]

பாண்டிய நாட்டின் மதுராபுரி நகரத்தைச் சார்ந்தவர். இயற்பெயர் மூர்த்தியார். சமண சமயத்தைச் சார்ந்த வடுகக் கருநாட மன்னன் மூர்த்தியாரை இகழ்ச்சி படுத்த எண்ணி தொடர் துன்பங்கள் கொடுத்தான் என்றும் அதைப் பொருட்படுத்தாமல் மூர்த்தியார் திருத்தொண்டு செய்து வந்தார் என்றும், அப்பொழுது அரசன் நம் அடியார்க்கு யாரும் சந்தனக்கட்டை விற்கக் கூடாது என்று தடைவிதித்ததாகவும், இதனால் சந்தனக்கட்டை எங்கும் கிடைக்கவில்லை என்றும், அரசன் உடனே சிவனடியாரின் கையை சந்தனக்கல்லில் வைத்து முழங்கை எலும்பு ஒடியும்படி அடித்ததாகவும், அடியார் அப்போது சிவனியமும் தமிழும் தழைக்க இந்நாட்டிற்கு ஒரு நல்ல அரசன் எப்பொழுது தான் வருவானோ? என வேண்ட, அன்று இரவு அரசன் இறந்து

விட்டதாகவும், அவருக்கு (அரசன்) பிள்ளைகள் இல்லாததால் அமைச்சர்கள் யானையைக் கண்கட்டிவிட்ட தாகவும், யானையிடம் உன் திருவருளால் நாட்டையாள ஒருவரைத் தெரிந்து சுமந்து வரும்படி வேண்டியதாகவும் யானை மூர்த்திநாயனாரைச் சுமந்து வந்ததாகவும் அன்று முதல் மூர்த்தியார் உலகாண்டு பின்பு இறைவனடி சேர்ந்தார் என தொண்டர் மாக்கதை (பெரிய புராணம்) கூறுகிறது.

மூர்வம் *mūrvam,* பெ.(n.) செடி வகையைச் சார்ந்த பெருங்குரும்பை; bow string hemp stemless plant (சா.அக.).

மூரல் *mūral,* பெ.(n.) 1. பல் (பிங்.); tooth. 2. புன்சிரிப்பு (பிங்.); smiling. *"மூரல் முறுவலொடு மதைஇய நோக்கே" (குறுந். 286:5). "உப்புநொடை நெல்லின் மூரல் வெண்சோறு" (அகநா.60:4).* 3. சோறு; boiled rice. *"பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர்" (பெரும்பாண்.168).* 4. பால் (பரி.அக.); milk. 5. ஒரு வகை கடல் மீன்; a kind of sea - fish.

தெ. முரியு, முருகு; க. முருவ; ம. முரல்; து.முரிஜ.

மூரலி-த்தல் *mūrali,* 4 செ.கு.வி.(v.i.) புன்முறுவல் செய்தல்; to laugh, smile. *"மூரலித்த முகத்தினன்" (உபதேசகா. அயமுகி.61).*

[மூரல்→மூரலி-த்தல்.]

மூரன்முறுவல் *mūran-muruval,* பெ.(n.) புன்சிரிப்பு; smile. *'முட்போன்ற பல்லு விளங்கும் மூரன் முறுவலையும்' (பு.வெ.11, ஆண்பாற்.9, உரை). "மூரன் முறுவலொடு மதைஇய நோக்கே" (குறுந்.286).*

[மூரல்→மூரன் + முறுவல்.]

மூரா *mūrā,* பெ.(n.) மீன்பிடிகலத்தின் முன்பக்கம் (முகவைமீன்.); frontage of fishing boat.

மூரி[1] *mūri,* பெ.(n.) 1. பெருமை; greatness. *"மூரிக் கடற்றானை" (பு.வெ.3:3) (பிங்.). "முழங்குதிரை கொழீஇய மூரீ எக்கர்" (நற்.15:1).* 2. வலிமை; strength. *"மூரிவெஞ்சிலை" (கம்பரா.கும்பகருண.26).* 3. பழமை (வின்.); antiquity. 4. கிழ அகவை; old age. *"மூரியெருத்தாலுழவு" (இன்.நாற். 21).* 5. எருமை; buffalo. *"மோட்டிள மூரி யுழக்க" (கம்பரா. அகலிகை. 69).* 6. எருது; ox, bullock. *"நெறிபடு மருப்பி னிருங்கண் மூரியொடு" (பதிற்றுப்.67 : 15).* 7. விடை யோரை (இடபராசி) (திவா.); taurus of the zodiac. 8. திமில் (யாழ்.அக.); hump. 9. துண்டம்; bit, part. *"வெண்ணிண மூரி யருள" (புறநா.393).* 10. முறியோலை பார்க்க; see *muri-y-ōli.* 11. முரண் (பிங்.); enmity. 12. நெரிவு (வின்.); crack, breach.

ம. மூரி; தெ., க., து. முரி.

மூரி[2] *mūri,* பெ.(n.) 1. சோம்பல்; laziness, indolence. 2. சோம்பல் முரிப்பு; shaking off laziness. *"பொய்த்ததோர் மூரியா னிமிர்ந்து" (கம்பரா.உண்டாட்.35).*

மூரிநிமிர்-தல் *mūri-nimir-,*2 செ.கு.வி. (v.i.) நெட்டை முரித்தல்; to stretch one self, as from laziness. *"சிங்கம்... மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு" (திவ். திருப்பா.23).*

மறுவ. சோம்பல் முறித்தல்.

[முரி → மூரி →மூரி + நிமிர்தல் = உடம்பை நீட்டிச் சோம்பல் முறித்தல் (வே.சொ.க.).]

மூரிப்போ–தல் *mūri-p-pō-*,8 செ.கு.வி. (v.i.) முதுமையால் வலிமையற்றுப் போதல்; to become weak by age. *முன்பே மூரிப் போய்ப் பல விடங்களிலும் பூண்கட்டிக் கிடக்கிறதொரு சொத்தை வில்லை (திவ்.பெரியாழ்.3. 9 : 2, வியா.பக்.771).*

[மூரி + போ–தல்.]

மூரிபோ–தல் *mūri-pō-*,8 செ.கு.வி.(v.i.) மூரிநிமிர்–தல் பார்க்க; see *mūri-nimir-. "நாஞ்சின் மூரிபோகாது முடுக்கும்" (பரிபா.20:54).*

[மூரி + போ–தல்.]

மூரிமுரி–த்தல் *mūri-muri-*, 4 செ.கு.வி. (v.i.) மூரிநிமிர்–தல் பார்க்க; see *mūri-nimir-.*

[மூரி + முரி–த்தல்.]

மூரியோலை *mūri-y-ōlai*,பெ.(n.) முறியோலை (நாஞ்சில்.) பார்க்க; see *muṟi-y-ōlai.*

[மூரி + ஓலை.]

மூரிவலனாதி *mūri-valaṉādi*,பெ.(n.) பருந்து; kite.

மூருகடந்தை *mūru-kaḍandai*, பெ.(n.) இலந்தை; jujube - *zizphus* (சா.அக.).

மூருகணிக்கரம் *mūru-kaṇikkaram*, பெ.(n.) கத்திரிக்காய்; brinjal (சா.அக.).

மூருவம் *mūruvam*,பெ.(n.) மூர்வம் பார்க்க; see *mūrvam.*

[மூர்வம்→மூருவம்.]

மூலஅபானக்கடுப்பு *mūla-abāṉa-k-kaḍuppu*,பெ.(n.) மலவாய்ப் பகுதியில் எரிச்சலுடன் வலி ஏற்படுகை; irritating pain caused in the region of anus (சா.அக.).

மூலக்கச்சம் *mūla-k-kaccam*, பெ.(n.) மூலைக்கச்சம் (உ.வ.) பார்க்க; see *mūlai-k-kaccam.*

[மூலை + கச்சம் → மூலக்கச்சம்.]

மூலகஞ்சம் *mūla-kañjam*,பெ.(n.) 1. சுவற்று முள்ளங்கி; large radish - *Raphanus sativus*. 2. சின்ன முள்ளங்கி; small radish - *Raphanus sativus* (சா.அக.).

மூலகஞ்சரம் *mūla-kañjaram*, பெ.(n.) சின்ன முள்ளங்கி; small radish - *Raphanus sativus* (சா.அக.).

மூலகஞ்சானி *mūla-kañjāṉi*, பெ.(n.) ஆற்று முள்ளங்கி; wall radish - *Blumea aurita* (சா.அக.).

மூலக்கடுப்பு *mūla-k-kaḍuppu*,பெ.(n.) மூல நோய் (வின்.); piles (சா.அக.).

[மூலம் + கடுப்பு.]

மூலக்கணம் *mūla-k-kaṇam*, பெ.(n.) அரத்தமும் சளியும் கலந்து வெளியேறி குழந்தைகளைத் தாக்கும் ஒருவகை நோய்; a disease in children due to congenital heat marked by passing of bloody and mucus faeces.

மறுவ. முக்குக்கணம்

[மூலம் + கணம்.]

மூலக்கரணி *mūla-k-karaṇi*,பெ.(n.) ஒருவகை நஞ்சு; a kind of arsenic.

மூலக்கரப்பன் *mūla-k-karappaṉ,* பெ.(n.) ஒரு வகைத் தோல் நோய்; a skin disease (சா.அக.).

மூலக்கல் *mūla-k-kal,* பெ.(n.) தலைக்குள் இருக்கும் நச்சுக்கல்; a kind of poisonous stone in the head (சா.அக.).

[மூலம் + கல்.]

மூலக்கல்வி *mūla-k-kalvi,* பெ.(n.) தொடக்கப் பள்ளிக் கல்வி; elementary education. *மூலக் கல்வி நாங்கள் வாசித்தா லாபத்தோ (பெண்மதி மாலை.பக்.29).*

[மூலம் + கல்வி.]

மூலக்கழிச்சல் *mūla-k-kaḻiccal,* பெ.(n.) அறுவகைக் கழிச்சல் நோய்களுள் ஒன்று; one of six *kaḻiccal,* Chronil euterities.

[மூலம் + கல்.]

மூலக்கனல் *mūla-k-kaṉal,* பெ.(n.) மூலச்சூடு பார்க்க; see *mūlā-c-cūḍu.*

[மூலம் + கனல்.]

மூலக்காட்டுமாடு *mūla-k-kāṭṭu-māḍu,* பெ.(n.) கறவை (பசு) மாட்டின் வகையில் ஒன்று; a species of milchy cow.

[மூலம் + காட்டு + மாடு.]

மூலக்காணி *mūlakkāṇi,* பெ.(n.) கர்க்கடக நஞ்சு (யாழ்.அக.); mineral poison.

மூலக்காரன் *mūla-k-kāraṉ,* பெ.(n.) 1. மூல நூலை இயற்றியவன்; author of a work, as distinguished from its commentator. 2. மூல நோய் உள்ளவன் (வின்.); person suffering from piles. 3. எதற்கும் உடனடியாக சினம் கொள்ளும் குணம் உடையவன் (வின்.); short - tempered man.

[மூலம் + காரன்.]

மூலக்கால் *mūla-k-kāl,* பெ.(n.) குளம்பு விரிந்து போன மாடு; cow with widened hoof.

மூலக்காற்று *mūla-k-kāṟṟu,* பெ.(n.) மூலைத் திசையினின்று அடிக்கும் காற்று (மீனவ.); wind that blows from the corner of two direction.

[மூலை→மூலம் + காற்று.]

மூலக்கிரகம் *mūla-k-kiragam,* பெ.(n.) அரச மரம்; a sacred tree called pipal- *Ficus religiosa* (சா.அக.).

மூலக்கிரந்தி *mūla-k-kirandi,* பெ.(n.) 1. நல்ல அரத்தம் கெடுவதால் வரும் நோய்; a disease due to impure blood in the body. 2. மூலநோய், 1 (M.L.) பார்க்க; see *mūla-nōy, 1.*

மறுவ. வயிற்றுக்கடுப்பு

[மூலம் + கிரந்தி.]

மூலக்கிராணி *mūla-k-kirāṇi,* பெ.(n.) 1. அறுவகைக் கழிச்சல் (கிராணி) நோய்களுள் ஒன்று; chronic enteritis, one of six *Kirāṇi.* 2. மூலநோய், 1 பார்க்க; see *mūla-nōy, 1.* 3. வயிற்றளைச்சல் (வின்.); dysentry.

[மூலம் + Skt. கிராணி.]

Skt. *கிராணி* > த. கழிச்சல்.

அறுவகைக் கழிச்சல் (கிரகணி) நோய்கள்: 1. பித்தக் கழிச்சல்; 2. வெப்ப ஊதைக் கழிச்சல், 3. சளி ஊதைக் கழிச்சல்; 4. மேகக் கழிச்சல்; 5. மூலக்கழிச்சல்; 6. ஊதைக் கழிச்சல்.

மூலக்கூடல் *mūla-k-kūḍal*, பெ.(n.) பெருங் குடல் அடிக்கூறு, மலவாய்; rectum.

மூலக்கூறு[1] *mūlakkūṟu*, பெ.(n.) உயிரற்ற ஒருபொருளைத் துண்டித்துக் கொண்டு போய்க் கடைசியாகப் பிரிக்க முடியாததெனக் கருதப்படும் நிலையில் உள்ள மூலப்பொருளின் அனைத்துப் பண்புகளையும் கொண்ட ஒரு குறிப்பிட்ட அணுவோ அல்லது வெவ்வேறு அணுக்களின் இணைவோ கொண்ட சிறு பகுதி; molecule.

[மூலம் + கூறு.]

மூலக்கூறு[2] *mūla-k-kūṟu*, பெ.(n.) பொருள்களின் அடிப்படைத் தத்துவம்; radical part or essential principle of a substance.

[மூலம் + கூறு.]

மூலக்கொடி *mūla-k-koḍi*, பெ.(n.) அல்லிக் கொடி; water lily (சா.அக.).

மூலக்கொதி *mūla-k-kodi*, பெ.(n.) 1. மூல நோய் உண்டாக்கும் ஒருவகை எரிச்சல் (வின்.); painful sensation from piles. 2. மூலநோய், 1 பார்க்க; see *mūla-nōy, 1.*

[மூலம் + கொதி.]

மூலக்கொதிப்பு *mūla-k-kodippu*, பெ.(n.) மூலக்கொதி பார்க்க; see *mūla-k-kodi.*

[மூலம் + கொதிப்பு.]

மூலகணம் *mūla-kaṇam*, பெ.(n.) 1. வெப்பம் கரணியமாக குழந்தைகளுக்கு மலத்தில் சீழ், அரத்தம் இரண்டும் கலந்து விழும் ஒரு நோய் வகை (பைஷஜ.); a disease in children due to congential heat marked by passing of bloody and mucus faeces. 2. மூலக்கணம் பார்க்க; see *mūla-k-kaṇam.*

மறுவ. முக்குக்கணம்

மூலகதலம் *mūla-kadalam*, பெ.(n.) 1. ஒருவகை முருங்கை; moringa. 2. முண்முருங்கை, 1 (மூ.அ.); see *muṉ-muruṅgai.*

மூலகந்தம்[1] *mūla-kandam*, பெ.(n.) இருவேலி; cuscus-grass.

மூலகந்தம்[2] *mūla-kandam*, பெ.(n.) மரம், பூண்டு இவைகளின் வேர்; root of plant, trees and herbs (சா.அக.).

மூலகபம் *mūla-kabam*, பெ.(n.) முருங்கை; drumstic tree - *Moringa oleifera* (சா.அக.).

மூலகபல்லவம் *mūlaga-pallavam*, பெ.(n.) முருங்கை மரம்; drumstic tree - *Moringa oleifera* (சா.அக.).

மூலகம் *mūlagam*, பெ.(n.) 1. கற்பூர வாழைப் பழம்; a kind of fragrant plantain fruit. 2. கிழங்கு; tuber ous root. 3. முள்ளங்கி; radish (சா.அக.).

மூலகம்பகைத்தான் *mūlagam-pagaittāṉ*, பெ.(n.) சீந்திற்கொடி ; moon creeper - *Tinosphora corelifolia* (சா.அக.).

மூலகரணாதி *mūla-karaṇādi*, பெ.(n.) சிவனார் வேம்பு; Siva's neem - Indigoferra asphalathifolia (சா.அக.).

மூலகவொளி *mūlaga-v-oḷi,* பெ.(n.) மூலாக்கினி, 2 பார்க்க; see *mūlā-k-kiṉi, 2.* *"சுடரிலகு மூலகவொளி மேவியருவி பாய" (திருப்பு.586).*

மூலகன்மம் *mūla-kaṉmam,* பெ.(n.) ஆதனை ஒட்டிக் கொண்டு இருக்கிற கன்மம் (சி.சி.2, 39, சிவஞா); karma eternally clinging to the soul.

[மூலம் + Skt. கன்மம்.]

மூலகா *mūlagā,* பெ.(n.) முள்ளங்கி; radish - *Raphanus sativus* (சா.அக.).

மூலகாரணம் *mūla-kāraṇam,* பெ.(n.) முதற்கரணியம்; first cause. *நானவற்றினுக்கு மூல காரணமாகுவன் (பிரபுலிங்.மாயைகோ.68).*

[மூலம் + காரணம்.]

மூலகுணக்காரன் *mūla-kuṇa-k-kāraṉ,* பெ.(n.) மூலக்காரன், 3 (வின்.) பார்க்க; see *mūla-k-kāraṉ, 3.*

மூலகுருவாசான் *mūla-guruvāšāṉ,* பெ.(n.) பொன்மாற்று சித்தர்; alchemist (சா.அக.).

மூலங்கீரனார் *mūlaṅgīraṉār,* பெ.(n.) கழக காலப் புலவன்; poet in kaḻagam age. *முள் முருக்கின் நெற்றைப் பேயினுடைய கைவிரலுக்கு உவமை கூறியவர். சோழ நாட்டு திருச்சாய்க்காடு இவர் செய்யுளில் வந்துள்ளது (நற்.73).* பேய்கள் பலியுண்ண *மூதூர் மன்றங்களுக்கு வருவதை இவர் கூறுகிறார். திருச்சாய்க் காட்டின் வளத்தையும் சிறப்பித்துக் கூறியுள்ளார். இவ்வூர் இக்காலத்தில் சாயாவானம் என்று வழங்கப்படுகிறது. இவர் பாடியதாக நற்றிணையில் ஒரு பாடல் உள்ளது. பாலையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.*

"வேனில் முருக்கின் விளைதுணர் அன்ன
மாணா விரல வல்வாய்ப் பேஎய்
மல்லன் மூதூர் மலர்ப்பலி உணீஇய
மன்றம் போழும் புன்கண் மாலைத்
தம்மொடும் அஞ்சும் நம்மிவண் ஒழியச்
செல்ப என்ப தாமே செவ்வரி
மயிர் நிரைத் தன்ன வார்கோல் வாங்குகதிர்
செந்நெலஞ் செறுவின் அன்னந் துஞ்சும்
பூக்கெழு படப்பைச் சாய்க்காட்டு அன்ன என்
நுதல் கவின் அழிக்கும் பசலையும்
அயலோர் தூற்றும் அம்பலும் அளித்தே"
(நற்.73).

மூலச்சி *mūlacci,* பெ.(n.) காற்றுக்கொடி (கொத்தான்); air creeper, leafless creeper - *Cassytha filiformia* (சாஅக.).

மூலச்சிறைபோடு-தல் *mūla-c-ciṟai-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) ஒரு சடங்கு; one kind of rite, function, observance.

[மூலை + சிறை + போடு-.]

கணவன் இறந்த இரவுக்குப் பின் வரும் அதிகாலையில் மனைவியின் பட்டுச் சேலையை அவிழ்த்து வெள்ளைச் சேலை உடுத்துவர். இச்சடங்கு அவளை மூலையிற் சிறை வைத்தற்கு அடையாளமாக நடத்தப்படுகிறது (கோவை.).

மூலச்சுன்னம் *mūla-c-cuṉṉam,* பெ.(n.) குடற் சுன்னம் (நச்சுக் கொடியில் இருந்து எடுக்கப்படும் காரத்தன்மை உடைய கலவை); an alkaline compound prepared from the placental cord (சா.அக.).

மூலச்சூடு *mūla-c-cūḍu,* பெ.(n.) 1. கணைச்சூடு; a disease of children. 2. மூலநோய்; piles.

3. மூலக்கொதி, 1 பார்க்க; see *mūla-k-kodi, 1.*

[மூலம் + சூடு.]

மூலச்சோதி *mūla-c-cōdi,* பெ.(n.) கடவுள் (வின்.); god, as the Primeval Light.

[மூலம் + Skt. சோதி.]

மூலசத்தி *mūla-šatti,*பெ.(n.) தலைமையான ஆற்றல் (சத்தி); serpents power in the human system - `*kundalini*' the seat of power the Godless of *Moola ātharam* (சா.அக.).

[மூலம் + சத்தி.]

மூலசதுர்வர்க்கம் *mūla-šatur-varkkam,* பெ.(n.) நான்கு வகைக் கிழங்கு; four sorts of tuber.

[மூலம் + சதுர்வர்க்கம்.]

மூலசம் *mūlašam,* பெ.(n.) கிழங்குள்ள செடிகொடி (வின்.); plants and creeper having tubers.

மூலசாமூலம் *mūla-šāmūlam,* பெ.(n.) பெருவழுதலை; a plant - a big species of brinjal (சா.அக.).

மூலஞ்சிவப்பி *mūlañ-jivappi,* பெ.(n.) நச்சுப்புல்; a poisonous grass (சா.அக.).

மூலட்டம் *mūlaṭṭam,*பெ.(n.) மூலட்டானம் பார்க்க; see *mūlaṭṭāṉam. "திருமூலட்டந் தொழுது" (காஞ்சிப்பு.தழுவக்கு.172).*

மூலட்டானம் *mūlaṭṭāṉam,*பெ.(n.) திரு மூலட்டானம் (தேவா.725, 4); the sacred shrine of *Tiruvārūr.*

மூலட்டானன் *mūlaṭṭāṉaṉ,* பெ.(n.) 1. திருவாரூரிற் கோயில் கொண்டுள்ள சிவன்; the presiding deity at the Temple of *Tiruvārūr. "மணியாரூர்த் திருமூலட்டானனாரே" (தேவா. 720, 1).* 2. மூலவர் பார்க்க; see *mūlavar.*

[மூலட்டானம்→மூலட்டானன்.]

மூலத்தம்பம் *mūla-t-tambam,*பெ.(n.) ஒரு சிற்ப நூல் (வின்.); a treatise on architecture.

[மூலம் + Skt.தம்பம்.]

மூலத்தனம் *mūla-t-taṉam,* பெ.(n.) மூலதனம் (யாழ்.அக.)பார்க்க; see *mula-taṉam.*

[மூலம் + Skt. தனம்.]

மூலத்தானம்*mūla-t-tāṉam,*பெ.(n.) 1. அடிப்படை; base, foundation. 2. கருவறை; sanctum sanctorum of a temple. 3. மூலவர் (யாழ்.அக.) பார்க்க; see *mūlavar.* 4. அரச இருக்கை (வின்.); royal residence, palace.

[மூலம் + Skt. தானம்.]

மூலத்திரவியம் *mūla-t-tiraviyam,* பெ.(n.) மூலதனம் (யாழ்.அக.) பார்க்க; see *mūla-taṉam.*

[மூலம் + Skt. திரவியம்.]

மூலத்தின்சாரம் *mūlattiṉ-šāram,* பெ.(n.) 1. சிறுநீர்; urine. 2. கல்லுப்பு; rock salt.

மூலத்தினவு *mūla-t-tiṉavu,* பெ.(n.) எரிச்சலை உடைய மலவாய்; irritation in the anus (சா.அக.).

[மூலம் + தினவு.]

மூலத்தீ *mūlatti*, பெ.(n.) உயிர் ஆதன் (சீவாத்மா); liberated soul (சா.அக.).

மூலத்தீசுர் *mūla-t-tiśur*, பெ.(n.) திருமந்திரம் எழுதிய திருமூலர்; *Thirumoolar*, author of *Thirumantiram* (சா.அக.).

மூலத்துருவம் *mūla-t-turuvam*, பெ.(n.) விண்கோள் நிலை அளவு வகை; epoch-longitude, longitude of a planet.

மூலத்துவாரம் *mūla-t-tuvāram*, பெ.(n.) மூலத்துளை பார்க்க; see *mūla-t-tuḷai*.

[மூலம் + **Skt.** *துவாரம்.]*

மூலத்துளை *mūla-t-tuḷai*, பெ.(n.) மலவாய்த் துளை; anal orifice.

மூலதடி *mūla-taḍi*, பெ.(n.) ஆண் குறி; male organ, penis (சா.அக.).

[மூலம் + தடி.]

மூலதனம்[1] *mūla-taṉam*, பெ.(n.) தொழில் தொடங்கத் தேவைப்படும் அல்லது பயன்படுத்தப்படும் முதல் (பணம்); capital, investment. *பத்து கோடி ரூபாய் மூலதனத்தில் நிறுவப்பட்ட தொழிற்சாலை. சில நாடுகள் உள்நாட்டுத் தொழில்களில் அயல் நாட்டவர் மூலதனம் போடுவதை வரவேற்கின்றன. உழைப்பையே மூல தனமாகக் கொண்டு வாழ்க்கையில் முன்னேறியவர்.*

[மூலம் + **Skt.** *தனம்.]*

மூலதனம்[2] *mūla-taṉam*, பெ.(n.) தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருகிற உடமை, சொத்து; hereditary property.

[மூலம் + தனம்.]

மூலதாது *mūla-tādu*, பெ.(n.) மூலப் பொருள் (தனிமம்); elements (சா.அக.).

[மூலம் + **Skt.** *தாது.]*

மூலதேசியம் *mūla-tēśiyam*, பெ.(n.) செழு மலர்க் கொன்றை; large flower cassia - *Cassia florida* (சா.அக.).

மூலநாசம் *mūla-nāśam*, பெ.(n.) அடியோடு அழிகை; eradication, complete destruction. *மூலநாசம் பெற முடிக்கு மொய்ம்பினாள் (கம்பரா.சூர்ப்ப.8).*

[மூலம் + நாசம்.]

மூலநாடி[1] *mūla-nāḍi*, பெ.(n.) சுழுமுனை (திருமந்.622); a principal tubular vessel of the human body, said to lie between *iṭai* and *piṅgalai*, one of *taśa-nāḍi*.

[மூலம் + நாடி.]

மூலநாடி[2] *mūla-nāḍi*, பெ.(n.) மலவாய் நாடி; nerves in the anus (சா.அக.).

[மூலம் + நாடி.]

மூலநாயன்[1] *mūla-nāyaṉ*, பெ.(n.) திருமூலர்; great siddher named Tirumoolar (சா.அக.).

மூலநாயன்[2] *mūla-nāyaṉ*, பெ.(n.) வடிநீர் (கியாழம்); decoction.

மூலநாள் *mūla-nāḷ*, பெ.(n.) 19ஆம் விண்மீனாகிய குருகு (நட்சத்திரம்); the 19th nakšatra.

[மூலம் + நாள்.]

மூலநிதரி *mūla-nitari*, பெ.(n.) வட்டத் திருப்பி; root of a twiner - *Cissampelos pareira* (சா.அக.).

மூலநோக்காடு *mūla-nōkkāḍu,* பெ.(n.) மூலநோய், 1 பார்க்க; see *mūla-nōy, 1.*

[மூலம் + நோக்காடு.]

மூலநோய்[1] *mūla-nōy,* பெ.(n.) மலவாயில் உண்டாகும் ஒருவகை நோய்; piles haemorrhoids.

[மூலம் + நோய்.]

மலவாயில் உள்ள நாளம் என்னும் அரத்த நரம்பானது கிழங்கு முளையைப் போலவும், வேர்களைப் போலவும், ஊன் முளைகளைப் போலவும் காணும் ஒரு வகை நோய்.

மூலநோய்[2] *mūla-nōy,* பெ.(n.) ஆணவ மலம்; an impurity eternally clinging to the soul. *"மூல நோய் தீர்க்கு முதல்வன் கண்டாய்" (தேவா.845, 9).*

[மூலம் + நோய்.]

மூலப்பட்டை *mūla-p-paṭṭai,* பெ.(n.) சித்திர மூலத்தின் மேற்தோல் (சங்.அக.); bark of Ceylon leadwort.

[மூலம் + பட்டை.]

மூலப்படி *mūla-p-paḍi,* பெ.(n.) கிணற்றுப் படிக்கட்டில் நீருக்கருகில் உள்ள கடைசிப்படி (கோவை.); a last foot-stone in the stair-case of a well.

[மூலம் + படி.]

மூலப்படை *mūla-p-paḍai,* பெ.(n.) அறுவகைப் படையுள் நீண்ட காலமாகத் தொடர்ந்து வரும் படை (குறள், 762, உரை) (சுக்கிரநீதி. 303); soldiers who have been maintained from very early times or from time immemorial; reserved force, one of *aṟuvagai-p-paḍai. "உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத் தொல்படைக் கல்லால் அரிது" (குறள், 762).*

வ. மௌலம்

[மூலம் + படை.]

அறுவகைப்படை : 1. மூலப்படை; 2. கூலிப் படை; 3. நாட்டுப் படை; 4. காட்டுப்படை; 5. துணைப் படை; 6. பகைப்படை அறுவகைப் படையுள்ளுஞ் சிறப்புடையது மூலப்படை. மூலப்படையை வள்ளுவர் தொல்படை என்பர். வாழையடி வாழையாக இருந்து வருவதும், எவ்வகை ஊற்றையும் பொருட்படுத்தாததும், இறப்பிற்கு அஞ்சாததும், போரையே விரும்புவதும், அரசனைக் காக்க என்றும் உயிரை உவந்து ஈவதும், எக்காரணத்தையிட்டும் அறை போகாததும் வென்றே மீள்வதும் தொல்படைத் திறங்களாம். போர்க் காலத்துப் பெரும்படை அமைதிக் காலத்து வேண்டாவாதலின், போர் முடிந்த பின் மூலப்படை யொழிந்த பிறவெல்லாம் கலைக்கப்படுவது மரபு. அன்று மூலப்படைப் பகுதிகள் தலைநகரிலும், பிற கோநகர்களிலும் எல்லைப் புறங்களிலும் புதிதாய் வெல்லப்பட்ட பகைவர் நாட்டிலும் நிறுத்தப் பெறும் (பழ.தமிழ்.43).

மூலப்பவுத்திரம் *mūla-p-pavuttiram,* பெ.(n.) காற்றுபிடிப்பு, பித்தம் உடம்பில் மிகையாகி மலவாயின் அடியில் வீங்கிப் புடைத்துப் பழுத்து உடைந்து அதனின்று நீர் இடையறாது ஒழுகிக் கொண்டிருக்கும் நோய்; fistula in ano.

[மூலம் + Skt. பவுத்திரம்.]

மூலப்பாண்டு *mūla-p-pāṇḍu,* பெ.(n.) உடல் காய்ந்து, முகம் வீங்கி வெளுத்து, வலு குறைந்து, கைகால் ஓய்ந்து, சூலை மேற்கொண்டு, உணவு சுருங்கும் ஒருவகை நோய்; a disease marked by dryness of

the skin bloated face, paleness, loss of viality etc, a kind of dropsy (சா.அக.).

மூலப்பாண்டுசூலை *mūlappāṇḍu-šūlai*, பெ.(n.) உடல் வறண்டு, வெளுத்துத் திமிர் ஏறி, வீங்கி, கை கால் வளைந்து, கட்டி மலம் சிறுத்தும், அரத்த சோகையுடனும், கைகால்கள் விறைப்புடனும், களைப்புடனும் காணப்படும் ஒரு வகை நோய்; a kind of dropsy accompanied by anaemia, swelling loss of sensation pain in the limbs and stiffness of joints fatigue etc (சா.அக.).

[மூலப்பாண்டு + சூலை.]

மூலப்பினிசம் *mūla-p-piṉišam*, பெ.(n.) மூக்கில் தசை வளர்ச்சியை உண்டாக்கும் ஒரு வகை நோய்; a disease called sinus (சா.அக.).

மூலப்புற்று *mūla-p-puṟṟu*, பெ.(n.) மலவாய் வழியில் ஏற்படும் புற்று நோய்; cancer in the rectal region (சா.அக.).

[மூலம் + புற்று.]

மூலப்பொருள் *mūla-p-poruḷ*, பெ.(n.) 1. மூலகரணியமானப் பொருள்; the primary elements. 2. கடவுள் (வின்.); god, as the primal Being.

[மூலம் + பொருள்.]

மூலபகந்தரம் *mūla-pagandaram*, பெ.(n.) மூலப்பவுத்திரம் பார்க்க; see *mūla-p-pavuttiram.*

மூலபஞ்சாட்சரம் *mūla-pañjāṭšaram*, பெ.(n.) ஐந்து எழுத்தாலாகிய நமசிவாய மந்திரம் (வின்.); the mystic mantra of five letters viz. *nama-šivāya.*

[மூலம் + Skt. பஞ்சாட்சரம்.]

மூலபண்டாரம் *mūla-paṇḍāram*, பெ.(n.) நிதி வைப்பு; treasure kept in reserve. *"எங்கள் பாண்டிப் பிரான்றன் னடியவர்க்கு மூலபண்டாரம் வழங்குகின்றான்" (திருவாச. 36 : 5).*

[மூலம் + பண்டாரம்.]

மூலபத்திரம் *mūla-pattiram*, பெ.(n.) செப்பு நெருஞ்சில்; a prostate plant - Indigofera enneaphylla (சா.அக.).

மூலபதம் *mūla-padam*, பெ.(n.) சொல்லின் முதல் நிலை (பகுதி) (வின்.); etymon, radix or indivisible part of a word.

[மூலம் + Skt. பதம்.]

மூலபரடை *mūla-paraḍai*, பெ.(n.) தலைமை அவை; chief assembly.

மூலபரணி *mūla-paraṇi*, பெ.(n.) முருங்கை மரம்; drumstic tree - *Moringa oleifera* (சா.அக.).

மூலபலதம் *mūla-paladam*, பெ.(n.) பலா மரம்; jack tree - *Arto carpus integri folia* (சா.அக.).

மூலபலம் *mūla-palam*, பெ.(n.) மூலப்படை பார்க்க; see *mūla-p-paḍai. "மூல பலவதைப் படலம்" (கம்பரா.).*

மூலபலா *mūla-palā*, பெ.(n.) ஒரு வகைப் பலா; a kind of jack tree (சா.அக.).

மூலபவுந்திரம் *mūla-pavundiram*, பெ.(n.) மூலப்பவுத்திரம் பார்க்க; see *mūla-p-pavuttiram.*

[மூலம் + Skt. பவுந்திரம்.]

மூலபாடம் *mūla-pāḍam,* பெ.(n.) உரை யில்லாத மூலம் (வின்.); bare text without commentary.

[மூலம் + பாடம்.]

மூலபிருத்தியன் *mūla-piruttiyaṉ,* பெ.(n.) கடவுள் சிவனுக்குத் தொண்டு செய்யும் தலைமைப் பணியாளன் (சண்டேசுரர்); *Šaṇḍēšurar*, as the chief servant of *Šiva*.

மூலபேரம் *mūla-bēram,* பெ.(n.) மூலவர் பார்க்க; see *mūlavar.*

மூலம்[1] *mūlam,* பெ.(n.) 1. விதையினின்று முன்தோன்றும் முளை; seed-leaf. 2. முளையின் மாற்றமாகிய வேர்; root. 3. திரண்ட வேராகிய கிழங்கு (பிங்.); bulb, tuber. *"முதிர்கனி மூல முனிக்கண மறுப்ப" (கல்லா.38).* 4. வேரை ஒட்டிய அடிமரம்; trunk of a tree. *"போதி மூலம் பொருந்தி" (மணிமே.26: 47).* 5. அடிப்படை; fundamental cause. 6. முதல் (ஆதி); origin, source, that which is original. *"மூலவோலை மாட்சியிற் காட்ட" (பெரியபு.தடுத்.56).* 7. கரணியம்; cause, foundation. *"மூலமாகிய மும்மலம்" (திருவாச. 2, 111).* 8. வாயில்; agency, means. *இது அவன் மூலமாகக் கிடைத்தது.* 9. முகாமை (பிரதானம்); importance. *"மூலவேள்விக்கு" (கம்பரா. பிரமாத்.164).* 10. மூலவர் (யாழ்.அக.) பார்க்க; see *mūlavar.* 11. மரம்; tree. 12. குருகுவிண்மீன் (பிங்.), மூலநாள்; the 19th naksatra. 13. அண்மை; nearness. 14. உரிமையாளர்; ownership. 15. இதளியம் (பாதரசம்); mercury. 16. சித்திர மூலம்; ceylon lead wort.

வ. மூல.

[முல்→மூல்→மூலம் = முளை.]

மூலம்[2] *mūlam,* பெ.(n.) மலவாய் ஓரத்திலோ, உட்பகுதியிலோ முளையைப் போல் உருவாகி வலியையும் மலச்சிக்கலையும் உண்டாக்கும் ஒரு நோய்; piles. *அவன் மூலநோயால் தாக்கப்பட்டுள்ளதால் அவனின் மூலம் அடிக்கடி வெளிவந்துவிடுகிறது.*

[முல்→மூல்→மூலம் = முளை. அண்டியில் முளைபோல் தோன்றும் நோய்.]

மூலம்[3] *mūlam,* பெ.(n.) 1. பிறிது ஒன்று தோன்றுவதற்கு அடிப்படையாக இருக்கும் பொருள்; source, origin. *இந்தச் சிக்கலுக்குப் பல காரணங்கள் இருக்கலாம். இருப்பினும் மூலகரணியம் இதுதான். இந்தச் செய்திக்கு மூலம் ஓர் ஆங்கிலப் பத்திரிகை. உண்மையாக, வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை மூலமாக வைத்துத்தான் இந்தக் கதையை எழுதினேன்.* 2. படி (பிரதி) எடுப்பதற்கு உரிய அடிப்படையான முதல் உருவாக்கம்; original of something. *இந்த ஓவியத்தின் மூலம் எங்கு உள்ளது?* 3. முதன் நூலாசிரியரால் எழுதப்பட்ட பாடம்; the original text. *சிலப்பதிகாரத்தின் மூலம் மட்டும் கொடு. உரையை நான் படித்திருக்கிறேன்.*

[முல்→மூல்→மூலம்.]

மூலம்[4] *mūlam,* பெ.(n.) அடிப்படை ஆவணம், ஓலை (ஆதாரப்பத்திரம்); document of title. *இந்த வீட்டு ஆவணத்தின் மூலம் என் அப்பாவிடம் உள்ளது.*

[முல்→மூல்→மூலம்.]

மூலம்[5] *mūlam,* இடை.(part.) ஒன்றின் ஊடாக அல்லது வழியாகப் பயன்படுத்தி ஒரு செயல் நடைபெறுவதாகக் காட்டும் இடைச்சொல்; a term to express the

sense of by means of, by through. *பேராசிரியரோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயன்றேன். ஆழ் துளைக் கிணறு மூலம் நிலத்தடி நீரை எடுத்து வேளாண்மைக்குப் பயன்படுத்துகிறார்கள். இடி விழுந்தால் மின்சார இடிதாங்கி மூலம் நிலத்தில் இறங்கிவிடும்.*

மூலம்[6] *mūlam,* பெ.(n.) முதலீடு; capital, investment. *"இந்நிலத்துக்கு மூலமான பணம்" (திருத்துறைப்பூண்டி கல்.1, 39, தெ.இ.கல்.தொ.17, கல் 546-39).*

[முல் → மூல் → மூலம்.]

மூலமட்டம் *mūla-maṭṭam,* பெ.(n.) மூலைமட்டம் பார்க்க; see *mūlai-maṭṭam.*

மூலமந்திரம்[1] *mūla-mandiram,* பெ.(n.) 1. தலைமை மந்திரம்; the chief mantra. *"மும்மைசா லுலகுக் கெல்லா மூல மந்திரத்தை" (கம்பரா.வாலிவ.71).* 2. அடிப்படை மந்திரம் (பிரணவம்); the mystic syllable ōm.

[மூலம் + மந்திரம்.]

மூலமந்திரம்[2] *mūla-mandiram,* பெ.(n.) செய்வினைகட்கு மூலிகைகளை பயன்படுத்த வேண்டி, வேரைப் பிடுங்குவதற்கு முன் சொல்லும் மந்திரம்; before collecting the herbs for medical purposes, some religious function with mantram is to be performed (சா.அக.).

[மூலம் + மந்திரம்.]

மூலமுக்கணை *mūla-mukkaṇai,* பெ.(n.) வில்வம்; Bael - *Crataeva religiosa* alias *Aegle mernaelos* (சா.அக.).

மூலமுளை *mūla-muḷai,* பெ.(n.) மூல நோயின் கரணியமாக மலவாயில் காணப்படும் முளை போன்ற நுனி; the fleshy excresence protruding out-wards in the rectum caused by piles (சா.அக.).

மூலமுளைமுனை *mūla-muḷai-muṉai,* பெ.(n.) மலவாயில் தோன்றும் முளையின் முனை; tip of the fleshy growth in the piles (சா.அக.).

[மூலமுளை + முனை.]

மூலமுறிவெங்கொதிப்பு *mūla-muṟi-veṅg odippu,* பெ.(n.) 1. மூலச்சூடு, மூலக் கொதிப்பு; internal heat of system. 2. மலவாய் வெளிப்படல்; prolapse of the anus.

[மூலம் + முறி + வெம்மை + கொதிப்பு..]

மூலமொழி *mūla-moḻi,* பெ.(n.) முதலில் தோன்றிய மொழி, தாய்மொழி; primary or parent language.

[மூலம் + மொழி.]

மூலர் *mūlar,* பெ.(n.) திருமூலர்; saint Thirumoolar. *"மூலர் முறை யொன்று" (சேக்கிழார்.பு.96).*

மூலர்முறை *mūlar-muṟai,* பெ.(n.) திருமந்திரம் (சேக்கிழார்.பு.96); Tiru mandiram.

[மூலர் + முறை.]

மூலரத்தக்கணம் *mūla-ratta-k-kaṇam,* பெ.(n.) குழந்தைகளுக்கு மலவாயில் மலத்துடன் அரத்தத்தை உண்டாக்கும் நோய்; a cogenital disease in children causing bloody stools (சா.அக.).

[மூலம் + அரத்தக்கணம்.]

மூலரவி *mūla-ravi,* பெ.(n.) காக்கையின் நால்வகை இனத்தில் ஒருவகை; one of the four varieties of crow (சா.அக.).

மூலரோகம் *mūla-rōgam,* பெ.(n.) மூல நோய்[1] (பதார்த்த) பார்க்க; see *mūla-nōy*[1].

[மூலம் + Skt. ரோகம்.]

மூலவக்கினி *mūla-vakkini,* பெ.(n.) சிறுநீர்; urine (சா.அக.).

மூலவர் *mūlavar,* பெ.(n.) கோயிலுள் கருவறையில் நிலையாக உள்ள கடவுளின் வடிவம் (மூர்த்தி); idol fixed in the sanctum sanctorum of a temple, dist. fr. *urcavar.* *மூலவர் வழிபாடு முத்தி தரும்.*

[மூலம் → மூலவர்.]

கோயிலில் கால்கோள் செய்யப்பட்ட கடவுள்.

மூலவள்ளி *mūla-valli,* பெ.(n.) வெற்றிலை (பிங்.), இலைக்கொடி; betel vine - *Piper betel*.

மூலவன்னிதீச்சலம் *mūlavanni-ticcalam,* பெ.(n.) சிறுநீரக புளியம் (அ) உப்பு; uric acid or salts (சா.அக.).

மூலவாசல் *mūla-vāšal,* பெ.(n.) 1. கோயிலின் உட்பக்கக் கருவறை வாயில்; entrance into the sanctum sanctorum of a temple. *"மூலவாசல் வெளிவிட்டு" (திருப்பு.399).* 2. உச்சித்துளை; fontanelle.

[மூலம் + வாசல். வாயில்→வாசல்]

மூலவாய்க்கால் *mūla-vāykkāl,* பெ.(n.) தொடக்கவாய்க்கால் (கோவை); beginning of water-course.

[மூலம் + வாய் + கால்.]

மூலவாய்வு *mūla-vāyvu,* பெ.(n.) இடுப்புப் புடிப்பு; முக்கோண மூட்டெலும்பு சார்ந்த ஒரு நோய்; the gas in the sacral region (சா.அக.).

மூலவாயு[1] *mūla-vāyu,* பெ.(n.) செரிமானம் சரியில்லாமல் உடல் வெளுத்து மலம் கருகி வயிறு எப்பொழுதும் இரைந்து கொண்டிருக்கும் ஒரு வகை நோய்; a windy disease attended with loss of appetite bloodlessness and noisy bowels (சா.அக.).

[மூலம் + Skt. வாயு.]

மூலவாயு[2] *mūla-vāyu,* பெ.(n.) வளிப் பிடிப்பால் (வாதம்) உண்டாகும் நோய் (வின்.); wind in the intestines, a disease.

[மூலம் + Skt. வாயு.]

மூலவிக்கிரகம் *mūla-vikkiragam,* பெ.(n.) மூலவர் (வின்.) பார்க்க; see *mūlavar.*

மூலவியாதி *mūla-viyādi,* பெ.(n.) மூலநோய்[1] (வின்.) பார்க்க; see *mūla-nōy*[1].

மூலவிருள் *mūlaviruḷ,* பெ.(n.) 1. ஆதனைப் பற்றியிருக்கும் அறியாமையாகிய இருள் (வின்.); the original darkness of the soul. 2. ஆணவ மலம் (யாழ்.அக.); the original impurity of the soul.

[மூலம் + இருள்.]

மூலவுதிரம் *mūla-vudiram,* பெ.(n.) மூலம் காரணியமாக மலவாயில் உண்டாகும் அரத்தம்; bleeding from the piles (சா.அக.).

[மூலம் + உதிரம்.]

மூலவுப்பு *mūla-v-uppu,* பெ.(n.) மண்டை ஓட்டில் இருந்து செய்யப்படும் ஒருவகை உப்பு; a kind of salt extracted from the human skull (சா.அக.).

[மூலம் + உப்பு.]

மூலவுபத்திரவம் *mūlavupattiravam,* பெ.(n.) மூலநோய்[1] பார்க்க; see *mūla-nōy.*

*[மூலம் + **Skt.** பவுத்திரம்.]*

மூலவெதுப்பு *mūla-veduppu,* பெ.(n.) மாடுகளுக்கு உண்டாகும் ஒருவகை நோய் (மாட்டுவா.158); a disease of cattle.

[மூலம் + வெதுப்பு.]

மூலவெழுத்து *mūla-v-eḻuttu,* பெ.(n.) 1. மூலாக்கரம் பார்க்க; see *mūlā-k-karam.* 2. முளைமந்திரம் (பிரணவம்); the mystic incantation *ōm.* *"மூல வெழுத்துடனைந்துங் கொளுவி" (கந்தபு. கயமுகனு.72)*

[மூலம் + எழுத்து.]

மூலவேர் *mūla-vēr,* பெ.(n.) அடிவேர்; tap root, main root of a tree. *"மகாமேரு பர்வதத்தை மூல வேருடன் முடியுடன் வாங்கினவன்று" (தக்கயாகப்.161, உரை).*

[மூலம் + வேர்.]

மூலவேர்த்தைலம் *mūla-vēr-t-tailam,* பெ.(n.) நடுநிலக்கடல் (முத்தியதரைக்கடல்) சார்ந்த பகுதிகளில் காணப்படும் ஒப்பனைச் செடிகளின் வேரில் இருந்து எடுக்கப்படும் நெய்மம்; oil prepared out of plumbgo root (சா.அக.).

*[மூலம் + வேர் + **Skt.** தைலம்.]*

மூலவோலை *mūla-v-ōlai,* பெ.(n.) மூல ஆவணம்; original of a deed, as distinguished form its copy. *"மூலவோலை மாட்சியிற் காட்ட வைத்தேன்" (பெரியபு. தடுத்தாட்.56).*

[மூலம் + ஓலை.]

மூலா *mūlā,* பெ.(n.) கொடி முல்லை; a creeper (சா.அக).

மூலாக்கரம் *mūlā-k-karam,* பெ.(n.) பிற எழுத்துக்களுக்கு மூலமான அகரம் (வின்.); the fundamental or basic letter from which all other letters are derived.

மறுவ. முதலெழுத்து.

மூலாக்கினி *mūlākkiṉi,* பெ.(n.) 1. இரைப்பை எரிச்சல், அடிவயிறு எரிச்சல்; the gastric fire. 2. மூலாதாரத்தில் உள்ள சூடு; internal heat having its seat in the *mūlātāram.*

*[மூலம் + **Skt.** அக்கினி.]*

மூலாகமம் *mūlākamam,* பெ.(n.) உலகத் தோற்ற வரலாறு; the book of genesis evolution of universe.

*[மூலம் + வேர் + **Skt.** ஆகமம்.]*

மூலாசனம் *mūlāšaṉam,* பெ.(n.) வேர் கிழங்குகளாகிய உணவு (யாழ்.அக.); food consisting only of roots and bulbs.

மூலாசாரம் *mūlāšāram,* பெ.(n.) மருந்துக்குப் பயன்படுத்தும் வேர்களை உடைய மூலிகை; herbs and plants whose roots are only used in medicine (சா.அக.).

மூலாட்டிநாடிகம் *mūlāṭṭi-nāḍigam,* பெ.(n.) ஒருவகைச் செடி (மூக்கிரட்டை); a prostate plant hogweed-*Boerhaavia procumbens* (சா.அக.).

மூலாதாரம்[1] *mūlātāram,* பெ.(n.) 1. அடிப்படை; fundamental cause. 2. ஆறுமூல(தார)ங்களுள் குய்யத்துக்கும் குதத்துக்கும் நடுவில் நான்கு இதழ்த் தாமரை போலுள்ள சக்கரம் (சிலப்.3:26, உரை); a cakkiram or nerve - plexus in the body. described as a four - petalled lotus, situated between the base of the sexual organ and the anus, one of *āṟātāram.*

[மூலம் + Skt. ஆதாரம்.]

மூலாதாரம்[2] *mūlātāram,* பெ.(n.) ஒன்றைத் தோற்றுவிக்க அல்லது ஒரு தொழிலைச் செய்ய அடிப்படையாகவும் மூலமாகவும் அமைவது; resources. *தேவையான மூலாதாரங்களும், பட்டறிவும் உடையவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.*

[மூலம் + Skt. ஆதாரம்.]

மூலாதிரசம் *mūlādi-rašam,* பெ.(n.) ஒருவகைச் செடி (அரத்தை); a plant - *Galangal - Alpinia galangal* (சா.அக.).

மூலாமை *mūlāmai,* பெ.(n.) கடல்வாழ் ஆமைவகையுளொன்று (முகவைமீன.); a species of sea tortoise (சா.அக.).

[மூலம் + ஆமை.]

மூலாவளி *mūlāvaḷi,* பெ.(n.) மூளை; brain (சா.அக.).

மூலான் *mūlāṉ,* பெ.(n.) நச்சுத் தன்மையுள்ள மீன்; a poisonous fish.

இம்மீனின் பல் படின் நெஞ்சடைக்கவும், இறக்கவும் நேரிடும் (செங்கை.மீன.).

மூலி[1] *mūli,* பெ.(n.) 1. மருந்தாகவுதவும் புல், பூண்டு செடி, கொடி; plant. *"பாதாள மூலி படருமே" (நல்வழி.23).* 2. மருந்துவேர்; medicinal root. 3. கிழங்கு; root of a tree.

த. மூலி > வ. மூலின்.

[மூல்→மூலி.]

மூலி[2] *mūli,* பெ.(n.) கரணியப் பொருளாகக் கருதப்படுபவன் (பூதன்); one who is the cause. *"மூலிவடிவா மெயினன்" (பாரத. அருச்சுனன்றவ.103).*

மூலிக்கரணம் *mūli-k-karaṇam,* பெ.(n.) 1. மூலம், ஆதி; commencement. 2. விலை ஆவணம்; sale deed.

[மூலி + கரணம்.]

மூலிக்கை *mūlikkai,* பெ.(n.) மூலிகை (யாழ்.அக.)பார்க்க; see *muligai.*

மூலிகற்பம் *mūli-kaṟbam,* பெ.(n.) மூலிகைகளைக் கொண்டு செய்த உடல் வலுவேற்றும் மருந்து (காய கற்பம்); herbs used in the preparation of rejuvenating drugs (சா.அக.).

[மூலி + கற்பம்.]

மூலிகை *mūligai,* பெ.(n.) மருந்தாகப் பயன்படும் செடி கொடிகளின் வேர், இலை முதலியன; roots leaves etc. of plants, used for medicine . *மூலிகை அறுத்தால், மூன்றுலகு ஆளலாம் (பழ.).*

வ. மூலிகா.

[மூலி→மூலிகை. த. மூலிகை > வ. மூலிகா.]

மூலிகைச்சத்து *mūligai-c-cattu,* பெ.(n.) மூலிகையில் உள்ள உயிர்ச் சத்து; the active principles of a drug.

[மூலிகை + சத்து.]

மூலிகைச்சரக்கு *mūligai-c-carakku,* பெ. (n.) சித்த மருத்துவத்தின்படி 1008 பொருட்கள்; 1008 products for Siddha medicine (சா.அக.).

[மூலிகை + சரக்கு.]

மூலிகைச்சாறு *mūligai-c-cāṟu,* பெ.(n.) மருந்துப் பூண்டினின்று பிழிந்தெடுத்தச் சாறு; juice of the herbs (சா.அக.).

[மூலிகை + சாறு.]

மூலிகைச்செம்பு[1] *mūligai-c-cembu,* பெ.(n.) மூலிகைகளில் இருந்து எடுக்கும் செம்பு; copper extracted from herbs (சா.அக.).

[மூலிகை + செம்பு.]

மூலிகைச்செம்பு[2] *mūligai-c-cembu,* பெ.(n.) திருமூலர் திருமந்திரம் 1000ல் சொல்லி உள்ள முறையில் மூலிகையிலிருந்து எடுத்தச் செம்பு; copper extracted from herbs - The method of extraction is told in Thirumandiram.

[மூலிகை + செம்பு.]

மூலிகைப்பயிர் *mūligai-p-payir,* பெ.(n.) மருந்தாகப் பயன்படும் விளைபயிர்; medicinal herbs.

[மூலிகை + பயிர்.]

மூலிகைமர்மம் *mūligai-marmam,* பெ.(n.) மூலிகையின் மறைபொருள் (கமுக்கங்களை) பற்றிய நூல்; secrets about the herbs (சா.அக.).

[மூலிகை + மர்மம்.]

மூலிகையீயம் *mūligai-yīyam,* பெ.(n.) திருமூலர் திருமந்திரம் 1000த்தில் சொல்லியுள்ள மூலிகையினின்று ஈய மெடுக்கும் முறை, ஈய மூலிகை; the method of extracting lead from herbs is told in `Thirumandiram' lead extracted from herbs (சா.அக.).

[மூலிகை + ஈயம்.]

மூலியம்[1] *mūliyam,* பெ.(n.) 1. விலை; price. 2. விலைக்கு வாங்கிய பொருள் (யாழ்.அக.); article purchased. 3. ஊதியம், கூலி (யாழ்.அக.); wages, salary. 4. வாயில் (நிமித்தம்); means agency.

[மூலம்→மூலி→மூலியம்.]

த. மூலம்→வ. மூல்யம்

மூலியம்[2] *mūliyam,* வி.அ.(adv.) வாயில்; through. *யார் மூலியமாய்ச் செய்தி தெரிவித்தாய்? (உ.வ.).*

[முல்→மூல்→மூலம்→ மூலியம்.]

மூலை *mūlai,* பெ.(n.) 1. இருபக்கங்களோ, கோடுகளோ சந்திக்கும் கோணம்; corner where two sides or lines meet. *"மூலை முடுக்குகளும்" (இராமநா.சுந்.3). சதுரத்துக்கு நான்கு மூலைகள். சேலைத் தலைப்பின் ஒரு மூலை கிழிந்திருந்தது.* 2. கோணத் திசை; intermediate point of direction. *ஈசான மூலையில் வீடு.* 3. முனை; tip, corner of a street. *தெரு மூலையில் வண்டி நிற்கிறது.* 4. மிகச் சிறு அளவு; no worth or value, of no avail. *கல்யாணச் செலவுக்கு இந்த*

ஆயிரம் ரூபாய் எந்த மூலைக்கு? பெரும் புள்ளிகளே அவனை எதிர்க்க முடியாத போது நீ எந்த மூலைக்கு?. 5. வீடு (வின்.); house. *மூலை வீட்டிலே முட்டை இடுகிறான் (பழ.).* 6. அறை மூலை; corner of the room. *"இருட்டறை மூலையிலிருந்த குமரி" (திருமந். 1514).*

ம. மூல; தெ. மூல; க. மூலெ.

[முல்→மூல்→மூலை.]

மூலைக்கச்சம் *mūlai-k-kaccam,* பெ.(n.) பின் கச்சத்திலிருந்து ஆடைநுனி தொங்கும்படி உடைகட்டும் வகை; fashion of tying a man's cloth so that one end is partly tucked in behind and partly let freely down.

[மூலை + கச்சம்.]

மூலைக்கப்புப்பாய்தல் *mūlai-k-kappu-p-pāydal,* பெ.(n.) குழந்தைகளின் விளையாட்டு வகை (இ.வ.); a children's game.

[மூலை + கப்புப்பாய்தல்.]

மூலைக்கார்த்திகை *mūlai-k-kārttigai,* பெ.(n.) நளி (கார்த்திகை) மாதத்தில் நளி விண்மீனுக்கு (திருக் கார்த்திகைக்கு)ப் பின் வரும் நாட்கள் (இ.வ.); the day of the month of *Kārtigai* after *Tiru-k-kārttigai.*

மூலைக்கால் *mūlai-k-kāl,* பெ.(n.) முழுத்தக்கால் பார்க்க; see *muḻutta-k-kāl. "மூலைக்கால் நாட்டும் விதி" (சர்வா. சிற்.39).*

[மூலை + கால்.]

மூலைக்காற்று *mūlai-k-kāṟṟu,* பெ.(n.) மூலைத் திசையினின்று அடிக்குங் காற்று (வின்.); wind blowing from an intermediate point of the compass.

[மூலை + காற்று.]

மூலைக்குடா *mūlai-k-kuḍā,* பெ.(n.) 1. குடா துறைமுகம் முதலியவற்றின் மூலை; corner of a bay harbour, etc. 2. வீடு, வயல் முதலியவற்றின் மூலையிடம் (வின்.); out-of-the way room in a large house; remote corner of a large field.

[மூலை + குடா.]

மூலைக்குத்து *mūlai-k-kuttu,* பெ.(n.) 1. முற்றத்து மூலைக்கு எதிராக வீட்டுத் தலைவாயிலின் நிலை அமைந்திருக்கை; position of a house in which its main door-way faces a corner of the courtyard. 2. மூலைப்பார்வை பார்க்க; see *mūlai-p-pārvai.*

[மூலை + குத்து.]

மூலைக்குமூலை *mūlaikku-mūlai,* வி.எ. (adv.) சிதறுபட (உ.வ.); in a scattered manner.

[மூலை + கு + மூலை.]

மூலைக்குமூலைவரிசை *mūlaikku-mūlai-variśai,* பெ.(n.) ஒன்றுவிட்டொரு கல் எதிர்முகமாகச் சாயும்படி அமைக்கும் கட்டட முறை (C.E.M.); diagonal bond, herring bone work, rows of parallel lines in which the alternate rows slope in different directions.

[மூலைக்குமூலை + வரிசை.]

மூலைக்கை *mūlai-k-kai,* பெ.(n.) வீட்டின் மூலை முகட்டுச் சட்டம் (வின்.); beam from a corner to the ridge of a roof.

[மூலை + கை.]

மூலைகா–த்தல் *mūlai-k-kā-,* 4 செ.கு.வி. (v.i.) கணவனை இழந்த மனைவி வீட்டுக்குள் ஒரு மூலையிற் கிடந்து துன்பமடைதல் (இ.வ.); to lie mourning in a corner of a house, as a recently widowed woman.

[மூலை + கா–த்தல்.]

மூலைத்தாய்ச்சி *mūlai-t-tāycci,* பெ.(n.) நாலுமூலைத்தாய்ச்சி என்னும் விளையாட்டு; a game.

[மூலை + தாய்ச்சி.]

மூலைத்திசை *mūlai-t-tišai,* பெ.(n.) பெருந்திசைகளுக்கு நடுவேயுள்ள கோணத் திசை (வின்.); intermediate point of the compass.

[மூலை + திசை.]

மூலைப்பார்வை *mūlai-p-pārvai,* பெ.(n.) 1. கோணத் திசையை நோக்கிய வீட்டு நிலை; position of the house facing an intermediate point of the compass, considered in auspicious. 2. சாகுந் தறுவாயில் விழி ஒருபுறமாகச் செருகி நிலைக்குத்திடுகை; fixed, oblique look of the eyes at the time of death.

[மூலை + பார்வை.]

மூலைமட்டப்பலகை *mūlai-maṭṭa-p-palagai,* பெ.(n.) மூலைமட்டம் பார்க்குங் கருவி (C.E.M.); mason's set - square.

[மூலை + மட்டம் + பலகை.]

கட்டடத்தின் மூலையின் ஒழுங்கைக் கண்டறியப் பயன்படுத்தும் கோணமுடையதாகச் செய்யப்பட்ட 'T' அல்லது 'ட' வடிவ கருவி.



மூலைமட்டம் *mūlai-maṭṭam,* பெ.(n.) 1. நேர்கோணம்; right angle. 2. மூலை மட்டப்பலகை பார்க்க; see *mūlai-maṭṭa-p-palagai.*

[மூலை + மட்டம்.]

மூலைமட்டம்பார்த்தல் *mūlai-maṭṭam-pārttal,* பெ.(n.) வாயில் நிலையில் மூலைகளின் சரிசம அளவை அளவிட்டுப் பார்க்கை; testing a door-frame by diagonal measurement.

[மூலை + மட்டம் + பார்த்தல்.]

மூலைமுடக்கு *mūlai-muḍakku,* பெ.(n.) 1. மூலைமுடங்கி பார்க்க; see *mūlai-muḍaṅgi.* 2. மூலைமுடுக்கு பார்க்க; see *mūlai-muḍukku.*

[மூலை + முடக்கு.]

மூலைமுடங்கி *mūlai-muḍaṅgi,* பெ.(n.) வளைந்து செல்லும் சிறு வழி (வின்.); crooked way.

[மூலை + முடங்கி.]

மூலைமுடுக்கு *mūlai-muḍukku,* பெ.(n.) 1. பொருள்களுக்கு இடையில் உள்ள சிறு இடைவெளி; small gaps between things. *வீட்டின் மூலை முடுக்கெல்லாம் தேடியும் விரலணி (மோதிரம்) கிடைக்கவில்லை.* 2. எளிதில் சென்றடைய முடியாத இடம்; unreachable corner of a country, etc. *இந்தப் பத்திரிகை நாட்டின் மூலை முடுக்கெல்லாம் கிடைக்கும்.* 3. சந்து பொந்து; nook and corner.

[மூலை + முடுக்கு.]

மூலையடியே *mūlai-y-aḍiyē,* கு.வி.எ. (adv.) எதிர்பாராத வகையில் (எதேச்சையாய்); at one's pleasure, as one likes. *"மூலையடியே சுகானுபவம் பண்ணித் திரிந்தார்களாம் படி" (ஈடு.4. 9 : 5).*

[மூலை + அடியே.]

மூலையடிவழி *mūlai-y-aḍi-vaḻi,* பெ.(n.) குறுக்கு வழி; short cut. *"எனக்கு இங்ஙனே யிருப்பதொரு மூலையடிவழி யுண்டாவதே" (ஈடு, 10. 8 : 3).*

[மூலை + அடி + வழி.]

மூலையரம் *mūlai-y-aram,* பெ.(n.) மூன்று பட்டையுள்ள அரம் (வின்.); three-sided rasp or file.

[மூலை + அரம்.]



மூலையோட்டம் *mūlai-y-ōṭṭam,* பெ.(n.) நேர்க்கோணமின்றி மூலையாய் அமைகை (வின்.); angular extension, diagonal extending out of square.

[மூலை + ஓட்டம்.]

மூலையோடு[1]-தல் *mūlai-y-ōḍu-,* 5 செ.கு.வி.(v.i.) நேர்க்கோணமின்றி மூலை வாக்கில் அமைதல் (வின்.); to be elongated as a corner to run out of square.

[மூலை + ஒடு-தல்.]

மூலையோடு[2] *mūlai-y-ōḍu,* பெ.(n.) 1. கூரை முகட்டில் வேயும் ஓடு வகை; ridge-tile. 2. கூடல் வாயில் இடும் ஓடு; a kind of tile used for covering the valley of a roof.

[மூலை + ஓடு.]



மூலைவாக்கு *mūlai-vākku,* பெ.(n.) மூலை கோணிய நிலை (வின்.); diagonal position, oblique position.

[மூலை + வாக்கு.]

மூலைவாங்கல் *mūlai-vāṅgal,* பெ.(n.) மூலையோட்டம் பார்க்க; see *mūlai-y-ōṭṭam.*

[மூலை + வாங்கல்.]

மூலைவாசல் *mūlai-vāšal,* பெ.(n.) தெருவிற்கு நேராகவன்றி ஒதுக்கமாய் அமைந்த வாயில்; gate or door - way, at or near a corner of a house.

[மூலை + (வாயில்) வாசல்.]

மூலைவாட்டம் *mūlai-vāṭṭam,* பெ.(n.) மூலைவாக்கு பார்க்க; see *mūlai-vākku.*

[மூலை + வாட்டம்.]

மூலைவாட்டு *mūlai-vāṭṭu,* பெ.(n.) மூலைவாக்கு பார்க்க; see *mūlai-vāṭṭu.*

[மூலை + வாட்டு.]

மூலைவிட்டம் *mūlai-viṭṭam,* பெ.(n.) நான்கு கோணத்தில் உள்ள எதிர் மூலைகளைச் சேர்க்குங் கோடு; diagonal.

[மூலை + விட்டம்.]

மூவகைச்சத்தி *mūvagai-c-catti,* பெ.(n.) விழைவு ஆற்றல் (இச்சா சத்தி), செயலாற்றல் (கிரியாசத்தி), அறிவாற்றல் (ஞானசத்தி) எனும் மூவகையாற்றல்; the three powers 1. the power of affection and benevolence to souls. 2. the power of creation - Evolution of universe. 3. the power of knowledge (சா.அக.).

[மூவகை + சத்தி.]

மூவகைப்பாலகர் *mūvagai-p-pālagar,* பெ.(n.) 1. பால் குடிக்கும் குழந்தை; those infants which can take only milk. 2. பாலும் குடிப்பதோடு சோறு தின்னும் குழந்தை; those which can take and live on in milk and rice. 3. சோறு மட்டும் தின்னும் குழந்தை; those that can live on rice only (சா.அக.).

[மூவகை + பாலகர்.]

மூவகைமதம் *mūvagai-madam,* பெ.(n.) மூன்று வகையான மதம்; three kinds of religions.

[மூன்று→மூ + வகை + மதம் .]

மக்களின் அறிவு நிலைக்கேற்ப மதம் 1. சிறுதெய்வ வணக்கம், 2. பெருந்தேவ மதம், 3. கடவுள் சமயம் என மூவகைப்படும்.

இம்மை நலத்தை மட்டும் நோக்கி இன்பக் காலத்திலும், துன்பக் காலத்திலும், ஐம்பூதமும் ஆவிகளும் போன்ற சிறு தெய்வங்கட்கு உணவு படைத்துக் காவு கொடுப்பதும், சிறு தெய்வ வணக்கம்; சிவன் அல்லது திருமால் பெயரால் இறைவனை நாள்தோறும்வழிபட்டு, உயிர்க் கொலை நீக்கிக் காய்கனி மட்டும் படைத்து, அவ்வம்மத அடையாளந் தாங்கி இருதிணை யுயிருக்கும் தீங்கு செய்யாது இயன்றவரை நன்மையே செய் தொழுகுவது பெருந்தேவ மதம்; எங்கும் நிறைந்திருக்கும், இறைவனை உருவ வணக்கமின்றி உள்ளத்திலேயே வழிபட்டு, தன்னையே படைத்து, முக்கரணமுந் தூய்மையாகி இல்லறத்திலேனும் துறவறத்திலேனும் நின்று, இயன்றவரை எல்லாவுயிர்கட்கும் நன்மையே செய்து, இம்மையிலேனும் மறுமையிலேனும் வீடு பெற வொழுகுவது கடவுள் சமயமாம்.

சிறு தெய்வ வணக்கத்திற்கு உருவம் இன்றியமையாதது; பெருந்தே வழிபாட்டிற்கு, அது வழிபடுவாரின் அகக் கரண வளர்ச்சிக் கேற்றவாறு இருந்தும் இல்லாமலும் இருக்கலாம் (தேவநேயம்–12, பக்.107).

மூவகையிடம் *mūvagai-y-iḍam,* பெ.(n.) தமிழ் இலக்கணங்கள் கூறும் தன்மை, முன்னிலை, படர்க்கை; place of Tamil

gramatical verse first person, second person and third person, etc.

[மூன்று + வகை + இடம்.]

மூவங்கம் *mū-vaṅgam,* பெ.(n.) 1. காசு (வெள்வங்கம்); tin. 2. ஈயம்பொதி (கருவங்கம்); lead. 3. துத்தநாகம் (நாகம்); zinc (சா.அக.).

[மூ + அங்கம்.]

மூவசைச்சீர் *mū-v-aśai-c-cīr,* பெ.(n.) உரிச்சீர்; metrical foot of three syllables. *"வெண்பா வினமா நேரசையாலிற்ற மூவசைச் சீர்" (காரிகை, உறுப்.6).*

[மூ + அசை + சீர்.]

மூவட்சி *mū-v-aṭśi,* பெ.(n.) தேங்காய் (தைலவ.தைல.); coconut, as having three eyes.

[மூ + Skt. அட்சி.]

தேங்காயின் மேற்பரப்பில் மூன்று புள்ளிகள் காணப்படும். இம்மூன்றும் சிவனின் முக்கண் என பக்தர் கூறுவதால் இதற்கு மூவட்சி எனப் பெயர் வந்திருக்கலாம்.

மூவடிமுக்கால் *mūvaḍi-mukkāl,* பெ.(n.) வெண்பாவிற் கொருபெயர்; a kind of *Veṇbā.*

[மூவடி + முக்கால். மூன்று முழுவடியும் (அடிதோறும் நான்கு சீர் கொண்டது) ஒரு முக்காலடியும் (மூன்று சீர் கொண்டது) கொண்டது.]

மூவடிமுப்பது *mū-v-aḍi-muppadu,* பெ.(n.) இடைக்காடர் செய்ததாகக் கூறப்படுவதும், சிந்தடிச் செய்யுள் முப்பது கொண்டதுமான ஒரு நூல் (தொல்.பொருள். 548, உரை); a poem of 30 stanzas of three lines each, attributed to *iḍai-k-kāḍar.*

[மூன்று + அடி – மூன்றடி→மூவடி + முப்பது.]

மூன்றடிச் செய்யுட்கள் முப்பது கொண்டவை. இந்நூல் தற்போது இல்லை (கலை.).

மூவடிவு *mū-vaḍivu,* பெ.(n.) ஆண், பெண், அலி என்ற மூவகை வடிவம்; the three forms of living things viz. *āṇ,peṇ,ali.*

[மூ + வடிவு.]

மூவணை *mūvaṇai,* பெ.(n.) மூன்று இணை ஏர் மாடு (வின்.); three yokes of oxen.

[மூன்று + இணை.]

மூவர்¹ *mūvar,* பெ.(n.) 1. முவ்வடிவுகள்; the Hindu trinity. *"பலர்புகழ் மூவருந் தலைவராக" (திருமுரு.162).* 2. மூவேந்தர் பார்க்க; see *mūvēndar.* *"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்" (தொல். பொருள்.391).* *"முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்" (புறநா.35:4).* *"தமிழ்கெழு மூவர் காக்கு" (அகநா.31:14).* 3. தேவாரக் குரவர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர், ஆகிய மூன்று நாயன்மார்கள்; the three Saiva saints, viz. Appar, śampandar, śundarar authors of the Tēvāram hymns. *"மூவர்செய் பனுவல்" (தாயு. சச்சிதா.3).*

[மூ→மூவர்.]

மூவர்² *mūvar,* பெ.(n.) அந்தணர், அரசர், வணிகர் எனும் மூன்று பிரிவினர்; three section of people, Brahmins, kings and traders who are considered to be high-birth.

[மூ→மூவர்.]

"இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றி னின்ற துணை" (குறள், 41). "என்னுங்குறளில் இயல்புடைய மூவர்" என்பது அதிகார வியைபால் அந்தணர், அரசர், வணிகர் என்னும் முக்குலத் தில்லறத்தாரையே குறிக்கும் பிரமசாரியன், வானப்பிரத்தன், சந்நியாசி என்று பரிமேலழகர் கூறியிருப்பது பொருந்தாது. துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் என்னுங் குறளிலுள்ள துறந்தார் என்னுஞ் சொல்லே துறவியரைக் குறிக்கும் (பழ.த.ஆ.பக்.99).

மூவர்தண்பொழில் *mūvar-taṉpoḻil*, பெ.(n.) தமிழ்நாடு; Tamil Nadu.

[மூவர் + தண்பொழில். மூவர் = சேர, சோழ, பாண்டியர்.]

பரதகண்ட மெனப்படும் இந்துதேயம், பழங்காலத்தில் நாவல் மரத்தான் சிறப்புற் றிருந்தமையால், நாவலம் பொழில் எனப்பட்டது.

ஒரு காலத்தில் குமரி மலை முதல் பனிமலை (இமயம்) வரையும் முத்தமிழ் வேந்தர் ஆட்சி செலுத்தியமையால், நாவலந் தண்பொழிற்கு மூவர் தண்பொழில் 'மூவர் தண்பொழில்' என்பது தென்னாட்டை அல்லது தமிழ்நாட்டை மட்டும் குறித்தது (சொ.ஆ.க.).

மூவரசர் *mū-v-arašar*, பெ.(n.) மூவேந்தர் பார்க்க; see *mū-vēndar*.

[மூ + அரசர்.]

மூவராயர் *mūvarāyar*, பெ.(n.) மூவேந்தர் பார்க்க; see *mū-vēndar*. *"மூவராயர் கண்டன்" (தெ.இ.கல்.தொ.1:10).*

[மூவரையர்→மூவராயர்.]

மூவரியணில் *mū-vari-y-aṇil*, பெ.(n.) முதுகில் நீளமாக மூன்று வரிகளுடைய அணில் வகை; striped squirrel, Sciurus palmarum, as having three longitudinal stripes along its back. *"மூவரியணிலோடாங்கவை நான்குங் குட்டிக்குரிய" (தொல்.பொருள்.561).*

[மூ + வரி + அணில்.]



மூவரையர் *mū-v-araiyar*, பெ.(n.) மூவராயர் பார்க்க; see *mūvarāyar*.

[மூ + அரையர்.]

மூவளபிசைத்தல் *mūvaḷa-pišaittal*, பெ.(n.) செய்யுளில் ஓசை குறையுமிடத்து நெடில்கள் தனது இரண்டு மாத்திரை அளவிலிருந்து மூன்று மாத்திரை அளபாய் நீட்டித்து ஒலிப்பது (அளபெடை); a letter lengthened in sound either in literary. *"ஓஒதல் வேண்டு மொளி மாழ்குஞ் செய்வினை ஆஅதும் என்னு மவர்" (குறள், 653).*

மறுவ. அளபெடை.

[மூன்று + அளபு + இசைத்தல். நெட்டுயிர்கள் மூவலகு பெற்று ஒலிப்பது.]

எழுத்துக்களின் ஒலியளவு கூறும்போது ஒவ்வொரு மாத்திரையையும் ஒரு அலகாகக் கொண்டனர். ஒலியலகினை அளவு என்றும் குறிப்பர். உயிரெழுத்துக்களில் குறில் ஓரலகு பெறும். நெடில் ஈரலகு பெறும். நெட்டுயிர்கள் சில சூழலில் மூன்று மாத்திரை அளவினதாக ஒலிக்கப்படுவதும் உண்டு. அதுவே அளபெடை.

மூவறிவுயிர் *mūvaṟivuyir,* பெ.(n.) ஊறு, சுவை, நாற்றம் ஆகிய மூவறிவு மட்டுமே யுள்ள சிதலெறும்பாதியான சிற்றுயிர்கள்; creatures such as ants, having only three senses. *"சிதலும் எறும்பும் மூவறிவினவே பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (தொல். பொருள்.மரபு.30).*

[மூ + அறிவு + உயிர். உற்றறிதல், சுவைத்தறிதல், நுகர்ந்தறிதல் அல்லது முகர்ந்தறிதல் ஆகிய மூன்று அறிவினை மட்டும் பெற்ற சிதலெறும்பு முதலிய உயிர்கள்.]

மூவன் *mūvaṉ,* பெ.(n.) கழக கால அரசன்; a king belongs to *Śaṅgam* period.

பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர்க்கு விரைவில் பரிசில் தராமையால் இகழப் பெற்றவன் (புறநா.209). பொறையன் என்னும் சேர மன்னன் மூவனுடையப் பல்லைப் பிடுங்கித் தொண்டி நகரின் மதில் வாயிற் கதவிலே அழுத்தினான் என்று தெரிகிறது (நற்.18). பாலை திணை குறித்து பொய்கையார் பாடிய பாடலில் மூவன் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது.

"பருவரல் நெஞ்சமொடு பல்படரகல
வருவர் வாழி தோழி மூவன்"
முழுவலி முள்ளெயி றழுத்திய கதவிற்
கானலந் தொண்டிப் பொருநன் வென்வேல்
தெறலருந் தானைப் பொறையன் பாசறை
நெஞ்ச நடுக்குறூஉந் துஞ்சா மறவர்
திரைதபு கடலின் இனிது கண் படுப்பக்
கடாஅங் கழீஇய கதனடங்கியானைத்
தடவு நிலை யொரு கோட்டன்ன
ஒன்றிலங் கருவிய குன்றிறந்தோரோ"
(நற்.18.).

மூவாசை[1] *mū-v-āśai,* பெ.(n.) மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்ற மூவகைப்பட்ட பற்று; the three desires or passions, viz., *maṇ-ṇ-āśai, peṇ-ṇ-āśai, Poṉ-ṉ-āśai.*

[மூ + ஆசை.]

மூவாசை[2] *mūvāśai,* பெ.(n.) பிணத்தின் மேல் மூடும் சீலை (இ.வ.); cloth spread over a corpse.

மூவாதியார் *mūvādiyār,* பெ.(n.) ஐந்திணை எழுபது என்ற நூலை இயற்றிய ஆசிரியர்; a poet, author of *Aintiṇai-y-eḻubadu.*

மூவாமருந்து *mūvā-marundu,* பெ.(n.) அமிழ்தம்; சாவா மருந்து; nectar, as preventing old age. *"மூவா மருந்தின் முன்னர்த் தோன்றலின்" (சிலப்.2 : 46).*

[மூ + ஆ + மருந்து.]

மூவாமலை *mūvā-malai,* பெ.(n.) மேரு மலை (பிங்.); the Mount *Mēru.*

மூவாமுதல் *mūvā-mudal,* பெ.(n.) கடவுள் (யாழ்.அக.); God.

[மூ + ஆ + முதல்.]

மூவாயிரவர் *mū-v-āyiravar,* பெ.(n.) தில்லை வாழ் பிராமணர் மூவாயிரவர்; the community of 3000 Brahmins, being special devotees of the God at Chidambaram. *"மூவாயிரவர்க்கு மூர்த்தி யென்னப் பட்டானை" (தேவா.17, 7).*

[மூ + ஆயிரம் – மூவாயிரம்→மூவாயிரவர்.]

மூவார் *mūvār,* பெ.(n.) மூப்பில்லாத தேவர்; the *Dēvas,* as never ageing. *"மூவார் தொழுதெழு வடிவம்" (மேருமந்.874).*

[மூ + ஆ – மூவா → மூவார்.]

மூவார்விரியன் *mūvār-viriyaṉ,* பெ.(n.) நீளம் குறைந்து தடித்துள்ள பாம்பு வகை (கோவை.); a kind of short and pursy *viriyaṉ* snake. *இருபக்கமும் தலையிருப்பது போல் தோற்றமளிக்கும் பாம்பு.*

[மூவார் + விரியன்.]

மூவிசை *mū-v-iśai,* பெ.(n.) மந்தம், மத்திமம், உச்சம் என்ற மூன்றான பண் வகை (வின்.); pitch of three grades, viz. mandam, mattimam, uccam.

[மூ + இசை.]

மூவிடம் *mū-v-iḍam,* பெ.(n.) தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்று இடங்கள் (பிங்.); the three persons, viz., *taṉmai, muṉṉilai, paḍarkkai.*

மறுவ. மூவகையிடம்

[மூ + இடம்.]

தன்மை – நான், நாங்கள், யான், யாம்

முன்னிலை – நீ, நீங்கள், நீர், நீவிர்

படர்க்கை – அவன், அவள், அது.

மூவிரல்தட்டல் *mūviral-taṭṭal,* தொ.பெ. (vbl.n.) நாடி பார்த்த பின் மூவிரலையும் நிலத்தின் மேல் தட்டல்; patting the three fingers on the earth after feeling the pulse (சா.அக.).

[மூன்று + விரல் + தட்டல்.]

மூவிருந்தேக்கி *mūvirundēkki,* பெ.(n.) தொப்புள்; umbilicus (சா.அக).

மூவிலை[1] *mū-v-ilai,* பெ.(n.) மூவிலை வேல் பார்க்க; see *mū-v-ilai-vēl.* *"கொலைமலி மூவிலையான்" (தேவா.923, 11).*

மூவிலை[2] *mū-v-ilai,* பெ.(n.) 1. குப்பை மேனி; a plant used as antidote- *Acalypha-indica.* 2. நரிப்பயறு (மலை.); field-gram. 3. வில்வம்; bael, as triple - leaved. *"நல்லறுகு மூவிலைப் பத்திரமிரண்டும்" (செவ்வந்தி.பு. பிரமதேவன். 43).*

மூவிலைக்குருந்து *mūvilai-k-kurundu,* பெ.(n.) பொதிகை மலைச் சாரலில் தாமிரபரணி ஆற்றங்கரையில் விளைவதாகச் சொல்லும் ஒருவகைச் செடி; a plant said to grow in the *Podigai* mountain and the shores of the river *Tamaraparani* (சா.அக.).

[மூன்று + இலை + குருந்து.]

மூவிலைச்சி *mūvilaicci,* பெ.(n.) வில்வம்; a sacred tree - *Aegle mermelos alias Crataeva religiosa* (சா.அக.).

மூவிலைச்சூலம் *mūvilai-c-cūlam,* பெ.(n.) மூவிலைவேல் பார்க்க; see *mūvilai-vēl.* *"மூவிலைச் சூலமென்மேற் பொறி" (தேவா.937, 1).*

[மூ + இலை + சூலம்.]

மூவிலைப்பயறு *mūvilai-p-payaṟu,* பெ.(n.) ஒருவகைப் பயறு, நரிப்பயறு; a variety of pulse, field-gram - *Phaseolus aconitifolius (சா.அக.).*

[மூ + இலை + பயறு.]

மூவிலைமின்னி *mūvilai-minni*, பெ.(n.) அவரை (சங்.அக.); a twiner beans - *Dolichos lab lab* (சா.அக.).

மூவிலைவேல் *mūvilai-vēl*, பெ.(n.) முத்தலை வேல் (திரிசூலம்); trident. *"மூவிலை வேல் வலனேந்திப் பொலிபவனே" (திருவாச. 6 : 9).*

[மூவிலை + வேல்.]

மூவிலைவேலோன் *mūvilaivēlōn*, பெ.(n.) முத்தலை வேல் தாங்கிய வயிரவன் (பிங்.); Bhairava, as wielding the trident.

[மூவிலைவேல்→மூவிலைவேலோன்.]

மூவிழை *mūvilai*, பெ.(n.) பாவு நெசவில் பயன்படுத்தப்படும் ஊடிழை; yarn that intervenes the warp.

[மூ + இழை.]

மூவினம் *mūvinam*, பெ.(n.) 1. ஆன் (பசு), எருமை, ஆடு ஆகிய மூவகைப்பட்ட கால்நடை; the three kinds of cattle, viz., *pašu, erumai, āḍu. "மூவின மேய்த்தல் சேவினந் தழுவல்" (இலக்.வி.390).* 2. வல்லினம் மெல்லினம் இடையினம் என்ற மூவகை மெய்யெழுத்து (நன்.236); the three classes of consonants, viz., *vallinam, mellinam, iḍaiyinam.*

[மூ + இனம்.]

மூவு-தல் *mūvu-*, 5 செ.கு.வி.(v.i.) விலகுதல் (யாழ்.அக.); to separate, remove.

த. மூவு-தல்; E. move.

[ஓவு-தல்→மூவு-தல் = நீங்குதல்.]

மூவுதவமணி *mūvudava-mani*, பெ.(n.) யானைக் குன்றிமணி; barricary seed - *Adanan thera pavonia* (சா.அக.).

மூவுலகம் *mūvulagam*, பெ.(n.) மூவுலகு பார்க்க; see *mūvulagu. "மூவுலகம் விளைத்த வுந்தி" (திவ்.இயற். திருவாசி.4).*

[மூ + உலகம்.]

மூவுலகளந்தோன் *mūvulagaḷandōn*, பெ.(n.) திருமால்; Visṇu.

[மூவுலகு + அளந்தோன்.]

மூவுலகாளி *mūvulagāḷi*, பெ.(n.) 1. கடவுள்; god. *"முனைவன் மூவுலகாளி" (திவ்.திருவாய்.8:9:5).* 2. இந்திரன் (யாழ். அக.); indra.

[மூவுலகு + ஆளி. ஆள்→ஆளி.]

மூவுலகு *mū-v-ulagu*, பெ.(n.) துறக்கம் (சுவர்க்கம்), நிலவுலகம் (மத்தியம்), கீழுலகு (பாதாளம்) என்ற மூன்று உலகங்கள்; the three worlds. *"மூவுலகுங் கேட்குமே... கொடுத்தா ரெனப் படுஞ்சொல்" (நாலடி,100).*

[மூ + உலகு.]

மூவுலகுணர்ந்தமூர்த்தி *mūvulagunarnda-mūrtti*, பெ.(n.) அருகன்; Arhat.

[மூவுலகு + உணர்ந்தமூர்த்தி.]

மூவெயில் *mū-v-eyil*, பெ.(n.) திரிபுரம்; the three cities, destroyed by *Šivan. "முக்கண்ணான் மூவெயிலு முடன்றக்கால்" (கலித்.2:4).*

[மூ + எயில்.]

மூவேந்தர் *mū-vēndar,* பெ.(n.) சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூன்று தமிழரசர்; the three Tamil kings, viz., *Cēraṉ, Cōḻaṉ, Pāṇḍiyaṉ.* *"முடியா லுலகாண்ட மூவேந்தர் முன்னே" (தேவர்.880, 11).*

[மூ + வேந்தர்.]

மூவேந்திரவேளார் *mu-vēndiravēḷār,* பெ.(n.) விருப்பாட்சி தேவராயர் காலத்தில் வாழ்ந்த கணக்கு அதிகாரி; a contemporary accountant of *viru-p-pāṭciDevarayar.* *"இப்படிக்கு இவர்கள் சொல்ல இந்த பிரமாணம் எழுதினென் இன்னாட்டுக் கணக்கு உத்திராபதியாரான அறிவுடை மூவேந்த வேளார்" (புது.கல்.715/40).*

இவர் காலம் கி.பி.1476.

மூவேல் *mūvēl,* பெ.(n.) மூன்று வகை வேலமரம்; the three kinds of acacia tree. *(வெள்வேல், கருவேல், குட்டிவேல்)* (சா.அக.).

[மூ + வேல்.]

மூழ்¹–தல் *mūḻ-,*2 செ.கு.வி.(v.i.) பற்றிக் கொள்ளுதல்; to seize, take hold of. *"மூழ்ந்த பிணி நலிய" (நன்.417, விருத்.).*

[மூள்–தல்→மூழ்–தல்.]

மூழ்²–த்தல் *mūḻ-,*4 செ.குன்றாவி.(v.t.) மூழ்கச் செய்தல்; to submerge, engulf. *"மூழ்த்த நாளந்நீரை மீனாயமைத்த பெருமானை" (திவ்.பெரியதி.6. 8 : 2).*

[முழு→மூழ்→மூழ்–த்தல்.]

மூழ்³–த்தல் *mūḻ-,*4 செ.கு.வி.(v.i.) முதிர்தல் (பதிற்றுப்.அரும்.); to be mature.

[ஊழ்–த்தல்→மூழ்–த்தல் = முதிர்தல்.]

மூழ்⁴–த்தல் *mūḻ-,*4 செ.குன்றாவி.(v.t.) 1. மூடுதல்; to close, as a bud. *"மறவரும் வாய் மூழ்த்தனரே" (புறநா.336).* 2. மொய்த்தல்; to swarm round. *"கதழ்பு மூழ்த்தேறி" (பரிபா.10 : 18).* 3. வளைத்தல்; to surround. *"முரணுடை வேட்டுவர் மூழ்த்தனர்" (பெருங்.உஞ்சைக்.56 : 49).*

[முகிழ்–த்தல்→மூழ்–த்தல்.]

மூழ்⁵ *mūḻ,* பெ.(n.) மலர் அரும்பு, முகிழ் (யாழ்ப்.); flower - bud.

மறுவ. போது, மொட்டு.

[முகிழ்→மூழ்.]

மூழ்கடி–த்தல் *mūḻgaḍi-,*4 செ.குன்றாவி. (v.t.) மூழ்கச் செய்தல்; to drown.

[மூழ்கு + அடி–த்தல்.]

மூழ்கல் *mūḻgal,* தொ.பெ.(vbl.n.) முழுகல்; bathing (சா.அக.).

மறுவ. தலை நீராடல்.

மூழ்கிக்கப்பல் *mūḻgi-k-kappal,* பெ.(n.) நீரில் மூழ்கிச் செல்லும் கப்பல்; submarine.

மூழ்கு¹–தல் *mūḻgu-,*5 செ.கு.வி.(v.i.) 1. நீர் மடத்தின் கீழ் செல்லுதல், முழுகுதல்; submerge, get drowned; sink. *பயிர்கள் நீரில் மூழ்கி உள்ளன.* 2. நினைவு முதலியவற்றில் அழுந்துதல், துயரம் முதலியவற்றில் ஆழ்தல், அமிழ்தல்; get buried in thought, etc., be immersed in grief, etc. *"வேட்கை வெந்நீரிற் கடிப்ப மூழ்கி" (திருவாச.6:41). "சுரையம்பு மூழ்க" (கலித்.6). பழைய நினைவுகளில் மூழ்கிப் போனார். வேலையில் மூழ்கிவிட்டால் வீட்டை மறந்து விடுவார்.*

[முழுகு→மூழ்கு→மூழ்கு–தல்.]

மூழ்கு²–தல் *mūḻgu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. புகுதல்; to reach, enter. *"வானமூழ்கிச் சில் காற்றிசைக்கும்" (மதுரைக்.357).* 2. மறைதல்; to be hidden, screened. *"வியன்மலை மூழ்கிச் சுடர்கான் மாறிய செவ்வி நோக்கி" (சிறுபாண்.170).* 3. தங்குதல்; to abide, to remain. *"முளிமுதன் மூழ்கிய வெம்மை தீர்ந்து" (கலித்.16).*

தெ. முநுகு; க. முழுகு; ம. முநுகுக.

[முழுகு→மூழ்கு→மூழ்கு–தல்.]

மூழ்கு³–தல் *mūḻgu-*, 5 செ.கு.வி.(v.i.) ஈடுவைத்த பொருள் திருப்ப முடியாமல் போதல்; pledged things cannot retained.

மூழ்த்தம் *mūḻttam*, பெ.(n.) முழுத்தம் பார்க்க; see *muḻuttam*. *"ஊழ்வினை துரப்பவோடி யொன்று மூழ்த்தத் தினுள்ளே" (சீவக.2763).*

[முழுத்தம்→மூழ்த்தம்.]

மூழ்த்து¹–தல் *mūḻttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மூழ்²–, பார்க்க; see *mūḻ²-*. 2. ஆழ்த்துதல்; to plunge, immense, weigh down.

[முழுத்து→மூழ்த்து→மூழ்த்து–தல்.]

மூழ்த்து² *mūḻttu*, வி.அ.(adv.) விரைந்து; speedly. *"வகைவகை யூமூழ் கதழ்பு மூழ்த்தேறி" (பரிபா.10:18). "மூழத்திறுத்த வியன் றானையொடு" (பதிற்று.33:5).*

மூழக்கு *mūḻakku*, பெ.(n.) மூன்று உழக்கு (தொல்.எழுத்து.457, உரை); three *uḻakku*. குறச்சிறார். *"மூழக்குழக்குத் தினை தந்தார்" (தமிழ்நா.29).*

[மூ + உழக்கு.]

மூழட்டி *mūḻaṭṭi*, பெ.(n.) மிளகு; pepper - *Piper nigrum*.

மூழல் *mūḻal*, பெ.(n.) 1. மூடி; lid. *'காண்டிகைச் செப்பு ஒன்று அடியும் மூழலும் உட்பட' (தெ.இ.கல்.தொ.2:5).* 2. கழற்காய் (திவா.); bonduc nut.

[மூழ் →மூழல்.]

மூழாக்கு *mūḻākku*, பெ.(n.) மூழக்கு (தொல்.எழுத்து.457, உரை) பார்க்க; see *mūḻakku*.

[மூலக்கு→மூழாக்கு.]

மூழி¹ *mūḻi*, பெ.(n.) 1. உட்குழிந்த அகப்பை (திவா.); ladle. 2. நீர்க்கலம் (கமண்டம்); a vessel for holding water. *"மயிற்பீலியோடு மூழிநீர் கையிற்பற்றி" (பெரியபு. திருஞான. 601).* 3. வேள்வி (யாகம்)க்குப் பயன்படுத்தும் ஏன வகை (சீவக.2464, அரும்.); a vessel used in sacrifices. 4. நீர்நிலை (பிங்.); reservoir of water, tank. 5. துழாவிக் கடையும் மத்து (வின்.); churning stick.

க. மூழி

[மூழ்→மூழி.]

மூழி² *mūḻi*, பெ.(n.) சோறு (சூடா.); boiled rice, cooked rice.

[மூழ்→மூழி. மூழ் = அரும்பு. அரும்புபோல் இருக்கும் சோற்றை மூழி என்றிருக்கலாம்.]

மூழிவாய் *mūḻi-vāy*, பெ.(n.) பூக்கூடை; flower - basket. *"மூழிவாய் முல்லை மாலை" (சீவக.833).*

[மூழி + வாய். மூழ் = மலர் மொட்டு. மூழ்→ மூழி = மலர், மூழிவாய் = மலர்க்கூடை.]

மூழை *mūḻai,* பெ.(n.) 1. குழிந்த இடம்; hallow place. *"குன்றை யம்மூல மூழைவாய் வைத்து" (கம்பரா.மருத்து.116).* 2. உட்குழிந்த அல்லது சமைத்த உணவை முகக்கும் அகப்பை; ladle. *"மூழை சுவையுணரா தாங்கு" (நாலடி, 321).* 3. துழாவிக் கடையும் மத்து (சது.); churning strick. 4. சோறு; boiled rice.

[மூழி→மூழை.]

மூள்(ளு)தல் *mūḷ-,* 16 செ.கு.வி.(v.i.) 1. நெருப்புப் பற்றுதல்; kindle, catch fire. *"ஆலையில் மூண்ட நெருப்பைத் தீயணைப்பு வீரர்கள் அணைத்தனர்".* 2. சினம், ஐயம் முதலியவை உள்ளத்தில் எழுதல்; to rouse the anger, suspicion. *அவன் பார்க்கும் பார்வையைக் கண்டதுமே அவருக்கு ஐயம் மூண்டது.* 3. ஊக்கத்துடன் முற்படுதல் (முனைதல்); to enter upon with earnestness. *"முதலற முடிக்க மூண்டான்" (கம்பரா.மாயாசீ.96).* 4. இடையூறு (தகராறு), கலவரம் முதலியன ஏற்படுதல்; to dispute, war, etc. *தலைவர் சுடப்பட்டதால் நாட்டில் கலவரம் மூண்டது.* 5. பொருந்துதல்; to be suitable. 6. கூடுதல், மிகுதல்; to increase.

[முள்→மூள்→மூள்(ளு)-தல்.]

மூளி[1] *mūḷi,* பெ.(n.) 1. பெண்களைக் குறித்து, அணிகலன்கள் முதலியவை இல்லாத வெறுமை; வழக்கமாய் உள்ள அணிகலனில்லாத-வன்-வள்-து; person or thing devoid of the usual ornaments, etc. *கல்யாணத்திற்கு மூளிக் கழுத்துடனா போவது? கணவனை இழந்து மூளியாகி நிற்கும் மகளைக் கண்டு மனம் அழுதது.* 2. பொருளில் வடிவமோ கூர்மையோ இல்லாத குறைபாடு; defect in shape, sharpness, etc. in certain articles. *முனை உடைந்து மூளியாகி கிடந்தது உளி. மூளிச் சட்டியானாலும் கொழுக்கட்டை வேக வேண்டும் (பழ.). சிதைந்து மூளியாகக் கிடந்தன சிற்பங்கள். உறுப்புக் குறையுள்ள பொருள் எல்லாம் மூளியும் காளியுமாய்க் கிடக்கிறது (உ.வ.).* 3. பெண்ணைக் குறித்த ஒரு வசைச் சொல்; an addrishing word for woman an conlempt. 4. பெண்ணைக் குறிக்கும் பொதுச்சொல்; a term for addrishing woman. *"ஒருநாழியாலும் வரும். ஒரு மூளியாலும் வரும்" (பழ.).*

[முள் →மூள்→மூளி.]

மூளி[2] *mūḷi,* பெ.(n.) 1. உறுப்புக் குறை; defect of limb, deformity. *"சூர்ப்பணகையை மூளியாக்க" (இராமநா. உயுத்.26). காதறுந்த மூளி மூக்கறுந்த மூளியைப் பார்த்துச் சிரித்தாளாம்.* 2. தலைப்பகுதியில் பின்னப்பட்டிருப்பது; that which has lost a part or piece, especially at the top. *மூளிக்குடம்.* 3 குறைவுள்ள கருமம்; that which is defective. *அவன் வராமையால் அந்தக் கருமம் மூளியாய்ப் போயிற்று.* 4. அழகற்றவள்; ugly woman, a term of abuse. 5. துளையுள்ளது; that which bore. 6. துளையறுந்தது; that which is torn bore.

[முள் →மூள்→மூளி.]

மூளிக்காதவன் *mūḷi-k-kādavaṉ,* பெ.(n.) மடங்கிய அல்லது சுருங்கிய காதினை உடையவன் (கோவை.); bent, or contracted ear-lobe.

[மூளி + காதவன். காதன்→காதவன்.]

மூளிக்காதி *mūḷi-k-kādi,* பெ.(n.) காதணி யில்லாதவள்; women without ear jewels.

[மூளி + காதி. காது→காதி.]

மூளிக்காது *mūḷi-k-kādu,* பெ.(n.) 1. பெண்டிரின் அணிகலன்கள் அணியாத காது; woman's ear devoid of the usual ornaments. 2. அறுபட்ட காது; ear with torn lobe.

[மூளி + காது.]

மூளிச்சட்டி *mūḷi-c-caṭṭi,* பெ.(n.) குறைபாடுடைய பானை; defective pot. *"மூளிச்சட்டியானாலும் கொழுக்கட்டை வேகும்" (பழ.).*

[மூளி + சட்டி.]

மூளிக்குடம் *mūḷi-k-kuḍam,* பெ.(n.) ஒரு மருங்கு வாயுடைந்த குடம்; damaged mouth pot.

[மூளி + குடம்.]

மூளிநாய் *mūḷi-nāy,* பெ.(n.) காதறுபட்ட நாய் (வின்.); dog with clipped ears.

[மூளி + நாய்.]

மூளிமுக்காடு *mūḷi-mukkāḍu,* பெ.(n.) மகளிர் தலையை மறைக்கும் துணி (வின்.); hood, covering for the head of a woman.

[மூளி + முக்காடு.]

மூளிமுலை *mūḷi-mūlai,* பெ.(n.) காம்பு இல்லாத முலை; absence of the nipple - *Athelia* (சா.அக.).

[மூளி + முலை.]

மூளிமோதரம் *mūḷi-mōdaram,* பெ.(n.) கணையாழி, விரலணி (கோவை.); finger - ring.

[மூளி + மோதரம்.]

மூளியாடு *mūḷi-y-āḍu,* பெ.(n.) மிகச்சிறிய காதுகளையுடைய ஆடு (கோவை.); sheep with small ears.

[மூளி + ஆடு).]

மூளியுதடு *mūḷi-yudaḍu,* பெ.(n.) பிளந்த உதடு (வின்.); hare lip.

[மூளி + உதடு.]

மூளியோடு *mūḷiyōḍu,* பெ.(n.) சிதைந்த ஓடு (வின்.); chipped tile.

[மூளி + ஓடு.]

மூளிவண்டி *mūḷi-vaṇḍi,* பெ.(n.) மேற்கூடு இல்லாத மாட்டு வண்டி (கோவை.); bullock cart without roof.

[மூளி + வண்டி.]



மூளுவான்சொறி *mūḷuvāṉ-šoṟi,* பெ.(n.) சொறி – கடல் மீன் (தஞ்சை, மீன்.); a sea fish.

மூளை *mūḷai,* பெ.(n.) 1. உடல் உறுப்புகளைச் செயற்படுத்துவதும் கட்டுப்படுத்துவதும் உணர்வுகளைத் தோற்றுவிப்பதுமான, மண்டையோட்டினுள் அமைந்திருக்கும் உறுப்பு; brain. *"மூளையார் சிரத்து" (திவ்.பெரியதி.4. 2 : 8). வலிப்பு நோய்க்கு மூளையில் ஏற்படும் பாதிப்பே கரணியம்.* 2. அறிவு, சிந்தனைத் திறன்; brain, intelligence. *மூளை இருந்தால் இப்படிச் செய்வாயா? அவருக்கு இருக்கும் மூளையில் கால்பங்கு நமக்கு இருந்தால் போதும்!* 3. எலும்புக்கு நடுவில் உள்ள பொருள் (மச்சை) (சூடா.); bone marrow, medullary substance, one of *catta-tātu.*

ம. மூள; வ.மஜ்ஜா

OE.mearg, **Os., OHG.** marg, **ON.**mergh, **E.** marrow.

[மூள் → மூளை = எலும்பிற்கு அல்லது மண்டையோட்டிற்கு உள்ளிருப்பது.]

பிடரியில் முள்ளந்தண்டு நடுவில் இருந்து மண்டை வரைக்கும் நான்கு பிரிவுகளாய் உள்ள குழகுழப்பான வெண்மையுள்ள ஒரு தசைப்பற்று. இது ஆண்களுக்கு பொதுநிலையில் 1500 சிற்றெடை (grams)யும், பெண்களுக்கு (1200 சிற்றெடையும் இருக்கும் என்பர். அகவை ஆக ஆக எடையும் வலுவும் குறையும் (சா.அக.).



மூளைக்கட்டி *mūḷai-k-kaṭṭi,* பெ.(n.) மூளையில் உண்டான கட்டி; abscess of the brain.

[மூளை + கட்டி.]

மூளைக்கமர் *mūḷai-k-kamar,* பெ.(n.) தலையின் மூளைப் பகுதிகளின் இடையே யுள்ள இடைவெளி; the fissure separating the two hemispheres of the brain - *Intercerebral fissure* (சா.அக.).

மூளைக்கலக்கம் *mūḷai-k-kalakkam,* பெ.(n.) மூளையில் ஏற்படும் கலக்கம், அறிவுப் பிறழ்சி; brain disorders, paranoea.

[மூளை + கலக்கம்.]

மூளைக்காய்ச்சல் *mūḷai-k-kāyccal,* பெ.(n.) மூளையில் ஏற்படும் அழற்சியினால் பெரும்பாலும் குழந்தைகளுக்கு உண்டாகும் காய்ச்சலோடு கூடிய நோய்; brain fever.

[மூளை + காய்ச்சல்.]

மூளைக்கால்கள் *mūḷai-k-kālgaḷ,* பெ.(n.) முகுளத்தையும் சின்ன மூளையையும் ஒன்று சேர்க்கும் நரம்புப் பட்டைகள்; a pair of bands which connect the pons and the oblongata with the cerebrum cruracerebri (சா.அக.).

[மூளை + கால்கள்.]

மூளைக்கொதிப்பு *mūḷai-k-kodippu,* பெ.(n.) 1. வெயிலால் தாக்கப்படுகை; sunstroke. 2. தலையில் சென்று தாக்கும் மிகையான குருதியோட்டம்; rush of blood to the head. *மிக்கபடிப்பால் அவனுக்கு மூளைக் கொதிப்பு உண்டாயிற்று.*

[மூளை + கொதிப்பு.]

மூளைகெடு–தல் *mūḷai-keḍu-*,20 செ.கு.வி. (v.i.) அறிவு குறைதல்; to be weak in brain power.

[மூளை + கெடு–தல்.]

மூளைச்சலவைசெய்–தல் *mūḷai-c-calavai -šey-*, 1 செ.கு.வி. (v.i.) சிந்தித்து முடிவுக்கு வரவிடாமல் ஒன்றைத் திரும்ப திரும்பச் சொல்லி அல்லது சான்று காட்டி அதை ஏற்கச் செய்தல்; brain wash.

[மூளை + சலவை + செய்–தல்.]

மூளைச்சுரம் *mūḷai-c-curam,* பெ.(n.) மூளைக்காய்ச்சல் பார்க்க; see *mūḷai-k-kāyccal.*

[மூளை + சுரம்.]

மூளைச்சோர்வு *mūḷai-c-cōrvu,* பெ.(n.) உறுதியாக நிற்கும் திறன் இல்லாத மூளை; weakness of brain (சா.அக.).

[மூளை + சோர்வு.]

மூளைத்தாபிதம் *mūḷai-t-tābidam,* பெ.(n.) கொதிப்புடன் உள்ள மூளை; inflammation of the brain (சா.அக.).

மறுவ. மூளைக்கொதிப்பு

[மூளை + Skt. தாபிதம்.]

மூளைதாபனரோகம் *mūḷai-t-tābaṉa-rōgam,*பெ.(n.) மூளையில் ஏற்படும் நோய்; cerebral inflammation.

மூளைப்பாரிசவாயு *mūḷai-p-pāriša-vāyu,* பெ.(n.) மூளைக்கு வரும் ஒரு வகை நோய்; cerebral paralysis.

[மூளை + **Skt.** *பாரிசவாயு.]*

மூளைப்பித்தம் *mūḷai-p-pittam,* பெ.(n.) தலை மூளையில் பித்தம் சேர்ந்தால் மது உண்டவரைப் போல பிதற்றி, அறிவைக் கெடுத்துவிடும் ஒரு வகை நோய்; a disease which spoils the intellect of the person and makes him behave little, a intoxicated person. It is caused by bile humour affecting the brain (சா.அக.).

[மூளை + பித்தம்.]

மூளைப்பிதுக்கம் *mūḷai-p-pidukkam,* பெ.(n.) மூளை பிதுங்கி விடுகை (இங்.வை.); protrusion of the brain, as from an accident.

[மூளை + பிதுக்கம்.]

மூளையதிர்ச்சி *mūḷai-y-atircci,* பெ.(n.) தலையில் அடிபடுவதால் உண்டாகும் மூளைக் கலக்கம் (இங்.வை.); concussion of the brain.

[மூளை + அதிர்ச்சி.]

மூளையமுக்கம் *mūḷai-y-amukkam,*பெ.(n.) மூளை அழுந்தி விடுகை (இங்.வை.); compression of the brain, as from an accident.

[மூளை + அமுக்கம்.]

மூளையரத்தவொழுக்கு *mūḷai-y-aratta - v-oḻukku,*பெ.(n.) அரத்தப் போக்குடைய மூளை; cerebral haemorrhage.

[மூளை + அரத்தம் + ஒழுக்கு.]

மூளையில்லாதவன் *mūḷai-y-illādavaṉ,* பெ.(n.) மூடன், அறிவிலி; fool, as devoid of brains.

[மூளை + இல்லாதவன்.]

மூளைவறண்டவன் *mūḷai-vaṟaṇḍavaṉ,* பெ.(n.) 1. கோணற் புத்தியுள்ளவன் (வின்.); eccentric man. 2. மூளையில்லாதவன் (இ.வ.); பார்க்க; see *mūḷai-y-iilādavaṉ.*

[மூளை + வறண்டவன்.]

மூற்றை *mūṟṟai,* பெ.(n.) மும்மடங்கு; three -fold; triple. *"நூற்றுப்பத்து நுவன்ற தோன் முகன் மூற்றைக் கையினன்" (கந்தபு. கயமுகன்.2).*

[மூன்று→மூற்றை.]

மூறுவஞ்சி *mūṟu-vañji,* பெ.(n.) முத்து; pearl, one of the nine gems (சா.அக.).

மூறுவா *mūṟuvā,* பெ.(n.) பெருங்குரும்பை (மலை.); bowstring hemp.

மூறைக்கல் *mūṟai-k-kal,* பெ.(n.) கடலடியிற் கிடைக்கும் கல் வகைகளுள் விலை மதிப்புடையது (நெல்லைமீன.); valuable stone among stones found under the sea.

மூறைமுள் *mūṟai-muḷ,* பெ.(n.) நீர்பரப்பின் மேல் பந்துபோல் மிதக்கும் ஓருயிரி; an aquatic floating creeper resembling like ball. *மூல நோயுடையார் உண்ண மூலம் குணமாகும்.*

மூன்றாங்கட்டு *mūṉṟāṅ-kaṭṭu,* பெ.(n.) 1. வீட்டின் மூன்றாங் கட்டடப் பகுதி (உ.வ.); the third compartment of a house. 2. ஒடிந்த உறுப்புக்கு இறுதியாக மூன்றாம் முறை கட்டுங் கட்டுப் போலுள்ள முடிவான தீர்மானம் (வின்.); final or decisive opinion, as the third and last bandage to a broken limb (செ.அக.).

[மூன்று + ஆம் + கட்டு.]

மூன்றாங்கல் *mūṉṟāṅ-kal,* பெ.(n.) மூன்று கல் வைத்து ஆடும் கல்லாட்டம் (கோவை.); a kind of three stone game or play.

மறுவ. கல்லாங்கல், கூழாங்கல்.

[மூன்றாம் + ஆம் + கல்.]

ஆட்டத்தின் பெயர் : மூன்று கற்களைக் கொண்டு ஆடும் ஆட்டம் மூன்றாங்கல்.

ஆடுமுறை : மூன்று கற்களுள் ஒன்றைக் கீழ் வைத்து ஏனையிரண்டையும் கையில் வைத்துக் கொண்டு அவற்றுள் ஒன்றை மேலெறிந்து இன்னொன்றைக் கீழ்வைத்து முந்திக் கீழ் வைத்ததை எடுத்துக் கொண்டு மேலெறிந்ததைப் பிடித்தல் வேண்டும். பின்பு மீண்டும் ஒன்றை மேலெறிந்து கையிலுள்ளதைக் கீழ் வைத்துக் கீழிருந்ததை எடுத்துக் கொண்டு மேலெறிந்ததைப் பிடித்தல் வேண்டும். இவ்வாறே பன்னிருமுறை தொடர்ந்து தவறாது ஆடிவிடின் பழமாம். பன்னிரு முறைக்கும் கீழ்வருமாறு பாட்டுப் பாடப்படும்.

1. ஒன்றாவது – ஒன்றாங்காய், 2. இரண்டாவது – இரத்தினகிளி (அல்லது ஈச்சங்காய்), 3. மூன்றாவது முத்துச்சரம், 4. நாலாவது நாற்காலி, 5. அஞ்சாவது பஞ்சவர்ணம், 6. ஆறாவது பாலாறு, 7. ஏழாவது எழுத்தாணி, 8. எட்டாவது கொட்டாரம், 9. ஒன்பதாவது ஓலைப்பூ, 10. பத்தாவது பனங்கொட்டை, 11. பதினொன்றாவது தென்னம்பிள்ளை, 12. பன்னிரண்டாவது தென்னை மரத்தடியிலே தேரோடும் பிள்ளையார்.

ஒருத்தி ஆடும் போது தவறிவிடின், அடுத்தவள் ஆடல் வேண்டும். ஆடினவள் மறுமுறையாடும் போது, மீண்டும் முதலிலிருந்தே ஆடல் வேண்டும் (தமிழ் நாட்டு விளையாட்டுகள், பாவாணர், பக்.63).

நெல்லையில் பெண்கள் இவ்விளையாட்டை விளையாடும் பொழுது கீழ்வரும் பாட்டைப் பாடிக் கொண்டே விளையாடுவார்கள்.

ஓரி உலகெலாம், உலகெலாம்
சூரியன், சூரியன் தங்கச்சிக்கு
சுந்தரவள்ளிக்கு, மாயக்
குறத்திக்கு நாளை கல்யாணம்.

மூன்றாங்கால் *mūṉṟāṅ-kāl,* பெ.(n.) 1. திருமணம் போன்றவற்றிற்கு மூன்று நாள் முன்பு நடும் பந்தற்கால் (வின்.); the first post of a marriage 'pandal' set up three days before the wedding. 2. மூன்றாம் தலைமுறை உறவு (வின்.); consanguinity of the third degree. 3. மூன்றாம் ஆண்குழந்தை (இ.வ.); the third male child of a person.

[மூன்று + ஆம் + கால்.]

மூன்றாங்குட்டம் *mūṉṟāṅ-kuṭṭam,* பெ.(n.) உடல் சிவப்பாகி, கொஞ்சம் நாள் கழித்து உடம்பு வெளுத்துத் துன்புறுத்தும் ஒருவகைத் தொழுநோய்; third stage of leprosy (சா.அக.).

[மூன்று + ஆம் + குட்டம்.]

மூன்றாங்கொம்பு *mūṉṟāṅ-kombu,* பெ.(n.) மூன்றாம் நாள் விதைப்பதற்காக அதற்கு முன் இரண்டு நாளும் நீரில் ஊறவைத்த நெல்விதை (தஞ்சை.); seeds of paddy kept in water for two days, for sowing on the third day.

மறுவ. மூன்றாங்கோப்பு

[மூன்று + ஆம் + கொம்பு.]

மூன்றாந்தரச்சங்கு *mūṉṟāndara-c-caṅgu,* பெ.(n.) புழுத்தாக்குதலுக்குட்பட்ட சங்கு (நெல்லை.); a marine shell, an inferior conch affected by worms.

[மூன்று + ஆம் + தரசங்கு.]

மூன்றாந்திருவந்தாதி *mūṉṟān-tiru-v-andādi,* பெ.(n.) நாலாயிரத் தெய்வப் பனுவலுள் பேயாழ்வார் வெண்பாவிற் பாடிய அந்தாதி நூல்; an *antāti*n *veṇbā* metre in *Nālāyira-p-pirabandam* by *Pēyāḻvār.*

[மூன்று + ஆம் + திருவந்தாதி.]

மூன்றாநடவு *mūṉṟā-naḍavu,* பெ.(n.) மூன்றாவது முறை பிடுங்கி நடும் நாற்று (இ.வ.); third transplantation of seedlings.

[மூன்று + ஆம் + நடவு.]

மூன்றாம்சுற்று *mūṉṟām-šuṟṟu,* பெ.(n.) 1. மூன்றாவது சுற்றுப் பாதை; கோயிற் கருவறையைச் சுற்றியுள்ள மூன்றாவது சுற்றுப்பாதை; vicinity surrounding a shrine in a temple. 2. விளையாட்டு, பேச்சு வார்த்தை மூன்றாம் நிலையில் இருக்கை; third circular of sports, talk.

[மூன்று + ஆம் + சுற்று.]

மூன்றாம்பாட்டன் *mūṉṟām-pāṭṭaṉ,* பெ.(n.) முப்பாட்டன் (இ.வ.); grand father's grand father.

[மூன்று + ஆம் + பாட்டன்.]

மூன்றாம்பிறைக்காய்ச்சல் *mūṉṟām-piṟai-k-kāyccal,* பெ.(n.) மூன்று நாட்களுக்கு ஒருமுறை விட்டு விட்டு வரும் காய்ச்சல்; a fever whose paroxysms

return every third day or every 48 hours - *Tertian fever* (சா.அக.).

[மூன்று + ஆம் + பிறை + காய்ச்சல்.]

மூன்றாம்வளையமூலவிரணம் *mūṉṟām-vaḷaiya-mūla-viraṇam,* பெ.(n.) மலவாயில் உண்டாகும் மூல முளை எரிச்சல்; piles (சா.அக.).

*[மூன்று + ஆம் + வளையம் + மூலம் + **Skt.**இரணம்.]*

மூன்றாமீற்றுப்பசும்பால் *mūṉṟām-mīṟṟu-p-pašum-pāl,*பெ.(n.) நாட்பட்ட சளி (கபம்) நோயைப் போக்கும் பால்; milk of the cow that has given birth to the third calf (சா.அக.).

*[மூன்று + ஆம் + ஈற்று + **Skt.** பசு + அம் + பால்.]*

மூன்றாமுறைக்காய்ச்சல் *mūṉṟā-muṟai-k-kāyccal,*பெ.(n.) ஒரு நாள் விட்டு ஒரு நாள் வரும் காய்ச்சல் நோய் (M.L.); malaria tertian fever.

[மூன்று + ஆம் + முறை + காய்ச்சல்.]

மூன்றாவது *mūṉṟāvadu,* பெ.(n.) 1. இரண்டாவதற்கு அடுத்துள்ளது; that which is third. 2. வெற்றிலைப் பாக்குடன் சேர்த்து உண்ணும் மூன்றாவது பொருளான சுண்ணாம்பு; quick lime, as the third article used in chewing betel, the other two being betel and areca-nut.

[மூன்று →மூன்றாவது.]

மூன்றிலைமேனி *mūṉṟilai-mēṉi,* பெ.(n.) குப்பைமேனி; rubbish plant - *Acalypha indica* (சா.அக.).



மூன்று *mūṉṟu,* பெ.(n.) இரண்டுக்கு மேல் அடுத்துள்ள எண்; three. *சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே (தொல்.எழுத்து.1). "அறனும் பொருளு மின்பமு மூன்றும்" (புறநா.28:15). "இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்" (நற்.214:1). "மூன்றுட னீன்ற முடங்கர் நிழத்த" (அகநா.147:4). "மூன்று முடிச்சு கழுத்தில் விழட்டும்; முப்பது இலைகள் குப்பையில் விழட்டும்" (பழ.). "மூன்று காசுக் குதிரை ஆறு காசு வைக்கோல் தின்கிறதாம்". "மூன்று மாதத்திற்கு முன்னே பல் போனவளுக்கு முறுக்குக் கடையில் என்ன வேலை". "மூன்று வீட்டுக்கு முக்காலி நான்கு வீட்டிற்கு நாற்காலி".*

தெ. மூது; க. மூட்ரு; ம. முந்நு; து. முகி.

மூன்றுகட்டுவீடு *mūṉṟu-kaṭṭu-vīḍu,* பெ.(n.) 1. மூன்று முற்றங்களைக் கொண்ட வீடு; comprising three court yards house. 2. மூன்று மாடி உள்ள வீடு; three terrace house.

[மூன்று + கட்டு + வீடு.]

மூன்றுகாலம் *mūṉṟu-kālam,*பெ.(n.) இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய மூன்று காலங்களைக் குறிப்பது; three types of tense, viz. present tense, past tense, future tense. *முக்காலமும் அறிந்த முனிவன்.*

[மூன்று + காலம்.]

மூன்றுகொட்டைக்காய் *mūṉṟu-koṭṭai-k-kāy,* பெ.(n.) மூன்று விதையுள்ள நிலக்கடலை (கோவை.); three seeds ground -nut.

[மூன்று + கொட்டை + காய்.]

மூன்றுதண்டர் *mūṉṟu-taṇḍar,* பெ.(n.) மூன்று (திரி) தண்டத் துறவிகள்; ascetics with trident - staff. *"மூன்று தண்டரொன்றினர்" (திவ்.திருச்சந்.52).*

[மூன்று + தண்டர்.]

மூன்றுதாள் *mūṉṟu-ṭāḷ,* பெ.(n.) 1. ஒரு வகைச் சீட்டாட்டம் (கோவை.); a kind of a game at cards. 2. தனித்தனியாக மூன்று காகிதத்தின் பெயர்; three paper. 3. மூன்று கால்கள்; three legs.

[மூன்று + தாள்.]

மூன்றுதுறைசன்னல் *mūṉṟu-tuṟai-šaṉṉal,* பெ.(n.) மூன்று கதவுடைய சாளரம்; window with three doors.

[மூன்று + துறை + சன்னல்.]

மூன்றுநிலைமாடக்கோயில் *mūṉṟu-niḷai-māḍa-k-kōyil,* பெ.(n.) மூன்று அடுக்குடையக் கோயில்; the three storeyed (storied) temple.



[மூன்று + நிலை + மாடம் + கோயில்.]

மூன்றுநூல் *mūṉṟu-nūl,* பெ.(n.) பூணூல்; the sacred thread, as having three strands. *"மூன்றுநூல் கிடந்த தோண்முனி" (கம்பரா.கிளை.137).*

[மூன்று + நூல்.]

மூன்றுப்பு *mūṉṟuppu,* பெ.(n.) கடலுப்பு, இந்துப்பு, கல்லுப்பு என்னும் மூன்று வகை உப்பு; the three salts, viz., *kaḍaluppu, induppu, kalluppu* (சா.அக.).

[மூன்று + உப்பு.]

மூன்றுபத்திரி *mūṉṟu-pattiri,* பெ.(n.) சாதி இலை, இலவங்க இலை, தாளிச இலை; mace, cinnamon leaf, Himalayan silverfur (சா.அக.).

[மூன்று + பத்திரி.]

மூன்றுபத்திவீடு *mūṉṟu-patti-viḍu,* பெ.(n.) மூன்றுகட்டுவீடு பார்க்க; see *mūṉṟu-kaṭṭu-viḍu.*

[மூன்று + பத்தி + வீடு.]

மூன்றுபுள்ளிநண்டு *mūṉṟu-puḷḷi-nanḍu,* பெ.(n.) மேலோட்டில் மூன்று புள்ளிகளுடைய கடல் நண்டு (தஞ்சைமீன.); three dotted sea-shore crabs.

[மூன்று + புள்ளி + நண்டு.]

மூன்றுமா *mūṉṟu-mā,* பெ.(n.) 'ங' என்ற குறியுள்ளதும், இருபதில் மூன்று கொண்டதுமான கீழிலக்க (பின்ன)வெண்; the fraction 3/20.

[மூன்று + மா.]

மூன்றுவர்ணத்தி *mūṉṟu-varṇatti,* பெ.(n.) பன்றி முள்; the thorn of a porcupine (சா.அக.).

மூன்றுவீசம் *mūṉṟu-višam,* பெ.(n.) 'ங' என்ற குறியுள்ளதும் பதினாறில் மூன்று கொண்டதுமான கீழிலக்க (பின்ன)வெண்; the fraction 3/16.

[மூன்று + வீசம்.]

மூன்றுவேளை *mūṉṟu-vēḷai,* பெ.(n.) காலை, நண்பகல், மாலை என்ற நாளின் மூன்று பகுதிகள்; three period of a day called morning, after-noon and evening.

[மூன்று + வேளை.]

மூன்றேமுக்கால் *mūṉṟē-mukkāl,* பெ.(n.) அளவுப் பெயர்; measurement. எண்ணிக்கையில் மூன்றும், மேலும் ஒன்றில் முக்கால் பங்கும் (3/4). *"மூன்றே முக்கால் நாழிகையிலே முத்து மழை பெய்தது. வாரி எடுக்கு முன்னே மண் மாரியாய்ப் போயிற்று" (பழ.).*

[மூன்று + முக்கால்.]

மூனானாத்து *mūṉāṉāttu,* பெ.(n.) நேற்றைக்கு முந்திய நாளுக்கு முந்தைய நாள் (முகவைமீன.); two - days before yesterday.

[மூன்றாம்நேற்று → மூனானேற்று → மூனானாத்து.]

மூனை *mūṉai,* பெ.(n.) தவசங்களுள் ஒன்றான கம்புக்கு மேலுள்ள தோல்; skin layer that covers the millet, husk.

மறுவ. சொங்கு, கொங்கு, கொங்கை.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ஏழாம் மடலம் - மூன்றாம் பாகம்

மெ - மௌ

Vol. VII - Part - III

து. இராசேந்திரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை
மற்றும்
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு
2007

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

ஏழாம் மடலம் - மூன்றாம் பாகம்

(மெ - மௌ)

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

VOL. VII - PART III

து. இராசேந்திரன், இ.ஆ.ப.

அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும்

செய்தித் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு

2007

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 21

முதற் பதிப்பு : 2007

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. VII, Part - III

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு
Government of Tamilnadu

விலை உருபா 400/–

குறியீட்டெண் Colon No. P.J1-J, 314"K.M4

வெளியிட்டோர் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

அச்சீடு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை 600 113.

நூல் கிடைக்குமிடம் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை – 600 113.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி
A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

VOL. VII- PART III

ஏழாம் மடலம் - மூன்றாம் பாகம்
(மெ - மௌ)

பதிப்புக் குழு

து. இராசேந்திரன், இ.ஆ.ப.
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும்
செய்தித் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

கூர்ந்தாய்வாளர்
திரு.மா.பூங்குன்றன்

தொகுப்பாளர்கள்
திரு.முத்து.பிச்சை
முனைவர் மு.கண்ணன்
முனைவர் பா.வெற்றிச்செல்வன்
முனைவர் ச.செந்திலாண்டவன்
முனைவர் இரா.கு.ஆல்துரை (பகுதிப் பொறுப்பாளர்)
திரு.கா.இளமுருகு
திரு.ச.கி.கணேசன் (ஓவியர்)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 20.4.2007

அணிந்துரை

அகரமுதலி திட்டத்தின் ஏழு மற்றும் எட்டாம் மடலங்கள் இதழ்களை விரிப்பது கண்டு என் இதயம் பெருமிதம் எய்துகிறது. ஒவ்வொரு மொழியிலும் அதன் சொற்களுக்கு வேர் மூலம் காண முற்படும்போது, பெரும்பாலான சொற்களின் வேர்மூலங்கள் அடுத்த மொழிகளில் சென்று நிற்கும். ஆனால், தமிழில் உள்ள சொற்களின் மூலங்கள் அனைத்தும் தமிழிலேயே அமைந்துள்ளன. இப்போது நடைமுறையில் வழங்குகிற தமிழ்ச் சொற்களும், உருவாகி வருகின்ற கலைச் சொற்களும், தொழில்நுட்பச் சொற்களும் ஏற்கனவே வழங்கிய வேர் மூலங்களிலிருந்து விரிந்தும் பெருகியும் வந்தனவும் வருவனவும் ஆகும்.

அறிவியல் வளர்ச்சி மிகுந்துள்ள இந்நாளில், செய்தித் தொடர்பாலும் தொழில் நுட்ப வளர்ச்சியாலும் உலகம் சுருங்கிவிட்ட நிலையில், ஒரு மொழியில் அண்டையயல் மொழிச் சொற்களெல்லாம் கலந்து விடுவது இயல்பு. இத்தகைய சூழ்நிலையிலும் தமிழ் தனித்தியங்க வல்லதாக நெடுங்காலமாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. இதைத்தான் பாவேந்தர் பாரதிதாசனார் 'தனித்தியங்கும் தன்மை தமிழினுக்கு உண்டு; தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு' என்று ஆணித்தரமாகப் பாடி வைத்தார்.

அவ்வாறு, தமிழ், தான் தனித்தியங்குவது மட்டுமல்லாமல், பிற மொழிகளுக்கும் சொற்களை வாரி வழங்கிக் கொண்டுள்ளது. தமிழகத்திற்கு அப்பால் தனித்தனியே பிரிந்து வழங்கிவரும் திராவிட மொழிகளுக்கெல்லாம் தமிழ்மொழி வேர் மூலங்களை வழங்கியுள்ளதால், அவற்றின் அடிப்படையிலேயே அம்மொழிகளில் சொற்கள் பெருகியுள்ளமையைக் காண்கிறோம். அதனாலேயே, 'தமிழ் திரவிடத்திற்குத் தாய்' என்று தேவநேயப் பாவாணர் பறை சாற்றினார்.

இன்னும் பல மொழிகளிலுமுள்ள சொற்களின் வேர் மூலங்களும் தமிழிலேயே இருப்பதைக் காண நேர்கிறது. இது மொழியியல் உலகின் ஆய்வுப் போக்கைப் பல திருப்பங்களுக்கு உள்ளடக்குகின்றது. நெடுங்காலமாக வழக்கத்தில் இருப்பதும், தனித்தியங்க வல்லதும், பிறமொழிகளுக்குச் சொற்களை வழங்கவல்லதுமான மொழியே 'செம்மொழி' எனச் செம்மொழி இலக்கணம் வரையறுக்கப்படுகின்றது. தமிழின் இலக்கண இலக்கிய நூல்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு மறைக்கப்பட்டிருந்த காலமான கி.பி. 1857 அளவில் தமிழகம் வந்திருந்த கால்டுவெல் பெருமகனார் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் ஓர் ஒப்புமையைக் கண்டறிந்து, "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" (The comparative grammar of Dravidian Languages) என்ற நூலை வெளியிட்டார். அதன் வழி அவர் தன் ஆராய்ச்சியில் கண்ட முடிவுதான், "தமிழ் ஒரு செம்மொழி" என்பதாகும்.

அதன்பின், ஆங்கில அறிஞர்களான, "மெக்ளின்" போன்றவர்கள் தமிழ்மொழியில் உள்ள பதிவுகளையும், தமிழர்களின் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றையும் அறிவியல், வானியல் போன்றவற்றில் அவர்கள் பெற்றிருந்த அறிவாற்றலையும் ஆராய முற்பட்டனர். அவற்றின்வழி அந்த அறிஞர் பெருமக்கள் எல்லாம், 'தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழி' (Primary Classical) என்று வழிமொழிந்து சென்றனர்.

இவற்றின் தொடர்ச்சியாகத் தமிழை ஒரு செம்மொழி என அரசே அறிவிக்க வேண்டுமென்று பரிதிமாற் கலைஞர் தன் கோரிக்கையை முதன்முதலில் அரசின் முன்வைத்து வலியுறுத்தினார்.

ஆனால், இதை முழுவதுமாக அறிவியல் வழியாக மொழியியலில் நிறுவுவதற்குச் சொற்களுக்கு உரிய வேர் மூலம் காணும் சொற்பிறப்பியல் பணியே துணை நிற்கும் என்று, தன் வாழ்நாளையே சொல்லாய்வுக்கென ஒப்புவித்துக் கொண்டவர் 'மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்'. இத்தகைய பலரது தொடர்ச்சியான சிந்தனைகளின், செயல்பாடுகளின் மூலமாகத்தான் தமிழ் ஒரு செம்மொழி என்பதற்கான அங்கீகாரத்தை இன்று நாம் வென்றெடுத்துள்ளோம்; வெற்றிவாகை சூடியுள்ளோம்.

தமிழ்மொழியில் வழங்கும் சொற்களுக்கெல்லாம் வேர்மூலம் காண்பது என்பது ஆழ்கடலில் முத்தெடுக்கும் பணியினும் கடினமானது; இந்தப் பணியொன்றே தமிழ் செம்மொழி என்பதை ஏற்கச் செய்யும் முதன்மைப் பணியாகும். இப்பணியில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பல ஆண்டுகள் உழைத்து ஆராய்ச்சி நூல்கள் பலவற்றை உருவாக்கி வெளியிட்டுள்ளார்; 'உயர்தனிச்செம்மொழி' (The Primary Classical Language of the World) என்ற நூலைப் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே வெளியிட்டுள்ளார்.

தேவநேயப் பாவாணரின் இந்தச் சொல்லாராய்ச்சித் திறனை அறிந்து, அவர்தம் பணி தமிழ் உலகிற்குத் தேவை என்று நான் கருதியதால் 8.5.1974 அன்று, 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்ககம்' என்னும் ஒரு துறையைப் புதிதாக நிறுவி, அதற்குப் பாவாணர் அவர்களையே இயக்குநராகவும் நியமனம் செய்து அகர முதலித் தொகுதிகள் வெளிவர ஆவன செய்ததை இவ்வேளையில் மகிழ்வுடன் நினைவு கூர்கிறேன். அதன் பயனாக, பணிகள் சிறப்பாக நிகழ்ந்து முதல் தொகுதி அணியமாகிக் கொண்டிருக்கும் நிலையில் பாவாணர் அவர்கள் திடீரென மறைந்தார்கள். அதற்குப்பின் அவர்தம் நூல்களை அடிப்படையாகக் கொண்டு, அவரின் அணுகுமுறையிலேயே தொடர்ந்து அகர முதலித்திட்டத்தின் அடுத்தடுத்தத் தொகுதிகள் வெளிவரலாயின.

பாவாணர் மறைவுக்குப் பின்னும், ஒவ்வொரு முறையும் அரசுப்பொறுப்பு ஏற்கிற போதும் இந்தத் துறையின் வளர்ச்சியில் நான் மிகுந்த அக்கறை செலுத்தி வந்துள்ளேன். 1996ஆம் ஆண்டில் தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாட்டுக்கு எனத் தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டுச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்திற்குத் தேவையான கூடுதல் பணியாளர்கள், கணிப்பொறியமைப்பு போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

இதுவரை, மும்மூன்று தொகுதிகள் கொண்ட ஆறு மடலங்களாக மொத்தம் 18 தொகுதிகள் சென்ற ஆண்டுவரை வெளிவந்து முடிந்துள்ளன. இப்போது 'ம', 'ய', 'வ' வரிசையில் ஆறு பகுதிகள் வெளிவருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். எஞ்சிய பகுதிகளும் விரைந்து வெளிவர வேண்டும் என்பது என் அவா. இந்த அகரமுதலிப் பகுதிகள் வெளிவர உறுதுணையாய் நின்ற தமிழ் வளர்ச்சி—பண்பாடு (ம) அறநிலையத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் மற்றும் அகரமுதலித் திட்ட இயக்கத்தின் பொறுப்பு இயக்குநர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப. அவர்களுக்கும், நூல்களை உருவாக்கியுள்ள அகரமுதலித் திட்டத்தின் ஆசிரியர், பணியாளர் குழுக்களுக்கும் எனது உளமார்ந்த பாராட்டுகள் உரித்தாகுக.

என்றும்,
அன்புடன்

(மு. கருணாநிதி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

"முத்தமிழறிஞர்"

கலைஞர் மு. கருணாநிதி



மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

தமிழ்நாடு அரசு

து. இராசேந்திரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையம் (ம) செய்தித் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்,

பதிப்புரை

மனிதச் சமுதாயத்தை உயர்த்த உதவும் அரியகலை மொழி. ஒரு மொழியின் பழமையை நிலைநாட்டுவதற்குப் பிற அடிப்படைகளைக் காட்டிலும் மொழியாய்வே முதன்மையானது. பிற சான்றுகள் அனைத்தும் வரலாற்றுக் காலம் வரையுள்ள பழமைத் தன்மையை விளக்கவல்லன. வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய நிலையைக் காட்டக்கூடிய ஒரே சான்றாக மொழி விளங்குகிறது. அவ்வடிப்படையில் தான் தமிழின் தோற்றத்தைப் பற்றி அறிய தமிழாய்வு பெருமளவில் துணைபுரியும் என்று மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் கருதினார்; தம் ஆய்வின் மூலம் தமிழின் பழமையை நிலை நாட்டினர்.

இன்று உலகில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. இம்மொழிகள் பல்வேறு மொழிக் குடும்பங்களைச் சேர்ந்தவையாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. இவற்றுள் இந்தோ–ஐரோப்பியம், திராவிடம், உரல் – அல்தாயிக், ஆப்பிரோ – ஆசியாடிக்கு (எமைதோ–செமிதிக்கு) ஆகியவை இன்றியமையாத குடும்பங்களாகக் கருதப்படுகின்றன. இந் நான்கு மொழிக் குடும்பங்கள் பொதுவான ஒரு மூலமொழியிலிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்று ஐரோப்பிய மொழியிலறிஞர்கள் சென்ற நூற்றாண்டு தொடக்கத்திலேயே கருதினர். இத்திசையில் பாவாணரது ஞாலமுதன்மொழி ஆய்வு தமிழின் ஞாலமுதன் மொழித்தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

மொழி வரலாற்றில் நிலைப்பாடு, வளர்ச்சி ஆகிய இரண்டு தன்மைகள் குறிப்பிடத்தக்கனவாக இருக்கின்றன. தமிழ் மொழியைப் பொறுத்தவரை தொல்காப்பியர் காலத்திற்குப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே நன்கு நிலைத்த தன்மையினை எய்திவிட்டது.

"மொழியில் இருவகை மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஒன்று அகக்காரணங்களால் ஏற்படுவது. மற்றொன்று புறக் காரணங்களால் ஏற்படுவது. பெரும்பாலும் சிக்கனம், ஒப்புமை, போன்றவற்றால் நிகழ்வது அகக்காரணங்களால் ஏற்படும் மாற்றமாகும். அரசியல் தாக்கம், சமுதாயப் புரட்சி அல்லது வேற்று நாட்டு வெற்றி ஆகியவற்றால் நிகழ்வது புறக்காரணங்களால் ஏற்படும் மாற்றமாகும்" (மாக்கசுமுல்லர் 1888 முன். XXVIII). மொழியின் திரிபுக்கு முந்தைய தன்மையைத் திரிபடைந்த தன்மையைக் கொண்டுதான் காணவேண்டியிருக்கிறது. இவ்வகையில் முந்தைய தன்மையை மொழியகழ்வாய்வின் மூலம் காட்டினார் பாவாணர்.

கருத்துப் பொதிந்த கருவூலங்களாக மொழிச் சொற்கள் விளங்குகின்றன. மொழி வழக்காற்றில் காலந்தோறும் நிகழ்ந்துள்ள பண்பாட்டு – அறிவுக் கூறுகள் அனைத்தும் மொழிச் சொற்களில் பொதிந்திருக்கும். சொல்லின் மூலவடிவத்தை அறிந்தால் அதன் பின் அது பெற்று வந்துள்ள மாற்றங்களைக் கணக்கிடலாம். சொல்லின் மூலவடிவத்தைக் காண்பதற்கு நாம் அவ்வடிவத்தின் பழமையைக் காணவேண்டும். இன்றைய நிலையில் பல்கிப் பெருகிக் காணப்படும் மொழிச் சொற்கள் எல்லாம் சிறு எண்ணிக்கையிலான வேர்களினின்று வளர்ந்து வந்துள்ளன. மொழி வளர்ச்சியில் அரிதான சொற்களும் தனிமைப்படுத்தப்படும் சொற்களும் வழக்கிழக்கின்றன. அதே நேரத்தில் புதிய ஆக்கங்களுடன் தேவையான சொற்களை மொழி ஆக்கிக் கொள்கிறது.

உலகமொழிகள் மூவாயிரத்துள்ளும் வேர்ச்சொல் காண்பதற்கு எளிதாகவும் மிகுதியாகவும் இடந்தரும்மொழி தமிழ் ஒன்றே. அஃது இயன்மொழியாதலால் பெரும்பாற் சொற்களின் வேர்வடிவை அல்லது வேருருப்பை இன்றும் தாங்கி நிற்கின்றது.

"ஒரு மொழியின் பெருமை அல்லது வளமை அதன் சொல்வளத்தால் அறியப்படும். சொல்வளத்தைக் காட்டுவது அகரமுதலி யென்னும் சொற்களஞ்சியம்" (பாவாணர் 1995 : முன் XXII) அகரமுதலி சொற்களை அடிப்படைப் பொருளாகக் கொண்டு சொற்கள் தொடர்பான செய்திகளைத் தருகிறது. இது சொற்களின் தொகுப்பாக இருப்பதால் கடந்த காலத்தையும் வருங்காலத்தையும் இக்காலத்தின் வழியே இணைக்கும் பாலமாக இயங்கி வருகிறது. அகரமுதலி பல கிளை வழக்குகளினூடே மொழியைத் தரப்படுத்தும் தன்மை வாய்ந்தது. தமிழ், சொல்வளமிக்க மொழி. அதன் சொல்வளத்தைக் கொண்டு அதன் நலன்கள் அனைத்தையும் அறிந்துகொள்ளலாம். தமிழ்நலன்கள் அனைத்தையும் காட்டும் வகையில் வடிவமைக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் ஏழாவது மடலம் மூன்றாம் – பகுதி இது. இது "மெ" முதல் "மௌ" வரையிலான வரிசைச் சொற்களைக் கொண்டது.

இப்பகுதியில் குறிக்கப்பட்டுள்ள சொற்களுக்கான விளக்கம் அருமையாக கொடுக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக 'முல்' என்னும் வேரிலிருந்து 'மெத்தை[1]' என்னும் சொல் பிறந்த வகையாக முல் → மெல் → மென்மை. மெல் → மெலி → மெலிவு. மெல் → மெலு → மெது → மொதுபு → மெதுகு. மெது → மெத்து → மெத்தை = மெல்லணை என்று காட்டப்பட்டுள்ள பொருத்தப்பாட்டினைக் கண்டுகொள்ளலாம்.

மே → மேல்[2] என்று சொல் வளர்ச்சியைக் காட்டும் போது எ, ஏ, சே, தெ, தே, மெ, மே, வே ஆகிய எழுத்துகளில் தொடங்கும் சொற்கள் உணர்ச்சியினைக் குறிக்கின்றன என்று ஒரு புது நெறியைத் தருவதைக் காணலாம்.

மொட்டு[1] என்னும் சொல்லுக்கு வேர் விளக்கம் தரும்போது முள் → முளை = முளைக்கும் வேர் தளிர் முதலியன, மரக்கன்று. முகுள் → முகுளம் = அரும்பு. முகுள் → முகிள் → முகிளம் = அரும்பு. முகிள் → முகிழ் = அரும்பு என்று முகுளம், முகுள், முகிளம், முகிழ் ஆகிய நான்கு சொற்கள் அரும்பு என்று பொருள் கொண்டிருப்பதைக் காட்டிப் பின்னர் முகிழ் → முகிழும். முட்டு → மொட்டு என்று காட்டி விளக்கும் திறத்தைக் காணலாம்.

தமிழ் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் ஊக்கம் அளித்து வரும் நம் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர அயராதுழைத்த பதிப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர்கள், பகுதிப் பொறுப்பாளர், தொகுப்பாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது பாராட்டுகள்.

து. இராசேந்திரன்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

மெ

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

மெ

மெ *me,* 'ம்' என்ற மெய்யெழுத்தும் 'எ' என்ற உயிரெழுத்தும் இணைந்த உயிர் மெய் (அசை) எழுத்து; the syllable formed by adding the short vowel 'e' to the consonant 'm'.

[ம் + எ]

மெச்சாதவர் *meccādavar,* பெ.(n.) 1. வரவேற்கத் தக்க விருந்தினர், நல்விருந்து; welcome guest. 2. நண்பர்கள் (வின்.); friends.

[மெச்சு + ஆ + த + அவர்]

மெச்சிக்கொள்(ளு)-தல் *mecci-k-koḷ(ḷu)-,* 10 செ.குன்றாவி. (v.t.) புகழ்ந்துரைத்தல்; to praise, approve, command. *'மெச்சிக் கொள்கிறதற்கு எச்சிலை எடுக்கிறது' (பழ.). 'தமிழின் தனித்தன்மையை மெச்சிக் கொள்ளாத புலவர் இல்லை' (உ.வ.).*

தெ. மெச்சுகொனது.

[மெச்சு → மெச்சி + கொள்-, 'கொள்' து.வி.]

மெச்சு¹-தல் *meccu-,* 5 செ.குன்றாவி. (v.t) 1. புகழ்தல், பாராட்டுதல்; to praise, extol, to flatter, to land. *"அமரர் மெச்ச மலர்மல்கு பொழில்" (தேவா. 543, 9). 'சிறுவனின் மறத்தன்மையை மெச்சாதவர்கள் இல்லை' (உ.வ.).* 2. மதித்தல் (வின்.); to esteem. 3. வியத்தல்; to admire greatly, wonder. *"மெச்சூது சங்கமிடத்தான்" (திவ். பெரியாழ். 2, 1, 1).*

ம. மெச்சுக; க., தெ., குட., பட. மெச்சு; து. மெச்சு, மெச்சி; கோத. மெச்.

[ஏ = உயர்ச்சி, பெருமை. ஏ → ஏடு = விஞ்ஞையருலகம். ஏ → ஏத்துதல் = உயர்த்துதல், புகழ்தல், வழுத்துதல். எஞ்சுதல் = மேற்படுதல், மிகுதல், மீதல். எஞ்சு → எச்சு → எச்சம், மிகுதியாய்க் கொடுத்தலை எச்சாய்க் கொடுத்தல் என்பது கொங்கு நாட்டுவழக்கு. (மு.தா.71 – 73). எ → எச்சு → மெச்சு. மெச்சுதல் = உயர்த்திப் பேசுதல்]

மெச்சு² *meccu,* பெ.(n.) உவப்பு(வின்); approbation, commendation.

மறுவ. பாராட்டு, புகழ்.

ம. மெச்சம்; க. மெச்சு, மெச்சிகெ, மெச்சுவிகெ; தெ., பட., குட. மெச்சு; து. மெச்சணிகெ; கோத. மெச்.

[எ → எச்சு → மெச்சு]

மெஞ்சை *meñjai,* பெ.(n.) மென்செய் பார்க்க; see *menšey.*

மறுவ. நஞ்சை.

[மென்செய் → மெஞ்சை]

மெஞ்ஞலம் *meññalam,* பெ.(n.) மெய்ந்நலம் (யாழ். அக) பார்க்க; see *mey-n-nalam.*

[மெய்ந்நலம் → மெஞ்ஞலம்]

மெட்டி *meṭṭi,* பெ.(n.) வெள்ளியிலான பெண்கள் கால்விரலணிவகை; a kind of plain silver ring worn on the great toe or the next toe. *'மெட்டியொலி எழ நடந்து வந்தாள்' (உ.வ.).*

க. மெட்டு; தெ. மெட்டெ, மட்டிய, மட்டெ; து. மேண்டிகெ; நா. மட்டெ; பர். மட்ட.

[மெட்டு = மேடு, மண்திட்டு, யாழிசைத் தானக்கட்டை, இசைப்போக்கு, மேன்மை. மெட்டு → மெட்டி. (மு.தா.73)]

சில வகுப்பாரிடையே பெண்கள் திருமண மானதற்கு அடையாளமாகவும் சிலரிடையே அழகிற் காகவும் மெட்டி அணியும் வழக்கம் உண்டு.



மெட்டு[1]-தல் *mettu-,* 4 செ.குன்றாவி. (v.t.) காலால் தாக்குதல்; to spurn or push with the foot. *"நிகளத்தை மெட்டி மெட்டிப் பொடிப்படுத்தி" (பழனிப்பிள்ளைத். 12).*

க., தெ., பட. மெட்டு; கோத. மெட்; துட. மோட்; மா. மட்யெ.

[முட்டு → மட்டு → மட்டை = பட்டை (மு.தா.114) முட்டு → மட்டு → மெட்டு. மெட்டுதல் = ஒன்றனை அழுந்துமாறு காலால் மிதித்தல்]

மெட்டு[2] *mettu,* பெ.(n.) செருப்பு; a sandal, a shoe.

க., தெ., பட. மெட்டு.

[மெட்டுதல் = காலால் மிதித்தல். மெட்டு = மிதித்து நடக்கப் பயன்படுத்தும் செருப்பு]

மெட்டு[3] *mettu,* பெ.(n.) 1. மேடு (திவா.); mound. 2. வெட்டும் பள்ளத்தின் நடுவில் வெட்டளவு காட்டும் மண்திட்டு (இ.வ.); section of earth left in the centre of an excavation as a measure of its depth. *'போடிமெட்டு, கம்பம்மெட்டு' (உ.வ). ஊர்ப்பெயர்கள் பின்னொட்டு.* 3. கின்னரத்தில் (பிடிலில்) வைக்கும் மிதப்புக்கட்டை; bridge of a fiddle. 4. ஊர் சூழ்காடு (வின்.); wood or jungle which surrounds a village.

ம. மேடு, மாடு (குன்று); க. மெட்டு, மேடு (குன்று), மிட்டு (மலை), மிட்டெ (மேட்டு நிலம்); தெ. மெட்ட; து. மிட்டெ, முட்டெ (குவியல்); கொலா. மெட்டா, மெட்ட்; நா. மெட்ட்; கோண். மட்டா (மலை).

[எ → எட்டு. எட்டுதல் = உயர்ந்து அல்லது நீண்டு தொடுதல். எட்டம் = உயரம், தூரம். (மு.தா.70). எட்டு → மெட்டு = மேடு, மண்திட்டு, யாழிசைத் தானக்கட்டை]

மெட்டு[4] *mettu,* பெ.(n.) மெட்டி பார்க்க; see *metti. "மெட்டினைப் பதத்திலிட்டு" (தனிப்பா. ii. 29, 68).*

க. மெட்டு; தெ. மெட்டெ.

[மெட்டி → மெட்டு]

மெட்டு[5] *mettu,* பெ.(n.) 1. ஆயத்துறை (வின்.); place where custom is paid, custom-house. 2. தடை; obstacle, obstruction. *'உள்ளே வரவொட்டாமல் மெட்டு வைத்து விட்டான்' (நெல்லை.).*

தெ. மெட்டு.

[எ → எட்டு → மெட்டு = மேடு, மண்திட்டு, மேடான இடத்தில் அமையும் ஆயத்துறை, மேடு ஏற்படுத்தும் தடை]

மெட்டு[6] *mettu,* பெ.(n.) பெருந்தகைமை, மதிப்புரவு (கௌரவம்); honour. *"மெட்டுக் கடக்க வெருட்டிடும்" (விறலிவிடு. 860).* 2. ஒயில் (இரீதி) (இ.வ.); fashion, style. 3. இசைப்பண்; tune of a song, rhythm.

'பாரதி பாட்டை இனிமையான மெட்டில் கேட்கும் போது பொருளும், இசையும் நம்மை மயக்குகின்றன. இது இந்துத்தானி மெட்டு' (உ.வ.).

பட. மேட்டு (பகட்டாரவாரம்).

[எ → எட்டு → மெட்டு = மேடு, உயர்ந்து காணப்படும் பெருந்தகைமை, உயர்த்திக் காட்டப் பெறும் ஒயில்]

மெட்டுக்காரன் *mettu-k-kāraṉ,* பெ.(n.) ஆயம் தண்டுவோன்; custom officer; one who collects customs, toll-gatherer.(C.G.)

[மெட்டு⁵ + காரன். எட்டு → மெட்டு = மேடு, மண்திட்டு, ஊர் சூழ்காடு. மெட்டுக்காரன் = மேடான இடம் அல்லது ஊரையொட்டிய இடத்தில் அமர்ந்தவன், அங்கமர்ந்து வரி தண்டுபவன்.]

மெட்டுச்சேவகன் *mettu-c-cēvagaṉ,* பெ.(n.) 1. மெட்டுக்காரன் பார்க்க (வின்.); see *mettu-k-kāraṉ.* 2. வருவாய்த்துறை அலுவலக உதவியாளர்; peon of the revenue department.

[மெட்டு + சேவகன்]

Skt. *śēvaka* > த. சேவகன்

மெத்த *metta,* வி.எ. (adv.) மிகவும்; much, abundantly, greatly. *"மெத்த நேயவனை" (தேவா. 758, 7). 'பாவாணரை மெத்தச் சிறந்தவர் என்று பலரும் பாராட்டுகின்றனர்' (உ.வ.).*

[மெத்து → மெத்த. எ → (எத்து) → மெத்து = மெத்துதல் = மேலிடுதல், மிகுதியாதல்]

மெத்தப்படித்தவன் *metta-p-paḍittavaṉ,* பெ.(n.) மிகுதியாகப் படித்தவர்; voracious reader. *'மெத்தப் படித்தவருக்குச் சோறு வெல்லம்' (பழ.). 'மறைமலையடிகளை மெத்தப் படித்தவர் என்று பாவாணர் பாராட்டுகிறார்' (உ.வ.).*

[மெத்த + படித்தவன்]

மெத்தபிரமி *metta-pirami,* பெ.(n.) வாய்நீர் ; saliva.

மெத்தம்பாரை *mettam-pārai,* பெ.(n.) மஞ்சள் கலந்த செம்மை நிறமுடையதும் 16 விரலம் வரை வளர்வதுமான கடல்மீன்வகை; sea-fish, yellowish red, attaining 16 in. in length, caesia pinjalo.


மெத்தம்பாரை

மெத்தம்பிரியன் *mettam-piriyaṉ,* பெ.(n.). சிவப்பும், மஞ்சளும் கலந்ததும் தூண்டிலிரையாகப் பயன்படுவதுமான கடல்மீன் வகை; sea-fish, crimson with orange tints, lutjanus annularis, used as bait.

மெத்தமதி *metta-madi,* பெ.(n.) மூளைச்சலம்; spinal fluid.

மெத்தவிடத்தி *metta-viḍatti,* பெ.(n.) மருதோன்றி; nail dye.

மெத்தனம் *mettaṉam,* பெ.(n.) 1. காலத் தாழ்ப்பு; delaying. 2. கவலையின்மை, பொருட்படுத்தாமை, பொறுப்பின்மை; slack,

lack of seriousness. *'ஏற்கனவே படித்ததுதான் என்று மெத்தனமாய் இருந்து விடாதே'. 'உன் மெத்தனத்தால் சிக்கல் பெரிதாகி விட்டது' (உ.வ.).*

[மெது → மெத்து → மெத்தென = மெதுவாக. மெத்தெனவு → மெத்தனம் (வே.க.4,23,24)]

மெத்தனவு *mettanavu,* பெ.(n.) 1. மெத்தெனவு பார்க்க; see *mettenavu.* 2.கவலையின்மை; light-heartedness. *"மெத்தனவிற்று யிலுங்கால்" (திருவாலவா. 27, 70).*

தெ. மெத்தென.

[மெத்து → மெத்தெனவு]

மெத்து[1]-தல் *mettu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மிகுதல்; to abound, increase. *"மெத்து பேரொளியாய்" (சேதுபு. தோத். 66).* 2. நிரம்புதல்; to be filled. *"மேவிய வடுவு மெத்தல்" (திருவாலவா. 1, 5).*

ம. மெத்துக; க., தெ. மெத்து.

[ஏ → எம்புதல் = எழுதல், குதித்தல். ஏ = மேலோங்குகை. ஏ → ஏத்துதல் = உயர்த்துதல், புகழ்தல், வழுத்துதல். (மு.தா.71) எ → (எத்து) → மெத்து, மெத்துதல் = மேலிடுதல், பள்ளத்தை நிரப்புதல், மிகுதல், வெல்லுதல்]

மெத்து[2]-தல் *mettu-,* 15 செ.குன்றாவி. (v.t.) 1. நிரப்புதல்; to fill. *"மனக்குறை மெத்தவுள்ளுபு" (தணிக்கைப்பு. வீராட். 35).* 2.அப்புதல்; to pad, pack, to plaster. *"இறைச்சி மெத்தி" (சீவக. 1577).* 3. பூசுதல்; t' smear, apply.

க., தெ., து., பட. மெத்து; கொலா. மெத்; நா., பர். மெத்.

[எ → (எத்து) → மெத்து-,]

மெத்துப்பூசு-தல் *mettu-p-pūsu-,* 5 செ. குன்றாவி. (v.t.) கனத்தப் பூச்சு மேன்மேலும் பூசுதல்; to give thick coating.

[மெத்து + பூசு-.]

மெத்துமெத்தென *mettu-mettena,* பெ.(n.) மெத்தெனல், 1 பார்க்க; see *mettenal-1.* *'அண்மையில் வாங்கிய செருப்பு காலுக்கு மெத்துமெத்தென்றிருந்தது' (உ.வ.).*

[மெத்து + மெத்து + என]

மெத்துவாத்துவம் *mettu-vāttuvam,* பெ.(n.) *மெத்துவாத்துவாதனம்* பார்க்க; see *mettu-vāttu-vādanam. "மெத்து வாத்துவ மிடக்கால் வடக்கால்" (தத்துவம். 108).*

மெத்துவாத்துவாதனம் *mettu-vāttu-vādanam,* பெ.(n.) இரண்டுகாலும் நீட்டி ஒரு முழங்கையூன்றித் தலையையேந்தி ஒரு கையை முசிவற நீட்டிக் கிடக்கும் இருக்கை (ஆசனம்) வகை (தத்துவம். 108, உரை); (saiva.) a reclining posture with one arm supporting the head and the other arm stretched along the body, while both the legs are outstretched.

[மெத்துவாத்துவம் + ஆதனம்]

Skt. *āsana* > த. ஆதனம்.

மெத்துவாத்துவதனம்



மெத்தென்று *mettenru*, வி.எ. (adv.) மென்மையாக (மிருதுவாக); soft. *'தலையணை மெத்தென்று இருந்தது' (உ.வ.).*

[மெது → மெத்து → மெத்தை = மெல்லணை (மு.தா.282). மெத்து + என்று]

மெத்தெனல் *mettenal*, பெ.(n.) 1. மென்மைக் குறிப்பு; expr. signifying being smooth or soft. *"மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேலேறி" (திவ். திருப்பா.19).* 2. அமைதிக் குறிப்பு; being gentle. 3. காலத்தாழ்ச்சிக் குறிப்பு; being slow. *"மெத்தெனமாதைக் கொண்டு வருகுவில்" (திருவாலவா. 62, 7).* 4. மந்தக்குறிப்பு (ஈடு. 1, 10, 11); being dull.

க. மெத்தகெ, மெத்திகெ, மெத்தன்ன, மெத்தானெ, மெத்தனெ; தெ. மெத்த, மெத்தனி; து. மெத்தென, மெத்தனெ; நா. மெத்தெ.

[மெல் → மெது → மெத்து + எனல். மென்மையாயிருத்தல்]

மெத்தெனவு *mettenavu*, பெ.(n.) 1. அமைதி (சாந்த)க் குணம் (வின்.); mildness of disposition, even temper, gentleness. 2. வளைந்து கொடுக்கும் தன்மை; pliancy.

[மெல் → மெது → மெத்து → மெத்தனவு]

மெத்தை[1] *mettai*, பெ.(n.) 1. படுத்துக்கொள்ள பயன்படுவதும் பஞ்சு போன்ற மென்மையான பொருள்களை உள்ளே வைத்து தைக்கப் படுவதுமான படுக்கை; bed, cushion. *"ஒரு பாம்பை மெத்தையாக விரித்து" (திவ். பெரியாழ். 5, 1, 7). 'மெத்தை நோர்த்தி தலையணை பீற்றல்' (பழ.).* 2. பஞ்சணை; quilt stuffed with cotton. 3. துயிலிடம்; sleeping place. 4. சட்டை (பிங்.); coat, jacket. 5. வேட்டையாடும்போது தோளிலிடும் கருவி (சாதனம்); a hunting accessory carried on the shoulder. *"வலத்தோளில் இட்ட மெத்தையும்" (திவ். திருநெடுந். 21, வ்யா. பக். 170).*

ம., தெ. மெத்த; க., பட. மெத்தை.

[முல் → மெல் → மென்மை. மெல் → மெலி → மெலிவு. மெல் → மெலு → மெது → மெதுபு → மெதுகு. மெது → மெத்து → மெத்தை = மெல்லணை (மு.தா. 281, 282)]

mett-a, Tel. (Tam. mettei), (Can. motte) a bed, a cotton bed, a cushion. The Dravidian word appears to be derived from mel soft. Comp., however, the Heb. mittāh, a bed, a cushion, a litter, from nātāh, to stretch out; Latin matta (CGDFL. 609).

மெத்தை[2] *mettai*, பெ.(n.) மெத்தைவீடு (வின்.) பார்க்க; see *mettai-vīdu*. *'அப்பா மெத்தையில் இருக்கிறார், பார்!' (உ.வ.).*

மறுவ. மாடி.

ம. மெத்த; தெ. மித்தெ; து. மெத்திகெ; பட. மெத்தெ.

[ஏ → மே → மேல். மே → மேது = மேல் மண்ணீடு. மீது → மெத்து = மேற்படு; மெத்து → மெத்தை = மேல்தளம். (சு.வி.57)]

மெத்தை[3] *mettai*, பெ.(n.) பூடுவகை; a plant. (சங்.அக.).

மெத்தைக்கட்டில் *mettai-k-kaṭṭil*, பெ.(n.) மெதுவணை பரப்பிய கட்டில்; cot which spreaded with soft bed.

[மெத்தை + கட்டில். கட்டு + இல்]



மெத்தைகட்டில்

மெத்தைச்சட்டை *mettai-c-caṭṭai,* பெ.(n.) பஞ்சு உள் வைத்துத் தைத்த சட்டை; bush-shirt or bush jacket.

[மெத்தை + சட்டை. சட்டம் → சட்டை = உடம்பு, உடம்பின் மீந்தோல், அதுபோன்ற மெய்ப்பை.]

மெத்தைப்பாய் *mettai-p-pāy,* பெ.(n.) 1. கீழ்ப்பாயைக்காட்டிலும் நயமாகச் செய்த மேற்பாயையுடைய இரட்டைப்பாய் (இ.வ.); double mat, the upper one being finer than the lower . 2. மெத்தை மேல் விரிக்கும் பாய் (வின்.); mat for spreading on a mattress.

ம. மெத்துப்பாயி.

[மெத்தை + பாய்]

மெத்தைப்பாரை *mettai-p-pārai,* பெ.(n.) மெத்தம்பாரை (யாழ்ப்.) பார்க்க; see *mettam-pārai.*

[மெத்தம்பாரை → மெத்தைப்பாரை]

மெத்தைவீடு *mettai-vīḍu,* பெ.(n.) 1. மாடி வீடு; storied house. *'மெத்தை வீட்டுக்காரர் ஆயிற்றே, மிடுக்காகத்தான் பேசுவார்'* *(உ.வ.).* 2. மேனிலை மாடம்; upper storey. *'அப்பா மெத்தை வீட்டில் இருக்கிறாரா, பார்'* *(உ.வ.).* 3. மொட்டை மாடி வீடு; terraced house.

[மெத்தை + வீடு]

[எஞ்சுதல் = மேற்படுதல், மிகுதல், மீதல். எஞ்சு → எச்சு → எச்சம் (மு.தா.73). எ → (எத்து) → மெத்து. மெத்துதல் = மேலிடுதல். மெத்து → மெத்தை = மேல்நிலை, மேல்தளம்]



மெத்தைவீடு

மெதி-த்தல் *medi-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. பாதத்தை ஒன்றன்மேல் வைத்தல், அடிவைத்தல்; to tread on. 2. காலால் துவைத்தல்; to tread down, trample on.

ம. மெதி, மெதிக்க, மெதியுக; க. மிதி; தெ. மெதுகு; து. மெதிபுனி, மெதுபுனி, மெத்புனி.

[மிதி → மெதி-,]

மெது *medu,* பெ.(n.) 1. மென்மை; softness. *'மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் குழியப் பாயும்' (பழ.).* 2. அமைதி (வின்.); gentleness. 3. தாமதம்; slowness. 4. மந்தம்; dullness. 5. கூர்மழுக்கம் (வின்.); bluntness, as of an edge.

து. மெது.

[மெல் → மெது]

த. மெது > **Skt.** *mṛdu*

ஒ.நோ. **E.** smooth; **OE.** smooth (once usu. smethe, whence dial smeeth).

நாகம் என்னும் தமிழ்ச்சொல் snake என்று செருமானிய மொழிகளில் சகரமுதன் மிகையோடு வழங்குவது போன்றே, மெது வென்னும் சொல்லும் வழங்குகிறதென்க.

தமிழ் சொற்களின் மகரவுறுப்பின்பின் ரகரத்தை இடைச் செருகுவது சமற்கிருதத்தில் சொல்லாக்க இயல்பே.

எ–டு: அமுது (சோறு) – அம்ருத. மடி–மரி–ம்ரு. மிதி–ம்ருத்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலியில் ம்ருது என்னும் சமற்கிருதச் சொல்லினின்று மெது என்னும் தென்சொல் திரிந்துள்ளதாகக் காட்டப்பட்டுள்ளது. (வே.க.4. 23).

மெதுக்கிடு–தல் *medukkiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) மெதுவாயிருத்தல்; to be soft.

து. மெதுஆபினி.

[மெது → மெதுக்கு + இடு–, மெதுக்கு = மெதுவாயிருக்கும் வெந்த சோறு. 'இடு' – து.வி.]

மெதுக்கு *medukku,* பெ.(n.) 1. சோறு; boiled rice. 2. குடமிளகாய் (பம்பளிமாசு) (வின்.); pomelo.

தெ. மெதுகு.

[மெது → மெதுக்கு. அரிசி அவிந்தபின் மெதுவாயிருத்தல் காண்க. (வே.க.4,23)]

மெதுகரம் *medukaram,* பெ.(n.) சன்ன அரம்; a kind of small, smoot file, used in fine workmanship.

[மெது → மெதுகு + அரம். நுண்ணிய வேலைப் பாட்டில் மெதுவாக அராவும் சன்ன அரம்.]

மெதுகாணி *medu-kāṇi,* பெ.(n.) மெருகு வளை பார்க்க (சங்.அக.); see *merugu-vaḷai.*

[மெருகாணி → மெதுகாணி. மெருகிடும் ஒரு கருவி]

மெதுகு *medugu,* பெ.(n.) மென்மை; fineness, thinness.

[மெல் → மெது → மெதுகு]

மெதுபக்கோடா *medu-pakkōḍā,* பெ.(n.) கடலை மாவை உருண்டைகளாக உருட்டிப் பொரித்துச் செய்யப்படும் ஒரு தின்பண்டம்; a kind of savoury made of chick-pea paste by cooking it soft in oil.

[மெது + பக்கோடா]

U. *pagōra* > த. பக்கோடா.

மெதுமெது–த்தல் *medu-medu-,* 11 செ.கு.வி. (v.i.) மென்மையாயிருத்தல் (வின்); to be soft to the touch as fruit.

[மெது + மெது. அடுக்குத்தொடர்.]

மெதுமெதுப்பு *medu-meduppu,* பெ.(n.) மென்மைத்தன்மை (வின்); softness; having a soft surface.

[மெதுமெது → மெது மெதுப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

மெதுவடை *medu-vaḍai,* பெ.(n.) மெதுவாயிருக்கும் உழுந்து வடை, பலகார வகை (மதி.க. ii.15); a kind of cake.

[மெது + வடை. வள் → வடு → வடை = வட்டமாக இருக்கும் பணியாரம்]

மெந்தியம் *mendiyam,* பெ.(n.) வெந்தயம் (இ.வ.); fenugreek.

ம. வெந்தயம்; க. மெந்தெ; தெ. மெந்தி; து., பட. மெத்தெ; கோத. மெந்தெ, மெந்தெய,

மெந்த்ய; துட. மேத்ய்.

[மெல் → மெல்து → மெந்து → மெந்தயம் → மெந்தியம்]

த. மெந்தியம் > **Skt.** *mēthikā.*

தமிழில் மெந்தியம், வெந்தயம் என ம,வ ஆகியவற்றில் தொடங்கும் இருவகைச் சொற்களும் வழக்கில் இருந்தாலும் வெந்தயக்கீரை, வெந்தயத்தோசை, வெந்தயக்கஞ்சி என்றாற் போன்று 'வ' வில் தொடங்கும் வழக்கு மிகுதி.

மெந்திரி *mendiri,* பெ.(n.) பரண்கட்டு (யாழ்ப்.); frame-work of a loft or ceiling.

ம. மெதியம்.

மெய்¹-த்தல் *mey-,* 11 செ.கு.வி. (v.i.) உண்மையாதல்; to be true. *"மெய்த்த திருவள்ளுவனார்" (சோமேச. முது. 41).*

[மெய் ² → மெய்-,]

மெய்² *mey,* பெ.(n.) 1. உண்மை; truth-reality, fact. *"மெய்யுணர்வில்லாதவர்க்கு"* (குறள், 354). *'மெய் சொல்லிக் கெட்டவனுமில்லை, பொய் சொல்லி வாழ்ந்தவனுமில்லை' (பழ.). 'அது மெய்யோ பொய்யோ யாருக்குத் தெரியும்' (உ.வ.).* 2. ஆதன்; soul. *"காட்டாசி நின்றானைக் கண்ணறியா மென்யென்ன" (சி.போ. 6,2,4).* 3. உணர்ச்சி; consciousness. *"மெய்ம்மறந்துபட்ட" (புறநா. 25).* 4. உடம்பு; body, used euphemistically. *"முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்" (குறள், 619).* 5. மார்பு; breast. *"முழுமெய் முறீஇ" (சிலப். 5, 226).* 6. ஒற்றெழுத்து; consonant. *"பதினெண்ணெழுத்து மெய்யென மொழிப" (தொல். எழுத். 9).*

ம. மெய்; க. மய், மெய், மை; தெ. மெயி; பட., குட., கோத. மெய்; துட. மொய்.

[மே = மேல். மே → மேவு. மேவுதல் = மேலிட்டுக் கொள்ளுதல், வேய்தல். மேல் → மேலா → மேலாவு = மேலதிகாரிகள். மேல் → மேன்மை. மேல் → மேன் → மேனி = உடம்பின் மேற்புறம், உடம்பு (மு.தா.73,74). மே → (மேய்) → மெய்]

மெய்க்கடுப்பு *mey-k-kaḍuppu,* பெ.(n.) உடல்வலி, உடல் முழுவதும் தோன்றும் வலி; pain all over the body.

[மெய் + கடுப்பு. கடு → கடுப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

மெய்க்கலவை *mey-k-kalavai,* பெ.(n.) மெய்யிற் பூசுங் கலவைச் சாந்து; unguent for the body. *"தானாக்கிய மெய்க்கலவை போல்" (பரிபா. 7, 20).*

[மெய் + கலவை. கல → கலவை]

மெய்க்கவசம் *mey-k-kavašam,* பெ.(n.) உடலிலிடும் காப்புச் சட்டை (வின்.); coat of mail, armour.

[மெய் + கவசம்]

மெய்க்காட்டு¹-தல் *mey-k-kāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) நேரில் வந்து தோற்றுதல் (அஷ்டாதச. பக். 62); to mark one's presence, to attend personally, to appear.

[மெய் + காட்டு-. காண் (த.வி) - காட்டு (பி.வி.)]

மெய்க்காட்டு² *mey-k-kāṭṭu,* பெ.(n.) 1. நேரில் வந்து தோற்றுகை; personal attendance. *"தேவர்களைச் சனியும், புதனும் மெய்க்காட்டுக் கொண்டு...... போருகிற இந்திரனும்" (ஈடு. 3, 6, 4).* 2. படை (சேனை) யைப் பார்வையிடுகை; parade,

review of an army. *"மெய்க்காட்டிட்ட படலம்" (திருவிளை.).* 3. மெய்க்காட்டு வேலை பார்க்க; see *mey-k-kāṭṭu-vēlai.*

[மெய் + காட்டு]

மெய்க்காட்டுவேலை *mey-k-kāṭṭu-vēlai,* பெ.(n.) குத்தகைக்கு விடாமல் நேரில் நடத்தும் வேலை; work done under muster roll, as different from work done under a contract. *'இந்த வேலை மெய்க்காட்டில் நடக்கிறதா? அடங்கலில் நடக்கிறதா?' (உ.வ.).*

[மெய்க்காட்டு + வேலை]

மெய்க்காடு *mey-k-kāḍu,* பெ.(n.) மெய்க் காட்டுவேலை (இ.வ.) பார்க்க; see *mey-k-kāṭṭu-vēlai.*

[மெய் + காடு]

மெய்க்காவல்[1] *mey-k-kāval,* பெ.(n.) மெய்காவலன் பார்க்க; see *mey-kāvalaṉ.*

[மெய் + காவல். கா → காவல்]

மெய்க்காவல்[2] *mey-k-kāval,* பெ.(n.) கோயிற் காவலர்; temple-guard. *"நித்த வினோத வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்துச் சிற்றம்பர் ஊரார் இடக்கடவ திருமெய்க்காப்பு ஒன்றும்" (தெ. கல். தொ. 22, கல். 57).*

மறுவ. மெய்க்காப்பு (தஞ்சைப் பெரியகோவில் கல்வெட்டு).

[மெய் + காவல். கா → காவல். 'அல்' தொ.பெ.ஈறு.]

மெய்க்காவலர் *mey-k-kāvalar,* பெ.(n.) மெய்க்காவல்[2] பார்க்க; see *mey-k-kāval[2].*

[மெய் + காவலர். காவல் → காவலர். நாள்படி (நாள் நிவந்தம்) பெறுபவர், இறையிலி நிலம் (காணியாட்சி நிலம்) பெறுபவர் என மெய்க்காவலர்களுள் இரு பிரிவுண்டு]

மெய்க்கிளை *mey-k-kiḷai,* பெ.(n.) பலாக் கொட்டையில் தோன்றும் முளை, கனி கொடுக்கும் பலா முளை(யாழ்ப்); genuine sprout in jack-trees.

[மெய் + கிளை]

மெய்க்கீர்த்தி *mey-k-kīrtti,* பெ.(n.) 1. புகழ் (கொ.வ.); fame. 2. அரசனது புகழ் வரலாறுகளைக் கூறி, அவன் தேவியுடன் வாழ்க என்று வாழ்த்தி, அவன் இயற் பெயருடன் ஆட்சியாண்டைக் கூறும் பாடல் வகை (பன்னிருபா. 311); a poem detailing the geneology and achievements of a king, with a prayer for his long life and his queen's and a mention of his proper name and regnal year. *'கரிகால் வளவன் ஈழத்தின் மேற் படையெடுத்துப் பன்னீராயிரம் குடிகளைச் சிறைப்பிடித்துக் கொண்டுவந்து, காவிரிக்குக் கரைகட்டுவித்ததாக அவன் மெய்க்கீர்த்தி கூறுகிறது'.*

[மெய் + கீர்த்தி. சீர்த்தி → கீர்த்தி. சீர்த்தி அல்லது கீர்த்தி மிகு புகழ் (சொ.க.40)]

மெய்க்கீர்த்தியின் இலக்கணம் பன்னிரு பாட்டியல், வச்சணந்திமாலை முதலிய பாட்டியல் நூல்களில் காணப்படுகிறது. இப்பகுதி அகவல்சீர் அமைதியுடன் சீர் நான்காய் இரண்டடித் தொடையில், அரசன் மெய்ப்புகழ் எல்லாஞ் சொல்லியும், முடிவில் அவன் வரலாறு சொல்லியும், அவன் மனைவியுடன் வாழ்க எனச் சொல்லியும், அவன் இயற்பெயர் முன்னர் சிறக்க யாண்டெனக் கூறியும் முடிவதாகும்.

சோழ மன்னர்கள் தங்கள் மெய்க்கீர்த்திகளில் தத்தம் வெற்றிகளையே முழுமையாகக் கூறுவர்.

பாண்டிய மன்னரோ, தங்கள் வெற்றிகளுடன் தங்கள் முன்னோர்கள் அருஞ் செயல்களையும் உடன் சேர்த்துக் கூறுவர். இவர்கள் வரலாற்றின் அடிப்படைச் சான்றுகள் இம்மெய்க் கீர்த்திகளேயாகும். *"திருமகளிருந்தென வீரசிம்மாசனத்து, உலகுடை யாளொடும் வீற்றுருந்தருளிய குலோத்துங்க சோழ தேவர்க்கு"* (முதற் குலோத்துங்கன் – மெய்க்கீர்த்தி) (கல்.அக.)

மெய்க்கீர்த்திமாலை *mey-k-kirtti-mālai,* பெ.(n.) தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களுள் ஒன்றும் அரசனது புகழ் கூறுவதுமாகிய நூல் வகை (இலக். வி. 805); panegyric poem about the great deeds of a king, one of 96 pirabandam, q.v.

[மெய்க்கீர்த்தி + மாலை]

மெய்க்குளிர்ச்சி *mey-k-kulircci,* பெ.(n.) உடலினுள் ஏற்படும் குளிர்த்தன்மை; coolness of the body.

[மெய் + குளிர்ச்சி. குளிர் → குளிர்ச்சி]

மெய்க்குற்றம் *mey-k-kuṟṟam,* பெ.(n.) 1. கொட்டாவி, நெட்டை, குறுகுறுப்பு, கூன் கிடை, நட்டுவிழல் என்பனவாகிய உடலில் உண்டாகும் ஐவகைக் குற்றங்கள் (பிங்.); ill-mannered bodily action, of which there are five kinds viz. *koṭṭāvi, neṭṭai, kuṟu-kuṟuppu, kūṉ-kiḍai, naṭṭu-viḻal.* 2. நிலை நின்ற குற்றம்; permanent defect. *"என் செய்வினையா மெய்க்குழற நீக்கி" (திவ். இராமானுச. 26).*

[மெய் + குற்றம்]

மெய்க்கூத்து *mey-k-kūttu,* பெ.(n.) தேசி, வடுகு, சிங்களம் என்ற முப்பாற் பகுதியை யுடைய அபிநயக் கூத்து (சிலப். 3, 12, உரை); (Natya) dancing with gesticulation, of three kinds viz. *teśi, vaḍugu, śiṅgaḷam.*

[மெய் + கூத்து]

மெய்க்கொட்டை *mey-k-koṭṭai,* பெ.(n.) மெய்க்கிளை (யாழ். அக.) பார்க்க; see *mey-k-kiḷai.*

[மெய் + கொட்டை]

மெய்க்கொள்(ளு)-தல் *mey-k-koḷ(ḷu)-,* 16 செ.குன்றாவி. (v.t.) மெய்யாகக் கொள்ளுதல் (வின்.); to believe to be true.

[மெய் + கொள்–,]

மெய்க்கோள் *mey-k-kōḷ,* பெ.(n.) 1. மெய்யாகக் கொள்ளுகை; acceptance as truth. 2. முன்பணம் (வின்); earnest. *'மெய்க்கோளாய் வாங்கினேன்'.*

[மெய் + கோள். கொள் → கோள்]

மெய்கடாமரம் *mey-kaḍā-maram,* பெ.(n.) ஒரு வகை மரம்; a kind of Euphorbia.

மெய்கண்டசந்தானம் *meykaṇḍa-śandāṉam,* பெ.(n.) மெய்கண்ட தேவரது கொண்முடிபைப் பின்பற்றுவோர் (அபி.சிந்) ; followers of *Meykaṇḍa-dēvar* philosophical teachings.

[மெய்கண்ட + சந்தானம்]

Skt. *san-tāna* > த. சந்தானம்.

மெய்கண்டசாத்திரம் *meykaṇḍa-śāttiram,* பெ.(n.) திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞான சித்தியார், சிவஞான போதம், இருபாவிருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம் அல்லது துகளறுபோதம், சங்கற்ப நிராகரணம்

என்ற சைவக் கொண்முடிபை (சித்தாந் தத்தை)க் கூறும் 14 நூல் (சாத்திரங்)கள்; canonical text of the *šaiva šiddhānda* philosophy, 14 in number, viz., *thiru-v-undiyār, tiru-k-kaḷiṟṟu-p-paḍiyār, šivañāṉa-šittiyār, šivañāṉa-pōdam, irubā-v-irubagdu, uṇmai-viḷakkam, šiva-p-pirakāšam, tiru-v-aruṭpayaṉ, vinā-veṇbā, pōṟṟi-p-paḵṟoḍai, koḍi-k-kavi, neñju-viḍu-tūdu, uṇmai-neṟi-viḷakkam* or *tugaḷ-aṟu-pōdam, šaṅgaṟpa-nirākaraṇam.*

[மெய்கண்ட + சாத்திரம்]

Skt. *šāstra* > த. சாத்திரம்.

மெய்கண்டதேசிகன் *meykaṇḍa-dēšigaṉ,* பெ.(n.) மெய்கண்ட தேவர் பார்க்க (சித். மரபுகண். 1.); see *meykaṇḍa-dēvar.*

[மெய்கண்ட + தேசிகன்]

Skt. *dēsika* > த. தேசிகன்.

மெய்கண்டதேவர் *meykaṇḍa-dēvar,* பெ.(n.) வழியாசிரிய (சந்தான குரவ)ருள் முதல்வரும் சிவஞான போத ஆசிரியராய் 13 ஆம் நூற்றாண்டில் விளங்கியவருமான சைவப் பெரியார்; a saiva *Ācārya*, author of *šivañāṉa-pōdam*, 13th c. the chief of *šandāṉa-kuravar.*

[மெய்கண்ட + தேவர்]

மெய்கண்டநூல் *meykaṇḍa-nūl,* பெ.(n.) மெய்கண்டசாத்திரம் பார்க்க (சித். மரபுகண். 1); see *meykaṇḍa-šāttiram.*

[மெய்கண்ட + நூல்]

மெய்கண்டான் *meykaṇḍāṉ,* பெ.(n.) மெய்கண்டதேவர் பார்க்க; see *meykaṇḍa-dēvar. "மெய்கண்டானூல்" (சி. சி. பாயி. 2).*

[மெய் + கண்டான்]

மெய்கண்டு *mey-kaṇḍu,* பெ.(n.) இத்தனை ஆள் என்பதை நேரிற் கண்டு செய்யும் கணக்கீடு; to reckon, compute, calculate, as of, at direct supervision. *"இந்நெல் தண்ட வந்தார்க்கு மெய்கண்டு ரீசாறு கொடுப்பதாகவும்" (தெ. கல். தொ. 8, கல். 5).*

[மெய் + கண்டு. காண் → கண்டு]

மெய்காட்டு-தல் *mey-kāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) ஒருவன் தன் வலிமையைக் காட்டுதல் (வின்.); to exhibit one's strength.

[மெய் +காட்டு-.]

மெய்காண்(ணு)-தல் *mey-kāṇ(ṇu)-,* 16 செ.குன்றாவி. (v.t.) உண்மையாக ஆராய்ந்தறிதல்; to ascertain by investigating truly. *"நீ மெய்கண்ட தீமை" (புறநா. 10).*

[மெய் + காண்-,]

மெய்காப்பாளன் *mey-kāppāḷaṉ,* பெ.(n.) மெய்காவலன் (வின்.) பார்க்க ; see *mey-kāvalaṉ.*

[மெய் + காப்பாளன். மெய் = உடம்பு. கா → காப்பு → காப்பாளன்]

முன்பு அரசன் அருகிலிருந்து அவனுக்குப் பகைவரால் துன்பம் வரா வண்ணம் மெய்க் காப்பாளர் காத்து வந்தனர். இன்று உயர் பதவியில் இருப்போர், பிறரால் இடர் நேரலாம் என எதிர் பார்ப்போர் மெய்காப்பாளரை அமர்த்திக் கொள்கின்றனர்.

மெய்காப்பு *mey-kāppu,* பெ.(n.) மெய்காவலன் பார்க்க; see *mey-kāvalaṉ.*

து. மெய்காபு.

[மெய் + காப்பு. கா → காப்பு. 'பு'. தொ.பெ.ஈறு]

மெய்காவல் *mey-kāval,* பெ.(n.) 1. ஒருவனைப் பாதுகாக்கை; guarding a person. *"அப்பூதத்தை அவன் பொருட்டு மெய்காவலாக ஏவுதலின்" (சிலப். 6, 12, உரை).* 2. சிறை; custody of person, imprisonment.

ம. மெய்காவல்;

[மெய் + காவல், கா → காவல். 'அல்' தொ.பெ.ஈறு.]

மெய்காவலன் *mey-kāvalan,* பெ.(n.) 1. பிறருக்குத் துன்பம் (ஏதம்) நேராமற் காப்பவன்; body-guard. 2. திருக்கோயில் காவல் செய்பவர்; temple-guard.

[மெய் + காவலன். கா → காவல் → காவலன். 'அன்' ஆ.பா.ஈ.று]

திருக்கோயில் மெய்காவலருக்கு நாள்படியோ (நிவந்தமோ), காணியாட்சி நிலமோ அளிக்கப் பெறுவது வழக்கு.

மெய்காவற்காரன் *mey-kāvar-kāran,* பெ.(n.) மெய்காவலன் (இ.வ.) பார்க்க; see *mey-kāvalan.*

[மெய் + காவல் + காரன்]

மெய்குழலாதி *mey-kulalādi,* பெ.(n.) தாமரைக் கிழங்கு; root of lotus.

[மெய் + குழலாதி]

மெய்குளிரல் *mey-kuliral,* பெ.(n.) உடலின் மேல் பரவும் குளிர் காற்றின் தாக்கம்; the body becoming chill and cold.

[மெய் + குளிரல்]

மெய்கூறல் *mey-kūral,* பெ.(n.) மும்மொழியி லொன்றான உண்மை பேசுகை (யாழ். அக.); speaking the truth, one of *mu-m-moli.* (q.v).

[மெய் + கூறல். கூறு → கூறல். 'அல்'. தொ.பெ.ஈ.று]

மெய்ச்சு–தல் *meyccu-,* 5 செ.குன்றாவி. (v.t.) மெச்சு–தல் பார்க்க; see *meccu-,* *"படிமெத்த மெய்ச்சு பாவலனே" (திருப்போ. சந். சின்னகட். ஐங்கர. 6.).*

[மெச்சு → மெய்ச்சு–,]

மெய்ச்சூலை *mey-c-cūlai,* பெ.(n.) உடம்பு குத்தல் நோய்; pricking pain in the body.

[மெய் + சூலை]

மெய்சிலிர்–த்தல் *mey-šilir-,* 4 செ.கு.வி. (v.i) வியப்பு, மகிழ்ச்சி முதலியவற்றால் கிளர்ச்சி அடைதல், சிலிர்ப்பு அடைதல்; to horripilate, due to scare, fear, disgust etc., be enthralled. *"மெய்சிலிராக் கை மோவா" (திவ். இயற். சிறிய. 6, 21). 'மயிலின் ஆட்டம் கண்டு மெய்சிலிர்த்துப் போனோம்' (உ.வ.).*

மறுவ. மயிர்க்கூச்செறிதல்.

து. மெயி அரிகட்டுனி.

[மெய் + சிலிர்–,]

மெய்சுழி–த்தல் *mey-šuli-,* 4 செ.கு.வி. (v.i.) பகடி (கேலி) செய்யும் பொருட்டு மெய்யுறுப்புகளை அசைத்தல்; to shake as of limbs in accords to ridicule.

[மெய் + சுழி. சுள் → சுழி]

மெய்செய்–தல் *mey-šey-,* 1 செ.கு.வி. (v.i.) 1. உண்மையுடன் நடத்தல்; to be true, to be faithful. *"கார்யத்தில் வந்தால் மெய்*

செய்வாரைப் போல பொய் செய்து தலைகாட்டும்" (ஈடு. 10, 4, 5, பக். 141). 2. செயலை நிறைவேற்றுதல்; to accomplish a thing. *'தொடங்கின செயலை மெய் செய்து வரவேண்டாமா?'*

[மெய் + செய்-,]

மெய்ஞ்ஞலம் *mey-ñ-ñalam,* பெ.(n.) உண்மை (உடல்) நலம்; health.

[மெய் + நலம் - மெய்நலம் → மெய்ஞ்ஞலம்]

மெய்ஞ்ஞானசாரம் *mey-ñ-ñāṉa-cāram,* பெ.(n.) ஓர் சொல்; a kind of text.

[மெய்ஞ்ஞானம் + சாரம்]

Skt. *jñāna* > த. ஞானம்.

மெய்ஞ்ஞானநிட்டை *mey-ñ-ñāṉa-niṭṭai.* பெ.(n.) உண்மையறிவு (மெய்ஞ்ஞான) நிலையில் நிற்கை (வின்.); firm stand in the path of spiritual wisdom.

[மெய் + ஞானம் + நிட்டை]

Skt. *nistha* > த. நிட்டை.

Skt. *jñāna* > த. ஞானம்.

மெய்ஞ்ஞானம் *mey-ñ-ñāṉam,* பெ.(n.) உண்மையறிவு; true knowledge, spiritual wisdom. *"இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினும்" (நாலடி, 116).*

[மெய் + ஞானம்]

Skt. *jñāna* > த. ஞானம்.

மெய்ஞ்ஞானவிளக்கம் *mey-ñ-ñāṉa-viḷakkam,* பெ.(n.) பிரபோத சந்தரோதயமென்ற வடமொழி நாடகத்தைப் பின்பற்றித் தமிழ் மொழியில் மாதைத் திருவேங்கடநாதர் இயற்றிய வேதாந்த தொடர்பான பனுவல்; a metaphysical poem adapted by *Mādai-t-tiru-vēṅkaḍa-nādar* from a Sanskrit drama of the same name.

[மெய்ஞ்ஞான + விளக்கம்]

Skt. *jñāna* > த. ஞானம்.

மெய்ஞ்ஞானி *mey-ñ-ñāṉi,* பெ.(n.) மெய்ப் பொருள் திறவோன் (தத்துவஞானி) (பு. வெ. 10, 4, உரை); person of the true spiritual wisdom.

[மெய் + ஞானி]

Skt. *jñānin* > த. ஞானி.

மெய்டா *meyḍā,* பெ.(n.) பூமருது; flowering murdah.

மெய்த்தகை *mey-t-tagai,* பெ.(n.) 1. புனையாத இயற்கையழகு; natural unadorned beauty. *"மெய்த்தகை மாது" (திருக்கோ. 231, கொளு, உரை).* 2. உண்மைக் கற்பு (திருக்கோ. 231, கொளு, உரை); true chastity.

[மெய் + தகை]

மெய்த்திடு-தல் *mey-t-tiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) மெய்-த்தல் பார்க்க; see *mey-,* *"மெய்த்திடும் பலமுனக்கு" (சி.சி. 2,18).*

[மெய் + மெய்த்து + இடு-.]

மெய்த்திறம் *mey-t-tiṟam,* பெ.(n.) மத வுண்மையை உணர்த்தும் நூல் (மணிமே. 27, 106); treatise expounding religious truths.

[மெய் + திறம்]

மெய்த்தொடரி *mey-t-toḍari,* பெ.(n.) ஒரு மூலிகை; a plant.

மெய்தாங்கி *mey-tāṅgi,* பெ.(n.) இருக்கை (ஆசனம்); seat (M.E.R. 343 of 1923).

[மெய் + தாங்கி. உடம்பைத் தாங்குவது]

மெய்தீண்டு-தல் *mey-tīṇḍu-,* 5 செ. குன்றாவி. (v.t.) அன்போடு ஒருவன் உடலைத் தொடுதல்; to touch affectionately, as the body of a child to caress. *"மக்கண் மெய் தீண்ட லுடற்கின்பம்" (குறள், 65).* 2. ஒருத்தியின் கற்பைக் கெடுத்தல் (கொ.வ.); to outrage a woman's modesty.

[மெய் + தீண்டு-.]

மெய்தீய்-தல் *mey-tīy-,* 2 செ.குன்றாவி. (v.t.) நேர்மை தவறுதல்; to prove false. *"உத்தமநம்பி விகாதம் பண்ணி நியாயம் போலே மெய் தீய்ந்து" (கோயிலொ. 96).*

[மெய் + தீய்-.]

மெய்தொட்டுப்பயிறல் *mey-toṭṭu-p-payiṟal,* பெ.(n.) தலைவியின் மனக்குறிப்பை யறிதற் பொருட்டுத் தலைவன் அவளைத் தொட்டுப் பழகுவதைக் கூறும் அகத்துறை (தொ. பொ. 102); (agap.) theme describing a lover touching the person of his beloved to ascertain her inclinations.

[மெய் + தொட்டு + பயிறல். தொடு → தொட்டு]

மெய்ந்நலம் *mey-n-nalam,* பெ.(n.) 1. உடம்பினழகு; beauty of person. 2. வலிமை (சூடா.); strength.

[மெய் + நலம்]

மெய்ந்நவை *mey-n-navai,* பெ.(n.) மெய்க் குற்றம் (பிங்.) பார்க்க; see *mey-k-kuṟṟam.*

[மெய் + நவை]

மெய்ந்நிலை *mey-n-nilai,* பெ.(n.) 1. உண்மைத்தன்மை; reality. 2. சிறு விரலும் அணிவிரலும் நடுவிரலும் சுட்டுவிரலும் ஒன்றன்மீது ஒன்றுபடாமல் விட்டுநிமிரச் சுட்டு விரன்மேற் பெருவிரல் சேர வைப்பதாகிய இணையா வினைக்கை வகை (சிலப். 3, 18, உரை); (*Nāṭyā.*) a gesture with one hand in which the four fingers are spread out and the thumb is joined to the forefinger one of *iṇaiyā-viṉai-k-kai* (q.v.).

[மெய் + நிலை]

மெய்ந்நிலைமயக்கம் *mey-n-nilai-mayakkam,* பெ.(n.) மெய்ம்மயக்கம் (நன். 109, மயிலை) பார்க்க; see *mey-m-mayakkam.*

[மெய்ந்நிலை + மயக்கம்]

மெய்ந்நீர்மை *mey-n-nīrmai,* பெ.(n.) 1. உண்மை; truth. 2. வீடுபேறு (மோட்சம்); salvation, as the ultimate reality. *"மெய்ந்நீர்மை மேனிற்பவர்" (திரிகடு. 35).*

[மெய் + நீர்மை]

மெய்ந்நூல் *mey-n-nūl,* பெ.(n.) உண்மை யுணர்த்தும் நூல்; sacred writings, as teaching the truth. *"பொய்ந்நூலை மெய்ந்நூ லென்றென் றோதி" (திவ். பெரியதி. 2, 5, 2).*

[மெய் + நூல்]

மெய்ந்நெறி *mey-n-neṟi,* பெ.(n.) உண்மை வழி; the true path, the path of virtue. *"மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய வதிசயங் கண்டாமே" (திருவாச. 26, 10).*

[மெய் + நெறி]

மெய்நடுக்கம் *mey-naḍukkam,* பெ.(n.) உடம்பின் நடுக்கம்; tremble of the body.

[மெய் + நடுக்கம்]

மெய்நலம் *mey-nalam,* பெ.(n.) மெய்ந்நலம், 2 பார்க்க (வின்.); see *mey-n-nalam* 2.

[மெய் + நலம்]

மெய்நீர் *mey-nīr,* பெ.(n.) சிறுநீர்; urine.

[மெய் + நீர். மெய் = உடம்பு]

மெய்நூலன் *mey-nūlaṉ,* பெ.(n.) பாண்டவர்களுக்கும் குருவினர்க்கும் படைப்பயிற்சி யளித்த பார்ப்பன மறவர், துரோணாசாரியன்(வின்.); *Durōṇācāriyaṉ,* a Brahmin warrior who taught archery to *Pāṇḍavās* and Kurus.

[மெய் + நூலன்]

மெய்ப்படாம் *mey-p-paḍām,* பெ.(n.) உடலை மூடும் போர்வை (வின்.); mantle, cloak, as covering the body.

[மெய் + படாம்]

மெய்ப்படு-தல் *mey-p-paḍu-,* 17 செ. குன்றாவி. (v.t.) 1. உண்மையாதல்; to be true: to prove correct. *"மெய்ப்பட வுணர்வு தோன்று" (சீவக. 2726).* 2. தெய்வம், பேய் ஆகியன ஏறுதல் (ஆவேசிக்கப் பெறுதல்); to be possessed, as by a deity or a spirit. *"முருகுமெய்ப்பட்ட புலைத்தி போல" (புறநா. 259).*

[மெய் + படு-.]

மெய்ப்பரிசம் *mey-p-parišam,* பெ.(n.) மெய்யுணர்வு[2] பார்க்க; see *mey-y-uṇarvu*[2].

[மெய் + பரிசம்]

Skt. *sparša* > த. பரிசம்.

மெய்ப்பாட்டிசைக்குறி *meyppāṭṭišai-k-kuṟi,* பெ.(n.) வியப்பைக் குறிக்கச் சொல்லின் பின் இடும் அடையாளம்; mark of exclamation (mod.).

[மெய்ப்பாடு + இசை + குறி]

மெய்ப்பாட்டியற்கை *mey-p-pāṭṭiyaṟkai,* பெ. (n.) சமண நூல் (சைனபரமாகமம்); the Jain scriptures. *"கப்பத் திந்திரன் காட்டிய நூலின் மெய்ப்பாட்டியற்கையின் விளங்கக் காணாய்" (சிலப். 11, 154).*

[மெய் + பாட்டியற்கை]

மெய்ப்பாடு *mey-p-pāḍu,* பெ.(n.) 1. நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என எண் வகைப்பட்டதும் புறத்தார்க்குப் புலப்படு வதோராற்றான் வெளிப்படுவதுமான உள்ள நிகழ்ச்சிகள் (தொல். பொ. 251) (பாவம்); manifest physical expression of the emotions of eight kinds,viz., *nagai, aḻugai, iḷivaral, maruṭkai, accam, perumidam, veguḷi, uvagai.* 2. புகழ் (பிங்); praise. 3. இயற்கைக் குணம்; nature, innate diposition. *"இடைச்சாதியின் மெய்ப்பாட்டாலே அடங்கக் கறக்க வல்ல சாமர்த்தியம்" (திவ். திருப்பா. 11, வ்யா).*

[மெய் + பாடு. உள்ளத்து உணர்வுகள் உடல் வழியாக வெளிப்படுகை. படு → பாடு]

மெய்ப்பி-த்தல் *meyppi-,* 4 செ.குன்றாவி. (v.t.) எண்பித்தல், நிறுவுதல் (நிருபித்தல்); to prove, substantiate. *'அவன் மீது கூறிய குற்றத்தை உன்னால் மெய்ப்பிக்க முடியுமா?' (உ.வ.).*

[மெய் → மெய்ப்பி-.]

மெய்ப்பிரம் *mey-p-piram,* பெ.(n.) முகில் (பிங்); cloud.

மெய்ப்பு[1] *meyppu,* பெ.(n.) 1. எண்பிப்பு (நிரூபணம்); verification, proof. 2. புகழ்ச்சி (சூடா.); eulogy. 3. திருத்தத்துக்கான அச்சுப்படி; printing proof. *'இன்று பத்து பக்கம் மெய்ப்பு வந்துள்ளது' (உ.வ.).*

[மெய் → மெய்ப்பு, 'பு' தொ.பெ.ஈறு]

மெய்ப்பு[2] *meyppu,* பெ.(n.) பகட்டாரவாரம் (ஆடம்பரம்); ostentation. *"ஆணவ மெய்ப்பாகச் செய்யாதே" (குருகூர்ப். 89).*

[மீ → (மீய்) → மெய் = உடம்பு. மெய் → மெய்ப்பு = உடம்பு வழிக் காட்டும் பகட்டாரவாரம்]

மெய்ப்புப்பணி *meyppu-p-paṇi,* பெ.(n.) அச்சுப் படிகளை ஒப்பிட்டுப் பார்க்கும் பணி; proof reading work. *'அவன் மெய்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ளான்' (உ.வ.).*

[மெய் → மெய்ப்பு]

மெய்ப்புப்பார்–த்தல் *meyppu-p-pār-,* 4 செ.குன்றாவி. (v.t.) அச்சுப்படி திருத்தங்களை மேற்கொள்ளுதல்; to read proof (printing). *'ஒருமுறைக்கு இருமுறை கவனமாக மெய்ப்புப் பார்க்க வேண்டும்' (உ..வ.).*

[மெய்ப்பு + பார்–,]

மெய்ப்பூச்சு *mey-p-pūccu,* பெ.(n.) உடலின் மேற் பூசும் கலவைச்சாந்து முதலியன; fragrant paste, oil, etc. for smearing on the body. *"மெய்ப்பூச்சு நெய்தருங் கொழுந் தூப தீபங்கள்" (பெரிய. திருக்குறிப்புத். 60).*

[மெய் + பூச்சு. பூசு → பூச்சு]

மெய்ப்பூட்டுத்தீட்டு *mey-p-pūṭṭu-t-tīṭṭu,* பெ.(n.) மரபு வழி உடன்படிக்கைச் சீட்டு (நபர் சாட்டுதல் சீட்டு); heritary agreement deed. *'இந்நால்வரோம் மெய்ப்பூட்டுத் தீட்டுக் குடுத்த பரிசாவது சந்திராதித்த வரையும் நாங்களும் எங்கள் வங்கடித்தாரும் அளக்கக் கடவோ மானோம்" (தெ. கல். தொ. 5, கல்.480).*

[மெய்ப்பூட்டு + தீட்டு. சீட்டு → தீட்டு]

மெய்ப்பை *mey-p-pai,* பெ.(n.) சட்டை; coat,clock. *"மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து" (முல்லைப். 60).*

[மெய் + பை. மெய் = உடல். மெய்யை (உடலை) உட்புகுத்தும் பை போன்றது]

மெய்ப்பொருணாயனார் *mey-p-poruṇāyaṉār,* பெ.(n.) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் (பெரியபு.); a canonized Saiva saint, one of 63.

[மெய்ப்பொருள் + நாயனார்]

மெய்ப்பொருள் *mey-p-poruḷ,* பெ.(n.) 1. உண்மை; truth, essence, reality. *"மெய்பொருள் காண்பதறிவு" (குறள், 385).* 2. உண்மையான செல்வம்; true wealth. *"கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி" (கொன்றைவே. 3).* 3. உண்மையாக உள்ளதான தெய்வம், கடவுள்; god, as reality. *"வேதமு முடிவு காண மெய்ப் பொருள்" (கம்பரா. வீபீடணனடைக்கல. 113).* 4. மெய்ப்பொருணாயனார் பார்க்க (தேவா. 736, 1); see *mey-p-poruṇāyaṉār.* 5. உண்மையான பொருள்; the true meaning. *"மெய்ப்பொருள் காண்பத்றிவு" (குறள், 385).*

[மெய் + பொருள்]

மெய்ப்பொறி[1] *mey-p-poṟi,* பெ.(n.) 1. உடல் அழகு (சரீர லக்ஷணம்); mark or feature of the body. *"விண்ணகத் திளையானன்ன மெய்ப் பொறி" (சீவக. 1949).* 2. உடல் (வின்.); body.

[மெய் + பொறி]

மெய்ப்பொறி[2] *mey-p-poṟi,* பெ.(n.) ஐம்புலன்களின் ஒன்றான தொடுவுணர்வு; organ of touch - skin.

[மெய் + பொறி]

மெய்படுபருவம் *mey-paḍu-paruvam,* பெ.(n.) பாளை, பாலன், காளை, இளையோன், முதியோன் என்ற ஐவகை ஆண்மக்கட்பருவம் (பிங்); stage in the life of man, five in number, viz., *pāḷai, pālaṉ, kāḷai, iḷaiyōṉ, mudiyōṉ.*

[மெய் + படு + பருவம்]

மெய்பிறிதாதல் *mey-piṟidādal,* பெ.(n.) ஒரு மெய் இன்னொரு மெய்யாக மாறுதல்; (Gram.) change of a consonant into another one.

[மெய் + பிறிது + ஆதல்]

புணர்ச்சி (சந்தி)யிலக்கணத்தை விளக்கும் பொழுது சொற்கள் எய்தும் மாற்றத்தைப் பற்றிப் பேசுகிறது தொல்காப்பியம். சொற்கள் எய்தும் மாற்றம் மெய் பிறிதாதல், மிகுதல், கெடுதல் என மூவகைப்படும். சொற்கள் தம்முள் சேரும்பொழுது ஒரு மெய் இன்னொரு மெய்யாகத் திரிவது மெய் பிறிதாதல். மரம் + கள் → மரங்கள் என்றவிடத்து மகரம் ஙகரமாக மாறியிருப்பது மெய் பிறிதாதல் வகையைச் சார்ந்தது.

மெய்புகுகருவி *mey-pugu-karuvi,* பெ.(n.) கவசம்; coat of armour. *"புலியினது தோலாற் செய்யப்பட்ட மெய்புகு கருவி" (புறநா. 13, உரை).*

[மெய் + புகு + கருவி]

மெய்புதையரணம் *mey-pudai-y-araṇam,* பெ.(n.) மெய்புகுகருவி பார்க்க; see *meypugu-karuvi. "பஃறோன் மெய்புதை யரண மெண்ணாது" (பதிற்றுப். 52, 6).*

[மெய் + புதை + அரணம். அரண் → அரணம்]

மெய்பெறு-தல் *mey-peṟu-,* 20 செ.கு.வி. (v.i.) எழுத்துக்கள் திருந்திய ஒலிவடிவு பெறுதல்; to assume definite sound-values as letter. *"மெய்பெறா மழலைச் சொல்" (கலித். 81, 2).*

[மெய் + பெறு-,]

மெய்ம்மயக்கம்[1] *mey-m-mayakkam,* பெ.(n.) சொற்களில் ஒற்றெழுத்து இயைந்து வருகை (சொல். எழுத். 22, இளம்பூர.); (Gram.) agreement between successive consonants, in words.

[மெய் + மயக்கம். மெய் = மெய்யெழுத்து. மய → மயக்கம்]

தொல்காப்பியரின் சொல்லாட்சிப்படி மெய்ம் மயக்கம் என்பது வேறுபட்ட இரண்டு மெய்கள் சேர்வது. செல்க என்பதில் லகரமும் ககரமும் மயங்கி வந்துள்ளன. இதனைப் பிற்கால இலக்கணப் புலவர்கள் வேற்று நிலை மெய்ம்மயக்கம் என அழைத்துள்ளனர். பத்து, பற்று என்றாற்போன்று (தகரமும் றகரமும் இரட்டித்து வருவதை) ஒரே எழுத்து இரட்டித்து வருவதை உடனிலை மெய்ம் மயக்கம் எனக் குறித்துள்ளனர். உடனிலை மெய்ம்மயக்கம் என்னும் தொடர் தொல்காப்பியரைப் பொறுத்தவரையில் 'பொருத்த மற்றது. மயங்குதல் = கலத்தல். மெய்ம்மயக்கம் = இருவேறுபட்ட மெய்கள் கலத்தல். ஒரேயெழுத்து இருமுறை தோன்றி யிணைவதைத் தொல்காப்பியர் உடனிலை என்றே குறிப்பிடுவார்.

மெய்ம்மயக்கம்[2] *mey-m-mayakkam,* பெ.(n.) உடலுடன் மனமும் தன்னிலை மறத்தல்; unconsciousness.

[மெய் + மயக்கம்]

மெய்ம்மயக்கு *mey-m-mayakku,* பெ.(n.) மெய்ம்மயக்கம்[1] பார்க்க (நன். 109); see *mey-m-mayakkam*[1]

[மெய் + மயக்கு. மய → மயக்கு]

மெய்ம்மலம் *mey-m-malam,* பெ.(n.) மெய்மாசு, 1 (பிங்.) பார்க்க; see *mey-māšu1.*

[மெய் + மலம்]

மெய்ம்மற-த்தல் *mey-m-mara-,* 3 செ.கு.வி. (v.i.) 1. அறிவு நீங்குதல்; to swoon, lose consciousness. *"மெய்ம் மறந்து பட்ட வரையாப் பூசல்" (புறநா. 25).* 2. (ஒன்றில் ஈடுபட்டு) எங்கு இருக்கிறோம் என்ன செய்கிறோம் என்னும் உணர்வை இழத்தல், தன்னை மறத்தல்; to forget or lose oneself. *'கடவுளைக் கண்டு (தரிசித்து) மெய்ம்மறந்து நின்றான்'. 'இசையை மெய்ம்மறந்து கேட்டுக் கொண்டிருந்தேன் அதனால் நீ வந்தது தெரியவில்லை'.* 3. சோர்வடைதல்; to weary. 4. மயக்கமடைதல்; faint. 5. கள் வெறியேறுதல் (போதையாதல்); to be intoxicated.

ம. மெய்மறக்க.

[மெய் + மற-, மெய் = உடல். மெய்ம்மறத்தல் = உடலுணர்களை (தன்னுணர்வுகளை) மறத்தல்]

மெய்ம்மறதி *mey-m-maradi,* பெ.(n.) 1. அறிவு நீங்குகை (வின்.); swooning, losing consciousness. 2. தன்னிலை மறக்கை; self-forgetfulness. 3. சின வெறி; fit of anger. 4. வெறி; fit of insanity.

[மெய் + மற. மற → மறதி]

மண்ணீரலிலிருந்து அளவிற்குக் குறைந்து ஊதை நீரானது இரைப்பையில் விழுவதனால் உடம்பிற்கு ஏற்படும் ஒரு நிலைமை. (சா.அக.).

மெய்ம்மறை *meymmarai,* பெ.(n.) மெய்புகு கருவி பார்க்க; see *mey-pugu-karuvi. "சான்றோர் மெய்ம்மறை" (பதிற்றுப். 14,12).*

[மெய் + மறை]

மெய்ம்மை *meymmai,* பெ.(n.) 1. மெய்யானது, உண்மையானது, உண்மை; truth, reality. *"மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்கு" (திருவாச. 9, 20).* 2. பட்டாங்கான இயல்பு (தொல். எழுத். 156); natural state. 3. உளதாயிருக்கும் தன்மை (சத்து); existence. *"மெய்ம்மையொடு சித்தாகும்" (வேதா. சூ. 31).* 4. பொருண்மை; signification. *"மெய்ம்மையானு மவ் விரண்டாகும்" (தொல். சொல். 427).*

[மெய் → மெய்ம்மை. உடலால் பொய்யின்றிச் செயல்படுதலே மெய்ம்மை]

உண்மை என்பது சொல்லை மட்டும் பற்றிய அறமன்று. உள்ளும் புறம்பும் ஒத்திருப்பதே உண்மை. உள்ளம் வாய் மெய் ஆகிய முக்கரணங்களும், ஒருங்கே உண்மையில் ஒத்திருத்தல் வேண்டும். இவ்வியல்பை யறிந்து, உண்மை வாய்மை, மெய்ம்மை என உண்மைக்கு முப்பெயரிட்டனர் முன்னோர். உள்ளத்தைப் பற்றியது உண்மை; வாயைப் பற்றியது வாய்மை; மெய்யைப் பற்றியது மெய்ம்மை.

உண்மை சொல்லை மட்டும் பற்றிய தென்னும் தப்புக் கொள்ளையாலேயே, பொல்லாதவர் பொய்யாணையிடுவதும் பிறர் அதை நம்பி ஒப்புக்கொள்வதும் நேர்கின்றன.

உளத்தொடு பொருந்தாது சொல்லொடும் மெய்யொடும் மட்டும் பொருந்துவது ஒருபோதும் உண்மையாகாது. உளத்தொடு பொருந்திய உண்மையுரைப்பவர் திருந்திய வொழுக்கமுடைய வராயிருத்தல் திண்ணம் என்னும் கருத்தே.

பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று (குறள், 297)

என்ற குறளின் அடிப்படை என்க.

உண்மை வாய்மை மெய்ம்மை என்னும் சொற்களின் முக்கரணத் தொடர்பு, தன்னேர்ச்சியான (accidental) போலியே.

உள் → உண்மை = உள்ளதாயிருக்கும் தன்மை. உள்ளத்தொடு பொருந்தியது என்னும் பொருள் மொழிநூற்கு ஒவ்வாது. வாய்மை = வாய்ப்பது, நிறை வேறுவது. மெய்ம்மை = உடம்புபோல் உண்மை யானது. (substance, sustantiality) (வே.க. 42, 43).

மெய்ம்மையா-தல் *meymmai-yā-,* 6 செ.கு.வி. (v.i) 1. உண்மையாதல்; to prove true. 2. இயல்பாதல்; to remain without change. *"மெய்ம்மையாதலு முறழத் தோன்றலும்" (தொல். எழுத். 156).*

[மெய்ம்மை + ஆ-,]

மெய்ம்மொழி *mey-m-moli,* பெ.(n.) 1. உண்மையான வாக்கு; true word; true teaching. 2. மறை (வேதம்); the vedas. 3. முனிவரின் சாவச் சொல்; malediction or benediction, uttered by sages.

[மெய் + மொழி]

மெய்மட்டு *mey-mattu,* பெ.(n.) மெய்மட்டுக்காணி பார்க்க; see *mey-mattu-k-kāni.* (S.I.I.V. 233).

[மெய் + மட்டு]

மெய்மட்டுக்காணி *meymattu-k-kāni,* பெ.(n.) நட்டுவத்துக்கு மதங்கம் (மிருதங்கம்) அடிக்கும் உரிமை; right of beating the small drum, as an accompaniment to dancing. (S.I.I.V, 232).

[மெய்மட்டு + காணி]

மெய்மயக்கம் *mey-mayakkam,* பெ.(n.) உடல் மயக்கம், உடல் உணர்வற்ற நிலை; giddiness.

[மெய் + மயக்கம்]

மெய்மலம் *mey-malam,* பெ.(n.) 1. நரகல்; filth. 2. உடம்பின் அழுக்கு; dirt.

[மெய் + மலம்]

மெய்மறதி *mey-maradi,* பெ.(n.) மெய்ம்மறதி (யாழ்.அக.) பார்க்க; see *mey-m-maradi.*

[மெய் + மறதி]

மெய்மாசு *mey-māśu,* பெ.(n.) 1. உடலழுக்கு (பிங்); dirt in the body. 2. கழிவுப் பொருள் (பவ்வீ) (வின்.); excreta.

[மெய் + மாசு]

மெய்முடங்கல் *mey-mudangal,* பெ.(n.) உடம்பு ஒடுங்குதல், உடல் உறுப்புகள் வலுவின்றி சோர்ந்தொடுங்கல்; emaciation.

[மெய் + முடங்கல்]

மெய்முதல் *mey-mudal,* பெ.(n.) மொழிக்கு முதலாக வரும் மெய்கள்; word initial consonants.

[மெய் + முதல். க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ ஆகிய ஒன்பது மெய்கள் மொழி முதலில் வரும்]

மெய்மேலாதனம் *mey-mēl-ādanam,* பெ.(n.) இரண்டுகையையுமூன்றி உடலை உயர்த்தி நிறுத்தும் இருக்கை (ஆசன) வகை (தத்துவப். 109, உரை); (*Yōga.*) a posture in which the body is raised and supported by both the hands placed on

the ground.

[மெய் + மேல் + ஆதனம்]

Skt. *āsana* > த. ஆதனம்.



மெய்மேலாதனம்

மெய்மேனிற்றல் *mey-mēṉiṟṟal,* பெ.(n.) மெய்மேலாதனம் பார்க்க; see *mey-mēlādaṉam. "வீரவாதனமாமை மெய் மேனிற்றல்" (தத்துவப். 109).*

[மெய் + மேல் + நிற்றல்]

மெய்மை *meymai,* பெ.(n.) நினைவு; thought.

[மெய் → மெய்மை]

மெய்யர் *meyyar,* பெ.(n.) பார்ப்பார்; Brahmin. 2. துறவியார்; renunciation of the pleasures of life, asceticism. 3. மெய் சொல்வோர்; one who speaks truth.

[மெய் → மெய்யர்]

மெய்யழகு *meyyaḻagu,* பெ.(n.) இயல்பான அழகு; personal, true beauty.

ம. மெய்யழகு.

[மெய் + அழகு]

மெய்யழற்சி *mey-y-aḻaṟci,* பெ.(n) தோலின் அழுகும் தன்மை; inflammation of the skin.

[மெய் + அழற்சி]

மெய்யறிவு *mey-y-aṟivu,* பெ.(n.) உண்மையான அறிவு; true knowledge.

[மெய் + அறிவு. உலகின் உண்மை நிலை அறிதல்]

மெய்யவத்தை *meyya-vattai,* பெ.(n) மெய்க்குற்றம் பார்க்க; see *mey-k-kuṟṟam.*

[மெய் + அவத்தை]

Skt. *avasthā* > த. அவத்தை.

மெய்யவற்குக்காட்டல்வினா *meyyavaṟku-k-kāṭṭal-viṉā,* பெ.(n.) பிறரையறிவுறுத் தற்குக் கேட்கும் வினா வகை (தொல். சொல். 13, சேனா.); question put to a person with a view to instructing him.

[மெய் + அவன் + காட்டல் + வினா. காட்டு → காட்டல். 'அல்' தொ.பெ.ஈறு]

மெய்யன் *meyyaṉ,* பெ.(n.) 1. உண்மை யுணர்ந்தவன்; one who has realised the truth. 2. உண்மையானவன்; true, honest, trust worthy, faithful person. *"அவளுக்கும் மெய்யனல்லை" (திவ். பெருமாள். 6, 3).* 3. முனிவன் (பிங்); sage. 4. அந்தணன் (சூடா.); Brahmin. 5. உண்மை புகலுவோன் (யாழ்.அக); one who speaks the truth. 6. கடவுள் (யாழ். அக); god, as the embodiment of truth. 7. மகன் (யாழ். அக); son.

[மெய் → மெய்யன். 'அன்' ஆ.பா.ஈறு]

மெய்யனத்தல் *mey-y-aṉattal,* பெ.(n.) உடம்பின் கொதிப்பு, உடற்சூடு அதிகரித்தல்; rise of heat in the body.

[மெய் + அனத்தல்]

மெய்யனல் *mey-y-aṉal,* பெ.(n.) உடம்பின் சூடு, உடல் வெப்பம்; heat of the body.

[மெய் + அனல்]

மெய்யாப்பு *meyyāppu,* பெ.(n.) குப்பாயம், சட்டை (சங். அக.); coat.

[மெய் + யாப்பு. யா → யாப்பு = உடம்பின் மேல் கட்டப்படுவது]

மெய்யாலரிசிநாடுரி *mey-y-ālariši-nāḍuri,* பெ.(n.) ஆள் ஒன்றுக்குரிய சோற்றரிசி நாழியும் உரியும் கொண்ட அளவு; rice of a *'nāḻi'* and *'uri'* measure. *"ஆயிரவர்க்கும் பத்தெட்டுக் குடுத்தல், மெய்யாலரிசி நாடுரியாக நிடதம்ம இருநூற்றறுபத்திரு காடி" (தெ. கல். தொ. 8, கல். 529).*

[மெய்யால் + அரிசி + நாழி + உரி]

மெய்யாள்சாரி *mey-y-āḷ-šāri,* பெ.(n.) ஊன்; flesh.

மெய்யிலழல் *mey-y-ilaḻal,* பெ.(n.) உடம்பின் வெப்பம்; temperature-heat of the body.

[மெய்யில் + அழல்]

மெய்யிளைப்பு *mey-y-iḷaippu,* பெ.(n.) உடலிளைப்பு; emaciation.

[மெய் + இளைப்பு. இளை → இளைப்பு. 'பு' தொ.பெ.ஈறு.]

மெய்யிறுகல் *mey-y-iṟugal,* பெ.(n.) உடல் வன்மை பெறல்; body becoming hard and strong.

[மெய் + இறுகல். இறு → இறுகு → இறுகல்]

மெய்யீறு *mey-y-īṟu,* பெ.(n.) மெய்யெழுத்தை இறுதியினுடைய சொல்; word ending in a consonant. *"மெய்யீறெல்லாம்" (தொல். எழுத். 105, இளம்.).*

[மெய் + ஈறு. ஞண நமன யரலவழள ஆகிய பதினொரு மெய்கள் மொழியிறுதியில் வரும்.]

மெய்யுணர்தல் *mey-y-uṇardal,* பெ.(n.) மெய்யுணர்வு (குறள், அதி. 36) பார்க்க; see *mey-y-uṇarvu.*

[மெய் + உணர்தல். உணர் → உணர்தல். 'தல்' தொ.பெ.ஈறு]

மெய்யுணர்வு¹ *mey-y-uṇarvu,* பெ.(n.) உண்மையறிவு (தத்துவ ஞானம்) (குறள், 352, உரை); Knowledge of reality.

[மெய் + உணர்வு]

[மெய் + உணர்வு. உணர் → உணர்வு. 'வு' தொ.பெ.ஈறு]

மெய்யுணர்வு² *meyyuṇarvu,* பெ.(n.) ஊன்றல், கட்டல், குத்தல், தடவல், தட்டல், தீண்டல், பற்றல், வெட்டல், என்ற எண் வகைப்பட்ட உடலுணர்ச்சிக் காரணங்கள் (பிங்.); canes of sensation in the body of eight kinds, viz. *vūṉṟal, kaṭṭal, kuttal, taḍaval, taṭṭal, tīṇḍal, paṟṟal, veṭṭal.*

[மெய் + உணர்வு]

மெய்யுதகம் *mey-y-udagam,* பெ.(n.) மெய் வழிநீர் (மூ.அ) பார்க்க; see *mey-vaḻi-nīr.*

[மெய் + உதகம்]

Skt. udaka > த. உதகம்.

மெய்யுரை¹–த்தல் *mey-y-urai-,* 4 செ.கு.வி. (v.i.) உரை சொல்லல்; to write faithful commentary, as true to the text.

[மெய் + உரை]

மெய்யுரை² *mey-y-urai,* பெ.(n.) 1. நூற்குப் பொருத்தமான உரை (இறை, 1, உரை, பக். 8); faithful commentary, as true to the text.

2. உண்மையான மொழி; true word. *"மெய்யுரை பையவிளம்பினான்" (கம்பரா. பிணிவீ. 111).*

[மெய் + உரை]

மெய்யுவமம் *mey-y-uvamam,* பெ.(n.) வடிவு பற்றி வரும் உவமை (தொல். பொ. 276, 20); comparison based on form on shape.

[மெய் + உவமம்]

மெய்யுளைச்சல் *mey-y-uḷaiccal,* பெ.(n) உடம்பின் வலி; pain in the body.

[மெய் + உளைச்சல்]

மெய்யுறுபுணர்ச்சி *mey-y-uṟu-puṇarcci,* பெ.(n.) உடலால் கூடுங் கூட்டம் (தொல். பொ. 145, உரை); (Akap.) copulation, embrace.

மறுவ. உடலுறப் புணர்ச்சி.

[மெய்யுறு + புணர்ச்சி. உள்ளப் புணர்ச்சிக்கு எதிரானது]

மெய்யூர் *meyyūr,* பெ.(n) செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஒரு ஊர்; a village in *Cengalpaṭṭu* dt.

[மெய் + ஊர்]

மெய்யூர் என்னும் பெயரில் மதுராந்தகம், திருவள்ளூர், திருபெரும்புதூர் ஆகிய வட்டங்களில் சில ஊர்கள் இருக்கின்றன.

மெய்யெரிச்சல் *mey-y-ericcal,* பெ.(n) உடல் தணல்; burning sensation of the body. *'மெய்யெரிச்சல் மிகுதியாக உள்ளது' (உ.வ.).*

[மெய் + எரிச்சல். எரி → எரிச்சல். 'சல்' தொ.பெ.ஈறு]

மெய்யெழுத்து *mey-y-eḻuttu,* பெ.(n.) 1. ஒற்றெழுத்து, உயிரெழுத்திற்கு உடம்பா யிருப்பது (வீரசோ. சந்திப். 1, உரை); (Gram.) consonant, as the body to which the vowel gives life. 2. மெய்யெழுத்தைக் குறிக்கும் வரி வடிவம்; the letter representing a consonant.

[மெய் + எழுத்து]

எழுத்துகளில், வேறோர் எழுத்தின் உதவி யின்றித் தானே ஒலிக்கும் உயிரெழுத்து தானாய் இயங்கும் உயிரையும், உயிரெழுத்தின் உதவியின்றித் தனித்தொலியாத மெய்யெழுத்து உயிரின்றி இயங்காத உடம்பையும் உயிரோடு கூடிய மெய்யெழுத்து உயிரோடு கூடிய உடம்பையும் ஒத்திருத்தலால் அம்மூவகை எழுத்திற்கும் அம் மூவகைப் பொருட்பெயர்களையே உவமையாகு பெயராக இட்டனர் முதல் நூலாசியர்......... மெய்யெழுத்துகளில் வல்லினம், மெல்லினம், இடையினம் என்பன வல்லுடம்பையும் மெல்லுடம் பையும், இடைத்தரவுடம்பையும் நிகர்க்கும் என்பதை அவ்வப் பெயர்களே உணர்த்தும் (சொ.க.32).

தமிழில் க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் பதினெட்டு மெய்யெழுத்துகள் உள்ளன.

மெய்யொலி *meyyoli,* பெ.(n.) ஒற்றெழுத்து; consonant.

[மெய் + ஒலி]

பேச்சொலிகளைத் தமிழிலக்கணங்கள் உயிரொலி என்றும் மெய்யொலி என்றும் இரண்டாகப் பிரிக்கும். பேச்சு முயற்சியால் வெளிப்படுகின்ற காற்று எங்கும் தடைப்படாமல் இதழமைப்பாலும் நாவின் இயக்கத்தாலும் தேவையான மாறுதல்களைப் பெற்று ஒலியை உண்டாக்கும்போது அம்முறையில் பிறக்கும் ஒலிகளுக்கு உயிரொலி என்று பெயர். அங்ஙனம் இல்லாமல் வேறுவகையில் உருவாகும் எல்லா ஒலிகளையும் மெய்யொலி என்பர். அந்த மெய்யொலிகளைத் தமிழிலக்கணங்கள் வலி, மெலி, இடை என மூன்றாய்ப் பிரித்துள்ளன. தமிழ்மொழியில் உள்ள மெய்யெழுத்துகள் பதினெட்டு (இ.க.).

மெய்வசை *mey-vašai,* பெ.(n.) ஒருவனைப் பற்றி வசை தோன்றக் கூறும் பாட்டு வகை (இலக். வி. 753); (Rhet.) a poem holding

up a person to ridicule.

[மெய் + வசை]

மெய்வருக்கை *mey-varukkai,* பெ.(n.) மெய்யெழுத்துக்களின் வரிசை (வின்.); the series of consonants.

[மெய் + வருக்கை]

Skt. varga > த. வருக்கை.

மெய்வருத்தம் *mey-varuttam,* பெ.(n.) உடலுழைப்பாலாகிய அயர்ச்சி; fatigues. *'மெய்வருத்தம் பாரார்' – ஔவையார்.*

[மெய் + வருத்தம்]

மெய்வருத்தல் *mey-varuttal,* பெ.(n.) உடல் வருந்த உழைத்தல்; straining the body.

[மெய் + வருத்தல். வரு → வருத்தல். 'தல்' தொ.பெ.ஈறு.]

மெய்வருத்து-தல் *mey-varuttu-,* 5 செ.கு.வி. (v.i.) உடல் வருந்த உழைத்தல்; to strain the body.

[மெய் + வருத்து-.]

மெய்வலி[1] *mey-vali,* பெ.(n.) உடலின் வலிமை; physical,bodily strength. *"நிரம்பிய மெய் வலியினையுடைய மாக்கள்" (பெரும்பாண். 61, உரை).*

[மெய் + வலி]

மெய்வலி[2] *mey-vali,* பெ.(n.) உடல் கடுப்பு; pain in the body.

மறுவ. உடல் நோவு.

[மெய் + வலி]

மெய்வழி *mey-vaḻi,* பெ.(n.) உண்மைச் சமயம்; the true religion.

ம. மெய்வழி.

[மெய் + வழி]

மெய்வழிநீர் *mey-vaḻi-nīr,* பெ.(n.) சிறுநீர் (யாழ்.அக.); urine.

[மெய் + வழி + நீர்]

மெய்வார்த்தை *mey-vārttai,* பெ.(n.) மெய்யுரை[2] பார்க்க (சிலப். 30, 192, அரும்); see *mey-y-urai*[2]

[மெய் + வார்த்தை]

Skt. *vārttā* > த. வார்த்தை.

மெய்வாழ்த்து *mey-vāḻttu,* பெ.(n.) ஒருவனை வாழ்த்திக் கூறும் பாட்டு வகை (இலக். வி. 753); (Rhet.) a poem in praise of a person.

[மெய் + வாழ்த்து]

மெய்விடு-தல் *mey-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) இறத்தல்; to die, as casting off one's body. *"இரங்கி மெய்விடவும்" (சிலப். 27, 97).*

[மெய் + விடு-.]

மெய்விழு-தல் *mey-viḻu-,* 2 செ.கு.வி. (v.i.) இறத்தல்; to die.

[மெய் + விழு-.]

மெய்விரதன் *mey-viradaṉ,* பெ.(n.) 1. உதிட்டிரன் (வின்.); *Udiṭṭiraṉ.* 2. வீடுமன்; *Bhisma.*

[மெய் + விரதன்]

Skt. *vratin* > த. விரதன்.

மெய்வெளு-த்தல் *mey-veḷu-,* 4 செ.கு.வி. (v.i.) உடல் வெளுருதல்; to become pale as body.

[மெய் + வெளு-,]

மெய்வெளுப்பு *mey-veḷuppu,* பெ.(n.) சோகை; anaemia.

[மெய் + வெளுப்பு வெளு → வெளுப்பு. 'பு' பெ.ஆ.ஈ.]

மெய்வேறு *mey-vēṟu,* பெ.எ. (adv.) தனித்தனியாய்; individually. *"மெய்வேறு ஆழாக்கு நெய்யும்"*(S.I.I.iii.232).

[மெய் + வேறு]

மெய்வை-த்தல் *mey-vai-,* 4 செ.கு.வி. (v.i.) மெய்விடு-தல் பார்க்க; see *mey-viḍu-,* *"வீழ்ந்து மெய் வைத்தலும்" (மணிமே. 6, 131).*

[மெய் + வை-,]

மெரள்(ளு)-தல் *meraḷ(ḷu)-,* 16 செ.கு.வி. (v.i.) மயங்கியஞ்சுதல்; to be frightened, starled.

[மருள் → மிரள். மிரளுதல் = மயங்கியஞ்சுதல். மிரள் → மெரள் (வே.க.4,42)]

மெரிபாகல் *meri-pāgal,* பெ.(n.) மிதிபாகல்; small bitter guard.

[மெரி + பாகல்]

மெரிபாவை *meri-pāvai,* பெ.(n.) 1. ஒரு வகை பாவை; a kind of carilla. 2. பாகற்காய்; small bitter gourd.

[மெரி + பாவை]

மெரிபாவை

மெருகங்கிழங்கு *merugaṅ-kiḻaṅgu,* பெ.(n.) வெருகங் கிழங்கு (பதார்த்த. 405); long-rooted arum.

[மெருகன்கிழங்கு → மெருகங்கிழங்கு]

மெருகரம் *merugaram,* பெ.(n.) மெருகு வேலையில் பயன்படும் அரவகை; smooth file. (C.G.)

[மெதுகரம் → மெருகரம் (வே.க.4,24)]

மெருகன்கிழங்கு *merugaṉ-kiḻaṅgu,* பெ.(n.) ஒரு வகைக் கிழங்கு; a bulbous root.

[வெருகன்கிழங்கு → மெருகன்கிழங்கு]

மெருகாணி *merugāṇi,* பெ.(n.) மெருகு வளை பார்க்க; see *merugu-vaḷai.*

[மெதுகாணி → மெருகாணி = மெருகுவளை யென்னும் தட்டார் கருவி. (வே.க.4, 24)]

மெருகி *merugi,* பெ.(n.) மருட்கற்றாழை; hyacinth aloe.

மெருகிடு-தல் *merugiḍu-,* 18 செ.கு.வி. & செ.குன்றாவி. (v.i.) & (v.t.) பளபளப்பு உண்டாகச் செய்தல் (வின்.); to polish, burnish.

[மெருகு + இடு-,]

மெருகு[1] *merugu,* பெ.(n.) பளபளப்பு, பொலிவு; smoothness, glitter, lustre, polish, brightness, freshness. *'மெருகு மாறாத வெள்ளி யேனம் (பாத்திரம்)' (உ.வ.).*

ம. மெருகு, வெருகு; க. மெருகு, மிறுகு; தெ. மெருகு, மெருங்கு; து. மொர்பு.

[மெது → மெதுகு → மெருகு = மெதுவான பளபளப்பு (வே.க.4, 24)]

மெருகு² *merugu,* பெ.(n.) வெருகஞ்செடி; long rooted arum.

[வெருகன்கிழங்கு → மெருகங்கிழங்கு → மெருகு (மருஉ)]

மெருகுக்கல் *merugu-k-kal,* பெ.(n.) மெருகிட வுதவுங் கல்; pumice stone, used in polishing. (C.E.M.).

[மெருகு + கல்]

மெருகுச்சுண்ணாம்பு *merugu-c-cuṇ-ṇāmbu,* பெ.(n.) சுவர் முதலியவற்றிற் பூசும் சிப்பிச் சாந்து போன்ற நுண்ணிய சுண்ணாம்புச் சாந்து; fine chunam used in plastering, flooring, etc., as giving a polished surface.(C.E.M.).

[மெருகு + சுண்ணாம்பு]

மெருகுத்தைலம் *merugu-t-tailam,* பெ.(n.) மெருகெண்ணெய் பார்க்க; see *meru-g-eṇṇey* (Mod.).

[மெருகு + தைலம்]

Skt. taila > த. தைலம்.

மெருகுதேய்–த்தல் *merugu-tēy-,* 4 செ. குன்றாவி. & செ.கு.வி. (v.t.) & (v.i.) மெருகிடு–தல் (வின்.) பார்க்க; see *merugiḍu-,*

[மெருகு + தேய்–,]

மெருகுபோடு–தல் *merugu-pōḍu-,* 19 செ. குன்றாவி. & செ.கு.வி. (v.t.) & (v.i.) மெருகிடு–தல் (வின்.) பார்க்க; see *merugiḍu-,*

[மெருகு + போடு–,]

மெருகுமண் *merugu-maṇ,* பெ.(n.) தட்டார் மெருகிடுதற்குதவும் மண்வகை (இ.வ.); a kind of earth used by goldsmith in polishing.

[மெருகு + மண்]

மெருகுவளை *merugu-vaḷai,* பெ.(n.) மெருகிட வுதவும் தட்டார் கருவி வகை (இ.வ.); polishing-pin, used by goldsmiths.

[மெருகு + வளை]



மெருகுவளை

மெருகுள்ளித்தைலம் *merugulli-t-tailam,* பெ.(n.) பூண்டும், மெருகன் கிழங்கும் கலந்து அணியம் செய்யப்படும் நெய்மம்; medicated oil prepared out of garlic and tuberous root of *'merugu',*

[மெருகு + உள்ளி + தைலம். இது மூட்டுவலி (arthrities), எலும்பு மூட்டிணைப்புள் கசிவுறும் உயவு நீர்ம நோய் (synovities) ஆகியவற்றிற்கு மருந்தாகப் பயன்படுகிறது என்று சா.அக. குறிப்பிடுகிறது.]

Skt. taila > த. தைலம்.

மெருகெண்ணெய்¹ *merugeṇṇey,* பெ.(n.) பளபளப்பிற்காக மரப்பண்டங்களின் மேல் பூசும் எண்ணெய் (வின்.); varnish, oil used to give polish to cabinet work. 2. மினுக்

கெண்ணெய் (யாழ் அக.); unguent for improving the complexion.

[மெருகு + எண்ணெய். எள் + நெய் – எண்ணெய்]

மெருகெண்ணெய்[2] *merugenney,* பெ.(n.) மெருகன் கிழங்கிலிருந்து எடுக்கும் எண்ணெய்; medicated oil prepared out of the tuberous root.

[மெருகு + எண்ணெய். மெருகு = மெருகன்கிழங்கு]

மெருகேற்று-தல் *merugērru-,* 5 செ.குன்றாவி.(v.t.) மெருகிடு-தல் பார்க்க; see *merugidu-,*

க. மெறயிசு.

[மெருகு + ஏற்று-,]

மெருகோடு *merugōdu,* பெ.(n.) மேற்புறத்திற் பளபளப்புள்ள ஓடு; glazed tile (C.E.M.).

[மெருகு + ஓடு]

மெருவணை *meruvaṇai,* பெ.(n.) 1. இறுமாப்பு (ஆடம்பரம்); ostentation, display. 2. ஊர்வலம் (இ.வ.); procession, as in a wedding.

க. மெறவணிகெ, மெறவணி; தெ. மெரவடி.

[மெருகு → மெருகணை → மெருவணை]

மெருள்[1] *meruḷ,* பெ.(n.) அச்சம் (நன். 101, மயிலை); fear.

தெ. மெரமெர.

[மிரள் → மெரள். மெரளுதல் = மயங்கியஞ்சுதல். மெரள் → மெருள். மெரளுதல் = மயங்கியஞ்சுதல். (வே.க.4,42)]

மெருள்(ளு)-தல் *meruḷ(ḷu)-,* 16 செ.கு.வி. (v.i.) அச்சமடைதல்; to fear, to shy.

ம. மிரளுக.

[மருள் → மிரள். மிரளுதல் = மயங்கியஞ்சுதல்; மிரள் → மெரள். மெரளுதல் = மயங்கியஞ்சுதல். மெரள் → மெருள் (வே.க.4, 42)]

மெருளி *meruḷi,* பெ.(n.) அச்சங் (பயங்) கொள்ளி (இ.வ.); shy person or animal, coward.

[மருள் → மிரள் → மெரள் → மெருள் → மெருளி (வே.க.24, 42)]

மெல்[1] *mel,* பெ.அ. (adj.) மென்மையான; soft, tender. *"ஆம்பன் மெல்லடை கிழிய" (அகநா. 56).*

[முல் → மெல் (வே.க.4,19)]

mel, fine, thin, soft, tender; *mell-a*, softly, gently. Comp. Latin mollis, soft, tender, pliant; Greek malakos, soft, gentle, tender. The derivation of the Latin *mollis*, from *movilis*, seems inconsistent with the connection which subsists between *mollis* and *malakos*; and the resemblance of both to the Dravidian *mel* is remarkable. Comp. Sans. *mridu*, soft, which is in Tamil *medu*. I can scarcely think *mel*, like *med-u*, derived from *mṛidu* (CGDFL. 603, 604).

Goth. *mel*, grind; *malma*, sand; **ON.** *malmr*, ore; **E.** *malm*, soft chalky rock; **OE.**, mealm, cog. w; **OS., OHG.** *melm*, dust.

E. *meal*; **OE.** *mela*; **OS., OHG.** *melo*; **ON.** *mjol*, cog, w; **L.** *molere*, grind; **E.** *mill*, building fitted with machinery for grinding corn.

OE. *mylen*; **OS.** *mulin*; **OHG.** *muli* (n.) **f.LL.** *molinum*; **L.** *mila, mill*; **f.** *mole*, grind.

E. *molar*, grinder (mammal's back teeth

serving to grind) **f.** *molaris* (mela, millstone).

E. *mull* (Sc.), snuff box (var. of mill), box originally having a grinder.

E. *muller*, tool used for grinding powders etc. on slab.

ME. *mol, mulour*, **f.** *mul, grind.*

E. *mullock* (Austral.), refuse from which gold has been extracted. **f.** dial. *mull*, dust, rel. to **OE.** *mgl*, dust; **MDu.** *mul*, mol f. Gme root *mul-*, grind.

E. *multure*, toll of grain or flour paid to *muller*.

ME. or **OF** *milture* f. med, L. *molitura* f.*molere*, grind. **(வே.க.4.22)**

மெல்^{2}(லு)–தல் *mel(lu)-*, **3** செ.குன்றாவி. (v.t.) **1.** கடின அல்லது விழுங்க முடியாத உணவைப் பல்லால் அரைத்து மென்மை யாக்குதல், (உணவுப் பொருள் முதலிய வற்றைப்) பற்களால் கடித்துக் கரைத்தல், வாயாற் குதட்டுதல்; to chew, as betel, to masticate. *"மெல்லிலைப் பண்டியும்" (சீவக. 62). 'மாடு புல்லை மென்று கொண்டிருந்தது' (உ.வ.).* **2.** கடித்தல்; to chide. *'இரவும் பகலும் என்னை மென்று கொண்டிருக்கிறான்'.*

ம. மெல்லுக; க. மெல், மெலி, மெலு, மெல்லு, மெலகு, மெலுகு, மெல்கு, மலகு, மலுகு; தெ. மெக்கு; து. மென்னு; கோத. மெக்; துட. மெள்க்; கூ. ம்ரேட, ம்ரேடி.

[முல் → மெல்]

மெல்கு^{1}–தல் *melgu-*, **5** செ.கு.வி. (v.i.) **1.** மெதுவாதல்; to become soft. *"காலின் மென்மைக்குத் தக்கபடி தானும் மெல்கிற்றிலன்" (சிலப். 15, 138, அரும்.).* **2.** நொய்யதாதல் (இலேசாதல்) (வின்.); to be light. **3.** இளகுதல்; to melt.

[மெல் → மெல்கு–,]

E. *melt*, become or make soft by liguifying by heat; **OE.** *meltan, mieltan*; **ON.** *meta* (digest).

E. *molten* (melted).

E. *smelt* (extract metal from ore by melting). **MDu.** or **MLG.** smelten.

E. *malt*; **OE.** *mealt*; **OS.** *malt*; **OHG.** malz; **ON.** *malt*, cog.w. *melt*. **(வே.க.4,21).**

மெல்கு^{2}–தல் *melgu-*, **5** செ.குன்றாவி. (v.t.) மெல்(லு)–தல் பார்க்க; see *mel(lu)-*. *"மெல்கிடு கவுள வல்குநிலை புகுதரும்" (அகநா. 56).*

[மெல் → மெல்கு]

மெல்கோல் *mel-kōl*, பெ.(n.) பற்குச்சி (சூடா.); stick for cleaning the teeth. *"மெல்கோறின்று" (சீவக. 803).*

[மெல் + கோல்]

மெல்ல *mella*, வி.அ. (adv.) **1.** மெதுவாக, மென்மையாக, சிற்றளவாக; softly, slowly, gently. *"தானோக்கி மெல்ல நகும்" (குறள், 1094).* **2.** அமைதியாக, அடக்கமாக; comely. *"மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி" (புறம். 73).* **3.** தாழ்வான குரலாக; in low voice.

ம., தெ. மெல்ல; க. மெல்ல, மெல்லகெ, மெல்லனெ; பட. மெல்லெ, து. மெல்ல, மெல்லனெ.

[மெல் → மெல்ல]

மெல்லடை *mel-l-aḍai*, பெ.(n.) மெல்லிய அடை (அப்பவகை) (பிங்.); a kind of thin cake.

து. மெசுபாகு, மிசுபாகு (ஒருவகை இனிப்பு அப்பம்)

[முல் → மெல் = மெதுவான. மெல் → மென்மை, மெல் + அடை (வே.க.4,19)]

மெல்லணை *mel-l-aṇai,* பெ.(n.) 1. மெத்தை[1] பார்க்க; see *mettai*[1]. *"மெல்லணை மேல் முன்துயின்றாய்" (திவ். பெருமாள். 9 ,3).* 2. சட்டை (சூடா.); jacket.

[மெல் + அணை. அள் → அண் → அண → அணை]

மெல்லப்பேசு-தல் *mella-p-pēšu-,* 5 செ.கு.வி. (v.i.) குரலைத் தாழ்த்திப் பேசுதல்; to speak softly.

து. மெல்ல பாதெருனி.

[மெல்ல + பேசு-,]

மெல்லம்புலம்பன் *mellam-pulamban,* பெ.(n.) நெய்தனிலத்தலைவன் (பிங்.); chief of a maritime tract. *"மெல்லம்புலம்பன் பிரிந்தென" (குறுந். 5).*

[மெல்லம்புலம்பு → மெல்லம்புலம்பன்]

மெல்லம்புலம்பு *mellam-pulambu,* பெ.(n.) நெய்தனிலம் (திருக்கோ. 379, உரை); maritime tract.

[மெல் + புலம்பு. மணலால் ஆகிய மெல்லிய நெய்தல் நிலம்]

மெல்லரி *mellari,* பெ.(n.) உயர்ந்த சிறிய அரிசி வகை; rice of a superior quality. *"உலை தந்த மெல்லரி"* (திருமந். 422).

[மெல் + அரி]

மெல்லன் *mellaṉ,* பெ.(n.) நெய்தனிலத் தலைவன்; man of neydal nilam (maritime tract).

[முல் → மெல் = மெதுவான. மெல் → மெல்ல = மெதுவாக. மெல் → மெல்லென = மெத்தெனற் குறிப்பு, மெல் → மெல்லன் = மெல்லிய தன்மையன் (வே.க.4,19)]

மெல்லி *melli,* பெ.(n.) மெல்லியல், 2 பார்க்க; see *melliyal* 2. *"மெல்லி நல்லா டோள்சேர்" (ஆத்திசூ.).*

[மெல் → மெல்லி. மெல்லியலுடைய பெண்]

மெல்லிக்கை *mellikkai,* பெ.(n.) 1. பருமற்றது (வின்.); thinness. 2. ஒல்லியானது; being tall and lean.

[மெல் → மெல்லிக்கை = சிறியது, பருமனற்றது]

மெல்லிசரம் *melli-šaram,* பெ.(n.) நுட்பமாய் அராவவுதவும் அரம்; sash file (C.E.M.).

[மெல்லிசு + அரம்]

மெல்லிசு *mellišu,* பெ.(n.) மெல்லிது (கொ.வ.) பார்க்க; see *mellidu.*

[மெல்லிது → மெல்லிசு (கொ.வ)]

மெல்லிசுப்பிரம்பு *mellišu-p-pirambu,* பெ.(n.) மெல்லிதான பிரம்பு வகை; rattan-palm (L).

[மெல்லிசு + பிரம்பு]

மெல்லிசை *mellišai,* பெ.(n.) எளிய இனிய இசை, மெதுவான ஓசை; soft tone, popular music (as opposed to classical music), light music. *'இந்த மெல்லிசை எனக்கு மிகவும் பிடித்தது' (உ.வ.).*

[மெல் + இசை]

மெல்லிசைவண்ணம் *mellišai-vaṇṇam,* பெ.(n.) மெல்லெழுத்து மிகுந்து வரும் செய்யுளோசை (சந்தம்) (தொல். பொ. 529); a rhythm effected by the frequent use of the nasals.

[மெல் + இசை + வண்ணம்]

மெல்லிதழ் *mellidal*, பெ.(n.) 1. மென்மையான பூ முதலியவற்றின் மடல், petals of flowers. 2. மங்கையர் உதடு; lips of women.

[மெல் + இதழ்]

மெல்லிது *mellidu*, பெ.(n.) 1. மென்மை (வாய்ந்த)யான பொருள்; that which is soft or fine. *"மலரினு மெல்லிது காமம்" (குறள், 1289).* 2. ஒல்லி; thinness, slenderness.

[மெல் → மெல்லிது]

மெல்லிமை *mellimai*, பெ.(n.) மென்மை; softness.

[மெல் → மெல்லிமை]

மெல்லிய *melliya*, பெ.எ. (adj.) 1. பருமனாகவோ, தடித்ததாகவோ இல்லாதது; thin, slender. *'மெல்லிய நூல்', 'மெல்லியட்டல்'.* 2. அதிக ஓசை (சத்தம்) இல்லாத; soft. *'மெல்லிய குரலில் பதிலளித்தார்' (உ.வ.).*

[மெல் → மெல்லிய]

மெல்லியகொத்தான் *melliya-kottāṉ*, பெ.(n.) முடக்கறுத்தான்; palsy curer-baloon vine.

[மெல்லிய + கொத்தான்]

மெல்லியகோசு *melliya-kōšu*, பெ.(n.) முட்டைக்கோசு; cabbage.

[மெல்லிய + கோசு]

E. cosh > த. கோசு.

மெல்லியசாதிகம் *melliya-šādigam*, பெ.(n.) 1. ஆச்சா; sal. 2. அரசு; pipal.

மறுவ. மராமரம்.

மெல்லியது *melliyadu*, பெ.(n.) மென்மையரனது; the thing which is soft or tender.

[மெல் → மெல்லிய + அது]

மெல்லியநல்லாள் *melliya-nallāḷ*, பெ.(n.) பெருமாட்டி; lady, mistress, princess.

[மெல் → மெல்லிய + நல்லாள்]

மெல்லியபூ *melliya-pū*, பெ.(n.) மலர் வகையில் ஒன்றான மல்லிகை; jasmine.

[மெல்லிய + பூ]

மெல்லியர் *melliyar*, பெ.(n.) 1. வலிமையில்லாதவர்; the weak. *"தேவர் மெல்லியர்" (கம்பரா. யுத்த. மந்திரப். 32).* 2. உடல் மெலிந்தவர் (வின்.); the emaciated. 3. எளியர்; the poor. *"எச்சத்தின் மெல்லியராகி" (நாலடி, 299).* 4. புல்லிய குணங்களையுடையவர்; low, mean persons. *"மடவர் மெல்லியர் செல்லினும்" (புறநா. 106).* 5. பெண்டிர் (வின்); woman as of delicate build.

[மெல் → மெல்லியர்]

மெல்லியல்[1] *melliyal*, பெ.(n.) 1. மென்மையான இயல்பு; tender nature. *"மெல்லியற் குறுமகள்" (குறுந். 89).* 2. மெல்லியலுடைய பெண்; woman. *"மெல்லிய லாக்கை முற்று நடுங்கினள்" (கம்பரா. மாயா. சனக. 18).* 3. இளங்கொம்பு (சூடா.); tender twig of a tree.

[மெல் + இயல்]

மெல்லியல்[2] *melliyal*, பெ.(n.) 1. மலை வாழை; mountain plantain. 2. பெண்; lady.

[மெல் + இயல்]

மெல்லியலாள் *melliyalāḷ*, பெ.(n.) பெண்; lady. *'மெல்லியாள் தோள் சேர்' (பழ.).*

[மெல் → மெல்லியல் + ஆள்]

மெல்லியன் *melliyan,* பெ.(n.) அறிவு குன்றியவன் (புறம். 184); less intelligent man.

[மெல் → மெல்லியன்]

மெல்லியார் *melliyār,* பெ.(n.) எளியோர்; mean man, poor man.

[மெல் → மெல்லியார்]

மெல்லியார்கூந்தல் *melliyār-kūndal,* பெ.(n.) அம்மையார் கூந்தல் என்னும் பூண்டு வகை (மூ.அ.); seeta's thread, Cuscuta reflexa.

[மெல்லியார் + கூந்தல்]



மெல்லியார் கூந்தல்

மெல்லிலை *mellilai,* பெ.(n.) 1. வெற்றிலை; betal leaf. *"மெல்லிலைக் காவும்" (சீவக. 326).* 2. வெற்றிலைக் கொடி (சூடா.); betal pepper, vine.

[மெல் + இலை]

மெல்லிழை[1] *mellilai,* பெ.(n.) ஆடை முதலியவற்றின் நுண்ணூல்; filament.

[மெல் + இழை]

மெல்லிழை[2] *mellilai,* பெ.(n.) மெல்லிய ஆடையணிந்த பெண்; a lady wearing thin clothes.

[மெல் + இழை. 'மெல்லிழை' அன்மொழித் தொகை]

மெல்லினம் *mellinam,* பெ.(n.) மூவினத்துள் மெல்லோசையுடைய எழுத்துகள், மெய்யெழுத்துகளின் மூன்று பிரிவு (வல்லினம், மெல்லினம், இடையினம்) களுள் மூக்கொலியாலான ங், ஞ், ண், ந், ம், ன் ஆகிய ஆறு எழுத்துகளை உள்ளடக்கிய பிரிவு (நன். 69); (Gram.) the six nasal consonants of the Tamil (tripartite) system.

[மெல் + இனம். மெல்லொலியுடைய மெய்யெழுத்துகள்]

மெல்லினவெதுகை *mellina-v-edugai,* பெ.(n.) எல்லாச் சீர்களிலும் மெல்லின எழுத்துக்கள் எதுகையாய் வருவது; nasal consonants letters concatenation in which the second letters of the line of a verse.

[மெல்லின(ம்) + எதுகை]

மெல்லுகை *mellugai,* பெ.(n.) கறிக்கை; chiding.

[மெல் → மெல்லுகை. 'கை' தொ. பெ. ஈறு]

மெல்லெழுத்து *mel-l-eluttu,* பெ.(n.) மெல்லோசையுடைய ங், ஞ், ண், ந், ம், ன் என்ற எழுத்துகள் (தொல். எழுத்து. 20); the six consonants *ṅ, ñ, ṇ, n, m, ṉ* classified as soft or nasal consonants dist. from *val-l-eluttu* and *idai-y-eluttu.*

[மெல் + எழுத்து. எழுது → எழுத்து]

மெல்லென *mellena,* வி.அ. (adv.) மெல்ல பார்க்க; see *mella.*

[மெல் → மெல்லென]

மெல்லெனல் *mel-l-enal*, பெ.(n.) 1. மெத்தெனற் குறிப்பு; expr. signifying being soft. *"மெல்லென் சீறடி" (தொல். பொ. 146).* 2. குரல் தாழ்ந்து பேசற் குறிப்பு; being gentle in speech. *"மெல்லெனக் கிளந்தனமாக" (பொருந.122).* 3. மந்தக்குறிப்பு (சூடா.); being dull.

[மெல் + எனல்]

மெல்லொற்று *mel-l-orru*, பெ.(n.) மெல்லெழுத்து பார்க்க (தொல். எழுத். 414); (Gram.) see *mel-l-eluttu.*

[மெல் + ஒற்று]

மெல்வினை *mel-vinai*, பெ.(n.) பணி (சரியை), பத்தி (கிரியை) என்னும் மத வினைகள்; cariyai and kiriyai, the first two of the four paths to salvation, as easier. *"எளிதானவற்றை மெல்வினையே யென்றது" (திருக்களிற்றுப். 17).*

[மெல் + வினை]

மெலி¹-தல் *meli-*. 2 செ.கு.வி. (v.i.) 1. வலி குறைதல்; to be weak. 2. உடல் இளைத்தல், பருமன் குறைதல்; to become lean, thin. *"ஆக்கையைப் போக்கப் பெற்று மெலிகின்ற என்னை" (திருவாச. 6,10), 'நோயினால் மெலிந்த உடம்பு' (உ.வ.).* 3. வருந்துதல்; to suffer, to languish. *"அளப்பினான் மெலிகிற்பாள்" (காசிக. மகளிர். 8).* 4. அழிதல்; to perish. *"மெலியு நம்முடன் மேல்வினை யானவே" (தேவா. 3, 18, 10).* 5. எளியராதல் (வின்.); to become poor; to be reduced in circumstances. 6. இனமொத்த மெல்லெழுத்தாக மாறுதல்; (Gram.) to be softened, as a hard consonant into the corresponding soft or nasal consonant. *"குழைத்த வென்பது குழைந்தவென மெலிந்து நின்றது" (புறநா. 21, உரை).* 7. சுரத்திற்றாழ்தல்; (Mus.) to be lowered in pitch. *"யாழ்மேற் பாலை யிடமுறை மெலிய" (சிலப். 3, 92).*

ம. மெலி; து. மெலி (நோய் போன்றவற்றால் உடல் எடை குறைதல்).

[முல் → மெல் → மெலி. மெலிதல் = வறுமையடைதல் (மு.தா. 286)]

மெலி²-த்தல் *meli-*, 2 செ.குன்றாவி. (v.t.) 1. வலி குறைத்தல்; to weaken. 2. உடல் மெலியச் செய்தல்; to make thin, lean. 3. வருந்துதல்; to cause suffering. 4. அழித்தல்; to destroy. *"கடற்கரை மெலிக்குங் காவிரி" (சிலப். 6,164).* 5. வல்லினவெழுத்தை இனமொத்த மெல்லின வெழுத்தாக மாற்றுதல்; (Gram.) to soften, as a hard consonant into the corresonding soft or nasal consonant. *"மெலிக்கும் வழி மெலித்தலும்" (தொல். சொல். 403).* 6. சுரத்தைத் தாழ்த்தல்; (Mus.) to lower the pitch.

[முல் → மெல் → மெலி. (முதா.286) மெலிதல் → மெலித்தல். செய்யுள் திரிபு ஆறனுள், வல்லெழுத்து இனமெல்லெழுத்தாக மாறுதல் அல்லது மாற்றப்படுதல். (நன்.155). இயல்பாக வல்லினம் பெற்ற சொற்கள் செய்யுளில் மெல்லினம் பெற்றுவந்தால் அது மெலித்தல் வேறுபாடு. "தண்டையின் இனக்கிளி கடிவோள் பண்டையள் அல்லள் மானோக்கினளே" இங்குத் தட்டை என்பது தண்டை என மெலித்து வந்துள்ளது]

மெலி³ *meli*, பெ.(n.) மெல்லெழுத்து பார்க்க; see *mel-l-eluttu. "மெலிமிகலுமாகும்" (நன். 215).*

[முல் → மெல் → மெலி]

மெலிகோல் *meli-kōl,* பெ.(n.) கொடுங்கோல்; rod of tyranny, tyranny. *"மெலிகோல் செய்தேனாகுக" (புறநா. 71).*

[மெலி + கோல்]

மெலிசு *meliśu,* பெ.(n.) மெலிது பார்க்க; see *melidu.*

[மெலிது → மெலிசு]

மெலித்தல் *melittal,* பெ.(n.) செய்யுள் மாற்றம் (விகாரம்) ஒன்பதனுள் வல்லெழுத்து இன மெல்லெழுத்தாக மாறும் மாற்றம் (விகாரம்) (நன். 155); (Gram.) changing of a hard or stop consonant into the corresponding soft or nasal consonant, one of nine *ceyyuḷ-vigāram.*

[மெலி → மெலித்தல்]

மெலிதாவிகம் *melitāvigam,* பெ.(n.) மருது மேற்புல்லுருவி; a parasite growing on marudu tree.

மெலிது *melidu,* பெ.(n.) 1. மெலிந்தது; that which is thin. 2. மென்மையானது; that which is soft. *'மனத்துக்குள் நம்பிக்கை மெலிதாகத் தலை தூக்கியது'.*

[மெல் → மெலி → மெலிது]

மெலிந்த *melinda,* பெ.எ. (adj.) ஒடுங்கிய, வலுவிழந்த நிலை; unnerved. *'மெலிந்த உடம்பு' (உ.வ.).*

[மெலி → மெலிந்த]

மெலிந்தநெஞ்சு *melinda-neñju,* பெ.(n.) வலுவிழந்த நெஞ்சாங்குலை; weak heart.

[மெலிந்த + நெஞ்சு]

மெலிந்தவள் *melindavaḷ,* பெ.(n.) ஒல்லியான உடல்வாகு உள்ளவள்; a lean woman. *"மெலிந்தவளுக்கு மெத்தப் பலன், மேனி மினுக்கி இட்டவளுக்கு மெத்தக்கசம்" (பழ.).*

[மெலிந்த + அவள்]

மெலிந்துபோ-தல் *melindupō-,* 8 செ.கு.வி. (v.i.) மெலி[1]-தல் பார்க்க; see *meli[1]-, 'எட்டு நாள் காய்ச்சலில் அவன் மெலிந்து போய் விட்டான்' (உ.வ.).*

[மெலி → மெலிந்து + போ-,]

மெலிந்தோன் *melindōṉ,* பெ.(n.) 1. நோய் முதலியவற்றால் உடம்பு மெலிந்தவன்; person emaciated by disease. 2. மெலியவன் பார்க்க; see *meliyavaṉ.* 3. ஏழை; destitute person.

[மெலி → மெலிந்தோன்]

மெலிப்பயறு *meli-p-payaṟu,* பெ.(n.) எலிப்பயறு; wild horse gram.

மறுவ. வயற்பயறு, சிறுபயறு.

[மெலி + பயறு]

மெலிப்பு *melippu,* பெ.(n.) 1. மெலித்தல் பார்க்க; see *melittal.* 2. மெல்லெழுத்து பார்க்க; see *mel-l-eḻuttu.* *"வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றுலும்" (தொல். எழுத். 157).*

[மெலி → மெலிப்பு]

மெலியது *meliyadu,* பெ.(n.) மெல்லியது பாாக்க; see *melliyadu.*

[மெல்லியது → மெலியது]

மெலியவன் *meliyavaṉ,* பெ.(n.) வலுவற்றவன்; weak, powerless persons. *"மெலியவர் பால தேயோ வொழுக்கமும் விருப்பந் தானும்" (கம்பரா. வாலிவதை. 80)*

[மெலி → மெலியவன்]

மெலியார் *meliyār,* பெ.(n.) வலிகுறைந்தவர்; weak, powerless persons. *"மெலியார் மேன் மேகபகை" (குறள், 861).*

[மெலி → மெலியார்]

மெலியார்கூந்தல் *meliyār-kūndal,* பெ.(n.) அம்மையார்கூந்தல்; seeta's thread.

[மெலியார் + கூந்தல்]

மெலிவடை-தல் *melivaḍai-,* 2 செ.கு.வி. (v.i.) 1. உடல் வளர்ச்சி குன்றுதல், ஒல்லியாதல்; to become lean. 2. வலுக் குறைதல்; to grow weak.

[மெலிவு + அடை]

மெலிவு *melivu,* பெ.(n.) 1. தளர்ச்சி; weakness, feebleness, languor. *"அணியிழை மெலிவின்" (பு.வெ.11, பெண்பாற். 5).* 2. களைப்பு; fatigue. *"மெலிவு தீர்தி" (கம்பரா. திருவடி. 5).* 3. துன்பம்; pain, suffering. 4. தொல்லை; trouble, difficulty. *"எங்களுக் குண்டான மெலிவுகளுஞ் சொல்லி"* (Insc. Pudu. 799). 5. தோல்வி; defeat. *"மெலிவென்பது முணர்ந்தோன்" (கம்பரா. முதற்போ. 181).* 6. கொடுமை; tyranny; oppression. *"வலியவர் மெலிவு செய்தால்" (கம்பரா. வாலிவ. 80).* 7. படுத்த லோசை; (Mus.) low pitch. *"வலிவும் மெலிவுஞ் சமனுமெல்லாம்" (சிலப். 3, 93).*

[முல் → மெல் → மெலி → மெலிவு = தோல்வி. (மு.தா.286) 'வு'-தொ.பெ.ஈறு]

மெலிவுநாடி *melivu-nāḍi,* பெ.(n.) வலு விழந்த நாடி, வலுவற்ற நாடி; feeble pulse.

[மெலிவு + நாடி]

மெலிவுநோய் *melivu-nōy,* பெ.(n.) இளைக்கும் நோய்; emaciation.

[மெலிவு + நோய்]

மெலிவுறல் *meli-vuṟal,* பெ.(n.) 1. வலு விழத்தல்; growing weak. 2. இளைத்தல்; growing thin and weak.

[மெலி → மெலிவு + உறல். உறு → உறல்]

மெலிவுறு-தல் *melivuṟu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. வலுவிழத்தல்; to grow weak. 2. இளைத்தல்; to become thin, lean.

[மெலிவு + உறு-,]

மெலு *melu,* பெ.(n.) எடைக்குறைவான காசு (நாணயம்) (வின்.); coin below the standard weight.

[மெல் → மெலு]

மெலுக்கு[1] *melukku,* பெ.(n.) 1. மென்மை (வின்.); exquisiteness, tenderness. 2. விழிப்பு (இ.வ.); wakefulness.

[மெல் → மெலு → மெலுக்கு]

மெலுக்கு[2] *melukku,* பெ.(n.) வெளியழகு (அலங்காரம்) (யாழ். அக.); pomp, ostentation.

[மினுங்கு → மினுக்கு. மினுக்குதல் = பளபளப்புண்டாக்குதல். மினுக்கு → (மெனுக்கு) → மெலுக்கு]

மெலுக்குவை *melu-k-kuvai,* பெ.(n.) 1. மெலுக்கு[1], 1 பார்க்க; see *melukku[1], 1.* 2. மெலுக்கு[1], 2 பார்க்க (இ.வ.); see *melukku[1], 2.*

தெ. மெலகுவ.

[மெலுக்கு → மெலுக்குவை]

மெழுக்கடிகள் *meḻu-k-kaḍigaḷ,* பெ.(n.) 1. கோயிலை மெழுகித் தூய்மை படுத்துவோர்; servants who clean the floor, in a temple (S.I.I.V.248). 2. கோயில் வழிபாட்டின் போது தீவட்டி, விளக்கு ஆகியவை பிடிக்கும் ஊழியர்; the temple servant who holds torch and lamp during worshipping time. *"இராஸ்ரீ பலி எழுந்தருளும் பொழுது எரியக்கண்ட இருப்புப் பிற விளக்கு முப்பதினுக்கு நிடதம் எண்ணெய் நாழி உழக்கு இவை பிடிப்பார் மெழுக்கடிகன்மார் நால்வர்" (தெ. கல். தொ. 5. கல். 625).*

[மெழுக்கு + அடிகள்மார்]

மெழுக்கம் *meḻukkam,* பெ.(n.) சாணியால் மெழுகிவைத்த இடம்; ground or floor prepared by being smeared with cow-dung water. *"மலரணி மெழுக்கமேறி" (பட்டினப். 248).*

[மெழுகு → மெழுக்கு → மெழுக்கம் (வே.க.4,25)]

மெழுக்கு *meḻukku,* பெ.(n.) 1. மெழுகுகை; smearing with cow-dung water, as the floor. *"புலர்வதன் முன்னலகிட்டு மெழுக்குமிட்டு" (தேவா. 727, 3).* 2. சாணம்; cow-dung. *"திருவலகும் திருமெழுக்கும் தோண்டியுங்கொண்டு" (பெரியபு. திருநாவுக். 68).* 3. மெழுகும் பொருள்; substance or solution used to smear any surface. *"வேரியின் மெழுக்கார்ந்த மென்பூ நிலத்து" (சீவக.129).* 4. மெழுகு, 3, 4 பார்க்க; see *meḻugu3,4.*

[மெழுகு → மெழுக்கு. (வே.க.4, 25)]

மெழுக்குச்சாத்து-தல் *meḻukku-c-cāttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) மெழுகு[1]-தல் (வின்.) பார்க்க; see *meḻugu[1]-,*

[மெழுகு → மெழுக்கு + சாத்து-,]

மெழுக்குத்துணி *meḻukku-t-tuṇi,* பெ.(n.) 1. நீர் ஊறாதிருப்பதற்காக மெழுகு பூசின துணி; wax cloth, cloth water-proofed with a layer of wax (C.E.M). 2. நனையாதிருப்பதற்காக மேற்பூச்சிட்ட துணி (Mod.); oil-cloke . 3. கரிநெய்யிட்ட கூரைப்பாய் (Mod.); tarpaulin.

[மெழுகு → மெழுக்கு + துணி]

மெழுக்குப்புறம் *meḻukku-p-puṟam,* பெ.(n.) கோயில் மெழுகுதற்கு விடப்பட்ட இறையிலி நிலம்; rent-free *'inam'* land, granted for sweeping and washing the floor, in a temple (M.E.R 17,of 1930-31).

[மெழுகு → மெழுக்கு + புறம்]

மெழுக்கூட்டு-தல் *meḻu-k-kūṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) மேற்பூச்சிடுதல்; to smear, as with wax to; to coat. *"நிஷித்த திரவியத்தை உள்ளே வைத்து மெழுக் கூட்டினவோபாதி" (ஈடு, 1, 2, 1. பாடபேதம்).*

[மெல் → மெல்கு → மெழுகு. மெழுகு → மெழுக்கு = மேற்பூச்சுப் பொருள். மெழுக்கு + ஊட்டு-,]

மெழுகாலிகம் *meḻukāligam,* பெ.(n.) மாங்கிளுவை; a tree-mango balsam.

மெழுகிடு–தல் *meḻugiḍu-,* 17 செ.குன்றாவி. (v.t.) 1. நூலின் மேல் மெழுகு பூசுதல்; to wax, smear with wax, as a thread. 2. மெழுகு[1]–தல் பார்க்க; see *meḻugu[1]-,* 3. மெழுகுகட்டு–தல் பார்க்க; see *meḻugu-kaṭṭu-,*

[மெழுகு + இடு–, 'இடு' து.வி.]

மெழுகு[1]–தல் *meḻugu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. இடத்தைத் தூய்மை செய்வதற்காகச் சாணக் கரைசலால் தேய்த்துப் பூசுதல் அல்லது நீரால் கழுவுதல்; to cleanse the floor with cow-dung water. *"நின்றிருக் கோயிறூகேன் மெழுகேன்" (திருவாச. 5, 14).* 2. பூசுதல்; to smear, as the body with sandal paste. *"முகிண் முலை மெழுகிய சாந்தின்" (கம்பரா. பிணிவீ. 53).* 3. குற்றத்தை மறைத்துப் பூசிவிடுதல்; to gloss over, varnish.

[மெல் → மெல்கு → மெழுகு. மெழுகுதல் = மேனியில் சந்தனம் பூசுதல், நிலத்தைச் சாணமிட்டுத் துப்புரவு செய்தல், குற்றத்தை மறைத்துப் பேசிவிடுதல் (வே.க.4, 25)]

மெழுகு[2] *meḻugu,* பெ.(n.) 1. சாணம்; cow-dung. *"துய்ய மெழுகுடன்" (திருமந். 1720).* 2. மென்மை (அழகர்கல. 10); smoothness. 3. கொழுப்பிலிருந்து அல்லது எண்ணெயிலிருந்து உருவாக்கப்படுவதும் எளிதில் உருகக் கூடியதுமான பொருள், தேனடையன் சக்கை (குறுந். 155); wax, beeswax. *'அவலங்களைப் பார்க்கும் போது அவர் உள்ளம் மெழுகைப் போல் உருகியது' (உ.வ.).* 4. பிசின்; gum. 5. மாத்திரையுமாகாது இளகிய(லேகிய) முமாகாது பிசுபிசுத்த தன்மையுடைய மருந்து; soft, waxy pill, mass.

[முவ் → மெல் → மென்மை. மெல் → மெல்கு. மெல்குதல் = மெதுவாதல், நொய்யாதல், இளகுதல். மெல்கு → மெழுகு. (வே.க.4, 21, 25]

மெழுகு, மூலிகைச்சாறு, செய்நீர் முதலிய வற்றால் சுருக்குக்கொடுத்து அல்லது அவற்றோடு கடைச்சரக்குகளைச் சேர்த்து, தேன், முலைப்பால் முதலியவற்றாலரைத்துத் திரட்டிய பசையுள்ளதான ஒரு வகை மருந்து. (சா.அக.).

மெழுகுவகை : இலிங்கமெழுகு, மூசாம்பிர மெழுகு, இரச மெழுகு, தாமிர மெழுகு, சிவப்பு மெழுகு, இலவண மெழுகு, கத்தூரி மெழுகு, கோரோசனை மெழுகு, கெந்தக மெழுகு, பாடாண மெழுகு, வீர மெழுகு.

மெழுகுக்களிம்பு *meḻugu-k-kaḷimbu,* பெ.(n.) சிரங்கு முதலியவற்றிற்கிடும் களிம்பு வகை (M.L.); medicinal ointment for itches, etc.,

[மெழுகு + களிம்பு. மெழுக்களிம்பு = இளகிய அல்லது களிப்பதமான மருந்து]

மெழுகுகட்டிவார்–த்தல் *meḻugu-kaṭṭi-vār-,* 4 செ.குன்றாவி. (v.t.) மெழுகுக் கருவில் மாழைகளை யுருக்கிவிட்டுத் திருமேனி வார்த்தல் (வின்.); to pour molten metal into a wax-mould and cast, as an image.

[மெழுகு + கட்டி + வார்–,]

மெழுகுகட்டு–தல் *meḻugu-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) திருமேனி வார்க்க மெழுகினாற் கருக் கட்டுதல் (வின்.); to make a wax-mould for casting an image.

[மெழுகு + கட்டு–.]

மெழுகுசாணை *meḻugu-šāṇai,* பெ.(n.) 1. மெழுகால் துடைத்த உரைகல் (இ.வ.); touch stone cleaned with beeswax. 2. மெழுகுங் கருமணலுங் கலந்து செய்த சாணைக்கல் (வின்.); whetstone formed of black sand and wax.

[மெழுகு + சாணை]

மெழுகுசாத்து-தல் *meḻugu-šāttu-,* 5 செ.கு.வி. (v.i.) மெழுகுகட்டு-தல் பார்க்க; see *meḻugu-kaṭṭu-, "சிற்பர்களான் மெழுகு சாத்தி" (திருவாலவா. 45, 2).*

[மெழுகு + சாத்து-, படிமை வார்க்க மெழுகினாற் கருக்கட்டுதல்]

மெழுகுசாரணை *meḻugu-šāraṇai,* பெ.(n.) பூடுவகை (சங்.அக.); a prostrate plant.

[மெழுகு + சாரணை]

மெழுகுசீலை[1] *meḻugu-šīlai,* பெ.(n.) மெழுக்குத்துணி பார்க்க; see *meḻukku-t-tuṇi.*

[மெழுகு + சீலை. சீரை → சீலை]

மெழுகுசீலை[2] *meḻugu-šīlai,* பெ.(n.) 1. மருந்து பூசப்பெற்ற சிறு துண்டு; a plaster. 2. தேன் மெழுகு பூசப்பெற்ற ஆடை; wax cloth coated with bees wax.

[மெழுகு + சீலை. சீரை → சீலை]

மெழுகுசெய்-தல் *meḻugu-šey-,* 1 செ.கு.வி. (v.i.) மெதுவாக்குதல், மென்மையாக்குதல்; to smooth, soften. *"புரவி கருவிகொ டுரிஞ்சி மிக மெழுகு செய்து" (அழகர்கல. 10).*

[மெழுகு + செய்-,]

மெழுகுசேர்வை *meḻugu-šērvai,* பெ.(n.) மெழுகுக்களிம்பு (வின்.) பார்க்க; see *meḻugu-k-kaḷimbu.*

[மெழுகு + சேர்வை]

மெழுகுத்தட்டு *meḻugu-t-taṭṭu,* பெ.(n.) மெழுகுபாளம் (வின்.) பார்க்க; see *meḻugu-pāḷam.*

[மெழுகு + தட்டு]

மெழுகுத்தண்டு *meḻugu-t-taṇḍu,* பெ.(n.) மெழுகுத்திரி பார்க்க (யாழ்.அக.); see *meḻugu-t-tiri.*

[மெழுகு + தண்டு]

மெழுகுத்திராவகம் *meḻugu-t-tirāvagam,* பெ.(n.) வீரம், பூரம், நவச்சாரம், படிகாரம் – இந்நான்கையும் வாலையிலிட்டு இறக்கிய ஒரு வகை நெய்மம் (தைலம்); an acid distilled from the four drugs corrosive sublimate, alum, ammoniam chloride and subchloride of mercury.

[மெழுகு + திராவகம்]

Skt. *drāvaka* > த. திராவகம்.

மெழுகுத்திரி[1] *meḻugu-t-tiri,* பெ.(n.) விளக்காக எரியும்படி நடுவே திரியையுடைய நீள் உருண்டை வடிவில் செய்யப்பட்ட மெழுகுக் கட்டி; wax candle, taper.

[மெழுகு + திரி]



மெழுகுத்திரி

மெழுகுத்திரி² *me|ugu-t-tiri,* பெ.(n.) ஒழுக்கக் கேட்டினால் உருவாகும் நோயைக் குறைக்கும் மருந்து; a slender flexible wax taper intended for introduction into the urethra or rectum.

[மெழுகு + திரி]

மெழுகுத்துணி *me|ugu-t-tuni,* பெ.(n.) மெழுக்குத்துணி (வின்.) பார்க்க; see *me|ukku-t-tuni.*

[மெழுகு + துணி]

மெழுகுத்தேன் *me|ugu-t-tēn,* பெ.(n.) மெழுகுக் கூட்டில் ஈக்கள் கட்டிய தேன்; honey collected by bees.

[மெழுகு + தேன்]

மெழுகுத்தைலம் *me|ugu-t-tailam,* பெ.(n.) புண், காயம் ஆகியவற்றைப் போக்க மெழுகு முதலியன சேர்த்துச் செய்யப்பட்ட பூசு மருந்து; medicinal oil prepared with wax and other ingredients.

[மெழுகு + தைலம்]

Skt. taila > த. தைலம்.

மெழுகுதிரி *me|ugu-tiri,* பெ.(n.) மெழுகுத்திரி¹ (வின்.) பார்க்க; see *me|ugu-t-tiri¹*.

[மெழுகு + திரி]

மெழுகுதுணி *me|ugu-tuni,* பெ.(n.) மெழுகுத் துணி (வின்.) பார்க்க; see *me|ugu-t-tuni.*

[மெழுகு + துணி]

மெழுகுநீர் *me|ugu-nīr,* பெ.(n.) பூநீர், சாரம், பச்சை, பூரம் கூட்டில் செயநீர் விட்டு அரைக்கும் ஒரு வகை நீர்; pungent liquid prepared from subchloride of mercury. copper sulphate. salt from the fuller's earth.

[மெழுகு + நீர்]

மெழுகுபதம் *me|ugu-padam,* பெ.(n.) மருந் தெண்ணெய்ப் பதம் ஐந்தனுள் காய்ச்சப்பட்ட மருந்தெல்லாம் சேர்ந்து மெழுகு போல் திரண்டு வரும் பதம்; thick consistency or viscosity, one of five *marundennai-p-padam.*

[மெழுகு + பதம்]

மெழுகுபனையன் *me|ugu-panaiyan,* பெ.(n.) அம்மை நோய்வகை (யாழ்.அக.); a kind of small pox.

[மெழுகு + பனையன்]

மெழுகுபாகல் *me|ugu-pāgal,* பெ.(n.) வழவழப்புள்ள பாகற்காய் (மூ.அக.); bristly balsam-pear, climber.

[மெழுகு + பாகல், மெழுகு = வழவழப்புத் தன்மையைக் குறித்தது]

மெழுகுபாளம் *me|ugu-pā|am,* பெ.(n.) குறித்த நிறையுள்ள மெழுகுத்தகடு (இ.வ.); cake of wax, generally of a particular weight.

[மெழுகு + பாளம்]

மெழுகுபீர்க்கு *me|ugu-pīrkku,* பெ.(n.) சுணையற்ற பீர்க்கு (சங்.அக.); a kind of gourd.

மறுவ. வெண்பீர்க்கு, நுரைபீர்க்கு.

[மெழுகு + பீர்க்கு]

மெழுகுபூச்சு *me|ugu-pūccu,* பெ.(n.) திருமேனி முதலியவற்றின் மேல் மெழுகு பூசி யெடுக்கும் அச்சு (இ.வ.); mould or imprint taken with wax, as of images.

[மெழுகு + பூச்சு]

மெழுகுபூவிகம் *meḻugu-pūvigam,* பெ.(n.) தேன் கூட்டினுள்ளிருக்கும் பூச்சி; the insects in the honey comb.

[மெழுகு + பூவிகம்]

மெழுகுபேய்ப்பீர்க்கு *meḻugu-pēy-p-pīrkku,* பெ.(n.) நுரைப்பீர்க்கு; loofa.

[மெழுகு + பேய்ப்பீர்க்கு]

மெழுகுபொம்மை *meḻugu-bommai,* பெ.(n.) 1. மெழுகினாற் செய்த விளையாட்டுப் பதுமை; doll made of wax. 2. தொல்லைகளைத் தாங்க முடியாதவ-ன்-ள் (கொ.வ.); person easily fatigued.

க. மேநடுபொம்பெ.

[மெழுகு + பொம்மை. பொய்ம்மை → பொம்மை]

மெழுகுபோடு-தல் *meḻugu-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) மரவேலைக்குப் பளபளப் பேற்ற மெழுகைக் காய்ச்சிப் பூசுதல் (வின்.); to wax cabinet work, in polishing.

[மெழுகு + போடு-,]

மெழுகுமண் *meḻugu-maṇ,* பெ.(n.) கருக்கட்டும் பசைமண் (வின்.); clay used in forming a mould over the figure of wax, in casting.

[மெழுகு + மண்]

மெழுகுமருந்து *meḻugu-marundu,* பெ.(n.) மெழுகு², 5 பார்க்க; see *meḻugu², 5.*

[மெழுகு + மருந்து]

மெழுகுமுட்டம் *meḻugu-muṭṭam,* பெ.(n.) மெழுகுபாளம் பார்க்க (இ.வ.); see *meḻugu-pāḷam.*

[மெழுகு + முட்டம்]

மெழுகுவத்தி *meḻugu-vatti,* பெ.(n.) மெழுகுத்திரி (வின்.) பார்க்க; see *meḻugu-t-tiri.*

[மெழுகு + வத்தி]

மெழுகுவர்த்தி *meḻugu-vartti,* பெ.(n.) மெழுகுத்திரி (வின்.) பார்க்க; see *meḻugu-t-tiri.*

[மெழுகு + வர்த்தி. வத்தி → வர்த்தி]

மெழுகுவல்லி *meḻugu-valli,* பெ.(n.) வட்டவல்லி; a creeper.

[மெழுகு + அல்லி]

மெழுகுவுருண்டை *meḻugu-vuruṇḍai,* பெ.(n.) பொன்னின் மாற்றினைக் காணப் பயன்படுத்தும் மெழுகு; a wax used to find the fineness or quality of gold.

[மெழுகு + உருண்டை]

சிரட்டைக்கரி தேங்காயெண்ணெய் மெழுகுடன் சேர்த்துருக்கி உருண்டை செய்தது.

மெழுகுவெண்டி *meḻugu-veṇḍi,* பெ.(n.) சுணையில்லாத வெண்டை; smooth surfaced lady's finger.

[மெழுகு + வெண்டி. வெண்டை → வெண்டி]

மெழுகூட்டு-தல் *meḻu-kūṭṭu-,* 5 செ. குன்றாவி. (v.t.) மூடி மறைத்தல்; to cover up, as with wax. *"நிக்ஷித்த திரவியத்தை உள்ளே வைத்து மெழுகூட்டின வோபாதியிறே" (ஈ.டு. 1, 2, 1).*

[மெல் → மெல்கு → மெழுகு + ஊட்டு. மெழுகுதல் = குற்றத்தை மறைத்துப் பேசுதல், மெழுகூட்டுதல் = மூடி மறைத்தல்]

மெழுகெண்ணெய் *meḻugeṇṇey,* பெ.(n.) 1. மரச் சாமானுக்கு மெருகிட உதவும் மெழுகு சேர்த்த பூச்சு நெய்மம் (இ.வ.); solution of wax and glue, used in polishing wood. 2. மெழுகு முதலியன சேர்த்துச் செய்யப்பட்ட எண்ணெய் வகை (தைலவ. தைல.); medicinal oil prepared with wax and other ingredients.

[மெழுகு + எண்ணெய்]

மெழுகெழுது-தல் *meḻugeḻudu-,* 5 செ.கு.வி. (v.i.) துணியில் அச்சடிக்க மெழுகால் உருவமெழுதுதல் (இ.வ.); to form designs with wax, in printing chintz.

[மெழுகு + எழுது-,]

மெழுமெழு-த்தல் *meḻu-meḻu-,* 4 செ.கு.வி. (v.i.) மெதுவாதல்; to be soft to the touch. *"மிடறு மெழுமெழுத் தோட" (திவ். பெரியாழ். 3,2,6).*

[மெழு + மெழு-,]

மெள்ள *meḷḷa,* வி.எ. (adv.) மெல்ல பார்க்க; see *mella.* *"மெள்ளவெழுந் தரியென்ற பேரரவம்" (திவ். திருப்பா. 6).*

[மெல்ல → மெள்ள. முல் → மெல் → மெல்ல]

மெள்ளென *meḷḷeṉa,* வி.எ. (adv.) மெல்லென பார்க்க; see *melleṉa.* *"மெள்ளனவே மொய்க்கு நெய்க் குடந்தன்னை யெறும்பு" (திருவாச. 6, 24).*

க. மெல்லனெ.

[மெல்லென → மெள்ளென. மெல் → மெல்லென]

மென்கண் *meṉ-kaṇ,* பெ.(n.) இரக்கம்; tenderness of heart, mercy. *"மென்கண் பெருகினறம் பெருகும்" (நான்மணி. 92).*

[மென் + கண். மெல் → மென்]

மென்கணம் *meṉ-kaṇam,* பெ.(n.) மெல்லினம் (நன். 158, உரை) பார்க்க; (Gram.) see *melliṉam.*

[மென் + கணம். கள் → கண் → கணம். மென்கணம் = மெல்லின மெய்கள்]

மென்கால் *meṉ-kāl,* பெ.(n.) மென்காற்று, தென்றல்; southern breeze, a gentle breeze. *"மென்கால் பூவளவிய தெய்த" (கம்பரா. வனம்புகு. 2).*

[மென் + கால்]

மென்காற்று *meṉ-kāṟṟu,* பெ.(n.) மென்கால் பார்க்க; see *meṉkāl.*

க. மெல்லெலர்.

[மென் + காற்று. மெல் → மென்கால் → காற்று]

மென்கொடி *meṉ-koḍi,* பெ.(n.) கொடிவகை (பிங்.); a species of creeper.

[மென் + கொடி. மெல் → மென்]

மென்செய் *meṉ-śey,* பெ.(n.) உழுது நீர்விட்டு மென்மையாகச் செய்யப்பட்ட நிலம்; wetland, prepared for cultivation. *"புன்செய் மென்செயும்"* (S.I.I.V. 285).

மறுவ. நன்செய்.

[மென் + செய். மென்மையாக்கப்பட்ட நிலம். மெல் → மென்]

மென்சொல் *meṉ-sol,* பெ.(n.) 1. இனிய சொல் (நாமதீப. 668); soft, pleasant word. 2. அன்பான சொல் (வின்.); kind word.

[மென் + சொல்]

மென்தூறல் *men-tūral,* பெ.(n.) மென்மையாகப் பெய்யும் தூறல்; a gentle, light rain.

க. மெல்லரி.

[மெல் → மென் + தூறல். தூறு → தூறல்]

மென்தொடர்க்குற்றியலுகரம் *mentodar-k-kurriyalugaram,* பெ.(n.) மென்றொடர்க் குற்றியலுகரம் பார்க்க; see *menrodar-k-kurriyalugaram.*

[மென்தொடர் + குற்றியலுகரம்]

மென்பறை *men-parai,* பெ.(n.) பறவைக் குஞ்சு; young bird. *"மென்பறை விளிக்குரல்" (ஐங்குறு. 86).*

[மென் + பறை. பறவை → பறை. இனி பற → பறை என்றுமாம்]

மென்பால் *men-pāl,* பெ.(n.) மருதநிலம் (பிங்.); agricultural tract. *"வளம் வீங்கிருக்கை .... மென்பா றோறும்" (பதிற்றுப். 75, 8).*

[மென் + பால். பகல் → பால்]

மென்பிணி *men-piṇi,* பெ.(n.) சிறுதுயில்; light sleep, nap. *"மயக்கத்துப் பொழுது கொண் மரபின் மென்பிணி யவிழ" (பதிற்றுப். 50, 21).*

[மென் + பிணி]

மென்புரட்டு *men-puraṭṭu,* பெ.(n.) கைம்மாற்றிலே பணம் புரட்டுகை (யாழ். அக.); dealings in money obtained by simple loan and other temporary expedients.

[மென் + புரட்டு. மெல் → மென். புரள் → புரட்டு]

மென்புலம் *men-pulam,* பெ.(n.) 1. நீர் வளத்தால் மெல்லிய மருதநிலம்; the agricultural tract. *"மென்புல வைப்பி னன்னாட்டுப் பொருந" (புறநா. 42).* 2. மணல் நிறைந்த நெய்தனிலம்; the maritime tract. *"மென்புலக் கொண்கன்" (ஐங். 119).*

[மென் + புலம். மெல் → மென்]

மென்புற்று *men-purru,* பெ.(n.) மென்மையான சிலந்தி; soft cancer, encephaloid.

[மெல் → மென் + புற்று]

மென்பேச்சு *men-pēccu,* பெ.(n.) இனிமையான பேச்சு; a gentle, kind word.

க. மெல்வாது, மெல்மாது.

[மென் + பேச்சு]

மென்மெல *men-mela,* வி.அ. (adv.) மெல்ல மெல்ல; slowly, softly. *"மென்மெல வியலி வீதி போந்து" (பெருங். வத்தவ. 17, 99).*

[மெல்(ல) + மெல]

மென்மேல் *men-mēl,* வி.அ. (adv.) மேன்மேலும் (கொ.வ.); further and further.

ம. மேன்மேல்

[மேல்மேல் → மென்மேல்]

மென்மை *menmai,* பெ.(n.) 1. நுண்மை; fineness, thinness. 2. தொடுவதற்குப் பஞ்சு போன்று இருக்கும் மென்மைத் தன்மை; tenderness, softness. *"கயவென கிறவி மென்மையு மாகும்" (தொல். சொல். 322), 'பெண்கள் இயல்பாகவே மென்மை யானவர்கள்' (உ.வ.).* 3. (தொடுவதில்) மெதுவான முறை; gentle. *'தூங்கும் குழந்தையின் தலையை மென்மையாகத் தடவிக் கொண்டிருந்தாள் அன்னை' (உ.வ.).*

4. அதிக அரவமில்லாத தன்மை; (of. voice, volume etc.) soft. *'மென்மையான இசை, மிக மென்மையாகத்தான் கேட்டாள்' (உ.வ.).* 5. கடுமையான செயலால் எளிதில் பாதிக்கப்படும் தன்மை; gentle nature. *'அவரது மென்மையான மனம் புண்படும்படி ஏதாவது சொல்லியிருப்பாய்' (உ.வ.).* 6. மெல்லெழுத்து பார்க்க; see *mel-l-eluttu* (Gram.). *"மேவு மென்மை மூக்கு" (நன். 75).* 7. தாழ்வு; lowness, inferiority. *"மென்சொலேனும் .... இகழார்" (கந்தபு. அவையட. 3).* 8. வலியின்மை; weakness, infirmity. *"மேவற்க மென்மை பகைவரகத்து" (குறள், 877).* 9. அமைதி; gentleness. *"மெல்லிய நல்லாருண் மென்மை" (நாலடி, 188).*

ம. மெலிவு, மெலிச்சன்; க. மெல்பு; து. மெலியுனி.

[முல் → மெல் → மென் → மென்மை (மு.தா.281)]

மென்றல் *menral,* தொ.பெ. (vbl.n.) மெல்லுதல்; chewing.

[மெல் → மெல்லுதல் → மென்றல்]

மென்றுவிழுங்கு-தல் *menru-vilungu-,* 5 செ.குன்றாவி. (v.t.) முழுமையாகச் சொல்லத் தயங்கி இடையிடுதல்; to be hesitant in-expressing openly. *'செலவழித்ததற்குக் கணக்குக் கேட்டால் மென்று விழுங்குகிறான்' (உ.வ.).*

[மென்று + விழுங்கு-,]

மென்றொடர் *menrodar,* பெ.(n.) மென்றொடர்க்குற்றியலுகரம் பார்க்க; see *menrodar-k-kurriyalugaram. "வன்றொடர் மென்றொடராயிரு மூன்றே யுகரங் குறுகிடன்" (தொல். எழுத். 406).*

[மெல் + தொடர், மெல்தொடர் → மென்றொடர். மெல்லின மெய்யை ஈற்றயலாகக் கொண்ட சொல்]

மென்றொடர்க்குற்றியலுகரம் *menrodar-k-kurriyalugaram,* பெ.(n.) மெல்லொற்றைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் (நன். 94); (Gram.) the final shortened 'u' in a word, preceeded by a soft consonant.

[மென்றொடர் + குற்றியலுகரம்]

தனிக்குறில் அல்லாத ஏனை யெழுத்துகளின் பின் அல்லது எழுத்துத் தொடர்களின் பின் கசடதபற ஆகிய வல்லினங்களின் மீது ஏறிவரும் உகரம் இயல்பான தன்மாத்திரையினின்று குறுகி யொலிக்கும். இறுதி குசுடுதுபுறு ஆகியவற்றிற்குமுன் மெல்லெழுத்து இடம் பெறுமாயின் அது மென்றொடர் குற்றியலுகரமாம். எ–டு. சங்கு, குரங்கு, பந்து, மருந்து.

மென்றொடர்க்குற்றுகரம் *menrodar-k-kurrugaram,* பெ.(n.) மென்றொடர்க் குற்றியலுகரம் பார்க்க ; see *menrodar-k-kurriyalugaram.*

[மென்றொடர் + குற்றுகரம்]

மென்றொடர்மொழி *menrodar-moli,* பெ.(n.) மென்றொடர்க்குற்றியலுகரம் பார்க்க (தொல். எழுத். 415); see *menrodar-k-kurriyalugaram.*

[மென்றொடர் + மொழி]

மென்னகை *mennagai,* பெ.(n.) ஒலி எழுப்பாமல் உதடு விரிய மெல்ல சிரிக்கும் சிரிப்பு; smile. *"கவர்தலைச் சூலி மென்னகை விளைத்து" (உபதேசகா. சிவவிரத. 163).*

மறுவ. இளநகை, புன்னகை; புன்சிரிப்பு.

க. மெல்நகெ.

[மெல் + நகை]

மென்னடை *mennadai,* பெ.(n.) 1. மெதுவான நடை; gentle, graceful gait. *“மென்னடை யன்னம் பரந்து விளையாடும்” (திவ். நாய்ச். 5. 5).* 2. அன்னம் (பிங்.); swan.

க. மெல்நடெ.

[மெல் + நடை]

மென்னாடி *mennāḍi,* பெ.(n.) மென்மையான துடிப்பு; soft pulse.

[மெல் + நாடி]

மென்னி *menni,* பெ.(n.) மென்னை, 1 (வின்.) பார்க்க; see *mennai1.*

மென்னிகட்டி *menni-katti,* பெ.(n.) கால்நடை நோய்வகை; a cattle disease. (M.Cm.D.248).

[மென்னி + கட்டி]

மென்னிலை *mennilai,* பெ.(n.) நடன நளிநய (அபிநய)க் கைவகை (வின்.); a kind of hand-pose.



மென்னிலை

மென்னீர் *mennīr,* பெ.(n.) நன்னீர்; soft water.

[மெல் + நீர்]

மென்னு-தல் *mennu-,* 5 செ.குன்றாவி. (v.t.) நெம்புதல் (இ.வ.); to lift with a lever.

[உன்னுதல் = உயரவெழுதல். உன்னு → (முன்னு) → மென்னு. மென்னுதல் - மேலெழுப்புதல், நெம்புதல்]

மென்னை *mennai,* பெ.(n.) 1. மிடறு (வின்.); throat. 2. கதுப்பு (யாழ்.அக.); cheek.

[முள் → மொள் → மொத்து = திரட்சி, திரண்டது (மு.தா.210) முள் → முல் → முன் → முன்னை = திரண்டு காணப்படும் தொண்டை, கதுப்பு, முன்னை → மன்னை = தொண்டை, கதுப்பு. மன்னை → மென்னை]

மென்னைக்கட்டி *mennai-k-katti,* பெ.(n.) 1. தொண்டைக்கட்டி; goitre. 2. மன்னைக் கட்டி, பொன்னுக்கு வீங்கி; mumps.

[மென்னை + கட்டி. மன்னை → மென்னை]

மென்னைப்பிடிக்க *mennai-p-piḍikka,* வி.எ. (adv.) கழுத்து முட்ட (கொ.வ.); to the full, as is eating.

[மென்னை + பிடிக்க]

மென்னையைப்பிடி-த்தல் *mennaiyai-p-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கழுத்தை நெரித்தல்; to throttle. 2. கட்டாயப்படுத்தி (நிர்ப்பந்தித்து) வேண்டுதல் (கொ.வ.); to importunate.

[மென்னையை + பிடி-,]

மெனக்கெடு[1]-தல் *menakkeḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. வீணாதல்; to be wasted, as time, labour, etc. *‘என் வேலையெல்லாம் மெனக்கெட்டது’.* 2. வேறு வேலைகளை விட்டு ஒன்றிற் கவனங் கொள்ளுதல்; to act with a single purpose, as setting aside everything else. *‘அதை மெனக்கெட்டுச் செய்து முடித்தான்’.*

ம. மெனக்கெடு; து. மெனக்கடு, மெனெக்கடு (ஓய்வு, விடுப்பு, ஒழிவு).

[வினை + கெடு = வினைக்கெடு → மெனக்கெடு–,]

மெனக்கெடு²–த்தல் *menakkeḍu-*, 17 செ.குன்றாவி. (v.t.) மெனக்கெடுத்து–தல் பார்க்க; see *mena-k-keḍuttu-*, *'பொழுதை யெல்லாம் மெனக் கெடுக்கிறான்'.*

[வினை + கெடு = வினைக்கெடு → மெனக்கெடு–,]

மெனக்கெடுத்து–தல் *mena-k-keḍuttu-*, 18 செ.குன்றாவி. (v.t.) பயனின்றிப் போகச் செய்தல்; to waste, as one's time or labour. *'என் காலத்தை மெனக் கெடுத்து விட்டாய்'.*

[மெனக்கெடு → மெனக்கெடுத்து–,]

மெனக்கேடு *mena-k-kēḍu*, பெ.(n.) 1. வீணானது; that which is useless. 2. செயலறுகை; inactivity. 3. தாமதம்; delay.

ம. மெக்கெடு; து. மெனக்கடு, மெனெக்கடு.

[வினைக்கேடு → மெனக்கேடு]

மே

மே¹ *mē*, பெ.(n.) 'ம்' என்ற மெய்யெழுத்தும் 'ஏ' என்ற உயிரெழுத்தும் இணைந்த உயிர்மெய் (அசை) எழுத்து; the syllable formed by adding the long vowel *'ē'* to the consonant 'm'.

[ம் + ஏ]

மே² *mē*, பெ.(n.) மேவு 3 (வின்.) பார்க்க; see *mēvu 3.*

[ஏ → மே]

மே³ *mē*, பெ.(n.) மேம்பாடு; excellence. *"மேதக மிகப்பொலிந்த........ .... வயக்களிறு" (மதுரைக். 14).*

[ஏ → மே (சு.வி.57)]

மே⁴ *mē*, பெ.(n.) வாழைப்பழச்சாறு; plantain fruit essence.

மேக்கடி¹–த்தல் *mēkkaḍi-*, 4 செ.கு.வி. (v.i.) ஆப்பறைதல் (வின்.); to drive in a wedge or stake.

[மேக்கு² + அடி–,]

மேக்கடி²–த்தல் *mēkkaḍi-*, 4 செ.கு.வி. (v.i.) வஞ்சித்தல் (வின்.); to deceive.

[மேக்கு = பிளவுபடுத்தும் ஆப்பு. மேக்கடித்தல் = ஆப்பறைதல், அதைப்போல் பிளவுண்டாக்கும் செயலில் ஈடுபடுதல், வஞ்சித்தல்.]

மேக்கு¹ *mēkku*, பெ.(n.) 1. மேற்கு (பிங்.); west. 2. மேலிடம்; height, high place. *"மேக்கெழு பெருஞ்சினை" (குறுந். 26).* 3. மேலான தன்மை; superiority. *"மேக்கு நீங்கிய வெள்ள வுவகையால்" (கம்பரா. மீட்சி. 26).*

[மேல் → மேற்கு → மேக்கு = மலையாலுயர்ந்த திசை அல்லது கதிரவன் செலவின் பிற்பகுதிக்குரிய திசை (மு.தா. 74), மேடான இடம், மேட்டைப் போல் உயர்ந்து காணப்படும் தன்மை.]

மேக்கு² *mēkku*, பெ.(n.) 1. ஒரு பக்கம் பருத்தும், பருத்த பக்கத்திலிருந்து சரிவாகச் சென்று மறுபக்கம் மெலிவான தகடு போலக் காணப்படுவதும் பிளப்பதற்கு அல்லது உறுதியாக நிறுவுவதற்குப் பயன்படுத்து வதுமான சிறு மரக்கட்டை அல்லது மாழை

(உலோகம்), ஆப்பு (வின்.); wedge. 2. மரவாணி (இ.வ.); wooden nail, wooden peg.

[இடுக்கு = இடுக்கிக் கொள்ளக் கூடிய இடம், விரல்களுக்கிடையே, பற்களுக்கிடையே காணப்படும் சிறு சந்து. இடுக்கு → இக்கு = இடை. இக்கு → (எக்கு) → மெக்கு → மேக்கு = பிளவுபடுத்தும் ஆப்பு]

மேகக்கட்டி *mēga-k-kaṭṭi,* பெ.(n.) அரத்தக் கெடுதலினாலுண்டாகும் கட்டி வகை (இ.வ.); boil resulting from impure blood, venereal eruption.

[மேகம் + கட்டி. குள் → குட்டி → கட்டி]

மேகக்கடுப்பு *mēga-k-kaḍuppu,* பெ.(n.) கூடா ஒழுக்கத்தினால் ஏற்படும் வெட்டை நோய்ச்சுருக்கு; irritation caused by venereal heat.

[மேகம் + கடுப்பு. கடு → கடுப்பு.]

மேகக்கரப்பான் *mēga-k-karappāṉ,* பெ.(n.) மேகநீராலுண்டாகும் கரப்பான் வகை, சொறி சிரங்கு; a skin disease characterized by the development of blisters on the body (M.L.).

[மேகம் + கரப்பான்]

மேகக்கருப்பக்கல் *mēga-k-karuppa-k-kal,* பெ.(n.) மேகக்கல் பார்க்க (யாழ்.அக.); see *mēga-k-kal.*

[மேகம் + கருப்பம் + கல்]

மேகக்கருவாதி *mēga-k-karuvādi,* பெ.(n.) இஞ்சி; ginger.

[மேகம் + கருவாதி]

மேகக்கல் *mēga-k-kal,* பெ.(n.) ஆட்டுமணத்தி (ஆட்டுரோசனை) (வின்.); bezoar of the sheep.

[மேகம் + கல்]

மேகக்கற்பகக்கல் *mēga-k-kaṟpaga-k-kal,* பெ.(n.) முடவாட்டுக்கல்; a kind of mineral stone.

[மேகம் + கற்பகம் + கல்]

மேகக்காக்கையோன் *mēga-k-kākkaiyōṉ,* பெ.(n.) பிறவி நஞ்சுவகை (யாழ்.அக.); a mineral poison.

மேகக்காங்கை *mēga-k-kāṅgai,* பெ.(n.) 1. ஆண்பிறப்புறுப்பில் சீழ்வடிதல், சிறுநீர் கழிக்கும் போது வலியுண்டாதல் முதலிய அறிகுறிகளைக் கொண்ட ஒரு பால்வினை நோய் (இங்.வை); gonorrhoea. 2. கணைச் சூடு (இ.வ.); a disease in children.

[மேகம் + காங்கை. குள் → (கள்) → காள் → காய். காய்தல் = எரிதல். காய் → (காய்கை) → காங்கை]

மேகக்காந்தல் *mēga-k-kāndal,* பெ.(n.) பால்வினை நோயழற்சி; venereal inflammation.

[மேகம் + காந்தல். காய்தல் = எரிதல். காய் → (காய்ந்து) → காந்து → காந்தல்]

மேகக்காந்தி¹ *mēga-k-kāndi,* பெ.(n.) ஒருவகை பால்வினைநோய்; a kind of venereal disease.

மேகக்காந்தி² *mēga-k-kāndi,* பெ.(n.) கிளுவை; balsam tree, balsmondendron berryi.

[மேகம் + காந்தி]

மேகக்காய் *mēga-k-kāy,* பெ.(n.) கடுக்காய்; galnut, terminellia chebula.

[மேகம் + காய்]

மேகக்காரகப்படை *mēga-k-kāraga-p-paḍai,* பெ.(n.) பால்வினை நோயால் வரும் ஒருவகை தோல் நோய்; an eczerna caused by venereal affection or heat blenorrhoea.

[மேகக்காரகம் + படை]

மேகக்காரகம்[1] *mēga-k-kāragam,* பெ.(n.) பால்வினை நோயால் வரும் தோல் நோய் அதாவது கிரந்தி படை தடிப்பு முதலியன குருக்கள்; skin affection due to venereal causes.

[மேகம் + காரகம்]

Skt. *kāraka* > த. காரகம்.

மேகக்காரகம்[2] *mēga-k-kāragam,* பெ.(n.) கைகால் விரல்களிற் காணும் வெடிப்பு, அரிப்பு; fisture of leg or toes. 2. நீர்க்கசிவு; pus of fisture of toes.

[மேகம் + காரகம்]

Skt. *kāraka* > த. காரகம்.

மேகக்காரகவெண்ணெய் *mēga-k-kāraga-v-eṇṇey,* பெ.(n.) குளிகை யெண்ணெய், பால்வினை நோய்க்காக உருவாக்கப்படும் எண்ணெய்; an oil, medicated preparation given for skin affections caused by venereal heat.

[மேகக்காரகம் + எண்ணெய். சிற்றாமணக்கெண்ணெய், வெள்ளை வெங்காயம் 5 பங்கும் ஏலம் வகைக்கு 1 பங்கும் அரைத்து எண்ணெயிற் கலந்து சூரிய புடத்தில் வைத்தெடுத்த எண்ணெய்.]

மேகக்கிரந்தி *mēga-k-kirandi,* பெ.(n.) கூடா நட்பினால் ஏற்படும் கிரந்திப்புண்; syphilis sore and bubo.

மறுவ. பறங்கிப் புண்.

[மேகம் + கிரந்தி]

Skt. *granthi* > த. கிரந்தி.

மேகக்கிரந்திபோக்கி *mēga-k-kirandi-pōkki,* பெ.(n.) மேகக் கிரந்தியை நீக்கும் மருந்து; anti syphilitic.

[மேகக்கிரந்தி + போக்கி. போக்கு → போக்கி.]

மேகக்கிராணி *mēga-k-kirāṇi,* பெ.(n.) மேகத் தொடர்பாய்க் காணும் ஒரு வகைக் கிராணிக் கழிச்சல்; chronic diarrhoea caused by the venereal defects in the system.

[மேகம் + கிராணி]

Skt. *grahaṇi* > த. கிராணி.

மேகக்கினி *mēga-k-kiṉi,* பெ.(n.) மின்னல்; lightning.

*[மேகம் + அக்கினி. த. அழன் → அழனி → (அகனி) → **Skt.** agni > த. அக்கினி.]*

மேகக்குத்தல் *mēga-k-kuttal,* தொ.பெ. (vbl.n.) மேகவலி; piercing pain due venereal causes.

[மேகம் + குத்தல்]

மேகக்குலாந்தகன் *mēga-k-kulāntakaṉ,* பெ.(n.) மேக நோய்களைத் தீர்க்கும் வாணாள் (ஆயுள்) வேத மருந்து வில்லை; pill that is said to cure all the varieties of megam - venereal affections.

மேகக்குறிஞ்சி *mēga-k-kuriñji,* பெ.(n.) ஒரு வகை இசை; a musical mode.

[மேகம் + குறிஞ்சி]

மேகக்கூட்டம் *mēga-k-kūṭṭam,* பெ.(n.) மழைமுகிற் கூட்டத்தின் செலவு; passage of rain-clouds.

[மேகம் + கூட்டம். கூடு → கூட்டம்.]

மேககர்ச்சனை *mēga-karccaṉai,* பெ.(n.) மேகமுழக்கம் (வின்.) பார்க்க; see *mēgamuḻakkam.*

[மேகம் + கர்ச்சனை]

Skt. *garjana* > த. கர்ச்சனை.

மேககர்ச்சிதம் *mēgakarccidam,* பெ.(n.) மேகமுழக்கம் (வின்.) பார்க்க; see *mēga-muḻakkam.*

[மேகம் + கர்ச்சிதம்]

Skt. *garjana* > த. கர்ச்சிதம்.

மேககாந்தி *mēga-kāndi,* பெ.(n.) மேகக் காங்கை[1] (வின்.) பார்க்க; see *mēga-k-kāṅgai*[1].

[மேகம் + காந்தி. காந்து → காந்தி]

மேககாரகம் *mēga-kāragam,* பெ.(n.) மேகக்காங்கை, 1 (வின்.) பார்க்க; see *mēga-k-kāṅgai 1.*

[மேகம் + காரகம்]

Skt. *kāraka* > த. காரகம்.

மேககாலம் *mēga-kālam,* பெ.(n.) கார்காலம் (யாழ்.அக.); rainy season.

[மேகம் + காலம்]

மேககுலாந்தகன் *mēga-kulāndagaṉ,* பெ.(n.) பால்வினைநோயைப் போக்கும் ஒருவகைக் கூட்டு மருந்து (பதார்த்த. 1214); a compound medicine for venereal, urinary and other diseases.

[மேகம் + குலாந்தகன்]

மேககெற்சனம் *mēga-keṟcaṉam,* பெ.(n.) மேகமுழக்கம் (யாழ்.அக.) பார்க்க; see *mēga-muḻakkam.*

[மேகம் + கெற்சனம்]

Skt. *garjana* > த. கெற்சனம்.

மேகச்சடை *mēga-c-caḍai,* பெ.(n.) கருப்பு மனோசிலை; a black variety of arsenic.

[மேகம் + சடை]

மேகச்சத்துரு *mēga-c-catturu,* பெ.(n.) ஆவாரை (பொன்னாவரை); a shrub-cassia auriculata.

மேகச்சாய் *mēga-c-cāy,* பெ.(n.) ஒருவகை நஞ்சு (சீர்பந்த பாடாணம்); a kind of arsenic.

[மேகம் + சாய்]

மேகச்சாயை *mēga-c-cāyai,* பெ.(n.) நீலக்கல்; one of nine gems, saffire.

[மேகம் + சாயை]

மேகச்சிரங்கு[1] *mēga-c-ciraṅgu,* பெ.(n.) பால்வினை நோய் தொடர்பாய் வரும் ஒருவகைச் சொறி சிரங்கு; itch due to venereal heat.

[மேகம் + சிரங்கு]

மேகச்சிரங்கு² *mēga-c-ciraṅgu,* பெ.(n.) தீய நீரால் தோன்றுஞ் சிரங்குவகை; erysipelas. (M.L.).

[மேகம் + சிரங்கு]

மேகச்சிலை *mēga-c-cilai,* பெ.(n.) 1. வழலை (மாக்கல்); soap-stone. 2. சுண்ணாம்புக் கல்; kunkar stone.

மறுவ. மாக்கல், வங்கக்கல்.

[மேகம் + சிலை]

Skt. *silā* > த. சிலை.

மேகச்சிறுநீர் *mēga-c-ciṟunīr,* பெ.(n.) நீரிழிவு; passing copious urine.

[மேகம் + சிறுநீர்]

மேகச்சுருக்கு *mēga-c-curukku,* பெ.(n.) மேகத்தினால் ஏற்படும் நீர்க்கடுப்பு; dysuria caused by venereal heat.

[மேகம் + சுருக்கு]

மேகச்சூடு *mēga-c-cūḍu,* பெ.(n.) 1. மேக வெட்டை எனப்படும் மேகநோய்; greet gonorrhoea an inflammatory ailment of the genitals of both sex attended with secretion. 2. மேகக்காங்கை பார்க்க; see *mēga-k-kāṅgai.*

[மேகம் + சூடு. சுள் → சுடு → சூடு]

மேகச்செலவு *mēga-c-celavu,* பெ.(n.) மழைமுகிற் கூட்டத்தின் செலவு; passage of rain clouds.

[மேகம் + செலவு]

மேகச்சொறி *mēga-c-coṟi,* பெ.(n.) மேகச் சிரங்கு; venereal itch.

[மேகம் + சொறி]

மேகச்சோரணம் *mēga-c-cōraṇam,* பெ.(n.) ஒருவகை நீலநிற ஒளிக்கல் (ராஜா வர்த்தம்) (யாழ்.அக.); a blue coloured gem.

மேகசஞ்சாரம்¹ *mēga-šañjāram,* பெ.(n.) பால்வினை நோய் படருகை; spreading of venereal virus.

[மேகம் + சஞ்சாரம்]

Skt. *šañcāra* > த. சஞ்சாரம்

மேகசஞ்சாரம்² *mēga-šañjāram,* பெ.(n.) மேகச்செலவு பார்க்க; see *mēga-c-celavu.*

[மேகம் + சஞ்சாரம்]

Skt. *šañcāra* > த. சஞ்சாரம்

மேகசஞ்சாரி *mēga-šañjāri,* பெ.(n.) மேகநாதமூலி; an herb.

மேகசஞ்சீவி *mēga-šañjīvi,* பெ.(n.) மேகசஞ்சாரி; an herb.

மேகசடை *mēga-šaḍai,* பெ.(n.) கரிய மனோசிலை (சங்.அக.); black realgar.

மேகசம் *mēgašam,* பெ.(n.) முத்து (யாழ்.அக.); pearl.

[மேகம் + அஜம் – மேகஜம் → மேகசம் = மேகத்தில் பிறக்கும் கோழி முட்டைப் பருமனுள்ள ஒரு முத்து.]

Skt. a-ja > த. அசம்.

மேகசலம் *mēga-šalam,* பெ.(n.) பனிக் குடத்து நீர்; liquor amni.

[மேகம் + சலம்]

மேகசலவித்தன் *mēga-šalavittaṉ,* பெ.(n.) பூநீறு; salt grown in the soil of fuller's earth during new moon or full moon days.

மேகசாதனி *mēga-šādaṉi,* பெ.(n.) செம்பருத்தி; red cotton plant, gossypium.

மேகசாதனி

மேகசாரம்[1] *mēga-šāram,* பெ.(n.) 1. சூடம் (கற்பூரம்) (சங்.அக.); camphor. 2. காய்ச்சும் உப்பு; a prepared salt.

[மேகம் + சாரம். சாறு → சாறம் → சாரம்.]

மேகசாலம் *mēga-šālam,* பெ.(n.) 1. முகிற் கூட்டம் (வின்.); range of clouds. 2. ஒரு வகை மணி (யாழ்.அக.); a gem.

[மேகம் + சாலம்]

Skt. *jāla* > த. சாலம்.

மேகசிந்தகம் *mēga-šindagam,* பெ.(n.) சாதகப்புள்; a bin-lark.

[மேகம் + சிந்தகம்]

மேகசீவகம் *mēga-šīvagam,* பெ.(n.) மேகசிந்தகம் பார்க்க; see *mēga-šindagam.*

மேகசுரம் *mēga-šuram,* பெ.(n.) மேக நோயால் வரும் காய்ச்சல்; fever due to venereal causes (M.L.).

[மேகம் + சுரம்]

மேகசூலை *mēga-šūlai,* பெ.(n.) மேக நோயால் உடற்பொருத்தில் உண்டாகும் விறைப்புத் தன்மை, கை கால் குடைச்சல்; formation of stiff joint. anchylosis.

[மேகம் + சூலை. சுல் → சூல் = குத்தும் கூரிய படைக்கலம். சூல் → சூலம் = முக்கவர்வேல். சூல் → சூலை = ஒருசார் நோய்.]

த. சூலை > **Skt.** *sūlā.*

மேகசொர்ணக்கல் *mēga-sorṇa-k-kal,* பெ.(n.) ஒரு வகை மணிக்கல்; a kind precious stone, lapis lazuli.

[மேகம் + சொர்ணம் + கல்]

Skt. *svarṇa* > த. சொர்ணம்.

மேகசோரணம் *mēga-šōraṇam,* பெ.(n.) ஒருவகை நீலநிறக்கல் (ராஜாவர்த்தம்) (யாழ்.அக.); a blue coloured gem.

[மேகம் + சோரணம்]

Skt. *cōra* > த. சோரணம்.

மேகடம்பம் *mēgaḍambam,* பெ.(n.) நிழலுக்காக அமைக்கப்படும் ஒப்பனையுடன் கூடிய மேற்கட்டி (விதானச்சீலை) (கல்.அக.); decorated canopy, for shade.

[மேல் + கடம்பம் – மேகடம்பம்]

மேகத்தடிப்பு *mēga-t-taḍippu,* பெ.(n.) மேக நோய் காரணமாக உடம்பில் பல இடங்களிலும் வீக்கம் காணல்; venereal

patches of swelling in several parts of the body.

[மேகம் + தடிப்பு. தடி → தடிப்பு. 'பு' தொ.பெ.ஈறு.]

மேகத்தண்டம் *mēga-t-taṇḍam,* பெ.(n.) தேங்காய்; cocoanut.

[மேகம் + தண்டம்]



மேகத்தண்டம்

மேகத்தருள்சிலை *mēga-t-taruḷ-šilai,* பெ.(n.) கருங்கல்; granite stone.

[மேகத்தருள் + சிலை]

Skt. *silā* > த. சிலை.

மேகத்திமிர் *mēga-t-timir,* பெ.(n.) மேக நோயால் உடம்பிலுண்டாகும் திமிர்; benumb due to venereal causes.

[மேகம் + திமிர்]

மேகத்திமிரம் *mēga-t-timiram,* பெ.(n.) கருவிழியில் மேகம் கம்மியது போல் இருளடையச் செய்யும் ஓர் கண்ணோய்; an eye disease of the pupil.

[மேகம் + திமிரம். திமிர் → திமிரம்.]

மேகத்திற்களிக்கும்தாசி *mēgattir-kaḷikkum-dāši,* பெ.(n.) மயிலிறகு; feather of peacock.



மேகத்திற்களிக்கும்தாசி

மேகத்திற்பிறந்தவுப்பு *mēgattir-piṟanda-vuppu,* பெ.(n.) வெடியுப்பு; salt petre.

[மேகத்தில் + பிறந்த + உப்பு]

மேகத்தின்கருப்பக்கல் *mēgattiṉ-karuppa-k-kal,* பெ.(n.) 1. ஒருவகை நஞ்சு; a kind of poison. 2. ஆட்டு மணத்தி (ஆட்டுரோசனை); bezoar of the sheep.

[மேகத்தின் + கருப்பக்கல்]

மேகத்தின்விந்து *mēgattiṉ-vindu,* பெ.(n.) பூநாகம் (மூ.அ.); earthworm.

[மேகத்தின் + விந்து. வித்து → விந்து]

மேகத்தினவு *mēga-t-tiṉavu,* பெ.(n.) மேகச்சொறி பார்க்க; see *mēga-c-coṟi.*

[மேகம் + தினவு]

மேகத்துவாரம் *mēga-t-tuvāram,* பெ.(n.) வான்வெளி (ஆகாயம்) (யாழ்.அக.); sky.

[மேகம் + துவாரம்]

Skt. *dvāra* > த. துவாரம்

மேகத்தொனி *mēga-t-toṉi,* பெ.(n.) மேகமுழக்கம் (வின்.) பார்க்க; see *mēga-muḻakkam.*

[மேகம் + தொனி]

Skt. *dhvani* > த. தொனி.

மேகத்தொனியான் *mēga-t-toṉiyāṉ,* பெ.(n.) அவுரி; indigo plant-indigoferra tinctoria.



மேகத்தொனியான்

மேகத்தோயம் *mēga-t-tōyam,* பெ.(n.) காய்ச்சிய உப்பு; a prepared salt.

[மேகம் + தோயம்]

மேகதனு *mēga-daṉu,* பெ.(n.) வானவில்; rainbow. *"மேகதனு......... நின்றதொக்குமே" (இரகு. அயனெழுச்சி. 40).*

மறுவ. இந்திரவில்.

[மேகம் + தனு]

Skt. *dhanus* > த. தனு.

மேகதாரி *mēga-dāri,* பெ.(n.) மயிலிறகு (யாழ்.அக.); feather of peacock.

[மேகம் + தாரி]

Skt. *dhāri* > த. தாரி.

மேகதிமிரம் *mēga-timiram,* பெ.(n.) பார்வையை மங்கச் செய்யும் கண்ணோய் வகை (சீவரட்.); a disease of the eye that clouds vision.

[மேகம் + திமிரம்]

மேகதீபம் *mēga-dībam,* பெ.(n.) மின்னல் (யாழ்.அக.); lightning.

[மேகம் + தீபம்]

Skt. *dīpa* > த. தீபம்

மேகதேகம் *mēga-dēgam,* பெ.(n.) மேகநோய்கொண்ட உடல்; body afflicted by venereal complaints.

[மேகம் + தேகம்]

Skt. *dēha* > த. தேகம்

மேகநாசம் *mēga-nāšam,* பெ.(n.) வெண் காரம்; borax.

[மேகம் + நாசம்]

மேகநாதத்திமூலி *mēga-nādatti-mūli,* பெ.(n.) கட்டுக்கொடி; coagulating creeper - cocculus villosus.

மேகநாதப்பூண்டு *mēga-nāda-p-pūṇḍu,* பெ.(n.) ஒருவகைப் பூண்டு; a herb.

[மேகநாதம் + பூண்டு. புண் → பூண் → பூண்டு.]

மேகநாதம்[1] *mēga-nādam,* பெ.(n.) மேகத்தில் உண்டாகும் ஒலி, இடி; rumbling of clouds, thunder.

து. மேகநாதொ.

[மேகம் + நாதம்]

Skt. *nāda* > த. நாதம்.

மேகநாதம்² *mēga-nādam,* பெ.(n.) 1. சிறுகீரை (சூடா.); a species of amaranth. 2. பலாசம் (சங்.அக.); palas tree. 3. பச்சிலை (சங்.அக); gemboge. 4. மலைப்பச்சை; tree yielding white flowers.

மேகநாதரசம் *mēga-nāda-rašam,* பெ.(n.) மூலிகை மருந்து, வெள்ளி, வெண்பித்தளை, செம்பு, கந்தகம் சேர்த்து செங்கீரைச் சாற்றால் அரைத்து புடம் போட்டு எடுக்கப்பெற்ற வாணாள் வேத (ஆயுர்வேத) மருந்து; a Ayurvedic medicine composed of silver, white brass, copper in equal quantities to which is added three part of sulphur. The whole mixture is pounded well with the juice of red amaranthus spinose and calcined in (cowdung 100 cakes) or gajaputtam. It is prescribed for all kind of fever, thirst and burning sensation.

[மேகநாதம் + ரசம்]

Skt. *rasa* > த. ரசம்.

மேகநாதன்¹ *mēga-nādaṉ,* பெ.(n.) 1. இந்திரசித்து; Indrajit. *"அடல் மேகநாதன் புகுந் திலங்கை மேயநாள்" (கம்பரா. திருவவ. 10).* 2. வருணன் (யாழ்.அக.); *Varuṇa.*

[மேகம் + நாதன்]

Skt. *nātha* > த. நாதன்.

மேகநாதன்² *mēga-nādaṉ,* பெ.(n.) ஒரு வகை உப்பு (நவச்சாரம்) (சங்.அக.); sal-ammoniac.

மேகநாதன்³ *mēga-nādaṉ,* பெ.(n.) சிறுகீரை; amaranthus.

மேகநாதி *mēga-nādi,* பெ.(n.) 1. கட்டுக்கொடி; coagulating creeper-cocculus villosus. 2. கணங்கன் புல்; a kind of grass.

மேகநிறத்தி *mēga-niṟatti,* பெ.(n.) கருநெல்லி; black Indian gooseberry.

[மேகம் + நிறத்தி]

மேகநிறத்தி

மேகநிறப்பாடாணம் *mēga-niṟa-p-pāḍāṇam,* பெ.(n.) கருநிற நஞ்சு; arsenic of black colour.

[மேகநிறம் + பாடாணம்]

Skt. *pāsāṇa* > த. பாடாணம்.

மேகநிறம் *mēga-niṟam,* பெ.(n.) நீலத் தாமரை; blue lotus.

[மேகம் + நிறம்]

மேகநீர்¹ *mēga-nīr,* பெ.(n.) மழைநீர்; water from the sky, rain water.

[மேகம் + நீர்]

மேகநீர்² *mēga-nīr,* பெ.(n.) 1. மேகக் காங்கை 1, 2 பார்க்க; see *mēga-k-kāṅgai 1,2.* 2. தீயநீர் (வின்.); impure blood in the body, venereal virus.

[மேகம் + நீர்]

மேகநீர்க்கோவை *mēga-nīr-k-kōvai,* பெ.(n.) கூடா ஒழுக்கத்தினால் ஏற்படும் தடுமன்; cold affection due to venereal infection.

[மேகம் + நீர் + கோவை]

மேகநீர்ப்பாய்ச்சல்[1] *mēga-nīr-p-pāyccal,* பெ.(n.) ஒரு வகைக் கண்நோய்; a kind of eye disease.

[மேகம் + நீர் + பாய்ச்சல். 'அல்' தொ.பெ.ஈறு]

மேகநீர்ப்பாய்ச்சல்[2] *mēga-nīr-p-pāyccal,* பெ.(n.) மேகக்காங்கை, 1 பார்க்க; see *mēga-k-kāṅgai 1.*

[மேகம் + நீர் + பாய்ச்சல். 'சல்' தொ.பெ.ஈறு.]

மேகநோய் *mēga-nōy,* பெ.(n.) தீய நீரால் உண்டாம் நோய்வகை; syphilis, primary or secondary.

[மேகம் + நோய். ஆணின் பிறப்புறுப்பில் புண்களை உண்டாக்கும் ஒரு பால்வினை நோய்]

மேகநோய்நூல் *mēga-nōy-nūl,* பெ.(n.) மேகவியல் நூல்; urology, the study of the urinary system.

[மேகம் + நோய் + நூல்]

மேகப்பச்சை *mēga-p-paccai,* பெ.(n.) ஒரு வகை பச்சைக்கல் (சங்.அக.); a variety of green stone, one of nine gems.

[மேகம் + பச்சை]

மேகப்படலம் *mēga-p-paḍalam,* பெ.(n.) ஒரு வகைக் கண்ணோய்; an eye disease.

[மேகம் + படலம்]

மேகப்படை *mēga-p-paḍai,* பெ.(n.) மேகத் தொடர்பு மாசுவினால் உடம்பில் காணும் ஒரு வகைப்படை, தோல் மேலுண்டாகும் சொறிவகை; a kind of spreading skin disease due to venereal causes, ringworm (M.L.).

[மேகம் + படை]

மேகப்பற்று *mēga-p-paṟṟu,* பெ.(n.) ஒரு வகை மேகநோய்; syphilitic psoriasis. (M.L.).

[மேகம் + பற்று]

மேகப்பிடகம் *mēga-p-piḍagam,* பெ.(n.) மேகக்கட்டி; venereal abscess.

[மேகம் + பிடகம். பிள் → பிளா → பிழா = வாயகன்ற ஓலைக் கொட்டான். பிழா → பிடா = பெட்டி. பிடா → பிடகு → பிடகம் = தட்டு, பெட்டி, கொப்புளம்]

மேகப்பிடிப்பு *mēga-p-piḍippu,* பெ.(n.) மேகத்தால் ஏற்படும் மூட்டு பிடிக்கை; stiffness of joints due to venereal affections.

[மேகம் + பிடிப்பு. பிடி → பிடிப்பு, 'பு' தொ.பெ.ஈறு]

மேகப்பிரமிலம் *mēga-p-piramilam,* பெ.(n.) நீர் ஒழுக்கு; urethral discharges due to venereal affections.

[மேகம் + பிரமிலம்]

Skt. *pramēha* > த. பிரமிலம்.

மேகப்புட்பம் *mēga-p-puṭpam,* பெ.(n.) 1. நீர்; water. 2. மழை; rain. 3. வஞ்சி; lady.

[மேகம் + புட்பம்]

Skt. *puṣpa* > த. புட்பம்.

மேகப்புடகை *mēga-p-puḍagai,* பெ.(n.) மேகப்பிடகம் பார்க்க; see *mēga-p-piḍagam.*

[மேகப்பிடகம் → மேகப்புடகம் → மேகப்புடகை]

மேகப்புடை *mēga-p-puḍai,* பெ.(n.) 1. பறங்கிப்புண்வகை (இங்.வை.); secondary syphillis. 2. உடல் மரத்துப்போவதால் உண்டாகும் நோய் வகை (திமிர்வாதம்) (பைஷஜ.); a kind of spasm proceeding from numbness, a kind of leprosy.

[மேகம் + புடை]

மேகப்புண் *mēga-p-puṇ,* பெ.(n.) கூடா வொழுக்கத்தினால் பரவும் கொறுக்கு நோய் (இங்.வை.); sore due to veneral causes, venereal sore or ulcer. syphilis, soft chancre.

மறுவ. பறங்கிப்புண்.

[மேகம் + புண்]

மேகப்புரை *mēga-p-purai,* பெ.(n.) மேகப்பிளவை; sinus of venereal abscess.

[மேகம் + புரை. புல் → புர் → புரை]

மேகப்புள் *mēga-p-puḷ,* பெ.(n.) வானம்பாடி (பிங்.); sky-lark. *"மேகப் புள் வயிற் பிறந்த புட் போல்" (சீவக. 2897).*

[மேகம் + புள்]



மேகப்புள்

மேகப்புற்று *mēga-p-puṟṟu,* பெ.(n.) மேக நோய் முதிர்வினால் ஏற்படும் புண், கட்டிவகை (வின்.); chronic ulcer due to venereal affection, a venereal eruption.

[மேகம் + புற்று. புல் → புற்று]

மேகப்புறவதம் *mēga-p-puṟavadam,* பெ.(n.) குதிரை; horse.

[மேகம் + புறவதம்]



மேகப்புறவதம்

மேகபடலம்¹ *mēga-paḍalam,* பெ.(n.) முகிற்கூட்டம்; range of clouds. *"மேகபடலத்தால் நீலநிறத்தையுடைய ஆகாயத்தின் கண்ணே" (மதுரைக். 678, உரை).*

[மேகம் + படலம்]

மேகபடலம்² *mēga-paḍalam,* பெ.(n.) 1. மேக நோயால் படரும் புண் வகை (வின்.); a spreading venereal sore. 2. பார்வையை

மங்கச் செய்யும் கண்ணோய் வகை; a disease of the eye that clouds vision.

[மேகம் + படலம்]

மேகபதம் *mēga-padam,* பெ.(n.) மேக மண்டலம் பார்க்க; see *mēga-maṇḍalam.* *"மேகபதத்துக்கு மேலுள்ள தேவர்கள்" (தக்கயாகப். 510, உரை).*

[மேகம் + பதம்]

மேகபதி *mēga-padi,* பெ.(n.) ஒன்பான் மணிகளிளொன்று; one of the nine gems, cinnamon stone.

[மேகம் + பதி]

மேகபந்தி *mēga-pandi,* பெ.(n.) முகிற் கூட்டம் (வின்.); mass of clouds.

[மேகம் + பந்தி]

மேகபுட்பம் *mēga-puṭpam,* பெ.(n.) 1. நீர் (வின்.); water. 2. மழை; rain.

[மேகம் + புட்பம்]

Skt. *puṣpa* > த. புட்பம்

மேகம்¹ *mēgam,* பெ.(n.) 1. வானவெளியில் திரண்டிருக்கும் நீராவித்திரள், முகில்; cloud. *"நன்னிற மேக நின்றது போல" (சிலப். 11, 46).* 2. நீர் (பிங்.); water.

மறுவ. ஆய், இளை, எழிலி, கணம், கந்தரம், கள், கார், காளம், குயின், கொண்டல், கொண்மு, சீதம், செல், பெயல், மங்குல், மஞ்சு, மழை, மால், முகில் , மை, வான், விசும்பு, விண், விண்டு.

ம. மேகம்; க. மேக; தெ. மேகமு; து. மேகி.

சிறுநீர் கழித்தல், நீராக்குதல், வெண்ணீர் (விந்து) வெளிப்படுதல், ஆகிய பொருளுடைய mih என்பதினின்று மேகம் என்னும் சொல் பிறந்ததாக மா.வி. அகரமுதலி காட்டுகிறது. நீர் பொழிவது என்னும் கருத்தைப் புலப்படுத்த நீர்மேகம், மழைமேகம் என்றாற் போன்று நீர்ப்பொருள் அடை கொடுத்து வழங்குவதை நோக்கும் போது மேகத்திற்கு மழை பொழிவது அடிப்படை பொருளன்று என்பது வெளிப்படை. அதேபோல் கருத்தமேகம் கார்மேகம் என்றும் வெளிறிய மேகம் வெண்மேகம் என்றும் அழைக்கப்படுவதைப் பார்க்கும் போதும் மேகம் என்பது நீர் பெய்தல் என்று பொருள்படும் அடியிலிருந்து பிறந்திருக்க வாய்ப்பில்லை என்பது உறுதிபடுகிறது. அதாவது மேகத்திற்குரிய வண்ணங்கள் இரண்டு. ஒன்று வெண்மை, மற்றொன்று கருப்பு. இவ்விரு தன்மை (வண்ணங்.) களைக் குறிக்க வெண், கார் என்னும் அடைகள் கொடுத்து வழங்குவது மேகம் என்பதற்கு நீர்பொழியும் தன்மையைக் காட்டும் கருமை வண்ணம் அடிப்படையில் அமையவில்லை என்பதைக் காட்டுகிறது. அதனால்தான் நீர், மழை போன்ற அடைகள் கொடுத்து மேகத்தின் நீர் பொழியும் பொருள் உணர்த்தப்படுகிறது.

மேகம் என்னும் சொல் மேலே இருப்பது என்னும் பொருளுடைய மீ என்னும் அடியிலிருந்து வளர்ந்துள்ளது.

மீ → மே (மேல்) → மேகெ (க. மேகெ, மேகு = மேல்) → மேக → மேகம்.

மேகத்தைக் குறிக்கும் மற்றொரு சொல்லான மூட்டம் (மேலே) மூடுவது என்னும் பொருளில் அமைந்தது இச்சொல்லுடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கது,

மூடு → மூட்டம் = மூடியிருப்பது, மூடு → மூடம் → மோடம் = முகில்.

இனி ஓரிடத்தில் நிற்காமல் நகர்ந்து செல்லும் தன்மை நோக்கி

ஏகு → மேகு → மேகம் என்றுமாம்.

த. மேகம் > **Skt.** *mēgha.*

மேகம்² *mēgam,* பெ.(n.) 1. குயில் (யாழ்.அக.); the Indian cuckoo. 2. முத்தக் காசு (சங்.அக.); straight sedge. 3. தண்ணீர் விட்டான் கிழங்கு; water root. 4. கடுக்காய்; gallnut.



மேகம்³ *mēgam,* பெ.(n.) 1. கெட்ட குருதி, ஒழுக்கக்கேடு, மூத்திரக் கோளாறு ஆகியவற்றால் உண்டாகும் நோய்; venereal or urinary disease, disease due to impure blood. 2. வெள்ளை நோய் (வின்.); a urinary disease.

து. மேக, மேவ.

[மீ → மே (மேல்) → மேகெ → மேக → மேகம் = மேலிருப்பது, மழை பெய்வது, நீர் வெளிப் படுத்துவது, நீர் வெளிப்படும் நோய். சிறுநீர் பையிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் ஏற்படும் நோய். முறைகேடான உடலுறவில் ஏற்படும் நோய். மேகம் என்னும் சொல்லிற்கு மழை பொழிதல் என்னும் வழிபொருள் ஏற்பட்ட பின் நீர்வெளிப்படும் நோய்க்கும் மேகம் என்னும் பெயர் ஏற்பட்டது. மா.வி.அகரமுதலி நோயைக் குறிக்கும் mēha என்னும் சொல்லும் நீர் வெளிப்படுதல் என்னும் பொருள்படும் mih என்னும் அடியிலிருந்து பிறந்தது எனக் காட்டுகிறது]

த. மேகம் > **Skt.** *mēha.*

மேகம்போக்கி *mēgam-pōkki,* பெ.(n.) 1. மர மஞ்சள்; tree turmeric. 2. அகத்தி வேர்ப் பட்டை; root of sesbania grandifhora. 3. பாற்சுற்றி; the viscid juice of madar and other plants collected and evaporated in shallow dish in the sum or in the shade-caoout chone.

[மேகம் + போக்கி]



மேகம்போல்வளர்ந்தகன்னி *mēgam-pōl-vaḷarnda-kaṉṉi,* பெ.(n.) கருநெல்லி; black Indian goosberry.

[மேகம்போல் + வளர்ந்த + கன்னி]

மேகமண்டலம் *mēga-maṇḍalam,* பெ.(n.) வான்வெளி; the region of the clouds, cloudlands.

[மேகம் + மண்டலம். முல் → முள் → முண்டு → மண்டு. மண்டுதல் = வளைதல். மண்டு → மண்டலம் = வட்டம், நாட்டுப் பகுதி. மேகமண்டலம் = மேகம் சூழ்ந்திருக்கும் வான்வெளி]

மேகமந்தாரம் *mēga-mandāram,* பெ.(n.) மந்தாரக்கல் (சிலை); a medicinal stone.

மேகமாகி *mēga-māgi,* பெ.(n.) ஆவாரை; a shrub-cassia auriculata.

மேகமாலை *mēga-mālai,* பெ.(n.) முகிற்கூட்டம்; mass of clouds. *"மேகமாலை வெங்கோடை மாரிபோல வாளி கூட" (கம்பரா. மூலபல. 84).*

[மேகம் + மாலை. முல் → முள் → முய → முயல் → மயல் = மயக்கம். முய → முயல் → மயல் = மயக்கம். மயல் → மால் = மயக்கம். மாலுதல் = மயங்குதல். மால் → மாலை = பல மலர்கள் கலக்குந் தொடை. மேகமாலை = முகில்கள் கலந்த கூட்டம்]

மேகமாற்றம் *mēga-mā̱r̲r̲am,* பெ.(n.) மேகநோய் குணமடைகை; curing of the venereal disease.

[மேகம் + மாற்றம். மாறு → மாற்று → மாற்றம்]

மேகமுழக்கம் *mēga-mul̤akkam,* பெ.(n.) இடிமுழக்கம், மேகங்களினூடே உண்டாகும் பேரொலி (வின்.); rumbling of clouds, thunder.

[மேகம் + முழக்கம்]

மேகமுறவஞ்சம் *mēgamur̲a-vañjam,* பெ.(n.) காசிச்சாரம்; a kind of salt.

மேகமூட்டம் *mēga-mūṭṭam,* பெ.(n.) மேகம் பரந்து நிற்கை; overspreading of the clouds.

[மேகம் + மூட்டம். மூடு → மூட்டம் = மூடியிருப்பது. மேகமூட்டம் = மேகம் சூழ்ந்து மூடியிருப்பது]

மேகமூர்ந்தோன் *mēga-mūrndōn̲,* பெ.(n.) மேகத்தின்மேல் அமர்ந்து செல்பவன், இந்திரன் (நாமதீப. 60); Indra.

[மேகம் + ஊர்ந்தோன்]

மேகமூலி[1] *mēga-mūli,* பெ.(n.) நீர்ப்பனை (சங்.அக.); creeping aumanac.

[மேகம் + மூலி]

மேகமூலி[2] *mēga-mūli,* பெ.(n.) புல்லாமணக்கு; sebastiana chamaelea.

மேகயெரிச்சல் *mēga-yericcal,* பெ.(n.) மேக நோயினால் ஏற்படும் புண் முற்றி வெடிக்கும் நிலையில் ஏற்படும் எரிச்சல்; burning sensation due to venereal cause.

[மேகம் + எரிச்சல். எரி → எரிச்சல். 'சல்' தொ.பெ.ஈறு.]

மேகயோனி *mēga-yōn̲i,* பெ.(n.) புகை; smoke.

[மேகம் + யோனி]

Skt. *yōni* > த. யோனி.

மேகர் *mēgar,* பெ.(n.) 1. (அரசர்) செல்லும் வழிகளில் நீர்த்தெளிப்போர்; water-sprinklers, those who water the roads, as for a kings progress. *"ராஜா போம்போது முன்னே மேகர் நீர் விடுமா போலே" (ஈடு. 10, 1, 1).* 2. செல்லும் வழிகளைச் சீர்ப்படுத்துவோர் (ஈடு. 10, 1, 1, ஜீ); those who clear the way, as for a king.

[மேகம் → மேகர்]

மேகரஞ்சம் *mēga-rañjam,* பெ.(n.) கரு நாகம்; black variety of cobra.



மேகரஞ்சம்

மேகரஞ்சி *mēga-rañji,* பெ.(n.) ஒரு பண் (இராகம்) (வின்.); (mus.) a specific melody-type.

[மேகக்குறிஞ்சி → மேகரஞ்சி]

மேகரண்டம் *mēga-ranḍam,* பெ.(n.) மயிர்க்குருந்து; hair root.

[மேகவண்டம் → மேகரண்டம்]

மேகரணக்களிம்பு *mēgaraṇa-k-kaḷimbu,* பெ.(n.) மேகத்தினால் வரும் புண் போக்கும் களிம்பு அல்லது மருந்து; ointment for venereal, ulcers and sores.

[மேகம் + ரணம் + களிம்பு. களி → களிம்பு.]

Skt. *vraṇa* > த. ரணம்.

மேகரணம் *mēga-raṇam,* பெ.(n.) 1. மேகப் புண் பார்க்க; see *mēga-p-puṇ.* 2. குட்டம்; leprosy (M.L.).

[மேகம் + ரணம்]

Skt. *vraṇa* > த. ரணம்.

மேகராகக்குறிஞ்சி *mēga-rāga-k-kuṟiñji,* பெ.(n.) குறிஞ்சி யாழ்த் திறத் தொன்று (பிங்.); a secondary melody type of *'kuṟiñji'* class.

[மேகம் + ராகம் + குறிஞ்சி. அராகம் → ராகம்]

மேகராகம் *mēga-rāgam,* பெ.(n.) பாலை யாழ்த்திறவகை (பிங்.); (Mus.) a secondary melody-type of the *pālai* class.

[மேகம் + ராகம். அராகம் → ராகம்.]

மேகராசி *mēga-rāśi,* பெ.(n.) முகிற்கூட்டம்; mass of clouds *"மேகராசி பொழிய" (தக்கயாகப். 643).*

[மேகம் + ராசி]

Skt. *rāśi* > த. ராசி.

மேகராடி *mēga-rāḍi,* பெ.(n.) மயிலடிக் குருந்து (சங்.அக.); false peacock's foot tree.

மேகராணி *mēga-rāṇi,* பெ.(n.) மயிலடிக் குருந்து; a kind of sacred tree.

[மேகராடி → மேகராணி]

மேகரோகம் *mēga-rōgam,* பெ.(n.) மேகம்² 1, 2 (இங்.வை.) பார்க்க; see *mēgam² 1,2.*

[மேகம் + ரோகம்]

Skt. *rōha* > த. ரோகம்.

மேகரோகி *mēga-rōgi,* பெ.(n.) மேகநோயால் வருந்துபவ—ன்—ள்; person afflicted with venereal disease.

[மேகம் + ரோகி]

Skt. *rōhi* > த. ரோகி.

மேகலாபதம் *mēgalā-padam,* பெ.(n.) இடை (யாழ்.அக.); waist.

மேகலாபாரம் *mēgalābāram,* பெ.(n.) மேகலை (யாழ்.அக.) பார்க்க; see *mēgalai.*

[மேகலை + பாரம்]

Skt. *bhāra* > த. பாரம்.

மேகலை *mēgalai,* பெ.(n.) 1. அரைஞாண்; waist-cord. *"அரைசெய் மேகலையான்" (தேவா. 281, 9).* 2. மணமாகாதவன் அணியும் கயிறு; a waist-cord of moonja grass in three strands. used by a *bachelor. "முஞ்சியெனும் புன்மூன்று புரியினுறு கயிறு...... மேகலை" (திருவானைக். கோச்செங். 116).* 3. மகளிர் இடையிலணியும் (ஒட்டியாணம் போன்ற) ஏழு அல்லது எட்டுக் கோவையுள்ள அணிவகை (திவா.); a jewelled girdle of 7 or 8 strands, a belt-

like golden ornament (formerly) worn by women round the waist. *"மின்னுமேகலையுந் தோடுங் கொடுத்து" (சீவக. 2662) (சிலப். 4, 30, உரை).* 4. ஆடை (அக.நி); cloth. 5. புடைவை (வின்.); saree. 6. கோயில் மேற்கட்டியின் (விமானத்தின்) வெளிப் புறத்திற் செய்யப்பட்ட சிற்பவேலை; ornamental mouldings as on the outside of the *vimāṇam* of a temple. 7. தூண் முதலியவற்றைச் சுற்றியமைக்கும் வளையம்; (Arch.) cincture, gridle. 8. வேள்விச் சாலை சுற்றியிடுங் கோலம்; lines drawn round the sacrificial pit or the receptacle in which the sacrificial fire in deposited. *"வேதியுங் குண்டமு மேகலையொடு...... கண்டு" (திருவிளை. திருமணப். 67).* 9. மலைச்சரிவு (வின்.); the sloping sides of a mountain. 10. மேருமலையின் உச்சித் தொடர் (வின்.); a row or ridge of peaks on mount *Mēru.* 11. குதிரையின் கொப்பூழுக்கு மேலே காணப்படும் நற்சுழி (அசுவசா. 20); auspicious curl of hair just above a horse's navel.

[மேகலம் → மேகலை = பெண்டிர் அரையில் ஆடையின் மேல் அணியும் எண்கோவைப் பட்டிகையான அணிகலன். மேகலை தமிழர் அணிகலங்களுள் ஒன்று (வ.வ.2,74)]

த. மேகலை > **Skt.** *mēkhalā.*

mē (in mēkhalā, a waist-band, a girdle, etc.,) Gt. (p.529) takes it to be D. mey, etc., the body. If comparison is right, khala may be D.kala, "that is joined or attached to" (Cf. Sk. kalita and the D. past participle of kali) (KKEDxix)



மேகலை

மேகவண்டம் *mēga-vaṇḍam,* பெ.(n.) மயிற்குருந்து; hair root.

மேகவண்ணக்குறிஞ்சி *mēgavaṇṇa-k-kuriñji,* பெ.(n.) மேகவண்ணப் பூவுள்ள செடிவகை, மேகவண்ணப்பூவுள்ள மருதோன்றி (யாழ்.அக.); western ghats blue nail dye.

மறுவ. மழை வண்ணக் குறிஞ்சி.

[மேகவண்ணம் + குறிஞ்சி]



மேகவண்ணக்குறிஞ்சி

மேகவண்ணப்பட்டு *mēga-vaṇṇa-p-paṭṭu,* பெ.(n.) பல நிறங்களைக் காட்டும் பட்டுத் துணிவகை; shot silk. *"மேக வண்ணப் பட்டு மேற்கட்டி" (பத்ம. தென்றல்விடு. 40).*

[மேகவண்ணம் + பட்டு]

மேகவண்ணப்பூவுளமருதோன்றி *mēga-vaṇṇa-p-pūvuḷa-maru-tōṉṟi,* பெ.(n.) மேகவண்ணக்குறிஞ்சி பார்க்க; see *mēgavaṇṇa-k-kuṟiñji.*(L.)

[மேகவண்ணம் + பூவுளமருதோன்றி]

மேகவண்ணன் *mēgavaṇṇaṉ,* பெ.(n.) திருமால் (மேகம் போன்ற நிறமுள்ளவன்); *Tirumāl* (*Vishṇu*) dark in colour like a rain-cloud. *"வண்ண மருள் கொளணி மேகவண்ணா" (திவ். திருவாய். 6, 10, 3).*

[மேகம் + வண்ணன்]

மேகவண்ணிக்குறிஞ்சி *mēgavaṇṇi-k-kuṟiñji,* பெ.(n.) மேகவண்ணக் குறிஞ்சி பார்க்க; see *mēgavaṇṇa-k-kuṟiñji.*

[மேகவண்ணக்குறிஞ்சி → மேகவண்ணிக் குறிஞ்சி]

மேகவத்துமம் *mēgavattuvam,* பெ.(n.) 1. வான்வெளி (ஆகாயம்); sky. 2. அணு (யாழ்.அக.); atom.

மேகவர்ணப்புடைவை *mēga-varṇa-p-puḍaivai,* பெ.(n.) மேகவரணப்புடைவை பார்க்க; see *mēga-varaṇa-p-puḍaivai.*

[மேகவரணப்புடைவை → மேகவர்ணப் புடைவை]

மேகவர்ணம் *mēga-varṇam,* பெ.(n.) மேகவரணம் (இ.வ.) பார்க்க; see *mēga-varaṇam.*

[மேகவரணம் → மேகவர்ணம்]

மேகவர்ணனை *mēga-varṇaṉai,* பெ.(n.) மேகவருணை (சங்.அக.) பார்க்க; see *mēga-varuṇai.*

[மேகம் + வர்ணனை. வருணை → வர்ணனை]

மேகவரணக்கல் *mēga-varaṇa-k-kal,* பெ.(n.) மந்தாரச் சீலை; basalt.

[மேகம் + வரணம் + கல்]

மேகவரணச்செவ்வந்தி *mēga-varaṇa-c-cevvandi,* பெ.(n.) நீலச் சிவந்தி; blue or black chrysanthem.

[மேகம்+ வரணம் + செவ்வந்தி]

மேகவரணத்தான் *mēga-varaṇattāṉ,* பெ.(n.) முத்துச்சிப்பி; pearl, oyster shell.

[மேகம் + வரணத்தான்]

மேகவரணத்தான்

மேகவரணப்புடைவை *mēgavaraṇa-p-puḍaivai,* பெ.(n.) பலபடியாக நிறம் மாறும் புடைவை வகை; a shot saree.

[மேகவண்ணம் → மேகவரணம் + புடைவை]

மேகவரணம் *mēga-varaṇam,* பெ.(n.) 1. கருநீலம்; sky-blue. 2. பலபடியாக மாறித் தோன்றும் நிறம் (இ.வ.); shifting or changing colour, as of shot silk.

[மேகம் + வரணம். வள் → வண் → வண்ணம் = வளைத்தெழுதும் எழுத்து அல்லது ஓவியம், எழுதும் மை அல்லது கலவை நீர், எழுதிய கலவை

நீரின் நிறம். வள் → வர் → வரி. வரிதல் = எழுதுதல், சித்திரமெழுதுதல், பூசுதல். வரி = வளைகோடு, கோடு, எழுத்து, நிறம். வரி + அணம் – வரிணம் → வரணம்]

மேகவரணன் *mēga-varaṇaṉ,* பெ.(n.) நாவற்பழம்; the jambo fruit.

[மேகம் + வரணன். வருணன் → வரணன் = கருப்பு நிறப் பழம்.]

மேகவரணனை *mēga-varaṇaṉai,* பெ.(n.) மேகநாதத்திமூலி பார்க்க; see *mēganādatti-mūli.*

மேகவருணை *mēga-varuṇai,* பெ.(n.) அவுரி (யாழ்.அக.); indigo.

மேகவழலை *mēga-vaḻalai,* பெ.(n.) பாலியல் அழலை (எரிச்சல்); venereal inflammation.

[மேக(ம்) + அழலை. அழல் → அழலை. 'ஐ' தொ.பெ.ஈறு.]

மேகவறட்சி *mēga-varaṭci,* பெ.(n.) மேகத்தினால் ஏற்படும் நாவறட்சி; venereal thirst.

[மேகம் + வறட்சி]

மேகவன்னம் *mēga-vaṉṉam,* பெ.(n.) காக்காய்ப் பொன் (அப்பிரகம்); mica.

மேகவாகனன்[1] *mēga-vāgaṉaṉ,* பெ.(n.) 1. மேகத்தின் மேல் அமர்ந்து செல்பவன், இந்திரன் (பிங்.); Indra, as riding on a cloud. 2. சிவன் (யாழ்.அக.); *šivaṉ.*

[மேகம் + வாகனன்]

Skt. *vāhana* > த. வாகனம்.

மேகவாகனன்[2] *mēga-vāgaṉaṉ,* பெ.(n.) கருங்கல் (யாழ்.அக.); granite stone.

[மேகம் + வாகனன்]

Skt. *vāhana* > த. வாகனம்.

மேகவாதசூலை *mēga-vāda-šūlai,* பெ.(n.) மேகநோய்வகை; syphilis (M.L.).

[மேகம் + வாதம் + சூலை. சுல் → சூல் → சூலை.]

Skt. *vāta* > த. வாதம்.

மேகவாதப்பிடிப்பு *mēga-vāda-p-piḍippu,* பெ.(n.) ஒரு வகை பிடிப்பு நோய்; venereal arthritis.

[மேகம் + வாதம் + பிடிப்பு. பிடி → பிடிப்பு. 'பு' தொ.பெ.ஈறு.]

Skt. *vāta* > த. வாதம்.

தன்னால் உணவை உண்ண முடியாது பிறரைக் கொண்டு ஊட்டச் செய்யும் ஒருவகை நோய்; இவ்வகை நோய்கள் வெள்ளி நீற்றால் (பற்பத்தால்) குணப்படும்.

மேகவாதம் *mēga-vādam,* பெ.(n.) மேகவூதை பார்க்க; see *mēga-v-ūdai.*(M.L.)

[மேகம் + வாதம்]

Skt. *vāta* > த. வாதம்

மேகவாய் *mēga-vāy,* பெ.(n.) தயிர் (சங்.அக.); curd.

மேகவாயு *mēga-vāyu,* பெ.(n.) 1. மேகநோய் வெப்பத்தாலுண்டாகும் வாயு (வின்.); flatulency caused by venereal heat. 2. மேகவூதை (இ.வ.) பார்க்க; see *mēga-v-ūdai.*

[மேகம் + வாயு]

Skt. *vāyu* > த. வாயு.

மேகவார்த்தையறிபவன் *mēga-vārttai-yaṟibavaṉ,* பெ.(n.) தவளை; frog.

[மேகம் + வார்த்தை + அறிபவன்]

Skt. *vārttā* > த. வார்த்தை.

மேகவார்த்தையறிபவன்

மேகவிடுதூது *mēga-viḍu-tūdu,* பெ.(n.) காதலரிடம் மேகத்தைத் தூது விடுவதாகக் கூறும் சிற்றிலக்கிய வகை (திருநறையூர் நம்பி மேகவிடு தூது); a poem in which a lover is supposed to send a love-message by means of a cloud.

[மேகம் + விடு + தூது]

மேகவித்திரதி *mēga-vittiradi,* பெ.(n.) 1. பிளவை நோய் (பைஷஜ.); carbuncle. 2. மேகக்கட்டி; venereal abscess.

[மேகம் + வித்திரதி]

Skt. *vidradhi* > த. வித்திரதி.

மேகவிநாசம் *mēga-vināšam,* பெ.(n.) மழைமேகம் கலைகை (சீவக. 2833, உரை); dispersing of clouds.

[மேகம் + விநாசம்]

Skt. *vi-nāša* > த. விநாசம்.

மேகவியாதி *mēga-viyādi,* பெ.(n.) மேக நோய் பார்க்க; see *mēga-nōy.* (M.L.).

[மேகம் + வியாதி (நோயுள்ளோருடன் கூடாவொழுக்கத்தால் வரும் நோய்]

Skt. *vyādhi* > த. வியாதி.

மேகவிரஞ்சி *mēga-virañji,* பெ.(n.) மேகக் குறிஞ்சி (பரத. இராக. 56) பார்க்க; see *mēga-k-kuṟiñji.*

[மேகக்குறிஞ்சி → மேகவிரஞ்சி]

மேகவிரணம் *mēga-viraṇam,* பெ.(n.) மேகப்புண் பார்க்க; see *mēga-p-puṇ.* (M.L.)

[மேகம் + விரணம்]

Skt. *viraṇa* > த. விரணம்.

மேகவிரிஞ்சி *mēga-viriñji,* பெ.(n.) மேகக் குறிஞ்சி (சங்.அக.) பார்க்க; see *mēga-k-kuṟiñji.*

[மேகக்குறிஞ்சி → மேகவிரிஞ்சி]

மேகவிருளி *mēga-viruḷi,* பெ.(n.) பித்து (சங்.அக.); bile, insanity.

[மேகம் + விருளி]

மேகவுப்பு *mēga-v-uppu,* பெ.(n.) வெடியுப்பு; salt petre.

[மேகம் + உப்பு]

மேகவூதை *mēga-vūdai,* பெ.(n.) ஊதை நோய்வகை; gout, gonorrhoeal rheumatism.

[மேகம் + ஊதை]

மேகவூறல் *mēga-vūṟal,* பெ.(n.) 1. தீயநீர் பரவுகை; spread of bad harmours in the body. 2. மேகப்படை பார்க்க; see *mēga-p-paḍai.* 3. மேகத்தினவு; itching caused by venereal affections.

[மேகம் + ஊறல். ஊறு → ஊறல். 'அல்' தொபெ.ஈறு.]

மேகவெட்டை *mēga-veṭṭai,* பெ.(n.) மேகக்காங்கை, 1 பார்க்க; see *mēga-k-kāṅgai1*.(M.L.).

[மேகம் + வெட்டை. வெக்கை → வெட்டை.]

மேகவெடிசூலை *mēga-veḍi-cūlai,* பெ.(n.) மேகவெடிப்புண்; rheumatism due to venereal causes accopanied by sores.

[மேகம் + வெடி + சூலை]

மேகவெள்ளை *mēga-veḷḷai,* பெ.(n.) மேகக்காங்கை, 1 பார்க்க; see *mēga-k-kāṅgai1* (M.L.).

[மேகம் + வெள்ளை, வெள்ளையொழுக்கு]

மேகவேக்காடு *mēga-vēkkāḍu,* பெ.(n.) மேகத்தினால் ஏற்படும் அழற்சி நோய்; venereal inflammation.

[மேகம் + வேக்காடு. வேதல் = அழலுதல். வே + காடு – வேக்காடு = எரிகை, அழற்சி.]

மேகவேர் *mēga-vēr,* பெ.(n.) சல்லிக் குடல்; umbilical cord.

[மேகம் + வேர்]

மேகனக்கிளை *mēgaṉa-k-kiḷai,* பெ.(n.) அடிவயிற்றுக் கீழும் குறிக்கு மேலும் உள்ள எலும்பின் கிளை; touch of the pubis - Ramus.

[மேகனம் + கிளை]

மேகனப்பொருத்து *mēgaṉa-p-poruttu,* பெ.(n.) முருந்து, தசைநாரினால் எதிரெலும்புடன் இணைக்கப்பட்ட பொருத்து; joint of the pubis which is united at its termination to the opposite as pubis by the thick cartilage ligaments and fibres.

[மேகனம் + பொருத்து. பொரு → பொருத்து.]

மேகனபாலிரேகை *mēgaṉa-pāli-rēgai,* பெ.(n.) பாலிமேகன வரி; iliopeotineal line.

[மேகனம் + பாலி + ரேகை, ஏகை = கோடு ஏடுதல் – செல்லுதல்; ஏகை → ரேகை. ஏகையும் மாலையும் இருளொடு துறந்த பாசார் மேனிப் பசுங்கதிர் ஒளிரவும் (சிலப். ஊர் – 184–5)]

மேகனம் *mēgaṉam,* பெ.(n.) 1. ஆண்குறி (வின்.); membrum virile, penis. 2. மயிரால் மூடப்பட்ட பெண்குறிப் பாகம்; pons pubis. 3. சிறுநீர்; urine.

[மேகம் → மேகனம் = நீர் (சிறுநீரை) வெளியேற்றுவது]

மேகாக்கினி *mēgākkiṉi,* பெ.(n.) மேகக்கினி (யாழ்.அக.) பார்க்க; see *mēga-k-kiṉi* (M.L.).

*[மேகம் + அக்கினி – மேகக்கினி → மேகாக்கினி. மேகம் → அழனி → (அகனி) → **Skt.** agni.]*

மேகாகுந்தம் *mēgā-kundam,* பெ.(n.) மயிலிறகினடி (சங்.அக.); quill-end of peocock's feather.

மேகாதிபதி *mēgādibadi,* பெ.(n.) நவ நாயகருள் குறித்த ஆண்டு மழைக்குரிய கோள் (கிரகம்) (பஞ்.); the planet that determines the rainfall in a particular year, one of '*nava-nāyagar*'.

[மேகம் + அதிபதி – மேகதிபதி → மேகாதிபதி]

Skt. *adhi-pati* > த. அதிபதி.

மேகாதிபன் *mēgādibaṉ,* பெ.(n.) மேகாதிபதி (வின்.) பார்க்க; see *mēgādibadi.*

[மேகம் + அதிபன்]

Skt. *adhi-pa* > த. அதிபன்.

மேகாந்தகாரம் *mēgānda-kāram,* பெ.(n.) மழைக்காலிருட்டு (வின்.); cloudy darkness.

[மேகம் + அந்தகாரம்]

Skt. *andha-kāra* > த. அந்தகாரம்.

மேகாரடி *mēgāraḍi,* பெ.(n.) ஒருவகை சிறுமரம் (மயிலடிக்குருந்து) (மலை.); false peacock's foot tree.

[மேகாரம் → மேகாரடி]

மேகாரம் *mēgāram,* பெ.(n.) மயில்; peacock. *"உரகமதெடுத்தாடு மேகார மீதின் மிசை" (திருப்பு. 153).*

மறுவ. தோகை, பிணிமுகம், மஞ்ஞை.

[மேகம் → மேகரம் → மேகாரம்]



மேகாரி *mēgāri,* பெ.(n.) 1. அறுகம்புல் (நாமதீப. 325); harialli grass. 2. கொடி வகை, அவரை (நாமதீப. 315); field-bean.

மேகாரித்தைலம் *mēgāri-t-tailam,* பெ.(n.) மேகநோயைக் குணமாக்கும் எண்ணெய் (தைலவ. தைல.); a medicinal oil for venereal diseases.

[மேகம் + அரி + தைலம்]

Skt. *taila* > த. தைலம்.

மேகானந்தி *mēgāṉandi,* பெ.(n.) மயில் (வின்.); peacock.

மேகை *mēgai,* பெ.(n.) இறைச்சி (சங்.அக.); flesh.

[மேதை → மேகை]

மேங்கா *mēṅgā,* பெ.(n.) கட்டுமரவகை (இ.வ.); a kind of catamaran.

மேங்காவல் *mēṅgāval,* பெ.(n.) 1. மேற்பார்வை; superintendence. 2. மேங்காவற்காரன் பார்க்க; see *mēṅkāvaṟ-kāraṉ.*

[மேல் + காவல். கா → காவல்]

மேங்காவற்காரன் *mēṅgāvaṟ-kāraṉ,* பெ.(n.) நாட்டில் களவு முதலியன நேராமற் காப்பவன் (இ.வ.); supervising watchman of a country or district.

[மேங்காவல் + காரன்]

மேங்கை *mēṅgai,* பெ.(n.) மேலிடம்; upper portion, higher place. *'அவன் என்ன செய்வான், மேங்கையில் இருப்பவர்கள் சொல்வதைத்தான் அவன் கேட்க வேண்டும்' (உ.வ.).*

க. மேங்கெய் (புறங்கை), மேங்கால் (புறங்கால்).

[மேல் + கை]

மேச்சேரி *mēccēri,* பெ.(n.) சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டத்தில் அமைந்த ஊர்; a village *Omalūr* taluk in *Sēlam* dt.

[மேய்ச்சல் + ஏரி – மேய்ச்சேரி → மேச்சேரி]

தாரமங்கலம், அமரகுந்தி ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களைக் கட்டுவதற்காகக் கருங்கற்களைத் தூக்கிச் சென்ற எருமைகள் மேய்வதற்காக வெட்டப்பட்ட ஏரி மேய்ச்சலேரி எனப்பட்டது. மேய்ச்சலேரிக்கு அருகில் அமைந்த ஊர் மேய்ச்சலேரி → மேய்ச்சேரி → மேச்சேரி என வழங்கப்பட்டது. இப்பகுதியில் எருமை வளர்க்கப்படுவது மிகுதி.

மேசகம் *mēšagam,* பெ.(n.) 1. விரிந்த மயிற்றோகை (பிங்.); expanded plumage of a peacock. 2. குதிரையின் பிடரிமயிர்; mane of horse. 3. இருள் (சங்.அக.); darkness. 4. கருமை (சங்.அக.); blackness. 5. புகை (சங்.அக.); smoke. 6. முகில் (சங்.அக.); cloud.



மேசகம்

மேச்கை *mēšagai,* பெ.(n.) 1. மேசகம், 3 (சங்.அக.) பார்க்க; see *mēšagam3.* 2. கரிய மனோசிலை (மூ.அ.); black realgar.

மேசை *mēšai,* பெ.(n.) 1. எழுது கருவி முதலிய பொருள்களை வைப்பதற்குரியதும் கால் களால் தாங்கப்படும் பலகை யுடையதுமான பொருள் வகை, மிசை (இக்.வ.); table. *'மேசை மேல் உள்ள புத்தகத்தை எடுத்து வா' (உ.வ.).* 2. சூதாட்டத்தில் வைக்கும் பந்தயப்பணம் (கொ.வ.); money staked at a card-game.

து. மோச, மேசெ.

[மிசை → மீசை → மேசை]



மேசை

மேசைக்கத்தி *mēšai-k-katti,* பெ.(n.) கத்தி வகை (இக்.வ.); table-knife.

து. மேசெகத்தி

[மேசை + கத்தி]

மேசைக்காரர் *mēšai-k-kārar,* பெ.(n.) பரவர் வகையினர்; a sub-division of Paravas. (G.Tn.D.T, 123).

மேசைத்துப்பட்டி *mēšai-t-tuppaṭṭi,* பெ.(n.) மேசைவிரிப்பு (வின்.) பார்க்க; see *mēšai-virippu.*

[மேசை + துப்பட்டி]

Skt. *dvi-paṭ* > த. துப்பட்டி.

மேசைவிரிப்பு *mēšai-virippu,* பெ.(n.) மேசை மேல் விரிக்கும் துணி; table-cloth.

[மேசை + விரிப்பு. விரி → விரிப்பு]

மேட்டாங்காடு *mēṭṭāṅ-kāḍu,* பெ.(n.) புஞ்சைச் சாகுபடிக்குரிய மேட்டுப்பாங்கான நிலம்; elevated land fit only for dry cultivation.

[மேடு → மேட்டாங் + காடு]

மேட்டி[1] *mēṭṭi,* பெ.(n.) 1. மேட்டிமை, 1 பார்க்க; see *mēṭṭimai* 1. *"மேட்டி பேசுவாய்" (குருகூர்ப். 91).* 2. மேட்டிமை, 3 பார்க்க; see *mēṭṭimai* 3. *"மேட்டி குலைந்தது" (திருப்பு. 1111).* 3. தலைவன் (வின்.); chief, head. 4. கிராமத் தலைவனுக்கு விடப்பட்ட மானியம்; land granted free of tax to the headman of a village (R.T.).

தெ. மேட்டி.

[மேல் → மேள் → மேட்டி]

மேட்டி[2] *mēṭṭi,* பெ.(n.) மேதி; stake (R.T).

[மேதி → மேடி → மேட்டி]

மேட்டிமை *mēṭṭimai,* பெ.(n.) 1. செருக்கு (அகந்தை) (வின்.); haughtiness. 2. தலைமை; leadership. 3. மேன்மை (வின்.); excellence.

து. மேண்டு, மேண்ட.

[முகடு = உச்சி, மேலிடம், கூரை. முகடு → மோடு → மேடு → மேடை → மேட்டிமை (மு.தா.68)]

மேட்டிரம் *mēṭṭiram,* பெ.(n.) ஆண்குறி; membrum virile, penis. *"குறுகிச் சிவந்த மேட்டிரமும்" (திருவாலவா. 28, 67)*

மேட்டுக்கால்வாய் *mēṭṭu-k-kālvāy,* பெ.(n.) மேட்டுப் பகுதியில் அமைந்த கால்வாய்; canal which dug at high ground.

[மேட்டு + கால்வாய்]

மேட்டுக்குடி *mēṭṭu-k-kuḍi,* பெ.(n.) பொருளியல், கல்வியியல், குமுகவியல் – போன்றவற்றில் உயர்ந்தவர்; the elite, the privileged or upper class.

[மேட்டு + குடி. மேடு → மேட்டு = உயரம், பெருமை, மேன்மை.]

மேட்டுக்கழனி *mēṭṭu-k-kaḻaṉi,* பெ.(n.) மேட்டுப் பாங்கான இடத்தில் உள்ள கழனி; cultivable field at high land.

[மேட்டு + கழனி]

மேட்டுநாயக்கன் *mēṭṭu-nāyakkaṉ,* பெ.(n.) தொட்டியர் தலைவன்; headman of the *toṭṭiya* caste. (E.T.vii. 185).

[மேட்டு + நாயக்கன்]

மேட்டுநிலம் *mēṭṭu-nilam,* பெ.(n.) உயர்வான நிலம்; high or elevated land, rising ground. *"சிவந்த மேட்டு நிலத்து" (புறநா. 120, உரை).*

[மேடு → மேட்டு + நிலம்]

மேட்டுப்பட்டி *mēṭṭu-p-paṭṭi,* பெ.(n.) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம் வைகையாற்றின் தென்கரையில் அமைந்த ஊர்; a village in Dindukkal dt, *Nilakkōṭṭai* Taluk, situated on the bank of vaigai river.

[மேடு + பட்டி. மேடான பகுதியில் அமைந்த ஊர்]

மேட்டுப்பாய்ச்சல் *mēṭṭu-p-pāyccal,* பெ.(n.) 1. நீர் ஏறிப்பாய வேண்டியதான மேட்டு நிலம்; elevated land, as difficult for irrigation. 2. மேட்டில் நீரிறைத்துப் பாய்ச்சுகை; irrigation of land at a high

level. 3. கடினமான வேலை (கொ.வ.); uphill work.

[மேட்டு + பாய்ச்சல். பாய் → பாய்ச்சல். 'சல்' தொ.பெ.ஈறு.]

மேட்டுப்பாளையம் *mēṭṭu-p-pāḷaiyam,* பெ.(n.) கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைந்த நகரம்; a city in coimbatore dt.

[மேடு + பாளையம். பாளையம் என்பது படையிருக்கும் ஊர். மேட்டுப்பாளையம் என்னும் பெயரில் தமிழ் நாட்டில் பல ஊர்கள் உள்ளன. உத்தமபாளையம், உடையார்பாளையம், பாளையங் கோட்டை என்றாற்போன்று பல ஊர்களுக்குப் பாளையம் பெயராய் அமைந்துள்ளது]

மேட்டுமடை *mēṭṭu-maḍai,* பெ.(n.) 1. மேட்டு நிலத்துப் பாயும் நீர்க்கால்; channel which irrigates lands on a higher level, high level channel. 2. மேட்டு நிலத்துக்கான நீர்ப் பாய்ச்சு மடை; sluice or opening that turns water on to a high-level channel. 3. மேட்டுப்பாய்ச்சல், 1, 2 பார்க்க (ஈடு.); see *mēṭṭu-p-pāyccal 1,2.* 4. எளிதில் இணங்காதவ–ன்–ள்; one whom it is very difficult to persuade. *'மூடர்களுக்குப் படிப்பென்பது மேட்டு மடை'.*

[மேட்டு + மடை. மேடு → மேட்டு. மடு → மடை]

மேட்டூர் *mēṭṭūr,* பெ.(n.) சேலம் மாவட்டத்தில் அமைந்த ஊர்; a village in *Sēlam* dt.

[மேடு + ஊர். இவ்வூர் குன்றுகள் அமைந்த பகுதியில் அமைந்ததால் இப்பெயர் பெற்றது]

மேட்டூரணை *mēṭṭūraṇai,* பெ.(n.) மேட்டூரில் அமைந்த அணை; the dam of *Mēṭṭūr.*

[மேட்டூர் + அணை. தமிழ்நாட்டில் காவிரி ஆற்றில் அமைந்ததும் மிகப்பெரியதுமான அணை.]



மேட்டூரணை

மேடகம் *mēḍagam,* பெ.(n.) மேடம்[1], 1, 2 பார்க்க; see *mēḍam[1]-1,2.*

பிரா. ஏளக.

[மேழம் → மேடம் = செம்மறியாட்டுக்கடா. மேழம் → மேழகம் = செம்மறியாட்டுக் கடா. மேழகம் → ஏழகம் = செம்மறியாட்டுக்கடா. மேழகம் → மேடகம். (வே.க.4.46, 47)]

மேடச்செலவு *mēḍa-c-celavu,* பெ.(n.) 1. மேழ ஓரையில் ஞாயிறு புகுங்காலம்; (astron.) vernol equinox. 2. விடை (இடபம்), இரட்டை (மிதுனம்), கடகம், மடங்கல் (சிங்கம்) ஆகிய ஓரைகள் (ராசிகள்) சேர்ந்த ஞாயிறு வீதியின் பகுதி; a section of the zodiac embracing the signs Tarus, Gemini, Cancer and Leo.

[மேழம் → மேடம் + செலவு]

மேடசிங்கி *mēḍaśiṅgi,* பெ.(n.) ஆடு தின்னாப்பாளை (மலை.); worm-killer.

மேடம்[1] *mēḍam,* பெ.(n.) 1. செம்மறியாட்டுக் கடா, ஆடு (பிங்.); sheep, ram. 2. ஓரை (ராசி) மண்டலத்தின் முதற்பகுதி; aries of a zodiac. 3. மேடமதி (சித்திரை) (தமிழாண்டின் முதல் மாதம்); the first solar month. *"மேடமாமதி" (கம்பரா. திருவவதா. 110).*

மேட்டூர் அணை

மறுவ. உதள், கொறி, தகர், மறி, மை, வருடை.

[முழு → முழா = திரண்டமுரசு; முழு → முழுமை = பருமை. முழா → மிழா = பருத்த ஆண்மான். மிழா → மேழம் = செம்மறியாட்டுக் கடா. மேழம் → மேடம் (வே.க.4,46,47)]

த. மேட > **Skt.** *mēṣa.*

மேடம்² *mēḍam,* பெ.(n.) கவசம்; coat of armour.

[மேழம் → மேடம்]

மேடம்²

மேடவிடவம் *mēḍa-viḍavam,* பெ.(n.) மேடச்செலவு (வின்.) பார்க்க; see *mēḍa-c-celavu.*

[மேடம் + விடவம்]

Skt. *visuva* > த. விடவம்

மேடவீதி *mēḍa-vīdi,* பெ.(n.) விடை (இடபம்), இரட்டை (மிதுனம்), கடகம், மடங்கல் (சிங்கம்) ஆகிய ஓரை (இராசி)கள் சேர்ந்த ஞாயிறு வீதியின் பகுதி (பரிபா. 11, 2, உரை); (astron.) a section of the zodiac embracing the signs Taurus, Gemini, Cancer and Leo.

[மேடம் + வீதி]

மேடவோரை *mēḍa-vōrai,* பெ.(n.) ஆடு என்னும் விலங்கைக் குறியீட்டு வடிவமாக உடைய முதல் ஓரை (ராசி); first contellation of the zodiac having the ram as its sign, Aries.

[மேடம் + ஓரை]

மேடன் *mēḍaṉ,* பெ.(n.) மேழ ஓரைக்கு உடையவன், செவ்வாய் (நாமதீப. 98); the planet Mars, as the lord of the sign aries.

[மேடம் → மேடன். 'ன்' உடைமை குறித்த ஈறு]

மேடாதிபன் *mēḍādibaṉ,* பெ.(n.) நெருப்புக் கடவுள் (அக்கினி தேவன்) (வின்.); Agni, as riding a ram.

[மேடம் + அதிபன் – மேடதிபன் → மேடாதிபன்]

மேடாயனம் *mēḍāyaṉam,* பெ.(n.) மேடச்செலவு (வின்.) பார்க்க: see *mēḍa-c-celavu.*

[மேடம் + அயனம் – மேடயனம் → மேடாயனம்]

Skt. *ayaṉa* > த. அயனம்.

மேடாயனமண்டலம் *mēḍāyaṉa-maṇḍalam,* பெ.(n.) ஞாயிறு வீதியைச் செலவு தொடக்கத்தில் (அயனாரம்பங்களில்) இருபகுதியாக்கும் செலவு (அயன) மண்டலம் (வின்.); (astron.) equinoctial colure.

[மேடம் + அயனம் + மண்டலம்]

Skt. *ayaṉa* > த. அயனம்.

மேடிக்கம்பு *mēḍi-k-kambu,* பெ.(n.) நெசவுக்கருவியின் உறுப்பு வகை (இ.வ.); warp beam, roller on which the warp in wound in a loom.

[மேடி + கம்பு]



மேடிடு—தல் *mēḍiḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) (அடித்து வரப்படும்) மண்ணால் (பள்ளம்) நிரப்பப்படுதல்; to silt up. *"வண்டல் அதிகமாகப் படிந்து ஏரிகள் மேடிட்டு விட்டன".*

[மேடு + இடு-,]

மேடியுப்பு *mēḍi-y-uppu,* பெ.(n.) வளையலுப்பு; glass-gall.

[மேடு + உப்பு]

மேடு *mēḍu,* பெ.(n.) 1. உயரம் (பிங்.); height. 2. உயர்வான நிலம்; hilly ground. *'மேனா மினுக்கியைக் கொண்டவன் கெட்டான், மேட்டிலே பயிரிட்டவன் கெட்டான்' (பழ.).* 3. சிறு திடர்; eminence, little hill, hillock, ridge, rising ground. *"மேட்டிமைப்பன" (கம்பரா. நாட்டு. 27).* 4. பெருமை (பிங்.); greatness. 5. வயிறு (பிங்.); abdomen, belly. 6. உள்ளங்கையிலுள்ள மேட்டுப் பகுதிகள்; (Palmistry.) mounts on palm of hand.

ம., க., பட. மேடு; தெ. மெட்ட.

[முகடு = உச்சி,மேலிடம், கூரை. முகடு → மோடு → மேடு (மு.தா.68)]

மேடுகல்லு—தல் *mēḍu-kallu-,* 5 செ.கு.வி. (v.i.) மேட்டு நிலத்தை வெட்டிச் சமமாக்குதல் (S.I.I.vii. 277); to level down, by digging up the high ground.

[மேடு + கல்லு-,]

மேடும்பள்ளமும் *mēḍum-paḷḷamum,* பெ.(n.) உயர்ச்சியும் தாழ்ச்சியும்; ups and downs. *'வாழ்க்கை மேடும் பள்ளமுமாகத் தான் இருக்கும்' (உ.வ.).*

[மேடு + உம் + பள்ளம் + உம்]

மேடூகம் *mēḍūgam,* பெ.(n.) சுவர் (சது.); wall.

[மேடு → மேடுகம் → மேடூகம்]

மேடேற்றம் *mēḍēṟṟam,* பெ.(n.) மேட்டு நிலம் (S.I.I.iii. 288); high land.

[மேடு + ஏற்றம்]

மேடை *mēḍai,* பெ.(n.) 1. தளமுயர்ந்த இடப்பகுதி; platform, raised floor. 2. சொற்பொழிவு, இசை நிகழ்ச்சி போன்றவற்றை நடத்த உதவும் சற்று உயரமான தளம்; dais. *'அறிஞர் அண்ணா மேடையேறிப் பேசும் போது பெருங்கூட்டம் கூடும்' (உ.வ.).* 3. செய் குன்று (வின்.); artificial mound. 4. மாடி; storey, terraced house or palace. *"விண்ணார் நிலவுதவழ் மேடை" (தாயு. பைங்கிளி. 54).* 5. சமையலறையில் பொருள்கள் வைக்க உயர்த்தப்பட்ட இடம்; (in kitchen) a berth.

ம. மே; தெ. மேட.

[முகடு = உச்சி, மேலிடம், கூரை. முகடு → மோடு → மேடு → மேடை (மு.தா.68)]

மேடைச்சுவர் *mēḍai-c-cuvar,* பெ.(n.) அடிச்சுவர் (C.E.M.); basement wall.

[மேடை + சுவர். சுவல் → சுவர்.]

மேடைப்பேச்சு *mēḍai-p-pēccu,* பெ.(n.) பொதுக்கூட்டங்களில் ஆற்றும் சொற்பொழிவு; public speaking. *'மேடைப்*

பேச்சுக் கென்று அரசியல் கட்சிகள் தனியான ஆட்களைக் கொண்டுள்ளன' *(உ.வ.).*

[மேடை + பேச்சு. பேசு → பேச்சு.]

மேடையேற்று-தல் *mēḍai-y-ēṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) நாடகம், நடனம் முதலிய வற்றைப் பலரும் கண்டு களிக்க நிகழ்த்துதல்; to stage (a drama, dance etc.). *'இராமாயண நாட்டிய நாடகத்தை நூறாவது முறையாக மேடையேற்றி நடித்தனர்'.*

[மேடை + ஏற்று. ஏறு → ஏற்று-,]

மேடையேறு-தல் *mēḍai-y-ēṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நிகழ்ச்சியாக மேடையில் அளிக்கப் படுதல்; (of drama, dance, etc.) to be staged. *'நாடகங்கள் பலவும் மேடையேற வாய்ப்பில்லாமல் இருக்கின்றன'.*

[மேடை + ஏறு-,]

மேடைவீடு *mēḍai-vīḍu,* பெ.(n.) மேடை, 4 பார்க்க; see *mēḍai 4.*

[மேடை + வீடு]

மேண்டம் *mēṇḍam,* பெ.(n.) ஆடு (பரி.அக.); ram.

[மேழம் → மேடம் → மேண்டம்]



மேண்டம்

மேத்தியம் *mēttiyam,* பெ.(n.) 1. தூய்மை; purification, purity, cleanliness. *"மேத்திய மாக்கும் புந்தியும்" (சேதுபு. சாத். 2).* 2. ஒருவகை செடி (சீரகம்) (தைலவ. தைல.); cumin.

மேத்தியாசம் *mēttiyāšam,* பெ.(n.) வசம்பு (பரி.அக.); sweet flag.

மேத்திரம் *mēttiram,* பெ.(n.) ஆட்டுக்கடா (சங்.அக.); ram.

[மேழம் → மேடம் → மேட்டிரம் → மேத்திரம்]

மேதகம்¹ *mēdagam,* பெ.(n.) 1. தொன் மணிகளுள் ஒன்று (கோமேதகம்) (வின்.); sardonyx. 2. சாலாங்க செய்நஞ்சு (பாடாணம்) (மூ.அ.); a mineral poison.

மேதகம்² *mēdagam,* பெ.(n.) மேதகவு (யாழ்.அக.) பார்க்க; see *mēdagavu.*

[மே + தகம். தகவு → தகம்]

மேதகவு *mēdagavu,* பெ.(n.) 1. மேன்மை; excellence, greatness. 2. மதிப்பு (யாழ்.அக.); value. *"மேதக வாக்கலும்" (சீவக. 1922).*

[மே + தகவு]

மேதகு¹-தல் *mē-dagu-,* 2 செ.கு.வி. (v.i.) மேன்மையாதல்; to be eminent. *"மேதகு காலி னூக்கங் கண்டோன்" (திருவாச. 3, 23).*

[மே + தகு-.]

மேதகு² *mēdagu,* பெ.அ. (adv.) குடியரசுத் தலைவர், மாநில ஆளுநரைக் குறிக்கும் முன்னடை; excellency - title and form of address for the president and governor of a state.

[மே → மேதகு]

மேதகை *mēdagai,* பெ.(n.) மேன்மை; greatness, excellence, eminence. *"விருத்த மேதகையவர்" (கம்பரா. யுத்த. மந்திரப். 67).*

[மே + தகை. தகு → தகை.]

மேதங்கரர் *mēdaṅgarar,* பெ.(n.) சாக்கிய முனிவருக்கு முன் தோன்றிய புத்தருள் ஒருவர் (மணிமே. 30, 14, கீழ்க் குறிப்பு); one of the Buddhas before Gautama.

[மே + தங்கரர்]

மேதச்சி *mēdacci,* பெ.(n.) கற்பரி செய்நஞ்சு (பாடாணம்) (யாழ்.அக.); a mineral poison.

மேதசு *mēdašu,* பெ.(n.) மேதம்[2] பார்க்க;see *mēdam* [2].

[மே → மேத → மேதசு]

மேதம்[1] *mēdam,* பெ.(n.) வேள்வி (யாகம்) (பிங்.); sacrifice.

[ஏதம் → மேதம் = கேடு, கொலை உயிர்க்காவு கொடுத்துச் செய்யும் வேள்வி]

மேதம்[2] *mēdam,* பெ.(n.) கொழுப்பு (யாழ்.அக.); fat.

[மே → மேதை → மேதம்]

மேதம்[3] *mēdam,* பெ.(n.) கொலை (வின்.); murder.

[ஏ → ஏவு → ஏது (ஏவுகை) (வ.வ.98) ஏது → ஏதம் = கேடு. ஏதம் → மேதம்]

த. மேதம் > **Skt.** *mētha.*

மேதர் *mēdar,* பெ.(n.) மேதரவர் பார்க்க; see *mēdaravar.*

[மே → மேதர்]

மேதரம் *mēdaram,* பெ.(n.) மலை (பிங்.): mountain.

[மே → மேதரம்]

மேதரவர் *mēdaravar,* பெ.(n.) மூங்கில் வேலை செய்து வாழும் ஒரு வகையினர் (வின்.); a class of people who do bamboo work.

தெ. மேதரவாடு; க. மேதரு,

[மேதர் → மேதரவர்]

மேதவர் *mēdavar,* பெ.(n.) மேதரவர் பார்க்க (அபி.சிந்.); see *mēdaravar.*

[மேதர் → மேதரவர்]

மேதன் *mēdaṉ,* பெ.(n.) மேதாவி பார்க்க; see *mēdāvi.* *"மேதா விளையோய்" (கம்பரா. பிராட்டிகளங். 18).*

[மே → மேதன்]

மேதாவர் *mēdāvar,* பெ.(n.) மேதரவர் (யாழ்.அக.) பார்க்க; see *mēdaravar.*

[மேதரவர் → மேதாவர்]

மேதாவி *mēdāvi,* பெ.(n.) அறிவுடையவர்; person of supreme intelligence. *"மேதாவிகட்கெல்லா மேலாய" (கம்பரா. இரணிய. 176).*

ம. மேத்தாவி.

[மேதை = மேன்மை, மேலோன், அறிஞன். மேதாள்வி → மேதாவி (மு.தா. 73)]

மேதாவினி *mēdāviṉi,* பெ.(n.) நாகணவாய்ப்புள் (மூ.அ.); bush myna.



மேதாவினி

மேதி[1] *mēdi,* பெ.(n.) 1. எருமை; buffalo. *"மேதியன்ன கல்பிறங்கியவின்" (மலைபடு. 111).* 2. எருமை முகங்கொண்டவனும் கொற்றவையால் அழிக்கப்பட்டவனுமான ஓர் அசுரன் (பிங்.); a buffalo-faced demon, slain by *Durgā.*

மறுவ. கவலி, காரான்.

[முள் → மொள் → மொய் = வலிமை. மொய் → மொய்ம்பு = வலிமை (மு.தா.223). மொய் → மய் → மை → மைந்து = வலிமை. மைந்து → மைது → (மைதி) → மேதி = வலிமையுடைய எருமை. ஒ.நோ.எருமை மறம் (மறவனொருவன் தன்படை முதுகிடவும் பகைவர் படையைத் தான் அஞ்சாது எதிர்த்து நிற்கும் புறத்துறை (பு.வெ.7.13))]

மேதி[2] *mēdi,* பெ.(n.) வெந்தயம்; fenugreek.

மறுவ. மேத்து, வெந்தயம் வெந்தை.

ம. வெந்தயம்; க. மெத்தெ, மெந்தெய; தெ. மெந்தி; து. மெத்தெ, மெந்தி, மெந்தெ; பட. மெத்தெ.

[மெல் → மெல்தி → மெத்தி → மேதி]

த. மேதி > **Skt.** *manthā, methi, methinī, vedhanī.*

மேதி[3] *mēdi,* பெ.(n.) களத்திற் பொலியெருதுகளைக் கட்டுங்கட்டை; stake at the threshing - floor to which oxen are tied.

[மே → மேழி → மேதி]

மேதி[4] *mēdi,* பெ.(n.) நெற்களம் (யாழ்.அக.); threshing - floor.

[மேடு → மேடி → மேதி]



மேதி[4]

மேதிக்கவுணன் *mēdi-k-kavuṇaṉ,* பெ.(n.) வைப்பு செய்நஞ்சுவகை (யாழ்.அக.); a prepared arsenic.

மேதிச்சென்னிமிதித்தோள் *mēdi-c-ceṉṉi-midittōḷ,* பெ.(n.) கொற்றவை (வின்.); *Durgā.*

[மேதி + சென்னி + மிதித்தோள்]

மேதித்தலைமிசைநின்றாள் *mēdi-t-talai-miśai-niṉṟāḷ,* பெ.(n.) கொற்றவை; *Durgā.*

[மேதி + தலை + மிசை + நின்றாள்]

மேதியன் *mēdiyaṉ,* பெ.(n.) மேதியான் (வின்.) பார்க்க; see *mēdiyāṉ.*

[மேதி → மேதியன்]

மேதியான் *mēdiyāṉ,* பெ.(n.) (எருமையூர்வன்) காலன்; Yama, as riding a buffalo. *"சுருதிநாதன் மேதியான் முகநோக்கி" (குற்றா. தல. மந்தமா. 120).*

[மேதி → மேதியான்]

மேதினி *mēdiṉi,* பெ.(n.) நிலவுலகம் (பிங்.); earth. *"மேதை படப்படர் மேதினியானது"* *(கம்பரா. அதிகாய. 75).*

[மே = மேல், மேம்படு. மேதுதல் = பள்ளத்தை நிரப்புதல். மேதை = மேன்மை, மேலோன், அறிஞன். மேதாள்வி → மேதாவி (மு.தா.73). மே → மேது → மேதுனி → மேதினி = மேலாக (நீர்ப்பரப்பின்மேல்) இருக்கும் நிலவுலகம் அல்லது நீர் சூழ்ந்து இருக்கும் நிலவுலகம். mēdini என்னும் சொல் கொழுப்பு, எலும்பு மச்சை, நிணநீர் எனப் பொருள்படும் mēdas என்பதிலிருந்து வந்ததாக மா.வி. அகரமுதலி காட்டுகிறது. இப்பொருள்களும் உடற்றோலுடன் (மேலாக) இருப்பது என்னும் பொருளடிப்படையில் உருவானவையே.]

மேதினிபடைத்தோன் *mēdiṉi-paḍai-t-tōṉ,* பெ.(n.) 1. நிலவுலகத்தைப் படைத்தவன், நான்முகன் (பிரமன்); *Brahmā,* as the creator of the earth. 2. நிலவுலகத் தலைவன், திருமால் (சூடா.); *Viṣṇu,* as the lord of the earth.

[மேதினி + படைத்தோன். படை → படைத்தோன்.]

மேதினிவிளக்கு *mēdiṉi-viḷakku,* பெ.(n.) உலகத்தில் விளங்கும் புகழ் (கல்.அக.); fame, renown, glory.

[மேதினி + விளக்கு]

மேதை[1] *mēdai,* பெ.(n.) 1. பேரறிவு; supreme intelligence, powerful intellect. 2. மேன்மை (சூடா.); greatness. 3. பேரறிவாளி (சிறுபஞ். 22); person of supreme intelligence. 4. அறிவன் (புதன்) (பிங்.); the planet mercury.

[மேல் → மேலை. மேல் → மேன்மை. மேல் → மேன் → மேன்படு → மேம்படு → மேம்பாடு (மு.தா.74). மேல் → மேது → மேதை = மேலான அறிவு (பேரறிவு) உடையவர்]

மேதை[2] *mēdai,* பெ.(n.) கள் (சூடா.); intoxicating drink.

[(முள்) → முளி. முளிதல் = பொங்குதல். முளிதயிர் = நன்றாய்த் தோய்ந்த தயிர். முண்டகம் = கள். (முள்) → முர → முரப்பு. முரத்தல் = புளித்தல். முர → மோர். முனி → முடை → முதை → (மூதை) → மேதை]

மேதை[3] *mēdai,* பெ.(n.) 1. கொழுப்பு; fat. *"மதுமேதை படப்படர் மேதினியானது"* *(கம்பரா. அதிகாய. 75).* 2. இறைச்சி (சூடா.); flesh. 3. தோல் (சூடா.); skin. 4. நரம்பு (பிங்.); nerve.

[மேல் → மேன் → மேனி = உடம்பின் மேற்புறம், உடம்பு (மு.தா.74). மேல் → (மேது) → மேதை = உடம்பின் மேலாக இருக்கும் தோல், தோலுடன் இணைந்திருக்கும் இறைச்சி, கொழுப்பு]

மேதை[4] *mēdai,* பெ.(n.) பொற்றலைக் கையாந்தகரை (மருந்துப் பூடுவகை) (மலை.); Ceylon verbesina.

மேதை[5] *mēdai,* பெ.(n.) உடலிலுள்ள ஓகங்களாகிய பதினாறு கலைகளுளொன்று; a yogic centre in the body. *"போக்குவது மேதை கலை" (தத்துவப். 135) (செந். ix, 248).*

மேதைமரியாதை *mēdai-mariyādai,* பெ.(n.) மேரை, 3 (இ.வ.) பார்க்க; see *mērai 3.*

[மேரை → மேதை + மரியாதை]

Skt. *maryāda* > த. மரியாதை.

மேதைமை *mēdaimai,* பெ.(n.) மேதை[1], 1 பார்க்க; see *mēdai[1]-1.* *"ஆயுமேதைமை தெளிவு" (விநாயகபு. 69, 59).*

[மேதை → மேதைமை. 'மை'. ப.பெ.ஈறு]

மேதையர் *mēdaiyar,* பெ.(ந.) புலவர் (திவா.); learned men, poets.

மறுவ. அவை, அறிஞர், கலைஞர், கவிஞர், கற்றவர், சங்கம், சவை, புதர், முதுவோர், மூத்தோர்.

[மேதை → மேதையர்]

மேந்தலை *mēn-talai,* பெ.(n.) 1. மேன்மை (வின்.); eminence, excellence. 2. கப்பலின் காற்று தாக்கும் பக்கம் (வின்.); windward side of a vessel. 3. தலைவன் (இ.வ.); leader.

[மேல் + தலை]

மேந்தானம் *mēn-dānam,* பெ.(n.) உயர்ந்த இடம் (யாழ்.அக.); elevated place, height.

[மேல் + தானம்]

மேந்தி *mēndi,* பெ.(n.) மேதி[2] (மூ.அ.) பார்க்க; see *mēdi*[2].

[மேதி → மேந்தி]

மேந்திகை *mēndigai,* பெ.(n.) மேதி[2] (மூ.அ.) பார்க்க; see *mēdi*[2].

[மேதி → மேந்தி → மேந்திகை]

மேந்திரி *mēndiri,* பெ.(n.) பரண்கட்டு (வின்.); the frame - work of a loft or ceiling.

[மெந்திரி → மேந்திரி]

மேந்தோல் *mēn-tōl,* பெ.(n.) மேற்றோல் (மீந்தோல்); superficial skin, epidermis. *"மேந்தோல் களைந்த தீங்கொள் வெள்ளெள்" (புறநா. 321, 2).*

[மேல் + தோல்]

மேந்தோன்று-தல் *mēn-tōṉṟu-,* 5 செ.கு.வி. (v.i.) மேம்பட்டு விளங்குதல்; to become eminent, famous. *"அரசியல் பிழையாது செருமேந் தோன்றி" (பதிற்றுப். 89).*

[மேல் + தோன்று-,]

மேநடைநீர் *mēnaḍainīr,* பெ.(n.) பருவ காலத்தில் பாசன வாய்க்காலில் பெருகிவரும் நீர்; water that flows first in the irrigation during monsoon. *"இவ்வாய்க்கால் மேநடைநீர் பாயப் பெறுவதாக" (தெ. கல். தொ. 19. கல். 344)*

[மேல் + நடை + நீர் – மேல் நடைநீர் → மே நடை நீர். மேல் = மேலிடம், முன்னிடம்]

மேம்படு-தல் *mēmbaḍu-,* 20 செ.கு.வி. (v.i.) சிறத்தல்; to rise high, as in status, to be pre-eminent to be great, as is learning. *"நல்லவையுண் மேம்பட்ட கல்வியும்" (திரிகடு. 8).*

ம. மேம்படுக.

[மேல் → மேன் → மேம்படு (மு.தா. 74) 'படு' து.வி.]

மேம்படுநன் *mēmpaḍunaṉ,* பெ.(n.) மேம்பாடுற்றவன்; one who stands pre-eminent. *"போற்றிக்கேண்மதி புகழ் மேம்படுக" (பொருந. 60).*

[மேம்படு → மேம்படுநன்]

மேம்பாடு *mēm-pāḍu,* பெ.(n.) 1. (இருக்கும் நிலையிலிருந்து அடையும்) உயர்வான நிலை; upliftment, betterment. *'மனித குலம் மேம்பாட்டிற்கு மட்டுமே அணுஆற்றலைப் பயன்படுத்த வேண்டும்' (உ.வ.).* 2. சிறப்பு;

greatness, grandeur, dignity, pre-eminence. *"விரிந்த மதிநிலவின் மேம்பாடும்" (இலக். வி. 659, உதா.).* 3. (மேலும் பயன்பாடு கருதி செய்யப்படும்) சீரமைப்பு, சீர்திருத்தம்; improvement, development. *'பெரிய நகரங்களின் மேம்பாட்டிற்காகத் திட்டப் பணிகள் செயல்பாட்டில் உள்ளன' (உ.வ.).*

[மேல் → மேன் → மேன்படு → மேம்படு → மேம்பாடு (மு.தா.74). படு → பாடு, முதனிலைத் திரிந்த தொ.பெ.]

மேம்பார்வை *mēm-pārvai,* பெ.(n.) 1. வேலைகளைக் கண்காணிக்கை; superintendence. 2. அழுத்தமில்லாத நோக்கு (கொ.வ.); superficial or cursory look.

[மேல் + பார்வை. பார் → பார்வை.]

மேம்பாலம் *mēmbālam,* பெ.(n.) இருப்புப்பாதை முதலியவற்றின் மேலே கட்டப்பட்ட பாலம்; overbridge.

[மேல் + பாலம் – மேல்பாலம் → மேன்பாலம் → மேம்பாலம். மே → மேல்.]

மேம்பாலம்

மேம்புள்ளி *mēm-pulli,* பெ.(n.) மேம்புள்ளி மதிப்பு பார்க்க; see *mēmpulli-madippu.*

[மேல் + புள்ளி]

மேம்புள்ளிமதிப்பு *mēmpulli-madippu,* பெ.(n.) அறுவடைக்கு முன் தவச (தானிய) விளைவைப் புள்ளி மதிப்புச் செய்கை; estimate of the produce of fields just before harvest. (Tj).

[மேம்புள்ளி + மதிப்பு. மதி → மதிப்பு]

மேம்போக்கு *mēm-pōkku,* பெ.(n.) மேலோட்டம்; superficiality. *'நுணுக்கமான சிவனியக் கொண்முடிபு (சைவசித்தாந்தம்) நூலை மேம்போக்காகப் படித்துவிட்டுத் திறனாய்வு செய்ய முடியாது'.*

[மேல் + போக்கு]

மேமூட்டைபோடு–தல் *mē-mūttai-pōdu-,* 19 செ.குன்றாவி. (v.t.) ஏமாற்றுதல் (கொ.வ.); to deceive.

[மேல் + மூட்டை + போடு–,]

மேமூட்டையாசாமி *mē-mūttai-y-āšāmi,* பெ.(n.) வஞ்சகன்; cheat.

[மேல் + மூட்டை + ஆசாமி]

U. *āsāmi* > த. ஆசாமி.

மேய்[1]–தல் *mēy-,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. விலங்கு முதலியன உணவு கொள்ளுதல்; to graze, feed, prey on as beasts or birds, to gnaw, as white ants. *"பெற்றம்................ மேய்ந்தற்று" (குறள், 273), "மேயுங் குருகினங்காள்" (திவ். திருவாய். 6,1,1), 'மாடுகள் புல் மேய்ந்து கொண்டிருந்தன' (உ.வ.).* 2. பருகுதல்; drink. *"கலங்கு தெண்டிரை மேய்ந்து" (சீவக. 32).* 3. கெடுத்தல் (வின்.); to spoil. *'இந்த வண்டி மாட்டை மேய்ந்துவிடும்'.* 4. பறித்து நுகர்தல் (கொ.வ.); to obtain and enjoy unlawfully. 5. மேற்போதல்; to dominate, to surpass.

'பேச்சில் அவன் எல்லாரையும் மேய்ந்து விடுவான்'.

ம. மேய்க; க. மே, மேயு, மேய்; தெ. மேயு; து. மேயுணி, மேபிணி, மேபாவுனி; பட. மேயி; கோத. மெய், மெச்; துட. மிய்; கொலா. மி; நா. மீய்; பர். மேய்; கோண். மேயியானா; குவி. மெயலி; குரு. மென்னா; மா. மினெ; பிரா. பெய்.

[மீ = உயரம், மேலிடம். மிசை = உயர்ச்சி. மி → மெ → மெச்சு. மெச்சுதல் = உயர்த்திப் பேசுதல். மெ → மே → மேல் = மேம்பாடு. மே → மேய். மேய்தல் = விலங்கு மேலாகப் புல்லைத் தின்னுதல், பெரும்பாலும் கால்நடைகள் நிலத்தில் முளைத் திருப்பனவற்றை அலைந்து திரிந்து தேடித் தின்னுதல்]

மேய்²—தல் *mēy-,* 2 செ.கு.வி. (v.i.) 1. திரிதல் (சஞ்சரித்தல்); to roam. *"உடன்மேயுங் கருநாராய்" (திவ். திருவாய். 6, 1, 2).* 2. விடனாய்த் திரிதல்; to lead a profligate life.

[மேய்¹ → மேய்—, விலங்குகள் புல் பூண்டுகளை அலைந்து திரிந்து தின்னுதலை உணர்த்தும் மேய்தல் வினையின் பொருள் தின்னுதல் இல்லாமல் வெறுமனே அலைந்து திரிவதை உணர்த்திற்று]

மேய்³—த்தல் *mēy-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. புல் முதலியவற்றை விலங்குகள் உண்ணச் செய்தல்; to graze, to feed. *"பசு..... மேய்ப்பாரு மின்றி" (திருமந். 2883), 'அவர்கள் கால்நடைகளை மேய்ப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள்' (உ.வ.).* 2. மருந்து முதலியன செலுத்துதல் (வின்.); to administer, as physic to horses. *'மசாலை மேய்க்கிறான்'.* 3. அடக்கி யாளுதல் (கொ.வ.); to govern.

ம. மேய்க்க; க. மேயிசு, மேசு; தெ. மேபின்சு; து. மேபாவுனி; கோத. மேச்; துட. மீச்; பட. மேசு; கொலா., நா. மீப்.

[மே = மேல். மே → மேய். மேய்தல் = விலங்கு புல்லின் மேற்பகுதியைத் தின்னுதல் (தமி.வ.72)]

மேய்⁴—தல் *mēy-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கூரை முதலியன வேய்தல்; to cover fully, to thatch, as with leaves, to roof, as with tiles. *"இறைச்சி மேய்ந்து தோல்படுத்து" (தேவா. 838, 4).*

[மெத்துதல் = மேலிடுதல், மெத்து → மெத்தை = மேல்நிலை, மேல்தளம். மே → மேதுதல் = பள்ளத்தை நிரப்புதல். மே → மேய். மேய்தல் = கூரையின் மேல் இலை வைக்கோல் முதலியவற்றை இடுதல் (மு.தா. 74). மேய் → வேய். வேய்தல் = கூரையின் மேல் வைக்கோலிடுதல் (தமி.வ.72)]

மேய்க்கி *mēykki,* பெ.(n.) ஆடுமாடு முதலியன மேய்ப்பவன்; one who tends cattle, shepherd, cowherd. *"எமதருமனும் பகடு மேய்க்கியாய்த் தனியிருப்ப" (தாயு. சிற்சுகோ.10).*

மறுவ. மேய்ப்பன், இடையன்.

[மேய் → மேய்க்கி]

மேய்கானிலம் *mēy-kāṉilam,* பெ.(n.) மேய்ச்சற்றரை பார்க்க; see *mēy-c-carrarai* (C.G.).

[மேய் + கால் + நிலம்]

மேய்கோல் *mēy-kōl,* பெ.(n.) இடையன் கோல் (வின்.); shepherd's crook or staff.

[மேய் + கோல். ஆடு மாடுகளை மேய்ப்பதற்குப் பயன்படுத்தும் கோல்.]

மேய்ச்சல் *mēyccal,* பெ.(n.) 1. மேய்கை; grazing. *'மாடுகள் மேய்ச்சலுக்குப் போயிருக்கின்றன' (உ.வ.).* 2. மேய்ச் சற்றரை; common pasturage, grazing

ground. *'மேய்ச்சலுக்காகக் காடுகளைப் பெருமளவில் அழித்து வந்துள்ளனர்' (உ.வ.).* 3. உணவு; food. 4. ஊதாரித்தனமாய் (விடனாய்)த் திரிகை; profligacy. 5. கேடுற்றது; anything rendered useless, as land for cultivation. *'இந்தப் புன்செய் மேய்ச்சலாய் விட்டது'.*

ம. மேய்ச்சல்; க. மேகு; து. மேசெல்; பட. மேசலு.

[மேய் → மேய்ச்சல். 'சல்' தொ.பெ.ஈறு]

மேய்ச்சல்காடு *mēyccal-kāḍu,* பெ.(n.) விலங்குகள் மேயும் காட்டுப்பகுதி; the wild or jungle where beasts graze, pasture-ground.

க. மேகு காடு.

[மேய்ச்சல் + காடு]

மேய்ச்சல்நிலம் *mēyccal-nilam,* பெ.(n.) மேய்ச்சற்றரை பார்க்க; see *mēy-c-carrarai.*

[மேய்ச்சல் + நிலம்]

மேய்ச்சற்கறையான் *mēyccar-karaiyān,* பெ.(n.) கறையான் வகை (வின்.); predatory termite.

[மேய்ச்சல் + கறையான்]

மேய்ச்சற்றரை *mēyccarrarai,* பெ.(n.) ஆடு மாடுகள் மேயுமிடம்; pasture land, common pasturage.

[மேய்ச்சல் + தரை. மேய் → மேய்ச்சல். 'சல்' தொ.பெ.ஈறு.]

மேய்ச்சற்றலம் *mēy-c-carralam,* பெ.(n.) மேய்ச்சற்றரை பார்க்க (வின்.); see *mēy-c-carrarai.*

[மேய்ச்சல் + தலம்]

மேய்ச்சற்றலை *mēy-c-carralai,* பெ.(n.) மேய்ச்சற்றரை; pasture land, meadow. *"கன்றுகளுக்கு மேய்ச்சற்றலை பார்க்கை யாலும்" (திவ். பெரியாழ். 3, 3, 4, வியா. பக். 570).*

[மேய்ச்சற்றரை → மேய்ச்சற்றலை]

மேய்ப்பன் *mēyppan,* பெ.(n.) 1. இடையன்; herdsman, shepherd, grazier. 2. ஆளுநர், அடக்கியாளுபவன்; governor. 3. ஆயர் (போதகன்); pastor (Chr.). *'நல்ல மேய்ப்பனா யிரு'.*

[மேய் → மேய்ப்பன் = ஆடுமாடுகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்து மேயச் செய்பவன், அதுபோல பிறரைக் கட்டுக்குள் வைப்பவன்]

மேய்ப்பு *mēyppu,* பெ.(n.) 1. மேய்க்கை; feeding, pasturing. 2. மேய்க்கைக் குரிய நிலம்; grazing ground.

[மேய் → மேய்ப்பு. 'பு' பெ.ஆ.ஈறு]

மேய்மணி *mēy-maṇi,* பெ.(n.) இரை தேடுவதற்கு வெளிச்சந் தந்துதவும்படி நாகம் உமிழ்வதாகக் கருதப்படும் ஒளிக்கல் (இரத்தினம்) (மலை.); gem believed to be ejected by a cobra to serve as a light in finding its prey. *"நாம நல்லராக் கதிர்ப்பட வுமிழ்ந்த மேய்மணி" (அகநா. 72).*

[மேய் + மணி]

மேயம் *mēyam,* பெ.(n.) 1. அளவிடற்குரியது (சங்.அக.); that which is capable of being estimated. 2. அறியத்தகுந்தது (சங்.அக.); that which is cognisable or capable of

being known. 3. உவமேயம்; that which is compared. *"இயலுமேயமு மானவியலனே" (சிவதரு. கோபுர. 225).*

[ஏய்தல் = பொருந்துதல். ஏய் → மேய் → மேயம் = பொருத்தி அளவு பார்ப்பது, அளவிடற்குரியது]

மேயல் *mēyal,* பெ.(n.) 1. மேய்கை; grazing. *"மானினப் பெருங்கிளை மேயலாரும்" (ஐங்குறு. 217).* 2. மேயும் புல் முதலியன; pasture, herbage for cattle to eat. *"பதவு மேயலருந்து மதவு நடை நல்லான்" (அகநா. 14).* 3. பறித்து நுகர்தல் (கொ.வ.); grabbing; obtaining and enjoying unlawfully.

க. மேவு; படை. மேசல்.

[மேய் → மேயல். 'அல்' தொ.பெ.ஈறு]

மேயவன் *mēyavaṉ,* பெ.(n.) மேயான் பார்க்க; see *mēyāṉ. "மேயவன் றன்னொடு மெண்ணி" (கம்பரா. இலங்கைகேள். 13).*

[மே → மேவு. மே → மேயான் → மேயவன்]

மேயான் *mēyāṉ,* பெ.(n.) உறைபவன்; resident, dweller. *"பெருந்துறையின் மேயானை" (திருவாச. 8, 7).*

[மே → மேவு. மேவுதல் = தங்குதல், உறைதல். மே → மேயான் = ஓரிடத்தில் தங்குபவன்]

மேர்வை *mērvai,* பெ.(n.) மேரை, 5 (இ.வ.) பார்க்க; see *mērai5.*

[மேல் → மேர் → மேர்வை]

மேரக்காலி *mērakkāli,* பெ.(n.) பேய் (கரு.அக.); ghost.

[மேல்காலி = தரையோடு பொருந்தாது மேலே கால் வைப்பது. மேல்காலி → மேலக்காலி → மேரக்காலி]

மேரு *mēru,* பெ.(n.) ஏழு தீவுகளின் நடுபாகத்திலுள்ளதும் கோள்கள் சுற்றி வருவதாகக் கருதப்படுவதுமான பொன் மலை; the golden mountain round which the planets are said to revolve, believed to be the centre of the seven *Dvīpas. "மாநிலத் திடைநின் றோங்கிய நெடுநிலை மேரு" (சிலப். 28, 48).* 2. மலை (யாழ்.அக.); mountain. 3. தேர் முதலியவற்றின் உச்சியில் அழகணியாக அமைந்த குடம்; ornamental globular top, as of a car. 4. சாய்ந்த கூரையின் உச்சி (இ.வ.); top or ridge of a sloping roof. 5. ஆயிரம் உச்சிகளையும் நூற்றிருபத்தைந்து மேனிலைக்கட்டுகளையும் ஆயிரமுழம் அகலத்தையும் அவ்வளவு உயரத்தையும் கொண்டு விளங்கும் கோயில் (சுக்கிர நீதி, 229); a temple 1000 hands wide and 1000 hands high with 1000 domes and 125 floors. 6. மேருமணி (இ.வ.) பார்க்க; see *mērumaṇi.* 7. பெண்குறி (கொக்கோ. 1, 17); pudendum muliebre. 8. உட்காரும் (ஆசனப்) பலகை (யாழ்.அக.); sitting plank. 9. திருசக்கரம் (ஸ்ரீ சக்ரயந்திரம்); the mystical diagram of *śrīcakram*, made in relief. 10. பன்னீர்க் குடுவை வகை (யாழ்.அக.); carboy, jar, big bottle of rose water.

[மே → மேல் → மேரு = உயர்ந்து காணப்படுவது. ஏழு தீவுகள் நடுவில் அமைந்ததாகவும் கோள்கள் அதைச் சுற்றி வருவதாகவும் கூறும் கற்பனை மலை வழக்கூன்றியது முதல்நிலை. அடுத்து பொதுப் படையாக மலையைக் குறித்தது. பின்னர் மலைபோல் உயர்ந்து காணப்படுவனவும் இச்சொல்லால் குறிக்கப்பட்டன.]

த. மேரு > **Skt.** *mēru.*



மேரு

மேருக்குப்பி *mēru-k-kuppi,* பெ.(n.) 1. வழிப் போக்கன் (பயணி) கங்கை நீரை அடைத்துக் கொண்டு செல்லும் ஒருவகைக் கண்ணாடிக் கொள்கலம்; a kind of glass bottle in which Ganges water is carried by pilgrims. 2. மேரு, 10 பார்க்க; see *mēru10.*

[மேரு + குப்பி]

மேருகம் *mērugam,* பெ.(n.) நறுமண (வாசனை)ப் பண்ட வகை (யாழ்.அக.); a kind of incense.

மேருத்தீபம் *mēru-t-tīpam,* பெ.(n.) மேருவிளக்கு பார்க்க; see *mēru-viḷakku.* *"அணிமிகு மேருத்தீபம்" (பிரத. ஒழிபி. 41).*

[மேரு + தீபம்]

மேருதாமன் *mēru-tāmaṉ,* பெ.(n.) சிவ பெருமான்; *Sivaṉ.*

[மேரு + தாமன்]

Skt. *dhāman* > த. தாமன்.

மேருமணி *mēru-maṇi,* பெ.(n.) வழிபாட்டு (செப) மாலை முதலியவற்றின் நாயகமணி (யாழ்.அக.); the principal or central bead in a rosary or necklace.

[மேரு + மணி]

மேருமந்தரபுராணம் *mērumandara-purāṇam,* பெ.(n.) 14-ஆம் நூற்றாண்டி னிறுதியில் வாமனாசிரியர் செய்ததும், மேருமந்தரர்களின் வரலாற்றைக் கூறுவது மான ஒரு சமணக் காப்பியம்; a Jaina Tamil poem on the lives of *Mēru* and Manthara, by *Vāmanācārya*, composed towards the end of the 14th C.

[மேரு + மந்திரம் + புராணம்]

Skt. *purāṇa* > த. புராணம்.

மேருயந்திரம் *mēru-yandiram,* பெ.(n.) கதிர்க்கோல் (யாழ்.அக.); spike.

[மேரு + இயந்திரம்]



மேருயந்திரம்

மேருவில்லாளன் *mēru-villāḷaṉ,* பெ.(n.) மேருவில்லி பார்க்க; see *mēru-villi.* *"மேரு வில்லாளன் கொடுத்த .... யாவையு மாய்ந்து கொண்டான்" (கம்பரா. நாகபாச. 18).*

[மேரு + வில் + ஆள் + அன்]

மேருவில்லி *mēru-villi,* பெ.(n.) மேருமலையை வில்லாகக் கொண்டவன், சிவபெருமான்; *Sivaṉ,* as having Mt. *Mēru* for his bow. *"மேருவில்லி மஞ்சனச் சாலைவாய்" (தக்க யாகப். 379).*

[மேரு + வில்லி]

மேருவிளக்கு *mēru-viḷakku,* பெ.(n.) இறைவன் முன் எடுக்கும் அடுக்கு விளக்கு; a cluster of lights, waved before gods.

[மேரு + விளக்கு]



மேருவிளக்கு

மேருவின்வாரி *mēruviṉ-vāri,* பெ.(n.) பொன்மணல் (யாழ்.அக.); golden sand.

[மேருவின் + வாரி]

மேரை *mērai,* பெ.(n.) 1. எல்லை; boundary, limit. 2. வகை (வின்.); manner, way. 3. மரியாதை (யாழ்.அக.); rule of propriety or decorum, limits of propriety. 4. அடக்கம் (வின்.); gravity, sobriety, modesty. 5. மொத்த விளைச்சலின்றும் சிற்றூர் வேலைக்காரர், காணியாட்சிக் காரர் முதலியோருக்குக் களத்திற் பிரித்துத் தனியாகக் கொடுக்கப்படும் தவசம்; the portion of the crop, given as a perquisite to holders of *kāṇi-y-āṭci*, or to hereditary village officers and servants, out of the common stock on the threshing-floor. (R.T.).

க., து. மோர; தெ. மேர.

[மேல் → மேலை → மேரை = மேலெல்லை, எல்லை, அளவு, மதிப்பு, மதித்தளிக்கும் மானியம் (மு.தா.74)]

த. மேரை > **Skt.** *maryā.*

மேரைத்திட்டம் *mērai-t-tiṭṭam,* பெ.(n.) மேரை பிரித்துக் கொடுப்பதற்காக ஏற்பட்ட திட்டம்; regulation or rule relating to the proportion of allowances to the village officers and servants from the crops. (W.G.).

[மேலை + திட்டம்]

மேரைமரியாதை *mērai-mariyādai,* பெ.(n.) மேரை, 3 (இ.வ.) பார்க்க; see *mērai 3.*

[மேரை + மரியாதை]

Skt. *maryāda* > த. மரியாதை.

மேரைமானியம் *mērai-māṉiyam,* பெ.(n.) முற்காலத்தில் தவசமாகக் கொடுக்கப்பட்டுப் பின்னர் பணமாகச் செலுத்தப்படும் விளைச் சற்பாகம்; grant of a portion of the gross produce of cultivated lands, now commuted into money. (W.G.).

[மேரை + மானியம்]

மேரையழித்தல் *mērai-y-aḻittal,* பெ.(n.) எல்லையைக் குறிக்கும் வரப்பு முதலியவற்றை அழிக்கை; destruction of landmarks, as by removing survey stones, etc.

[மேரை + அழித்தல். அழி → அழித்தல். 'தல்' தொ.பெ.ஈறு.]

மேல்[1] *mēl,* பெ.(n.) 1. கீழ்ப்பகுதிக்கு அல்லது அடிப்பகுதிக்கு எதிரான பகுதி, மேலிடம்; that which is above or over, upper side, surface. *"ஓலை..... தொட்டு மேற்பொறியை நீக்கி" (சீவக. 2143). 'அறையின் மேல் தட்டில் திறவுகோல் உள்ளது' (உ.வ.).* 2. அதிகப்படி; upper or higher (limit), further, additional,

extra. *'இது குறித்து மேலும் விளக்கம் தேவை' (உ.வ.).* 3. வானம் (சூடா.); sky. *"மேலுயர் கைலையை" (கம்பரா. யுத்த. மந்திரப். 80).* 4. மேற்கு (பிங்.); west. *'மேல் திசையில் ஞாயிறு மறையும் நேரம்' (உ.வ.).* 5. தலை; head. *"மேவா ருயிருணங்க மேன்முடித்த பிள்ளையன்" (பு.வெ.2,8).* 6. தலைமை; leadership, superiority. *'மேலதிகள்'.* 7. மேன்மை (பிங்.); excellence. 8. உயர்ந்தோர்; the great. *"இன்னாமை நோக்கிப் பசைதல் பரியாதா மேல்" (நாலடி, 60).* 9. உடம்பு; body. *'மேலுக்குச் சுகமில்லை, மேல்வலி'.* 10. கல்வி(அறிவு) (தக்கயாகப். 545, உரை); knowledge, science. 11. இடம் (பிங்.); place. 12. மேலெழுந்தவாரியானது; that which is superficial. 13. முன்புள்ளது; that which goes before. 14. பின்புள்ளது; that which comes after.

ம. மேல்; க., து., பட. மேலு; தெ. மேல.

[மே = மேல், மேம்பாடு. மேதுதல் = பள்ளத்தை நிரப்புதல். மேவுதல் = மேலிட்டுக் கொள்ளுதல். மே → மேல். எ,ஏ,சே,தெ,தே, மெ,மே,வே ஆகிய எழுத்துக்களில் தொடங்கும் சொற்கள் உயர்ச்சியைக் குறிக்கின்றன. (மு.தா.70–74)]

இற்றைத் தமிழ்நாட்டிற் போன்றே பண்டைத் தமிழகமாகிய குமரிநாட்டிலும் மேல்கோடியிலேயே பெருமலைத் தொடரிருந்தது. அதனால், நிலம் மேற்கில் உயர்ந்தும் கிழக்கில் தாழ்ந்தும் இருந்தது. இந்நிலைமை பற்றியே குடதிசை மேல் (மேற்கு) என்றும், குணதிசை கீழ் (கிழக்கு) என்றும் பெயர் பெற்றன. (தமி.வ.முன்.11).

mēlu, a particular high number. Gt. (p.529) compares D. mēl, etc. (KKED XXXVII)

மேல்² *mēl,* பெ.(n.) (ஒன்றோடு ஒப்பிடும் போது குறிப்பிடப்படுவது) சிறந்தது, மேம்பட்டது; better, superior. *'இதுவரை வாங்கிய அரிசியே மேல், சொல்லிச் செய்யாமல் இருப்பதை விடச் சொல்லாமல் இருப்பதே மேல்' (உ.வ.).*

[மே → மேல்]

மேல்³ *mēl,* இடை. (part.) 1. மேல், மீது எனப் பொருள்படும் ஒரு முன்னொட்டு (பி.வி. 45, உரை); a particle meaning on, upon above used with verbs. 2. ஏழாம் வேற்றுமைப் பொருளில் வரும் சொல்லுருபு (தொல். சொல். 82); word used as a locative sign. *'உன் மேல் தவறில்லை, அவன் மேல் பழி சுமத்தப்பட்டுள்ளது'.*

[ஏ → மே → மேல்]

ஏழாம் வேற்றுமையின் பொருள் இடம். 'மேல்' மீது எனப் பொருள்பட்டு இடத்தைக் குறிப்பதால் இது ஏழாம் வேற்றுமை உணர்த்தும் சொல்லுருபாக ஆளப்படுகிறது.

மேல்⁴ *mēl,* வி.அ. (adv.) 1. அதிகமாக (வின்.); more, more than, over. *'சுமார் ஐந்து இலக்க உருபாவுக்கு மேல் கையாடல் செய்யப்பட்டுள்ளது'.* 2. பிறகு; beyond. *'இதற்கு மேல் அவரால் இந்தப் பதவியில் நீடிக்க முடியாது'.* 3. வெளிப்புறத்தில்; on, at. *'பெட்டிக்கு மேல் உள்ளது புத்தகம்'.* 4. முன்; before, previously, formerly. *"சிறுபட்டி மேலோர்நாள்" (கலித். 51).* 5. பற்றி; about. *'சிவபெருமான் மேற் பாடிய நூல்'.* 6. அப்பால் (வின்.); afterwards, subsequently. *"அங்கே போனதின்மேல் எனக்கெழுது".* 7. இனி (உரி.நி.); hereafter.

[ஏ → மே → மேல் (சு.வி.57)]

மேல்கட்டு *mēl-kaṭṭu,* பெ.(n.) பந்தல் போன்றவற்றில் ஓலைக்கடியில் மேல்பாகத்தில் கட்டும் துணி; cloth spread on the lower side of the thatch of a pandal.

து. மேல்கட்டு.

[மேல் + கட்டு]



மேல்கட்டு

மேல்கடல் *mēl-kaḍal,* பெ.(n.) மேற்றிசையிலுள்ள கடல்; the Arabian sea, as the western sea. *"மேல்கடல் வானுகத் தின்றுளை வழி" (திருக்கோ. 6).*

[மேல் + கடல். தமிழ்நாட்டிற்கு மேற்குப் பக்கத்தில் அமைந்த கடல்]

மேல்காது *mēl-kādu,* பெ.(n.) காதின் உயரப்பகுதி; the top part of the ear.

[மேல் + காது]

மேல்கால் *mēl-kāl,* பெ.(n.) மேல்காற்று பார்க்க (நாமதீப. 91); see *mēl-kāṟṟu.*

[மேல் + கால்]

மேல்காற்று *mēl-kāṟṟu,* பெ.(n.) மேற்குத் திசையினின்று வீசும் காற்று (திவா.); west wind. *"கோடை மேல் காற்றே".*

மறுவ. கோடைக்காற்று, கோடை.

ம. மேல்காற்று.

[மேல் + காற்று]

மேல்கீழாதல் *mēl-kīḻādal,* பெ.(n.) தலை கீழாதல்; topsy - turvy.

ம. மேல்கீழாயி.

[மேல் + கீழ் + ஆதல். ஆ → ஆதல் 'அல்' தொ.பெ.ஈறு]

மேல்கை *mēlkai,* பெ.(n.) 1. அப்பாலானது; that which is farther or on the further side. 2. உயர்தரம்; higher rank, standing, degree or pedigree. 3. மேடு; highland, elevation. 4. மேற்கு; west.

து. மேல்கயி (வெற்றி, மேன்மை).

[மேல் + கை]

மேல்கோட்டை *mēl-kōṭṭai,* பெ.(n.) சீரங்கப் பட்டினத்திற்கு அருகில் அமைந்த மாலிய வழிபாட்டிடம்; name of a place of *Vaishṇava* pilgrimage near *śrīraṅga-paṭṭiṇan* in Mysore.

[மேல் + கோட்டை. திருவரங்கத்திலிருந்து சென்ற இராமானுசர் தங்கிய இடம்.]

மேல்சாதி *mēl-cādi,* பெ.(n.) மேற்குலம் பார்க்க; see *mēṟkulam.*

க. மேலு சாதி.

[மேல் + சாதி]

Skt. *jāti* > த. சாதி.

மேல்சாந்தி *mēl-cānti,* பெ.(n.) 1. கோயிலின் தலைமைப் பூசகன் (T.A.S.ii.48,49); chief priest, in a temple.

ம. மேல்சாந்தி.

[மேல் + சாந்தி]

மேல்சார் *mēl-šār,* பெ.(n.) 1. மேல்பக்கம் (கொ.வ.); western side. 2. மேற்கு (யாழ்.அக.); west.

[மேல் + சார்]

மேல்டாப்பு *mēltāppu,* பெ.(n.) வண்டி முதலியவற்றின் மேற்கூடு (இக்.வ.); roof or hood, as of a vehicle.

[மேல் + டாப்பு]

E. top > த. டாப்பு.

மேல்தட்டு *mēl-taṭṭu,* பெ.(n.) 1. மேல்மாடம்; upperstorey. 2. உயர்வானது; superior. *'மேல்தட்டு மக்கள் வாழ்க்கையே வேறானது' (உ.வ.).*

ம. மேத்தட்டு.

[மேல் + தட்டு]

மேல்தட்டுமக்கள் *mēl-taṭṭu-makkaḷ,* பெ.(n.) 1. உயர் குலத்தினர்; people of high caste. 2. வசதி வாய்ப்புப் படைத்தவர்; people who are in well-to-do position.

[மேல்தட்டு + மக்கள்]

மேல்தரம் *mēl-taram,* பெ.(n.) சிறந்தது, உயர்வானது; the best sort, superior.

ம. மேத்தரம்.

[மேல் + தரம்]

மேல்தரை *mēl-tarai,* பெ.(n.) தறியில் நெசவாளர் அமையும் மேட்டுப் பகுதி; the sitting (raised) place of a weaver at loom.

[மேல் + தரை]

மேல்தளம் *mēl-taḷam,* பெ.(n.) மேற்றளம் பார்க்க; see *mēṟṟaḷam.*

[மேல் + தளம்]

மேல்தறி *mēl-taṟi,* பெ.(n.) நெசவில் திண்ணை போல் மேடாக்கி அமைக்கப்பட்ட தறி; weaving made at pial like structure.

[மேல் + தறி]

மேல்தாடை *mēl-tāḍai,* பெ.(n.) கீழ்த் தாடைக்கு மேலாக அமைந்த தாடை; the upper jaw.

க. மேல்தவடெ.

[மேல் + தாடை]

மேல்துண்டு *mēl-tuṇḍu,* பெ.(n.) தோளில் போடும் துண்டு; towel worn over the shoulder. *'காமராசர் எப்போதும் மேல்துண்டு அணியும் பழக்கமுள்ளவர்'.*

[மேல் + துண்டு]



மேல்துண்டு

மேல்தோல் *mēl-tōl,* பெ.(n.) மேற்றோல் பார்க்க; see *mēṟṟōl.*

க. மேலுதோலு.

[மேல் + தோல்]

மேல்நாடு *mēl-nāḍu,* பெ.(n.) வெளிநாடு (குறிப்பாக) அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும்; foreign country especially western country. *'மேல் நாட்டு மோகம் இன்றைய இளைஞர்களை மிகுதியாகப் பாதித்திருக்கிறது'.*

[மேல் + நாடு. மேல் = மேற்கு]

மேல்நாள் *mēl-nāḷ,* பெ.(n.) மேனாள் பார்க்க; see *mēṉāḷ.*

ம. மேநாள்.

[மேல் + நாள்]

மேல்நிலைப்பள்ளி *mēl-nilai-p-paḷḷi,* பெ.(n.) மேனிலைப்பள்ளி காண்க; see *mēṉilai-p-paḷḷi.*

[மேல்நிலை + பள்ளி. புள் → பள் → பள்ளம். பள் → பள்ளி = சமமான நிலம், சமணப் பள்ளி, கல்விக்கூடம். மேல்நிலை = பள்ளியிறுதி வகுப்பிற்கு மேலானது.]

மேல்படிப்பு *mēl-paḍippu,* பெ.(n.) மேற் படிப்பு பார்க்க; see *mēṟ-paḍippu.*

[மேல் + படிப்பு. படி → படிப்பு. 'பு' தொ.பெ.ஈறு.]

மேல்பல் *mēl-pal,* பெ.(n.) மேல்வாய்ப்பல் பார்க்க; see *mēlvāy-p-pal.*

[மேல் + பல்]

மேல்பாகம் *mēlbāgam,* பெ.(n.) மேலாக அமைந்த பாகம்; upper portion.

க. மேல்பாக.

[மேல் + பாகம். பகு → பாகு → பாகம்]

மேல்பாதி *mēl-pādi,* பெ.(n.) 1. மேற்குப் பகுதி; western portion. *'பழந்தமிழகத்தின் மேல்பாதி மலையாள நாடாகி விட்டது' (உ.வ.).* 2. மேல் வாரம் (இ.வ.); the share of the produce assigned to the landlord or the government.

[மேல் + பாதி. பகுதி → பாதி]

மேல்பால் *mēl-pāl,* பெ.(n.) மேற்குப் பக்கம்; western side. *"பகலிழந்த மேல்பாற் றிசைப் பெண் புலம்புறுமாலை" (திவ். இயற். திருவிருத். 35).*

[மேல் + பால். பகல் → பால்]

மேல்பால்விதேகம் *mēl-pāl-vidēgam,* பெ.(n.) ஒன்பது வகை நிலத்தின் பெரும் பிரிவுகளுள் ஒன்று (பிங்.); a continent, one of *nava-kaṇṭam,* q.v.

[மேல் + பால் + விதேகம்]

Skt. *vi-dēha* > த. விதேகம்.

மேல்பீட்டி *mēl-pīṭṭi,* பெ.(n.) சட்டையின் மேற்பகுதி (இ.வ.); breast of a garment.

[மேல் + பீட்டி]

மேல்பேச்சு *mēl-pēccu,* பெ.(n.) பிறருரையை மறுத்தோ, எதிர்த்தோ பேசும் பேச்சு; counter argument, contradicting. *'நீ ஏன் ஒவ்வொரு பேச்சுக்கும் மேல் பேச்சு பேசுகிறாய்?'*

[மேல் + பேச்சு. பேசு → பேச்சு.]

மேல்மட்டம் *mēl-maṭṭam,* பெ.(n.) 1. மேற் புறத்தின் மட்டம்; superficial level at the top. 2. மட்டப் பலகை (இ.வ.); mason's level.

[மேல் + மட்டம்]



மேல்மடை *mēl-maḍai,* பெ.(n.) 1. நீர் மடையை அடுத்துள்ள விளைநிலம்; field near the sluice. (R.T.). 2. மேட்டிலுள்ள வாய்க்கால் (இ.வ.); water-way at high level.

[மேல் + மடை. மடு → மடை]

மேல்மண்டலம் *mēl-manḍalam,* பெ.(n.) எருமையூர் (மைசூர்)ப் பகுதி; Mysore region. (I.M.P. Sm. 94).

[மேல் + மண்டலம். மண்டு → மண்டலம்]

மேல்மாடி *mēl-māḍi,* பெ.(n.) வீட்டின் மேனிலைக் கட்டு (வின்.); upper storey.

க. மேலுப்பரிகெ; து. மேல்மாரிகெ, மேலுப்பரிகெ, மேல்மெஞ்சி.

[மேல் + மாடி]

மேல்மிதந்தபுத்தி *mēl-midanda-butti,* பெ.(n.) மேலெழுத்து வாரியாகக் காணப்படும் அறிவு (ஞானம்), ஆழமில்லாத அறிவு; superficial knowledge or understanding.

[மேல் + மிதந்த + புத்தி]

மேல்முகம் *mēl-mugam,* பெ.(n.) மேற்குப் பகுதி (நாஞ்,); western division.

[மேல் + முகம். மேடான பகுதி]

மேல்முகவரி *mēl-mugavari,* பெ.(n.) மடலின் புறத்தே மடலைப் பெறுவோரின் பெயர், ஊர் முதலியனவற்றைக் குறிக்கும் அடையாளம்; super scription, address, as of a letter. *'மேல் முகவரி தெளிவாக இல்லாத அஞ்சல் உரிய காலத்தில் சேரும் என்று சொல்ல வியலாது' (உ.வ.).*

[மேல் + முகவரி]

மேல்முந்தானை *mēl-mundāṉai,* பெ.(n.) மேல்முன்றானை பார்க்க (இ.வ.); see *mēl-muṉṟāṉai.*

[மேல்முன்றானை → மேல்முந்தானை]

மேல்முந்தி *mēl-mundi,* பெ.(n.) மேல் முன்றானை பார்க்க (இ.வ.); see *mēl-muṉṟāṉai.*

[மேல் + முந்தி]

மேல்முந்திரி *mēl-mundiri,* பெ.(n.) முந்திரி (வின்.); a minute fraction.

[மேல் + முந்திரி]

மேல் வாய்ச் சிற்றிலக்கத்தில் அடிமட்ட எண் மேல் முந்திரி என்னும் முந்திரி (1/320) யும் கீழ்வாய்ச்சிற்றிலக்கத்தில் அடிமட்ட எண் கீழ் முந்திரி (1/102, 1/400)யும் ஆகும். (ப.அ.72)

முந்து + இரி = முந்திரி. இரிதல் = விலகுதல், பிளத்தல், கெடுதல். இரிசல் = பிளவு. ஒ.நோ: பின்னம் = பிளவு கீழ்வாயிலக்கம். **E.** fraction, **fL.** frang, break. கீழ்வாயிலக்கங்களுள் முந்தியது முந்திரி யெனப்பட்டது. (வே.க.4,12).

மேல்முந்திரிகை *mēl-mundirigai,* பெ.(n.) மேல்முந்திரி பார்க்க; see *mēl-mundiri.*

[மேல் + முந்திரிகை. முந்திரி → முந்திரிகை]

மேல்முந்திரை *mēl-mundirai,* பெ.(n.) மேல்முந்திரி (கணக்கதி. 2, உரை) பார்க்க; see *mēl-mundiri.*

[மேல் + முந்திரை. முந்திரி → முந்திரை]

மேல்முறையீடு *mēl-muṟaiyīḍu,* பெ.(n.) வழக்கில் தோற்றவர் மேல்முறை மன்றத்தில் செய்யும் முறையீடு; appeal (by one aggrieved by decree or order of a court. *'மாவட்ட நீதி மன்றத்தில் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்ய முற்பட்டனர்'.*

[மேல் + முறையீடு. முறையிடு → முறையீடு]

மேல்முன்றானை *mēl-muṉṟāṉai,* பெ.(n.) உடுத்தும்போது மேற்புறமாக வரும் சேலையின் முகப்பு (இ.வ.); the front or outer end of a saree, pallu lait on the top of a saree.

து. மெண்ணடெ, மெந்நடெ (பெண்கள் தம் மார்பை மூடிக்கொள்ள பயன்படுத்தும் துணி).

[மேல் + முன்றானை. முன் + தானை – முன்றானை]

மேல்முனை *mēl-muṉai,* பெ.(n.) உச்சி; top.

[மேல் + முனை. முன் → முனை]

மேல்மூச்சு *mēl-mūccu,* பெ.(n.) 1. முயற்சி முதலியவற்றால் மேலெழும் பெருமூச்சு; deep breath, as at the time of exertion. *'மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடி வந்தார்' (உ.வ.).* 2. இறக்கும் தறுவாயில் மேனோக்கி யெழும் மூச்சுக் காற்று; dying breath.

[மேல் + மூச்சு. மூசு → மூச்சு.]

மேல்யோசனை *mēl-yōšaṉai,* பெ.(n.) மேலோசனை பார்க்க; see *mēlōšaṉai.*

[மேல் + யோசனை]

Skt. *yōjanā* > த. யோசனை.

மேல்வக்கணை *mēl-vakkaṇai,* பெ.(n.) 1. மேல்முகவரி பார்க்க; see *mēl-mugavari.* 2. தேவைக்கு அதிகமாகப் பேசுதல் (அதிகப் பிரசங்கம்); insolent or impertiment talk. *'மேல் வக்கணை பேசாதே'.*

[மேல் + வக்கணை]

மேல்வட்டம் *mēl-vaṭṭam,* பெ.(n.) 1. நகர முதலியவற்றின் வெளிச்சுற்று; outlying portion beyond the fixed limits of a city, temple or fort. 2. முதன்மை; superiority, leadership. *"சபையின் மேல்வட்டமாகக் காண வைப் போன் பிதாவாம்" (குமரேச. சத. 58).* 3. மதிப்பு (யாழ்.அக.); regard.

[மேல் + வட்டம். வள் → வட்டு → வட்டம்]

மேல்வட்டி *mēl-vaṭṭi,* பெ.(n.) வட்டிக்கு வாங்கிக் கூடுதல் வட்டிக்கு விட்டுப் பெறும் பணம்; sum taken on loan which is lent in turn with higher interest by the borrower.

[மேல் + வட்டி]

Skt. *vṛddhi* > த. வட்டி.

மேல்வடதிக்காள்வோன் *mēl-vaḍa-tik-k-āḷvōṉ,* பெ.(n.) காற்றுக் கடவுள் (நாமதீப. 90); god of wind, as the regent of the north-west.

[மேல் + வட + திக்கு + ஆள்வோன்]

மேல்வரி[1] *mēl-vari,* பெ.(n.) மேல்வரிச்சட்டம் பார்க்க; see *mēlvari-c-caṭṭam.*

[மேல் + வரி]

மேல்வரி² *mēl-vari,* பெ.(n.) வரியாக உறுதியிடப்படும் தொகையின் மீது குறிப்பிட்ட அளவின்படி கூடுதல் கட்டணம்; surcharge. *'இந்த வகைப் பொருள்களுக்கு 10% விற்பனை வரியும் 2% மேல் வரியும் செலுத்த வேண்டும்'.*

[மேல் + வரி]

மேல்வரிச்சட்டம் *mēlvari-c-caṭṭam,* பெ.(n.) 1. முன்மாதிரியாய் அமைந்தது; model. 2. ஒருவர் தாம் கையாளுவதற்குத் தாமே அமைத்துக் கொண்ட திட்டச் சொற்றொடர் (வாக்கியம்); motto.

[மேல்வரி + சட்டம்]

மேல்வரிசை *mēl-varišai,* பெ.(n.) 1. மேலிடமாக அமைந்துள்ள வரிசை; upper row. 2. செங்கற் கட்டடத்தில் எழுதகத்துக்கு மேலுள்ள படைச்சுவர்; blocking course, upper layer in masonry. (C.E.M.).

க. மேல்வரிசெ.

[மேல் + வரிசை. வரி → வரிசை]

மேல்வரும்படி *mēl-varum-baḍi,* பெ.(n.) (சம்பளம் போன்ற வருமானம் தவிர்த்து) அதிகப்படியாகக் கிடைக்கக்கூடிய வருமானம்; income in addition to the salary. *'மேல்வரும்படி இருப்பதால் அவர் பகட்டாக (ஆடம்பரமாக) நடக்கிறார்' (உ.வ.).*

[மேல் + வரும்படி. வரு(வா) + படி]

மேல்வருமானம் *mēl-varumāṉam,* பெ.(n.) மேல்வரும்படி பார்க்க; see *mēl-varum-baḍi.*

ம. மேல்வரவு.

[மேல் + வருமானம். வரு → வருமானம். மானம் = அளவு, அவ்வளவு குறித்தபொருள், பொருள்.]

மேல்வலி *mēl-vali,* பெ.(n.) உடம்பு நோவு (கொ.வ.); myalgia.

[மேல் + வலி]

மேல்வா-தல் (மேல்வருதல்) *mēl-vā-,* 18 செ.கு.வி. (v.i.) 1. எழுதல்; to rise. *"நாச்செற்று விக்குண் மேல் வாராமுன்" (குறள், 335).* 2. ஒருவர் மீது எதிர்த்து வருதல்; to advance against, as an enemy. *"பரதனிப் படைகொடு..... மேல் வந்தான்" (கம்பரா. கிளை. 27).* 3. நெருங்கி வருதல்; to approach. *"மூப்பு மேல் வாராமை முன்னே" (நாலடி, 326).*

[மேல் + வா (வரு)-,]

மேல்வாசகம் *mēl-vāšagam,* பெ.(n.) மேல் முகவரி பார்க்க (இ.வ.); see *mēl-mugavari.*

[மேல் + வாசகம். வாயி → வாசி → வாசகம்.]

மேல்வாசி *mēl-vāši,* பெ.(n.) 1. ஒப்படிக் கணக்கைத் தீர்க்குமுன் அறம் முதலிய வற்றிற்குச் செலவிடும் தவசம்; corn distributed for charitable and other purposes before the settlement of harvest accounts. 2. மதிப்பிற்கு மேல் விளைச்சல் காணும் போது நில உரிமை யாளர்க்கு அதிகப்படியாகக் கிடைக்கும் தவசம்; the quantity of corn due to the landlord when the produce exceeds the estimation or *puḷḷi.* 3. மேல்வாசிநிலம் பார்க்க; see *mēl-vāsi-nilam.*

[மேல் + வாசி. வாய் → வாசி]

மேல்வாசிநிலம் *mēl-vāši-nilam,* பெ.(n.) அயல் நிலங்களினும் அதிக வருவாயுள்ள நிலம் (இ.வ.); land that produces *pro rata* more than other lands in the neighbourhood.

[மேல்வாசி + நிலம்]

மேல்வாசியளவு *mēl-vāši-y-aḷavu,* பெ.(n.) நெல் முதலியவற்றை அளவில் அதிகப் படுத்திக் காட்டும் அளத்தல் முறை (இ.வ.); a skilful method of measuring corn so as to show more than the real quantity.

[மேல்வாசி + அளவு. அள் → அள → அளவு]

மேல்வாய் *mēl-vāy,* பெ.(n.) 1. வாயின் மேற்பகுதி (உரி.நி.); palate. 2. மேல் வாயிலக்கம், 1 பார்க்க; see *mēl-vāyilakkam 1.*

ம. மேல்வாயி.

[மேல் + வாய்]

மேல்வாய்க்கணக்கு *mēlvāy-k-kaṇakku,* பெ.(n.) மேல்வாயிலக்கம், 1 பார்க்க(வின்.); see *mēl- vāyilakkam1.*

[மேல்வாய் + கணக்கு]

மேல்வாய்ச்சிற்றிலக்கம் *mēlvāy-c-ciṟṟilakkam,* பெ.(n.) மேல்வாயிலக்கம் பார்க்க (வின்.); see *mēl- vāyilakkam.*

[மேல்வாய் + சிற்றிலக்கம்]

எண்ணலளவை, சிற்றிலக்கம், பேரிலக்கம் என இருவகை. அரை, கால், அரைக்கால், வீசம் (மாகாணி) முதலிய பின்னவெண்கள் சிற்றிலக்கமும், ஒன்று இரண்டு மூன்று முதலிய முழுவெண்கள் பேரிலக்கமும் ஆகும். சிற் றிலக்கத்தில், கீழ்வாயிலக்கமென்றும் மேல் வாயிலக்கமென்றும் இருவகையுண்டு. கீழரை 1/640, கீழ்க்கால் 1/1280, கீழரைக்கால் 1/2560, கீழ்வீசம் 1/5120 முதலியன கீழ்வாய்ச் சிற்றிலக்கமும், மேலரை (அரை), மேற்கால் (கால்), மேலரைக்கால் (அரைக்கால்), மேல் வீசம் (வீசம்) முதலியன மேல்வாய்ச் சிற்றிலக்கமுமாகும். கீழ்வாய்ச் சிற்றிலக்கத்தொடு ஒப்பு நோக்கியே அரைகால் அரைக்கால் முதலியன மேல்வாய்ச் சிற்றிலக்கமெனப்படும். (ப.ஆ.72).

மேல்வாய்ப்பல் *mēlvāy-p-pal,* பெ.(n.) வாயின் மேல்வரிசைப்பல்; upper tooth or teeth. *'குழந்தைக்கு மேல்வாய்ப்பல் முளைத்து விட்டதா?' (உ.வ.).*

மறுவ. அண்பல்.

[மேல்வாய் + பல்]

மேல்வாய்ப்புறம் *mēlvāy-p-puṟam,* பெ.(n.) மேல்வாய், 1 (பிங்.) பார்க்க(வின்.); see *mēl-vāy 1.*

[மேல்வாய் + புறம்]

மேல்வாயிலக்கம் *mēl-vāy-ilakkam,* பெ.(n.) 1. ஒன்றிலிருந்து மேலெண்ணப்படும் எண்முறை; enumeration of whole number, as from one upwards, dist. fr. *kīlvāy-ilakkam.* 2. பின்னத்தில் மேலெழுதப்படும் எண் (வின்.); (Arith.) numerator of a fraction.

[மேல்வாய் + இலக்கம்]

மேல்வாரதார் *mēl-vāratār,* பெ.(n.) நிலத்தின் உரிமையாளர்; the proprietor or owner of the land.

[மேல்வாரம் + தார்]

Skt. *dārin* > த. தார்.

மேல்வாரம் *mēl-vāram,* பெ.(n.) விளைவி லிருந்து உரிமையாளருக்குக் கொடுத்தற் குரிய தவசம்; the proportion of the crop or produce claimed by the land-holder, dist. fr. *kuḍi-vāram.* (C.G.). *"இந்நிலம் உழுது மேல் வாரத்தால் வந்து நெல்லு ஆயிரத்திருநூற்றி பத்தைங்கல்" (தெ. கல். தொ. 4. கல். 223).*

ம. மேல்வாரம்.

[மேல் + வாரம்]

மேல்வாரை *mēl-vārai,* பெ.(n.) 1. சாரத்தின் மேற் போடப்படும் பலகை; planks in scaffolding. 2. ஊர்தி (வாகனம்) முதலிய வற்றைத் தூக்கிச் செல்ல உதவும் தண்டு; poles for carrying *vāganam* etc., tied to it on the outside. 3. கைம்மரம்; rafter.

[மேல் + வாரை. வார் → வாரை]

மேல்விசாரணை *mēl-višāraṇai,* பெ.(n.) 1. கண்காணிப்பு (வின்.); superintendence, inspection. 2. மேற்கொண்டு செய்யும் புலனாய்வு (விசாரணை); further enquiry or trial, retrial, rehearing.

[மேல் + விசாரணை]

Skt. *vi-cāraṇā* > த. விசாரணை.

மேல்விட்டம் *mēl-viṭṭam,* பெ.(n.) வீட்டின் முகட்டு வளை (வின்.); ridge-piece.

[மேல் + விட்டம்]

மேல்விட்டவளைவு *mēl-viṭṭa-vaḷaivu,* பெ.(n.) கட்டட வளைவின் வெளிவீச்சு; extrados of an arch.

[மேல்விட்ட + வளைவு. முள் → (மள்) → வள் → வளை → வளைவு]

மேல்விதேகம் *mēl-vidēgam,* பெ.(n.) மேல்பால்விதேகம் (வின்.) பார்க்க; see *mēlpālvidēgam.*

[மேல் + விதேகம்]

Skt. *vi-dēha* > த. விதேகம்.

மேல்விரி *mēl-viri,* பெ.(n.) 1. படுக்கையின் மேல்விரிப்பு; bed-sheet. *"நாநா வர்ணமா யிருப்பதொரு மேல்விரியை விரித்தாற் போலே" (ஈடு. 7, 6, 6).* 2. மேற்கட்டி (விதானம்); canopy.

[மேல் + விரி]

மேல்விரிப்பு *mēl-virippu,* பெ.(n.) மழைக் காகவோ, சூரிய ஒளி மறைப்புக் காகவோ மேலாகக் கட்டும் துணி; an awning.

ம. மேல்விரிப்பு.

[மேல் + விரிப்பு]

மேல்விலங்கு *mēl-vilaṅgu,* பெ.(n.) உயிர் மெய்களில் இகர ஈகாரங்களைக் குறிக்க மெய்கள் மேல் இடும் குறியீடு (தொல். எழுத். 17, உரை); (Gram.) sign. of i, *ī,* in vowel consonants.

[மேல் + விலங்கு. வில் → விலங்கு = குறுக்காக வளர்வது, குறுக்காக நிற்கும் குன்று, குறுக்குக் கோடுகள் போல் உயிர் மெய்யெழுத்துகளில் இகர ஈகாரங்களைக் குறிக்கும் அடையாளமாக உயிர்மெய் எழுத்துகளின் மேல் வரையும் வளைவு. உயிர்மெய் எழுத்துகளின் மேல் இடம் பெறுவது மேல்விலங்கு.]

மேல்விலாசம் *mēl-vilāšam,* பெ.(n.) மேல்முகவரி பார்க்க; see *mēl-mugavari.*

து. மேல்விளாச.

[மேல் + விலாசம்]

Skt. *vi-lāsa* > த. விலாசம்.

மேல்விழு-தல் *mēl-viḻu-,* 2 செ.கு.வி. (v.i.) 1. முற்படச் சென்று பாய்தல்; to rush, as upon an enemy. *"கம்ஸப் ரேரிதராய்......... மேல்விழுவார்கள்" (ஈடு. 10, 3, 9).* 2. வலியப் புகுதல்; to volunteer, to offer voluntarily. *"மேல் வீழ்ந்து நாமே விளம்பினோம்" (தனிப்பா. ii, 97, 249).* 3. ஊக்கத்துடன் செயலில் முந்துதல்; to fall to work with enthusiasm.

க. மேல்பிழு; து. மேலுகு பூருனி (ஒன்றின் மேல் விழுதல், தாக்குதல்); பட. மேலெபுய்.

[மேல் + விழு-,]

மேல்விளாசம் *mēl-viḷāśam,* பெ.(n.) மேல் முகவரி பார்க்க; see *mēl-mugavari.*

[மேல் + விலாசம்]

Skt. *vilāsa* > த. விளாசம்.

மேல்விளைவு *mēl-viḷaivu,* பெ.(n.) 1. பிற்பயன்; consequence, future result. *"என்னதாகு மேல் விளை வென் றிருந்தானிராமன்" (கம்பரா. கடல்காண். 12).* 2. மேற்செய்ய வேண்டிய செயல்; business that ought to be done in the near future. *"தூதன் வந்திறைஞ்சி மேல்விளைவு மனையன்றன் வரவுஞ் சொலி" (பிரபோத. 10, 14).* 3. ஓராண்டில் அதிகப்படியாகப் பயிரிட்டுப் பெறும் விளைச்சல் (இ.வ.); additional or extra crop for the year.

க. மேல்விழு; பட. மேல்புய்.

[மேல் + விளைவு. விளை → விளைவு]

மேல்வினை *mēl-viṉai,* பெ.(n.) 1. இப்பிறப்பிலே செய்யும் நற்செயல் (புண்ணியம்), அறங்கடை (பாவம்) கள்; karma which is yet to come. *"மெய்ஞ்ஞானத்தால்........ மேல்வினை கூடாது" (வேதா. சூ. 162).* 2. மேல்விளைவு, 1 பார்க்க (இ.வ.); see *mēl-viḷaivu1.*

[மேல் + வினை]

மேல்வீடு *mēl-vīḍu,* பெ.(n.) 1. தரையில் அமைந்த அறைகளுக்கு மேல் அறைகள் அமையுமாறு கட்டப்பட்ட வீடு, மெத்தை வைத்த வீடு; storeyed house. 2. வீட்டின் மேல் கட்டப்பட்ட அறை அல்லது அறைகள்; upper storey. *'அப்பா மேல் வீட்டில் இருக்கிறாரா பார்' (உ.வ.).* 3. துறக்கம் (மோட்சம்) (ஈடு.); heaven.

மறுவ. மாடிவீடு, மெத்தைவீடு.

[மேல் + வீடு]

மேல்வீராணம் *mēl-vīrāṇam,* பெ.(n.) வடவார்க்காடு மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; a village in North Arcot dt.

[மேல் + வீராணம். பராந்தகமன்னனின் சிறப்புப் பெயர்களுளொன்று வீர நாராயணன். மேற்குத் திசையில் அமைந்த வீர நாராயணபுரம் மேல் வீரநாராயணபுரம். அது மேல் வீராணமாய் மருவியுள்ளது. ஆர்க்காடு வட்டத்தில் வீர நாராயணபுரம் என்னும் ஊர், தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள வீராணத்தேரி என்னும் ஏரி, திருவண்ணாமலை வட்டத்திலுள்ள வீராணம் என்னும் ஊர், அம்மன்னன் பெயரால் பெயர் பெற்றவை.]

மேல்வெள்ளம் *mēl-veḷḷam,* பெ.(n.) முதல் வெள்ளத்திற்குப் பின்வரும் வெள்ளம் (இ.வ.); second or subsequent spate.

[மேல் + வெள்ளம். விள் → வெள் → வெள்ளம் = வெறுப்பான புதுப்பெருக்கு நீர்]

மேல்வேட்டி *mēl-vēṭṭi,* பெ.(n.) துண்டு; towel.

[மேல் + வேட்டி. வெட்டு → வெட்டி → வேட்டி]

மேலகம் *mēlagam,* பெ.(n.) மேல்வீடு, 2 பார்க்க; see *mēl-vīḍu* 2.

[மேல் + அகம்]

மேலங்கம் *mēlaṅgam,* பெ.(n.) 1. வெளிப் படை; exterior, external appearance. 2. வெளிப் பகட்டு; outward show.

[மேல் + அங்கம்]

Skt. *aṅga* > த. அங்கம்.

மேலங்கி *mēlaṅgi,* பெ.(n.) மேற்சட்டை (வின்.); outer coat.

து. மேலங்கி.

[மேல் + அங்கி]

Skt. *aṅgin* > த. அங்கி.

மேலடி *mēlaḍi,* பெ.(n.) தவசமாகச் செலுத்தும் இறை (T.A.S.vi. 14); tax paid in kind.

[மேல் + அடி]

மேலடைப்பு *mēl-aḍaippu,* பெ.(n.) மேற் கூரை அல்லது மச்சின் அடிப்புறத்தில் தைக்கப்படும் பலகை (இ.வ.); ceiling planks, planks of a loft below the roof.

[மேல் + அடைப்பு. அடை → அடைப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

மேலத்தாட்சி *mēla-t-tāṭci,* பெ.(n.) உறுதி மொழி (வின்.); attestation, confirmatory sworn statement, written or oral.

[மேல் + அத்தாட்சி]

Skt. *hasta-sākṣin* > த. அத்தாட்சி.

மேலத்து *mēlattu,* பெ.(n.) பெருமிதம்; superior airs. *"மிகமேலத்தாய்ப் பேசிவெளிப் பகட்டாய்" (பஞ்ச. திருமுக. 970).*

மேலதிகம் *mēladigam,* பெ.(n.) தேவைக்கு அதிகமாக கூடுதல்; additional, extra. *'உன்னிடம் மேலதிகமாகவுள்ள பாவாணரின் கட்டுரைப் படியொன்றை என்னிடம் கொடுக்கக் கூடாதா?'. 'மேலதிகமாக உள்ள ஆடைகளை ஆதரவற்றோருக்குக் கொடுத் துதவலாம்'.*

[மேல் + அதிகம்]

மேலதிகாரம் *mēladigāram,* பெ.(n.) உயர் அதிகாரம், கண்காணிக்கும் பொறுப்பு; higher authority.

து. மேலதிகார.

[மேல் + அதிகாரம். அதி + (கரி)காரம் → அதிகாரம் = மிகுதி, வலிமை, ஆட்சி.]

மேலதிகாரி *mēladigāri,* பெ.(n.) உயர் அதிகாரி, பணியைக் கண்காணிக்கும் பொறுப்பதிகாரி; high command, boss. *'அரசு அலுவலகங்களில் குறைந்த எண்ணிக்கையில்தான் மேலதிகாரிகள் இருப்பார்கள்'.*

து. மேலதிகாரி.

[மேல் + அதிகாரி]

மேலப்பட்டு *mēla-p-paṭṭu,* பெ.(n.) செங்கல் பட்டு மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; a village in *Ceṅgalpaṭṭu.*

[மேல் + பட்டு – மேல்பட்டு → மேலப்பட்டு. செங்கல்பட்டு, மதுராந்தகம் வட்டங்களில் இப்பெயர் கொண்ட ஊர்கள் சில உள்ளன. திசை அடிப்படையில் கீழ்ப்பகுதி ஊர்களினின்று வேறுபடுத்திக்காட்ட அமைந்ததே 'மேல்' அடை]

மேலவர் *mēlavar,* பெ.(n.) அறிஞன் (திவா.); wise man.

மறுவ. ஆய்ந்தோர், ஆரியர், ஆன்றோர், உயர்ந்தோர், உலகு, சான்றோர், நல்லவர், மிக்கோர்.

[மேல் → மேலவர்]

மேலவர்க்கிறைவன் *mēlavar-k-kiṟaivaṉ,* பெ.(n.) மேலவரிறைவன், 1 பார்க்க (திவா.); see *mēlavar-iṟaivaṉ1.*

[மேலவர்க்கு + இறைவன்]

மேலவரிறைவன் *mēlavar-iṟaivaṉ,* பெ.(n.) 1. முருகக் கடவுள்; Lord Murugan, Kandan. 2. இந்திரன்; Indran.

[மேலவர் + இறைவன். இறை → இறைவன்]

மேலவளைவு *mēla-vaḷaivu,* பெ.(n.) மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்திலுள்ள ஊர்; a village in Madurai dt, *Mēlūr* taluk.

[மேல் + வளைவு. வளைவு அல்லது வளவு ஒருவருக்குச் சொந்தமான பல வீடுகள் சேர்ந்த இடம். கள்ளர்கள் இப்பகுதியை வளைத்துக் குடியேறியவூர் என்றும் காரணம் கூறுவர்.]

மேலவன் *mēlavaṉ,* பெ.(n.) 1. பெரியோன்; great or superior person. *"மேலவன் விளம்பலும் விளம்பன் மேயினான்" (கம்பரா. விபீடண. 78).* 2. அறிஞன் (திவா.); wise man. 3. தேவன் (பிங்.); celestial being. 4. மேலிடத்துள்ளவன்; one who is seated high, as on a horse. *"குதிரையின் றலைகள் கொய்து மேலவன் சிரத்தைச் சிந்தி" (கம்பரா. அதிகாய. 201).*

ம. மேலவன்.

[மேல் → மேலவன்]

மேலவை *mēlavai,* பெ.(n.) சட்டமன்ற உறுப்பினர்கள் தன்னாட்சி (சுயாட்சி) அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப்பெறும் உறுப்பினர்கள், ஆளுநரால் அமர்த்தப் (நியமிக்கப்) பெறுபவர்கள், திறனாய் வறிஞர்கள் ஆகியோர்களைக் கொண்ட அவை; upper chamber in the bicameral legislature (of a state). *'மேலவையில் அமர்த்த (நியமிக்க)ப் பெற்றவர்கள் யாவரும் மக்கள் நலனில் கருத்து கொள்தல் வேண்டும்'.*

[மேல் + அவை. அமை → அவை.]

மேலழுக்கு *mēlaḻukku,* பெ.(n.) உடம்பழுக்கு (வின்.); dirt or filth on the body.

[மேல் + அழுக்கு]

மேலறை *mēlaṟai,* பெ.(n.) உயரே அமைந்த உள் வீடு, அரங்கு; upper compartment.

து. மேல் அதெ.

[மேல் + அறை]

மேலன் *mēlaṉ,* பெ.(n.) மேலவன் பார்க்க; see *mēlavaṉ.*

ம. மேலன்.

[மேல் → மேலன். 'அன்' ஆ.பா.ஈறு]

மேலனம் *mēlaṉam,* பெ.(n.) 1. பழக்கம்; acquaintance. 2. மேளனம், 1, 3 பார்க்க (யாழ்.அக.); see *mēḷaṉam1,3.*

[மேல் + அனம்]

மேலா[1]-த்தல் *mēlā-,* 12 செ.குன்றாவி. (v.t.) மேற்புறமாக்குதல் (யாழ்.அக.); to turn upward.

[மேல் + ஆ –,]

மேலா²–தல் *mēlā-,* 6 செ.கு.வி. (v.i.) 1. சிறத்தல் (கொ.வ.); to excel. 2. வெற்றி பெறுதல்; to succeed, overcome.

து. மேலாபுனி.

[மேல் + ஆ–,]

மேலா³ *mēlā,* பெ.(n.) மேலிடம், மேற்பட்ட அதிகாரப் பதவி (இ.வ.); superior or higher authorities. *'மேலாவிலிருந்து ஆணை வந்துள்ளது'.*

[மேல் → மேலா]

மேலாக்கம் *mēlākkam,* பெ.(n.) உயர்வு, மேம்பாடு; elevation, promotion.

ம. மேலாக்கம்.

[மேல் + ஆக்கம். ஆக்கு → ஆக்கம்]

மேலாக்கு *mēlākku,* பெ.(n.) மகளிர் மார்பின் மேலிடும் சேலை; upper garment worn by women, the part of a saree thrown over breast and shoulders.

[மேல் + ஆக்கு]

மேலாக¹ *mēlāga,* வி.எ. (adv.) மேல் பரப்பை ஒட்டிய பகுதியில்; on the surface, not deeply. *'விதையை மேலாக ஊன்ற வேண்டும் அப்போது தான் எளிதில் முளைக்கும்' (உ.வ.).*

[மேல் + ஆக]

மேலாக² *mēlāga,* வி.எ. (adv.) அதிகமாக, மேல்; more than. *'கடந்த ஓராண்டுக்கும் மேலாக அனுமதி கேட்டுப் போராட்டம் நடைபெறுகிறது'. 'அவர் ஒரு மணி நேரத்திற்கும் மேலாகப் பேசிக் கொண்டிருக்கிறார்'.*

[மேல் + ஆக]

மேலாகு–தல் *mēlāgu-,* 7 செ.கு.வி. (v.i.) மேலா²–தல் பார்க்க; see *mēlā²-,*

து. மேலாபுனி.

[மேல் + ஆகு–, ஆ → ஆகு]

மேலாடை *mēlāḍai,* பெ.(n.) 1. மேல்துண்டு, மேற்றுணி; upper cloth, cloth worn loosely over the shoulders. *"மேலாடை வீழ்ந்த தெடுவென்றான்" (நள. கலிநீங்கு. 45).* 2. காய்ச்சும் பாலின் மேற்பரப்பில் படியும் ஏடு; cream of milk.

ம. மேலாட; க. மேலுது.

[மேல் + ஆடை]

மேலாண்மை *mēlāṇmai,* பெ.(n.) பிறரைக் கட்டுப் படுத்தக்கூடிய வலு (பலம்), மேலாளுமை, மேலோங்கிய நிலை; dominance, suzerainty. *'அணு ஆயுத மேலாண்மை'.*

[மேல் + ஆண்மை. ஆள்(ளு)மை → ஆண்மை]

மேலாண்(மை)இயக்குநர் *mēlāṇ(mai)-iyakkunar,* பெ.(n.) ஆளுவ (நிருவாக)த் துக்காக அரசின் ஒப்புதலுடன் அமர்த்தப்படும் சிறப்பு அதிகாரமுடைய உயர் அதிகாரி; managing director.

[மேலாண்மை + இயக்குநர்]

மேலாதிக்கம் *mēlādikkam,* பெ.(n.) முறை யற்ற அதிகாரம், கட்டுப்படுத்தி ஆளும் அதிகாரம்; hegemony (of a country), domination (by a nation or a group of people). *'தீவிர (பயங்கர) வாதிகளின் மேலாதிக் கத்தில் மேலும் சிலர் சிக்கியுள்ளனர்'.*

[மேல் + ஆதிக்கம்]

மேலாநெல்லி *mēlā-nelli,* பெ.(n.) ஒரு வகைச் செடி; black-berried feather foil.

[மேலா + நெல்லி]

மேலாப்பு *mēlāppu,* பெ.(n.) மேற்கட்டு (மேல்விதானம்); awning canopy. *"விண்ணீல மேலாப்பு விரித்தாற்போன் மேகங்காள்" (திவ். நாய்ச். 8,1).*

[மேல் → மேலாப்பு]

மேலாம்புறம் *mēlām-puram,* பெ.(n.) மேலெழுந்த வாரி; superficiality.

[மேல் → மேலாம் + புறம்]

மேலாம்மினுக்கி *mēlām-minukki,* பெ.(n.) மேலால்மினுக்கி பார்க்க; see *mēlāl-minukki.* *'மேலாம்மினுக்கியைக் கொண்டவன் கெட்டான், மேட்டிலே பயிரிட்டவன் கெட்டான்' (பழ.).*

[மேலால்மினுக்கி → மேலாம்மினுக்கி]

மேலாமத்தூர் *mēlāmattūr,* பெ.(n.) விருது நகர் மாவட்டம், சாத்தூர் வட்டத்திலுள்ள ஊர்; a village in Virudunagar dt., *Sāttūr* taluk.

[மேல் + ஆமத்தூர். ஆமத்தூர் என்னும் ஊருக்கு மேற்கே அமைந்தவூர்]

மேலாமரம்¹ *mēlā-maram,* பெ.(n.) கட்டு மரவகை (இ.வ.); a kind of catamaran.

[மேலா + மரம்]

மேலாமரம்² *mēlā-maram,* பெ.(n.) பட்டினவரின் கருவி வகை (அபி.சிந்.); a kind of fisherman's instrument.

[மேலா + மரம்]

மேலாமினுக்கி *mēlā-minukki,* பெ.(n.) மேலால்மினுக்கி பார்க்க (வின்.); see *mēlāl-minukki.*

[மேலா + மினுக்கி]

மேலாமுதுரம் *mēlā-muduram,* பெ.(n.) கத்தூரிமானின் எலும்பு (யாழ்.அக.); bone of musk-deer.

[மேலா + முதுரம்]

மேலாயினார் *mēlāyinār,* பெ.(n.) உயர்ந்தோர்; elders. *"இது மேலோயி னாரிடங்களிற் பூப்புணர்த்துமாறு" (இறை. 43, பக். 175).*

க. மேலாதவரு.

[மேல் + ஆயினார்]

மேலார் *mēlār,* பெ.(n.) 1. மேலாயினார் பார்க்க; see *mēlāyinār.* 2. வீரர்; warriors. *"மேலாரிறையமருள்" (பு.வெ. 9,8).*

[மேல் → மேலார்]

மேலார்ப்பு *mēlārppu,* பெ.(n.) மேலாப்பு பார்க்க (யாழ்.அக.); see *mēlāppu.*

[மேலாப்பு → மேலார்ப்பு]

மேலால்¹ *mēlāl,* வி.எ. (adv.) உயர்தரமான; upper, higher.

[மேல் → மேலால்]

மேலால்² *mēlāl,* வி.எ. (adv.) 1. இனிமேல்; hereafter. *'மேலால் இப்படிச் செய்யாதே'.* 2. மேலெழுந்த வாரியாக; superficially. *'அவன் வேலை எப்பொழுதும் மேலாலாகத் தான் இருக்கும்' (உ.வ.).*

[மேல் → மேலால்]

மேலால்மினுக்கி *mēlāl-miṉukki,* பெ.(n.) மேனியை அழகுபடுத்தி(அலங்கரித்து)க் கொண்டு மினுக்குபவள் (வின்.); woman who decks herself meretriciously.

[மேலால் + மினுக்கி. மினுக்கு → மினுக்கி. 'இ'.பெ.பா.ஈறு.]

மேலாலம் *mēlālam,* பெ.(n.) மழை (சது.); rain.

[மேல் + ஆலம். ஆல் → ஆலம் = நீர், மழை]

மேலாலவத்தை *mēlālavattai,* பெ.(n.) நெற்றியில் (லலாடத்தில்) ஆதன் (ஆன்மா) தங்கி நிற்கும் நிலைகளாகிய விழிப்பில் விழிப்பு (சாக்கிரத்திற் சாக்கிரம்), விழிப்பில் கனவு (சாக்கிரத்திற் சொப்பனம்), விழிப்பில் உறக்கம் (சாக்கிரத்தில் சுழுத்தி), விழிப்பில் அயர்வுறக்கம் (சாக்கிரத்தில் துரியம்), விழிப்பில் உயிர்ப்படக்கம் (சாத்திரத்தில் துரியாதீதம்) என்னும் ஐவகை நிலைகள் (அவத்தைகள்); (சி.சி. 4, 35, நிரம்ப); (Saiva) the five *avattai* which the soul, seated in the forehead, undergoes viz. *šākkirattiṟ-šākkiram, šakkirattiṟ-sop panam, šākkirattil-suḻutti, šakkirattil-turiyam, šākkirattil turiyātītam.*

[மேலால் + அவத்தை]

Skt. *ava-sthā* > த. அவத்தை.

மேலாவலை *mēlā-valai,* பெ.(n.) மீன் பிடிக்கும் வலை வகை (அபி.சிந்.) (இ.வ.); a kind of fishing net, used in the sea.

[மேலா + வலை]

மேலாவு *mēlāvu,* பெ.(n.) மேலதிகாரி; high command.

[மேல் → மேலா → மேலாவு (மு.தா. 74)]

மேலாழியார் *mēlāḻiyār,* பெ.(n.) வித்தியாதர மன்னர்; Vittiyadara chiefs. *"மேலாழியார் வெள்ளிவேதண்ட லோகம்" (தக்கயாகப். 545).*

[மேல் + ஆழியார். ஆழி → ஆழியார்]

மேலாள் *mēlāḷ,* பெ.(n.) 1. நாற் குலத்து (சாதியு) ளொன்றைச் சேர்ந்தவன்; caste Hindu. *'மேலாளா ? கீழாளா?'.* 2. கண் காணிப்போன்; overseer, supervisor.

ம. மேலாள்.

[மேல் + ஆள்]

மேலாளர் *mēlāḷar,* பெ.(n.) செயலாட்சி யாளர்; manager. *'உங்கள் அலுவலகத்தின் மேலாளர் திறமைசாலி'.*

[மேல் + ஆளர். மேல் பார்வை பார்ப்பவர்.]

மேலான் *mēlāṉ,* பெ.(n.) மேலோன் பார்க்க; see *mēlōṉ.*

ம. மேலான்.

[மேல் → மேலான்]

மேலான *mēlāṉa,* பெ.எ. (adj.) 1. (குறிப்பிடப் படும் அளவுக்கு) அதிகமான; more than. *'நூற்றுக்கும் மேலானோர் கொல்லப்பட்டனர்'.* 2. சிறந்த, உயர்ந்த; excellent, superior, better. *'இவ்விளம்பரம் குறித்து தங்களின் மேலான கருத்துகள் கோரப்படுகின்றன'.*

[மேல் + ஆன]

மேலிடம் *mēliḍam,* பெ.(n.) செயல்பாடுகளை ஆய்வு செய்யும் உயர்மட்ட அமைப்பு அல்லது குழு; decision making body, high-level authority. *'வேட்பாளர்களைத் தேர்வு செய்வது கட்சி மேலிடம்'.*

து. மேல்சர.

[மேல் + இடம்]

மேலிடு[1]–தல் *mēliḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. அதிகமாதல்; to increase, grow, as love. 2. மேல் விழு–தல், 1 பார்க்க; see *mēl-viḻu-, 1.* *"புகழோடே முடிய வமையு மென்று மேலிட்டார்கள்" (ஈடு. 6, 4, 3).* 3. மேலெழுதல் (யாழ்.அக.); to rise above, as water. 4. உமட்டுதல்; to be vomitted. *'சாப்பிட்ட சோறு மேலிடுகிறது'.*

[மேல் + இடு–, 'இடு'. து.வி.]

மேலிடு[2]–தல் *mēliḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) தலைக்கீடு கொள்ளுதல்; to put forward, as a pretext. *"மூரிவெஞ் சிலைமேலிட்டு மொய்யமர் மூட்டிவிட்டான்" (கம்பரா. பரசு. 28).*

[மேல் + இடு–,]

மேலிதழ் *mēlidaḻ,* பெ.(n.) மேல் வாயிதழ்; upper lip.

[மேல் + இதழ். உதடு → (உதழ்) → இதழ் = உதடு, உதடு போன்ற பூவிதழ்]

மேலிமை[1] *mēlimai,* பெ.(n.) மேன்மை (இ.வ.); excellence.

க. மேல்மெ; தெ. மேலிமி.

[மேல் → மேலிமை]

மேலிமை[2] *mēlimai,* பெ.(n.) கண்ணுக்கு மேலுள்ள இமை; upper eyelid.

[மேல் + இமை]

மேலிமைத்தாறு *mēlimai-t-tāṟu,* பெ.(n.) பிறவி நச்சு வகையில் ஒன்று (யாழ்.அக.); a kind of mineral poison.

[மேலிமை + தாறு]

மேலீடு *mēlīḍu,* பெ.(n.) 1. மேலிடுவது; that which is placed over. 2. குதிரைச் சேணம் முதலியன; accoutrements of a horse. *"பூணும் பொற்படையாகிய மேலீட்டையும்" (பு.வெ.10, 2, உரை).* 3. கண்காணிப்பு முதலியன செய்யும் மேற்பதவி (வின்.); superintendence, superioity in office. 4. மிகுதியாக விருக்கை (வின்.); prevalence, predominance. 5. மிகை; being overwhelmed. *'உணர்ச்சி மேலீட்டால் அழலாமா?'.* 6. உணவுடன் சேரும் கறி முதலியன (வியஞ்சனம்); relish or sauce used with food, as curry with rice. *"வாளையினது...... தடியை....... சோற்றிற்கு மேலீடாகக் கொண்டு" (புறநா. 61, உரை).* 7. மகளிர் காதணி வகை (வின்.); a jewel worn in the ear by women. 8. தலைக்கீடு; pretext, pretence. 9. அடுத்த வாய்ப்பு; next occasion. *'மேலீட்டுக்குப் பார்த்துக் கொள்வோம்'.* 10. ஒரு இணை (ஜதை)யில் மேம்பட்டிருப்பது; the superior of a pair. 11. வெளிப்பகட்டு; outward appearance. 12. கோயில் மேற்சுவர்; capital, projecting structure on the top of walls, especially round temples and forts. 13. வரிசை அல்லது அடுக்கில் மேலாக இருப்பது; that which is uppermost in a pile or first in a series. *'இது மேலீட்டு இட்டலி'* 14. அடைமானக் காரனிடம் மீண்டும் கடன் வாங்கி அடைமானச் சொத்தையே பொறுப்புக் கட்டுகை (Legal.); further charge or mortgage.

[மேல் + ஈடு. இடு → ஈடு]

மேலுக்கு *mēlukku,* வி.அ. (adv.) 1. புறத்தே மட்டும், கமுக்கமாயல்லாமல்; formally, to keep up appearances. *'மேலுக்குச் சினந்துக் கொள்ளுகின்றான்'.* 2. மேற்புறமாக; on the outer side.

[மேல் + கு. 'கு' நான்காம் வே. உருபு]

மேலுக்கெடு-த்தல் *mēlu-k-keḍu-,* 4 செ.கு.வி. (v.i.) வாயிலெடுத்தல் (இ.வ.); to vomit.

[மேலுக்கு + எடு-,]

மேலுசாவல் *mēlušāval,* பெ.(n.) மேற்கொண்டும் செய்யும் புலனாய்வு (மேல் விசாரணை); further enquiry or trial. *'அவரது வழக்கு மேலுசாவலுக்காக உயர்நீதி மன்றத்திற்கு வந்துள்ளது' (பழ.).*

[மேல் + உசாவல். உசாவு → உசாவல். 'அல்', தொ.பெ.ஈறு.]

மேலுத்தரியம் *mēluttariyam,* பெ.(n.) மேலாடை பார்க்க; see *mēlāḍai.*

[மேல் + உத்தரியம். உ = உயர்ந்த தரம் = நிலைமை, உ + தரம் – உத்தரம் = மேற்பட்டது, மேலானது. உத்தரம் → உத்தரியம் = மேலாடை.]

மேலுதடு *mēludaḍu,* பெ.(n.) மேல் வாயிதழ்; the upper lip.

க. மேலுதடி.

[மேல் + உதடு. ஊ → (ஊது) → உதடு = வாயின் முற்பகுதி]

மேலுபசாரம் *mēl-upacāram,* பெ.(n.) வாய்ச்சொல் (வார்த்தை) இ.வ.); lip-deep courtesy.

[மேல் + உபசாரம்]

Skt. *upa-cāra* > த. உபசாரம்.

மேலும் *mēlum,* வி.எ. (adv.) பின்னும்; moreover, further, besides. *'மேலும் அவனுக்கு நேற்று கொடுத்தது தவறாகிப் போய்விட்டது'.*

[மேல் → மேலும்]

மேலுரம் *mēluram,* பெ.(n.) நிலப்பயிர் நட்டபின் இடும் உரம்; application of (fertilizer) top dressing. *'சாம்பலை மேலுரமாகப் போடுவது நல்லது'.*

[மேல் + உரம்]

மேலுருளை *mēluruḷai,* பெ.(n.) கவலைப் பாதையின் நடுவிலுள்ள உருளை; in between roller of a *'kamalai'* (waterlift).

[மேல் + உருளை. கொண்டான் இழுத்துவரும் கயிற்றைத் தேயாமல் காக்கவும் இழுப்பதற்கு எளிதாகவும் இருக்கப் பயன்படுவது]

மேலுலகம் *mēl-ulagam,* பெ.(n.) 1. வானுலகு; the celestial world. *"மேலுலக மில்லெனினு மீதலே நன்று" (குறள், 222).* 2. மேலேழுலகம் பார்க்க (யாழ்.அக.); see *mēlēḻulagam.*

து. மேல்லோகொ; பட. மேல்லோக.

[மேல் + உலகம்]

மேலுலகு *mēlulagu,* பெ.(n.) மேலுலகம் பார்க்க; see *mēlulagam.*

[மேல் + உலகு]

மேலுறுதி *mēluṟudi,* பெ.(n.) கூடுதல் சான்று (யாழ்.அக.); confirmatory evidence.

[மேல் + உறுதி]

மேலூமலை *mēlūmalai,* பெ.(n.) தர்மபுரி மாவட்டம் ஒசூர் வட்டத்தில் அமைந்த ஊர்; a village in Dharmapuri dt, *Osūr* taluk.

[மேல் + மலை – மேல்மலை → மேலூமலை = மலைமேல் அமைந்த ஊர்]

மேலூர் *mēlūr,* பெ.(n.) மதுரை மாவட்டத்தில் அமைந்த மேலூர் என்ற நகரம்; a town in Madurai dt.

[மேல் + ஊர். மேல் = மேற்கு. 16 ஆம் நூற்றாண்டில் தோன்றியவூர். அக்காலத்தில் சிறப்புற்றிருந்த ஒரு ஊருக்கு மேற்கே அமைந்ததால் இப்பெயர் பெற்றது. பெரும்பாலும் மேற்குப் பக்கத்தில் அமைந்த ஊர் மேலூர் எனப்படும். இப்பெயர் தாங்கிய பல ஊர் தமிழ்நாட்டிலுள்ளன. இதைப்போல் கிழக்குத் திசையில் அமைந்த ஊர் கீழூர் எனப்படும்.]

மேலெழ *mēleḻa,* வி.எ.(adv.) மேலுக்கு; superficially, on the surface. *"மேலெழச் சிறிது கலங்கிற்றாகிலும்" (ஈடு, 1, 4, 3, வ்யா. பக். 183).*

[மேல் + எழ]

மேலெழு-தல் *mēleḻu-,* 2 செ.கு.வி. (v.i.) 1. மேற்கிளம்புதல்; to rise up. 2. மிதத்தல்; to float. 3. எதிர் நோக்கி வருதல்; to advance against a person. *"அடர்ந்து வந்தனன் மேலெழ" (திருவாலவா. 46, 15).* 4. மேம்படுதல்; to be superior.

[மேல் + எழு-.]

மேலெழுச்சி *mēleḻucci,* பெ.(n.) 1. மேற் கிளம்புகை; rising. 2. செருக்கு (வின்.); pride, haughtiness. 3. ஊன்றி நோக்காத் தன்மை (வின்.); superficiality, careless ness. *'மேலெழுச்சியாயிராதே'.*

[மேல் + எழுச்சி. எழு → எழுச்சி. 'சி' தொ.பெ.ஈறு]

மேலெழுத்திடு-தல் *mēleḻuttiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) ஒப்புக் கொண்டதற்கு அறிகுறியாகக் கையெழுத்திடுதல்; to accept, certify. *"எதிரிகள் மதித்து மேலெழுத்திட்ட வீரப்பாட்டுக்கு" (ஈடு. 6, 2, 2).*

[மேல் + எழுத்திடு-,]

மேலெழுத்து *mēleḻuttu,* பெ.(n.) 1. மேல் முகவரி பார்க்க; see *mēl-mugavari.* 2. சான்று (சாட்சி)க் கையெழுத்து; signature of an attesting witness. *"வாசகங் கேட்ட பின்னர் மற்று மேலெழுத்திட்டார்கள்" (பெரியபு. தடுத்தாட். 60).* 3. அரசியற் கணக்கதிகாரி; accountant-general, auditing officer. *"மேலெழுத்துக் கணக் கிட்டினன்" (T.A.S.i. 177).* 4. மேலதிகாரி அனுப்பும் கடிதம்; instructions of a superior authority order.

[மேல் + எழுத்து. எழு → எழுது → எழுத்து]

மேலெழுந்தவறிவு *mēleḻunda-vaṟivu,* பெ.(n.) ஆழமில்லாத அறிவு; superficial knowledge or understanding.

[மேலெழுந்த + அறிவு. அறி → அறிவு. 'வு' தொ.பெ.ஈறு]

மேலெழுந்தஞானம் *mēleḻunda-ñāṉam,* பெ.(n.) மேலெழுந்தவறிவு பார்க்க; see *mēleḻunda-vaṟivu.*

[மேலெழுந்த + ஞானம்]

Skt. *jñāna* > த. ஞானம்.

மேலெழுந்தபுத்தி *mēleḻunda-puddi,* பெ.(n.) மேலெழுந்தவறிவு பார்க்க; see *mēleḻunda-vaṟivu.*

[மேலெழுந்த + புத்தி]

மேலெழுந்தவாரி *mēlelunda-vāri,* பெ.(n.) 1. எளிமை; ease, facility, as in doing anything. *"மேலெழுந்தவாரியாக இவர்களோடே யுத்தம் பண்ணுகையாலே" (ஈடு. 6, 4, 3, ஜீ.).* 2. ஊற்றிக் கவனியாமை (வின்.); superficiality. *'ஆழ்ந்த இலக்கியப் புலமை வாய்ந்த பாவாணரின் நூல்களை மேலெழுந்தவாரியாகப் பயின்றால் புரிந்து கொள்ள இயலாது'.*

[மேல் + எழுந்த + வாரி]

மேலெறி-தல் *mēleri-,* 2 செ.குன்றாவி. (v.t.) மேலே வீசுதல்; to upthrow. 2. பொருள், விலங்கு, மனிதன் போன்றவற்றின் மேல் எறிதல்; to throw upon a thing, animal, person etc.

[மேல் + எறி-,]

மேலே *mēlē,* பெ.(n.) 1. ஒட்டியபடி மேல்; over an object. 2. உயரே மேல்நோக்கி; up. 3. தொடர்ந்து; further. *'பாய் முதுகில் குத்தாதிருக்க மேலே ஒரு தாவளத்தை (சமுக்காளம்) விரித்துக் கொள்ள வேண்டும்'. 'விடை தெரிந்தவர்கள் கையை மேலே தூக்குங்கள்'. 'மேலே என்ன நடந்தது? சொல்'.*

[மேல் → மேலே]

மேலேழுலகம் *mēlēlulagam,* பெ.(n.) ஒன்றன் மேல் ஒன்றாக அமைந்த ஏழு உலகங்கள் (பூலோகம், புவலோகம், சுவலோகம், மகலோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம்) (பிங்.); the seven upper worlds, viz., *pū-lōgam, puvalōgam, šuvalōgam, magalōgam, šanalōgam, tavalōgam, šattiyalōgam* each succeeding world being above that which precedes it.

[மேல் + ஏழு + உலகம்]

மேலேற்றமாக *mēlērramāga,* வி.எ. (adj.) அதிகப்படியாக, முன் செய்ததை விட கூடுதல் அளவுடையதாக; excess. *"அமுது செய்தருளி வருகிற பெண் போனகத்துக்கும், பருப்புப் போனகத்துக்கும், அப்பத்துக்கும், மேலேற்றமாக பால்போனகமும்" (மேல் அளவுள்ளதாகப் பால் பொங்கலும்) (தெ. கல். தொ. 12, பகு. 1, கல். 201).*

[மேல் + ஏற்றமாக]

மேலேறு-தல் *mēlēru-,* 5 செ.கு.வி. (v.i.) மேலே செல்லுதல்; to climb up. *'மரத்தின் மேலேறுவதற்குப் பயிற்சி தேவை' (உ.வ.).*

து. மேலரி, மேலாரி.

[மேல் + ஏறு-,]

மேலை¹ *mēlai,* பெ.(n.) வருங்காலம் (வின்.); future. *'மேலை யாண்டுகளில் நாட்டின் மின்சாரத் தேவை மிகுதியாக இருக்கும்'.*

க. மேலெ.

[மேல் → மேலை]

மேலை² *mēlai,* வி.எ.(adj.) 1. மேலிடமான; upper. *"மேலைத் தவலோகம்" (திருவிளை. மலையத். 28).* 2. மேற்கிலுள்ள; western. *"மேலைச்சேரி" (நன். 402, உரை).* 3. முந்தின; former. *"மேலைத் தவத்தாற் றவஞ் செய்யாதார்" (நாலடி, 31).* 4. அடுத்த; next in order or in time. *"மேலையாண்டு"*

[மேல் → மேலை]

மேலை³ *mēlai,* து.வி. (adv.) முன்பு; formerly. *"மேலை நீள் விசும்புறையும் வெண் மதியம்" (சீவக. 2238).*

[மேல் → மேலை]

மேலை[4] *mēlai,* பெ.(n.) 1. (யாழ்.அக.) அஞ்சனக்கல் கருநிமிளை; black bismuth. 2. மை; ink.

[மேல் → மேலை. மை → மையம் → (மையல்) → மேல்]

மேலைக்கடல் *mēlai-k-kaḍal,* பெ.(n.) மேல்கடல் பார்க்க (தக்கயாகப். 124, உரை); see *mēl-kaḍal.*

[மேல் → மேலை + கடல்]

மேலைக்கரை *mēlai-k-karai,* பெ.(n.) 1. மேற்குக்கரை; western bank or coast. *'கீழைக் கரையிலிருந்து மேலைக்கரைக்குச் செல்ல பாலம் அமைத்துள்ளனர்' (உ.வ.).* 2. மேற்குப் பக்கம்; western side or portion, as of a village. *'மேலைக் கரையில் தமிழ்க் கல்லூரி அமைந்துள்ளது' (உ.வ.).*

[மேலை + கரை. பெரும்பாலும் தமிழகத்தில் ஆறுகள் மேற்கிலிருந்து கிழக்காக ஓடும். ஆகையால் ஆற்றிற்கு வடகரை தென்கரை அமைவதே, பெரும்பான்மை. குளம், ஏரி ஆகியவற்றின் கரைகளைக் கீழைக்கரை, மேலைக்கரை என அழைக்கும் வழக்கம் உண்டு.]

மேலைக்காவிரி *mēlai-k-kāviri,* பெ.(n.) குடமூக்கின் (கும்பகோணத்தின்) மேற்பகுதி; the west portion of *Kuḍamūkku* (*Kumbakōṇam*)

[மேல் + காவிரி. குடந்தையில் ஓடும் காவிரியின் மேற்குப்பகுதி]

மேலைக்காற்று *mēlai-k-kāṟṟu,* பெ.(n.) மேற்கிலிருந்து வீசும் காற்று; westerly wind.

[மேலை + காற்று. கால் → காற்று]

மேலைக்கு *mēlaikku,* வி.எ.(adv.) இனிமேல்; hereafter, afterwards, in future.

க. மேலெக்கெ.

[மேல் → மேலை → மேலைக்கு]

மேலைச்சமுத்திரம் *mēlai-c-camuttiram,* பெ.(n.) மேல்கடல் (தக்கயாகப்.124, உரை) பார்க்க; see *mēl-kaḍal.*

[மேலை + சமுத்திரம்]

மேலைச்சிதம்பரம் *mēlai-c-cidambaram,* பெ.(n.) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள திருப்பேரூர் என்னும் சிவக்கோயில்; *Tiru-p-pērūr,* a *śiva*-shrine in Coimbatore district.

[மேலை + சிதம்பரம். சிற்றம்பலம் → சிதம்பரம்]

மேலைச்சீமை *mēlai-c-cīmai,* பெ.(n.) மேலைநாடு பார்க்க; see *mēlai-nāḍu.*

[மேலை + சீமை. சேய்மை → சீமை]

மேலைச்சேரி *mēlai-c-cēri,* பெ.(n.) தென்னார்க்காடு மாவட்டம் செஞ்சி வட்டத்திலுள்ள ஓர் ஊர்; a village in South Arcot dt., *Señji* Taluk.

[மேல் → மேலை + சேரி. சேர் → சேரி. வீடுகள் சேர்ந்திருக்கும் இடம்]

மேலைத்திசை *mēlai-t-tišai,* பெ.(n.) மேற்கு பார்க்க; see *mēṟku.*

[மேலை + திசை. திக்கு → திசை.]

மேலைநாடு *mēlai-nāḍu,* பெ.(n.) மேற்குத் திசைக் கண் அமைந்த நாடு; western country. *'மேலை நாட்டு மோகம் இளைஞர்களிடையே மிகுதி' (உ.வ.).*

[மேலை + நாடு]

மேலைநெற்றி *mēlai-neṟṟi,* பெ.(n.) சிவனது நெற்றிக்கண்; the third eye of *Sivaṉ* on His forehead. *"இறைவர்தம் மேலை நெற்றி*

விழிக்க" (தக்கயாகப். 334).

[மேலை + நெற்றி]

மேலையுலகு *mēlai-y-ulagu,* பெ.(n.) வானுலகு (பிங்.); heaven, as the upper world.

[மேலை + உலகு]

மேலைவீடு *mēlai-vīḍu,* பெ.(n.) மேல்வீடு பார்க்க; see *mēl-vīḍu.* *"நாமேலை வீடெய்த" (திருவாச. 8,6).*

[மேலை + வீடு]

மேலைவெளி *mēlai-veḷi,* பெ.(n.) இயலுலகொடு சார்ந்த இடம் (பரவெளி); the great cosmic space. *"மேலை வெளியி லொளிரும்" (திருப்பு. 459).*

[மேலை + வெளி]

மேலொடி *mēloḍi,* பெ.(n.) மேல்வாரம் பார்க்க; see *mēl-vāram* (T.A.S.iv. 74).

[மேல் + ஒடு (உடைமைப் பொருள். வே. உருபு) - மொலொடு → மேலொடி]

மேலொப்பம் *mēl-oppam,* பெ.(n.) 1. சரிபார்ப்பு கையெழுத்து; attestation signature, counter signature. *'மதிப்பெண் பட்டியல் படிக்கு அரசு சான்றிதழ் பெற்ற அலுவலர் மேலொப்பம் இட வேண்டும்' (உ.வ.).* 2. எழுத்து அல்லது பேச்சால் ஒப்புக் கொள்ளுகை (வின்.); endorsing.

[மேல் + ஒப்பம். ஒப்பு → ஒப்பம்]

மேலொப்பனை *mēl-oppaṉai,* பெ.(n.) 1. மெய்ப்பித்ததை உறுதிப்படுத்தும் சான்று (வின்.); additional proof, confirmatory evidence. 2. வெளிக்கு இணக்கங் காட்டுகை; out-ward conformity.

[மேல் + ஒப்பனை. ஒப்பு → ஒப்பனை.]

மேலொருக்கல் *mēl-orukkal,* பெ.(n.) இசைக் குற்றவகை (திருவாலவா. 57, 26); (Mus.) a defect in singing.

[மேல் + ஒருக்கல். உருக்கல் → ஒருக்கல் = ஓர் அமங்கலப் பெண்.]

மேலொற்றி *mēl-oṟṟi,* பெ.(n.) மறு ஒற்றி; puisne mortgage, a second mortgage.

து. மேலு அடவு.

[மேல் + ஒற்றி]

மேலோங்கி *mēlōṅgi,* பெ.(n.) கரையாருள் ஒரு வகையார் (யாழ்.அக.); a sub-caste of *Karaiyār.*

[மேல் + ஓங்கி]

மேலோங்கு-தல் *mēl-ōṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) கூடுதலாதல்; to prevail over. *'பாவேந்தர் பாக்களில் தமிழுணர்வு மேலோங்கி நிற்பதை எளிதில் உணரலாம்' (உ.வ.).* 2. வலிமை பெறுதல்; to get the upper hand of. *'குடும்பத்தில் அறிவுள்ள மக்களின் கை மேலோங்கி யிருப்பது இயல்பு தானே?' (உ.வ.).*

[மேல் + ஓங்கு-]

மேலோசனை *mēl-ōšaṉai,* பெ.(n.) முன்கருத்து (தெய்வச். விறலிவிடு. 80); foresight.

[மேல் + யோசனை]

Skt. *yōjanā* > த. யோசனை.

மேலோட்டம் *mēlōṭṭam,* பெ.(n.) மேலெழுந்தவாரி காண்க; see *mēleḻunda-vāri.*

[மேல் + ஓட்டம். ஓடு → ஓட்டம்]

மேலோடு-தல் *mēl-ōḍu-,* 5 செ.கு.வி. (v.i.) எதிர்த்துத் தாக்குதல்; to attack, rush against. *"மெய் சொல்லா விராவணனை மேலோடி யீடழித்து" (தேவா. 158, 2).*

[மேல் + ஓடு-,]

மேலோர் *mēlōr,* பெ.(n.) 1. மேலிடத்தோர்; those who are seated high, as an horses. *"காழோர் கையற மேலோ ரின்று" (மணிமே. 4, 35).* 2. உயர்ந்தோர்; the great, those of superior rank or caste. *"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்" (தொல். பொ. 144).* 3. புலவர் (பிங்.); poets; men of learning. 4. முன்னோர்; ancestors, ancients. 5. வானோர் (சூடா.); celestials.

[மேல் → மேலோர். 'அர்' பன்மை ஈறு.]

மேலோலை *mēlōlai,* பெ.(n.) 1. அதிகார மளிக்குஞ் சீட்டு; letter of authority. 2. மேற் கடுதாசி; covering letter.

[மேல்+ ஓலை]

மேலோன் *mēlōṉ,* பெ.(n.) மேலானவன், உயர்ந்தவன்; man of superior stature in learning, culture etc.

[மேல் → மேலோன் (மு.தா. 74)]

மேவருமனுநெறி *mē-varu-maṉu-neṟi,* பெ.(n.) மேலானதாகத் தொடர்ந்து வருகின்ற மனு என்னும் மன்னன் வகுத்த அரசியல் வழி; political guidance narrated by king Manu. *"மேவரு மனுநெறி விளங்கிய கோவிராக கேசரி வர்மரான உடையார் ஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு" (மெய்கீர்த்தி)*

[மேல் + வரும் + மனு + நெறி]

மேவல் *mēval,* பெ.(n.) 1. (பிங்.) ஆசை; desire. 2. கலக்கை; joining, uniting.

[மேவு → மேவல்]

மேவலர் *mēvalar,* பெ.(n.) மேவார் பார்க்க; see *mēvār.* *'துன்புறுக்கு மேவலரை நோவ தெவன்' (பழ. 238).*

[மேவு + அல் + அர். 'அல்' எ.ம.இடைநிலை]

மேவா-தல் (மேவருதல்) *mēvā-,* 18 செ.கு.வி. (v.i.) பொருத்தமாதல்; to be fitted for. *"மேவரக் கிளந்து" (குறிஞ்சிப். 138).*

[மே + வா-,]

மேவாப்பல் *mēvā-p-pal,* பெ.(n.) மேல்வாய்ப்பல் பார்க்க; see *mēlvāy-p-pal.*

[மேல்வாய்ப்பல் → மேவாப்பல்]

மேவார் *mēvār,* பெ.(n.) பகைவர்; foes, enemies. *"மேவார் மறத்தொடு மல்லர் மறங்கடந்த காளை" (பு.வெ. 9, 4).*

மறுவ. அமரார், அரிகள், இகலோர், இரிஞர், உதிர்த்தோர், ஒட்டலர், ஒட்டார், ஒல்லார், ஒன்னார், கருதலர், செறுநர், சேரலிர், தரியலர், தெவ்வர், நள்ளார். நிகரார், நேரலர், நேரார், போற்றார், மாற்றலர், முனைந்தோர், மேவலர், விட்டவர்.

ம. மேவலர்.

[மேவு + ஆ + ர். ஆ எ.ம.இடைநிலை. 'ர்' பன்மையீறு]

மேவி-த்தல் *mēvi-,* 11 செ.குன்றாவி. (v.t.) தங்கச் செய்தல்; to cause to stay. *"புதல்விதனை ...., திருக்கோயின் மேவித்தான்" (உபதேசகா. உருத்திராக். 171).*

ம. மேவல் (தங்குதல்).

[மேவு → மேவி-,]

மேவினர் *mēviṉar,* பெ.(n.) 1. நண்பர்கள் (பிங்.); friends, allies. 2. உறவினர் (திவா.); relations.

மறுவ. ஒட்டுநர், ஒல்லுநர், ஒன்றுநர், துன்னுநர், தொடர்ந்தார், நள்ளுநர்.

[மேவு → மேவினர்]

மேவு[1]-தல் *mēvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. அடைதல்; to join, to reach. *"மேகநாதன் புகுந்திலங்கை மேயநாள்" (கம்பரா. திருவவ. 10).* 2. விரும்புதல்; to desire. *"அவருந்தா மேவன செய்தொழுகலான்" (குறள், 1073).* 3. நேசித்தல்; to love. *"மேவியன் றாநிரை காத்தவன்" (திவ். திருவாய். 3, 2, 9).* 4. ஓதுதல்; to learn, study. *"மேவரு முதுமொழி விழுத்தவ" (பரிபா. 8, 9).* 5. உண்ணுதல் (வின்.); to eat. 6. சமமாக்குதல்; to level, make even, as the ground. *'வயலை மேவினான்'.* 7. மேலிட்டுக் கொள்ளுதல்; to manifest, assume. *"மேவற்க மென்மை பகை வகரத்து" (குறள், 877).* 8.வேய்தல்; to thatch, cover over. *"தோலைமேவி" (ஈடு. 5, 1, 5).*

ம. மேவுக.

[ஏ → மே → மேவு]

மேவு[2]-தல் *mēvu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. அமர்தல்; to abide, dwell. *"திருத்துருத்தி மேயான்" (திருவாச. 31, 3).* 2. பொருந்துதல்; to be attached, to be united, to be fitted or joined. *"ஒருமை வினைமேவு முள்ளத் தினை" (பரிபா. 13, 49).*

[மே → மேவு]

மேவு[3]-தல் *mēvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. படிதல், பரவுதல்; to spread. *"கண்ணுக் கெட்டிய வரை மணல் மேவிக் கிடந்தது".* 2. நிரப்புதல்; to spread. *'சரளைக் கற்களை மேவிய பிறகு தார் ஊற்றி சாலை அமைத்தனர்'.*

[ஏ → மே → மேவு-,]

மேவு[4] *mēvu,* பெ.(n.) விருப்பம், நசை; desire. *"நம்பு மேவு நசையாகும்மே" (தொல். சொல். 329).*

[ஏ → மே → மேவு[1]-, → மேவு]

மேவு[5] *mēvu,* பெ.(n.) மே[3] பார்க்க (இலக்.அக.); see *mē* [3].

[மே → மேவு]

மேழகம்[1] *mēḻagam,* பெ.(n.) காப்பு (பிங்.); coat of armour.

[மேல் + அகம் – மேலகம் → மேளகம் → மேழகம்]

மேழகம்[2] *mēḻagam,* பெ.(n.) செம்மறி யாட்டுக்கடா, ஆடு; ram. *"வெம்பரி மேழக மேற்றி" (சீவக. 521).*

மறுவ. உதள், கிடாய், கொச்சை, கொறி, செம்மறி, தகர், துருவை, பள்ளை, புருவை, மறி, மேடம், மோத்தை,மை, வற்காலி, வருடை, வெள்ளை.

[முழு → முழுமை = பருமை. முழுவது → முழுது → முழுதோன் = கடவுள். முழா → மிழா = பருத்த ஆண்மான். மேழம் → மேடம் = செம்மறியாட்டுக் கடா. மேழம் → மேழகம் (வே.க.4,46,47)]

மேழம்[1] *mēḻam,* பெ.(n.) மேழகம்[1] பார்க்க (அரு.நி.); see *mēḻagam*[1]

[மேல் + அகம் – மேலகம் → மேழகம் → மேழம்]

மேழம்² *mēḻam,* பெ.(n.) மேழகம்² பார்க்க (அரு.நி.); see *mēḻagam²*.

[முழு → முழுமை = பருமை. முழா → மிழா = பருத்த ஆண்மான். மிழா → மெழா → மேழம்]

மேழி *mēḻi,* பெ.(n.) 1. கலப்பை; plough. *"வினைப்பக டேற்ற மேழி"* (புறநா. 388). 2. கலப்பையில் கைப்பிடி; plough-tail, handle of a plough. *"மேழி பிடிக்குங் கை" (திருக்கை வழக்கம், 22).*

ம. மேழி, மேஞ்ஞல்; க. மேடி, மேணி; தெ. மேடி; குவி. மேரி.

[புள் → பிள் → பிள. பிளத்தல் = பிடுதல், துளைத்து அல்லது வெட்டி உடைத்தல், பிரித்தல். பிள் → விள் → விள → விளவு = நிலம் முதலியவற்றின் பிளப்பு. பிள் → விள். விள்ளுதல் = பிளத்தல். விள் → விழி → மிழி → மெழி → மேழி = நிலத்தைக் கீறுவதற்கு (உழுவதற்கு)ப் பயன்படும் கருவி]



மேழி

மேழிச்செல்வம் *mēḻi-c-celvam,* பெ.(n.) ஏரால் வருஞ் செல்வம்; wealth derived from husbandry. *"மேழிச்செல்வம் கோழை படாது" (கொன்றைவே.).*

[மேழி + செல்வம்]

மேழித்தோரணம் *mēḻi-t-tōraṇam,* பெ.(n.) தென்னங் குருத்தோலையில் ஏர்க்கலப்பை வடிவில் கீறி, பின்னலிட்டு வரிசையாகக் கட்டப்படும் தோரணம்; festoons made with tender palm-leaf, like plough-share and hung in a row. *"இத்திரு முற்றத்திலே பூமிபிராட்டியை எழுந்தருளுவித்து, மேழித் தோரணமும் சாத்தி" (இராசாதி ராசன், கி.பி. 1048) (தெ. கல். தொ. 8. கல். 291).*

[மேழி + தோரணம்]

மேழியர் *mēḻiyar,* பெ.(n.) 1. உழவர் (பிங்.); agriculturists. 2. மருதநிலமாக்கள் (பிங்.); people who belong to the agricultural tract. 3. வேளாளர் (பூவைசியர்) (பிங்.); *vēḷāḷas*, as cultivators.

[மேழி → மேழியர்]

மேழிவாரம் *mēḻi-vāram,* பெ.(n.) வேளாண் (விவசாயச்) செலவு; cultivation expenses. *"மேழிவாரங் கூடக் காணாது" (சரவண. பணவிடு. 133).*

[மேழி + வாரம்]

மேழை¹ *mēḻai,* பெ.(n.) 1. கஞ்சி (அக.நி.); gruel. 2. காடி (அக.நி.); vinegar.

[முள் → (மொள்) → மொழு → மொழுமொழு. மொழுமொழுத்தல் = சதை தளர்தல். மொழு → மொழுகு → மெழுகு = நெகிழ்ந்த நெய்ப்பொருள் (மு.தா.281) மெழு(கு) → மேழு → மேழை]

மேழை² *mēḻai,* பெ.(n.) கொம்பில்லா விலங்கு (மோழை) (நாமதீப. 235); hornless beast.

[மொழுக்கு → மொழுக்கன் = வேலைப் பாடில்லாத அணி. மழுங்கு → மழுங்கன் = வேலைப் பாடில்லாத அணி. (மொழு) → மோழை = மொட்டை, கொம்பில்லா மாடு, மரஅடி முண்டம். (மு.தா.101) மோழை → மேழை]

மேளக்கச்சேரி *mēḷa-k-kaccēri,* பெ.(n.) அரங்கில் மேளம் வாசிக்கை; entertainment by *mēḷa-kārar.*

[மேளம் + கச்சேரி]

U. *Kachahri* > த. கச்சேரி.

மேளக்கட்டு *mēḷa-k-kaṭṭu,* பெ.(n.) ஒலி நன்கு கேட்கும்படி இசையமைவு பெறுந் தன்மை; good acoustical property.

[மேளம் + கட்டு]

மேளக்காரன் *mēḷa-k-kāraṉ,* பெ.(n.) 1. மேளகாரன் பார்க்க; see *mēḷa-kāraṉ.* 2. பகட்டாளன் (ஆடம்பரக்காரன்) (இ.வ.); dandy, pompous or showy man.

[மேளம் + காரன்]

மேளகம் *mēḷagam,* பெ.(n.) கஞ்சி (சங்.அக.); gruel.

[மெழு(கு) → மேழை → மேழகம் → மேளகம்]

மேளகாரர் *mēḷa-kārar,* பெ.(n.) நாயனம், ஒத்து, தவில், தாளம் இவற்றை வாசிக்கும் முழக்கியர்; band of musicians playing pipe, drone-pipe, drum and cymbals.

[மேளம் + காரர்]

மேளகாரன் *mēḷa-kāraṉ,* பெ.(n.) 1. மேளம் வாசிப்போன்; piper, drummer. 2. இசை செய்விக்கும் குலத்தான் (சாதியான்); person belonging to a caste of musician.

[மேளம் + காரன்]

மேளங்கட்டு-தல் *mēḷaṅ-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. இசைக் கருவிகளுக்குக் குரல் அளவு சேர்த்தல்; to tune instruments and bring them into harmony with one another. 2. எதிரொலி முதலியவற்றாற் கேடுறாது இசையமைதி பெறுதல்; to be fit acoustically, as a music hall.

[மேளம் + கட்டு-,]

மேளஞ்செய்-தல் *mēḷañ-šey-,* 1 செ.கு.வி. (v.i.) மேளங்கட்டு-தல் 1 பார்க்க (இ.வ.); see *mēlaṅ-kaṭṭu-, 1.*

[மேளம் + செய்-,]

மேளஞ்சேவி-த்தல் *mēḷañ-šēvi-,* 4 செ.கு.வி. (v.i.) மேளமடி-த்தல் 2 (வின்.) பார்க்க; see *mēḷamaḍi-, 2.*

[மேளம் + சேவி-,]

மேளதாளம் *mēḷa-tāḷam,* பெ.(n.) 1. மேளம், 2 பார்க்க; see *mēḷam 2.* 2. பகட்டு (ஆடம்பரம்) (கொ.வ.); ostentation; pomb.

[மேளம் + தாளம். மேளதாளம் எதுகை நோக்கி வந்த மரபிணை மொழி]

மேளம் *mēḷam,* பெ.(n.) 1. பண்; musical scale. 2. நாயனம், ஒத்து, தவில், தாளம் என்பவற்றின் தொகுதி; (Mus.) collection of four musical instruments, viz. *nayaṉam, ottu, tavil, tāḷam.* 3. தவில்; a drum having two heads. 4. நல்ல உணவு; sumptuous food. 5. கவலையற்ற இன்பவாழ்வு (இ.வ.); prosperous, carefree condition. 6. கலவை மருந்து; medicinal mixture.

[முள் → முழு → முழா = திரட்சி, மத்தளம். முழா → முழவு → முழவம். முள் → (மள்) → மழு = திரண்ட ஆயுதம். முள் → முரு → முரள் → முரண் → முரடு = பெரியது, திரண்டது. முரடு → முரசு = திரண்ட கட்டையாற் செய்யப்பட்ட மத்தளம், பேரிகை. முள் → மொள் → மோள் → மோளம் → மேளம் (மு.தா. 209, 210)]

மேளமடி–த்தல் *mēḷamaḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. தவில் அடித்தல்; to beat the drum. 2. பக்க இசைக் கருவிகளோடு நாயனம் இசைத்தல்; to play on the pipe with accompaniments. 3. விளம்பரப் படுத்துதல்; to give publicity. 4. ஒத்துப் பேசுதல்; to play second fiddle, to endorse slavishly. 5. வருந்தி முயலுதல்; to strive hard. *'சோற்றுக்கு மேள மடிக்கிறான்'.*

[மேளம் + அடி–,]

மேளவாத்தியம் *mēḷa-vāttiyam,* பெ.(n.) மேளம், 2 பார்க்க; see *mēḷam-2.*

[மேளம் + வாத்தியம். வாச்சியம் → வாத்தியம்]

மேளனம் *mēḷaṉam,* பெ.(n.) 1. கலக்கை; mixing. 2. இசைக்கருவிகளின் இயைபு; (Mus.) attunement, concord, harmony. 3. கூட்டம்; crowd, assembly.

[மேளம் → மேளனம்]

த. மேளனம் > **Skt.** *mēlana.*

மேளி–த்தல் *mēḷi-,* 11 செ.குன்றாவி. (v.t.) கூட்டுதல் (இலக்.அக.); to assemble, collect.

க. மேளிசு.

[மேளம் → மேளி–,]

மேற்கட்டி *mēṟ-kaṭṭi,* பெ.(n.) 1. மேலிருந்து தொங்கும் திரை; top of bedstead, tester, canopy, awning. 2. மேல் தளத்தின் கீழ் பரப்பக்கட்டியிருக்கும் விரிப்பு; cloth spread below the roof of a room to prevent dust falling from the roof.

[மேல் + கட்டி]

மேற்கட்டு[1] *mēṟ-kaṭṭu,* பெ.(n.) 1. மேல்வீடு (யாழ்.அக.); loft, upper storey. 2. மேல்துண்டு (வின்.); upper garment. 3. துணைச்சான்று; additional argument or support. 4. அழகு (அலங்காரம்) (இ.வ.); show.

[மேல் + கட்டு]

மேற்கட்டு[2] *mēṟ-kaṭṭu,* பெ.(n.) மேல்கட்டு பார்க்க; see *mēl-kaṭṭu.*

து. மேல்கட்டு.

[மேல் + கட்டு]

மேற்கட்டுக்கூறை *mēṟ-kaṭṭu-k-kūṟai,* பெ.(n.) கோயில்களின் இறையகம். கற்புறை, மடைப்பள்ளிக்கட்டு ஆகிய இடங்களில் உள்ளகத்தின் மேல் தளம் போன்று வெண்மை, நீலம் வண்ணத் துணியைக் கொண்டு அமைக்கப்படும் கட்டு; whiten blue cloth spread on the lower side make a canopy of temple canopy, kitchen etc. *"ஸ்ரீ கற்ப கிரகத்துக் கட்டு மேற்கட்டிக்கு வெண்கூறை இணை" (தெ. கல். தொ. 14. கல் 16. அ)*

[மேல் + கட்டு + கூறை. கூறு → கூறை]

மேற்கடுதாசி *mēṟ-kaḍudāśi,* பெ.(n.) 1. பணவோலை உறுதிப்படுத்தி எழுதும் மடல்; letter of advice in a hundi transaction. 2. உள்ளடக்கப் பொருளை விவரிக்குங் கடிதம் (இக்.வ.); covering letter.

[மேல் + கடுதாசி]

மேற்கண்ட *mēṟ-kaṇḍa,* பெ.அ. (adj.) மேலே குறிப்பிடப்பட்ட; cited above, given below. *'மேற்கண்ட குறிப்புகளை முறையாகப் பின்பற்றவேண்டும்'.*

[மேல் + கண்ட. காண் → கண்ட]

மேற்கத்தி *mēṟ-katti,* பெ.எ. (adj.) மேற்குத் திசைக்குரிய; western. *'மேற்கத்தி நாடுகள்' (உ.வ.).*

[மேல் → மேற்கத்தி]

மேற்கத்திய *mēṟkattiya,* பெ.அ. (adj.) மேற்கில் உள்ள, அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் சேர்ந்த; western. *'மேற்கத்திய இசை, மேற்கத்திய நாகரிகம்'.*

[மேற்கு → மேற்கத்திய]

மேற்கத்தியான்[1] *mēṟkattiyāṉ,* பெ.(n.) மேற்கு பக்கத்தான் (வின்.); western.

[மேற்கத்திய + ஆன்]

மேற்கத்தியான்[2] *mēṟ-kattiyāṉ,* பெ.(n.) மேற்றிசையினின்று வாங்கி வந்த மாடு; cattle bought from western side (country).

[மேற்கத்திய + ஆன்]

மேற்கதி *mēṟ-kadi,* பெ.(n.) 1. மேனோக்கி (ஊர்த்துவ முகமாக)ச் செல்லும் தன்மை; upward tendency, as in the growth of vegetables; higher tendency, as of spiritual minds. 2. வீடு (மோட்சம்); supreme bliss. *"மேற்கதிபெற" (பிரபுலிங். துதி. 13)*

[மேல் + கதி]

மேற்கதுவாய் *mēṟ-kaduvāy,* பெ.(n.) மேற்கதுவாய்த்தொடை பார்க்க; see *mēṟ-kaduvāy-t-toḍai. "முதலயற் சீரொழித் தல்லன மேல்வரத் தொடுப்பின் மேற்கது வாயும்" (இலக். வி. 723).*

[மேல் + கதுவாய்]

மேற்கதுவாய்த்தொடை *mēṟ-kaduvāi-t-toḍai,* பெ.(n.) அளவடியுள் முதலயற் சீர்க்கணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயினவரத் தொடுப்பது (இலக். வி. 723, உரை); (pros.) a versification in which *mōṉai,* etc., occur in the first, third and fourth feet of an *aḷavaḍi.*

[மேற்கதுவாய் + தொடை. தொடு → தொடை]

மேற்கருமம் *mēṟ-karumam,* பெ.(n.) குறை; want, need. *"அவர்களுக்குண்டாகிய மேற்கருமம் அந்தக் காரியப் பேர்களாலே தீர்க்கப்பட்டாள் போல" (சங்கற்பந். 2, உரை. பக். 24).*

[மேல் + கருமம்]

மேற்கவடி *mēṟ-kavaḍi,* பெ.(n.) கவடி விளையாட்டுள் ஒருவகை (parav.); an outdoor game.

[மேல் + கவடி. கவை → கவடு → கவடி. இரண்டு அணியாகப் பிரிந்து விளையாடும் ஆட்டம்.]

மேற்காட்டிய *mēṟ-kāṭṭiya,* பெ.எ. (adj.) மேற்கண்ட பார்க்க; see *mēṟ-kaṇḍa.*

[மேல் + காட்டிய. காட்டு → காட்டிய.]

மேற்காது *mēṟ-kādu,* பெ.(n.) காதின் மேற்பகுதி (வின்.); upper part of the ear.

[மேல் + காது]

மேற்காவல் *mēṟ-kāval,* பெ.(n.) 1. மேல் உசாவல் (விசாரணை) (வின்.); superintendence. 2. மேல் உசாவல் (விசாரணை) செய்பவன்; superintendent.

க. மேல்காவலி.

[மேல் + காவல்]

மேற்காறுபாறு *mēṟ-kāṟupāṟu,* பெ.(n.) மேற்காவல் (வின்.) பார்க்க; see *mēṟ-kāval.*

[மேல் + காறுபாறு]

U. *Kārbār* > த. காறுபாறு.

மேற்கி *mēṟki,* பெ.(n.) நஞ்சு (பாஷாணம்) (அரு.அக.); poison.

மேற்கு *mēṟku,* பெ.(n.) திசைகளுள் ஒன்று; west. *'ஞாயிறு மறையும் திசை மேற்கு'.*

ம. மேற்கு.

மறுவ. மேலைத்திசை.

[மேல் → மேற்கு = மலையாலுயர்ந்த திசை, அல்லது கதிரவன் செலவின் பிற்பகுதிக் குரிய திசை.]

மேடான திசை மேற்கு இது பள்ளமான திசைக்கு (கிழக்கிற்கு) எதிரானது. சோழ, பாண்டி நாட்டின் நிலமட்டம் நோக்கியே பள்ளமான திசை (கிழக்கு) என்றும் மேடான திசை (மேற்கு) என்றும் அழைக்கப்பட்டன.

மேற்குடி *mēṟ-kuḍi,* பெ.(n.) காணியாளர்; land owners of a village. *"கீழ்க்குடியாகிய வரிசையாளரைப் புறந்தரும் மேற்குடிகளாகிய காணியாளரை"* (பதிற்றுப். 13, 24, உரை).

[மேல் + குடி]

மேற்குடுமி *mēṟ-kuḍumi,* பெ.(n.) 1. உச்சிக் குடுமி (இ.வ.); tuft of hair on the crown of the head, top knot. 2. கதவின் மேற்பக்கத் தாடுங் குடுமி (வின்.); upper pin of a door.

[மேல் + குடுமி]

மேற்குத்திசை *mēṟku-t-tišai,* பெ.(n.) மேற்கு பார்க்க; see *mēṟku. 'தமிழ்நாட்டின் மேற்குத் திசையில் கேரளம் அமைந்துள்ளது' (உ.வ.)*

[மேற்கு + திசை]

மேற்குத்தொடர்ச்சிமலை *mēṟku-t-toḍarcci-malai,* பெ.(n.) தென்னிந்தியாவின் மேல் புறத்தில் தெற்கு வடக்காகத் தொடர்ந்து செல்லும் மலை; the western ghats.

[மேற்கு + தொடர்ச்சி + மலை]

மேற்குலத்தோர் *mēṟ-kulattōr,* பெ.(n.) உயர்ந்த குலத்தவர் (சாதியார்) (வின்.); people of high caste, those of a superior class.

[மேல் + குலத்தோர்]

மேற்குலம் *mēṟ-kulam,* பெ.(n.) உயர்குலம்; high caste. *'தங்கள் குலத்தை மேற்குலம் என்று சொல்லுபவர்கள் இன்னும் இருக்கின்றனர்'.*

[மேல் + குலம்]

மேற்குலர் *mēṟ-kular,* பெ.(n.) மேற் குலத்தோர் பார்க்க (சூடா.); see *mēṟkulattōr.*

[மேல் + குலர்]

மேற்கூரை *mēṟ-kūrai,* பெ.(n.) 1. வீட்டின் மேல் வேய்ந்த கூரை (வின்.); roof of a house. *'சேவல் வேய்ந்த கூரை'.* 2. அடிநிலம் நீங்கலான கட்டடம்; super structure. 3. மேற்கோப்பு பார்க்க; see *mēṟkōppu.* 4. மேல்தளம்; ceiling. *'சேவல் மேற்கூரையில் நின்று கூவியது'.*

[மேல் + கூரை. கூர் → கூரை]

மேற்கூறிய *mē̠r-kūṟiya,* பெ.எ. (adj.) மேற் சொன்ன பார்க்க; see *mē̠r-coṉṉa.* *'அவனால் மேற்கூறியவற்றை மறுக்க இயலவில்லை'.*

[மேல் + கூறிய. கூறு → கூறிய]

மேற்கை *mē̠ṟkai,* பெ.(n.) தோள்பட்டைப் பகுதி, கையின் மேற்பகுதி; the upper portion of the arm.

க. மேல்தோளு.

[மேல் + கை]

மேற்கொண்டு *mē̠r-koṇḍu,* வி.எ. (adv.) 1. குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு அல்லது நேரத்துக்குப் பிறகு தொடர்ந்து; further. *'அவரால் மேற்கொண்டு பேச முடியவில்லை'.* 2. இனிமேல்; hereafter. *'நடந்தது நடந்து விட்டது, இனி மேற்கொண்டு என்ன செய்வது என்று சிந்தித்துச் செயல்படுங்கள்'.*

[மேல் + கொண்டு]

மேற்கொதி *mē̠r-kodi,* பெ.(n.) 1. உடம்பின் சூடு (வின்.); feverishness. 2. முத்துக் கொதி, முதற் கொப்புளம் கிளம்பும் அரிசிக் கொதி; a stage in the boiling of rice. *'சோறு சமைக்கையில் மேற்கொதி முந்தி வருகிறது'.*

[மேல் + கொதி]

மேற்கொள்(ளு)-தல் *mē̠r-koḷ(ḷu)-,* 10 செ. குன்றாவி.(v.t.) 1. மேலேறுதல்; to mount, as a horse. *"பரிமேற் கொண்ட பாண்டியனார்" (திருவாச. 36, 3).* 2. மேம்படுதல் (வின்.); to gain prominence, to overcome, surpass, to rise above. *'அவனை நான் மேற்கொண்டு விட்டேன்'.* 3. உறுதி செய்தல்; to assert, as a proposition. *'பிரபஞ்சம் உற்பத்தி திதிநாச முடைத்தென மேற்கொண்டது'. (சி.போ.பா. 1, பக். 43).* 4. ஏற்றுக் கொள்ளுதல்; to embrace, as a doctrine, to accept. *'அந்தக் கொள்கையை அவன் மேற்கொண்டவன்'.* 5. முயலுதல்; to undertake, attempt. *"அவமதனை யஃதிலார் மேற்கொள்வது" (குறள், 262).* 6. பொறுப்பு கொள்ளுதல் (வகித்தல்); to assume the responsibility of. *'அரசியலை மேற் கொண்டான்'.* 7. வஞ்சினமுரைத்தல்; to make a vow, to asseverate. 8. நடத்துதல்; to conduct. *'அனுமதியின்றி கட்டப்பெற்ற வீடுகளைக் குறித்து ஆய்வு மேற்கொள்ளப் படும்'.* 9. கைக்கொள்ளுதல்; to take measure, to adopt methods. *'நோய் தடுப்பு வழிமுறைகள் விரைவில் மேற்கொள்ள வேண்டும்'.* 10. செயல்படுதல்; to function. *'தொழிலாளிகள் தங்கள் தேவைகளை நிறைவு செய்தற்பொருட்டு உண்ணா நோன்பு மேற்கொண்டனர்'.*

[மேல் + கொள்-,]

மேற்கோண்மலைவு¹ *mē̠ṟkōṇ-malaivu,* பெ.(n.) ஏரணத்தில் முற்கூறியதற்கு மாறுபடக் கூறுகையாகிய குற்றம் (தொல். சொல். 1, சேனா); (Log.) subsequent contradiction of a proposition previously stated, a flaw in logic.

[மேற்கோண் + மலைவு]

மேற்கோண்மலைவு² *mē̠r-kōṇ-malaivu,* பெ.(n.) செய்யுட் குற்றங்களுளொன்று (யாப். வி. ப. 325); a defect in poetic composition.

[மேற்கோண் + மலை]

மேற்கோப்பு *mēṟ-kōppu,* பெ.(n.) வீட்டின் கூரைப்பகுதி; roof, roofing.

[மேல் + கோப்பு. கோ → கோப்பு]

மேற்கோள்[1] *mēṟ-kōḷ,* பெ.(n.) 1. ஏற்றுக் கொள்கை; acceptance. 2. போர்வை (வின்.); cover, mantle. 3. பொறுப்பில் இருக்கை; assumption of responsibility. *"இடஞ் சிறிதென்னும் மேற்கோள் செலுத்த" (புறநா. 8, உரை).* 4. ஊக்கம்; enterprising spirit, enthusiasm. 5. வஞ்சினம் (சிலப். பதி. 80, உரை); solemn asseveration. 6. அறுதியுரை (தருக்கசங். பக். 34); (Log.) proposition stated. 7. மேன்மை (சது.); excellence.

தெ. மேகோலு.

[மேல் + கோள்]

மேற்கோள்[2] *mēṟ-kōḷ,* பெ.(n.) ஞாயிற்றி லிருந்து உருவத்தில் இரண்டாம் நிலையிலும் தொலையில் ஆறாம் இடத்தில் உள்ளதும் குளிர்ச்சியைத் தருவதாக நம்பப்படுவதுமான காரி (சனி) கோள் (பிங்.); the planet saturn.

மறுவ. அந்தன், கதிர்மகன், கரியோன், காரி, கீழ்மகன், சவுரி, சாவகன், நீலன், பங்கு, மந்தன், முடவன், முதுமகன்.

[மேல் + கோள்]

மேற்கோள்[3] *mēṟ-kōḷ,* பெ.(n.) உறுதிப் பாடான நோக்கம்; set purpose. *"ஒழியாமலுல குய்யக் கொள்வனென்று மேற் கோளுடையாள்" (நீலகேசி. 188, உரை).*

[மேல் + கோள்]

மேற்கோள்[4] *mēṟ-kōḷ,* பெ.(n.) கூறிய வடிவத்திலேயே சொல்லும் புலப்பாட்டு நெறி; quotation, citation. *'மறைமலையடிகளார் திருக்குறளை அடிக்கடி மேற்கோள் காட்டிப் பேசுவார்'.*

[மேற் + கொள்–, மேற்கொள் → மேற்கோள்]

மேற்சட்டை *mēṟ-caṭṭai,* பெ.(n.) உடம்பின் மேல்பாகத்தில் போடும் சட்டை; an upper garment.

க. மேல்வொதகெ.

[மேல் + சட்டை. மேற்சட்டை உள்ளாடைக்கு மேல் போடும் சட்டையெனவும் உடம்பின் மேல்பாகத்தில் (தோளிலிருந்து இடுப்பு வரை) போடும் சட்டை எனவும் இருவகையாகப் பொருள் கொள்ள இடமுண்டு]

மேற்சாட்சி *mēṟ-cāṭci,* பெ.(n.) முன் சாட்சியை யுறுதிப்படுத்தும் சாட்சி; additional evidence, confirmatory evidence.

[மேல் + சாட்சி]

Skt. *śāksin* > த. சாட்சி.

மேற்சாத்து *mēṟ-cāttu,* பெ.(n.) 1. மேல் துண்டு; upper garment. *"வேழங் கொடுத்ததொரு மேற்சாத்தும்" (ஏகாம். உலா. 203).* 2. திருமேனி முதலியவற்றிற்குக் காப்பின் மேற்புறஞ்சாத்தும் அணி (இ.வ.); ornaments worn over the kavasam of an idol etc. 3. சாத்துப்படி (இ.வ.); sandal paste. 4. மேலொப்பம் பார்க்க; see *mēl-oppam.*

[மேல் + சாத்து]

மேற்சாதி *mēṟ-cādi,* பெ.(n.) மேற்குலம் பார்க்க; see *mēṟ-kulam.*

மறுவ. உயர்குலம்.

க. மேலுசாதி.

[மேல் + சாதி]

Skt. *jāti* > த. சாதி.

மேற்சீட்டு *mēṟ-ciṭṭu,* பெ.(n.) எழுதியுள்ளதை யுறுதிப்படுத்துஞ் சீட்டு (வின்.); note annexed to a writing to authenticate it.

[மேல் + சீட்டு]

மேற்சீமை *mēṟ-cīmai,* பெ.(n.) 1. இங்கிலாந்து முதலிய மேனாடுகள்; the western countries, as England etc., 2. எருமை (மைசூர்) நாடு; Mysore, as lying to the west of the Tamil county.

[மேல் + சீமை]

மேற்சுவாசம் *mēṟ-cuvāśam,* பெ.(n.) மேல்மூச்சு, 2 பார்க்க; see *mēl-mūccu* 2.

[மேல் + சுவாசம்]

Skt. *śvāsa* > த. சுவாசம்.

மேற்சூரி *mēṟ-śūri,* பெ.(n.) மேற்படி, 1 (சர்வா. சிற். 45) பார்க்க; see *mēṟpaḍi,1.*

[மேல் + சூரி]

மேற்செம்பாலை *mēṟ-cempālai,* பெ.(n.) பாலையாழ்த்திறவகை (பிங்.) (சிலப். 3, 88, உரை); (Mus.) a secondary melody-type of the *pālai* class.

[மேல் + செம்பாலை]

மேற்செல்(லு)-தல் *mēṟ-cel(lu)-,* 13 செ.கு.வி. (v.i.) 1. தாழ்வான பகுதியிலிருந்து உயர்வான பகுதிக்குச் செல்லுதல்; to go or climb upward as of tree, mountain, upstairs, etc. *'நீலமலை, ஆனைமலை, சேரவரையன் மலை முதலிய மலைகளிலுள்ள இற்றைப் பழங்குடி மாந்தரெல்லாம் கொள்ளைக்கும் போருக்குந் தப்பிக் கீழிருந்து மேற் சென்றவரே'.* 2. அப்பாற்போதல்; to go on, go further. 3. மேற்படுதல்; to excel, surpass. 4. படையெடுத்தல் (திவா.); to invade. 5. விரைதல்; to hasten. *"நல்வினை மேற்சென்று செய்யப்படும்" (குறள், 335).*

க. மேலுவோகு; பட. மேலெஹோகு.

[மேல் + செல்(லு)-,]

மேற்செலவு *mēṟ-celavu,* பெ.(n.) 1. படையெடுப்பு; invasion. *"நின்னைப்பாடும் புலவர் நினது மேற் செலவைப்பாட" (புறநா. 33, உரை).* 2. வீட்டு நாட்சரி (தினசரி) செலவு (கொ.வ.); sundry expenses of a household.

[மேல் + செலவு]

மேற்சொன்ன *mēṟ-coṉṉa,* பெ.எ. (adj.) மேலே குறிப்பிட்ட, மேலே உரைத்த; above mentioned.

ம. மேற்சொல்லிய.

[மேல் + சொன்ன]

மேற்பக்கம் *mēṟpakkam,* பெ.(n.) உள் பக்கத்திற்கு எதிரானது, புறப்பகுதி, வெளிப்பக்கம்; upside.

[மேல் + பக்கம்]

மேற்பகுதி *mēṟpagudi,* பெ.(n.) மேலாக இருக்கும் பாகம்; upside, top portion of a tree etc. *'மரத்தின் மேற்பகுதி இலைகளைக் கழிக்க வேண்டும்' (உ.வ.).*

[மேல் + பகுதி]

மேற்பட்டை *mēṟ-paṭṭai,* பெ.(n.) மரத்தின் மேலுள்ள தோல் (வின்.); outer bark of a tree.

மறுவ. மேற்புறணி.

[மேல் + பட்டை]

மேற்படி *mēṟ-paḍi,* பெ.(n.) 1. கதவு நிலையின் மேற்பாகத்திலிருக்கும் மரம் (இ.வ.); lintel, upper part of the frame of a door or window. 2. முற்குறித்தது; the aforesaid, above said, above mentioned. *"மேற்படி பெருமானடி களுக்கு நந்தாவிளக் கெரிப்பதாக" (S.I.I.iii.97).*

ம. மேல்படி.

[மேல் + படி]

மேற்படிப்பு *mēṟ-paḍippu,* பெ.(n.) மேல் நிலைப் படிப்பு; further studies, higher education. *'மேற்படிப்பிற்காக வெளிநாடு செல்கிறேன்'.*

[மேல் + படிப்பு. படி → படிப்பு]

மேற்படியான் *mēṟ-paḍiyāṉ,* பெ.(n.) மேலே சொல்லப் பெற்றவன்; one who is mentioned above. *"திருக்கழுங்குன்றக் கண்ணப்பன் வைத்த திருநுந்தா விளக் கொன்று மேற்படியாக வைத்த விளக்கு ஆறு" (தெ. கல். தொ. 5. கல். 468).*

[மேல் + படியான்]

மேற்படு-தல் *mēṟ-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. சிறந்திருத்தல்; to predominate, preponderate. 2. குணத்தில் மேம்படுதல்; to excel in quality, to be superior. 3. அதிகமாதல்; to increase, to be excessive. *"நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" (திருவாச. 3, 4).*

[மேல் + படு-,]

மேற்பணி *mēṟ-paṇi,* பெ.(n.) பரவமகளிர் காதணி வகை (இ.வ.); an ear ornament worn by Parava women.

[மேல் + பணி]

மேற்பயிர் *mēṟ-payir,* பெ.(n.) மரம், செடி முதலியன; corn. large vegetables and trees. (R.).

[மேல் + பயிர்]

மேற்பரப்பு *mēṟ-parappu,* பெ.(n.) பார்க்கும் வகையில் உள்ள பரப்பு, தரை முதலியவற்றின் வெளிப்பரப்பு (இ.வ.); surface. *'நீரின் மேற்பரப்பைக் கிழித்துக்கொண்டு படகு சென்றது'.*

[மேல் + பரப்பு]

மேற்பல் *mēṟ-pal,* பெ.(n.) மேல்வாய்ப்பல் பார்க்க; see *mēlvāy-p-pal.*

[மேல் + பல்]

மேற்பலகை *mēṟ-palagai,* பெ.(n.) 1. மேற்படி, 1 பார்க்க (வின்.); see *mēṟ-paḍi* 1. 2. உகில் (நகம்) (அரு.அக.); nail.

[மேல் + பலகை]

மேற்பாடம் *mēṟ-pāḍam,* பெ.(n.) படி (நகலு)க்கு மூலமாயுள்ளது (வின்.); the original of a copy.

[மேல் + பாடம்]

மேற்பாதம் *mēṟ-pādam,* பெ.(n.) இரண்டு கால்களையும் சம்மணமாக மடித்துப் பாதங்களைத் தொடைகளின் மேலாக வைக்கும் ஓக இருக்கை (யோகாசன) வகை; *(Yōga.)* a posture in which the legs are folded crosswise and the feet placed on the thighs.

[மேல் + பாதம். பதி → (பாதி) → பாதம்]

மேற்பாதி *mēṟ-pādi,* பெ.(n.) மேல்வாரம் பார்க்க; see *mēl-vāram.* *"இப்பூமி மேற் பாதியும் பணியுங் கொண்டு" (T.A.S.iii. 168).*

[மேல் + பாதி. பகுதி → பாதி]

மேற்பாதிநிலம் *mēṟ-pādi-nilam,* பெ.(n.) மேடாயிருக்கும் பக்க நிலம்; adjacent field on a higher level.

[மேல் + பாதி + நிலம். பகுதி → பாதி]

மேற்பார்—த்தல் *mēṟ-pār-,* 4 செ.குன்றாவி. (v.t.) கண்காணித்தல்; to supervise. *"மேற் பார்க்க மைந்தரு மூவாவெருதும்" (தனிப்பா.).*

[மேல் + பார்–]

மேற்பார்வை *mēṟ-pārvai,* பெ.(n.) 1. மேல் உசாவணை (வின்.); superintendence. 2. பணியாளர்களையும் பணியையும் கண்காணிக்கும் பொறுப்பு; supervision. *'மேற்பார்வை செய்ததனால்தான் பணிகள் உடனுக்குடன் நடக்கின்றன'.* 3. மேலெழுந்த பார்வை (வின்.); superficial observation. 4. செருக்கிய நோக்கம் (வின்.); proud look. 5. எட்டப் பார்வை (வின்.); long sight. 6. சாகும் சமயத்தில் (தருணத்து) மேனோக்கி நிற்கும் பார்வை (இ.வ.); up-turned position of the eyes, as at the time of death.

[மேல் + பார்வை. பார் → பார்வை. 'வை' தொ.பெ.ஈறு.]

மேற்பார்வையாளர் *mēṟ-pārvaiyāḷar,* பெ.(n.) மேற்காணி பணியைக் கண் காணிக்கும் பணியினர்; supervisor in an examination hall, a polling booth, etc. *'தேர்தல் மேற்பார்வையாளராகப் பணிபுரிவது கடினமான ஒன்றாகும். தேர்வு நடைபெறும் அறையில் இரு மேற்பார்வையாளர்கள் மேற்பார்வை செய்வதால் தவறுகள் நடைபெற வாய்ப்பில்லை'.*

[மேல் + பார்வை + ஆளர். ஆள் → ஆளர்]

மேற்பாரம் *mēṟ-pāram,* பெ.(n.) 1. அமுங்கும் படி ஒன்றன் மேலே வைக்கும் எடை (வின்.); weight for compression. 2. அதிகமாகச் சேர்க்கும் எடை; additional burden or load.

[மேல் + பாரம்]

Skt. *bhāra* > த. பாரம்.

மேற்பால் *mēṟ-pāl,* பெ.(n.) மேற்குலம் பார்க்க; see *mēṟ-kulam.* *"மேற்பா லொரு வனு மவன்கட்படுமே" (புறநா. 183).*

[மேல் + பால்]

மேற்பாலம் *mēṟ-pālam,* பெ.(n.) இருப்புப் பாதை முதலியவற்றின் மேலே கட்டப்பட்ட பாலம் (இக்.வ.); over bridge.

[மேல் + பாலம்]

மேற்பாவல் *mēṟ-pāval,* பெ.(n.) மரக் கலத்தின் உறுப்புவகை (வின்.); the upper spar of a sailing ship, dist. fr. *kīl-p-pāval.*

[மேல் + பாவல்]

மேற்புத்தி *mēṟ-putti,* பெ.(n.) மேலானவர்களிடம் பெறும் அறிவுரை; counsel, advice from elders or superiors. *"நல்லோர் கண்டு மேற்புத்தி சொல்லல் வேண்டும்" (திருவேங். சத. 49).*

[மேல் + புத்தி]

மேற்புரம் *mēṟ-puram,* பெ.(n.) வானுலகு; heaven (svarga). *"புகழுறச் சேர்வார் மேற்புரம்" (சைவச. பொது. 568).*

[மேல் + புரம்]

மேற்புலவர் *mēṟ-pulavar,* பெ.(n.) தேவர் (தைலவ. தைல.); the celestials.

[மேல் + புலவர்]

மேற்புறணி *mēṟ-puraṇi,* பெ.(n.) மேற்பட்டை பார்க்க (வின்.); see *mēṟ-paṭṭai.*

[மேல் + புரணி]

மேற்புறம் *mēṟ-puṟam,* பெ.(n.) 1. வெளிப்புறம் (வின்.); outside, upper surface. 2. கப்பலிற் காற்றுத் தாக்கும் பக்கம் (வின்.); windward side of a vessel. 3. மேலண்டைப் பக்கம்; western side.

[மேல் + புறம். மடிக்கப்படும் அல்லது சுருட்டப்படும் பொருள்கட்கு முன்பக்கம் உட்புறமும் பின்பக்கம் வெளிப்புறமும் போன்றிருத்தலாலும் உயிரற்ற கனப்பொருள்கட்கு மேற்புறம் முழுதும் வெளிப்புறமாயிருத்ததாலும் மேற்புறம் வெளிப் புறத்தைக் குறித்தது]

மேற்பூச்சு *mēṟ-pūccu,* பெ.(n.) வெளிப்பக்கம் பூச்சு, மெருகேற்றப்பட்டது; outer plastering, coating, gilding, painting. *'மேற்பூச்சு முடிந்ததும் புதுமனை புகுவிழா நடத்தப் படவேண்டும்'.* 2. புறத்தே கவர்ச்சியாகத் தோன்றும் பொய்த் தோற்றம்; outward appearance. *'வாழ்க்கையின் மேற்பூச்சுக் களையே வாழ்க்கையின் சாரம் என்று தடுமாறக் கூடாது' (உ.வ.).* 3. குற்ற மறைக்கை (இ.வ.); covering of defects, white-washing. 4. மனவீடுபாடு இல்லாத நடத்தை முதலியன (இ.வ.); formality, convention.

[மேல் + பூச்சு]

மேற்பேச்சு *mēṟ-pēccu,* பெ.(n.) 1. மேல் கொண்டு விரித்துக் கூறுதல்; further talk or discussion. 2. வெளி முகமன் (உபசாரச்) சொல்; lip-deep courtesy.

[மேல் + பேச்சு]

மேற்போக்கி *mēṟ-pōkki,* பெ.(n.) கீழுள்ள ஆறு அல்லது வாய்க்காலுக்கு மேலே குறுக்காக நீரோடும்படி கட்டிய கால் (இ.வ.); aqueduct.

[மேல் + போக்கி. போக்கு → போக்கி. 'இ' வி.முத.ஈறு.]

மேற்போட்டுக்கொள்(ளு)¹-தல் *mēṟ-pōṭṭu-k-koḷ(ḷu)-,* 10 செ.குன்றாவி. (v.t.) வலிய ஏற்றுக் கொள்ளுதல்; to undertake voluntarily, to take upon oneself.

[மேல் + போட்டு + கொள்(ளு)-, 'கொள்' து.வி.]

மேற்போட்டுக்கொள்(ளு)²-தல் *mēṟ-pōṭṭu-k-koḷ(ḷu)-,* 16 செ.கு.வி. (v.i.) பிறனுக்காகப் பிணையேற்றல்; to stand surety, stand guarantee.

[மேல் + போட்டு + கொள்(ளு)-,]

மேற்போர்வை *mēṟ-pōrvai,* பெ.(n.) மேலாகப் போர்த்திக் கொள்ளும் போர்வை; upper garment.

[மேல் + போர்வை. போர் → போர்வை. 'வை' தொ.பெ.ஈறு.]

மேற்றட்டு[1] *mēṟṟaṭṭu,* பெ.(n.) 1. உயர்தரம்; high rank. 2. அடுக்குப் பேழை முதலியவற்றின் மேல் அறை; upper shelf, as of an almirah. 3. மேற்றளம்[1], 2 பார்க்க; see *mēṟṟaḷam*[1],*2.* 4. பரண் போன்ற மேலிடம்; upper berth. 5. அடுக்கு ஏன(பாத்திர)த்தில் மேலுள்ள தட்டு; upper compartment as of a tiffin carrier. 6. உடுத்தியிருக்குஞ் சேலையின் வெளிச்சுற்று (இ.வ.); outer fold of a woman's garment.

[மேல் + தட்டு]

மேற்றட்டு[2] *mēṟṟaṭṭu,* பெ.(n.) உயர்ந்த வகை (சாதி) மட்டக் குதிரை; superior pony.

[மேல் + தட்டு]

மேற்றண்ணீர் *mēṟṟaṇṇīr,* பெ.(n.) 1. மேலிடத்தினின்று வரும் நீர்; water from a higher level. 2. தலைமடையிலிருந்து பாயும் நீர்; water from the head-sluice of a channel. 3. நிலத்தின் மேலே தேங்கி யோடும் நீர்; surface-water. 4. நில மட்டத்தை யடுத்துக்காணும் ஊற்று நீர்; surface-spring. 5. மழை நீர்; rain-water, as from above.

[மேல் + தண்ணீர். தண் + நீர் – தண்ணீர். வெப்பநாட்டில் விரும்பிக் கொள்ளும் தண்மை அடை நீருடன் சேர்ந்து பெருவழக்கூறிய பின் (தண்ணீர்) ஒரு சொல் நீர்மைப்பட்டு நீரைக் குறிப்பதாயிற்று.]

மேற்றலை *mēṟṟalai,* பெ.(n.) 1. தலையின் மேற்பகுதி; crown, top of the head. 2. மேற்புறம், 2, 3 பார்க்க (வின்.); see *mēṟ-puṟam 2,3.* 3. மேற்புறம்; upper surface. *'மேசையின் மேற்றலை'.* 4. நதி முதலியன தொடங்குமிடம்; beginning, head; source, as of a river. *'இது மேற்றலை வெள்ளம்'.*

[மேல் + தலை]

மேற்றளம்[1] *mēṟṟaḷam,* பெ.(n.) 1. மேல்மாடி; upper floor. *"மேற்றளத் தொருவன் பசிக்க வைத்து" (பிரபோத. 13, 17).* 2. கப்பலின் மேற்புறத்துள்ள தட்டு (வின்.); upper deck of a ship.

[மேல் + தளம்]

மேற்றளம்[2] *mēṟṟaḷam,* பெ.(n.) 1. புறவிதழ்; calyx of a flower. 2. மெய்க்காவற் படை (யாழ்.அக.); troop of body-guards.

[மேல் + தளம்]

மேற்றிசை *mēṟṟišai,* பெ.(n.) மேற்கு; west. *"மேற்றிசைக்க ணுள்ள நிலத்தை" (சிறுபாண். 47, உரை).*

[மேல் + திசை]

மேற்றிசைப்பாலன் *mēṟṟišai-p-pālaṉ,* பெ.(n.) மழைக்கடவுள் (சூடா.); *Varuṇa,* as the regent of the west.

[மேற்றிசை + பாலன்]

Skt. *pāla* > த. பாலன்.

மேற்றிணை *mēṟṟiṇai,* பெ.(n.) உயர்குலம்; high caste. *"தன் மேற்றிணைக் கேற்பத் தகுவன கூறும்" (பெருங். உஞ்சைக். 36, 121).*

[மேல் + திணை]

மேற்றொழில் *mēṟṟoḻil,* பெ.(n.) உயர்ந்த செயல்; great deed or achievement. *"மேற்றொழிலு மாங்கே மிகும்" (நாலடி, 193).*

[மேல் + தொழில்]

மேற்றோல் *mēṟṟōl,* பெ.(n.) மீந்தோல்; epidermis.

[மேல் + தோல்]

மேற்றோள் *mēṟṟōḷ,* பெ.(n.) தோளின் மேற்பாகம்; the upper portion of the arm.

க. மேலுதோளு.

[மேல் + தோள்]

மேற்றோன்றி *mēṟṟōṉṟi,* பெ.(n.) செம்மை நிறக் கொடிவகை; red species of Malabar glory - lily. *"மேற்றோன்றிப் பூக்காள்" (திவ். நாய்ச். 10, 2).*

[மேல் + தோன்றி]

மேன் *mēṉ,* பெ.(n.) மேல், 1 பார்க்க (நாமதீப. 773); see *mēl, 1.*

[மேல் → மேன்]

மேன்கூரை *mēṉ-kūrai,* பெ.(n.) மேற்கூரை பார்க்க (யாழ்.அக.); see *mēr-kūrai.*

[மேல் + கூரை]

மேன்சாதி *mēṉ-cādi,* பெ.(n.) மேற்குலம் பார்க்க (இ.வ.); see *mēṟ-kulam.*

[மேல் + சாதி]

Skt. *jāti* > த. சாதி.

மேன்செலவு *mēṉ-šelavu,* பெ.(n.) மேற் செலவு, 2 பார்க்க (இ.வ.); see *mēṟ-celavu* 2.

[மேல் + செலவு]

மேன்பாடு *mēṉ-pāḍu,* பெ.(n.) மேம்பாடு பார்க்க (யாழ்.அக.); see *mēm-pāḍu.*

[மேல் + பாடு. படு → பாடு]

மேன்பார்க்கெல்லை *mēṉpāṟ-k-kellai,* பெ.(n.) மேற்பால்எல்லை, மேற்கு பக்கத் தெல்லை; western boundary.

[மேல் + பால் + எல்லை. இறையிலி செய்யப்பெற்ற, அல்லது விலைக்குப் பெறப்பட்ட நிலத்திற்கோ, கிராமத்திற்கோ அமைந்த நான்கு பக்க எல்லைகளையும் முறையாகக் கண்டு உள்ளவாறு சாசனத்தில் குறிப்பது வழக்காகும்'.]

மேன்பாலம் *mēṉ-pālam,* பெ.(n.) 1. மேற் பாலம் பார்க்க; see *mēṟ-pālam.* 2. மேற் போக்கி பார்க்க; see *mēṟ-pōkki.*

[மேல் + பாலம்]

மேன்மக்கள் *mēṉ-makkaḷ,* பெ.(n.) உயர்ந்தோர்; noble man, high-minded man. *"கீழாய...... சொல்பவோ மேன்மக்கள்" (நாலடி, 70). 'மேன் மக்கள் சொற்கேள்' (பழ.).*

[மேல் + மக்கள். மக + கள் – மக்கள்.]

மேன்மலை *mēṉ-malai,* பெ.(n.) 1. ஞாயிறு மறையும் இடம், மேற்கு மலை; the hill where the sun sets. *"கனலி.... மேன்மலை குளிப்ப" (பெருங். மகத. 7, 99).* 2. காவிரி நதி தோன்றும் (உற்பத்தியாகும்) மலை; the mountain in Coorg where the *Kāvēri* has it source. *"கிளையொடு மேன்மலை முற்றி" (பரிபா. 12, 2).*

[மேல் + மலை]

மேன்மாடம் *mēṉ-māḍam,* பெ.(n.) வீட்டின் மேல் பகுதி; upper storey, balcony, terrace.

[மேல் + மாடம்]

மேன்முறையாளர் *mēṉ-muṟaiyāḷar,* பெ.(n.) மேன்மக்கள் பார்க்க; see *mēṉ-makkaḷ.* *"மேன்முறையாளர் தொழில்" (திரிகடு. 2).*

[மேல் + முறையாளர்]

மேன்மூச்சு *mēṉ-mūccu,* பெ.(n.) மேல்மூச்சு பார்க்க; see *mēl-mūccu.* *'மேன்மூச்சுக் கீழ்மூச்சு வாங்குகிறது'.*

[மேல் + மூச்சு]

மேன்மூடி *mēṉ-mūḍi,* பெ.(n.) மேலே மூடுதற்குதவுவது; cover, lid.

[மேல் + மூடி. மூடு → மூடி]

மேன்மேல் *mēṉ-mēl,* வி.எ. (adv.) மேன் மேலும் பார்க்க; see *mēṉ-mēlum.* *"தவாஅது மேன் மேல் வரும்" (குறள், 368).*

ம. மேன்மேல்.

[மேல் + மேல்]

மேன்மேலும் *mēṉ-mēlum,* வி.எ. (adv.) பின்னும் பெருக, தொடர்ந்து அதிகமாக; more and more, further and further. *"மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே" (திருவாச. 5, 30). 'உன்னுடைய பணியில் மேன் மேலும் உயர்ச்சி பெற வாழ்த்துகள்' (உ.வ.).*

க. மேலிந்தமேலெ.

[மேல் + மேலும்]

மேன்மை *mēṉmai,* பெ.(n.) 1. சிறப்பு, உயர்வு; greatness, eminence, excellence, dignity, superiority. *"ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை" (குறள், 137). 'மேன்மையான செயல்கள் செய்து வாழ்வைப் பயனுடையதாகக் கொள்தல் வேண்டும்'. (உ.வ.).* 2. பெருமை; grandeur, sublimity. 3. கண்ணியம்; respect, honour, nobility.

ம. மேன்ம; தெ. மேலிமி.

[மேல் → மேன்மை (மு.தா.74)]

மேன்றலை *mēṉralai,* பெ.(n.) மரக்கலத்தின் முன்புறம் (யாழ்.அக.); the helm of a ship.

[மேல் + அலை]

மேன *mēṉa,* இடை. (part.) ஏழாம் வேற்றுமை யுருபு (தொல். சொல். 57, சேனா.); ending of the locative.

[மேல் → மேன் → மேன]

மேனசம் *mēṉaśam,* பெ.(n.) வெங்காரம் (சங்.அக.); borax.

மேனடைநீர் *mēṉaḍai-nīr,* பெ.(n.) அதிகப் படியாகவுள்ள நீர்; surplus water. *"மேனடைநீர் பாயவும்" (S.I.I.iii. 411).*

[மேல் → (மேன்) → மேனடை + நீர்]

மேனரிக்கம் *mēṉarikkam,* பெ.(n.) அத்தை அல்லது அம்மான் குடும்பத்தாரோடு ஒருவனுக்குள்ள உறவு முறைமை. (சென்னை.); the relationship that exists between a man as his father's sister's family or his mother's brother's family.

தெ. மேனரிக்கமு.

மேனா¹ *mēṉā,* பெ.(n.) மேனாப்பல்லக்கு பார்க்க; see *mēṉā-p-pallakku.*

க. மேன, மேணி.

[மேல் → மேன் → மேனா]

மேனா² *mēṉā,* பெ.(n.) 1. மரப்பால் வகை மருந்துப் பொருள் (பைஷஜ.); a kind of saccharine exudation obtained from r[illegible] 2. மர வகை; flowering ash tree (M.M. 4[illegible])

[மன்னா → மானா → மேனா]

மேனாக்காய்ச்சொல்(லு)-தல் *mēṉā-k-kāy-c-col(lu)-,* 8 செ.குன்றாவி. (v.t.) உளமாறப் பேசாமல் மேற்போக்காகப் பேசுதல்; to speak merely for form's sake, to express sentiments which are merely lip-deep. *(Nāñ.).*

[மேல் + நாக்கு + ஆய் + சொல்-.]

மேனாட்டார் *mēṉāṭṭār,* பெ.(n.) 1. தேவர்; the celestials. 2. எருமை நாடு (மைசூர்) மாநிலத்தவர்; the people of Mysore. 3. ஐரோப்பியர் முதலிய மேலைத் தேசத்தவர்கள்; the Occidentals, Europeans. 4. திருநெல்வேலியின் மேற்குப் பகுதியிலும், திருவிதாங்கூரிலுமுள்ள சாணார் வகையார்; a sub-division of the *šāṇār* caste in the western part of *Tirunelvēli* and in Travancore.

[மேல் + நாட்டார். நாடு → நாட்டார் = நாட்டைச் சேர்ந்தவர். மேற்குப் பகுதியில் உள்ள நாடு மேனாடு. மேனாட்டில் வாழ்வோர் மேனாட்டார்]

மேனாடு[1] *mēṉāḍu,* பெ.(n.) 1. துறக்கம் (சுவர்க்கம்); heaven (svarga), as the upper world. 2. மேட்டு நிலம் (பீடபூமி); highland. 3. தமிழ்நாட்டுக்கு மேற்பாலுள்ள எருமையூர் (மைசூர்) (குருபரம்.); Mysore, as being to the west of the Tamil country. 4. மேற்சீமை, 1 பார்க்க; see *mēṟ-cīmai 1.*

[மேல் + நாடு. உயரே இருப்பது என்னும் பொருளில் வருவது நேரடிப்பொருள். அவ்வாறில்லாமல் உயரமான பகுதி, அப்பகுதி அமைந்த திசை, அத்திசையில் அமைந்த நிலம் என்னும் பொருளில் வருவது பொருள் விரிவடிப்படையில் அமைந்தது]

மேனாடு[2] *mēṉāḍu,* பெ.(n.) பொன்னாங்காணி (தைலவ. தைல); a plant found in damp places.

மேனாணி-த்தல் *mēṉāṇi-,* 11 செ.கு.வி. (v.i.) பெருமிதங் கொள்ளுதல்; to be proud. *"அவர்கள் நடுவே............... மேனாணித் திருக்கு மிருப்பை" (ஈடு, 7, 6, 9).*

[மேல் + நாணி. நாண் → நாணி. இயல்பான கீழ் நோக்கி வளைதல் போலில்லாமல் மேல்நோக்கி வளைதல் அதாவது நிமிர்தல் பெருமிதத்தைக் குறிப்பதாயிற்று. 'இ' வினையாக்க ஈறு]

மேனாணிப்பு *mēṉāṇippu,* பெ.(n.) பெருமிதம்; pride, lordliness. *"அத்தால் வந்த மேனாணிப் பாலே செருக்கி யிருக்கிறவனை" (திவ். திருக்குறுந். 2, வ்யா).*

[மேல் + நாணிப்பு, நாணி → நாணிப்பு. 'பு' தெ.பெ.ஈறு]

மேனாதம் *mēṉādam,* பெ.(n.) 1. பூனை (யாழ்.அக.); cat. 2. மயில்; peacock. 3. வெள்ளாடு; goat.



மேனாதம்

மேனாப்பல்லக்கு *mēṉā-p-pallakku,* பெ.(n.) மூடு பல்லக்கு; a covered palanquin.

[மேல் → மேனா + பல்லக்கு]



மேனாப்பல்லக்கு

மேனாம்பு *mēṉāmbu,* பெ.(n.) அவமதிச் சொல்; harsh word, offensive language. *"கண்டாற் புலவரை மேனாம்பு பேசுங் கசடர்" (பெருந்தொ. 1336).*

[மேல் + ஆம்பு]

மேனாமினுக்கி *mēṉā-miṉukki,* பெ.(n.) மேனிமினுக்கி பார்க்க; see *mēṉi-miṉukki.*

[மேனி = உடல், உடம்பு; மேனிமினுக்கி = உடம்பைப் பகட்டாக அழகுபடுத்திக் காட்டுபவ-ன்-ள். மேனி மினுக்கி → மேனாமினுக்கி]

மேனாரிக்கம் *mēṉārikkam,* பெ.(n.) மேனரிக்கம் (சென்னை.) பார்க்க; see *mēṉarikkam.*

தெ. மேனரிக்கமு.

[மேனரிக்கம் → மேனாரிக்கம்]

மேனாவண்டி *mēṉā-vaṇḍi,* பெ.(n.) பெட்டி வண்டி (இ.வ.); bullock-coach.

[மேனா + வண்டி]



மேனாவண்டி

மேனாள் *mēṉāḷ,* பெ.(n.) 1. முன்னாள்; former day. *"மேனாணீ பூப்பலிவிட்ட கடவுளைக் கண்டாயோ" (கலித். 93).* 2. பின்னாள் (கலித். 72, உரை); subsequent day.

ம. மேநாள்; க. மேலினதின (அடுத்த நாள், மறுநாள்).

[மேல் + நாள்]

மேனி¹ *mēṉi,* பெ.(n.) 1. உடம்பு, உடல் (பிங்.); body. *"பசந்த மேனியள்" (சிலப். 8, 68) 'பொன்போல் சிவந்தமேனி' (உ.வ.).* 2. வடிவம் (பிங்.); form, shape. 3. நிறம்; colour. *"தளிரேர் மேனித்தாய சுணங்கின்" (நெடுநல். 148).* 4. அழகு; beauty. 5. நன்னிலைமை; good condition, healthy state.

ம. மேனி; தெ. மேனு, மேனி (ஒளி, உடம்பிற்குரியன); குட. மெளி; கொலா. மென்; நா., பர். மேன்; கட. மேனு; கோண். மேண்டுர்; குரு. மேத்; மா. மேத்.

[மேல் → மேன் → மேனி = உடம்பின் மேற்புறம், உடம்பு, திருமேனி = இறையுடம்பு, தூயோருடம்பு (மு.தா.74).]

மேனி² *mēṉi,* பெ.(n.) 1. ஒருவகைப் பூடு (குப்பை மேனி) (தைலவ. தைல.); Indian acalypha.

ம. குப்பமேனி.

[குப்பைமேனி → மேனி]

மேனி

மேனி³ *mēṉi,* பெ.(n.) 1. நிலத்தின் சராசரி விளைவு; average crop or yield of a harvest. *'இந்த முறை நெல்மேனிக் குறைவு'.* 2. விழுக்காட்டுமானம் (வீதம்); percent. *'ஆளுக்குப் பத்து உருவா மேனி கூலி பேசினார்' (உ.வ.).*

[மேல் → மேனி = உடம்பு, உடம்பு போலத் தனியாகத் தெரியும் உருப்படி]

மேனிக்கு *mēṉikku,* இடை. (part.) படி, வண்ணம்; as, keep on. *'இழவு வீட்டிற்குச் சொந்தக்காரர்கள் வந்த மேனிக்கு இருக்கிறார்கள்'.*

[மேனி + கு. 'கு' நா.வே.உ.]

மேனிகரப்போர் *mēṉi-karappōr,* பெ.(n.) தம் உருவத்தை மறைக்க வல்லாரான அசுரர் (பிங்.); Asuras, as becoming invisible at will.

[மேனி + கரப்போர்]

மேனிகுலை-தல் *mēṉi-kulai-,* 2 செ.கு.வி. (v.i.) (வின்.) 1. அழகு குறைதல்; to lose freshness or beauty, to fade, to wither as the body. 2. சீர் குலைதல்; to be disarranged, dishevelled, as the hair. 3. உருவங்கெடுதல்; to be deformed. 4. கலக்க முறுதல்; to be perturbed, agitated.

[மேனி + குலை-,]

மேனிச்சம்பா *mēṉi-c-cambā,* பெ.(n.) சம்பா நெல்வகை (தமிழன்); a kind of *sambā* paddy.

[மேனி + சம்பா]

மேனிப்பொன் *mēṉi-p-poṉ,* பெ.(n.) பழைய வரிவகை; an ancient tax. (I.m.p Tr. 89).

[மேனி + பொன்]

மேனிமினுக்கி *mēṉi-miṉukki,* பெ.(n.) எப்போதும் அழகுபடுத்திக் கொண்டு திரிபவ-ன்–ள்; person gaudily dressed, fop.

[மேனி + மினுக்கி. மினுக்கு → மினுக்கி 'இ' பண்பு குறித்த ஈறு]

மேனிலம் *mēṉilam,* பெ.(n.) மேனாடு, 1 பார்க்க; see *mēṉāḍu1.*

[மேல் + நிலம்]

மேனிலர் *mēṉilar,* பெ.(n.) இறைவர் (நாமதீப. 63); gods.

மறுவ. கடவுளர், தேவர்.

[மேல் + நிலர். நிலம் → நிலர். மேலோன (உயரமான) நிலத்திற்குரியவர்]

மேனிலை *mēṉilai,* பெ.(n.) 1. முன்னர் உள்ளது; that which precedes. *"மேனிலை யொத்தலும்" (தொல். எழுத். 340).* 2. மேல் மாடி (பிங்.); upper storey. *"மேனிலைச் சாளரக் கதவு" (காஞ்சிப்பு. நகர. 75).*

[மேல் + நிலை]

மேனிலைக்கட்டு *mēṉilai-k-kaṭṭu,* பெ.(n.) கோபுர முதலியவற்றின் மேல்மாடி (சுக்கிரநீதி, 229); storey, as of a tower.

[மேனிலை + கட்டு]

மேனிலைப்பள்ளி *mēṉilai-p-paḷḷi,* பெ.(n.) பத்தாம் வகுப்பிற்கு மேல் இரண்டு ஆண்டுகள் படிக்கவேண்டிய படிப்புத் திட்டம் கொண்ட உயர்நிலைப் பள்ளி; higher secondary school which has a two year course after the tenth standard.

[மேல் + நிலை + பள்ளி]

மேனீர் *mēṉīr,* பெ.(n.) 1. மேற்றண்ணீர் 1,2,3,4 பார்க்க; see *mēṟṟaṇṇīr 1,2,3,4.* 2. மழைநீர்; rain-water. *"இந்நிலத்துக்கு முன்னுடைய மேனீருங் கிணறும்" (S.I.I.iii,110).*

[மேல் + நீர்]

மேனோக்கம் *mēṉōkkam,* பெ.(n.) 1. மேனோக்கிக் கிளம்புகை; elevation, rise, steepness. 2. தாராள சிந்தை; liberality of mind. 3. மேலெழுந்த பார்வை; superficial view. 4. பேரவா; aspiration, ardent desire. 5. செருக்கு; haughtiness.

[மேல் + நோக்கம்]

மேனோக்கு-தல் *mēṉōkku-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மேல் எழுதல் (வின்.); to rise. 2. பெருகுதல்; to increase. 3. கக்குதல் (வாந்தியாதல்) (கொ.வ.); to vomit. 4. பேரவாக் கொள்ளுதல்; to aspire, ardently, desire. 5. செருக்குறுதல்; to be haughty.

[மேல் + நோக்கு-,]

மேனோன் *mēṉōṉ,* பெ.(n.) மேலோன், உயர்ந்தவன்; man of superior, in knowledge, culture etc.,

[மேல் → மேலோன் → மேனோன்]

மை

மை[1] *mai,* பெ.(n.) தமிழ் நெடுங்கணக்கில் 'ம்' என்ற மெய்யெழுத்தும் 'ஐ' என்ற உயிர்க்கூட்டெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய் (அசை) எழுத்து; the syllable formed by adding the diphthong 'ai' to the consonant 'm'.

[ம் + ஐ]

மை[2] *mai,* பெ.(n.) 1. பெரும்பாலும் பெண்கள் கண்ணில் தீட்டிக் கொள்ளப் பயன்படுத்தும் ஒட்டும் தன்மையுடைய கருப்பு நிற அழகுப் பொருள்; black pigment (applied on the edge of the eyelashes mostly by women). *'அவளுடைய மை தீட்டிய கண்கள், குழந்தைக்கு மையைக் குழைத்துப் பொட்டு வைத்தாள்' (உ.வ.).* 2. கருப்பு, நீலம், சிவப்பு முதலிய நிறங்களில் இருக்கும் எழுது பொருளாகப் பயன்படும் நீர்மம் (திரவம்); ink. *'ஆசிரியர் தூவல் சிவப்பு மையிட்டது' (உ.வ.).* 3. வண்டிச் சக்கரத்திற் கிடும் மசகெண்ணெய்; oil mixed with burnt straw; wheel (grease). 4. மந்திர வாதத்தில் பயன் படுத்தும் மை; black pigment used in witchcraft. 5. கருநிறம்; black, blackness. *"மறவர் மைபடு திண்டோள்" (அகநா. 89).* 6. இருள்; darkness. *"மைபடு மருங்குல்" (புறநா. 50).* 7. கறை, களங்கம்; spot, as of the moon; blemish. *"மைதீர்ந்தன்று மதியுமன்று" (கலித். 55).* 8. கருமேகம்; dark cloud. *"மைபடு சென்னி.... மலை" (கலித். 43).* 9. விண் (அரு.நி.); sky, as blue. 10. குற்றம்; fault, defect. *"மையிலறிவினர்" (புறநா. 22, 8).* 11. அறங்கடை (பாவம்); sin. *"மைதீர்த்தல்" (சினேந். 457).* 12. அழுக்கு;

dirt. "மையில் செந்துகிர்" (கலித். 85). 13. பிறவி; birth, as due to karma. "மையறு சிறப்பிற் றெய்வம்" (பட்டினப். 159). 14. எருமை; buffalo. "வைகுபுலர் விடியன் மைபுலம் பரப்ப" (அகநா. 41). 15. ஆடு (திவா.); sheep, goat. "மையூன் மொசித்த வொக்கலொடு" (புறநா. 96). 16. மேடவோரை (மேடராசி) (சூடா.); aries of the zodiac. 17. நீர் (யாழ்.அக.); water.

ம. மை, மழி, மயி; க., பட. மசி (அழுக்கு); தெ. மசி (கருப்பு. ஒட்டடை, கரி); து. மயி, மை, மசி (கரி); துட. மொய் (இருட்டாதல்); குட. மசி (கரி); குரு. மைச் (மை).

[முல் → மல் → மால் = கருமை, திருமால் (கரியோன்), முகில். முள் → மள் → மாள் → மாய் → மாயோன் (திருமால்), மாயோள் (காளி). மாய் → மாயம் = கருமை. மள் → (மய்) → மை = கருமை, முகில், காராடு, கரியகுழம்பு (மு.தா.181)]

மை³ *mai*, பெ.(n.) 1. மலடு (பிங்.); barrenness, sterility. 2. மலடி; barren woman. 3. மலட்டெருமை; barren buffalo.

ம. மை(மலடு), மச்சி(மலடி); கோத. மய் (மலட்டெருமை); துட. மொய்.

[முள் → மள் → மை = கருமை (மு.தா.181) = மகப்பேறின்மையாகிய கருமை, அத்தன்மையுடைய பெண், அத்தன்மையுடைய எருமை.]

மை⁴ *mai*, பெ.(n.) 1. பசுமை; greenness. "மையிருங்கானம்" (அகநா. 43). 2. இளமை (அக.நி.); youth.

[முள் → மள் → மள்ளன் = இளைஞன், வீரன் (மு.தா.41) முள் → மள் → மை.]

மை⁵ *mai*, இடை. (part.) 1. பண்புப் பெயர் விகுதியு ளொன்று; suffix expressing an abstract quality or condition, as *karumai*, *porumai*. 2. தொழிற் பெயர் விகுதியு ளொன்று; ending verbal nouns, as *šeykinramai*, *šeyyāmai*. 3. வினை யெச்ச விகுதியுளொன்று; ending verbal participles. "ஒற்றொற்றுணராமை யாள்க" (குறள், 589).

க. மெ (சொல்லாக்க ஈறு).

மை⁶-த்தல் *mai-*, 11 செ.கு.வி. (v.i.) 1. கறுத்தல்; to become black. "மைத்திருள் கூர்ந்த" (மணிமே. 12, 85). 2. ஒளி மழுங்குதல்; to be dim. "மைத்துன நீண்ட வாட்டடங் கண்ணார்" (சீவக. 2333).

துட. மொய் (இருட்டாதல்).

[மள் → (மய்) → மை-,]

மை⁷ *mai*, பெ.(n.) அறியாமை (அஞ்ஞானம்); ignorance. "மைதபு ஞான மனத்திடை யொன்றும்" (பாகவத. 8, வாமனாவ. 32).

[முல் → மல் → மால் = கருமை, முகில். மால் → மாலம் = கருப்பு. மால் → மா = கருமை. முள் → மள் → மாள் → மாய் → மாயோன் = திருமால் (கரியோன்). முள் → மள் → மை = கருமை, (மு.தா. 181) இருள் படர்ந்த அல்லது ஒளிகுன்றிய அறிவு (அறியாமை)]

மைக்கண் *mai-k-kan*, பெ.(n.) நெல்வகை (நெல்லை.); a kind of paddy.

[மை + கண்]

மைக்கண்மாடு *mai-k-kan-mādu*, பெ.(n.) கண்ணைச் சுற்றி கறுப்பு முடியுள்ள மாடு; cow which has black hair around its eye.

[மை + கண் + மாடு. இவ்வகை மாடு தீமையின் அடையாளமாக (சகுனமாக)க் கருதப்படுகிறது]

மைக்கரப்பான் *mai-k-karappāṉ,* பெ.(n.) கருங்கரப்பன் வகை (பதார்த்த. 234); a dark-coloured eruption.

[மை + கரப்பான்]

மைக்கரிப்பான் *mai-k-karippāṉ,* பெ.(n.) கருப்புக்கரிசல்; black variety of eclipta alfa.

[மை + கரிப்பான்]

மைக்காட்டுமண் *mai-k-kāṭṭu-maṇ,* பெ.(n.) மைக்காடு பார்க்க; see *maikkāḍu.*

[மைக்காடு + மண்]

மைக்காட்டுவெட்டு *mai-k-kāṭṭu-veṭṭu,* பெ.(n.) பழைய காசு (நாணய)வகை; a coin used in former days.

[மைக்காடு + வெட்டு]



மைக்காட்டுவெட்டு

மைக்காடு *mai-k-kāḍu,* பெ.(n.) பொன் முதலியன சிதறிக் கலந்துள்ள அக்கசாலை மண் (வின்.); ashes and dust in a goldsmith's workshop containing particles of precious metals.

தெ. மசிட்டு.

மைக்காநாள் *maikkā-nāḷ,* பெ.(n.) மறுநாள் (இ.வ.); next day, tomorrow.

[மறுநாள் → மறுக்காநாள் → மைக்காநாள்]

மைக்காப்பு *mai-k-kāppu,* பெ.(n.) எழுத்து நன்கு தெரியுமாறு ஏட்டுச்சுவடிக்கு மை தடவுகை; smearing black paste over the leaves of an *ōla* book to render the script clear. *"கோவை முடிவிடத்தெழுதிப் பின்னர்......... மைக்காப்புஞ் செய்தார்" (திருவாத. பு. திருவடி. 15).*

[மை + காப்பு. கா → காப்பு]

மைக்காரி *mai-k-kāri,* பெ.(n.) ஒருவகை கொன்றை மரம்; a kind of tree.

[மை + காரி]



மைக்காலிருட்டு *mai-k-kāl-iruṭṭu,* பெ.(n.) காரிருள்; pitch darkness. *"மைக்காலிருட்டனைய விருளில்லை" (தாயு. ஆனந்த. 10).*

[மை + கால் + இருட்டு. இருள் → இருட்டு. மையிருட்டு' பார்க்க.]

மைக்குண்டுமிளகாய் *mai-k-kuṇḍu-miḷagāy,* பெ.(n.) கருப்புக் குண்டு மிளகாய்; black round chilly.

[மை + குண்டு + மிளகாய். மிளகு + காய் – மிளகாய்]

மைக்குருந்து *mai-k-kurundu,* பெ.(n.) கருங்குருந்து பார்க்க; see *karuṅ-kurundu.*

[மை + குருந்து]

மைக்குரோதிகம் *mai-k-kurōdigam,* பெ.(n.) மிளகு; black pepper - piper nigrum.

மைக்குறுவை *mai-k-kuṟuvai,* பெ.(n.) நெல்வகை (G.Tn.D.I. 153); a kind of paddy.

[மை + குறுவை]

மைக்குன்றி *mai-k-kuṉṟi,* பெ.(n.) கருப்புக் குண்டுமணி; black jeweller's bead.

[மை + குன்றி]

மைக்கூடு *mai-k-kūḍu,* பெ.(n.) 1. எழுதும் மை வைக்குங் கூடு; ink-bottle, ink-pot. *'முன்னர் மைக்கூட்டில் மையையூற்றித் தொட்டு எழுதும் பழக்கம் பரவலாக இருந்தது' (உ.வ.).* 2. கண்மைச் சிமிழ்; small casket for keeping black pigment.

[மை + கூடு. கூண்டு → கூடு]



மைக்கூடு

மைக்கூண்டு *mai-k-kūṇḍu,* பெ.(n.) 1. மைக்கூடு பார்க்க; see *mai-k-kūḍu.* 2. கண்மை வைக்குஞ் சிமிழ்; little metallic receptacle for collyrium for the eyes.

[மை + கூண்டு. குள் → கொள் → கொள்ளுதல் = கூடுதல். குள் → கூள் → கூண்டு]

மைக்கூர் *mai-k-kūr,* பெ.(n.) ஒருவகைப் புண்; a kind of boil (M.L.).

[மை + கூர்]

மைக்கொடுவேலி *mai-k-koḍuvēli,* பெ.(n.) கருங் கொடிவேலி; black peunbago.

[மை + கொடுவேலி]

மைக்கொன்றை *mai-k-koṉṟai,* பெ.(n.) மயிற் கொன்றை (பதார்த்த. 207); peacock's crest.

ம. மயில்குன்ன.

[மள் → (மய்) → மை = கருமை, கரு(நீல) நிறத்தோகையுள்ள பறவை. இதே அடியிலிருந்து மை → மயில் (மு.தா.181) என்று இப்பறவைக்கான மற்றொரு பெயரும் உருவாக்கப் பெற்றுள்ளது. மை + கொன்றை]

மைக்கொன்னை *mai-k-koṉṉai,* பெ.(n.) சரக்கொன்னை; a kind of tree.

[மை + கொன்னை]

மைகம் *maigam,* பெ.(n.) ஒருவகைச் செய்நஞ்சு (வக்கிராந்த பாஷாணம்) (யாழ்.அக.); a mineral poison.

மைகரம் *mai-garam,* பெ.(n.) மயக்கம் (யாழ்.அக.); bewilderment, confusion.

[மை + கரம்]

மைகூட்டு-தல் *mai-kūṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) மை உருவாக்கல்; to make ink, collyrium or paint.

[மை + கூட்டு-,]

மைகோதி *mai-kōdi,* பெ.(n.) சீப்பு; comb. *"சுவரின்மேல் மைகோதியும் ஈர்கோலியுமே கிடக்கின்றன" (எங்களூ. 127).*

[மை + கோதி. கோது → கோதி. 'இ' வி. முத. ஈறு.]



மைச்சந்தன் *mai-c-candaṉ,* பெ.(n.) ஒரு வகைச் செய்நஞ்சு (பாஷாணவகை) (யாழ். அக.); a mineral poison.

மைச்சம்பா *mai-c-cambā,* பெ.(n.) கருங் குறுவை (பதார்த்த. 816); a dark variety of paddy maturing in three months.

[மை + சம்பா]

மைச்சம்பி *mai-c-cambi,* பெ.(n.) மைத்துனன் (இ.வ.) பார்க்க; see *maittuṉaṉ.*

[மைத்துனன் → மச்சான் → மைச்சான் → மைச்சம்பி]

மைச்சமனந்தன் *maicca-maṉandaṉ,* பெ.(n.) 1. காய்ச்சும் மருந்துவகை; a kind of arsenic. 2. ஒரு வகை மருந்து; a chemical.

மைச்சாடிதம் *mai-c-cāḍidam,* பெ.(n.) சீரகம்; cumin seeds.

மைச்சாரி *mai-c-cāri,* பெ.(n.) கருங்குறுவை நெல்; a kind of black paddy used in diet by Yogis.

[மை + சாரி. சாலி → சாரி]

மைச்சாலி *mai-c-cāli,* பெ.(n.) மைச்சம்பா பார்க்க (தைலவ. தைல.); see *mai-c-cambā.*

[மை + சாலி]

மைச்சாள் *mai-c-cāḷ,* பெ.(n.) மைத்துனி (யாழ்.அக.) பார்க்க; see *maittuṉi.*

[மைத்துனன் → மைத்தான் (ஆ.பா.) – மைச்சாள் (பெ.பா.)]

மைச்சான் *mai-c-cāṉ,* பெ.(n.) மைத்துனன் பார்க்க; see *maittuṉaṉ.*

[மைத்துனன் → மைச்சான்]

மைச்சுனி *mai-c-cuṉi,* பெ.(n.) மைத்துனி (யாழ்.அக.) பார்க்க; see *maittuṉi.*

[மைத்துனி → மைச்சுனி]

மைச்சீரகம் *mai-c-cīragam,* பெ.(n.) கருஞ் சீரகம்; black cumin-nigella sativa.

[மை + சீரகம்]

மைச்சீரிடம் *mai-c-cīriḍam,* பெ.(n.) பயிரைக் கெடுக்கும் ஒருவகைப் பாசி; a kind of moss affecting crops.

மறுவ. வேப்பம்பாசி.

[மை + சீரிடம்]

Skt. sirisa > த. சீரிடம்.

மைச்சூகி *mai-c-cūki,* பெ.(n.) கருப்புக் கொன்னை; black cassia.

மைச்சூரை *mai-c-cūrai,* பெ.(n.) கருஞ் சூரை; hedge caper shrub.

[மை + சூரை]

மைச்சை *mai-c-cai,* பெ.(n.) 1. விந்து; semen. 2. அரத்தம்; blood.

[மச்சை → மைச்சை]

மைசாட்சி *mai-šāṭci,* பெ.(n.) 1. சீரகம்; cumin seeds. 2. பொன்னாங் கண்ணி; a medicinal prostate plant.

[மை + சாட்சி]

Skt. *sāksin* > த. சாட்சி.

மைசாட்சி

மைசேர்-த்தல் *mai-sēr-,* 4 செ.கு.வி. (v.i.) மைகூட்டு-தல் பார்க்க; see *mai-kūṭṭu-,*

[மை + சேர்-,]

மைஞ்சு *maiñju,* பெ.(n.) மேகம் (நன். 122, மயிலை.); cloud.

க. மஞ்சு.

[மள் → (மய்) → மை = கருமை, முகில், காராடு, கரியகுழம்பு. மை → மஞ்சு = முகில் (மு.தா. 181). மஞ்சு → மைஞ்சு]

மைஞை *maiñai,* பெ.(n.) மயில், வஞ்சி; a kind of tree.

மைஞை

மைத்தான் *maittāṉ,* பெ.(n.) சோளப் பயிருக்கு வரும் நோய் வகை (இ.வ.); smut, a disease affecting *cōḷam.*

[மை → மைத்தான்]

மைத்துனத்தோழன் *maittuṉa-t-tōḻaṉ,* பெ.(n.) கிண்டல் செய்து விளையாடும் முறைமையுடைய தோழன்; intimate friend, chum, boon companion. *"மைந்தனை மகிழ்வ கூறி மைத்துனத் தோழனென்றான்" (சீவக. 1264).*

[மைத்துனன் + தோழன்]

மைத்துனமை *maittuṉamai,* பெ.(n.) மைத்துன முறைமை; relationship of a brother-in-law or of a cognate-cousin. *"மாதவன் மைத்துனமையினான் மகிழ்ச்சி கூர்ந்தே" (பாரத. அருச்சுனன்றீர். 56).*

[மைத்துனன் → மைத்துனமை. 'மை' ப.பெ.ஈறு]

மைத்துனன் *maittuṉaṉ,* பெ.(n.) 1. மனைவி அல்லது கணவனுடன் பிறந்தவன்; brother of one's wife or husband. 2. மாமன் அல்லது அத்தையின் மகன்; son of one's maternal uncle or paternal aunt. *"தன்மைத்துனைக் கொலை சூழ்ந்த" (உத்தரரா. திக்குவி. 107).* 3. உடன் பிறந்தாளின் கணவன்; sister's husband.

ம. மச்சனன், மச்சினன்; க. மய்துன, மய்த, மய்தன; தெ. மேன; கோத. மசிண்; துட. மசிண்ப்; குட. மச்சினே; து. மைதினெ, மைதுனெ; கொலா. மச் (மாந்தன்); நா. மாச் (மாந்தன்); குரு. மேத் (ஆண்); பட. மைத.

[மைத்துனன் என்பதற்கு ஒருகா. maithuna என்னும் வடசொல் மூலமாய் இருக்கலாம் என்று செ. ப. அகரமுதலி காட்டுகிறது. ஆயின் அச்சொற்கு வடமொழியில் இணை என்னும் பொருள் உள்ளதேயன்றி உறவு நிலையைக் குறிக்கும் பொருள் இல்லை. திருந்தா திரவிட மொழிகள் உட்பட திரவிடக் குடும்ப மொழிகள் பலவற்றில் இச்சொல்வழக்குள்ளமை இது தென் சொல்லென்பதைத் தெளிவுபடுத்துகிறது. மேலும் இதற்கொத்த இனச்சொல் ஆரியக் குடும்ப மொழிகளில் இல்லை. முல் → முன் → முன்பு = வலிமை. முல் → மல் = வலிமை. முள் → மொள் → மொய் = வலிமை. மொய் → மொய்ம்பு = வலிமை (மு.தா.223). மொய் → மொய்ந்து → மய்ந்து → மைந்து = வலிமை. மைந்து → மைத்தன் = இளைஞன், திண்ணியன், மறவன், கணவன். மைந்து → (மைத்து) → மைத்துனன் = கணவன் முறையுள்ள மாமன் அல்லது அத்தையின் மகன், உடன் பிறந்தாரின் கணவன், மனைவி அல்லது கணவனுடன் பிறந்தவன்]

மைத்துனி *maittuṉi,* பெ.(n.) 1. மனைவியின் உடன்பிறந்தாள்; wife's sister. 2. மாமன் அல்லது அத்தையின் மகள்; daughter of one's maternal uncle or paternal aunt. *"மைத்துனி நடக்கமாட்டே னிளைத்தன னென்ன" (திருவாலவா. 62, 7).* 3. உடன் பிறந்தவன் மனைவி; brother's wife.

ம. மச்சூரிச்சி; தெ. மேன; து. மைதிதி, மைதெதி; குட. மச்சினி, மச்சிணிசி; கொலா. மாச (மனைவி); நா. மாசல் (பெண்); கோண். மை (பெண், மனைவி), மச்சு (மனைவி); குரு. மல் (மகள்).

[மைத்துனன் (ஆ.பா.) – மைத்துனி (பெ.பா.). 'இ' பெ.பா.ஈறு.]

மைதா *maitā,* பெ.(n.) கள்மயக்கம் (இ.வ.); intoxication.

தெ. மைத.

[மய → மயல் = மயக்கம். மய → மையல் = காதல் மயக்கம். மய் → மயந்து → மைந்து = காதல் மயக்கம். மைந்து → மைது → மைதா = கள்மயக்கம்]

மைதீட்டு-தல் *mai-tīṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) மையிடு-தல், 1 பார்க்க; see *mai-yiḍu-, 1.*

[மை + தீட்டு-,]

மைந்தன்¹ *maindaṉ,* பெ.(n.) மகன் (பிங்.); son. *"குலக்கோ மைந்தர் தமக்கும்" (கம்பரா. மந்தரை. 76).*

மறுவ. எச்சம், கான்முளை, சந்ததி, சிறுவன், செம்மல், சேய், தனயன், தோன்றல், பிறங்கடை, புத்திரன், புதல்வன், மதலை, மருமான், வழி.

[மைந்து → மைந்தன்]

மைந்தன்² *maindaṉ,* பெ.(n.) 1. இளைஞன் (பிங்.); young man. *"மைந்த...... நீ யிதற் கென்னை வெகுண்டது" (கம்பரா. நகர்நீங். 134).* 2. விலங்கு, ஊர்வனவற்றின் குட்டி; young of an animal or reptile. *"அரவமூத்த மைந்தன்" (பரிபா. 19, 73).* 3. மாணாக்கன்; disciple, pupil. *"அளவிலா மைந்தர்க் கூட்டி" (திருவாலவா. 35, 4).* 4. ஆண் மகன் (பிங்.); man. 5. திண்ணியன் (சூடா.); strong man, powerful man. 6. வீரன்; warrior, hero. *"தொடு கழன் மைந்தர் தொழில்" (பு.வெ. 3, 6).* 7. கணவன்; husband. *"மைந்த ரகலத்தகலா......... நன்னீர்ப் புணர்ச்சியும்" (பரிபா. 8, 43).*

ம. மைந்தன்.

[மைந்து → மைந்தன். பதினைந் தாண்டுள்ளவன். "திறலோன் யாண்டே பதினைந்தாகும்" (பன்.பாட்.230)]

மைந்து[1] *maindu,* பெ.(n.) 1. வலிமை; might, strength. *"மைந்து பொருளாக வந்த வேந்தனை" (தொல். பொ. 70).* 2. அழகு; beauty. *"மைந்த ரசோக மடலவிழ" (சிலப். 8, வெண்பா, 1).* 3. விருப்பம்; desire. *"துறை வேண்டு மைந்தின்" (பரிபா. 6, 30).* 4. யானையின் மதம்; must of an elephant. *"களிறே..... மைந்து பட்டன்றே (புறநா. 13)".*

[முல் → முன் → முன்பு = வலிமை. முல் → மல் = வலிமை. முள் → மொள் → மொய் = வலிமை. மொய் → மொய்ம்பு = வலிமை (மு.தா. 223). மொய் → மொய்ந்து → மய்ந்து → மைந்து]

மைந்து[2] *maindu,* பெ.(n.) 1. காமமயக்கம்; infatuation of love. *"மகளிரை மைந்துற் றமர்புற்ற மைந்தர்" (பரிபா. 20, 91).* 2. பித்து (திவா.); madness.

[முயங்கு → மயங்கு → மசங்கு. மயங்கும் பொழுது = அந்திவேளை. முய → மய → மச → மசகு = திகைப்பு, மயக்கம். மய → மயல் = மயக்கம். மயல் → மையல் = காதன் மயக்கம் (மு.தா. 178). மய் → மயந்து → மைந்து = காதன் மயக்கம்]

மைந்து[3] *maindu,* பெ.(n.) அறியாமை; ignorance, stupidity. *"மைந்துற்றாய்" (பரிபா. 20, 69).*

[மள் → (மய்) → மை = கருமை. மை → மஞ்சு = முகில். (மு.தா.181). மை → மைந்து = இருள் படர்ந்த அறிவு, அறியாமை]

மைந்து[4] *maindu,* பெ.(n.) பிள்ளை (திவ். பெரியாழ். 1, 1, 8, வியா. பக். 16); son.

[முள் → மொள் → மொய் = வலிமை. மொய் → மொய்ந்து → மய்ந்து → மைந்து]

மைந்துவிரட்டு *maindu-viraṭṭu,* பெ.(n.) முருட்டெருதுகளைக் கொட்டு முழக்குடன் வெளியில் விடுத்து அவற்றைத் தழுவிப் பிடிக்கச் செய்தல்; bull taming, in which the competitors capture fierce bulls let loose on the occasion.

மறுவ. ஏறுதழுவல், கொல்வேறு கோடல், சல்லிக்கட்டு.

[மைந்து + விரட்டு = வலிமை கொண்டு அடக்குவது. இன்று மஞ்சுவிரட்டு என்று மருவி வழக்கம் பெற்றுள்ளது.]

மைந்துவிரட்டு

மைந்நூறு *mai-n-nūṟu,* பெ.(n.) மைப்பொடி; black powder for the eye. *"மைந் நூறு வேற்கண் மடவார்" (சீவக, 453).*

[மை + நூறு. நுள் → நுறு → நூறு = பொடி.]

மைநகர்ப்பூமி *mainakar-p-pūmi,* பெ.(n.) பிறவி நஞ்சு வகை (வக்கராந்த பாடாணம்) (யாழ்.அக.); a mineral poison.

மைநாகம் *mai-nāgam,* பெ.(n.) இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலுள்ளதாகச் சொல்லப்படும் ஒரு மலை (கம்பரா. கடறாவு. 40); mount *maināga,* said to be between the Indian peninsula and Ceylon.

[மை + நாகம்]

மைநாகன் *mai-nāgaṉ,* பெ.(n.) மைநாகம் பார்க்க (வின்.); see *mai-nāgam.*

[மை + நாகன். நாகம் → நாகன்]

மைப்பரணி *mai-p-paraṇi,* பெ.(n.) மை வைக்குஞ் சிமிழ்; casket for collyrium.

[மை + பரணி]

மைப்பு[1] *maippu,* பெ.(n.) கருப்பு; black, blackness. *"மைப்புறுத்தகண் ணரம்பை மார்" (காஞ்சிப்பு. அரிசாப.2).*

[மசி → மயி → மை. மை → மைஞ்சு = கருமுகில். மை → மைப்பு (வே.க.4,51)]

மைப்பு[2] *maippu,* பெ.(n.) மரம் முதலியன உரைத்திருக்கை; rottenness, as of wood.

[மை → மைப்பு]

மைப்புயல் *mai-p-puyal,* பெ.(n.) இருண்ட மேகம் (அக.நி.); dark cloud.

[மை + புயல். பெய் → பெயல் → புயல் = மழை பெய்யும் முகில்]

மைப்பூச்சு *mai-p-pūccu,* பெ.(n.) மைத்தீட்டுதல்; applying collyrium.

[மை + பூச்சு]

மைப்பேறு—தல் *maippēṟu-,* 5 செ.கு.வி. (v.i.) மரம் முதலியன உளுத்துப்போதல்; to become rotten, as wood.

[மை + பேறு—,]

மைப்போது *mai-p-pōdu,* பெ.(n.) மைம்மலர் பார்க்க; see *mai-m-malar.* *"மைப்போதணி தொங்கல் வாணன்" (தஞ்சைவா. 116).*

[மை + போது]

மைப்போளம் *mai-p-pōḷam,* பெ.(n.) கரியபோளம்; black bole.

[மை + போளம்]

மைபற்றவை—த்தல் *mai-paṟṟa-vai-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மை செய்வதற்கு வேண்டிய மருந்தின் புகை மேல் ஏனத்தின் (பாத்திரத்தின்) உட்பக்கம் பற்றும்படி செய்தல்; to set the copper dish in such a way as to catch the smoke that comes from burning wick in the preparation of collyrium.

[மை + பற்ற + வை—,]

மைபூசு—தல் *mai-pūśu-,* 5 செ.கு.வி. (v.i.) மையிடு—தல் 1 பார்க்க; see *maiyiḍu-, 1.*

து. மயிபாடுனி.

[மை + பூசு—,]

மைபோட்டுப்பார்—த்தல் *mai-pōṭṭu-p-pār-,* 4 செ.குன்றாவி. (v.t.) புதையல் முதலியன கண்டுபிடித்தற் பொருட்டு மையிட்டுப் பார்த்தல்; to discover hidden treasure, etc., by using magic pigment.

[மை + போட்டு + பார்—, போடு → போட்டு.]

மைபோடு—தல் *mai-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. வண்டிக்கு மசகு இடுதல் (கொ.வ.); to grease, as a country cart. 2. மையூட்டு—தல் 2 பார்க்க; see *mai-yūṭṭu-, 2.* 3. மயக்கிக் கவர்தல்; to bewitch.

[மை + போடு—,]

மைபோலரை—த்தல் *maipōlarai-,* 4 செ.குன்றாவி. (v.t.) நெகிழ வைத்தல்; to pulverise, to grind till it becomes wax like.

[மை + போல் + அரை—, அர் → அரை. அரைத்தல் = அராவித் தூளாக்குதல் அல்லது பசையாக்குதல்.]

மைம்மலர் *mai-m-malar,* பெ.(n.) கருங் குவளை; blue nelumbo. *"மைம்மலர்க் கோதை" (சீவக. 208).*

[மை + மலர்]

மைம்மா *mai-m-mā,* பெ.(n.) பன்றி (பிங்.); pig, as black.

[மை + மா. கருநிறவிலங்கு.]



மைம்மா

மைம்மீன் *mai-m-mīṉ,* பெ.(n.) காரிக்கோள் (சனி); the planet saturn, as black in colour. *"மைம்மீன் புகையினும்" (புறநா. 117).*

[மை + மீன்]

மைம்முகன் *mai-m-mugaṉ,* பெ.(n.) முசு, கருப்பு முகத்தையுடைய ஒருவகை குரங்கு (பிங்.); langur, as black-faced.

[மை + முகன். முகம் → முகன். 'ன்' உடைமை குறித்த ஈறு.]

மைம்முகன்

மைம்மை[1] *maimmai,* பெ.(n.) 1. கருமை; black. 2. இருண்மை; darkness.

[முள் → முய் → மய் → மை = கருப்பு, இருள். மை → மைம்மை = கருமை, இருண்மை (வே.க.4, 59)]

மைம்மை[2] *mai-m-mai,* பெ.(n.) 1. குழந்தை பெறவியலாத பெண், மலடி (பிங்.); barren woman. 2. மலட்டெருமை (திவா.); barren buffalo.

ம. மைம; க. மைமெ.

[மை + மை. 'மை'. ப.பெ.ஈறு]

மைம்மைப்பு *mai-m-maippu,* பெ.(n.) பார்வைக்குறை; defective sight, dimness of vision. *'மைம்மைப்பி னன்று குருடு' (பழமொ. 298).*

[மைம்மை → மைம்மைப்பு = கண்ணிருளல், கண்மங்கல், பார்வைக் குறை (வே.க.4, 60)]

மைமல் *mai-mal,* பெ.(n.) மாலைநேரம் (யாழ்.அக.); evening.

[மைம்மை → மைமை → மைமல் (வே.க.4,60)]

மைமுகன் *mai-mugaṉ,* பெ.(n.) மைம்முகன் பார்க்க; see *maimmugaṉ.*

[மை + முகன். முகம் → முகன். 'ன்' உடைமை குறித்த ஈறு.]

மைமை *mai-mai,* பெ.(n.) பூசை; worship. *"புக்கவர் மைமை தொடங்கின ரன்றே" (மேருமந். 1285).*

க. மைமெ.

மையக்கட்டை *maiya-k-kaṭṭai,* பெ.(n.) வண்டியில் அச்சின் மேற்போடுங் கட்டை; piece of wood placed over the axle, supporting the frame-work of a country cart.

[மையம் + கட்டை]



மையக்கட்டை

மையக்கவர்ச்சி *maiya-k-kavarcci,* பெ.(n.) ஒரு பொருளின் சுற்றெல்லைக்குட்பட்ட அணுக்கள் அப்பொருளின் மையத்தை நோக்கி நெருங்கும் ஆற்றல் (சக்தி); centripetal force. (Mod.).

[மையம் + கவர்ச்சி]

மையண்டம் *maiyaṇḍam,* பெ.(n.) முட்டை (யாழ்.அக.); egg.

[மையம் + அண்டம்]

Skt. *aṇḍa* > த. அண்டம்.

மையநாட்டம் *maiya-nāṭṭam,* பெ.(n.) ஒரு பொருளை மற்றொரு பொருள் இழுக்கும் மைய ஈர்ப்பு; gravitation.

[மையம் + நாட்டம். நாடு → நாட்டு → நாட்டம்]

மையநூக்கம் *maiya-nūkkam,* பெ.(n.) ஒரு பொருளின் மையத்திலுள்ள அணுக்கள் அப்பொருளின் சுற்றெல்லையை நோக்கிப் போகும் ஆற்றல் (சக்தி); centrifugal force (Mod.).

[மையம் + நூக்கம்]

மையம்[1] *maiyam,* பெ.(n.) 1. நடு (சூடா.); centre, middle. 2. நடுத்தரமானது; that which is mediocre. 3. வளைவைத் தாங்கும் தூணின் மேலுறுப்பு (இ.வ.); impost; top portion of a pillar upon which an arch rests. (loc.).

ம. மய்யம்.

[முள் → முடு → முடங்கு → மடங்கு. முடு → முடி → மடி. மடிதல் = மடங்குதல். மடங்கு → மடக்கு = அலகை மடக்கி வைக்கும் கத்தி (மு.தா.230) முள் → மள் → மய் → மய்யம் → மையம் = மடக்கப்பட்டது, மடங்கிய இடம், நடு.

வடமொழி madhya என்னும் சொல்லினின்று மையம் வந்ததாக செ.ப.அகரமுதலி குறிக்கிறது. madhya என்னும் சொல் மத்தியம் என தமிழ் வழக்கில் உள்ள நிலையில் மீண்டும் வேறொரு வகையில் இன்னொரு சொல் (மையம்) உருவாகும் தேவை மிகையானதே. மேலும் மத்ய மத்தியம் என மாறுமேயன்றி மய்யம் அல்லது மையம் என மாறுவதற்கு வாய்ப்பு குறைவு]

மையம்[2] *maiyam,* பெ.(n.) ஐயமானது; that which is doubtful or vague.

[மள் → மாள் → மாழ் → மாழ்கு. மாழ்குதல் = மயங்குதல். மாழ் → மாழை = மருட்சி, மயக்கம். முய → மய → மச → மசகு = திகைப்பு, மயக்கம். மய → மயல் = மயக்கம், காதல். மயல் → மையல் = காதன் மயக்கம் (மு.தா.178). மையல் → மையம் = மயக்கம் தருவது, ஐயமானது.]

மையம்[3] *maiyam,* பெ.(n.) மை; a black paint.

[மை → மையம்]

மையம்பாய்-தல் *maiyam-pāy-,* 2 செ.கு.வி. (v.i.) இருபக்கமும் சாய்தலால் ஒவ்வாமல் நிற்றல் (யாழ்.அக.); to oscillate about the middle point, as the index of a balance.

[மையம் + பாய்-,]

மையமண்டபம் *maiya-mandabam,* பெ.(n.) 1. தெப்பக்குளத்தின் நடுவில் அமைந்த மண்டபம் (இ.வ.); building or hall in the middle of a temple tank. 2. குடியரசுத் தலைவர் மாளிகையின் மையமண்டபம்; central hall of the President's Chamber.

[மையம் + மண்டபம்]



மையமண்டபம்

மையல் *maiyal,* பெ.(n.) 1. காமமயக்கம்; infatuation of love. *"மையல் செய் தென்னை மனங்கவர்ந்தானே யென்னும்" (திவ். திருவாய். 7, 2, 6).* 2. பித்து; madness. *"மையலொருவன் களித்தற்றால்" (குறள், 838).* 3. செல்வம் முதலியவற்றால் வரும் செருக்கு; overwhelming pride, due to rank, wealth etc. *"மையல் .... மன்னன்" (சீவக. 589).* 4. யானையின் மதம்; must of an elephant. *"வேழ மையலுறுத்த" (பெருங். உஞ்சைக். 37, 232).* 5. கருவூமத்தை (மலை.); datura.

[மயல் → மையல் = மனத்தைக் கலக்கும் பெருங்காதல் (சு.வி.39)]

மையல்தருமகாமூலி *maiyal-taru-makā-mūli,* பெ.(n.) சிவகரந்தை; a plant Ceylon toolsy-sphoeranthes zeylanica.

[மையல் + தரு + மகா + மூலி. மா → மகா]

மையல்தருமூலி *maiyal-taru-mūli,* பெ.(n.) காமவுணர்வைத் தூண்டும் மூலிகை; an agent stimulating the sexual passion.

[மையல் + தருமூலி]

மையலஞ்சந்தை *maiyalañ-candai,* பெ.(n.) சந்தை நடக்கும் இரண்டாம் நாள் (வின்.); the second day in the holding of a fair or market.

[மையம் → மையலம் + சந்தை]

மையலவர் *maiyalavar,* பெ.(n.) பித்தர்; persons of deranged minds. *"மையலவர் போல மனம் வகை சொன்னார்" (சீவக. 2013).*

[மயல் → மையல் → மையலவர். (வே.க.4, 58).]

மையலார் *maiyalār,* பெ.(n.) 1. மாய வினைஞர் (வித்தைக்காரர்); magicians. *"மண்மயக்கு மயக்குடை மையலார்" (இரகு. யாகப். 35).* 2. மையலவர் பார்க்க; see *maiyalavar.*

[மயல் → மையல் → மையலார். (வே.க.4,58)]

மையலி *maiyali,* பெ.(n.) மாய வினையாட்டி (வித்தைக்காரி) (யாழ்.அக.); witch.

[மையல் → மையலி. 'இ'பெ.பா.ஈறு]

மையவாடி¹ *maiya-vāḍi,* பெ.(n.) முள் வேலியுள்ள இடம் (யாழ்.அக.); place hedged around with thorns.

[மையம் + வாடி]

மையவாடி² *maiya-vāḍi,* பெ.(n.) நன்காடு; burial-ground.

[மையம் + வாடி]

மையன்மா *maiyanmā*, பெ.(n.) யானை (இலக்.அக.); elephant.

[மையல் + மா]

மையன்மை *maiyan-mai*, பெ.(n.) மையல் 1, 2 பார்க்க; see *maiyal* 1, 2. *"மையன்மை செய்து" (திவ். பெரியாழ். 2, 3, 3).*

[மையல் → மையன்மை]

மையனோக்கம் *maiya-nōkkam*, பெ.(n.) துயரப்பார்வை; mournful look. *"மைய நோக்கம்பட வருமிரக்கம்" (தொல். பொ. 260, உரை).*

[மயல் → மையல் + நோக்கம்]

மையா[1] *mai-y-ā*, பெ.(n.) மலட்டு ஆ (பசு); barren cow. *"மையாதாங் காத்தோம்பி" (அறநெறி. 38).*

[மை + ஆ. மை = மலடு.]

மை[3] பார்க்க.

மையா[2]**-த்தல்** *mai-y-ā*, 12 செ.கு.வி. (v.i.) 1. மயங்குதல்; to be perplexed. *"மலர் நாணின் மையாத்தி நெஞ்சே" (குறள், 1112).* 2. ஒளி மழுங்குதல்; to become dim. *"விண்மே லொளி யெல்லா மையாந் தொடுங்கி" (பு.வெ. 9, 13).* 3. பொலிவழிதல்; to look wan, to look deserted. *"மாந்த ரென்பவ ரொருவருமின்றி மையாந்த வந்நகர்" (காஞ்சிப்பு. நகரேற். 101).*

[முல் → முள் → முள்கு. முள்குதல் = முயங்குதல். முயங்கு → மயங்கு → மயக்கு → மயக்கம். முயங்கு → மயங்கு. முய → மய. மயத்தல் = மயங்குதல். (வ.வ.2, 63). மய → மையா]

மையாடு-தல் *mai-y-āḍu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. மையோலை பிடி-த்தல் பார்க்க; see *mai-y-ōlai-piḍi-*, *"ஐயாண் டெய்தி மையாடி யறிந்தார் கலைகள்" (சீவக. 2706).* 2. கருமையாதல்; to be blackened, as with poison. *(தேவா. 303, 1).*

[மை + ஆடு-,]

மையாயிசம் *maiyāyišam*, பெ.(n.) கடுக்காய்; gallnut.

மையாளி *maiyāḷi*, பெ.(n.) கருந்தாளி; gaub.

மறுவ. காட்டத்தி.

[மை + ஆளி]

மையான் *mai-y-āṉ*, பெ.(n.) எருமை; buffalo, as black. *"இருணிற மையான்" (குறுந். 279).*

[முள் → முய் → மய் → மை = கருப்பு, இருள் (வே.க.4, 59). மை + ஆன் – மையான் = கருப்பு நிற மாடு (விலங்கு)]

மையி *maiyi*, பெ.(n.) மிளகு, மிளகுக் கொடி; pepper creeper.

[முள் → முய் → மய் → மை = கருப்பு. மை → மையி = கருமையானது]

மையிடு-தல் *mai-y-iḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. கண்ணுக்கு மையெழுது (அஞ்சன மெழுது)தல்; to paint the eyes, with collyrium. *"வடிவேல் விழிக்கு மையிட்டாள்" (விறலிவிடு.).* 2. புதை பொருள் முதலிய வற்றைக் கண்டுபிடிக்க உள்ளங் கையிலேனும் கண்களிலேனும் மந்திர மை போடுதல்; to apply magic pigment to one's eyes or palm for obtaining a vision of stolen goods or hidden treasure.

[மை + இடு-,]

மையிரவி *maiyiravi,* பெ.(n.) 1. ஊமத்தைச் சாறு; juice of dhatura. 2. மருளுமத்தை; black datura.

மையிருட்டு *mai-yiruṭṭu,* பெ.(n.) காரிருள் (கொ.வ.); pitch darkness.

மறுவ. கும்மிருட்டு.

[மை + இருட்டு. மை = கருப்பு. இரு → இருள் → இருட்டு]

மையிருள் *mai-y-iruḷ,* பெ.(n.) மையிருட்டு பார்க்க; see *mai-y-iruṭṭu. "கருகு மையிருளின் கணம்" (பெரியபு. இளையான். 15).*

[மை + இருள். இரு → இருள்]

மையிலை *maiyilai,* பெ.(n.) ஒருவகைப் பூடு; a plant.

[மை + இலை]

மையிழுது *mai-y-iḻudu,* பெ.(n.) 1. மை விழுது; collyrium, eye-salve. *"மையிழுதிழுகி" (புறநா. 281).* 2. ஆட்டு நிண நெய் (புறநா. அரும்.); fat of sheep.

[மை + இழுது]

மையுடை *mai-y-uḍai,* பெ.(n.) கருவேல் (தைலவ. தைல); black babul.

[மை + உடை]

மையுறிஞ்சி *mai-y-uriñji,* பெ.(n.) மையொற்றி; blotting paper.

[மை + உறிஞ்சி. உறிஞ்சு → உறிஞ்சி. 'இ' வினை முதலீறு]

மையூட்டு-தல் *mai-y-ūṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. மையிடு-தல், 1 பார்க்க; see *mai-yiḍu-, 1.* 2. ஓலைக்கு மைதடவுதல்; to ink a written *ōla.*

[மை + ஊட்டு-, உண் (த.வி.) → ஊட்டு (பி.வி.)]

மையூமத்தை *maiyū-mattai,* பெ.(n.) கருவூமத்தை; blue or black variety of datura.

மையெழுத்து *mai-y-eḻuttu,* பெ.(n.) மையால் எழுதும் எழுத்து; writing, in ink. *"மை யெழுத்தூசியின் மாண்டதோர் தோட்டிடை .... கரந் தெழுத்திட்டாள்" (சீவக. 1767).*

[மை + எழுத்து]

மையெழுது-தல் *mai-y-eḻudu-,* 5 செ.கு.வி. (v.i.) மையிடு-தல் 1 பார்க்க; see *maiyiḍu-, 1 "மையெழுதிப் பொட்டெழுதி" (கூளப்ப. 132).*

[மை + எழுது-,]

மையொற்றி *mai-y-oṟṟi,* பெ.(n.) எழுது மையை ஒற்றும் தாள்; blotting papper. (Mod.).

[மை + ஒற்றி]

மையோலைபிடி-த்தல் *mai-y-ōlai-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) கற்கத் தொடங்கும் போது மைதடவிய எழுத்துள்ள ஓலையைக் கைக் கொள்ளுதல்; to handle an *ōla* written and inked, in commencing one's study. *"ஐயாட்டை நாளை எண்ணாகப் பெற்று மையோலைபிடித்துக் கலைகள் கற்றார்" (சீவக. 2706, உரை). "மையோலை பிடித்த இளைய புலவரது" (பரிபா. 11, 88, உரை).*

[மை + ஓலை + பிடி-,]

மைரேயம் *mai-rēyam,* பெ.(n.) ஒரு வகை நெய்மம் (தைலம்); a kind of medicated oil.

மைலார் *mailār,* பெ.(n.) பொங்கற் பண்டிகையை யடுத்து ஒரு கிழமைக் (வார) காலம் வண்ணார் முதலியோர் மைலாரு தேவியை வழிபட்டுக் கொண்டாடும் விழா; festival in which washermen, artisans and others worship mailaru, their tutelary deity, for about a week after *pongal.* (C.G.)

மைலார்பூசை *mailār-pūšai,* பெ.(n.) மைலார் பார்க்க (இ.வ.); see *mailār.*

[மைலார் + பூசை]

மைலாரு *mailāru,* பெ.(n.) சிறு தேவதை; a petty goddess.

தெ. மைலாரு.

மைலாலக்கடி *mailāla-k-kadi,* பெ.(n.) 1. மர வகை (பிசின்பட்டை); common grey mango laurel. 2. பிசின்பட்டை மரத்தின் மேற்றொலி; bark of common grey mango laurel.

மைவாகனன் *mai-vāganan,* பெ.(n.) 1. ஆட்டு ஊர்தியுடையோன், (அக்கினி தேவன்) (பிங்.); Agni, as riding a ram. *"நம்மை முகம் பாரான் மைவாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே" (தனிப்பா. i, 186, 14).*

[மை + வாகனன்]

Skt. *vāhanan* > த. வாகனம். வாகனம் → வாகனன்.

மைவாசிகி *maivāciki,* பெ.(n.) குண்டுப்பனை; a kind of palm.

மைவிடை *mai-vidai,* பெ.(n.) ஆட்டுக் கிடாய்; ram. *"வாயின் மாடந்தோறும் மைவடை வீழ்ப்ப" (புறநா. 33).*

[மை + விடை]

மைவிழியார் *mai-viliyār,* பெ.(n.) விலை மகள்; prostitute. *'மைவிழியார் மனையகல்' (பழ.).*

[மைவிழி → மைவிழியார். விலைமகட்கு அழகு மேனி மினுக்குதலாதலின் கண்ணுக்கு மை தீட்டும் வகையில் கொள்ளும் அழகுபடுத்துதல் குறிப்பாக விலைமகட்குரியதாயிற்று.]

மைவிளக்கு *mai-vilakku,* பெ.(n.) எரி விளக்கு; oil lamp. *"மாணிக்க விளக்கை மைவிளக்கோடே எடுத்து" (சிலப். 9, 1–4, உரை).*

[மை + விளக்கு]



மைவிளக்கு

மைவீடு *mai-vīdu,* பெ.(n.) செங்கத்தாரி; a shrub with medicinal bark or root.

[மை + வீடு]

மைவை—த்தல் *mai-vai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மையிட்டு (அஞ்சனமிட்டு) மயக்குதல்; to bewitch, to enchant by means of magic pigment. 2. கண்ணுக்கு அஞ்சனம் உருவாக்கல் (தயாரித்தல்) (இ.வ.); to prepare collyrium for the eye. 3. வெறி யுண்டாகும்படி கள்குடித்தல்; to drink to intoxication.

[மை + வை–,]

மைனம் *mainam,* பெ.(n.) மீன்; fish.

[மீன் → மீனம் → மைனம்]

மைனா *maiṉā,* பெ.(n.) நாகணவாய்ப் புள்; a bird.



மைனிகன் *maiṉigaṉ,* பெ.(n.) கறையான் (யாழ்.அக.); white ant.

மொ

மொ[1] *mo,* பெ.(n.) தமிழ் நெடுங்கணக்கில் 'ம்' என்ற மெய்யெழுத்தும் 'ஒ' என்ற உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் (அசை) யெழுத்து; the syllabic letter of 'm' and 'o'.

[ம் + ஒ]

மொ[2] *mo,* பெ.(n.) தோள்; shoulder.

மொக்கச்சி *mokkacci,* பெ.(n.) மொக்கைச்சி பார்க்க; see *mokkaicci.*

[மொக்கைச்சி → மொக்கச்சி]

மொக்கட்டை[1] *mokkaṭṭai,* பெ.(n.) தலையில் நெற்றி முதல் மோவாய் வரையிலுள்ள முன் பகுதி (யாழ்.அக.); front of head from forehead to chin, face.

மறுவ. முகம்.

தெ. மொக்கட்டு, மொகமு.

[முகக்கட்டை = மோவாய்க்கட்டை. முகக் கட்டை → மொக்கட்டை]

மொக்கட்டை[2] *mokkaṭṭai,* பெ.(n.) மழுக்கமானது (இ.வ.); that which is blunt.

தெ. மொக்கடி, மொக்கடீடு (குறுகிய மருப்புள்ள யானை).

த. மொக்கட்டை > **Skt.** matkuna (elephant without tusks)

[மொக்கை + கட்டை. மொழுக்கு → மொக்கு → மொக்கை.]

மொக்கட்டைமுறித்தான் *mokkaṭṭai-muṟittāṉ,* பெ.(n.) குறும்பன் (யாழ்.அக.); mischievous person.

[மொக்கட்டை + முறித்தான். மொக்கட்டை = முகம்.]

மொக்கட்டையீனம் *mokkaṭṭai-y-īṉam,* பெ.(n.) மதிப்புக்கேடு (யாழ்.அக.); disrespect.

[முகக்கட்டை → மொக்கட்டை + ஈனம். முகத்திற்கு அதாவது (முகத்தை உடைய) ஆளுக்கு ஏற்படும் மதிப்புக் குறைவு.]

Skt. *hīna* > த. ஈனம்.

மொக்கணி[1] *mokkaṇi,* பெ.(n.) குதிரைக்குக் கொள்ளு முதலியன உணவு கட்டும் பை; feed - bag, nose - bag. *"மொக்கணி முட்டக்கட்டி" (திருவாலவா. 29, 6).*

க. பக்கணா.

[மொக்கு + அணி. மொக்குதல் = மொக்கித் தின்னுதல்.]



மொக்கணி² *mokkaṉi,* பெ.(n.) கோவேறு கழுதை முதலியவற்றிக்கிடுங் கடிவாளம் போன்ற கருவி வகை (சப்.); a kind of bridle for mules, etc.

[மூக்கணி → மொக்கணி]

மொக்களி¹–த்தல் *mokkaḷi-,* 4 செ. குன்றாவி. (v.t.) செலவில் (பயணத்தில்) தடை செய்தல் (வின்.); to detain a person in his journey.

[மொக்கு + அளி–,]

மொக்களி²–த்தல் *mokkaḷi-,* 4 செ.கு.வி. (v.i.) பயணத்தில் தங்குதல் (யாழ்.அக.); to stop on a journey, to sojourn.

[மொக்கு + அளி–,]

மொக்கன் *mokkaṉ,* பெ.(n.) தடித்த–வன்–வள்–து (இ.வ.); stout person or thing.

தெ. மொக்காடு (தடித்தவன்)

[மொழு → மொகு → மொக்கு = மரக்கணு, பருமன். மொக்கு → மொக்கன் (வே.க.4, 47)]

மொக்கித்தின்(னு)–தல் *mokki-t-tiṉ(ṉu)-,* 14 செ.குன்றாவி. (v.t.) ஒரு சேர விழுங்கி யுண்ணுதல் (வின்.); to eat greedily in large mouthfuls.

[மொக்கி + தின்(னு)–. முழுக்கு → முக்கு. முக்குதல் = ஒன்றை வாய்நிருள் முழுக்கித் தின்னுதல். முக்கு → மொக்கு. (மு.தா. 291). துல் → துன் → துற்று = உணவு. துற்றுதல் = உண்ணுதல் துற்று → துற்றி = உணவு. துன் → தின் → தின்னு.]

மொக்கு¹–தல் *mokku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. மொக்கித்தின்னு–தல் பார்க்க; see *mokki-t-tiṉṉu-.* *"முக்கனி சர்க்கரை மொக்கிய" (திருப்பு. 263).* 2. அடித்தல் (பிங்.); to beat.

க., பட. முக்கு; தெ. மெக்கு.

[முள் → முழு → முழுங்கு → விழுங்கு. முழுங்கு → (முழுக்கு) → முடுக்கு = ஒருமுறை விழுங்கும் நீர் அளவு. முடுக்கு → மடக்கு. முழுக்கு → முக்கு. முக்குதல் = ஒன்றை வாய்நிருள் முழுக்கித் தின்னுதல். முக்கு → மொக்கு. மொக்குதல் = வாய்நிருள் நிரம்ப முழுக்கித் தின்னுதல் (மு.தா. 290, 291)முக்குதல் அல்லது மொக்குதல் வாய் நிறைய ஒன்றையிட்டுத் தின்னுதல். (சொ.க. 50)]

மொக்கு² *mokku,* பெ.(n.) 1. பூமொட்டு; flower-but. 2. சேலைகளில் மொட்டுப் போற் செய்யப்படும் வேலைப்பாடு; bud-like designs on sarees. 3. தரையிலிடும் பூக்கோலம்; ornamental designs drawn on the floor with powder. 4. குத்து விளக்கின் தகழி (வின்.); bowl of an oil lamp.

மறுவ. மொட்டு.

க., பட. மொக்கு; தெ. மொக்க.

[முள் → முளை = முளைக்கும் வேர், தளிர் முதலியன, மரக்கன்று. முருந்து = இளந்தளிர், இளவெலும்பு. முருந்து → முருந்தம் = கொழுந்து. முள் → முகை = அரும்பு (மு.தா. 39, 40). முகைதல் = அரும்புதல். முகு → மொகு → மொக்கு (வே.க.4,3)]



மொக்கு³ *mokku,* பெ.(n.) 1. மரக்கணு (யாழ்.அக.); knot in trees. 2. மொக்கை பார்க்க; see *mokkai.*

தெ. மொக்க.

[முள் → (மொள்) → மொழுக்கு → மொழுக்கட்டை → மொக்கட்டை = மழுக்கமானது. மொழுக்கு → மொக்கு (மு.தா.99)]

மொக்குபோ-தல் *mokku-pō-,* 8 செ.கு.வி. (v.i.) மொக்கைபோ-தல், பார்க்க (கொ.வ.); see *mokkai-pō-,*

[மொக்கு + போ-,]

மொக்குமா *mokkumā,* பெ.(n.) ஒருவகைக் கோலப் பொடி (இ.வ.); powder for drawing decorative designs on the floor.

[மொக்கு² + மா⁶. மொகு → மொக்கு = பூமொட்டு, தரையிலிடும் பூக்கோலம். மொக்குமா = தரையில் பூக்கோலம் போடப் பயன்படுத்தும் மாவு]

மொக்குழி *mokkuḷi,* பெ.(n.) சிற்றுண்டி வகை (இ.வ.); a kind of confection.

[மொக்குளித்தல் = திரளுதல். மொக்குளி → மொக்குழி]

மொக்குள்¹ *mokkuḷ,* பெ.(n.) 1. கொப்பூழ்; navel. 2. மகளிர் கந்து (யோனிலிங்கம்); clitoris. 3. புறயிதழ்; calyx.

க. முகுள்.

[மொக்கு → மொக்குள் = மலரும் பருவத்து அரும்பு, அது போன்றுள்ள உடலுறுப்பு]

மொக்குள்² *mokkuḷ,* பெ.(n.) 1. மலரும் பருவத்துள்ள அரும்பு; flower-bird. 'முகை மொக்கு ளுள்ளது நாற்றம்போல்' (குறள், 1274). 2. நீர்க்குமிழி; bubble. "படுமழை மொக்குடின்" (நாலடி, 27).

க. முகுல்.

[முகிள் → முகிழ் = அரும்பு. முகிழ் → முகிழம். முகை = அரும்பு. முகிடு → மொக்கு = அரும்பு. மொக்கு → மொக்குள் (வே.க.4,3)]

மொக்குளி-த்தல் *mokkuḷi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. குமிழியுண்டாதல் (வின்.); to bubble up. 2. திரளுதல் (யாழ்.அக.); to gather up.

க. முக்குளிசு.

[மொக்கு → மொக்குள் = மலரும் பருவத்து பேரரும்பு, நீர்க்குமிழி. மொக்குள் → மொக்குளி-, (வே.க.4,3)]

மொக்குளிப்பான் *mokkuḷippāṉ,* பெ.(n.) சின்னம்மை; chicken-pox.

மறுவ. அம்மைக் கொப்புளம், கொப்புளிப்பான், விளையாட்டம்மை.

[மொக்குளி → மொக்குளிப்பான். மொக்குளித்தல் = குமிழியுண்டாதல். உடம்பில் குமிழி போல் கொப்புளம் ஏற்படும் கரணியம் பற்றி இந்நோய் மொக்குளிப்பான் எனப்பட்டது. அக்கொப்புளத்தின் தன்மைக்கேற்ப தட்டம்மை, மணல்வாரியம்மை, பயற்றம்மை என்றாற்போன்று வேறுபடுத்திக் காண்பதும் உண்டு. கொப்புளத்தில் நீர்கோத்திருக்கும் தன்மைபற்றி நீர்க்கொள்வான் எனக் குறிப்பிடுவதும் உண்டு.]

அம்மைக் கொப்புளம் முத்துப்போன்று இருத்தலால் அதை முத்தென்று அழைப்பர். அதனால் மாரிக்கு முத்துமாரியம்மன் என்றொரு பெயர் வழக்கும் உண்டு. (சொ.க.9.).

மொக்கை¹ *mokkai,* பெ.(n.) 1. கூரின்மை; bluntness as of an iron style. *'பேனா மொக்கையாய் விட்டது' (உ.வ.).* 2. பருமன்; bulkiness; stoutness. 3. மரத்துண்டு (இ.வ.); piece of wood, stump. 4. தாழ்வு (இ.வ.); low condition. 5. அவமானம் (யாழ்.அக.); ignominy, shame, disgrace. 6. மதிப்பு (யாழ்.அக.); respect. 7. முகம் (இ.வ.); face. *'மொக்கைக்காட்டி யடித்தான்' (இ.வ.).* 8. புணர்ச்சி; copulation.

தெ. மொக்க (கூரின்மை).

[முள் → (மொள்) → மொழுக்கு → மொழுக்கட்டை → மொக்கட்டை = மழுக்கமானது. மொழுக்கு → மொக்கு → மொக்கை = கூரின்மை (மு.தா.99). மொழு → மொகு → மொக்கு = மரக்கணு, பருமன். மொக்கு → மொக்கன் = தடித்தவன். மொக்கு → மொக்கை (வே.க.4,48)]

மொக்கை² *mokkai,* பெ.(n.) பெரியது; that which is big.

[முள் → மள் → மாளிகை = பெருமனை. முரு → மொக்கு → மொக்கை = பெரியது. மொக்கை → மக்கை. மக்கைச்சோளம் = பெருஞ்சோளம்]

மொக்கைகுலை-தல் *mokkai-kulai-,* 2 செ.கு.வி. (v.i.) அவமானப்படுதல் (வின்.); to be disgraced.

[மொக்கை + குலை-, குல் → குலை. குலைதல் = கெடுதல்.]

மொக்கைச்சி *mokkaicci,* பெ.(n.) 1. மிகப் பருத்தவள்; stout woman. 2. அறிவு மழுங்கின பெண்; dullard woman.

[மொக்கை → மொக்கைச்சி]

மொக்கைச்சோளம் *mokkai-c-cōlam,* பெ.(n.) பருத்த அமெரிக்கச் சோளம் (மக்காச்சோளம்) (மூ.அ.); Indian corn.

[மொக்கை + சோளம். மொக்கைச் சோளம் → மக்கைச் சோளம் → மக்காச்சோளம். (வே.க.4,48)]



மொக்கைச்சோளம்

மொக்கைபோ-தல் *mokkai-pō-,* 8 செ.கு.வி. (v.i.) 1. அவமானப்படுதல்; to be disgraced. *"மொக்கை போகச் செகுத்திடுவார் பொருள்" (திருப்பு. 603).* 2. முனை மழுங்குதல் (யாழ்.அக.); to become blunt, as a knife. *'அரிவாள் மணை மொக்கை போய்விட்டது' (உ.வ.).*

[மொக்கை + போ-,]

மொக்கைபோடு-தல் *mokkai-pōdu-,* 8 செ.குன்றாவி. (v.t.) புணர்தல்; to cohabit, copulate.

[மொக்கு → மொக்கை = பருமன், புணர்ச்சி. மொக்கை + போடு-, (வே.க.4, 48)]

மொக்கையன் *mokkaiyan,* பெ.(n.) 1. மிகப் பருத்தவன், தடியன்; stout man. 2. அறிவு மழுங்கியவன்; dullard.

[மொக்கை → மொக்கையன்]

மொக்கையா—தல் *mokkai-y-ā-,* 6 செ.கு.வி. (v.i.) முனை மழுங்குதல்; to be blunt, as a knife. *'கத்தி மொக்கையாய் விட்டது, சற்று தீட்டிக் கொடு' (உ.வ.).*

[மொக்கை + ஆ-,]

மொக்கையாளி *mokkai-y-āḷi,* பெ.(n.) மிகப் பருத்தவன்; stout man.

[மொக்கை + ஆளி. மொக்கையாளி → மக்கையாளி → மக்காளி = மிகப் பருத்தவன். (உ.வ.) (வே.க.4.48).]

மொக்கையீனம் *mokkai-y-īṉam,* பெ.(n.) மதிப்புக் குறைவு (யாழ்.அக.); disrespect.

[மொக்கை + ஈனம்]

Skt. *hīna* > த. ஈனம்.

மொகடஞ்செடி *mogaḍañ-jeḍi,* பெ.(n.) மகிழஞ்செடி; a tree with very fragrant flowers-munusops elengi.

[மகிழம் + செடி. மகிழஞ்செடி → மொகடஞ்செடி]

மொகடம்பட்டை *mogaḍam-paṭṭai,* பெ.(n.) மகிழம்பட்டை; bark of the tree.

[மகிழம் + பட்டை. மகிழம்பட்டை → மொகடம்பட்டை. பட்டு → பட்டை = தட்டையான பொருள்.]

மொகத்தாருடம் *moga-t-tāruḍam,* பெ.(n.) செங்குளவி; red beetle.

மொகமொகெனல் *mogamogeṉal,* பெ.(n.) 1. நீர்க் கொதிப்பின் ஒலிக்குறிப்பு; onom. expr. of boiling. 2. கழுத்துக் குறுகிய ஏனத்தி (பாத்திரத்தி)னின்று நீர் ஊற்றுங் காலுண்டாகும் ஈரடுக்கொலி குறிப்பு (சூடா.); onom. expr. of gurgling sound, as of water poured from a narrow-necked vessel.

[மொகமொக + எனல்]

மொகர் *mogar,* பெ.(n.) மோர்[1] பார்க்க; see *mōr.*

ம. மோர்.

[முள் → முளி. முளிதல் = பொங்குதல் (மு.தா.63). முளி → முயி → முயர் → முசர் = மோர், தயிர். முசர் → மொசர் → மொகர்.]

மொகலிங்கம் *moga-liṅgam,* பெ.(n.) மகலிங்கம் (M.M.1022); weaver's beam.

தெ. மொகலிங்கம்.

மொகி *mogi,* பெ.(n.) கொக்கு; a kind of bird stork.

மொகி

மொகுமொகு—த்தல் *mogu-mogu-,* 4 செ.கு.வி. (v.i.) ஒலித்தல்; to resound. *"எழுகடல்களு மொகு மொகுத்தென" (பாரத. பதின்மூன். 86).*

[மொகு + மொகு—]

மொகுமொகுமெனல் *mogu-mogu-meṉal,* பெ.(n.) மொகுமொகெனல் பார்க்க (திவா.); see *mogu-mogeṉal.*

[மொகு + மொகு + எனல்]

மொகுமொகெனல் *mogu-mogeṉal,* பெ.(n.) 1. ஒலிக்குறிப்பு; onom. expr. of resounding. *"மொகுமொகென் றொலி மிகுந்த மருகங்கள்" (கலிங். 100).* 2. நீர் பெருகுதற்குறிப்பு; onom. expr. of gushing, as of water. *"மொகுமொகென விருவிழி நீர் முத்திறைப்ப" (தாயு. பொருள்வ. 4).*

[மொகுமொகு + எனல்]

மொங்கன் *moṅgaṉ,* பெ.(n.) மொக்கன் பார்க்க (வின்.); see *mokkaṉ.*

[மொக்கு → மொக்கன் = தடித்த–வன்–வள்–து. மொக்கன் → மொங்கன். (வே.க.4,47)]

மொங்கான் *moṅgāṉ,* பெ.(n.) 1. இடிகட்டை (வின்.); rammer for roads. 2. பெருத்துக் கனத்த பொருள் (கொ.வ.); anything large and heavy. 3. மொங்கான்தவளை பார்க்க; see *maṅgāṉ-tavaḷai.*

[முள் → மள் → மாளிகை = பெருமனை. முரு → மொக்கு → மொக்கை = பெரியது. மொக்கு → மொங்கு → மொங்கான் = பெரியது, பெருந்தவளை (மு.தா.216)]

மொங்கான்

மொங்கான்சாத்து–தல் *moṅgāṉ-šāttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) மொங்கான்வை–த்தல், 2 பார்க்க; see *moṅgāṉ-vai-,* 2.

[மொங்கான் + சாத்து–,]

மொங்கான்தவளை *moṅgāṉ-tavaḷai,* பெ.(n.) பருத்த பச்சைத் தவளை; a kind of frog which big and green in colour.

[மொங்கான் + தவளை]

மொங்கான்தவளை



மொங்கான்வை–த்தல் *moṅgāṉ-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. இடிகட்டையால் நொறுக்குதல்; to ram. 2. ஏமாற்றுதல் (கொ.வ.); to deceive.

[மொங்கான் + வை–,]

மொங்கின் *moṅgiṉ,* பெ.(n.) கப்பலின் பாய்க்கயிறு கட்டுங் கட்டை (கப்.வ.); horizontal wooden block to which the fore-tack of a sail is fastened.

மொச்சட்டங்கொட்டு–தல் *moccaṭṭaṅ-koṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) நாவாற் கொட்டி யொலித்தல் (இ.வ.); to smack.

[மொச்சட்டம் + கொட்டு–,]

மொச்சட்டம் *moccaṭṭam,* பெ.(n.) நாவாற் கொட்டியொலிக்கை; smacking.

['மொச்சு' = ஒலிக்குறிப்புச்சொல். மொச்சு → மொச்சட்டம்.]

மொச்சடி–த்தல் *moccaḍi-*, 4 செ.கு.வி. (v.i.) தீய (துர்) நாற்றம் வீசுதல் (வின்.); to emit a foul smell, as goats.

தெ. முருகு.

[மொச்சை + அடி–, மொச்சையடி → மொச்சடி–,]

மொச்சம் *moccam,* பெ.(n.) மொசகம் பார்க்க; see *mošagam.*

மொச்சி *mocci,* பெ.(n.) மலைமொச்சி; mountain lablab.

[மொச்சை → மொச்சி]

மொச்சு *moccu,* பெ.(n.) தீய (துர்) நாற்றம் (வின்.); foul smell, as of goats.

தெ. முச்சு; பட. மொச்சு.

[மொச்சை → மொச்சு]

மொச்சுமொச்செனல் *moccu-mo-c-cenal,* பெ.(n.) அசையிட்டு உண்ணும் ஒலிக்குறிப்பு; onom. expr. of munching.

[மொச்சு + மொச்சு + எனல்]

மொச்சேலயம் *moccēlayam,* பெ.(n.) காட்டு மொச்சை; wild dolichos.

மொச்சை[1] *moccai,* பெ.(n.) தீய (துர்) நாற்றம்; foul smell. *"மொச்சைய வமணரும்". (தேவா. 579, 10).*

பட. மொச்சு (சாக்கடை).

[ஊசுதல் = அழுகுதல், சுவைகெடுதல். ஊசு → மூசு. மூசுதல் = கெடுதல். மூசு → மூச்சு → மொச்சு → மொச்சை = கெட்ட பண்டத்திலிருந்து தோன்றும் தீய நாற்றம்.]

மொச்சை[2] *moccai,* பெ.(n.) 1. மெல்லிய பழுப்பு நிறத்தோல் மூடிய அரை வட்ட வடிவிலிருக்கும் அவரைவகைப் பயறு, வெண்மொச்சை (சிலப். 14, 211, உரை); hyacinth bean, climber. 2. பயற்றுக் கொடிவகை; lablab, climber.

ம. மொச்ச.

[மொத்து → மொத்தம். மொத்து → மொத்தை = திரளை. மொத்தை → மொச்சை = திரண்ட பயறு (மு.தா. 210), தமிழ்நாட்டுப் பயற்று வகைகளுள் மிக மொத்தமானது; வீட்டவரைக்கு இனமான காட்டவரை (வே.க.4,50).]

மொச்சைக்கொட்டை *moccai-k-koṭṭai,* பெ.(n.) மொச்சைக் காயினுள் உட்குழிந்த அரைவட்ட வடிவிலிருக்கும் விதை (பதார்த்த. 837); hyacinth bean. *'இந்த சோறு மொச்சைக் கொட்டை மாதிரி இருக்கிறது'.*

[மொச்சை + கொட்டை. குள் → கொள் → கொட்டை = உருண்டு திரண்ட விதை]

மொச்சைப்பயறு *moccai-p-payaṟu,* பெ.(n.) மொச்சைக் கொட்டை பார்க்க (வின்.); see *moccai-k-koṭṭai.*

[மொச்சை + பயறு]

மொச்சையடி–த்தல் *moccai-y-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) தயிர் முதலியன தீய (துர்) நாற்றம் வீசுதல் (இ.வ.); to emit a bad odour, as rencid curd, etc.

[மொச்சை + அடி–,]

மொச்சையவரை *moccai-y-avarai,* பெ.(n.) மொச்சை[2], 1 பார்க்க (இ.வ.); see *moccai*[2], *1.*

[மொச்சை + அவரை. அவல் → அவலை → அவரை]

மொசகம் *mošagam,* பெ.(n.) வாழை; plantain tree.

மொசடி *mošaḍi,* பெ.(n.) நீலங்கலந்த செந்நிறமுள்ளதும் 16 விரலம் வரை வளர்வதுமான கடல்மீன்வகை; a sea-fish, purplish-red, attaining 16 in. in length.



மொசடி

மொசம் *mošam,* பெ.(n.) இலவம் பிசின்; the gum of silk cotton tree.

மொசி¹–தல் *moši-,* 2 செ.கு.வி. (v.i.) மொய்த்தல்; to swarm. *"கடுந்தே றுறுகிளை மொசிந்தன துஞ்சும்" (பதிற்றுப். 71, 6).*

[மொய் → மொசி–,]

மொசி²–த்தல் *moši-,* 2 செ.குன்றாவி. (v.t.) தின்னுதல்; to eat. *"மையூன் மொசித்த வொக்க லொடு" (புறநா. 96).*

[முள் → முடு → மடு. மடுத்தல் = வாயிலிடல், உண்ணுதல். மடு → மடை = உணவு, சோறு. முள் → (முசி) → மொசி(மு.தா.289). மொசித்தல் = பலர் கூடி உண்ணுதல் (தமி.வ.106)]

மொசிங்கிப்பாறை *mošiṅgi-p-pāṟai,* பெ.(n.) வெண்மை கலந்த நீலநிறமுள்ளதும் 13 விரலம் வரை வளரக் கூடியதுமான கடல்மீன் வகை; horse mackerel, silvery blue, attaining 13 inch in length.

[மொசிங்கி + பாறை]



மொசிங்கிப்பாறை

மொசுக்கு–தல் *mošukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) மொக்கித்தின்(னு)–தல் பார்க்க (கொ.வ.); see *mokki-t-tiṉ(ṉu)-,*

[மொக்கு → மொசுக்கு–,]

மொசுக்கை *mošukkai,* பெ.(n.) முசுமுசுக்கை பார்க்க (மூ.அ.); see *mušu-mušukkai.*

[முசுக்கை → மொசுக்கை]

மொசுப்பு *mošuppu,* பெ.(n.) செருக்கு; pride. *"தீம்பிலே கைவளரும்படி வளர்த்த மொசுப் பெல்லாம்" (திவ். திருமாலை, 18, வ்யா. பக். 69).*

[மொய் → மொசு → மொசுப்பு]

மொசுமொசு¹–த்தல் *mošu-mošu-,* 11 செ.கு.வி. (v.i.) தினவெடுத்தல் (வின்.); to feel an itching sensation.

தெ. முசமுசலாடு

[மொசு + மொசு]

மொசுமொசு²–த்தல் *mošu-mošu-,* 4 செ. குன்றாவி. (v.t.) அடிக்கடி தொல்லை செய்தல்; to worry, annoy.

[மொசு + மொசு–,]

மொசுமொசுக்கை *mošu-mošukkai,* பெ.(n.) முசுமுசுக்கை (வின்.); bristly bryony.

[முசுமுசுக்கை → மொசுமொசுக்கை]

மொசுமொசெனல் *mošu-mošenal,* பெ.(n.) 1. வண்டு முதலியன மொய்த்தற் குறிப்பு; onom. expr. of swarming, as of bees. 2. நீர் உள்ளிறங்குதற்குறிப்பு; onom. expr. of gurgling sound, as in drinking. 3. மயிர் நன்கு வளர்தற்குறிப்பு; onom. expr. of signifying luxuriant growth of hair.

[மொசு + மொசு + எனல்]

மொஞ்சகம் *moñjagam,* பெ.(n.) பீலி; whisk made of peacock feathers. *"மொஞ்சகக் கையர்" (திருவாலவா. 26, 6).*

மொஞ்சி *moñji,* பெ.(n.) முலை; breasts. *"மொஞ்சி மொஞ்சியென் றழுங்குழந்தை" (திருப்பு. 71).*

து. முஞ்ஞு, முஞ்ஞெ.

[மொள் → மொண் → மொண்ணை = மழுக்கம். மொண்ணை → மொண்ணி = வழுக்கையாக இருக்கும் முலை. மொள் → மொய் → மொய்சி → மொஞ்சி.]

மொஞ்சிநாற்றம் *moñji-nāṟṟam,* பெ.(n.) முலைப்பால் மணம் (வின்.); smell of breast-milk.

[மொஞ்சி + நாற்றம். நாறு → நாற்றம்]

மொட்டந்தலை *moṭṭan-talai,* பெ.(n.) மொட்டைத்தலை பார்க்க (வின்.); see *moṭṭai-t-talai. 'மொட்டந்தலையிற் பட்டங்கட்டி யாள வந்தானோ'.*

[மொட்டைத்தலை → மொட்டந்தலை]

மொட்டம்பு *moṭṭambu,* பெ.(n.) கூரற்ற அம்பு (பிங்.); blunt arrow.

[மொட்டை + அம்பு- மொட்டையம்பு → மொட்டம்பு. அம் → அம்பு.]

மொட்டாக்கிடு-தல் *moṭṭākkiḍu-,* 17 செ. குன்றாவி. (v.t.) முகத்தை மூடுதல்; to cover the face as a veil.

[முட்டாக்கிடுதல் → மொட்டாக்கிடுதல்]

மொட்டாக்கு *moṭṭākku,* பெ.(n.) முக்காடு; a cloth covering the head.

[முட்டாக்கு = முகத்தை மூடுதல். முட்டாக்கு → மொட்டாக்கு]

மொட்டி[1]-த்தல் *moṭṭi-,* 11 செ.கு.வி. (v.i.) 1. குவிதல்; to close in like a bud. *"கரமலர் மொட்டித் திருதய மலர" (திருவாச. 4, 84).* 2. அரும்புதல் (சங்.அக.); to bud, to shoot forth buds.

[மொட்டு → மொட்டி-,]

மொட்டி[2] *moṭṭi,* பெ.(n.) பலாவிளி; a kind of tree.

மொட்டு[1] *moṭṭu,* பெ.(n.) 1. பூவின் இதழ் விரியாமலிருக்கும் நிலை, அரும்பு; tender flower-bud. *"மொட்ட றாமலர்" (திருவாச. 29,8). 'மல்லிகை மொட்டு முல்லை மொட்டை விட பெரியது' (உ.வ.)* 2. தேரின் கூம்பு; rounded top of a car. *"மாமொட்டொடிந்து மான்றேர் சிதைய" (பாரத. நான்காநாள். 24).* 3. ஆண்குறியின் நுனி (வின்.); glans penis.

மறுவ. அரும்பு, போகில், மொக்கு, மொக்குள்.

ம. மொட்டு; கூய். மொடோ.

[முள் → முளை = முளைக்கும் வேர்தளிர் முதலியன, மரக்கன்று. முகுள் → முகுளம் = அரும்பு. முகுள் → முகிள் → முகிளம் = அரும்பு. முகிள் → முகிழ் = அரும்பு. முகிழ் → முகிழம். முகை = அரும்பு. முட்டு = பிஞ்சு. முட்டுக்காய் = பிஞ்சுக்காய். முட்டுக்குரும்மை = சிறுகுரும்மை. முட்டு → மொட்டு = அரும்பு. முதள் = அரும்பு (மு.தா. 39, 40)]

மொட்டு[2] *mottu,* பெ.(n.) தலையில் வாங்கும் குட்டு; blow with the knuckles or the fist on the head, cuff.

[முட்டுதல் = தலையாலும் முகத்தாலும் தாக்குதல். முட்டு → மொட்டு. மொட்டு மொட்டென்று தலையிற் குட்டினான் என்பது வழக்கு. கொங்கு நாட்டார் குட்டை மொட்டுக்காய் என்பர் (மு.தா. 88)]

மொட்டுக்காய் *mottu-k-kāy,* பெ.(n.) மொட்டு[1] பார்க்க; see *mottu*[1].

[மொட்டு → மொட்டுக்காய்]

மொட்டுவெளித்தள்ளுதல் *mottu-veli-t-tallutal,* பெ.(n.) ஆண்குறியின் மேற்றோல் மொட்டை மூடாமல் உள்வாங்கியுள்ள நிலை; condition in which the foreskin is drawn back from the end of the penis and cannot be returned (M.L.).

[மொட்டு + வெளி + தள்ளுதல். தள்ளு → தள்ளுதல். 'தல்' தொ.பெ.ஈறு.]

மொட்டூசி *mottūci,* பெ.(n.) மேல்முனையில் மொட்டு போன்ற கொண்டியுடைய ஊசி, குண்டூசி (இ.வ.); pin.

[மொட்டு + ஊசி. உள் → உளி → உசி = கூர்மை. உசி → ஊசி = கூர்மை, கூர்மையான கருவி.]

மொட்டை[1] *mottai,* பெ.(n.) 1. முடி நீங்கிய நிலை; bald head, shaven head. *"மொட்டைய மணாதர்" (தேவா. 325, 10). 'குழந்தைக்கு மொட்டையடிக்க வேண்டும்'.* 2. இயற்கையாக இருக்க வேண்டியது இல்லாத நிலை; barrenness, in completion, baldness. *'மழையில்லாமல் மரங்கள் மொட்டையாக நிற்கின்றன'.* 3. கூரின்மை; bluntness, as of a knife. 4. அறிவின்மை; stupidity, ignoranace, dulness. *'மொட்டைப்புத்தி' (கொ.வ.).* 5. வெறுமை; complete barenness. *'மொட்டை மரம்'.* 6. நிறைவின்மை, தேவையான விளக்கம் இல்லாத தன்மை; imperfection, incompleteness want of necessary details. *'இப்படி மொட்டையாக விடை சொன்னால் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்' (உ.வ.).* 7. மொட்டைமுறையீடு பார்க்க (இ.வ.); see *mottai-muraiyīdu.*

மறுவ. மூளி.

ம. மோழ (கொம்பில்லா விலங்கு); க. மொண்ட, மொண்டு, மொண்டெ (மழுங்கிய நிலை, குறை), மோட, மோடு (குறைநிலை); தெ. மொண்டி (குறைக்கப்பட்ட, வெட்டப்பட்ட மர அடித்தாள்); து. மொண்டு; கோத. மொண்ட்ய் (முண்டம்); துட. முட்ய் (முடவன், முண்டம்); பட. மொட்டெ.

Pkt. *matta* (கொம்பில்லாதது); **Skt.** *munda* (கொம்பில்லாதது, வெட்டப்பட்டது).

[முள் → (மள்) → மழு → மழுகு → மழுங்கு → மழுக்கு → மழுக்கம். முள் → முட்டு → மொட்டை. ஒ.நோ. பொட்டு → பொட்டை = கண்ணொளி மங்குதல் (மு.தா. 98).]

மொட்டை[2] *mottai,* பெ.(n.) மணமாகாத இளைஞன் (வின்.); unmarried man, used in contempt. *'மொட்டைப் பையன்' (உ.வ.).*

[முள் → முளு → முசு → மூசு = பிஞ்சு, பலாமுசு. ஒ.நோ. உளு → உசு. எ → ச போலித்திரிபு. முள் → முட்டு. முட்டுக் குரும்பை = சிறு தென்னம் பிஞ்சு அல்லது பனம் பிஞ்சு. முட்டு → மொட்டு = அரும்பு. மொட்டு → மொட்டை (வே.க.4, 1, 2)]

மொட்டைக்கட்டை *moṭṭai-k-kaṭṭai,* பெ.(n.) ஆடையில்லாவுடம்பு (அம்மணம்); nakedness, rudity (Tp).

மறுவ. முண்டக்கட்டை.

[மொட்டை + கட்டை. முள் → முட்டு → மொட்டை = வெறுமை, இயல்பாக இருக்க வேண்டியது இல்லாத நிலை, ஆடை உடுத்தாதவுடம்பு. கள் → கட்டு → கட்டை = திரண்டது, திரண்டவுடம்பு.]

மொட்டைக்கடிதம் *moṭṭai-k-kaḍidam,* பெ.(n.) கையெழுத்திடாத முறையீடு (மனு), கையெழுத்திடாத கடிதம்; anonymous petition, anonymous letter. *'மேலதிகாரி கையூட்டு (லஞ்சம்) வாங்குவதாக மொட்டைக் கடிதம் வந்துள்ளது' (உ.வ.).*

[மொட்டை + கடிதம்]

மொட்டைக்கறுப்பன் *moṭṭai-k-kaṟuppaṉ,* பெ.(n.) 1. கறுப்பு நெல்வகை (வின்.); a kind of black paddy. 2. காலன் (எமதூதன்); messenger of Yama.

[மொட்டை + கறுப்பன். கறு → கறுப்பன்.]

மொட்டைக்காகிதம் *moṭṭai-k-kākidam,* பெ.(n.) 1. கையொப்பமில்லாத கடிதம் (இக்.வ.); anonymous letter. 2. மொட்டை முறையீடு பார்க்க; see *moṭṭai-muṟai-y-īḍu.*

[மொட்டை + காகிதம்]

U. *Kāgaz* > த. காகிதம்.

மொட்டைக்குல்லா *moṭṭai-k-kullā,* பெ.(n.) தட்டை வடிவான தலைப்பாகை வகை (வின்.); a kind of flat cap.

[மொட்டை + குல்லா]

U. *Kalāh* > த. குல்லா.



மொட்டைக்குல்லா

மொட்டைக்குறுவை *moṭṭai-k-kuṟuvai,* பெ.(n.) இரண்டு மாதத்திற் பயிராகக் கூடியதும் குட்டையாய்க் கீழ்நோக்கி வளைவதுமான நெல்வகை; a species of paddy, short and bent down, maturing in two months, dist. fr. *vāṟ-kuṟuvai.*

[மொட்டை + குறுவை. குறு → குறுவை = குறுகிய காலத்தில் விளைச்சல் தரும் நெற்பயிர்.]

மொட்டைக்கோதுமை *moṭṭai-k-kōdumai,* பெ.(n.) கோதுமை வகை; a kind of wheat.

[மொட்டை + கோதுமை]

Skt. *gōdhūma* > த. கோதுமை.

மொட்டைக்கோபுரம் *moṭṭai-k-kōburam,* பெ.(n.) 1. அரைகுறையாய் செய்து நிறுத்தி விடப்பட்ட கோபுரம்; unfinished tower of a temple. 2. உச்சிக்கூம்பு இல்லாத கோபுரம்; pinnacle less tower.

[மொட்டை + கோபுரம். கோ= அரசன். புர் புரம் = உயர்ந்த மனை. கோபுரம் = அரண்மனையிலுள்ள புரம்.]



மொட்டைக்கோபுரம்

மொட்டைச்சி *mottaicci,* பெ.(n.) 1. மயிரற்ற தலையுடையவள்; bald-headed woman. 2. கைம்பெண்; widow, as having a shaven head. 3. ஒருவகை மருந்துப் பொடி (யாழ்.அக.); a medicinal powder.

[மொட்டையன் (ஆ.பா) – மொட்டைச்சி (பெ.பா)]

மொட்டைத்தலை *mottai-t-talai,* பெ.(n.) 1. மயிர் நீங்கிய தலை; bald or shaven head croped head. *"தட்டை முடி மொட்டைத் தலை" (அறப். சத. 64). 'மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடி போட்டது போல' (பழ.).* 2. முண்டாசு (பாகை) முதலியன அணியாத தலை; bare, uncovered head.

[முட்டு → மொட்டை + தலை]

மொட்டைத்தலையன் *mottai-t-talaiyan,* பெ.(n.) தலை மயிரை நீக்கியவன்; one who has shaven head. *'மொட்டைத் தலையன் போருக்கு அஞ்சான்' (பழ.)*

[மொட்டை + தலையன். தலை → தலையன்]

மொட்டைத்தனம் *mottai-t-tanam,* பெ.(n.) 1. மழுங்கடித்தல் (புதுவை.); shaven condition, as of head. 2. அசட்டுத் தனம் (இ.வ.); foolishness.

[மொட்டை + தனம்]

மொட்டைதட்டு-தல் *mottai-tattu-,* 5 செ.குன்றாவி.(v.t.) மொட்டையடி-த்தல்,2 பார்க்க (வின்.); see *mottai-y-adi-,* 2. *'மரத்தையெல்லாம் மொட்டை தட்டி விட்டான்'.*

[மொட்டை + தட்டு–,]

மொட்டைப்பயல் *mottai-p-payal,* பெ.(n.) சிறுவன்; boy, lad.

[முள் → முளை = இளமை. முளையன் = சிறுவன். முளையான் = சிறு குழந்தை. முள் → முட்டு → மொட்டு → மொட்டை. மொட்டைப்பயல் = சிறுபயல் (மு.தா.41). மணமாகாத இளைஞர் (வே.க.4,2)]

மொட்டைப்பிராது *mottai-p-pirādu,* பெ.(n.) மொட்டை முறையீடு பார்க்க (இ.வ.); see *mottai-muraiyidu.*

[மொட்டை + பிராது]

U. *faryād* > த. பிராது.

மொட்டைப்புத்தி *mottai-p-putti,* பெ.(n.) மழுங்கின அறிவு (வின்.); stupidity, dulness of intellect.

[மொட்டை + புத்தி]

மொட்டைமச்சு *mottai-maccu,* பெ.(n.) மொட்டைமாடி பார்க்க; see *mottai-mādi.*

[மொட்டை + மச்சு]

மொட்டைமண்டை *mottai-mandai,* பெ.(n.) மழித்த தலை; bald or shaven head.

[மொட்டை + மண்டை. முள் → மொள் → மொண்டை → மண்டை = நீர் முகக்குங்கலம். இரப்போர் கலம், அதுபோன்ற தலையோடு, தலையின் மேற்பகுதி]

மொட்டைமரம் *moṭṭai-maram,* பெ.(n.) 1. பட்டுப்போன மரம்; dead tree. 2. காயா மரம்; barren, unyielding tree. 3. இலை, பழம் முதலியன முற்றும் உதிர்ந்த மரம்; tree stripped completely of its fruits, leaves, etc.

[மொட்டை + மரம்]

மொட்டைமனு *moṭṭai-maṉu,* பெ.(n.) மொட்டைமுறையீடு பார்க்க; see *moṭṭai-muṟai-y-īḍu.*

[மொட்டை + மனு]

மொட்டைமாடி *moṭṭai-māḍi,* பெ.(n.) கூரை எதுவும் இல்லாமல் சுற்றுச்சுவருடன் மட்டும் இருக்கும் (கட்டடத்தின்) மேல்தளம்; the flat roof of a house open to the sky, open terrace. *'கோடையில் மொட்டை மாடியில் நன்றாகக் காற்று வரும்' (உ.வ.).*

[மொட்டை + மாடி]

மொட்டைமாடு *moṭṭai-māḍu,* பெ.(n.) கொம்பில்லா மாடு; hornless or dehorned cattle.

[மொட்டை + மாடு. மா → மாடு]



மொட்டைமாடு

மொட்டைமுறையீடு *moṭṭai-muṟai-y-īḍu,* பெ.(n.) கையெழுத்திடப் பெறாத முறையீடு (விண்ணப்பம்); anonymous petition.

[மொட்டை + முறையீடு. முறையிடு → முறையீடு]

மொட்டையடி-த்தல் *moṭṭai-y-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. தலை முழுதும் மழித்தல்; to shaven the head entirely. *'ஆண்டுக் கொருமுறை மொட்டையடிப்பதைச் சிலர் வழக்கமாகக் கொண்டுள்ளனர்' (உ.வ.).* 2. முழுதுங் கொள்ளை கொள்ளுதல்; to strip completely, as a man of his wealth, as a tree of its fruits. *'மரத்தை மொட்டை யடித்து விட்டார்கள்'.*

[மொட்டை + அடி-, 'அடி' து.வி.]

மொட்டையன் *moṭṭaiyaṉ,* பெ.(n.) 1. மொட்டைத் தலையன்; bald-headed man; man with fully shaven or cropped head. 2. முழுதுமிழந்தவன் (இ.வ.); man completely stripped of his wealth.

[மொட்டை → மொட்டையன். 'அன்'. ஆ.பா.ஈறு.]

மொட்டையா-தல் *moṭṭai-yā-,* 6 செ.கு.வி. (v.i.) 1. முடி நீங்குதல்; to become bald. 2. கூர் மழுங்குதல்; to blunt.

[மொட்டை + ஆ-, முனைமழுங்கியது மொட்டையாகும். மொட்டையாதல் உண்மையாய் மொட்டையாதலும் அணிவகையில் மொட்டை யாதலும் என இருவகை. உடம்பிற்குத் தலை யின்மையும், தலைக்குப் பாகை மகுடமின்மையும், மண்டைக்கு மயிரின்மையும், உறுப்பிற்கு அணி யின்மையும், மேலுக்கு ஆடையின்மையும், நிலத்திற்குப் பயிரின்மையும், முடங்கலுக்குக் கையெழுத்தின்மையும். மரத்திற்குக் கிளை யின்மையும், வாலுள்ள உயிரிக்கு வாலின்மையும், வாலிற்கு அதன் நுனியின்மையும் இவை போல்வன பிறவும் மொட்டையாகக் கருதப்படும் (மு.தா. 100).]

மொட்டையாக்கு-தல் *moṭṭai-y-ākku-*, 5 செ.குன்றாவி. (v.t.) மொட்டையடி-த்தல் 2 பார்க்க (இ.வ.); see *moṭṭai-yaḍi-, 2.*

[மொட்டை + ஆக்கு-, ஆகு (த.வி.) - ஆக்கு (பி.வி.)]

மொட்டையிடு-தல் *moṭṭai-y-iḍu-*, 17 செ.குன்றாவி. (v.t.) மொட்டையடி-த்தல் பார்க்க; see *moṭṭai-y-aḍi-,*

[மொட்டை + இடு-,]

மொட்டைவசனம் *moṭṭai-vasaṉam*, பெ.(n.) 1. நிறைவுபெறா சொற்றொடர் (வாக்கியம்); incomplete sentence. 2. நிறுவப்படாத செய்தி; uncoroborated statement.

[மொட்டை + வசனம்]

Skt. *vacana* > த. வசனம்.

மொட்டைவண்டி *moṭṭai-vaṇḍi*, பெ.(n.) மேற்கூடில்லா வண்டி; open cart without roof or hood.

[மொட்டை + வண்டி]



மொட்டைவண்டி

மொட்டைவிண்ணப்பம் *moṭṭai-viṇṇappam*, பெ.(n.) மொட்டைமுறையீடு பார்க்க; see *moṭṭai-muṟai-y-īḍu.* *'அவர் மொட்டை விண்ணப்பம் போடுவதை வழக்கமாக கொண்டுள்ளார்'.*

[மொட்டை + விண்ணப்பம்]

Skt. *viñāpana* > த. விண்ணப்பம்.

மொட்டைவெள்ளாடு *moṭṭai-veḷḷāḍu*, பெ.(n.) கொம்பில்லாத ஆடு; hornless goat.

[மொட்டை + வெள்ளாடு. பொதுவாக வெள்ளாடுகளுக்கு 1/2 முதல் 3/4 அடி அளவு கொம்பு இருக்கும்]

மொடமொடப்பு *moḍa-moḍappu*, பெ.(n.) விறைப்புத்தன்மை; stiffness. *'மொட மொடப்பான துணிகளை அணிவதிலேயே சிலருக்கு நாட்டம் அதிகம்'.*

[முல் → மல் = வலிமை. முல் → முள் → மொள் → மொய் = வலிமை. முள் → மொள் → மொட → மொடமொடப்பு.]

மொடமொடெனல் *moḍa-moḍeṉal*, பெ.(n.) மொடுமொடெனல் பார்க்க (சது.); see *moḍu-moḍeṉal.*

[மொடமொட + எனல்]

மொடவி *moḍavi*, பெ.(n.) பரு, முகப்பரு; small pimple on the face (கருநா.).

க. மொடவி, மொடவெ; தெ. மொடிம; பட. மொடிவி; கோத. மொர்திரி (மச்சம்).

[மொடு → மொடவி]

மொடு *moḍu*, பெ.(n.) 1. பருமை; bigness, bulkiness. 2. மிகுதி (யாழ்ப்.); plenty. 3. விலை முதலியவற்றின் நயம் (வின்.); clearness. *"பெருச்சாளியை மூத்த நயினார் மொடுவாய்க் கொண்டு போனார்" (குற்றா. குற. 93, 2).*

[முகடு → மோடு (மு.தா.68). மோடு → மொடு]

மொடுக்குமொடுக்கெனல் *moḍukku-moḍukkeṉal*, பெ.(n.) ஒலிக் குறிப்பு வகை (வின்.); onom. expr. of gulping. *'மொடுக்கு மொடுக்கென்று குடிக்கிறான்'.*

[மொடுக்கு + மொடுக்கு + எனல்]

மொடுகு *moḍugu*, பெ.(n.) கையணி வகை; a kind of bracelet.

தெ. முருகு.

[முள் → முறு → முறுகு → மொடுகு = முறுக்கிச் செய்யப்பட்ட அணி]



மொடுமொடு-த்தல் *moḍu-moḍu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. பசையுள்ள ஆடை முதலியன ஒலித்தல் (வின்.); to rustle, as dried skin, starched cloth. 2. வயிறு இரைதல்; to rumble, as the bowels. 3. விரைதல்; to hasten.

[மொடு + மொடு-,]

மொடுமொடெனல் *moḍu-moḍeṉal*, பெ.(n.) 1. உலர்ந்த தோல் முதலியவற்றின் ஒலிக் குறிப்பு (பிங்.); rustling sound as of dried skin, starched cloth. 2. வயிறு இரைதற் குறிப்பு (கொ.வ.); rumbling in the stomach. 3. விரைதற்குறிப்பு; hastening. *"முன்னலோர் வெள்ளிப் பெருமலைக் குட்டன் மொடுமொடு விரைந்தோட" (திவ். பெரியதி. 1, 7, 5).*

[மொடு + மொடு + எனல்]

மொடுவார்நங்கை *moḍuvār-naṅgai*, பெ.(n.) பாம்புகடி வேர்; a kind of root used as an antidote in snake poison.

மொண்டணி *moṇḍaṇi*, பெ.(n.) மொந்தணி, 1 பார்க்க (சப்.); see *mondaṇi, 1*.

[மொந்தணி → மொண்டணி]

மொண்டல் *moṇḍal*, பெ.(n.) மொள்ளுகை (நாமதீப. 757); taking liquid, as in a vessel, scooping.

[மொள் → மொண்டு → மொண்டல். 'அல்'. தொ.பெ.ஈறு]

மொண்டள-த்தல் *moṇḍaḷa-*, 3 செ. குன்றாவி. (v.t.) நீர்மப் பொருள்களை முகந்து அளவு செய்தல்; to measure by taking in vessel, as water.

[மொண்டு + அள-,]

மொண்டன் *moṇḍaṉ*, பெ.(n.) சாமை வகை (யாழ்ப்.); a species of *šāmai.*

மொண்டாவன் *moṇḍāvaṉ*, பெ.(n.) மொண்டான் பார்க்க (சப்.); see *moṇḍāṉ*.

[மொண்டான் → மொண்டாவன்]

மொண்டான் *moṇḍāṉ*, பெ.(n.) நீர் மொள்ள உதவும் கலவகை (இ.வ.); a vessel for taking water.

[முள் → முழு → (முகு) → முக. முகத்தல் = மொள்ளுதல், மொண்டளத்தல். முள் → மொள். மொள் → மொண்டை → மொந்தை = கள்

முகக்குங்கலம் (மு.தா. 289). முள் → மொள் → மொண்டான் (வே.க.4, 92)]



மொண்டி[1] *mondi,* பெ.(n.) 1. நொண்டி வின்.); lame person. 2. ஆட்டத்தில் தன் (இ.வ.), தோல்வியை யேற்றுக் கொள்ளாமற் சாதிப்பவன் (இ.வ.); one who, refuses to admit defeat.

தெ. மொண்டி.

[முள் → முண்டு → முண்டம் = மழித்தலை. முண்டு → மொண்டு = மொட்டைக்கை, கைக்குறை. மொண்டு → மொண்டி = கை குறைந்தவன். மொண்டி முடம் என்பது வழக்கு. முடம் என்பது வளைவு என்றும் மொண்டி என்பது குறை என்றும் வேறுபாடறிக. (மு.தா.101)]

மொண்டி[2] *mondi,* பெ.(n.) மொண்டன் பார்க்க (யாழ்ப்.); see *mondan.*

[மொண்டன் → மொண்டி]

மொண்டி[3] *mondi,* பெ.(n.) மொண்டுக் காரன் பார்க்க; see *mondu-k-kāran.*

தெ. மொண்டி; க. மொண்ட; து. மொண்தி.

[முரண்டு → மொண்டு → மொண்டி]

மொண்டி[4] *mondi,* பெ.(n.) ஒரு சாமை; a millet, samai.

மொண்டிமுடம் *mondi-mudam,* பெ.(n.) மொண்டி[1] பார்க்க; see *mondi*[1].

[மொண்டி + முடம்]

மொண்டு *mondu,* பெ.(n.) 1. முரண்டு (வின்.); refractoriness, unruliness. 2. தொந்தரவு (யாழ்.அக.); annoyance worry.

க. மொரடு, முருடு; தெ. மொண்டி.

[முரண்டு → முண்டு → மொண்டு. முரடு → முரடன் → க. மொட்ட]

மொண்டுக்காரன் *mondu-k-kāran,* பெ.(n.) 1. முரண்டு செய்வோன் (யாழ்.அக.); refractory man. 2. தொந்தரவு செய்பவன்; trouble some person.

க. மொட்ட, மட்ட; பட. மொட்ட.

[முரண்டுக்காரன் → மொண்டுக்காரன் = முரணாகச் செயல்படுவோன். முரள் → முரண் → முரண்டு → மொண்டு.]

மொண்டை *mondai,* பெ.(n.) மொந்தை பார்க்க; see *mondai.*

[முள் → மொள் → மொண்டை. மொண்டை → மண்டை = நீர் முகக்குங்கலம் (மு.தா.289)]

மொண்ணன் *monnan,* பெ.(n.) வழுக்கைத் தலையன்; bald-headed person. *"வன்கண்ணர் மொண்ணரை" (தேவா. 705, 4).*

[மொண்ணை → மொண்ணன்]

மொண்ணி *monni,* பெ.(n.) முலை (யாழ்ப்.); breast.

மறுவ. அம்மம், குயம், குருக்கண், கொங்கை.

[(மொள்) → மொண் → மொண்ணை = மழுக்கம். மொண்ணை → மொண்ணி = வழுக்கையாக இருப்பது]

மொண்ணை *monnai,* பெ.(n.) 1. வழுக்கை; baldness. 2. கூர்மையின்மை; bluntness.

[முள் → (மொள்) → மொழுக்கு → மொக்கு → மொக்கை = கூரின்மை. (மொள்) → மொண் → மொண்ணை = மழுக்கம், கூரின்மை (மு.தா.99)]

மொண்ணையன் *monnaiyan,* பெ.(n.) அறிவு மழுங்கினவன் (நெல்லை.); dullard, idiot.

[மொண்ணை = கூரின்மை. மொண்ணை → மொண்ணையன். 'அன்'. ஆ.பா.ஈறு]

மொணரி *monari,* பெ.(n.) மொறுமொறுப்பவ-ன்–ள் (இ.வ.); one who grumbles.

[முனுமுனு → மொணமொண. மொண → மொணரி.]

மொத்தப்பட்டா *motta-p-pattā,* பெ.(n.) சிற்றூர் அல்லது மாவட்டத்தை மொத்தமாக விடுங் குத்தகை (வின்.); lease of a whole village or district.

[மொத்தம் + பட்டா]

U. *pattā* > த. பட்டா.

மொத்தப்பைசல் *motta-p-paisal,* பெ.(n.) 1. சிற்றூர் முழுவதுக்கும் மொத்தத் தீர்வையை உறுதிப்படுத்தப் பின்பு அத்தீர்வையை உரிமம் வாரியாக பிரித்தல்; (R.T.) settlement of land revenue based on a preliminary assessment of the whole village. 2. முழுதும் தீர்ந்து விடுகை; outright settlement, as of a business.

[மொத்தம் + பைசல்]

U. *faisal* > த. பைசல்.

மொத்தம்¹ *mottam,* பெ.(n.) 1. கூட்டுத் தொகை; sum, total, aggregate. *'தேர்வு எழுதினவர் எல்லாரும் மொத்தம் எத்தனை பேர்?' (உ.வ.).* 2. முழுமை; whole. *"பரிக்குமிப் பரிமா மொத்தம்" (திருவாலவா. 28, 72). 'எல்லாக் காய்களையும் மொத்தமாய் விலைபேசி வாங்கிக்கொள் (உ.வ.). 'வரவு செலவுக் கணக்குப் பார்த்தால் மொத்தத்தில் இழப்பிராது'.* 3. பொது (அக.நி); universality, generality. *'எல்லாரையும் மொத்தமாய் வைதான்'.* 4. பெரும்பான்மை; majority. *'மொத்தவிலை வணிகர்' (உ.வ.).*

ம. மொத்தம்; க., பட. மொத்த; தெ. மொத்தமு; து. மொத்தொ.

[முள் → முழு → முழுது = முழுமை. முழுது → முழுவது. முழு → முழுவல் → முழுவன். முழு → (முது) → முதல் = உடம்பு. முல் → முற்று = முழுது. முது → மொது → மொத்து → மொத்தம். (மு.தா.214)]

மொத்தம்² *mottam,* பெ.(n.) பருமன் (வின்.) திண்ணம்; bulkiness. *'கட்டிற்கால் மொத்தமாயிருக்க வேண்டும்' (உ.வ.). 'எலுமிச்சம் பழத்தோல் மொத்தமாயிருத்தல் கூடாது'.*

[முள் → முரு → முரள் → முரண் → முரடு = பெரியது, திரண்டது. கழுமுரடு = மிகத்திரண்ட பொருள். முரடு → முரசு = திரண்ட கட்டையாற் செய்யப்பட்ட மத்தளம், பேரிகை. முரசு → முரசம். முரடு → முருடு = முண்டுக்கட்டை. முள் → மொள் → மோள் → மோளம் → மேளம். மோளம் → மோழகம் → மேழகம் → ஏழகம் → மொள் → மொத்து = திரட்சி திரண்டது. மொத்து → மொத்தம் (மு.தா. 209, 210)]

மொத்தம்³ *mottam,* பெ.(n.) நீலமலை குறும்பர் ஊர்; Kurumba (of Nilgiri) village.

பட. மொத்த; கோத. மொத்ம்; துட. முத்.

[முள் → முழு → முழுது = முழுமை. முழு → மொது → மொத்து → மொத்தம் = கூட்டுத்தொகை. கூட்டாக வீடுகள் இருக்கும் குறும்பர் ஊர். ஒ.நோ. சேரி = வீடுகள் சேர்ந்திருக்கும் ஊர்]

மொத்தம்பைசல் *mottam-paisal,* பெ.(n.) மொத்தப்பைசல் பார்க்க (G.Tj.D.I.182); see *motta-p-paišal.*

[மொத்தம் + பைசல்]

U. *faisal* > த. பைசல்.

மொத்தமுதல் *motta-mudal,* பெ.(n.) முதலாவது, தொடக்கமாவது; the very beginning, at the very first, in the first place.

க. மொத்த மொதல்.

[மொத்தம் + முதல்]

மொத்தளம் *mottaḷam,* பெ.(n.) 1. கூட்டம் (யாழ்.அக.); crowd. 2. மொத்தம் 1 பார்க்க; see *mottam 1.*

[முது → மொது → மொத்து → மொத்தம் (மு.தா. 214) = கூட்டுத்தொகை. மொத்து → மொத்தளம். (வே.க.4,49).]

மொத்தன் *mottaṉ,* பெ.(n.) 1. தடித்தவன்; stout man. 2. சோம்பேறி; lazy person. 3. மூடன்; dullard, idiot.

[மொது → மொத்து → மொத்தன். (வே.க.4, 49)]

மொத்தி[1] *motti,* பெ.(n.) புடைப்பு (யாழ்ப்.); excrescence, protuberance, swelling.

[மொத்து → மொத்தி]

மொத்தி[2] *motti,* பெ.(n.) 1. தடித்தவள்; stout woman. 2. சோம்பேறி; lazy woman. 3. மூடத்தனமுள்ளவள்; dullard woman.

க. மொத்தி.

[மொத்தன் (ஆ.பா.) – மொத்தி (பெ.பா.)]

மொத்திக்கால் *motti-k-kāl,* பெ.(n.) ஆனைக்கால்; elephantiasis bilarial leg.

[மொத்தி + கால்]

மொத்தினி *mottiṉi,* பெ.(n.) நுரை (சங்.அக.); foam.

[மொத்து → மொத்தி → மொத்தினி]

மொத்து[1]–தல் *mottu-,* 5 செ.குன்றாவி. (v.t.) உரக்க அல்லது வலுக்க அடித்தல்; to strike, beat. *"எதிர்மொத்தி நின்று" (கம்பரா. முதற்போ. 66). 'எல்லாருஞ் சேர்ந்து நன்றாய் மொத்தி விட்டார்கள்' (உ.வ.).*

ம. மொத்துக; க. மோது; தெ. மொத்து; து. முத்தெ.

[முல் → முது → முத்து. முத்துதல் = சேர்தல், ஒன்றையொன்று தொடுதல், முது → மொது → மொத்து–,]

மொத்து[2]–தல் *mottu-,* 5. செ.கு.வி. (v.i.) வீங்குதல்; to swell. *'அவனுக்கு முகம் மொத்தியிருக்கிறது' (உ.வ.).*

[மொலு → மொது. மொதுமொதுவெனல் = திரளுதற் குறிப்பு. மொது → மொத்து–, (வே.க.4,49)]

மொத்து[3] *mottu,* பெ.(n.) வலுத்த அடி; stroke, blow. *"மோதுதிரையான் மொத்துண்டு" (சிலப். 7, பாடல் 7).*

[முது → மொது → மொத்து]

மொத்து[4] *mottu,* பெ.(n.) 1. தடித்த–வன்–வள்–து; stout fellow. 2. மூடத்தனமான வன்–வள்–து; dullard, idiot. 3. சுறுசுறுப்பில்லாத வன்–வள்–து (கொ.வ.); lazy person or animal.

க. மொத்த; தெ. மொத்து.

[மொது → மொத்து. (வே.க.4,49)]

மொத்துப்பிண்டம் *mottu-p-pindam,* பெ.(n.) மொத்து[3] பார்க்க; see *mottu*[3].

[மொத்து + பிண்டம். பிள் → பிண் → பிண்டு → பிண்டம்.]

மொத்துலவங்கப்பட்டை *mottu-lavanga-p-pattai,* பெ.(n.) பெரிய கருவா (லவங்க)ப் பட்டை; thick variety of cinnamon bark.

[மொத்து + லவங்கம் + பட்டை]

Skt. *lavanga* > த. லவங்கம்.

மொத்தை[1] *mottai,* பெ.(n.) 1. உருண்டை (வின்.); ball, round lump. *'மொத்தைச் சோற்றுக்கு மேளம் அடிக்கிறான்' (பழ.).* 2. பருமன் (யாழ்.அக.); bulkiness, stoutness.

க., பட. முத்தெ; தெ. முத்த.

[மொள் → மொத்து = திரட்சி, திரண்டது. மொத்து → மொத்தம். மொத்து → மொத்தை = திரளை (மு.தா. 210)]

மொத்தை[2] *mottai,* பெ.(n.) மூடப்பெண் (வின்.); ignorant woman.

க. மொத்தி.

[மொத்து → மொத்தை]

மொத்தை[3] *mottai,* பெ.(n.) ஆடு; goat.

[மொள் → மொத்து = திரட்சி, திரண்டது. மொத்து → மொத்தை = திரண்ட விலங்கு]

மொத்தைப்பிண்டம் *mottai-p-pindam,* பெ.(n.) உருத்திரிந்து தசைத் திரட்சியாகத் தோலால் மூடிக் காணப்படும் கரு; foetus reduced to a shapeless mass of flesh covered with skin.

[மொத்தை + பிண்டம். புள் → (பிள்) → பிண்டு → பிண்டம்.]

மொத்தையுரு *mottai-y-uru,* பெ.(n.) நெட்டுரு (இ.வ.); learning by rote. *'மொத்தையுருப் போட்டுத் தேறிவிட்டான்' (உ.வ.).*

[மொத்தை + உரு]

மொதிரகண்ணி *modira-kanni,* பெ.(n.) மோதிரக்கண்ணி (இலத்.); climbing flax.

[மோதிரக்கண்ணி → மொதிரகண்ணி]

மொதுமொதுவெனல் *modumoduvenal,* பெ.(n.) திரளுதற் குறிப்பு; onom. expr. signifying crowding together. *'மொது மொதுவென்று மக்கள் குவிந்தார்கள்' (உ.வ.).* 2. கொழுத்து வளர்தற் குறிப்பு; onom. expr. signifying luxuriance in growth.

[மொலு → மொது. மொது + மொது + எனல்.]

மொதுமொதெனல் *modu-modenal,* பெ.(n.) 1. விழுங்கல் அல்லது உறிஞ்சல் ஒலிக்குறிப்பு (வின்.); onom. expr. signifying sound of swallowing or sucking in liquid. 2. திரளுதற்குறிப்பு; onom. expr. signifying crowding together. *'மொதுமொதென்று சனங்கள் குவிந்தார்கள்'.* 3. கொழுத்து வளர்தற் குறிப்பு; onom. expr. signifying luxuriance in growth.

[மொதுமொதுவெனல் → மொதுமொதெனல் (வே.க.4,49)]

மொந்தணி *montani,* பெ.(n.) மரத்தின் கணு (யாழ்ப்.); protuberance or knot in a tree. 2. மொத்தை[1] பார்க்க (யாழ்.அக.); see *mottai*[1].

[மொத்து → மொந்து → மொந்தணி]

மொந்தணியன் *mondaṉiyaṉ,* பெ.(n.) 1. உருண்டையானது; anything in round lump ball. 2. பருத்தது; anything bulky.

[மொந்தணி → மொந்தணியன்]

மொந்தன் *mondaṉ,* பெ.(n.) 1. தடித்த தோலையுடைய ஒருவகை வாழைப்பழம் (பதார்த்த. 728); thick-skinned plantain fruit, abyssinian banana. 2. ஒருவகை (திருவித்தி)க் கடுக்காய்; a variety of gallnut.

தெ. பொந்த.

[முரு → மொக்கு → மொக்கை = பெரியது. முது → மொது → மொத்து → மொந்து → மொந்தன் = பெருவாழை (மு.தா.216). கதலிக்கு எதிரானது (வே.க.4, 50)]

மொந்தன்பழம் *mondaṉ-paḻam,* பெ.(n.) மொந்தன் 1 பார்க்க; see *mondaṉ1.*

[மொந்தன் + பழம்]

மொந்தின்கடுக்காய் *mondiṉ-kaḍukkāy,* பெ.(n.) மொந்தன் 2 பார்க்க; see *mondaṉ 2.*

[மொந்தின் + கடுக்காய்]

மொந்தை[1] *mondai,* பெ.(n.) 1. சிறு பானை போன்ற மண்பாண்டம்; a small earthern vessel used mostly in tapping palmyra sap etc. *"நீர் மொள்ள மொந்தைக்கும் வழியில்லை" (அருட்பா. V. கந்தர்சரண. தனிப்பா. 2). 'மோருக்குப் போய் மொந்தையை ஒளிப்பான் ஏன்?' (பழ.).* 2. சிறு மரப்பாண்ட வகை; a small wooden vessel. 3. சிறு ஏனம் (இ.வ.); a small vessel. 4. ஒரு கட்பறை வகை (பிங்.); a drum with one face.

ம. மொந்த; க. முந்தெ; தெ. முந்த.

[முள் → முழு → (முகு) → முக. முகத்தல் = மொள்ளுதல், மொண்டளத்தல். முக → முகவை. முல் → (முழை) → மூழை = அகப்பை. மொள் → மொண்டை → மண்டை = நீர்முகக்குங்கலம், இரப்போர்கலம், அது போன்ற தலையோடு, தலையின் மேற்பகுதி, மண்டை போன்ற தோற்கருவி. மொள் → மொண்டை → மொந்தை = கள் முகக்குங்கலம், மொந்தை போன்ற தோற்கருவி (இசை.) (மு.தா.289)]

மொந்தை[2] *mondai,* பெ.(n.) 1. பருத்தது; that which is stout or big. 2. திரண்டது; that which is round, lump.

[மொள் → மொத்து = திரட்சி , திரண்டது. மொத்து → மொத்தம். மொத்து → மொத்தை = திரளை. மொத்தை → மொந்தை (மு.தா.210)]

மொந்தையுரு *mondai-y-uru,* பெ.(n.) மொத்தையுரு பார்க்க (கொ.வ.); see *mottai-y-uru.*

[மொத்தையுரு → மொந்தையுரு (வே.க.4,50)]

மொப்படி-த்தல் *moppaḍi-,* 4 செ.கு.வி. (v.i.) வெடிநாற்றம் வீசுதல் (வின்.); to emit a rancid smell.

[மொப்பு + அடி]

மொப்பு *moppu,* பெ.(n.) 1. வெடிநாற்றம் (வின்.); rancid smell, as of sour milk or putrid meat. 2. குட்டி பாலைக்குடியாதபடி ஆட்டின் மடியில் சுற்றிவைக்குந் துணி (சங்.அக.); piece of cloth tied over the she-goat's udder to prevent its kid from sucking the milk.

[மோ → மோப்பு → மொப்பு]

மொய்[1]–த்தல் *moy-,* 11. செ.கு.வி. (v.i.) 1. சுற்றிச் சூழ்தல் அல்லது சூழ்ந்திருத்தல், நெருங்குதல்; to crowd, press, throng, swarm, as flies, bees, ants. *"வாளோர் மொய்ப்ப" (புறநா. 13), 'ஈக்கள் மொய்த்த பண்டங்களை வாங்காதீர்கள்' (உ.வ.).* 2. மேற்பரவுதல் (வின்.); to spread, as an eruption. *'கரப்பான் மொய்க்கிறது'.* 3. இருத்தல் (அக.நி.); to abide in.

க. முசுரு.

[மூழ் → மூடு → மூடி. மூடு → முடம் → மோடம். மூடு = அறிவிலி. மூடம் → மூடன். மூழ் → மூய். மூய்தல் = மூடுதல், வாய்மூடி எச்சில் உமிழ்தல். மூய் → மொய். மொய்த்தல் = மூடுதல் (மு.தா. 190)]

மொய்[2]–த்தல் *moy-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. நெருங்கிச் சுற்றுதல்; to crowd round, swarm round. 2. தொல்லைப் படுத்துதல்; to annoy, tease. 3. மூடுதல்; to cover, to enclose.

[மூய் → மொய். மொய்த்தல் = மூடுதல். (மு.தா.190)]

மொய்[3]–த்தல் *moy-,* 4 செ.கு.வி. (v.i.) இறுகுதல்; to harden, as land dried by the sun.

[முள் → முறு → முறுகு → முறுகல் = சூட்டினால் இறுகியது. முள் → (மொள்) → மொய். மொய்த்தல் = இறுகுதல் (மு.தா.222)]

மொய்[4]–த்தல் *moy-,* 11 செ.குன்றாவி. (v.t.) கொடுத்தல் (அக.நி.); to give, bestow.

[மொழிதல் = சொல்லுதல். மொழிந்து கொடுத்தல் = வாயால் சொல்லிப் பிறருக்குக் கொடுத்தல். மொழிதல் சொல்லிக் கொடுத்தல். மொழி → மொயி → மொய்]

மொய்[5] *moy,* பெ.(n.) 1. நெருக்கம்; press, throng, swarm. *"மொய் கொண்மாக்கள்" (மணிமே. 19, 136).* 2. கூட்டம் (பிங்.); company, assembly, crowd. 3. போர்; battle, war. *"மொய் தாங்கிய முழுவலித் தோள்" (பு.வெ. 8, 28).* 4. போர்க்களம்; battle-field. *"மொய்த் தலைதனில்....... முடுகினனே" (இரகு. திக்கு. 87).* 5. பகை; enemy, enmity. *"மொய்யிரிய" (பு.வெ. 3, 5).* 6. வண்டு (சூடா.); bee.

[மூழ் → மூய். மூய்தல் → மூடுதல். மூய் → மொய் (மு.தா.190)]

மொய்[6] *moy.* பெ.(n.) 1. இறுகுகை; closeness, tightness. *"மொய்வளம் பூத்த முயக்கம்" (பரிபா. 18, 18).* 2. பெருமை; greatness, excellence. *"மொய்சிதைக்கு மொற்றுமை யின்மை" (நான்மணி. 23).* 3. வலிமை (பிங்.); strength. *"மொய்வளஞ் செருக்கி" (பதிற்றுப். 49, 8).* 4. யானை (பிங்.); elephant.

[முள் → (மொள்) → மொய். மொய்த்தல் = இறுகுதல் (மு.தா.222)]

மொய்[7] *moy,* பெ.(n.) தாய் (அக.நி.); mother.

[அம்மா → அம்மொய் → மொய் (கொ.வ.)]

மொய்[8] *moy,* பெ.(n.) 1. மணவிழா முதலியவற்றில் வழங்கும் அன்பளிப்புப் பணம் (கொ.வ.); presents given on special occasions, as at a wedding. *'மொய்ப் பணம் ஆயிரம்தான் உள்ளது' (உ.வ.).* 2. நன்கொடை (மகமை) (இ.வ.); contribution, as to a charity.

க. முய்; பட. மொய்யி; து. முயி; கோத. மொய்.

[முழி → மொழி. மொழிதல் = சொல்லுதல், செய்யும் அன்பளிப்பை மொழிந்து விடுதல், மொழிந்து செய்யும் அன்பளிப்பு, அன்பளிப்பு.]

மொய்⁹ *moy,* பெ.(n.) 1. அத்தி; fig tree. 2. ஆமை; tortoise. 3. யானை; elephant.



மொய்⁹

மொய்¹⁰ *moy,* பெ.(n.) வண்டு; beetle.

[மூழ் → மூய். மூய்தல் = மூடுதல். மூய் → மொய் (மு.தா.190). மொய் = (ஒன்றை) மொய்க்கும் உயிரி.]

மொய்க்கணக்கு *moy-k-kaṇakku,* பெ.(n.) திருமணம் முதலியவற்றில் வழங்கும் நன்கொடைகளின் குறிப்பு; list of presents made as marriage or other special occasions.

[மொய் + கணக்கு]

மொய்கதிர் *moy-kadir,* பெ.(n.) 1. முலைக் காய் (நிகண்டு.); nipple of woman's breast, teat of animal. 2. முலை (சது.); breast, udder.

[மொய் + கதிர்]

மொய்த்தாய் *moy-t-tāy,* பெ.(n.) தாய் (யாழ்.அக.); mother.

[மொய் = அம்மா. மொய் + தாய் – மொய்த்தாய் = அம்மாவாகிய தாய்]

மொய்தாய் *moy-tāy,* பெ.(n.) மொய்த்தாய் பார்க்க (யாழ்.அக.); see *moy-t-tāy.*

[மொய் = அம்மா. தாய் = அம்மா. மொய்தாய் மீமிசைச் சொல்]

மொய்ப்பணம் *moy-p-paṇam,* பெ.(n.) மொய்⁸ பார்க்க; see *moy⁸.*

[மொய் + பணம். படம் → பணம்]

மொய்ம்பன் *moymbaṉ,* பெ.(n.) வீரன்; warrior. *"வாளி......... மொய்ம்ப ரகங்களைக் கிழித்து" (கம்பரா. முதற்போ. 145).*

[மொய்ம்பு → மொய்ம்பன்]

மொய்ம்பு *moymbu,* பெ.(n.) 1. வலிமை; strength, valour, prowess. *"முரண் சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும்" (குறள், 492).* 2. தோள்; shoulder. *"பூந்தாது மொய்ம்பின வாக" (கலித். 88).*

ம. முறிப்பு; க. முய், முயிவு, முயிபு, முடிபு; தெ. மூபு; து. முடு (தோள்பொருத்து); பட. முடு; கூ. மோபு.

[முள் → முறு → முறுகு → முறுகல். முள் → (மொள்) → மொய். மொய்த்தல் = இறுகுதல். மொய் = இறுகுதல், வலிமை. மொய் → மொய்ம்பு – வலிமை, வலிமையைக் காட்டும் தோள்.]

மொய்யற்சன்னி *moyyaṟ-caṉṉi,* பெ.(n.) மூடு இசிவு (சன்னி) நோய்வகை (யாழ்.அக.); catalepsy.

[மொய் → மொய்ம்பு. மொய் → மொய்யல் + சன்னி]

மொய்யெழுத்து *moy-y-eḻuttu,* பெ.(n.) அற ஆவணம் (யாழ்.அக.); deed of endowment for a charitable purpose.

[மொய் + எழுத்து. பரிசாகக் கொடுக்கப்பட்ட மொய்யினைக் குறிக்கும் ஆவணம்]

மொய்யெழுது[1]–தல் *moy-y-eḻudu-,* 5 செ. குன்றாவி.(v.t.) 1. மணம் முதலியவற்றில் நன்கொடையளித்தல்; to give presents on marriage or other special occasions. 2. அற (தரும)த்திற்குச் சிறு தொகை உதவுதல் (வின்.); to subscribe small sums to a charity. 3. கொடுத்துத் திரும்பக் கிடையாதனவற்றைச் செலவாக எழுதுதல்; to write off as irrecoverable.

[மொய் + எழுது–,]

மொய்யெழுது[2]–தல் *moy-y-eḻudu-,* 5 செ.கு.வி. (v.i.) திருமணம் முதலியவற்றில் அளிக்கும் நன்கொடைகளைப் பதிவு செய்தல்; to make a list of presents given on marriage or other special occasions.

[மொய் + எழுது–,]

மொய்யெனல் *moy-y-eṉal,* பெ.(n.) 1. சோம்பற்குறிப்பு (சூடா.); slowness. 2. புளித்தற்குறிப்பு (கொ.வ.); sourness.

[மொய் + எனல்]

மொயின் *moyiṉ,* பெ.(n.) கோயிலுக்குக் கொடுக்கும் பணம் அல்லது பொருள்; a payment or contribution, as to a temple (R.T).

[மொய் = அன்பளிப்பு. மொய் → மொயின்]

மொயினி *moyiṉi,* பெ.(n.) மொயின் பார்க்க; see *moyiṉ* (R.T).

[மொய் → மொயின் → மொயினி]

மொரசுபறையன் *morašu-paṟaiyaṉ,* பெ.(n.) கன்னட நாட்டிலிருந்து தமிழ்நாடு புகுந்த பறையர் வகுப்பினர்; a division of the *Paṟaiya* caste. said to have migrated from Karnataka to the Tamil Country. (E.T.V, 80).

[மொரசு + பறையன்]

மொரப்பூர் *morappūr,* பெ.(n.) தர்மபுரி மாவட்டத்தில் அமைந்த ஊர்; a village in Dharmapuri dt.

[முரம்பு = கன்னிலம் அல்லது சரள் நிலம் (சொ.க.66). முரம்பு → மொரம்பு + ஊர் = மொரம்பூர் → மொரப்பூர். முரம்பு என்று பிறவிடங்களிலும் ஊர்ப்பெயர் அமைந்துள்ளதைக் காண்க]

மொரமொர–த்தல் *mora-mora-,* 11. செ.கு.வி. (v.i.) 1. முறுக்கா யொலித்தல்; to rustle. 2. முறமுற–த்தல் 1 பார்க்க; see *muṟa-muṟa-,1.* 3. முறமுற–த்தல் 2 பார்க்க; see *muṟa-muṟa-,* 2.

[மொர + மொர–,]

மொரமொரப்பு *mora-morappu,* பெ.(n.) 1. முறுக்காயொலிக்கை; rustling. 2. முறமுறப்பு 1 பார்க்க; see *muṟa-muṟappu, 1.* 3. முறமுறப்பு 2 பார்க்க; see *muṟa-muṟappu, 2.*

[மொரமொர → மொரமொரப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

மொரமொரெனல் *moramoreṉal,* பெ.(n.) 1. முறுக்காய் ஒலித்தற் குறிப்பு; rustling. 2. முரமுரெனல் பார்க்க் (சங்.அக.) ; see *mura-mureṉal.*

[மொர + மொரெனல்–,]

மொருமொரு–த்தல் *moru-moru-,* 11. செ.கு.வி. (v.i.) 1. முணுமுணுத்தல்; to murmur, to grumble. 2. மொரமொர–த்தல் பார்க்க; see *mora-mora-.*

[மொரு + மொரு–]

மொருமொரெனல் *moru-morenal,* பெ.(n.) 1. மொரமொரெனல் பார்க்க (சங்.அக.); see *mora-morenal.* 2. முணுமுணுத்தற் குறிப்பு; onom. expr. of grumbling.

[மொருமொரு + எனல்]

மொல்லமாறி *mollamāri,* பெ.(n.) 1. முடிச்சவிழ்க்கி; pickpocket. 2. புரட்டன்; dishonest person, deceiver.

தெ. முல்லை மாரி.

[முல்லை + மாறி. இல்லிருத்தல் முல்லை (தனிப்பா.) முல்லை கற்பொழுக்கத்தின் அடையாளம். முல்லை = கற்பு நெறி, ஒழுக்கம். முல்லைமாறி → மொல்லமாறி. மாறு → மாறி. 'இ' வினை முதலீறு. ஒ.நோ. கேட்டுமாறி]

மொல்லு *mollu,* பெ.(n.) சண்டைக்கு முன் கைகால்களைத் தட்டிச் செய்யும் ஆரவாரம் (வின்.); noise made with hands and feet, preparatory to a fight.

[மொல் → மொல்லு]

மொல்லுமொல்லெனல் *mollu-mollenal,* பெ.(n.) இரைச்சற் குறிப்பு (சங்.அக.); onom. expr. signifying noisy clamour.

[மொல்லு + மொல்லெனல்]

மொல்லை *mollai,* பெ.(n.) ஓரைக்கூட்டத்தில் முதலாவது மேழம் (மேடம்) (சூடா. உள். 9); aries of the zodiac.

[முல் → முல்லை = குத்தகை. முல்லைக்காரன் = குத்தகைக்காரன். முல்லை → மொல்லை = மேழம் (பருத்த செம்மறியாட்டுக் கடா), மேழவோரை (வே.க. 4, 27)]

மொல்லையிற்போடு-தல் *mollaiyir-pōdu-,* 19 செ.குன்றாவி. (v.t.) குடும்பப் பொதுச் செலவிற்குக் கொடுத்தல்; to pledge a property for common expenditure of a family.

[முல் → முல்லை = குத்தகை. மொல்லை + இல் + போடு-,]

மொலு *molu,* பெ.(n.) மொல்லு பார்க்க (யாழ்.அக.); see *mollu.*

[மொல்லு → மொலு]

மொலுமொலு-த்தல் *molu-molu-,*4 செ.கு.வி. (v.i.) 1. மொருமொரு-த்தல் 1 பார்க்க (சங்.அக.); see *morumoru-, 1.* 2. விடாது பேசுதல்; to chatter. 3. இரைதல்; to clamour.

[முல் → முல்லை = குத்தகை, முல்லை → மொல்லை = பருத்த செம்மறியாட்டுக்கடா. மொல் → மொலு. மொலு + மொலு-,]

மொலுமொலெனல் *molu-molenal,* பெ.(n.) 1. விடாது பேசற்குறிப்பு; chattering. 2. இரைச்சற் குறிப்பு; noisy clamour. 3. முணுமுணுத்தற் குறிப்பு; grumbling. 4. தினவெடுத்தற்குறிப்பு; itching sensation. *'சிரங்கு மொலுமொலென்று அரிக்கிறது'.* 5. சொறிதற் குறிப்பு (வின்.); scratching.

[மொல் → மொலு. மொலுமொலு + எனல்]

மொலுமொலுவெனல் *molu-molu-v-enal,* பெ.(n.) ஈக்கள் மொய்த்தற் குறிப்பு; onom. expr. signifying swamp of flies.

[மொலுமொலு + எனல்]

மொலோரெனல் *molōrenal,* பெ.(n.) சிறு மீன் கூட்டம் நீர் மட்டத்தில் துள்ளிவரும் ஒலிக்குறிப்பு; onom. expr. signifying noise produced by small fishes at upper part of tank, sea etc.

[மொலோர் + எனல்]

மொழச்சு—தல் *molaccu-,* 5 செ.குன்றாவி. (v.t.) மழித்தல் (கொச்சை); to shave.

[மொழு → மொழச்சு]

மொழி¹—தல் *moli-,* 4 செ.குன்றாவி. (v.t.) சொல்லுதல்; to say, speak. *"மனத்தொடு வாய்மை மொழியின்" (குறள், 295).*

[முள் → முளி → முழி → மொழி (வே.க.4,44). மொழிதல் சொற்றிருத்தமாகப் பேசுதல். (சொ.க.49)]

மொழி² *moli,* பெ.(n.) 1. மணிக்கட்டு, முழங்கால், கணைக்கால் முதலியவற்றின் பொருத்து; joint, as of wrist, knee, ankle, etc. *'மொழி பிசகி விட்டது' (உ.வ.).* 2. மரஞ் செடி கொடிகளின் கணு; joint where a twig branches off from the stem. *"மொழியு மினியீர்...... மதுரக் கழைகாள்" (அழகர்கல. 67).*

[முல் → முள் → முள்கு. முள்குதல் = முயங்குதல். முள் → முளி = உடல் மூட்டு, மரக்கணு, கணுக்கால். முழி → மொழி. (வே.க.4,44)]

மொழி³ *moli,* பெ.(n.) 1. சொல்; word. *"மறைமொழி தானே மந்திரமென்ப" (தொல். பொ. 481).* 2. கட்டுரை; saying, maxim. *"பழமொழி".* 3. பேசும் மொழி; language, speech. *"மொழி பெயர் தேஎத்த ராயினும்" (குறுந். 11).* 4. வாக்கு மூலம் (நாஞ்சி.), உறுதிமொழி; deposition, promise. *'மொழி தப்பினவன் வழி தப்பினவன்' (பழ.).* 5. பொருள்; meaning, sense. *"இனமொழி" (தொல். பொ. 480).*

கருத்து வெளிப்பாடே மொழி. ஒவ்வொரு மொழியின் அமைதியும் இலக்கணம், மரபு என இருவகைப்படும். ஒரு மொழியின் இலக்கணத்தையும் அதிலுள்ள நூல்களையும் எவரும் அம்மொழியை எழுதப்படிக்கத் தெரிந்தவுடன் தாமே கற்றுக்கொள்ளலாம். ஆனால் அம்மொழியின் மரபையும், அம்மொழியாரின் விதப்புக் கருத்துகளையும் தாமே அறிய முடியாது (மு.தா.1 : 67).

மொழி தோன்றிய வகை :

இயற்கை விளைவையே முற்றுஞ் சார்ந்திருந்த அநாகரிக மாந்தர், மணவுறவும் மகவுவளர்ப்பும் பற்றி நிலையற்ற குடும்ப அளவான கூட்டுறவு பூண்டு வாழ்ந்து வந்தனர். அவர் கூடி வாழ்ந்த போது ஒருவர்க்கொருவர் தத்தம் கருத்தைப் புலப்படுத்த வேண்டியதாயிற்று. அதற்குக் கண்சாடை, முகக்குறிப்பு, சைகை, நடிப்பு, உடலசைவு முதலிய செய்கைகளையும், உணர்வொலி (Emotional Sound), ஒப்பொலி (Imitative Sounds), குறியொலி (Symbolic-Sounds), வாய்ச்செய்கையொலி (Gestigulatory Sounds), குழவி வளர்ப்பொலி (Nursery-Sounds), சுட்டொலி (Deictic Sounds), ஆகிய அறுவகையொலிகளையும், இயற்கையாகவும் செயற்கையாகவும் ஆண்டு வந்தனர்.

செயற்கை விளைவை அறிந்துகொண்ட முந்தியல் மாந்தர், பயிர்த்தொழிலைச் செய்தற்கும் தற்காப்பிற்கும் தத்தம் பிள்ளைகளுடனும், பேரப்பிள்ளைகளுடனும், கொட்பேரப்பிள்ளைகளுடனும், கூட்டங்கூட்டமாக ஒவ்வோரிடத்தில் நிலைத்து வாழத் தொடங்கிய பின், நிலைத்த விரிவுபட்ட கூட்டுறவு ஏற்பட்டது. நாகரிகம் தோன்றி வளர்ந்தது. கருத்துக்கள் பல்கின. அவற்றைக் குறிக்கச் சொற்கள் வேண்டியிருந்தன. பழைய அறுவகை யொலிகளினின்றும் படிப்படியாய்ச் சொற்கள் பிறப்பிக்கப்பட்டன.

சொற்கள் முறையே,

(1) அசைநிலை (Monosyllabic Stage),

(2) புணர்நிலை (Compounding Stage),
(3) பகுசொன்னிலை (Inflexional Stage),
(4) கொளுவுநிலை (Agglutinative Stage),
என்னும் நால்வகை நிலைகளையடைந்து நிறைவடிவுற்றன.

கருத்துகள் மேன்மேலும் புதிது புதிதாய்த் தோன்றத் தோன்றச் சொற்களும் ஆக்கப்பட்டுக் கொண்டே வந்ததினால், மொழியானது வளர்ச்சி யடைந்து கொண்டேயிருந்தது. பிற்கால மொழியை நோக்க முற்கால மொழிநிலை குறைபாடுள்ள தேனும், ஒரு குறிப்பிட்ட காலமொழிநிலையைத் தனிப்பட நோக்கும்போது, அது அக்காலத்திற்கேற்ப நிறைவுள்ளதாகவே யிருக்கும்.

குறிஞ்சி நிலத்தைவிட முல்லை நிலத்திலும், முல்லை நிலத்தைவிட மருத நிலத்திலும், உழவு சிறப்பாய்ச் செய்யப்பட்டது. உழவிற்குத் தக்க ஊர்ப்பெருக்கமும், ஊர்ப் பெருக்கத்திற்குத் தக்க நாகரிகமும், நாகரிகத்திற்குத் தக்க மொழி வளர்ச்சியும் ஏற்பட்டன.

குறிஞ்சியினின்று மாந்தர் பிற நிலங்கட்குச் செல்லுமுன்னரே, மொழிக்கு அடிப்படையான சொற்களெல்லாம் தோன்றிவிட்டன. பிற நிலங்களில், வெவ்வேறு பொருட்களையும் வினைகளையுங் குறித்தற்கு, வெவ்வேறு சொற்தொகுதிகள் எழுந்தன. பண்டமாற்றினாலும் ஆட்சி விரிவினாலும் திணைமயக்கம் ஏற்பட்டதினால், நானில அல்லது ஐந்திணைச் சொற்றொகுதிகளுஞ் சேர்ந்து வளமுள்ள ஒரு பெருமொழி தோன்றிற்று. இங்ஙனம் குமரிக்கண்டத்தில் தோன்றிய மொழியே தமிழாகும்.

உலக முதற் பெருமொழியாக்கம் மிக மெல்ல நடைபெற்றிருக்குமாதலானும், அதன் பின்னிலை களினும் முன்னிலைகள் அமைதற்கு நீண்ட காலஞ் சென்றிருக்கு மாதலானும், நிமிர்ந்த குரங்கு மாந்தன் (p.e.) காலம் கி.மு.500,000 என்று மாந்தநூல் வல்லார் கூறியிருத்தலானும், தமிழ்மொழி குறிப்பொலி நிலையினின்று நால்வகைச் சொன்னிலையும் அடைதற்கு, ஏறத்தாழ ஓரிலக்கம் ஆண்டுகள் சென்றிருத்தல் வேண்டும். அதன் திருந்திய மொழிநிலை கி.மு.25,000 ஆண்டுகட்கு முன்னரே ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

தமிழ் முதல் தாய்மொழியென்பதற்குக் காரணங்கள்

(1) மாந்தன் பிறந்தகமாகிய குமரிக்கண்டத்தில் தமிழ் தோன்றியுள்ளமை.

(2) இதுபோதுள்ள மொழிகளுள் தமிழ் மிகப் பழைமையான தாயிருத்தல்.

(3) தமிழ் எளிய வொலிகளைக் கொண்டிருத்தல்.

(4) தமிழிற் சிறப்புப்பொருள் தருஞ் சொற்கள் பிற மொழிகளிற் பொதுப்பொருள் தருதல்.
எ-டு. செப்பு (தெ.), தா(இலத்தீன்).

(5) தமிழ் இயற்கையான சொல்வளர்ச்சி யுடைமை (செயற்கையான சொல்வளர்ச்சியின்மை).

(6) ஆரிய சேமிய மொழிச் சொற்கள் பலவற்றின் வேரைத் தமிழ் தன்னகத்துக் கொண்டிருத்தல்.

(7) பல மொழிகளின் மூவிடப் பதிற்பெயர்கள் தமிழ்ப் பெயர்களைப் பெரிதுஞ் சிறிதும் ஒத்திருத்தல்.

(8) தாய்தந்தையரைக் குறிக்கும் தமிழ் முறைப் பெயர்கள், ஏறத்தாழ எல்லா மொழிகளிலும் திரிந்தும் திரியாதும் வழங்கிவருதல்.

(9) தமிழ்ச்சொற்கள் வழங்காப் பெருமொழி உல கத்திலின்மை.

(10) ஒரு தனி மொழிக்குரிய தோற்ற வளர்ச்சி முறைகளைத் தமிழே தெரிவித்தல்.

(11) சில பல இலக்கண நெறிமுறைகள் தமிழுக்கும் பிற மொழிகட்கும் பொதுவாயிருத்தல்.

(12) பல மொழிகள் தமிழிலுள்ள ஒரு பொருட் பல சொற்களுள் ஒவ்வொன்றைத் தெரிந்து கொண்டிருத்தல்.
(எ-டு, இல் (தெலுங்கு), மனை (கன்னடம்), அகம் (கிரேக்கம்), குடி (பின்னியம்).

(13) பிறமொழிகட்குச் சிறப்பாகக் கூறப்படும் இயல்களின் மூலநிலைகள் தமிழிலிருத்தல். (எ-டு) ஆரிய மொழிகளின் அசையழுத்தமும் சித்திய மொழிகளின் உயிரிசைவு மாற்றமும் அமெரிக்க மொழிகளின் பல்தொகை நிலையும் போல்வன.

பெரும்பான் மொழிகள் தமிழை ஒவ்வாதிருத்தற்குக் காரணங்கள்

தமிழ் முதல் தாய்மொழியாயினும், பெரும்பான் மொழிகள் அதை ஒத்திருக்கவில்லை. அதற்குக் காரணங்களாவன:-

(1) குமரிக் கண்டத்தில் மொழிதோன்று முன்னமே, சில மாந்தர் கூட்டங்கள் வெவ்வேறு திசையிற் பிரிந்து சென்று, ஆங்காங்கு வெவ்வேறு முறையில் ஒவ்வொரு சிறு மொழி வளர்த்துக்கொண்டமை.

(2) தமிழின் நால்வகை நிலையிலும் மக்கள் குமரிக் கண்டத்திலிருந்து வெவ்வேறிடம் பிரிந்து சென்றமையும், அவர்கள் மொழிகள் பலவகையில் திரிந்து போனமையும்.

(3) குமரிக் கண்டத்திலிருந்து பிரிந்து சென்ற மக்கள், சென்ற தேயத்துச் சூழ்நிலைக்கேற்பப் புதுச் சொற்களை ஆக்கிக் கொண்டபின், இன்றியமையாத அடிப்படைச் சொற்கள் தவிர ஏனைய தமிழ்ச்சொற்களெல்லாம் வழக்கின்றி மறைந்து போனமை.

(4) ஏறத்தாழ ஐம்பான் சொல்லாலும் அறுபான் சொல்லாலும் தம் கருத்துக்களையெல்லாம் தெரிவிக்கும் அரை நாகரிக நாடோடிச் சிறு குல மாந்தர், அடிக்கடி தம் மொழியை அடியோடு மாற்றிக்கொண்டிருந்தமை.

(5) போராலும் வலக்கரத்தாலும் வெல்லப்பட்ட மக்கள், வென்ற மக்களின் மொழியை முற்றும் அல்லது பெரும்பாலும் மேற்கொண்டமை.

(6) மொழிகள் மேன்மேலுந் திரிந்துகொண்டே வந்தமை.

மொழிகள் மாந்தன் அமைப்பே

மொழிகள் என்றுமுள்ளவையென்றும், இறைவனால் படைக்கப்பட்டவை யென்றும், இயற்கையாய் அமைந்தவையென்றும்; சில மொழிகள் தேவமொழி யென்றும்; பல தவறான கருத்துகளை இன்றும் பல இந்தியர் கொண்டுள்ளனர்.

மொழிகளெல்லாம் படிப்படியாகவும் சிறிது சிறிதாகவும் மாந்தனால் வளர்க்கப்பெற்றவையே. அவற்றுள் ஒரு சில தனித்தனி யெழுந்த தனி மொழிகள்; ஏனைய இரண்டும் பலவும் கலந்த கலவை மொழிகள். உலகிலுள்ள மொழிகளெல்லாம் மக்கள் மொழிகளே.

மொழிகள் மாந்தன் அமைப்பே யென்பதற்குக் காரணங்களாவன:-

(1) மொழியில்லாத அநாகரிக மாந்தர் இன்றும் சில மலைகளிலும் காடுகளிலும் வாழ்ந்து வருதல்.

(2) மொழியுள்ள மக்களின் பிள்ளை களெல்லாம், தம் பெற்றோர் மொழியை, அவரிடத்தும் பிறரிடத்தும் சிறிது சிறிதாய்த் தம் பிள்ளைப் பருவத்திற் கற்றே பேசப்பழகுதல்.

குழவிப் பருவத்திலேயே மக்கட் கூட்டத்தினின்று பிரிக்கப்பட்டு, பேச்சுக் கற்கும் வாய்ப்பு சிறிதுமில்லாமல் வளர்க்கப்படும் எந்த ஆடவனும் பெண்டும், ஒரு மொழியும் பேசாது ஊமையாய்த் தானிருக்க முடியும், பிறவிச் செவிடர் எல்லாரும் ஊமையரா யிருத்தலை நோக்குக.

(3) மொழிகள், அவற்றைப் பேசும் மக்களின் நாகரிக அளவிற்கேற்ப வளர்ச்சியடைந்திருத்தல்.

(4) இருமொழியும் பல மொழியும் கலந்து பல கலவை மொழிகள் ஒரு சில நூற்றாண்டுகட்கு முன் புதிதாய்த் தோன்றியிருத்தல்.

(5) பல மொழிகள் வரவர வள்ர்ச்சியடைந்து வருவது வரலாற்றாலறியப்படல்.

(6) மொழிகள் பலவாயிருத்தல்.

இறைவன் படைப்பாகவாவது இயற்கை யமைப்பாகவாவது மொழியிருந்திருப்பின், ஒரேயினமான உலக மக்கட்கெல்லாம் ஒரே மொழியே யிருந்திருத்தல் வேண்டும்.

(7) கற்கப்படாத மொழிகள் ஒருவனுக்கு விளங்காமை.

மொழிகள் இறைவன் படைப்பாகவாவது

இயற்கை யமைப்பாகவாவது இருந்திருப்பின், எல்லாமொழியும் எல்லார்க்கும் இயல்பாகவே தெரிந்திருத்தல் வேண்டும்.

(8) இனத்தொடர்புள்ள மக்களின் மொழிகள் சொல்லிலும் இலக்கண நெறிமுறையிலும் பெரும்பாலும் ஒத்தும், அத் தொடர்பில்லா மக்களின் மொழிகள் அவ் விரண்டிலும் பெரும்பாலும் ஒவ்வாதும் இருத்தல்.

(9) இற்றைஞான்றும், புதுக்கருத்துகளைக் குறிக்கும் புதுச்சொற்கள், ஒவ்வொரு மொழியிலும் தோன்றிக் கொண்டும் சேர்க்கப்பட்டுக் கொண்டும் வருதல்.

கருத்துகளைக் குறிக்கும் ஒலிக்குறிகளே சொற்கள். கருத்துகள் வரவரப் பல்கி வருகின்றன, அநாகரிகக் காலத்தில் கருத்துகள் சில்கி யிருந்திருக்குமாதலின், அவற்றைக் குறிக்கும் சொற்களும் சில்கியே இருந்திருத்தல் வேண்டும்.

மொழிவளர்ச்சி ஒரு திரிந்தமைவு (evolution)

மக்கள் கற்றிருக்கும் ஒவ்வொரு கலையும், அதன் துவக்க நிலையிலிருந்து மெல்ல மெல்லத்திரிந்து வளர்ந்து நீண்ட காலத்திற்குப் பின் நிறைவடைந்ததேயன்றி, ஒரேயடியாய்த் தோன்றியதன்று, இதனை ஈரெடுத்துக் காட்டுகளால் விளக்குவாம்.

இதுபோது மக்கள் பயிலும் கலைகளுள் ஆசிரியப் பயிற்சியும் ஒன்றாம். ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளும் கல்லூரிகளும் தோன்றுமுன், ஆசிரியத் தொழிலிற்புகும் ஒவ்வொருவரும் தத்தம் ஆசிரியர் தமக்குக் கற்பித்த முறையில் ஒரு கூற்றையன்றி வேறொன்றும் அறியாதவராயிருந்தனர். அதனால், அவரது ஊழிய முற்பகுதியில் மாணவருளங்கொளக் கற்பிக்கும் ஆற்றலற்றவராயிருந்தனர். தற்காலக் கற்பிப்பு முறையில் ஒரு பகுதியை அதாவது நுவற்சி நெறிமுறைகள் சிலவற்றைக் கண்டறிதற்கும், அவர்க்கு நீண்டகாலஞ் சென்றது. ஆகவே, அவருடைய பிற்கால மாணவரே அவர் கற்பிப்பால் பெரும்பயன் பெறமுடிந்தது. ஆயின், ஆசிரியப் பயிற்சி ஏற்பட்ட பின்போ, ஆசிரிய ஊழியத்தை மேற்கொள்ள விரும்பும் ஒவ்வொரு மாணவரும், அவ்வூழியத்தைத் தொடங்குமுன்னரே, நுவற்சி நெறிமுறைகளெல்லாவற்றையும், ஆசிரியப் பயிற்சி வாயிலாய் ஒருங்கே அறிந்து கொள்கின்றனர். அந்நெறிமுறைகளெல்லாம் ஒருவராலேயே அல்லது ஒரே தலைமுறையில் கண்டுபிடிக்கப்பட்டவையல்ல. பல நூற்றாண்டுகளாக, பற்பல நுண்மாண் நுழைபுல ஆசிரியரால், ஒவ்வொன்றாகக் கண்டுபிடிக்கப்பட்ட நுவற்சிநெறிமுறைகளின் தொகுதியே இற்றை ஆசிரியப் பயிற்சியாகும்.

முதற்கால மாந்தர் உணவுபொருள்களைப் பச்சையாகவே உண்டுவந்தனர். அதன்பின் சுட்டுண்ணக் கற்றனர். அதன்பின் முறையே, அவித்துண்ணவும், உப்பிட்டவித் துண்ணவும், மசாலையென்னும் கறிச்சரக்குச் சேர்த்துக் குழம்பு கூட்டு சாறு முதலியன காய்ச்சவும், வறுவல், பொரியல், சுண்டல், புழுக்கல் முதலிய முறைகளைக் கையாளவும், அவற்றைப் பலகாரஞ் செய்யவும், நீண்ட நாட் பலகாரஞ் செய்யவும் கற்றனர். இவற்றிக்குச் சென்றகாலம் எத்துணையோ ஊழிகளாகும். ஆயின், இன்றோ, பன்னீடூழிகளாகப் படிப்படியாய் வளர்ந்துவந்த மடைக் கலையை, ஒருவர் சின்னாளில் முற்றும் பயின்று கொள்கின்றார்.

இங்ஙனமே, மாந்தன் தோன்றியதிலிருந்து கழி பலவூழிகளாக வளர்க்கப்பட்ட கருத்தறிவிப்புக் கலையாகிய மொழியும், இன்று ஒவ்வொருவராலும் பெற்றோர் மற்றோர் வாயிலாகப் பிள்ளைப் பருவத்திற் கற்கப்படுகின்றது. ஆயின், இற்றை மொழிநிலை என்றும் இருந்திலது. முதலாவது, விலங்கும் பறவையும் போலப் பல்வேறு குறிப்பொலிகளாலேயே மாந்தர் தம் கருத்தைத் தெரிவித்து வந்தனர். பின்பு, அக்குறிப்பொலிகள் சொன்னிலை யெய்தின. அச்சொற்கள், முற்கூறியவாறு, முறையே அசைநிலை, புணர்நிலை, பகுசொன்னிலை, கொளுவுநிலை ஆகிய நால்வகை நிலைகளை அடைந்தன. அதன்பின், தனிச்சொல்லும் (Simple word), கூட்டுச்சொல்லும் (Compound word) ஆன சொற்களின் பெருக்கம் ஏற்பட்டு, மொழியானது

இற்றை நிலையடைந்தது. அங்குக் கூறப்பட்ட ஒவ்வொரு நிலைக்கும் ஒவ்வொரு பேரூழி சென்றதென்பதை அறிதல் வேண்டும்.

கி.மு. பத்தாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தலைச் சங்கத்தமிழ் முத்தமிழாயிருந்ததனால், அம் முத்தமிழும் ஒன்று சேரற்கும், அவற்றுக்கு மூலமான இயற்றமிழின் இலக்கணம் அமைதற்கும், அவ்விலக்கணத்திற்கு மூலமான இலக்கியம் எழுதற்கும், அவ்விலக்கியத்தின் சிறந்த வடிவான செய்யுள் தோன்றற்கும், அச்செய்யுட்கு மூலமான உரைநடை அல்லது மொழி தோன்றற்கும், எத்துணையோ வூழிகள் சென்றிருத்தல் வேண்டும்

தமிழ் அல்லது தமிழன் பிறந்தகம் குமரிக்கண்டமே என்பதற்குக் காரணங்கள்

(1) தமிழ் தொன்றுதொட்டுத் தென்னாட்டில் வழங்கிவரல்.

(2) தமிழ்நாட்டில் தெற்கே செல்லச் செல்லத் தமிழ் தூய்மையாகவும், வடக்கே செல்லச் செல்ல அது திரிந்தும் இருத்தல்.

(3) தமிழ்நாட்டையடுத்து வடக்கும் மேற்கும் தமிழின் திரிபான திராவிடமொழிகள் வழங்கல்.

(4) இந்தியாவில், வடக்கே செல்லச் செல்லத் திரவிட மொழிகள் திரிதல்.

(5) வட இந்தியாவில் திரவிட மொழிகளும் ஆரிய மொழிகளும் வழங்கல்.

(6) இந்தியாவிற்குப் புறம்பாகப் பெலுச்சித்தானத்திலன்றி வேறொரிடத்தும் திரவிடமொழி வழங்காமை.

(7) தமிழிலக்கிய மெல்லாம் தென்னாட்டிலேயே இயற்றப்பட்டிருத்தல்.

(8) வணிகத்தால் பிறநாடுகளினின்று வந்த கருப்பொருள்களன்றி, பண்டையிலக்கியத்திற் கூறப்பட்டுள்ள முதல் கருவுரியாகிய மூவகைப் பொருள்களும், தென்னாட்டிற்கே யுரியவை யாயிருத்தல்.

(9) பழம் பாண்டிநாடு குமரிக்கண்டப் பகுதியாகக் கூறப்பட்டிருத்தல்.

(10) தமிழ் ஒலிமுறைமை தென்னாட்டிற்கன்றி வேறொரு நாட்டிற்கும் ஏலாமை (மு.தா.முன். 21-31).

மொழிக்கட்டு *moḻi-k-kaṭṭu,* பெ.(n.) உடற் பொருத்திற் காணுந் திமிர் (மருத்.); stiffness of joints.

[மொழி + கட்டு]

மொழிச்சாரியை *moḻi-c-cāriyai,* பெ.(n.) இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வெழுத்துகளால் ஆகிய சாரியை (நன். 252, மயிலை.); (Gram.) particle, augment consisting of two or more letters.

[மொழி + சாரியை]

மொழிதடுமாறு-தல் *moḻi-taḍumāṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. திக்கிப் பேசுதல் (யாழ்.அக.); to stammer. 2. வாய் குழறுதல்; to err, hesitate or stumble in reading, reciting, etc.,

[மொழி + தடுமாறு-,]

மொழிதவறு-தல் *moḻi-tavaṟu-,* 5 செ.கு.வி. (v.i.) மொழி பிசகு-தல் பார்க்க; see *moḻi-piśagu-,* *'மொழி தவறாதவன் வழி தவறாதவன்' (பழ.).*

[மொழி + தவறு-,]

மொழிந்ததுமொழிவு *moḻindadu-moḻivu,* பெ.(n.) முன்மொழிந்ததனையே பயனின்றிப் பின்னும் மொழிவதாகிய நூற்குற்றம் (தண்டி. 102); tautology, a defect in literary composition, one of ten *nūṟ-kuṟṟam.*

மறுவ. கூறியது கூறல்.

[மொழிந்தது + மொழிவு]

மொழிநூல் *moḻi-nūl,* பெ.(n.) மொழி வரலாற்றுக் கூறும் நூல் (பு.வ.); philology. *'மொழிநூலை உலகில் தோற்றுவித்தவர் குமரி நாட்டுத் தமிழிலக்கண நூலாரே என்பார் பாவாணர்'.*

[மொழி + நூல்]

மொழிநூல்

மொழிநூலாவது சொற்கள், சொல்லாக்க முறைகள், இலக்கண அமைதி முதலியனபற்றிப் பல மொழிகட்கிடையிலுள்ள தொடர்பை ஆராயுங் கலை.

மொழி நூல் முதலாவது கிரேக்கு. இலத்தீன் என்னும் மொழிகளைக் கற்குங் கல்வியாக, 18 ஆம் நூற்றாண்டில் மேனாடுகளில் தோன்றிற்று. பின்பு, ஆங்கிலேயரும் விடையூழியரும் (Missionaries) இந்தியாவிற்கு வந்து, சமற்கிருதத்திற்கும் கிரேக்க லத்தீன் மொழிகட்குமுள்ள நெருக்கத்தைக் கண்டுபிடித்த பின், ஐரோப்பாவில் ஆரிய மொழிகளைப் பற்றிச் சிறப்பாராய்ச்சி எழுந்தது. ஆரிய மொழிகளை யாராய்ந்தவர்களுள் கிரீம் (Grimm), வெர்ணெர் (Verner) என்ற இருவர் தலைசிறந்தவர். உலகத்தின் பல இடங்களுக்குச் சென்ற விடையூழியரும் வழிப்போக்கரும் அவ்வவ்விடத்து மொழிகளைக் கற்று, மேலை மொழிகளில் அவற்றின் இலக்கணங்களை வரைந்து வெளியிட்டதுமன்றி, இனமொழிகளை யெல்லாம் ஒப்பிட்டுப் பல குடும்பங் களாகவும் வகுத்துக் காட்டினர். ஒப்பியன் மொழி நூல்கலையே விடையூழியராலும் வழிப்போக்கராலும் தான் உருவாயிற்று என்று கூறினும் மிகையாகாது. பிற கலை யாராய்ச்சியாளரும் மொழிநூலுக்கு உதவியிருக்கின்றனர்.

பல நாட்டு மொழிகள் மேனாட்டு மொழிகளில் வரையப்பட்ட பின், மாக்கசு முல்லர் என்ற மாபெரும் புலவர், சென்ற நூற்றாண்டில், தம் வாழ்நாளை யெல்லாம் மொழிநூற் கல்விக்கே ஒப்புக்கொடுத்து, உலக மொழிகளிற் பெரும்பாலானவற்றை ஆராய்ந்து, தம் நுண்மாண் நுழைபுலத்தால் ஒப்பியன் மொழி நூலை உருவாக்கினார்.

மாக்கசு முல்லர் திராவிட மொழிகளைச் சரியாய் ஆராயாததாலும், அவற்றை வடமொழியின் கிளைகள் என்று தவறாக எண்ணியதாலும், திராவிடத்தின் உண்மையான இயல்புகளைக் கூறமுடியவில்லை. திராவிடம் வடமொழிச் சார்பற்றதென்றும், உலக முதன்மொழிக்கு மிக நெருங்கியதென்றும், வடசொல்லென மயங்கும் பல சொற்கள் தென்சொற்களேயென்றும், வட மொழியில் பல தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளன வென்றும், முதன்முதல் எடுத்துக்காட்டி, மொழிநூற் சான்றுகளால் நிறுவியவர் கால்டுவெல் (Caldwell) கண்காணிரே. திராவிட மொழிகள் மொத்தம் பன்னிரண்டென்பதும். அவற்றுள் ஆறு திருந்தினவும், ஆறு திருந்தாதனவுமாகும் என்பதும், பெலுச்சித்தானத்திலுள்ள பிராகுவி திராவிட மொழியேயென்பதம், இவருடைய கண்டுபிடிப்புகளே. திராவிடம் வடமொழிச் சார்பற்றது, வடமொழியில் பல திராவிடச் சொற்களுள்ளன என்னுங் கொள்கையில், இவருடன் ஒன்றுபட்டவர், இவர் தமிழைச் சிறப்பாயாராய்ந்ததுபோன்றே மலையாள மொழியைச் சிறப்பாயாராய்ந்தவர் டாக்டர் குண்டட் (Gundert) ஆவர். இவ் விருவர்க்கும் திராவிட வுலகம், விதப்பாய்த் தமிழுலகம் பட்டுள்ள கடன் மாரிக்குப் பட்டுள்ளதேயெனினும் பொருந்தும்.

கால்டுவெல், மாக்கசு முல்லர் என்ற இருவர் ஆராய்ச்சிகளே இந்நூலுக்கு முதற்காரணமாகும்.

மொழிநூற்கலைக்கு ஆங்கிலத்தில் முதலிலிருந்து வழங்கி வரும் பெயர்கள் 'Philology' (Gk. - L. philos, desire; logos, discourse), 'Glottology' (Gk, L glotta, tongue; logos, discourse) என்பன. இவற்றுள் முன்னையதே பெருவழக்கு. ஆனால், மாக்கசு முல்லர் 'Science of Language' என்று தாம் இட்ட பெயரையே சிறப்பாகக் கொண்டனர்.

மொழிநூலுக்கு ஆங்கிலத்தில் Linguistics, Linguistic Science என்றும் பெயருண்டு.

'Philology' என்னும் பெயர் விரும்பிக் கற்கப்படுவது என்னும் பொருளது. கிரேக்கும் இலத்தீனும், மேனாட்டாரால் இலக்கிய மொழிகளென விரும்பிக் கற்கப்பட்டதினால், இப்பெயர் தோன்றிற்று. தமிழில், முதன்முதல் தோன்றிய மொழிநூற் பனுவல், மாகறல் கார்த்திகேய முதலியார் 1913 ஆம் ஆண்டு வெளியிட்ட 'மொழிநூல்' ஆகும். 'மொழிநூல்' என்னும் குறியீடும் அவரதே. அதன் பின்னது டாக்டர் சுப்பிரமணிய சாத்திரியார் அவர்கள் எழுதி 1936–ல் வெளியிட்ட 'தமிழ் மொழிநூல்' ஆகும்.

அதன்பின்னது, கலைத்திறவோரும் (M.A.) சட்டத் திறவோரு (M.L.)மான கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் எழுதி, 1939ஆம் ஆண்டில் வெளிவந்த 'மொழிநூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும்' என்பதாகும்.
(மு.தா.1.82-84).

மொழிப்பற்றாளர் *moḻi-p-paṟṟāḷar,* பெ.(n.) தாய்மொழியின் மேல் அக்கறை கொண்டவர்; language zealists. *'தமிழின் தூய்மைக்குத் தமிழ் மொழிப் பற்றாளரின் பங்கு பெரிது' (உ.வ.).*

[மொழி + பற்றாளர்]

மொழிப்பிசகு[1] *moḻi-p-pišagu,* பெ.(n.) சொல் மாறுகை (வாக்குத்தவறுகை); failure to keep one's word.

[மொழி + பிசகு]

மொழிப்பிசகு[2] *moḻi-p-pišagu,* பெ.(n.) உடற் பொருத்து இடம் விட்டு விலகுகை; dislocation of joints.

[மொழிபிசகு → மொழிப்பிசடு]

மொழிப்பொருள் *moḻi-p-poruḷ,* பெ.(n.) 1. சொற்கு ஏற்பட்ட பொருள்; significance or meaning of a word. *"மொழிப் பொருட் காரணம்" (தொல். சொல். 394).* 2. நிமித்தச் சொல்; word or utterance foreboding good or ill. *"நிமித்த மொழிப்பொரு டெய்வம்" (தொல். பொ. 36).* 3. மறைமொழி; mantra. *"மொழிப் பொருட் டெய்வம் வழித்துணை யாகென" (சிலப். 10, 100).*

[மொழி + பொருள்]

மொழிபிசகு[1]-தல் *moḻi-pišagu-,* 5 செ.கு.வி. (v.i.) வாக்குத் தவறுதல்; to fail in keeping one's word.

[மொழி + பிசகு-,]

மொழிபிசகு[2]-தல் *moḻi-pišagu-,* 5 செ.கு.வி. (v.i.) உடற்பொருத்து இடம் விட்டு விலகுதல்; to suffer dislocation in joints.

[மொழி + பிசகு-,]

மொழிபிறழ்[1]-தல் *moḻi-piṟaḻ-,* 3 செ.கு.வி. (v.i.) மொழி பிசகு[1]-தல் பார்க்க; see *moḻi-pišagu[1]-,*

[மொழி + பிறழ்-,]

மொழிபிறழ்[2]-தல் *moḻi-piṟaḻ-,* 3 செ.கு.வி. (v.i.) மொழிபிசகு[2]-தல் பார்க்க; see *moḻi-pišagu[2]-,*

[மொழி + பிறழ்-,]

மொழிபுணர்இயல்பு *moḻi-puṇar-iyalbu,* பெ.(n.) பொருள்கோள்; modes of construing verses.

[மொழிபுணர் + இயல்பு]

சொற்றொடரில் பொருள் நிலைக்கு ஏற்றபடி சொற்கள் சேரும் முறைமையினைத் தொல்காப்பியம் மொழி புணர் இயல்பு என்று குறிப்பிடுகிறது. இதனையே பிற்கால இலக்கணப் புலவர் யாற்று நீர், மொழி மாற்று, நிரனிறை, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறியாப்பு, கொண்டு கூட்டு, அடிமறி மாற்று என எண்வகையாகச் செய்யுட்குப் பொருள் கொள்ளும் முறையினைக் குறிப்பிடும் பொருள் கோள் என்று குறிக்கின்றனர்.

மொழிபெயர்-த்தல் *moḻi-peyar-,* 4 செ.குன்றாவி. (v.t.) நூல் முதலியவற்றை வேறு மொழியில் மொழிமாற்றம் செய்தல்; to interpret, translate. *"மொழிபெயர்த் ததர்ப்பட யாத்தல்" (தொல். பொ. 652).*

[மொழி + பெயர்-,]

மொழிபெயர்தேசம் *moḻipeyar-tēšam,* பெ.(n.) மொழிபெயர்தேம் பார்க்க; see *moḻi-peyar-tēm.*

[மொழிபெயர் + தேசம்]

மொழிபெயர்தேம் *moḻi-peyar-tēm,* பெ.(n.) வேற்றுமொழி வழங்கும் நாடு; foreign country, as the place where the language is different. *"மொழிபெயர்தே எத்தராயினும்" (குறுந். 11).*

[மொழி + பெயர் + தேம். தேசம் → தேம்]

மொழிபெயர்தேயம் *moḻipeyar-tēyam,* பெ.(n.) மொழிபெயர்தேம் பார்க்க; see *moḻi-peyar-tēm.*

[மொழிபெயர் + தேயம்]

மொழிபெயர்ப்பு *moḻi-peyarppu,* பெ.(n.) மொழிமாற்றம் செய்தல் (நன். 50); translation; interpretation in another language.

[மொழி + பெயர்ப்பு. பெயர் → பெயர்ப்பு. 'பு' தொ.பெ.ஈறு]

தொல்காப்பியர் நூல்களை முதல்நூல், வழிநூல் என இருவகைப்படுத்தி வழிநூல் 1. தொகுத்தல், 2. விரித்தல், 3. தொகைவிரி, 4. மொழிபெயர்ப்பு என நான்கு வகைப்படும் என்பர். வழிநூல் முறையினை நன்னூலார் யாப்பு என்ற சொல்லால் குறிப்பார். நன்னூலார் கோட்பாட்டின்படி நூல்யாப்பு நான்கு வகைப்படும். தொல்காப்பியர் கூறிய வழிநூல்வகை நான்கினையும் நன்னூலார் நூல்யாப்பு என்ற சொல்லால் குறித்துள்ளார்.

மொழிமாற்று *moḻi-māṟṟu,* பெ.(n.) பொருள் கோளெட்டனுள் ஏற்ற பொருளுக்கு இயையுமாறு மொழிகளை மாற்றிப் பொருள் கொள்ளும் முறை (நன். 413); (pros.) mode of contruing a verse in which the words have to be transposed for the ascertainment of its proper meaning, one of eight *poruḷ-kōḷ* (q.v.).

[மொழி + மாற்று. மாறு → மாற்று. செய்யுளில் சொற்களை மாற்றிப் பொருள் செய்ய வேண்டிய நிலையில் சொற்கள் புணர்க்கப்பட்டிருப்பது மொழிமாற்று. எ-டு. சுரை யாழ அம்மி மிதப்ப.]

மொழிமாற்றுப்பொருள்கோல் *moḻimāṟṟu-p-poruḷkōḷ,* பெ.(n.) மொழி மாற்று பார்க்க; see *moḻi-māṟṟu.*

[மொழிமாற்று + பொருள்கோள்]

மொழிமாறாவோலை *moḻi-māṟā-vōlai,* பெ.(n.) மாற்றுங் கருத்தில்லாத கட்டுப்பாடு உடைய ஆவணம்; (Legal.) deed whose terms cannot be revoked.

[மொழி + மாறு + ஆ + ஓலை. 'ஆ' எ.ம. இடைநிலை]

மொழிமிரட்டி *moḻi-miraṭṭi,* பெ.(n.) ஒருவகைப்பூடு; a herb.

[மொழி + மிரட்டி]

மொழிமுதலெழுத்துகள் *moḻimudal-eḻuttukaḷ,* பெ.(n.) சொல்லின் முதலில் வரும் எழுத்துகள்; initial letters.

[மொழிமுதல் + எழுத்துகள். மொழி = சொல்]

உயிரெழுத்து பன்னிரண்டும் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ ஆகிய ஒன்பது மெய்யெழுத்துகளுமாகி இருபத்தொன்று எழுத்துகள் மொழிமுதல் எழுத்துகள். நன்னூலார் இங் ஙனம், எங் ஙனம் முதலாய சொற்களை மனத்திற்கொண்டு ஙகரமும் மொழி முதலில் வரும் என்பார்.

மொழிமுறித்தான்காய்ச்சல் *moḻi-muṟittāṉ-kāyccal,* பெ.(n.) முடக்குக் காய்ச்சல்; dengue.

[மொழி + முறித்தான் + காய்ச்சல். காய் → காய்ச்சல். 'சல்' தொ.பெ.ஈறு.]

மொழிமை *moḻimai,* பெ.(n.) உண்மை, ஒழுக்கம் போன்றன பற்றி நன்கு அறியப்பட்ட சுருக்கமான கூற்று (பிங்.); proverb.

மறுவ. பழமொழி, சொலவடை, முதுமொழி.

[மொழி → மொழிமை. 'மை' ப.பெ.ஈறு]

மொழியன் *moḻiyaṉ,* பெ.(n.) பெரிய பேன் (யாழ்.அக.); large louse.

[முழு → முழுமை = பருமை. முழா → மிழா = பருத்த ஆண்மான். முழா → முடா → மிடா = பெரு மண்பானை. முழு → மொழு → மொழுக்கு → மொழுக்கன் = தடித்தவன். மொழு → மொழியன் = பெரும் பேன் (வே.க. 4, 46, 47)]

மொழியாக்கம் *moḻi-y-ākkam,* பெ.(n.) 1. மொழிபெயர்ப்பு பார்க்க; see *moḻi-peyarppu.* 2. ஒரு மொழியில் உள்ள இலக்கியம் முதலியவற்றை இன்னொரு மொழியில் அதன் பண்பாடு நாகரிகத்தை யொட்டி மாற்றி ஆக்கம் செய்தல்; transcreation.

[மொழி + ஆக்கம். ஆகு (த.வி.) – ஆக்கு (பி.வி.) → ஆக்கம்]

மொழியிடையெழுத்து *moḻi-y-iḍai-eḻuttu,* பெ.(n.) சொல்லின் நடுவில் வேற்றுநிலை மெய்ம்மயக்காகவும் உடனிலை மெய்ம் மயக்காகவும் வரக்கூடிய எழுத்துகள் (வின்.); (Gram.) letters capable of succeeding a consonant in the middle of a word.

[மொழி + இடை + எழுத்து]

மொழியியல் *moḻi-yiyal,* பெ.(n.) மொழியை ஆராயும் அறிவியற் புலம்; linguistics. *'சென்ற நூற்றாண்டில் மொழியியல் வியக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டது' (உ.வ.).*

[மொழி + இயல்]

வண்ணனை மொழியியல், ஒப்பீட்டு மொழியியல், வரலாற்று மொழியியல் என்று பகுத்துக் கொண்டு மொழியியல் மொழிகளைப் பாகுபடுத்தியும் ஒப்பிட்டும் ஆராய்கிறது. இத்துறை பிறதுறைகளுடன் சேர்ந்து கொண்டு குமுகாய மொழியியல், உளவியல் மொழியியல் என்றாற்போன்று நல்ல ஆய்வுப் பரப்பினைக் கொண்டுள்ளது.

மொழியிறுதி *moḻi-y-iṟudi,* பெ.(n.) மொழியீற்றெழுத்து பார்க்க (வின்.); see *moḻi-y-īṟṟeḻuttu.*

[மொழி + இறுதி]

மொழியீற்றெழுத்து *moḻi-y-īṟṟeḻuttu,* பெ.(n.) சொல்லின் முடிவில் வரும் எழுத்து (வின்.); (Gram.) final letter of a word.

[மொழி + ஈற்று + எழுத்து. ஈறு → ஈற்று. எழு → எழுது → எழுத்து]

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பதினொரு உயிரெழுத்துகளும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் ஆகிய பதினொரு மெய்யெழுத்துகளும் மொழியிறுதியில் வரும்.

மொழியீறு *moḻi-y-īṟu,* பெ.(n.) மொழி யீற்றெழுத்து பார்க்க (வின்.); see *moḻi-y-īṟṟeḻuttu.*

[மொழி + ஈறு]

மொழியொலிக்குறிப்பு *moḻi-y-oli-k-kuṟippu,* பெ.(n.) சொல்லின் அழுத்தமான பலுக்கம் (வின்.); tone, emphasis.

[மொழி + ஒலி + குறிப்பு. குறி → குறிப்பு]

மொழியோசை *moḻi-y-ōšai,* பெ.(n.) பலுக்கல் (உச்சரிப்பு) (வின்.); pronunciation.

[மொழி + ஓசை]

மொழிவழக்கு *moḻi-vaḻakku,* பெ.(n.) மொழியில் காணப்படும் வழக்குகள்; dialects.

[மொழி + வழக்கு]

ஒரு பெரு மொழியில் பல வழக்குகள் (Dialect) உண்டு. அவற்றை மொழிவழக்கெனலாம். அவை, இடவழக்கு (Local Dialect), திசைவழக்கு (Provincial Dialect), குலவழக்கு (Class Dialect), திணைவழக்கு (Regional Dialect) என நால்வகைப்படும். ஒரு மொழி நீடித்து வழங்குமாயின், முற்கால (Old) வழக்கு, இடைக்கால (Middle) வழக்கு, இக்கால (Modern) வழக்கு என முந்நிலைகளை யடைந்திருக்கும்.

ஒரு மொழி உயர்ந்ததும் தாழ்ந்ததுமான இருவழக்குகளை யுடையதாயிருப்பின், அவை முறையே உயர் (High), தாழ் (Low) என்னும் அடைகள்பெற்று, அம்மொழிப் பெயராற் குறிக்கப்படும் (கா: உயர்ஜெர்மன் – High German, தாழ் ஜெர்மன் – Low German). தமிழில் இவை செந்தமிழ் கொடுந்தமிழ் என வழங்கும்.

ஒரு மொழியில், எழுத்தில் வழங்கும் வழக்கு நூல்வழக்கு (Literary Dialect) என்றும், பேச்சில் வழங்கும் வழக்கு உலக வழக்கு (Colloquial Dialect) என்றும் கூறப்படும். (மு.தா.1:81)

மொழுக்கட்டை *moḻu-k-kaṭṭai,* பெ.(n.) தடித்த–வன்–வள்; stout man or woman.

[முழு → மொழு → மொழுக்கு → மொழுக்கன் = தடித்தவன். மொழுக்கு → மொழுக்கட்டை. (வே.க.4,47)]

மொழுக்கம்மை *moḻu-k-kammai,* பெ.(n.) ஒருவகை அம்மை நோய்; a kind of disease.

[மொழுக்கு + அம்மை]

மொழுக்கன்[1] *moḻu-k-kaṉ,* பெ.(n.) வேலைப்பாடில்லாத அணிகலன் (இ.வ.); plain jewel without elaborate or fine engraving of filigree work. 2. எளிய (இயல்பு) வேலை (யாழ்.அக.); plain workmanship.

[முள் → (மொள்) → மொழுக்கு → மொழுக்கன். மழுங்கு → மழுங்கன் = வேலைப்பாடில்லாத அணி (மு.தா.101).]

மொழுக்கன்[2] *moḻu-k-kaṉ,* பெ.(n.) தடித்தவன்; stout man.

[முழா → முடா → மிடா = பெருமண்பானை. மிடாத்தவளை = பெருந்தவளை. முழு → மொழு → மொழுக்கு → மொழுக்கன். (வே.க.4,47)]

மொழுக்கன்[3] *moḻu-k-kaṉ,* பெ.(n.) காய்ச்சல் கண்டு உடம்பு வீங்கி வலியுடன் வரும் ஒருவகை அம்மைநோய்; a kind of pox attended with moderate fever and pain all over the body with swelling.

மொழுக்கன்பிரண்டை *moḻukkaṉ-piraṇḍai,* பெ.(n.) ஒருவகைப் பிரண்டை; a variety of vitis guadrangularis.

[மொழுக்கன் + பிரண்டை]

மொழுக்கன்மோதிரம் *moḻukkaṉ-mōdiram,* பெ.(n.) பூவேலை முதலியன செய்யப்படாத விரலணி (வின்.); plain ring.

[மொழுக்கன் + மோதிரம்]

மொழுக்கனோலை *mo*l*ukkan-ōlai,* பெ.(n.) கல் வைத்து இழைக்காது தங்கத்திற் செய்த எளிய காதோலையணி (வின்.); woman's plain ear-ring made of gold and not set with gems.

[மொழுக்கன் + ஓலை]

மொழுக்கு–தல் *mo*l*ukku-,* 5. செ.குன்றாவி. (v.t.) 1. மொழுக்குமரமடி–த்தல் பார்க்க (நாஞ்.); see *molukku-maram-adi-,* 2. மெழுகு–தல் பார்க்க; see *melugu-,* *'தரையைச் சாணமிட்டு மொழுக்கு' (இ.வ.)*

[முள் → (மொள்) → மொழு → மொழுக்கு]

மொழுக்குமரம் *molukku-maram,* பெ.(n.) உழுத கழனியைச் சமப்படுத்தும் பலகை; board or roller for smoothing land newly ploughed, harrow, drag.

மறுவ. பரம்பு.

[மொழுக்கு + மரம்]



மொழுக்குமரம்

மொழுக்குமரமடி–த்தல் *molukku-maramadi-,* 4 செ.குன்றாவி. (v.t.) உழுத பின் விதைத்தற்காகப் பரம்புப் பலகையால் நிலத்தைச் சமன் செய்தல்; to level ploughed land by a board or drag, for sowing.

மறுவ. பரம்படித்தல்.

[மொழுக்கு + மரமடி–,]

மொழுக்கெனல் *molu-k-kenal,* பெ.(n.) 1. சடக்கென ஒடிகைக் குறிப்பு (சங்.அக.); breaking suddenly, as a dry branch. 2. எண்ணெய்ப் பசையாயிருத்தற் குறிப்பு; being greasy.

[மொழுக்கு + எனல்]

மொழுக்கை *molukkai,* பெ.(n.) கூர் மழுங்கிய தன்மை; boldness.

[முழு → மொழு → மொழுக்கை (மு.தா.105)]

மொழுங்கன் *molungan,* பெ.(n.) மொழுக்கன் பார்க்க (சங்.அக.); see *moluk-kan.*

[முள் → (மொள்) → மொழு → மொழுங்கு → மொழுங்கன்]

மொழுப்பு¹–தல் *moluppu-,* 5 செ.குன்றாவி. (v.t.) காரியத்தை மழுப்புதல் (வின்.); to protract, as a business; to delay, put off on frivolous pretences; to evade.

[முழு → மொழு → மொழுக்கை = மொட்டையான தன்மை. மொழு → மொழுப்பு = எதற்கும் பிடிப்புத் தராமல் வழுக்குதல், மழுப்புதல். மழுப்பு → மொழுப்பு என்றலுமாம்.]

மொழுப்பு² *moluppu,* பெ.(n.) 1. கட்டு; tie, knot. *“சடைமொழுப் பவிழ்ந்து” (திருவிசைப். கருவூர். 8, 1).* 2. சோலை செறிந்த தேயம்; locality abounding in garden. *“சோலைசூழ் மொழுப்பில்” (திருவிசை. கருவூர். 1, 5).*

க. மொடுபு.

[முழு → மொழு → மொழுக்கு → மொழுக்கன் = தடித்தவன். மொழுக்கு → மொழுக்கட்டை = தடித்த–வன்–வள். மொழு → மொழுப்பு = சோலை செறிந்த பைதிரம் (பிரதேசம்) (வே.க.4,46)]

மொழுமை *molumai,* பெ.(n.) குங்கிலியம்; Indian dammerresin.

மொழுமொழு-த்தல் *molu-molu-,* 4 செ.கு.வி. (v.i.) கொழுகொழுப்பாயிருத்தல்; to be flabby.

[முள் → (மொள்) → மொழு → மொழுமொழு. மொழுமொழுத்தல் = சதை தளர்தல் (மு.தா. 281)]

மொழுவீக்கம் *molu-vikkam,* பெ.(n.) ஊதை நோய் (வாத) வீக்கம்; a rheumatic swelling.

[மொழு + வீக்கம்]

மொள்(ளு)-தல் *mol(lu)-,* 2 செ.குன்றாவி. (v.t.) நீர் முதலியன முகத்தல் (அக.நி.); to take in a vessel, as water. *"இன்ப மொண்டே யருந்தி யிளைப்பாளினேன்" (தாயு. பாயப்புலி. 27).*

- மா. முள்கெ.

[முள் → முழு → (முகு) → முக. முகத்தல் = மொள்ளுதல், மொண்டளத்தல். முள் → (முழை) → மூழை = அகப்பை. முள் → மொள். மொள்ளுதல் = கலத்தை நீருட்புகுத்தி நீர் (முதலியன) கொள்ளுதல்(மு.தா.289)]

மொள்ளமாறி *mollamāri,* பெ.(n.) மொல்லமாறி பார்க்க; see *molla-māri.*

[முல்லைமாறி → மொல்லமாறி → மொள்ளமாறி]

மொளி *moli,* பெ.(n.) எலும்பின் அசைவு; joints.

மொளிபொருத்தல் *moli-poruttal,* தொ.பெ. (vbl.n.) மூட்டு வீங்கல்; swellings of the joints.

[மொளி + பொருத்தல்]

மொறமொறப்பு *mora-morappu,* பெ.(n.) 1. தூய்மை; cleanliness. 2. சருச்சரை; roughness. 3. உலர்ச்சி; dryness.

[முள் → முறு → முறுகு → முறுகல் = சூட்டினால் இறுகியது. முறு → முற → முறமுறப்பு = விறப்பு (மு.தா.222). முறமுறப்பு → மொறமொறப்பு]

மொறமொறெனல் *mora-morenal,* பெ.(n.) மொரமொரெனல் பார்க்க; see *mora-morenal.*

[மொரமொரெனல் → மொறமொறெனல்]

மொறுமொறு-த்தல் *moru-moru-,* 11 செ.கு.வி. (v.i.) வெறுப்புக்குறிப்புக் காட்டுதல்; to grumble. *"சுரர் மொறுமொறுப்பப் போகந் துய்த்தனன்" (திருவானைக். கவுத. 102).*

[மொறு + மொறு-,]

மொறுமொறெனல் *moru-morenal,* பெ.(n.) மொரமொரெனல் பார்க்க (வின்.); see *mora-morenal.*

[மொரமொரெனல் → மொறமொறெனல் → மொறுமொறெனல்]

மோ

மோ¹ *mō,* பெ.(n.) தமிழ் நெடுங்கணக்கில் 'ம்' என்ற மெய்யெழுத்தும் 'ஓ' என்ற உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் (அசை) யெழுத்து; the sylabic letter formed by adding the long vowel 'ō' to the consonant 'm'

[ம் + ஓ]

மோ² *mō,* இடை. (part.) முன்னிலையசைச் சொற்களுள் ஒன்று (தொல். சொல். 276); a verbal suffix of second pers. as *kēnmō.*

மோ[3]–த்தல் *mō-*, 12 செ.குன்றாவி. (v.t.) மூக்கால் நுகர்தல்; to smell. *"மோப்பக் குழையு மனிச்சம்" (குறள், 90). 'பழைய சோற்றை நாய் மோந்து பார்த்து விட்டுச் சாப்பிடாமல் ஓடிவிட்டது' (உ.வ.).*

க., பட. மூசு.

[முகம் → முகர் = முகம், மூக்கு. முகர்தல் = மணமறிதல். முகர் → மோர் → மோ. மோத்தல் = மணமறிதல் (வே.க.4,4)]

மோ[4]–த்தல் *mō-*, 12 செ.குன்றாவி. (v.t.) மொள்ளுதல் (தைலவ. தைல.); to take in a vessel, as water. 2. மேற் கொள்ளுதல்; to undertake. *"மோந்த போர்முகத்து" (உபதேசகா. சிவவிரத. 327).*

க., பட. மொகெ.

[முழு → முகு → முக. முகத்தல் = நீரைக் குழித்தல் அல்லது துளைத்தல் போல மொள்ளுதல், நீர்ப்பொருளையுங் கூலப் பொருளையும் கலத்தால் அல்லது படியால் மொண்டளத்தல், தாங்கி யெடுத்தல். முக → மோ (வே.க.4,89)]

மோக்கட்டை *mōkkaṭṭai,* பெ.(n.) வாயின் கீழ்ப்பகுதி; part of face below mouth, chin.

மறுவ. முகரைக்கட்டை, மோரைக்கட்டை.

[முகவாய் → மோவாய். மோவாய்க்கட்டை → மோக்கட்டை],

மோக்களா *mōkkaḷā,* பெ.(n.) 1. மகிழ்ச்சி ஆரவாரம்; joviality, conviviality. 2. கட்டுப்பாடில்லாமை (இ.வ.); freedom from restraint.

மோகணத்தி *mōgaṇatti,* பெ.(n.) மொந்தன் வாழை; thick-skinned plantain fruit.

மோகந்திரிவாள் *mōgantirivāḷ,* பெ.(n.) சார்வளை; a prostate plant.

மோகநட்சத்திரம் *mōganaṭcattiram,* பெ.(n.) மோகமீன் (விதான. குணா குண. 41, உரை) பார்க்க; see *mōgamīṉ.*

[மோகம் + நட்சத்திரம்]

Skt. *naksatra* > த. நட்சத்திரம்.

மோகநூல் *mōga-nūl,* பெ.(n.) 1. சமய எதிராளிகளை வெளியாக்குவதற்காகப் பொய்க் கொள்கைகளை மேற்கொண்டு கூறும் நூல்; book of false doctrines written to confound heretics and lead them astray. 2. இன்பநூல் (காமநூல்); treatise on erotics. *"முற்பருவப் பெண்கட்கு மோகநூல்" (பூவண. உலா, 447).*

[மோகம் + நூல்]

மோகப்படைக்கலம் *mōga-p-paḍaikkalam,* பெ.(n.) மயக்கத்தை உண்டாக்கும் அம்பு வகை (வின்.); a magic arrow that causes swooning.

[மோகம் + படைக்கலம்]

மோகம்[1] *mōgam,* பெ.(n.) 1. முருங்கை; horse-radish tree. 2. வாழை; plantain.

மோகம்[1]

மோகம்² *mōgam,* பெ.(n.) 1. விருப்பம்; love, affection. 2. பாலுணர்வு வேட்கை, காம மயக்கம்; fascination due to love. *'மோகம் முப்பது நாள் ஆசை அறுபது நாள்' (பழ.).* 3. விடுபட முடியாத விருப்பம்; craze, infatuation. *'மேல்நாட்டு மோகம் கொண்டு பலர் வெளிநாடுகள் செல்கின்றனர். திரைப்பட மோகம் யாரை விட்டது' (உ.வ.).* 4. மயக்கம் (மூர்ச்சை) (சூடா.); loss of consciousness, fainting. 5. மாயையால் நிகழும் மயக்கவுணர்ச்சி (சி.போ.பா. 2, 2); delusion of mind which prevents one from discerning the truth. 6. திகைப்பு; confusion, distraction. *"மோகமெங்கு முளவாக" (கம்பரா. நாகபாச. 84).* 7. மோகமீன் (விதான. குணாகுண. 41, உரை) பார்க்க; see *mōga-mīṉ.*

[முகம் = மூக்கு. முகத்தில் மிக முன்னால் நீண்டிருப்பது மூக்காதலால், முகப்பெயர் மூக்கையுங் குறித்தது. முகம் → முக. முகத்தல் = மணத்தல், விரும்புதல். "மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்" (மூதுரை). முக → மோ. மோத்தல் = முகர்தல் = விரும்புதல். மோ + கம் – மோகம் = விருப்பம், காதல், பெருங்காதல் (சு.வி.29). காதலால் ஏற்படும் மயக்கம், திகைப்பு]

மோகம்³ *mōgam,* பெ.(n.) மோர்; buttermilk. *"மோகமுறை யிணக்கம்" (அழகர்கல. 87).*

மோகமீன் *mōgamīṉ,* பெ.(n.) காரி (சனி) நிற்கும் விண்மீனிற்கு ஆறாவதும், பத்தாவதும், பதினோராவதும், இருபதாவது மாகிய விண்மீன்கள்; (Astrol.) the 6th, 10th, 11th and 20th naksatras counted from that occupied by saturn.

[மோகம் + மீன்]

மோகர் *mōgar,* பெ.(n.) 1. மோகமுடையவர் (சங்.அக.); infatuated persons. 2. சித்திரக் காரர் (சூடா.); painters, as appealing to the aesthetic sense by their art.

[மோகம் → மோகர். 'ர்' ப.பா.ஈறு.]

மோகரம் *mōgaram,* பெ.(n.) 1. பேராரவாரம்; roar. *"பன்றி பெரு மோகரத்தோடு" (பாரத. அருச்சுனன்றவ. 95).* 2. கொடுமை (யாழ்.அக.); vehemence, rage.

[மோகனம் → மோகரம்]

மோகரா *mōgarā,* பெ.(n.) பத்து அல்லது பதினைந்து ரூபாய் மதிப்புள்ள காசு (நாணய)வகை; gold coin, varying in value from 10 to 15 rupees.

மோகரி¹-த்தல் *mōgari-,* 11 செ.கு.வி. (v.i.) ஆரவாரித்தல்; to roar, to shout with excitement. *"வீமனு மோகரித் தவுணரைத் தடிந்து" (பாரத. வேத்திர. 63).*

மோகரி²-த்தல் *mōgari-,* 11 செ.கு.வி. (v.i.) மயங்குதல் (யாழ்.அக.); to be perplexed.

மோகரி³ *mōgari,* பெ.(n.) ஒரு வகை மருந்து விதை (அசமதாகம்); a medicinal seed of ornum variety.

மோகலிங்கம் *mōgaliṅgam,* பெ.(n.) ஒரு வகை மரம்; a kind of tree.

மோகலீலை *mōga-līlai,* பெ.(n.) காம விருப்ப நடத்தை (வின்.); lascivious behaviour.

[மோகம் + லீலை]

Skt. *līla* > த. லீலை.

மோகவிலை *mōga-vilai,* பெ.(n.) விருப்பத்தின் பொருட்டு கொடுக்கும் அதிகவிலை; fancy price.

[மோகம் + விலை]

மோகவுவமை *mōga-v-uvamai,* பெ.(n.) பொருண் மேலுள்ள வேட்கையால் உவமானம் உவமேயங்களை மயங்கக் கூறும் உவமையணி வகை (தண்டி. 30, உரை); (Rhet.) figure of speech in which the *upamāṉan* and the *upamēyam* are confounded.

[மோகம் + உவமை]

மோகன் *mōgaṉ,* பெ.(n.) காமன் (பிங்.); *Kāma*, the god of love.

[மோகம் = விருப்பம், காதல், பெருங்காதல். மோகன் = காதலையுண்டாக்கும் காமன் (சு.வி.29,30)]

மோகனக்கல் *mōgaṉa-k-kal,* பெ.(n.) 1. பூசைப் பொருள்களை வைக்கும் சரக்கு (அர்த்த) மண்டபத்திலுள்ள கல் மேடை; stone platform in the artha *maṇḍabam*, on which the necessary articles for worship are kept. 2. முகனைக்கல்; carved stone -lintel projecting from a temple gate-way.

[மோகனம் + கல்]

மோகனச்சுண்ணம் *mōgaṉa-c-cuṉṉam,* பெ.(n.) மயக்கப் பொடி; magic powder used for fascinating a person. *"சிலை வேள்விட்ட மோகனச் சுண்ணம்" (பாரத. சம்பவ. 94).*

[மோகனம் + சுண்ணம். சுள் → சுண் → சுண்ணம் = நீறு, சுண்ணாம்பு, நறுமணப்பொடி, பொடி.]

மோகனசாத்திரம் *mōgaṉa-šāttiram,* பெ.(n.) மோகநூல் பார்க்க; see *mōga-nūl.*

[மோகனம் + சாத்திரம்]

Skt. *sāstra* > த. சாத்திரம்.

மோகனநாட்டியம் *mōgaṉa-nāṭṭiyam,* பெ.(n.) மகளிர் கூத்து (யாழ்.அக.); dancing by women.

[மோகனம் + நாட்டியம்]

மோகனப்படை *mōgaṉa-p-paḍai,* பெ.(n.) மயக்கத்தை உண்டாக்கும் அம்பு வகை (சங்.அக.); a magic arrow that causes swooning.

[மோகனம் + படை]

மோகனம் *mōgaṉam,* பெ.(n.) 1. மயக்க முண்டாக்குகை; bewildering, confusing. 2. மனமயக்கம்; confusion of mind, mental perturbation, giddiness. *"மோகனமின் முனி" (சேதுபு. வேதா. 11).* 3. எண்வகை செயலுள் (அட்டகருமத்துள்) ஒன்றும் அறுபத்து நாலு கலையுள் ஒன்றுமான பிறரை மயங்கச் செய்யும் கலை; magic art of fascinating a person, one of *aṣṭa* - karumam, q.v, also one of *arupattu-nālu kalai.* *"திடமுள மோகனமாட" (தனிப்பா. i, 235, 1).* 4. காமன் ஐங்கணைகளுள் மோகமுண்டாக்கும் அம்பு (யாழ்.அக.); one of the five arrows of *kāma* that makes a person infatuated. 5. ஐவகையம்பு (பஞ்சபாண)ச் செயல்களுள் ஒன்றான ஆசைமிகுகை (பிங்.); infatuation as the effect of *mōgaṉam,* one of *pañca-pāṇa-c-ceyal.* 6. ஓர் அராகம்; (Mus.) a specific melody type. 7. ஏமாற்றுகை (யாழ்.அக.); deceiving, cheating.

[மோகம் → மோகி + அனம் = மோகனம் = பெருவிருப்பம், காதல், வசியம், மயக்குகை. (சு.வி.30) 'அனம்' ஓர் ஈறு.]

மோகனமாலை *mōgaṉa-mālai,* பெ.(n.) பொன்னும் பவளமும் கோத்த மாலை வகை; a necklace of gold beads and corals. *"மோகனமாலைக் கிசைவாய் மல்லிகைப் பூமாலையிட்டே" (கொண்டல்விடு. 501).*

[மோகனம் + மாலை]

மோகனலாடு *mōgaṉalāḍu,* பெ.(n.) பண்ணிகார வகை (இக்.வ.); a kind of sweet meat.

[மோகனம் + லாடு]

U. *lāḍu* > த. லாடு.

மோகனவித்தை *mōgaṉa-vittai,* பெ.(n.) பிறரை மயங்கச் செய்யும் கலை (வின்.); the magic art of fascinating a person.

[மோகனம் + வித்தை]

விழி → விடி → வித். த. வித் > **Skt.** *vidyā* > த. வித்தை.

மோகனாங்கனை *mōgaṉāṅgaṉai,* பெ.(n.) அழகு முதலியவற்றால் கண்டோரை மயக்கும் பெண் (வின்.); fascinating woman.

[மோகனம் → மோகனாங்கனை]

மோகனீயம் *mōgaṉiyam,* பெ.(n.) எண் குற்றத்துள் ஆதனு (ஆன்மாவு)க்கு மயக்கத்தைச் செய்யுங்குற்றம் (பிங்.) (சிலப். 10, 177, உரை); the karma which bewilders all the faculties, one of *eṉ-kuṟṟam, q.v.*

மோகனூர் *mōgaṉūr,* பெ.(n.) சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டத்திலுள்ள ஊர்; a village in *Sēlam* dt., *Nāmakkal* taluk.

[மோகனம் = ஒருவகைப்பண். மோகனம் → மோகனூர். இப்பண்ணின் வல்ல கலைஞர் இருந்த இடம். இனி மோகம் = கண்டாரைக் கவர்தல். மோகம் → மோகனூர் என்றுமாம்.]

மோகனை *mōgaṉai,* பெ.(n.) மோகனம் 3 பார்க்க; see *mōgaṉam, 3.* *"மோகனை யென்பது முந்தி முயன்றாள்" (கம்பரா. அயோமுகி. 59).*

[மோகனம் → மோகனை]

மோகா *mōgā,* பெ.(n.) பாதிரி; a kind of tree.

மோகாதி *mōgādi,* பெ.(n.) காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்கள் (யாழ்.அக.); the three defects or infirmities viz., *kāmam, veguḷi, mayakkam.*

[மோகம் + ஆதி]

மோகாந்தகாரம் *mōgānda-kāram,* பெ.(n.) மோகமாகிய இருள்; confusion of mind; mental darkness, as caused by sexual passion.

[மோகம் + அந்தகாரம்]

Skt. *andhakāra* > த. அந்தகாரம்.

மோகான் *mōgāṉ,* பெ.(n.) வெண்ணிறமுடைய கடல்மீன்வகை; white pomfret, deep neutral tint.



மோகரன்

மோகி[1]–த்தல் *mōgi-*, 11 செ.கு.வி. (v.i.) 1. மனம் தடுமாறுதல் (விநாயகபு. 74, 218); to be confused, bewildered. 2. காமத்தால் மயங்குதல்; to be infatuated with love.

[மோகம் → மோகி–,]

மோகி[2] *mōgi*, பெ.(n.) கஞ்சா (தைலவ. தைல.); ganja plant, bhang.

மோகி[3] *mōgi*, பெ.(n.) கம்புகம் (அபின்) (நாமதீப. 393); opium.

மோகிக்கப்பண்ணு–தல் *mōgikka-p-paṇṇu-*, 12 செ.குன்றாவி.(v.t.) காமங் கொள்ளச் செய்தல் (வின்.); to infatuate.

[மோகி → மோகிக்க + பண்ணு–,]

மோகிதம் *mōgidam*, பெ.(n.) காமமயக்கம்; infatuation of love. *"மோகிதமான வெங்களை"* (விநாயகபு. 82, 7).

[மோகி → மோகிதம்]

மோகிதன் *mōgidaṉ*, பெ.(n.) காமவிருப்பம் கொள்வோன் (வின்.); love stricken man.

[மோகி → மோகிதம் → மோகிதன்]

மோகிப்பி–த்தல் *mōgippi-*, 11 செ.குன்றாவி. (v.t.) மோகிக்கப்பண்ணு–தல் பார்க்க; see *mōgikka-p-paṇṇu-*, *"எல்லாச் சகத்தையு மோகிப்பிக்கு மன்னவன்"* (விநாயகபு. 74, 218).

[மோகி → மோகிப்பி–,]

மோகிரம் *mōgiram*, பெ.(n.) மயக்கம்; mental delusrion.

மோகினி *mōgiṉi*, பெ.(n.) 1. மோகனாங் கனை பார்க்க; see *mōgaṉāṅgaṉai*. *"அடைய மோகினி களாயினர்கொல்"* (தக்கயாகப். 87). 2. திருமாலின் கண்டோரை மயங்கச் செய்யும் பெண்வடிவான தோற்றரவம்; incarnation of *Visṇu* as a fascinating woman. *"மோகினியாகிய நின்வடிவினைக் கண்டு"* (பரிபா. 3, 33, உரை). 3. தீயமாயை (அசுத்தமாயை); (Saiva.) impure *māyā*. *"பிரியா மோகினிப் பெரும் போகத்தை"* (ஞானா. 1, 29). 4. பெண் பேய்வகை; a class of demoness. *"மோகமோகினிகள் யோக யோகினிகள்"* (தக்கயாகப். 593).

[மோகம் → மோகி + அனம் – மோகனம் = பெரு விருப்பம், காதல், வசியம், மயக்குகை, மோகனம் செய்யும் பேய் மோகினி. (சு.வி.30)]

மோகினிக்குள்மஞ்சினி *mōgiṉikkuḷ-mañjiṉi*, பெ.(n.) புளிகறளை; a hairy creeper.

மோகினிப்பணம் *mōgiṉi-p-paṇam*, பெ.(n.) திருவிழாவில் தெய்வத்திற்குப் பெண் கோலஞ் செய்து எழுந்தருளிவிக்கும் போது கொடுக்கும் பணம் (வின்.); money offered to a god, when he is dressed in female attire and taken out in procession.

[மோகினி + பணம். படம் → பணம்.]

மோகினிப்பிசாசு *mōgiṉi-p-piśāśu*, பெ.(n.) மோகினி[1] 4 பார்க்க; see *mōgiṉi*[1], 4..

[மோகினி + பிசாசு]

மோகை *mōgai,* பெ.(n.) உருத்தோன்றாதப் பருப்பொருள் (இ.வ.); lump or mass, without any distinctive shape.

மோங்கில் *mōṅkil,* பெ.(n.) திமிங்கல வகை (தக்கயாகப். 384, உரை); a kind of whale.

மோச்சரசம் *mōccarašam,* பெ.(n.) மோசைச்சாறு பார்க்க; see *mōšai-c-cāṟu.*

[மோசைரசம் – மோச்சரசம்]

மோசக்காரன் *mōša-k-kāraṉ,* பெ.(n.) ஏய்ப்போன் (வஞ்சகன்); deceiver, a deceitful or treacherous man, a trickster.

க. மோசகார.

[மோசம் + காரன்]

மோசக்காரி *mōšakkāri,* பெ.(n.) ஏய்ப்பவள்; a deceiver, a deceitful or treacherous woman.

க. மோசகாதி

[மோசம் + காரி]

மோசகம்[1] *mōšagam,* பெ.(n.) 1. மோசம்[2] 2 பார்க்க (மூ.அ.); see *mōcam*[2] 2. 2. துறவு (யாழ்.அக.); asceticism.

மோசகம்[2] *mōšagam,* பெ.(n.) வாழை; plantain.

மோசகன்[1] *mōšagaṉ,* பெ.(n.) 1. விடுவிப்போன்; deliverer. 2. வெளி விடுவோன்; one who passes or lets out. *"நந்தனவனத்து மோசகனை மலமதனை"* *(சிவதரு. சுவர்க்கநரக. 175).* 3. துறவி (யாழ்.அக.); ascetic.

மோசகன்[2] *mōšagaṉ,* பெ.(n.) 1. திருடன் (சங்.அக.); thief. 2. தட்டான்; gold smith.

[மோசம் → மோசகன். மோசம்செய்வோன்]

மோசகி *mōšagi,* பெ.(n.) செடிவகை (கிலுகிலுப்பை) (மூ.அ.); rattlewort.

'இச்செடியின் விதைகள் கிலுகிலுப்பையைப் போலாகும்'.

மோசடி *mōšaḍi,* பெ.(n.) 1. சொந்த ஊதிய(லாப)த்துக்காகச் செய்யும், சட்டத்திற்குப் புறம்பான ஏமாற்றுச் செயல்; defrauding, cheating. *'சீட்டு நிறுவனம் நடத்தி மோசடி செய்தவர்கள் காவலரிடம் சரணடைந்தனர்'.* 2. பொய்யானது, கெட்ட எண்ணத்தோடு கூடியது; deception, fraud. *'முடிவளர மருத்துவம் செய்யப்படும் விளம்பரங்கள் யாவும் மோசடியானவை'.*

[முள் → முய் → முசு → மோச → மோசம் = ஏய்ப்பு. மோசம் → மோசடி]

மோசநாசம் *mōša-nāšam,* பெ.(n.) ஏமாற்றுகையும் கேடுறுத்துகையும்; cheating and damaging.

[மோசம் + நாசம்]

மோசம்[1] *mōšam,* பெ.(n.) 1. பிறருக்குத் தீமை விளைவிப்பது, ஏய்ப்பு, வஞ்சனை; treachery, deceit, fraud. *'உயிர் போகும் அளவிற்கு ஒரு மோசமான செயல் நிகழ்ந்து விட்டது'.* 2. பேரிடர் (அபாயம்); danger, risk, detriment, accident. *'இவ்வாண்டு மழை மோசமான பாதிப்பை ஏற்படுத்தி விட்டது'*

(உ.வ.). 3. பிசகு (சங்.அக.); mistake, error. 4. தரம், ஒழுக்கம் முதலியவற்றில் குறைவு, தாழ்வு; bad in standard,ability, standard etc. *'பையன் இந்தத் தேர்வில் மிக மோசமான மதிப்பெண் எடுத்துள்ளான்.' (உ.வ.).*

ம., க., தெ., பட. மோச.

இச்சொற்கு ஒருவேளை வடமொழி *moša* மூலமாயிருக்கலாம் என்று செ.ப.க.அகரமுதலி குறிப்பிடுகிறது. வடமொழியில் அச்சொல்லிற்குத் திருட்டு, கொள்ளை என்பன போன்ற பொருள்கள் உள்ளனவே யன்றி தமிழில் உள்ளதுபோல் வஞ்சனை, பேரிடர், பிசகு என்னும் பொருள்கள் இல்லை. வடமொழி *moša* திருடுதல், கொள்ளையடித்தல் என்னும் பொருளுள்ள *muš* என்னுடம் வேரினின்று பிறந்தது என்று மா.வி.அகரமுதலி குறிப்பிடுகிறது.

[முல் – துளைத்தற் கருத்துவேர்.
முல் → முழு – முழைத்தல் = துளைத்தல்
முழைத்த வான்புழை (பாரத. காண்டவ. 17)
முழை–மூழை = 1. குழிந்த இடம், 2. உட்குழிந்த அகப்பை. "மூழை சுவையுணராதாங்கு" மூழை–மூசை = உட்கூடான மண்குகை, மாழையை உருக்கும் சிறுமண்கரு. வெளியில் உருவோடு இருந்து உள்ளே வெறுமைக் கூடாக இருக்கும் பொருளை ஏமாற்றுப் பொருளாகக் கருதுதல் இயல்பு. ஒ.நோ. பொள் = துளை, பொள் → பொய். பொய்தல் = துளைக்கப்படுதல். 'பொய்தகடொன்று பொருந்தி' (கம்பரா. பஞ்ச. 49). பொய்த்தல் = 1. உண்மையல்லாதவற்றைச் சொல்லுதல். 'தன்னெஞ் சறிவது பொய்யற்க' (குறள், 293) = 2 ஏமாற்றுதல், வஞ்சித்தல். 'நின்றோடிப் பொய்த்தல்' (நாலடி, 111). பொய்த்தல் = 1. செயல்தவறுதல். "விண்ணின்று பொய்ப்பின்" (குறள்,13). 2. கெடுதல்
"பொருளென்னும் பொய்யா விளக்கம் (குறள், 753)
பொள் → பொய்ச்சு = பழத்தின் குற்றம் (வி.)
சொத்தைப்பகுதி
மூசை = உட்கூடான, புறத்தில் நன்கு அமைந்ததான பொருளை ஏய்ப்புப் பொருளாகவும் ஏமாற்றுப் பொருளாகவும் பார்க்கிற இயல்பு மக்களுக்கு உண்டு. மூசைத்தங்கம் = குறை பாடுள்ள பொன், பத்தரை மாத்துத் தங்கத்திற்கு எதிரானது. மூசை → மோசம். வடமொழி வேர் mus என்பதற்கும் தமிழ் வேர் முல் மூலமாக இருப்பதைக் காணலாம்].

மோசம்² *mōšam,* பெ.(n.) 1. முருங்கை பார்க்க; see *muruṅgai.* 2. வாழை; plantain.

மோசம்செய்–தல் *mōšam-sei-,* 1 செ.கு.வி. (v.i.) நம்பிக்கையைப் பொய்யாக்கும் வகையில் ஏமாற்றுதல், வஞ்சித்தல்; to cheat, let (one) down. *'என் நண்பனே இப்படி மோசம் செய்வான் என்று எதிர்ப்பார்க்க வில்லை'.*

க. மோசகொளிசு.

[மோசம் + செய்–,]

மோசம்போ–தல் *mōšam-pō-,* 8 செ.கு.வி. (v.i.) 1. ஏமாற்றப்படுதல்; to be decieved. *'அவனிடம் நம்பிக்கை வைத்துப் பணம் தந்ததால் மோசம் போய்விட்டோம்' (உ.வ.).* 2. இடர்ப்பாட்டுக்குள்ளாதல்; to fall into danger. 3. பிசகுதல்; to go wrong, to be mistaken.

க. மோசகொள்ளு, மோசகோகு.

[மோசம் + போ–,]

மோசமான *mōšamāṉa,* பெ.எ. (adj.) 1. வஞ்சித்து ஒழுகுகிற, கீழறுப்பான; deceitful, treacherous. *'அவன் மிகவும்*

மோசமானவன்' (உ.வ.); 2. இடர் நிறைந்த; dangerous. *'மோசமான காலம்' (உ.வ.).*

[மோசம் + ஆன]

மோசனம்[1] *mōšaṉam,* பெ.(n.) நெல்வகை (யாழ்.அக.); a kind of paddy.

மோசனம்[2] *mōšaṉam,* பெ.(n.) விடுபடுகை (சூடா.); liberation, deliverance. *"பாசமோசனந்தான் பண்ணும்படி" (சி.சி. 8, 3).*

மோசனம்[3] *mōšaṉam,* பெ.(n.) கூரையின் நெடுவிட்டம்; purlin.

க. மொகசர.

[முகசரம் → மொகசரம் → மோசரம் → மோசனம்]

மோசனி *mōšaṉi,* பெ.(n.) இலவுமரவகை (சங்.அக.); red-flowered silk cotton tree.

[மோசை → மோசனி]

மோசா *mōšā,* பெ.(n.) கருநொச்சி; a black variety of nochi. 2. இலவம்பிசின்; gum of silk cotton tree.

[மோசை → மோசா]

மோசாகம் *mōšāgam,* பெ.(n.) வாழை; plantain.

மோசாகிரீடம் *mōšā-kiriḍam,* பெ.(n.) சந்தன மரம்; sandal wood tree.

மோசாசம் *mōšāšam,* பெ.(n.) பருத்திப் பிசின் (யாழ்.அக.); resin gathered from the cotton-plant.

மோசாசனி *mōšāšaṉi,* பெ.(n.) இலவு; silk cotton tree.



மோசாசிகம் *mōšāšigam,* பெ.(n.) மருளூ மத்தை; a variety of *dhātura.*

மோசாடம் *mōšāḍam,* பெ.(n.) 1. சந்தனம் (மலை.); sandalwood. 2. வாழைப்பழம் (யாழ்.அக.); plantain fruit.

மோசாபரணி *mōšāparaṇi,* பெ.(n.) பருத்தி; cotton.

மோசி[1]**-த்தல்** *mōši-,* 11 செ.கு.வி. (v.i.) பிசகிப்போதல் (சப்.); to err, to be misled.

[மோசம் → மோசி-,]

மோசி[2]**-த்தல்** *mōši-,* 11 செ.கு.வி. (v.i.) விட்டொழிதல்; to give up. *"சங்கை மோசிப்பாயே" (கைவல். சந். 21).*

[முசிதல் = அறுதல். முசி → மூசி → மோசி-,]

மோசி[3] *mōši,* பெ.(n.) பழைய புலவருள் ஒருவர்; an ancient poet. *"மோசி பாடிய வாயும்" (புறநா. 158).*

மோசிகீரனார் *mōšikiraṉār,* பெ.(n.) கழகக் (சங்க) காலப் புலவர்; a poet of sangam age.

[மோசி + கீரனார். மோசி = ஓர் ஊர். இன்றைய கருவூர்ப் பக்கத்திலுள்ள மோசூர் மோசியூரே எனக் கருத இடமுண்டு.]

மோசிகை *mōšikai,* பெ.(n.) உச்சிமுடி (யாழ்.அக.); tuft of hair on top of head.

மோசிமல்லிகை *mōši-mallikai,* பெ.(n.) காட்டு மல்லிகை (சிலப். 13, 156, உரை); wild jasmine.

[மோசி + மல்லிகை]

மோசிரிகோபம் *mōširi-kōbam,* பெ.(n.) வெதுப்படக்கி; a plant, ballota disticha.

மறுவ. எருமுட்டைப் பீநாறி, பேய்மிரட்டி.

மோசை[1] *mōšai,* பெ.(n.) 1. மோசையிலவம் (மூ.அ.) பார்க்க; see *mōšai-ilavam.* 2. நீலிச்செடி, அவுரி (மூ.அ.); Indian indigo. 3. வசம்பு (சங்.அக.); sweet flag. 4. வாழை (மூ.அ.); plantain.

மோசை[2] *mōšai,* பெ.(n.) விரலணிவகை; finger-ornament, probably of the shape of plantain flower. *"மகளிர் ..... மெல்விரல் மோசை போல" (நற். 188), "முற்றிவளை மோசை முதற்கங்காளன்" (காளத். உலா, 341).*

மோசைச்சாறு *mōšai-c-cāṟu,* பெ.(n.) இலவம் பிசின்; resin of silk cotton.

[மோசை + சாறு]

மோசையிலவம் *mōcai-y-ilavam,* பெ.(n.) இலவு (தைலவ. தைல.); red flowered silk-cotton tree.

[மோசை + இலவம்]

மோட்டடைப்பன் *mōṭṭaḍaippaṉ,* பெ.(n.) கூரை முகட்டின் இரு பக்கங்களிலும் வைக்கப்படுஞ் சித்திர வேலைப்பாடுடைய பலகையடைப்பு (நாஞ்.); a decorated piece of plank, placed on both sides of the ridge of a roof.

[மோடு + அடைப்பன்]

மோட்டன் *mōṭṭaṉ,* பெ.(n.) முரடன் (மூர்க்கன்); ruffian. *"சீதையை மோட்டன் வளைத்தொரு தேர்மிசை யேகொடு" (திருப்பு. 266).*

[மோடு → மோட்டன்]

மோட்டா *mōṭṭā,* பெ.அ. (adj.) 1. பெரிய; large, great, big. 2. கீழ்த்தரமான; shoddy, trashy. 3. தடித்த, முருடான; coarse, rough, unrefined. *'வெயில் காலத்தில் இப்படி ஒரு மோட்டாத் துணியில் சட்டை தைத்துப் போட்டிருக்கிறாயே?' (உ.வ.).*

[மோடு → மோட்டா]

மோட்டாக்குறுவை *mōṭṭā-k-kuṟuvai,* பெ.(n.) மூன்று மாதத்தில் விளையக் கூடிய குறுவை நெல்வகை (இ.வ.); a coarse paddy which matures in 3 months.

[மோட்டா + குறுவை. குறு → குறுவை = குறுகிய காலத்தில் விளைச்சல் தரும் நெற்பயிர்.]

மோட்டில் *mōṭṭil,* பெ.(n.) குமிழ்; a thorny tree.

மோட்டிறால் *mōṭṭiṟāl,* பெ.(n.) இறால் மீன் வகை (வின்.); mantis-shrimp.

[மோடு + இறால்]



மோட்டிறால்

மோட்டுத்தனம் *mōṭṭu-t-taṉam,* பெ.(n.) முருட்டுத்தனம் (சங்.அக.); obstinacy.

[மோடு' + தனம்]

மோட்டுமீன் *mōṭṭu-mīṉ,* பெ.(n.) விண்மீன்; star. *"மோட்டு மீன் குழாத்தின்" (சீவக. 2325).*

[மோடு' + மீன்]

மோட்டுவடிம்பு *mōṭṭu-vaḍimbu,* பெ.(n.) மோட்டுவளை பார்க்க; see *mōṭṭu-vaḷai.* (C.G.)

[மோட்டு + வடிம்பு]

மோட்டுவரி *mōṭṭu-vari,* பெ.(n.) வீட்டுவரி (யாழ்ப்.); house-tax.

[வீட்டுவரி → மீட்டுவரி → மோட்டுவரி]

மோட்டுவலயம் *mōṭṭu-valayam,* பெ.(n.) மாலைவகை; a kind of garland. *"சூட்டுக் கத்திகையும் மோட்டு வலயமும் பிறவுமாகப் புனைந்து" (இறை. 2, பக். 42).*

[மோட்டு + வலயம்]

மோட்டுவளை *mōṭṭu-vaḷai,* பெ.(n.) உட்கூரையின் உச்சிப் பகுதி (இ.வ.); ridge of the inner roof. *'வீட்டுக்கு உள்ளேயே உட்கார்ந்து மோட்டுவளையைப் பார்த்தால் எப்படி முன்னேறமுடியும்' (உ.வ.).*

[முகடு → மோடு → மோட்டு + வளை]

மோட்டுவளையோடு *mōṭṭu-vaḷai-y-ōḍu,* பெ.(n.) மோட்டோடு பார்க்க (பு.வ.); see *mōṭṭōḍu.*

[மோட்டு + வளையோடு]

மோட்டை *mōṭṭai,* பெ.(n.) நீர் கசிந்து வெளியேறும்படி வயல் வரப்புத் துளைப் பட்டிருக்கை; porosity of the ridge of a field. *'மோட்டை போனால் கோட்டை போகும்' (நெல்லை).*

[முள் → முண்டு. முண்டுதல் = பன்றி முகத்தாற் இளைத்தல் (மு.தா.257). முள் → முட்டு → (மொட்டை) → மோட்டை = துளை. இனி மோடு + ஒட்டை (மோட்டில் அமைந்த ஒட்டை) – மோட்டை என்றுமாம்.]

மோட்டோடு *mōṭṭōḍu,* பெ.(n.) வீட்டு முகட்டிலிடும் வளைவோடு (கொ.வ.); ridge tile.

[முகடு → மோடு + ஓடு]

மோட்டோலை *mōṭṭōlai,* பெ.(n.) கூரையோடு வேயும் ஓலை (நாஞ்.); palm - leaf used to cover the ridge of a roof.

[முகடு → மோடு + ஓலை]

மோடசகன் *mōḍasagaṉ,* பெ.(n.) கள்வன் (யாழ்.அக.); thief.

மோடம்¹ *mōḍam,* பெ.(n.) மந்தாரம்; dark, clouded sky.

ம. மூடம்; க., து., பட. மோட; தெ. மோடமு; குட. மோட.

[முள் → மூழ். மூழ்த்தல் = மூடுதல். மூழ் → மூழல் = மூடி. மூழ் → மூடு → மூடி. மூடு → மூட்டம் → மோடம் = வானம் மூடிய மந்தாரம். (மு.தா.190)]

மோடம்² *mōḍam,* பெ.(n.) மூடத்தனம் (வின்.); stupidity.

து. மோட.

[முள் → மூழ். மூழ்த்தல் = மூடுதல். மூழ் → மூடு → மூடி. மூடு → மூடம் → மோடம் = வானம் மூடிய மந்தாரம், மந்தாரம் போன்ற மடமை. (மு.தா. 190).]

மோடமரம் *mōḍa-maram,* பெ.(n.) மகிழ்³ பார்க்க (இ.வ.); see *magiḻ*³.

[மகிழமரம் → மோடமரம்]

மோடன்¹ *moḍaṉ* பெ.(n.) வளர்ந்தவன்; tall man. *"நெடுந்தாளினான் மோடன்" (சைவச. ஆசா. 13).*

[மோடு → மோடன்]

மோடன்² *mōḍaṉ,* பெ.(n.) மூடன்; foal, blockhead. *"மோடாதி மோடனை" (திருப்பு. 557).*

[மோடம் = மடமை. மோடம் → மோடன். 'ன்'. ஆ.பா.ஈறு.]

மோடனம் *mōḍaṉam,* பெ.(n.) 1. காற்று (யாழ்.அக.); wind. 2. அரைக்கை (யாழ்.அக.); rubbing, grinding. 3. அவமானம்; disgrace. *"கலுழனை மோடனம் விளைத்தமைபோல்" (குற்றா. தல. திருமண. 66).* 4. மாயக்கலை (வித்தை) (வின்.); magic, enchantment, as a craft. 5. மூடத்தனம் (வின்.); folly.

மோடா *mōḍā,* பெ.(n.) மேல்புறமும் கீழ் புறமும் வட்டமாகவும் இடைப்பகுதி குறுகியும் இருக்கும் உட்கார பயன்படுத்தும் பிரம்பால் பின்னப்பட்ட இருக்கை; a seat in the shape of an hour glass.

[மோடு → மோடா]



மோடா

மோடாசம் *mōḍāśam,* பெ.(n.) வெண்பூசனி; ash pumpkin.



மோடாசம்

மோடாமோடி *mōḍa-mōḍi,* பெ.(n.) பகட்டு (ஆடம்பரம்) (வின்.); ostentation, pomp. *'மோடாமோடியாய்ச் செலவு செய்கிறது'.*

க. மோடாமோடி (அழகு, எழில்).

[மோடி + மோடி – மோடிமோடி → மோடாமோடி]

மோடி[1] *mōḍi,* பெ.(n.) 1. செருக்கு (வின்.); arrogance. 2. வகை (விதம்); way, manner, style, air. *"அப்போதிலொரு மோடியுமாய் வேறே முகமுமாய்" (பணவிடு. 195).* 3. பகட்டு (ஆடம்பரம்); grandeur, display. *'திருமணம் வெகுமோடி?'.* 4. உயர் தோற்றம் (வின்.); military bearing, as of a soldier, dignified bearing. 5. வேடிக்கைக் காட்சி; exhibition show. 6. பிணக்கு; dis agreement, discord. *'ஊடலாய்ப் போவாரை மோடி திருத்துவார்' (விறலிவிடு. 315).* 7. ஏய்ப்பு; deceit, fraud. 8. மொத்தம் (வின்.); wholesale, entirety. *'அவற்றை மோடியாய் வாங்கினாய்'.*

ம., க., தெ. மோடி.

[முகடு = உச்சி, மேலிடம், கூரை. முகடு → மோடு. (மு.தா.68). மோடு → மோடி]

மோடி[2] *mōḍi,* பெ.(n.) மந்திரத்தால் பொருளை மறைத்தலும் அதனைக் கண்டெடுத்தலுமாகிய உறழாட்டில் (விவாதத்தில்) மந்திரம் செய்வோர்களுக்கிடையே நிகழும் போட்டி; trial of magical powers between two enchanters, in which one hides some treasure from the other and challenges him to discover it by mantra.

ம., க., தெ. மோடி.

[மகிடி → மோடி]

மோடி[3] *mōḍi,* பெ.(n.) பாம்பாட்டியின் ஊதுகுழல் வகை; a kind of flute used by snake-charmers.

தெ. மகிடி.

[மகிடி → மோடி]

மோடி[4] *mōḍi,* பெ.(n.) 1. கண்ட திப்பிலி; dried knots of the creeper of long pepper. 2. திப்பிலி மூலம் (பைஷஜ. 85); long-pepper root.

க. மோடி. (திப்பிலியின் வேர்)

மோடி[5] *mōḍi,* பெ.(n.) மோடியெழுத்து பார்க்க (இ.வ.); see *mōḍi-y-eḻuttu.*

மோடிக்காரன் *mōḍi-k-kāraṉ,* பெ.(n.) 1. ஒப்பனைவிரும்பி (இ.வ.); stylish man. 2. பிணக்கங்காட்டுவோன் (வின்.); unfriendly man, man with forbidding countenance. 3. ஏய்ப்போன் (இ.வ.); deceitful person.

க. மோடிகார (மோடிக்கலை செய்பவன்).

[மோடி + காரன்]

மோடிடு-தல் *mōḍiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. சோரத்திற் கருப்பமாதல் (இ.வ.); to become pregnant by illicit inter course. 2. ஆறு முதலியவற்றில் மணலால் மேடு உண்டாதல்; to form shoals, as in river.

[மோடு + இடு-, 'இடு' து.வி.]

மோடிநாணயம் *mōḍi-nāṇayam,* பெ.(n.) பொற்காசு (பொன்னாணய) வகை; a gold coin introduced by the Maharattas. *"மோடி நாணய விலையாலே" (திருப்பு. 572).*

[மோடி + நாணயம்]

Skt. *nāṇaka* > த. நாணயம்.

மோடிப்புடவை *mōḍi-p-puḍavai,* பெ.(n.) வெண்ணிறமுள்ள புடைவை வகை (வின்.); a kind of white-coloured saree.

[மோடி + புடவை]

மோடிமோதிரம் *mōḍi-mōdiram,* பெ.(n.) சொகுசான மோதிரம் (இ.வ.); finger-ring made of pinchbeck.

[மோடி + மோதிரம். முகத்திரம் → மோதிரம்.]

மோடியெடு-த்தல் *mōḍi-y-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஒருவனுக்குக் கேடு விளைப்பதற்காக அவன் நிலத்திற் புதைத்து வைக்கப்பட்ட பாழ்ப் (சூனிய) பொருளை எடுத்து விடுதல்; to discover and remove the articles of witchcraft buried in the ground belonging to a person with a view to cause him harm. 2. மறைமொழிக் கல்வியால் புதையலிடத்தைக் கண்டறிதல்; to search for hidden treasure by means of magic.

[மோடி + எடு-,]

மோடியெழுத்து *mōḍi-y-eḻuttu,* பெ.(n.) 1. மராத்திய எழுத்து வகை; a Maharatta script. 2. சேர்ந்தெழுது மெழுத்து; a running hand.

[மோடி⁴ + எழுத்து. எழு → எழுது → எழுத்து.]

மோடிவித்தை *mōḍi-vittai,* பெ.(n.) மோடி² பார்க்க; see *mōḍi²*.

து. மோடிவித்யெ.

[மோடி + வித்தை]

மோடிவை-த்தல் *mōḍi-vai-,* 4 செ.கு.வி. (v.i.) ஒருவனுக்குக் கேடு விளைப்பதற்காக அவன் நிலத்தில் பாழ்பொருளைப் புதைத்து வைத்தல்; to bury articles of witchcraft under the ground belonging to a person with a view to cause him harm.

[மோடி + வை-,]

மோடு¹ *mōḍu,* பெ.(n.) 1. உயர்ச்சி (பிங்.); height. *"மோடிசை வெற்பென" (அஷ்டப். திருவேங்கடத்தந். 44).* 2. மேடு (சூடா.); hill, eminence. 3. உட்கூரையின் உச்சிப் பகுதி, முகடு; top, as of a house. *'மறுமொழி (பதில்) சொல்லாமல் மோட்டைப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தால் என்ன பொருள் (அர்த்தம்)?' (உ.வ.).* 4. கூரையின் உச்சி; ridge of roof. 5. பருமை; largeness, stoutness. *"மோட்டிறா" (சீவக. 95), "மோட்டெருமை" (தமிழ்நா. 77).* 6. பெருமை; greatness. *"மோட்டெழி லிளமை நீங்க" (சீவக. 2799).* 7. உயர்நிலை; high position. *"மோட்டிடத்துஞ் செய்யார் முழுமக்கள்" (நாலடி. 358).* 8. வயிறு (பிங்.); belly, stomach. *"பிணர் மோட்டு......... பேய்மகள்" (திருமுரு. 50).* 9. கருப்பை; womb. 10. உடம்பு; body. *"மோட்டுடைப் போர்வையோடு" (ஆசாரக். 92).* 11. பிளப்பு (அக.நி.); cleavage, cleft.

[முகடு = உச்சி, மேலிடம், கூரை. முகடு → மோடு (மு.தா.68)]

மோடு² *mōḍu,* பெ.(n.) மடமை; stupidity, dullness of intellect, ignornce. *"புலவர் கவிதை கேட்டவர்க்கு வரிசைநல்காத மோட்டுலுத்தர்" (கடம்ப. பு. இலீலா. 127).*

மறுவ. முட்டத்தனம்.

[முள் → மூழ். மூழ்த்தல் = மூடுதல். மூழ் → மூழல் = மூடி. மூழ் → மூடு → மூடி. மூடு → முடம் → மோடம் = வானம் மூடிய மந்தாரம், மந்தாரம் போன்ற மடமை. (மு.தா.190). மோடம் → மோடு]

மோடுகூடு-தல் *mōḍu-kūḍu-,* 5 செ.கு.வி. (v.i.) மார்பெலும்பு முதலியன தெரிதல்; to be bony in the chest. *'இந்தக் குழந்தைக்கு மார்பு மோடு கூடியிருக்கிறது'.*

[மோடு + கூடு–, முகடு → மோடு.]

மோடுபரு–த்தல் *mōḍu-paru-,* 4 செ.கு.வி. (v.i.) பிடரியிற் சதை திரண்டிருத்தல்; to be strong and sinewy in the nape of the neck. *"ஊன் மல்கி மோடு பருப்பார்" (திவ். திருவாய். 3, 5, 7).*

[மோடு + பரு–,]

மோடுபிரி–தல் *mōḍu-piri-,* 3 செ.கு.வி. (v.i.) கருப்பமாதல் (இ.வ.); to become pregnant.

[மோடு + பிரி–,]

மோண்டுகொளி *mōṇḍukoḷi,* பெ.(n.) உறக்கத்தில் படுக்கும் பாயிலும் உடுக்கும் உடையிலும் மோண்டு கொள்ளும் பையன் அல்லது பெண்பிள்ளை; one who (a boy or girl) soils bed or dress by urine.

[மோண்டு + கொளி, கொள்ளி → கொளி, மொள் → மோள். மோளுதல் = சிறுநீர் பாய்ச்சுதல் அல்லது கழித்தல். (வே.க.4,92,93)]

மோணம் *mōṇam,* பெ.(n.) 1. பழத்தின் வற்றல்; dried fruit. 2. பாம்புப் பெட்டி; box for carrying snakes.

மோத்திரம் *mōttiram,* பெ.(n.) சிறுநீரகத்தில் உருவாவதும் பிறப்புறுப்புகள் வழியாக வெளியேறுவதுமான நீர்மம், மூத்திரம்; urine. மறுவ. சிறுநீர்.

[மொள் → மோள். மோளுதல் = துளையினின்று சிறுநீர் பாய்ச்சுதல் அல்லது கழித்தல். மோள் → மோட்டிரம் → மோத்திரம் → மூத்திரம் (பாண்டி நாட்டு வழக்கு) (வே.க.4,92,93)]

மோத்தை[1] *mōttai,* பெ.(n.) 1. செம்மறியாட்டுக் கடா; ram. *"மோத்தையுந் தகரு முதலும்" (தொல். பொ. 602).* 2. வெள்ளாட்டுக்கடா (சூடா.); goat. 3. மேழவேரை (சூடா. உள். 9); aries.

க. மேகெ (பெண்ணாடு); தெ. மேக (ஆட்டுக்கடா).

[மொத்து → மொத்தை = திரளை. மொத்தை → மோத்தை = விலங்குகளின் ஆண் பொதுவாகப் பெண்ணினும் பருத்திருப்பதால், கடா, மோத்தை, மேழகம் (மோழகம்) முதலிய பெயர்களாற் குறிக்கப்பெறும். (மு.தா. 210)]

மோத்தை[2] *mōttai,* பெ.(n.) 1. வாழை, தாழை முதலியவற்றின் மடல் விரியாத பூ; spathe or unblown flower, as of plantain, fragrant screw-pine, etc. *"நெடலை வக்கா முதலியன....... தாழம்பூ மோத்தை போலிருப்பின" (நற். 211, உரை).* 2. முற்றாத தேங்காய் (கோவை); half-ripe coconut.

[மொத்து → மொத்தை = பருமன், உருண்டை, சோற்றுருண்டை. மொத்தை → மோத்தை (வே.க.4,50)]

மோத்தைக்கடா *mōttai-k-kaḍā,* பெ.(n.) மோத்தை[1] 1 பார்க்க; see *mōttai*[1]*1.*

[மோத்தை + கடா]

மோதகக்கெண்டை *mōdaga-k-keṇḍai,* பெ.(n.) நீலமும் பசுமையுங் கலந்தகெண்டை மீன்வகை; large - eyed carp, bluish green.

[மோதகம் + கெண்டை]



மோதகக்கெண்டை

மோதகக்கொண்டை *mōdaga-k-koṇḍai,* பெ.(n.) உருண்டையாகக் கட்டும் உச்சிக் கொண்டை; a kind of rounded braid of hair on the top of head.

[மோதகம் + கொண்டை]



மோதகக்கொண்டை

மோதகத்தேக்கு *mōdaga-t-tēkku,* பெ.(n.) கொழுக்கட்டைத் தேக்கு; a kind of tree.

[மோதகம்³ + தேக்கு]

மோதகப்பிரியன் *mōdaga-p-piriyaṉ,* பெ.(n.) பிள்ளையார் (விநாயகன்)(யாழ்.அக.); *Gaṇēšā.*

[மோதகம் + பிரியன்]

மோதகம்¹ *mōdagam,* பெ.(n.) 1. அப்பவருக்கம்; cake of rice-flour made into a ball and boiled or steamed. *"வகையமை மோதகம்" (மதுரைக். 626).* 2. கொழுக்கட்டை (கந்தபு. காவிரி. 25); a bolus-like preparation of rice-flour. 3. பிட்டு; a kind of pudding, made of flour. *"காழியர் மோதகத் தூழுறு விளக்கமும்" (சிலப். 6, 137).* 4. தோசை (வின்.); a kind of flour-cake.

[முள் → மூழ். மூழ்த்தல் = மூடுதல். மூழ் → மூடு → மூடி (மு.தா.190). மூடு → மூடகம் = உள்ளே பொருள்களை வைத்து மூடியது. மூடகம் → மோடகம் → மோதகம்]

மோதகம்² *mōdagam,* பெ.(n.) 1. மகிழ்ச்சி (வின்.); delight, mirth. 2. இணக்கம் (யாழ்.அக.); agreement, suitability.

[மோதம் → மோதகம்]

மோதகம்³ *mōdagam,* பெ.(n.) 1. குதிரைப் பிடுக்கன் மரம்; a tree. 2. கொழுக்கட்டைத் தேக்கு; a tree.

மோதகம்⁴ *mōdagam,* பெ.(n.) மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டத்தில் உள்ள ஊர்; a village in Madurai dt., Tirumangalam taluk.

[மூடகம் → மோடகம் → மோதகம் = கொழுக்கட்டை, கல்லுப்பட்டி பக்கத்திலுள்ள இவ்வூரில் முதன் முதல் நில அளவை செய்யப்பட்டது. முதன்முதலில் பிள்ளையார் சுழி போடப்பட்ட பகுதியாதலால் அவருக்கு விருப்பமான பண்டத்தின் பெயரால் மோதகம் என்று பெயர்பெற்றது. (தமி.ஊர்)]

மோதகமரம் *mōdaga-maram,* பெ.(n.) (பீநாறி) நீண்ட மரவகை; fetid tree.

[மோதகம் + மரம்]

மோதகவல்லிமரம் *mōdaga-vallimaram,* பெ.(n.) கொழுக்கட்டை மரம்; a tree.

மோதபர் *mōdapar,* பெ.எ. (adj.) நம்பிக்கையான (செங்கை.); reliable, respectable, trustworthy.

மோதபர்குடி *mōdapar-kuḍi,* பெ.(n.) நம்பிக்கையின் குடித்தனக்காரன் (செங்கை.); respectable tenant of substantial means.

[மோதபர் + குடி]

மோதம் *mōdam,* பெ.(n.) 1. மகிழ்ச்சி; joy, rejoicing, gladness. *"முன்புற்றது கண்டெழு மோதமுறா" (வேதாரணி. பிரமோப. 16).* 2. களிப்பு; intoxication. 3. நறுமணம்; smell, scent, perfume. 4. ஓமம் (மலை.); Bishop's weed.

மோதமம் *mōdamam,* பெ.(n.) வெள்ளுமத்தை; dhatura berring white flowers.

மோதமரம் *mōdamaram,* பெ.(n.) குதிரை பிடுக்கன் மரம்; a tree.

மோதயந்தி *mōdayanti,* பெ.(n.) காட்டுமல்லிகை (மூ.அ.); wild jasmine.

மோதல் *mōdal,* பெ.(n.) கைகலப்பு, சண்டை, தகராறு; clash. *'மாணவர் மன்றத் தேர்தல் தொடர்பாக மாணவர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டது' (உ.வ.).*

[மோது → மோதல். 'அல்' தொ.பெ.ஈறு]

மோதலை[1] *mōdalai,* பெ.(n.) 1. முகதலை; front piece or part of a cloth. *"மோதலை முண்டு பார்வைப் புறமாதலால் கெட்டியாய் நெய்யப்பட்டிருக்கும்" (நாஞ்.).* 2. போர்முனை (இ.வ.); battle-front.

[முகதலை → மோதலை]

மோதலை[2] *mōdalai,* பெ.(n.) கைம்மாற்றுக் கடன்(இ.வ.); temporary loan.

[முகதலை → மோதலை]

மோதவம் *mōdavam,* பெ.(n.) நறுமணம்; perfume, scent, smell.

[மோதம் → மோதவம்]

மோதனங்கமூலி *mōdanaṅga-mūli,* பெ.(n.) சித்தாமணக்கு; castor plant

மோதானி *mōdāni,* பெ.(n.) மல்லிகை; jasmine.

மோதானிகம் *mōdānigam,* பெ.(n.) குட மல்லிகை; jasmine bearing flowers with many whorls.

மோதிரக்கள்ளி *mōdira-k-kaḷḷi,* பெ.(n.) கொடிவகை (மூ.அ.); a creeper.

[மோதிரம் + கள்ளி]

மோதிரக்கன்னி *mōdira-k-kanni,* பெ.(n.) நீண்ட செடிவகை (வின்.); climbing flax.

ம. மோதிரக்கண்ணி; க. மோதிரக்கண்ணீ.

[மோதிரக்கண்ணி → மோதிரக்கன்னி]

மோதிரப்பாட்டு *mōdira-p-pāṭṭu,* பெ.(n.) நாடகநூல்வகை; a dramatic poem. *"நாடகச் செய்யுளாகிய மோதிரப் பாட்டுங் .... கடகண்டும்" (தொல். பொ. 492, உரை).*

[மோதிரம் + பாட்டு]

மோதிரம் *mōdiram,* பெ.(n.) தங்கம், வெள்ளி போன்ற மாழைகளால் செய்யப்படுவதும் விரலில் அணிந்து கொள்வதுமான சிறுவளையமான விரல்அணி, கணையாழி; finger-ring. *"சுறாவே றெழுதிய மோதிரந் தொட்டாள்" (கலித். 84, 23), 'குட்டுப்பட்டாலும் மோதிர விரலால் குட்டுப் பட வேண்டும்' (பழ.).*

மறுவ. விரற்செறி, கணையாழி.

ம. மோதிரம்; க. மோதிர.

[முகம் → முகர் = அரசனது முகம் அல்லது தலையுருவம் பொறித்த முத்திரை. முக + திரம் - முகத்திரம் → மோதிரம் = முத்திரையிட்ட விரலணி. முத்திரை மோதிரம் என்னும் வழக்கை நோக்குக. (வ.வ.2,72)]

முதலில் மோதிரம் முத்திரையுடையதாக இருந்தது. பின்னர் முத்திரையில்லாத மோதிரம் அணியும் பழக்கம் உண்டாக அதிலிருந்து வேறுபடுத்திக் காட்ட முத்திரை அடை சேர்த்து முத்திரை மோதிரம் என வழங்கும் வழக்கம் ஏற்பட்டது.



மோதிரம்

மோதிரமாறுதல் *mōdira-māṟudal,* பெ.(n.) கிறித்தவ மதத்தார் மணஞ் செய்யும் போது மணமகனும் மணமகளும் கணையாழியை மாற்றிக் கொள்ளுகை (கிறித்.); exchange of rings between bride and bridegroom at their marriage.

[மோதிரம் + மாறுதல். மாறு → மாறுதல். 'தல்'. தொ.பெ.ஈறு.]

மோதிரமுருந்து *mōdira-murundu,* பெ.(n.) குரல் வளையில் காணப்படும் மோதிரத்தைப் போன்ற வட்டமான இள எலும்பு; cricoid cartilage.

[மோதிர + முருந்து]

மோதிரவிரல் *mōdira-viral,* பெ.(n.) சுண்டு விரலுக்கு அடுத்த விரல்; ring-finger.

ம. மோதிரவிரல்.

[மோதிரம் + விரல். மோதிரம் அணியும் விரல். விரி → விரல்.]



மோதிரவிரல்

மோதிரவிளையாட்டு *mōdira-viḷaiyāṭṭu,* பெ.(n.) 1. திருமணத்தில் குடத்து நீரில் மோதிரமிட்டு மணமக்கள் எடுத்து ஆடும் விளையாட்டு (வின்.); an item in the marriage festivites in which the bride and bridegoom pick out a ring dropped

into a pot of water. 2. மோதிரத்தை ஒளித்து எடுக்கும் பிள்ளை விளையாட்டு வகை (இ.வ.); a children's game of hiding a ring and finding it.

[மோதிரம் + விளையாட்டு]

மோதிரம்வைத்தல் *mōdiram-vaittal,* பெ.(n.) மோதிரத்தை ஒளித்து எடுக்கும் பிள்ளை விளையாட்டு வகை (இ.வ.); a children's game of hiding a ring and finding it.

[மோதிரம் + வைத்தல். 'தல்'. தொ.பெ.ஈறு.]

ஆடுவாரெல்லாம் இருகட்சியாகப் பிரிந்து கொண்டு, கட்சிக் கொருவராக இருவரொழிய ஏனையரெல்லாம், கட்சி வாரியாய் இரு வரிசையாக எதிரெதிர் உட்கார்ந்து கொள்வர். உட்காராத இருவரும் தத்தம் கட்சி வரிசையின் பின்னால் நின்று கொண்டிருப்பர். அவருள் ஒருவர் ஒரு மோதிரத்தைக் கையில் வைத்துக் கொண்டு குனிந்து தம் வரிசையில் ஒவ்வொருவர் பின்னாலும் அதை வைப்பதாக நடித்து, யாரேனும் ஒருவர் பின்னால் வைத்து விட்டு வரிசை நெடுகிலும் சென்றபின் நிமிர்ந்து நிற்பர். எதிர் வரிசைக்குப் பின்னால் நிற்பவர், மோதிரம் வைக்கப்பட்ட இடத்தை இன்னாருக்குப் பின் என்று சுட்டிக் கூற வேண்டும். சரியாய்ச் சொல்லிவிடின், அடுத்த முறை எதிர் வரிசையின் மோதிரம் வைத்தல் வேண்டும்; இல்லாவிடின் முன் வைத்தவரே வைத்தல் வேண்டும். இங்ஙனம் தொடர்ந்து ஆடப்பெறும். கீழேயிருப்பவர் ஆட்டு நெடுகலும் உட்கார்ந்துகொண்டே யிருப்பர் (த.வி.129).

மோதிரைகெங்கை *mōdirai-gengai,* பெ.(n.) சீந்திற்கொடி; moon creeper.

மோதினி *mōdini,* பெ.(n.) 1. மான்மணத்தி (கஸ்தூரி) (மூ.அ.); musk. 2. மல்லிகை; jasmine.

மோது¹-தல் *mōdu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. ஒரு பரப்பில் வேகமாக இடித்தல், புடைத்தல் (பிங்.); to hit, strike, smite, butt. *"கனகநிற வேத னபயமிட மோது கரகமல"* (திருப்பு. 543), *'வேகமாக வந்த பேருந்து மரத்தின் மேல் மோதியது'* (உ.வ.). 2. தாக்குதல்; to blow against, dash against, push against with force. *"மோது முது திரையால் மொத்துண்டு"* (சிலப். 7, கட்டுரை. 7). 3. அப்புதல் (வின்.); to plaster, put as, as earth to a mud wall. *"சுவர்க்கு மண் மோதுகிறது"*. 4. சண்டை போடுதல்; to fight, clash, as of nations. *'போரில் இரண்டு நாடுகளும் கடுமையாக மோதிக்கொண்டன'* (உ.வ.). 5. விளையாட்டு, தேர்தல் போன்றவற்றில் போட்டியிடுதல்; to clash, meet in games, in election etc. *'இறுதிப் போட்டியில் தமிழ் நாட்டணியும் கருநாடக அணியும் மோதிக்கொண்டன'* (உ.வ.). *'நண்பர்களா யிருந்த இருவரும் வரும் தேர்தலில் மோதிக்கொள்ள இருக்கின்றனர்'* (உ.வ.).

ம. மோதுக; க., தெ., பட. மோது.

[முள் → முட்டு → மொட்டு = தலையில் வாங்கும் குட்டு. முள் முத்து மொத்து. மொத்துதல் = உடம்பிற் கையாலும் கருவியாலும் அடித்தல். முத்து → மொத்து → மொது → மோது. மோதுதல் = முட்டுவதினும் சற்று மெலிதாய்த் தாக்குதல்]

மோது² *mōdu,* பெ.(n.) தாக்கு; blow, stroke. *'அவனை ஒரு மோது மோதினான்'.*

க. மோடு.

[முத்து → மொத்து → மொது → மோது]

மோது³ *mōdu,* பெ.(n.) 1. வைக்கோற் கட்டு (இ.வ.); bundle of straw. *'மோதுகட்டி யிழுத்தாய் விட்டது, சுவாமி புறப்படலாம்'* (இ.வ.). 2. எண்ணெய் வடிக்கும் பொருட்டுச் சேர்த்துக் காய்ச்சும் நீர்; water added to

crushed castor-beans and heated, in extracting oil.

தெ. மோத (வெற்றிலைச் சிறுகட்டு).

[முள் → முழு → முழுது = முழுமை. முழு → முது → மொது → மொத்து → மொத்தம் = ஒருவகைப் பொருள் அல்லது பலவகைப் பொருள்கள் எல்லாம் சேர்ந்த முழுத்திரட்சி (மு.தா.214) முழு → முது → மொது → மோது]

மோதுகடுக்காய் *mōdu-kaḍukkāy,* பெ.(n.) கடுக்காய்த் தோல்; outer skin of the gall nut.

மோதை *mōdai,* பெ.(n.) வசம்பு (சங்.அக.); sweet flag.

மோந்தை[1] *mōndai,* பெ.(n.) முகம்; the face (சேரநா.).

ம. மோந்த; க. மோதி; தெ. மோமு; பட. மோந்தெ.

[முகம் → முகந்தை → மோந்தை]

மோந்தை[2] *mōndai,* பெ.(n.) தோற்கருவி வகை; a kind of drum. *"மோந்தை முழாக்குழ றாள மொர் வீணை"* (தேவா. 349, 5).

ம. மொந்தா.

[முள் → மொள் → மொண்டை → மொந்தை = கள் முகக்குங்கலம், மொந்தை போன்ற தோற்கருவி. (மு.தா.289). மொந்தை → மோந்தை.]



மோந்தை[2]

மோப்பநாய் *mōppa-nāy,* பெ.(n.) பெரும்பாலும் கள்ளத்தனமான அல்லது இடர்ப்பாடுடைய பொருள்களை முகர்ந்து கண்டறியும் வகையில் காவல் துறையால் பழக்கப்படுத்தப்பட்ட நாய்; sniffer dog. *'வைப்பகத்தில் நடந்த கொள்ளையை துப்புத் துலக்குவதற்கு மோப்ப நாய்கள் வரவழைக்கப்பட்டன' (உ.வ.).*

[மோப்பம் + நாய்]

மோப்பம் *mōppam,* பெ.(n.) 1. மணத்தை மூக்கால் உணர்வது; scent, smell. *'காட்டிலுள்ள விலங்குகள் தம் மோப்பத் திறனால் மனித நடமாட்டத்தை அறிந்து விடுகின்றன' (உ.வ.).* 2. மூக்கு (யாழ்.அக.); nose.

[மூக்கம் → முகர் = முகம், மூக்கு. முகர்தல் = மணமறிதல். முகர் → மோர் → மோ. மோத்தல் = மணமறிதல். மோ → மோப்பு → மோப்பம் = மணமுகர்வு (வே.க.4, 4)]

மோப்பம்பிடி-த்தல் *mōppam-piḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) மணத்தால் உணர்ந்து கண்டறிதல்; to scent, to discern by smell, as hounds on a track. *'கொலை நடந்த இடத்திலிருந்து மோப்பம் பிடித்துக் கொண்டு ஓடிய நாய் அருகிலுள்ள சாலையில் போய் நின்றது' (உ.வ.).* 2. காமவிருப்பத்துடன் (விச்சையுடன்) ஒருத்தியைத் தொடர்தல்; to follow a woman with improper desire.

[மோப்பம் + பிடி-,]

மோப்பி[1] *mōppi,* பெ.(n.) மோப்பம் பார்க்க (யாழ்.அக.); see *mōppam.*

[மோப்பம் → மோப்பி]

மோப்பி² *mōppi,* பெ.(n.) கைம்பெண் (இ.வ.); widow, used disrespectfully.

தெ. மோபி; க. மோபு.

மோப்பு *mōppu,* பெ.(n.) அன்பு; desire, amour. *"முஷ்டிவாங்கிப் பயலோ மோப்பாச்சு" (விறலிவிடு. 772).*

மோப்புக்கயிறு *mōppu-k-kayiṟu,* பெ.(n.) முறுக்குக் கயிறு; twisted rope.

[முறுக்கு + கயிறு – முறுக்குக் கயிறு → மொறப்புக் கயிறு → மோப்புக்கயிறு]

மோம் *mōm,* பெ.(n.) உரைகல்லில் ஒற்றும் கருப்பு மெழுகு; a black coloured wax with which the rubbed gold or silver on the touch stone is pressed against.

மோம்பழம் *mōm-baḻam,* பெ.(n.) நன்மணமுள்ள கனி; delicious, fragrant fruit. *"மோம்பழம் பெற்றாற் போலே" (ஈடு. 3, 5, 3).*

மோய் *mōy,* பெ.(n.) பெண்பால் பெற்றோர்; a female parent, mother. *"உன் மோயின் வருத்தமும்" (திவ். பெருமாள். 9, 9).*

மறுவ. அம்மனை, அவ்வை, அன்னை, ஆய், ஈன்றாள், தாய், பயந்தாள், யாய்.

[தம் + ஆய் → தமாய் → மோய். இனி அம்மாய் → அம்மோய் → மோய் விளி பொருட்டமைந்த வடிவமுமாம்]

மோயன் *mōyaṉ,* பெ.(n.) 1. பணியாட்கள் (வின்.); establishment. 2. கோயிற் படித்தரக்காரர் (இ.வ.); members of a temple establishment.

மோர்¹ *mōr,* பெ.(n.) நீர்விட்டுக் கடைந்த தயிர்; buttermilk, curd diluted with water. *"நாண் மோர் மாறும் .... ஆய்மகள்" (பெரும்பாண். 160). 'மோரைத் தெளித்தாலும் திருமணம் (கலியாணம்) தான், முத்தைத் தெளித்தாலும் திருமணம் (கலியாணம்) தான்' (பழ.).*

ம. மோர்; க. மொசரு, மசரு (தயிர்); து. மொசரு (தயிர்); குட. மோரி, கட்டிமோரி (தயிர்); கோத. மொசர்; துட. மொர்; பட. மொசரு (தயிர்).

[முள் → முளி. முளிதல் = பொங்குதல். முள் → முறு. முளி தயிர் = நன்றாய்த் தோய்ந்த தயிர். முண்டகம் = கள். (முள்) → முர → முரப்பு. முரத்தல் = புளித்தல். முர → மோர் (மு.தா.63)]

மோர்² *mōr,* பெ.(n.) தேன்; honey.

மோர்³ *mōr,* பெ.(n.) முகர் பார்க்க; see *mugar.*

[முகர் → மோர்]

மோர்க்களி *mōr-k-kaḷi,* பெ.(n.) மோரோடு அரிசிமாச் சேர்த்துச் செய்த களியுணவு; a kind of repast made of buttermilk and rice flour.

[மோர் + களி]

மோர்க்கறி *mōr-k-kaṟi,* பெ.(n.) மோர்க் குழம்பு பார்க்க; see *mōr-k-kuḻambu.*

[மோர் + கறி]

மோர்க்குழம்பு *mōr-k-kuḻambu,* பெ.(n.) மோர் சேர்த்துச் செய்யுங் குழம்பு வகை (இந்துபாக. 11); a kind of sauce made in buttermilk. *'பெரியவருக்கு மோர்க்குழம்பு மிகவும் பிடிக்கும்' (உ.வ.).*

[மோர் + குழம்பு]

மோர்க்கூழ் *mōr-k-kūḻ,* பெ.(n.) மோர்க்களி (இ.வ.) பார்க்க; see *mōr-k-kaḷi.*

[மோர் + கூழ்]

மோர்ச்சாற்றமுது *mōr-c-cāṟṟamudu,* பெ.(n.) மோர்ச்சாறு பார்க்க; see *mōr-c-cāṟu.*

[மோர் + சாற்று + அமுது]

மோர்ச்சாறு *mōr-c-cāṟu,* பெ.(n.) மோர் சேர்த்துச் செய்த சாறு; a kind of sauce prepared with butter milk.

[மோர் + சாறு]

மோர்மிளகாய் *mōr-miḷagāy,* பெ.(n.) மோரிலிட்டுப் பக்குவபடுத்திய மிளகாய்; chillies cured with buttermilk. *'பழைய சோற்றுக்கு மோர்மிளகாய் இருந்தால் நன்றாக இருக்கும்' (உ.வ.).*

[மோர் + மிளகாய். மிளகு + காய் – மிளகாய்.]

மோர்மிளகு *mōr-miḷagu,* பெ.(n.) மோர் மிளகாய் பார்க்க; see *mōr-miḷagāy.*

[மோர் + மிளகு]

மோரடகம் *mōraḍagam,* பெ.(n.) மோரடம்[1] பார்க்க; see *mōraḍam*[1].

[மோரடம் → மோரடகம்]

மோரடம்[1] *mōraḍam,* பெ.(n.) 1. கரும்புவேர் (மூ.அ.); root of sugar-cane. 2. வீழிப்பூடு (தைலவ. தைல.); a straggling shrup with simple oblong leaves and greenish flowers.

[முருடு → முரடு = கரட்டுத்தன்மை. முரடு → மொரடு → மோரடு → மோரடம் = கரடு முரடாகக் காணப்படுவது]

மோரடம்[2] *mōraḍam,* பெ.(n.) பெருங் குரும்பை (மலை.); bowstring hemp.

மோரடி *mōraḍi,* பெ.(n.) கரும்புத்தட்டை; a top portion of sugarcane with leaves.

மோரம் *mōram,* பெ.(n.) பழையவரிவகை; an ancient tax. *"மோரமும் இலைவாணியப் பாட்டமும் திங்கட் காசும்" (T.A.S.i, 165).*

மோரி *mōri,* பெ.(n.) சிறுவடிகால்; small water course, channel, gutter. *'தன் வயலுக்கு மோரி ஒன்று வெட்டினான்' (இ.வ.).*

மோரீசுவாழை *mōrīcu-vāḻai,* பெ.(n.) ஆனை வாழை; a kind of plantain.

மோரு–தல் *mōru-,* 3 செ.குன்றாவி. (v.t.) முகர்தல்; to smell.

[முகர் → மோர் → மோரு (கொ.வ.)]

மோரெண்ணெய் *mōr-eṇṇey,* பெ.(n.) மோர் சேர்த்துச் செய்யும் மருந்தெண்ணெய் (நாஞ்சி.); a medicinal oil prepared with buttermilk.

[மோர் + எண்ணெய்]

மோரை *mōrai,* பெ.(n.) 1. முகம் (இழிவுக் குறிப்பு) (கொ. வ.); face, a word of contempt. *'அவன் முகரையைப் பார் எப்படி யிருக்கிறதென்று' (உ.வ.).* 2. முகவாய்க் கட்டை; chin. 3. முகப்புப்பக்கம்; front portion.

ம. மோர்; க., பட. மோரெ; தெ. மோர; து. மோணெ, மோனெ.

மறுவ. முகவாய், மோவாய், மொகரை.

[முகம் → முகர் = முகம், மூக்கு. முகர் → முகரை = பழிக்கப்படும் முகம். முகரை → மோரை = பழிக்கப்படும் முகம், முகவாய்க் கட்டை (வே.க.4,4)]

மோரைக்கட்டை *mōrai-k-kaṭṭai,* பெ.(n.) மோரை பார்க்க; see *mōrai.*

தெ. மோரகொட்டுலு.

[முகரை → மோரை + கட்டை]

மோரைக்கயிறு *mōrai-k-kayiṟu,* பெ.(n.) மாட்டின் வாயைச் சுற்றிக் கட்டுங் கயிறு (நாஞ்சி.); rope tied round the mouth of bulls.

[முகரைக்கயிறு → மோரைக்கயிறு]

பெரும்பாலும் 'ஆ' வைப் பிடித்துக் கட்டுவதற்கு ஏற்றதாக அமைவது மோரைக் கயிறு, மூக்கணாங் கயிறு (எருதுக்கு), கொம்பு ஆகியவற்றையும் பிடித்துக் கட்டுவதற்குப் பயன் படுத்துவதுண்டு.

மோரோடம் *mōrōḍam,* பெ.(n.) செங் கருங்காலி; red catechu. *"பாதிரி.......... மாமலர் நறுமோரோடமொடு" (நற். 337).*

மோவம் *mōvam,* பெ.(n.) மோகனீயம் பார்க்க; see *mōgaṉiyam.* *"மோழை மோவத்தினுக்கும்" (மேருமந். 103).*

மோவாய் *mōvāy,* பெ.(n.) 1. முகத்தில் வாய்க்குக் கீழுள்ள இடம் (வின்.); chin. *"குச்சி னிரைத்த குரூஉ மயிர் மோவாய்" (புறநா. 257).* 2. தாடி (வின்.); beard.

மறுவ. முகரை, மோரை.

தெ. மோவி (உதடு); துட. மொய் (தாடி).

[முகவாய் → மோவாய் (வே.க.4,5)]

மோவாய்க்கட்டை *mōvāy-k-kaṭṭai,* பெ.(n.) மோவாய் 1 பார்க்க (கொ.வ.); see *mōvāy1.*

[மோவாய் + கட்டை]

மோவாய்க்கட்டைபிடி-த்தல் *mōvāy-k-kaṭṭai-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) மோவாய்தாங்கு-தல் பார்க்க (கொ.வ.); see *mōvāy-tāṅgu-,*

[மோவாய் + கட்டை + பிடி-,]

மோவாய்தாங்கு-தல் *mōvāy-tāṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கெஞ்சுதல்; to beg, make entreaties, as by touching another's chin.

[மோவாய் + தாங்கு-,]

மோவாய்பிடி-த்தல் *mōvāy-piḍi-,* 4 செ. குன்றாவி. (v.t.) மோவாய்தாங்கு-தல் பார்க்க; see *mōvāy-tāṅgu-,*

[மோவாய் + பிடி-,]

மோவாயெலும்பு *mōvā-y-elumbu,* பெ.(n.) முகரையெலும்பு; lower jaw-bone.

[மோவாய் + எலும்பு]

மோழல் *mōḻal,* பெ.(n.) பன்றி (பிங்.); swine.

[(மொழு) → மோழை → மோழல் = மொட்டை முகமுள்ள பன்றி (மு.தா. 101)]

மோழலம்பன்றி *mōḻalam-paṉṟi,* பெ.(n.) ஆண்பன்றி; boar. *"மோழலம் பன்றியோடு முளவுமா" (சீவக. 1233).*

[மோழலம் + பன்றி. மொழு → மோழை → மோழல் → மோழலம்]

மோழனை *mōḻaṉai,* பெ.(n.) காட்டுமல்லிகை (சங்.அக.); wild jasmine.

மோழி *mōḻi,* பெ.(n.) மோழிக்குழம்பு பார்க்க; see *mōḻi-k-kuḻambu.*

மோழிக்குழம்பு *mōḻi-k-kuḻambu,* பெ.(n.) புளிக்கோசு போன்ற குழம்பு வகை; a mild sauce in imitation of a Malay curry.

[மோழி + குழம்பு]

மோழை[1] *mōḻai,* பெ.(n.) 1. கொம்பில்லாத விலங்கு; hornless or dehorned cattle. *'ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்'.* 2. மொட்டை (யாழ்.அக.); anything defective. 3. மரத்தின் அடிமுண்டம் (வின்.); stump, block. 4. மடமை; stupidity. *"மோழை மோவத்தினுக்கும்" (மேருமந். 103).* 5. குமிழி; bubble. *"அண்ட மேழை யெழ" (திவ். திருவாய். 7, 4, 1).* 6. மடு; pool. *"ஆழியா னென்று மாழ மோழையிற் பாய்ச்சி" (திவ். பெரியாழ். 3, 7, 4).* 7. கஞ்சி (பிங்.); gruel. 8. காடி; vinegar. 9. வெடியுப்பு; nitre.

ம. மோல; க. மோளெ.

[(மொழு) → மோழை = மொட்டை, கொம்பில்லா மாடு, மர அடி முண்டம். (மு.தா.101)]

மோழை[2] *mōḻai,* பெ.(n.) 1. வெடிப்பு; cleft, crevice. 2. கீழாறு; subterranean water-course. *"மண்டலங் கிழிந்த வாயின் மறிகடன் மோழைமண்ட" (கம்பரா. பொழிலிறு. 60).*

[முள் → முண்டு. முண்டுதல் = பன்றி முகத்தாள் கிளைத்தல் (மு.தா.257). முள் → முளை → முழை → (மொழை) → மோழை]

மோழைக்கறுப்பு *mōḻai-k-kaṟuppu,* பெ.(n.) நெல்வகை (இ.வ.); a kind of paddy.

[மோழை + கறுப்பு]

மோழைக்கொம்பன் *mōḻai-k-komban,* பெ.(n.) கொம்பு வளர்ச்சியறும்படி சுடப்பெற்ற கொம்புள்ள மாடு; ox with horns hindered in their growth, dehorned cattle.

[மோழை + கொம்பன். கொம்பு → கொம்பன். 'ன்' உடைமை குறித்த ஈறு]

மோழைக்கொம்பு *mōḻai-k-kombu,* பெ.(n.) வளர்ச்சியறும்படி சுடப்பட்ட கொம்பு (வின்.); horn hindered from growing by being burnt.

[மோழை + கொம்பு. கொள் → கொம் → கொம்பு = வளைந்த கோடு, வளைந்த விலங்கின் தலைமேல் அமையும் உறுப்பு]

மோழைபுறப்படு-தல் *mōḻai-puṟa-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) கீழாறு வெளியே தோன்றிப் பாய்தல் (வின்.); to gush out, as water from a subterranean.

[மோழை + புறப்படு-,]

மோழைபோது *mōḻai-pōdu,* பெ.(n.) மோழை உருவாதல்; forming hole in the field, by crabs.

மறுவ. கீழாறு போடுதல், மடு போடுதல், பேடு போதல்.

[மோழை + போது]

மோழைமிதி *mōḻai-midi,* பெ.(n.) வயலில் நண்டால் உண்டாக்கப்பட்ட ஓட்டை (மோழை) யை மிதிப்பது; treading the hole in the field.

[மோழை + மிதி]

மோழைமுகம் *mōḻai-mugam,* பெ.(n.) பன்றி (நிகண்டு.); swine.

[மொழு → மோழை + முகம். மொட்டை முகமுள்ள பன்றி. மோழல் = பன்றி. (மு.தா. 101)]

மோழைமை *mōlaimai,* பெ.(n.) 1. மடமை; stupidity. *"முன்பு சொன்ன மோழைமையால் முட்டை மனத்தீரே" (தேவா. 188, 8).* 2. கேலிப் பேச்சு; word of ridicule. *"முன் பெலாஞ்சில மோழைமை பேசுவர்" (தேவா. 359, 4).*

[(மொழு) → மோழை = மொட்டை (மு.தா.101), மோழை → மோழைமை = அறிவு மழுங்கிய நிலை, மடமை]

மோழைவழி *mōlai-vali,* பெ.(n.) நுழைவழி (திருக்காளத். பு. அரும்.); narrow gate or opening.

[மோழை + வழி]

மோளு-தல் *mōlu-,* 12 செ.கு.வி. (v.i.) சிறுநீர் கழித்தல்; to pass urine, to urinate. *'பிள்ளை படுக்கையில் மோண்டு விடுகிறது' (உ.வ.).*

[முள் → மொள் → மொண்டான் = நீர்மொள்ளுங் கலவகை. மொள் → மொண்டை → மொந்தை = மொள்கலம். மொள் → மோள். மோளுதல் = சிறுநீர் பாய்ச்சுதல் அல்லது கழித்தல் (வே.க.4,92). மோள் → மோட்டிரம் → மோத்திரம் → மூத்திரம். வடமொழியில் மோள் என்னும் பகுதி அல்லது வினை இல்லை. மூத்திரம் என்னும் வினைப்பெயரே உள்ளது. வினைப் பகுதியினின்று வினைப்பெயர் அமையுமேயன்றி, வினைப் பெயரினின்று வினைப் பகுதி அமையாது (மு.தா. 276)]

மோறா[1]-த்தல் *mōrā-,* 7 செ.கு.வி. (v.i.) 1. அங்காத்தல்; to gape. *"நரசிம்மத் தினுடைய மோறாந்த முகத்தையும்" (ஈடு, 4, 8, 7).* 2. சோம்பியிருத்தல்; to be lazy. *"மோறாந் தொரொரு கானினையா திருந்தாலும்" (கேவா. 1051, 3).*

தெ. மோராத்திலு; க. மோராதி.

மோறை[1] *mōrai,* பெ.(n.) முருட்டுத்தனம்; wildness, savageness. *"மோறை வேடுவர் கூடிவாழ்" (தேவா. 919, 4).*

[முகரை → மோரை = பழிக்கப்படும் முகம். மோரை → மோறை = (இயல்பாய் இல்லாமல்) முரட்டு முகத்தோற்றம், முரட்டுத்தனம்]

மோறை[2] *mōrai,* பெ.(n.) 1. மோவாய்; chin, used in contempt. *'நான் உன் மோறையைப் பெயர்ப்பேன்'.* 2. மோறைக் கட்டை பார்க்க; see *mōrai-k-kattai.*

தெ. மோறா; து. மோரீ.

[முகரை → மோரை → மோறை]

மோறைக்கட்டை *mōrai-k-kattai,* பெ.(n.) முகம் (கொ. வ.); face, used in contempt.

[முகரைக்கட்டை → மோரைக்கட்டை → மோறைக்கட்டை]

மோனகந்தாள் *mōnakandāl,* பெ.(n.) உடும்பு; guana.



மோனகந்தாள்

மோனை[1] *mōnai,* பெ.(n.) 1. மோனைத் தொடை பார்க்க (தொல். பொ. 404); see *mōnai-t-todai.* 2. முதன்மை; first. *"மோனை மங்கலத் தியற்றுவ" (உபதேசகா.*

சிவபுண். 63). "மோனையா மெனவுரைத்த சவணத்திற்கு" (வேதா. சூ. 131).

[முகம் → முகப்பு = முள் மண்டபம், முனைப் பகுதி. முகம் → முகன் → முகனை → மோனை = சீர்களின் முதலிடம், அவற்றின் முதலெழுத்துகள் ஒன்றி வரவல், முகப்பு (மு.தா.36)]

மோனை² *mōṉai,* பெ.(n.) மகன் (யாழ்ப்.); sonny, used as a term of endearment in addressing a child.

ம. மோன் (மகன்).

[மகன் → மொ(க)ன் → மோன். மோன் → மோனை]

மோனைத்தொடை *mōṉai-t-toḍai,* பெ.(n.) செய்யுட்டொடை ஐந்தனுள் சீர்களின் முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது (இலக். வி. 723, உரை); a versification in which the first letters of all or some feet of a line alliterate, one of five *toḍai, q.v.*

[மோனை + தொடை. தொடு → தொடை]

ஒலிப்பு முறையால் முதலெழுத்து ஒன்றி வருவது மோனை.

'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

இங்கு முதலடியில் முதல் சீரில் வரும் அகரம் நான்காம் சீரில் வரும் ஆகாரத்திற்கு மோனை அ, ஆ, ஐ, ஔ நான்கும் தமக்குள் ஒன்றனுக்கொன்று மோனையாகவும், இ, ஈ, எ, ஏ நான்கும் தமக்குள் ஒன்றனுக்கொன்று மோனையாகவும், சகரமும் தகரமும் தமக்குள் மோனையாகவும், ஞகரமும் நகரமும் தமக்குள் மோனையாகவும் வரும். யகரமும் ஞகரமும் மோனையாக வருதலும் ஏற்கத்தக்கதே. மெய்யெழுத்துகள் உயிர்மெய்யாக வரும் பொழுது முன்னர் குறிப்பிட்ட உயிரெழுத்துக்குத் தக்கபடி அமையும். அதாவது ச,சா,சை,சௌ தமக்குள் மோனையாகவும் த,தா,தை,தௌ தமக்குள் மோனையாக வரும். சு,சூ,செ,சே தமக்குள்ளும், தி,தீ,தெ,தே தமக்குள்ளும் மோனைகளாக அமையும். இவ்வாறே பிறவும் அமையும்.

மௌ

மௌ *mau,* பெ.(n.) தமிழ் நெடுங்கணக்கில் 'ம்' என்ற மெய்யெழுத்தும் 'ஔ' என்ற உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் (அசை) எழுத்து; the syllabic letter formed by adding the vowel (diphthong) 'au' to the consonant 'm'.

[ம் + ஔ = மௌ]

மௌவல் *mauval,* பெ.(n.) 1. காட்டு மல்லிகை; wild jasmine. *"ஞாழன் மௌவல்" (குறிஞ்சிப். 81).* 2. முல்லை (சூடா.); Arabian jasmine. 3. தாமரை; lotus. *"மௌவ னீண்மலர் மேலுறை வானொடு" (தேவா. 1213, 13).*

மௌவறி *mauvaṟi,* பெ.(n.) காட்டு மல்லிகை; wild jasmine.

மௌவாலி *mauvāli,* பெ.(n.) குதிரைவாலி; a plant.

மௌவாலி

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

எட்டாம் மடலம் – முதல் பாகம்

ய – வ

Vol. VIII - Part - I

து.இராசேந்திரன் இ.ஆ.ப

அரசு செயலாளர்

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட

இயக்கக வெளியீடு

2007

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

எட்டாம் மடலம் - முதல் பாகம்

(ய, வ)

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

VOL. VIII-PART I

து. இராசேந்திரன், இ.ஆ.ப.
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும்
செய்தித் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு

2007

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 22

முதற் பதிப்பு	:	2007

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. VIII, Part - I

பதிப்புரிமை	:	தமிழ்நாட்டரசு Government of Tamilnadu
விலை	:	உருபா 400/–
குறியீட்டெண்	:	Colon No. P.J1-J, 314"K.M4
வெளியிட்டோர்	:	செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் சி–48, முதல் தளம், தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம் அண்ணாநகர், சென்னை – 600 040.
அச்சீடு	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சி.பி.டி. வளாகம், தரமணி, சென்னை 600 113.
நூல் கிடைக்குமிடம்	:	செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் சி–48, முதல் தளம், தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம் அண்ணாநகர், சென்னை – 600 040. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சி.பி.டி. வளாகம், தரமணி, சென்னை – 600 113.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி
A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE
VOL. VIII- PART I

எட்டாம் மடலம் - முதல் பாகம்
(ய, வ)

பதிப்புக் குழு

து. இராசேந்திரன், இ.ஆ.ப.
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

கூர்ந்தாய்வாளர்
புலவர். இறைக்குருவனார்
திரு.க.கணேசன்

தொகுப்பாளர்கள்
திரு.முத்து.பிச்சை (பகுதிப் பொறுப்பாளர்)
முனைவர் மு.கண்ணன்
முனைவர் பா.வெற்றிச்செல்வன்
முனைவர் ச.செந்திலாண்டவன்
முனைவர் இரா.கு.ஆல்துரை
திரு.கா.இளமுருகு
திரு.ச.கி.கணேசன் (ஓவியர்)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 20.4.2007

அணிந்துரை

அகரமுதலி திட்டத்தின் ஏழு மற்றும் எட்டாம் மடலங்கள் இதழ்களை விரிப்பது கண்டு என் இதயம் பெருமிதம் எய்துகிறது. ஒவ்வொரு மொழியிலும் அதன் சொற்களுக்கு வேர் மூலம் காண முற்படும்போது, பெரும்பாலான சொற்களின் வேர்மூலங்கள் அடுத்த மொழிகளில் சென்று நிற்கும். ஆனால், தமிழில் உள்ள சொற்களின் மூலங்கள் அனைத்தும் தமிழிலேயே அமைந்துள்ளன. இப்போது நடைமுறையில் வழங்குகிற தமிழ்ச் சொற்களும், உருவாகி வருகின்ற கலைச் சொற்களும், தொழில்நுட்பச் சொற்களும் ஏற்கனவே வழங்கிய வேர் மூலங்களிலிருந்து விரிந்தும் பெருகியும் வந்தனவும் வருவனவும் ஆகும்.

அறிவியல் வளர்ச்சி மிகுந்துள்ள இந்நாளில், செய்தித் தொடர்பாலும் தொழில் நுட்ப வளர்ச்சியாலும் உலகம் சுருங்கிவிட்ட நிலையில், ஒரு மொழியில் அண்டையயல் மொழிச் சொற்களெல்லாம் கலந்து விடுவது இயல்பு. இத்தகைய சூழ்நிலையிலும் தமிழ் தனித்தியங்க வல்லதாக நெடுங்காலமாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. இதைத்தான் பாவேந்தர் பாரதிதாசனார் 'தனித்தியங்கும் தன்மை தமிழினுக்கு உண்டு; தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு' என்று ஆணித்தரமாகப் பாடி வைத்தார்.

அவ்வாறு, தமிழ், தான் தனித்தியங்குவது மட்டுமல்லாமல், பிற மொழிகளுக்கும் சொற்களை வாரி வழங்கிக் கொண்டுள்ளது. தமிழகத்திற்கு அப்பால் தனித்தனியே பிரிந்து வழங்கிவரும் திராவிட மொழிகளுக்கெல்லாம் தமிழ்மொழி வேர் மூலங்களை வழங்கியுள்ளதால், அவற்றின் அடிப்படையிலேயே அம்மொழிகளில் சொற்கள் பெருகியுள்ளமையைக் காண்கிறோம். அதனாலேயே, 'தமிழ் திரவிடத்திற்குத் தாய்' என்று தேவநேயப் பாவாணர் பறை சாற்றினார்.

இன்னும் பல மொழிகளிலுமுள்ள சொற்களின் வேர் மூலங்களும் தமிழிலேயே இருப்பதைக் காண நேர்கிறது. இது மொழியியல் உலகின் ஆய்வுப் போக்கைப் பல திருப்பங்களுக்கு உள்ளடக்குகின்றது. நெடுங்காலமாக வழக்கத்தில் இருப்பதும், தனித்தியங்க வல்லதும், பிறமொழிகளுக்குச் சொற்களை வழங்கவல்லதுமான மொழியே 'செம்மொழி' எனச் செம்மொழி இலக்கணம் வரையறுக்கப்படுகின்றது. தமிழின் இலக்கண இலக்கிய நூல்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு மறைக்கப்பட்டிருந்த காலமான கி.பி. 1857 அளவில் தமிழகம் வந்திருந்த கால்டுவெல் பெருமகனார் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் ஓர் ஒப்புமையைக் கண்டறிந்து, "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" (The comparative grammar of Dravidian Languages) என்ற நூலை வெளியிட்டார். அதன் வழி அவர் தன் ஆராய்ச்சியில் கண்ட முடிவுதான், "தமிழ் ஒரு செம்மொழி" என்பதாகும்.

அதன்பின், ஆங்கில அறிஞர்களான, "மெக்ளின்" போன்றவர்கள் தமிழ்மொழியில் உள்ள பதிவுகளையும், தமிழர்களின் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றையும் அறிவியல், வானியல் போன்றவற்றில் அவர்கள் பெற்றிருந்த அறிவாற்றலையும் ஆராய முற்பட்டனர். அவற்றின்வழி அந்த அறிஞர் பெருமக்கள் எல்லாம், 'தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழி' (Primary Classical) என்று வழிமொழிந்து சென்றனர்.

இவற்றின் தொடர்ச்சியாகத் தமிழை ஒரு செம்மொழி என அரசே அறிவிக்க வேண்டுமென்று பரிதிமாற் கலைஞர் தன் கோரிக்கையை முதன்முதலில் அரசின் முன்வைத்து வலியுறுத்தினார்.

ஆனால், இதை முழுவதுமாக அறிவியல் வழியாக மொழியியலில் நிறுவுவதற்குச் சொற்களுக்கு உரிய வேர் மூலம் காணும் சொற்பிறப்பியல் பணியே துணை நிற்கும் என்று, தன் வாழ்நாளையே சொல்லாய்வுக்கென ஒப்புவித்துக் கொண்டவர் 'மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்'. இத்தகைய பலரது தொடர்ச்சியான சிந்தனைகளின், செயல்பாடுகளின் மூலமாகத்தான் தமிழ் ஒரு செம்மொழி என்பதற்கான அங்கீகாரத்தை இன்று நாம் வென்றெடுத்துள்ளோம்; வெற்றிவாகை சூடியுள்ளோம்.

தமிழ்மொழியில் வழங்கும் சொற்களுக்கெல்லாம் வேர்மூலம் காண்பது என்பது ஆழ்கடலில் முத்தெடுக்கும் பணியினும் கடினமானது; இந்தப் பணியொன்றே தமிழ் செம்மொழி என்பதை ஏற்கச் செய்யும் முதன்மைப் பணியாகும். இப்பணியில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பல ஆண்டுகள் உழைத்து ஆராய்ச்சி நூல்கள் பலவற்றை உருவாக்கி வெளியிட்டுள்ளார்; 'உயர்தனிச்செம்மொழி' (The Primary Classical Language of the World) என்ற நூலைப் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே வெளியிட்டுள்ளார்.

தேவநேயப் பாவாணரின் இந்தச் சொல்லாராய்ச்சித் திறனை அறிந்து, அவர்தம் பணி தமிழ் உலகிற்குத் தேவை என்று நான் கருதியதால் 8.5.1974 அன்று, 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்ககம்' என்னும் ஒரு துறையைப் புதிதாக நிறுவி, அதற்குப் பாவாணர் அவர்களையே இயக்குநராகவும் நியமனம் செய்து அகர முதலித் தொகுதிகள் வெளிவர ஆவன செய்ததை இவ்வேளையில் மகிழ்வுடன் நினைவு கூர்கிறேன். அதன் பயனாக, பணிகள் சிறப்பாக நிகழ்ந்து முதல் தொகுதி அணியமாகிக் கொண்டிருக்கும் நிலையில் பாவாணர் அவர்கள் திடீரென மறைந்தார்கள். அதற்குப்பின் அவர்தம் நூல்களை அடிப்படையாகக் கொண்டு, அவரின் அணுகுமுறையிலேயே தொடர்ந்து அகர முதலித்திட்டத்தின் அடுத்தடுத்தத் தொகுதிகள் வெளிவரலாயின.

பாவாணர் மறைவுக்குப் பின்னும், ஒவ்வொரு முறையும் அரசுப்பொறுப்பு ஏற்கிற போதும் இந்தத் துறையின் வளர்ச்சியில் நான் மிகுந்த அக்கறை செலுத்தி வந்துள்ளேன். 1996ஆம் ஆண்டில் தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாட்டுக்கு எனத் தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டுச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்திற்குத் தேவையான கூடுதல் பணியாளர்கள், கணிப்பொறியமைப்பு போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

இதுவரை, மும்மூன்று தொகுதிகள் கொண்ட ஆறு மடலங்களாக மொத்தம் 18 தொகுதிகள் சென்ற ஆண்டுவரை வெளிவந்து முடிந்துள்ளன. இப்போது 'ம', 'ய', 'வ' வரிசையில் ஆறு பகுதிகள் வெளிவருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். எஞ்சிய பகுதிகளும் விரைந்து வெளிவர வேண்டும் என்பது என் அவா. இந்த அகரமுதலிப் பகுதிகள் வெளிவர உறுதுணையாய் நின்ற தமிழ் வளர்ச்சி–பண்பாடு (ம) அறநிலையத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் மற்றும் அகரமுதலித் திட்ட இயக்கத்தின் பொறுப்பு இயக்குநர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப. அவர்களுக்கும், நூல்களை உருவாக்கியுள்ள அகரமுதலித் திட்டத்தின் ஆசிரியர், பணியாளர் குழுக்களுக்கும் எனது உளமார்ந்த பாராட்டுகள் உரித்தாகுக.

என்றும்,
அன்புடன்

(மு. கருணாநிதி)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
"முத்தமிழறிஞர்"
கலைஞர் மு. கருணாநிதி



மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

தமிழ்நாடு அரசு

து. இராசேந்திரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையம் (ம) செய்தித் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்,

பதிப்புரை

இலக்கணம் மொழி நூலின் அடிப்படையாக விளங்குவது போன்று சொல் வரலாறு மொழி வரலாற்றின் திறவுகோலாகத் திகழ்கின்றது. தமிழின் ஈடிணையில்லா, இயற்கையான, இலக்கண வரம்பினை, இயம்பவந்த, திருவிளையாடல் புராண ஆசிரியர் பரஞ்சோதியார்,

> "கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோ டமர்ந்து
> பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
> மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
> எண்ணிடைப்பல கிடந்ததா எண்ணவும் படுமோ!"

என்று அழகாக எடுத்துரைக்கின்றார்.

செந்தமிழ் வேழம் பாவாணரின் அறிவார்ந்த அடிச்சுவட்டில், அரைக்கலைக்களஞ்சிய அமைப்பில், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் எட்டாவது மடலம், முதற்பகுதியாகிய யகரவகர வரிசைப் பகுதி வெளிவருகிறது. இப்பகுதியிலமைந்துள்ள சொற்கள் பண்டுதொட்டு, இன்று வரையுள்ள தமிழர்தம் பண்பாடு, நாகரிகம், வரலாறு முதலானவற்றைக் காட்டும், கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றன. காலத்தாற் சிதையாது, ஞாலத்தில் எஞ்ஞான்றும் நிலைத்து நிற்கும் பைந்தமிழின் புகழைப் பறைசாற்றும் பெட்டகங்களாக மிளிர்கின்றன.

பாவாணரின் வேர்ச்சொல் நெறிமுறையினை அடிப்படையாகக் கொண்டு, வகரப் பகுதியிலுள்ள சொற்கள் விளக்கப்பட்டுள்ளன.

(எ.கா.) பகு → வகு
முல் → மல் → வல் → வல்லம் = வட்டமான ஓலைக்கூடை.

இளமை, புதுமையைக் குறிக்கும். 'மழ' என்னும் முதனிலையும், 'முல்' என்னும் மூலத்ினின்று முகிழ்த்ததே யாகும்.

(எ.கா.) முல் → முள் → மள் → மழ → வழ → வழை → வழைச்சு.

"வல்[1]" – என்னும் வளைவுக்கருத்து வேர்மூலச் சொற்களே வகரப் பகுதியில், மிகுதியாக இடம் பெற்றுள்ளன. சான்றுகள் வருமாறு:–

(எ.கா.)
வல் → வல்லி = வளைந்த கொடி. "வல்லி யணையாள்" (பு.வெ.பெண்பாற்.13, உரை).
முல் → மல் → மலார் → வலார் = வளைந்த இடம்போத்து (twig.)
வலார் → வளார் = வளைந்த புளியங்கொம்பு.
வல் → வள் → வள்ளி = வளைந்த கொடி.
வல் → வலை = உயிரிகளைச் சூழ்ந்து அகப்படுத்தி, வளைக்குந் தன்மையுள்ள கயிற்றுக் கருவி.

வல் → வல → வலத்தால் = வளைதல், வளைத்தல், சூழ்தல்.
வல் → வள் → வள → வளவு = வளைந்தமைந்த வீட்டுச் சுற்றுப் பரப்பு
வல் → வள் → வள்ளம் = வட்டமான உண்கலம்.
வல் → வள் → வள → வளர் → வளரி = பிறைபோல் வளைந்த வளரித்தடி (boomeking).
வள் → வள → வளா = சுற்றுப்பரப்பு; வளர் → வணர் = யாழ்க்கோட்டின் வளைந்த பகுதி.
வள் → வளி = வளைந்து வீசும் காற்று.
வல் → வள் → வளர் → வளரி = வளைதடி.

சொல்லின் பொருண்மையினை அடிப்படையாகக்கொண்டே, ஒரு மொழியை ஆய்வு செய்ய வேண்டுமென்பார் மொழிஞாயிறு. இக்கருத்தினையே தொல்காப்பியர் ''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' என்று குறித்துள்ளார். மேலும் யாழ், யானை, வள்ளுவன் முதலான சொற்கள் அரைக்கலைக்களஞ்சிய அமைப்பில் திறம்பட விளக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக யகரப் பகுதியில் இடம் பெற்ற யானை என்னுஞ் சொல்லினைக் காணலாம்.

(எ.கா.) அல் → எல் → என் → ஏன் → ஏனை → யானை

யானை என்னுமிச் சொல் ''அல்'' என்னும் கருமைக் கருத்துப் பொருண்மையை அடிப்படையாகக் கொண்டது. மொழிஞாயிறு தமது சொல்லாராய்ச்சிக் கட்டுரையில் 20 பெயர்களை, யானையின் மறு வடிவங்களாகக் குறித்துள்ளார். இச் சொல் விளக்கம் பக்கம் 48– முதல் 53 வரை இடம்பெற்றுள்ளது.

கழக இலக்கியங்களில் யானை, கன்னங்கரிய வண்ணத்தில் பென்னம் பெரிய உருவத்தில், காண்பவர்தம் கருத்திலும், நெஞ்சிலும் நீக்கமற நிறைந்து, தமிழ் மண்ணின் மரபுச் சொத்துகளுள் ஒன்றாக, 38 இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையான திரவிட மொழியில் உள்ள கருமைக் கருத்துச் சொற்கள் குறிக்கப்பெற்றுள்ளன.

வள்ளுவன் என்னும் சொல், பாவாணரின் சொற்பிறப்பு நெறிமுறையினை அடியொற்றி விளக்கப்பட்டுள்ளது. இச்சொல்லின் விளத்தத்தினை பக். 483–இல் காணலாம்.

சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலியில் வடசொல்லாகக் குறிக்கப்பட்ட பல சொற்கள், பாவாணரின் அடிச்சுவட்டில் செந்தமிழ்ச் சொற்களாக இப்பகுதியில் குறிக்கப்பட்டுள்ளன. சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:–

1. வக்கா = யானை, கொக்கு போன்ற நீர்ப்பறவை
த. வக்கா → **Skt.** baka.
[வட்கு → வக்கு → வக்கா] வகரப்பகுதி. பக்.76.

2. வக்கிரம், வக்கிரப்புத்தி போன்றவை – பாவாணரின் நெறிமுறையையொட்டித் தமிழ்ச் சொல்லாக நிறுவப்பட்டுள்ளது (பக்.78–79).

3. வஞ்சி = ஏமாற்றுதல்.
   த. வஞ்சி → **Skt.** *vañc* (வஞ்ச்) (பக்.116–117)

4. வட்டம் = சுற்று. த. வட்டம் → **Skt.** வ்ருத்த (பக்.134–135)

5. வரணம் = எழுத்து, பூச்சு, நிறம், வகை, அழகு.
   [வள் → வர் → வரி + அணம்] த.வரணம் → (பக்.280–281)

6. வயிரம் = திண்மை.
   வல் → வள் → வய் → வை → வயிர் → வயிரம்.
   த. வயிரம் → **Skt.** vajva. (பக்.247–248)

மேலும் இப் பகுதியில் மறைந்து போன *வரணம், வரணித்தல், வரணிப்பு* முதலான சொற்கள் விளக்கப்பெற்றுள்ளன. மறைந்து போன இசைக் கருவியான யாழ் பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன. சிற்றூர்களிலிருந்த தற்போது மறைந்து போன வட்டச்சில்லி, வட்டப்பேந்தா, வண்ணான்தாழி முதலான விளையாட்டுகள் விளக்கப்பட்டுள்ளன. மேலும் மறைந்து போன பண்பாட்டுக் கூறுகள், மருத்துவம் பற்றிய செய்திகள் தொகுக்கப்பட்டு நல்ல முறையில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

கி.பி.3 ஆம் நூற்றாண்டு முதல் 13–ஆம் நூற்றாண்டு வரை, தமிழ்மொழியை எழுதப் பயன்பட்ட வட்டெழுத்துப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் சீரியமுறையில் கொடுக்கப்பட்டுள்ளன (பக்.145–147). தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளிலிருந்து ஏராளமான கல்வெட்டுச் சொற்கள் தொகுக்கப்பட்டு, விளக்கப்பட்டுள்ளன.

தமிழ் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் ஊக்கம் அளித்து வரும் நம் *மாண்புமிகு முதலமைச்சர்* அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பகுதி வெளிவருவதில் அயராது பாடுபட்ட பதிப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர்கள், பகுதிப் பொறுப்பாளர், தொகுப்பாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7/3/2007

து. இராசேந்திரன்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

ய்

ய் *y*, **1.** தமிழ் நெடுங்கணக்கில் பதினோராவது இடையின மெய்யெழுத்து; the eleventh medial consonant of the Tamil alphabet. **2.** அடியண்ண ஒலி; voiced palatal. **3.** மூவின மெய்யெழுத்துப் பிரிவுகளுள், வல்லினத்துக்கும், மெல்லினத்துக்கும், இடைப்பட்ட நிலையில் ஒலிக்கும் எழுத்து; the six medial consonants of the *Tamil* (tripartite) system. *வல்லெழுத்துத் தோன்றும் மார்புக்கும், மெல்லெழுத்துத் தோன்றும் மூக்குக்கும் இடைப்பட்ட இடமான அடியண்ணத்தில் தோன்றும், ஒலிப்புடை ஒலியாகும்.*

ய *ya*, 'ய்' என்ற மெய்யெழுத்தும், 'அ' என்ற உயிரெழுத்தும் இணைந்த உயிர்மெய் (அசை) யெழுத்து; the syllable formed by adding the short vowel 'a' to the consonant 'y'.

[ய் + அ → ய]

இடையெழுத்து :- (இடையினம்)

தமிழ் நெடுங்கணக்கில் 'க' கர முதலாக வரும் உயிர்மெய்யெழுத்துகளில், பதினோராம் எழுத்து. இடையெழுத்து(ய,ர,ல,வ,ழ,ள)களு ளொன்று. வல்லெழுத்துப்போல் வன்மையுமாகாமல் மெல் லெழுத்துப்போல் மென்மையுமாகாமல், இடை நிகரனவாய் நிற்பதால், இடையினம் அல்லது இடையெழுத்தென்று, இலக்கணப் புலவர் இயம்புவர்.

அரையுயிர் **(Semi-vowels):-**

உயிரெழுத்திற்கும் மற்றைய மெய் யெழுத்திற்கும் இடைநிகரனவாய், நிற்பன என்று கொண்டு, மேனாட்டார், 'ய'கர 'வ'கரத்தை அரை உயிர்கள் என்று வழங்குவர். ஆனால், இவற்றைப் பிறப்பு வகையாலோ, செவியுணர் ஒலி வகையாலோ, ஒரினமாகக் கொண்டு ஆராய்வதே சாலச் சிறந்ததென்று, இந்நாளைய பேச்சொலியியல் (phonetics) அறிஞர்கள் கருதுவர்.

பிறப்பிடம் :-

நாவின் மேற்புறம் தட்டையாக நிற்குங்கால், அண்ணத்திற்கும், நாவிற்கும் இடையேயுள்ள இடைவெளி மிகமிகச் சிறியதாய்ப் பரந்து தோன்றும். அவ்விடைவெளி வழியாக மூச்சானது உரசிக்கொண்டே வெளிவருங்கால் தோன்றும் ஒலிப்புடை ஒலியே யகரம். இஃது இடையண்ணத்திற் பிறப்பது. இவ்வொலியின் பிறப்பிடம் பற்றித் தொல்காப்பியர்,

> *"அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை*
> *கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்"*

(தொல்.99) என்று கூறியுள்ளது காண்க.

'மிடற்றெழு வளியிசை' என்பதால், யகரம் ஒலிப்புடை ஒலி எனக் கொள்ளலாம். 'அண்ணம் சேர்ந்த' என்பதனால், அது வல்லண்ண ஒலி என்பது தெளிவு. 'கண்ணுற்றடைய' என்பது, இஃது உரசொலி என்பதைக் குறிப்பதாகக் கொள்ளலாம். "உரலாணியிட்டாற் போலச் செறிய" என்று நச்சினார்க்கினியரும், உவமைகாட்டிப் பொருள் கூறியுள்ளது அறிக.

இடையெழுத்து :-

யகரம் மொழிக்கு முதலில் வாரா. யகரம், இகரத்திற்கொத்த இடையெழுத்து எனலாம். உரசொலியின் கண்ணே இகரம் யகரமாதல் இயல்பு. அலகு பெறும் உயிரொலி, ஈற்றில் படுத்துச் சொல்லப் பெறும் போது, 'இ'கரம் யகரமாகும்.

ஆஇ→ஆய். (எ.கா.) போஇ→போய்

'இகர யகரம் இறுதி விரவும்' என்பது தொல்காப்பியம். இகரத்தின் பிறப்பிடமே யகரத்தின் பிறப்பிடமாகும். ஆனால் நாவானது இகரத்திற்கு எழவேண்டியதற்கு மேலும் சிறிது உயரத்தில் அண்ணத்தை நோக்கி எழுங்கால், யகரம் பிறக்கும். நாவானது இகர, யகரத்தை ஒலிக்குங்கால், அண்ணத்திற்கும் நாவிற்கும் இடையே சிறிது இடைவெளி தோன்றும். அஃதாவது உயர வேற்றுமை உருவாகுமென்று மொழியியலார் கருதுவர். மற்றொரு பிரிவினர், "இஃது உயர வேற்றுமை அன்று; யகர ஒலிப்பு எழுங்கால், உள் நாவின் பின்புறத்தே நிகழும் ஒத்தொலிப்பின் (resonance) வேற்றுமையே என்பர். அகர ஆகாரத்தின் முன்போ, உகர ஊகாரத்தின் முன்போ, யகரம் வருங்கால், நாவினியக்கம், பெரிதளவில் வேற்றுமையை ஏற்படுத்தும்.

(எ.கா.) மரயானை; வரையூடு.

கூட்டொலி :-

யகரத்தை மொழியியலார் கூட்டொலி என்றும் கூறுவர். ஒரு முழு உயிரை அடுத்து, உடம்படுமெய் போன்ற நெகிழுயிர், முன்னோ பின்னோ அமைந்து வருவதே கூட்டொலியென்பார், சுவீட்டு (sweet) என்ற மொழியியல் அறிஞர். ஆனால் தமிழில் யகரம் உயிரும், மெய்யும் மயங்கும், மயக்கத்தினிடை வெளிப்படும் நெகிழொலி என்பதே பொருந்தும்.

நிலைமொழியை ஒட்டியே யகர உடம்படுமெய், பிற்காலத்தே பெருவழக்காகப் பயின்று வந்துள்ளது. பவணந்தியார் வருமொழியின் உறுப்பினையொட்டியே, யகர உடம்படுமெய் வழக்கிலிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

(எ.கா.) மாயிரு, மணியழகிது. கோயில், ஆயிடை. தீயெழுந்தது.

உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி குறித்து, பவணந்தியார் பகர்வது வருமாறு :-

இஈஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன் இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்
(நன். 162.)

மொழியியலார், யகரத்தை நெகிழொலி என்றும், இலக்கண நூலார் உடம்படுமெய் என்றும் கூறியுள்ளனர். ஆனால் மொழிக்கோ, மொழி யுறுப்பிற்கோ, ஈற்றில் பயின்றுவரும் யகரம் நெகிழொலி யாகாது. மொழியீற்று யகரத்தை "இ" கரத்தின் திரிபென்றுரைத்தலே பொருந்தும்.

(எ.கா.) போஇ → போய்.
ஆஇ → ஆய்.

மேற்குறித்த எடுத்துக்காட்டுகள் தொல்காப்பியர் காலத்தில், "ய"கரம் உடம்படுமெய்யாக வருவது கட்டாயமில்லை என்பதைப் புலப்படுத்துகின்றன. பழந்தமிழில் உயிர்களும் ஒன்றோடொன்று மயங்குந் தன்மையினைத் தெளிவுறுத்துகின்றன எனலாம்.

பழந்தமிழில், தொல்காப்பியத்தில் கூறியவாறு, யகரம் ஆகாரத்துடன்தான், மொழிக்கு முதலில் வரும்.

(எ.கா.) : யானை → ஆனை, யாடு → ஆடு, யாறு → ஆறு, யாமை→ஆமை.

தொல்காப்பியர் காலத்தில், உயிரோடு உயிர் மயங்கும் மயக்கம் இயல்பாகவே வழக்கூன்றி யிருந்தது. 'யா' என்பது எகரமாகக் குறுகும்.

(எ.கா.): யான்→என், யாது→எது, யாம்→எம்.

கல்லாதார் வழங்கும் சொற்களில் யகரம் சகரமாக ஒலிக்கும்.

(எ.கா.) : உயிர் → உசிர், மயிர் → மசிர், பயல் → பசல், மயல் → மசல், அயல் → அசல்.

யகரம் வருமொழி முதலாக வரும்போது

நிலைமொழியீற்றுக் குற்றியலுகரம், குற்றிய லிகரமாகத் திரியும். பிற்காலத்தே மொழியின் ஈற்றில் வரக்கூடிய மெல்லெழுத்தும், இடை யெழுத்தும், உகரச்சாரியை பெற்று வருவது இயல்பாயிற்று.

(எ.கா.) : நாடு + யாது–நாடியாது, மண்ணு + யாது–மண்ணியாது, சொல்லு + யாது–சொல்லியாது. யகரம் மூக்கொலி பெற்றால், ஞகரம் போன்றே ஒலிக்கும். இவ்வாறு யகரம் ஞகரமாகத் திரிவதைத் தொல்காப்பியரும் குறித்துள்ளார். மண், பொன் போன்று மெல்லெழுத்தில் முடியும் சொற்களின் பின்னே, யாத்தல் என்ற வினைச்சொல்லடியாகப் பிறந்த சொற்கள் வருமானால், யகரமும் மெல்லொலிச்சாயல் பெற்று ஞகரமாகும்.

(எ.கா.) : மண்யாத்த→மண்ஞாத்த.

தமிழில், யகரம் மொழிக்கு முதலில் வாரா நிலையிலும், பிறமொழிச் சொற்களில், ஆ வல்லாத பிற உயிர்களோடு சேர்ந்து, மொழிக்கு முதலில் வரும் நிலை பிற்காலத்தே ஏற்பட்டது. இந்நிலையில், தமிழின் இயல்பிற்கு ஏற்ற வண்ணம் மாறியே ஒலிக்கும்.

(எ.கா.) : யந்திரம்→இயந்திரம், யக்ஷன்→இயக்கன், யுத்தம்→உயுத்தம்.

யகரத்தை முதலெழுத்தாகக் கொண்டு வரும் பிறமொழிச் சொற்கள், தமிழ் மொழிக்கு முதலில் வரும் போது யகரம் எகரமாகத் திரியும்.

(எ.கா.) : யமன் → எமன், யந்திரம் → எந்திரம்.

காலந்தோறும் கல்வெட்டுகளிற் காணப்படும் யகரத்தின் வரிவடிவ வளர்ச்சி :–

ஒரு பிறை போன்ற வடிவத்தின் நடுவில் நிற்கும் செங்குத்துக் கோடாக, கி.மு.3–ஆம் நூற்றாண்டில் அசோகர் காலக் கல்வெட்டுகளில் – (அசோகன் பிராமி.) காணப்படும் வரிவடிவம்.

தமிழகக் குகைக் கல்வெட்டுகளில், தமிழியெழுத்தாகச், சூலத்தின் முத்தலை வடிவம் போன்று கி.மு.3–ஆம் நூற்றாண்டில் காணப்படும் வரிவடிவம்.

கி.பி.2–ஆம் நூற்றாண்டில் இவ்வெழுத்தின் உயரம் குறைந்து, நடுக்கோட்டில் அழகுப் புள்ளியுடனும், இடப்பகுதியில் ஒரு வளைவும் கொண்டு வளர்ச்சியுற்ற வரிவடிவம்.

கி.பி.3,4,5–ஆம் நூற்றாண்டுகளில் பல்லவர் காலத்தில் வளர்ச்சியுற்ற வரிவடிவம்

கி.பி.6,7–ஆம் நூற்றாண்டுகளில் பல்லவர் காலக் கல்வெட்டுகளிற் காணப்படும் வளர்ச்சி பெற்ற வரிவடிவம்.



கி.பி.8–ஆம் நூற்றாண்டுகளில் கல்வெட்டுகளில் காணப்படும் வரிவடிவ வளர்ச்சி.



கி.பி.9–ஆம் நூற்றாண்டில் வரி வடிவ வளர்ச்சி



கி.பி.10,11–ஆம் நூற்றாண்டுகளில் சோழர் காலத்து வரிவடிவ வளர்ச்சி



கி.பி.12,13–ஆம் நூற்றாண்டுகளில் பாண்டியர் காலத்து வரிவடிவ வளர்ச்சி.



கி.பி.14,15–ஆம் நூற்றாண்டுகளில் விசயநகர மன்னர் காலத்து வரிவடிவம்



யா[1] *yā*, compound of ய் and ஆ. 'ய்' என்ற மெய்யெழுத்தும், 'ஆ' என்ற நெட்டுயிரெழுத்தும் இணைந்த உயிர்மெய் (அசை) யெழுத்து; the syllable formed by adding the long vowel 'ā' to the consonant `y'.

காலந்தோறும் கல்வெட்டுக்களிற் காணப்படும் யகர ஆகாரத்தின் வரிவடிவ வளர்ச்சி :-

கி.மு.2,3–ஆம் நூற்றாண்டுகளில் அசோகர் காலத்து தமிழ் பிராமிக் கல்வெட்டுகளிற் காணப்படும் வரி வடிவம்

கி.மு.2,3–ஆம் நூற்றாண்டுகளில் குகைகளில் காணப்படும் தமிழி யெழுத்துக் கல்வெட்டில் காணப்படும் வரிவடிவம்



கி.பி.5,6,7–ஆம் நூற்றாண்டுகளில் பல்லவர் கல்வெட்டுகளில் காணப்படும் வரிவடிவம்.

கி.பி.8–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் காணப்படும் வரி வடிவம்



கி.பி.9–ஆம் நூற்றாண்டுக் கல் வெட்டுகளில் காணப்படும் வரிவடிவம்



கி.பி.10,11–ஆம் நூற்றாண்டுகளில் சோழர் காலக் கல்வெட்டுகளில் காணப்படும் வரிவடிவம்



கி.பி.11,12–ஆம் நூற்றாண்டுகளில் பாண்டியர் காலக் கல்வெட்டுகளில் காணப்படும் வரிவடிவம்



கி.பி.14,15–ஆம் நூற்றாண்டுகளில் விசயநகர மன்னர் கல்வெட்டுகளில் கானப்படும் வரிவடிவம்



கி.பி.18,19–ஆம் நூற்றாண்டில் யகர ஆகாரம் இன்றைய வரிவடிவத்தை எய்தியது எனலாம்

கி.பி.20–இல் தற்கால வரிவடிவம்.

யா[2] *yā*, பெ.(n.) யாவை; what or which things. *"பெண்ணிற் பெருந்தக்க யாவுள"* *(குறள், 54).*

யா[3] *yā*, பெ.(n.) **1.** அஃறிணைப்படர்க்கைப் பன்மை வினா; third person inferior beings plural question. **2.** அசைச்சொல்; a rhythmic word (யா பன்னிருவர்). 3. ஓரெழுத்து; a letter of Tamil alphabet. 4. ஐயம்; doubt, apprehension. **5.** இல்லை; nothing.

யா[4] *yā*, பெ.(n.) **1.** கருமைப் பொருண்மை யினைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி; a monosyllabic unique word describing the blackish nature of the subject. 2. கரிய மரம்; a black tree. *"உம்பல் அகைத்த ஒள்முறி யாவும்" (மலைபடு. 429).* 3. ஓர் மரம்; ebony-tree; Ceylon ebony - *Diospyros ebenaster*. 4. மரவகை (தொல். எழுத்து.229); a tree. *"யானை யொடித்துண்டெஞ்சிய யா" (குறுந். 232).* 5. அகலம் (நாமதீப. 778); breadth, width.

த. யா → **Skt.** *syāva* = dark, dark-brown. *kohistāni* = *šā* = black.

த. யா → **Skt.** *syāva* → *syāviyā*, *syāvyā* = darkness.

"யா" என்னும் ஓரசைச்சொல் கருமைக் கருத்தினை முதன்மையாக அல்லது அடிப்படையாகக் கொண்டது; அதே போழ்தில், கரிய, பருத்த அடிப்பகுதியினைக் கொண்ட யாமரத்தையும் குறிக்குந் தன்மைத்து. மூலச் சொல்லின் முதனிலையாகிய வேர்ப்பகுதியிலேயே, கருமைப் பொருள் பொதிந்துள்ளது, உளங்கொளத் தக்கதொன்றாகும். இக் கருமைக் கருத்து மூலவேர் பற்றிச் சொல்லாய்வாளர் ப.அருளியார் கூறுவது :

"கருமை என்னும் நிறக்கருத்து அடிப்படையில் மரவகையினுள் ஒன்று, "யா"–என்றவாறே, பண்டைய நம் தமிழ் மாந்தர்களால் சுட்டப்பெற்றது ஈராயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே, தமிழகம் முழுமைக்கும் மிகப் பரவலாகவும் தெளிவாகவும் இனந்தெரிந்திருந்த இம் மரம். இன்றைக்கு மிகப்பெரிய நிலைத்திணை (தாவர)வியல் அறிஞர்களாலேயே எம்மரம் என்று, கண்டறிய முடியவில்லை என்றவாறு, கலக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் மறைதிறத்ததாகும்!

யா[5]–த்தல் *yā-*, 4 செ.கு.வி.(v.i.) 1. பிணித்தல்; lure, decoy. 2. ஒன்றோடொன்று பொருத்துதல், கட்டுதல்; to tie up. *"யானையால் யானையாத் தற்று" (குறள், 678).* 3. நீர் முதலியன அணைத்தல்; to dam up, to confine. *"பெருக யாத்தநீர்" (காஞ்சிப்பு.நாட்.75).* 4. விட்டு நீங்காதிருத்தல்; to be inseparable from. *"பெருக யாத்தநீர்" (காஞ்சிப்பு. நாட். 75). "மற்றவனை யாக்குமவர் யாக்கு மணைந்து" (ஏலா.8).* 5. அணிதல், கட்டிக் கொள்ளுதல்; to adorn. *"மிடற்றமை மரபின அரைக்கு யாக்குநரும்" (புறநா.378:77).* 6. செய்யுள் முதலியன அமைத்தல்; to compose, as a poem. *"மொழி பெயர்த்ததர்ப்பட யாத்தல்" (தொல். பொருள். 652).* 7. சொல்லுதல்; to tell, utter, say. *"சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்" (தொல். பொருள். 655).* 8. தொடர்பு கொள்ளுதல்; to contact. *"குன்றா இனனும் அறிந்தியாக்க நட்பு" (குறள், 793).*

[யா→யாத்தல் = ஒன்றோடொன்று பொருந்துதல், கட்டுதல், பிணித்தல்.]

"யா" என்னும் பொருந்துதற் கருத்து வேர்மூலத்தினின்று தோன்றிய சொல்.

யா → யாக்கு → யாக்கை=பல்வகைத் தாதுக்களாலும், நரம்பு, நார், தசை, எலும்பு போன்றவற்றால் பொருத்திக் கட்டப்பெற்ற உடல்.

யா→யாப்பு = கட்டு, கட்டுவடம், பிணிப்பு – கட்டுத்துணி.

யா→யாத்தல்=ஒன்றோடொன்று பொருந்துதல், கட்டுதல், பிணித்தல், அணிதல், கட்டிக் கொள்ளுதல், தொடர்பு கொள்ளுதல், விட்டு நீங்காதிருத்தல், செய்யுள் முதலியன கட்டுதல் போன்ற பொருண்மைகளில், தொல்காப்பியம் முதல், அனைத்துக் கழக இலக்கியங்களிலும், வழக்கூன்றியுள்ளது.

"யா" என்னும் இப்பொருந்துதற் கருத்து மூலவேர், "இய்" என்னும் விதைச் சொல்லினின்று தோன்றியது. இது பற்றிய விளத்தம் வருமாறு :

இய்→ இய→இயா→யா.

(எ.டு.) இய்→இயை = பொருந்து, சேர்.

1. இய்→இயை→இயைதல் = 1. பொருந்துதல், சேர்தல், அணுகுதல், நேர்தல் போன்ற பொருட்பாங்கினில், "இய்" என்னும் மூல வேரினின்று முகிழ்த்த "இயைதல்" என்னும் சொல், பயின்று வந்துள்ளமைக்கான எடுத்துக்காட்டு:–

"என்போ டியைந்த வமிழ்து" (நாலடி, 210).

இணங்குதல், உடன்படுதல், மனம் இசைதல் அல்லது பொருந்துதல்.

புணர்தல், கூடுதல்.

ஒத்தல், போலுதல்.

2. இயை + (த்) + தல் – இயைத்தல் = பொருத்துதல், சேர்த்தல்.

இயைய = ஓர் உவமவுருபு.

இயை + வு – இயைவு = சேர்க்கை.

மேற்குறித்த பொருட்பொருத்தப்பாட்டுடன் இயைந்ததும், இலக்கியச் சான்றுகளுடன் கூடியதுமான அடிப்படைத் தரவுகளின் வாயிலாக, "யா" என்னும் பொருந்துதல் கருத்துக் கிளைவேர், "இய்" என்னும் மூலமுதல் வேரினின்று முகிழ்த்தது எனலாம். கீழ்க்காணும் சான்றுகளும் பொருந்துதல் கருத்துத் தோற்றத்தினை நிலைநிறுத்தும் வண்ணம் அமைந்துள்ளன.

(எ.டு.) இயைவு→இயைபு = பொருத்தம், புணர்ச்சி, இணக்கம்.

இசைவு = பொருத்தம், தகுதி.

யகர சகரத்திரிபு = இயை→ இசை = பொருத்து.

3. இசை + தல் – இசைதல் = பொருந்துதல். ஒத்துச் சேர்தல், கலத்தல், உடன்படுதல்.

இசை + (த்) + தல் – இசைத்தல் = பொருந்துதல், கட்டல், ஒத்தல்.

யகர ழகரத்திரிபு = இயை→இழை = பொருந்து.

இழை + தல் – இழைதல் = கூடுதல், பிணைதல்.

மனம் பொருந்துதல், நெருங்கிப் பழகுதல்.

இழை + (த்) + தல் – இழைத்தல் = பொருத்துதல், பதித்தல், செய்தல்.

இத்தகைய பொருண்மைகளைத் தன்னகத்தே கொண்ட, பொருந்துதற் கருத்து வேர்மூலம் பற்றி விளக்க வந்த சொல்லாய்வறிஞர் அருளியார்,

"மிகப் பலவாகிய பொருட்செறிவு சான்ற

இனச் சொற்களைத் தமிழில் வளர்வுறச் செய்வதற்கு அடிப்படை மூலக்கருவாக இருந்த "இய்" என்னும் மூலவேரே,

இய்→இய→இயா→யா என்றவாறு வளர்ந்து, எளிய நெட்டொலியாக நின்று, அப்பொருந்துதற் கருத்தையே அடிப்படையாகக் கொண்ட கிளைவேராக வளர்ந்து, நூற்றுக்கும் மேற்பட்ட சொல்வடிவங்களைத் தோற்றுவிக்கக் காரணக் கருவாயிற்று" ("யா"–பக்.211). என்று குறிப்பிட்டுள்ளது, ஈங்கு கருதத்தக்கது.

தொல்காப்பியந் தொட்டு, அனைத்துக் கழக இலக்கியங்களிலும், யாத்தல் என்னுமிச்சொல், ஒன்றோடொன்று பொருந்துதல், கட்டுதல், பிணித்தல், கட்டிக் கொள்ளுதல், அணிதல், செய்யுள் முதலியன கட்டுதல் போன்ற பொருண்மைகளில் ஆளப்பட்டுள்ளது.

ஒன்றோடொன்று பொருந்துதல், கட்டுதல் என்னும் பொருளில்,

"காஞ்சியி னகத்துக் கரும்பருத்தி யாக்குந்

தீம்புனல் ஊர" (அகநா. 156:6:7).

2. பிணித்தல் என்னும் பொருளில் *"யானையால் யானையாத் தற்று" (குறள், 678).*

3. செய்யுள் முதலியன கட்டுதல் என்னும் பொருட்பாங்கில்,

"மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தல்" (தொல். பொருள்.652).

4. அணிந்து கொள்ளுதல், கட்டிக் கொள்ளுதல் என்னும் பொருண்மையில்,

"அரைக்கு அமைமரபின மிடற்றுயாக்குநரும்

மிடற்றமை மரபின அரைக்கு யாக்குநரும்" (புறநா.378:16,17).

மேற்குறித்த இலக்கிய வழக்குகள் அனைத்தும், பொருந்துதல் பொருண்மையினை அடிப்படையாகக் கொண்டவையே. இப் பொருந்துதல் கருத்தின் மூலவேர், "இய்" என்பதே யாகும்.

யாஅ *yāa,* பெ.(n.) 1. செய்யுளில் மட்டும் பயின்றுவரும், "யா" என்பதன் அளபெடை; lengthening of sound in yā in poetry. *"யாஅ ஒண்டளிர்" (அகநா. 331,1).* 2. யாஅம் பார்க்க; see *yāam.*

[யா → யாஅ]

கழகக்காலப் புலவர்கள், "யா" எனும் நெடிலை செய்யுளில் ஓசை நிறைத்தற்பொருட்டு, "யாஅ" என்று அளபெடையாகக் குறித்துள்ளனர். (எ.டு) *"யாஅ வரிநிழல்" (குறுந்.232:4–5), "நீடுநிலை யாஅத்துக் கோடுகொள் அருஞ்சுரம்" (அகநா.263, 8).*

யாஅம்[1] *yāam,* பெ.(n.) யாமரம் பார்க்க; see *yāmaram. "நெடுநிலை யாஅம்" (அகநா. 659:8). "மென்சினை யாஅம் பொளிக்கும்" (குறுந். 37 : 2).*

[யா→ யாஅ→யாஅம்]

யாஅம்[2] *yāam,* பெ.(n.) செய்யுளில் மட்டும் காணப்பெறும், "யாஅ" என்பதன் அளபெடை; lengthening of sound *yāa*, in poetry. *"பிடிபசி களைஇய பெருங்கை வேழம் மென்சினை யாஅம் பொளிக்கும்" (குறுந். 37, 2–7).*

[யா → யாஅ → யாஅம்]

"யாஅ" என்னும் வடிவே, யாமரம் என்னும் பொருண்மையில், அளபெடுத்த வடிவமாக "யாஅம்" என்று கழகக்காலப் புலவர்களால் குறிக்கப்பட்டுள்ளது. (எ.கா.) *"நெடுநிலை யாஅம்" (அகநா.659,9).*

யாக்குதல்[1] *yākkudal,* பெ.(n.) கட்டுதல்; to build, to construct.

யாக்கு–தல்[2] *yākku-,* 5 செ.கு.வி.(v.i.) யாத்தல்; to compose, to create afrsh.

யாக்குவி–த்தல் *yākkuvi-,* 4 செ.கு.வி.(v.i.) பழக்குவித்தல்; to tame, to accustom.

யாக்கெரு *yākkeru,* பெ.(n.) கொன்றை; cassia.



யாக்கை *yākkai,* பெ.(n.) 1. கட்டுகை; tie, bond. 2. உடம்பு; body. *"யாக்கை யகத்துறுப் பன்பி லவர்க்கு" (குறள், 79), "காக்கைக்கும் கழுகுக்கும் இரையாகும் இந்த யாக்கை", "நீரில் எழுத்தாகும் யாக்கை.........." (அற நெறிச்.) க.வா. குமரகுருபர்.*

[யா + கு – யாகு→யாக்கு + ஐ – யாக்கை.]

"யா" என்னும் பொருந்தற் கருத்து மூலத்தினின்று முகிழ்த்த சொல் நரம்பு–நார்–எலும்பு–தசை–அரத்தம் முதலியவற்றால் கட்டுறப் பெற்றதாகிய உடம்பு, உடல், யாக்கை.

(எ.கா.) *"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு" (குறள், 948).*

"நீர்இன்று அமையா யாக்கைக்கு" (புறநா. 18:18)

இச்சொல்லின் பொருட்பொருத்தப்பாடு பற்றிச் சொல்லாய்வாளர் ப. அருளியார் கூறுவது :

"யா→யாத்தல் = பொருத்துதல், கட்டுதல் (யாழ்.அக.). "யா" என்னும் பொருந்துதல் கருத்துக் கிளைவேர் நூற்றுக்கு மேற்பட்ட சொல்

வடிவங்களைத் தோற்றுவித்துள்ளது" கட்டுதல், பிணித்தல், பொருத்துதல் போன்ற பொருட் பொருத்தப்பாட்டில் யாக்கை என்னும் இச்சொல் கழகவிலக்கியங்களில் ஏராளமாக வழக்கூன்றி யுள்ளது.

யாக்கை என்னும் பெயர்குறித்து மொழிஞாயிறு மொழிவது :-யாக்கை என்பது ஆகுபெயர். எழுவகைத் தாதுக்களால் யாக்கப்பட்டது. யாத்தல் = கட்டுதல் (தேவ.12, பக்.205).

யாக்கைக்குற்றம் *yākkai-k-kuṟṟam,* பெ. (n.) 1. கொட்டாவி, நெட்டை, குறுகுறுப்பு, கூன்கிடை, நட்டுவிழல் என்பனவாகிய உடலில் உண்டாம் ஐந்து வகைக் குற்றங்கள் (பிங்.); ill mannered bodily action, of which there are five kinds, viz: *koṭṭāvi, neṭṭai, kuru-kuruppu, kūṉ-kiḍai, naṭṭu-viḻal.* 2. நிலைநின்ற குற்றம் (தோஷம்); permanent defect. *"என் செய்வினையா மெய்க்குற்ற நீக்கி" (திவ். இராமாநுச. 26).* 3. பதினெண்குற்றம் (பிங்.); the eighteen kinds of defects of the human body.

யாக்கைக்குறுகுற்றம் *yākkai-k-kuṟu-kuṟṟam,* பெ.(n.) யாக்கைக்குற்றம், 2 (சது.) பார்க்க; see *yākkai-k-kuṟṟam.*

[யாக்கை + கு + உறு + குற்றம்]

யாக்கைசித்தியாக்கி *yākkai-citti yākki,* பெ.(n.) எருமைக் கனைச்சான்; seperation of body after attainment or final liberation.

யாக்கையன் *yākkaiyaṉ,* பெ.(n.) தசை, எலும்பு, நார், அரத்தம், கொழுப்பு போன்ற தாதுக்களாற் கட்டப்பெற்றவன்; man bind or made of flesh, bone, nerves, blood and fat. *"வடிந்த யாக்கையன்" (புறம், 180:6).*

[யாக்கை + அன்.]

"அன்" ஆண்பாலீறு. மானுடயாக்கையானது, தசை, எலும்பு, நரம்பு முதலான, பல்வகைப் பொருட்களால் கட்டப்பெற்றது. இவ்வாறு பொருத்திய உடம்பினையுடைய மாந்தன் உடம்பினன், உடலினன் என்னும் பொருட் பொருத்தம், விளங்கித் தோன்றும் வண்ணம் "யாக்கையன்" என்று குறிக்கப் பெற்றான்.

யாகப்பப்பிள்ளை *yāgappa-p-piḷḷai,* பெ. (n.) தூது பனுவர், வானவன் விடு தூது போன்ற நூல்களை எழுதியவர், இவர் 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார்; *yāgappa piḷḷai* wrote treatiss like *Tūdu-paṉuvar, vāṉavaṉ-viḍu-tūdu,* 19th C.

யாகவுப்பு *yāga-v-uppu,* பெ.(n.) மருந்துப்பு; a kind of medicinal salt.

[யாக + உப்பு]

யாகவேதி *yāga-vēdi,* பெ.(n.) வல்லமை யுள்ள மூலிகை 23ல் ஒன்று; one of the 23 strong drugs.

[யாக + வேதி]

யாகாட்டம் *yāgāṭṭam,* பெ.(n.) வெள்ளை நாயுருவி; ordinary species of Indian burr.

[யாகம் + ஆட்டம்]

யாங்கண் *yā-ṅ-kaṇ,* வி.எ.(adv.) எவ்விடம்; where.

[யா + கண்]

யாங்கணும் *yāṅgaṇum,* பெ.(n.) எங்கும்; every-where. *"எஞ்ஞான்றும் யாங்கணும் யார்க்கு மெளிது" (குறள், 864).*

[யாங்கண் + உம்]

யாங்கர் *yāṅgar,* பெ.(n.) அரக்கர் (அக.நி); *Rāksasas,* devil spirited persons demon, giant.

யாங்கள் *yāṅgaḷ,* பெ.(n.) தன்மைப் பன்மைப் பெயர்; we.

[ஏம்→ யாம் + கள் – யாங்கள்.]

ஒ.நோ. நாம் + கள் – நாங்கள், எம் + கள் – எங்கள். "கள்" பன்மையீறு.

தனித்தன்மைப் பன்மைப் பெயர் வழக்கற்றுப் போனதினால், இன்று அதன் இடத்தில் 'நாங்கள்' என்னும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப்பெயர் தன் உளப்பாட்டுப் பொருளையிழந்து வழங்குகின்றது.

யாங்கனம் *yā-ṅ-gaṉam,* பெ.(n.) எவ்வாறு; how, in what manner, of what nature. *"யாங்கனம் தாங்குவென்" (நற்.381:6), "யாங்கன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்" (புறநா. 8).*

[யாங்கு + அனம் → யாங்கனம். "அனம்" = சொல்லாக்க ஈறு.]

(ஒ.நோ.) அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம்.

யாங்கு[1] *yāṅgu,* வி.எ.(adv.) 1. எவ்விடம், எங்கு; where. *"கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ" (குறள், 1070).* 2. எவ்வாறு; how, in what manner, of what nature. *"யாங்கு வல்லுநையோ" (ஐங்குறு. 231).*

க. ஹேகெ.

[யா + அங்கு → யாஅங்கு → யாங்கு]

ஆங்கு→அங்கு = அவ்விடம் (கலித்.145:6)

யாங்கு[2] *yāṅgu,* பெ.(n.) ஐயப்பொருளை யுணர்த்துஞ் சொல்; doubtful word.

[யாஅங்கு → யாங்கு]

யாங்கும் *yāṅgum,* பெ.(n.) எவ்விடத்தும்; everywhere. *"யாங்குமுளன் யாங்கு மிலன்....... எம்மான்" (குற்ற. தல. தக்கன் வேள்.5).*

[யாங்கு → யாங்கும்]

யாங்ஙனம் *yā-ṅ-ṅaṉam,* பெ.(n.) 1. எவ்விடம்; where. *"கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ" (குறள், 1070).* 2. எவ்வாறு; how, in what manner, of what nature. *"யாங்கு வல்லுநையோ" (ஐங்குறு.231).*

[யாங்கனம் → யாங்ஙனம்.]

யாசசர்க்கரை *yāša-šarkkarai,* பெ.(n.) பூனைக்காலிச் செடியின் சாற்றினின் றெடுக்கும் சருக்கரை; salt, extracted from juices of *pūṉai-k-kāli* plant.

யாசுசிதறாணி *yāšu-šidaṟāṇi,* பெ.(n.) கற்பூரம்; camphor.

[யாசு + சிதறாணி]

யாசுமிர்த்தம் *yāšu-mirttam,* பெ.(n.) புளி நரளைக் கிழங்கு; tubeus root of virtus cornosa alais, v.s setosa.

[யாசு + அமிர்த்தம்]

யாட்டை *yāṭṭai,* பெ.(n.) ஓராண்டுக்காலம்; annual, yearly.

[ஆண்டு→ஆண்டை→ஆட்டை→யாட்டை.]

யாடம் *yāḍam,* பெ.(n.) சிறுகாஞ்சொறி (தைலவ.தைல); small climbing nettle.

யாடலாயமூலி *yāḍalāya-mūli,* பெ.(n.) கறிப்புடலை; snake gourd, useful as vegetable.

யாடவச்சாரம் *yāḍava-c-cāram*, பெ.(n.) சத்திசாரம்; a kind of prepared salt.

[யாடவம் + சாரம்]

யாடு *yāḍu*, பெ.(n.) ஆடு; goat. *"யாடுங் குதிரையும் நவ்வியும் உழையும்" (தொல். பொருள். 567).*



க. ஆடு, ஆண்டு; தெ. ஆடு, யேட, ஏடிக; ம. ஆடு; து. ஏடு; குட. ஆடி; கூ. ஓட; குரு. ஏடா; மா. ஏட; பிரா. கேட்; குரும். ஆடு; கோண். யேடி; துட. ஓடு; ஈரு.,எரு. ஆடு; பட. ஆடு.

த. யாடு; **Skt.** eḍa, ēḍak.

Skt. ēdaka = ஆண்யாடு, ēdi = பெண்யாடு; **Pkt.** ēḍayā = பெண்யாடு, eḍakka = ஆண்யாடு. வட இந்திய மொழிகளில் யாடு, திரிந்து வழங்கிய பாங்கு வருமாறு :-

Pashai. ēṟā; yeṟō; **shumashti**. yēre; **Gawar-bati**. erayē; **Savi**. = yeṟo; **Pahlvi** = yiṟo; **Shina** = ēri.

[ஏழகம் → ஏடகம் → ஏடு → யாடு (வே.க.4, பக்.47).]

(ஒ.நோ.) மா + டு → மாடு.

ஒருகா. யா = கருமைக் கருத்தினைக் குறிக்கும் மூலவேர். யா → ஆ. ஒருகா. யாடு → ஆடு. 'டு' சொல்லாக்க ஈறு.

மக்கள் வழக்கிலும் இலக்கிய வழக்கிலும், வழக்கூன்றிய "ஆடு" என்னும் கரிய விலங்கின் பண்டைய வடிவம் யாடு என்பதாகும். கருமை என்னும் பொருண்மையில் யாடு என்னும் பெயர், பண்டைக் காலத்தே கழக இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. கருமையின்றி வெண்மைநிறத்தில் உள்ள ஆடு, வெள்ளாடு எனப்பட்டது. வெள்ளாட்டிலும், கருமைநிறம் மிகுதியாக உண்டு. யாடு என்னுமிச் சொல் கருமைக் கருத்தின் அடிப்படையிலேயே, இலக்கியத்திலும், மக்களிடையேயும் வழக்கூன்றியுள்ளது. தொல்காப்பியத்திலும், அகநானூற்றிலும் "யாடு" என்றே இடம் பெற்றுள்ளது.

"யாடும் குதிரையும் நவ்வியும் உழையும்" (தொல்.பொருள்.567), "மோத்தையும் தகரும் உதளும் அப்பரும் யாத்த என்ப யாட்டின் கண்ணே" (தொல்.பொருள்.1547), "காடுறை இடையன் யாடுதலைப் பெயர்க்கும்" (அகநா.394:13).

"யா" என்னும் இக் கருமைப் பொருண்மை முதனிலையே காலப்போக்கில் "ஆ" என்று, மக்கள் வழக்கிலும், இலக்கிய வழக்கிலும், திராவிட மொழிகளிலும் வழங்கலாயிற்று.

யாண் *yāṇ*, பெ.(n.) அழகு; beauty, handsome. *"ஞானமாக்கழல் யாணுற வீக்குநர்" (ஞானா. 37).*

[ஏ → ஏண் → யாண்]

யாண் = கவின், அழகு என்னும் பொருட் பொருத்தப்பாட்டில், இச்சொல் பயிலுந் தன்மைத்து. கலித்தொகை 50-ஆம் பாடலில், இச்சொல், கவின், அழகு என்னும் பொருண்மையில் வழக்கூன்றியுள்ளது.

(எ.கா.) *"யாணது பசலை என்றனன்" (கலி. 50:7).*

யாண்டு[1] *yāṇḍu,* பெ.(n.) 1. எங்கு, எவ்விடம்; where, what place. *"தண்ணென்னும் தீயாண்டுப் பெற்றா ளிவள்" (குறள், 1104).* 2. எப்பொழுது; when ever. *"யாண்டும் இடும்பை இல" (குறள், 4). "யாண்டுச்சென் றியாண்டு முள ராகார்" (குறள், 895).*

[யா + அண்டு – யாஅண்டு→ யாண்டு]

அண் = இடப் பொருள் உருபு. அண் + து – அண்டு = இடைத்தையுடையது, இடம்.

யா = வினாப் பொருண்மையினைக் குறிக்கும் சொல். தமிழ் மொழியில் முதற்கண் மாந்தன் விளைத்த எவ்வகை வினாக் கேட்புக்குமாக வழங்கிய வினாமொழி.

யாண்டு[2] *yāṇḍu,* பெ.(n.) ஆண்டு; year. *"யாண்டு தலைப்பெயர வேண்டு புலத் திறுத்து" (பதிற்றுப். 15).*

தெ., க. ஏடு; ம. ஆண்டு.

யாண்டு என்றது மாசித் திங்களில் தோன்றிய பங்குனிப் பிறை முதலாக மேல் வருகின்ற மாசியில் பங்குனிப் பிறையளவும் பன்னிரு மதியமாதல் (நச்.சிவ.489).

யாண்டு[3] *yāṇḍu,* பெ.(n.) பருவம்; term, period.

[யா → யாண் → யாண்டு]

பன்னீராண்டும், பதினாறியாண்டுமே பெண்மையும், ஆண்மையும் பிறக்கும் பருவ மென்பது (தொல்.பொருள்.273, பேரா).

யாண்டும் *yāṇḍum,* வி.எ.(adv.) 1. எப்பொழுதும்; always, under all circumstances for ever. *"யாண்டு மிடும்பை யில" (குறள், 4).* 2. எவ்விடத்தும்; in all places, every where, wheresoever. *"யாண்டுச்சென்றி யாண்டு முளராகார்" (குறள், 895).*

[யாண்டு + உம்]

யாண்டை *yāṇḍai,* பெ.அ.(in. pn.) எவ்விடம்; which place. *"யாண்டையது கானென விசைத்தது மிசைப்பாய்" (கம்பரா. உருக்காட்டு. 61).*

தெ. ஏட.

[யாண்டு → யாண்டை]

யாணம்[1] *yāṇam,* பெ.(n.) 1. அன்பு, விருப்பம், உள்ளக்கட்டு; love, affection, friendship. 2. பற்றுக்கோடு; support. *"தேவரை யாணமென் றடைந்து" (திவ்.திருச்சந்.69).*

[யா→யாஅண்→யாண் + அம் – யாணம்.]

"இய்" – என்பது பொருந்துதற் கருத்து மூலவேர். இய்→இயை→இயைதல் = அன்பால் இணைதல், நட்பால் பொருந்துதல். இரண்டு உள்ளமும் இயைதல். ஆரா அன்பால் இணைந்து கலத்தல். இய்→இய→இயா→யா.

யா = பொருந்துதற் கருத்துக் கிளைவேர்.

கருத்தொருமித்த காதலர் இருவர்தம் உள்ளக்கட்டின், விருப்பின் விளைவாகத் தோன்றும் நெஞ்சகப் பிணைப்பே காதலேயாகும்.

யாணம்[2] *yāṇam,* பெ.(n.) கட்டு; bind, tie. *"உடைதாரமும் ஒட்டியாணமும்" (மீனாட்சி. பிள்.ஊசல்.10).*

[யா→யாஅண்→யாண் + அம் – யாணம்.]

(ஒ.நோ.) கலி + யாணம் – கலியாணம் = ஆரவாரத்தோடு கூடிய புதிய மணமக்களைக் கட்டுவிக்கும் மங்கல நிகழ்வு விழா.

(எ.கா.) ஒட்டு + யாணம் – ஒட்டியாணம் = இடையை உள்ளொடுங்குமாறு ஒட்டிக்கட்டும் அரைவளை, அரையணி. ஒட்டியாணம், கலியாணம் இவ்விருசொற்களிலும், "யாணம்" என்னும் சொல், பின்னொட்டாகக் கட்டு, பொருத்து என்னும் பொருளில் பயின்று வருவது காண்க.

கன்னடம், தெலுங்கு, துளு முதலான திராவிடமொழிகளிலும், கட்டு, பொருத்து என்னும் பொருளில், இச்சொல் இன்றளவும் ஆளப்பட்டு வருதல் கண்கூடு.

(எ.கா.) ஒட்டியாணம் kannada: oḍyāṇa, oḍḍiyāṇa, oḍḍavāṇa.

oḍvāvā=belt of gold or silver chiefly worn by women.

Tu.: oḍyaṇe, oḍyāṇe.

Te. : oḍḍāṇamu.

த. ஒட்டியாணம் > **Skt.** uḍḍiyāna.

யாணம்³ *yāṇam*, பெ.(n.) 1. அழகு; beauty. *"யாணஞ்சான்ற அறிவர், கண்டோர்" (தொல்.பொருள்.1446).* 2. புதுவருவாய்; new income.

[யாஅண் → யாண் + அம் – யாணம்.]

கலியாணம் என்னும் கூட்டுச்சொல்லில் பின்னொட்டாகப் பிணைக்கப்பட்டுள்ள யாணம் என்னும் சொல், அழகு என்னும் பொருளில் தொல்காப்பியர் காலத்தே ஆளப்பட்டது.

கலியாணம் என்பது ஆடவர்க்கு எழிலார்ந்த இல்லத்தரசி கொணர்ந்த புதுவருவாய் என்னும் பொருண்மையில், இக்காலத்தும் ஆளப்படுகிறது. இதுகுறித்து மொழிஞாயிறு கூறுவது :– "கலி என்னும் சொல் இசைக்கருவி முழக்கத்தையும், யாணம் என்னும் சொல் பந்தற்சுவடிப்பும், மணமக்கள் கோலமுமாகிய அழகையும், வரிசை வைத்தலும், மொய் யெழுதுதலும், சீர் செய்தலுமாகிய புது வருவாயையும் குறிப்பது கவனிக்கத்தக்கது" (வ.வ.278, 279).

யாணர்¹ *yāṇar*, பெ.(n.) 1. புத்தம் புதிது; freshness, newness. *"புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி" (தொல்.சொல். 379).* 2. புதிய வருவாய்; new income. *"அறாஅ யாண ரகன்கட் செறுவின்" (பதிற்றுப். 71).* 3. வளப்பம்; fertility. *"யாணர்க் கோங்கின் குவிமுகை" (ஞானா. 60).* 4. செல்வம்; wealth. *"வெல்போர் வீயா யாணர்" (பதிற்றுப். 35, 10).* 5. நன்மை (பிங்.); goodness. 6. முறைமை; nature, regularity. *"மாணுற விலகா யாணர்த்து" (ஞானா 54, 8).*

[ஏ → ஏண் → யாண் → யாணம் → யாணர்.]

யாணர்² *yāṇar*, பெ.(n.) அழகு (பிங்.); beauty, charm.

[யாண் + அர் – யாணர். 'அர்' சொல்லாக்க ஈறு.]

யாண் = கவின், அழகு.

யாண் + அர் – யாணர். அழகும் கவினும் எழிலுற வாய்க்கப் பெற்றவர்.

"யாண்" என்னும் முன்னொட்டு அழகு, கவின் என்னும் பொருட் பொருத்தப்பாட்டில், கழக விலக்கியங்களில் பரவலாகப் பதிவூன்றியுள்ளது.

(எ.கா.) *"யாணது பசலை என்றனன்" (கலித். 507).*

"யாணர்த் தண்பணை உறும் என" (அகநா. 220:19).

"யாணர்த் தம் சிறுகுடி யானே" (அகநா. 228:13).

"காரணி யாணர்த் தூம்பகம்
பழுனிய தீம்பிழி மாந்தி" (பதிற்றுப்.80:20, 21).

இவ்வழகுப் பொருண்மை குறித்துச் சொல்லாய்வறிஞர் அருளியார் பகர்வது "அழகுடைய ஒன்று–புதியதாகத் தோன்றியதாகவும் – புதுமையோடு அமைந்திருப்பதாகவும் இருத்தல் இயல்பாதலின் – புதுமை – புதிது ஆகிய கருத்துப் பொருள் விரிவாக்கங்கள் நிகழ்ந்தன."

யாணர்³ *yāṇar,* பெ.(n.) 1. கல் தச்சர் (அக.நி.); stone-cutters. 2. மரவேலை செய்யும் தச்சர்; carpenters.

[யாஅண் → யாண் + அர் → யாணர்]



யாணர்நகர் *yāṇar-nagar,* பெ.(n.) விஞ்சையருலகு (பிங்.); world of the *vidyādharas.*

யாணன் *yāṇan,* பெ.(n.) அழகுள்ளவன்; beautiful or handsome person. *"யாணர்க்குள் யாண" (அரிச். பு. சூழ்வினை. 19).*

[யாண் + அன் – யாணன்]

யாண் = கவின், அழகு.

யாணன் = அழகும், கவினும் இயல்பாக வாய்க்கப் பெற்றவன்.

யாணு *yāṇu,* பெ.(n.) அழகு; beauty. *"ஞானமாக்கழல் யாணுற வீக்குநர்" (ஞானா.33), "யாணுக் கவினாகும்" (தொல். சொல்.381).*

[யாண் → யாணு = கவின், அழகு.]

யாத்தழாகம் *yā-t-taḻāgam,* பெ.(n.) மூதண்டம் என்னும் மூலிகை; a kind of herbal medicine.

[யா + தழாகம்]

யாத்திரை¹ *yāttirai,* பெ.(n.) செலவு; journey, voyage. *"நிசிவேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்".*

[ஏய் → ஏ → யா + திரை = தொழிற்பெயர் விகுதி.]

(எ.டு.) தகடூர் யாத்திரை.

த. யாத்திரை – **Skt.** yātrā> யாத்ரா.

ஒ.நோ. மா → மாத்திரை.

'ய'கரம் ஜகரமாவது இந்தி ஆரியமொழி இயல்பு.

(எ.டு.) இந்தி. யுவன் > வ. ஜவான்.

த. யாத்திரை → வ. யாத்ரா → இந்தி. ஜாத்ரா (தலைமை.தமி.பக்.17).

யாத்திரை என்பது பாவாணரின் வேர்ச்சொல் பகுப்பின் வழி தூய தென்சொல் என்பது புலனாகும். இதுகாறும் இச்சொல் பிறமொழிச் சொல்லென மயங்கி வந்த நிலையினை விட்டொழிக.

யாத்திரை² *yāttirai,* பெ.(n.) திருக்கோவில்களைக் காணும் பொருட்டு செலவு மேற்கொள்கை; pilgrimage, to sacred places. *'இராமேச்சுரம் வரை யாத்திரை மேற்கொண்டார்'.*

[ஏய் → ஏ → யா → யாத்திரை = வழிச்செலவு.]

யாத்திரைநாடி *yāttirai-nāḍi,* பெ.(n.) கோழை மேற் கோழை கூடிச்சேர்ந்தால் உடலிருக்க உயிர் பிறிந்து போகும், இறத்தலைக்குறிக்கும் நாடி; pulse indicating death, due to phlegmatic humour reactin.

[யாத்திரை + நாடி]

யாத்திரைபோதல்[1] *yāttirai-pōdal,* பெ.(n.) மணமகன் திருமண நிகழ்வின் முன்பு பயணமாகச் செல்லுதல் (இ.வ.); a custom of ceremonial setting out of the bridegroom as a pilgrim, just before the celebration of the marriage. *"காசி யாத்திரை" (இ.வ.).*

[யாத்திரை + போதல்]

யாத்திரைபோதல்[2] *yāttirai-pōdal,* பெ.(n.) 1. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்; setting by the bridegroom for earing wealth. 2. திருக்கோயில்களுக்கு நலங்கருதி செலவு மேற்கொள்ளுதல்; setting out of pilgrimage.

மறுவ. பரதேசம் போ–தல்.

[ஏ→ யா + திரை + போ–. ஏ = செல், திரை = ஒரு தொழிற்பெயரீறு)]

யாத்திரை என்னுஞ் சொல்லை வட சொல்லென்று மயங்கி யாத்திரை போதல் என்னும் வழக்கம் ஆரியத் திருமண நிகழ்வில் காணப்படுவதால் வடவருக்கே யுரியதென்பர். பாவாணரின் வேர்ச்சொல் பகுப்பின் வழி தூய தென்சொல் என்பது புலனாகும்.

பழந்தமிழரிடத்தே யாத்திரை போதல் என்னும் வழக்கத்திற்கு இணையாக, 'பரதேசம் போதல்' என்னும் நிகழ்வு, வழக்கூன்றி வந்துள்ளது. தமிழரிடையே பழைய முறையில் நிகழ்த்தப் பெறும், பெரும்பாலான திருமணங்களில், 'பரதேசம் போதல்' என்று ஒரு சடங்கு முற்காலத்தே உண்டு. "வினையே ஆடவர்க்கு உயிரே" என்னும் பழந்தமிழர் தம் மணவினை முடித்தற்கு முன்பே, பொருள் தேடச் செல்லுதல் சிறப்பெனக் கருதப்பட்டதால், "பரதேசம் போதல்" என்னும் சடங்கு திருமண நிகழ்வில் இடம்பெற்றதெனலாம். பரதேசம் என்பது வெளிநாடு மணப்பிள்ளை குதிரையில் பரதேசம் போய் வருவார், வந்தவுடன் மணமகளுக்குத் தாலிகட்டுதல் நடைபெறும். இந்நிகழ்வு தொன்றுதொட்டு நிகழ்ந்துவரும் தமிழர்தம் திருமண நிகழ்வாகும். இந்நிகழ்வு பண்டைய இலக்கண இலக்கியங்களில் "வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல்" என்னும் அகப்பொருள் துறையைச் சார்ந்தது ஆகும்.

இந்நிகழ்வு பழைய வழக்கத்தின் அடையாளமாக, பொருள் வளம் மிக்காரிடையே காணப்படுகிறது. பொருளாதார நெருக்கடியின் விளைவாக இந்நிகழ்வு அருகி வருவது யாவரும் அறிந்தவொன்றாகும்.

வாழ்வியலில் அனைத்து இல்லக் கடமைகளையும் முடித்த முதுபெருங்குரவர், நற்பேறு கருதி திருக்கோயில்களுக்குச் செல்லுதலும் யாத்திரை போதலேயாகும்.

யாதகம் *yādagam,* பெ.(n.) அகத்தி, a tree- *Sesbania-gradiflora.*

யாதயாமம் *yādayāmam,* பெ.(n.) அருந்தியது அறுதல்; digestion, assimilation.

யாதரு *yātaru,* பெ.(n.) பலகறை; cowry- *Cypracamoneta.*

யாதவசமூலி *yādavaša-mūli,* பெ.(n.) மருளூமத்தை; a species of datura.

[யாதவசம் + மூலி. மூலிகை என்பதன் கடைக்குறை மூலி.]

யாதானும் *yādāṉum,* பெ.எ.(adj.) எதுவாயினும்; which thing, what thing. *"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்" (குறள், 397).*

[யாது + ஆன் + உம்]

யாதிகம் *yādigam,* பெ.(n.) மல்லிகை வகையுளொன்று; a kind of jasmine - *Jasminim Auriculatum.*

[யாது + ஆன் + உம்]

யாதினிக்குல்லி *yādiṉi-k-kulli,* பெ.(n.) சாராயம் (சித்.அக.); arrack.

[யாதினி + குல்லி]

யாது[1] *yādu,* பெ.அ.(in.pron.) 1. எது; what, which. *"அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்" (குறள், 254), "யாது யா.............. என்னும் பெயரும்" (தொல்.சொல். பெயரி.13:5).* 2. வினா; question, interrogation, query. *'காரணம் யாதாக இருப்பினும் அதைத் தெரிவிக்க வேண்டும்'.*

[யாவது → யாது.]

"யாது" என்பது சிறிதும் அறியப்படாத பொருள்பற்றி வினாவாக வரும். கா. குதிரைவாலி யாது?

யாது[2] *yādu,* பெ.(n.) அரக்கன்; wil-doer, *rāksasa. "வைதனர் யாதுதானர்" (கம்பரா. கும்ப. 174).*

யா → யாது = கரியநிறத்தன்.

யாது[3] *yādu,* பெ.(n.) கள் (சது.); toddy.

யாது[4] *yādu,* பெ.(n.) நினைவு; memory, remembrance. *"எனக்கு யாது இல்லை".*

[யா → யாது]

யாதுகம் *yādugam,* பெ.(n.) வாலுளுவை யரிசி; seeds of intellect plant.

யாதுடையான்பூடு *yāduḍaiyāṉ-pūḍu,* பெ. (n.) செவ்வாமணக்கு; red variety of castor.

யாதும் *yādum,* பெ.(n.) எதுவும்; anything and everything, anything. *"யாது மூரே யாவருங் கேளிர்" (புறநா.192).*

[யாது + உம்.]

ஒருகா. யாவதும்→யாதும் என்றுமாம்

யாதொரு *yādoru,* பெ.அ.(adj.) எந்த ஒரு; any what so ever. *"யாதொரு தெய்வங் கண்டீர் அத்தெய்வமாகி அங்கே" (அப்பர். தேவாரம்.), 'எனக்கும், இதற்கும் யாதொரு தொடர்பும் இல்லை'.*

[யாது + ஒரு]

யாதோ *yādō,* பெ.(n.) ஐயச்சொல்; interrogative or doubtfull word.

[யாது → யாதோ]

யாதோவருமாசி *yādō-varumāši,* பெ.(n.) பெருந்துளசி; a large species of ocimun sanitum, holy basil.

யாதோனிவாசம் *yādōṉi-vāšam,* பெ.(n.) தண்ணீர்; water.

யாந்தலந்தகம் *yāṉ-talandagam,* பெ.(n.) செங்கத்தரி; red variety of brinjal.

யாந்துடனாதி *yāṉ-duḍaṉādi,* பெ.(n.) கருந்துளசி; black variety of ocimum sanction, a species of holy basil family.

[யா + துழநாதி → துடனாதி]

யாப்பண்டம் *ya-p-paṇḍam,* பெ.(n.) கருக்கொண்டவள் விரும்பும் திண்பண்டம்; an eatable desired by a pregnant woman.

மறுவ. காயமருந்து.

யாப்பதிகாரம்[1] *yāppadigāram,* பெ.(n.) செய்யுளிலக்கணம் கூறும் நூற்பகுதி (தொல். பொருள்.313, பேரா); section on prosody.

மறுவ. யாப்பிலக்கணம்.

[யாப்பு + அதிகாரம். அதிகாரம் = நூற்பெரும் பிரிவு.]

யாப்பதிகாரம்[2] *yāppadigāram,* பெ.(n.) செய்யுளிலக்கணம் பற்றி புலவர் குழந்தை எழுதிய நூல்; a treatise on Tamil prosody by *pulavar Kuḻandai.*

யாப்பம் *yāppam,* பெ.(n.) புணர்ச்சி (சங். அக.); coition.

மறுவ. கலவி.

[யாப்பு + அம் – யாப்பம்.]

த. யாப்பம் > **Skt.** Yābha (யாப) = sexual intercourse.

யாப்பருங்கலக்காரிகை *yāpparuṅgala-k-kārigai,* பெ.(n.) பதினோராம் நூற்றாண்டில் அமிதசாகரர் கட்டளைக் கலித்துறையால் இயற்றிய செய்யுளிலக்கண நூல்; a treatise on Tamil prosody in *kaṭṭaḷai-kali-t-tuṟai* metre by *Amidaśāgarar,* 11th,C.

மறுவ. காரிகை.

[யாப்பருங்கலம் + காரிகை]

கரு → கார் → காரிகை = அழகிய பெண். யாப்பருங்கலக் காரிகையென்பது அழகிய பெண்ணை விளித்துப் பாடும் பாவகையில் அமைந்தது.

யாப்பருங்கலம் *yāpparuṅgalam,* பெ.(n.) பதினோராம் நூற்றாண்டில் அமிதசாகரர் நூற்பாவால் இயற்றிய செய்யுளிலக்கண நூல்; a grammatical treatise on prosody in *šūttira-p-pa,* by *Amidaśāgarar.*

யாப்பறை *yāppaṟai,* பெ.(n.) கற்பில்லாதவள்; abandoned woman. *"யாப்பறை யென்றே யெண்ணின னாகி" (மணிமே. 22, 42).*

[யாப்பு + அறு → அறை – யாப்பறை = யாப்பு அறுபட்டவள். கட்டு நெகிழ்ந்தவள்.]

யாப்பானந்தம் *yāppāṉandam,* பெ.(n.) பாட்டில் தலைவன் பெயர்க்கு முன்னும் பின்னும் சிறப்புடை மொழியினைப் புணர்த்து இடர்ப்படப் பாடும் ஆனந்தக் குற்றம் (யாப். வி. 96, பக். 522); a defect in composition in which the name of the hero of a poem is clumsily set in the midst of attributes. *முன் தொடுக்கப்பட்ட சிறப்புடை மொழியின் பின்னர்ப் பாட்டுடைத் தலைவன் பெயர் நிறீஇ, அதன் பின்னே சிறப்புடை மொழி நிறீஇச், சிறப்பிக்கப்படுவதனை இவ்வாறு இடர்ப்படப் பாடுவது (யாப்.96).*

*[யாப்பு + **Skt.** ānanda → த. ஆனந்தம்]*

யாப்பியம் *yāppiyam,* பெ.(n.) 1. பொழுது போக்கு (யாழ்.அக.); hobby. 2. காலவரை யறை யுள்ளது; time-bound that which has a time limit or frame. 3. வளி முதலாய நோய் மூன்றனுள் பெரும்பான்மை தீர்க்கத் தக்கதும் சிறுபான்மை தீர்க்க முடியாததுமான நாட்பட்ட நோய் (குறள், 949, கீழ்க் குறிப்பு);

chronic disease as not completely curable, one of three *nōy.* 4. இழிவானது (யாழ்.அக.); that which is contemptible or mean, pully-mindedness. 5. நாஞ்சில் நாட்டு மருமக்கத்தாய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் குடும்பத்திலிருந்து விலகும் போது அக்குடும்பத்தில் அவனுக்குள்ள பங்குக்கு ஈடாகக் கொடுத்து, ஒதுக்குஞ் சொத்து; the property given to a male member of the *Nāñjilnāḍu marumakkatāyam* family in lieu of his interest in the family property. *'அவனுக்கு இந்நிலத்தை யாப்பியமாகக் கொடுத்து ஒதுக்கிவிட்டார்கள்'.*

[யாப்பு→யாப்பியம்]

யாப்பியயானம் *yāppiya-yāṉam,* பெ.(n.) கோயில் திருமேனியை நெடுந்தூரம் கொண்டு செல்லுதற்கு உதவும் தண்டிகை; ornamental palanquin for carrying an idol for long distances.

[யாப்பியம் + யானம்]

யாப்பியரோகம் *yāppiya-rōgam,* பெ.(n.) நோய் மூன்றனுள் பெரும்பான்மை தீர்க்கத் தக்கதும் சிறுபான்மை தீர்க்க முடியாததுமான நாட்பட்ட நோய் (குறள், 949 கீழ்க் குறிப்பு); chronic disease, as not completely curable, one of three *nōy.*

*[யாப்பியம் + **Skt.** ரோகம். யாப்பியம் = உடம்பு.]*

Skt. rōga> த. ரோகம்.

யாப்பியவுகந்துடைமை *yāppiya-v-ugan duḍaimai,* பெ.(n.) நாஞ்சில் நாட்டிலுள்ள குழந்தைகளுக்குத் தகப்பனாருடைய யாப்பியச் சொத்திலுள்ள உரிமை; the reversionary interest of the children of a *Nāñji-nāḍu* family in the *yāppiyam* property of their father.

[யாப்பியம் + உகந்துடைமை]

யாப்பிலக்கணம் *yāppilakkaṉam,* பெ.(n.) செய்யுளிலக்கணம்; prosody.

[யாப்பு + இலக்கணம்]

யாப்பு[1] *yāppu,* பெ.(n.) 1. கட்டுகை; binding, tying. *"கழல்யாப்புக் காரிகை நீர்த்து" (குறள், 777).* 2. பிணிப்பு (நற், 21:2) கட்டு, கட்டுவடம் (கலி.54:3); tie. *"யாப்புடை யாழ்" (சீவக. 2011).* 3. கட்டப்பெற்ற பாட்டு, செய்யுள் (பிங்.); poetry. 4. யாழ்ப் பத்தரிற் குறுக்கே வலிவுறச் செய்யுங் கட்டு; ligature stretched across the pot like portion of *yāḷ.* *"புதுவது புனைந்த வெண்கை யாப்பமைத்து" (மலை. 28).* 5. சிறப்புப் பாயிரவிலக்கணம் பதினொன்றனுள் இன்ன நூல் கேட்டபின் இன்னது கேட்கத்தக்க தென்னும் முறை (நன். 49); graduated serial order of treatises to be studied one of order of *siṟappu-p-pāyiram..* 6. அன்பு, அன்புத் தொடர்பு; affection, as binding persons together love that was springing up between them. *"நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள் யாப்பினு ளட்டிய நீர்" (குறள், 1093).* 7. உறுதி; resolution, steadiness, firmness, conviction. *"யாப்புறு மாதவத்து" (மணிமே. பதி. 57), "யாப்பிலோரை" (முது. காஞ்சி. 21).* 8. சூழ்ச்சி (பிங்.); counsel, guile. 9. பொருத்தம்; fitness, matching. *"அதற்கு யாப்புடைமையின்" (தொல். சொல். 77).* 10. கவசம் (நற்.265:4); armour. 11. பாம்பு (அக.நி.); snake. 12. மெய்ப்பை (பரி, திரட்டு : 12: 19); *சொற்களைப் பாவாக இசைத்தல் (தேவ.2). அடிதோறும், பொருள் பெறச்செய்வதொரு செய்கை (பேரா.தொல். பொருள். 313)*

தெ. ஆபு

[யா → யாப்பு]

யாப்பு எனினும், பாட்டு எனினும், தூக்கு எனினும், செய்யுள் எனினும், தொடர்பு எனினும் ஒக்கும் (யாப்.பாயி.).

யாப்பு² *yāppu*, பெ.(n.) வல்லிகை என்னும் குதிரைக்குரிய கழுத்தணி (கலி.96:10); valligai, tied tinkling bells put around the neck of horse.

[யா → யாப்பு = குதிரையின் கழுத்தில் பிணைத்துள்ள அணிவகை.]

யாப்பு³ *yāppu*, பெ.(n.) முலைக்கச்சு; bodice, stays for the breast.

[யா → யாப்பு = கட்டுத்துணி.]

(ஒ.நோ.) மார் + யாப்பு → மாராப்பு. 1. மார்பகத்தின் மேலிட்டுக் கட்டும் சீலைப் பகுதி. 2. முதுகை வளைய வந்து மார்பருகில் இணைத்து மூட்டை கட்டும் கச்சை (சீதக்.36).

யாப்புண்டல் *yāppuṇḍal*, பெ.(n.) கட்டுப்படுதல்; subject to, bounden.

[யாப்பு + உண்டல்.]

யாப்புவகை *yāppu-vagai*, பெ.(n.) நான்கு பிரிவாகவுள்ள நூலமைப்பு; treatise which has four sections.

[யாப்பு + வகை]

நூல்யாக்குமிடத்து நான்கு பிரிவாக நூல் அமைக்கப்படும். அவையாவன :- 1. தொகுத்தமைத்தல், 2. விரித்துக் கூறும் பான்மையில் அமைத்தல், 3. தொகை விரியாகக் கூறுதல், 4. மொழிபெயர்த்தல்.

யாப்புவழு *yāppu-vaḻu*, பெ.(n.) செய்யுட் குற்றங்களுளொன்று (யாப்.வி.பக். 525); a defect in poetic composition.

[யாப்பு + வழு]

"யாப்பதிகாரத்தோடு மாறு கொள்வது" (யாப். 95.)

யாப்புறவு *yāppuṟavu*, பெ.(n.) 1. தள்ளத் தகாத மரபொழுங்கு; inviolable rule. *“ஒன்றற்கே இவையாறும் வரவேண்டு மென்னும் யாப்புறவில்லை” (நன்.132, மயிலை).* 2. தகுதி; fitness, suitability. *“கோப்பெருந்தேவிக் கல்லதை யிச்சிலம் பியாப்புறவில்லை” (சிலப். பதி. 24).*

[யாப்பு + உறவு – யாப்புறவு.]

யாப்புறு¹-தல் *yāppuṟu-*, 20 செ.கு.வி.(v.i.) பொருள் நிரம்பியிருத்தல்; to be pregnant with meaning. *“யாப்புற வந்த” (தொல். பொருள்.254).*

[யாப்பு + உறு–.]

யாப்புறு²-தல் *yāppuṟu-*, 17 செ.கு.வி. (v.i.) ஏற்புடையதாதல், சம்மதித்தல்; to be appropriate, to earn, gather. *“வருந்தி யாப்புற்ற” (ஞானா. 20).*

[யாப்பு + உறு–.]

யாப்புறு³-த்தல் *yāppuṟu-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. வலியுறுத்துதல்; to enforce. *“பெயர்த்துரை அதனை யாப்புறுத்தற் பொருட்டு” (குறள், 944, உரை).* 2. கட்டுப்படுத்தல்; to bound.

[யாப்பு + உறு–.]

யாப்புறுப்பார் *yāppuṟuppār*, பெ.(n.) உறுதிப்படுத்துவார்; one who confirms.

[யாப்புறு → யாப்புறுப்பார்.]

யாபதம் *yāpadam,* பெ.(n.) வாலுளுவை; a plant-*Celastrus paniculata.*

[யா + பதம்]

யாபம் *yābam,* பெ.(n.) யாப்பம் பார்க்க; see *yāppam.*

யாபி[1]-த்தல் *yābi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. பொழுது போக்குதல்; to while away one's time. 2. துய்த்தல்; to enjoy. *"சுசிக்குச் சுசிந்தை சொல்லுக்குத் தேருர், இருக்கப் பறக்கை, யாபிக்கக் கோட்டாறு" (நாஞ்.).*

[யா→யாபி-.]

யாபி[2]-த்தல் *yāpi-,* 4 செ.கு.வி.(v.i.) உரிமையில்லையாகவும் எடுத்தாளுதல்; to obtain unlawful possession of; to encroach upon.

யாபேரும் *yāpērum,* மா.பெ.(pron.) எல்லாரும் (இ.வ.); one and all.

[யா + பேரும்.]

யாம் *yām,* பெ.(n.) தன்மைப்பன்மைப் பெயர் (தொல்.சொல். 164); we. *"யாஅம் துணை புணர்ந்துறைதும்" (ஐங்குறு.333). "யாம் கண்ணிற்காண நகுப" (குறள், 1140).*

க. ஆம்

[யா + அம் – யாஅம்→ யாம். அம் = தன்மைப் பன்மை ஈறு.]

யாம்பல்கண்டாள் *yāmbal-kaṇḍāḷ,* பெ.(n.) மணித்தக்காளி; a medicinal plant used as vegetable, black night-shade-*Solanum tubenosum.*

யாமக்காலம் *yāma-k-kālam,* பெ.(n.) நள்ளிரவு; mid-night.

மறுவ. நடு இரவு நடுநாள்.

[யாமம் + காலம்]

யாமக்காவலர் *yāma-k-kāvalar,* பெ.(n.) யாமங்கொள்பவர் பார்க்க; see *yāmaṅ-koḷpavar.*

[ஏமம்→யாமம் + காவலர்]

யாமக்கிழங்கு *yāma-k-kiḻaṅgu,* பெ.(n.) ஒருவகைக் கிழங்கு; a variety of corm.

[யாமம் + கிழங்கு]

யாமக்கோட்டம் *yāma-k-kōṭṭam,* பெ.(n.) உவளகம்; harem. *"யாமக் கோட்டத் தருஞ்சிறைக் கோடல்" (பெருங். இலாவாண. 11, 25).*

[யாமம் + கோட்டம்]

யாமகோடம் *yāma-kōḍam,* பெ.(n.) 1. சேவல்; cock. 2. நாழிகை வட்டில் (யாழ். அக.); hour glass.

யாமங்கொள்பவர்[1] *yāmaṅ-koḷpavar,* பெ.(n.) 1. இடையாமத்து ஊர்க்காவல் செய்பவர்; night watchman. *"யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம்" (புறநா. 37).* 2. நாழிகைக் கணக்கர்; those who announce the time of the day to the king. *"குறுநீர்க் கன்னலின் யாமங் கொள்பவர்" (மணிமே.7:65).*

யாமங்கொள்பவர்[2] *yāmaṅ-koḷpavar,* பெ.(n.) யாமந்தோறும் காவல் செய்தலை மேற்கொள்ளும் காவலர்; mid-night watchman. *"காப்புடை வாயில் போற்றோ என்னும் யாமங் கொள்பவர்" (நற்.132:8–9).*

[ஏமம்→யாமம் + கொள்பவர்]

இரவுப் பொழுதில் ஒவ்வொரு யாமத்தும் காவல் மேற்கொள்பவர்.

யாமசரிதன் *yāma-šaridaṉ,* பெ.(n.) அரக்கன்; *Rāksasaṉ,* as roaming about at night. *"யாமசரிதனை மூளையுக வுடல் கீளுமே" (பாரத.வேத்திரகீய. 45).*

யாமசிக்கிழங்கு *yāmaši-k-kiḻaṅgu,* பெ.(n.) தண்டுக்கிழங்கு வகையு ளொன்று; a variety of corm. *சமையலுக்குப் பயன்படும் கருப்புத் தோலுடன் கூடிய கிழங்கு.*

யாமபதி *yāma-padi,* பெ.(n.) திங்கள் (சந்திரன்) (யாழ்.அக.); moon.

[யாமம் + பதி]

யாமபேரி *yāma-pēri,* பெ.(n.) இரவில் ஒவ்வொரு சாமத்தின் தொடக்கத்திலும் கொட்டும் பேரிகை; drum beaten with stick at the commencement of each of the three watches or segment of the mid night. *"யாம பேரி யிசைத்தலால் (கம்பரா. கைகேசிசூழ். 57).*

[யாமம் + பேரி. பேரி = முரசு. பேரிகை என்பதன் கடைக்குறை பேரி.]

யாமம்[1] *yāmam,*பெ.(n.) 1. 7 1/2 நாழிகை கொண்ட காலவளவை (பிங்.); a watch of 7 1/2 *nāḻigai* = 3 hours, period of three hours. 2. நள்ளிரவு; midnight, the middle watch of the night. *"கூதிர் யாம மென்மனார் புலவர்" (தொல். பொருள். 6).* 3. இரவு; night. *"யாமக்கடலை நீந்துவேன்" (சீவக. 1663).* 4. இடக்கையாற் கொட்டும் ஒரு தோற்கருவி (சிலப்.3,27,உரை); small drum beaten by the left hand. 5. ஒரு நாளில் 40 நாழிகைக்குமேல் 50 நாழிகை வரையுள்ள பொழுது (நாமதீப.559); the period between the fortieth and the fiftieth *nāḻigai* of a day. 6. பொழுது (அக.நி.); time. 7. அகலம் (நாமதீப.778); breadth.

த. யாமம் → **Skt.** *yāma* = night watch of three hours.

மறுவ. நள்ளிரவு, நடு இரவு, நடுநாள், நடுச்சாமம்.

[ஏம் → ஏமம் → யாமம்]

யாமம் என்னுஞ் சொல், "யா" என்னும் கருமைக்கருத்து மூல வேரடியினின்று கிளைத்தது. அங்கிங்கெனாதவாறு, யாங்கணும் இருள் கவ்வித் திகழும், நடு இரவுக் காலமே யாமம். இச்சொல், இரவுக்காலம் என்னும் பொதுப் பொருளில், முதற்கண் வழங்கியது. காலப்போக்கில் அவ்விருள் செறிந்து திகழும் நடுப்பகுதி நேரமாகிய நள்ளிரவுப் பொருண்மையில், சிறப்பாக மக்களிடையே, வழக்கூன்றியது. நள்ளென்னும் இடையறாத் தொடரோசை எங்கும் கேட்கும், இராப்பொழுதின் நடுக்கூறே யாமம் என்று கழகக்கால இலக்கியங்கள் இயம்பும்.

எ.கா.வருமாறு:-

1. *"நள்ளென் யாமத்து" (குறுந்.160:4)*
2. *"நள்ளென யாமத்து மழை பொழிந்தாங்கே" (நற். 22 : 11).*
3. *"கடல் மீன் துஞ்சு நள்ளென் யாமத்து" (அகம். 142 : 20).*
4. *"நள்ளென் யாமத்து உயவுத் துணையாக" (அகம். 103 : 12).*
5. *"யாம இரவின் நெடுங்கடை நின்று"(அகம்.208:1).*

நடுஇரவு, நள்ளிரவு என்னும் பொருண்மையில் தொல்காப்பியம் முதலான கழகக்காலப் பனுவல்களில் பரந்துபட்ட இலக்கியப் பதிவுகள் காணப்படுகின்றன. அவற்றுட் சில வருமாறு :-

1. *"குறிஞ்சி, கூதிர், யாமம் என்மனார் புலவர்"*
(தொல்.பொருள்.1 : 7)
2. *"புலம்புகொள் யாமத்து" (குறுந். 279 : 3)*
"...................... உறை செறிந்து"
3. *"ஊதை தூற்றும் கூதிர் யாமத்து"*
(குறுந்.86:3:4)
4. *"நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்"*
(புறநா.189:3).

"யாமம்" என்னும் சொல்பற்றி ஆய்வாளர் ப.அருளி கூறுவது வருமாறு :– பொதுப்பட இரவைக் குறித்துத் தோற்றிய யாமம் என்னுஞ் சொல், கருத்துக் கூர்ப்பு எய்தி, நள்ளிரவாகிய நடு இரவையே காலப்போக்கில், சிறக்கக் குறித்து வழங்கத் தலைப்பட்டது.

(Pali) *yāma*
(Prakrit) *yāma*
(Sindhi) *yam-a*

"ய" கரம் "ஜ" கரமாவது வடவிந்திய ஆரிய மொழி இயல்பு.

(எ.கா). த. யாத்திரை → **Skt.** *yātra.* **Hindi.** *jātra.*

"யாமம்" என்னும் கருமைக்கருத்து அடிப்படைச் சொல்லினின்று (சகரமெய் முற்பேறுற்றுத்) திரிபெய்திவாறு பயில்வு கொண்டுள்ள இந்திய–ஆரிய மொழிச் சொற்களாவன :

யாமம் > [Sanskrit] *syāma* = black, swarthy, dark-blue

[Prakrit] *šāma* = black, dark-blue
[Pali] : *šāma* = black, dark
[Pashai] : *šāmak, šamec* = black
Kachur - i sala
dialect of pashai : *šamek* = black
Nirlāmi dialect of pashai : *sāmek* = black
Wegali dialect of pashai : *sāmek* = black.
Kuraṅgali dialect of pashai : samak
Kashmiri : somu = dark-blue, dark brown;
Nepali : *sāu* = dark coloured
Assamese : *xāu, xāo* = swarthy, lightish dark
Gujarati : *sām* = black, dark
Sindhi : sam - van = black colour

அடுத்த திரிபு வளர்ச்சி :

யாமம் > [Sanskrit] *syāma* > *šyāmala* = dark - coloured
Prakrit : samala = dark coloured
Sindhi : *sāvilo* = dark-blue
Panjābi : *sāvla, saulā, sāvlā, sāulā*
saula = black, dark-complexioned
Nepali : *sāulo* = swarthy
Oriya : *sāula, sāmala*

ஒரு ஒப்பு நோக்குக்கு :

[Sanskrit] *šyāma - sāstri* [சியாமா சாஸ்திரி = கருப்பாசிரியன்]
[கருப்பாசிரியப் பார்ப்பான்]
யா = கருமை
யா > [Sanskrit] *syāva* = dark, dark-brown
Kohistāni : *šā* = black
யா > [Sanskrit] *syāva* > *syāviya, syāvyā* = darkness

யாமங் கொள்பவர் = இடையாமத்து ஊர் காப்பவர்

[1] "யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம்
கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சி"
[புறம் : 37 : 9–10]

யாமம்[2] *yāmam-*, பெ.(n.) தெற்கு (சூடா.); south.

யாமயாழ் *yāma-yāḻ*, பெ.(n.) நடுச் சாமத்தில் இசைக்கும் யாழ்; lute played at midnight. *"யாமயாழ் மழலையாள்" (கம்பரா. நாடவிட்.34).*

[யாமம் + யாழ்]

நள்ளிரவில் இசைக்கப்பெறும் யாழ்; ஒவ்வொரு யாமத்திலும், அதற்குரிய பண்முறையோடு இசைக்கப்பெறும் யாழ்.

யாமர் *yāmar,* பெ.(n.) 1. இயக்கர் பன்னிருவர்; twelve sons of *iyakkiyan,* a deity. 2. தேவதை; a deity.

யாமரம் *yāmaram,* பெ.(n.) 1. கரிய பருத்த அடிப்பகுதியை யுடைய மரம்; the blackish trunk of a tree. *"யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்" (தொல்.எழுத்து.229).* 2. ஆச்சா மரம் (அக.நி.); hard wickia binata tree.

கன். ஆசு, ஆச, ஆர்ச.

மறுவ. கருந்தாளி மரம், மையாளி மரம், நெடுந்தாளி, அஞ்சன மரம், காட்டடகு, சாலமரம்.

[யா + மரம் – யாமரம்]

கரிய பருத்த தாள்பகுதியை உடைய நெடிய மரம். இம்மரம் பாலை நிலத்தில் பரவலாகக் காணப்பெறும். இம்மரத்தின் நிலைத்திணைப் பெயரை, (தாவரப் பெயரை) இதுகாறும், யாரும் தெளிவாக வரையறுக்கவில்லை. "யா" என்னும் ஓரசைச் சொல், சொல்லமைப்பிலேயே, கருமைப் பொருண்மையை பெயராகப் பெற்றுள்ளது. கருமைக் கருத்து மூலச்சொல்லான, "யா" என்னும் விதைச்சொல்லே [seed - word] யாமரத்தினைக் குறிக்கும். கழக இலக்கியத்தின் தலைமைப் பனுவலான தொல்காப்பியத்திலும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களிலும், 'யா', 'யாஅ', 'யாஅம்', 'யாமரம்' என்னும் வடிவங்கள் பதிவு பெற்றுள்ளன. (எ.கா.) "யா":– "யாவுயர் நனந்தலை" (அகநா.65:13). "யாஅ":– "யாஅ வரிநிழல்" (குறுந். 232 : 5).

"யாஅம்", "நெடுநிலை யாஅம்" (அகநா. 659, 9), "யாமரம்" "யாமரக் கிளவியும்" (தொல். எழுத்து. 229).

யாமரம் கரிய நெடுந்தாள்களைத் தன்னகத்தே கொண்டது. இப் பருத்த நெடுந்தாள்களினின்று கிளைத்த கவடுபட்ட கொம்புகளில், பொன்போற் சிவந்த இளந்தளிர்கள், மிக்கு ஒளியுடன் மிளிரும். இம் மரத்தின் கவடுபட்ட கொம்புகளில் விளங்கித் தோன்றம் பிளவுபட்ட இலைகள் எல்லாம், இலையுதிர்காலத்தே வீழ்ந்துபடுந் தன்மைத்து. இலைகள் உதிர்ந்த நிலையில், யாமரத்தின் மீது விழும் சூரியக் கற்றைகள், பாலைநில வழிப் போக்கர்களுக்கு வரிநிழலை வழங்குந் தன்மையன. பொன் போல் ஒளிரும், பிளவுபட்ட யாமரத்தின் இலைகள், காண்போர்க்கு மனையுறைக் கோழியின், செக்கச்சிவந்த அலைதாடியின் தோற்றத்தினை நினைவூட்டுத் தன்மையன. சேவலின் சிவந்த அலைதாடியின் அமைப்பானது, யாமரத்தில் நெருப்புக்கனல் ஒளிர்வது போன்றிருக்கும். இக் காட்சியினைக் கீழ்க்காணும் பாடல்வரிகள் தெளிவுறுத்துகின்றன.

(எ.கா.)

"நெருப்பவிர் கனலி யுருப்புச் சினந் தணியக்
கருங்கால் யாத்து வரிநிழ விரீஇ" (ஐங்குறு. 388:1–2).

"மனையுறை கோழி அணல் தாழ்பு அன்ன
கவையொண் தளிர கருங்கால் யாஅத்து"
(அகநா. 187, 14–15)

கன்னங்கரிய நெடியதாள்களையுடைய இம் மரத்தினைக் கழக இலக்கியப் பாடல்கள் "கருங்கால் யாத்து" என்று கூறுவது போன்று, சாம்பசிவ மருத்துவ அகரமுதலியும், "கருந்தாளிமரம்" என்று பெயரிட்டு அழைப்பது, இங்கு குறிப்பிடத்தக்கது.

இம்மரம் நீண்ட நெடிய தோற்றமுடையது. ஏணி சார்த்தி ஏறவேண்டிய அளவிற்குத் தாள்பகுதி நெடுமையும், சுற்றுப்பகுதி பருமையுங் கொண்டது. பின்வரும் அகநானூற்றுப் பாடல்வரிகள், யாமரத்தின் தோற்றத்தினை நன்கு புலப்படுத்துகின்றன.

"நெடுந்தாளி யாத்து" (அகநா : 2)

"குறும்பொறை எழுந்த நெடுந்தாள் யாத்து"
(அகநா.193 : 7).

இம்மரம் ஆறலைக் கள்வரின் அடாவடிச் செயலைத் தவிர்ப்பதற்கும், அருந்துணை புரிந்தது. வழிச் செல்வோர், கள்வர் திரியாத நல்வழியைத் தெரிவு செய்யப் பயன்படும், பொன்போன்ற கவைத்த தளிர்களையுடைய யாமரம் - என்னும் பொருண்மையைக் கீழ்க்காணும் அகநானூற்றுப் பாடல் வரிகள் தெளிவுறுத்தும் பான்மை வருமாறு:- (எ-டு)

"கள்வர் பகைமிகு கவலைச் சென்னெறி
காண்மார்
மிசைமரஞ் சேர்த்திய கவைமுறி யாத்து"
(அகநா. 257 : 13-14).

அச்சந்தரும் அருஞ்சுரத்தில், ஆறலைத் துண்ணும் கொடுந்தொழில் எயினர், பெரும் பொருள் தேடுதற்கு உறுதுணை புரியும், நெடுநிலை மரம். கவைமுறி பொன்தளிர் வீழ்ந்த ஞான்று, வழிப்போக்கர்தம் வருகையை அறிதற்கு, வாட்டமான வரிநிழலைத் தோற்றுவிக்கும், நெடுந்தாள் மரம். கொடுவில் எயினர், செந்நிலை யாமரத்தின், மரமோடு மரமாக ஒன்றியிருந்து, வழிக்கண் வரும் வம்பலரைக் காண்பர். இந் நிலையினைக், கீழ்க்காணும் அகநானூற்றுப் பாடல் வரிகள், நெஞ்சில் நிலைநிறுத்தும் பாங்கு வருமாறு :- "வேறுபல் கவலைய வெருவரு வியன்காட்டு ஆறுசெல் வம்பலர் வருதிறம் காண்மார் வில்வல் ஆடவர் மேலான் ஒற்றி
நீடுநிலை யாஅத்துக் கோடுகொள் அருஞ்சுரம்" (அகநா.263).

ஒளி பொருந்திய செங்குத்தான தோற்றத்தினையுடைய இம்மரத்தின் இலைகள் வீழ்ந்து படுந்தன்மையன. இலைகள் இலவாகி மிக ஓங்கித் திகழும், யாமரத்தின் அடிப்பகுதி, நண்பகல் ஞாயிற்றின் கதிர்வீச்சில் - வரிவரியான நிழல் தோற்றத்தினை, வழிப்போக்கர்க்கு வாரிவழங்கும் தன்மையை,

"ஒல்கு நிலை யாஅத்து ஓங்குசினை பயந்த
அல்குறு வரிநிழல்" .... (அகநா.287:11).

"கருங்கால் யாத்து வரிநிழ லிரீஇ"
(ஐங்குறு:388:2).

யாமரத்தின் தாள்பகுதி, உரித்தற்கேற்றவாறு அமைந்த பட்டைகளையுடையது.

"அத்த யாஅத்துப் பொரியரை முழுமுதல்"
(குறுந்.255 : 1-2).

இம்மரத்தின் பட்டைகளை யானை உரித்து, மிக விருப்புடன் உண்ணும்.

"பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்"
(குறுந். 37 : 2-3).

யாமரத்தின் பட்டையை, உரித்தால் நீர் கசியும்.
"நாரரை மருங்கின் நீர்வரப் பொளித்து"
(அகநா. 254 : 15).

இன்றைய ஆச்சா மரமே; அன்றைய யாமரம்:- "யா"-என்னும் இம்மரப்பெயர்க்குப் பொருள் புகல வந்த அறிஞர் பெருமக்கள் அனைவரும், கழகக்கால இலக்கியங்களில் பயின்ற பான்மையினை சற்றும் உற்று நோக்காது, பொத்தாம் பொதுவாக, "ஒருவகை மரம்" என்றே குறித்துள்ளனர்.

1. சாம்பசிவம் மருத்துவ அகரமுதலி.
   யா = ஒரு மரவகை; a kind of tree.
2. சென்னைப் பல்கலைக்கழக அகாமுதலி.
   யா = மரவகை; a tree (பக்.3396).
3. மரஇனப் பெயர்த்தொகுதி - II
   யா = மரவகை; a kind of tree (பக். 221).

"யா"-மரம் இன்றைய வழக்கில், "ஆச்சா"- என வழங்கப் பெறுகின்றது.யா→ ஆ, என்று மாறும்.

(ஒ.நோ.) யாடு → ஆடு
யானை → ஆனை.
யா → ஆ + சு → ஆசு.
ஆசு + ஆ → ஆசா = யாமரம்.

யாமரத்தைக் குறித்து வழங்கிய பண்டைய இத் தமிழ் வடிவங்கள், இன்றும் கன்னட மொழியில்

"ஆசு", "ஆச", "ஆர்ச" போன்ற வடிவங்களைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

ஆசா → ஆச்சா = வலித்தல் திரிபு.

ஆச்சா = ஆச்சாமரம் = பண்டைய யாமரம்.

[Hard wickia binata]

'ஆமணக்கு விதைத்தால் ஆச்சா முளைக்குமா?' என்ற நாட்டுப்புற பழமொழியும், ஆச்சாவைச் சுட்டுவதறிக.

முடிவாக, கழகக் காலத்தில் யாமரம் என்றும், கன்னடத்திலும், மக்கள் வழக்கிலும் ஆச்சாமரம் என்றும், இம்மரம் மக்களிடையே வழக்கூன்றி இருந்தது. மலைபடுகடாத்து வரிகளிடையில் வரும் "யாஅம்" என்ற சொல்லுக்கு, "யாம் பூவும்" – (அதாவது, யாமரத்தின் பூவும்) – என்று நச்சினார்க்கினியர் உரை வரைந்துள்ளதாகப் பதிப்பித்துள்ளமைக்கு, – உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் அடிக்குறிப்பாகத் தந்துள்ள பாட வேறுபாடு, "ஆச்சாவிற் பூவும்" என்று குறிக்கப் பெற்றுள்ளது. இவ்வடிக் குறிப்பு – அன்றைய யாமரமே – இன்றைய, ஆச்சாமரம் என்பதை உறுதிப்படுத்துகிறது எனலாம் (காண்க. பத்துப்பாட்டு. மலைபடு. நச்.பக்.648).

யாமவதி *yāmavadi,* பெ.(n.) இராப்பொழுது (யாழ்.அக.); night, as divided into watches.

[யாமம் + வதி → யாமவதி]

இராப்பொழுதின் முப்பிரிவுகளுள் ஒன்றான இடையாமம். பத்திலிருந்து இரண்டு மணி வரையிலான காலம்.

யாமவருணம் *yāma-varuṇam,* பெ.(n.) வாகை மரம்; a tree, the indian walnut.

யாமளசாத்திரம் *yāmaḷa-cāttiram,* பெ.(n.) சத்தி பூசையைப் பற்றிக் கூறும் தந்திர சாத்திர நூல் (தக்கயாகப். 136, உரை); a tantric work on Sakti worship.

*[யாமளம் + **Skt.** சாத்திரம்]*

யாமளபுராதனர் *yāmaḷa-purādaṉar,* பெ.(n.) காளியின் படைவீரர்; the warriors of *kāli's* army. *"வருவார் புவனநாயகி தன் யாமள புராதனர்களே" (தக்கயாகப். 432).*

*[யாமளம் + **Skt.** புராதனர்]*

யாமளம்[1] *yāmaḷam,* பெ.(n.) 1. சத்தி பூசையைப் பற்றிக் கூறும் ஒரு தந்திர நூல் (தக்கயாகப், 136, உரை); a tantric work on sakti worship. 2. யாமளத்தின்படி பகடாதியாக வேண்டிய பலிக ளீந்து (பாரத. களப்.8); a vedic section on witch-craff. *"யாமள முதலிய வேத மந்திரம்" (பாரத. நச்சுப். 14).* 3. சோடு (யாழ்.அக.); pair, brace, couple.

யாமளம்[2] *yāmaḷam,* பெ.(n.) 1. பச்சை (யாழ்.அக.); green. 2. இளமை; youth, adolescence.

யாமளவிக்கல் *yāmaḷa-vikkal,* பெ.(n.) இரட்டை இரட்டையாக வரும் விக்கல்; hiccups which occurs in double strokes.

யாமளாக்கினி *yāmaḷākkiṉi,* பெ.(n.) மாகாளியினுடைய பெருந்தீ (தக்கயாகப். 666, உரை); the fire of *Mahākāḷi.*

யாமளாகமம் *yāma-ḷāgamam,* பெ.(n.) சத்தி பூசையைப்பற்றிக் கூறும் ஒரு தந்திர நூல் (தக்கயாகப். 136, உரை); a tantric work on Sakti worship.

யாமளேந்திரர் *yāmaḷēndirar,* பெ.(n.) இசைத்தமிழ் நூலாசிரியருள் ஒருவர் (சிலப். உரைப்பாயி); one of the author of a treatise on *iśai-t-tamil.*

யாமளை *yāmaḷai,* பெ.(n.) 1. மலைமகள்; Parvadi. *"யாமளையை வரையரசளித்த பச்சை மா மணியை" (பிரமோத். 18, 29).* 2. (கொற்றவை) காளி (பிங்.); Durga.

யாமன் *yāmaṉ,* பெ.(n.) இறப்புக் கடவுள்; *yāmaṉ* in his office as judge of souls.

மறுவ. இயமன்

[ஏமம்→யாமம்→யாமன்.]

உடல் வேறு உயிர் வேறாக இருவேறுபடுத்தும் கூற்றுவன்.

யாமி *yāmi,* பெ.(n.) 1. இரவு (யாழ்.அக.); night. 2. இயமன்தேவி (அபி.சிந்.); wife of yama. 3. தெற்கு (யாழ்.அக.); south. 4. கற்புடையாள் (யாழ்.அக.); chaste or continent woman. 5. உடன்பிறந்தாள் (யாழ்.அக.); sister. 6. மகள் (யாழ்.அக.); daughter. 7. மருமகள் (யாழ்.அக.); daughter-in-law.

[யாமம்→யாமி.]

யாமிகன் *yāmigaṉ,* பெ.(n.) இரவுப் பொழுதில் நகர்நோட்டஞ் செய்யும் காவற்காரன் (சுக்கிர நீதி, 32) ; night watchman, one who patrols a city at night.

[யாமி→யாமிகன்.]

யாமிகை *yāmigai,* பெ.(n.) இரவு; night.

[யாமி→யாமிகை.]

யாமியம்[1] *yāmiyam,* பெ.(n.) 1. இந்து விதிமுறைகளின் தொகுப்பு (யாழ்.அக.); a code of Hindu law. 2. தவம் (யாழ்.அக.); penance, Tapas. 3. சந்தனம்; sandal.

யாமியம்[2] *yāmiyam,* பெ.(n.) தெற்கு (பிங்.); south. *"யாமியந்தனி லெய்திய தூதுவர்" (குற்றா. தல. மந்தமா.85).*

யாமியம்[3] *yāmiyam,* பெ.(n.) பொறுப்பு; security, responsibility.

யாமியன் *yāmiyaṉ,* பெ.(n.) அகத்தியன் (யாழ்.அக.); Agastya.

யாமியாயனம் *yāmiyāyaṉam,* பெ.(n.) தென்திசைச் செலவு (தட்சிணாயனம்) (யாழ்.அக.); sun's progress towards the south.

*[யாமி + **Skt.** அயனம்]*

யாமியை *yāmiyai,* பெ.(n.) இரவு (யாழ்.அக.); night.

[யாமி→யாமியை.]

யாமிரீபதி *yāmirīpadi,* பெ.(n.) கருப்பூரம்; camphor.

யாமினி *yāmiṉi,* பெ.(n.) (முதல் இடை கடையெனும் மூன்று யாமங்களை யுடைய) இரவு; night, as consisting of three watches of four hours duration each. *"யாமினியி லெவ்வுயிர்க்கு மேற்ற துயில்" (பாரத. பதினேழாம். 169).*

யாமினியம் *yāmiṉiyam,* பெ.(n.) தெற்கு (பிங்.); south. *"யாமியந்தனி லெய்திய தூதுவர்" (குற்றா. தல. மந்தமா.85).*

யாமினீபதி *yāmiṉī-padi,* பெ.(n.) 1. திங்கள் (சங்.அக.); moon. 2. எரிக்குங் கருப்பூரம்; camphor.

யாமீரன் *yāmīraṉ,* பெ.(n.) திங்கள் (யாழ்.அக.); moon.

மறுவ. நிலவன்.

யாமீரை *yāmīrai,* பெ.(n.) இரவு; night.

யாமுகம் *yāmugam*, பெ.(n.) மனக்கவலை (யாழ்.அக.); mental worry, agony.

யாமுனம் *yāmuṉam*, பெ.(n.) அஞ்சனக்கல் (யாழ்.அக.); black bismuth.

யாமுனர் *yāmuṉar*, பெ.(n.) யமுனைத் துறைவருக்கு நாதமுனி கட்டளையால் மணக்கால் நம்பி இட்டபெயர் (அபிதாந சிந்.); based on the orders of Natamuni, Manakkal Nambi named Yamunai shrine as Yamunar.

யாமுனாசாரியர் *yāmuṉācāriyar*, பெ.(n.) ஆளவந்தார் என்னும் மாலிய ஆசிரியர்; *Aḷavandār*, a *vaisṇava acārya.*

யாமுனேட்டகம் *yāmuṉēṭṭagam*, பெ.(n.) ஈயம் (யாழ்.அக.); lead.

யாமை[1] *yāmai*, பெ.(n.) பாதுகாப்பான ஓடுள்ள ஒருயிரி–ஆமை; tortoise. *"யாமை யெடுத்து நிறுத்தற்றால்" (கலித். 94).*

க. ஆமெ.

[ஏம் → ஏமை → யாமை (ஏம் = பாதுகாப்பு) (சு.வி.பக்.54).]

யாமை[2] *yāmai*, பெ.(n.) இரவு (யாழ்.அக.); night.

யாமை[3] *yāmai*, பெ.(n.) செவ்வழிப்பண்; a secondary melody-type of the *cevvaḷi* class. *"செவ்வழி யாழ்த் திறத் தொன்று" (பிங்.).*

யாமை[4] *yāmai*, பெ.(n.) 1. தெற்கு (யாழ்.அக.); south. 2. இரண்டாம் நாண்மீன்; the second naksatra, part of aries. *"பரணிநாட் பிறந்தான்" (சீவக. 1813).* 3. போர்முகத்தில் ஆயிரம் யானைகளை அழித்து வென்ற வீரனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட சிற்றிலக்கியவகை (இலக். வி. 839); a poem about a hero who destroyed 1000 elephants in war front. 4. இரவின் பதினைந்து முழுத்தங்களுள் ஆறாவதான இராக்கதம் (விதான.குணா.குண.73, உரை); the sixth of the 15 divisions of the night. 5. அடுப்பு (தைலவ. தைல); oven, fireplace. 6. செப்பு; jewel casket, small box. 7. சாடி; a kind of jar. 8. சிலந்திக்கூடு (ஈடு. 7, 5, 10); a spider's web. 9. ஏரிமதகு (வின்.); a sluice of a tank. 10. கூத்து (சது.); dance. 11. காவல் மேடை; watch tower. 12. மேற்றட்டு; race over a fireplace, loft under the roof of a house.

யாமை[5] *yāmai*, பெ.(n.) இல்பொருள் குறிக்கும் ஓர் வாய்பாடு (இலக். வி. 160, உரை); a term denoting that which is non-exixting, as a blanket made of turtle's hair, a mare's nest.

யாமைப்பலகை *yāmai-p-palagai*, பெ.(n.) ஓகவிருக்கைகளுக்குப் பயன் படுத்துவதும், ஆமையின் வடிவம் அமைந்ததுமான ஓகவிருக்கை வகை; a kind of wooden seat in the form of a tortoise, used for sitting in meditation. *"வில்வாதியினாற் செய்க....... கூர்மாதனம்" (சைவ. பொது. 57) (தொல். பொருள். 625).*

[யாமை + பலகை]

யாமைமணை *yāmai-maṇai*, பெ.(n.) சம்மணம் அல்லது கால்மேற் கால்போட்டு உட்காருகை; a yogic posture with folded legs. *"வில்வாதி யினாற் செய்க....... கூர்மாதனம்" (சைவச. பொது.57).*

மறுவ. கூர்மாதனம்.

[யாமை + மணை]

யாய் *yāy*, பெ.(n.) தாய்; mother. *"முன்றிற் போகா முதிர்வினள் யாயும்" (புறநா. 159). "தொடிகழித் திடுதல்யான் யாயஞ் சுவலே" (புறநா. 83, 3). "யாயும் ஞாயும்" (குறுந்.).*

[எம் + ஆய் – எம்மாய்→ யாய். சொற்சிதைவாகி வந்தது.]

யாயாரியம் *yāyāriyam*, பெ.(n.) புங்கமரம்; a tree-Indian beech, cypness.

யாயாவரர் *yāyāvarar*, பெ.(n.) வழிபடுதற்குரிய மூதாதையர்; manes.

மறுவ. தென்புலத்தார், முந்தையர்.

யார்[1] *yār*, பெ.வி.(inter. pron.) யாவர், எவர்; who. *"நலக்குரியார் யாரெனின்" (குறள், 149).*

தெ. யவும்; க. யாரு.

[ஏ→யா→யாவர்→யார்]

யாவர் என்னுஞ் சொல்லின் தொகு வடிவமே யார். "வ"கரம் இடைக்குறை. இது குறித்துத் தொல்காப்பியர் கூறுவது.

"பலரறி சொல்முன் யாவர் என்னும் பெயரிடை வகரம் கெடுதலும்........." (தொல்.எழுத்து.172).

யார்[2] *yār*, பெ.(n.) செடிவகை (மலை.); bristly button weed.

யார்[3] *yār*, பெ.(n.) 3 அடி; one yard.

யார்[4] *yār*, பெ.(n.) உயர்திணைப் பன்மை அல்லது உயர்வு ஒருமை வினாச்சொல்; plural or honorfic singular pronoun of *uyartiṇai* (higher caste). *"யாஅ ரென்னும் வினாவின் கிளவி" (தொல்.சொல். 695). 'இந்தியத் தலைமை அறமன்றத் தலைவர் (நீதிபதி) யார்?"*

[ஏ→யா→யார்]

'ஏ'காரத்தின் திரிபே 'யா'வென்பது. உயர்திணை முப்பாலையுங் குறிக்கும். 'யார்' என்பது, உலகவழக்கில் 'ஆர்' என்று மருவும்.

உயர்திணையில் வரும் இவ்வினாச்சொல், அகநானூறு 50வது பாடல், 8வது வரியிலும்; பரிபாடல் (17:8) ஆம் பாடலிலும், நாலடியார் (119: 1) ஆவது பாடலிலும் எடுத்தாளப் பெற்றுள்ளது.

யார்[5] *yār*, பெ.(n.) புகழ்பெற்றவர்களின் அல்லது குறிப்பிட்ட துறையில் உள்ளவர்களின் வாழ்க்கைக் குறிப்பு, முகவரி முதலிய விளத்தங்கள் அடங்கிய நூல்; a book of men of fame or persons serving in a particular department containing biography, address the details.

யார்பதம் *yār-padam*, பெ.(n.) வாலுளுவை (மலை.); black-oil tree.

யாரஞ்சம் *yārañjam*, பெ.(n.) ஆடாதோடை; a medicinal shrub -*Adhathoda vesica*.

யாரம் *yāram*, பெ.(n.) துண்டிப்பூடு; a kind of medicinal herb.

யாரள் *yāraḷ*, வி.பெ.(inter. pron.) யாவள் பார்க்க; see *yāvaḷ*. *"பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே" (குறுந். 19).*

[யார் + அள் = பெண்பாற் பெயரீறு.]

யாரி[1] *yāri*, பெ.(n.) அத்தி; fig tree.

யாரி[2] *yāri*, பெ.(n.) 1. எதிரி; opponent, respondant. 2. கதவு; door. 3. கள்ளக் காதலர் (சோரநாயகர்); paramour.

யாரியாத்தி *yāri-yātti*, பெ.(n.) வானம்; sky.

யாருந்தின்னாமூலி *yāruntiṉṉā-mūli*, பெ.(n.) 1. அங்கப்பிச்சு; the bile in the body. 2. ஒரு வகை மூலிகை; a kind of herb.

[யாரும் + தின்னா + மூலி]

யாரும் *yārum*, பெ.(n.) எவரும்; anybody or everybody. *"யாரு மறிவர் புகைநுட்பம்" (நாலடி, 282).*

[யார் + உம்]

யாரை *yārai*, பெ.(n.) இதில் 'ஐ' சாரியை; whom.

யாரோ *yārō*, பெ.(n.) இன்னார் என்று பெயர் குறிப்பிடப்பட முடியாதவர்; someone who cannot be identified. *இது யாரோ ஒருவர் பாடிய பாட்டு.*

யால்லம் *yāllam*, பெ.(n.) வானம்; sky.

யாலம்[1] *yālam*, பெ.(n.) சாலமரம்; sal, shorea robusta. *"ஆமணக்கு நட்டு ஆச்சாவாக்கலாகாது" (சீவக. 2613, உரை).*

யாலம்[2] *yālam*, பெ.(n.) 1. ஆச்சாமரம் (அக.நி.); hard wickia binata tree. 2. ஓர் மரம்; ebony tree; Ceylon ebony - *Diospyros ebenaster.*

மறுவ. காட்டடகு, சாலமரம்.

த. யாலம் > **Skt.** sāla; **Eng.** sal.

[யா → யாஅல் → யால் + அம் → யாலம்]

யாலம் என்னும் இச்சொல், "யா"–என்னும் கருமைக் கருத்து முதனிலையினின்று முகிழ்த்தது.

யா → ஆ.

ஆ + சு → ஆசு; ஆசு + ஆ → ஆசா.

வலித்தல் திரிபாக ஆசா → ஆச்சா – என்று மாறும். ஆச்சா = ஆச்சாமரம். கழக இலக்கியங்களில், யாலம் (ஆச்சாமரம்) யாமரம் எனும் பெயரில் பதிவு பெற்றுள்ளது. "யாமரக் கிளவி" (தொல்.எழுத்து.229) தொல் காப்பியத்தில் யாலம் எனப்படும் ஆச்சமரம், "யாமரம்" என்று இடம் பெற்றுள்ளது.

யாலம்[3] *yālam*, பெ.(n.) இரவு (அக.நி.); night.

[யாமம் → யாலம்]

யாலாவாருதம் *yālā-vārudam*, பெ.(n.) ஆதொண்டை; a thorny creeper.

யாவகம் *yāvagam*, பெ.(n.) 1. பருத்தி வகை (சங்.அக.); brazil cotton. 2. காராமணி; chowlee-bean. *"அரிகாற் பெரும்பயறு நிறைக்கு மூர" (ஐங்குறு. 47).*

யாவச்சீவம்[1] *yāvaccīvam*, வி.எ.(adv.) வாழ்நாளுள்ளவரை; as long as one's life lasts, life long till one's last breath. *"அவனுடைய யாவச்சீவமு மறிவேன்".*

யாவச்சீவம்[2] *yāvaccīvam*, வி.எ.(adv.) ஒருவரைப் பற்றிய வாணாள் வரலாறு; every thing about one's life history, everything about a person. *"யாவச்சீவம் பிறருக்குழைத்தான்"*

*[யாவம் + **Skt.** jiva → த. சீவம்]*

யாவசூகம் *yāvaśūgam*, பெ.(n.) வாற் கோதுமையின் வைக்கோலை நீற்றிச் செய்த உப்புவகை (மூ.அ); alkaline salt prepared from the ashes of burnt barley straw.

யாவண் *yāvaṇ*, வி.பெ.(inter.pron.) எவ்விடம்; where. *"இருள் யாவணதோ நின்னிழல் வாழ்வோர்க்கே" (புறநா.102).*

[யா + (வ்) + அண் → யாவண்]

"யா" – என்னும் வினாக்கேட்பு மொழியினை அடிப்படையாகக் கொண்டு முகிழ்த்த சொல்.

யாவணது *yāvaṇadu*, பெ.(n.) எவ் விடத்துள்ளது (புறநா.); where is it?

[யாவண் + அது → யாவணது]

யாவண் என்னும் வினாமொழியினின்று தோன்றிய சொல்.

யாவத்தும் *yāvattum*, வி.எ.(adv.) 1. சிறிதும்; even a little. *"யாவது மனங்கவல் பின்றி" (பொருந. 94).* 2. எல்லாம் (சூடா.); all, wholly, entirely. *"யானைவெண் மருப்பினாலியற்றி யாவதும்" (சீவக. 1201), "அவள் சொத்து யாவத்தும் போயிற்று".*

யாவது *yāvadu*, வி.பெ.(inter. pron.) 1. எது; which. *"காரியம் யாவதும் கழறுவீர்" (கந்தபு. தக்கன்மக. 6).* 2. எவ்விதம்; how. *"கொணரும் வகை யாவதென" (கம்பரா. திருவவ. 38).*

[யா + (வ்) + அது → யாவது]

"அது" = அஃறிணை ஒருமைச்சுட்டுப்பெயர். யாவது என்னுஞ் சொல் கழகவிலக்கியங்களில் மிகுதியாகப் பயின்று வந்துள்ளது. அவற்றுட் சில வருமாறு:–

1) *"நினக்கியான் மறைத்தல் யாவது" (நற்.72:5)*
2) *"ஆயிடை உடன்றோர் உய்தல் யாவது" (புறம்.97:17)*
3) *"இலம்பாடு அகற்றல் யாவது" (புறம்.281:15)*

சென்னைப் பல்கலைக் கழக அகரமுதலியில், இச்சொல்லிற்குரிய கழகவிலக்கியச் சான்றுகள் குறிக்கப்படவில்லை.

யாவதும் *yāvadum*, வி.எ.(adv.) 1. சிறிதும்; even a little. *"யாவது மனங்கவல் பின்றி" (பொருந. 94).* 2. எல்லாம் (சூடா.); wholly. *"யானைவெண் மருப்பினாலியற்றி யாவதும்" (சீவக. 1201).*

[யாவது → யாவதும்]

யாவநாலம் *yāva-nālam*, பெ.(n.) ஒரு வகைத் தவசம் (பதார்த்த. 1399); maize, great, millet.

யாவநாளம் *yāva-nāḷam*, பெ.(n.) யாவ நாலம் பார்க்க; see *yāva-nālam*.

யாவம்[1] *yāvam*, பெ.(n.) 1. அரக்கு (இ.வ.); lac. 2. பருத்தி வகை (சங்.அக.); brazil cotton.

யாவம்[2] *yāvam*, பெ.(n.) யாவத்தீவம் (வின்.); the island of java.

யாவம்[3] *yāvam*, பெ.(n.) ஆச்சாமரம்; hard wickia binata tree.

[யா → யாவம்.]

யாவர்[1] *yāvar*, வி.பெ.(inter.pron.) 1. உயர்திணைப் பன்மையில் வரும் வினாச்சொல்; interrogative plural pronoun for higher category of names of men and gods. *'இந்த இலக்கண நூலின் உரை யாசிரியர்கள் யாவர்?'* 2. அனைவர்; me and all, everyone. *'நேர்ச்சியில் இறந்தவர்களின் குடும்பத்தினர் கதறியழுத காட்சி யாவர் உள்ளத்தையும் உருக்கியது'.*

[யா + (வ்) + அர் → யாவர்]

'அர்' – பலர்பாலீறு.

யாவர்[2] *yāvar,* வி.பெ.(inter. pron.) எவர்; who, what persons. *"........... யாவர் என்னும் ஆவயின் மூன்றொடு" (தொல்.சொல்.647), "யாவர்வாய் திறக்க வல்லார்" (கம்பரா. பூக்கொய். 6), "பலரறி சொல்முன் யாவர் என்னும் பெயரிடை" (தொல்.எழுத்து.172).*

தெ. எவரு; க. யார்; ம. யாவர்.

[ஏ → யா + அர் – யாவர்]

"அர்" = பலர்பாலீறு. உயர்திணைப் பெயருள் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறியுள்ளார். *"யாவர்.............. என்னும் ஆவயின் மூன்றொடு .... பாலறி வந்த உயர்திணைப் பெயரே" (தொல்.647).*

யாவரும் *yāvarum,* பெ.(n.) எவரும்; each and every person, all persons. *"யாவருமறிவரியாய் எமக்கெளியாய்" (திருவாச. 20 : 3).*

[யாவர் + உம். 'உம்' முற்றும்மை.]

யாவள் *yāvaḷ,* வி.பெ.(inter. pron.) எவள்; who, which woman. *"யாவளோ வெம் மறையாதீமே" (ஐங்குறு.370), "யாவள்....... என்னும் ஆவயின் மூன்றொடு" (தொல். 647).*

க. யாவளு.

[ஏ→யா. "அள்" = பெண்பாற் பெயரீறு.]

யாவன் *yāvaṉ,* வி.பெ.(inter. pron.) எவன்; who, which man. *"யாவனோ வொருவ னென்றாள்" (கம்பரா.உலாவியற். 11).*

க. யாவநு

[ஏ→யா + அன்]

"அன்" = ஆண்பாற் பெயரீறு. தொல்காப்பியர் யாவன் என்னுமிச் சொல்லைப் பாலினைப் புலப்படுத்தும் உயர்திணைப் பெயருள் ஒன்றாகக் குறித்துள்ளார். *"யாவன்............ என்னும் ஆவயின் மூன்றொடு .... அப்பதினைந்தும் பால்அறி வந்த உயர்திணைப் பெயரே" (தொல்.647).*

யாவனம் *yāvaṉam,* பெ.(n.) நிலவரிகை; a land cess or tax.

[யவனம் → யாவனம்]

யாவும் *yāvum,* பெ.(n.) எல்லாம் (சூடா.); all, wholeness, entirely, each and everything.

க. யாவவு.

[யா + உம்]

யாவை *yāvai,* வி.பெ.(inter. pron.) எவை; which things, what. *"யாதுயா யாவை என்னும் பெயரும்" (தொல்.சொல். 652), "புகழுந் தலைவன் யார் நூற்பொருள் யாவை" (மணிமே.27:168).*

[யா + அவை → யாஅவை → யாவை]

"யா" என்னும் வினாவடி அஃறிணைப் பன்மை வினாப் பெயராக செய்யுளில் வழங்கும். "அவை" = அஃறிணைப் படர்க்கைப் பன்மைச் சுட்டுப்பெயர் (தொல்.சொல்.167.சேனா, உரை).

யாவையும் *yāvai-y-um,* பெ.(n.) எல்லாம் (சூடா.); all, wholeness, entirely. *"யாவையும் பாடிக் கோவையைப் பாடு" (பழ.).*

[யாவை + உம். "உம்" = முற்றும்மை.]

யாழ் *yāḻ,* பெ.(n.) 1. பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டி யாழ் என்ற நால்வகை வீணைக்கருவி (சிலப். 3, 26) (பிங்.); stringed musical instruments, which are four kinds viz., *pēri-yāḻ, cagōḍa-yāḻ,*

magara-yāḻ, ceṅkōṭṭi-yāḻ. 2. ஆடவை (மிதுன) ராசி (பிங்.); gemini of the zodiac. 3. அசுவதி (பிங்.), ஒரு நட்சத்திரம் (திவா); name of the first nakstra, part of aries. 4. மூதிரை (திருவாதிரை) (சூடா.); the 6th naksatra, part of orion. 5. பண் (இறை. 1, உரை); (mus.) melody-type. 6. ஆந்தை (அரு.நி.); owl.

பண்டைத் தமிழர், தமிழகத்தில் தெரிந்தெடுத்து அமைத்த இன்னியங்களுள், நரம்புக் கருவியாகிய யாழ் மிகவும் சிறப்புடையது. இசை நுணுக்கங்களையும், பல்வகைப் பண்ணமைதிகளையும் ஓர்ந்துணர்ந்தோர் யாழ் என்னும் பொருண்மையில், நரம்பமைதிகட்கு ஏற்றவாறு, அமைத்துள்ள மறுவடிவங்கள் வருமாறு :-

மறுவ. நரம்பு, நரம்பின்மறை, மறை, நரம்புக் கருவி.

[ஏ→ஏழ்→யாழ் (சு.வி.பக்.53)]

மேலே குறித்துள்ள பெயர்களனைத்தும் யாழைக் குறிக்கும் பொதுப்பெயர்களாகும். மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரால், "பாணர் கைவழி மதிப்புரை (மறுப்பு)" என்னும் கட்டுரையில் எடுத்தாளப் பெற்றவை.

கழகத்தமிழ்ப் பனுவல்களிலும், அதற்கு முன்னர் இயற்றப்பட்ட பாடல்கள் பலவற்றிலும் இடம்பெற்றுள்ள, மூவகை யாழ் பற்றிய குறிப்புகள் வருமாறு :- 1. வில்யாழ், 2. சீறியாழ், 3. பேரியாழ்.

வரலாற்றிற்கு எட்டாத தொன்முது காலத்தே அமைக்கப்பெற்ற நரம்புக்கருவியே வில்யாழாகும். வில்லின் நரம்பினை (நாணினை) நெருடுங்கால் விளைந்த இன்னிசையொலியே பல்வகை யாழ்க்கருவிகளின் வளர்ச்சிக்கு அடிகோலின என்று இசை வல்லுநர் இயம்புவர். இது பற்றி மொழிஞாயிறு மொழிவது :-

"நரப்புக்கருவி வில்நாண் ஒலியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிதலால், வில்யாழே முதன்முதல் தோன்றிய யாழ்வகையாக இருத்தல் வேண்டும்"(மறுப்புரை மாண்பு.பக்.121).

முற்காலத்தில் வாழ்ந்த இசைப்புலவர்கள், துறைக்கருவியாகிய வேய்ங்குழலையும், நரம்புக்கருவியாகிய யாழையும் துணைக்கொண்டே குரல் முதலிய ஏழிசைகளையும், குற்றமற ஆராய்ந்து, பெரும்பண்களை அமைத்துள்ளனர். இப்பண்களின் வழிப்பிறக்கும் திறங்களை ஓர்ந்துணர்ந்து இசை நுணுக்கங்களை இனிமை பொருந்துமாறு இசைத்து வகைப்படுத்தியுள்ளனர்.

குழல், யாழ் என்னுமிக் கருவிகள், கேட்பவர் பிணிக்குந் தன்மையன. அனைவர்தம் மனத்திற்கும் மட்டற்ற மகிழ்வூட்டுவன; சிந்தைக்கும், செவிப்புலனுக்கும் சீரிய இசைத்திறத்தை வாரி வழங்குவதால்தான் வள்ளுவப் பெருந்தகையார்,

"குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்" என்று

யாழிசையோடு, குழலிசையின் சிறப்பினையும் சேர்த்துக் கூறியுள்ளார்.

முற்காலத்தில், யாழ்க் கருவியை நிலைக்களனாகக் கொண்டே பெரும்பண்களும், அவற்றின் திறங்களும் தெள்ளிதிற் தெரிந்து வகைப்படுத்தப்பட்டன. யாழ் நரம்பின் துணைகொண்டு, நுணுகி ஆராய்ந்து கண்ட பண் வகைகளைத் தொல்காப்பியர், "யாழின் பகுதி" (தொல்.அகம்.15) என்றும், அப் பண்களின் பாங்கினையும், இயல்புகளையும் திறம்படத் தெரிவிக்கும் இசை நூலை, "நரம்பின் மறை" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாந்தரிடையே இன்று பயன்பாட்டிலுள்ள அனைத்து நரம்புக் கருவிகளுக்கும் பிறப்பிடம், யாழே யாகும். முதல் மூலநரப்புக் கருவியாகிய

யாழனின்றே, நரம்பிசைக் கருவிகள் அனைத்தும்தோன்றின என்பது பாவாணர்தம் கருத்தாகும். அதனால்தான் மொழிஞாயிறு "யாழ் என்னும் தமிழ்ப்பெயர், பண்டைக்காலந் தொட்டு, தமிழ் நாட்டில் மட்டுமின்றி, ஞாலமெங்கனும், முக்காலும் வழங்கும், நரப்புக் கருவி கட்கெல்லாம் பொதுப்பெயர்" என்று குறித்துள்ளார். மேலும் அவர் கூறுங்கால், "ஒரு நரம்புள்ள சுரையாழ் முதல் ஆயிரம் நரம்புள்ள, ஆதியாழ் வரை எல்லா நரப்புக் கருவிகளும், கழக இலக்கியப் பனுவல்களிலும், அதற்கு முன்னர் இயற்றப்பட்ட பாடல்கள் பலவற்றிலும் யாழ் என்றே குறிக்கப்பட்டுள்ளன. யாழ் என்னுஞ் சொல்லைச் சிறப்புப் பெயராகக் கொண்ட எந்தவொரு தனிக்கருவியும் கடைச் சங்க காலத்திருந்ததில்லை. அன்றிருந்த பல்வகை யாழிற் தலைசிறந்தது, செங்கோட்டு யாழேயாகும். வீணை என்பது, செங்கோட்டியாழையே குறித்து வழங்கிற்று.

யாழைக் குறித்து வழங்கிய பல்வகைப் பெயர்களுள், வீணையும் ஒன்று. யாழ் வேறு, வீணை வேறு என்பது, இருவகையில் தவறான திரிபுக் கொள்கை என்றும் அறிந்து கொள்க". யாழ் என்னும் தென்சொல், பிற்காலத்து வழக்கற்றதினாலேயே, முற்காலத்தில் சுரையாழ் என வழங்கியது.

யாழ், வீணை என்னும் இரு சொற்களும் ஒருபொருட் கிளவியாய், ஒரே கருவியையே குறிக்கும். இசை நுணுக்கமறியாதோரே யாழ்வேறு, வீணை வேறு என்பர்.

பண்ணிசைத்தற்குரிய பண்டை யாழ் வகைகளுள், செங்கோட்டியாழ் ஒன்றே, இன்று சிறிது, உருக்கரந்தும், பெயர் மாறியும் வழங்கி வருகின்றது. நரம்பு அல்லது கம்பி கொண்ட இசைக் கருவிகளெல்லாம், தமிழில் யாழ் என்றே பெயர் பெறுதற்குரியன (மறுப்புரை, மாண்பு. பக்.122).

யாழ் என்பது, ஒரு தனிப்பட்ட கருவியின் சிறப்புப் பெயராகாது. அது தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக் கருவி, கஞ்சக் கருவி என்னும், நால்வகைக் கருவியுள், நரப்புக் கருவியை யெல்லாம், பொதுப்படக் குறிக்கும் பொதுப் பெயராகும். இப்பாகுபாட்டின்படி இற்றை வீணையும் ஒருவகை யாழாயிருக்க அதை மட்டும், எங்ஙனம் வேறு பிரித்துக் கூற முடியும்.

பண்ணைக் குறித்த யாழ் என்னும் சொல் 'ஏழ்' என்பதின் திரிபு. யாழ் என்னும் நரம்புக் கருவி. தோன்று முன்னமே குறிஞ்சியாழ், பாலையாழ் எனப் பண்ணின் பெயராக யாழ் என்னும் சொல் வழங்கியது.

கருவியிலாயினும் தொண்டையிலாயினும் இசையை எழுப்புதல், எழூஉதல் எனப்படும். எழுவது அல்லது எழுப்பப்படுவது ஏழ். ஏழ் = இசை. இசைச் சுரங்கள் ஏழு. 'ஏழிசைச் சூழல்', 'ஏழிசை வல்லபி' என்னும் வழக்குகளை நோக்குக. 'ஏழ்' என்னும் இசையின் பெயர் அதன் சுரத்தொகையான ஏழாம் எண்ணைக் குறிக்கக் கொள்ளப்பட்டது.

நரம்புகளாற் கட்டப்பெற்றதும், மரம் (தந்தம்) மருப்பு, தோல் போன்றவற்றால் நன்கு பொருத்தப் பெற்றதுமான இசைக்கருவி.

அடியார்க்கு நல்லார் யாழ்பற்றிக் கூறுவது :- யாழ் நால்வகைப்படும்; அவை பேரியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டி யாழ் என்பன. இந்நால்வகை யாழிற்கும் நரம்பு கொள்ளுமிடத்துப் பேரியாழிற்கு இருபத்தொன்றும், மகரயாழிற்குப் பத்தொன்பதும் சகோட யாழிற்குப் பதினாறும், செங்கோட்டி யாழிற்கு ஏழும் கொள்ளப்படும் (அடியார்க்கு நல்லார். சிலம்பு.3:26).

வில்யாழும் - சிறப்புகளும் :- பண்டைத் தமிழ் மாந்தர்களால் மிகப் பழங்காலத்தில் அமைக்கப்பெற்ற நரப்புக் கருவியே, வில்யாழாகும்.



சகோடயாழ்



சீறியாழ்



வில் யாழ்

மகர யாழ்

யாழுருவங்கள் அனைத்திற்கும் வில்யாழே மூலமாகும். தேவநேயர்தம் கருத்தும் இஃதேயாகும்.

இதனையடியொற்றியே சீறியாழ், பேரியாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ் முதலாக ஆயிரம் நரம்புடைய பெருங்கலம் என்னும் யாழ் ஈறாக, எத்தனையோ யாழமைப்புகள் நரம்பிசை வல்லுநர்களால் நன்கு இசையறிவிற் தேர்ந்து தெளிந்துணர்ந்து வடிவமைக்கப்பட்டன. இடையனொருவன், உள்ளே துளையுடைய குமிழ மரக்கொம்புகளை வில்லாக வளைத்து, மரல்நார்க் கயிற்றினை நரம்பாகக் கட்டித் தானே செய்து கொண்ட வில்யாழில், குறிஞ்சிப்பண்ணை இசைத்து இன்புற்ற நிகழ்வினைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார், தாம் பாடிய பெரும்பாணாற்றுப் படையில் பேசுவது வருமாறு:-

ஞெலிகோற் கொண்ட பெருவிரல் ஞெகிழிச்
செந்தீத் தோட்ட கிருந்துளைக் குழலின்
இன்றீம் பாலை முனையிற் குமிழின்
புழற் கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பு
வில்யா ழிசைக்கும் விரலொறி குறிஞ்சி
(பெரும்பாண்.178-182).

வில்யாழின் இசையானது, வண்டுகளின் இன்னொலியை ஒத்தது. அண்மையிலுள்ளோர் செவிக்கே புலப்படும் தன்மைத்து. வில்லாக வளைக்கப் பெற்ற குமிழங் கொம்பும், அக்கொம்பினுள்ளே அமைக்கப்பட்ட சிறுதுளையும், நரம்பின் ஒலியை, ஒரு குறிப்பிட்ட அளவே பெருகச் செய்தன.

யாழ் அமைப்பு :- வில்யாழின் இன்னிசைப் பெருக்கினை இனிதுணர்ந்த இசைவல்லுநரும், இசைக் கருவியாளரும், பின்வருமாறு வில்யாழினை வடிவமைத்தனர். முதற்கண் நல்ல விளை நிலத்தில் விளைந்து நன்கு பருத்து முற்றியதும், மாசுமருவற்றதும், வண்டுகள் துளைக்காத தன்மையுள்ளதுமான குமிழ மரத்தைத் தெரிவு செய்தனர். பின்னர் அம்மரத்தினை வேண்டிய அளவுக்குத் துண்டாக அறுத்தனர். அதன்பின் அறுத்த மரத்தினொரு பகுதியை, உள்ளே குடைந்து வெற்றிடமாக்கினர். மரத்துண்டின் மேற்பரப்பினைத் தோலினால் மூடினர். குமிழ மரத்தில் தோல் நன்கு இறுகிப் பொருந்தும்படி ஓரங்களில் சிறிய அணிகளை முடுக்கிப் பத்தர் என்னும் யாழுறுப்பினை அமைத்தனர். பின்பு, பத்தரிலும் கோட்டிலும் நன்கு பொருந்தும்படி, நீளத்தாற் சிறியனவும், பெரியனவும் அகிய நரம்புகளை அளவறிந்து இணைத்துக் கட்டி, யாழினை வடிவமைத்தனர். இவ்வாறு வடிவமைத்த யாழில், முதறக்ண் பண்டைக்காலத்தே, மாட்டின் நரம்புகளைத் தெரிவு செய்து, இசை நரம்புகளாக அமைத்தனர்.

காலப்போக்கில் மாட்டின் நரம்புகள் மழையாலும், வெயிலாலும், நெகிழ்ந்தும், இறுகியும், அடிக்கடி குரலோசையை (சுருதியை) வேறுபடுத்திக் காட்டியதால், குழலோசையின் துணையுடன், யாழ் நரம்பிற்கு இசைகூட்டி, மகிழ்ந்தனர்.



யாழ்இலக்கணம் *yāḻ-ilakkaṇam*, பெ.(n.) யாழ் செய்யும் அல்லது யாழினை இசைக்கும் முறையினைக் கூறும் நூல்; a treatise on making *yāḻ*.

[யாழ் + இலக்கணம்]

யாழ்க்கரணம் *yāḻ-k-karaṇam,* பெ.(n.) யாழ்வாசிப்பிற்குரிய செய்கை; movements of the hands in playing the lute. *"பண்ணியாழ்க் கரணமும்" (மணிமே. 2, 20).*

[யாழ் + கரு→கரணம் (செய்கை)]

த. கரணம் > **Skt.** karaṇa.

யாழ்க்குமிழ் *yāḻ-k-kumiḻ,*பெ.(n.) வில்யாழ் உருவாக்கத்திற்குப் பயன்படும் குமிழமரம்; *"kumiḻa"* tree used for making *vil-yāḻ.*

[யாழ் + குமிழ்]

யாழ்செய்–தல் *yāḻ-šey-,*1 செ.கு.வி.(v.i.) பாடுதல்; to sing, to tune music. *"தேனின மலங்கலுண் டியாழ் செயும்" (சீவக. 1012).*

[யாழ் + செய்–,]

யாழ்த்தண்டு *yāḻ-t-taṇḍu,*பெ.(n.) வீணா தண்டம்; neck of the lute.

[யாழ் + தண்டு]

யாழ்த்திறம் *yāḻ-t-tiṟam,* பெ.(n.) 1. ஐந்து சுரமுள்ள இசை (சிலப்.4, 106, உரை); a secondary melody-type, pentatonic. 2. பண் (பிங்.); (mus.) primary melody-type.

[யாழ் + திறம்]

திறம் : ஐந்து சுரங்களைக் கொண்ட பண்வகை.

யாழ்தரித்தாள் *yāḻ-tarittāḷ,* பெ.(n.) மலை மகள் (நாமதீப.22); *pārvadi.*

*[யாழ் + **Skt.** தரித்தாள்]*

யாழ்நரம்பு *yāḻ-narambu,* பெ.(n.) தந்திரி; a string of lute.

மறுவ. யாழ்நார்

[யாழ் + நரம்பு]

யாழ் உறுப்புகளில் மிகவும் இன்றியமையாத மூலவுறுப்பு. யாழிசை மிகநுட்பமாக வெளிப்படுதற்கு, யாழ் நரம்பினை மிகத் திட்பமாக முறுக்கேற்ற வேண்டும். நன்கு முறுக்கேற்றிய, பிசிறற்ற மிக மெல்லிய நரம்பினால்தான் கேட்பவர் உளங்கொளத் தக்கவாறு பண்களை மிக நுணுக்கமாக இசைக்க இயலுமென்று இசை வல்லுநர் கூறுவர்.



யாழ்நார் *yāḻ-nār,*பெ.(n.) யாழ்நரம்பு பார்க்க; see *yāḻ-narambu.*

[யாழ் + நார்]

யாழ்ப்பத்தர் *yāḻ-p-pattar,*பெ.(n.) யாழ் உறுப்புகளுள் ஒன்று; a component of the lute.

யாழ்ப்பாணநாயனார் *yāḻppāṇa-nāyaṉār,* பெ.(n.) ஈழத்தரசனிடமிருந்து யாழ்ப்பாண நாட்டைப் பெற்றுத் தமிழர்களைக் குடியேற்றியவராகச் சொல்லப்படுபவரும் கட்புலனிழந்தவருமான சோழநாட்டு இசைப் புலவர்; a blind minstrel of the *Chōḻa* country, who is said to have been favoured by a singhalese king and obtaining possession of Jaffna, settled a colony of Tamil people.

யாழ்ப்பாணம் *yāḻppāṇam,* பெ.(n.) இலங்கையின் வடபாலுள்ளதும், தமிழராற் குடியேற்றம் பெற்றதுமான நாடு; Jaffna, a province north of ceylon, inhabited by a colony of Tamils.

தமிழர் மிகுதியாயுள்ள இவ்விடம் இலங்கையின் வட பாற்கண் அமைந்துள்ளது. இங்கு காங்கேசன் துறை, ஊர்க்காவற்றுறை எனும் இருதுறைமுகங்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணம் நாகதீவம், எருமை முல்லைத் தீவு என்ற இரு தீவுகளாக இருந்து பின் தீவகற்பமாக மாறியது. புவியியல் மாற்றத்தால் இப்பகுதிகள் சேர்ந்து யாழ்ப்பாணம் உண்டாயிற்று. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் நாகர்கள் வாழ்ந்தனர். நாகமன்னன் இதை ஆண்டான். மணிமேகலையில் சொல்லப்படும் மணிபல்லவமும் நாகதீவமும் ஒன்றே எனக் கருதுவாருமுளர்.

தென்னிந்திய மக்களுடன் இனத்தாலும் பண்பாட்டாலும் தொடர்புள்ள மக்கள் வாழ்ந்தமையை புவியியல், மானிடவியல், வரலாறு, இலக்கியம், மொழி முதலியன சான்று பகர்கின்றன. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் அங்குப் பேச்சு மொழியாக வழக்கூன்றியிருந்தது.

சேர நாட்டின் குருடனான பாணனொருவன் யாழுடன் சென்று இலங்கை அரசனைப் போற்றிப் பாடினமையால் அவ்வரசன் மகிழ்ந்து, இலங்கையின் வடபகுதியைப் பரிசாகத் தந்ததன் நினைவாக 'யாழ்ப்பாணம்' என்ற பெயரிடப்பட்டதாகவொரு கருத்துமுண்டு.

ஐரோப்பியரின் வருகைக்குப்பின் 'ஜாப்னா' (jaffna) என மருவிற்று. யாழ்ப்பாணம் கி.மு.145லிருந்து தமிழ் மன்னரின் ஆட்சியின் கீழிருந்தது. இக்காலத்தில் தமிழர்களும் நாகர்களும் கலப்புமணம் கொண்டனர். கி.பி.431இல் சீனப் பயணி பாகியான், இலங்கை வந்து சில குறிப்புகளெடுத்துக் கொண்டார்.

9, 10-ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்களுக்கு சிங்கை ஆரிய மன்னர்களென்று பெயர்.

டச்சுக்காரர் 1658-இல் போர்ச்சுக்கீசியரை வென்று 1795 வரை ஆண்டனர். டச்சு மொழி யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் கலந்தது. சான்றாக கதிரை (நாற்காலி), அலவாங்கு (கடப்பாரை), கந்தோர் (அலுவலகம்), வெந்தீசு (ஏலவிற்பனை) முதலிய சொற்கள் இன்றும் வழங்கப்படுகின்றன.

1795ஆம் ஆண்டு, யாழ்ப்பாணம் ஆங்கிலேயரின் ஆளுகைக்குட்பட்டு, 1948ம் ஆண்டு இலங்கை முழுவதும் விடுதலை அடைந்தது.

யாழ்ப்பாணர் *yāḻ-p-pāṇar,* பெ.(n.) யாழ்வாசினையில் வல்ல பாணர் வகையார் (பு.வெ.9, 19, கொளு); an ancient caste of lute-players of excellence.

[யாழ் + பாணர்]

யாழ்ப்பாணி *yāḻppāṇi,* பெ.(n.) யாழ்ப்பாண நாட்டான்; citizen native of jaffna.

[யாழ்ப்பாணம்→யாழ்ப்பாணி]

யாழ்பதங்காளி *yāḻ-padaṅgāḷi,* பெ.(n.) செவ்வழியாழ்த் திறத்தொன்று (பிங்.); a secondary melody-type of the *cevvaḻi* class.

[யாழ் + பதங்காளி]

யாழ்முரி *yāḻ-muri,* பெ.(n.) அருட்டொண்டர் திருஞான சம்பந்தரால் யாழில் அடங்காத இசையை யுடையதாகப் பாடப்பட்ட பண்வகை; a tune sung by saint *Tiru-ñāṉa-śambandar,* as one which could not be played on the *yāḻ* or lute.

[யாழ் + முரி]

திருநீலகண்ட யாழ்ப்பாணரின் வேண்டுகோளை யேற்றுத் திருஞான சம்பந்தப் பெருமானால் பாடப்பட்ட பண்.

யாழ்முரிப் பண்ணிலமைந்த பாடல் வருமாறு:-

மாதர்மடப்பிடியும் மடஅன்னமும் அன்னதோர்
நடையுடைம் மலைமகள் துணையென மகிழ்வர்
பூதஇனப்படை நின்றிசை பாடவும் ஆடுவர்
அவர்படர் சடைந் நெடு முடியதோர் புனலர்
வேதமொடு ஏழிசைபாடுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுனிரகரை பொருதுவிம்மி நின்றயவே
தாதவிழ்புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை
எழில்பொழில் குயில்பயில் தருமபுரம் பதியே
(திருஞானசம்பந்தர்.தேவாரம்)

மிடற்றில் இசைக்கவியலாவாறு, இறைவனின் இறும்பூதுச் செயலாக யாழ்முரிப்பண் திகழ்ந்த தன்மையினைச் சேக்கிழார் வழிநின்று மொழிஞாயிறு கூறுவது:-

திருநீலகண்ட யாழ்ப்பாணர், 'யாழ்முரிப் பண்ணை'த் தம் யாழிலிட்டுக் காட்ட முடியாமைக்கு, அதாவது, அவரது அளவிறந்த சிவபக்தியே காரணம். தருமபுரத்திலுள்ள அவருடைய உறவினர், அவர் திருஞானசம்பந்தரின் திருப்பதிக இசையை யாழ்ப்படுத்தி வந்த திறனைப் புகழ்ந்தபோது, அவர் அதற்கு மிக வருந்தி, யாழிலிட்டுக் காட்ட முடியாதவாற திருப்பதிகம் பாடும்படி தாமே திருஞானசம்பந்தரை வேண்டினார். இதனால், யாழிலிட்டுக் காட்ட முடியாத பெருமை, திருப்பதிக இசைக்கிருத்தல் வேண்டுமென்று அவர் பேரவாக் கொண்டமை புலனாகும். இத்தகைப் பக்தி நோக்குடையவர் எங்ஙனம் தம் திறமையை அன்று காட்டியிருக்க முடியும்? அவர் காட்ட முயன்றிருப்பினும், அவரது அச்ச மனப்பான்மை எங்ஙனம் இடந்தந்திருக்கும்?

இரண்டாவது, யாழில் மட்டுமின்றி வேறெவர் மிடற்றிலும் இசைக்க முடியாதவாறு, இறைவனருளால் இறும்பூதுச் செயலாக யாழ்முரிப் பண்ணைத் திருஞானசம்பந்தர் பாடினாரென்று, சேக்கிழார் மிகத் தெளிவாகக் கூறுகின்றார். வேறெவர் மிடற்றிற்கும் இயலாத இசை யாழுக்கு மட்டும் எங்ஙனம் இயன்றிருக்கும்? இதனால் யாழ்முரிப் பண்ணைப் பாணர் யாழிலிட்டுக் காட்ட முடியாமை அவர் யாழ் வில்யா ழொத்தது என்னும் போலி யூகிப்பிற்கேதுவாகாமை பெறப்படும்.

மேற்காட்டிய காரணங்களின் உண்மையைப் படிப்போர் அறிதற்கு, அந்நிகழ்ச்சியைக் கூறும் பெரிய புராணச் செய்யுள்களை ஈண்டுக் காட்டுகின்றேன்:-

"தருமபுரம் பெரும்பாணர் திருத்தாயர் பிறப்பிடமாம்
அதனாற் சார
வருமவர்தஞ் சுற்றத்தார் வந்தெதிர்கொண்
டடிவணங்கி வாழ்த்தக் கண்டு
பெருமையுடைப் பெரும்பாணர் அவர்க்குரைப்பார்
பிள்ளையார் அருளிச் செய்த
அருமையுடைப் பதிகந்தாம் யாழினாற் பயிற்றும்பே
றருளிச் செய்தார்"

"கிளைஞருமற் றதுகேட்டுக் கெழுவுதிருப் பதிகத்திற்
கிளர்ந்த ஓசை
அளவுபெறக் கருவியில்நீர் அமைத்தியற்று
மதனாலே அகில மெல்லாம்
வளரஇசை நிகழ்வதென விளம்புதலும் வளம்புகலி
மன்னர் பாதம்
உளம்நடுங்கிப் பணிந்துதிரு நீலகண்டப்
பெரும்பாணர் உணர்த்து கின்றார்"

"அலகில்திருப் பதிகஇசை அளவுபடா
வகைஇவர்கள்
உலகிலுளோ ருந்தெளிந்தங் குண்மையினை
அறிந்துய்ய உணர்த்தும் பண்பால்

மலர்புகழுந் திருப்பதிகம் பாடியரு ளப்பெற்றால்
பண்பு நீடி
இலகுமிசை யாழின்கண் அடங்காமை
யான்காட்டப் பெறுவன் என்றார்"

"வேதநெறி வளர்ப்பவரும் விடையவர்முன்
தொழுதுதிருப் பதிகத் துண்மை
பூதலத்தோர் கண்டத்தும் கலத்தினிலும்
நிலத்துநூல் புகன்ற பேத
நாதஇசை முயற்சிகளால் அடங்காத வகைகாட்ட
நாட்டு கின்றார்
மாதர்மடப் பிடிபாடி வணங்கினார் வானவரும்
வணங்கி ஏத்த"

"வண்புகலி வேதியனார் மாதர்மடப் பிடிஎடுத்து
வனப்பிற் பாடிப்
பண்பயிலுந் திருக்கடைக்காப் புச்சாத்த
அணைந்துபெரும் பாண னார்தாம்
நண்புடையாழ்க் கருவியினால் முன்புபோல்
கைக்கொண்டு நடத்தப் புக்கார்க்
கெண்பெருகும் அப்பதிகத் திசைநரம்பில்
இடஅடங்கிற் றில்லை யன்றே"

திருஞானசம்பந்தரினும் முதியரான திருநாவுக்கரசர், 'மாசில் வீணையும்' என்று பாடியிருத்தலானும், திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழ்முரிப் பண்ணை இசைத்தற் கியலாமை பற்றித் தம் யாழை உடைத்தற் கெழுந்தபோது, அதைத் தடுத்த சம்பந்தர் 'யாழை விட்டுவிட்டு வீணையை மேற்கொள்ளும்' என்னாது, 'திருப்பதிக இசையை இயன்றவரை இயக்கும்' என்றமையானும்; பாணரும் வேறொரு நரப்புக் கருவியை மேற்கொள்ளாமை யானும் அவர் கையாண்டது வீணையொத்த கருவியே யன்றி வேறென்று என்பது துணியப்படும் (மறுப்புரை மாண்பு.பக்.120) பாணர்கைவழி மதிப்புரை (மறுப்பு)).

யாழ்முரிநாதர் *yāḻ-muri-nādar*, பெ.(n.) தருமபுரத்தில் எழுந்தருளிய இறைவன் திருப்பெயர் (அபிதாநகோ.); name of a god shrined at Dharuma-puram.

*[யாழ்முரி + **Skt.** நாதர்]*

யாழ்முரிநாதேசுவரர் *yaḻmuri nādēšu varar*, பெ.(n.) திருத்தருமபுரத்திலே கோயில் கொண்டிருக்கும் இறைவன் பெயர்; the god shrined at Tiru-t-taruma-puram.

யாழ்முனி *yāḻ-muṉi*, பெ.(n.) மூவுலகுலாவி (நாரதர்); sage *Nāradar*, who is personefied always with lute playing.

[யாழ் + முனி]

யாழ்முனிவன் *yāḻ-muṉivaṉ*, பெ.(n.) மூவுலகுலாவி (நாரதர்); a sage, *Nāradar*. *"பாடல் யாழ் முனிவன்" (பாகவத. 10, ஸ்ரீ நாரதர். 7).*

[யாழ் + முனிவன்]

யாழ்வகை *yāḻ-vagai*, பெ.(n.) 1. ஐந்து நிலத்திற்குரிய யாழ் எனும் இசைக் கருவி; a turning lute intended for all 5 classification or categories of lands. 2. பண்டைக்காலத்தில் வழக்கிலிருந்த ஏழுவகை யாழ்களான வில்யாழ், பேரியாழ் (பெருங்கலம்), சீறியாழ், செங்கோட்டியாழ், ஆதியாழ் (பெருங்களம்), மகரயாழ், சகோட யாழ்; the seven kinds of lute (*yāḻ*) in ancient days viz., *vil-yāḻ, pēriyāḻ (peruṅgaḻam), šīriyāḻ, šeṅgōṭṭi-yāḻ, ādi-yāḻ (peruṅgalam), magara-yāḻ, šagōḍa-yāḻ.*

[யாழ் + வகை]

யாழ்வகைகளாவன:-

1. வில்யாழ்:- வில்யாழின் அமைப்பும் சிறப்பும் யாழ் என்னும் சொல் விளக்கத்திற் காண்க.

2. பேரியாழின் (பெருங்கலம்) அமைப்பும் சிறப்பும்:-

முற்கால மக்கள் உருவத்திலும் பெரியவரா யிருந்ததனால், அவர் கையாண்ட கருவிகளெல்லாம் பெரியனவாகவேயிருந்தன. மக்கள் உருவம் வரவரச் சிறுத்து வருவதனால், அவர்கள் கையாளும் பலவகைக் கருவிகளும் சிறுத்து வருகின்றன. பேரியாழ் மிகப் பழையதாதலின், அது முது பழங்கால மக்கட்கேற்றபடி மிகப் பெரியதாயிருந்திருக்கின்றது. அது நால்வகை யாழில் முதற் குறிக்கப் பெறுவதற்கு அதன் பழைமையே காரணம். கடைச் சங்க காலத்திலும் அது வழங்கினதாகக் கூறப்படினும், அது உருவத்திற் பெரியவர்க்கே உரியதாய் அருகின வழக்காகவே வழங்கினதாகத் தெரிகின்றது.

அதிர்வு நரம்புகளால் இசையைப் பெருக்கலாம் என்ற எண்ணம் உண்டானபின், பெருங்கலம் என்னும்பேரியாழில் முதன்முதலாக அதிர்வு நரம்புகள் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆகவே, அவ் யாழில் பெரும் பத்தர் முந்தினதும் அதிர்வு நரம்பு பிந்தியதுமாகும். தலைச்சங்க காலத்து மக்கள் தம் உடற் பருமனுக்கேற்றபடி இயல்பாகவே பெரும் பத்தர் அமைத்திருத்தல் வேண்டும். பிற்காலத்துச் சிற்றுருவ மக்களின் சீரியாழ்களோடு ஒப்பு நோக்கிய பின்னரே, அதற்குப் பெருங்கலம் அல்லது பேரியாழ் என்று பெருமைச் சொல் அடைகொடுத்துப் பின்னோர் பெயரிட்டதாகத் தெரிகின்றது. முதற்காலத்தில் அது அளவான கருவியாகவே கருதப்பட்டிருக்கலாம். பழங்காலத்தில் பெரு வழக்காக வழங்கியதாக நூல்களிற் கூறப்படும் மத்தளம், அதன் பருமை காரணமாக இன்று பயன்படுத்தப்படாமல் சில சிற்றூர்களிற் பதுங்கிக் கிடக்கின்றது. அது சிறுவடிவான மதங்கம் (மிருதங்கம்) இன்று பெருவழக்காயுள்ளது. இங்ஙனமே, பேரியாழ், சீறியாழ் நிலைமைகளும் கடைச்சங்க காலத்தில் இருந்திருத்தல் வேண்டும்.

பேரியாழினும் பேரியாழான ஆதியாழ் (பெருங்கலம்) வேறு; நாரதப் பேரியாழ் என்பது வேறு.

"பெருங்கலமாவது பேரியாழ்; அது கோட்டினதளவு பன்னிரு சாணும், வணரளவு சாணும், பத்தரளவு பன்னிரு சாணும், இப் பெற்றிக்கேற்ற ஆணிகளும், திவவும், உந்தியும் பெற்று, ஆயிரங்கோல் கொடுத்தியல்வது; என்னை?"

"ஆயிர நரம்பிற் றாதியா ழாகும்
ஏனையுறுப்பு மொப்பன கொளலே
பத்தரளவுங் கோட்டின தளவும்
ஒத்த வெண்ப இருமூன் றிரட்டி
வணர்சா ணொழித்தென வைத்தனர் புலவர்"

என்பது அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரம். நாரதப் பேரியாழ் வில்யாழ் வகையாகும்.

இருபத்தொரு நரம்பினால் தொடுக்கப்படுவது பேரியாழ் எனப் புறநானூற்றுரையாசிரியர் குறிப்பிடுவதால் பேரியாழுக்குரிய நரம்பின் தொகை 21 என்பது புலனாகும். பெரும்பாணாற்றுப் படையில், 'இடனுடைப் பேரியாழ்' என இது குறிக்கப்படுதலால் வடிவிற் பெரியதாயிருந்ததெனத் தெரிகிறது. இதனைக் கவைபோல் அமைந்து, பின்னிருந்து தாங்குதற்கு அமைந்தது கவைக்கடை என்ற உறுப்பாகும். 'பிறைபிறந்தன்ன பின்னேந்து கவைக்கடை' எனவரும் பெரும்பாணாற்றுப்படைத் தொடர் இதன் அமைப்பினை நன்கு விளக்குவதாகும். பேரியாழில் குரல் முதலிய ஏழிசைக்குரிய நரம்புகள் ஏழும், மெலிவு, சமன், வலிவு என்னும் மூன்று தானங்களிலும் தனித்தனி அமைந்து நிற்றலால் மொத்த நரம்புகள் இருபத்தொன்றாயின.

3. சீறியாழ் அமைப்பும் சிறப்பும்:- "வணர் கோட்டுச் சீறியாழ்" என நடுகற் காதையிலும், "செந்நிறம் புரிந்த செங்கோட்டியாழ்" எனப் புறஞ் சேரியிறுத்த காதையிலும் இளங்கோவடிகள் குறிப்பிடுதலால் சீறியாழும், செங்கோட்டியாழும் இருவேறு கருவிகள் என்பது நன்கு விளங்கும். இவற்றுள் சீறியாழ் என்பது பத்தர், கோடு, திவவு, போர்வைத்தோல், நரம்பு என்னும் ஐந்துறுப்புடையதாகும்.

4. செங்கோட்டுயாழ் அமைப்பும் சிறப்பும்:- நாவலந்தேயத்தில் (இந்தியாவில்) வழக்கிலிருந்த நால்வகை நரப்புக் கருவிகளுள், தலைசிறந்தது செங்கோட்டியாழ் என்பது, பாவாணர்தம் கொண்முடிபு. இச்செங்கோட்டி யாழே, சிலமாற்றம் பெற்று யாழின் மறுபெயர்களுள் ஒன்றான வீணை என்னும் பெயரில், இன்று வழங்கி வருகிறது.

கி.பி.8ஆம் நூற்றாண்டிற்கும், கி.பி.13ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், இன்றைய வீணையைப் போன்று, வளைவின்றி நேராய் அமைந்திருத்தலால், செங்கோட்டி யாழ் என்றழைக்கப்பட்டது.

செம்மை + கோடு = நேராய் அமைந்த கோடு. 'செம்மை' என்னுஞ் சொல், இங்கு வளைவின்மையைச் சுட்டியது.

செங்கோட்டியாழ், யாழின் இன்னிசைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. செங்கோட்டியாழ் பற்றி, மொழிஞாயிறு வழங்கும் சிறப்புக் குறிப்புகள்:-

1. நால்வகை யாழுள், செங்கோட்டி யாழே மிகச் சிறந்தது. 2000 ஆண்டுகட்கு முன்பு வடிவமைக்கப்பட்டது. இதைவிடச் சிறந்த இசைக்கருவி, ஞாலமெங்கினும் இல்லை. இக்காலத்து வீணையையொத்த வடிவில் செங்கோட்டியாழ் அமைந்திருந்ததாலேயே, அதற்கு வீணை என்னும் பெயரும், சிறுபான்மை வழங்கிற்று. இச்செங்கோட்டி யாழில் நரம்பிற்குப் பதிலாய்க் கம்பியும், வார்த்திவவிற்குப் பதிலாய் வெண்கல மெட்டும், தோற் போர்வைக்குப் பதிலாய், மரப்பலகையும், வறுவாய்க்குப் பதிலாய் நுண்துளைத் தகடும் கொண்டிருத்தலே, இற்றை வீணையின் வேறுபாடாம். குடவடிவிற் சிறிது மாறுதல், கோல் எனப்படும். மெட்டுத் தொகையிற் கூடுதல், ஆகியவற்றையும் வேறுபாடாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

ஈராயிரமாண்டுகட்கு முன்பு வடிவமைக்கப்பட்ட செங்கோட்டி யாழே, கால வளர்ச்சியில், மேற்குறித்த வேறுபாடுகளுடன் வீணை என்னும் பெயரில், இன்று மக்களிடையே உலா வருகின்றது என்பார், மொழிஞாயிறு.

நால்வகை யாழ் குறித்த, கடைக்கழகப் பாடலுள், செங்கோட்டி யாழே சீர்பொலியுஞ் சிறப்பினது என்பதைக் குறிக்கும் பாடல் :

"பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினார் -
தார்பொலிந்து
மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே
பின்னு முகாவே பிற"

என்பதனால், கடைச்சங்க காலத்தில் பலவகை யாழ்கள் சிறந்தன என்பதும், அவற்றுள்ளும் செங்கோட்டியாழ் தலைசிறந்தது என்பதும் அறியப்படும். காலமுறைப்படி நோக்கின், இசைவல்லார் கையாளும் கருவிகளு.ள் பிந்தினது சிறந்திருக்கு மேயன்றி, முந்தினது சிறந்திருக்காது. நால்வகை யாழுள் இறுதியது செங்கோட்டி யாழாதலின், அது ஏனையவற்றினும் சிறந்ததாயிருத்தல் வேண்டும்.

செங்கோட்டி யாழில் அமைந்துள்ள உறுப்புகள் :- செங்கோட்டியாழில் 18 உறுப்புகள் உள்ளன. உறுப்புகளின் வரணனையைப்

படங்களுடன் திரு.வரகுண பாண்டியனார், சீவகசிந்தாமணி வாயிலாகவும், நூற்பாக்களின் துணைக்கொண்டும் விளக்கியுள்ளார்.

நூற்பாக்கள் வருமாறு :-

"கோடே பத்த ராணி நரம்பே
மாடக மெனவரும் வகையின வாகும்"
"மாட்டிய பத்தரின் வகையு மாடகமுந்
தந்திரி யமைதியுஞ் சாற்றிய பிறவு
முந்திய நூலின் முடிந்த வகையே"

திருத்தக்க தேவர் கூறுவது :-

"மணிகடை மருப்பின் வாளார் மாடக வயிரத் தீந்தேன் அணிபெற வொழுகி யன்ன அமிழ்துறழ் நரம்பின் நல்யாழ்" (சீவக.722).

மறைத்திரு. விபுலானந்த அடிகள் தமது யாழ்நூலுள் வரைந்து காட்டியுள்ள படத்தில் செங்கோட்டியாழின் உறுப்புகள் முழுமையாகச் சுட்டப் பெறவில்லை. இலக்கியங்களில் காணப்படுவதும், பழைய நூற்பாக்களில் குறித்துள்ளவையும் விடப்பட்டுள்ளன. இது குறித்து மொழிஞாயிறு கூறுவது :

"செங்கோட்டி யாழைப்பற்றி அடிகள் வரைந்து காட்டியுள்ள படமே, உண்மையானதாயின் வறுவாய், கவைக்கடை, உந்தி, ஒற்றுறுப்பு, தந்திரிகரம், மாடகம், தகைப்பு, வணர் முதலிய உறுப்புகளெல்லாம் எங்கே? அவற்றைக் கூறியுள்ள இளங்கோவடிகளும், அடியார்க்கு நல்லாரும் பித்தரோ? அன்றிப் பொய்யரோ?"

5. ஆதியாழ்:- முதலூழியிலே அரக்கர்கள் நரம்புக் கருவியை அமைத்து வாசிப்பதில் வல்லவர்களாக இருந்தனரென்றும், அவர்களது தருக்கினை நீக்குங் கருத்துடன் நல்லறிவுடைய புலமைச் செல்வர்கள் ஆயிர நரம்புடைய யாழினை அமைத்து, நுண்ணிய இசை நலன்கள் பலவற்றையும் வெளிப்படுத்தினார்களென்றும் பெருங்கதையிற் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு ஆயிரம் நரம்புடையதாய் அமைக்கப் பெற்ற யாழானது ஆதியாழ் எனவும், பெருங்களம் எனவும் வழங்கப் பெற்றது. இக்கருவியில் பத்தர் பன்னிருசாண் நீளமும், கோடு வளைவொழித்துப் பன்னிருசாண் நீளமும் உடையனவாக அமைக்கப்படுவன என்றும் யாழுக்குரிய ஏனையவுறுப்புக்களும் மேற்கூறிய அளவுக்குத்தக அமைக்கப்படுவன என்றும் அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார். இசைச் சுருதிகளை நுட்பமாக ஆராயுமிடத்து அச்சுருதிகளின் எல்லை இருநூறு என்பது திட்டமாகத் தெரியுமென்றும் அவ்விரு நூறு சுருதிகளையும் மெலிவிற்கு மெலிவு, சமன் வலிவு, வலிவிற்கு வலிவு என்னும் ஐந்து தானங்களிலும் வைக்க நரம்புகளின் தொகை ஆயிரமாம் என்றும், இத்தகைய நுண்ணிய சுருதிகளை வாசித்தற்குப் பயன்படும் முறையில் தமிழ் மக்களால் அமைத்துக் கொள்ளப்பட்ட யாழ்க் கருவியே ஆயிர நரம்புடைய யாழ் என்பர்.

6. மகரயாழ்:- மணிமேகலை, பெருங்கதை, சீவகசிந்தாமணி என்னும் நூல்களிலே 'மகரயாழ்' எனவும் 'மகரவீணை' எனவும் கூறப்படும் இசைக் கருவி சங்கச் செய்யுட்களிலே குறிக்கப்படவில்லை. *'யவனக் கைவினை மகரவீணை'* எனப் பெருங்கதையிற் கூறப் பெற்றிருத்தலால் இக்கருவி யவனபுரம் எனப்படும். கிரேக்க நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டதென எண்ணுவதற்கு இடமுண்டு. யவனர்களால் மகரமீன் வடிவில் வனப்புற அமைக்கப்பட்ட இவ்விசைக் கருவியானது அரச குமரர், பரத குமரர் முதலிய பெருஞ்செல்வர் வீடுகளிலே வாசிக்கப் பெற்றதெனத் தெரிகிறது.

7. சகோடயாழ்:- 'ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி' எனவும், 'பிழையா மரபின் ஈரேழ்கோவை'

எனவும், சிலப்பதிகாரத்திற் சிறப்பித்துப் போற்றப் பெறும் யாழ்க் கருவி பதினான்கு நரம்புடைய சகோட யாழாகும். இதன்கண், உழைமுதல், கைக்களை யீறாகப் பதினான்கு நரம்பு கட்டப்பெற்றன. அவற்றுள் முதல் நான்கு மெலிவுத் தானத்திலும், இடையேழு சமன் தானத்திலும், இறுதி மூன்று வலிவுத் தானத்திலும் அமைந்து நின்றன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வழங்கிய யாழ்க் கருவியாகிய இதன் உருவச் சாயல் அமராவதிச் சிற்பத்திலே கிடைத்திருக்கிறது. கி.பி.ஏழாம் நூற்றாண்டிலே வாழ்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்பார், திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாடிய தேவாரப் பதிகங்களைச் சகோட யாழில் வாசித்தார் என்பது வரலாறு. இங்ஙனம் சகோட யாழை வாசித்தமையால் அவரைச் 'சகோட யாழ்த்தலைவர்' எனச் சேக்கிழார் பாராட்டிப் போற்றியுள்ளார். தாராசுரம் திருக்கோயிலில் யாழேந்திய நிலையில் அமைக்கப்பட்ட திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருவுருவத்தில் அவர் வாசித்த பழைய சகோட யாழின் உருவச்சாயலை இன்றும் காணலாம். கேள்வியென்பது யாழுக்கு ஒரு பெயர். இன்னிசை புலனாதற்குரிய சிறந்த முறையில் அமைக்கப் பெற்றமையால் இது 'செம்முறைக் கேள்வி' எனப் பெயரெய்தியது. இத்தமிழ்ப் பெயரே பிற்காலத்தில் 'சகோஷம்' என வடமொழியில் மொழி பெயர்த்து வழங்கப்பெற்றது.

யாழும் வீணையும் ஒன்றே :- யாழ் வேறு; வீணை வேறு என்று, இரண்டையும் வேறுபடுத்திப் பாவாணர் காலத்திலேயே சிலர் பேசி வந்தனர். ஆனால், இரண்டும் ஒன்றே என்று "பாணர் கைவழி" மதிப்புரை (மறுப்பு) சனவரி, (செந்தமிழ்ச் செல்வி 1951) என்னும் கட்டுரையில், தொல்காப்பியம், கழக காலப் பாடல்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, தேவாரம், பிங்கலம் போன்ற நூல்களின் துணையுடன் நிறுவியுள்ளார்.

அனைத்து நரப்புக் கருவிகளுக்கும் யாழ் என்பது பொதுப்பெயராகும். வீணை என்பது யாழைக் குறித்து வழங்கிய பெயர்களுள் ஒன்று. அன்றையச் செங்கோட்டியாழே, இன்றைய வீணை என்பார் மொழிஞாயிறு.

வீணை என்னும் பெயர் தனித்து வரும்போது, செங்கோட்டி யாழையே அல்லது பிற யாழையே குறிக்கும்.

(எ.கா.) *"மங்கல மிழப்ப வீணை மண்மிசை"* என்று இளங்கோவடிகளும்,

"மாசில் வீணையும் மாலை மதியமும்" என்று திருநாவுக்கரசரும்,

"குழலி னோசை வீணை மொந்தை கொட்ட முழ வதிர" என்று திருஞானசம் பந்தரும், கூறுதல் காண்க.

சீவகசிந்தாமணியில், கந்தருவதத்தையா ரிலம்பகத்தில், யாழ் என்னும் பெயரும், வீணை என்னும் பெயரும், ஒரு பொருட்கிளவியாய், ஒன்றுக்கொன்று பதிலாக வருகின்றன. தேவாரத்தில் யாழ் என்னும் பெயர் வருமிடத்தில் வீணையும் வீணை என்னும் பெயர் வருமிடத்தில் யாழ் என்னும் பெயரும் விலக்கப்பட்டன. நாரதயாழ், நாரதவீணை என ஒரே கருவி குறித்து இருபெயர் வழக்கமுள்ளது.

வீணை என்னும் பெயர், யாழ் என்னும் பெயரோடுகூடி வருமிடத்தில் மட்டும், தனி மிடற்றிசையையோ யாழிசையோடு கூடிய மிடற்றிசையையோ குறிக்கும். யாழ் என்னும் சொல்லும், பொதுப்பட்ட இசையையும், இசைப்பகுதியான பண்ணையும் இசைக் கருவியான யாழையும், இடத்திற்கேற்ப குறிக்கும்.

(எ.கா.) *"செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ" (தொல்.அகத்.18).*

"துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே" (தொல்.களவு.1) என்று தொல்காப்பியரும்,

"யாழோர் மணவினைக் கொத்தனள் என்றே" (மணிமே.22:86) என்று சீத்தலைச் சாத்தனாரும், சொல்லை இசையென்னும் பொருளில் ஆண்டனர்.

"பாலை குறிஞ்சி மருதஞ் செவ் வழியென

நால்வகை யாழா நாற்பெரும்பண்ணே" என்று பிங்கல முனிவர் அச்சொல்லைப் பண் என்னும் பொருளில் ஆண்டனர். யாழ் என்பது ஒரு தனிப்பட்ட கருவியின் சிறப்புப் பெயராகாது. அது தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக் கருவி, கஞ்சக்கருவி என்னும் நால்வகைக் கருவியுள் நரப்புக் கருவியை யெல்லாம் பொதுப்படக் குறிக்கும் பொதுப் பெயராகும். இப் பாகுபாட்டின்படி இற்றை வீணையும், ஒருவகை யாழாயிருக்க அதை மட்டும் எங்ஙனம் வேறு பிரித்துக் கூற முடியும்?

யாழும் வீணையும் வெவ்வேறு கருவி யாயிருப்பின், நாரதயாழ் நாரதவீணை எனச் சிலப்பதிகாரத்தும், மகரயாழ் மகரவீணை எனச் சிந்தாமணியிலும், ஒரே கருவி ஏன் இரு பெயராலும் அழைக்கப் பெறல் வேண்டும்? ஆதி (பெரு), மகர, சகோட, செங்கோட்டு, முண்டக, சிறு முதலிய அடையடுத்தாலன்றி, யாழ் என்னும் பெயர் ஒரு சிறப்பு வகை நரப்புக் கருவியைக் குறிக்காது. ஆயினும், சுருக்கம் பற்றி, துப்பாக்கியிற் பலவகையிருப்பினும் அவற்றுட் சிறந்ததும் துப்பாக்கியென்றே அழைக்கப் பெறுதல் போல, யாழுட் பலவகையிருப்பினும் அவற்றுட் சிறந்ததும் யாழ் என்றே அழைக்கப்பெறும்.

யாழ் பற்றிய இலக்கியச் சான்றுகள் :- பத்துப் பாட்டில் அமைந்த சிறுபாணாற்றுப்படை, பெரும்பா ணாற்றுப்படை, பொருநராற்றுப்படை முதலான கழகக்காலப் பனுவல்களில், இற்றைக்கு 2000ஆம் ஆண்டுகட்கு முன்பு பாணர் இசைத்த, யாழ்க் கருவியின் தோற்றமும், யாழுறுப்புகளின் வண்ணமும் வடிவமும், செயல்வகையும், பயனும், பல்வேறு உவமைகளின் வாயிலாக விளக்கப்பெற்றுள்ளன.

இதுகாறும் கிடைத்துள்ள கழகத் தமிழ்ப் பனுவல்களில், யாழ் குறித்து வரும் பாடல்கள் பற்றிய பதிவெண்களின் விளத்தம் வருமாறு:-

அகநானூறு: 0.15, 14:15, 56:11, 82:6, 88:11, 109:1, 186:10, 212:6, 214:13, 266:10, 279:11, 314:12, 331:10, 332:8, 346:13, 374:8, 396:3.

ஐங்குறுநூறு: 410.5, 472:1, 475:3, 478:5.

கலித்தொகை: 2.27, 9:19, 29:17, 32:9, 34:16, 70:22, 118:15, 123:4, 131:9, 143:10, 38.

குறிஞ்சிப்பாட்டு: 110.

சிறுபாணாற்றுப்படை: 35.

திருமுருகாற்றுப்படை: 141.

நற்றிணை: 30:2, 139:4, 176:8, 186:6, 189:3, 335:9, 380:7.

நெடுநல்வாடை: 70.

பட்டினப்பாலை: 156.

பதிற்றுப்பத்து: 41.2.

பரிபாடல்: 3.86, 7:78, 8:2, 10:56, 11:125, 20:57, 21:35.

புறநானூறு: 64:1, 65:1, 69:1, 109:15, 136:1, 152:14, 170:13, 242:2.

பெரும்பாணாற்றுப்படை: 182, 462.

பொருநராற்றுப்படை: 109, 168, 211.

மதுரைக்காஞ்சி: 559, 584, 605.

மலைபடுகடாம்: 37, 381, 450, 469, 534.

முல்லைப்பாட்டு: 8.

1. *'செவ்வழி நல்யா ழிசையினென் பையென' (அகம்.14:15).*

2. *'புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி யாழின்' (அகம்.56:11).*

3. *'நல்யா ழாகுளி பதலையொடு சுருக்கி' (புறம்.64:1).*

4. *'மண்முழா மறப்பப் பண்யாழ் மறப்ப' (புறம்.65:1).*

5. *'வணரமை நல்யா ழிளையர் பொறுப்ப' (பதிற்றுப்.41:2).*

யாழ்வல்லோர் *yāḻ-vallōr,* பெ.(n.) 1. வீணை வல்லோர்; talented experts in playing on the lute. 2. கந்தருவர் (சூடா.); Gandharvas, the heavenly choristers.

[யாழ் + வல்→ வல்லார்→வல்லோர்.]

"ஆவோ வாகும் பெயருமா ருளவே" (தொல்.680).

யாழ்வல்லோன் *yāḻ-vallōṉ,* பெ.(n.) மூவுலகு உலாவி (நாரதன்); *Nāradaṉ,* a celestial sage said to be expert in lute playing.

[யாழ் + வல்→ வல்லான்→வல்லோன்]

யாழ்வாசித்தல் *yāḻ-vāšittal,* பெ.(n.) மகளிர்க்குரிய குசல வித்தை ஐந்தனுள் ஒன்றான யாழ்வாசித்தல்; playing the lute, a women's accomplishment, one of five *kušala-vittai.*

[யாழ் + வாசித்தல்]

யாழ்வாசினை *yāḻ-vāšiṉai,* பெ.(n.) வீணை வாசிக்கை (சீவக.660, உரை); playing the lute.

[யாழ் + வாசி→வாசினை]

யாழ *yāḻa,* இடை.(part.) ஒரு முன்னிலை அசைச்சொல்; expletive of the second person. *"யாழ நின் மைந்துடை மார்பிற் சுணங்கு நினைத்துக் காண்" (கலித். 18).*

[யாழ் → யாழ]

'யாழ யுடையாய்' என்னும் பொருளுடைய செய்யுளில் 'யாழ' என்னுஞ் சொல், நாளடைவில் அசைச்சொல் அளவில் நின்றது.

யாழல் *yāḻal,* பெ.(n.) கறையான் (யாழ்.அக.); white ant.

மறுவ. சிதல்

யாழவடிப்படிரம் *yāḻa-v-aḍi-p-paḍiram,* பெ.(n.) சந்தனம்; sandal.

யாழாசிரியன் *yāḻ-āširiyaṉ,* பெ.(n.) யாழிசை கற்பிப்பவன்; instructor or trainer in lute-playing.

[யாழ் + ஆசிரியன்]

யாழின்மென்மொழிநாயகி *yāḻiṉmeṉ moḻināyagi,* பெ.(n.) திருமணஞ் சேரியில் எழுந்தருளியிருக்கும் தேவியின் பெயர்; the deity enshrined at *Tirumaṇañcēri.*

[யாழ் → யாழின் + மென்மொழி + நாயகி]

'இன்' ஒப்புப்பொருள் குறித்த ஐந்தாம் வேற்றுமை உருபு.

யாழினுமென்மொழியம்மை *yāḻiṉumeṉ moḻi-y-ammai,* பெ.(n.) திருவிளமரிலே கோயில் கொண்டிருக்கும் தேவியின் பெயர்; a deity enshrined at *Tiruviḷamar.*

[யாழினும் + மென்மொழி + அம்மை]

யாழுறுப்பு *yāḻuṟuppu*, பெ.(n.) யாழில் அமைந்துள்ள சிறப்புறுப்புகள்; the special components of the lute viz., *pattar, yāppu, undi, maruppu, tivavu.*

[யாழ் + உறுப்பு]

1. பத்தர் :– பத்தர் என்பது, இக்காலத்தில் வீணையென்ற இசைக் கருவியில் உள்ள குடம் என்ற உறுப்பினை ஒத்து அமைந்ததாகும். பத்தர் என்ற இவ்வுறுப்பினை முன்னோர்கள் குமிழ், முருக்கு, தணக்கு என்ற மரங்களால் அமைத்தார்கள். யாழ்ப் பத்தராகிய இதன் மேற்புறம் முழுவதும் குடைந்தெடுக்கப்பட்டுத் தோலால் மூடப்பெறும். இனி, பத்தரின் மேற்புறத்தில் ஒரு பாதி மரமே வறுவாயாகத் திறக்கப்பட்டிருக்க, அத்திறப்பின் வழியாக மற்றைப் பாதி மரத்தினையும் உள்ளே குடைந்தெடுத்து, வறுவாய்ப்பகுதியை மட்டும் போர்வைத் தோலால் மூடுதலும் உண்டு. பத்தர் என்ற உறுப்பானது, இவ்வாறு இரு வகையாகவும் அமைக்கப்படும். இதன்கண் எட்டாம் நாள் திங்களைப் போன்று அரைவட்ட வடிவில் வறுவாய் அமைத்த பொழுது அதன் வழியாகக் குடைந்தமைக்கப் பெற்ற பத்தரின் உள்ளிடம் இருள் செறிந்ததாய் இருக்கும். பத்தரில் வறுவாயாகத் தோன்றும் மேற்பரப்பினை மூடுதற்கு அமைந்த போர்வைத் தோல் நன்றாகப் பாடஞ் செய்து துவரூட்டப்பட்டுச் செந்நிறமுடையதாய் தோன்றும். இத் தோலைப் பொருத்தி மூடுவதற்குப் பத்தரின் ஓரத்தைச் சுற்றிலும் முடுக்கப்பட்ட சிறிய ஆணிகளின் தலைகள் நண்டின் கண்களைப் போன்று தோன்றும். போர்வைத் தோலின் நடுப்பகுதி பத்தரின் உள்ளே நரம்புகள் செல்லுதற்கு ஏற்ற வண்ணம் இரு கூறாகப் பிரிந்து இணைத்துத் தைக்கப்பெற்றிருக்கும். இங்ஙனம், போர்வைத் தோலினை நடுவே இணைத்ததைப் பதனம் என்றும், பொல்லம் பொத்துதல் என்றும் வழங்குவர்.

2. யாப்பு :– யாப்பு என்பது பத்தரின் குறுக்களவே நீளமாகச் சிறுவிரற் பருமனாக யானைத் தந்தத்தினாற் செய்யப்பட்டு, நரம்புகளைத் தொடுத்தற்கு இடமாகவும் நரம்பின் அசைவினைப் பத்தரிலே தாக்கி ஒலிமையப் பெருக்குதற்குரிய கருவியாகவும் அமைக்கப்பட்டதோர் உறுப்பாகும். இவ்வுறுப்பு பத்தரின் உள்ளிடத்தே செறிக்கப் பெறுவதாகும்.

3. உந்தி :– உந்தி என்பது, பத்தரின் மேல் மூடப்பெற்ற போர்வைத் தோலிற்கும், பத்தரினுள்ளே செறிக்கப்பட்ட யாப்புறுப்பிற்கும் நடுவே அமைந்த உறுப்பாகும். இது வளைந்து உயர்ந்து போர்வைத் தோலின் நடுவிடத்தைத் தாங்கி நிற்பதாகும். இதன் அடியில் அமைந்த யாப்புறுப்பில், தொடுக்கப்பட்ட இசை நரம்புகள், அதன் மேல் உள்ள உந்தியென்னும் இதன் வழியாக, வெளியே செல்ல வேண்டியிருத்தலால் உந்தியென்னும் இவ்வுறுப்பின் நுனிப்பகுதி இரு பிளவாகப் படுக்கப்பட்டிருக்கும். 'உந்தி' என்னும் சொல் 'உந்து' என்னும் வினையடியாகப் பிறந்ததாகும். வளைந்து உயர்ந்து உந்தி நிற்றலால் 'உந்தி' என்னும் பெயருடையதாயிற்று.

4. மருப்பு :– மருப்பு என்பது, யாழிலுள்ள கோடு என்ற உறுப்பாகும். இது பாம்பு மேல் நோக்கிப் படமெடுத்தது போன்று மேல்நோக்கி வளைந்த வடிவுடையதாகும். கோடுதல்–வளைதல், வளைந்த வடிவுடையதாதலின் கோடு என வழங்கப்பெற்றது. இது கருங்காலி, கொன்றை முதலிய மரத்தினாற் செய்யப்பட்டுக் கருநிறமுடைய தாயிருக்கும். முற்கூறிய வண்ணம் பத்தரினுள்ளிடத்தே யாப்புறுப்பில் தொடுக்கப்பட்ட இசை நரம்புகள் பத்தரின் நடுவே, இரு கூறாகப் பொருத்தித் தைக்கப்பெற்ற போர்வைத்தோலின் ஊடாக, வெளியே இழுக்கப்பட்டுக் கோடு என்ற இவ்வுறுப்பிலே வாரினால் வலித்துக் கட்டப் பெறுவனவாகும்.

யாழி

5. திவவு :– இசை நரம்புகளைக் கோட்டில் துவக்குதற்கு அமைந்த வார்க்கட்டினைத் திவவு என வழங்குவர். யாழ் நரம்புகளைக் கோட்டின் மேலும் கீழும் உயர்த்தியும் தாழ்த்தியும் உச்சு சுரமாக்குதற்கும், மந்த சுரமாக்குதற்கும் பயன்பட்டது திவவு என்னும் வார்க் கட்டேயாகும். காலம் செல்லச் செல்ல இத் திவவுக்குப் பதிலாக நரம்புகளை, வலித்தற்கும் மெலித்தற்கும் உரிய வகையில் அமைத்துக் கொண்ட உறுப்பு, மாடக;ம் என்பதாகும். இது, நால்விரல் அளவான மாலிகை வடிவில் கருவிள மரத்தினாற் கடைந்து செய்யப்பட்டு, நரம்புகளை இழுத்து முறுக்குதற்கும், வேண்டுமளவு தளர்த்தற்கும், தகவாகக் கோட்டின் கண்ணே அமைக்கப்படுவதாகும். மாடமாகிய இவ் வுறுப்பினை இக்காலத்தார் முறுக்காணி என வழங்குவர்.

யாழையங்கினி *yāḻai-yaṅgiṉi,* பெ.(n.) தழுதாழை; shrub in the edges, aloe.

யாழோர் *yāḻōr,* பெ.(n.) 1. யாழிசை வல்லோர்; skilful or expert players on the lute. 2. கந்தருவர் (சூடா.); Gandharvas, the heavenly choristers.

[யாழ் → யாழோர்]

யாழோர்கூட்டம் *yāḻōr-kūṭṭam,* பெ.(n.) காதலர் தம்முள் மனமொத்துக் கூடுங் கூட்டம் (தொல்.பொருள்.92, உரை); a form of marriage which results entirely from love and which has no ritual whatsoever, as common among Gandharvas.

[யாழோர் + கூடு → கூட்டம். (கூட்டம் = கூடுகை)]

யாழோர்மணவினை *yāḻōr-maṇa-viṉai,* பெ.(n.) காதலர் தம்முள் மனமொத்துக் கூடுங் கூட்டம் (தொல்.பொருள்.92,உரை). a form of marriage which results entirely from love and which has no ritual whatsoever, as common among Gandharvas. *"யாழோர் மணவினைக் கொத்தனளென்றே" (மணிமே.22,86).*

[யாழோர் + மணவினை]

யாளவரி *yāḷa-vari,* பெ.(n.) யாளியுருவங்கள் வரிசையாக அமைக்கப் பெற்ற கோயிற் கட்டடப் பகுதி; the portion of a temple-structure where the figures of *yāḷi* are set in row.

[யாள + வரிசை → வரி (வரிசை = நிரையொழுங்கு)]

யாளி *yāḷi,* பெ.(n.) 1. கரிமாவின் மருப்பும் தும்பிக்கையும் அரிமாவின் முகமுடையதாகக் கருதப்படும் விலங்கு; a mythological lion-faced animal with elephantine proboscis and tusks. *"உழுவையும் யாளியு முளியமும்" (குறிஞ்சிப். 252).* 2. அரிமா (அக.நி.); lion. 3. மடங்கலோரை (சிங்கராசி) (சூடா.); leo of the zodiac. 4. இறை கூடைவகை (வின்.); a shallow vessel for throwing water to wet the sail of a craft or for ladling out bilge water. 5. யானை (அக.நி.); elephant.

க. யாளி

யாளிக்கால் *yāḷi-k-kāl,* பெ.(n.) யாளி வடிவிற் செய்த பாதம் (S.I.I.ii,5); leg of stand etc., shaped like a *yāḷi.*

[யாளி + கால்]

யாளிக்கூடை *yāḷi-k-kūḍai,* பெ.(n.) இறை கூடைவகை; a shallow vessel for throwing water to wet the sail of a craft or for ladling out bilge-water.

[யாளி + கூடை]



யாளிதத்தன்[1] *yāḷi-tattaṉ,* பெ.(n.) ஔவைக்குத் தந்தை; father of Avvai. *"யாளிகூடவற்றூரண்டு" – எனும் ஞானாமிர்த செய்யுளால் அறியலாம்.*

மறுவ. பகவன்

[யாளி + தத்தன்]

யாளிதத்தன்[2] *yāḷi-tattaṉ,* பெ.(n.) ஒரு முனி (ஞானாமி); a saint or sage.

[யாளி + தத்தன்]

யாளிப்பட்டை *yāḷi-p-paṭṭai,* பெ.(n.) யாளிக் கூடை பார்க்க; see *yāḷi-k-kūḍai.*

[யாளி + பட்டை]

யாளிபலம் *yāḷi-palam,* பெ.(n.) அரிமாவினையு மிஞ்சும் ஆற்றலைக் குறிக்கும் உவமைச் சொல்; extra ordinary strength, comparable to the strenght of a lion.

*[யாளி + **Skt.** Bala > த. பலம்]*

யாளிமுகம் *yāḷi-mugam,* பெ.(n.) யாளியின் முகம்போல அணிகளில் அமைக்கப்பட்ட முகப்பு முதலியன; ornamental pendant or clasp of jewels, shaped like the face of a *yāḷi.*

[யாளி + முகம்]

யாளியானை *yāḷi-yāṉai,* பெ.(n.) யானையின் மருப்பும் துதிக்கையும் அரிமாவின் முக முடையதாகக் கருதப்படும் விலங்கு; a mythological lion-faced animal with elephantine probosics and tusks.

[யாளி + யானை]

யாளியூர்தி *yāḷi-y-ūrdi,* பெ.(n.) காளி (அரிச். 4. பாயி.9) (பிங்.) (யாளியை ஊர்தியாக வுடையவள்); *kāḷi,* as riding on a *yāḷi.*

[யாளி + ஊர்தி]

யாளிலலாடம் *yāḷi-lalāḍam,* பெ.(n.) யாளி யுருவமைந்த தூணின் நெற்றி; the capital of a pillar, shaped like a *yāḷi.*

யாளிவிரை *yāḷi-virai,* பெ.(n.) சிறு சணல் வித்து (பதார்த்த. 780); lin-seed, flaxseed, linususitatissi mum.

[யாளி + விரை]

யாற்றுநீர் *yāṟṟu-nīr,* பெ.(n.) எண்வகைப் பொருள்கோளில் சொற்களை முன்பின்னாக மாற்றாமல் நேராகவே பொருள் கொள்ளு முறை (நன். உரை. 412); a mode of construing a verse in which the words are taken in their order without any transposition to yield the intended meaning, one of the eight *poruḷ-kōḷ.*

யாற்றுநீர்ப்பொருள்கோள் *yāṟṟu-nīr-p-poruḷ-kōḷ*, பெ.(n.) பொருள்கோள் எட்டு வகைகளுள் ஒன்று, செய்யுளில் ஆற்று நீர் போன்று பொருள் கொள்வதாகும்; knowing meaning of a poem like pouring of river water, one of eight *poruḷ-kōḷ*.

[யாற்றுநீர் + பொருள்கோள்]

யாறகம் *yāṟagam*, பெ.(n.) வான்வெளியிற் பறந்தலையுங் கருடன்; sky root - a climber.

யாற்றொழுக்கு *yāṟṟoḻukku*, பெ.(n.) கருதிய பொருளைக் குறைவுபடாது, நூற்பாவில் அமைத்துக் கூறுகை; composing *nūṟpā* flawless.

[யாற்று + ஒழுகு → ஒழுக்கு]

யாற்றொழுக்கு பற்றி இளம்பூரணர் இயம்புவது "கருதிய பொருளை வழுவாமற் சூத்திரம் ஒருங்குபடக் கிளத்தல்" (தொல்.பொருள்.656, இளம்.).

யாறாம்பை *yāṟāmbai*, பெ.(n.) கவுதும்பை; a species of tumbai, dead nettle.

யாறு *yāṟu*, பெ.(n.) மரஞ்செடி கொடியடர்ந்த அடவியை யூடறுத்துச் செல்லும் நீர்ப்பெருக்கு; river. *"அகழிழிந் தன்ன கான்யாற்று நடவை" (மலைபடு. 214).*

தெ. ஏரு; க., ம. ஆரு.

[அர் → அறு → ஆறு → யாறு]

நிலமெங்கும் ஒரே சோலையாயிருந்த காலத்தில், இடையிடையோடும் ஆறுகளே, ஊடுநீந்தியும் ஓரமாக நடந்து செல்லும் வழிகளாயிருந்தமையின், வழி ஆறு எனப்பட்டது (சொல்.ஆ.க.பக்.17). மலையை அறுத்து வழிந்தோடும் நீரை அருவி என்றாதல் போன்று நிலத்தை ஊடறுத்து ஓடும் நீர்ப்பெருக்கு யாறானவாறாம்.

யான்[1] *yāṉ*, பெ.(n.) செய்யான்; a kind of centepede.

யான்[2] *yāṉ*, சு.பெ.(n.) நான்; first person, I. *"யான்நோக்குங் காலை நிலன்நோக்கும்" (குறள்,1093), "யான் எனும் ஆசு இல் ஆதவனே" (சிவ.திரு.1:49)*

[ஏ → ஏன் → யான் (ஏ = உயர்வு).]

'நான்' என்னும் செருக்கு (அகங்காரம்) மாந்தனுக்கு இயல்பாக வுண்மையால், முந்தியல் தமிழன் தற்பெருமையும் தன்னலமும் பற்றி 'ஏ'காரச் சுட்டால் தன்னைக் குறித்தான் (சு.வி.பக்.58).

"யா"–என்னும் தன்மைச்சுட்டு மூலத்தினின்று முகிழ்த்த சொல். "நான்" என்றவாறு, தன்னையே குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ளுவதற்கு முதன்முதல் மாந்தன் பயன்படுத்திய மூல வொலியீடு.

யான்[3] *yāṉ*, பெ.அ.(pron.) தன்மை யொருமைப் பெயர் (தொல். சொல். 162); first person singular noun.

தெ. எநு; ம. ஏந; க. ஊந்.

[ஏ → யான். ஏகாரம் 'யா'வாகத் திரிதலை ஏமம் → யாமம், ஏமை → யாமை → ஏது → யாது முதலிய சொற்றிரிபுகளானறிக.]

யான்மை *yāṉmai*, பெ.(n.) செருக்கு, தன்னலம் மற்றும் தன்முனைப்புணர்வு; egoism; arrogancy; self-consciousness. *"யான்மை தீர்புகழ் வியாதன்" (சேதுபு. விதூ.1).*

[ஏ → ஏன் → யான் → யான்மை]

யானஞ்செய்-தல் *yāṉañ-cey-*,13 செ.கு.வி. (v.i.) செல்லுதல்; to go, to move. *"பத்தியால்.......... யானஞ் செய" (இரகு. நாட்டுப்.41).*

யானபாத்திரம் *yāṉa-pāttiram-*, பெ.(n.) மரக்கலம் (யாழ்.அக.); boat or catamaran.

[ஏனம் → யானம் + பாத்திரம் (யானம் = மரக்கலம்).]

யானம் *yāṉam*, பெ.(n.) 1. கட்டப்பெற்ற ஊர்தி வகை; conveyance, vehicle, carriage. *"சிலம்பறீ ரிந்திரன் யானம்" (இரகு. திக்குவி.10).* 2. சிவிகை; palanquin, litter. *"வாகன யானங் கண்மிசைக் கொண்டார்" (பெரியபு. தடுத்தாட். 20) (சூடா.).* 3. மரக்கலம் (சூடா.); vessel, ship, raft, catamaran. *"யானமே மரக்கலத்தோ டெழிலூர்தி" (சூடா.11:15:2).* 4. அரசரது குணங்களுள் ஒன்றான போர்ச் செலவு; march against an enemy, one of *araśar-aṟu-guṇam. "சிந்தை கொள்யான மேற்செல்லல்" (இரகு. திக்குவி. 21).* 5. அறை வீடு (யாழ்.அக.); room, chamber. 6. கள் (சது.); toddy.

[ஏல் → ஏனம் → யானம்]

"யா"-என்னும் பொருந்துதற் கருத்து வேரினின்று முகிழ்த்த சொல். யாத்தல் = கட்டுதல், இணைத்தல். யானம் = கட்டப்பெற்ற ஊர்தி வகை. நில நீர்வழிச் செலவிற்கு முறையே பல்லக்கு, மரக்கலம் போன்றவற்றை உருவாக்குவதற்கு மரத்துண்டு, பலகை, இரும்புச் சட்டம் முதலான பொருட்களை ஒன்றோடொன்று பொருத்தி, இணைத்துச் செய்வதால் ஏற்பட்ட பெயர் என்றறிக.

யானமுகம் *yāṉa-mugam*, பெ.(n.) வண்டியினேர்க்கால் முனைப்பகுதி; a sturdy plank used in bullock-cart thill.

[யானைமுகம் → யானமுகம்]

யானாதருயா *yāṉā-taruyā*, பெ.(n.) பலகரை; cowry.

மறுவ. சோழி.

யானெனதெனல் *yāṉeṉadeṉal*, பெ.(n.) தானல்லாத உடம்பை யானென்றும் தனக்குப் புறம்பான பொருளை எனதென்றும் கருதி அவற்றின்மேற் பற்றுவைத்தல் (அகங்காரம மகாரங்கள்); the sense of I and mine. *"யானென தென்னுஞ் செருக்கறுப்பான்" (குறள், 346).*

[ஏ → ஏன் → யான் + என் + அது - எனது + எனல், ஏ = உயர்வு.]

'தன்னுடம்பைத் தானாக மயங்கி யானென்பதால் அகப்பற்று 'யான்' என்னும் சொல்லாலும், தனக்குச் சொந்தமான பிறபொருள் அல்லது உடைமைகளையெல்லாம் தனித்தனி எனது என்று சொல்வதால் புறப்பற்று 'எனது' என்னும் சொல்லாலும் குறிக்கப்படும்' (குறள், 346, தமிழ் மரபுரை)

யானை¹ *yāṉai*, பெ.(n.) துதிக்கையுடைய விலங்கு; elephant - *Elephas indicus. "யானையுங் குதிரையும்" (தொல். பொருள். 570), யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்' (பழ.), 'யானைக் கட்டக் கயிறு தானே எடுத்துக் கொடுக்கும்' (பழ.), 'யானை மேல் போகிறவனைச் சுண்ணாம்பு கேட்பது போல' (பழ.). 'யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்' (பழ.).*

[அல் → எல் → என் → ஏன் → ஏனை → யானை]

[ஒருகா. யா + அன் → யாஅன் → யான் + ஐ → யானை = கரிய விலங்கு]

தெ. ஏனுக (*ēnuga, ēnika, ēniga, ēnige,*

ēnuga), க. அனெ (ane), *yāne*, ம. அன (*āna*), **kota.** a.n., **Toda** = a.n., **Kodagu** = a-ne, **Tuly.** *āne*, **Kolami** = *enāgi*, *ēngi*, *Naiki* = *ēnagi*, **Gondi.** *yēni*, **Konda** = *ēngu*.

மறுவ. 1. உம்பல் = உயர்ந்தது; 2. உவா = திரண்டது; 3. ஓங்கல் = மலை போன்றது; 4. கரி = கரியது; 5. கள்வன் = கரியது; 6. களிறு = கரிய ஆண்யானை; 7. கறையடி = உரல் போன்ற பாதத்தினை யுடையது; 8. குஞ்சரம் = திரண்டது; 9. கைம்மா = துதிக்கையை யுடைய விலங்கு; 10. கைம்மலை = கையையுடைய மலைபோன்றது; 11. நால்வாய் = தொங்குகின்ற வாயையுடையது; 12. புகர்முகம் = முகத்தில் புள்ளியுள்ளது (ஒருவகை); 13. புழைக்கை (பூட்கை) = துளையுள்ள கையை யுடையது; 14. பெருமா = பெரியவிலங்கு; 15. பொங்கடி = பெரிய பாதத்தையுடையது;16. யானை (ஏனை) = கரியது; 17. வழுவை = உருண்டு திரண்டது; 18. வாரணம் = சங்கு போன்ற தலையையுடையது அல்லது புல்லை வாரிப் போடுவது; 19. தும்பி = துளையுள்ள கையையுடையது; 20. வேழம் = வெள்ளை யானை (சொல்.ஆ.க.பக்.16).

மேற்குறித்த மறுவடிவப் பெயர்கள் ஒவ்வொன்றும், நுண்ணிய பொருட் பொருத்தப்பாட்டுடன், கழகக்கால இலக்கியங்களில் ஆளப்பெற்றவையாகும்.

கருமை நிலையிலும், பருமை நிலையிலும் காணப்படும் பெருமைசான்ற முப்பத்தெட்டுப் பெயர்களில் கழக இலக்கியங்களில் இவ்விலங்கு உலா வருகின்றது என்று, சொல்லாய் வறிஞர் ப.அருளியார் குறித்துள்ளதும், ஈங்கு எண்ணத்தக்க வொன்றாகும்.

கன்னங்கரிய வண்ணத்தில், பென்னம் பெரிய தோற்றத்துடன், காண்பவர்தம் கருத்திலும், நெஞ்சிலும் நீக்கமற நிறைந்து, பெருமைமிகு உருவுடன் உலாவரும், இவ்விலங்கு, தமிழ்மண்ணிற்குரிய மரபுச்சொத்துகளுள் ஒன்று. மங்கல அடையாளமாகக் கருதப்பெறும் ஓம் என்னும் மூலமந்திரத்தை உலகுக்கு உணர்த்தும் பான்மையில் அமைந்துள்ளது. தமிழர்தம் வாழ்வியலில் பின்னிப் பிணைந்தது. கழகப் பனுவல்களில் ஐந்நூற்றிற்கும் அதிகமான இடங்களில், யானையின் கருமைசான்ற கவினுறு காட்சி எழுத்தோவியமாக்கப்பட்டுள்ளது, கண்கூடு. யானை என்னும் சொல்லாட்சி, சங்கப்பாடல்களில் நானூறுக்கும் மேற்பட்ட இடங்களில் மிகநுண்ணிய பொருண்மையுடன் பல்வேறு நிலைகளில் பதிவு பெற்றுள்ளது.

"யானை" என்னும் கருமைவண்ண விலங்கிற்கு விதைச்சொல்லாக "அல்" என்னும் மூலத்தைத் தமது வேர்ச்சொற் கட்டுரை பகுதி 1–இல் பாவாணர் குறித்துள்ளார்.

"அல்" = கருமைக் கருத்துவேர்

அல் → அலவன் = 1. கரியவிருள் அகலும் வண்ணம் தண்ணொளி பாய்ச்சும் நிலவன்.

2. கும்மிருட்டில் பளிச்சென்று பார்வைத் துலக்கமுறுமாறு, பளிங்குக் கண்களுடன் அமைந்த பூனை. அல் → எல் = இரவு.

எ.கா:– "எல்லிற் கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப் போல்" (நாலடி, 8).

எல் → எல்லி → எல்லிருள் = இராவிருள். "அல்" என்னும் கருமைக் கருத்து மூலத்திலிருந்து முகிழ்த்த, எல், எல்லி, எல்லிருள் போன்ற சொற்கள் கழக இலக்கியங்களிலும், சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற காப்பியப்பனுவல்களிலும் பரவலாகக் காணப்படுகின்றன.

இந்த "எல்" என்னும் கருமைக்கருத்து வேரடியினின்று பிறந்த சொல்லே யானை என்பது, மொழிப்பகலவன் பாவாணர் கருத்தாகும்.

எல் → என் → ஏன் → ஏனை → யானை.

இக் கருமைக்கருத்து வேர்மூலத்தை விளக்கவந்த பாவாணர், யானையை, ஏனை என்று வழங்கும் நெல்லை வழக்கையும் (வே.க., 1.பக்.159) எடுத்துக் காட்டியுள்ளார்.

கருமைக் கருத்து வேரடியான "எல்" என்பதிலிருந்தே, பன்றியைக் குறிக்கும் ஏனம் என்ற சொல் தோன்றியது.

எல் → என் → ஏன் → ஏனம் = பன்றி; ஏன் = கரிய விலங்கான பன்றி.

"ஏனொருவன் எயிற்றில் தாங்கியதும்" (திவ். இயற். நான்.70)

பன்றியைக் குறிக்க வந்த தொல்காப்பியர்,

"இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்"

(தொல்.பொருள்.623)

"இருள்நிறப்பன்றி" என்னுங்குறிப்பு, கருமைக் கருத்தினைக் குறிப்பது. வெண் மருப்பினையுடைய பன்றிக்கும் ஆண்யானைக்கும், ஏனம் என்னும் சொல் பொதுப்பெயராகும். ஏனம், களிறு, யானை போன்ற சொற்கள் கருமைத் தோற்றத்தினை குறிப்பன.

யானைக்குரிய பெயர்களும் – அவற்றிற்குரிய காரணங்களும் :-

துளையுடைமை :-

1. தும்பி : துளையமைந்த கையினை உடைய விலங்கு.

2.புழைக்கை : புழையமைந்த–அஃதாவது, துளை பொருந்திய கையினை உடைய விலங்கு.

3. பூட்கை : புழைக்கையினை உடைய விலங்கு. புழை + கை > பூழ்க்கை > பூட்கை (கொள்கை பூணுகையாகிய பூண்கை என்பதன் திரிபாக வரும் "பூட்கை" என்பது, – இதனினும் வேறுபுடையில் மலர்ந்த வேறொரு சொல்! திரிபின் காரணமாக இவ்வண்ணம் ஒரு வடிவு கொள்ளுவது – போலி வகையதாகும்).

கை போன்ற உறுப்பமைவு :

4. கைம்மா : கையினை உடைய விலங்கு.

5. கைம்மலை : கையினையும் மலை போன்ற தோற்றத்தையும் உடைய விலங்கு.

தொங்குகை :

6. குஞ்சரம் : தொங்கும் கையினையுடைய விலங்கு. குஞ்சுதல் = தொங்குதல்
குஞ்சி = தொங்கும் ஆண்குறி
குஞ்சு + அரம் > குஞ்சரம் ("அரம்– ஓர் ஈறு)

"குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை"
(தொல்.பொருள்.மரபி : 19)

7. தூங்கல் : தும்பிக்கை தூங்கும் விலங்கு. தூங்குதல் = தொங்குதல்.
தூங்கு > தூங்கு = தொங்குகை
(ஒ.நோ. : தூக்கு + அணம் > தூக்கணம்
தூக்கணம் + குருவி – தூக்கணங்குருவி)

8. நால்வாய் : தொங்கும் வாய்போன்ற – தும்பிக்கையை உடைய விலங்கு
(நாலுதல் = தொங்குதல்)

பருத்த அடியினை உடமை :

9. கறையடி : உரல் போன்ற கால்களை உடைய விலங்கு "கறையடி யானை" (பெரும்பாண் : 351 நச்.உரை) : உரல் போன்ற அடியினையுடைய யானை.....)
(குறுதல் = குத்துதல். "தினைகுறு மகளிர்" (மலைபடு : 342) குறு + ஐ > குறை தவசங் குத்துதற்குரிய உரல். குறை > கறை = உரல்)

10.பொங்கடி : பருத்து வீங்கிய தோற்றத்தையுடைய – அடியினையுடைய விலங்கு.

முகத்திற் புள்ளிகளையுடைமை :

11. புகர்முகம் : புள்ளிகள் பொருந்திய முகத்தினையுடைய விலங்கு. *"பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான்" (பெரும்பாண்:448)*

மதநீர் ஒழுக்குடைமை :

12. வழுவை : மதநீர் வழுவுதலையுடைய (ஒழுகுதலையுடைய) விலங்கு.

வண்டுகள் மொய்ப்புடைமை :

13. மொய் : வண்டுகள் மொய்த்தலையுடைய விலங்கு

வண்டுகளைக் கடிந்தோட்டுதலுடைமை :

14. கடிவை : (வண்டு) ஞிமிறு முதலியவற்றைக் கடிந்து ஓட்டுவதற்கு எப்போதும் காதுகளை அசைவித்துக் கொண்டிருக்கும் விலங்கு. (கடிதல் = விலக்குதல்) *"கொடிது கடிந்து கோறிருத்தி" (புறம்:17:5).*

கடி = நீக்கம் (பிங்.)

கடிவை = யானை (திவா.)

மந்தமுடைமை :

15. மந்தமா : சுறுசுறுப்பின்றி பெரும்பாலும் அமைதியாக இயங்கும் விலங்கு.

மதமுடைமை :

16. களிறு : மதத்தையுடைய விலங்கு (கள் > கள் + இர் > களிர் > களிரு > களிறு) *"களிறு மதயானை" (பிங். 2413)*

17. மதக்கயம் : மதத்தையுடைய கரியநிற விலங்கு

18. மதமா : மதத்தையுடைய விலங்கு

மருட்சி நோக்குடைமை :

19. மருண்மா : மருண்டு நோக்கும் நோக்கத்தினையுடைய விலங்கு

பெருந்தோற்றமுடைமை :

20. பகடு : பெரிய உருத் தோற்றத்தையுடைய விலங்கு (பகம் = பெருமை).

21. எறும்பி : பெரு விலங்கு (இறு > இறும்பு > எறும்பு > எறும்பி

22. பெருமா : பெரிய விலங்கு

23. பெருவிலங்கு : பெருந் தோற்றத்தையுடைய விலங்கு ("பெண்டாட்டி பெருவிலங்கு (யானை), பிள்ளையிரண்டும் கள்ளாணி!" என்பதொரு பழமொழி)

உயரமுடைமை :

24. உம்பல் : உயரமான தோற்றத்தையுடைய விலங்கு

25. உவா : உயரமுடைய விலங்கு

வலிமையுடைமை :

26. வல்விலங்கு : வலிமை பொருந்திய விலங்கு

27. வயமா : வலிமை மிக்க விலங்கு. *"வய வலியாகும்" (தொல்.சொல்.உரி : 70)*

கட்டுப் பேறுடைமை :

28. கம்பமா : கம்பத்தில் பிணிக்கப் பெறுதலை -யுடைய விலங்கு; தறியில் கட்டப் பெறுதலையுடைய விலங்கு "கம்பமா என்றேன்!" (தனிப்பா.)

சங்கொலிப்புடைமை :

29. வாரணம் : பெருஞ்சங்குப் போன்ற ஒலியையெழுப்பும் விலங்கு *"புகர்முக வாரணம்" (மணிமே.7 : 115).*

ஊதுலைத் துருத்தியுருவுடைமை :

30. தோல் : துருத்தியைப் போன்ற தோற்றமுடைய விலங்கு. தோல் = துருத்தி. *"மென்றோன் மிதியுலைக் கொல்லன்" (பெரும்பாண்.206).*

தோல் = யானை.

"புரைத்தோல் வரைப்பின்"

(மலைபடு.88)

மூங்கில் முளையுண்ணல் விழைவுடைமை:

31. வேழம் : மூங்கில் மூளையினை விரும்பியுண்ணும் விலங்கு. வய் = துளை. வய் + இர்>வயிர் =

துளையினையுடைய ஊதுகொம்பு. *"திண்காழ் வயிரெழுந்திசைப்ப" (திருமுரு : 120)*

வயிர் = துளையினையுடையதாகிய மூங்கில் *"முளிவயிர்ப் பிறந்த வளிவளர் கூரெரி"*

(ஐங்குறு : 395).

வயிர் + இயர் > வயிரியர் = ஊதுகொம்பு ஊதுபவர்கள்; பாடகர் "வயிரிய மாக்கள் பண்ணமைத் தெரீஇ" (பதிற்றுப்.: 29)

வய்→வெய்→வேய் = 1. மூங்கில். *"வேய்ப்பெயல் விளையுட் டேக்கட்டேறல்" (மலைபடு.171).*

2. உட்டுளைப் பொருள் (பிங்.)

வேய்க்கண் = மூங்கிற் கணு (நாமதீப : 297), வேய்ங்குழல் = புல்லாங்குழல் (திவ். திருப்பள்ளியெழுச்சி. 4), வேய்ம்பரப்பு = மூங்கிற்பாய் (நாஞ்சில் நாட்டு வழக்கு), வேயரிசி = மூங்கிலரிசி (திவா.)

வேய்த்தோள் = மூங்கில் போன்ற தோள்.

காண்க : *"முறிமேனி முத்தம் முறுவல் வெறி நாற்றம் வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு" (குறள்,1113).*

வேய் + அம் > வேயம் > வேழம் = மூங்கில்

வேழம் = மூங்கில் முளையினை விரும்பியுண்ணுவதாகிய யானை.

ஒ.நோ.: வேழம் > வேழம் + பு > வேழம்பு + அர் > வேழம்பர் = கழைக் கூத்தர் (பிங்.).

கருநிறத் தோற்றமுடைமை :

32. கயம் : கரிய நிறத் தோற்றத்தையுடைய விலங்கு (கய் = கருமைக் கருத்து மூலவேர்களுள் ஒன்று)

கய் + அம் > கயம் = யானை

கயமுனி = யானைக் கன்று

"பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்ப"

(மலைபடு : 107).

முனி = யானைக் கன்று

"முனியுடைக் கவளம் போல" (நற் : 360 : 9).

கயம் > (Prakrit) gaya

(யகர ஜகரத் திரிபின் வழி) gaya > (Sanskrit) gaja = elephant (Pali) gaja = elephant.

33. நாகம் : கரிய நிறத்தையுடைய விலங்கு

"ஏந்தெழில் வரிநுதல் பொருதொழி நாகம்"

(நெடுநல் : 116–117).

(யானையைச் சுட்டும் நாகம் எனும் சொல்லுக்குரிய விளக்கத்தை "நாகம்" எனும் கட்டுரையில் காண்க.)

34. ஆம்பல் : கரிய நிறமுடைய விலங்கு (இதற்குரிய வேர்வழி விளக்கத்தை "ஆம்பி" என்னும் கட்டுரையுள் காண்க.)

35. கள்வன் : கரிய நிறத் தோற்றத்தையுடைய விலங்கு (கள் : கருமைக் கருத்துப் பக்கவேர்)

கள் > கள் + வு > கள்வு + அன் > கள்வன் = கரியவன் (பிங்.).

கள்வன் = (கரிய நிறத்ததாகிய) யானை (பிங்)

36. களவன் : கரிய நிறத்தையுடைய விலங்கு

கள் > கள் + அவு > களவு + அம் > களவம் யானை (வின்.)

களவம் களபம் (வகர பகரத் திரிபு) = யானை (ஒ.நோ: கலவுதல் = கலத்தல், தொகுதல். கலவு + அம் > கலவம் = தொகை, தோகை. (தொகு = ஒன்றுசேர், கல. தொகு + ஐ > தொகை > தோகை)

கலவம்→கலாவம். கலாபம் = தோகை, தோகையையுடையதாகிய மயில்

"மணிவயிற் கலாபம்"

(சிறுபாண்.15).

37. கரி : கரியநிற விலங்கு

கரு + இ – கரி. *"கொடுங்கரிக் குன்றுரித்து"*

(திருவாச : 6, 19)

கரி > (Sanskrit) kari = elephant

மேலும் காண்க :

Kari-kumbha = the frontal globe of an elephant

Kari-garjit = the roaring of the elephant

Kari-carman = an elephant's hide

Karija = a young elephant

Kari-danta = elephant's tusk

Kari-nāsa = the trunk of the elephant

Kari-pa = the keeper of an elephant

Kari-patha = the way of an elephant

Kari-pota = a young elephant

Kari-bandha = the post to which an elephant is tied

Kari-mācala = destroyer of elephants

Kari-mukha = elephant faced

Kari-yādas = a water elephant (hippopotamus = நீர்யானை)

Kari-vara = an excellent elephant

Kari-skandha = a herd of elephants

Karika = an elephant

Karini = a female elephant

(Page : 254 A Sanskrit - English Dictionary - Sir Monier Monier Williams)

மேலே குறிக்கப்பெற்ற 38 பெயர்களுள், யானை, கயம், நாகம், ஆம்பல், கள்வன், கரி, களபம் முதலான சொற்கள், கருமை நிறத் தோற்றத்தைத் தெள்ளத் தெளிவுறக் காட்டுவன.

மிகக் கருமையாகவும், பருமையாகவும் பெரியவுருவில் திகழும், இவ்விலங்கினை, விலங்கியலார் பாலூட்டி வகையுள் அடக்குவர். இம் மன்பதையுள் குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவரும் காண விரும்பும் விலங்கு யானையே எனில் மிகையன்று. கழகக்காலம் முதல், இன்றளவும், இவ்விலங்கு தமிழர்தம் வாழ்வியலில் பிரிக்கமுடியாதது.

விலங்குக் காட்சியகங்களிலும் (zoo), வட்டரங்குகளிலும் (circus), திருக்கோவில்களிலும், திருமண நிகழ்வுகளிலும், பகட்டாரவார வரவேற்பு விழாக்களிலும் யானையின் பங்கு இன்றியமையாதது. நந்தமிழ் நாட்டில் யானையைப் பற்றியப் பழமொழிகள், வழக்குகள், கல்லாதார் நாவில் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

தமிழகத்தில், முதுமலையில் யானைகள் சிறப்பாகப் பாதுகாத்து வளர்க்கப் பெறுகின்றன. இங்குள்ள யானைகள் எலிபாசுமாக்சிமசு இண்டிக்கசு (எலிபாஸ்மாக்ஸிமஸ் இண்டிக்கஸ்) வகையைச் சார்ந்தவை.

இந்தியாவில் இமயமலையின் தாழ்வான பகுதிகளிலும், நாவலந்தேயத்தின் வடபாகத்திலும், அசாம், கிழக்கு வங்காளம் போன்ற இடங்களிலுள்ள அடர்ந்த காடுகளிலும், நீலமலை, மேற்குத் தொடர்ச்சி மலையிலும், குடகு, எருமையூர் (மைசூர்), திருவிதாங்கூர் போன்ற இடங்களிலும், யானைகள் கூட்டங்கூட்டமாகக் காணப்படுகின்றன.



யானை[2] *yāṉai,* பெ.(n.) பெரியது என்னும் பொருளில் ஆளப்பெறும் பெயரெச்சம்; noun used as adj. in the sense of big, large, tall, great, etc.

[ஏனை→யானை.]

யானைக்கச்சை *yāṉai-k-kaccai,* பெ. (n.) யானைக் கழுத்தணிக் கயிறு (பிங்.); cord tied round elephant's neck.

[யானை + கச்சு→கச்சை.]

யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை[1] *yāṉaikkaṭcēy-māndarañ-cēral irum-poṟai,* பெ.(n.) ஒரு சேர அரசன், இவன் அரசனும் புலவனும் வள்ளலுமாக இருந்தவன். ஐங்குறு நூறு தொகுப்பித்தோன் என்பர். இவன் இளஞ் சேரலிரும் பொறைக்கு உறவினன்; a cera king, also as king, poet as well as liberal donor, He is said have composed *Aiṅguṟu-nūṟu,* related to harm *Cēralirumboṟai.*

யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை[2] *yāṉai-k-kaṭšēy-māndarañ-cēral-irum-poṟai,* பெ.(n.) பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனால் கட்டுண்டவன். இவனைப் பாடிய புலவர் குறுங்கோழியூர் கிழார்; one who was subdued by *Pāṇḍiyaṉ Talaiyalaṅgānattu* victories king *Neḍuñceḻiyaṉ,* poet *kuṟuṅkōḻiyūr-kiḻār* composed songs in praise of him.

யானைக்கடைப்பல் *yāṉai-k-kaḍai-p-pal,* பெ.(n.) யானையின் கடைவாய்ப்பல்; the last interior tooth in the elephant's mouth.

[யானை + கடை + பல்]

யானைக்கண் *yāṉai-k-kaṇ,* பெ.(n.) 1. சிறு கண்; small eye in disproportion to the size of the body, as those of an elephant. *"யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல்" (புறநா. 20).* 2. இலை, காய் முதலியவற்றில் புள்ளி விழும் நோய் வகை (யாழ்.அக.); a disease that causes spots or dots on leaves and fruits.

[யானை + கண்]

யானைக்கண்சட்டி *yāṉai-k-kaṇ-caṭṭi,* பெ. (n.) அஞ்சனத்திற்காக மை படியும் படியாகப் பயன்படுத்தும் ஓர் வகைச் சட்டி; an earthern ware to arrest the smoke to prepare collyrium.

[யானை + கண் + சட்டி]

யானைக்கண்தாட்டுப்பத்திரி *yāṉai-k-kaṇ-tāṭṭu-p-pattiri,* பெ.(n.) சேலை வகை; a kind of saree.

*[யானைக்கண் + தாட்டு + **Skt.** பத்திரி]*

யானைக்கணையம் *yāṉai-k-kaṇaiyam,* பெ.(n.) 1. யானை கட்டுந்தறி; post or deeply earthed ensure to which elephants are chained. 2. யானைக் கூடத்தில் யானைகள் ஒன்றோடொன்று சண்டையிடா வண்ணம் அவற்றைப் பிரிக்கிற குறுக்கு மரம்; wooden bar set up between elephants in a stable to prevent their fighting with one another.

[யானை + கணையம். கணையம் = யானைக் கட்டுத்தறி]

யானைக்கத்தலை *yāṉai-k-kattalai,* பெ.(n.) கத்தலை மீன் வகை (வின்.); a species of kattalai fish.

[ஆனைக்கத்தலை→யானைக்கத்தலை]

யானைக்கதி *yāṉai-k-kadi,* பெ.(n.) நடனம், வேகம், மந்தம், ஓட்டம் என்ற நான்கு வகைப்பட்ட யானை நடை; paces of an elephant, of four kinds viz., *naḍaṉam* or dancing, *turidam* or hurrying, *mandam* or slow, *ōṭṭam* or running.

[யானை + கது→கதி (கதி = நடை).]

யானைக்கம்பம் *yāṉai-k-kambam,* பெ.(n.) யானை கட்டுந்தறி; post for typing elephants.

[யானை + கொம்பு→கம்பு → கம்பம். கம்பம் = பெருமரத்தூண்]

யானைக்கரணம் *yāṉai-k-karaṇam,* பெ. (n.) கரசைக்கரணம்; the *karaṇam* known as *karašai.* *சோமவாரமும் திரிதி நாமயோகமும் யானைக் கரணமும் பெற்ற திருவோண நக்ஷத்ரத்து" [T.A.S. V, 122].*

[யானை + கரணம்]

யானைக்கருப்பம் *yāṉai-k-karuppam,* பெ.(n.) 1. வெகுகாலந்தங்குங் கருப்பம்; long period of gestation, as of an elephant which is 18 months for a female calf and 22 months for a male calf. 2. நீடித்த கால முயற்சி; a tediously long period of endeavour before functification. *"இதைப் பற்றிய பிரயத்தினம் கசகர்ப்பம்".*

[யானை + கருப்பம்]

யானைக்கல் *yāṉai-k-kal,* பெ.(n.) மதுரையில் வைகைக் கரையிலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிகு இடங்களுளொன்று; a famous historical place located in the river bank of vaigai at Madurai.

யானைக்கவடு *yāṉai-k-kavaḍu,* பெ.(n.) யானைபோல் மனத்துள் மறைத்து வைத்திருக்கும் காழ்ப்புணர்வு – நீங்கா வெறுப்பு; concealed grudge or ill-will or resentment, as of an elephant.

[யானை + கவடு]

யானைக்கள்ளிமுனையாள் *yāṉai-k-kaḷḷi-muṉaiyāḷ,* பெ.(n.) ஒரு பூண்டு (வின்.); spurge sprout, boucerosia umbellata.

யானைக்கற்றாழை *yāṉai-k-kaṟṟāḻai,* பெ.(n.) கற்றாழை வகை (L); century plant.

மறுவ. காட்டுக்கற்றாழை.

[யானை + கற்றாழை]

யானைக்கன்று *yāṉai-k-kaṉṟu,* பெ.(n.) யானைக்குட்டி (பிங்.); young one or calf of an elephant. *"யானைக் கன்றும் வளநாடும் பெற்றவர்".*

[யானை + கன்று. கன்று = யானையின் இளமைப்பெயர்]

யானைக்காதல் *yāṉai-k-kādal,* பெ.(n.) முகைதீன் இபின் சின்ன இபுராகிம் என்பவரால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட காதல் பனுவல்; a treatise titled 'Kādal paṉuval' written by Mohideen ibin chinna Ibrahim, 19C.

[யானை + காதல்]

யானைக்கால் *yāṉai-k-kāl,* பெ.(n.) 1. யானைக்கால்நோய் பார்க்க; see *yāṉai-k-kāl-nōy.* 2. பெரிய நீர்த்தூம்பு (வின்.); large tube fixed on the walls or roofs for draining rain water.

மறுவ. பெருங்கால், மோத்திக்கால்.

Skt. சீலிபதம்

[ஏன் → ஏனை → யானை + கால்]

குல் → கல் → கால் = தோன்றல், வளர்தல். கால் = "குல்" என்னும் தோன்றற் கருத்து வேரிலிருந்து, முகிழ்த்த சொல்.

முழங்காலுக்குக் கீழ் பெருமளவில் வீங்கிப் பருக்கச் செய்யும் ஒரு வகை நோய்.

யானைக்கால்சுரம் *yāṉai-k-kāl-šuram,* பெ.(n.) யானைக்கால் நோயின் அறிகுறியாக ஏற்படும் காய்ச்சல்; a kind of fever preceeding the attack of elephantasis.

[யானைக்கால் + சுரம்.]

யானைக்கால்நோய் *yāṉai-k-kāl-nōy,* பெ.(n.) பெருங்கால் நோய்; elephantiasis - *Filariasis.*

[யானைக்கால் + நோய்]

யானையின் கால் வீங்கிப் பருத்துள்ளது போன்று, மனிதர்களின் காலினையும் வீங்கிப் பருக்கச் செய்யும் நோய்.

இந்நோய், மிகநுண்ணிய உயிரியினால் (Wuchereia Bancrofti) உருவாகிறது. ஆடவர்களிடம் அதிகம் காணப்படுகிறது. குளம் குட்டைகளிற் காணப்படும் கொசுக்களின் மூலம் இந்நோய் பரவுகிறது. அமெரிக்கா, இசுபெயின், ஆத்திரேலியா, சீனா, இந்தியா, வடமேற்கு ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் இந்நோய் பரவியுள்ளது.

யானைக்கால்மூலி *yāṉai-k-kāl-mūli,* பெ.(n.) யானையடியிலை என்னும் பெயர் கொண்ட மருந்துச் செடி; plant with leaf as big as elephants foot mark.

[யானைக்கால் + மூலி.]

யானையின் அடிச்சுவட்டினைப் போன்று வட்ட வடிவிலான இலைகளைக் கொண்ட மருந்துக் கொடி.



யானைக்கால்வணக்கிப்பூடு *yāṉai-k-kāl-vaṇakki-p-pūḍu,* பெ.(n.) சிறு நெருஞ்சில் (மூ.அ.); cows thorn, land caltrops- *Tribulus terrestrs.*

[யானை + கால் + வணக்கு + பூடு]

யானைக்கால்வணங்கி *yāṉai-k-kāl-vaṇaṅgi,* பெ.(n.) யானைக்கால்வணங்கிப் பூடு பார்க்க; see *yāṉai-k-kāl-vaṇaṅgi-p-pūḍu.*

[யானைக்கால் + வணங்கி.]

யானைக்கால்வீக்கம் *yāṉai-k-kāl-vīkkam,* பெ.(n.) காலில், தோல், சவ்வு, தசை, எலும்பு முதலானவற்றில் நீர் சேர்வதனால் ஏற்படும் வீக்கம்; a swelling caused in the leg by the accumulation fluid and morbid growth flesh.

[யானைக்கால் + வீக்கம்.]

இரண்டு கால்களிலும், கெட்டநீர் சேர்ந்து, யானைக்கால் போன்று பெருத்து வீக்கத்துடன் தேவையற்ற சதை வளர்ச்சியை உண்டாக்கும் நோய்.

யானைக்காலை *yāṉai-k-kālai,* பெ.(n.) யானைகள் கட்டுமிடம் (வின்.); Elephant-stable.

[யானை + காலி→காலை. காலி = மாடுகள் காவி.]

யானைக்காற்சுவடி *yāṉai-k-kāṟ-šuvaḍi,* பெ.(n.) யானைக்கால்மூலி பார்க்க; see *yāṉai-k-kāl-mūli.*

[யானைக்கால் + சுவடி.]

யானைக்காற்புழு *yāṉai-k-kāṟ-puḻu,* பெ.(n.) யானைக்கால் நோயினை யுண்டாக்கும் புழு; a kind of worm developing elephantiasis.

[யானைக்கால் + புழு.]

யானைக்காற்பூடு *yāṉai-k-kāṟ-pūḍu,* பெ.(n.) யானைக்காற்சுவடி பார்க்க; see *yāṉai-k-kāṟ-šuvaḍi.*

[யானைக்கால் + பூடு.]

யானைக்கிட்டி *yāṉai-k-kiṭṭi,* பெ.(n.) வாட்கோரை; a kind of grass.

[யானை + கிட்டி = பெருங்கோரை வகை.]

யானைக்கிளிஞ்சில் *yāṉai-k-kiḷiñjil,* பெ.(n.) கிளிஞ்சில் வகையுளொன்று; a kind of oyster or shell. *கடற்கரையில் ஒதுங்கிக் கிடக்கும் யானைக்கிளிஞ்சில்கள் மேலை நாடுகளில் தரமிக்க உணவாகப் பயன்படுகின்றன (உ.வ.).*

மறுவ. படகுக்காலி.

[யானை + கிளிஞ்சில் = கடல்வாழ் உயிரி வகை.]

கிள்→கிளி→கிளிஞ்சில் (தொல்.பொருள். 534, உரை).

இக் கிளிஞ்சில்கள் யானைக்கொம்பின் வடிவத்தைப் போன்றவை. கடற்கரையின் மணற்படுகையில் பரவலாகக் காணப்படுபவை. எல்லாக் கடற்கரைகளிலும் மடிந்த நிலையில் ஒதுங்கிக் கிடக்குந் தன்மையன.

(எ.டு.) டென்டேலியம் ஆக்டகோணம்.

யானைக்குட்டம் *yāṉai-k-kuṭṭam,* பெ.(n.) பெருநோய் வகை; a kind of leprosy.

[யானை + குட்டம்.]

யானைத்தோல் போல், சொறசொறவென்று தடித்துக் கறுத்து, மரத்துக் காணப்படும் நோய்.

யானைக்குப்பு *yāṉai-k-kuppu,* பெ.(n.) சதுரங்கம்; chess. *"யானைக்குப்பு ஆடுவாரைப் போலே" (திவ். திருப்பா. 26, வ்யா.).*

[யானை + குப்பு]

யானைக்குரு *yāṉai-k-kuru,* பெ.(n.) மர வகை; species of cinnamon.

[யானை + குரு]

யானைக்குருகு *yāṉai-k-kurugu,* பெ.(n.) சக்கரவாகம், 1 (சூடா.); cakra bird.

[யானையுண்குருகு → யானைக்குருகு]

யானைக்குறுந்தோட்டி *yāṉai-k-kuṟun tōṭṭi,* பெ.(n.) குறுந்தோட்டிப் பூடுவகை; queensland hemp.

[யானை + குறுந்தோட்டி]

யானைக்குறும்பு *yāṉai-k-kuṟumbu,* பெ.(n.) யானைக்கவடு (இ.வ.) பார்க்க; see *yāṉai-k-kavaḍu.*

[யானை + குறும்பு]

யானைக்கூடம் *yāṉai-k-kūḍam*, பெ.(n.) யானைகள் கட்டுமிடம் (வின்.); elephant stable.

[யானை + கூடு→கூடம்.(கூடம் = யானைச் சாலை)]

யானைக்கை *yāṉai-k-kai*, பெ.(n.) 1. தும்பிக்கை; elephant's trunk. 2. கை வீக்கங் காணும் நோய்வகை; a filarial disease in which the hand gets swollen.

[யானை + கை]

யானைக்கைக்கோள் *yāṉaikkaikkōḷ*, பெ.(n.) பகைவரை பெறிந்து அவர்தம் கரிமாவையும் காவலையும் கைக் கொண்டதைக் கூறும் புறத்துறை (பு.வெ.6, 24) (புறப்.); theme of destroying one's enemy and capturing his elephants and fortress.

[யானை + கைக்கொள் → கைக்கோள்.]

யானைக்கொசுகு *yāṉai-k-kośugu*, பெ.(n.) பெரிய கொசுகு; large musquito.

[யானை + கொசுகு.]

யானைக்கொந்தி *yāṉai-k-kondi*, பெ.(n.) பெரிய மருந்திலை வகையு ளொன்று; a kind of large medicinal leaves.

[யானை + கொந்தி.]

யானைக்கொப்பம் *yāṉai-k-koppam*, பெ.(n.) யானையை அகப்படுத்துங் குழி (சூடா.); kheda, pit for entrapping elephants.

[யானை + கொப்பம்]

யானைக்கொம்பன் *yāṉai-k-kombaṉ*, பெ.(n.) 1. கன்னி (புரட்டாசி)யில் விதைத்து ஆறு மாதத்தில் விளையும் ஒருவகை நெல்; (G.Tn.D.153) a species of paddy sown generally in *puraṭṭāśi* and reaped in six months and having long, thin, white grains. 2. வாழை வகை (வின்.); species of plantain.

[யானை + கொம்பன்]

யானைக்கொம்பு *yāṉai-k-kombu*, பெ.(n.) 1. யானையின் கொம்பு; elephant's tusk. 2. யானையின் எலும்பு; elephant's bone. 3. நெற்பயிரில் விழும் ஒருவகை நோய்; a disease of paddy crops.

[யானை + கொம்பு]

யானைச்சச்சாரம் *yāṉai-c-caccāram*, பெ.(n.) யானைகள் கட்டுமிடம்; elephant stable.

[யானை + சச்சாரம்]

யானைச்சப்பரம் *yāṉai-c-capparam*, பெ.(n.) யானை மீது மேல்விதானமுள்ள இருக்கை (அம்பாரி) (யாழ்.அக.); howdah.

[யானை + சப்பரம்]



யானைச்சார்வு *yāṉai-c-cārvu*, பெ.(n.) யானைகள் கட்டுமிடம் (வின்.); elephant-stable.

[யானை + சார்வு]

யானைச்சாலை *yāṉai-c-cālai,* பெ.(n.) யானைகள் கட்டுமிடம் (வின்.); elephant-stable.

மறுவ. யானைக்கூடம்.

[யானை + சாலை]

யானைச்சீரகம் *yāṉai-c-cīragam,* பெ. (n.) பெருஞ்சீரகம், 2 (மலை.); chinese anise.

[யானை + சீரகம்]

யானைச்சுண்டை *yāṉai-c-cuṇḍai,* பெ.(n.) காட்டுச் சுண்டை; solanum ferox.

[யானை + சுண்டை]

யானைச்சொறி[1] *yāṉai-c-coṟi,* பெ.(n.) பெருந்தினவு நோய் (M.L.); dry tetter, a scaly eruption, psoriasis.

[யானை + சொறி]

யானைச்சொறி[2] *yāṉai-c-coṟi,* பெ.(n.) சாம்பல் நிறத்திலோ, சிவப்பு நிறத்திலோ தடிப்புகளையும், வெள்ளை நிறச் செதில்களையும் ஏற்படுத்தும் ஒரு வகை தோல் நோய்; psoriasis.

[யானை + சொறி]

யானைத்தடிக்கால் *yāṉai-t-taḍikkāl,* பெ.(n.) யானைத்தடிச்சல் பார்க்க; see *yāṉai-t-taḍiccal.*

[யானை + தடிக்கால்]

யானைத்தடிச்சல் *yāṉai-t-taḍiccal,* பெ. (n.) 1. படர்கொடி வகை (L.); smooth-leaved fish-bone climber. 2. புளிநறளை (மூ.அக.); bristly trifoliate vine. 3. புளி அரணைப் பூண்டு; a kind of plant.

[யானை + தடிச்சல்]

யானைத்தடிப்பு *yāṉai-t-taḍippu,* பெ.(n.) யானைத்தடிச்சல் பார்க்க; see *yāṉai-t-taḍiccal.*

[யானை + தடிப்பு.]

யானைத்தண்டம் *yāṉai-t-taṇḍam,* பெ.(n.) யானை செல்லும் வழி (யாழ்.அக.); elephant's track.

மறுவ. யானையடி.

[யானை + தண்டம்]

யானைத்தண்டு *yāṉai-t-taṇḍu,* பெ.(n.) ஒருவகைக் கீரைத்தண்டு; large sized amaranth stem.

[யானை + தண்டு]

யானைத்தந்தம் *yāṉai-t-tandam,* பெ.(n.) 1. யானையின் கொம்பு; elephant's tusk. 2. யானையின் எலும்பு; elephant's bone.

[யானை + தந்தம்]



யானைத்தம்பம் *yāṉai-t-tambam,* பெ.(n.) யானை கட்டுந் தறி; post to which elephants are chained.

[யானை + Skt. stamba > த. தம்பம்]

யானைத்தலை *yāṉai-t-talai,* பெ.(n.) அத்தியிலை; the leaf of fig tree.

[யானை + தலை]

யானைத்தலைவன் *yāṉai-t-talaivaṉ,* பெ.(n.) யானைக் கூட்டத்துள் தலைமை ஏற்கும் யானை (மலைபடு. 297, உரை); leading prominent elephnat in a herd.

[யானை + தலைவன்]

யானைத்தறி *yāṉai-t-taṟi,* பெ.(n.) 1. யானை கட்டுந்தறி; post to which elephants are chained. 2. யானைக் கூடத்தில் யானைகள் ஒன்றோடொன்று சண்டையிடா வண்ணம் அவற்றை பிரிக்கிற குறுக்குமரம்; wooden bar set up between elephants in a stable to prevent their fighting with one another.

[யானை + தறி]

யானைத்திசை *yāṉai-t-tišai,* பெ.(n.) வடக்கு (யாழ்.அக.); north direction.

[யானை + திசை]

பெருந்திசையாகக் கருதப்படும் வடதிசை.

யானைத்திப்பிலி *yāṉai-t-tippili,* பெ.(n.) பெருந்திப்பிலி கொடிவகை; elephant-pepper climber, long pepper.

[யானை + திப்பிலி]

யானைத்தீ[1] *yāṉai-t-tī,* பெ.(n.) தணியாத பசியை விளைக்கும் நோய்; a disease that causes insatiable hunger. *"யானைத் தீ நோயரும்பசி கெடுத்த" (மணிமே. 19, 153).*

[யானை + தீ]

யானைத்தீ[2] *yāṉai-t-tī,* பெ.(n.) தணியாப் பசியை விளைக்கும் ஒரு நோய். இதனால் காய சண்டிகை மிகத் துன்புற்றுப் பின்மணிமேகலையிட்ட உணவால் பசி யொழிந்தனள் (மணிமேகலை.); a disease of insatiable hungry affecting by this, kayasandigai suffered a lot and satiated with the food offered by *Manimēgalai.*

[யானை + தீ]

யானைத்தும்மல் *yāṉai-t-tummal,* பெ.(n.) யானைத்தும்மயிலை விழும், இது குளிசமாடவுதவும்; an unknown leaf.

[யானை + தும்மல்]

யானைத்தூண் *yāṉai-t-tūṇ,* பெ.(n.) 1. யானை கட்டுந்தறி; post to which elephants are chained. 2. யானைக் கூடத்தில் யானைகள் ஒன்றோடொன்று போரெதிர்தலைப் பிரிக்கிற குறுக்கு மரம்; wooden bar set up between elephants in a stable to prevent their fighting with one another.

[யானை + தூண்]

யானைத்தெல்லு *yāṉai-t-tellu,* பெ.(n.) பெருந்தெல்லு என்னும் கொடிவகை; a creeper.

[யானை + தெல்லு]

யானைத்தொழு *yāṉai-t-toḻu,* பெ.(n.) யானைகள் கட்டுமிடம்; elephant stable.

[யானை + தொழு]

யானைநகம் *yāṉai-nagam,* பெ.(n.) யானையின் குளம்பு; elephant's nail.

[யானை + நகம்]

யானைநாரத்தை *yāṉai-nārattai,* பெ.(n.) கடார நாரத்தை; a big variety of citrus fruit, sevila orange.

[யானை + நாரத்தை]

யானைநெருஞ்சி *yāṉai-neruñji,* பெ.(n.) பெருநெருஞ்சி; a large thirstle - *Tribulus longinosus; Bedalium meria* (சா.அக.).

[யானை + நெருஞ்சி]

யானைநெருஞ்சில் *yāṉai-neruñjil,* பெ.(n.) பெருநெருஞ்சில் (இங்.வை.111); a stout-stemmed herb.

[யானை + நெருஞ்சில்]

கருத்த முட்களையுடைய பெரு நெருஞ்சில்.



யானைப்பட்டம் *yāṉai-p-paṭṭam,* பெ.(n.) யானையின் முகவோடை (உரி.நி.); ornamental plate tied to an elephant's fore head.

[யானை + பட்டம்]

யானைப்படுகுழி *yāṉai-p-paḍukuḻi,* பெ.(n.) யானையை அகப்படுத்துங் குழி (சூடா.); kheda, pit for entrapping elephants.

[யானை + படுகுழி. (படுகுழி = பெருங்குழி)]

யானைப்படை *yāṉai-p-paḍaḍai,* பெ.(n.) அரசர்க்குரிய நால்வகைப் படையுளொன்று; one of the four kinds of king's army. *'யானையுடை படைகாண்டல் மிகவினிதே' என்றார் பூதஞ்சேந்தனாரும்.*

[யானை + படை]

அடிக்கடி யானைப்படையை அரசன் அணிவகுப்பித்துக் கண்டுகளிப்பான். யானைப் படை அக்காலத்துச் சிறந்த படையாகக் கருதப்பட்டது.

யானைப்பதி *yāṉai-p-padi,* பெ.(n.) யானை நகம்; elephant's nail.

[யானை + நகம்.]

யானைப்பந்து *yāṉai-p-pandu,* பெ.(n.) விளையாட்டு வகை (தஞ். சர. i, 529); a game.

மறுவ. பிள்ளையார் பந்து.

[யானை + பந்து]

யானைப்பந்து என்னும் இந்த ஆட்டம் பிள்ளையார் பந்து என்னும் விளையாட்டென மொழிஞாயிறு குறித்துள்ளார்; ஊரகப் பகுதிகளில் இந்த விளையாட்டு இன்றும் ஆடப்படுகிறது. இவ்விளையாட்டு பற்றிப் பாவாணர் கூறுவது :

ஆட்டத்தின் பெயர் பிள்ளையாரைக் குறிக்கும் ஒரு கல்லின்மேற் பந்தை எறிந்தாடும் ஆட்டு, பிள்ளையார் பந்து. இது திருச்சிராப்பள்ளி வட்டாரத்திற் பிள்ளையார் விளையாட்டென வழங்கும்.

ஆடுவார் தொகை: பொதுவாக, எண்மர்க்குக் குறையாத பலர் இதை ஆடுவர்.

ஆடு கருவி: ஏறத்தாழ ஆறங்குல நீளமுள்ள ஒரு கல்லும், ஒரு பந்தும், இதற்குரிய ஆடு கருவிகளாம்.

ஆடிடம்: சுவரடியும் அதையடுத்த வெளிநிலமும் ஆடுகளமாம்.

ஆடுமுறை : ஆடுவோரெல்லாரும் சமத் தொகையினரான இரு கன்னையாகப் பிரிந்து கொள்வர். ஒரு செங்கல்லை அல்லது சிறு கல்லைப் பிள்ளையாராக கோடித்து நட்டு, ஒரு கன்னையார் சற்றொப்ப பதினாறடித் தொலைவில் எதிர்நின்று ஒவ்வொருவராய் ஒவ்வொரு தடவை நிரனிரை ஒருவர்பின் ஒருவராய்ப் ஒருமுறை மட்டுமே பிள்ளையாரைப் படுகிடையாகச் சாய்த்தற்குப் பந்தாலடிக்க, இன்னொரு கன்னையார் இரு பக்கத்திலும் பிள்ளையார்க்கும் அவருக்கும் இடையில் வரிசையாக நின்று கொண்டு, எறியப்பட்ட பந்தைப் பிடிக்க முயல்வர். பிள்ளையாரைப் படுகிடையாய்ச் சாய்த்த பந்தை மேலெழும்பொழுது பிடித்து விடினும், எறிந்த பந்து பிள்ளையாற்மேற் படாவிடினும், பட்டும் அதைப் படுகிடையாய்ச் சாய்க்காவிடினும், எறியுங் கன்னையாள் மாறிக்கொண்டேயிருந்து அனைவருந் தீர்ந்தபின், எதிர்க்கன்னை அடிக்குங் கன்னையாராகவும் மாறல் வேண்டும்.

பிள்ளையாரைப் படுகிடையாய்ச் சாய்த்த பந்து பிடிக்கப்படாவிடின், பிடிக்க நின்ற கன்னையர் அனைவரும் சற்றுத் தொலைவில் இடையிட்டு நிற்பர். அடித்த கன்னையாளரனைவரும் நெருக்கமாகக் கூடி நின்று, அவருள் ஒருவன் பந்தைத் தன் அடி வயிற்றின் மேல் வைத்து அது வெளிக்குத் தெரியாமல் இரு கையாலும் பொத்திக்கொண்டும், பிறரும் தாம் பந்து வைத்திருப்பதாக எதிர்க் கன்னையாருக்குத் தோன்றுமாறு தனித்தனி நடித்துக்கொண்டும், அவரிடையே பிரிந்து செல்வர். எதிர்க்கட்சியாருள் யாரேனும் ஒருவன், உண்மையாய்ப் பந்து வைத்திருப்பவனை ஐயுறாது அவனுக்குப் பக்கமாக நிற்பின், பந்து வைத்திருப்பவன் திடுமென்று அவன்மேல் எறிந்து விடுவான்; அத்துடன் ஓராட்டை நிறைவுற்றதாகக் கருதப்பெறும். அடுத்த ஆட்டை ஆடுவது ஆடுவார் விருப்பத்தைப் பொறுத்தது.

ஆட்டுத் தோற்றம் : ஒருகால், பிறமதப் பகைமைபற்றியும் கொள்ளையடித்தற் பொருட்டும், இடைக் காலத்திற் சில அரசரும் கொள்ளைத் தலைவரும் தெய்வச்சிலைகளை (விக்கிரகங்களை) உடைத்ததும் கவர்ந்ததும், இவ் விளையாட்டுத் தோற்றத்திற்குக் காரணமாயிருந்திருக்கலாம். கசினி மகமது, மாலிக்காபூர், திருமங்கையாழ்வார் முதலியோர் செயல்கள், இங்குக் கவனிக்கத்தக்கன.

யானைப்பல் *yāṉai-p-pal,* பெ.(n.) யானையின் கொம்பு; elephant's tooth, tusk. *"யானைப் பல்லை உரைத்துத் தடவினால் மண்டையிடி போகும்".*

மறுவ. யானைத்தந்தம்

[யானை + பல்]



யானைப்பல்லாதி *yāṉai-p-pallādi,* பெ.(n.) கண்ணில் பூவிழும் நோய்க்கான மருந்து மாத்திரை; an ayurvedic medicinal tablet for opacity of the lens.

யானைப்பாகன் *yāṉai-p-pāgaṉ,* பெ.(n.) யானை நடத்துவோன் (பிங்.); elephant driver, mahout.

மறுவ. மாவுத்தர்

[யானை + பாகன்]

யானைப்பிச்சான் *yāṉai-p-piccāṉ,* பெ.(n.) கொடிவகை (மலை.); bristly trifoliate vine.

மறுவ. புளிநறளை.

[யானை + பிய் → பிய்ச்சான்]

யானைப்பிஞ்சு *yāṉai-p-piñju,* பெ.(n.) அத்திப் பிஞ்சு; very tender big fruit.

[யானை + பிஞ்சு]

ஈங்கு பிஞ்சு என்பது காய்நிலைகள் நான்கனுள் தோன்றிய நிலையினைக் குறிக்கும் என்பார் மொழிஞாயிறு.

புள் → (பிள்) → பீள் = இளங்கதிர். இளமைப்பூட்டை = இளங்கதிர். பூட்டை → பீட்டை (மு.தா.39). புள் → பிள் → பின் → பின்சு → பிஞ்சு. யானை என்பது பெருமைப் பொருள் முன்னொட்டு.

யானைப்பிரண்டை *yāṉai-p-piraṇḍai,* பெ.(n.) பெரிய வடிவிலமைந்த பிரண்டை; large species of square stalked vine vitis quadrangularis.

[யானை + பிரண்டை]

புரண்டை → பிரண்டை = புரண்டிருக்கும் அல்லது முறுக்குண்டிருக்கும் கொடி (மு.தா.242). முறுக்குண்ட நீள்பெருங் கொடியே யானைப் பிரண்டை. யானை என்பது ஈங்கு பெருமைப் பொருள் குறித்த முன்னொட்டு.

யானைப்பீசன் *yāṉai-p-pīšaṉ,* பெ.(n.) புதுவகைக் கொன்றை; a variety of cassia tree.

[யானை + பீசன்]

யானைப்புச்சான் *yāṉai-p-puccāṉ,* பெ.(n.) புளிநறளை; a hairy climbing plant.

[யானை + புச்சான்]

யானைப்புடுக்கு *yāṉai-p-puḍukku,* பெ.(n.) சதை வளர்ந்து பருத்த புடுக்கு; elephantoid scrotum.

[யானை + புடுக்கு – புடை → புடம் → புட்டம் = புடைத்த குண்டி. புட்டம் → புட்டா → புட்டை = பெருத்த விதை (அண்டம்) (வே.க.3–77) புடம் → புட → புடுக்கு. 'கு' = சொல்லாக்க ஈறு]

யானைப்புளி *yāṉai-p-puḷi,* பெ.(n.) பெரிய மரவகை (மலை.); baobab.

[யானை + புள் → புளி]

யானைப் புளி என்னுஞ்சொல், கருமையான பருத்த பெரியமரத்தைக் குறிக்கும். புளிப்புச் சுவை மிக்க சற்றுப் பெரிய பழங்களைத் தரும் புளியமரம்.

யானைப்புளியமரம் *yāṉai-p-puḷiya maram,* பெ.(n.) பப்பரப்புளி, பொந்தம் புளி மரம், பூரி மரம்; a big tamarind tree, a stout stemmed tamarind tree.

[யானை + புளிமரம் → புளியமரம்]

யானைப்புளுகன் *yāṉai-p-puḷugaṉ,* பெ. (n.) பெரும் பொய்யன் (இ.வ.); great liar.

[யானை + புளுகன் = பெரும்புளுகன். புள் → புளு → புளுகு = பொய் : (வே.க.3.101). புளு + புளுகு → புளுகன். யானை = உருவிற்பெரியதைக் குறிக்கும் அடை.]

ஒ.நோ. யானைக்கால். யானைப்புடுக்கு, யானை நெருஞ்சில், யானைக்காது.

யானைப்பெருங்காயம் *yāṉai-p-peru-ṅ-kāyam,* பெ.(n.) 1. ஒருவகைப் பெருங்காயக் கலவை (வின்.); a medicinal preparation of asafoetida for elephants. 2. பெருங்காய வகை (சங்.அக.); a kind of asafoetida.

[யானை + பெருங்காயம்]

மருந்துச் சரக்காகப் பயன்படும் பெருங்காயம். ஈங்கு யானை என்னும் அடை, கருமையும், பருமையுங் குறித்ததென்க.

யானைப்போர் *yāṉai-p-pōr*, பெ.(n.) யானைகள் ஒன்றோடொன்று பொரும் போர்; elephant-fight with each other. *"குன்றேறி யானைப் போர் கண்டற்றால்" (குறள், 758).*

[யானை + போர்]

யானைபதி *yāṉai-pati*, பெ.(n.) நகம்; nail.

மறுவ. யானையுகிர்.

[யானை + பதி]

யானைபாய்ச்சு-தல் *yāṉai-pāyccu-*, 5 செ.கு.வி.(v.i.) யானையை மதம்படுமாறு செய்தல்; to make an elephant go must or musth. *"மறைந்தி யானை பாய்ச்சி விடல்" (பழ. 62).*

[யானை + பாய்ச்சு-]

யானைபிடி-த்தல் *yāṉai-piḍi-*, 4 செ.கு.வி. (v.i.) காட்டில் வாழும் யானையைக் குழிவெட்டிப் பிடித்தல்; to catch a wild elephant by the way of digging pit.

[யானை + பிடி-. புள் → பிள் → பிண்டி → பிடி-.]

யானைபிடி-த்தல் = யானையைக் கைப்பற்றுதல், அகப்படுத்துதல், கட்டுதல். யானை பிடித்தல் நால்வகைப்படும்.

1. பெண்யானையின் மூலம் பிடித்தல்; பெண்யானையின் இனப்பெருக்கம் பருவகாலத்தில் - காட்டுக்குள் அனுப்பி - ஆண் யானையைப் பிடித்தல்.

2. தாரு முறையில் மதம் பிடித்த இரண்டு யானைகளை யானைக் கூட்டமுள்ள காட்டுப் பகுதியில் போகச் செய்து பிற யானைகளைப் பிடித்தல். இமயமலைச் சாரலில் கூர்க்கரினத்தார் இம்முறையினை இன்றும் கையாளுகின்றனர்.

3. குழிவெட்டிப் பிடித்தல். குழிவெட்டிப் பிடிக்கும் முறை பற்றிய குறிப்பு புறநானூற்றிலும் (புறம்.7:4:19). சிலப்பதிகாரத்திலும் (25:3) காணப்படுகிறது. இம்முறை 'பயம்பு' என்று குறிக்கப்பட்டுள்ளது.

இம்முறையில் குறிப்பிட்ட அளவு ஆழத்திற்கு குழிகளைவெட்டி, அதன்மேற்பரப்பினை மூங்கில், இலை, தழைகளால் மூடிப் பிடிப்பர்.

4. நான்காவது வகை, கெடா (Kheda) முறையைச் சார்ந்தது. இதுபற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை.

யானைமஞ்சள் *yāṉai-mañjal*, பெ.(n.) பெருத்த கிழங்குகளையுடைய மஞ்சள் வகை (மலை.); a large species of turmeric.

[யானை + மஞ்சள்]

யானைமட்டம் *yāṉai-maṭṭam*, பெ.(n.) இள யானை (யாழ்.அக.); young elephant.

[யானை + மட்டம்]

யானைமணி *yāṉai-maṇi*, பெ.(n.) யானையின் இருமருங்குந் தூங்கும் மணி; bells suspended on either side of an elephant. *"யானைவரும் பின்னே, மணி யோசைவரும் முன்னே" (பழ.).*

[யானை + மணி]

யானைமதம் *yāṉai-madam*, பெ.(n.) யானையின் தலைப்பக்கம் இரண்டு, கண் இரண்டு, கைத்துளை இரண்டு குறி ஒன்று என ஏழிடங்களின்று பாய்வதாகக் கருதப்படும் மதநீர்; must exudation of an elephant, said to issue from seven places, the two temples, the two eyes, the two nostrils and the testes.

[யானை + மதம். மதம் = மதநீர்]

யானைமயக்கி *yāṉai-mayakki*, பெ.(n.) ஒரு செடி; a plant.

[யானை + மயக்கி]

யானைமலை *yāṉai-malai*, பெ.(n.)1. மதுரைக்கு வடக்கிலுள்ள ஒரு குன்று (தேவா. 858, 1); a long, bare, elephant-shaped rock near Madurai. 2. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஒரு மலைத் தொடர்; Anaimalais, a range of mountains in the southern part of the Coimbatore district. *"ஊனெழு குன்றை யானைமலையென" (திருவாலவா. 26, 28).*

[ஏனை→யானை + மலை]

யானைமறம் *yāṉai-maṟam*, பெ.(n.) அரசனது யானையின் போர் வீரத்தைச் சிறப்பித்துக் கூறும் புறத்துறை (பு.வெ. 7, 6); theme praising the heroic deeds of the king's elephant in battle.

[யானை + மறம்]

யானைமறவர் *yāṉai-maṟavar*, பெ.(n.) யானை வீரன்; elephant trooper.

மறுவ. ஆணையாள், குஞ்சரமல்லர், அத்திமல்லர்.

[யானை + மறவர்]

யானைமால் *yāṉai-māl*, பெ.(n.) யானைகள் கட்டுமிடம் (வின்.); elephant-stable.

[யானை + மால். மால் = யானை கட்டுந் தொழுவம்.]

யானைமாவுத்தன் *yāṉai-māvuttaṉ*, பெ.(n.) யானைப்பாகன்; mahout.

[யானை + மாவுத்தன்]

யானைமீக்குவம் *yāṉai-mīkkuvam*, பெ.(n.) கறுப்பு மருதுவகை; leathery-winged myrobalan.

[யானை + மீக்குவம்]

யானைமீன் *yāṉai-mīṉ*, பெ.(n.) 1. பெருமீன் வகை (பிங்.); a very large fish. 2. திமிங்கில வகை (தக்கயாகப். 384, உரை); a kind of whale.

[யானை + மீன்]

யானைமுகபடாம் *yāṉai-muga-paḍām*, பெ.(n.) யானையின் கும்பத்தலத்திலிடும் ஒப்பனைச் சீலை (பிங்.); ornamental cloth covering the fore head of an elephant.

[யானை + முகபடாம்]

யானைமுகவற்கிளையோன் *yāṉai-mugavaṟkiḷaiyōṉ*, பெ.(n.) 1. முருகக் கடவுள் (பிங்.); Skanda. 2. வீரபத்திரக் கடவுள் (சூடா.); *Vīrabhadra.*

யானைமுகவன் *yāṉai-mugavaṉ*, பெ.(n.) பிள்ளையார் கடவுள் (திவா.); Ganēsa.

[யானை + முகவன்]

யானைமுகவோடம் *yāṉai-muka-v-ōḍam*, பெ.(n.) யானையுருவமான முகப்புள்ள தோணி (சிலப். 13, 176, உரை); boat with an elephant-shaped prow.

மறுவ. கரிமுகவம்பி (சிலப்.13,179)

[யானை + முகம் + ஓடம்]

யானைமுள் *yāṉai-muḷ*, பெ.(n.) 1. நீருடைய மரம்; buffalo thorn cutch. 2. குடைவேல் மரம்; umbrella thorn babul.

[ஏனை→யானை + முள்]

யானைமுள்ளிச்சங்கு *yāṉai-muḷḷi-c-caṅgu,* பெ.(n.) சங்குவகை, பெரிய யானை போன்ற அமைப்புடையதும், வெளிப்புறம் முட்கள் நிறைந்ததுமான சங்கு; an elephant-shaped thorny conch.

யானைமூத்திரம் *yāṉai-mūttiram,* பெ.(n.) யானையின் சிறுநீர்; elephant's urine.

[யானை + மூத்திரம்]

இது மருந்துக்கு பயன்படும்.

யானையங்குருகு *yāṉai-y-aṅ-kurugu,* பெ.(n.) குருகு வகை; a kind of heron. *"யானையங் குருகின் சேவலோடு" (மதுரைக். 674).*

யானையடி *yāṉai-y-aḍi,* பெ.(n.) 1. சதுரங்க ஆட்டத்தில் யானை செல்லும் நெறி; the course of the elephant or the rook in a game of chess. 2. நேர்வழி; straight path or course. 3. ஐயனார் கோயில் முன்றிலில் யானையுரு நிறுத்தியிருக்குமிடம்; place where an elephant's figure is set in front of an *Aiyaṉār* temple. 4. பெரிய வட்டமாயுள்ளது; anything large and round like the foot of an elephant. *"யானையடி யப்பளம்".* 5. செடிவகை (இ.வ.); a plant.

[யானை + அடி. அண் → அடி. இனி, அடு → அடி என்றுமாம்.]

யானை நிறுத்தியிருக்கும் அல்லது கட்டியிருக்கும் பெரிய வட்டமான இடமே, "யானையடி" எனப்படும்.

யானையடிக்கல் *yāṉaiyaḍi-k-kal,* பெ.(n.) தளம்போட உதவும் பெரிய சதுரச் செங்கல் (இ.வ.); large sized square brick, used in flooring or roofing.

[யானையடி + கல்]

யானையடியிலை *yāṉaiyaḍi-y-ilai,* பெ.(n.) யானைக்கால்மூலி பார்க்க; see *yāṉai-k-kāl-mūli.*

[யானையடி + இலை.]

யானைத்தடம் போன்று அமைப்புள்ள மூலிகையிலை.

யானையணைதறி *yāṉai-y-aṉai-taṟi,* பெ.(n.) 1. யானை கட்டுந்தறி; post to which elephants are chained. 2. யானைக் கூடத்தில் யானைகள் ஒன்றோடொன்று சண்டையிடா வண்ணம் அவற்றைப் பிரிக்கிற குறுக்குமரம்; wooden bar set up between elephants in a stable to prevent their fighting with one another.

[யானை + அள் → அண் → அண → அணை + தறி. (அணைதறி = கரி, பரி முதலியவற்றைக் கட்டும் கம்பம் அல்லது குறுந்தறி)]

யானையறுகு *yāṉai-y-aṟugu,* பெ.(n.) பெரிய அருகம்புல்; large sized dubgrass or harialli grass.

[யானை + அறு + அறுகு]

மாந்தர்தமை வருத்தும் பெரிய நோய்களை அறுப்பது யானையறுகு. பயிர் பச்சைகளைக் களைகளாக வேரூன்றி அழிப்பதனாலும், இப்பெயர் வந்ததெனலாம்.

யானையாள் *yāṉai-y-āḷ,* பெ.(n.) யானை வீரன்; elephant trooper.

[யானை + ஆள்.]

யானையாளி *yāṉai-yāḷi,* பெ.(n.) யாளி (சூடா.) பார்க்க; see *yāḷi.*

[யானை + யாளி]

யானையுண்குருகு *yāṉai-y-uṇ-kurugu,* பெ.(n.) 1. யானையைக் கொன்று தின்பதாகக் கருதப்படும் ஒரு பெரும் பறவை (வின்.); a labulous bird, reputed to be able to devour an elephant. 2. இரவில் இணை பிரிந்து வருந்துவதாகக் கூறும் பறவை வகை; a kind of bird that anguishes for sepearation of its pair in night. *சக்கரவாகச் செழும்பெடை காண்"* *(தணிகைப்பு. களவு.347).*

[யானை + உண் + குருகு]

யானையுரித்தோன் *yāṉai-y-urittōṉ,* பெ.(n.) சிவபிரான்; *Šivaṉ,* as having flayed an elephant.

[யானை + உரித்தோன்]

யானையெலுமிச்சை *yāṉai-y-elumiccai,* பெ.(n.) பெரிய எலுமிச்சை; large sized species of lime.

[யானை + எலுமிச்சை]

யானையேற்றம் *yāṉai-y-ēṟṟam,* பெ.(n.) யானை மீதேறி அதனையடக்கி நடத்தும் வித்தை (பதார்த்த. 1451, தலைப்பு); art of riding an elephant bringing it under his control.

[யானை + ஏறு→ஏற்று→ஏற்றம்]

அரசர்க்குரியனவாகச் சொல்லப்பெறும் அடையாளப்பொருள் இருபத்தொன்றனுள் வலிமை, பெருமை முதலிய சிறப்புக்களைக் குறிக்கும் யானை.

அரசப் பதவி காணவிழைவார் கற்கவேண்டும் வித்தைகளுள் யானையேற்றமு மொன்று.

யானையைவிழுங்குமீன் *yāṉaiyai-viḻuṅgu-mīṉ,* பெ.(n.) திமிங்கிலம் (சா.அக.); whale.

[யானை + ஐ + விழுங்கு + மீன்]

யானை விழுங்குமீன் என்னும் பெயருள்ள திமிங்கிலம் கடலில் வாழ்வது; பாலூட்டி யினத்தைச் சார்ந்தது. மீனையொத்த தோற்றமுடைய பெரிய விலங்கு.



யானைவணக்கி *yāṉai-vaṇakki,* பெ.(n.) யானைத்தோட்டி (பிங்.); elephant goad.

[யானை + வணக்கு → வணக்கி]

யானைவணங்கி[1] *yāṉai-vaṇaṅgi,* பெ.(n.) 1. தேட் கொடுக்கிச் செடி; a plant. 2. நெருஞ்சி; a prostrate plant with thorny fruits, land caltrops-*Tribulus terrestris.*

[யானை + வணங்கி]

யானைவணங்கி[2] *yāṉai-vaṇaṅgi,* பெ.(n.) 1. சிறுசெடிவகை; turnsole. 2. ஒரு வகைச் செடி; a stout-stemmed herb with spiny fruits and slimy leaves.

[யானை + வணங்கு → வணங்கி]

யானைவாரி *yāṉai-vāri,* பெ.(n.) 1. யானை பிடிக்குமிடம்; place where elephants are caught or happed. 2. யானைகள் கட்டுமிடம் (வின்.); elephant-stable.

[யானை + வாரி. வாரி : யானை யகப்படுத்துமிடம்]

யானைவாழை *yāṉai-vāḻai*, பெ.(n.) 1. பெரிய வாழைவகை; a large species of plantain. 2. நீண்ட குலை கொண்ட ஒருவித வாழை; stunted plantain not more than four feet hight and having its bunch of fruits hanging down like a elephant's trunk.

[யானை + வாழை]

யானைவிச்சுளி *yāṉai-viccuḷi*, பெ.(n.) கழுகு வகை (வின்.); a species of osprey.

[யானை + விச்சுளி]



யானைவிழுங்குமீன் *yāṉai-viḻuṅgu-mīṉ*, பெ.(n.) யானையைவிழுங்குமீன் பார்க்க; see *yāṉaiyai-viḻuṅgu-mīṉ*.

[யானை + ஐ + விழுங்கு + மீன்]

யானைவீரர் *yāṉai-vīrar*, பெ.(n.) எண் பெருந் துணைவருள் யானை மேலிருந்து போர்புரியும் வீரர் (திவா.); warriors riding on elephants, one of *eṉ-perun-tuṇaivar*. *"யானை வீரருமிவுளித் தலைவரும்" (சிலப். 26, 76).*

மறுவ. யானை மறவர், குஞ்சரமல்லர்.

[யானை + வீரர்]

யானைவென்றி *yāṉai-veṉṟi*, பெ.(n.) ஒரு யானை பிறிதொன்றோடு பொருது வெற்றி பெறுதலைக் கூறும் புறத்துறை (பு.வெ. ஒழிபு.8); theme describing the victory of an elephant fighting with another.

[யானை + வெல்→வென்→வென்றி]

யானைவேட்டுவன் *yāṉai-vēṭṭuvaṉ*, பெ.(n.) யானை வேட்டையாடுவோன்; one who hunts elephants. *"யானை வேட்டுவன் யானையும் பெறுமே" (புறநா.214).*

[யானை + வேடு→வேட்டு→வேட்டுவன்.]

யி *yi*, 'ய்' என்ற மெய்யெழுத்தும், 'இ' என்ற உயிரெழுத்தும் இணைந்த உயிர்மெய் (அசை) யெழுத்து; the syllable formed by adding the short vowel 'i' to the consonant 'y'.

[ய் + இ → யி]

யீ *yī*, 'ய்' என்ற மெய்யெழுத்தும், 'ஈ' என்ற உயிரெழுத்தும் இணைந்த உயிர்மெய் (அசை) யெழுத்து; the syllable formed by adding the short vowel 'ī' to the consonant 'y'.

[ய் + ஈ → யீ]

யு *yu*, 'ய்' என்ற மெய்யெழுத்தும், 'உ' என்ற உயிரெழுத்தும் இணைந்த உயிர்மெய் (அசை) யெழுத்து; the syllable formed by adding the short vowel 'u' to the consonant 'y'.

[ய் + உ → யு]

யூ *yū*, 'ய்' என்ற மெய்யெழுத்தும், 'ஊ' என்ற உயிரெழுத்தும் இணைந்த உயிர்மெய் (அசை) யெழுத்து; the syllable formed by adding the short vowel 'ū' to the consonant 'y'.

[ய் + ஊ → யூ]

யெ *ye*, 'ய்' என்ற மெய்யெழுத்தும், 'எ' என்ற உயிரெழுத்தும் இணைந்த உயிர்மெய் (அசை) யெழுத்து; the syllable formed by adding the short vowel 'e' to the consonant 'y'.

[ய் + எ → யெ]

யே *yē*, 'ய்' என்ற மெய்யெழுத்தும், 'ஏ' என்ற உயிரெழுத்தும் இணைந்த உயிர்மெய் (அசை) யெழுத்து; the syllable formed by adding the short vowel 'ē' to the consonant 'y'.

[ய் + ஏ → யே]

யை *yai*, 'ய்' என்ற மெய்யெழுத்தும், 'ஐ' என்ற நெட்டுயிரெழுத்தும் இணைந்த உயிர்மெய் (அசை) யெழுத்து; the syllable formed by adding the short vowel 'ai' to the consonant 'y'.

[ய் + ஐ → யை]

யொ *yo*, 'ய்' என்ற மெய்யெழுத்தும், 'ஒ' என்ற உயிரெழுத்தும் இணைந்த உயிர்மெய் (அசை) யெழுத்து; the syllable formed by adding the short vowel 'o' to the consonant 'y'.

[ய் + ஒ → யொ]

யோ *yō*, 'ய்' என்ற மெய்யெழுத்தும், 'ஓ' என்ற உயிரெழுத்தும் இணைந்த உயிர்மெய் (அசை) யெழுத்து; the syllable formed by adding the short vowel 'ō' to the consonant 'y'.

[ய் + ஓ → யோ]

யௌ *yau*, 'ய்' என்ற மெய்யெழுத்தும், 'ஔ' என்ற உயிரெழுத்தும் இணைந்த உயிர்மெய் (அசை) யெழுத்து; the syllable formed by adding the short vowel 'au' to the consonant 'y'.

[ய் + ஔ → யௌ]

வ்

வ் *v*, தமிழ் நெடுங்கணக்கில் பதினான்காம் மெய்யாகப் பல்லிதழில் ஒலிக்கப்பெறும் இடையினவெழுத்து, இவ்வெழுத்து சில விடத்தே அரையுயிராகவும், உடம்படு மெய்யாகவும் ஒலிக்கும் தன்மைத்து; the fourteenth letter of medial consonant in *Tamil* alphabet. It functions as dental labial and glide.

தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களில் இயம்பியவாறும் மாந்தர்தம் நாவில் நன்கு பலுக்கும் பான்மையிலும், மேற்பல்லும், கீழிதழும் ஒன்றிப் பொருந்துங்கால், ஒலிப்பொடு மூச்சு வெளிவரும் போது, பிறக்கும் மெய்யொலி.

மொழியியலார், இம்மெய்யொலியின் பிறப்பிடம் நோக்கி, இதழ்ப் பல்லொலி (labio-dental) என்றும், ஈரிதழ்த் திறப்பொலி (bio-labial) என்றும், அரையுயிர் (semi-vowel) என்றும், ஒழுகொலி (continuant) என்றும், பலவாறு பகுத்துக் கூறுவர்.

தொல்காப்பியர் அவ், இவ், உவ், தெவ் என்னும் நான்கு மொழிகளில், இம் மெய்யொலி ஈறாக வரும் என்று வரையறுத்துள்ளார். இந்நூற்பா வருமாறு:-

"வகரக் கிளவி, நான்மொழி ஈற்றது" (தொல். எழுத்து.81).

ஆனால், காலப்போக்கில், இம் மெய்யீற்றிற்குப் பின்னும் உகரச் சாரியை பெற்று, உகர ஈறாக வழங்குவது வழக்கமாகிவிட்டது.

(எ.கா.) அவ் → அவ்வு → கவ்வு → வவ்வு

அவ்(வு)தல் – ஒன்றைக் கவ்வுதலை யொத்த வாய்ச் செய்கை நிலை "அவ்" என்னும் ஒலியைத் தோற்றுவிக்கும்.

கவ்(வு)தல்–மேல்வாய்ப்பல் கீழுதட்டோடு பொருந்துதலே கவ்வும் நிலையாகும். இந்நிலை வகர மெய்யொலிப்பிற்கே ஏற்கும். இதனை நன்னூலார், "மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே" (நன்.85) என்று குறித்துள்ளது காண்க.

வவ்(வு)தல் – என்னுஞ் சொல்லிற் பயிலும் வகர மெய், ஒன்றைக் கையினாற் பற்றுதல் என்னும் பொருண்மையைக் குறிக்கும்.

அ(வ்+ஐ) – அவை

அவ் + ஐ – அவ்வை→அவை. தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், என்ற நன்னூலாரின் கூற்றினுக்கு ஏற்றவண்ணம் "அவ்வை" என்னும் சொல்லில், மெய்யொலி பயின்று வந்த ஞான்றும், புணர்ச்சியின் கண்ணே, "ஐ"காரம் வரும்போதும், இம் முதனிலையில் உள்ள (அவ்), "வ"கர உடம்படுமெய் கெடும்.

இதனைக் கீழ்காணும் நூற்பாவால் அறியலாம்.

"அகரத் திம்பர் வகரப் புள்ளியும் ஔ வென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்" இந் நூற்பாவினைத் தொல்காப்பியர், எழுத்ததிகாரத்தில் 56–வது நூற்பாவினுக்கு அடுத்திருக்க வேண்டும் என்பது, ஆய்வாளர் கருத்தாகும்.

வ[1] *va*. தமிழ் வண்ணமாலையில் 'வ்' என்ற மெய்யெழுத்து 'அ' என்ற உயிரெழுத்து முன்னும் பின்னுமாயிணைந்த உயிர்மெய் (அசை) யெழுத்து; the medial syllable formed by adding the short vowel `a', to the consonant `v'.

[வ் + அ – வ.]

வகரம் தமிழ் நெடுங்கணக்கில், பதினான்காவது உயிர்மெய்யெழுத்தாகும். மொழியியலாருள் ஒரு பிரிவினர், வகரத்தை உரசொலி யென்பர். மற்றொரு சாரார், "மேற்பல்லும், கீழிதழும் சேருங்கால், ஒலிப்பொடு மூச்சு வெளிவரும் பொழுது, கேட்கின்ற ஒலியாதலால், உரசொலி என்று உரைப்பதைக் காட்டிலும், ஒழுகொலி (Continuant) என்பதே பொருத்தப்பாடுடைத்து" என்பர். வகரத்தின் பிறப்பிடம் பற்றிப் பகருங்கால், *"பல்லித ழியைய வகாரம் பிறக்கும்"* (தொல்.எழுத்து.98) என்று தொல்காப்பியரும், *"மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே"* (நன்.85) யென நன்னூலாரும் குறித்துள்ளமை, இங்கு நினைவு கூரத்தக்கது.

இவ்வாறு, இதழ்ப் பல்லின் (labio-dental) ஒலியாக வகரம் இருந்தாலும், அது ஆங்கிலத்தில் "w" என்பது போல, ஈரிதழ்த் திறப்பொலியாகவும் (Bio-labial) ஒலிக்கின்றது என்றும் மொழியியலாருள் ஒரு பிரிவினர் கருதுவர்.

(எ.கா.) ஔ, அவ்.

"அகர உகரம் ஔகார மாகும்" என்பர் தொல்காப்பியர். பின்வந்தோர், *"அகர வகரமும் ஔவாகும்"* என்பர். 'ஔ' என்பதை, கழகக்காலச் செய்யுட்களில், 'அவ்' என்றே பன்மை ஈறாக, "அவ்வே" (புறம்.9:5), *"இவ்வே பீலியணிந்து"* (புறம்.9:5).நம் புலவர் பெருமக்கள் குறித்துள்ளனர். இந்த (உ→வ) உகர வகர மாற்றமே. வகரம் ஈரிதழ்த் திறப்பொலி என்னும் மொழியியல் கொள்கையின் அடிப்படையுண்மையை விளக்கும் வண்ணம் அமைந்துள்ளது என்பது மொழியியலார் கருத்தாகும். இந்த வகரம் சில திராவிட மொழிகளில் ஒலிப்புடைப் பகரமாகவும் (b) வழங்குகிறது.

(எ.கா.) த. வடுகு → க. படகு

த. வலை → க. பலெ

த. வண்டி→ தெ., க. பண்டி *(bandi)*

வரகு → பரகு

வரட்டி→பரட்டி

வரவு→பரவு

தமிழிலும், சில திராவிட மொழிகளிலும், ''ம''கரம், தம் மூக்கொலியை இழந்து 'வ'கரமாக மாறுகின்றது.

(எ.கா.) நீம் + இர் – நீமிர்→நீவிர்.

உடம்படுமெய்:– இ, ஈ, எ, ஏ, ஐ முதலான எழுத்துகளின் சார்பில்லாத பிற இடங்களில் இரண்டுயிர்கள் அடுத்தடுத்து வருங்கால், இந்த வகரமே உடம்படுமெய்யாக வருகிறது. இவ்வகர வுடம்படுமெய் முற்காலத்தே வருமொழியின் முதலொலிக்கு இனமாயும், பிற்காலத்தில் நிலைமொழியின் ஈற்றிற்கு இனமாயும், வருமெனக் கூறலாம். ''கவவகத் திடுமே'' (தொல். உரி.59).

(எ.கா.) ''நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கண்'' (புறம்.164). ''நாடிமட வன்னத்தை'' (நள.).

தொல்காப்பியர் 'வ'கரம், அவ், இவ், உவ், தெவ் என்ற நான்கு மொழிகளில்தான் ஈறாகப் பயின்று வரும் என்று வரையறுத்த ஞான்றும், வல்லெழுத்திற்குப் பின்னால் வருங்கால், ஆய்தமாகும் என்றுங் கூறியுள்ளார். (எ.கா.) கஃபு, வெஃகா, கஃசு.

'அவ்' போன்ற சொற்களில் பன்மைப் பொருளை, மக்கள் மறந்த ஞான்று ''து'' என்னும் ஒருமை விகுதியைச் சேர்த்து (அவ்+து) அஃது என்று வழங்கத் தலைப்பட்டனர்.

இவ்வாறு, ஓரிடைச் சொல் தன் பொருளை இழந்தபோது, அவ்விடத்தே வேறு இடைச்சொல்லைச் சேர்த்து வழங்குதல், திராவிட மொழிகளின் பொதுவியல்பாகும். ஆனால் ஒட்டுநிலை மொழியாம் நந்தமிழ்மொழி, பொருளிழந்த இடைச்சொற்களைச் சாரியையெனப் பெயர்சூட்டி, வழங்கி வருகிறது. தொன்றுதொட்டு வகர மெய்யீறு மொழியின் இறுதியில் வழங்கி வந்தாலும், இடைக்காலத்திலிருந்தே இவ் வீற்றுக்குப் பின்னும், உகரச்சாரியை பெற்று வழங்குவது வழக்கமாகிவிட்டது..

(எ.கா.) வவ்வு, கவ்வு, தெவ்வு உயிர்மெய்ம் மயக்கத்தில் மெய்யெழுத்தில் தொடங்கி வரும் தனிக்குறிலின் பின் உள்ள வகரம், வருமொழியில் உயிர்வரின் இரட்டும்.

(எ.கா.) அவ்+இடை – அவ்விடை. பிற இடங்களில் வரும் உயிர், வகரத்தின் மேலேறி உயிர்மெய்யாகும்.

பிற்காலத்தில் வகர மெய்யீறு உகரச் சாரியை பெற்ற போதும், வருமொழியில் யகரம் வருங்கால், அவ்வுகரம், இகரமாக மாறும்.

(எ.கா.) தெவ் + யாது → தெவ்வியாது

அவ் + யாது → அவ்வியாது

இலக்கணத்தில் வரும் எடுத்துக்காட்டுகளில் மட்டுமே, பிற்காலத்தல் இம்மயக்கத்தைக் காணலாம்.

வருமொழியில் வல்லெழுத்து வந்தால், நிலை மொழியில் உள்ள வகரமெய், ஆய்தவெழுத்தாக மாறும்.

(எ.கா.) அவ் + கடிய – அஃகடிய.

வருமொழியில் மெல்லெழுத்து வந்தால், நிலைமொழியில் உள்ள வகரமெய், மெல்லெழுத்தாக மாறும்.

(எ.கா.) அவ் + நாழி – அந்நாழி. மொழியிடை வரும் தனி வகரமும் இரட்டை வகரமும், பொருள் வேறுபாடுடையன.

(எ.கா.) அவை, அவ்வை.

கவை, கவ்வை.

மேற்கூறிய எடுத்துக்காட்டின் வாயிலாக இரட்டை வகரம் மொழியிடையில் மட்டுமே பயின்று வரும் என்பது நன்கு போதரும்.

காலந்தோறும் கல்வெட்டுகளிற் காணப்படும் வகர உயிர் மெய்யின் வரி வடிவ வளர்ச்சி

கீழே ஒரு வட்டமும், அதன் மேலே நிற்கும் செங்குத்துக் கோடுமாகக் கொம்பிலிருந்து தொங்கும் உண்டையான பழம் போன்று, அசோகர் காலக் கல்வெட்டுகளிலும், (அசோகன்-பிராமி) கி.மு.4-ஆம் நூற்றாண்டில் தமிழர்தம் குகைக் கல்வெட்டு-களிலும், தமிழி யெழுத்தாக எழுதப்பட்ட வரிவடிவம்.

பட்டிப்புரோலுக் கல்வெட்டில், கி.மு.2, 3-ஆம் நூற்றாண்டுகளில், ஒரு குடுவை போல உச்சியில் சிறு படுக்கைக் கோட்டுடன் காணப்படும் வரிவடிவம்.

கி.பி.2, 3-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் இவ்வரிவடிவம் ஒரு முக் கோணத்தின் உச்சியிலுள்ள சிறு அழகுப் புள்ளியுடன் காணப் படுகிறது.



கி.பி.6, 7-ஆம் நூற்றாண்டு களில் பல்லவர் காலத்து வரிவடிவ வளர்ச்சி.



கி.பி.8-ஆம் நூற்றாண்டில் பல்லவர் கல்வெட்டுகளிற் காணப்படும் வரிவடிவம்.



கி.பி.9, 10 மற்றும் 11-ஆம் நூற்றாண்டுகளில் சோழர் காலக் கல்வெட்டுகளிற் காணப்படும் வரி வடிவம்.



கி.பி.12, 13-ஆம் நூற்றாண்டு களில் பாண்டியர் காலத்துக் கல்வெட்டுகளிற் காணப்படும் வரி வடிவம்.

கி.பி.14, 15-ஆம் நூற்றாண்டு களில் விசயநகர மன்னர் காலத்துக் கல்வெட்டுகளிற் காணப்படும் வரி வடிவம்.



கி.பி.16, 17, 18-ஆம் நூற்றாண்டு காலக் கல்வெட்டுகளிற் காணப்படும் வரிவடிவம்.



கி.பி.19, 20-ஆம் நூற்றாண்டு காலக் கல்வெட்டுகளில் ஏறத்தாழ இற்றை வரிவடிவ நிலையை எய்தியது எனலாம்.

வ[2] *va,* கால் என்ற பின்ன வெண்ணின் குறியீடு; symbol of the fraction 1/4. *'எட்டேகால் லெட்சணமே', 'அவ' 8 1/4.*

வ[3] *va,* இடை.(part) பலவின்பால் ஈறுகளுள் ஒன்று (தொல்.சொல். 9); an ending indicative of neut. pl.

வஃகான் *va-k-āṉ,* பெ.(n.) வ என்னும் எழுத்து; the letter "va". *"வஃகான் மெய்கெட" (தொல். எழுத்து. 122).*

[வ + கான் - வஃகான். கான் = பழந்தமிழ் எழுத்துச் சாரியை. இது புணருங்கால் இடையே ஆய்தந் தோன்றியது (நன்.எழுத்து.17).]

வக்கசிப்பி *vakka-šippi,* பெ.(n.) சிப்பிமுத்து; pearl oxyster.

[வக்கம் + சிப்பி.]

வக்கட்டை¹ *vakkaṭṭai,* பெ.(n.) மெலிந்த உயிரினம்; lean animal.

[வட்கு→வக்கு→ வக்கட்டை. வட்கு = மெலிவு.]

வக்கட்டை² *vakkaṭṭai,* பெ.(n.) 1. அளவுக் கதிகமான தண்ணீர் வெளியே செல்லுவதற் குரிய வழி; outlet for surplus water. 2. செய்வரப்பில் கழிவுநீர் செல்லுதற்கு வெட்டப்பட்ட நீர்மடை (யாழ்ப்.); Channel cut through the ridge of a paddy field, to let the surplus water pass away, or for allowing water to run on to the adjoining field.

[வாய் + கடை→ கட்டை→வாய்க்கட்டை→ வக்கட்டை.]

வக்கடை *vakkaḍai,* பெ.(n.) நீர் பாய்வதற்காக, வயல்வரப்பில் வெட்டி விடப்படும் ஓடை; streamlet in between the ridges of paddy field.

மறுவ. வாய்மடை

[வாய்க்கடை→வக்கடை.]

யாழ்ப்பாணத்தமிழர் "வக்கடை" என்று, இன்றும் வழங்கிவருதல் காண்க.

வக்கணத்தி *vakkaṇatti,* பெ.(n.) மாகணத்தி; a kind of tree.

வக்கணப்பட்டை *vakkaṇa-p-paṭṭai,* பெ.(n.) வக்கணத்தி; a kind of medicinal plant.

வக்கணம்¹ *vakkaṇam,* பெ.(n.) 1. வக்கணை 1, 2 (யாழ்.அக.) பார்க்க; see *vakkaṇai.* 2. பட்டப் பெயர் (யாழ்.அக.); title. 3. விற்பன்னம் (யாழ்.அக.); learning, scholarship. 4. நாகரிகம் (யாழ்.அக.); civilization. 5. பண்பாடு; culture. 6. செம்மை; refinement. 7. ஒழுங்கு; order. 8. வக்கணை¹, 3 பார்க்க; see *vakkaṇai.* 9. பழித்துரை; taunt, accusation. *வக்கணப் பேச்சு (யாழ்ப்.).*

தெ. வக்கண; க. ஒக்கணெ.

Pkt. vaggaṇa.

[வகு→வக்கு + அணம். அணம் = ஓரீறு.]

வக்கணம்² *vakkaṇam,* பெ.(n.) மார்பு (யாழ். அக.); breast.

வக்கணாத்தன் *vakkaṇāttaṉ,* பெ.(n.) மர வகை (L.); heart-leaved mottled ebony.

வக்கணாத்தி *vakkaṇātti,* பெ.(n.) கொடி வகையிலொன்று (L.); a species of star-vervain climber.

வக்கணாத்திப்பட்டை *vakkaṇātti-p-paṭṭai,* பெ.(n.) வக்கணாத்தி; bark.

[வக்கணாத்தி + பட்டை]

வக்கணாமரம் *vakkaṇā-maram,* பெ.(n.) வக்கணைமரம் பார்க்க; see *vakkaṇai-maram.*

வக்கணி¹-த்தல் *vakkaṇi-,* 4 செ.குன்றாவி. (v.t.) விளக்கமாயுரைத்தல்; to expound in detail. *"புராணஞ் சுருதிப்பொருள் வக்கணிப்பவன்". (மேருமந்.244).*

[வகு→வக்கு + அணம் - வக்கணம் → வக்கணி-.]

தெ.வக்கணிஞ்சு; க.வக்கணிசு.

வக்கணி²-த்தல் *vakkaṇi-,* 4 செ.கு.வி.(v.i.) மனங்கோணியிருத்தல் சார்ந்திருத்தல்

(இ.வ.); to be at variance. *'வக்கணித்து வழக்குரைத்தவன் வழிமுறையின்றி அழிந்து போவான்'.*

[வங்கு → வக்கு → வக்கணி-.]

வக்கணை[1] *vakkaṇai,* பெ.(n.) 1. கடிதம், ஆவணம் முதலியவற்றின் முகப்புச்சொல் அல்லது முதல் தொடர்மொழி (நாமதீப. 654); formal portion of a letter or other document; honorific superscription in a letter. 2. முகமன்மொழி; words of courtesy. *"வக்கணையாலின்பம் வருமோ" (தாயு. பராபர.213).* 3. அழகு மிளிரும் வண்ணணை அல்லது கருத்துரை; flowery or rhetorical speech or statement. *"வக்கணைப் பேச்சல்ல" (இராமநா.உயுத். 30).* 4. அறிவாற்றல், ஒழுங்கு, வரிசை, முறைவைப்பு; scholarship, order. 5. திறமைமிக்க பேச்சு (இ.வ.); skilful talk. 6. வக்கணம்[1], 2, 3, 4, 5, 7 (யாழ்.அக.) பார்க்க see *vakkaṇam. வக்கணைப் பேச்செல்லாம் வாசல்வரைதான் நிற்கும் (இ.வ.).*

க. வக்கணெ.

வக்கணை[2] *vakkaṇai,* பெ.(n.) திறமை; adeptness, skilfulness, smartness, expertise. *சமைத்த உணவு விரும்பி உண்ணும் வகையில் உள்ளது (இ.வ.). படித்த பெண், அதுதான் வக்கணையாகப் பேசுகிறாள்.*

வக்கணை[3] *vakkaṇai,* பெ.(n.) 1. நீண்ட மரவகை; wight's indian nettle. 2. மரவகை; mottled ebony. 3. மஞ்சள் நிறமுள்ள மர வகை; yellow wood ebony.

வக்கணை[4] *vakkaṇai,* பெ.(n.) மார்பு (யாழ். அக.); breast.

வக்கணைப்பேச்சு *vakkaṇai-p-pēccu,* பெ.(n.) தனித்திறனை வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்க பேச்சு; flowery or skilful talk. *வக்கணைப் பேச்சு மட்டும் வாழ்க்கைக்கு உதவாது (உ.வ.).*

[வகு → வக்கு + அணம் – வக்கணம் → வக்கணை + பேச்சு. அணம் = சொல்லாக்க ஈறு.]

வக்கணைமரம் *vakkaṇai-maram,* பெ.(n.) 1. ஒரு மரவகை; a kind of tree. 2. இம்மரம் மேடான, காய்ந்த நிலப்பகுதியில் வளரும் தன்மைத்து இதன் பழங்கள் உணவாகவும் பயன்படும்; a small tree, common in plans and about the foot of mountains in dry localaties, fruit pulp is edible.

வக்கம் *vakkam,* பெ.(n.) நத்தைச்சூரி; a plant- *Spemaciea gusoouda.*

வக்கம்பிடி-த்தல் *vakkam-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) சுள்ளென்று வெப்பம்பட ஒற்றடமிடுதல்; to foment.

[வக்கு → வக்கம் + பிடி-.]

வக்கரஞ்சபயறு *vakkarañja-payaṟu,* பெ.(n.) கடலை; gram.

வக்கரபுத்தி *vakkara-putti,* பெ.(n.) வக்கிரபுத்தி பார்க்க; see *vakkira-putti.*

வக்கரம் *vakkaram,* பெ. (n.) வக்கிரம் பார்க்க; see *vakkiram.*

[வட்கு → வக்கு → வக்கரம்.]

வக்கரன் *vakkaraṉ,* பெ.(n.) 1. மாறுபாடுள்ளவன்; perverse, cross-grained person. *"வக்கரனைக் கொன்றான் வடிவு" (திவ். இயற். மூன்றாந், 21, 3).* 2. திருமாலால் அழிக்கப்பட்ட அரக்கன்; an asura slain by

vishnu. "வக்கரனை வடிவழித்த மாயவா" (பெருந்தொ. 865). "வக்கரன்" பாக்கமுடையான் கொஞ்கராயன். இடையெழுவள்ளல்களுள் ஒருவன் ஆயந்தனூர் ஏரி மதகு கல்வெட்டு.

வக்கரனை *vakkaraṉai,* பெ.(n.) அனைத்துப் பண்களும் குழலின் ஆறு துளைகளில் உண்டாகும் வண்ணம், விரல்களில் சமஞ்செய்து தெரிவுசெய்கை (இசை.); mainpulating the flute so as to produce all melody-types on its six stops. "வைத்த துளை யாராய்ச்சி வக்கரனைவழிபோக்கி யொத்த நிலை யுணர்ந்ததற்பின்" (பெரியபு. ஆனாய.24). (செந்.vi.215).

வக்கரி[1] *vakkari,* வி.(v.) 1. வக்கிரம்; perverse. 2. கோணுகை, நெறி பிறழ்கை; distortion, contortion. 3. மாறுபாடான சிந்தனையோடு இருத்தல்; have perverseness, act perversely. *அவருடைய வக்கரித்துப் போன ஆசைகள் இவை: குடும்பத்தில் ஒவ்வொருவரும் வக்கரித்துக் கொண்டு நிற்கிறார்கள்.*

வக்கரி[2]-த்தல் *vakkari-,* 4 செ.கு.வி.(v.i.) கோணியிருத்தல், முரண்பாடாயிருத்தல்; to be crooked, to be contradictory. "வக்கரித்தால் நீ வாரா வண்மையென்ன" (கொண்டல்விடு. 8.). வக்கர காளியம்மன் கோயில். 2. வளைந்திருத்தல், மடங்குதல்; to be bent. 3. மடங்கித் திரும்புதல்; to turn back. 4. ஆலத்தி செய்தல்; to wave, as of camphor, etc. in front of an idol etc.

[வக்கு→வக்கரம் →வக்கரி-.]

வக்கரிப்பு *vakkarippu,* பெ.(n.) 1. சிடுசிடுப்பு; frown. 2. நெறிபிறழ்வு; perversion.

[வக்கரி→வக்கரிப்பு.]

வக்கரை[1] *vakkarai,* பெ.(n.) 1. வரிந்து கட்டும் முகட்டுக்கட்டை; wooden ridge-piece to hold the ropes that tie down the thatch; tie -piece. 2. சேணம், துணிப்பை; saddle, cotton-bag.

[வக்கரி→வக்கரை.]

வக்கரை[2] *vakkarai,* பெ.(n.) பற்கரை (வின்.); artifical blackness of the teeth.

வக்கலாட்டி *vakkalāṭṭi,* பெ.(n.) ஒருவகைக் கூட்டு மருந்துச் சரக்கு; a compound of a catechu formed with the juice of tender coconuts, arecanuts and other spices.

மறுவ. காசுக்கட்டி.

வக்கவசப்பூடு *vakka-vaša-p-pūḍu,* பெ.(n.) அங்கப்பிச்சு; bile of the body.

வக்களி-த்தல் *vakkaḷi-,* 4 செ.கு.வி.(v.i.) வளைந்தது; to become crooked.

[வங்கு →வக்கு →வக்களி-.]

வக்கற்றவள் *vakkaṟṟavaḷ,* பெ.(n.) 1. வாழ்க்கைக்குரிய செல்வம், பொருள் முதலியன இல்லாதவள்; woman lacking wealth materials, etc. "வக்கற்றவள் வானவேடிக்கை பார்க்கலாமா?" (உ.வ.). 2. பிழைக்கத் தெரியாதவள்; woman who has no knack of living. 3. வகையற்றவள் பார்க்க; see *vagai-y-aṟṟavaḷ.*

[வக்கு + அற்றவள்.]

வக்கனஞ்சம் *vakkaṉañjam,* பெ.(n.) பாக்கு; areca-nut.

வக்கா[1] *vakkā,* பெ.(n.) கொக்கினத்து ளொன்று; a kind of a white-stork. *"வக்காவு நாரையுங் கொக்கும் படுக்கவே" (குற்றா. குற. 93.2.).*

த. வக்கா > **Skt.** baka.

[வட்கு → வக்கு → வக்கா = கொக்குவகை (வ.வ.2, பக்.75).]

(ஒ.நோ.) கொள் → கொள்கு → கொட்கு → கொக்கு = வளைந்த கழுத்துள்ள நீர்ப்பறவை. வளைதல் கருத்து வேரிலிருந்து கிளைத்த சொல். வளைந்த கழுத்தினை யுடைய நாரை, கொக்கு போன்ற நீர்ப் பறவை வகை (வே.க.4, பக்.100).

இப்பறவை "ஆர்டியா" இனத்தைச் சார்ந்தது. வைக்கோலால் கூடுகட்டி வாழுந் தன்மைத்து: 3 முதல் 5 வரையிலான எண்ணிக்கையில் முட்டையிடும். உச்சந்தலை, பிடரி, முதுகின் மேற்பகுதி, தோள்பகுதி கறுத்தும், பச்சை வண்ணத்திலும் காணப்படும்.

இப்பறவையின் கழுத்தும், மேற்பகுதியும் பழுப்பு நிறத்தில் காணப்படும்.



வக்கா[2] *vakkā,* பெ.(n.) சிப்பி வகை; a kind of cockle-shell. *"வக்காவின் மணிபூண்டு" (குற்றா. குற.79).*

[வக்கு → வக்கா. வளைந்த சிப்பி.]

வக்கா[3] *vakkā,* பெ.(n.) 1. தேவாங்கு; sloth. 2. ஓர் வகை நாரை; a kind of stork.

[வக்கு → வக்கா.]

வக்காசீதம் *vakkā-šīdam,* பெ.(n.) எல்லாப் பொருள்களையும் கரைக்கும் ஆற்றலுடைய பொது நீர்மம்; universal acid or universal solvent.

வக்காணம் *vakkāṇam,* பெ.(n.) வாய்ப்பாட்டின் வாயிலாகப் பண்ணினை விரிவாக வெளிப்படுத்தும் ஆற்றல்; the free rendering of a pan in such a way as to bring out its form without reference to talam or words. *"மீத்திறம் படாமை வக்காணம் வகுத்து" (சிலப். 3, 148).*

க. வக்காண.

வக்காணி[1]-த்தல் *vakkāṇi-,* 4 செ. குன்றாவி.(v.t.) விளக்கமாயுரைத்தல்; to expound in detail. *"நாலு பாஷ்யத்திலும் ஒரு பாஷ்யம் வக்காணித்தறிவான்" (சோழவமி. 53).*

தெ. வக்கணின்சு.

வக்காணி[2]-த்தல் *vakkāṇi-,* 4 செ.கு.வி. (v.i.) சொற்போர்புரிதல்; to carry on disputations.

[வக்கணித்தல் → வக்காணி-த்தல்.]

வக்காணிக்குமண்டபம் *vakkāṇikku-maṇḍabam,* பெ.(n.) மறைகள் குறித்து சொற்போர் நிகழும் பட்டி மண்டபம்; the hall where disputations on the vedas are held.

[வக்காணிக்கு + மண்டகம் → மண்டபம்]

வக்காப்புல் *vakkā-p-pul,* பெ.(n.) 1. களை வகை (தஞ்.); a kind of weed. 2. புல் வகை; a kind of grass.

[வக்கா + புல்]

வக்காமணி *vakkā-maṇi,* பெ.(n.) சிப்பிமணி வகை; bead of a kind of cockle-shell. *"வக்காமணிக்கு வழியில்லாதவன் வானவூர்தியில் வலம்வர முடியுமா?*

வக்காமணிச்செட்டிகள் *vakkāmaṇi-c-ceṭṭigaḷ,* பெ.(n.) வக்காமணி செய்யும் செட்டி மரபினர் (வின்.); traders dealing in *vakkāmaṇi,* who belongs to *cheṭṭiyār* - caste.

[வக்காமணி + செட்டிகள்]

வக்காளி-த்தல் *vakkāḷi-,* 4 செ.கு.வி. (v.i.) வானம் வெளிவாங்குதல் (தஞ்.வழ.); to clear up, as the sky.

[வெக்காளி-, →வக்காளி-,]

வக்கிணி-த்தல் *vakkiṇi-,* 4 செ.கு.வி.(v.i.) மனங்கோணியிருத்தல்; to be at variance. *வக்கிணித்த வீடு வாழாது (உ.வ.).*

வக்கிரக்கச்சு *vakkira-k-kaccu,* பெ.(n.) 1. கருடன்; brahmini kite. 2. கிளி; parrot. 3. வலியான்; a small black bird.

வக்கிரக்கண் *vakkira-k-kaṇ,* பெ.(n.) மாறுகண் (கொ.வ.); squinting eye.

[வக்கிரம் + கண்]

வக்கிரகண்டகம் *vakkira-kaṇḍagam,* பெ.(n.) வளைந்த முள்ளுடைய இலந்தை (சங்.அக.); jujube-tree, as having curved thorns.

[வட்கு → வக்கு → வக்கரம் → வக்கிரம் + கண்டகம். கண்டகம் = முள். வட்கு = வளைவு]

வக்கிரகண்டம் *vakkira-kaṇḍam,* பெ.(n.) குழந்தை; child.

[வக்கிரம் + கண்டம்.]

வக்கிரகண்டி *vakkira-kaṇḍi,* பெ.(n.) செய்நீர் (திராவகம்) வடிக்க உதவும் நீண்ட கழுத்துள்ள பாத்திரம்; vessel with a long neck, used in distilling; still.

வக்கிரகதி *vakkira-kadi,* பெ.(n.) 1. நேர்மையற்ற செலவு (அக.நி.); irregular course. 2. பிற்போக்குத் தன்மையுள்ள கோள்நிலை; retrograde motion of a planet.

[வக்கிரம் + கதி]

வக்கிரகந்தம் *vakkira-kandam,* பெ.(n.) திருகுகள்ளி; twisting milk hedge - *Euphorbia tirucalli.*

[வக்கிரம் + கந்தம்]

வக்கிரசச்சு *vakkira-šaccu,* பெ.(n.) 1. ஒரு வகைப் பறவை; white headed kite. 2. கிளி; parrot. 3. வலியான்; king crow.

[வக்கிரம் + சஞ்சு → சச்சு]

வக்கிரசஞ்சு *vakkira-šañju,* பெ.(n.) வக்கிர சச்சு பார்க்க; see *vakkira-šaccu.*

வக்கிரசந்திரன் *vakkira-šandiraṉ,* பெ.(n.) இளம்பிறை (யாழ்.அக.); crescent moon.

வக்கிரசாரம் *vakkira-šāram,* பெ.(n.) மாறுபட்ட கோள்நிலை; retrograde motion of a planet.

[வக்கிரம் + சாரம்]

வக்கிரசுரம் *vakkira-šuram,* பெ.(n.) நேர்மையற்றியைந்த இசைச்சுரம்; irregular succession of notes.

[வக்கிரம் + சுரம்]

வக்கிரதந்தம்[1] *vakkira-tandam,* பெ.(n.) 1. வளைந்த பல் (வின்.); curved tooth. 2. கூரிய நச்சுப்பல், எந்திரக் கருவியின் பல்; fang.

[வக்கிரம் + தந்தம்]

வக்கிரதந்தம்[2] *vakkira-tandam,* பெ.(n.) 1. சிங்கப்பல்; eye tooth. 2. தின்பீர்க்கு; ribbed gourd. 3. நாய்ப்பல்; dog tooth.

வக்கிரதந்தன் *vakkira-dandaṉ,* பெ.(n.) இயமன் (நாமதீப.87.); *yamaṉ.*

[வக்கிரம் + தந்தன்]

வக்கிரநஞ்சு *vakkira-nañju,* பெ.(n.) கிளி; parrot.

வக்கிரப்பண் *vakkira-p-paṇ,* பெ.(n.) நேராக ஏறியிறங்காமல் இடையில் மாறி வரும் பண் (இசை.); melody-type in which the ascent of the notes in the scale is interrupted by the descenmting notes and the descent by the ascending notes.

[வக்கிரம் + பண்]

வக்கிரப்பாதன் *vakkira-p-pādaṉ,* பெ.(n.) அறநெறிக்கு மாறுபட்டவன்; unethical person, cruel person. *"இதற்கு வக்கிரப்பாதன் சந்திராதித்ய ருள்ள தனையும் நரகத்தினிற்பானாகவும்" (தெ.கல். தொ.12, பகு.1. கல்.34).*

[வக்கிரம் + **Skt.***பாதன்]*

வக்கிரப்பார்வை *vakkira-p-pārvai,* பெ.(n.) 1. பொறாமையுடன் கூடிய தீய பார்வை; jealousy and evil look. 2. கடுஞ்சினப் பார்வை; fury look. *ஆளையே விழுங்குவது போல் வக்கிரப் பார்வை பார்க்கிறான் (இ.வ.).* 3. பேராசையுடன் கூடிய வஞ்சகப் பார்வை; greedy and hypocritic look. 4. நெறி பிறழ்ந்த ஏக்கப் பார்வை; yearning look. 5. குறுகிய விருப்பு வெறுப்புகளுடன் கூடிய கொடுமைப் பார்வை; parachial and cruel look.

[வள்→வட்கு→வக்கு→வக்கரம்→வக்கிரம் + பார்→பார்வை.]

வக்கிரம் + பார்வை = பிறர்தம் ஆக்கமும், வளர்ச்சியும் கண்டு பொறாமையுடன் நோக்கும் பார்வை. சிறிது கற்றவர், கற்றுத்துறைபோய ஒருவரைக் கண்டு, மனங்குமுறுதலும், வக்கிரப் பார்வையாகும்.

சிறிது செல்வமுடையவர், பெருந் தனக்காரரைக் கண்டு, காழ்ப்புடன் நோக்குதலும் வக்கிரப் பார்வையே.

போட்டியும், பொறாமையும் மலிந்த, இம் மன்பதையில் வக்கிரவெண்ணத்துடன் இயைந்த வக்கிரப் பார்வை நிறைந்துள்ளமை கண்கூடு.

வக்கிரப்புத்தி *vakkira-p-putti,* பெ.(n.) குமுகாய நெறி, ஒழுங்கு, நேர்மை முதலியவற்றிலிருந்து மாறுபட்டு நோக்கு, மனம்; perverted mind. *"வக்கிரப்புத்திக் காரனுக்கு வாழ்வு மட்டந்தான்" (உ.வ.).*

மறுவ. கோணல்புத்தி

[வட்கு→வக்கு→வக்கரம்→வக்கிரம் + புத்தி.]

புல் → புலம் = பொருளொடு பொருந்தும் அறிவு. அறிவுறுப்பு. அறிவுநூல். புலம் → புலன். புலன் = பொருளொடு பொருந்தும் அறிவு. அறிவுநூல் (சு.வி.36). புல் →புன் →புந்தி →புத்தி = அறிவு. நல்வழி, வழிவகை.

பிறர்தம் பொருளை, உடைமையை, நெறி முறையற்ற வழியில், எய்த எண்ணும் மனப்பாங்கே வக்கிரபுத்தி.

வக்கிரம்[1] *vakkiram,* பெ.(n.) குமுகாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுங்கு, முறைமை, ஒழுங்கு முதலியவற்றிலிருந்து திரிந்த நிலை, விகாரம்; perversity.

பள்ளிப்படிப்பால் குழந்தைகள் கெட்டுப் போகிறார்கள் என்பது வக்கிரமான சிந்தனை, வக்கிரமான பாலுறவு ஆசைகள்.

வக்கிரம்[2] *vakkiram,* பெ.(n.) 1. வளைவு; curve, bend, winding. *"வக்கிர சாபமழை பொழிந்து" (பாரத. இரண்டா.12).* 2. வட்டம் (பிங்.); circle. 3. சென்ற வழி மீள்கை (பிங்.); retracing one's steps. 4. நேர்மையற்ற செலவு (அக.நி.); irregular course. 5. கொடுமை (பிங்.); cruelty, malignancy, as of a planet. 6. பொய் (திவா.); lie. 7. வஞ்சனை (வின்.); fraud, dishonesty. 8. கோணல் வழி (இ.வ.); indirectness, crookedness. 9. பொறாமை (பிங்.); envy. 10. கலக்கம் (வின்.); confusion.

[வள்கு → வட்கு → வக்கு → வக்கரம் → வக்கிரம்.]

வக்கிரன் *vakkiraṉ,* பெ.(n.) 1.மாறுபாடுள்ளவன்; perverse, cross-grained person. 2. கொடுமையானவன்; cruel man. 3. காரி (சனி) (இலக். அக.); saturn. 4. செவ்வாய் (பிங்.); mars. 5. திருமாலாற் கொல்லப்பட்ட அசுரன்; an asura slain by *Visṇu*. *"வக்கிரனை வடிவழித்த மாயவனா" (பெருந்தொ.865).*

வக்கிராங்கி *vakkirāṅgi,* பெ.(n.) 1. கடுகு ரோகணி; a purgative drug. 2. கூனி; one having crooked back. 3. நீர் முள்ளி; a throny plant - *Barleria longifolia.*

வக்கிராசம் *vakkirāšam,* பெ.(n.) கற்கடக சிங்கி; galls of pistacia integerrima.

வக்கிராந்தம் *vakkirāndam,* பெ.(n.) மறு துடரி; a plant.

வக்கிரி[1]**-த்தல்** *vakkiri-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கோள்நிலை, மடங்கித் திரும்புதல் (யாழ். அக.); to retrograde, as a planet. 2. வளைந்திடுதல்; to be crooked. 3. மனங் கோணியிருத்தல்; to be at variance.

[வட்கு → வக்கு → வக்கரி → வக்கிரி-. வட்கு = வளைவு.]

வக்கிரி[2]**-த்தல்** *vakkiri-,* 4 செ.கு.வி.(v.i.) வாய்ப்பாட்டின் வாயிலாகப் பண்ணினை விரிவாகப் பயிற்சி செய்தல்; to elaborate tune or melody type. *"இசையோன் வக்கிரித் திட்டத்தை யுணர்ந்து" (சிலப். 3, 41).*

வக்கு[1]**-தல்** *vakku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. வதக்குதல்; singe, to roast. *"கொழுப்பரிந்து... வக்குவன வக்குவித்து" (பெரியபு.கண்ணப்.145).* 2. தீய்த்தல், பொசுக்குதல்; to burn.

[வதக்கு → வக்கு.]

வக்கு[2] *vakku-,* பெ.(n.) 1. வேகுகை, தீய்க்கை; being singed or burnt. 2. வதக்குகை; being roasted. *"நெருப்புச் சிந்தலின்வக்கிலாத் திசைகளுமில்லை" (கம்பரா. இராவணன் வதை. 65).*

[வட்கு → வக்கு. (ஒ.நோ.) மட்கு → மக்கு]

வக்கு³ *vakku*, பெ.(n.) 1. தோல் (யாழ். அக.); skin. 2. ஊமைக்காயம்; contused wound. வக்குண்ட காயம் (இ.வ.). 3. நீர்த் தொட்டி (யாழ். அக.); water-trough.

வக்கு⁴ *vakku*, பெ.(n.) 1. வழி; means, resources. *அவனுக்குக் கடன் கொடுக்க வக்கில்லை* (C.G.). 2. இடம்; place.

[வகு→வக்கு (மொ.க.பக்.39).]

வக்கு⁵ *vakku*, பெ.(n.) 1. மூத்திரக்குண்டிக் காய்; kidney. 2. விதைக் கொட்டை (அண்ட விதை); testicle. *உன்னை வக்கிலே உதைத்துச் சரியான வழி பண்ணுகிறேன் (இ.வ.) வக்கிலே அடிபட்டால் வாழ்வது எளிது இல்லை (உ.வ.).*

[வட்கு→வக்கு]

வக்குத்திரிகரணம் *vakku-t-tiri karaṇam*, பெ.(n.) படுக்கை (வின்.); bed.

வக்குநார் *vakkunār*, பெ.(n.) 1. மரவகை; woolly ordure tree. 2. சணல் நார்; hemp fibre. 3. அணி நார்; sterculia villosa.

[வக்கு + நார்.]

வக்குரி-த்தல் *vakkuri-*, 4 செ.கு.வி.(v.i.) 1. வேதல்; to scorch. 2. எரிதல்; to burn. *"வாயாற் சொல்லில் வாய் வக்குரிக்கும்படி" (ஈடு. 9, 9, 2).*

[வக்கு→வக்குரி.]

வக்குவக்கெனல் *vakku-vakkeṉal*, பெ.(n.) 1. களைப்பு மேலிட ஓடும் ஒலிக் குறிப்பு (வின்.); Onom. expr. of a running to exhaustion. 2. கடுமையாய் இருமற் குறிப்பு (வின்.); coughing hard. 3. கடுமையாய் இடித்தற் குறிப்பு; pounding hard or ramming.

வக்கி *vakki*, பெ.(n.) 1. எருது; bull. 2. காற்று; wind.

வகச்சல் *vagaccal*, பெ.(n.) மாலை வகை; a kind of garland. *"திருமாலை வகச்சல் வளையம்" (கோயிலொ. 59).*

[வகைச்சல்→வகச்சல்.]

வகத்திரம் *vagattiram*, பெ.(n.) வாகை (சங்.அக.); siris.

வகதி *vagadi*, பெ.(n.) 1. எருது (யாழ்.அக.); bull. 2. காற்று; wind. 3. நண்பன்; friend.

வகந்தம் *vagandam*, பெ.(n.) 1. காற்று (யாழ்.அக.); wind. 2. குழந்தை; child.

வகம் *vagam*, பெ.(n.) 1. காற்று (யாழ்.அக.); wind. 2. வழி (யாழ்.அக.); path. 3. குதிரை (இலக்.அக.); horse. 4. ஊர்தி (யாழ்.அக.); vehicle.

வகரக்கிளவி *vagara-k-kiḷavi*, பெ.(n.) மொழிக்கு முதலாகத் தொடங்கும் 'வ'வெனுஞ் சொல்; the word begining with the letter of medial vagaram. *"வகரக்கிளவி நான்மொழி ஈற்றது" (தொல். எழுத்து.81).*

[வ + கரம் – வகரம் + கிள் →கிள→கிளவி. (கரம் = எழுத்துச் சாரியை). (கிளவி = சொல்).]

வகரம் *vagaram*, பெ.(n.) 'வ' என்னும் எழுத்து; the letter, va. *பல்லிதழிற் பிறப்பது வகரம்.*

[வ + கரம் = வகரம். கரம் = எழுத்துச் சாரியை. 'வ' பார்க்க; see va¹. தொல்காப்பியர் எழுத்ததி காரத்திலுள்ள 137–வது நூற்பாவில், "கரம்" என்பது குற்றெழுத்துச் சாரியைகளுள் ஒன்றென்று குறிப்பிட்டுள்ளார்.]

வகலியம் *vagaliyam,* பெ.(n.) மரம்; a kind of tree.

வகன் *vagaṉ,* பெ.(n.) 1. குபேரன் (யாழ்.அக.); *kubēraṉ.* 2. பகன் என்னும் அரக்கன்; *Bagaṉ,* an *aśura* or demon.

வகா *vagā,* பெ.(n.) அகத்தி; a kind of tree-*Sesbania grandiflora.*

வகாதரம் *vagādaram,* பெ.(n.) வெம்புனல்; hot spring.

வகாரசூத்திரம் *vagāra-šūttiram,* பெ.(n.) அகத்தியர், அகப்பேய்சித்தர், உரோமர் செய்த ஓர் தமிழ் பொன்னாக்க நூல்; hermetic philosophy which is known under the name of alchemy, Agastiar, Agapey cittar, and Roma risi, each has written the book separately.

['வ'காரம் + சூத்திரம்]

வகாரத்தலைவன் *vagāra-t-talaivaṉ,* பெ.(n.) பூரம்; impure subchloride of mercury.

வகாரத்திரவியவித்தை *vagāra-t-tiraviya-vittai,* பெ.(n.) திருவைந் தெழுத்து வித்தைகளுள் மூன்று வித்தை; three magical arts of the five relating to five mystic letters.

மறுவ. மூலமந்திரம் (ஓம்).

வகாரம்[1] *vagāram,* பெ.(n.) வகரவெழுத்து; the letter va. *“வகார மிசையும் மகாரம் குறுகும்” (தொல். எழுத்து. 330). "பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும்" (தொல். எழுத்து.98).*

[வ + காரம்.]

காரம் = எழுத்துச் சாரியை. பழந்தமிழ் எழுத்துச் சாரியைகளுள் ஒன்று. கரம், காரம், கான் இம்மூன்றும் குற்றெழுத்துச் சாரியைகளாய் (தொல்.எழுத்து.137) வரும். கரம் குற்றெழுத் திற்கும், காரம் நெட்டெழுத்திற்கும் சொல்லும் வழக்கு அச் சாரியைகளில் அமைந்துள்ள குறில் நெடில் வடிவங்களால் ஏற்பட்டதென்க.

வகாரம்[2] *vagāram,* பெ.(n.) 1. வெண்மையுஞ் செம்மையும் கலந்த பருந்தினம்; a mythical bird. 2. தரங்குறைந்த மாழையினைப் பொன்னாக்கும் முயற்சி; alchemy. 3. செயற்கை வெள்ளியினைப் பொன்னாக்கும் கலை; alchemical process of making artificial silver.

வகாரவித்தை *vagāra-vittai,* பெ.(n.) 1. பொன்னாக்கக் கலை; alchemy. 2. திருவைந்தெழுத்துக் கலை; magical art relating to the five mystic letters.

வகாரவுப்பு *vagāra-v-uppu,* பெ.(n.) கல்லுப்பு (மூ.அ.); rock - salt.

வகாரவேலை *vagāra-vēlai,* பெ.(n.) இரும்பு, செம்பு போலும் தரம் தாழ்ந்த மாழைகளைப் பொன்னாக்கஞ் செய்வது; transmulation of base metals-iron. copper etc, into gold.

வகிடெடு-த்தல் *vagiḍeḍu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. வாகெடுத்தல்; to make partition of hair. 2. வகிரெடு-த்தல் பார்க்க; see *vagireḍu-.*

[வகிடு + எடு-.]

வகிடு *vagiḍu,* பெ.(n.) வகிர்ந்த முன்தலை மயிரின் இடைவெளி யொழுங்கு; parting in woman's hair from the crown to the forehead.

[வகு →வகிர் →வகிரு →வகிடு. (வகிர் = வகிர்ந்த உச்சி, உச்சிக்கோடு) (மு.தா.பக்.265)]

வகிர்¹–தல் *vagir-*, 2 செ.குன்றாவி. (v.t.) 1. துண்டாக அறுத்தல் (சது.); to slice; to cut in slips. 2. பிளத்தல் (சது.); to split. 3. கீறுதல்; to cleave. *"பகிர்ந்தான் சில வகிர்ந்தான் சில" (கம்பரா.அதிகாய.160).* 4. கிழித்துத் திறத்தல்; to tear open. 5. பிரித்தெடுத்தல்; to rip up. *வாழைமரத்தை வகிர்ந்து தண்டினைப் பிரித்தெடுத்தனர் (உ.வ.).*

[வகு→வகிர்–.]

வகிர்² *vagir*, பெ.(n.) 1. பிளவு; tearing. 2. கீறு (வின்.); scratch. 3. பிளந்த துண்டு; slice. *"மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்" (திருவாச.9, 2).* 4. வகிடு; வகிர்ந்த முன்தலை மயிரின் இடைவெளியொழுங்கு; parting in woman's hair from the crown to the forehead. 5. வார்க்கச்சு (வின்.); leather girdle. 6. தோல் வார் (யாழ்.அக.); leather strap. 7. நரம்பு (யாழ்.அக.); tendon. 8. வழி (பிங்); way. 9. சாலை; road.

[வகு→வகிர்–.]

வகிரு–தல் *vagiru-*, 2 செ.கு.வி.(v.i.) 1. அறுத்தல்; cutting. 2. பங்கு செய்தல்; slicing.

[வகிர்→வகிரு–.]

வகிரெடு–த்தல் *vagir-eḍu-*, 4 செ. குன்றாவி.(v.t.) உச்சியினின்றும் நெற்றியின் நடுப்பகுதி வரை மயிரை ஒழுங்குபடப் பிரித்தல்; to part the hair from the crown to the forehead.

[வகு→வகிர் + எடு–.]

வகிரேந்திரியம் *vagirēndiriyam*, பெ.(n.) அறிகருவியாகிய புலன் (யாழ்.அக.); organ of sense.

Skt. இந்திரிய

[பகு→பகிர்→வகிர் + இந்திரியம்.]

வகு¹–த்தல் *vagu-*, 4 செ.குன்றாவி.(v.t.) 1. கூறுபடுத்துதல்; to separate, to divide. 2. பகிர்ந்து கொடுத்தல்; to apportion. *"பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து" (நெடுநல்.78).* 3. இனம்பற்றிப் பிரித்தல்; to classify. 4. தலைப்புவாரியாக ஒதுக்கீடு செய்தல்; to allot under different heads. 5. அமர்த்துதல்; to assign, appoint. *"வகுத்தான் வகுத்த வகையல்லால்" (குறள், 377).* 6. பகுத்துக் கணக்கிடுதல் (கணக்.); to divide. 7. வகைப்படுத்திச் சொல்லுதல்; to narrate categorically. அவன் கதை வகுப்பாய் (பாகவத.1 ஸ்ரீ. நாரதர். 5). 8. முறையோடு செலவிடுதல்; to expend methodically. *"காத்த வகுத்தலும்" (குறள், 385.).* 9. படைத்தல்; to create, as for a special purpose. *"என்னை வகுத்திலையே லிடும்பைக் கிடம் யாது சொல்லே" (தேவா. 643, 2).* 10. பூசுதல்; to daub. *"அஞ்சனம் வகுத்து" (பெருங். உஞ்சைக். 34, 15).*

ஒ.நோ. L., facio, to make, do, E. manufacture.

[பகு→வகு–.]

வகு²–தல் *vagu-*, 2 செ.குன்றாவி.(v.t.) பிளத்தல்; to split. *"மரல் வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு" (புறநா. 264).*

[பகு→வகு–.]

வகு³ *vagu*, வி.(v.) 1. ஏற்படுத்துதல்; frame. 2 உருவாக்குதல்; to set up. 3. அமைத்தல்; to institute. *மக்களுக்காக வகுக்கப்படும் சட்டங்களை மக்கள் மதித்து நடக்க வேண்டும். முன்னோர் வகுத்த முறை இது: அவர் தனக்கென்று ஒரு புது வழியினை வகுத்துக் கொண்டார்.*

[பகு→வகு–.]

வகு⁴ *vagu,* வி.(v.) 1. வகைப்படுத்துதல்; classify, seperate, analyse. *செய்தியைத் தொகுத்தும், வகுத்தும் பார்க்கும்போது சில முடிவுகள் கிடைக்கும்.* 2. கணித்தல்; divide. *ஒரு எண்ணில் மற்றோர் எண் எத்தனை மடங்கு உள்ளது என்று கணக்கிடுதல்.*

[பகு→வகு-.]

வகுஞ்சம் *vaguñjam,* பெ.(n.) இரவு (மலை); night.

வகுண்டகி *vaguṇḍagi,* பெ.(n.) மருதோன்றி; nail dye-*Lawsonia alba.*

வகுண்டம் *vaguṇḍam,* பெ.(n.) கவிழ்ந்து பூக்கும் தும்பை வகை (மலை); a low annual plant flourishing in dry localities.

மறுவ. கவிழ்தும்பை



வகுண்டிகா *vaguṇḍigā,* பெ.(n.) வாலுளுவை அரிசி; seeds of intellect plant - *Celastrus paniculata.*

வகுண்டிகை *vaguṇḍigai,* பெ.(n.) கஞ்சாங் கோரை (மலை.); white basil.

மறுவ. நாய்த்துளசி

வகுண்டிமடம் *vaguṇḍi-maḍam,* பெ.(n.) வாலுளுவை (சங்.அக.); black oil tree.

[வகுந்து→வகுண்டி+மடம்]

வகுணி *vaguṇi,* பெ.(n.) ஒலி (சூடா.); sound.

[வகுளி→வகுணி]

வகுத்தல் *vaguttal,* பெ.(n.) 1. பிரித்தற் கணக்கு (கணக்.); division. 2. வடிவமைப்பு; design.

[வகு'→வகு-த்தல்]

வகுத்தாலம் *vagu-t-tālam,* பெ.(n.) கொடிப் பாசி; moss creeper-*Hydrilla verticillata.*

வகுத்தான் *vaguttāṉ,* பெ.(n.) ஊழ்; fate, as the great dispenser. *"வகுத்தான் வகுத்த வகையல்லால்" (குறள். 377).*

வகுத்திரம் *vaguttiram,* பெ.(n.) தெப்பம் (யாழ்.அக.); raft.

வகுத்திராபிகாரம் *vaguttirāpigāram,* பெ.(n.) மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறி; five sense organs- body, mouth, eye, nose, ear.

வகுத்துக்காட்டல் *vaguttu-k-kāṭṭal,* பெ.(n.) உத்தி முப்பத்திரண்டனுள், முன் தொகுத்துக் கூறியதைப் பின்னர் முறையே விரித்துக் கூறுவது (நன். 14); detailed exposition of what has been briefly summorised earlier stated, one of 32 utti.

[வகுத்து + காட்டல்.]

வகுதரவு *vagu-taravu,* பெ.(n.) வகை தெரிவு (நாஞ்.); discrimination.

வகுதி *vagudi,* பெ.(n.) 1. பிரிவு; division. 2. வகுப்பு; class. *"வகுதியின் வசத்தன" (கம்பரா. இரணியன். 69).*

[பகு→வகு→வகுதி (மு.தா.265)]

ஒருகா. பகுதி→வகுதி என்றுமாம்.

வகுந்து *vagundu,* பெ.(n.) 1. வழி; way. *"வகுந்து செல் வருத்தத்து" (சிலப். 11.167).* 2. சாலை; road.

[வகு¹→வகுந்து.]

வகுந்துமடம் *vagundu-maḍam,* பெ.(n.) வாலுளுவை (மூ.அ.); black oil tree.

[வகுண்டிமடம்→வகுந்துமடம்]

வகுப்பு¹ *vaguppu,* பெ.(n.) 1. பள்ளியில் மாணவருக்கு கற்றுக் கொடுக்கப்படும் பாடவேளை அல்லது நேரம்; period of instruction. 2. தர அடிப்படையிலும், வசதி அடிப்படையிலும் பகுக்கப்பட்டிருக்கும் பிரிவு; grade based on amenities. *'முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றான்'.* 3. பொருளாதார அடிப்படையில் பிரிக்கப்படும் பிரிவு; class based on economic status. *'நடுத்தர வகுப்பைச் சார்ந்தவர்'.*

[வகு→வகுப்பு.]

ஒ.நோ. பகு →பகுப்பு

வகுப்பு² *vaguppu,* பெ.(n.) பள்ளியில் மாணவர்களைப் பிரித்துப் பாடஞ்சொல்லும் பிரிவு; class. *"ஒரே வகுப்பிலாங்குக் கலைபயின்றோ மல்லவா" (பஞ்ச. திருமுக. 432).*

[வகு→வகுப்பு.]

வகுப்பு³ *vaguppu,* பெ.(n.) 1. கூறுபடுத்துகை; dividing. 2. இன வாரியாகப் பிரிக்கை; classifying. *"வகுப்பமைந்த....... அப்பங்கள்" (மதுரைக் 626. உரை.).* 3. பிரிவு; section, division. *இளஞ்சிறார்களின் மனங் கொள்ளுமாறு இறங்கிச் சென்று பாடஞ் சொல்லுபவரே திறமையான ஆசிரியர் (உ.வ.).* 4. பத்தி; paragraph. 5. இனம், குழு; clan, caste. *மக்களிடையே முதற்கண் கிளைத்த தொழில் வகுப்பே (craft class) நாளடைவில் பல்வேறு இனவகுப்புகளைத் தோற்றுவித்தது.* 6. தரம், தன்மை; class, standard, rank. 7. தடுக்கப்பட்ட அறை; compartment, as in a railway carriage. *வகுப்புக்குப் பயணிகள் எண்மர் (உ.வ.).* 8. வகிடெடுத்த முன்தலை மயிரின் இடைவெளி யொழுங்கு; parting in woman's hair from the crown to the forehead. *"சீவி வகுப்பெடுத்துச் சேர்த்துக் குழன்முடித்து" (கூளப்ப.131.).* 9. சந்தம், ஒத்தி தன்மையாய் இசைக்கும் வரி; uniform rhythmic flow of a stanza. *"மங்கல வள்ளை வகுப்பொடு வெண்பாவால்......... இசை (வச்சணந். செய்யு. 132).* 10. அழகு (சது.); beauty. 11. பொலிவு (யாழ்.அக.); splendour.

[வகு→வகுப்பு.]

வகுப்புவாதம் *vaguppu-vādam,* பெ.(n.) இனம், மத அடிப்படையில் மக்களைப் பிரிக்க எண்ணுகின்ற போக்கு; sectarianism, communalism. *'வகுப்பு வாதத்தினால் நாட்டின் ஒற்றுமை சீர்குலைகிறது'.*

*[வகுப்பு + **Skt.** vāda> த. வாதம்.]*

வகுப்புவாரி¹ *vaguppu-vāri,* பெ.(n.adj.) 1. இனப் பாகுபாடு; communal division. *இனப் பாகுபாடு அறநெறிக்கு ஒவ்வாதது.* 2. பிரிவுவாரிப் பகுப்பு; sectional division. 3. கிளைவாரித் தேர்வு; divisional election.

[வகுப்பு + வாரி]

வகுப்புவாரி² *vaguppu-vāri,* வி.எ.(adv.) 1. வகுப்பு வாரியாக; communally. *வகுப்பு வாரியாகத் தலைவரைத் தெரிவு செய்வது*

வகுளம்



வலம்புரி

வல்லாரை

தற்கால நடைமுறையாகிவிட்டது (உ.வ.). 2. பிரிவுவாரியாக; sectionally. 3. கிளை வாரியாக; divisionally.

[வகுப்பு + வாரி]

வகுமை *vagumai,* பெ.(n.) 1. களிப்பு, இன்பம்; joy. 2. மகிழ்ச்சி (அக.நி.); happiness.

வகுலி *vaguli,* பெ.(n.) மீன்; fish. *"பயமிலாது திரியுஞ்சில் வகுலி போன்று" (வரத. பாகவத. நரசிங்க.234) (நாமதீப.269).*

வகுவை *vaguvai,* பெ.(n.) ஓர் கட்டி; an abscess.

வகுள்[1] *vagul,* பெ.(n.) 1. சமுத்திராப்பச்சை; a kind of plant - *Argyreia speciosa.* 2. மகிழ மரம்; a tree - *Mimusops elengi.*

வகுள்[2] *vagul,* பெ.(n.) சமுத்திரப்பாலை (மலை); elephant creeper.

வகுளப்பிகம் *vagulappigam,* பெ.(n.) வஞ்சிக்கொடி (சங்.அக.); a creeper.

வகுளம் *vagulam,* பெ.(n.) மகிழம்பூ; pointed, leaved ape flower. *"பசும்பிடி வகுளம் பல்லிணர்க் காயா" (குறிஞ்சிப். 70.).*

வகுளம்பூ *vagulam-pū,* பெ.(n.) மகிழம்பூ; flower of mimusops elengi. It is very fragrant but not beautiful.

வகுளாபரணம் *vagulāparaṇam,* பெ.(n.) மேளகர்த்தாக்களுளொன்று; a primary *rāga..*

வகுளி[1] *vaguli,* பெ.(n.) ஒலி (யாழ்.அக.); sound.

[வகுணி→வகுளி]

வகுளி[2] *vaguli,* பெ.(n.) 1. எவட்சாரம்; a prepared salt. 2. மலைமாமரம்; mountain mango tree.

வகுளிநாதர் *vaguli-nādar,* பெ.(n.) நவநாத சித்தருள் ஒருவர் (பொருட்.நிக.9.); *śiddhā,* one of *navanāda-cittar.*

வகை[1] *vagai,* பெ.(n.) 1. கூறுபாடு; division, section. *"அவ்வகை யொன்பதும் வினை யெஞ்சு கிளவி" (தொல். சொல். 146).* 2. கிளை, பிரிவு; section, branch. 3. சாதியினம், வகுப்பினம் (G.Tn.D.1.145.); caste. 4. பிரிவு, இனம்; kind, class, sort. *இது எவ்வகையைச் சேர்ந்தது?* 5. முறை; manner, method. *"பாயினார் மாயும் வகையால்" (பு.வெ.5, 2)* . 6. வழி, சூழ்ச்சி; ways, means. *"மாயும் வகையறியேன்" (திவ். திருவாய். 5, 4, 4). "வகைமடிப்பிலே மாட்டிக் கொண்டது" (பழ.).* 7. காரணம் (நாமதீப. 640.); cause. 8. தந்திரம்; artfulness. *"வகையால் மதியாது மண்கொண்டாய்" (திவ்.இயற். நான்முகன். 25.).* 9. திறமை, ஆற்றல், வலிமை; skill, ability. *"வகைகொண்டு வந்தேன்" (கம்பரா.பாசப். 36.).* 10. இயல்பு, தன்மை; nature, quality. *"வளமங்கையர் வகையுரைத்தன்று" (பு.வெ. 9.50, கொளு.).* 11. வணிக முதல் (வின்.); the principal stock in trade. 12. இடம் (பிங்.); place. 13. உறுப்பு; limb. *"வகை நலமுடைய காளை" (சீவக. 695.).* 14. வாழ்க்கைக்குரிய செல்வம், பொருள் முதலியன (வின்.); goods; property; means of livelihood. 15. குறுந்தெரு; short or narrow street. *"மூதா ரிடவகை யெல்லை யெல்லாம்" (சீவக.462).* 16. மனையின் பகுப்பு; apartments of a house. *"வகைமாணல்லில்" (புறநா. 398).* 17. விளக்கம் (இ.வ.); details. 18. கூட்டப்படும் எண்கள் (வின்.); parts of the some total in addition.

தெ., ம. வக; க., து. வகெ.

[வகு¹→வகை]

வகை²–தல் *vagai-*, 2 செ.கு.வி.(v.i.) பிரிவு படுதல்; to be divided, sub-divide.

[வகு¹→வகை–, (மொ.க.பக்.39)]

வகை³–தல் *vagai-*, 3 செ.குன்றாவி.(v.t.) 1. வகைப்படுத்துதல்; to arrange a subject. *"மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள்" (கம்பரா. மந்தரை.60.).* 2. வகிர்தல், பிளத்தல்; to divide; to cut. *"வாளை யீர்ந்தடி வல்லிதின் வகைஇ" (நற்.129.).* 3. ஆராய்தல்; to consider, weigh. *"நகர்நீ தவிர்வாயெனவும் வகையாது தொடர்ந்து (கம்பரா.பிராட்டி.16.).*

[வகு¹→வகை–,]

வகை⁴ *vagai-*, பெ.(n.) 1. பொதுவான கூறுகளைக் கொண்டு ஏற்படுத்திக் கொள்ளும் பிரிவு; classification or compart one utilisation based on theme. or category. *இங்கு அனைத்து வகையான பொருட்களும் கிடைக்கும்.* 2. பிரிவு; variety. *எத்தனையோ வகையான மனிதர்கள்.* 3. முறை; manner. *'ஆறுதல் அளிக்கும் வகையில் பேசினார்'. ஒரு வகையில் நீ சொல்வது சரி.*

[வகு→வகை]

வகை⁵–தல் *vagai-*, பெ.(n.) குறுகலான சந்து; narrow lane.

[வகு¹→வகை–, வகை = குறுந்தெரு (சீவ.நச். 462).]

வகைக்கு *vagaikku*, பெ.(n.) பிரிவு தோறும்; each item. *வகைக்கு பத்து உருபா செலவாயிற்று.*

வகைகணக்குமன்றம் *vagai-kaṇakku-maṉṟam*, பெ.(n.) நஞ்சை யறுதிக் களநடை, மிகுதி விளைச்சல் மகமை, மானியக் கொடை முதலியவற்றின் கணக்குகளை மேற்பார்வை செய்யும் கணக்கு மன்றம்; revenue collecting body in a joint meeting, once in a year, verifying the classified accounts of wet lands, fixed land income groups and donated lands.

[வகை + கணக்கு + மன்றம்]

வகைகாரன் *vagai-kāraṉ*, பெ.(n.) கெட்டிக்காரன்; clever man. *"நீயாடும் வித்தை வெகுமாய வித்தை கண்டாய் வகைகாரா" (நெல்விடு.240.).*

[வகு→வகை + காரன் = வினைமுதல் குறித்த ஆண்பாலீறு]

வகைகூறு–தல் *vagai-kūṟu-*, 5 செ.கு.வி. (v.i.) ஒரு சொல்லிற்குரிய பொருளை பலவாறு வகைப்படுத்திக் கூறுதல்; to convey the meaning of a word, in various classsifications.

[வகை + கூறு–.]

வகைகூறுதல் என்பது, ஒன்றற்குரிய விளக்கத்தைக் கூறுமுகத்தான், அதன் இயல்புகளை வெளிப்படுத்த வேண்டி, அதனுடைய வகைகளைக் கூறுதலாகும். "நகையென்பது சிரிப்பு; அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலு மென மூன்றென்ப" (தொல். பொருள்.251, பேரா.) எனப் பேராசிரியர் கூறும் சிரிப்பு வகை, வகை கூறுதலில் அடங்கும்.

வேட்கை பிறவாப் பருவத்தாரும், பிறக்கின்ற பருவத்தாரும், பிறந்த பருவத்தாரும் என

மூவகையார் (சீவ.2529, நச்.) எனப் பெண்கள் வகைப்படுத்தப்படுதல் குறிப்பிடத் தக்கதாகும்.

வகைகெட்டவன் *vagai-keṭṭavaṉ,* பெ.(n.) 1. ஒழுக்கங் கெட்டவன்; a man lacking discipline. 2. தரமறியாதவன்; the man who does not the know the dignity of value.

[வகு→வகை + கெட்டவன்.]

வகைச்சல் *vagaiccal,* பெ.(n.) மாலை வகை; a kind of garland. *"திருமாலை வகச்சல் வளையம்" (கோயிலொ. 59).*

[வகை →வகைச்சல்]

வகைசமாபந்தி *vagai-šamāpandi,* பெ.(n.) வகைகணக்குமன்றம் பார்க்க; see *vagaikaṇakku -maṉṟam.*

[வகை + U. சமாபந்தி]

வகைசெய்-தல் *vagai-šey-,* 1 செ.கு.வி. (v.i.) 1. ஏற்பாடு செய்தல்; to make arrangements. 2. ஆயத்தப் படுத்துதல்; to prepare. 3. கணக்கிற் பதிவு செய்தல்; to make entries in an account. 4. வழி செய்தல் (இ.வ.); to find a way out. 5. நிலங்களுக்குத் தீர்வை யொழுங்கு செய்தல் (S.I.I. i, 64.); to make a revenue settlement.

[வகை + செய்-.]

வகைசெய்கின்றவர் *vagai-šey giṉṟavar,* பெ.(n.) நிலத்தின் அளவு முதலியவற்றை ஒழுங்குபடுத்தும் அதிகாரி (I.M.P.Cg.720); settlement officer.

[வகை + செய்கின்றவர்]

வகைசொல்(லு)-தல் *vagai-šol(lu)-,* 1 செ.கு.வி.(v.i.) 1. விளக்கஞ் சொல்லுதல்; to give details. 2. கணக்குக் காட்டுதல்; to render account.

வகைத்தார் *vagai-t-tār,* பெ.(n.) வகை மாலை பார்க்க; see *vagai-mālai. "வகைத்தார் மார்பன்" (பெருங். வத்தவ.4, 8).*

[வகை + தார்]

வகைதப்பு *vagai-tappu,* பெ.(n.) 1. நேர் வழியினின்றும் பிறழுகை; swerving from the right path. 2. தவறுகை; mistake. 3. ஆய்ந் தறியாமை; thoughtlessness. *"வகைதப்பா மோசம் வராதோ" (விறலிவிடு. 983.).*

[வகை + தப்பு.]

வகைதிரிவு *vagai-tirivu,* பெ.(n.) வகை தெரிவு (நாஞ்.) பார்க்க; see *vagai-terivu.*

[வகை + திரிவு]

வகைதெரி-தல் *vagai-teri-,* 2 செ.கு.வி. (v.i.) ஒன்றன் தனிச் சிறப்பினைத் தெரிந்து செயல்படுதல்; to do a thing after considering its special features.

[வகை + தெரி-.]

வகைதெரிவு *vagai-terivu,* பெ.(n.) ஒன்றைக் கூர்ந்து நோக்கி, பிற பொருள்களினின்று வேறுபடுத்தும் திறன்; discrimination. *அவன் வகை தெரிவு இல்லாதவன்.*

[வகு→வகை + தெரிவு]

வகைதொகை *vagai-togai,* பெ.(n.) விளக்கம்; details. *மேற்கொண்ட செலவினத்தின் வகைதொகை சொல்லியாதல் வேண்டும்.*

தெ. வகதொக.

[வகை + தொகை]

வகைநிலைக்கொச்சகம் *vagai-nilai-k-koccagam,* பெ.(n.) கொச்சக வகை (சீவக. 2514, உரை.); a kind of koccagam verse.

[வகைநிலை + கொச்சகம்.]

வகைநூற்பா *vagai-nūṟpā,* பெ.(n.) தொகுத்துச் சொல்லப்பட்டதனை வேறு வேறாக வகுத்துரைக்கும் நூற்பா (நன். 20); *nūṟpā,* giving detailed exposition of that which has already been briefly stated.

[வகை + நூற்பா.]

வகைப்படுத்து-தல் *vagai-p-paḍuttu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. பங்கிடுதல் (சங்.அக.); to divide. 2. வகையாகப் பிரித்தல்; to classify and arrange.

[வகு→வகை + படு →படுத்து-.]

வகைப்பாடு *vagai-p-pāḍu,* பெ.(n.) பிரித்தல்; division, classification. *நோயின் அறிகுறிகள், வகைப்பாடு முதலியன அறிந்து பண்டுவமளிக்க வேண்டும்.*

[வகை + பாடு.]

வகைப்பேறு *vagai-p-pēṟu,* பெ.(n.) வரி வகையுளொன்று; a tax.

[வகை + பேறு. பேறு = வரிவகை.]

வகைபண்ணு-தல் *vagai-paṇṇu-,* 5 செ.கு.வி.(v.i.) வகைசெய்-, 1, 2, 3 (யாழ்.அக.) பார்க்க; see *vagai-šey-.*

[வகை + பண்ணு-.]

வகைபுனை-தல் *vagai-puṉai-,* 2 செ.குன்றாவி.(v.t.) வகைசெய்-, 1, 2, 3 (யாழ்.அக.) பார்க்க; see *vagai-šey-.*

[வகை + புனை-.]

வகைபெறக்காட்டல் *vagai-peṟa-k-kāṭṭal,* பெ.(n.) தொகுத்துரைத்ததை விரித்துக் கூறும் உத்திவகை (மாறனலங். பாயி. 25.); a literary device which consists in the detailed treatment of which has already been briefly stated.

வகைபெறு-தல் *vagai-peṟu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. முட்டுப்பாடுகள் விலகுதல், தடைகள் அகலுதல்; to be cleared of difficulties. 2. முறைப்படி அமைதல்; to be in proper order.

[வகை + பெறு-.]

வகைமடிப்பு *vagai-maḍippu,* பெ.(n.) உதவியற்ற நிலை; helpless condition.

[வகை + மடிப்பு.]

வகைமாலை *vagai-mālai,* பெ.(n.) தளிரும் பூவும் விரவத்தொடுத்த மாலை; a kind of garland in which tender leaves and flowers are alternately strung together. *"வகைமாலையினையும் இழையினையுமுடைய மகளிரை" (சீவக. 483, உரை).*

[வகை + மாலை]

வகைமுதலடுக்கணி *vagai-mudalaḍuk kaṇi,* பெ.(n.) பல வகையான முதற்பொருள்களை அடைசினை புணராது செய்யுள் முழுவதும் அடுக்கிக் கூறுவதாகிய அணி (மாறனலங். 179.); a figure of speech in which a whole stanza consists merely of the names of several objects strung together without any adjunct.

வகைமோசம் *vagai-mōšam,* பெ.(n.) 1. இக்கட்டான, சிக்கல் நிலை; complicated. 2. உதவியற்ற நிலை; helpless condition.

3. நம்பிக்கைக் கேடு; betrayal or breach of trust.

[வகை + மோசம்]

வகையரா *vagaiyarā,* பெ.(n.) முதலியன (வின்.); etcetera.

[வகை→வகையரா.]

வகையற்றவள் *vagai-y-aṟṟavaḷ,* பெ.(n.) 1. வாழும் வழி தெரியாதவள்; a woman who does not know, how to live. 2. நெறி பிறழ்ந்தவள்; woman gone astray. 3. கொள்கைப் பிடிப்பின்றி வாழ்பவள்; woman lacking principles in life.

[வகை + அற்றவள்.]

வகையறா *vagaiyaṟā,* பெ.(n.) ஒன்றோடு தொடர்புடைய மற்றொன்று; and the rest, etcetera hails from a family. *'வயலின் தம்பூரா வகையறாக்களுடன் வந்து இறங்கினார்'.*

வகையறி—தல் *vagai-y-aṟi-,* 2 செ.கு.வி. (v.i.) 1. செய்யும் முறை தெரிதல்; to know the way, to follow the proper course of action. 2. கூறுபாடறிதல்; to understand the bearings. *"சொல்லின் வகையறியார்" (குறள், 713.).*

[வகு →வகை + அறி–,]

வகையறு[1]—த்தல் *vagai-y-aṟu-,* 4 செ.குன்றாவி. (v.t.) வழக்குத் தீர்த்தல்; to settle, as a dispute. *'எங்களில் நாங்கள் பொருந்தி வகையறுத்துக் கொண்டோம்' (S.I.I.viii 156).*

[வகை + அறு–.]

வகையறு[2]—த்தல் *vagai-y-aṟu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. தெளிவாகப் பகுத்தறிதல்; to discern. 2. நுணுக்கத்தை வேறுபடுத்தி விளக்குதல்; to distinguish. 3. மறைக் குறியீடுகளைத் தெளிவுறுத்தல்; to decipher. 4. சிக்கலறுத்தல், முடிச்சவிழ்த்தல்; to unravel.

வகையறு[3]—தல் *vagai-y-aṟu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. அடிப்படைப் பொருளை இழத்தல்; to lose the wherewithal. 2. ஆதரவற்றுப் போதல்; to become helpless.

வகையாக *vagai-y-āga,* பெ.அ.(adj.) வசமாக; inescapably, strongly. *'பொய் சொல்லி அவரிடம் வகையாக மாட்டிக் கொண்டான்.*

[வகை + ஆக.]

வகையார் *vagaiyār,* பெ.(n.) இனத்தார், பிரிவினர்; persons of same class or sect.

[வகு →வகை →வகையார்.]

வகையிடு—தல் *vagai-y-iḍu-,* 18 செ. குன்றாவி.(v.t.) வகைப்படுத்து (யாழ்.அக.) பார்க்க; see *vagai-p-paḍuttu.*

[வகு →வகை + இடு–.]

வகையுளி *vagai-y-uḷi-,* பெ.(n.) அசை முதலுறுப்புகளைச் சொல் நோக்காது இசை நோக்கி வண்ணமறுக்கை (யாப். வி. 375.) (தண்டி. 111.); scansion in disregard of speech rhythm.

'வேண்டுதல் 'வேண்டாமை' என்ற குறளில் வகையுளி பயின்று வருதல் குறித்து யாப்பருங்கலக் காரிகையாரும், இளம்பூரணரும் வரையறுத்துள்ளது வருமாறு:

முன்னும் பின்னும் அசை முதலாகிய உறுப்புகள் நிற்புழி அறிந்து குற்றப்படாமல் வண்ணம் அறுத்தல் (யாப்.95).

'பொருளொடு சொல்லை அறுத்தவழித் தளையும், சீரும் சிதையின், அவ்வழி ஓசையை நோக்கி அதன்வழிச் சேர்த்துக' (தொல்.செய்யுள்.10, இளம்.).

வகைவை-த்தல் *vagai-vai-,* 4 செ. குன்றாவி.(v.t.) 1. பொருட்டாகக் கொள்ளுதல்; to pay attention to. 2. கணக்கிலெடுத்துக் கொள்ளுதல்; to take into account. *இவன் நான் சொல்வதை வகை வைக்காமல் மனம் போனபோக்கில் நடக்கிறான் (நாஞ்.).* 3. கணக்கில் வரவு வைத்தல்; to credit to an account.

வகோரகண்டன் *vagōra-kaṇḍaṉ,* பெ.(n.) கொட்டைக் கரந்தை; a kind of plant.

வங்கக்கடம் *vaṅga-k-kaḍam,* பெ.(n.) வெங்காரம்; borax.

வங்கக்கல்[1] *vaṅga-k-kal,* பெ.(n.) சுக்கான் கல் (யாழ்.அக.); kunkur.

[வங்கம் + கல்.]

வங்கக்கல்[2] *vaṅga-k-kal,* பெ.(n.) சிலா வங்கக்கல்; a kind of lead stone.

[வங்கம் + கல்.]

வங்கக்களங்கம் *vaṅga-k-kaḷaṅgam,* பெ.(n.) மருந்துவகை (தஞ்.சர.iii, 79.); a medicinal preparation.

வங்கக்களிம்பு *vaṅga-k-kaḷimbu,* பெ.(n.) சிவப்புக் களிமம்; an ointment prepared with red oxide of lead.

[வங்கம் + களிம்பு.]

வங்கக்காந்தசத்து *vaṅga-k-kānda-šattu,* பெ.(n.) 1. ஒரு வகை மூலி; a kind of herbal. 2. சிறியாணங்கை, நத்தைச் சூரி, அழுகண்ணி, தொழுகண்ணி, கள்ளி; herbs containing lead and load stone.

வங்கக்குடு *vaṅga-k-kuḍu,* பெ.(n.) குடவம் (பித்தளை); brass.

வங்கக்குவடு *vaṅga-k-kuvaḍu,* பெ.(n.) வங்கமலை; mountain containing lead ore.

[வங்கம் + குவடு.]

வங்கக்கூட்டு *vaṅga-k-kūṭṭu,* பெ.(n.) வங்கம் சேர்ந்த மருந்து; medicine containing lead.

[வங்கம் + கூட்டு.]

வங்கக்கோளாறு *vaṅga-k-kōḷāṟu,* பெ.(n.) ஈயத்தின் சிதைந்த படிவு; saturnine cachexia.

வங்கச்சுண்ணம் *vaṅga-c-cuṇṇam,* பெ.(n.) வங்கத்தாற் செய்த மருந்துப் பொடி வகை; a kind of medicinal powder, prepared from purified lead.

[வங்கம் + சுண்ணம்.]

வங்கச்செடி *vaṅga-c-ceḍi,* பெ.(n.) இண்டஞ்செடி; a throny shurb - *Caesalpinia sepiaria.*

[வங்கம் + செடி.]

வங்கசத்துமூலிகை *vaṅga-šattu-mūligai,* பெ.(n.) சிவகரந்தை, வெள்ளறுகு, ஆடாதோடை, மணித்தக்காளி, துத்தி, பொன்னாங்கண்ணி, அறுகம்வேர், இலந்தை, செங்கத்தாழை அடங்கிய மூலிகைகள்; herbs containing lead.

வங்கசம் *vaṅgaśam,* பெ.(n.) ஓர்வகை வெள்ளி; a kind of silver.

[வங்கம் → வங்கசம்.]

வங்கசிந்தூரம் *vaṅga-šindūram,* பெ.(n.) ஈயத்தின் சிந்தூரம் (பதார்த்த.1208); red lead.

[வங்கம் + சிந்தூரம்.]

வங்கசிலை *vaṅga-šilai,* பெ.(n.) தமிழ்ச் சித்தர் கூறும் 120 வகை இயற்கை மருந்துகளுள் ஒன்று; one of the 120 kinds of natural bodies as classified in Tamil Siddar's science.

வங்கசெஞ்சாந்து *vaṅga-šeñcāndu,* பெ.(n.) செவ்வீயம்; red lead.

வங்கசேனகம் *vaṅga-šēṉagam,* பெ.(n.) வெள்ளகத்தி (மூ.அ.); west Indian pea - tree.

வங்கடபாரை *vaṅgaḍa-pārai,* பெ.(n.) மீன்வகையுளொன்று; a kind of fish-caranx crumenoph thalmus.



வங்கடம் *vaṅgaḍam,* பெ.(n.) இனம், குடும்பம்; race, family.

வங்கடை *vaṅgaḍai,* பெ.(n.) மீன்வகை; a kind of fish.

வங்கணக்காரன் *vaṅgaṇa-k-kāraṉ,* பெ.(n.) 1. உயிர் நண்பன் (வின்.); intimate friend. 2. கள்ளக் காதலன்; paramour.

[வங்கணம் + காரன்]

வங்கணக்காரி *vaṅgaṇa-k-kāri,* பெ.(n.) வங்கணத்தி பார்க்க; see *vaṅgaṇatti.*

[வங்கணக்காரன் (ஆ.பா.) →வங்கணக்காரி (பெ.பா.)]

வங்கணத்தி *vaṅgaṇatti,* பெ.(n.) 1. உற்ற தோழி; intimate woman friend. 2. காமக் கிழத்தி, கள்ளக்காதலி (வின்.); concubine.

[வங்கணம் + அத்தி (அத்தி = ஒரு பெண்பாலீறு)]

வங்கணப்பேச்சு *vaṅgaṇa-p-pēccu,* பெ.(n.) பொய்க்குற்றச்சாட்டு; slander.

[வங்கணம் + பேச்சு]

வங்கணம்¹ *vaṅgaṇam,* பெ.(n.) 1. நட்பு; friendship. *"நேசமிலா வங்கணத்தி னன்று வலிய பகை" (தனிப்பா. i, 104, 35).* 2. காதல்; love. 3. கள்ளக் காதல்; amour. *"என் வங்கணச் சிங்கியைக் காணேனே" (குற்றா.குற.136).*

வங்கணம்² *vaṅgaṇam,* பெ.(n.) 1. கத்தரிக்காய் வகை (அரு.நி.); brinjal variety. 2. செங்கத்தரி (சங்.அக.); orbicular leaved caper. 3. சேம்பு (சங்.அக.); Indian kales.

வங்கணம்³ *vaṅgaṇam,* பெ.(n.) தகுதி; propriety. *"எனை ஆதரித்தல் வங்கணமே" (சர்வசமய. பக். 67).*

வங்கணன் *vaṅgaṇaṉ,* பெ.(n.) வங்கணக்காரன் (யாழ்.அக.) பார்க்க; see *vaṅgaṇa-k-kāraṉ.*

[வங்கணம்→வங்கணன்.]

வங்கத்துக்குவா – தல் (வங்கத்துக்கு வருதல்) *vaṅgattukku-vā-,* 18 செ.கு.வி. (v.i.) 1. தெரிவு செய்தல்; to be put to the test. 2. பயனுள்ளதாதல்; to be effective.

வங்கதாளேசுவரபற்பம் *vaṅga-tāḷē šuvara -paṟpam,* பெ.(n.) இதளியம், தாம்பிரத்தூள், அரிதாரம், கந்தகம், சம எடை கொண்டு அரைத்துப் புடமிட்ட பற்பம். இதனால் கிரந்தி சூலை நீங்கும்; a calcined white powder prepared from mercury, copper, orpiment, or sulphur, it is prescribed for ulcers, rheumatic pains and gunmam.

வங்கதூசம் *vaṅga-tūšam,* பெ.(n.) பவளம்; coral.

வங்கதோசம் *vaṅga-tōšam,* பெ.(n.) ஈயத்தினா லுடம்பிலேற்பட்ட நஞ்சு; lead poison-*Piumbism.*

வங்கநடம் *vaṅga-naḍam,* பெ.(n.) வெண் காரம் (மூ.அ.); borax.

வங்கநாடு *vaṅga-nāḍu,* பெ.(n.) வங்கம்[1], 5 பார்க்க; see *vaṅgam.*

[வங்கம் + நாடு.]

வங்கநாளம் *vaṅga-nāḷam,* பெ.(n.) ஈயத்தால் செய்த குழாய், இது வளி முறையில் அடுப்பூதுவதற்காக பயன்படும்; a lead tube to blow the over.

வங்கநீர் *vaṅga-nīr,* பெ.(n.) கடல்; sea. *"வங்கநீர் வரைப்பெலாம்" (சூளா.இரத. 104).*

வங்கநீறு *vaṅga-nīṟu,* பெ.(n.) ஈயமணல் (மூ.அ.); lead ore.

வங்கப்பற்று *vaṅga-p-paṟṟu,* பெ.(n.) இருவேறு மாழைகளை ஒன்றிணைக்க உதவும் பற்று; solder for metals.

[வங்கம் + பற்று. பற்று = இணைக்கும் மாழைத்தூள்.]

வங்கப்பாண்டி *vaṅga-p-pāṇḍi,* பெ.(n.) பள்ளியோடம் போன்ற வண்டி; a boat - like cart. *"வங்கப் பாண்டியிற் றிண்டே ரூரவும்" (பரிபா. 20, 16).*

[வங்கம் + பாண்டி.]

வங்கப்பாத்திரம் *vaṅga-p-pāttiram,* பெ. (n.) அடுகலங்களிலொன்று; domestic vessels prepared with white lead.

[வங்கம் + பாத்திரம்.]

வங்கப்பாவை *vaṅga-p-pāvai,* பெ.(n.) மருந்துச்சரக்கு வகை; a drug. *"வங்கப் பாவையோ டின்ன மருத்துறுப் பெல்லாம்" (பெருங். மகத. 17, 150).*

வங்கபற்பம் *vaṅga-paṟpam,* பெ.(n.) ஈயத்தின் தூள் (பற்பம்) (யாழ்.அக.); carbonate of lead.

[வங்கம் + பற்பம்.]

வங்க்பேதி *vaṅgapēdi,* பெ.(n.) சூத நஞ்சு; a kind of arsenic prepared from mercury or mercurial compound.

[வங்கம் + பேதி.]

வங்கம்[1] *vaṅgam,* பெ.(n.) 1. தூய்மைப் படுத்திய ஈயம் (நாமதீப. 378.); purified lead. *"வங்கம் இறுகினால் மகாராசனாகலாம்" (பழ.). "வங்கத்திற் செம்பொனுந் தெரிப்பாம்" (கந்தபு.மார்க்.123).* 2. தகரம்; tin. 3. துத்தநாகத் தூள் (யாழ்.அக.); zinc. 4. வெள்ளி (பிங்.); silver. *"வங்கம்குத்தத் தங்கம் தேயுமா?" (பழ.).* 5. ஐம்பத்தாறு நாடுகளுள் ஒன்று (இரகு. திக்குவி. 56); Bengal, one of 56 tēšam. 6. பதினெண் மொழியுளொன்றான வங்கநாட்டு மொழி; the Bengali language, one of *padinen-moli.* 7. மரவகை; Indian calosanthes. 8. சிறு மரவகை; tender wild jack. 9. கத்தரி (பிங்.); brinjal. 10. வழுதுணங்காய்; a kind of brinjal.

வங்கம்[2] *vaṅgam,* பெ.(n.) அலை; wave.

வங்கம்[3] *vaṅgam,* பெ.(n.) 1. ஆற்று வளைவு (யாழ்.அக.); bend of a river. 2. வளைவு; curve. 3. கருத்து (அக.நி.); idea.

வங்கம்[4] *vaṅgam,* பெ.(n.) 1. மரக்கலம்; ship, as moving swiftly. *"வாலிதை யெடுத்த வளிதரு வங்கம்" (மதுரைக்.536).* 2. வண்டி வகையு ளொன்று; a kind of vehicle. *"திண்டேர்ப் புரவி வங்கம் பூட்டவும்" (பரிபா. 20, 16).*

[வங்கு →வங்கம்.]

வளைந்த அல்லது வட்ட வடிவான மரக்கலம் (வே.க.4 : 99).

வங்கம்[5] *vaṅgam,* பெ.(n.) வறுமை; poverty.

[வெங்கம் →வங்கம்]

வங்கம்நீற்றி *vaṅgam-nīṟṟi,* பெ.(n.) மலை முருங்கை; mountain moringa tree.

வங்கம்விளையுங்கல் *vaṅgam-viḷaiyuṅ-kal,* பெ.(n.) வெள்ளைச் சுக்கான் கல் (யாழ். அக.); white kunker.

[வங்கம் + விளை + உம் + கல்]

வங்கமணல்[1] *vaṅga-maṇal,* பெ.(n.) ஒரு வகைச் சரக்கு; one of the 120 kinds of natural substances.

[வங்கம் + மணல்]

வங்கமணல்[2] *vaṅga maṇal,* பெ.(n.) வங்கநீறு (யாழ்.அக.) பார்க்க; see *vaṅga -nīṟu.*

[வங்கம் + மணல்]

வங்கமலை *vaṅga-malai,* பெ.(n.) ஈயமலை; mountain containing lead ore.

வங்கமாரணம் *vaṅgamāraṇam,* பெ.(n.) வங்க பற்பம்; calcined lead.

வங்கமுதலவ்வை *vaṅgamudalavvai,* பெ.(n.) இலவங்கம்; cloves.

வங்கமூலி *vaṅga-mūli,* பெ.(n.) பிரமியிலை; lead of brahmi.

வங்கர்[1] *vaṅgar,* பெ.(n.) வங்கதேயத்தார்; people of Bengal. *"வங்கர் மாளவர்" (கம்பரா. உலாவி. 47).*

வங்கர்[2] *vaṅgar,* பெ.(n.) நெய்தனிலமாக்கள்; mariners.

[வங்கம் →வங்கர்.]

வங்கராங்கீரை *vaṅgarāṅ-kīrai,* பெ.(n.) கடற்கரையோர நெய்தல் நில நிலைத்திணை; a herb seen in coastal region.

[வங்கர் + ஆம் + கீரை]

வங்கராசன் vaṅga-rāšaṉ, பெ.(n.) ஈயம்; lead.

[வங்கம் + ராசன்]

வங்கரை vaṅgarai, பெ.(n.) வளைகை; கோணுகை; bent, crook. *"வங்கரை கொங்கரையாய் மாட்டிக் கொண்டான்" (பழ.).*

[வங்கு →வங்கரை. வங்கு = வளைவு.]

வங்கல் vaṅgal, பெ.(n.) மூலிகை வகையு ளொன்று; amoora rohita.

வங்கவணம் vaṅgavaṇam, பெ.(n.) உப்பு; salt.

வங்கவலி vaṅgavali, பெ.(n.) உப்பு வகையு ளொன்று; colico pictonum.

வங்கவிடம் vaṅga-viḍam, பெ.(n.) 1. ஈய நஞ்சூட்டு; plumbism. 2. வங்கதோசம் பார்க்க; see *vaṅga-tōšam.*

[வங்கம் + விடம்]

வங்கவுப்பு vaṅga-v-uppu, பெ.(n.) உப்பு வகை (இங்.வை.); sugar of lead.

[வங்கம்' + உப்பு]

வங்கவுப்புசெயநீர் vaṅga-v-uppu-šeya nīr, பெ.(n.) ஓர் வகை ஈயம் சேர்ந்த செய்நீர்; a pungent liquid extracted from lead salts.

வங்கன்[1] vaṅgaṉ, பெ.(n.) இழிசினன் (சூடா.); outcaste.

மறுவ. கீழ் (கள்)

வங்கன்[2] vaṅgaṉ, பெ.(n.) வறுமையாளன் (கொ.வ.); poor-man *"வங்கம்பயலுக்கு வாய்ப் பேச்சில் குறைவில்லை" (உ.வ.).*

[வெங்கம்→வெங்கன்→வங்கன்.]

வங்கனம் vaṅgaṉam, பெ.(n.) சேம்பு (மலை.); Indian kales.

வங்கனி vaṅgaṉi, பெ.(n.) செங்கத்தரி; red brinjal.

வங்கா[1] vaṅgā, பெ.(n.) பறவை வகை; a kind of bird. *"வங்காக் கடந்த செங்காற் பேடை" (குறுந். 151) (தொல்.எழுத்து.225, உரை).*

[வங்கு→வங்கா (வே.க.4 : 99).]

வளைந்த கழுத்துள்ள நாரை.

ஒருகா. வக்கா →வங்கா = பறவை வகை. வங்கு, வங்கம் = வளைவு. வளைவுப் பொருண்மை குறித்த சொல்.

வங்கா[2] vaṅgā, பெ.(n.) ஊதுகொம்பு வகை, நீண்டு வளைந்த ஊது குழல் (வின்.); a long winding trumpet, ram's horn.

[வங்கு→வங்கா (வே.க.4 : 99).]

வங்கு = வளைவு. வளைத்து நீண்ட வடிவில் அமைக்கப்பட்ட ஊதுகுழல்.

வங்காரக்கண்டி vaṅgāra-k-kaṇḍi, பெ.(n.) சேலை வகையு ளொன்று; a kind of saree.

[வங்காரம்+கண்டி]

வங்காரம் vaṅgāram, பெ.(n.) 1. பொன்; gold. *"வங்கார மார்பிலணி தார்" (திருப்பு. 748).* 2. மாழைக் கட்டி (பிங்.); ingot, mass of metallic ore. 3. செப்பம் (யாழ்.அக.); good condition.

தெ; பங்காரமு; க. பங்கார.

வங்காரவச்சி vaṅgāra-vacci, பெ.(n.) மேற்கிந்தியாவிலுள்ள ஏழை மக்கள் பயன்படுத்தும் கீரை வகை; west Indian samphire purslane, a herb eaten by poor

people. *"தாயுந் தகப்பனுந் தள்ளிவிட்ட காலத்தே வாவென்றழைத்த வங்காரவச்சி" (வின்.).*

வங்காரவள்ளைக்கீரை *vaṅgāra-vaḷḷai-k-kīrai,* பெ.(n.) ஓர் வகைக் கீரை, இது மழைக் காலத்தில் முளைக்கும்; a kind of vegetable greens used in culinary.

வங்காரவாசி *vaṅgāra-vāśi,* பெ.(n.) வங்காரவச்சி (சங்.அக.) பார்க்க; see *vaṅgāra-vacci.*

வங்காளக்கிழங்கன் *vaṅgāḷa-k-kiḻaṅgaṉ,* பெ.(n.) மருந்திற்குப் பயன்படும் கிழங்கு வகைகளுளொன்று; bengal whiting scialnoides pama.

வங்காளகுடாக்கடல் *vaṅgāḷa-k-kuḍā-k-kaḍal,* பெ.(n.) நாவலந்தேயம் (இந்தியா) உள்ளிட்ட நிலஞ்சூழ்ந்த கடல்; the bay of *Beṅgāl.*

[வங்காளம் + குடாக்கடல்.]

நாவலந் தேயத்தை (இந்தியாவை) மூன்று பக்கஞ் சூழவமைந்த கடல் (குடாக்கடல் = மூன்று பக்கம் நிலஞ்சூழ்ந்த கடல், குடைவுள்ள கடல்).

வங்காளச்சர்க்கரை *vaṅgaḷa-c-carkkarai,* பெ.(n.) சருக்கரை வகையுளொன்று; a kind of sugar; Bengal sugar.

வங்காளச்சீனி *vaṅgāḷa-c-cīṉi,* பெ.(n.) வங்காளச்சர்க்கரை பார்க்க; see *vaṅgāḷa-c-carkkarai.*

வங்காளத்தாறு *vaṅgāḷattāṟu,* பெ.(n.) இலிங்கம், பச்சைக் கருப்பூரம், குங்குமப்பூ, படிகாரம், சாரம், சுக்கு முதலியன. இவைகள் ஆறும் வங்காளத்திலிருந்து வருகின்றன; the six drugs from *Beṅgāl.*

வங்காளத்திப்பிலி *vaṅgāḷa-t-tippili,* பெ.(n.) திப்பிலி வகை (மூ.அ.); a species of long pepper, as from *Beṅgāḷ.*

வங்காளத்தேவி *vaṅgāḷa-t-tēvi,* பெ.(n.) 1. பரதவர் வழிபடும் கடவுள்; god worshipped by fisherman tribe. 2. திருமகள்; *Tirumagaḷ. "தேவி தேவண்ணா ஏலேலோ வங்காளத் தேவி ஏலேலோ மலையாளத்தில் ஏலேலோ மலையாள தேவி ஏலேலோ" (நாட்டார் பாடல்).*

வங்காளப்பச்சை *vaṅgāḷa-p-paccai,* பெ.(n.) 1. செம்பிலிருந்து உண்டாக்கப்படும் ஒருவகை வண்ணம்; verdigris - *Sub acetis cupris.* 2. பூடுவகை (யாழ்.அக.); a herb.

வங்காளம்[1] *vaṅgāḷam,* பெ.(n.) வங்கம்[1] 5, 6 பார்க்க; see *vaṅgam. "தங்காத சாரல் வங்காள தேசமும்" (S.I.I. i, 98).*

[வங்கம்→வங்காளம்.]

வங்காளம்[2] *vaṅgāḷam,* பெ.(n.) பண்வகை (சது.); (mus.) a melody-type.

வங்காளமஞ்சள் *vaṅgāḷa-mañjaḷ,* பெ.(n.) மகளிர் பூசிக்குளிக்கும் மஞ்சள் வகை; a kind of turmeric, used by women when bathing.

[வங்காளம் + மஞ்சள்]

வங்காளவாத்து *vaṅgāḷa-vāttu,* பெ.(n.) வாத்து வகை (சென்.வழ.); a kind of goose.

வங்காளவேலம் *vaṅgāḷa-vēlam,* பெ.(n.) ஓர் வேல மரம்; bengal landanam-*Morung elachi.*

வங்காளி *vaṅgāḷi,* பெ.(n.) 1. வங்காள நாட்டான்; *Beṅgāḷi.* 2. வங்கம்[1], 6 பார்க்க; see *vaṅgam.* 3. வாழை; plantation.

வங்கான் *vaṅgāṉ,* பெ.(n.) சிறு அணிகலன்; sundry jewellery. *"வங்கானுந் தொங்கானுமாட்டிக் கிளுகிளுத்து" (ஆதி யூரவதானி. 64).*

வங்கி[1] *vaṅgi,* பெ.(n.) வேலிப்பருத்தி கொடி வகை; a variety of cotton creeper.

வங்கி[2] *vaṅgi,* பெ.(n.) கரைப்பேட்டு வகையுள் ஒன்று, கோடு போன்று வளைந்து செல்லும் முறையில் கரையில் விளிம்படுத்துச் செய்யப்படும் வேலைப்பாடு; decorative works on the margin of a cloth, a kind of margin pattern.

வங்கி[3] *vaṅgi,* பெ.(n.) 1. தோளணியுளொன்று (வின்.); a kind of armlet, as having a peculiar curve. 2. வளைந்த இரும்புக்கருவி; a kind of iron hook or curved instrument. 3. வளைந்த கத்தி (பிச்சுவா); நெளிவாள்; a kind of curved sword.

தெ., க., வங்கி (ink.); து. வக்கி (gg.).

[வாங்கு → வங்கு → வங்கி. வங்கி = நெளி வளையல் (வே.க.4 : 99).]

நெளிவளையல், நெளி மோதிரம் முதலானவை வளைதற் கருத்தினைக் குறிக்கும் அணிகலன்க ளாகும்.

வங்கி[4] *vaṅgi,* பெ.(n.) சித்திரைத் திங்களில் விதைக்கப் பெற்று, ஐந்து திங்களுக்குள் விளையும் மட்டமான சம்பா நெல் வகை; bengal paddy, an inferior kind of *cambā,* sown in cittirai and maturing in five months.

வங்கி[5] *vaṅgi,* பெ.(n.) கொடுவேலி (சங். அக.); Ceylon lead-wort.

வங்கிக்காரை *vaṅgi-k-kārai,* பெ.(n.) கழுத்தணிவகை (இ.வ.); a necklet.

[வங்கி +காரை]



வங்கிசன் *vaṅgišaṉ,* பெ.(n.) 1. வழித் தோன்றல்; scion. 2. உறவினன் (வின்.); kinsman.

வங்கிநெளிவு *vaṅgi-neḷivu,* பெ.(n.) விரலணி வகை (இ.வ.); a kind of ring, as having a peculiar curve.

[வங்கு → வங்கி + நெளிவு = நெளிவாக வளைந்தமைந்த விரலணிவகை.]

வங்கியம்[1] *vaṅgiyam,* பெ.(n.) 1. மூங்கில் (மலை); bamboo. 2. இசைக்குழல் (சூடா.); reed pipe. *"வங்கியம் பலதேன் விளம்பின" (கம்பரா. கைகே.60).*

[வங்கு →வங்கி →வங்கியம்.]

வங்கு = வளைவு. பெருவங்கியம் = வளைவாக அமைந்த இசைக் குழல்.

வங்கியம்[2] *vaṅgiyam,* பெ.(n.) இனம், பிரிவு, குடும்பம், கொடிவழி; race, family, lineage.

வங்கிலம் *vaṅgilam,* பெ.(n.) முள்; thorn.

[வங்கி →வங்கியம்.]

வங்கிவளையல் *vaṅgi-vaḷaiyal,* பெ.(n.) வளையல் வகை (வின்.); a kind of bangle.

[வங்கு→வங்கி + வளையல் = நெளிவளையல் (மு.தா.பக்.70).]



வங்கினி *vaṅgiṉi,* பெ.(n.) 1. மை; black paste. 2. பொட்டு; mark made in the forehead with black paste. 3. கருமை; black. *"நாணவே வங்கினியை வழித்தெடுத்து, நாலுதினம் பூமிக்குள் வைத்திடாயே" (கருவூ-குருநூல்).*

வங்கீபுரத்தாய்ச்சி *vaṅgīpura-t-tāycci,* பெ.(n.) நூற்றெட்டுத் திருப்பதிகக்கோவை, நூற்றெட்டுத் திருப்பதித் தோத்திரம் ஆகிய நூல்களை இயற்றிய புலவர்; author of *nūṟṟeṭṭu-t-tiruppadiga-k-kōvai, nūṟṟeṭṭu-t-tiruppadi-t-tōttiram.*

வங்கு[1] *vaṅgu,* பெ.(n.) காய்ந்து வறண்ட செதில்களைப் போல, மேல் தோலை மாறச்செய்து வெடிப்பு ஏற்படுத்தும் தோல் நோய்; a kind of skin disease marked by dryness of the skin and cuts or cracks.

க. பங்கு (banku)

மறுவ. நாய்ச்சொறி.

[மங்கு→வங்கு = மேனியில் மங்கல் நிறமாகப் படரும் ஒருவகைப் படை நோய் (வே.க. 4 : 59).]

குளித்தபின் துவர்த்தாத மேனியிற் காணும் படை போன்ற தோற்றம்.

வங்கு[2] *vaṅgu,* பெ.(n.) மரக்கலத்தறி; a kind of wooden loom.

வங்கு[3] *vaṅgu,* பெ.(n.) 1. கல் முதலியவற்றின் உட்டுளை; orifice, hole, hollow, as in a stone. *"தான் கிடக்கிற வங்குகளினுடைய வாசலிலே முத்துக்களை யீன்றன" (திவ். பெரியதி. 3,4, 2, வ்யா.).* 2. எலி, பாம்பு முதலியவற்றின் வளை (சது.); rat-hole, snake-hole. 3. மலைக் குகை; உட்டுளை (பிங்.); cave, cavern, hollow. *"வங்குகளிலே நிறைத்துள்ள தேனிலே தோய்த்து" (திவ். பெரியதி. 1, 2, 5, வ்யா.).* 4. மரப்பொந்து; hollow in a tree. *"வங்கினைப் பற்றிப்போகா வல்லுடும் பென்ன" (பெரியபு. கண்ணப்ப. 116.).* 5. தோணியின் விலாச் சட்டங்களுக்கு நடுவிலுள்ள இடம் (வின்.); space between the beams or ribs of a boat. 6. பாய்மரக் குழி (வின்.); socket for a mast. 7. கப்பலின் விலாச்சட்டங்கள் (பரவ.); wooden ribs of a ship. 8. தோல் நோய் வகையுளொன்று (இ.வ.); spreading spots on the skin, a disease. 9. நாய்ச்சொறி (இ.வ.); blotches on a mangy dog. 10. கழுதைப்புலி (சங். அக.); hyena, as spotted. 11. தாழம்பூவின் மகரந்தம் (இ.வ.); pollen of the screwpine.

க., ம. பங்கு, வங்கு.

[வணங்கு→வங்கு (வே.க. 4 : 99).]

வல்[1] என்னும் வளைதற் கருத்து வேரடியிலிருந்து கிளைத்த சொல்; உள் வளைந்து தோன்றும் படகு, தோணி, கப்பல் போன்றவற்றின் விலாச் சட்டங்கள்.

வங்குக்கட்டை *vaṅgu-k-kaṭṭai,* பெ.(n.) வங்குக்கால் பார்க்க; see *vaṅgu-k-kāl.*

[வங்கு + கட்டை]

வங்குக்கால் *vaṅgu-k-kāl,* பெ.(n.) கப்பலின் விலாப்பலகைகளைத் தைக்கும் அடிப்படைச் சட்டம் (வின்.); the keel of a vessel, the timber to which the side - planks are nailed.

[வங்கு+ கால்]

வங்குசம் *vaṅgušam,* பெ.(n.) கூகை நீறு (சங்.அக.); flour of arrow-root.

ஒருகா. கூகைக்கிழங்குசாறு.

வங்குசகோசனம் *vaṅguša-kōšaṉam,* பெ.(n.) குங்குமப்பூ; European saffron.

வங்குபடர்தல் *vaṅgu-paḍardal,* பெ.(n.) வங்கு[1] பார்க்க; see *vaṅgu.*

வங்குமாசம் *vaṅgumāšam,* பெ.(n.) புளிங்காடி; vinegar.

வங்குமாறல் *vaṅgu-māṟal,* பெ.(n.) வங்கு; resolving of the black spots.

வங்குல் *vaṅgul,* பெ.(n.) மரவகை (L.); spleen tree.

[வங்கு → வங்குல் = வளைந்து வளர்ந்த மரம்.]

வங்குவாசல் *vaṅgu-vāšal,* பெ.(n.) கருப்பையிலிருந்து பெண்குறிக்குள்ளடங்கி நீண்டு வந்திருக்கும் பூ; carvix.

வங்குளம்[1] *vaṅguḷam,* பெ.(n.) 1. காற்று; wind. 2. ஊதை; windy.

வங்குளம்[2] *vaṅguḷam,* பெ.(n.) வங்கூழ்,1 (சங்.அக.) பார்க்க; see *vaṅgūḷ.*

[வங்கூழ் → வங்குள் → வங்குளம்]

வங்கூழ் *vaṅguḷ,* பெ.(n.) 1. காற்று; wind. *"வங்கூ ழாட்டிய வங்குழை வேங்கை "(அகநா. 328).* 2. நோய் செய்யும் வளி (வாதக்.) முதலாய குறைபாடு (தைலவ.); *vādam,* one of the three humours of the body.

வங்கேசுவரம் *vaṅgēšuvaram,* பெ.(n.) 1. வங்க பற்பம், சங்கு பற்பம், ரசபற்பம், தாளகபற்பம், இவைகளைக் கலுவத்திலிட்டு அரைத்து, புளித்த காடியில் உலர்த்திய ஒரு வகை மருந்து; a kind of medicine. 2. இலங்கேசுவரம் (ஈழத்தீசுவரர்); a Šiva shrine in *Srilaṅga.*

வங்கேசுவரரசம் *vaṅgēšuvara-rašam,* பெ.(n.) வங்கேசுவரம் பார்க்க; see *vaṅgēšuvaram.*

வங்கை[1] *vaṅgai,* பெ.(n.) குறும்பு; mischief. *'சங்கையில்லாமலே வங்கைகள் செய்தாரே' (கனம். கிருட். கீர்த். 40).*

வங்கை[2] *vaṅgai,* பெ.(n.) பகை (யாழ்.அக.); enmity. *"வங்கை வைத்தால் தன்குடிக்குப் பகை" (உ.வ.).*

[வகு → வங்கு → வங்கை.]

வங்கொலையாயிரு-த்தல் *vaṅkolai-y-āy-iru-,* 4 செ.கு.வி.(v.i.) கொடிய பசியுடன் இருத்தல்; to be in intense or severe hungry.

வச்சஆள் *vacca-āḷ,* பெ.(n.) பணிக்கு அமர்த்திய வேலையாள்; engaged servant.

[வைத்த → வச்ச + ஆள்.]

வச்சகத்தண்டுகம் *vaccaga-t-taṇḍugam,* பெ. (n.) வெட்பாலையரிசி; the seed of a tree, - *Herium antidysentricum.*

வச்சகம்[1] *vaccagam,* பெ.(n.) 1. காட்டு மல்லி வகை, நீண்ட மரமல்லி; Indian cork. 2. வெட்பாலை (தைலவ. தைல.); conessi bark.

வச்சகம்[2] *vaccagam,* பெ.(n.) மரமல்லிகை; a tree-Milingtonia hortenair, it is also known as malai malligai.

வச்சதாகம் *vacca-tāgam,* பெ.(n.) கருங் கொள்ளு; black horse gram.

வச்சநாகம் *vacca-nāgam,* பெ.(n.) பாம்பு வகையுளொன்று; a kind of snake.



வச்சநாபி *vacca-nābi,* பெ.(n.) நச்சுப்பூடு வகை (யாழ்.அக.); hepal aconite.

வச்சநாவி *vacca-nāvi,* பெ.(n.) வச்சநாபி பார்க்க; see *vacca-nābi.*

வச்சநி *vaccani,* பெ.(n.) மஞ்சள்; turmeric.

வச்சநீர் *vacca-nīr,* பெ.(n.) வச்சநி பார்க்க; see *vaccani.*

வச்சராங்கம் *vacca-rāṅgam,* பெ.(n.) வீரம், இரசம் இவைகளை விளக்கெண்ணையில் அரைத்து, பதங்கித்து மேகப்புண்களுக்காக கொடுக்கும் மருந்து வகை; a medicine prepared with mercury and perchloride of mercury and prescribed for syphilitic sores.

வச்சரி *vaccari,* பெ.(n.) வேம்பு (சங்.அக.); neem tree.

வச்சனி[1] *vaccaṉi,* பெ.(n.) மஞ்சள்; turmeric.

வச்சனி[2] *vaccaṉi,* பெ.(n.) காற்சேம்பு; a kind of plant.

வச்சாகம் *vaccāgam,* பெ.(n.) காட்டாடு; wild goat.

வச்சாதனி *vaccādaṉi,* பெ.(n.) சீந்தில்; moon creeper-*Tinospracordifolia* alias *Menispermum cordifolium.*

வச்சி *vacci,* பெ.(n.) செடி வகை; oblong cordate-leaved tree bilberry.

வச்சிதண்ணீர் *vacci-taṇṇīr,* பெ.(n.) அரத்தம்; blood.

வச்சிரஅப்பிரகம் *vaccira-appiragam,* பெ.(n.) காக்கைப் பொன்; a variety of mica.

வச்சிரக்காரை *vaccira-k-kārai,* பெ.(n.) பனஞ்சாறு, முட்டை, சுண்ணாம்புக் கலவை முதலியவற்றின் கலவை; a mixture of sweet totaly or juice extracted form palmra, egg and calcium or lime.

வச்சிரக்கியாழம் *vaccira-k-kiyāḻam,* பெ.(n.) மகப் பெற்ற மகளிர்க்கு, அரத்தப் போக்கு நிற்க கொடுக்கின்ற மூங்கிலைக் கருக்கு நீர்; a decoction of bamboo leaves given to woman after delivery of child, to arrest oozing or wasting of blood.

[வச்சிரம் + கியாழம்]

வச்சிரக்குகை *vaccira-k-kugai,* பெ.(n.) புற்றுமண், கூழாங்கல், கழுதை லத்தி, சுட்ட உமி, பழங்கந்தை முதலியவற்றை புளிக்க வைத்து, அரைத்துச் செய்கின்ற ஓர் கெட்டியான மூசை; a strong crucible, the method of its preparation is given.

உருக்குவதற்கும், நீறு செந்தூரம் சுண்ணம் உருவாக்க வேண்டியும் அதிகச் சூடு வேண்டி யிருந்தால் இம் (மூசை) மட்குகையைப் பயன்படுத்துவதுண்டு.

வச்சிரக்குருந்து *vaccira-k-kurundu*, பெ.(n.) பொதிகை மலையில் விளையும் ஒருவகைக் குருந்து; a plant growth in the podigai mountain.

வச்சிரக்குளிகை *vaccira-k-kuligai*, பெ.(n.) ஒரு வகை மருந்து; a kind of medicine.

வச்சிரகண்டம் *vaccira-kandam*, பெ.(n.) இலந்தை; a jujube tree-*Zizyphus jujube*.

வச்சிரகண்டா *vaccira-kandā*, பெ.(n.) அரையாப்புக்குக் கொடுக்கும் மருந்து; a pill prescribed for bubo.

வச்சிரகந்தம் *vaccira-kandam*, பெ.(n.) தாளகச் செய்நஞ்சு (சங்.அக.); yellow orpiment.

வச்சிரகந்தரசம் *vaccira-kandarašam*, பெ.(n.) ஏலம்; a plant bearing fragrant capsules-Cardamum.

வச்சிரகம் *vacciragam*, பெ.(n.) தாமரைக் காய் (சது.); pericarp of the lotus.

வச்சிரகாயம்¹ *vaccira-kāyam*, பெ.(n.) உரமிகு உடம்பு; a strong robust body.

வச்சிரகாயம்² *vaccira-kāyam*, பெ.(n.) மருந்து வகை; a medicine. *"தயிராற் குடிப்பதொரு மருந்துண்டு, வச்சிர காயம் என்பது" (தக்கயாகப். 547. உரை).*

வச்சிரங்கம் *vacciraṅgam*, பெ.(n.) 1. சதுரக்கள்ளி; a square spurge. 2. வச்சிரம் பார்க்க; see *vacciram*.

வச்சிரசலம் *vaccira-šalam*, பெ.(n.) கோரைக்கிழங்கு; fragrant root tuber of a grass or sedge cyperus rotundus.

வச்சிரசீதம் *vaccira-šidam*, பெ.(n.) பேய்ச் சீந்தில்; a creeper.

வச்சிரசுவாலை *vaccira-šuvālai*, பெ.(n.) ஒரு வகை மீன்; a kind of fish (சா.அக.).

வச்சிரத்தலைச்சி¹ *vaccira-t-talaicci*, பெ.(n.) கதண்டுக்கல்; a kind of mineral stone (சா.அக.).

வச்சிரத்தலைச்சி² *vaccira-ttalaicci*, பெ.(n.) கருவண்டு (யாழ்.அக.); black beetle.

மறுவ. கதண்டு

வச்சிரத்துரு *vaccira-t-turu*, பெ.(n.) சதுரக் கள்ளி (இலக்.அக.); square spurge.

வச்சிரத்துருவம் *vaccira-t-turuvam*, பெ.(n.) நாட்டு அதிமதுரம் அல்லது குன்றிமணி வேர்; Indian liquorice - *Abrus precatrious (Root of)* (சா.அக.).

வச்சிரத்தைத்தோயமாக்கி *vaccirattai-t-tōyamākki*, பெ.(n.) அத்திபேதி; a drug that resolves hardness of the bone (சா.அக.).

வச்சிரத்தைப்பற்பமாக்கி *vaccirattai-p-parpamākki-*, பெ.(n.) பிரண்டை; medicinal climber-vitis quadrangularis (சா.அக.).

வச்சிரத்தோகை *vaccira-t-tōgai*, பெ.(n.) செங்கத்தாரி; a medicinal shrub-*Niebuhria linearis* (சா.அக.).

வச்சிரதந்தி¹ *vaccira-tandi*, பெ.(n.) ஒரு வகைப் பூடு; a kind of herb (சா.அக.).

வச்சிரதந்தி² *vaccira-tandi*, பெ.(n.) ஒரு வகைப் புழு; a kind of worm. *"வச்சிரதந்தி யெனப்படு முந்துகீடம்" (கந்தபு. மகாசாத். 42).*

வச்சிரதந்திவேர் *vaccira-tandi-vēr,* பெ. (n.) ஒருவகை வேர்; a kind of root (சா.அக.).

வச்சிரதரு *vaccira-taru,* பெ.(n.) கஞ்சா; Indian hemp-cannabis sativa (சா.அக.).

வச்சிரநாடு *vaccira-nāḍu,* பெ.(n.) பாண்டி நாட்டிலிருந்ததொரு பெயர் பெற்ற கடற்கரை நாடு; the coastal region in the *Pāṇḍiyaṉ* country. *"வச்சிரநாடன்ன வாணுதல்" (களவியற்.47).*

வச்சிரநிணம் *vaccira-niṇam,* பெ.(n.) 1. மலைவேம்பு; a species of mountain or hill margosa. 2. கருவேம்பு; black species of margosa-*Garuga pinnata* (சா.அக.).

வச்சிரப்பால் *vaccira-p-pāl,* பெ.(n.) சதுரக்கள்ளிப்பால்; milk of square spurge-*Euphorbia quadratus* (சா.அக.).

வச்சிரபுட்பம் *vaccira-puṭpam,* பெ.(n.) எள்ளுப் பூ (மூ.அ.); blossom of sesamum.

வச்சிரமூசை *vaccira-mūšai,* பெ.(n.) 1. சாம்பல், புற்றுமண், இரும்பு கிட்டம், வெள்ளைக்கல் சூரணம், தலைமயிர் இவற்றை ஆட்டுப்பாலில் வேகவைத்து அரைத்து ரசம், மற்ற மாழைகளை உருக்க வேண்டி பயன்படுத்தும் ஒரு வகை மூசை; crucible for melting metals, the method of preparing it is given. 2. வச்சிரக்குகை பார்க்க; see *vaccira-k-kugai.*

[வச்சிரம் + மூசை]

வச்சிரமூலி *vaccira-mūli,* பெ.(n.) 1. பிரண்டை; medicinal climber, square-stalked vine, vitis quadrangularis. 2. எருக்கு; madar shrub, calotrophis gigantia. 3. சதுரக்கள்ளி; square spurge-*Euphorbia quadrata.*

வச்சிரரூபகவாதம் *vaccira-rūbaga-vādam,* பெ.(n.) கழுத்து பிடரியில் வலி, விழிகள் அசைவின்மை, கொறுக்கை தலைநோய், நடுக்கல், குதிகால் நரம்புகளில் நோவுடன் திமிர், கழிமாசுக் குறைவு ஆகியவிக்குணங்களைக் காட்டுகின்ற ஊதை வகை; a vada disease marked by cramps, pain in the nape, immobility of the eyes, head ache tremors pain in heels etc (சா.அக.).

வச்சிரவரிகை *vaccira-varigai,* பெ.(n.) பெண் மகப்பேறடைவதைக் குறிப்பதாகக் கருதப்படும் உள்ளங்கை வரிகை வகை (சிவக். பிரபந். சரபேந்திர. குற. 51, 1); a kind of distinctive mark in the palm of the hand, believed to indicate female issue.

வச்சிரவல்லி *vaccira-valli,* பெ.(n.) 1. பிரண்டை (சங்.அக.); square-stalked vine. 2. சூரிய காந்தி; sun - flower.

வச்சிரவல்லிலேகியம் *vaccira-valli-lēgiyam,* பெ.(n.) மருந்து வகை; a kind of medicine.

வச்சிரவல்லிவேர் *vaccira-valli-vēr,* பெ.(n.) பிரண்டை வேர்; root of vitis quadrangularis (சா.அக.).

வச்சிரவிதளியம் *vaccira-v-idaḷiyam,* பெ.(n.) தூய்மையாக்கப்பட்ட இதளியம் (சங். அக.); purified mercury.

வச்சிராங்கம் *vaccirāṅgam,* பெ.(n.) சதுரக்கள்ளி; square spurge.

வச்சிராங்கி[1] *vaccirāṅgi,* பெ.(n.) மூக்குத்திக் காய்; a (creeping) plant (சா.அக.).

வச்சிராங்கி² *vaccirāṅgi*, பெ.(n.) 1. உறுதியான கவசம் (சூடா.); invulnerable armour. 2. வைரம் பதித்த கவசம்; armour or cloak set with diamonds.

வச்சிராஞ்சி *vaccirāñji*, பெ.(n.) பிரண்டை; vitis quadrangularis (சா.அக.).

வச்சிரி *vacciri*, பெ.(n.) சதுரக்கள்ளி; square spurge.

வச்சை *vaccai*, பெ.(n.) பழிப்பு; disgrace, contempt. *"வச்சையா மெனும் பயமனத் துண்டு"* (கம்பரா. கரன்வதை. 142).

[வை → வசை → வச்சை.]

வச்சைமாக்கள் *vaccai-mākkaḷ*, பெ.(n.) இவறன்; misers, stingy persons. *"வச்சைமாக்க ளேன்றமா நிதியம் வேட்ட விரவலர்"* (கம்பரா. உண்டாட். 19).

[வசை → வச்சை + மாக்கள் (மாக்கள் = கயவரான பொல்லா மாந்தர்.]

வச்சையம் *vaccaiyam*, பெ.(n.) கலைமான்; stag-roe buck-*Capreolus dorcus*.

வச்சையன் *vaccaiyan*, பெ.(n.) இவறன் மாலையன்; miser. *"வச்சையன்போலொர் மன்னன்"* (கம்பரா. பூக்கொய். 19.).

[வச்சை → வச்சையன்]

வசக்கட்டு *vaša-k-kaṭṭu*, பெ.(n.) 1. வணிகக் கூட்டாளி மூலமாகக் கொடுத்த தொகை; payment made to a partner. 2. ஒப்படைத்த பொருள்; goods or monies left in charge of a person. 3. இன்னதற் கென்று நியமித்து வைத்த தொகை; sum ear - marked for a particular purpose. 4. செலவுக்கென்று முன்னதாகக் கொடுத்த பணம்; imprest. 5. ஆட்சி (வின்.); possession.

வசக்கட்டுக்கணக்கு *vaša-k-kaṭṭu-k-kaṇakku*, பெ.(n.) கணக்கர் அல்லது நிருவாகப் பணியாளரிடம் நிருவாகச் செலவுக்காகக் கொடுத்து வைக்கப்பட்ட பணத்தின் கணக்கு (C.G.); account in respect of monies left in charge of a accountant or an agent.

[வசக்கட்டு + கணக்கு.]

வசக்கி *vašakki*, பெ.(n.) காடும், மேடுமாய்க் கிடந்த நிலத்தைச் சீர் செய்கை; reclamation of lands from irregular shape. *"ஊரின் மேலூர் புற்றும் தெற்றியுமாய்க் கிடந்த பாழ் நிலத்தை வசக்கி வயலும் குளமுமாக்கி"*.

[வயக்கி → வசக்கி]

வசக்கு¹-தல் *vasakku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. வயப்படுத்துதல், பழக்குதல்; to break in, tame, train, subdue. *மாட்டை உழவுக்கு வசக்கவேணும்.* 2. வளையப் பண்ணுதல் (யாழ்.அக.); to bend.

வசக்கு²-தல் *vašakku-*, 5 செ.குன்றாவி. (v.t.) நிலத்தைப் பண்படுத்துதல்; to reclaim or improve land. *'கட்டை பறிச்சு வசக்கி' (S.I.I.V.307).*

[வயக்கு → வசக்கு]

வசக்கு³-தல் *vašakku-*, 5 செ.குன்றாவி. (v.t.) வாட்டுதல்; to roast.

[வதக்கு → வசக்கு]

வசக்கேடு *vaša-k-kēḍu*, பெ.(n.) 1. உடல் நலமின்மை (வின்.); loss of health or unwell. 2. மயக்கம் (வின்.); delirium.

3. தன்னிலை கெடல்; untowardness. 4. இடர்ப்பாட்டு நிலை; awkward predicament. 5. தவற்று நிலை; wrong. 6. ஆறுதல் அளிக்கவியலாத நிலை; uncomfortable position.

[வசம் + கேடு.]

வசங்கண்டவன் *vašaṅkaṇḍavaṉ,* பெ.(n.) 1. உண்மையறிந்தவன் (வின்.); one who is aware of the state of things. 2. முற்பழக்க முள்ளவன்; man of experience. 3. ஏதாவ தொரு பழக்கத்திற்கு அடிமை யானவன்; man addicted to a habit. *அவன் ஊரார் பணத்தில் உடம்பு வளர்த்து வசங்கண்டவன் (உ.வ.).*

[வசம் + காண்→கண்டவன்.]

வசங்கம் *vašaṅgam,* பெ.(n.) வசகம் பார்க்க; see *vašagam.*

வசங்களி-த்தல் *vašaṅ-kaḷi-,* 4 செ.கு.வி. (v.i.) கட்டு மீறுதல் (யாழ்.அக.); to get out of control, to be uncontrolable.

[வசம் + கழி-,→களி-,]

வசங்கெட்டவன் *vašaṅ-keṭṭavaṉ,* பெ.(n.) 1. செயலற்றவன், ஆண்மையற்றவன் (வின்.); impotent man. 2. உடல் நலமற்றவன் (வின்.); unhealthy man (one who is not in health). 3. நிலைமை கெட்டவன் (வின்.); man in reduced circumstances. 4. மனமின்றி வேலை செய்பவன்; unwilling or involuntary worker. 5. நட்பாங் கிழமையிலான் (யாழ்.அக.); unfriendly man. 6. கட்டினின்று விடுபட்டவன்; one who has freed himself from bonds. 7. ஒழுங்கீனன், ஒழுக்கக்கேடன்; one who has gone astray.

வசஞ்செய்-தல் *vašañ-cey-,* 1 செ.குன்றாவி.(v.t.) 1. வயப்படுத்துதல்; to entice, allure. *"வாய் தரத் தக்கசொல்லி யென்னையுன் வசஞ்செய்வாயேல்" (கம்பரா. அங்கதன்றூது. 29);* 2. (முற்றிலும் ஆளுகைக்கு உட்படுத்துதல்) அடக்குதல்; to overcome, subdue. 3. கைப்பற்றுதல்; to take possession of.

[வயம்→வசம் + செய்-,]

வசட்டி *vašaṭṭi,* பெ.(n.) வயிரமண் (யாழ்.அக.); diamond dust.

வசத்திற்சோதினி *vašattiṟ-šōdiṉi,* பெ.(n.) எலுமிச்சை; sour lime.

வசதி[1] *vašadi,* பெ.(n.) 1. வீடு (பிங்.); house, residence. 2. நல்லிடம் (சூடா.); commodious and comfortable place. 3. சமணர் கோவில் (இ.வ.); jain temple. 4. மருத நிலத்து ஊர் (பிங்.); village in an agricultural tract. 5. தகை நலம்; convenience. 5. வாய்ப்பு நலம்; comfort. *"முன்றிலிடை யுலவவே வசதி பெறு போதும்" (தாயு. சச்சிதா.11).* 6. இரவு (யாழ்.அக.); night.

வசதி[2] *vašadi,* பெ.(n.) செல்வமும் பொருளும் ஏற்படுத்தித் தரும் வாய்ப்பான நிலை; means, amenity. *'அலுவலக நேரத்தை அவரவர் வசதிக்கேற்ப மாற்றிக் கொள்ளக் கூடாது'.*

வசதிக்கேடு *vašadi-k-kēḍu,* பெ.(n.) உடம்பின் மெலிவு; physical weakness.

வசதிகம் *vašadigam,* பெ.(n.) அடிவயிற்றைச் சுற்றியிருக்கும் எலும்பு; bone round the lower abdomen, pelvis.

வசந்தங்கங்கரு *vašandaṅ-kaṅgaru,* பெ.(n.) சித்தரத்தை; lesser galangul-*Alpina officinarum.*

வசந்தப்பு-தல் *vašan-tappu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. முறை கேடாதல் (வின்.); to be on the wrong side, to be in the wrong place. *இது வசந்தப்பிச் சேர்த்திருக்கிறது.* 2. அறிவு மயங்குதல்; to lose conciousness. *அவன் வசந்தப்பி உளறுகிறான் (உ.வ.).*

[வசம் + தப்பு-,]

வசநீக்கம் *vaša-nikkam*, பெ.(n.) கைவச மிருந்ததை நீக்குகை; dispossession.

[வயம்→ வசம் +நீக்கம்.]

வசப்படு-தல் *vaša-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. கட்டுப்படுதல்; to submit, to be brought into subjugation. 2. ஆளுமைக்கு உட்படுதல்; to bring into one's possession. 3. தந்திரமாய் வசமாதல் (இ.வ.); to be enticed.

[வயம்→ வசம் + படு-.]

வசப்படுத்து-தல் *vašappaḍuttu-*, 5 செ. குன்றாவி. (v.t.) 1. கட்டுப்படுத்துதல்; to submit, to subjugate. 2. ஆளுமைக்கு உட்படுத்துதல்; to bring into one's possession. 3. தந்திரமாய் வசமாக்குதல்; to entice.

[வயப்படு→ வசப்படு →வசப்படுத்து-,]

வசப்பந்தேறு *vašappan-tēṟu*, பெ.(n.) வசம்பு வேர்த் துண்டு (வின்.); a piece of the root of sweet flag.

[வசம்பு + தேறு.]

வசப்பிழை *vaša-p-pilai*, பெ.(n.) வசக்கேடு (வின்.) பார்க்க; see *vaša-k-kēḍu*.

[வசம்' + பிழை]

வசப்படு *vaša-p-paḍu*, வி.(v.) 1. ஆட்படுதல்; to be in the grip of (5th), to entrap. 2. உள்ளாதல்; be possessed by, subjected to. *காதல் வசப்பட்டுத் தூக்கத்தில் கூட உளற ஆரம்பித்துவிட்டான்.*

வசப்படுத்து-தல் *vaša-p-paḍuttu-*, 5 செ.கு.வி. (v.i.) வயப்படுத்து-தல் பார்க்க; see *vaya-p-paḍuttu-*. *'வெள்ளையனே வெளியேறு, என்னும் காந்தியடிகளின் கொள்கை இளைஞர்களை வசப்படுத்தியது'.*

[வயப்படுத்து→வசப்படுத்து-தல்.]

வசம்¹ *vašam*, பெ.(n.) 1. பொறுப்பு; under one's custody. 2. இருப்பு; under one is one's possession. 3. உள்ளான நிலை; being under the control or fluence, as a consequence or result. *'எல்லாம் விதியின் வசம்'.*

[வயம் →வசம்]

ஒநோ. தேயம் → தேசம்

நேயம் → நேசம்

வசம்² *vašam*, பெ.(n.) 1. உடைமை; possession. 2. பொறுப்பு, அக்கறை; charge, care. *"மாயப்பிறவி யுன்வசமே வைத்திட்டிருக்கும்" (திருவாச. 33, 8).* 3. ஆட்சி (யாழ்.அக.); power. 4. அடக்கி வைக்கை; control. 5. கீழ்ப்படிகை (வின்.), பணிகை, சார்ந்திருக்கை; subordination, subjection, dependence. 6. நேர் (இ.வ.); directness, straightness. 7. ஒழுங்கு (வின்.); order, regularity. 8. நிலைமை; real state or condition. *"அவன் அங்கே வசமறியாமற் போனான்".* 9. இயலுகை; ability, possibility. *"பொய்த்துயில்*

கொள்வான்றனை யெழுப்ப வசமோ" (தாயு. ஆனந்தமான.7). 10. பக்கம் (வின்.); side. 'சப்பட்டை வசமாய்வை'. 11. எழுதும் தாள் (நாஞ்.); copying paper, folio. 12. பிறப்பு (யாழ்.அக.); birth.

வசம்³ *vašam*, இடை.(part.) மூலமாக; through. *அவர்வசம் பாவாணர் பொத்தகங்களை அனுப்பி யிருக்கிறேன்.*

வசம்⁴ *vašam*, பெ.(n.) வசம்பு (நாமதீப. 335.) பார்க்க; see *vašambu*.

வசம்⁵ *vašam*, பெ.(n.) இடம்; place. *"தானத்தார் வசம் குடுத்து".*

வசம்பிருந்தை *vašambirundai*, பெ.(n.) வசம்பு சுட்டகரி; charreel sweet flag.

வசம்பு¹ *vašambu*, பெ.(n.) 1. பெருவேம்பு; a big species of margosa. 2. தாமரை இலை; lotus leaf. 3. மிளகு; peper, pipper nigrum. 4. ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளிற் பயிராகும் ஓர் விதப் பூண்டின் வேர்த்தண்டு; under ground stem of a plant, sweet flag, the root gives a very strong pungent odour, the leaf when wounded gives the smell. it is used for the following diseases, snake bite, enlarged spleen, gunmam, diarrhoea etc.

Skt. உக்கிரந்தம்.

இது பாம்பு நஞ்சு குன்மம் அரத்தபித்தம், சூலை சன்னிபாதம், பீலிகம், யானைக்கால், செரியாமையானேற்படும் வயிற்று நோய் கழிமாசுக்கட்டிற் காண்புழு ஆகியவற்றை நீக்குகின்ற ஓர் மருந்தாகும்.

வசம்பு² *vašambu*, பெ.(n.) மருந்தாகப் பயன்படும் ஒரு பூண்டின் வழுவழுப்பான வேர்; white sweet flag, used as a medicine. *'குழந்தைக்கு வயிற்று வலி வந்தால், வசம்பு குழைத்துத் தடவுவதுண்டு'.*

வசம்பு³ *vašambu*, பெ.(n.) செடிவகை; sweet flag. *"வால்வெள் வசம்பும்" (பெருங். உஞ்சைக். 50, 28).*

வசம்புகா *vašambukā*, பெ.(n.) மலைவள்ளிக் கொடி; mountain sweet potato - creeper.

வசம்புசுட்டகரி *vašambu-šuṭṭa-kari*, பெ.(n.) கரிய, நீண்ட சொரசொரப்பான இலையைக் கொண்ட செடிவகை; charred sweet flag.

வசம்புவாசா *vašambu-vāšā*, பெ.(n.) மிளகு; pepper.

வசமாக *vašamāga*, பெ.அ.(adj.) 1. வகையாக; inescapably. *திருடன் காவலர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டான்.* 2. தப்பிக்க முடியாமல்; to under miscontrol or to grip.

[வயம்→வசம்+ஆக]

(ஒ.நோ.) தேயம் → தேசம்
கயம் → கசம்

வசமொழிக்கை *vašamoḻikkai*, பெ.(n.) வசநீக்கம் பார்க்க; see *vaša-nikkam*.

வசலிகா *vašaligā*, பெ.(n.) மல்லிகை; jasmine.

வசலை *vašalai*, பெ.(n.) பசளைக் கொடி; a kind of creeper. *"வசலை மென்கொடி வாடிய தன்ன" (கந்தபு. இரணியன். புத். 56).*

தெ. பட்சட்சலி

வசலைக்கீரை *vašalai-k-kīrai,* பெ.(n.) பசலைக்கீரை; greens of a climber-*Spinach creeper.*

வசலோமி *vašalōmi,* பெ.(n.) பொற்றலைக் கையாந்தகரை; a species of eclipta progstata.

வசவல்லி *vašavalli,* பெ.(n.) மரவகை; a kind of tree of the species.

வசவன் *vašavan̠,* பெ.(n.) காளைக் கன்று; male calf, steer. *"வசவனொடு புலி முலையுண" (திருப்பு. 51.).*

க. பசவ

[வயம்→வயவன்→வசவன்]

வசவி *vašavi,* பெ.(n.) 1. கோயிலிலுள்ள நாட்டிய மகளிர்; dancing girl attached to a temple. 2. நடத்தை கெட்டவள் (யாழ்.அக.); faithless - woman.

[வயம்→வயவி. 'இ' பெண்பாலீறு.]

வசவு *vašavu,* பெ.(n.) வசை, இழிமொழி, சுடுசொல்; foul, abusive language. *"கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும்" (திவ். திருவாய். 7, 5, 3).*

[வசை→வசவு]

வசளை *vašaḷai,* பெ.(n.) வசலை (வின்.) பார்க்க; see *vašalai.*

வசன் *vašan̠,* பெ.(n.) 1. எல்லை (யாழ்.அக.); limit. 2. நேர்; directness, straightness.

வசன்கட்டு *vašan̠-kaṭṭu,* பெ.(n.) எல்லை வரம்பு (யாழ்.அக.); boundary-line.

மறுவ. எல்லைக்கோடு

[வசன் + கட்டு.]

வசனாண்டி *vašan̠āṇḍi,* பெ.(n.) பொன் ஊமத்தை; yellow flowered dhatura, thorn apple (சா.அக.).

வசனாபி *vašan̠ābi,* பெ.(n.) பனிமலைச் சாரலில் விளைவதும், 2–3 விரலம் நீளமுள்ளதும், தோல் சுருங்கி இருப்பதுமான ஒரு வகை நஞ்சு; Indian aconite root found grown in the regions of Himalayas and gold in the bazzars-*Aconitum Ferox.* It is one of the nine kinds of virulent poisonous most of which are the species of aconite. The root resembles the navel of children and leaves are like those of Notchi (Vitex). It is said that no plant grows near it. The tuber contains a white strach like poisonous substance.

வசனித்தாய் *vašan̠ittāy,* பெ.(n.) சிறு துவரை; small red gram (சா.அக.).

வசா[1] *vašā,* பெ.(n.) 1. குருதியின்மேல் வடியும் நீர்; serum of the blood. 2. கொழுப்பு; fat. 3. சதைப்பாகம்; flesh. 4. வசம்பு பார்க்க; see *vašambu* (சா.அக.).

மறுவ. ஊனீர்

வசா[2] *vašā,* பெ.(n.) 1. சதைப் பகுதியி லிருக்கின்ற கொழுப்பு; oily fat substance in the flesh. 2. அத்திமேகம் என்னும் நோய் வகை; a disease, excess of calcium in the urine.

வசாக்கிரம் *vašākkiram,* பெ.(n.) பிரம்பு; a climber-common rattan-*Calamus Rotang* (சா.அக.).

வசாக்கோட்டி *vašā-k-kōṭṭi,* பெ.(n.) கருப்பக் காலத்துண்டாம் மசக்கை முதலியன;

morning sickness and morbid longings of a pregnant woman.

[வயா→வசா + கோட்டி.]

கருப்பமுற்றவளுக்கு மயக்கம் முதலியவற்றை யுண்டாக்குவது.

வசாசலம் *vaśā-śalam*, பெ.(n.) குருதியின் மேல் வடியும் ஊனீர்; serum (சா.அக.).

வசாசில்லி *vaśā-śilli*, பெ.(n.) குடலைச் சூழ்ந்திருக்கும் ஊனம், ஊறுஞ்சவ்வு; (serus) industrial membrane (சா.அக.).

வசாதிகணம் *vaśādigaṇam*, பெ.(n.) வசம்பு, சுக்கு, கடுக்காய், அதிவிடயம் ஆகியவைகளின் தொகுப்பு; species of drugs in the group of sweet flag, dry ginger, gallnut and Indian atee (சா.அக.).

வசாபூயம் *vaśā-pūyam*, பெ.(n.) சீழு மூனீரும் சேர்ந்தவை; seropurulent (சா.அக.).

வசாமேகம் *vaśā-mēgam*, பெ.(n.) ஒரு வகை நோய்; a kind of disease, fat in the urine (சா.அக.).

வசாலியம் *vaśāliyam*, பெ.(n.) செவ்வியம்; pepper creeper (சா.அக.).

வசானியம்¹ *vaśāṇiyam*, பெ.(n.) மிளகு (சங்.அக.); black-pepper.

வசானியம்² *vaśāṇiyam*, பெ.(n.) வசாலியம் பார்க்க; see *vaśāliyam*.

வசி¹-தல் *vaśi-*, 2 செ.குன்றாவி.(v.t.) 1. பிளத்தல்; to split, to cut. 2. வெட்டுதல்; to cut. *"வசிந்து வாங்கு நிமிர்தோள்" (திருமுரு. 106).*

வசி²-தல் *vaśi-*, 2 செ.கு.வி.(v.i.) 1. வடுப் படுதல்; to be dented or notched. 2. வளைதல் (பிங்.); (திருமுரு. 106. உரை.); to bend.

வசி³ *vaśi-*, பெ.(n.) 1. பிளவு; cleft. *"கொழுநர் மார்பி னெடுவசி விழுப்புண்" (மலைபடு. 303).* 2. நுனி, கூர்மை (பிங்.); point. 3. முனை; edge. *"வசிகெழு சூலம்" (கந்தபு. மகாகாள.19).* 4. நுனி கூர்மையான கோல்; pointed stake. *"நாலு வசி நாட்டி நடுக்குதிக்கும் நன்னகரும்" (விறலிவிடு. 131).* 5. கழுக்கோல் (வின்.); impaling stake. 6. அடையாளம், குறி; mark. 7. தழும்பு; scar, cicatrice. *"வெள்ளூசி நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்" (பதிற்றுப் 42, 4) (பிங்.).* 8. வாள் (பிங்.); sword. *"இராவணனே கலந்தருள் பெற்றது மாவசியே" (தேவா. 151, 10).* 9. சூலம் (வின்.); trident.

[வள் → வய் → வயி → வசி. வசி = கூர்மை. (ஒ.நோ.)மய் → மயி → மசி.]

வசி⁴-த்தல் *vaśi-*, 4 செ.குன்றாவி.(v.t.) பிளத்தல்; to split, to cut. *"இறைவன் கண்டமாக வசித்ததாகிய வசிதடியை" (பரிபா. 5, 39, உரை).*

வசி⁵-த்தல் *vaśi-*, 4 செ.கு.வி.(v.i.) தங்குதல் (சூடா.), வதிதல், வாழ்தல்; to dwell, live, abide, reside.

வசி⁶ *vaśi-*, பெ.(n.) இருப்பிடம் (யாழ்.அக.); residence.

வசி⁷-த்தல் *vaśi-*, 4 செ.குன்றாவி.(v.t.) வசியஞ் செய்தல், கிளர்ச்சியுறச் செய்தல், கவர்தல் (இ.வ.); to cajole, wheedle, inveigle, gain one's affections, entice. *"வசிந்து வாங்கு நுசுப்பின்" (புறநா. 383, 12, அடிக்குறிப்பு).*

வசி8 *vaši*, பெ.(n.) 1. வசியம் (திவா.); fascination. *"வசி செய்யுன் றாமரைக் கண்ணும்" (திவ். திருவாய். 10, 3, 8)*. 2. தன் வசஞ் செய்வது; that which fascinates. *"காழி யரனடிமா வசியே" (தேவா. 151, 10)*. 3. தாழ்ச்சி; பணிகை (அக.நி.); subjugation, submission. 4. நம்பிக்கை, உறுதியளிக்கை, தேற்றுகை (அக.நி.); convincing, assuring. 5. வசிய வித்தைக்குரிய சொல்; magic word. *"மாதர் மனைதொறும்.... வசிபேசு மரனார்" (தேவா. 1008, 2)*. 6. எண் வகை சித்தியுள், அனைத்தையும் தன் வயமாக்குகை (திருவிளை.அட்டமா. 27); the supernatural power of subduing all to one's own will, one of *aṣṭamā-šitti*. *"மணமலர் போ லெவரானும் வாஞ்சிக்கப்படுகை வசி" (சிவதரு. சிவஞானயோ. 90)*.

வசி9 *vaši*, பெ.(n.) 1. மழை; rain. *"வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி" (சிலப்.5, 73)*. 2. நீர் (பிங்.); water.

வசி10 *vaši*, பெ.(n.) குற்றம் (அக.நி.); fault, defect.

வசி11 *vaši*, பெ.(n.) வெள்வெண்காயம் (சங்.அக.); garlic.

வசிக்கல் *vašikkal*, பெ.(n.) மாடுகளைக் கயிற்றால் கட்டப் பயன்படும் ஓர் கல்; a stone to bind the cattle.

வசிகம் *vašigam*, பெ.(n.) மிளகு (மலை.); black pepper.

வசிகரணத்தந்திரம் *vaši-karaṇa-t-tandiram*, பெ.(n.) மக்களிடையே உண்டாக்கும் நோய்களைக் குறிக்கும் ஓர் நூல்; a science on treating of disease of the sexual organs.

வசிகரணம்1 *vašikaraṇam*, பெ.(n.) 1. வயப்படுத்துகை; subjugation. 2. புணர்ச்சிக்கு இணங்குகை (யாழ். அக.); yielding to sexual advances. 3. அழகு; beauty.

வசிகரணம்2 *vašikaraṇam*, பெ.(n.) வாள் (யாழ்.அக.); sword.

வசிகரத்தி *vaši-karatti*, பெ.(n.) கம்மாறு வெற்றிலை; a strong pungent betel leaf which is dark green in colour-piper betel.

வசிகரமருந்து *vašikara-marundu*, பெ.(n.) உண்டோரைப் பயன்படுத்தச் செய்தவர் வயமாக்கும் மருந்து (கொக்கோ.1, 26); a drug that charms and neslaves the person to whom it is administered.

வசிகரி1 *vašikari*, பெ.(n.) 1. காரெள்; a black species of gingeli seed. 2. தொழுகண்ணி; a kind of plant. 3. வசியம் செய்தல்; influencing, mesmerising, entresing (சா.அக.).

வசிகரி2-த்தல் *vašikari-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. தன்வயப்படுத்துதல், கவர்ந்திழுத்தல்; to charm, captivate fascinate, to subjugate. *"உயிரை வசிகரிக்கு மந்திரமொன்று" (கந்தபு.அசுரர்யா.23)*. *"பசையி னெஞ்சர் தமையெல்லாம் பத்தாவாக வசிகரித்தும்" (உத்தரரா.இராவணன் பிறப்.19)*. 2. வேண்டுதல் (யாழ்.அக.); to request.

வசிதடி *vaši-taḍi*, பெ.(n.) துணித்த துண்டம்; piece cut off. *"வசிதடி சமைப்பின்" (பரிபா.5, 39)*.

வசிதம் *vašidam*, பெ.(n.) 1. ஆணைத் திப்பிலி; a large sized long pepper. 2. மிளகு; pepper-*Piper higrum* (சா.அக.).

வசிநி *vašini*, பெ.(n.) வன்னிமரம்; sama tree-*Prosopis spicigera*, Indian mesquit tree (சா.அக.).

வசிப்பிடம் *vašippiḍam*, பெ.(n.) குடியிருக்கின்ற அல்லது தங்கியிருக்கின்ற இடம்; abode, residence, dwelling place. *'வசிப்பிடத்திற்கு அருகிலேயே அலுவலகம்'.*

[வதி→வசி→வசிப்பு + இடம்.]

வசிமாறத்தி *vašimāṟatti*, பெ.(n.) எட்டி மரம்; a tree bearing bitter poisonous fruit- *Nux vomica* (சா.அக.).

வசிமூலி *vaši-mūli*, பெ.(n.) வசியமூலி பார்க்க; see *vašiya-mūli*.

[வசி + மூலி = மூலிகை என்பதன் கடைக் குறை.]

வசியக்கனி *vašiya-k-kaṉi*, பெ.(n.) ஆதொண்டை; a prickly creeper-*Capparis horrida*.

வசியகரன் *vašiya-karaṉ*, பெ.(n.) வசியம் செய்வோன்; one who is influencing or mesmerising, a person by magical enchantments, mugician.

*[வசிய + **Skt.** மயசய > த. கரன்.]*

வசியகுளிகை *vašiya-kuḷigai*, பெ.(n.) தன்னை வைத்திருப்பவனுக்குப் பிறரை வசமாகச் செய்விக்கும் மாயமாத்திரை; magic pill which brings other persons under the influence of its possessor. *"யாவரும் வசிய குளிகை . . . மாதருக் கதிரூபவின்பம்" (திருவேங்.சத.89).*

[வசியம்[1] + குளி→குளிகை. குளிகை = மந்திர வலிமையுள்ள மாத்திரை.]

வசியநூல் *vašiya-nūl*, பெ.(n.) ஒருவர் மனத்தை வசப்படுத்திக் கொள்ளும் முறையை விரிக்கும் சாத்திரம்; treatise dealing with the art of bewitching a person.

[வசியம் + நூல்.]

வசியப்பொருத்தம் *vašiya-p-poruttam*, பெ.(n.) திருமணப் பொருத்தம் பத்தனு ளொன்று (விதான. கடிமண.4, உரை); a correspondence between the horoscopes of the propspective bride and bridegroom, one of ten *tiru-maṇa-poruttam*.

[வசியம் + பொருத்தம்.]

வசியப்போக்கு *vašiya-p-pōkku*, பெ.(n.) வசியக் கலை; following the magic art (சா.அக.).

வசியம்[1] *vašiyam*, பெ.(n.) 1. வசப்படுகை; being docile or subjugated. 2. நெருங்கிய நேயம்; great attachment. 3. மாசற்ற காதல்; devoted love. *"ஒய்வறு வசியமுண்டாய்" (கொக்கோ.1, 28).* 4. தன்வயமாக்குகை; subjugation. 5. எண்வகைக் கருமங்களுள் மக்கள், தேவர், கோள்கள் முதலானவற்றைத் தன்வயப்படுத்தும் வித்தை (வேதா.சூ.16, உரை); magic art of bringing under control a person, spirit or deity, one of *asṭa-karmam*. 6. கைவசம் (வின்.); actual possession.

[வயின்→வயம்→வசம்→வசி→வசியம்.]

மகளிரையும் பிறரையும் மந்திரத்தாலும் மனப்பயிற்சியாலும் வயப்படுத்துதல்.

வசியம்² *vašiyam*, பெ.(n.) கிராம்பு (மலை); cloves.

வசியம்செய்-தல் *vašiyam-šey-*,1 செ.கு.வி. (v.i.) வசியம்பண்ணல் பார்க்க; see *vašiyam-pannal*.

[வசி→வசியம் + செய்.]

வசியம்பண்ணல் *vašiyam-pannal*, தொ.பெ.(vbl.n.) மருந்திட்டு, மாய வலையிலகப்படச் செய்தல்; philter.

[வசியம் + பண்ணு→பண்ணல்.]

வசியமதாசி *vašiyamatāši*, பெ.(n.) பெருந்தும்பை; a large species of tumbai flower, dead nettle.

வசியமருந்து *vašiya-marundu*, பெ.(n.) உண்டோரைப் பயன்படுத்தச் செய்தவர்தம் வயமாக்கும் மருந்து (கொக்கோ.1, 26); a drug that charms and enslaves the person to whom it is administered.

[வசியம்¹ + மருந்து]

வசியமூலி *vašiya-mūli*, பெ.(n.) கரும்பசளை, செங்கொடி வேலி, சிறியாணங்கை; enchanting plants.

[வசியம் + மூலி = மூலிகை என்பதன் கடைக்குறை.]

வசியமை *vašiyamai*, பெ.(n.) வசியப்படுத்துவதற்காக அழிஞ்சி விதைக் கொண்டு செய்யும் ஒரு வகை மை; a magical black point having psychic or magical properties of influencing the person desired for (சா.அக.).

[வசியம் + மை.]

வசியயீரு *vašiya-yīru*, பெ.(n.) மருந்தீடு; a love philter.

வசியர் *vašiyar*, பெ.(n.) வணிகர் (சூடா.); members of the *vaišya* caste. *"அன்பார் வசியர்க்கேயாம்" (சைவச. பொது. 95).*

வசியவாடை *vašiya-vāḍai*, பெ.(n.) வசியம் செய்வதற்காக தூவும் ஓர் பொடி; a powder blown for alluring a person.

வசியை *vašiyai*, பெ.(n.) 1. தம் வயப்படுத்தும் அன்புமிக்க மனைவி (யாழ். அக.); beloved wife. 2. கற்புடைய பெண்; chast woman.

[வசி + ஐயை – வசியை.]

வசிவாசி *vašivāši*, பெ.(n.) மீனைப்பூ; a kind of tree.

வசிவு *vašivu*, பெ.(n.) 1. பிளத்தலால் உண்டாம் வடு; scar, cicatrice. *"வானமின்னு வசிவு பொழிய" (மலைபடு. 97).* 2. வளைவு (பிங்.); curvature;bend. 3. கவிகை மோடு போன்ற வளைவு (வின்.); arch, vault.

வசு *vašu*, பெ.(n.) வெள்ளைப் பூண்டு (மலை.); garlic.

வசுகூபம் *vašu-kūbam*, பெ.(n.) அமுரி; urine or urinary salt (சா.அக.).

வசுநரை *vašunarai*, பெ.(n.) புளி (சங்.அக.); tamarind.

வசூரி *vašūri*, பெ.(n.) அம்மைநோய் (இ.வ.); small-pox.

[வைசூரி + வசூரி.]

வசூரை *vašūrai*, பெ.(n.) வேசை (யாழ்.அக.); harlot.

வசூரிகைப்புண் *vaśūrigai-p-puṇ,* பெ.(n.) அம்மைப்புண்; small pox-ulcer (சா.அக.).

[வைசூரி →வசூரிகை + புண்.]

வசை[1]-தல் *vaśai-,* 2 செ.கு.வி.(v.i.) வசைகூறுதல், பழித்துரைத்தல், பொய்க் குற்றஞ்சாட்டுதல்; to censire, blame, calumniate. *"வசையுநர்க் கறுத்த பகைவர்" (பதிற்றுப்.32.15).*

வசை[2] *vaśai,* பெ.(n.) 1. பழிப்பு, குற்றம், திட்டுகை, பொய்க்குற்றச் சாட்டு; reproach, censure, blame, stigma, calumny. *"அடிசில் வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை" (புறநா.10).* 2. வசைகவி (தொல்.பொருள்.437); satire poem. 3. குற்றம், பிழை; defect. *"வசை தீர்ந்த வென்னலம்" (கலித்.26,14).* 4. அகப்பை (யாழ்.அக.); ladle.

[வை →வசை.]

வசையும் இரண்டு வகைப்படும். மெய் வசையும் இருபுற வசையும் என (யாப்.95; யாப்.கா.58). வெளிப்படக் கூறக் கேட்டார்க்குந் தனக்கும் இன்பம் பயத்தலிற் குறிப்பினாதற் கூற வேண்டுவது வசையென்று கொள்ளப்படும் (தொல்.செய்யுள்.172, இளம்.). புகழ் போன்று வசையாதலும், வசைபோன்று புகழாதலும் படவரும் (தொல்.செய்யுள்.நச்.124).

வசை[3] *vaśai,* பெ.(n.) 1. வறட்டாமா (வறட்டுப்பசு) (சூடா.), வறட்டுப்பசு; sterile cow. 2. ஆமா (பசு) (யாழ். அக.); cow. 3. பெண் யானை (யாழ். அக.); female elephant. 4. கணவன் தமக்கை (யாழ். அக.); husband's sister. 5. பெண் (யாழ்.அக.); woman. 6. மகள் (யாழ்.அக.); daughter. 7. மனைவி (யாழ்.அக.); wife.

வசை[4] *vaśai,* பெ.(n.) கொழுப்பு, தசை; marrow, fat. *"வசை கீசகமென் றிருவகையாய்த் துன்னும் புலவால்" (சேதுபு. வேதா.30).*

வசை[5]-தல் *vaśai-,* 2 செ.கு.வி.(v.i.) 1. வளைதல், கோடுதல்; to bend, incline, to make crooked. 2. சூழப்படுதல்; வேலி போடுதல்; to be environed, to be encompassed; to be enclosed.

தெ. வஞ்சு.

வசை[6]-த்தல் *vaśai-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. வளைத்தல்; to bend, incline to make crooked. 2. சூழ்தல், வளைத்தல்; to surround, encompass, encircle.

[வசை →வசைத்தல்.]

வசை[7] *vaśai,* பெ.(n.) 1. இழிவுபடுத்துதல்; to abuse, to humiliation. 2. குறைகூறும் வகையில் பேசுதல்; to talk slanderously, klemished saying. *'அவன் வாயைத் திறந்தால் வசைதான்'.*

வசைக்கடம் *vaśai-k-kaḍam,* பெ.(n.) செம் பொருளங்கதம் பற்றிக் கலிப்பாக்களால் அமைந்த ஒரு பழையநூல் (தொல். பொருள். 437, உரை); an ancient poem in kali verse, dealing with satire.

வசைக்கவி *vaśai-k-kavi,* பெ.(n.) வசைகவி (வின்.) பார்க்க; see *vaśai-kavi.*

[வசை + Skt. கவி.]

வசைக்கூத்து *vaśai-k-kūttu,* பெ.(n.) நகைதிறச் சுவைபற்றி நிகழும் நையாண்டிக் (கேலிக்) கூத்து (சிலப்.3:13, உரை); a dance caricaturing persons and holding them upto ridicule.

[வசை + கூத்து.]

வசைகவி *vašai-kavi*, பெ.(n.) வசைகூறும் அங்கதப் பாடல் (வின்.); satiric poem; lampoon. 2. வசைபாடுவோன், பழித் துரைப்போன்; satirist.

*[வசை + **Skt.** கவி.]*

வசைகவியாண்டான் *vašai-kaviyāṇḍāṉ*, பெ.(n.) காளிமடல் என்னும் நூலை இயற்றிய புலவர்; a poet who composed *kāli maḍal*.

வசைகூறு-தல் *vašai-kūṟu*, 5 செ. குன்றாவி.(v.t.) பழி சுமத்துதல்; to blame or censure.

[வசை+கூறு-. குல்→கூல்→கூறு=பொருத்தமாகப் பழிகூறுதலே வசைகூறுதலாகும்.]

வசைச்சொல் *vašai-c-col*, பெ.(n.) பழிச் சொல் (இ.வ.); abusive language.

[வசை + சொல்.]

வசைநீங்கு-தல் *vašai-nīṅgu-*, 5 செ. குன்றாவி. (v.t.) கண்டனம் அல்லது குற்றத்திலிருந்து விலகுதல்; to leave censure or blame.

[வசை + நீங்கு-.]

வசைப்பாட்டு *vašai-p-pāṭṭu*, பெ.(n.) அங்கதப்பாட்டு, வசைகூறும் பாடல்; satiric poem.

மறுவ. அங்கதச் செய்யுள்.

[வசை + பாட்டு]

வசைபாடு-தல் *vašai-pāḍu-*, 5 செ. குன்றாவி.(v.t.)1. திட்டுதல்; to abuse, to scold. *'நீங்கள் ஒருவர் மீது ஒருவர் வசைபாடுவதை நிறுத்த வேண்டும்'. சிலர் வசைபாடுதலையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர் (உ.வ.).* 2. தரம் தாழ்த்திப் பேசுதல்; to degrade. *"அவர் வசைபாடுவதில் வல்லவர்" (உ.வ.).*

[வசை + பாடு-.]

இழிவுபடுத்தும் அல்லது குறைகூறும் வகையில் பழித்தும் பேசுதல். பிறர்மீது குற்றஞ்சாட்டுதலும், பிறரை வீண்வம்பிற்கிழுத்துச் சண்டையிடுதலும் இதனுள் அடங்கும்.

வசையம் *vašaiyam*, பெ.(n.) கருநிறமுள்ள மான்வகை (நாமதீப.224.); black deer.

வசையழி-த்தல் *vašai-y-aḻi-*, 4 செ. குன்றாவி.(v.t.) குற்றம் அல்லது பழியினை முழுதும் போக்குதல்; to destroy or ruin.

[வசை + அழி-.]

வசையுநர் *vašaiyunar*, பெ.(n.) 1. வசை கூறுவோர், பழித்துரைப்போர், குற்றஞ் சுமத்துவோர்(பதிற்றுப். 32, 15, உரை); those who blame or censure; calumniators. 2. பகைவர்; enemies, as revilers. *"வசையுநர்க்கறுத்த பகைவர்" (பதிற்றுப்.32, 15).*

மறுவ. அங்கதர்

[வசை →வசையுநர்.]

வசையொழி-த்தல் *vašai-y-oḻi-*, 4 செ. குன்றாவி.(v.t.) பழியினை முற்றும் துடைத்தல் அல்லது போக்குதல்; to exonerate. *"வசையொழித்த வாழ்வே வளமான வாழ்வு" (உ.வ.).*

[வசை + ஒழி-.]

வசைவக்கணம் *vašai-vakkaṇam*, பெ.(n.) பழிப்பு (யாழ்ப்.); reproach. *"வசை வக்கணம் பேசுகிறான்".*

[வசை + வக்கணம்.]

வசைவினை *vasaivinai,* பெ.(n.) நன்றல்லா நடத்தை (வின்.); balme-worthy conduct or act.

[வசை + வினை.]

வசைவு[1] *vasaivu,* பெ.(n.) குற்றம் (திவ். பெரியாழ். 3, 4, 2 வ்யா. பக். 594); fault; blemish

[வசை → வசைவு.]

வசைவு[2] *vasaivu,* பெ.(n.) வசை, 1 பார்க்க; see *vasai.* *“செவிசுடு கீழ்மை வசைவுகளே வையும்”(திவ். திருவாய்.7, 5, 3).*

[வை→வசை → வசைவு.]

வஞ்சகச்சொல் *vañjaga-c-col,* பெ.(n.) ஏமாற்றும் பேச்சு; deceitful talk or speech.

த. வஞ்சம் → **Skt.** vañc.

[வங்கு → வஞ்சு →வஞ்சம் →வஞ்சகம் + சொல்]

வங்கு : வளைவு, கோணல். பிறரை ஏமாற்றும் தன்மையுள்ள மனக் கோணலான பேச்சு.

வஞ்சகம் *vañjagam,* பெ.(n.) 1. சூழ்ச்சி, தந்திரம்; artfulness, cunning. 2. ஏமாற்றம், ஏய்ப்பு; fraud, deceit. *“வஞ்சகப் பெரும் புலையனேனையும்’ (திருவாச.5, 96).* 3. மறைவு (யாழ். அக.); hiding. 4. நரி (யாழ்.அக.); jackal.

Skt. வஞ்சக.

[வங்கு→ வஞ்சு →வஞ்சம் →வஞ்சகம்.]

வஞ்சகமூடி *vañjaga-mūḍi,* பெ.(n.) ஆமை (யாழ்.அக.); tortoise.

[வஞ்சகம் + மூடி.]



வஞ்சகன் *vañjagaṉ,* பெ.(n.) 1. சூழ்ச்சிக்காரன், தந்திரக்காரன் (சூடா.); artful, cunning man. *“இருணிறவஞ்சகர்” (கம்பரா.படைத் தலைவர்வதை.10).* 2. ஏமாற்றுபவன்; deceiver, impostor, cheat. *“இந்த வஞ்சகனை யாள நினையாய்” (தாயு.மௌன.6).* 3. கயவன் (யாழ்.அக.); rogue. 4. நரி (யாழ்,அக.); jackal.

[வஞ்சகம்→ வஞ்சகன்.]

வஞ்சகி *vañjagi,* பெ.(n.) 1. தந்திரக்காரி, சூழ்ச்சிக்காரி; artful, cunning woman. 2. ஏமாற்றுபவள்; deceitful woman. *“என்சகிமார் வஞ்சகிமா ரென்றால்” (தனிப்பா. 1, 321, 15).*

[வஞ்சகன்(ஆ.பா.)→ வஞ்சகி (பெ.பா.).]

வஞ்சகுனி *vañjakuṉi,* பெ.(n.) வெள்ளி லோத்திரம்; the bark of wood apple tree.

வஞ்சத்தன்மை *vañja-t-taṉmai,* பெ.(n.) சூழ்ச்சித்திறம்; deceitfulness.

[வஞ்சம் + தன்மை.]

வஞ்சந்தீர்-தல் *vañjan-tir-,* 4 செ.கு.வி.(v.i.) பழிவாங்குதல் (யாழ். அக.); to be take revenge, to be revenged.

[வஞ்சம் + தீர்-.]

வஞ்சநவிற்சி *vañja-naviṟci,* பெ.(n.) ஏதேனும் ஒரு காரணத்தால் நிகழ்ந்த மெய்ப்பாடு முதலியவற்றை மற்றொரு காரணத்தால் நிகழ்ந்தனவாகக் கூறும் அணி (அணியி.86); a figure of speech in which the effect of one cause is ascribed to another or a feeling is dissembled by being attributed to a cause other than the real.

மறுவ. வஞ்சப்புகழ்ச்சி

[வஞ்சம் + நவில்→நவிற்சி.]

வஞ்சப்பழிப்பு *vañja-p-paḻippu,* பெ.(n.) ஒன்றன் பழிப்பினால், மற்றொன்றன் பழிப்புத் தோன்றக் கூறும் அணிவகை (அணியி.31); apparent censure of an object, artfully suggesting the censure of another object, a figure of speech.

[வஞ்சம் + பழிப்பு.]

வஞ்சப்புகழ்ச்சி[1] *vañja-p-pugaḻcci,* பெ.(n.) புகழ்வதைப் போன்று இகழ்வது, இகழ்வதைப் போன்று புகழ்வது; apparent praise of censure suggesting the opposite, irony.

[வஞ்சம் + புகழ்ச்சி]

வஞ்சப்புகழ்ச்சி[2] *vañja-p-pugaḻcci,* பெ.(n.) ஒன்றன் பழிப்பினால் அதன் புகழ்ச்சியேனும் மற்றொன்றன் புகழ்ச்சி யேனும், ஒன்றன் புகழ்ச்சியால் அதன் பழிப்பேனும் மற்றொன்றன் பழிப்பேனுந் தோன்றக் கூறும் அணிவகை (அணியி. 30); apparent praise or censure of an object, artfully suggesting the censure or praise either of the same object or another, an irony.

[வஞ்சம் + புகழ்ச்சி]

பழிப்பது போன்று புகழ்ந்துரைக்கும் கபிலர் பாடிய வஞ்சப்புகழ்ச்சிப் பாடல் வருமாறு:–

"பாரி பாரி யென்று பலவேத்தி
ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே"

(புறநா.107).

உலகு புரத்தற்கு மாரியு முண்டாயிருக்கப் பாரியொருவனையே புகழ்வர், செந்நாப் புலவரெனப் பழித்தது போலப் புகழ்ந்தவாறு என்னை? யெனின்,

"நாட்டிற் புலவர் பலரும்," "பாரி பாரி"யெனப் பாரியொருவனையே புகழ்கின்றனர். இவ் வுலகுயிர்களைப் புரத்தற்கண் பாரியொருவனே யன்றி மாரியும் உண்டே. இஃதென்ன வியப்பு" என்று கபிலர் உரைத்துள்ளது, ஓர்ந்துணரத் தக்கது.

மழை மிகுதியாகப் பெய்தால், பேரிழப்பே மிஞ்சும். வேளாண் பயிர்கள் அழியும்; மாந்தவுயிர்கள் காட்டாற்று வெள்ளத்தில் மடியும்; ஆனால், பாரியின் வள்ளண்மையால், புலவர் பெருமக்கள் வாழ்வாங்கு வாழ்ந்த குறிப்பும் பெறப்பட்டதறிக.

புகழ்வது போல இகழ்ந்துரைக்கும், திருக்குறளில் அமைந்துள்ள பாடல் வருமாறு,

"பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்" (குறள், 839).

பேதையர் அல்லது அறிவற்றவர்களிடம் கொள்ளும் நட்பு, எஞ்ஞான்றும், துன்பம் தாராது. ஏனெனில், நட்புசெய்து பிரியுங்காலத்தே துயரொன்றும் நேராது.

அறிவற்றவர்தம் நட்பினைப் புகழ்ந்துரைத்தல் போல், இகழ்ந்துரைக்கும் பாங்கு, உணர்த்தப்பட்ட தெனலாம்.

வஞ்சப்புகழ்ச்சியணி *vañja-p-pugaḻcci-y-aṇi,* பெ.(n.) வஞ்சப்புகழ்ச்சி[2] பார்க்க; see *vañja-p-pugaḻcci.*

[வஞ்சப்புகழ்ச்சி + அணி.]

வஞ்சப்பெண் *vañja-p-peṇ,* பெ.(n.) 1. கொற்றவையின் ஏவற்பெண்; a female servant of *koṟṟavai.* 2. சூழ்ச்சிக்காரி; artful, cunning woman, a woman of deceitful nature, sly woman. *"வஞ்சப் பெண்ணஞ்சுண்ட வண்ணல்" (திவ். பெரியதி. 2, 6, 7).*

[வஞ்சம் + பெண்]

வஞ்சபாவம் *vañja-pāvam,* பெ.(n.) வஞ்சத் தன்மை பார்க்க; see *vañja-t-taṉmai.* *"வஞ்ச பாவம் வரும்வழி மாற்றி" (உத்தரரா. அரக்கர். 226).*

வஞ்சம் *vañjam,* பெ.(n.) 1. ஏய்ப்பு, ஏமாற்றுகை, சூழ்ச்சி; fraud, deceit, craftiness. *"போற்றுமின் வஞ்சம்" (நாலடி. 172).* 2. பொய்; lie, falsity. *"வருந்த னின் வஞ்ச முரைத்து"* (கலித்.89). 3. கொடுமை, வன்முறை; cruelty, violence. *"வஞ்சக் கருங்கட னஞ்சுண்டார் போலும்" (தேவா.519, 4).* 4. வாள் (பிங்.); sword. 5. வஞ்சினம் (அரு.நி.); oath, asseveration. 6. பழிக்குப் பழி; revenge. 7. மாயம்; illusion. 8. சிறுமை (திவா.); smallness, littleness. 9. அழிவு, சிதைவு; destruction, ruin. *"நஞ்சினி தருத்தினு நல்வினை மாட்சி வஞ்ச மில்லோர்க் கமிழ்தா கற்றே" (ஞானா. 32, 2).*

[வஞ்சி→வஞ்சம்.]

வஞ்சமகள் *vañja-magaḷ,* பெ.(n.) வஞ்சப் பெண், 2 பார்க்க; see *vañja-p-peṇ.*

[வஞ்சம் + மகள்]

வஞ்சம்வை-த்தல் *vañjam-vai-,*4 செ. கு.வி. (v.i.) பழி வாங்கப் பார்த்தல் (வின்.); to harbour malicious thoughts and be on the watch for revenge.

வஞ்சரம் *vañjaram,* பெ.(n.) வஞ்சிரம் பார்க்க; see *vañjiram.*

தெ. வஞ்சரமு

வஞ்சலம் *vañjalam,* பெ.(n.) பாம்பு (சங்.அக.); serpent.

வஞ்சவம் *vañjavam,* பெ.(n.) வஞ்சலம் (சது.) பார்க்க; see *vañjalam.*

வஞ்சவிளங்கம் *vañja-viḷaṅgam,* பெ.(n.) வஞ்சகாரம் பார்க்க; see *vañja-kāram.*

வஞ்சவிறுதி *vañja-v-iṟudi,* பெ.(n.) பொய்ச்சாக்காடு; pretended death. *"வஞ்சவிறுதி நெஞ்சுணத் தேற்றி" (பெருங். இலாவாண. 9, 39).*

[வஞ்சம் + இறு→இறுதி.]

வஞ்சன் *vañjaṉ,* பெ.(n.) 1. சூழ்ச்சித் திறமுடையவன்; deceitful person. *"வஞ்சனே னடியே னெஞ்சினிற் பிரியா வானவா" (திவ்.பெரியதி.1, 6, 7).* 2. வஞ்சகன் 1, 3 பார்க்க; see *vañjagaṉ.*

[வஞ்சம்→வஞ்சன்.]

வஞ்சனம் *vañjaṉam,* பெ.(n.) 1. சூழ்ச்சி, ஏய்ப்பு, வஞ்சகம்; craftiness, fraud, deceit. *"தலைவன் கண் நிகழ்ந்த வஞ்சனம்" (கலித். 4, உரை).* 2. வஞ்சர மீன் வகை (யாழ்.அக.); a kind of seer fish.

[வஞ்சி→வஞ்சனம். அனம் = ஒரு தொழிற் பெயரீறு.]

வஞ்சனவளி *vañjaṉavaḷi,* பெ.(n.) வளியின் விளைவாலேற்பட்ட குடலிறக்கம்; inguinal hernia.

வஞ்சனி *vañjaṉi,* பெ.(n.) 1. காளியின் ஏவற்பெண் இடாகினி (பிங்.); *Iḍāgiṉi,* a female servant of *kāḷi.* 2. மலைமகள் (நாமதீப. 23); *pārvadi.* 3. மாயையென்னும் பெண் தெய்வம்; the goddess *māyā* or illusion. *“வஞ்சனி தன்படை யாண்டு போந்துழி” (கந்தபு. யுத்தகாண். நகர்புகு. 45).* 4. பெண் (சது.); woman. 5. வஞ்சமகள் (இலக்.அக.); cunning woman. 6. ஆணை (யாழ்.அக.); asseveration, solem or declaration.

[வஞ்சம்→வஞ்சனி]

வஞ்சனை¹ *vañjaṉai,* பெ.(n.) ஒரு வகை நோய்; a kind of disease (சா.அக.).

வஞ்சனை² *vañjaṉai,* பெ.(n.) 1. வஞ்சகம், 1, 2 பார்க்க; see *vañjagam. “புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய” (திருவாச., 1, 55).* 2. மாயை (பிங்.); illusion. *“வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கி” (கம்பரா. உருக்காட்.17).* 3. வஞ்சனைப்புணர்ப்பு பார்க்க; see *vañjaṉai-p-puṇarppu. “சித்திரவஞ்சனை புல்லியவறிந்து” (சிலப்.3, 56).* 4. பொய் (பிங்.); lie, falsity. 5. போலித்தன்மை; falsehood, duplicity. 6. சூளுரை (வின்.); oath, pledge. 7. ஆணையிட்டுக் கூறுதல்; asseveration. 8. தெய்வப் பெண் (பிங்.); Goddess. 9. பெண் (பிங்.); woman.

[வஞ்சம்→வஞ்சனை]

வஞ்சனைப்புணர்ப்பு *vañjaṉai-p-puṇarppu,* பெ.(n.) இசைகொள்ளா எழுத்துகளின் மேலே வல்லொற்று வந்த போது, மெல்லொற்றுப் போல நெகிழ்த்துப் புணர்க்கை (சிலப். 3, 56, அரும்.); a method of composition, in which the letters of the *vaṉkaṇam,* sound like those of the *meṉ-kaṇam* the stress not falling on them.

[வஞ்சனை + புணர்ப்பு]

வஞ்சனையாளன் *vañjaṉai-y-āḷaṉ,* பெ.(n.) ஏமாற்றுவோன், வஞ்சிப்போன் (பிங்.); deceiver, guileful person, cheat.

[வஞ்சனை →வஞ்சனையாளன்]

வஞ்சி¹–த்தல் *vañji-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஏமாற்றுதல், மோசடி செய்தல், சூழ்ச்சி செய்தல்; to deceive, defraud, cheat. *“வஞ்சித்து வாழ்வாரின் வன்கணா ரில்” (குறள், 276).*

[வங்கு→வஞ்சு→வஞ்சி–.]

த. வஞ்சி > **Skt.** vañc (வஞ்ச்).

(ஒ.நோ.) அங்கு → அஞ்சு; பொங்கு → பொஞ்சு. தமிழிலும், வடமொழியிலும், வஞ்சித்தல், வஞ்சம், வஞ்சகம் போன்ற சொற்களுக்கு "வங்கு" என்பதே மூலம். ‘வங்கு’ என்னும் சொல், ‘வள்’ என்னும் மூலவேரினின்று கிளைத்தது. ‘வள்’ என்ற வேரடி, வளைதற் கருத்தினை அடிப்படைப் பொருண்மையாகக் கொண்டது. வளைதற் கருத்திலிருந்து, ஏமாற்றுக் கருத்துப் பிறந்தது என்பார் மொழிஞாயிறு. ஏமாற்றுக் கருத்தில் பிறந்த சொற்கள், உலக வழக்கிலும், இலக்கிய வழக்கிலும், பேராளமாக, அஃதாவது வரையிறந்து மக்களிடையே வழக்கூன்றியுள்ளன.

மக்கள் வழக்கு:–

(எ.கா.) வங்கு, வஞ்சு, வஞ்சி, வஞ்சம், வஞ்சகம், வஞ்சனம், வஞ்சனை.

கூட்டுச்சொற்களுள் சில :-

வஞ்சகப்பேர்வழி : வஞ்சனையாளன்

வஞ்சகக்காரன் : வஞ்சகக்காரி

வஞ்சனைசெய்தல்.

இச்சொல்லின் வரலாறு பற்றி மொழிஞாயிறு மொழிவது: இருமொழியிலும் வங்கு என்பதே மூலம். ஆயின், வடவர், வக்கு (வக்) என்னும் வலித்தல் வடிவிற் காட்டுவர். இதினின்றே வக்ர, வக்ரீகரண முதலிய வடசொற்கள் பிறக்கும்.

ஒருவனை ஏமாற்றுவது, வட்டஞ்சுற்றி அவனை வளைவது போலிருத்தலால், வளைதற் கருத்தில், ஏமாற்றுக் கருத்துப் பிறந்தது. circumvent என்னும் ஆங்கிலச் சொல்லையும் நோக்குக.

இலக்கிய வழக்கு :

1. "வஞ்சித்து வாழ்வாரின் வன்கணா ரில்" (குறள், 276).

2. "வஞ்சே வல்லரே" (தேவா. 828:3).

3. "வஞ்சகப் பெரும்புலைய னேனையும்" (திருவாச.5:6).

4. "இருணிற வஞ்சகர்" (கம்பரா. படைத்தலைவர்வதை.10).

5. "போற்றுமின் வஞ்சம்" (நாலடி, 172).

வஞ்சி² *vañji*, பெ.(n.) 1. வஞ்சிப்பா பார்க்க; see *vañji-p-pā*. *"வஞ்சி யடியே யிருசீர்த் தாகும்" (தொல். பொருள்.357).* 2. மருத யாழ்த்திறத்து ளொன்று (பிங்.); a secondary melody-type of marudam class.

வஞ்சி³ *vañji*, பெ.(n.) 1. வஞ்சிக்கொடி பார்க்க; see *vañji-k-koḍi*. *"கரிக்குன்றுரித் தஞ்சுவித்தாய் வஞ்சிக் கொம்பினையே" (திருவாச. 6, 19).* 2. மரவகை (L.); glabrous mahua of the Malabar coast. 3. மரவகை (L.); four seeded willow. 4. சீந்தில் படர்கொடி (மூ.அக.); gulancha. 5. கூகைநீறு (நாமதீப.398); arrow-root flour. 6. குடை (பிங்.); umbrella.

வஞ்சி⁴ *vañji*, பெ.(n.) 1. புறத்திணையுள் மண்கொள்ளப் பகைவர் மேற்செல்வதைக் கூறுவது (தொல்.பொருள். 62); major theme describing the advance of a kind against his enemies with a view to annexing their territories, one of *puṟattiṇai*. 2. அரசன் வஞ்சிமலரைத் தலையிற் சூடிப் பகைவர் நாட்டைக் கொள்ளுமாறு அவர் மேற்செல்லக் கருதியதைக் கூறும் புறத்துறை (பு.வெ.3, 1); theme describing the decision of a king to wear the vañji flowers on his head and to advance against his enemies, with a view to annexing their territories.

வஞ்சிப்போர் பற்றி நச்சினார்க்கினியர் கூறுவது:-

வஞ்சி யென்றது ஒருவர் மேல் ஒருவர் சேரல் (தொல்.பொருள்.61, நச்.).

வஞ்சி⁵ *vañji*, பெ.(n.) 1. பெண் (பிங்.); woman. 2. அறத்தேவி (யாழ். அக.); Goddess of virtue.

வஞ்சி⁶ *vañji*, பெ.(n.) 1. சேரர் தலைநகரான கருவூர்; *karūr*, capital of the *cēra* country. *"வாடாவஞ்சி வாட்டும்" (புறநா.39, 17).* 2. கொடுங்கோளூர்; *koḍuṅgōḷūr*. *"வஞ்சி மணிவா யிலையணைந்தார்" (பெரியபு. வெள்ளானைச். 22).* 3. சேரநாடு (மனோன். ii, 3, 75); the *cēra* country.

வஞ்சி[7] *vañji,* பெ.(n.) 1. படகு; canoe. 2. கோயிலிற் காணிக்கை செலுத்தும் உண்டிப் பெட்டி; hundi chest or box kept in a temple for voluntary contributions to satisfy a row. *இவன் வஞ்சி முறித்த கள்வன் (இ.வ.).*

ம. வஞ்சி

வஞ்சி[8] *vañji,* பெ.(n.) 1. நம்பச்செய்து கைவிடுதல்; betray. 2. கொடுமையாக ஏமாற்றுதல்; cheat cruelly, deceive, desert. *'கணவனால் வஞ்சிக்கப்பட்ட பெண்'.*

வஞ்சிக்களம் *vañji-k-kaḷam,* பெ.(n.) வஞ்ச[3] 9, 10 பார்க்க; see *vañja. "எழில் வஞ்சிக் களத்திற்றோன்றி" (தேசிகப். பிரபந்தஸாரம். 8).*

[வஞ்சி[3] +களம்]

வஞ்சிக்கொடி[1] *vañji-k-koḍi,* பெ.(n.) 1. தொப்புள் கொடி; umbilical cord. 2. நஞ்சுக் கொடி; placental cord (சா.அக.).

வஞ்சிக்கொடி[2] *vañji-k-koḍi,* பெ.(n.) கொடி வகை (L.); common rattan of South India.

[வஞ்சி[3] + கொடி]

வஞ்சிக்கொடிச்சுண்ணம் *vañji-k-koḍi-c-cuṇṇam,* பெ.(n.) குடற்சுண்ணம்; a kind of medicine prepared from the umbilical cord (சா.அக.).

வஞ்சிக்கொடிச்செயநீர் *vañji-k-koḍi-c-ceya-nīr,* பெ.(n.) சாகா உப்பு செயநீர்; a kind of pungent liquid preparation.

வஞ்சிச்சீர் *vañji-c-cīr,* பெ.(n.) வஞ்சியுரிச்சீர் (தொல்.பொருள். 332) பார்க்க; see *vañji-y-uri-c-cīr.*

[வஞ்சி[1] + சீர்]

வஞ்சித்தாழிசை *vañji-t-tāḻišai,* பெ.(n.) இருசீரடி நான்காய், ஒரு பொருண்மேல் மூன்று செய்யுள் அடுக்கிவரும் வஞ்சிப்பாவினம் (காரிகை, செய்.14); a poem of three stanzas of four lines each, each line having two material feet and the whole poem dealing with the single theme.

[வஞ்சி[2] + தாழிசை]

தாழிசை = தாழம்பட்ட ஓசையால் அளவொத்து ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வருவது.

இரண்டு சீர்களால் ஆக்கப்பெற்ற நான்கடிகளைக் கொண்டு வரும். ஒரு பொருள்மேல் மூன்று செய்யுட்கள் கோவையாக அடுக்கி வரும் வஞ்சித்தாழிசைப் பாடல் வருமாறு :

1. *"பிணியென்று பெயராமே*
 துணிநின்று தவஞ்செய்வீர்
 அணிமன்ற லுமைபாகன்
 மணிமன்று பணியீரே"

2. *"என்னென்று பெயராமே*
 கன்னின்று தவஞ்செய்வீர்
 நன்மன்ற லுமைபாகன்
 பொன்மன்று பணியீரே"

3. *"அதிதென்று பெயராமே*
 வரைநின்று தவஞ்செய்வீர்
 உருமன்ற லுமைபாகன்
 திருமன்று பணியீரே"

மேற்குறித்த வஞ்சித்தாழிசை மன்று பணிதல் வேண்டும் என்ற பொருண்மேல், மூன்று செய்யுட்களும் அடுக்கி வந்தன. ஒவ்வொரு செய்யுளும் நான்கடிகள் கொண்டுள்ளமையையும் ஒவ்வோரடியும், இரண்டுசீர்களால் ஆக்கப் பெற்றமையையும் காண்க.

வஞ்சித்தாழிசை பற்றி யாப்பருங்கலக்காரிகை நுவல்வது : *"ஒருபொருண்மேல் மூன்றடுக்கி யல்லது வாரா" (யாப்.கா.46)..*

இளம்பூரணர், வஞ்சித்தாழிசை பற்றிப் பகர்வது:– *"குறளடி நான்கினால் ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வரும்" (தொல்.செய்யுள்.175, இளம்.).*

வஞ்சித்திணை *vañji-t-tiṇai,* பெ.(n.) வஞ்சி[4], 1 (பு.வெ.3, உரை) பார்க்க; see *vañji.*

[வஞ்சி[4]+திணை.]

வஞ்சித்துறை[1] *vañji-t-tuṟai,* பெ.(n.) இருசீரடி நான்காய், ஒரு பொருள்மேல் ஒரு செய்யுள் வருவதாகிய வஞ்சிப்பாவினம் (காரிகை, செய். 14); a stanza of four lines of two metrical feet each, dealing with the single theme.

[வஞ்சி[2] + துறை]

ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வராது, தனிச் செய்யுளாய் வரும். அச்செய்யுள் இரண்டு சீர்களைக் கொண்ட நான்கு அடிகளை உடையது.

(எ.டு)

"மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்"

மேற்குறித்த பாடலின் கண்ணே முதற்சீர் கூவிளங்கனியாயும், மற்றச்சீர் விளச்சீராயும் வந்துள்ளமை காண்க.

வஞ்சித்துறை[2] *vañji-t-tuṟai,* பெ.(n.) வஞ்சி[4], 2 பார்க்க; see *vañji. ''வஞ்சியும் வஞ்சித் துறையுமாகும்'' (பு.வெ.3).*

[வஞ்சி[2] + துறை]

வஞ்சித்தூக்கு *vañji-t-tūkku,* பெ.(n.) பரிபாடலில் வஞ்சியடிகளால் வரும் பகுதி (தொல்.பொருள்.433, உரை); the lines of *vañji* metre, mainly occuring in *pari-pāḍal.*

[வஞ்சி[2] + தூக்கு.]

வஞ்சிநாடு *vañji-nāḍu,* பெ.(n.) 1. சேரநாடு (மனோன்.ii, 3, 75); the *cērā* country. 2. திருவிதாங்கூர் மாநிலம்; the (erstwhile) Travancore state.

[வஞ்சி[2] + நாடு]

வஞ்சிநெடும்பாட்டு *vañji-neḍum-pāṭṭu,* பெ.(n.) பத்துப்பாட்டுள் கரிகாற் பெரு வளத்தானைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய பாட்டு; a poem on the *Cōḷa* king *Karikāṟ-peruvaḷattāṉ* by *Kaḍiyalūr-uruttiraṅkaṇṇaṉār* one of the *pattu-pāṭṭu.*

[வஞ்சி + நெடு(மை) + பாட்டு]

வஞ்சிப்பனிநீர் *vañji-p-paṉi-nīr,* பெ.(n.) பனிக்குடத்து நீர்; liquor amni (சா.அக.).

வஞ்சிப்பா *vañji-p-pā,* பெ.(n.) நால்வகைப் பாவினுளொன்று; one of the four chief kinds of metre.

[வஞ்சி[2] + பா[4]]

வஞ்சி : வஞ்சமுடையது. அளவடி முதலிய அடிகளையும் புறநிலை வாழ்த்து முதலிய பொருள்களையும், அமைந்து வரவிடாது, வஞ்சம் பொருந்தி நிற்றலால் வஞ்சிப்பா எனப்பட்டது.

1. இரண்டு சீர்களைக் கொண்ட அடியாலேனும், மூன்று சீர்களைக் கொண்ட அடியாலேனும் வரும். அளவடி முதலிய மற்றைய

அடிகள் வரப்பெறா; 2. பெரும்பான்மையுந் தன்தளையும் சிறுபான்மை பிறதளையும் தழுவிவரும்; 3. தூங்கலோசை யுடையதாய் வரும்; 4. தனிச்சொற் பெற்று அகவற் சுரிதகத்தால் முடிவு பெறும். வெள்ளைச் சுரிதகம் வரப்பெறாது.

தூங்கலோசை :– 1. ஏந்திசைத் தூங்கல்; 2. அகவற்றூங்கல்; 3. பிரிந்திசைத் தூங்கல் என மூவகைப்படும்.

1. ஏந்திசைத் தூங்கல் : ஒன்றிய வஞ்சித்தளை (கனி முன் நிரையும், நிழல் முன் நிரையுமாம்)யால் வருவது. (எ.டு) *"வளவயலிடைக் களவயின்மகிழ்"*.

2. அகவற்றூங்கல் : ஒன்றாத வஞ்சித் தளை (கனி முன் நேரும், நிழல் முன் நேரும்)யான் வருவது. (எ–டு) *"தேம்புனலிடை மீன்றிரிதரும்"*.

3. பிரிந்திசைத் தூங்கல் : ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை, பிறதளைகள் என்பன கலந்து வருவது. (எ–டு) *"துணையில்லாத் துறவுநெறி" (பிற தளையாகிய கலித்தளை வந்தது)*.

குறளடி வஞ்சிப்பா

பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவு
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
மகிழும் மகிழ்தூங் கூரன்
நாளும்
புகழ்த லானாப் பெருவண் மையனே.

இச்செய்யுள் குறளடியால் வரப்பெற்று "நாளும்" என்னுந் தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் முடிந்தது.

சிந்தடி வஞ்சிப்பா

(எ–டு)

'எறிவெண்டிரைக் கடல்சூழ்புவி யெளிதெய்தினும்
இறவந்துடைப் பொழுதுய்ந்திட லுளதென்னினும்
அறிவின்றிறத் துயர்ந்தோர்படி றிசைக்கின்றிலர்
அதனால் முன்வரு மின்பினு முறைப்பட நாடிற்
பின்வரு மிடர்மிகப் பெரிதா மெனவே'

இச்செய்யுள் சிந்தடியால் வந்து "அதனால்" என்னும் தனிச்சொல் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் முடிந்தது. (வஞ்சி – வஞ்சமுடையது. அளவடி முதலிய அடிகளையும், புறநிலை வாழ்த்து முதலிய பொருள்களையும் அமைந்து வர விடாது வஞ்சம் பொருந்தி நிற்றலால் வஞ்சிப்பா எனப்பட்டது).

வஞ்சிப்பாவின் இனம் :–

1. வஞ்சித் தாழிசை; 2. வஞ்சித் துறை; 3. வஞ்சி விருத்தம் என்பன வஞ்சிப் பாவின் இனங்கள் ஆகும்.

பத்துப் பாட்டுள் ஒன்றாகிய பட்டினப்பாலை, பெரும்பாலும் வஞ்சி அடிகளான் அமைந்து, ஆசிரிய அடிகளால் முடிவதனால், அதனை வஞ்சி நெடும்பாட்டெனவும் கூறுவர். புறநானூற்றுச் செய்யுட்களிற் சில வஞ்சியடிகளைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ளன.

வஞ்சிப்பா குறித்து இளம்பூரணர் இயம்புவது:– வஞ்சியுரிச் சீரானும், ஏனைச் சீரானும் இருசீரடியானும், முச்சீரடியானும், தூங்க லோசையானும் வந்து, தனிச்சொல் பெற்று, ஆசிரியச் சுரிதகத்தான் இறுவது. இப்பா இருசீரடி வஞ்சிப்பா, முச்சீரடி வஞ்சிப்பா என இருவகைப்படும். ஆசிரியச் சுரிதகத்தாலிற்ற இருசீரடி வஞ்சிப்பா தனிச்சொற் பெறுதலுண்டு (தொல்.செய்யுள்.113, இளம்.).

யாப்பருங்கலக்காரிகை கூறுவது :- வஞ்சிப்பா ஆசிரியச் சுரிதகத்தால் இறுவதல்லது வெள்ளைச் சுரிதகத்தால் இறப்பெறாது (யாப். கா.47).

வஞ்சிப்பாட்டு[1] *vañji-p-pāṭṭu,* பெ.(n.) பழைய நாடக நூல்களுளொன்று (தொல்.பொருள். 492, உரை); an ancint dramatic poem.

[வஞ்சி[2] + பாட்டு]

வஞ்சிப்பாட்டு[2] *vañji-p-pāṭṭu,* பெ.(n.) ஓடப்பாட்டு (நாஞ்.); boatman's song.

[வஞ்சி[7] + பாட்டு]

வஞ்சிப்பால் *vañji-p-pāl,* பெ.(n.) முலைப் பால்; breast milk (சா.அக.).

வஞ்சிப்பு *vañjippu,* பெ.(n.) ஏமாற்றுகை (இலக்.அக.); deceit, cheating, guile.

[வஞ்சி [1] → வஞ்சிப்பு]

வஞ்சிமாலிதழி *vañjimalidaḻi,* பெ.(n.) கொத்தான்; a twiggy plant-*Cassytha filiformis* (சா.அக.).

வஞ்சியர்காட்சி *vañjiyar-kāṭci,* பெ.(n.) கண்ணாடி (யாழ்.அக.); mirror.

[வஞ்சி[5] → வஞ்சியர் + காட்சி]

வஞ்சியர்மயக்கி *vañjiyar-mayakki,* பெ. (n.) 1. பெருந்தும்பை; a big species of dead nettle flower. 2. இருமல், கோழை முதலியவற்றை நீக்கும் மருந்துக் குணமுள்ள தும்பை; a kind of of herbal medicine 'Tumbai'. *இது பதினேழு வகை தும்பை வகைகளுள் ஒன்றென சா.அக. மருத்துவ அகரமுதலி கூறும்.*

வஞ்சியரவம் *vañji-y-aravam,* பெ.(n.) வீர முரசுடனே யானை பிளிறப் பகைவர்மீது சேனை மிகுசினத்துடன் கிளர்ந்தெழுவதைக் கூறும் புறத்துறை (பு.வெ.3, 2); theme describing the furious advance of an army, against the enemy, with drums beating and elephant's roaring.

[வஞ்சி[4] + அரவம்]

வஞ்சியன் *vañjiyaṉ,* பெ.(n.) வஞ்சியான் (மனோன்.) பார்க்க; see *vañjiyāṉ.*

[வஞ்சி [1] → வஞ்சியன்]

வஞ்சியான் *vañjiyāṉ,* பெ.(n.) 1. சேர மன்னன்; the *cēra* king. 2. சேர நாட்டான்; native of the *cēra* king. *"வஞ்சியான் வஞ்சியான்" (முத்தொள்.616).*

வஞ்சியுரிச்சீர் *vañji-y-uri-c-cīr,* பெ.(n.) தேமாங்கனி, புளிமாங்கனி, கூவிளங்கனி, கருவிளங்கனி என்று நான்குவகைப்பட்ட, நிரையசையீற்றிலமைந்த மூவசைச் சீர்கள்; metrical foot of three *asai* or syllables, chiefly found in *vañji-p-pā,* of four varieties, viz. *tēmāṅkaṉi, puḷimāṅkaṉi, kūviḷaṅkaṉi, karuviḷaṅkaṉi.*

[வஞ்சி + உரிச்சீர்]

நிரையீற்று வஞ்சியுரிச்சீர் முதலசையோ டொன்றுவனவும், ஒன்றாதனவும் என இரு வகைப்படும். அவற்றுள் ஒன்றி வருவது நிரைபு முதலாகிய சீரொடு உறழ ஐந்து வகைப்படும். ஒன்றாதது, நேர்பு, நேர் முதலாகிய சீரொடு உறழ ஐந்து வகைப்படும்.

உரியசையீற்று வஞ்சியடியும், அவ்வாறே உறழ ஐந்து வகைப்படும் (தொல்.செய்யுள்.48, இளம்.).

வஞ்சியெரு *vañji-y-eru,* பெ.(n.) ஓர் வகை மருந்துப்பு; a rare salty preparation acting as king of medicine (சா.அக.).

வஞ்சிரம் *vañjiram,* பெ.(n.) 1. நீலநிறமும் ஆறடி வளர்ச்சியுமுடைய கடல்மீன் வகை; sea-fish, bluish, attaining 6 feet in length. 2. நீல நிறமும், மூன்றடி வளர்ச்சியுமுடைய கடல்மீன் வகை; seer, bluish, attaining 3 feet in length.

[வன்–மை + சிரம்.]



பாப்பிளாக்சை மாவுலசி என்னும் இனத்தது. எலும்புச் சட்டகமுள்ள கடல் மீன்கள் சிபியம் (Cybium), சகாம்பொரோமோரசு (Scombero -mours) என்னும் குலங் (சாதி)களைச் சேர்ந்தவை. 4, 5 அடி நீளம் வளரக்கூடியவை; இவற்றின் செதில்கள் மிகச் சிறியவை. சில சமயங்களில் செதில்கள் இருப்பதில்லை. முதுகின் நடுக்கோட்டிலே இருக்குப் இரண்டாவது முதுகு துடுப்புக்குப் பின்னால் ஏழு அல்லது இன்னும் மிகுதியான சிறு துடுப்புகள் உண்டு. அவ்வாறே மலவாயில் துடுப்புக்குப் பின்னாலும் சிறு துடுப்புகள் இருக்கும். வாலின் இரு பக்கங்களிலும் நெடுக்கில் செல்லும் புடைப்புக்கள் பக்கத்திற்கு நன்றாக இருக்கும். வால் நன்றாக இரண்டு பிரிவுள்ளதாக இருக்கும். நிறம் உடம்பின் மேற்பாகம் எஃகு போன்ற நீலநிறமுள்ளது. அடிவயிற்றுப் பாகம் வெள்ளி போன்று வெண்மையாக இருக்கும். உடம்பின் பின் பக்கங்களிலே தெளிவில்லாத பட்டைகள் அல்லது புள்ளிகள் உண்டு.

வஞ்சிரம் மிக விரைவாக நீந்திச் செல்லும். பொதுவாக இது மேற்பரப்பும் ஆழமும் இல்லாத நடுப்பரப்பு நீரில் திரியும். அடிக்கடி உயரக் காற்றில் துள்ளும். இது கூட்டமாகச் செல்லும் சிறு மீன்கள், இறால் முதலியவற்றைப் பின் தொடர்ந்து சென்று பிடித்து விழுங்கும்.

இதைத் தூண்டில் கயிறு எறிந்து பிடிப்பது சிறந்த வேட்டையாகும். வஞ்சிரம் மிக நல்ல உணவு மீன்.

வஞ்சிரா *vañjirā,* பெ.(n.) கொடிவேலி; a plant lead wort, plumbage zeylanica (சா.அக.).

வஞ்சிரி *vañjiri,* பெ.(n.) விருசு; a kind of tree (சா.அக.).

வஞ்சிவிருத்தம் *vañji-viruttam,* பெ. (n.) முச்சீரடி நான்காய் வரும் வஞ்சிப்பாவினம் (காரிகை, செய்.14); a stanza of four lines of three metrical feet each.

*[வஞ்சி² + **Skt.** விருத்தம்]*

விருத்தமென்பது தமிழில் மண்டில மெனப்படும். பிற்றைத் தமிழ் யாப்பில் விருத்தமே பெருவழக்கானமையான் மண்டிலமென்னும் பெயர் மறைந்து விருத்தமென்னும் பெயர் வேறூன்றிய தென்க.

இருசீரடி, பெறாது, முச்சீரடியாய்த் தனித்து வரும் வஞ்சிவிருத்தப்பா வருமாறு :–

"ஒன்றி னம்பர லோகமே
யொன்றி னம்பர லோகமே
சென்று மேவருந் தில்லையே
சென்று மேவருந் தில்லையே"

வஞ்சிவிருத்தம் பற்றி இளம்பூரணர் கூறுவது :- *"முச்சீரடி நான்காகி வரும்" (தொல். செய்யுள்.48, இளம்.).*

வஞ்சிவேந்தன்[1] *vañji-vēndaṉ*, பெ.(n.) சேரர்கள் கொண்டிருந்த பட்டப் பெயர்களுள் ஒன்று; one of the title of *cērās* kings.

[வஞ்சி +வேந்தன்]

'வஞ்சி வேந்தன்' என்ற பெயருக்கு 'வஞ்சி'யை தலை நகராக கொண்டிருந்தவன் என்ற பொருளும் உண்டு.

வஞ்சிவேந்தன்[2] *vañji-vēndaṉ*, பெ.(n.) 1. மண்வேட்கையால் மேற்சென்றேனும் எதிர்த்தேனும் போர் செய்யும் அரசன் (தொல். பொருள்.62, உரை); king who makes constant war, impelled by land-hunger. 2. சேரன் (பிங்.); *cēra* king. 3. வஞ்சி நகர்த் தலைவன்; *cēra* king, as ruler of *vañji*.

[வஞ்சி[6] + வேந்தன்]

வஞ்சீசன் *vañjīšaṉ*, பெ.(n.) திருவிதாங்கூர் மன்னன்; the king of Travancore. *'வஞ்சீச மங்களம்'.*

*[வஞ்சி[6] + **Skt.** ஈசன்]*

வஞ்சு *vañju*, பெ.(n.) வஞ்சகம் பார்க்க; see *vañjagam. "வஞ்சே வல்லரே" (தேவா.828, 3).*

[வங்கு → வஞ்சு = ஒருவனை ஏமாற்றுகை, ஏய்க்கை (வ.வ.பக்.75)]

வஞ்சுலோவு *vañju-lōvu*, பெ.(n.) வஞ்சி பார்க்க; see *vañji*(சா.அக.).

வஞ்சுளம்[1] *vañjuḷam*, பெ.(n.) 1. அசோகு, 1 (மலை.); *Ašōgā* tree. 2. வேங்கை மரம் (மலை.); East Indian kino. 3. வஞ்சிக்கொடி (நாமதீப.311) பார்க்க; see *vañji-k-koḍi*.

வஞ்சுளம்[2] *vañjuḷam*, பெ.(n.) வஞ்சுளன் (அரு.நி.) பார்க்க; see *vañjuḷaṉ*.

வஞ்சுளன் *vañjuḷaṉ*, பெ.(n.) காரிப்புள் (பிங்.); a species of king crow.

மறுவ. கரிக்குருவி

வஞ்சூரன் *vañjūraṉ*, பெ.(n.) மீன் வகை (வின்.); a kind of fish.

வஞ்சூலிகம் *vañjūligam*, பெ.(n.) சூரத் தாவரை; a plant, senna from surat-*Cassia angustifolia of Surat* (சா.அக.).

வஞ்சை *vañjai*, பெ.(n.) வஞ்சி[6] 1, 2 பார்க்க; see *vañji. "வஞ்சையப்பர்க் கறிவிப்பதே" (தேவா.1167, 10).*

[வஞ்சி[6] → வஞ்சை]

வஞ்சைக்களம் *vañjai-k-kaḷam*, பெ.(n.) வஞ்சி[6]1, 2 (மனோன்.) பார்க்க; see *vañji*.

[வஞ்சி[6] →வஞ்சை + களம்]

வட்கர்[1] *vaṭkar*, பெ.(n.) 1. குற்றம் (புறநா. 100, உரை); fault. 2. இடைமுரிவு (சிலப்.25, 146.அரும்.); cut or injury in the middle, as on a palmyra stem. *"வட்கர் குற்றமெனினும் அமையும்" (பழைய.புறநா.100).*

[வள் →வட்கு →வட்கர்.]

வட்கர்[2] *vaṭkar*, பெ.(n.) வட்கார் பார்க்க; see *vaṭkār. "வட்கர் போகிய வளரிளம் போந்தை" (புறநா.100).*

[வட்கார் →வட்கர்.]

வட்கார் *vaṭkār,* பெ.(n.) பகைவர்; enemies. *"வட்கார் நிரையன் றழலெழ வெய்து நின்றோன்" (திருக்கோ.152). "வட்கார் மேற்செல்லுவது வஞ்சியாம்" (பு.வெ.மா.).*

வட்காரம் *vaṭkāram,* பெ.(n.) வெடிகாரம் (சங்.அக.); kind of salt.

வட்கிலான் *vaṭkilāṉ,* பெ.(n.) பகைவன் (இலக்.அக.); enemy, foe.

வட்கு[1] –தல் *vaṭku-,* 5 செ.கு.வி.(v.i.) 1. வெட்குதல்; to be ashamed. *"வட்கின வெனப் பெரி தடைத்தகுயில் வாய்கள்" (பாகவத.10, வேய்ங்குழ.6).* 2. கூசுதல்; to be shy, bashful. *"அரன்குன்றென்றே வட்கி" (திருக்கோ.116).* 3. கெடுதல்; to be destroyed. *"அதகங்கண்ட பையணனாகம் போல வட்க" (சீவக.403).* 4. தாழ்தல்; to humble, to lower oneself. *"வாடிய காலத்தும் வட்குபவோ" (பழமொ. 204).* 5. ஒளி மழுங்குதல் (சூடா.); to be dim, to be lit faintly.

[வெட்கு→வட்கு–.]

வட்கு[2]–தல் *vaṭku-,* 5 செ.கு.வி. (v.i.) வளம் பெறுதல், பகட்டாயிருத்தல்; to thrive well, prosper, to flourish, to be luxuriant, as a plant. *"முட்கொணச்சுமரம்.... வட்சி நீண்டதற் பின் மழுவுந் தெறும்"(சூளா. சீய.72).*

வட்கு[3] *vaṭku,* பெ.(n.) 1. வெட்கம்; shame. 2. நாணம்; bashfulness, shyness, modesty. *"வட்கில ளிறையும்" (திவ். திருவாய். 7, 2, 3).* 3. கேடு; injury, ruin. *"வட்கிலானைக் கவான்மிசை வைத்து" (காஞ்சிப்பு.நாரசிங்.6).*

[வள்கு→வட்கு.]

இஃதும் வளைதற் கருத்து மூலமாகும். வெட்கத்தினால் தலை சாய்கை.

வட்கு[4]–தல் *vaṭku-,* 5 செ.கு.வி.(v.i.) 1. வணங்குதல், வழிபடுதல்; to worship. 2. வளைதல்; to bend.

[வள் →வள்கு→வட்கு.]

வட்கார் = வணங்கார். வளைதற்கருத்து வேரடியினின்று கிளைத்த சொல். வட்கு என்னும் வடிவம், வடமொழியில் இல்லை (வ.வ.2 : 76).

வட்சத்தலம் *vaṭca-t-talam,* பெ.(n.) மார்பு; chest (சா.அக.).

வட்சாத்திரி *vaṭcāttiri,* பெ.(n.) நெஞ்செலும்பு; sternum (சா.அக.).

வட்டக்கட்டில் *vaṭṭa-k-kaṭṭil,* பெ.(n.) வட்ட வடிவில் செய்த சுழற் கட்டில் வகை; a circular revolving cot. *"மூட்டுவாய் மாட்சிமைப்பட்ட வட்டக்கட்டில்" (நெடுநல்.123, உரை).*

[வல்→வள்→வட்டு→வட்டம்.வட்டம் + கட்டில். கட்டு +இல் = கட்டில். "இல்" சொல்லாக்க ஈறு. சுற்றி வருந்தன்மையில் வட்ட வடிவிற் செய்த கட்டில்.]

வட்டக்கச்சைக்கட்டில் *vaṭṭa-k-kaccai-k-kaṭṭil,* பெ.(n.)வட்ட வடிவாயமைந்த கட்டில் வகை; a kind of round shaped cot.

[வட்டக்கச்சை + கட்டில்.]

வளமனைகளிலும், அரசர் மாளிகைகளிலும் உள்ள கட்டில்.

வட்டக்கண்ணி *vaṭṭa-k-kaṇṇi,* பெ.(n.) வட்டிக்கண்ணி (இ.வ.) பார்க்க; see *vaṭṭi-k-kaṇṇi.*

[வட்டம் + கண்ணி. கள்→கண்→கண்ணி. வட்டமாக முளைத்த செடி அல்லது மரம்.]

வட்டக்கணக்கன் *vaṭṭa-k-kaṇakkaṉ*, பெ.(n.) ஒரு வட்டத்தைச் சேர்ந்த பலவூர்களுக்குரிய கணக்கன் (இ.வ.); accountant of a circle *(vaṭṭam)* or group of villages.

[வட்டம் + கணக்கன். வட்டம் = நிலப்பரப்பு, சிலவூர்களைக் கொண்ட நாட்டுப்பகுதி. (கணக்கன் = ஊர்க்கணக்கெழுதுவோன்)]

வட்டக்கப்பல் *vaṭṭakkappal*, பெ.(n.) புகையிலை வகை (இ.வ.); a variety of tobacco.

வட்டக்கருக்கு *vaṭṭa-k-karukku*, பெ.(n.) ஒரு வட்டத்தினுள் இலை, கொடி ஆகியவை செறிந்த கருக்கு; an artful work with thick leave, creeper in a circle.

[வள் →வட்டு→வட்டம் + கருக்கு. கருக்கு = சிற்பவேலை.]

மேலே சொல்லப்பட்ட கருக்கு வேலைகள் பரிமா, அரிமா ஆகியவற்றின் தொடைகளிலும், கோயிற் தூண்களிலும் வரையப்படும்.

வட்டக்காய் *vaṭṭakkāy*, பெ.(n.) அண்ட விதை (கொ.வ.); testicle.

தெ. வட்டகாய

[வட்டம் + காய்]

வட்டக்காரன் *vaṭṭa-k-kāraṉ*, பெ.(n.) வட்டத்துக்குப் பணமாற்றுவோன் (C.G.); money ex-changer.

[வட்டம்² + காரன். வட்டம் = நாணயமாற்றின் வட்டம்.]

வட்டக்காரர் *vaṭṭa-k-kārar*, பெ.(n.) சம்மாட்டியார் மூலமாக மீன்பிடி தொழிலில் பண முதலீடு செய்பவர்; a person who invest money in fishing through a middle man called *Šammāṭṭiyār.*

[வட்டம் + காரர்.]

சம்மாட்டியார் அன்றாடம் கிடைக்கும் மீன்பாட்டினை ஏலம் விட்டு அத்தொகையில் நூற்றுக்கு ஒரு வட்டம் வீதம் (விழுக்காடு) கொடுப்பார். வட்டக்காரர் தமது முதலுக்கு வட்டத் தொகையை வட்டிப் போலப் பெற்றுக் கொள்கிறார். 1 வட்டம் – ரு–6–25.

வட்டக்கிணறு *vaṭṭa-k-kiṇaṟu*, பெ.(n.) வட்ட வடிவமாக அமைந்த சிறுகிணறு; small, circular shallow well.

[வட்டம்¹ + கிணறு]

வட்டக்கிருமி *vaṭṭa-k-kirumi*, பெ.(n.) ஒரு வகை குடற் பூச்சி; a variety of intestinal parasite-*Ascaris* (சா.அக.).

[வட்டம் + Skt.கிருமி.]

வட்டக்கிலுகிலுப்பை *vaṭṭa-k-kilukiluppai*, பெ.(n.) செடிவகை (பதார்த்த.253); rattle-wort, blue-flowered.

[வட்டம்¹ + கிலுகிலுப்பை]

வட்டத்தோற்றத்தினைக் குறிக்கும் இருபதிற்கு மேற்பட்ட காட்சிப் பொருளைக் குறிக்கும் இச்சொல் தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு வழங்கிவரும் நூற்றுக்கணக்கான நிலைத்திணைப் பெயர்களு ளொன்றாம்.

வட்டக்கிளா *vaṭṭa-k-kiḷā*, பெ.(n.) களா; a plant-*Carandus spinaram* (சா.அக.).

வட்டக்குடில் *vaṭṭa-k-kuḍil*, பெ.(n.) பெருங் குடிசை (யாழ்.அக.); big hut.

[வட்டம்¹ + குடி →குடில்¹]

வட்டக்குடை *vaṭṭa-k-kuḍai,* பெ.(n.) அரசர்க்குரிய குடை (சீவக.860, உரை.); state umbrella.

[வட்டம் + குடை.]

வட்டக்குழிபிடி–த்தல் *vaṭṭa-k-kuḻi-piḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) வில்லைப் போலிருக்க வேண்டி, உருக்கினதை, உருக்கிச் சாய்க்க வட்டமாகச் செய்த ஓர் குழி; a bow shaped pit (to pour the melted matal into it) for casting (சா.அக.).

வட்டக்குளம்படி *vaṭṭa-k-kuḷambaḍi,* பெ.(n.) கழுதைக் குளம்படி; plant known as ass's hoof (சா.அக.).

வட்டக்குளிகம் *vaṭṭa-k-kuḷigam,* பெ.(n.) மேக நிறச் செவ்வந்தி; chrysanithemum flower of cloud colour (சா.அக.).

வட்டக்கெண்ணை *vaṭṭakkeṇṇai,* பெ.(n.) கண்டுபாரங்கி; Indian lotus croton.

வட்டக்கைச்சில் *vaṭṭa-k-kaiccil,* பெ.(n.) கொட்டாங்கச்சியின் அடிப்பாதியோடு (யாழ். அக.); the lower half of a coconut-shell.

[வட்டம்[1] + கச்சி →கச்சில்[2] →கைச்சில்]

வட்டக்கொட்டை *vaṭṭa-k-koṭṭai,* பெ.(n.) வட்டமான தலையணை; round pillow.

[வட்டம்[1] + கொட்டை]

வட்டக்கொடை *vaṭṭa-k-koḍai,* பெ.(n.) காட்டெருமை; wild buffalo (சா.அக.).

வட்டக்கோட்டை *vaṭṭa-k-kōṭṭai,* பெ.(n.) வட்டமாகவோ, சதுரமாகவோ அமைந்த கோட்டை; a fort in the shape of circle or square.

[வட்டம் + கோட்டை]

வட்டக்கோரை *vaṭṭa-k-kōrai,* பெ.(n.) புல்வகையுளொன்று (நாநார்த்த.128); a kind of sedge or grass.

வட்டக்கோல் *vaṭṭa-k-kōl,* பெ.(n.) வட்ட வடிவு; circular or round shape or form.

[வட்டம்[1] + கோல்]

வட்டக்கோவை *vaṭṭa-k-kōvai,* பெ.(n.) கொடி வகை; a common creeper of the hedges- *Coccinia indica. "கோவையங் கனிநே றென்ன" (திருச்செந். பு.8, 56)*

வட்டக்கோள் *vaṭṭa-k-kōḷ,* பெ.(n.) வட்டம்[1], 2 (சிலப்.10,102, உரை) பார்க்க; see *vaṭṭam.*

மறுவ. கரந்துறைகோள்.

[வட்டம்[1] + கோள்[2]]

வட்டகம் *vaṭṭagam,* பெ.(n.) வயிற்றுளைச்சலைப் போக்கும் மருந்து; hollarrhena antidysenterica.

வட்டகன்னி *vaṭṭa-kaṉṉi,* பெ.(n.) வட்டத்துத்தி பார்க்க; see *vaṭṭa-t-tutti* (சா.அக.).

வட்டகை *vaṭṭagai,* பெ.(n.) 1. பரப்பெல்லை; area, extent. 2. நிலப்பகுதி; region. *“ஊர்நாற்காத வட்டகை” (சிலப்.5, 133,* உரை). 3. வட்டம்[1] 9, 10 பார்க்க; see *vaṭṭam.* 4. வட்டகைநிலம் (வின்.) பார்க்க; see *vaṭṭagai-nilam.* 5. சிறுகிண்ணம்; small bowl. *“கொடியனார் வெள்ளி வட்டகை யூன்றிவாய் மடுப்ப” (சீவக.938).* 6. வட்டில்; metal cup. *“செம்பொற்றூமணி வட்டகையோடு” (காஞ்சிப்பு. தழுவக்.333).*

[வட்டம்[1] →வட்டகை = சிறிய நாட்டுப் பகுதி (தேவ.13, பக்.5). 'வட்டகை' யென்னும் வடிவம் வடமொழியி லில்லை.]

வட்டகைநிலம் *vaṭṭagai-nilam,* பெ.(n.) அடைப்புக்கட்டிய நிலம்; enclosed field, fenced land.

[வட்டம்[1]→வட்டகை + நிலம்]

வட்டகைமணியம் *vaṭṭagai-maṇiyam,* பெ.(n.) வட்டமணியம் (வின்.) பார்க்க; see *vaṭṭa-maṇiyam.*

[வட்டம்→வட்டகை + மணியம். மணியம் = ஊர், ஊரிலுள்ள கோயில் மற்றுமுள்ளவற்றை மேற்பார்வை செய்கை]

வட்டங்கண்கூலி *vaṭṭaṅkaṇ-kūli,* பெ.(n.) நாணயமாற்றம் செய்யும் வணிகத் துறை இடையீட்டாளர் பெறும் கூலி; money broker's commission.

[வட்டம் + கண்கூலி]

வட்டங்கி *vaṭṭaṅgi,* பெ.(n.) வெள்வங்கம்; white lead, tin.

வட்டங்கூட்டு—தல் *vaṭṭaṅ-kūṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) அணியமாதல் (நெல்லை); to prepare, to be neadied.

[வட்டம்[1] + கூட்டு—தல்]

இது வழக்கியன் மரபுச் சொற்களு ளொன்று.

வட்டச்சக்கரம் *vaṭṭa-c-cakkaram,* பெ.(n.) சித்திர பா வகை (யாப்.வி.பக். 497); a kind of metrical composition.

வட்டச்சாரணை *vaṭṭa-c-cāraṇai,* பெ.(n.) 1. வெள்ளை வட்டச் சாரணை; trianthema pentandra. 2. இதன் இலைகள் கண்நோய்க்குப் பயன்படுவதாலிப் பெயர்; rounded mucronate leved train thema- *Orgia trianthemoides.* It is so called because of its usefulness in ophthalmia and other diseases of the eye (சா.அக.).

வட்டச்சில்லி *vaṭṭa-c-cilli,* பெ.(n.) பழந்தமிழர் விளையாட்டுகளுளொன்று; one of the games of the ancient *Tamiḻs.*

[வல்→ வள்→வட்டம் + சில்→சில்லி.]

வட்டமான அரங்கு கீறி ஆடும் இவ்விளையாட்டுக் குறித்து, மொழிஞாயிறு கூறுவது :

ஆடுகருவி :– சக்கரவடிமான ஓர் அரங்கும் ஆளுக்கொரு சில்லியும் இதற்கான ஆடு கருவியாம்.

சக்கரத்தின் குறட்டில் ஒரு குறிப்பிட்ட வட்டத் தொகையும், அதன் ஆரைகட்கிடையில் முறையே அத் தொகைக்கு வரிசை யொழுங்காகக் கீழ்ப்பட்ட சிறுதொகைகளும், குறிக்கப்படும்.

ஆடுமுறை: முதலாவது கீழ்த்தொகையுள்ள கட்டத்திற் சில்லியெறிந்து, நொண்டியடித்து ஒரேயெட்டில் மிதித்து வெளியே தள்ளி, மீண்டும் ஒரேயெட்டில் அதை மிதித்தல் வேண்டும். இங்ஙனம் தொடர்ந்து மேன்மேலுயர்ந்த தொகையுள்ள சுற்றுக் கட்டங்களிலெல்லாம் ஆடியபின், நடுக்கட்டத்தில் ஆடல் வேண்டும். நடுக்கட்டத்துள் எறிந்த சில்லியை, அது அங்கிருக்கும்போதும் அதை வெளியே தள்ளிய பின்பும், நேரே ஒரேயெட்டில் மிதித்தல் வேண்டு மேயன்றிச் சுற்றுக் கட்டத்தின் வழியாய்ச் சென்று மிதித்தல் கூடாது.

ஒருவர் தவறியபின் அடுத்தவர் ஆட வேண்டும்.

குறித்த வட்டத் தொகையை முந்தி யெடுத்தவர் (அதாவது எல்லாக் கட்டங்களையும் தவறாது முந்தியாடியவர்), கெலித்தவராவர். கெலிப்பதற்குப் 'பழம்' என்று பெயர். ஒவ்வொரு பழத்திற்கும் காலால் ஒவ்வோர் உப்பு வைக்கப்படும்.

உப்புக்குள், வட்டையினின்று தொடங்கி ஒன்றையொன்று தொட்டுக்கொண்டு வரிசையாக இருக்கும். வெளியே தள்ளப்பட்ட சில்லி ஒரேயெட்டில் மிதிக்க முடியாதவாறு தொலைவிலிருப்பின், ஆடுபவர் தாம் வைத்த உப்பு வரிசைமேல் நடந்துசென்று அதை மிதிக்கலாம்.



வட்டச்சீட்டு *vaṭṭa-c-cīṭṭu,* பெ.(n.) நிதிச் சீட்டுவகை; a kind of chit transaction.

[வட்டம்[2] + சீட்டு. வட்டம் = ஒருசுற்று.]

வட்டசட்டம் *vaṭṭa-caṭṭam,* பெ.(n.) ஒழுங்கு (இ.வ.), ஒழுங்கான நிலை; regularity, orderliness.

[வட்டம்[1] + சட்டம். ஒருகா. வாட்டசாட்டம் → வட்டசட்டம்.]

வழக்கியன் மரபுச் சொற்களு ளொன்று.

வட்டஞ்சுற்று--தல் *vaṭṭañ-cuṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) சுற்றி வளைந்துச் செல்லுதல்; to go in a circuitous or round about route. *"வட்டஞ் சுற்றியும் வழியே போ"* (நாஞ்.).

[வள் → வட்டு → வட்டம்[1] + சுற்று–,]

வட்டச்சொச்சவியாபாரம் *vaṭṭa-c-cocca-viyābāram,* பெ.(n.) நாணயமாற்று முதலிய தொழில்; money exchange the profession.

வட்டணம் *vaṭṭaṇam,* பெ.(n.) 1. வட்டமான கேடகம்; shield. *"இட்ட வட்டணங்கண் மேலெறிந்த வேல்"(கலிங்.413).* 2. நெடுங் கேடக வகை (யாழ்.அக.); a kind of big shield.

மறுவ. பரிசை

த. வட்டணம் > **Skt** அட்டன.

[வட்டம் → வட்டணம் = வட்டமான கேடகம் (மு.தா.2, பக்.85).]

வட்டணி[1]–த்தல் *vaṭṭaṇi-,* 4 செ.குன்றாவி. (v.t.) வட்டமாக்குதல்; to make round or circular, to encircle.

[வட்டணம் → வட்டணி.]

வட்டமாதல், வட்டமாக்குதல் (மு.தா. 2, பக்.85) 'வட்டணி' என்னும் வினைவடிவம். வடமொழியி லில்லை.

வட்டணி[2]–த்தல் *vaṭṭaṇi-,* 4 செ.கு.வி. (v.i.) வட்டமாதல்; to encircle to become round or circular.

[வட்டணம் → வட்டணி.]

வட்டணி என்னும் வினைவடிவம் வடமொழியி லில்லை.

வட்டணிப்பு *vaṭṭaṇippu,* பெ.(n.) வட்டமா யிருக்கை, வட்டவடிவமான தன்மை; roundness, circularity, rotundity. *"குண்டலமென்று வட்டணிப்பைச் சொல்லவுமாம்" (திருவிருத்.57, வ்யா.பக்.318).*

[வட்டணம் → வட்டணி → வட்டணிப்பு.]

வட்டணை[1] *vaṭṭaṇai,* பெ.(n.) 1. பொருள் பொதிந்த, அறிவார்ந்த பேச்சு; flowery meaningful speech, learned jargon.

2. வண்ணனை; flowery or rhetorical speech or statement. *"வட்டணை பேசுவர்" (பதினொ, கோபப்பிர.85).*

வட்டணை² vaṭṭaṇai, பெ.(n.) 1. வட்டம்¹, 1 (பிங்.) பார்க்க; see vaṭṭam. *"வாயினூலால் வட்டணைப் பந்தர் செய்த சிலந்தி" (தேவா. 507, 2).* 2. உருண்டை; globe, ball. 3. வட்டமான செலவு; circular course, as of a horse. *"மாப்புண்டர வாசியின் வட்டணைமேல்" (கம்பரா.படைத்.97).* 4. இட வலமாகச் சுற்றுகை; moving left and right, as in pugilistic performance. *"சுற்றிவரும் வட்டணையிற் றோன்றா வகைகலந்து" (பெரியபு. ஏனாதி.29).*

த. வட்டணம் > **Skt**. வர்த்தன.

[வட்டணம் → வட்டணை = இருமுனையும் வளைந்து தொடுமாறு முழுமையாக வளைவாக அமைக்கப்பட்ட வட்டணை.]

வட்டணை³ vaṭṭaṇai, பெ.(n.) 1. தொழுதற்கு அறிகுறியாகத் தாமரை மொட்டுப் போலக் கைகளைக் குவிக்கை (பரிபா.16, 11, உரை); a gesture with both hands signifying obcisance, consisting in folding one's hands so as to resemble a lotus bud. *"வகைதெரி மாக்கட்கு வட்டணை காட்டி" (மணிமே.7, 4, 3).* 2. தாளக் கருவி; cymbals. *"கொம்மைக் குயவட்டணை கொண்டிலனோ" (கம்பரா. அதிகாயன்.9).* 3. தாளம் போடுகை (பிங்.); beating time. 4. அடிக்கை (அரு.நி.); beating. 5.மொத்துகை (அரு.நி.); dashing against.

வட்டணை⁴ vaṭṭaṇai, பெ.(n.) கிடுகு, கேடகம்; shield. *"மன்னவர்காண வட்டணை வாளெடுத்து" (கல்லா.48, 8).*

[வட்டணம் → வட்டணை = வட்டமான கேடகம் (மு.தா.2, பக்.85]

வட்டணை⁵ vaṭṭaṇai, பெ.(n.) வட்டமான அணை, வட்டவடிவிலமைந்த படுக்கை; circular bed or cushion. *"வட்டணை........ இரீஇயினாரே" (சீவக.2433).*

[வட்டம் + அணை]

வட்டணையுறுத்து-தல் vaṭṭaṇai-y-uruttu-, 5 செ.கு.வி.(v.i.) தாளம்போடுதல் (வின்.); to beat time, to struggle.

[வட்டணை + உறு→உறுத்து-,]

வட்டத்தகரை vaṭṭa-t-tagarai, பெ.(n.) வண்டுக் கடிகளைப் போக்கும் ஒருவகைத் தகரைச்செடி; a species of cassia which has round leaves and is capable of curing beetle sting (சா.அக.).

[வட்டம் + தகரை]

வட்டத்தலைப்பா vaṭṭa-t-talaippā, பெ.(n.) தலைப்பாகை வகையுளொன்று (யாழ். அக.); a kind of head-dress, round turban.

[வட்டம் + தலைப்பா]

வட்டத்தறிமுறையன் vaṭṭa-t-tari muraiyaṉ, பெ.(n.) பெருமருந்து; a twiner- *Aristolochia indica.*

வட்டத்தாமரை vaṭṭa-t-tāmarai, பெ.(n.) 1. மரவகை; Indian lotus croton. 2. ஒரு வகைச் சிறு செடி (M.M.588.); narrow woolly-stipuled lotus croton.

[வட்டம் + தாமரை]

வட்டத்தாமரை, வட்டக்கிலுகிலுப்பை என்பனவும் பிறவும் தொன்றுதொட்டு வழங்கி வரும் நிலைத்திணைப் பெயர்களாகும். இது கேரளப் பகுதியிற் காணக்கூடும்.

வட்டத்தாளி *vaṭṭa-t-tāḷi,* பெ.(n.) செடி வகை (M.M.938.); a shrub.

[வட்டம்[1] + தாளி[5]]

வட்டத்திப்பிலி *vaṭṭa-t-tippili,* பெ.(n.) மருந்துக் கொடி வகை (பதார்த்த. 954); long pepper-m.cl., piper longum.

வட்டத்திரி *vaṭṭa-t-tiri,* பெ.(n.) 1. துமுக்கி (துப்பாக்கி)க்கு நெருப்பு வைக்குந் திரி (வின்.); match of a gun. 2. காதிடு திரி; small roll of cloth put into the pierced lobe of the ear for widening the aperture.

[வட்டம் + திரி.]

வட்டத்திருகாணி *vaṭṭa-t-tirukāṇi,* பெ.(n.) மேற்பகுதி வட்டமாக அமைந்த திருகாணி; tirukani with round brim.

[வட்டம் + திருகாணி]

வட்டத்திருப்பி[1] *vaṭṭa-t-tiruppi,* பெ.(n.) 1. பொன்முசுட்டை வேர்; root of cissampelos pareira. 2. கொழுப்பு தசையை வளர்க்கும் உடம்பு; it increases flesh ingient in the body (சா.அக.).

வட்டத்திருப்பி[2] *vaṭṭa-t-tiruppi,* பெ.(n.) 1. கொடிவகை; velvet leaf, kidney-leaved bracteate moonseed. 2. அரிவாண மணைப்பூண்டு (L.); sickle-leaf shrub. 3. ஆடு தின்னாப்பாளை; an ash coloured bitter prostate medicinal plant, worm-killer-*Aristolochia bracteata.*

வட்டத்துத்தி[1] *vaṭṭa-t-tutti,* பெ.(n.) ஓர் வகைச் சிறுதுத்தி; a shrub-*Macaranga Roxburghi.*

வட்டத்துத்தி[2] *vaṭṭa-t-tutti,* பெ.(n.) வட்டத் தாமரை, 2 பார்க்க;see *vaṭṭa-t-tāmarai.*

வட்டத்தொப்பி *vaṭṭa-t-toppi,* பெ.(n.) தொப்பி வகை (யாழ்.அக.); a kind of round hat.

[வட்டம்[1] + தொப்பி]

வட்டத்தோல் *vaṭṭa-t-tōl,* பெ.(n.) கிடுகு, கேடகம்; shield. *"வட்டத்தோல் வரிபுறங் கிடந்தசைய"(திருவிளை. நரிபரி.30).*

[வட்டம் + தோல்.]

வட்டதரி *vaṭṭa-tari,* பெ.(n.) முண் மரவகை (பதார்த்த.245); ashy babool.

வட்டதாக்கல் *vaṭṭa-tākkal,* பெ.(n.) வட்டமாகச் செய்தல்; to make round shape.

வட்டதிட்டம் *vaṭṭa-tiṭṭam,* பெ.(n.) நேர்மையான ஏற்பாடு; proper course. *"வட்டதிட்டந் தெரிந்து நடந்து கொள்ள வேண்டும்" (இ.வ.).*

வட்டநரிமருட்டி *vaṭṭa-nari-maruṭṭi,* பெ.(n.) வட்டக்கிலுகிலுப்பை (மூ.அ.) பார்க்க; *vaṭṭa-k-kilukiluppai.*

[வட்டம் + நரிமருட்டி]

வட்டப்பக்கா *vaṭṭa-p-pakkā*, பெ.(n.) அகன்ற வட்டவடிவாயமைந்த பக்காப் படிவகை; Madras measure, when made with a wide circular mouth.

[வட்டம் + பக்காப்படி→பக்கா. பக்காப்படி = பெரியபடியி னளவு.]

வட்டப்பண்டிகை *vaṭṭa-p-paṇḍigai*, பெ. (n.) கோயில் விமானத்தில் வட்ட வடிவமாக அமைந்த பண்டிகை; an arnament on the top of temple tower.

வட்டப்பாலை[1] *vaṭṭa-p-pālai*, பெ.(n.) தமிழிசையின் அடிப்படையான பகுப்பு நான்கனுளொன்று (சிலப்.17, உரை, பக்.453); one of the four base of the ancient Tamil music.

[வட்டம் + பாலை]

குமரிக்கண்டத் தமிழர் நுண்மாண் நுழைபுலத்தராயும் தலைசிறந்த நாகரிகராயும் எஃகுச் செவியராயு மிருந்ததினால் ஏழுபேரிசையும் ஐந்து சிற்றிசையுமாகிய பன்னீரிசையை (சுரத்தை)யும் கண்டு ஆயப்பாலை என்னும் முறையில், எழுபாலைப் பண்களைத் திரித்ததுமன்றி, அப்பன்னீரிசையையும் வட்டப்பாலை என்னும் முறையில், 24 ஆகவும்......... நுட்பமாய்ப் பகுத்து எல்லையற்ற இசைப் பேரின்பத்தை நுகர்ந்திருக்கின்றனர் (பண்.தமி.நா.பண்.பக்.112).

வட்டப்பாலை[2] *vaṭṭa-p-pālai*, பெ.(n.) நிலைத் திணை வகையுளொன்று; a class of thing that immovable.

[வட்டம் + பாலை]

வட்டப்பாறை *vaṭṭa-p-pāṟai*, பெ.(n.)1. வட்டமான பாறை; round, flat stone or rock. *வட்டப்பாறை நாச்சியார்* (வின்.). 2. விளைவற்ற கற்பாங்கான பகுதி (வின்.); rockey, barren surface, uncultivable rocky area. 3. சந்தனக்கல்; round, flat stone used for triturating sandal wood. "*வட்டப்பாறையின் முழங்கையை மணங்கொள் சந்தனமா. . . தேய்க்குமுன் (திருவாலவா.51, 6).*

[வட்டம் + பாறை]

வட்டப்புல் *vaṭṭa-p-pul*, பெ.(n.) காவட்டம் புல் (மூ.அ.); Citronella-grass.

மறுவ. காமாட்சிப்புல்

[காவட்டம்புல் →வட்டம்புல்→வட்டப்புல்]

வட்டப்பூ *vaṭṭa-p-pū*, பெ.(n.) கால்விரலணி வகை (சிலப்.6, 97, அரும்.); a toe-ring.

மறுவ. மெட்டி

[வட்டம் + பொல்→பூல்→பூ]

வட்டப்பூடு *vaṭṭa-p-pūḍu*, பெ.(n.) ஒருவகைப் பூடு; a species of small milkwort- *Polygalaglabra*.

[வட்டம் + பூடு]

வட்டப்பேந்தா *vaṭṭa-p-pēndā*, பெ.(n.) பழந்தமிழர் விளையாட்டுகளில் ஒன்று; one of the games of ancient *Tamiḷs*.

[வல்→வள்→வட்டு→வட்டம் + பேந்தா]

வட்டமான வளையமிட்டு ஆடும் இக்கோலி விளையாட்டுப் பற்றி பாவாணர் கூறுவது :

ஆட்டின் பெயர் : பேந்தா எனப்படும் வட்டக் கோட்டிற்குள் உருட்டியாடுங் கோலியாட்டு வகை வட்டப் பேந்தாவாம். இது சதுரப் பேந்தாவுடன் ஒப்பு நோக்கி வட்டப் பேந்தா எனப்பட்டது.

ஆடுவார் தொகை : மூவர் முதல் எத்துணைப் பேராயினும் இதை ஆடலாம். ஆயினும், ஐவர்க்குக் குறையாதும் பதின்மர்க்குக் கூடாதும் இருப்பின் சிறப்பாம்.

ஆடுகருவி : ஆடகருள் ஒவ்வொருவனுக்கும் பல கோலிகள் இருத்தல் வேண்டும். அவற்றோடு தெல் என்னும் ஒரு பெருங்கோலி ஒவ்வொருவனிடத்துமாவது எல்லார்க்கும் பொதுவாகவாவது இருத்தல் வேண்டும்.

ஏறத்தாழ முக்கச விட்டமுள்ள ஒரு வட்டக்கோடு கீறப்படும். அதன் நடுவில் ஒரு குழி கில்லப்படும். வட்டத்தின் அடியில் கால்வட்டம் அமையுமாறு ஒரு குறுக்குக் கோடும் கீறப்படும்.

கால் வட்டமுள்ள பக்கத்தில், வட்டத்தினின்று ஏறத்தாழ முக்கசத் தொலைவில், உத்தி கீறப்படும். அதற்கு மேலும் இரு பக்கத்தும் கவியுமாறு ஒரு தலைகீழான பகரக்கோடு இடப்படும். அது மூடி எனப்படும். அதை இன்று டாப்பு (TOP) என்னும் ஆங்கிலச் சொல்லாற் குறிப்பர்.

ஆடுகளம் : முற்றமும் புறக்கடையும் பொட்டலும் வெளி நிலமும் இதை ஆடுமிடமாம்.

ஆடுமுறை : ஆடகரெல்லாரும் முதன் முதல் உத்தியில் நின்றுகொண்டு, ஒவ்வொருவனாய்த் தத்தம் கோலியை வட்டத்தின் நடுவிலுள்ள குழியை நோக்கி உருட்டல் வேண்டும். யார் கோலி குழிக்கு அண்ணணித்தாய் (அதாவது மிக நெருங்கி) நிற்கின்றதோ, அவன் முன்னும்; அதற்கு அடுத்து நிற்குங் கோலிக்காரன் பின்னும்; அதற்கடுத்து நிற்குங் கோலிக்காரன் அதன் பின்னுமாக; இங்ஙனம் குழியண்மை வரிசைப்படி எல்லாரும் ஆடல் வேண்டும். கோலியை உருட்டும்போது ஒருவன் கோலி இன்னொருவனதை அடித்துவிட்டால், எல்லார் கோலியும் மீண்டும் ஒவ்வொன்றாய் உருட்டப்படும். கோலிகள் ஒன்றோடொன்று அடிபடுவது சடபுடா எனப்படும்.

ஆடுவார் வரிசை யொழுங்கு இவ்வாறு துணியப்பட்ட பின், முந்தி யாடுகிறவனிடம் ஏனையோரெல்லாரும் ஆளுக்கொரு கோலி கொடுத்துவிடல் வேண்டும். அவன் அவற்றுடன் தன் கோலியையுஞ் சேர்த்து, எல்லாவற்றையும் மொத்தமாய் வட்டத்திற்குள் உருட்டுவான். அதன்பின், தெல்லால் (அதாவது குண்டால்) முக்கால் வட்டத்திலுள்ள கோலிகளுள் எதையேனும் எவற்றையேனும் அடிப்பான். கால் வட்டத்துள் உள்ளவற்றை அடித்தல் கூடாது; அடிப்பின், 'பச்சா'வாம். அதற்கு ஒரு கோலி போட்டுவிட வேண்டும். அதன்பின், அடுத்தவன் ஆடுவான்.

உருட்டுவான் யாராயினும், மூடியை மிதிக்கவாவது தாண்டவாவது கூடாது. அங்ஙனஞ் செய்யின் தவறியவனாவன். அதனால் அடுத்தவன் ஆட நேரும். மூடி பொதுவாக முதலிற் போடப்படுவதில்லை. பலமுறை சொல்லியுங் கேளாது, ஒருவன் உத்திக்கு முன்னாற் கால் வைத்து முன்புறமாகச் சாய்ந்து அடிப்பின், மூடி போடப்படும். அது போடப்பட்ட பின் அதை மிதிப்பின் அல்லது தாண்டின் 'பச்சா' என்னும் குற்றமாம். அதற்கு ஒரு காய் போட்டு விடவேண்டும்.

உருட்டப்பட்ட கோலிகளுள் ஏதேனும் ஒன்று நேரே குழியில் விழுந்துவிடின், வெற்றியாம். அவன் காய்களை அடிக்கத் தேவையில்லை. உருட்டினவன் திரும்பவும் ஆடலாம்.

முக்கால் வட்டத்துள் உள்ள கோலியை அல்லது கோலிகளை அடிப்பின், அடிபட்ட கோலியனைத்தும் வட்டத்தினின்று வெளியேறிவிடல் வேண்டும். அங்ஙனம் வெளியேறிவிடின் அது ஒரு வெற்றியாம். குழியிற் போட்டாலும் காயடித்தாலும், ஏனையோரெல்லாரும் கெலித்தவனுக்கு ஒவ்வொரு காய் கொடுத்துவிடல் வேண்டும். குழியுள் போட்டுக் காயும் அடித்துவிடின் இரட்டைக் கெலிப்பாதலின், ஏனையோர் இவ்விரு காய் கொடுத்துவிடல் வேண்டும். முக்கால் வட்டத்துள் உள்ள காய்களை

அடிக்கும்போது, குழிக்காயையும், அடிக்கலாம்; வெளிக்காயையும் அடிக்கலாம். வென்றவன் என்றும் திரும்பியாடுவான்.

குழியிலும் போடாமல் முக்கால் வட்டத்திற்குள் உள்ள காயையும் அடிக்காமல் போனவன், தன் ஆட்டத்தை இழந்து விடுவான். அதன்பின் அடுத்தவன் ஆடல் வேண்டும். அன்று ஒருவரும் காய் போடுவதில்லை.

அடித்தகாயாவது அடிக்கப்பட்ட காயாவது வட்டத்தை விட்டு வெளியே போகாவிடின், பச்சா என்னுங் குற்றமாம். அதற்கு ஒரு கோலி அடுத்தவனிடம் கொடுத்துவிட்டு, ஆட்டத்தை விட்டு விடல் வேண்டும். குழியிற் போட்டவிடத்தும் அடித்த காய் அல்லது அடிக்கப்பட்ட காய் வெளியேறாவிடின், இரட்டைப் பச்சாவாம். அன்று, அடித்தவன் இரு காய் கொடுத்துவிட்டு ஆட்டத்தை விட்டுவிடல் வேண்டும். அடுத்தவன் அவற்றையுஞ் சேர்த்து உருட்டுவான். அவன் கெலித்துவிடின், அப் பச்சாக் காய்களையும் வழக்கப்படி கொடுக்கிறவற்றையும் எடுத்துக் கொள்ளலாம்; கெலிக்காவிடின் பச்சாக் காய்கள் பழங்காய்களுடன் சேர்த்து உருட்டப் பெறும். எவன் எங்ஙனம் கெலிப்பினும், பழங்காய்களை ஒருபோதும் கெலிப்புக் காயாகப் பெறல் முடியாது. ஆட்டமும் முடியும் வரை, அவை ஒரு 'முதல்' போல் இருந்து கொண்டே யிருக்கும். ஆட்டம் முடிந்தபின், அவனவன் முதற்காய் அவனவனைச் சேரும்.

ஒருவன் கெலித்தவிடத்து இன்னொருவனுக்குப் போடக் காயில்லாவிட்டால், அவன் கடனாகவாவது விலைக்காவது பிறனிடம் வாங்கிக் கொள்ளலாம்; அல்லாக்கால், அவன் முதலில் இட்ட காயை இழந்துவிடுவான்.

எல்லாரும் ஆடி முடிந்தபின், ஒருவரிடமாவது பலரிடமாவது காய் மிகுதியாய்ச் சேர்ந்திருக்கும். அவற்றுள் அவரவர் சொந்தக் காய்க்கு மேற்பட்டவெல்லாம் கெலிப்புக் காயாகும்.

ஆட்டின் பயன் : கோலியாட்டின் பொதுப் பயனாக முற்கூறப்பட்டவற்றொடு, பெருந் தொகையான கோலிகளை எளிதாய் ஈட்டிக் கொள்வதும், சிறு முதலையிட்டுப் பேரூதியம் பெறும் கருத்துறவும், இவ் வாட்டின் பயனாம்.

வட்டப்பேய்மருட்டி *vaṭṭa-p-pēy-maruṭṭi,* பெ.(n.) ஒரு பேய் மருட்டி; a kind of plant- *Anisomeles ovata.*

வட்டப்போதிகை *vaṭṭa-p-pōdigai,* பெ.(n.) போதிகையின்கீழ் அமைத்த வட்ட வடிவான தாங்கல் வகை (வின்.); a circular supporting piece placed under the capital of a pillar.

[வட்டு→வட்டம் + போதிகை]

வட்டம்¹ *vaṭṭam,* பெ.(n.) 1. பணம், வராகன் போன்ற பெயர்; money named like '*varāgaṉ*'. 2. வட்டக்காரர் பார்க்க; see *vaṭṭa-k-kārar.*

வட்டம்² *vaṭṭam,* பெ.(n.) 1. மண்டலம், வட்ட வடிவு (தொல்.சொல்.402, உரை); circle, circular form, ring-like shape. 2. பரிவேடம் (சிலப்.10, 102, உரை.); halo round the sun or moon, a *karandurai-kōl.* 3. குயவன் திரிகை (பிங்.); potter's wheel. 4. வண்டிச்சக்கரம் (யாழ். அக.); wheel of a cart. 5. உண்கலமாய்த் தைக்கும் இலையின் நடுப்பகுதி (இ.வ.); the central portion of a leaf-plate stitched for taking food. 6. தடவை, முறை; turn, course, as of a mantra. *"விநாயகர் நாமத்தை நூற்றெட்டு வட்டஞ்செய்து" (விநாயகபு.74, 214).* 7. சுற்று (வின்.); revolution, cycle. 8. ஒரு கோள் வானமண்டலத்தை ஒரு முறை சுற்றி வரும் காலம்; cycle of a planet. *அவன் சென்று ஒரு வியாழவட்டமாயிற்று.* 9. சுற்றியுள்ள நிலப்

பகுதி; circuit, surrounding area or region. *"கோயில் வட்டமெல்லாம்" (சீவக.949).* 10. சில ஊர்களைக் கொண்ட நிலப்பகுதி; a revenue unit comprising of a few villages, called taluk. 11. வட்டணை[2], 3 பார்க்க; see *vaṭṭaṇai. "தார்பொலி புரவிவட்டந் தான்புகக் காட்டுகின்றாற்கு" (சீவக.442).* 12. விருந்து முதலியவற்றிற்குச் சமைத்த தொடுகறிவகைகள் (நாஞ்.); items or course of side dishes of a meal for a feast etc. 13. அப்பவகை; a kind of pastry. *"பாகொடு பிடித்த விழைசூழ் வட்டம்" (பெரும்பாண்.378).* 14. வட்டப்பாறை, 3 பார்க்க; see *vaṭṭa-p-pāṟai. "வடவர்தந்த வான்கேழ் வட்டம்" (நெடுநல்.51).* 15. ஆல வட்டம்; circular ornamental fan. *"செங்கேழ் வட்டஞ் சுருக்கி" (நெடுநல்.58).* 16. வாகுவலயம் (பிங்.); bracelet worn on the upper arm. 17. தராசுத்தட்டு; scale-pan, round plate for balance. *"வட்டமது ஒத்தது வாணிபம் வாய்த்ததே" (திருமந். 1781).* 18. கைம்மணி (பிங்.); hand bell. 19. கிடுகு, கேடகம் (பிங்.); shield. *"ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப" (திருமுரு.111).* 20. முத்து வகை (பிங்.); a kind of pearl. *"முத்து வட்டமும் அனுவட்டமும்" (S.S.I.I.ii, 22).* 21. பீடம், இருக்கை (யாழ்.அக.); seat, chair. 22. குளம் (பிங்.); pond, tank. 23. கொள்கலம் (யாழ்.அக.); receptacle. 24. நீர்ச்சால் (பிங்.); large water pot. 25. நீரெறிகருவி; a kind of water-squirt. *"பூநீர் பெய் வட்டமெறிய" (பரிபா.21, 42).* 26. வளைவு; curve, bend. *"வில்லை வட்டப்பட வாங்கி" (தேவா.5, 9).* 27. பாரா வளை; a kind of boomerang. *"புகரினர் சூழ் வட்டத்தவை" (பரிபா.15, 61) (பிங்.).* 28. ஆடை; dress, cloth. *"வாலிழை வட்டமும்" (பெருங்.உஞ்சைக்.42, 208).* 29. எல்லை (சூடா.); boarder, boundary, limit. *"தொழுவல்வினை யொல்லை வட்டங் கடந் தோடுத லுண்மை" (தேவா.5, 9).* 30. திருத்தம், செம்மை; polish, refinement. *வட்டமாய்ப் பேசினான் (இ.வ.).* 31. ஐந்நூறு சால் கொண்ட நீரளவு; a unit for measuring the quantity of water = 500 average potfuls, as the quantity necessary for a *paṅgu*for one week. 32. மக்கட் பிரிவு (இ.வ.); sect, tribe. 33. யானையின் நடுச்செவி(பிங்.); the middle ear of an elephnat. 34. தாழ்வு (அக.நி.) ஆழமான பள்ளத்தாக்கு; lowness, depth, as of a valley. 35. களத்திற் சூடடிப்பதற்குப் பரப்பிய நெற்கதிர் (நாஞ்.); sheaves of paddy spread on a threshing floor for being threshed. 36. வட்டமரம்[2] பார்க்க (வின்.); see *vaṭṭa-maram.*

த. வட்டம் → **Pkt.** vaṭṭa → **Skt.** வ்ருத்த.

ஒ.நோ. நட்டம் → நடம் **Skt.** ந்ருத்த → **L.** verto (to turn)

[முள் → வள் → வட்டு + அம் → வட்டம் = சுற்று. ஒருகா. வள் + தம் என்றுமாம்.]

'வள்' என்னும் வழிவேர் தமிழிற் பல்வேறு வடிவங்கொண்டு நூற்றுக்கணக்கான சொற்களைப் பிறப்பிக்கும். வ்ருத்த என்னும் வடசொல் தமிழில் வட்டம் என்று திரியவில்லை. வட்டம் என்னும் சொல்லே வருத்த என்று திரிந்தது. வளை, வள்ளம், வட்டு, வட்டி முதலிய பல சொற்கட்கும் வள் என்பதே வேர். இச்சொற்கட்கெல்லாம் இனமானவை வடமொழியிலில்லை.

ஒரு கோள் வான மண்டலத்தை ஒருமுறை சுற்றி வருங்காலம் (மு.தா.2 : 89).

வளைந்த பொருளில் இரு முனையும் தொடுமாறு முழு வளைவானதே வட்டம் (மு.தா. 2 : 89).

'வளைவு முற்றியதே வட்டமாம்' (மொழியா. கட்.பக்.52) என்றும் வட்டத்துக்குப் பொருள் வரையறை செய்வார் பாவாணர்.

வட்டம்[3] *vaṭṭam*, இடை. (part.) தோறும்; each, every. *"ஆட்டைவட்டம் காசு ஒன்றுக்கு.... பலிசை" (S.I.I. ii, 122, 27).*

[வள்→வட்டு→ வட்டம்.]

வட்டம்[4] *vaṭṭam*, பெ.(n.) 1. நாணய மாற்றின் வட்டம்; rate of exchange. 2. நாணயம் மாற்றுவோரின் பிடித்தத் தொகை; money-changer's Commission. *"நாணயத்தின் வட்டமென்றும்" (பணவிடு.179).* 3. ஒட்டு மொத்த வாணிகத்திற் கொடுக்கும் தள்ளுபடி (இ.வ.); wholesale trade discount. 4. ஊதியம்; profit. *'அந்த வணிகத்தில் எனக்கு வட்டமொன்றுமில்லை'.*

[வட்டு→ வட்டம்.]

வட்டம்[5] *vaṭṭam*, பெ.(n.) முதலாம் பராந்தகன் ஆட்சியில், நாட்டுப்பிரிவுகளுக்கு வழங்கிய பெயர்; a word used to indicate as one of the regions of *Parāndaga Cōla* kingdom. *"இடையாற்று நாட்டு வடகரையூர் நாட்டு சிற்றாயல் வட்டத்து சிற்றுவக்குடி" (தெ.கல். தொ.7, கல்.515).*

வட்டமாக அமைந்த ஊர் அல்லது நாட்டுப் பகுதி. பல ஊர்களடங்கிய சூழலே வட்டமாக, கணிக்கப்பட்டுள்ளது. இக் காலத்தில் ஒரூரின் உட்பிரிவுகளாகக் குறிக்கின்றனர். இச் சொல் ஊதியம், வருவாய் ஆகியவற்றிற்கமைந்த காலவரையறையினைக் குறிக்கும் வழக்குச் சொல்லாகவும் பயின்று வருகிறது. திருமறைக் காடுடையார் கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்".

[வட்டு→வட்டம்.]

வட்டம்கூறு-தல் *vaṭṭam-kūṟu-*, 5 செ. குன்றாவி.(v.t.) போட்டியில் பலர்முன் ஏற்றி விலை கூறுதல்; to be auctionning by voice, oral auction.

[வட்டம் + குல்→ கூல்→கூறு-. குல் = பொருத்து. வட்டம் கூறுதல் = பொருத்தமாக ஏலம் கூறுதல்.]

வட்டம்பண்ணு-தல் *vaṭṭam-paṇṇu-*, 5 செ.குன்றாவி.(v.t.) மந்திரம் முதலியவற்றை நாள்தோறும் மனனஞ் செய்தல் அல்லது உருப்போடுதல் (யாழ்ப்.); to mug or recite daily mantras, etc.

[வட்டம் + பண்ணு-.]

வட்டம்பிரிதல் *vaṭṭam-piridal*, பெ.(n.) நாணயமாற்றம் முதலியவற்றில் ஊதியம் பெறுகை (வின்.); profit or gain in exchange etc.

[வட்டம் + பிரிதல். வட்டம் = நாணயமாற்றின் வட்டம்.]

வட்டம்போடு[1]**-தல்** *vaṭṭam-pōḍu-*, 20 செ.கு.வி.(v.i.) வட்டமிடு-, (வின்.) பார்க்க; see *vaṭṭam-iḍu-*.

[வட்டம் + போடு-.]

வட்டம்போடு[2]**-தல்** *vaṭṭam-pōḍu-*, 20 செ.கு.வி.(v.i.) சூடடிக்க நெற்கதிர்களை நிலத்திற் பரப்புதல்; to spread sheaves of

paddy on the threshing floor for being threshed.

[வட்டம் + போடு–,]

வட்டம்போடு³–தல் *vaṭṭam-pōḍu-,* 19 செ.குன்றாவி.(v.t.) வட்டமிடு பார்க்க; see *vaṭṭam-iḍu.*

[வட்டம் + போடு–,]

வட்டம்போர் *vaṭṭam-pōr,* பெ.(n.) சூதாட்டம் (தொல்.எழுத்து.418, இளம்.); dice-play, gambling.

[வள் → வட்டு → வட்டம் + போர். ஒ.நோ. சொற்போர்.]

வட்டமடக்கி *vaṭṭam-aḍakki,* பெ.(n.) வட்டத் திருப்பி (சங்.அக.) பார்க்க; see *vaṭṭa-t-tiruppi.*

வட்டமணியக்காரன் *vaṭṭamaṇiya-k-kāraṉ,* பெ.(n.) நாட்டாண்மைக்காரன்; headman of a village or group of villages.

[வட்டமணியம் + காரன்¹]

வட்டமணியம்¹ *vaṭṭa-maṇiyam,* பெ.(n.) சுற்றியிருக்கும் ஊர்களில் வரிதண்டும் வேலை; the office of revenue collection in a division.

வட்டமணியம்² *vaṭṭa-maṇiyam,* பெ.(n.) 1. நாட்டாண்மை; office of headman of a circle or group of villages. 2. நாட்டாண்மைக்காரன்; village headman.

[வட்டம் + மணியம்.]

வட்டமணை *vaṭṭa-maṇai,* பெ.(n.) 1. திருக் கோயில் திருமேனியை வைப்பதற்குரிய வட்டமான பீடம்; circular platform for idols, in a temple. 2. மதிப்புறவாக இடும் இருக்கை; seat offered as a mark of respect.

[வட்டம்¹ + மணை¹]

வட்டமணைவேதியை *vaṭṭa-maṇai-vēdiyai,* பெ.(n.) வட்டமணை (இ.வ.) பார்க்க; see *vaṭṭa-maṇai.*

வட்டமயிர்க்கத்தி *vaṭṭa-mayir-k-katti,* பெ.(n.) சத்திரக் கருவி 26–ல் ஒன்று; one of the 26 surgical instruments described in the Tamil medical science.

வட்டமரம் *vaṭṭa-maram,* பெ.(n.) 1. செக்கின் ஆட்டு மரம்; turning pole of an oil-press. 2. காட்டு மரவகை (வின்.); a jungle tree.

வட்டமறுதி *vaṭṭam-aṟudi,* பெ.(n.) சீட்டு முதலியவற்றின் முடிவு (கொ.வ.); conclusion, close, as of a chit fund etc.

[வட்டம் + அறு → அறுதி]

வட்டமிடு¹–தல் *vaṭṭam-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.). 1. பறவை முதலியன சுற்றி வருதல்; to hover about, as a hawk; to gyrate. 2. உருண்டையாதல்; to be round or globular. *"வட்டமிட் டடியிட்டு" (தனிப்பா.i, 322,16).*

[வட்டம் + இடு–,]

வட்டமிடு²–தல் *vaṭṭa-iḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) நோக்கங்கொண்டு சுற்றுதல்; to hang about in order to gain an object, to round about with a view to gain something. *கலுழன் இரையைத் தேடி வானத்தில் வட்டமிட்டுத் திரிகிறது.*

[வட்டம் + இடு–,]

வட்டமுத்து *vaṭṭa-muttu,* பெ.(n.) வட்ட வடிவில் அமைந்த முத்து; round pearl. *'பிறப்பிலேயே தட்டையான வடிவில் வட்டமாக அமைந்த முத்து'.*

[வட்டம் + முத்து]

ஒருகா. முத்துவட்டம்

வட்டமுலையாள் *vaṭṭamulaiyāḷ,* பெ.(n.) ஓர் வகைப்பூடு; a kind of shrub (plant).

வட்டமூக்குகோலா *vaṭṭa-mūkku-kōlā,* பெ.(n.) கடல் மீன்வகை; a kind of sea fish, anacanthus barbatus, body strongly compressed dull brown or grey fish with yellow fins 10 inches long.



வட்டமேசைமாநாடு *vaṭṭa-mēšai-mā nāḍu,* பெ.(n.) தனிப்படக்கூட்டிய ஆய்வுக் கூட்டம் (தற்கா.); round table conference, as of persons sitting in conference round a circular table, conkened for specific purpose.

வட்டரவு *vaṭṭaravu,* பெ.(n.) வட்டவடிவு (யாழ்ப்.); circularity.

[வட்டம் → வட்டரவு]

வட்டராயசம் *vaṭṭa-rāyašam,* பெ.(n.) வருவாய்த்துறை ஆய்வாளரின்கீழ் பணியாற்றும் எழுத்தன் (G.Tp.D.I. 241); revenue inspector's clerk.

வட்டவங்கரம் *vaṭṭavaṅgaram,* பெ.(n.) காஞ்சூரை; strych nine tree-*Strychnes nux vomica* dried bottle gourd fakeer's bottle.

வட்டவழுக்கை *vaṭṭa-vaḻukkai,* பெ.(n.) வழுக்கை பார்க்க; see *vaḻukkai.*

வட்டவாழி *vaṭṭa-vāḻi,* பெ.(n.) நன்னாரி; Indian sarsaperilla-*Ilemidesmus indica.*

வட்டவிருக்கம் *vaṭṭa-virukkam,* பெ.(n.) ஆலமரம்; banyan tree-*Ficus bengalensis.*

மறுவ. தொன்மரம், ஆல்.

[வட்டம் + விருட்சம் → விருக்கம்.]

வட்டவோடு *vaṭṭa-v-ōḍu,* பெ.(n.) அகல்; a small earthen pot (dish).

[வட்டம் + ஓடு.]

வட்டறவு *vaṭṭaṟavu,* பெ.(n.) முடிவாக அறுதி யிடுகை (யாழ்.அக.); final determination, finality.

[வட்டு → வட்டறவு.]

வட்டன்[1] *vaṭṭaṉ,* பெ.(n.) வட்டுப்போல் உருண்டு திரண்டவன்; round person. *"குறுவட்டா நின்னி னிழிந்ததோ கூனின் பிறப்பு" (கலித்.94, 27).*

[வட்டு→வட்டன் (வ.வ.2, பக்.77)]

இருபதிற்கு மேற்பட்ட காட்சிப் பொருள்களினின்று கிளைத்த சொல். வட்டன் என்னுஞ்சொல், தோற்றத்தில் உருண்டு திரண்ட காட்சியைக் குறித்தது (தேவ. 12, பக்.4).

வட்டன்² *vaṭṭaṉ,* இடை.(part.) ஒவ்வொரு, ஒவ்வொன்றும்; each and every. *"ஆட்டைவட்டன் முக்குறுணி நெற் பொலிசையாக" (S.I.I.ii,69, 3).*

[வட்டம்→வட்டன்.]

வட்டா¹ *vaṭṭā,* பெ.(n.) மேற்புறம் அகன்று, வட்டமான பரப்புக் கொண்டதும், கீழ்ப்புறம் நிற்க வைப்பதற்கு ஏற்ப வடிவம் கொண்டதுமான பாத்திரம்; a small tray-like case to keep saucer-like vessel.

மறுவ. கோப்பை

[வட்டு→வட்டா]

வட்டா² *vaṭṭā,* பெ.(n.) வட்டில், மல்லை; porringer.

வட்டா³ *vaṭṭā,* பெ.(n.) வாயகன்ற கலவகை; plate, porringer, bowl. *"வட்டாவுந் தாம்பூலமுந் துகிலுந் தாங்கிநிற்ப" (சீதக்.).*

[வட்டு→வட்டா]

வட்டா⁴ *vaṭṭā,* பெ.(n.) திறமை; சமர்த்து (திருவிருத்.71, அரும்.பக்.371); ability, cleverness.

[வட்டம்→வட்டா]

வட்டாகிருதி *vaṭṭākirudi,* பெ.(n.) 1. வட்ட வடிவு; circular shape or form, ellipse or other curvilinear figure. 2. வட்ட வடிவுள்ளவற்றின் சுற்றளவு; periphery of a curvilinear figure.

[வட்டு + Skt. ākrti> த. ஆகிருதி.]

வட்டாசிதுத்தி *vaṭṭāśi-tutti,* பெ. (n.) ஒரு வகைச் செடி; a kind of plant.

வட்டாட்சியர் *vaṭṭāṭciyar,* பெ.(n.) சிறு நாட்டுப் பகுதியின் ஆட்சியாளர்; tasildar. *இன்று வட்டாட்சியர் அலுவலகம் சென்று வந்தேன்.*

[வட்டம் + ஆட்சியர்]

வட்டாட்டம் *vaṭṭāṭṭam,* பெ.(n.) வட்டாட்டு பார்க்க; see *vaṭṭāṭṭu.*

[வட்டம் + ஆட்டம்.]

வட்டாட்டு *vaṭṭāṭṭu,* பெ.(n.) வட்டுக் கொண்டு ஆடும் சூதாட்டம்; game of dice, gambling. *"வட்டாட்டாடிடம் பலவுங் கண்டார்" (கம்பரா. மிதிலைக்.17).*

[வட்டாடு→வட்டாட்டு.]

வட்டாட்டு, வல்லாட்டு, வேட்டையாடலுமின்ன பிறவும் அரசன் இன்பமாகப் பொழுதுபோக்கும் வழிகளாம்.

வட்டாடு-தல் *vaṭṭāḍu-,* 5 செ.கு.வி.(v.i.) வட்டையுருட்டிச் சூதாடுதல்; to play with draughts or dice. *"அரங்கின்றி வட்டாடி யற்றே" (குறள், 401).*

மறுவ. கவறாடுதல்.

[வள்→வட்டு + ஆட்டு→ஆடு-. வட்டு = வட்டமான சூதாட்டுக் கருவி.]

வட்டாணி *vaṭṭāṇi,* பெ.(n.) 1. திறமை; ability, capacity. 2. வாய்வட்டமாகப் பேசுகை (திருவிருத்.71, அரும்.பக்.371); cleverness or talent, expertness in talking as in speech.

தெ. வடாரி.

[வட்டம்¹ + ஆணி]

வட்டாத்தி *vaṭṭātti,* பெ.(n.) ஒருவகை மரம்; a kind of tree- *Bauhinia malabarica.*

வட்டாப்பத்து *vaṭṭā-p-pattu,* பெ.(n.) ஒற்றை ஓலையாற் செய்த விசிறி (யாழ்ப்.); fan made of a single talipot leaf.

வட்டாரம்[1] *vaṭṭāram,* பெ.(n.) தூக்கு குண்டு, சுவரொழுங்கினைச் சரிபார்ப்பதற்குப் பயன்படும் கருவி; an iron round used to verify the vertical level of a wall or a door frame etc.

வட்டாரம்[2] *vaṭṭāram,* பெ.(n.) 1. சூழக்கிடந்த நிலப்பகுதி (வின்.); circuit, surrounding area or region. *"கோயில் வட்டமெல்லாம்" (சீவக.949).* 2. வீட்டின் சுற்றுப்புறம்; compound round a house. 3. வீடு (வின்.); house. 4. தவசக் களஞ்சியம்; granary.

தெ. வட்டாரமு; க. வடர; து. வட்டார.

[வள்→வட்டு→வட்டம்→வட்டாரம் = சுற்றுப்புற நாட்டுப்பகுதி (வ.வ.2, பக்.77).]

'வட்டாரம்' என்னுமிவ் வடிவம் வடமொழியி லில்லை.

வட்டாரம்[3] *vaṭṭāram,* பெ.(n.) குறிப்பிட்ட இடமும், அதனைச் சூழக்கிடக்குஞ் சுற்றுப் பகுதியும்; particular region. *'தஞ்சை வட்டாரத்தில் கோயில்கள் அதிகம்'.* 2. வட்டம்; ward, division.

[வள்→வட்டு+ஆரம் = ஓரீறு.]

வட்டாரமொழி *vaṭṭāra-moḻi,* பெ.(n.) பொதுமொழியிலிருந்து ஒலிப்பு முறையாலும், சொற்களாலும், இலக்கண அமைப்பாலும், சற்றே வேறுபாடுடையதும், குறிப்பிட்ட நிலப்பகுதியைச் சார்ந்தவர்களால் மட்டும் பேசப்படுகின்ற மொழி; language variety, spoken by the people of a region of a country or by a class of its people dialect with slight difference of popular language local variety of a localised language.

மறுவ. நடைமொழி, வட்டார வழக்கு.

[வட்டாரம் + மொழி]

வட்டாரவழக்கு *vaṭṭāra-vaḻakku,* பெ.(n.) வட்டாரமொழியில் உள்ள சொல் வழக்கு; usage in a language variety or dialect local usage register.

மறுவ. இடவழக்கு, உலக வழக்கு.

கிளைமொழி

[வட்டாரம் + வழக்கு]

பூனையைப் 'பூசு' என்றழைப்பது நெல்லை வட்டார வழக்கு. யானையை 'ஏனை'யென்பது தென்னாட்டுக் குடியானவர் வழக்கு.

வட்டி[1]-த்தல் *vaṭṭi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. வட்டமாதல் (யாழ்.அக.); to be round in shape. 2. சுழலுதல், சுற்றிச் சுற்றி வருதல்; to revolve, to move round and round, to gyrate. *"வட்டித்துப் புயலே நுரைஇய வியலிரு - ணடுநாள்" (அகநா.28).* 3. வஞ்சினமுரைத்தல், சூளுரைத்தல்; to swear, to take an oath. *"வட்டித்து விட்டா ளெறிந்தாள் (சிலப்.21:45).* 4. தாள வொற்றறுத்தல் (இசை.); to beat time, to deviate from rhyme of cymbals.

க. பட்டிசு.

வட்டி[2]-த்தல் *vaṭṭi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. தோள் புடைத்தல், வஞ்சினமுரைத்தலால் தோள் விம்மிப் புடைத்தல்; to slap one's own shoulders, in defiance or challenge. *"செருவறைந்து பாழித்தோள் வட்டித்தார்" (பழமொ.326).* 2. சுழற்றுதல்; to whirl, to swing round. *"மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்து" (புறநா.42).* 3. உருட்டுதல்,

சுற்றுதல், சுழற்றி எறிதல்; rolling or throwing as of dice. *“கழகத்துத் தவிராது வட்டிப்ப” (கலித்.136).* 4. உணவு பரிமாறுதல் (வின்.); to serve, as a meal. 5. கட்டுதல்; to tie. *“அலகில் மாலை யார்ப்ப வட்டித்து” (புறநா. 394).* 6. எழுதுதல் (சிலப்.21, 46, அரும்.); to write. 7. வளைத்தல் (இலக். அக.). to bend. 8. கடிதல்; to reprove, reprimand, censure. *அவன் என்னை வட்டித்தான் (வின்).*

வட்டி[3] *vaṭṭi-*, பெ.(n.) 1. கடகப்பெட்டி; basket made of palm stem fibre. *“வேட்டுவன் மான்றசை சொரிந்த வட்டியும்” (புறநா.33).* 2. கூடை; basket. *“பல்கல வட்டியர்” (அகநா. 391).* 3. படியளவு கொண்ட முகத்தலளவை (தொல்.எழுத்து.170) (பிங்.); a measure of capacity = 1 nāḻi = 1 paḍi. 4. பலகறை; cowry. *“வட்டி மாலை கண் மானு மெயிற்றினர்” (கந்தபு.வீரபத்.38) (வின்.).* 5. வழி, பாதை (அக.நி.); path, way, track. 6. கிண்ணம் (அக. நி.); porringer. 7. சூலுற்ற பெண்களுக்கு உண்டாகும் மயக்கம் (வின்.); giddiness during pregnancy. 8. வட்டில், 7 (தேவா.692, 7) பார்க்க; see *vaṭṭil*.

வட்டி[4] *vaṭṭi-*, பெ.(n.) 1. பணத்தைப் பிறன் பயன்பாட்டிற்காக கொடுத்து உடையவன் பெறும் ஊதியம்; interest on money, loaned for others. *“வட்டியை யறவாங்குநர்” (கடம்ப.பு. இலீலா.147).* 2. வருவாய்ப் பெருக்கம் (நாமதீப.645.); profit, gain

த. வட்டி → **Skt.** வர்த்தி.

[வட்டு→வட்டி.]

முதல் தொகையை சுழற்சி முறையில் கொடுத்துப்பெறும்பொழுது, கிடைக்கும் வருவாய் பெருக்கம்.

வட்டித்தல் = வட்டமாதல், சுழலுதல், சுழற்றுதல், சுழற்சிக் கருத்தினின்று தோன்றிய சொல்.

வட்டி[5] *vaṭṭi,* பெ.(n.) கடன் தொகைக்கு குறிப்பிட்ட காலத்திற்கு இவ்வளவு என்கிற விதத்தில் கூடுதலாகப் பெறப்படும் தொகை; fixed interest on a loan for a specified period.

வட்டிக்கண்ணி *vaṭṭi-k-kaṇṇi,* பெ.(n.) சிறு செடி வகை (M.M. 588.); narrow woolly stipulated lotus croton.

[வள்→வட்டு→வட்டி. வட்டித்தல் = வட்டமாதல். வட்டி + கண்ணி = வட்டமாகச் சுற்றி முளைத்த சிறுசெடி அல்லது மரம்.]

வட்டிக்கருப்பட்டி *vaṭṭi-k-karuppaṭṭi,* பெ.(n.) வட்டுக்கருப்பட்டி (இ.வ.) பார்க்க; see *vaṭṭu-k-karuppaṭṭi.*

[வட்டுக்கருப்பட்டி →வட்டிக்கருப்பட்டி. வட்டு → வட்டி + கரும்புல் + அட்டி – கரும்புல்லட்டி → கரும்பட்டி →கருப்பட்டி (கரும்புல் = பனைமரம்).]

வட்டிக்குவட்டி *vaṭṭikkuvaṭṭi,* பெ.(n.) 1. வட்டித் தொகைக்குத் கொடுக்கும் மேல்வட்டி; interest on interest. 2. வட்டியை முதலோடு சேர்த்துக் கணக்கிட்டுக் கொடுக்கும் வட்டி; compound interest, interest on cummulative deposit.

[வட்டி + கு + வட்டி.]

வட்டிகை[1] *vaṭṭigai,* பெ.(n.) 1. வளைத்தெழுதுங் கோல்; painter's brush, drawing pencil. *“வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவையின்” (மணிமே.4, 57).* 2. ஓவியம், படம், சித்திரம் (சூடா.); portrait picture. *“வட்டிகைப் பாவை நோக்கி” (சீவக. 2085) (சூடா.).*

த. வட்டிகை → **Skt.** வர்த்திகா.

[வட்டி →வட்டிகை.]

எழுத்தும் உருவெழில் ஓவியமும் பெரும்பாலும் வளைத்தெழுதவும் வரையவுங் காணலாம்.

வட்டிகை² *vaṭṭigai,* பெ.(n.) 1. சுற்றளவு, நகரத்தின் சுற்றளவு; circumference, as of a town. 2. வட்டம் (யாழ்.அக.); circle. 3. கைம்மணி (யாழ்.அக.); hand bell.

வட்டிகை³ *vaṭṭigai,* பெ.(n.) கூடை (பிங்.); basket.

[வட்டு→வட்டி →வட்டிகை]

வட்டிகை⁴ *vaṭṭigai,* பெ.(n.) 1. சிறப்புப் பட்டம், விருது வகையுளொன்று; special title an item of paraphernalia. *"அலகில் வட்டிகை தழல் விழித்தலால்" (கலிங்.333.).* 2. ஓடவகை; coracle, wicker-boat. *"துள்ளியல் வட்டிகை துடுப்பிற் கடைஇ" (பெருங்.உஞ்சைக் 40, 46).*

[வட்டி →வட்டிகை]

வட்டிகை⁵ *vaṭṭigai,* பெ.(n.) நால்வகைச் சாந்துள் ஒன்று (பிங்.); an unguent, one of *nāl-vagai-c-cāndu.* = *"சீதவட்டிகை வாரி வாரி . . . . இறைப்ப" (இரகு.வாகு.44) (பிங்.).*

வட்டிகைப்பலகை *vaṭṭigai-p-palagai,* பெ.(n.) சித்திரமெழுதும் பலகை; plank or tablet for painting. *"எழுதுகோலையும் வட்டிகைப் பலகையிலே போகட்டு" (சீவக.1107).*

[வட்டிகை + பலகை]

வட்டிகைப்பள்ளம் *vaṭṭigai-p-paḷḷam,* பெ.(n.) நெஞ்சாங்குலையின் வலது புறத்திலமைந்த குழி (வின்.); fossa ovalis, a depression on the left wall of the right article of the heart.

[வட்டிகை² + பள்ளம்]

வட்டிகைப்பாவை *vaṭṭigai-p-pāvai,* பெ.(n.) உருவெழிலோவியம்; drawing, picture or portrait. *"வட்டிகைப் பாவை நோக்கி" (சீவக.2085).*

மறுவ. சித்திரப்பாவை

[வட்டிகை¹ + பாவை]

வட்டிச்சிட்டை *vaṭṭi-c-ciṭṭai,* பெ.(n.) வட்டிக் கணக்கு எழுதும் புத்தகம்; account book showing interest calculated up-to-date.

[வட்டி + சில் →சிட்டு→சிட்டை]

வட்டிடல் *vaṭṭiḍal,* பெ.(n.) வட்டிலில் வைத்தல்; to keep in porringer.

வட்டிநாழி¹ *vaṭṭi-nāḻi,* பெ.(n.) வட்டித் தொகை பெறுதற்குரியதாகப் பெறப்படும் பழைய வரி; a kind of ancient tax, accruing interest. It is also considered as a tax to be collected in kind of paddy.

[வட்டி + நாழி]

இதனை நெல்லாகப் பெறும் வரியென்றும் கொள்வர்.

வட்டிநாழி² *vaṭṭi-nāḻi,* பெ.(n.) பழையவரி வகை (*S.I.I.ii, 521.*); an ancient tax.

வட்டிப்பு *vaṭṭippu,* பெ.(n.) 1. சூள் (நாமதீப. 667); vow, determined effort. 2. வட்டம் (யாழ்.அக.); circle.

வட்டிமேல்வட்டி *vaṭṭi-mēl-vaṭṭi,* பெ.(n.) வட்டிக்குவட்டி (வின்.) பார்க்க; see *vaṭṭikku-vaṭṭi.* 2. காலந்தாழ்த்திய வட்டித் தொகைக்குப் பெறப்படும் சிறுவட்டி; penal interest for delayed payment of interest.

[வட்டி^{3} + மேல்வட்டி]

வட்டியில்லாக்கடன் *vaṭṭi-y-illā-k-kaḍaṉ,* பெ.(n.) 1. வட்டியின்றிக் கொடுக்குங் கடன் தொகை; interest free loan debt not carrying interest. 2. திரும்பச் செய்தலை எதிர்நோக்கிக் கொடுக்கும் நன்கொடை (இ.வ.); present made in expectation of a similar return thereof.

[வட்டி + இல் + ஆ (எ.ம.இ.நி) + கடன்]

வட்டிரோகம் *vaṭṭi-rōgam,* பெ.(n.) மகப்பேறு நடந்தேறிய பெண்களின் உடம்பில் உண்டாகும் அரத்தப் போக்கு; a disease marked by flow of blood through vagina during post delivery.

வட்டில்[1] *vaṭṭil,* பெ.(n.) மாழையாற் செய்த படையல் தட்டு; a puja metal plate. *“வட்டில் பஞ்சவன் மாதேவி என்னும் திருநாமத்தால் விளங்கிற்று ஒன்று” (தெ.கல்.தொ.2:2, கல்.51).*

வட்டில்[2] *vaṭṭil,* பெ.(n.) 1. கிண்ணம், தட்டு, குவளை; porringer, platter, plate, cup. *“பொன்வட்டில் பிடித்து” (திவ். பெருமாள்.4, 3).* 2. வட்டி^{2}, 3 (தொல்.எழுத்.170. இளம்.) பார்க்க; see *vaṭṭi.* 3. நாழிகை வட்டில்; clepsydra, a small vessel with holes in the bottom, floating on the water and sinking at the end of a *nāḻigai,* being a contrivance for determining time. 4. அம்புக்கூடு; quiver for arrows. *“வாளிவட்டில் புறம் வைத்து” (கம்பரா. தேரேறு.39).* 5. கூடை (அக.நி.); basket. 6. வழி, பாதை (அக.நி.); path, way. 7. பட்டம், விருதுவகையுளொன்று; a degree, an award, an item of paraphernalia. *“ஏறுமால் யானையே சிவிகையந்தளக மீச்சோப்பி வட்டில்” (தேவா.692, 7).* 8. சொக்கட்டான் அறை (வின்.); draught-board. 9. அப்பளஞ் செய்யுமாறு உருட்டி வைக்கும் மாவுண்டை (இ.வ.); ball of dough, for preparing appalam.

[வட்டு→வட்டி→வட்டில் = வட்டமான கலம் (மு.தா.2, பக்.85).]

ஒருகா. வள் + தி → வட்டி + இல் என்றுமாம்.

வட்டிலை *vaṭṭilai,* பெ.(n.) முட்செடிவகை (M.M.293.); caricature plant, a thorny plant.

[வடு→வட்டு + இலை]

வட்டிவாசி *vaṭṭi-vāśi,* பெ.(n.) 1. வட்டி வீதம்; rate of interest. 2. வட்டி; interest.

[வட்டி^{3} + வாசி. வாசி = வீதம், விழுக்காடு.]

வட்டிவாணிகம் *vaṭṭi-vāṇigam,* பெ.(n.) பொருளை முதலாக வைத்து, கடனாகக் கொடுத்து, கடன் தொகைக்குரிய வட்டிக் காசினைக் கால அளவு மற்றும் ஒழுங்கு முறைப்படி பெற்று வரும் வாணிகம்; a kind of trade for investment and loaning for earning interest accrued thereto with a time frame. *“புறவரவா வந்து வட்டி வாணியஞ் செய்வாரையும் உள்ளூரிலிருந்து வட்டி வாணியஞ் செய்வாரையும் வட்டியால் நாழி நெல்லாகக் கொண்டும்” (தெ.கல்.தொ. 17.கல்.235).*

[வட்டி + வாணிகம்]

வட்டிற்பூ *vaṭṭir-pū,* பெ.(n.) தாமரைப்பூ (சங். அக.); lotus.

[வட்டில் + பூ]

வட்டினி *vaṭṭiṉi,* பெ.(n.) போட்டியில் வைக்கும் பொருள்; wager stake in a game. *"வட்டினி கொடுத்து..... வட்டாட்டாடிடம்" (கம்பரா. மிதிலை.17).*

வட்டு[1] *vaṭṭu,* பெ.(n.) 1. சூதாட்டத்திற்குரிய வட்டுக் கருவி; small spheroidal pawn, dice, draught. *"கையாடு வட்டிற் றோன்றும்" (அகநா.108).* 2. திரட்சி (சூடா.); roundness. 3. திரண்டபொருள்; anything round. *"முட்டி வட்டனைய கோல முத்துலாய்" (சீவக. 2950).* 4. நீரெறி கருவி வகை; a water-squirt. *"வண்ண நீர் கரந்த வட்டு விட்டெறிவோரும்" (பரிபா.11, 55).* 5. பாண்டி விளையாட்டுக்குரிய சில் (இ.வ.); a circular piece used in *pāṇḍi* game. 6. விளையாட்டுக் கருவி வகை; a game-piece. *"கல்லாச் சிறாஅர் நெல்லி வட்டாடும்" (நற்.3). "குன்ற மணிவட்டினுருட்டு மாற்றல்" (சீவக.611).* 7. வட்டில், 9 (இ.வ.) பார்க்க; see *vaṭṭil.* 8. குடையிற் கம்பிகள் கூடும் இடம் (இ.வ.); the circular piece to which the ribs of an umbrella are joined. 9. சிறு துணி (தஞ்சை.); small piece of cloth. 10. வட்ட (பனைவெல்ல)க் கருப்பட்டி; a large round shaped cake of jagger.

[வள் + து →வட்டு = வட்டமான கருப்புக் கட்டி, வட்டமான ஓடு (மு.தா.2, பக்.85)]

வட்டு[2] *vaṭṭu,* பெ.(n.) 1. கண்ட சருக்கரை (இலக். அக.); candied sugar. 2. கத்தரி வகை; Indian nightshade. *"முள்ளுச் செழுமலரோன்" (திவ். இயற்.சிறிய.ம. தனியன்).*

[வள் + து – வட்டு]

வட்டுக்கத்தரி *vaṭṭu-k-kattari,* பெ.(n.) கத்தரி வகை; a variety of round brinjal.

[வட்டு + கத்தரி]

வட்டுக்கருப்பட்டி *vaṭṭu-k-karuppaṭṭi,* பெ. (n.) பனாட்டுக் கட்டி; large ball of jaggery.

மறுவ. பனங்கருப்பட்டி

[வள்→வட்டு + கருப்பட்டி.]

கரும்புல்+அட்டு→ அட்டி = கரும்புல்லட்டி கரும்பட்டி. கரும்பட்டி→கருப்பட்டி. கரும்புல் = பனை மரம். அட்டு→அட்டி = அடப்பட்டது; காய்ச்சப்பட்டது.

ஒருகா. வட்டக்கருப்புக்கட்டி→ வட்டுக் கருப்பட்டி.

வட்டுக்கருப்புக்கட்டி *vaṭṭu-k-karuppu-k-kaṭṭi,* பெ.(n.) வட்டுக்கருப்பட்டி (வின்.) பார்க்க; see *vaṭṭu-k-karuppaṭṭi.*

[வட்டு + கருப்புக்கட்டி.]

வட்டுக்காய்[1] *vaṭṭu-k-kāi,* பெ.(n.) பத்திய வுணவு; a restricted or prescribed diet.

மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட உணவினை ஏற்றலும் விலக்கியன ஒழிதலும் வட்டுக்காயாகலாம்.

வட்டுக்காய்[2] *vaṭṭu-k-kāy,* பெ.(n.) சூதாடு கருவி; dice.

[வட்டு + காய்[3]]

வட்டுக்குத்தி *vaṭṭu-k-kutti,* பெ.(n.) பனைக் குருத்தினடி (வின்.); the part just below the top of a fresh palm leaf.

[வள்→வட்டு + குத்தி]

வட்டுக்கொல்லி *vaṭṭu-k-kolli,* பெ.(n.) 1. தேவதாரு; a fragrant wood. 2. சம்பங்கி; a fragrant flower, champaca.

வட்டுச்செடி *vaṭṭu-c-cedi,* பெ.(n.) வட்டு பார்க்க; see *vaṭṭu.*

வட்டுடை *vaṭṭuḍai,* பெ.(n.) 1. முழந் தாளளவாக உடுக்கும் உடை; cloth tied round the waist and reaching down the knee. *"அந்நுண் மருங்கு லிகந்த வட்டுடை" (மணிமே.3, 122).* 2. ஆடை (பிங்.); garment. 3. அரைக்காற் சட்டை; drawers.

[வட்டு→ வட்டுடை = முழந்தாளளவாக வீரர் உடுக்கும் உடைச்சிறப்பு (விசேடம்) (சீவக.468, நச்.)]

வட்டுப்பருப்பு *vaṭṭu-p-paruppu,* பெ.(n.) பருப்பு வகையுளொன்று; a kind of dhal - *Lathyrus Sativus.*

மறுவ. கேசரிப் பருப்பு.

[வட்டு + பருப்பு.]

இப்பருப்பு நாவலந்தேயத்தில் (இந்தியாவில்) வங்காளம், அசாம், நடுவண் பைதிரம் (மத்தியப்பிரதேசம்) முதலான இடங்களில் பயிராகின்றது. வங்கத்தின் காட்டுப் பகுதிகளிலும், (களி கலந்த வண்டல் மண்ணில்), ஏனைய பகுதிகளிலும் விளைகின்றது. ஆண்டு தோறும் அக்டோபர் மாதத்தில் விதைத்து, ஆறு திங்களில் அறுவடை செய்வர். இது மற்றப் பயிர்களிடையே, களை போன்று விளையும் தன்மைத்து. வட்டுப் பருப்புத் தவசத்தின் வடிவம் ஒழுங்காக இராது; ஆப்பு வடிவில் இருக்கும். பழுப்பு நிறத்தில், கறுப்பு வரிகளுடன் காணப்படும்.

இப் பருப்பினைக் கடலைப் பருப்பு, துவரப் பருப்புடன் சேர்த்து சமைத்து உண்பர்.

வட்டுப்பருப்புநோய் *vaṭṭu-p-paruppu-nōy,* பெ.(n.) வட்டுப்பருப்பு உண்பதா லுண்டாகும் ஒருபக்க ஊதை (பாரிசவளிம) நோய்; lathyrism.

[வட்டுப்பருப்பு + நோய்]

வட்டுப்பழம் *vaṭṭu-p-paḻam,* பெ.(n.) ஒருவகைக் கொட்டை; a kind of nut. *இதன் கொட்டையாலான பொடியினால் பற்றூய்மை செய்தால் பற்புழு போம்.*

வட்டுப்போர் *vaṭṭu-p-pōr,* பெ.(n.) சூதாட்டம்; gambling. *"வட்டுப்போர்கள் பொருதல் அரியவாமாறு போல" (பழ.176, உரை).*

[வட்டு + போர்]

வட்டுமுள்ளி *vaṭṭu-muḷḷi,* பெ.(n.) கழி முள்ளி; Indian nightshade.

வட்டுவப்பை *vaṭṭuva-p-pai,* பெ.(n.) வட்டுவம் (வின்.) பார்க்க; see *vaṭṭuvam.*

[வட்டுவம்+பை]

வட்டுவம் *vaṭṭuvam,* பெ.(n.) 1. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை முதலியன வைக்கும் பை (வின்.); pouch in which betel leaves, nuts, chunnam, tobacco, etc. are kept. 2. மருந்துப்பை; medicine pouch. *"வட்டுவத்தைத் தூக்கிக் கொண்டு திரிகிறார்களே" (பிரதாப விலா.121).* 3. பையின் உட்பை (வின்); pocket inside a pouch or purse.

தெ. வட்டுவமு.

[வள் + து–வட்டு + அகம் – வட்டகம் → (வட்டுகம்)→வட்டுவம்.]

வட்டுறுப்பு *vaṭṭuṟuppu,* பெ.(n.) திருத்தம், செம்மை (யாழ்.அக.); exactness, precision, correctness.

வட்டெலி *vaṭṭeli*, பெ.(n.) மரவெலி (வின்.); a species of rat.

[வட்டு + எலி]

வட்டெழுத்து[1] *vaṭṭeḻuttu*, பெ.(n.) 1. கி.பி. 12–ஆம் நூற்றாண்டு வரை, தமிழ் மொழியில் வழங்கிவந்த வட்ட வடிவில் அமைந்த வரி வடிவம்; a script slightly circular in form which was used till 12th century A.D. in *ṭamiḻ* language. 2. பழைய தமிழெழுத்து வகையுளொன்று; (I.P.M.) an ancient Tamil script.

மறுவ. பட்டயவெழுத்து, வட்டம், தெக்கன் மலையாளம், நானா மோனம்.

[வட்டு + எழுத்து. வளைந்த தமிழெழுத்து வகை (வே.க.4, பக்.102).]

ஒருகா. வெட்டெழுத்து → வட்டெழுத்து என்றுமாம்.

வள் → வட்டு → வட்டம் + எழுத்து.

வட்டம் = வளைவு. 'வள்' எனும் வளைவுக் கருத்து வேரிலிருந்து கிளைத்த சொல். வட்டெழுத்து என்பது வளைந்த தமிழெழுத்து வகை எனப் பொருள்படும். தெக்கன மலையாளம் பட்டயவெழுத்து.

கி.பி. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை, தமிழகத்தில் தமிழ் மொழியை எழுதுவதற்கு வழங்கிய, வட்ட வடிவமான எழுத்து. கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு கல்வெட்டில் இவ்வெழுத்து "வட்டம்" என்று குறிக்கப்பெற்றுள்ளது. (எ–டு)

"திருமலை ஜீர்ணிக்கையால்
உத்தாரணம் பண்ணினவிடத்து
திருமலையில் கல்வெட்டு வட்டம்
ஆகையால், தமிழாகப்படியெடுத்து"

என்று கல்வெட்டு கூறுகிறது. திருக்குற்றாலநாத சுவாமி கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டிலிருந்து, புரிந்து கொள்ளவியலாத வட்டம் நீங்கலாக ஏனைய கல்வெட்டுகள் அனைத்தும், மீண்டும் சுவரில் பொறிக்கப்பட்டனவென்று அறிகிறோம்.

இவ்வட்டெழுத்துக் கல்வெட்டுகளை அனைவராலும் படிக்கவியலவில்லை. ஒருசிலரே, இக் கல்வெட்டுகளைப் படித்தனர் என்று திருக்குற்றாலத்திலுள்ள குறும்பலா ஈசர் கல்வெட்டு தெளிவுறுத்துகிறது.

வட்டெழுத்தின் தோற்றம் : திரு.டி.ஏ. கோபிநாதராவ் அவர்கள்,

1. தமிழகத்தில் குகைகளில் காணப்படும் தமிழி எழுத்துகளிலிருந்தே, வட்டெழுத்து வளர்ச்சி அடைந்தது என்று கூறியுள்ளார்.

2. பெரும்பேராசிரியர் (மகாமகோபாத்யாய) அரிபிரசாத் சாத்திரி என்பார், *"கரோஷ்டி எழுத்துகளிலிருந்தே வட்டெழுத்து தோன்றியது"* என்று குறித்துள்ளார்.

3. முனைவர் பர்னல் அவர்கள் வட்டெழுத்து ஃபினிசியன் எழுத்திலிருந்து தோன்றியது என்றும், அசோகன் பிராம்மியிலிருந்து வேறுபட்டது என்றும் கூறியுள்ளார். இவர் மேலும் கூறுங்கால்,

வடமொழி தமிழகத்தில் பரவுதற்கு முன்னரே தமிழகத்தில் வழக்கிலிருந்து, அசோகன் பிராமியிலிருந்து வளர்ந்தது என்ற கருத்தினை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

4. முனைவர் பூலர் கூறுவது : வட்டெழுத்து தமிழின் மாறுபட்ட வடிவம். மராட்டியர், மோடி எழுத்தைப் பயன்படுத்தியது போன்று தமிழக வணிகர் பயன்படுத்திய எழுத்தே, வட்டெழுத்தாகும்.

தமிழி எழுத்தே வட்டெழுத்திற்கு மூலமாகும்.

இக்கருத்து தமிழ் எழுத்தின் வரிவடிவ வளர்ச்சியினின்று வட்டெழுத்தின் வரிவடிவ வளர்ச்சியினை ஒப்பிட்டு நோக்கி அறியப்பட்ட உண்மையாகும்.

அண்மையில் வட ஆற்காடு மாவட்டத்தில் தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை பல நடுகற்களைப் படி எடுத்தது. இவை கி.பி.6ஆம் நூற்றாண்டிலிருந்து 9–ஆம் நூற்றாண்டுக்கு உட்பட்ட காலத்தைச் சார்ந்தவை. இவற்றில் பெரும்பாலானவை வட்டெழுத்தில் உள்ளன. கி.பி.5–ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் காணப்படும் இரு நடுகற்கள் தருமபுரி மாவட்டம் இருளப்பட்டி என்னும் இடத்தில் இருந்து கிடைத்தன. இவையும் வட்டெழுத்தில் உள்ளன. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகள் 'பண்டையத் தமிழி எழுத்தில் இருந்துதான் வட்டெழுத்து வளர்ந்தது' என்று தெளிவாகக் குறிக்கின்றன. ஆதலின் வட்டெழுததின் வளர்ச்சியைக் குறித்து இனி ஐயப்பாட்டுக்கே இடமில்லை. தமிழி எழுத்துக்கள் படிப்படியாக வட்டெழுத்தாக மலர்வதை ஒவ்வொரு எழுத்திலும் காட்டலாம்.

இதுகாறும் வட்டெழுத்தில் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்பட்டது செஞ்சியின் அருகில் திருநாதர்குன்று என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டாகும். இது கி.பி.5–ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்பட்டது. ஆனால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இதைக் காட்டிலும் தொன்மையானவை. இவற்றில் பலவற்றைக் கவனித்தால் இவை தனி வட்டெழுத்தில் எழுதப்படவில்லை; வட்டெழுத்தும் தமிழும் கலந்தே எழுதப்பட்டுள்ளன; ஆதலின் தொடக்கத்தில் வட்டெழுத்தும் தமிழும் கலந்தே எழுதப்பட்டன என்பது தெளிவாகியது. இதன் அடிப்படையில் காணும் போது அரச்சலூரில் உள்ள கல்வெட்டு இரு எழுத்துகளின் தொடக்கத்தையும் காட்டுகிறது. இரண்டு ஒரே கல்வெட்டில் கலந்தே எழுதப்பட்டுள்ளதையும் இங்குக் காண்கிறோம். ஆதலின் வட்டெழுத்து கி.பி.3–ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தில் வழக்கில் வந்தது என்று கூறலாம்.

வட்டெழுத்து பாண்டி நாட்டில் சிறப்பாக வழங்கியது என்றும், மலையாளப் பகுதிகளில் அண்மைக்காலம் வரை சிறப்புற்றிருந்தது. ஆதலின் தமிழகத்தின் தென் பகுதியில் தோன்றியிருக்க வேண்டும் என்றும் அங்குத் தான் வழக்கிலிருந்தது என்றும் கருத்து நிலவியது. ஆனால் அண்மைக்காலக் கண்டுபிடிப்புகளிலிருந்து தமிழகத்தின் வடபகுதியில் வடாற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு, தருமபுரி, கோவை முதலிய மாவட்டங்களில் (அதாவது பண்டைய கொங்கு நாடு, கங்கபாடி, பெரும்பாணப்பாடி, தொண்டைமண்டலம் ஆகிய பகுதிகளில்) பரவலாக இவ்வெழுத்து வழக்கிலிருந்தது என்று அறிகிறோம். காலத்தால் தொன்மையான வட்டெழுத்துக் கல்வெட்டுகள் அனைத்தும் தமிழகத்தில் வடபகுதியில் தான் கிடைத்துள்ளன.

பல்லவர்களின் கல்வெட்டுகள் தமிழ் எழுத்திலும், வட்டெழுத்தும் தமிழ் எழுத்தும் கலந்த எழுத்திலும் உள்ளன என்று கண்டோம். ஆக இருவகை எழுத்துகள் ஒன்றாக வளர்ச்சி பெற்றிருக்கின்றன. இரண்டும் தமிழ் மொழியை எழுதப் பயன்பட்டவைதான்.

கி.பி.6–ஆம் நூற்றாண்டிலிருந்து 8–ஆம் நூற்றாண்டு வரை பல்லவர்களின் பல கல்வெட்டுகள் வட்டெழுத்தில் கிடைத்துள்ளன. பாண்டி நாட்டில் ஏழாம் நூற்றாண்டிலிருந்து வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. 8, 9–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர்களது செப்பேடுகள் அனைத்தும் வட்டெழுத்தில் உள்ளன. செப்பேடுகள் அரசனால் அளிக்கப்பட்டவை. ஆதலின் வட்டெழுத்து பாண்டியர் அவையில்

சிறப்புற்றிருந்தது என்பது தெளிவு. பல்லவர்களது பகுதிகளில் வட்டெழுத்து வழக்கிலிருந்த போதிலும் செப்பேடுகளில் அது காணப்படவில்லை. சோழ மண்டலத்தில் வட்டெழுத்துச் சாய்கால் பெறவில்லை. சோழர்கள் தமிழையே பயன்படுத்தினர். ஆனால் பாண்டி நாட்டைக் கைப்பற்றிய போது அவர்கள் அப்பகுதிகளில் வட்டெழுத்தையே வழங்கினர். விரைவில் வட்டெழுத்தை விட்டு அங்கும் தமிழிலேயே எழுதத் தலைப்பட்டனர். கொங்கு நாட்டில் கொங்குச் சோழர் என்ற குலத்தோர் வட்டெழுத்தைப் பரவலாகப் பயன்படுத்தினர். தொண்டை மண்டலத்தில் கங்கர், பாணர் பகுதிகளிலும் வட்டெழுத்து 8–ஆம் நூற்றாண்டுக்கு பிறகு வழக்கற்றுப் போயிற்று. கொங்கு நாட்டிலும், பாண்டியர் பகுதிகளிலும் கி.பி.12–ஆம் நூற்றாண்டு வரை வட்டெழுத்து வழங்கி பின்னர் அங்கும் மறைந்தது. கேரளத்தில் அது வளர்ந்து, கிரந்தமும் வட்டெழுத்தும் இணைந்து இன்றைய மலையாள எழுத்தாக மலர்ந்துள்ளது.

வட்டை¹ *vaṭṭai,* பெ.(n.) 1. வயல்; crop field. 2. பெருங்காடு; large tract of big forest. 3. திக்கு; direction. *'எட்டு வட்டையிலும் வந்தார்கள்'.*

வட்டை² *vaṭṭai,* பெ.(n.) வழி (சூடா.); way. *"வல்லுயிர்தாங்கும் வட்டை வந்தனை" (கல்லா.40, 13).*

வட்டை³ *vaṭṭai,* பெ.(n.) 1. சக்கரத்தின் மேல் வளைமரம்; felloe, rim of a wheel. *"உருள்கின்ற மணிவட்டை" (சிலப்.29, உரைப்பாட்டு. மடை).* 2. தேர் (யாழ்.அக.); car, chariot. 3. புலியினுடல்வரி (வின்.); stripes on a tiger's body. 4. பரப்பெல்லை, நிலப்பகுதி; area, region. 5. மரவட்டை; mountain tamana oil tree. 6. மரவட்டை வகை; marote. 7. வட்டப்பக்கா (நாஞ்.) பார்க்க; see *vaṭṭa-p-pakkā.*

வட்டோடு *vaṭṭōḍu,* பெ.(n.) தட்டாருடைய தீச்சட்டி; goldsmith's pot for live-coals.

வட்பத்திரம் *vaṭ-pattiram,* பெ.(n.) ஆல்; banyan tree-*Ficus bengalensis.*

வட்புலி *vaṭ-puli,* பெ.(n.) அரிமா (சங்.அக.); lion.

வட¹ *vaḍa,* பெ.அ.(adj.) வடக்கு என்பதன் பெயரடை; adjective of north. *வட மாநிலங்களில் மழையினால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.*

[வட → வடக்கு + திசை → வடதிசை]

வட² *vaḍa,* பெ.எ.(adj.) வடக்கத்தி பார்க்க; see *vaḍakkatti.*

வடஒன்பதுபார் *vaḍa-oṉbadu-pār,* பெ.(n.) வடக்கு ஒன்பது பார்; northern bank in nine fathoms.

வடக்கத்தி *vaḍakkatti,* பெ.அ.(adj.) வடக்கிற்குரிய (கொ.வ.) north, northern.

வடக்கத்திய *vaḍakkattiya,* பெ.அ.(adj.) வடக்குப் பகுதியைச் சார்ந்தவை; concerning northern region. *'வடக்கத்திய உணவு'.*

வடக்கத்தியான்¹ *vaḍakkattiyāṉ,* பெ.(n.) தொப்புள் நீண்டிருக்கும் மாடு; a kind of sturdy bull having elangated umbilical growth. *வடக்கத்தியா (கொ.வ.).*

[வடக்கு + அத்து + ஆன்]

வடக்கத்தியான்² *vaḍakkattiyāṉ,* பெ.(n.) வடபுலத்தான் (இ.வ.); northerner. *வடக்கத்திக்காரனுக்கு வாய் கொஞ்சம் நீளம் (இ.வ.).*

[வடக்கத்தி → வடக்கத்தியான்]

வடக்கயிறு¹ *vaḍa-k-kayiṟu*, பெ.(n.) மாடுகளைப் பிணைத்து கவலை ஓட்டுபவர் பயன்படுத்தும் கயிறு; a rope used by a person to draw water from a well, by lagging two bulls. *வடகவுறு (கொ.வ.). கமலை என்பது பாண்டிய நாட்டு வழக்கு.*

[வடம் + கயிறு]

வடக்கயிறு² *vaḍa-k-kayiṟu*, பெ.(n.) 1. தேர் முதலியவற்றை இழுக்கும் பெருங்கயிறு; large, stout rope or cable, as for drawing a temple-car. *"வடக்கயிறு வெண்ணரம்பா" (தாயு.சச்சிதா.2).* 2. ஏர் நாழிக்கயிறு (வின்.); cord of the *ēr-nāḻi.*

வடக்கன் *vaḍakkaṉ*, பெ.(n.) 1. வடக்குப் பக்கத்தான் (இ.வ.); northerner. 2. புகையிலை வகை (இ.வ.); a variety of tobacco.

ம. வடக்கன்.

வடக்காட்சி *vaḍa-k-kāṭci*, பெ.(n.) ஒளி பரப்பப்படும் பல்வேறு அலைவரிசைகளை ஈர்த்து வடத்தின் வழியாக, வீட்டுத் தொலைக்காட்சிகளுக்கு அனுப்பப்படும் செயல்முறை; the operation which received more telecasting channels and distributed to the home television sets through cables; cable television. *வடக்காட்சி அமைப்புப் பழுதுற்றதால், நேற்று ஒளிபரப்பான செம்மொழிக் கருத்தரங்க நிகழ்ச்சியை எல்லையம்மன் குடியிருப்பு மக்களால் கண்ணுறுதற்கியலவில்லை (இ.வ.).*

[வடம் + காட்சி. 'சி' பண்புப்பெயரீறு. காண் + சி → காட்சி = கண்ணுறல்.]

வடக்காளிமூலி *vaḍakkāḷi-mūli*, பெ.(n.) கோவை; a climber-*Coccinia indica.*

வடக்கிரு-த்தல் *vaḍakkiru-*, 4 செ.கு.வி. (v.i.) உயிர்துறக்குந் துணிவுடன், வடக்கு நோக்கியிருந்து மேற்கொள்ளும் உண்ணா நோன்பு (கூர்மபு. சூதக.27.); to sit facing north direction, taking a vow of fasting to death. *"புறப்புண் ணாணி வடக்கிருந் தோனே" (புறநா.66: 8).*

[வடக்கு + இரு-]

போரிற் பெற்ற புறப்புண் நாணியும், புதல்வர் தன்னொடு பொரவருகைநாணியும், உலகப் பற்றைத் துறந்தவிடத்தும், அரசர் ஊருக்கு வடக்கிலிருந்து உயிர் துறத்தல். பகைவரால் சிறைப்பட்டிருந்து உண்ணாதிறத்தலும் வடக்கிருத்தலின்பாற்படும்.

இம் மன்பதை நுகர்ச்சியைத் துறந்து, பசியால் உடலை மெலிவித்து, ஒக முயற்சியினால், உயிரை விடுதற்பொருட்டு, தான் வாழ்ந்த இடத்தை விட்டு வடதிசையிற் சென்று தங்குதலும், மீண்டும் வாராது, கொண்முடிபுடன் தவஞ்செய்யுமுகத்தான் வடக்கு நோக்கிச் செல்லுதலும், பண்டைய மரபாகும்.

வாழ்வில் நாணத்தகு நிலை நேர்ந்ததனால் சிலர் வடக்கிருந்ததாகக் கழக இலக்கியங்களில் பதிவு காணப்படுகின்றது.

(எ-டு) 1. சேரமான் பெருஞ்சேரலாதன், சோழன் கரிகாற் பெருவளத்தானொடு பொருதுபட்ட, புறப்புண்ணாணி வடக்கிருந்தான் (புறநா.65).

2. அகநானூற்றிலும் இச் செய்தி இடம் பெற்றுள்ளது. "அழிகள மருங்கின் வாள் வடக்கிருந்தென, இன்னா இன்னுரை கேட்ட சான்றோர் அரும்பெறல் உலகத்தவனொடு செலீஇயர் பெரும்பிறிது ஆகியாங்கு" (அகநா.55).

3. கோப்பெருஞ்சோழன், தன் மக்கள் தன்னொடு பொரவந்த செயலுக்கு நாணி வடக்கிருந்தமை குறித்துப் புறநானூற்றுப் பாடல்கள் (214, 216, 218) தெரிவிக்கின்றன.

4. சிறுபஞ்ச மூலத்திலும் (73) வடக்கிருத்தல் பற்றிய கருத்து வந்துள்ளது.

5. கழகக்கால வாழ்வியலுடன் இணைந்த, இந்நிகழ்வினை, வில்லிபாரதம் (இந்திரப்.25); தஞ்சைவாணன் கோவை (374) ஆகிய நூல்களும், எடுத்தியம்புகின்றன.

வடக்கு *vaḍakku,* பெ.(n.) நாற்றிசையு ளொன்று; north, the north point of the compass.

தெ., ம. வடக்கு; க. படுகு.

[வடம் + கு. ஒருகா. வட + அக்கு = பின்னொட்டு என்றுமாம்.]

வடக்குத்திருவீதிப்பிள்ளை[1] *vaḍakku-t-tiruvīdi-p-piḷḷai,* பெ.(n.) திருவாய்மொழியின் உரையாசிரியர்; commentator of poetry titled *Tiruvāymoḻi. 15–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர், திருவாய் மொழிக்கு முப்பத்தாறாயிரப்படி உரை செய்தவர்.*

வடக்குத்திருவீதிப்பிள்ளை[2] *vaḍakku-t-tiruvīdi-piḷḷai,* பெ.(n.) நம்பிள்ளை இசைக் கதையைத் திருவாய் மொழிக்கு ஈடு முப்பத்தாறாயிரப்படியென்று விரிவா யெழுதின மாலியவாசிரியர்; a *vaisṇava ācāryа*who embodied the lectures of *Nambiḷḷai* on *Tiruvāy-moḻi,* into a commentary, named, *īḍu-muppatt āṟāyira-p-paḍi. "வள்ளல் வடக்குத் திருவீதிப்பிள்ளை...... நன்குரைத்த தீடு முப்பத்தாறாயிரம் (உபதேசரத்.44).*

[வடக்கு + திருவீதிப்பிள்ளை]

வடக்குநோக்கி *vaḍakku-nōkki,* பெ.(n.) காந்தம் ஏற்றிய திசைகாட்டுமுள் (மனோன். iii, 3, 95); magnetic needls, as always position indicating north.

[வடக்கு + நோக்கு→நோக்கி]

ஒருகா. காந்தவூசி

வடக்குப்பார்த்தவீடு *vaḍakku-p-pārtta-vīḍu,* பெ.(n.) தெருவாசல் வடக்குப் பக்கமாக அமைந்த வீடு; north facing house.

வடக்குமலையான் *vaḍakku-malaiyāṉ,* பெ.(n.) வடமலையான்[1] பார்க்க; see *vaḍa-malaiyāṉ.*

[வடக்கு + மலையான்]

வடக்குவடக்கா—தல் *vaḍakkuvaḍakkā-,* 6 செ.கு.வி.(v.i.) மயிர் முதலியன சடை பற்றுதல் (இ.வ.); to become matted, as hair.

[வடம் + கு + வடம் + கு + ஆ–,]

வடக்குவாசற்செல்வி *vaḍakkuvāsaṟ-celvi,* பெ.(n.) ஊரின் வடபுறத்து எல்லைத் தெய்வமாகிய காளி (இ.வ.); *Kāḷi,* as presiding at the northern gate of or border of a village or town or city.

மறுவ. வடக்குவாய்ச்சி

[வடக்கு + வாசல் + செல்வி]

வடக்குவேர் *vaḍakku-vēr,* பெ.(n.) வடக்கே ஓடும் வேர்; root running towards north.

வடக்கேபோ—தல் *vaḍakkē-pō-,* 5 செ.கு.வி. (v.i.) மணமகனும் மணமகளும் காரி அல்லது ஞாயிற்றுக் கிழமையில் ஆலயத்திற்கு சென்றுவருதல்; to go to temple or praying spots and come back therefrom by newly wedded couples.

வடக்கேயோடும்சங்கவேர் *vaḍakkē-y-ōḍum-šaṅga-vēr,* பெ.(n.) சங்கஞ் செடியின் வடக்கு வேர்; the root of the four spined monetia that runs towards north.

வடக்கொட்டை *vaḍakkoṭṭai,* பெ.(n.) புங்கங் கொட்டை; soap nut.

வடகதி *vaḍa-kadi,* பெ.(n.) மஞ்சள்நிறக் குருந்தம் (புட்பராகம்); one of the nine gems-*Topaz.*

வடகபாகவிதி *vaḍaga-pāgavidi,* பெ.(n.) வடகம்; process or method of preparing *vaḍagam.*

வடகம்[1] *vaḍagam,* பெ.(n.) 1. அரிசிமாக் கூழால் செய்யப்படும் வடகவற்றல்; water cakes of flour, seasoned and dried in the sun. 2. வத்தல்; dried paste of flour. 3. தாளிப்பதற்கு பயன்படுத்தும் நறுமணக் கூட்டு; condiment used in cookery.

[வட்டம்→வடம்→வடகு →வடகம்]

வடகம்[2] *vaḍagam,* பெ.(n.) அரைத்தமாவுடன் கறிச்சரக்குகளைச் சேர்த்து உலர்த்திய தாளிப்புருண்டை; a mixture of flour, herbs, spices, etc., made into lumps or balls and dried in the sun.

த. வடகம் → **Skt.** வடக.

[வட்டம்→வடம்→ வடகு→வடகம்.]

நன்கு அரைத்த பருப்புடன் கறிச்சரக்குகளைச் சேர்த்துலர்த்திய தாளிப்புருண்டை (வ.வ.பகுதி 2, பக்.78).

வடகம்[3] *vaḍagam,* பெ.(n.) 1. தோல்; skin. 2. ஒரு வகை மருந்து; a class of medicine. 3. தாளிப்பதற்கு பயன்படும் வாசனைக் கூட்டு; condiment or mixture of spices etc. used in coockery.

வடகம்[4] *vaḍagam,* பெ.(n.) 1. மேலாடை; upper garment. *"வடகமுந் துகிலுந் தோடும்" (சீவக.462).* 2. துகில்வகை (சிலப்.14, 108, உரை); a superior kind of cloth, a fine fabric. 3. தோல் (பிங்.); skin.

[வட்டம்→வடம்→வடகம். அத்தவாளம்; உடைச் சிறப்பு (விசேடம்) (சீவ.468, நச்.)]

வடகம்[5] *vaḍagam,* பெ.(n.) தாளிதம் செய்ய பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கறி வடகம்; balls of condiments or spices used in preparation of food saucer etc. in ancient time. *கடுகு, சீரகம், வெந்தயம், வெங்காயம், உளுத்தம் பருப்பு, பெருங்காயம், கறிவேப்பிலை ஆகியவற்றின் கலவை உருண்டை.*

வடகயிலாயம் *vaḍa-kayilāyam,* பெ.(n.) சிவனுறையும் பனிமலை; Mt. *Kailāsa,* in the *Himalayās,* abode of *Šiva. "கயிலை மலையானே" (தேவா. 1159, 1).* 2. கோயம்புத்தூர் மாவட்டத்தில், பேரூருக்கு அருகிலுள்ளதொரு சிவன் கோயில்; a *Šivan* temple near *Pērūr* in Coimbatore District.

[வடக்கு + கயிலாயம்]

வடகயிலை *vaḍa-kayilai,* பெ.(n.) வட கயிலாயம், 1 பார்க்க; see *vaḍa-kayilāyam. "வடகயிலை யண்டர்நாயக ரிருக்கும்" (பெரியபு. திருநாவுக்.364).*

[வடக்கு + கயிலாயம்→கயிலை (மரூஉ.).]

வடகலை[1] *vaḍa-kalai,* பெ.(n.) 1. வடமொழி நூல்; sanskrit literature. *"செந்தமிழும் வடகலையுந் திகழ்ந்த நாவர்" (திவ். பெரியதி. 7, 7, 7).* 2. வடமொழி; sanskrit. *"வடகலை*

தென்கலை வடுகு கன்னடம்" (கம்பரா. பாயி.). 3. வடகலைநாமம் பார்க்க; see *vaḍagalai-nāmam.* 4. மாலியப் பிரிவினருள் ஒரு சாரார்; a *vaisṇava* sect, dist fr *teṉ-kalai.*

வடகலை² *vaḍakalai,* பெ.(n.) ஞாயிற்றின் (சூரிய) கலை; vital air passing through right nostril.

மறுவ. பிங்கலை

[வலம்→வட(ம்) + கலை.]

வடகலைநாமம் *vaḍakalai-nāmam,* பெ.(n.) வடகலை 'ரு' வடிவத் திருப்பாத மில்லாத மாலியர் தரிக்கும் திருமண் காப்பு; the U-shaped mark indication of the *vaḍakalai-vaisṇavas,* sectarian.

வடகலையார் *vaḍakalaiyār,* பெ.(n.) வடகலை¹, 4 பார்க்க; see *vaḍa-kalai.*

[வடகலை→ வடகலையார்.]

வடகாரம் *vaḍa-kāram,* பெ.(n.) உப்பு வகை (மூ.அ.); a kind of salt.

வடகாவிசேர் *vaḍakāvi-šēr,* பெ.(n.) வடகாவி மரத்திற் கட்டப்படும் பாய்; main top sail.

வடகாவிமரம் *vaḍakāvi-maram,* பெ.(n.) வடமரத்தின் அடிக்கட்டைக்கு மேலுள்ள பகுதி; main top mast.

வடகாற்று *vaḍa-kāṟṟu,* பெ.(n.) வடதிசைக் காற்று (சூடா.); north wind.

மறுவ. வாடைக்காற்று, வாடை.

[வடக்கு + காற்று.]

வடகிரி *vaḍa-kiri,* பெ.(n.) மேருமலை (யாழ். அக.); Mt. Mēru, as the northern mountain.

மறுவ. வடமலை, வடவரை.

[வடக்கு + Skt. கிரி.]

வடகிழக்கு *vaḍa-kiḻakku,* பெ.(n.) வடக்குங் கிழக்குஞ்சேருங் கோணத்திசை; north east.

[வடக்கு + கிழக்கு.]

வடகிழக்குப்பருவக்காற்று *vaḍa-kiḻakku-p-paruva-k-kāṟṟu,* பெ.(n.) இந்தியாவில், குறிப்பிட்ட மாதங்களில் மழை பெய்விக்கும் வகையில் வடகிழக்குத் திசையிலிருந்து வீசும் காற்று; North-East monsoon in India.

[வடகிழக்கு + பருவக்காற்று. குறித்த பருவத்தில் ஒருமுகமாயடிக்குங் கடற்காற்று.]

வடகிழக்குப்பருவமழை *vaḍa-kiḻakku-p-paruva-maḻai,* பெ.(n.) தமிழகத்தை வளப்படுத்தும் பருவ மழையுள் ஒன்று; North-East monsoon.

மறுவ. அடைமழை.

[வடகிழக்கு + பருவமழை.]

வடகீலியம் *vaḍakīliyam,* பெ.(n.) சூரைச் செடி; a kind of medicinal plant.

வடகீழ்த்திசை *vaḍa-kīḻ-t-tišai,* பெ.(n.) வடகிழக்கு (யாழ்.அக.) பார்க்க; *vaḍa-kiḻakku.*

வடகீழ்த்திசைப்பாலன் *vaḍakīḻ-t-tišai-p-pālaṉ,* பெ.(n.) வடகிழக்குத் திசைக் காவலன் (ஈசானன்) (யாழ். அக.); *īšāṉaṉ,* as the regent of the north-east.

வடகு *vaḍagu*, பெ.(n.) தோல் (இலக்.அக.); skin.

[வடகம் →வடகு.]

வடகுணதிசை *vaḍa-kuṇa-tišai*, பெ.(n.) வடகிழக்கு பார்க்க; see *vaḍa-kiḻakku.*

[வடக்கு+குணதிசை. குணம் + திசை (குணம் = கிழக்கு).]

வடகோடி *vaḍa-kōḍi*, பெ.(n.) வடமுனை; northern end.

வடகோடு *vaḍa-kōḍu*, பெ.(n.) பிறைமதியின் வடக்கு முனை; the northern horn of the cresent moon. *"வடகோ டுயர்ந்தென்ன தென்கோடு தாழ்ந்தென்ன வான் பிறைக்கே" (பட்டினத்.திருப்பா.)*

வடகோடை *vaḍa-kōḍai*, பெ.(n.) வட மேற்குக் காற்று; northwest wind.

வடங்கன் *vaḍaṅgaṉ*, பெ.(n.) வெங்காரம் (சங்.அக.); borax.

வடசரமுனை *vaḍašara-muṉai*, பெ.(n.) புதிய செயல்கள் தொடங்க ஏற்ற காலம்; period conducive for commencing new ventures or works.

வடசவர்சவாய் *vaḍa-šavar-savāy*, பெ.(n.) வடசவர் மரத்திற்கு முன்பக்கத்தில் தாங்கும் வண்ணம் இழுத்து (ஆதாரமாக)க் கட்டப்படுங்கயிறு; main top gallant stay.

இது கப்பல் கட்ட பயன்படும் மரம்.

வடசவர்சேர் *vaḍa-šavar-sēr*, பெ.(n.) வடசவர் மரத்தில் கட்டப்படும் பாய்; main top gallant sail.

வடசவர்பறுவான் *vaḍašavar-paṟuvāṉ*, பெ.(n.) வடசவர் மரத்தின் குறுக்கே போடப்படும் மூங்கிற்கழி; main-top gallant yard.

[வடசவர் + பறுவான். பறுவான் = பாய்மரந் தாங்குங் குறுக்குக்கழி.]

வடசவர்பெற்பறோடி *vaḍašavar-peṟ paṟōḍi*, பெ.(n.) வடசவர் மரத்திற்குப் பக்க ஆதாரமாய்க் கட்டப்படுங்கயிறு (M.Navi.); main top gallant backstays.

வடசவர்மரம் *vaḍašavar-maram*, பெ.(n.) வடமரத்திலுள்ள காவிமரத்துக்கு மேலுள்ள பகுதி; main top-gallant mast.

வடசவர்லவுரான் *vaḍašavar-lavurāṉ*, பெ.(n.) வடசவர்சவாய் பார்க்க; see *vaḍašavar-šavāi.*

வடசேடி *vaḍa-šēḍi*, பெ.(n.) வெள்ளி மலையின் வடக்கு பகுதி (தக்கயாகப். 371); the northern range of the mythical silver mountain.

வடசேர் *vaḍa-šēr*, பெ.(n.) கப்பலின் வடமரத்தில் விரிக்கப்படும் பாய்; main sail.

வடசொல் *vaḍa-šol*, பெ.(n.) 1. வட (சமற்கிருத) மொழி; sanskrit language. *"வடசொற்கிளவி" (தொல்.சொல்.401).* 2. வடமொழி பார்க்க; see *vaḍa-moḻi.*

[வடக்கு + சொல்]

வடசொல்மரபு *vaḍašol-marabu*, பெ.(n.) திரிந்த சொல்; corrupted word. *திரிந்த வகையாகிய சொல்மரபு (தொல். செய்யுள்.76, இளம்.). வடசொல் என்பது ஆரியச் சொற் போலுஞ் சொல் (தொல். சொல்.391, இளம்.).*

[வடசொல் + மரபு.]

வடதமிழ் *vaḍa-tamiḻ,* பெ.(n.) தமிழகத்தின் வடபுலத்து மக்களிடையே வழங்கிவந்த தமிழ்; language speaking in northern part of *Tamiḻ-nāḍu,* is called *vaḍa-tamiḻ.*

[வடக்கு+ தமிழ் →வடதமிழ்]

வடதரம் *vaḍa-taram,* பெ.(n.) 1. வடதாரை பார்க்க; see *vaḍa-tārai.* 2. விடதாரை; dichrosta chyscineria.

வடதலை *vaḍa-talai,* பெ.(n.) வடக்குத் தலைப்பு; northern part. *"ஊர் வடதலையில் நத்தமும்".*

மறுவ. வடகோடி

[வடக்கு+ தலை]

வடதளம் *vaḍa-taḷam,* பெ.(n.) ஆலிலை; banyan leaf. *"வடதள வுதரவாணி" (மனோன்.i, 2,110).*

[வடம் + தளம் (தளம் = இலை)]

வடதிசை *vaḍa-tišai,* பெ.(n.) நாற்றிசையு ளொன்றான வடக்கு; north, the north point of the compass.

[வடக்கு+ துகு→(தெகு)→திகை→ திசை.]

திகைத்தல், மயங்கல். திகைப்பதற்கிடமானது திசை. திசைத்தல் திகைத்தல். "வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு தென்றிசை யாண்ட தென்னவன் வாழி" (சிலப்.11:21, 22).

வடதிசைத்தலைவன் *vaḍa-tišai-t-talaivan,* பெ.(n.) எண்டிசைக் காவலருள் (பாலகர்) வட திசைக்குரிய குபேரன் (பிங்.); *kubēra,* as the regent of the North.

[வடதிசை + தலைவன்.]

வடதிசைப்பாலன் *vaḍa-tišai-p-pālan,* பெ.(n.) வடதிசைத்தலைவன் பார்க்க; *vaḍa-tišai-t-talaivan.*

[வடதிசை + பாலன்.]

வடதிரவிடம் *vaḍa-diraviḍam,* பெ.(n.) வட நாட்டில் (வட இந்தியாவில்) வழங்கி வரும் திராவிட மொழிகள்; north Dravidian languages.

[வட + திரவிடம்]

ஒருகா.வடஇந்தியப் பிராகிருதம், பிராகிருதம்.

வடதிரவிடம் தோன்றிய பாங்கு பற்றிப் பாவாணர் பகருவது : வடதிரவிடம் என்பது பிராகிருதமாகும். பிராகிருதம் என்பது சமற்கிருதம் தோன்றுவதற்கு முன்பு வேதக்காலத்திலேயே, இந்தியா முழுதும் வழங்கி வந்த வட்டார மொழிகளாகும். பிராகிருதம் என்னும் சொல், முந்திச் செய்யப் பெற்றது அல்லது இயற்கையாக வுள்ளது என்று பொருள்படும். பைசாசம், சூரசேனி, மாகதி, மகாராட்டிரி, திராவிடீ எனப் பிராகிருதம் ஐந்தாக வகுக்கப் பெற்றிருந்தது. இவற்றுள் முன் நான்கே பெரும்பாலும் பிராகிருதம் எனப்படும். அவற்றுள்ளும், மராட்டிரம் முதற்காலத்தில் பஞ்ச திராவிடத்துள் ஒன்றாகக் கொள்ளப்பெற்றது. விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள கூர்ச்சரம், மகாராட்டிரம், ஆந்திரம், கன்னடம், திராவிடம் (தமிழ்) ஆகிய ஐந்நாடுகளும் பஞ்ச திராவிடம் என வழங்கிவந்தன. ஆகவே, முதற்காலப் பிராகிருதம், பைசாசம், சூரசேனி, மாகதி என்னும் மூன்றே. இவற்றையும் மொழியளவி லன்றிச் சொல்லளவில் வேறுபடுத்திக் காட்டுவது வழக்கமன்று. மூவகைப் பிராகிருதச் சொற்களையும் பிராகிருதம் என்று பொதுப்படக் குறிப்பதே வழக்கம்.

வடஇந்தியப் பிராகிருதமும் ஒருகாலத்தில் திரவிட மாயிருந்து திரிந்ததே. அது வேதக்

காலத்திற்கு மிக முந்தியதாகும். ஆகவே, வேத ஆரியர் வருகைக்கு முன், இந்தியப் பழங்குடி மக்கள் மொழிகளெல்லாம், தெற்கில் தமிழும் வடக்கில் திரவிடமுமாக இருவேறு நிலைப்பட்டிருந்தனவென் றறிதல் வேண்டும். திரவிடமும் தென்திரவிடம், நடுத்திரவிடம், வடதிரவிடம் என மூவகைப் பட்டிருந்தது. தென்திரவிடம் வடுகு போன்ற கொடுந்தமிழ்; நடுத்திரவிடம் மராட்டிரமும் குச்சரமும்; வடதிரவிடம் வட இந்தியப் பிராகிருதம்.

காலக்கடப்பினால் மட்டுமன்றி இடச் சேய்மையினாலும் மொழிகள் திரிகின்றன. தமிழ் போன்ற இயன்மொழியில்தான் செம்மை என்னும் வரம்பிட்டு, இலக்கிய வாயிலாகவும் உயர்ந்தோருலக வழக்கு வாயிலாகவும் அதன் திரிபைத் தடுக்க முடியும். தெலுங்கு, மராத்தி, இந்தி, ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய திரிமொழிகளெல்லாம் திரிபினாலேயே தோன்றியுள்ளன. ஆதலால், அவற்றின் திரிபைத் தடுக்குமாறும் விலக்குமாறும் இல்லை. திரிபை நீக்கிவிடின் திரிமொழிகள் அவ்வம் மொழிகளாகா. தெலுங்குத் திரிபை நீக்கிவிடின், அது தமிழாய்விடும். அங்ஙனமே பிரெஞ்சுத் திரிபை நீக்கிவிடின், அது இலத்தீ னாகிவிடும்.

திரிபிற்கு ஓர் எல்லையுமில்லை; ஒரு தனிப்பட்ட வகையுமில்லை. திரிமொழிகள் பல்வேறு வகையில் மேன்மேலுந் திரியத்திரிய, புதுப்புது மொழிகள் தோன்றிக்கொண்டே அல்லது பிரிந்துகொண்டே போகும். இதனால், ஓர் இயன்மொழிக்கும் அதன் திரிமொழிகட்கும் இடைப்பட்ட உறவு அல்லது தொடர்பு, திரிபின் அளவிற்கேற்ப நெருங்கியோ நீங்கியோ இருக்கும். திரிமொழிகட்குள்ளும் ஒரு தாய்மொழிக்கும் அதன் கிளைமொழிகட்கும் இடைப்பட்ட உறவும் இத்தகையதே.

பாலினின்றே தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகியவை உருவாக்கப் பெறுகின்றன. ஆயின், இவற்றிற் கிடைப்பட்ட உறவு திரிபிற்கேற்பத் தோற்றத்திலும் பண்பிலும், வேறுபட்டுள்ளது. உருக்கின நெய் தோற்றத்திற் பாலினின்று முற்றும் வேறுபட்டு விடுகின்றது. நெய் உருவாகும் வகையை அறியாதவன் நெய்க்கும் பாலிற்குமுள்ள தொடர்பை உணர முடியாது. இங்ஙனமே மொழிகட் கிடைப்பட்ட உறவுமென்க. வடதிரவிடம் என்னும் பிராகிருதம், தமிழுக்கு எத்துணை நெருக்கமாயிருந்ததென்பதைப் பின்வருஞ் சொற்களாற்கண்டு கொள்க.

தமிழ்	பிராகிருதம்	தமிழ்	பிராகிருதம்
அச்சன்	அஜ்ஜ	சாவம்	சாவ
அத்தன்	அத்த	சிப்பி–இப்பி	சிப்பீ
அத்தை	அத்தா	சுண்ணம்	சுண்ண
அப்பன்	அப்ப	சுன்னம்	சுன்ன
இதோ	இதோ	செட்டி	சேட்டி
எட்டி–செட்டி	சேட்டி	சேணி	சேணி
ஏழகம் (ஆடு)	ஏளக	சொக்கம்	சொக்க
ஐயவி	சசவ	நட்டம்–(நடம்)	நட்ட
ஐயன்	அய்ய	நீல்–நீலம்	நீல்
கச்சை	கச்ச	நேயம்	நே அம்
கசடு	கசட, சகட	படிக்கம்	படிக்கஹ
கட்டை	கட்ட (ṭh)	படிமை	படிமா
கந்தன்	கந்த	பரிவட்டணை	பரிவட்டண
கப்பரை	கப்பர(kh)	பரிவட்டம்	பரிவட்ட
கற்பூரம்	கப்பர	பல்லக்கு	பல்லங்க(nk)
கம்பம்	கம்ப(kh.bh)	பளிங்கு	பலிக (ph)
கம்மாளன்	கம்மார	புடவி	புடவீ (dh)
கலாவம்	கலாவ	பேய்	பேந்து, பேத
கவாளம்	கவாட்ட	பையுள்	பய்யாவுல
காவு	காவ்(gh)	மண்டபம்	மண்டவ
குள்ளம்	குல்ல(kh)	மாது	மாது
கொக்கு	கொக்கை	வக்கணம்	வக்கண(gg)
சகடி	சாடீ(t)	வக்கு	வக்க
சரி (ஒப்பு)	சரி	வட்டம்	வட்ட
		வண்ணம்	வண்ண

வடதுருவசக்கரம் *vaḍa-turuva-cakkaram,* பெ.(n.) நிலத்தின் வட கோடியிலுள்ள குளிர்ச்சியான மண்டலத்தை வரையறுக்கும் சுற்றுரேகை; arctic circle.

[வடதுருவம் + சக்கரம்]

வடதுருவம் *vaḍa-turuvam,* பெ.(n.) வடக்கிலுள்ள நிலவுலக முனைக்கோடி (துருவம்); the north pole.

[வடக்கு + துருவம்]

வடதெற்கு *vaḍa-teṟku,* பெ.(n.) வடக்கும் தெற்கும்; north and south. *"வடதெற்கு விலங்கி"(பதிற்றுப்.31).*

[வடக்கு + தெற்கு]

தென்வடலின் எதிர்மறை வடதெற்காம்.

வடதேசம் *vaḍa-tēšam,* பெ.(n.) வடநாடு (யாழ். அக.); northern country or region.

மறுவ. வடபுலம்

[வடக்கு + தேசம்]

தேசம் = இடம், நாடு, முடிவு, எல்லை, பக்கம். திசை→ தேசு→தேசம். தேசம் என்னும் சொல், முதலில் எல்லையைக் குறித்தது. ஈண்டு வடதேசம் என்பது வடநாட்டையும், வடவெல்லையையும் குறித்து வழங்கிற்று.

வடதேசவடமன் *vaḍa-tēša-vaḍamaṉ,* பெ.(n.) வடமருள் ஒரு பிரிவினன்; a sub-sect of *vaḍamaṉ.*

[வடதேசம் + வடவர்மகன்→வடமன்]

வடந்தாங்கி *vaḍan-tāṅgi,* பெ.(n.) கோயில் தேர்வடத்தைத் தாங்கும் வட்டஞ்சுற்றி; temple car rope round shape supported.

வடந்திங்கி *vaḍan-tiṅgi,* பெ.(n.) கப்பற்பாயின் அடிப்புறத்தை மேலிழுக்கும் கருவி (Naut.); main clew-garnet; puchase, consisting of two single blocks and a fall, by which the lower corner of a square mainsail is hauled upto the yard.

வடந்தை *vaḍandai,* பெ.(n.) 1. வடக்கிலுள்ளது; that which is in the north. *"வடந்தைத் தண்வளி" (நெடுநல். 173).* 2. வடகாற்று ; northern wind. *"தண்பனி வடந்தை"(ஐங்குறு.263).*

வடந்தைக்கனல் *vaḍandai-k-kaṉal,* பெ.(n.) வடந்தைத்தீ பார்க்க; see *vaḍandai-t-tī.*

[வடந்தை + கனல். வடதிசை நெருப்பு]

வடந்தை = வடக்கிலுள்ளது. குல்→குன்→கன் →கனல் = எரிந்து கொண்டிருக்கும் தீ. வடக்கில் எரிந்து கொண்டிருக்கும் நெருப்பு.

வடந்தைத்தீ *vaḍandai-t-tī,* பெ.(n.) வடதிசை நெருப்பு (L.); aurora borealis. *"சுடர்ந்தெரி வடந்தைத் தீயும்" (காஞ்சிப்பு. இருபத்.384).*

[வடம்→வடந்தை + தீ = வடதிசை நெருப்பு அல்லது வடவைக்கனல் (வ.மொ.வ.2, பக்.78). வடந்தை = வடக்கிலுள்ளது. வடக்கிலுள்ளதாகக் கருதப்படும் கனல்.]

வடநாடு *vaḍa-nāḍu,* பெ.(n.) தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய நான்கு மாநிலங்கள் தவிர்த்த பிற வட மாநிலங்கள்; northern part of India other than four southern states. *'அவனுக்கு வடநாட்டில் வேலை கிடைத்திருக்கிறது'.*

[வடக்கு + நாடு]

வடநூல் *vaḍanūl*, பெ.(n.) வடமொழியிலுள்ள நூல்; Sanskrit literature. *"வடநூன்மரபும் புகன்று கொண்டே" (வீரசோ. பாயி.3).*

வடநூலார் *vaḍanūlār*, பெ.(n.) வடமொழியில் வல்லார்; sanskritists, proficient an expert or adept in sanskirit. *"வடநூலார் தாமே பதிகமு முரையுஞ் செய்வார்" (பி.வி.3, உரை).*

[வடநூல்→வடநூலார்]

வடநெறி *vaḍa-neṟi*, பெ.(n.) வடநூன்முறை; literary convention or usage in sanskirit. *"மன்னும் வடநெறியே வேண்டினோம்" (திவ்.இயற்.பரிய.ம.40).*

[வட + நெறி]

வடப்படி *vaḍa-p-paḍi*, பெ.(n.) 144 பலங் கொண்ட நிறை (G.Tn.D.1, 237); a weight of 144 palam.

வடப்படிரம் *vaḍa-p-paḍiram*, பெ.(n.) சந்தனம்; sandel ptero carpus santalinus (சா.அக.).

வடப்பிலவம் *vaḍa-p-pilavam*, பெ.(n.) அத்தி மரம்; tailed oval leaved fig-*Ficus talboti*.

வடபடி *vaḍa-paḍi*, பெ.(n.) வடப்படி (இ.வ.) பார்க்க; see *vaḍa-p-paḍi*.

வடபத்தி *vaḍa-patti*, பெ.(n.) வடபத்திரம் (சங்.அக.) பார்க்க; see *vaḍa-pattiram*.

வடபத்திரசாயி *vaḍapattiraśāyi*, பெ.(n.) ஆலிலையிற் பள்ளி கொண்ட திருமால்; *visṇu*, as in a sleeping posture on a banyan leaf.

வடபத்திரம் *vaḍa-pattiram*, பெ.(n.) மர வகை (யாழ்.அக.) a kind of tree.

வடபத்திரிகா *vaḍa-pattirigā*, பெ.(n.) கிளுவை; balsam tree-*Balsmodendron beryi*.

வடபரதம் *vaḍa-baradam*, பெ.(n.) வட இந்தியா (வின்.); Northern India.

மறுவ. வடநாடு, வடபுலம்.

[வட + பரதம்]

வடபல்லி *vaḍa-palli*, பெ.(n.) தலைக் கோலத்திற் புல்லகமென்னும் அணிகலன் (சிலப். 6, 107, உரை); woman's ornament for the forehead, part of *talai-k-kōlam* or decoration.

வடபாங்கு *vaḍa-pāṅgu*, பெ.(n.) தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள தெருக் கூத்து வகையு ளொன்று; a street play normally performed in South Arcot District.

வடபால்விதேகம் *vaḍa-pāl-vidēgam*, பெ. (n.) ஒன்பது நிலப்பெரும் பிரிவுளொன்று (பிங்.); a continent, one of *nava-kaṇḍam*.

வடபாலிரேவதம் *vaḍa-pāl-irēvadam*, பெ. (n.) ஒன்பது நிலப்பெரும் பிரிவிளொன்று (பிங்.); a continent, one of a *nava-kaṇḍam*.

வடபாற்பரதம் *vaḍa-pāṟ-paradam*, பெ.(n.) தொண்பது (ஒன்பது) கண்டத்துள்ளொன்று (பிங்.); a continent, one of *nava-kaṇḍam*.

[வடபால் + பரதம்]

வடபுலம் *vaḍa-pulam,* பெ.(n.) 1. வடநாடு; northern country. *“வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த” (சிறுபாண்.48).* 2. வடதிசைக்குரு *(பதிற்றுப்.68, 13);* uttara-guru, the earthly paradise.

[வட + புலம்]

வடபூமி *vaḍa-būmi,* பெ.(n.) வடநாடு; northern country.

வடபெருங்கல் *vaḍa-peruṅkal,* பெ.(n.) வடமலை, 2 பார்க்க; see *vaḍa-malai. “தென்குமரி வடபெருங்கல்” (மதுரைக்.70).*

[வடக்கு + பெரு–மை+கல்]

வடபொழில் *vaḍa-poḻil,* பெ.(n.) வடக்கிலுள்ள நிலப்பரப்பு; northern region. *“நாவலந் தண்பொழில் வடபொழி லாயிடை” (பரிபா.5: 8).*

மறுவ. வடபுலம்

[வடக்கு + பொழி→பொழில்.]

வடம்¹ *vaḍam,* பெ.(n.) 1. பருங் கயிறு; a thick rope. 2. தேரினை யிழுக்கப் பயன்படும் நீண்டகயிறு; cable, large rope, as for drawing a temple-car. *“வடமற்றது” (நன்.219, மயிலை.).* 3. தாம்பு (சூடா.); cord. 4. தென்னை, பனை மரமேறவுதவுங் கயிறு (இ.வ.); a loop of coir rope, used for climbing palm-trees. 5. மணிவடம் (சூடா.); string of jewels. *“வடங்கள் அசையும்படி உடுத்து” (திருமுரு.204, உரை.).* 6. வில்லின் நாண் (பிங்.); bowstring. 7. சரம், சரப்பளி; strands of a garland, chains of a necklace. *“இடை மங்கைகொங்கை வடமலைய” (அஷ்டப். திருவேங்கடத் தந்.39).* 8. ஒழுங்கு; arrangement in order. *“தொடங்கற்காலை வடம்பட விளங்கும்” (ஞானா.14, 41).* 9. வட்டமாகப் பரவும் ஆலமரம் (சூடா.); banyan. *“வடநிழற்கண் ணூடிருந்த குருவே” (தாயு. கருணா.41.).*

[வட்டம்→வடம்.]

த. வடம் > **Skt.** vaṭa.

நாவலந் (இந்து) தேயத்தின் வடபாகத்தில் வட(ஆல) மரம் மிகுதியாய் வளர்தலின் அத்திசை வடம் எனப்பட்டது.

vaṭam (perhaps prākrit for vrita, surrounded covered' என்று மா.வி.அ. குறித்திருத்தல் காண்க.

வடம் = வட்டமாகப் பரவும் ஆலமரம். உருண்டு திரண்ட கயிறு. கமலை (கம்மாலை) உருண்டு திரண்ட பொற்கொடி அல்லது மணிக்கோவை.

வடம் என்னும் தூய தென்சொல்லை வடமொழிச்சொல்லென்று சென்னைப் பல்கலைக் கழக தமிழ் அகரமுதலி குறித்துள்ளது, முற்றிலும் பொருந்தாது. அடிப்படைப் பொருண்மையாகிய வட்டம் என்ற சொல்லினின்று வடம் தோன்றியதறிக. உருண்டு, திரண்ட வட்டப் பொருள் குறித்த சொற்கள், இலக்கியத்திலும், மக்கள் வழக்கிலும், இன்றும் மிகுதியாக வழக்கூன்றியுள்ளன.

(எ.கா.) வடக்கயிறு, தேர்வடம், வடமாலை, வடமணி வளை, வடமணிக் கோவை.

மேற்குறித்த கரணியங்களைக் கருத்திற் கொண்டே, மொழிஞாயிறு, தமது நூலில் (வ.வ. 248–249) வடம் தென்சொல்லென்று நிறுவியுள்ளார்.

வடம்² *vaḍam,* பெ.(n.) 1. மண்டலம் (அக.நி.) (தொல். சொல். 402, உரை); circle, circular form, ring-like shape. 2. பலகை; plank of wood. *பக்கவடம்; கதவு வடம் (நாஞ்.).*

வடம்³ *vaḍam*, பெ.(n.) 1. கோயில் தேரை இழுக்கப் பயன்படுத்தும் பருத்த முறுக்குக் கயிறு; thick twisted rope, to haul a heavy object like a temple car. 2. கழுத்துச் சங்கிலியின் தடித்த சரடு; a string of a gold chain. *இரட்டை வடச் சங்கிலி.*

வடம்பி *vaḍambi*, பெ.(n.) தான்றிக்காய்; a tree-*Terminalia bellerica* (சா.அக.).

வடம்பிடி-த்தல் *vaḍam-piḍi-*, 4 செ.கு.வி. (v.i.) வடத்தைப் பிடித்துத் தேரிழுத்தல்; to pull or draw a temple-car by seizing it by its cables or thick ropes.

[வடம் + பிடி-,]

வடம்புலி *vaḍam-puli*, பெ.(n.) ஆல்; banyan tree-*Ficus bengalensis* (சா.அக.).

வடம்போக்கி *vaḍam-pōkki*, பெ.(n.) வடத்தை இழுத்துச் செல்வதற்குரிய இடம்; a specific location for pulling the thick rope the Temple care.

[வடம் + போகு→போக்கி.]

வடம்போக்கித்தெரு *vaḍam-pōkki-t-teru*, பெ.(n.) தேர் திரும்புவதற்கு முன், முதற்கண் வடத்தை இழுத்துச் செல்வதற்கு வாய்ப்பாக அமைந்த தெரு; a street located for conveniently turning the temple car.

[வடம்போக்கி + தெரு.]

வடமகீதரம் *vaḍa-magīdaram*, பெ.(n.) மேருமலை; big Mt.Meru. *“சிரவுட மகீதர மெனக் குவித்து” (பாரத. இராசசூய. 44).*

வடமதுரை *vaḍa-madurai*, பெ.(n.) நாவலந் (இந்து)தேயத்தின் வட பாகத்திலுள்ள மதுரை; Madurai, in north India. *“மாயனை மன்னு வடமதுரை மைந்தனை” (திவ். திருப்பா. 5).*

[வட(ம்) + மதுரை.]

வடமநெடுந்தத்தனார் *vaḍama-neḍun tattaṉār*, பெ.(n.) கழகக்காலப் புலவருள் ஒருவர்; an ancient *Śaṅgam* poet.

வடநெடுந்தத்தனார் என்றும், வடம நெடுந்தத்தனாரெனவும் அழைக்கப்படுகின்ற இவர், புறநானூற்றில் 179–ஆம் பாடலை இயற்றியவராவார். ‘நாலைகிழவன் நாகன்’ என்பவனைப் பற்றி பாடியுள்ளார்.

"ஞால மீமிசை வள்ளியோர் மாய்ந்தென
ஏலாது கவிழ்ந்தஎன் இரவல் மண்டை
மலர்ப்போர் யாரென வினவலின் மலைந்தோர்
விசிபிணி முரசமொடு மண்பல தந்த
திருவீழ் நுண்பூண் பாண்டியன் மறவன்
படைவேண் டுவழி வாளு தவியும்
வினைவேண் டுவழி அறிவு தவியும்
வேண்டுப வேண்டுப வேந்தன் தேஎத்து
அசைநுகம் படாஅ ஆண்டகை யுள்ளத்துத்
தோலா நல்லிசை நாலை கிழவன்
பருந்துபசி தீர்க்கும் நற்போர்த்
திருந்துவேல் நாகற் கூறினர் பலரே" (புறம். 179).

வடமரம்¹ *vaḍa-maram*, பெ.(n.) கப்பலின் நடுவில் இருக்கும் பாய்மரம்; main mast.

வடமரம்² *vaḍa-maram*, பெ.(n.) ஆலமரம்; banyan tree-*Ficus Bengalensis*.

மறுவ. தொன்மரம்

[வடம் + மரம்.]

வடம்போன்ற விழுதுகளை விடுவது, வட (ஆல) மரம். வடமரம் வங்காளத்தில் மிகுதியாய் வளர்கின்றது. அதனாலேயே அது ‘Fiscus bengalensis’ என்று நிலைத்திணை நூலில் அழைக்கப்படுகிறது.

வடமருது *vada-marudu,* பெ.(n.) மருத மரவகை; flowering murdah.

வடமலை *vada-malai,* பெ.(n.) 1. மேரு மலை; big Mt. Mēru. *"வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்" (பட்டினப். 187).* 2. இமயமலை; the Himalayas. *"வடமலைப் பெயர்குவை யாயின்" (புறநா.67).* 3. தமிழகத்தின் வடவெல்லையாக அமைந்த திருப்பதி மலை; the Tiruppadi hills, as the northern boundary of the Tamil country. *"தென்னனுயர் பொருப்பும் தெய்வ வட மலையும்" (திவ். இயற். பெரிய. ம, 6).* 4. மந்தர மலை; Mt. Mandara. *"மன்னு வடமலையை மத்தாக" (திவ். இயற். பெரிய. ம.105).* 5. வடமலையப்பபிள்ளையன் (பெருந் தொ.1321) பார்க்க; see *vada-malaiyappa-pillaiyan.*

[வடக்கு + மலை.]

வடமலையப்பப்பிள்ளையன் *vadamalai-y-appa-p-pillaiyan,* பெ.(n.) கி.பி.1706–ஆம் ஆண்டில் நாயக்க மன்னரின் ஆளுமைக்குட்பட்டு திருநெல்வேலிச் சீமையை ஆண்டவரும் மச்ச புராணம் இயற்றியவருமான பெருமகன்; a viceroy of the *Tirunelvēli* regions under the Naiks of Madurai, 1706 A.D.

[வடமலையப்பன் + பிள்ளையன்]

வடமலையப்பபிள்ளை *vadamalai-y-appa-pillai,* பெ.(n.) 17–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a poet, lived in 17 C. *இவர் நாநூற்றுக்கோவை, நீடூர்த்தலபுராணம், மச்ச புராணம், நாற்கவி வண்ணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.*

வடமலையப்பன் *vadamalai-y-appan,* பெ.(n.) வடமலையப்பபிள்ளையன் (பெருந் தொ. 1327) பார்க்க; see *vadamalai-y-appa-p-pillaiyan.*

[வடமலை + அப்பன்]

வடமலையான் *vada-malaiyān,* பெ.(n.) 1. திருப்பதி மலையுறையுந் திருமால்; *Visnu* as residing in the Tiruppadi hills. *"வடமலையாய்... அஞ்சேலென்று வந்தருளே" (அஷ்டப். திருவேங்கடத்தந்.6).* 2. நெல் வகையு ளொன்று (வின்.); a kind of paddy.

மறுவ. வேங்கடவன்.

[வடமலை →வடமலையான்]

வடமலைவாண்டன் *vadamalai-vāndan,* பெ.(n.) வடமலையான் (யாழ்.அக.) பார்க்க; see *vadamalaiyān.*

[வடமலை + வாழ்நன் → வாண்டன்]

வடமலைவாணன் *vadamalai-vānan,* பெ.(n.) வடமலையான் (யாழ்.அக.) பார்க்க; see *vada-malaiyān.*

[வடமலை + வாழ்→வாழ்நன் → வாணன்]

வடமவண்ணக்கன் *vadama-vannakkan,* பெ.(n.) வடமொழி பேசும் வடநாட்டு மக்கள்; northerners who speak sanskirit. *கழகக்கால புலவர்களுள் ஒருவர். இவர் குறுந்தொகையில் 81 வது பாடலை பாடியவராவார்.*

வடமவண்ணக்கன்தாமோதரனார் *vadama-vannakkan-tāmōdaranār,* பெ.(n.) சங்கப்புலவருள் ஒருவர்; an ancient *sangam* poet. *இலக்கியங்களில் வடமன் தாமோதரனார் என்று காணப்படும்*

இப்பெயர், வண்ணக்கன் என்பதன் பொருள் நாணய நோட்டஞ் செய்பவன் என்பதாகும். புறநானூற்றின் 172ஆம் பாடலில் 'பிட்டங் கொற்றன்' குறித்து பாடியுள்ளார். இவர் வடதிசையில் இருந்து வந்தவராக கருதப்படுகிறார். 'யாரினும் இனியன் பேரன் பினனே' என்னும் பாடலும் இவர் பாடியது.

"யாரினும் இனியன் பேரன் பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுடைச் சேவல்
சூல்முதிற் பேடைக் கீனி லிழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாண ரூரன் பாணன் வாயே" (குறுந். 85).

வடமவண்ணக்கன்பேரிசாத்தனார் *vadama-vannakkan-pēri-šāttanār*, பெ.(n.) கழகக்காலப் புலவர்களுள் ஒருவர்; an ancient sangampoet. *மாந்தரஞ் சேரலிரும்பொறையும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியும் போர் செய்தபோது, சோழனின் படைத்தலைவன் தேர்வண் மலையனைப் பற்றிப் பாடியவர். இவர், புறநா 198, 125, அகநா:38, 214, 242, 268, 305, குறுந்: 81, 159, 278, 314, 366 நற்.25, 37, 67, 104, 199, 299, 323, 378 முதலானவை இவர் பாடியவையே.*

வடமன் *vadaman*, பெ.(n.) வடநாட்டான்; man of the north country.

[வடவர்மகன் → வடமன்]

வடமாது *vada-mādu*, பெ.(n.) புளி; tamarind.

வடமாலிகை *vada-māligai*, பெ.(n.) பருத்தி; cotton shrub.

வடமீதி *vada-midi*, பெ.(n.) வடபாதி (நாஞ்.); the northern half.

[வட + மீதி]

வடமீன் *vada-min*, பெ.(n.) அருந்ததி யென்னும் விண்மீன்; the star called arundadi. *"வடமீன் புரையுங் கற்பின் மடமொழி" (புறநா. 122).*

[வட → வடமீன்]

வடமுகம்[1] *vada-mugam*, பெ.(n.) வடபால் (யாழ்.அக.); the northern quarter, towards north.

[வட + முகம்]

வடமுகம்[2] *vada-mugam*, பெ.(n.) கால்வாயின் முகப்பு (யாழ்ப்.); head of a water-course or channels (சா.அக.).

[மடைமுகம் → வடமுகம்]

வடமுகில் *vada-mugil*, பெ.(n.) பாண்டியன் (அக.நி.); Pāndiyan.

வடமுருங்கை *vada-murungai*, பெ.(n.) காட்டு முருங்கை; a plant wild moringa- *Ormocarpum sennoides* (சா.அக.).

வடமூலகன் *vada-mūlagan*, பெ.(n.) சிவபிரான் (சங்.அக.); *Šivan.*

வடமேரு *vada-mēru*, பெ.(n.) மேருமலை; Mt. *Mēru. "கல்லன்றோ..... வடமேரு" (கம்பரா. மாயாசனகப்.81).*

மறுவ. கனகமலை.

[வடக்கு + மேரு]

வடமேற்காறு *vadamērkāru*, பெ.(n.) வட மேற்கு நாட்டில் விளையும் சமுத்திராப்பழம், கடுக்காய், சீயக்காய், பொன்னிளங்காய், தேற்றான் வித்து, வலம்புரிக்காய் ஆகிய ஆறு வகைச் சரக்குகள்; six drugs that grow in the north west territory.

வடமேற்கு *vaḍa-mēṟku,* பெ.(n.) வடக்கும் மேற்குஞ் சேர்ந்த கோணத்திசை; north-west direction.

[வடக்கு + மேற்கு]

வடமேற்றிசை *vaḍa-mēṟṟišai,* பெ.(n.) வட மேற்கு பார்க்க; see *vaḍa-mēṟku.*

[வடமேற்கு + திசை]

வடமேற்றிசைக்குறி *vaḍamēṟṟišai-k-kuṟi,* பெ.(n.) கழுதை (திவா.); ass.

[வடமேற்றிசை + குறி]

வடமேற்றிசைப்பாலன் *vaḍamēṟṟišai-p-pālaṉ,* பெ.(n.) வளி வழங்கு தேவன் (யாழ். அக.); *vāyu,* as the regent of the north-west.

[வடமேற்றிசை + பாலன்]

எண்டிசைப் பாலகருள் வடமேற்கு மூலைக்குரியவனும் காற்றுக்கு அதிகாரியுமான தேவன்.

வடமொழி *vaḍa-moḻi,* பெ.(n.) 1. சமற்கிருத மொழி; sanskrit language. *"வடமொழி முதலான பிற கலைக்கடல்களுள்ளும்" (நன். 459, மயிலை.).* 2. வடசொல் (இலக்.); sanskrit word. *"செந்தமிழ்க்கண் வந்த வடமொழியு மாற்றாதே" (யாப்.வி. பக். 461).*

மறுவ. ஆரியம், ஆரியமொழி.

[வட + மொழி = வடக்கினின்று வந்த அயன்மொழி (தேவ.12, பக்.223)]

சமற்கிருதத்தைத் தொன்று தொட்டு, வடமொழியென்று வழங்கினர். வேதமொழி அல்லது அதன் செயற்கை வளர்ச்சியான இலக்கிய நடைமொழி (literary dialect), வடக்கினின்று வந்ததால் வடமொழி என்றும், நன்றாகச் செய்யப்பட்டது என்னும் பொருளில் சமற்கிருதம் (ஸம்ஸ்கிருத) என்றும், தேவர் பேசுவது என்னும் பொருளில் தேவமொழி (தேவபாஷா) அல்லது கீர்வாணம் என்றும், ஆரியர் மொழி என்னும் பொருளில் ஆரியம் என்றும், பெயர் பெறும்.

வடமொழி என்னுமிச்சொல் இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் இடம்பெற்றுள்ளன.

(எ.கா) *"வடமொழி வாசகம் செய்தநல் லேடு" (சிலப். 15:58).*

"வடமொழி யாளரொடு வருவோன் கண்டு" (மணிமே. 5:40).

"வடமொழியாட்டி மறைமுறை யெய்தி" (மணிமே. 13:73).

ஆரியமும், வடமொழியும் ஒரு பொருட் சொற்களாகத் தமிழகத்தில் வழக்கூன்றியிருந்தன வென்பதைப் பின்வரும், கம்பராமாயணப் பாடல் வரியால் அறியலாம்.

"ஆரியம் முதலிய பதினெண் பாடையின்" (கம்பரா. பம்பா. 14)

வடமொழி ஒரு திரிமொழியும், கலவை மொழியுமாகும். வடமொழி பின்வருமாறு ஐவேறு நிலைகளைக் கொண்டதாகும்.

1. தென்திரவிடம் (வடுகு); 2. வடதிரவிடம் (பிராகிருதம்); 3. கீழையாரியம்; 4. வேதமொழி; 5. சமற்கிருதம்.

இயன்மொழியாகிய செந்தமிழின் சீர்மைகளையும், திரிமொழியாகிய வடமொழியின் தன்மைகளையும், பாவாணர் வேறுபடுத்திக் காட்டும் பாங்கு வருமாறு :-

தென்மொழி வடமொழி வேறுபாடு :- செந்தமிழாகிய தமிழும் கொடுந்தமிழ்களாகிய திரவிட மொழிகளும் சேர்ந்தது தென்மொழியாகும்.

தென்மொழி	வடமொழி
(1) தெற்கில் தோன்றியது	வடக்கினின்று வந்தது
(2) இயற்கையாய் அல்லது தானாய்த் தோன்றிய இயன்மொழி	திராவிடத்தினின்று திரிந்து தமிழால் வளம்படுத்தப் பெற்ற திரிமொழி.
(3) தூய ஓரினத் தாய்மொழி	ஈரினக் கலவை மொழி.
(4) உலக வழக்கு மொழி. வாழும் உண்ணிமொழி	வழங்கா நூன்மொழி; அதனால் பிறமொழி –களையே சார்ந்து வாழும் உண்ணிமொழி.
(5) இந்திய ஐரோப்பிய மொழிக்கோவையின் முதனிலை	இந்தி ஐரோப்பிய மொழிக்கோவையின் இறுதிநிலை.
(6) மென்மொழி	வன்மொழி.
(7) இயற்கைப் பால் மொழி	செயற்கைப் பால் மொழி
(8) பொருளிலக்கணத்தால் இலக்கண நிறைமொழி.	பொருளிலக்கணமின்மை –யால் இலக்கணக் குறை மொழி.
(9) செம்மை வரம்புமொழி.	செம்மை வரம்பிலா மொழி
(10) பெரும்பாலும் மூல இலக்கிய மொழி	பெரும்பாலும் மொழி –பெயர்ப்பிலக்கிய மொழி.
(11) உண்மை, சமன்மை, அன்பு முதலியவற்றை உணர்த்தும் பண்பாட்டு மொழி	பொய்ம்மை, பிரிவினை, ஒருகுல முன்னேற்றம் முதலியவற்றையுணர்த்தும் பண்பாடற்ற மொழி.
(12) மக்கள் மொழி –யென்று ஒப்பும் மொழி	தேவ மொழியென்று ஏமாற்றும் மொழி.

சமற்கிருதத்தை வடமொழியென்றும் தமிழைத் தென்மொழியென்றும் தொன்று தொட்டு வழங்கி வருவதால், முன்னது வடக்கினின்று வந்த அயன் மொழி என்றும், பின்னது முதலில் இருந்தே தெற்கின்கண் வழங்கி வந்த நாட்டுமொழியென்றும் தெள்ளத் தெளிவாக அறியலாம்.

மொழிக்குச் சொன்னது மொழியாளர்க்கும் ஒக்கும். சிலர் வரலாற்றுண்மைக்கு மாறாக வடமொழியும் முற்காலத்தில் இருந்தே தென்னாட்டில் வழங்கி வந்த தென்பர். அவர்க்கு வடமொழி என்னும் பெயரே வாயடைத்தல் காண்க (சொல்.21).

வண்ணமாலை (வர்ண மாலா): வடமொழி நெடுங்கணக்கு அல்லது குறுங்கணக்கு வர்ணமாலா எனப்பெறும். வண்ணம்–வர்ண. மாலை–மாலா. வர்ண, அக்ஷர என்பன எழுத்தின் பொதுப் பெயர்கள். இவற்றுட் பின்னது அசையையுங் குறிக்கும் (வ.வ.).

ஒலியும் பிறப்பும்: உயிரெழுத்துகளுள்; ருகரம் குற்றியலுகரம் சேர்ந்த ரகரமாகும். ரூகாரம் அதன் நெடில் அல்லது நீட்டம். லுகரம் குற்றிய லுகரம் சேர்ந்த லகரம்.

ஐ, ஔ என்னும் இரு நெடிலும் முதற்காலத்தில் ஆய், ஆவ் என நீண்டொலித்தனவென்றும், ஆரியம் தமிழொடு தொடர்பு கொண்டபின், அவை தமிழிற்போல் அய், அவ் எனக் குறுகி யொலிக் கின்றனவென்றும், கூறுவர்.

தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான பிற எழுத்துகளெல்லாம், தமிழிற்போன்றே ஒலிக்குமென அறிக.

ஏ, ஒ இரண்டும் தமிழில் எகர ஒகரங்களின் நீட்டமான தனி யொலிகளாகக் (Simple vowels) கொள்ளப்பெறும்; சமற்கிருதத்தில் தவறாகப் புணரொலிகளாகக் (Diphthongs) கொள்ளப் பெறுகின்றன. இதற்கு அம்மொழியில் எகர ஒகர மின்மையும் குணசந்தியுமே காரணம்.

அ, ஆ + இ, ஈ–ஏ. எ–டு : மஹா + இந்திர(ன்) = மஹேந்திர(ன்)

அ, ஆ+உ, ஊ= ஓ. எ–டு : குல + உத்துங்கன் = குலோத்துங்கன்.

எழுத்துச் சாரியை :

'காரமும் கரமும் கானொடு சிவணி

நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை' என்பது தொல் காப்பியம் (134).

உயிரெழுத்தின் உதவியின்றித் தாமாக வொலிக்காத மெய்யெழுத்துகளை ஒலிப்பித்தற் பொருட்டும், தாமாக வொலிக்கும் உயிரெழுத்துகளையும் எளிதாக ஒலிப்பித்தற் பொருட்டும், சில துணையொலிகளைப் பண்டைத் தமிழிலக்கண நூலார் அமைத்துள்ளனர். அவை சாரியை எனப்பெறும்.

முறை: மேலையாரிய மொழிகட்குள் ஒன்றிற்காவது முறை என்னும் எழுத்திலக்கணம் இன்றுமில்லை. வேத ஆரியர் எழுத்தும் இலக்கியமுமின்றி இந்தியாவிற்குட் புகுந்தனர். வேத மொழிக்கும் வேதத்திற்கும் எழுதாக்கிளவி என்று பெயர். வேதத்தைக் குறிக்கும் ச்ருதி (கேள்வி) என்னும் பெயரே ஆரியர்க்கு எழுத்தின்மையை உணர்த்தும்.

உயிர் வரிசையுட் செருகப்பட்ட சிறப்பெழுத்துகளை நோக்கினும், முற்றுகரத்தை யடுத்துக் குற்றுகரமும், ரகரக் குற்றுகரத்தின் பின் லகரக் குற்றுகரமும் வைக்கப் பெற்றிருப்பது, எத்துணைத் தமிழ் முறையொட்டியது!

அளபு : அளவு என்பது எழுத்தொலியின் மாத்திரை அல்லது அளவு. அளபு, மாத்திரை என்பன ஒருபொருட் சொற்கள். இவற்றுள் முன்னது தமிழ்ச் சிறப்புச் சொல்; பின்னது தென்மொழிக்கும் வடமொழிக்கும் பொதுச் சொல்.

மெய்க்கு அரையும் குறிற்கு ஒன்றும் நெடிற்கு இரண்டும் மாத்திரை என்பது இருமொழிக்கும் பொது. வடமொழியில் ப்லுதம் என்னும் அளபெடையையும் உயிர் அல்லது உயிர்மெய் வகைகளுள் ஒன்றாகச் சேர்த்து, அதற்கு மும்மாத்திரை என வகுத்துள்ளனர்.

அளபெடையையும் ஓர் உயிர் வகையாகக் கொண்டது வடமொழியிலக்கணத்தின் பின்மையையே காட்டும்.

வடிவம் : வடமொழிக்கு முதன்முதல் எழுத்து ஏற்பட்டது தமிழ் நாட்டில் தான். அது தமிழ் ஏட்டெழுத்தினின்று திரிந்த கிரந்த வெழுத்து. அதன் காலம் தோரா கி.மு.10ஆம் நூற்றாண்டு.

ஐந்திரம் என்னும் வடமொழி வியாகரணம் தொல்காப்பியத்திற்கு முந்திய நூலாதலால், வடமொழிக் கிரந்தவெழுத்து அதற்கு ஓரிரு நூற்றாண்டு முற்பட்டதாயிருத்தல் வேண்டும்.

கிரந்தம் என்பது நூல். வடமொழியாளர்க்குச் சொந்த வழக்கு மொழியின்மையால், நூலிற்கு மட்டும் பயன்படுத்தப்பெற்ற எழுத்தைக் கிரந்தாட்சரம் என்றனர்.

இன்றுள்ள தேவநாகரி கி.பி.4ஆம் நூற்றாண்டிற் கருக் கொண்டு 11ஆம் நூற்றாண்டில் முழுநிறைவடைந்தது. அதையும் உற்று நோக்கின், அதற்கும் கிரந்தவெழுத்திற்குமுள்ள நுண்ணிய வடிவொப்புமை புலனாகும்.

புணர்ச்சி:– எழுத்துப் புணர்ச்சி, சொற்புணர்ச்சி எனப் புணர்ச்சி இரு வகைப்படும்.

தமிழிலக்கணத்தை முதன் முதல் ஆய்ந்து கண்டு நூலியற்றியவர் தலைசிறந்த முனிவர் என்பது,

"வினையின் நீங்கி விளங்கிய வறிவின்

முனைவன் கண்டது முதனூ லாகும்"

(தொல்.1594) என்னும் தொல்காப்பிய நூற்பாவால் விளங்கும்.

முனிவர் மெய்ப்பொருளுணர்வு முதிர்ந்தவ ராதலின், உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் உயிர், உயிரில்லது (மெய்), உயிருள்ளது (உயிர்மெய்) என மூவகையாக இருக்கக்கண்டு, அவற்றை யொத்த மூவகை எழுத்தொலிகட்கும் அவற்றின் பெயரையே உவமையாகு பெயராக இட்டு, உயிர்மெய்க்குத் தனி வடிவும் அமைத்தனர்.

இதனால், உயிர்மெய்யொலியை உயிரும் மெய்யுமாக முதன்முதற் பகுத்தவர் தமிழர் என்பதும், உயிர்மெய்யிலேயே எழுத்துப் புணர்ச்சி தோன்றிவிட்டதென்பதும், தெளிவாம்.

சொற்புணர்ச்சி எல்லா மொழிகளிலுமுண்டு. ஆயின், இயன்மொழியிலேயே புணர்ச்சி ஒழுங்காகவும் புணர்ச்சொற்கள் எளிதாய்ப் பகுக்கக் கூடியனவாகவுமிருக்கும். திரிமொழிகளில் தனிச்சொல்லும் கூட்டுச் சொல்லும் பெரும்பாலும் திரிந்திருப்பதாலும், திரிபுப் புணர்ச்சி நிகழவேண்டிய விடத்தும் இயல்புப் புணர்ச்சியே பெரும்பான்மையாய் நிகழ்வதாலும், திரிபுப் புணர்ச்சி நிகழ்ந்தவிடத்தும் அது வரிவடிவிற் காட்டப் பெறாமையாலும், அவற்றிற் புணர்ச்சியிலக்கணம் வகுக்கப் பெரிதும் இடமில்லை.

சமற்கிருதம் திரிமொழியாயினும், தொன்று தொட்டுத் தமிழொடு தொடர்பு கொண்டமையானும், ஐந்திலிரு பகுதிக்குக் குறையாது தமிழாயிருத்தலானும், தமிழைத் தழுவியே இலக்கணஞ் செய்யப் பெற்றமையானும், புணர்ச்சியிலக்கணம் அதற்கமைந்ததென்க. ஆயினும், திரிமொழியாதலின், தமிழ்ப் புணர்ச்சிபோற் பெரும்பாலும் ஒழுங்குபடாது எத்துணையோ விலக்குகளைக் கொண்டுள்ளதென அறிக.

சமற்கிருதம் ஆரியமும் திரவிடமுங் கலந்த மொழியாதலின், பல முதிரொலிகளைக் கொண்டிருப்பதுடன், வல்லின் ஐவகையுள்ளும் பொலி (voice) யொலியுடனும் பொலியா (voiceless) வொலியுடனும் மூச்சொலியை ஒழுங்காகச் சேர்த்து அவற்றிற்குத் தனி வடிவம் அமைந்துள்ளது.

kh, gh; ch, jh, ṭh, dh; th, dh ph, bh என்னும் பத்துக் கூட்டு மெய்கட்கும், வடமொழியில் தனி வடிவம் அமைந்திருத்தல் காண்க. இந்நிலைமை வேறெம் மொழியிலுமில்லை.

வடமொழி வண்ணமாலையின் பின்மை :- வடமொழி வண்ணமாலையின் பின்மை பின்வருஞ் சான்றுகளால் துணியப்பெறும்.

1. வடமொழியின் பின்மை.

2. ஆரிய வேதம் பன்னூற்றாண்டு எழுதாக் கிளவியாயிருந்தமை.

3. தமிழெழுத்தைப் பின்பற்றிய கிரந்தம் தேவநாகரிக்கு முற்பட்டமை.

4. ஒலி வடிவு, மாத்திரை, சாரியை, வரிவடிவு, முறை முதலியவற்றில் இயன்றவரை தமிழைப் பின்பற்றியிருத்தல்.

5. ஒலிப்பெருக்கம்.

6. கூட்டுமெய்கட்குத் தனிவடிவு கொண்டுள்ளமை.

7. மேலையாரியம்போற் குறுங்கணக்கு மட்டுங் கொண்டிராது தமிழ்போல் நெடுங்கணக்குங் கொண்டிருத்தல் (வ.வ).

பால் (லிங்க) : வடமொழியில் திணையில்லை; பால்மட்டும் உண்டு. அது புல்லிங்கம் (ஆண்பால்), திரீலிங்கம் (பெண்பால்), நபும்ஸகலிங்கம் (அலிப்பால்) என மூவகைப்படும்.

வடமொழிப் பால்வகுப்பு இயற்கையான பொருளியல்பு பற்றியதன்று; பெரும்பாலும் செயற்கையான இலக்கண முறை பற்றியது. சில பெயர்களே உண்மையான பால்காட்டும்.

எ—டு: பு தகம் (ஆ.பா.), சிலா (பெ.பா.) = கல்.

வேற்றுமை (விபக்தி) : கிரேக்க இலக்கணத்தில், எழுவாய் வேற்றுமை, விளிவேற்றுமை, செய்பொருள் வேற்றுமை, கிழமை வேற்றுமை, கொடை வேற்றுமை என்னும் ஐவேற்றுமைகளும், இலத்தீன் இலக்கணத்தில் எழுவாய் வேற்றுமை, கிழமை வேற்றுமை, கொடை வேற்றுமை, செய்பொருள் வேற்றுமை, விளிவேற்றுமை, நீக்கவேற்றுமை, என்னும் அறுவேற்றுமைகளுமே, கூறப்படுகின்றன.

முதற்கால ஆங்கிலத்தில் எழுவாய், விளி, செய்பொருள், கிழமை, கொடை, கருவி என்னும் அறுவேற்றுமைகள் இருந்ததாகச் சொல்லப் படுகின்றது. ஆயின் மேலையாரிய மொழி ஒன்றிலாவது எண் வேற்றுமை சொல்லப்பட வில்லை.

வடமொழியிலோ தமிழிற்போல் எண்வேற்றுமை காட்டப்பெறுவதுடன், அவற்றின் வரிசையும் பெயரும் பொருளும் முற்றும் தமிழை ஒத்திருக்கின்றன.

வேற்றுமைப்பெயர்		வேற்றுமைப்பொருள்	
தமிழ்	வடமொழி	தமிழ்	வடமொழி
முதல்வேற்றுமை	ப்ரதமா விபக்தி	வினைமுதல்	கர்த்தா
இரண்டாம் "	த்விதீயா "	செய்பொருள்	கர்ம(ம்)
மூன்றாம் "	த்ருதீயா "	வினைமுதல், கருவி	கர்த்தா, கரணம்
நான்காம் "	சதுர்த்தீ "	கொடை	ஸம்பிரதானம்
ஐந்தாம் "	பஞ்சமீ "	நீக்கம்	உபாதானம்
ஆறாம் "	ஷஷ்டீ "	கிழமை	ஸம்பந்த(ம்)
ஏழாம் "	ஸப்தமி "	இடம்	அதிகரணம்
எட்டாம் "	ஸம்போதன" ப்ரதமா	விளி	ஸம்போதனம்

இங்ஙனம் முற்றும் ஒத்திருப்பதால், வடமொழி வண்ணமாலை போன்றே வடமொழி வேற்றுமையமைப்பும் தமிழைத் தழுவியதென்பது வெள்ளிடைமலை.

தமிழில் எண்வேற்றுமையும் எண்வரிசையால் மட்டுமின்றி, எழுவாய், செய்பொருள், கருவி, கொடை, நீக்கம், கிழமை, இடம், விளி எனப் பொருள்பற்றியும்; பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என உருபுபற்றியும்; பெயர்பெறும்.

வடமொழியில் எட்டாம் வேற்றுமை எண்ணாற் பெயர்பெறாதிருப்பதும் கவனிக்கத்தக்கதாம்.

தமிழ் இயன்மொழியாதலால் அதில் முதல் வேற்றுமைக்கு உருபில்லை; சமற்கிருதம் திரிமொழியாதலின், அதற்கு அஃதுண்டு.

வடமொழி திரிமொழியாதலின், அதன் வினைகட்கு வேர்ச்சொற்கள் அம்மொழியிலில்லை. அவை பெரும்பாலும் இயன் மொழியாகிய தமிழில்தான் உள்ளன. ஆயினும், வடமொழி தேவ மொழியென்னும் ஏமாற்றிற்கேற்ப வடமொழி வினைச் சொற்களின் முதனிலைகளையும் (Themes) அடிகளையும் (Stems) வேர்களாகக் (Roots) காட்டியுள்ளனர். மேனாட்டாரும், தமிழை வரலாற்று முறைப்படி ஆராயாமையால், வடமொழியை இயன்மொழியென்றும், ஆரியத் தாய்மொழியென்றும் மயங்கி வடவர் காட்டியுள்ள போலி வேர்ச்சொற்களை உண்மையான வேர்ச்சொற்ளென்றே நம்பியிருக்கின்றனர்.

வடவர் காட்டியுள்ள தாதுக்கள் (வேர்ச் சொற்கள்) ஏறத்தாழ 1750. அவை எங்ஙனம் தவறானவை என்பது, இங்கு ஐந்தாதுக்களால் எடுத்துக் காட்டப்பெறும்.

கீர்த்

சீர் = சிறப்பு, புகழ். சீர் – சீர்த்தி = பெரும்புகழ்.

சீர்த்தி மிகுபுகழ் (தொல்.796).

சீர்த்தி–கீர்த்தி. ச–க. ஒ.நோ. : செய் – (கெய்)–கை, செம்பு–கெம்பு, சேரலம்–கேரளம், சேது–கேது.

சீர் என்னும் முதனிலையும், 'தி' என்னும் ஈறும், 'த்' ஆகிய புணர்ச்சித் தோன்றலும், கொண்ட சீர்த்தி என்னும் தொழிற் பெயரின் (அல்லது தொழிலாகு பெயரின்) முற்பகுதித் திரிபாகிய கீர்த் என்பதை முதனிலையாகக் கொள்வது எத்துணையியற்கைக்கு மாறானது! வடமொழி நூன்மொழியேயாதலால், அதில் எச்சொல் வடிவையும் எப்பொருளிலும் ஆளலாம்.

கீர்த்தி என்பதனோடு நேர்த்தி என்பதனை ஒப்பு நோக்குக.

இனி, இதற்கு வேராக, க்ரு[2] என்பதனைப் பாணினியார் (3:3:97) குறித்துள்ளார். அது கரை என்னும் தென்சொல்லின் திரிபே.

கரைதல் = 1. அழைத்தல். *"கலங்கரை விளக்கம்" (சிலப்.).*

2. சொல்லுதல், கற்பித்தல்

அறங்கரை நாவின் நான்மறை முற்றி (தொல்.சி.பா.).

3. எடுத்துச் சொல்லுதல், புகழ்தல்.

அழைத்தலைக் குறிக்கும் அகவல் என்னும் சொற்போல், கரைதல் என்னும் சொல்லும் பாடுதலை உணர்த்தும். ஆதலால், வடமொழியிற் பாணனை அல்லது பாவலனைக் காரு (இ.வே.) என்பர்.

சுட்டும் வினாவும் : சுட்டும் வினாவும், ஆரியமும் சேமியமுமான பிறமொழிகளிலெல்லாம் சொற்களாகவே யிருக்கின்றன. தமிழிலோ அவை சொற்களாக மட்டுமின்றிச் சொற்கட்கு மூலமான எழுத்துகளாகவும் இருக்கின்றன. அவ்வெழுத்துகள் உண்மையில் ஒரெழுத்துச் சொற்களே.

நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி.
குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே.
ஆவயின் வல்லெழுத்து மிகுதலு முரித்தே.
அஇ உஅம் மூன்றுஞ் சுட்டு.
ஆஎ ஓஅம் மூன்றும் வினா.
எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி....

என்று தொல்காப்பியம் (43, 44, 301, 31, 32, 552) கூறுவதாலும், சுட்டும் வினாவும் இன்றும் தனி நெடிலாகத் திரவிடத்திலும் வடதிரவிடக் கான் முளையாகிய இந்தியிலும் வழங்குவதாலும், குறில் நெடில் பலுக்க வெளிதா யிருப்பதனாலும், ஆண்டு ஈண்டு யாண்டு (ஏண்டு) என்னுஞ் சொற்கட்கு முதல் குறுகிய வடிவின்மையாலும், சுட்டு வினாவெழுத்துகள் முதற்காலத்தில் நீண்டேயிருந்து பின்னர்க் குறுகியமை அறியப்படும்.

சுட்டடிகளும் வினாவடிகளும் தனி யெழுத்துகளா யிருப்பதனால், அவற்றை இடைச் சொல்லென்று கொண்டனர் முன்னோர். அவை தனியெழுத்துகளாயினும், பொருளுணர்த்துவதாற் சொல்லாயும் பலவெழுத்துச் சொற்போன்றே பொருள் நிரம்பியும், இருப்பதை அறிக.

தமிழில் உறவியல் (Relative) வினாவும் நேர்வினாவும் ஒரேவகையடி கொண்டிருக்கும். வடமொழியில் உறவியல்வினா யகரவடி கொண்டும் நேர்வினா ககர வடிகொண்டும் உள்ளன. எ–டு:–

உறவியல் வினாச்சொல்	நேர்வினாச்சொல்
யத்(d)	கிம் = யார், எது
யத்ர	குத்ர = எங்கு

வடமொழி : தொடரியல்

(1) தொகைச் சொல் (ஸமாஸ)

வேதமொழியின் மூலமாகிய மேலையாரிய முறைப்படி சமற்கிருதச் சொற்றொடரமைப்பு ஒரு மருங்கு வேறுபட்டிருப்பினும், வேத மொழியின் வடதிரவிட அல்லது பிராகிருதக் கலப்பினாலும், சமற்கிருதத்தின் தமிழ்த் தொடர்பினாலும், அது ஒரு மருங்கு தமிழையும் தழுவியுள்ளது.

அடுக்குத் தொடர் (வீப்ஸா)

தமிழிற் போன்றே வடமொழியிலும் சொற்கள் அடுக்கி வரலாம்.

எ–டு : வ்ருக்ஷம் வ்ருக்ஷம் ஸிஞ்சதி = மரம் மரமாய்த் தண்ணீர் ஊற்றுகிறான்.

2. சொற்றொடர் (வாக்ய)

வடமொழிச் சொற்றொடர்ச் சொல்வரிசை பெரும்பாலும் தமிழ் முறையை ஒத்ததே.

எழுவாய் முன்னும் செயப்படுபொருள் இடையும் பயனிலை பின்னும் வருவதே இயல்பான முறை.

வடமொழியிலக்கணம் எழுத்து, சொல், சொற்றொடர் என்னும் மூன்றொடு முடிகிறது. செய்யுளிலக்கணம் சந்த என்றும், அணியிலக்கணம் அலங்கார சாத்திரம் என்றும் வேறு நூல்கள் போல் வெவ்வேறாகக் கூறப்படும்.

தமிழில் வடமொழியில்லாப் பொருளிலக்கண முண்மையாலும், பண்டை யிலக்கியமெல்லாம் செய்யுள் வடிவி லிருந்தமையாலும், சொல்லை யடுத்த மொழியுறுப்பு பொருளென்று கொண்டு, அதனுள்ளே செய்யுளையும் உடம்பின் இயற்கையழகு போற் செய்யுளிலமைந்திருக்கும் அணியையும் அடக்கி விட்டனர், மெய்ப் பொருளியல் முற்றத் துறைபோய மேதகு பண்டைத் தமிழ் நூலோர்.

நன்னூல், சின்னூல் முதலிய தென்னூலும் எழுத்துஞ் சொல்லும் சொற்றொடருமே கூறுகின்றனவேயெனின், அவை வடநூன் முறை தழுவிய பின்னூலென்றும், தொல்காப்பியம்போல் நிறைவான பிண்ட நூலாகாது குறைவான துண்ட நூலே யென்றும், கூறி விடுக்க.

வடமொழி என்பது ஒருகாலும் பேசப்படாத நூன்மொழியே யாதலின், அதன் வரலாறென்பது உண்மையில் இலக்கிய வரலாறே (வ.வ.).

வடமொழிக்கும் தென்மொழிக்கும் வேறுபாடு

1. எழுத்துகளின் தொகை (உண்மை யானபடி) வடமொழியில் 42: தென்மொழியில் 30.

2. வடமொழியொலிகள் வலியன; தென்மொழி யொலிகள் மெலியன.

3. மூச்சொலிகள் வடமொழியில் மட்டுமுண்டு.

4. கூட்டெழுத்துகள் தென்மொழியில் இல்லை.

5. வடமொழியில் உயிர்கள் (தீர்க்கம், குணம், விருத்தியென மூவகையில்) நெடிலாக மாறிப் புணரும்; தென்மொழியில் உடன்படுமெய் பெற்றுப் புணரும்.

6. தமிழில் மொழி முதல் இடை கடை வராத எழுத்துகளெல்லாம், வடமொழியில் மொழி முதலிடை கடை வரும்.

7. இடுகுறிப்பெயர் தமிழுக்கில்லை.

8. முன்னிலையை உளப்படுத்தும் தன்மைப் பன்மைப் பெயர் வடமொழியிலில்லை.

9. உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாடு வடமொழியில் இல்லை.

10. ஆண்பால், பெண்பால், அலிப்பால் என வடமொழியில் பால் மூன்று; அவை ஈறு பற்றியன; தமிழில் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனப் பால் ஐந்து; அவை பொருளும் எண்ணும் பற்றியன.

11. இருமை என்னும் எண் தமிழில் இல்லை.

12. முதல் வேற்றுமைக்கு உருபு வடமொழியி லுண்டு; தென்மொழியில் இல்லை.

13. குறிப்புவினை வடமொழியில் இல்லை.

14. வடமொழியிற் பெயரெச்சமும் பெயர் போல வேற்றுமையேற்கும்.

15. வடமொழியில் வரும் முன்னொட்டுச் (Prefix) சொற்கள் தமிழில் பின்னொட்டுச் (Suffix) சொற்களாயிருக்கும்.

16. தழுவுஞ் சொல்லும் நிலைமொழியும் வடமொழியில் வருமொழியா யிருப்பதுண்டு. தமிழில் வழுவமைதியாயும் அருகியுமே அங்ஙனம் வரும்.

17. வினைத்தொகை வடமொழியில் இல்லை.

18. தமிழில் மிகச் சிறப்பாகக் கருதப்படும் பொருளிலக்கணம் வடமொழியில் இல்லை.

19. வெண்பா, ஆசிரியப்பா முதலிய பாக்களும் இவற்றின் வேறுபாடுகளும் இனங்களும் வடமொழியில் இல்லை.

20. இயல் இசை நாடகமெனத் தமிழை மூன்றாகப் பகுப்பது போல வடமொழியைப் பகுப்பதில்லை.

வடமொழிநூல் *vaḍa-mōḻi-nūl,* பெ.(n.) சிந்தாமணி முதல் வைத்திய மாலை ஈறாகவுள்ள 32 நூல்கள்; thirty two scientific sanskrit books from *Cindāmaṇi* to *Vaittiyamālai.*

[வடமொழி + நூல்]

வடமொழியாட்டி *vada-moḷi-y-āṭṭi,* பெ.(n.) பார்ப்பனத்தி; Brahmin woman. *"வடமொழி யாட்டி மறைமுறை யெய்தி" (மணிமே.13, 73).*

[வடமொழி + ஆட்டி. ஆட்டி = பெண்பாலீறு.]

ஈங்கு வடமொழியாட்டி, என்னுஞ்சொல் ஆரியப் பார்ப்பனியைக் குறித்து மணிமேகலையில் வழங்குஞ் சொல்லாகும்.

வடமொழியாளன் *vada-moḷi-y-āḷan,* பெ.(n.) பார்ப்பான்; brahmin. *"வடமொழி யாளரோடு வருவோன் கண்டு" (மணிமே. 5, 40).*

[வடமொழி + ஆள்→ஆளன். ஆளன் = ஓர் ஆண்பாற் பெயரீறு.]

ஆரியப்பார்ப்பான், கி.பி. 3ஆம் நூற்றாண்டி லெழுந்த மணிமேகலையில் வடமொழியாளன், என்று குறிக்கப்பட்டுள்ளான் (வ.வ.2-21).

வடமோடி *vada-mōdi,* பெ.(n.) இலங்கையி லுள்ள தெருக்கூத்து வகையு ளொன்று; a street play normally performed in Srilanka.

[வட→வடமோடி]

வடமோதங்கிழார் *vada-mōdaṅ-kiḷār,* பெ. (n.) கழகப்புலவர்; an ancient *saṅgam* poet.

புறநானூற்றில் 260-ஆம் பாடலை இயற்றியவர். நிரை மீட்டுவந்த வீர னொருவன் தன் உயிர்விட்ட மாண்பினை சிறப்பித்துக் கூறியுள்ளமையால் இவர்தம் புலமை நன்கு விளங்கும். அகநானூற்றில் 317-ஆம் பாடல் இவர் இயற்றிய பாடலாகும். கொங்குமலரில் குரவ மலருதிர்வது பொன் தராசுத் தட்டில் வெள்ளித் துண்டு சொரிவது போலுமென்று இவர் வண்ணித்துள்ளமை இவர்தம் புலமைக்கு சான்றாம்.

"மாக விசும்பின் மழைதொழில் உலந்தெனப்
பாசு யன்ன பகலிருள் பரப்பிப்
புகைநிற வுருவின் அற்சிரம் நீங்கக்
குவிமுகை முருக்கின் கூர்நுனை வையெயிற்று
நகைமுக மகளிர் ஊட்டுகிர் கடுக்கும்
முதிராப் பல்லிதழ் உதரப் பாய்ந்தடன்
மலருண் வேட்கையின் சிதர்சிதர்ந் துகுப்பப்
பொன்செய் கன்னம் பொலிய வெள்ளி
நுண்கோல் அறைகுறைந் துதிர்வன போல
அரவ வண்டினம் ஊதுதொறுங் குரவத்து
ஓங்குசினை நறுவீ கோங்கல ருறைப்பத்
துவைத்தெழு தும்பித் தவிரிசை விளரி
புதைத்துவிடு நரம்நன் இம்மென இமிரும்
ஆனே முற்ற காமர் வேனில்
வெயிலவிர் புரையும் வீததை மராஅத்துக்
குயிலிடு பூசல் எம்மொடு கேட்ப
வருவேம் என்ற பருவம் ஆண்டை
இல்லை கொல்லென மெல்ல நோக்கி
நினைந்தன மிருந்தன மாக நயந்தாங்கு
உள்ளிய மருங்கின் உள்ளம் போல
வந்துநின் றனரே காதலர் நந்துறந்து
என்னுழி யதுகொல் தானே பன்னாள்
அன்னையும் அறிவுற வணங்கி
நன்னுதற் பாஅய பசலை நோயே" (அகநா. 317).

வடயம் *vadayam,* பெ.(n.) நெல்லிக் கனி முதலியவற்றை அரைத்துத் தட்டிய வடை; cake, as of nelli fruits.

[வடை→வடையம்→வடயம்]

வடரம் *vadaram,* பெ.(n.) 1. தலைச்சீலை; head-dress, turban. 2. பாய்; mat.

வடராசி *vaḍarāśi,* பெ.(n.) மரவகை; variegated mountain ebony.

வடல் *vaḍal,* பெ.(n.) ஆலமரம் (மலை.); banyan tree.

[வடம்→வடல்]

வடலி *vaḍali,* பெ.(n.) இதரயிட்டம் பனை ஐந்தனுளொன்றான இளம்பனை (G.Tn. D.I.307); young or immature palmyra tree, one of five *idarayiṭṭam-paṉai.*

[மடல் → வடல்→ வடலி.]

வடலுறுசிற்றம்பலம் *vaḍaluṟu-śiṟṟambalam,* பெ.(n.) வடலூர் பார்க்க; see *vaḍalūr.* *"வடலுறு சிற்றம்பலத்தே வாழ்வாய் என் கண்ணுள் மணியே" (அருட்பா.3802).*

[வடலுறு + சிற்றம்பலம்.]

செ→செத்து→சித்து = கருத்து அறிவு, கருதியதை அடையும் திறம்.

(ஒ.நோ.) செந்துரம்→சிந்துரம் சித்து + அம்பலம்–சித்தம்பலம்→சிற்றம்பலம்.

அம்புதல் = குவிதல், கூடுதல்.

அம்பு→அம்பல்→அம்பலம் = கூடும் அவை, அவைக்களம்.

அருட்பேரொளி ஆண்டவரின் திருவருட் செல்வர்கள் கூடுமிடம். இறையருள் ஒருமுகப்பட்டு, அனைவருக்கும் அருளை வாரிவழங்குமிடமே, வடலுறு சிற்றம்பலம், எனலாம்.

வடலூர் *vaḍalūr,* பெ.(n.) கி.பி.1865இல், வள்ளலாரால் பாடல் பெற்றதும், அனைத்து நெறிக்கழகம் (சமரச சுத்தசன்மார்க்க சத்திய ஞான சங்கம்) அமைக்கப்பெற்றதுமான, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடம்; *vaḍalūr,* a fabulous historical place, canonized by *vaḷḷalār,* the found of *aniattu-neri-k-kaḷagam (Šamarasa-Šutta-Šaṉ-mārga-Šattiyañāṉa Šaṅgam)* located in *Kaḍalūr,* dt. *"வருவார் அழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே" (அருட்பா.4482) வடலூரில் தருமச் சாலையை 23.05.1867–இல் வள்ளலார் நிறுவினார் (இ.வ.).*

மறுவ. வடல்வாய், வடலுறு சிற்றம்பலம்.

[வடல் + ஊர்.]

வடலூர், அருட்பேரொளி ஆண்டவரின் திருவருளின்பத்தை, மன்பதைக்கு எஞ்ஞான்றும் வாரி வழங்கிக் கொண்டிருக்கும், வள்ளலார்தம் அருட்பாக்களில் பார்வதிபுரம், வடல், வடல்வாய், சித்திபுரம், ஞானசித்திபுரம், உத்தரஞானசித்திபுரம், உத்தரஞான சிதம்பரம் முதலான பெயர்களில் அழைக்கப்படும் பாடல் எண்கள் வருமாறு:– 3790, 3802, 4239, 4242, 4482, 3690, 3585, 3796, 4636, 3981, 4046–4056.

அற்றார் அழிபசி தீர்த்தலும்– அறவுணவுச் சாலையும் (சத்திய தருமச்சாலை) : –

அற்றார் அழிபசி தீர்த்தலே குமுகாயத்தில் உயர் பேரறமென்பது, வள்ளலார்தம் பேரருட்கொள்கை. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார், பசியினால் இளைத்த ஏழைகளைக் கண்டுளம் பதைத்து அவர்தம் முக வாட்டத்தைப் போக்கிடவும், இறையருள் நாட்டத்தை ஊட்டுதற்பொருட்டும், 1867 விடை (வைகாசி)த் திங்கள் 11–ஆம் நாள் அறவுணவுச்சாலையை (சத்திய தருமச்சாலை) நிறுவினார். வடலூரின்கண் அமைந்துள்ள அறவுணவுச் சாலையில், 23.05.1867–இல் மூட்டிய தீ, ஏதுமற்ற ஏதிலிகளின் வயிற்றுப் பசியை, இன்றுவரை, போக்கிய வண்ணம் உள்ளது.

மனிதர்களின் சிற்றம்பலமாம், நெற்றிப் பொட்டில் (புருவமய்யத்தில்), அருளொளிப் பிழம்பாக இறைவன் இலங்குவதால், எவரும் பசியோ டிருத்தலாகாது என்னும் பொதுநோக்கில், வடலூரில் வள்ளலாரால் அறவுணவுச் சாலை நிறுவப்பட்டது. இவ்வறவுணவுச்சாலையிலேயே வள்ளலார் 1867–1870 வரை வீற்றிருந்தார். மெய்யறிவுப் பேரவை (சத்தியஞானசபை) 25.01.1872–இல் எல்லாம் வல்ல இறைவனைப் பேரொளிப் பிழம்பாக கண்ட வள்ளலார், ஒளி (அருட்பெருஞ்சோதி) வழிபாட்டிற்கென, மெய்யறிவுப் பேரவையை (சத்தியஞானசபை) 1872–ஆம் ஆண்டு சுறவத் திங்கள் 13–ஆம் நன்னாளில், (பூசம்) அருட்பேராளி வழிபாட்டினை, வடலூரில் முதன்முதலாகத் தொடங்கி அருட்பேரொளிக் காட்சியினை, அனைவரும் கண்டு களிக்குமாறு செய்தார்.

இயற்கையின் விளக்கமே, வடலூரிலுள்ள மெய்யறிவுப் பேரவை (சத்தியஞானசபை) என்பது வள்ளலார்தம் அருள் விளக்கமாகும். அனைத்து மனிதரிடத்தும் அகத்தே ஒளிரும் இறையொளிக் காட்சியின் புறவெளிப்பாடே, மெய்யறிவுப் பேரவை (சத்தியஞானசபை) எனின், மிகையன்று.

ஆதனுள் ஒளிரும் அருட்பேரொளியை மறைத்துக்கொண்டிருப்பது, ஆணவக்கூறுகளாம் வெவ்வேறு நிறமுள்ள ஏழுதிரைகளான படலங்களே என்பது வள்ளலார்தம் கருத்தாகும்.

மாந்தரிடமுள்ள, அறியாமையாகிய திரைகளை அகற்றுவதே, இப்பிறவியின் நோக்கம். இதற்காகவே இப்பிறவியை இறைவன் நமக்களித்துள்ளான் என்பது வள்ளலார்தம் கொள்கையாகும். அறிவின்மைத் திரையை நாம் இப்பிறவியில் அகற்றிவிட்டால், ஆதனுள்ளத்தே அமைந்த மெய்யறிவுத் திரையில், அருட் பேரொளி ஆண்டவன் விளங்கித் தோன்றுவதை, அனைவருக்கும் குறிப்பால் உணர்த்துவதை வெளிப்படையாக, விளக்கும் பொருட்டே, மெய்யறிவுப் பேரவை (சத்தியஞான சபை)யை, வடலூரில் வள்ளலார் தோற்றுவித்தார், என்பதே சாலப் பொருந்தும். வள்ளலார் தமது அகத்தே பெற்ற அருட்பேரொளிக் காட்சியினை, புறத்தே, வடலூரில் மெய்யறிவுப் பேரவையின் வாயிலாக, இன்றும் காட்டிய வண்ணம் உள்ளார்.

(எ.டு.) "திருந்தும் என் உள்ளத் திருக்கோயில் கண்டேன்" (அருட்பா. 3796).

"சத்திய ஞானசபை என்னுள் கண்டனன், சன்மார்க்க சித்தியை நான்பெற்றுக் கொண்டனன்" (அருட்பா.4909) முதலான வள்ளலாரின் அருண்மொழிகள், மெய்யறிவுப் பேரவையின் அருளொளிக் காட்சியினை விளக்கும் வண்ணம் உள்ளது.

வடலூரார் *vaḍalūrār,* பெ.(n.) வள்ளலார் பார்க்க; see *vaḷḷalār. கொலைபுலை தவிர்த்தலே வடலூரார் நெறி (இ.வ.). இறவாப் (மரணமிலா) பெருவாழ்வு நெறியை வடலூரார் இம்மன்பதையில் நிலைநிறுத்தினார் (இ.வ.).*

மறுவ. சிதம்பரம் இராமலிங்கம்

[வடல் + ஊர் + ஆர் – வடலூரார். 'ஆர்' பெருமைப் பொருட் பெயரீறு.]

வடவர்¹ *vaḍavar,* பெ.(n.) வடபுலத்தார்; northerners. *"வடவர் வாடக் குடவர் கூம்ப" (பட்டினப். 276).*

[வடல்→வடலர்→வடவர்]

வடவர்² *vaḍavar,* பெ.(n.) வடதிசையைச் சார்ந்த குழுக்கள்; committes of northern directions. *'வடவர் வாடக் குடவர்*

கூம்பத்தென்னவன் திறல் கெட' என்று பட்டினப்பாலையிற் குறிப்பிடப்பெறும். இவர்கள் அருவா நாட்டிற்கு வடக்கே வாழ்ந்த வீரக் குடி மக்களாவர்.

[வடலர்→வடவர்]

வட்டவர்சேர் *vaṭṭavar-šēr*, பெ.(n.) வடவர் மரத்தில் கட்டப்படும் பாய்; main royal sail.

வடவர்மகன் *vaḍavar-magaṉ*, பெ.(n.) வடவர்களின் வழி வந்தவன்; descendant of northeners. *'வடவர் மகன்' என்பதன் மரூஉ 'வடமன்' என்பதாகும். பார்ப்பனர்களில் ஒரு கிளைக்குடியினர் 'வடவர்' என்று அழைக்கப்படுகின்றனர்.*

வடவர்மரம் *vaḍavar-maram*, பெ.(n.) வட மரத்தின் உச்சிப்பாகம்; main royal mast.

வடவரை *vaḍa-varai*, பெ.(n.) 1. மாமேரு; big Mt. *Mēru*. *"வடவரை கொட்டையாய்ச் சூழ்ந்த" (உத்தரரா. தோத்திர. 15).* 2. மந்தர மலை; Mt. Mandara. *"வடவரை மத்தாக" (சிலப். 17, முன்னிலைப்பரவல்,1).*

[வட + வரை]

வடவளம் *vaḍa-vaḷam*, பெ.(n.) வடநாட்டில் விளைந்த பண்டம்; produce of the northern country. *"வடவளந் தரூஉ "நாவாய்" (பெரும்பாண். 320).*

[வட + வள் + அம்→வடவளம்]

வடவனம் *vaḍa-vaṉam*, பெ.(n.) மரவகை; a species of tree. *"வடவனம் வாகை" (குறிஞ்சிப். 67).*

வடவனல் *vaḍa-vaṉal*, பெ.(n.) வடந்தைத்தீ பார்க்க; see *vaḍandai-t-tī*. *"வெள்ளத்திடை வாழ் வடவனலை" (கம்பரா. தைலமா.86). "அக்கடலின்மீது வடவனல் நிற்கவில்லையோ" (தாயு.பரிபூர.9).*

[வட + அனல். அனல் = தீ. உல்→உல→உலை. உல்→அல்→அன்→அனல். வடக்கிலுள்ளதாகக் கருதப்படும் வடதிசை நெருப்பு.]

வடவனலம் *vaḍa-v-aṉalam*, பெ.(n.) வடந்தைத்தீ பார்க்க; see *vaḍandai-t-tī*. *"கடுகிய வடவன லத்தினை வைத்தது" (கலிங். 402).*

[வடக்கு + அனல் + அம். அம் = பெருமைப் பொருட் பின்னொட்டு]

வடவாக்கினிப்பால் *vaḍavākkiṉippāl*, பெ.(n.) ஒருவகை மருந்து; a kind of medicine (சா.அக.).

வடவாசுதர் *vaḍavā-šudar*, பெ.(n.) அசுவினி தேவர் (யாழ்.அக.); the *Ašviṉs*.

வடவாமுகம் *vaḍavā-mugam*, பெ.(n.) 1. வடந்தைத்தீ பார்க்க; see *vaḍandai-t-tī*. *"வடவாமுகத் தழலொடே" (பிரபோத. 19.1).* 2. நிரயம் (உரி.நி.); the nether region.

வடவாயிற்செல்வி *vaḍa-vāyiṟ-celvi*, பெ.(n.) வடக்குவாசற்செல்வி (நாஞ்.) பார்க்க; see *vaḍakku-vāšaṟ-celvi*.

[வடக்குவாசல் →வடவாயில் + செல்வி]

'வடக்குவாச்சி' (கொ.வ.).

வடவானசாறு *vaḍavāṉa-šāṟu*, பெ.(n.) இரும்பின் ஊறலைப் போக்கும் ஓர் மூலிகைச்சாறு; the juice of a herb that remove rust from iron.

[வடிவான + சாறு.]

தெள்→தெறு→தெற்று = தெளிவு.

தெற்று→தெறு→தேறு→தேறல் = தெளிந்த சாறு, கள், தேன், காய், கனி போன்றவற்றிலிருந்து வடித்தெடுக்கப்பட்ட தெளிநீர்.

தேறு→சாறு = வடிகட்டிய நீர்.

இரும்பின்மேல் படர்ந்துள்ள அழுக்கு, துரு போன்றவற்றைப் போக்கும் மூலிகைச் சாறே, வடவான சாறு என்றழைக்கப்பட்டது.

வடவானலம் *vaḍa-v-āṉalam,* பெ.(n.) வடந்தைத்தீ பார்க்க; see *vaḍandai-t-tī.* *"மண்ணுமின்றி வடவானலமு மின்றி" (தக்கயாகப்.408).*

[வடவை + அனல் + அம்.]

வடவிருக்கம் *vaḍa-virukkam,* பெ.(n.) ஆல மரம்; banyan tree-*Ficus bengalensis* (சா.அக.).

வடவீதி *vaḍa-vīdi,* பெ.(n.) வடபாதி (நாஞ்.); the northern half.

வடவு *vaḍavu,* பெ.(n.) மெலிவு; fatigue, weak. *"ஆறாத வடவாற" (தக்கயாகப். 557).*

வடவெளிச்சத்தூலக்கட்டு *vaḍa-veḷic-cattūlakkaṭṭu,* பெ.(n.) கூரை அமைப்பில் முக்கோணச் சாய்வாயமைந்த ஒருவகை அமைப்பு; triangle-shaped roof.

வடவேங்கடம் *vaḍa-vēṅgaḍam,* பெ.(n.) திருப்பதி மலை; the Tirupadi hills, as in the northern part of the Tamil country. *"வடவேங்கடந் தென்குமரி யாயிடை" (தொல். பாயி.).*

[வடக்கு + வேங்கடம்]

தமிழ் கூறும் நல்லுலகம், வடவேங்கடம் வரை பரவியிருந்த பான்மையைத் தொல்காப்பியப் பாயிரம் புலப்படுத்துகிறது.

வடவேர் *vaḍa-vēr,* பெ.(n.) வடக்கே ஓடும் வேர்; root running towards north.

[வட+ வேர்]

வடவை *vaḍavai,* பெ.(n.) 1. பெண் குதிரை (பிங்.); mare. 2. மகளிர்சாதி மூன்றனுள், குதிரையினத்துப்பெண் (கொக்கோ.3,6). 3. வடந்தைத்தீ (பிங்.) பார்க்க; see *vaḍandai-t-tī.* 4. அடிமைப்பெண் (யாழ்.அக.); slave-girl. 5. எருமை (பிங்.); buffalo. 6. பெண்யானை (பிங்.); female elephant.

[வடம்→ வடவை = வடதிசை நெருப்பு (Auroro borealis).]

வடக்கிலுள்ளதாகக் கருதப்படும் ஊழித்தீ.

"வடவைக் கனலைப் பிழிந்தெடுத்து" (தனிப்பா.).

வடவனல் = வடவை.

"அக் கடலின்மீது வடவனல் நிற்கவிலையோ" (தாயு.பரிபூர.9).

வடவனலம் = வடவை.

"கடுகிய வடவன லத்திடை வைத்தது" (கலிங்.402).

வடந்தை = வடக்கிலுள்ளது. வடந்தைத்தீ = வடவை.

"சுடர்ந்தெரி வடந்தைத் தீயும்" (காஞ்சிப்பு. இருபத்.384).

உத்தர மடங்கல் = வடவை (திவா.) உத்தரம் = வடக்கு.

மடங்கல் = ஊழித்தீ.

உத்தரம் = வடக்கிலுள்ள ஊழித்தீ (பி.)

பண்டைத் தமிழர் சுற்றுக் கடலோடிகளா (circumnavigators)யிருந்தமையால், வடமுனையில் ஒரோவொருகால் தோன்றும் மின்னொளியைக் கண்டு அதற்கு வடவை அல்லது வடவனல் எனப் பெயரிட்டிருந்தனர். குமரிக்கண்டத்திற் பல பேரழிவுகள் நேர்ந்ததினால், ஊழியிறுதியழிவிற்கு அவ் வடவையே காரணமென்றுங் கருதினர்.

தென்முனையிலும் வடவை போன்ற ஒளி தோன்றுமேனும், பண்டைத் தமிழிலக்கியம் முற்றும் அழியுண்டு போனமையால், அதைப்பற்றிய இலக்கியக் குறிப்பும் இறந்துபட்டது.

"Aurora, n.Luminous atmospheric (prob.electrical) phenomenon radiating from earth's northern (borealis) or southern (australis) magnetic pole" என்று COD கூறுதல் காண்க.

வடவர் வடவை என்னுஞ் சொல்லை வடசொல்லாகக் காட்டல் வேண்டி, வடபா என்னும் அதன் வடமொழி வடிவிற்குப் பெண்குதிரை என்று பொருளிருத்தலால், அதற்கேற்ப ஒரு கதையைக் கட்டி வடபாக்னி என்றும் வடபா முகாக்னி என்றும் பெயரிட்டு, பெண்குதிரை முகத்தில் தோன்றிய நெருப்பென்று பொருளும் விரித்துவிட்டனர். அக்கதை வருமாறு:

கிருதவீரியன் மக்கள், பிருகு முனிவர் ஈட்டிவைத்த பெருஞ்செல்வத்தைக் கவரவேண்டி அம் முனிவரின் மக்களையும் பேரப் பிள்ளைகளையுங் கருநிலையிலுங் கொன்றதினால், அக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரேயொரு பெண் தன் கருவைத் தன் தொடையில் மறைத்து வைத்திருந்து, அது பிறந்தபின் ஔர்வ எனப் பெயரிட்டாள். (ஊரு = தொடை. ஔர்வ = தொடையிற் பிறந்தவன்). அவ் வாண்பிள்ளை பெரியவனானபின், தன் தந்தைமாரைக் கொன்றவரைப் பழிவாங்கும் பொருட்டுத் தவஞ்செய்ய, அத்தவத்தினின்று உலகையே அழித்துவிடத்தக்க ஒரு பெருந்தீ கிளர்ந்தெழுந்தது. அதைக் கண்டு அவன் முன்னோர் அஞ்சி அதைக் கடலில் இட்டுவிடுமாறு கட்டளையிட, அவனும் அதற்கிணங்கி அங்ஙனமே இட்டு விட்டான். அது ஒரு பெண்குதிரைமுக வடிவு கொண்டு அங்கு தங்கிற்று.

மா.வி.அ. இக் கதையையும் வரைந்து, வடபாக்னி என்னுஞ் சொற்கு, "mare's fire, `submarine fire or the fire of the lower regions (fabled to emerge from a cavity called the `mare's mouth' under the sea at the South Pole") என்று விளக்கமுங் கூறியுள்ளது.

மேலையர் தமிழைக் கல்லாமையால் விளையும் தீங்கு இதனால் வெளியாகின்றது.

வடவைக்கனல் *vaḍavai-k-kaṉal,* பெ.(n.) வடந்தைத்தீ பார்க்க; see *vaḍandai-t-tī.* *“வடவைக் கனன்மாவும்” (தக்கயாகப். 694).*

[வடவை + கனல். குல்→குன்→கன்→கனல்.]

வடதிசையிலுள்ள ஊழித்தீ.

வடவைத்தீ *vaḍavai-t-tī,* பெ.(n.) வடந்தைத் தீ பார்க்க; see *vaḍandai-t-tī.* *“சுடர்ந்தெரி வடந்தைத் தீயும்” (காஞ்சிப்பு. இருபத்.384).*

மறுவ. ஊழித்தீ

[வடவை + தீ.]

வடனகலாயம் *vaḍaṉa-kalāyam,* பெ.(n.) வடகயிலாயம் பார்க்க; see *vaḍa-kayilāyam.*

வடாகரம் *vaḍāgaram,* பெ.(n.) கயிறு (யாழ்.அக.); rope.

வடாது *vaḍādu*,பெ.(n.) 1. வடக்குள்ளது; that which is in the north. *"வடாஅது பனிபடு நெடுவரை" (புறநா.6).* 2. வடக்கு; north. *"வடாதுந் தெனாதும் பரராசர் வகுத்த நேமி" (பாரத. பதின்மூன்று. 80).*

[வட → வடாது.]

வடாம் *vaḍām*,பெ.(n.) வடகம்[1] பார்க்க; see *vaḍagam*

வடாரகம் *vaḍāragam*,பெ.(n.) கயிறு (இலக். அக.); string, rope.

வடி[1]–தல் *vaḍi-*, 4 செ.கு.வி.(v.i.) 1. ஒழுகுதல்; to drip, trickle, as water. சீழ் வடிகின்றது. 2. நீர் முதலியன வற்றுதல்; to be diminished, as water in a river; to flow back, ebb, as tide. *"வடியாத பவக்கடலும் வடிந்து" (அஷ்டப். திருவரங். கலம். 93).* 3. திருந்துதல்; to be perfected, as pronunciation. *"வடியா நாவின்" (புறநா. 47).* 4. தெளிதல்; to be clear, as sound. *"வடிமணி நின்றியம்ப" (பு.வெ.10, 14, பக்.116).* 5. அழகு பெறுதல்; to become handsome. *"வடுவின்று வடிந்த யாக்கையன்" (புறநா. 180).* 6. நீளுதல் (சூடா.); become long. *"குழைவிரவு வடிகாதா" (தேவா.1091, 1).*

[வழி → வடி–. ழ → ட மெய்த் திரிபு (ஒ.நோ.) குழல் → குடல். புழல் → புடல்.]

வடி[2]–தல் *vaḍi-*, 4 செ.கு.வி.(v.i.) வீக்கம் வாங்கல்; diminishing of swalling pus etc.

வடி[3]–த்தல் *vaḍi-*, 11 செ.குன்றாவி.(v.t.) 1. வடியச் செய்தல்; to cause to flow out; to shed, as tears; to drain. *"கட்புனல் வடித்து" (தனிப்பா.i, 351, 73).* 2. வடிகட்டுதல்; to strain, as conjee from cooked rice; to filter. *"மற்றுமொருகால் வடித்தெடுத்து" (தனிப்பா.i, 182,5).* 3. பிழிதல்; to squeeze out. *"பன்றிக் கூழ்ப் பத்தரிற் றேமா வடித்தற்றால்" (நாலடி, 257).* 4. தயில மிறக்குதல்; to distill, as oil. *"கடத்துற வடி" (தைலவ.தைல.116).* 5. திருத்தமாகச் செய்தல்; to refine, polish; to perfect. *"வானுட்கும் வடிநீண் மதில்" (புறநா. 18).* 6. சாரமான சொல்லா லமைதல்; to express in choice language. *"வாயினால் வடித்த நுண்ணூல்" (சீவக.271).* 7. வயமாக்குதல் (சூடா.); to win over; to bring under control, to influence. 8. பழக்குதல்; to tame, train as wild elephants. *"கதிக்குற வடிப்போர் கவின் பெறுவீதியும்" (மணிமே. 28, 61).* 9. பயிலுதல்; to practise. *"வார்சிலை வடிப்ப வீங்கி" (சீவக. 1450)* 10. சோறு சமைத்தல் (கொ.வ.); to cook, as rice. 11. கூராக்குதல் (சங்.அக.); to sharpen. *"வடித்தாரை வெள்வேல்" (சீவக. 2320).* 12. வாரிமுடித்தல் (நற்.23); to comb and fasten, as hair. 13. தகடாக்குதல்; to flatten out. *"இரும்பு வடித்தன்ன மடியா மென்றோல்" (பெரும்பாண்.222).* 14. நீளமாக்குதல்; to lengthen, to elongate. 15. யாழ் நரம்பை உருவுதல்; to stroke with the fingers over, as the string of a lute in playing. *"வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்தும்" (பொருந.23).* 16. அழகு படுத்தல், அணி செய்தல்; to equip, as a horse, to decorate. *"வடித்த போத்தொடு" (சீவக. 1773).* 17. ஆராய்தல்; to investigate, examine, to research. *"வடித்த நூற்கேள்வியார்" (சீவக. 1846).* 18. ஆராய்ந்தெடுத்தல்; to select, choose. *"மாரனிக்கு வில்வளைத் தலர்க்கணை வடித்து" (பிரபோத. 30, 59).* 19. கிள்ளி யெடுத்தல்; to pluck, nip. *"கிளிபோல் காய

கிளைத்துணர் வடித்து" (அகநா. 37).

[வழி→ வடி-. ழ→ட மெய்த் திரிபு (ஒ.நோ.) குழல்→ குடல். புழல்→புடல்.]

வடி⁴-த்தல் *vaḍi-,* 11 செ.கு.வி.(v.i.) வடிக்கு-, பார்க்க; see *vaḍikku-.*

வடி⁵ *vaḍi,* பெ.(n.) 1. தேன்; honey. *"வடிமலர் வள்ளம்" (சூளா. இரத. 45). "வடிகொள் பொழிலின்" (தேவா. 116, 3).* 2. கள் (பிங்.); toddy. 3. நீளுகை (அரு.நி.); lengthening, elongation.

[வழி→ வடி.]

வடி⁶ *vaḍi,* பெ.(n.) 1. வடித்தெடுக்கை; filtration, distillation. *"வடியுறு தீந்தேறல்" (பு.வெ.1,19).* 2. கூர்மை (நாமதீப.); sharpness. *"வடியாரு மூவிலைவேல்" (தேவா.830,6).* 3. வாரி முடிக்கை; combing and fastening, as of the hair. *"வடிக்கொள் கூழை யாயமொடு" (நற்.23).* 4. ஆராய்ச்சி, துப்பறிகை; research, scrutiny, investigation. *"வடியமை" (சீவக. 1685, உரை).* 5. வடிகயிறு (யாழ்.அக.) பார்க்க; see *vaḍi-kayiṟu.* 6. கயிறு (யாழ்.அக.); rope. 7. நாய் (சது.); dog.

[வழி→ வடி (மு.தா.பக்.109).]

வடி⁷ *vaḍi,* பெ.(n.) 1. மாம்பிஞ்சு; tender, green mango. *"நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த" (பெரும்பாண்.309).* 2. பிளவுபட்ட மாம்பிஞ்சு; piece of green mango, cut longitudinally in two. *"வடியன்ன வுண்கட்கு" (கலித். 64).*

[வடு→ வடி.]

வடி⁸ *vaḍi,* பெ.(n.) காற்று; wind. *"வடிபட வியங்கும் வண்ணக் கதலிகை" (பெருங். மகத. 3, 36).*

[வளி→ வடி. வளி = வளைந்துவீசுங் காற்று.]

வடி⁹ *vaḍi,* பெ.(n.) வடிவம்; form, shape. *"கரியது வடிகொடு" (தேவா. 815, 5).*

[வடிவு→ வடி.]

வடி¹⁰ *vaḍi,* பெ.(n.) சிறுதடி (நாஞ்.); small cane or stick.

தெ. படித; க. படி; ம. வடி.

வடிக்கதிர் *vaḍi-k-kadir,* பெ.(n.) நூல் முறுக்குங் கருவி (யாழ்.அக.); spindle, instrument for twisting threads.

[வடி + கதிர். குதிர்→கதிர். வடிகதிர் = நூல் நூற்கும் கருவி.]

வடிக்கயிறு *vaḍi-k-kayiṟu,* பெ.(n.) வடிகயிறு பார்க்க; see *vaḍi-kayiṟu.* *"வடிக்கயிறு முட்கோல் பற்றிய தடக்கையுள பாகு" (கந்தபு. சூரபன். வதை. 218).*

[வடி + கயிறு.]

வடிக்கருவி *vaḍi-k-karuvi,* பெ.(n.) வடிக் கதிர் (யாழ்.அக.) பார்க்க; see *vaḍi-k-kadir.*

[வடி + கருவி.]

வடிக்கு-தல் *vaḍikku-,* 4 செ.கு.வி.(v.i.) 1. வடியச் செய்தல்; to filter. 2. களங்க மறுத்தல்; to strain out. 3. காய்ச்சி இறக்குதல்; to distil.

[வடி →வடிக்கு-.]

வடிகஞ்சி *vaḍi-kañji,* பெ.(n.) சோறு வடித்த கஞ்சி (பதார்த்த. 1389); conjee, rice water strained in cooking.

[வடி + கஞ்சி.]

வடிகட்டி *vaḍi-kaṭṭi,* பெ.(n.) நீர்ம மட்டுமே பெறுதற்கேற்ற சல்லடை; strainer.

[வடிகட்டு→வடிகட்டி.]

மண்டி மகுளி தூசுதுப்பட்டையை நீக்கி நீர்ம மொன்றை மட்டும் பெறுதற்குரியது வடிகட்டி.

வடிகட்டின *vaḍi-kaṭṭina,* பெ.அ.(adj.) சுத்தமான, முழுமையான; down right. *'இது வடிகட்டின பொய்'.*

வடிகட்டு[1]-தல் *vaḍi-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. வடித்தல்; to strain; to filter. *"நீரை வடிகட்டி யெடு".* 2. சாரத்தைத் திரட்டுதல்; to epitomise; to give the purport of.

[வடி + கட்டு-.]

ஒரு கலத்திலுள்ள நீரை ஊற்றும்போது அதிலுள்ள மண்டியைத் தடுத்தற்குக் கலத்தின் வாயில் துணிகட்டுதலாம்.

வடிகட்டு[2]-தல் *vaḍi-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) கஞ்சியை வடிகட்டுதல்; filtering of gruel.

[வடி + கட்டு-.]

வடிகம் *vaḍigam,* பெ.(n.) குளிகை (மாத்திரை); pill, it is usually prepared by reducing the required drugs in the fine powder, and then grinding them with the juice or decoction, as the case may be, into a paste of wax consistency, then pills are made with hand.

வடிகயிறு *vaḍi-kayiṟu,* பெ.(n.) குதிரையின் வாய்க்கயிறு; rein. *"வடிகயி றாய்ந்து" (சீவக. 794).*

[வடி + கயிறு.]

வடிகலசம் *vaḍi-kalaśam,* பெ.(n.) வடிகட்ட பயன்படும் பாத்திரம்; vessel used to collect the filtered substance.

[வடி + கலசம். கலசம் = குடம்.]

வடிகாது *vaḍi-kādu,* பெ.(n.) தொங்குந் துளைச்செவி; perforated ear lengthened by weighting the earlobes. *"குழைவிரவு வடிகாதா" (தேவா. 1091, 1).*

[வடி + காது.]

பாண்டி நாட்டுப் பழநாகரிக மகளிர்போல் கற்றைகள் தமிழப் பெண்டிரும் காது வளர்த்துள்ளனர்.

வடிகால் *vaḍi-kāl,* பெ.(n.) நீரை வடியவிடுங் கால்வாய்; outlet, a channel to drain water.

[வடி + கால். கால் = நீண்டுசெல்லும் நீர்க்கால்.]

வடிகால்குழாய் *vaḍikāl-kuḻāy,* பெ.(n.) சுதைமா வினால் கட்டப்பட்ட குழாய், இது தண்ணீரை வெளியேற்றவும், உள் கொணரவும் பயன்படும்; a pipe used for conveying and draining of water.

[வடிகால் + குழாய்.]

வடிகால்வாய் *vaḍi-kāl-vāy,* பெ.(n.) வடிகால் பார்க்க; see *vaḍi-kāl.*

வடிகால்நிலம் *vaḍikāl-nilam,* பெ.(n.) வெள்ளப் பெருக்கை வெளியேற்றுதற்குரிய நிலம்-நிலப்பரப்பு; outlet land.

[வடிகால் + நிலம்.]

வடிகொண்டசூரணம் *vaḍi-koṇḍa-śūraṇam,* பெ.(n.) வடிகட்டிய சூரணம்; filtered or sieved powder.

வடிகொள்ளல் *vaḍi-koḷḷal,* தொ.பெ.(vbl.n.) வடித்துக் கொள்ளல்; getting filter.

[வடி + கொள்ளல். கொள்→கொள்ளல்]

வடிசதுக்கம் *vaḍi-šadukkam,* பெ.(n.) நெய்ம முதலியன வடிக்கும் இடம் (தைலவ. தைல. பாயி. 44); place where filtration is done.

[வடி + சது→சதுக்கம். சதுக்கம் = இடம். மருந்தெண்ணெய் வடிகட்டுமிடம்.]

வடிசம்[1] *vaḍišam,* பெ.(n.) அல்குல்வை; fourchette.

வடிசம்[2] *vaḍišam,* பெ.(n.) தூண்டில் (யாழ். அக.); fish-hook.

வடிசம்பா *vaḍi-šambā,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[வழி→வடி + சம்பா. சம்→சம்பா.]

தமிழ் நாட்டில் விளையும் அறுபது வகைச் சம்பா நெல் வகையுளொன்று.

வடிசல்[1] *vaḍišal,* பெ.(n.) 1. நீர் முதலியன வற்றுகை (வின்.); ebbing, decreasing, draining as to water etc. 2. நீளுகை; elongation, lengthening.

[வடி→வடியல்→வடிசல்]

வடிசல்[2] *vaḍišal,* பெ.(n.) 1. வடிக்கை; straining, filtering. 2. வடித்த சோறு; rice boiled and strained. *வடிசல் நைவேத்தியம் (யாழ்ப்.).*

வடிசற்காது *vaḍišaṟ-kādu,* பெ.(n.) வடிகாது (வின்.) பார்க்க; see *vaḍi-kādu.*

[வடிசல் + காது]

வடிசாந்து *vaḍi-šāndu,* பெ.(n.) நற்சாந்து (யாழ்.அக.); superior fragrant unguent.

[வடி[2] + சாந்து]

வடித்தண்ணீர் *vaḍi-t-taṇṇīr,* பெ.(n.) நாற்றங் காலில் நீர் கட்டி பின் வடிக்கப்பட்ட தண்ணீர்; drained water from seed-bed after properly irrigating for a while.

வடித்தநீர் *vaḍitta-nīr,* பெ.(n.) வடிநீர்; distilled water-*Aque distilata.*

வடித்திறு-த்தல் *vaḍittiṟu-,* 4 செ.கு.வி. (v.i.) தெளியவைத்து இறுத்தல்; to decant.

[வடி→வடித்து + இறு-,]

வடித்துக்கொட்டு-தல் *vaḍittu-k-koṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) சமைத்துப் படைத்தல்; to cook and serve.

[வடி→வடித்து + கொட்டு-.]

வடித்துக்கொள்ளல் *vaḍittu-k-koḷḷal,* தொ. பெ.(vbl.n.) கருக்கு நீர் எட்டில் ஒன்றாய் உருவாக்குதல்; preparing decoction by boiling it down to one eight.

[வடித்து + கொள்ளல்.]

வடித்தெடு-த்தல் *vaḍitteḍu-,* 4 செ.கு.வி. (v.i.) வடித்திறுத்தல் பார்க்க; see *vaḍi-t-tiṟu-.*

[வடி→வடித்து + எடு-,]

கல், மண், தூசு துப்பட்டை, ஈயெறும்பு முதலிய பொருள்களோடு கலக்க நேர்ந்த உண்டற்குரிய நீரையும் நீர்ப்பொருளையும், அவற்றை நீக்கும் பொருட்டு துணிகட்டி வடித்தெடுப்பதும் பனஞ்சாறு அல்லது பனைநீரை, இங்ஙனம் வடித்தெடுத்து பருகுவதும் இன்றும் கண்கூடு.

வடிதங்கம் *vaḍi-taṅgam,* பெ.(n.) தூய்மை யாக்கிய பொன் (யாழ்.அக.); pure gold.

[வடி² + தங்கம்]

ஒருகா. பசும்பொன்.

வடிதங்கொடி *vaḍitaṅ-koḍi,* பெ.(n.) கொடி மாதுளை; creeper-pommegranate.

வடிதட்டு¹ *vaḍi-taṭṭu,* பெ.(n.) சோற்றிலிருந்து கஞ்சியை வடித்தெடுக்க உதவும் வகையில், செம்பாதிப் பரப்பில் மட்டும் துளைகளை கொண்ட தட்டு; a shallow metal round plate with partial perforation used to strain cooked rice.

[வடி + தட்டு]



வடிதட்டு² *vaḍi-taṭṭu,* பெ.(n.) சிப்பற்றட்டு வகை (இ.வ.), அரிகலம்; a kind of colander.

வடிதமிழ் *vaḍi-tamiḻ,* பெ.(n.) தெளி தமிழ் (யாழ்.அக.); choice *Tamiḻ.*

வடிதயிர் *vaḍi-tayir,* பெ.(n.) கட்டித்தயிர்; thick mass of curds. *"வைத்த நெய்யுங் காய்ந்த பாலும் வடிதயிரு நறுவெண்ணெயும்" (திவ். பெரியாழ். 2, 2, 2).*

[வடி + தயிர்.]

வடிதாள் *vaḍi-tāḷ,* பெ.(n.) வடிகட்டும் தாள்; filter paper.

வடிதேய்–த்தல் *vaḍi-tēy-,* 4 செ.குன்றாவி. (v.t.) பொடியிட்டுத் தேய்த்து மினுக்குதல் (நாஞ்.); to polish; as jewels; to burnish, as gold.

[வடி + தேய்–,]

வடிந்தகாது *vaḍinda-kādu,* பெ.(n.) வடிகாது (வின்.) பார்க்க; see *vaḍi-kādu.*

[வடி¹ + காது]

வடிந்துபோ–தல் *vaḍindu-pō-,* 8 செ.கு.வி. (v.i.) இளைத்துப்போதல்; getting emaciated, to be weak.

வடிநாமம் *vaḍi-nāmam,* பெ.(n.) கோமேதகம்; one of the 1nine gems Cannmon stone.

வடிநிரயம் *vaḍi-nirayam,* பெ.(n.) தோற்ற அமைவு; posture.

வடிப்பம் *vaḍippam,* பெ.(n.) 1. செப்பம்; elegance. *"வடிப்பம் வடிப்பமாய்ப் பேசிக் கொள்ளாதே" (இராமநா. கிஷ். 9).* 2. வடிவழகு; physical handsomeness. *"ராமன் வடிப்பங்கள் கண்டுகொண்டு" (இராமநா. பால. 20).* 3. அழகு (வின்.); beauty. 4. செயலாற்றல், திறம் (யாழ்.அக.); capacity, ablity. 5. கூர்மை; sharpness.

[வடி →வடிப்பம்]

வடிவு = அழகு. அழகு பொருந்துமாறு வடிக்கப்பட்ட சிற்பம் வடிப்பமாகும். கண்டார் கண்ணையும் கருத்தையும் கவரும் பான்மையில் அமைந்ததும், அனைவர்தம் உள்ளத்திலும், எஞ்ஞான்றும் நின்று நிலவுபாங்கினில் எழிலுடன் வடிக்கப்பட்ட சிற்பமே வடிப்பமெனப்படும்.

முதற்பொருளாம் வடிவைக் குறிக்காது காலப்போக்கில் வடிவின் அமைதியாய்த் திகழும் அழகைக் குறிக்கலாயிற்று. சிலர் பெயரே வடிவென வழங்குதலறிக. "வடிவான் மருட்டுதல்" என்பது வடிவழகால் மயக்குதல் என்பதாம்.

வடிக்கப்பட்டவேல் அழகாக விளங்குவதுடன், கூர்மையும் கொண்டிருத்தலால், அதற்குக் கூர்மைப் பொருளும் உண்டாயிற்று.

வடிப்பான் *vaḍippāṉ,* பெ.(n.) நீர்மங்களி லிருந்து கசடுகளை வடித் தெடுக்குங் கருவி; filter.

வடிப்பு[1] *vaḍippu,* பெ.(n.) 1. வடிக்கை (யாழ். அக.); straining filtering. 2. தெரிந்தெடுக்கை; selecting, choosing. 3. இருப்புக் கம்பி (யாழ்.அக.); iron rod.

வடிப்பு[2] *vaḍippu,* பெ.(n.) காய்ச்சி யிறக்குதல்; distillation.

வடிப்பு[3] *vaḍippu,* பெ.(n.) வடஇந்தியா (வின்.) northern india.

வடிப்போர் *vaḍippōr,* பெ.(n.) யானை முதலியன பயிற்றுவோர்; tamers, trainers, as of elephants. *"புதுக்கோள் யானையும்.... பொற்றார்ப் புரவியுங் கதிக்குற வடிப்போர்" (மணிமே. 28, 61).*

வடிபலகை *vaḍi-palagai,* பெ.(n.) சோறு வடிக்கப் பயன்படும் சிறு மரப்பலகை (நெல்லை.); a small flat piece of wood, used as a strainer in cooked rice.

[வடி + பலகை]

வடிபாத்திரம் *vaḍi-pāttiram,* பெ.(n.) மருந்தெண்ணெய் வடிப்பதற்கு வேண்டி பயன்படுத்தும், வாயகன்ற மட்பாண்டம் அல்லது சட்டி; wide mouthed eartheren ware to hold or collect the medicated oil to be filtered.

வடிபானை *vaḍi-pāṉai,* பெ.(n.) 1. சோறாக்குதற்கான மட்கலம்; vessel for cooking rice. 2. காய்ச்சுஞ் சரக்கின் ஆவியைக் குளிரச்செய்து நீர்மநிலையில் வடிக்கும் பானை (வின்.); condenser in a distilling apparatus; pot which receives the distilled liquid.

[வடி + பானை]

வடிம்பலம்நின்றபாண்டியன் *vaḍimbalam-niṉṟa-pāṇḍiyaṉ,* பெ.(n.) பண்டைய பாண்டிய மன்னர்களுளொருவன்; an ancient *Pāṇḍiyaṉ* king. *"ஆழிவடிம்பலம்ப நின்றானென" (நளவெண்பா.). "இவன் பஃறுளியாற்றை உண்டாக்கிக் கடற் றெய்வத்திற்கு விழாச் செய்த பாண்டியன்" (புறநா.).*

மறுவ. உக்கிரவருமன்.

அடியார்க்கு நல்லார் (சிலம்பு.) உரையில் இவனைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. இவன் கடல் சுவற வேலெறிய, கடல் வற்றி, இவன் கால்விளிம்பு மட்டாகக் கழுவியது. அதனால், வடிம்பலம்ப நின்றானெனப் பெயராயிற்று.

நளவெண்பாவிலும் இவனைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

வடிம்பிடு-தல் *vaḍim-piḍu,* 18 செ. குன்றாவி. (v.t.) 1. கட்டாயப் படுத்துதல்; to compel. *"வடிம்பிட்டு ஆசிரயிக்கைக்காக" (ஈடு.10.1, 4).* 2. கோயில் தேரினைத் தணிபோட்டுக் கிளப்புதல் (ஈடு, 7, 2, 5, அரும்.); to rise and start with a lever, as a temple-car. 3. தூண்டுதல், நகருதல்; to urge, move. *"நெஞ்சிலே வடிம்பிட்டு.....*

ஸ்தோத்ரம் பண்ணா நின்றாள்" (ஈடு. 7, 2, 5). 4. குறை கூறுதல், பழி கூறுதல்; to slander, blame. "தாய்மாரும் ஊரவரும் வடிம்பிடுகிறார்களோ வென்று" (திவ். திருநெடுந். 21, வ்யா, பக். 170).

[வடிம்பு + இடு-,]

வடிம்பு *vaḍimbu,* பெ.(n.) 1. துணி, கத்தி முதலியவற்றின் விளிம்பு அல்லது நுனி; border, edge as of garment, blade, as of a knife. *"பொன் வடிம் பிழைத்த வான்பகழி" (கம்பரா. கிளை. 38).* 2. கால் முதலியவற்றின் விளிம்பு; extremity, as of the foot. *"ஏற்றெருமை நெஞ்சம் வடிம்பி னிடந்திட்டு" (கலித். 103).* 3. கூரைச் சாய்வு (வின்.); eaves, edge of a standing roof. 4. தேர் முதலியவற்றைக் கிளப்புந் தணிமரம்; lever. *"ரதத்தோ பாதி வடிம்பாலே தாக்கி" (ஈடு.1. 4, 6).* 5. வடிம்புக் கம்பி (இ.வ.) பார்க்க; see *vaḍimbu-k-kambi.* 6. தழும்பு, வடு (நெல்லை.); mark, scar, smudge. 7. பழி; reproach, blame. *"தாய்மாரும் ஊரவரும் வடிம்பிடுகிறார்களோ வென்று" (திவ். திருநெடுந். 21, வ்யா, பக். 170).*

[விளி→(விளிம்பு)→வடிம்பு (மு.தா.I, பக்.103.]

வடிம்புக்கம்பி *vaḍimbu-k-kambi,* பெ.(n.) தாங்குமரம் (இ.வ.); spar.

[வடிம்பு + கம்பி]

வடிம்புக்கழி *vaḍimbu-k-kaḻi,* பெ.(n.) குறுக்கு விட்டம் (யாழ்.அக.); transverse piece in roofing.

[வடிம்பு + கழி]

வடிம்புபிடி-த்தல் *vaḍimbu-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) குறுக்கு விட்டந் தொடுத்தல் (வின்.); to tie cross timbers of a roof.

[வடிம்பு + பிடி-,]

வடிமணி *vaḍi-maṇi,* பெ.(n.) தெளிந்த ஓசையுள்ள மணி; clear sounding bell. *"வடிமணி நின்றியம்ப" (பு.வெ.10, 14, பக். 116).*

வடிமருந்து *vaḍi-marundu,* பெ.(n.) கள்; arrack, intoxicating liquor (சா.அக.).

பட்டைச் (சாராயம்) வெறியம்.

தென்னை, பனை, அரிசி, வெல்லம் முதலியவற்றிலிருந்து வடிக்கப்படும் புளிப்பேறிய மதுவகை.

மருந்து = வெறியம் (சாராயம்). மருத்துவக் குணமுடையது. வயிற்று வலிக்கும் உடம்பிலுள்ள எலும்புகளுக்கும் ஊட்டமாகப் பயன்படுவது.

வடிமார் *vaḍi-mār,* பெ.(n.) கூரைவேயப் பயன்படும் புல்வகை; a species of sedge used for roofing thatched shed.

வடிமாலை *vaḍi-mālai,* பெ.(n.) கடுகு ரோகணி; a purgative drug-*Helleborus niger* (சா.அக.).

வடியல் *vaḍiyal,* பெ.(n.) 1. வடிசல்², 1 பார்க்க; see *vaḍišal.* 2. வடித்த நீர் முதலியன (யாழ்.அக.); strained or filtered liquid. 3. சமைக்கப்பட்டது; that which is cooked. *நான்கு படியரிசி வடியல்.*

[வடி →வடியல்]

வடியவெடுத்தல் *vaḍiya-v-eḍuttal,* தொ.பெ. (vbl.n.) வடிகால்வாய் வழியாக நீர் வடிக்கச்

வடிக்கச் சொல்லல்; draining of water through an outlet or canal.

[வடிய + எடுத்தல்.]

வடியிடு-தல் *vaḍi-y-iḍu-*, 18 செ. குன்றாவி. (v.t.) வடித்தெடுத்தல்; to be filtered. *"தெள்ளிமறை வடியிட்ட வமுதப்பிழம்பே" (தாயு.கருணா.8).*

[வடி + இடு-, இல்→இள்→இடு-தல்.]

வடியுப்பு *vaḍi-uppu*, பெ.(n.) வடித்தவுப்பு; filtered salt.

[வடி + உப்பு.]

வடியெண்ணெய் *vaḍi-y-eṇṇey*, பெ.(n.) வடித்தெடுத்த மருந்தெண்ணெய் (வின்.); clarified medicinal oil.

[வடி + எண்ணெய்]

வடிரசி *vaḍiraši*, பெ.(n.) ஓர் பாலை; alstonia scholaris.

வடிவகணிதம் *vaḍiva-kaṇidam*, பெ.(n.) வடிவங்களையும், உருவங்களையும், உருவாக்கும் கோடுகள், கோணங்கள் முதலியவற்றைக் கணித அடிப்படையில் விளக்கும் பிரிவு; geometry.

[வடிவம் + கணிதம்]

வடிவடைப்புவேலை *vaḍivaḍaippu-vēlai*, பெ.(n.) தூண் அல்லது வேண்டிய வடிவத்தில் அமைக்கப்பட்டு, அதில் கற்காரையிட்டுச் செய்யப்படும் வேலை; decorative work in pillar or any structure with polished coloured marbles or tiles.

[வடிவம் + அடைப்புவேலை.]

வடிவணங்கு *vaḍi-v-aṇaṅgu*, பெ.(n.) அழகிய பெண்; beautiful lady, as fair-complexioned. *"ஆதிமா மரபின்வரு வடிவணங்கை" (திருவாலவா. 11, 3).*

[வடிவு + அணங்கு]

வடிவம்[1] *vaḍivam*, பெ.(n.) உள்ளடக்கத்துக்குத் தகுந்த புற அமைப்பு; appearance or form that is reflective of the inner content.

[படிவம்→வடிவம்]

வடிவம்[2] *vaḍivam*, பெ.(n.) 1. உருவம் (பிங்.); form, shape, figure. *"சங்கம வடிவம்..... தாபர வடிவம்" (திருவாலவா. 61, 14).* 2. உடல் (யாழ்.அக.); body. 3. அழகு, செம்மை, நேர்த்தி; beauty, charm, comeliness. *"வடிவமங்கை தனைச் சுருதி விதியின் மணம் புணர்ந்தான்" (திருவாலவா. 3, 3).* 4. நிறம், உடல் வண்ணம் (அக.நி.); colour, good physique. 5. பளபளப்பு, ஒளிர்வு; glassiness, lustre, glittering. 6. மெய்ச் சொல் (அக.நி.); true word, truth.

[படி→வடி→வடிவு→வடிவம்]

வடிவம்[3] *vaḍivam*, பெ.(n.) 1. உருப்படிவம்; model. 2. கலைஞர்களுக்கு உருப்படிவமாக (மாதிரியாக) அமைபவர்;

வடிவமை-த்தல் *vaḍivamai-*, 4 செ. குன்றாவி. (v.t.) 1. வடிவம் கிடைக்கும் படி செய்தல்; to design, shape. 2. உருவாக்குதல்; to architect. *இந்தத் திரையரங்கத்தை வடிவமைத்தவர் யார்?*

[வடிவம் + அமை-]

வடிவமைப்பு *vaḍivamaippu*, பெ.(n.) உருவாக்கப்பட்ட தோற்றம்; design. *'அந்தக்*

கொதிகலன்கள் கோபுரம் போன்ற வடிவமைப்புக் கொண்டவை'.

[வடிவம் + அமைப்பு]

வடிவவுவமம் *vaḍiva-v-uvamam,* பெ.(n.) உருவத்தை ஒப்பித்துக் கூறும் உவமை (யாழ். அக.); simile in which the comparison is in respect of shape or form.

[வடிவம் + உவமம்]

வடிவழகி *vaḍivaḻagi,* பெ.(n.) வெற்றிலை; betel leaf-*Piper beter* (சா.அக.).

வடிவாக *vaḍi-v-āga,* கு.வி.எ.(adv.) முற்றும் (நெல்லை.); completely, fully, entirely.

[வடிவு + ஆக-.]

வடிவாளன் *vaḍi-v-āḷaṉ,* பெ.(n.) அழகன் (இ.வ.); handsome man.

[வடிவு + ஆள்→ஆளன்]

வடிவானவைத்தன் *vaḍivāṉa-vaittaṉ,* பெ. (n.) சாரைப்பாம்பு; the male of cobra-the rat snake.

வடிவிக்குமருந்து *vaḍivikku-marundu,* பெ. (n.) உடம்பு அல்லது வீக்கத்தை வற்றச் செய்யும் மருந்து; drugs or medicines capable of reducing the swelling of the body.

வடிவியல் *vaḍiviyal,* பெ.(n.) வடிவகணிதம் பார்க்க; see *vaḍiva-kaṇidam.*

வடிவிலாக்கூற்று *vaḍivilā-k-kūṟṟu,* பெ.(n.) வான்வெளி வாக்கு; voice from an invisible speaker, voice from heaven. *“பிறந்திட்டதோர் வடிவிலாக்கூற்று” (சேதுபு. பராவு. 42).*

[வடிவு + இல் + ஆ + கூற்று]

வடிவு[1] *vaḍivu,* பெ.(n.) அல்குல் (பிங்.); vagina, mons veneris.

வடிவு[2] *vaḍivu,* பெ.(n.) 1. உருவம், அமைப்பு; form, shape. *“வண்ணந்தானது காட்டி வடிவு காட்டி” (திருவாச. 5, 25).* 2. உடல் (சூடா.); body. 3. அழகு; beauty. *“வடிவுடை மலைமகள்” (தேவா. 618, 7). “வடிவார் வயற்றில்லை” (திருக்கோ. 139).* 5. நன்னிறம்; fair complexion. 6. பளபளப்பு, ஒளிர்வு, பிறங்கொளி, அழகொளி; brightness, lustre. *“வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும்” (திவ். திருப்பல். 2).* 7. உண்மை, மெய்ச்சொல் (அரு.நி.); truth, true word.

தெ. வடுவு; ம. வடிவு.

[வடி→வடிவு]

வடிவு[3] *vaḍivu,* பெ.(n.) 1. வடித்தது (இ.வ.); that which is strained or filtered. 2. மிகுதியாக வடிந்த நீர்; overflow, surplus water.

வடிவுப்பானை *vaḍivu-p-pāṉai,* பெ.(n.) வடிபானை (வின்.) பார்க்க; see *vaḍi-pāṉai.*

[வடி→வடிவு + பானை.]

வடிவுவமை *vaḍi-v-uvamai,* பெ.(n.) வடிவவுவமம் (சங்.அக.) பார்க்க; see *vaḍiva-v-uvamam.*

[வடிவு + உவமை]

வடிவெண்ணெய் *vaḍi-v-eṇṇey,* பெ.(n.) குருதிக்கேட்டாலுண்டான நோய்களுக்குக் கொடுக்கும் எண்ணெய்; medicated oil for diseases caused by vitiation of blood (சா.அக.).

வடிவெலும்பு *vadi-v-elumbu,* பெ.(n.) மாரெலும்பு; rib, breast bone - *Sternum.*

வடிவெழுத்து *vadi-v-eluttu,* பெ.(n.) ஒலியின் குறியாக, எழுதப்படும் எழுத்து (நன்.256, மயிலை) (பிங்.); a letter, written symbol of an uttered sound, dist. fr. *oli-y-eluttu.* 2. திருந்திய கையெழுத்து (இ.வ); legible or fine hand writing.

[வடி →வடிவு + எழுத்து]

வடிவேல்[1] *vadivēl,* பெ.(n.) 19–ஆம் நூற்றாண்டில் *"சுப்பிரமணியர் துதிக் கோவை"* என்னும் நூலை இயற்றிய புலவர்; a poet who composed a work titled subramaniar *Tudikkōvai* in 19C.

வடிவேல்[2] *vadivēl,* பெ.(n.) 1. கூரிய வேல்; sharp lance. *"வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே" (கந்தரலங். 70).* 2. முருகக்கடவுள் (இ.வ.); Kanda, as wielding the lance.

[வடி + வேல்]

வடு[1] *vadu,* பெ.(n.) 1. மாம்பிஞ்சு; unripe fruit, especially very green tender mango. *"மாவின் வடுவகிரன்ன கண்ணீர்" (திருவாச. 9, 2).* 2. உடல் மச்சம் (வின்.); wart, mole. 3. தழும்பு; scar, smudge, cicatrice, wale. *"சாபநோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்" (புறநா. 14).*

வடு[2] *vadu,* பெ.(n.) 1. உளியாற் செதுக்கின உரு; chiselled figure. *"கூருளி பொருத வடுவாழ் நோன்குறடு" (சிறுபாண். 252).* 2. புண்வாய்; mouth affected by an ulcer or wound. *"தாழ் வடுப் புண்" (பு.வெ.10, சிறப்பிற்.11).*

வடு[3] *vadu,* பெ.(n.) 1. குற்றம்; fault, defect. *"வடுவில் வாய்வாள்" (சிறுபாண்.121).* 2. பழி; reproach, blemish. *"வடுவன்று வேந்தன் றொழில்" (குறள். 549).* 3. கேடு; injury, calamity, catastrophe. *"நாயகன் மேனிக் கில்லை வடுவென" (கம்பரா. மருத்து. 5).*

வடு[4] *vadu,* பெ.(n.) 1. நுண்ணிய கருமணல்; fine, black sand. *"வடுவா ழெக்கர் மணலினும் பலரே" (மலைபடு. 556).* 2. செம்பு (பிங்.); copper. 3. வாள் (யாழ்.அக.); sword. 4. வண்டு (பிங்.); beetle.

வடு[5]–த்தல் *vadu-,* 4 செ.கு.வி.(v.i.) பிஞ்சு விடுதல் (வின்.); to bear fruit.

வடு[6]–த்தல் *vadu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. வெளிப்படுத்துதல்; to manifest. 2. பார்வைக்கு காட்சியாக வைத்தல்; to exhibit. *"வடுத்தெழு கொலை" (கல்லா.5).*

வடு[7] *vadu,* பெ.(n.) 1. மாணி (இ.வ.); celibate student. 2. இளைஞன் (யாழ்.அக.); youth. 3. திறமையானவன் (இ.வ.); clever boy, talented youngster.

வடுக்கு–தல் *vadukku-,* 5 செ.கு.வி.(v.i.) நூற்பாவில், வண்ணமேற்றாத முரட்டு நூலை ஏற்றுதல்; to thrust undyed coarse thread into spinning mill.

[வடு →வடுகு–.]

வடுக்கொள்(ளு)–தல் *vadu-k-kol(l)-,* 13 செ.கு.வி.(v.i.) 1. தழும்பு படுதல்; to bear mark, smudge, sear. *"நல்லகம் வடுக்கொள முயங்கி" (அகநா. 100).* 2. புண் முதலியன ஆறத் தொடங்குதல் (இ.வ.); to begin to heal, as a sore etc.

[வடு + கொள்–,]

வடுகக்கடவுள் *vaḍuga-k-kaḍavuḷ,* பெ. (n.) சிவபெருமானின் வயிரவ வடிவம் (திவா.); *Bhairavaṉ,* a form of *Śivaṉ.*

வடுகக்காது *vaḍuga-k-kādu,* பெ. (n.) வடிகாது (வின்.) பார்க்க; see *vaḍi-kādu.*

வடுகச்சி *vaḍugacci,* பெ. (n.) வடுகப்பெண் (வின்.); a woman of *vaḍuga* caste.

[வடுகர் + அச்சி. அச்சன் (ஆ.பா.)→அச்சி (பெ.பா.)]

வடுகச்செட்டி *vaḍuga-c-ceṭṭi,* பெ. (n.) செட்டியாருள் ஓரினத்தவர் (வின்.); a division of *ceṭṭiyar* caste.

வடுகடுக்காய் *vaḍu-kaḍu-k-kāi,* பெ. (n.) கடுக்காய்ப் பிஞ்சு; an unriped chebulic myrobalan (சா.அக.).

வடுகநம்பி *vaḍuga-nambi,* பெ. (n.) இராமாநுசரின் வழித்தொண்டர் (குருபரம்.); a disciple of *Rāmānujar.*

வடுகநாததேசிகர்[1] *vaḍuganāda-tēśigar,* பெ. (n.) 17-ஆம் நூற்றாண்டில் *"திருமுல்லை வாயிற் புராணம்"* என்னும் நூலை இயற்றிய புலவர்; a poet who composed a work titled *'Tirumullai-vāyiṟ-purāṇam'* in 17C.

வடுகநாததேசிகர்[2] *vaḍuganāda-tēśigar,* பெ. (n.) 19, 20ஆம் நூற்றாண்டில் காத்திருப்பு என்னும் ஊரைச் சேர்ந்த, புள்ளிருக்க வேளூர்ப்புராணம் என்னும் நூலை இயற்றிய புலவர்; a poet who composed a work titled *'puḷḷirukka-vēḷūr-p-purāṇam'* in 19-20 C. He hails from *Kāttiruppu* village.

வடுகநாதன் *vaḍuga-nādaṉ,* பெ. (n.) வடுகக்கடவுள் பார்க்க; see *vaḍuga-k-kaḍavuḷ.*

வடுகப்பறையன் *vaḍuga-p-paṟaiyaṉ,* பெ. (n.) மாலிய சமயத்தைச் சார்ந்த தெலுங்க நாட்டுப் பஞ்சம வகையான் (இ.வ.); a *vaisṇava paṟaiya* of the Telugu country.

[வடுகன் + பறையன்]

வடுகம் *vaḍugam,* பெ. (n.) வடுகு பார்க்க; see *vaḍugu.*

[வடம்→ வடகு→ வடுகு→ வடுகம் (வ.வ.பக்.26).]

வடகு என்னும் சொல்லிடையுள்ள டகரம், அதையடுத்து ஈற்றிலுள்ள குகரச் சார்பால், டுகரமாயிற்று. (ஒ.நோ.) கேடகம்→கிடுகு.

இங்ஙனம் அகரம் உகரமாய்த் திரிந்தது உயிரிசைவு மாற்றம் (Harmonic sequence of Vowels) என்னும் நெறிமுறையாகும்.

வடுகர்[1] *vaḍugar,* பெ. (n.) தமிழகத்தின் வடக்குப் பகுதியில் வாழ்ந்த குடியினர்; inhabitant lived in northern region of T.N. *'வடுகர்' என்பது ஒரு குடியின் பெயராகும். 'வடுகு' என்பவற்றோடு 'அர்' விகுதி சேர்ந்தமையால் 'வடுகர்' என்றாயிற்று. வடுகர் தமிழகத்தின் வட வெல்லையில் மட்டுமின்றி, நாலாபுறமும் பரவி வாழ்ந்தனர். வடக்கே வாழ்ந்த வடுகரைத் தமிழர் 'வட வடுகர்' என்றழைத்தனர். 'கதநாய் வடுகர்' (அகம்.381, 7). 'வம்ப வடுகர்' என்னும் சொல்லாளப் படுவதால், புதியவர்கள், நிலையற்றவர்கள், அயலார்கள் எனவும் அழைக்கலாம். 'கடுங்குரற் பம்பை கதநாய்*

வடுகர்' (நற்.212, 5). 'கல்லா நீள்மொழிக் கதநாய் வடுகர்' (அகம்.107, 11). 'கதநாய் வடுகர்' (அகம்.375, 14) என வடுகரைக் குறித்த பாடல்கள் கழகக்கால இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது.

வடுகர்[2] *vaḍugar*, பெ.(n.) 1. தெலுங்கர்; people of the Telugu country. *"கதநாய் வடுகர்" (நற். 212).* 2. கி.பி.16–ஆம் நூற்றாண்டில் விசயநகர நாட்டினின்று, தமிழ் நாட்டிற் குடியேறிய தெலுங்கர்; a caste of Telugu immigrants, from the kingdom of vijayanagar into the Tamil country in the 16th century.

[வடுகு→வடுகர்]

வடுகரணம் *vaḍu-karaṇam,* பெ.(n.) பூணூல் போடும் விழா (யாழ்.அக.); investiture with the sacred thread.

வடுகவழிபன்னீராயிரம் *vaḍuga-vaḻi-paṉṉīrāyiram,* பெ.(n.) நெல்லூர், குண்டூர், கடப்பை முதலாய நிலப்பரப்பை யுள்ளடக்கிய வடுகர் வாழ் தேயம்; *vāṇargaḷ* country comprising of *Nellūr, Guṇḍūr, Kaḍappai* etc. *'பன்னீராயிரம் என்பது பூமியின் பரப்பைக் குறிப்பதாமென்பர். பன்னீராயிரம் ஊர்களை கொண்ட பரப்பிடம் என்பதனை, முடியலூர் சாசனம் உணர்த்துகின்றது'. "நனைமுதிர் நறவின் நாட்பலி கொடுக்கும் வால் நிணப்புகலின் வடுகர் தேயத்து" (அகம்.213:7–8).*

[வடுகவழி → வடுகநாடு.]

வடுகவாளி *vaḍuga-vāḷi,* பெ.(n.) வடுக நாட்டு மகளிர் காதில் அணியும் காதணி வகை; a kind of ear-ring worn by vaduga community women. *"வடுகவாளி ஒன்றில் கோத்தமுத்து ஒன்பது" (தெ.இ.கல். தொ.2:2, கல்.51).*

[வடுகர் + வாளி. வாளி = ஒரு வகைக் காதணி]

வடுகன்[1] *vaḍugaṉ,* பெ.(n.) 1. வயிரவன் (பிங்.); Bhairava. 2. மாணி; celibate student. 3. இளைஞன் (யாழ்.அக.); youth. 4. மூடன் (யாழ்.அக.); fool, stupid.

வடுகன்[2] *vaḍugaṉ,* பெ.(n.) தெலுங்க நாட்டான்; man from the Telugu country.

[வடுகு + அன்]

வடுகன்றாய் *vaḍugaṉ-ṟāy,* பெ.(n.) காளி (திவா.); *Kāḷi,* the mother of Bhairava.

[வடுகன் + தாய்]

வடுகி *vaḍugi,* பெ.(n.) வடுகன்றாய் (பிங்.) பார்க்க; see *vaḍugaṉ-ṟāy.*

வடுகு[1] *vaḍugu,* பெ.(n.) 1. தமிழ்நாட்டின் வடவெல்லையிலுள்ள நாடு; the region situated in the north of the Tamil country. *"வடதிசை மருங்கின் வடுகு வரம்பாக" (தொல்.பொருள்.650, உரை).* 2. ஆந்திரநாடு; the Telugu country. 3. தெலுங்கு மொழி; the Telugu language. *"வடகலை தென்கலை வடுகு கன்னடம்" (கம்பரா. தனி.).* 4. தெலுங்கின் கிளைமொழி; a dialect of Telugu. *"கன்னடம் வடுகு கலிங்கந் தெலுங்கம்" (நன்.272, மயிலை) (தொல். சொல்.400, உரை).* 5. தெலுங்கு பேசுவோரிடையே உள்ள தொரு பிரிவு (பிங்.); a division of Telugu-speaking people.

க. படகு.

[வடம்→வடகு→வடுகு. ஒருகா. கொடுந்தமிழ்.]

முதன்முதல் வடதிசையாற் பெயர் பெற்ற மொழி வடுகு என்னும் தெலுங்கே. அது வேதக் காலத்திலேயே தமிழினின்று திரிந்திருந்தது.

வடம்→ வடகு→வடுகு→வடுகம்.

வடகு என்னும் சொல்லிடையுள்ள டகரம், அதையடுத்து ஈற்றிலுள்ள குகரச் சார்பால், டுகரமாயிற்று. இங்ஙனம் அகரம் உகரமாய்த் திரிந்தது உயிரிசைவு மாற்றம் (Harmonic Sequence of Vowels) என்னும் நெறிமுறையாகும்.

ஒ.நோ. : கேடகம் - கிடுகு.

எடுப்பொலி (எ-டு) : குடி- gudi (கோவில்), கூன் - gūvu. சடை - ஜட.

வலிப்பொலி (எ-டு): செய் - cey, போடு - பெட்டு.

இங்க்கா = இன்னும், கொஞ்ச்செமு = கொஞ்சம்,

அண்ட்டாரு = என்றார், எந்த்த = எவ்வளவு,

கும்ப்பு = கும்பு.

இங்ஙனம் ஆரியத்தன்மையடைந்த ங்க்க, ஞ்ச்ச, ண்ட்ட, ந்த்த, ம்ப்ப என்னும் வல்மெலிவலி யிணைகள் முதன்முதல் வடுகிலேயே தோன்றுகின்றன. தமிழில் இத்தகைய வொலிகள் மருந்திற்குங் காணக்கிடையா. அதிலுள்ளவை யெல்லாம் ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய மென்மெலிவலி யிணைகளே.

வடுகு[2] *vaḍugu,* பெ.(n.) 1. மருத யாழ்த்திறத் தொன்று (பிங்.); a secondary melody-type of the marudam class, one of four *maruda-yāḻ-t-tiram.* 2. இந்தளம் (பிங்.); a melody-type. 3. மெய்க் கூத்து வகை (சிலப். 3, 12, உரை); a physical dance.

[வடக்கு→வடுகு]

வடுகு[3] *vaḍugu,* பெ.(n.) மணியிலமைந்த குற்றம் (C.G.); a flaw imperfection in a gem.

[வடு→வடுகு]

வடுகு[4] *vaḍugu,* பெ.(n.) பூணூலணியும் விழா; investiture with the sacred thread. *"ஏழுறு வடுகுசெய் திருக்கு வேமுதல்....... ஓதியே" (நல்.பாரத.துட்டிய.60).*

வடுகுந்தமிழுங்குணம் *vaḍugun-tamiḻuṅ-guṇam,* பெ.(n.) வயிற்றுக் கடுப்பு; pain in abdomen.

வடுச்சொல் *vaḍu-c-col,* பெ.(n.) பழிமொழி; reproach.

[வடு + சொல்]

வடுத்தலைக்கலவாய் *vaḍu-t-talai-k-kalavāy,* பெ.(n.) மஞ்சள் நிறமானதும் நெடிதாய் வளர்வதுமான கடல் மீன்; sea-fish attaining a large size.

[வடு + தலை + கலவாய்]

ஒருகா. பன்றிமீன்.



வடுப்படல் *vaḍu-p-paḍal,* பெ.(n.) மீன் வேட்டையில் உண்டாகும் காயம்; a wound caused due to forecially fish catching.

வடுப்பிஞ்சு *vaḍu-piñju,* பெ.(n.) இளம்பிஞ்சு; tender, unriped fruit.

[வடு + பிஞ்சு.]

வடுபட்டவள் *vaḍu-paṭṭavaḷ,* பெ.(n.) ஆணுடன் தொடர்புடையவள்; a reduced woman.

வடுபடுத்து-தல் *vaḍu-paḍuttu-,* 5 செ.கு.வி.(v.i.) வெட்டு, குத்து முதலியவற்றால் காயப்படுத்துகை; wounding.

வடும்பு[1] *vaḍumbu,* பெ.(n.) மூங்கிற் கழி, கெடை; a long bamboo post.

வடும்பு[2] *vaḍumbu,* பெ.(n.) சாத்து மரங்களின் குறுக்கே போடுங்கழி; tie beam.

வடுமாங்காய் *vaḍu-māṅgāy,* பெ.(n.) மாவடு ஊறுகாய் (கொ.வ); a pickled preparation of green tender mangoes.

[வடி→வடு + மாங்காய்.]

வடுவக்கூடை *vaḍuva-k-kūḍai,* பெ.(n.) கூடைவகை (வின்.); a kind of basket.

[வடுகன்→வடுவன் + கூடை]

வடுவரி *vaḍuvari,* பெ.(n.) 1. வண்டு (சது.), தேனீ; beetle, bee. 2. சிற்றுயிரி; insect.

[வடு + வரி]

வடுவறவேதல் *vaḍuvaṟa-vēdal,* தொ.பெ.(vbl.n.) முழுவதுமாக வேதல்; cooking well.

[வடு + அற + வே-,]

வடுவன் *vaḍuvaṉ,* பெ.(n.) தெலுங்கு நாட்டான்; man from the Telugu country.

[வடுகு→வடுகன்→வடுவன்]

வடுவும்புள்ளியும் *vaḍuvum-puḷḷiyum,* பெ.(n.) அம்மையிறங்கி உதிர்தல்; to be full of warts and spots as after small pox.

வடுவை *vaḍuvai,* பெ.(n.) செம்பு; copper.

வடை *vaḍai,* பெ.(n.) தேர்ச்சக்கர வடிவாகச் செய்யப்படும் உழுத்தம் பலகாரம்; a cake made of black grum, fried in ghee or oil.

Skt. வடா.

[வட்டை → வடை]

ஒ.நோ.பெட்டை பெடை.

வட்டக் கருத்துச் சொற்களுள் வட்டு, வட்டை என்னும் வடிவுகள் வடமொழியில் இல்லை (வே.க.4 பக்.104).

வடைக்குத்தி *vaḍai-k-kutti,* பெ.(n.) பண்ணிகாரம் குத்தியெடுக்குங் குத்தூசி வகை; a picker, used in frying cakes.

[வடை + குத்தி]

வடைகறி *vaḍai-kaṟi,* பெ.(n.) வடைக்குரிய கடலை மாவுடன் கறிமசாலை சேர்த்துத் தாளித்து, ஆவியில் வைத்தெடுக்கும் ஒருவகைத் தொடுகறி; a kind of side dish. using chickpea flour paste as in the preparation of vaḍai.

[வடை + கறி]

வடைப்பருப்பு *vaḍai-p-paruppu,* பெ.(n.) பயற்றம் பருப்புடன் எலுமிச்சம்பழச்சாறு முதலியன சேர்த்துச் செய்யப்படுஞ் சிற்றுண்டி வகை; a salad of green gram split and soaked in lime water and seasoned with condiments.

தெ. வடபப்பு

[வடை + பருப்பு]

வடைமாலை *vaḍai-mālai,* பெ.(n.) வேண்டுதலின் பொருட்டு வடைகளைக் கோத்து மாகாளர், குரக்கினத் தலைவன் (அனுமன்) முதலிய தெய்வங்கட்கு இடும் மாலை; garland of vaḍai offered in vow to deities, such as *Mākāḷar, Hanumār,* etc.

[வடை + மாலை]

வடையம் *vaḍaiyam,*பெ.(n.) 1. நெல்லிப்பழம் முதலியவற்றை அரைத்துத் தட்டிய வடை; cake, as of nelli fruits. 2. பொட்டலமாகக் கட்டிய வெற்றிலை பாக்கு (தஞ்.); folded packet of betel leaves and areca-nut.

வடையற்றது *vaḍai-y-aṟṟadu,* பெ.(n.) வீணானது (யாழ்.அக.); that which is useless, wasteful material.

வடைவாரி *vaḍai-vāri,*பெ.(n.) துளைகள் கொண்ட வாரியெடுக்கும் கரண்டி; perforated ladle to take out *vaḍai-cakes.*

[வடை + வாரி]



வண்களமர் *vaṇ-kaḷamar,* பெ.(n.) வேளாளர் (திவா.); *vēḷāḷās.*

[வள் → வண் + களமர்.]

வண்சிறை *vaṇ-šiṟai,* பெ.(n.) மதில் (சது.); battlement.

[வன்சிறை → வண்சிறை.]

வண்டகி *vaṇḍagi,* பெ.(n.) முந்திரிக் கொட்டை; cashew nut-*Anacardium occidentale.*

வண்டத்தனம் *vaṇḍa-t-taṉam,* பெ.(n.) 1. குறும்பு (கொ.வ.), கொடுமை; mischief, wickedness. *வண்டத்தனக்காரனுக்கு சண்டித்தனப் பெண்சாதி (உ.வ.).* 2. நாணமின்மை; impudence. 3. மதிப்பின்மை; impertinence. 4. இழி செயல்(வின்.); lewdness.

தெ. பண்டதனமு; க. பண்டதன.

[வண்டம் + தனம். 'தனம்' சொல்லாக்க ஈறு. ஒ.நோ. குறும்புத் தனம், கஞ்சத்தனம்.]

வண்டப்புரட்டன் *vaṇḍa-p-puraṭṭaṉ,* பெ.(n.) ஏமாற்றுக்காரன்; consummate cheat. *வண்டப்புரட்டனுக்கு வாய்த்த சண்டி (இ.வ.). "வண்டப் புரட்டர்தா முறிதந்து பொன்னடகு வைக்கினுங் கடனீந்திடார் (குமரே. சத. 4). வண்டப் புரட்டனுக்கு உடம்பெல்லாம் வாய் (உ.வ.).*

[வண்டம் + புரட்டு→புரட்டன்.]

வண்டப்பேச்சு *vaṇḍa-p-pēccu,* பெ.(n.) 1. குறும்புப் பேச்சு; imprudent talk. 2. இழிவான பேச்சு; lewd talk. 3. கண்மூடித்தனமான பேச்சு; rash talk. *மட்டுமரியாதையற்ற வண்டப்பேச்சு பகையை வளர்க்கும் (இ.வ.).*

[வண்டம் + பேச்சு.]

அளவுக்கு மீறி, எல்லைக் கடந்து, மிகு சினத்தால் பேசும் பேச்சு.

வண்டம் *vaṇḍam,* பெ.(n.) குந்தம் (சங்.அக.); a weapon.

வண்டமை[1] *vaṇḍamai,* பெ.(n.) கருஞ்சங்கு (சா.அக.); black conch.

வண்டமை[2] *vaṇḍamai,* பெ.(n.) கடல்மீன் வகை (சங்.அக.); shell fish.

வண்டயக்கட்டை *vaṇḍaya-k-kaṭṭai,* பெ.(n.) மரத்தூணின் உருண்டை வடிவப் பகுதி; a round plank attached to wooden pillar to act, as a connector.

வண்டயம்[1] *vaṇḍayam,* பெ.(n.) கழல்; anklet. *"வீரவண்டயம் அணிந்த திருவடிகள்" (திவ். திருப்பா. 17, அரும். பக். 162).*

தெ. பெண்டியமு; க. பெண்டெய.

[வண்டு → வண்டயம். (ஒ.நோ.) தண்டு → தண்டயம்.]

வண்டயம் = உருட்டிய துணிப்பந்தம்.

வண்டயம்[2] *vaṇḍayam,* பெ.(n.) வண்டவாளம் பார்க்க; see *vaṇḍavāḷam.* *'அவன் வண்டயமெல்லாம் வெளிவந்து விட்டது'.*

வண்டர் *vaṇḍar,* பெ.(n.) 1. அரசனுக்கு நாழிகையறிவிக்கும் கடிகையார்; panegy -rists who keep the king informed of the time, by praising him at stated hours. *"வண்டரு மோவரும் பாட" (சீவக. 1844).* 2. மங்கலம் பாடுவோர் (வின்.); panegyrists, bards. 3. வீரர் (நாமதீப. 139); warriors.

வண்டரம் *vaṇḍaram,* பெ.(n.) 1. நாயின் வால் (யாழ்.அக.); dog's tail. 2. நாய்; dog. 3. முகில்; cloud. 4. மார்பு; breast, chest.

வண்டரன் *vaṇḍaraṉ,* பெ.(n.) 1. அலி (யாழ்.அக.); eunuch. 2. இவறன் (கஞ்சன்); miser.

[வண்டரன் = முற்கால அரசவைகளில் விதையகற்றப்பட்டு அமர்த்தப்பட்ட பணியாள்.]

வண்டரிசி[1] *vaṇḍariśi,* பெ.(n.) உளுத்த அரிசி, குருவண்டுக்குள்ளிருக்கும் அரிசி (rhm f.); pest eaten rice. *"பேருகேள் வண்டினது அரிசி பட்டால் பேரண்டம் நீறியது பிளக்குந் தானே" (கொங்கணவர்).*

வண்டரிசி[2] *vaṇḍariśi,* பெ.(n.) கழுதை வண்டின் முதுகில் சுண்ட அரிசியைப் போல் விழும் முட்டை; இது கையில் பட வெந்து போகும் தன்மைத்து; இதில் இளங்கூட்டி அரைத்துப் பூச துரிசு நீறும், பேரண்டம் நீறிப் பிண்டிக்கும், சரக்கெல்லாம் நீறுக்கும்; the egg of a kind of beetle calcifies copper sulphate, skull bone and other drugs.

வண்டல்[1] *vaṇḍal,* பெ.(n.) வெள்ளப்பெருக்கு முதலியவற்றால் அடித்தொதுங்கிய வளமான மண்; silt, alluvium. *'அழிக்கும் வெள்ளமே வளம் தரும் வண்டலையும் கொண்டு வருகிறது'. நன்செய் தொளி நடவில் குளத்து வண்டல் தூவினால் விளைச்சல் மிகுதியாகும் (இ.வ.).*

[வண்டு → வண்டல்.]

வண்டல்[2] *vaṇḍal,* பெ.(n.) 1. மகளிர் விளையாட்டு வகை (திவா.); a girl's game of making toy houses. *"தண்முத்தம் பேதை மடவார்தம் வண்டல் விளக்கயரும்" (ஐந். ஐம். 46).* 2. மகளிர் கூட்டம் (அரு.நி.); bevy of ladies. 3. விளையாட்டாக இழைத்த சிற்றில்; toy house. *"தண்புனல் வண்டலுய்த் தென" (ஐங்குறு.69).* 4. நீர் முதலியவற்றினடியில் மண்டிய பொடி மண் முதலியன; dregs, lees, sediment; mud,

mire, slush. *"வண்டல் பாய் பொன்னி நாடனை" (கலிங். 135). "வியனதி வண்டலாக" (பாரத. பதினாறாம். 73).* 5. நீரொதுக்கி விட்டமண்; earth or sand washed ashore by a river, lake etc. *"வண்டலுண் மணல் தெள்ளி" (திவ். நாய்ச். 2, 3).* 6. செம்மண்டரை (இ.வ.); alluvial soil, capable of retaining moisture and of a light red colour. 7. சேறு முதலியன உலரும் போது மேலே காய்ந்தெழும்பும் ஏடு; flake, skin, thin layer that peels off, scale. *"பூசுகந்தம் தனத்திற் பொரிந்தது..... பொருக்கெழும்பி" (தனிப்பா.1, 381, 27).* 8. பருக்கைக்கல் (யாழ்.அக.); pebble. 9. நீர்ச்சுழி (யாழ்அக.); whirlpool.

[மண்டு→வண்டு→வண்டல்.]

வண்டல்கீரை *vandal-kīrai,* பெ.(n.) வள்ளைக்கீரை பார்க்க; see *vaḷḷai-k-kīrai.*

வண்டல்நீர் *vanḍal-nīr,* பெ.(n.) வண்டற் படிவு கலந்த நீர்; water with sediments.

[வண்டல் + நீர்.]

வண்டலடி-த்தல் *vanḍalaḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. வயலுக்கு உரமாக வண்டல் பரப்புதல் (C.G); to spread, alluvial deposit in fields, as manure. 2. வயல் மண்மேடிடுதல் (கொ.வ.); to become silted up, as a field.

[வண்டல் + அடி-,]

வண்டலம் *vanḍalam,* பெ.(n.) சேறு (யாழ். அக.); slush.

[வண்டல்→வண்டலம்.]

வண்டலவர் *vanḍalavar,* பெ.(n.) விளையாட்டு மகளிர்; playful girls. *"இரிவுற்றார் வண்டிற்கு வண்டலவர்" (கலித்.92).*

[வண்டு→வண்டலவர்.]

வண்டலாயம் *vanḍal-āyam,* பெ.(n.) விளையாடும் தோழியர் கூட்டம்; a company of girl-playmates. *"வண்டலாயமொ டுண்டுறைத் தலைஇ" (பெரும்பாண்.311).*

[வண்டல் + ஆயம்.]

வண்டலிழை-த்தல் *vanḍal-iḻai-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. மணலாற் சிற்றிலிழைத்து விளையாடுதல் (பொருந. 187, உரை); to make a toy-house out of sand. 2. பருவமகளிர் விளையாட்டுகளுள் ஒன்று; a play of virgins.

மறுவ. கூடலிழைத்தல்.

[வண்டல் + இழை-.]

பருவப் பெண்டிர், தத்தம் மனங்கவர் மணாளன் வாய்ப்பது குறித்து, மணலில் வட்டங்கீறிக் கணித்தறியும் விளையாட்டு.

வண்டவாளம்[1] *vanḍavāḷam,* பெ.(n.) மானக் கேடான நிகழ்வுகள்; unpleasant, discreditable facts. *அவருடைய வண்ட வாளங்களெல்லாம் எங்களுக்குத் தெரியும் (உ.வ.). உன் வண்டவாளத்தையெல்லாம், தண்டவாளத்தில் ஏற்றலாமா? (பழ.).*

[வண் →வண்ட + வாலம்→வாளம். வாளம் = நெடுமை.]

வண்டவாளம் = தகுதிக் குறைவான, முறையற்ற செயல்கள். "உன் வண்டவாளத்தைத் தண்டவாளத்தில் ஏற்றுகிறேனா, இல்லையா பார்!" என்பது" எரிச்சலுணர்வின் வெளிப்பாடைக் காட்டும் வழக்குத் தொடராகும்.

தண்டவாளத்தில் ஏற்றல் என்பது ஊரறியப் பரப்புதல், தண்டவாளத்தில் என்பது, தொடர்வண்டியில் செய்தித்தாள் அனுப்புவது போல, அனுப்புவதாம்.

வண்டவாளம்[2] *vaṇḍa-vāḷam,* பெ.(n.) 1. நிலைமை, தன்மை; state, condition, used in contempt. 2. முதல்; capital, funds.

தெ. பண்டவாலமு; க., து. பண்டவால.

வண்டற்கல் *vaṇḍaṟ-kal,* பெ.(n.) வெள்ளி நிமிளை; antimony.

வண்டற்படுகை *vaṇḍaṟ-paḍugai,* பெ.(n.) வண்டலிட்ட ஆற்றங்கரை (வின்.); muddy bank of a river.

[வண்டல் + படு → படுகை.]

வண்டற்பாவை *vaṇḍaṟ-pāvai,* பெ.(n.) வண்டலாற் செய்த விளையாட்டுப் பாவை; toy made of mud. *"வண்டற்பாவை வௌவலின் நுண்பொடி யளைஇக் கடறூர்ப் போளே" (ஐங்குறு. 124).*

[வண்டல் + பாவை.]

வண்டன்[1] *vaṇḍaṉ,* பெ.(n.) குள்ளன் (இலக். அக.); short, dwarfish person.

வண்டன்[2] *vaṇḍaṉ,* பெ.(n.) திண்ணியன் (பிங்.); brave and resolute man.

[வண்டு→வண்டன்.]

வண்டன்[3] *vaṇḍaṉ,* பெ.(n.) தீயோன்; wicked or evil person. *"வண்டர் மும்மதின் மாய்தர வெய்தவன்" (தேவா. 755, 7).*

[வண்டு→வண்டன்.]

வண்டன்[4] *vaṇḍaṉ,* பெ.(n.) சுன்னத்துப் பண்ணப்பட்டவன் (யாழ்.அக.); circumcised man.

வண்டனான் *vaṇḍaṉāṉ,* பெ.(n.) முனிவன் (சீவக. 1632, உரை); austere sage, as bee-like in nature.

வண்டாலம் *vaṇḍālam,* பெ.(n.) 1. குந்தாலி; pick-axe. 2. மழு (பு.வெ.9, 38, உரை); battle-axe.

மறுவ. கணிச்சி.

வண்டாழ்ங்குருகு *vaṇḍāḻṅ-kurugu,* பெ.(n.) குருகு வகையுளொன்று; a kind of heron. *"வண்டாழ்ங் குருகினுடைய சேவல்களோடே" (மதுரைக். 674, உரை).*

வண்டாழ்வான் *vaṇḍāḻvāṉ,* பெ.(n.) ஒரு வகை பறவை; a bird which (is a) terrorises the beetles.

வண்டாளம் *vaṇḍāḷam,* பெ.(n.) வண்டவாளம், 1 (இ.வ.) பார்க்க; see *vaṇḍavāḷam.*

வண்டாளை *vaṇḍāḷai,* பெ.(n.) நெல்வகை (குருகூர்ப்.58); a kind of paddy.

வண்டானம் *vaṇḍāṉam,* பெ.(n.) நாரைவகை; pelican ibis. *"நாரைவண்டான மெதிர்த்த தண்புனல்" (சீவக. 2108).*



வண்டானவண்டு *vaṇḍāṉa-vaṇḍu*, பெ.(n.) 1. ஓர் வகை யுப்பு; a secret salt. 2. கருப்பிண்டத்திலிருந்து தயாரிக்கும் ஓர் உப்பு; a salt extracted by a secret process from the foetus (சா.அக.).

வண்டி[1] *vaṇḍi*, பெ.(n.) 1. சகடம்; cart, carriage, bandy. *"வண்டியை யேறினாள்" (சீவக. 2054, உரை). "வண்டியில் ஓடமும் ஏறும்; ஓடம் வண்டியில் ஏறும்" (பழ.).* 2. வண்டிப்பாரம் பார்க்க; see *vaṇḍi-p-pāram*. 3. சக்கரம்; உருளை (சூடா.); wheel, as of a cart car.

தெ., க., பண்டி; ம. வண்டி.

[வள்→வண்→வண்டு→வண்டி (வே.க.4:101).]

ஒருகா. வள் + தி – வண்டி. இச்சொல்லும் வளைவுக் கருத்தினடிப்படையில் தோன்றியதாகும்.

'வண்டி'யென்பது முதலிற் சக்கரத்தையும் பின்பு உறுப்பாகுபெயராய்ச் சகடத்தையும் குறிக்கும்.

சகடம் என்னும் பொருளில், வண்டி என்னுஞ்சொல், பண்டி என்பதன் திரிபாகத் தெரிகின்றது. ஏனெனின், பண்டி என்னும் வடிவே, சீவகசிந்தாமணி மூலத்தில் இடம் பெற்றுள்ளது. மேலும், பாண்டி, பாண்டில் என்பவற்றை யொத்த வகர முதற் சொற்கள், இருவகை வழக்கிலுமில்லை.

ஒருகால், வண்டியென்னும் வடிவே, தொன்றுதொட்டு உலகவழக்காயிருந்திருக்கலாம். வண்டி யென்னும் வடுக கன்னட வடிவம், வகர பகரத் திரிபின் விளைவாம் (வே.க.4:101).

வண்டி[2] *vaṇḍi*, பெ.(n.) வயிறு (யாழ்.அக.); belly, stomach.

வண்டி[3] *vaṇḍi*, பெ.(n.) 1. அடிமண்டி; sediment, dregs. 2. கழிவுப்பொருள்; lees.

தெ., க. பண்டு.

[மண்டி→வண்டி.]

வண்டி[4] *vaṇḍi*, பெ.(n.) ஆனேற்றாலோ, பரியாலோ (குதிரை) இழுக்கப்படும் அல்லது இயந்திரத்தால் இயங்கும் சக்கரங்களை உடைய ஊர்தி; generally vehicle, especially bullock-cart, horse-drawncart.

[வள்→வண்→வண்டு→வண்டி (வே.க.4:101).]



வண்டிக்கட்டு *vaṇḍi-k-kaṭṭu*, பெ.(n.) 1. வண்டிப்பட்டா (வின்.) பார்க்க; see *vaṇḍi-p-paṭṭā*. 2. மகளிர் முடிந்து கொள்ளும் தலைமுடி வகை (இ.வ.); a mode of tying a woman's braided hair.

[வண்டி + கட்டு. கள்→கடு→கட்டு.]

கட்டு = இணைப்பு, சேர்ப்பு, முடிப்பு. வட்ட வடிவில் முடிந்து கொள்ளும் மகளிர்தம் தலைமுடிப்பு.

வண்டிக்கடுக்கன் *vaṇḍi-k-kaḍukkaṉ*, பெ. (n.) பொன்னாலியன்ற பெரிய வட்ட வடிவான கடுக்கன் வகை (இ.வ.); a large circular, gold ear-ring of men.

[வண்டி + கடுக்கன். கடி→கடு→கடுக்கன். கடித்தல் = பொருத்துதல், பிடிப்பாக இருத்தல். வண்டிக்கடுக்கன் = வண்டிச்சக்கர வடிவிலமைந்த ஆடவர் காதணி.]

வண்டிக்காரன் *vaṇḍi-k-kāraṉ*, பெ.(n.) 1. வண்டியோட்டுபவன்; cart driver. 2. ஓட்டுநர்; driver. 3. வண்டிக்கு உரியவன்; owner of a cart or carriage.

[வண்டி + காரன். காரன் = வினைமுதல், உடைமை முதலிய பொருளில்வரும் ஆண்பாற் பெயரீறு (விகுதி).]

வடமொழியாளர் இப்பெயரீற்றைக் 'க்ரு' (செய்) என்னும் முதனிலையினின்று திரித்துப் பொருளுரைப்பது பொருந்தாது. காரன் என்னும் ஆண்பாற் பெயரீறு, செந்தமிழுக்கேயுரியது.

ஆட்டுக்காரன்: மாட்டுக்காரன், வீட்டுக்காரன், வேலைக்காரன், கோழிக்காரன், வெள்ளைக்காரன் போன்ற எண்ணிலடங்கா வினைமுதற் பெயரீறுகள் தமிழில் வழக்கூன்றியுள்ளமை காண்க.

வண்டிக்கால் *vaṇḍi-k-kāl*, பெ.(n.) வண்டிச் சக்கரம் (வின்.); cart-wheel.

[வண்டி + கால்.]

வண்டிக்கீல் *vaṇḍi-k-kīl*, பெ.(n.) வண்டிமசகு (இ.வ.) பார்க்க; see *vaṇḍi-mašagu*.

[வண்டி + கீல். இல்→கில்→கீல்.]

வண்டிக்கூடு *vaṇḍi-k-kūḍu*, பெ.(n.) வண்டியின் மேற்கூண்டு; dome-like top or cover of a cart.

[வண்டி + கூடு. குல்→குள்→கூடு.]



வண்டிக்கொட்டகை *vaṇḍi-k-koṭṭagai*, பெ.(n.) வண்டிப்பேட்டை (கட்டட. நாமா.) பார்க்க; see *vaṇḍi-p-pēṭṭai*.

வண்டிக்கொழுப்பு *vaṇḍi-k-koḻuppu*, பெ.(n.) வண்டிமசகு (வின்.) பார்க்க; see *vaṇḍi-mašagu*.

[வண்டி + கொழுப்பு.]

வண்டிகட்டு-தல் *vaṇḍi-k-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. மாட்டை வண்டியின் நுகத்தடியிற் பூட்டுதல்; to yoke the bullocks to a bandy, as for a journey. 2. சுற்றுப் பயணம் முதலியன தொடங்குதல் (இ.வ.); to start, as on a journey.

[வண்டி + கட்டு-, கள்→கட்டு = இணைத்தல், பிணைத்தல்.]

மாட்டை வண்டி நுகத்தடியில் இணைத்துச் சேர்த்தலே, வண்டி கட்டுதலாகும்.

வண்டிச்சத்தம் *vaṇḍi-c-cattam*, பெ.(n.) வண்டிக்கூலி, வண்டி வாடகை; carriage, hire, fare, hire charges.

மறுவ. சகடக்கூலி

[வண்டி + சத்தம்.]

சாத்து = பண்டங்களைக் கொண்டு விற்கும் வணிகர் கூட்டம். சாத்தம்→சத்தம் = வண்டிக்குக் கொடுக்கும் கூலி. வண்டிச் சத்தம் என்பது வண்டியிற் பண்டங்களை ஏற்றிச் செல்லுவதற்கான கூலி அல்லது வாடகை.

வண்டிச்சவடு *vaṇḍi-c-cavaḍu*, பெ.(n.) வண்டித்தடம் பார்க்க; see *vaṇḍi-t-taḍam*. *"ஆன்குடிக்குப் போகிற வண்டிச்சவட்டுக்கு வடக்கும்"* (புதுக்.கல். 420).

[வண்டி + சுவடு→ சவடு. உகரமுதற்சொல் அகரமுதலவாதல் தமிழில் இயல்பாம்.]

வண்டிச்செடிலாடல் *vaṇḍi-c-ceḍil-āḍal,* பெ.(n.) வண்டியில் வைத்துள்ள செடிலில் ஆடுகை (வின்.); swinging from hook in a machine mounted on a cart and rotated.

வண்டிசண்டி *vaṇḍi-šaṇḍi,* பெ.(n.) திறமை யுள்ளவன் (இ.வ.); clever person.

வண்டித்தடம் *vaṇḍi-t-taḍam,* பெ.(n.) வண்டிச் சக்கரம் சென்று தேய்ந்த தடம்; cart-track. *வண்டி தட, வண்டி தடை (பே.வ.).*

[வண்டி + தடம்]

வண்டிப்பட்டா *vaṇḍi-p-paṭṭā,* பெ.(n.) வண்டிச் சக்கரத்தின் மேல் தைத்த இருப்புச் சட்டம்; iron frame of cart-wheel.

[வண்டி + பட்டை → பட்டா]

வண்டிப்பட்டை *vaṇḍi-p-paṭṭai,* பெ.(n.) வண்டிப் பட்டா (இ.வ.) பார்க்க; see *vaṇḍi-p-paṭṭā.*

[வண்டி + பட்டை.]

வண்டிப்பாதை *vaṇḍi-p-pādai,* பெ.(n.) வண்டித் தடம் பார்க்க; see *vaṇḍi-t-taḍam. வண்டிபாட்ட (பே.வ).*

[வண்டி + பாதை.]

வண்டிப்பாரம் *vaṇḍi-p-pāram,* பெ.(n.) 1. வண்டியிலேற்றும் சுமை; cart-load. *"வண்டிப்பாரம் நிலத்திலே" (பழ.).* 2. பட்டணம் படி 480 முதல் 500 வரை கொள்ளும் தவச அளவுவகை; a unit of dry measure, varying from 480 to 500 (Chennai) city measures.

வண்டிப்பேட்டை *vaṇḍi-p-pēṭṭai,* பெ.(n.) 1. சுற்றுலா வண்டிகள் தங்கும் இடம்; caravansari, enclosed halting place for travelling carts. *வண்டிப்பேட்டைச் சண்டிக்காளை வச்சசுமையை இழுக்காது (உ.வ.).* 2. வண்டிமேடு பார்க்க; see *vaṇḍi-mēḍu.*

[வண்டி + பேட்டை = பயண வண்டி முதலியன தங்குமிடம்.]

வண்டிப்பைதா *vaṇḍi-p-paidā,* பெ.(n.) வண்டிச் சக்கரம்; cart-wheel.

வண்டிபுட்பம் *vaṇḍi-puṭpam,* பெ.(n.) அசோகு; a kind of tree-*Saraca indica.*

வண்டிப்பொறை *vaṇḍi-p-poṟai,* பெ.(n.) வண்டிப்பாரம், 1 பார்க்க; see *vaṇḍi-p-pāram.*

[வண்டு → வண்டி + பொறை. பொறை = பாரம்.]

வண்டிமசகு *vaṇḍi-mašagu,* பெ.(n.) வண்டிச் சக்கரத் துளையிலிடும் மை (இ.வ.); wheel-grease.

[வண்டி + மதி→மசி→மசகு.]

மசகு = வைக்கோற் கரியோடு விளக்கெண்ணெய் கலந்து மசித்த (குழைத்த) வண்டிமை.

வண்டிமசி *vaṇḍi-maši,* பெ.(n.) வண்டிமசகு (இ.வ.) பார்க்க; see *vaṇḍi-mašagu.*

[வண்டி + மதி→மசி.]

வண்டிமலைச்சி *vaṇḍi-malaicci,* பெ.(n.) சிற்றூர்ப் பெண்தெய்வம்; a village goddess.

வண்டிமலையன் *vaṇḍi-malaiyaṉ,* பெ.(n.) தென்னார்க்காடு மாவட்டத்தில் வணங்கப் படுகின்ற தெய்வம்; male deity worshiped in South Arcot district.

வண்டிமேடு *vaṇḍi-mēḍu,* பெ.(n.) வண்டி நிற்குமிடம் (கொ.வ.); cart-stand.

வண்டிமை *vaṇḍi-mai,* பெ.(n.) வண்டிமசகு பார்க்க; see *vaṇḍi-mašagu.*

[வண்டி + மசி→மயி→மை = வண்டிமசகு.]

வண்டியகவாய் *vaṇḍi-y-agavāy,* பெ.(n.) வண்டிச் சக்கரத் துளை (வின்.); axle-tree hole.

[வண்டி + அகவாய் = உள்ளிடம்.]

வண்டியம் *vaṇḍiyam,* பெ.(n.) செடிவகை (மலை.); pink-tinged white sticky mallow.

வண்டியிலை *vaṇḍi-y-ilai,* பெ.(n.) சக்கரத்தின் வட்டையையும், குடத்தையும் ஒன்றிணைக்கும் பன்னிரண்டு மரக் கட்டைகள்; 12 wood pieces connecting the wheel rim and kuḍam. *வண்டி எல (பே.வ.).*

மறுவ. ஆரக்கால்.

[வண்டி + இலை. இலை = வண்டிச்சக்கரத்தின் ஆரக்கால்.]

வண்டியேர்க்கால் *vaṇḍi-yēr-k-kāl,* பெ.(n.) வண்டியின் மத்தியில் மையக் கட்டையின் மேல் நுகத்தடியுடன் பொருத்தப்பட்ட நீண்ட வலுவான மரக்கட்டை; a long sturdy plank centrally fixed in the bullock easy longitudinally. *வண்டி ஏர்க்காலு (பே.வ.).*

வண்டிரம் *vaṇḍiram,* பெ.(n.) வாகை மேற் புல்லுருவி; a parasite plant on the tree vāgai.

வண்டில்¹ *vaṇḍil,* பெ.(n.) வெங்காரம்; borax.

வண்டில்² *vaṇḍil,* பெ.(n.) 1. வண்டி¹, 1 (வின்.) பார்க்க; see *vaṇḍi.* 2. சக்கரம் (நாமதீப. 461); wheel.

[வண்டு→வண்டி→ வண்டில்.]

வண்டிவட்டை *vaṇḍi-vaṭṭai,* பெ.(n.) வண்டிச் சக்கரம் உருப்பெறுதற்குரிய ஆறு வளைவான மரச்சட்டங்கள்; six rims of wheel. *வண்டி வட்(ை)ட (பே.வ.).*

[வண்டி + வட்டு→வட்டை]

வண்டினரி *vaṇḍinari,* பெ.(n.) 1. வண்டரிசி பார்க்க; see *vaṇḍariši.* 2. ஆறு புள்ளி வண்டு கொளுஞ்சி, செடிவண்டு, குருவண்டு, குழிவண்டு, நீருக்குள் சுழல் வண்டு, எரிவண்டு, கழுதை வண்டு இவையெல்லாம் குருமுறைக்கு எடுத்தவை; all the above kinds of beetles are useful in alchemy.

வண்டு¹ *vaṇḍu,* பெ.(n.) 1. வண்டு, சுரும்பு, தேன், ஞிமிறு என நால்வகைப்பட்ட அறுகாற் சிறுபறவை; chafer, bee of four kinds, viz., *vaṇḍu, šurumbu, tēṉ, ñimiṟu.* *"யாழிசை கொண்ட வினவண்டிமிர்ந் தார்ப்ப" (கலித். 131). வண்டு மொய்க்காத அரும்பும், வண்ணான் துவைக்காத துணியும் சிறக்காது (உ.வ.).* 2. நறுமணத்தை நாடிப் பறக்கும் அறுகாற் சிறு பறவை வகை; a kind of bee. *"வண்டு கண்மகிழ்தே னினங்காள்" (சீவக. 892). வண்டு ஏறாத மரமில்லை (பழ.). வண்டு தூரத்திலேயே வாசனை அறியும் (இ.வ.).*

[வள்→வண்→ வண்டு (வே.க.4, பக்.100).]

வண்டு² *vaṇḍu,* பெ.(n.) 1. மறவருள் ஒரு உட்பிரிவைச் சார்ந்தவர் (புறநா. 263, உரை); a sub-sect of *Maṟava* caste. 2. அம்பு (பிங்.); arrow. *"ஒழிகில வேள்கர வண்டே" (வெங்கைக்க. 18).* 3. குற்றம் (பிங்.); fault.

4. கைவளை (பிங்.); bracelet. *"கைவண்டுங் கண்வண்டு மோடக் கலையோட" (ஆதி. உலா. 98).* 5. சங்கு (பிங்.); conch. 6. நூல் (பிங்.); thread. 7. எட்டாம் நாண் மீனான கொடிறு (பூசம்) (பிங்.); the eighth *naksatra.* 8. சிற்றொழுக்கம் (நாமதீப. 650); lowly or mean conduct. 9. செம்மரம்; coromandel redwood.

[வண் →வண்டு.]

வண்டு³ *vaṇḍu,* பெ.(n.) 1. பெருவிரலும் அணிவிரலும் வளைந்து, நுனியொன்றிச் சிறுவிரல் நிமிர்ந்து, சுட்டு விரலும் நடுவிரலும் நெகிழ வளைந்து நிற்கும் இணையா வினைக்கை வகை (சிலப். 3, 18, உரை); a gesture with one hand in which the tips of the thumb and the ring-finger are joined and the little finger is held erect, while the fore finger and the middle finger are bent and held loosely together, one of 33 *iṇaiyā-viṇai-k-kai.* 2. நாட்டிய முத்திரைக்குரிய அலிக்கை வகை (சிலப். 3, 18, உரை, பக்.92, கீழ்க்குறிப்பு); a hand-pose.

[வண் →வண்டு.]

பெருவிரலும் அணிவிரலும் வளைந்து நுனியொன்றில் சிறுவிரல் நிமிர்ந்து, சுட்டு விரலும, அணிவிரலும் நெகிழ வளைந்து நிற்பது (சிலம்பு. 3:18 அடியார்க்கு).

வண்டு⁴ *vaṇḍu,* பெ.(n.) 1. தவசத்தை அளக்கும் பொழுது கீழே விழுவனவற்றைப் பிடித்துக் கொள்ளும் வைக்கோற் கூடு; small coil of twisted straw used to catch what drops out while measuring grain. 2. சுற்றுப் பயணத்தில் மாடுகளின் உணவாக வண்டியின் மேலிடும் வைக்கோற் பழுதை; twist or bundle of straw thrown over the cover of a bullock cart, as fodder for bullocks during the journey.

[வண் →வண்டு.]

வண்டுக்காய் *vaṇḍu-k-kāy,* பெ.(n.) வெண்டைக்காய்; ladies finger-*Hibiscus esculentus.*

வண்டுக்குள்ளரிசி *vaṇḍukkuḷḷariši,* பெ.(n.) வண்டரிசி பார்க்க; see *vaṇḍariši.*

வண்டுகட்டு-தல் *vaṇḍu-kaṭṭu-,* 5 செ. குன்றாவி.(v.t.) பானையின் வாயைச் சீலையால் மூடிக் கட்டுதல்; to cover and tie up the mouth of a pot with cloth, in preserving things. *'நலமதாய்க் கவசம் தன்னில் நயமதாய் வண்டுகட்டி'.*

[வண்டு + கட்டு-,]

வண்டுகட்டல் *vaṇḍu-kaṭṭal,* பெ.(n.) வேடு கட்டுதல்; the film that is formed on boiling milk and other substances.

வண்டுகடி *vaṇḍu-kaḍi,* பெ.(n.) 1. வண்டு கொட்டுகை; sting of wasp or beetle. 2. தோல் மே லுண்டாகும் சொறி வகை (இ.வ); ring worm. 3. வண்டுகொல்லி, 2 (இ.வ.) பார்க்க; see *vaṇḍu-kolli.*

[வண்டு + கடி.]

வண்டுகடியிலை *vaṇḍu-kaḍi-y-ilai,* பெ.(n.) வண்டுகொல்லி, 2 (கொ.வ.) பார்க்க; see *vaṇḍu-kolli .*

வண்டுகாயப்போடு-தல் *vaṇḍu-kāyap pōḍu-,*19 செ.குன்றாவி.(v.t.) உப்பளப் பாத்தியிலிருந்து வாரியெடுக்கும் உப்பை, அப்பாத்தியின் வரப்பிலேயே குவித்து, ஒருநாள் முழுவதும் வெயிற் காய்ச்சலிடுகை; drying proeers on the ridges of beds in salt pans by heaping.

வண்டுகுத்தி *vaṇḍu-kutti,* பெ.(n.) குருவி வகை (சங்.அக.); a small bird.

[வண்டு + குத்தி.]

ஒருகா. வண்டுகொத்தி →வண்டுகுத்தி.



வண்டுகூட்டு-தல் *vaṇḍu-kūṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) பாத்தியிலிருந்து உப்பை அவ்வரப்பிலேயே வாரிக் குவித்தல்; to heap salt on the ridge itself after collecting from salt beds.

[வண்டு + கூட்டு-,]

வண்டுகொல்லி¹ *vaṇḍu-kolli,* பெ.(n.) 1. சீமையகத்தி; large-leafleted-eglandular senna. 2. தோல் நோய்தீர்க்கும் மருந்துச் செடிவகை; ring worm shrub. 3. மரவகை (மலை.); deodar cedar. 4. சண்பகம் (மூ.அ.); champak.

வண்டுகொல்லி² *vaṇḍu-kolli,* பெ.(n.) 1. ஆடு தின்னாப் பாளை; a creeper, which is very bitter and ash coloured-*Aristo lochia bracteata.* 2. தேவதாரம்; a kind of fragrant wood-Eagle wood.

வண்டுச்சிலந்தி *vaṇḍu-c-cilandi,* பெ.(n.) ஒருவகைப் புண் (சீவரட். 354); a burning blister.

வண்டுச்சொறி *vaṇḍu-c-coṟi,* பெ.(n.) வண்டு கடிப்பதினால் உண்டான சொறி; urticaria caused by sting of beetles.

வண்டுசுற்று-தல் *vaṇḍu-śuṟṟu-,* 5 செ. கு.வி. (v.i.) வைக்கோல் முதலியவற்றைப் புரியாக நெருங்கச் சுற்றிக் கட்டுதல்; to make twists of straw and pack them.

[வண்டு + சுற்று-.]

வண்டுணாமலர்மரம் *vaṇḍuṇā-malar-maram,* பெ.(n.) 1. செண்பகம்; champak. 2. வேங்கை [illegible] East Indian kino.

[வண்டு + உண்- + ஆ (எ.ம.இ.நி.) + மலர் மரம்.]

வண்டுணி *vaṇḍuṇi,* பெ.(n.) தாமரை (சா. அக.); lotus.

வண்டுநாணான் *vaṇḍu-nāṇāṉ,* பெ.(n.) வண்டுகளை வில்லின் நாணாகவுடைய காமன் (நாமதீப. 59); *kāma,* as having a row of beetles for the string of His bow.

[வண்டு + நாண் + ஆன்.]

வண்டுநெல்லி *vaṇḍu-nelli,* பெ.(n.) வண்டு கொல்லி (இங்.வை.) பார்க்க; see *vaṇḍu-kolli.*

வண்டுமரம் *vaṇḍu-maram,* பெ.(n.) ஓர் வகை கொடி; beetle tree.

வண்டுமூலி¹ *vaṇḍu-mūli,* பெ.(n.) உப்பு; the three salts obtained from the efflouresence grown on the soil of fuller's earth.

வண்டுமூலி² *vaṇḍu-mūli,* பெ.(n.) வெள்ளெருக்கு; madar shrub with white flowers-*Calotrops gigantea.*

வண்டுருவன் *vaṇḍuruvaṉ*, பெ.(n.) திருமால் (நாமதீப 50); *Visṇu*.

வண்டுவிடு-தல் *vaṇḍu-viḍu-*, 20 செ.கு.வி. (v.i.) வைக்கோல் முதலியவற்றைப் புரியாகத் திரித்தல்; to twist straw.

[வண்டு + விடு.]

வண்டுளம் *vaṇḍuḷam*, பெ.(n.) நந்தியா வட்டம்; white flower of a plant which yields milky juice when wounded - East India rosebay.

வண்டுறுக்கு-தல் *vaṇḍuṟukku-*, 5 செ.கு.வி. (v.i.) உதட்டை மடக்கிக் கடித்தல் (திருநெல்.); to curl and bite one's lips.

[வண்டு + உறுக்கு-, உறுக்குதல் = சினத்தல்.]

வண்டுறை *vaṇḍuṟai*, பெ.(n.) எழுத்தில்லா வோசை (சது.); inarticulate sound.

வண்டெச்சில் *vaṇḍeccil*, பெ.(n.) தேன்; honey. *"இளநீர் வண்டெச்சில் பயறப்பவகை" (திருப்பு. விநாயகர். 3).*

[வண்டு + எச்சில்.]

வண்டேறாமலர் *vaṇḍēṟā-malar*, பெ.(n.) அப்பொழுதலர்ந்த மலர் (வின்.); flower just blown, as not visited by the bee.

[வண்டு + ஏறு + ஆ (எ.ம.இ.நி.) + மலர்.]

வண்டை[1] *vaṇḍai*, பெ.(n.) வெண்டை (சங். அக.); a plant, yielding ladies-finger- *Hibiscus esculentus*.

க. பெண்டெ.

[முள் → (மள) → வள் → வண்டை.]

வண்டை[2] *vaṇḍai*, பெ.(n.) கொச்சையானது; which is corrupt or vulgar. *'வண்டைப் பேச்சு' (இ.வ.).*

[வண்டு → வண்டை.]

வண்டையிழைப்புளி *vaṇḍai-y-iḻaip puḷi*, பெ.(n.) தச்சுக் கருவி வகை (இ.வ.); beading plane.

[வண்டு → வண்டை + இழைப்பு + உளி.]



வண்டோதரி *vaṇḍōdari*, பெ.(n.) இராவண னுடைய மனைவி; the wife of *Rāvaṇāṉ*. *"அழகமர் வண்டோதரிக்குப் பேரருளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானை" (திருவாச.18 : 2).*

[மண்டோதரி → வண்டோதரி]

வண்டோதரிவேர் *vaṇḍōdari-vēr*, பெ.(n.) ஒருவகை மூலி; a kind of medicine.

வண்டோலம் *vaṇḍōlam*, பெ.(n.) 1. வண்ட வாளம் 1, 2 பார்க்க; see *vaṇḍa-vāḷam*. 2. ஒருவனது முந்தைய வரலாறு; one's antecedents. *'உன் வண்டோல மெல்லாம் நன்றாய் அறிவேன்' (திருநெல்.).*

வண்ணஆவாரம் *vaṇṇa-āvāram*, பெ.(n.) தகரை; ring worm plant, cassia tora.

வண்ணக்கச்சோலம் *vaṇṇa-k-kaccōlam,* பெ.(n.) ஓமாலிகை முப்பத்திரண்டனு ளொன்று (சிலப். 6 : 77, உரை); one of 32 *ōmāligai.*

[வண்ணம் + கச்சோலம். கச்சோலம் = ஒருவகை நறுமணப் பொருள்.]

வண்ணக்கச்சோல முள்ளிட்ட முப்பத்திரு வகை ஓமாலிகையும் ஊறவைத்த நன்னீரில் அரச மகளிரும் செல்வப் பெண்டிரும் குளித்து வந்தனர்.

வண்ணக்கட்சி *vaṇṇa-k-kaṭci,* பெ.(n.) வண்ணக்களஞ்சியம் பார்க்க; see *vaṇṇa-k-kaḷañjiyam. "என்பேர் வண்ணக்கட்சி" (தமிழ்நா. 242).*

[வண்ணம் + கட்சி.]

வண்ணக்கம்மர் *vaṇṇa-k-kammar,* பெ.(n.) வண்ணவேலை செய்வோர்; painters. *"வத்தநாட்டு வண்ணக்கம்மரும்" (பெருங். உஞ்சைக். 58, 44).*

[வரணம் → வண்ணம்+கருமம் → கம்மம் → கம்மர்.]

வண்ணக்கலிவிருத்தம் *vaṇṇa-k-kali-viruttam,* பெ.(n.) சந்தம் அமைந்த கலி மண்டிலப்பா; rhythmic stanza of *"Kali-maṇḍila-p-pā"* kind.

[வரணம்→வண்ணம் + கலிவிருத்தம். (கலி விருத்தம் = நாற்சீரடி நான்காய் வரும் கலிப்பாவின் இனம்).]

சந்தம் அமைந்த வண்ணக்கலி விருத்தப் பாடல் வருமாறு :-

"மால்ஏந்திய குழலார்தரு மயல்போம் இடர் அயல்போம்
கோல்ஏந்திய அரசாட்சியும் கூடும் புகழ் நீடும்
மேல்ஏந்திய வானாடர்கள் மெலியாவிதம் ஒருசெவ்
வேல்ஏந்திய முருகாஎன வெண்ணீ றணிந்திடிலே"
(அருட்பா).

வண்ணக்கவுதாரி *vaṇṇa-k-kavudāri,* பெ.(n.) கவுதாரி வகையுளொன்று; painted trancolin-*Francolinus-pictus.*

மறுவ. கதுவாலி.

[வண்ணம் + கதுவாலி→கவுதாரி]

தமிழ் நாட்டின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளிற் காணப்படும் இக்கவுதாரி, 31 விரலம் உயரம் வரை வளரும் தன்மைத்து. கரும் புள்ளிகளுடன், கோடுகளும், வெள்ளைப் பட்டைகளும் கொண்ட பழுப்பு நிற உடலைக் கொண்டது. தவசங்கள், புல் விதைகள், சிறு பழங்கள், கரையான் ஆகியவற்றை இரையாகக் கொள்ளும் இவை, 4 முதல் 8 வரையிலான எண்ணிக்கையில் முட்டையிடும்.



வண்ணக்களஞ்சியம் *vaṇṇa-k-kaḷañjiyam,* பெ.(n.) வண்ணம் (சந்தப் பாடல்) பாடுவதிற் சிறந்த பாவலன்; poet, specially skilled in composing *vaṇṇam* verses. *'வண்ணக் களஞ்சியப் புலவர்' (இ.வ.).*

[வரணம்→வண்ணம் + களஞ்சியம்.]

வண்ணக்கஞ்சாத்தனார் *vaṇṇakkañ-cāttaṉār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்களுள் ஒருவர்; an ancient *Śaṅgam,* poet. *இவர்தம் பாடலொன்று திருவள்ளுவ*

மாலையில் இடம் பெற்றுள்ளது. வண்ணக்கஞ்சாத்தனார் திருக்குறளை வேதத்திற்கு ஒப்பாகக் கூறியுள்ள பாடல், வருமாறு :- "ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து இதனின்இது சீரியது என்று ஒன்றைச் செப்பரிதால் – ஆரியம் வேதம் உடைத்து; தமிழ்திரு வள்ளுவனார் ஓது குறட்பா உடைத்து" (திருவள்ளுவமா.43).

[வண்ணம் → வண்ணகம் வண்ணக்கம் + சாத்தன் → சாத்தனார்.]

பண்டைக் காலத்தில் பெரும்பாலும் வணிகரே சாத்தன் என்னும் பெயர் தாங்கியிருக்கவும் இப்புலவர் பெருந்தகை போலும் கூலவாணிகன் சீத்தலை சாத்தனார் மற்றும் இன்னபிற பெயர் பெற்றாரையும் எண்ணிப் பார்க்க.

வண்ணக்களஞ்சியப்புலவர் *vaṇṇa-k-kaḷañjiya-p-pulavar,* பெ.(n.) 18-ஆம் நூற்றாண்டில் "முகைதீன் புராணம்" என்னும் நூலை இயற்றிய புலவர்; a poet, who composed the work titled *Mugaidīṉ purāṇam* in 18C. *இவர் மதுரைக்கு அண்மையிலுள்ள 'மீசல்' என்னுமூரிற் பிறந்தவர். 'வண்ணம்' பாடுவதிற் சிறந்த பாவலராவார். இவர் பாடிர் அல்தின் புலவர் எனவும் அழைக்கப்படுகிறார்.*

[வண்ணக்களஞ்சியம் + புலவர்.]

வண்ணக்கன்[1] *vaṇṇakkaṉ,* பெ.(n.) 1. மாசுண்ட துணிவெளுக்கும் தொழிலாளி; washerman. 2. வண்ணச் சித்திரங்கள் எழுதுபவன்; artist. *"சனநாதத் தெரிந்த வலங்கை வேளைக் காறரில் வண்ணக்கன் ஐயாறனாகிய சித்திரயாளி" (தெ.கல்.தொ.17, கல்.238). முதல் இராசராசன் கி.பி. 1007 முதல் இராசராசன் திருநெய்த்தானம் கல்வெட்டு.*

[வண்ணம் → வண்ணக்கன்.]

வண்ணக்கன்[2] *vaṇṇakkaṉ,* பெ.(n.) கட்டி பொற்காசு, பொற் கட்டிகளை (நிறுத்தும் உரைத்தும்) நோட்டஞ் செய்பவன்; tester of coins. *"வண்ணக்கன் சாத்தனார்" (நற்.). "வண்ணக்கர் காணத்தை நீலமென்றலும்" (தொல். சொல். 16, சேனா).*

மறுவ. காசுநோட்டகன்.

[வண்ணம் → வண்ணகன் → வண்ணக்கன்.]

பொற்காசை அல்லது பொற்கட்டியை உரைத்துப் பார்த்து, அதன்மாற்று வண்ணத்தால் (நிறத்தால்) காசின் அல்லது பொற் கட்டியின் இயல்பறியும், நோட்டகன். சரியானவற்றின்மேல் முத்திரையிடுவதும் இவ்வலுவலர்தம் பொறுப்பாம். கழகக்காலப் புலவராகிய வடம வண்ணக்கன் தாமோதரனார் (புறம்.172), காசுநோட்டக மரபினர் என்பர்.

வண்ணக்கன்[3] *vaṇṇakkaṉ,* பெ.(n.) 1. செயலலுவலர்; executive. 2. மேலாளர்; manager.

வண்ணக்கன்சொருமருங்குமரனார் *vaṇṇakkaṉ-šorumaruṅ-kumaraṉār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்களுளொருவர்; an ancient *šaṅgam* poet. *இவர் நாணய நோட்டகராக இருந்தவர், குறிஞ்சித் திணையை சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடலில் தலைமகன் இரவில் வருநெறியினை கூறியது சிறப்புடையது. நற்றிணையில் ஒரு செய்யுளை பாடியதாக கூறுவர். அப்பாடல் வருமாறு:-'*

"விளிவில் அரவமொடு தனிசிறந் துரைஇ
மழையெழுந் திறுத்த நளிர்தூங்கு சிலம்பிற்
கழையமல்பு நீடிய வானுயர் நெடுங்கோட்டு
இலங்குவெள் ளருவி வியன்மலைக் கவாஅன்

அரும்புவா யவிழ்ந்த கருங்கால் வேங்கைப்
பொன்மருள் நறுவீ கன்மிசைத் தாஅம்
நன்மலை நாட நயந்தனை யருளாய்
இயங்குநர் மடிந்த அயந்திகழ் சிறுநெறிக்
கடுமா வழங்குதல் அறிந்தும்
நடுநாள் வருதி நோகோ யானே" (நற்; 257).

வண்ணக்கன்தத்தனார் *vaṇṇakkaṉ-tattaṉār*, பெ.(n.) கழகக் காலப் புலவர்களுள் ஒருவர்; an ancient *Šaṅgam* poet. *கழகக் காலத்தில் தத்தனார் என்னும் பெயரில் குடில் தத்தனார், நெய்தல் தத்தனார், கணக்காயன் தத்தனார், நெடுந்தத்தனார் என புலவர்கள் வாழ்ந்துள்ளனர்.*

[வண்ணக்கன் + தத்தன்→தத்தனார்.]

வண்ணக்குங்குலு *vaṇṇa-k-kuṅgulu*, பெ. (n.) மருந்திலை வகையுளொன்று; a kind of medicinal leaves.

வண்ணக்குதிரை *vaṇṇa-k-kudirai*, பெ.(n.) வரிக்குதிரை; piebald horse. *வண்ணக் குதிரை மண்ணைத் தின்னும்போது, தட்டுவாணிக் குதிரை கொள்ளுக்கு அழுகிறதாம் (பழ.).*

[வரி+அணம்→வரணம்→வண்ணம்+ குதிரை (வரி = நிறம், வரைவு).]

பல நிறக் கோடுள்ள குதிரை.



வண்ணக்குழிப்பு *vaṇṇa-k-kuḻippu*, பெ.(n.) வண்ணச் செய்யுளின் சந்தவாய்பாடு (வின்.); a set or formal harmonic rhythm for *vaṇṇam* compositions.

[வரணம்→வண்ணம் + குழி→குழிப்பு.]

வண்ணக்குனிப்பு *vaṇṇa-k-kuṉippu*, பெ.(n.) வண்ணக்குழிப்பு (வின்.) பார்க்க; see *vaṇṇa-k-kuḻippu*.

[வண்ணம் + குனிப்பு.]

வண்ணகம் *vaṇṇagam*, பெ.(n.) 1.விளக்கமுற வண்ணித்துப் புகழ்கை (தொல். பொருள். 452, உரை); elaborate eulogy. 2. கலிப்பாவினுறுப்புளொன்று (வீரசோ. யாப். 11, உரை); a component of kali verse. 3. சந்தனம் (யாழ்.அக.); sandal wood. 4. நறுமணம் (யாழ்.அக.); fragrance. *வண்ணித்து வருதலின் வண்ணகம் எனப்படும் (யாப்.84).*

Skt. வர்ணக.

[வள்→வண்→வண்ணம்→வண்ணகம் (வே.க. 4:97).]

ஒ.நோ. திண்ணம்→திண்ணகம். வண்ணகம் = அராகம் என்னும் வண்ணவுறுப்பு (மு.தா.2, பக்.78) வண்ணித்துப் புகழ்தலான் வண்ணகம் எனப்படும் (தொல்.பொருள்.452, பேரா.).

வண்ணகவொத்தாழிசை *vaṇṇaga-v-ottāḻisai*, பெ.(n.) 1. அராகம், தாழிசை, எண், வாரம் என்னும் உறுப்புக்களைச் சிறப்பாகக் கொண்டு வரும் கலிப்பாவகை (தொல். பொருள். 452); a variety of *kali* verse in which *arāgam, tāḻisai, eṇ* and *vāram* are

the main features. 2. வண்ணகவொத் தாழிசைக்கலிப்பா; see *vaṇṇaga-v-ottāḻišai-k-kalippā.*

[வண்ணகம் + ஒத்தாழிசை.]

ஆறுறுப்பமைந்த வண்ணக வொத்தாழிசைக் கலி தொன்றுதொட்டு வழங்கும் தமிழ்ச்செய்யுள் வகை; ஒருவன் தன் காதலை வெளிப்படுத்தற்கும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி கடவுளை வழுத்தற்கும், வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாபோல், மிகப் பொருத்தமான செய்யுள் வகையை வேறெம் மொழியிலுங் காணவியலாது (வே.க.4: பக்.97).

வண்ணக வொத்தாழிசைக்கலி என்னும் செய்யுள் வகை, தொல்காப்பியர் முந்து நூலிற்கண்ட இலக்கணக் குறியீடாதலின், தலைக்கழகக் காலத்தது என்று அறிதல் வேண்டும்.

வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா *vaṇṇaga-v-ottāḻišai-k-kalippā,* பெ.(n.) வண்ணகவொத்தாழிசை பார்க்க; see *vaṇṇaga-v-ottāḻišai.*

[வண்ணகம்+ஒத்தாழிசை→வண்ணகவொத் தாழிசை + கலிப்பா.]

அசையடி முன்னர், அராகம் வந்து, அனைத்துறுப்புகளும் அமையும் வண்ணம் இயற்றப்படும் பா, வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா எனப்படும். வண்ணகவொத்தாழிசைக் கலி என்னும் செய்யுள்வகை. தொல்காப்பியர் முந்து நூலிற் கண்ட இலக்கணக் குறியீடாதலின், தலைக் கழகக் காலத்தது என்பது வெள்ளிடை மலை.

வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா செய்யுளிற் பயின்றுவரும் பான்மைபற்றி, அமிதசாகரனார், யாப்பருங்கலக் காரிகையுள் உரைப்பது வருமாறு:–

"அம்போதரங்க உறுப்பிற்குந் தாழிசைக்கும் நடுவே அராக உறுப்புப் பெற்று தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்பினையும் உடைத்தாய் வருமெனின், அது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும்:–

வண்ணகவொத்தாழிசையின் அடிவரையறையாவது:– சிறுமை நான்கடி, பெருமை எட்டடி, இடை ஐந்தடியானும், ஆறடியானும், ஏழடியானும் வரப்பெறும் எனக்கொள்க.

என்னை, "அளவடி முதலா வனைத்தினு நான்கடி முதலா யிரட்டியு முடுகியு னடக்கும்".

வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா பாடல் வருமாறு:–

இன்னே எழுக செயல்முனைப் புற்றே!

(வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா)

தரவு

நிறைபுலத்துப் பெருவளஞ்சேர் நெடியபுகழ் நிலைகொண்ட
மறைமலையின் மனத்தரங்கில்
மலர்ந்தெழுந்த ஒளிப்பிழம்பு
மொழிஞாயி றெனவுலகந் தொழுதேத்தும் பாவாணர்
ஒழிவின்றிப் பலதுறையும் விழிவைத்துப் பெரிதாய்ந்தே
உலகமுதன் மொழியீதென் றுறுதியுற நிறுவியசீர்
இலகுவள மிகுதமிழுக் கியல்புரிமை யுடையோய் கோள்!

தாழிசை

நீணிலத்தின் உடன்றோன்றி நிலைசிறந்த குடிமரபின்
மாணுயர்ந்த ஒருமூவர் வழிவந்தோய் நிலவரையில்
பெரியதமிழ் நலமறியார் அறிவாரைப் பேணுகிலார்

அரியணைக்கே குறிவைப்பார் அவர்க்கோல்
செய்தனையே!
தென்கடல் நெடும்பரப்புத் திகழ்ந்தபெருங்
குமரியினைத்
தன்வயிற் றுளதாக்கிக் காண்டதன்றி
நின்மடியால்
வழிமொழிகள் வலக்காரம் வரம்பிகந்து
மிகநீளக்
கொழிதமிழ் வழங்குநிலம் மேன்மேலுங்
குறுகியதே!
நீள்தமிழுக் கயலவர்கள் நின்னாட்டிற்
காலூன்றி
ஆள்கின்ற நிலையும்பெற் றார்க்கின்றார்
நின்னவரோ
பலநாடுஞ் சென்றவற்றைப் பசுமையுறச்
செய்தாலுஞ்
சிலவேனும் உரிமையின்றிச் சீரழியும்
நிலையென்னே!

அராகம்

மாட்சியின் உயர்தமிழ் வழிபடு மொழியிலை
எனமிக இழிவுசெய் மதம்!
ஆட்சியின் அலுவலில் தமிழிடம் பெறுவதில்
தடையுறும் அரசியல் நெறி!
காட்சியின் இனியநல் மழலையர் முதலனை
வரும்பயில் வதுபிற மொழி!
மீட்சியும் தமிழ்க்கினி யுளதுகொல் எனமிக
உளைவது பெரியவர் மனம்!

நாற்சீர் ஈரடி நான்கு அம்போதரங்கம்

புறம்போக்கு மொழிச்சொற்கள்
இடையிடையே புக்கதனால்
திறம்பட்ட செந்தமிழின் சீர்குலைவை
யறிகிலையால்!
துறைதொறுந் தமிழ்வளமை புதுக்குவதற்
கிடையூறாய்த்
திறைகொள்வார் தங்கொள்கை செயற்படுதல்
உணர்கிலையால்!

நாற்சீர் ஓரடி நான்கு அம்போதரங்கம்

தாய்மொழியிற் கையொப்பம் இடுவதில்லை
தமிழன் கை!
தாய்மொழியைப் பலுக்குதற்குப் புரள்வதில்லை
தமிழன் நா!
தமிழிசையைக் கேட்கிலவால் தமிழன்றன்
செவியிணையே!
தமிழ்வரியைக் காண்கிலவால் தமிழன்றன்
கண்ணிணையே!

முச்சீர் ஓரடி எட்டு அம்போதரங்கம்

கலப்படத்தால் திரிந்தது மொழி!
கயவர்களால் இழிந்தது கலை!
மறைகளினால் மறைந்தது மதி!
மனுவினரால் பிறழ்ந்தது முறை!
சடங்குகளால் புதைந்தது மதம்!
சாதிகளாய்ச் சிதைந்தது குடி!
வீறாப்பாய் இழிந்தது மறம்!
வெறுந்தரகால் ஒழிந்தது பொருள்!

இருசீர் ஓரடிப் பதினாறு அம்போதரங்கம்

வரலாற்றுத் திரிப்பொருபால்!
வழிபாட்டுக் கெடுப்பொருபால்!
அரசியலில் புரட்டொருபால்!
அலுவலர்செய் அலைப்பொருபால்!
கட்சிகளின் பிணக்கொருபால்!
கல்வியகப் பறிப்பொருபால்!
திரைப்படத்துத் தீங்கொருபால்!
உரைப்பாட்டுக் கரைப்பொருபால்!
சாதிகளின் தழைப்பொருபால்!
தாளிகைகள் கலைதப்பொருபால்!
காட்சியொலி அழிம்பொருபால்!
ஆட்டத்தின் அலைப்பொருபால்!
பணியில்லாப் பிணியொருபால்!
பரிசுச்சீட் டீர்ப்பொருபால்!
நடிப்பவரைச் சுவைப்பொருபால்!
நாடேகுஞ் செலவொருபால்!

தனிச்சொல்

எனவாங்கு

சுரிதகம்

மொழியும் மொழிகொள் மக்களும் நிலனும்
இழிவுறக் கிடந்த பழிபடு நிலைமை
போய்மடிந் தொழியத் தாய்மொழி போற்றி
ஆய்வின் அறிவின் துறைபல கண்டு
தன்னுரிமை வாழ்க்கை நலம்பெற
இன்னே எழுக செயல்முனைப் புற்றே!

குமரிக்கண்டத் தமிழர் செய்யுட் கலையின் கொடுமுடியேறி நாலும் ஐந்தும் ஆறுமான உறுப்புகளையுடைய நால்வகைக் கலிப்பாக்களையும் யாத்திருந்தனர்.

வண்ணகூபிகை *vaṇṇa-kūbigai,* பெ.(n.) மைக்கூடு (யாழ்.அக.); ink-bottle.

வண்ணச்சுவையமுதம் *vaṇṇa-c-cuvai-y-amudam,* பெ.(n.) வண்ணவமுதம் பார்க்க; see *vaṇṇa-v-amudam.* *"வண்ணச் சுவையமுதம் வைக" (சீவக. 2604).*

[வண்ணச் + சுவை + அமுதம்.]

வண்ணஞ்சேர்ந்தோன் *vaṇṇa-ñ-cērndōṉ,* பெ.(n.) வீரபாகுதேவர் (நாமதீப.37); *vīrabāhu-tēvar.*

வண்ணடை *vaṇṇaḍai,* பெ.(n.) துகில் வகையு ளொன்று (சிலப். 14, 108, உரை); a fine cloth.

[வண்ணம் + ஆடை → அடை.]

பண்டைத் தமிழ்நாட்டில் நெய்யப்பட்டதாக அடியார்க்கு நல்லாராற் குறிக்கப்பெற்ற 36 ஆடை வகைகளுளொன்று.

வண்ணத்தரு *vaṇṇa-t-taru,* பெ.(n.) பாடல் வகையுளொன்று (யாழ்.அக.); a kind of poetic composition.

[வண்ணம் + தரு.]

வண்ணத்தான் *vaṇṇattāṉ,* பெ.(n.) ஆடைக்கு நிறமூட்டுபவன்; dhobi. *"ஸ்ரீ வைஷ்ணவ வண்ணத்தான் திருப்பரி வட்டங்களை அழகிதாக வாட்டி" (ஈடு. 5, 10, 6).*

மறுவ. வண்ணான்

ம. வண்ணத்தாந.

[வண்ணம் → வண்ணத்தான்.]

வண்ணத்தி *vaṇṇatti,* பெ.(n.) சொறி, தேமலைப் போக்கும் ஓர் பூடு; a shrub used to cure skin disease.

வண்ணத்துப்பூச்சி *vaṇṇattu-p-pūcci,* பெ.(n.) வண்ணாத்திப்பூச்சி பார்க்க; see *vaṇṇātti-p-pūcci.* *"மயிர்ப்புழுவிலிருந்து வண்ணத்துப் பூச்சி பரிணமித்தாலென்ன" (ஈச்சுரநிச்சயம், 167).*

[வண்ணம் + அத்து + பூச்சி.]



வண்ணதூதன் *vaṇṇa-tūdaṉ,* பெ.(n.) திருமுகங் கொண்டு செல்வோன் (யாழ்.அக.); messenger carrying letters.

[வண்ணம் + தூது → தூதன்.]

ஒருகா. அஞ்சலாள்.

வண்ணத்திப் பூச்சிகள்

இந்தியாவில் உள்ள பலவகை வண்ணத்திகளில் இங்கு 10 வகைகள்

வண்ணநங்கைவித்து *vaṇṇa-naṅgai-vittu,* பெ.(n.) அழிஞ்சில் விதை, நாட்பட்ட சீலக்கழிச்சலுக்குப் பயன்படுத்தப்படும் கூட்டுச் சரக்குகளு ளொன்று (சா.அக.); a compound medicine of chronic dysentery..

வண்ணநீர் *vaṇṇa-nīr,* பெ.(n.) அரக்கு நீர்; vermilion water sprinkled on festive occasions. *"வண்ணநீர் கரந்த வட்டு" (பரிபா. 11, 55).*

[வண்ணம் + நீர்.]

வண்ணப்படம் *vaṇṇa-p-paḍam,* பெ.(n.) வரணந்தீட்டி வரைந்தெழுதிய படம்; colourful picture.

[வண்ணம் + படம்.]

வண்ணப்பரிமளம் *vaṇṇa-p-parimaḷam,* பெ.(n.) முகமதியர் பாவியத்தின் ஆசிரியர்; author of epic titled 'Mugamadiyar'.

வண்ணப்புறக்கந்தரத்தனார் *vaṇṇappura-k-kandarattaṉār,* பெ.(n.) கழகப் புலவர்; an ancient Šaṅgam poet.

இவருடைய இயற்பெயர் கந்தரத்தன். பாலைத் திணைப்பாடலிற் பயின்றுவரும் 'வண்ணப்புறவு' என்ற சொற்சிறப்பு நோக்கி, அச்சொல்லே இவர்க்கு அடைமொழியாக அமைந்தது. நற்றிணையில் ஒரு பாடலும், அகநானூற்றில் ஒரு பாடலும் இடம்பெற்றுள்ளது. வண்ணப் புறக் கல்லாடனார் என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றார். இவர் பாடியவை அகம் : 49–ஆம் பாடலும் நற்றிணையில் 71–ஆம் பாடலுமாகும்.

"மன்னாப் பொருட்பிணி முன்னி இன்னதை
வளையணி முன்கைநின் இகுளைக்
குணர்த்தெனப்
பன்மாண் இரத்தி ராயிற் சென்மென
விடுநா ளாதலு முரியள் விடினே
கண்ணும் நுதலும் நீவி முன்னின்று
பிரிதல் வல்லிரோ ஐய செல்வர்
வகையமர் நல்லில் அகவிறை யுறையும்
வண்ணப் புறவின் செங்காற் சேவல்
வீழ்துணைப் பயிருங் கையறு முரல்குரல்
நும்மிலள் புலம்பக் கேட்டொறும்
பொம்ம லோதி பெருவிதிப் புறவே" (நற்;71)

வண்ணம்[1] *vaṇṇam,* பெ.(n.) 1. அளவு; level. 2. ஒப்பீடு; comparison. 3. வீதம்; ratio. 4. முறைமை; arrangement, order. *"நாழிக்கு நெல்லு தூணிவண்ணமாக ஓராட்டை நாளைக்கு நெல்லு 120 கலமும்" (தெ. கல். தொ. 14, கல். 210). நெல்லு குறுவாள் கூலி ஏற்றி அஞ்சிரண்டு வண்ணத்தால் அறுநாழி உழக்கும்" (தெ. கல். தொ. 19. கல். 210).*

வண்ணம்[2] *vaṇṇam,* பெ.(n.) 1. நிறம்; colour. *"வெளியார்முன் வான்சுதை வண்ணங் கொளல்" (குறள், 714).* 2. ஓவியம் வரைதற்குரிய வண்ணக் கலவை; paint drawing paste. *"பலகை வண்ணநுண் டுகிலிகை" (சீவக. 1107).* 3. சாந்துப் பொது (யாழ்.அக.); unguent; pigment. *வண்ணத்துக்குக் கிண்ணம் போடுகிறான் (இ.வ.).*

[வரணம் →வண்ணம்.]

குமரிக் கண்டத் தமிழர் எஃகுச் செவியும், கூர்ங்கண்ணும் நுண்மதியும் உடையராதலின், வண்ணங்களை யெல்லாம் நுட்பமாய் வகுத்து அவற்றிற்கு வெள்ளை, கருப்பு, நீலம், பச்சை, மஞ்சள், சிவப்பு, கத்தரி (Violet) யென வெவ்வேறு பெயரிட்டிருந்தனர். பண்டை யிலக்கிய மெல்லாம்

செய்யுள் வடிவிலேயே இருந்ததினாலும், அவையும் அடியோடு இறந்துபட்டமையாலும், பல வண்ணப் பெயர்களும் இறந்தொழிந்தன. இன்றும் மீன்பெயர்களில் வெண்ணிற வகைகளைக் குறிக்க வெள்ளி, வெள்ளை, வெளிச்சி வெண்ணெய், வெளுவை முதலிய சொற்கள் ஆளப்பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது.

வண்ணம்³ *vaṇṇam*, பெ.(n.) 1. அழகு; beauty, handsome. *"பிறைநுதல் வண்ண மாகின்று" (புறநா. 1).* 2. இயற்கையழகு; unadorned, natural beauty. *"வண்ணமுந் தேசு மொளியுந் திகழ" (பரிபா. 12, 20).* 3. ஒப்பனை (அக.நி.); adorning, decoration. 4. குணம்; nature; character; quality. *"நிரலுடைமையும் வண்ணமுந் துணையும்" (குறிஞ்சிப். 31).* 5. நன்மை (யாழ்.அக.); good. 6. சிறப்பு; merit, virtue. *"கைவண்ண மிங்குக் கண்டேன்" (கம்பரா. அகலிகை.82).* 7. மாலை (நாஞ்.); garland. 8. செயல் (இலக்.அக.); action. 9. இத்தனை மடங்கு என்பதைக் குறிக்கும் எண் (வின்.); co-efficient.

வண்ணம்⁴ *vaṇṇam*, பெ.(n.) 1. கனம்; thickness. *"யானைக் கையினளவு வண்ணமும் நீளமும் உள்ளது யாளியின் தும்பிக்கை.* 2. வடிவு (பிங்.), அமைப்பு; form, figure. 3. சாதி (தொல். பொருள்.82, உரை); caste. 4. இனம், பிரிவு; species; class. *"வண்ண வண்ணத்த மலர்" (குறிஞ்சிப். 114).* 5. வகை, வடிவம், ஒழுங்கு; way, manner, method. *"தலைச்செல்லா வண்ணத்தால்" (குறள், 561).*

[வள்→வண்→வண்ணம்.]

வண்ணம் என்னும் சொல், வகை என்னும் பொருளில், அவ்வண்ணம், இவ்வண்ணம், எவ்வண்ணம் என, இருவகை வழக்கிலும், பெருவழக்காய் வழங்குதலையும் நோக்குக (மு.தா.2, பக்.79).

வண்ணம்⁵ *vaṇṇam*, பெ.(n.) 1. பாவின்க ணிகழும் ஓசை வேறுபாடு (தொல். பொருள். 313); verse rhythm. 2. சந்தப்பாட்டு; rhythmic verse with regular beats. வண்ணத்திரட்டு. 3. முடுகியல் வண்ணம் (பிங்.); a part of kali verse. 4. பண் (சது.); melody. 5. இசைப்பாட்டு; song. *"கோதை தானே யிட்டதோர் வண்ணந்தன்னை" (சீவக. 1696).*

[வள்→வண்→வண்ணம்.]

ஒருகா. பண் → பண்ணம் → வண்ணம் என்றுமாம் (தென்.கட்.பக்.9).

குறிலும் நெடிலும் அளபெடையிரண்டும் இனம் மூன்றும் ஆய்தமும் வண்ணத்திற்கு உறுப்பாம் (தொல்.பொருள்.314, பேரா.). ஒரு பாவின்க ணிகழும் ஓசை (விகற்பம்) வேறுபாடு (தொல்.செய்யுள்.1, நச்.).

எழுத்து, வரைவு, பூச்சு, நிறம், வகை, செய்யுள், ஓசை வகை முதலான பொருண்மைகளில் இச்சொல் பயின்று வரும் (மு.தா.2, பக்.78).

அருணமலை (கிரி)யார் பாடிய திருப்புகழ் வண்ணங்களும் பட்டினத்தார் பாடிய உடற்கூற்று வண்ணமும், அகப்பொருட் செய்யுள்களில் வரும் உள்ளுரையுவமையும் போன்ற அருஞ்சுவை யின்பக்கூறுகள் வேறெம்மொழி யிலக்கியத்திலும் காணக்கிடையா.

வண்ணம் பற்றி மொழிஞாயிறு கூறுவது வருமாறு:

செய்யுள் ஒலிப்புமுறை, ஓசை, சந்தம், வண்ணம் என மூவகைப்படும். அவற்றுள் வண்ணம்

என்பது, எல்லா அடியும் மாத்திரையும் எழுத்தினமும் சீரும் ஒத்துவரப் பாடுவது. அதை, நூற்றுக்கணக்கான வகையில், பல்லாயிரமாகப் பாடுவது இறைவன் திருவருள் பெற்றவர்க்கே இயலும் (த.இ.வ.48).

"சந்தவேறுபாடு" (தொல்.பொருள்.525 பேரா.)

"குணம்" (நச்.குறிஞ்.31). சந்தம் (தொல். செய்யுள்.234, நச்.).

வண்ணம்பூசு-தல் *vaṇṇam-pūsu-*, 5 செ.கு.வி. (v.i.) வண்ணக் கலவையை சுவற்றில் பூசுதல்; to rub the colour or paint.

[வரணம்→வண்ணம் + பூசு-.]

வண்ணமகள் *vaṇṇa-magaḷ*, பெ.(n.) கோலஞ் செய்வாள்; lady's maid. *"வண்ண மகளி ரிடத்தொடு தம்மிடம்...... கொள்ளார்" (ஆசாரக். 83).*

[வண்ணம் + மகள்.]

வண்ணமாதிரு *vaṇṇa-mātiru*, பெ.(n.) 1. தூவல், கரிமுனை; pen; pencil. 2. தூதி; female messenger or ambassador.

வண்ணமாதிருகை *vaṇṇa-mādirugai*, பெ.(n.) கலைமகள் (யாழ்.அக.); *kalaimagaḷ* the Goddess of learning.

வண்ணமாலை *vaṇṇa-mālai*, பெ.(n.) நெடுங் கணக்கு (சங்.அக.); the alphabet.

[வரணம்→வண்ணம் + மாலை.]

வண்ணமாயிரு-த்தல் *vaṇṇa-māyiru-*, 4 செ.கு.வி.(v.i.) தடிமன் அல்லது பருமனாக இருத்தல்; to be stout or bulky, to be far.

வண்ணவமுதம் *vaṇṇa-v-amudam*, பெ.(n.) பருப்புச்சோறு (சீவக.2604, உரை); cooked rice mixed with dholl.

[வண்ணம் + அமுதம்.]

வண்ணவிருத்தம் *vaṇṇa-viruttam*, பெ.(n.) சந்தம் அமைந்த ஆசிரிய மண்டிலப்பா; rhythmic stanza of *āśiriya-maṇḍila-p-pā*.

[வரணம்→வண்ணம் + விருத்தம்.]

வண்ணவிருத்தத்தில் அமைந்த ஆசிரிய மண்டிலப்பா வருமாறு:-

"திருமால் ஆதியர் உள்ளம் கொள்ளும் ஓர்
செவ்விய வேலோனே
குருமாமணியே குணமணியே சுரர்கோவே
மேலோனே
கருமா மலம்அறு வண்ணம் தண்ணளி
கண்டே கொண்டேனே
கதியே பதியே கனநிதியே கற்கண்டே
தேண்தேனே
அருமா தவம்உயர் நெஞ்சம் விஞ்சிய
அண்ணா விண்ணவனே
அரசே அமுதே அறிவுருவே முருகையா
மெய்யவனே
உருவாகிய பவபந்தம் சிந்திட ஓதிய வேதியனே
ஒளியே வெளியே உலமெலாம் உடையோனே
வானவனே" (அருட்பா).

வண்ணவுவமம் *vaṇṇa-v-uvamam*, பெ.(n.) நிறம்பற்றிக் கூறும் உவமை (தொல். பொருள். 276); a simile in which the subject of comparison is colour.

[வரணம்→வண்ணம் + உவ→உவமம்.]

வண்ணவொழுங்கு *vaṇṇa-v-oḻungu*, பெ.(n.) 1. அகரமுதலி வரிசை; alphabetical order. 2. சாதியொழுங்கு; caste-code.

[வண்ணம் + ஒழுகு→ஒழுங்கு.]

வண்ணவோதனம் *vaṇṇa-v-ōdaṉam*, பெ.(n.) புளி, எள், சருக்கரை முதலான சுவையூட்டும் பொருட்கள் கலந்தட்ட சோறு (விதான. யாத்திரை.8); a preparation of cooked rice mixed with condiments.

[வண்ணம் + ஓதம்→ஓதனம்.]

வண்ணனை[1] *vaṇṇaṉai*, பெ.(n.) வண்ணித்துப் புகழ்கை; description, delineation.

[வண்ணம்→வண்ணி→வண்ணனை.]

வண்ணனை[2] *vaṇṇaṉai*, பெ.(n.) 1. புனைவுரை (தண்டி.பொது.7); desrciption, interpre -tation, delineation. 2. புகழ்ந் தேத்துகை, முகமன் மொழிகை (யாழ்.அக.); praise, flattery.

வண்ணனைமொழி *vaṇṇaṉai-moḻi*, பெ.(n.) காட்சி, கருத்து என்னும் இருவகைப் பொருள்களையும் வண்ணத்தால் வரைதல் அல்லது சொல்லாற் புகழ்ந்து விரித்துக் கூறுதல்; expressing the two different matters of depiction and description by means painting or by narration of words.

[வண்ணம் → வண்ணி → வண்ணனை + மொழி.]

வண்ணனைமொழிநூல் *vaṇṇaṉai-moḻi-nūl*, பெ.(n.) விளக்கமொழியியல்; descriptive linguistics. *'வண்ணனை மொழிநூல் உண்மைக்கு மாறானது' (மொழி ஞாயிறு).*

[வண்ணனை + மொழிநூல்.]

மொழிநூல் மூவகைப்படும். அவை யாவன :-

1. வண்ணனை மொழிநூல் (Descriptive linguistics).

2. வரலாற்று மொழிநூல் (Historical linguistics).

3. ஒப்பியன் மொழிநூல் (Comparative linguistics).

கி.பி.18-ஆம் நூற்றாண்டுமுதல், அமெரிக்காவில், வண்ணனை மொழிநூல் தனிக்கலையாக, வழங்கியும், வளர்ந்தும் வருகிறது.

முதன்முதலாக தொல்காப்பியரே, மொழி நூற்கலைக்கு, கி.மு.7-ஆம் நூற்றாண்டிலேயே வித்திட்டுள்ளார் என்பதனைக் கீழ்க்காணும் சொல்லதிகார நூற்பாக்களால் அறியலாம்.

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" (தொல்.640).

"மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" (தொல்.877).

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே" (தொல்.880).

"வடசொற் கிளவி, வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" (தொல்.884).

அமெரிக்கர் வளர்த்து வரும் வண்ணனை மொழிநூலுள், பலகுறைகள், உண்மைக்கு மாறாகவும், தமிழுககுக் கேடாகவும் மலிந்துள்ள பாங்கினை மொழிஞாயிறு, வண்ணனை மொழிநூலின் வழுவியல் என்னும் நூலுள் விளக்கமாக உரைத்துள்ளார்.

மேனாடுகளில் கடந்த முந் நூற்றாண்டுகளாக வளர்க்கப்பெற்று வரும் மொழிநூல், தொடக்கத்தில் ஆங்கிலத்தில், (Science of speech, Science of Language, Linguistic Science, Linguistics, Glottology, Philology) எனப் பல பெயர்களைப் பெற்றிருந்தது. இவற்றுள் (Linguistics, Philology)

என்னும் இரண்டே இறுதியில் நிலைபெற்றன. மொழிநூல், ஒரே சமயத்தில், வரலாறு தழுவியதாகவும் ஒப்பு நோக்கியதாகவும் பல கூறுகளாகப் பகுக்கப்படாததாகவும் உள்ளது. மாக்கசு முல்லர் (Max Muller), விற்றினி (Whitney), செசுப் பெர்சென் (Jespersen) முதலிய மொழி நூற் பேரறிஞரெல்லாம் மேற்கூறிய முறையிலேயே மொழி நூலை வளர்த்து வந்தனர். ஆயின், அண்மையில், சில மேலை மொழி நூலறிஞர்,

வண்ணாங்குன்னை *vaṇṇāṅkuṉṉai,* பெ.(n.) மீன் வகையுளொன்று; a kind of fish.

வண்ணாத்தான் *vaṇṇāttāṉ,* பெ.(n.) வண்ணான் (ஈடு. 4, 3, 5); washerman, dhobi.

[வண்ணத்தான் →வண்ணாத்தான்.]

வண்ணாத்தி[1] *vaṇṇātti,* பெ.(n.) வண்ணாரப் பெண்; washer-woman, dhobi. *"வண்ணானுக்கு வண்ணாத்திமேல் ஆசை; வண்ணாத்திக்குக் கழுதைமேல் ஆசை" (பழ.).*

[வண்ணான்(ஆ.பா.)→வண்ணாத்தி (பெ.பா.)]

வண்ணாத்தி[2] *vaṇṇātti,* பெ.(n.) 1. வண்ணாத்திக் குருவி; washer woman robin. 2. வெண்ணிறமும் நான்கு அங்குல வளர்ச்சியு முடைய ஆற்று மீன்; fresh-water fish, silvery, attaining 4 in. in length. 3. பூநீறு (யாழ்.அக.); a medicinal powder. 4. வண்ணாத்திப்பூச்சி (வின்.); butterfly.

வண்ணாத்தி[3] *vaṇṇātti,* பெ.(n.) நாகணவாய்ப்புள்; myna.

வண்ணாத்தி[4] *vaṇṇātti,* பெ.(n.) 1. ஒருவகை வெள்ளை உவர்மண் (வின்.); light white-coloured earthy matter containing a great proportion of carbonate soda. 2. ஒருவகை மருந்துப்பொடி (யாழ்.அக.); a medicinal powder.

வண்ணாத்திக்கிழங்கு *vaṇṇātti-k-kiḻaṅgu,* பெ.(n.) பல பிள்ளைக் கிழங்கு; a tuber.

[வண்ணாத்தி + கிழங்கு.]

வண்ணாத்திக்குருவி *vaṇṇātti-k-kuruvi,* பெ.(n.) 1. பறவை வகையுளொன்று; washer woman robin. 2. விசிறிக் குருவி; white-browed fantail.

[வண்ணாத்தி + குருவி.]



வண்ணாத்திகதிர் *vaṇṇātti-kadir,* பெ.(n.) வழலை; effloresence grown on the soil of fuller's earth.

[வண்ணாத்தி + கதிர்.]

வண்ணாத்திமீன் *vaṇṇātti-mīṉ,* பெ.(n.) கருப்பு வெள்ளை வரிகளும், மஞ்சள் நிறமான துடுப்புமுடைய ஓர் அழகான கடல் மீன்; butterfly fish.

[வண்ணத்துமீன் →வண்ணாத்திமீன்.]

வண்ணாத்திப்பூச்சி *vaṇṇātti-p-pūcci,* பெ.(n.) பலவண்ணத்துப் பூச்சி (இ.வ.); butterfly.

[வண்ணத்துப்பூச்சி →வண்ணாத்திப்பூச்சி.]

பலநிறம் அல்லது கோலமுள்ள பூச்சி.

வண்ணாப்பண்டி *vaṇṇā-p-paṇḍi,* பெ.(n.) வண்ணார் துணிகளை யேற்றும் வண்டி (யாழ்.அக.); washerman's cloth loading cart.

வண்ணார்கற்காசு *vaṇṇār-kaṟ-kāšu,* பெ.(n.) ஆடைகளின் அழுக்கெடுக்கும் தொழிலாளிகள், அழுக்ககற்றுவதற்கும், உலர்த்துவதற்கும், நீர்நிலைகளில் கற்கள் பரப்பின இடத்துக்கு கொடுக்கும் வரி; a kind of tax or cess paid by washermen in lieu of washing and drying activities on a place of stony surface.

[வண்ணார் + கற்காசு.]

வண்ணார்பந்தம் *vaṇṇār-pandam,* பெ.(n.) துணிப்பந்தம்; torch made of rags.

[வண்ணார் + பந்தம்.]

வண்ணாற்பற்று *vaṇṇār-paṟṟu,* பெ.(n.) அரையில் வரும் மேகப்படை வகை; dhobi's itch.

வண்ணார்பாட்டம் *vaṇṇār-pāṭṭam,* பெ.(n.) வண்ணார்கற்காசு பார்க்க; see *vaṇṇār-kaṟ-kāšu.*

[வண்ணார் + பாட்டம்.]

வண்ணார்வரி *vaṇṇār-vari,* பெ.(n.) வண்ணாரிடமிருந்து அரசு பெற்ற பழையவரி (S.I.I.i.81); tax collected from washer man.

[வண்ணார் + வரி.]

வண்ணாரத்துறை *vaṇṇāra-t-tuṟai,* பெ.(n.) வண்ணான்றுறை (வின்.) பார்க்க; see *vaṇṇāṉṟuṟai.*

[வண்ணார்→வண்ணார + துறை.]

வண்ணாரப்பாறை *vaṇṇāra-p-pāṟai,* பெ. (n.) வரிவகை (புதுக்.கல். 90); a petty cess.

மறுவ. வண்ணாரப்பாட்டம்.

வண்ணாரம் *vaṇṇāram,* பெ.(n.) உடுத்துக் களைந்த துணியைத் தூய்மை செய்யும் தொழில்; profession of a dhoby or washerman. *'வண்ணாரந் துன்னார மச்சிகமே' (நீலகேசி. 280).*

வண்ணாரமாடன் *vaṇṇāra-māḍaṉ,* பெ.(n.) உடம்பு கொதித்தல், இரத்தம் கக்குதல் முதலிய குணத்தைக் காட்டும் ஓர் பைசாசம்; a develish disease causing vomiting of blood etc.

வண்ணான்¹ *vaṇṇāṉ,* பெ.(n.) 1. வழலை பார்க்க; see *vaḻalai.* 2. சவர்க்காரம், மருந்துகளின் அழுக்காகிய குற்றங்களைப் போக்கும் குரு; one that removes flaws in the medicine.

[வள்→வண்→வண்ணம் + ஆன் - வண்ணான்.]

மண்ணுதல் = கழுவுதல், தூய்மையாக்குதல். ஒருகா. மண்→மண்ணான்→வண்ணான். மண் = உவர்மண். மண்ணான் = உவர்மண்ணினால், ஆடையின் அழுக்ககற்றுபவன்

வண்ணான்² *vaṇṇāṉ,* பெ.(n.) குடிமக்கள் பதினெண்மருள் ஆடைவெளுக்கும் இனத்தான் (பிங்.); washerman, a person belonging to the washerman caste, dhobi one among 18 in number. *வண்ணானுக்கு நோய் வந்தால் கல்லோடே.*

[மண்ணான்→வண்ணான்.]

வண்ணான்காரம் *vaṇṇāṉ-kāram*, பெ.(n.) உவர்மண்; fuller's earth.

மறுவ. களர்நிலம், ஆடைமண்.

[வண்ணான் + காரம்.]

வண்ணான்குறி *vaṇṇāṉ-kuṟi*, பெ.(n.) சேங்கொட்டை; marking nut, dhoby's nut-*Semi carpus anacardium*.

வண்ணான்தாழி *vaṇṇāṉ-tāḻi*, பெ.(n.) பழந்தமிழர் விளையாட்டுகளுள் ஒன்று; one of the games of the ancient *Tamiḻs*.

[வண்ணான் + தாழி.]

இவ்விளையாட்டின் பெயர் : பாண்டி நாட்டில், வண்ணாரக் குலத்தையும் தாழ்த்தப்பட்ட வகுப்புகளையும் சேர்ந்த சிறுவர், வண்ணான் துறையில் ஆடையொலிப்பது போல் நடித்தாடும் ஆட்டு வண்ணான் தாழி. தாழி என்பது அலசுவதற்குத் துணிகள் வைக்கப்பட்டிருக்கும் பெரும்பானை.

ஆடுவார் தொகை : பொதுவாக, நால்வர்க்கு மேற்பட்ட பலர் இதை ஆடுவர்.

ஆடு கருவி : ஒரு துணி மூட்டை இதற்கு வேண்டுங் கருவியாம்.

ஆடுகளம் : ஊர்ப் பொட்டலிலும் அகன்ற தெருவிலும் இது ஆடப்பெறும்.

ஆடுமுறை : ஆடுவார் அனைவரும் ஒவ்வொரு துணிபோட வேண்டும். அவை ஒரு மூட்டையாகக் கட்டப்படும். அதை ஒருவன் எடுத்துத் தன் பிடரியில் வைத்துக்கொண்டு, மருள்கொண்ட தேவராளன்போல் ஆடி வரிசையாய் நிற்கும் ஏனையோருள் ஒருவன்மேல் கண்ணை மூடிக்கொண்டு எறிவான். அது யார்மேல் விழுந்ததோ அவன் அதைத் தன் பிடரியில் வைத்து இருகையாலும், பிடித்துக்கொண்டு கீழே உட்கார வேண்டும். மூட்டையை எறிந்தவன், அதில் இரண்டோர் அடியடித்துவிட்டு, "கூழ் குடிக்கப் போகிறேன்", என்று சொல்லிச் சற்றுத் தொலைவுபோய் மீள்வான். அதற்குள் ஏனையோரெல்லாம் அம் மூட்டையில் தொப்புத் தொப்பென்று அடித்து மகிழ்வர். போய் மீண்டவன் அவருள் ஒருவனைத் தொடமுயல்வான். அவன் அணுகியவுடன் அனைவரும் ஓடிப்போவர். அவன் ஒருவனைத் தொடுமுன் இன்னொருவன் மூட்டையில் அடித்துவிடின், அத் தொடுகை கணக்கில்லை. இன்னொருவன் மூட்டையில் அடிக்குமுன் ஒருவனைத் தொட்டுவிடின் தொடப்பட்டவன் மூட்டையை வாங்கித் தன் பிடரிமேல் வைத்துக்கொண்டு கீழே உட்கார வேண்டும். முன்பு கீழே உட்கார்ந்திருந்தவன் பின்பு பிறரைத் தொடுபவனாவன். முன்பு தொட்டவன் பின்பு பிறரொடு சேர்ந்து மூட்டையில் அடித்து விளையாடுவான்.

இங்ஙனமே, நெடுகலும், தொடப்பட்டவன் மூட்டை வைத்திருப்பவனாகவும், மூட்டை வைத்திருந்தவன் தொடுபவனாகவும், தொட்டவன் மூட்டையில் அடித்து விளையாடு பவனாகவும், மாறிக்கொண்டே வருவர்.

புதிதாய்த் தொடு பவனாகும் ஒவ்வொருவனும், முதலாவது மூட்டையில் இரண்டடி யடித்துவிட்டுக் கூழ் குடிக்கப் போவதும், பின்பு மீண்டும் பிறரைத் தொடுவதும் மரபாம்.

மூட்டையில் அடித்து மகிழும் ஒவ்வொருவனும் பின்பு மூட்டை தாங்கி அடிவாங்குவதற்க இடமிருத்தலால், முன்பு பிறன் முதுகில் மூட்டையிருந்தபோது கண்ணோட்டமின்றி வன்மையாய் அடித்தவன். பின்பு தன் வினைவிளைவை மிகுதியாய் அறுக்கநேரும்.

விளையாட்டு முடிந்தபின், அவனவன் துணியை அவனவன் எடுத்துக்கொள்வான்.

ஆட்டைத் தோற்ற விளக்கம் : வண்ணாருள் ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு துறையுண்டு. ஒருவன் இன்னொருவன் துறையில் வெளுப்பது, வசதிக் குறைவுமட்டு மன்றி இழப்பு முண்டு பண்ணும். பழங்காலத்தில் ஒவ்வொரு வண்ணானும் வண்ணாரப் பாட்டம் அல்லது வண்ணாரப் பாறை என்னும் தொழில்வரி செலுத்த வேண்டியிருந்தது. அதனால் ஒருவன் பாறையில் இன்னொருவன் வெளுப்பது, மிகக் கண்டிப்பாய்த் தடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆயினும், ஒருவன் பாறை மிக வசதியுள்ளதாகவிருப்பின், அவன் தான் வழக்கமாக உண்ணுங் கூழுண்ணச் சென்றிருக்கும்போது, வரும்போது, அவர் ஓடியிருப்பர். அவன் அவரைத் துரத்தி அடித்திருப்பான், அல்லது கடுமையாய்த் திட்டியிருப்பான்.

இச் செயலையே இவ் விளையாட்டு உணர்த்துகின்றது. தொடுபவன் வண்ணானையும், மூட்டை பாறையையும், அதில் அடிப்பவர் அவன் கூழுண்ணச் சென்றிருக்கும்போது அதைப் பயன்படுத்தும் பிற வண்ணாரையும், ஒருவனை ஒடித்தொடுவது திருட்டுத்தனமாய்ப் பாறையைப் பயன்படுத்திய ஒருவனைப் பிடித்து அடிப்பதையும், குறிப்பதாகக் கொள்ளப்படும்.

ஆட்டின் பயன் : ஓடும் ஒருவனைப் பிடிப்பதும் ஒருவனாற் பிடிபடாமல் ஓடிப்போவதுமான வினைப்பயிற்சி, இவ் விளையாட்டின் பயனாம்.

வண்ணான்பூமி *vaṇṇāṉ-pūmi*, பெ.(n.) வண்ணான்காரம் பார்க்க; see *vaṇṇāṉ-kāram.*

[வண்ணான் + பூமி.]

வண்ணான்றுறை *vaṇṇāṉṟuṟai*, பெ.(n.) வண்ணான் ஆடை வெளுக்கும் நீர்த்துறை (சினேந். 174); washerman's ghat in a river or tank. *வண்ணான் துறைக்கல்லிலே வந்தபேரெல்லாம் தோய்க்கலாம் (பழ.).*

[வண்ணான் + துறை.]

வண்ணானவுரி[1] *vaṇṇāṉ-avuri*, பெ.(n.) நீலவுரி; indigo-a plant that yields indigo.

வண்ணானவுரி[2] *vaṇṇāṉ-avuri*, பெ.(n.) செடி வகை (பெ.மாட்.); a plant.

வண்ணானழுக்கு[1] *vaṇṇāṉ-aḻukku*, பெ.(n.) சூதகம்; menses.

வண்ணானழுக்கு[2] *vaṇṇāṉ-aḻukku*, பெ.(n.) வண்ணானிடம் வெளுக்கப்போடும் அழுக்காடை (அறப். சத. 64); soiled or dirty clothes for washing.

[வண்ணான் + அழுக்கு.]

உடுத்திக் களைந்ததும் மாசு படிந்ததுமான, சட்டை, வேட்டி, துண்டு முதலியன வண்ணானழுக்கெனக் கொள்ளவுஞ் சொல்லவும் பெறும் நாட்டுப்புற மக்களின் நல்லதமிழ்ச் சொற்களு ளொன்று.

வண்ணானிடத்தி *vaṇṇāṉ-iḍatti*, பெ.(n.) கழுதை; ass.

வண்ணானுக்குவாலை *vaṇṇāṉukku-vālai*, பெ.(n.) அண்டச் சுண்ணம்; calcified powder of egg.

வண்ணானைக்கும்பிட்டார்[1] *vaṇṇāṉai-k-kumbiṭṭār*, பெ.(n.) முதல் குலோத்துங்கன் ஆட்சியில், தகடூர் நாட்டைக் காத்திருந்த அதிகாரியின் பெயர்; an official who protected the *Tagadūr* country during *kulōtuṅgaṉ*. *"திருக்காளத்தியினின்றும் ஆண்டார் வண்ணானைக் கும்பிட்டா ரெழுந்தருளி" (தெ.கல்.தொ. 7, கல். 533).*

வண்ணானைக்கும்பிட்டார்[2] *vaṇṇāṉai-k-kumbiṭṭār*, பெ.(n.) சேரமான் பெருமா ணாயனார்; *Cēramāṉperumāṇāyaṉār.*

வண்ணி–த்தல் *vaṇṇi-*,4 செ.குன்றாவி. (v.t.) 1. புனைந்துரைத்தல்; to depict, describe. *"வண்ணித்தலா வதில்லா" (சீவக. 2458).* 2. போற்றி வணங்கிக் கூறுதல்; to praise, submissively. 3. மிகைபடக்கூறுதல் (வின்.); to exaggerate. 4. உவமித்தல் (வின்.); to illustrate by anology. 5. விரித்தல்; to expatiate, to write copiously.

[வண்ணம் →வண்ணி–.]

பல வகையில் அல்லது பல்வேறு ஓசைபடப் புகழ்ந்து பாடுதல். ஓர் ஓவியத்தைப் பல்வேறு நிறங்களாலும், நுண்வினைகளாலுஞ் சிறப்பிப்பதும், ஓர் அணிகத்தைப் (வாகனத்தை) பன்னிற அழகிய பொருள்களாற் சுவடிப்பதும், ஓர் உடம்பைப் பன்னிற ஆடையணிகளால் அழகுபடுத்துவதும் போன்று, இறைவனை அல்லது ஒரு தலைவனைப் பல்வேறு கருத்துகளாலும், பல்வகைச் செய்யுள் உறுப்புகளாலும், சிறப்பித்துப் புகழ்தல்; அல்லது பொருளிடங் காலங்களுள் ஒன்றன் இயல் செயலுறுப்புக ளெல்லாவற்றையும் விளத்தமாக (விவரமாக) எடுத்துக் கூறுதல் (வே.க.4, பக்.97).

வண்ணிகன் *vaṇṇigaṉ*,பெ.(n.) எழுத்தாளன் (சது.); writer.

Skt. வர்ணிக.

[வண்ணி →வண்ணிகன்.]

வண்ணிகை *vaṇṇigai*, பெ.(n.) மருந்துச் சரக்கு வகை; a drug. *"வண்ணிகை வங்கப் பாவையோடு" (பெருங்.மகத.17, 150).*

வண்ணிகைத்திருக்கொற்றக்குடை *vaṇṇigai-t-tiru-k-koṟṟa-k-kuḍai*, பெ.(n.) ஒப்பனை செய்யப்பட்ட கொற்றக் குடை; decked or adomed king's count. *"வண்ணிகைத் திருக்கொற்றக்குடை மகுடம் அடுத்து விளக்கின பறளை உள்பட ஒன்று" (தெ.கல்.தொ.2, கல்.1).*

வண்பயன் *vaṇ-payaṉ*,பெ.(n.) முழுமையான விளைச்சல்; abundant yield. *"வசையிலா வண்பயன் குன்றும்" (குறள், 239).*

[வண் + பயன்.]

மல் → வல் → வள் → வண் + பயன். பயன் = விளைச்சல். 'மல்' என்னும் வேரடி வளமைப் பொருள் பயப்பது. "மல்லல் வளனே" என்று தொல்காப்பியர் உரியியலில் உரைப்பது காண்க. வண்பயன் என்பது முழுமையான வளமிக்க நல்விளைச்சலைக் குறித்தது.

வண்புகழ் *vaṇ-pugaḻ*,பெ.(n.) கொடையால் வருஞ்சிறப்பு; reputation for liberality. *"வண் புகழ் மூவர்" (தொல். பொருள். 391).*

[வண்–மை + புகழ்.]

வண்மை *vaṇmai*,பெ.(n.) 1. ஈகை; bounty, liberality. *"வண்மையு மன்ன தகைத்து" (நாலடி, 269).* 2. தன்மை, இயல்பு, சிறப்பு, வளமை, குணம் (பிங்.); quality, property, nature, speciality. *"ஈது..... கருமஞ் செய்வார் வண்மை" (திருவாத. பு. திருப்பெருந். 93).* 3. அழகு (யாழ்.அக.); beauty. 4. வாய்மை (பிங்.); truth. *"வாரா தொழியா னெனும் வண்மையினால்" (கம்பரா. உருக்காட். 6).* 5. வளப்பம் (திவா.), (குறள், 239); fruitfulness, fertility, abundance. 6. வலிமை (பிங்.); strength. 7. புகழ் (சூடா.); praise, reputation. 8. வாகைமரம் (சங். அக.); sirissa.

[வள் → வண்மை. வண்மை = வளம், வளத்தாலாகும் ஈகை.]

வணக்கம் *vaṇakkam,* பெ.(n.) 1. வளைகை; bending. *"வில்வணக்கந் தீங்கு குறித்த மையான்" (குறள். 827).* 2. வழிபாடு; adoration, reverence; worship. *"குறைவிலா வென்னெடு வணக்கங் கூறி" (கம்பரா. தைல. 38).* 3. நூன்முகம மூன்றனுள், தெய்வம், குரு முதலியவர்க்கு வணக்கங் கூறுகை; verses in praise of god, guru, etc., at the commencement of a work, one of nūṉ-mugam. *"வாழ்த்தும் வணக்கமும் பொருளியல் புரைத்தலுமென மூவகைப்படும்" (சி.போ. பா. மங்க. பக்.1).* 4. கீழ்ப்படிகை (யாழ்.அக.); obedience, submision. 5. பெருமைப் படுத்துகை (யாழ்.அக.); respect, regard. 6. அணாவைக் குறிக்கும் குழூஉக் குறி (C.N.); cant for an 'anna', a coin.

தெ. வங்கு; க. பக்கு; ம. வணக்கம்.

[வள் → (வண்) → வண → வணங்கு → வணக்கு → வணக்கம்.]

மக்கள் கடவுளையும், தாழ்ந்தோர் உயர்ந்தோரையும் வணங்கும்போது, உடம்பு வளைதலால், வளைதற் கருத்தில் வணக்கக் கருத்துப் பிறந்தது (மு.தா.2, பக்.71).

வணக்கவொடுக்கம் *vaṇakka-v-oḍukkam,* பெ.(n.) வணங்கி ஒடுங்கி ஒழுகுகை; deferential or reverential behaviour.

மறுவ. ஒடுக்கவணக்கம்.

[வணங்கு → வணக்கு → வணக்கம் + ஒடுக்கு → ஒடுக்கம்.]

ஒருவரை யொருவர் நெருங்கும்போது நெருக்கமும் அதனால் ஒடுக்கமும் ஏற்படுவது இயல்பு. இடைவெளி ஒடுக்கம், பொருளொடுக்கம், ஒழுக்கவொடுக்கம் எனும் மூவகை யொடுக்கத்துள் இவ்வணக்க வொடுக்கமென்பது ஒழுக்க வொடுக்கத்தின்பாற்படும்.

வணக்கி *vaṇakki,* பெ.(n.) துறட்டி; iron crook.

[வணக்கு → வணக்கி.]

கரும்பொன்னில் (இரும்பில்) வளைத்துச் செய்த துறட்டி.

வணக்கு[1]**-தல்** *vaṇakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. வளைவித்தல்; to bend, make flexible, as the body. 2. பணியச்செய்தல்; to make submissive. *"மழபுலம் வணக்கிய மாவண் புல்லி" (அகநா. 61).*

தெ. வந்சுட (vantsuta); க. பக்கிசு (baggisu).

[வணங்கு-, → வணக்கு-,]

வணக்கு[2] *vaṇakku,* பெ.(n.) 1. வணக்கம், 1 பார்க்க; see *vaṇakkam. "வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம்" (சிலப்.6, 95).* 2. வணக்கம், 2 பார்க்க; see *vaṇakkam. "வணக்கொடு மாள்வது வலமே" (திவ். திருவாய். 1, 3, 8).* 3. வணக்கம், 3 பார்க்க; see *vaṇakkam. "நூன்முகத்துறைக்கு மங்களாசரணை வாழ்த்து வணக்கொடு வத்து நிர்த்தேசம்" (வேதா. சூ. 8).*

[வணங்கு → வணக்கு.]

வணக்குமார் *vaṇakkumār,* பெ.(n.) கோயிற் கணக்கெழுதுவோன்; temple accountant.

வணங்காமுடி *vaṇaṅgā-muḍi,* பெ.(n.) யாருக்கும் அடிபணியாமல் நடப்பவன்; recalcitrant person, stiff necked person.

வணங்காமுடிமன்னன் *vaṇaṅgā-muḍi-maṉṉaṉ,* பெ.(n.) வணங்காமுடியோன் பார்க்க; see *vaṇaṅgā-muḍiyōṉ.*

[வணங்கு + ஆ (எ.ம.இ.நி.) + முடிமன்னன்.]

வணங்காமுடியோன் *vaṇaṅgā-muḍiyōṉ,* பெ.(n.) 1. பிறர்க்கு அடிபணியாத அரசன்; independent monarch, as bowing his head to no one. 2. துரியோதனன் (சூடா.); *Duriyōdaṉaṉ.* 3. ஒருவருக்கும் பணியாதவன்; man of sturdy independence.

[வணங்கு + ஆ (எ.ம.இ.நி.) + முடி.]

வணங்காலவணம் *vaṇaṅgā-lavaṇam,* பெ.(n.) பிடாலவணம்; a variety of salt.

வணங்கு¹ *vaṇaṅgu,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கைகூப்புதல்; to greet. 2. வளைதல்; to bend one's body when doing work, to involve fully in ones work. *'வணங்கி வேலை செய்'.*

க. baggu.

[குள் → மள் → வள் (வண்) → வணங்கு –, (மு.தா.பக்.71)]

வணங்கு²–தல் *vaṇaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நுடங்குதல்; to bend, to yield, as a freed in a flood. *"வணங்கிடை" (பு.வெ.7, 27).* 2. அடங்குதல்; to be submissive, gentle, modest. *"வணங்கிய வாயினர்" (குறள். 419).* 3. ஏவற்றொழில் செய்தல்; to perform menial service. *"நம்மில் வந்து வணங்கியும்" (கலித். 76).*

க. பக்கு.

[வள் → வண் → வண → வணங்கு –,(வே.க.4, பக்.98).]

வணங்கு³–தல் *vaṇaṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. வழிபடுதல், தொழுதல்; to worship, adore, revere, salute, pray respectfully. *"எண்குணத்தான் றாளை வணங்காத் தலை" (குறள். 9).* 2. சூழ்ந்து கொள்ளுதல்; to surround, encompass. *"வணங்குமிப் பிறப்பிவை நினையாது" (திருவாச. 41, 6).*

[வள் → வண் → வண → வணங்கு–, (வே.க.4, பக்.98)]

வணங்குஞ்சூரி *vaṇaṅguñ-cūri,* பெ.(n.) செடி வகை; a kind of plant.

வணர்¹–தல் *vaṇar-,* 2 செ.கு.வி.(v.i.) 1. வளைதல்; to bend. *"வணர்ந்தேந்து மருப்பின்" (மலைபடு. 37).* 2. மயிர் குழன்றிருத்தல்; to curl, as the hair. *"வெறிகமழ் வணரைம்பால்" (கலித். 57).*

[வள் → வண் → வணர்– (வ.வ.81).]

'வள்' என்னும் வளைவுக் கருத்தினைக் குறிக்கும் அடிப்டை வேரடியினின்று கிளைத்த சொல் (ஒ.நோ.) திள் → திண்.

வணர்² *vaṇar,* பெ.(n.) கட்டட வேலை வளைவு (வின்.); vault, arched roof.

[வள் → வண் → வணர்]

'வள்' என்னும் வளைவுக் கருத்தினைக் குறிக்கும் அடிப்டை மூலத்தினின்று முகிழ்த்த சொல்லாகும்.

வணர்³ *vaṇar,* பெ.(n.) யாழ்க் கோட்டின் வளைந்த உறுப்பு; the curving part of the lute.

[வள் → வண் → வணர்]

வணிக்கிராமத்தார் *vaṇi-k-kirāmattār,* பெ.(n.) பண்டைக்காலத்துள்ள ஒரு வணிகர் குழு (தொல். சொல். 167, உரை); an ancient guild of merchants.

*[பணிகன்→வணிகன் (ஒ.நோ.) பகு→வகு. பணி + **Skt.** grāma >த. கிராமம்→கிராமத்தார்.]*

வணிகக்காய்கறிப்பூடு *vaṇiga-k-kāy-kaṟi-p-pūḍu,* பெ.(n.) வழுதலை; brinjal.

[பணிகம்→வணிகம் + காய்கறி + பூடு. விளைவித்து உருவாக்கும் வழுதலை.]

வணிகசூரியர் *vaṇiga-šūriyar,* பெ.(n.) வணிகரில் முதன்மை பெற்றோர்; chief or leading or prominent merchants, merchant princes. *"வணிக சூரியரே வாரீர்" (திருவாலவா. 41, 18).*

[வணிகம் + சூரியர்.]

வணிகநோக்கு *vaṇiga-nōkku,* பெ.(n.) ஊதியத்தை எதிர்பார்க்கும் போக்கு; commercialism, profitable approach. *'கல்வி வணிக நோக்கில் நடைபெறுகின்றது'.*

[வணிகம் + நோக்கு]

வணிகபதம் *vaṇiga-padam,* பெ.(n.) விற்பனை (யாழ்.அக.); trade.

[வணிகம் + பதம்.]

வணிகம் *vaṇigam,* பெ.(n.) பல பண்டம் கொள்வதும் கொடுப்பதுமான தொழில் (வின்.); trade.

[பணிகம்→வணிகம்.]

பண்ணுதல் = செய்தல், உண்டாக்குதல், விளைத்தல், உருவாக்குதல்.

த. வணிகம் < **Skt.** vanij.

இச்சொற்கு வடவர் கூறும் பண்டமாற்றுப் பொருள் கற்பனையே. பண்ணியம் பண்ணப்பட்ட பொருள், பண்டம், விற்கப்படும் வணிகப் பொருள் என்னும் பொருண்மையில் கழகவிலக்கியங்களில் பயின்று வந்துள்ளமைக்கான சான்றுகள் வருமாறு :-

1. விளைவித்த அல்லது உருவாக்கிய பொருள் அல்லது பண்டம் என்னும் பொருளில் :-

"பல்வேறு பண்ணியந் தழீஇத்திரி விலைஞர்" (மதுரைக்.405).

"காம ருருவிற் றாம்வேண்டும் பண்ணியம்" (மதுரைக்.422).

2. விற்பனை செய்யப்படும் வணிகப் பொருள் :- *"கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழ" (மணிமே.7:24).*

3. பண்ணிய பொருளை வணிகம் செய்பவர் என்னும் பொருளில் :-

"பெருங்கடல் நீந்திய மரம்வலி யுறுக்கும் பண்ணிய விலைஞர்".

[பண்ணியன்→ பண்ணிகன்→ பணிகன் →வணிகன்→வணிகம் (வ.வ.பகுதி 2: 82).]

Guj. vaṇiyo, baniya, **A.** banyan, **Port.** banian, **E.** banian, banyan.

குமரிக்கண்ட முழுக்கினாலும், முதலிரு கழக இலக்கிய இறந்துபாட்டாலும், பலசொற்களின் வேர்களையும், இணைப்பு அண்டுகளையும், இன்று காட்ட இயலவில்லை.

வணிகன்→ வணிகு (ஒ.நோ.) வேந்தன் (வேய்ந்தோன்) →வேந்து.

"அதன்கண் வணிகனொருவ னுளன்" (மேருமந்.280).

வணிகம்→வணிகு→வணிஜ்.

இனி, பொருள் பண்ணுபவன் (ஈட்டுபவன்) பணிகன் என்றுமாம்.

"Vanij.m. (also written banij) a merchant, trader RV &&" என்பது மா.வி.அ.

வணிகம் என்னும் சொல், வடவர் கூறுவது போன்று பண்டமாற்றுப் பொருண்மை பொதிந்த சொல்லன்று.

செய்தல், விளைவித்தல், உருவாக்குதல் என்னும் பொருட்பொருத்தப்பாட்டிலிருந்து முகிழ்த்த சொல்லாகும்.

பண்ணியன் → பண்ணிகன் → பணிகன் → வணிகன், என்று ஏரணமுறையில் அமைந்த சொல்லாகும்.

உழவினால் விளைக்கப்படும் பொருள்களையும், கைத்தொழிலாற் செய்யப்படும் பொருள்களை வெளிநாட்டிலும், வெளிநாட்டுப் பொருள்களை உள்நாட்டிலும், பரப்பவும், பெரும் பொருளீட்டி நாட்டுச் செல்வத்தை பெருக்கவும், வணிகம் இன்றியமையாத தென்று கண்ட பண்டையவரசர், அதனை ஒல்லும் வாயெல்லாம் ஊக்கி வந்தனர்.

நகரந்தொறும், வணிகர் குழுமம் (Merchant Guild) இருந்தது. நாட்டுப்புற நகராட்சி பெரும்பாலும் நகர வணிகர் கையில் இருந்தது. நகரங்களையெல்லாம் அரசன் நேரடியாக மேற் பார்த்து வந்தனன். தலைமை வணிகனுக்கு எட்டிப் பட்டமும், எட்டிப்புரவும் அளிக்கப்பட்டது. வணிகர் குழுமங்கட்கு வலஞ்சை மணிக்கிராமம் அஞ்சுவண்ணம் முதலிய பட்டங்களும் அளிக்கப்பட்டன.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பே, தமிழர் வணிகத்திற் சிறந்து திகழ்ந்தனர். வணிகம் நிலவணிகம், நீர்வணிகம் என இருவகைப்படும். இருவகை வணிகமும் தமிழகத்தில் தழைத்தோங்கியது. நிலங்கடந்து செய்யும் நில வணிகம் காலிற்பிரிவு என்றும், நீர் கடந்து செய்யும் நீர் வணிகம், கலத்திற் பிரிவு என்றும் கழக இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்கிறோம்.

"முந்நீர் வழக்கம் மகடூவோ டில்லை" என்னும் தொல்காப்பிய நூற்பா, நீர் வகித்திற்கு நற்சான்று நீர்வணிகத்தின் நிமித்தம் படைக்கின்றது. பண்டைத்தமிழர், கடல் கடந்து செல்லுங்கால், மகளிரை உடனழைத்தச் செல்லாமை யென்னும், பண்பாட்டையும் நிறுவுகின்றது.

பத்துப்பாட்டுள், பட்டினப்பாலையும் மதுரைக்காஞ்சியும், பண்டைத் தமிழர் நீர் வணிகத்திலும், நில வணிகத்திலும் ஈடுபட்டுச் செல்வ வளஞ் சிறந்து வாழ்ந்த வரலாற்றினைப் பேசுகின்றன எனலாம்.

வணிகர் *vaṇigar,* பெ.(n.) வணிகன் பார்க்க; see *vaṇigaṉ.*

[பணிகர்→வணிகர்.]

இப்பர், கவிப்பர், பெருங்குடியரென்று மூன்று பாலார் (சீவக.1756, நச்.).

வணிகர்குணம் *vaṇigar-guṇam,* பெ.(n.) வணிகரெண்குணம் (பிங்.) பார்க்க; see *vaṇigareṇguṇam.*

வணிகர்தொழில் *vaṇigar-toḻil,* பெ.(n.) ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகம் என்னும் வாணிகர்தம் அறுவகைத் தொழில் (தொல்.பொருள்.75, உரை); occupations of the *vaiśyā's,* six in number, viz, *ōdal, vēṭṭal, īdal, uḻavu, nirai-y-ōmbal, vāṇigam.*

வணிகரறுதொழில் *vaṇigaraṟu-toḻil,* பெ.(n.) வணிகர்தொழில் (திவா.) பார்க்க; see *vaṇigar-toḻil.*

வணிகரெண்குணம் *vaṇigar-eṇguṇam*, பெ.(n.) தனிமையாற்றல், முனிவிலனாதல், இடனறிந்தொழுகல், பொழுதொடு புணர்தல், உறுவது தெரிதல், இறுவதஞ்சாமை, ஈட்டல், பகுத்தல் என்னும் வாணிகரின் எட்டுக் குணங்கள் (பிங்.); virtues desirable in merchants, eight in number viz., *taṉimai-y-āṟṟal, muṉivilaṉ-ādal, iḍaṉ-aṟindoḻugal, poḻudoḍu-puṇardal, uṟuvadu-teridal, iruvadañjāmai, īṭṭal, paguttal.*

[வணிகர் + எண்குணம்.]

வணிகவியல் *vaṇiga-v-iyal*, பெ.(n.) பொருட்களின் பரிமாற்றத்திற்கு இடையூறாக இருப்பவற்றை நீக்குவதற்கான வழிகளைப் பற்றியும், நிருவாக வரவு, செலவு பற்றியும் மேற்கொள்ளும் படிப்பு; as a subject of study in commerce.

[வணிகம் + இயல்]

வணிகன் *vaṇigaṉ*, பெ.(n.)1. வணிகவினத்தான் (பிங்.); person belonging to the *vaiśyā* caste, trader community. 2. பண்ட விற்பனையாளன்; merchant, trader. 3. துலாவோரை (யாழ்.அக.); libra of the zodiac.

மறுவ. விலைஞன், விற்பவன், செட்டி.

த. வணிகன் > **Skt.** vanija.

[பண்ணியன் → பண்ணிகன் → பணிகன் →வணிகன்.]

ஒருகா. வள் →வணிகம் என்றுமாம்.

வளைவுப் பொருள் வளர்ச்சியைக் குறிக்கும். தனித்தமிழ்ப் பகுப்பான நால்வகை மக்கட்பிரிவில் விற்பனையாளன் 'வணிகன்' என்னுஞ் சொல்லாலேயே தொன்றுதொட்டுக் குறிக்கப்படு கின்றனர்.

(ஒ.நோ.) பண்ணியாரம் →பண்ணிகாரம் → பண்ணியாரம் →பணியாரம். பகு →வகு (வ.வ.2:82).

"வணிகன்" என்னும் சொல், வணிஜ் என்ற வடசொல்லின் திரிபென்று மா.வி. அகரமுதலி குறிப்பிட்டுள்ளது. பண்டமாற்றுப் பொருளினின்று இச்சொல் தோன்றியது என்று வடமொழியாளர் கருதுவது, முற்றிலுங் கற்பனை என்பார் மொழிஞாயிறு.

பண்ணுதல் என்னும் சொல் செய்தல், உண்டாக்குதல், உருவாக்குதல், விளைவித்தல் என்னும் பொருண்மைகளை உள்ளடக்கியது.

இச்சொல்பற்றி மொழிஞாயிறு, வடமொழி வரலாறு–2, பக்கம் 82–83இல் பகர்வது வருமாறு:–

வணிகன் – வணிஜ் (இ.வே.) வணிஜ.

பண்ணுதல் = செய்தல், உண்டாக்குதல், விளைவித்தல், உருவாக்குதல். இச் சொற்கு வடவர் கூறும் பண்டமாற்றுப் பொருள் கற்பனையே.

பண்ணியம் = 1. பண்ணப்பட்ட பொருள், பண்டம்.

"பல்வேறு பண்ணியந் தழீஇத்திரி விலைஞர்" (மதுரைக்.405).

"காம ருருவிற் றாம்வேண்டும் பண்ணியம்" (மதுரைக்.422).

"சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரும்" (மதுரைக்.506).

2. விற்கப்படும் வணிகப் பொருள் :–

"கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழ" (மணிமே.7:24).

பண்ணிய விலைஞர் = பண்டவாணிகர்.

"பெருங்கடல் நீந்திய மரம் வலியுறுக்கும் பண்ணிய விலைஞர்" (பதிற்.76:5).

பண்ணியாரம் → பண்ணிகாரம் = பலபண்டம் (திவா.) தெ. பண்யாரமு.

பண்ணியன் → (பண்ணிகன்) → வணிகன்.

ஒ.நோ. பண்ணியாரம் → பண்ணிகாரம். பண்ணியாரம் → பணியாரம். பகு → வகு.

வணிகன் →வணிகம். வணிகன் → வாணிகன் → வாணிகம். வாணிகன் → வாணியன்.

"வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை" (தொல்.1578).

Guj. vamiyo, baniya, **A.** banyan, **Port.** banian, **E.** banian, banyan.

குமரிக்கண்ட முழுக்கினாலும், முதலிரு கழக இலக்கிய இறந்து பாட்டாலும், பலசொற்களின் வேர்களையும், இணைப்பு அண்டுகளையும் இன்று காட்ட இயலவில்லை.

வணிகன்→ வணிகு (ஒ.நோ.) வேந்தன் (வேய்ந்தோன்) →வேந்து.

"அதன்காண் வணிகொருவ வேந்துனுளன்" (மேருமந்.280).

வணிகு → வணிஜ். இனி, பொருள் பண்ணுபவன் (ஈட்டுபவன்) பணிகன் என்றுமாம்.

"Vaṇij.m. (also written banij) a merchant, trader RV &&" என்பது மா.வி.அ.

[பண்ணியன் → பண்ணிகன் → பணிகன் →வணிகன் (வ.வ.பகுதி 2: 82).]

வணிகு *vaṇigu,* பெ.(n.) வணிகன் 1, 2 பார்க்க; see *vaṇigaṉ. "அதன்கண் வணிகொருவ னுளன்" (மேருமந். 230).*

[வணிகன் →வணிகு.]

(ஒ.நோ.) வேந்தன் (வேய்ந்தோன்)→வேந்து.

த. வணிகு > **Skt.** vaṇij.

"Vaṇij.m. (also written banij) a merchant, trader RV. &&" என்பது மா.வி.அ.

வணிச்சியம் *vaṇicciyam,* பெ.(n.) வணிகம், விற்பனை (யாழ்.அக.); commence, trade.

வணிசம் *vaṇisam,* பெ.(n.) **1.** வணிசை (யாழ்.அக.) பார்க்க; see *vaṇišai.* **2.** எருது; ox.

வணிசை *vaṇišai,* பெ.(n.) கரணம் பதினொன்றுளொன்று (விதான. பஞ்சாங். 29, உரை); a division of time, one of 11 karaṇam.

வணிதம்[1] *vaṇidam,* பெ.(n.) ஆளுகைக்குட்பட்ட திணைநிலப் பகுதி; locality, administrative region. *"சோழங்க நல்லூர் வணிதத்திலே யிருக்கும்படி" (கோயிலொ. 54).*

தெ. வணிதமு.

வணிதம்[2] *vaṇidam,* பெ.(n.) செப்பம் (யாழ். அக.); elegance, handsomeness.

வணை-த்தல் *vaṇai-,* 4 செ.குன்றாவி.(v.t.) தண்ணீர் ஊற்றுதல்; to pour, as water from a pot.

வணை[1]**-தல்** *vaṇai-,* 2 செ.கு.வி.(v.i.) வளைதல் (திருநெல்.); to bend.

வணை[2]**-த்தல்** *vaṇai-,* 4 செ.கு.வி.(v.i.) வளைத்தல் (நெல்லை.); to bend.

வணை[3] *vaṇai,* பெ.(n.) வயிற்றிலுண்டாம் மாட்டு நோய் வகை (Rd.M.24); a cattle-disease affecting the bowels.

வத்தகம் *vattagam,* பெ.(n.) வெட்பாலை (மலை.); conessi bark.

வத்தகி *vattagi,* பெ.(n.) 1. பெருமுள்ளி; large nail-dye. 2. மரமல்லிகை; Indian-cork.

ஒருகா. காட்டுமுள்ளி.

வத்தகுதோதரம் *vattagutōdaram,* பெ.(n.) எருவாய்ச் சுருக்கத்தால் ஏற்படும் வயிற்றுப்பசம்; tympanitis caused by the constriction of the anus.

வத்தகை[1] *vattagai,* பெ.(n.) தருப்பூசணி; water melon.

வத்தகை[2] *vattagai,* பெ.(n.) சருக்கரைக் கொம்மட்டி (இ.வ.); sweet water-melon.

வத்தகோபன் *vatta-kōban,* பெ.(n.) சினங் காப்போன் (யாழ்.அக.); one who has subdued his anger.

[வத்தம் + கோபன்]

வத்தங்கிக்கட்டை *vattaṅgi-k-kaṭṭai,* பெ.(n.) சாயமரச்சக்கை; logwood.

வத்தங்கி *vattaṅgi,* பெ.(n.) சப்பங்கி (M.M. 783); sappan-wood.

[வத்தம் + அங்கி]

வத்தப்பழம் *vatta-p-paḻam,* பெ.(n.) உடலுக்குள் ளிருக்கும் பித்தம் நீக்கும் பழம்; a fruit which reduces bile.

வத்தம்[1] *vattam,* பெ.(n.) 1. வற்றம், உள் வாங்குதல்; drying up, evaporation. 2. கடல் நீர் குறைதல்; reduction in volume of sea water.

வத்தம்[2] *vattam,* பெ.(n.) சோறு; boiled or cooked rice. *"பறவைப் பெயர்படு வத்தம்" (பெரும்பாண். 305).*

வத்தமம் *vattamam,* பெ.(n.) ஆமணக்கு (மலை.); castor plant.

[வத்தம் → வத்தமம்]

வத்தர் *vattar,* பெ.(n.) நுவல்வோன், நூலாசிரியன்; teller, speaker, author of a work.

வத்தராயன் *vattarāyaṉ,* பெ.(n.) 1. வற்ச நாட்டரசன்; king of the vatsa country. 2. தலைவர் சிலர்க்கு வழங்குஞ் சிறப்புப் பெயர் (கல்.); title of certain chiefs or leaders.

வத்தரோதயப்பூடு *vattarōdaya-p-pūḍu,* பெ.(n.) பருத்தி; cotton.

வத்தல்[1] *vattal,* பெ.(n.) பெரிய தோணி; big boat.

ஒருகா. வள்ளம்.

வத்தல்[2] *vattal,* பெ.(n.) வற்றல்; dried vegetables or fruit thereof.

வத்தல்[3] *vattal,* பெ.(n.) 1. வறண்டது; anything dried. 2. உப்பிட்டுலர்த்தியதோர் உணவுப் பண்டம்; fish or vegetable, salted and dried, dried salty food stuff. 3. ஒல்லியானது (கொ.வ.); anything lean or slim.

[வற்றல் → வத்தல்]

வத்தல்[4] *vattal,* பெ.(n.) சிறிய ஓடம் (யாழ்.அக.); small or tiny boat.

[வத்தம் → வத்தல்]

வத்தல்குழம்பு *vattal-kulambu,* பெ.(n.) புளிக்கரைசலில் உப்பிட்டுலர்த்திய வத்தலிட்டுச் செய்த குழம்பு; a sauce of thick tamarind solution with dried vegetable pieces.

[வற்றல்→வத்தல் + குள்→குழ→குழம்பு]

சுவையூட்டுவனவும் உடம்பை வலுப்படுத்து வனவும் நோய் வராது தடுப்பனவுமான மஞ்சள், மிளகு அல்லது மிளகாய் வற்றல், சீரகம், கொத்துமல்லி, தேங்காய் முதலியவற்றை மைபோல் அரைத்துக் கலந்தும் இஞ்சி, வெங்காயம், வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், கருவாப்பட்டை, ஏலம், சோம்பு முதலிய மருந்துச் சரக்குகளை வேண்டுமளவு உசிலை (மசாலை)யாகச் சேர்த்தும் வெந்தபின் புளிக்கரைசலிட்டும் கடுகு, கறிவேப்பிலை முதலிய தூவி எண்ணெயில் தாளித்தும் செய்யப் பெறுவது, குழம்பு.

உப்பேறிய உவர்ப்புடன்கூடிய கசப்பும் வெப்பநாடாம் நம் நாட்டின் இயல்பிற்கேற்ற வளவிலான புளிப்பும் தமிழரின் சுவைமுதிர்ச்சி, நாகரிகம், மருத்துவ அறிவு, உடல்நல உணர்ச்சியை ஒருங்கெடுத்துக்காட்டுவனவாம்.

வத்தலும்தொத்தலுமாக *vattalum-tottalum-āga,* வி.அ.(adv.) உடல் நலிந்து மெலிந்துமாக; in a thin and emaciated condition, being mere skin and bones. *'வத்தலும் தொத்தலுமாக நாலைந்து சிறுவர்கள்'.*

[வத்தலும் + தொத்தலும் + ஆக.]

வத்தவன் *vattavan,* பெ.(n.) வச்ச நாட்டரசன்; king of the vatsa country. *"வடித்தேர்த் தானை வத்தவன் றன்னை" (மணிமே. 15, 62).*

வத்தற்கில்லி *vattar-killi,* பெ.(n.) மஞ்சள் நிறக் குருந்தம் (புட்பராகம்); one of the nine gems-topaz.

வத்தாக்கு[1] *vattākku,* பெ.(n.) ஓர் கொடி; a creeper.

வத்தாக்கு[2] *vattākku,* பெ.(n.) 1. கொம்மட்டி (வின்.); water-melon. 2. சருக்கரைக் கொம்மட்டி (M.M.372); sweet water-melon.

வத்தாகிலுகிலுப்பை *vattā-kilu-kiluppai,* பெ.(n.) வட்டக்கிலுகிலுப்பை பார்க்க; see *vaṭṭa-k-kilu-kiluppai.*

வத்தாங்கி *vattāngi,* பெ.(n.) வத்தேக்கு; caesalpinia sappan.

வத்தாம்பம் *vattāmbam,* பெ.(n.) இலைக் கள்ளி; leafy spurge-*Euphorbia nerifolia.*

வத்தாயி *vattāyi,* பெ.(n.) கிச்சிலி வகை; batavian orange.

வத்தாலை *vattālai,* பெ.(n.) 1. சருக்கரைக் கொம்மட்டி; sweet water-melon. 2. கொம்மட்டி (சங்.அக.); water-melon.

வத்தாலைக்கொடி *vattālai-k-kodi,* பெ.(n.) சருக்கரை வள்ளி (மலை.); sweet potato.

வத்தாவி *vattāvi,* பெ.(n.) பட்டாவியாவி லிருந்து வரும் எலுமிச்சம் பழம்; Batavian lemon.

வத்தாவிப்பூசனி *vattāvi-p-pūšani,* பெ.(n.) நீண்ட வெள்ளைப் பூசணி வகை; a kind of pumpkin, as originally from Batavia.

வத்தாளங்கிழங்கு *vattāḷaṅ-kiḷaṅgu,* பெ.(n.) சருக்கரைவள்ளிக் கிழங்கு (யாழ்ப்.); sweet potato.

வத்தி[1] *vatti,* பெ.(n.) கல் மூங்கில், இது நல்ல மலையில் விளையும்; rough stemmed

shrubby bamboo-oxytenan thera thwaitesi. It is a hard bamboo grown in the Nallamalai hills and Western ghats.

வத்தி² *vatti,* பெ.(n.) 1. திரி; wick. 2. ஊதுவத்தி; joss-stick, incense-stick. 3. மெழுகுவத்தி; candle. 4. தீக்குச்சி (இக். வழ.); match stick. 5. விளக்குத் தகழி (யாழ்.அக.); oil-cup of a lamp. 6. ஆடையின் அருகு (யாழ்.அக.); unwoven end or fringe of a cloth. 7. வரி (யாழ்.அக.); line. 8. மணியின் கீழ்ப்பதிக்கும் வண்ணத் தகடு (யாழ்.அக.); foil.

[பற்றி →பத்தி→வத்தி]

வத்தி⁴-த்தல் *vatti-,* 4 செ.கு.வி.(v.i.) உளதாதல்; to exist. *"பாருற வத்திக்குங் கொடியாள்" (உ..தரரா. அரக்க. 5).*

வத்திகம் *vattigam,* பெ.(n.) ஆரைக்கீரை; a kind of sweet greens grown in Marshy land-*Manasilea qudrifolia.*

வத்திப்பெட்டி *vatti-p-peṭṭi,* பெ.(n.) தீப்பெட்டி (சென்னை. வழ.); match-box.

[வத்தி + பெட்டி]

வத்தியம் *vattiyam,* பெ.(n.) இறப்பு (யாழ். அக.); death.

வத்திரசுரம் *vattira-šuram,* பெ.(n.) பேரா முட்டி; a plant-*Pavonia odorata.*

வத்திரசோதினி *vattira-šōdiṉi,* பெ.(n.) எலுமிச்சை (யாழ்.அக.); sour-lime.

வத்திரதாரு¹ *vattira-dāru,* பெ.(n.) தேவதாரு (சங்.அக.); red cedar.

வத்திரதாரு² *vattira-tāru,* பெ.(n.) செம்புளிச்சை (பச்.மூ.); rosella.

வத்திரதேசி *vattira-dēši,* பெ.(n.) வயிற்றில் வலி யுண்டாக்கி முன்னுண்டது செரிக்கும் சமயத்தில் வயிறுளைந்து கொப்பூழில் வலித்து விம்மிக் காணுமோர் நோய்; a disease which causes intense pain in the navel region or alimentary canal during disgestion of food.

வத்திரபஞ்சகம் *vattira-pañjagam,* பெ.(n.) சிவகரந்தை; sweet basil -*Sphoeranthus seylanica.*

வத்திரவாகு *vattira-vāgu,* பெ.(n.) தேவதாரு (சங்.அக.); red-cedar.

வத்திராட்சம் *vattirāṭcam,* பெ.(n.) அந்தி மந்தாரை (வின்.); four-'o' clock plant.

வத்திரி *vattiri,* பெ.(n.) தோல் வார் (சங்.அக.); leather strap.

வத்திரிகாளிதம் *vattiri-kāḷidam,* பெ.(n.) இடித்த சூரணத்தைத் துணியி லிட்டுச் சலித்தல்; filtering or sieving of powder through a cloth.

வத்திரிசோதினி *vattiri-šōdiṉi,* பெ.(n.) எலுமிச்சை; lime.

வத்திரோணம் *vattirōṇam,* பெ.(n.) பெருமரம் (மலை.); tooth-leaved tree of heaven.

வத்திவை-த்தல் *vatti-vai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. வெடி கொளுத்துதல்; to ignite the fuse. 2. சண்டை மூட்டுதல்; to stir up trouble; to instigate; to create misunderstanding as igniting combustibles. 3. கோட் சொல்லுதல்; to backbite. 4. புண்ணிற்குக் காரம் வைத்தல்; to apply a piece of cloth soaked airth caustic to a sore.

[வத்தி + வை-.]

வத்து *vattu,* பெ.(n.) உவமை (நாமதீப. 675); simile.

வத்துப்பு *vattuppu,* பெ.(n.) கறியுப்பு (யாழ். அக.); common salt.

[வத்து + உப்பு]

வத்துளம் *vattuḷam,* பெ.(n.) 1. வட்டமானது; that which is circular in shape. 2. சக்கரம் (நாமதீப.766); wheel, as of a cart.

[வட்டளம்→வட்டுளம் → வத்துளம்]

வத்தூரம் *vattūram,* பெ.(n.) பொன்னாங்கண்ணி (சங்.அக.); a kind of greens growing in damp fields and ridges thereto.

வத்தேக்கு[1] *vattēkku,* பெ.(n.) 1. சருக்கரைக் கொம்மட்டி; sweet water-melon. 2. கொம்மட்டி (சங்.அக.); a small water-melon.

[வத்தாக்கு → வத்தேக்கு]

வத்தேக்கு[2] *vattēkku,* பெ.(n.) சப்பங்கி மரவகை (வின்.); sappan-wood.

வத்தேந்தி *vattēndi,* பெ.(n.) கதவு நிலைமேல் வைக்குஞ் சுவர்தாங்கி (யாழ்.அக.); lintel.

[வை + ஏந்தி – வைத்தேந்தி → வத்தேந்தி]

வத்தை[1] *vattai,* பெ.(n.) உள்வயிரமற்றது (யாழ்.அக.); pith, soft portion of wood.

[வற்று → வத்து → வத்தை]

வத்தை[2] *vattai,* பெ.(n.) வத்தல்[2] (இ.வ.) பார்க்க; see *vattal.*

வதக்கம் *vadakkam,* பெ.(n.) 1. வாடுகை; fading, withering. *மரத்தில் இலை வதக்கமாயிருக்கிறது (இ.வ.).* 2. இளைப்பு, களைப்பு; fatigue, lassitude, tiredness.

[வதங்கு → வதக்கு → வதக்கம்]

வதக்கல் *vadakkal,* பெ.(n.) வாட்டல்; searching (drying for the remcoval of the structural of constitutional matter from a substance - arefaction), drying and withering of a substance as a result of extreme heat.

[வதங்கல் → வதக்கல்]

வதக்கிக்கட்டல் *vadakki-k-kaṭṭal,* தொ.பெ. (vbl.n.) மருந்திலையை நெருப்பில் காட்டி, பிறகு புண் புரைக்குக் கட்டுகை; bandaging after applying scorched medicinal leaves to abscess, wounds etc.

[வதக்கி + கட்டல்]

வதகனாப்பூ *vadaganā-p-pū,* பெ.(n.) வாடா மல்லிகை பார்க்க; see *vāḍā-malligai.*

வதக்கு–தல் *vadakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. வாட்டுதல், பொரித்தல்; to roast, to dry. *"பன்றி தன்னை யெரியினில் வதக்கி" (பெரியபு. கண்ணப்ப. 117).* 2. வருத்துதல்; to harass, annoy.

[வதங்கு → வதக்கு → வதக்கு–தல்]

வதக்குவதக்கெனல் *vadakku-vadak-keṉal,* பெ.(n.) 1. பக்குவமாகாது ஈரப்பசை யோடிருத்தற் குறிப்பு; being under-boiled or under-fried as greens. 2. மார்பு அடித்துக் கொள்ளுதற் குறிப்பு; palpitation of the heart.

[வதக்கு + வதக்கு + எனல்]

வதங்கல் *vadaṅgal,* பெ.(n.) 1. வாடியது; that which is withered or dried. 2. ஈரப்பசை நீங்காத உணவுப் பண்டம்; under-boiled or under-fried foodstuff. 3. உடல்வலியற்ற–வன்–வள்–து; constitutionally weak person or animal. *"ஆள் வதங்கல்" (உ.வ.).*

[வதங்கு→வதங்கல்]

வதங்கிப்போ–தல் *vadaṅgi-p-pō-,* 8 செ.கு.வி.(v.i.) வாடிப்போதல்; to dry up, to fade, wither. *வதங்கிப் போதல் (பே.வ.).*

வதங்கு–தல் *vadaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. வாடுதல்; to wither, fade, to grow dry. 2. சோர்தல்; to be discouraged or dispirited, to be fatigued.

வதம் *vadam,* பெ.(n.) ஆலமரம்; banyan tree-*Ficus bengalensis.*

[வடம்→வதம்.]

வதரம் *vadaram,* பெ.(n.) இலந்தை மரம் (யாழ்.அக.); jujube tree.

வதரி¹ *vadari,* பெ.(n.) 1. வதரம் பார்க்க; see *vadaram.* 2. சங்கு; conch-shell.

வதரி² *vadari,* பெ.(n.) இலந்தை (சூடா.); jujube-tree.

வதரி³ *vadari,* பெ.(n.) திருமாலுக்குரிய சிறப்புமிகு தவத்தோர் வாழும் தலத்து ளொன்று; a hermitage sacred place to *Vishṇu. "வதரி வணங்குதுமே" (திவ். பெரியதி. 1, 3).*

வதலி¹ *vadali,* பெ.(n.) தடவை, முறை; time, turn. *"அவன் ஒருவதலி வந்தான்" (நெல்லை.).*

வதலி² *vadali,* பெ.(n.) வடலி (G.Tn.D. I. 307) பார்க்க; see *vaḍali.*

வதவடி *vadavaḍi,* பெ.(n.) வதுவடி பார்க்க; see *vadu-vaḍi.*

வதவத *vadavada,* வி.அ.(adv.) ஒன்றை அடுத்து ஒன்றாக, நிறைந்த அளவில்; to an excessive or annoying degree or extent, one after the other consecutively.

வதவதவென்று *vadavada-v-eṉṟu,* பெ.(n.) நிறைந்து வழிகை; over flowing, surplusing in brim of a bowl or vessel or any container.

வதவரிசி *vada-v-ariśi,* பெ.(n.) 1. அரைக் காய்ச்சலான புழுங்கல் (நெல்) அரிசி (வின்.); rice husked from boiled paddy before it is fully dried. 2. ஈரம் படிந்த அரிசி (இ.வ.); rice affected by dampness.

[வதங்கல்→வதவல் + அரிசி.]

வதவல் *vadaval,* பெ.(n.) 1. வாடியது (யாழ். அக.); that which has faded or dried. 2. அரைக்காய்ச்சலானது; that which is partially parched. 3. ஆடு முதலியவற்றின் குடலிலுள்ள செரிமானமாகாத தீனி (இ.வ.); undigested feed in indestive or alimentary canal of sheep etc.

[வதங்கல்→வதவல்.]

வதவலரிசி¹ *vadaval-ariśi,* பெ.(n.) சரியாக காயாத அரிசி; partially dried rice.

[வதவரிசி→வதவலரிசி.]

வதவலரிசி² *vadaval-ariśi,* பெ.(n.) வதவரிசி பார்க்க; see *vada-v-arisi.*

[வதவல் + அரிசி]

வதற்றரு *vatarraru,* பெ.(n.) கறிமுள்ளி; a plant - *Solanum indicum.*

வதறு[1]-தல் *vadaru-,* 2 செ.கு.வி.(v.i.) 1. வாயாடுதல் (வின்.); to chatter, prate; to be talkative. 2. மழலை மொழியாதல்; to lisp, to babble.

தெ. வதறு; க. ஒதறு.

வதறு[2]-தல் *vadaru-,* 2 செ.குன்றாவி.(v.t.) திட்டுதல்; to abuse, scold. *"வாயாலே வதறுகிறவன்" (உ.வ.).*

வதனப்பூடு *vadana-p-pūdu,* பெ.(n.) கரிசலாங் கண்ணி; a prostrate plant-*Eclypta prostata.*

வதனம் *vadanam,* பெ.(n.) வெள்ளைக் காக்கணம்; a twiner bearing white flowers - *Chitoria ternatea (albfloria).*

வதாலகம் *vadālagam,* பெ.(n.) மீன்வகை (சங்.அக.); a kind of fish.

வதாலம் *vadālam,* பெ.(n.) வதாலகம் (சங்.அக.) பார்க்க; see *vadālagam.*

வதி[1]-தல் *vadi-,* 2 செ.கு.வி.(v.i.) 1. தங்குதல்; to dwell, abide; to sojourn, stay. *"வதிமண வம்பலர் வாயவிழ்ந் தன்னார்" (பரிபா. 10, 20).* 2. துயிலுதல்; to sleep. *"ஆற்றா ணினையுநள் வதிந்தக்கால்" (கலித். 126).*

[பதி→வதி.]

வதி[2] *vadi,* பெ.(n.) 1. விலங்கு முதலியன தங்குமிடம்; lair, nest. *"மாவதிசேர" (கலித். 119).* 2. சேறு (பிங்.); mire. *"செங்கயல் வதிக்குதி கொளும் புனலது" (கலித். 126).*

வதி[3] *vadi,* பெ.(n.) 1. வழி (பிங்.); way. *"தனிவதி யியக்கர் காட்ட" (பாரத. அருச்சுனன்றவ. 27).* 2. கால்வாய்; channel, head of a channel. *"முக்கோலக்கலத்தால் வதியட்டிக் கீழ்க்கடை நீர் போவதாகவும்"* (S.I.I.vi, 147).

வதியழி-தல் *vadi-y-ali-,* 2 செ.கு.வி. (v.i.) 1. தங்குதல்; to stay, abide, house. 2. பெருகியிருத்தல்; to be a plenty, to be in abundant growth. *'மாம்பழம் வதியழியுது'.*

[பதி→வதி + அழி-.]

'வள்ளிதாய் (முழுதும்), வதியழி-தல் போன்ற நூற்றுக்கணக்கான சொற்கள் தென்பாண்டி வழக்கிற்கு சிறப்பாகும். ஆதலால் தமிழைச் செவ்வையாய் அறிய வேண்டின் பாண்டி நாட்டுலக வழக்கை ஆராய்தல் வேண்டும் (த.வ.முன்னுரை).

வது *vadu,* பெ.(n.) 1. மணமகள்; bride. வதுவரர். 2. மகனின் மனைவி (யாழ்.அக.); daughter-in-law. 3. மனைவி (யாழ்.அக.); wife.

வதுக்கு *vadukku,* பெ.(n.) 1. மேம்பட்ட நிலை; improved condition, better position. 2. நன்னிலை; good or favourable circumstances. *'வதுக்குப் பெற்றிருக்கிறான்' (வின்.).*

தெ., க. பதுகு.

வதுகி *vadugi,* பெ.(n.) வைக்கோல் (சங். அக.); straw.

[வதகி → வதுகி]

வதுகை *vadugai,* பெ.(n.) மனைவி (யாழ்.அக.); wife.

[வது → வதுகை]

வதுமரம்¹ *vadu-maram,*பெ.(n.) பழமுண்ணிப் பாலை; edible paulay-*Mimusops kanki* (சா.அக.).

வதுமரம்² *vadu-maram,*பெ.(n.) மரவகை (சங்.அக.); a tree.

வதுவடி *vaduvaḍi,*பெ.(n.) உலக்கைப் பாலை (மலை.); wedge-leaved ape-flower.

வதுவர் *vaduvar,*பெ.(n.) வாதுவர் (சூடா.); horse grooms.

[வாதுவர்→வதுவர்]

வதுவை *vaduvai,*பெ.(n.) 1. மணமகள்; bride. *"வதுவை நாறும் வண்டுகம ழைம்பால்" (மலைபடு. 30).* 2. திருமணம்; wedding, marriage. *"எம்மனை வதுவை நன்மணங் கழிகென" (ஐங்குறு. 399).* 3. மண மாலை; wedding garland. *"வானர மகளிர்க்கு வதுவை சூட்ட" (திருமுரு. 117).* 4. நறுமணம் (பிங்.); fragrance. 5. புணர்ச்சி (அக.நி.); sexual union, inter course, copulation. 6. வலுவந்தம் (யாழ். அக.); compulsion; force.

[மருவு→(மவு)→மது→வது→வதுவை.]

வதுவைக்கண்ணி *vaduvai-k-kaṇṇi,* பெ.(n.) பெரியாணங்கை; a kind of plant.

வதுவைக்கணம் *vaduvai-k-kaṇam,* பெ.(n.) மணமக்களின் ஓரைப் பொருத்தம் (வின்.); correspondence or matching in respect of *ōrai* of the bride and bride-groom.

[வதுவை + கணம்]

வதுவைக்கலியாணம் *vaduvai-k-kaliyāṇam,* பெ.(n.) சடங்குகட்குட்பட்ட திருமணம்; marriage as in the form approved by the rituals. *"தன்னகத்து வதுவைக் கலியாணஞ் செய்வான்" (இறை. 23, உரை. பக். 127).*

[வதுவை + கலியாணம்]

வதுவைச்சூட்டணி *vaduvai-c-cūṭṭaṇi,* பெ.(n.) மணமாலை; wedding garland. *"வதுவைச் சூட்டணி வண்டுவாய் திறப்பவும்" (பெருங். உஞ்சைக். 33, 75).*

[வதுவை + சூடு→சூட்டு² + அணி]

திருமண நிகழ்வின்பொழுது மணமக்கள் சூடும் மணமாலை.

வதுவைத்திண்ணை *vaduvai-t-tiṇṇai,*பெ.(n.) திருமண வேதிகை (பிங்.); marriage -dais or platform.

மறுவ. மணமேடை

[வதுவை + திண்ணை]

வதுவைநாற்றம் *vaduvai-nāṟṟam,*பெ.(n.) புதுமணம்; new fragrance. *"வதுவை நாற்றம் புதுவது கஞல" (அகநா. 25).*

[வதுவை + நாற்றம்]

வதுவைமணம் *vaduvai-maṇam,* பெ.(n.) வதுவைக்கலியாணம் பார்க்க; see *vaduvai-k-kaliyāṇam. "நாளை வதுவைமண மென்று நாளிட்டு" (திவ். நாய்ச். 6, 2).*

[வதுவை + மணம்]

இருமனமுமொன்று கலந்த இம்மணம் கரணத்தோடு கூடிய திருமணமாம்.

வதுவைமுளை *vaduvai-muḷai,* பெ.(n.) திருமணத்தில் ஒன்பது தவசங்கள் விதைக்கும் பாலிகை (பிங்.); nine earthen pots in which *oṉbadu-tavašam is* sown and allowed to sprout during marriage.

[வதுவை + முளை]

வதூ *vadū,* பெ.(n.) வது (யாழ்.அக.) பார்க்க; see *vadu.*

[வது → வதூ]

வதூவரர் *vadūvarar,* பெ.(n.) மணமகனும் மணமகளும்; bride and bridegroom.

வதை *vadai,* பெ.(n.) தேன்கூடு (வின்.); honey comb.

[வது→ வதை]

வந்தகணிசம் *vanda-kaṉišam,* பெ.(n.) நீர் குறையும் நேரம்; time frame to dry water.

[மந்த → வந்த + கணிசம்.]

வந்தட்டி *vandaṭṭi,* பெ.(n.) வந்தேறி பார்க்க; see *vandēṟi.* *'வந்தட்டி காக்கெ வரப்பிலெ கம்மாக் காக்கெ கரையிலெ' யென்பது பாண்டி நாட்டு சொலவம்.*

[வா→வந்து+ அண்டி – வந்தண்டி →வந்தட்டி.]

வந்தட்டிவரத்தட்டி *vandaṭṭi-varattaṭṭi,* பெ.(n.) வந்தேறி (இ.வ.) பார்க்க; see *vandēṟi.*

[வந்தட்டி + வரத்தட்டி.]

வந்தடை-தல் *vandaḍai-,* 2 செ.குன்றாவி. (v.t.) இறைவனே வலிய வந்து ஆதனை (ஆன்மாவை) ஆட்கொள்ளுதல்; to unite God voluntarily, with soul.

[வா→வந்து + அடை.]

வந்தணை-தல் *vandaṇai-,* 2 செ.குன்றாவி. (v.t.) வந்தடைதல்; to come near. *"வந்தணைந்து நல்லூரின் மண்ணுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்து எழும் பொழுதில்......" (பெரியபு.).*

[வந்து + அள்→அண்→அண→அணை-.]

வந்ததுகொண்டுவாராததுணர்த்தல் *vandadu-koṇḍu-vārādaduṇarttal,* பெ.(n.) பின் ஒரு வழி வந்தது கொண்டு முன் வாராததொரு பொருளை அறியவைக்கும் தந்திரவுத்தி வகை (தொல். பொருள். 666); a literary device which consists in applying to an earlier statement an implication drawn from a later explicit statement.

வந்ததுவரட்டும் *vandadu-varaṭṭum,* வி.மு. (in.v.) நேரிடுவது நேரிடட்டும்; come what may-voguelagalere.

[வந்தது = இயல்பாய் வருவது. வந்தது + வரட்டும்.]

வந்தமார்க்கம் *vandamārkkam,* பெ.(n.) நாயுருவி (மலை.); a plant growing in hedges and thickets.

வந்தனி *vandaṉi,* பெ.(n.) கோரோசனை (நாமதீப. 393); bezoar of the cow.

வந்தி *vandi,* பெ.(n.) 1. கைவளை (வின்.); bracelet. 2. துன்பம், இடர்; difficulty. வந்தியான உழவு, வந்தியான வேலை. 3. வன்முறை, கட்டாயம் (திவ். நாய்ச். 9, 3, அரும்.); compulsion. 4. கட்டாயமாய் வந்தது (யாழ்.அக.); that which comes through external compulsion. 5. முரண்டு (வின்.); perversity, pertinacity. 6. சண்டை (திவ். நாய்ச். 9, 3, அரும்.); quarrel. 7. ஏணி (யாழ்.அக.); ladder.

வந்திகட்டு-தல் *vandi-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கட்டாயப்படுத்துதல், வற்புறுத்துதல் (யாழ்.அக.); to compel, to force, pressurise.

[வலிந்து→வலிந்தி →வந்தி + கட்டு-தல்]

வந்திகை *vandigai,* பெ.(n.) 1. கைவளை; bracelet. 2. கையில் தோளின்கீழ் அணியப்படும் அணிகலன், தோள்வளை; armlet. *"பணைத்தோள்..... வயக்குறு வந்திகை" (மதுரைக். 415).* 3. நுதலணி வகை (அக.நி.); an ornament worn on the forehead. 4. அணிகலன் (அரு.நி.); ornament.

[வண்டு→ வந்து→ வந்திகை]

வந்தித்தல்[1] *vandittal,* பெ.(n.) ஆடுதின்னாப் பாளை (மலை.); worm-killer.

வந்தித்தல்[2] *vandittal,* பெ.(n.) பங்கம்பாளை; a bitter prostate plant-*Aristolochia bractcata.*

வந்திபற்று–தல் *vandi-parru-,* 5 செ.குன்றாவி. (v.t.) வலிந்து எடுத்துக் கொள்ளுதல்; to obtain or take by force. *"வரிவளையிற் புகுந்து வந்திபற்றும் வழக்குளதே" (திவ். நாய்ச். 9, 3).*

[வலிந்து→வந்து→வந்தி + பற்று–.]

ஒரு செயல் அல்லது வினையின் வன்மை குறித்த வழக்காகும்.

வந்திபீசம் *vandi-pīšam,* பெ.(n.) நேர்வாளம்; croton seed.

வந்திபோடு–தல் *vandi-pōḍu-,* 19 செ. குன்றாவி. (v.t.) கட்டாயமாய்ப் பொறுப்பேற்றுதல் (யாழ்.அக.); to force responsibility upon.

[வலிந்து→வலிந்தி→வந்தி + போடு–.]

வந்தியம்[1] *vandiyam,* பெ.(n.) குத்துப்பிடாரி; a kind of plant.

வந்தியம்[2] *vandiyam,* பெ.(n.) மலட்டுத்தனம்; sterility.

வந்தியிறு–த்தல் *vandi-y-iru-,* 4 செ.குன்றாவி. (v.t.) கட்டாயமாக வற்புறுத்தலுக் குட்பட்டு வரி முதலியன செலுத்துதல் (யாழ்.அக.); to pay tax, etc... under compulsion.

[வலிந்து→ வந்தி + இறு–.]

வந்தியை *vandiyai,* பெ.(n.) வந்திகை[1] பார்க்க; see *vandigai*[1].

[வந்திகை → வந்தியை]

வந்திவாங்கு–தல் *vandi-vāṅgu-,* 5 செ. குன்றாவி.(v.t.) கட்டாயத்திற்குட்படுத்தி வரி முதலியன வாங்குதல் (யாழ்.அக.); to collect tax, etc., using force or destraint.

[வலிந்து→வலிந்தி→வந்தி+ வாங்குதல்]

வந்தீவு *vantīvu,* பெ.(n.) தூத்துக்குடியில், சிறிய மீன்பிடி துறைமுகத்தில் இருக்கின்ற கலங்கரை விளக்கம்; a small island north of Tuticorin, on which there is small fishing beacon.

வந்து[1] *vandu,* பெ.(n.) காற்று; wind. *"வந்தெனக் கந்தனூறு கணைதொடா" (கந்தபு. சூர. வதை. 188).*

[வண்டு→ வந்து = வளைந்து வீசுங்காற்று (வேக.பக்.101).]

வந்து[2] *vandu,* இடை. (part) 1. ஓர் அசைச் சொல்; an expletive. 2. பேச்சில் ஏற்படும் இடைவெளி தெரியாதவாறு இட்டு நிரப்பப் பயன்படுத்தும் ஒருசொல்; a filler in conversation. *"ஏன் இவ்வளவு நேரங்கழித்து வந்தாய்? என்று கேட்டதற்கு, 'அது "வந்து" வீட்டிலிருந்து புறப்பட நேரமாகி விட்டது' என்று இழுத்தாற்போல் பதில் சொன்னான்" (இக்.வ.).*

[வா → வந்து]

வந்துலோ *vandulō*, பெ.(n.) காஞ்சிரை; a tree-*Strychnos nuxvomica* (சா.அக.).

வந்துவம் *vanduvam*, பெ.(n.) பங்கம்பாளை; an ash coloured bitter medicinal prostate plant-*Aristolochia Bracteata* (சா.அக.).

வந்தூலமது *vantūla-madu*, பெ.(n.) வெள்ளூமத்தை; thorn-apple-*Dhatura alba* (சா.அக.).

வந்தேறி *vandēṟi*, பெ.(n.) 1. புதிதாகக் குடியேறியவன்; new-comer, immigrant, new settler. *"வந்தேறிகளாய்த் திருநாள் சேவித்துப் போவாரைப் போலே" (திவ். நாய்ச். 8, 9, வ்யா.).* 2. இடையில் வந்து குடியேறியவர்; that which is introduced from outside; exotic. *"இது வந்தேறி என்று தோற்றா நின்றதிறே" (ஈடு. 5, 1, 5). ஒரு சிலர் தங்களை மண்ணின் மைந்தர்கள் என்றும், பிறரை வந்தேறிகள் என்றும் அழைப்பது வழக்கமாகி விட்டது (இ.வ.).*

[வா → வந்து + ஏறி]

வந்து ஏறுபவர் வந்தேறி எனப்படுவர். வருதல் நாடு தாண்டி நாடு வருதல். ஒரு நாட்டார் மற்றொரு நாட்டிற்கு உரிமை பெறாமல் வருவதும், வந்து நிலைமக்களாகத் தங்கி விடுவதும் 'வந்தேறி' எனப்படுகின்றதாம். நிலை மக்களாக இருப்பவரையும் வந்தேறிகளாக அலை மக்கள் ஆக்கி விடுவர் என்பதற்கு ஈழநாட்டு நிலை எடுத்துக்காட்டாம். வந்தேறிகள் நிலை மக்களாவதற்கு அமெரிக்க, ஆப்பிரிக்க, ஆத்திரேலிய நாட்டு ஆட்சியுடையாளர் சான்றாவர். வருதல், இருத்தல் ஆகியது, வந்தேறுதல் எனப்படுவது குடியேறுதல், குடியேற்றம் போன்ற வழக்காம்.

வந்தேறு-தல் *vandēṟu-*, 5 செ.கு.வி.(v.i.) புதிதாக வந்து குடிபுகுதல்; to come and settle permanently, new settler, to immigrate. *"இருவினைகள் வந்தேற வழியுமில்லை" (தாயு. ஆனந்த. 10).*

'வந்தேறிகள் வஞ்சகர் தமிழால் பிழைத்தார். வளர்ந்தபின் அவரே தமிழை அழித்தார்' என்பது பாவாணரின் பொன்மொழி.

[வா + ஏறி = வந்தேறி → வந்தேறு-.]

வந்தேறுங்குடி *vandēṟuṅ-kuḍi*, பெ.(n.) ஒருரில் புதிதாக வந்து வேளாண்மை செய்யுங் குடியானவன்; immigrant cultivator.

[வந்தேறு + குடி[4]]

வந்தை[1] *vandai*, பெ.(n.) பெருமை (யாழ். அக.); greatness, honour, esteem.

[வா→வந்தை]

வந்தை[2] *vandai*, பெ.(n.) புல்லுருவி; honeysuckle mistletoe.

வந்தை[3] *vandai*, பெ.(n.) வந்திகை பார்க்க; see *vandigai*. *"வந்தைக்கும்..... இரண்டிலை பதியின்றேல்" (சேதுபு.துத்தம.9).*

வப்புக்கல் *vappu-k-kal*, பெ.(n.) செம்பாறைக் கல்; gravel stone.

வப்புகாரம் *vappu-kāram*, பெ.(n.) ஒரு மருந்து வகை; a kind of medicine.

வபபவனம் *vaba-bavaṉam*, பெ.(n.) தொட்டி நஞ்சு; a kind of arsenic.

வம்பக்கோட்டி *vamba-k-kōṭṭi*, பெ.(n.) பயனிற் சொல் பாராட்டுங் கூட்டம்; assembly of men indulging in vain or idle and aimless talk, blabbering crowd. *"வட்டுஞ் சூதும் வம்பக் கோட்டியும்" (மணிமே. 14, 63).*

[வம்பு[1] + கோட்டி[2]]

வம்படி¹–த்தல் *vambaḍi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. வீண்சொல் பேசுதல்; indulge in idle talk or unnessary talk. 2. இன்பமொழி பேசுதல்; to indulge in wanton talk. 3. தீதுரைத்தல்; to speak evil. 4. பழித்துப் பேசுதல்; to talk disparagingly.

[வம்பு + அடி–.]

வம்படி²–த்தல் *vambaḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. இழித்துப் பழிதூற்றுதல் (கொ.வ.); to slander, to throw mud with evil words. 2. தீங்கு செய்தல்; to do harm.

[வம்பு + அடி–.]

வம்பப்பரத்தர் *vamba-p-parattar,* பெ.(n.) பெண்கள் பலரின், சிற்றின்ப புதிய நுகர்ச்சியை விரும்புங் காமுகன்; lascivious men who are ever after fresh victims for their lust. *"வறுமொழியாளரொடு வம்பப்பரத்தரொடு" (சிலப். 16, 63).*

[வம்பு + பரத்தர். வம்பு = புதுமை (பரத்தர் = விலைமகளோடு விளையாடுபவன்)]

வம்பப்பரத்தை *vamba-p-parattai,* பெ.(n.) கழிகாமத்தையுடைய விலைமகள்; lustful mistress or prostitute or harlot. *"வம்பப் பரத்தை வறுமொழியாளனொடு..... குறுகினர்" (சிலப். 10, 219).*

[வம்பு + பரத்தை. பரத்தர் (ஆ.பா.)→பரத்தை (பெ.பா.)]

வம்பம் *vambam,* பெ.(n.) சாலங்க வைப்பு நஞ்சு (யாழ்.அக.); a mineral poison.

வம்பமாக்கள் *vamba-mākkaḷ,* பெ.(n.) புதியோர், வெளிநாட்டவர்; immigrants, newcomers, strangers, foreigners. *"வம்பமாக்கள்..... கட்போருளரெனில்" (சிலப். 5, 111).*

[வம்பு¹ + மாக்கள்]

வம்பமாந்தர் *vamba-māndar,* பெ.(n.) 1. வம்பமாக்கள் பார்க்க; see *vamba-mākkaḷ.* 2. ஒரு கூட்டத்திலுஞ் சேராத மக்கள் (சிலப். 16, 63, அரும்.); nondescript persons.

[வம்பு¹ + மாந்தர்]

வம்பமாரி *vamba-māri,* பெ.(n.) காலமல்லாத காலத்துப் பெய்யும் மழை; unseasonal rains. *"வம்பமாரியைக் காரென மதித்தே" (குறுந். 66).*

[வம்பு¹ + மாரி¹]

வம்பரத்தை *vambarattai,* பெ.(n.) பருத்தி; cotton - *Gossypium herbaceum.*

வம்பல் *vambal,* பெ.(n.) திசை (பிங்.); region, point of the compass.

தெ. வம்பு.

வம்பலன் *vambalaṉ,* பெ.(n.) 1. புதியோன்; new comer, stranger, unknown person. *"வம்பலர் துள்ளுநர்க் காண்மார்" (கலித். 3).* 2. வழிப்போக்கன்; wayfarer, a gypsy or traveller. *"வெங்கால் வம்பலர் வேண்டுபுலத் துறையவும்" (புறநா. 230).* 3. அயலான்; neighbour, alien. *"வம்பலன் றன்னொடு வைகிரு ளொழியாள்" (மணிமே. 20, 88).*

[வம்பு¹ → வம்பலன்]

வம்பலாட்டம் *vambalāṭṭam,* பெ.(n.) குழப்பம் (இ.வ.); confusion, complication, perplexity, puzzlement.

[வன்பு→வம்பு→ வம்பல் + ஆட்டம்]

வம்பள¹–த்தல் *vambaḷa-*,3 செ.கு.வி. (v.i.) வம்படி–, 1, 2, 3, 4 பார்க்க; see *vambaḍi-*.

[வன்பு→வம்பு ¹ + அள–.]

வம்பள²–த்தல் *vambaḷa-*, 3 செ.குன்றாவி. (v.t.) பொல்லாங்குரைத்தல்; to slander, to talk evil. *"அன்னை மாரென்னை வாய் வம்பளக்கின்றதே" (அஷ்டப். அழகரந். 70).*

[வம்பு ¹ + அள–.]

வம்பன் *vambaṉ*,பெ.(n.) 1. பயனற்றவன்; worthless person. *"வம்பனாய்த் திரிவேனை" (திருவாச. 42, 9).* 2. வம்பளப்போன்; gossip-monger. 3. தீய நடத்தையாளன் (யாழ்.அக.); mischievous, wanton person, bad fellow. 4. முறை கேடாகப் பிறந்தவன் (யாழ்.அக.); illegitimate son.

தெ. வம்பு

[வன்பு→வம்பு ¹ → வம்பன்]

வம்பாடு *vambāḍu*, பெ.(n.) கடின உழைப்பு; hard tireless effort.

மறுவ. அரும்பாடு

[வன்பாடு→வம்பாடு.]

வம்பாநிலம் *vambānilam*, பெ.(n.) கடற் கரையை யடுத்த நன்செய்நிலம் (C.G.); arable wet land adjacent to the sea.

வம்பி¹ *vambi*, பெ.(n.) 1. பயனற்றவள்; worthless or useless woman. 2. வம்பளப்பவள்; gossip-monger. 3. கெட்ட நடத்தையுள்ளவள்; mischievous, wanton woman. 4. முறைகேடாகப் பிறந்தவள்; illegitimate daughter.

[வம்பன் → வம்பி]

வம்பி² *vambi*,பெ.(n.) கருவண்டு (யாழ்.அக.); black bee.

வம்பு¹ *vambu*,பெ.(n.) 1. புதுமை (பிங்.); newness, novelty. *"வம்பப் பதுக்கை" (புறநா.3).* 2. நிலையின்மை; instability. *"வம்புநிலை யின்மை" (தொல். சொல். 327).* 3. பயனிலாமை, மதிப்பின்மை; uselessness; worthlessness, dishonour. *"வம்பு பழுத்து" (திருவாச. 40, 6).* 4. வீண் பேச்சு (கொ.வ.); idle-talk; gossip. 5. பழிமொழி; scandal. *"ஊரார் புகல் வம்பே" (வெங்கைக்க.18).* 6. தீச்சொல்; evil word. *"வெறிதே வம்புரைத்தனை" (கந்தபு. சூரன்வதை. 157).* 7. படிறு (பிங்.); falsity, untruthfulness. 8. சிற்றொழுக்கம் (நாமதீப. 650); base conduct. 9. இழிச்சொல் (யாழ். அக.); indecent language. 10. வஞ்சனை (பிங்.); deceit, slyness. 11. காமக் களியாட்டம்; wanton act; dalliance. *"அவளொடு வம்பு பண்ணினான்".* 12. சண்டை; quarrel. *"அவன் ஒருவரோடும் வம்புக்குப் போகிறதில்லை".* 13. வம்பமாரி பார்க்க; see *vamba-māri*. *"வம்பார் சிலம்பா" (திருக்கோ.159).* 14. வம்புக்காய் பார்க்க; see *vambu-k-kāy*. 15. வம்புப் பிள்ளை (யாழ்ப்.) பார்க்க; see *vambu-p-piḷḷai*. 16. உவமை; comparison, similitude. *"வம்பிறு சிவனிடத்து" (ஞானா. 68, 12).* 17. அரைக் கச்சு; girdle, belt for the waist. *"வம்புடை யொள்வாண் மறவர்" (பு.வெ.6, 24).* 18. யானைக்கச்சு; girth of an elephant. *"வம்பணி யானை" (புறநா. 37).* 19. முலைக் கச்சு (பிங்.); stays for woman's breast. *"வம்புடைக் கண்ணுருத் தெழுதரு முலை" (அகநா. 150).* 20. கையுறை; glove. *"வம்புகளை வறியாச் சுற்றம்" (பதிற்றுப்.19, 9).* 21. மேற்போர்வை (அரு.நி.); upper garment. 22. மிடா (யாழ்.அக.); a big earthen vessel. *"வம்பைச் சமைத்து வடிவுகண்டு" (கூளப்ப. 193).*

வம்பு[2] *vambu,* பெ.(n.) நறுமணம்; smell, fragrance. *"வம்பறா வரிவண்டு" (தேவா. 737:5).*

வம்பு[3] *vambu,* பெ.(n.) 1. பல்லக்கின் வளை கொம்பு (இ.வ.); curved bamboo-pole of a Palanquin. 2. புரசமரம்; satin wood. 3. கலப்பை, வண்டியிவற்றின் நுகங்கொளுவும் உறுப்பு; shaft, as of a plough or of a carriage; thill.

தெ. வம்பு; க. பம்பு.

[வள் →வட்கு →வக்கு →வங்கு →வம்பு. வம்பு = வளைவு; (ஒ.நோ.) தீங்கு →தீம்பு.]

வம்புக்கச்சேரி *vambu-k-kaccēri,* பெ.(n.) வம்பளந்து, வீண்பேச்சுப் பேசிப் பொழுது போக்கும் கூட்டம்; gossiping crowd, company gathered for idle talk, blabbers.

[வம்பு + U. kacceri > த. கச்சேரி]

வம்புக்காய் *vambu-k-kāy,* பெ.(n.) பருவந் தப்பிக் காய்க்குங் காய் (யாழ்.அக.); fruit growing out of season.

[வம்பு + காய்]

வம்புச்சண்டை *vambu-c-caṇḍai,* பெ.(n.) வலியச் சென்று ஏற்படுத்தும் சண்டை; quarrel which one picks up wontonly. *வம்புச் சண்டைக்குப் போகாதே வந்த சண்டையை விடாதே (பழ.).*

[வன்பு →வம்பு + சண்டை]

வம்புத்தனம் *vambu-t-taṉam,* பெ.(n.) 1. குறும்பு (சங்.அக.); mischief. 2. வீண் பேச்சு; gossip. 3. வஞ்சகம் (யாழ்.அக.); fraud, deceit, slyness, craftiness.

[வம்பு[1] + தனம்[1]. தனம் = பண்புணர்த்தற் பொருட்டு வந்த சொல்லாக்க ஈறு.]

வம்புதும்பு[1] *vambu-tumbu,* பெ.(n.) வீண் வம்பு; unnecessary interference. *"அவன் யாருடைய வம்புதும்புக்கும் போக மாட்டான்" (மரபிணைமொழி).*

வம்புதும்பு[2] *vambu-tumbu,* பெ.(n.) 1. வீண் பழிச்சொல்; scandal and gossip. 2. மதிப்புரவற்ற சொல் (வின்.); ribaldry. 3. குறும்புத்தனம் (இ.வ.); mischief.

[வம்பு[1] + தும்பு[1]]

வம்புப்பாளை *vambu-p-pāḷai,* பெ.(n.) பருவந் தப்பிய பாளை (யாழ்.அக.); spathe opening out of season.

[வம்பு[1] + பாளை[1]]

வம்புப்பிள்ளை *vambu-p-piḷḷai,* பெ.(n.) முறைகேடாகப் பிறந்த குழந்தை (வின்.); bastard, illegitimate child.

[வம்பு + பிள்ளை]

வம்புப்பிறப்பு *vambu-p-piṟappu,* பெ.(n.) ஒழுக்கங்கெட்டவளிடம் பிறக்கை (யாழ்.அக.); birth out of wedlock, illegitimate birth.

[வம்பு + பிறப்பு]

வம்புப்பேச்சு *vambu-p-pēccu,* பெ.(n.) வீண் பேச்சு (யாழ்.அக.); idle talk, gossip, empty chat.

[வம்பு + பேச்சு]

வம்புமரம் *vambu-maram,* பெ.(n.) குற்ற வாளிகளைக் கட்டி வைத்தடிக்கும் குறுக்கு மரவகை (வின்.); a kind of slant-tree to which criminals are tied when whipped.

[வன்பு → வம்பு[2] + மரம்]

வம்புவளர்-த்தல் *vambu-vaḷar-*, 4 செ.கு.வி. (v.i.) வம்பள-த்தல் பார்க்க; see *vambaḷa-*.

[வம்பு ¹ + வளர்-.]

வம்மரம் *vammaram,* பெ.(n.) வன்மரம் (வின்.) பார்க்க; see *van-maram.*

[வன்மை + மரம் = வம்மரம்]

வம்மரை *vammarai,* பெ.(n.) வம்மரம் (L.) பார்க்க; see *vammaram.*

[வம்மரம்→வம்மரை]

வம்மி *vammi,* பெ.(n.) மரவகை; guinea peach.

வம்மை *vammai,* பெ.(n.) பெற்றோர் மண மகட்குக் கொடுக்குஞ் சீர்; presents given to a bride by her parents on the occasion of wedding. *"வம்மை வரிசை" (இ.வ.).*

[வண்மை → வம்மை]

வமனி *vamaṉi,* பெ.(n.) 1. அட்டை (சங்.அக.); leech. 2. பருத்திச்செடி; cotton plant.

வமிசரோசனை *vamiša-rōšaṉai,* பெ.(n.) மூங்கிலுப்பு bamboo-salt.

[வமிசம் + ரோசனை]

வமைச்சு *vamaiccu,* பெ.(n.) இளமை (அக. நி.); youth.

வய¹-த்தல் *vaya-,* 4 செ.குன்றாவி.(v.t.) விரும்புதல்; to wish for, to desire. *"வயந்தே யுமக்காட் செய்து" (தேவா. 946. 7).*

வய² *vaya,* பெ.(n.) 1. ஆற்றல், வலி; strength, power. *"வயத்தணிந் தேகு" (பரிபா. 11, 40). "வய வலியாகும்" (தொல்.849).* 2. மிகுதி; increase, abundance, surplus.

வயக்கம் *vayakkam,* பெ.(n.) 1. ஒளி, வெளிச்சம்; brightness, light. *"வெண்ணிற வயக்க மாண்டது" (தணிகைப்பு. திருநாட். 15).* 2. ஒளிவட்டம் (யாழ்.அக.); halo.

[வயங்கு→வயக்கு→வயக்கம்]

வயக்கல்¹ *vayakkal,* பெ.(n.) பண்படுத்தம் பெறா நிலத்தை திருத்தி, பயிர் செய்வதற்குரிய வகையில் பண்படுத்தல்; convert the waste land, fit for cultivation. *"திடல் வயக்கிய நிலம்" (தெ. கல். தொ. 8, கல். 660). "கல்லி வயக்கின நிலம்" (தெ. கல். தொ. 8. 655, 681).*

[வசக்கு→வசக்கல்→ வயக்கல்]

வயக்கல்² *vayakkal,* பெ.(n.) வயல் (இ.வ.), கழனி; paddy field, agricultural tract, cultural land.

[வயக்கு → வயக்கல்]

வயக்கு¹-தல் *vayakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. விளங்கச் செய்தல்; to cause to shine. 2. திருத்துதல் (கல்.); to improve, reclaim as land.

[வயங்கு → வயக்கு → வயக்கு-.]

வயக்கு²-தல் *vayakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) பழக்குதல் (யாழ்.அக.); to tame, break in.

Ma. vayakkuga; Kol. vay; Nāk. vay.

[வசக்கு ¹ → வயக்கு-தல்]

வயக்கு³ *vayakku,* பெ.(n.) ஒளி, வெளிச்சம்; brightness, splendour, light. *"வயக்குறு மண்டிலம்" (கலித். 25).*

[வயங்கு → வயக்கு]

வயக்கேதனம் *vayakkētaṉam,* பெ.(n.) காட்டு மிளகாய்; wild chilly.

வயகாண்டகம் *vaya-kāṇḍagam,* பெ.(n.) வயகுண்டம் பார்க்க; see *vaya-kuṇḍam.*

வயகுண்டம் *vaya-kuṇḍam,* பெ.(n.) 1. கவிழ்ந்து பூக்கும் தும்பை வகை; a low annual plant flourishing in dry localities. 2. மலைத் தும்பை; hill toombay.

வயகுண்டலி *vaya-kuṇḍali,* பெ.(n.) வய குண்டம் பார்க்க; see *vaya-kuṇḍam.*

வயங்கல் *vayaṅgal,* பெ.(n.) உருவம் காட்டும் கண்ணாடி; mirror, as bright. *"மணிபுரை வயங்கலுட் டுப்பெறிந் தவைபோல" (கலித். 33).*

[வயங்கு → வயங்கல்]

வயங்கு-தல் *vayaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. ஒளி செய்தல்; to shine, gleam, glitter. *"வயங்கொளி மண்டிலம்" (அகநா.11).* 2. விளங்குதல்; to be resplendent. *"வயங்கிய கற்பினாள்" (கலித்.2).* 3. தெளிதல்; to be clear, lucid, as water. *"வயங்கொலி நீர்" (பு.வெ.2,14).* 4. தோன்றுதல்; to be exhibited. *"வயங்காக் கூத்து வயங்கியபின்" (சீவக. 2704).* 5. மிகுதல்; to abound. *"அணிநிழல் வயங்கு..... மதி" (பரிபா. 3, 51).* 6. நடத்தல் (யாழ்.அக.); to walk, go.

[வயங்கு → வயங்கு-தல்]

வயச்சம் *vayaccam,* பெ.(n.) குழலா தொண்டை; a plant-*Capparis aphylla.*

வயசத்து *vaya-šattu,* பெ.(n.) பலகல்லு சத்து; the essence of several stones.

வயஞானம் *vaya-ñāṉam,* பெ.(n.) உண்மை யறிவு; real knowledge. *"வயஞானம் வல்லார் மருகற் பெருமான்..... அடியுள்குதலால்" (தேவா. 662, 11).*

*[வய + ஞானம். **Skt.** ñaṉa > த. ஞானம்.]*

வயணம் *vayaṇam,* பெ.(n.) 1. வழி, வகை, பான்மை (வின்.); manner, method, way. 2. நிலைமை (வின்.); circumstance, condition. *'அதன் வயணமென்ன'?* 3. தெளிவான விளக்கம்; clear details, particulars. *"வயணமாய்ப் பேசினான்".* 4. உணவு முதலியவற்றின் வளம்; sumptuousness. *'வயணமாய்ச் சாப்பிடுகிறவன்'.* 5. நல்லமைப்பு; good, agreeable condition. *'குழம்பு வயணமாயிருக்கிறது' (வின்.).* 6. சீர்மை (வின்.); neatness. 7. ஏற்றது; favourableness, suitability. *'காற்று வயணமாயிருக்கிறது'.* 8. காரணியம்; reason, cause. *'அப்படிச் செய்ததின் வயணம் என்ன' (இ.வ.).*

Ka. vaina; **Tu.** vayana; **Te.** Nayinamu.

[வசம் →வயம் →வயன் →வயனம் →வயணம்.]

வயத்தம்பம் *vayattambam,* பெ.(n.). இளமை மாறாமல் நிறுத்தும் வித்தை; art of arresting the influence of advancing age in a person. *"இகலிலா வயத்தம்ப மென் றின்னவை செய்தும்" (திருவிளை. எல்லாம். 17).*

*[வயம் + தம்பம். **Skt.** stamlbha > த. தம்பம்.]*

வயத்தன் *vayattaṉ,* பெ.(n.) வசப்பட்டிருப்பவன் (யாழ்.அக.); one brought to a state of subjection.

[வசம் →வயம் → வயத்தன்]

வயதரம் *vayadaram,* பெ.(n.) கடுக்காய் (மலை.); chebulic myrobalan.

[வய + தரம்]

வயதெற்றி *vayaterri,* பெ.(n.) திப்பிலி (சங். அக.); long-pepper.

[வயவெற்றி → வயதெற்றி.]

வயதேகி *vaya-tēgi,* பெ.(n.) வயதெற்றி பார்க்க; see *vayaterri.*

வயநாட்டுச்சிரிப்பான் *vaya-nāṭṭu-c-cirippāṉ,* பெ.(n.) பறவை வகையு ளொன்று; wayanad laughing thrush-*Garrulax delessert.*

இப்பறவை நீலமலை, கொடைக்கானல் சார்ந்த மலைப் பகுதிகளிற் காணப்படும். 23 விரலம் உயரம் வரை வளரும் தன்மைத்து. உடலின் மேற்பகுதி செம்பழுப்பு நிறமும், கீழ்ப்பகுதி சாம்பலும், பழுப்பு நிறமுங் கலந்து காணப்படும். புழு, பூச்சிகளை உட்கொண்டு, 2 முதல் 3 முட்டைகளிட்டு, தன்னுடைய இனத்தைப் பெருக்கும்.

வயநிமிளை *vaya-nimiḷai,* பெ.(n.) அஞ்சனக்கல்; sulphurate of antimony.

வயப்படு-தல் *vaya-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) வசமாதல்; to be brought under another's influence; to be subjugated. *"தீமையுடையார் வருந்தினா ரென்றே வயப்படுவதுண்டோ" (பழமொ. 110).*

[வசம் →வயம் + படு-.]

வயப்பயறு *vaya-p-payaṟu,* பெ.(n.) 1. நரிப்பச்சைப் பயறு; jackal green gram - *Rothia trifoliata* (சா.அக.). 2. எலிப்பயறு; rat gram. 3. கொல்லைப்பயறு; garden pulse. 4. பனிப் பயறு; dew pulse.

[வயல் + பயறு]

வயப்புலி *vaya-p-puli,* பெ.(n.) அரிமா (திவா.); lion. *"வயப்புலியை வாலுருவி விடுகின்றீரே" (பாரத. சூதுபோர். 265).*

[வய + புலி. வய = வலிமை, ஆற்றல். புலி = அரிமா (அக.நி.)]



வயப்போத்து *vaya-p-pōttu,* பெ.(n.) அரிமா (பிங்.); lion.

[வய + போத்து]

வயம்¹ *vayam,* பெ.(n.) 1. வலி (நாமதீப. 793); power, might. 2. வெற்றி; victory, conquest. *வலம்புரி வயநேமியவை" (பரிபா. 15, 59).*

[வய→வயம். வலம்→வயம் (சு.வி.16).]

வயம்² *vayam,* பெ.(n.) நிலம்; earth. *"வயமுண்ட மாலும்" (தேவா. 69, 9).*

[வையம் → வயம்]

வயம்³ *vayam,* பெ.(n.) வேட்கை; desire. *"வயந்தலை கூர்ந்தொன்றும் வாய்திறவார்" (திருக்கோ. 383).*

Ka. bayake, bay(i)ke, bavake; **Tu.** bayakini; **Te.** vācu; **Go.** wassāvā.

[வயா → வயம்]

வயம்[4] *vayam,* பெ.(n.) பறவை (பிங்.); bird.

வயம்[5] *vayam,* பெ.(n.) 1. வசம்; state of subjugation. *"வயங்கொள நிற்பதோர் வடிவினை யுடையார்" (தேவா.1133, 2).* 2. மூலம்; means, agency. *"வையை வயமாக வை" (பரிபா. 6, 78).* 3. தொடர்பு (அரு.நி.); connection. 4. ஏற்றது, பொருத்தமானது; suitability. *"காற்று வயமா யிருக்கிறது" (உ.வ.).*

[வசம் → வயம்.]

(ஒ.நோ.) நேசம்→நேயம். தேசம்→தேயம் ச→ ய = திரிபு.

வயம்[6] *vayam,* பெ.(n.) நீர் (பிங்.); water.

[பயம் → வயம்]

வயம்[7] *vayam,* பெ.(n.) குதிரை (யாழ்.அக.); horse.

[அயம் → வயம்]

வயம்[8] *vayam,* பெ.(n.) 1. முயல் (பிங்.); hare. 2. கராம்பூ (சங்.அக.); clove.

வயமது *vayamadu,* பெ.(n.) சீந்தில் (சங். அக.); gulancha.

வயமம் *vayamam,* பெ.(n.) அத்தி (சங்.அக.); country fig.

வயமா *vaya-mā,* பெ.(n.) 1. அரிமா (பிங்.); lion. *"ஞெலிகழை முழங்கழல் வயமா வெரூஉங் குன்று" (ஐங்குறு.307).* 2. மடங்கல் மாதம்; the month of *āvaṇi*. *"வயமா கனிக்குங் கோற்றேட்கு நன்னான்கு" (தைலவ. பாயி. 55).* 3. புலி (பிங்.); tiger. *"குன்றில் வயமா முழங்க" (சீவக. 2778).* 4. யானை; elephant. *"வயமாத் தானவாரியும்" (கம்பரா. ஊர்தேடு. 17).* 5. குதிரை; horse. *"பணைநிலை முணைஇய வயமாப் புணர்ந்து" (ஐங்குறு. 449).*

[வய + மா. வய = வலிமை, ஆற்றல்.]

வயமான் *vaya-māṉ,* பெ.(n.) வயமா, 1 பார்க்க; see *vaya-mā*. *"அரும்பொறி வயமானனையை" (பதிற்றுப். 75,2).* 2. வயமா, 3 பார்க்க; see *vaya-mā*. *"முணங்கு நிமிர் வயமான் முழுவலி யொருத்தல்" (புறநா. 52).*

[வய + மான்]

வயமீன் *vaya-mīṉ,* பெ.(n.) சகடெனும் (உரோகணி) நாண்மீன்; the fourth naksatra.

[வய + மீன்]

வயல் *vayal,* பெ.(n.) 1. கழனி; paddy field. *"வளவய லூரர" (நாலடி, 367).* 2. மருத நிலம் (சூடா.); agricultural tract. 3. வெளி (பிங்.); open space; plain.

மறுவ. பற்று

தெ., க., து. பயல்; ம. வயல்.

Koi. ve-gad; **Kod.** bell.

[வயம் → வயல்]

வயல்கதிர்க்குருவி *vayal-kadir-k-kuruvi,* பெ.(n.) குருவி வகையுளொன்று; paddy field warbler - *Acrocephalus agricola.*

[வயல் + கதிர்க்குருவி]

நீர்வளம் கொண்ட நெல்வயல், புதர், கருப்பங்காடு ஆகியப் பகுதிகளிற் காணப்படும்

இவை எறும்புகள், சிறு வண்டுகள் முதலியவற்றை உணவாகக் கொண்டு வாழும் தன்மைத்து. 13 விரலம் உயரம் வரை வளரும். தமிழகத்தில் இனப்பெருக்கம் மேற்கொள்வதில்லை.

வயல்சுற்றித்திரிவான் *vayal-šuṟṟi-t-tirivāṉ,* பெ.(n.) கொக்கு; a paddy bird-stork.

[வயல் + சுற்றி + திரிவான்]

வயல்சூழ்சோலை *vayal-šūḻ-šōlai,* பெ.(n.) இளமரக்கா (பிங்.); grove.

[வயல் + சூழ் + சோலை]

வயல்நண்டு *vayal-naṇḍu,* பெ.(n.) கழனியில் வாழும் நண்டு; field crab.

[வயல் + நண்டு]

வயல்நரி *vayal-nari,* பெ.(n.) நரிவகையு ளொன்று; a kind of field jackal.

மறுவ. வளைநரி, குள்ளநரி.

[வயல் + நரி.]

வயற்புறத்தே வாழும் நரி. இந்நரி வயல்களில் விளையும் காய்கறி, கிழங்குகளையும், பிற உயிரிகளையும் உண்டு வாழுந் தன்மைத்து. சாம்பசிவ மருத்துவ அகரமுதலியில், இந்நரியின் பெயர், வளைநரி என்று குறிக்கப்பட்டுள்ளது.



வயல்நீர் *vayal-nīr,* பெ.(n.) நெற் கழனி யிலிருக்கும் தண்ணீர், இதனால், வெள்ளை, மூர்ச்சை, சுரம் இவை நீங்கும்; water in the paddy field.

[வயல் + நீர்].

வயல்நெட்டி[1] *vayal-neṭṭi,* பெ.(n.) கழனி யோரத்தில் வளரும் நீர்நெட்டி; pith growing near fields.

[வயல் + நெட்டி. நெட்டி = கோரை.]

வயல்நெட்டி[2] *vayal-neṭṭi,* பெ.(n.) நெட்டி வகை (மூ.அ.); a species of sola pith.

[வயல் + நெட்டி]

வயல்பாய்ச்சல் *vayal-pāyccal,* பெ.(n.) வயல் முகமாக அமைந்த வீடு; paddy field view house.

[வயல் + பாய்→பாய்ச்சல்]

வயல்மாதுளை *vayal-māduḷai,* பெ.(n.) மாதுளை வகை (மூ.அ); a species of pomegranate.

[வயல் + மாதுளை]

வயல்முருங்கை *vayal-muruṅgai,* பெ.(n.) செடிவகை (நாஞ்.); a plant.

[வயல் + முருங்கை]

வயல்மெருகு[1] *vayal-merugu,* பெ.(n.) ஒரு வகை மெருகன்கிழங்கு; a kind of bulbous root.

[வயல் + மெருகு]

வயல்மெருகு[2] *vayal-merugu,* பெ.(n.) மெருகஞ் செடிவகை (மூ.அ.); a species of arum.

[வயல் + மெருகு[2]]

வயல்மேடு *vayal-mēḍu,* பெ.(n.) வயலை விடச் சற்று உயரமான இடம்; threshing ground (a little elevated from the ground).

மறுவ. களத்துமேடு, திடல்.

[வயல் + மேடு]

வயற் பகுதிகளில் நெற்கதிர்களை அடிப்பதற்கு பயன்படுத்தப்படும் மேட்டுப் பகுதி.

வயல்வெளி *vayal-veḷi,* பெ.(n.) வயலும், வயல் சார்ந்த இடமும்; agricultural tract.

மறுவ. மருதநிலம்.

[வயல் + வெளி.]

வயலும், வயலையொட்டி நெற்கதிரடித்தற் கென்று அமைந்த மேட்டு நிலப்பகுதியுமாம்.

வயல்வேளை *vayal-vēḷai,* பெ.(n.) வயலி பார்க்க; see *vayali.*

[வயல் + வேளை]

வயலம்மான்பச்சரிசி *vayal-ammāṉ-paccariśi,* பெ.(n.) 1. சிற்றம்மான் பச்சரிசி (வின்.); thyme-leaved spurge. 2. வட இந்தியா (வின்.) northern India.

[வயல் + அம்மான் + பச்சரிசி]

வயலுக்குள்ளழகானவல்லி *vayalukkuḷ-ḷ-aḻagāṉa-valli,* பெ.(n.) வல்லாரை; Indian penny wort-*Hydrocotyle asiatica.*

வயலுப்பு *vayaluppu,* பெ.(n.) வளையலுப்பு பார்க்க; see *vaḷaiyal-uppu.*

வயலெலி *vayal-eli,* பெ.(n.) வயலில் வாழும் எலி; field rat.

[வயல் + எலி]

கதிர்களையும், குருத்தையும் தின்றழித்து வயலில் வாழும் எலி.



வயலை¹ *vayalai,* பெ.(n.) பசலைக்கொடி; purslane. *"மனைநடு வயலை வேழஞ் சுற்றும்" (ஐங்குறு. 11).*

தெ. பட்டலி; க. பயலு.

[பசலை → வயலை]

வயலை² *vayalai,* பெ.(n.) வெளி (தஞ்சைவா. 333, உரை); open space; plain.

தெ. பைலு; க. பயலு.

[வயல் → வயலை]

வயவரி *vaya-vari,* பெ.(n.) புலி (திவா.); tiger.

[வய + வரி]

வயவன்¹ *vayavaṉ,* பெ.(n.) கருமை நிறமும் பிளந்த வாலுமுடைய கரிக்குருவி; a small black bird.

வயவன்² *vayavaṉ,* பெ.(n.) 1. வீரன், வலிமிக்கவன்; strong man, valiant man. *"வயவர்வேந்தே" (பதிற்றுப்.15, 21).* 2. திண்ணியன் (சூடா.); man of robust build. 3. படைத்தலைவன்; commander. *"வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு" (சிறுபாண். 249).* 4. கணவன் (சூடா.); husband. 5. காரிப் பிள்ளை (பிங்.); king-crow.

[வய → வயவன். வய = வலிமை, ஆற்றல்.]

வயவாசம் *vaya-vāšam,* பெ.(n.) கொழுஞ்சி; a plant-zanzibar indigo-*Tephrosia purpurea.*

வயவு[1] *vayavu,* பெ.(n.) கருப்பம்; womb.

[வயா → வயவு.]

வயவு[2] *vayavu,* பெ.(n.) வலிமை; strength. *"தாவா தாகு மலிபெறு வயவே" (பதிற்றுப். 36, 2).*

தெ. வலபு.

[வய → வயவு]

வயவு[3] *vayavu,* பெ.(n.) 1. கருப்பகாலத் துண்டாம் மசக்கை முதலியன; morning sickness and morbid longings of a pregnant woman. *"வயவுறு மகளிர்" (புறநா. 20).* 2. விருப்பம், ஆசை, அன்பு; desire, love, affection. *"வயவேற நனிபுணர்மார்" (பரிபா.11, 67).*

[வயா → வயவு]

வயவுநோய் *vayavu-nōy,* பெ.(n.) வயா நடுக்கம் பார்க்க; see *vayā-naḍukkam. "வயவுநோய் நலிதலின்" (கலித். 29).*

[வயவு + நோய்]

வயவெற்றி *vayaverṟi,* பெ.(n.) திப்பிலி (மலை.); long-pepper.

வயவை *vayavai,* பெ.(n.) வழி, பாதை (திவா.); way, path, track.

[வயம் →வயவை.]

வயளை *vayaḷai,* பெ.(n.) பசளை; a kind of greens-Spinach- *Spinacia deracea.*

[வயலை → வயளை]

வயற்கடைதூரம் *vayaṟ-kaḍai-tūram,* பெ.(n.) வயலளவுள்ள தூரம் (G.Tj.D.I. 344); a field's length or distance, considered a unit to indicate distance.

[வயல் + கடை + தூரம்]

வயற்கரந்தை *vayaṟ-karandai,* பெ.(n.) திரு நீற்றுப் பச்சை (வின்.); a kind of basil.

[வயல் + கரந்தை]

வயற்கரை *vayaṟ-karai,* பெ.(n.) 1. வயலுள்ள பகுதி; tract of wet lands. 2. வயல் (வின்.); paddy field.

[வயல் + கரை. கரை = நஞ்சைநிலம், செய்வரம்பு.]

வயற்கல் *vayaṟ-kal,* பெ.(n.) வெள்ளைச் சுக்கான் கல்வகை (மூ.அ.); a kind of white gravel.

[வயல் + கல்]

வயற்கள்ளி *vayaṟ-kaḷḷi,* பெ.(n.) பொரிப் பூண்டு (சங்.அக.); water-thorn.

[வயல் + கள்ளி[1]]

வயற்காடு *vayaṟ-kāḍu,* பெ.(n.) வயற்கரை பார்க்க; see *vayaṟ-karai.*

மறுவ. வயற்சார்பு

[வயல் + காடு]

வயலும் வயல் சார்ந்த நிலப்பரப்பு 'வயற்கரை' யெனவும் 'வயற்கா'டெனவும் சொல்லப்பெறும்.

வயற்கொடுக்கி *vayaṟ-koḍukki,* பெ.(n.) ஒரு வகைச் செடி (வின்.); a herbaceous plant.

[வயல் + கொடுக்கி]

வயற்கோலியன் *vayar-kōliyaṉ*, பெ.(n.) பாம்பு வகை (யாழ்.அக.); a kind of snake.

[வயல்+கோல் = வயற்கோல் → வயற்கோலியன்]

வயற்கோவி *vayar-kōvi*, பெ.(n.) வெண் தேக்கு; a tree, white teak (சா.அக.).

வயற்சார்பு *vayar-cārbu*, பெ.(n.) மருத நிலம் (வின்.); agricultural tract.

[வயல் + சார்பு]

வயற்சுள்ளி *vayar-culli*, பெ.(n.) பொரிப் பூண்டு (யாழ்.அக.); water-thorn- *Lepidagathes cristata.*

[வயல் + சுள்ளி]

வயற்சூலம் *vayar-cūlam*, பெ.(n.) உழவுக்காகாத விண்மீன்கள்; which are in auspicious for tilling.

வயற்செம்பை *vayar-cembai*, பெ.(n.) 1. செடி வகை (யாழ்.அக.); a plant. 2. செம்பைச் செடி; a kind of medicinal plant (சா.அக.).

[வயல் + செம்பை]

வயற்சேம்பு *vayar-cēmbu*, பெ.(n.) மழைக் காலத்தில் வரப்புக்களிலுண்டாம் சேம்புவகை (M.M.402); a variety of Indian hales.

[வயல் + சேம்பு]

வயற்பயறு *vayar-payaru*, பெ.(n.) 1. சிறு பயறு; field gram. 2. பச்சைப்பயறு, பாசிப் பயறு; green gram.

[வயல் + பயறு]

வயற்புல் *vayar-pul*, பெ.(n.) நன்செய்ப் பயிர்களிடையே முளைக்கும் களை; the grass or weed grown between crops in wet-land.

[வயல் + புல்.]

நன்செய்ப் பயிர்களின் விளைச்சலைக் கெடுக்கும் புல்.

வயற்றுத்தி *vayarrutti*, பெ.(n.) துத்திவகை (மூ.அ.); a species of evening mallow.

[வயல் + துத்தி ¹]

வயறு[1] *vayaru*, பெ.(n.) வயிறு பார்க்க; see *vayiru.*

வயறு[2] *vayaru*, பெ.(n.) 1. கொக்கி; hook. 2. கயிறு; rope.

வயன் *vayaṉ*, பெ.(n.) வழி, நிலைமை; way, condition. *"நந்திதமராம் வயன்பெறுவீர்" (திருமந். 55).*

[வயனம் → வயன்]

வயன்கட்டு *vayaṉ-kaṭṭu*, பெ.(n.) எல்லை வரம்பு (யாழ்.அக.); boundary.

[வசன் → வயன் + கட்டு]

வயனண்டு *vayaṉaṇḍu*, பெ.(n.) கழனி நண்டு (வின்.); field crab.

[வயல் + நண்டு]

மருத நிலக் கழனியில், நன்செய் மண் வளத்தை, மென்மேலும் வளஞ்செறியச் செய்யும் நண்டு.



வயனம்[1] *vayaṉam,* பெ.(n.) 1. பேச்சு, சொல்; word, speech. *"சரபோசி..... தனக்கேற்ற வயனத்தான்" (சரபேந்திர குறவஞ்சி 11, 8).* 2. மறைநூல்; the *vēdās.* *"நால்வயனத்தவ" (திருவிளை. கான்மாறி. 27).* 3. பழிமொழி; reproach, aspersion. *"வயனங்கள் மாயா வடுச் செய்தான்" (திருவாச. 12,4).*

வயனம்[2] *vayaṉam,* பெ.(n.) பான்மை வழி, தன்மை, வகை (வின்.); manner, way, quality. *"வயனங்களா லென்றும் வந்து நின்றானே" (திருமந். 1836).*

வயனர் *vayaṉar,* பெ.(n.) பறவை வடிவினர்; beings in the shape of birds. *"வயனர் சூழு காவிரியும்" (திருப்பு. 733).*

[வயம்[4] → வயனர்]

வயா[1] *vayā,* பெ.(n.) ஆசை; desire (சா.அக.).

வயா[2] *vayā,* பெ.(n.) 1. வேட்கைப் பெருக்கம் (திவா.); great desire. *"வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்" (தொல்.854).* 2. வயாநடுக்கம் (தொல். சொல். 371) பார்க்க; see *vayā-naḍukkam.* 3. கருக்கொள் கால மயற்கை நோய் (சூடா.); lanquor or lassitude during pregnancy. 4. கருப்பம் (பிங்.); foetus. 5. கருப்பை (வின்.); womb. 6. மகப்பேற்றிற்குரிய வலி (வின்.); pains of child-birth, labour pains. 7. வலி, வருத்தம் (பிங்.); pain, guib, sorrow. 8. நோய் (அக.நி.); disease.

வயாக்கோட்டி *vayā-k-kōṭṭi,* பெ.(n.) வயா நடுக்கம் பார்க்க; see *vayā-naḍukkam.*

[வயா + கோட்டி [1]]

ஒருகா. வசாக்கோட்டி→வயாக்கோட்டி.

வயாநடுக்கம் *vayā-naḍukkam,* பெ.(n.) வயாநோய் பார்க்க; see *vayā-nōy.*

[வயா + நடுக்கம்]

வயாநோய் *vayā-nōy,* பெ.(n.) கருப்பக் காலத்து ஏற்படும் மசக்கை நோய் (சூடா.); morning sickness and morbid longings of a pregnant woman. *"புளிங்காய் வேட்கைத் தன்று நின் மலர்ந்த மார்பிவள் வயாஅ நோய்க்கே" (ஐங்குறு. 51).*

[வயா + நோய்]

வயாப்பண்டம் *vayā-p-paṇḍam,* பெ.(n.) கருக்கொண்ட மகளிர் விரும்பும் தின்பண்டம் (யாழ்.அக.); eatables longed for by pregnant women.

[வயா + பண்டம் [1]]

வயாமது *vayāmadu,* பெ.(n.) சீந்தில் (மூ.அ); gulancha.

[வயமது → வயாமது]

வயாலெடு-த்தல் *vayā-leḍu-,* 4 செ.கு.வி. (v.i.) கக்கல்; to vomit (சா.அக.).

மறுவ. கக்குதல்

[வாயாலெடு-த்தல் → வயாலெடு-த்தல்]

வயாவிதனம் *vayā-vidaṉam,* பெ.(n.) வலி; pain (சா.அக.).

[வயா + விதனம். Skt. visava > த. விதனம்]

வயாவு[1]-தல் *vayāvu-,* 5 செ.குன்றாவி.(v.t.) விரும்புதல்; to desire, wish. *"காணுநர் வயாஅங் கட்கின் சேயாற்றின்" (மலைபடு. 476).*

[வயா → வயாவு-]

வயாவு[2] *vayāvu*, பெ.(n.) வயா (பிங்.) பார்க்க; see *vayā*.

[வயா → வயாவு]

வயாவுயிர்–த்தல் *vayā-v-uyir-*, 4 செ.கு.வி. (v.i.) 1. மகப்பெறுதல் (யாழ்.அக.); to yean, to give birth to be delivered of. 2. வருத்தந்தீர்தல்; to be relieved of pain.

[வயா + உயிர்–த்தல்.]

வயான் *vayāṉ*, பெ.(n.) கருப்பு நிறமும் பிளந்த வாலுமுடைய பறவை (பிங்.); king-crow.

மறுவ. காரிப்புள்

[வயவன் → வயான்]

வயானம்[1] *vayāṉam*, பெ.(n.) பறவை (சூடா.); bird.

[வயா → வயானம்]

வயானம்[2] *vayāṉam*, பெ.(n.) சுடுகாடு; cremation ground. *"சவத்துக்கு முன்னே வயானத்துக்குக் கூட்டிப் போகிறதும்" (புதுக். கல்.847).*

[மயானம் → வயானம்]

வயானன் *vayāṉaṉ*, பெ.(n.) வயான் (யாழ். அக.) பார்க்க; see *vayāṉ*.

[வயான் → வயானன்]

வயிக்கிராந்தம் *vayi-k-kirāndam*, பெ.(n.) வைப்புநஞ்சுவகை (மூ.அ.); a mineral poison.

வயிகா *vayigā*, பெ.(n.) விளாம்பிசின்; gum of wood-apple tree - gum of *Feronia elephantum* (சா.அக.).

வயித்தியலிங்கம் *vayittiya-liṅgam*, பெ.(n.) சிந்தாமணி நிகண்டின் ஆசிரியர்; author of *cindāmaṇinigaṇḍu*. *யாழ்ப் பாணத்திற் பிறந்த இவர் பரதவ குலத்தைச் சார்ந்தவர். வடமொழி, தென்மொழியிற் புலமை மிக்கவர். இவர் இயற்றிய நூல்களாவன செல்வச் சந்நிதி முறை, வல்லை வைத்தியேசர் பதிகம், முதலியபவைகளாகும்.*

வயித்தியன் *vayittiyaṉ*, பெ.(n.) மருத்துவன் (வின்.); medical practioner, doctor, medical professionalist.

வயிர்[1]–த்தல் *vayir-*, 4 செ.கு.வி.(v.i.) வயிரங் கொள்ளுதல்; to be solid, to harden. *"வயிர்த்தன ணிலத்தினுயர் வானமினி தென்பாள்" (பாரத. சம்பவ. 102).*

[வல் → வள் → வய் → வயிர்–.]

வலிமை கொள்ளுதல், திண்மையுடன் இருத்தல் (த.வ.பக்.111).

வயிர்[2]–த்தல் *vayir*, 4 செ.கு.வி.(v.i.) செற்றங் கொள்ளுதல்; to be angry, to bear grudge.

[வயிரம் [2] → வயிர் [3]–]

வயிர்[3] *vayir*, பெ.(n.) கூர்மை (அரு.நி.); sharpness. *"வச்சிரவயிர்வாயால்..... கொய்திட்டான்" (சேதுபு. துத். 19).*

[வள் → வய் → வயிர் (வள் = கூர்மை) (வய்) → வை = கூர்மை.]

ள → ய = மெய்த்திரிபு. ளகரமெய் யகர மெய்யாகத் திரிவது பெருவழக்கு (த.வ.I, பக்.11).

(ஒ.நோ.) கோள் → கோய். தொள் → தொய். நொள் → நொய். பிள் → பிய். வெள் → வெய்.

வயிர்[4] *vayir,* பெ.(n.) 1. மூங்கில்; bamboo. *"முளிவயிர்ப் பிறந்த வளிவளர் கூரெரி" (ஐங்குறு. 395).* 2. ஊதுகொம்பு; large trumpet, horn, bugle. *"திண்காழ் வயிரெழுந் திசைப்ப" (திருமுரு. 120). "வயிரிடைப்பட்ட தெள்விளி யியம்ப" (அகநா. 269:18).*

[வெதிர் → வயிர்]

வயிரக்கட்டை *vayira-k-kaṭṭai,* பெ.(n.) விளைந்த – வயிரம் பாய்ந்த கட்டை; a hard log (சா.அக.).

[வல்→வள்→வய்→வயிர்→வயிரம் + கட்டை = திண்ணிய கொம்பு (வ.வ.2, பக்.83).]

"திண்ணிய வயிரத்தையுடைய கொம்பு" (நச்.) உரையில் வருவது காண்க. வயிரக்கட்டையினைப் பிங்கலந்தை மரவயிரம் என்று குறித்துள்ளது.

வயிரக்கல் *vayira-k-kal,* பெ.(n.) வயிரமணி; diamond.

[வயிர்→வயிரம்[1] + கல்]

தொண் (நவ) மணியுளொன்று.

வயிரக்கனிந்தன் *vayirak-kaṉindaṉ,* பெ. (n.) பெருச்சாளி; an animal, bandicoot (சா.அக.).

[வயிரம் + கனிந்தன்]

வயிரக்காணி[1] *vayira-k-kāṇi,* பெ.(n.) வயிர கரணி பார்க்க; see *vayira-karaṇi.*

[வயிரம் + காணி]

வயிரக்காணி[2] *vayira-k-kāṇi,* பெ.(n.) நெல் வயல்; paddy field. *நெல்விளையும் வளஞ்செறிந்த நன்செய் நிலம்.*

[வள்→வய்→வயிர்→வயிரம் + காணி.]

காண் → காணி = (220' x 220') 20 பெருங்கோல் சதுரம் 1/80.

வயிரக்குணங்கள் *vayira-k-kuṇaṅgaḷ,* பெ.(n.) எட்டுவகைப் பலகை, ஆறுவகைக் கோணம், தாரை, சுத்தி, தராசம் என வயிரத்திற் காணப்படும் ஐந்து வகை நற்குணங்கள் (சிலப். 14, 180, உரை); good qualities found in diamonds, five number, viz., eight kinds of palagai, six hinds of *kōṇam, tārai, šutti, tarāšam.*

[வயிர்→வயிரம் + குள்→குணம்.]

வயிரக்குப்பாயம் *vayira-k-kuppāyam,* பெ.(n.) ஊடுருவிச் செல்லவியலாதவாறும், துளைக்க முடியாதவாறமைந்த உறுதியான கவசம்; impenetrable coat of armour. *"எடுத்தென்னுஞ் சொல்லுக்கிட்ட வயிரக்குப்பாயம்".*

மறுவ. மெய்ச்சட்டை.

[வல்→வள்→வய்→வயிர்→வயிரம்+ குப்பாயம்.]

குள்→குவ்→குப்பு→குப்பாயம்.

வலிமைக் கருத்தினின்று கிளைத்த சொல். உடலைக் கவ்வும் பான்மையில், வலிமையாக அமைந்த உறுதியான மெய்க்கவசம்.

வயிரக்குற்றம்[1] *vayira-k-kuṟṟam,* பெ.(n.) சரைமலம், கீற்று, சப்படி, பிளத்தல், துளை, கரி, விந்து, காகபாதம், இருத்து, கோடியில்லன, கோடிமுறிந்தன, தாரை மழுங்கல் என வயிரத்திற் காணப்படும் பன்னிரண்டு குற்றங்கள் (சிலப். 14, 180, உரை); 12 flaws in diamonds viz., *Šaraimalam, kīṟṟu, cappaḍi, piḷattal, tuḷai, kari, vindu, kāga-pādam, iruttu,*

kōḍi-y-illaṉa; kōḍi-muṟindaṉa, tārai-maḻungal.

[வயிர்→வயிரம்+குல்→குறு→குற்றம். குற்றம்.]

வயிரக்குற்றம்² *vayira-k-kuṟṟam,* பெ.(n.) வயிரங்களிலமைந்த குற்றம்; defects in diamond.

[வயிரம் + குற்றம்]

வயிரங்களில் காணப்படுகின்ற குற்றங்களாக கல்வெட்டு பின்வருவன வற்றை குறிப்பிடுகின்றது. 1.பொறிவு, 2. முறிவு, 3. அரத்தவிந்து, 4. காக விந்து, 5. வெந்தனர், 6. மடிப்புதாரை, 7. மப்பச்சுப்படி.

வயிரகரணி *vayira-karaṇi,* பெ.(n.) பெரு நெருஞ்சி (மலை.); a stout-stemmed herb.

வயிரங்கொள்(ளு)-தல் *vayiraṅ-koḷ-,* 16 செ.கு.வி.(v.i.) முதிர்தல்; to have the qualities of age. *வயிரங்கொண்ட வேப்பமரப் பலகை எடுக்கவிருக்கும் வீட்டின் கதவுநிலை, பலகணிகட்டு பயன்பாடுடைய தாகலாம்.*

வயிரச்சங்கிலி *vayira-c-caṅgili,* பெ.(n.) சரப்புணியென்னும் அணி (பிங்.); a kind of necklace.

[வயிர்→வயிரம் + சங்கிலி.]

அங்கு→சங்கு = வளைந்தது. சங்கு→ சங்கிலி = வளைந்து ஒன்றுடனொன்று கோத்திருப்பது.

வயிரச்சன்னம் *vayira-c-caṉṉam,* பெ.(n.) சிறுவயிரம் (இ.வ.); small-sized diamond.

[வயிரம் + சன்னம் = நுண்மையான வலிமைவாய்ந்த சிறுவயிரம். சுல்→ சல→ சன்னம். சன்னம் = நுண்மை.]

வயிரச்சிராய் *vayira-c-cirāy,* பெ.(n.) வயிரத்துகள்; diamond dust (சா.அக.).

[வயிரம் + சிராய்.]

சுல்→சல்→சில்→(சிர்)→சிராய் = சிறிய துகள்

வயிரசுத்தி *vayira-šutti,* பெ.(n.) வயிரத்தை சுத்தப்படுத்துகை; purification of diamond.

[வயிரம் + சுத்தி.]

வயிரஞ்சாதி-த்தல் *vayirañ-c-ādi-,* 4 செ.கு.வி. (v.i.) பகை மிகுதல் (யாழ்.அக.); to wreak vengeance, to fulfil one's hatred.

[வயிரம் ² + சாதி ¹–]

Skt. Šādh > த. சாதி

வயிரத்தளம் *vayira-t-taḷam,* பெ.(n.) தட்டையான வயிரம் (வின்.); flat diamond.

[வயிரம் + தல்→தள்→ தளம்.]

பெரிய வயிரத்தின் தட்டையான அடிப்பரப்பு.

வயிரத்தனம் *vayira-t-taṉam,* பெ.(n.) வன்குணம் (யாழ்.அக.); hardness, toughness

[வயிர்→வயிரம்¹ + தம்→தன் + அம்–தனம் = தமக்கேயுரிய வலிமைக் குணம்.]

வயிரத்தாரணை *vayira-t-tāraṇai,* பெ.(n.) ஆணவத்தை முற்றாயொழித்து, எஞ்ஞான்றும் ஆன்மா இரண்டறக் கலந்து இறையுடன் ஒகத்தில் ஆழ்கை (யாழ்.அக.); contemplation of the divine, always converging the faculties of the mind to one point, renouncing egoism, one of *nava-tāraṇai.*

[வயிர்→வயிரம் + தாரணை]

தார் + அணை = எஞ்ஞான்றும் ஆதனுக்கு நலமே நல்கும் இறையருள் ஒகநிலையில், ஆதனின் உள்ளத்தில் அணைவதால் (ஒன்றுவதால்) உள்ளம் ஒருமுகப்படுகை அல்லது வலிமையுறுகை.

வயிரத்தூள் *vayira-t-tūḷ*, பெ.(n.) வயிரத்தை தீயிலிட்டு புடமிடுகை; the purified diamond should be burnt in a fire and dipped in the decoction mixed with eyafoetida samuda salts and the seeds dolichos biflones.

[வயிரம் + தூள்]

வயிரப்பசை *vayira-p-pašai*, பெ.(n.) திண்ணிய வலிமை வாய்ந்த பசை; glue.

[வயிரம்[1] + பசை]

வயிரப்படை *vayira-p-paḍai*, பெ.(n.) வலிமை மிக்க படை (வச்சிராயுதம்) (பிங்.); thunderbolt.

[வயிரம்[1] + படு→ படை]

வயிரப்படையோன் *vayira-p-paḍaiyōṉ*, பெ.(n.) வானவர் தலைவன் (இந்திரன்); Indra, as the wielder of thunderbolt. *'வயிரப்படையோன் முதலமரர்' (காசிக. தேவர்கள் அகப். 10).*

[வயிரம் + படை →படையோன்]

வயிரப்பற்பம் *vayira-p-paṟpam*, பெ.(n.) கருப்பத்தால் வந்த சூலையை நீக்குமோர் மருந்து. நெஞ்சாங்குலை குளிர்ச்சி யுண்டாகி, சில்லிட்டுபோன போது, அக்குளிர்ச்சியை நீக்கி, இயல்பு நிலைக்குக் கொணரும். மேலும் இறக்குந்தறுவாயில் இருப்பவரை ஒரு மணி நேரத்தில் பேசும்படி செய்யும் தன்மைத்து; calcined diamond, it is prescribed for heart disease. it is said to stimulate the heart; which has been chilled to inaction.

[வயிரம் + பற்பம்]

Skt. bhasman > த. பற்பம்

வயிரப்பன்னாடை *vayira-p-paṉṉāḍai*, பெ.(n.) பனைமரத்துப் பன்னாடை; webbed sheath found in the palymra tree.

[வயிரம் + பனை + ஆடை – பனையாடை →பன்னாடை.]

வயிரம் = உறுதி.

உறுதியுள்ள பனைநாரினாலாகிய பன்னாடை.

வயிரப்பொடி *vayira-p-poḍi*, பெ.(n.) சிறு வயிரம் (இ.வ.); small sized or tiny diamond.

[வயிரம்[1] + பொடி]

வயிரப்பொலி *vayira-p-poli*, பெ.(n.) முற்றிய தவசமணி (இ.வ.); mature or ripe grain of corn.

[வயிரம்[1] + பொல் →பொலி]

நன்கு திரண்ட உறுதிமிக்க தவசம்.

வயிரம்[1] *vayiram*, பெ.(n.) 1. வயிரப்படை (பிங்.); thunderbolt. 2. தொண்மணி யுளொன்று; diamond, one of *nava-mani*. *"வயிரப் பொற்றோடு" (சிலப். 29, செங்குட்டுவன் கூற்று).* 3. மர வயிரம் (பிங்.); core of a tree, as the hardest part. 4. திண்மை; robustness, firmness. *"உலந்தரு வயிரத் திண்டோள்" (கம்பரா. பூக்கொ. 10).* 5. வலிமை; strength. *"தோள் வயிரந் தோன்ற" (சீவக. 645).* 6. கூர்மை (பிங்.); sharpness, pointed ness. *"கொறவைபுரி

வயிரவேலான்" (தணிகைப்பு. சீபரி. 32). 7. கிம்புரி; ornamental knob, as on a tusk or horn. *"கோட்டை வயிரஞ் செறிப்பினும் ..... பன்றி செயிர்வேழ மாகுதலின்று" (நாலடி, 358).* 8. தண்டாயுதம் (பிங்.); club. 9. முக்கோல் (திருவோணம்) (திவா.); the 22nd naksatra. 10. வாளியென்னும் அணிகலனின் தகடு (யாழ்.அக.); the flat metal piece of a kind of ear-ring.

த. வயிரம் > **Skt.** vajra

[வல்→வள் = வலிமை (பிங்.). வள்→வய்→வை →வயிர் = திண்ணிய கொம்பு. வயிர்→வயிரம் = திண்மை (வ.வ.பகுதி.2–83).]

வயிரம் என்னுஞ் சொல், தூய தென்சொல். வட மொழியில் இதற்கு மூலமில்லை. தமிழில் இலக்கிய வழக்கிலும், மக்கள் வழக்கிலும், மிகுதியாக வழக்கூன்றியுள்ளது. பத்துப்பாட்டுளொன்றான திருமுருகாற்றுப் படையிலும், சிலப்பதிகாரத்திலும், சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலான இலக்கியங்களிலும், நிகண்டுகளிலும், வலிமை, திண்மை என்னும் பொருளில் இடம் பெற்றுள்ளது.

வயிரம் என்னும் செந்தமிழ்ச்சொல்லே, வடமொழியில் வஜ்ர என்று திரிக்கப்பட்டுள்ளது. திண்மையுடையதாயிருத்தல், கடினமாயிருத்தல் வலிமையாயிருத்தல் என்னும் பொருண்மையில், மக்களிடைய வழங்கும், "வயிரம் பாய்ந்த கட்டை", "வயிரம் பாய்ந்த உடம்பு" போன்ற வழக்குகளை நோக்குக. இச் சொல்லின் வரலாற்றைக் கீழ்க்கண்டவாறு, மொழிஞாயிறு வடமொழி வரலாறு–இரண்டாம் பகுதி, மொழியதிகாரத்தில், பொருட் பொருத்தப் பாட்டுடன் விளக்கும் பாங்கு வருமாறு:–

வல் → வள் → வலிமை (பிங்.) *"வள்வார் முரசு" (பு.வெ.3:2, கொளு).*

வள் → (வய்) → வை → வயிர் = திண்ணிய கொம்பு.

"திண்காழ் வயிரெழுந் திசைப்ப" (திருமுருகு. 120).

இதன் உரை : *"திண்ணிய வயிரத்தையுடைய கொம்பு மிக்கொலிப்ப" – நச்.*

வயிர்த்தல் = 1. வயிரங்கொள்ளுதல்.

"வயிர்த்தன ணிலத்தினுயர் வானமினி தென்பாள்" (பாரத.சம்பவ.102).

வயிர் →வயிரம் = 1. திண்மை.

"உலந்தரு வயிரத் திண்டோள்" (கம்பரா. பூக்கொ.10).

2. வலிமை. *"தோள்வயிரந் தோன்ற"*

3. மரவயிரம் (பிங்.).

4. தொண்மணியுள் ஒன்று.

"வயிரப் பொற்றோடு" (சிலப்.29, செங்குட்டுவன் கூற்று).

5. மனவயிரமாகிய செற்றம்.

வடமொழியில் இதற்கு மூலமில்லை.

"Another vuj or uj, `to be hard or strong `may be inferred from ugra, ojas, vājra, vāja, (qq.vv.) the last of which gave rise to the Nom. vājaya" என்று மா.வி.அ.குறித்திருப்பதை நோக்குக.

வயிரம்[2] *vayiram,* பெ.(n.) செற்றம்; anger, animosity. *"வாள் வயிரம் விற்கு மடநோக்கி" (சீவக. 645).*

வயிரம்[3] *vayiram,* பெ.(n.) மயிர்ப்படாம் (நாமதீப. 55); woollen cloth.

[வயிரியம் → வயிரம்]

வயிரம்[4] *vayiram*, பெ.(n.) 1. ஒரு கல்; one of the nine gems, a very hard gem. 2. இது ஆறுவகைப்படும் (தேவபிரம சத்திரிய, வைசிய, சூத்திர சங்கரக் கற்கள் தங்கியிருக்கும்); the matrix of the gem is sand stone breccia lying under the compact sand stone of which the hills near kurnool are composed.

வயிரம்[5] *vayiram*, பெ.(n.) தொன்மணிகளுள் உறுதி மிக்கதும், விலை மதிப்பு மிக்கதுமான கல்; diamond.

உயர்ந்த வயிரங்களில் அமைந்த குணங்கள் ஆறு என்று இரத்தினநூல் இயம்புகிறது. அவை 1. கோணமாயிருத்தல். 2. இலகுவாயிருத்தல். 3. சமமான எட்டுத் தளங்களுடன் அமைதல். 4. கூரிய முனைகளுடைமை. 5. ஒளித் தெளிவுடைமை. 6. நான்கு பட்டைச் சதுரகமாக இருத்தல் என்பவைகளாகும். கல்வெட்டுகளில் சிறந்த வயிரம் என்பது 'இராசவர்த்தனம்' என்ற பெயருடன் குறிக்கப்படுகின்றது. வயிர வகைகளாகப் பின்வருவன குறிக்கப்பட்டுள்ளன. 1. பளிங்கு – உள்ளொளித் தெளிவுடனமைந்தது. 2. பொத்தி – கீழ்க்குழிவும் மேற்புடைப்புமுள்ளது. 3. தாளிம்பம் – பனையோலை கீற்றுப் போன்ற வடிவுடையது. 4. பளிக்கு வயிரம் – தூய ஒளியுடன் கூடியது. 5. சப்படி – சப்பையாகப் பிறப்பிலேயே இருப்பது. 6. கோமளம் – மென்மையும் வெளிறிய ஒளியும் பொருந்தியது. 7. உருளை – திரட்சியாக இருப்பது. 8. பந்தசாரம் – ஒன்றன் மேலொன்றாகப் படிந்த விளைவுடனிருத்தல். (தெ.கல்.தொ. 2:1, 2:2) (முதல். இராச.).

வயிரம்கோத்தபட்டைக்காறை *vayiram-kōtta-paṭṭai-k-kāṟai*, பெ.(n.) வயிரங்கள் வைத்து இழைக்கப்பட்ட கழுத்தணி; diamond studded necklace.

[வயிரம் + கோத்த + பட்டைக்காறை.]

வயிரம்பாய்-தல் *vayiram-pāy-*, 1 செ. குன்றாவி.(v.t.) வலிமை அல்லது உரமிகுதல்; to get strength. *வயிரம் பாய்ந்த தேக்குமரம் வாசற்காலுக்கு ஏற்றது (உ.வ.). வயிரம் பாய்ந்த உடலுக்கு மருத்துவம் இல்லை (இ.வ.).*

[வயிரம் + பாய்-.]

வயிரம்போடல் *vayiram-pōḍal*, தொ.பெ. (vbl.n.) வயிரத்தூள் பார்க்க; see *vayira-t-tūḷ*.

[வயிரம் + போடல்]

வயிரமணி *vayira-maṇi*, பெ.(n.) 1. வயிரம்[1], 2 பார்க்க; see *vayiram*. 2. பொன்னாலாகிய மணிவகை (யாழ்.அக.); bead of gold.

[வயிரம்[1] + மணி]

வயிரமுடி *vayira-muḍi*, பெ.(n.) 1. வயிரம் இழைத்த மணிமுடி; crown studded with diamonds. 2. வயிரம் முதலிய மணிகள் வைத்து இழைத்துச் செப்புத் திருமேனியிற் சூட்டப்பெறுந் தொப்பாரம்; head-ornament of an idol, set with diamonds and other precious stones.

[வயிரம்[1] + முடி]

வயிரமுத்து *vayira-muttu*, பெ.(n.) ஆணி முத்து (வின்.); pearl of the best quality.

[வயிர்→வயிரம் + முள்→முட்டு→முத்து. வயிரம் + முத்து]

குற்றமற்ற உயர்ந்த கட்டாணிமுத்து. வன்மையானதும், திண்ணியதுமான, விலை யுயர்ந்த நன்முத்து.

வயிரமேகவிருத்தி *vayira-mēga-virutti,* பெ.(n.) இலக்கண நூல்களுளொன்று (தக்கயாகப். 16, உரை); one of treatise on grammar.

[வயிரமேகம் + விருத்தி]

வயிரவசாந்தி *vayirava-šāndi,* பெ.(n.) இயற்கைக்கு மாறாக இறந்தவர்கட்கு பகர நேர்வாக வயிரவக் கடவுளுக்குச் செய்யும் வழிபாடு (வின்.); ceremony of appeasing Bhairava by making offerings in the sacrificial fire at the funeral ceremonies of a person who dies an unnatural death.

[வைரவம் → வயிரவம் + சாந்தி]

வயிரவபூசை *vayirava-pūšai,* பெ.(n.) திருத்தலங்களுக்குச் சென்று திரும்பி வந்தவுடன், வயிரவக்கடவுளுக்குச் செய்யும் பூசை (நாஞ்.); worship of Bhairava performed on return from a pilgrimage of holy places.

[பயிரவம் → வயிரவம் + பூசை]

வயிரவம் *vayiravam,* பெ.(n.) 1. அகப்புறச் சமயம்; the Bhairava sect. *"சிலர் கடாம் வயிரவத்தினை மேலெனத் தேர்வார்" (திருக்காளத். பு. 30, 26).* 2. நடுக்கம், அச்சம் (வின்.); terror, horror. 3. கலக்கம், கவலை; fear.

[வைரவம் → வயிரவம்]

வயிரவர் *vayiravar,* பெ.(n.) வயிரவக்கடவுள்; a God.

வயிரவராதி *vayiravarādi,* பெ.(n.) 1. வலம்புரிச் சங்கு; conch whose spirals turn to the right. 2. நந்தியாவட்டம்; East Indian rosebay.

வயிரவல்லி *vayiravalli,* பெ.(n.) பிரண்டை (மூ.அ.); square stalked vine.

வயிரவளை[1] *vayira-valai,* பெ.(n.) சிறுபயறு (மலை.); field-gram.

[வயிரம்[1] + வளை]

வயிரவளை[2] *vayira-valai,* பெ.(n.) நரிப்பயறு; dew gram-*Phaseolus aconitifolius.*

வயிரவன்பூசை *vayiravan-pūšai,* பெ.(n.) பரதவருடன் தொடர்புடைய ஒரு பூசை; a prayer pertaining to fishermen tribe.

[வயிரவன் + பூசை]

"அண்டு ராவைக்கு ஏலேலோ
வயிரவன் பூசையாம் ஏலேலோ
தாவறு மடமாம ஏலேலோ
மடத்தம்மா ஐயா ஏலேலோ" (நாட்டார் பாடல்)

வயிரவன்மடை *vayiravan-madai,* பெ.(n.) வயிரவர்க்கிடும் திருப்படையல் (வின்.); oblations offered to Bhairava.

[வயிரவன் + மடை[1]]

வயிரவன்வாகனம் *vayiravan-vāganam,* பெ.(n.) நாய்; dog, as the vehicle of *vayiravan.* *"சீராடையற்ற வயிரவன் வாகனஞ் சேரவந்து" (தனிப்பா.* **i, 186, 14).**

[வயிரவன் + வாகனம்]

வயிரவாரினி *vayira-vārini,* பெ.(n.) 1. கீரைத் தண்டு வகை; a species of amarnath. 2. கீரை வகை (யாழ்.அக.); a pot-herb.

வயிரவாள் *vayiravāl,* பெ.(n.) வச்சிரப்படை (பிங்.); thunderbolt.

[வயிரம்[1] + வாள்]

வயிரவாளி *vayira-vāli,* பெ.(n.) 1. வயிர வுறுதியுள்ள அம்பு (வின்.); adamantine arrow. 2. மாதர் காதணிவகை (யாழ்ப்.); a woman's ear-ornament.

[வயிரம் ¹ + வாளி]

வயிரவி¹ *vayiravi,* பெ.(n.) 1. கொற்றவை; Bhairavi. 2. பைரவிப் பண் (இசை.); a musical mode.

[வைரவி → வயிரவி]

வயிரவி² *vayiravi,* பெ.(n.) 1. சாரணை; a prostate plant. 2. சத்தி சாரணை; a boerhaavia rependa.

வயிரவிழா *vayira-vilā,* பெ.(n.) அறுபதா மாண்டு நிறைவுக் கொண்டாட்டம் (தற்கா.); diamond jubilee.

[வயிரம் ¹ + விழு → விழா]

வயிரவுருக்கு *vayira-vurukku,* பெ.(n.) வயிரத்தை உருக்கக்கூடிய பொருள்; a thing that melts or dissolves diamond. *'வயிரவுருக்கானது அரக்கையுருக்கச் சொல்லவேணுமோ' (திவ். திருநெடுந். 22. வ்யா. பக். 205).*

[வயிரம் + உருகு → உருக்கு]

வன்மையுந் திண்மைமிக்கதுமான, உறுதி வாய்ந்த உருக்கினையும் உருகச் செய்யும் பொருள்.

வயிரவூசி *vayira-v-ūsi,* பெ.(n.) 1. கண்ணாடி யறுக்குங் கூரிய வயிரம்; glazier's diamond for cutting glass. *"வயிரவூசியு மயன் வினையிரும்பும்" (நன். 265, சங்கர.).* 2. முத்துத்துளைக்கும் ஊசி (யாழ்.அக.); diamond-drill; needle for boring pearls.

[வயிரம் ¹ + ஊசி ¹]

வயிரவேர் *vayira-vēr,* பெ.(n.) சாயவேர் (மலை.); Indian madder.

[வயிரம் ¹ + வேர்]

வயிராக்கியம் *vayirākkiyam,* பெ.(n.) உலகப் பற்றின்மை; desireless altitude towards wordly objects, oath to conquer all worldly attachment. *"வேண்டும் வயிராக்கியத்துக்குற்ற வனிதாதி" (வேதா. சூ. 143).*

மறுவ. தன்னொறுப்பு

[வைராக்கியம் → வயிராக்கியம்]

வயிராக்கியன் *vayirākkiyan,* பெ.(n.) 1. பற்றற்றவன் (இ.வ.); one who is free from wordly desires and attachments, sage. 2. தன்முனைப்புள்ளவன்; obstinate, pertinacious or adamant person. 3. பற்றார்வலர் (வின்.); zealot, enthusiast.

[வைராக்கியம் → வயிராக்கியம் → வயிராக்கியன்]

வயிராகம் *vayirāgam,* பெ.(n.) 1. பற்றின்மை; absence of wordly passions. *"ஊன்று ஞானமோ டுயர் வயிராக நல்லொழுக்கம்" (பிரபுலிங். கைலாச. 43).* 2. ஊக்கம் (வின்.); zeal, enthusiasm, energy. 3. இணங்காமை (வின்.); obstinacy, pertinacity, adamancy.

வயிராகரம் *vayirāgaram,* பெ.(n.) மத்திய மாகாணத்திலுள்ள பெருநகரம்; a metropolitain city in Madhya pradesh. *"மதவரையீட்டம் வயிராகரத்து வாரி".*

வயிராகி *vayirāgi,* பெ.(n.) பற்றற்றவன் (வின்.); one who is free from wordly desires, or who conquered five senses, one who establishes desirelessness.

வயிராவி *vayirāvi*, பெ.(n.) வயிராகி (யாழ். அக.) பார்க்க; see *vayirāgi*.

[வயிராகி → வயிராவி]

வயிரி[1]-த்தல் *vayiri-*, 11 செ.கு.வி.(v.i.) 1. மனம் முதலியன இறுகுதல்; to be hardened, as in feeling. 2. இணங்காதிருத்தல்; to be obstinate, adamant.

[வயிர் → வயிரி-.]

மனம் வன்மையாகவும், திண்மையாகவும் கடிடன்படுதல் அல்லது உறுதியுடைத்தாதல். இணங்காதிருந்து செற்றங் கொள்ளுதலும் வயிரித்தலே யென்க.

வயிரி[2] *vayiri*, பெ.(n.) பகைவன்; enemy, foe. *"அவ்வயிரி செய்த" (திருநூற். 34).*

[வயிர் → வயிரி = பகை, பகைவன் (மு.தா.2, பக்.65).]

வயிரி[3] *vayiri*, பெ.(n.) கன்னெஞ்சன் (யாழ். அக.); iron or stone or hard hearted man.

[வயிரம் [1] → வயிரி]

வயிரி[4] *vayiri*, பெ.(n.) வல்லூறு (வின்.); royal falcon.

வயிரிப்பு[1] *vayirippu*, பெ.(n.) 1. இறுகுகை, கடினமாகை (வின்.); hardening, mental stress. 2. இணங்காமை, obstinacy, adamancy.

[வள் → வய் → வயிர் → வயிரி → வயிரிப்பு வலியது; கடினமானது.]

மனம் வயிரம்போல், வன்மையாயும், கடினமாயும் மாறுங்கால் எளிதில் அடங்காத் தன்மையேற்பட்டுத் தன்முரண் பிடித்தலே வயிரிப்பாகும்.

வயிரிப்பு[2] *vayirippu*, பெ.(n.) 1. வயிரம் பார்க்க; see *vayiram*. 2. வலிப்பு; convulsion.

வயிரியம் *vayiriyam*, பெ.(n.) மயிர்ச்சீலை (பிங்.); wollen cloth.

[வயிர் → வயிரி → வயிரம் [3] → வயிரியம்]

வன்மையாயும், திண்மையாயும், உருவாக்கப் பட்டுள்ள மயிர்ச்சீலை.

வயிரியமாக்கள் *vayiriya-mākkaḷ*, பெ.(n.) 1. வயிரியர்; professional dancers, actors, musicians. 2. பாடகர்; professional musicians. *"வயிரியமாக்கள் பண்ணமைத் தெழீஇ" (பதிற்றுப். 29).*

[வயிரியர் + மாக்கள்]

வயிரியர் *vayiriyar*, பெ.(n.) 1. கூத்தர், பாணர், விறலியர்; professional dancers, actors or actresses. *"விழவினாடும் வயிரியர் மடிய" (மதுரைக். 628).* 2. பாடகர்; professional musicians, songster or songstress.

[வயிர் [4] → வயிரியர்]

வயிரோசனன் *vayirōšaṉaṉ*, பெ.(n.) விரோசனன் மகன் மாவலி; *Mahābali*, son of *Virōšaṉaṉ*. *"வயிரோசனனுக்குல கீந்தவர்" (வெங்கைக்கோ. 162).*

வயிரோசனி *vayirōšaṉi*, பெ.(n.) சிவதை யென்னுங் கொடிவகை (சங்.அக.); Indian jalap.

வயில் *vayil*, பெ.(n.) 1. கூரை வேயப் பயன் கொள்ளும் ஒருவகைப்புல்; a kind of grass used for thatched roofing. 2. விழற்புல்; a kind of grass.

தீயபார்வையால் குழந்தைகட்கு ஏற்படும் கேட்டினைப் போக்குவதாகக் கருதப்படும் புல்.

வயில்வீடு *vayil-vīḍu*, பெ.(n.) விழலெனுங் கோரையால் வேய்ந்த கூரை வீடு; thatched roofing house.

[வயில் + வீடு]



வயிலத்தி *vayilatti*, பெ.(n.) உள்ளங்கால் (சங்.அக.); sole of foot.

வயிலத்திருகு *vayilattirugu*, பெ.(n.) உள்ளங்கை (சா.அக.); palm of the hand.

வயிற்றக்கமயூரம் *vayiṟṟakkamayūram*, பெ.(n.) வெள்ளூமத்தை; dhatura plant bearing white flowers - *Dhatura alba*.

வயிற்றகச்சவ்வு *vayiṟṟaga-c-cavvu*, பெ.(n.) வயிற்றினுட்சவ்வு பார்க்க; see *vayiṟṟinuṭ-šavvu*.

வயிற்றகமுடையான் *vayiṟṟagamuḍaiyāṉ*, பெ.(n.) (வயிற்றிற் பிறந்த) மகன் (இ.வ.); son, as born of one's womb.

[வயிற்றகம் ' + உடையான்]

வயிற்றறை *vayiṟṟaṟai*, பெ.(n.) வயிற்றிலுள்ள வெற்றிடம்; abdominal cavity.

வயிற்றழுக்கு *vayiṟṟaḷukku*, பெ.(n.) சூதக வழுக்கு; menstrual blood.

வயிற்றளைச்சல் *vayiṟṟaḷaiccal*, பெ.(n.) வயிற்றுநோய் வகை; dysentery.

[வயிறு + அளைச்சல்]

வயிற்றாசாரம் *vayiṟṟāšāram*, பெ.(n.) வயிற்றுக் கொடுமைக்காக நடந்து கொள்ளும் நடத்தை (இ.வ.); conduct dictated by necessitous circumstances.

[வயிறு + ஆசாரம் ']

வயிற்றாத்திரம் *vayiṟṟāttiram*, பெ.(n.) பசி (இ.வ.); hunger.

[வயிறு + ஆத்திரம்]

வயிற்றாலெடு-த்தல் *vayiṟṟāl-eḍu-*, 4 செ.கு.வி.(v.i.) வயிற்றாலேபோ-, (கொ.வ.) பார்க்க; see *vayiṟṟālē-pō-*,

[வயிறு + எடு-,]

வயிற்றாலேபோ-தல் *vayiṟṟālē-pō-*, 8 செ.கு.வி.(v.i.) வயிற்றுப் போக்காதல் (உ.வ.); to have diarrhoea or loose motions.

[வயிறு + போ-.]

வயிற்றாள் *vayiṟṟāḷ*, பெ.(n.) பெரு வயிறுடையவள்; big bellied woman (சா.அக.).

[வயிறாள் →வயிற்றாள்.]

வயிற்றாளி *vayiṟṟāḷi*, பெ.(n.) அளவின்றி வயிறு நிரைப்போன்(இ.வ.); belly-slave, glutton.

மறுவ. கழிபே ரிரையான்.

[வயிறு + ஆள் → ஆளி = வயிற்றாளி.]

'இ' உடைமைப் பொருளீறு.

வயிற்றான் *vayirrān,* பெ.(n.) பெரு வயிறோன் (இ.வ.); big-bellied man.

[வயிறு + ஆன். ஆன் = ஆண்பாலீறு.]

வயிற்றிசிவு[1] *vayirrišivu,* பெ.(n.) 1. வயிற்று வலி (வின்.); stomach-ache. 2. வயிற்றி லேற்படும் மகப்பேற்று வலி; labour-pains.

[வயிறு + இழுப்பு→இசிப்பு→இசிவு. இசிவு = வயிற்றுவலி, மகப்பேற்றுவலி.]

வயிற்றிசிவு[2] *vayirrišivu,* பெ.(n.) வயிற்றி லேற்படும் தசைபிடிப்பு; cramp of the abdominal muscles (சா.அக.).

[வயிறு + இழுப்பு→இசிப்பு→இசிவு.]

வயிற்றிரைச்சல்[1] *vayirriraiccal,* பெ.(n.) வயிற்றிலுண்டாகும் இரைச்சல்; gargling or gurgling sound in the abdomen (சா.அக.).

வயிற்றிரைச்சல்[2] *vayirriraiccal,* பெ.(n.) ஊதை மிகுதியான் வயிற்றி லுண்டாகும் இரைச்சல் (இ.வ.); rumbling of the bowels.

[வயிறு + இரை [2] → இரைச்சல்]

வயிற்றில்களிம்புகட்டல் *vayirril-kaḷimbu-kaṭṭal,* பெ.(n.) 1. உப்புசம்; tympanitis. 2. வளி வெளிநோக்கல்; any abnormal escape air as by belching yawning etc- *Herifleaus* (சா.அக.).

[வயிற்றில் + களிம்பு + கட்டல்]

வயிற்றில்வாயுபொருமல் *vayirril-vāyu-porumal,* பெ.(n.) ஊதையால் ஏற்படும் அடிவயிற்று வீக்கம்; tympanitis (சா.அக.).

வயிற்றிலடசல் *vayirriladašal,* பெ.(n.) வருமகுற்றம் (தோஷம்); industrinal fault or disorder (சா.அக.).

வயிற்றிலடி-த்தல் *vayirril-adi-,* 4 செ. குன்றாவி.(v.t.) பிழைப்பைக் கெடுத்தல் (இ.வ.); to deprive a person of his food or doing harm to the means of livelihood, as striking at the stomach. *"தொழிலாளர் வயிற்றிலடித்துப் பணம் சேர்ப்பது, முதலாளி களுக்குக் கைவந்த கலையாகும்" (உ.வ.).*

[வயிறு + அடு→ அடி-,]

வயிற்றிலிட்டுக்கொள்(ளு)-தல் *vayirril-iṭṭu-k-koḷ-,* 16 செ.கு.வி. (v.i.) 1. வயிற்றுப் போக்காதல் (இ.வ.); to have diarrhoea or loose motions. 2. இடுக்கண் முதலியவற்றால் உடம்பு இன்னலுறுதல் (இ.வ.); to be affected physically, as by a calamity, etc.

[வயிறு + இடு + கொள்-,]

வயிற்றிழைச்சல் *vayirrilaiccal,* பெ.(n.) வயிறுளை-த்தல் பார்க்க; see *vayiruḷai-.*

[வயிறு + இள்→ இழை→இழைச்சல்.]

வயிற்றிளக்கம் *vayirriḷakkam,* பெ.(n.) வயிற்றின் சுருக்கம்; relaxation of the bowels by cathartics or by discharges (சா.அக.).

[வயிறு + இள்→இள→இளகு→இளக்கு →இளக்கம்.]

வயிற்றிளைச்சல் *vayirriḷaiccal,* பெ.(n.) வயிறுளை-த்தல் பார்க்க; see *vayiruḷai-* (சா.அக.).

[வயிறு+இள்→இளை→இளைச்சல்.]

வயிற்றிற்கிருமி *vayirrir-kirumi,* பெ.(n.) வயிற்றுக்கிருமி (வின்.) பார்க்க; see *vayirru-k-kirumi.*

[வயிறு + Skt. krmi > த. கிருமி]

வயிற்றிற்கொள்(ளு)-தல் *vayiṟṟiṟ-koḷ(ḷu)-,* 10 செ.குன்றாவி.(v.t.) 1. உண்ணுதல்; to eat. *"தம் வயிற்றிற் கொண்டு" (திவ். திருவாய். 8, 7, 9).* 2. பாதுகாத்தல்; to protect. *"வயிற்றிற கொண்டு நின் றொழிந்தார்" (திவ். திருவாய். 8, 7, 9).* 3. மனத்திற் கொள்ளுதல்; to retain in memory, to absorb in mind. *"வயிற்றிற் கொண்டு மன்னவைத்தேன்" (திவ். திருவாய். 8, 7, 9).*

[வயிறு + கொள்-,]

வயிற்றின்கொடுமை *vayiṟṟin-kodumai,* பெ. (n.) வயிற்றுப்பசி; want of food, starvation (சா.அக.).

[வயிற்றின் + கொடுமை]

வயிற்றுக்கட்டி *vayiṟṟu-k-katti,* பெ.(n.) 1. வயிற்றுப் புண்கட்டி (வின்.); abdominal abscess. 2. ஈரல் முதலியவற்றின் வீக்கம் (உ.வ.); enlargement of the liver or the spleen.

மறுவ. ஆமைக்கட்டி, காய்ச்சற்கட்டி

[வயிறு + கள்→ கட்டு→கட்டி.]

கள் திரளல், பெருகுதல், உருண்டு கட்டியாதல். வயிற்றிலுள்ள உருண்டு திரண்ட கட்டி.

மலையும் மலைசார்ந்த குறிஞ்சிநிலத்துவாழ் மக்களுக்கு மண்ணீரல் சுரந்து கட்டியைப்போலத் தோற்றுவிக்கும் ஒரு வகை வீக்கமாகலாம்.

வயிற்றுக்கட்டு *vayiṟṟu-k-kattu,* பெ.(n.) 1. அடிவயிற்றிலிருந்து குறிவரைக்கும் துணியால் இறுகக்கட்டும் கட்டு; abdominal compress, a form of local pack, made by forming folds of a coarse linen towel of sufficient breadth to reach upto the penis. 2. ஈன்று புறந்தந்தவுடன் அடி வயிற்றிற் கட்டும் கட்டு; an abdominal bandage or belt for woman immediately after delivery (சா.அக.).

[வயிறு→ வயிற்று + கள்→கடு→கட்டு. கட்டு இணைத்தல், சேர்த்தல். வயிற்றை இடுப்போடிணைத்துப் பிணைத்துக் கட்டும் கட்டு.]

வயிற்றுக்கடுப்பு *vayiṟṟu-k-kaduppu,* பெ.(n.) 1. வயிற்றினழற்சியால் உண்டாகும் ஓர் நோய்; a disease causing throbbing pain or irritation in some parts of the abdomen. 2. மூலக்கடுப்பு; tenismus, as in dysentery. 3. வயிறுகடுப்பு பார்க்க; see *vayiṟu-kaduppu* (சா.அக.).

[வயிறு + கடு→கடுப்பு.]

வயிற்றின் அழற்சியால், கடுமையான வலி யுண்டாக்கும் வயிற்றுநோய்.

வயிற்றுக்கடுப்பு[2] *vayiṟṟu-k-kaduppu,* பெ.(n.) 1. வயிற்றுப் போக்கால் ஏற்படும் வலி; grips. 2. அரத்தக் கழிச்சல்; dysentery. 3. வயிற்றில் உண்டாம் நோவுவகை; stomach-ache, colic, cramp, stabbing pain in the stomach.

[வயிறு + கடு →கடுப்பு.]

வயிற்றில் மிகு வலியினையும், குத்தலையும் உண்டாக்கும் வயிற்று நோய்.

வயிற்றுக்கண்டரை *vayiṟṟu-k-kandarai,* பெ.(n.) அடி வயிற்றிலோடும் அரத்தக்குழாய்; abdominal aorta.

[வயிறு + கண்டு→ கண்டரை]

கண்டரை = நெஞ்சாங்குலையின் மேற்புறம் உள்ள இடப்பெருந் தமனி, ஆதார நாடி.

வயிற்றுக்கலக்கல் *vayirru-k-kalakkal,* பெ.(n.) வயிறு கலங்கி மலங்கழிகை; stirring sensation in the abdomen causing an inclination to go to stools (சா.அக.).

[வயிறு + சல → கலக்கல்.]

வயிற்றுக்கழிச்சல்[1] *vayirru-k-kaliccal,* பெ.(n.) அதிசாரம்; flux, purging (சா.அக.).

வயிற்றுக்கழிச்சல்[2] *vayirru-k-kali-c-cal,* பெ.(n.) வயிற்றுப்போக்கு (இ.வ.) பார்க்க; see *vayirru-p-pōkku.*

[வயிறு + கழி →கழிச்சல்]

கடுமையான வயிற்றுப்போக்கினாலுண்டாகும் நீர் நெருடலான கழிச்சல்.

வயிற்றுக்கனப்பு *vayirru-k-kanappu,* பெ.(n.) 1. செரிமான ஆற்றலறியாமல் உண்பதால் வயிறு விம்முகை (வின்.); heaviness of stomach as from over-eating or excessive eating. 2. ஊதை மிகுதியான் அடி வயிறு விம்முகை (கொ.வ.); tympanites.

மறுவ. வயிற்றுத் தீ

[வயிறு + கனப்பு]

கல்→கனல் = நெருப்பு அல்லது வயிற்றிலேற் படும் வெப்பம். மிகு செரிமானத்தால் ஏற்படும் வயிற்றுத் தீ.

வயிற்றுக்காந்தல்[1] *vayirru-k-kāndal,* பெ.(n.) கடும் பசியால் வயிறு காந்துகை; pricking in the stomach due to hunger (சா.அக.).

வயிற்றுக்காந்தல்[2] *vayirru-k-kāndal,* பெ.(n.) வயிற்றுக்காய்ச்சல் (கொ.வ.) பார்க்க; see *vayirru-k-kāyccal.*

[வயிறு + காந்து → காந்தல் = அல் தொ.பெ.ஈறு]

வயிற்றுப் பசியின் வெப்பமிகுதியாலேற்படும் எரிச்சல்.

வயிற்றுக்காய்ச்சல்[3] *vayirru-k-kāyccal,* பெ.(n.) வயிற்றுப் பசி (யாழ்.அக.); hunger, starvation.

[வயிறு+காய் → காய்ச்சல். 'அல்' தொழிற் பெயர் ஈறு.]

ஒருகா. வயிற்றுத்தீ

கடும் பசியினால் வயிற்றிலுண்டாகும் காய்ச்சல்.

வயிற்றுக்கிராந்தம்[1] *vayirru-k-kirāndam,* பெ.(n.) 1. குமுத நஞ்சு; a kind of poision. 2. வயிரக்கிராந்தம் பார்க்க; see *vayira-k-kirāndam* (சா.அக.).

[வயிறு + Skt.கிராந்தம்.]

Skt. krānta> த. கிராந்தம்

வயிற்றுக்கிராந்தம்[2] *vayirru-k-kirāndam,* பெ.(n.) செய்நஞ்சு வகையு ளொன்று (சங்.அக.); a kind of mineral poison.

[வயிறு + கிராந்தம்]

வயிற்றுக்கிருமி *vayirru-k-kirumi,* பெ.(n.) வயிற்றிலுண்டாம் கொக்கிப்புழு, நாடாப்புழு (யாழ்.அக.); round-worm, ring-worm, tape-worm.

[வயிறு + கிருமி]

Skt. krmi > த. கிருமி.

நுண்ணிய நச்சுயிரிகளின் விளைவாக, வயிற்றிலுருவாகும் இப்புழு, மனிதனுடைய குடலில் ஒட்டிக் கொண்டு, தனக்குத் தேவையான உணவை உறிஞ்சி உயிர் வாழும் இயல்பினது.



வயிற்றுக்குத்து *vayiṟṟu-k-kuttu,* பெ.(n.) வயிற்றிலேற்படும் நோவு (வின்.); stomach-ache, stabbing pain in stomach.

மறுவ. வயிற்றுவலி

[வயிறு + குல்→ குத்து.]

வயிறு குத்திக் குத்தி வலிப்பதாலுண்டாகும் நோவு.

வயிற்றுக்குத்துவாதம் *vayiṟṟu-k-kuttu-vādam,* பெ.(n.) வயிற்றுக்குத்து பார்க்க; see *vayiṟṟu-k-kuttu.*

*[வயிற்றுக்குத்து + **Skt.** வாதம்]*

மிகும் வளித்தொல்லையினால், வயிற்றிலேற்படும் வலி. இவ்வயிற்று வலியானது, வயிற்றின் ஏதேனும் ஒருபுறத்தே தாக்கும்; சிறிது நேரத்திற்கு ஒருமுறை குத்திக் குத்தி வலிக்குந் தன்மைத்து.

வயிற்றுக்கேடு *vayiṟṟu-k-kēḍu,* பெ.(n.) வயிற்றுப்போக்கு; disorder of stomach (சா.அக.).

[வயிறு + கெடு→கேடு]

வயிற்றுக்கொட்டல் *vayiṟṟu-k-koṭṭal,* பெ.(n.) சிறுக, சிறுக சீதமும், கழிமாசுக்கட்டும் இழிதல்; dysentery (சா.அக.).

[வயிறு + கொள்→கொட்டு + அல்]

வயிற்றுக்கொடுமை *vayiṟṟu-k-koḍumai,* பெ.(n.) வயிற்றுப் பசி (கொ.வ.); hunger, starvation.

[வயிறு + கொடு→கொடுமை]

வயிற்றுக்கொதி *vayiṟṟu-k-kodi,* பெ.(n.) 1. பசி; hunger. 2. வயிற்றுப்போக்கு; diarrhoea.

[வயிறு + குல்→குதி→கொதி]

வயிற்றுக்கோளாறு *vayiṟṟu-k-kōḷāṟu,* பெ.(n.) வயிற்றில் ஏற்படும் பலவித ஊறுபாடு; disorder of stomach due to indigestion (சா.அக.).

[வயிறு + குளறு→குளாறு→கோளாறு]

வயிற்றுச்சங்கடம் *vayiṟṟu-c-caṅgaḍam,* பெ.(n.) வயிற்றுத் தொந்தரவு; trouble in the stomach (சா.அக.).

த. சங்கடம் > **Skt.** Śaṅkata.

[வயிறு + சாங்கடை→சங்கடை→சங்கடம் = வருத்தம், ஒடுக்கவழி.]

வயிற்றுச்சிறுநோய் *vayiṟṟu-c-ciṟu-nōy,* பெ.(n.) அடி வயிற்றிலேற்படும் சிறுவலி; slight pain in the abdomen (சா.அக.).

[வயிறு + சில்→சிறு + நோய்.]

வயிற்றில் உண்டாகும் சிறிய குத்தல் வலி.

வயிற்றுச்சுரப்பு *vayirru-c-curappu,* பெ.(n.) வயிற்றுக்கனப்பு பார்க்க; see *vayirru-k-kanappu.*

[வயிறு + சுள்→சுர்→சுர→சுரப்பு]

வயிற்றுச்சூலை *vayirru-c-cūlai,* பெ.(n.) 1. ஓர்வகைச்சூலை, அடிவயிறு வீக்கத்துடன் கூடிய குடல் நோவு; colic pain in the abdomen. 2. வயிற்றுக்குத்தல் பார்க்க; see *vayirru-k-kuttal* (சா.அக.).

[வயிறு + சூல்→சூலை]

வயிற்றுத்தீ *vayirru-t-ti,* பெ.(n.) 1. முற் பொழுதுண்ட உணவைச் செரிக்கச் செய்யும் வயிற்றுத்தீ; digesting agency, considered a fire or heat abiding in the stomach. *"வயிற்றுத்தீத் தணிய" (புறநா. 74).* 2. பெரும்பசிப்பிணி வகை; a disease that causes insatiable hunger. *"வயிற்றுத் தீயார்க்கு" (ஏலாதி. 57).*

மறுவ. கடும்பசி

Skt. உதராக்கினி

[வயிறு + தீ]

வயிற்றுத்தொந்தி *vayirru-t-tondi,* பெ.(n.) வயிற்றின் தசை மடிப்பு; collop (சா.அக.).

[வயிறு + தொந்தி]

வயிற்றுநாளம் *vayirru-nālam,* பெ.(n.) அரத்தம், தசைநீர், கொழுப்புநீர் முதலானவற்றை உடலின் பல பகுதிகட்கும், எடுத்துச் செல்லும் அடிவயிற்று நரம்பு; gastric vein (சா.அக.).

[வயிறு + நாளம். நள்→நாள்→நாளம்.]

உட்டுளை, உட்டுளை நரம்பு.

வயிற்றுநீராம்பல் *vayirru-nirāmbal,* பெ.(n.) அடி வயிற்று நோய்; a disease of the abdomen.

[வயிறு + நீராம்பல்]

வயிற்றுநோக்காடு *vayirru-nōkkādu,* பெ.(n.) வயிற்றுநோவு பார்க்க; see *vayirru-nōvu.*

[வயிறு + நோய் + காடு. காடு = சொல்லாக்க ஈறு.]

ஒ.நோ. பூ + காடு

வயிற்றுநோய் *vayirru-nōy,* பெ.(n.) வயிற்று வலி (வின்.); stomach-ache.

[வயிறு + நோய்]

வயிற்றுநோவு *vayirru-nōvu,* பெ.(n.) 1. வயிற்று வலி (வின்.); stomach-ache. 2. மகப்பேற்று வலி; labour-pains, a pre-delivery symptom.

[வயிறு + நோ → நோவு]

வயிற்றுப்பசம் *vayirruppašam,* பெ.(n.) வயிறுப்பசம் (M.L) பார்க்க; see *vayiruppašam.*

[வயிறு + உப்பசம். உப்பசம் = வீக்கம்.]

வயிற்றுப்பசையெடுப்பான் *vayirru-p-pašai-eduppān,* பெ.(n.) பறவை வகையு ளொன்று; chestnut bellied nuthatch-*Sitta castanea.*

[வயிறு + பசை + எடுப்பான்]

இப்பறவையினம் தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும், இலையுதிர்க் காடுகள், மரங்கள் நிறைந்த ஊர்ப்புறத் தோப்புகளிலும் காணப்படும். இப்பறவை

யினமானது, 12 விரலம் உயரம் வரை வளரும். உடலின் மேற்பகுதி நீலம் தோய்ந்த கருஞ்சாம்பல் நிறமாகவும், கண், அலகு முதலியவற்றில் கருப்புக்கோடும் காணப்படும். புழு, பூச்சி, சிறு விதைகள் ஆகியன இவற்றின் உணவாகும். 4 அல்லது 5 முட்டைகள் இட்டு தன் இனத்தை பெருக்கும்.



வயிற்றுப்பறதி *vayir̤r̤u-p-par̤adi,* பெ.(n.) வயிற்றுப்பறப்பு (வின்.) பார்க்க; see *vayir̤r̤u-p-par̤appu.*

[வயிறு + பறதி]

வயிற்றுப்பறப்பு *vayir̤r̤u-p-par̤appu,* பெ.(n.) 1. பசித்தாருக்கு ஏற்படும் உணவு வேட்கை (வின்.); voracity. 2. வாழ்க்கைத் துன்பம்; straitened means of livelihood, inadequate means of living, poverty-sticken living.

[வயிறு + பற → பறப்பு.]

பசியால் வருந்துவோர் உண்பன கிடைத்தவிடத்து வயிறு நிரைத்தற் பொருட்டுளதாகும் உணவு வேட்கை.

வயிற்றுப்பாடு *vayir̤r̤u-p-pāḍu,* பெ.(n.) வயிற்றுப்பிழைப்பு (வின்.) பார்க்க; see *vayir̤r̤u-p-pil̤aippu.*

[வயிறு + படு→பாடு]

வயிற்றுப்பிசம் *vayir̤r̤uppišam,* பெ.(n.) வயிறுப்பசம் பார்க்க; see *vayir̤uppašam.*

[வயிறு + உப்பிசம்]

வயிற்றுப்பிசம்[2] *vayir̤r̤uppišam,* பெ.(n.) வயிறூதல், வயிற்றுப் பொருமல்; a distension of the abdomen attended with incarceration of flatus, and an intense pain and rumbling inside-tympanitis, it arrests the emission of flatus (சா.அக.).

[வயிறு + உப்பசம்→உப்பிசம்]

உப்பிசம் (கொ.வ.)

சீரகமும் வெல்லமும் உரியமுறையில் கலந்துண்ண வயிற்றுப்பசம் நீங்கும்.

வயிற்றுப்பிடுங்கல் *vayir̤r̤u-p-piḍuṅgal,* பெ.(n.) வயிற்றுநோய்; gnawing pain in the abdomen (சா.அக.).

[வயிறு + பிடுங்கல்]

வயிற்றுப்பிழைப்பு *vayir̤r̤u-p-pil̤aippu,* பெ.(n.) வாழ்விற்குரிய தொழில், பிழைப்பிற்குரிய தொழில்; liveli-hood, profession, occupation, as a means of living.

[வயிறு + பிழைப்பு[1]]

வயிற்றுப்பிள்ளை *vayir̤r̤u-p-pil̤l̤ai,* பெ.(n.) கருப்பத்தில் இருக்கின்ற பிள்ளை; child in the womb (சா.அக.).

[வயிறு + பிள்ளை]

வயிற்றுப்பிள்ளைக்காரி *vayiṟṟu-p-piḷḷai-k-kāri,* பெ.(n.) கருவுற்றவள்; pregnant woman.

மறுவ. சூலி, உண்டானவள், முழுகாதவள், பிள்ளைத்தாய்ச்சி.

[வயிறு + பிள்ளைக்காரி.]

வயிற்றுப்புகைச்சல் *vayiṟṟu-p-pugaiccal,* பெ.(n.) வயிற்றுட் கொதிப்புண்டாகை (யாழ்.அக.); excessive heat in the stomach due to empty stomach.

[வயிறு + புகை→புகைச்சல்]

வயிற்றுப்புண் *vayiṟṟu-p-puṇ,* பெ.(n.) வயிறு அழளுகை; ulceration of the stomach, stomach ulcer (சா.அக.).

[வயிறு + புண்]

வயிற்றுப்புரட்டல் *vayiṟṟu-p-puraṭṭal,* பெ.(n.) வாந்தி யெடுப்பதற்கு முன் வயிற்றில் உண்டாகும் வாய்க்குமட்டலுணர்வு; changes in the stomach or the sensation in the stomach before vomitting (சா.அக.).

[வயிறு + புரட்டல்]

வாயாலெடுக்கு முன் ஏற்படும் குமட்டலுணர்வு.

வயிற்றுப்புளிப்பு *vayiṟṟu-p-puḷippu,* பெ.(n.) முன்னுண்ட உணவு அறாமையான் இரைப்பையிற் புளிப்புச்சத்து மிகுதியா யிருக்கை (M.L.); acidity of the stomach.

[வயிறு + புளிப்பு]

வயிற்றுப்புற்று *vayiṟṟu-p-puṟṟu,* பெ.(n.) வயிற்றுப்பரப்பிலேற்படும் புற்றுநோய் வகை; stomach cancer (சா.அக.).

[வயிறு + புற்று]

வயிற்றுப்பூச்சி *vayiṟṟu-p-pūcci,* பெ.(n.) வயிற்றில் உண்டாகும் புழு (யாழ்.அக.); round-worm, ring-worm, tape-worm. in stomach.

[வயிறு + பூச்சி]

வேப்பிலைக் கொழுந்துடன், சிறிது வெல்லம் கலந்துண்ண வயிற்றுப்பூச்சி மடியும். துளசியையும், மிளகையும் உரியமுறையிற் கலந்து, கருக்குநீரிட்டுக் குடித்துவர, வயிற்றுப்பூச்சி மடியும்.

வயிற்றுப்பொருமல் *vayiṟṟu-p-porumal,* பெ.(n.) 1. வயிறுப்பசம் (வின்.) பார்க்க; see vayiṟuppašam. 2. பொறாமை (யாழ்.அக.); envy, jealousy.

மறுவ. வயிற்றுமந்தம்

[வயிறு + பொருமல்]

வயிற்றுப்போக்கு *vayiṟṟu-p-pōkku,* பெ.(n.) 1. வயிற்றோட்டம், செரியாமல் மலங் கழிகை (யாழ்ப்.); diarrhoea. 2. நச்சுக் கழிச்சல் (யாழ்.அக.); cholera.

[வயிறு + போக்கு[2]]

மாதுளம் பிஞ்சு, தென்னங்குரும்பை, மாவிலைக் கொழுந்து இம்மூன்றையும் அரைத்துக் கொடுத்தால், வயிற்றுப்போக்கு அகலும். சுட்ட வாழைப்பழத்தில், சிறிது தேன் கலந்து கொடுத்தாலும் வயிற்றுப்போக்கு நிற்கும்.

வயிற்றுமந்தம் *vayiṟṟu-mandam,* பெ.(n.) பசிவேட்கையின்மை; loss of appetite (சா.அக.).

[வயிறு + மந்தம்]

வயிற்றுமாரி *vayiṟṟu-māri,* பெ.(n.) கழிபே ரிரையான் (வின்.); glutton.

மறுவ. மிடாவிழுங்கி

[வயிறு + மாரி[1]]

வயிற்றுவலி *vayiṟṟu-vali,* பெ.(n.) 1. வயிற்றில் உண்டாம் நோவு வகை; stomach-ache, colic gripe; cramp in the stomach. 2. செரியாமையாலேற்படும் நோவு; dyspepsia, gastritis, pain due to indegestion.

மறுவ. குடல்முறுக்குநோய்

[வயிறு + வல்→வலி.]

வயிற்றுவால்காக்கை *vayiṟṟu-vāl-kākkai,* பெ.(n.) காக்கை வகையினுள் ஒன்று; bellied treepie-*Dendrocitha leucogastra* (சா.அக.).

[வயிற்றுவால் + காக்கை]

நீலமலை, ஆனைமலை போன்ற பகுதிகளில் மட்டுமே காணப்படுகின்ற, இந்த காக்கைக் கூட்டம் ஓணான், எலி, பழங்கள், கொட்டைகள் போன்றவற்றை உணவாகக் கொள்ளும். 50 விரலம் உயரம் வரை வளரும் தன்மை கொண்டது. நெற்றி, தலை, மார்பு, தொண்டை போன்றவை கருப்பு நிறமாகவும், இறக்கை கருமையும் வெண்மையுங் கலந்த வண்ணத்தில் காணப்படும். இதன் வாலானது 30 விரலம் நீளம் வரை வளர்ந்திருக்கும். 3 முதல் 4 முட்டைகளிட்டு தன் இனப்பெருக்கத்தை மேற்கொள்ளும் தன்மைத்து.

வயிற்றுவிம்மல் *vayiṟṟu-vimmal,* பெ.(n.) அன்னாசயத்திலும், குடலிலும் காற்று சேருவதினால் உண்டாகும் நோய்; tympanites (சா.அக.).

[வயிறு + விம்மல்]

வயிற்றுவிரணம் *vayiṟṟu-viraṇam,* பெ.(n.) வயிற்றிலுண்டாகும் புண்; peptic or duodenal ulcer.

[வயிறு + விரணம்.]

Skt. *vraṇa.*

வயிற்றுளைச்சல் *vayiṟṟuḷaiccal,* பெ.(n.) வயிற்றுப்போக்கு (M.L.) பார்க்க; see *vayiṟṟu-p-pōkku.*

[வயிறு + உளை → உளைச்சல்]

வெற்றிலையுடன், உப்பையும் சேர்த்துக் கொடுக்க வயிற்றுளைச்சல் விட்டுப்போகும்.

வயிற்றுளைவு[1] *vayiṟṟuḷaivu,* பெ.(n.) அடி வயிற்றில் குடைதல் போன்ற நோய்; boring pain in abdomen (சா.அக.).

[வயிறு + உளை→உளைவு]

வயிற்றுளைவு[2] *vayiṟṟuḷaivu,* பெ.(n.) 1. வயிற்றுப்போக்கு (யாழ்.அக.) பார்க்க; see *vayiṟṟu-p-pōkku.* 2. வயிற்றுவலி, 1 (வின்.) பார்க்க; see *vayiṟṟu-vali.*

[வயிறு + உளை → உளைவு]

வயிற்றெடுப்பு *vayiṟṟeḍuppu,* பெ.(n.) 1. ஆட்டு நோய் வகை (M.Cm.D.1, 249); a disease of sheep. 2. வயிற்றுப்போக்கு பார்க்க; see *vayiṟṟu-p-pōkku.*

[வயிறு + எடுப்பு]

வயிற்றெரி *vayiṟṟeri,* பெ.(n.) வயிற்றுத் தீ; digestive heat. *"பூதம் வயிற்றெரி மூண்டவே"* (தக்கயாகப். 568).

மறுவ. கடும்பசி, அழிபசி, யானைப்பசி.

[வயிறு + எரி]

வயிற்றெரிச்சல் *vayiṟṟericcal,* பெ.(n.) 1. வயிற்றிற்காணும் எரிவு; burning sensation in the stomach. 2. பொறாமை (யாழ்.அக.); envy, jealousy. 3. மன வருத்தம் (வின்.); sorrow, grief, unhappiness. 4. இரக்கம் (வின்.); compassion, pity.

[வயிறு + எரிச்சல்]

வயிற்றெரிச்சல்கொள்ளல் *vayiṟṟericcal-koḷḷal,* பெ.(n.) 1. இழப்பு, ஏமாற்றம் போன்றவற்றால் மனக்கொதிப் படைதல்; frustration. 2. பொறாமைப்படல்; heart burning, jealousy. *பிறர் ஆக்கம் கண்டு, வயிற்றெரிச்சல் கொள்ளல் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும்.*

[வயிறு + எரிச்சல் + கொள்ளல்.]

வயிற்றெரிச்சற்படு-தல் *vayiṟṟericcaṟ-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. பொறாமைப் படுதல்; to envy, to feel envy. *எதிர் வீட்டுக்காரர் மாடமாளிகை கட்டியதற்காக நீ ஏன் வயிற்றெரிச்சற் படுகிறாய்? அவனுக்கு நல்ல வேலை கிடைத்தற்காக நீ ஏன் வயிற்றெரிச்சல் படுகிறாய்? (உ.வ.).* 2. மன வருத்தமடைதல்; to feel vexation.

[வயிறு + எரிச்சல் + படு-.]

வயிற்றெரிவு *vayiṟṟerivu,* பெ.(n.) வயிற் றெரிச்சல் (வின்.) பார்க்க; see *vayiṟṟericcal.*

[வயிறு + எரி→எரிவு]

வயிற்றைக்கட்டு[1]-தல் *vayiṟṟai-k-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. அளவிட்டிதாய் உண்ணுதல்; to eat moderately. 2. வயிற்றுப் போக்கை நிறுத்துதல்; to bind the bowels, to check diarrhoea. *'இந்த மருந்து வயிற்றைக் கட்டும்' (உ.வ.).*

[வயிறு + கட்டு-.]

வயிற்றைக்கட்டு[2]-தல் *vayiṟṟai-k-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) அளவறிந்து செலவு செய்தல்; to be thrifty. *அருமந்த ஒருமகனை பெற்று ஆளாக்கினாள் 'வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி' வளர்த்தெடுத்த பெருமை குறித்தவாம். இவைபோன்ற நூற்றுக் கணக்கான சொற்களும் பாண்டி நாட்டுலக வழக்கிற்குச் சிறப்பாம்.* 2. கஞ்சத்தனமா யிருத்தல்; to be niggard. *வயிற்றைக்கட்டி வாயைக்கட்டி வாழ்ந்தாலும் மிஞ்சும் பணமே மிஞ்சும் (இ.வ.).*

[வயிறு + கட்டு-.]

வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டிக் காசு பணம் சேர்த்தல் என்னும் வழக்கு சிக்கனமாயிருத்தல் என்னும் பொருண்மை பொதிந்த மரபினை மொழியாகும். இவ்வழக்கு தென்மாவட்டங்களில் வாழும் கல்லாதார் நாவில், மிகுதியாக வழக்கூன்றியுள்ளது, குறிக்கத்தக்கது. 'வயிற்றைக் கட்டுதல்' என்னும் வழக்குத் தொடர், வாழ்வியலில், சிக்கனமாயிருத்தலையும், வயிற்றைக்கட்டி வாழ்தல் நோய் நொடியின்றி வாழ்தற்குரிய வழிமுறையையும் குறித்ததெனலாம்.

வயிற்றைக்கலக்கு-தல் *vayiṟṟai-k-kalakku-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நீருஞ் சேறுமாக கழிமாசு மலம் வெளிப்பட வேண்டி வயிற்றில் குழப்பம் உண்டாதல் (கொ.வ); to feel uncomfortable due to rumbling of the bowels. 2. பேரச்சங்கொள்ளுதல்; to be terrified alarmed, horrified, shocked.

[வயிறு + கலக்கு-.]

வயிற்றைக்கழுவு-தல் *vayiṟṟai-k-kaḻuvu-,* 5 செ.கு.வி.(v.i.) வயிறுகழுவு-, (இ.வ.) பார்க்க; see *vayiṟu-kaḻuvu-,* *நாலைந்து வீடுகளில் ஏவிய வேலை செய்து கிடைக்கும் அளவிட்டிதாம் பணத்தில் வயிற்றைக் கழுவுகிறாள் (உ.வ.).*

[வயிறு + கழுவு-]

வயிற்றைக்குறை–த்தல் *vayiṟṟai-k-kuṟai-,* 4 செ.குன்றாவி.(v.t.) வயிற்றுக்கு ஈயப்படும் உணவளவைக் குறைத்துக் கொள்ளுதல்; to reduce quantity of diet.

[வயிற்றை + குறை–.]

வயிற்றைத்திற–த்தல் *vayiṟṟai-t-tiṟa-,* 3 செ.கு.வி.(v.i.) கருக்கொள்ளுமாறு அருளுதல்; to bless a woman to give birth a child, to bless for motherhood. *"தெய்வம் இன்னும் அவள் வயிற்றைத் திறக்கவில்லை" (கொ.வ.).*

[வயிறு + திற–,]

வயிற்றைப்பீறல் *vayiṟṟai-p-pīṟal,* பெ.(n.) வயிற்றைக்கிழித்து குழந்தையை வெளியே எடுத்தல்; incision of the uterus through the abdominal wall and the extrication of the foetus there from caesarean section (சா.அக.).

[வயிறு + பீறல்.]

வயிற்றைப்பெருக்கு–தல் *vayiṟṟai-p-perukku-,* 5 செ.கு.வி.(v.i.) 1. உண்ணும் அளவைக் கூட்டுதல்; to increase one's appetite. *"ஸ்வயம் பாகத்திலே வயிற்றைப் பெருக்கினபடியாலே" (ஸ்ரீவசன. 84).* 2. நிறைவாக உண்ணுதல் (இ.வ.); to be gluttonous, to take full meal.

[வயிறு + பெருக்கு–.]

வயிற்றையொடுக்கு–தல் *vayiṟṟai-y-oḍukku,* 5 செ.கு.வி.(v.i.) உண்ணும் உணவின் அளவைக் குறைத்தல் (வின்.); to restrain one's appetite, to reduce the quantity of food.

[வயிறு + ஒடுக்கு–,]

வயிற்றையொறு–த்தல் *vayiṟṟai-y-oṟu-,* 4 செ.கு.வி.(v.i.) வயிற்றையொடுக்கு–, (வின்.) பார்க்க; see *vayiṟṟai-y-oḍukku-.*

[வயிறு + ஒறு–,]

வயிற்றைவலி–த்தல் *vayiṟṟai-vali-,* 4செ. குன்றாவி.(v.t.) குடலில் வலி ஏற்படுகை; colic (சா.அக.).

வயிற்றைவளர்–த்தல் *vayiṟṟai-vaḷar-,* 4 செ.கு.வி.(v.i.) வயிறுகழுவு–, (இ.வ.) பார்க்க; see *vayiṟu-kaḻuvu-.*

[வயிறு + வளர்–.]

வயிற்றோட்டம் *vayiṟṟōṭṭam,* பெ.(n.) வயிற்றுப்போக்கு, 1 (M.L.) பார்க்க; see *vayiṟṟu-p-pōkku.*

[வயிறு + ஓட்டம்']

வயிறடி–த்தல் *vayiraḍi-,* 4 செ.கு.வி. (v.i.) துயரக்குறியாக வயிற்றிலடித்துக் கொள்ளுதல்; to beat one's stomach with one's hands, as in grief. *"வைத்தது காணாள் வயிறடித்து" (திவ். இயற். சிறிய. ம. 34).*

[வயிறு + அடு→அடி–.]

வயிறடைத்தல் *vayiṟaḍaittal,* தொ.பெ.(vbl.n.) 1. உண்ணும் விருப்பம் இல்லாதிருக்கை; loathing of food not fond of food. 2. மலடாயிருக்கை; being barren, sterile. 3. பூப்பு நின்றுபோகை; being past menopause. 4. கருத்தரிக்குந் தன்மையற்றுப் போகை; ceasing to bear children, infertility.

[வயிறு + அடைத்தல்.]

வயிறதுக்கு–தல் *vayiṟadukku-,* 5 செ.கு.வி. (v.i.) 1. வயிறுபிடி–த்தல் பார்க்க; see *vayiṟu-piḍi-,* 2. வயிறலை–த்தல்

பார்க்க; see *vayiṟalai-*, *"அரிவைய ரவ்வயிறதுக்கினார்" (சீவக. 1104).*

[வயிறு + அதுங்கு(த.வி.)→அதுக்கு–,]

வயிறலை–த்தல் *vayiṟalai-,* 4 செ.கு.வி. (v.i.) வயிறடி–த்தல் பார்க்க; see *vayiṟaḍi-,* *"வந்தானை யிடைநோக்கி வயிறலைத்து" (கம்பரா. சூர்ப்ப. 115).*

[வயிறு + அல்→அலை. அலைதல் (த.வி.) →அலைத்தல் (பி.வி.)]

வயிறழி–தல் *vayiṟaḻi-,* 2 செ.கு.வி. (v.i.) 1. கருக்குலைதல்; to abort. 2. வெளிவிடுதல்; to be delivered. *"மஞ்சு தம்வயிறழிந்து" (சீவக.570).*

[வயிறு + ஒழி→அழி–,]

வயிறழிதல் *vayiṟiḻidal,* பெ.(n.) வயிறுகழிதல் (இ.வ.) பார்க்க; see *vayiṟukaḻidal.*

[வயிறு + இழி'–தல்]

வயிறழுதல் *vayiṟaḻudal,* தொ.பெ.(vbl.n.) வயிற்றில் இரைச்சலுண்டாகை (வின்.); flatulency , rumbling of the bowels.

[வயிறு + அழிதல்→அழுதல்.]

வயிறார *vayiṟāra,* கு.வி.எ.(adv.) வயிறுநிரம்ப; to one's bellyful. *உணவு சுவையாய் இருந்ததால், வயிறார உண்டான் (இக்.வ.).*

[வயிறு +ஆர்→ஆர. ஆர = மிக, நிறைய.]

வயிறிரைதல் *vayiṟiraidal,* பெ.(n.) வயிறழுதல் பார்க்க; see *vayiṟaḻudal.*

[வயிற + இரை'தல்]

வயிறு *vayiṟu,* பெ.(n.) 1. உதரம்; belly, stomach, paunch. *"உணவு..... சிறிது வயிற்றுக்கு மீயப் படும்" (குறள், 412). "அவ்வயிறு அலைத்த என்செய்வினைக் குறுமகள்" (நற்.179:3). "தண்ணுமைக் கண்ணின் அலைஇயர்தன் வயிறே" (அகநா. 1.06.93). "ஈன்ற வயிறோ விதுவே" (புறநா. 86:5).* 2. கருப்பப்பை; womb. *"பத்து மாதம் வயிற்றிற் சுமந்து பெற்ற பிள்ளை" (வின்.).* 3. நடுவிடம்; centre, heart, as of a tree. *"கடல்வயிறு கலக்கினையே" (சிலப். 17, முன்னிலைப் பரவல். 1).* 4. உள்ளிடம்; interior, inner space. *"வயிற்றிற்கொண்டு நின்றொரு மூவுலகும்" (திவ். திருவாய். 8, 7, 9).* 5. மனம் (திவ். திருவாய். 8, 7, 9); mind.

க. பசிறு.

Ma. vayaṟu; **Ko.** vi-r; **Kui.** vahi; **Ka.** basaṟ(u); **Tu.** bañji.

[வயின்→வயிறு]

வயிறுகட்டல்[1] *vayiṟu-kaṭṭal,* பெ.(n.) 1. மகப்பேறு நிகழ்ந்த பெண்களுக்கு அடிவயிற்றில் கட்டும் கட்டு; obsteric binder, bandage applied to the abdomen after delivery. 2. நோயாளி, கருவுற்றவள் உணவுக் கட்டுப்பாட்டிலிருத்தல்; patient and pregnant woman to be on diet (சா.அக.).

[வயிறு + கள்→கட்டு + அல்]

வயிறுகட்டல்[2] *vayiṟu-kaṭṭal,* பெ.(n.) தேவையற்ற உணவினை தவிர்த்தல்; avoidance of unnesessary food.

[வயிறு + கட்டல்]

வயிறுகடி *vayiṟu-kaḍi,* பெ.(n.) 1. பசி நோவு (இ.வ.); pinch of hunger. 2. வயிற்று வலி; stomach-ache. 3. பொறாமை; jealousy, envy.

[வயிறு + கடி[6]]

வயிறுகடித்தல் *vayiṟu-kaḍittal,* தொ.பெ.(vbl. n.) வயிறுகடி பார்க்க; see *vayiṟu-kaḍi-.*

[வயிறு + கடித்தல். கடித்தல் = வலித்தல்.]

வயிறுகடு-த்தல் *vayiṟu-kaḍu-,* 4 செ. குன்றாவி.(v.t.) வயிறு வலித்தல்; stomach-ache.

[வயிறு + கடு-,]

வயிறுகடுப்பு *vayiṟu-kaḍuppu,* பெ.(n.) வயிற்றின்ழற்சி; inflammation of the stomach-gastritis.

[வயிறு + கடுப்பு]

வயிறுகடுப்பெடு-த்தல் *vayiṟu-kaḍu-p-peḍu-,* 4 செ.குன்றாவி.(v.t.) வயிறு கடு-த்தல் பார்க்க; see *vayiṟu-kaḍu-,*

[வயிறு + கடுப்பு + எடு-.]

வயிறுகண்டிப்பு *vayiṟu-kaṇḍippu,* பெ.(n.) அடிவயிற்று வீக்கம்; swelling abdomen (சா.அக.).

[வயிறு + கண்டு→கண்டி→கண்டிப்பு]

வயிறுகலக்கல் *vayiṟu-kalakkal,* பெ.(n.) வயிறுகடுப்பு பார்க்க; see *vayiṟu-kaḍuppu.*

[வயிறு + கலக்கல்]

வயிறுகழிதல் *vayiṟu-kaḻidal,* தொ.பெ. (vbl.n.) இளகிய நிலையில் கழிமாசு (மலம்) போன்றவை இழிதல் (இ.வ.); having loose motions.

[வயிறு + கழிதல்]

வயிறுகழுவு-தல் *vayiṟu-kaḻuvu-,* 5 செ. கு.வி.(v.i.) அரும்பாடுபட்டு, உணவு தேடிப் பிழைத்தல்; to manage with great difficulty to get food and live, to eke one's livelihood. *வயிறுகழுவ வழியில்லாதவள் வானூர்தி ஏற நினைக்கலாமா? (பழ.).*

[வயிறு + கழுவு-]

வயிறுகனத்தல் *vayiṟu-kaṉattal,* பெ.(n.) வயிறுகடுத்தல் பார்க்க; see *vayiṟu-kaḍuttal.*

[வயிறு + கனத்தல்]

வயிறுகாந்தல்[1] *vayiṟu-kāndal,* பெ.(n.) வயிற்றுப்புகைச்சல் (வின்.) பார்க்க; see *vayiṟṟu-p-pugaiccal.*

[வயிறு + காந்தல்]

வயிறுகாந்தல்[2] *vayiṟu-kāndal,* பெ.(n.) வயிறு காந்துகை; to be pinched with hunger (சா.அக.).

[வயிறு + காந்தல்]

வயிறுகாந்துதல் *vayiṟu-kāndudal,* பெ.(n.) வயிறுகாய்தல் (வின்.) பார்க்க; see *vayiṟu-kāydal.*

[வயிறு + காய்→காய்ந்து→காந்து→காந்துதல் = எரிவெடுத்தல் (வே.க.185).]

வயிறுகாய்தல் *vayiṟu-kāydal,* பெ.(n.) பட்டினியாயிருக்கை, நீருஞ் சோறுமாகிய இருமருந்துளொன்றேனு முண்ணாமை; abstinency, starvation, being pinched with hunger, fasting. *"வயிறுகாய் பெரும்பசி" (மணிமே. 14, 6).*

[வயிறு + காய்[1] +தல் = தொ. பெ. ஈறு]

வயிறுகிடமுடெனல் *vayiṟu-kiḍa-muḍeṉal,* தொ.பெ.(vbl.n.) வயிற்றில் உண்டாகும் பேரிரைச்சல்; warble.

[வயிறு + கிடமுடெனல்.]

கிடமுடெனல் = ஒலிக்குறிப்புச் சொல்

வயிறுகிண்டுதல் *vayiṟu-kiṇḍudal-,* பெ.(n.) வயிறுகாய்தல் (இ.வ.) பார்க்க; see *vayiṟu-kāydal.*

[வயிறு + கிள்→கிண்டு→கிண்டுதல்.]

வயிறுகிள்ளுதல் *vayiṟu-kiḷḷudal,* பெ.(n.) வயிறுகாய்தல் பார்க்க; see *vayiṟu-kāydal.*

[வயிறு + கிள்ளுதல்]

வயிறுகிள்ளும்பசி *vayiṟu-kiḷḷum-paśi,* பெ.(n.) அழி பசி; gnawing hunger.

மறுவ. கொடும்பசி.

[வயிறு + கிள்ளும் + பசி]

வறியவரது கொடிய பசியே, வயிறு கிள்ளும் பசியெனவாம். இக்கொடிய பசியினைப் போக்குபவனே, அனைத்து நன்மைகளும், பெற்றவனாவன்.

வயிறுகுத்துதல் *vayiṟu-kuttudal,* பெ.(n.) வயிற்றில் வலியுண்டாகை (தொல். சொல்.15, உரை); having stabbing pain in the stomach.

[வயிறு + குத்துதல்]

வயிறுகுமுறல் *vayiṟu-kumuṟal,* பெ.(n.) வயிற்றுளெழும் அதிரொலி; quavering or trembling sound.

[வயிறு + குமுறல்]

வயிறுகுளிர்-தல் *vayiṟu-kuḷir-,* 2 செ.கு.வி. (v.i.) பொந்திகையடைதல்; to be refreshed, as by food, to be satisfied. *'அவன் வயிறு குளிர்ந்தான்' (வின்.).*

[வயிறு + குளிர்-,]

வயிறுகூப்பிடுதல் *vayiṟu-kūppiḍudal,* பெ.(n.) வயிறழுதல் (இ.வ.) பார்க்க; see *vayiṟaḻudal.*

[வயிறு + கூப்பிடுதல்.]

வயிறுகெல்லல் *vayiṟu-kellal,* பெ.(n.) வயிற்றளைச்சல்; irritation of the stomach (சா.அக.).

[வயிறு + கெல்லல்]

வயிறுகொட்டல் *vayiṟu-koṭṭal,* பெ.(n.) குருதிகொட்ட கழிமாசு (மலம்) கழிக்கை (M.L.); dysentery.

[வயிறு + கொட்டு + அல்.]

வயிறுகோளாறு *vayiṟu-kōḷāṟu,* பெ.(n.) அற்றதறிந் துண்ணாமையா னேற்படும் இடர், உடல் ஊறுபாடு; complication in the stomach due to indigestion and other cause.

[வயிறு + கோளாறு]

வயிறுசுருட்டிபிடி-த்தல் *vayiṟu-śuruṭṭi-piḍi-,* 4 செ.குன்றாவி.(v.t.) வயிறுகெல்லல் பார்க்க; see *vayiṟu-kellal.*

[வயிறு + சுருட்டி + பிடி-,]

வயிறுதம-த்தல் *vayiṟu-tama-,* 4 செ. குன்றாவி. (v.t.) வயிறுதமத்தது பார்க்க; see *vayiṟu-tamattadu.*

[வயிறு + தம-,]

வயிறுதமத்தது *vayiṟu-tamattadu,* பெ.(n.) பசியாறுகை; appeasement or satiation of hunger.

[வயிறு + தமத்தது]

வயிறுதள்ளல் *vayiṟu-taḷḷal,* தொ.பெ.(vbl.n.) 1. தொந்தி விழுகை; being pot-bellied or large belly. 2. கருப்பமாகை; conceinability, becoming pregnant (சா.அக.).

[வயிறு + தள்ளல்]

வயிறுதள்ளு-தல் *vayiṟu-taḷḷu-,* 5 செ. குன்றாவி. (v.t.) வயிறு பருத்தல்; to be in enlarged or bulging stomach.

[வயிறு + துள்→தள்→தள்ளு-.]

வயிறுதளர்ச்சி *vayiṟu-taḷarcci,* பெ.(n.) வயிற்றிளக்கம்; laxity of stomach.

[வயிறு + தள்→தளர்→ தளர்ச்சி]

வயிறு தளர்ந்து சுருங்குகை.

வயிறுதாரி *vayiṟu-tāri,* பெ.(n.) 1. பரு வயிறோன்; person with a big belly, pot-bellied person. *"கணபதியேல் வயிறுதாரி" (தேவா.1053, 2).* 2. கழிபேரிரையான் (வின்.); glutton. 3. தன்னலம் ஒன்றையே கருதுபவன்; extremely selfish person.

[வயிறு + தாரி[4]]

வயிறுதிறத்தல் *vayiṟu-tiṟattal,* தொ.பெ. (vbl.n.) 1. மகப்பெறுகை (இ.வ.); giving birth to children. 2. கழிபே ரிரையானாகை; being gluttonous.

[வயிறு + திறத்தல்.]

வயிறுநோ-தல் *vayiṟu-nō-,* 17 செ.கு.வி. (v.i.) மகப்பேற்று வலியுண்டாதல்; to have labour-pains.

[வயிறு + நோ-,]

வயிறுதூர்-தல் *vayiṟu-tūr-,* 3 செ.குன்றாவி. (v.t.) 1. பசிவேட்கையில்லாதிருத்தல்; to have loss of appetite. 2. மலடியாகுகை; to become barren or infertile (சா.அக.).

[வயிறு + தூர்-]

வயிறுநிமிரஉண்ணல் *vayiṟu-nimira-uṇṇal,* பெ.(n.) வயிறு நிரம்ப உண்ணல்; full consumption of food (சா.அக.).

மறுவ. வயிறார உண்ணல்.

[வயிறு + நிமிர + உண்ணல்]

வயிறுநீரோடல் *vayiṟu-nīrōḍal,* பெ. (n.) நீராய் கழிமாசு (மலம்) கழிதல்; dilute motions.

[வயிறு + நீரோடல்]

வயிறுப்பசம் *vayiṟu-p-paśam,* பெ.(n.) குடலில் தங்கும் வளிமிகுதியால் ஏற்படும் வயிற்றூத்தம்; distension of the abdomen from a morbid collection of air in the instentines and stomach.

வயிறுப்பல் *vayiṟuppal,* பெ.(n.) வயிறு பருத்தல்; distension of the abdomen (சா.அக.).

[வயிறு + உப்பல்]

வயிறுப்பு-தல் *vayiṟuppu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வயிறுப்பல் பார்க்க; see *vayiṟuppal.*

வயிறுப்புசம் *vayiṟuppuśam,* பெ.(n.) உண்டது செரியாமல் வயிறு பெருக்கை (இ.வ.); tympanites.

[வயிறு + உப்பசம்]

வயிறுபழு–த்தல் *vayiṟu-paḻu-,* 4 செ.குன்றாவி. (v.t.) மகப்பெறுதலின் பிறகு பெண்களுக் குண்டாகும் ஒருவகை நோய்; a post delivery disease of the stomach attacking woman (சா.அக.).

[வயிறு + பழு–,]

வயிறுபிடி–த்தல் *vayiru-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) துயரக்குறியாக வயிற்றைப் பிசைதல்; to press one's stomach with one's hands, as in grief or distress. *"ஏத்தாத நாளைக்கும் வயிறுபிடிக்க வேண்டும்படியான விஷயம் (ஈடு. 10, 1, 2).*

[வயிறு + பிடி–,]

வயிறுபுடை–த்தல் *vayiṟu-puḍai-,* 4 செ. குன்றாவி. (v.t.) வயிறு பெரிதாகுகை; distension of the abdomen (சா.அக.).

[வயிறு + புடை–]

வயிறுபுரட்டல் *vayiṟu-puraṭṭal,* தொ.பெ. (vbl.n.) குமட்டல்; nausea.

[வயிறு + புரட்டல்]

வயிறுபுழு–த்தல் *vayiṟu-puḻu-,* 4 செ.கு.வி. (v.i.) கருக்கொள்ளுதல்; to conceive. *அவள் அடிக்கடி வயிறுபுழுத்த வண்ணம் இருக்கிறாள்.*

[வயிறு + புழு–.]

வயிறுபேதித்தல் *vayiṟu-pēdittal,* தொ.பெ. (vbl.n.) வயிறுகழிதல் (யாழ்.அக.) பார்க்க; see *vayiṟu-kaḻidal.*

[வயிறு + பேதித்தல்]

வயிறுபொருமுதல் *vayiṟu-poṟumudal,* தொ.பெ.(vbl.n.) 1. வயிறுப்பசம் பார்க்க; see *vayiṟuppašam.* 2. வயிற்றெரிச்சல், 2 பார்க்க; see *vayiṟṟericcal.*

[வயிறு + பொருமுதல்]

வயிறுபோ–தல் *vayiṟu-pō-,* 8 செ.கு.வி. (v.i.) வயிறுபோக்கு பார்க்க; see *vayiṟu-pōkku.*

[வயிறு + போ–.]

வயிறுபோக்கு *vayiṟu-pōkku,* பெ.(n.) வயிற்றுப் போக்கு பார்க்க; see *vayiṟṟu-p-pōkku.*

[வயிறு + போக்கு]

வயிறுபோதல் *vayiṟu-pōdal,* தொ.பெ.(vbl.n.) வயிறுநீரோடல் பார்க்க; see *vayiṟu-nīrōḍal.*

[வயிறு + போதல்]

வயிறுமுட்ட *vayiṟu-muṭṭa,* கு.வி.எ.(adv.) வயிறார பார்க்க; see vayiṟāra.

[வயிறு + முட்ட.]

வயிறுவளர்–த்தல் *vayiṟu-vaḷar-,* 4 செ.கு.வி. (v.i.) வயிறுகழுவு–, (யாழ்.அக.) பார்க்க; see *vayiṟu-kaḻuvu-,*

[வயிறு + வளர்–.]

வயிறுவாய்¹–த்தல் *vayiṟu-vāy-,* 4 செ. குன்றாவி.(v.t.) மகப்பெறுதல்; to give birth a child. *"திதி யென்பாள்..... அசுரர்தமை வயிறு வாய்த்தாள்" (கம்பரா.சடாயுகாண். 25).*

[வயிறு + வாய்–,]

வயிறுவாய்²–த்தல் *vayiṟu-vāy-,* 4 செ.கு.வி. (v.i.) கருப்பத்திற்றங்குதல்; to remain in the womb as foetus. *"கௌசலை தன் மணிவயிறு வாய்த்தவனே" (திவ். பெருமாள். 8, 1).*

[வயிறு + வாய்–,]

வயிறுவாழ்-தல் *vayiṟu-vāḻ-,* 2 செ.கு.வி. (v.i.) தேவையான உணவு பெற்றிருத்தல்; to have enough or sufficient food. 2. உயிர்வாழ்தல்; to be alive. *'வயிறு வாழாமல் செய்கிறானன்றே' (திவ். பெரியாழ். 2, 9, 3, வ்யா. பக். 457).*

[வயிறு + வாழ்-,]

வயிறுவானமா-தல் *vayiṟu-vāṉam-ā-,* 6 செ.குன்றாவி.(v.t.) வயிறுப்புதல்; bloating of the abdomen.

[வயிறு + வானம் + ஆ-,]

வயிறுவிடுதல் *vayiṟu-viḍudal,* பெ.(n.) வயிறு கழிதல் (யாழ்.அக.) பார்க்க; see *vayiṟu-kaḻidal.*

[வயிறு + விடுதல்]

வயிறுவிம்மல்[1] *vayiṟu-vimmal,* பெ.(n.) வயிறூதல் பார்க்க; see *vayiṟūdal.* *"கோதுற்ற வயிறுவிம்மி குடல்தான் புரட்டுந்தானே".*

[வயிறு + விம்மல்]

வயிறுவிம்மல்[2] *vayiṟu-vimmal,* பெ.(n.) வயிற்றுப்பசம்; distension of the abdomen (சா.அக.).

[வயிறு + விம்மல்]

வயிறுவீக்கம் *vayiṟu-vīkkam,* பெ.(n.) வயிறு வீங்குகை; swelling of the abdomen.

[வயிறு + வீக்கம்]

வயிறுவெடித்தல் *vayiṟu-veḍittal,* பெ.(n.) பேருண்டி, பெருஞ்சிரிப்பு முதலியவற்றால் வயிறு வெடிப்பது போலாகை (கொ.வ.); bursting, as with excessive food, long laughter.

[வயிறு + வெடித்தல்.]

வயிறுவே-தல் *vayiṟu-vē-,* 17 செ.கு.வி. (v.i.) வயிறெரி-, பார்க்க; see *vayiṟeri-.*

[வயிறு + வே-, → வேகு-தல்.]

வயிறுவை-த்தல் *vayiṟu-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) வயிறு பருத்துத் தொந்தி வைத்தல்; to become pot belly. *அளவறியா துணவு கொள் பழக்கத்தால் அவனுக்கு வயிறு வைத்துவிட்டது (உ.வ.).*

[வயிறு + வை-த்தல்.]

அளவிற்கதிகமாக, நேரங்கெட்ட நேரத்தில் உணவுண்பதாலும், அலுவலகத்தில், அமர்ந்த வண்ணமே, பணிசெய்வதாலும், போதிய உடலுழைப்பு, உடற்பயிற்சி இன்மையாலும், நகரத்தில் வாழ்நர் வயிறு வைத்த நிலையில் துன்புறுகின்றனர்.

வயிறு வைத்தலைத் தவிர்க்க வேண்டுமெனின் கொழுப்புணவினை, உடலுழைப்பிற்கு ஏற்றவண்ணம் உண்ண வேண்டும். நார்ச்சத்து, புரதச்சத்து, மாவுப்பொருளினை உரிய நேரத்திலுண்டு, மருத்துவரின் அறிவுரையின்படி, கொழுப்பு கரையுமளவு உடற்பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும்.

உடற்பயிற்சி செய்யவியலாதவர்களுக்கு, நடைப்பயிற்சியே வயிறு வைத்தலைத் தவிர்த்தலுக் குரிய நல்வழியாகும்.

வயிறுளை-த்தல் *vayiṟuḷai-,* 4 செ.குன்றாவி. (v.t.) வயிற்றைத் துளைத்தல் போன்ற நோய்; a disease with boring pain in the abdomen.

[வயிறு + உளை-த்தல்.]

வயிறுளைவு *vayiṟuḷaivu,* பெ.(n.) வயிறுளை-த்தல் பார்க்க; see *vayiṟuḷai-.*

[வயிறு + உளைவு]

(உளைவு = குடைச்சனோவு)

வயிறூதல்[1] *vayirūdal,*பெ.(n.) வயிறு விம்மல் பார்க்க; see *vayiru-vimmal*(சா.அக.).

வயிறூதல்[2] *vayirūdal,*பெ.(n.) வயிற்றில் ஊதை தங்குவதால் உண்டாகும் வயிற்றூத்தம்; distension of the abdomen due to collection of air or flatus (சா.அக.).

வயிறூதுகை *vayirūdugai,* பெ.(n.) வயிறு பொருமுதல் (வின்.) பார்க்க; see *vayiru-porumudal.*

[வயிறு + ஊதுகை]

வயிறெடுத்தல் *vayireduttal,*பெ.(n.) வயிறு கழிதல் பார்க்க; see *vayiru-kalidal.*

[வயிறு + எடு-,]

வயிறெரி-தல் *vayireri-,* 2 செ.கு.வி.(v.i.) 1. பொறாமை கொள்ளுதல்; to be envious. *அவள் வளமனையில் வாழ்க்கைப்பட்டதைக் கண்டு வயிறெரிகிறாள்.* 2. மிகுதுயரமுறுதல் (பிரபுலிங். சித்தரா. 48); to be greatly moved by sorrow, to mentally upset.

[வயிறு + எரி ']

வயிறெரித்தல் *vayirerittal,* பெ.(n.) வயிற்றெரிச்சல் பார்க்க; see *vayir-r-ericcal.* *"மிகவும் வயிற்றெரித்தலுக்கு உடலாயிருக்குமிறே" (ஈடு. 4, 3, 4).*

[வயிறு + எரி - வயிறெரி → வயிறெரித்தல்]

வயிறெரிவு *vayirerivu,*பெ.(n.) வயிற்றெரிச்சல் *(வின்.)* பார்க்க; see *vayirrericcal.*

[வயிறு + எரிவு]

வயிறெற்று-தல் *vayirerru-,* 5 செ. குன்றாவி.(v.t.) வயிறடி-, பார்க்க; see *vayiradi-, "வயிறெற்றி யெற்றி" (கம்பரா. கைகேசி சூழ். 47).*

[வயிறு + எற்று]

வயின்[1] *vayin,*பெ.(n.) 1. இடம் (பிங்.); place. *"யாழ்ப்பாணர் வயின்வயின் வழங்கு பாடல்" (கம்பரா. நாட்டுப். 8).* 2. பக்கம்; side. *"புடைவீ ழந்துகி லிட வயிற்றழீஇ" (நெடுநல். 181).* 3. வீடு (சூடா.); house. 4. வயிறு; belly, stomach. *"வயின் கட்டோற்று மகவு" (இரகு.தேனுவ.46).* 5. பக்குவம்; proper stage, as in boiling rice. *"மகடூஉ வயினறிந் தட்ட" (பெரும்பாண். 304).* 6. முறை; order. *"வயின் வயி னுடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை" (புறநா. 77).* 7. எல்லை (அரு.நி.); boundary, limitation. 8. பிணை (அரு.நி.); security.

வயின்[2] *vayin,* இடை.(part.) 1. ஏழாம் வேற்றுமையின் சொல்லுருபு; sign of the locative. *"தம்வயிற் குற்றம்" (குறள், 846).* 2. ஓர் அசைச்சொல் (பெருங். அரும்.); an expletive.

வயினதேயன் *vayina-dēyan,* பெ.(n.) கருடன்; garudan, eagle. *"வெற்றிசேர் வயினதேயன்" (உத்தரரா. இலங்கையழி. 14).*

[வயினதேயம்→வயினதேயன்]

வயினம் *vayinam,* பெ.(n.) பறவை (யாழ். அக.); bird.

[வயனம்[4] → வயினம்]

வயினன் *vayinan,*பெ.(n.) கலுழன்; *garudan,* eagle. *"வெஞ்சிறை வயினன்" (அரிசமய. பரகா. 123).*

[வயின் → வயினன்]

வயினனாசயம் *vayiṉaṉāśayam,* பெ.(n.) வயிறு; stomach. *"வயினனாசயத்தின் வைகி..... பக்குவாசயமும் பற்றும்" (சிவதரு. சனன. 6).*

[வயின் + ஆமாசயம் → ஆனாசயம்]

வயினாருடதயம் *vayiṉāruḍadayam,* பெ.(n.) ஓர் வகை மருந்து வேர்; a medicinal root- arbian costus-*Costus arabicus* (சா.அக.).

வயேகடம் *vayēgaḍam,* பெ.(n.) மரமஞ்சள் (மலை.); tree turmeric.

வயோதிகம் *vayōdigam,* பெ.(n.) முதுமை; old age.

[வயோதிகன்→வயோதிகம் = கிழம்.]

Skt. வயோதிக

வயோதிகன் *vayōdigaṉ,* பெ.(n.) கிழவன்; old man.

[வயோதிகம் → வயோதிகன்]

வயோதிபம் *vayōdibam,* பெ.(n.) வயோதிகம் (யாழ்.அக.) பார்க்க; see *vayōdigam.*

வயோவகவம் *vayōvagavam,* பெ.(n.) ஈயம் (சங்.அக.); lead.

வர்க்கபுட்பம் *varkka-puṭpam,* பெ.(n.) திருநாமப்பாலை; a plant-*Similax macrophlla* (சா.அக.).

[வர்க்கம் + புட்பம்]

வர்க்கம் *varkkam,* பெ.(n.) எருக்கம்பால் (சங்.அக.); sap or milky exudation of the indian madder shrub.

வர்க்கம்பால் *varkkam-pāl,* பெ.(n.) எருக்கம் பால்; milky exudation of Indian madder shrub calotropis gigantia.

வர்ணகெந்தி *varṇa-kendi,* பெ.(n.) கெந்தகம்; sulphur (சா.அக.).

வர்ணசுக்கில் *varṇa-sukkil,* பெ.(n.) ஓர் வகைக் கண்ணோய்; a kind of eye disease (சா.அக.).

வர்ணசுரம் *varṇa-śuram,* பெ.(n.) சுரவகை; a kind of fever (சா.அக.).

வர்ணி *varṇi,* பெ.(n.) 1. சாதிலிங்கம்; cinnabar. 2. மாஞ்ச ரோகணி; a plant-pimpernal (சா.அக.).

வர்த்தங்கி *varttaṅgi,* பெ.(n.) 1. சப்பங்கி மரம்; sappan-wood tree. 2. சந்தனமர வகை; malay sandal tree.

வர்த்தமானபிப்பிலி *varttamāṉa-pippili,* பெ.(n.) திப்பிலிகளை 3, 5, 7 ,10 என்று இவ்விதமாக நாளுக்கு நாள் உயர்த்திக் கொண்டு சாப்பிடும் திப்பிலி சூரணம், இது காசம், கோழை நீக்கும் தன்மைத்து; taking in the powder of long peppeı increased doses as mentioned above. It is said to cure asthma consumption etc (சா.அக.).

வர்த்தமானம் *varttamāṉam,* பெ.(n.) ஆமணக்கு (தைலவ.தைல.); castor-plant.

[வர்தன → வர்த்தமானம்]

வர்த்திப்பிரயோகம் *vartti-p-pirayōgam,* பெ.(n.) மருக்காரை முதலியவற்றால் செய்து, எருவாயினுள் செலுத்துமோர் வகை நீண்ட

குளிகைகள்; long medicated , .lls made of the lant randia dumetorum for insertior into the rectum (சா.அக.).

[வர்த்தி + பிரயோகம்]

வர[1] *vara,* இடை.(part.) அசைச்சொல்; an expletive. *"தழங்கு மருவி என்னும் பாட்டுத்தொட்டு இதன்காறும் வர இப்பாட் டொன்பதும்" (திருக்கோ.135, உரை). "அஞ்சிறை மடநாரைக்குப் பின்பு இவ்வளவும் வர" (ஈடு. 2, 1, ப்ர.).*

[வா → வர]

வர[2] *vara,* இடை.(prep.) வரை; till, until. *"பரத்துவமே தொடங்கி அவதாரங்களிலே வர" (ஈடு. 3, 6, ப்ர.).*

[வா → வர]

வரக்கழலை *vara-k-kalalai,* பெ.(n.) தோற் பகுதியில் தோன்றும் கட்டி நோய்; a skin disease dermatitis (சா.அக.).

வரக்காட்டு-தல் *vara-k-kāttu-,* 5 செ. குன்றாவி.(v.t.) அனுப்புதல் (யாழ்.அக.); to send, as by post, courier or messanger.

[வர + காட்டு-.]

வரக்கூலி *vara-k-kūli,* பெ.(n.) நெல் முதலியவற்றை எடுத்து வருவதற்குள்ள வண்டிக் கட்டணம் (S.I.I.VIII, 5); vehicle hire charge or rent for carrying paddy, etc.

[வரல் + கூலி.]

வரகதி *vara-gadi,* பெ.(n.) 1. மேலான நிலை; salvation, as the most exalted state, emancipation or attainment. 2. துறக்கநிலை; heaven. *"வாட்டியவுடம்பின் யாங்கள் வரகதி விளைத்து மென்னில்" (சீவக. 1431).*

[பரகதி → வரகதி.]

Skt. gati > த. கதி.

வரகம்மை *varagammai,* பெ.(n.) ஓர் வகை அம்மை; a kind of pox (சா.அக.).

[வரகு + அம்மை.]

வரகுத் தவசம் போல் தோன்றும் மணல்வாரி அம்மை.

வரகமொத்தான்கொடி *varaga-mottān-kodi,* பெ.(n.) ஓர் கொடி வகை; a creeper-*Citrullus colexynthes* (சா.அக.).

வரகரிசி *varagarisi,* பெ.(n.) வரகினரிசி; husked grain of common millet. *"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்" (தமிழ்நா. 22).*

[வறகு→வரகு + அரிசி]

வரகவி *varakavi,* பெ.(n.) 1. அருட்கவி (யாழ்.அக.); gifted, soul inspired poet. 2. சிறந்த செய்யுள்; poem of great merit, poem of outstanding nature. *"வீரராகவன் வரகவி மாலையை" (திருவேங்கடக்கலம். தனியன்).*

[பரம்→ வரம் + கவி.]

Skt. kavi > *த. கவி.*

வரகு *varagu,* பெ.(n.) 1. சிறுதவசம்; common millet. *"புறவுக் கருவன்ன புன்புல வரகின்" (புறநா.34). "வாலிதின் விளைந்த புதுவர கரிய" (புறநா.120 : 9).* 2. சாமை; poor man's millet.

த. வரகு > **Skt.** varuka.

தெ. வரிகி; ம. வரகு; க. பரகு.

[வறகு → வரகு.]

புன்செய் நிலத்திற் பயிராகும் சிறந்த தவசம். ஊட்டச்சத்து நிறைந்தது.

வரகுக்கோழி[1] *varagu-k-kōḻi,* பெ.(n.) கோழி வகையுளொன்று; lesser florican- *Sypheotides indica* (சா.அக.).

[வரகு + கோழி]

தமிழகத்தின் புன்செய் நிலப்பரப்பில் காணப்படும் இவ்வினம், தற்போது அழியும் நிலை உருவாகியுள்ளது. இலை, தழை, கொழுந்து, விதைகள், சிறுபழங்கள் ஆகியவற்றோடு, தத்துக்கிளி, வெட்டுக்கிளி, எறும்பு முதலியவற்றை உட்கொள்ளும் இவை 46 விரலம் உயரம் வரை வளரும் தன்மைத்து. பழுப்பு நிற உடலில், அம்புமுனையைப் போன்ற கருப்புத்திட்டுகள் கொண்ட உடலையும், செம்பழுப்பு நிற மார்பையும், வயிற்றையும் கொண்டது. இவை நான்கு அல்லது ஐந்து முட்டைகளை இட்டு, இனப்பெருக்கம் மேற்கொள்ளும்.



வரகுக்கோழி[2] *varagu-k-kōḻi,* பெ.(n.) சீவல் வகை (M.M.); florican.

[வரகு + கோழி]

வரகுச்சம்பா *varagu-c-cambā,* பெ.(n.) ஆடவை, கடகம், மடங்கல் (ஆனி, ஆடி, ஆவணி) மாதங்களில் விதைத்து, ஆறு மாதத்திற் பயிராகும் சம்பா நெல்வகை (Rd.M.44); a variety of paddy, sown in the months of *āṉi, āḍi, āvaṇi* and maturing in six months.

[வரகு + சம்பா[1]]

வரகுச்சிறுகுறுவை *varagu-c-ciṟu-kuṟuvai,* பெ.(n.) மடங்கல் (ஆவணி) முதல், நளி (கார்த்திகை) வரையிலுள்ள காலத்தில் விதைத்து, நான்கு மாதத்திற் பயிராகும் நெல்வகை (Rd.M.45); a variety of paddy, sown in the season from *āvaṇi* to *kārttigai* and maturing in four months.

[வரகு + சிறுகுறுவை]

வரகுசுட்டசாம்பல் *varagu-šuṭṭa-šāmbal,* பெ.(n.) கருவுற்ற மகளிரின் அரத்தப் போக்கினை அகற்றும், எரிபட்ட நீறு; the ashes of burnt kodo millet, it is prescribed for flow of blood in pregnant woman (சா.அக.).

[வரகு + சுட்டசாம்பல்]

வரகுணதேவர் *varaguṇa-dēvar,* பெ.(n.) வரகுணன், 2 பார்க்க; see *varaguṉaṉ,* 2. *"பெரியவன்பின் வரகுண தேவரும்" (பதினொ. திருவிடை. மும். 21).*

[வரகுணன் + தேவர்]

வரகுணம் *vara-guṇam,* பெ.(n.) உயர்ந்த குணம்; excellent disposition or the best quality. *"மாதைய ரதிபதி வரகுண மேரு" (இலக். வி. சிறப்பு).*

[வரம்+குணம். பரம்→வரம்=உயர்வு, மேன்மை.]

வரகுணமங்கை *varaguṇa-mangai,* பெ.(n.) பாண்டிவள நாட்டிலுள்ள திருமால் திருப்பதிகளில் ஒன்று; one of the *Tirumāl tiruppati* in flourishing *Paṇḍiyaṉ* region.

வரகுணன் *varaguṇaṉ,* பெ.(n.) மாணிக்க வாசகர் காலத்திருந்த பாண்டிய மன்னன்; a *Pāṇḍiyā* king, contemporary of Saint *Māṇikkavāšagar. "வரகுணனாந் தென்னவ னேத்துசிற் றம்பலத்தான்" (திருக்கோ. 306).*

மறுவ. கடவுட் குணம்

[வரகுணம் → வரகுணன்]

ஒருகா. பரகுணம் →வரகுணம் →வரகுணன் = மேலான இறைத்தன்மை.

வரகுதிரி *varagudiri,* பெ.(n.) அம்மைவகை (வின்.); an acute contagious viral disease, as of small pox.

[வரகு+உதிரி :வரகுபோற் சிறியவளவினதாய், சில நாட்களில் உதிரும் தன்மையுள்ள அம்மை வகை.]

வரகுதிரிகை *varagu-tirigai,* பெ.(n.) வரகு திரிக்கும் பொறி; mill for grinding common millet. *"யானையினது காலையொக்கும் வரகுதிரிகை" (பெரும்பாண். 187, உரை).*

[வரகு + திரிகை]

வரகுழுமநியாயம் *vara-kuḻuma-niyāyam,* பெ.(n.) ஒரு குழுமத்துள் ஒருவர் தாம் அறியாதவற்றை, மற்றவருடைய உதவியால் அறிந்து கொள்ளுதல் போலும் நெறி (சி.சி.3, 4, சிவாக்.); the principle by which a member of an organisation or a body gains knowledge with the help of other members.

Skt. nyāya > த. நியாயம்.

[வரகுழுமம் + நியாயம்]

வரங்கிட—த்தல் *varaṅ-kiḍa-,*3 செ.கு.வி. (v.i.) வரம்பெறுதற்காகக் கோயில், கருவறை (கருப்பக்கிருகம்) முன் படுத்துக் கிடத்தல்; to lie prostrate in the presence of a deity, praying for the grant of a boon. *"வரங்கிடந்தான் றில்லை யம்பல முன்றிலம் மாயவனே" (திருக்கோ. 86).*

[புரம்→பரம்→வரம் + கிட—. பரம்→புரம் = உயர்ச்சி, உயரமான கட்டடம், கோபுரம். கோபுரமுள்ள கோயில், நகர்.]

வரங்கு *varaṅgu,* பெ.(n.) மரவகை; malabar wood-oil tree.

வரச்சந்தனம் *vara-c-candaṉam,* பெ.(n.) சந்தன மரவகை (யாழ்.அக.); a species of sandal wood tree.

[வரம் + சந்தனம்]

வரச்சிக்கரப்பன் *varacci-k-karappaṉ,* பெ.(n.) வறண்ட தோல் தடிப்புநோய் வகை; dry eczema.

வரட்சித்திமிரம் *varaṭci-t-timiram,* பெ.(n.) கருவிழியில் மந்தமும், நடுநரம்பில் குத்தலும், பீளையும், நீரும் பெருகச் செய்யும், மூளையைப் பித்தம் வறட்டும் போது பிறக்கும் நோய்; a disease of the block of eye that occurs when bile affects brain.

வரட்சிப்பிரமேகம் *varaṭci-p-piramēgam,* பெ.(n.) நீரழியும் போது கடுப்பு, எரிச்சல், நீர்த்தாரைவீக்கம், அதன் வாயுதட்டிலும் வீக்கம் ஆகியவற்றை உண்டாக்கி, வெட்டை நீர் கொஞ்சமேனும் வாராதிருக்கின்ற ஒரு

நோய் வகை; a disease of urethra marked by burning sensation during micturation, swelling of urethra etc.

வரட்சிவாதக்கரப்பான் *varaṭci-vāda-k-karappāṉ,* பெ.(n.) தோலில் தோன்றும் அரிப்பு நோய்; a kind of dry ecsema.

வரட்சிவாதம் *varaṭci-vādam,* பெ.(n.) தோல் வறண்டு காணப்படும் நோய் வகையு ளொன்று; a kind of skin disease.

[வரட்சி + வாதம்]

Skt. vāta> த. வாதம்.

வரச்சூலை *vara-c-cūlai,* பெ.(n.) வறட்சூலை (இ.வ.) பார்க்க; see *varaṭ-cūlai.*

[வரள் + சூலை]

வரசவிருக்கம் *varaša-virukkam,* பெ.(n.) அரசமரம் (சா.அக.); a sacred tree peepral tree - ficus neligiosa.

வரசளுப்பு *varašaḷuppu,* பெ.(n.) மருந்துப்பு வகையுளொன்று; a kind of medicinal salt.

வரட்கணம் *varaṭ-kaṇam,* பெ.(n.) 1. குழந்தைகளுக்கு உடல் சிவந்து, நெஞ்சு துடித்தலுடன், நாவில் கருத்த முள்ளுண்டாகி மஞ்சள் பூத்திருக்கும் ஒரு நோய்; a disease in children caused by congenital heat and marked by palpitation of the heart, parched tongue with thorny eruptions and yellow coloured face. 2. உடல் வறண்டு, விழிவெளுத்து, வலுக்குறைந்து, கை கால்களில் வலி தோன்றுகை; the above symptoms are also found in *Varaṭ-kaṇam* (சா.அக.).

வரட்கழலை *varaṭ-kaḻalai,* பெ.(n.) ஒருவகைக் கழலை; tumour (சா.அக.).

[வரள் + கழலை.]

வரட்கழிச்சல் *varaṭ-kaḻi-c-cal,* பெ.(n.) வயிற்றுப்போக்கு வகையுள் ஒன்று; a kind of loose motion like that of diarrhoea (சா.அக.).

வரட்காமாலை *varaṭ-kāmālai,* பெ.(n.) குழந்தைகளுக்கு கண் பசந்து, கால் ஓய்ந்து உடம்பு உலர்ந்து காணும் ஒரு வகை நோய்; a disease in children due to fatigue, weakness and yellow eye (சா.அக.).

[வரள் + காமாலை.]

வரட்சி *varaṭci,* பெ.(n.) வறட்சி பார்க்க; see *varaṭci.*

[வரள் → வரட்சி]

ஒ.நோ. திரள்→ திரட்சி. மருள்→மருட்சி.

வரட்சிகாசம் *varaṭci-kāšam,* பெ.(n.) வரட்டிருமல்; dry cough (சா.அக.).

Skt. ḷāša> த. காசம்.

[வரட்சி + காசம்]

வரட்சுண்டி *varaṭ-šuṇḍi,* பெ.(n.) வறட்சுண்டி (யாழ்.அக.) பார்க்க; see *vaṟaṭ-cuṇḍi.*

[வரள் + சுண்டு→ சுண்டி.]

வரட்சூலை *varaṭ-cūlai,* பெ.(n.) குடலைச் சுருட்டிப் பிடிக்கும் நோய்வகை (இங்.வை); pain in the ascending colon, a form of appendicitis.

[வரள் + சூல் →சூலை]

வரட்சொரி *varaṭ-cori*, பெ.(n.) சொரி வகையு ளொன்று (இராசவைத். 105); a kind of itch.

[வரள் + சொரி]

வரட்டடைப்பான் *varaṭṭaḍai-p-pāṉ*, பெ.(n.) மாட்டு நோய்வகையுளொன்று (பெ.மாட்.); a kind of cattle disease.

[வரட்டு + அடைப்பான்]

கால்நடைகளுக்குத் தொண்டையிலேற்படும் ஒரு வெக்கை நோய்.

வரட்டவரே *varaṭṭavarē*, பெ.(n.) 'வேகமாய் வா' என்பதைக் குறிக்கும் சொல்; a word to indicate quickly coming or arrival.

வரட்டி *varaṭṭi*, பெ.(n.) வறட்டி பார்க்க; see *vaṟaṭṭi*. *"வரட்டியுங் கேழ்வரகு ரொட்டியும் போலவே" (தனிப்பா.).*

தெ. வரட; க. பரடி; ம. வரடி.

[வரட்டு → வரட்டி]

வரட்டிருமல் *varaṭṭirumal*, பெ.(n.) 1. கோழை யுடன் கூடிய இருமல், இதற்கு நரிவெங்காயம், சுக்குத்தூள் சித்தரத்தை அரைத்துச் செய்த மாத்திரை; wild onion, dry ginger, lesser galangal are ground and made into pills and presribed for this disease. 2. வரட்சி காசம் பார்க்க; see *varaṭci-kāšam* (சா. அக.).

[வரட்டு + இருமல்]

வரட்டு[1]-தல் *varaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) வறட்டு பார்க்க; see *vaṟaṭṭu*.

[வரள் → வரட்டு-]

வரட்டு[2] *varaṭṭu*, பெ.(n.) வறட்டு பார்க்க; see *vaṟaṭṭu*.

வரட்டுச்சொறி *varaṭṭu-c-coṟi*, பெ.(n.) மிகுதியான தினவுண்டாவதால், மிகு அரிப்புண்டாக்கும் ஒருவகைச் சொறி; a kind of itch causing great scarching sensation (சா.அக.).

[வரட்டு + சுல்→சுர்→சுறு→சொறி]

கரடுமுரடான, புறத்தோலின் மீது சிரங்குப் புண்ணேற்படும். இச் சிரங்குப் புண்ணின் விளைவாக உடம்பிலேற்படும் தினவு, வரட்டுச் சொறியெனப்படும்.

வரட்டுச்சோகை *varaṭṭu-c-cōgai*, பெ.(n.) அரத்தக்குறைவால் முகம் வெளுத்து ஊதுமாறு செய்யும் நோய்வகை; anaemia, a disease characterised by pale and bloated face.

[வரட்டு + சோ→சோகை]

அரத்தக் குறைவால், உடம்பில் வறட்சியேற்பட்டு, சுறுசுறுப்புத் தன்மை குறையும். சோ என்றால் மடி அல்லது சோம்பல். இந் நோயுற்ற மாந்தனும் சோகையினால், சோம்பித் திகழ்வான் எனலாம்.

வரட்டுப்பசு *varaṭṭu-p-pašu*, பெ.(n.) வறட்டுப் பசு பார்க்க; see *vaṟaṭṭu-p-pašu*.

Skt. Pašu> த. பசு.

[வரட்டு + பசு.]

வரட்டுமாடு *varaṭṭu-māḍu*, பெ.(n.) கன்று ஈனாத, பால் கறவாத மாடு; barren cow, infertile dry cow.

[வரட்டு + மாடு]

வரட்பூலா *varaṭ-p-pūlā*, பெ.(n.) பெருஞ் செடி வகை; Indian snowberry (சா.அக.).

வரடம் *varaḍam,* பெ.(n.) 1. எகினம் (அன்னம்) (சங்.அக.); swan, gander. 2. முல்லை; arabian jasmine.

வரடை *varaḍai,* பெ.(n.) தோல்வார்; leather strap or string.

[வார்→வரு→வருடை→வரடை]

வரண்டகம்[1] *varaṇḍagam,* பெ.(n.) 1. உண்டை; ball, mass. 2. சுவர்; wall. 3. முகப்பரு; pimple on the face. 4. யானை மேற்றவிசு; seat on an elephant, howdah.

[கரண்டகம்→ (மரண்டகம்)→வரண்டகம்.]

வரண்டகம்[2] *varaṇḍagam,* பெ.(n.) வரண்டகை பார்க்க; see *varaṇḍagai. "பொன் வரண்டகத்தின் மேல்" (மேருமந். 1134).*

[கரண்டகம்→ (மரண்டகம்)→வரண்டகம்.]

வரண்டகம்[3] *varaṇḍagam,* பெ.(n.) முகப்பரு; pimple on the face.

[கரண்டகம்→ வரண்டகம்.]

வரண்டகை *varaṇḍagai,* பெ.(n.)நாகணவாய்ப் புள்; myna. *"வரண்டகைக் கொடி நிரைத்த" (மேருமந்.1104).*

[வரண்டம்→ வரண்டகை.]

வரண்டம்[1] *varaṇḍam,* பெ.(n.) வரண்டகம் பார்க்க; see *varaṇḍagam.*

[கரண்டம்→ வரண்டம்.]

வரண்டம்[2] *varaṇḍam,* பெ.(n.) 1. சாலைவழி; pathway. 2. தூண்டிற்கயிறு; fishing thread or twine or string. 3. புற்குவியல்; heap of grass. 4. முகப்பரு; pimple of the face.

[கரண்டம்→ வரண்டம்.]

வரண்டாலு *varaṇḍālu,* பெ.(n.) ஆமணக்கு (மூ.அ.); castor plant.

வரண்டியம் *varaṇḍiyam,* பெ.(n.) பேராமுட்டி (மூ.அ.); pink-tinged white sticky mallow.

வரண்மாடு *varaṇ-māḍu,* பெ.(n.) கடாமாடு (யாழ்.அக.); bull.

[வரள் + மாடு]

வரணக்காடை *varaṇa-k-kāḍai,* பெ.(n.) காடை வகையுளொன்று; painted bush-quail-*Perdicula erythrorhyncha.*

[வரணம் + காடை]

இக் காடை வகையானது, நீர் வளம் மிகுந்த மலைப் பகுதிகளிலும், பள்ளத்தாக்குகளிலும், மலைவாழ் மக்கள் பயிரிடும் நிலங்களிலும், அதிகம் காணப்படும். புல் விதைகள், நிலைத்திணைகள் (தாவரங்கள்) தளிர்கள் ஆகியவற்றை உணவாகக் கொள்ளும். பழுப்பு நிற வெண்கோடுகளுடனும், கருப்புக் கறைகளுடனும் காணப்படும். இவை 18 விரலம் உயரம் வரை வளரும் தன்மையவை. 5 முதல் 8 வரையிலான எண்ணிக்கையில் முட்டை இடும். ஆண் வரணக்காடை சிறிது வேறுபட்டுத் தோன்றும்.



வரணக்கினி *varaṇa-k-kiṉi,* பெ.(n.) நிறத்தை மாற்றும் தன்மை கொண்டது; decolourising matter.

[வரணம் + அக்கினி.]

வரணக்கோடாங்கியாட்டம் *varaṇa-k-kōḍāṅgi-y-āṭṭam,* பெ.(n.) சிற்றூர்களில் வண்ண ஆடைகள் அணிந்து, கோடாங்கி அடித்து ஆடியும், பாடியும் குறிசொல்லும் ஒருவகை ஆட்டம்; a variety of dance of soothsaying, performed in villages, by wearing colourful clothes and beating a small *(ūḍukku)* hand drum.

[வள்→ வர்→வரி + அணம்–வரணம் + கோடாங்கி + ஆட்டம்.]

கோடாங்கம் என்னும் மரத்தால் செய்த உடுக்கை, அதனையடித்துக் குறிசொல்லும் வரணக் கோடாங்கியையும் குறித்தது.

வரணக்கௌதாரி *varaṇa-k-koutāri,* பெ.(n.) கௌதாரி வகையுளொன்று; painted sandgrouse - pterocles indicus.

[வரணம் + கௌதாரி]

தமிழகத்தின் வடக்கு, மேற்கு மாவட்டங்களின், மலைப் பகுதிகளில் காணப்படுகின்றதும், 28 விரலம் உயரம் வளர்வதும், சிறுகீற்றுகளை உடலில் கொண்டதுமாகிய இக்கௌதாரி, சிறுவிதைகள், களைச் செடிகள், சிறு பழங்கள் ஆகியவற்றை உண்ணும். 4 அல்லது 3 முட்டைகள் இட்டு, தன்னுடைய இனத்தைப் பெருக்கும்.

வரணகம் *varaṇagam,* பெ.(n.) 1. எழுத்து; letter. 2. பூசுவண்ணம்; paint. 3. சந்தனமரம்; sandle wood tree. 4. மஞ்சாடி மரம் (சங்.அக.); redwood.

[வரணம்→ வரணகம்.]

வரணகச்சுழி *varaṇaga-c-cuḻi,* பெ.(n.) செந்நிறமுள்ள கடல் மீன் வகை; sea-fish, reddish.

[வரணகம் + சுழி.]

வரணச்சுண்டாங்கோழி *varaṇa-c-cuṇḍāṅ-kōḻi,* பெ.(n.) சுண்டாங்கோழி வகையுளொன்று; painted spurfowl-*Galloperdix lunulata.*

[வரணம் + சுண்டாங்கோழி]

மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குச் சரிவுகளிலும், கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலுள்ள, வறண்ட காடுகளிலும் காணப்படும். இவை, 32 விரலம் உயரம் வரை வளரும். செம்பழுப்பான உடலில், கருப்பு வளையங்களுக்கிடையே, வெண் திட்டுக்களைப் பெற்றிருக்கும். விதைகள், முளைகள், இலந்தை முதலியன, இவற்றின் உணவு. 3 முதல் 5 வரையிலான முட்டைகளையிட்டு, இனப்பெருக்கம் செய்யும்.



வரணசங்கரம் *varaṇa-śaṅgaram,* பெ.(n.) சாதிக்கலப்பு; confusion or mixing of castes due to inter marriage.

[வரணம் + சங்கரம்.]

வரணசபம் *varaṇa-šabam,* பெ.(n.) மழை வேண்டி ஓதப்படும் மறைமொழி; vedic prayer for rain, addressed to *varuṇaṉ.*

[வரணம் + சபம்.]

வரணசரம் *varaṇa-šaram,* பெ.(n.) செம் மணிகளாற் செய்த கழுத்தணி; necklace of rubies or red gems.

[வரணம் + சரம் = கழுத்தையொட்டி அணியும் அணி.]

வரணசூக்கம் *varaṇa-šūkkam,* பெ.(n.) மழைக் கடவுள் பற்றிய பாடல்; a vedic hymn in praise of *varaṇaṉ.*

[வரணம் + சூக்கம்.]

வரணடாறு *varaṇaḍāru,* பெ.(n.) ஆமணக்கு; castor plant-ricinus communis (சா.அக.).

வரணனை *varaṇaṉai,* பெ.(n.) 1. வண்ணனை; description. 2. புனைவுரை (தண்டி.பொது.7); delineation. 3. புகழ்ச்சி, பாராட்டு; praise.

த. வரணனை > **Skt.** varṇaṇā.

[வள் → வர் → வரி → வரணம் → வரணி → வரணை]

(ஒ.நோ.) திள் → திர் → திரள் → திரளை →திரணை.

"வள்" என்னும் அடிப்படை மூலத்திலிருந்து, கிளைத்த சொல். இம் மூலத்திரிபு, வடமொழியில் இல்லை. 'வர்' என்னும் மேற்படை மூலத்திலிருந்து தோன்றிய வர்ண என்னும் சொல்லே வடமொழியில் வழக்கிலுள்ளது. வர்ண என்று வடவர் காட்டும் மூலம் செயற்கையே.

"varṇ (rather Nom. fr. varṇa)" என்று மா.வி. குறித்திருத்தல் காண்க.

இஃதும், வடவர் வலிந்து திரித்துக் கொண்ட பொருட் பொருத்தப்பாடற்ற மூலம் என்பது, தேவநேயர்தம் கொண்முடிபு (வ.வ.பக்.82).

வரணி என்பது தூய தென்சொல்லாகும். வரணனை, வரணி, வரணிப்பு போன்ற சொற்கள் தென்பாண்டி நாட்டில், கல்லாதார் நாவில், இன்றளவும், வழக்கூன்றியுள்ள நல்ல தமிழ்ச் சொற்களாகும்.

(எ.கா.) அழகர் வரணிப்பு

அழகர் வரணனை.

வண்ணனை, வரணனை போன்ற செந்தமிழ் வடிவங்கள், வடசொல் வடிவைப் பின்பற்றி, வருண, வருணனை என்று தமிழில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகரமுதலியில் வழுப்பட எழுதப்பட்டுள்ளன.

மதுரையம்பதியில், கள்ளழகர் வையையாற்றில் எழுந்தருளுங்கால், அழகர் வரணனை, மாலிருஞ்சோலை வரணிப்பு போன்ற வரணிப்புப் பாக்கள், இன்றும் படிப்பறிவற்ற பாமரர்களால் இசைக்கப்படுகின்றன. தங்கக்குதிரையில், மாலிருஞ்சோலை அழகன், இவர்ந்துவரும் எழிற்கோலத்தைத் திறம்பட இசை நயத்துடன் வண்ணிப்பதே வரணிப்பு எனும் வரணணை யாகும்.

வரணம், வரணனை, வரணிப்பு, வரணித்தல் போன்ற சொற்களில் உள்ள "வள்" என்னும் வளைவுக்கருத்தே மூலமாகும். வனைந்து, வனைந்து புகழ்ந்துரைத்தலே வரணனையாகும்.

வரணனைப் பாக்கள் அனைத்தும் ஒருவர்அல்லது ஒன்றன் அழகினை, மற்றும் புகழ் அல்லது செயற்பாட்டினை, விதந்தோதுதலாகும்.

வரணத்தகடு *varaṇa-t-tagaḍu,* பெ.(n.) மணிகளைப் பதிக்கும் போது அவற்றினடியில் வைக்கப்படும் வண்ணம் பூசப்பட்ட தகடு

(இ.வ.); foil used in setting precious stones.

[வரணம் + தகடு.]

வரணத்தடுக்கு *varaṇa-t-taḍukku,* பெ.(n.) அழகுப்படுத்தி, வண்ணம் பூசிய பாய்; decorated mat. *"வாழ்ந்த மகள் வந்தாள் வரணத்தடுக்கு போடு" (உ.வ.).*

[வண்ணம் → வரணம் + அடுக்கு = அழகுபடுத்து.]

வரணதாபம் *varaṇa-tābam,* பெ.(n.) தலையில் மூளையின் சவ்வுக்கு ஏற்படும் அழற்சி; inflammation of the membranes of brain-meningitis (சா.அக.).

[வரணம் + தாபம்.]

Skt. dāba> த. தாபம்.

வரணதிசை *varaṇa-tišai,* பெ.(n.) மேற்கு (திவா.); the west.

[வரணம் + திசை.]

வரணதேவம் *varaṇa-tēvam,* பெ.(n.) குன்று (சதய) நாள்; the 24th naksatra.

[வரணம் + தேவம்.]

வரணநாள் *varaṇa-nāḷ,* பெ.(n.) வரணனாள் பார்க்க; see *varaṇaṉāḷ.*

[வரணம் + நாள்.]

வரணப்பாட்டு *varaṇa-p-pāṭṭu,* பெ.(n.) பண்முறையை விளக்கிப் பாடும் பாட்டு; improvised introduction to a melody.

[வரணம் + பாட்டு]

வரணப்பிரியை *varaṇa-p-piriyai,* பெ.(n.) இராக வகை (பரத.ராக.பக்.104); a specific melody-type.

[வரணம் + பிரியை.]

வரணப்பூதர் *varaṇa-p-pūdar,* பெ.(n.) நால்வகை வரணங்களையும் காக்கும் நான்கு பூதங்கள்; the four goblins protecting, respectively, the four castes.

[வரணம் + பூதம்→பூதர்.]

வரணப்பொருத்தம் *varaṇa-p-poruttam,* பெ.(n.) பன்னீருயிரும் க, ங, ச, ஞ, ட, ண என்ற மெய்யாறும், பார்ப்பனச் சாதியும்; த, ந, ப, ம, ய, ர என்ற ஆறும், மன்னர் சாதியும்; ல, வ, ற, ன என்ற நான்கும் வணிகர் சாதியும்; ழ, ள இரண்டும் சூத்திர சாதியுமாகக் கொண்டு, உரியவாறு செய்யுண் முதன் மொழிப் பொருத்தங் கொள்ளுமுறை (வெண்பாப். முதன், 9, 10); (Poet) rule of propriety which enjoins that the first words of a poem, should contain letters pertaining to the caste of the hero (the vowels and ka, ṅa, ca, ña, ṭa, ṇa being brahmin; ta, na, pa, ma, ya, ra being ksattriya; la, va, ṟa, ṉa being vaišya; ḻa, ḷa being šūdra) one of ten *ceyyuṉ-mudaṉ-moḻi-p-poruttam.*

[வரணம் + பொருத்தம்.]

வரணபகவான் *varaṇa-pagavāṉ,* பெ.(n.) வருணன், 1 (உரி.நி.) பார்க்க; see *varuṇaṉ, 1.*

வரணம்[1] *varaṇam,* பெ.(n.) 1. நிறம் (பிங்.); colour. 2. எழுத்து; letter. 3. அழகு (பிங்.); beauty. 4. ஒளிப்படலம்; brightness.

5. மஞ்சள் (யாழ்.அக.); turmeric. 6. பொன்னுரை (யாழ்.அக.); streak of gold on the touchstone. 7. பொன் (யாழ்.அக.); gold. 8. புகழ் (யாழ்.அக.); fame. 9. முகமன்; praise, flattery. 10. நறுமணம் (யாழ்.அக.); fragrance. 11. குணம் (இலக்.அக.); character. 12. தன்மை; quality. 13. பூச்சு; coating. 14. பூச்சுக் களிம்பு; ointment. 15. புனைவு (யாழ்.அக.); disguise. 16. வகை (யாழ்.அக.); manner. 17. மாதிரி (யாழ்.அக.); style, example. 18. யானை (யாழ்.அக.); elephant.

க. பரெ; தெ. வரி; ம. வரெ.

த. வரணம் > **Skt.** Varṇa.

[வள்→வர்→வரி + அணம் = வரணம். எழுத்து, பூச்சு, நிறம், வகை, அழகு, நிறம்பற்றிய குலம் (வ.வ.பகுதி.2, பக்.81).

(ஒ.நோ.) திள் → திர் → திரள் → திரளை → திரணை. 'வள்' என்னும் வளைவுக்கருத்து மூலத்தினின்று தோன்றிய சொல்.

(எ.கா.) வள் → வளை → வளைத்தல் = எழுதுதல், வரைதல்.

வள் → வர் → வரி → வரணம்.

வள் → வர் → வரி → வரிதல் = 1. எழுதுதல் (பிங்.), 2. சித்திரமெழுதுதல், பூசுதல்.

"வரிவனப்புற்றவல்லிப் பாவை" (புறம்.33). வரித்தல் = 1. எழுதுதல். "வள்ளுகிர் வரித்த சாந்தின் வனமுலை" (சீவக.2532). 2. சித்திரமெழுதுதல், பூசுதல். 3. கோலஞ் செய்தல். "அணிமலர் துறைதொறும் வரிக்கும்" (ஐங்குறு.117). "வள்" என்னும் அடிப்படை வளைவுக்கருத்து மூலத்தினின்று "வரி" என்னும் சொல் தோன்றும்.

(எ.கா.) வள் → வர் → வரி.

"வரி" என்னும் சொல்லினின்று எழுத்து, பூச்சு, நிறம், வகை, அழகு, நிறம்பற்றிய குலத்தைக் குறிக்கும் பொருண்மை பொதிந்த வரணம் என்னும் சொல் கிளைத்தது. வரணம் என்னும் சொல் தூயதென் சொல்.

வடவர்காட்டும் "வர்ண" (varṇ) என்னும் மூலம், பொருட் பொருத்தமற்றது. வடவர் திரித்துக் கொண்ட செயற்கைத் தன்மையுடையது, என்பார் பாவாணர்.

வரண அல்லது வர்ண என்னும் வடசொல்லே, தமிழில் வண்ணம் என்று திரிந்து வழங்குவதாகத் தமிழ்ப் பேராசிரியர் உட்படப் பலருங் கருதிக் கொண்டிருக்கின்றனர். வரணம், வண்ணம் என்னும் இரு சொல்லும் ஒரு சிறிது வடிவு வேறுபட்டனவேனும், ஒரே வேரினின்று முறையே, கீழ்ப்படையினுமேற்படையினுமாகத் தோன்றினவென் றறிதல் வேண்டும்.

(ஒ.நோ.) திண்ணை → திரணை.

தில்லுமுல்லு → திண்டுமுண்டு.

தில் → தெல் → தெள் → தெறு → தெற்று → தெற்றி → திண்ணை.

தில் → திள் → திண் → திண்ண = திரண்ட மேடை.

தில் → திண்டு → திள் → திட்டு → திட்டை.

தில் → திர் → திரள் → திரளை → திரணை திண்ணை.

திண்ணை, திரணை என்னும் இரு சொல்லும், கீழ்ப்படையிலும், மேற்படையிலுமாக ஒரே வேரினின்று தோன்றி, ஒரே பொருளை யுணர்த்துதல் காண்க.

இங்ஙனமே, வரணம், வண்ணம் என்னும் இருசொல்லுமெனக் கண்டு தெளிக. "திண்ணை" "திரணை"யின் திரிபன்று.

அங்ஙனமே, "வண்ணம்" வரணத்தின் திரிபன்று.'வண்ணகவொத்தாழிசை' வரணகவொத் தாழிசையென்று வழங்காமையும் நோக்குக (தேவ.13–பக்.40).

வரணம்² *varaṇam*, பெ.(n.) மூளையைக் கவர்ந்துள்ள மூன்று புரையான சவ்வுகள்; the three membrance that envelope the brain (சா.அக.).

வரணம்³ *varaṇam*, பெ.(n.) மாற்று; degree of fineness, as of gold.

வரணம்⁴ *varaṇam*, பெ.(n.) 1. தெரிந்தெடுக்கை; choice, selection. *"ஆசார்ய வரணம் பண்ணுதல்"*. 2. அமர்த்துகை (யாழ். அக.); appointing, nominating. 3. சூழ்கை (யாழ்.அக.); surrounding or incircling. 4. மதில் (இலக்.அக.); rampart, surrounding wall. 5. மறைக்கை (இலக். அக.); covering, screening. 6. சட்டை (நாமதீப.454); coat. 7. மாவிலிங்கம் (தைலவ.); round-berried cuspidate-leaved lingam tree. 8. ஒட்டகம் (யாழ்.அக.); camel. 9. பால் (யாழ்.அக.); milk.

[வரி + அணம் – வரணம்]

(ஒ.நோ.) மடி→மரி + அணம் = மரணம்.

மறைத்தற் கருத்தும், எழுதுதற் கருத்தும், வரணித்தற் கருத்தும், வளைதற் கருத்தோடு தொடர்புள்ளவையே. ஆதலால், சூழ்தலும், மறைத்தலும் பற்றிய சொல்லை வேறாகவும், நிறமும், வண்ணனை பற்றிய சொல்லை வேறாகவும், தமிழில் பிரித்தல் கூடாது (தேவ.13, பக்.40).

வரணம்பூசு–தல் *varaṇam-pūšu-*, பெ.(n.) 1. வண்ணம்பூசு–தல் பார்க்க; see *vaṇṇam-pūšu-*. 2. வரணம்வை–த்தல் பார்க்க; see *varaṇam-vai-*.

[வரணம் + பூசு–.]

ஓவியம், சுவர் போன்றவற்றில், வண்ணங் குறைந்த காலத்தே கோடிட்டு வரித்தல் அல்லது பூசுதல்.

வரணம்வை–த்தல் *varaṇam-vai-*, 4 செ. குன்றாவி.(v.t.) 1. நிறமூட்டுதல், வண்ணம் பூசுதல்; to give colour, to paint, to colour with dye. 2. வரணம்பூசு–தல் பார்க்க; see *varaṇam-pūšu-*.

[வள்→வர்→வரி→வரணம் + வை–.]

வரித்தல் = கோலஞ்செய்தல், சித்திரம் எழுதுதல், பூசுதல் என்னும் பொருண்மையில், சீவகசிந்தாமணி ஐங்குறுநூறு போன்ற இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது.

"வள்ளுகிர் வரித்த சாந்தின் வனமுலை" (சீவக.2532).

"அணிமலர் துறைதொறும் வரிக்கும்" (ஐங்குறு.117).

"வள்" என்னும் அடிப்படை மூலத்தினின்று கிளைத்த வரி என்னும் சொல்லினின்று, வரணம் என்னும் சொல் தோன்றியது.

வண்ணமெழுதுதல், வண்ணம் பூசுதல் என்னும் பொருட்பொருத்தப்பாட்டில், வரணம் வைத்தல் தென்பாண்டி நாட்டில் பரவலாக வழக்கூன்றியுள்ளது என்பார் மொழிஞாயிறு. வரி = வளைகோடு; எழுத்து.

எழுத்திலும், ஓவியத்திலும் வளைகோடும், வண்ணப்பூச்சும் நிரம்பி யிருப்பதால், வளைத்தற் கருத்தில், எழுத்துக்கருத்து தோன்றிற்று (வ.வ.பகுதி. 2, பக். 80).

வரணமாலை *varaṇa-mālai*, பெ.(n.) நெடுங்கணக்கு; the alphabet.

[வரணம் + மாலை.]

வரணமெட்டு *varaṇā-meṭṭu,* பெ.(n.) பாட்டிசை; இசைப்பாட்டு; song, musical composition.

[வரணம் + மெட்டு]

வரணமேறல் *varaṇam-ēṟal,* பெ.(n.) 1. பொன் மாற்றுயர்கை; increase of fineness or purity of gold. 2. மஞ்சளாகுகை; turning yellow. 3. குறைந்து காணும் வண்ணம் ஒளிர்தல்; dull colour becoming bright and shiny.

வரணலோகம் *varaṇa-lōgam,* பெ.(n.) 1. வரண மண்டலம்; region of *varaṇaṉ.* 2. நீர்; water.

[வரணம் + உலகம் → லோகம்.]

த. உலகம்→**Skt.** loka.

வரணவிந்து *varaṇa-vindu,* பெ.(n.) முத்துச் சிப்பி (யாழ்.அக.); mother of pearl.

[வரணம் + விந்து.]

வரணவிபாசகம் *varaṇa-vibāšagam,* பெ. (n.) ஒரு வகை நிறத்தைக் காட்டும் ஓர் முப்பட்டைக் கண்ணாடி; spectroscope.

வரணவில் *varaṇa-vil,* பெ.(n.) வானவில்லை அடுத்துத் தோன்றும் வில் வடிவு (வின்.); secondary rainbow.

[வரணம் + வில்.]

வரணவுலிமிடி *varaṇa-v-ulimiḍi,* பெ.(n.) கருப்பு உப்பிலாங் கொடி; a twiner black variety of *vuppilāṉ-koḍi.*

வரணவேலை *varaṇa-vēlai,* பெ.(n.) சித்திரம் எழுதுதல்; art of painting.

[வரணம் + வேலை.]

வரணனாள் *varaṇa-ṉāl,* பெ.(n.) குன்று (சதய) நாள் (பிங்.); the 24th naksatra.

[வரணன் + நாள்.]

வரணாச்சிரமதருமம் *varaṇā-c-cirama-tarumam,* பெ.(n.) நால்வகைச் சாதிக்கும் நால்வகை நிலைக்கும் உரிய ஒழுக்கம்; duties pertaining to the four classifications of castes and to the four stages of life.

[வரணம் + ஆச்சிரமம் + தருமம்.]

வரணாசாரம் *varaṇā-šāram,* பெ.(n.) சாதியொழுக்கம் (யாழ்.அக.); customs and manners pertaining to each of the four castes.

[வரணம் + ஆசாரம்.]

வரணாசிரா *varaṇā-širā,* பெ.(n.) சிவதை; purgative root - turbith root.

வரணாத்திரம் *varaṇāttiram,* பெ.(n.) வரணனை இறைவனாகக் கொண்ட படைக்கலன் (வின்.); the mystic arrow whose presiding deity is *varaṇaṉ.*

*[வரணம் + **Skt.** astra > த. அத்திரம்.]*

வரணாத்து *varaṇāttu,* பெ.(n.) புழுதிநாற்று; paddy seedling grown on dry seed-bed.

[வரள் + நாற்று → நாத்து]

வரணாத்துவா *varaṇāttuvā,* பெ.(n.) துறக்க நிலையை விளக்குவதும், அக்கர வடிவில் அமைந்ததுமான ஆறத்துவாக்களுள் ஒன்று (சி.சி.8, 6, மறைஞா.); a path to salvation or renunciation in the form of *varṇās,* one of six *āṟattuvā.*

[வரண + அத்துவா.]

வரணாலயம் *varaṇā-layam,* பெ.(n.) கடல்; the ocean or see.

[வரணன் + ஆலயம்.]

வரணி[1]-த்தல் *varaṇi-,*4 செ.குன்றாவி. (v.t.) 1. புனைந்துரைத்தல்; to depict, describe. 2. புகழ்ந்தேத்துதல், பலவாறு கூறிப் பாராட்டுதல்; to praise. 3. உவமித்தல்; to illustrate by anology. 4. மிகைபடக் கூறுதல்; to exaggerate. 5. எழுதுதல்; to write. 6. வண்ணி-த்தல் பார்க்க; see *vaṇṇi-,*

த. வரணம் → வரணி → **Skt.** varṇ (இ.வே.)

[வள் → வர் → வரி → வரணம் → வரணி = புனைந்துரைத்தல் (வ.வ.பகுதி.2, பக்.81)]

வரணம், வரணி என்னும் இரு சொல்லும், வடசொல் வடிவைப் பின்பற்றி வருண, வருணி எனத் தமிழில் வழுப்பட எழுதப்பட்டுள்ளன. பாண்டி நாட்டிற், குலம் வினவும்போது, "என்ன வரணம்" என்றே, இன்றும் ரகர வடிவில் நாட்டுப்புறத்தில் வழங்குதல் காண்க.

வண்ணம், வரணம் என்னும் இருசொல்லும், ஒரே மூலத்தினின்று தோன்றியவையே. ஆயின், முன்னது அடிப்படை மூலமாகிய 'வள்' என்பதினின்றும், பின்னது மேற்படை மூலமாகிய 'வரி' என்பதினின்றும், திரிந்தவையாகும்.

வள் → வண் → வண்ணம் → வண்ணி → வண்ணனை (அடிப்படை மூலம்).

வள் → வர் → வரி → வரணம் → வரணி (மேற்படை மூலம்).

(ஒ.நோ.) திள் → திண் → திண்ணை (அடிப்படை மூலம்).

திள் → திர் → திரள் → திரளை → திரணை (மேற்படை மூலம்).

வரணித்தல் என்பதன் செந்தமிழ்ச் சொல் வடிவம் வண்ணித்தல் என்பதாகும்.

திண்ணை, திரணை என்னும் இரண்டும் ஒரே, மூலத்தனின்று தோன்றிய ஒரு பொருட் சொற்களே. இவையிரண்டும், இன்றும் நெல்லை நாட்டு உலக வழக்காம்.

இங்ஙனமே, வண்ணம், வரணம் என்பனவும்.

வண்ணம் என்னும் அடிப்படை மூலத்திரிபு, வடமொழியிலின்மையும், வரணம் (வர்ண) என்னும் மேற்படை மூலத்திரிபே, அதிலுண்மையும், கவனிக்கத்தக்கன (வ.வ.பகுதி, 2, பக்.82).

பல நிறங்களைக் கொண்டு ஓர் ஓவியத்தைச் சிறப்பித்தாற்போன்று, பல சொற்களையும், அணிகளையுங் கொண்டு புனைந்துரைத்தலே, வரணித்தலாகும்.

வரணி[2] *varaṇi,*பெ.(n.) மாவிலிங்கம் (நாமதீப. 327); round-berried cuspidate-leaved lingam tree.

[வரணம் → வரணி]

வரணிக்கை *varaṇikkai,*பெ.(n.) பாராட்டுகை, புகழ்கை, புனைந்துரைக்கை; praise; delineation.

[வரணி → வரணிக்கை]

வரத்தாடு *vara-t-tāḍu,* பெ.(n.) வெளியூரிலிருந்து கொண்டு வரப்படுகின்ற ஆடு; sheep or goat brought from other places, alien sheep.

செம்மறியாடுகளின் மந்தையைக் கிடை என்பர். ஊர் ஊராகச் சென்று பகலில் மேய்ச்சலுக்கு விட்டு, இரவில் நிலத்துக்குரியவரிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டு உரத்திற்காக கிடையமர்த்துவர். இந்த ஆடுகள் வெளியூரிலிருந்து கொண்டுவரப்படுவதால் வரத்தாடுகள் என்றும், இவற்றை மேய்ப்பவர்களை வரத்தாட்டுக்காரர்கள் என்றும் அழைக்கப்படுவர்.

வரத்தாறு *varattāṟu,* பெ.(n.) கிளையாறு (வின்.); tributary stream.

[வரத்து + ஆறு]

வரத்து[1] *varattu,* பெ.(n.) 1. தலைமுறை; genealogy, lineage, progeny. *'ஒருவனைக் கவிபாடும்போது அவனுடைய வரத்துச் சொல்லியிறே கவிபாடுவது' (திவ். அமலனாதி. 1. வ்யா. பக். 24).* 2. விருந்தினர் வரவைக் குறிக்கும் பல்லிச் சொல்; chirping of lizard indicating the arrival of guests. 3. கட்டளை; order, command.

[வா→வரு→வரத்து.]

வரத்து[2] *varattu,* பெ.(n.) 1. வருகை; advent, coming in. *"நம் கோவலன் வருகின்ற வரத்து" (சிலப்.9, 64-9, உரை).* 2. நீர் வரும் வழி; inlet or feeding channel or source of water supply, as to a tank. *"இந்தக் குளத்துக்கு வரத்து எங்கே?" (உ.வ.).* 3. வரும்படி; income, receipts, perquisite. *"ஒருவரத்துமின்றிச் செலவு செய்வோர்" (அறப். சத. 56).* 4. கணக்கில் வரவுதொகை காட்டும் பாங்கு; the process of crediting in an account. 5. பெருக்கு; increase or enhancement. *"வெள்ளம் வரத்தா வற்றா?"* 6. எல்லை; limit, boundary. *"இந்நாயனார் திருப்பதியில் நாலு வரத்துக்குள்ளும் இருந்த குடிமக்களை" (புதுக்கோ.கல்வெ. 176).*

[வா → வரு →வரத்து]

வரத்துப்பல்லி *varattu-p-palli,* பெ.(n.) 1. விருந்தின் வருகையைத் தெரிவிக்கும்படி ஒலிசெய்யும் பல்லி; lizard which indicates by its chirping the advent of guests. 2. தீயதன் தீநிமித்தமாக ஒலி செய்யும் பல்லி (வின்.); lizard which indicates ill omen by its chirping.

[வரத்து + பல்லி]

வரத்துப்போக்கு[1] *varattu-p-pōkku,* பெ.(n.) வழக்கமான பெண் புணர்ச்சி; habitual intercourse (சா.அக.).

வரத்துப்போக்கு[2] *varattu-p-pōkku,* பெ.(n.) 1. உள்ளே புகுகையும் வெளியே போகையும்; entrance and exit. 2. ஒருவர் வீட்டுக்கு ஒருவர் சென்றுவரும் பழக்கம்; visiting terms, terms of cordiality. *"அந்த வீட்டுக்கு வரத்துப் போக்குண்டா?" (இ.வ.).* 3. வரவும் செலவும்; income and expenditure.

[வரத்து + போக்கு]

வரத்துவாரி *varattu-vāri,* பெ.(n.) குளத்துக்கு நீர் வரும் வாய்க்கால் (இ.வ.); supply channel, feeding channel of a tank.

மறுவ. குளக்கால்

[வரத்து + வாரி]

வரதஞ்சி *vara-tañji,* பெ.(n.) ஒரு செடி வகை; a kind of plant-caesapinia sappan (சா.அக.).

வரதட்சி *vara-taṭci,* பெ.(n.) சத்திசாரம்; a kind of salt (சா.அக.).

வரதடியன் *varataḍiyaṉ,* பெ.(n.) மடிமிகுமட்டி (இ.வ.); dull, idle fellow, blockhead, a very stupid person.

மறுவ. முழுச்சோம்பேறி

வரதலன் *vara-talaṉ,* பெ.(n.) வடதரன் பார்க்க; see *vaḍataraṉ* (சா.அக.).

வரதாரு *varadāru,* பெ.(n.) தேக்குமரம் (மூ.அ.); teak tree.

வரதுங்கராமபாண்டியன் *varatuṅga-rāma-pāṇḍiyaṉ,* பெ.(n.) 16–17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a poet, lived in 16-17 C.

இவர் திருக்கருவை அந்தாதி, சிவகவசம், பிரமோத்தர காண்டம், கொக்கோகம், கூர்ம புராணம் முதலியவற்றை இயற்றியவர். இவர் அதிவீரராம பாண்டியனுடைய பெரிய தந்தையின் மகன். கூர்ம புராணம், அதிவீரராம பாண்டியன் செய்ததாகவும் கூறுவர்.

வரந்தருவார் *varan-taruvār,* பெ.(n.) வில்லி புத்தூராழ்வாரின் புதல்வராகிய ஒரு புலவர் (பாரத. சிறப்புப் 23, தலைப்பு); a poet son of *villi-puttūr-āḻvār.*

இவர், 15–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். வில்லிபுத்தூராரின் 'வில்லி பாரதத்திற்கு பாயிரம் பாடியவர்.

வரநதி *vara-nadi,* பெ.(n.) கங்கை; the Ganges. *'மன்னவன்..... வரநதிக் கரையிலுற்றான்' (பாகவ. 1, தன்மபுத்திரன். 8).*

[வர + நதி.]

Skt. nadī> த. நதி.

வரநிச்சயம் *vara-niccayam,* பெ.(n.) மணமகனை இன்னானென்று உறுதிசெய்து கொள்ளுகை; selecting the bridegroom for a particular bride.

[வரன் + நிச்சம்→நிச்சயம் – வரநிச்சயம்.]

Skt. niś-caya> த. நிச்சயம்.

வரப்படி *varappaḍi,* பெ.(n.) வரப்பின் அருகிலுள்ள வயற்பகுதி; portion of a field, adjoining to the ridges.

[வரப்பு + அண்டி→அடி.]

வரப்பினை யொட்டியுள்ள இடப்பகுதி அல்லது வரப்பின் கீழிடம்.

வரப்படுத்து–தல் *vara-p-paḍuttu-,* 8 செ.குன்றாவி.(v.t.) 1. நெட்டுருப் பண்ணுதல்; to cram or mug up as a lesson. *பாடத்தை வரப்படுத்துகிறான்.* 2. வந்ததைப் பெற்றுக் கொள்ளுதல்; to credit; to appropriate, to accept whatever is offered. *வந்ததை வரப்படுத்தடா வல்லக்காட்டு, இராமா (இ.வ.).*

[வா → வர + படு →படுத்து–.]

வரப்பண்ணு–தல் *vara-p-paṇṇu-,* 5 செ. குன்றாவி. (v.t.) 1. வரவழைத்தல்; to cause to come; to bring; to produce. 2. நெட்டுருச் செய்தல்; to mug up, to cram, as a lesson.

[வா→ வர + பண்→பண்ணு–.]

வரப்பற்று–தல் *vara-p-paṟṟu-,* 5 செ. குன்றாவி. (v.t.) 1. தன்வயமாக்குதல்; to get into one's possession, to take hold of, to clutch eagerly. 2. வந்ததைப் பெற்றுக் கொள்ளுதல்

(இ.வ.); to credit, to appropriate, to accept whatever is offered.

[வா → வர + பற்று–,]

வரப்பார்[1]–த்தல் *vara-p-pār-*, 4 செ.கு.வி. (v.i.) பிறர் வரவுக்காகக் காத்திருத்தல் (யாழ்.அக.); to await, to wait for some one's arrival.

[வா → வர + பார்–.]

வரப்பார்[2]–த்தல் *vara-p-pār-*, 4 செ.குன்றாவி. (v.t.) வருமாறு செய்தல்; to cause or arrange to come.

[வா → வர + பார்–.]

வரப்பிரசாதம் *vara-p-piraśādam*, பெ.(n.) கடவுளரின் அருட்கொடை; Grace of Gods. *"தெய்வச்செயல் வரப்பிரசாதம்" (தனிச்.சிந். 231. 18).*

[வரம் + பிரசாதம்]

Skt. pra-sādi > த. பிரசாதி

வரப்பிரசாதி *vara-p-piraśādi*, பெ.(n.) வரமருள்வார்; bestower of boons. *"பழனியாண்டவர் நல்ல வரப்பிரசாதி".*

[வரம் + பிரசாதி]

Skt. pra-sādi > த. பிரசாதி.

வரப்பிரதானம் *vara-p-piradānam*, பெ.(n.) 1. வரந்தருகை; the granting of a boon, blessing. 2. நன்கொடை (யாழ்.அக.); excellent gift, donation.

[வரம் + பிரதானம்]

Skt. pradhāna > த. பிரதானம்

வரப்பிரதை *vara-p-piradai*, பெ.(n.) 1. வரமளிக்கும் தேவதை; benevolent goddess. 2. அகத்திய முனிவரின் மனைவியாகிய உலோபமுத்திரை (யாழ்.அக.); *Lōbamudrai*, the wife of Agattiyar.

[வரம் + பிரதை]

Skt. pratha > த. பிரதை

வரப்பு *varappu*, பெ.(n.) 1. வயல்வரம்பு; ridge of a field. *வரப்பு உயர நீர் உயரும்; குடி உயரக் கோன் உயரும் (உ.வ.). வரப்போ தலையணை; வாய்க்காலோ பஞ்சுமெத்தை (பழ.).* 2. வரம்பு; limit. 3. எல்லை (சது.); boundary.

[வரம்பு → வரப்பு: வளைதற் கருத்தினின்று கிளைத்த சொல்.]

ஒருவர் நிலத்தினின்று, மற்றொருவர் இடத்தை வளைத்து வரம்பிடுவதால் வரப்பு எனப் பெயர் பெற்றது. வயலின், எல்லையினை, அல்லது வயலோரத்தை வகுக்கும், வயல்வரம்பான திட்டு.

வரப்புக்கடா *varappu-k-kaḍā*, பெ.(n.) வரப்புநண்டு பார்க்க; see *varappu-nandu.*

[வரப்பு + கடா[2]]

வரப்புகழி–த்தல் *varappu-kaḻi-*, 4 செ.குன்றாவி. (v.t.) வரப்பினைச் சரி செய்தல்; shaping or reclaiming the ridges of paddy field.

[வரப்பு + கழி–.]

ஒருகா. அண்டைவெட்டுதல்.

வரப்புச்சுண்டெலி *varappu-c-cuṇḍeli*, பெ.(n.) எலிவகை; field-mouse.

[வரப்பு + சுண்டு + எலி.]

வயலோர வரப்புக்குழியில் வாழும், சிற்றெலி வகையுளொன்று.

வரப்புநண்டு *varappu-naṇḍu,* பெ.(n.) வயல் நண்டு; field crab.

[வரம்பு→வரப்பு + நொண்டு→நண்டு.]

நண்டுதல் = கிண்டுதல், கிளறுதல்.

வரப்பு நண்டு = வரப்புப் பொந்திலுள்ள வண்டலை வெளிக் கொணர்ந்து தரும் தன்மைத்து; வண்டலிலும் மணலிலும் கிண்டினாற்போற் செல்லும் நீருயிரி.



வரப்புமேடு *varappu-mēḍu,* பெ.(n.) மேடான வரப்பு; mound boundary, raised ridge of a field. *வரப்புமோடு (பே.வ.).*

[வரப்பு + மேடு]

வரப்புள் *varappuḷ,* பெ.(n.) வயல் (பிங்.); cultivable field.

[வரப்பு + உல்→உள்[2]]

வரப்பினுட் பகுதியிலுள்ளதும், நன்கு பண்படுத்தப்பட்டதுமான நன்செய்.

வரப்பூலா *vara-p-pūlā,* பெ.(n.) 1. வறட்பூலா பார்க்க; see *varaṭ-pūlā.* 2. பூலா; fleggea lencophyrus (சா.அக.).

வரப்பெலி *vara-p-peli,* பெ.(n.) எலி வகை; field-rat (சா.அக.).

[வரப்பு + எலி. இல்→இலி→எலி. இல் = குத்துதல், குடைதல்.]

நன்செய் வரப்புப் பொந்துகளில் வாழும் எலி.

வரப்போ–தல் *vara-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) நிகழக்கூடியதாதல்; to be about to come; to come in the future, to be positive or optamistic. *"உனக்கு நல்லகாலம் வரப்போகிறது" (உ.வ.).*

[வா → வர + போ–.]

வரபட்சம் *vara-paṭcam,* பெ.(n.) மண மகனைச் சார்ந்தவர் (யாழ்.அக.); the bridegroom's party.

[வரன் + பக்கம்→பட்சம்]

த. பக்கம் > **Skt.** பட்சம் (paksa).

வரபதி *vara-pati,* பெ.(n.) மூலிகை வகையு ளொன்று; a kind of herbal medicine (சா.அக.).

வரபலம் *vara-palam,* பெ.(n.) தென்னை மரம்; cocoanut tree - *Cocos nucifera* (சா.அக.).

வரம்[1] *varam,* பெ.(n.) 1. தெய்வம் முதலியவற்றாற் பெறும் பேறு; boon, gift, blessing by a deity or a great person. *"காதலி னுவந்து வரங் கொடுத் தன்றே" (திருமுரு.94). "இமையா நாட்டத் தொருவரங் கொண்டு" (பரிபா. 5:30). "வருபுனல் அணிகென வரங்கொள் வோரும்" (பரிபா 8:105). 'வரங்கொடுத்த தெய்வத்திற்கு, மொட்டை போடுவதாக வேண்டிக் கொண்டான்' (உ.வ.).* 2. அருள் (வின்.), உதவி நன்மை; grace, favour, help.

3. வாழ்த்து (யாழ்.அக.); blessing, well wish. 4. வேண்டுகோள்; supplication, solicitation, entreaty, request, as made to a deity or a great person. *"வசையிலாள் வரத்தின் வந்தாள்" (சீவக. 201).* 5. விருப்பம் (பொருட்.நி.); desire. 6. மேன்மை; esteem, excellence, eminence. 7. ஒரு பொற்குவை (யாழ்.அக.); a treasure or fund. 8. சூழல் (யாழ்.அக.); enclosed or encircled space. 9. அடைக்கலாங்குருவி (யாழ்.அக.); sparrow. 10. எறும்பு (யாழ்.அக.); ant.

[பரம்→வரம் = மேன்மை (தி.ம.49.]

புரம் = மேல், மேன்மாடம். உயர்ச்சி, உயரமான கட்டிடம். புரம்→பரம் = மேல், மேலிடம், மேலுலகம். *"புரையுயர் பாகும்" (தொல்.).*

வரம் குறித்து நச்சினார்க்கினியர், சீவகசிந்தாமணி உரையில் கூறுவது :- *"வேண்டுவ கோடல்" (நச்.சீவ.661).*

வரம்² *varam,* பெ.(n.) மஞ்சள் (மலை.); turmeric (சா.அக.).

[வர → வரம்]

வரம்படங்கல்பாட்டம் *varambaḍaṅgal-pāṭṭam,* பெ.(n.) தண்ணீர்த்தட்டு முதலியவற்றால் வயல்விளைவு குறைந்தாலும், தள்ளுபடி யில்லாத கட்டுக்குத்தகை வகை (நாஞ்.); a stringout lease of paddy-fields in which no remission is made in rent in the event of unforeseen drought, etc.

[வரம்பு + அடங்கல் + பாட்டம். பாட்டம் = குத்தகை வகை.]

வரம்பழி-தல் *varambaḻi-,* 2 செ.கு.வி. (v.i.) வரம்பிக-த்தல் பார்க்க; see *varambiga-,* *"வரம்பழியாது வாழ்ந்தேம்" (கம்பரா. மாயாசீதை.70).*

[வரம்பு + அழி-. ஒழி→அழி.]

வரம்பழிதரிசு *varambaḻi-tarišu,* பெ.(n.) பாழ்நிலம்; waste land.

[வரப்பு→வரம்பு + அழி + தரிசு.]

ஒருகா. வறுநிலம்.

வரம்பறு-த்தல் *varambaṟu-,* 4 செ.கு.வி. (v.i.) வரம்பறுத்தவிளைநிலம் பார்க்க; see *varambaṟutta-viḷai-nilam.*

[வரம்பு + அறு-.]

வரம்பறுத்தவிளைநிலம் *varambaṟutta-viḷai-nilam,* பெ.(n.) அளந்து, எல்லை யிட்டுப் பிரித்த நன்செய்நிலம்; measured cultivable, wet land. *'எம்மூர் வரம்பறுத்த விளைநிலமாயின வயல் நிலம்' (S.I.I. Vol.XII-102).*

[வரம்பறு + விளைநிலம்.]

வரம்பிக-த்தல் *varambiga-,* 4 செ.கு.வி. (v.i.) 1. அளவிலதாதல்; to be boundless. *"வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பு" (கம்பரா. அயோத். மந்திரப்.1).* 2. அளவு கடத்தல்; to exceed limits.

[வரம்பு + இக-.]

வரம்பிகந்தோடு-தல் *varambigandōḍu-,* 5 செ.கு.வி. (v.i.) அளவு கடத்தல்; to exceed limits. *"வரம்பிகந்தோடி" (கம்பரா. நாட்.9).*

[வரம்பிகந்து + ஓடு-.]

வரம்பில்காட்சி *varambil-kāṭci,* பெ.(n.) முழுதுணரும் அறிவு (சீவக. 2846, உரை.); omniscience, infinite wisdom.

மறுவ. முற்றறிவு.

[வரம்பு + இல் + காட்சி]

வரம்பில்ஞானம் *varambil-ñāṉam,* பெ.(n.) வரம்பில்காட்சி (வின்.) பார்க்க; see *varambil-kāṭci.*

[வரம்பு + இல் + ஞானம்[1]]

வரம்பிலறிவன் *varambil-aṟivaṉ,* பெ.(n.) கடவுள் (நன். பாயி. 54, மயிலை.); God, as the omniscient or all pervading divine.

மறுவ. முற்றறிவன்.

[வரம்பு + இல் + அறிவன்]

வரம்பிலாற்றல் *varambil-āṟṟal,* பெ.(n.) வரம்பில் வல்லமை; infinite power. *"வைத்து மீடியால் வரம்பிலாற்றலாய்" (கம்பரா. மருத்து. 116).*

[வரம்பு + இல் + ஆற்றல்]

வரம்பிலின்பம் *varambil-iṉbam,* பெ.(n.) பேரின்பம், அளவிலா மகிழ்ச்சி; divine infinite happiness.

[வரம்பு + இல் + இன்பம். இல்→இன்→இன்பு →இன்பம் = மட்டற்ற மகிழ்ச்சி.]

வரம்பிலின்பமுடைமை *varambil-iṉbam-uḍaimai,* பெ.(n.) சிவனெண்குணத் தொன்றான அளவிலின்ப(பேரின்ப)முடைமை (குறள், 9, உரை); being in enjoyment of boundless bliss, one of *śivaṉ-eṇ-kuṇam* or eight qualitis.

[வரம்பிலின்பம் + உடைமை. உடு→உடை →உடைமை]

வரம்பிற-த்தல் *varambiṟa-,* 4 செ.கு.வி. (v.i.) 1. அளவிலதாதல்; to be boundless. *"வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பு" (கம்பரா. அயோத். மந்திரப். 1).* 2. அளவு கடத்தல்; to exceed limits.

[வரம்பு + இள்→இறு→இற-.]

வரம்பு *varambu,* பெ.(n.) 1. எல்லை; boundary, border, limit, extent. *"வரம்பி றானை பரவா வூங்கே" (பதிற்றுப். 29, 15). "தலைவரம் பறியாது வருந்துமென் னெஞ்சே" (குறுந்.172 : 7). "புலங்கெட விறுக்கும் வரம்பி றானை" (புறநா. 16 : 9). "எண்ணுவரம் பறியா உவலிடு பதுக்கை" அகநா. (109 : 8).* 2. வரப்பு; ridge of a field. *"செறுவின் வரம்பணையாத் துயல்வர" (அகநா.13).* 3. அணை; causeway, dam. *"வேலை வகுத்தன வரம்பு" (கம்பரா. மாயாச.27).* 4. வழி (யாழ்.அக.); way. 5. விளிம்பு (இ.வ); brim. 6. ஒழுங்கு; rule of conduct, principle. *"வகைதொகை யறியாதவனே வரம்பு மீறிப் பேசுவான்".* 7. வட்டி (அக.நி.); interest. 8. மனை (அக.நி.); house-site.

Ka. bara, bare, vari, vare; **Te.** varuju; **Tu.** barabu, baraṅgayi, barē; **Ma.** varambu, vara, varu, varē; **Ko.** var.

[வரி→வரம்பு = எல்லை; வயல் வரம்பான திட்டு (வே.க.4 பக்.107).]

வரம்புகட்டு[1]-தல் *varambu-kaṭṭu-,* 5 செ. குன்றாவி.(v.t.) 1. அணைகட்டுதல் (யாழ். அக.); to dam up. 2. எல்லைக் கட்டுதல்; to limit. *'கடிப்புண் பரவாதபடி மாந்திரிகன் வரம்பு கட்டினான்' (உ.வ).* 3. முடித்தல்; to finish, to put an end to.

[வரம்பு + குள்→குட்டு→கட்டு-.]

வரம்புகட்டு^{2}–தல் *varambu-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) கடிப்புண் வட்டமாகத் தடித்தல்; to form rings, as in ringworm or spreading sores.

[வரம்பு + கட்டு–.]

வரம்புகட–த்தல் *varambu-kaḍa-,* 4 செ.கு.வி. (v.i.) வரம்பிற–த்தல் பார்க்க; see *varambiṟa-,*

[வரம்பு + கட–,]

வரம்புதிரட்டு–தல் *varambu-tiraṭṭu,* 5 செ.கு.வி.(v.i.) & செ.குன்றாவி.(v.t.) வரம்புகட்டு–தல் பார்க்க; see *varambu-kaṭṭu-,*

[வரம்பு + திரட்டு–]

வரம்புபண்ணு^{1}–தல் *varambu-paṇṇu-,* 5 செ.கு.வி.(v.i.) வரம்புகட்டு–தல்–,1, 2 பார்க்க; see *varambu-kaṭṭu-.*

[வரம்பு + பண்→பண்ணு–.]

வரம்புபண்ணு^{2}–தல் *varambu-paṇṇu-,* 5 செ.குன்றாவி.(v.t.) சரிப்படுத்துதல் (யாழ். அக.); to adjust, to set right, to rectify.

[வரம்பு + பண்ணு–.]

வரமாலை *varamālai,* பெ.(n.) மணமகனுக்கு மணமகள் சூட்டும் மணமாலை; the garland put by the bride round the neck of the bride-groom, at a marriage.

[வரன் + மாலை]

வரமுள்ளி *vara-muḷḷi,* பெ.(n.) ஓர் வகை முள்ளி; barleria brionita (சா.அக.).

வரமூலி *vara-mūli,* பெ.(n.) ஓர் பூடு; barleria prionties (சா.அக.).

வரயாத்திரை *vara-yāttirai,* பெ.(n.) மண மகன் மணமகள் வீட்டை நோக்கி திருத்தலத்திற்கு வருவது போன்று, ஊர்வலம் வருகை; setting out of the bridegroom in procession towards the house of the bride, at a marriage.

[வர + ஏ→ யா + திரை → யாத்திரை]

வரயோகம் *vara-y-ōgam,* பெ.(n.) நந்தையுடன் செக்கு (சதயம்), ஆரல் (கார்த்திகை), மூதிரை (திருவாதிரை), அறுவை (சித்திரை) என்பவற்றுளொன்று கூடுதலாலுண்டாம் ஒக வகை (விதான. குணாகுண.10); combination of nandai with one of the *naksatras, šadayam, kārttigai, tiruvādirai* and *cittirai.*

[வர + யோகம்]

Skt. yōga→ *த. யோகம்*

வரர் *varar,* பெ.(n.) 1. சிறந்தோர்; saint, sages, great or enlightened persons. *"வரரழக் கண்டதுண்டோ?" (திருவாலவா. 29, 9).* 2. வானோர் (பிங்.); celestials.

[பரர்→ வரர் = மேலானோர்.]

வரராசையுலா *vara-rāšai-y-ulā,* பெ.(n.) 17–ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நூல்; a work composed in 17C.

இந்நூலின் ஆசிரியர் இன்னாரென்று அறியப்படவில்லை. நூலின் பெயராலே ஆசிரியர் அழைக்கப்படுகின்றார். வரராசை என்பது சங்கர நயினார் கோயில். வடமலையப்ப பிள்ளையன் செய்த திருப்பணி நன்கு விளக்கப்பட்டுள்ளது.

வரராமயோகி *vararāma-y-ōgi,* பெ.(n.) 12–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; a poet, lived 12 C.

இவர் திருந்செந்தூர்ச் சண்முக சதகம், திருக்குறுங்குடி நம்பி சதகம், என்னும் நூல்களை இயற்றியுள்ளார்.

வரருசி *vara-ruši,* பெ.(n.) பாணினி(வியா கரணத்துக்கு) இலக்கணத்திற்கு உரை செய்த முனிவர் (சங்.அக.); the sage who wrote the *vārtigam* supplementing *pāṇiṉis* grammar.

வரருடவாலி *vararuḍa-vāli,* பெ.(n.) கரு நாகம்; black cobra (சா.அக.).

வரல் *varal,* பெ.(n.) வளருகை; growing. *"வனைந்துவரல் இளமுலை ஞெமுங்கப் பல்லூழ் விளங்குதொடி முன்கை வளைந்து புறஞ்சுற்ற" (அகம்.58:7–8).*

[வா → வர்→வரு→வரல்.]

வரல்வாறு *varal-vāṟu,* பெ.(n.) வரலாறு (யாழ்.அக.) பார்க்க; see *varalāṟu.*

[வா → வர்→வரு→வரல் + வாறு.]

வரலாற்றுக்களஞ்சியம் *varalāṟṟu-k-kaḷañjiyam,* பெ.(n.) வரலாற்றுச் செய்திகளை நிரல்படத் தொகுத்த நூல்; a historical encyclopaedia.

[வரலாறு + களஞ்சியம்.]

சிறப்பு மிக்க உலக வரலாற்று நிகழ்வுகளை ஏரணமுறைப்படி படவிளத்தங்களுடன் எடுத்தியம்பும் கலைக்களஞ்சியம்.

வரலாற்றுமுறைமை *varalāṟṟu-muṟaimai,* பெ.(n.) குடிவழியாகக் கையாளப்படும் இடையறவுபடாத வழக்கு; ancient and unbroken tradition or usage, hereditary custom. *"மரபு வழுவாவது வரலாற்று முறைமையின் மயங்கச் சொல்லுவது" (நன். 374, மயிலை.).*

[வரலாறு + முறைமை]

தொன்றுதொட்டு வழங்கி வரும் முறைமைக்கு மாறானது.

வரலாற்றுவஞ்சி[1] *varalāṟṟu-vañji,* பெ.(n.) சிற்றிலக்கியம் தொண்ணூற்றாறனுள் தலைவனது குலப்பிறப்பு முதலிய பல சிறப்பையும், புகழையும் வஞ்சிப்பாவாற் கூறும் பாடல்வகை; a panegyric in *vañji-p-pā* on the noble birth, greatness and fame of a hero, one of the 96 *ciṟṟilakkiyam.*

[வரலாறு + வஞ்சி [2]]

வரலாற்றுவஞ்சி[2] *varalāṟṟu-vañji,* பெ.(n.) போர்க்களத்துச் செல்லும் படை யெழுச்சியைக் கூறும் சிற்றிலக்கியம் (இலக். வி. 869); a poem describing the majestic march of an army to the battle-field.

[வரலாறு + வஞ்சி [3]]

வரலாறு *varalāṟu,* பெ.(n.) 1. நிகழ்ச்சி முறை; order of events. 2. இனவளர்ச்சி மற்றும் வாழ்வுமுறைத் தொடர்ப் பதிவேடு; history. *"ஈதிவன்றன் வரலாறுங் குலவரவும்" (கம்பரா. குலமுறை. 29).* 3. தொன்மநிகழ்வு; antecedents. 4. சூழல்; circumstances. 5. விளத்தம்; details. 6. வழிமுறை ; means, device. *"ஆவிதாங்கும் வரலாறு கேளும்" (அழகர்கல்.86).* 7. எடுத்துக்காட்டு; example, instance, illustration.

[வா→வர்→வரு→ வரல் + ஆறு]

கலைகளும் (Arts), அறிவியங்களும் (Sciences) 1. தற்சார்புள்ளது (independent), 2. மற்சார்புள்ளது (dependent) என இருதிறப்படும். தற்சார்பறிவியங்களுள் ஒன்றான வரலாறு, ஏனையறிவியங்கட்கெல்லாம் அடிமணையாயும், முதுகந்தண்டாயும் இருப்பதாகும்.

காட்சியும் கருத்துமாகிய ஒவ்வொரு பொருட்கும் வரலாறிருப்பினும், ஒரு நாடு, அதன் மக்கள், அவர்கள் மொழி, அவர்கள் நாகரிகம், ஆட்சி ஆகிய சிலவற்றின் வரலாறே சிறப்பாக வரலாறெனப்படும்.

ஒருநாட்டு வரலாறு அந்நாட்டின் பழங்குடி மக்களை (Aborigines)யும், வந்தேறி (immigrants) களையும், பிரித்துக் காட்டுவதால், ஒரு வீட்டுக்காரனுக்கு, அவ்வீட்டு ஆவணம் ஏமக்காப்பாவது போல், ஒரு நாட்டுப் பழங்குடி மக்கட்கும், அந்நாட்டு வரலாறு, சிலவுரிமை வகையில் ஏமக்காப்பாம்.

இனி வரலாறின்றி ஒரு மொழியின் உண்மையான இயல்பை அறிவதும் அரிதாம் (தேவ. பக்.24). ஒரு நாட்டின் வரலாற்றை அறிவதற்கு, அந்நாட்டு மொழியும், சொற்களும் உறுதுணை புரிவன எனலாம்.

வரலாறுகாணாத *varalāṟu-kāṇāda,* பெ.அ. (adj.) இதற்குமுன் இதுபோல் இருந்திராத, முன்பு ஒருமுறைகூட நடந்திராத; unprecedented, uneventful. *'வரலாறு காணாத கூட்டம்'.*

[வரலாறு + காண் + ஆ (எ.ம.இ.நி.) → காணாத]

வரவண்ணினி *varavaṇṇiṉi,* பெ.(n.) 1. திருமகள் (இலக்குமி) (யாழ்.அக.); *Tirumagaḷ.* 2. மலைமகள்; *Malaimagaḷ.* 3. கலைமகள்; *Kalaimagaḷ.* 4. கற்புடையாள்; contiment or chaste woman. 5. பெண்; woman. 6. மஞ்சள்; tumeric. 7. ஓர் நிறம்; a colour.

[வரவர்ணினி → வரவண்ணினி]

வரவர *vara-vara,* வி.அ.(adv.) 1. படிப் படியாய்; step by step, gradually. *வரவர அறிவு பெருகும்.* 2. மேன்மேலும்; further and further. *அடிக்கடி நடந்த வறற்கட (பஞ்ச)த்தாலும் வெள்ளத்தாலும் வரிக் கொடுமையாலும் பொதுமக்கள் நிலைமை வரவரச் சீர்கெட்டு வந்தது.*

[வா → வர் → வரு → வர + வர.]

வரவரமுனி *varavaramuṉi,* பெ.(n.) மணவாள மாமுனி; a *vaisṇava-ācārya.*

வரவழை-த்தல் *vara-v-aḻai-,* 4 செ. குன்றாவி. (v.t.) வருவித்தல், அழைத்தல்; to cause, to come, invite. *"மாதை யீங்கு வரவழைத்தே" (வெங்கைக்கோ. 336).*

[வா → வர் → வர + அழை-.]

வரவழைப்புப்பாட்டு *vara-v-aḻaippu-p-pāṭṭu,* பெ.(n.) வேலூர் மாவட்டத்திலுள்ள சோளிங்கர் என்னுமிடத்தில் ஒருவர் மீது தெய்வத்தை வரவழைப்பதற்காக உருமியடிப் போர் பாடும் பாட்டு; a song used by drummer to invoke god is once person normally practical is sholingar a town is Vellor district.

[வரவழைப்பு + பாட்டு.]

வரவாயு *vara-vāyu,* பெ.(n.) வரள்வாயு பார்க்க; see *varaḷ-vāyu.*

[வரள் + வாயு → வரவாயு]

Skt. வாயு

வரவிடு-தல் *vara-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) அனுப்புதல்; to send. *"இவையெல்லாம் வரவிடுதற்கு முன்னேயும்" (திவ். பெரியாழ். 1, 3, 2, வ்யா.)*

[வா → வர் → வர + விடு-.]

வரவிருத்தன் *vara-viruttaṉ,* பெ.(n.) உயிர்களுக்கு மேலான பரவாழ்வளிக்கும் சிவபிரான் (யாழ்.அக.); *Śivaṉ.*

வரவினம் *varavinam,* பெ.(n.) ஒருவருக்குப் பல்வேறு இடங்களிலிருந்து வரும் பண வரவு; heads of receipts. *இந்த வாரம் வரவினங்கள் அதிகமாக இருக்கும் (இ.வ.). வரவினம் அதிகமானால் உறவினம் ஓடிவரும் (உ.வ.).*

[வரவு + இனம்.]

வரவு[1] *varavu,* பெ.(n.) 1. ஒளி நீர்; semen. 2. வரகு; koda millet-paspalum scrobiculatum (சா.அக.).

வரவு[2] *varavu,* பெ.(n.) 1. வருகை; coming, advent. *"செலவினும் வரவினும்" (தொல். சொல். 28). "யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே" (குறுந்.75:5). நும்மொடு வரவு தான் அயரவும்" (நற்.12:9). "படிகாரிரெம் வரவு சொல்லுதிர்" (கம்பரா.பள்ளிபடை.1).* 2. வருவாய்; income, receipts, revenue. *"வரவு காணாத செலவு" (குமரே. சத. 29). வரவுக்குத் தகுந்த செலவு; மாப்பிள்ளைக்குத் தகுந்த மஞ்சம் (பழ.). வரவுக்கு மீறிய செலவு, வறுமைக்கு வழி வகுக்கும் (இ.வ.).* 3. வரலாறு; history. *"இதன்வர விதுவென் றிருந்தெய்வ முரைப்ப" (மணிமே. 6, 205). 'வரவெமர் மறந்தன ரதுநீ" (புறநா. 149 : 4).* 4. தோற்றம்; origin. *"போக்கொடு வரவு மின்றி" (காசிக. மணிக. 2).* 5. பாதை, வழி; path, way, track. *"குன்றத்தாற் கூடல் வரவு" (பரிபா. 8, 28).* 6. வணங்குகை; worship. *"புரையின்று மாற்றாளை மாற்றாள் வரவு" (பரிபா. 20.73).*

க. பரவு

[வா→ வர்→ வரு → வரவு]

வரவு[3] *varavu,* பெ.(n.) 'வா' என்னும் வினைப்பொருண்மை குறித்த பெயர்ச்சொல்; a verbal noun of the verb vā.

[வா→ வர்→ வரு → வரவு]

வரவுசெலவு *varavu-šelavu,* பெ.(n.) 1. வருவாயும் செலவும்; income and expenditure. 2. பேரேட்டிற் செய்யும் பதிவு; ledger entry. *ஒவ்வொரு தொழிற்சாலையும் வரவுசெலவை நாள்தோறும் பேரேட்டிற் பதிவு செய்ய வேண்டும் (இ.வ.).*

[வரவு + செலவு.]

வரவுசெலவுஅறிக்கை *varavu-šelavu-arikkai,* பெ.(n.) வரவு செலவுத் திட்டத்தைக் கொண்டுள்ள அறிக்கை; budget report. *பாராளுமன்றத்தில் நிதியமைச்சர் இவ் வாண்டிற்கான வரவு செலவு அறிக்கையைப் படித்தார் (இக்.வ.).*

[வரவு + செலவு + அறிக்கை]

வரவுசெலவுக்கணக்கு *varavu-šelavu-k-kaṇakku,* பெ.(n.) குடும்பச் செலவு குறித்த கணக்கு; family budget. *வீட்டின் வரவு செலவுக் கணக்கை ஒழுங்காக எழுதி வைத்தால், குடும்பத்தை முன்னேற்ற முடியும் (இ.வ.).*

[வரவு + செலவு + கணக்கு]

வரவுசெலவுத்திட்டம் *varavu-šelavu-t-tiṭṭam,* பெ.(n.) நாட்டுக்கு அல்லது நிறுவனத்துக்கு எதிர்வரும் ஆண்டிற் கிடைக்கும் வருமானம், வருமானத்திற்கான வழிகள், செலவுகள், செலவுக்கான ஒதுக்கீடு முதலியவை குறிக்கப்பட்ட திட்டம்; budget. *திறமையான வரவுசெலவுத் திட்டமே, நாட்டின் வளர்ச்சிக்கு வழிகோலும் (இக்.வ.).*

[வரவு + செலவு + திட்டம்]

வரவுதாழ்-த்தல் *varavu-tāḻ-,* 4 செ.கு.வி. (v.i.) காலந்தாழ்த்தி வருதல், நேரங்கடந்து வருதல்; to arrive belatedly, to be delayed. *"உணவு வரவு தாழ்த்தது" (கம்பரா. பிரமாத்திர.88).*

[வரவு + தாழ்-.]

வரவுமுறை *varavu-murai,* பெ.(n.) வருவாய் (இ.வ); source of income.

மறுவ. ஆகாறு.

[வரவு + முறை]

வரவுவை-த்தல் *varavu-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) செலுத்திய தொகை குறித்து எழுதி வைத்தல்; to credit in account, to enter the receipt of money, as on a pro-note or document. *நான் கொடுத்த பணத்தை வரவுவைத்துக் கொண்டு, மீதம் எவ்வளவு பணம் தரவேண்டுமென்று சொல்லுங்கள் (உ.வ.).*

[வரவு + வை-.]

வரவெக்கை *vara-vekkai,* பெ.(n.) அடைப்பான் எனும் கால்நடை நோய்; anthrax, a cattle-disease.

[வரள் + வெக்கை]

வரவெதிர்-தல் *vara-v-edir-,* 2 செ. குன்றாவி.(v.t.) 1. வரவு எதிர்நோக்கி யிருத்தல்; to wait for, to wait the arrival of. 2. எதிர்கொண்டு அழைத்தல்; to welcome in person.

[வரவு + எதிர்-.]

வரவெதிர்ந்திருத்தல் *vara-v-edirnd-iruttal,* பெ.(n.) தலைவி தன் னிருப்பிடத்துத் தலைவன் வருகையை எதிர்பார்த் திருத்தலைக் கூறும் புறத்துறை (சங்.அக.); a theme in which the heroine is described as awaiting the arrival of the hero at her abode.

[வரவெதிர் + இரு-.]

வரவேல்¹-தல் [வரவேற்றல்] *varavēl-,* 9 செ.குன்றாவி.(v.t.) எதிர்கொண்டழைத்தல்; to welcome in person. *புகழ்மிக்க தலைவர்களை எதிர் கொண்டழைப்பதும் விருந்தினரை வரவேற்பதும், மதிப்புரவுக்குரியது.*

[வரவு → வரவேல்]

வரவேல்²-தல் [வரவேற்றல்] *varavēl-,* 9 செ.குன்றாவி.(v.t.) 1. இன்முகத்தானு மின்சொலானும் வருக வருக வென்றழைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துதல்; to welcome the invitees. *பள்ளி ஆண்டு விழாவிற்கு வருகைபுரிந்த அனைவரையும், தலைமை யாசிரியர் மகிழ்ச்சியுடன் வரவேற்றார் (உ.வ.).* 2. திட்டம், ஒப்பந்தம் முதலியவற்றை ஆதரவு தந்து ஏற்றல்; to accept. *அரசின் நலத் திட்டத்தை எங்கள் கன்னை (கட்சி) முழுமனதுடன் வரவேற்கிறது (இக்.வ.). அமைதி உடன்பாட்டை உலக நாடுகள் அனைத்தும் வரவேற்கும் என்று நம்புகிறோம் (உ.வ.).* 3. ஒப்பந்தப்புள்ளி முதலியவற்றை அனுப்புமாறு வேண்டுதல்; to be invited, in tender notice etc. *எங்கள் நிறுவனத்திற்குத் தேவைப்படும் பொருள்கள் வழங்க ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன (இ.வ., உ.வ.).*

[வா→வர்→வரு→வரவு + ஏல்.]

வரவேற்பவை *varavērpavai,* பெ.(n.) வரவேற்புக்கழகம் (தற்கா.) பார்க்க; see *varavērpu-k-kalagam.*

[வரவேற்பு + அவை. அமை→அவை.]

வரவேற்பறை *varavērparai,* பெ.(n.) விருந்தினர் அமர்வதற்கான அறை; reception room. *அந்த வீட்டின் வரவேற்பறை மிகவும் எளிமையாக இருந்தது. அமைச்சரின் வரவேற்பறையில் நீண்ட நேரம் உட்கார்ந்திருந்தேன்.*

வரவேற்பு *varavēṟpu,* பெ.(n.) எதிர் கொண்டழைக்கை (தற்கா.); reception, welcome, to receive in person.

[வரவு + ஏல்→ ஏற்பு]

வரவேற்புக்கழகம் *varavēṟpu-k-kaḻagam,* பெ.(n.) பெரியவரை உசாவி அழைப்பதற்காக அமைக்கப்பட்ட அவை (தற்கா.); reception committee for V.I.Ps. or great personality.

[வரவேற்பு + கல் +அகம் – கல்லகம் →கழகம்]

வரவேற்புச்சபை *varavēṟpu-c-cabai,* பெ.(n.) வரவேற்பவை பார்க்க; see *varavēṟpavai.*

[வரவேற்பு + சபை]

த. அவை > **Skt.** sabha

வரவேற்புப்பத்திரம் *varavēṟpu-p-pattiram,* பெ.(n.) வரவேற்புமடல் பார்க்க; see *varavēṟpu-maḍal.*

[வரவேற்பு + பத்திரம்]

வரவேற்புமடல்[1] *varavēṟpu-maḍal,* பெ.(n.) பெரியோரை இனிது மொழிந்து உசாவியெதிர்கொண்டழைக்கும் அழைப்பிதழ்; welcome address in written form. *விழாவிற்கு வருகைபுரிந்த அமைச்சருக்குக் கட்சியினர் வரவேற்புமடல் படித்து வழங்கினர் (இ.வ.)*

[வரவேற்பு + மடல்]

வரவேற்புமடல்[2] *varavēṟpu-maḍal,* பெ.(n.) விழாவிற்கு வருகை செய்துள்ள விருந்தினர்தம் சிறப்பியல்பைப் புகழ்ந்து கூறும் இன்தீங்கிளவியம் பொதிந்த தாள்; scripted welcome address to be read out. *விழாவிற்கு வந்திருந்த தொழிலதிபருக்குத் தொழிலாளர்களால் வரவேற்பு மடல் அளிக்கப்பட்டது (உ.வ.).*

[வரவேற்பு + மடல்]

வரவேற்புரை *varavēṟpurai,* பெ.(n.) விழாவிற்கு வந்துள்ளோரை வரவேற்று நிகழ்த்தும் உரை; welcome address.

[வரவேற்பு + உரை]

வரவை *varavai,* பெ.(n.) 1. வயற்றாக்கு (வின்.); plot of paddy-field, compartment in a paddy-field bounded by ridges. 2. வரி; tax. *"இவ்வூரிற் பலவரவை யோடுங் கூட்டவும்" (தெ.இ.கல். தொ. 3, 211).*

[வரவு → வரவை]

வரவோலை *varavōlai,* பெ.(n.) அழைப்புக் கடிதம்; letter of invitation. *"வரவேண்டு மென்று வரவோலை அனுப்புவித்தார்".*

[வரவு + ஓலை.]

வரள்(ளு)–தல் *varaḷ(ḷu)-,*12 செ.கு.வி. (v.i.) 1. வற்றுதல் (பிங்.); to dry up, to evaporate. 2. உடம்பு மெலிதல் (வின்.); to become lean or emaciated.

[வறள் → வரள்–]

வரள்வாயு *varaḷ-vāyu,* பெ.(n.) குடலைச் சுருட்டிக் கொள்ளும் நோய்வகை (இ.வ.); a disease of the colon.

[வரள் + வாயு]

வரளம் *varaḷam,* பெ.(n.) பிரமி; a prostate plant - *Grabiola moniera* (சா.அக.).

வரளாரை *varaḷārai,* பெ.(n.) ஆரைவகை (யாழ்.அக.); a species of aquatic cryptogamous plant (சா.அக.).

[வரள் + ஆரை]

வரளி *varaḷi,* பெ.(n.) விறட்டி; dung cakes (சா.அக.).

வரற்கியம்[1] *vararkiyam,* பெ.(n.) சிற்றரத்தை (சங்.அக.); lesser galangal.

வரற்கியம்[2] *vararkiyam,* பெ.(n.) கோரைக் கிழங்கு; fragrant root tuber of a grass-*Cyperus pertenuis* (சா.அக.).

வரற்சுண்டி *varar-cuṇḍi,* பெ.(n.) நெட்டிக் கொடி; a kind of medicinal creeper.

[வரள் + சுண்டி]

வரற்சூரி *varar-cūri,* பெ.(n.) நத்தைச்சூரி; a kind of herbal plant.

[வரள் + சூரி]

வரற்பூலா *varar-pūlā,* பெ.(n.) நீர்ப்பூலா; black honey shrub-*Phyllanthus multiflora.*

வரற்பூலிகா *varar-pūligā,* பெ.(n.) முள்ளி; a kind of plant (சா.அக.).

வரற்றியம் *vararriyam,* பெ.(n.) கோரைக் கிழங்கு; fragrant root tuber of a grass-*Cyperus pertenuis* (சா.அக.).

வரன் *varaṉ,* பெ.(n.) 1. சிறந்தவன்; superior, great person. *"தமிழ் முனிவரன்" (தக்கயாகப். 40).* 2. கடவுள்; God. 3. நான்முகன்; Brahman. 4. சீவன்முத்தருள் நான்முகன் எனப்படும் வகையினன்; person belonging to the birama-varar class of *jīvaṉ-muttar. "தேகசஞ்சார நிமித்தந்தானா வுன்னுவோன் வரன்" (கைவல்ய. தத்துவ. 99).* 5. தமையன் (நிகண்டு, 218); elder brother. 6. மணமகன்; bridegroom. *"தன் மகளுக்கொத்த வரனைத் தேடுவான்" (உத்தரா. இரவாணன் பிற.2).* 7. கணவன் (சூடா.); husband.

[பரம்→வரம்→வரன். ம→ன = போலி.]

வரன் = மேலானவன், சிறந்தவன், மேலான வீட்டுலகம். பரநிலையை ஆதனுக்கு வழங்கும் அருள் வடிவான இறைவன்.

வரன்முறை *varaṉ-muṟai,* பெ.(n.) 1. மரபின் வந்த முறை; tradition. *"பாடினை யருமறை வரன் முறையால்" (தேவா. 80, 3).* 2. வரலாறு; history. 3. மூலம்; origin, source. *"அதன் வரன்முறை சொன்னான்" (பிரமோத். 18,1).* 4. ஊழ் (யாழ்.அக.); fate, destiny. 5. பெரியோரிடங் காட்டும் மதிப்புறவு அல்லது பணிவு; courtesy, respect or regard to superiors. *"வரன்முறை செய்திட" (கம்பரா. திருவவ. 64).*

[வா → வரன் + முறை – வரன்முறை]

வரன்று–தல் *varaṉṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வரடுதல்; to scrape, to gather up, to collect. *"மணிவரன்றி வீழுமருவி" (நாலடி, 369).*

M. varanṭuka.

வராக்கடன் *varā-k-kaḍaṉ,* பெ.(n.) செல வெழுத வேண்டிய கடன் (கொ.வ.); bad debt.

[வா + ஆ + கடன்]

வராக்கு *varākku,* பெ.(n.) கொம்மட்டி (சங்.அக.); a small water-melon (சா.அக.).

வராகக்கிரந்தி *varāga-k-kirandi,* பெ.(n.) தொட்டால் வாடி; a sensitive plant.

[வராகம் + கிரந்தி]

வராககர்ணி¹ *varāga-karṇi,* பெ.(n.) அகவ கந்தி; a plant, horse root-withania somneifera (சா.அக.).

வராககர்ணி² *varāga-garṇi,* பெ.(n.) அமுக்கிராச் செடி; Indian winter cherry.

வராககற்பம் *varāga-kaṟpam,* பெ.(n.) ஓர் வகை கற்பம்; a kind of medicinal preparation taken in for longevity (சா.அக.).

வராகப்பூடு *varāga-p-pūḍu,* பெ.(n.) மூக்குத்திப் பூடு; Indian lantina.

[வராகம் + பூடு]

வராகபணம் *varāga-paṇam,* பெ.(n.) நாணய வகை; a coin.

[வராகம் + பணம்]

வராகபுடம் *varāga-puḍam,* பெ.(n.) பன்றியின் உயரமளவுபோடும் புடம், 1 முழ சதுரமும், 1 முழ ஆழமுமான பள்ளத்தில் காட்டு முட்டையை மேலும், கீழுமாக நிரப்பி மருந்திட்டுப் போடும் புடம்; process of calcination by burning the medicine, in a heap of cow dung cakes as high as a big (about 50 dung cakes) when plastered crucible is roasted in a pit the dimension of which are one cubit in every side (சா.அக.).

[வராகம் + புடம்]

வராகம் *varāgam,* பெ.(n.) நிலப்பனை; ground palm-curculigo orchioides (சா.அக.).

வராகமிகிரர் *varāgamigirar,* பெ.(n.) ஆறாம் நூற்றாண்டிலிருந்தவரும் கணித நூலில் வல்லவரும் வானசாத்திர நூல்கள் பல இயற்றியவருமான ஆசிரியர்; an ancient astronomer and mathematician of many treatises, 6th cent.

வராகன் *varāgan,* பெ.(n.) 1. பன்றி வடிவங் கொண்ட திருமால் (பிங்.); Tirumāl in His boar-incarnation. 2. மூன்றரை உருபா மதிப்புள்ளதும் பன்றிமுத்திரை கொண்டதுமான ஒருவகைப் பொன்நாணயம் (அரு.நி.); *pagōḍa-* a gold coin = 3 1/2 rupees, as bearing the image of a boar. 3. மூக்குத்திக் கொடி (சங்.அக.); pointed-leaved hogweed.

[வராகம் → வராகன்]

வராகன்பூடு *varāgaṉ-pūḍu,* பெ.(n.) மூக்குத்திக் கொடி (மலை.); pointed-leaved hogweed.

[வராகன்¹ + பூடு]

வராகன்பூண்டு¹ *varāgaṉ-pūṇḍu,* பெ.(n.) கூத்தன்குதம்பை; pointed - leaved hog weed.

[வராகன் + பூண்டு]

ஒருகா. மூக்கொற்றி

வராகன்பூண்டு² *varāgaṉ-pūṇḍu,* பெ.(n.) வராகன்பூடு (மலை.) பார்க்க; see *varāgaṉ-pūḍu.*

[வராகன்¹ + பூண்டு]

வராகனாட்டம் *varāgaṉ-āṭṭam,* பெ.(n.) சீட்டாட்டத்தில் ஒரு வகை; a kind of card-playing.

[வராகன் + ஆட்டம்]

வராகி *varāgi,* பெ.(n.) 1. வாராகி (சூடா.); *vārāgi,* a divine energy. 2. சிறு குறட்டை (மலை.); a slight snoring. 3. சிற்றரத்தை (மலை.); lesser galangal. 4. நிலப்பனை (தைலவ.); moosly or weevil root. 5. கோரை (நாமதீப. 348); sedge. 6. சிறுகுறிஞ்சா (சங்.அக.); a climber. 7. வராகபுடம், 20 அல்லது 50 எருவிட்டுப் போடப்படும் புடம் (மூ.அ.); calcining metals with 20 or 50 cakes of cowdung. *"வராகிமேலிட்டுத் தூமஞ் செய்தனன்" (கந்தபு. மார்க். 135).*

[வராகம் → வராகி]

வராகிக்கிழங்கு *varāgi-k-kiḻaṅgu,* பெ. (n.) பன்றி மோத்தைக் கிழங்கு; root of trapa bispinosa (சா.அக.).

வராகிசாரணை *varāgi-šāraṇai,* பெ.(n.) சத்திசாரணை; a prostate plant, *Trianthema decandra* (சா.அக.).

வராகிப்புகை *varāgi-p-pugai,* பெ.(n.) மருந்துப்புகை வகை (யாழ்.அக.); a medicinal fumigation.

[வராகி + புகை]

வராகிமூலம் *varāgi-mūlam,* பெ.(n.) நிலப் பனங்கிழங்கு; ground palm, curculigo orchioides (சா.அக.).

வராகியரத்தை *varāgiyarattai,* பெ.(n.) சிற்றரத்தை; lesser galangal-*Alpinia galanga (minor)* (சா.அக.).

வராகிவேய் *varāgi-vēy,* பெ.(n.) வராகி வேல் (சங்.அக.) பார்க்க; see *varāgi-vēl.*

[வராகம் + வேய்]

வராகிவேல் *varāgi-vēl,* பெ.(n.) முட் பன்றியின் முள் (யாழ்.அக.); quill of porcupine (சா.அக.).

[வராகம் + வே;ல]

வராகு *varāgu,* பெ.(n.) வராகன் பார்க்க; see *varāgaṉ* (சா.அக.).

வராங்கம்[1] *varāṅgam,* பெ.(n.) வானவரின் உடல்; the body of a celestial being.

வராங்கம்[2] *varāṅgam,* பெ.(n.) இலவங்கப் பட்டை (மூ.அ.); cinnamon bark.

வராங்கம்[3] *varāṇgam,* பெ.(n.) 1. தலை (இலக்.அக.); head. 2. அழகியவுருவம்; elegant form. 3. உடல் (யாழ்.அக.); body. 4. யானை (யாழ்.அக.); elephant. 5. இலவங்கம் (நாமதீப.283); clove.

வராங்கனை *varāṅganai,* பெ.(n.) 1. மிகச் சிறந்தவள் (சங்.அக.); excellent woman. 2. கூந்தற் பனை; talipot palm.

வராங்கி[1] *varāṅgi,* பெ.(n.) 1. அழகுள்ளவள்; beautiful woman. 2. மஞ்சள் (மூ.அ.); turmeric.

வராங்கி[2] *varāṅgi,* பெ.(n.) பெருங்குமிழ்; flowering tree- *Gmellina arbonea* (சா.அக.).

வராசனம் *varāšaṉam,* பெ.(n.) 1. முட் செவ்வந்தி வகை (சங்.அக.); china rose. 2. நீர் முதலியன வைக்கும் பாத்திரம் (யாழ்.அக.); vessel or container for keeping water etc.

வராசனன் *varāšaṉaṉ,* பெ.(n.) 1. வாயிற் காப்போன்; door-keeper, watchman. 2. கள்ளக்காதலன்; paramour.

வராசான் *varāšāṉ,* பெ.(n.) கருப்பூரவகை (சிலப்.14, 109, உரை); a kind of camphor.

வராட்டி *varāṭṭi,* பெ.(n.) வறட்டி (சங்.அக.); cake of dried cowdung.

[வரள் → வராட்டி]

வராடகம் *varāḍagam,* பெ.(n.) 1. தாமரையின் காய் (சூடா.); seed-pod of the lotus. 2. பலகறை (சூடா.); cowry. 3. கயிறு (யாழ். அக.); rope.

வராடபேதி *varāḍa-bēdi,* பெ.(n.) எருவாய்க் கழிவு; discharge of foeces from the anus.

வராடம் *varāḍam,* பெ.(n.) வராடி[1] (வின்.) பார்க்க; see *varāḍi.*

வராடி[1] *varāḍi,* பெ.(n.) பலகறை (சூடா.); cowry.

வராடி[2] *varāḍi,* பெ.(n.) பாலையாழ்த் திறத்தொன்று (பிங்.); a melody-type of the *pālai* tracts.

வராடி[3] *varāḍi,* பெ.(n.) முரட்டுநூற் சீலை (வின்.); saree of coarse yarn.

[வராசி → வராடி]

வராடிகம் *varāḍigam,* பெ.(n.) வெண் மிளகாய்; white chilly (சா.அக.).

வராடிகை *varāḍigai,* பெ.(n.) பலகறை (சூடா.); cowry. *"வராடிகைத் திரள் பரப்பி" (பிரபோத.15, 61).*

[வராடிகம் → வராடிகை]

வராண்டம் *varāṇḍam,* பெ.(n.) தாமரையின் காய் (பிங்.); seed-pod of the lotus.

வராணசி *varāṇaši,* பெ.(n.) காசி (யாழ். அக.); Benares.

வராணி *varāṇi,* பெ.(n.) பாலை; a tree- *Mimusops hexandrus* (சா.அக.).

வராத்தம் *varāttam,* பெ.(n.) 1. கட்டளை (யாழ்.அக.); order, commandment. 2. வரிவாங்குகை (யாழ்.அக.); levying taxes. 3. கொடுக்கல் வாங்கல்; money dealings.

வராமுள்ளி *varā-muḷḷi,* பெ.(n.) மஞ்சள் நிற பூவையுடைய ஓர் பூடு; a throny plant with yellow flowers (சா.அக.).

வராரோகன் *varārōgaṉ,* பெ.(n.) யானைப் பாகன் (யாழ்.அக.); elephant-driver.

[வராரோகம் → வராரோகன்]

வரால் *varāl,* பெ.(n.) 1. சாம்பற் பச்சை நிறமும் நான்கடிவரை வளர்ச்சியுமுடைய மீன்வகை; murrel, a fish, greyish green, attaining 4 feet in length. *"நுண்ணாரற் பருவரால்" (புறநா.18:9). "கடுங்கண் வராஅற் பெருந்தடி மிளிர்வையொடு" (நற்.60-4).* 2. வெளிறின கருநிறமும் மூன்றடி வளர்ச்சியுமுடைய மீன்வகை; black-murrel, a fish, dark greyish or blackish, attaining 3 ft. in length. *"மோட்டிரு வராஅற்".* 3. நன்னீர் மீன் வகை (யாழ்.அக.); a fresh water fish.

த. வரால் > Skt. murala E. murrel.

Ma. varāl, virāl, vrāl; Ḻoḍ. baremi-nī.

[வரி→வரால்.]

ஏரி, குளங்களிற் காணப்படும் மீன் வகைகளுள் ஒன்று. சென்னைப் பல்கலைக் கழக அகரமுதலி, வரால் என்னும் சொற்கு, கெண்டையென்று பொருள் குறித்துள்ளதை பாவாணர் தவறென்று சென்னைப் பல்கலைக் கழக அகரமுதலியின் சீர்கேடு என்னும் நூலுள் (பக்.19) குறித்துள்ளது காண்க. கெண்டை வேறு, வரால் வேறு.

வரால் நன்னீர்ப் பகுதியிற் காணப்படும் மீன். வரி = நீளம். வரால் = குறவையினும் நீண்டிருப்பது. முர் (சூழ், பின்னு, பிணை) என்பது மூலாமாயிருக்கலாமென்று கருதுவது சரியன்று (மா.வி.அ.).



வரால்வலை *varāl-valai*, பெ.(n.) வரால் மீனை வலைத்துப் பிடிக்க உதவும் வலை (நாஞ்.); a fresh water fishing net to catch *varāl.*

[வரால் + வலை]

வராலகம்¹ *varālagam*, பெ.(n.) பாம்பு; snake (சா.அக.).

வராலகம்² *varālagam*, பெ.(n.) இலவங்கம் (தைலவ.); clove.

வராலடிப்பான் *varāl-aḍippaṉ*, பெ.(n.) ஒரு வகைப் பறவை; ospery.

[வரால் + அடிப்பான்]



வராலம் *varālam*, பெ.(n.) கிராம்பு (நாமதீப. 319); clove.

[வரால் → வராலம்]

வராலி *varāli*, பெ.(n.) பிரமி யெனும் பூடு (மலை.); pirami, a kind of prostrate herb.

[விராலி → வராலி]

வராலிகம் *varāligam*, பெ.(n.) ஈரல்; liver (சா.அக.).

[வராலி → வராலிகம்]

வராலுகம் *varālugam*, பெ.(n.) சங்கங்குப்பி; smooth volkameria - *Cledendron in creme* (சா.அக.).

[வராலிகம் → வராலுகம்]

வராவி *varāvi*, பெ.(n.) வராலி பார்க்க; see *varāli* (சா.அக.).

வராளம் *varāḷam*, பெ.(n.) பாம்பு (யாழ்.அக.); snake, serpent.

வராளி¹ *varāḷi*, பெ.(n.) 1. நிலவன் (சந்திரன்) (யாழ்.அக.); moon. 2. பண் வகையுளொன்று (இசை.); a specific melody-type. 3. யாழ் வகை (பரத. ஒழிபி.15); a kind of lute.

[வராலி → வராளி]

வராளி² varāḷi,பெ.(n.) மண்ணீரல் (சங்.அக.); spleen.

வராளிகை varāḷigai,பெ.(n.) கொற்றவை (யாழ்.அக.); Durgai.

[வராளம் → வராளி → வராளிகை]

வராற்பகடு varāṟ-pagaḍu,பெ.(n.) ஆண் வரால்; male murrel. *"அரில் வலை கீண்டு நிமிர்ந்தெழுவன வராற்பகடு" (திருக்காளத். பு. 2, 16).*

[வரால் + பகடு]

வராற்போத்து varāṟ-pōttu, பெ.(n.) இளவரால்; young murrel. *"பகுவாய் வராஅற்......... போத்து" (அகநா.36).*

[வரால் + போத்து]

வராணி¹ varāṇi,பெ.(n.) 1. பாலை; wedge-leaved ape flower. 2. வராணி பார்க்க; see *varāṇi* (சா.அக.).

வராணி² varāṇi,பெ.(n.) செடிவகை யுளொன்று (மலை.); a kind of plant.

வராணிகம் varāṇigam,பெ.(n.) பனை மரம்; palmyra tree (சா.அக.).

வரி¹ vari,பெ.(n.) 1. கோடு; line, as on shells, streaks, as in timber, stripe. *"நுண்ணிய வரியொடு திரண்டு..... கண்" (சீவக. 1702). "கொடுவரி யிரும்புலி தயங்க நெடுவரை" (அகநா.27:1). வரிவிழுந்த புலியைப் பார்த்து நரியும் கொள்ளிக் கட்டையை எடுத்துச் சுட்டுக் கொண்டதாம் (பழ.).* 2. தொய்யில் முதலிய வரைவு; ornamental marks on the breast. *"மணிவரி தைஇயும்" (கலித்.76).* 3. கை வரைவு (பிங்.); lines at the joint of fingers or on the palm of hand. 4. ஒழுங்கு நிரை; course, as of bricks, line, as of writing; series, as of letters, orderly line, as of ducks in flight; row. *"குருகி னெடு வரி பொறப்ப" (பதிற்றுப்.83, 2).* 5. எழுத்து (நாமதீப.673); letter. 6. புள்ளி; dot. *"வரிநுதற் பொருதொழி நாகம்" (நெடுநல். 117). "வெண்ணெல் அருந்திய வரிநுதல் யானை" (நற். 7:7).* 7. தேமல்; spreading spots on the skin. *"பொன்னவி ரேய்க்கு மவ்வரி" (கலித்.22).* 8. வண்டு (திவா.); beetle. 9. கடல் (பிங்.); sea. 10. கட்டு; tie, bandage. *"வரிச்சிலையாற் றந்த வளம்" (பு.வெ.1,16).* 11. பல தெருக்கூடுமிடம் (பிங்.); junction of streets. 12. வழி (உரி.நி.); way, path. 13. கடைக்கழக நூல்களுள் ஒன்று (இறை.1, பக். 5); a poem of the last šaṅgam. 14. உயர்ச்சி (பிங்.); loftiness, laudability, praise. 15. நீளம் (சூடா.); length.

Ma. vara, varaccal, varekka, varayuka, variyuka; **Ka.** bare, bari, barepa, barapa, braha, barā; **Kod.** bare; **Ko.** varv; **To.** parē; **Kui.** vrīsa; **Pa.** vare; **Tu.** baripuri, bare, bareta.

[வள் → வர் → வரி]

வரி² vari,பெ.(n.) 1. இசை (நாமதீப. 678); music. 2. இசைப்பாட்டு, வரிப்பாட்டு; tune, melody. *"வரிநவில் கொள்கை" (சிலப்.13:38).* 3. வரிக்கூத்து (சிலப்.3:14); a kind of masquerade dance.

[வள் → வர் → வரி]

வரி = வளைந்த கோடு, எழுத்து (தேவ.13, பக்.38).

வரி பற்றியும், வரிப்பாட்டுக் குறித்தும் சிலப்பதிகார அரும்பதவுரைகாரர் கூறுவது வருமாறு:–

"வரியாவது, முகமுடைவரி, முகமில்வரி, படைப்புவரியென மூன்று வகைப்படும். வரிப் பாட்டுக்கு முகமாக நிற்றலின் முகமெனப்படும். முகமில்வரியாவது முகமொழிந்து ஏனைய உறுப்புக்களான் வருவது. படைப்பு வரியாவது, எல்லாவுறுப்பும் ஒன்றானும், பலவானும், வெள்ளையானும், ஆசிரியத்தானும், கொச்சகம் பெற்றும், பெறாதும், வேறு வேறாகி வருவது" (சிலம்பு.7:19, அரும்.).

அடியார்க்கு நல்லார் கூறுவது :–

அவரவர் பிறந்த நிலத்தன்மையும் பிறப்பிற்கேற்ற தொழிற்றன்மையும் தோன்ற நடித்தல்". அவ்வரி எட்டு வகைப்படும். 1. கண்கூடு வரி; 2. காண்வரி; 3. உள்வரி; 4. புறவரி; 5. கிளர்வரி; 6. தேர்ச்சிவரி; 7. காட்சிவரி; 8. எழுத்துக்கோள் வரி (அடி.சிலம்பு.3:13).

வரி[3]–தல் *vari-,* 2 செ.குன்றாவி.(v.t.) 1. எழுதுதல் (பிங்.); to write, pen. 2. சித்திர மெழுதுதல்; to paint, to draw. *"வல்லோன் றைஇய வரிவனப்புற்ற வல்லிப்பாவை"* (புறநா. *33).* 3. பூசுதல்; to smear, daub. 4. மூடுதல்; to cover, close. *"புண்ணை மறைய வரிந்து" (திவ். திருவாய். 5, 1, 5).* 5. கட்டுதல்; to bind, tie, fasten. *"வரிந்த கச்சையன்"* (சூளா. *சீய. 11).*

க., தெ. வ்ராயு (vrāyu) vrāyincu, rāyu, rāsu; Ma. variyuka.

[வள்→வர்→வரி=எழுதுதல், பூசுதல், ஓவிய மெழுதுதல் (வ.வ.2, பக்.80)]

வரிதல், எழுதுதல், கட்டுதல் : வரி என்பது கோடு. வரிதல் என்பது எழுதுதல் பொருளது. "என்ன வரிகிறாய்?" 'வரிந்து தள்ளுகிறாயே எதை?' என்பவற்றில் வரிதல் எழுதுதல் பொருளாதல் அறிக. வரிந்து கட்டு, வரி என்றால் இறுக்கிக் கட்டுதல் என்னும் பொருளதே. 'கட்டாயம் என்பது கண்டிப்பாகச் செலுத்த வேண்டிய வரி என்பதே. அதில் இருந்தே, தீரா நிலையில் நிறைவேற்றியாக வேண்டிய செயல், 'கட்டாயம்' எனப்பட்டதாம். அரசிறை எனப்படும், வரியைத் தவிர்த்தலாகாது என்பதை விளக்குவது கட்டாயச் சொல்லாம் (வ.சொ.அகராதி).

வரி[4]–த்தல் *vari-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. எழுதுதல்; to write, pen. *"வள்ளுகிர் வரித்த சாந்தின் வனமுலை" (சீவக. 2532).* 2. சித்திரமெழுதல்; to draw, to paint. 3. பூசுதல் (சூடா.); to smear, daub. 4. கட்டுதல்; to bind, tie, fasten; to fix, as the reepers of a tiled roof. *"வரிக்குங் காட்சியிலா வறிவே" (ஞானவா. மாவலி.48).* 5. மொய்த்தல் (யாழ்.அக.); to swarm round. 6. கோலஞ்செய்தல்; to adorn, decorate, decks. *"புன்னை யணிமலர் துறைதொறும் வரிக்கும்" (ஐங்குறு. 117).*

[வள்→வர்→வரி–.]

வரி = எழுதுதல், சித்திரமெழுதுதல், பூசுதல், கோலஞ் செய்தல் முதலான பொருண்மைகளை யுள்ளடக்கிய 'வள்' என்னும், வளைவுக்கருத்து மூலவேரினின்று முகிழ்த்த சொல்லாகும்.

வரி[5]–த்தல் *vari-,* 4 செ.கு.வி.(v.i.) ஓடுதல்; to run; to flow. *"தலைவா யோவிறந்து வரிக்கும்" (மலைபடு. 475).*

[வர்→வரி–.]

வரி⁶–த்தல் *vari-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. தெரிவு செய்தல், தேர்ந்து கொள்ளுதல்; to choose, select. 2. அமர்த்துதல், பங்கீடு செய்தல்; to appoint, assign, allocate. *"கடவுள் வேதியர்களை வரித்து" (திருவிளை. இந்திரன்முடி. 26).* 3. அழைத்தல்; to invite. *"உலோபா முத்திரை தன்னொடும் வரித்து" (திருவிளை. அருச். 2).*

[வர்→வரு→வரி–.]

வரி⁷ *vari,*பெ.(n.) குடிமக்கள் செலுத்தும் திறை (பிங்.), அங்கம், திறை; impost, tax, toll, duty, contribution.

மறுவ. ஆயம், இறை, கடன், கடமை, கறை, காணிக்கை, தீர்வை, பகுதி, பாட்டம், பூட்சி, பேறு, மகமை, மகன்மை.

Te., Ma., vari; **Ko.** vary.

அரசு மக்களின் பொதுநலன் குறித்துச் செய்யும் செலவை ஈடுகட்டுதற் பொருட்டுப் பெறும் கட்டணம்.

வரி → வரிதல்.

வரி = கட்டு; வரிதல் = கட்டுதல்; வரித்தல் = இழுத்துக் கட்டுதல். வரி→வரிச்சு = கோடுபோல் நீண்ட கட்டு வரிச்சல். வரிச்சல் = கட்டல். வரி, வரிச்சு, வரிச்சல், வரிதல், வரித்தல் முதலான சொற்கள், கட்டு, கட்டல், கட்டுதல் பொருளில், இலக்கிய வழக்கிலும், மக்கள் வழக்கிலும், பண்டைக்காலந்தொட்டே வழக்கூன்றியுள்ளன. எடுத்துக்காட்டுகள் வருமாறு :–

1. "வரிச்சிலையாற் றந்த வளம்" (பு.வெ. 1, 16), 2. "வரிக்குங் காட்சியிலா வறிவே" (ஞானவா. மாவலி.); 3. "வரிந்த கச்சையன்", 4. "வரிச்சுமேல் விரிச்சு மூட்டியே" (கம்பரா. சித்திர.46).

பண்டைக்காலத்தில் அரசுக்குக் குடிமக்கள் செலுத்த வேண்டிய ஆயத்தைத் தவசமாகக் கட்டிவைத்தல்.

இன்றும் வரிகட்டுதல், பணங்கட்டுதல், தண்டங்கட்டுதல், போன்ற சொல்லாட்சிகள் பண்டைய நிலையை, எடுத்துக்காட்டும் பாங்கில் அமைந்துள்ளமை அறிக.

வரி⁸ *vari,*பெ.(n.) 1. தீ (அக.நி.); fire. 2. நிறம்; colour. *"வரியணிசுடர் வான்பொய்கை" (பட்டினப். 38).* 3. அழகு; beauty. *"வரிவளை" (பு.வெ. 11,12).* 4. வடிவு, அமைவு (அக.நி.); form, shape.

[அரி⁷ → வரி]

வரி⁹ *vari,*பெ.(n.) 1. நெல் (பிங்.); paddy. *"எடுத்துவரி முறத்தினிலிட்டு" (தனிப்பா. i, 354, 41).* 2. அதிமதுரம்; licorice. 3. கருவிழியில் ஏற்படும் ஒரு நோய்; a disease of the black of the eye. 4. தேமல்; a kind of skin diseases. 5. நெல்லரிசி; paddy rice (சா.அக.).

Te., Ma. vari; **E., Pa.** verci; **Go.** wanji.

[வல்→வள்→வர்→வரி–.]

த. வரி > **Skt.** vriri.

வரி = வரிச்சம்பா, வரியுள்ள நெல், நெல் (பிங்.) மா.வி.அ. "of doubtful derivation" என்று குறித்தலால், வடமொழியில் மூலமில்லை என்பதறிக (வ.வ.2,பக்.84).

வரிக்கடுக்காய் *vari-k-kaḍukkāy,*பெ. (n.) கடுக்காய் வகை (பதார்த்த. 973); species of chebulic myrobalan.

[வரி + கடுக்காய்]

கடு + காய் = கடுக்காய். கடுக்காய் = கசப்பு, கார்ப்புச் சுவையுள்ள காய்.

ஒருகா. வரிக்காய்

தமிழ் மருத்துவரால் திரிபலை என்றழைக்கப்பட்ட நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய் ஆகிய முக்காய்களுள் ஒன்று. வரிக்கடுக்காயின் வடிநீர் (கருக்குநீர்) ஊட்டச்சத்து நிறைந்தது. எழில் குன்றா இளமைக்கு எஞ்ஞான்றும் உறுதுணை புரிவது.

வரிக்கடை[1] *vari-k-kaḍai,* பெ.(n.) நெல்; paddy (சா.அக.).

[வரி + கடை]

குல் → குள் → குடு → கடு → கடை = ஒன்று இன்னொன்றை முட்டும் முனையுள்ள நெல் பக்கம் நோக்கிய முனையுள்ள வரி நெல். கடை இருவகை: 1. பக்கம் நோக்கியது, 2. மேனோக்கியது.

வரிக்கடை[2] *vari-k-kaḍai,* பெ.(n.) வண்டு (திவா.); beetle.

[வரி[1] + கடை]

வரிக்கண்ணி *vari-k-kaṇṇi,* பெ.(n.) பொன்னாங் கண்ணி; a prostate plant good for eye disease-Illecebrum sessile (சா.அக.).

[வரி + கண்ணி]

கண் + இ – கண்ணி.

ஒருகா. கள் (இளமை)→கண் →கண்ணி.

பொன்னாங்கண்ணி அரும்பிக் கொழுந்தாகத் தளிர்த்தலாற் பெற்ற பெயர்க் கண்ணி என முடியும். செடிகளும், மரங்களும், சொற்கருத்தால் கண்ணி என்றே குறிக்கப்பட்டுள்ளன.

வரிக்கண்ணோரா *varikka-ṇ-ṇōrā,* பெ.(n.) செஞ்சாம்பனிறமும் மஞ்சட் புள்ளிகளு முடைய கடல்மீன்வகை; a sea fish, dark greyish-brown, covered with light orange spots.

[வரிக்கண் + ஓரா]



வரிக்கத்தலை[1] *vari-k-kattalai,* பெ.(n.) குருங்கத்தலை; a sea, fish foot long with broad black strips upper jaw over lapping the lower not good for eating-seiaena maculata (சா.அக.).

[வரி + கத்தலை]

வரிக்கத்தலை[2] *vari-k-kattalai,* பெ.(n.) வரிக்கற்றலை பார்க்க; see *vari-k-kaṟṟalai.*

[வரி + கற்றளை → கத்தலை]

வரிக்கத்து *vari-k-kattu,* பெ.(n.) வருக்கத்து பார்க்க; see *varu-k-kattu.*

[வரி + கத்து]

வரிக்கயிறு[1] *vari-k-kayiṟu,* பெ.(n.) வலிக்கயிறு பார்க்க; see *vali-k-kayiṟu.*

[வரி + கயிறு]

கள் = கட்டுதல், பிணைத்தல். கள் → கய் → கயில் → கயிறு.

வரிக்கயிறு² *vari-k-kayiṟu,* பெ.(n.) வடக் கயிறு (இ.வ.); cable, long and thick rope.

[வரி¹ + கயிறு]

நன்கு முறுக்கேற்றிய திரட்சியான உருண்ட கயிறு.

வரிக்கரப்பான் *vari-k-karappāṉ,* பெ.(n.) வரிவரியாகத் தோன்றும் கரப்பான் வகை (சீவரட்.); a kind of eruption, a cutaneous disease.

[வரி¹ + கரப்பான்]

கரப்பு→கரப்பான். கரப்பு = சொறி, சுரசுரப்பு. குழந்தைகளுக்கு உண்டாகும் இருபத்தொன்பது கரப்பான் (சொறிநோய்). நோயுளொன்று.

வரிக்கருடன்சம்பா *varikkaruḍaṉ-cambā,* பெ.(n.) சம்பா நெல்வகை; a kind of cambā paddy.

[வரி + கருடன்சம்பா]

வரிக்கல் *varikkal,* பெ.(n.) நீளமாக அடித்துத் திருத்திய கல்; long piece of stone chiselled into required shape. *கோயில் மண்டபத்துக்கு வரிக்கல் கொண்டு வருகிறார்கள்.*

[வரி + கல். குல்→கல்.]

வரிக்கல் = உளியால் அடித்துத் திருத்தி வடிவமைத்த செப்பமான கல்.

வரிக்கலவாய் *vari-k-kalavāy,* பெ.(n.) மஞ்சட்கபில நிறங்கொண்ட கடல்மீன் வகை; a sea-fish, yellowish brown.

[வரி + கலவாய்]

ஆறுவகைக் கலவாய் மீன்வகையுளொன்று.

வரிக்கற்றலை *vari-k-kaṟṟalai,* பெ.(n.) 1. செந்நிறங்கொண்ட கடல்மீன் வகை; a kind of reddish sea-fish. 2. பளபளத்த சாம்பல் நிறமும், ஓரடி வளர்ச்சியுமுள்ள கடல் மீன்வகை; a sea-fish, silvery grey, attaining one feet in length.

[வரி¹ + கற்றலை]

கல் + தலை = கற்றலை. கற்றலை மீன் வகையு ளொன்று.



வரிக்கற்றாழை *vari-k-kaṟṟāḻai,* பெ.(n.) கற்றாழை வகையுளொன்று; a kind of aloe.

[வரி + கற்றாழை]

கல் + தாழை → கற்றாழை.

பதினேழுவகைக் கற்றாழையுளொன்று.

வரிக்கற்றை *vari-k-kaṟṟai,* பெ.(n.) கூரை வேய்தற்குதவும் புற்கற்றை முதலியன; bundle of straw etc, suitable for roofing. *"வரிக்கற்றை இடுமடத்து" (S.I.I. VI, 29).*

[வரி + கற்றை]

குல் = திரட்சிக் கருத்துவேர். குல்→கல்→ கற்றை. கூரைவேய்தற் பொருட்டுத் திரட்சியாகக் கட்டப் பெற்ற புற்கற்றை.

வரிக்காம்பு *vari-k-kāmbu,* பெ.(n.) அறுத்த புகையிலைச் செடியின் அடுக்கு; pile of harvested tobacco plants.

மறுவ. அடிக்கட்டை

[வரி + காம்பு]

கம்பு→காம்பு. அறுத்த புகையிலைச் செடியின் அடித்தூர்ப் பகுதி.

வரிக்காய் *vari-k-kāy,* பெ.(n.) கடுக்காய் வகையுளொன்று; a species of chebulic myrobalan.

[வரி + காய்]

கள்→காள்→காழ்→காய் = முதிர்ந்ததும், பழுக்காத நிலையிலுள்ளதுமான வரிக்கடுக்காய். இவ்வரிக் கடுக்காயின் கருக்கு நீரினை (வடிநீரினை) நாள்தோறும், மாலை வேளையிற் பருகினால், கோலூன்றி நடக்கும் கிழவனும், இளமைப் பொலிவை அடைவான் என்று தமிழ் மருத்துவர் கூறுவர்.

வரிக்காரம் *vari-k-kāram,* பெ.(n.) வரிகாரம் பார்க்க; see *vari-kāram.*

[வரி + காரம்]

வரிக்காரல் *vari-k-kāral,* பெ.(n.) வெண்மை நிறமும் எட்டு விரலம் (அங்குல) வளர்ச்சியுமுடைய கடல்மீன் வகை; a sea-fish, silvery, attaining 8 inch in length.

[வரி' + காரல்.]

காரல் மீன் வகையு ளொன்று.



வரிக்காரன்[1] *vari-k-kāraṉ,* பெ.(n.) தேர் முதலியவற்றை இழுக்கும் வடக்கயிறு திரிப்போன்; cable-twister, rope-maker.

[வரி[1] + காரன்]

வரிக்காரன்[2] *vari-k-kāraṉ,* பெ.(n.) 1. வரி வாங்குபவன்; tax- collector. 2. வரி கொடுப்பவன் (இ.வ.); one who pays tax, contribution etc.

[வரி[5] + காரன். காரன் = வினைமுதற் பொருளில் வந்த ஆண்பாற் பெயரீறு.]

வரிக்காரை[1] *vari-k-kārai,* பெ.(n.) மீன் வகையுளொன்று; a kind of fish-Atropus.

[வரி + காரை. கால்→கார்→காரை = நீண்ட முள் கொண்ட காறல் மீன்.]

வரிக்காரை[2] *vari-k-kārai,* பெ.(n.) மல்லிகை வகை; devine jasmine - *Randia uligionsa* (சா.அக.).

[வரி + காரை]

வரிக்காளான் *vari-k-kāḷāṉ,* பெ.(n.) காளான் வகையுளொன்று; a kind of mushroom (சா.அக.).

[வரி + காள்→காளான்]

சதுப்பு நிலங்களில் மழைக்குப்பின் தோன்றும் பச்சையமில்லாத செடிவகை. முதற்கண் கரிய நிறத்தைக் குறித்த காள் என்னும் வேரடி, கால்போக்கில் அனைத்துக் காளான் இனத்தையும் குறிக்கலாயிற்று.

வரிக்கிரந்தி *vari-k-kirandi,* பெ.(n.) சதையைப் பற்றிய புண்கட்டி; a kind of tumour of the muscles (சா.அக.).

[வரி + கிரந்தி]

Skt. granthi > த. கிரந்தி.

வரிக்கீச்சான் *vari-k-kīccāṉ,* பெ.(n.) மஞ்சட் பழுப்பு வண்ணத்ததும், பத்து விரலம் (அங்குல) வளர்ச்சியுமுடைய கடல்மீன்வகை; a sea-fish, yellowish brown, attaining 10 in. length.

[வரி [1] + கீச்சு →கீச்சான்]

வரிக்குக்கூறுசெய்வார் *varikku-k-kūṟu-ceyvār,* பெ.(n.) வரிக்கூறுசெய்வார் (தெ. இ.கல்.தொ.3, 211) பார்க்க; see *vari-k-kūṟu-šeyvār.*

[வரி [5] + கூறுசெய்–.]

வரிக்குதிரை[1] *vari-k-kudirai,* பெ.(n.) 1. பல வண்ணக் வரி நிறை குதிரை (வின்.); piebald horse. 2. சேணம் வேண்டாக் குதிரை (வின்.); horse not requiring a saddle.

[வரி [1] + குதி→குதிரை]

வரிக்குதிரை[2] *vari-k-kudirai,* பெ.(n.) உடலில் கறுப்பு, வெள்ளைப் பட்டைகளை உடைய குதிரைக் குடும்பத்தைச் சார்ந்த விலங்கு; zebra.

[வரி + குதிரை]



வரிக்குப்பச்சை *varikku-p-paccai,* பெ.(n.) பச்சைக்கல் வகை (யாழ்.அக.); a variety of green stone.

[வரி → வரிசைக்கு + பச்சை → வரிசைக்குப் பச்சை → வரிக்குப்பச்சை]

வரிக்கும்மட்டி[1] *vari-k-kummaṭṭi,* பெ.(n.) பேய்க்கொம்மட்டி (பதார்த்த. 576); colocynth (சா.அக.).

[வரி + கொம்மட்டி →கும்மட்டி]

வரிக்கும்மட்டி[2] *vari-k-kummaṭṭi,* பெ.(n.) ஆற்றுத்தும்மட்டி; a creeper-*Cucumis colocynthis* (சா.அக.).

மறுவ. பேய்த்தும்மட்டி, ஆற்றுக்கொடி.

ஆற்றுப்படுகைகளில் – மணற்பாங்கிற் காணக்கூடும் இச்செடிப் பகுதிகளனைத்தும் (சமூலம்) கசப்பானது.

வரிக்குமரி *vari-k-kumari,* பெ.(n.) வரிக் கற்றாழை பார்க்க; see *vari-k-kaṟṟāḻai* (சா.அக.).

மறுவ. குருவரிக்கற்றாழை

[வரி + குமரி. குமரி = கற்றாழை.]

வரிக்குமரியன்றை *vari-k-kumari-yaṉmai,* பெ.(n.) வரிக்கற்றாழஞ் சோறு; the pulp of striped aloe (சா.அக.).

வரிக்குயில் *vari-k-kuyil,* பெ.(n.) குயில் வகை (வின்.); banded koel.

[வரி + குயில்]

குயில், குக்கூவெனக் கூவுவதும், துயிலெழுப்பது மிதனியல்புபோலும்!



வரிக்குறவான் *vari-k-kuṟavāṉ,* பெ.(n.) முதுகுத் துடுப்பில் அரம் போன்ற முட்களமையப் பெற்றதும், கருப்பு, மஞ்சள் வரிகளுடையதுமான கடல் மீன். இது நச்சுத் தன்மையுடையதாகையால், உண்ணுவதற்குப் பயன்படாது; a kind of sea fish with yellow and black strips and sharp fins on the back; poisonous not fit for consumption (சா.அக.).

[வரி +குறவான். வரி = கோடு. குறவான் = மீன்.]

வரிக்குறைப்பு *vari-k-kuṟaippu,* பெ.(n.) வரியைத் தளர்த்துகை; tax-relaxation. *ஆடம்பரப் பொருட்களுக்கான வரிக்குறைப்பு இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெறவில்லை (உ.வ.).*

[வரி + குறைப்பு.]

வரிக்கூத்து *vari-k-kūttu,* பெ.(n.) கூத்து வகை (வின்.); a kind of masquerade dance.

[வரி + குல்→குத்து→கூத்து.]

பலவகைகளில் கால் குத்திட்டு பொய்த் தோற்றங்காட்டி, ஆடும் கூத்து.

எண்வகை வரிக்கூத்து சிலப்பதிகாரத்திற் குறிக்கப்பட்டுள்ளது.

வரிக்கூறிடுவார் *vari-k-kūṟiḍuvār,* பெ.(n.) வரிக்கூறுசெய்வார் (கல்.) பார்க்க; see *vari-k-kūṟu-ceyvār.*

[வரி + குல்→கூல்→கூறு + இடுவார்.]

பதிவு செய்த வரித்தொகைகளைப் பங்கிடுபவர் அல்லது பாகுபாடு செய்பவர்.

வரிக்கூறுசெய்-தல் *vari-k-kūṟu-šey-,* 1 செ.குன்றாவி.(v.t.) வரித் தொகையில், இன்னின்ன செலவிற்கு இவ்வள விவ்வளவென்று கூறுபடுத்தி ஒதுக்குதல்; to divide and allot tax for various expenditure (of departments).

[வரிக்கூறு + செய்-.]

வரிக்கூறுசெய்வார் *vari-k-kūṟu-šeyvār,* பெ.(n.) அரசிறை அதிகாரிகள் (கல்.); revenue officers in ancient times.

[வரி[5] + கூறுசெய்-.]

தத்தமக்குரிய ஊர்களில் அரசிறை தண்டுபவர். வரவு செலவு வரிப் பொத்தகத்திலுள்ள கணக்குப்படி ஆய்வுசெய்து, மொத்தப் பணத்தை, ஒவ்வொரு வாரியத்திற்கும் ஒதுக்கீடு (Budget) செய்வார்.

வரிக்கை *vari-k-kai,* பெ.(n.) பலாவகை (நாமதீப. 294); a species of jack-tree.

[வருக்கை [1] → வரிக்கை]

வரிக்கொம்மட்டி *vari-k-kommaṭṭi,* பெ.(n.) பேய்க்கொம்மட்டி (M.M.372); colocynth.

மறுவ. பேய்த்தும்மட்டி

[வரி + கும்மட்டி → கொம்மட்டி]

ஆற்றுப்படுகைகளில் விளையும் இப் பூண்டின் செடிப் பகுதிகளனைத்தும் (சமூலம்), கசப்பாக விருக்கும். இதன் தூள் கண்ணிலும் மூக்கிலும் படநேரின், நெடியேறும்.

வரிக்கொன்றை *vari-k-konṟai,* பெ.(n.) சிவப்புகொன்றை வகை (இலத்.); Red Indian laburnum.

மறுவ. வரிக்கொன்னை.

[வரி + கொல் → கொன்று → கொன்றை (கொத்து).]

முப்பத்திரண்டு கொன்றையுள் செங் கொன்றை வகையைச் சார்ந்தது.

வரிக்கோரை *vari-k-kōrai,* பெ.(n.) கோரை வகையுளொன்று; striped sedge.

[வரி + கோல் → கோர் → கோரை.]

வரிக்கோலம் *vari-k-kōlam,* பெ.(n.) தொய்யிலின் பத்திக்கீற்று (சிலப். 5, 226, அரும்.); ornamental figures or lines drawn on the breast.

[வள் → வர் → வரி + கோலம்.]

குல் → கொல் (புதியது, அழகியது) → கோல் + அம்.

மகளிர், தோள், மார்பகங்களில் வரிக்கோலம் எழுதும் சந்தனக் குழம்பு; மகளிர் மார்பகங்களில் சந்தனக் குழம்பால் எழுதுங் கோலம், வரிக்கோலமாகும்.

வரிக்கோலா *vari-k-kōlā,* பெ.(n.) கருநீலப் பச்சை நிறமுடையதும் 18 விரல வளர்ச்சி யுடையதுமான கடல் மீன்வகை; a species of sea fish, violet green, attaining 18 in. in length.

[வரி + கோலன் → கோலா.]

வரிக்கோலா நீண்டும், ஒல்லியாயும், தலை கூர்மையாகவும், எலும்பு பச்சை நிறமாயும் இருக்கும்.



வரிக்கோவை *vari-k-kōvai,* பெ.(n.) கண்டிதாத்திரிக்கொடி. இக் கீரை நோய் செய்யுங் கோழையை வேரறுக்கும்; striped caper; the leaves of which is good for curing phlegm humour (சா.அக.).

[வரி + கோவை]

வரிக்கோழிமீன் *vari-k-kōḻi-mīṉ,* பெ.(n.) கடலிலிருக்கும், வரியையுடைய ஓர் வகைக் கோழி மீன்; a kind of sea fish (சா.அக.).

[வரி + கோழி + மீன்]

ஆழ்கடலுள் வாழும், இம்மீன் 18 விரலம் (அங்குல) நீளமுள்ளது. கருநீல வண்ணமுடையது; கடலடிக் கல்லில் உள்ள சிறிய மீன்களை இரையாகக் கொள்ளும்.



வரிகயிறு *vari-kayiru,* பெ.(n.) வண்டியிலேற்றப் பெற்ற பொதி மூட்டையைப் பிணைத்துக் கட்டுங் கயிறு (வின்.); rope used for fastening or tightening the load in a cart.

[வரி + கயிறு]

கள் → கய் → கயில் → கயிறு = கட்டுதல், பிணைத்தல். கயிறு = மூட்டையைப் பிணைத்துக் கட்டப் பயன்படும் கட்டுக்கயிறு.

த. கயிறு > E. Coir.

வரிகரப்பன் *vari-karappan,* பெ.(n.) குழந்தைகளின் உடம்பிற், காணும் சொறிபுண் வகை; a children's ecazema marked by stripes or long fissures (சா.அக.).

[வரி + கரப்பு → கரப்பன்.]

கரப்பு = சொறி, சுரசுரப்பு. மூன்று அல்லது நான்கு திங்கள் முதல், மூன்றகவை வரையுள்ள குழந்தைகட்கு ஏற்படும் இருபத்தொன்பது வகைக் கரப்பான், சொறி புண்வகைகளுள் ஒன்று.

வரிகற்றாழை *vari-karrālai,* பெ.(n.) கோடு விழுந்த கற்றாழை, இவை ஓர் கற்பக மூலி; a kind of aloe with strips, it is a rejuvenation drug (சா.அக.).

மறுவ. குருவரிக்கற்றாழை

[வரி + கற்றாழை]

பதினேழு வகைக் கற்றாழைகளும் இஃதும் ஒன்று. இவ்வரிக் கற்றாழையின் மடல்கள் வெளிர் பச்சை வண்ணத்தன; இம்மடல்களின் நுனியில் கருஞ்சிவப்பு முட்கள் காணப்படும்.

வரிகாரம் *vari-kāram,* பெ.(n.) 1. வெங்காரம் (சங்.அக.); borax. 2. படிக்காரம்; alum. 3. பொரிகாரம்; borax.

[வரி + கரி → கார் → காரம்.]

காரம் = வெண்காரம், சீனிக்காரம்.

கரி என்னும் வினையடியால் பிறந்த தொழிற்பெயர். கரி + அம் – காரம். முதனிலை திரிந்து விகுதி பெற்ற தொழிற்பெயர். (ஒ.நோ.) படி + அம் – பாடம். தவி + அம் – தாவம். கரித்தல் = மிகுதல், காரம் = மிகுதி. கரி என்பது கடி என்னும் உரிச்சொல்லின் திரிபு. ட → ர = போலி. படவர் → பரவர்; முகடி → முகரி. உப்புக்கரிக்கும், உப்புக் கடுக்கும் என்பன ஒரு பொருள்பற்றிய உலக வழக்கு.

காரம் என்னும் சொல், முதற்கண் மிகுதியை உணர்த்திப் பின்பு உறைப்பு மிகுதியாயுள்ள வரிகாரப் பொருட்களான வெங்காரம் படிக்காரம் போன்றவற்றைக் குறித்ததென்க.

வரிகோணியல் *vari-kōṇiyal,* பெ.(n.) பொதி மாட்டின் இரு பக்கமும் சுமை யேற்றுவதற் கேதுவாகச் சேர்த்துத் தைத்த கோணி; double-bag, a pair of bags, with their mouths joined together, used in loading a pack-ox on either side.

[வரி² + கோணியல்]

வரிகோலம் *vari-kōlam,* பெ.(n.) தொய்யிலின் பத்திக்கீற்று (சிலப்.5, 226, அரும்.); ornamental figures or lines drawn on the breast. *"அவரெழுது வரிகோலம்" (சிலப். 5, 226).*

[வள்→ வர்→ வரி +கோலம். குல் → கொல் (புதியது, அழகியது) கோல் + அம்.]

வரிச்சங்கு *vari-c-caṅgu,* பெ.(n.) எலும்பு; bone (சா.அக.).

[வரி + சக்கு→ சங்கு.]

சங்கு போல், உள் வளைவுள்ள எலும்பு. சங்கு போன்ற ஊட்டி என்னும் மிடற்றுறுப்பு.

வரிச்சந்தி *vari-c-candi,* பெ.(n.) பல தெருக்கள் கூடுமிடம் (பிங்.); place where streets meet, cross-roads, a junction.

[வரி[1] + அந்து→சந்து→சந்தி[1]]

அந்துதல் = கூடுதல். அந்து→அந்தி = கூடியது, கூடிய நேரம் அல்லது இடம். அந்து→சந்து = முதனிலைத் தொழிற்பெயர்.

வரி+சந்து=பல தெரு அல்லது பலவழி, கூடுமிடம்.

வரிச்சம்பா *vari-c-cambā,* பெ.(n.) சித்திரை மாதத்தில் விதைத்து, ஐந்து மாதங்களிற் பயிராவதும், நெல் மணிகளின் மீது வரியுடையதுமான சம்பா நெல்வகை; a kind of striped paddy, sown in cittirai and maturing in five months.

[வரி[1] + சம்பா.]

சம்→சம்பா = இங்கு குறித்துள்ள சம்பா, கோடைக் காலத்தே பயிராகும் நெல் வகையைச் சார்ந்தது; அறுபது சம்பா வகையுள், வரிச்சம்பாவும் ஒன்று. இச்சம்பா நெல் வகைகள், தமிழ் நாட்டின் விளைபொருள் வளத்திற்கு ஏற்றதொரு எடுத்துக்காட்டாய்த் திகழ்வன எனலாம். தமிழ் நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை;

தமிழ் நாட்டுள்ளும், தென்னாட்டிலேயே வரிச்சம்பா, ஆவாரம்பூச் சம்பா, சீரகச் சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறு மணிச்சம்பா முதலான நெல் வகைகள் பயிராகின்றன. பழங்காலத்திற் பயிராகி வந்த பல்வகை நென்மணிகளும், பொன்னும் மணியும், பவழமும் இன்றும் தென்றமிழ் நாட்டில் விளைந்து வருவது கண்கூடு (சொல்.க.பக்.69, 70).

வரிச்சல் *variccal,* பெ.(n.) வரிச்சு (வின்.) பார்க்க; see *variccu.*

[வரி→ வரிச்சு →வரிச்சல் = கோடுபோல் நிண்ட கட்டுவரிச்சல்.]

வரிச்சல்பட்டை *variccal-paṭṭai,* பெ.(n.) நீண்ட மரப்பட்டை வகை; a kind of lengthy wooden roof.

[வரிச்சல் + பட்டை]

வரிச்சலாணி *variccalāṇi,* பெ.(n.) வரிச்சலிற் பதிக்கும் ஆணி (வின்.); nails for fastening reepers.

[வரிச்சல் + ஆழ்→ஆழி→ஆணி.]

ஒரு பொருளில் அல்லது வரிச்சற்கட்டையில் பதிக்குங்கால், ஆழ்ந்து பதியுந் தன்மை ஆணிக்கே யுரியது.

வரிச்சலுகை *variccalugai,* பெ.(n.) 1. வரி அல்லது தீர்வையைக் குறைக்கை; tax-concession or relief. *உடல் ஊனமுற்றவர் களுக்கு அரசு வரிச்சலுகை வழங்கியுள்ளது.* 2. வரிக்குறைப்பு பார்க்க; see *vari-k-kuṟaippu.*

[வரி + சலுகை. சலிகை→ சலுகை குறைக்கை, தளர்த்துகை.]

வரிச்சாணி *variccāṇi,* பெ.(n.) வரிச்சலாணி (வின்.) பார்க்க; see *variccal-āṇi.*

[வடி→வரி→வரிச்சு + ஆணி]

வரிச்சி *varicci,* பெ.(n.) நீண்டிருக்கும் குச்சு; lengthy stick.

[வரி→வரிச்சு→வரிச்சி.]

வரிச்சு *variccu,* பெ.(n.) கோடு போல் நீண்ட கட்டுவரிச்சல்; reeper of a roof; transverse lath. *"வரிச்சுமேல் விரிச்சு மூட்டியே" (கம்பரா. சித்திர. 46).*

[வரி³ → வரிச்சு]

கோடுபோல் நீண்ட வடிவிலமைந்ததும், கட்டுவதற்குப் பயன்படுவதுமான நெடுங்குச்சு. நீளுதற் பொருண்மையில், அஃதாவது நீட்சிக் கருத்திற் கிளைத்த சொல்.

வரிச்சுமை *vari-c-cumai,* பெ.(n.) வரிப் பளு; tax-burden.

[வரி + சுமை.]

அளவிற்கதிகமான வரிவிதிப்பினால் ஏற்படும் துயர்.

வரிச்சுருள் *vari-c-curuḷ,* பெ.(n.) செவ்வட்டை (சங்.அக.); a kind of leech.

[வரி¹ + சுருள். சுள்→சுரு→சுருள்.]



வரிசந்தி *vari-candi,* பெ.(n.) வரிச்சந்தி (யாழ்.அக.) பார்க்க; see *vari-c-candi.*

[வரி + சந்தி]

வரிசிலத்துக்கிடந்தபூமி *vari-šilattu-k-kiḍanda-būmi,* பெ.(n.) வரி, சில்லாயம் முதலியன இல்லாமல் பயனின்றிக் கிடந்த பூமி; unassessed waste land. *"ஊர் மஞ்சிக்கமாய் வரிசிலத்துக் கிடந்த பூமி" (S.I.I. Vol.III.156).*

[வரி + சிலத்து + கிடந்த + பூமி]

வரிசிறையாய்கிட-த்தல் *vari-širaiyāi-kiḍa-,* 4 செ.கு.வி.(v.i.) வரி பெறுவதற் கியலாமல் போதல்; tax to be uncollectable.

[வரி + சிறை + ஆய் + கிட-.]

வரிசிறையாய்கிடந்தபூமி *vari-širai-yāi-kiḍanda-būmi,* பெ.(n.) வரி பெறுவதற்கின்றி பயிரிடப் பெறாமல் கிடந்த நிலம்; unassessed cultivable waste land. *"ஊர்மஞ்சிக்கமாய் வரிசிறையாக் கிடந்த பூமி" (S.I.I. Vol.III.156)*

[வரி + சிறையாய் + கிடந்த + பூமி]

வரிசெலுத்து-தல் *vari-šeluttu-,* 5 செ. குன்றாவி.(v.t.) வரிக்கட்டுதல்; to remit tax. *ஒழுங்காக வரிசெலுத்துபவர், நாட்டின் பொருளாதாரத்திற்கு உதவியவராவர் (இ.வ.).*

[வரி + செலுத்து-.]

வரிசை¹ *varišai,* பெ.(n.) விளைச்சலில் உழவனுக்குரிய பங்கு; cultivator's, share of produce. *'வரிசைக்கு உழும்' (நேமிநா. சொல். 17, உரை). வரிசையும் இல்லை அரிசியும் இல்லை (பழ.).*

[வள்→வரி→வரிசை]

வரிசை = நிலத்தில் உழுது பயிரிடுபவனுக்கு, நிலவுடைமையாளன் தரும் பங்கு.

வரிசை[2] *varišai,* பெ.(n.) 1. ஒழுங்கு, முறை (சூடா.); order, regularity. 2. ஒருவருக்குப் பின் ஒருவராக, அல்லது ஒன்றையடுத்து ஒன்றாக, அமையும் பாங்கு; line, row series. *வழிபாடு முடிந்ததும் மாணவர்கள் வரிசையாக நடந்து வகுப்புகளுக்குச் சென்றனர் (உ.வ.).* 3. நிரையொழுங்கு, வரை, ஒழுங்கு; line, row, series. *சாலை ஓரத்தில் வரிசை வரிசையாக மரங்கள் (இக்.வ.).* 4. வேலைமுறை (வின்.); turn in duty or work. 5. அரசர் முதலியோரால் பெறுஞ் சிறப்பு; distinctive mark of honour or privilege granted by a royal or other authority. *"பொற்பட்ட முன்னா வரிசைகள்" (திருவாலவா. 28, 93). "வரிசை யறிதலோ வரிதே பெரிதும்" (புறநா. 121 : 3).* 6. அரச சிறப்புச் சின்னம் (முத்திரை); insignia of royalty. *"சாமரை யக்க மாதியாம் வரிசையிற் கமைந்த..... தாங்கி" (கம்பரா. நிந்தனை).* 7. மதிப்புரவு; honour, esteem. *"பொற்புற வரிசை செய்வான்" (திருவிளை. இந்திரன் முடி.37).* 8. மேம்பாடு; excellence, eminence. *"ஆடுகொள் வரிசைக்கொப்பப் பாடுவல்" (புறநா. 53).* 9. தகுதி; merit, fitness. 10. மதிப்பு; worth. *"வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்" (சிறுபாண். 217).* 11. பாராட்டு; regard, facilitate. *வரிசைப் பெரும்பாட் டெல்லாம்" (கலித். 85).* 12. நல்லொழுக்கம்; good conduct. *அவன் வரிசையாய் நடந்து கொள்கிறான் (உ.வ.).* 13. நன்னிலை (வின்.); good circumstances. 14. சீராகச் செய்யும் நன்கொடை; present, especially to a daughter on marriage or other occasion. *"மாமி வரவிட்ட வரிசையென்று" (விறலிவிடு. 533).* 15. வீதம்; rate; proportion, apportionment.

Ka. varase, varise; **Te.** varusa.

[வரி¹ → வரிசை = சீர் வகையிற் செய்யும் நன்கொடை.]

வரிசை-ஒழுக்கம் : 'எறும்பு வரிசை' ஓர் ஒழுங்கு முறையாக உலகமெல்லாம் பரவியிருத்தல் அறியக் கூடியது; ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லும் எறும்பு வரிசை, 'எறும்பின் ஒழுக்கு' எனச் சங்க நாளிலேயே சொல்லப்பட்டது. ஆயினும் பொருள் தட்டுப்பாடு, போக்குவரவு நெருக்கடி, காட்சிச் சாலை ஆகியவற்றால் அண்மைக் காலத்தே தான் வழக்கில் கொணரப்பட்டதாம். வரிகை (கியூ) முறை (Q System) என்பது எறும்புச்சாரி முறையே. நீரொழுக்கு, எறும்பொழுக்கு, ஒழுக்கம் என்பவை யெல்லாம் ஒழுங்கு முறைப்பட்டதாம். 'உன் வரிசை தெரியுமே' என்பதில் வரிசை ஒழுக்கமாதல் அறிக. வரிசை கெட்டவன் ஒழுக்கமற்றவன் என்பதாம் (வழக்குச் சொல்.அகராதி).

வரிசை[3] *varišai,* பெ.(n.) சிற்றூர் வரிவகை; village dues or rent. *"இந்நிலம் இரண்டு மாவுக்கும் வரிசையாவது" (புதுக். கல். 613)* (I.M.P.Tp.293).

[வள்→வரி + சை]

வரிசை[4] *varišai,* பெ.(n.) திருமணத்தின் பொழுதோ அல்லது சிறப்புப் பண்டிகை நாட்களிலோ, மகளுக்கு பிறந்த வீட்டில் கொடுக்கும் பொருள்; gifts, dowry. *அவர்களுக்கு ஒரே பெண் என்பதால், ஏராளமான வரிசை வைத்திருக்கிறார்கள் (உ.வ.).*

[வள்→வர்→வரி→வரிசை]

வரிசை[5] *varišai,* பெ.(n.) உருபா நோட்டுக் குறியீடுகளோடு ஒன்றையடுத்து ஒன்றாக வரும் எண்களைக் கொண்டவற்றின் தொகுப்பு; series of currency notes, etc. *புதிதாகச் செலாவணிக்கு வரும் ஐந்து உருபா நோட்டுகள் இரு வரிசை கொண்டவை.*

[வர்→வரி → வரிசை]

வரிசைக்காரன் *variśai-k-kāraṉ,* பெ.(n.) 1. நன்னடத்தையுள்ளவன் (வின்.); well behaved man. 2. முறைக்காரன்; one whose turn of duty occurs.

[வரிசை [1] + காரன்[1]. காரன் = வினைமுதற் பொருளில் வந்த ஆண்பாற் பெயரீறு.]

வரிசைக்கிரமம் *variśai-k-kiramam,* பெ.(n.) ஒழுங்கு முறை; proper or regular order.

[வரிசை [1] + கிரமம்]

Skt. krama > த. கிரமம்.

வரிசைக்குப்பச்சை *variśai-k-ku-p-paccai,* பெ.(n.) நாகப்பச்சை (யாழ்.அக.); a variety of green stone.

[வரிக்குப்பச்சை → வரிசைக்குப்பச்சை]

வரிசைக்குற்றி *variśai-k-kuṟṟi,* பெ.(n.) செங்கற்சூளையில் வரிசையாக அடுக்கும் விறகுக்கட்டை (நாஞ்.); stumps of wood set in a row in a brick-kiln.

[வரிசை[1] + குறு → குற்றி. குற்றி = மரக்கட்டை.]

வரிசைக்கெட்டவன் *variśai-k-keṭṭavaṉ,* பெ.(n.) 1. ஒழுக்கமில்லாதவன்; a man lacking discipline. *வரிசை கெட்டவனுக்குத்தான் வாய்க்கொழுப்பு அதிகம் (இ.வ.).* 2. மதிப்பற்றவன்; un-worthy person. 3. தகுதியற்றவன்; de-merit person.

[வரிசை + கெட்டவன்.]

வரிசைச்சுரம் *variśai-c-curam,* பெ.(n.) இடைவிட்டு முறையாக வரும் காய்ச்சல்; intermittent fever.

மறுவ. முறைக்காய்ச்சல்.

[வரிசை [1] + சுரம் [1]]

வரிசைசெய்-தல் *variśai-śey-,*1 செ.கு.வி. (v.i.) 1. சீர், சிறப்பு, மதிப்பு (மரியாதை)ச் செய்தல் (வின்.); to salute or render civility or courtesy. 2. வரிசையெடு-, பார்க்க; see *variśai-y-eḍu-,*

[வரிசை [1] + செய்-.]

வரிசைப்படிஇறு-த்தல் *variśai-p-paḍi-iṟu-,*3 செ.கு.வி.(v.i.) தண்டுவதாய நில வரியினை முறையாகச் செலுத்துதல்; to pay regularly the land revenue, levied by Govt.

மறுவ. வரியிறுத்தல், வரிசெலுத்தல்.

[வரிசைப்படி + இறுத்தல்.]

வரிசைப்பெயர் *variśai-p-peyar,* பெ.(n.) அரசனின் கொடிவழியைக் குறிக்கும் பெயர்; genelogical name of the king.

[வரிசை + பெயர்.]

வேள், மன்னன், கோவன் (கோன், கோ), வேந்தன் என்பன வரிசைப் பெயராம். அரசர் போன்றே அரசனுடைய பட்டத்தரசிக்குக் கோப்பெருந்தேவி அல்லது, பெருங்கோப்பெண்டு என்பது, வரிசைப்பெயராக வழங்கப் பெற்றும், பெருமை குறிக்கப்பெற்றும், வந்துள்ளமை காண்க.

வரிசைபார்-த்தல் *variśai-pār-,*4 செ.கு.வி. (v.i.) ஒழுங்குமுறையை நுட்பமாய்க் கவனித்தல் (வின்.); to be punctilious, formal or ceremonious.

[வரிசை [1] + பார்-.]

வரிசைமகளிர் *variśai-magaḷir,* பெ.(n.) விறலியர்; a class of female songesters. *"அடுப்புத் தொழிற் குரியரல்லாத வரிசை மகளிரும்" (பதிற்றுப். 18, 6, உரை).*

[வரிசை [1] + மகளிர்.]

வரிசைமாதர் *variśai-mādar,* பெ.(n.) வரிசைமகளிர் பார்க்க; see *variśai-magaḷir.* *"வரிசை மாதர் சிலம்போசை" (திருவாலவா. திருநகரச். 6).*

[வரிசை[1] + மாதர்[1]]

வரிசையளி–த்தல் *variśai-y-aḷi-,* 4 செ.கு.வி. (v.i.) வரிசைசெய்–தல் பார்க்க; see *variśai-śey-.*

[வரிசை + அளி–,]

"வையமுஞ் சிவிகையு மணிக்கா லமளியும்
உய்யா னத்தி னுறுதுணை மகிழ்ச்சியுஞ்
சாமரைக் கவரியுந் தமனிய வடைப்பையுங்
கூர்நுனை வாளுங் கோமகன் கொடுப்பப்
பெற்ற செல்வம் பிறழா வாழ்க்கைப்
பொற்றொடி மடந்தையர்"

என்னும் சிலப்பதிகாரப் பகுதியால், அரசன் பரத்தையரொடு, உலாப்போதலும், அவர்க்கு அவன் பற்பல வரிசையளித்தலும், உண்டென்பது பெறப்படும்.

வரிசையறி–தல் *variśai-y-aṟi-,* 2 செ.கு.வி. (v.i.) ஒருவர்தம் தரம் அறிந்து சிறப்பித்தல்; to assertain one's ability or speciality. *"வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்" (சிறுபாண்.217).*

[வரிசை + அறி–]

ஒருவர் தம் புலமை அல்லது ஆற்றலறிந்து பரிசு நல்குதலே, வரிசையறிதலாம். அரசன் அல்லது ஆட்சித் தலைவன், கலைஞர், புலவர், பாவலர், அறிஞர், ஆசிரியர், ஆராய்ச்சியாளர், பணித் திறவோர் முதலியோர்க்குப் பரிசளிக்கும் போதும் பட்டம் வழங்கும் போதும், இன்னபிற சிறப்புச் செய்யும் போதும், அவரவர் தகுதியும் தரமுதலாகிய வரிசையறிந்து செய்தல் வேண்டும். பரிசளித்தல் எளிது; வரிசையறிந்தளித்தல் அரிது. வரிசையறிதல் பற்றிக் கபிலர் மலையமான் திருமுடிக்காரியை நோக்கிப் பாடிய பாடல் வருமாறு:–

"ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
ஈதல் எளிதே மாவன் டோன்றல்
அதுநற் கறிந்தனை யாயின்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே"
(புறநா.121) (தேவ.13, பக்.25).

"புலவர் பெருமக்களின் புலமைத் திறத்தைப் பகுத்தறிந்து பரிசு நல்குதலே, வரிசையறிதல்" என்பார், மொழிஞாயிறு.

பண்டைப் பாவலர் அனைவரும், தமது நுண்மாண் நுழைபுலங்கெழுமிய, சீர்த்த மதியினால், மன்னர்தம் வாழ்வியல் நிகழ்வுகளை, இயற்கை நிகழ்வுடன் இணைத்துப் பாடுவதில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். கடையெழு வள்ளல்களும், கழகக்கால வேந்தர்களும் புலவர், பாணர், விறலியர், போன்றோரைப் பாதுகாக்கும் அரண்களாகத் திகழ்ந்தனர்.

இத்தகு வள்ளல்களுள், மலையமான் திருமுடிக்காரி போன்றோர் பரிசிலாளர்க்கு என்னதேவை என்பதறியாது, கொடைமடம்பட்டு, அனைவருக்கும் சமமாகப் பரிசுப் பொருட்களை வாரி வழங்கினர்.

பண்டைக்காலப் புலவர் பெருமக்கள், ஐந்நூறு ஊர் முற்றூட்டும், நாற்பது நூறாயிரம் பொன்னும், ஒருநாட்டு முழுவருவாயும், நூறாயிரம் பொற்காசொடு, ஒன்பது துலாம் பொன்னும், நூறாயிரம் பொற்காசொடு ஒருநாடும், இன்னோரன்ன பிறவும், அரசர்களிடையே பரிசாகப் பெற்ற பான்மையினை பண்டைத்தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. இவ்வாறு, பரிசிலாளரால் வைத்துப் பாதுகாக்கவியலாத வண்ணம் கொடைமடம்பட்டுப் பரிசு நல்குதல்

வரிசையறியாது கொடுத்த பரிசின் பாற்படும் என்று இலக்கியத் திறனாய்வாளர் இயம்புவர்.

மலையமான் திருமுடிக்காரி, தம்மைப் பாடிய புலவர்க்கு, வரிசையறியாது, கொடைமடம்பட்டுப் பரிசளித்த பாங்கினைக் கபிலரும், புறநானூறு 121ஆம் பாடலுள் குறித்துள்ளது காண்க.

வரிசையறிதல் குறித்து (1980) செந்தமிழ்ச் செல்வி மேத் திங்களிதழில், பண்டைத்தமிழ் மன்னர் வரிசையறியாது பரிசுகள் வழங்கிய செய்தியினைக் குறித்துள்ளது வருமாறு :-

பண்டைப் புலவரெல்லாரும் பாவலராகவே யிருந்தனர். அவர்க்குப் புலமையும் பாவன்மையும் ஒருங்கே யமைந்திருந்தன. இக் காலத்தில் ஒரு சிலரே பாவலர். அவருட் பெரும்பாலோர் புலவரல்லர். உணர்ச்சியேயூட்டும் பாவன்மையினும் அறிவு புகட்டும் புலமையே சாலச் சிறந்தது.

புலவர் புலத்துறைபற்றிப் பலவகையர்; ஆற்றல்பற்றிப் பல திறத்தர். இயலர், இசையர், நாடகர், கணியர், மருத்துவர் முதலியோர் பலவகையர்; நாவலர், பாவலர், விளக்கியர், தருக்கியர், நூல்வலர், உரைவலர், ஆய்வலர், கதைவலர், கட்டுரைவலர் முதலியோர் பலதிறத்தர். இவ் விரு சாராரும், மீண்டும், தலையர், இடையர், கடையர் என முந்நிலையர்.

"புலவர்தம், திறமும் நிலையும் அறிந்தே அவரவர்க்குத் தக்கவாறு பரிசளித்தல் வேண்டும். இங்ஙனம் பகுத்தறிதலையே வரிசையறிதல் என்றனர்" முன்னோர். வரிசையறிதல் பற்றிப் புறநானூற்றுப் பாடல்களில் காணப்படும் சான்றுகள் வருமாறு:-

"பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கி" (புறம்.6).

"வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை" (ஷெ.47).

"ஒருதிசை யொருவனை யள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் டோன்றல்
அதுநற் கறிந்தனை யாயின்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே"
(ஷெ.121).

"வரிசை யறிதலின் தன்னுந் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே"
(ஷெ.140).

"வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க் கடையா வாயி லோயே" (ஷெ.20)

என்பன புலவரின் வரிசையறிதலைக் குறிப்பனவாகும்.

வரிசையார் *variśaiyār,* பெ.(n.) அண்ணன் மனைவி; elder brother's wife.

[வரிசை + வரிசையார்.]

வரிசையாளர் *variśai-y-āḷar,* பெ.(n.) நிலத்தைப் பயிரிடுங்குடிகள்; cultivating tenants. *"தம் கீழ்க்குடிகளாகிய வரிசை யாளரை" (பதிற்றுப். 13, 24, உரை).*

மறுவ. பயிரிடுங்குடி, உழைப்பாளர்.

[வரிசை² + ஆள்→ஆளர். ஆள் = உயர்திணை இருபாற் பொதுச்சொல்.]

வரிசையெடு-த்தல் *variśai-y-eḍu-,* 4 செ.கு.வி.(v.i.) பலருமறியச் சீரெடுத்தல் (இ.வ.); to fetch presents ceremonially on marriage or other occasions, in the presence of relatives etc.

[வரிசை¹ + எடு-.]

வரிசைவாரம் *varišai-vāram,* பெ.(n.) விளைச்சலுக்கு ஏற்றபடி திட்டப்படுத்திய மேல்வாரம்; fixed rent calculated on the ascertained average yield of the land cultivated.

[வரிசை ² + வாரம்.]

வாரம் = நிலத்தைப் பயிரிடும் வேளாண் குடிகள், நிலவுடைமையாளருக்குச் செலுத்தும் பங்கு.

வரிசோறு *vari-šōṟu,* பெ.(n.) வரிவகை (I.M.P.Sm.2); a tax.

[வரி ⁵ + சோறு]

வரிஞ்சையூர் *variñjai-y-ūr,* பெ.(n.) சோழ நாட்டின் திருக்கீழ்வேளூர்க்கு தெற்கில் அமைந்த ஒரூர்; a village situated south of *Tiruk-kīḻ-vēlūr* in *Chōḻa* country. *இவ்வூரில் முன்னொரு நாளில் சிவனடியார்களை இகழ்ந்து பேசியவர்களுடைய நாவினையரிந்த சத்தி நாயனார் என்பவர் வாழ்ந்திருந்தார் என்று பெரியபுராணம் புகலும்.*

வரிட்டம் *variṭṭam,* பெ.(n.) மிகச்சிறந்தது; that which is pre-eminent, excellence. *"வரிட்ட மங்கலம்" (தக்கயாகப். 74, உரை).*

[பரிட்டம்→வரிட்டம்]

வரிட்டன் *variṭṭaṉ,* பெ.(n.) 1. மேலானவன்; esteemed or distinguished, pre-eminent man. 2. (ஆதன்) சீவன் முத்தருள் பிரமவரிட்டர் வகையினன்; person belonging to *pirama-variṭṭar* class of *cīvaṉ-muttar* or attained or enlightened saint. *"சீவன் முத்தர் நால்வகையாவர்..... பிரமவித்து வரன் வரியான் வரிட்டன்" (கைவல். தத். 94).*

[பரம்→வரம்→வரிட்டன். பரம் = மேலானது, சிறந்தது.]

வரித்தா *varittā,* பெ.(n.) கருக்காய்; indian gallnut, chebulic myrobalan (சா.அக.).

வரித்தும்மட்டி[1] *vari-t-tummaṭṭi,* பெ.(n.) வரிக்கும்மட்டி பார்க்க; see *vari-k-kummaṭṭi.*

[வரி ¹ + தும்மட்டி]

வரித்தும்மட்டி[2] *vari-t-tummaṭṭi,* பெ.(n.) பேய்க்கொம்மட்டி; colocynth.

[வரி ¹ + தும்மட்டி]

வரித்துலா *vari-t-tulā,* பெ.(n.) விடத்தேர் (L.); ashy, babool.

வரித்தோல்[1] *vari-t-tōl,* பெ.(n.) வரித்துலா பார்க்க; see *vari-t-tulā* (சா.அக.).

[வரி ¹ + தோல்]

வரித்தோல்[2] *vari-t-tōl,* பெ.(n.) காக்காய்ப் பாலை (L.); cluster-flowered croton.

[வரி ¹ + தோல் ³]

வரிதகம் *varidagam,* பெ.(n.) முப்பத் திரண்டடியான் வரும் இசைப்பாட்டு (சிலப். 3, 3, உரை, பக். 88); a kind of song of 32 lines.

[வரி ² → வரிதகம்]

வரித்தண்டல் *vari-t-taṇḍal,* தொ.பெ. (vbl.n.) இறை வாங்குதல்; collection of revenue. *இப்பொழுது மாநகராட்சியில் வரி தண்டற் பணி விரைவாக நடக்கிறது (உ.வ.).*

[வரி + தண்டல். தண்டு→தண்டல். தண்டல் = வாங்குதல்.]

வரிதள்ளுபடி *vari-tallupadi,* பெ.(n.) வரி நீக்குகை; tax deduction. *அரிசி, கோதுமைக்கான வரி தள்ளுபடி செய்யப் பட்டது (உ.வ.).*

[வரி + தள்ளுபடி.]

வரிதாளி *vari-tāli,* பெ.(n.) தாளிப்பனை; a kind of palm -*Talipot palm* (சா.அக.).

[வரி¹ + தாளி]

வரிந்துகட்டிக்கொண்டு *varindukatti-k-kondu,* கு.வி.எ.(adv.) விரைவாக, சண்டை, கலகத்தில் ஈடுபட; girding up one's loins. *என்ன சொல்லி விட்டேன் என்று வரிந்துகட்டிக்கொண்டு சண்டைக்கு வருகிறாய் (இக்.வ.). தேர்தலுக்குக் கட்சிகள் வரிந்துகட்டிக்கொண்டு நிற்கின்றன (இ.வ.). நண்பர் திருமணத்தில் வேலைகளை வரிந்துகட்டிக் கொண்டு செய்தார் (உ.வ.).*

[வரிந்து + கட்டிக்கொண்டு.]

வரிந்துகட்டு¹-தல் *varindu-kattu-,* 5 செ. குன்றாவி.(v.t.) 1. இறுக்கிக்கட்டுதல்; to bind tightly. 2. தீவிரத் தன்மை காட்டுதல்; to girde up one's loins voluntarily.

[வரி → வரிந்து + கட்டு-.]

கள் → கட்டு. வரிந்து கட்டுதல் என்பது ஒன்றோடொன்றை இறுக்கிப் பிணைத்துக் கட்டுதலாகும்.

வரிந்துகட்டு²-தல் *varindu-kattu-,* 5 செ.கு.வி.(v.i.) வேலைக்கு ஆயத்தமாதல் (இ.வ.); to prepare for work, as by tying one's loin-cloth.

[வரி → வரிந்து + கட்டு-.]

வரிந்துவரிந்து *varindu-varindu,* வி.அ. (adj.) விடாது; தொடர்ந்து வருதல்; un interrupted continuous. *'காலையிலிருந்து வரிந்துவரிந்து என்ன எழுதிக் கொண்டிருக்கிறாய்? (உ.வ.).*

[வரிந்து + வரிந்து]

வரிநகக்கொன்னை *vari-naga-k-konnai,* பெ.(n.) புலி உகிரி (நக)க் கொன்னைச் செடி வகையு ளொன்று; cassia with re-curved prickles- *Caesalpinia ligulata* - climber (சா.அக.).

வரிநண்டு *vari-nandu,* பெ.(n.) நண்டு வகை; a kind of crab, neptunus pelagicus.

[வரி + நண்டு]



வரிநிழல் *vari-nilal,* பெ.(n.) செறியாத நிழல்; shade interspersed with light. *"மராஅத்த வரிநிழ லசைஇ" (சிறுபாண். 12).*

மறுவ. கோட்டு நிழல்.

[வரி¹ + நிழல்]

வரிநுணல் *vari-nunal,* பெ.(n.) வரிக் கோடுகளையுடைய தவளை; striped frog. *"உடும்பு கொரீஇ வரிநுணல் அகழ்ந்து" (நற் -59.1.).*

[வரி¹ + நுணல்]

வரிநுதல்யானை *vari-nudal-yāṉai,* பெ.(n.) அழகிய புள்ளிகள் பொருந்திய நெற்றியை யுடைய யானை; elephant, which has beautiful spotted fore-head. *"வெண்ணெல் அருந்திய வரிநுதல்யானை தண்ணறும் சிலம்பில் துஞ்சும்" (நற்.7-7-8).*

[வரி[1] + நுதல் + யானை]

வரிநெல்லி *vari-nelli,* பெ.(n.) அரிநெல்லி; a small tree - *phyllanthus distichus* (சா.அக.).

[வரி + நெல்லி.]

வரிக்கோடுகளையுடைய சிறு நெல்லி. பித்த நோய்க்கு உகந்தது. ஊட்டச் சத்துடையது.

வரிப்படலம் *vari-p-paḍalam,* பெ.(n.) கருவிழியின் மீது கயிறு போல் செவ்வரிகளுடன், குத்தல், புகைச்சல், இவைகளை உண்டாக்கும் ஓர் கண்ணோய்; an eye disease affecting the black of the eye (சா.அக.).

[வரி[1] + படலம்]

வரிப்படாத்தி *vari-p-paḍātti,* பெ.(n.) வெள்விழியில் வலைக் கண்களைப் போல் சதை வளரும் ஓர் வகைக் கண்ணோய்; an eye disease developing a net work of morbid growth in the pupil of the eye (சா.அக.).

[வரி[1] + படாத்தி]

வரிப்படிரம் *vari-p-paḍiram,* பெ.(n.) சந்தனம்; sandal (சா.அக.).

[வரி[1] + படீரம் →படிரம்]

வரிப்பணம் *vari-p-paṇam,* பெ.(n.) குடிகள் செலுத்தும் வரி (வின்.); money-tax.

மறுவ. குடியிறை

[வரி[5] + பணம்[2]]

வரி வகையுளொன்று.

வரிப்பளு *vari-p-paḷu,* பெ.(n.) வரிச்சுமை பார்க்க; see *vari-c-cumai. சில்லறை வணிகர், வரிப்பளுவினால் தொல்லை யுறுகின்றனர் (உ.வ.).*

[வரி + பளு→பளுவு.]

அளவிற்கு அதிகமான வரிச்சுமையினால் மக்கள்படும் தொல்லையே வரிப்பளு.

வரிப்பாகுபாடு *vari-p-pāgu-pāḍu,* பெ.(n.) பண்டைக்காலத்தே வழக்கிலிருந்த வரிப் பகுப்பு முறை; classification of tax in ancient days.

[வரி + பாகுபாடு.]

பகு→பாகு.

ஒ.நோ. வகு→வாகு, படு→பாடு.

கீழிறைப் பாட்டம் (சிறுவரி), மேலிறைப் பாட்டம் என இரு பாலாய்ப் பகுக்கப்பட்டிருந்தன. ஊர்க்கழஞ்சு, குமரக்க சாணம், வண்ணாரப் பாறை தட்டாரப் பாட்டம் முதலியன கீழிறைப் பாட்டமும், வேலிக்காசு, திங்கள் மேராமு, முத்தாவணம், தறிப்புடவை முதலியன மேலிறைப் பாட்டமும் ஆகும்.

நிலவரி : வரிகளுட் சிறந்தது நிலவரி. அதனால் அது சிறப்பாக இறை அல்லது அரசிறை எனப்படும். அதற்குச் செய்க்கடன், காணிக்கடன் என்னும் பெயர்கள் வழங்கின.

அரசனால் விதிக்கப்பட்டவும், ஊரவையாரால் விதிக்கப்பட்டவும், அறமன்றத்தாரால் விதிக்கப் பட்டவும் கோயிலதிகாரிகளால் விதிக்கப்பட்டவும், சிற்றூர்த் தலைவனால் விதிக்கப்பட்டவும் ஆக

ஐவேறு தொகுதிப்பட்டிருந்தன. அக்காலத்து வரிகள், அரசனுக்குச் செலுத்த வேண்டியவை அரசிறையெனப்பட்டன.

சில வரிகள் காசாகவும், சில வரிகள் கூல (தானிய)மாகவும், சில வரிகள் அவ்விரண்டி லொன்றாகவும் செலுத்தப்பட்டன. காசாகச் செலுத்தப்பட்டவை காசாயம் (காசு கடமை) என்றும், அந்தராயப் பாட்டம் என்றும், கூலமாகச் செலுத்தப்பட்டவை மேலடியென்றும், பெயர் பெற்றன. காசு, பணம், பொன், காணம் என இறும் பெயர்களெல்லாம் முன்வகையையும், அரிசி, நெல், நாழி, குறுணி, பதக்கு என இறும் பெயர்களெல்லாம் பின் வகையையும் குறிக்கும். பெரும்பாலும் தொழில் வரிகள் பணமாகவும், நிலவரி இனமாகவும் செலுத்தப்பட்டன. செக்கிறை, தறியிறை, கடைவரி முதலியன ஆண்டுக்கு ஆறு பணமாகும்.

சந்தை, அங்காடி, தெரு, திருவிழா, முதலியவற்றில் பல வகைப் பொருள்கள் விற்கும் சில்லறைக் கடைகட்கு நாள் வரி வாங்கப்பட்டது.

வரிப்பாட்டு *vari-p-pāṭṭu,* பெ.(n.) இசைப் பாட்டு; tune, melody.

[வரி + பாட்டு.]

மூவகை வரிப்பாட்டும்.... இன்ன பிறவுமாகிய நாடகத்தமிழ் பகுதிகளும், சிலப்பதிகாரத்திற் சிறப்பாக அமைந்துள்ளது.

வரிப்பாடல் *vari-p-pāḍal,* பெ.(n.) 1. வரிப் பாட்டு பார்க்க; see *vari-p-pāṭṭu.* 2. இசையோடியைந்த பாக்களிலொரு வகை (சிலப்.6, 35, உரை); one of two classes of musical composition, the other class being known as *iśaiy-aḷavu-pa.*

[வரி + பாடல். பாடு→பாடல்.]

வரிப்பாடல், சிலப்பதிகார அரும்பத உரைகாரர் உரைப்பது:-

"வரிப்பாடலாவது, பண்ணும், திறமும், செயலும் பாணியும், ஒரு நெறியன்றி மயங்கச் சொல்லப்பட்ட, எட்டனியல்பும், ஆறனியல்பும் பெற்றுத் தன் முதலும், இறுதியும் கெட்டு, இயல்பும் முடமுமாக, முடிந்து கருதப்பட்ட சந்தியும் சார்த்தும், பெற்றும் பெறாதும் வரும். அதுதான் தெய்வஞ்சுட்டியும், மக்களைப் பழிச்சியும் வரும்" (அரும்.சிலம்பு.7:19).

வரிப்பாரை *vari-p-pārai,* பெ.(n.) செம்பாரை; horse-mackerel.

[வரி ' + பாரை]

வரிப்பிடித்தம் *vari-p-piḍittam,* பெ.(n.) அரசு குறித்த வருமானத்திற்கு அதிகமான வருவாயிலிருந்து கழிக்கும் தொகை; tax deduction at the source or income.

[வரி + பிடித்தம். பிடி→பிடித்தம் = கழிவு.]

வரிப்பிரோத்தம் *vari-p-pirōttam,* பெ.(n.) சதகுப்பை (மலை.); dill seed (சா.அக.).

வரிப்பிரோதிகம் *vari-p-pirōdigam,* பெ.(n.) வரிப்பிரோத்தம் பார்க்க; see *vari-p-pirōttam*(சா.அக.).

[வரி ' + பிரோதிகம்]

வரிப்பிளந்தெழுது-தல் *vari-p-piḷandeḻu-,* 5 செ.குன்றாவி.(v.t.) கையெழுத்து வரியில் இடைச்செருகி எழுதுதல்; to inter line, to insert in a line.

[வரி ' + பிளந்து + எழுது-.]

வரிப்பிளப்பு *vari-p-piḷappu,* பெ.(n.) ஆவணங்களில் இடைச்செருகி எழுதுவது; interlineation, an addition in between in a sentence, in deeds.

[வரி ' + பிள→பிளப்பு]

வரிப்பிளவை *vari-p-piḷavai,* பெ.(n.) வரிப் பிளப்பு பார்க்க; see *vari-p-piḷappu.*

[வரி + பிள→பிளவை.]

வரிப்பீகி *varippīgi,*பெ.(n.) பேய்க் கும்மட்டி; a creeper, citnillus colocynthis (சா.அக.).

வரிப்பீர்க்கு *vari-p-pīrkku,*பெ.(n.) வரியுள்ள பீர்க்கங்காய்; ribbed sponge gourd, used as vegetable-*Luffa acutangula.*

[வரி[1] + பீர்க்கு]

வரிப்புலி *vari-p-puli,* பெ.(n.) வேங்கைப்புலி (வின்.); bengal tiger.

[வரி[1] + புலி. வரி = கோடு.]



வரிப்புறம் *vari-p-puṟam,*பெ.(n.) அணில் வகை (பிங்.); striped squirrel.

[வரி[1] + புறம்[2]. வரி = கோடு.]

வரிப்புறா *vari-p-puṟā,* பெ.(n.) ஒரு வகைப் புறா; a kind of dove (சா.அக.).

[வரி[1] + புறா]

வரிப்பூச்சு *vari-p-pūccu,*பெ.(n.) செங்கல் வரிசைகளுக்கிடையே பூசப்படும் சாந்துப் பூச்சு; paste of lime or cement, sand water, mortar.

[வரி[1] + பூச்சு]

செங்கல் வரியினை மறைக்கும் பூச்சு.

வரிப்பூனை *vari-p-pūṉai,*பெ.(n.) காட்டுப் பூனை வகை; rusty-spotted cat.

[வரி[1] + பூனை]

காட்டுப்பூனை. இராக்காலங்களில் கோழிகளைத் தெரியாமல் தூக்கிப் போகும், பூனை வகையே வரிப்பூனையாகும்.

வரிப்பொத்தகக்கணக்கு *vari-p-pottaga-k-kaṇakku,*பெ.(n.) 1. வரிப் பொத்தகத்தில் வரவு – தரவு முதலான விளத்தங்களை யெழுதும் அதிகாரி; revenue officers in ancient times. 2. வரிப் பொத்தகம் பார்க்க; see *varip-pottagam.*

[வரி + பொத்தகம் + கணக்கு.]

வரிப்பொத்தகம்[1] *vari-p-pottagam,* பெ.(n.) அரசுக்குரிய வரி முதலானவற்றிற்குரிய கணக்குப் புத்தகம்; a denegab or a register, a kind of village account indicating Good tax or cess, patta, survey no etc. *இப்புத்தகத்தில் வரவு, தரவு விளத்த(விவர)ங்களை எழுதும் அதிகாரி, 'வரிப் பொத்தகக் கணக்கர்' என்று பெயர் பெறுவர். "வரிப்பொத்தகம் சாத்தனூருடையான் குமரனரங்கனும், பருத்தியூர்க் கிழவன் சிங்கன் வெண்காடனும் இருந்து, வரியிலிட்டுக் கொடுத்த ஆனைமங்கலம்" (பெரிய லெய்டன் செப்பேடுகள்). "இவ்வூர் ஆயமும் அந்தராயத்தால் காசு நெல் உள்பட தேவதானமாகக் கொடுத்தோமென்று வரியிலார்க்கும், வரிப்பொத்தகஞ் செய்வார் கட்கும் சொன்னோம்" (S.I.I. Vol. VII-538).*

"வரிநெடும் பொத்தகத்து" (கோயில் நான்மணிமாலை).

த. பொத்தகம்; **Skt.** புஸ்தக; இந்தி. புஸ்தக்.

[வரி¹ + பொத்தகம்]

வரிப்பொத்தகம்² *vari-p-pottagam,* பெ.(n.) **1.** அரசிறைக் கணக்குக்குறிப்பு (கல்.); tax register. 2. ஒரு பழைய அலுவல் (உத்தியோகம்) (T.A.S., i, 166); an ancient office.

[வரி⁵ + பொத்தகம்¹]

ஒருகா. நிலவரிக்கணக்கன்

வரிபரந்தமணல் *vari-paranda-maṇal,* பெ. (n.) கருமணல்; black sand (சா.அக.).

[வரி¹ + பரந்த + மணல்]

வரிபாதி *vari-pādi,* பெ.(n.) வரிக் கொன்றை பார்க்க; see *vari-k-konrai* (சா.அக.).

வரிபுனைபந்து *vari-puṇai-pandu,* பெ.(n.) வரிகள் நிறைந்த பந்து; striped ball. *"வரிபுனை பந்தொடு வைஇய செல்வோள்" (நற்–12–6).*

[வரிபுனை + பந்து.]

கோடுகள் நிறைந்த பந்து.

வரிபோடு–தல் *vari-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) குடியிறை விதித்தல் (வின்.); to impose or levy a tax.

[வரி⁵ + போடு–.]

வரிமணல் *vari-maṇal,* பெ.(n.) அறலினை யுடைய மணல்; sands on the shore, with streakes formed thereon by the action or movements of waves. *"வரிமண லகன்றிட்டை" (பட்டினப். 60).*

மறுவ. அரிமணல்.

[வரி¹ + மணல்]

வரிமணி *vari-maṇi,* பெ.(n.) பரவமகளிர் அணியுங் கழுத்தணி வகை; a necklace or neck-ornament, worn by parava-women.

[வரி¹ + மணி]

வரிமப்பு *vari-mappu,* பெ.(n.) வரிவரியாகத் தோன்றும் மேகம், இது கடுமையான காற்று வீசப்போவதற்கு அறிகுறி; scattered cloud being symptoms for storm or tempest or strong winds.

மறுவ. வரிமுகில்

[வரி + மப்பு.]

வரிமனை *vari-maṇai,* பெ.(n.) மணல் வீடு; sand house. *"வரிமனை புகழ்ந்த கிளவியன் யாவதும் மறுமொழி பெறா அன் பெயர்ந்தனன்" (அகம் – 250 – 8–9).*

[வரி¹ + மனை]

வரியங்கம்¹ *vari-y-aṅgam,* பெ.(n.) வெள் வரியங்கம்; dalbergia paniculata (சா.அக.).

வரியங்கம்² *vari-y-aṅgam,* பெ.(n.) பன்றி வாகை (L.); tube-in-tube wood.

[வரி¹ + அங்கம்]

வரியச்சு *vari-y-accu,* பெ.(n.) எழுதுங் தாளி (காகிதத்தி)னடியில் வைத்துக்கொள்ளும் கறுப்புக் கோடிட்ட தாள் (வின்.); black-lined sheet placed under the writing paper to lime writing.

[வரி¹ + அச்சு. அட்டு→அச்சு.]

வரியணி *vari-yaṇi,* பெ.(n.) கோடுகள் பொருந்திய அணிகலன்; striped jewells. *"குருதி ஒப்பின் கமழ் பூங்காந்தள் வரியணி சிறகின் வண்டுண மலரும்" (நற்-399-2-3).*

[வரி + அண் → அணி.]

வரியதிகாரி *vari-yadigāri,* பெ.(n.) வரி மதிப்பீடு செய்யும் அரசு அதிகாரி; tax officer.

[வரி + அதிகாரி. அதிகாரம் → அதிகாரி = வலிமை, ஆட்சி.]

வரியம் *variyam,* பெ.(n.) பெருஞ்சூலி; a tree (சா.அக.).

வரியரிசி *vari-y-ariši,* பெ.(n.) சீரகம் (மலை.); cumin.

[வரி[1] + அரிசி]

வரியாட்டு *vari-y-āṭṭu,* பெ.(n.) வரியாத்து, இரேவல் சின்னி; rhubarb root-*Rheum emodi* (சா.அக.).

[வரி[1] + ஆட்டு]

வரியாடல் *vari-y-āḍal,* பெ.(n.) எழுதுகை (அக.நி.); writing, penning.

[வள் → வரி + ஆடல்.]

வரியாத்து *vari-y-āttu,* பெ.(n.) வரியாத்துக் கிழங்கு பார்க்க; see *variyāttu-k-kilangu* (சா.அக.).

வரியாத்துக்கிழங்கு *vari-y-āttu-k-kilangu,* பெ.(n.) இரேவற்சின்னி (யாழ்.அக.); rhubarb.

[வரியாத்து + கிழங்கு]

வரியாரோத்தம் *variyā-rōttam,* பெ.(n.) வரிப்பிரோத்தம் பார்க்க; see *vari-p-pirōttam* (சா.அக.).

மறுவ. சதகுப்பை

வரியான் *variyāṉ,* பெ.(n.) 1. ஆதன் (சீவன்) முத்தருள் பிரமவரியார் வகையினன் (கைவல். தத். 94); person belonging to the pirama *variyār* class of *civaṉ-mutter* or attained saints. 2. ஓகம் இருபத்தேழனு ளொன்று (பஞ்.); a division of time, one of 27 ōgam.

வரியிலந்தை *vari-ilandai,* பெ.(n.) இலைச் சாற்றில் வெங்கார வகை; a kind of jujub. It's leaves juice is said to consolidate borax (சா.அக.).

[வரி[1] + இலந்தை]

வரியிலார் *variyilār,* பெ.(n.) அரசிறை அலுவலர் (கல்.); revenue officers in ancient times. *"நம் வரியிலார் வரியிலேயிட்டு" (S.I.I.iii, 36). "இவ்வூர் ஆயமும், அந்தராயத்தால் காசு, நெல் உள்பட தேவதானமாகக் கொடுத்தோமென்று வரியிலார்க்கும் வரிப்பொத்தகம் செய்வார்க்கும் சொன்னோம்" (S.I.I. VII.538).*

[வரி + இல் (இடைச்சொல்) + ஆர்]

வரிவிதிப்பவர் என்பார் திரு.சி.கோவிந்த ராசனார். ஆனால் மொழிஞாயிறு தமது பழந்தமிழாட்சி என்னும் நூலில், தலைநகரிலும், ஊர்களிலும் தண்டப்பட்டு வந்த வரித் தொகைகளைக் கணக்கிற் பதிவு செய்வோர் என்பார்.

இறை, கடமை, ஆயம் உள்ளிட்ட வரிகளை நேரிற்கண்டு, கணக்கிடும் அதிகாரி.

வரியிலிடு¹–தல் *variyil-iḍu-*, 20 செ. குன்றாவி.(v.t.) சிற்றூரில் (கிராமத்தில்) உள்ள நில அடங்கலிற் புதிய நிலவரிகளைப் பதிவு செய்தல்; to register new taxes in the village land revenue records or accounts. *"இவ்வூர் சபையார்க்குக் காசு கொடுத்து விலைக்கு கொண்டு சில சரணசேகர நல்லூர் என்னுந் திருநாமத்தால் வரியிலிட்டு இந்நிலம் ஐவேலிக்கும்" (திருவாலீசுவரம் கல்வெட்டு).*

[வரி + இல் + இடு–.]

வரியிலிடு²–தல் *variyil-iḍu-*,20 செ.கு.வி. (v.i.) வரிப்பொத்தகத்திற் பதிதல் (S.I.I. Vol. III, 115); to enter in the revenue register.

[வரி + இல் + இடு]

வரியிலீடு¹ *variyil-īḍu*, பெ.(n.) 1. வரிப் புத்தகம்; tax register. 2. புதிய வரிகளை நிலவரி கணக்கில் சேர்க்கும் அதிகாரி; a revenue officer responsible to add new taxes in law revenue accounts. *"வரியிலீடு உறுவூருடையான் தாழி வீரசோழன்" (பெரிய லெய்டன் செப்பேடுகள்).*

[வரி + இல் + ஈடு]

வரியிலீடு² *variyilīḍu*, பெ.(n.) 1. வரிப் பொத்தகத்திற் பதியும் பதிவு; entry in the revenue register. 2. வரிப் பொத்தகத்திற் பதியும் பழைய பதவி; office of keeping the revenue register. *"வரியிலீடு பாவையுடையானும்" (S.I.I. Vol.i, 16).*

[வரியிலிடு → வரியிலீடு]

வரியுரிமைசெய்–தல் *vari-y-urimai-šey-*, 1 செ.குன்றாவி.(v.t.) ஊரவை வழிபெறும் வரிமகமைகளை அவ்வூர்க் கோவில் திருப்பணிக்கு உரிமை செய்யும் அரசு ஆணை; a Government order conforming rights to village temples from tax collected by village committee. *பொத்தப்பிச் சோழன் ஆட்சியில் மணிமங்கலம் கோயில் திருப்பணிக்கு விடப்பட்டுள்ளது. "அனைத்து ஆயங்களும் திருப்பணிக்கு உடலாகவிட்டோம். இன்னாள் முதல் இன்னிலத்தால் வந்த அளைத்தாயங்களும் ஊருடன் கூட்டாதொழிவதாகச் சொன்னோம்" (S.I.I. Vol. VI. 256).*

[வரிகளை + திருப்பணிக்கு + உரிமை + செய்தல்]

வரியூமத்தை *vari-y-ūmattai*, பெ.(n.) ஊமத்தஞ் செடிவகையுளொன்று; a kind of dhatura, a devil's apple variety (சா.அக.).

[வரி + உன்மத்தம் → ஊமத்தை]

வரியெழுச்சிரோகம் *vari-y-eḻucci-rōgam*, பெ.(n.) வெள் விழியில் தேமலைப் போல் வட்டமாகத் தசையைப் பரவச் செய்யும் ஓர்வகைக் கண்ணோய்; an eye disease affecting the white part of eye ball marked by morbid growth of flesh on the white coat of the eye (சா.அக.).

*[வரியெழுச்சி + **Skt.** rōga> த. ரோகம். வரியெழுச்சி = வெள்விழியில் வரிவரியாக வளரும் தசை வளர்ச்சி.]*

வரியேய்ப்பு *vari-y-ēyppu*, பெ.(n.) சட்டப்படி அரசுக்குச் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்தாமல் ஏமாற்றுதல்; tax evasion. *வரியேய்ப்பு செய்பவர், நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுபவர் ஆவர் (இ.வ.).*

[வரி + ஏய்ப்பு]

வரியொட்டி *vari-y-oṭṭi,* பெ.(n.) மீன் வகை (வின்.); a kind of fish.

[வரி[1] + ஒட்டி]

ஒட்டி = ஒட்டு மீன் வகையைச் சார்ந்தது.

வரியோரா *vari-y-ōrā,* பெ.(n.) கரு வெண்மை கலந்த கபிலநிறமும், செந்நிறப் புள்ளிகளுமுடைய கடல்மீன் வகை (யாழ்.அக.); sea fish, dark greyish-brown covered with light orange spots.

[வரி + ஒரா. 'ஒரா' வெண்ணுங் கடல் மீன்வகையு ளொன்று.]



வரியோலை *vari-y-ōlai,* பெ.(n.) உடன்படிக்கை ஆவணம்; deed of agreement. *"வரியோலை யெழுதி வைத்தபடி" (பெரிய லெய்டன் செப்பேடுகள்).*

[வரி[2] + ஒலை]

வரிவகைகள் *vari-vagaigaḷ,* பெ.(n.) பழங்காலத்தில் குடிகள் செலுத்திய வரி வகைகள்; the various kinds of tax in ancient period.

[வரி + வகைகள்]

கழகக்காலத்தில், குடிகள் செலுத்திய வரிவகைகளாகப் பாவாணர் பழந்தமிழாட்சி என்னும் பனுவலுள் குறித்துள்ளது வருமாறு :–

அரசியல் வருவாய்களுள் நிலையானதும் முதன்மையானதும் குடிகள் செலுத்தும் வரியே. அது, நிலவரி, நீர்வரி, மனைவரி, தொழில் வரி, ஆள் வரி (Poll tax), விலங்கு வரி, பொருள் வரி, உய்ப்பு வரி, மணவரி, தண்ட வரி, கோயில் வரி, கொடைவரி, ஊழியப்பேற்று வரி, படைவரி, காட்சி வரி, கருவூல வரி, காசடிப்பு வரி எனப் பல திறத்தது.

நீர் வரி, விளைநிலங்கட்கு நீர்நிலைகளி னின்று நீரைப் பாய்ச்சிக் கொள்வதற்குச் செலுத்தும் வரி. அது ஏரிகுளப் பாய்ச்சலுக்குரியதாயின், நிலைநீர்ப்பாட்டம் என்றும், ஆற்றுப் பாய்ச்சற்குரிய தாயின், ஒழுகு நீர்ப்பாட்டம் என்றும் பெயர் பெறும். இனி, நன்னீர், புன்னீர் எனவும் வேறுபாடுண்டு. தொழில் வரி, உழவொழிந்த பிற தொழில்கட்கு வாங்கப்படுவது, விலங்குவரி, ஆடு, பெற்றம் (பசு), எருது, எருமை முதலிய விலங்குகட்கு வாங்கப்படுவது. உய்ப்பு வரி, நிலத்திலும் நீரிலும் பொருள்களை உய்த்தற்குச் செலுத்துவது. அது, ஆயம், உல்கு, சுங்கம் என்னும் பெயர்களாற் குறிக்கப்பெறும். மணவரி, திருமணத்திற்கு விதிக்கப்படுவது. அது அரைக்கால் பணமாகும். தண்டவரி, குற்றவாளிகட்குத் தண்டமாக விதிக்கப்படுவது. கொடைவரி, அரசன் அந்தணர்க்குச் செய்யும் பெருங்கொடைகட்குத் தண்டப்படுவது. ஊழியப்பேற்று வரி, ஊரவையார் பாடி காவலன் முதலியவரின் சம்பளத்திற்காகத் தண்டப்படுவது. பாடி ககாவலன் சம்பளத்தை அவனே தண்டிக் கொள்ள உத்தர விருந்தது. அவன் சம்பளம், நன்செய் விளைவில் மாவிற்கு ஒரு கலமும், புன்செய் விளைவில் மாவிற்கு ஒரு பணமும், கமுகிற்கு மரம் ஒன்றுக்கு வீசம் பணமும், கரும்பு, மருக்கொழுந்து, இஞ்சி, எள், வாழை ஆகிய வெள்ளாண்மையில் மாவிற்கு ஐந்து பணமும், வீட்டிற்கு ஆண்டுக்கு இரண்டு பணமும் ஆகும்.

அக்காலத்துக் குடிகளிடத்தில் வாங்கப்பட்ட வரிகளாகத் தேவநேயர் பழந்தமிழாட்சி என்னும் பனுவலுள் பகர்ந்துள்ளது :–

அங்காடிப் பாட்டம் (அங்காடிக்கூலி), அச்சுவரி, அட்டுக்கிறை, அடிகாசு, அடிமைக் காசு, அணியிடுவான் வரி, அதிகரணத்தண்டம், அதிகாரப்பேறு (அதிகாரப் பொன்), அரிகொழி, அரிநட்டி, அரிவாட்பதக்கு, அருந்தோடு, அரைக்கால்வாசி, அழகெருது, அழகெருது காட்சிக் காசு (காட்சியெருதுகாசு), அழுகற்சரக்கு, அள்ளுக்காசு, அளியிடுவான் வரி, அனுப்பு, ஆசுகவிகள் காசு (ஆசீவக் காசு), ஆசவக் கடமை, ஆட்டைச் சம்மாதம் (ஆட்டைக் காணிக்கை), ஆண்டெழுத்துத் தேவை, ஆத்திறைப் பாட்டம், ஆதிரைப் பிள்ளையார் நோன்பு, ஆள்நெல், ஆற்றுக்குலை, ஆற்றுப்பாட்டம், இடைப்பாட்டம் (இடைப்பூட்சி, இடைவரி), இராசசுரங் காணிக்கை, இருபதக் கட்டி, இலாஞ்சினைப் பேறு, இறைகாவல், இறைச்சோறு, இனவரி (இனக்காசு), ஈழப்புன்செய் (ஈழம்பூட்சி), ஈழற்கடி வரி, உகப்பார் பொன் (உகவைப் பொன்), உப்பாயம் (உப்புக்காசு, உப்புகோச்செய்கை), உபயம் (உபய மார்க்கம்), உரல்வரி, உல்லியக் கூலி, உலாவு காட்சி, உவச்சவரி, உழுதான் குடி, உள்வரி, உறுபாதை, உறுவுகோல், நிலன்காசு, ஊசிவாசி, ஊத்தைப் பாட்டம், ஊர்க்கணக்கர் சீவிதம் (ஊர்க்கலனை, ஊர்க்கழஞ்சி) ஊர்ச்சரிகை, ஊராட்சி, ஊரிடு வரிப்பாடு, ஊரெட்டு, எட்கடமை (எக்கடமை), எடுத்துக்கொட்டி, எடைவரி, எருமைப் பொன், எழுவை, ஏணிக்காணம், ஏர்க்காடி, (ஏர்ப்பொன், ஏர்க்காணிக்கை), ஏரியாயம், ஏல்வை, ஒட்டிதற் கடமை, ஒட்டச்சு, ஓடக்கூலி, கடையடைக்காய், கடையிறை, கண்காணி, கண்காணி கணக்கர் முதல், கண்கூலி, கண்ணாலக் காணம் (கலியாணக் கானம்), கண்ணிட்டுக் காணம் (கண்ணேட்டுக் காணம்), கணக்கப்பேறு (கணக்கிலக்கை), கதிர்க்காணம், கருவூல வரி, காட்டாள் காசு, காண வட்டம், காணி வெட்டி, காரியவாராய்ச்சி, காலத்தேவை, காவல் பரப்பு (காவற் பேறு), கீழ்வாரப் பச்சை, குசக்காணம், குடநாழிக் குடிமை (குடிக்காசு, குடிக்காணம், குடியிறை), குதிரை வரி, குதிரை விலாடம், குமாரக்கச்சாணம், குலை வெட்டி, கூலம், கூற்று நெல், கெடுபாதை, கேள்விமகமை, கைக் கணக்கு முதல், கையேற்பு, கொடிக் கடமை, கொட்டைக் கூலி, கோள்நிறை கூலி, சண்டாளப் பேறு, சந்திவிக்கிரகப் பேறு, சாட்டு வரி, சிறுபாடி காவல், சூலவரி (சூலவரிப் பொன்), செக்கிறை, செக்கு மன்றாடி, செங்கொடிக் காணம், சென்னீர் வெட்டி, சென்னீரமஞ்சி, சேவகக் காசு, சோறுமாடு, தசவந்தம் தட்டடுவு, தட்டாரப் பாட்டம் (தட்டுக்காயம், தட்டொலி) தடிப்பதக்கு, தண்டல்மேனி (தண்டலிற் கடமை, தண்டவிலக்கை, தண்டற் கடமை), தண்ட நாயகர் மகமை, தண்டாளர் முதல், தரகு (தரகு பாட்டம்), தலையாரிக்கம், தலைவிலை, தறியிறை (தறிப் புடைவை), தனப்பணம், தாட்பிடியரிசி (தாப்படியரிசி), தானமானியம், திருமுன் காட்சி, திருமுகக் காணம், திங்கள் மேராமு, திங்கட் சோறு, திங்கள் நெய், திங்கள் மோகம், திரைக்காசு, துலாக் கூலி, துலாபார வரி, தேவ குடிமை, தோணிக் கடமை, தோரணக் காணிக்கை, தோலொட்டு, நத்த வரி, நல்லா (நற்பசு), நல்லாடு, நல்லெருது, நல்லெருமை, நற்கிடா, நாட்டுக் காணிக்கை (நாட்டு வரி, நாட்டு வினியோகம்), நாட்டு பாதி, நாடு காவல், நாடு தல வாரிக்கை, நிலக்காணிக்கை, நீர்க்கூலி, நீர்நிலக் காசு, நெட்டாள், நெய்விலை, பச்சைப் பணம், பஞ்சுப்பீலி, பட்டடை வரி, பட்டிக்காடி, பட்டிக்கால், பட்டிகைக் காணம், பட்டித் தண்டம் (பட்டிப் பொன்), பட்டோலைக் காசு, படாங்கழி, படைப்பணம் (படையிலார் முறைமை), பண்குறுணி, பண்டவெட்டி, பண்ணிக் கூலி, பணவாசி, பணிக்கொத்து, பதுவாரம், பறைத்தறி, பறையிறை, பன்மை, பாசிப்பாட்டம், பாடி காவல், புத்தகம், புதாநாழி, புட்டக விலை, புரவுநெல், புலவரி, புழுகு

கடமை, புறக்கடமை (புறக்கலனை), புறம்பு, புறவெட்டி (பேர்க் கடமை, பேர் வரி), பொற்பூ, பொன்வரி, மடக்கு வரி, மண்மதில், மதில் தேவை, மந்தைப் பணம், மரமச் சாதி விலை, மனைப் பணம், மாட்டுக்கறை, மாடைக் கூலி, (மாடைக் காசு), மாதப்படி (மாதாரிக்கம்), மாப்பட்டடை, மாப்பணம், மாப் பதக்கு, மாமகம், மாவிறை, முத்தாவணம், முதற்றிரமம், முப்பறமுந்நாழி, முழுவரிமை, முன்னிடும் பணம், மேராழி, வகைப்பேறு, வட்டி நாழி, வண்ணாரப் பாட்டம் (வண்ணாரப் பாறை), வலங்கையிடங்கை மகன்மை, வழி நடடைக்கிடும் பணம், வாசல் பணம் (வாசல் பேறு), வாடாக் கடமை, வாய்க்கால் பாட்டம், வாரக் காணம், விடைப் பேர், வினியோகம், வீட்டுத் தேவை, வீரசேசை, வீரசேலை, வெட்டி (வெட்டிக்காசு, வெட்டிப் பாட்டம், வெட்டி வரி, வெட்டி வேதினை), வெள்ளாண் வெட்டி, வெள்ளை வாரி, வேண்டுகோள் வரி, வேய்நெல், வேலிக்காசு, மடக்கு வரி.

இங்குக் கூறப்பட்ட வரிகளெல்லாம் எல்லாக் காலத்தும், எல்லாவிடத்தும், எல்லாரிடத்தும் வாங்கப்பட்டவையல்ல. வேறு வரி குறிப்பன போல் தோன்றும் பல பெயர்கள் ஒரே வரி குறிப்பனவாகும்.

வரி வகைகள் குறித்துப் பாவாணர் "பழந்தமிழாட்சி" நூலுள் பகரும் ஆய்வுக்கருத்து:–

"சங்ககாலத்து வரிகளினும், பிற்காலத்து வரிகள், மிகப் பலவென்றும், இக்காலத் திலில்லாத ஆள்வரி, மணவரி, துலாபார வரி முதலிய சில விதப்பு வரிகள் அக்காலத்திருந்தன வென்றும் அறிதல் வேண்டும். ஆள்வரி சோழநாட்டில் முன்னியூர் தவிரப் பிறவூர்களில் கூனர், குறளரிடத்தும் வாங்கப்பட்டதாகத் தெரிகின்றது" (பழந்தமிழாட்சி. பக்.67).

வரிவசிதம் *vari-vašidam,* பெ.(n.) குற்றேவல் (யாழ்.அக.); personal service, attendance, as on a guru.

*[வரி + **Skt.** vasita → த. வசிதம்]*

வரிவடிவம் *vari-vaḍivam,* பெ.(n.) வரிவடிவு பார்க்க; see *vari-vaḍivu.*

[வரி + வடிவு → வடிவம். மொழியில் உள்ள ஒலிகளை எழுதுவதற்கான வடிவம்.]

வரிவடிவு *vari-vaḍivu,* பெ.(n.) ஒலியெழுத்திற்கு அறிகுறியான கீற்று வடிவு (நன்.97, மயிலை.); written character; written symbol of an articulate sound, dist. fr. *oli-vaḍivu.*

[வரி¹ + வடிவு]

செவிப்புலனான, ஒலியைக் கட்புலனாக்கும் குறியே, வரிவடி வென்க.

வரிவம் *varivam,* பெ.(n.) தண்ணீர் விட்டான்; a prickly climber; water root - *Asparagus racemosus* (சா.அக.).

வரிவம்மமௌலி *vari-vamma-mouli,* பெ.(n.) கற்றாழை; aloe (சா.அக.).

வரிவயம் *vari-vayam,* பெ.(n.) புலி; tiger, as stripped. *"வரிவயம் பொருத வயக்களிறு போல" (புறநா. 100).*

[வரி¹ + வயம்¹]

ஒ.நோ. வயமா.

வரிவரி *vari-vari,* பெ.(n.) தண்ணீர் விட்டான் (தைலவ.) கொடி; climbing asparagus.

வரிவரிசு *vari-varišu,* பெ.(n.) சீரகம்; cumin seed - *Cuminum cyminum* (சா.அக.).

வரிவரிமணலி *vari-vari-maṇali,* பெ.(n.) கற்றாழை (சங்.அக.); aloe.

[வரி¹ + வரி¹ + மணலி]

வரிவலை *vari-valai,* பெ.(n.) வலை வகையு ளொன்று (நற்றிணை. 111); a kind of net.

[வாரிவலை→வரிவலை]

வரிவழி *vari-vaḻi,* பெ.(n.) வரிவம் பார்க்க; see *varivam* (சா.அக.).

மறுவ. தண்ணீர்விட்டான்

[வரி¹ + வழி]

வரிவழுக்கை *vari-vaḻukkai,* பெ.(n.) ஓர் வகை வழுக்கை; a baldness (சா.அக.).

[வரி¹ + வழுக்கை]

வரிவள்ளி *vari-vaḷḷi,* பெ.(n.) வெற்றிலை வள்ளிக் கொடி; a climber (சா.அக.).

[வரி¹ + வள்ளி]

வரிவளி *vari-vaḷi,* பெ.(n.) வரிவம்மமௌலி பார்க்க; see *vari-vamma-mouli* (சா.அக.).

மறுவ. கற்றாழை

[வரி¹ + வளி]

வரிவளை *vari-vaḷai,* பெ.(n.) வளையல் வகையுளொன்று; a kind of bangles. *"கோல்வளை கழல்வளை வரிவளை யென்னுமா போலே" (திவ். பெரியாழ். 3, 4, 8. வ்யா. பக். 618).*

[வரி¹ + வள் →வளை]

வரிவனம் *vari-vaṉam,* பெ.(n.) தில்லைமரம் (மலை.); blinding tree.

[வரி¹ + வனம்]

வரிவாளம் *vari-vāḷam,* பெ.(n.) சுவர் மற்றும் இணைப்புகளிற் பூசப்படும் பூச்சு வேலை; plastering of walls and joints.

[வரி¹ + வாளம்]

வரிவிதி–த்தல் *vari-vidi-,* 4 செ.குன்றாவி. (v.t.) வரிபோடு–தல் பார்க்க; see *vari-pōḍu.*

[வரி + விதி–.]

Skt. vidhi → த. விதி.

வரிவிதிப்பு *vari-vidippu,* பெ.(n.) வரி போடுகை; levy. *சென்ற ஆண்டு வரவு–செலவு அறிக்கையில் இன்றியமையாத உணவுப் பொருள்களுக்கு வரிவிதிப்பு தளர்த்தப்பட்டது (உ.வ.).*

[வரி + விதிப்பு.]

வரிவிலக்கு *vari-vilakku,* பெ.(n.) தண்டுவதான அரசிறை ஒதுக்கம்; tax exemption.

[வரி¹ + விலக்கு]

வரிவிளம்பரம் *vari-viḷambaram,* பெ.(n.) செய்தித் தாளில் வகைப்படுத்தப்பட்டு, வெளியாகும், இரண்டொரு வரிகளிலான சிறிய விளம்பரம்; brief classified advertisement with a few lines. *வரி விளம்பரப் பகுதிகள் செய்தித்தாள் உரிமையாளருக்கு, அதிகமான வருவாய் ஈட்டித் தருகின்றன (இ.வ.).*

[வரி + விளம்பரம்]

வரிவேர் *vari-vēr,* பெ.(n.) அதிமதுரவேர்; liquorice root (சா.அக.).

[வரி¹ + வேர்]

வரிவை¹–த்தல் *vari-vai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. குடியிறை விதித்தல் (வின்.); to impose or levy a tax. 2. பொதுநிதி முதலியவற்றிற்காக வீதாச்சாரத் தொகை குறிப்பிடுதல் (இ.வ.); to apportion and levy contributions, as for a common fund.

[வரி⁵ + வை–.]

வரிவை²–த்தல் *vari-vai-*,4 செ.கு.வி. (v.i.) வரிசையாகக் கட்டுதல் (வின்.); to set in a row, as in brick-laying.

[வரி¹ → வை–.]

வரீக்கு *varikku*, பெ.(n.) இசைக் கமக வகை (பூர்.சங்.எ.); a kind of grace in music.

வருக்கம்¹ *varukkam*, பெ.(n.) ஒரு வகை நோய்; a kind of disease (சா.அக.).

வருக்கரை *varukkarai*, பெ.(n.) பலா; jack tree - *Hiterophyllus* (சா.அக.).

வருக்காந்தம் *varu-k-kāndam*, பெ.(n.) நிலாக்கல்; moon stone (சா.அக.).

வருக்கிலங்கெட்டவன் *varukkilaṅ-keṭṭavaṉ*, பெ.(n.) பயனில்லாதவன் (நெல்லை.); useless fellow, used in contempt.

[வரிக்கத்து→வருக்கத்து + கெடு–.]

ஒ.நோ. வாய்க்கிலை கெட்டவன்.

வருக்கு *varukku*, பெ.(n.) கஞ்சி (யாழ்.அக.); gruel.

[வர்க்கு → வருக்கு]

வருக்கை¹ *varukkai*, பெ.(n.) வருக்கைப்பலா பார்க்க; see *varukkai-p-palā*. *"மதுவிம்மு வருக்கையின் சுளையும்" (தேவா. 628, 9).*

ம. வரிக்க.

வருக்கை² *varukkai*, பெ.(n.) 1. இனம், பிரிவு, வகை; class, division, group. 2. உயிர், மெய் முதலிய எழுத்துகளின் இனம் (இலக்.); class of letters of the alphabet, as vowels kindred consonants etc.

[வருக்கம் → வருக்கை]

வருக்கை³ *varukkai*, பெ.(n.) மீன் வகை; a kind of fish. *"திருக்கை வருக்கை" (குருகூர்ப்.7).*



வருக்கைக்கனி *varukkai-k-kaṉi*, பெ.(n.) பலாப்பழம்; jack fruit of Artocarpus integrifolia.

[வருக்கை + கனி. கன்→கன்னு→கன்னி→கனி = பழுத்தல். நன்கு பழுத்துக் கனிந்த பலா.]

வருக்கைப்பலா *varukkai-p-palā*, பெ.(n.) பலாவகையு ளொன்று (நாமதீப. **294**); a species of jack-tree.

[வருக்கம்→ வருக்கை¹ + பலா¹. வருக்கை = ஓரினம்.]

வருகம்¹ *varugam*, பெ.(n.) 1. மயிற்றோகை (யாழ்.அக.); peacock's feather. 2. இலை; leaf.

[பருகம் → வருகம்]

வருகம்² *varugam*, பெ.(n.) பரிவாரம் (யாழ். அக.); train or chain of attendants.

[அருகம் → வருகம்]

வருகம்³ *varugam,* பெ.(n.) வருகை; come in. *"உலமந்து வருகம் சென்மோ தோழி" (அகநா.106 : 9). "உரைத்தனம் வருகம் எழுமதி புணர்திரை" (நற்.88 : 3). 'கண்டனம் வருகஞ் சென்மோ தோழி" (குறுந். 275 : 2).*

[வா→ வரு→ வருகம்]

வருகாலம் *varu-kālam,* பெ.(n.) வருங்காலம்; future. *"வருகாலஞ் செல்கால மாயினானை" (தேவா. 716, 3).*

மறுவ. எதிர்காலம்.

[வா→வரு→வரும் + காலம்.]

வருகூடம் *varukūḍam,* பெ.(n.) பித்தளை; brass (சா.அக.).

வருகை *varugai,* பெ.(n.) வந்தடைகை, வரவு (இ.வ.); advent.

[வள்→வர்→வார்→வரு→வருகை.]

வருகை என்பது வினைப் பெயராகும். இவ்வருகைக் கருத்து தோன்றிய பாங்கினைத் தேவநேயர் வரையறுப்பது வருமாறு:–

"ஒருவன் தன் உறைவிடத்தினின்று அல்லது இருப்பிடத்தினின்று, ஓரிடத்திற்குப் போனபின், அங்கிருந்து உறைவிடத்திற்கு வருவது, முன் பின்னாகத் திரும்பியே யாதலால், திரும்பற் கருத்தினின்றே வருகைக் கருத்துப் பிறந்தது. அதனால் திரும்பற் பொருட் சொல்லினின்றே, வருகைப் பொருட்சொல் தோன்றிற்று" (தேவ.13, பக்.59).

வருகைதருபேராசிரியர் *varugai-taru-pērāśiriyar,* பெ.(n.) பல்கலைக் கழகத்தின் அழைப்பின் பேரில், குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும், பணிமேற்கொள்ள வருகை தரும் பேராசிரியர்; visiting professor, guest faculty.

[வரு→வருகை + தா→தரு + பேராசிரியர்]

வருகைதா(வருகைதரு–தல்) *varugai-tā,* 18 செ.கு.வி.(v.i.) வருதல்; to come, to attend. *நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் வரவேற்கிறோம்.*

[வருகை + தா–.]

வருகைப்பதிவு *varugai-p-padivu,* பெ.(n.) மாணவர், ஊழியர் முதலானோர் தங்களின் வருகையைப் பதிவு செய்தல்; marking attendance by students, workers, etc.

[வருகை + பதிவு]

வருகைப்பதிவேடு *varugai-p-padivēḍu,* பெ.(n.) பணியாளர் தத்தம் வருகையைப் பதிவு செய்வதற்காக உள்ள ஏடு; attendance register. *'அலுவலர்கள் காலையில் வந்தவுடன் வருகைப்பதிவேட்டில் கையெழுத்துப் போட வேண்டும்' (உ.வ.).*

[வருகை + பதிவு + ஏடு]

வருங்கலம் *varuṅgalam,* பெ.(n.) உணவுப் பொருளற்ற ஏனம்; vessel without food, empty vessel. *"பெருங்களந் தொகுத்த வுழவர்போல விரந்தோர் வருங்கல மல்க வீசி" (அகம்.30–8–9).*

[வறுங்கலம்→ வருங்கலம்.]

வருங்காலம் *varuṅ-kālam,* பெ.(n.) 1. எதிர் வருங்காலப் பகுதி; future. *"வருங்கால நிகழ்காலங் கழிகாலமாய்" (திவ். திருவாய். 3, 1, 5). "வருங்காலம் சொல்லும் பல்லி,*

கழுநீர்ப்பானையில் வலியவந்து விழுந்தது போல" (பழ.). 2. எதிர்காலம் (இலக்.); future tense.

மறுவ. எதிர்காலம்.

[வா→வரு + காலம்]

வருங்காலவைப்புநிதி *varuṅgāla-vaippu-nidi,* பெ.(n.) ஊழியரின் மாத ஊதியத்திலிருந்து பிடித்திருக்கும் தொகையும், பணிக்கு அமர்த்திய நிறுவனம் தனது பங்காகச் செலுத்தும் தொகையும் கொண்டு ஏற்படுத்துவதும், பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின் அளிக்கப்படுவதுமான சேமிப்பு; fund created from out of the contributions of the employee and of the employer payable at retirement (in India), provident fund.

மறுவ. எய்ப்பினில் வைப்பு.

[வருங்காலம் + வை→வைப்பு + நிதி]

Skt. nidhi > த. நிதி.

வருங்குறுமாம்புல் *varuṅ-kuṟumām-pul,* பெ.(n.) நெற்பயிரில் காணப்படும் களைப் பயிர்; weeds along with crops in paddy field.

[வரும் + குறுமாம்புல்.]

வருசு *varušu,* பெ.(n.) அமுக்கிரா; a medicinal root-*Withania somnifera* (சா.அக.).

வருஞ்சீவியம் *varuñcīviyam,* பெ.(n.) மறுப்பிறப்பு; the future lie-the future state of existence (சா.அக.).

[வரும் + சீவியம்.]

Skt. jīvya → த. சீவியம்.

வருட்டம்[1] *varuṭṭam,* பெ.(n.) வேம்பு (மலை.); neem-*Margosa.*

[அரிட்டம் → வருட்டம்]

வருட்டம்[2] *varuṭṭam,* பெ.(n.) முட்டை (நாமதீப. 255); egg.

வருட்டு-தல் *varuṭṭu-,*5 செ.குன்றாவி. (v.t.) 1. தேற்றுதல்; to assure, convince. *"பின்னும் பலகால் வருட்டி" (பாரத. சம்பவ. 64). (சூடா.).* 2. பார்வையாலேயே தப்பவியலாதபடி ஈர்த்துப் பிடித்தல் (கவர்ச்சித்தல்); to charm, fascinate. *"வயம்வர வருட்டல் வருவித்திடலகற்றல்" (திருக்காளத். பு.33, 23).*

[முல்→மல்→மர்→மரு→மருட்டு→வருட்டு-.]

வருடகம் *varuḍagam,* பெ.(n.) 1. முடக்கொற்றான் (மலை.); balloon vine. 2. பெருசெந்தொட்டி a plant (சா.அக.).

வருடகேதுச்சம் *varuḍa-kēduccam,* பெ.(n.) மூக்கிரட்டை; spreading hog-weed-boerhavia pnocumbens (சா.அக.).

வருடபுட்பம் *varuḍa-puṭpam,* பெ.(n.) தாழையெனுஞ் செடிவகை; fragrant screw-pine (சா.அக.).

க. தாழெ.

வருடபுட்பி *varuḍa-puṭpi,* பெ.(n.) பேராமுட்டி; a kind of plant-pavonia odonata (சா.அக.).

வருடாபூ *varuḍā-pū,* பெ.(n.) சாரணை; fragrant medicinal creeper-*Tricanthema monogyna* (சா.அக.).

வருடு-தல் *varuḍu-*,5 செ.குன்றாவி.(v.t.) தடவுதல்; to rub, to massage. *"செம்புனல் வந்தங் கடிவருட" (தேவா. 112, 5).*

மறுவ. தைவருதல், சொரிதல்.

[வா→வரு→வருடு-.]

வருடை[1] *varuḍai*, பெ.(n.) அரிமாவையுங் கொல்லும் வலிமையுள்ளதாகக் கருதப்பட்ட (சரபம் என்றழைக்கப்பட்ட) பறவை; fabulous bird capable of killing the lion.

மறுவ. எண்காற்புள்.

[வரு→வருடை.]

வருடை[2] *varuḍai*, பெ.(n.) 1. வரையாடு; mountain sheep. *"வரையாடு வருடைத் தோற்றம் போல" (பட்டினப். 139).* 2. ஆடு (திவா.); sheep. *"தண்டாரணியத்துக் கோட்பட்ட வருடையை" (பதிற்றுப். 6, பதி.). "வேறுவே றினத்த வரைவாழ் வருடை" (அகநா.378 : 6). "போருடை வருடையும் பாயா" (நற். 359 : 8).* 3. மேழவோரை; aries of the zodiac. *வருடையைப் படிமகன் வாய்ப்ப (பரிபா. 11, 5).* 4. சரபம் (பிங்.); a fabulous animal.

[வரு→வருடை.]

வருடை[3] *varuḍai*, பெ.(n.) பொறாமை, மாற்சரியம்; envy, jealosy, malice. *"காமச் செற்றக்குரோத லோபமத வருடை" (தேவா. 1054, 8).*

[வா→வரு→வருடை.]

வருடைமான் *varuḍai-māṉ*, பெ.(n.) வரையாடு (சிலப். 25, 81, கீழ்க்குறிப்பு.); mountain sheep. *"செவ்வாரைச் சேக்கை வருடை மான் மறி" (குறுந். 187), 'வருடைமான் குழவிய வளமலை நாடனை (கலித்.43 : 14).*

[வருடை[1] + மான் : மான் = சொல்லாக்க ஈறு.]

வருணகம்[1] *varuṇagam*, பெ.(n.) திலகமரம்; sanders (சா.அக.).

வருணகம்[2] *varuṇagam*, பெ.(n.) 1. சந்தனம் (சங்.அக.); sandalwood. 2. மஞ்சாடிமரம்; red-wood.

வருணச்சேது *varuṇa-c-cēdu*, பெ.(n.) மாவிலிங்கம்; a sacred tree (சா.அக.).

[வருணம் + சேது]

வருணம்[1] *varuṇam*, பெ.(n.) 1. நீர் (பிங்.); water. 2. சதயநாள் (பிங்.); the 24th naksatra.

[வருண → வருணம்]

வருணம்[2] *varuṇam*, பெ.(n.) மாவிலிங்கம்; sacred tree - garlic pear tree - *Cratacra religiosa* (சா.அக.).

வருணமண்டலம் *varuṇa-maṇḍalam*, பெ.(n.) வருணனது உலகம்; region of *varuṇa*.

[வருணம் + மண்டலம்]

வருணமுனி *varuṇa-muṉi*, பெ.(n.) தண்ணீர் மிட்டான்; a prickly climber-water root (சா.அக.).

வருணமூலம் *varuṇa-mūlam*, பெ.(n.) உலிமடி வேர்; root of garlic pear tree-root of crataeva religiosa (சா.அக.).

[வருணம் + மூலம்]

வருணர்பாட்டியல் *varuṇar-pāṭṭiyal,* பெ.(n.) பாட்டியல் நூல்களில் ஒன்று (இலக். வி. 886, உரை); a work on poetics.

[வருணர் + பாட்டியல்]

வருணவதி *varuṇa-vadi,* பெ.(n.) மஞ்சள் (சங்.அக.); turmeric.

[வருண + வதி]

வருணவுலிமிடி *varuṇa-ulimiḍi,* பெ.(n.) கருப்பு உப்பிலாங் கொடி; a twiner black variety of உப்பிலாங் கொடி (சா.அக.).

வருணன் *varuṇaṉ,* பெ.(n.) 1. வாரணன் பார்க்க; see *vāraṇaṉ. "வருணன் மேய பெருமண லுலகமும்" (தொல். பொருள். 4).* 2. ஆரியருடைய வருண வழிபாடும், தமிழருடைய வருண வழிபாடும் தம்முள் வேறுபாடுடையன. முதற்குடிமக்களாகிய தமிழர்களுடைய வருணன் என்னும் கடவுட் பெயரை, ஆரியர் தம் கடவுளுக்கு இட்டு வழங்கினார்களென்பது மிகவும் பொருத்த மாகின்றது; The Aryan God, Varuna was probably the God of the Dravidian tribes being on the borders of the sea to whom the Aryan Rishis accorded a place in the pantheon (Dravidian India P.96).

[வாரணம் → வருணன் → வருணம் = கடல் தெய்வம்.]

வரி → வார் → வாரணம்= நிலத்தைச் சூழ்ந்துள்ள கடல் . வரிதல் = மூடுதல், சூழுதல், வளைதல்.

"வாரணஞ் சூழ் புவி" (தனிப்பாடல்)

வாரணன் = கடல் தெய்வம், வருணன் = மழைத் தெய்வம்.

வடவர் வ்ரு (கவி, மறை, சூழ்) என்பதை மூலமாகக் காட்டி, அனைத்தையும் மூடும் வானம் (All-enveloping sky) என்று பொருள் கூறுவர். தொல்காப்பியர் வருணனைக் கடல் தெய்வமாகவே குறித்துள்ளார். ஆனால் வடவர் மழைத் தெய்வமாகக் குறிப்பர்.

வரிதல் என்னும் சொல்லின் உள்ள வரி என்னும் வேரடி வளைதல் பொருளிலும், மூடுதற் பொருளிலும், சூழ்தல் பொருளிலும், தமிழில் ஆளப்பட்டுள்ளது. (எ.கா.) "புண்ணை மறைய வரிந்து" (திவ்.திருவாய்.5:1:5). தமிழர் வாரணனை என்றும் கடல் தெய்வமாகவே கொண்டனர்.

வரி என்னும் மூலத்திலிருந்தே, வாரணன் என்னும் சொல் தோன்றியுள்ளது. வாரணன் என்ற சொல்லிலிருந்தே வருணன் என்னுஞ்சொல் தோன்றியுள்ளது "வருணன் மேய பெரு மணலுலகமும்" (தொல்.951).

வருணனை *varuṇaṉai,* பெ.(n.) வண்ணனை[2] பார்க்க; see *vaṇṇaṉai.*

[வருணா → வருணனை.]

வருணாத்தமசை *varuṇā-t-tamašai,* பெ.(n.) கள்; toddy (சா.அக.).

வருணாவரிசி *varuṇā-variši,* பெ.(n.) வெட்பாலரிசி; a tree - *Wrightinana tinctoria* (சா.அக.).

வருணி[1] *varuṇi,* பெ.(n.) கண்களுக்கு (விகற்பமான) மாறுபட்ட நிறங்களைக் கொடுக்கும் கருத்த விழிக்குள் வட்டித்த

வடிவில் உற்பத்தி சவ்வு; a kind of coloured curtain in the anterior part of the eye perforated by the pupil for the transmission of light Iris (சா.அக.).

[வரு → வருணி.]

வருணி² *varuṇi,* பெ.(n.) பொன் (சங்.அக.); gold.

[வர்ணி → வருணி]

வருணியின்மை *varuṇi-iṉmai,* பெ.(n.) கண்களில் நிறமின்மை; inderemia-absence (சா.அக.).

[வருணி + இன்மை.]

வருத்தக்காரன் *varutta-k-kāraṉ,* பெ.(n.) நோயாளி (இலங்கை); patient, ailing or sickperson. *'வீட்டில் இரண்டு வருத்தக்காரர்கள்'..*

மறுவ. பிணியாளி, நோவாளி.

[வருந்து (த.வி.)→வருத்து (பி.வி.)→வருத்தம் + காரன்.]

வருத்தம்¹ *varuttam,* பெ.(n.) 1. மனதிற்குப் பிடிக்காத நிகழ்ச்சிகளினால் உண்டாகும் துன்பம்; suffering, pain, grief. *"படுகடுங்களிற்றின் வருத்தஞ் சொலிய" (அகநா.8). "உயங்குபடர் வருத்தமு முலைவு நோக்கி"* (புறநா. 150 : 4). *"உயங்குநடை மடப்பிடி வருத்த நோனாது" (குறுந். 307 : 5). "அலமரல் வருத்தம் தீர" (நற்.9 : 3). வருத்தம் தோய்ந்த முகத்துடன் அமர்ந்திருந்தார் (உ.வ.). அவ்வாறு பேசியதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன் (இ.வ.).* 2. கடுமை, இடுக்கண், முட்டுப்பாடு; difficulty, misfortune, bottleneck. 3. மறைவுற்ற உறவினர் குறித்து ஏற்படும் மன உளைவு; regret. *சித்தப்பாவின் எதிர்பாரா மறைவால், குடும்பமே வருத்தத்தில் மூழ்கியது.* 4. ஆற்றல், சுமை, நலிவு, முயற்சிக்கடுமை; stain, impediment. *"மெய்வருத்தம் பாரார்" (நீதிநெறி. 53).* 5. முயற்சி; effort. *"ஆற்றின் வருந்தா வருத்தம்" (குறள், 468).* 6. அரிதில் நிகழ்வது; that which has very little chance of occuring, very rare. *அவன் பிழைப்பது வருத்தம் (இ.வ.).* 7. களைப்பு; exhaustion, weariness, fatigue. *"அசைந்து கடைந்த வருத்தமோ" (திவ். இயற். 3, 64).* 8. நோயாளியின் பாதுகாப்பற்ற நிலை; critical condition, as of a patient. *"அவனுக்கு வருத்தமாயிருக்கிறது". "வலங்குபிணி வருத்தமொடு இயங்கல் செல்லாது" (நற். 47, 2).* 9. ஒருவர்மேல், மற்றவருக்கு மனத்தாங்கல்; complaint, grievance. *கேட்டவுடன் பணம் தராததால், அவனுக்கு என்மேல் வருத்தம் (உ.வ.).*

[வருந்து (த.வி.)→ வருத்து → வருத்தம் (பி.வி.)]

வருத்தம்² *varuttam,* பெ.(n.) 1. நோய்; உடல் நலிவு (யாழ்ப்.); weakness. 2. கோளாறு; malady. *குழந்தைக்கு என்ன வருத்தம்.*

[வர்→ வரு →வருத்தம்]

வருத்தவுப்பு *varutta-v-uppu,* பெ.(n.) வறுத்தவுப்பு; fried salt useful for those on diet (சா.அக.).

[வறுத்தவுப்பு→ வருத்தவுப்பு.]

வருத்தி *varutti*, பெ.(n.) மணியின் கீழ்ப் பதித்து வைக்கும் வண்ணத்தகடு (யாழ்.அக.); foil.

வருத்து[1]-தல் *varuttu-*, 15 செ.குன்றாவி. (v.t.) 1. வருவித்தல்; to cause to come, to fetch, to get, obtain. 2. ஓவியமெழுதுதல்; to paint, sketch, portrait. *"நினைப்பெனுந் துகிலிகையால வருத்தித்து" (சீவக. 180). "உமையிடத் துர்க்கையை வருத்தி" (உபதேசகா. சூராதி. 132).* 3. மனப்பாடஞ் செய்தல் (இ.வ.); to learn by heart, as a lesson, mug up.

[வள் → வர் → வரு → வருத்து-.]

வருத்து[2]-தல் *varuttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. வருந்தச் செய்தல்; to cause, pain, to afflict vex. *"வருத்துந் தெய்வங்களும்" (மதுரைக். 632).* 2. பயில்வித்தல்; to train. *"அன்னான் வருத்து வாளிளைஞர்" (திருவிளை. அங்கம். 6).* 3. துயரங்கொள்ளச் செய்தல்; துன்பப்பட வைத்தல்; to make one sad; to make one feel sorry. *அவரது பேச்சு அவளை மிகவும் வருத்தியது (உ.வ.). அல்லும் பகலும் வருத்தும் சிக்கல் இது (இ.வ.).* 4. ஒருவர், தம்மைக் கடும் முயற்சிக்கு உட்படுத்திக் கொண்டு உழைத்தல்; to strain oneself. *உங்களை இப்படி வருத்திக் கொண்டு இரவு பகலாக உழைக்க வேண்டுமா?*

[வருந்து- (த.வி.) → வருத்து (பி.வி.)]

வருத்து[3] *varuttu*, பெ.(n.) வருகை; advent, coming in, arrival.

[வா → வரு → வருத்து]

வருதல் *varudal*, தொ.பெ.(vbl.n.) வரல்; coming.

T. rā, **Ka., Tu.** bā, **Ma.** vā.

[வள் → வர் → வா → வரு → வருதல்.]

வள் என்னும் முதனிலையினின்றே, வருதல், வருகை என்னும் சொற்கள் முகிழ்த்தன. வளைதல், வட்டமாய் வளைதல், வளைந்து, எழுந்து, நடந்து வருதலே, வருதல் என்னும் சொல்லின் பொருண்மையாகும்.

வளைதற் கருத்தினின்றே வருதற் கருத்து முகிழ்த்ததென்பார் மொழிஞாயிறு. தமிழின்கண் அமைந்த வினைச்சொற்களின் முதனிலை யனைத்தும், பெரும்பாலும் ஏவல் வொருமை வடிவிலேயே யுள்ளதால், வருதல் என்னும் தொழிற் பெயரின் முதனிலையும், 'வா' என்னும் ஏவலொருமை யினின்று தோன்றியது, எனலாம்.

வருதி[1] *varudi*, பெ.(n.) 1. ஆணை; order. 2. அனுமதி; permission. *"வாய்க் கேள்வியர்க்கு வருதி செய்தான்" (தனிப்பா.).*

[வர் → வா → வரு → வருதி.]

வருதி[2] *varudi*, பெ.(n.) வருதல்; come in. *"இரவுச் சிறுநெறி தமியை வருதி" (அகநா. 318ே : 4), "பகலும் வருதி பல்பூங் கானல்" (நற். 223 : 3). "மாறி வருதி மலைமறைந் தொளித்தி" (புறநா. 8 : 8).*

[வர் → வா → வரு → வருதி.]

வருந்தி *varundi*, கு.வி.எ.(adv.) பணிந்து, மிகவும் வேண்டி; earnestly. *எவ்வளவோ வருந்திக் கூப்பிட்டும் திருமணத்திற்கு அவன் வரவில்லை (உ.வ.).*

[வருந்து → வருந்தி.]

வருந்திக்கழி–த்தல் *varundi-k-kaḻi-,* 4 செ.குன்றாவி.(v.t.) துன்பத்துடன் காலம் போக்குதல் (வின்.); to pass one's time in suffering or grief or agony.

[வருந்து→ வருந்தி + கழி–.]

வருந்திக்கூப்பிடு–தல் *varundi-k-kūppiḍu-,* 20 செ.கு.வி.(v.i.) வருந்தி யழை–த்தல் பார்க்க; see *varundi-y-aḻai-. வருந்திக் கூப்பிட்டும் புதுமனை புகுவிழாவிற்கு நண்பர் வரவில்லை (உ.வ.).*

[வருந்து→ வருந்தி + கூப்பிடு–.]

வருந்திக்கேட்டல் *varundi-k-kēṭṭal,* தொ.பெ.(vbl.n.) வருந்திக்கேள்–தல் பார்க்க; see *varundi-k-kēḷ-.*

[வருந்து→ வருந்தி + கேட்டல்.]

வருந்திக்கேள்–தல் *varundi-k-kēḷ-,* 11 செ.குன்றாவி.(v.t.) கெஞ்சுதல், இறைஞ்சுதல்; to beseech, to beg earnestly, to entreat, to solicit pressingly, to importune.

[வருந்து→ வருந்தி + கேள்–,]

வருந்திப்பிழை–த்தல் *varundi-p-piḻai-,* 4 செ.கு.வி.(v.i.) வறுமையில் நாட்களைக் கடத்துதல்; to lead life under poverty.

[வருந்து → வருந்தி + பிழை–.]

வருந்தியழை–த்தல் *varundi-y-aḻai-,* 4 செ.கு.வி.(v.i.) மிகவும் வேண்டிக் கூப்பிடுதல்; to invite emphaticaly. *நண்பர் எவ்வளவோ வருந்தியழைத்தும், உடல் நலிவுற்றதால், அவரது மகன் திருமணத்திற்குச் செல்ல முடியாமற் போய்விட்டது (உ.வ.).*

[வருந்தி + அழை–.]

வருந்தியேங்கு–தல் *varundi-y-ēṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) ஒருவர்தம் ஈடுசெய்யவியலா இழப்பினை யெண்ணியும், புலம்பியும் துன்பவுணர்வு கொள்ளுதல்; to feel sorry, to bemoan. *ஈடுசெய்யவியலாத நண்பனின் மறைவால், வருந்தியேங்கும் அவருக்கு ஆறுதல் கூறித் தேற்றுவார் யார்?*

[வருந்தி + ஏங்கு–. ஏ→ஏங்கு = மனம் வாடுதல். ஈடு கட்டவொண்ணா இழப்பினை யெண்ணிப் புலம்புதல்.]

வருந்து–தல் *varundu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. துன்புறுதல்; to suffer, to be distressed, tortured or grieved. *"காமமுழந்து வருந்தினார்க்கு" (குறள், 1131).* படிக்காமல் *ஊர் சுற்றியதற்காக இப்போது வருந்திப் பயனில்லை (உ.வ.). உங்களுக்கு உதவ முடியாததற்காக வருந்துகிறேன் (இ.வ.).* 2. உடல் மெலிதல்; to become emaciated. *"வாணுதன் மேனி வருந்தா திருப்ப" (மணிமே. 23, 62).* 3. மிக முயலுதல்; to take pains make great efforts. *"ஆற்றின் வருந்தா வருத்தம்" (குறள், 468).* 4. வருந்தி வேண்டிக் கொள்ளுதல்; to make a supplication. *'கடவுளை நோக்கி வருந்தினதால் அது கிடைத்தது'.* 5. உடல் வலியினை யுணர்ந்து வருந்துதல்; to strain oneself. *உடல் வருந்த உழைக்கும் வேளாண் தொழிலால் அதிகப் பலன் இல்லை (இ.வ.).*

[வறள்→வரல்→வரு→வருந்து–.]

நெஞ்சம் காய்ந்து போதல். நெஞ்சம் குளிர்தலால், மட்டற்ற மகிழ்ச்சியேற்படுவது மாந்தர்தம் இயல்பேயாகும். உள்ளம் வறண்டுபோதலை, அதாவது நெஞ்சம் காய்ந்து வருந்தும் தன்மையை, ஒருவர்தம் முகம்

உணர்த்துவது அனைவரும் அறிந்ததே. வருந்துதல், வருத்துதல், போன்ற சொற்கள் எல்லாம் பண்பினை வெளிப்படுத்தும் வினைச் சொற்களாகும். அதனாற்றான், வள்ளுவரும்,

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்" – (குறள், 706)

என்று மொழிந்துள்ளார் எனலாம்.

வருந்துதல் என்னுஞ் சொல், நெஞ்சம் காய்தல், காய்ந்து வறண்டு போதல்; துன்பத்தினால் முகம் சுருங்குதல் என்னும் பண்புப் பொருண்மைகளின் வெளிப்பாடு எனலாம்.

வருந்துரு *varunduru,*பெ.(n.) முள்ளிலவு மரம் (மலை.); red-flowered silk-cotton tree.

வருந்தூரு *varundūru,*பெ.(n.) வருந்துரு பார்க்க; see *varunduru*(சா.அக.).

வருநர் *varunar,*பெ.(n.) 1. புதியதாய் வருபவர்; new comers, stranger. *"வருநர்க்கு வரையா வளநகர்" (குறிஞ்சிப். 202).* 2. விருந்தினர்; guests. *"வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை" (புறநா. 10). "உள்ளி வருந ருலைவு நனி தீர" (புறநா. 158 : 14).*

[வா→வரு→வருநர்]

வருநாள் *varu-nāḷ,*பெ.(n.) எதிர்வருங் காலம்; future. *"கூத்தனை யேத்தலர்போல் வருநாள் பிறவற்க" (திருக்கோ. 44).*

[வா → வரு + நாள்]

வருபிறப்பு *varu-piṟappu,*பெ.(n.) 1. மறு பிறப்பு (நாமதீப. 690, உரை.); next-birth, rebirth. 2. மறுமை; life after death, reincarnation.

மறுவ. மறுபிறப்பு

[வா → வரு + பிறப்பு]

வருபுனல் *varu-puṉal,*பெ.(n.) 1. பெருகி வரும் நீர்; rising, swelling or over flowing water, flood or storm water. *"வருபுனலும் வாய்ந்த மலையும்" (குறள், 737).* 2. ஆறு (பிங்.); river. 3. ஆற்று நீரும் ஊற்று நீரு மல்லாத வேற்றுநீர் (யாழ்.அக.); water other than river or spring water.

[வரு + புனல்]

வருபொருள் *varu-poruḷ,*பெ.(n.) 1. எதிர் கால நிகழ்ச்சி; future event. *"மந்திரிக் கழகு வருபொருளுரைத்தல்" (நறுந்.).* 2. வருவதன் கருத்து; purpose or object of one's coming. *"மாமறையாளன் வருபொருளுரைப்போன்" (சிலப். 11: 34).*

[வரு + பொருள்]

வருபோகம் *varu-bōgam,*பெ.(n.) மறுபோக விளைவு; future crop or next seasonal produce. *"பெருங்கடன்கள்..... வருபோகத்துத் தருவல்" (திருவாலவா. 50, 6).*

[வரு + பூகம் →போகம்]

வரும் *varum,*பெ.அ.(adj.) 1. இனி வருவது; coming, next, successive or ensuring. 2. எதிர்காலம் குறித்த சொல்; future tense. *'வரும் ஆண்டிலாவது நல்ல மழைப் பெய்யட்டும்" (உ.வ.). வரும் அறிவன் கிழமையன்று (புதன்) நாங்கள் ஊருக்குப் போகிறோம். வரும் செல்வம் எல்லாம் நம்மதன்று (பழ.), வரும்வினை வழியில் நில்லாது (பழ.).*

[வா→ வர்→வரு→வரும்]

வரும்காலம் *varum-kālam,* பெ.(n.) 1. நிகழ்காலத்தைத் தொடர்ந்து இனிவரும் எதிர்காலம்; future. 2. வருங்காலம் பார்க்க; see *varuṅgālam.* *வருங்காலம் சொல்லும் பல்லி கழுநீர்ப் பானையில் விழுந்தது போல (உ.வ.).* 3. எதிர்காலத்தைக் குறிப்பது; future-tense. *'ஓடுவான்' என்ற வினைமுற்றில், 'வ்', வரும் காலத்தைச் சுட்டும் இடைநிலை.*

[வருங்காலம்→வரும்காலம்.]

வரும்படி *varumbaḍi,* பெ.(n.) வருவாய், வருமானத்திற்கான ஆதாரம்; income, source of income. *போதிய வரும்படி இல்லாததால் கடையை மூடிவிட்டார் (உ.வ.). வரும்படிக்கு மீறிய செலவால் வறுமையே மிஞ்சும் (இ.வ.).*

[வரு + படி³]

வரும்விதி *varum-vidi,* பெ.(n.) 1. எதிர் காலத்தில் நிகழ்வதன் பொருட்டு உறுதி செய்யப்பட்ட ஊழ்; befalling destiny. *வரும்விதி நன்மை செய்யுமென்றெண்ணி வீணே இருக்கலாமா? (உ.வ.). அவள் வாழ்வில் வரும் விதியை யார் அறிவார்? (இ.வ.).* 2. எதிர்கால நிகழ்விலுள்ள இயற்கை யொழுங்கு; befalling law of nature. *வரும் விதி வந்தால் படும் விதி பட வேண்டும் (பழ.).*

[வா→வர்→வரு + விதி]

Skt. vidhi > த. விதி.

வரும்வினை *varum-viṉai,* பெ.(n.) எதிர் காலத்தில் நிகழ்வதன் பொருட்டு முற்பிறவியிலும், இப்பிறவியிலும் செய்யும் செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு வரும் வினை; future deeds occuring according to the acitivities of previous birth and present's birth. *முற்பிறவியின் நற்செயல்களே, எதிர்கால வரும்வினையை உறுதி செய்யும் (இ.வ.).*

[வருவினை→வரும்வினை.]

வருமதனம் *varu-madaṉam,* பெ.(n.) கன்னல் சருக்கரை; cane sugar.

வருமதி *varumadi,* பெ.(n.) வரும்படி, வருமானம், வரவு (யாழ்.அக.); income, source of incoem, receipt. *'அவரிடமிருந்து எனக்கு ஆயிரம் ரூபாய் வருமதி இருக்கிறது' (இ.வ.).*

[வா→வரு + மதி. மதி = மதிப்பு மிக்க வருவாய்.]

ஒ.நோ. வெகுமதி.

வருமம்¹ *varumam,* பெ.(n.) தீராப்பகை; grudge, spite, malevolence. *"என் பேரில் உனக்கு என்ன வருமம்?" (உ.வ.). வருமம் கொண்டவர்க்கு வன்பகைதான் மிஞ்சும (இ.வ.).*

[வர்மம் → வருமம்]

வருமன்¹ *varumaṉ,* பெ.(n.) மன்னர் பூண்டு கொள்ளுஞ் சிறப்புப் பெயர்; title of the kings. *"திண்டிறற் சித்திர வரும னென்பவே" (பிரமோத். 8, 11).*

[வர்மன் → வருமன்]

வருமாறு *varumāṟu,* பெ.(n.) 1. வருந்தன்மை, வரும்விதம்; which is as follows. 2. நிகழ்ச்சி முறை; order of occurrence.

[வா→வரு+ஆறு ¹]

வருமானம்[1] *varu-māṉam,* பெ.(n.) 1. பணி, தொழில் முதலியவற்றால் கிடைக்கும் பணம்; professional or salaried income, source of income. *வணிகத்தில் நல்ல வருமானம் கிடைக்கும் என்றுதான் கடையை ஆரம்பித்தேன் (உ.வ.). வீட்டு வாடகையைத் தவிர வேறு வருமானம் எனக்கு இல்லை (உ.வ.). அரசாங்கத்தில் பணிசெய்தால் நல்ல வருமானம் கிடைக்கும்.* 2. வரிகளின் வாயிலாக அரசிற்கு கிடைக்கும் பணம்; revenue. *வரி விதிப்பதன் மூலம் அரசுக்கு வருமானம் கிடைக்கின்றது.*

[வா→ வரு + மானம்.]

மானம் அளவை குறித்த பெயரீறு.

(ஒ.நோ.) வெகுமானம்.

வருமானம்[2] *varu-māṉam,* பெ.(n.) வருவாய், வரவு, வரும்படி; income, source of income.

க. வரமான.

[வரு + மானம்[1] = மானம் = அளவை குறித்த பின்னொட்டு]

ஓ.நோ. தேய்மானம்.

வருமானவரி *varumāṉa-vari,* பெ.(n.) வரும்படியின் மேல் விதிக்கும் அரசிறை (தற்கா.); income-tax.

[வருமானம் + வரி[5]]

ஒருவருடைய ஆண்டு வருமானம், குறிப்பிட்ட அளவிற்கு மேற்படுமானால், அந்த வருமானத்தின் மீது அரசிற்கு செலுத்த வேண்டிய வரி.

வருமுலையாரித்தி *varu-mulai-yāritti,* பெ.(n.) கழகக்கால பெண்பாற் புலவர்; an ancient *śaṅgam* poetess. *குறுந்தொகையில் 176-ம் பாடலை பாடியுள்ளார். நெஞ்சத்தின் கலக்கத்துக்கு மழைநீரின் கலக்கத்தை உவமையாக கூறியுள்ளார். "மழைபொழியும் இயற்கை நிகழ்வினை, வாழ்வியல் நிகழ்வுடன் இணைத்துக் கூறியுள்ள", (குறுந்.176)* பாடல் வருமாறு:-

"ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியென்
நன்னர் நெஞ்சம் நெகிழ்ந்த பின்றை
வரைமுதிர் தேனிற் போகி-யோனே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வேறுபுல னன்னாட்டுப் பெய்த
ஏறுடை மழையிற் கலுழுமென் னெஞ்சே"
(குறுந்.176)

பற்பல நாளும் என்பால் வந்து, பணிவுடைய மொழிகளைக் கூறி, என்னெஞ்சை இளகச் செய்து, மலையின் முதிர்ந்த தேனிறாலைப் போன்று மனமழிந்து சென்றுவிட்டான். அவன் யாண்டுள னென்பதை யறியேன்.

வருமை *varumai,* பெ.(n.) மறுபிறப்பு; next or future birth. *"வருமையு மிம்மையு நம்மை யளிக்கும் பிராக்களே" (திவ். திருவாய். 3, 7, 5).*

[வா→வரு→வருமை]

வருமொழி *varu-moḻi,* பெ.(n.) புணர்ந்த இணைச் சொற்களில் இரண்டாவதாய் நிற்குஞ் சொல் (Gram.); the following or succeeding word in a compound, dist. fr. *nilai-moḻi.* *"நிலைவரு மொழிக ளியல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே" (நன். 151).*

[வா → வரு + மொழி[2]]

பணப்பை என்ற சொல்லில் 'பை' என்பது வருமொழி.

வருவதுபோவது *varuvadu-pōvadu,* பெ.(n.) மூச்சு, உயிர்ப்பு (வாசி); respiration, breathing, inhalation and expiration (சா.அக.).

[வருவது + போவது.]

வருவாணிதம் *varu-vāṇidam,* பெ.(n.) இலவங்கப்பூ; clove, eugenia caryop-*Hyllata* (சா.அக.).

வருவாய் *varuvāy,* பெ.(n.) 1. வரும்படி, வருமானம் (யாழ்.அக.); income, source of income. *"வருவாயுட் கால்வழங்கி வாழ்தல்" (திரிகடு.21).* 2. தோன்றும் இடம்; origin, source, avenues, means. *"ஆய்தத்திற்குப் பிறப்பதிகாரத்துள் வருவாய் கூறியவழி" (நன். 121, உரை). வருவாய்த்துறைச் செயலாளர் (இ.வ.). வருவாய் இல்லாத திருக்கோயில்கள் தமிழகத்தில் மிகுதியாக உள்ளன (உ.வ.).*

[வா → வரு →வருவாய்]

வருவாழ்வு *varu-vāḷvu,* பெ.(n.) மறுவாழ்வு; the future span of life rebirth.

[வா→வரு + வாழ்வு.]

வருவாளுண்டிமூலி *varu-vāḷuṇḍi-mūli,* பெ.(n.) இலந்தை; jujube-a thorny plant-*Zizyphus jujuba* (சா.அக.).

வருவி-த்தல் *varuvi-,*4 செ.குன்றாவி. (v.t.) 1. வரச்செய்தல்; to cause to come, to fetch, to bring, to get, obtain. 2. பொருண்முடிபுக்கு வேண்டிய சொல்லைப் பெய்து கொள்ளுதல் (இலக்.); to supply an ellipsis to complete the sense. *"நுவலும் என்றதற்கு உலகம் நுவலும் என வருவிக்க" (பதிற்றுப். 61, உரை).* 3. கொண்டு வருமாறு செய்தல்; to bring from somewhere. *இந்த மருந்து அயல்நாட்டிலிருந்து வருவிக்கப்பட்டது (இ.வ.).* 4. வேண்டாததை ஏற்படுத்துதல்; இயல்பாக இல்லாததை உண்டாக்குதல்; to invite trouble, etc.; to put on a smile. *இயற்கையோடியைந்து வாழும் வகைதெரியார் தங்களுக்குத் தாங்களே அழிவை வருவித்துக் கொள்கின்றனர் (இ.வ.). அவள் முகத்தில் பொய்யான சிரிப்பை வருவிக்க முயன்றான்.*

[வா → வரு → வருவி-.]

வருவிக்குடை *varuvi-k-kuḍai,* பெ.(n.) முழங்காற்சிப்பி (கரு.அக.); knee-cap.

[வருவியம் + குடை]

வருவியம் *varuviyam,* பெ.(n.) முழங்கால் (சங்.அக.); knee.

வருவிளி *varu-viḷi,* பெ.(n.) தப்பிச்சி மரம்; a kind of tree (un-identified) (சா.அக.).

மறுவ. ஆவிமரம்

வருவு-தல் *varuvu-,*5 செ.குன்றாவி.(v.t.) திறத்தல்; to open, as one's mouth. *'கப்பியமே யென்று வாய் வருவுதலின்' (நீலகேசி. 375, உரை).*

[வரு →வருவு-.]

வருவுமுள் *varuvu-muḷ,* பெ.(n.) மாழையின் மேல் (உலோகம்) கோடுவரையும் உருக்குமுள்; engineer's scriber for marking gange.

[வரைவு → வருவு + முள்]

வரை¹–தல் *varai-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கோடிழுத்தல்; எழுதுதல் (சூடா.); to write, inscribe, to draw a line. *வருகை தந்தமை குறித்து மடலொன்று வரைந்தான் (உ.வ.).* 2. ஓவியமெழுதுதல்; to draw with paint. *அது யார் வரைந்த படம் (இ.வ.).* 3. உறுதி செய்தல், நிலைநிறுத்துதல்; to fix, appoint, to ensure, to instal. *"புகழொடுங் கழிக நம் வரைந்த நாளென" (மலைபடு.557).* 4. அளவுபடுத்துதல்; to limit. *"வரையாப் பூச லொண்ணுதன் மகளிர்" (புறநா. 25).* 5. அடக்குதல்; to restrain. *"வரைகிலேன் புலன்க ளைந்தும்" (தேவா. 631, 1).* 6. விலக்குதல்; to exclude. *"உருவுகொளல் வரையார்" (தொல். எழுத்து. 41).* 7. கைவிடுதல்; to leave, abandon. *"கொள்கலம் வரைதலின்" (கலித். 133).* 8. ஏற்றத்தாழ்வு படுத்துதல், வேறுபடுத்துதல்; to differentiate or draw distinctions, to make nice discriminations. *"கொடைமட மென்ப தம்ம வரையாது கொடுத்த லாமே" (சூடா. 9, 10).* 9. நேர்மையான வழியில் பொருளீட்டுதல்; to acquire or earn by legitimate or honest means. *"வரைபொருள் வேட்கையேன்" (சிலப். 10, 51).* 10. தனக்குரியதாக்குதல்; to make one's own; to appropriate. *"அறன் வரையான்" (குறள், 150).* 11. மணஞ்செய்தல்; to marry. *"வெளிப்பட வரைதல் படாமை வரைதல்" (தொல். பொருள். 140).* 12. புதிய திட்டம் (நெறிமுறைகள்) செயற்பாடுகளை உருவாக்குதல்; to draft a rule, resolution, etc. *அமைச்சரவை விரைவில் புதிய கல்வித்திட்டத்தினை வரையவிருக்கிறது (இ.வ.).*

தெ. வ்ராயு.

[வரி² → வரை–.]

வரை² *varai*, பெ. (n.) 1. கோடு; line. 2. கைவரி (இரேகை) (சூடா.); line, as in palm of hand or on the fingers; wrinkle, as on the body. 3. எழுத்து (பிங்.); letter. 4. முத்துக் குற்றத்தொன்று (S.I.I.Vol.II.78); a defect in pearls. 5. மூங்கில்; bamboo. *"மால்வரை நிவந்த வெற்பின்" (திருமுரு.12).* 6. மலை; mountain. *"பனிபடு நெடுவரை" (புறநா.6). "மால்வரை மிளிர்க்கும் வருமினும் கொடிதே" (நற். 2 :10), "வான்றோய் சிமைய விறல்வரைக் கவாஅற்" (அகநா.3 : 6).* 7. மலைமுகடு, மலையுச்சி; mountain top, peak. *"மந்திவரை வரை பாய" (பரிபா.15, 39).* 8. பக்கமலை; side-hill, slope of a hill. *"வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந" (மதுரைக். 42).* 9. கல்; stone. *"வரையம்பு காயெரி மாரிகளாய்" (திருநூற். 34).* 10. சிறுவரம்பு (வின்.); small ridge as of a paddy field. 11. நீர்க்கரை (சூடா.); bank, shore. 12. வரையறை, எல்லை; limit, boundary. *"வளவரை" (குறள், 480).* 13. அளவு; measure, extent. *"உளவரை" (குறள், 480).* 14. விரலிறையளவு (இ.வ.); the measure of the distance between the joints of the forefinger. 15. காலம்; time. *"சிறுவரை" (பு.வெ. 12, பெண்பாற். 17).* 16. இடம்; place, location. *"மலைவரை மாலை" (பரிபா. 10, 1).* 17. ஏற்றத்தாழ்வு நோக்குகை (வின்.); discrimination, paying attention to differences. *"அவன் வரைவின்றிக் கொடுப்பான்".*

தெ. வர; ம. வரு; க. பரெ.

[வரி→வரை (கோடு)]

வரை³ *varai*, வி.எ. (adj.) வரைக்கும்; as far as, upto, till, until.

வரை[4] *varai,* பெ.(n.) 1. திரை; wrinkles in the face. 2. மாசி பத்திரி; a plant. 3. கற்பாசி; rock mass (சா.அக.).

வரை[5] *varai,* இடை.(part.) இடம், காலம், அளவு ஆகியவற்றில் குறிப்பிடப்படுவதே, எல்லையாக, இறுதியாக, மேல்வரம்பாக உடையது என்பதைத் தெரிவிப்பது; upto, till. *"சாலைவரை சென்று திரும்பினான்" (இ.வ.). ஏழுமணி வரை காத்திருந்தான் (உ.வ.). நீ செய்ததுவரை போதும் (இ.வ.).*

[வரு → வரை.]

வரைக்கட்டிடம் *varai-k-kaṭṭiḍam,* பெ.(n.) கட்டிடம் கட்டுவதற்கென்று தெரிவு செய்து சமப்படுத்திய இடம்; levelled plot or land.

[வரை + கட்டிடம். கட்டு + இடம் = கட்டிடம். கட்டுகின்ற இடம்.]

வரை = இடம், எல்லை. வரை என்னும் சொல் இடம் என்னும் பொருளில் கழகவிலக்கியங்களில் பதிவு பெற்றுள்ளது.

(எ.கா.) *"மலைவரை" (பரிபா.10, 1).*

கரடுமுரடாகவிருந்த இடத்தைக் கட்டிடங்கள் கட்டுவதன் பொருட்டுச் செம்மைப்படுத்திய இடம் வரைக்கட்டிடமாகும்.

வரைக்கட்டு *varai-k-kaṭṭu,* பெ.(n.) மலைப்பக்கத்தில் திருத்திச் சமன்செய்த விளைநிலம் (நாஞ்.); a levelled arable land adjacent to hill or mountain. *"வரைக்கட்டுக் கோணம்" (நாஞ். வழ.).*

[வரை + கட்டு. கள் → கட்டு = அமைத்தல், தோற்றுவித்தல்.]

வரைக்கடந்தாதி *varai-k-kaḍandādi,* பெ.(n.) கொசு; mosquito (சா.அக.).

வரைக்காய்ச்சல் *varai-k-kāyccal,* பெ.(n.) சுரத்தின் வகையுளொன்று; mountain fever (சா.அக.).

[வரை + காய்ச்சல். காய் → காய்ச்சல் = சுரநோய்.]

வரைக்குடிலம் *varai-k-kuḍilam,* பெ.(n.) வங்கக்கல் (யாழ்.அக.); lead ore.

[வரை + குடிலம்]

வரைக்கும்[1] *varaikkum,* வி.எ.(adv.) எல்லை வரை முடிய; as far as, upto, till, until.

தெ. வரகு

[வரை → வரைக்கும்]

வரைக்கும்[2] *varaikkum,* இடை.(part.) பெயரெச்சத்துக்குப் பின் சொற்றொடரில் குறிப்பிடும் செயலுக்குத் தடையாக இருப்பதைக் கூறுவது; after relative participle until, as long as. *அவனாகக் கேட்கும் வரை நீ பணம் தராதே (உ.வ.). நீ இந்தப் பணியை முடிக்காத வரை இங்கிருந்து போக முடியாது (இ.வ.).*

தெ. வரகு

[வரை → வரைக்கும்]

வரைக்கெண்டை *varai-k-keṇḍai,* பெ.(n.) கெண்டை மீன்வகை; carp.

[வரை + கெண்டை]

வரைகம்பு *varai-kambu,* பெ.(n.) கம்மாளர் கருவியுள் ஒன்று (யாழ்.அக.); an instrument used by blacksmiths or metal-workers.

[வரை + கம்பு [1]]

வரைச்சிலம்பு *varai-c-cilambu,* பெ.(n.) மலைச்சாரல்; mountain slope. *"வரைச் சிலம்பு தொட்டு நிலவுப் பரந்தாங்கு" (பரிபா. 11, 32).*

[வரை + சிலம்பு. சில் → சிலம்பு. சில் = ஒலிக்குறிப்பு.]

வரைச்சிறகரிந்தோன் *varai-c-cirag arindōṉ,* பெ.(n.) மலைகளின் சிறகுகளை வெட்டிய இந்திரன் (பிங்.); Indiraṉ, as one who clipped the wings of the mountains.

[வரை + சிறகு + அரிந்தோன். சில் → சிற → சிறகு.]

சிறகு = உறுப்பு, வலிமை, பிரிவு. அர் → அரி. அரித்தல் = அறுத்தல், அழித்தல், நீக்குதல். வரிச்சிற்கரிந்தோன் என்னும் சொல், ஈங்கு, மலைகளின் சிறகுகளை அல்லது மலைப் பகுதிகளை வெட்டியழித்த இந்திரன் என்னும் பொருள் பற்றியது.

வரைச்சுண்டி *varai-c-cuṇḍi,* பெ.(n.) செடி வகையுளொன்று; a kind of plant (சா.அக.).

[வரை + சுண்டி]

வரைத்தாள் *varai-t-tāḷ,* பெ.(n.) மலை யடிவாரம்; foot of a mountain. *"வரைத்தாள் வாழ்வேன்" (சிலப். 11, 115).*

[வரை + தாள் [1]]

வரைந்தநாள் *varainda-nāḷ,* பெ.(n.) 1. வரையறைக்குட்பட்ட நாள்; enclosed days. 2. வாணாள்; duration of life time.

[வரைந்த + நாள்]

வரைநீர் *varai-nīr,* பெ.(n.) மலையருவி (நாமதீப.81); mountain torrent.

[வரை + நீர்]

வரைநெல் *varai-nel,* பெ.(n.) மலைப்பாங்கான நிலத்தில் விளையும் நெல்வகை (நாஞ்.); a species of paddy raised in hilly tracts or areas.

[வரை + நெல்]

வரைநேமி *varai-nēmi,* பெ.(n.) உட்புறம் ஒளியும் வெளிப்புறம் இருளுங் கொண்டு நிலவுலகத்தைச் சூழ்ந்துள்ளதாகக் கருதப்படும் மலை; a mythical range of mountains encircling the orb of the earth and forming the limit of light and darkness. *"வரைநேமியளவுஞ் சென்றகன்றன" (தக்கயாகப். 85).*

*[வரை + **Skt.**நேமி]*

Skt. nēma > த. நேமி.

வரைப்பகை *varai-p-pagai,* பெ.(n.) இந்திரன்; Indiraṉ. *"நான்கெயிற் றொருத்தற் பிடர்ப்பொலி வரைப்பகை" (கல்லா. 30, 8).*

[வரை + பகை]

வரைப்பத்திம் *varaippattim,* பெ.(n.) மாசிப்பத்திரி; a plant (சா.அக.).

வரைப்பாசி *varai-p-pāśi,* பெ.(n.) கற்பாசி; lichen (சா.அக.).

[வரை + பாசி]

வரைப்பாலை *varai-p-pālai,* பெ.(n.) மலைப் பகுதியில் விளையும் பாலை; a tree growing in mountainous region (சா.அக.).

[வரை + பாலை]

வரைப்பு *varaippu,* பெ.(n.) 1. எழுதுகை; writing. *"வட்டிகை வரைப்பும் வாக்கின் விகற்பமும்" (பெருங். உஞ்சைக். 34, 168).* 2. எல்லை; limit, boundary. *"இடைநில வரைப்பின்" (மணிமே. 28, 24). "தண்டமிழ் வரைப்பகங் கொண்டி யாக" (புறநா. 198 : 12), "வெம்பா தாக வியனில் வரைப்பென" (பரிபா. 11 : 80).* 3. மதில்; wall of a fort or temple. *"அருங்கடி வரைப்பின் ஊர்கவி னழிய" (பட்டினப். 269).* 4. சுவர் சூழ்ந்த இடம் (சீவக, 949, உரை); enclosed space, courtyard. 5. வரைந்து கொள்ளப்பட்ட இடம்; enclosed place. *"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்" (தொல்.செய்யுள்.78).* 6. மாளிகை; mansion. *"துணையொடு திளைக்குங் காப்புடை வரைப்பின்".* 7. உலகம்; world. *"தண்கடல் வரைப்பில்" (பெரும்பாண். 18). "திருநகர் வரைப்பகம் புலம்ப அவனொடு" (அகநா.63 : 2).* 8. குளம்; tank. *"புனல் வரைப்பகம் புகுந்தோறும்" (பொருந. 240).*

[வரை → வரைப்பு]

வரைபடம் *varai-paḍam,* பெ.(n.) தோற்றம், அமைப்பு, முதலியவற்றைக் காட்டும் கோடுகளால் ஆன படம்; map, plan, diagram, graph. *'இந்திய வரைபடத்தில் கிழக்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் பெயர்களை எழுது' (இ.வ.). கட்டடம் வரைபடத்தில் உள்ளபடிதான் கட்டப்படுகிறது (இ.வ.).*

[வரை + படம்]

வரைபாய்தல் *varai-pāydal,* பெ.(n.) மலையுச்சியிலிருந்து கீழே விழுகை; falling oneself down from the top of a hill, a mode of committing suicide. *"வாழ்வின் வரைபாய்தல் நன்று" (நாலடி, 369).*

[வரை + பாய்தல்.]

வரைபொருட்பிரிதல் *varai-poruṭ-piridal,* பெ.(n.) வரைவிடத்துப் பொருள் வயிற்பிரிதலைக் கூறும் அகப்பொருட்பகுதி (அகப்.) (திருக்கோ.); theme treating of the departure of a lover to earn money for his marriage.

[வரை + பொருள் + பிரிதல்]

வரைமா *varai-mā,* பெ.(n.) மலைமா; mountain mango (சா.அக.).

[வரை + மா.]

வரைமுறை *varai-muṟai,* பெ.(n.) இப்படி அல்லது இவ்வளவு என்ற அளவில் நடவடிக்கையைத் திட்டமிடும் கட்டுப்பாடு; restriction. *யாரிடம் என்ன பேசுவது என்ற வரைமுறையே உனக்கு இல்லையா? (இ.வ.).* 2. எல்லை; delinitation, boundary. *எதற்கும் ஒரு வரைமுறை வேண்டும்.* 3. வகுக்கப்பட்ட செயல்முறை; constraint.

மறுவ. தடைவரம்பு.

[வரை + முறை]

ஒரு செயலைச் செயல்படுத்தும் வரையறுத்த திட்டஅமைப்பு அல்லது வகுக்கப்பட்ட முறையே வரைமுறையாகும்.

வரையடுக்கம் *varai-y-aḍukkam,* பெ.(n.) மலைகளின் தொடர்ச்சி; contiguous mountain range. *"குருதி ஒண்பூ உருகெழக் கட்டிப் பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்" (நற்.34:3-4).*

[வரை + அடுக்கம். அடு அடுக்கு+அம் = பன்மலை வரிசை.]

வரையமிர்து *varai-y-amirdu,* பெ.(n.) மலைபடு செல்வம் (சீவக.2110, உரை.); hilly or mountaneous produce.

[வரை + அமிர்து. அமிழ்து→அமிர்து.]

வரையரமகளிர் *varai-y-aramagaḷir,* பெ. (n.) மலைவாழ் தெய்வப் பெண்டிர்; mountain-nymphs. *"வரையர மகளிரிற் சாஅய்" (குறிஞ்சிப். 195).*

[வரை + அரமகள்→அரமகளிர் = துன்புறுத்தும் தெய்வப் பெண்.]

வரையரையன் *varai-y-araiyan,* பெ.(n.) மலையரசன் (இமவான்); the *Himālayas* personified, as the king of the mountains. *"வரையரையன் மடப்பாவை" (சேதுபு. சருவ. 39).*

[வரை + அரசன்→அரைசன்→அரையன்]

வரையறவு *varai-y-aṟavu,* பெ.(n.) 1. எல்லை; வரையறை (யாழ்.அக.); limit. 2. அளவு (சங்.அக.); measuring.

[வரையறு → வரையறவு]

வரையறுக்க *varai-y-aṟukka,* பெ.எ. (adj.) அறுதியிட; உறுதி செய்ய, வகுக்க, define, prescribe. *இந்தக் காசுகள் கிடைத்த இடத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்த அரசனின் நாட்டு எல்லையை ஒருவாறு வரையறுக்கலாம் (உ.வ.).*

[வரையறை → வரையறுக்க. அறு→ அறுக்க.]

வரையறு-த்தல் *varai-y-aṟu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. தீர்மானித்தல், அறுதியிடல், உறுதிசெய்தல்; to settle, decide, determine, ascertain. *இடத்துக்கு இடம், நாட்டுக்கு நாடு ஒழுக்கம் என்பது வேறுபடுவதால், அதை வரையறுத்தல் கடினம் (உ.வ.). நீங்கள் தயாரித்த பொருள்கள் நாங்கள் வரையறுத்த தரத்தில் இல்லை (இ.வ.). "மறைகளெல்லா முடிய வரையறுத் துணர்ந்து புகலினும்" (வெங்கைக்க. 89).* 2. மதிப்பிடுதல் (பிங்.); to estimate. 3. எல்லைப்படுத்துதல் (சங்.அக.); delimit. 4. வளைத்தல் (யாழ்.அக.); surround, encircle.

[வரை + அறு-.]

வரையறுத்தபாட்டியல் *varai-y-aṟutta-pāṭṭiyal,* பெ.(n.) பாட்டியல்பற்றிய ஒரு நூல்; a treatise on poetics by sambanda muṉivar.

[வரையறு + பாட்டியல்]

இதனைச் சம்பந்தப்பாட்டியல் என்றும் கூறுவர். இது சீர் முதலான மங்கலங்களை வரையறுத்துக் கூறினமையால், இப் பெயர் பெற்றதெனலாம். இந்

நூலையியற்றிவர் இன்னாரென அறியமுடியவில்லை. சம்பந்த முனிவரின் மாணவர் ஒருவர் இயற்றினார் என்று கருதுகின்றனர்.

வரையறுத்தான் *varai-y-aruttāṉ,* பெ.(n.) பேய்த்தம் பட்டை அவரை; a creeper belonging to field or garden bean family (சா.அக.).

தம்பட்டையவரை வகையு ளொன்று. படர்கொடி வகையைச் சார்ந்தது. கறி சமைத்துண்பதற்கு உகந்தது. மருத்துவக் குணமிக்கது என்று சா.அக. கூறும்.

வரையறை[1] *varai-y-arai,* பெ.(n.) 1. பொருள் வரையறை அல்லது சொற்பொருள் விளக்கம்; definition. *இலக்கியம் என்பது, பொருள் வரையறைக்கு அப்பாற்பட்டது (உ.வ.). கற்பனைக்கு என்ன வரையறை வகுக்க முடியும்? (இ.வ.).* 2. வரம்பிடுகை; delimitation. *கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டது (இ.வ.).*

[வரையறு→வரையறை]

வரையறை[2] *varaiyarai,* பெ.(n.) 1. எல்லை; limit, boundary. *"நாள் வரையறை நோக்கும்" (திருவானைக். நாட். 83).* 2. அளவு (சங்.அக.); measurement. 3. அடக்கவொடுக்கம் (இ.வ.); restraint in manners or behaviour. 4. கண்டிப்பு (இ.வ.); strictness. 5. திட்டம் (இ.வ.); accuracy, exactness, precision. 6. முடிபு (இ.வ.); termination. 7. வரைமுறை பார்க்க; see *varai-murai.*

[வரையறு → வரையறை]

வரையறை[3] *varaiyarai,* பெ.(n.) தான் குறிக்கக்கூடிய பலபொருள்களும் ஒன்றற்கே அல்லது அதன் ஒரு கூற்றிற்கே, சிறப்பாக ஆளப்பெறுதல்; restriction.

[வரையறு → வரையறை]

குறிப்பிடப்பட்ட ஒன்றை, இத் தன்மைத்து அல்லது இவ்வளவு என்று, வரையறுத்துக் காட்டுவதே வரையறை.

சொல்	குறிக்கும் பொருள்	வரையறைப் பொருள்
மனை	வீடு, மனைவி	வீட்டு நிலம்
யாம்	இருவகைத் தன்மைப்பன்மை	உளப்பாட்டுத் தன்மைப்பன்மை

மணம், குணம், ஒழுக்கம் என்னும் பொதுச் சொற்களை நல்வகைக்கும், நாற்றம், வீச்சம் என்னும் பொதுச் சொற்களைத் தீயவகைக்கும், வழங்குவதும் வரையறையே (தவ.I, பக்.104).

வரையறைகூறு-தல் *varai-y-arai-kūru-,* 5 செ.குன்றாவி.(v.t.) ஒன்றன் பண்பை வரையறுத்துக் கூறுதல்; to define or prescribe one's character.

[வரையறு→வரையறை + கூறு-.]

குல் → கூல் → கூறு-. குல் = பொருத்து, பொருத்தமாய்ச் சொல். வரையறை கூறுதல் ஒன்றன் பண்பை, அப் பொருளின் தன்மையையொட்டிப் பொருத்தமாக வரையறுத்து மொழிதல். இச்சொல் குறித்து இளம்பூரணர் இயம்பும், சிறப்பு விளத்தம் வருமாறு :-

"வரையறை கூறுதலாவது ஒன்றன் பண்பை வரையறுத்தாற் போலக் கூறுவதாகும். விளக்கிக் கூறுகின்ற தன்மையையும் இதனுள் அடக்கலாம்".

'பரத்தையர்' என்ற சொல்லுக்கு இளம்பூரணர் கூறுகின்ற விளக்கம் அவர்க்குரிய பண்பைச் சுருங்கிய சொற்களால் தெளிவாக விளக்குகின்றது. "ஆடலும் பாடலும் வல்லாராகி அழகும் இளமையும் காட்டி இன்பமும் பொருளும் வெஃகிற ஒருவர் மாட்டும் தாங்காதார்" (இளம்.தொல்.பொருள்.149) என்ற அவ்விளக்கம், அதற்குரியாரை ஓவியமாக்கிக் காட்டுகின்றது. இதனால் அவர்களது தோற்றப் பொலிவும், கலைத் திறமையும், காமத்திளைப்பும், உண்மைப் பண்பும் ஒருசேரக் காட்டப் பெறுகின்றன.

வரையாட்டுக்கொம்பு *varai-y-āṭṭu-k-kombu,* பெ.(n.) கம்பளியாட்டுக் கொம்பு; horn of fleec sheep (சா.அக.).

[வரையாடு + கொம்பு]

வரையாடு *varai-y-āḍu,* பெ.(n.) 1. மான் வகை (M.M.775); ibex. 2. காட்டாடு; jungle sheep. *"ஒங்குமால்வரை வரையா டுழக்கலி னுடைந்துகு பெருந்தேன்" (சீவக. 1559). "வரையாடு வருடைத் தோற்றம் போல" (பட்டினப்.139).*

மறுவ. வருடை.

[வரை + ஆடு]

வரை = மலை. மலைகளில் மேய்ந்து திரியும் ஆடு. மூலிகைகளை மேய்ந்து வளர்வதால், இதன் கறி மருத்துவக் குணமிக்கது (சா.அக.).



வரையாத்தி *varai-y-ātti,* பெ.(n.) மலையாத்தி மரம்; variegated mountain ebony. *"வரையாத்தி நீழல்" (குற்றா. தல. பராசக்தி. 10).*

[வரை + ஆத்தி.]

வரையாநுகர்ச்சி *varaiyā-nugarcci,* பெ.(n.) களவுப்புணர்ச்சி; secret union of lovers. *"வரையகத் தியைக்கும் வரையா நுகர்ச்சி" (பரிபா. 8, 41).*

[வரை + ஆ + நுகர்ச்சி. 'ஆ' எதிர்மறை இடைநிலை.]

வரையாப்படங்கு *varaiyā-p-paḍaṅgu,* பெ.(n.) ஒரு வகை மருந்துச் செடி; a kind of medicinal herb (சா.அக.).

வரையால் *varaiyāl,* பெ.(n.) கல்லால மரம்; a variety of banyan, *Ficus infectoria* (சா.அக.).

வரையாலிகம் *varai-yāligam,* பெ.(n.) முல்லை; plant, a species of Jasmine family (சா.அக.).

வரையாவீகை *varaiā-v-īgai,* பெ.(n.) பெருங்கொடை; unstinted liberality, as making no distinction among the recepients. *"வரையாவீகைக் குடவர் கோவே" (புறநா. 17).*

[வரை + ஆ + ஈகை¹]

வரையாழி *varai-y-āḻi,* பெ.(n.) 1. சக்கரவாள மலை; a mythical mountain range. *"கடலாழி வரையாழி தரையாழி" (தக்கயாகப். 6).* 2. மலை (தக்கயாகப். 6, உரை); mountain.

[வரை + ஆழி¹. ஆல்→ஆள்→ஆழ்→ஆழி = ஞாலத்தைச் சுற்றியமைந்த மலைத் தொடர்.]

வரையில் *varai-y-il,* இடை.(part.) வரைமுறை பார்க்க; see *varai-murai.*

[வரை→வரையில்]

வரையுடகம் *varai-yuḍagam,* பெ.(n.) நல்ல மாதுளை; a species of pomogranate (சா.அக.).

வயிற்று நோவினைப் போக்கும். இதன் பழச்சாறு, உடலுக்கு மினுமினுப்பைத் தரும். வயிற்றுக் கழிச்சலைப் போக்கும். வயிற்றுக் கடுப்பினைப் போக்கிச் செரிமானமும், பசியையும் அதிகரிக்கச் செய்யும் என்று சா.அக. கூறும்.

வரையும் *varaiyum,* வி.எ.(adv.) வரை, எல்லை, முடிய; as far as, upto, till.

[வரை → வரையும்]

வரையுறுத்து-தல் *varai-y-uruttu-,* 4 செ.குன்றாவி.(v.t.) வரையறு-த்தல் பார்க்க; see *varai-y-aru-,*

[வரை + உறுத்து-.]

வரையெருக்கு *varai-erukku,* பெ.(n.) மலை எருக்கு; mountain madder shrub (சா.அக.).

வரையோடு *varai-y-ōḍu,* பெ.(n.) உரலின் வாயோடு (யாழ்ப்.); ring-shaped stone piece placed over a mortar to prevent the grain from scattering while husking.

[வரை + ஓடு²]

வரைவாழை *varai-vāḻai,* பெ.(n.) மலைவாழை (சிலப்.11, 83, உரை); a kind of plantain grown in mountain regions.

[வரை + வாழை]

வரைவாளர் *varai-vāḷar,* பெ.(n.) வரைபடம் வரைபவர்; draftsman, draughtsman.

[வரை → வரைவு + ஆளர்.]

வரைவில்லி *varai-villi,* பெ.(n.) பொதுமகள் (நாமதீப. 5); prostitute, harlot.

[வரைவு + இல் + இ. 'இ' உடைமைப் பொருளீறு.]

வரைவிலக்கணம் *varai-v-ila-k-kaṇam,* பெ.(n.) வரையறை; definition. *"கலைக்கு வரைவிலக்கணம் கூறமுடியுமா?" (உ.வ.).*

[வரைவு + இலக்கணம்]

வரைவின்மகளிர் *varaivin-magaḷir,* பெ.(n.) பொது மகளிர் (குறள்.); prostitutes, harlots.

மறுவ. இருமனப்பெண்டிர், கணிகையர், பரத்தையர், விலைமாது, விலைமகள்.

[வரைவு + இல் → இன் + மகளிர்]

வரைவின் மகளிர் பற்றி மொழிஞாயிறு கூறுவது :– இல்லறம் புகாதும், கற்பைக் காவாதும், அழகு, துப்புரவு, புனைவு, முத்தமிழ்க்கலை முதலியவற்றால், ஆடவரை மயக்கி, வெளிப்படையான கொடிய நோயும், துப்புரவில்லாது தீ நாற்றம் வீசும் அருவருப்பான தோற்றமுமற்ற ஆடவர்க்கெல்லாம், குலம், மதம், பருவம், நிலைமை முதலான வேறுபாடின்றித் தம் நலத்தைப் பொருட்கு விற்கும் பொதுமகளிர், பலரொடும் வரையாது கூடுதலால் வரைவின் மகளிர் எனப்பட்டனர். (திருக். தமிழ்மரபுரை. பக். 149).

அழியும் பொருள் மேல் அவாவுறும் மகளிர், ஆரா அன்பினை அறியாத பெண்டிர்.

ஒருவரிடத்துள்ள பொருளின் அளவிற்கேற்ற வண்ணம், அன்பு செலுத்தும் பண்பில் மகளிரே இருமனப்பெண்டிர். இம்மாய மகளிரைப் பேரறிவாளர், ஒருபோதும் நாடார். கள்ளநெஞ்சங் கொண்ட இவ் வரைவின் மகளிர், குமுகாய மாந்தர்தம் உள்ளத்தை உற்றுநோக்கார். உடம்பை விற்றுப் பொருள் தேடுவதையே தம் வாழ்வின் முடிந்த முடிபாகக் கொள்வர். மன்பதையில் மாய்ந்தொழியும் பகட்டாரவாரப் பொருளினையே, வாழ்பொருளாக நினைந்து, சுவரினை விற்றுச் சித்திரம் வாங்குவது போல், தம்பேரெழில் தொலைத்துப் பெரும்பொருளீட்டி, வாணாளிறுதியில், அப் பொருளினைத் துய்க்காது, வறிதே மாய்வர். இத்தகைய இழிகுண மங்கையரையே வள்ளுவப் பேராசான் பொருட்பெண்டிர் என்றும், இருமனப் பெண்டிர் என்றும் இடித்துரைக்கின்றார். இத்தகையோரைக் கூடி மகிழ்வோர், பிணத்தைக் கூடும் பேதைமையாளர் எனில் மிகையன்று. இப் பொருண்மை பொதிந்த பொதுமறைப் பாடல் வருமாறு:–

"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி லேதில் பிணந்தழீ இயற்று" (குறள், 914).

வரைவின் மகளிர் பற்றிப் பரிமேலழகர் கூறுவது:– "தம் நலம் விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது, அதற்கு ஆவார், ஆகாதார் என்னும் வரைவு இல்லாத மகளிர்".

மணக்குடவர் கூறுவது :– "முயக்கத்தில் வரைவின்மையால், வரைவின் மகளிர் என்று கூறப்பட்டது".

வரைவின்மாதர் *varaivin-mādar,* பெ.(n.) வரைவின்மகளிர் பார்க்க; see *varaivin-magaḷir.*

[வரைவு + இல் → இன் + மாதர்]

வரைவு[1] *varaivu,* பெ.(n.) 1. எழுதுகை (திவா.); writing. 2. ஓவியமெழுதுகை; painting. 3. எல்லை; limit. *"வரைவின்றிச் செறும் பொழுதின்" (கலித். 8).* 4. அளவு (வின்.); measurement. 5. ஏற்றத்தாழ்வு நோக்குகை; discrimination, paying attention to differences. *"வரைவறக் கொடுப்போன்" (சூடா. 2, 48).* 6. திருமணம்; marriage. *'வரைவுநன் றென்னா தகலினும் அவர் வந்து" (அகநா. 119 : 4). "உரைசா னன்கலம் வரைவில வீசி" (பதிற்று. 54 : 8).* 7. ஒழுக்கநெறி; the path of good conduct. 8. நீக்கம் (திவா.); rejection, exclusion, deletion. 9. பிரிவு (வின்.); separation.

[வரை → வரைவு]

வரைவு பற்றி இளம்பூரணர் பொருளதிகாரத்தில் புகல்வது :– "வரைவு என்பது செய்யத்தகுவனவும், தவிரத் தகுவனவும், வரைந்து ஒழுகும் ஒழுக்கம்" (இளம்.தொல். பொருள்.256).

வரைவு[2] *varaivu,* பெ.(n.) திட்டம், சட்டம் முதலியவற்றின் திருத்தத்துக்கு உள்ளாகக் கூடியபடி; முதற்படி; draft of a plan, etc.; proposal. *அடுத்த ஐந்தாண்டுத் திட்ட வரைவு ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது (உ.வ.).*

[வரை → வரைவு]

வரைவுகடாதல் *varaivu-kaḍādal,* பெ.(n.) தலைவியை மணம் புரிந்து கொள்ளுமாறு தோழி தலைமகனை வற்புறுத்தும் அகத்துறை (அகம்.) (திருக்கோ. 130); theme of the female companion of the heroine urging the hero to marry her mistress.

[வரைவு + கடாவுதல் →கடாதல்.]

வரைவுடன்படுதல் *varaivuḍaṉ-paḍudal,* பெ.(n.) தலைவியின் சுற்றத்தார் தலைமகற்கு அவளை மணம்புரிவிக்க உடன்படும் அகத்துறை (அகம்.) (கலித்.107, துறைக் குறிப்பு); theme in which the parents of the heroine give their consent to her marriage with the hero.

[வரைவு + உடன்படுதல்.]

வரைவுமலி–தல் *varaivu-mali-,* 2 செ.கு.வி. (v.i.) மணநிகழ்வதுபற்றி மகிழ்வுறுதல்; to feel happy at the prospect of marriage. *"அவன் வரைய வருகின்றமை தோழி தலைவிக்கு வரைவு மலிந்து கூறியது" (கலித். 37, துறைக்குறிப்பு).*

[வரைவு + மலி–.]

வரைவெழுத்து *varaiveḻuttu,* பெ.(n.) ஈழுத்தாணி கொண்டு ஏட்டிலெழுதப் பெறும் எழுத்து; stylus for writing on *ēḍu* (palmra leaf).

[வரைவு + எழுத்து.]

வரைவெழுத்தும் வெட்டெழுத்தாகிய வட்டெழுத்தும், எழுதப்படும் கருவிக்கேற்ப வெவ்வேறு சொல்லாற் குறிக்கப் பெறும். கையினால் மணலிலும், மையினால் துணியிலும், சுவரிலும், எழுத்தாணியால் ஓலையிலும் வரையும் ஒவ்வொரு வரிவடிவும், ஒரே தொடர்ச்சியாக, கோடிழுத்து வரையும் எழுத்தென்க.

வல்[1] *val,* பெ.(n.) கட்டுக்கொடி; coagulating creeper, cocculus villosus (சா.அக.).

வல்[2] *val,* பெ.(n.) 1. வலிமை (சூடா.); strength, power. *"ஒலிவல் ஈந்தின் உலவைஅம் காட்டு" (நற்.2:2). "வல்லசுரர் ஆகி" (திருவாசகம். சிவபுராணம்).* 2. திறமை; ability, capacity, talent, skill. 3. மேடு (உரி.நி.); hillock. 4. சூதாடுங்கருவி (தொல். எழுத்து. 373); dice. 5. முலைக்கச்சு (யாழ்.அக.); bodice.

வல்[3] *val,* பெ.(n.) விரைவு (சூடா.); quickness, hurriedness, speed, haste. *"எம்மினும் விரைந்துவல் லெய்திப் பன்மா" (அகநா. 9: 17). "வழிபடு வோரை வல்லறி தீயே" (புறநா.10 : 1).*

வல்கம் *valgam,* பெ.(n.) மரப்பட்டை (தைலவ.); bark of tree (சா.அக.).

வல்கலம் *valkalam,* பெ.(n.) 1. மரப்பட்டை (தைலவ.); bark of tree. 2. சில உடலுறுப்புகளை மூடியிருக்கும் சவ்வு; cortex.

[வல்+கலம். குல்→கல்→கலம் = மரத்தில் அல்லது உடலில் இயற்கையாய் பொருந்தியது.]

வல்கி *valgi,* பெ.(n.) யாழ் (திவா.); lute.

வல்கிதம் *valgidam,* பெ.(n.) வற்சிதம் (யாழ்.அக.); gallop, a pace of horse.

[வல் + கிதம்.]

Skt. kita > த. கிதம்.

வல்சி *valši,* பெ.(n.) 1. உணவு; food. *"வளைகதிர் வல்சிகொண் டளைமல்க வைக்கும்" (புறநா. 190). "குறும்பி வல்சிப் பெருங்கை யேற்றை" (அகநா. 8 : 2). "எறிமட மாற்கு வல்சி ஆகும்" (நற். 6 : 8).* 2. சோறு (பிங்.); boiled or cooked rice. *"கொழுவல்சி" (மதுரைக். 141).* 3. அரிசி (சா.அக.); rice. *"வல்சி காய்களின் வருக்கமும்" (திருவிளை. குண்டோ. 175).* 4. நெல்; paddy. *"வினைஞர் வல்சி நல்க" (மலைபடு. 462).*

[உல் → வல் → வல்சி]

வல்மீகம் *valmīgam,* பெ.(n.) 1. கறையான் புற்று; ant-hill. 2. ஆனைக்கால்; elephantiasis (சா.அக.).

[வல்மீக → வல்மீகம்]



வல்ல *valla,* பெ.அ.(adj.) 1. ஆற்றல் மிக்க; வலிமையுள்ள; powerful. *குறிப்பிடப் படுவதை நிகழ்த்தக்கூடிய.* 2. திறமையுள்ள; skilful, capable, talented, efficient. *குளிர் காய்ச்சலை உடனடியாகக் குறைக்கவல்ல மருந்து.*

தெ. வல்ல.

[வல்[1] → வல்ல]

வல்லக்கட்டி *valla-k-kaṭṭi,* பெ.(n.) வல்லைக் கட்டி; enlargement of spleen.

[வல்ல + கட்டி.]

குள் → கள் → கட்டு → கட்டி. கள் = திரளல், பெருகுதல், உருண்டையாதல், உருண்டு கட்டியாதல், வல்லக்கட்டி என்பது திரண்டு பெருகுதலால் ஏற்படும் தோற்றம்.

வல்லக்காடு *vallakkāḍu,* பெ.(n.) சுடுகாடு; cremating ground, burial ground. *"வயசோ வல்லக் காடோ?" (இ.வ.).*

தெ. வல்லகாடு

[வல்ல + காடு.]

கடு = மிகுதி, செறிவு, அடர்த்தி. மரங்களின் செறிவு மிக்க இடம். இங்கே காடு என்னும் சொல் காடுவெட்டி நிலந்திருத்தியபோது, விளைநிலம் என்னும் பொருண்மையிலும், அடுத்து விளைநிலத்தையடுத்த ஊர் எல்லை யென்னும் பொருளிலும், இறுதியாக ஊரெல்லையின் கண்ணே அமைந்த சுடுகாடு என்னும் பொருள்களில் புடைபெயர்ந்துள்ளது.

வல்லக்கோட்டை *valla-k-kōṭṭai,* பெ.(n.) புகழ்பெற்ற முருகன் கோவிலமைந்த ஊர்; a fabulous Lord Murugan temple located in Kāñcipuram Dist.

வல்லகி *vallagi,* பெ.(n.) வல்கி பார்க்க; see *valgi.*

[வல்ல → வல்லகி]

வல்லகை *vallagai,* பெ.(n.) வாழை; plantain (சா.அக.).

வல்லங்கை *vallaṅgai,* பெ.(n.) வலதுகை; right hand.

[வலக்கை →வல்லக்கை →வல்லங்கை.]

குல் = கூடுதல் கருத்து வேர். குல் →குய் →கய் (செய்தல்) →கெய் →செய். செய் →கெய் →கை.

வல்லசம் *vallaśam,* பெ.(n.) மிளகு; pepper-*Piper nigrum* (சா.அக.).

வல்லடி *vallaḍi,* பெ.(n.) 1. வல்லபம்² (யாழ்.அக.) பார்க்க; see *vallabam²*. 2. வலுக்கட்டாயம் (சங்.அக.); force, compulsion. 3. கட்டாயம், வலிமை; compulsion. 4. கொடுமை; oppression, cruelty. 5. நோயின்றித் தற்கொலை முதலியவற்றால் நேரும் இறப்பு; unnatural death. *"வல்லடி வாரிக்கொண்டு போக" (உ.வ.).*

தெ. வல்லடி.

[வல்¹ + அடி². அடு→ அடி.]

வல்லடிக்காரன் *vallaḍi-k-kāran,* பெ.(n.) 1. வன்முறையால் வினை முடிப்போன்; bully, one who achieves or attains his object forceably. *"வல்லடிக்காரர்க்கு விளக்கேற்றிக் காட்டுமா போலே" (ஈடு. 9, 5, 3).* 2. கொள்ளைக்காரன்; plunderer, robber.

[வல்லடி + காரன்.]

(ஒ.நோ.) பணக்காரன், வீட்டுக்காரன்.

கரு → காரன் = வினைமுதல் உடைமைப் பொருளிற் பயின்றுவரும், ஆண்பாற் பெயரீறு. வல்லடிக்காரன் என்னுமிச் சொல்லில், வலிமை அல்லது ஆற்றலைக் கொண்டு, வன்முறையால் வினைமுடிப்போனைக் குறித்து வழங்கிற்று எனலாம். காரி (பெ.பா.). வீட்டுக்காரன் என்பது உரிமையும், பணக்காரன் என்பது உடைமையும், காவற்காரன் என்பது வினையுடைமையும் (குலப் பெயராயின் வினையுரிமையும்), அண்ணன் காரன் என்பது உறவுரிமை உணர்த்தும் பெயர்களாகும். தோட்டக்காரன், வண்டிக்காரன், மாட்டுக்காரன் என்பன உரியவனைக் குறிக்காவிடத்துப் பொறுப்புரிமைக்காரனைக் குறிக்கும். உரியவன் சொந்தக்காரன்.

காரன் காரியீற்றுப் பெயர்கள் நூற்றுக் கணக்கின.

காரன் (kāra)→ வ. கார.

வடமொழியாளர் இவ்வீற்றை வட சொல்லாக்குவதற்கு 'க்ரு' (செய்) என்னும் முதனிலையினின்று திரித்துச் செய்பவன் என்று பொருள் கூறுவர். ஆட்டுக்காரன், கோழிக்காரன், சொந்தக்காரன், தண்ணீர்க்காரன், நாழிமணிக்காரன், புள்ளிக்காரன், முட்டைக்காரன், வெள்ளைக்காரன் முதலிய பெயர்கட்குச் செய்பவன் என்னும் பொருள், பொருந்தாமை காண்க. வேலைக்காரன், கூலிக்காரன் என்பனவும் வினையுடைமையே குறிக்கும்.

வல்லடியடி¹–த்தல் *vallaḍi-y-aḍi-,* 4 செ. F ‹ whÉ (v.t.) வலுக்கட்டாயஞ் செய்தல்; to compel, force.

[வல்லடி + அடி–. அடு→அடி.]

வல்லடியடி²–த்தல் *vallaḍi-y-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) கொடுமை யிழைத்தல்; to cause oppression, to enforce cruelty.

[வல்லடி + அடி–. அடு→அடி.]

வல்லடிவம்பன் *valladi-vamban,* பெ.(n.) வலக்கட்டாயத்தால் செயலை முடித்துக் கொள்வோன்; bully, one who achieves his object by using force. *"வடிப்பமாய்ப் பேசிவரும் வல்லடிவம்பர்களும்" (ஆதி யூரவதானி. 23).*

[வல்லடி + வம்பன]

வல்லடிவழக்கு *valladi-valakku,* பெ.(n.) 1. அழிவழக்கு (இ.வ.); unreasonable insistence, unjust or oppressive claim. 2. நெறிமுறையின்றி வல்லுரத்தைப் பயன்படுத்துகை (வின்.); unjustifiable or unreasonable use of force.

[வல்லடி + வழக்கு. வழங்கு→வழக்கு.]

வல்லடை *valladai,* பெ.(n.) கூரைவீட்டில் கூரையின் அடிப்பகுதியில் அமைந்த புல் அல்லது தட்டையாலாகிய கட்டு; a kind of grass or sedge used underneath the thatched roof of a house.

[வல் + அடை. அடு→அடை.]

வல்லணங்கு *val-l-anangu,* பெ.(n.) காளி (பிங்.); kāḷi, as powerful.

[வல்[1] + அணங்கு. உணங்கு→ அணங்கு.]

உணங்கு = வருந்து, வருத்து.

உண்மைக்குப் புறம்பானவரை பிறருக்கு இன்னல் விளைவிப்போரை, வருத்தும் பெண் தெய்வமென்று, ஊரகத்தார் நம்பினர். பிறரை வருத்துவோருக்கு இன்னல் தருபவள் என்றும், கடுந்துயரங்களைந்து எத்தகு வலிமை வாய்ந்த இன்னல் களைபவளே காளி.

வல்லத்துக்கல் *vallattu-k-kal,* பெ.(n.) வல்லத்துவில்லை பார்க்க; see *vallattu-villai.*

மறுவ. பளிங்கு

[வல்லம்[3] + அத்து + கல்]

வல்லத்துக்கிட்டம் *vallattu-k-kittam,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்தின் அருகிலுள்ள வல்லம் என்னும் ஊரில் எடுக்கும் சிறந்த கிட்டம்; over burnt brick found at vallam near Tañjore District (சா.அக.).

[வல்லம் + அத்து + கிட்டம்.]

வல்லத்துவில்லை *vallattu-villai,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள வல்லம் என்னும் ஊரிற்கிடைக்கும் பளிங்குக் கல்; crystals for spectacles, as obtained from Vallam area in Tañjore District.

[வல்லம்[3] + அத்து + வில்லை]

வல்லதம் *valladam,* பெ.(n.) 1. கொலை (யாழ்.அக.); murder. 2. மூடுகை; covering.

[வல் → வல்ல → வல்லதம்]

ஒருகா. வல் + அதம் = ஓரீறு என்றுமாம்.

வல்லந்தம் *vallandam,* பெ.(n.) 1. வலுக்கட்டாயம், வலாற்காரம்; compulsion. 2. வன்மை, வலு; might, strength. 3. உரம், வலிமை; power, energy.

[வல்ல : வலிமையுள்ள, வல்ல → வல்லந்தம்]

வல்லநாய் *vallanāy,* பெ.(n.) சூதாடு கருவியாகிய நாய் (தொல். எழுத்து. 384, உரை); a piece in gambling.

[வல்[1] → வல்ல + நாய்]

வல்லப்பலகை *valla-p-palagai,* பெ.(n.) சூதாடுதற்குரிய பலகை (தொல். எழுத்து. 384, உரை); gambling board.

[வல் [1] → வல்ல + பலகை]

வல்லபசத்தி *vallabašatti,* பெ.(n.) வல்லவ சத்தி பார்க்க; see *vallava-šatti.*

[வல்லபம் [2] + சத்தி [4]]

வல்லபடி *valla-padi,* வி.எ.(adv.) முடிந்தபடி; to the best of one's ability. *"தாம் வல்லபடி பாடி" (புறநா. 47, உரை).*

[வல்ல + படி[3]]

வல்லபம்[1] *vallabam,* பெ.(n.) வல்லவம்[1] பார்க்க; see *vallavam[1].*

வல்லபம்[2] *vallabam,* பெ.(n.) குங்கிலியம்; resin (சா.அக.).

வல்லபம் என்பது வெள்ளைக் குங்கிலியம், கருங்குங்கிலியம் என்னும் இருவகை மரப்பிசினையும் குறிக்கும். இப்பிசின் நீரில் கரையாது;

இம் மரப்பிசின் பொருள்களை நன்கு இறுக ஒட்டுந் தன்மை மிக்கது.

வல்லபன்[1] *vallaban,* பெ.(n.) வல்லவன்[2] பார்க்க; see *vallavan[2].*

[வல்லபம்[2] → வல்லபன்]

வல்லபன்[2] *vallaban,* பெ.(n.) வல்லவன்[3] பார்க்க; see *vallavan[3].*

[வல்லபம் [2] → வல்லபன்]

வல்லபேதம் *vallabēdam,* பெ.(n.) ஞாழல்; european saffron.

வல்லம்[1] *vallam,* பெ.(n.) ஆற்றல்; power, strength, energetic capacity. *"வல்லம்பேசி வலிசெய் மூன்றூரினை..... நூறினான்" (தேவா. 380, 6).*

[வன்–மை → வல்லமை → வல்லம்]

ஒருகா. வல்→ வல்லம்.

வல்லம்[2] *vallam,* பெ.(n.) வல்லவை, 1 (அக.நி) பார்க்க; see *vallavai.*

வல்லம்[3] *vallam,* பெ.(n.) 1. வேலூர் மாவட்டத்திலுள்ள ஒரு சிவத்தலம்; a Šiva shrine located in Vellore District. 2. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரு நகரம்; a town situated in the Tañjore district. *"வல்ல மெறிந் தானேந்து வாள்" (பெருந்தொ. 961). "நெடுங்கதிர் நெல்லின் வல்லம் கிழவோன்" (அகநா. 356 : 13).* 3. வல்லத்துவில்லை பார்க்க; see *vallattu-villai.* 4. வாழை (மலை.); plantain. 5. இரண்டு மஞ்சாடி நிறை (நாமதீப. 804); a quality weight 2 *mañjāḍi.*

வல்லம்[4] *vallam,* பெ.(n.) வட்டமான ஓலைக் கூடை (இ.வ.); round shaped Ōla basket.

[முல் → மல் → வல் → வல்லம்]

வல்லம் = வட்டவடிவமாக மிடைந்து பின்னப்பட்ட ஓலைக்கூடை.

வல்லம்[5] *vallam,* பெ.(n.) 1. வைப்புநஞ்சு வகையுளொன்று; a kind of arsenic. 2. பருப்பு வகையுளொன்று; a kind of pulse (சா.அக.).

வல்லம்[6] *vallam,* பெ.(n.) வள்ளம் பார்க்க; see *vaḷḷam.*

வல்லம்கிட்டம் *vallam-kiṭṭam,* பெ.(n.) இரும்பு முதலியவற்றின் மாழைக்கட்டி; ore lump of metal.

[வல்லம் + கிட்டம். குள் → கிள் → கிட்டம் = திரட்சி, கட்டி.]

இந்தக் கிட்டம் தஞ்சைக்கு அருகேயுள்ள வல்லத்தில் மிகுதியாகக் கிடைக்கிறது. இங்கு உற்பத்தியாகும் கிட்டம் ஏனைய பகுதிகளில் கிடைக்கும் கிட்டத்தைவிட மிகச் சிறந்தது. இதன் சிறப்புத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு, வல்லம்கிட்டம் என்று பெயர்பெற்றது.

வல்லம்பன் *vallambaṉ,* பெ.(n.) தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம் மாவட்டங்களில், வேளாண் தொழில் செய்து வாழும் ஓர் இனம்; a cultivating caste in Tañjāvūr, Tiruchirāppaḷḷi and Rāmanādapuram Districts.

[வல்[1] + அம்பு → அம்பன் = வல்லம்பன்]

வல்லமை *vallamai,* பெ.(n.) 1. பெரும் வலிமை; might, power, prowess. *"காதுசிலை வல்லமைகள்" (திருக்கலம். 72). இந்தியா வல்லமை பொருந்திய நாடாக வளர்ந்து வருகிறது (உ.வ.).* 2. திறன்; ability, skill, expertness. *முத்துக் குளிப்பவர்கள் நீண்ட நேரம் நீருக்குள் மூழ்கியிருக்கும் வல்லமை படைத்தவர்கள் (இ.வ.).*

[வல்[1] → வல்ல → வல்லமை]

வல்லயம் *vallayam,* பெ.(n.) ஈட்டிவகை; a kind of spear. *"வல்லயந் தனிலுடைவாளில்" (கந்தபு. தருமகோ. 24).*

தெ. பல்லமு; க. பல்லக.

[வல் + அயம் – வல்லயம் = வலிமை பொருந்திய ஈட்டி வகை.]



வல்லரசு *val-l-arašu,* பெ.(n.) பொருளாதாரத்தில் அல்லது வலிமைசான்ற படைத்திறன் மிக்க நாடு; country of predominance in economy or in military; super power country. *வல்லரசுகள் படைக்குறைப்புச் செய்ய முன்வந்தால், மக்கள் அமைதியாக வாழ்வர் (உ..வ.).*

[வல் + அரசு. அரசன் → அரசு (ஈறுகெட்டது). (ஒ.நோ.) வேந்தன் → வேந்து.]

வல்லரட்டன் *vallaraṭṭaṉ,* பெ.(n.) 1. பெரும் வலிமையாளன்; brave and resolute man. 2. இறுமாப்புடையவன்; man of arrogancy.

மறுவ. மிடுக்கன்.

[வல் + அரட்டன்.]

அரள் → அரட்டு → அரட்டன். எவரையும் வெல்லும் திறன் வாய்ந்தவன். அளப்பரும் ஆற்றல் மிக்கவனே வல்லரட்டன்.

வல்லரி *vallari,* பெ.(n.) 1. தளிர் (சூடா.); budding tender shoot. 2. பசுங்காய் (சூடா.); green fruit. 3. காய்க்குலை (உரி.நி.); cluster of fruit. 4. பூங்கொத்து (திவா.); bunch of flowers. 5. கொடி (சங்.அக.); creeper.

வல்லவசத்தி *vallava-šatti,* பெ.(n.) மிகுவலி; strong and kerile strength.

வல்லவட்டு¹ *valla-vaṭṭu,* பெ.(n.) வல்லவன் போடும் மேல் துண்டு; a towel worn by abled capable man.

[வல்ல + வட்டு]

மேல் துண்டைக் கழுத்தைச் சுற்றிப் போடுவதும், இடையில் கட்டிக்கொள்வதும் பணிவைக் காட்டும். ஒரே தோளில் தொங்க விடுவது தான் யாருக்கும் பணியேன் என்பதை குறிக்கும். அதைத் தான் 'வல்லவட்டு' என்பர்.

வல்லவட்டு² *vallavaṭṭu,* பெ.(n.) வல்ல வாட்டு (வின்.) பார்க்க; see *vallavāṭṭu.*

வல்லவம்¹ *vallavam,* பெ.(n.) 1. அன்பு, காதல் (யாழ்.அக.); love. 2. உயர் சாதிக் குதிரை வகை (யாழ்.அக.); a good breed of horse species.

[வல்→ வல்ல → வல்லவம்]

வல்லவம்² *vallavam,* பெ.(n.) 1. வலிமை, ஆற்றல்; vitality, strength, might, potentiality. 2. திறமை; ability, capacity, talent. 3. கொடுஞ்செயல்; cruel deed/ harsh action. 4. அருஞ்செயல்; வீரதீரச் செயல்; heroic deed, difficult performance.

[வல்→ வல்ல → வல்லவம்]

வல்லவர்கோன் *vallavar-kōṉ,* பெ.(n.) சாளுக்கிய நாட்டவர் அரசன்; a king of *Cāḷukkiās* country. *"வல்லவர் கோனை வரவு காணாது".*

[வல்லவர் + கோன்]

வல்லவர்கோன் = சாளுக்கிய ஆகவமல்லன் (வீரராசேந்திரன் – மெய்கீர்த்தி)

வல்லவரையர்வந்தியத்தேவர் *valla-v-araiyar-vandiya-t-tēvar,* பெ.(n.) கீழைச் சாளுக்கிய மன்னன்; a king of *kiḻai-c-cāḷukkiās.* *"ஸ்ரீராஜ ராஜதேவர் திருத்தமைக்கையார் வல்ல வரையர் வந்தியத் தேவர் மகாதேவியார்" (தெ.கல். தொ. 2 :1, கல்.7). இம்மன்னன் முதலாம் இராசராசனின் தமக்கையான குந்தி தேவியின் கணவன்.*

[வல்→ வல்ல + அரையர் + வந்தியத்தேவர்.]

வல்லவலோட்டி *vallavalōṭṭi,* பெ.(n.) முட்செடி வகையுளொன்று; a kind of thorny shrub (சா.அக.).

வல்லவன்¹ *vallavaṉ,* பெ.(n.) மேலைச் சாளுக்கிய மன்னன்; the western *cāḷukya* king.

வல்லவன்² *vallavaṉ,* பெ.(n.) 1. கணவன்; husband. *"மலைமாது வல்லவன் வாணன்" (பிங்.) (தஞ்சைவா.164).* 2. இடையன் (வின்.); shepherd, cowherd. 3. இடையர் தலைவன் (யாழ்.அக.); chief herdsman. 4. அன்பிற் குரியவன்; one who is beloved. 5. குதிரைகளை மேற்பார்ப்போன் (யாழ்.அக.); supervisor of horses.

[வல்லபன் → வல்லவன்]

வல்லவன்³ *vallavaṉ,* பெ.(n.) 1. வலிமை யுள்ளவன்; strong or heroic man. 2. திறமைசாலி, ஆற்றலுள்ளவன், பொருத்த மானவன்; capable man, suitable man, man of ability. *"வல்லவன் றைஇய பாவைகொல்" (கலித். 56, 7). வல்லலவன் வகுத்ததே வாய்க்கால் (பழ.). வல்லவனுக்கும் வல்லவன் வையத்திலுண்டு (உ.வ.). 'வல்லவன் ஆட்டும் பம்பரம் மணலிலும் ஆடும்' (பழ.).*

[வல் ¹ → வல்லவன்]

வல்லவன்[4] *vallavan̲*, பெ.(n.) 1. சமைப்பவன் (வின்.); cook. 2. விராடனகரில் வீமன் கரந்துறைந்த போது, பூண்ட பெயர்; name assumed by Bhīman̲ when he lived incognito in virāḍa.

[வல் [1] → வல்லவ → வல்லவன்]

வல்லவாட்டு *vallavāṭṭu*, பெ.(n.) 1. இடத் தோளின் மேலிருந்து அணியும் ஆடை; upper cloth worn loosely over the left shoulder and across the chest. *"சந்திரகாவிச் சேலை வல்லவாட்டுக்குட் டதும்பி" (தனிப்பா. i, 260, 1).* 2. கழுத்தைச் சுற்றித் தொங்க விடும் ஆடை (இ.வ.); scarf gracefully hung round the neck.

தெ. வல்லெ வாடு.

[வல்ல + வாட்டு → வல்லவாட்டு]

வல்லவாழ் *vallavāḻ*, பெ.(n.) நாலாயிரத் தெய்வப் பனுவலிற் பாடல் பெற்ற திருப்பதி; sacred Tiruppadi, a place of celebration in *Nālāyira-t-teyva-p-pan̲uval.*

வல்லவாறு *valla-v-ār̲u*, வி.எ.(adv.) இயன்றவளவில்; to the best of one's ability or power. *"வல்லவாறு சிவாய நமவென்று..... நாதனடி தொழ" (தேவா. 470: 6).*

[வல்ல + ஆறு [1]]

வல்லவி[1] *vallavi*, பெ.(n.) 1. வல்லவை[1] (பிங்.) பார்க்க; see *vallavai.* 2. மலைமகள் (பார்வதி) (நாமதீப.23); malai-magaḷ.

[வல் → வல்ல → வல்லவி]

வல்லவி[2] *vallavi*, பெ.(n.) 1. வலிமை யுள்ளவ–ன்–ள் (சங்.அக.); strong and verile person, mighty man. 2. திறமையுள்ளவன் –ள் (யாழ்.அக.); skilful or capable person.

வல்லவை *vallavai*, பெ.(n.) 1. மனைவி (சூடா.); wife. 2. ஆனைமுகனாரின் துணைவி; wife of God Gaṇēšān̲.

[வல்லவ → வல்லவை]

வல்லவைமன் *vallavai-man̲*, பெ.(n.) ஆனைமுகன் (நாமதீப. 28); *Gaṇēšan̲*, as the husband of vallavai.

[வல்லவை + மன்[2]]

வல்லா *vallā*, பெ.(n.) முடியாதவை; impossibilities, incapabilities. *"வல்லா கூறினும்" (தொல். பொருள். 425). "வல்லாகூறி யிருக்கு முள்ளிலை" (குறுந். 219 : 5), "வல்லா நெஞ்சம் வலிப்ப நம்மினும்" (அகநா.53 : 14).*

[வல்லு + ஆ. 'ஆ' = எதிர்மறை ஈறு.]

வல்லாகினி *vallāgin̲i*, பெ.(n.) கருங்கொடி; spring creeper - *Hiptage madablota* (சா.அக.).

வல்லாங்கு *vallāṅgu*, கு.வி.எ.(adv.) இயன்றவளவில், முடிந்த வரையில், செய்தவளவில்; to the best of one's ability or power, to the extent possible. *"வல்லாங்குப் பாடி" (புறநா. 47). "வல்லாங்கு வருது மென்னா தல்குவர" (அகநா.79 : 10). "வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்" (புறநா. 163 : 6). "வல்லாங்குச் செய்து" (மணிமே–23, 44).*

[வல்ல + ஆங்கு]

வல்லாசி *vallāši*, பெ.(n.) நஞ்சினை நீக்கக் கொடுக்கும் பூடு. இப்பூடு மலையாளத்தில் விளையும்; a Malabar herb given as an antitode for poisons (சா.அக.).

வல்லாட்சி *vallāṭci,* பெ.(n.) கொடுங்கோலாட்சி; despotism.

[வல் + ஆட்சி]

அடக்கியொடுக்கியும், வன்மையாகவும், தன்போக்கில் ஆட்சி செய்தலுமே, வல்லாட்சியாகும்.

வல்லாட்டு *val-l-āṭṭu,* பெ.(n.) குறும்பு; horse-play, rude-pranks, mischief. *"ஐவர் கண்டகர்தம் வல்லாட்டை யடக்கும்" (திருவாச. 40, 8).*

[வல்¹ + ஆடு → ஆட்டு]

வல்லாட்டு, வேட்டையாடல் போன்றன அரசன் இன்பமாக பொழுதுபோக்கும் வழிகளாம்.

வல்லாண்முல்லை *vallāṇ-mullai,* பெ.(n.) ஒருவனது குடியையும் பிறப்பிடத்தையும் இயல்புகளையும் புகழ்ந்து, அவனது ஆண்மை பெருகச் சிறப்பித்துக் கூறும் புறத்துறை (பு.வெ.8, 23); theme of appealing to and exciting the manly virtues of a person by praising his family, his native place, and his great qualities.

[வல்லாண்–மை + முல்லை]

வல்லாண்மை *val-l-āṇmai,* பெ.(n.) பேராற்றல்,; manliness, great ability. *"வல்லாண்மை செல்வமென் றிவ்வெல்லாம்" (திருக்கலம். 76).*

[வல்¹ + ஆண்–மை]

வல்லாதகம் *vallādagam,* பெ.(n.) வல்லாதி பார்க்க; see *vallādi* (சா.அக.).

வல்லாததுக்கம் *vallāda-tukkam,* பெ.(n.) 1. முறைமையின்றி உண்டாகுந் துயரம் (யாழ்.அக.); misery suffered unjustly. 2. தாங்கொணாத் துயரம் (இ.வ.); agony, grief, unbearable distress, woe.

[வல்லு + 'ஆ' (எதிர்மறை இடைநிலை) + துக்கம்]

வல்லாதா *vallādā,* பெ.(n.) சேமரத்தின் கொட்டை (பதார்த்த. 1066); marking-nut.

மறுவ. சேங்கொட்டை

வல்லாதி *vallādi,* பெ.(n.) சேங்கொட்டை; marking nut-*Semi carpus anacardium* (சா.அக.).

வல்லாதிமூலி *vallādi-mūli,* பெ.(n.) வழுதலை; brinjal (சா.அக.).

வல்லாதோர் *vallādōr,* பெ.(n.) வலிமையற்றோர்; weak or infirm person. *"இரந்தோர் மாற்றல் ஆற்றா இல்லின் வாழ்க்கை வல்லாதோரே" (நற்.84, 11–12).*

வல்லாமை *vallāmai,* பெ.(n.) 1. இயலாமை; incapability, incapacity. 2. தள்ளாமை (இ.வ.); physical unfitness.

[வல்லு + ஆ + மை. 'ஆ' = எதிர்மறை இடைநிலை. மை = பண்புப்பெயரீறு.]

ஒ.நோ. கொள்ளாமை, செய்யாமை.

வல்லார்¹ *vallār,* பெ.(n.) 1. வலிமை யுடையவர்; mighty persons. 2. திறமை யுடையவர்; talented, clever, capable persons. *"வடிநாவின் வல்லார் முற் சொல்வல்லேன்" (கலித். 141, 19).*

[வல்¹ + ஆர்]

வல்லார்² *vallār,* பெ.(n.) 1. வலுவிழந்தவர்; weak person. 2. திறமையில்லாதவர்; incapable persons. *"வல்லாராயினும் வல்லுநராயினும்" (புறநா. 27).*

மறுவ. மாட்டாதவர்

[வல்லு + ஆர்]

வல்லார்கொள்ளை *vallār-kollai,* பெ.(n.) பாதுகாப்பில்லாது யாவரும் கவர்ந்து கொள்ளக்கூடிய சொத்து; property left unprotected or uncared for, as object of easy plunder by others. *"வல்லார் கொள்ளை வாழைப்பழ மாகும்".*

[வல்லார்² + கொள்ளை]

கொள்→கொள்ளை = அச்சுறுத்திச் சூறை கொள்ளும் வழிப்பறி.

வல்லாரல் *vallāral,* பெ.(n.) வல்லாரை; Indian penny wort (சா.அக.).

வல்லாரி *vallāri,* பெ.(n.) கொக்கு; stork (சா.அக.).

வல்லாரை¹ *vallārai,* பெ.(n.) 1. கீரை வகை (பதார்த்த. 359); Indian penny-wort. 2. தழல் (கேட்டை) விண்மீன் (பிங்.); the 18th naksatra.

[வல்→வல்லாரை]

உடலுக்கு வலிவைக் கொடுக்கும். இக் கீரையை ஒரு மண்டலம் உண்டுவந்தால், அரத்தக் கடுப்பு அகலும்; வயிற்றுளைவு நிற்கும். அறிவு கூர்மை பெறும் என்று சா.அக. கூறும்.

வல்லாரை² *vallārai,* பெ.(n.) சூதாடுபவர்; gambler. *"வல்லாரை வல்லார் செறுப்பவும்" (பரிபா. 9 : 74).*

[வன்→வல்→வல்லால்→வல்லாரை]

வல்லாரைக்கிருதம் *vallārai-k-kirudam,* பெ.(n.) வல்லாரையும் நெய்யுஞ் சேர்த்துச் செய்த கூட்டு மருந்து (வின்.); compound medicine made of pennywort and ghee (சா.அக.).

Skt. krta > த. கிருதம்.

[வல்லாரை + கிருதம்²]

வல்லாரைக்கீரை *vallārai-k-kīrai,* பெ.(n.) வல்லாரை; leaves of vallārai are edible and used as greens (சா.அக.).

[வல்லாரை + கீரை]



வல்லாரைக்கொடிமூலம் *vallārai-k-kodi-mūlam,* பெ.(n.) வல்லாரைக் கொடியின் வேர்; root hydrocotyle asiatica (penny wort) (சா.அக.).

[வல்லாரை + கொடிமூலம்]

வல்லாரைக் கீரையின் அனைத்துப் பாகங்களும் மருத்துவக் குணம் வாய்ந்தவை. இதன் வேர்ப்பகுதியில் மருத்துவக் குணம் முழுமையாக உள்ளதால் தனியே குறிப்பிடப்பட்டுள்ளது.

வல்லாரைச்சூரணம் *vallārai-c-cūranam,* பெ.(n.) தூள்; fine powder (சா.அக.).

[வல்லாரை + சூரணம். சுல்→ சுர்→சூர் →சூரணம் = மருந்தினைச் சுட்டுக் கருக்கிய பொடி.]

வல்லாரையடிமூலம் *vallārai-adi-mūlam,* பெ.(n.) வல்லாரை வேரினைச் சுட்டுக் கருக்கிய பொடி; fine powder of Indian penny-wort's root *(Vallārai-k-kīrai)* (சா.அக.).

[வல்லாரை + அடி + மூலம்]

வல்லாவட்டு *vallāvaṭṭu,* பெ.(n.) கழுத்தைச் சுற்றித் தொங்கவிடும் ஆடை (இ.வ.); scarf or towel gracefully hung round the neck.

[வல்[1] → வல்லா + வட்டு. வட்டு = வட்டமாகத் தொங்கவிடும் ஆடை]

வளமும் வல்லாண்மையு முடையவர்கள் தங்களின் தோற்றப் பொலிவு கருதியும், குமுகாயத்தில் தனித்தொரு நிலையை உயர்த்திக் காட்டிக் கொள்ளும் பொருட்டும் மூன்றினொருபகுதி முன்னு மிருபகுதி பின்னுமாக அணியப் பெறும் துண்டு என்றறிக.

வல்லாளகண்டன் *vallāḷa-kaṇḍaṉ,* பெ.(n.) 1. பேராற்றலுள்ளவன்; the mightiest of the mighty. *"வல்லாள கண்டா வடுகநாதா" (தனிப்பா.* ii, *47, 112).* 2. மிக்க துணிவுள்ளவன்; man of a venture some and unyielding spirit, very bold man, a man of stamina.

[வல்லாளன் + கண்டன்]

வல்லாளகண்டி *vallāḷa-kaṇḍi,* பெ.(n.) 1. பேராற்றலுள்ளவள்; the mightiest of the mighty women. 2. மிக்க துணிவுள்ளவள் (இ.வ.); woman of a venturesome and unyielding spirit, very bold woman, a women of physical and mental strength.

[வல்லாளகண்டன் → வல்லாளகண்டி]

வல்லாளர்கண்டன் *vallāḷar-kaṇḍaṉ,* பெ.(n.) வல்லாளகண்டன் (யாழ்.அக.) பார்க்க; see *vallāḷa-kaṇḍaṉ.*

[வல்லாளர் + கண்டன்]

வல்லாளன்[1] *vallāḷaṉ,* பெ.(n.) 1. வலிமை மிக்கவன்; mighty man, valiant hero. *"நள்ளாதார் மிடல்சாய்த்த வல்லாள" (புறநா. 125). "அரசுவரிற் றாங்கும் வல்லாளன்னே" (புறநா. 327: 8).* 2. திறமையாளன் (சமர்த்தன்) (வின்.); talented or skilful man, expert, efficient man, an incisive person. 3. விசய நகரத்து மன்னர்களிலொருவன்; a king of vijaya nagar.

[வல் [1] + ஆளன் : ஒரு ஆண்பாற் பெயரீறு.]

வல்லாளன்[2] *vallāḷaṉ,* பெ.(n.) 1. அரச மரபினன்; king of the *Bellāḷaṉ* dynasty. 2. ஒரு வீரன்; a brave soldier.

[வெள்ளாளன் → வல்லாளன் = வேளாண் குடியில் வந்த அரச மரபினன்]

இவன் மதுரையில் குலோத்துங்க பாண்டியன் காலத்தில் வாழ்ந்தவன். பெரும் பொருளை திரட்டிச் சிற்றரசனைப் போற் சிறந்து விளங்கியவன். தன்னிடம் வருவோர்க்கு கொடையளித்து வள்ளலாக வாழ்ந்தவன்.

வல்லாறு *vallāṟu,* வி.எ.(adj.) இயன்றவளவில், முடியும் வரையில்; to the best of one's ability or power, to the extent possible. *"தாயரென்னும் பெயரே வல்லாறெடுத்தேன்" (ஐங்குறு. 380).*

[வல்ல + ஆறு' அறு → ஆறு.]

வல்லான் *vallāṉ,* பெ.(n.) 1. வலிமை யுள்ளவன்; a stronger, mighty man. *"வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு வழக்குக்கு" (தாயு. சுகவாரி. 3). "வல்லா னல்லன் வாழ்கவவன் கண்ணி" (பதிற்றுப். 56:).* 2. திறமையாளன்; capable man. 3. கடவுள்; God, the almighty. *"வல்லான்*

செயலென வுணர்ந்து தேறி" (திருவாலவா. 56, 6). 4. சூதாடுபவன்; gambler. *"வல்லானாடிய மணிவட் டேய்ப்ப" (சீவக. 983).*

[வல்[1] → வல்லான்]

வல்லான்வலியான் *vallāṉ-valiyāṉ,* பெ.(n.) வல்லாளகண்டன் (இ.வ.) பார்க்க; see *vallāḷa-kaṇḍaṉ.*

[வல்லான் + வலியான்]

வல்லி[1] *valli,* பெ.(n.) சூதாடுபவன்; gambler. *"வல்லினாற் பயன்கொள்வான் வல்லி" (வீரசோ. தத். 3).*

[வல் [1] → வல்லி]

வல்லி[2] *valli,* பெ.(n.) 1. கொடி (பிங்.); creeper. *"வல்லியனையாள்" (பு.வெ.12, பெண்பாற். 13, உரை).* 2. படர் கொடிவகை; a creeper with bulbous, roots. 3. மருந்துச் செடி (சூடா.); medicinal plant. 4. இளம்பெண்; young woman, lady. *"மாதவி ஈன்றமணி மேகலை வல்லி" (மணிமே.18, 25), "வல்லியை யுயிர்த்த நிலமங்கை" (கம்பரா. கோலங். 24).* 5. முருகக் கடவுளின் தேவியாகிய வள்ளியம்மை (சூடா.); a wife of God Murugaṉ. 6. கால் விலங்கு; fetters. *"கானி மிர்த்தாற் கண்பரிப வல்லியோ" (பெருந்தொ.516).* 7. அறிவம் (உபநிடதம்) (வின்.); upaniḍadam, each of a series of hindu sacred trealise, written in sanskirit and expounding the vedas. 8. பதாகை (உரி.நி.); banner, standard. 9. பலாசமரம்; battle-of-plassey tree. 10. புன்முருக்கு மரம் (மலை.); a plant. 11. திருமணம் (யாழ்.அக.); marriage.

[த.வல்லி → வ. வல்லீ, முல் → மல் → வல் → வல்லி, வளைதற்கருத்து வேரினின்று கிளைத்த சொல்.]

வல்லி = கொடி போன்று வளைந்ததும், நெளிவு, சுழிவுகளுடன் கூடியதும், இயல்பாய் வளைக்குந் தன்மையுடன் திகழும் நிலைத்திணைப் பெயர்கள் எல்லாம் வளைவுக் கருத்தினின்று முகிழ்த்தவையே.

வளைதற் கருத்துப் பற்றி மொழிஞாயிறு கூறுங்கால்:–

மொழி இருவகைப்படும். 1. முழைத்தல் மொழி (Natural language). 2. இழைத்தல் மொழி (Articulate-speech).

இழைத்தல் மொழிபற்றிய சொற்கள் பெரும்பாலும் உகரச் சுட்டடியினின்று முகிழ்த்தவையே. உகரமேறிச் சொன்முதலாகாத 'வ'கரமுதற் சொற்களெல்லாம் 'புல்' என்னும் பகர முதலடியினின்றோ, 'முல்' என்னும் மகர முதலடியினின்றோதான் பிறந்துள்ளன.

' (எ–டு) முல் → மல் → வல் → வல்லி = வளைந்தகொடி.

வல்லி[3] *valli,* பெ.(n.) இடைச்சேரி (பிங்.); shepherds habilation or colony.

வல்லி[4] *valli,* பெ.(n.) 1. விரைவு (சூடா.); quickness, speed, haste, hurriedness. 2. அளவு; a measure (சா.அக.).

[வல் [2] → வல்லி]

வல்லி[5] *valli,* பெ.(n.) பிரிகை (பிங்.); removal, separation.

வல்லி[6] *valli,* பெ.(n.) அளவு வகை (வின்.); a standard measure.

வல்லி[7] *valli,* பெ.(n.) 1. முருக்கு; twisting. 2. வள்ளிக்கொடி; the creeper of sweet

potato. 3. இலந்தை; jujube. 4. தண்ணீரைக் கட்டும் ஓர் கொடி; coagulating creeper; Broom creeper-*Coculus villosus* (சா.அக.). 5. சீந்தில்; moon creeper. 6. புனல் முருங்கை; a tree wild moringa (சா.அக.).

[வல்→வல்லி.]

வல்லி[8] *valli*, பெ.(n.) 1. நன்னாரி; a twiner-*Hemidesmus*. 2. அமுதவல்லி; Tinosphora cordifolia. 3. அமிர்தவல்லி; tino shora cordifolia. 4. சாம்பாரவல்லி; vitis indica. 5. சீரக வல்லி; dioscorea aculeata. 6. ஈருவல்லி; maba buxifolia (சா.அக.).

வல்லிக்கயிறு *valli-k-kayiṟu*, பெ.(n.) உடை மேல் அணிந்து கொள்ளும் அரைஞாண் கயிறு; waist-cord worn over the cloth. *"பட்டின் கண்ணே அழகுபடக் கிடந்த வல்லிக் கயிறு விளங்க" (சீவக. 2280, உரை).*

[வல்லி[2] + கயிறு.]

கள்→கய்→கயில்→கயிறு. கள் = கட்டுதல், பிணைத்தல்.

வல்லிக்காய் *valli-k-kāi*, பெ.(n.) மரவங்கை; holly-leaved berberry (சா.அக.).

[வல்லி + கா→காய்.]

வல்லிக்கொடி *valli-k-koḍi*, பெ.(n.) பெரு மருந்துக் கொடி (பதார்த்த. 269); Indian birthwort.

[வல்லி + கொடி. கொடு→கொடி = வளைந்து படரும் நிலைத்தணை வகை (வே.க.167).]

வல்லிக்கொடிசெயநீர் *valli-k-koḍi-šeyanīr*, பெ.(n.) நஞ்சுக் கொடியினின்று உப்பெடுத்து மற்ற சரக்குகளோடு சேர்த்து பனியில் வைத்து அதனால் கசிந்த நீர்; a strong pungent liquid obtained by exposing in the night's dew, the slat extracted fromt he navel-string or the umbilical cord of a new born baby (or) foetus after mixing it with other ingredients (சா.அக.).

வல்லிக்கோளகம் *valli-k-kōḷagam*, பெ.(n.) பறங்கி வைப்பு நஞ்சு; a kind of arsenic (சா.அக.).

[வல்லி + கோளகம். கோள்→கோளகம்]

வல்லிகம்[1] *valligam*, பெ.(n.) செவ்வல்லிக் கொடி; water lilly (சா.அக.).



வல்லிகம்[2] *valligam*, பெ.(n.) கொடிவகை (யாழ்.அக.); a kind of creeper.

வல்லிகம்[3] *valligam*, பெ.(n.) 1. மிளகு (யாழ்.அக.); pepper. 2. மஞ்சள் (பச்.மூ.); turmeric.

[வல்லிசம் → வல்லிகம்]

வல்லிகை[1] *valligai*, பெ.(n.) 1. குதிரைக் கழுத்தில் கட்டும் வடம்; halter of a horse. *"நீலமணிக் கடிகை..... வல்லிகை" (கலித்.96).* 2. காதணிவகை (பிங்.); an ear-jewel.

[வல்லி[2] → வல்லிகை]

வல்லிகை[2] *valligai,* பெ.(n.) யாழ் (அக.நி.); lute.

[வல்லகி → வல்லிகை]

வல்லிசம் *vallišam,* பெ.(n.) மிளகு (தைலவ.); black-pepper.

வல்லிசாதகம் *valli-šādagam,* பெ.(n.) கற்பகத்திற் படருங் கொடிவகை (சங்.அகு.); a karpagam-creeper (சா.அக.).

Skt. sadaga> த. சாதகம்

[வல்லி[2] + சாதகம்]

வல்லிசாதம் *valli-šādam,* பெ.(n.) வல்லி சாதகம் (திருமுரு.101. வேறுரை, பக். 47, கீழ்க்குறிப்பு) (வின்.) பார்க்க; see *valli-šādagam.*

[வல்லி[2] + **Skt.** sāda> த. சாதம் *]*

வல்லிசாதி *valli-šādi,* பெ.(n.) தெய்வத் தன்மையுள்ள கொடி; divine creeper. *"கற்பக வல்லிசாதி போல்வாள்" (தக்கயாகப். 77, உரை).*

[வல்லி[2] + சாதி[6]]

வல்லிசு *vallišu,* பெ.(n.) முழுமை; that which is whole, full, complete.

[வல்லி →வல்லிசு]

வல்லிசுக்கிரன் *valli-šukkiran,* பெ.(n.) மூலிகை வகையு ளொன்று; a kind of herbal medicine (சா.அக.).

[வல்லி + சுக்கிரன்]

வல்லிசூரணை *valli-šūraṇai,* பெ.(n.) புளி வசளை; a kind of greens.

[வல்லி + சூரணை]

வல்லிசூரனை *valli-šūraṉai,* பெ.(n.) கீரை வகை (சங்.அக.); a kind of greens.

[வல்லி[2] + சூரனை]

வல்லிசை[1] *vallišai,* பெ.(n.) 1. உச்சவிசை (பிங்.); treble or high note or pitch. 2. வல்லோசை (இலக்.); sound of the hard consonants.

[வல்[1] + இசை[5]]

வல்லிசை[2] *vallišai,* பெ.(n.) பாம்பு (அக. நி.); snake.

வல்லிசைவண்ணம் *val-l-išai-vaṇṇam,* பெ.(n.) வல்லெழுத்து மிக்கு பயின்றுவரும் இசைப்பாட்டு; a rhythm marked by frequent use of *val-l-eḻuttu.* *"வல்லிசைவண்ணம் வல்லெழுத்துப் பயிலும்" (தொல். பொருள். 528).*

[வல்லிசை[1] + வண்ணம்]

வல்லிதின்[1] *vallidiṉ,* பெ.(n.) வல்லாங்கு பார்க்க; see *vallāṅgu.* *"வல்லிதின் விருந்து புறந்தருதலும்" (தொல். பொருள். 152). "வாழை ஈர்ந்தபடி வல்லிதின் வகைஇப்" (நற்.120 : 5).*

[வல்[1] → வல்லிதின்]

வல்லிதின்[2] *vallidiṉ,* வி.எ.(adv.) விரைவாக; rapidly, quickly. *"வல்லிதி னாடி வலிப்பதே" (பழ. 261). "வல்லிதின் வணங்கிச் சொல்லுநர்ப் பெறினே" (நற். 68 : 6).*

[வல்[2] → வல்லிதின்]

வல்லிதி *vallidi,* பெ.(n.) வல்லிசு பார்க்க; see *vallišu.*

வல்லிபஞ்சமூலம் *valli-pañja-mūlam,* பெ. (n.) வல்லி² பார்க்க; see *valli*.

வல்லிமண்டபம் *valli-maṇḍabam,* பெ.(n.) கொடிப்பந்தல்; bower, arbour. *"ஓர் மாதவி வல்லிமண்டபத்தில்" (இறை. 2, பக். 28).*

[வல்லி ² + மண்டபம்]

வல்லிமரம் *valli-maram,* பெ.(n.) கப்பலின் தலைப் பாய்மரம் (Naut.); main mast.

[வல்லி ² + மரம்]

வல்லிமொடி *valli-moḍi,* பெ.(n.) பெருமருந்துக் கொடி (மலை.); Indian birthwort.

[வல்லிக்கொடி → வல்லிமொடி]

வல்லியம்¹ *valliyam,* பெ.(n.) 1. புலி (பிங்.); tiger. *"பைங்கண் வல்லியங் கல்லளைச் செறிய" (அகநா. 362).* 2. கொல்லி மலை (பிங்.); Mount kolli, a hill in the *cēra* country.

[வல் ¹ → வல்லியம்]

வல்லியம்² *valliyam,* பெ.(n.) 1. வல்லிக் கொடி (பிங்.); creeper. 2. செவ்வள்ளிக் கொடி (மலை.); purple yam. 3. மஞ்சள் (மலை.); turmeric.

[வல்லி ² → வல்லியம்]

வல்லியம்³ *valliyam,* பெ.(n.) இடைச்சேரி (பிங்.); shepherds habitation.

[வல்லி ³ → வல்லியம்]

வல்லியம்குருளை *valliyam-kuruḷai,* பெ.(n.) புலிக்குட்டி; cub of tiger. *"வல்லியம் பெருந்தலைக் குருளை" (நற்.2–5).*

[வல்லியம் + குருளை. குல் → குரு → குருள் → குருளை]

வல்லியம்பொருப்பு *valliyam-poruppu,* பெ.(n.) கொல்லிமலை (பிங்.); Mt. kolli, a hill in the cēra country.

[வல்லியம்¹ + பொருப்பு]

வல்லியை *valliyai,* பெ.(n.) அமுக்கிரா (தைலவ.) Indian winter cherry.

வல்லிராசன் *valli-rāsaṉ,* பெ.(n.) பல்லி; lizard.

[பல்லி → வல்லி + ராசன். அரசு → அரசன் → ராசன்.]



வல்லிரு *valliru,* பெ.(n.) முருக்கு; a tree- Butea frondosa.

வல்லிருள் *valliruḷ,* பெ.(n.) கடும் இருள்; deep darkness. *"மாரி நடுநாள் வல்லிருள் மயக்க" (மணிமே.14:3).*

[வல் + இல் → இர் → இரு → இருள்.]

வல்லிலோமம் *valli-lōmam,* பெ.(n.) வலம் புரிக்காய் பார்க்க; see *valampuri-k-kāy.*

வல்லிவன்னி¹ *valli-vaṉṉi,* பெ.(n.) கொடுவேலி (தைலவ.); ceylon leadwort.

[வல்லி + வன்னி]

வல்லிவன்னி² *valli-vaṉṉi,* பெ.(n.) சித்திரமூலம்; a plant - *Plumbago zeylanicum* (சா.அக.).

[வல்லி + வன்னி]

வல்லிவனம் *valli-vaṉam,* பெ.(n.) சமவசரணம் எனுஞ் சைனக் கோயிலின் மூன்றாந் திருச்சுற்று; the third court yard of šamava-šaraṇam Jain temple. *"காதமகல் வல்லிவனத்தைச் சார்ந்தோர்" (மேருமந். 1057).*

[வல்லி + வனம்]

வல்லினநடை *valliṉa-naḍai,* பெ.(n.) வல்லெழுத்துகள் மிகுதியாகப் பயின்று வருமாறு பாடல் பாடுகை; composing a poem with hard consonants.

[வல்லினம் + நடை]

வல்லினம் *val-l-iṉam,* பெ.(n.) க், ச், ட், த், ப், ற் என்ற வல்லோசையுள்ள மெய் யெழுத்துகள் (நன். 68); the class of hard consonants, viz., k, c, ṭ, t, p, ṟ.

மறுவ. வல்லெழுத்து, வல்லொற்று.

வன்கணம், வலிவன்மை.

[வல்¹ + இனம். இல்→இலம்→இனம்.]

வல்லோசை யெழுத்துகளைச் சார்ந்த இனம். மெய்யெழுத்துகளின் மூன்று பிரிவுகளில், இடையினத்தையும், மெல்லினத்தையும் விட, வன்மையாக ஒலிக்கப் பெறும் ஆறு எழுத்துகளை உள்ளடக்கிய பிரிவு. இவை வலிய உறுப்பாகிய மார்பிற் பிறக்கும். செவி கருவியாக உச்சரித்து வலிவன்மை அறியலாம்.

வல்லினமெய் தமிழ்ச்சொற்கு ஈறாவதில்லை. இறுதியில் வல்லினமெய் வரக்கூடாதென்று விலக்கியது, பண்டைத் தமிழரின் மெல்லொலி வாயியல்பு பற்றியது மட்டுமன்று; எதிர்காலத் தமிழரின் வாழ்நாள் நீடிக்குமாறு, இயன்றவரை மொழியொலிப்பு முயற்சியைக் குறைக்க வேண்டுமெனுங் குறிக்கோளுங் கொண்டதாம்.

வல்லினவெதுகை *valliṉa-v-edugai,* பெ.(n.) எல்லாவடிகளின் முதற்சீர்க்கண்ணும் வல்லெழுத்து எதுகையாக ஒன்றிவரும் தொடை (உரை.); rhyme in which the second letter of each line of a stanza is a hard consonant. *"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" (குறள், 2). "கார்க் கரும்பின் கமவாலை தீத்தெருவின் கவின் வாடி" (பட்டினப்பாலை.).*

[வல்லினம் + எதுகை. எதிர்கை→எதுகை (த.வ.50).]

திருக்குறளிலும், பட்டினப்பாலை வரிகளிலும் வல்லின வெழுத்துகள் எதுகையாக பயின்று வந்துள்ளமை காண்க.

வல்லீகம் *vallīgam,* பெ.(n.) பெருங்காயம் (நாமதீப. 393); asafoefida.

வல்லீசம் *vallīšam,* பெ.(n.) மிளகு; black pepper.

வல்லீட்டுக்குற்றி *vallīṭṭu-k-kuṟṟi,* பெ.(n.) 1. கொட்டாப்புளி (யாழ்ப்.); mallet. 2. தாங்கற் கட்டை (இ.வ.); log placed under another as a support, supporter. 3. பனை முதலியவற்றைப் பிளக்குங் குற்றி (யாழ்.அக.); a wedge for splitting palmyra stem, etc.

[வல் ¹ + இடு + குற்றி. குறு→குற்றி = மரக்கட்டை.]

வல்லீற்று *vallīṟṟu*, பெ.(n.) பலவாண்டிற்கு ஒருமுறை ஈனும் பெற்றம் (இ.வ.); cow that calves once in several years, dist. fr. *āṭṭīṟṟu*.

[வல் + ஈத்து → ஈற்று : வல்லீற்று. ஈன் →ஈற்று.]

வல்லு-தல் *vallu-*, 5 செ.குன்றாவி.(v.t.) செய்யமாட்டுதல்; to be able, to be possible. *"வல்லினும் வல்லேனாயினும்" (புறநா. 161).*

[வல் ¹ → வல்லு-.]

வல்லுடல் *valluḍal*, பெ.(n.) வலிமையான உடல்; strong and verile body, sturdy body.

[வல் + உடல்.]

உழல்→உடல் = உடம்பு, உயிர்வாழிடம் (பிங்.). திண்மையும், உறுதியும் வாய்க்கப்பெற்ற கட்டுடல். உடம்பின் கூடு.

வல்லுதல் *valludal*, பெ.(n.) ஒழுங்கு (வின்.); propriety, discipline.

வல்லுநர் *vallunar*, பெ.(n.) வல்லோர்; experts, capable persons. *"வல்லா ராயினும் வல்லுந ராயினும்" (புறநா. 27). "வாழ்தல் வல்லுந ராயிற் காதலர்" (அகநா. 329:3), வன்கண் கொண்டு வலித்துவல்லுநரே" (குறுந்.395 : 3). உளவியல் வல்லுநர் (இ.வ.). இக்கால இசை வல்லுநர், தமது குரல் வளத்தால் அனைவரையும் மெய்மறக்கச் செய்கின்றார் (இ.வ.).*

[வல்லு → வல்லுநர்]

ஒ.நோ. இயக்கு→இயக்குநர்.

குறிப்பிட்ட ஒரு துறையில், திண்ணிய திறமையும், தனித்த அறிவும், சிறப்பாற்றலும் வாய்க்கப் பெற்றவர். சட்ட வல்லுநர், இசைக் கலை வல்லுநர் போன்றவை இக்கால வழக்காகும்.

வல்லுப்பலகை *vallu-p-palagai*, பெ.(n.) சூதாடுதற்குரிய பலகை (தொல். எழுத்.384, உரை); a plank for gambling. *"வல்லுப்பலகை யெடுத்து நிறுத்தன்ன" (கலித். 94).*

[வல் ¹ + பலகை]



வல்லுயிர் *valluyir*, பெ.(n.) எளிதிலிறவாத உயிர்கள் (யாழ்.அக.); rarely dying person or animal, long living being.

[வல் + உயிர். உய் →உயிர்.]

வல்லுரம் *valluram*, பெ.(n.) 1. காடு (யாழ்.அக.); jungle, forest. 2. அடவி, அடர்ந்த காடு; desert, thick forest. 3. புற்றரை; grassy surface, lawn turf. 4. வயல்; field. 5. மணல்; sand. 6. பூங்கொத்து; bunch of flowers, bouquet. 7. காட்டுப் பன்றியின் இறைச்சி; flesh of the wild hog. 8. தனிமை; loneliness, solitude.

[வல்லி ⁵ →வல்லு→வல்லுரம்]

வல்லுருவம் *valluruvam,* பெ.(n.) மனத்தை யடக்கும் வலிமையற்ற உருவம்; big statured, man who lacks control of his sense. *"வலியி னிலைமையான் வல்லுருவம்" (குறள், 273).*

[வல்→வல்லு+உருவம்.உரு→உருவு→ உருவம்.]

வல்லுவப்பை *valluva-p-pai,* பெ.(n.) 1. வெற்றிலைப்பை (வின்.); large betel-pouch with several sections. 2. அரையிற் கட்டும் பணப்பை (யாழ்.அக.); purse of cloth tied round the waist.

[வல்லுவம் + பை 4]

ஒருகா. வட்டுவப்பை→வல்லுவப்பை.



வல்லுவம் *valluvam,* பெ.(n.) வல்லுவப்பை,1 (வின்.) பார்க்க; see *valluva-p-pai.* *"வல்லுவங் கொல்லோ மெல்லிய னாமென" (நற். 33 : 9).*

[வட்டுவம் → வல்லுவம்]

வல்லுளி *valluḷi,* பெ.(n.) பன்றி (பிங்.); boar, swine, pig.

[வல் 1 + உள் 2 → உளி = வல்லுளி]

வலிமை வாய்ந்த உளிகளைப் போன்றே, சிறிய கொம்புகளை உடையதாயிருந்தமை பற்றி ஏனம், வல் + உளி – வல்லுளி என்றும் சுட்டப் பெற்றது.

வல்லுறை *vallurai,* பெ.(n.) வலுவூட்டு மருந்து; tonic (சா.அக.).

[வல் + உறை. உறு→உறை.]

உடலுக்கு ஆற்றலையும், வலிமையையும் தரும் ஊட்டமருந்து.

வல்லூகம்[1] *vallūgam,* பெ.(n.) 1. கரடி (உரி.நி.); bear. 2. புலி (அக.நி.); tiger.

[வல்1 + ஊகம்.]

உகு→ஊகு→ஊகம். உகுத்தல் = அழித்தல், கொல்லுதல்.

வல்லூகம் என்பது, பிறரைத் தமது கூரிய உகிராற், கொன்றழிக்கும் தன்மை வாய்ந்த புலி அல்லது கரடி.

வல்லூகம்[2] *vallūgam,* பெ.(n.) 1. ஆண் குரங்கு (வின்.); male monkey. 2. மூசு; large ape.

[வல் 1 + ஊகம்1. உகு→ஊகு→ஊகம்.]

ஒருகா. வல்1 + உலுமம்→உலுகம்→ஊகம். உலுமம் = கரிய மயிர். வல்லூகம் என்பது அடர்ந்த கரிய மயிர்களையுடைய ஆண் குரங்கு.

வல்லூரம் *vallūram,* பெ.(n.) 1. இறைச்சி (யாழ்.அக.); flesh. 2. அடவி, அடர்ந்தகாடு; desert, thick forest. 3. பாழ் நிலம்; uncultivated field, barren land.

[வல் + ஊரம்.]

ஊர் + அம் – ஊரம் = உயரமானது. வல்லூரம் என்பது உயரமான அடர்ந்த மரங்களுள்ள காடு.

வல்லூரி *vallūri,* பெ.(n.) பன்றி; pig.

[வல் + ஊர்→ஊரி.]

சிவப்பு வல்லூறு

பொரி வல்லூறு

சிறிய வல்லூறு

வல்லூறு

வல்லூற்று *vallūṟṟu,* பெ.(n.) பாறையிடையினின்று வரும் நீரூற்று; mountain spring. *"வல்லூற்றுவரில் கிணற்றின்கட் சென்றுவப்பர்" (நாலடி, 263).*

[வல்[1] + ஊற்று[2]. ஊறு→ஊற்று = சுரந்து வரும் ஊற்று நீர்.]

வல்லூற்றுக்குருவி *vallūṟṟu-k-kuruvi,* பெ.(n.) வல்லூறு[1] (வின்.) பார்க்க; see *vallūṟu.*

[வல்லூறு + குருவி]

வல்லூறு[1] *vallūṟu,* பெ.(n.) கழுகைவிடச் சிறியதும், கூர்மையான இறக்கை நுனியும், சாம்பல் நிறமுதுகுப் பகுதியும் கொண்ட பறவை; falcon.

[வல் + உறு→ஊறு.]

வல்லூறு[2] *vallūṟu,* பெ.(n.) பெருந்தீனி கொள்ளும், கூரிய பார்வையுடைய கலுழன் வகையைச் சார்ந்த பறவை; shikar accipiter.

இப்பறவை 36 செ.மீ. உயரம் வரை வளரும் தன்மைத்து. கருஞ்சாம்பல் நிறத்தைக் கொண்டது. நீண்டவாலுடன் தெண்படும். 4 அல்லது 5 குறுக்குப் பட்டைகளைக் கொண்டது. மா, வேம்பு, புளி, தென்னை முதலிய மரங்களில் கூடமைத்து, 3 முதல் 4 வரையிலான முட்டைகள் இடும். தமிழகம் எங்கிலும் பரவலாக காணப்படும் இப்பறவையானது, சிட்டு, காடை, கௌதாரி, தத்துக்கிளி, ஈசல், அணில் முதலியவற்றை இரையாகக் கொண்டு வாழும் தன்மைத்து.

சிறிய வல்லூறு என்னும் பறவையும், வல்லூறு இனத்ததே. சிறிய தோற்றத்தின் அடிப்படையில் அமைந்த பெயராகும்.

வல்லூறு[3] *vallūṟu,* பெ.(n.) இராசாளிக் கழுகு; royal falcon. *"கொக்கு வல்லூறு கண்டென்ன விலவிலத்து" (தனிப்பா.i, 171, 23).*

[வல்[1] + ஊறு[1]]



வல்லெழுத்து *val-l-eḻuttu,* பெ.(n.) வல்லின மெய்யெழுத்துகள்; the class of hard consonants. *"வல்லெழுத் தென்ப கசட தபற" (தொல். எழுத். 19).*

[வல்[1] + எழுத்து.]

ஒருகா. வல்லினம்.

இழு→எழு→எழுது→எழுத்து = எழுதப்படுவது; இழு = கோடிழுத்தல். வல்லின ஒலிகளைக் கோடிட்ட எழுத்துருவத்தாலுரைப்பது.

வல்லெழுத்துப் பற்றி இளம்பூரணர் இயம்புவது :–

"வல்லென்று இசைத்தலானும், 'வல்' என்ற தலைவளியாற் பிறத்தலானும் வல்லெழுத்து எனப்பட்டது" (இளம்.தொல்.எழுத்து.19).

வல்லெழுத்து பற்றி நச்சினார்க்கினியர் நவில்வது :–

"வல்லென்றிசைத்தலானும் வல்லென்ற தலைவளியாற் பிறத்தலானும் வல்லெழுத்தாயிற்று" (தொல்.எழுத்து.19, நச்.).

வல்லெனல்[1] *val-l-eṉal,*பெ.(n.) வன்மையாதற் குறிப்பு; expr. signifying hardnes or severity. *"வல்லென்ற நெஞ்சத்தவர்" (நான்மணி. 33).*

வல்லெனல்[2] *val-l-eṉal,*பெ.(n.) விரைதற் குறிப்பு; expr. signifying speed.

வல்லே *vallē,* வி.எ.(adv.) விரைவாக; promptly, speedily. *"ஒன்றின வொன்றின வல்லே செயிற் செய்க" (நாலடி, 4). "செல்லினிச் சிறக்கநின் னுள்ளம் வல்லே" (அகநா. 19:8). "அடுபோர்ச் செழிய விகழாது வல்லே" (புறநா. 18 : 27).*

[வல் [2] → வல்லே]

வல்லேறு *vallēṟu,*பெ.(n.) இடி; thunderbolt. *"விசும்பின் வல்லேறு சிலைப்பினும்" (பெரும்பாண். 135).*

[வல் [1] + ஏறு [3]]

வல்லேன் *vallēṉ,* பெ.(n.) இணங்குகை, ஏற்கை; agreeing, yielding. *"அறனி லாளன் புகழ்என் பெறினும் வல்லேன்மன் தோழி யானே" (நற்–275–8–9).*

வல்லை[1] *vallai,* பெ.(n.) 1. வலிமை (சூடா.); strength, power, energy. *"அருள வல்லை யாகுமதி யருளிலர்" (புறநா. 27 : 17). "வல்லை யாகுதல் ஒல்லுமோ நினக்கே" (நற். 162 : 12).* 2. பெருங்காடு (பிங்.); extensive thicket, big forest. *"வல்லையுற்றவேய்" (கம்பரா. வனம்புகு. 42).* 3. மேடு (திவா.); hillock, mound. 4. கோட்டை (வின்.); fort, fortress. 5. வயிற்றுக்கட்டி (சீவரட்.); ovarian tumour.

[வல் [1] → வல்லை]

வல்லை[2] *vallai,*பெ.(n.) வல்லே பார்க்க; see *vallē. "வல்லைக் கெடும்" (குறள், 480).*

[வல்[2] → வல்லை]

வல்லை[3] *vallai,*பெ.(n.) 1. ஓர் நோய்; a disease. 2. புன்முருக்கு; a wild species of Butea frondosa. 3. முருக்கு; Erythrina indica (சா.அக.).

வல்லை[4] *vallai,*பெ.(n.) 1. புனமுருங்கை; battle of plassey tree. 2. முருக்கு; palas-tree.

வல்லைக்கட்டி *vallai-k-kaṭṭi,* பெ.(n.) வயிற்றுக் கட்டிவகை (சீவரட்.); ovarian tumour.

[வல்லை [1] + கட்டி]

வல்லையம் *vallaiyam,*பெ.(n.) ஈட்டி வகை; a kind of spear. *"வல்லையப் போருக் கொதுங்கேன்" (கூளப்ப. 181).*

[வல்லயம் → வல்லையம்]



வல்லைவாதம் *vallai-vādam,*பெ.(n.) வீங்கி காணப்படும் ஊதை நோய் வகையுளொன்று; enlargement of spleen. *"வாளது குறுக்கே வளர்ந்து தான் கிடக்கும் போது நீளமாய் உழக்கோல் போலும் நேரதாய்க் கிடக்குங் கண்டீர். மாளவே அன்னந்தன்னை வாங்காது செறிந்திடாது நாளது கேளாய் வல்லை நவின்றிடும் வாதந்தானே" (யூகி. 1200).*

*[வல்லை + **Skt.** vāta > த.வாதம்.]*

வல்லொட்டு *val-l-oṭṭu,* பெ.(n.) 1. போதும் போதாதென்றிருப்பது; that which is satiable or insatiable or barely sufficient. 2. அருமையா யிருப்பது; rarity, that which is rare.

[வல் ¹ + ஒட்டு]

வல்லொற்று *vallorṟu,* பெ.(n.) வல்லினம் (இலக்.) பார்க்க; see *val-l-iṉam.* *"வல்லொற்றுத் தொடர்மொழி" (தொல். எழுத். 409).*

[வல் ¹ + ஒற்று. ஒற்று = மெய்யெழுத்து.]

வல்லோன் *vallōṉ,* பெ.(n.) வல்லான், வலிமையுள்ளவன் (பிங்.); mighty-man, valiant man. *"வல்லோன் கூருளிக் குயின்ற" (நெடுநல். 118). "வல்லோன் றைஇய வரிவனப் புற்ற" (புறநா. 33 : 16), "மெல்லவி ழுஞ்சினை புலம்ப வல்லோன்" (அகநா. 21: 10). "ஊரலஞ் சேரிச் சீறூர் வல்லோன்" (நற். 77 : 8).*

[வல்லான் → வல்லோன்]

வல்வரவு *valvaravu,* பெ.(n.) மிகு வேகத்துடன் வருதல்; speedy return. *"மற்றுநின் வல்வரவு வாழ்வார்கு உரை" (குறள், 1151).*

[வல்³ + வரவு.]

'வல்' என்னும் வேரடி ஈங்கு விரைவுக் குறிப்பினையுணர்த்திற்று.

வல்வருத்தம் *val-varuttam,* பெ.(n.) கடு வருத்தம் (யாழ்.அக.); excessive pain.

[வல் ¹ + வருத்தம்]

வல்வழக்கு *val-vaḻakku,* பெ.(n.) வல்லடி வழக்கு, அழிவழக்கு (கொ.வ.); unreasonable insistence.

[வல் ¹ + வழக்கு]

வல்வாயசரணன் *val-vāya-šaraṇaṉ,* பெ.(n.) பாம்பு வகை (யாழ்.அக.); a kind of snake.

*[வல்¹ + வாய் + அசரணன். **Skt.** அசரண.]*

வல்வாயன் *val-vāyaṉ,* பெ.(n.) வாக்கு வன்மையுள்ளவன் (வின்.); one who is tongue-doughty, eloquent proficient man; orator.

மறுவ. சொல்வல்லன்.

[வல் ¹ + வாயன்]

வல்விடம் *val-viḍam,* பெ.(n.) கடுநஞ்சு (யாழ்.அக.); deadly poison.

[வல்¹ + விடம்]

வல்விரை-தல் *val-virai-,* 2 செ.கு.வி. (v.i.) மிக வேகமாதல், விரைதல்; to hurry, speed up. *"வள்ளலை வல்விரைந் தெய்த" வக. 328).*

[வல்² + விரை-.]

வல்வில் *val-vil,* பெ.(n.) ஒரே காலத்திற் பல பொருள்களை ஊடுருவிச் செல்லும்படி ஓரம்பை எய்யுந் திறமை; the skill of piercing many objects by a single arrow. *"வற்பார் திரடோளைந் நான்குந் துணித்த வல் விலிராமன்" (திவ். பெரியதி. 5, 1, 4) (புறநா. 152, 6, அடிக்குறிப்பு).*

[வல்¹ + வில்]

வல்வில்ஓரி *val-vil-ōri,* பெ.(n.) கடை வள்ளல்களுள் ஒருவன் (புறநா. 158, 5); name of a liberal chief, one of *kaḍaivaḷḷalgaḷ.*

[வல்வில் + ஓரி]

கடைக்கழகக் காலத்தில் வள்ளலாகச் சிறந்து விளங்கிய குறுநில மன்னர் எழுவரு ளொருவன், ஓரி.

வல்வில்லி *val-villi,* பெ.(n.) ஒரே காலத்திற் பல பொருள்களை ஊடுருவிச் செல்லும்படி, ஓரம்பை எய்யுந் திறனுடையவன் (புறநா. 150, அடிக்குறிப்பு); skilful archer, able to pierce many objects at a time, by a single arrow.

மறுவ. வில்லாளன்.

[வல்வில் → வல்வில்லி]

வல்விலங்கு *val-vilaṅgu,* பெ.(n.) யானை (பிங்.); elephant.

[வல்¹ + விலங்கு]

வல்வினை *val-viṉai,* பெ.(n.) 1. வலியதாகிய ஊழ்; the law of karma, as irresistible mighty destiny. *"தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்" (தேவா. 4, 4).* 2. தீவினை; bad karma, evil-doing. *"ஒழிகென வொழியா தூட்டும் வல்வினை" (சிலப். 10, 171).* 3. கொடுஞ் செயல்; wicked deed. *"வாளிற் றப்பிய வல்வினை யன்றே" (மணிமே. 21, 60).* 4. வலிதாகிய தொழில்; mighty act or deed. *"நீ வல்வினை வயக்குதல் வலித்திமன்" (கலித். 17).*

[வல் ¹ + வினை]

வல்வினைநோய் *valviṉai-nōy,* பெ.(n.) கொடிய நோய்; wicked disease. *"வாராத வல்வினைநோய் வந்தாலும்" (திருவருட்பா.).*

[வல்வினை + நோய்.]

வல¹-த்தல் *vala-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. சுற்றுதல்; to encircle, surround. *"புலவுநாறு நெடுங்கொடி..... வாங்குசினை வலக்கும்" (புறநா. 52).* 2. பின்னுதல்; to spin, as a spider its thread; to plait; to weave or knit. *"இழைவலந்த பஃறுன்னத்து" (புறநா. 136).* 3. தொடுத்தல்; to string in a series. *"உரைத்தேம்..... வலந்து" (பரிபா. 3, 10 – 11).* 4. பிணித்தல், கட்டுதல்; to tie, bind. *"குடர்வலந்த வேற்றின்முன்" (கலித். 103).* 5. வளைத்தல் (வின்.); to bend.

[மல் → வல் → வல → வலம் = சுற்று, வல → வலத்தல்.வலத்தல் = வளைத்தல், சூழ்தல், சுற்றுதல்.]

வல²-த்தல் *vala-,* 4 செ.கு.வி.(v.i.) கொழுத்தல் (திவா.); to grow fat, to become bulky.

[பல → வல-.]

வல³-த்தல் *vala-,* 4 செ.குன்றாவி.(v.t.) கேட்போர் மனத்தைப் பிணிக்கச் சொல்லுதல், உரைத்தல்; to say, tell; to narrate or converse. *"மருமகன் வலந்ததும்" (சீவக. 187).*

வலக்கச்சம் *vala-k-kaccam,* பெ.(n.) குமிழ்; a tree-*Gmelina arborca* (சா.அக.).

வலக்கட்டாயம் *vala-k-kaṭṭāyam,* பெ.(n.) வலக்காரம்; compulsion, force, coercion.

தெ. பலகட்டாயமு

[வலம்¹ + கட்டாயம்]

வலக்கணி *vala-k-kaṇi,* பெ.(n.) ஓர் வகை நாடி; a kind of pulse (சா.அக.).

வலக்கம் *valakkam,* பெ.(n.) மூக்கறா; a medicinal root (சா.அக.).

வலக்காய் *valakkāi,* பெ.(n.) வலம்புரிக்காய் பார்க்க; see *valam-purikkāi.*

வலக்காரம்[1] *valakkāram,* பெ.(n.) 1. கட்டாயம்; force, compulsion, coercion. 2. அதிகாரம், வலிமை; authority, power, might. *"வலக்காரம் பேசுகிறான்" (வின்.).* 3. வெற்றி; success, victory, triumph. *"வலக்கார முற்றாய்" (திருப்பு. 386).*

[பலக்காரம் → வலக்காரம்]

வலக்காரம்[2] *valakkāram,* பெ.(n.) 1. சூழ்ச்சி; wile, trick. *"சிறுவலக்காரங்கள் செய்த வெல்லாம்" (திருக்கோ. 227).* 2. பொய் (சூடா.); falsehood, lie, untruth.

[வல [1] + காரம் [2]]

வலக்காரம்[3] *vala-k-kāram,* பெ.(n.) இறக்கியம் (சர்வ திராவகம்); a kind of acid (சா.அக.).

வலக்கால்வாத்துவாதனம் *vala-k-kāl-vāttu-v-ādaṉam,* பெ.(n.) வலக்காலை மாத்திரம் நீட்டி நெஞ்சம் நிலத்திலே தோயக் கிடக்கும் இருக்கை வகை (தத்துவப். 108, உரை); a posture in which the right leg is stretched out and the chest is made to touch the ground.

[வலம் [1] + கால் [1] + வாத்து + ஆதனம் (ஆதனம் = இருக்கை) வாத்துவாதனம்]

Skt. āsana த. ஆசனம்.

வலக்கை *vala-k-kai,* பெ.(n.) 1. வலது கை; right hand. *"வலக்கையின் மலைந்தான்" (கம்பரா. சம்புமா. 25).* 2. வலப்பக்கம்; right side. *"அது வலக்கையிலுள்ளது".*

[வலம்[1] + கை[7]. குல்→குய்→கய்→கெய்→செய் →கெய்→கை→கய் (செய்தல்)→கெய்→கை.]

ஒ.நோ. வலங்கை→வலக்கை என்றுமாம்.

கை யென்னும் பெயர், செய் என்னும் வடிவில் குமரி நாட்டில் வழங்கியிருத்தல் வேண்டும் (செல்வி.435/1974).

தமிழில் உள்ள 'செய்' எனும் வடிவமே, கன்னடம், குடகு, துளு, கோத்தம், துடவம், படகு, கொலாமி, கடபா, கோண்டி, கொண்டா, கூய், குவி, பிராகுவி ஆகிய மொழிகளில் கை, கெய், gey, biy, கீ எனும் வடிவங்களில் ஆட்சி பெற்றுள்ளது.

மாந்தக்கை போன்றிருக்கும் தும்பிக்கையும் கை எனப்பட்டது. ஒளிக்கற்றையைக் கதிரவனின் கையாக உருவகப்படுத்தியுரைப்பதால், அதுவும் கை எனலாயிற்று.

வலக்கைகொடு-த்தல் *valakkai-koḍu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. உதவியளித்தல்; to help or support, as by extending the right hand. 2. உறுதி கூறுதல் (இ.வ.); to make a solemn affirmation, as by striking hands.

[வலக்கை + கொடு-.]

வலக்கைச்சி *vala-k-kaicci,* பெ.(n.) வலக்கணி பார்க்க; see *vala-k-kaṇi.*

வலக்கைதா-தல் *valakkai-tā-,* 18 செ.கு.வி. (v.i.) வலக்கைகொடு-, பார்க்க; see *valakkai-koḍu-,* *"வலக்கை தந்து நிலத்தில் வந்தவதரித்த" (இராமநா. உயுத். 3).*

[வலக்கை + தா-.]

தள்→தர்→தரு→தா = ஒத்தோனுக்குக் கொடுத்தல். 'தா' என்பதை வடமொழியாளர், வடசொல் என்பர். "தா என்கிளவி ஒப்போன் கூற்றே" (தொல்.சொல்.929).இலவயமாகக் கொடுத்தல் என்பதே வடமொழிப் பொருளாகும். ஆனால் மொழிஞாயிறு, "தன்னிலையில் ஒத்த தன்மையனுக்குத் தருதல் என்னுஞ் சிறப்புப் பொருளினையே, பழந்தமிழ் வடிவமான 'தா' குறிக்கும். தமிழின் தலைமைத் தன்மையை, நிலைநிறுத்தும் சொற்களுள் 'தா'வும் ஒன்று" என்று கூறியுள்ளார்.

புதுப்பெருக்கு நீரைக் குறிக்கும் 'வெள்ளம்' என்னும் சொல், தன் சிறப்புப் பொருளையிழந்து 'நீர்' என்னும் பொதுப்பொருளில் மலையாளத்தில் வழங்குவது போன்று, ஒத்தோனுக்குக் கொடுத்தல் என்னும் சிறப்புப் பொருளை இழந்து, 'தா' என்னும் சொல், 'கொடுத்தல்' என்னும் பொதுப்பொருளில் ஆரிய மொழிகளில் வழங்குகிறது.

வலக்கையடி-த்தல் *valakkai-y-aḍi-,* 4 செ.கு.வி.(v.i.) உறுதி கூறுதல் (இ.வ.); to make a solemn affirmation, as by striking hands, asseveration, euphatic assurance.

[வலக்கை + அடி-. அடு→அடி.]

வலக்கொன்னை *vala-k-konnai,* பெ.(n.) குப்பையில் வளரும் ஒருவகைக் கீரை; Indian acalypha. It is a vermifuge (சா.அக.).



மறுவ. குப்பைமேனி.

வலகுடியஞ்சாலி *valakuḍi-y-añjāli,* பெ.(n.) வரிவகை (நாஞ்.); a petty cess.

[வலகுடி + அஞ்சாலி. (அஞ்சாலி = பழைய வரிவகை).]

வலங்கம் *valaṅgam,* பெ.(n.) பெருங்குடும்பம்; large or big family. *வலங்க முடையான் (வின்.).*

தெ. பலங்கமு; க., து. பலக.

வலங்கமத்தார் *valaṅgamattār,* பெ.(n.) பறையர்தம் சிறப்புப் பெயர் (வின்.); title of the right-hand section of the paṟaiya caste.

[வலங்கை → வலங்கமத்தார்]

ஒருகா. வலங்குலத்தார்→வலங்கமத்தார்.

வலங்கமர் *valaṅgamar,* பெ.(n.) வலங்கமத்தார் (யாழ்.அக.) பார்க்க; see *valaṅgamattār.*

[வலம் + அமர். உம்→அம்→அமல்→அமர்.]

அமர்தல் = பொருந்துதல். பொருந்துதல் என்பது கூடுதல். போர்க்களத்தில் இருபகைப் படைகள் கலத்தல் அல்லது கூடுதல். இங்கு வலங்கமர் என்பது, அமர்க்களத்தில் அரசனுக்கு வலப்புறம் இருந்து போர் செய்தோரைக் குறித்ததென்க.

வலங்காரம் *valaṅgāram,* பெ.(n.) மத்தளத்தின் மார்ச்சனை பூசிய பக்கம் (யாழ்.அக.); that side of a mirudaṅgam, to which *mārccaṉai* is applied.

[வலம்[1] + காரம்[1]]

வலங்குலத்தார் *valaṅ-kulattār,* பெ.(n.) தமிழ்நாட்டு வலங்கை இனத்தாருள் ஒருசார் கூட்டத்தினர்; a segment among the right-hand castes in Tamil country.

[வலங்குலம் → வலங்குலத்தார்.]

குல்→ குலம். குல் = வளைவு, சூழ்தல். மன்னனின் வலப்பக்கம் அமர்ந்து பணியாற்றும், ஆற்றல் மிக்கவர்.

வலங்குலம் *valaṅgulam,* பெ.(n.) வலங்கை இனத்தார் (யாழ்.அக.); the right hand castes among the Tamils.

[வலம்¹ + குலம்]

குல்→ குலம். குலம் = வளைவு, சூழ்தல். வலங்குலத்தார். வலங்குலம் போன்ற அமைப்புகள் சோழராட்சிக் காலத்தே தோன்றியவை. சோழராட்சியில் மன்னருக்குப் போர்க்களத்திலும், அவைக்களத்திலும் (அரண்மனையிலும்) வலதுபுறம் இருந்து செயலாற்றும் திறன் மிக்க குலம்.

வீரராசேந்திரம் (கி.பி.1063–1069) ஆட்சிக் காலத்தில், வலங்கை இனத்தார் பற்றிய செய்திகள் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன. வலங் குலத்தில் இடம்பெற்ற இனத்தார் வருமமாறு:– 1. வேளாளன்; 2. அகம்படியான்; 3. இடையன்; 4. சாலியன்; 5. பட்டணவன்; 6. சான்றான்; 7. குறவன்; 8. குறும்பன்; 9. வள்ளுவன்; 10. பறையன்.

வலங்கை *valaṅgai,* பெ.(n.) 1. வலப் பக்கத்துக் கை; right hand. 2. தமிழ் நாட்டு வலங்கையினத்தாருள் ஒரு பிரிவினம்; a sect among the right hand castes in Tamil country. *"படைவீட்டு ராஜ்யம் நாட்டவர் வலங்கையும் இடங்கையும் மஹா ஜனமும்" (தெ. இ. கல். தொ. i, III).*

[வலம்¹ + கை⁵]

வலங்கைஇடங்கைப்படைகள் *valaṅgai-iḍaṅgai-p-paḍaigaḷ,* பெ.(n.) பகைவரின் அரணை வலதுபுறமாகவும், இடதுபுறமாகவும் வளைத்துச் சென்று போரிடும் வெட்சி வீரர்கள்; warriors who combat enemis fort surrounding on both right and left directions.

[வலங்கை + இடங்கை + படைகள்.]

முதலாம் இராசராசன் காலத்தில் இப்படைகள் சிறந்த வளர்ச்சி அடைந்திருந்தன. சோழர் படையில் வளர்ச்சியடைந்திருந்த இப்படைகள், முதலாம் குலோத்துங்கன் ஆட்சியில், சோழ நாட்டில் காவிரிக்கு வடகரையில், கஞ்சனூரில் படைவீடிருந்து, ஆட்சிக்குப் பகையாயிருந்த குறும்பொன்றை அழித்து, ஆநிரைகளைக் கவர்ந்து வந்தமையை, திட்டைக்குடிக் கல்வெட்டு புலப்படுத்துகிறது. குறும்பெறிந்து ஆநிரை கவர்தலை வெட்சி திணையின் செயலாக *"வேந்து விடு முனைஞர் வேற்றுபுலக்களவின் ஆதந்து ஓம்பல் மேவற் றாகும்."* என்று கூறும் தொல்காப்பிய இலக்கண மரபுடன் வெட்சியாரின் செயல்களாகக் கூறப் பெறும். *'தந்து நிறை'* பாதீடு *ஆகிய துறைகட்கமைந்த நிகழ்ச்சிகள், சோழர் காலத்தில் கி.பி.11–ம் நூற்றாண்டில் நிகழ்ந்திருப்பதனை கல்வெட்டொன்று புலப்படுத்துகின்றது. "இத் தேவர்க்கு மூன்றாவது நாளிலே, சோழ மண்டலம் இடங்கை வலங்கையாய் இன்னாயனார்க்குக் குறும்பெரிய காவேரிக்கு* வடகரையில் கஞ்சனூரகத்திலே விட்டுக் கொடு இருந்து, குறும்பெறிந்து, நிறைகொண்ட ஆடும், மாடும், கிடாவும், எருமையும் இன்னாயனார் விளக்குக்கு குடுத்த உருக்களில் திருநுன்தா விளக்கு இரண்டுக்கு உடலாக நீக்கின பசு நாற்பதும் நீக்கி, ஆடும், மாடும், எருமையும், முதலான காசு கள அய" (தொல்பொருள் ஆய்வுத்துறை அறிக்கை 1903). கி.பி. 1070ல் சோழ

நாட்டில் அரசுக்கு வாரிசு இல்லாமையால் ஏற்பட்ட குழப்பத்தைக் கீழைச் சாளுக்கிய மரபினனாகிய குலோத்துங்கன் அறிந்து, சோழர் பெண் கொடுத்த தன்தாய் வழி முறையால் விரைந்து வந்து அரசேற்றான். ஆட்சியேற்ற மூன்றாவது நாளிலேயே இந் நிகழ்ச்சி நிகழ்ந்திருப்பது இச் செய்திக்கு உறுதுணையாகும். இச் செயலை விரும்பாத நிலையில், சோழநாட்டில் பகைவர்கள் அமைந்திருந்ததையே, இக் கல்வெட்டு தரும் குறும் பெறிந்த நிகழ்ச்சி புலப்படுத்துகிறது. "ஸ்ரீ ராஜ ராஜ தேவர் வலங்கைப் பழம்படை" (தெ.கல். தொ. 2 : 2 கல். 35).

வலங்கைஇடங்கைமகன்மை *valaṅgai-iḍaṅgai-magaṉmai,* பெ.(n.) வலங்கை, இடங்கை படைகளுக்கு மக்கள் விருப்புடன் அளிக்கும் வரி; a tax paid oy people voluntarily for worriors of valour called right and left armis. *"வலங்கை இடங்கை மகன் உள்ளிட்ட அந்தராயத்துக்கு" (தெ.கல். தொ.8. கல்.4).*

[வலங்கை + இடங்கை + மகமை → மகன்மை = வரிவகையுளொன்று.]

வலங்கைஇடங்கைவழக்காரம் *valaṅgai-iḍaṅgai-vaḻakkāram,* பெ.(n.) வலங்கை இடங்கைப் பிரிவினர்க்கிடையே ஏற்பட்ட வழக்கு; a dispute between *vaḻaṅgai* (right) and *iḍaṅgai*(left) sects.

[வலங்கை → வலங்கையார்]

கரிகாலன் என்னும் பெயர்கொண்ட வீர ராசேந்திரச் சோழன் காலத்தே (கி.பி.1063–1069), வலங்கைக் குலத்தார்க்கும், இடங்கைக் குலத்தார்க்கும் இடையே ஏற்பட்ட வழக்கினையும், அப் பிணக்கினைத் தீர்த்து, ஒவ்வொரு குலத்தார்க்கும் உரிய முறைமையினை வரையறை செய்த, வாழ்வியல் செய்தியினைப் பற்றி, பாவாணர் தமிழர் வரலாறு (பக்.310–311) என்னும் நூலில் நுவல்வது :–

குலப் பட்டம், குடை கொடி பந்தம் முதலிய விருதுச் சின்னங்கள், வெண்கவரி வீச்சு, சிவிகை குதிரை முதலிய ஊர்தி, மேளவகை, தாரை வாங்கா முதலிய ஊதிகள், வல்ல வாட்டு, செருப்பு ஆகியவை பற்றிக் குலங்கட்கிடையே பிணக்கும் சச்சரவும் ஏற்பட்டதனால், கரிகாலன் என்னும் பெயர் கொண்டிருந்த வீர ராசேந்திரச் சோழன் (1063–1069) அவ் வழக்கைத் தீர்த்து வைத்ததாகத் தெரிகின்றது.

"காவிய மாகிய காமீகங் கண்டுகங்
காகுலத்தோர்
ஓவிய பாத்திர ராக விருபத்து நான்குயர்ந்த
மேவிய கோட்டத் திலுங்கரி கால
வளவன்மிக்க
வாவிய மேன்மை கொடுத்தளித்
தான்றொண்டை மண்டலமே"

என்பது, கஎ–ஆம் கஅ–ஆம் நூற்றாண்டிலிருந்த படிக்காசுப் புலவர் பாடியது.

சோழனுக்கு வலக்கைப் பக்கம் அமர்ந்திருந்த குலத்தார் வலங்கையர் என்றும், இடக்கைப் பக்கம் அமர்ந்திருந்த குலத்தார் இடங்கையர் என்றும், பெயர் பெற்றதாக உய்த்துணரலாம். பகைகொண்ட இருசாரார் ஒரே பக்கத்தில் இருந்திருக்க முடியாது.

இருகையிலும் பல குலத்தார் சேர்ந்திருப்பினும், வலங்கையில் வேளாளரும் இடங்கையிற் கம்மாளருமே தலைமையானவர் என்று கருத இடமுண்டு.

சோழராட்சிக்குப்பின் பல்வேறரசுகள் ஏற்பட்டதனாலும், பல புதுக் குலங்கள் தோன்றியதனாலும், ஆங்கிலர் அரசாட்சிக்

காலத்தில் மீண்டும் வலங்கை யிடங்கைச் சச்சரவு கிளர்ந்தெழுந்தது கஅ0கூ-ஆம் ஆண்டு சூலை மாதம் உரு -ஆம் பக்கல், செங்கழுநீர்ப்பட்டு மாவட்ட நயன்மைத் தீர்ப்பாளர் சார்சு கோல்மன் (George Colman) துரை, அவ் வழக்கைத் தீர்த்து ஒவ்வொரு குலத்தார்க்கும் உரியவற்றைத் திட்டஞ் செய்தார்.

வலங்கைக் குலங்கள் :- வேளாளன், அகம்படியான், இடையன், சாலியன், பட்டணவன், சான்றான், குறவன், குறும்பன், வள்ளுவன், பறையன் முதலியன.

இடங்கைக் குலங்கள் :- கம்மாளன், பேரிச்செட்டி, நகரத்துச்செட்டி, கைக்கோளன், பள்ளி (வன்னியன்), வேடன், இருளன், பள்ளன், இரட்டைமாட்டுச் செக்கான் முதலியன.

இடங்கையினும் வலங்கை பெருங்கை. மேளகாரன், கணிகை (தாசி), பணி செய்வோன் முதலிய குலங்களில் இருகையுமுண்டு. ஒரு சில குலங்களில் ஆடவர் ஒரு கையும், பெண்டிர் ஒரு கையும் ஆவர். வடுக கன்னடநாடுகளிலும் இவ்வகுப்புக்கள் இருப்பதால், அந்நாட்டுப் பகுதிகள் கக-ஆம் நூற்றாண்டிலும் தமிழ்நாடாயிருந்தமை அறியப்படும்.

"இத்தமிழ்நாட்டில் ஒவ்வொரு நகரத்திலும், சிற்றூரிலும், இடங்கை வலங்கையார் வசிப்பதற்கு வீதிகள் தனித்தனியே ஏற்பட்டிருக்கின்றன. ஒருவர் வசிக்குந் தெருவில் மற்றொருவர் வசிப்பதில்லை. சுபாசுபப் பிரயோசனங்களிலும் ஒருவரிருக்கும் வீதி வழியாக மற்றொருவர் ஊர்வலம் வருவதில்லை. பிரேதங்கொண்டு போவதில்லை. கருமாதியிலுமப்படியே. இருவருக்கும் பொதுவாயுள்ள வீதியில் போவதற்குத் தடையிராது. சுவாமிகளுக்கு உற்சவாதிகளும் அந்தந்தக் கட்சிகளிலுள்ள வீதிகளிலே தான் நடத்துவார்கள்" என்று கா.சு.பிள்ளை ககூ0க-ஆம் ஆண்டில் எழுதியுள்ளார் (வருண சிந்தாமணி, பக்.502-3).

வலங்கைப்பழம்படை *valaṅgai-p-paḻam-paḍai,* பெ.(n.) முதலாம் இராசராசன் ஆட்சியில் அமைக்கப்பட்டிருந்த படைகளுள் பழமையாக வரும் வலங்கைப் படை. வலங்கை, இடங்கை என்பது படைகளின் பாகுபாட்டிற்கமைந்த குறிப்புப் பெயராகும்; a right wing of army formed during Raja Raja cōḻa-region. Right, left are two classifications of said army.

வலங்கைமத்தர் *valaṅgai-mattar,* பெ.(n.) வலங்கமத்தார் (சினேந்.140) பார்க்க; see *valaṅga-mattār.*

[வலங்கமத்தார் → வலங்கைமத்தர்]

வலங்கைமீகாமன் *valaṅgai-mīgāmaṉ,* பெ.(n.) 18-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த இவர், கும்பகோணத்துக்கு அருகில் வலங்கைமானில் வாழ்ந்தவர்; he lived before 18C and a native of *valaṅgaimāṉ* near *Kumbakōṇam.*

இவர் 'அறிவானந்தர்' எனவும் அழைக்கப் படுகின்றார். அறிவானந்த சித்தியார் என்னும் நூலினை இயற்றியவர்.

வலங்கையார் *valaṅgaiyār,* பெ.(n.) 1. வலங்கை யினத்தார் (வின்.); the right-hand castes among the Tamils. 2. வலங்குலம் பார்க்க; see *valaṅgulam.*

[வலங்கை → வலங்கையார்]

வலங்கையிடங்கைமகன்மை *valaṅgai-iḍaṅkai-magaṉmai,* பெ.(n.) பழைய வரி வகை; an ancient tax or levy.

[வலங்கை + இடங்கை + மகன்மை = வரி, ஆயம்.]

வலங்கையுயர்வுகொண்டார் *valaṅgai-y-uyarvu-koṇḍār,* பெ.(n.) சாணார்தம்

சிறப்புப் பட்டப்பெயர் (நாஞ்.); a title assumed by a section of *cāṇār* caste.

[வலங்கை + உயர்வு + கொண்டார்]

வலங்கையுற்றார் *valaṅgai-y-uṟṟār,* பெ.(n.) வலங்கையார் (வின்.) பார்க்க; see *valaṅgaiyār.*

[வலங்கை + உறு- (உற்று)→ உற்றார்.]

வலங்கொள்[1]**(ளு)-தல்** *valaṅ-koḷ(ḷu)-,* 16 செ.கு.வி.(v.i.) வெற்றியடைதல்;to be victorious, triumphant. *"வலங்கொள் புகழ்பேணி" (தேவா. 668, 8).*

[வலம் + கொள்-. வல→வலம் = வெற்றி.]

வலங்கொள்[2]**(ளு)-தல்** *valaṅ-koḷ(ḷu)-,* 10 செ.குன்றாவி.(v.t.) 1. இடவலமாக வருதல்; circumambulation from left to right. *கடவுட் கடிநகர்தோறு மிவனை வலங்கொளீஇ (கலித்.84).* 2. வெல்லுதல்; to conquer.

[வலம்[1] + கொள்-.]

வலசத்து *vala-šattu,* பெ.(n.) சிலாசத்து; bitumen (சா.அக.).

வலசல் *valasal,* பெ.(n.) வலசை[4], 1 பார்க்க; see *valašai.*

வலசாரி[1] *vala-šāri,* பெ.(n.) கிளிஞ்சில்; bivalve-shell (சா.அக.).

வலசாரி[2] *valašāri,* பெ.(n.) கூத்து முதலியவற்றில் வலமாகச் சுற்றி வருகை (யாழ்.அக.); turning or wheeling to the right as in dancing.

[வலம்[1] + சாரி[1]]

வலசி *valaši,* பெ.(n.) சோறு; cooked rice (சா.அக.).

[வல்சி → வலசி]

வலசு *valašu,* பெ.(n.) வலசை[1], 2 (யாழ்.அக.) பார்க்க; see *valašai.*

வலசுத்தி *vala-šutti,* பெ.(n.) கழிமாசுக் (மல) கட்டை வெளியேற்றுதல்; to evacuate/ void/ as excreta.

வலசெழுமை *vala-šeḻumai,* பெ.(n.) கொம்பு; one of the nine gems-ruby (சா.அக.).

வலசை[1] *valašai,* பெ.(n.) உட்கிடைச் சிற்றூர்; hamlet.

மறுவ. தொட்டி.

வலசை[2] *valašai,* பெ.(n.) வரிச்சல்; lath. *"மூங்கில் வலசைகள் 25 விழுக்காடு சுமை கட்டி" (மதி. க. ii, 173).*

வலசை[3] *valašai,* பெ.(n.) பறவைகள், விலங்குகள் தக்க சூழலைத் தேடி இடம் பெயர்தல்; migration of birds, beasts etc. for better environment.

வலசை[4] *valašai,* பெ.(n.) 1. வேற்று நாட்டுக்குக் குடியோடுகை; emigration flight from home to alien country. *"திவ்யதேசத் தெம்பெருமான்களும் நம்மாழ்வாரும் அங்கே வலசையாக வெழுந்தருள" (யதீந்த்ரப். 12).* 2. கூட்டம் (யாழ்.அக.); crowd.

தெ. வலச; க. வலசெ.

குடிகள் வலசை போராதினால் சில ஊர்கள் குடிப்பாழாயின.

வலசை[5] *valašai*, பெ.(n.) வடுக வினத்தாருள் ஒரு பிரிவினர் (இ.வ.); the Balija segment in vaduga caste.

தெ. பலிசெ.

வலசைவாங்கு-தல் *valašai-vāṅgu-*, 5 செ.கு.வி.(v.i.) வேற்றூர்க்குக் குடியோடுதல் (வின்.); to emigrate, to fly from home to alien region or village.

மறுவ. புலம்பெயர்-தல்

[வலசை + வாங்கு-.]

வலசோர் *valašōr*, பெ.(n.) நகரம்; town.

வலஞ்சக்கியன் *valañ-cakkiyaṉ*, பெ.(n.) நாகமணல்; zinc ore (சா.அக.).

வலஞ்சால்ஒட்டு-தல் *valañjāl-ōṭṭu-*, 5 செ.கு.வி.(v.i.) ஏர் கொண்டு உழவு செய்தலில் ஒருமுறை நீள் வட்டமாக வருதல்; ploughing lands lengthwise or longitudinally.

[வலம்சால் + ஓட்டு-.]

வலஞ்சியர் *valañjiyar*, பெ.(n.) வணிகர்; the vaisya or trade community.

வலஞ்சுரி-தல் *valañ-curi-*, 2 செ.கு.வி. (v.i.) இடமிருந்து வலமாகச் சுற்றுதல்; to whirl to the right. *"வலஞ்சுரி மராஅம் வேய்ந்து" (ஐங்குறு. 348).*

[வலம்[1] + சுரி-.]

வலஞ்சுழி[1]-த்தல் *valañ-cuḻi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. வலமாகச் சுற்றச் செய்தல்; to cause to whirl to the right. 2. வலப்புறமாகச் சுழியும்படிக் கீறுதல்; to draw to the right, as a circle.

[வலம்[1] + சுழி[2]-.]

வலஞ்சுழி[2]-த்தல் *valañ-cuḻi-*, 4 செ.கு.வி. (v.i.) வலஞ்சுழி[1]-தல் பார்க்க; see *valañ-cuḻi-*. *"வலஞ்சுழித் தெழுந்து வந்து" (கம்பரா. பிரமாத். 166).*

[வலம்[1] + சுழி[1] -.]

வலஞ்சுழி[3]-தல் *valañ-cuḻi-*, 2 செ.கு.வி. (v.i.) 1. வலமாகச் சுழலுதல்; to whirl to the right. 2. வலப்புறமாகச் சுழிந்திருத்தல்; to curl to the right.

[வலம்[1] + சுழி[1]]

வலஞ்சுழி[4] *valañ-cuḻi*, பெ.(n.) 1. வலமாகச் சுழலுகை (யாழ்.அக.); to curling or whirling to the right. 2. வலப் புறமாகச் சுழியுஞ் சுழி; curl winding to the right. 3. குதிரையின் நற்சுழி வகை (வின்.); right-hand curl on a horse's forehead, considered to be a good mark. 4. தஞ்சை மாவட்டத்திலுள்ள பாடல்பெற்ற சிவத்தலம் (தேவா.); a siva shrine in the Tañjore district.

[வலம்[1] + சுழி[1]]

வலஞ்செய்-தல் *valañ-cey-*, 1 செ.குன்றாவி. (v.t.) இடவலமாகச் சுற்றி வருதல்; to go round from left to right. *"மும்முறை மலைவலஞ் செய்தால்" (சிலப். 11, 107).*

[வலம்[1] + செய்-.]

வலஞ்கைமணிக்கிராமம் *valañjai-maṇik kirāmam*, பெ.(n.) ஒருசார் வணிகர் குழுமம்; a merchant guild.

வலட்டி *valaṭṭi*, பெ.(n.) வல்லமை யுள்ளது (யாழ்.அக.); that which is dominant or powerful.

[வலாட்டியம் → வலட்டி]

வலத்தபாடுவோர் *valatta-pāḍuvōr,* பெ.(n.) வில்லுப்பாட்டுப் பாடுவோரின் வலப்புறம் அமர்ந்து பாடுவோர்; a singer sitting the right side on *villu-p-pāṭṭu*singer. *வில்லுப்பாட்டு இசைப்பவருடன் ஒத்திசைந்து பாடுவோர்.*

[வலத்த + பாடுவோர் = புகழ், வீரம், வெற்றிச் சிறப்புகளைப் பாடுவோர்.]

வலத்திடு-தல் *vala-t-tiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) சொல்லுதல்; to speak.

[வலத்து + இடு-.]

வலத்தை *valattai,* பெ.(n.) நுகத்தின் வலப் பக்கத்து எருது (இ.வ.); bull yoked on the right.

[வலம்[1] → வலத்தை]

வலதம் *valadam,* பெ.(n.) சுக்கு; dried ginger (சா.அக.).

வலது *valadu,* பெ.(n.) 1. வலப்பக்கம்; right side. 2. வெற்றி; victory, triumph. *"மணவாளருடனே வழக்காடி வலது பெற்றேன்" (அருட்பா, vi, தலைவிவருந். 12).* 3. திறமை; efficiency, skill, talent. *"வாயுள்ளார் பேசவும் வலதுள்ளார் கொழிக்கவும்".* 4. ஒருவன் வலதுக்குள் ளடங்கியது; that which is within one's power or ability. *"அது என் வலத்ல்ல" (வின்.).* 5. யாதொரு குறைவுமின்றி வாழும் வாழ்க்கை; life of ease and comfort. 6. செயல் (யாழ்.அக.); deed.

[வல→வலம் → வலது]

வலதுகுண்டை *valadu-kuṇḍai,* பெ.(n.) நுகத்தின் வலப்பக்கத்து எருது (வின்.); bull yoked on the right.

[வலது[1]+குள்→குண்டு→குண்டை= எருது.]

வலதுகுறைந்தோர் *valadu-kuṟaindōr,* பெ.(n.) உடல் உறுப்பு குறைந்தோர்; physically handicapped people. *வலது குறைந்தோருக்கான நிலையம் ஒன்றை அமைச்சர் திறந்து வைத்தார்.*

மறுவ. ஊனமுற்றோர்.

[வலது + குறைந்தோர்]

வலதுகை[1] *valadu-kai,* பெ.(n.) ஆலோசனை வழங்குதல், மந்தணம் (இரகசியம்) காத்தல், குறிப்பறிந்து நம்பிக்கையாக நிறைவேற்றுதல், முதலானவற்றில் ஒருவருக்கு உறுதுணையாக; one's right hand, a confident who supports one in all respects. *சிறப்புச் செயலர்தான் முதலமைச்சரின் வலது கை.*

வலதுகை[2] *valadu-kai,* பெ.(n.) வலக்கை பார்க்க; see *vala-k-kai.*

[வலது + கை]

வலதுசடரம் *valadu-šaḍaram,* பெ.(n.) இதமனியிலிருக்கும் நான்கு அறைகளுள் வலது பக்கத்தில் உள்ள காரி யரத்தப் பகுதி; one of the four chambers of the heart situated on the right bottom-right ventricle (சா.அக.).

[வலது + சடரம்]

வலதுசாரி *valadu-šāri,* பெ.(n.) முதலாளித் துவத்தை ஆதரிக்கும் இயக்கம்; rightist. *தேர்தலில் வலதுசாரிகள் வெற்றி.*

[வலது + சார்→ சாரி.]

வலதுபுப்புசம் *valadu-pupušam,* பெ.(n.) வலது பக்கத்திலுள்ள நுரையீரல்; the right lung (சா.அக.).

[வலது + புப்புசம்]

வலந்தம்[1] *valandam,* பெ.(n.) வளைவு (யாழ். அக.); curve, bend, arch.

[வல[1] → வலந்தம்]

வலந்தம்[2] *valandam,* பெ.(n.) சொல் (யாழ். அக.); word.

[வல[3] → வலந்தம்]

வலந்தரை *valandarai,* பெ.(n.) வலங்காரம் (இ.வ.) பார்க்க; see *valaṅgāram.*

[வலம் [1] + தரை [2]]

வலந்தழைத்தமூலி *valandaḻaitta-mūli,* பெ.(n.) பிரண்டை; a climber square -stalked vine- vitis quadrangularis (சா.அக.).

வலந்தானை *valandāṉai,* பெ.(n.) ஆடவர் வட்டமாகச் சுற்றிவந்து கோல் அடித்தாடும் ஆட்டவகை (G.Tp.D.I.86); a dance in which men move in a circle beating sticks together.

[வலம் [1] + தானை]

வலந்திரி *valandiri,* பெ.(n.) வலப் பக்கமாய்ச் சுற்றியேறுங் கொடிவகை (யாழ்.அக.); a creeper which winds to the right.

[வலம் + திரி]

வலநாடு *vala-nāḍu,* பெ.(n.) ஓர் ஊர்; a country.

[வல + நாடு. (நாடு = மருத நிலம்)]

வலநாள் *vala-nāḷ,* பெ.(n.) வலவோட்டு நாள் (விதான. கால. 2) பார்க்க; see *vala-v-ōṭṭu-nāḷ.*

[வலம் [1] + நாள்]

வலப்பம் *valappam,* பெ.(n.) 1. மரப்பலகையில் எழுதும் ஒருவகைக் கல் (வின்.); a kind of soft stone, used to write on wooden boards. 2. கரும்பலகையில் எழுதும் பலப்பக்குச்சி; slate pencil.

மறுவ. பலப்பம், மாக்குச்சி.

[பலப்பம் → வலப்பம்]

வலப்பாசிசம் *vala-p-pāśiśām,* பெ.(n.) வலது பார்க்க; see *valadu.*

வலப்பாரிசம் *vala-p-pāriśam,* பெ.(n.) வலப்பக்கம் (யாழ்.அக.); right side.

[வலம் [1] + பாரிசம்]

வலம்[1] *valam,* பெ.(n.) 1. சேனை, படை (வின்.); army. 2. வலி, வலிமை; strength, energy. *"வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த" (புறநா. 24).* 3. வெற்றி; victory, triumph. *"வலந்தரிய வேந்திய வாள்" (பு.வெ.9, 35).* 4. ஆணை; command, authority. *"நின் வலத்தினதே" (பரிபா. 5, 21).* 5. வலப்பக்கம்; right side. *"இடம் வல மேழ்பூண்ட விரவித்தேர்" (திவ். இயற். 3, 73). "துளங்குநடை மரையா வலம்படத் தொலைச்சி" (அகநா. 3:7).* 6. இடவலமாக வருகை; circumambulation from left to right. *"மாலிருஞ் சோலை வலஞ்செய்து நாளும் மருவுதல் வழக்கே" (திவ். திருவாய். 2, 10, 8).* 7. சுமை, பாரம், கனம் (அக.நி.); luggage, weight. 8. மேலிடம் (திவா.); high place or locality. 9. இடம் (மலைபடு. 549, உரை) (சூடா.); locality.

[வல்→வல→வலம்]

வலம்[2] *valam,* இடை.(part.) ஏழனுருபு; sign of the locative. *"கைவலத்தியாழ் வரை நின்றது" (நன். 302, உரை).*

[பலம் → வலம்]

வலம்[3] *valam,* பெ.(n.) கழிமாசுக்கட்டு; faeces.

[மலம் → வலம்]

வலம்[4] *valam,* பெ.(n.) நேர்த்தியானவை; that which is excellent or matured.

[வல → வலம்.]

வலம்நோக்கிநிலை-த்தல் *valam-nōkki-nilai-,* 4 செ.குன்றாவி.(v.t.) மூச்சை வலது மூக்குத் துளை வழியாக விடல்; exhaling or breathing through the right nostril.

[வலம் + நோக்கி + நிலை-.]

வலம்படு-தல் *valam-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. வெற்றியுண்டாதல்; to be victorious or triumphant. *"வலம்படு முரசின்" (பதிற்றுப். 78, 1).* 2. இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கஞ் செல்லுதல்; to pass across one's path from left to right. *"கரிக்குருவி வலம்பட்டது" (உ.வ.).*

[வல → வலம்[1] + படு-.]

வலம்பம் *valambam,* பெ.(n.) நேர்கோடு (யாழ்.அக.); straight line.

[வலம்பை → வலம்பம்]

வலம்பாய்-தல் *valam-pāy-,* 2 செ.கு.வி. (v.i.) வலம்படு-தல் 2 பார்க்க; see *valampaḍu.*

[வலம் + பாய்-.]

வலம்புரநாதர் *valambura-nādar,* பெ.(n.) திருவலம்புரத்திலே கோயில் கொண்டிருக்கும் இறைவன்; the God enshrined at Tiruvalampuram.

வலம்புரி[1] *valamburi,* பெ.(n.) 1. வலமாகச் சுழிந்திருப்பது; that which curls to the right. *"வலம்புரி யாழியனை" (திவ். பெரியதி. 9, 9, 9).* 2. வலம்புரிச்சங்கு; conch whose spirals always turn to the right. *"திருமுத் தீன்ற வலம்புரிபோல்" (சீவக. 2702). "அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து" (அகநா. 201 : 5). "துணை புணர்ந் தெழுதரும் தூநிற வலம்புரி" (கலித்.135 : 1). "ஒருசிறைக் கொளீஇய திரிவாய் வலம்புரி" (புறநா. 225 : 12). "இரங்குகுரல் முரசமொடு வலம்புரி யார்ப்ப" (புறநா. 397).* 3. வலம்புரிச் சங்கு போன்று கைவரி (இரேகை); lines in the palm of the hand resembling *valamburi-c-caṅgu,* considered auspicious. *"வலம்புரி பொறித்த வண்கை மதவலி" (சீவக. 204).* 4. வலம்புரிச் சங்கின் வடிவமைந்த தலைக் கோலவகை; a head-ornament, shaped like *valampuri-c-caṅgu. "உத்தியொடு.... வலம்புரி வயின் வைத்து" (திருமுரு. 23).* 5. இடவலமாகத் திருக்கோயிலைச் சுற்றுகை (வின்.); circumambulation from left to right, as of a temple.

தெ. வலமுரி; ம. வலம்பிரி.

[வலம்[1] + புரி]

வலம்புரி[2] *valamburi,* பெ.(n.) 1. நந்தியாவட்டச்செடி (பிங்.); East Indian rose bay, wax-flower crape Jasmine. *"பாரிசாத மென் கொழுந்தொடு வலம்புரி பலவும்".* 2. நீண்ட செடிவகை (சூடா.); Indian screw-tree.

[வலம்[1] + புரி]

வலம்புரி³ *valamburi,* பெ.(n.) சிறு விரலும் பெருவிரலும் நிமிர்ந்து, சுட்டுவிரலின் அகம் வளைந்து, ஒழிந்த இரண்டு விரலும் நிமிர்ந்து இறைஞ்சி நிற்கும் இணையா வினைக்கை வகை (சிலப். 3, 18, உரை); a gesture with one hand in which the little finger and the thumb are held upright while the forefinger is folded and the other two fingers are held up slightly bent, one of 33 *iṇaiyā-v-iṇaikkai.* 2. இட வலமாகத் திருக்கோயிலைச் சுற்றி வருதல்; circumambulation from left to right, as of a temple.

[வலம்¹ + புரி]

வலம்புரிக்காய் *valamburi-k-kāy,* பெ.(n.) வலம்புரிச் செடியின் காய் (இங். வை. 52); cone of the Indian screw-tree, used medicinally.

[வலம்புரி¹ + காய்³]

வலம்புரிக்கொடி *valamburi-k-koḍi,* பெ.(n.) கொடிவகை (மலை.); a climber.

[வலம்புரி + கொடி]

வலம்புரிச்சங்கம் *valamburi-c-caṅgam,* பெ.(n.) வலம்புரிச்சங்கு பார்க்க; see *valamburi-c-caṅgu.* *"வலம்புரிச் சங்கம் வறிதெழுந் தார்ப்பம்" (மணிமே. 7:113).*

[வலம்புரி + சங்கம்.]

வலம்புரிச்சங்கு *valam-buri-c-caṅgu,* பெ.(n.) இடமிருந்து வலமாக உள் வளைந்த சங்கு; conch whose spirals always turn to the right.

[வலம்புரி¹ + சங்கு]



வலம்புரிப்புல் *valamburi-p-pul,* பெ.(n.) புல்வகை (M.M.853, 934); spear-grass.

[வலம்புரி² + புல்]

வலம்பை *valambai,* பெ.(n.) கம்பு, கழி (இ.வ.); pole, stick, rafter.

[வல்→வல→வலம்பை.]

வலம்வருவாண்டி *valamvaruvāṇḍi,* பெ.(n.) விச்சுளி; a swift little bird (சா.அக.).

வலம்வா—தல் *valam-vā-,* 15 செ.குன்றாவி. (v.t.) இடவலமாகத் திருக்கோயிலைச் சுற்றி வருதல்; to go round from left to right, as of a temple. *"திருமலையே வலம் வந்தனள்" (தக்கயாகப். 321).*

[வலம்¹ + வா—.]

வலமன்¹ *valamaṉ,* பெ.(n.) நந்தியாவட்டம்; a flower plant, wax flower, crape jasmine, East Indian rosebay.

வலமன்² *valamaṉ,* பெ.(n.) வலப்பக்கம் (யாழ். அக.); right side.

[வலம்¹ → வலமன்]

வலமா—தல் *valam-ā-,* 8 செ.கு.வி.(v.i.) வலம் படு—தல் 2 (இ.வ) பார்க்க; see *valam-paḍu-2-.*

[வலம்¹ + ஆ—⁶]

வலமாய்வாங்கு-தல் *valamāi-vāṅgu-,* 5 செ.குன்றாவி.(v.t.) வயல் வரப்பின் அருகில் உழுவதற்கேற்ப மண்வெட்டியால் வெட்டி யெடுத்து, உழவுக்கு ஏற்ற வாறாக்குதல்; to dredge with spade that portion of the field near its ridge as ploughing is not feasible.

[வலமாய் + வாங்கு-.]

வலமுறைத்திரிவுக்குறி *valamuṟai-t-tirivu-k-kuṟi,* பெ.(n.) சொல்லின் வலப்புறம் ஏற்படும் மாற்றத்தைச் சுட்டும் அடையாளம்; a symbol representing a change in the right side of a word (←).

[வலமுறை + திரிவுக்குறி]

வலயக்கிரகணம் *valaya-k-kiragaṇam,* பெ.(n.) வலயம் போலத் தோன்றும் சூரிய கிரகணம் (வின்.); annular eclipse of the sun.

[வலயம் + கிரகணம்]

Skt. grahaṇa → த. கிரகணம்.



வலயம் *valayam,* பெ.(n.) 1. வளையம், வட்டம் (பிங்.); circle, round. 2. சக்கரப்படை (சூடா.); discus. 3. கடல் (பிங்.); sea. 4. பூகோளத்தின் மண்டலாகாரமான பகுதி; zone of earth. 5. கைவளையம்; bracelet, armlet. *"நிரைநில முழ வலயங் களினலைய" (பெரியபு. திருநாவுக். 6).* 6. தாமரையின் சுருள்; involute petal of a lotus. 7. சுற்றிடம்; surrounding region. *"கடல்வலயத் தயலறிய" (கம்பரா. சடாயுகாண். 23).* 8. நீர்நிலை(பிங்.), குளம்; tank, pool. 9. பாத்தி; plot, division in a field. 10. தோட்டப்பாத்தி; garden plot. *"மஞ்சளு மிஞ்சியு மயங்கரில் வலயத்து" (சிலப்.10, 74).* 11. தோட்டம் (சிலப்.10, 74, அரும்.); garden. 12. எல்லை (யாழ்.அக.); limit, ambit.

[வளையம் → வலயம்]

வலர்வடிமாரன் *valarvaḍimāraṉ,* பெ.(n.) எருமை முன்னை; a kind of tree (சா.அக.).

வலரி *valari,* பெ.(n.) அலரி; a small tree - *Nerium odorum* (சா.அக.).

வலவந்தம் *vala-vandam,* பெ.(n.) கட்டாயம்; compulsion, force, coercion.

[வல → வலவந்தம்]

வலவந்தரம் *vala-vandaram,* பெ.(n.) கட்டாயம், வலவந்தம் (வின்.); compulsion, force, coercion.

[வலவந்தம் → வலவந்தரம்]

வலவந்தன் *vala-vandaṉ,* பெ.(n.) வன்கண்மையன் (பலவந்தன்) (வின்.); forceful or coercive man.

மறுவ. முரடன்.

[வலவந்தம் → வலவந்தன்]

வலவலத்ததுணி *vala-valatta-tuṇi,* பெ.(n.) சல்லடைத் துணி; gause-a thin slight transparent-linen, a cloth woven loosely.

[வலவலத்த + துணி]

வலவன்[1] *valavaṉ*, பெ.(n.) 1. திறமையாளன் (வின்.), சமர்த்தன்; capable man, expert. 2. வெற்றியாளன் (சூடா.); conqueror. 3. நுகத்தின் வலப்பக்கத்து எருது (இ.வ.); bull yoked on the right.

[வலம் = வெற்றி, வலம் [1] + அன்.]

வலவன்[2] *valavaṉ*, பெ.(n.) 1. தேர்ப்பாகன்; charioteer. *"விசும்பின் வலவ னேவா வானவூர்தி" (புறநா. 27). "வலவ னாய்ந்த வண்பரி" (அகநா. 20 : 15), "புலவு நா றகன்றுறை வலவன் தாங்கவும்" (குறுந். 311 : 2).* 2. திருமால் (பிங்.); *vishṇu.*

[வல்லபன் → வலபன் → வலவன்]

வலவன்[3] *valavaṉ*, பெ.(n.) இந்திரனால் கொல்லப்பட்ட அரக்கன் (திருவிளை. மாணிக்கம். 19); an *Aśuraṉ* slain by Indiraṉ. *"வாசவன் வேள்விக் கிரங்கியோர் பசுவாய் வந்திடும் வலவனை" (திருவாலவா. 25, 9).*

[வல → வலவன்]

வலவன்[4] *valavaṉ*, பெ.(n.) வலப்பக்கத்துள்ளவன்; person on the right side, a helpful person.

[வலம்→ வலவன்.]

வலவன்பாடி *valavaṉ-pāḍi*, பெ.(n.) 1. வில்லுப் பாட்டில் வீசுகோற்காரனுக்கு வலப் பக்கத்திலிருந்து பாடுவோன்; one who accompanies the singer playing the vil in *villu-p-pāṭṭu*, sitting on his right side. 2. ஒத்துப் பாடுவோன்; sycophant.

[வலவன் + பாடி.]

வலவாய் *valavāy*, பெ.(n.) வலப்பக்கம்; right-side. *"அஃது இடவாய் வலவாய் பெயரும்படி" (கலித். 140, உரை).*

[வலம் [1] + வாய்]

வலவை[1] *valavai*, பெ.(n.) ஆனை முகத்தோன் தேவி; consort of *Gaṇēšaṉ*. *"வலவை கேள்வனும்" (உபதேசகா. சிவவிரத. 192).*

[வல்லபை → வல்லவை → வலவை]

வலவை[2] *valavai*, பெ.(n.) 1. திறமை, ஆற்றல், வல்லபம் (சிலப். 5, 74, உரை); ability, skill, expertise. 2. திறமையாளன், வல்லவன்–ள் (பிங்.); powerful capable person, energetic man. *"வலவைப் பார்ப்பான்" (சிலப். 23, 61).* 3. காளி (பிங்.); *kāḷi.* 4. காளியின் ஏவலாளியான இடாகினி (பிங்.); a female attendant on *kāḷi.*

[வல் [1] → வல →வலவை]

வலவை[3] *valavai*, பெ.(n.) 1. நாணிலாதவ–ன்–ள்; shameless. *"வலவைக ளல்லாதார்" (நாலடி. 268). "மாதர்க் கோலத்து வலவையி னுரைக்கும்" (சிலப். 5, 74).* 2. வஞ்சப் பெண் (பிங்.); deceitful woman, grileful lady.

[வல [1] → வலவை]

வலவை[4] *valavai*, பெ.(n.) பிறர் ஏற்றுக் கொள்ளும் படி பேசுபவன்; uncontraversel person, infalliable man.

[வல → வலவை]

வலவோட்டம் *vala-v-ōṭṭam*, பெ.(n.) வல வோட்டுநாள் பார்க்க; see *vala-v-ōṭṭu-nāḷ.*

[வலம் [1] + ஓடு → ஓட்டம்]

வலவோட்டுநாள் *vala-v-ōṭṭu-nāḷ*, பெ.(n.) இரலை, தாழி, ஆரல், கழை, கொடிறு, கவ்வை, கைம்மீன், நெய்ம்மீன், விளக்கு, குருகு, முற்குளம், கடைக்குளம், முற்கொழுங்கல், பிற்கொழுங்கல், தொழுபஃறி ஆகிய

நாண்மீன்கள் (சோதிட. சிந். 155); alternate group of three nāṉmīṉgaḷ, commencing with the group *iralai, tāḻi, āral, kaḷai, koḍiṟu, kavvai, kaimmīṉ, neymmīṉ, viḷakku, kurugu, muṟkuḷam, kaḍaikkuḷam, muṟkoḷuṅgal, piṟkoḷuṅgal, toḻupakṟi,* dist. fr. *iḍa-v-ōṭṭu-nāḷ.*

[வலம் + ஓடு + நாள்]

வலற்காரம் *valaṟkāram,* பெ.(n.) பொய் (நாமதீப.655); falsehood, lie.

[வலக்காரம் → வலற்காரம்]

வலன்[1] *valaṉ,* பெ.(n.) 1. வெற்றி; victory, triumph. *"வலனாக வினையென்று" (கலித். 35).* 2. வலப்பக்கம்; right side. *"மேழி வலனுயர்ந்த வெள்ளை நகரமும்" (சிலப். 14, 9). "சுடர் நிமிர் மின்னொடு வலனேர் பிரங்கி" (அகநா. 43 : 2).* 3. மேலிடம் (திவா.); high place or locality, higher authority. 4. வலம்[1]1, 2, 4, 6, 7, 9 பார்க்க; see *valam.*

[வலம்[1] → வலன்]

வலன்[2] *valaṉ,* பெ.(n.) 1. வலப்பக்கத்தி லிருப்பவன்; man on the right. *"இடவல" (பரிபா. 3, 83).* 2. வெற்றியாளன் (சூடா.); conqueror, winner.

[வலம்[1] → அன்]

வலன்[3] *valaṉ,* பெ.(n.) இந்திரனால் கொல்லப்பட்ட அரக்கன் (திருவிளை. மாணிக்கம். 19); an *Aśura* slain by *Indiraṉ.*

[வலம் → வலன்]

வலனா-தல் *valaṉ-ā-,* 6 செ.கு.வி.(v.i.) இடப் பக்கத்திலிருந்து வலப்பக்கஞ் செல்லுதல்; to pass across one's path from left to right.

[வலன்[1] + ஆ-.]

வலனேர்பு *valaṉērbu,* பெ.(n.) வலது பக்கம்; right side. *"அணங்கடை அருந்தலை உடலி வலனேர்பு" (நற்-37, 9). "உலகமுவப்ப வலனேர்பு திரிதரு" (திருமுருகா.).*

[வலன் → வலனேர்பு.]

வலாகம்[1] *valāgam,* பெ.(n.) கொக்கு (பிங்.); common crane, field bird.

[பலாகம் → வலாகம்]

வலாகம்[2] *valāgam,* பெ.(n.) நீர் (யாழ்.அக.); water.

[வளாகம் → வலாகம்]

வலாகு *valāgu,* பெ.(n.) வலாகம்[1] (யாழ்.அக.) பார்க்க; see *valāgam*[1]. *"வாரி யோட்டில் வலாகரித் திட்டபோல்" (மேருமந். 652).*

[வலாகம் → வலாகு]

வலாகை *valāgai,* பெ.(n.) கொக்கு (யாழ். அக.); crane.

[வலாகு → வலாகை]



வலாசகம் *valāsagam,* பெ.(n.) 1. குயில் (யாழ்.அக.); koel. 2. தவளை; frog.

வலாட்டிகன் *valāṭṭigaṉ,* பெ.(n.) திண்ணியோன், வலுமிக்கவன்; strong man, valiant man.

[வலாட்டியன் → வலாட்டிகன்]

வலாட்டியம் *valāṭṭiyam,* பெ.(n.) பலம், வலிமை; strength.

[வலாட்டியன் → வலாட்டியம்]

வலாட்டியன் *valāṭṭiyaṉ,* பெ.(n.) வலிமிக்கோன், திண்ணியோன்; strong man, man of valour.

[வலாட்டிகன் → வலாட்டியன்]

வலார் *valār,* பெ.(n.) வளார்; twig, switch. *"வலாஅர் வல்விற் குலாவரக் கோலி" (புறநா.324).*

[மலார் → வலார்.]

வலாரி *valāri,* பெ.(n.) இந்திரன் (வலன் என்னுமசுரனின் பகைவன்); Indra, as the enemy of the *Aśura valaṉ.* *"வலாரி யாதி விண்ணோர்" (தணிகைப்பு.சீபரி.20).*

வலாற்காரம் *valāṟ-kāram,* பெ.(n.) வலக்கட்டாயம் (யாழ்.அக.) பார்க்க; see *vala-k-kaṭṭāyam.*

வலி¹–த்தல் *vali-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கட்டாயப்படுத்துதல்; to force, compel. *"வலித்தாண்டு கொண்ட" (திருவாச. 11, 7).* 2. பற்றிக்கொள்ளுதல்; to seize. *"கொண்டு கைவலித்தல் சூழ்ந்திசின் யானே" (அகநா. 76).* 3. இடர்ப்பட்டுப் பொருள் கொள்ளுதல் (வின்.); to understand with great difficulty, to strain, as an interpretation. 4. மெல்லெழுத்தை வல்லெழுத்தாக்குதல் (இலக்.); to become hard in sound, as a soft consonant. *"வலிக்கும் வழி வலித்தலும்" (தொல். சொல். 403).* 5. துணிதல்; to decide, foldly. *"வல்வினை வயக்குதல் வலித்திமன்" (கலித். 17).* 6. வற்றச் செய்தல் (வின்.); to dry, scorch, parch, reduce. 7. அழுத்திப் பலுக்குதல் (வின்.); to stress, as words.

[வலி¹ → வலி–.]

வலி²–த்தல் *vali-,* 4 செ.கு.வி.(v.i.) 1. திண்ணியதாதல்; to become hard or strong and verile. *"கல்லென வலித்து நிற்பின்" (கம்பரா.வருண. 84).* 2. வற்றுதல்; to become dry, to reduce. *"நீர் நுங்கின் கண்வலிப்ப" (புறநா.389).* 3. நோவுண்டாதல்; to ache; to pain; to be painful. *"வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்" (தேவா. 946, 7).* 4. முயலுதல் (வின்.); to make efforts, to attemper. 5. கொழுத்தல் (திவா.); to become stout, fat.

[வலி¹ → வலி–.]

வலி³–த்தல் *vali-,* 4 செ.கு.வி. (v.i.) 1. சொல்லுதல் (சூடா.); to say, tell, state, narrate, speak. 2. கருதுதல் (பிங்.); to think, consider. *"வலியா தெனக்கு வம்மீ னீரென" (பெருங். வத்தவ. 3, 99).* 3. கருத்தோடு செய்தல்; to do delightly, to execute with undivided attention, as a work. *"திங்கள் வலித்த காலன் னோனே" (புறநா. 87).* 4. உடன்படுதல் (பிங்.); to agree to, to consent, to be consonant with. *"செல்லல் வலித்தேனச் செம்மன் முன்" (பு.வெ.11, பெண்பாற். 12).*

[வல்³ → வலி–.]

வலி⁴–த்தல் *vali-*, 4 செ.குன்றாவி.(v.t.) 1. துடுப்பு, கயிறு முதலியவற்றை இழுத்தல்; to draw, pull; to attract. *"புலித்தோல் வலித்து வீக்கி" (தேவா. 910, 3). "சார்ங்கம் வளைய வலிக்கும்" (திவ். நாய்ச். 5, 8). படகுத் துடுப்பு வலிப்பதற்குப் பழக்கம் இருந்தால்தான் முடியும் (உ.வ.). கயிற்றை இடது பக்கமாக வலித்துவிடுங்கள் (இ.வ.).* 2. வளைத்தல் (சூடா.); to bend, curve. 3. அழகு காட்டுதல் (திருநெல்.); to mimic; to make a face at. *தம்பி என்னைப் பார்த்து வலிக்கிறான் (இ.வ.).* 4. தண்டாற் படகு தள்ளுதல்; to row, tug. 5. கப்பற்பாய் தூக்குதல்; to hoist, as the sails of a vessel or ship. 6. புகை குடித்தல் (இ.வ.); to smoke, as tobacco.

[வல் → வலி–.]

வலி⁵–த்தல் *vali-*, 4 செ.கு.வி.(v.i.) 1. இசிவு காணுதல்; to have contortions or convulsions. 2. ஏங்குதல் (வின்.); to pine, droop, languish, to yearn, crave, desire. 3. உடம்பில் துன்பம் தரும் உணர்வு உண்டாதல்; to pain; to hurt. *மருத்துவர் ஊசி குத்தும்போது எறும்பு கடிப்பது போலத்தான் வலிக்கும் (உ.வ.). பல் கூசுகிறதா? வலிக்கிறதா? (இ.வ.). பேருந்து நிறுத்தத்தில், கால் வலிக்க நிற்க வேண்டியிருந்தது (இக்.வ.).*

[வல் → வலி–.]

வலி⁶–தல் *vali-*, 2 செ.குன்றவி.(v.t.) 1. கட்டாயப்படுத்துதல்; to behave with emel and rough manner, to coerce, to force cruelly, compel. *"வலிந்து பற்றினான்" (உ.வ.).* 2. மீறுதல்; to transgress, transcend, surpass. *"அருளினை வலிய மாட்டாமை" (பெரியபு. திருநீலக். 34).*

[வன் → வலி ¹ → வலி–.]

வலி⁷–தல் *vali-*, 2 செ.குன்றாவி.(v.t.) இழுத்தல்; to draw, pull, to attract, to influence. *"காந்தம் வலியு மிரும்பு போல்" (பிரபுலிங். மாயையினுற். 45).*

[வல் → வலி–.]

வலி⁸–தல் *vali-*,பெ.(n.) 1. வன்மை; strength, power. *"வலியி னிலைமையான்" (குறள், 273).* 2. வலாற்காரம் பார்க்க; see *valāṟ-kāram*. *"வலிசெயா தாணையை நினைந்து" (திருவாலவா.57, 5).* 3. தன் முனைப்பு (அகங்காரம்); arrogance. *"கேள்வி யனைத்தினும் வலியினும் மனத்தினு முணர்வினும்" (பரிபா.3, 49).* 4. வல்லெழுத்து; hard consonant. *"ஈற்று மெய் வலிவரி னியல்பாம்" (நன்.159).* 5. தொகை நிலைத் தொடர் மிக்கு வருஞ் செய்யுட் குணம் (தண்டி.24); vigour of style, achieved by introducing compounds in quick succession, a merit of poetic composition. 6. பற்றுக்கோடு; Prop, support. *"தண்ட வலியாக நனி தாழ்ந்து" (சீவக.2012).* 7. பற்றிரும்பு (பிங்.); cramp-iron, pincers. 8. துன்பம்; trouble, difficulty. *"அதைச் செய்வதில் உனக்கென்ன வலி".* 9. நோவு; pain, ache. *"யான்பட்ட வலிகாண வாராயோ" (கம்பரா.சூர்ப்ப.102).*

[வல் → வலி–.]

வலி⁹ *vali*,பெ.(n.) 1. ஒலி (பிங்.); sound. 2. சூளுரை, வஞ்சினம்; vow, oath. *"போக்கரும் வலிபுகன்று போய் வரு மாயை" (பிரபுலிங். வசவண். 31).* 3. வஞ்சம் (பிங்.), ஏமாற்று; deceit, fraud, guile, cheat, craftiness.

[வல் → வலி ⁷]

வலி[10] *vali,* பெ.(n.) 1. இழுக்கை; pulling, dragging; attracting. 2. அமரகண்டம், குமரகண்டம், பிரமகண்டம், காக்கை வலி, முயல்வலி என்று ஐவகைப்பட்ட இசிவு நோய் (தைலவ. தைல. 75); cramp, spasm, convulsion, fit, of five kinds, viz., *amara-kaṇḍam, kumara-kaṇḍam, pirama-kaṇḍam, kākkai-vali, muyal-vali.* 3. கப்பற்காரர்க்குக் கொடுக்கும் முத்துக் குவியலில், எட்டிலொரு பகுதி (வின்.); remuneration to the owners of the boats used in pearl-fishery being one day's gathering in one eighth share.

[வல் → வலி.]

வலி[11] *vali,* பெ.(n.) வலியன், ஆற்றலுடையவன்; strong, powerful man, with stamine. *"காய மனவசி வலிகள்" (மேருமந். 1097). வலிபடைத்த தோள் (உ.வ.).*

[வன் →வல் → வலி.]

வலி[12] *vali,* பெ.(n.) அடையாளம், குறி (யாழ். அக.); mark, trace, fold, crease.

[வரி → வலி]

வலி[13] *vali,* பெ.(n.) குரங்கு (யாழ்.அக.); monkey.

வலி[14] *vali,* பெ.(n.) நறுவிலி (மலை.); sebesten.

[விலி → வலி]

வலிக்கட்டாயம் *vali-k-kaṭṭāyam,* பெ.(n.) வலுக்கட்டாயம் பார்க்க; see *valu-k-kaṭṭāyam.*

[வலி[1] + கட்டாயம்]

வலிக்கட்டு *vali-k-kaṭṭu,* பெ.(n.) யாழ் நரம்பின் வலிந்த கட்டு (பிங்.); tight fastening of the strings of a lute.

[வலி[1] + கட்டு]

வலிக்கயிறு *vali-k-kayiṟu,* பெ.(n.) வண்டியில் வைக்கோல், இன்னபிற ஏற்றிச் செல்லும் பொழுது அவை கீழே விழாமல் இழுத்துக் கட்ட உதவும் கயிறு; a long thick rope used to tighter straw heap or gumy sock's loads. *வல்லி கவுறு, வலி கவுறு (பே.வ.).*

[வலி[10] + கயிறு. வலித்தல் = இழுத்தல், கட்டுதல்.]

வலிக்கெனல் *vali-k-keṉal,* பெ.(n.) தெளிவாயிருத்தற் குறிப்பு (யாழ்.அக.); expr. signifying clearness.

வலிகுன்மம்[1] *vali-kuṉmam,* பெ.(n.) 1. செரிமானமின்மையால் உண்டாகும் ஓர் நோய்; a disease due to indigestion-gastragia. 2. பித்தம் மிகுதியாகி செரியாமையினால் ஏப்பத்தோடு வலியை உண்டாக்கும் ஒரு நோய்; dyspepsia arising from chronic enlargement of the spleen. 3. வயிறு பலவிதமாய் வலித்து, உணவினை ஏற்க மறுத்து, தேகத்தை வற்றச் செய்யும் ஓர் நோய்; a disease marked by burning in the chest, vomitting nauses with pains in the abdomen, causing emaciation.

வலிகுன்மம்[2] *vali-kuṉmam,* பெ.(n.) வலிப்பு முதலியவற்றோடு கூடிய வெப்பு நோய் (சீவரட். 108); a kind of fever, attended with convulsion and pains all over the body.

[வலி[1] + குன்மம்]

வலிகுன்மவாயு *vali-kuṉma-vāyu,* பெ.(n.) வலிகுன்மம் பார்க்க; see *vali-kuṉmam.*

[வலி + குன்மவாயு.]

Skt. vāyu த. வாயு

வலிங்கம் *valiṅgam,* பெ.(n.) வலாற்காரம் (யாழ்ப்.); compulsion, coercion, force.

[வலி [3] → வலிங்கம்]

ஒருகா. வலுவந்தம்→வலிங்கம்.

வலிச்சம்[1] *valiccam,* பெ.(n.) வலிப்புக் காட்டுகை; grimace.

[வலிச்சு → வலிச்சம்.]

வலிச்சம்[2] *valiccam,* பெ.(n.) முகச்சைகை; grimace.

[வலிச்சு → வலிச்சம்.]

முதற்கால குமரிநாட்டு மாந்தனின் உடற்சைகை உறுப்புச் சைகையென்ற இருதிறத்த சைகைமொழியுள், முகச்சைகையாகிய வலிச்சமும் சைகையு ளடங்கும்.

வலிச்சல் *valiccal,* பெ.(n.) 1. கட்டு வரிச்சல் (வின்.); reeper of a roof, transverse lath. 2. பனையின் கடுங்காய் (யாழ்ப்.); palmyra fruit not fully ripe. 3. தசை முதலியவற்றின் கடினத் தன்மை (இ.வ.); toughness, as of flesh che. 4. காய்ந்தது (யாழ்.அக.); anything dried.

[வலி [4] → வலிச்சல்]

வலிச்சலன் *vali-c-calaṉ,* பெ.(n.) 1. மிகவும் மெலிந்தவன்; extremely emaciated man. 2. பிடிவாதக்காரன்; obstinate or adamant man.

[வலிச்சல் → வலிச்சலன்]

குச்சி போன்று, மெல்லிய உருவினன்.

வலிச்சலாணி *vali-c-calāṇi,* பெ.(n.) வரிச்சலாணி; nail for fastening creepers-with rafter.

[வலிச்சல் + ஆணி [1]]

வலிச்சற்கொடி *valiccaṟ-koḍi,* பெ.(n.) கொடிவகை (யாழ்.அக.); a kind of creeper.

வலிச்சை *valiccai,* பெ.(n.) கட்டுவரிச்சல்; reeper.

[வலிச்சல் → வலிச்சை]

வலிசம் *vališam,* பெ.(n.) தூண்டில் (யாழ். அக.); fish-hook.

வலிசன்னி *vali-saṉṉi,* பெ.(n.) நரம்பிழுப்பு; convulsions.

[வலி + சன்னி.]

Skt. sanni > த. சன்னி.

வலிசெய்–தல் *vali-šey-,*1 செ.கு.வி.(v.i.) 1. மிறுக்குச் செய்தல்; to be stiff in manners. *“அடிமைக் கணவன் வலிசெய்ய” (திவ். நாய்ச். 5, 10).* 2. வல்வழக்குரைத்தல்; to make an unjust or oppressive claim. *“தாரான் வலி செய்கின்றான்” (பெரியபு. திருநீலகண்ட. 32).*

[வலி [1] + செய்–.]

வலித்தல் *valittal,* பெ.(n.) செய்யுட்டிரிபு ஆறனுள் மெல்லொற்றை வல்லொற்றாக மாற்றுகை (நன். 155); a poetic licence which consists in the change of a soft consonant into a hard one, one of six *ceyyuḷ-vigāram.*

[வல்→ வலி [3] → வலித்தல்]

வலித்திரும்பு *valittirumbu,* பெ.(n.) காந்தம் (வின்.); loadstone, magnet.

மறுவ. பற்றிரும்பு.

[வலி ³ + இரும்பு]

பற்றியிழுக்கும் ஈர்ப்பு ஆற்றலுள்ள இரும்பு.

வலித்துக்கட்டு-தல் *valittu-k-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) கயிற்றை இழுத்துக் கட்டுதல்; to tie after tightening the rope. *வலிச்சி கட்டுதல் (உ.வ.).*

[வல்→வலி→வலித்து + கட்டு-.]

வலித்துக்காட்டு-தல் *valittu-k-kāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) பிறரை நக்கல் செய்யும் வகையில் விரலை ஆட்டுதல்; வாயைக் கோணிப் பேசுதல்; to make faces at someone.

[வலித்து + காட்டி (த.வி.)→காட்டு (பி.வி.).]

பிறரை வேண்டுமென்றே சினமூட்டு முகத்தாயினும், நக்கல் பேச்சுப் பேசும் பான்மையிலும் வக்காணித்தும், அழகுக்காட்டியும் பேசுதல் வலித்துக்காட்டுதல் எனலாம்.

வலிதம் *validam,* பெ.(n.) 1. சுற்றுவட்டம் (யாழ்.அக.); environment, surroundings. 2. அசைவு; shaking, movement.

[வலி ³ → வலிதம்]

வலிதாங்காமை *vali-tāṅgāmai,* பெ.(n.) வலி பொறுக்காமை; unbearable pain.

[வலி + தாங்காமை.]

வலிதின் *validiṉ,* வி.எ.(adv.) விரைவாக; by force, forcibly. *"கையாலே வலிதிற் பிடித்துக் கொள்ளும்" (கலித். 62, உரை).*

[வல்லிதின்→வலிதின்]

வலிதீர்க்குமருந்து *vali-tīrkku-marundu,* பெ.(n.) வலிநீக்குமருந்து பார்க்க; see *vali-nīkku-marundu.*

வலிது *validu,* பெ.(n.) வலிமையுள்ளது; that which is strong and sturdy. *"நம்மினும் வலிதாத் தூக்கிய பொருளே" (அகநா. 265 : 23).* 2. வலவந்தம்; force, compulsion, coercion.

[வல்¹ → வலி →வலிது]

வலிதை *validai,* பெ.(n.) நாட்டிய விணைக்கை வகை (சிலப். 3, 12, உரை, பக். 81, கீழ்க்குறிப்பு); a kind of hand-pose.

வலிந்தரசம் *valinda-rašam,* பெ.(n.) கட்டியரசம்; consolidated mercury.

வலிந்து *valindu,* வி.அ.(adv.) 1. வலுக் கட்டாயமாக, வேண்டுமென்றே செய்தல்; to do forceably and wontonly, deliberately. *"ஒரு மொழியில் பிற மொழிச் சொற்களை வலிந்து புகுத்துவது தவறு". எதிலாவது வலிந்து ஈடுபட்டால், கவலை தானே மறையும் (இ.வ.).* 2. வலிய; without being invited or asked. *அவன் வலிந்து வலிந்து பேசினும், நான் அவனோடு பேசமாட்டேன் (உ.வ.).*

[வலி → வலிந்து]

வலிந்துகொள்(ளு)-தல் *valindu-koḷ(ḷu)-,* 16 செ.குன்றாவி.(v.t.) 1. வலு கட்டாயமாய்க் கைப்பற்றுதல்; to annex by force. 2. இடர்ப்பட்டுப் பொருள் கொள்ளுதல்; to strain, as in interpretation, to understand with great difficulty.

[வலி ² + கொள்-.]

வலிந்துவந்துபேசு–தல் *valindu-vandu-pēšu-*,5 செ.கு.வி.(v.i.) பிறர் வேண்டுதலின்றித் தானாகவே முன்வந்து பேசுதல்; to speak, voluntarily to a person who is not willing to talk. *நன்றி மறந்த நண்பர், வலிந்து வந்து பேசியவுடன், எல்லாவற்றையும் மறந்து இன்முகத்துடன் பேசினார் .*

[வலிந்துவந்து + பேசு-.]

வலிந்துவலிந்துபேசு–தல் *valindu-valindu-pēšu-*,5 செ.கு.வி.(v.i.) ஒரு திட்டத்தை அல்லது கருத்தை வற்புறுத்திப் பேசுதல்; to talk a subject or plan emphaticaly. *மகளிர்க்கான இட ஒதுக்கீட்டைப் பாராளுமன்றத்தில் அமைச்சர் வலிந்து வலிந்து பேசினார் (இ.வ.).*

[வலிந்துவலிந்து + பேசு-.]

வலிநிறம் *vali-niṟam,* பெ.(n.) மாந்துளிர்க் கல்; a kind of stone coloured like the tender leaf of mango tree.

வலிநீக்குமருந்து *vali-nīkku-marundu,* பெ.(n.) உறக்கத்தை உண்டாக்கி, அதன் வாயிலாக வலியை நீக்கும் மருந்து; a pain killer drug that gives relief from pain-anodyne.

[வலி + நீக்கு + மருந்து]

வலிநோய்[1] *vali-nōi,* பெ.(n.) இவை 46 வகை கொண்டது; convulsions, they are of 46 kinds.

[வலி + நோய்]

வலிநோய்[2] *vali-nōy,* பெ.(n.) காக்கைவலி; epilepsy. *"வலி நோயொடு முடைநாற்ற நோயாளர்" (கடம்ப. பு. இலீலா. 107).*

[வலி [7] + நோய்]

வலிப்படு–தல் *vali-p-paḍu-*,20 செ.கு.வி. (v.i.) வன்முறைக்கு ஆட்படுதல்; to undergo for violence or coercion.

[வலி + படு-.]

வலிப்பற்று *vali-p-paṟṟu,* பெ.(n.) பற்றுக் குறடு (பிங்.); smith's tongs.

[வலி[1] + பற்று]

நழுவுந் தன்மை வாய்ந்த பொருளையோ அல்லது ஏனைய வத்தன்மையவற்றை பிடித்துக் கல்வி எடுப்பதற்குக் கம்மப் பணியாளர் பயன்படுத்துவது. பொருளைப் பிடித்து எடுக்கப் பயன்படும் இடுக்கி அல்லது இடுக்கி போன்ற கருவி.



வலிப்பிடிப்பு *vali-p-piḍippu,* பெ.(n.) ஒரு வகை நோய்; a kind of disease, stiffness of limbs with pain.

[வலி + பிடிப்பு]

வலிப்பித்தம் *vali-p-pittam,* பெ.(n.) அடி வயிற்று இசிவு, மூட்டுவலி, மாரடைத்தல், உடலம் துடித்தல் முதலிய குணங்களைக் காட்டும் நோய்; a disease marked by pain joints, pulling pain in the lower abdomen, choaking of the chest, tumour of the body etc.

[வலி + பித்தம்.]

பே→பேத்து→பீத்து→பித்து→பித்தம்.

(ஒ.நோ.) தீம்→தித்தி. தேஞ்சுவை→தீஞ்சுவை.

வலிப்பித்தம் என்பது பித்த நீரின் மிகுதியால் உண்டாகும், மிகுபித்தம். இதுவே பல்வகை வலிகளுக்கு மூலமாகும். உடம்பில் பித்த நீர் மிகுதியாகச் சுரப்பதால், அடிவயிற்று வலி, மூட்டுவலி, மார்வலி போன்ற நோய்கள் உண்டாகின்றன என்று சா.அக. கூறும்.

பித்து = மயக்கம், மதிமயக்கம்.

வலிப்பித்து = மிகு பித்த நீரினால், உடம்பிலுண்டாகும் வலி.

பித்து = தலைச் சுற்றை யேற்படுத்தும் நீர் (bile).

மா.வி. அகரமுதலி பித்தம் என்ற சொல்லிற்கு etm. unknown என்று கூறுதல் காண்க.

வடவர் பித்த என்னுஞ் சொல்லினின்று, "பைத்ய" என்னுஞ் சொல்லைத் திரித்துள்ளனர் (வ.வ.2:37).

பித்து→பித்தம் = பித்தநீர், பித்தநாடி.

வலிப்பித்தம் என்பது யாதெனின், பித்த நீர் சுரக்கும் உறுப்பில், மிகுபித்தம் சுரந்து, அச்சுரப்பின் விளைவாலேற்படும் அடிவயிற்று வலி, மார்வலி முதலானவை எனலாம்.

வலிப்பிரமை *vali-p-piramai,* பெ.(n.) நரம்பு வலியேற்படுவது போன்ற மருட்சி; hallucinatory neuralgia.

[வலி + பிரமை]

Skt. bhrama > த. பிரமை.

வலிப்பீனிசம் *vali-p-pīṉišam,* பெ.(n.) மூக்கினில் உண்டாகுமோர் நோய்; a disease of the nose.

*[வலி + **Skt.** பீனிசம்]*

Skt. pīṉaša > த. பீனிசம்.

வலிப்பு[1] *valippu,* பெ.(n.) 1. நிலைபேறு; firmness; permanence, stability. *"வல்லே வலிப்புறீஇ" (சீவக. 1143).* 2. மெல்லொற்று வல்லொற்றாகை (இலக்.); change of a soft consonant into a hard one. *"மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்" (தொல். எழுத்து. 157).* 3. நோவு, வலி; pain, aching. *"மலட்டாவைப் பற்றிக் கறவாக் கிடப்பர்..... தங்கள் கைவலிப்பே" (சடகோபரந்.37).* 4. வருத்தம், துன்பம்; trouble, difficulty. *அதைச் செய்ய என்ன வலிப்பு?*

[வலி⁶ → வலிப்பு]

வலிப்பு[2] *valippu,* பெ.(n.) 1. இசிவு; convulsion, fit. 2. இழுக்கை (யாழ்.அக.); pulling, dragging, attracting. 3. தண்டு வலிக்கை; rowing. 4. அழகு காட்டுகை (திருநெல்.); making faces at a person.

[வலி ⁶ → வலிப்பு]

நோயின் காரணமாகத் திடீரென்று, கட்டுப்படுத்த இயலாதவாறு வெட்டிவெட்டி இழுக்கும் வலியுடன் கூடிய நரம்பிழுப்பு.

வலிப்புவகைகள் *valippu-vagaigaḷ,* பெ.(n.) இசிவுநோய் வகைகள்; some varieties of convulsions.

சாம்பசிவ மருத்துவ அகரமுதலி வரையறுக்கும் வலிப்பு வகைகள் வருமாறு:

1. குமரகண்டம், 2.காக்கைவலிசன்னி, 3. முகவலிப்பு, 4. முகசன்னி, 5. முயல் வலிப்பு, 6. மாந்த வலிப்பு, 7. காக்கை வலிப்பு, 8. அள்ளு வலிப்பு, 9. புற இசிவு, 10. வளிபரி வலிப்பு முதலியனவாகும்.

வலிப்புவாங்கு–தல் *valippu-vāṅgu-*, 5 செ.குன்றாவி. (v.t.) இசிவு நோயினை நீக்குதல்; to cure convulsion.

[வலிப்பு + வாங்கு–.]

வலிப்புறு–த்தல் *valippuṟu-*, 4 செ. குன்றாவி.(v.t.) 1. தோற்றுவித்தல், நிலை பெறுத்துதல், நிறுவுதல்; to establish, make firm, to demonstrate, prove, to instal. *"வலிப்புறீஇ" (சீவக. 1143).* 2. வற்புறுத்துதல்; to assure, make sure of, to compel. *"நங்களன்பென நாட்டி வலிப்புறீஇ" (சீவக. 1334).*

[வலிப்பு¹ + உறு–.உல் →உறு–.]

வலிப்புறுத்துதல் என்பது, ஒரு கொள்கையையோ, நிறுவனத்தையோ தோற்றுவித்து, நிலைநிறுத்துதல்.

வலிபடு¹–தல் *vali-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. வலிமையுறுதல்; to become strong, firm. 2. மாறுபடுதல்; to compete, rival; to match, to differenciate. *"செங் குவளைகளே யிவை..... நின்..... நயனங்களின் வலிபட்டன" (தக்கயாகப். 317).*

[வலி¹ + படு–.]

வலிபடு²–தல் *vali-paḍu-*,20 செ.கு.வி. (v.i.) பற்றியிழுக்கப்படுதல்; to be drawn, dragged, to be attracted, influenced. *"நீடு முதலையின் வாயில் வலிபடு நீல கிரியை" (பாரத. ஆறாம். 25).*

[வலி⁷ → படு–.]

வலிபதம் *valipadam*,பெ.(n.) பாகு முதலியன கட்டியாகும் நிலை; state of a liquid hardening into a solid mass.

[வலி² + பதம்¹]

வலிபற்றிரும்பு *vali-paṟṟirumbu,* பெ.(n.) பற்றுக்குறடு (பிங்.); smith's tongs.

[வலிபற்று + இரும்பு]

இர் →இரு →இரும்பு (மு.தா.197).

நழுவும் வழுவும் பொருளைப் பொதுவாகப் பற்றிப் பிடித்து எடுப்பதற்குப் பயன்படுத்தும் இரும்பினாலாகிய, கம்மாளர் கருவி.

வலிபொறுக்கமுடியாமை *vali-poṟukka-muḍiyāmai*,பெ.(n.) வலிபொறுக்காமை பார்க்க; see *vali-poṟukkāmai.*

[வலி + பொறுக்கமுடியாமை]

வலிபொறுக்காமை *vali-poṟukkāmai*, பெ.(n.) வலிதாங்காமை; excessive sensitiveness to pain, hyperalgesia.

[வலி + பொறுக்காமை]

வலிமருந்து *vali-marundu,*பெ.(n.) வலிமை யூட்டுகிற மருந்து; a medicine with invigorating effect, tonic.

[வலி + மருந்து]

வலிமாகுன்மம் *vali-mā-kuṉmam,*பெ.(n.) வயிற்றுப் பகுதியில் ஏற்படும் வலி; a disease of the stomach with unbearable stabbing pain.

[வலி + மா + குன்மம். குல் →குல்மு →குன்மம்]

வலிமாந்தம் *vali-māndam,* பெ.(n.) எண் வகை மாந்தத்துளொன்று (யாழ்.அக.); convulsions, one of *en-vagai-māndam.*

[வலி⁷ + மாந்தம். மந்தம்→ மாந்தம்.]

வலிமாந்தம் என்பது குழவி நோய் வகையைச் சார்ந்தது. செரியாமையின் விளைவாகக் குழந்தைகளுக்கு ஏற்படும் இசிவு நோய் என்று சா.அக. கூறும்.

வலிமுகம் *vali-mugam,* பெ.(n.) குரங்கு (பிங்.); monkey.

[வாலி→வலி + முகம்]

வலிமுன்பு *vali-munbu,* பெ.(n.) மிக்கவலி; great strength. *"வலிமுன்பின் வல்லென்ற யாக்கை" (கலித். 4, 1).*

[வல்→வலி¹ + முன்→முன்பு]

வலிமை *valimai,* பெ.(n.) 1. ஆற்றல், வன்மை (வின்.); strength, power. *அவன் வலிமையும் திறமையும் உள்ளவன் (உ.வ.). நாம் வலிமை மிக்க நாடுகளோடு, பல துறைகளில் போட்டிபோட வேண்டி யிருக்கிறது (இக்.வ.).* 2. திறமை, கெட்டிக்காரத்தனம்; skill, expertise, cleverness. *"வலிமை பாராட்டல்" (யாழ்.அக.). வலிமையுடன் போராடுபவரே, வாழ்வில் வளம் பெறுவர் (இ.வ.). படைவலிமை பெருக்குவது அமைதிக்கு ஊறு பயக்கும் (இ.வ.).* 3. திண்மை (வின்.); hardness, thickness. 4. வலவந்தம் (யாழ்.அக.); force, compulsion. 5. ஒன்றின் அமைப்பில் அல்லது நிலைப்பாட்டில் உள்ள உறுதி; firmness. *இந்தப் பற்பசை பற்களுக்கு ஒளியும் வலியும் தரும் (இ.வ.).*

[வலி¹ → வலிமை]

அகக்கரண வாற்றலாகிய உளவலி, புறக்கரண வாற்றலாகிய உடல்வலி ஆகிய இரண்டனுள், முதலில் தோன்றியது உடல்வலியே. பொதுவாக உடற்பருமனே உடல் வலிக்குக் காரணமாகும். உடல்வலியால் ஒருவன் ஒரு பொருளைக் கைப்பற்றி யாளலாம். அவ் ஆட்சியே அவனுக்கு அப்பொருள்மேல் அதிகாரத்தைக் காட்டும். அவ் அதிகாரமே உரிமையாம். ஒருவன் தன் வலிமை மிகுதியால், இன்னொருவன் பொருளிற்குக் கூட அதிகாரியாகலாம். 'வலிமைக்கு வழக்கில்லை' என்பது இன்றும் உண்மையான பழமொழியாகும்.

வலிமைசெய்-தல் *valimai-šey-,* 1 செ. குன்றாவி.(v.t.) வலவந்தப் படுத்துதல் (வின்.), கட்டாயப்படுத்துதல்; to force, compel.

[வலி→வலிமை + செய்-.]

ஒரு திட்டத்தினை அல்லது பணியினைத் தமது அளப்பரிய ஆற்றல் அல்லது அதிகாரத்தின் வாயிலாக வல்லந்தமாகச் செயற்படுத்துதலே, வலிமை செய்தலாம்.

வலிய¹ *valiya,* பெ.எ.(adj.) வலிமையுள்ள; strong. *"வலிய வாகுநின் றாடோய் தடகை" (புறநா.14 : 11), "வலிய கூறவும் வல்லையோ மற்றே" (அகநா.191 : 17), "எருத்து வலிய எறுழ்நோக் கிரலை" (கலித்.15 : 5).*

[வலி¹ → வலிய]

வலிய² *valiya,* வி.எ.(adv.) 1. வலவந்தமாக, கட்டாயமாக; forcibly, coercibly. *"அரும்பை வலிய அலர்த்திக் கட்டின கழுநீர் மாலை" (சீவக. 1466, உரை). மனத்திட்பத்தை வலிய வரவழைத்துக் கொண்டான் (உ.வ.). வலிய வரவழைத்துக் கொண்ட சிரிப்பு (இ.வ.).* 2. பெரிய; big.

[வலி² → வலிய]

வலிய[3] *valiya,* வி.எ.(adv.) பிறர்தம் வேண்டுகோளின்றித் தானாகவே (பெரியபு. தடுத்தாட்.68); voluntarily, freely, spontaneously, gratuitously, volitionally. *அவர் வலிய வந்து பேசினார் (உ.வ.).*

[வலி [2] → வலிய]

வலியகொடிவேலி *valiya-koḍi-vēli,* பெ.(n.) பெருங்கொடி வேலி; a large plumbago- *Pupalia atorpurpurea.*

வலியச்செய்–தல் *valiya-c-cey-,* 1 செ. குன்றாவி.(v.t.) 1. ஒரு செயலை வலுக்கட்டாயமாகச் செய்தல்; to do an action forcefully. 2. வலிமைசெய்–தல் பார்க்க; see *valimai-šey-.*

[வலிய + செய்–.]

வலியச்சென்றுபேசு–தல் *valiya-c-cenṟu-pēšu-,* 5 செ.கு.வி.(v.i.) ஒருவர் பேசாத சூழலிலும் தானாகச் சென்று பேசுதல்; to speak voluntarily to a person, who is not willing to talk. *இயக்குநரிடம் மேலாளர் வலியச் சென்று பேசினால்தான் இயக்ககத்தின் பணிகள் இனிது முடியும் (இ.வ.).*

[வலிய + சென்று + பேசு–.]

வலியசர்ப்பம் *valiya-sarppam,* பெ.(n.) பெரும்பாம்பு (வின்.); dragon.

[வலிய [1] + **Skt.** *சர்ப்பம்]*

Skt. sarpa > த. சர்ப்பம்.

வலியநஞ்சு *valiya-nañju,* பெ.(n.) அச்சந் தரும் கொடிய நஞ்சு; dreadful poison.

[வலிய + நஞ்சு]

நை → நைஞ்சு → நஞ்சு=உயிர்க்கொல்லி. உண்டவுடன் உயிரைக் கொல்லும் ஆற்றல் பொருந்தியது. உடலை வருத்தி, உயிரைப் போக்குந் தன்மையது.

வலியப்பனம் *valiyappaṉam,* பெ.(n.) மூலிகை வகையுளொன்று; a kind of herbal medicine.

உடலுக்கு வலிமையும், ஆற்றலும் நல்கும் மருந்து.

வலியபி *valiyabi,* பெ.(n.) கார்போகியின் விதை; seeds of psorolia corlifolia.

மறுவ. கார்போகரிசி

வலியபுடம்போடு–தல் *valiya-puḍam-pōḍu-,* 19 செ.குன்றாவி.(v.t.) நெருப்பி லிட்டுத் தூய்மையாக்குதல்; to refine or calcinate metals voluntarily.

[வலி→வலிய + புடம் + போடு–.]

வலியம் *valiyam,* பெ.(n.) வலியபி பார்க்க; see valiyabi.

வலியவன் *valiyavaṉ,* பெ.(n.) 1. வலிமை யுள்ளவன்; strong and sturdy man. 2. திறமையாளன்; capable or able man, expert, a dept. *"வலியவன் வெட்டினது வாய்க்கால்".*

[வலி [1] → வலியவன்]

வலியறிதல் *vali-y-aṟidal,* பெ.(n.) பகைவனுடைய வலிமையைத் தெரிந்து கொள்ளுகை (குறள், அதி. 48); judging or sensing the strength of one's enemy.

[வலி + அறிதல்]

வலியன் *valiyaṉ,* பெ.(n.) 1. வலிமை யுள்ளோன்; strong, powerful man, mighty man. *"வலியரல்லோர் துறை துறை யயர" (பரிபா.6, 39), "கல்லினும் வலியன் தோழி" (குறுந். 187 : 4).* 2. திறமைசாலி; skilful or capable man, expert. 3. நல்ல நிலைமையிலுள்ளவன், கட்டுடலோன்; one

who is in good health, hale and healthy man. *"வலியனென் றவர்கூற மகிழ்ந்தனன்"* *(கம்பரா. பள்ளி. 3).* 4. வலியான், 4, 5 (திவா.) பார்க்க; see *valiyāṉ.* 5. வலிபதமானது (யாழ்.அக.); that which has been hardened into a mass.

[வலி → வலியன்.]

வலியாடு-தல் *vali-y-āḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) துன்பப்படுத்துதல்; to torment, afflict, to be in missery to torture. *"மயிலே யெனைநீ வலியாடுதியோ" (கம்பரா. கார்கா. 55).*

[வலி + ஆடு-.]

ஆல் → ஆள் → ஆளு → ஆடு → ஆடு-தல் = செயற்படல், அசைதல். வலியாடுதல் = பிறரைத் துன்பப் படுத்துதல்.ஆள் = முதனிலைத் தொழிற்பெயர்.

[வலி¹ + ஆடு-.]

வலியான் *valiyāṉ,* பெ.(n.) 1. வலிமை யுள்ளோன்; sturdy, strong, powerful man. *"வலியார்முற் றன்னை நினைக்க" (குறள், 250).* 2. வலியன் 2, 3 பார்க்க; see *valiyaṉ.* 3. கலுழன் (பருந்து) (யாழ்.அக.); kite. 4. கரிக்குருவி; king-crow, raven. *"வல்லூறாந்தை வலியான் குருகே" (பன்னிருபா. 80).* 5. கரிக்குருவி வகை; red wagtail.

[வலியன் → வலியான்]

வலியில்லாக்காலம் *valiyillā-k-kālam,* பெ.(n.) உடல் வலி போன்றவற்றில் உணரும் இடைப்பட்ட நோவில்லா நேரம்; in between attacks.

[வலியில்லா + காலம்.]

வலியின்மை *valiyiṉmai,* பெ.(n.) வலி இல்லாமை; painlessness, anodynia.

[வலி + இன்மை.]

இல் → இன்மை = இல்லாமை. வலியின்மை. நோயினாலுண்டாகும் வலியில்லாமையைக் குறித்து நின்றது.

வலியுங்காசம் *valiyuṅ-kāšam,* பெ.(n.) குமரிகாசம்; நோவினை உண்டாக்கும் காசம்; cataract of the eyes.

மறுவ. கண்காசம்

[வலி → வலியுங்காசம்.]

கால் → கார் → காய் → காசம் (வெளிவருவது). வலி = நோவு, நோய்.

கண்களில் ஏற்படும் சதை வளர்ச்சி. வலியுங்காச மென்பது, கண் பார்வையைப் போக்கும் தன்மைத்து. இந் நோயினால் முதற்கண் கண்கள் கலங்கும். மிகுவலியுடன் கூடிய குத்தலின் விளைவால், கண்களில் நீர் வடியும்.

இக் காச நோயுற்றோர் தம் கண்களில் ஏற்படும் சதை வளர்ச்சியால், கருமணிப்படலம் மறைந்து பார்வை மங்கும் அல்லது முற்றிலும் ஒழியும்.

சில நேரங்களில் கண்மணி பெருத்து, நீர்க்கோத்துக் காணப்படுவதுடன், அளவிற்கு அதிகமான நோவினையும் ஏற்படுத்துமென்று சா.அக. கூறும்.

வலியுணர்ச்சி *vali-y-uṇarcci,* பெ.(n.) வலி மிகுதியான் உடலிலேற்படும் நோவுக்குறி அல்லது வலியுணர்வு; bodily sensation of pain - *Hyperalgesia.*

[வலி + உணர்ச்சி. உணர் → உணர்ச்சி = உணர்கை.]

வலியுளைவு *vali-y-uḷaivu*, பெ.(n.) வலியுணர்கை அல்லது நோவில் அழுந்துகை; painful experience.

[வலி + உளைவு. உள்→உளை→உளைவு]

வலியுற்றவிருமல் *vali-y-uṟṟa-v-irumal*, பெ.(n.) இடை விட்டு நிகழ்கிற வலியுடன் கூடிய இருமல்; spasmodic cough, cough occuring intermittently.

[வலி + உறு→உற்ற – வலியுற்ற + இருமு→இருமல்.]

வலியுறுத்து-தல் *vali-y-uṟuttu-*, 5 செ. குன்றாவி. (v.t.) 1. கருத்து, எண்ணம் முதலியவற்றை உறுதிப்படுத்துதல்; to strengthen, to emphasize or stress. *தன் கருத்தை வலியுறுத்த பல எடுத்துக் காட்டுகளைக் கூறினார் (உ.வ.). முதல் மூன்று பத்திகளும் ஒரே கருத்தைத்தான் வலியுறுத்துகின்றன (உ.வ.). "நெஞ்சை வலியுறீஇ" (கலித். 142).* 2. உறுதி கூறுதல்; to affirm, assure. 3. கோரிக்கையை வற்புறுத்துதல் (வின்.); to emphasise, insist on, force. *தொழிலாளர் கூட்டமைப்பு பத்துக் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டம் நடத்தி வருகிறது (இ.வ.).* 4. கஞ்சத்தனஞ் செய்தல்; to be close-fisted, to be miserly. *"வளன் வலியுறுக்கு முளமிலாளரொடு" (புறநா.190).*

[வலி + உறுத்து. உல்→உறு→உறுத்துதல்]

ஒருவர் தம், கருத்து, செயற்பாடு போன்றவற்றை உறுதிப்படுத்துதல் அல்லது வற்புறுத்துதல்.

வலிவடிவு *vali-vaḍivu*, பெ.(n.) வலிமை சேர்த்தல்; form of energy.

[வலி + வடிவு]

வலிவலை *vali-valai*, பெ.(n.) 1. வலை வகையுளொன்று; driftnut. 2. வலைவகை பார்க்க; see *valai-vagai.*

[வலி + வலை.]

வல்→வல→வலை = மீன் அல்லது விலங்குகளை அகப்படுத்துங் கருவி. பெரிய மீன்களை அகப்படுத்தும் வலை.

வலிவாதகுன்மம்[1] *vali-vāda-kuṉmam*, பெ.(n.) வயிற்றுப்பகுதியில் வலியை யுண்டாக்கும் கட்டி; a tumour like growth in the stomach, causing with stabbing pain.

[வலி + வாதம் + குன்மம்.]

Skt. vata > த. வாதம்.

குல்→குல்மு→குன்மு→குன்மம்.

அடிவயிற்றின் உட்பகுதியில் உண்டாகும் உள் கட்டி அல்லது வயிற்றுக் கட்டி.

வலிவாதகுன்மம்[2] *vali-vāda-kuṉmam*, பெ.(n.) பித்தம் அதிகரித்துச் செரியாமை யினால், ஏப்பத்தோடு வலியை உண்டாக்கும் நோய்; dyspepsia arising from chronic enlargement of the spleen.

[வலி + வாதம் + குன்மம்.]

Skt. vata > த. வாதம்.

குல்→(குத்தல், வலி)→குன்மம்.

எட்டு வகை குன்ம நோய்களுள் வலி வாத குன்மமும் ஒன்று.

வலிவாதம் *vali-vādam*, பெ.(n.) இசிவுடன் கூடிய ஓர் வகை ஊதை (வாத) நோய்; a kind of rheumatism accompanied by fits.

*[வலி + **Skt.** வாதம்.]*

Skt. vāta > த. வாதம்.

வலிவாயு *vali-vāyu*, பெ.(n.) இரைப்பை அழற்சி; gastritis.

[வலி + வாயு.]

Skt. vāyu > த. வாயு.

இரைப்பையில் வளியினை யுண்டாக்கும் உணவுகளை உண்பதாலுண்டாகும், அழற்சி.

வலிவின் *valiviṉ*, பெ.(n.) கடுகு; mustard seeds, brassica juncea.

வலிவு *valivu*, பெ.(n.) 1. வன்மை, ஆற்றல்; strength. *அவனுடைய கால்கள் வலிவிழந்து தளர்ந்தன (இ.வ.).* 2. உடல் உறுதி; vigour. 3. உச்சவிசை (இசை); high pitch. *"வலிவும் மெலிவும் சமனுமாக" (பொருந. 55, உரை).*

[வலி ² → வலிவு]

வலிவுகொடு[1]–த்தல் *valivu-koḍu-*, 4 செ. குன்றாவி. (v.t.) வலிமை உண்டு பண்ணுதல்; to give tone or vigour to the system.

[வலிவு + கொடு–. கொள் → கொடு.]

உள்ளத்திலும், உடலிலும் இழந்த ஆற்றலை உருவாக்குதல்.

வலிவுகொடு[2]–த்தல் *valivu-koḍu-*, 4 செ.குன்றாவி. (v.t.) நோயினால் உடல் வலிமை குன்றியபொழுது ஆற்றலூட்டும் சொற்களைக் கூறுதல்; to speak gentle and warm words to reoccupate one's illness.

[வலிவு + கொடு–.]

வலிவுதருமருந்து *valivu-taru-marundu*, பெ.(n.) ஆற்றல் அல்லது வலுவுண்டாக்கும் மருந்து; a tonic, invigorating medicine.

[வலிவு + தரு + மருந்து.]

வலிவூட்டு–தல் *vali-v-ūṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) ஒருவர் தம் கருத்து, செயற்பாடு, கொள்கை முதலானவற்றை உறுதிப்படுத்தி உரைத்தல் அல்லது வலியுறுத்திக் கூறுதல்; to reiterate strongly in one's policy, views, opinion and action etc. *என் கருத்துகள் அல்லது செயற்பாடுகளுக்கு வலிவூட்டும் வகையில் தரவுகள் கிடைத்துள்ளன (உ.வ.).*

[வலிவு + ஊட்டு–.]

ஊடு (பி.வி.)→ஊட்டு (செயப்.வி.)

ஒ.நோ. வாடு→வாட்டு

கூடு→கூட்டு.

வலினம் *valiṉam*, பெ.(n.) பொறித்தேற்றா; a tree.

வலீநகம் *valī-nagam*, பெ.(n.) தாழை (அரு. அக.); fragrant screw-pine - Aloe.

வலீபலிதம் *valī-palidam*, பெ.(n.) முகத்திற் காணும் ஓர் தோல் நோய்; a skin disease affecting the face.

வலீமுகம் *valī-mugam*, பெ.(n.) திரைந்த முகமுள்ள குரங்கு; monkey, as having a wrinkled face. *"ஒரு திறத்த வலீமுகங்கள்" (பாரத. பதின்மூ. 37).*

[வலி→ வலீ + முகம்.]

வலு[1]–த்தல் *valu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. வன்மையாதல்; to be strong or hard. 2. திரப்படுதல் (யாழ்.அக.); to be firm or sustained. 3. அதிகரித்தல்; to become heavy. *மழை வலுத்துவிட்டது (உ.வ.).*

[வலு ¹ → வலு–.]

வலு² valu, பெ.(n.) 1. வலிமை (வின்.), ஆற்றல்; strength, sturdiness. 2. திறமை; expertise, skill, ability. 3. கனம் (யாழ். அக.); weight. 4. எடைக்கு மேற்பட்டுள்ள காசு (வின்.); coin above standard weight, opp. to melu. 5. பெருங் கொசுகு வகை (வின்.); a species of big mosquito. 6. எட்டென்னும் எண்ணைக் குறிக்கும் குழூஉக்குறி (வின்.); a cant term for eight. 7. பற்று (யாழ்.அக.); prop. 8. ஒரு வகைப் பசை மருந்து (யாழ்.அக.); a medicinal paste.

க. பலு.

[வல் ¹ → வலு]

வலு³ valu, இடை.(part.) படு, மிகவும் (யாழ்ப்.); very. *"அவன் வலுவேகமாக மிதிவண்டி ஓட்டுகிறான். அவன் வலு கெட்டிக்காரன் (இலங்கைவழக்கு).*

[வல் → வலு]

வலு⁴ valu, பெ.அ.(adj.) 1. வலமான; strong. 2. அளவு கடந்த, அதிகமான, பெரிய; great, much, more, surplus. *வலுகடினம்.*

[வல் ¹ → வலு]

வலுக்கட்டாயம் valu-k-kaṭṭāyam, பெ.(n.) 1. வலவந்தம்; force, coercion. *சாப்பிடுவதற்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றார் (உ.வ.).* 2. வல்லந்தம்; compulsion.

[வலு+கட்டாயம். கட்டு→கட்டாயம் (வே.க.136)]

ஒன்றைச் செய்வதில் ஒருவருக்கு விருப்பம் இல்லாவிட்டாலும், தவிர்க்கவியலாத சூழலில், மற்றொருவரால் வற்புறுத்தப்பட்டுச் செயல்புரிவதே வலுக்கட்டாயம்.

வலுக்காரி valu-k-kāri, பெ.(n.) திறமையுள்ளவள் (வின்.); skillful woman. *"தெண்டிக்கு மன்னவனைச் சேர்ந்த வலுக்காரியை" (கூளப்ப. 356).*

[வலு ¹ + காரி ⁵]

வலுக்கிடு-தல் valu-k-kiḍu-, 20 செ.கு.வி. (v.i.) விறைத்தல் (இ.வ.); to become stiff.

[வலு→வலுக்கு+இடு-.இல்→இள்→ இடு-.]

வலுக்குவலுக்கெனல் valukku-valukkeṉal, பெ.(n.) எளிதில் அறாதபடி வலுத்திருத்தற் குறிப்பு (இவ.); onom. expr. of toughness.

[வலு → வலுக்கு + வலுக்கு + எனல்]

வலுக்கொள்ளு-தல் valu-k-koḷḷu-, 10 செ.குன்றாவி.(v.t.) வலுக்கட்டாயமாக எடுத்துக் கொள்ளுதல்; to take forcibly. *'நிலத்தை வலுக்கொண்டு' (சரவண. பணவிடு. 184).*

[வலு + கொள்ளு-. குல்→ குள்→கொள்ளு.]

வலுக்கொள்ளுதல் என்பது, தமது ஆற்றலாலும், வலிமையாலும் வலக்காரத்தாலும், முடியாது என்று யார் எவ்வளவு மறுத்துக் கூறினும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது, ஒன்றை தன்னகப்படுத்துதல்.

வலுகாரி valu-kāri, பெ.(n.) வலுக்காரி பார்க்க; see *valu-k-kāri.*

[வலு + காரி.]

கரு→கருத்தல். கருத்தல் = செய்தல். கரு→ கார் + இ → காரி. இங்கு வலுகாரி என்பது, வேலைக்காரி, பணக்காரி என்பவற்றிற் போல, வலுவுடைமைப் பொருளில் வரும், ஒரு பெண்பாற் பெயரீறு.

வலுகிழம்[1] *valu-kiḷam,* பெ.(n.) மிகக்கிழம்; very old person.

மறுவ. படுகிழம்

[வலு + கிழம்.]

வலுகிழம்[2] *valu-kiḷam,* பெ.(n.) 1. வலமிகு கிழம், ஆற்றல் வாய்ந்த கிழம்; strong, old person or animal, energetic aged being. 2. மிக்க கிழத்தனமுள்ள–வன்–வள்–து (வின்.); decrepit, old person or animal, very old infirm being.

[வலு + கிழம்.]

கீழ் → கிழம் = முதுமை, முதியோர், முதுமையடைந்தது. வலுகிழம் என்பது, ஈங்கு ஆற்றலும், வலிமையும் வாய்ந்த, முதுமைப் பருவத்தைக் குறித்தது.

வலுச்சண்டை *valu-c-caṇḍai,* பெ.(n.) குறிப்பிட்டுச் சொல்லுதற்குரிய கரணியமேது மின்றி வலியத் தொடங்குஞ் சண்டை; voluntarily picked up quarrel. *வலுச்சண்டைக்குப் போகாதே, வந்த சண்டையை விடாதே.*

[வலு + சண்டை.. சள் → சண்டு → சண்டை = பூசல், போர்.]

தமது வலிமையை அல்லது ஆற்றலைக் காட்டுமுகத்தான் உருவாகும் சண்டை; வலுவுள்ள பேரரசன், வலிமையற்ற குறுநில மன்னன் மீது தொடுக்குஞ் சண்டையும் வலுச்சண்டையெனலாம்.

வலுசர்ப்பம் *valu-sarppam,* பெ.(n.) 1. பெரும்பாம்பு; dragon. 2. கொடும்பாம்பு வடிவமான பிசாசு (கிறித்.); satan, the infernal serpent.

[வலு + சர்ப்பம்.]

த. சருப்பம் > **Skt.** sarpa.

சர் → சருப்பம் → சர்ப்பம்.

சர்ரெனல் விரைந்து செல்லுதலை யுணர்த்தும் ஒலிக்குறிப்புச் சொல் .

பாம்பு, மாந்தன் பார்வையினின்று மிக விரைந்து சென்று (சர்ரென்று) மறையும் இயல்பினைக் கொண்டது. மா.வி. அகரமுதலி, சருப்பம் என்ற தமிழ்ச் சொல்லிற்கு ஊர்ந்து செல்லும் பொருண்மையினை அடிப்படைப் பொருளாகச் சுட்டியுள்ளது.

ஊர்ந்து செல்லுதலைக் காட்டிலும் கண்ணிமைக்கும் நேரத்தில் சர்ரென்று விரைந்து சென்று மறையுந் தன்மையை அனைவரும் அறிவர்.

பாம்பினது நஞ்சு, கடித்தவரைக் குறிப்பிட்ட பொழுதில் கொல்லும் வலுவினை உடையது. வலுசர்ப்பம் என்றவிடத்து, விரைந்து மறையும் பாம்பினது தன்மையையும், நஞ்சினது வலுவினை (ஆற்றலை)யும் உணர்த்திற்று எனலாம்.

வலுசுருதி *valu-surudi,* பெ.(n.) வன்மை, வலுவந்தம்; might, compulsion, coercion.

[வலு + சுருதி]

Skt. Sruti > த. சுருதி.

வலுச்செய்–தல் *valu-c-cey-,* 1 செ. குன்றாவி.(v.t.) உறுதிப்படுத்துகை; invigorate.

[வலு + செய்–.]

வலுத்தவள் *valuttavaḷ,* பெ.(n) அழகு, செருக்கு இன்னபிறவற்றில் மீக்கூர்ந்து உடல்வலிமையுடன் திகழ்பவள்; mightly woman with imposing and inspiring, enterprising personality. *வலுத்தவள் பேச்சுக்கு மறுபேச்சில்லை (உ.வ.).*

[வலு → வலுத்தவள் = ஆற்றல், திறம் பெற்றவன்.]

அழகு, செல்வம் போன்றவற்றாலுண்டாகும் தன்முனைப்பு அல்லது செருக்கு மற்றும் உடல் வலிமையுமாம்.

வலுத்தவன் *valuttavaṉ,* பெ.(n.) செல்வாக்கு, உடல்வலிமை போன்றவற்றில் மிக்கூர்ந்தவன்; mighty man such as an eminent and physical valour etc. *வலுத்தவன் சொல்வதெல்லாம் சட்டமாகுமா? (உ.வ.). வலுத்தவன் செயலுக்குத்தான் மதிப்பு அதிகம்.*

[வல்→வலி → வலிமை = ஆற்றல், திறன். வல் →வலு→வலுத்தல் = வலிமையுடைத்தாதல்; திறனுடைத்தாதல். வலு→வலுத்தவன் = செல்வாக்கிலும், சொல் வாக்கிலும் சிறந்தவன், ஆற்றலுடையவன்.]

வலுத்தவன் என்னும் இச்சொல், குமுகாயத்தில் மூவகைப் பொருண்மையில் வழக்கூன்றியுள்ளது.

1. உடல் ஆற்றலில் வலுத்தவன்

2. பணச்செழிப்பில் கொழுத்து, வன்முறையில் வலுத்தவன்.

3. பெரும் பதவி வகிப்பதால், வலிமை பெற்றவனும், வலுத்தவனே யாவான்.

வலுத்துப்போ-தல் *valuttu-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) கெட்டியாகுதல்; to grow strong solid. *வழுவழாக இருந்த பொரிவிளங்காய் உருண்டை (இனிப்பு), வெல்லப்பாகு பதங் கூடியதால், மேலும் வலுத்துப் போனது (உ.வ.).*

[வலுத்து + போ-.]

வழுவலாகவும், நழுவலாகவும் இருந்த பொருள் வலுத்துக் கெட்டித் தன்மையுடைத்தாதல்.

வலுப்பு *valuppu,* பெ.(n.) 1. நிலைபேறு (யாழ்.அக.); firmness, permanence. 2. ஆற்றல்; strength.

[வலு → வலுப்பு]

வலுமை *valumai,* பெ.(n.) 1. வலம், ஆற்றல், திறன், வலிமை; strength, power, energy. *"வலுமைக்கு வழக்கில்லை (வின்.).* 2. வன்முறை, வலாற்காரம் (தொல்.எழுத்து. 154, இளம்பூ.); force, violence. *"மன்னவனே யிந்த வலுமைசெய்தா லார்க்குரைப்போம்" (கூளப்ப. 353).*

[வலிமை → வலுமை]

வரையிறந்த உடல்வலிமையின் காரணமாக, அனைவரையும், அடக்கி வைத்தலும், வன்முறையில் ஈடுபடுதலும், வலுமை யெனலாம்.

வலுமோசம் *valu-mōšam,* பெ.(n.) பெருங் கேடு (வின்.); great deception, big cheating.

[வலு + மோசம்]

வலுவடை-தல் *valu-v-aḍai-,* 2 செ.கு.வி. (v.i.) வலிமை கூடுதல் அல்லது ஆற்றலுடைத்தாதல்; to get strength or vigour. *புயல்சின்னம் வலுவடைந்ததால், அதிகமழை பெய்து, பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின (இ.வ.).*

[வலுவு + அடை-. அடு→அடை.]

வலுவந்தம்[1] *valu-vandam,* பெ.(n.) 1. வலாற்காரம்; compulsion, coercion. 2. வன்மை; might, power.

[வலு→ வலுவந்தம்]

வலுவந்தம்[2] *valu-vandam,* பெ.(n.) வலுக்கட்டாயம் பார்க்க; see *valu-k-kaṭṭāyam.*

[ஒருகா. வலவந்தம்→ வலுவந்தம்]

வலுவந்தரம் *valuvandaram,* பெ.(n.) வலுவந்தம் (யாழ்.அக.) பார்க்க; see *valuvandam.*

[வலுவந்தம் → வலுவந்தரம்]

வலுவந்தன் *valuvandaṉ,* பெ.(n.) உப்பு; salt.

வலுவன் *valuvaṉ,* பெ.(n.) வலுவுள்ளவன், ஆற்றல் வாய்ந்தவன்; powerful person, strong and verile person. *"வலுவர் கருணீகர் மிகு பாகஞ்செய் தன்னமிடு மடையர்" (அறப். சத. 92).*

[வலு → வலுவன்]

வலுவாய்ச்செய்-தல் *valuvāi-c-cey-,* 1 செ.குன்றாவி.(v.t.) காற்று புகாதபடி கெட்டியாய் மண்சீலை செய்தல்; to lute well so that no air can enter, to make air proof solid statue.

[வலுவாய் + செய்-.]

வலுவாயன் *valu-vāyaṉ,* பெ.(n.) 1. நா வன்மையுள்ளவன் (வின்.); one who is tongue-doughty, eloquent man, an adept in speaking. 2. நாவலர்; a good orator.

[வல் → வலு + வாய் + அன்]

வலுவிழ-த்தல் *valu-v-iḻa-,*3 செ.கு.வி. (v.i.) வலிமை குறைதல் அல்லது செயலிழத்தல்; to loose the strengthen or vigour. *காற்றழுத்தத் தாழ்வுமண்டலம் வலுவிழந்தது (இ.வ.).*

[வலிவு → வலுவு + இழ-. இழி→இழ.]

வலுவு *valuvu,* பெ.(n.) வலு பார்க்க; see *valu.*

[வலு → வலுவு.]

வலுவுயரம் *valu-v-uyaram,* பெ.(n.) மிக்க உயரம் (வின்.); great or very height, zenith, peak.

[வலு + உயரம்]

வலு = "மிகுதி"ப் பொருள் குறித்தது.

வலுவூட்டு-தல் *valu-v-ūṭṭu-,*5 செ.கு.வி. (v.i.) 1. வலிவூட்டு- பார்க்க; see *vali-v-ūṭṭu-.* 2. நோயினால் வலுவிழந்த அல்லது ஆற்றல் குன்றிய உடலுக்கு வலிவூட்டும் ஊக்க மருந்தினைக் கொடுத்தல்; to offer tonic, to energize physical condition.

[வலு + ஊட்டு.]

ஆற்றலூட்டும் மருந்துகளை உட்கொளச் செய்தல்.

உண் → ஊண் →ஊடு(தவி.)→ஊட்டு (பி.வி.) (செயப்.வி.). (ஒ.நோ.) வாடு→வாட்டு. கூடு→கூட்டு. தொடு→தோண்டு.

வலூகம் *valūgam,* பெ.(n.) தாமரைக் கிழங்கு (யாழ்.அக.); the root or tuber of the lotus-plant.

வலை *valai,* பெ.(n.) 1. உயிரிகளை யகப்படுக்குங் கருவி; net, trammel. *இரும்புவலை வைத்து அடிக்கப்பட்ட பலகணி (உ.வ.). மீன் பிடிக்கும் வலை (இ.வ.). மேலிருந்து விழுந்தாலும் அடிபடாதபடி கீழே*

வலை கட்டப்பட்டிருந்தது (இ.வ.). "புலிகொண்மார் நிறுத்த வலையுள்" (கலித். 65). 2. சூழ்ச்சி; trick, fraud. *"அகப்பட்டேன்.... வாசுதேவன் வலையுளே" (திவ். திருவாய். 5, 3, 6).* 3. வேள்வித் தலைவியர் நெற்றியிலணிந்து கொள்ளும் அணிவகை; ornament worn on the forehead by the wife of the chief sacrificer. *"அறம் புகழ்ந்த வலை சூடி..... நிலைக் கோத்த நின்றுணைத் துணைவியர்" (புறநா. 166).*

தெ., ம. வல; க. பலெ.

[வல் → வல[1] →வலை]

விலங்குகள், மீன்கள் முதலானவற்றை அகப்படுத்தற் பொருட்டுக் கயிறு, இழை போன்றவற்றால், ஒரே அளவிலான வலைக்கண்ணிட்டுப் பின்னப்பட்ட அல்லது இடைவெளியோடு செய்யப்பட்ட கருவி.

வலைக்கண்[1] *valai-k-kaṇ,* பெ.(n.) வலையில் காணப்படும் இடைவெளி; net hole.

[வலை + கண்.]

வலைக்கண்[2] *valai-k-kaṇ,* பெ.(n.) வலையின் சிறுதுளை (வின்.); mesh of a net.

[வலை + கண். குல்→குள்→கள்→கண் = துளை, சிறுதுளை.]

வலைக்கண்கட்டி *valai-k-kaṇ-katti,* பெ.(n.) சிறு கட்டி எழும்பி, மரத்தின் வேரினைப் போலப் பரவி, அரத்தமும், சீழும் வடியும் ஒரு கட்டி வகை; an abscess studded with slender vegetations of flesh and attended with intolerable burning sensation, it has many small openings.

[வலை + கண் + கட்டி.]

குள்→கள்→கட்டு→கட்டி (மு.தா.244). கள் = திரளல், பெருகுதல், உருண்டையாதல், உருண்டு கட்டியாதல்.

வலைக்கத்தி *valai-k-katti,* பெ.(n.) வலை பின்னும்போதும், பழுதுபார்க்கும் போதும், வலைநூல் அறுக்கவும், இன்னபிற தேவைக்கும் வலைஞர் பயன்படுத்தும் கத்தி; a knife used for cutting loops of yarn, thread etc., while knitting or felling of net.

[வலை + கத்தி. கள்→கட்டு→கத்து→கத்தி.]

கத்தி = வெட்டுதல், அறுத்தல்.



வலைக்கம்பி *valai-k-kambi,* பெ.(n.) வலை போன்று அமைந்த கம்பி; welded mesh.

[வலை + கம்பி.]

கொம்பு→கம்பு→கம்பி = மரக்கிளையின் சிறு வளார் போன்று மெலிந்து நீண்டது.

வலைக்கயிறு *valai-k-kayiṟu,* பெ.(n.) விலங்குகளை யகப்படுக்குங் கருவி; net, trammel. *"புலிகொண்மார் நிறுத்த வலையுள்" (கலித்-65).*

[வலை + கயிறு.கள்→கய்→கயில்→கயிறு.]

கள் = கட்டுதல், பிணைத்தல்.

வலைக்காசு *valai-k-kāšu*, பெ.(n.) செம்படவர் கொடுக்கும் கோயில் மகமைப் பணம் (இ.வ.); net-money, a contribution paid by fishermen to a temple.

[வலை + காணி. காண்→காணி.]

செம்படவர் பயன்கொண்ட நிலத்தையும், அந் நிலத்திற்குச் செலுத்தப்பட்ட வரியின் பெயரும் வலைக்காணியே ஆகும்.

வலைக்காரன் *valai-k-kāraṉ*, பெ.(n.) வலைத் தொழில் செய்பவன்; net manufacturer.

[வலை + காரன். கரு→காரன்.]

வலைக்குரியவனையும் வலையைச் செய்பவனையும் குறிக்கும். ஆண்பால் உடைமைப் பெயரீறு. வலைக்காரன் என்னுமிச்சொல்லில் பயின்று வரும் இப் பெயரீறு வேலைக்காரன், பணக்காரன், மாட்டுக்காரன், தோட்டக்காரன், வண்டிக்காரன் போன்ற சொற்களில் வருவது போன்று உடைமைப் பொருளிலும், உரியவனைக் குறிக்காவிடத்துப் பொறுப்புரிமைக் காரனைக் குறிக்கும்.

உரியவன் = சொந்தக்காரன்.

காரன், காரியீற்றுப் பெயர்கள் உலக வழக்கிலும், இலக்கிய வழக்கிலும் நூற்றுக் கணக்கில் வழக்கூன்றியுள்ளன.

த. காரன் > வ. கார.

வடமொழியாளர், இப் பெயரீற்றை வட சொல்லாக்குதற் பொருட்டுக் 'கரு' (செய்) என்னும் முதனிலையினின்று திரித்துச் செய்பவன் என்று பொருள் கூறுவர். இது பொருந்தப் பொய்த்தலின்பாற்பட்டது. செய்வானைக் குறிக்கும் வடமொழியீறுகள் கார, காரு, காரி, காரன் (செய்பவன்), காரி (செய்பவள்) எனப்படும் வடிவில் நிற்கும் (வே.க.189).

வலைக்கால் *valai-k-kāl*, பெ.(n.) கடலில் வீசிய வலையினை, வலைத்திழுக்கும் போது வெளித்தோன்றும் வலையின் அடிப்பாகம்; an adjoining net, while pulling the net spread in the sea already. *"வலைக்காலில ஏலேலோ ஒரு கடி கடிச்ச மாதிரி கிடக்கு ஏலேலோ" (நாட்டுப்புறப் பாடல்).*

[வலை + கால். குல்→கல்→கால் = வலையின் ஒரு கூறு, வலையின் அடிப்பாகம்.]

குல் = தோன்றல் கருத்து வேர்.

வலைக்காளான் *valai-k-kāḷāṉ*, பெ.(n.) வலைக்கண்ணுருவமாயுள்ள மஞ்சள் நிற காளான்; an edible yellow mushroom.

[வலை + காளான். காள்→ காளான்.]

காளான் வகை இருபத்தொன்றில், வலைக்காளானும் ஒன்று. இன்சுவை மிக்கது. சமையலுக்கு உகந்தது என்று சா.அக. கூறும்.

வலைக்குணுக்கு *valai-k-kuṇukku*, பெ.(n.) வலையை நீருள் தாழச்செய்யும் மாழை (உலோகம்)யுருண்டை (வின்.); metal weight attached to a net.

[வலை + குணுக்கு. குள்→குணுக்கு.]

வலைக்குணுக்கு என்பது, மீன் வலையை நீருள், அமிழ்த்தும் மாழையிற் செய்த ஈயக்குண்டு.

வலைக்கூண்டு *valai-k-kūṇḍu*, பெ.(n.) கடற்கரையில் வலைகளை வைக்கும் பாதுகாப்பு சிறுகுடில்; a small nest to store nets.

[வலை + கூண்டு. குள்→குண்டு→கூண்டு.]

கடற்கரையில் வலைகளைப் பாதுகாத்து வைப்பதற்குப் பயன்படும் கூண்டு போன்ற அமைப்புடைய சிறுகுடில்.

வலைகட்டபத்தல் *valai-katta-pattal,* தொ.பெ.(vbl.n.) வலையை வீசுவதற்கு அணியமாக வைத்தல்; to keep ready the net.

[வலைகட்ட + பற்றல் →பத்தல்.]

வலைகட்டல் *valai-kattal,* தொ.பெ. (vbl.n.) 1. வலை பின்னுதல்; to knit or manufacture net. 2. பழுதான வலைகளைச் சரிபடுத்துதல்; felling of net.

[வலை + கட்டல். கள்→கட்டு + அல் – கட்டல்.]

வலைகப்பி *valai-kappi,* பெ.(n.) வலையைக் கடலில் இறக்கவும், மீன்பிடி கலத்தினில் ஏற்றவும் பயன்படுத்தும் உருளை; gallows.

[வலை + கப்பி. கழி→கழிப்பு→கழிப்பி→கப்பி.]

கப்பி = மீன்பிடி வலைஞர் பயன்படுத்தும் உருளை.

வலைகாயவை–த்தல் *valai-kāya-vai-,* 4 செ.குன்றாவி.(v.t.) அழுக்கடைந்த ஈர்ங்கண் வலையை தூய்மை செய்து வெயிலிற் காய வைத்தல்; to wash dirty nets and dry up.

[வலை + காயவை–.]

வலைகாரம் *valai-kāram,* பெ.(n.) வெடிகாரம் (மூ.அ.); a kind of salt.

மறுவ. வெடியுப்பு

[வலை + காரம். கரி→கார்→காரம்.]

ஒருகா. கரி + அம் – காரம். கரி என்னும் வினையடியால் பிறந்த தொழிற்பெயரே காரம். முதனிலை திரிந்து ஈறுபெற்ற தொழிற்பெயர். வெடிகாரம் என்பது வெடிமருந்து செய்வதற்குப் பயன்படும் உப்பு என்றுங் கூறுவர். வெடிமருந்தின் வேகத்தையும் உறைப்பையும், வலைகாரம், ஒருங்கே உணர்த்திற்று எனலாம்.

வலைகாரன் *valai-kāran,* பெ.(n.) மீன் பிடிப்போன் (வின்.); fisherman.

மறுவ. வலைஞன்

[வலை + காரன்[1]. கரு→காரன்.]

உடைமையையும், உரிமையையும் ஒருங் குணர்த்தும், ஆண்பாற் பெயரீறு.

வலைகாவு–தல் *valai-kāvu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வலையைத் தோளிலிட்டுத் தூக்கிச் செல்லுகை; to carry the net with one's shoulder.

[வலை + காவு–. கா→காவு. கா = சுமத்தல், காத்தல்.]

வலைகிளப்பு–தல் *valai-kilappu-,* 5 செ. குன்றாவி.(v.t.) வலையைப் பற்றி மேலிழுத்தல்; to drag the net a top.

[வலை + கிளப்பு–. கிளம்பு→கிளப்பு = எழுப்புதல்.]

வலைகொள்(ளு)–தல் *valai-kol(lu)-,* 7 செ.குன்றாவி.(v.t.) சூழ்தல்; to surround, to encircle. *"வலைகொண்ட மானம் வேறென்" (இரகு. இரகுவ. 50).*

[வலை+கொள்–.குல்→குள்→கொள்(ளு)–.]

வட்டவடிவமாகச் சுற்றி வளைத்து, வளை வீசுதலே, வலை கொள்ளுதலாகும்.

வலைச்சாளரம் *valai-c-cālaram,* பெ.(n.) பலகணி; latticed window.

[வலை + சாளரம்.]

கம்பி வலையிட்ட பலகணி.

வலைச்சி *valaicci,* பெ.(n.) 1. செம்படவப் பெண்; fisher woman. 2. நெய்தனிலப் பெண் (யாழ்.அக.); woman of the maritime tract or coastal areas' woman who lives in sea shore.

[வலையன் (ஆ.பா.) → வலைச்சி (பெ.பா.)]

ஒ.நோ. : புலையன்→புலைச்சி.

வலைச்சியார் *valaicciyār,* பெ.(n.) கலம்பக வுறுப்பினுள் தலைவன் ஒரு வலைச்சியிடம் காமக்குறிப்புப்படக் கூறும் பகுதி (குமர. பிர. மதுரைக்கலம். 66); a section in kalambagam, which describes the hero as making love fisher woman.

[வலைச்சி → வலைச்சியார்]

வலைச்சேரி *valai-c-cēri,* பெ.(n.) வலைஞர் வாழிடம்; fishermen's Quarters.

[வலை + சேரி. சேர்→சேரி.]

வலைஞர் சேர்ந்து வாழுமிடம் வலைச்சேரி என்றழைக்கப்பட்டது.

வலைசவ்வு *valai-cavvu,* பெ.(n.) சன்னல் பின்னலான சவ்வு; cellular tissue or texture.

[வலை + சவ்வு. சவ்→சவ்வு.]

மெல்லிய வலைபின்னுதற்குப் பயன்படும் இழைமம்.

வலைசிகா *valai-sigā,* பெ.(n.) செந்தினை; red italian millet-*Setaria italica.*

வலைசுத்து-தல் *valai-šuttu-,* 5 செ. குன்றாவி.(v.t.) மீன்பிடித்து முடித்த உடன் வலையை சுற்றுகை; to roll up the net immediately after fishing operation.

[வலைசுற்றுதல்→வலைசுத்துதல் (பே.வ.).]

வலைஞன் *valaiñaṉ,* பெ.(n.) மீன் பிடிப்போன்; fisherman. *"கொடிமுடி வலைஞர்" (மதுரைக். 256).*

[வலை + அன்→வலையன்→வலைஞன்]

தொன்முது தமிழில் ஞ், ந் என்பன உடம்படு மெய்களாக இருந்திருக்கின்றன. வலைஞர், வினைஞர் முதலாய சங்ககாலச் சொற்கள் இவ்வுடம்படுமெய்யினைப் பெற்றுவருதல் காண்க.

வலைத்துணி *valai-t-tuṇi,* பெ.(n.) 1. மருந்து வடிகட்டும் கொசுவலையைப் போன்ற சீலைத் துணி; filter cloth. 2. சல்லடைத்துணி; sieve - cloth.

[வலை + துணி.]

வலைதட்டல் *valai-taṭṭal,* தொ.பெ. (vbl.n.) கடற்பரப்பில் வீசிய வலையைக் கொணர்ந்து, கையால் தட்டுதல்; to bring and landing the net spreads.

[வலை + தட்டல். தட்டு→தட்டல்.]

தட்டல் = கையாலும், கருவியாலும் தட்டல். தட்டல் கருத்து முட்டல் கருத்தினின்று முகிழ்த்தது.

(ஒ.நோ.) ஒட்டு→ஒட்டல். இங்கு வலைதட்டல் என்பது வலைகளைச் சேர்த்து கொணர்ந்து தரையில் வைத்துத் தட்டலாம்.

வலைதடு-த்தல் *valai-tadu-,* 4 செ. குன்றாவி.(v.t.) பகைமை நிமித்தம் மந்திரம் செய்து, மீன்கள் வலையில் அகப்படாம லிருக்கச் செய்தல்; to make no harvesting

of fish due to specific magic or enchantment by foes.

[வலை + தடு-. துல்→தல்→தள்→தடு-த்தல் = தடைசெய்தல்.]

மந்திரத்தின் மூலமாக, மீன்கள் வலைப்படாதவாறு, தடைசெய்தலே வலை தடுத்தலாகும்.

வலைதப்பல் *valai-tappal,* தொ.பெ. (vbl.n.) அழுக்கடைந்த நிலையில் இருந்த வலையினைத் தூய்மை செய்து உலர வைத்தல்; to dry the net after removing the dust. *வலையைத் தப்புத் தப்பென்று தப்பி உலர வைத்தல்.*

[வலை + தப்பு→தப்பல்.]

மீன்பிடித்து, அழுக்குடன், முடைநாற்றம் வீசும் வலையைத் தண்ணீரில் தப்புத்தப்பென்று தப்பி அலசுதலே, வலைதப்பல் என்க.

வலைதப்பு-தல் *valai-tappu-,* 5 செ.கு.வி. (v.i.) கடலில் இளக்கிய மீன்பிடிவலை அறுபட்டோ அல்லது காணாமலோ போயொழிதல்; to lose fishing net, at fishing - spot.

[வலை + தப்பு-.]

வலைதள்ளு-தல் *valai-taḻḻu-,* 5 செ. குன்றாவி.(v.t.) கலத்திலிருக்கும் வலையை, மீன் மற்றும் கடல்வாழ் உயிரிகளை வலைக்குமாறு கடலில் தள்ளுதல்; to throw the net in the sea, placed in the boat or catamaram.

[வலை + துள்→தள்→தள்ளு-.]

வலைநாள்செய்-தல் *valai-nāḷ-šey-,* 1 செ.கு.வி.(v.i.) புதிய வலை வாங்கியவுடன், அதனை கடலுக்குக் கொண்டு செல்லாமல், உரிய சடங்குகளைச் செய்த பின்னரே கடற்றொழிலுக்கு வலையை எடுத்துச் செல்வர். பழைய வலையை வைத்துக் கடலை, அரிசி, வெல்லம் ஆகியன படைத்து, தெய்வங்களைத் தங்களின் வலைகளுக்குக் காவலாக இருக்க வேண்டும் என்று வேண்டுவர். அதன் பின்னரே கடலுக்குக் கொண்டுச் செல்வர்; to be the day of performance of rites after purchasing new net and before going for fishing, prayig deitis to be with fishermen.

[வலை + நாள் + செய்-.]

வலைநாற்றம் *valai-nāṟṟam,* பெ.(n.) முடை நாற்றம்; foul stench, very unpleasant smell. *"துணி வலை நாற்றம் நாறுகிறது"* *(மீனவழ.).*

மறுவ. கவுச்சுவலை.

[வலை + நாற்றம். நாறு→நாற்று→ நாற்றம்.]

நாற்றம் = முடை நாற்றம் அல்லது மீன் வலைக்கும் மீன்பிடி வலையின் நாற்றம். நாறுதல் = தோன்றுதல், தோன்றி மணம் பரப்புதல்.

உலக வழக்கில் நாற்றம் என்னுஞ் சொல், முடைநாற்றத்தையே குறிக்கும். இலக்கிய வழக்கில் நல்லது, தீயது ஆகி இரண்டிற்கும் பொதுவாம் முதற்கண் நறுநாற்றத்தை மட்டும் குறித்த இச் சொல், காலப்போக்கில் வேறுபட்ட அல்லது மாறுபட்ட மணத்தையும் குறிக்கலாயிற்று.

வலைநாற்றம் என்னும் சொல், மீனவரிடையே, கவுச்சு நாற்றம் அல்லது முடைநாற்றம் என்னும் பொருண்மையில், வழக்கூன்றியுள்ளது. அடிக்கடி மீன் வலைத்தலால் உண்டாகும் முடைநாற்றமே, வலைநாற்றம் எனலாம்.

வலைப்படு-தல் *valai-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. வலையில் மீன் மற்றும் கடல்வாழ் உயிரிகள் அகப்படுதல்; to be caught in a net. 2. சூழ்ச்சிக்குட்படுதல்; to be cheated by a trick, to subject to cheat. *"பரமன் வலைப் பட்டிருந்தேனே" (திவ். நாய்ச். 13, 2).*

[வலை + படு-.]

வலைப்பரதவர் *valai-p-paradavar,* பெ.(n.) மீன் பிடி தொழில் செய்வோர்; fishermen. *"உரவுக் கடல் உழந்த பெருவலைப் பரதவர்" (நற். 63 – 1).*

[வலை + படவர்→பரவர்→ பரதவர். பரதவர் = மீன்பிடி தொழில் செய்வாருள் ஒரு வகுப்பினர்.]

வலைப்பாடு *valai-p-pāḍu,* பெ.(n.) வலையால் மீன் பிடிக்கை (யாழ்.அக.); fishing with nets.

[வலைப்படு→ வலைப்பாடு.]

வலைப்பூச்சி *valai-p-pūcci,* பெ.(n.) சிலந்தி (வின்.); spider.

[வலை + பூச்சி. புல்→பூள்→பூய்→பூய்ச்சி→ பூச்சி = சிற்றுயிரி (செந்து).]

வலைப்பூச்சி = உட்டுளையுள்ள சிலந்திப் பூச்சி. புல்→புர்→புரை = உட்டுளை, உட்டுளைப் பொருள்.



வலைப்பை *valaippai,* பெ.(n.) வலைபோற் கண்களுள்ள பை; netting, net-bag.

[வலை + பை]

வலைப்பொத்தல் *valai-p-pottal,* பெ.(n.) அறுந்த வலையை, வலைப்பகுதியை, (கடல்வாழ் மீன் மற்றும் பிற உயிரிகளை அகப்படுத்துமாறு) மூடுகை; tearing of net with holes.

[வலை + பொத்தல். பொத்தல் = மூடுகை.]

வலைபற்றல் *valai-parṟal,* பெ.(n.) வலையைப் பற்றி எடுத்தல்; to pick up net.

[வலை + பற்றல்.]

வலைபொத்து-தல் *valai-pottu-,* 5 செ. குன்றாவி. (v.t.) அறுந்த வலையினைத் தைத்தல்; to stitch or repair the damaged net.

[வலை + பொத்து-.]

வலைமண்டலி *valai-manḍali,* பெ.(n.) கருநொச்சி; a plant justica gendarussa.

வலைமால் *valai-māl,* பெ.(n.) வலைகளின் இணைப்பு; jointing together of nets.

[வலை + மால்.]

வலைமாலடி *valaimāl-aḍi,* பெ.(n.) வலையின் கீழ்ப்புற விளிம்பு; the lower edge of net.

[வலைமால் + அடி.]

வலைமாலிணை *valaimāl-iṇai,* பெ.(n.) வலைகளை ஒன்று சேர்த்தல்; mounting or fixing of nets.

[வலைமால் + இணை.]

வலைமுடி–தல் *valai-muḍi-,* 2 செ.குன்றாவி. (v.t.) வலை கட்டுகை; braiding.

[வலை + முடி–.]

வலையகட்டு–தல் *valaiya-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) சுற்றிக்கட்டுதல்; to coil up, as a rope.

[வலைய + கட்டு–.]

வலையசேரி *valaiya-cēri,* பெ.(n.) 1. நெய்தல் நிலம் (யாழ்.அக.); maritime tract. 2. செம்படவர் வாழிடம்; fishermen's quarters or colony,habitats.

[வலையர் + சேரி. சேர் → சேரி.]

வலையர் சேரி வலையசேரி என்றானது. இங்கு, மீன்பிடிதொழில் புரியும் செம்படவர் சேர்ந்து வாழிடம் என்னும் பொருள் வந்துள்ளது.

வலையடி–த்தல் *valai-y-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) பலகணி முதலானவற்றில் வலையினைப் பொறுத்துதல்; to fix net in windows, doors, etc.

[வலை + அடி–.]

வலையப்பறையன் *valaiya-p-paṟaiyaṉ,* பெ.(n.) வலைகளாற் பறவைகளைப் பிடிக்கும் பறையர் இனத்தினன்; a sect of *paṟaiyas* who live by netting birds.

[வலையன் + பறையன்]

வலையம்[1] *valaiyam,* பெ.(n.) படிக்கல்; quartz, crystal pebble.

[வளையம் → வலையம்]

வலையம்[2] *valaiyam,* பெ.(n.) வலயம் (வின்.), கை வளையம், வாகுவலயம் (வின்.); bracelet, armlet. *"நிரைநில முழவலயங்களினலைய" (பெரியபு. திருநாவுக்.6).*

[வளையம் → வலையம்]

வலையர் *valaiyar,* பெ.(n.) 1. மீன் பிடிக்கும் தொழில் செய்வோர்; fisherman or women. 2. நாட்டின் பூர்வீகக் குடிமக்கள்; ancient inhabitants of a nation or country or region.

[வலை → வலையர்.]

வலையரோகம் *valaiya-rōgam,* பெ.(n.) கண்டத்திற்கு உள்ளும், வெளியிலும் நீளமாக உயர்ந்து, அதிக நோயில்லாமலும், கழுத்தைச் சுற்றிலும் வீங்கும் ஓர் நோய்; a measles like disease causing swelling around neck and a projection in front portion.

*[வளை → வலை → வலையம் + **Skt.**ரோகம்.]*

வலையன் *valaiyaṉ,* பெ.(n.) 1. நெய்த னிலத்தான் (பிங்.); inhabitant of maritime tracts. 2. குடிமக்கள் பதினெண்மருள் மீன், புள் முதலியன பிடித்து வாழும் இனத்தாருள் ஒரு பிரிவினன்; fisherman, person of a caste which lives by netting fish, birds and beasts, one of 18 *kuḍi-makkaḷ.* 3. சாமை வகை (யாழ். அக.); a species of poor man's millet.

[வலை → வலையன்]

வலையன்சாமை *valaiyaṉ-sāmai,* பெ.(n.) சாமைவகை (வின்.); a species of poorman's millet.

[வலையன் + சாமை. சமை → சாமை.]

வலையிடையர் *valai-yiḍaiyar,* பெ.(n.) பரதவருள் ஒரு பிரிவினர்; a sect of fishing tribes.

[வலை + இடையர். இடை + அர் – இடையர்.]

கடல் வளத்தையையே, வாழ்க்கைத் தொழிலாக மேற்கொண்ட பரதவருள் ஒரு பிரிவினர்.

வலையிழுப்புப்பாடல் *valai-yiḻuppu-p-pāḍal,* பெ.(n.) மீன் பிடிப்போர் வலை இழுக்கும் போது பாடும் பாடல்கள்; a song sung by fishermen while pulling net.

[வலையிழுப்பு + பாடல்.]

வலையிழுப்புப் பாடல்கள் மீனவர்தம் வாழ்வியல் துன்பத்தை விளக்குவனவாகும். மீனவர்கள் மீன்வலைக்குங்கால், படும் இன்னலையும், அம் மீனை விற்குங்கால், பெறும் இழப்புகளையும், எடுத்தியம்புவன. அவர்தம் அகவாழ்வினைக் காமச்சுவை மிளிரும் பாங்கினில் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன எனலாம்.

வலையிளக்கு-தல் *valai-y-iḷakku-,* 5 செ. குன்றாவி.(v.t.) வலையைப் பிரித்துக் கடலுள் நழுவவிட்டு இறக்குதல்; to put into the sea after unfolding the net.

[வலை + இளக்கு. இளகு→இளக்கு.]

வலையைப் பிரித்து, நெகிழும் வண்ணம் அசைத்தல் வலையிளக்குதலெனப்படும்.

வலையிள-த்தல் *valai-y-iḷa-,* 4 செ.கு.வி. (v.i.) கட்டுமரம் கலத்திலிருந்து வலையைக் கடலிற் விரித்து நழுவவிட்டு இறக்குதல்; to spread net from catamaram and go for fishing.

[வலை + இள-. இல்→இள்→இள-.]

வலையூசி *valai-yūši,* பெ.(n.) வலை பின்னுவதற்குப் பயன்படும் ஊசி; a needle used of knitting nets.

[வலை + ஊசி. உள்→உசி→ஊசி.]

வலைபின்னுவதற்குப் பயன்படும் மெல்லிய ஊசி.



வலையேறு-தல் *valai-yēṟu-,* 5 செ.கு.வி. (v.i.) பெருவலையைப் படகில் அல்லது கலத்தில் ஏற்றுகை; to load fishing boat or catamaram with big laughty net.

[வலை + ஏறு-. ஏ→ஏல்→ஏறு-.]

வலைவகை *valai-vagai,* பெ.(n.) வலைகளின் பகுப்பு; classifications of nets.

[வலை + வகை]

வலை வகைகள் : 1) களவலை, 2) கரைவலை, 3) கைவலை, 4) வடுவலை, 5) வீச்சுவலை, 6) பாச்சுவலை, 7) தெவ்வலை, 8) வரிவலை, 9) கொண்டைவலை, 10) மணி வலை, 11) சிக்குவலை, 12) வீச்சுவலை, 13) மடிவலை, 14) கரைவலை, 15) இழுவலை, 16) பொடிவலை, 17) பருவலை, 18) தூரிவலை, 19) சாளவலை எனப் பரதவர் பல்வேறாகப் பகுக்கின்றனர்.

வலைவடம் *valai-vaḍam,* பெ.(n.) மாசு, தூது (நாமதீப. 448); dirt.

[வலை + வடம்]

வலைவரி *valai-vari,* பெ.(n.) மீன் பிடிப்போர் செலுத்தும் வரி; a tax on fishing.

[வலை + வரி [5]]

வலைவளம் *valai-vaḷam*, பெ.(n.) அரியவும் விலைமதிப்பு மிக்கவுமாய வஞ்சிரம், இறால் மற்றும் இன்னபிற கடல்வாழ் உயிரிகள் வலைப்படுகை; costly and rare fishes, sea species caught with one net. *"வேட்டம் பொய்யாது வலை வளம் சிறப்ப" (நற். 38, 1).*

[வலை + வளம்]

வலைவளை¹-த்தல் *valai-vaḷai-*, 4 .செ. குன்றாவி.(v.t.) கிழிந்த வலைகளைச் சரிசெய்து, மீண்டும் கடலுக்கு கொண்டு செல்கை; to take to the sea after mending the torn nets.

[வலை + வளை-]

வலைவளை²-த்தல் *valai-vaḷai-*, 4 செ. குன்றாவி.(v.t.) வலையை உப்பங்கழியில் அரைவட்டம் போலிட்டு, மீன்கள் தப்பி ஓடிவிடாதவாறு வளைக்கும் தன்மை; an exercise to arrest fishes from escaping by putting the net in encircled fashion.

[வலை + வளை-]

வலைவளைப்பு *valai-vaḷaippu*, பெ.(n.) 1. வலையை வீசுகை, போதிய அளவு மீன்பிடிபட வேண்டுமென்பதற்காக ஒருபாடு வளைப்பு, இருபாடு வளைப்பு, மூன்றுபாடு வளைப்பு என்று வளைப்பதுண்டு; encircling in thee categories of one, two or three to get sufficient fish catch. 2. வலை வளை-த்தல் பார்க்க; see *valai-vaḷai-*.

[வலை + வளைப்பு]

வலைவன் *valaivan*, பெ.(n.) வலையன், 1, 2 பார்க்க; see *valaiyan* 1, 2. *"வலைவர்க் கமர்ந்த மடமான் போல" (கலித். 23).*

[வலையன் → வலைவன்]

வலைவாங்கு-தல் *valai-vāṅgu-*, 5 செ. குன்றாவி.(v.t.) கடலில் வீசிய வலையை மீண்டும் கலத்திற்குள் இழுத்தல்; to withdraw net spread in the sea into boat or catamaraw.

[வலை + வாங்கு-.]

வலைவாணன் *valai-vāṇaṉ*, பெ.(n.) வலையன் 1, 2 பார்க்க; see *valaiyaṉ*. *"காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்" (திருவாச. 48, 3).*

[வலை + வாணன்]

வலைவாழ்நன் *valai-vāḻ-naṉ*, பெ.(n.) வலையன் 1, 2 பார்க்க; see *valaiyaṉ 1, 2*. *"வலைவாழ்நர் சேரி" (சிலப். 7, கட்டுரை, 10).*

[வலை + வாழ்நன்]

வலைவிரி-த்தல் *valai-viri-*, 4 செ.கு.வி. (v.i.) அகப்படும்படி தகுந்த ஏற்பாடு செய்தல்; to lay a snare; to trap somebody. *திருடர்களைப் பிடிக்க வலை விரிக்கப் பட்டிருக்கிறது (உ.வ.).*

[வலை + விரி-.]

நேர்மையான வழியில் ஒன்றை அகப்படுத்தற் பொருட்டு, முறையாக அல்லது முன்னேற்பாடாக எடுத்துக் கொள்ளும் முயற்சியே வலை விரித்தலாகும்.

வலைவீசு-தல் *valai-vīśu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. மீன் முதலியன வலைக்க கடற்பரப்பில் வலையை யெறிதல்; வலிமை சேர்த்தல்; form of energy to spread the net, as in fishing activitis. *"வலைவீசின படலம்" (திருவிளை.).* 2. வயப்படுத்த முயலுதல்; to try to ensnare or influence a person. *'நடிகை மறுமணம் செய்ய முத்தழகனுக்கு காம வலைவீசினாள்' (உ.வ.).*

[வலை + வீசு-.]

வலைவீசுதல்-அகப்படுத்துதல் :- வலை வீசுதல் என்பது மீன் பிடிப்பதற்காகச் செய்யப்படுவது. வலைவீசல், வலைபோடல், தூண்டில் போடல் என்பனவும், மீனை அகப்படுத்துவதற்கு அல்லது சிக்கவைப்பதற்குச் செய்யும் செயலேயாகும். அதே போல் ஒருவர் தாம் விரும்பிய ஒருவரை அகப்படுத்துதற்குச் செய்யும் முயற்சி, சூழ்ச்சி, பேச்சு கண்ணோக்கு என்பவை, வலைவிரித்தலாக வழக்கில் சொல்லப்படும்.

வலை விரித்தல் என்பதும் அகப்படுத்த எடுத்துக் கொள்ளும் முயற்சியையே குறிக்கும். நேரிய வழியால் அகப்படுத்துதலை வலைவீசுதல் என்னும் வழக்கம் இல்லை (வழக்குச்சொல் அகரமுதலி).

வலைவை-த்தல் *valai-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) கடலில் வலையை போடுகை; to spread or throw net in sea.

[வலை + வை-]

வவ்வடி *vavvaḍi*, பெ.(n.) வழுக்குந்தன்மை மிகுதியாகவுள்ள சேற்று மண் நிறைந்த பகுதி; slippery region.

வவ்வரிகொட்டு-தல் *vavvari-koṭṭu-*, 5 செ.கு.வி(v.i.) வவ்வலிடு-தல் (வின்.) பார்க்க; see *vavval-iḍu-*.

[வவ்வல் → வவ்வரி + கொட்டு-. கொள் → கொட்டு→கொட்டுதல்.]

கொட்டுதல் = அறைந்து கொள்ளுதல். குளிரினால் பற்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளுதலே வவ்வரி கொட்டுதலாகும்.

வவ்வல்கொட்டு-தல் *vavval-koṭṭu-*, 5 செ.கு.வி.(v.i.) வவ்வலிடு-தல் (இ.வ) பார்க்க; see *vavval-iḍu-*.

[வவ்வல் + கொட்டு-. கொள்→ கொட்டு→ கொட்டுதல்.]

வவ்வலிடு-தல் *vavval-iḍu-*, 20 செ.கு.வி. (v.i.) குளிர்மிகுதியாற் பற்கள் ஒலியுண்டாக விரைந்து மோதிக் கொள்ளுதல்; to chatter with cold, as teeth. *"அறவவ்வலிடுதல் வேர்த்தல் செய்யா திருக்கை" (திவ். பெரியதி. அவ. பக். 12).*

[வவ்வல் + இடு-. இல்→இள்→இடுதல் = குத்துதல், பொருத்துதல்.]

பல் வரிசைகளிரண்டும் அளவிற்கதிகமான குளிரினால் ஒன்றோடொன்று பொருந்தியடித்துக் கொள்ளுதல்.

வவ்வலொட்டி *vavva-loṭṭi*, பெ.(n.) வவ்வாலோட்டி எனும் நீண்ட செடி (யாழ்.அக.); cockspur.

[வவ்வாலோட்டி →வவ்வலொட்டி.]

உடம்பெங்கும் ஒட்டுந்தன்மையுள்ள முட்செடி வகை.



வவ்வலோட்டி *vavvalōṭṭi,* பெ.(n.) ஓர் முட்செடி; a thorny shrub.

வவ்வாதிலொட்டி *vavvādi-loṭṭi,* பெ.(n.) வவ்வலோட்டி பார்க்க; see *vavva-lōṭṭi.*

வவ்வால் *vavvāl,* பெ.(n.) 1. ஒருவகைப் பறவை; bat. *"மரம்பழுத்தால் வவ்வாலை வாவென்று கூவி" (நல்வழி. 29).* 2. கடல் மீன்வகை (யாழ்.அக.); pomfret, sea-fish.

க. பாவல்; ம. வாவல்; து. பாவலி.

[வாவல் → வவ்வால்]

வவ்வால்நத்தி *vavvāl-natti,* பெ.(n.) மண்டபக் கட்டடத்தின் முகட்டுவகை (இ.வ.); quadrangular turret of a maṇḍapam.

[வவ்வால் + நத்து→நத்தி.]

வவ்வால்மீன் *vavvāl-mīṉ,* பெ.(n.) வவ்வால், 2 (யாழ்.அக.) பார்க்க; see *vavvāl,* 2.

[வவ்வால் + மீன் ²]

வவ்வால்விளக்கு *vavvāl-viḷakku,* பெ.(n.) விளக்குக் கொத்து வகைகளு ளொன்று (யாழ்.அக.); a cluster of lamps, candelabrum.

[வவ்வால் + விளக்கு]

வவ்வாலெலும்பு *vavvāl-elumbu,* பெ.(n.) மண்டையோட்டிற்கு, அடிப்புறத்துள்ளதோர் எலும்பு (இங்.வை.6); sphenoid bone, irregularly-shaped bone in front of the occipital in the base of the skull of the higher vertebrates.

[வவ்வால் + எலும்பு= மண்டையோட்டின் அடிப்பகுதியிலமைந்த வெண்மையான எலும்பு. எல் →எலு→எலுமு→எலும்பு. எல் = வெண்மை.]

வவ்வாலொட்டி *vavvā-loṭṭi,* பெ.(n.) வவ்வாலோட்டி பார்க்க; see *vavvāl-ōṭṭi.*

வவ்வாலோட்டி *vavvāl-ōṭṭi,* பெ.(n.) நீண்ட செடிவகையு ளொன்று (மலை.); cockspur, a kind of long shrub.

[வவ்வால் + ஓட்டி.]

வவ்வாற்குறடு *vavvāṟ-kuṟaḍu,* பெ.(n.) மரக்கட்டையிலான காலணிக் குறடு வகையு ளொன்று (யாழ்.அக.); a kind of knob on wooden sandals.

[வவ்வால் + குறடு ¹]

வவ்வாற்பந்தம் *vavvāṟ-pandam,* பெ.(n.) 1. தீவட்டி வகையுளொன்று (யாழ்ப்.); rod supporting a row of pendent torches, carried in a procession. 2. வவ்வால் விளக்கு (யாழ்.அக.); a cluster of lamps, candelabrum.

[வவ்வால் + பந்தம்]

வவ்வானாற்றி *vavvāṉ-āṟṟi,* பெ.(n.) அடிப்படையற்றது, பிடிபாடில்லாதது (யாழ். அக.); that which is without basis or support.

வவ்வி¹ *vavvi,* பெ.(n.) சமயக்குறியிடாத வெறுமை (சூனிய) நெற்றியுடையவ–ன்–ள் (வின்.); one wearing no sectarian marks on the forehead.

[வெளவி→வெவ்வி→வவ்வி]

வவ்வி² *vavvi,* பெ.(n.) கவர்கை; snatch, take hold of. *"கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி" (அகநா. 346 : 23).*

[வவ்வு→வவ்வி.]

வவ்வியம் *vavviyam,* பெ.(n.) மணிமுத்து வேங்கை; a species of East Indian kino, a tree.

வவ்வு[1]-தல் *vavvu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கவர்தல்; to snatch, take hold of, to take poseession of. *"அரசர் செறின் வவ்வார்" (நாலடி, 134),* 2. பற்றிக் கொள்ளுதல்; to carry off. *"வவ்வித் துழாயதன்மேற் சென்ற" (திவ்.பெரியதி.9, 4, 4).* 3. வாருதல் (யாழ். அக.); to sweep away.

[அவ்→அவ்வு→கவ்வு→வவ்வு-.]

வவ்வு[2] *vavvu,* பெ.(n.) 1. கவர்கை; snatching, taking hold of. *"வவ்வு வல்லார்" (பரிபா.6, 80).* 2. சுவருக்கும் கூரைக்கும் இடையிலுள்ள வெளி; the space between the wall and the sloping roof on it.

[கவ்வு→வவ்வு-.]

வவக்காணி *vava-k-kāṉi,* பெ.(n.) 1. யானை மலம்; extreta of elephant. 2. செம்படவர் கொடுக்குங் கோயில் மகமைப் பணம் (இ.வ.); net-money, a contribution paid by fishermen to a temple.

வவா *vavā,* பெ.(n.) தசைநீர்; lymph.

ஒருகா. உனீர்.

வவி *vavi,* பெ.(n.) வவ்வி (வின்.) பார்க்க; see *vavvi.*

வவுலம் *vavulam,* பெ.(n.) கருவேல் மரம்; Indian gum tree - arabica tree - *Acacia arabica.*

வழக்கச்சொல் *vaḻakka-c-col,* பெ.(n.) உலக வாழ்க்கைப் பயன்பாட்டில், வழங்குஞ் சொல் (யாழ்.அக.); word in popular or colloquial use.

மறுவ. வாழ்வியற்சொல்

[வழங்கு→வழக்கம் + சொல்]

பேச்சு வழக்கில், பொதுவாகப் பயன்படுத்துஞ் சொல்.

வழக்கடிப்பாடு *vaḻakkaḍippāḍu,* பெ.(n.) தொன்றுதொட்டு வரும் பயிற்சி; ancient usage. *"தொழிற்படக் கிளத்தலும் வழக்கடிப்பாட்டிற் குரித்து" (நன். 399, மயிலை).*

[வழங்கு→வழக்கு + அடிப்படு →அடிப்பாடு]

வழக்கநிலை *vaḻakka-nilai,* பெ.(n.) உறுதித் தன்மை; confirmation.

[வழக்கம் + நிலை]

வழக்கப்பசி *vaḻakka-p-paši,* பெ.(n.) பசியார்வம் சற்றே குறைவாயிருந்தாலும் நேரப்படி உண்ணுகை; to eat in time regularly even when there is no appetite.

[வழக்கம் + பசி.]

வழக்கப்படி *vaḻakka-p-paḍi,* பெ.(n.) முறைப்படி; as usual, according to custom.

[வழக்கம் + படி.]

வழக்கபழக்கம் *vaḻakka-paḻakkam,* வி. (v.) வாழ்வின் செயல்பாடு; habits of life. *'அது அவர்களின் வழக்கபழக்கம்'.*

[வழக்கம் + பழக்கம்]

வழக்கம்[1] *vaḻakkam,* பெ.(n.) 1. பழக்கம், நடைமுறை; usage, practise, habit. *அவர் காலை எழுந்தவுடன் கடவுளை வணங்குவது வழக்கம் (உ.வ.).* 2. மரபு; custom. *"முந்நீர் வழக்கம் மகடூவோ டில்லை"*

(தொல்.பொருள்.34). 3. பொதுவானது (வின்.); that which is ordinary or common. 4. ஈகை; giving, gift, chanty. *திருக்கை வழக்கம்.* 5. பயன்படுத்துகை; use, employment, as of a weapon or missile. 6. நாள்தொறும் செய்வது; routine work.

க. பழகெ (6).

[வழங்கு → வழக்கம் (வே.க.3–152).]

வழக்கம்² *va*l*akkam,* பெ.(n.) 1. கை, கால் முதலியவற்றின் இயக்கம் (யாழ்ப்.); functioning. *அவருக்குக் கால் ஒன்று வழக்கம் இல்லை (இலங்.).* 2. புழக்கம்; use. *எனக்கு இடதுகைதான் வழக்கம்.*

[புழங்கு → ..ழங்கு → வழக்கம்.]

வழக்கமாய் *va*l*akkamāy,* கு.வி.எ.(adv.) 1. முன் வழக்கப்படி; usually, habitually, conventionally. 2. பெரும்பாலும்; generally, mostly.

[வழக்கம் + ஆய்]

வழக்கமான *va*l*akkamāṉa,* கு.வி.எ.(adv.) குறிப்பிட்ட முறையில், பலமுறை தொடர்ந்து செய்வதால் பழக்கமாகிப் போவது; that which is usual, customary. *வழக்கமான பாதையிலேயே இன்றும் போவோம் (இ.வ.).*

[வழக்கம் + ஆன.]

வழக்கமுறைமை *va*l*akka-muraimai,* பெ.(n.) மருந்தைப் பயன்கொள்ளும் முறை; prescription.

[வழக்கம் + முறைமை.]

வழக்கர் *va*l*akkar,* பெ.(n.) 1. நீள் வழி (அரு.நி.); long passage. 2. வழக்கம்; habit, convention.

[வழங்கு → வழக்கு → வழக்கர் (வே.க.3–152).]

வழக்கழிவு *va*l*akka*l*ivu,* பெ.(n.) முறை (நீதி) தவறுகை; injustice. *"வழக்கை வழக்கழிவு சொல்லின்" (தமிழ்நா. 35).*

மறுவ. அழிவழக்கு, இழிவழக்கு, நேர்மைக் கேடு.

[வழக்கு + அழிவு]

வழங்கு (த.வி.)→ வழக்கு (தொ.பெ.) + அழிவு.

அழி → அழிவு (தொ.பெ.தொ.ஆகு.) = 'வு' வழக்கழிவு என்பது வழக்காறு.

வழக்கு பற்றியசச் சரவு என்னும் பொருண்மைத்து.

வழக்கறி–தல் *va*l*akkari-,* 2 செ.கு.வி. (v.i.) 1. பழக்க வழக்கங்களை யறிதல்; to have a knowledge of manners and customs. 2. சட்டமறிதல்; to be versed with law or statute.

[வழக்கு + அறி–. அள் → அறு → அறிதல்.]

அள்ளுதல் = பொருந்தியறிதல், பொருந்துதல்.

(ஒ.நோ.) பள் → பள்ளம் → பறு → பறி.

வழக்கறிதல் என்பது, சட்ட நுணுக்கங்களை, வழக்கறிஞர் தமது மதியினாற் பொருத்தியறிதல்.

வழக்கறிஞர் *va*l*akkariñar,* பெ.(n.) முறை தவறாது வழக்குரைப்போன்; lawyer, barrister, advocate.

[வழக்கு + அறிஞர்.]

அறு→அறிஞர் = கூர்த்த மதிநுட்பமுடையோர். 'அர்' பலர்பாலீறு.

ஒருகா.அறி→அறிகின்றான்→அறிகுந்நான்.

அறிகுந்நான்→அறியுந்நான்→அறியுநன்

அறியுநன்→அறிநன்→அறிஞன்

அறிஞன்→அறிஞர்.

அனைத்துச் சட்ட நுணுக்கங்களையும், அறிந்து தாம் மேற்கொண்ட வழக்கிற் பொருத்தி, வழக்காடுபவரே வழக்கறிஞர் என்க.

முறைமன்றத்தில், ஒருவர் சார்பாக அல்லது ஒரு அமைப்பின் சார்பாக வழக்காடும் தகுதியும், அதற்கான அனுமதியும் பெற்றவர்.

வழக்கறு[1]-தல் *valakkaru-,*2 செ.கு.வி. (v.i.) வழக்கத்தினின்று கிளவியம் மறைந்து போதல்; to become obsolute, as a word, to fall into desuetude.

[வழக்கு + அறு-. அர்→ அறு- (த.வி.)]

ஒருசொல், உலகவழக்கினின்று, அழிந் தொழிதல்.

வழக்கறு[2]-த்தல் *valakkaru-,* 4 செ. குன்றாவி.(v.t.), செ.கு.வி.(v.i.) 1. போக்கைத் தடுத்தல்; to felter or hinder one's movement. *"வழி வழக்கறுக்கும்" (குறுந். 324).* 2. வழக்கைத் தீர்த்து விடுதல் (வின்.); to decide, as a case, to settle, as a dispute. *உன்னோடு வழக்காடிக் கொண்டிருந்தால், என்வேலை கெட்டுவிடும் (உ.வ.).*

[வழக்கு + அறு-. அறு-தல் (த.வி.)→ அறு-த்தல் (பி.வி.)]

வழக்கன் *valakkan,* பெ.(n.) 1. வழக்குத் தொடுத்தவன் (வின்.) (யாழ்.அக.); plaintiff. 2. செலவிடுதற்குரியது; that which is intended for free distribution. *"வழக்கனாயிருக்கிற சந்தனத்தைக் கொடுத்தான்" (ஈடு. 4, 3, 1).*

மறுவ. வழக்காளி.

[வழக்கு → வழக்கன் (வே.க.3-152)]

இலவயமாகப் பகிர்ந்தளிக்கும் பொருள்.

வழக்காட்டு *vala-k-kāttu,* பெ.(n.) 1. வன்மையாக வழக்காடுகை, சொற்போர் புரிகை; disputation, arguement, averment. 2. ஊடல்; sulks, flown. *"வழக்காடிய வழக்காட்டுப் போக" (பு.வெ.9, 51, உரை).*

மறுவ. சொல்லாட்டு.

[வழக்காடு (த.வி.)→ வழக்காட்டு (பி.வி.) = போராட்டு (வே.க.3-153).]

வழக்காடி[1] *vala-k-kādi,* பெ.(n.) விளக்குக் கூடு; light house.

மறுவ. வழிகாட்டு விளக்கு.

[விளங்கு→ வழங்கு →வழக்கு + ஆடி. ஆடு+இ - ஆடி.]



வழக்காடி[2] *valakkādi,* பெ.(n.) வழக்காளி (வின்.); plaintiff.

[வழக்கு → வழக்காடி. 'இ' சொல்லாக்க ஈறு.]

(ஒ.நோ.) மன்று→மன்றாடி.

வழக்காடு-தல் *valakkādu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. சொற்போராடுதல்; to dispute, wrangle. 2. நயன்மை (நீதி)க்காகப் போராடுதல்; to litigate. *உச்ச (நீதி) முறை மன்றத்திலும் வழக்காடிப் புகழ்பெற்றவர் (இ.வ).* 3. ஊடுதல்; to sulk. *"தோளினை யுடையாள் வழக்காட்டிடத்துக் குழைந்தது" (பு.வெ. 12, பெண்பாற். 15, கொளு, உரை).*

[வழக்கு + ஆடு-. ஆல் → ஆள் → ஆளு- → ஆடு-தல் = வினையாற்றுதல், செயற்படுதல்.]

வழக்கிற் போடுதல் (வே.க.3–153).

வழக்காடுமன்றம் *valakkādu-manram,* பெ.(n.) கொடுக்கப்பட்ட தலைப்புப்பொருளை ஆதரித்து, ஒருவரை எதிர்த்து மற்றொருவர், அற(நீதி) மன்றத்தில் வழக்காடுவது போன்று நடத்தும் நிகழ்ச்சி; a debating forum with scholars, as of argument in court. *சிறப்பு விழா நாட்களில், வழக்காடு மன்றம் என்ற நிகழ்ச்சி. தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகிறது (இ.வ.).*

[வழக்காடு + மன்றம்]

தகுதி சான்ற ஒருவரை நடுவராகக் கொண்டு, குறிப்பிட்டதொரு பொருள் குறித்து, ஒன்றை எடுத்து மொழிந்தும், எதிர்மறுத்தும் (ஒட்டியும் வெட்டியும்) இருவர் அல்லது இருவேறணியர் சொற்போரிடுதல்.

வழக்காரம் *valakkāram,* பெ.(n.) மறுப்புரை, சொற்போர்; dispute. *"மணவாளப் பிள்ளையுடன் வழக்காரம் நன்றாச்சே" (வள்ளி கதை.). அறமன்றத்தில் வழக்கின் வெற்றிக்கு, வழக்காரம் இன்றியமையாதது (உ.வ.).*

[வழக்கு + ஆரம் – வழக்காரம்.]

(ஒ.நோ.) ஒட்டாரம். 'ஆரம்' = ஓர் ஈறு.

வழக்காரை *vala-k-kārai,* பெ.(n.) கக்கலைத் தடுக்கும் கொட்டைப் பருப்பு; grey emetic nut - *Randia Uligirosa.*

வழக்காளி *valakkāli,* பெ.(n.) 1. வழக்குத் தொடுத்தவன்; plaintiff. 2. சொற்போர் புரிவோன் (யாழ்.அக.); disputant, wrangler, counsel. 3. சட்ட நுணுக்கத்தையும், வழக்கின் தன்மையும் அறிந்தவன் (இ.வ.); one who is well-versed in laws and case details (customs).

[வழக்கு + ஆளி]

ஒ.நோ. கூட்டாளி = பாட்டாளி, முதலாளி = தொழிலாளி, போராளி.

'ஆளி' = உடைமை குறித்த ஈறு

வழக்காறு[1] *vala-k-kāru,* பெ.(n.) மக்களின் வாழ்க்கையில் காலம் காலமாக எல்லோராலும் பகிர்ந்து கொள்ளப்பட்டு, நடைமுறையில் வழங்கி வருபவை; custom and usage, lore (of the folk) from time to time. *சொற்களின் வழக்காறுகள் மாந்தர்தம் பண்பாட்டுச் சின்னங்களாகும் (உ.வ.).*

மறுவ. உலக வழக்கு, வழக்கியல்.

வழக்காறு பற்றி இளம்பூரணர், கல்லாடனார் போன்ற உரையாசிரியர் வரைந்துள்ளது வருமாறு:

இளம்பூரணார்:- வழக்காறு இரு வகைப்படும். இலக்கண வழக்கும், இலக்கணத்தோடு பொருந்தின மரூஉ வழக்கும் என.

(எ.டு.) "இல் முன் என்பதனை முன்றில் என்று தலைதடுமாறச் சொல்லுதல், இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ வழக்கு."

கல்லாடனார் :- இனிச் சோழணாடு என்பதனைச் சோணாடு என்பது மரூஉ வழக்கு (இளம்.தொல்.சொல்.17). இலக்கணத்தொடு பொருந்தின மரூஉ வழக்கும், மரூஉ வழக்குமென இருவகைப்படும் (கல்.தொல்.சொல்.17).

"வழக்காறென்பது வழங்கற்பாடே மேற்கொண்டு, ஒரு காரணமும் நோக்காது, வாய்பாடு பகுத்துப் பயிலச்சொல்லி வருவது". "வழக்காறு வழங்குதல் பற்றி வருவது" (கல்.தொல்.சொல்.7).

வழக்காறு² *vaḻakkāṟu,* பெ.(n.) 1. வழக்கு; usage. 2. பழக்கவொழுக்கம்; customs, manners, ancient practice. *“வாய்மையுடையார் வழக்கு” (திரிகடு. 37).*

மறுவ. நடைமொழி.

[வழக்கு + ஆறு ¹]

வழக்கிடு-தல் *vaḻakkiḍu-,*20 செ.கு.வி. (v.i.) 1. சொற்போர் புரிதல், சொல்லாடுதல்; to dispute, to argue. 2. வன்மையாய் வழக்குரைத்தல், பூசலிடுதல்; to wrangle, argue vehemently.

[வழக்கு + இடு-.]

வழக்கியல் *vaḻakkiyal,* பெ.(n.) 1. வழக்காறு; usage. *“எனமுத் தகுதியோ டாறாம் வழக்கியல்” (நன்.267).* 2. உலக வழக்கிலுள்ள கொச்சை நடை (வின்.); conventional colloquial style.

[வழக்கு + இயல் ²]

வழக்கு¹-தல் *vaḻakku-,*5 செ.குன்றாவி. (v.t.) போக்குதல்; to cause to go. *"வழக்குமாறு கொண்டு" (கலித்.101).*

[வழங்கு (த.வி.)→வழக்கு-, (பி.வி.)]

வழக்கு² *vaḻakku,*பெ.(n.) 1. மாநகர் முறை மன்றம் ஊரக ஐவராயம் (ஊர்ப்பஞ்சாயத்து) போன்றவற்றில் தீர்வுக்காக முன் வைக்கப்படுவது; suit, case. *கொலை வழக்கு (உ.வ.). உங்கள் வழக்கு நாளை உசாவலுக்கு வருகிறது (விசாரணைக்கு வருகை) (இ.வ.). பொய்வழக்குப் போடுவது தற்காலத்தில் வாடிக்கையாகிவிட்டது (உ.வ.).* 2. இயங்குகை; moving, passing to and from. *“வழக்கொழியா வாயில்” (பு.வெ.10, முல்லைப். 4).* 3. உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்ற இருவகை வழக்குகள்; usage, of two kinds, viz., ulaga-vaḻakku, ceyyuḷ-vaḻakku. *“வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே” (தொல்.பொருள்.647).* 4. இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என்ற இருவகை வழக்குகள் (நன். 266, மயிலை.); usage in respect of words in lit. and in speech, of two classes, viz., iyalbu-vaḻakku, tagudi-vaḻakku. *“இலக்கண முடைய திலக்கணப் போலி மரூஉ வென்றாகும் மூவகை யியல்பும் இடக்கரடக்கல் மங்கலம் குழூஉக்குறி எனுமுத் தகுதியோ டாறாம் வழக்கியல்”(நன்.207).* 5. பழக்கவொழுக்கம்;

customs, manners, ancinet practise. *"வாய்மையுடையார் வழக்கு" (திரிகடு. 37).* **6.** நெறி முறை, வழி; way, method. *"அன்புற் றமர்ந்த வழக்கென்ப" (குறள், 75).* 7. நயன்மை (நீதி), முறைமை; justice. *"வழக்கன்று கண்டாய்" (திவ். இயற். 2, 19).* 8. அற மன்றத்தில் தொடுக்கப்பட்ட முறையான வழக்கு (தற்கா.); litigation. *கொலை வழக்கு (உ.வ.). உங்கள் வழக்கு நாளை (விசாரணைக்கு) உசாவுதலுக்கு வருகிறது (இ.வ.). 'வழக்குத்தீர்ப்பதில் மரியாதைராமன்தான்' (பழ.).* **9.** முறை மன்ற வழக்கு; appeal. **10.** கருத்து வேறுபாடு, சொற்போர் புரிகை; controversy dispute. **11.** வண்மை; bounty, liberality. *"உடையான் வழக்கினிது" (இனிய. நாற். 3).*

[வழங்கு → வழக்கு]

வழக்கு எனப்படுவது உலகவழக்காகிய மக்கள் வழக்கிலும், கற்றுத் துறைபோகிய பாவலர் இயற்றும் இலக்கிய வழக்கிலும், தொன்றுதொட்டுப் பயின்று வருவது. இது பற்றித் தொல்காப்பியர், "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல்சான்ற புலனெறி வழக்கம் கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும் உரியதாகும் என்மனார் புலவர்" (தொல். 999) என்று குறிப்பிட்டுள்ளது ஓர்ந்துணரத்தக்கது. அகரமுதலியில் வழக்கு என்னும் சொற்கு, செ.அக.குறிக்கப்பட்டுள்ள 7–ஆம் பொருள் (litigation) முறை (நீதி) மன்றத்தில் செய்யும் வியாச்சியம்" என்றுள்ளது. இஃது எங்ஙனம் இக்காலத்தது (mod) என்பது விளங்கவில்லை (வே.க. 3. பக்.152).

ஆனால் ஒல்காப் புகழ் தொல்காப்பியர், தமது நூலுள், தொன்முது வழக்குகளையும், கல்லாதார் நாவில் பயிலும், உலகியல் வழக்குகளையும் கற்றறிந்தார் ஏத்தும் புலனெறி வழக்குகளையும், தமிழர்தம் வாழ்வியலுள் இணைத்துக் கூறியுள்ளார். கிறித்துவிற்கு முன்னரே, அனைத்து வழக்குகளையும், வாழ்வியலுடன் இணைத்துக் கூறியுள்ள நுண்மாண் நுழைபுலம் இன்றளவும் பொருட் பொருத்தப்பாடாயுள்ளது உய்த்துணரத் தக்கவொன்றாகும்.

சொற்கள் வழக்கு மிகுதி பற்றிப் பொருளறியப்படுவதும், வழக்கின்மை பற்றிப் பொருளறியப்படாமையுமுண்டு. வழக்கு காலந்தோறும் மாறிக்கொண்டேயிருக்கும். தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய பூசை என்பது, இக் காலத்துப் பூனை என வழங்குகின்றது.

வழக்கு என்னுஞ் சொல்குறித்து உரையாசிரியர்களின் கருத்து வருமாறு :–

சேனாவரையர் செப்புவது :– வழக்கு என்பது காரணமின்றி வழங்கற்பாடே பற்றி வருவது (சேனா.தொல்.சொல்.17).

பரிமேலழகர் பகர்வது :– ஒரு பொருளைத் தனித்தனியே எனது, எனதென்றிருப்பார், அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு, அப் பொருள் மேல் செல்வது. அது கடன் கோடல் முதல் பதினெட்டு பதத்தது ஆம் (பரிமே.திருக்.உரைப்பா.).

தெய்வச்சிலையார் மொழிந்தது :– ஒப்புமையின்றி உலகத்தார் பயில வழங்கப்படுவது (தெய்.தொல்.சொல்.17).

சுப்பிரமணிய தீட்சதர் சொன்னது :– வழக்காவது உலக வழக்கு செய்யுள் வழக்கென இருவகைப்படும். அவற்றை வடநூலார் லௌகிகப் பிரகரியை, வைதிகப் பிரகரியை என்பர் (சுப்பி. பிரயோ.18).

வழக்கு[3] *vaḻakku,* பெ.(n.) 1. மொழி வழங்கிவரும் முறை; use of language, variety of style. பேச்சுவழக்கு (உ.வ.). எழுத்து வழக்கு (இக்.வ.), வட்டார வழக்கு (இ.வ.). 2. மக்களால் பின்பற்றப்படுவதாகவும்

பயன்படுத்தப்படுவதாகவும் இருப்பது, புழக்கம்; that which is current in usage. *நீங்கள் குறிப்பிடும் பல சொற்கள் இப்போது வழக்கில் இல்லை (உ.வ.). வழக்கில் உள்ள நடைமுறை இதுதான் (இ.வ.).*

[வழங்கு → வழக்கு]

வழக்கு⁴ *vaḻakku,* பெ.(n.) கணக்கு என்பதனோடு இணைத்து வரும் சொல்; a word which occurs in combination kaṇakku (கணக்கு).

வழக்குக்கேட்டல் *vaḻakku-k-kēṭṭal,* பெ.(n.) வழக்குக்கேள்–தல் பார்க்க; see *vaḻakku-k-kēḷ-,*

[வழக்கு + கேட்டல்]

வழக்குக்கேள்–தல் *vaḻakku-k-kēḷ-,* 11 செ.குன்றாவி.(v.t.) உண்மை(நீதி)யறிதற் பொருட்டு வழக்கினை ஆய்வு செய்தல்; to hear or try a case to render justice.

[வழக்கு + கேள்–.]

வழக்குச்செய்–தல் *vaḻakku-c-cey-,* 1 செ.கு.வி. (v.i.) வழக்காடு–தல் 1, 2 (யாழ்.அக.) பார்க்க; see *vaḻakkāḍu-.*

[வழக்கு + செய்–.]

வழக்குச்சொல் *vaḻakku-c-col,* பெ.(n.) வழக்கச்சொல் பார்க்க; see *vaḻakka-c-col.*

[வழக்கு + சொல்³]

வழக்குத்தீர்–த்தல் *vaḻakku-t-tīr-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. வழக்கினை ஆய்ந்து (நீதியினை) மெய்ம்மையை(நீதியினை) முடிவு செய்தல்; to decide, settle, as a law-suit or after or trial dispute. *"வழக்குத் தீர்ப்பில் மரியாதைராமன் தான்" (பழ.).* 2. நடு நிலையிலிருந்து சந்து செய்தல் (இ.வ.); to arbitrate.

மறுவ. வழக்கறுத்தல், முறைசெய்தல்.

[வழக்கு + தீர்–.]

வழக்குத்தொடர்–தல் *vaḻakku-t-toḍar-,* 2 செ.கு.வி.(v.i.) 1. அற (நீதி) மன்றத்திற்கு வழக்கினை எடுத்துச் செல்லுதல்; to avail court of law, to file a law suit in court. 2. சொற்போரிடுதல்; to carry on a dispute, to aver or argue.

[வழக்கு + தொடர்–.]

வழக்குத்தொடு–த்தல் *vaḻakku-t-toḍu-,* 4 செ.கு.வி. (v.i.) வழக்குத்தொடர், 1 பார்க்க; see *vaḻakku-t-toḍar,*

[வழக்கு + தொடு–,]

வழக்குத்தோல்–தல் *vaḻakku-t-tōl-,* 13 செ.கு.வி.(v.i.) 1. வழக்கில் தோல்வியுறுதல்; to lose a suit or ease. 2. எதிர் வழக்குரைத்தலில் தோல்வியுறுதல்; lapse or deceat in counter arguement.

[வழக்கு + தோல்–.]

வழக்குத்தோற்றல் *vaḻakku-t-tōṟṟal,* பெ.(n.) வழக்குத்தோல்–தல் பார்க்க; see *vaḻakku-t-tōl-,*

[வழக்கு + தோற்றல்]

வழக்குப்பேசு–தல் *vaḻakku-p-pēšu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. வழக்குரைக்கும் போது முறைமையை (நீதியை) நிலை நாட்டுதல் (யாழ்.அக.); to argue ethically in a case.

2. சட்ட நுணுக்கங்களை யெடுத்துக் கூறி வழக்காடுதல்; to dispute, wrangle, aver with legal facts.

[வழக்கு + பேசு-.]

வழக்குப்பொருள் *vaḻakku-p-poruḷ,* பெ.(n.) ஒரு சொற்குப் பேச்சுவழக்கிலுள்ள பொருள் (வின்.); popular meaning of a word.

மறுவ. நடைமொழிப்பொருள்.

[வழக்கு + பொருள்]

வழக்குப் பொருள் காலந்தோறும் மாறிக்கொண்டேயிருப்பதை 'நாற்றம்' என்னும் சொல்லா லறிக.

வழக்குப்போடு-தல் *vaḻakku-p-pōḍu-,* 19 செ.குன்றாவி. (v.t.) வழக்குத்தொடர்-தல் பார்க்க; see *vaḻakku-t-toḍar-,*

[வழக்கு + போடு-.]

வழக்குமுறி *vaḻakku-muṟi-,* பெ.(n.) முறையீடு (புகார்); complaint.

வழக்குமொழி *vaḻakku-moḻi,* பெ.(n.) வழக்குச்சொல் பார்க்க; see *vaḻakku-c-col.*

மறுவ. உலகவழக்கு.

[வழங்கு→வழக்கு + மொழி.]

பொதுமக்கள் வழங்கும் சொற்கள், வழக்குச் சொற்கள் அல்லது வழக்குமொழிகள் எனப்படும்.

வழக்குரைஞர் *vaḻakkuraiñar,* பெ.(n.) வழக்கறிஞர் பார்க்க; see *vaḻa-k-kaṟiñar.*

[வழக்கு + உரைஞர்.]

வழகம் *vaḻagam,* பெ.(n.) பவளம் (சங்.அக.); coral.

[வளகம் → வழகம்]

வழகு *vaḻagu,* பெ.(n.) 1. வழவழப்பு, பளபளப்பு; smoothness, brightness. 2. மென்மை; softness, gloss. *"வழகிதழ்க் காந்தண்மேல் வண்டிருப்ப" (பதினொ. திருவீரந். 70).*

[வழுவு = வழுக்குந்தன்மை. வழுவு → வழகு]

வழங்கல் *vaḻaṅgal,* பெ.(n.) உண்டாக்குகை; to be productive, to supply.

[வழங்கு → வழகல்.]

வழங்காத்தேர் *vaḻaṅgā-t-tēr,* பெ.(n.) பேய்த்தேர்; mirage. *"களிறு...... வழங்காத்தேர் நீர்க்கவா அங்கானம்" (கலித்.7).*

[வழங்காத்தேர் = வழக்கிலில்லாத் தேர். வழங்கு + ஆ (இ.நி.) + தேர்]

வழங்காதொழி-தல் *vaḻaṅgā-doḻi-,* 2 செ.கு.வி.(v.i.) மக்கள் பேச்சு வழக்கிலில்லாது போதல்; to out of usage as of words.

[பழங்கு→வழங்கு→வழங்காது + ஒழி-.]

காலதர், சாளரம், பலகணி என முச்சொல் லிருக்கவும் சன்னல் என்னும் போர்த்துக்கீசியச் சொல்லை வேண்டாது வழங்கியதால் அம் முச்சொல்லே போல் எத்துணையெத்துணை அருந்தமிழ்ச் சொற்கள் வழங்காதொழிந்தன. அவை எண்ணத் தொலையா.

வழங்காப்பொழுது *vaḻaṅgā-p-poḻudu,* பெ.(n.) உச்சி வேளை; midday, noon. *"வழங்காப் பொழுது நீ கன்று மேய்ப் பாய்போல்" (கலித். 112).*

[வழங்கு + ஆ (எ.ம.இ.நி.) + பொழுது]

வழங்காவழி *vaḻaṅgā-vaḻi,* பெ.(n.) புதுவழி, மக்கள் செல்லா வழி; new track, unused passage.

மறுவ. காட்டுவழி

[வழங்கு + ஆ (எ.ம.இ.நி.) + வழி]

வழங்கி *vaḻaṅgi,* பெ.(n.) 1. தன் மனைவியைக் கூட்டிக் கொடுப்பவன் (வின்.); pimp, one who prostitutes one's wife. 2. விலைமாது; harlot, prostitute.

க., து. வள; ம. வழநமிய.

[வழங்கு → வழங்கி]

வழங்கு¹–தல் *vaḻaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. இயங்குதல், நகர்தல்; to move, proceed, advance. *"முந்நீர் வழங்கு நாவாய்" (புறநா. 13).* 2. உலாவுதல்; to walk about. *"சிலம்பில் வழங்க லானாப் புலி" (கலித். 52).* 3. தொன்று தொட்டு நடைபெற்று வருதல்; to be in existence from the past. 4. புழக்கத்தி லிருத்தல்; to be in usage, as money, words, etc. 5. அசைந்தாடுதல்; to swing one's body backwards and forwards, as an elephant. *"மழகளிறு கந்து சேர்பு...... வழங்க" (புறநா. 22).* 6. கூத்தாடுதல்; to dance. *"பேய் மகள் வழங்கும் பெரும்பா ழாகும்" (பதிற்றுப். 22, 37).* 7. நிலைபெறுதல்; to last, to be static, to endure, to stand established. *"வானின் றுலகம் வழங்கி வருதலான்" (குறள், 11).* 8. பயிற்சி பெறுதல் (வின்.); to be accustomed, practised, to under go training. 9. கொண்டாடப் படுதல்; to be esteemed, honoured, respected, celebrated. *"வழங்கு தாரவன்" (சீவக. 2504).* 10. பொருத்தமாதல், ஏற்றதாதல், தகுதியுடையதாதல்; to be fit, suitable. *"வாய்க்கு வழங்காத கறி" (வின்.).*

க. பழகு

[பழங்கு → வழங்கு–.]

வழங்கு²–தல் *vaḻaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) மொழி, கதை முதலானவை மக்களது பயன்பாட்டில் அல்லது புழக்கத்திலிருத்தல்; to be current. *நல்லதங்காள் கதை இன்றும் மக்களிடையே வழங்குகிறது. அழகர்வரணிப்பு மதுரை மாவட்டத்தில் வழங்குகிறது (இ.வ.).* 2. குறிப்பிடுதல்; to call. *நாவலந்தேயத்தை (இந்தியாவை) பாரதம் என்றும் வழங்குகிறோம் (இ.வ.).*

வழங்கு³–தல் *vaḻaṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. பயன்படுத்துதல், கையாளுதல்; to use, practise. *தமிழ்ப்புலவர் தனித்தமிழ்ச் சொற்களையே, வழங்குதல் வேண்டும் (உ.வ.).* 2. கொடுத்தல், அளித்தல், வழங்குதல், பகிர்தல்; to give, supply, distribute. *"வழங்கத் தவாஅப் பெருவள னெய்தி" (பெரும்பாண்.26). இந்தப் பகுதியில் அன்றாடம் குடிநீர் வழங்கப்படுகிறது. குற்றவாளிக்கு உரிய தண்டனை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் (இ.வ.).* 3. அனுப்புதல், உரிய காலத்தே, பொருத்தமானதைப் பயன்படுத்துதல்; to cause to move, to send, to discharge. *"சாபநோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்" (புறநா. 14).* 4. சொல்லுதல், முணுமுணுத்தல்; to tell, speak, utter, to murmur or whisper. *"யானோ தேறேனவர் பொய் வழங்கலரே" (குறுந். 21).*

க. பழகு (g.)

[புழங்கு→பழங்கு → வழங்கு–.]

வழங்கு⁴–தல் *vaḻaṅgu-*,5 செ.கு.வி.(v.i.) நடமாடுதல் (இ.வ.); to frequent.

வழங்கு⁵–தல் *vaḻaṅgu-*,5 செ.கு.வி. (v.i.) 1. நிகழ்ச்சி, படைப்பு முதலியவற்றை புதியதாக உருவாக்கி முன்வைத்தல்; to present entertainments. 2. தொலைக் காட்சி, வானொலி முதலியவற்றில் ஒரு நிறுவனமோ, அல்லது நன்றறியவரப் பெற்றவரோ, நிகழ்ச்சியொன்றைத் தன் செலவில் நடத்த முன்வருதல்; to sponsor a programme on T.V., radio etc. *இந்த நிகழ்ச்சியை உங்களுக்கு வழங்கியவர்கள் பகட்டு (ஆடம்பர)ப் பொருட்கள் தயாரிப்பவர்கள்.* 3. கால், கை முதலியவை இயங்குதல் (இலங்.); to function of limbs. *கால், கை வழங்காமல் போயிற்று (இலங்கை வழக்கு).*

[புழங்கு→பழங்கு → வழங்கு–.]

வழங்குநர் *vaḻaṅgunar*, பெ.(n.) கொடுக்குநர், தருபவர்; distributor, supplier, donor. *"மான்ற மாலை வழங்குநர்ச் செறீஇய" (நற்–29.4).*

[வழங்கு → வழங்குநர்.]

கொடையளிப்பவர், ஒன்றை அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் பான்மையர்.

வழட்டல் *vaḻaṭṭal*, பெ.(n.) தோல் நழுவச் செய்கை; scratching the skin from the body.

[வழுட்டல் → வழட்டல்.]

வழட்டு–தல் *vaḻaṭṭu-*,5 செ.குன்றாவி. (v.t.) வழற்றுதல் (வின்.); to cause the skin to peel off.

மறுவ. வழற்றுதல்

[வழல்→வழற்று→வழட்டு–.]

வழண்டு–தல் *vaḻaṇḍu-*,5 செ.கு.வி.(v.i.) கழலுதல், தோல் உரிதல் (இ.வ.); to be abraded, to peel off.

[வழட்டு→வழண்டு–.]

வழப்பம் *vaḻappam*, பெ.(n.) 1. பழக்கம், வழக்கம்; usage, practice, habit, custom. 2. வழக்கம் (யாழ்.அக.) பார்க்க; see *vaḻakkam*.

வழமை *vaḻamai*, பெ.(n.) 1. வழக்கம்; habit, habitual act. 2. இயல்பு நிலை; normalcy, actuality. *"நகரம் வழமைக்குத் திரும்பி விட்டது".*

[பழமை→வழமை.]

வழல்(லு)–தல் *vaḻal(lu)-*,13 செ.கு.வி. (v.i.) தோல் உரிதல், கழலுதல்; to be abraded, to peel off.

[வழி→வழல்→வழல்(லு)–.]

வழலகரம் *vaḻa-lagaram*, பெ.(n.) நாய் வேளை, நாய்க் கடுகு; a plant-cleome niscosa.

வழலம் *vaḻalam*, பெ.(n.) நாள்; day.

வழலிக்கை *vaḻalikkai*, பெ.(n.) இளைப்பு (வின்.), களைப்பு; weariness, fatigue, tiredness.

தெ. படலிக; க. பளகெ.

[வழல்→வழலி→வழலிக்கை.]

வழலை *vaḻalai*, பெ.(n.) 1. பாம்பு வகையு ளொன்று (சீவரட். 344); ground snake. *"வேனில் ஓதிப் பாடுநடை வழலை" (நற்.92:2).* 2. ஒருவகை முப்பு (மூ.அ.); a kind of medicinal salt. 3. சவர்க்காரம் (பதார்த்த. 1106); soap. 4. புண்ணினின்று வடியும் ஊனீர்; exudation from a sore. *"புண்*

வழலை வடியும் பெரிய தலை" (புறநா.22, உரை). **5.** கோழை (சது.); phlegm. **6.** பூநீர்; salt.

[வழு→(வழல்)→வழலை.]

வழுவுதல் = நழுவுதல். வழவழப்பாதல். வழலைப் பாம்பு, சவர்க்காரம், கோழை போன்றவை கைக்கு அடங்காது, வழுவிச்செல்லுந் தன்மையாதலால், வழலை என்றாயிற்று.

வழலைக்கடி *vaḻalai-k-kaḍi,* பெ.(n.) வழலைப் பாம்பின் நச்சுக் கடி; poisonous bite of the vaḻalai or ground snake.

[வழலை + கடி. கடு→கடி.]

த. கடி > **Skt.** khad.

கடி என்னும் தமிழ்ச்சொல்லே, வடமொழிச் சொல்லான "khad"-யின் மூலமாகும். நஞ்சுத் தன்மை செறிந்த வழலைப் பாம்பின் நச்சுக்கடி.

வழலைக்கொக்கு *vaḻalai-k-kokku,* பெ.(n.) கருங்கொக்கு; black stork.

[வழலை + கொக்கு]



வழலைச்சத்து *vaḻalai-c-cattu,* பெ.(n.) பல கல்லு சத்து; strength of several stones.

[வழலை + சத்து]

வழலைச்சுண்ணம் *vaḻalai-c-cuṇṇam,* பெ.(n.) முப்பூச்சுண்ணம், சரக்கை எல்லாம் சலவையாக்கி அல்லது நீற்றிப் புகையையடக்கி பழுக்காத சரக்குகளையெல்லாம் பழுக்க வைக்கும்; calcified powder of three salts, universal salt, this aids to calcify various other drugs.

[வழலை + சுண்ணம். சுள்→சுண்→சுண்ணம்.]

கடைச்சரக்குகளை நீற்றித் தூய்மையாக்கும் முப்பூத்தூள். நாட்பட்ட எல்லா நோய்களையும் நீக்கும்.

வழலைச்சுத்தி *vaḻalai-c-cutti,* பெ.(n.) தொண்டையிலுள்ள கோழையை நீக்கல்; to remove the mucous or phlegm from the throat.

[வழலை + சுத்தி]

வழலைச்செய்நீர் *vaḻalai-c-ceynīr,* பெ.(n.) நளினம், உடம்பு நடுக்கம், தடுக்க உட்கொள்ளும் மருந்து, நச்சுயிரிகளின் வாயிலிருந்து வெளிப்படும் நஞ்சுவிலிருந்து உருவாக்கப்படும் செய்நீர் (திராவகம்); a liquid taken in during the practice of yoga to prevent tremor and other diseases, an acid obtained from the fluid emitted by poisonous creatures. When dropped on the skin vesicles are formed.

[வழலை + செய்நீர்]

வழலைத்திறவுகோல் *vaḻalai-t-tiṟavukōl,* பெ.(n.) வெடியுப்புச் சுண்ணம்; calcified powder of potassium nitrate.

[வழலை + திறவுகோல்]

வழலைதள்ளல் *vaḻalai-taḷḷal,* தொ.பெ. (vbl.n.) கோழை வாயினின்று வெளி வருதல்; discharge of phlegm from mouth.

[வழலை + தள்ளல்]

வழலைதொட்டாடல் *vaḻalai-toṭṭāḍal,* தொ.பெ.(vbl.n.) முப்பூவை முதன்மையாக வைத்துக் கொண்டு, மருந்துகளைக் கையாளுதல்; preparing medicine having universal salt on hand.

[வழலை + தொட்டாடல்]

வழலைநீர் *vaḻalai-nīr,* பெ.(n.) 1. தலைப் பிண்டச் செயநீர்; a liquid extracted from the head of the first foetus of a woman. 2. சவுக்காரநீர்; pungent liquid extracted from *vaḻalai.* 3. பனிக்குடத்து நீர்; liquor amni.

[வழலை + நீர்]

வழலைநோய் *vaḻalai-nōy,* பெ.(n.) கோழை; phylegmatic disease.

[வழலை + நோய்]

வழலைப்பச்சை *vaḻalai-p-paccai,* பெ.(n.) வழுக்குப்பாசி; lichen or emerald.

[வழலை + பச்சை]

வழலைப்பாம்பு *vaḻalai-p-pāmbu,* பெ.(n.) ஓர் வகைப் பாம்பு; a kind of ground snake.

[வழலை + பாம்பு]

வழலைமார்க்கம் *vaḻalai-mārkkam,* பெ.(n.) முப்பு வடிக்கும் முறை; the process of making and using the universal three salt.

[வழலை + மார்க்கம்]

Skt. mārga > த. மார்க்கம்.

வழலைமுப்பு *vaḻalai-muppu,* பெ.(n.) வழலை பார்க்க; see *vaḻalai.*

[வழலை + முப்பு]

வழலையாதி *vaḻalai-yādi,* பெ.(n.) முதிர்கரு; foetus.

வழலையுப்பு[1] *vaḻalai-y-uppu,* பெ.(n.) 1. சவுக்கார உப்பு; a salt extracted from dhoby's earth-fuller's earth. 2. மூப்பு; universal salt.

[வழலை + உப்பு]

வழலையுப்பு[2] *vaḻalai-y-uppu,* பெ.(n.) வழலை, 2 (யாழ்.அக.) பார்க்க; see *vaḻalai, 2.*

[வழலை + உப்பு]

வழலையுப்புசெயநீர் *vaḻalai-y-uppu-šeyanīr,* பெ.(n.) வாலையுப்பு செயநீர், மதிசெயநீர்; a pungent liquid preparation from salts (சா.அக.).

வழலைரசம் *vaḻalai-rašam,* பெ.(n.) இதளியம் கலந்த மருந்துச்சாறு; a medicinal preparation of mercury.

[வழலை + ரசம்]

Skt. rasa > த. இரசம்.

வழலைவங்கம் *vaḻalai-vaṅgam,* பெ.(n.) வங்கக்கட்டு (கொங்கணவர்–வாத காவியத்தில் சொல்லிய முறைப்படி செய்யப் படுவது); consolidation of lead as told in koṅgaṇavar vātha kaviyam.

[வழலை + வங்கம்]

வழவழ–த்தல் *vaḻavaḻa-*,4 செ.கு.வி. (v.i.) 1. வழுக்குந் தன்மையதாதல்; to be slippery, as mire, a polished surface. *வழவழத்த உறவைக் காட்டிலும் வைரம் பாய்ந்த பகை நன்று (பழ.).* 2. உறுதியற்றிருத்தல்; to be slack, loose or unsteady. 3. மழமழத்தல்; to be smooth. 4. தெளிவின்றிப் பேசுதல்; to babble, to wishy-washy in talk, to speak without clarity.

[வழ + வழ–.]

வழவழப்பு *vaḻavaḻappu,* பெ.(n.) 1. வழுக்குந் தன்மை (வின்.); slipperiness. 2. மழமழப்பு; smoothness. 3.உறுதியின்மை; looseness, unsteadiness, negligence.

[வழவழ → வழவழப்பு]

வழவழவெனல் *vaḻa-vaḻa-v-eṉal,* பெ.(n.) 1. வழுக்குதற் குறிப்பு; expr. signifying slipperiness. 2. தெளிவின்றிப் பேசுதற் குறிப்பு; wishy-washy talk, speaking unclearly, infirmity in talking.

[வழவழ + எனல்]

வழற்சிங்கி *vaḻaṟ-siṅgi,* பெ.(n.) ஆறாத சீழ்ப் புண்ணோய்; a kind of ulcer disease.

வழற்று–தல் *vaḻaṟṟu-*,5 செ.குன்றாவி. (v.t.) தோல் வழலச் செய்தல், கழலச் செய்தல்; to cause the skin to peel off.

[வழல் → வழற்று (பி.வி.)]

ஒ.நோ. கழல்→ கழற்று.

வழாஅல் *vaḻāal,* பெ.(n.) 1. தவறுகை; an act of turbling, failure. 2. வழுக்குகை; slipping. *“வழூஉ மருங்குடைய வழாஅ லோம்பி” (மலைபடு. 215).*

[வழு→வழால்→வழாஅல் (மு.தா.பக்.112).]

வழாநிலை *vaḻā-nilai,* பெ.(n.) சொற்கள் அல்லது தொடர்கள் இலக்கண வரம்பினின்றும் விலகாது அமைகை (நன். 374); grammatical correctness, as of a word or sentence, dist. fr. vaḻūu-nilai.

[வழுவு + ஆ (எ.ம.இ.நி.) + நிலை]

சொற்கள் பொருட்டொடர்புபட்டுத் தொடர்ந்து நிற்கும்பொழுது, முடிக்கப்படுஞ் சொற்களோடு முடிக்குஞ் சொற்கள் திணை, பால், எண், இடம், காலம் முதலியவற்றில் ஒத்து, இலக்கணப்பிழை யில்லாதிருப்பின் வழாநிலையாம்.

வழாறு *vaḻāṟu,* பெ.(n.) நீர் நிறைந்த ஆறு அல்லது குளம் (சூடா.); surplusing water river or tank.

[முழு–மை → வழு–மை + ஆறு¹]

வழி¹–தல் *vaḻi-,* 2 செ.கு.வி.(v.i.) 1. நிரம்பி வடிதல் (இ.வ.); to overflow, to surplus. *“வழிந்த கார்விடம்” (கம்பரா. சூர்ப்பண. 72).* 2. வடிதல்; to flow, drain.

ம. வழியுக (vaḻiyuka, vaḻikka.)

[வடி → வழி–.]

வழி²–தல் *vaḻi-*,2 செ.கு.வி.(v.i.) தோல் வழலுதல் (நெல்லை.); to be abraded.

[வழல் → வழி–]

வழி³–த்தல் *vaḻi-,* 4 செ.குன்றாவி.(v.t.) வடித்தல்; to shed, let flow. *“வழிக்குங் கண்ணீரமுவத்து” (கம்பரா. கடல்காண். 5).*

[வடி → வழி–.]

வழி⁴–த்தல் *vaḻi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. அரைத்த மாவு சந்தன முதலியவற்றைத் திரட்டியெடுத்தல்; to wipe, scrape, to

gather together, as a puply mass. *"மூக்கை வழித்து" (தனிப்பா. II, 383).* 2. பூசுதல்; to rub in with the hand, as an ointment, to smear, as sandal paste. *"மார்பின் விரை வழித்து" (சீவக. 699).* 3. ஆடையைத் திரைத்தல்; to roll up, as one's cloths. *ஆடையை வழித்துக் கொண்டு ஆற்றில் இறங்கினான்.*

க., ம. பளி.

[மல்→மழி→வழி–.]

வழி[5]–த்தல் *vaḻi-,* 4 செ.குன்றாவி.(v.t.) மழித்தல் (இ.வ.); to shave.

[முல்→மல்→மழி→வழி–.]

வழி[6] *vaḻi,*பெ.(n.) 1. வழி, பாதை, சாலை; way, road, path. *"வாழ்நாள் வழியடைக்குங் கல்" (குறள், 38).* 2. மூலகாரணம், அடிப்படை (யாழ்.அக.); origin, source. 3. செயற்படுத்தும் வழி; means for implemenation. *"அதற்கு ஒரு வழி சொல்லு" (உ.வ.).* 4. தீமையைக் குறைக்கும் மாற்று வழி; remedy. *"அந்தத் தப்புக்கு என்ன வழி செய்தான்" (உ.வ.).* 5. வழிபாடு; homage. *"வையங் காவலர் வழிமொழிந்தொழுக" (புறநா.8).* 6. ஒழுக்கம் (பிங்.); course of conduct or behaviour. 7. முறைமை (பிங்.), மாதிரி; manner, method, mode. 8. வழித்தோன்றல்; posterity, descendants. *"வாழ்க்கை வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்" (குறள், 44).* 9. இனம், கொடிவழி, குடும்பம், மரபு (பிங்.); family convention or heritage. 10. மகன் (சூடா.); son. 11. சார்ந்த உறவு, சுற்றம்; relation, dependant. *"மகனை முறைசெய்த மன்னன் வழியோர்" (மணிமே.22, 210), "செற்றோரை வழி தபுத்தனன்" (புறநா. 239).* 12. தமையன் (அரு.நி.); brother. 13. கொடிவழி, பரம்பரை; traditions, series, line, succession. *"வழித் தொண்டர்" (பெரியபு. திருநாவுக். 333).* 14.சிறப்புப்பாயிரம் பதினொன்றனுள் ஒன்றாகிய நூல் வந்த நெறி (நன்.46); history or origin of a literary work, one of 11 širappu-p-pāyiram. 15. அடிச்சுவடு, பதிவு; impression, foot-print, trace. *"யானைக்கால் வழியன்ன" (புறநா. 368).* 16. பின்னானது; that which is subsequent. *"வழிநாட் கிரங்கு மென்னெஞ்சம்" (புறநா. 176).* 17. வழக்கு (வின்.); usage. 18. பழைமை (வின்.); antiquity. 19. இடம்; place. *"தலைநாளன்ன புகலொடு வழி சிறந்து" (மலைபடு. 565).* 20. மலைப் பக்கம் (சீவக. அரும்.); mountainous region. 21. திரட்சி (பிங்.); roundness. 22. பேறு, கொடை, வரம்; boon, gift. *"எவ்வழி நினக்கு வேண்டும்" (உபதேசகா. சிவத்துரோ. 115).*

க. பளி (baḷi); ம. வழி (vari); து. பரி (baḷi), (baḷika); கோத. baypo; தெ. vaḷaṅku(வழங்கு).

[மழி → வழி.]

வழி[7] *vaḻi,*வி.எ.(adv.) பின்பு; afterwards. *"வழிபயக்கு மூதியமும்" (குறள், 461).*

வழி[8] *vaḻi,*இடை.(part.) 1. வினையெச்ச விகுதி (தொல்.சொல். 231); an adverbial particle meaning in case, under certain circumstances. 2. ஏழனுருபு (நன். 302); sign of the locative.

வழிஅலகு *vaḻi-alagu,* பெ.(n.) நீளம், நிறை, காலம் என்னும் அலகுகளில் இருந்து பெறப்படும் பிற அலகு; derival unit.

[வழி + அலகு]

சுற்றளவு, கொள்ளளவு போன்றவை. வழி அலகிற்குச் சான்றாகும்.

வழிக்கண்ணார் *vaḻi-k-kaṇṇār,* பெ.(n.) வழித்தோன்றல், வழிமரபினர்; descendants, progeny. *"இவரும் இவர் வழிக் கண்ணாரும்" (S.I.I.ii, 352).*

[வழி + கண்ணார்]

வழிக்கரை *vaḻi-k-karai,* பெ.(n.) வழிப் பக்கம் (யாழ்.அக.); wayside.

[வழி + கரை]

வழிக்குக்கொண்டுவா *vaḻikku-k-koṇḍu-vā,* 18 செ.கு.வி.(v.i.) உரிய முறையை அல்லது ஒழுங்கைப் பின்பற்றச் செய்தல்; to bring some one into line, to discipline some one. *"சரியாகப் படிக்காத மகனை எப்படி வழிக்குக் கொண்டுவருவது என்று சிந்தித்தார்" (இ.வ.).*

[வழிக்கு + கொண்டு + வா-.]

வழிக்குவரு-தல் *vaḻikku-varu-,* 18 செ.கு.வி. (v.i.) வழிக்குவா-தல் பார்க்க; see *vaḻikku-vā-.*

[வழி + வரு-.]

வழிக்குவா-தல் *vaḻikku-vā-,* 18 செ.கு.வி. (v.i.) 1. இணங்குதல்; to submit, yield, to surrender. *அவன் எப்படியும் நம் வழிக்கு வந்துதான் ஆக வேண்டும் (இ.வ.).* 2. நல்வழிப்படுதல்; to reform to revert to the right way.

[வழி + வா-.]

வழிக்கொள்(ளு)-தல் *vaḻi-k-koḷ(ḷu)-,* 16 செ.கு.வி. (v.i.) 1. பின்பற்றிச் செல்லுதல்; to follow, go after. *"மஞ்சனை வைதுபின் வழிக்கொள்வா யென" (கம்பரா. உருக்காட்டுப். 17).* 2. பயணப்படுதல்; to start or travel on a journey. *"இசைவலான்..... இருள்வழிக் கொண்டான்" (திருவிளை. விறகு. 48).*

[வழி + கொள்(ளு)-.]

வழிகட்டி *vaḻi-kaṭṭi,* பெ.(n.) வழி மறிப்பவன் (இ.வ.); way-layer, foot-pad, a person who obstructs.

[வழிகட்டு → வழிகட்டி]

வழிகட்டு-தல் *vaḻi-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. வழி மறித்தல் (யாழ்.அக.); to lie in wait, to obstruct. 2. ஏற்பாடு செய்தல்; to prepare, arrange. 3. வழிவகை கூறுதல்; to suggest suitable ways and means.

[வழி + கட்டு-.]

வழிகாட்டி[1] *vaḻi-kāṭṭi,* பெ.(n.) வாணிகஞ் செய்வார் பற்றியும், வாணிகத்தைப் பற்றியும் விளக்கும் நூல்; directory of traders and commerce or trade.

[வழி + காட்டி]

வழிகாட்டி[2] *vaḻi-kāṭṭi,* பெ.(n.) 1. செல்லுதற்குரிய வழியைக் காட்டுபவ-ன்-ள் (வின்.); guide, leader, one who shows the way. *வழிகாட்டிப் பறிப்பவன் திருடன் வரதன் ஏறுவது கழுலன் (பழ.)* 2. பிறர் பின்பற்றுதற்குரிய முன்மாதிரியாக இருப்பவ-ன்-ள்; one who sets an example, to emulate by others, exemplar.

என்கலையுலக வாழ்க்கையில் வழிகாட்டி என்று சொல்லத் தக்கவர் இவர் (இக்.வ.). ஆய்வுநூல் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு, இந்த நூல் நல்ல வழிகாட்டி (இ.வ.). 3. வழிகாட்டிமரம் (தற்கா.) பார்க்க; see *vaḻikāṭṭi-maram.*

[வழிகாட்டு → வழிகாட்டி]

வழிகாட்டிமரம் *vaḻi-kāṭṭi-maram,* பெ.(n.) வழி பிரியுமிடங்களில் பிரிந்து செல்லும் பாதையை அறிவிக்கும் மரம் (வின்.); guide-post, sign-post at cross roads, indicating direction.

மறுவ. கைகாட்டிமரம்

[வழிகாட்டி + மரம்]

சாலைகள் பிரியுமிடங்களில் அல்லது சேருமிடங்களில் அவ்வச்சாலை செல்லும் ஊர்ப்பெயர் அறிவிக்கும் (வழிகாட்டி) மரங்கள்.



வழிகாட்டு-தல் *vaḻi-kāṭṭu-,*5 செ.கு.வி. (v.i.) 1. செல்லும் நெறியை அறிவித்தல்; to show the way, to give guide line. *மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய ஆசிரியர்கள் (உ.வ.).* 2. நன்னெறி யுணர்த்துதல்; to direct one in the right path moral or religious, to teach ethics. 3. உரிய பாதையைக் காட்டுதல்; to suggest right ways and means. 4. உதவியாக இருத்தல்; to be of help. *ஏதேனும் ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ள இந்த நூல் வழிகாட்டும் (இ.வ.).*

[வழி + காட்டு-.]

வழிகாட்டுமரம் *vaḻi-kāṭṭu-maram,* பெ.(n.) வழிகாட்டிமரம் பார்க்க; see *vaḻikāṭṭi-maram.*

[வழிகாட்டு + மரம்]

வழிகெடு-தல் *vaḻi-keḍu-,*20 செ.கு.வி. (v.i.) அடிச்சுவடு தெரியாமல் அழிதல்; to erase impression of steps to leaving no trace behind. *"வந்த குற்றம் வழிகெட வொழுகலும்" (தொல். பொருள். 146).*

[வழி + கெடு-.]

வழிகோலு-தல் *vaḻi-kōlu-,*5 செ.கு.வி. (v.i.) 1. வழிவகுத்தல்; to pave the way, to find way out. 2. மூலமாக; to be instrumental. *இவை அழிவிற்கு வழிகோலும். தேர்தலில் தான் வெற்றி பெற வழிகோலிய தொண்டர்களுக்கு நன்றி தெரிவித்தார் (இக்.வ.).*

[வழி + கோலு-.]

வழிச்சந்தி *vaḻi-c-candi,* பெ.(n.) தெருக்கள் கூடுமிடம்; junction of roads.

[வழி + அந்து→அந்தி→சந்தி.]

வழிச்சந்தி என்னும் சொல், ஈங்கு குறைந்தது, மூன்று தெருக்கள் கூடுமிடத்தைக் குறித்தது எனலாம்.

சந்தி என்னும் சொல் சொற்புணர்ச்சி யென்னும் பொருண்மையில், எவ்வகைத் தமிழ் வழக்கிலும், இதுகாறும் பயிலாது போயினும், தெருப்புணர்ச்சி என்னும் பொருளில், சந்திக்கிழுத்தல், சந்தி சிரித்தல், சந்தியில் நிற்றல், சந்தி மறித்தல், சந்தியில் விடுதல் என்று உலக வழக்கில், மக்களிடையே இன்றும் வழக்கூன்றியுள்ளது. சந்தி என்னுஞ் சொல் தூய தென்சொல்லென்று மொழிஞாயிறு வடமொழி வரலாறு என்னும் நூலில் (வ.வ.68-69) நிறுவியுள்ளார்.

பலதெரு அல்லது, முத்தெரு கூடுமிடம் என்னும் பொருண்மையில், "சதுக்கமும் சந்தியும்" என்று திருமுருகாற்றுப்படையிலும், பலவழி கூடுமிடம் என்னும் பொருண்மையில் "சந்து நீவி" என்று மலைபடுகடாத்திலும், செய்யுள் வழக்காகப் பயின்று வந்துள்ளமை காண்க.

வழிச்சாரி *vaḻi-c-cāri,* பெ.(n.) 1. நடையுள்ள வழி; beaten road, foot path with trace. 2. சுங்கஞ் செலுத்தாது, பொருள்களைக் கடத்துவோரைப் பிடிப்பதற்கான கள்ளப்பாதை (வின்.); secret track of custom officers to apprehend the evaders of customs and hoarders.

மறுவ. சுருங்கைவழி

[வழி + சார்→சாரி]

வழிச்சாரியை *vaḻi-c-cāriyai,* பெ.(n.) வரி; a kind of tax. *"நம் நாட்டில் வழிச்சாரியை கொள்ளும் துறைகளிலே, தலைச் சுமைக்கும் எருத்துப் பொதிக்கும் பேர் ஒன்றுக்கு இரண்டாக வந்த காசும்" (S.I.I.Vol.XVII.141).*

[வழி + சாரியை. சார்→சாரியை.]

விற்பனைப் பொருள்களை மாட்டின் மீதும், தலைச் சுமையாகவும் கொண்டு, சாலைவழியே வேற்றிடம் செல்லும் வணிகர்களிடம் ஆள் சுமைக்கு இவ்வளவு காசு என்று, அரசு பெறும் கட்டணம்.

வழிச்செல்வோன் *vaḻi-c-celvōṉ,* பெ.(n.) சுற்றுலாச் செல்வோன் (பயணி) (பிங்.); traveller, one who takes a journey. *வழிச் செல்வோன் வார்த்தை நீர்மேல் எழுத்தாகும் (இ.வ.).*

மறுவ. வழிநடையாளன்.

[வழி + செல்-.]

வழிச்செலவு *vaḻi-c-celavu,* பெ.(n.) 1. யாத்திரை (பிங்.), சுற்றுலா; jouney, tour. 2. சுற்றுலாச் செலவு; journey or travelling expenses. *"சுற்றுலாவில் வழிச்செலவு செய்வதற்குத் தந்தை மகனுக்கு நானூறு உருபா கொடுத்தான்" (இக்.வ.).*

[வழி + செல்→செலவு]

வழிச்செவ்வை *vaḻi-c-cevvai,* பெ.(n.) சாலை; road. *"போகிற வழிச் செவ்வைகளில்" (தெ.இ.கல்.தொ.5, 138).*

[வழி + செவ்வை. செவ்வை = வழி முதலியவற்றின் செப்பம்.]

வழிச்சொல்லு-தல் *vaḻi-c-collu-,* 8 செ. குன்றாவி.(v.t.) வகை செய்தல்; to make arrangements, as for payment of debts. *'கடனுக்கு வழி சொன்னாற் கைச்சாதமுண்பேன்' (கோவ. க. 52).*

[வழி + சொல்லு-.]

வழிச்சோறு *vaḻi-c-cōṟu,* பெ.(n.) 1. கட்டுச் சோறு; boiled rice prepared and bundled up for a journey, viaticum. 2. இறந்த

பன்னிரண்டாநாள் இறந்தவர் செல்வழிக்கு உதவியாகக் கொடுக்கப்படும் பாதேயம்; the viaticum, offered for a deceased person on the 12th day of his death.

[வழி + சோறு [1]]

வழிசீ–த்தல் *vaḻi-cī-*, 4 செ.கு.வி.(v.i.) செல்லும் வழியைச் செப்பனிடுதல்; to repair or clear the path or roadways. *"வழி சீத்து" (ஏலா. 44).*

[வழி + சீ–.]

வழிசெய்[1]–தல் *vaḻi-šey-*, 1 செ.குன்றாவி. (v.t.) வகை செய்தல்; to provide a way of disposal, to find a way out. *அனைவருக்கும் வீடு கிடைக்க வழிசெய்ய வேண்டும் (இ.வ.).*

[வழி + செய்–,]

நிகழ வேண்டிய செயற்பாட்டிற்கு வகை செய்தல்.

வழிசெய்[2]–தல் *vaḻi-šey*,1 செ. குன்றாவி. (v.t.) வழி வகுத்தல்; to devise a method or guideline. *வெள்ள (நிவாரண) உதவி உரியோருக்குச் சென்று சேர அரசு வழி வகை செய்ய வேண்டும்.*

[வழி + செய்–.]

வழிஞ்சி *vaḻiñji*,பெ.(n.) இளமை (அக.நி.); youth, adolescence.

வழித்தடை *vaḻi-t-taḍai*,பெ.(n.) வழிநடையில் நிகழும் இடையூறு; hindrance or obstacle to a journey, as by an evil omen etc.

[வழி + தடை. தள்→தடு→தடை.]

வழிச்செலவின் கண்ணே, எதிர்கொள்ளும் இன்னல்.

வழித்திண்ணை *vaḻi-t-tiṇṇai*, பெ.(n.) வீடு கோபுரம் முதலியவற்றின் வெளித் திண்ணை (நாமதீப. 493); outer pial, as of a house.

[வழி + திண்ணை]

வழித்திருடன் *vaḻi-t-tiruḍaṉ*, பெ.(n.) வழிப்பறி செய்பவன்; high way robber.

மறுவ. ஆறலைக் கள்வன்.

[வழி + திருடு→ திருடன்.]

வழித்துணை *vaḻi-t-tuṇai*, பெ.(n.) 1. வழி நடையில் உடன் வருவோன்; fellow, traveller, a companion on a journey. 2. வழிக்குத் துணையாவோன்; guide, escort. *"வழித்துணையா மழபாடி வயிரத் தூணே" (தேவா. 322, 7).* 3. தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து, உதவிவரும் குடும்பத்துணை (யாழ்.அக.); a friend of the family who helps from generation to generation.

[வழி + துணை[1]]

வழித்துணைநாதர் *vaḻi-t-tuṇai-nādar*, பெ.(n.) விரிஞ்சி புரத்தில் கோயில் கொண்டிருக்கும் இறைவனின் பெயர்; a name of god is who have temple in viriñji puram.

*[வழித்துணை + **Skt.** nātha> த.நாதர்]*

குடகு நாட்டிலிருந்து தொண்டைநாட்டுக்கு மிளகு விற்க வந்த சிவநேசன் என்னும் வணிகனுக்கு வழித்துணையாக வந்து, வழிப்பறி செய்ய வந்த கள்ளர்களை விரட்டியடித்தமையால் "வழித் துணைநாதர்" என்னும் பெயர் பெற்றார்.

வழித்துணைமருந்து *vaḻi-t-tuṇai-marundu,* பெ.(n.) 1. வழிப்போக்காக நெடுந்தொலைவு செல்வோர் முதலுதவியின் பொருட்டுக் கொண்டு செல்லும் மருந்து; first aid box carried during journey. 2. வாழ்க்கைப் பாதையை இனிது வழி நடத்திச் செல்லும் இறைவன்; God.

[வழித்துணை + மருந்து.]

அற்றை நாளில் நெடுந்தொலைவு செல்வோர் வழித்துணை மருந்தாகச் சுக்கு, மிளகு, திப்பிலி போன்றவற்றை உடன்கொண்டு சென்றனர். தலைவலி போக்கும் மருந்தாகவும், மிகுசளி, வளிப்பிடிப்பு நீக்கும் மருந்தாகவும், சுக்கு, மிளகு, திப்பிலி, அதிமதுரம் போன்றவை அன்று பயன்பட்டது போன்று, ஆங்கில மருத்துவம் மிக்கு விளங்கும் இற்றை நாளிற், சுற்றுலா செல்வோர் முதலுதவிப் பெட்டியினை உடன் கொண்டு செல்கின்றனர்.

முதலுதவிப் பெட்டியில், தலைவலி, உடம்புவலி, வளித்தொல்லை (வாயுப்பிடிப்பு), குளிர்சுரம் போக்கும் குளிகைகளும், வளிப்பிடிப்பு, சுளுக்கு போக்கும் மருந்துகளும், நெய்மங்களும் (தயிலங்களும்) கொண்டு செல்லாத சுற்றுலாக் குழுமங்களே இல்லையெனலாம்.

அனைத்து மாந்தர்தம் வாழ்க்கைச் செலவினையும், எஞ்ஞான்றும் நலிவின்றி, நலத்துடனும், வளத்துடனும் நடத்திச் செல்பவன், எல்லாம்வல்ல இறைவனாகையால், திருஞான சம்பந்தப் பெருமான், திருவானைக்காப் பதிகத்தில் திருவருட் சிறப்பினை விளக்குமுகத்தான், "வானநாடனே வழித்துணை மருந்தே" என்று பாடியருளிய பாங்கும் ஈங்கு கருதத்தக்கதாகும்.

வழித்தெய்வம் *vaḻi-t-teyvam,* பெ.(n.) குல தெய்வம்; family deity, tutelary deity. *"எங்கள் வழித்தெய்வம் போல்வான்" (சூடா. பாயி. 6).*

[வழி + தெய்வம். வழி = வழிவழி]

வழித்தொண்டு *vaḻi-t-toṇḍu,* பெ.(n.) வழிவழியடிமை; hereditary slavery or subservience especially to a deity. *"வழித்தொண்டு செய்திடக் கச்சை கட்டிக்கொண்ட" (குற்றா. குற. 91, 1).*

[வழி + தொண்டு]

மரபுவழித் தொடர்ந்து, தலைமுறைதோறும் தொண்டாற்றுகை. இறைவனுக்குத் தலைமுறை தோறும் தொடர்ந்து செய்யும் அடிமைத் தொண்டு.

வழித்தோன்றல் *vaḻi-t-tōṉṟal,* பெ.(n.) கொடி வழியுதித்த பிள்ளை (பிங்.); male descendant. *இவரும் இவரது வழித் தோன்றல்களும் வடக்கிலிருந்து வந்து தெற்கில் குடியேறினர் (உ.வ.).*

மறுவ. பிறங்கடை.

[வழி + தோன்றல்]

வழிதட்டு-தல் *vaḻi-taṭṭu-,*5 செ.கு.வி. (v.i.) செல்வழி தெரியாது மயங்குதல்; to get puzzled or perplexed by losing one's way or tract.

[வழி + தட்டு-. துள்→தள்→துட்டு→தட்டு]

வழிதவறு-தல் *vaḻi-tavaṟu-,*5 செ.கு.வி. (v.i.) ஒழுக்கம் தவறி நடத்தல்; go astray. *வழிதவறியவர்களுக்கு வாழ வழிகாட்டும் அமைப்பு.*

[வழி + தவறு. தாவு→தவல்→தவறுதல் = பிழை செய்தல், நெறிதவறுதல்.]

வழிதவறுதல் என்பது வாழ்க்கைப் பாதையில் நெறி பிழைத்தலாகும். பிறன்மனை விழைதல், பிறர்பொருள் கவர்தலும், வழி தவறுதலாகும்.

வழிதிகை-த்தல் *vaḻi-tigai-,*4 செ.கு.வி. (v.i.) 1. செல்வழி தெரியாது மயங்குதல்; to get puzzled by losing one's way. 2. செய்வகை தெரியாது கலங்குதல்; to be confused in mind not knowing what to do. *"வழிதிகைத் தலமர்கின்றேன்" (திவ். திருவாய். 3, 2, 9).*

[வழி + திக்கு→திகை-.]

வழிதுறை *vaḻi-tuṟai,* பெ.(n.) 1. வழியும் துறையும்; road and ford. 2. வழிமுறை methodalogy, way, expedient. *"வழிதுறை யீதென்றறியாய்" (அருட்பா.* vi, தான்பெற்ற. 6, பக்.707). *'இயலா தென்பதில்லவே யில்லை வழிதுறை தெரியா தென்பதே உண்மை'.* 3. பக்கத்துணை (வின்.); means to an end, auxiliary aid.

[வழி + துறு→துறை]

வழிந்தோடு-தல் *vaḻindōḍu-,*5 செ.கு.வி. (v.i.) பெய்த மழைநீர் நிலத்தின் மீது புரண்டோடுதல்; to overflow on the surface as storm or rain water.

[வழி ² + ஓடு-.]

வழிநட-த்தல் *vaḻi-naḍa-,*3 செ.கு.வி. (v.i.) ஏவல் செய்தல்; to serve as a call boy, to carry-out orders. *"செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப" (மதுரைக். 189).*

[வழி + நெடு→நெட→நட.]

வழிநடத்து-தல் *vaḻi-naḍattu-,*5 செ.கு.வி. (v.i.) 1. முன்னின்று நடத்துதல்; to lead. 2. தலைமை தாங்கி நடத்துதல்; to guide, in forefront. *விடுதலைப் போரில் நம்மை வழிநடத்திச் சென்றவர்கள் இன்று இல்லை. நம்மை வழிநடத்தும் பொறுப்பு தலைவருக்கே உரியது.*

[வழி + நட→நடத்து-.]

வழிநடை *vaḻi-naḍai,* பெ.(n.) 1. வழிச் செல்லுகை; journey, travel. *"வழிநடைச் சேறல் வலித்திசின் யானே" (அகநா. 303).* 2. நடைபாதை (இ.வ.); foot path.

[வழி + நடை]

வழிநடைக்களைப்பு *vaḻi-naḍai-k-kaḷaippu,* பெ.(n.) வழிநடையிளைப்பு பார்க்க; see *vaḻi-naḍai-y-iḷaippu.*

[வழிநடை + களைப்பு.]

நீணெடுந்தூரம் நடந்து செல்வதால், ஏற்படும் உடற்களைப்பு மற்றும் மனச்சோர்வு.

வழிநடைக்கிடும்பணம் *vaḻi-naḍai-k kiḍum-paṇam,* பெ.(n.) வரி வகை; road cess or levy. *நாட்டின் ஓரிடத்தினின்று, மற்றொரு பகுதிக்குச் செல்வோர் செலுத்திய நெடுஞ்சாலைத் தீர்வை.*

[வழிநடை + இடும்பணம்.]

வழிநடைச்செலவு *vaḻi-naḍai-c-celavu,* பெ.(n.) 1. தரை வழிச்செலவு (பயணம் (வின்.)); journey. 2. சுற்றுலா (பயண)ச் செலவு (இ.வ.); expenses incured doing a journey, travel expenses.

[வழிநடை + செலவு]

வழிநடைச்சோர்வு *vaḻi-naḍai-c-cōrvu,* பெ.(n.) வழிநடையிளைப்பு பார்க்க; see *vaḻinaḍai-y-iḷaippu.*

[வழிநடை + சோர்வு.]

வழிநடைப்பதம் *vaḻi-naḍai-p-padam,* பெ.(n.) வழி நடக்கும்போது கண்ட காட்சியை வரணித்துப்பாடும் பாட்டு; song of a traveller, describing the scenery on the way.

[வழிநடை + பதம்²]

வழிநடையிளைப்பு *vaḻi-naḍai-y-iḷaippu,* பெ.(n.) வழி நடையால் ஏற்பட்ட சோர்வு; fatigue due to long journey by walk.

[வழிநடை + இளைப்பு]

வழிநடை = வழிச்செலவு. இளை→இளைப்பு = மெலிவு, சோர்வு.

நெடுந்தொலைவு நடப்பதனால் ஏற்படும் சோர்வு அல்லது களைப்பு.

வழிநாள் *vaḻi-nāḷ,* பெ.(n.) பின்னாள்; succeeding or next day. *"வழிநாட் கிரங்கு மென்னெஞ்சம்" (புறநா. 176).*

[வழி + நாள்]

வழிநில்-தல் (வழிநிற்றல்) *vaḻi-nil-,* 14 செ.கு.வி.(v.i.) ஏவல் செய்தல்; to act as a call boy, to carry-out or implement orders. *"மருவிப் பிரிய மாட்டேனான் வழிநின் றொழிந்தேன்" (தேவா. 301, 3).*

[வழி + நில்-.]

வழிநிலை *vaḻi-nilai,* பெ.(n.) 1. பின்னின்றேவல் செய்கை; sub-servience, subservient attitude. *"வழிநிலை பிழையாது" (தொல். பொருள். 114).* 2. பின்னிகழ்வது; that which immediately succeeds or follows, subsequent happening. *வழிநிலைக்காட்சி.* 3. அணி வகை (பிங்.); a figure of speech.

[வழி + நிலை]

வழிநிலைக்காட்சி *vaḻi-nilai-k-kāṭci,* பெ.(n.) இயற்கைப் புணர்ச்சியை யடுத்த இடந்தலைப் பாட்டில், தலைவன் தலைவியைக் காணுங்காட்சி (தொல்.பொருள்.16, உரை); subsequent meeting of lovers after their first meeting (Agap.).

[வழிநிலை + காட்சி]

காண் + சி – காட்சி. 'சி' பண்புப்பெயரீறு.

எழுவகைக் காட்சியுளொன்று. தலைவனும் தலைவியும் தம்முள் முதன் முதலாகக் காணுதலைக் கூறும் கைக்கிளைத் துறையென்று புறப்பொருள் வெண்பாமாலை புகலும் (பு.வெ.11, ஆண்பால்).

இருவரும் தம்முள் முதற்கண் கண்ணுறும் முதற்காட்சியே வழிநிலைக் காட்சி. என்று இறையனார் இளவியலுரை இயம்பும்.

"தலைமகளைத் தலைமகன் முதற்கண் கண்ணுற்று, இஃதொரு வியப்பென்றெனல்" என்றது பேராசிரியர் தம் விளக்கமாகும் (பேரா.திருக்.1;1).

வழிநூல் *vaḻi-nūl,* பெ.(n.) நூல் மூவகையுள் முதனூலின் முடிபைப் பெரும்பான்மை யொத்துச் சிறுபான்மை மாறுபடும் நூல் (தொல். பொருள். 650); secondary work, agreeing for the most part with its original or mudanūl and deviating from it wherever the author considers it proper or necessary, one of three kinds of nūl.

[வழி + நூல்]

அகத்தியம் தொல்காப்பியம் வழிநூலாதலின் அதிலுள்ள தென்சொற்களெல்லாம் தலைக்கழக முதனூலைச் சேர்ந்தவையாம்.

முதலில் தோன்றிய நூலில் சொல்லப்பட்டவற்றை ஏற்றுத் தேவையான மாற்றங்களைச் செய்து எழுதப்படும் நூல்.

வழிநூல் பற்றி இறையனார் களவியலுரை இயம்புவது :– முதல் நூலோடு ஒத்த மரபிற்றாய் ஆசிரிய மத விகற்பம் படக்கிளப்பது (இறை.1).

யாப்பருங்கல விருத்தி கூறுவது :- முதல் நூலோடு ஒத்த முடிவிற்றாய்த் தனது ஓர் விகற்பம் படக் கிளப்பது (யாப்.பாயி.).

வழிப்படு¹–தல் *vaḻi-p-paḍu-*,20 செ.கு.வி. (v.i.) 1. பயணமாதல்; to travel, to go on one's way. 2. நேர்படுதல் (யாழ்.அக.); to be reformed or mended. 3. சந்தித்தல்; to meet. *"அவன் எங்காவது வழிப்பட்டால் என்னிடம் வரச்சொல்லு" (உ.வ.)*

[வழி + படு ¹–.]

வழிப்படு²–தல் *vaḻi-p-paḍu-*, 18 செ. குன்றாவி. (v.t.). 1. வழிபடு¹, 2 பார்க்க; see *vaḻi-paḍu*. *"அமரர் கோன் வழிப்பட்டால்" (திவ். திருவாய். 3, 1, 8).* 2. வழிபடு¹, 1 பார்க்க; see *vaḻi-paḍu*.

[வழி + படு ¹–.]

வழிப்படு²–த்தல் *vaḻi-p-paḍu-*, 4 செ. குன்றாவி.(v.t.) 1. பயணப்படுத்துதல்; to send on a journey, to despatch. *"மதிநுதலியை வழிப்படுத்து" (திருக்கோ. 214, கொளு).* 2. நல்ல வழியிற் செலுத்துதல் (சூடா.); to set on the right path. 3. சீர்திருத்துதல்; to regulate, to reduce to order, to reform. *"இருமொழியும் வழிப்படுத்தார்" (காஞ்சிப்பு. தழுவக். 249).* 4. வயப்படுத்துதல் (யாழ்.அக.); to bring under control, to entice. 5. வணக்கஞ் செய்வித்தல் (வின்.); to casue one to reverence, to cause to salute.

[வழிப்படு¹ → வழிப்படு–.]

வழிப்பணி *vaḻi-p-paṇi*, பெ.(n.) குற்றம் செய்தோர்க்குத் தண்டனையாக, பாதை செப்பனிடும் வேலை தருகை; laying and repairing roads being the labour of a personer sentenced to rigorous imprisonment, engaging convicts or prisoners for road improvement works as a measure of punishment.

[வழி + பணி]

வழிப்பயணம் *vaḻi-p-payaṇam*, பெ.(n.) வழிச்செலவு (இ.வ.); journey.

மறுவ. நடைச்செலவு

[வழி + பயணம்]

Pkt. payaṇa > த. பயணம்.

வழிப்பறி¹–த்தல் *vaḻi-p-paṟi-*,4 செ.குன்றாவி. (v.t.) இடைவழியிற் கொள்ளை யிடுதல் (சூடா.); to way lay and rob.

[வழி + பறி¹–.]

வழிப்பறி² *vaḻi-p-paṟi*, பெ.(n.) வழிக் கொள்ளை (பிங்.); highway robbery. *இந்தப் பகுதியில் அடிக்கடி வழிப்பறி நடக்கிறது (உ.வ.).*

[வழி + பறி]

நெடுந்தொலைவு சுற்றுலா செல்வோரிடமிருந்து, பணம், நகை போன்றவற்றைக் கொள்ளையடித்தல்; இதுபோன்று வழிப்பறி செய்வோர் கழகக் காலத்தே, ஆறலைத்துண்போர் எனப்பட்டனர்.

வழிப்பாடு *vaḻi-p-pāḍu,* பெ.(n.) 1. வழியிற் செல்லுகை; proceeding on the way. 2. பின்பற்றுகை; following. 3. வணக்கம்; reverence, adoration. *"பூசித்துப் பணியும் வழிபாடு பாரீர்" (ஏகாம். உலா. 371).* 4. பூசனை (பிங்.); ritual, worship. இத்தளி வழிபாடு செய்வார்க்கு (கோயி.கல்வெ.தொ.1, 150). 5. வழக்கம் (வின்.), பயன்பாடு, மரபு; use, custom, habit. 6. சமயக் கோட்பாடு (வின்.); religious system.

[வழிப்படு → வழிப்பாடு.]

வழிப்பாம்பு *vaḻi-p-pāmbu,* பெ.(n.) எப்பொழுதும் கடிப்பதற்காகவே வழிகட்டிக் கொண்டிருக்கும் ஒரு வகைப் பாம்பு; a kind of snake exclusively awaiting to bite passers-by.

[வழி + பாம்பு]

வழிப்பிரிவு *vaḻi-p-pirivu,* பெ.(n.) வழிபல ஒன்று கூடும் இடம் (வின்.); cross ways; place where two or more roads meet, road junction.

[வழி + பிரிவு]

வழிப்புண் *vaḻi-p-puṇ,* பெ.(n.) 1. எரு (ஆசன) வாய்ப்புண்; anal sore. 2. குறி வாய்ப்புண்; vaginal sore or ulcer (சா.அக.).

[வழி + புண்]

புல்→புள்→பிள்→பிழம்பு = திரட்சி. புல்→புள்→புண் = தோலில் திரண்டு காணப்படும் ஊறு. தோலில் எழும்பும் கட்டி. இங்கு வழிப்புண் என்பது, எருவாயிலிலோ அல்லது பெண்குறிவாயிலோ எழும்பியுள்ள புண்கட்டி.

அல்குல் அல்லது ஆண்குறியில் தோன்றும் இணைவிழைச்சின் விளைவாகத் தோன்றும் புண்கட்டிகளும் வழிப்புண் வகையைச் சார்ந்தனவே.

வழிப்புப்புழுகு *vaḻippu-p-puḻugu,* பெ.(n.) புனுகுப் பூனையின் பிருட்டப் பையினின்று வழித்தெடுத்த புழுக்கை (புனுகு) (வின்.); civet taken out of the ventricle of the civet cat.

[வழி[1] + புழுகு]

வழி = வாயில். புள்→புழு→புழுக்கை. பிள்→பீள்→பீளை→பூளை. புள்→புழு→புழுகு. புனுகுப் பூனையின் குறிவாயிலினின்று வெளிப்படும் நறுமணப் பொருளே, வழிப்புழுகு என்றறிக.

வழிப்புரை *vaḻi-p-purai,* பெ.(n.) வழிப் போக்கர் வழிநடைக் களைப்பாறத் தங்குமிடம் (ஏலாதி. 2); rest-house; traveller's bungalow.

[வழி + புரை[6]]

புல்→புர்→புரை = வீடு, அறை, சாலை, இடம்.

வழிநடைச் செலவினை மேற்கொள்வோர் வழிநடை வருத்தம் தீருதற் பொருட்டுத் தங்கி களைப்பாறிச் செல்லுமிடம்.

வழிப்பெருந்தேவி *vaḻi-p-perundēvi,* பெ.(n.) அரசிளங்குமரி; junior queen. *"சேதியர் பெருமகன் வழிப்பெருந் தேவியொடு" (பெருங். வத்தவ. 3, 110).*

[வழி + பெருந்தேவி]

வழிப்பொதி *vaḻi-p-podi,* பெ.(n.) வழிச்சோறு, 1 (இ.வ.) பார்க்க; see *vaḻi-c-cōṟu.*

[வழி + பொதி]

வழிப்போ[1]–தல் *vaḻi-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) வழிப்படு[1]–, பார்க்க; see *vaḻi-p-paḍu-.*

[வழி + போ–.]

வழிப்போ[2]–தல் *vaḻi-p-pō-,* 8 செ.குன்றாவி. (v.t) வழிபடு[1]–, 1 பார்க்க; see *vaḻi-paḍu-.*

[வழி + போ–.]

வழிப்போக்கர்வாழை *vaḻi-p-pōkkar-vāḻai,* பெ.(n.) நீர்வாழை (தற்கா.); traveller's palm.

[வழிப்போக்கன் + வழு→வாழை. வாழை = வழுவழுப்பான மரம்.]

வழிப்போக்கன் *vaḻi-p-pōkkaṉ,* பெ.(n.) வழிச்செல்வோன்; wayfarer, traveller, journeyer. *"வழிப்போக்கர் புகுந்தாடா நிற்பர்களே" (ஈடு. 4, 4, 6).*

[வழிப்போக்கு → வழிப்போக்கன்]

வழிப்போக்கு *vaḻi-p-pōkku,* பெ.(n.) 1. வழியிற் போகை; going along the path, proceeding on the way. 2. பாதை, வழி; path, track. *"வழிப்போக்கிலே அவனைக் காண்பாய்" (வின்.).* 3. வயல்களிலுள்ள வழிப்பாதை; foot-path in the cultivable field. 4. பாழ்நிலம் (இ.வ.); waste land.

[வழி + போ→போக்கு.]

வழிப்போவான் *vaḻi-p-pōvāṉ,* பெ.(n.) வழிச்செல்வோன், யாத்திரையாளன்; wayfarer, traveller, journeyer.

[வழி + போ→போவான்.]

ஒருகா. வழிச்செல்வோன்.

வழிபடு[1]–தல் *vaḻi-paḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. பின்பற்றுதல்; to follow, adhere to. *"வழிபடுதல் வல்லுதலல்லால்" (நாலடி, 309).* 2. வணங்குதல்; to reverence, worship. *"வழிபடு வோரை வல்லறி தீயே" (புறநா. 10), "வழிபடு தெய்வங் கட்கண் டாஅங்கு" (நற்.9:2).*

[வழி + படு–.]

வழிபடுதல் என்பது கடவுள் நெறியைப் பின்பற்றுதலைக் குறிக்கும். "பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார்" என்று வள்ளுவர் கூறுவது காண்க. அது ஒவ்வொரு சமயத்தார்க்கும் வேறுபட்ட வழிமுறைகளையும், நெறிமுறைகளையும், கொண்டதாயினும், ஒவ்வொரு சமய நம்பிக்கைக் கூட்டத்தாரும், தமக்கென ஒரு தலைமை வழிபாட்டுநெறி வகுத்துக் கொண்டு, ஒன்றுபட்டு இயங்க வழிவகுத்தது.

காலப்போக்கில் முழுமுதற் கடவுளை வழிபடுதலே உயர்ந்தது, என்னும் எண்ணம், மாந்தர்தம் வாழ்வில் வழக்கூன்றியது. வாழ்வியலில் அச்சந்தரும் பொருட்களை வழிபடத் தொடங்கிய மாந்தன், நெறியின் வயப்பட்ட கடவுளை, வகுத்துக்கொண்டு, அதுவே முழுமுதல் இறைவழிபாடென்று எண்ணினான்.

நாள் செல்லச்செல்ல, தன்னுள்ளத்தே உறையும் மனச்சான்றாகிய உண்மையிறைவனை உணராது, இம்மைப் பயன் விளையுமென்றெண்ணி, வழிபடுதலை, பலநிலைகளில் மேற்கொண்டதனால், கடவுள் வழிபாட்டின் உயரிய நிலையை மறந்தான்.

இன்று கடவுள் வழிபாடு, தன்பொருள் இழந்து கடவுளைப் போற்றி வணங்குகின்ற கடவுள் வாழ்த்துப் பொருளில் மட்டும் ஆளப்படுகின்றது.

தேவாரக் காலத்தில், வழிபடுதலென்பது கூட்டுவழிபாட்டையே குறித்தது.

(எ.டு.) "கூடிநின் அடியார்" என்னும் திருவாசகக் கருத்தை நோக்குக.

வழிபடு^{2}–தல் *vaḻi-paḍu-*,20 செ.கு.வி. (v.i.) வழிப்படு^{1}–, 1 (வின்.) பார்க்க; see *vaḻi-p-paḍu.*

[வழி + படு–.]

வழிபடு^{3}–த்தல் *vaḻi-paḍu-*, 4 செ. குன்றாவி.(v.t.) வழிப்படு^{2}– (வின்.) பார்க்க; see *vaḻi-p-paḍu-.*

வழிபடுகடவுள் *vaḻipaḍu-kaḍavuḷ*, பெ. (n.) ஒருவன் தன் குலத்திற்கும், தமக்கு முரித்தாக வணங்கும் கடவுள்; tutelary deity; the deity which a man worships as his own God or the God of his family or caste, dist. fr. *ērpuḍai-k-kaḍavuḷ*. *"வழிபடு கடவுளை யாதல்...... ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல்"* (குறள், அவ.).

[வழிபடு + கடவுள். கடவுதல் = செலுத்துதல். கடவு→கடவுள் = இயக்குபவன், செலுத்துபவன்.]

(ஒ.நோ.) இயவு →இயவுள். கடவுள் என்னும் பெயர்க்கு எல்லாவற்றையும் இயக்குபவன் அல்லது செலுத்துபவன் என்றும் பொருளுரைக்கலாம். மனமொழி மெய்களைக் கடந்து நின்றிலங்கும் முழுமுதற் கடவுளைக் குறிக்க எழுந்த சொல்லென்பது, அதன் பகுதியாலேயே விளங்கும் (சொ.ஆ.க.31).

த. கடவுள் > E. God.

வழிபடுதவசி *vaḻi-paḍu-tavaśi*, பெ.(n.) காது வலிக்காக பயன்படுத்தும் ஓர் வகைக் கற்றாழை; a kind of aloes used in ear ache.

வழிபடுதெய்வம் *vaḻipaḍu-deyvam*, பெ.(n.) 1. வழிபடுகடவுள் பார்க்க; see *vaḻipaḍu-kaḍavuḷ*. *"வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப"* (தொல்.பொருள்.422). *"அழிவில முயலும் ஆர்வ மாக்கள் வழிபடுதெய்வம் கட்கண்டாங்கு"* (நற்.9–1–2). 2. நிலையாக எஞ்ஞான்றும் உள்ளத்திலிறுத்தி வணங்குந் தெய்வம்; favourite deity, chosen by him for worship from among all the deities.

[வழிபடு + தெய்வம்]

இம் மன்பதையில், மாந்தர் வணங்குந் தெய்வம், பற்பலவாயிருப்பினும், ஒருவன், தன் உள்ளத்தை குறிப்பிட்டதொரு தெய்வத்திடம் முழுமையாக ஒப்படைத்து, அத் தெய்வத்தையே நெஞ்சார நினைந்து வணங்குதல்.

வழிபண்ணு–தல் *vaḻi-paṇṇu-*,5 செ.கு.வி. (v.i.) வகை செய்தல்; to provide a way of disposal, way out, sorting out.

[வழி + பண்ணு–.]

வழிபய–த்தல் *vaḻi-paya-*,3 செ. குன்றாவி. (v.t.) 1. பிற்பயத்தல் (தொல். பொருள்.424); to result ultimately in. 2. மறுக்காது கொடுத்தல் (வின்.); to give without refusal.

[வழி + பய–.]

வழிபறி^{1}–த்தல் *vaḻi-paṟi-*, 4 செ.குன்றாவி. (v.t.) இடைவழியிற் கொள்ளை யிடுதல் (சூடா.); to waylay and rob.

[வழி + பறி–,]

வழிபறி[2] *vaḻi-paṟi*, பெ.(n.) வழிப்பறி, வழிக் கொள்ளை (பிங்.); highway robbery. *"வழிபறியுண்ட விடத்தே தாய்முகங் காட்டி னாற்போலே" (ஈடு. 6, 1, 1).*

[வழி + பறி.]

வழிபாடு *vaḻi-pāḍu*, பெ.(n.) 1. வழியிற் செல்லுகை; proceeding on the way. 2. பின்பற்றுகை; following. 3. ஒரு தெய்வத்தையேனும் முழுமுதற் கடவுளை யேனும் வணங்கும் வணக்கம்; reverence, adoration. *"பூசித்துப் பணியும் வழிபாடு பாரீர்" (ஏகாம். உலா, 371).* 4. பூசனை (பிங்.); ritual, worship. *"இத்தளி வழிபாடு செய்வார்க்கு" (S.I.I. Vol.i, 150).* 5. வழக்கம், பயன்பாடு, மரபு (வின்.); use, custom, habit. 6. சமயக் கோட்பாடு (வின்.); religious system.

[வழிபடு→வழிபாடு.]

மொழிஞாயிறு, தமிழர்தம் கடவுள் வழிபாடு அறிவியல் தழுவியதென்பார். தொல்காப்பியர் அறிவியல் நோக்கில், இறைவழிபாட்டினை முதற்பொருளுள் அடக்கியுள்ளார். தொல்காப்பியர் முதற்பொருளென்று மொழிந்தது, எல்லாக் கருப் பொருள்களும் தோன்றுதற்கு நிலைக்களனாகிய காலமும் இடமுமேயாகும். இம் முதற்பொருளே, இறைவன் என்னும் உருவகச் சொல்லிற்குரிய இயல்வரையறையாகும். மணிவாசகரும், "போற்றி என்வாழ் முதலாகிய பொருளே" என்று குறித்துள்ளது, இறைமறுப்பாளரும், இறைப் பற்றாளரும் ஏற்கும் வண்ணம் அமைந்துள்ளது. அறிவியல் அறிஞர் ஐன்சுடீனும், ஒருபொருளின், (நீள, அகல, உயரம்) கனத்தோடு, காலத்தையும் இணைத்தே, கணக்கிட வேண்டும் என்றார்.

இம் முதற் பொருள் கருத்தினைத் தொல்காப்பியர் "காலமும் இடமும் முதற் பொருளென்ப" என்று கூறியுள்ளதால், தமிழர்தம் வழிபாட்டுக் கொள்கையும், சமயவழிபாடும் வாழ்வியலின் வழிப்பட்ட அறிவியல் சார்ந்தது என்பதில், யாதொரு ஐயமில்லையென்க.

வழிபாடுசெய்–தல் *vaḻipāḍu-šey-*,1 செ.கு.வி. (v.i.) கருத்தறிந்து அவர் ஏவாமல் அவர் விரும்பியன செய்தல் (திவ்.திருப்பள்ளி. 5, வ்யா, பக்.31); to serve a great person, guessing his wishes.

[வழிபாடு + செய்–.]

வழிபார்[1]–த்தல் *vaḻi-pār-*, 4 செ.குன்றாவி. (v.t.) எதிர்பார்த்தல்; to expect, to look forward to. *"நாடோறும் வழிபார்த்திரங்கி மனந்தளர்ந்தேன்" (அருட்பா. 5. வேட்கை. 3)*

[வழி + பார்–.]

வழிபார்[2]–த்தல் *vaḻi-pār-*, 4 செ.கு.வி. (v.i.) 1. வழிவகை தேடுதல்; to find a way out; to devise means. 2. உரியகாலம் பார்த்தல் (வின்.); to watch for an opportunity, to wait for an opportune time.

[வழி + பார்–.]

வழிபார்[3]–த்தல் *vaḻi-pār-*, 4 செ.குன்றாவி. (v.t.) நோயாளிகள் வாசற்படியை நோக்கும், இறத்தற்குறி; staring at the gate way by a patient, it is a symptom of death.

[வழி + பார்–.]

வழிபோ—தல் *vaḻi-pō-*,8 செ.குன்றாவி. (v.t.) & செ.கு.வி.(v.i.) வழிப்போ— பார்க்க; see *vaḻi-p-pō-*. *"வழிபோன வருத்தத்தை" (பொருந. 93).*

[வழி + போ—.]

வழிபோவார் *vaḻi-pōvār,* பெ.(n.) வழிச் செல்வோன்; travellers, journeyers. *"வழி போவார் தம்மொடும் வந்து" (தேவா. 916: 2).*

மறுவ. வழிப்போக்கன்.

[வழிபோ—. → வழிபோவார்]

வழிமடக்கு[1]—தல் *vaḻi-maḍakku-*, 5 செ. குன்றாவி. (v.t.) வழிமறி—த்தல் பார்க்க; see *vaḻi-maṟi-*. *மேய்ச்சல்நிலங் கண்டறிந்த இடையன், ஆநிரைகளை வழி மடக்கினான் (உ.வ.).*

[வழி + மடக்கு—.]

வழிமடக்கு[2] *vaḻi-maḍakku,*பெ.(n.) அணி வகை (பிங்.); a figure of speech.

[வழி + மடக்கு]

வழிமறி—த்தல் *vaḻi-maṟi-*,4 செ. குன்றாவி. (v.t.) செல்வதைத் தடுத்தல்; to stop, obstruct, hinder or prevent, as a person from going.

[வழி + மறி—.]

வழிமார்க்கம் *vaḻi-mārkkam,* பெ.(n.) நல்லொழுக்கம்; good behaviour, civility, character, conduct.

[வழி + மார்க்கம்]

Skt. mārga > த. மார்க்கம்.

வழிமுட்டு *vaḻi-muṭṭu,* பெ.(n.) செல்ல முடியாத வழி; blind track or path, dead end. *"வழி முட்டா யிருக்கும் இடங்களும்" (குறிஞ்சிப். 258, உரை).*

[வழி + முட்டு]

வழிமுட்டு—தல் *vaḻi-muṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) (வழித் தோன்றல்) கொடிவழி யற்றுப் போதல் (இ.வ.); to terminate or extinct of a line of heirs or successors.

[வழி + முட்டு—.]

வழிமுதல் *vaḻi-mudal,* பெ.(n.) 1. குல முதல்வன்; progenitor, original head of a family or dynasty. *"அனபாயன் றிருக்குலத்து வழி முதலோர் (பெரியபு. புகழ்ச். 8).* 2. வழிபடுகடவுள் பார்க்க; see *vaḻi-paḍu-kaḍavuḷ. "வாழு நாள் கொடுத்தாய் வழிமுதலே" (தேவா. 485,5).*

[வழி + முதல்.]

வழி = குடிவழி, மரபு. பிறங்கடை தோறும், வாழையடி வாழையென வந்த மரபுவழி, வணங்கும் இறை.

வழிமுரண் *vaḻi-muraṇ,* பெ.(n.) ஒரு செய்யுளில் முரண்டொடை மிகுதியாகப் பயில்வது (காரிகை. ஒழிபி. 6, உரை, பக். 157); to learn contradictory nature in a poem.

[வழி + முரண்]

வழிமுறை[1] *vaḻi-muṟai,*பெ.(n.) 1. வழித் தோன்றல்; descendant, pedigree. *"தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை தீரா விடும்பை தரும்" (குறள், 508).* 2. படித்தர வரிசை, படித்தர வரிசையொழுங்கு; gradation, graduated scale. *"அன்பு*

வழிமுறையாற் சுருங்காது" (திருக்கோ. 275, உரை).

[வழி + முறை]

வழிமுறை[2] *vaḻi-muṟai,* வி.எ.(adv.) பின்பு; afterwards, subsequently. *"வழிமுறைக் காயாமை வேண்டுவல்யான்" (கலித். 82). "நாற்பத் தொன்பது வழிமுறை வந்த" (புறநா. 201: 11).*

[வழி + முறை]

வழிமுறைத்தாய் *vaḻi-muṟai-t-tāy,* பெ. (n.) தகப்பன் முதல் திருமணத்திற்குப் பின், மணந்துகொண்ட தாய்; step mother. *"வழிமுறைத் தாயுழைப் புக்காற்கு" (கலித். 82).*

மறுவ. சிற்றன்னை.

[வழிமுறை + தாய்]

தா→ தாய்.

ஒருகா. தம் + ஆய் → தாய். பிள்ளை நிலையில், புகுந்தகுடிக்கு, மகவினைக் கொடுக்காது போயினும், தமது கணவன் மணந்து கொண்டவளது குழந்தையை தாய் முறையில் வளர்த்துப் பாதுகாப்பவ ளென்றறிக. உறவு வழியில் தாயாகுந் தன்மையுடையவளே, வழிமுறைத்தாய்.

வழிமுறைத்தாரம் *vaḻi-muṟai-t-tāram,* பெ.(n.) முதல் மணத்துக்குப் பின் மணந்து கொண்ட தாரம்; second wife, wife married after the death of the previous wife. *"தன் காதலியை இழந்தபின் வழிமுறைத்தாரம் வேண்டின்" (தொல். பொருள். 79, உரை, பக். 186).*

[வழிமுறை + தாரம்]

தன்→ தரு→ தார்→தாரம்.

தன் என்னும் வினை தருதற் பொருளில் தரு எனத் திரிந்தது. அதன்பின் எதிர்மறை வினையில் தார் அல்லது 'தா' என்றானது. தாரம் என்னும் சொல் தார் என்னும் திரிபடியாகப் பிறந்தது.

முதற்கண் ஆடவர்க்குத் தரப்பட்டவள் மனைவி. பிள்ளையைப் புகுந்தகுடிக்குத் தருவதற்பொருட்டு, வழிமுறையில் முதற்கண் கணவனுக்குத் தரப்பட்ட தாரமே, வழிமுறைத்தாரம் எனலாம்.

வழிமொழி[1]-தல் *vaḻi-moḻi-,* 2 செ. குன்றாவி.(v.t.) 1. வழிபாடு கூறுதல்; to praise. *"வலியரென வழிமொழியலன்" (புறநா. 239, 7).* 2. மொழிந்ததைத் திரும்பக் கூறுதல்; to reiterate, as a statement already made.

[வழி + மொழி.]

வழிமொழிதல் பற்றிப் பேராசிரியர் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் புகல்வது, "தன் தன்மையென வேறின்றித் தன்கைப்படுத்தல்" (தொல். பொருள்.307 பேரா.உரை).

வழிமொழி[2] *vaḻi-moḻi,* பெ.(n.) இசைப் பாட்டு வகையுளொன்று; a kind of rhythmic verse. *"தமிழ் விரகன் வழிமொழிகள்" (தேவா. 149:12).*

[வழி + மொழி]

வழிமொழி[3] *vaḻi-moḻi,* பெ.(n.) அணிவகை (யாப்.வி.பக்.511); a figure of speech.

[வழி + மொழி.]

வழிமோனை *vaḻi-mōṉai,* பெ.(n.) இன வெழுத்தால் வரும் மோனைத் தொடை (தொல். பொருள். செய். 94, பேரா. உரை); vowel and consonantal assonance in metrical alliteration.

[வழி + மோனை]

வழியசை *vali-y-asai,* பெ.(n.) கலிப்பாவில் வரும் ஓர் உறுப்பு (கலித். 90, உரை); a member of kali verse.

[வழி + அசை. அல்→அலை→அசை.]

வழியட்டு-தல் *vali-y-attu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வழிய விடுதல்; to cause to overflow or overspread, to be brimmed. *"நெருப்பை வழியட்டினாற் போல்" (ஈடு,4, 6, 2).*

[வழி + அட்டு-.]

வழியடியார் *vali-y-adiyār,* பெ.(n.) வழிவழித் தொண்டர்; hereditary worshippers or devotees. *"வழியடியோம் வாழ்ந்தோங்காண்" (திருவாச. 7, 11).*

[வழி + அடியார்]

வழியடை¹-த்தல் *vali-y-adai-,* 4 செ. குன்றாவி.(v.t.) 1. செல்லவொட்டாது வழித் தடை செய்தல்; to obstruct or hinder or present or wall the way. *"வாழ்நாள் வழியடைக்குங் கல்" (குறள், 38).* 2. தடுத்தல் (வின்.); to raise obstacles in the way of; to impede, to felter, to stop, prevent, hinder.

[வழி + அடை-.]

வழியடை² *vali-y-adai,* பெ.(n.) இடையூறு, தடை; obstruction, obstacle, felter, hindrance. *"அறந்தெரி திகிரிக்கு வழியடை யாகும்" (பதிற்றுப். 22,4).*

வழியடை³ *vali-y-adai,* பெ.(n.) தாயத்தின் பின்னுரிமை யுடையான்; presumptive heir. *"தாயத்து வழியடையாகிய இளங்கோ நம்பியும்" (பெருங். உஞ்சைக். 37, 222).*

[வழி + அடு¹ →அடை.]

வழியம்பலம் *vali-y-ambalam,* பெ.(n.) வழிப்போக்கர் தங்குவதற்குரிய விடுதி (நாஞ்.); wayside inn or rest house.

[வழி + அம்பலம். அம்பு→அம்பல்→அம்பலம் = பலர் கூடுமிடம்]

வழியல்¹ *valiyal,* பெ.(n.) வழிந்தோடுவது (யாழ்.அக.); that which overflows or drains off, surplusing.

[வழி² →வழியல்]

வழியல்² *valiyal,* பெ.(n.) வழித்தெடுக்கப் பட்டது (யாழ்.அக.); that which is gathered together by wiping, scraping, etc.

[வழி⁴ →வழியல்]

வழியலை-த்தல் *vali-y-alai-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஆறலைத்தல் (பொருந. 21, உரை); to rob on the highway.

மறுவ. வழிப்பறித்தல்.

[வழி + அலை-த்தல். அலை-த்தல் = அடித்தும் துன்புறுத்தியும் பறித்தல்]

அலைத்தல் = வருத்துதல். அல்→அலை. அலை-தல் (த.வி.)→அலை-த்தல் (பி.வி.)

வழிப்போக்கரைத் துன்புறுத்தி, அவர்தம் உடைமைகளைத் தன்வயப்படுத்தல். ஆறலைக் கள்வர்தம் வழியலைத்தல் தொழில், சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை போன்றவற்றில் மிகுதியாகப் பேசப்படுகிறது.

வழியளவை *vali-y-alavai,* பெ.(n.) கருதலளவை; inference, as a mode of proof, derivation, deducing. *"ஆன்றோராற் செய்யப்பட்ட மிருதி முதலியவற்றிற்கு, மூலவேதம்*

உண்டென்று வழியளவையா லுணரப்படுதலின்" (சி.போ. பா.அவையடக். பக். 16).

[வழி + அளவை. அள்→அள→அளவை.]

காட்சி, கருத்து, ஒப்பு, உரை என்னும் நால்வகை ஏரண அறிவழி யளவைகளுள், வழியளவையும் ஒன்று.

வழியன்[1] *vaḻiyaṉ,*பெ.(n.) பெருநோயாளன் (யாழ்.அக.); leper.

மறுவ. தொழுநோயாளன்.

[அழியன்→வழியன்]

இப் பெருநோயின் விளைவால் உடலுறுப்புகள் குறையும். கை, கால் விரல்கள் அழுகும். அருவருக்கத்தக்க நிலையினைத் தோற்றுவிக்கும்.

வழியன்[2] *vaḻiyaṉ,*பெ.(n.) அரியவன்; a man of incognito. *"இன்று சென் றெய்தும் வழியனு மல்லன்" (புறநா. 389 : 7).*

வழியனுப்பு-தல் *vaḻi-y-aṉuppu-,*5 செ. குன்றாவி.(v.t.) 1. செலவு மேற்கொள்ள விடுதல்; to see one off, send some one to. 2. சென்று வருதற்கு விடைகொடுத்து அனுப்புதல்; to bid farewell. *வெளிநாடு செல்லும் தலைவரை வழியனுப்பத் தொண்டர்கள் பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் திரளாகக் கூடினர்.*

[வழி + அனுப்பு-. வழியனுப்புதல் = விடைகொடுத்தனுப்புதல், போகச் செய்தல்.]

வழியனுப்புதல் மக்களிடையே பரவலாக, இன்று வழக்கில் உள்ளது. வீட்டிற்கு வந்த விருந்தினரை வாசல்வரை சென்று வழியனுப்புவதும், நண்பரை அல்லது உறவினரை பணியின் பொருட்டோ அல்லது படிப்பிற்காகவோ, வெளிநாட்டிற்கு வழியனுப்புவதும், விழா முடிந்தவுடன் தலைவரை, அவர்தம் மகிழ்வுந்தில் ஏறும்வரை உடன்சென்று வழியனுப்புவதும், இன்று காணப்படும் நிகழ்வாகும்.

வழியனுப்புவிழா *vaḻi-y-aṉuppu-viḻā,* பெ.(n.) விடைகோடல் விழா; farewell function.

[வழியனுப்பு + விழா. விழு + ஆ (ஆ = தொழிற் பெயரீறு).]

வழியாக *vaḻiyāga,*இடை.(part.) 1. மூலம்; through, by. 2. வேற்றுமை உருபு 'இன்' என்பதற்கு பின் வருகின்ற சொல்; after the case suffix. *பலகணியின் வழியாகத் தென்றல் வீசியது (உ.வ.).*

[வழி→வழியாக.]

வழியாமணக்கு *vaḻi-y-āmaṇakku,*பெ. (n.) புல்லாமணக்கு; a eastor plant, *Sebastiana chamaelea.*

[வழி + ஆமணக்கு. அவிழ்→அவிழம்→அவிணம்→ஆவிணம்→ஆவணம்→ஆமணம்→ஆமணக்கு.]

அவிழ் = முளையவிழும், வித்து. எண்ணெய் வித்தாகப் பயன்படும் முதற்காரணம் கருதி, 'அவிழ்' அடியாக இச் சொல் தோன்றியது. ஆமணக்கு வகை பதினேழுள் வழியாமணக்கும் ஒன்று. இஃது மிகுதியாக எண்ணெய் நல்கும் வித்தென்று, நிலைத்திணை இயல் வல்லுநர் கூறுவர்.

வழியாயம் *vaḻiyāyam,*பெ.(n.) வரி (சுங்கம்) (கல்.); toll, excise.

[வழி + ஆயம்[3]]

வழியிரங்கு-தல் *vaḻiy-iraṅgu-,*5 செ.கு.வி. (v.i.) பின்னிரங்குதல்; to repent. *"கற்றொறுங் கல்லாதே னென்று வழியிரங்கி" (பழமொ. 2).*

[வழி + இரங்கு-.]

இரங்குதல் = மனமிரங்கிக் கூறுதல். இள → இர →இரங்கு.

நடந்து முடிந்த, செயலை நினைந்து மனமழுந்துதல் அல்லது உள்ளங் குமைதல் வழியிரங்குத லாகும்.

வழியிலார் *vaḻiyilār,* பெ.(n.) கொடி வழியினர்; descendants, pedigee. *"சாத்தனும் இவன் வழியிலாரும் பெறக்கடவதாகவும்" (புதுக்.கல். 11).*

[வழி → வழியிலார். வழி = தலைமுறை, வழியிலார் = வழித்தோன்றல் அல்லது மரபினர்.]

வழியீற்றுப்பசும்பால் *vaḻi-y-īṟṟu-p-paśum-pāl,* பெ.(n.) தானீன்ற கன்றிற்குப் பலமுறை கொடுக்கும் பால் அல்லது, நெடுங்காலமாக ஈன்ற கன்றிற்குக் கொடுத்து வரும் பால்; milk of of the cow that has calfed many times or that has calfed a long time before.

[வழி + ஈன் →ஈனு →ஈற்று + பசு + பால்.]

Skt. pasu > த. பசு.

வழியுங்காந்தி *vaḻiyuṅ-kāndi,* பெ.(n.) அப்பிரக நஞ்சு; a kind of arsenic.

வழியுணவு *vaḻiyuṇavu,* பெ.(n.) வழிச்சோறு, 1 (பிங்.) பார்க்க; see *vaḻi-c-cōṟu, 1.*

[வழி + உணவு.]

வழியுரை-த்தல் *vaḻi-y-urai-,* 4 செ.கு.வி. (v.i.) தூது சொல்லுதல்; to speak as an ambassador. *"வழியுரைப்பான் பண்பு" (குறள், 688).*

[வழி + உல் → உர → உரை-.]

வழியுரைப்பான் *vaḻi-y-uraippāṉ,* பெ.(n.) தூதன் (பிங்.); ambassador.

[வழி + உரைப்பான். உல் → உர → உரை → உரைப்பான்.]

ஒரு நாட்டின் சார்பாகச் செய்தி யறிவிப்பாளனாக அல்லது நிகராளியாக, மற்றொரு நாட்டிற்கு அனுப்பப்படும் உயரதிகாரி - நிலைத்தூதன்.

ஒரு நாட்டின் அரசியல், பொருளாதாரம், பண்பாடு தொடர்பான செய்திகள், மற்றொரு நாட்டிற்குத் தூதன்வழி யுரைக்கப்படுவதால், வழியுரைப்பான் என்னுஞ் சிறப்புப் பெயர் பெற்றான்.

வழியெச்சம் *vaḻi-y-eccam,* பெ.(n.) குடும்ப வழி தொடர்தற்குரிய மகப்பேறும், சுற்றமும்; descendants, offspring and kith an kin. *"இத்தர்மம் அழிவு செய்வான் வழியெச்ச மறுவான்" (S.I.I. Vol. V. 224).*

மறுவ. வழிமரபு, உற்றார் உறவினர்.

[வழி + எச்சம். எஞ்சு → எச்சு → எச்சம். வழியெச்சம் = வழித்தோன்றல், பிறங்டை.]

வழியெச்சமறு-தல் *vaḻi-y-eccam-aṟu-,* 5 செ.கு.வி. (v.i.) வழியெஞ்சு-.தல் பார்க்க; see *vaḻi-y-eñju-. "இத்தர்மம் அழிவு செய்வான் வழியெச்சமறுவான்" (S.I.I. Vol. V. 83)*

[வழி + எச்சம் ' + அறு-.]

அர் → அறு. ஒ.நோ. உர் → உறு.

வழியெஞ்சு-தல் *vaḻi-y-eñju-,* 5 செ.கு.வி. (v.i.) கொடிவழியற்றுப் போதல்; to become extinct, as a family. *"வழியெஞ்சு லெஞ்ஞான்று மில்" (குறள், 44).*

[வழி + எஞ்சு-.]

வழியெதுகை *vaḻi-y-edugai,* பெ.(n.) ஒரு செய்யுளில் அடிதோறும் முதன்மூன்று சீர்க்கண்ணும் வரும் எதுகை வகை (காரிகை, ஒழிபி. 6, உரை, பக். 158); an agreement in rhyme of the first, the second and the third foot in every line of a stanza.

[வழி + எதுகை. எதிர்க்கை→எதுகை.]

வழியொழுகு-தல் *vaḻi-y-oḻugu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. பின் செல்லுதல்; to follow, to repeat. 2. நேர்வழியிற் செல்லுதல்; to go along the right path, to be upright. *"வழியொழுகாச் சலதரன்" (காஞ்சிப்பு. கடவுள். 5).* 3. ஏவலின்படி நடத்தல்; to obey, as a direction or command. *"வாய்மையான் வழியொழுகின்று" (பு.வெ.8, 11, கொளு.).*

[வழி + ஒழுகு-.]

வழியோன் *vaḻiyōṉ,* பெ.(n.) வழித்தோன்றல் (பிங்.) பார்க்க; see *vaḻi-t-tōṉṟal.*

[வழி → வழியோன்.]

வழிவகு-த்தல் *vaḻi-vagu-,* 4 செ.குன்றாவி. (v.t.) வழிகோலு பார்க்க; see *vaḻi-kōlu.*

[வழி + வகு-]

வழிவகை *vaḻi-vagai,* பெ.(n.) 1. இடம் பொருளேவல்கள்; theatre or place, resources and conveniences. *வழி வகையுள்ளவன்.* 2. வழிமுறை, தகுமுறை; expedients, means. 3. ஒரு செயல் நடைபெறுவதற்கான ஏற்பாடும், திட்டமும்; way or method. *பொருளாதாரத்தில் பின்தங்கியவர் முன்னேற அரசியல் சட்டத்தின் வாயிலாக வழிவகை செய்யப் பட்டது (உ.வ.).*

[வழி + வகை]

வழிவந்தான் *vaḻi-vandāṉ,* பெ.(n.) 1. கொடி வழிப்பிறந்தவன்; descendant. 2. பின்பற்றி யொழுகுவோன்; follower. *"மறையின் வழிவந்தார்கண்ணே" (ஏலாதி,1).* 3. நற்குடியிற் பிறந்தோன்; one born of a good family. *"என்றும் வழி வந்தார்" (ஏலாதி, 1).*

[வழிவா → வழிவந்தான்]

வழிவருத்தம் *vaḻi-varuttam,* பெ.(n.) இருக்கும் ஊர், நகரம் முதலியவற்றிலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லுவதால் ஏற்படும் வழிநடைக் களைப்பு; tiredness, fatigue or weariness from journey. *"வழிவருத்தந் தீர்ந்திருந்த இரவல" (சிறுபாண்.40, உரை).*

மறுவ. வழிநடைத்துன்பம்.

[வழி + வருத்தம்]

வழிநடைத்துணையின்றி தன்னந்தனியே நெடுந்தொலைவு செல்லுதலால், ஏற்படும் மெய் வருத்தம்.

வழிவரு-தல் *vaḻi-varu-,* 18 செ.கு.வி. (v.i.) வழிவா-தல் பார்க்க; see *vaḻi-vā-.*

[வழி + வரு-.]

வழிவலியுடையோன் *vaḻi-vali-y-uḍaiyōṉ,* பெ.(n.) ஓணான்; a species of lizard family. *'வேலிக்கு ஓணான் சான்று' (பழ.).*



[வழி + வேலி→ வலி + உடையோன்.]

வழிவழி *vaḻivaḻi*, பெ.அ.(adj.) தலைமுறை தலைமுறையாய்; from generation to generation. *"பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து" (தொல். பொருள். 422). "அழிவி லுள்ளம் வழிவழிச் சிறப்ப" (அகநா. 47 : 1), "வழிவழிச் சிறக்க எனவேட் டேமே" (ஐங்குறு. 2 : 6).*

மறுவ. சரவடி.

[வழி + வழி = தொடரும் தலைமுறை.]

வழிவழி வந்ததும், நீண்ட தொடர்பினை யுடையதுமாய் அமைந்த, குழு அல்லது இனம்.

வழிவழிப்படு-தல் *vaḻi-vaḻi-p-paḍu-*, 20 செ.கு.வி.(v.i.) மரபுவழிப்படுதல்; to follow customs or norms. *"புல் லிலை ஓமைய புலிவழங்கு அத்தம் சென்ற காதலர் வழிவழிபட்ட நெஞ்சே" (நற்.107 : 6-7).*

[வழிவழி + படு-.]

வழிவழியாக *vaḻi-vaḻiyāga*, கு.வி.எ. (adv.) மரபு; from genaration to generation, conventionally. *இது வழிவழியாக இப்படித்தான் நடந்து வருகிறது (இ.வ.). வழிவழியாகத் தொடரும் மரபினை மாற்றுவது கடினம் (உ.வ.).*

மறுவ. கொடிவழி, கொடிவழியாக.

[வழிவழி + ஆக.]

தலைமுறை கடந்து நீண்ட நெடுந் தொடர்பினை வழிவழியாகக் கொண்டதோரினம். மரபு, செய்தி முதலியவை தொடர்வதைக் குறிக்கையில், முதல் தலைமுறைக்கு அடுத்தது, என்ற பொருண்மையைக் குறிக்கப் பயன்படுத்தும் கூட்டுச் சொல்லாகும்.

வழிவழியாய்ப்போ-தல் *vaḻi-vaḻi-y-āy- p-pō-*, 8 செ.கு.வி.(v.i.) வெவ்வேறு வழியாகப் பிரிந்து போதல் (வின்.); to disperse in different directions.

[வழி + வழி + ஆ + போ-.]

வழிவா-தல் *vaḻi-vā-*, 8 செ.கு.வி.(v.i.) 1. மரபுவழி வருதல்; to be hereditary. *"வழிவருகின்ற வடியரோர்க்கருளி" (திவ். திருவாய், 9, 2, 2).* 2. தொன்று தொட்டு வருதல்; to be handed down from generation to generation. *"வழிவந்த கேண்மையார்" (குறள், 809).* 3. நற்குடிப் பிறத்தல்; to hail from a good family. 4. பின்பற்றியொழுகுதல்; to follow, to abide by. *"மறையின் வழிவந்தார்" (ஏலாதி, 1).* 5. அறநூல்களிற் கூறியவாறு, பிறழாது நடத்தல்; to follow or adhere strictly the precepts of the sāstras. *"குடிகுடி வழிவந்தாட்செய்யுந் தொண்டரோர்க் கருளி" (திவ். திருவாய். 9,2,1).*

[வழி + வரு→வா-.]

வழிவிடு[1]-தல் *vaḻi-viḍu-*, 20 செ. குன்றாவி. (v.t.) 1. புறப்பட்டுப்போகச் செய்தல், விடுதல்; to see one off. *"நேச வெகுமானங்கள் செய்தெழுதல் வழிவிடுதல்" (திருவேங். சத.*

58). 2. பாதையிலிருந்து விலகுதல்; to make way for somebody. *தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்த பெண்கள், பெரியவர் எதிர்ப்பட்டதும் வழிவிட்டார்கள் (இ.வ.). புகழ்பெற்ற ஆட்டக்காரர், தாம் இனிப் போட்டிகளிற் கலந்துகொள்ளப் போவதில்லை என்றும், புதுவதாய்க் களமிறங்கவிருக்கும் இளம் வீரர்களுக்கு வழிவிட விரும்புவதாகவும், தொலைக்காட்சி நேர்காணலிற் கூறினார் (இ.வ.). வாழ்க்கைப் பாதையில் முன்னேறிச் செல்பவர்களுக்குத் தடையாக இல்லாமல், விலகி வழிவிடுதல்.*

[வழி + விடு-.]

வழிவிடு²–தல் *vaḻi-viḍu-,*20 செ.கு.வி. (v.i.) 1. செல் வழி திறத்தல்; to make or open a way. 2. நெறிதவறுதல் (வின்.); to stay from the right ways or path. 3. மாற்று வழியின் வாயிலாகச் செயல் முடிக்க ஏற்பாடு செய்தல்; to devise means, to find a way out, as from a difficult situation. 4. இடையூறுகளைப் போக்குதல்; to mitigate or remove obstacles or obstructions. 5. இறக்குந் தறுவாயில் கழுவாயாகச் (பிராயச்சித்தமாக) சடங்குகளைச் செய்தல் (இ.வ.); to perform certain rituals when a person is at the point of death.

[வழி + விடு-.]

வழிவை–த்தல் *vaḻi-vai-,*4 செ.கு.வி. (v.i.) 1. சுற்றுலா அல்லது புறப்பாடு தொடங்குதல் (யாழ்.அக.); to start or commence a journey. 2. முன் செய்து காட்டுதல்; to begin first, to set an example to be a model. 3. கேடு சூழ்தல்; to plot one's ruin. *அவனுக்கு வழி வைக்கிறான்.*

[வழி + வை-.]

வழு¹ *vaḻu,* பெ.(n.) கன்று முதலியன பிறக்கும்போது காணப்படும் சவ்வு முதலியன; dirt or mucus, as on the body of a calf just yeaned. *"வழு நுகர்ந்தா தரவொடு கன்றுகள்" (நூற்றெட்டு. திருப்பு. 67).*

[வழ→வழு.]

வழு² *vaḻu,* பெ.(n.) 1. தவறு, குற்றம் (தக்கயாகப். 7); error, mistake, fault, flaw, lapse. 2. இழப்பு, கேடு, சூடா.); damage, loss. 3. கரிசு (பாவம்); sin. *"வழுவாய் மருங்கிற் கழுவாயுமுள" (புறநா. 34).* 4. பழிப்புரை; scandal, ill-repute. *"வழுவெனும் பாரேன்" (சிலப். 16, 69).* 5. திணை, பால் முதலியன தத்தம் இலக்கணநெறி மயங்கி வருவதாகிய குற்றம் (நன். 375); solecism, impropriety in language; deviation from rule. *"எழுவுறழ் திணிதோள் வழுவின்று மலைந்தோர்" (புறநா. 61 : 16), "வழுவிலன் அம்ம தானே குழீஇ" (நற். 143 : 6).*

[முழு→மழு→வழு]

வழு என்னும் சொல்லின் பொருட் பொருத்தப்பாடு குறித்து, யாப்பருங்கல விருத்தி, இளம்பூரணர், சேனாவரையர் முதலானோர் கூறும், உரைக்குறிப்புகள் வருமாறு:–

1. வழு என்பது குற்றம். அது நான்கு வகைப்படும். எழுத்து வழுவும், சொல் வழுவும், யாப்பு வழுவும் என (யாப்.95).

2. செய்ததன்கண் முடிய நில்லாது, தப்பி ஒழுகுதல் (தொல்.பொருள்.143, இளம்.).

3. சொல்லுதலே அன்றி ஒழுக்கத்து இழுக்கி ஒழுகுதல் (தொல்.பொருள்.145, நச்.).

4. வழு எழுவகைப்படும் (தொல். சொல்.11, சேனா.).

5. எழுவகை வழுவாவன : திணைவழு, பால்வழு, இடவழு, காலவழு, செப்புவழு, வினாவழு, மரபு வழு என்பன (தொல். சொல்.1, இளம்.).

6. வழு ஏழுவகைப்படும் (தொல். சொல்.11, சேனா.).

7. சொல்லுதலே அன்றி ஒழுக்கத்து இழுக்கி ஒழுகுதல் (தொல்.பொருள்.145, நச்.).

வழுக்கட்டை *va̲lu-k-kaṭṭai*, பெ.(n.) 1. உருண்டு திரண்டிருக்கை; plumpness. "*வழுக்கட்டை பயல்.* 2. மூடத்தனம் (வின்.); stupidity. 3. சிறுபிள்ளை (இ.வ.); child, young person, an adolescent in comtempt.

[மழுக்கு → மழுக்கட்டை → வழுக்கட்டை (மு.தா.3, பக்.105).]

வழுக்கம் *va̲lukkam*, பெ.(n.) 1. தவறு; error, slip, flew, mistake. *"வாய்மை வழுக்க முறுதலஞ்சி" (பெருந்தொ.994).* 2. ஒழுக்கத் தவறு; lapse of conduct. *"மறைநூல் வழுக்கத்துப் புரிநூன் மார்பர்" (சிலப்.13,38).*

[வழு →வழுக்கு → வழுக்கம்]

வழுக்கல் *va̲lukkal*, பெ.(n.) 1. சறுக்குகை; slipperiness. 2. சறுக்கலான தரை (திவா.); slippery ground. 3. தெங்கினிளங்காய்; tender coconut.

[வழு → வழுக்கு → வழுக்கல் = வழுக்கைத் தேங்காய் (தேவநேயம்.12, 260).]

வழுக்கையான இடமும் பொருளும் வழுக்கும் தன்மைத்து.

வழுக்கல் = வழுவழுப்பு, வழுக்கைத் தேங்காய்.

வழுக்கா-த்தல் *va̲lu-k-kā-*,4 செ. குன்றாவி. (v.t.) 1. குறித்த பொருளை அதற்குரிய சொல்லாற் கூறுதல்; to utter proper word to mention a partcular theme or thing. 2. வழுவமை-த்தல் பார்க்க; see *va̲lu-v-amai-*.

[வழு+கல்→கள்→கவ்(வு)→கா-.]

கவ்வுதல் = பிடித்தல், காத்தல். தீங்கு வராமல் தடுத்தல், விலக்குதல், பேணிக்காத்தல் என்னும் பொருண்மைகளில், இலக்கியத்திலும், மக்களிடையேயும் வழக்கூன்றியுள்ளது. 'கா' என்னும் வினையடி, பாதுகாத்தல் என்னும் பொருள் தரும். வழுக்காத்தல் என்னுஞ்சொல், ஒரு பொருளின் தன்மையைப் பேணிக்காத்தல் என்னும் பொருள் பயத்தல் காண்க. இச் சொல் குறித்து, சேனாவரையரும், சுப்பிரமணிய தீட்சிதரும் கூறியுள்ளமை வருமாறு :-

"வழுவற்க என்றலும் வழு அமைத்தலும் என
வழுக்காத்தல் இருவகைப்படும்"

(தொல். சொல். 11, சேனா.)

குறித்த பொருளை அதற்குரிய சொல் அன்று ஆயினும், ஓராற்றான் அப்பொருளை விளக்குதலின் அமைக என்றல், வழுக்காத்தலாம் (சுப்பி. பிரயோ.44).

வழுக்காய் *va̲lukkāy*, பெ.(n.) வழுக்கலுள்ள இளந்தேங்காய் (வின்.); tender coconut in which the pulpy matter has just begun to form.

[மழுக்கு →வழுக்கு + காய் [3]]

வழுக்குந்தன்மையுள்ளதும், இளம் பதத்திலுள்ளதுமான தெங்கினிளங்காய்.

வழுக்காறு *valukkāru*, பெ.(n.) தீய நெறி; evil way or method. *"வழுக்காறனைத்து முறுவிக்கும்" (விநாயகபு. 2, 32).*

[வழு→வழுக்கு + ஆறு. அறு→ ஆறு = வழி.]

வழு = குற்றம். வழுக்காறு = தீயவழி.

வழுக்கிவிழு–தல் *valukki-vilu-*, 2 செ.கு.வி. (v.i.) வாழ்க்கை நெறியிலிருந்து பிறழ்ந்து போதல்; to astray.

[வழு→வழுக்கு→வழுக்கி + வீழ்→விழு–.]

வழுக்கு[1]–தல் *valukku-*, 5 செ.கு.வி. (v.i.) 1. சறுக்குதல்; to slip; to slide, as in slippery lands. *"வழுக்கி வீழினுந் திருப்பெயரல்லான் மற்றியா னறியேன்" (தேவா. 1110, 1). வேடிக்கை பார்த்துக் கொண்டே நடந்தவன் வாழைப் பழத்தோலில் கால் வைத்ததால், வழுக்கி, விழுந்தான் (இ.வ.). வாழ்க்கைப் பாதையில் வழுக்கி விழுந்தவர் மீள்வது கடினம் (உ.வ.). பாசி படர்ந்த குளத்துப் படி வழுக்கும் (உ.வ.).* 2. தவறு செய்தல்; to err, to commit a mistake or wrong. *"கோள் வழுக்கி" (கலித். 104).* 3. தப்புதல்; to escape. *"வழுக்கிக் கழிதலே நன்று" (நாலடி, 71).* 4. மறத்தல்; to be forgetful. *"வழுக்கியும் வாயாற் சொலல்" (குறள், 139).* 5. அசைதல் (வின்.); to move back and forth, as the eyes.

ம. வழுக்குக.

[மழு→வழு→ வழுக்கு–.]

ஒருகா. வழுவழுத்தல் என்றுமாம்.

ஈளை நிலப்பரப்பில் பிடிப்பு இல்லாமல் நழுவிச் சரிதலும், வாழ்க்கைப் பாதையில் பொருளாதாரச் சீர்குலைவுக்காளாகி நிலைகுலைதலும், பாசி படர்ந்த படிக்கட்டில் சறுக்கிச் சாய்தலும், வழுக்குதல் எனலாம்.

வழுக்கிவிழுதல் என்பதும் அது. 'வழுக்கி விழுந்தவள்' எனப் பெண்ணைப் பழிக்கும் ஆணுலகம் – ஏன் பெண்ணுலகமும் கூட, ஆணை வழுக்கி விழுந்தவனாகச் சொல்வது இல்லை. வழுக்கி விழுந்தவர்கள் கடைத்தேறவென்றே அரும்பாடு பட்டார் முத்துலக்குமி அம்மையார். காந்தியடிகள் தம் தொண்டில் ஒரு பகுதி வழுக்கி விழுந்தவர் கடைத்தேற்றத்திற்கு உரிமை கொண்டது. ஒருவர் வழுக்கினால், இன்னொருவரும் வழுக்குதலுக்கு அடிப்படையாக இருந்திருக்க வேண்டுமே! அவரைத் தப்பவிட்ட வழுக்குதலே வழுக்குதலாம். 'அவள் வழுக்கி விழுந்தவளாமே' எனப் பார்வை பார்ப்பது பரிவாக இருந்தால் நலம்! எரிவாக இருந்தால்? எய்தவன் இருக்க அம்பை நோவதாம் பழியே. வழுக்கி விழுதல், வழிதவறல், கைவிடல் என்பனவும் இச் சார்புடையனவே (வழுக்குச்சொல். அகராதி. ப.114, 115).

வழுக்கு[2]–தல் *valukku-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. ஒழிதல்; to exempt, to keep out of account. *"ஒன்னார் வழுக்கியுங் கேடீன் பது" (குறள், 165).* 2. அடித்தல்; to beat, to thrash. 3. மோதுதல் (வின்.); to dash against.

[வழுவு → வழுக்கு–.]

(ஒ.நோ.) நழுவு→நழுக்கு.

வழுக்கு[3] *valukku*, பெ.(n.) 1. சறுக்குகை; slipping. 2. தவறு; error, mistake. 3. குற்றம்; fault. 4. பிழை; mistake or wrongness. 5. தோல்வி; failure. 6. மறதி (பிங்.); forgetfulness. 7. பயன்படாது கழிவது; that which comes useless. *"வழுக்கினுள் வைக்குந்தன் னாளை" (குறள், 776).* 8. கொழுப்பு; grease. 9. சளிச்சவ்வு, சளி, சளியால் மூடப்பட்ட நீர்ப்பொருள்;

mucous, mucus. *"நிணம் பொதி வழுக்கிற் றோன்றும்" (ஐங்குறு. 207).*

[முல்→மல்→மழு→வழு→வழுக்கு.]

வழுக்குநிலம் *vaḻukku-nilam,* பெ.(n.) சறுக்கலான தரை (திவா.), (குறிஞ்சி. 288, உரை); slippery ground.

மறுவ. ஈளைத்தரை

[மழுக்கு→வழுக்கு + நிலம்]

வழுக்குப்பாசி *vaḻukku-p-pāši,* பெ.(n.) நீர்ப்பாசி வகை (வின்.); a kind of moss, Lichen.

[வழுக்கு + பாசி]

வழுக்குமரம் *vaḻukku-maram,* பெ.(n.) விளையாடற்குரிய சறுக்கு மரம்; greased pole to climb on, in sports.

[வழு→வழுக்கு + மரம்]

நுனிக்கொம்பிலிருக்கும் பரிசுப் பொருளைக் கைப்பற்றுதற் பொருட்டுப், போட்டியிட்டு ஏறும் எண்ணெய் தடவப்பட்ட வழுவழுப்பான நீண்டுயர்ந்த கம்பமே, வழுக்கு மரமாகும். வழுக்குமர விளையாட்டுப் போட்டி ஊரகத்தே இன்றும் காணப்படுகிறது.

வழுக்குவெண்டி *vaḻukku-veṇḍi,* பெ.(n.) வழவழப்பான வெண்டைக்காய்; okra, ladies finger which is viscous-Hibiscus esculentus.

[வழு→வழுக்கு + வண்டை→வெண்டை→வெண்டி]

வழுக்கெண்ணெய் *vaḻu-k-keṇṇey,* பெ.(n.) கொழுப்பும், எண்ணெயுங்கலந்த கலவை வகை (யாழ்.அக.); a mixture of grease and oil.

[வழுக்கு + எண்ணெய்]

எள் + நெய் = எண்ணெய்.

எண்ணெய் என்னுஞ்சொல் முதற்கண் நெய்ப் பொருள் எல்லாவற்றிற்கும் பொதுப்பெயராயிருந்து, காலப்போக்கில் சிறப்புப் பெயராயிற்று. முதன்முதலாக எள்ளின் நெய்யைக் குறித்த எண்ணெய் என்னுஞ் சொல், மிகப்பெருவழக்காய் வழங்கியதால், நாளடைவில் தன்சிறப்புப் பொருளை யிழந்து, நெய்யல்லாத நெய்மப் பொருள்களின், பொதுப்பெயராயிற்று. வழுக்கும் இயல்புள்ள, கொழுப்பு மிகுதியாகக் கலந்த எண்ணெய் வழுக்கெண்ணெய் என்று மக்களிடையே வழக்கூன்றியது.

வழுக்கை[1] *vaḻukkai,* பெ.(n.) 1. இளவழுக்கை; the tender kernal or pulp inside- a tender cocoanut. 2. மூன்று மாதத்திய பிண்டக்கரு; foetus of 3 months old. 3. உகிர் உண்டாகும் பொருள்; proximal end of the nailbed. 4. (பிரமி) வழுக்கைப்பூடு; a plant-gratiola monera. 5. மொட்டை; shaven head. 6. வட்ட வழுக்கை; a tree. 7. மயிர் முளையாமை; a skin disease which destroys the hair fex manges.

[முல் → மொழு → மொழுக்கை → மழுக்கை → வழுக்கை = இளந் தேங்காய் (தேவநேயம்.12, பக்.260).]

இளமை, புதுமைப் பொருளைக் குறிக்கும் முல் என்னும் முதனிலையினின்று முகிழ்த்த சொல். காலப்போக்கில் இச் சொல்லே முதிராத இளங்கருவினையும், மொழுமொழுவென்று, மழித்தாற் போலுள்ள வழுக்கைத் தலையினையும், குறிக்கலாயிற்று.

வழுக்கும் இடமும், வழுக்கும் பொருளும் வழுக்கையாம். முன்னது வரப்பு வழுக்கல்; பின்னது இளநீரில் வழுக்கை. தலை வழுக்கை, வழுக்கையுமாம் மழுக்கையுமாம். முழுக்க வழிந்தது, மழுக்கை; மயிர் உதிர்ந்து முளைக்காதது வழுக்கை. வழுக்கைக் கல் போல, பொருள் போல அமைந்தது என உவமைப் பொருளதாம்.

இங்குக் காணும் வழுக்கை அப் பருப்பொருள் நீங்கிய நுண்பொருள் வழுக்கையாம். ஒன்றைச் சொன்னால், 'ஆம்' என ஏற்காமல், 'அன்று' எனவும் மறுக்காமல், வழுக்கிக் கொண்டு போய்விடலாம். 'அவனே வழுக்கை; அவன் எப்படி எள்ளுக்காய் பிளந்தது போலத் தீர்த்து வைக்கப் போகிறான்' என்னும் தெளிவு, வழுக்கைப் பொருள் விளக்கும் (வழக்குச் சொல் அகராதி.ப.114).

வழுக்கை² *vaḻukkai,* பெ.(n.) 1. வழு வழுப்பான இளந் தேங்காயின் உள்ளீடு; pulp of a tender cocounet. *"முதிரா வழுக்கை யிளநீர்" (குமரே. சத. 19).* 2. தலைமயிர் உதிர்ந்து வளராத நிலை; baldness.

[முல் → முழு → மொழு → மொழுக்கை → மழுக்கை → வழுக்கை]

மொட்டையான பொருள்கள், சிறப்பாக மழித்த தலை, வழுக்கையாயிருப்பதால் மழுக்கைக் கருத்தினின்று, வழுக்கைக் கருத்துப் பிறந்தது.

வழுக்கைக்கெளிறு *vaḻukkai-k-keḷiṟu,* பெ.(n.) 1. நீலநிறமும் ஆறு அடி வளர்ச்சியுமுள்ள ஆற்று மீன் வகை; a fresh water fish, bluish, attaining 6 ft. or more in length. 2. நீலநிறமும் நீண்ட முள்ளுமுள்ள ஆற்றுமீன்; a fresh-water fish with long maxillary barbels, bluish.

[வழுக்கை + கெளிறு]

குள்→கெள்→கெளிறு. கெளுத்திமீன் வகையு ளொன்று.



வழுக்கைத்தலை *vaḻukkai-t-talai,* பெ.(n.) பொட்டலாயிருக்கும் தலை; bald head.

[மழுக்கை→வழுக்கை + தலை]

வழுக்கைத்தேங்காய் *vaḻukkai-t-tēṅgāy,* பெ.(n.) தெங்கினிளங்காய் (வின்.); tender cocoanut.

[வழுக்கை + தேங்காய்]

வழுக்கைப்பசலை *vaḻukkai-p-paśalai,* பெ.(n.) பசலை வகையுளொன்று; a kind of puslane.

மறுவ. வழுவற்றேங்காய்

[வழுக்கை + பசலை]

வழுக்கைப்பசளை *vaḻukkai-p-pašaḷai,* பெ.(n.) ஓர் வகைச் செடி; a prostate plant - portulaca oleracea.

[வழுக்கை + பசளை]

வழுக்கைப்பயல் *vaḻukkai-p-payal,* பெ.(n.) சிறுவன்; young boy, an adolescent.

[மழு→மழுக்கை→வழுக்கை + பயல் = சிறுபயல் (தேவநேயம்.12, பக்.260).]

ம→ வ = திரிபு

(ஒ.நோ.) மிஞ்சு→விஞ்சு.

வழுக்கைப்பலா *vaḻukkai-p-palā,* பெ.(n.) சுவை குன்றிய பலாவகை (வின்.); an inferior variety of jack tree.

[வழுக்கை + பலா [1]]

வழுக்கைப்பள்ளம் *vaḻukkai-p-paḷḷam,* பெ.(n.) பல்லின் சவ்வுப் பள்ளம்; pulp cavity.

[வழுக்கை + பள்ளம்]

வழுக்கைப்புல் *vaḻukkai-p-pul,* பெ.(n.) புல்வகையுளொன்று; a kind of grass- *Cyanotis axillaris.*

[வழுக்கை + புல். புல்லுதல் = துளைத்தல். உல் →புல்.]

பதினெண் வகைப் புல்வகையுளொன்று. புல்லுதல் என்னும் வினைச்சொல் வழக்கிறந்தது. புல் = உட்டுளையுள்ள நிலைத்திணை வகை.

பிடிக்குங்கால் சறுக்குந் தன்மையுள்ள புல்லே, வழுக்கைப்புல் எனலாம்.

வழுக்கைமரம் *vaḻukkai-maram,* பெ.(n.) கட்டிடப் பணிகளுக்குப் பயன்படும் மர வகைகளுள் ஒன்று; a kind of tree intended to building works.

[வழுக்கை + மரம்]

வழுக்கைவிளநீர் *vaḻukkai-viḷanīr,* பெ.(n.) முதிராத் தன்மையதும், இளம் பதத்திலுள்ளதும், நீர்மிகுந்துள்ளதுமான தெங்கினிளங்காய்; tender cocoanut with pulp kernal.

[மழுக்கை→வழுக்கை (வழுவழுப்பான இளம்பருப்புள்ளீடு) + இளநீர்.]

இளம் + நீர் = இளநீர். முதிராத வழுக்கைத் தெங்கினிளநீர்.

வழுக்கோபிகம் *vaḻu-k-kōbigam,* பெ.(n.) முளைக்கீரை; a greens-*Amaranthus gangeticus tender.*

வழுங்கல் *vaḻuṅgal,* பெ.(n.) அறிவற்றவன்; insensate person, senseless idiot, stupid, fool. *அவன் சுத்த வழுங்கல், அவனோடு யார் பேசுவார்? (இ.வ.).*

[மழுங்கல் → வழுங்கல்]

வழுத்தரல் *vaḻu-t-taral,* பெ.(n.) இறந்து போகை; (Jaina) dying, death. *"பின்னை வழுத்தரல் மரபிதென்றார்" (மேருமந். 567).*

[வழுவு + தரு→தா–.]

வழுத்தரவு *vaḻuttaravu,* பெ.(n.) வழுவி வீழ்கை; declining fall.

[வழு+தரவு.]

வழுத்து-தல் *vaḻuttu-*,5 செ.குன்றாவி. (v.t.) 1. வாழ்த்துதல்; to bless, to grace. *"வழுத்தினாள் தும்மினேனாக" (குறள், 1317).* 2. வணங்குதல்; to praise. *"வழுத்தியுங் காணாமலரடி" (திருவாச. 4, 9) (சூடா.).* 3. மந்திரம் சொல்லுதல்; to mutter chant, as mantras. *"மந்திர நாவிடை வழுத்துவராயினர்" (சிலம்பு.16:172).*

வழுத்தேமா *vaḻu-t-tēmā*,பெ.(n.) மலைமா; a kind of mango tree, grown in hilly areas.

வழுதலங்காய் *vaḻutalaṅ-gāy*, பெ.(n.) கத்தரிக்காய்; brinjal- *Dischrostachys cineria. இது கொடி வழுது துணைக்காய்.*

வழுதலை[1] *vaḻu-talai*,பெ.(n.) 1. கத்தரிக்காய் (பிங்.); brinjal; egg-plant-*Solanum* (சா.அக.). 2. கண்டங்கத்தரி வகை (மூ.அ.); Indian night shade.

வழுதலை[2] *vaḻu-talai*,பெ.(n.) 1. புல்லுருவி (அக.நி.); scarecrow made of straw. 2. புனத்திடும் பொய்க்கழு (சது.); dummy stake set up in corn fields as a warning to thieves.

வழுதலைக்கியாழம் *vaḻu-talai-k-kiyāḻam*, பெ.(n.) கண்டங்கத்திரியுடன், மருந்துச் சரக்குகளைச் சேர்த்துக் காய்ச்சி வடித்த, கருக்குநீர்; decoction of Solanum jacquini.

[வழுதலை + கியாழம்.]

வழுதி[1] *vaḻudi*,பெ.(n.) பாண்டிய மன்னர்களின் புனை பெயர்களுள் ஒன்று; one of the nick names of Pāṇḍiyā kings. *'வழுத்தத் தக்கவன் வழுதி எனப்பட்டான்'*

[வழுத்தி→வழுதி. வழுத்து = புகழ்]

வழுதி[2] *vaḻudi*,பெ.(n.) பாண்டியமன்னன் (பிங்.); Pāṇḍiyaṉ king. *"பெரும்பெயர் வழுதி" (புறநா. 3).*

வழுதி என்பதையே இயற்பெயராய்க் கொண்டவன்.

வழுதிநாடு *vaḻudi-nāḍu*,பெ.(n.) வழுதி வளநாடு (திவ். திருவாய். **3:6:11**) பார்க்க; see *vaḻudi-vaḷanāḍu.*

[வழுதி + நாடு]

வழுதியச்சுவருக்கம் *vaḻudiya-c-cuvarukkam*,பெ.(n.) பாண்டியர் காசு வகை (S.I.I.V.90); a Pāṇḍiyar coin.

[வழுதி + அச்சு + **Skt.** *வர்க்கம்]*

Skt. varga > த. வருக்கம்.

வழுதியர் *vaḻudiyar*,பெ.(n.) பாண்டிய மரபின் ஐந்து கிளைக் குடிகளுளொன்று; one of five classes of Pāṇḍiya ancestery.

[வழுதி→வழுதியர். 'அர்' பலர்பால் ஈறு.]

வழுதிவளநாடு[1] *vaḻudi-vaḷa-nāḍu*, பெ.(n.) தென்பாண்டி நாட்டில் திருச்செந்தூர் மான வீரப்பட்டினம், வரகுணமங்கலம் முதலிய பகுதிகளடங்கிய நாடு; a region comprising Tiruchendūr, maṉa-vīrap-paṭṭiṉam in south Pāṇḍiya kingdom or country.

[வழுதி + வளநாடு.]

வழுதிவளநாடு[2] *vaḻudi-vaḷa-nāḍu*, பெ.(n.) ஆழ்வார் திருநகரியைச் சூழ்ந்த நாடு; the region around *āḻvār-tiru-nagari. "வண்டலம்புஞ்சோலை வழுதி வளநாடன்" (திவ். திருவாய். 2:8:11).*

[வழுதி + வளநாடு.]

வழுது[1] *valudu,* பெ.(n.) பொய் (பிங்.); lie, falsehood.

[வழு→வழுது.]

வழுது[2] *valudu,* பெ.(n.) வைக்கோல் (பிங்.); straw.

[வய்→வை→வைது→வழுது.]

ஒருகா. பழுது→ வழுது.

வழுதுணங்காய் *valutunangāy,* பெ.(n.) கத்தரியின் காய் (மதுரைக். 529, உரை); unripe fruit of brinjal.

[வழுதுணை + காய்]

வழுதுணை[1] *valu-tuṇai,* பெ.(n.) முள்ளுக் கத்திரி; brinjal with prickles.

வழுதுணை[2] *valutuṇai,* பெ.(n.) வழுதலை[1], 1 பார்க்க; see *valutalai.* *"வட்டும் வழுதுணையும் போல்வாரும்" (நாலடி, 264).*

வழுதுணைத்தழும்பன் *valu-tuṇai-t-talumbaṉ,* பெ.(n.) தழும்புள்ளதால் ஒருவனுக்குண்டாகிய பெயர்; named after a smudge, causitive name after a smudge. *"பிடிமிதி வழுதுணைப் பெரும் பெயர்த்தழும்பன் கடிமதில் வரைப்பின் ஊனூர் உம்பர்" (அகநா. 227:17 – 18).*

[வழுதுணை + தழும்பன்.]

வழுந்தல் *valuntal,* பெ.(n.) 1. காய்ப்பேறல்; excoriation. 2. வழுவுறல்; abrasion.

வழுந்து–தல் *valundu-,* 5 செ.கு.வி.(v.i.) தோலுரிதல் (வின்.); to be excoriated, wear off, as the skin.

[அழுந்து → வழுந்து–.]

வழுநிலை *valu-nilai,* பெ.(n.) சொல் முதலியன இலக்கணத் தவறாக வருகை (நன். 374, மயிலை.); (Gram.) erroneous use, as of a word, dist. fr. *valā-nilai.*

தமிழுக்கு எது வழுநிலையோ, அது பிற மொழிகட்கு வழாநிலையாம். தமிழுக்குச் செம்மை இன்றியமையாத பண்பாயிருத்தலினாலேயே, அது செந்தமிழ் எனப்பட்டது. பொதுமக்களோடு எத்துணைக் கொச்சையாகப் பேசினும் ஏடெடுத் தெழுதும் போதும், மேடையேறிப் பேசும்போதும், இலக்கண நடையைக் கையாள வேண்டுமென்பதே தமிழ்மரபு.

வழுநீர் *valu-nīr,* பெ.(n.) கண்ணினின்று ஒழுகும் பீளை; rheum in the eye. *"கழுநீர்க் கண்காண் வழுநீர் சுமந்தன" (மணிமே. 20:47).*

[வழு + நீர்.]

வழுப்பாசி *valu-p-pāśi,* பெ.(n.) பயிர்க்குக் கேடு புரியும் பாசிவகை (இ.வ.); lichen which causes injury to crops.

[வழு + பாசி.]

வழும்பு[1] *valumbu,* பெ.(n.) 1. குற்றம்; fault. *"வழும்பில் சீர்நூல்" (நாலடி, 352).* 2. தவறு, பிழைபாடு; error, mistake. 3. தீங்கு; evil, harm. *"வழும்பு கண்புதைத்த...... பாசி" (மலைபடு. 221).*

[வழு→வழும்பு.]

வழும்பு[2] *valumbu,* பெ.(n.) 1. கொழுப்பு, நீர்மக்குழம்பு (பிங்.); fat. *"வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்றுள்" (நாலடி, 46).* *"அழுந்து விழுப்புண் வழும்புவாய் புலரா எவ்வ நெஞ்சத்து எஃகெறிந் தாங்கு" (நற்–97–1–2.).* 2. நிணம் முதலியவற்றின் மேலுள்ள வழவழப்பான நீர்ப் பண்டம்; slimy

substance, mucus, as on fat or on new - born calf. *"வழும்பறுக்க கில்லாவாந் தேரை" (நாலடி, 352).* 3. அழுக்கு (வின்.); filth, impurity.

[முழு→மழு→வழு→வழும்பு.]

வழுமூட்டு¹-தல் *valu-mūṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) தோலுரிதல் (வின்.); to be excoriated, wear off, as the skin.

[வழு + மூட்டு-.]

வழுமூட்டு²-தல் *valu-mūṭṭu-,* 5 செ. குன்றாவி.(v.t.) 1. இணங்கச் செய்தல்; to reconcile. 2. மென்மையாக்குதல்; to smoothen. 3. வெளிவராமல் அடக்கி விடுதல்; to hush up, as an affair.

[வழு + மூட்டு-,]

வழுமெனல் *valum-enal,* பெ.(n.) 1. வழு வழுப்புக்குறிப்பு; smoothness. 2. தெரிந்தும், தெரியாதவர் போல் அடக்கமாயிருப்பது; being silent and secretive.

[வழும் + எனல். என் + அல் = எனல்.]

வழுவநாதி *valuva-nādi,* பெ.(n.) (சுழுத்தி) அறிதுயில்; a kind of trance.

வழுவமை-த்தல் *valu-v-amai-,* 4 செ. குன்றாவி.(v.t.) இலக்கண வழுவாயினும் அமைவதாகக் கொள்ளுதல் (தொல். சொல். 31, சேனா.); (Gram.) to treat certain grammatical errors as permissible.

[வழு + அமை-.]

ஒரு பொருளின் தன்மையை முழுமையாக ஒரு சொல் விளக்காதமையினும், ஒருவாற்றான், அப் பொருளை விளக்கும் பாங்கினில் அமைத்துக் கொள்ளுதல். வழுவமைத்தல் குறித்துச் சுப்பிரமணிய தீட்சிதர், தமது பிரயோக விவேகத்தில் விளக்குவது வருமாறு :- "குறித்த பொருட்கு உரிய சொல் அன்று ஆயினும், ஓராற்றான் அப்பொருளை விளக்குதலின் அமைக என்றல் வழுவமைத்தலாம்" (சுப்பி.பிரயோக.44).

வழுவமைதி *val-v-amaidi,* பெ.(n.) இலக்கண வழுவாயினும் ஒரு பயன்நோக்கி ஆன்றோரால் அமைக வென்று கொள்ளுகை (தொல்.சொல்.41, சேனா.); (Gram.) sanctioned deviation from grammatical rules, as in tense, person, gender, recognised anomaly.

[வழு + அமை→அமைதி]

வழுவமைதி குறித்துச் சேனாவரையர் செப்புவது :- குறித்த பொருட்குரிய சொல்லன்றாயினும், ஒருவாற்றான் அப் பொருள் விளக்குதலின் அமைக வென்றல் (தொல். சொல்.11, சேனா.).

வழுவமைதிவினை *valuvamaidi-vinai,* பெ.(n.) வழுவாயினும் வழுவற்றது போல் இலக்கணியரால் அமைக்கப்பெற்ற வினை (த.வ.180); (Gram.) sanctioned deviation from grammatical rules, as in verb, recognised anomaly.

[வழுவமைதி + வினை.]

உண்டு என்னும் குறிப்பு வினைமுற்று முதற்கண் படர்க்கை ஒன்றன்பால் வினையாயிருந்து பின்பு ஐம்பால் மூவிட ஈரெண் பொது வினையாய் வழங்குகின்றது.

வழுவல் *valuval,* பெ.(n.) 1. நழுவுகை (வின்.); sliding down, letting slip. 2. வழு, 1, 2 பார்க்க; see *valu.* *(காரியத்துக்கு) தொழிலுக்கு வழுவல் வாராமல் பார் (வின்.).* 3. இளந்தேங்காயின் வழுக்கல் (யாழ்.அக.); soft pulp in a tender coconut.

[வழு→வழுவு→வழுவல்]

வழுவழு-த்தல் *valu-valu-*,4 செ.கு.வி. (v.i.) 1. வழுக்குதல்; to slip. *"வாளமர் நீந்தும் போழ்தின் வழுவழுத் தொழியு மென்றான்".* 2. வழுவழுப்பாதல்; to be slippery, smooth or polished. 3. உறுதியறுதல்; to be infirm or unsteady. *"வழுவழுத்த வுறவதனின் வயிரம்பற் றியபகையே வன்மையாமே" (தண்டலை. 83).*

[மழு→மழுமழு→வழுவழு→வழுவழு-.]

வழுவழுக்கு *valu-valukku,* பெ.(n.) வழு வழுப்பு பார்க்க; see *valu-valuppu.*

[வழு→வழுக்கு.]

வழுவழுத்தபண்டம் *valu-valutta-pandam,* பெ.(n.) வழவழப்பான பொருள்; mucous substana, unctuous.

[வழுவழுத்த + பண்டம்]

வழுவழுத்திறங்குகை *valu-valu-t-tirangugai,* பெ.(n.) அருவருப்பான பொருளைக் கண்டவிடத்துண்டாகும், குமட்ட லுணர்வு; a feeling on facing unwanted or undesinable thing, as of exereta.

[வழுவழுத்து + இறங்குகை. இறங்கு→இறங்குகை. 'கை' சொல்லாக்க ஈறு.]

வழுவழுப்பு *valu-valuppu,* பெ.(n.) 1. கொழு கொழுப்பு; clamminess, sliminess. குட்டியாடு கொழுத்தாலும், வழுவழுப்புத் தீராது (உ.வ.). 2. வழுக்குந் தன்மை; slipperiness. *"நிலம் பாசி படர்ந்து வழுவழுப்பாயுடைமை (வின்.).* 3. உயவுத் தன்மை; lubricity, oiliness. 4. மென்மை; smoothness. 5. பளபளப்பு (இ.வ.); gloss.

[வழுவழு → வழுவழுப்பு (எண்ணெய்ப் பிசுக்கு).]

வழுவழுப்புள்ளவை *valu-valupp-ullavai,* பெ.(n.) நெய்மக் குழை வுடையவை; unctuous substance.

[வழுவழுப்பு + உள்ளவை]

வழுவழுப்பு = எண்ணெய்ப் பிசுக்கு.

வழுவழெனல் *valuvalenal,* பெ.(n.) 1. மென்மைக் குறிப்பு; smoothness, soft-natured altitude. 2. விரைவுக் குறிப்பு (நாமதீப. 687); swiftness, quickness, hurriedness.

[வழுவழு + எனல்]

வழுவற்றேங்காய் *valuvarrengay,* பெ.(n.) வழுக்கலுள்ள இளந்தேங்காய் (வின்.); tender coconut in which the pulpy matter has just begun to form.

[வழுவல் + தேங்காய்]

வழுவன் *valuvan,* பெ.(n.) 1. மீன்வகை; a kind of fish. 2. தன் உடற்கொழுப்பைக் கடல் மேற்பரப்பில் மிதக்கவிட்டு, செத்தது போல் இருக்கின்ற மீன்; pretention of the fish as if dead.

[வழுவு→வழுவன்]



பறவையின் கவனத்தைக் கவர கொழுப்பினை யுமிழ்ந்து நீரின் மீது பரப்பி, இறந்ததைப் போல் இருக்கும். பறவை அதன் மீதமர, உடனே வாரிச்சுருட்டி வாயிலிட்டு விழுங்குந் தன்மை கொண்ட மீன்.

வழுவன்சுறா *vaḻuvaṉ-šuṟā*, பெ.(n.) கரு வெண்மை நிறமும், 12 அடி வளர்ச்சியுமுள்ள சுறாமீன் வகை (வின்.); man eating shark, dark grey, attaining 12 ft. in length.

[வழுவன் + சுறா]



வழுவாங்கி *vaḻu-vāṅgi*, பெ.(n.) மருந்திலை வகையுளொன்று; a kind of medicinal shrub.

வழுவாடி[1] *vaḻuvāḍi*, பெ.(n.) வாழ்வுதருந் தொழிலை நழுவ விடுபவன் (சங்.அக.); one who is careless or negligent in one's affairs, indifferent person.

[வழுவாளி→ வழுவாடி.]

வழுவாடி[2] *vaḻuvāḍi*, பெ.(n.) பாலைத் தீவுக்கண்மையில், அதிகம் பிடிபடும் ஒருவகைத் திருக்கைமீன்; a kind of fish caught in sea bed of desert islands.

[வழுவாளி→ வழுவாடி.]

வழுவாதநாழி *vaḻuvāda-nāḻi*, பெ.(n.) சரியான அளவுபடி; correct or accurate measure. *"நாலு உழக்கு வழுவாத நாழியால்..... அட்டுவேனானேன்" (S.I.I.i. 115).*

[வழுவாத + நாழி = குற்றமற்ற, சரியான நிறைநாழி.]

வழுவாமை *vaḻuvāmai*, பெ.(n.) 1. நேர்மை (வின்.), முழுமை, வாய்மை; integrity. 2. நடுநிலை பிறழாமை; rectitude, uprightness of heart. 3. பிழைபடாமை; absence of error, inerrancy.

[வழுவு + ஆ + மை]

நெறிபிறழாமையே வழுவாமையாம். 'ஆ'– எதிர்மறை இடைநிலை, 'மை' சொல்லாக்க ஈறு.

[ஒ.நோ.] நழுவாமை, கழுவாமை

வழுவாய் *vaḻuvāy*, பெ.(n.) 1. தப்புகை; escape. *"வழுவாயுண்டென மயங்குவோள்" (மணிமே. 11 : 130).* 2. கரிசு (பாவம்.); sin. *"வழுவாய் மருங்கிற் கழுவாயு முண்டென" (புறநா. 34,4).*

[வழுவு → வழுவாய்]

வழுவி *vaḻuvi*, பெ.(n.) அத்தி (சங்.அக.); country fig.

வழுவிச்சம் *vaḻuviccam*, பெ.(n.) நத்தைச் சூரி; a kind of plant.

வழுவிலாஅடிமை *vaḻuvilā-aḍimai*, பெ.(n.) 1. குற்றம் இழைக்காத பணியாளன்; unflemished employee. 2. குற்றமற்றவன்; white-hearted man, flawless person.

[வழு→ வழுவு + இல் + ஆ + அடிமை. 'இல்' எதிர்மறை இடைநிலை. 'ஆ' பெயரெச்சஈறு.]

வழுவு¹-தல் *vaḻuvu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. தவறுதல்; to err, to swerve from the right, to go astray. *"தன்னியல் வழாஅது" (புறநா. 25).* 2. நழுவுதல்; to miss, as a step, to sway down, as a load, to be turned out of a course. *"முகில் வழுவி வீழ்வன" (சூளா. அரசி. 386).* 3. சறுக்குதல்; to slip. *"வழூஉ மருங்குடைய வழாஅ லோம்பி" (மலைபடு. 215).* 4. குறைவுடையதாதல்; to be inaccurate, to be deficient. *"வழுவாத நாழி" (S.I.I.i,115).*

[வழு → வழுவு-.]

வழுவு² *vaḻuvu,* பெ.(n.) வழு பார்க்க; see *vaḻu.*

[வழு → வழுவு.]

வழுவுடைக்காமம் *vaḻuvuḍai-k-kāmam,* பெ.(n.) அகத்திணை ஏழனுள் ஒன்றானதும் ஒத்த இனமல்லாதவளுடனாவது, இயற்கைக்கு (விதிக்கு) மாறாகவாவது, தன்னை விட அகவையில் முதிர்ந்தவளோடாவது, மனம் ஒவ்வாதவளோடாவது கூடும் காதல் (அகப்.); improper love, as when it is in violation of customary rules or when the woman is older than the man or is of a different caste or does not consent, one of seven *aga-t-tiṇai.* *"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்" (தொல்.947).*

மறுவ. பெருந்திணை.

[வழு→வழுவு + உடை + காமம். கமம்→காமம்.]

கமம் = நிறைவு, மகிழ்வு, விருப்பம்.

"கமம் நிறைந் தியலும்" (தொல்.938).

வடமொழியாளர் 'காம்' என்னும் சொல்லுக்கு 'கம்' என்பதை மூலமாகக் காட்டுவர். இஃது பொருட் பொருத்தப்பாடற்றது.

வடமொழியில் "கம்" இடைச் சொல்லாகவும், நான்காம் வேற்றுமையுருபாகவும், வழங்குகிறது. ஆம், நலம் என்னும் பொருண்மை பயப்பது.

ஆனால் தமிழின் கண்ணே நிறைவுப் பொருண்மையில் வழங்குவதாகத் தொல்காப்பியர் குறித்துள்ளது, பொருட்பொருத்தப்பாடுடையது.

வழுவுடைக்காமம் என்பது இங்கு குறைவுடைய நிறைவினைக் குறித்ததென்க.

தலைவன், தலைவியர் அகவை, இனம் போன்றவற்றுள், ஏதேனுமொன்று குறைவுள்ள தன்மையில் கூடுங்காலுண்டாகும் காமமே வழுவுடைக் காமமாகும்.

வழுவுண்டகாயம் *vaḻuvuṇḍa-kāyam,* பெ.(n.) சுவர் முதலியவற்றில் உராய்வதாலோ அல்லது கயிற்றைக் கையில் அழுத்திப் பிடித்திழுப்பதனாலோ ஏற்பட்ட புண்; a wound caused by violent rubbing of friction as by rubbing against a wall or by a rope pulled through the hands-brush burn.

[வழு + உண்ட + காயம். கள்→கய்→காய்→காயம்.]

வழுவுண்டபுண் *vaḻuvuṇḍa-puṇ,* பெ.(n.) தேய்வுண்டபுண், உராய்ந்த புண்; abrasion.

[வழு + உண்ட + புண்]

வழுவுண்ணல் *vaḻu-vuṇṇal,* தொ.பெ. (vbl.n.) தேய்தல், குறைதல்; getting abrasion.

[வழு→வழுவுண்ணல்.]

அழுத்த மிகுதியாலுண்டாகும், தேய்மானம் அல்லது குறைபாடு.

வழுவை¹ *vaḻuvai,* பெ.(n.) 1. மலையெருக்கு; mountain madar, calotropis gigantia. 2. நாய்ப்பாகல்; a kind of bitter gourd.

வழுவை² *vaḻuvai,* பெ.(n.) யானை (சூடா.); elephant.

[வழு → வழுவை]

வழூஉ *vaḻūu,* பெ.(n.) வழு பார்க்க; see *vaḻu.* *"வழூஉச் சொற் கோவலர்" (கலித். 106).*

[வழு → வழூஉ]

வழூஉச்சொற்புணர்த்தல் *vaḻūu-c-coṟ-puṇarttal,* பெ.(n.) நூற்குற்றம் பத்தனுள், பிழையுள்ள சொற்றொடர்களை அமைக்குங் குற்றம் (நன்.12); employment of improper or inappropriate phrases or words and terms, one of ten nūṟ-kuṟṟam.

[வழூஉ + சொல் + புணர்த்தல்]

வழூஉநிலை *vaḻūu-nilai,* பெ.(n.) வழுநிலை (வின்.) பார்க்க; see *vaḻunilai.* erroneous use of (gram.) words.

வழை *vaḻai,* பெ.(n.) 1. சுரபுன்னை; long-leaved two-sepalled gamboge. *"வழைவளர் சாரல் (கலித். 50). (தேவ நேயம்.12, பக்.259).* 2. வழைச்சு பார்க்க; see *vaḻaiccu.* *"பாகரிறை வழை மதுநுகர்பு" (பரிபா. 11:66).*

[முல் → முள் → மள் → மழ → (வழ்) → வழை.]

இளமை, புதுமை போன்ற பொருண்மையைக் குறிக்கும் "மழ" என்னும் முதனிலையினின்று தோன்றிய சொல்.

வழைச்சு *vaḻaiccu,* பெ.(n.) புதுமை; freshness, as of palm juice, raw or unripe condition. *"சாடியின் வழைச்சற விளைந்த..... நறும்பிழி" (பெரும்பாண். 280).*

[முல் → முள் → மள் → மழ → (வழ) → வழை → வழைச்சு]

ம → வ மெய்யினத் திரிபு.

ஒ.நோ.மிஞ்சு → விஞ்சு.

"முல்" என்னுமுதனிலை, இளமை, சிறுமை, புதுமை போன்ற பொருண்மை பொதிந்த சொற்களை உருவாக்கும் வேர் மூலமாகும்.

வீரம் போன்ற பொருட்பொருத்தப்பாட்டில், இம் முதனிலை கழக இலக்கியத்துள் பயின்று வந்துள்ளது.

(எ.கா.) "சாடியின் வழைச்சற விளைந்த" (பெரும்பாண்.280).

முல் → முள் → மள் → மள்ளன் = இளைஞன்.

"பொருவிறல் மள்ள" (திருமுருகு.262). மள் → மழ → வழ = இளமை, புதுமை, புதியதாகத் தோன்றிய குழவி.

"மழவும் குழவும் இளமைப் பொருள" (தொல்.796).

மழ → மழலை + தேன் = மழலைத்தேன்.

மழலைத்தேன் = புதியதாகத் தோன்றிய தேன்.

முள் → (மள்) → மழ → வழ → வழை → வழைச்சு

புதுமை, சிறுமை, அழகு, இளமை போனற் பொருட்களைச் சுட்டும். முல் → மள → மழ என்னும் போன்ற பொருண்மைகளைக் குறிக்கும். ஏரணமுறை வளர்ச்சியில் வழை, வழைச்சு போன்ற சொற்கள் தோன்றின.

வழைமது *vaḻai-madu,* பெ.(n.) புளிப்புச் சுவையற்ற இளமது; unfermented liquor.

[வழை + மது. வழை = இளமை, புதிது.]

வள்[1] *vaḷ,* பெ.(n.) 1. வளம்; fertility, abundance, profitable, increase. *"வள்ளிதழ் மாலை" (சீவக. 2732).* 2. பெருமை; largeness, nobility. 3. மேன்மை; greatness. 4. நெருக்கம் (வின்.); narrowness, little-mindedness.

[முல்→மல்→வல்→வள்.]

வள்[2] *vaḷ,*பெ.(n.) 1. கூர்மை (பிங்.); sharpness, pointedness. *"வள்வாயமதி" (தேவா.209, 1).* 2. வாள் (பிங்.); sword. 3. வார் (சூடா.); thong, lash. 4. வாளுறை (அக.நி.); sheath. 5. கடிவாளம்; bridle. *"புரவி..... வாங்குவள் பரிய" (அகநா. 4).* 6. காது (பிங்.); ear. 7. படுக்கை; bed. *"வள்ளே துணியே யிவற் றொடு" (ஏலாதி. 50).*

[வல்→வள்.]

வள்[3] *vaḷ,*பெ.(n.) 1. வலிமை (பிங்.); strength, being strong, physically powerful. *"வள்வார் முரசு" (பு.வெ.3, 2, கொளு.).* 2. வலிப்பற்றிரும்பு (பிங்.); cramp-iron, iron-band.

[வல்→வள். வல் = வன்மை, வலிமை. வலிமையுடன் வலித்துக் கொள்ளும் பற்றிரும்பு.]

வள்பு *vaḷpu,*பெ.(n.) வள்[2], 3 பார்க்க; see *vaḷ[2], 3. "மாசற விசித்த வார்புறு வள்பின்" (புறநா. 50). "வலவன் வள்பு ஆய்ந்து ஊர" (நற்–11.8), "வெள்வசிப் படீஇயர் மொய்த்த வள்பு" (நற்–82, 9).*

[வல்→வள்→வள்பு.]

வள்வாய்ஆழி *vaḷ-vāy-āḻi,*பெ.(n.) பெருமை வாய்ந்த தேருருள்; royal wheel. *"வள்வாய் ஆழி உள்வாய் தோயினும் புள்ளுநிமிர்ந் தன்ன பொலம்படைக் கலிமா" (நற்.78:8–9).*

[வள்வாய் + ஆழி.]

வள்வு *vaḷvu,*பெ.(n.) வள்[2], 3 பார்க்க; see *vaḷ[2], 3. "வள்வாய்ந்து பண்ணுக" (பு.வெ.12, இருபால். 3).*

[வள்→வள்வு.]

வள்ளக்கடவு *vaḷḷa-k-kaḍavu,* பெ.(n.) தோணியில் ஏறியிறங்கும் துறை (நாஞ்.); jetty.

[வள்ளம் + கட→கடவு]

வள்ளக்களி *vaḷḷak-kaḷi,*பெ.(n.) தோணி செலுத்தும் போட்டி (நாஞ்.); boat-race.

[வள்ளம் + களி]

வள்ளக்கால் *vaḷḷa-k-kāl,* பெ.(n.) 1. வளைந்த கால் (இ.வ.); bow-leg. 2. பரம்புப் பலகையை நுகத்தோடு சேர்ப்பதற்குரிய மூங்கிற் பிளவு (நாஞ்.); the bamboo lath connecting the levelling wood plant and the yoke of a field-leveller.

[வள்ளம் + கால்]

வள்ளங்குதி–த்தல் *vaḷḷaṅ-kudi-,* 4 செ. குன்றாவி.(v.t.) வள்ளம், கடல் அலைகளில் முன்னேறும் போது குதித்துத் தாவுகை; jumping by a leap while canoe is progressing among tides.

[வள்ளம் + குதி–.]

வள்ளச்சி *vaḷḷacci,* பெ.(n.) உருள்கடலை (பட்டாணி); pea pulse.

வள்ளடி *vaḷḷaḍi,* பெ.(n.) காதினடி (தைலவ.); lobe of ear.

[வள்[2] + அடி]

வள்ளப்போட்டி *vaḷḷa-p-pōṭṭi,* பெ.(n.) கடலில் வள்ளங்களை போட்டி போட்டுக் கொண்டு செலுத்துகை; to canol in sea competiting a water sports.

[வள்ளம் + போட்டி.]

வள்ளம்[1] *vaḷḷam,* பெ.(n.) 1. உண்ணுங் கலமாக உதவும் வட்டில் வகை (பிங்.); a dish for use in eating or drinking. *"வள்ளத் தவனேந்த ...... மது மகிழ்ந்தார்" (சீவக. 2700).* 2. நாழிகை வட்டில் (சூடா.); hour-glass, clepsydra. 3. மரக்கால் (பிங்.) பார்க்க; see *marakkāl.* 4. நான்கு மரக்கால் கொண்ட அளவு (வின்.); a measure of grain = 4 *marakkāl.* 5. இரண்டு அல்லது நான்கு படிகொண்ட அளவு (G.Sm.D.I, i, 286) (G.Tp.D.I, 178); a measure of capacity = 2 or 4 *paḍi.* .

க. பள்ள; ம. வள்ளம்.

[வல்→வள்→வள்ளம்.]

வள்ளம்[2] *vaḷḷam,* பெ.(n.) 1. சிறுதோணி; boat made trunk of a tree. 2. துடுப்பு வட்டின் உதவியால் செலுத்தப்படும்; தோணி அல்லது சிறு படகு; canoe, catamaram.

[மல்→வல்→வல்லம் →வள்ளம். வட்ட வடிவுடன் அமைக்கப்பட்டதும், துடுப்பு வட்டின் உதவியால் செலுத்தப்படுவதுமான, தோணி வகை]

வள்ளமாட்டம் *vaḷḷam-āṭṭam,* பெ.(n.) கடல் அலை பேரளவில் எழும்போது வள்ளம் தத்தளிப்பது; shaking of canoe due to floating waves.

[வள்ளம் + ஆட்டம்]

வள்ளல்[1] *vaḷḷal,* பெ.(n.) வள்ளக்கீரை; a kind of greens.

வள்ளல்[2] *vaḷḷal,* பெ.(n.) 1. வரையாது வாரி வழங்குபவன்; person of unbounded liberality, liberal donor. 2. வண்மை, ஈகம், அருளியற்கொடையில் ஆர்வமுடைமை; benevolence.

[வண்→வள்→வள்ளல்.]

வள்ளல்[3] *vaḷḷal,* பெ.(n.) 1. திறமை, ஆற்றல், வல்லமை; ability, power. 2. மந்தணத் தொழில், தனி நடவடிக்கைகள்; private or personal affairs. *"அவன் வள்ளல் வெளிப்பட்டுவிட்டது" (வின்.).*

[வல்→வள்→வள்ளல்.]

வள்ளல்[4] *vaḷḷal,* பெ.(n.) கஞ்சன் என்னும் எதிர்மறைப் பொருளில் வழங்கும் மக்கள் வழக்கு; a common peoples usage in negative meaning as miser. *நீ பெரிய வள்ளல்; தெரியாதா? உன் வள்ளல் ஊர் அறியுமே? (இவறன் என்னும் எதிர்மறைப் பொருள் பயக்கும், வழக்குச் சொல்).*

[வல்→வள்→வள்ளல்.]

வள்ளல் = கருமி. இல்லை என்று கூறாமல், எல்லை இன்றி வழங்குவது வள்ளன்மை எனப்படும். நீயே என் கொடைப் பொருள் என ஒரு கோடு போட்டால் அக் கோட்டைக் கடந்து வரமாட்டானாம் பாரி. "வாரேன் என்னான் அவர் வரையன்னே" என்பது புறப்பாடல். அத்தகைய வள்ளன்மையைக் குறியாமல் அதற்கு எதிரிடைப் பொருளையும் வள்ளல் என்பது தருதல் வழக்கில் உண்டு. நீ பெரிய வள்ளல்; தெரியாதா? என்பதில் கருமி என்பது வள்ளற் பொருளாம், 'உன் வள்ளல் ஊரறியுமே' என்பது எள்ளலென எளிதல் புரியுமே. 'நீ பிறந்ததால்

தானே பாரி செத்தான்' என்பது இனிக் கொடையால் புகழ்பெற முடியாதென இறந்தான் என்பதைக் குறித்து, புகழ்வது போலப் பழிப்பதாம்.

வள்ளல்[5] *vaḷḷal*, பெ.(n.) தழுவு கொடிவகை; creeping bind-weed.

மறுவ. படர்கொடி

[வல்→வள்→வள்ளல்.]

வள்ளலார்[1] *vaḷḷalār*, பெ.(n.) திருவருட்பா முதலான அருளியல் நூல்களை இயற்றியவர்; a modern sage author of the *Tiruvaruṭpā* and some other pious works both prose and poetry.

மறுவ. இராமலிங்கர், இராமலிங்க அடிகள்.

[வள்→வள்ளல் + ஆர்-வள்ளலார். 'ஆர்' சிறப்புப் பெயரீறு.]

உயிர்கள்மாட்டு எல்லையில்லாப் பேரருள் பூண்டவர். அருட்பேரொளி ஆண்டவனை அனைவரிடத்தும் கண்டவர். எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணி, வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியவர். மன்பதையின் பசிப்பிணி போக்கும், மருத்துவனாகப் பிறந்தார். மனிதநேய ஒருமைப்பாடு மண்ணுலகில் நிலைபெற்று ஒங்குவதற்காக, 05.10.1823 (புரட்டாசி) கன்னி, 21, ஞாயிறு)ஆம் நாளன்று, கடலூர் மாவட்டத்திலுள்ள, வடலூரிலிருந்து 7 கல் தொலைவிலமைந்துள்ள மருதூரில், இராமையா-சின்னம்மை இணையருக்கு, அருட்பேரொளி ஆண்டவர்தம் அருளின் திருவுருவாகத் தோன்றினார்.

தை மாதம் 19-ஆம் நாள், வெள்ளிக்கிழமை (30.01.1874) அருட்பேரொளி ஆண்டவருடன் இணைந்தார்.

இயற்பெயர் : இராமலிங்கம்

சிறப்புப் பெயர் : திருவருட் பிரகாச வள்ளலார்.

உறைந்த இடங்கள் : சென்னை (1825-1858)
கருங்குழி 1858-1867
வடலூர் 1867-1870
மேட்டுக்குப்பம் 1870-1874

இயற்றிய நூல்கள் : 1. மனுமுறை கண்ட வாசகம்
2. சீவகாருணிய ஒழுக்கம்

பதிப்பித்த நூல்கள் : 1. ஒழிவிலொடுக்கம் - 1851
2. தொண்டைமண்டல சதகம் 1855
3. சின்மய தீபிகை-1857

அருளிய பாடல்கள் : திருவருட்பா ஆறு திருமுறைகள்

பாடல்களின் எண்ணிக்கை : 5818 மற்றும் ஆறு திருமுறைகளிலும் சேராத உரைநடைப் பகுதி. இதில் வாழ்விற்குத் தேவையான நெறிமுறைகள் விளக்கப்பட்டுள்ளன. குமுகாயத்திற்கு இன்றியமையாது வேண்டப்படும் உணவு, மருத்துவம், தவம் முதலான செய்திகள் செறிந்துள்ளன.

நிறுவிய நிலையங்கள் :

1. மெய்ந்நெறி பொதுநிலைக் கழகம் - 1865 (சமரச சன்மார்க்க சத்திய சங்கம்)
2. அறவுணவுச்சாலை (தருமச்சாலை) - 1867
3. மெய்யறிவுப் பேரவை (சத்திய அருள் ஞான அவை) - 1872
4. சித்தி வளாகம் - 1870

அன்பே அனைத்தையும் அளிக்கும் : இறைவன் அன்பெனும் பிடியுள் அகப்படும் அருளாளன். அனைத்துயிர்களிடத்தும் அருளறம் பூண்டு, ஏழை எளியவர்தம் இன்னலகற்றி, இன்சொல் பயிற்றிப் பசிப்பிணி களைபவர்தம் அருட்செயலில் அருட்பேரொளி ஆண்டவன் ஒளிர்கின்றான் என்பது, வள்ளலார்தம் பேரருட் கொள்கையாகும்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பேதையரே, அகத்தே கறுத்தவராவார். கள்ளமனக் குரங்கின் வயப்பட்டு, தஞ்சமடைந்தவர்க்கு வஞ்சமிழைக்கும் வன்பு நெஞ்சத்தாரையும் வாழ்விக்கும் அளப்பெரும் அருளாளனின் அன்பின் மாட்சிமையை விளக்கும் வள்ளலார் பாடல் :

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புரு வாம்பர சிவமே"

வள்ளலார் வகுத்த மெய்ம்மை நெறி (சன்மார்க்கம்) : வள்ளலார், இவ்வையம் உய்யும் பொருட்டு, இறவாப் பெருநெறியாம், அனைத்துயிர்கள் மாட்டும் அன்பு செலுத்தும் அருள் நெறியை (ஜீவகாருண்யம்) உரைத்த பேரருளாளர். அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்திருந்த மன்பதையர் (மக்கள்)தம் நெற்றிப் பொட்டில் (புருவமத்தியில்) அனைவருக்கும் அருள் வழங்கும் ஆண்டவன், அருட்பேரொளிப் பிழம்பாய் மிளிர்கின்றான் என்னும் மெய்யுணர்வை, உலகத்தவர்க்கு உணர்த்தியவர், வள்ளலார் ஒருவரே யெனலாம்.

ஞால மக்கள் அனைவருள்ளும், அருட்பேரொளி ஆட்சி செலுத்தும், மாட்சியை வள்ளலாரின் திருநெறிய திருவருட்பாக்கள் தெளிவுறுத்துகின்றன. "ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" என்னும் திருமூலரின் தீந்தமிழ்க் கொள்கையைச் செயற்படுத்தியவர் நம் வள்ளற் பெருமான். தெய்வம் ஒன்று என்னும் ஞாலந்தழீஇய நற் கொள்கைக்கு வித்திட்டவர், வள்ளலார். எங்கும் நிறைந்து ஒளிரும் அருட்பேரொளி ஆண்டவன், அனைவர் உள்ளத்திலும் மிளிர்கின்றான். மன்பதை மக்கள் அனைவரையும், அருட்பேரொளி இறைவனின் மறுபதிப்பாய்க் காணும் பாடல்கள் :

"மாயையால் கலங்கி வருந்திய போதும்
வள்ளல் உன்தன்னையே மதித்து உன்
சாயையாய்ப் பிறரைப் பார்த்ததே அல்லால்
தலைவ! வேறு எண்ணியது உண்டோ?"

கொலை–புலால்–தவிர்த்தலே வாழ்வியல் அருளறம்: ஞாலத்துவாழ் மக்களனைவரும் தொழத்தக்க நிலையில், வள்ளுவத்தின் வழிநின்று, தாமும் ஒழுகி, பிறரையும் வழிநடாத்தி வாழ்வில் ஓங்கச் செய்த பெருமை வள்ளலாரையே சாரும்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" (குறள், 260).

உற்ற நோய் நோன்றலையும், அஃதாவது தன்துயர் பொறுத்துப் பிறருக்குப் பேரருள் புரிவதையுமே வள்ளலார் வாழ்வாகக் கொண்டார். பசியினால் இளைத்து, வீடு தோறும் இரந்துண்டு இன்னலுறுவோரைக்கண்டு வருந்தும் வள்ளலார் சிறுதெய்வ வழிபாட்டில், ஆடு, பன்றி வெட்டியுண்ணும், இழிதகையர் தமைக்கண்டு நெஞ்சு நடுக்குற்றுக் கூறுவது:–

"நலிதரு சிறிய தெய்வமென் றையோ நாட்டிலே
பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடுபன்றிகுக் குடங்கள் பலிக்கடா முதலிய
உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே புந்தி
நொந்து உளநடுக்குற்றேன்" (அருட்பா.3471).

"துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் சொல்லத்
தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்
கண்ணினால் ஐயோ பிறவுயிர் பதைக்கக் கண்ட

காலத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி வகைகளும்
கண்ட போதெல்லாம்
எண்ணிஎன் உள்ளம் நடுங்கிய நடுக்கம் எந்தைநின்
திருவுள்ளம் அறியும்" (அருட்பா,3473)

என்னும் அருட்பாக்கள் வாயிலாக உயிர்க்கொலை புரியுங்கால், அவருள்ளம் பதைத்த பாங்கினைத் தெள்ளிதில் அறியலாம். ஒவ்வொரு மனிதனும் தம் வாழ்வில் கொல்லாமை என்னும் அருளறத்தின் வழிநின்று, அனைத்துயிர்கள் மாட்டும் அன்பு செயின், மன்பதை வாழ் மக்களுள் தெய்வமாக மதிக்கப்படுவான் என்பதற்கு வள்ளலாரே எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். அங்கிங்கு என்றில்லாது எவ்வுயிரிடத்தும் நீக்கமற நின்றொளிரும், இறைவனைக் காண வேண்டுமானால், எல்லோரிடத்தும் ஆரா அன்பு பூண்டொழுக வேண்டும் என்பதே வள்ளலாரின் வாழ்வியற் கொள்கையாகும்.

திருநெறிய தீந்தமிழின் செழுமையைப் பாடும் பாங்கு :

திருநெறிய தீந்தமிழின் அருளியற் சிறப்பை வள்ளலார், பாடியுள்ள பாங்கு, அனைவருக்கும் அருளை வாரி வழங்கும் வகையில் அமைந்துள்ளது.

(எ.டு.)

"மடிக்குறும் நீர்மேல் எழுத்தினுக் கிடவே
மைவடித் தெடுக்குநர் போல
நொடிக்குளே மறையும் உடம்பினை வளர்க்க
நொந்தனன் நொந்ததும் அல்லால்
படிக்குளே மனத்தால் பரிவுறுகின்றேன்
பாவியேன் தனக்கருள் புரியாய்
வழக்குறும் தமிழ் கொண்டன்பருக்கு
அருளும் வள்ளலே ஒற்றியூர் வாழ்வே"
(அருட்பா, 875).

"எந்தை உனைப்பாடி மகிழ்ந்தின்புறவே
வைத்தருளிச் செந்தமிழின்
வளர்க்கின்றாய்" (அருட்பா, 4802)
"தண்டமிழ்க் கவிதைபோல் சாந்தமிக்கது"

(குடும்பகோஷம்–19) (அருட்பா–உரைநடைப் பகுதி) என்னும் மேற்கோள்கள் வாயிலாக, அருள் நலம் கெழுமிய, தெய்வத்தமிழின் திருவருட் சிறப்புகளைத் தெளிவுறுத்தியுள்ளார். தமிழென்னும் திருவருட் பெருங்கடலில் வள்ளலார் முக்குளித்து, அருளில் திளைத்த பான்மையினை திருவருட்பா 6 தொகுதிகளும், குமுகாயத்திற்கு உணர்த்துகின்றன.

இறவாப் பெருநெறி–எல்லாம்வல்ல அருட்பேரொளி : இறைவனின் இன்னருளால் மனிதப் பிறவியை அடைந்த ஆதன் (ஆன்மா) ஆண்டவர் ஒருவரே என்றுணர வேண்டும். அவன் அருட்பேரொளிப் பிழம்பாய் அனைவரிடத்தும் ஒளிர்கின்றான். அருட்பெருங்கடவுளின் தண்ணருட் பெருங் கொள்கையினைத் தன்னுள்ளே கொண்டொழுக வேண்டும். அனைத்துயிர் களிடத்தும் அன்புபூண்டு, அருள் வளர்க்க வேண்டும். இரக்கம் காட்ட வேண்டும்.

இறவாப்பெருநெறி : "யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்" என்னும் திருமூலரின் திருப்பாட்டினை மெய்ப்பித்துக் காட்டிய பெருமை வள்ளலாரையே சாரும். "அரிதரிது மானுடராய்ப் பிறத்தலரிது" என்பது அவ்வையின் அருள்வாக்கு. "வாய்த்தது இப்பிறவி மதித்திடுமின்" என்பது நாவரசரின் நல்வாக்கு. வாய்த்தற்கரிய இம் மனிதப் பிறவியிலேயே, தம்முள் ஒளிரும், அருட்பேரொளி ஆண்டவரின் இன்னருளைப் பெற்று, இறவாப் பெருநெறியில் திளைத்தவர் வள்ளலார்.

எல்லாம்வல்ல இறைவனின் இன்னருள் இருந்தால்தான், தம்முள்ளே நெற்றியின் நடுவே, நின்றொளிரும் அருட்பேரொளி ஆண்டவனை அறியலாம். இறவாப் பெருநெறியினை ஈந்து

புரக்குந் தன்மையாளனாகிய, இவனே, வள்ளுவர் காட்டும் வாலறிவன். மாசுமருவற்றவன். பேரருட் பிழம்பினன். கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பு. வல்லார்க்கும், மாட்டார்க்கும் வரமளிக்கும் வரம். நல்லார்க்கும் பொல்லார்க்கும் இடையே நடுநின்றொளிரும் அருட்பிழம்பாம், முழுமுதற் கடவுள். இவ்வாறு அருட் பேரொளி இறைவன் எல்லோரிடத்தும் இலங்குவதால், அனைவரும் அனைத்துயிர் மாட்டும், அன்புபூண்டு அருள்நலம் பரவ வேண்டுமென்று இறைஞ்சுகின்றார் வள்ளலார். மேலும் பசியால் வாடும் வயிற்றிற்குச் சோறிட வேண்டும். வாடும் மாந்தர்தம் வாட்டத்தை யகற்றுபவனே, மன்பதையில் அனைவர்தம் உள்ளத்தேயும் உறைபவன் ஆவான். இறவா வாழ்வினை எளிதில் அடைவான். உறுபசி களைதலே, உயர்பேரறமாகும். அருட்பெருங் கடவுள் தமக்கு, இறவா நிலையளித்த செய்தியினை,

"இறவாத பெருநிலையில் இணைசொலா இன்புற் றிருக்க எனை வைத்த குருவே" (அருட்பா. 3673)

அருட்பேரொளி (சோதி)க் கடவுள் என்னுள் ஒளிர்கையில், எமன் என்னை அணுகவே மாட்டான் என்று கூறும் பாடல் (அருட்பா, 3702) எல்லோர் நெஞ்சிலும் எஞ்ஞான்றும் நின்று நிலவும்.

(எ.கா.)

"எமன் எனும் அவன்இனி இலை இலை மகனே
எய்ப்பற வாழ்கஎன் றியம்பிய அரசே"
"ஈனமறுத்தென்றும் இறவாமைநல்கும் என்றே
ஞானமணி மன்றிடத்தே நண்பு வைத்தேன்
ஐயாவே" (திருவருட்பா.2950).

மேற்குறித்த கண்ணியின் கண்ணே எஞ்ஞான்றும் இறவாப் பெருநெறியினை அருட்பெருங் கடவுளிடம் வள்ளலார் வேண்டுவது காண்க. கீழ்க்காணும் திருவருட்பா பாடல்களில், தண்ணளிமிக்க, அருட்பெருங்கடவுள், தமக்கு என்றும் இறவாப் பெருவாழ்வு தந்தமையைக் கூறியுள்ளார்.

திருவருட்பாப் பாடல் எண்கள் :– 126, 157, 1105, 3673, 3630, 3692, 3702, 3703, 3708, 4333, 4615, 4638, 4907, 4953, 4954, 5278, 5412, 5486, 5806.

சாகாவரம் பெற்றமையைக் குறிக்கும் திருவருட்பாப் பாடல் எண்கள் : 30308, 3208, 3709, 3848, 3893, 3910, 4328, 4464, 4543, 4583, 4615, 209, 1568, 4627, 4631, 4534, 4635, 4694, 4707, 4731, 4754, 4791, 4796, 4815, 4817, 4828, 4903, 4956, 5417, 5510, 5624.

(எ.டு.)

"உள்ளம் தளிர்த்திடச் சாகாவரங் கொடுத்து" (திருவருட், 3848) என்றும் மேற்குறித்த அருட்பா வரியில், அருட்பேரொளி ஆண்டவன், வள்ளலாருக்குச் சாகாவரம் தந்ததினால், அவர்தம் உள்ளம் தளிர்த்தோங்கிச் சிறந்தென்று குறித்துள்ளமை காண்க.

மரணமில்லாப் பெருவாழ்வு : அருட்பெருங் கடவுளான அருட்பேரொளி ஆண்டவர், மரணமில்லாப் பெருவாழ்வில், வாழச்செய்த திறத்தினை, 3074, 4952, 4957, 5295, 5576, 5598 முதலான திருவருட்பாப் பாடல்களில் பாடியுள்ளார். ஒன்றிரண்டு எடுத்துக்காட்டு :–

"மரணமற்று வாழ்கவெனத் திருவார்த்தை
அளித்தாய்" – 3074.
"மரணத்தை விடுவித்துவிட்டேன்" – 4957.
"வம்மின் உலகியலீர், மரணமிலாப் பெருவாழ்வில்
வாழ்ந்திடலாம் கண்டீர்" – 5576.

தாம் வாழ்ந்த மரணமில்லாப் பெருவாழ்வை மன்பதை மக்களனைவரும் பெற்றுய்யும் பொருட்டு

ஆண்டவரை அழைக்கும், வள்ளலாரின் அருள் பண்பை எடுத்துரைப்பார் எவருமில்லை. "இறைவனின் அருளே உலகை ஆள்வது" என்னும் வாழ்வியல் கொள்கை வகுத்தவரன்றோ? வள்ளலார்.

வள்ளலாரும் – வள்ளுவரும் :

அற்றார் அழிபசி தீர்த்தலிலும் (குறள், 226), கொல்லா நோன்பிலும், தன்னூன் பெருக்கத்துப் பிறவுயிர்களின் ஊனினை உட்கொள்ளும் மாந்தர்தமைக் கண்டு வெகுளும் வேகத்திலும் – வள்ளலாரும் வள்ளுவரும் ஒத்த கருத்துடையவராகத் திகழ்கின்றனர் எனலாம். பிறவுயிர்கள்மாட்டு பேரன்பு செலுத்தும், பெருநெறிக் கொள்கையில், வள்ளுவமும்– வள்ளலாரும், இணைந்தே செல்வதைக் காட்டும் பாடல்கள்:–

"அன்பிற்கு உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்" (குறள், 71).

"நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீர்
அதனால் உடம்பு
நனைந்து நனைந்து" (அருட்பா, 5576)

"தன்னூன் பெருக்கத்திற்குத்தான் பிறிதுஊன்
உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்"

கொல்லா நோன்பினையும், புலால் மறுத்தலையும் மாந்தர் கொண்டொழுக வேண்டிய தலையாய வாழ்வியற் கொள்கையாக – அருட்பா முழுவதிலும் பாடியுருகியுள்ளமை கண்டு தெளிக.

வள்ளலாரும் – திருமூலரும் :

திருமூலர் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று உரைத்தது போன்று, வள்ளலாரும், தம் வாணாள் இறுதியில் அருட்பேரொளிக் கடவுளை, முழுமுதற் கடவுளாகக் கொண்டார். தமது ஆறாம் திருமுறையில் அருட்பேரொளி ஆண்டவரையே முழுமுதற் கடவுளாக ஏற்றுப் பாடிய பாடல்கள், ஏராளமாகவுள்ளன. அருட்பேரொளி யகவலில் (அருட்பெருஞ்சோதி அகவல்) அருட்பெருங்கடவுள், வள்ளலாருக்கு அனைத்து ஆற்றலையும் தந்து, மகனே என்று மாறாக்காதலுடன் அழைத்துச் செங்கோலும், கணையாழியும் அளித்து, மணிமுடிசூட்டி, அருளாட்சி செய்யப் பணித்த பான்மையினைத் திருவருட்பாப் (4139, 4521, 5447, 3672, 4615, 4177, 4589, 4150–4153, 4156) பாடல்களில் தெளிவுறுத்தியுள்ளார்.

படமாடக் கோயிலிலுள்ள இறைவனுக்குப் பூசை செய்வதைவிட, நடமாடுங் கோயிலாக, நாட்டினில் உலாவரும், ஏழை எளியவர்க்கு உதவுவதும், அவர்தம் அழிபசி போக்குவதுமே, உயர்பேறமாக வள்ளலாரும் – திருமூலரும், ஏன் வள்ளுவப் பெருந்தகையும், வலியுறுத்துவது காண்க.

"அற்றார் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி" (குறள், 226).

மன்பதையில் பொருளுள்ளவனின் கடமை, ஏதுமற்ற ஏழைகளின் வயிற்றுப் பசி தவிர்த்தலே யாகும்.

"உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்"

என்னும் திருமூலர் வாக்கினுக்கு ஏற்ப, வள்ளலார் இலக்கியம் படைத்துள்ளார் எனலாம்.

ஐந்தொழில் ஆற்றும் ஆற்றல் பெற்றமை :

அருட் பெருங்கடவுள் வள்ளலாருக்கு ஐந்தொழில் புரியும் ஆற்றல் அளித்தமையை,

"ஆக்கி அளித்தல்முதல் ஆந்தொழில் ஓர்
ஐந்தினையும்
தேக்கி அமுதொருநீ செய் என்றான்"
(அருட்பா.4045)

என்னும் பாடலிலும், (திருவருட்பாடல் எண்கள் 3948, 4045, 4139, 4150–4152, 4519, 4580, 4591, 4797–4807, 5034, 5383, 5509) ஆறாம் திருமுறை முழுவதிலும், விரிவாக விளக்கியுள்ளமை காண்க.

தன்னையறியு அறிவே தனிப்பெரும் அறிவு : ஒவ்வொருவரும் முதற்கண் வெந்ததைத் தின்று மடிவதையே, வாழ்வின் பொருளாகக், கொள்ளாது, தனது வளமையை, அறிவை, ஆற்றலை, விளக்கமறத் தெரிந்து, தேர்ந்து தெளிய வேண்டும் என்பதே வள்ளலார் வாக்கு.

"தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே ஒரு தந்திரம்நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே" (அருட்பா.2847) என்னும் இன்னிசைச் சிந்தில் இசைக்கின்றார்.

அறிவியல் உண்மை – அணு பற்றிய செய்தி :

"தாய் கருப்பையினுள் தங்கிய உயிர்களை ஆய்வறக் காத்தருள் அருட்பெருஞ்சோதி" என்னும் அருட்பெருங்கடவுட் பாடல் வரிகளில், கருவாய் வயிற்று, இருட்டறையில் இருக்கும் பான்மையினையும், கருப்பையில் உள்ள குழவியைக் கண்ணுங் கருத்துமாய்க் காப்பது – அருட் பேரொளிக் கடவுளின் உள் ஒளியென்று உரைத்துள்ளமையுங் காண்க.

கருவாயினிலே இறைவன் இருந்து, கருவினைக் காக்கும் அறிவியலுண்மையை அப்பரடிகள்,

"கருவாய்க்கிடந்து உன் கழலே நினையும் கருத்துடையேன்" என்று கூறியமை அறிக.

அருட்பெருங் கடவுள், நமதுடலில் உள்ள ஒவ்வொரு அணுவிலும் ஒளிர்கின்ற நிலையினை,

"அணுவிலணு வாயிருந்தார் வெண்ணிலாவே
எங்கும்
ஆகிநின்ற வண்ணமென்ன வெண்ணிலாவே"

என்று தெளிவுறுத்தியதறிக.

தமிழ் நாட்டிலிருந்து, அமெரிக்காவிற்குச் சென்ற தவத்திரு சச்சிதானந்த அடிகளார், மெய்ந்நெறிப் பொதுநிலைக் கழகத்தை வர்சீனியா நாட்டில் உருவாக்கியுள்ளார். இங்குள்ளவர்களுக்கு முதலில் ஊழ்கம் (தியானம்) கற்றுக் கொடுத்தார். வள்ளலார் கொள்கையாகிய, 'புலால் மறுத்தல்' அமெரிக்காவெங்கும், நன்கு பரவியுள்ளது. அருட்பேரொளி ஆண்டவருக்கு, அமெரிக்காவில் அருட்பேரொளிக் கோவிலைக் கட்டி, அருட்பெருங் கடவுளின் அருட்கொள்கைகளைப் பரப்பி வருகிறார். பல ஆயிரக்கணக்கான மாணவர்கள், மெய்ந்நெறிப் பொதுநிலைக் கழகத்தில் சேர்ந்து (சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்) திருவருட்பா ஓதி பயன்பெற்று வருகின்றனர்.

மூடவழக்கங்களை ஒழித்த சீர்திருத்தச் செம்மல் :–

அருட்பேரொளிக் கடவுளிடம் அவர் வேண்டுவதெல்லாம் அருட்பண்பையும், ஆண்டவரை அறியும் மெய்யறிவினையுமேயாகும். தொன்மத்தைத் தகர்க்கிறார். கலையுரைத்த கற்பனையால் புனையப்பட்ட, கட்டுக் கதைகளை உடைத்துத் துகள்துகளாக்குகிறார். நம்பவியலாக் கதைகளும், கற்பனைகளும் கலந்த தொன்மங்களை கண்மூடித்தனமாகக் குமுகாயத்தார் ஏற்றுக் கொள்ளலாகாது என்று தெளிவுறுத்துகின்றார்.

மன்பதையில் கூறுகின்ற சமயங்களும், மதங்களும், மக்களைக் கூறுபோடுந் தன்மையன. பிரித்தாளும் சூழ்ச்சியன. சமயக்கொள்கைகள் அனைத்தும் அருட்பேரொளி (சோதி) ஆண்டவரை உணர்த்துவனவல்ல. மெய்ந்நெறியுண்மைக் கழகம் (சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்) ஒன்றே, மக்களை நன்னெறியில் வாழ்விக்கும். தொன்மங்களும் (புராணங்களும்) மறவனப்புகளும் (இதிகாசங்களும்) சூது நிறைந்தவை.

உண்மையினை உள்ளபடி, உணர்த்தாதவை. அருட்பெரு நெறிச் (சன்மார்க்க) சமயமே அனைவருக்கும் உகந்தது என்று வள்ளலார் உணர்த்தும் பாடல்:

"கலையுரைத்த கற்பனையே
நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கம் எல்லாம் மண்மூடிப்போக

மலைவறு சன்மார்க்கம் ஒன்றே
நிலைபெற மெய்யுலகம்
வாழ்ந்தோங்கக் கருதியருள்
வழங்கினை என்தனக்கே"(அருட்பா, 3768).

அருட்பேரொளி (சோதி)க் கடவுள் கண்மூடி வழக்கங்களை ஒழித்த முழுமுதற் கடவுள் என்று மேற்குறித்த பாடல்வரிகளில் குறித்துள்ளது, உணர்ந்து இன்புறத் தக்கது. மெய்யருட் பொதுநெறி ஒன்றே, இறைவன் வள்ளலாருக்கு உணர்த்திய உயர்நெறி. வையகம் வாழ்வதற்கும், அருள் பெற்று உய்வதற்கும், வள்ளலார் அருட்ருெங் (சோதிக்) கடவுளின் மறு அருள் வடிவமாகத் தோன்றி மக்களை வாழ்வித்தார் என்பது, மெய்ந்நெறிக் கழகத்தினர்தம் (சன்மார்க்கச் சங்கத்தினர்) கொண்முடிபாகும்.

வள்ளலார்² *vaḷḷalār,* பெ.(n.) வள்ளலார் சாத்திரம் என்ற நூலியற்றிய ஆசிரியர்; a poet and philosopher, author of *vaḷḷalār šarittiram.*

[வள்ளல்→வள்ளலார்.]

வள்ளலார்³ *vaḷḷalār,* பெ.(n.) ஒழிவி லொடுக்க நூலாசிரியர்; name of *oḻivil-oḍukkam*, a *šaivite,* philosophical work of the 15th C.

[வள்ளல்→வள்ளலார்.]

வள்ளற்றனம் *vaḷḷaṟṟaṉam,* பெ.(n.) வள்ளன்மை பார்க்க; see *vaḷḷaṉmai.* *"வள்ளற்றனமும் வகுத்தனன் கூறி" (பெருங். நரவாண. 8, 6).*

[வள்ளல் + தனம்.தனம் = சொல்லாக்க ஈறு.]

(ஒ.நோ.) கஞ்சத்தனம், மடத்தனம்.

வள்ளன்மை *vaḷḷaṉmai,* பெ.(n.) 1. கொடையுடைமை; liberality. 2. வாரி வழங்குந் தன்மை; munificence. *"வள்ளன்மை பூண்டான்கண் ஒண் பொருள்" (நாலடி, 386).*

[வள்ளல் + மை. 'மை' பண்புப் பெயரீறு.]

வள்ளாங்கை *vaḷḷāṅgai,* பெ.(n.) இடக்கை; left hand.

[வள்→வள்ளாம் + கை]

வள்ளி¹ *vaḷḷi,* பெ.(n.) 1. கொடி வகை; a kind of creeper. *"வாடிய வள்ளி முதலரிந் தற்று" (குறள், 1304).* 2. கொடி; a medicinal creeper, convolvulus balatas. 3. நிலத்திற் படரும் பூசணி (M.M); panicled bindweed. 4. தண்டு; stalk, stem. 5. கொடிபோன்று தொடர்ந்திருப்பது; streak, line, row. *"மேகவள்ளி" (தொல்.பொருள்.88, உரை).*

[வல்→வல்லி→வள்ளி]

வள்ளி² *vaḷḷi,* பெ.(n.) 1. கைவளை; bracelet. 2. காப்பு வளை; armlet. *"ஆம்பல் வள்ளித் தொடிக்கை" (புறநா.63).* 3. தொய்யிற் கொடி; figures drawn on the breasts and arms of young women. *"வண்டே யிழையே வள்ளி பூவே" (தொல். பொருள்.).* 4. வள்ளித் தண்டை (வின்.); rattan shield.

[வல்→வல்லி→வள்ளி]

வள்ளி³ *vaḷḷi,* பெ.(n.) 1. குறிஞ்சிநிலப் பெண்; woman of the hilly tracts. *"வள்ளி மருங்குல்" (திருக்கோ. 128).* 2. முருகக் கடவுளின் துணைவி; a wife of Lord *Murugaṉ.* *"குறவர் மடமகள்.... வள்ளியொடு" (திருமுரு.101).* 3. முருகக் கடவுட்கு மகளிர் மனநெகிழ்ந்து வெறியாடுதலைக் கூறும் புறத்துறை (பு.வெ.9, 41); (Puṟap.) theme describing the *veṟi-y-āḍal* of hill women possessed by *Murugaṉ.* 4. குறிஞ்சி மகளிர் கூத்து வகை (தொல். பொருள். 60, உரை); a kind of dance of hill women.

[வல் → வல்லி → வள்ளி = வளைந்த கொடி போன்ற பெண், குறிஞ்சிநிலப் பெண், முருகன் தேவி (தேவ.13, பக்.48).]

(ஒ.நோ.) கொடு → கொடி = வளைந்த தண்டு (வ.வ.256).

கொடி → கொடிச்சி = குறிஞ்சி நிலப் பெண்.

"முருகவேளைக் குறித்தது" (வீர.104), "தண்கதிர் மண்டிலம்" (தொல்.பொருள்.88, நச்.) என்று உரையாசிரியர்கள், வள்ளி குறித்துக் கூறியதறிக.

வள்ளிக்கண்டம் *vaḷḷi-k-kaṇḍam,* பெ.(n.) 1. சீந்தில் (மலை.); gulancha. 2. வள்ளிகா பார்க்க; see *vaḷḷigā.*

[வள்ளி + கண்டம்]

வள்ளிக்கிழங்கு *vaḷḷi-k-kiḻaṅgu,* பெ.(n.) வள்ளி; sweet potato.

[வள்ளி + கிழங்கு]

இதன் வகைகளாக, சாம்பசிவ அகராதி கூறுவன :- 1. வள்ளிக்கிழங்கு; root tuber - Impomoea batatas. 2. மரவள்ளிக்கிழங்கு; root tuber, topioca-manihot utilissima. 3. சருக்கரை வள்ளிக் கிழங்கு; tuber, Impomoea batatas. 4. சீனவள்ளி. 5. சிவப்பு வள்ளி; red in colour. 6. மஞ்சள் மரவள்ளி; yellow indian, shot-canna flacida. 7. சீமை மரவள்ளி; mendoza arrow root.

வள்ளிக்கூத்து *vaḷḷi-k-kūttu,* பெ.(n.) குறிஞ்சி நிலத்து மக்களின் கூத்து வகை (பெரும்பாண். 370, உரை); a masquerade dance among the people of the hilly tracts.

[வள்ளி + குத்து → கூத்து.]

குறிஞ்சிநில மக்கள், முருகனின் வள்ளி திருமண நிகழ்வைத் தாளவொத்துக்கு இயையக் கூத்தாக, இன்றும் ஆடி வருகின்றனர்.

வள்ளிக்கொடி *vaḷḷi-k-koḍi,* பெ.(n.) காட்டு வள்ளி; five leaved yam.

[வள்ளி + கொடி]

வள்ளிகா *vaḷḷigā,* பெ.(n.) 1. சீந்திற் கொடி; moon creeper. 2. வெண்திணை; Italian millet-*Sectoria italica.*

வள்ளிகாத்திணை *vaḷḷigā-t-tiṉai,* பெ.(n.) வெண்டினை; Italian millet-*Setoria italica.*

வள்ளிகேள்வன் *vaḷḷi-kēḷvaṉ,* பெ.(n.) முருகக்கடவுள் (வள்ளிக்கணவன்); lord Murugaṉ.

மறுவ. குறிஞ்சிக் கடவுள்

[வள்ளி + கேள்வன். கேள் → கேள்வன் = கணவன்.]

வள்ளிகொழுநன் *vaḷḷi-koḻu-naṉ,* பெ.(n.) வள்ளிகேள்வன் பார்க்க; see *vaḷḷi-kēḷvaṉ.*

[வள்ளி + கொழுநன். கொள் → கொளுவு → கொழுவு → கொழுநன்.]

கொழுநன் = மணந்து கொள்பவன். கொழுவுதல் = அணைத்துக் கொள்ளல்.

வள்ளிசாக *vaḷḷišāga,* வி.அ.(adv.) 1. முழுமையாக; fully, round sum. 2. கூடுதலாக; even a little bit. *"வீட்டில் வள்ளிசாகத் தண்ணீர் இல்லை".*

[வள்ளிசு→வள்ளிசாக]

வள்ளிசாய் *vaḷḷišāy,* குவிஎ.(adv.) 1. முழுவதும்; entirely, completely, fully. 2. நேர்த்தியாய்; neatly. 3. சரியாய்; exactly, correctly, precisely.

[வள்ளிசு→வள்ளிசாய்]

வள்ளிசு[1] *vaḷḷišu,* பெ.(n.) நெற்றி; forehead.

வள்ளிசு[2] *vaḷḷišu,* பெ.(n.) 1. நேர்த்தி; neatness, beauty. 2. துல்லியம்; correctness, exactness, preciseness, accuracy.

[வல்→வள் + இது - வள்ளிது→வள்ளிசு]

வள்ளித்தண்டு *vaḷḷi-t-taṇḍu,* பெ.(n.) வள்ளித் தண்டை (சங்.அக.) பார்க்க; see *vaḷḷi-t-taṇḍai.*

[வள்ளி + தண்டு]

வள்ளித்தண்டை *vaḷḷi-t-taṇḍai,* பெ.(n.) பிரப்பங் கேடகம்; rattan shield. *"வார்மயிர்க் கிடுகொடு வள்ளித் தண்டையும்" (சீவக. 22, 18).*

[வள்ளி + தண்டை]

வள்ளிதிருமணக்கதை *vaḷḷi-t-tirumaṇa-k-kadai,* பெ.(n.) வள்ளிநாடகம் பார்க்க; see *vaḷḷi-nāḍagam.*

[வள்ளி + திருமணம் + கதை.]

வள்→வள்ளி = வளைந்த கொடி போன்ற பெண், குறிஞ்சிநிலப் பெண், முருகன் தேவி.

கழல்→கழறு→கதல்→கதை.

கதை = சிறப்பித்துச் சொல்லுதல். குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகன், வள்ளி திருமண நிகழ்வைச் சிறப்பித்துச் சொல்லும் கதையே வள்ளிதிருமணக் கதை.

வள்ளிது *vaḷḷidu,* பெ.(n.) முழுமை; whole.

[வள் + இது.]

ஒ.நோ. E. round = whole.

இச் சொல் வட்டம் என்னும் சொல்போல 'வள்' என்னும் பகுதியினின்று பிறந்ததாகும். உலக வழக்கில் இச் சொல் முழுமைப் பொருளில் வழங்கி வருகிறது. வள்ளிதாய்ச் செலாயிற்றென்றால், முழுதும் செலவாயிற்றென்பது பொருள். 'வள்ளிசாய்' என்பது கொச்சைப்போலி.

இதுபோன்ற பல சொற்கள், நெல்லை வழக்கிற்குச் சிறப்பாகும். ஆதலால் தமிழை செவ்வையாய் அறிய வேண்டின், பாண்டி நாட்டுலக வழக்கை முழுமையாய் ஆராயவேண்டும்.

வள்ளிநாய்ச்சியார் *vaḷḷi-nāycciyār,* பெ.(n.) வள்ளியம்மை (திருமுரு.பக்.47, கீழ்க்குறிப்பு); consort of lord *murugāṉ.*

[வள்ளி + நாய்ச்சியார்.]

வள்ளிநாயகம்பிள்ளை *vaḷḷi-nāyagam-piḷḷai,* பெ.(n.) 20-ஆம் நூற்றாண்டில் தில்லைப் பதிற்றுப்பத்தந்தாதி என்னும் நூலை, இயற்றிய புலவர்; a poet, who composed a work titled *'tillai-patiṟṟu-p-pathandādi'* in 20C.

வள்ளிநாடகம் *vaḷḷi-nāḍagam,* பெ.(n.) குறிஞ்சிநிலத் தெய்வம் முருகன் வள்ளி திருமண நிகழ்வை நாடகமாக நடித்துக் காட்டுகை; drama of *vaḷḷi* (story).

[வள்ளி + நடி + அகம்→நாடகம்.]

நடம் (பிங்.) கதை தழுவி வரும் கூத்து. வள்ளி திருமணக் கதையே, வள்ளி நாடகமாகவும், வள்ளிக் கூத்தாகவும், பன்னெடுங்காலமாக நடிக்கப்பட்டு வருகிறது.

வள்ளிநாயகி *vaḷḷi-nāyagi,* பெ.(n.) வள்ளியம்மை; a consort of lord Murugaṉ. *"முருகு புணர்ந்து இயன்ற வள்ளிபோல நின் உருவுகண் எறிப்ப நோக்கல் ஆற்றலனே" (நற்.82, 4–5).*

[வள்ளி + நாயகி]

வள்ளிபங்கன் *vaḷḷi-paṅgaṉ,* பெ.(n.) முருகக் கடவுள்; lord *Murugaṉ.*

[வள்ளி + பங்கன்]

வள்ளிப்புரி *vaḷḷi-p-puri,* பெ.(n.) நெல்லைச் சேர்கட்டும்போது சுற்றிப்பிடித்துக் கொள்ள அமைக்கும் வைக்கோற்புரி; straw ropes used in the collection of paddy.

[வள்ளி + புரி. புல்→புர்→புரி.]

வள்ளிமணவாளன் *vaḷḷi-maṇavāḷaṉ,* பெ.(n.) வள்ளியின் கணவன்; as the consort or husband of *vaḷḷi.*

[வள்ளி + மணவாளன்]

வள்ளிமணாளன் *vaḷḷi-maṇāḷaṉ,* பெ.(n.) வள்ளிமணவாளன் பார்க்க; see *vaḷḷi-maṇavāḷaṉ.*

[வள்ளி + மணாளன்]

வள்ளிமலை *vaḷḷi-malai,* பெ.(n.) ஒரு மலை; a mountain, hill.

[வள்ளி + மலை]

வள்ளிமாதரை *vaḷḷi-mātarai,* பெ.(n.) வெங்காயம்; onion-*Allium cepa.*

[வள்ளி + மாதரை]

ஒருகா. ஈருள்ளி

வள்ளியம்[1] *vaḷḷiyam,* பெ.(n.) மிளகு (மலை.); black pepper.

[வல்→வல்லி→வள்ளி→வள்ளியம்]

வள்ளியம்[2] *vaḷḷiyam,* பெ.(n.) 1. மரக்கலம் (சது.); ship, catamaran. 2. ஊது குழல்; musical pipe. 3. மெழுகு; wax.

[வள்ளி→வள்ளியம் (வே.க.4, பக்.95)]

வள்ளியம்மை *vaḷḷi-y-ammai,* பெ.(n.) முருகக் கடவுளின் தேவி; a consort of lord *Murugaṉ.*

[வள்ளி + அம்மை]

வள்ளியம்மைகூட்டம் *vaḷḷi-y-ammai-kūṭṭam,* பெ.(n.) குறவர் இனம்; the kuṟava caste.

மறுவ. குறக்கூட்டம்

[வள்ளியம்மை + கூட்டம்]

வள்ளியன் *vaḷḷiyaṉ,* பெ.(n.) வள்ளியோன்; liberal generous person, munificent, donor. *"வள்ளிய ராக வழங்குவ தல்லலால்" (கம்பரா.வேள்விப். 29).*

[வள்[1]→வள்ளி→வள்ளியன்]

வள்ளியோர் *vaḷḷiyōr,* பெ.(n.) வண்மை யுடையோர்; generous, liberal person. *"வள்ளியோர்ப் படர்ந்து, புள்ளின் போகிநெடிய என்னாது சுரம் பல கடந்து" (புறம். 47 – 1–2).*

[வல்→வள்ளி→வள்ளியோர்.]

வள்ளியோன் *vaḷḷiyōṉ,* பெ.(n.) வள்ளியோர் பார்க்க; see *vaḷḷiyōr.* *"வள்ளியோர்ப் படர்ந்து" (புறநா. 47).*

[வள் → வள்ளியோன்]

வள்ளுகிர் *vaḷḷu-kir,* பெ.(n.) கூரிய உகிர்; sharpened nail. *"வள் உகிர வயல் ஆமை வெள் அகடு கண்டன்ன" (புறம்-387-1-2).*

[வல் → வள் + உகிர்]

வள்ளுயிர் *vaḷḷuyir,* பெ.(n.) பேரொலி; noise, shout.

[வள் + உயிர்]

வள்ளூரம் *vaḷḷuram,* பெ.(n.) 1. ஆட்டிறைச்சி; mutton, meat. 2. சூட்டிறைச்சி; roasted meat. 3. மாட்டிறைச்சி; beaf. 4. புலால்; flesh-meat. *"முழூஉ வள்ளூர முணக்கு மள்ள" (புறநா. 219). "ஆயிடை யறிந்தும் வள்ளூர மருந்தலால்" (பிரமோத். 3, 34).*

[வள் + உரம். வள் = திண்மை.]

வள்ளுவசாத்திரம் *vaḷḷuva-cāttiram,* பெ. (n.) கணியம் (சோதிடம்) (வின்.); the art of foretelling, as practised by the vaḷḷuvaṉ caste.

*[வள்ளுவன் + **Skt.**சாத்திரம்]*

Skt. Sastra > த. சாத்திரம்

வள்ளுவநாடு *vaḷḷuva-nāḍu,* பெ.(n.) திருவிதாங்கூர்ச்சீமையைச் சார்ந்த ஒரு நாடு; a region in the then travancore state.

[வள்ளுவம் + நாடு.]

வள்ளுவப்பண்டாரம் *vaḷḷuva-p-paṇḍāram,* பெ.(n.) வள்ளுவ இனத்திற் குறி சொல்வோன்; a soothsayer of the *vaḷḷuva* caste.

[வள்ளுவம் + பண்டாரம்]

வள்ளுவப்பயன் *vaḷḷuva-p-payaṉ,* பெ.(n.) திருக்குறள் (நன். 274, மயிலை.); *tiru-k-kuṟaḷ.*

[வள்ளுவம் + பயன்.]

வள்ளுவப்பறையன் *vaḷḷuva-p-paṟaiyaṉ,* பெ.(n.) வள்ளுவசாதியிற் குறி சொல்வோன்; a sooth sayer of the *vaḷḷuva* caste.

[வள்ளுவம் + பறையன்.]

வள்ளுவப்பை *vaḷḷuva-p-pai,* பெ.(n.) நாட்டுக் கோட்டைச் செட்டிகளுள், மணமகன் தோள் மேல் இட்டுச் செல்லும் பட்டுப்பை; long silk purse or red cloth carried on the shoulders by a *nāṭṭu-k-kōṭṭai cheṭṭi,* bridegroom to receive betel and other gifts (E.T.V. 268).

[வள்ளுவம் + பை.]

வள்ளுவம் *vaḷḷuvam,* பெ.(n.) வள்ளுவ ரியற்றிய திருக்குறள் தெளிவுறுத்தும் வாழ்வியல் நெறிமுறைகள் அல்லது கோட்பாடுகள் (தத்துவம்); principles or philosophy of life, written by *Vaḷḷuvar,* the author of *Tirukkuraḷ.*

மறுவ. அறம்; தமிழ்மறை; முப்பால்; உலகப் பொதுமறை.

[வள் → வள்ளுவன் → வள்ளுவர் → வள்ளுவம்]

வள்ளுவம் என்பது ஆசிரியனை நோக்கி அமைத்துக்கொண்ட பெயராகும்.

வள்→வள்ளுவன் = மதிக்கூர்மையன்.

மதிக்கூர்மை மிக்க சீரிய செஞ்சொற்கள் வாயிலாக, எந்நாட்டவர்க்கும், எக்காலத்தவர்க்கும் ஏற்றவண்ணம், 2000 ஆண்டுகட்கு முன்னரே, தெள்ளிய மனமும், ஒள்ளிய அறிவும், திண்ணிய நெஞ்சும், நுண்ணிய மதியும் கொண்ட திருவள்ளுவர் இயற்றிய நூலே திருக்குறளாகும். இந்நூலுள் பொதிந்துள்ள ஞாலந்தழீஇய வாழ்வியற் கருத்துகளே வள்ளுவமாகும்.

ஞால மாந்தர் அனைவரும் குமுகாயத் துறையிலும், சமயத்துறையிலும், வாழ்வியல் துறைகள் அனைத்திலும், துன்பமின்றி, தொல்லைகளின்றி, நன்னெறிபூண்டு, பொந்திகை யடைந்து நலத்துடனும், வளத்துடனும் வாழ வழிகாட்டும் திருக்குறளே வள்ளுவ மென்றறிக.

வள்ளுவனாரின் வாழ்வியற் கோட்பாடுகளே வள்ளுவம் ஆகும். உலகத்திலுள்ள அனைத்து மறைகளின் கருத்துகளும், பொதிந்துள்ளதால், உலகப் பொதுமறையாயிற்று. உலக முழுமைக்கும் ஏறத்தாழ 30க்கும் மேற்பட்ட மொழிகளில், மொழி பெயர்க்கப்பட்ட நூலாகவும் வள்ளுவம் திகழ்கிறது.

மக்கள்–மாக்கள்–பகுப்பு :– ஆறாம் அறிவாகிய பகுத்தறிவு அல்லது பண்பாடு நிறைந்தவரை மக்கள் என்றும், அஃதற்றவரை மாக்கள் என்றும், மாந்தரை இருவகுப்பினராகத் தொல்காப்பியர் பகுத்துள்ளார். "மாவும் மாக்களும் ஐயறிவினவே" (தொல்.1531).

(எடு) *"மக்கள் தாமே ஆறறிவுயிரே" (தொல்.1532).*

வள்ளுவரும், பண்பட்ட மாந்தரை மக்கள் என்று கீழ்க்கண்ட குறட்பாக்களிற் குறித்துள்ளது காண்க.

1. *"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல் கற்றாரோடு ஏனை யவர்" (குறள், 410).*

2. *"மரம் போல்வர் மக்கட்பண்பு இல்லாதவர்" (குறள், 997)*

3. *"மக்களே போல்வர் கயவர்" (குறள், 1071).*

பண்படா மாந்தரை மாக்கள் என்று வள்ளுவம் வரையறுத்ததற்கான சான்றுகள் :–

*"கொலை வினையராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து" (குறள், 329).*

*"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்" (குறள், 420).*

"கொலை வினையர் மக்கட் பண்பில்லாதவரென்று கருதி", அவர்களை மாக்கள் என்று தொல்காப்பியர் கூறுவது போல், வள்ளுவர் குறித்துள்ளமையால், வள்ளுவத்தின் காலம் கி.மு.7–ஆம் நூற்றாண்டிற்கும், கடைக்கழக முடிவாகிய கி.பி.3–ஆம் நூற்றாண்டிற்கும், இடைப்பட்டது. கிறித்துவிற்கு முந்தியதென்பார் மொழிஞாயிறு (தமிழியற் கட்டுரைகள் பக்.148).

மறைமொழி – மந்திரம் – வள்ளுவத்தின் – தனிச்சிறப்பு :–

தொல்காப்பியர் கூறும் மக்கட் பகுப்பானது – வள்ளுவர் வகுத்தளித்த திருக்குறளாம், வள்ளுவத்தின், உலகளாவிய உயர்கொள்கைக்கு, எடுத்துக்காட்டு என்பார் பாவாணர்.

திருவள்ளுவர்,

*"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப" (தொல்.1434)* என்னுந் தொல்காப்பிய நூற்பாவை,

*"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" (குறள், 28)*
என்னுங் குறளிற் கூறியுள்ளது. உயத்துணரத்தக்கது. வாழ்வியலுக்கு ஏற்ற வண்ணம் அமைந்த வள்ளுவத்தின் சிறப்பினை வரையறுப்பது அரிது. பிறமதத்தினரின் மறைமொழி, மறை (வேத)த்

தன்மையது. வள்ளுவம் கூறும் மறைமொழி, மனத் திண்மைக்குச் சான்றாகத் திகழ்வது. கருதியதைச் செயலாக்கும் அல்லது நிறைவேற்றும் ஆற்றல் மிக்கது.

மந்திரம் பற்றி மொழிஞாயிறு:- "மறை மொழி அல்லது மந்திரம் என்பது, வாய்மொழியும் சாவிப்புமென இருவகைப்படும். திருமூலரின் திருமந்திரமும், நம்மாழ்வாரின் திருவாய்மொழியும், வாய்மொழி போல்வன. கவுந்தியடிகள் காவிரித் தென்கரைச்சோலை யொன்றில், வம்பப் பரத்தையையும், வறுமொழியாளனுமான இருவரை நரிகளாக்கியது சாவிப்பு" (திருக்குறள் தமிழ்மரபுரை, பக்.56).

ஆனால் வள்ளுவம் கூறும் மறைமொழி ஆற்றல் மிக்கது. திண்ணிய தன்மையது. எண்ணிய எண்ணத்தை நிறைவேற்றும் திறம் வாய்ந்தது.

முன்→மன் + திரம் = மந்திரம்; திரம்→திறம்.

முன்னுதல் = எண்ணுதல், கருதுதல்.

(ஒ.நோ.) மன்று→மந்து→மந்தை; முரி→முறி.

அன்பற்றவர் - என்பற்ற புழுபூச்சிகளை யொப்பர்:- பிறர்மாட்டு அன்புசெலுத்தாதவர்களை - எலும்பற்ற புழுபூச்சிகளுக்கு ஒப்பான ஓரறிவுயிர்கள், என்று இகழ்கிறது வள்ளுவம். இக் கோட்பாடு, வள்ளுவத்தின் வையந்தழுவிய வாழ்க்கைக் கோட்பாடு எனலாம். அன்பற்ற மாக்களை, அறத்தெய்வம் எரித்துக் கொல்லும் என்பதை,

"என்பிலதனை வெயில் போலக் காயுமே

அன்பி லதனை அறம்" (குறள், 77) என்று குறித்துள்ளமை காண்க. வெயில் வந்த ஞான்று, எலும்பில்லா உடம்பு இன்னலுறுவது போல், தீவினைக் காலத்தே, பிறர்க்குத் தீமை செய்பவர் தீராத் துயருள் ஆழ்வர்.

வள்ளுவம் காட்டும் நாற்பொருள் பாகுபாடு :

அறம், பொருள், இன்பம், வீடென்னும், நான்மை நன்னெறியினை, நானிலத்தாரின், வாழ்க்கையில், இணைத்து இயம்பிய பெருமை, வள்ளுவத்திற்கே உரிய சிறப்பாகும்.

அறம் : ஆரியர் சிந்து வெளியில் தங்கியிருந்தபோது, இயற்கைத் தோற்றங்களையும், ஐம்பூதங்களையும், உணவுப் பொருள்களையுமே, தெய்வங்களாக வணங்கினர். சோமம் என்னும் ஒருகொடிச் சாற்றுமதுவும் தெய்வமாக வணங்கப்பட்டது. விடியற்கால ஒளி முதல் அந்திமாலைக் கதிரவனின் சுடர் வரை, சூரியனின் ஒரே சுடரை, அறு நிலைகளில் தெய்வமாக வணங்கியது, அவரின் மதியில்லா வளர்ச்சி நிலையைக் காட்டும் என்பார் பாவாணர்.

வடவருக்குக் கோயிலுமில்லை; குளமுமில்லை. விலங்கை காவு கொடுக்கும் வேள்வித்தூணே கோயில். இறந்தபின் உயிர்கள் பல்வேறு உலகில் வதியும் என்பது வடவர் கொள்கை.

முழுமுதற் கடவுட் கொள்கையும், வீடுபேற்றுக் கொள்கையும் வள்ளுவத்தில் பரவலாகக் காணப்படுகிறது. இதுவே தமிழர் கொள்கை; வள்ளுவம் காட்டும் உறுதிப் பொருள்கள் நான்கனுள் தலையாயது அறம். உள்ளத்தில் கள்ளத்தைக் களைதலே உயர்பேரறம். அறந்தொடர்பான முயற்சிகள் அனைத்தும் மனத்தைப் பக்குவப் படுத்தும் திறத்தன. அதனால்தான் வள்ளுவம்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற" (குறள், 34) என்றழைக்கிறது.

"வறியார்க்கொன்று ஈவதே, ஈகை"- வள்ளுவம்.

வள்ளுவ மென்றழைக்கப்படும் திருக்குறளின், சிறப்புமிகு வாழ்வியல் கோட்பாடாகக்

குறிக்கப்படுவது யாதெனின், ஏதுமற்ற ஏதிலிகட்கும், திருப்பிச் செய்யுந் திறனற்ற ஏழையர்க்கும், அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பதே, ஈகையென்று குறித்துள்ளமையாகும்.

இத்தகைய ஈடிணையில்லாப் பேரறத்தை, வள்ளுவம் கூறுவதாலேயே – திருக்குறள், அறம் என்றழைக்கப்பட்ட தென்க. வள்ளுவம் கூறும் வாழ்வியலறப் பாடல் வருமாறு:–

"வறியார்க்கொன் றீவதே ஈகை மற்றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர் துடைத்து" (குறள், 221).

பொருள்: பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்பதனைவரும், அறிந்ததே. இல்லறத்திலிருந்து, இயல்புடைய மூவரைக் காத்து, நன்மக்களைப் பெற்று, கற்றோர் போற்றும் அவையில் அவர்தமை முந்தியிருக்கச் செய்வதற்கு இன்றியமையாதது, பொருளேயாகும். உலகியல் வாழ்விற்கு உறுதுணையாயிருக்கும், இப் பொருளைக் கொண்டுதான், வேந்தன்,

"படைகுடிகூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" (குறள், 381)

முதலான, ஆறு உறுப்புகளின் வாயிலாக, மக்களுக்குப் பாதுகாப்பான வாழ்க்கையைத் தரவியலும், இங்கு "கூழ்" என்பது குடிகள் அல்லது நாட்டிலிருந்து பெறும் பொருளைக் குறித்தது.

இன்பம்: இன்பத்துப் பாலென்பது வெளிப்படையாகச் சிற்றின்பத்தையும், குறிப்பாகப் பேரின்பப் பொருளையும் குறிக்கும் என்பது ஆன்றோர் கொள்கை.

மனைத்தக்க மாண்புடையவளாகிய மனைவியிடம், இல்வாழ்க்கை நடாத்தி, அறத்தின்வழி ஈட்டிய பொருளை, தாமும் உண்டு, பிறர்க்கும் கொடுத்துப் பல்லுயிரோம்புங்கால் பெறும் இன்பமே, பெருமைக்குரிய பேரின்பமாகும். துறக்கவுலகாம் வீட்டின்பத்தைவிடச் சிறந்த இன்பமாகும். இவ்வின்பத்தை "இல்லறஞ்செய்தார் எய்தும் துறக்கவின்பம்" என்பார் பரிமேலழகர். இத்தகைய பொருள்பொதிந்த குறள் வருமாறு:–

"தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு" (குறள், 1107).

"சிற்றின்பமே, பேரின்பத்தின் திறவுகோல்" என்னும் கோட்பாட்டினை, இக் குறளின் வழியாக, வள்ளுவர் குறித்துள்ளார். இது பற்றிய திருச்சிற்றம்பலக் கோவை,

"பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் ஆங்கே
உற்றபரிசென்று உந்தீபற" என்று கூறியுள்ளதறிக.

4. வீடு: "ஆசையறுமின்கள், ஆசையறுமின்கள் ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்", என்பது தமிழர்தம் வாழ்வியற் கோட்பாடாகும். ஆசையை யொழித்தலே, வீடுபேறடைவதற்குரிய எளிய வழி; இது குறித்து, வள்ளுவம் வகுத்துள்ளது வருமாறு. இவ்வுலக வாழ்க்கையிலேயே ஆசையை அறுத்து, உயர்ந்த வீட்டின்பத்தை அனைவரும் அடையலாம், என்பதே வள்ளுவம் காட்டும் வழியாகும்.

"ஆராவியற்கை அவா நீப்பின் அந்நிலையே
பேராவி யற்கை தரும்" (குறள், 370).

ஆசைக்கோர் அளவில்லையென்பார் தாயுமானவர், ஆசையும் அன்பும் அறுத்த வாழ்வே, ஈசனை அடையும் எளிய வாழ்வென்று, திருமூலர் (2613) கூறியுள்ளது, இங்கு உற்றுநோக்கற்குரியது. எஞ்ஞான்றும், பொந்திகை (போதுமென்ற மனம்)யடையாத பேராசை இயல்பினை, வள்ளுவம் ஆராவியற்கை யென்று கூறுவதறிக.

எள்ளளவுந் துன்பங் கலவாததாய், எல்லையில்லா இன்பத்தை எஞ்ஞான்றும் வாரிவழங்குவதாய் அமைந்த வீட்டின்பமே "பேராவியற்கை" யென்னும் பேரின்பமாகும்.

எடுத்தயிப் பிறவியிலேயே, ஆசையை யொழித்துப் பெறும் பேரின்பமே, "உடலோ டிருந்த வீடு" (சீவன் முத்தி) என்றும், இறந்தபின் பெறுவது உடலிறந்த வீடு (விதேகமுத்தி) என்றும், சொல்லப்பெறும்.

வள்ளுவத்தில் கூட்டுடைமையாட்சி : தெய்வப் புலவரியற்றிய வள்ளுவத்தில் மக்கள் தொகை மிக்க இன்றையக் குமுகாயத்திற்கு மிகவும் இன்றியமையாததும், எக் காலத்தும் நிலைத்து நிற்பதுமான, கூட்டுடைமையாட்சியின் கருத்துப் பதிவுகள், கீழ்க்கண்ட குறள்களில் மிளிர்கின்றன.

"பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்" (குறள், 44)

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (குறள், 322)

என்னுங் குறட்பாக்களிலும், மேலும், 227, 1107, 1062 போன்ற பாக்களும் கூட்டுடைமை குறித்தனவே. இனி,

"பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்ல தமைச்சு" (குறள், 633) என்னும் குறள், எக் காலத்திற்கும் ஏற்றவண்ணம் அமைந்துள்ளது.

வள்ளுவமும் – மனுதருமமும்

உழு தொழிலையும், உழவரையும் மனு தருமம் இழிவாகக் குறித்துள்ளது (எ.கா. மனுதருமசாத்திரம் 10:84ஆம் பக்கம் காண்க).

ஆனால் வள்ளுவம் *"சுழன்றும் ஏர்பின்னது உலகம்" (1031)* என்றும், *"உழுவார் உலகத்தார்க்கு ஆணி" (குறள், 1032)* என்றும், *"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" (குறள், 1033)*, *"உழவினார் கைம்மடங்கின் இல்லை" (குறள், 1036)* என்றும், உழுதொழிலின் இன்றியமையாமையும், வேளாண் தொழிலாளர்தம் சிறப்புக்களையும் குறிக்கு முகத்தான், உலகப் பொதுமறையாகத் திகழ்கிறது.

ஓய்வின்றி உழைத்தால் ஊழையும் வெல்லலாம் வள்ளுவம் :

ஊழ்வினைக் கொள்கையை ஓயாது உழைப்பதன் வாயிலாக ஒழித்துக் கட்டுகிறார் வள்ளுவர் (குறள், 620). மடியின்றி உழைத்தால் குடி உயரும் (குறள், 602). "தெய்வத்தால் முடியாத செயலையும், முயற்சியுடன் அயராது உழைத்தால், இனிது முடிக்கலாம்". வாழ்வில் வளங்காணலாம், என்பதே வள்ளுவத்தின் உயரிய வாழ்வியற் கொள்கையாகும்".

(எ–கா)

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்" (குறள், 619).

வள்ளுவம் – வாழ்க்கை வழிகாட்டி :

கீழே குறிக்கப்பட்டுள்ள குறட்பாக்கள், வள்ளுவம் எங்ஙனம் வாழ்விற்கு வழிகாட்டுகின்றது, என்பதனைத் தெளிவுறுத்தும், கலங்கரை விளக்கமாக இலங்குகின்றன.

(எ–கா)

"கோளில் பொறியில் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" (குறள், 9).

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (குறள், 392).

"கற்றிலனாயினும் கேட்க" (குறள், 414).

"எண்ணித் துணிக கருமம்" (குறள், 467).

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது" (குறள், 101)

போன்றனவும், ஒருவன் செம்மையாகவும்,

சிறப்பாகவும், இன்பமாகவும் வாழச் சிறந்த வழிகாட்டுவனவாகக் கீழ்க்கண்ட குறளெண்களுள்ள பாக்களைக் குறிக்கலாம். குறள், 27, 30, 251, 1062, 60, 904, 920, 146, 67, 70, 760, 616, 675, 467, 625, 33, 642, 293, 282, 314, 101, 460, 792, 523, 443, 942, 236.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்" (குறள், 314)

என்னுங் குறட்பாவின் வழியொழுகினால், எல்லோர்க்கும் வாழ்வில் எஞ்ஞான்றும் இன்பமே, துன்பமில்லை யென்று துணியலாம்.

வள்ளுவம் – இறைப்பொதுமை – சமயப்பொதுமை :

வள்ளுவம் எந்தவொரு இறைவனையும் பெயர்சுட்டி அழைக்கவில்லை. இறைவனின் தன்மைகளைப் பொதுவாகவே, வரையறுத்துள்ள பாங்கு போற்றி வணங்கத் தக்கது.

இறைவனை "ஆதி பகவன்" (குறள், 1) என்றும், "வாலறிவன்" (குறள், 2) என்றும், "மலர்மிசை யேகினான்" என்றும், "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்றும், "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்றும், "தனக்குவமை யில்லாதான்" என்றும், "அறவாழியந்தணன்" என்றும், குறிப்பிட்டு, ஒரு பெயர், ஓர் உருவம், இல்லாத இறைவனுக்கு, வள்ளுவம் அருட்பெயர் பலவற்றைச் சூட்டுவதன் வாயிலாக, இறைவனை ஞாலப் பொதுமைப் பொருளாக அமைத்துக் காட்டியமையால், நானிலத்தில் நிலைத்தவிடத்தைப் பெற்றுள்ளது..

வள்ளுவர் *va!!uvar*, பெ.(n.) 1. கீழ்க்கணக்கு நூல்களிலொன்றாகிய திருக்குறள் செய்தவர், காலம் கி.மு.1–ம் நூற்றாண்டு என்ற கருத்தும் உண்டு; a saintly poet who composed *tiru-k-kuṟaḷ*, one of *kīḻ-k-kaṇakku* works, I.B.C. 2. உலகப்பொது மறையாம் திருக்குறளை இயற்றியவர்; the world renowned patron *Šaint* and the eminent poet *vaḷḷuvar*, who wrote Tirukkuraḷ. *"வள்ளுவர் செய்திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்" (மனோன்மணீய ஆசிரியர்). "வாய்மொழி வள்ளுவர் முப்பால்" (திருவள்ளுவமாலை).*

[வள்→வள்ளுவன்→வள்ளுவர். வள் = கூர்மை. வள்ளுவர் = கூர்மதியர், வல்லவர், வண்மையாளர்.]

வரணப் பாகுபாட்டைக் கடிந்த தமிழர் மீட்பர் :– நால்வரணக் கூண்டிலடைபட்டிருந்த தமிழரை மீட்டவர் வள்ளுவரென்பார், பாவாணர். "வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்" (புறம்.183). "பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்" (சிலப்.22:109) என்று கழக இலக்கியமும் அந்தணர், அரசர், வணிகர், சூத்திரரென்று காப்பிய இலக்கியமும் பேசிய நால்வரணப் பகுப்பிலிருந்து, நந்தமிழரை விடுவித்த தமிழர் மீட்பராக; வள்ளுவர் விளங்குவதைக் காட்டும் குறட்பாக்களும், பாடல் எண்களும் (972, 973, 978, 133, 134, 1033, 1035) வருமாறு :–

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (குறள், 972).

"மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்" (குறள், 973).

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்" (குறள், 133).

"மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்" (குறள், 134).

நல்லொழுக்கமுடைமையே உயர்ந்த குலத் தன்மையாகும். ஒருவர் உயர்ந்த இனத்தில் பிறந்து, தீயொழுக்கம் புரிந்தால், தாழ்ந்த குலத்தவராகவே, அவர் மதிக்கப்படுவாரென்பது, வள்ளுவரின் வாய்மொழியாகும்.

அறத்திலும், கடமையிலும் பிறழாதவர் எச் சாதியினராயினும், உயர்ந்தவரென்பது வள்ளுவர் வாக்காகும்.

குடி என்னும் சொல், தலைக்கட்டு, குடும்பம், சரவடி (கோத்திரம்), குலம், குடிகள் (நாட்டினம்) என்னும், ஐவகை மக்கட் கூட்டத்தையுங் குறிக்கும். இங்குக் குடியென்றது குலத்தை. குலமாவது ஒரே தொழில் செய்யும் மக்கள் வகுப்பு. வரணம் என்பது, நிறம் குறித்தும், பிறப்புக் குறித்தும் ஏற்படுத்தப்பட்ட ஆரியப் பகுப்பென்பார் பாவாணர் (திருக்குறள், தமிழ் மரபுரை, 109).

துறவென்பது, இவ்வுலகில் வாழும் அனைத்து மாந்தருக்கும் பொதுவானது. அனைவரிடத்தும், தண்ணளிபூண்டு, செந்தண்மையுடன் அன்பு செலுத்துவதே துறவு. எந்தவொரு குறிப்பிட்ட இனத்தவரும், உரிமை கொண்டாட முடியாதது. எல்லாவுயிரிடத்தும் அன்பு செலுத்துவதே, தமிழர்தம் வாழ்வியலறமென்று பாடி, தமிழரை மீட்டவர் வள்ளுவர்.

(எ–டு)

"அந்தண ரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொ ழுகலான்" (குறள், 30).

2. இல்வாழ்க்கையிலும் வீடுபேறு பெறலாம் :–

துறவறத்தால் மட்டும் வீடுபெறலாம் என்பர் சிலர். அனைத்துலகியற் பற்றைவிட்டொழித்து, அமைதியாய் இருந்து, பிறர்பழி தூற்றாவாறு இல்வாழ்க்கை நடாத்துதலே, நல்லறமாகும். உயர்ந்த வீடுபேறும், இஃதேயென்றுரைத்த வாழ்க்கை வழிகாட்டியே, வள்ளுவர், இல்வாழ்வே பேரறமாகும். அஃதும், மாற்றார் பழிப்பிற்கிடமின்றி இருந்துவிட்டால், உயர்பேறம் என்பதை,

(எ–டு)

"அறத்தாற்றினில் வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்" (குறள், 46).

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று" (குறள், 49)

போன்ற குறட்பாக்கள் வாயிலாகவும், குறள், 1032, 41, 42, 545, 559–ஆம் எண்ணுள்ள பாக்களின் வாயிலாகவும், தமிழர்தம் வாழ்வியல் நெறிமுறைகளைப் பாடித் தமிழரையும், தமிழர் பண்பாட்டையும் வள்ளுவர் மன்பதையில் நிலைநிறுத்தினாரெனலாம்.

3. வாழ்க்கை வழிகாட்டியார் – வள்ளுவர்:–

ஒருவன் உலகில் செம்மையாகவும், சிறப்பாகவும், இன்பமாகவும் வாழச் சிறந்த வழிகாட்டும் குறட்பாக்களும், பாடல் எண்களும் வருமாறு:–

"கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" (குறள், 9).

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு" (குறள், 60).

"முயற்சி திருவினையாக்கும்" (குறள், 616).

"எண்ணித் துணிக கருமம்" (குறள், 467).

"தன்னெஞ்சு அறிவது பொய்யற்க" (குறள், 293).

"உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்" (குறள், 282).

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்தியது
அற்றது போற்றி உணின்" (குறள், 942).

பாடல் எண்கள் :– 392, 414, 904, 920, 146, 760, 616, 675, 467, 625, 67, 70, 33, 642, 293, 282, 314, 101, 460, 792, 523, 443, 942, 236 போன்ற குறட்பாக்களின் வழியாக, வாழ்வாங்கு வாழ்வதற்குரிய நெறிமுறைகளை, வாழ்வியலில் இணைத்துக் கூறியவர், வள்ளுவர்,

(எ–டு)

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" (குறள், 236).

அறத்துப்பாவில் இல்லறவியலில் அமைந்துள்ள இக் குறட்பாவில் (236), வாழ்க்கை வழிகாட்டியான வள்ளுவர் வாய்மொழியாகப் பாவாணர் கூறவது:–

"பிறத்தலும், பிறவாமையும், இறைவன் ஏற்பாட்டின்படி, அல்லது ஊழின் அமைப்புப்படியே நிகழ்வதால், அவை பிறப்பவரின் உணர்ச்சியொடு கூடியனவும், விருப்பிற்கு அடங்கியனவுமல்ல. ஆதலால், இங்குத் "தோன்றுக", "தோன்றற்க" என்று கூறியதெல்லாம், "*புகழுக்கேற்ற நல்வினை செய்வானைப் பாராட்டியதும், அது செய்யாதானைப் பழித்ததுமேயன்றி, வேறல்ல என அறிக*" புகழ் என்பது இங்கு ஆகுபொருளது.

4. திருமுறை யாசிரியர்:– வள்ளுவர் தமது நூலின் வாயிலாக, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்மை நன்னெறிகளை நவின்றதன் மூலம், உலகத் திருமுறையாசிரியர்களுள் ஒருவராக, ஒப்பாரும் மிக்காருமின்றி ஒப்பற்றவராகத் திகழ்கிறார். எல்லாம் வல்ல இறைவன் வழிபாட்டையும், இல்வாழ்க்கைக்குரிய அறங்களையும், துறவு அதிகாரத்தில், துறந்தாருக்குரிய அறவொழுக்கங் களையும், திருக்குறளுள் முழுமையாகக் கூறி யுள்ளமை காண்க.

வள்ளுவர், இன்பத்துப் பாலின் கண்ணே, மணிவாசகரின் திருக்கோவை போல், உவமை வாயிலாகப் பேரின்பத்தை யுணர்த்தும் திருமுறையாகத் திருக்குறளை அமைத்துள்ளார்.

திருமுறையாசிரியராகவும், தெய்வப் புலவராகவும் திகழும் வள்ளுவரின் திருவருட் சிறப்பினை மாமூலனார் பெயரிலுள்ள திருவள்ளுவ மாலைப் பாடல் பகர்வது வருமாறு:–

"அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பியதேவை – மறந்தேயும்
வள்ளுவன் என்பானோர் பேதை அவன்
வாயச்சொற் கொள்ளாற் அறிவுடையார்"

இப் பாடலின்கண்ணே, அறம், பொருள், இன்பம், வீடெனும், தமிழர்தம் நான்மை நன்னெறியினைத் திருமுறையாசிரியரான தெய்வப் புலவர் வள்ளுவர், தமது உலகப் பொதுமறையில், உணர்த்தும் பாங்கினைத் தெளிவுறுத்துவதாகக் கொள்ளலாம்.

5. உழவின் பெருமையும் வள்ளுவரும்:– வையகம் வளமுடனனும், நலமுடனும் வாழ்வாங்கு வாழ்தற்கு, இன்றியமையாது தேவைப்படுவது உணவு. இவ்வுணவை விளைவிக்கும் உழவனே தலைமைக் குடிமகன் என்பார் வள்ளுவர். இவனே அனைத்துத் தொழில் முனைவோரிலும் ஒப்பற்றவன் உயர்ந்தவன். நாடு பசியும் பிணியுமற்றுச் சிறந்தோங்கி வாழ்வதற்கு, கடுங்கோடையிலும், புயல்மாரியிலும், இரவென்றும் எண்ணாது, பகலும் பாராது, இன்னலை யேற்று, உடலை வருத்தி யுழைப்பவனே உழவன். இவனே, உலகமாகிய தேரைச் செம்மையாகச் செலுத்துபவன். இது பற்றியே, வள்ளுவர், தம் ஒப்புயர்வற்ற உலகப் பொதுமறையில், குடிசெயல் வகையின் பின் உழவதிகாரத்தை வைத்தார்.

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி" (குறள், 1032) என்றுவியந்தோதுகிறார்.

பாருய்யப் பாடுபடும் பழுதற்ற தொழிலாளியே உழவன் என்பார், மொழிஞாயிறு.

6. உழவன் இரப்போர் சுற்றத்தான்:– விருந்தோம்புதற் பொருட்டு வேளாண்மை செய்பவனே உழவன். வேளாண்மை செய்வதிற் சிறந்ததினாலேயே, உழவர் வேளாளர் எனப் பெயர் பெற்றனர். வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான் என்று, கழகப்புலவர் நல்லாதனார் நவின்றுள்ளார். இக் கருத்தினை வள்ளுவர்,

"இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்" (குறள், 1035)

என்னுங் குறளில் கூறுவது காண்க.

7. வேளாளன் புரப்போர் கொற்றத்தான்:– அரசன் நல்லாட்சி நல்குதற்கும், அனைத்துத் தொழிலாளரும், ஊக்கமுடன் உழைப்பதற்கும், நாட்டை வளத்துடன் வாழ்விப்பதற்கும், வேளாண் பெருமக்களே கரணியமென்பார் வள்ளுவர்.

"பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்" (குறள், 1034)

பார் போற்றும் பழுதற்ற முதற்றொலாளியே உழவன். பிற தொழிலாளர்போல் பிறர்முன் கைகட்டி வாழவேண்டிய கடப்பாடற்ற, தன்னுரிமையாளனே, வேளாளன் என்பார் வள்ளுவர்.

பண்டைநாளில், சிற்றூர்வாணனாயினும், பேரூர்வாசியாயினும், கொல்லன், தச்சன், கற்றச்சன், கன்னான், தட்டான், கொத்தன், குயவன், வண்ணான், மஞ்சிகன் (நாவிதன்), வாணியன், பாணன், பறையன் முதலிய பதினெண் தொழிலாளரும், குடிமக்கள் எனப்பட்டு, உழவர்க்குப் பக்கத்துணையாயிருந்து, தத்தம் தொழிலைச் செய்து, கதிரடிக்களத்தில் அவ்வக் காலத்துக் கூலதைக் கூலியாகப் பெற்று வாழ்ந்ததால்தான், அக் காலக் கூட்டரவுக் குமுகாயத்தில் தலைமைக் குடிவாசியாக உழவன் திகழ்ந்தான் என்பார் பாவாணர். இக்கருத்தினை,

"சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை" (குறள், 1031)

என்னுங் குறட்பாவில் வள்ளுவர் கூறியுள்ளமை காண்க.

8. மெய்ப்பொருளறிஞர்:– தன்வயத்தம், தூய்மை, இயற்கை, முற்றறிவு, இயல்பாகக் கட்டினமை, பேரருள், முடிவிலாற்றல், வரம்பிலின்பம், எங்குமுண்மை பகாமை என்னும் தொண்குணத்தனாய், தனக்குவமை யில்லாத முழுமுதற் கடவுள், எல்லாம் வல்லனாதலின், அவனை எழு கூறாகப் பகுக்கும் ஆரிய முறையை மறுத்து, ஐம்பூதமும், ஐம்பூதத் தன்மையும், அறிவுப்பொறியைந்தும், கருமப்பொறியைந்தும், அவற்றையறியும் ஆதனும் (புருடனும்) அவன் அறிதற் கருவியாகிய மதியுள்ள மன நானுணர்வுகளும் ஆகிய இருபத்தைந்தோடு, காலம், இறைவன் என்னும் இரண்டையுங் கூட்ட, மெய்ப்பொருள் மொத்தம் இருபத்தேழேயெனும் கருத்துப்பட,

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு" (குறள், 27)

திருவள்ளுவர் கூறியிருப்பது, அவர் ஒருவரே, உண்மையான தெளிந்த மெய்ப்பொருளறிஞர் என்பதைக் காட்டும்

ஊழ் என்பது வினையுள் அடங்கும்.

9. செந்தண்மை அந்தணர்:– கீழ்க்காணும் குறட்பாக்கள், அனைத்துயிர்கள் மாட்டும் அன்பு பூண்டொழுகும் வள்ளுவர்தம் அருள் உள்ளத்தை, உணர்த்துவனவாக உள்ளன.

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்" (குறள், 251).

தன் உடம்பைப் பெரிதாக்குவதற்காகத் தான் வேறோர் உயிரின் உடம்பைக் கொன்று தின்பவனிடத்தில், அருள் வீற்றிருப்பதெங்ஙனம்?

உடம்பைப் பருக்க வைத்தற்குக் கொலையில்லாத உணவு நிரம்பவிருத்தலானும், உடம்பை எங்ஙனம் பேணினும், அது அழிந்து போவதாதலானும், ஊனுணவு பெறுதற்கு ஓர் உயிரை எள்ளளவும் இரக்கமின்றிக் கொல்ல வேண்டியிருத்தலானும், குற்றமற்ற வுயிரிகளை, மேல்மேலுங் கொல்வது, கொடுமையினுங் கொடுமையாதலானும் "எங்ஙனம் ஆளும் அருள்?" என்றார்.

"அந்தணரென்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழு கலான்" (குறள், 30).

அந்தணர் என்னுஞ் சொல், அழகிய குளிர்ந்த அருளையுடையவர் என்னும் பொருளது. வள்ளுவர், ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர்வரையுள்ள எல்லாவுயிர்களிடத்தும் இரக்கம் கொண்டு ஒழுகியதால், அருளுடைமையை வாழ்வியலின் முதலறமாகக் குறித்தார்.

10. முதற்பாவலர்:– வள்ளுவர் குறள்வெண்பா பாடியதுபோல், எவரும் பாடவில்லை. திருக்குறள் போல் குறள்வெண்பாவிற்குச் சிறந்தநூல் முன்னுமில்லை பின்னுமில்லை.

(எ–டு)

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை" (குறள், 55).

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு" (குறள், 60) என்பன, இன்னோசையுள்ளன.

"கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள" (குறள், 1101).

கீழ்காணும் எண்ணுள்ள, குறட்பாக்களும்,

(எ–டு) "குறள், 385, 751, 1032, 1062, பொருட் சிறப்புள்ளன. வள்ளுவரின் முதற்பாவன்மையைச் சிறப்பாகக் காட்டும், பாடலாக பாவாணர் குறித்துள்ளது வருமாறு :

"நத்தம் போற்கேடு முளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது" (குறள், 235)

இதனைக் கபிலர் பெயரிலுள்ள,

"தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால் – மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வள்ளைக் குறட்பா விரி"

என்னும் வள்ளுவமாலைப் பாவுந் தெரிவிக்கும்.

11. தமிழ்நாட்டுத் திருப்புரவலர் (**Patron Saint**):– ஒவ்வொரு நாட்டிற்கும் திருப்புரவலர் அல்லது காவல்தூயர் ஒருவர் உளர். தமிழ்நாட்டுத் திருப்புரவலர் திருவள்ளுவரே. அவர் முக்கால அரசியல் அறிஞராதலால் மக்கள் தொகை மிக்க இக் காலத்திற்குப் பொதுவாக ஏற்ற கூட்டுடைமையாட்சியை, எக் காலத்திற்கும் பொருந்தும் கருத்துகளாகக் கீழ்க்காணும், குறட்பாக்களில் விளக்கியுள்ளார்.

"பகுத்துண்டு பல்துயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தளை" (குறள், 322).

பாடல் எண்கள் :– (குறள், 44, 227, 322, 1107, 1062) மேற்குறித்தவை கூட்டுடைமைப் பொருண்மை பொதிந்தவை.

"பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு" (குறள், 633)

என்னும் குறள், எக் காலத்திற்கும் ஏற்றதெனலாம்.



வள்ளுவர்கோட்டத் தேர்

வள்ளுவர்கோட்டம் *vaḷḷuvar-kōṭṭam,* பெ.(n.) திருவள்ளுவர் 2000-ஆம் ஆண்டு நிறைவைக் குறிப்பதற்காகவும், திருக்குறளைச் சிறப்பிப்பதற்காகவும், சென்னையில் தமிழக அரசால் எழுப்பப்பெற்ற கோயில் போன்ற அமைப்புடைய கோட்டம்; on completion of 2000 years of *Tiruvaḷḷuvarāṇḍu,* the government of Tamiḻ Nāḍu constructed a magnificient monument called *Vaḷḷuvar Kōṭṭam* located in Chennai. *சென்னையில் உள்ள கவின்மிகு சுற்றுலாத் தலங்களுள் வள்ளுவர் கோட்டமும் ஒன்றாகும் (இ.வ.).*

[வள்ளுவர் + கோட்டம். கோண்→கோடு→ கோட்டம்.]

ஒ.நோ. பாண் →பாடு.

கோட்டம் :- மதில் சூழ்ந்த கோயில்; கோயில். மா.வி. அகரமுதலி கோஷ்ட்ட (koshta) என்ற சொல்லிலிருந்து, கோட்டம் என்ற சொல் வந்ததாகக் காட்டுவது தவறு, என்பார் மொழிஞாயிறு. கோயிலைக் குறிக்கும் கோட்டம் என்னும் சொல் 'உல்' என்னும் மூலவேரினின்றும், 'குல்' என்ற அடிவேரினின்றும் கிளைத்த தூய தென்சொல் (மறுப்புரை மாண்பு, பக்.163). இச் சொல் சிலப்பதிகாரம், மணிமேகலையில் கோயில், கோட்டம், நகரம், குடிகை என்னும் பெயரிலும், வளைந்த மாளிகை என்னும் பெயரிலும் ஆளப்பட்டுள்ளதறிக.

வள்ளுவர்வாய்மொழி *vaḷḷuvar-vāymoḻi,* பெ.(n.) வள்ளுவர் பார்க்க; see *vaḷḷuvar.* *"உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்குமே வள்ளுவர் வாய்மொழி" (திருவள்ளுவமாலை. மாங்குடி மருதனார்).*

[வள்ளுவர் + வாய்மொழி.]

வள்ளுவன் *vaḷḷuvaṉ,* பெ.(n.) 1. பறையருள் குருவாகவும் அரசன் ஆணையைத் தெரிவிப்போனாகவும், உள்ள ஒரு சாதியான்; a paṟaiyar caste, the members of which are royal drummers and priests for paṟaiyās. 2. வருவதுரைப்போன் (நிமித்திகன்); one who foretells events by omens. *"வள்ளுவன் சொனான்" (சீவக. 419).* 3. அரசர்க்கு உள்படு கருமத் தலைவன் (பிங்.); an officer who proclaims the king's commands. 4. திருவள்ளுவர்; the author of the *Tiru-k-kuṟaḷ. "வள்ளுவன் வாயதென் வாக்கு" (வள்ளுவமா.2).*

[வள் + உ + அன் →வள்ளுவன். உ- சாரியை, அன் - ஆண்பாற் பெயரீறு.]

அரச கட்டளையை முரசறைந்து அறிவிப்பவன் (தி.ம.5). "வள்" என்னும் வேர்ச்சொல்லினின்று தோன்றிய சொல். "வள்" என்னும் அடிச்சொற்கு கூர்மை, வலிமை, வண்மை என்னும் பொருள்களுண்டு.

வள்ளுவன் - கூர்மதியன், வல்லவன், வள்ளியோன்.

வள்ளுவன் என்னும் பெயரின் வரலாறு குறித்துப் பாவாணர் கூறுவது வருமாறு:- வள்ளுவன் எனும் முதன் முதல் பறையருள், ஒரு பிரிவாராய், அரசன் ஆணையை, அவாது நகர மக்கட்கு யானை மீதேறிப் பெரும்பறை (பேரிகை)யறைந்தறிவிக்கும் விளம்பரத்

தலைவனைக் குறித்தது. இத் தலைவன் அரசாணையை மக்கட்கறிவிக்கும் அளவில், இற்றை விளம்பர மந்திரி போல்வான்.

வள்ளுவர் பறையர் குலத்தொரு பிரிவினரென்பது, அவரது பறையறையும் தொழிலாலும், வள்ளுவப் பறையன் என்றோர் சொல்லுண்மையாலும், இக் காலத்தும் அவர் பறையரினும் உயர்ந்தவராயிருப்பினும், பிற உயர் குலத்தாரால் இழிவாயெண்ணப்படுவதாலும், பறையர்க்குக் குருவாயிருப்பதாலும் அறியப்படும்.

பண்டைக்காலத்தில் குலப்பிரிவினை பிற்காலத்திற்போல் மிகக் கொடிதா யிராமையானும், வள்ளுவர் அரசர் வினையைச் செய்து வந்தமையாலும், அவர்க்கு இழிவு இருந்திலது.

அச்சு வித்தை மிகச் சிறந்து பத்திரிகைகளாலும், துண்டறிக்கைகளாலும் விரைந்து செய்தி பரப்பும் இக் காலத்தும், வேத்தியல், பொதுவியல் ஆகிய இருவகைச் செய்திகளையும் பறையறைந்து விளம்பரஞ் செய்யும் வழக்கு வீழ்ந்திலது. பண்டைக்காலத்தில் பறையறைத லொன்றே, செய்தி பரப்பும் சிறந்த வாயிலாகும். இதனால், பறையறைதல் என்னும் தொழிற் பெயருங்கூட விளம்பரத்தைக் குறிப்பதாகும். "நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்து சாற்றக் கேண்மின்" என்றார் கபிலரும்.

பொது மக்கட்குப் பறையறைபவர் அல்லது விளம்பரஞ் செய்பவர், பறையரெனும் பொதுப் பெயராலும், அரசர்க்கு அவ் வினைகளைச் செய்பவர், வள்ளுவர் எனும் சிறப்புப் பெயராலும், அழைக்கப்பட்டனர். ஒரே வினையை, அது எத்துணை இழிந்ததாயினும், அரசர்க்குச் செய்பவர் உயர்வாகவும், பொதுமக்கட்குச் செய்பவர் இழிவாகவும், எந்நாட்டிலும் எண்ணப்படுதல் இயல்பாம். உதாரணமாக, அரசர்க்கு மயிர்வினை செய்பவன் சாதாரண அம்பட்டரினும் உயர்வாயெண்ணப்படுவான். அவர் பொதுமக்கட்கு வினை செய்வதும், அங்ஙனம் செய்பவருடன் உறவு கலப்பதுமில்லை; தன்போன்ற பிற அரச வழி அம்பட்டருடனேயே, கொள்வினை கொடுப்பனையும் வைத்துக் கொள்வான். இங்ஙனமே பொதுக் குலமான பறையரினின்றும் வள்ளுவர் தனிக்குலமாகப் பிரிய நேர்ந்தது.

பண்டை நூல்களில் வள்ளுவன் தொழில், அரசராணையைப் பறையறைந் தறிவிப்பதாகவே கூறப்பட்டுள்ளது.

"வள்ளுவார் முரசமூதூர ரறைகென வருளினானே" என்றார் சீவகசிந்தாமணி யாசிரியர் திருத்தக்கதேவர் (செய்.2149). இதில் வள்ளுவன் என்பது இசைப் பற்றி வள்ளுவார் என நீண்டது. இனி வள்ளுவன் என்னும் பெயரின் மூலத்தை ஆராயினும், அது பறையறையும் தொழிலுக்கு ஏற்ற பொருளையே தராநிற்கும்.

வள்ளுவன் எனும் சொல், 'வள்' என்னும் மூலத்தினின்றும் பிறந்தது. 'வள்' என்பது பறைக்கு வேண்டிய தோலையும் வாரையும் அவற்றாற் செய்யப்படும் பல பொருள்களையுங் குறிப்பதாகும்.

வள் = வார் (சூடா.நிக.).

வள் = வாளுறை (அக.நிக.).

வள் = கடிவாளம் (அகநா.4).

'வள்' என்னும் மூலம் புவ்வீறு பெற்றும், இப் பொருள்களை உணர்த்தும்.

வள்பு தெரிந்தூர் மதிவலவநின்

"புள்ளியற் கலிமாப் பூண்ட தேரே" (486) என ஐங்குறு நூற்றில் கடிவாளத்தையும்,

"மாசற விசித்த வார்புற வள்பின்... உருகெழு முரசம்" (50) எனப் புறநானூற்றில் வாரையும், "வள்பு" என்னும் சொல் குறித்தது.

'வள்' என்னும் மூலத்தினின்றும், பிறந்த வள்ளூரம் என்னுஞ் சொல், தோலின் இனப் பொருளான ஊனை (மாமிசத்தை)க் குறிக்கும்.

'வள்' என்னுஞ்சொல் உகரச்சாரியையும், அன் ஈறும் பெற்று வள்ளுவன் என்றாயது.

வள்ளுவன், அரச சம்பந்தமான தொழிலைச் செய்பவனாதலின், பிங்கல நிகண்டில்.

வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் அரசர்க்
குள்படு கருமத் தலைவர்க் கொன்றும்.

என்று கூறப்பட்டுள்ளது. இதில் 'வள்ளுவன்' என்பதற்கு எதுகையாயும், சம்பந்தப்பட்ட என்னும் பொருளிலும் வந்த 'உள்படு' என்னும் சாமானியத் தொடரை, மிகச்சிறந்த பொருளதாகக் கொண்டு 'அரசர்க் குள்படு கருமம்' என்பது ஆங்கில நாட்டுச் சேம்பர்லேன் (Chamberlain) போன்ற ஓர் அதிகாரத்தைக் குறிக்குமென்பர். இது எமக்கு உடன்பாடன்று.

இனிச் சார்பினாலும் வள்ளுவன் தொழில் யாங் கூறியதே என்பது போதரும், மேற்கூறிய சூத்திரத்தில், 'வள்ளுவன்' என்பதை அடுத்து நிற்கும் 'சாக்கை' யெனும் பெயர், வெற்றிக் காலத்தும், அமைதிக்காலத்தும், அரசர்க்குக் கூத்தாடி மகிழ்ச்சியை யுண்டுபண்ணும் வேத்தியற் கூத்தரைக் குறிக்கும். வள்ளுவரும் சாக்கையரும் தமக்குக் கீழ்ப்பட்ட பல துணைவரையும், தத்தம் தொழிற்கு முழுப்பொறுப்பு முடைமையான், கருமத் தலைவரெனப்பட்டார்.

10–ஆம் நூற்றாண்டி லியற்றப்பட்ட சீவகசிந்தாமணியில், வள்ளுவன் அரசாணையைப் பறையறைந்து விளம்பரஞ் செய்பவனாகக் கூறப்படுவதலால், அதற்கு இரண்டொரு நூற்றாண்டிற்கு முந்திய பிங்கலத்திலும் அதுவேயாதல் வேண்டும்.

பண்டைக்காலத்திற் பாணர்க்கு, இசைத் தொழிலே குலத் தொழிலாயினும், அவருட் பலர் அதில் பிழைப்பின்மைபற்றிப் பிற தொழிலை மேற்கொண்டது போல், வள்ளுவரும் அரச வினையில்லாரெல்லாம் கணி (சோதிட)த் தொழில் புரிந்து வந்தனர். சாதகங் கணித்தலும் குறி சொல்லுதலும், இக் காலத்தும் வள்ளுவர்க்குரிய.

பண்டைக்காலத்திலேயே வள்ளுவர் நிமித்திகத் தொழிலுஞ் செய்துவந்தமையின், வள்ளுவர் எனும் பெயர் நிமித்திகன் எனும் பொருளையுந் தழுவியது (சிந்தாமணி 419). நிமித்திகன் நிமித்தம் (சகுனம்) கூறுபவன். வள்ளுவன் குறி சொல்லுவதனால், அத் தொழிற்கு வள்ளுவ சாத்திரமென்றும், அவனுக்கு வள்ளுவப் பண்டாரமென்றும் பெயர் உண்டு. பண்டாரமென்பது முற்காலத்தில் நூலகங்கட்கும், பல நூல் பயின்ற புலவர்க்கு அல்லது ஞானிகட்கும் வழங்கிய பெயர். அது பின்பு முறையே துறவு பூண்ட அறிஞர்க்கும், போலித் துறவிகளுக்கும், பெயராயிற்று.

புறநானூற்றில் சில பாடல்களில் நாஞ்சில் என்னும் மலைக்குத் தலைவனான ஒருவன், வள்ளுவன் என்னும் பெயராற் கூறப்படுகிறான். அவன் ஒருகாற் சேரனுக்கும், பின்பு பாண்டியனுக்கும், படைத்தலைவனாயிருந்ததாகத் தெரிகின்றது. அவன் 137, 140, 380–ஆம் புறப்பாட்டுகளில் பொருநன் என்று விளிக்கப்படுகின்றான். பொருநன் என்னும் பெயர் ஏர்க்களம் பாடுவோன், போர்க்களம் பாடுவோன், பரணி பாடுவோன் என்னும் மூவகைப் புலவருள்

அல்லது பாடகருள் ஒருவரையாவது, போர் வீரனையாவது குறிக்கும். இங்குக் கூறப்பட்ட நாஞ்சில் வள்ளுவன், ஓர் படைத் தலைவனாதலின் போர்த்தொழிற் பற்றியே பொருநன்* எனப்பட்டான்.

வள்ளுவக் குலத்தானொருவனுக்கு, ஓர் அருஞ்செயல்பற்றியோ அல்லது சிறந்த போர்த் தொழில்பற்றியோ, நாஞ்சில் என்னும் மலையைக் கொண்ட ஒரு சிறு நாடு, (சேரனால் அல்லது பாண்டியனால்) கொடுக்கப்பட்டிருக்கலாம். பண்டைக் காலத்தில் போர் வீரர் பெரும்பாலும், மறவரும் கள்ளரு மாயிருந்தாரேனும், பிற குலத்தாரும், அத் தொழிற்கு எத்துணையும் விலக்கப்பட்டில ரென்பது தேற்றம். ஆதலால் நாஞ்சில் வள்ளுவனை வள்ளுவக் குலத்தானாகக் கூறுவதற்குப் பெரிதுந் தடையில்லை. திருவிதாங்கூர்ச் சீமையைச் சேர்ந்த ஒரு நாடு வள்கூள நாடெனப்படுகின்றது. அது ஒருவேளை நாஞ்சில் வள்ளுவன் நாடாயிருந்திருக்கலாம்.

இனி, வள்ளுவன் என்னும் பெயரே, வள்ளல் என்னும் பெயரின் மறுவடிவமாகக் கொண்டு, அதற்கு உபகாரி என்னும் பொருளும் உரித்தாக்குவர். வள்ளல் என்னும் பெயரும் 'வள்' என்னும் மூலத்தினின்றே பிறந்ததாயினும், அம் மூலம், உபகாரி யென்னும் பொருளில் வரும்போது, வள்ளல், வள்ளியன், வள்ளியான், வள்ளியோன், என்ற வடிவுகளை ஏற்பதல்லது, வள்ளுவன் என்னும் வடிவை எவ்விடத்தும் ஏலாமையின், அது போலியுரையென மறுக்க.

இதுகாறுங் கூறியவற்றால், வள்ளுவன் என்பது குலப்பெயரே யென்றும், அது நிமித்திகனையும் குறிக்குமென்றும், உபகாரி யென்னும் பொருளில் வாராதென்றும், அறிந்து கொள்க (The Putturian, Feb.1939).

வள்ளுவன்வாய்ச்சொல் *vaḷḷuvaṉ-vāy-c-col,* பெ.(n.) வள்ளுவர் பார்க்க; see *vaḷḷuvar.* *"மன்புலவன் வள்ளுவன் வாய்ச்சொல்" (திருவள்ளுவமாலை-இறையனார்).*

[வள்ளுவன் + வாய்ச்சொல்]

வள்ளூரம் *vaḷḷūram,* பெ.(n.) 1. வள்ளுரம், 1 பார்க்க; see *vaḷḷuram.* 2. சூட்டிறைச்சி (வின்.); roasted flesh-meat. *"கழுகுண்ண வள்ளூர மேசுமந்து" (சீவக. 1552).*

[வள்ளுரம்→வள்ளூரம்.]

வள்ளெனல் *vaḷḷeṉal,* பெ.(n.) குரைக்கும் ஒலிக்குறிப்பு (வின்.); Onom, expr. of barking sound.

[வல்→வள் + எனல்]

வள்ளை *vaḷḷai,* பெ.(n.) 1. கொடிவகை; creeping bindweed, I pomaea aquatica. *"மகளிர் வள்ளை கொய்யும்" (பதிற்றுப்.29, 2).* 2. மகளிர் நெற்குத்தும்போது ஒரு தலைவனைப் புகழ்ந்து பாடும் பாட்டு; song sung by women when husking or hulling grain in praise of a hero. *"மனையளகு வள்ளைக் குறங்கும் வளநாட" (வள்ளுவமா. 5), "வள்ளைத் தாள்போல் வடிகாதிவைகாண்" (மணிமே.20-53).*

[வல்→வள்→வள்ளை. வள்ளை = உரற்பாட்டு (தொல்.பொருள்.63, நச்.)]

வள்ளைக்கீரை *va!!ai-k-kīrai,* பெ.(n.) கொடி வகை (பதார்த்த.596); swamp cabbage-*Ipomoea aquatica.*

[வள்ளை + கீரை]



வள்ளைப்பாட்டு *vaḷḷai-p-pāṭṭu,* பெ.(n.) மகளிர் நெற்குத்தும் போது ஒரு தலைவனைப் புகழ்ந்து பாடும் பாட்டு, (சிலப். 29); song sung by women in praise of a hero when husking or hulling grain.

[வள்ளை + பாட்டு.]

இயலுமிடமெல்லாம் மகளிர் தம் வினைகளை இசையொடு செய்து வந்தமையை வள்ளைப் பாட்டால், அறியலாம்.

வள்ளையுப்பு *vaḷḷai-y-uppu,* பெ.(n.) ஓர் வகை ..ப்பு; a kind of salt.

[வள்ளை + உப்பு.]

வளக்காற்று *vaḷa-k-kāṟṟu,* பெ.(n.) நேர் காற்று; a tree wind.

[வள்ளை + காற்று.]

வளக்குவெல்லி *vaḷakku-velli,* பெ.(n.) பூடு வகை (தெய்வச். விறலிவிடு. 405); a plant.

வளகடா *vaḷa-kaḍā,* பெ.(n.) வளர்கிடாய் பார்க்க; see *vaḷar-kiḍāy.*

[வளர்கிடாய் → வளகடா. மக்களின் பேச்சுவழக்கில் வளர்கிடாய், என்பது வளகடா என்று வழக்கூன்றியுள்ளது. இவ் வழக்கு கொச்சை வழக்கென்றும் கூறுவர்]

வளகம் *vaḷagam,* பெ.(n.) பவளம், தொண் மணியுள் ஒன்று; red coral, one of *nava-maṇi.* *"பவளத் தன்ன மேனி" (குறுந். 1).*

வளகிலவணம் *vaḷagilavaṇam,* பெ.(n.) வளையலுப்பு; a salt used in the manufacture of bangles.

வளகு *vaḷagu,* பெ.(n.) நீண்ட மரவகை; woman sebesten. *"வளகின் குளகமர்ந்துண்ட" (கலித். 43).*

வளங்காலவணம் *vaḷaṅgā-lavaṇam,* பெ.(n.) வளையலுப்பு; a kind of mineral salt capable of calcining zinc (சா.அக.).

இதில் நாகம் நீறும். இதனால் நீரிழிவு அதிமூத்திரம் போம் என்று சா.அக. கூறும்.

வளங்கோலு-தல் *vaḷaṅ-kōlu-,* 5 செ.கு.வி. (v.i.) காரிய முடிவிற்கு வழி தேடுதல்; to devise ways and means to achieve an object.

[வளம் + கோலு-.]

குல்→கொல்→கோல்→கோலு-.

ஒரு செயல் அல்லது வினை இனிதே நலமாய் முற்றுப் பெறுதற்கு, அனைவருடனும் கலந்தாய்வு செய்து வழிகோலுதலே, வளங்கோலுதாகும்.

வளச்சகட்டை *valacca-kaṭṭai,* பெ.(n.) வளைக்கப்பட்ட சிறிய இரும்புக்கம்பி; a little bendy iron rod.

[வளைத்த → வளச்ச + கட்டை.]

வளச்சுக்கட்டு-தல் *vaḷaccu-k-kaṭṭu-*, 5 செ.கு.வி.(v.i.) வளைத்துக்கட்டுதல் பார்க்க; see *vaḷaitt-k-kaṭṭu-*.

வளஞ்சியர்[1] *vaḷañjiyar*, பெ.(n.) வாணிகத்தால் நாட்டின் செல்வ வளத்தினைப் பெருக்கியவர்கள்; a community classified as '*vaiśiyās*' to enrich the country by trade and commence. *இவர்கள் 'நானாதேசி வளஞ்சியர்' என்று கூறப் பெறும் வணிகக் குழுவினராவர். சித்திரமேழி பெரிய நாட்டுக் குழுவிலும், பதினெண்பூமி திறலாயிரத்தைந் நூற்றுவராய வாணிபக் குழுவிலும், இடம் பெற்றிருந்த வணிகராவர். "திருவேள்விக்குடி உடையார்க்கு திருக் கற்றளி எடுக்கின்ற வளஞ்சியரும் நானா தேசியத் திசையாயிரத்தைஞ் ஞூற்று வரும்" (S.I.I. Vol.XIX.459).*

வளஞ்சியர்[2] *vaḷañjiyar*, பெ.(n.) ஒரு வகை இனத்தினர்; a sect.

சோழர் காலத்தில் வாழ்ந்த தோரினத்தவர் இவர்களைப் பற்றிய செய்திகள் விரிவாக இல்லை.

வளத்தக்காள் *vaḷattakkāḷ*, பெ.(n.) வருவாய்க்கு ஏற்றவண்ணம் வாழ்க்கையை நடத்துபவள்; leading an economical life. *"வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" (குறள், 51).*

[வளம் + தகு→தக்கு→தக்காள்]

கணவனின் வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்துபவளே, வளத்தக்காள் என்பார் மொழிஞாயிறு. 'வருவாய்க்குத் தக்க வாழ்க்கை யென்பது, முதலை அறிந்து, அதற்கு இயைய செலவு அழித்தல்' என்பார் பரிமேலழகர்.

செலவழித்தலென்பது, இல்வாழ்வில் ஏற்படும் இன்றியமையாத அடிப்படைச் செலவுகள் எனலாம்.

வளந்து *vaḷandu*, பெ.(n.) பெரிய மிடா (யாழ். அக.); big pot or vessel.

வளநாடு *vaḷa-nāḍu*, பெ.(n.) செழிப்புள்ள தேசம்; fertile tract or region. *"நேராதார் வளநாட்டை" (பு.வெ. 3, 14, கொளு).*

[வளம் + நாடு.]

இடையறவுபடாத வருவாயினை, அரசிற்கு அளிக்கும் செழிப்பான நாடு.

வளப்பக்கல் *vaḷa-p-pakkal*, பெ.(n.) மருந்துக் குப்பியை மூடுகின்ற மூடி; a stone, stopper or cork for closing bottle top.

வளப்பம்[1] *vaḷappam*, பெ.(n.) வளம், செழுமை; fertility, productiveness. *"வளமுடி நடுபவர்" (சீவக. 49).*

[வள →வளப்பம்.]

வளப்பம்[2] *vaḷappam*, பெ.(n.) 1. வழக்கம்; customs, peculiarties. *"கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்?" (வின்.).* 2. வளம், 1 பார்க்க; see *vaḷam*.

[வழ→வள →வளப்பம்.]

வளப்பாடு *vaḷappāḍu*, பெ.(n.) பெருக்கம்; profitable increase gain. *"வளப்பாடு கொளலும்" (பரிபா.2).*

[வளம் + பாடு.]

வளப்பிணி *vaḷappiṇi*, பெ.(n.) வளி (வாத) நோய்; disease caused by wind humour.

வளபூதம் *vaḷa-būdam*, பெ.(n.) கெம்பு; ruby.

வளம்[1] *vaḷam*, பெ.(n.) வலிமை; strength.

[வல்→வள→வளம்.]

வளம்[2] *vaḷam*, பெ.(n.) 1. செழுமை, வளமை; fertility. *"வளமுடி நடுபவர்" (சீவக. 49).*

2. அளவிற்கு அதிகமாக உற்பத்தி செய்கை; luxuriance, excessive productiveness. 3. மிகுதி; abundance, fullness. *"தொழுதெழுவார் வினைவள நீறெழ" (திருக்கோ. 118).* 4. பயன்; gain, profit, advantage. *"பயன் றூக்கி" (குறள், 912).* 5. செல்வம்; wealth, riches. *"வளவரை வல்லைக் கெடும்" (குறள், 480).* 6. வருவாய்; income. *"தற்கொண்டான் வளத்தக்காள்" (குறள், 51).* 7. நன்மை; goodness. *"உலவா வளஞ் செய்தான்" (பு.வெ. 8,7).* 8. தகுதி (பிங்.); suitability, fitness. 9. மாட்சிமை; greatness, excellence. 10. அழகு; beauty. *"இளவளநாடுபுல்லி" (சீவக.751).* 11. பதவி (சூடா.); dignity, station. 12. புனல்; water. *"சுனைவளம் பாய்ந்து" (திருக்கோ. 118).* 13. உணவு; food. *"பல் வளம் பகர்பூட்டும்" (கலித். 20).* 14. வணிகப் பண்டம்; article of merchandise. *"முந்நீர்வளம் பெறினும்" (பு.வெ.8. 31).* 15. வலம் (மறுவ.). 16. வெற்றி; victory, success. *"வளந்தரும் வேலோய்" (பு.வெ.9.9).* 17. வழி (வின்.); path, track. 18. பக்கம் (வின்.); part, side.

தெ. வளமு; ம. வளம்.

[முல்→மல்→மல்லல் = வளம், பருமை, மிகுதி, செல்வம், வலிமை, மற்போர்.மல்→வல்→வள் + அம்→வளம்.]

ஒ.நோ. நல் + அம் – நலம்

முல்[4] பொருந்துதற் கருத்து வேர் என்பார், மொழிஞாயிறு. இப் பொருந்து தற் கருத்து வேரிலிருந்து திரளுதல், பருத்தல், விரிதல், மிகுதல், செழித்தல், அழகாதல் முதலாய கருத்துகள் தோன்றும்.

வளமாகச் செழித்து வளர்ந்த பொருள் பருக்குந் தன்மைத்து. இப் பருத்தல் கருத்தினின்றே, மொத்தமாதல், வலுத்தல் முதலான கருத்துகள் முகிழ்க்கும். வலுத்தற் கருத்திலிருந்து பொருந்துதற் கருத்துப் பிறக்கும். இது குறித்துப் பாவாணர் கூறுவது வருமாறு :–

"பல அணுக்கள் அல்லது உறுப்புகள் அல்லது பொருள்கள், பொருந்துவதால் (ஒன்று சேர்வதால்) திரட்சி அல்லது பருமை உண்டாகும். (எ.கா.) "சேரே திரட்சி" (தொல்.உரி.65). செல்வம் அல்லது நீர் மிகையால் வளமும், பருமையால் வலிமையும் உண்டாகும்.

வளம்பெறு–தல் *vaḷam-peṟu-,* 18 செ. குன்றாவி.(v.t.) செழிப்படைதல் (சா.அக.); to become stronger and healthy to become prosperous.

[வளம் + பெறு–.]

வளமடல் *vaḷa-maḍal,* பெ.(n.) சிற்றிலக்கியம் தொண்ணூற்றாறனுள் அறம், பொருள், வீடு ஆகியவற்றினும், காமமே சிறந்தது என்றுந் தலைவனது பெயரை எதுகையிலமைத்துங் கலிவெண்பா வாற் பாடும் நூல்வகை (இலக். வி. 856); a poem in *kali-veṇbā,* praising kāmam as excelling *aṟam, poruḷ* and *vīḍu* and mentioning in *edugai* the name of the hero, one of 96 *Śiṟṟilakkiyam.*

[வளம் + மடல்.]

வளமலைநாடன் *vaḷa-malai-nāḍaṉ,* பெ.(n.) குறிஞ்சி நிலத் தலைவன்; fertile, hilly ruler. *"பொன்னுரை கல்லின் நன்னிறம் பெறூஉம் வளமலை நாடன் நெருநல் நம்மொடு" (நற்.25–4–5).*

[வளமலை + நாடன்.]

வளமனமுடையோன் *vaḷa-maṉamuḍai yōṉ,* பெ.(n.) துறவி; Šaint.

வளமனை *vaḷa-maṉai,* பெ.(n.) அரண்மனை; royal palace. *"வளமனை பாழாக வாரி" (புறப்.பொ.மா.வஞ்சிப்.15).*

[வள்→வளம் + மனை.]

"பெருஞ்செல்வர் வாழும் சிறந்த உறையுள்" எனப் பொருள் செய்வார், பாவாணர்.

வளமுறுமொழியாள் *va!amuru-moliyāḷ*, பெ.(n.) சாயா மரம்; tree that does not cast its shadow.

வளமை[1] *va!amai*, பெ.(n.) கொழுப்பு; fatness, nutrition.

[வழ→வள→வளமை.]

வளமை[2] *va!amai*, பெ.(n.) 1. பொருள்; property, money. *"வளமை கொணரும் வகையினான்" (திணைமாலை. 85).* 2. உதவி, நலன், பயன் (அக.நி.); benefit, kindness, help, favour. 3. வளம்[1], 6 பார்க்க; see *va!am*[1], 6.

[வளம் → வளமை.]

வளமை[3] *va!amai*, பெ.(n.) 1. வழக்கம்; customs. 2. வளப்பம்[2] பார்க்க; see *va!appam*.

[வழ→ வழமை→ வளமை.]

வளமைகொழி-த்தல் *va!amai-koli-*, 4 செ.கு.வி.(v.i.) தன் பெருமையைத் தானே கூறிக் கொள்ளுதல்; to blow one's own trumpet, to brag.

[வளமை + கொழி-.]

ஒருகா. தற்பெருமை கொள்ளுதல்.

வளமைநீட்டு-தல் *va!amai-nittu-*, 5 செ.கு.வி. (v.i.) வளமை கொழி; to brag.

[வளமை + நீட்டு-,]

வளமையர் *va!amaiyar*, பெ.(n.) 1. வேளாளர் (பிங்.); agriculturists. 2. மண்டிய பொருள் வளமுள்ளவர்; wealthy, prosperous persons, rich man. 3. மாட்சிமையுள்ளோர்; great or excellent persons, man of character.

[வளம்→வளமை→வளமையர்.]

வளயம் *va!ayam*, பெ.(n.) வளையம் பார்க்க (வின்.); see *va!aiyam*.

[வலயம்→வளயம்.]

வளர்[1]**-தல்** *va!ar-*, 8 செ.கு.வி.(v.i.) 1. பெரிதாதல்; to grow. *"வளர்வதன் பாத்தியுள்" (குறள், 718).* 2. நீளுதல்; to lengthen, to be elongated. 3. மிகுதியாதல்; to increase, to wax, as the moon. *"துன்பம் வளர வரும்" (குறள், 1223).* 4. களித்தல்; to rejoice. *"வேனல் வளரா மயில்" (திணைமாலை. 111).* 5. கண்டுயிலுதல்; to sleep. *"ஆலிலையின் மேலன்று நீ வளர்ந்தது" (திவ். இயற். 1. 69).* 6. தங்குதல்; to dwell, rest. *"வளர் தாமரை" (திருக்கோ. 1).*

க. மலெ; ம. வளருக.

[முல்→மல்→வல்→வள்→வளர்-.]

வளர்[2]**-த்தல்** *va!ar-*, 4 செ.குன்றாவி.(v.t.) 1. பெருக்குதல்; to cause to increase, to enhance. 2. போற்றிவளர்த்தல்; to cherish, bring up, as a child, animal, plant etc. 3. வளர்த்து-தல் பார்க்க; see *va!arttu-*.

[வல்→வள்→வளர்-.]

வளர்[3]**-த்தல்** *va!ar-*, 4 செ.கு.வி.(v.i.) வளரச் செய்தல்; to make grow.

[வள்→வளர்-.]

வளர்[4] *va!ar*, பெ.(n.) 1. ஒருவமச் சொல்; a particle of comparison. *"இழை வளர் நுண்ணிடை" (தேவா. 991. 6).* 2. வளார் பார்க்க; see *va!ār*.

வளர்கடா *va!ar-kaḍā*, பெ.(n.) வளர்கிடாய் (வின்.) பார்க்க; see *va!ar-kiḍāy*.

[வளர் + கடா.]

வளர்கிடாய் *vaḷar-kiḍāy,* பெ.(n.) வீட்டில் வளர்த்த ஆட்டுக்கிடாய்; domestically reared ram.

[வளர் + கடாய்→கிடாய்.]



வளர்ச்சி *vaḷarcci,* பெ.(n.) 1. வளருகை; growth, increase, enrichment. 2. உயரம்; stature, height. *"அவன் வளர்ச்சியுள்ளவன்".* 3. நீட்சி; elongation, lengthening. 4. உறக்கம்; sleep. *"வளர்ச்சியும்...... புணரார் பெரியா ரகத்து" (ஆசாரக். 71).*

[வள்→வளர்→வளர்ச்சி.]

வளர்சடையோன்நாதவிந்து *vaḷar šaḍai yōṉ-nāda-vindu,* பெ.(n.) கந்தகம்; sulphur.

வளர்த்தகாடு *vaḷartta-kāḍu,* பெ.(n.) தானே முளைத்த மரங்களைப் பாதுகாத்து வளர்க்கும் பணியாளர்களுக்கு நிலவுடைமை யாளர் கொடுக்கும் கொடைப் பொருள்; remuneration or grant paid by a land lord to his tenants for maintaining properly trees of spontaneous natural growth.

[வளர்→வளர்ந்த→வளர்த்த + காடு.]

வளர்த்தாள் *vaḷarttāḷ,* பெ.(n.) 1. செவிலித் தாய்; foster-mother, wet nurse. 2. கைத் தாய்; governess. *செவிலித்தாய் என்பவள் (பண்டைய இலக்கியங்களில்) தலைவியின் வளர்ப்புத் தாய்.*

[வளர்→வளர்த்தாள்.]

வளர்த்தி *vaḷartti,* பெ.(n.) வளர்ச்சி; growth, development. *"உன் வளர்த்தி யூடே வளர்கின்றதால்" (திவ். பெருமாள். 6, 3).*

[வளர்→வளர்த்தி.]

வளர்த்து[1]-தல் *vaḷarttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) கிடத்துதல்; to stretch as a thing, on the ground. *"தயிலத்தோணி வளர்த்துமி னென்னச் சொன்னான்" (கம்பரா. யுத்த. இராவணன் சோகப். 61).*

[வள்→வளர்→வளர்த்து-.]

வளர்த்து[2]-தல் *vaḷarttu-,* 5 செ. குன்றாவி. (v.t.) 1. வளரச் செய்தல்; to cause to grow. 2. உறங்கச் செய்தல்; to put to sleep. *"அன்னம்..... வளர்த்திய மழலைப் பிள்ளை" (கம்பரா. நாட்டுப். 13).* 3. நீட்டுதல்; to lengthen, to prolong, as talk. 4. பொன் முதலியவற்றைத் தகடாக அடித்தல் (வின்.); to beat into thin plates, as gold.

[வளர்→வளர்த்து-.]

வளர்ந்தெழுரோகம் *vaḷarndeḻu-rōgam,* பெ.(n.) கண்ணில் புண் தோன்றி, கண் சிவந்து, நீர் வடிதலோடு பார்வை குறைந்து காணப்படுமோர் கண்ணோய்; an eye disease marked by ulcerated fleshy growth in the corner of the eye and white coat, redness, watering, dimness of vision etc.

வளர்ப்பாளன் *vaḷarppāḷaṉ,* பெ.(n.) வளர்ப்புப் பிள்ளை பார்க்க; see *vaḷarppu-p-piḷḷai.*

[வளர்ப்பு + ஆளன்]

வளர்ப்பு[1] *vaḷarppu,* பெ.(n.) ஊண்; nutrition.

[வளர்→வளர்ப்பு.]

வளர்ப்பு[2] *vaḷarppu,* பெ.(n.) 1. வளர்க்கை; bringing up, fostering. 2. நடனக்காரியின் மகவேற்பாக வந்த பெண்மகவு; girl adopted by a dancing-girl. 3. பிறனைச் சார்ந்து வாழ்பவன்; dependant. *"வளர்ப்பு வக்கணையறியாது" (வின்.).*

[வளர்→வளர்ப்பு.]

வளர்ப்புணி *vaḷarppuṇi,* பெ.(n.) வளர்ப்புப் பிள்ளை (யாழ்.அக.) பார்க்க; see *vaḷarppu-p-piḷḷai.*

[வளர்ப்பு + உண்→உணி.]

வளர்ப்புத்தாய் *vaḷarppu-t-tāy,* பெ.(n.) 1. செவிலித்தாய்; foster-mother. 2. வளர்த்தாள் பார்க்க; see *vaḷarttāḷ.*

[வளர்ப்பு + தாய்]

வளர்ப்புப்பிள்ளை *vaḷarppu-p-piḷḷai,* பெ.(n.) 1. மிகவும் விரும்பி வளர்க்கப்படும் பிள்ளை; foster-child. 2. தத்துப்பிள்ளை; adopted child.

[வளர்ப்பு + பிள்ளை]

வளர்பிறை *vaḷar-piṟai,* பெ.(n.) 1. வளர்மதி; cresent moon, waxing moon. *"மங்குல் விசும்பின் வளர்பிறை" (பெருங்.நரவாண.1, 67).* 2. வளர் பக்கம்; the bright half of the lunar month.

[வளர் + பிறை.]

வளர்மயிர் *vaḷar-mayir,* பெ.(n.) மயிர்க் குழற்சி; tuft, knot of hair.

[வளர் + மயிர்]

வளர்முகநாடு *vaḷar-muga-nāḍu,* பெ.(n.) பொருளாதாரம் அல்லது தொழில் முறையில் வளர்ந்து வரும் நாடு; economically or industrially developing country. *'இந்தியா ஒரு வளர்முக நாடு' (உ.வ.).*

[வளர் + முகம் + நாடு]

வளர்மேகம் *vaḷar-mēgam,* பெ.(n.) சிறுநீரக நோய்; increasing urinary venereal disease.

[வளர் + மேகம்]

வளர்வு *vaḷarvu,* பெ.(n.) வளர்ச்சி (வின்.) பார்க்க; see *vaḷarcci.*

[வளர்→வளர்வு.]

வளரறம் *vaḷaraṟam,* பெ.(n.) மிகுமறம் (வின்.); increasing virtue.

[வளர் + அறம்]

வளரி *vaḷari,* பெ.(n.) 1. வளரித்தடி பார்க்க; see *vaḷari-t-taḍi. "மறவன் கொடுப்பது வளரிப் பிரசாதம்".* 2. வயலில் முளைக்குங் களை வகை (நாஞ்.); a kind of weed, growing in the field.

[வள→வளர்→வளரி = பிறைபோல் வளைந்த வளரித்தடி (வே.க.4, பக்.95).]

வளரிக்கை *vaḷarikkai,* பெ.(n.) வளர்த்துப் பேசுகை; prolonging talkativeness. *'வளரிக்கையாலே வம்பிலே போகுதென் வாணாள்' (வள்ளி. கதை).*

மறுவ. வாயாடு.

[வளர்→வளரி→வளர்க்கை.]

வளரித்தடி *vaḷari-t-taḍi,* பெ.(n.) ஒரு புறம் கனமாகவும், மற்றொரு புறம் எடையற்றதாகவும், கூர்மையாகவும் மரம்

அல்லது இரும்பினாற் பிறை வடிவாகச் செய்த ஒரு வகை எறிகருவி; boomerang, short weapon of hard wood or iron, crescent-shaped, one end being heavier than the other and the outer edge sharpened.

[வளரி + தண்டி → தடி = பிறைபோல் வளைந்த வளரித்தடி (வே.க.4, பக்.95)]

வளருப்பு *valaruppu,* பெ.(n.) கோவானூர் உவர் மண்ணுப்பு; effiorescence gathered from the soil of fuller's earth found in kōvaṉūr *(சா.அக.).*

வளவள¹த்தல் *vaḷa-vaḷa-,* 4 செ.கு.வி. (v.i.) 1. சுருக்கமின்றி பயனற்றச் சொற்களைப் பேசுதல்; to be talkative, to be wondy, speaking of rain words, indulge in vain speaking. 2. வீணே பிதற்றுதல் (வின்.); to babble.

[வள → வளவள-.]

வளவள²-த்தல் *vaḷa-vaḷa-,* 4 செ.கு.வி. (v.i.) வளுவளு (வின்.) பார்க்க; see *vaḷu-vaḷu.*

[வழவழ → வளவள-.]

வளவளப்பு¹ *vaḷa-vaḷappu,* பெ.(n.) பிசுபிசுப்பு; musilaginous pasty and smooth, slippery.

[வழவழ → வளவள → வளவளப்பு.]

வளவளப்பு² *vaḷa-vaḷappu,* பெ.(n.) 1. பயனற்றச் சொற்களை அதிகமாகக் கூறுதல்; talkativeness, wordiness, excessive talk of vain words. 2. வீண் பிதற்று; vain talk, babbling.

[வளவள → வளவளப்பு.]

வளவன்¹ *vaḷavaṉ,* பெ.(n.) சோழர்களின் பட்டப் பெயர்களுள் ஒன்று; one of the titles of Cōḻas. *'வளவன்'* என்ற பெயர், சோழரின் மரபில் வந்தோர்க்கு வழங்கும் பெயராகும். *'வள நாட்டின் தலைவன்'* என்பதே *'வளவன்'* என்பதின் பொருளாகும். *'மாவளத்தான்' (புறம் - 43-44), 'திருமாவளவன்' (பட்டி-299), 'கரிகால் வளவன்' (அகம்-55-10), 'கிள்ளிவளவன்' (பிறம்-70, 10, 346, 22, 399, 13).*

வளவன்² *vaḷavaṉ,* பெ.(n.) 1. சோழன்; Cōḻa king. *"இயறேர் வளவ" (புறநா. 7).* 2. வேளாளன்; agriculturist. *"அரசர்கள் வணிகர் குறைவறு வளவர்கள்" (திருப்போ. சந். திருப்பள்ளி.8).*

[வளம் → வளவன்.]

வளவன்மாதேவி *vaḷavaṉ-mādēvi,* பெ.(n.) பராந்தகச் சோழனின் மனைவி; wife of *parāndaga-c-cōḻaṉ.*

[வளவன் + மாதேவி.]

இவளுடைய பெயரால் அமைந்த ஊர் 'வளையமாதேவி' என்பதாகும். இவ்வூர் தென்னாக்காடு மாவட்டத்தில் உள்ளது.

வளவி *vaḷavi,* பெ.(n.) வீட்டிறப்பு (பிங்.); sloping roof, caves.

[வள → வளவி.]

வளவு¹-தல் *vaḷavu-,* 5 செ.குன்றாவி.(v.t.) வளர்த்தல்; to bring up, rear. *"வெட்டுணியுன் மகனை மெல்ல வள வாக்கால்" (ஆதியூரவதானி. 38).*

[வளவி → வளவு-.]

வளவு² *vaḷavu,* பெ.(n.) 1. வீடு; house. *"வளவிற்கமைந்த வாயிற்றாகி" (பெருங். இலாவாண.6, 77).* 2. வீட்டுப்புறம் (வின்.); house hold premises.

தெ. வெளவு (velavu).

[வள் → வள → வளவு = வீட்டுச் சுற்றுப்பரப்பு, வீட்டுத்தொகுதி (வே.க.4, பக்.95).]

வளவுதடி *vaḷavu-taḍi,* பெ.(n.) ஆண்குறித் தண்டு; penis.

[வளவு + தடி]

வளன் *vaḷaṉ,* பெ.(n.) வளம் பார்க்க; see *vaḷam. "பெருவளனெய்தி" (பெரும்பாண். 26).*

வளா[1] *vaḷā,* பெ.(n.) பரப்பு; circuit, area, spread, as a tank. *"குளவளாக் கோடின்றி நீர் நிறைந்தற்று" (குறள், 523).*

[வள் → வள → வளா = சுற்றுப்பரப்பு (வே.க.4, பக்.95).]

வளா[2] *vaḷā,* இடை.(int.) பளாபளா (வின்.); exclamation meaning 'bravo'.

க. பளா.

வளாகச்சுவர் *vaḷāga-c-cuvar,* பெ.(n.) கட்டடத்தைச் சுற்றியமைந்த சுவர்; compound wall.

[வளாகம் + சுவர்]

வளாகம் *vaḷāgam,* பெ.(n.) 1. இடம் (பிங்.); place, complex, premises. *"புலன்களைந்தும் வென்றவர் வளாகந் தன்னுட் சென்றிலேன்" (தேவா. 1193:1).* 2. வளைக்கை (சூடா.); enclosing, surrounding, fencing. 3. உலகம்; globe, earth. *"முந்நீர் வளாக மெல்லாம்" (கலித்.146).* 4. பூகண்டம்; continent. *"ஏழ்பெரு வளாக வேந்தர்" (கம்பரா. திருமுடி.6).* 5. நாடு; country. *"வேறோர் வளாகம துற்றான்...... வணிகன்" (கந்தபு. மார்க். 142).* 6. தினைப்புனம் (பிங்.); millet-field. *"குன்றும் யாறுங்குவடும் வளாகமும்" (குற்றா. தல. வேடன் வலம். 28).* 7. தோட்டம்; garden. 8. வளா[1] பார்க்க; see *vaḷā*[1].

[வள் → வள → வளா → வளாகம்.]

வல்[1] வளைவுக் கருத்தினின்று முகிழ்த்த சொல். வளைந்து சூழ்ந்த இடம், வளைந்து சூழ்ந்த கடல், வளைந்து சூழ்ந்த நிலப்பரப்பு வளைந்து சூழ்ந்த வளாகம் போன்ற பொருண்மை பொதிந்த சொற்கள், வளைவுக்கருத்தினின்று முகிழ்த்தன என்பார், மொழிஞாயிறு.

வளாஞ்சி *vaḷāñji,* பெ.(n.) வளார் பார்க்க; see *vaḷār.*

[வள் → வளா → வளாஞ்சி (இ.வ.) (வே.க.4, பக்.95).]

வளாய்க்கொள்ளுதல் *vaḷāy-k-koḷḷudal,* பெ.(n.) சூழ்ந்து கொள்ளுதல்; encircled fenced.

[வளாய் + கொள்ளு–,]

வளார் *vaḷār,* பெ.(n.) இளம் கொம்பு; twing, tender branch. *"புளியம் வளாரால் மோதுவிப்பாய்" (தேவா.1039,1).*

தெ.மளாரமு.

[வல் → வலார் → வளார்.]

வளால் *vaḷāl,* பெ.(n.) 1. தரைக்கூறுவகை (செந். xiii, 172); a kind of soil. 2. வளா[1] பார்க்க; see *vaḷā*[1].

[வளார் → வளால்.]

வளாலை *vaḷālai,* பெ.(n.) முட்டைக் காளான்; oval shaped mushroom.

[வளால் → வளாலை.]

வளாறு *vaḷāṟu,* பெ.(n.) வளார் பார்க்க; see *vaḷār.*

[வளார்→வளாறு.]

வளாவு[1]-தல் *vaḷāvu-,*5 செ.குன்றாவி.(v.t.) 1. சூழ்தல் (பிங்.); to surround. *"இள வெயில் வளாவ" (பரிபா. 15, 27). "மகோததி வளாவும் பூதலம்" (கம்பரா. தேரேறு. 42).* 2. மூடுதல்; to cover, jacket. *"பைந்துகில்..... வெம்முலை மேல் வளாய்" (சீவக. 2634).*

[வள→வளா→வளாவு-.]

வளாவு[2]-தல் *vaḷāvu-,*5 செ.குன்றாவி. (v.t.) 1. கலத்தல்; to mix, as hot water with cold, to dilute. *"தேன் வளாவியும்" (கம்பரா. ஆற்றுப். 8), "கடல் வெதும்பின் வளாவு நீரில்லாது போலவும்" (இறை. 3. பக். 47).* 2. அளவளாவுதல் (பிங்.); to be sociable, intimate.

[வளா→வளாவு-.]

வளி[1] *vaḷi,*பெ.(n.) 1. ஓதம்; moisture. 2. பிதுக்கம்; production. 3. குடலிறக்கம் (அண்டவாதம்); hernia. 4. சூதம்; hydrocele. 5. ஆசன வளையம்; rings in the rectum. 6. வளிம (வாதம்); wind humour.

[வள்→வளி]

வளி[2] *vaḷi,*பெ.(n.) 1. காற்று; wind, air. *"வளிவழங்கு மல்லன்மா ஞாலங்கரி" (குறள், 245).* 2. சுழல்காற்று (பிங்.); whirl wind. 3. உடலிலுள்ள வாதக்கூறு; windy humour in the body. *"வளி முதலா வெண்ணிய மூன்று" (குறள், 941).* 4. அண்டவாத நோய்; rupture, hernia.

தெ., ம.வளி.

[வல்→வள்→வளி.]

"வளி = வளைந்து வீசுங் காற்று" (வேர்ச் சொல்.4, பக்.95).

வளி[3] *vaḷi,*பெ.(n.) சிறிய காலவளவு வகை; a small duration of time. *"கணம் வளி யுயிர்ப்புத் தோவம்" (மேருமந். 94).*

[வள்→வளி.]

வளிச்செல்வன் *vaḷi-c-celvaṉ,* பெ.(n.) (வாயுக்) காற்று கடவுள்; the wind god.

[வளி + செல்வன்]

வளிசம் *vaḷišam,*பெ.(n.) தூண்டில் (பிங்.); fishing rod.

[வள்→வளி→வளிசம் = வளைந்த தூண்டில்.]



வளிதரும்செல்வன் *vaḷidarum-šelvaṉ,* பெ.(n.) வளிச்செல்வன் பார்க்க; see *vaḷi-c-celvaṉ.*

[வளிதரும் + செல்வன்.]

வளிதூக்கல் *vaḷi-tūkkal,* தொ.பெ.(vbl.n.) வேகமாகக் காற்றடித்தல்; to speed wind. *"கொடிறுபோல் காயவால் இணர்ப்பாலை செல்வளி தூக்கலின் இலைநீர் நெற்றம்" (நற்-107-3-4).*

[வள்→வளி + தூக்கல்]

வளிநிலை *vaḷi-nilai,*பெ.(n.) மூச்சுக் காற்றினை உடம்பினுள் தேக்கி வைக்கும் அல்லது நிறுத்தும் ஓகநிலை; retention, holding in of breath, suspension of breath, a part of *ōgam(pirāṇāyāmam).*

மறுவ. காற்றியக்கம்

[வளி + நிலை]

வளிநிலை (பிராணாயாமம்), இழுக்கை (பூரகம்), விடுகை (இரேசகம்), நிறுத்தம் (கும்பகம்) என்னும் மூவகையால் மூச்சை யடக்கி யாள்கை. வளிநிலை (பிராணாயாமம்) ஓகத்தின் எண்ணுறுப்புகளு ளொன்று.

வளிநிலை குறித்து அடியார்க்கு நல்லார் உரைத்துள்ளது வருமாறு :- "உந்தியொடு புணர்ந்த விருவகை வளியும், தந்த மியக்கந் தடுப்பது வளிநிலை" (சிலம்பு.14:11, உரை.).

வளிப்பிடுக்கன்[1] *vaḷi-p-piḍu-k-kaṉ,* பெ.(n.) வளியிறங்கினவன்; one who is afflicted with rupture.

[வளி + பிடுக்கன்]

வளிப்பிடுக்கன்[2] *vaḷi-p-piḍukkaṉ,* பெ.(n.) வளியன் பார்க்க (வின்.); see *vaḷiyaṉ.*

[வளி + பிடுக்கன்]

வளிப்பிடுக்கு *vaḷi-p-piḍukku,* பெ.(n.) காற்றுச் சேர்ந்த ஆணின் இனப்பெருக்கச் சுரப்பி உறுப்பு; rupture hernia.

மறுவ. ஓதப்பிடுக்கு.

[வளி + பிடுக்கு.]

புல் →புள் →பிள் →பிழம்பு = திரட்சி (வே.க.3:81).

பிள் → பிண்டு = திரட்சி (வே.க.3:81).

புள் →பிள் →பிடு →பிடுக்கு.

வளிமம் மிகுதியாகச் சேர்ந்து, திரண்டு திகழும் ஆணின் விதைக்கொட்டை.

வளிமகன் *vaḷi-magaṉ,* பெ.(n.) 1. அனுமான்; *haṉumāṉ.* 2. வீமன்; *vīmaṉ.* *"அரக்கில்லை வளிமகனு டைத்து" (கலித். 25).*

[வளி + மகன்]

வளிமறை *vaḷi-maṟai,*பெ.(n.) 1. வீடு; house. *"என்னல் கூர்வளிமறை" (புறநா. 196).* 2. கதவு; door. *"வளிமறையு மின்றி வழக் கொழியா வாயில்" (பு.வெ.10, முல்லைப். 4).*

[வளி + மறை]

வளியன் *vaḷiyaṉ,*பெ.(n.) பருத்த விதைகளை யுடையவன்; one afflicted with a big scrotum, one afflicated with rupture.

[வளி + அன் – வளியன்]

வளியிறங்கினவன் *vaḷi-y-iṟaṅgiṉavaṉ,* பெ.(n.) வளியன் பார்க்க (வின்.); see *vaḷiyaṉ.*

[வளி + இறங்கினவன்]

வளு[1] *vaḷu,* பெ.(n.) கருப்பையிலிருந்து குழவி (பிண்டம்) வெளிவருமுன் வெளிப்படும் வழவழப்பான ஒரு பொருள்; a slight discharge of mucus with or without blood called 'show' indicating the delivery of the child, a discharge of blood and mucus from the rigina of the onset of labour.

வளு[2] *vaḷu,*பெ.(n.) 1. இளமை; youth. 2. இளைது; that which is tender or young.

வளுந்து-தல் *vaḷundu-,* 5 செ.கு.வி.(v.i.) வழுந்து (வின்.) பார்க்க; see *vaḷundu.*

வளும்பு *va|umbu,* பெ.(n.) வழும்பு^{2} பார்க்க (யாழ்.அக.); see *va|umbu.*

மறுவ. கொழுப்பு.

[வழும்பு→வளும்பு.]

வளுவளு–த்தல் *va|u-va|u-,*4 செ.கு.வி. (v.i.) 1. வழுக்குத் தன்மையாதல்; to be slimy, slippery. 2. பேச்சு முதலியவற்றில் தெளிவின்றியிருத்தல் (வின்.); to be uncertain or indecisive as in speaking or language, unclear.

[வளு + வளு–.]

வளுவளெனல் *va|u-va|enal,* பெ.(n.) நொளு நொளுப்பு; plastic.

[வளு + வளெனல்]

வளுவாதியர் *va|u-vādiyar,* பெ.(n.) புதுக்கோட்டைச் சீர்மையிலும், திருச்சி மாவட்டத்திலும் வாழ்கின்ற, வலையருள் ஒரு பிரிவினர் (E.T.vii, 311); a subsect of the *va|aiyar* caste in the erstwhile *Pudukōṭṭai* state now district and in the Trichy district.

வளை^{1}–தல் *va|ai-,* 2 செ.கு.வி.(v.i.) 1. கோணுதல்; to bend, to become crooked. 2. தாழ்தல்; to lower down. *"முற்றமூத்துக் கோல்துணையா முன்னடி நோக்கி வளைந்து" (திவ். பெரியதி. 1, 3, 1).* 3. தோற்றல்; to be defeated. *"வளையா வயவரும்" (பு.வெ.7, 18).* 4. திடமறுதல் (சீவக.1068, உரை); to yield, give way, surrender. 5. நேர்மையினின்று விலகுதல்; to deviate, as from rectitude. *"வளையாத செங்கோல் வளைந்ததிது வென்கொல்" (சிலப்.19, 16).* 6. வருந்துதல்; to suffer, regret. *"வளையார்பசியின்" (பதினொ திருவிடை–மும்மணிக்.21).* 7. சுற்றுதல்; to move or round about, as foetus in the womb. *'குழந்தை வயிற்றில் வளைய வருகிறான்' (உ.வ.).*

[வள்→ வள→வளை– (வே.க.4, பக்.95).]

வளை^{2}–தல் *va|ai-,* 2 செ.குன்றாவி.(v.t.) 1. சூழ்தல்; to surround, encompass, besiege. *"வளைகடல் வலையிற் சூழ்ந்து" (சீவக. 1115).* 2. சுற்றி வருதல்; to hover round, to walk around. *"வையக முழுதுடன் வளைஇ" (புறநா. 69), "செறிவளை நல்லார் சிலர் புறஞ் சூழ" (மணிமே.18–39).*

[வள்→வள→வளை–. (வே.க.4, பக்.95)]

வளைதல் = பயன் கருதிச் சுற்றி வருதல். தனக்கு ஆக வேண்டிய ஒன்றைக் கருதிப் பன்முறை வந்து பார்த்தலும், பேசுதலும், வளைதல் என்றும், வளைய வருதல் என்றும் சொல்லப்படும்.

வீட்டைச் சுற்றுதலும், ஆளைச் சுற்றுதலும், வளைதல். அவ்வளைதலும் பல்கால் வருதல், தற்பயன் கருதியதேயன்றிப் பிறிதன்றாம். வாலைக் குழைக்கும் நாய் வளைய வரும். வாயைக் குழைக்கும், இவரும் வளைய வருவர். இத்தகையவரே, 'சுடக்குப் போட்டால் வருவார்' என்று சொல்லப்படும், இழிவு உடையவராம். அன்பால் தாய், சேயையும், சேய், தாயையும் வளைய வருதல் ஈதன்றாம். "வளைய வருகிறானே, என்ன புதுநாடகம்" என்பது வளைய வருதலை விளக்கும்.

வளை^{3}–த்தல் *va|ai-,*4 செ.குன்றாவி.(v.t.) 1. வளையச் செய்தல்; to bend, inflect. 2. சூழ்தல்; to surround. *"இடுமுட் புரிசை யேமுற வளைஇ" (முல்லைப். 27).* 3. தடுத்தல்; to hinder, obstruct, prevent. *"வள்ளனீங்கப் பெறாய் வளைத்தே னென" (சீவக. 889).* 4. பற்றுதல்; to grasp, seize. 5. கவர்தல்; to carry off, sweep away, to steal. *'திருடர் வந்து எல்லாவற்றையும் வளைத்துக் கொண்டு விட்டார்கள்' (இ.வ.).*

6. பேச்சு முதலியவற்றை திருப்புதல்; to reiterate, to revert again and again. *'வளைத்து வளைத்து பேசுகிறான்' (இ.வ.).* 7. எழுதுதல்; to paint, delineate. *"உருவப்பல்பூ வொருகொடி வளைஇ" (நெடுநல். 113).* 8. அணிதல்; to wear, put on. *"சடை முடிமேல் முகிழ்வெண்டிங்கள் வளைத்தானை" (தேவா. 871.1).*

[வள்→வள→வளை- (வே.க.4, பக்.95)]

வளை[4] *vaḷai,* பெ.(n.) வளையம்; ring, circle, circuit. *"கோபுரகலச அமைப்பினால் இவ்விணைப்பினை அறியலாம்" (தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டு), "கண்களி பெறூஉம் கவின்பெறு காலை எல்வளை ஞெகிழ்ந் தோற்கு அல்லல்" (நற்-56-3-4). "ஆய்வளைக் கூட்டும் அணியுமார் அவையே" (நற்-60-11).*

க. பளெ (b)

[வள்→வள→வளை (வே.க.4, பக்.95)]

பல பகுதிகளாக அமைக்கப் பெற்று, ஒன்றாக, ஒருருவாக அமைக்கப்படும் மாழையாலான பாத்திரங்கள், ஒன்றற் கொன்று அடுக்கிச் செருகி உருவாக்கும் சுரையிடங்களே வளை என்று பெயர் பெறும்.

வளை[5] *vaḷai,* பெ.(n.) 1. சுற்றிடம்; circle, circuit, surrounding region. *"பரமேச்சுர மங்கலத்து ளகப்பட்ட வளையில்"* (S.I.I.i, 151, 72). 2. சங்கு; conch. *"வளையொடு புரையும் வாலியோற்கு" (பரிபா. 2, 20).* 3. கைவளை; bangle, bracelet. *"முன்கை யிறையிறவா நின்ற வளை" (குறள், 1157).* 4. ஆழி, எறி வளையம்; discus. *"தாங்கணைப் பணிலமும் வளையுந் தாங்கரா வீங்கணைப் பள்ளியான்" (கம்பரா. உருக்காட்டுப். 43).* 5. துளை; hole. 6. எலி முதலியவற்றின் பொந்து (இ.வ.); rat-hole burrow. 7. சிறிய உத்திரம் (வின்.); small beam. 8. நீண்ட மரத்துண்டு; long piece of wood.

க. பளெ (b.).

[வள்→வளை]

வளை[6] *vaḷai,* பெ.(n.) தூதுவளை (சங்.அக.); a thorny climbing brinjal.

வளைக்கழுந்து *vaḷai-k-kaḻundu,* பெ.(n.) சுவருட் செலுத்தும் உத்திரத்தின் பகுதி; tenon in the end of the lower beam in a building.

[வளை + கழுந்து]

வளைக்காச்சுமணி *vaḷai-k-kāccu-maṇi,* பெ.(n.) சங்குமணி; a kind of bead.

[வளை + காச்சுமணி. காய்ச்சுமணி→ காச்சுமணி]

வளைகாப்பு *vaḷai-kāppu,* பெ.(n.) முதலாவதாகக் கருவுற்ற பெண்ணுக்கு, ஐந்தாவது அல்லது ஏழாவது மாதத்தில் வளையணியும் நிகழ்வு; bangle wearing ceremony in the fifth or seventh month of a married woman's first pregnancy.

[வளை + காப்பு. கா = காத்தல். கா→ காப்பு.]

முதன்முதல் கருவுற்ற பெண்களுக்கு, ஏழாம் மாதத்தில் செய்யப்படும் நிகழ்வு.

கருவுற்ற மகளிரை, நோய்நொடியிலிருந்து காத்தற்பொருட்டு நிகழ்த்தப்பெருஞ் சடங்கு. பேயச்சத்திலிருந்தும், கண்ணேறுபடுதலிலிருந்தும் காப்பதற்காகப் போடப்படும் வளையே, வளைகாப்பென்று, ஊரகத்தார் நம்புகின்றனர்.

ஏழாம் மாதத்தில் செய்யவியலாதவர், ஒன்பதாம் மாதத்தில் செய்வர்.

தாயைக் காத்தற் பொருட்டு, முதற்கண், வேம்பின் ஈர்க்காலாகிய வளையை அணிவிப்பர். பின்பு அவரவர்தம் செல்வ வளமைக்குத் தக்கவாறு, தங்கவளையல், சங்கு வளையலை அணிவித்துத் தாயை மகிழ்விப்பர்.

வளைகாப்புபோடல் *vaḷai-kāppu-pōḍal,* பெ.(n.) வளைகாப்பு பார்க்க; see *vaḷai-kāppu.*

[வளைகாப்பு + போடல்.]

முதற்சூலுற்ற பெண்களுக்கு பெண்வீட்டார் நிகழ்த்தும் வளையணி விழாவே, வளைகாப்புப் போடலாகும்.

வளைகாப்புபோடல் – மகப்பேற்றுக்கு அழைப்பு விழா.

வளையலும் காப்பும் போடுதல் பிறந்த குழந்தைப் பருவந்தொட்டே நடக்கத் தொடங்குவது. அதனைக் குறியாமல், "வளைகாப்புப்போடல்" – கருக்கொண்ட மகளை ஏழாம் மாதத்திலோ, ஒன்பதாம் மாதத்திலோ – தாய் வீட்டுக்கு, மகப்பேற்றுக்காக அழைக்கும் போது, விழாவாக நிகழ்த்தப்படுகின்றது.

வளைகாப்பு விழா அல்லது வளையணி விழா நாளில், பல்வகைச் சோறுகள், பண்டங்கள் ஆக்கிப் படைத்தலும், அவ் விழாவுக்கு வந்த மங்கல மகளிர், கன்னியர், குழந்தைகள் ஆகிய அனைவருக்கும் வளயல் போடுதலும் வழக்காம். வளையல் அணிவிக்கும் நாளை, வளயணிவிழா நாளாக இன்றும், தமிழர் கொண்டாடுகின்றனர்.

வளையல் மகளிர் அணி. மணிக்கட்டை வளைத்து வளையல் போடுதல் போல் ஆதனை, அஃதாவது, கருவுற்ற மகளிரையுஞ், சேயினையும், இறைவன் வளைத்துக் காப்பதாகவும் சிவனியத்தார் பொருள் கூறுவர்.

கா→காப்பு. ஆடவர் அணியுமாகும். ஆனால் வளைகாப்பு, சேயையும், தாயையும் காக்கும் காப்பாகும்.

ஆனால் வளைகாப்பிலுள்ள காப்பு, அணி குறியாமல், காவல் பொருளையே சுட்டுதலறிக. 'காப்புக்கட்டல்' என்னும் ஊர் வழக்கை நோக்குக.

வளைகுடா *vaḷai-kuḍā,* பெ.(n.) விரிகுடாவை விடக் குறைந்த பரப்பைக் கொண்ட கடல் பகுதி; gulf. *"வளைகுடா நாடுகள்".*

[வளை + குடா]

வளைகூட்டு-தல் *vaḷai-kūṭṭu-,* 5 செ. குன்றாவி.(v.t.) கூந்தலை உலர்த்தி அள்ளி முடிதல்; to dry and to make into a knot. *"மா இருங் கூந்தல் மடந்தை ஆய்வளைக் கூட்டும் அணியுமார் அவையே" (நற்–60–10–11).*

[வளை + கூட்டு–.]

வளைகொள்ளல் *vaḷai-koḷḷal,* பெ.(n.) சங்கு எடுப்பதற்காகக் கடலில் முக்குளித்தல்; to swim into deep sea to cull out conch-shell.

[வளை + கொள்ளல்.]

வளைச்சல் *vaḷaiccal,* பெ.(n.) கழித் துண்டுகளை இணைக்கும் மரச்சட்டம், வலிச்சல்; reeper.

[வரிச்சல்→ வலிச்சல்→ வலைச்சல்→ வளைச்சல்.]

வளைச்செட்டி *vaḷai-c-ceṭṭi,*பெ.(n.) வளைவிச் செட்டி பார்க்க; see *vaḷaivi-c-ceṭṭi.*

[வளை + செட்டி.]

வளைசல் *vaḷaical,* பெ.(n.) 1. வளைவு; crookedness, curve, curvature, bend. 2. வீடு முதலியவற்றின் சுற்றுப்புறம்; courtyard, compound, enclosure. 3. வளையல் பார்க்க; see *vaḷaiyal.*

[வளை→வளைசல்]

வளைசலுளி *vaḷical-uḷi,* பெ.(n.) வளைவுப் பகுதிகளில் செதுக்கப் பயன்படும் உளி; chisel used to englave bend portion of wood.

[வளைசல் + உள்→உளி = குறுகிய வளைவுப் பகுதிகளில் செதுக்கப் பயன்படுவது.]



வளைத்துப்போடு-தல் *vaḷaittu-p-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) தன் வயப்படுத்துதல்; win over, bring one's control or influence, to entice. *'ஊரில் வாய்மடையிலிருக்கும் நஞ்சை நிலத்தை யெல்லாம் வளைத்துப் போட்டு விட்டார்' (இ.வ.).*

[வளைத்து + போடு-.]

வளைத்துவைத்தல்[1] *vaḷaittu-vaittal,* பெ.(n.) 1. தடையிடுகை; felter, restriction, obstruction. 2. பிணித்து வைக்கை; binding.

[வளைத்து + வைத்தல்]

வளைத்துவை[2]-த்தல் *vaḷaittu-vai-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. அப்பாற் போகவொட்டாது மடக்குதல்; to restrain one from going away or escaping. *"வளைத்து வைத்தேனினிப் போகலொட்டேன்" (திவ். பெரியாழ்.5,3,2).* 2. சிறையகப் படுத்துதல்; to imprison, to intern. *"சிறையறை வளைத்து வைத்தார்" (திருவாலவா. 29, 19).* 3. இடையூறு செய்தல்; to obstacle.

[வள்→வள→வளை→வளைத்து + வை-.]

வளைதடி *vaḷai-taḍi,* பெ.(n.) குறுந்தடி வகை; a kind of curved cudgel, used as a weapon.

[வளை + தடி = படைக்கலனாகப் பயன்படும் எறிதடி.]

வளைதடிச்சம்பா *vaḷai-daḍi-c-cambā,* பெ.(n.) சம்பா நெல்வகை; a kind of *cambā* paddy.

[வளைதடி + சம்பா]

வளைதொளை *vaḷai-toḷai,*பெ.(n.) 1. வளைந்த செலவு; winding hole. 2. தொடர்பில்லாத வற்றிலே தலையிட்டு வினவுதலை யுணர்த்துங் குறிப்புச் சொல் (வின்.); a term indicative of inquisitiveness.

[வளை + தொளை, துளை → தொளை]

வளைந்தகால் *vaḷainda-kāl,* பெ.(n.) நெளிந்த கால்; bow leg.

[வளைந்த + கால்]

வளைந்தலகுச்சிலம்பன் *vaḷaindalagu-c-cilamban,* பெ.(n.) சிலம்பன் என்னும் பறவை வகையுள் ஒன்று; Indian scimitar babbler-*Pomatorhinus horsfieldi.*

[வளைந்தலகு + சிலம்பன்]

கிழக்கு, மேற்கு தொடர்ச்சி மலைச்சார்ந்த, ஏலத் தோட்டம், மூங்கில் காடு, பசுங்காடு, இலையுதிர்காடு முதலிய பகுதிகளில் காணப்படுவதும், 22 விரலம் உயரம் வளர்வதும், பசுமை தோய்ந்த கரும்பழுப்பு நிறமும், வெண்புருவம் கொண்டும், தொண்டை, மார்பு, வயிறு ஆகிய வெண்நிறமாயும் காணப்படும். இவை, பூச்சிகளை உண்ணும் தன்மை கொண்டது. 2 அல்லது 3 முட்டைகளிட்டு தன் இனத்தைப் பெருக்கும்.

வளைந்துகொடுத்தல் *vaḷaindu-koḍuttal,* தொ.பெ.(vbl.n.) நடைமுறை வாழ்க்கையில் விடாப்பிடியின்றி, சற்று நெகிழ்வாயிருத்தல்; being fluctuous in a particular deed. *நாணல்போல் வளைந்து கொடுக்கப்பழகிடு வளமான வாழ்விற்கு ஏற்புடையதோடன்றி வரவேற்புடையதுமாகும் (உ.வ.).*

[வளைந்து + கொடுத்தல்.]

வளைந்தெழுரோகம் *vaḷainteḻu-rōgam,* பெ.(n.) புருவம், கீழிமை, கடைக்கண் போன்றவற்றில் சதை வளர்ந்து, மேல்நோக்கி பார்க்க முடியாமல் துன்புறுத்தும் ஓர் நோய்; an eye disease affecting the lower lid, corner of eyes and inability to look upwards due to fleshy growth.

*[வளைந்தெழு + **Skt.** rōga>த. ரோகம்.]*

வளைநரல் *vaḷai-naral,* பெ.(n.) சங்கொலி; conch sound. *"வளைநரல் பௌவம் உடுக்கை ஆக" (நற்–க.வா.1–2.).*

[வளை + நரல். வளை = உள்வளைந்துள்ள சங்கு, நரல் = ஒலி.]

வளைநரி *vaḷai-nari,* பெ.(n.) நரிவகை (வின்.); a kind of fox.

[வளை + நரி]

அடர்ந்த காடு மற்றும் மண்டிக் கிடக்கும் புதர்களிற் காணப்படுவது, வளைநரி.



வளைநீர் *vaḷai-nīr,* பெ.(n.) கடல்; sea, as surrounding the earth. *"வளை நீரோசை தனின் மிகுமால்" (திருவாலவா. திருநகரச்.6). "வளைநீர் மேய்ந்து கிளைமுதல் செலீஇ" (நற்–54–1).*

[வளை + நீர்]

பெரும்பாலான நிலப்பரப்பை வளைத்துச் சூழ்ந்த உவர்நீர்ப்பரப்புடையதே, வளைநீராகும்.

வளைப்பு *vaḷappu,* பெ.(n.) 1. வளைக்கை; bending. 2. வளைவு; bend, flexure, crookedness. 3. சூழ்கை; encircling, surrounding, besieging. *"வளைப்பகம் வகுத்துக் கொண்டிருந்தேன்" (திவ்.*

பெரியாழ்.5, 1, 5). 4. முற்றுகையிடுகை; besieging. *"சேனையை வளைப்புறப் போக்கி" (கம்பரா.மீட்சி.139).* 5. குடியிருப்பிடம்; house-premises, compound. 6. சிறை; jail, prison, place of confinement. *"வளைப்பினூடு நிற்கு நற்குணத்தினாரை" (திருவாத.பு. மண். 12).* 7. காவல்; guard, protection, policing. *"பெருவளைப்பிட்டுக் காத்த கற்பிது" (சீவக. 2077).* 8. உழவுச் சால் (யாழ்.அக.); round or turn of ploughing.

[வளை→வளைப்பு.]

வளைப்புக்கிட–த்தல் *vaḷaippu-k-kiḍa-*, 4 செ.குன்றாவி.(v.t.) 1. வெளியிலே தப்ப விடாது, சூழ்ந்து கொள்ளுதல்; to besiege, to pester a person by surrounding him and not allowing him to escape. 2. பழி கிடத்தல்; to lie down, vowing not to get up unless one's request is granted, to sit dharna.

[வளைப்பு + கிட–.]

வளைபோழ்நர் *vaḷai-pōḻnar,* பெ.(n.) வளைபோழுநர் பார்க்க; see *vaḷai-pōḻunar. "விலங்கரம் பொரூஉம் வெள்வளை போழ்நரோடு" (மணிமே.28, 44).*

[வளை + போழ்நர்]

வளைபோழுநர் *vaḷai-pōḻunar,* பெ.(n.) சங்கறுப்போர்; makers of conch-ornaments. *"அணிவளை போழுநர்" (சிலப். 5:47).*

[வளை + போழுநர்]

வளைமணி *vaḷai-maṇi,* பெ.(n.) அக்குமணி (பிங்.); bead made of conch-shell.

[வளை + மணி]



வளைமணிவடம் *vaḷai-maṇi-vaḍam,* பெ.(n.) அக்குவடம்; a string of beads. *'திருவரையிற் சாத்தின வளை மணிவடமானது' (திவ். பெரியாழ். 1, 7, 8).*

[வளை + மணி + வடம்]

வளைமுகப்புசாளரம் *vaḷai-mugappu-śāḷaram,* பெ.(n.) மூக்குத்துளை; nostril.

[வளை + முகப்பு + சாளரம்]

வளைமுற்றம் *vaḷai-muṟṟam,* பெ.(n.) வீட்டின் முன் பகுதியில் நடப்பதற்காகப் பயன்படுத்தப்படும் பாதை; the path which is used to walk in front of the house.

மறுவ. நடை.

[வளை + முற்றம்]

வளையக்கொடி *vaḷaiya-k-koḍi,* பெ.(n.) அண்ணாந்தாள்; a kind of torture.

[வளையம் + கொடி]

வளையக்கோலுகை *vaḷaiya-k-kōlugai,* பெ.(n.) 1. சுற்றுகை; encompassing, surrounding. 2. தனக்கு மட்டும் உரிமையாக்கிக் கொள்ளுகை (வின்.); monopolizing.

[வளையம் + கோலுகை]

வளையகம் *vaḷaiyagam,* பெ.(n.) சங்கு (அக.நி.); conch, as curved.

[வளையம் + அகம்]



வளையணிதல் *vaḷaiyaṇidal,* தொ.பெ. (vbl.n.) வளைகாப்புபோடல் பார்க்க; see *vaḷai-kāppu-pōḍal.*

[வளை + அணிதல்]

வளையநோய் *vaḷaiya-nōy,* பெ.(n.) கண்டத்திற்கு உள்ளும், வெளியேயும், கழுத்தைச் சுற்றி வீங்கி, தொண்டை வரை அடைந்து துன்புறுத்துமோர் நோய்; a circular or ring shaped raised swelling obstructing or closing up the upper end of the oesophagus, it is incurable and hence should be given up.

[வளையம் + நோய்.]

வளையம்[1] *vaḷaiyam,* பெ.(n.) 1. சீதாங்க நஞ்சு; a kind of arsenic. 2. சீனக்காரம்; alum. 3. தவளை; frog. 4. தாமரைச்சுருள்; coil of lotus stalk.

வளையம்[2] *vaḷaiyam,* பெ.(n.) 1. தாமரைச் சுருள் (பிங்.); the involuted petals of a lotus. *"இப்போதாயிற்று வளையஞ் செவ்வி பெற்றதும்"* (ஈடு. 2, 6, 11). 2. வட்டம்; ring, circle. 3. கைவளை (வின்.); bracelet. 4. குளம் (வின்.); tank. 5. எல்லை (வின்.); ambit. 6. வளையமாலை பார்க்க; see *vaḷaiya-mālai.* 7. வட்டம்[1], 7, 8 பார்க்க; see *vaṭṭam.*

த. வளையம் > **Skt.** vaḷaya.

[வள் → வள → வளை → வளையம் (வே.க.4, பக்.96).]

வளையம்போடு-தல் *vaḷaiyam-pōḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. வட்டமிடுதல்; to draw a circle, to en circle. 2. சூதாட்டத்தில் வளையமெறிதல்; to throw an iron ring, in gambling. 3. கெட்ட நோக்கத்துடன் ஒருவனைச் சுற்றித் திரிதல்; to hover round a person with bad motives or degraded approach.

[வளையம் + போடு-.]

வளையமாடு-தல் *vaḷaiyam-āḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கயிறு சுருட்டுதல் (வின்.); to wind up a rope, coil a cable. 2. வளையம் போடு-, 2,3 பார்க்க; see *vaḷaiyam-pōḍu.*

[வளையம் + ஆடு-. ஆல் → ஆள் → ஆளு → ஆடு = வளைதல், சுற்றுதல், சுழலுதல்.]

கயிற்றை வளையமாகச் சுற்றுதல் அல்லது சுருட்டுதல்.

வளையமாலை *vaḷaiya-mālai,* பெ.(n.) முடியில் வளைத்துச் சூடும் மாலை; garland worn round the head. *"தேன் மிக்க மாலையை வளைய மாலையுடனே சிறப்பச் சூடி"* (புறநா. 76, 7, உரை).

[வளையம் + மாலை]

வளையமிடல் *vaḷaiyamiḍal,* பெ.(n.) கண்களைச் சுற்றி உண்டாகும் கருப்பு; searching eyes - looking all round.

[வளையம் + இடல். இடு→இடல்.]

வளையமுடி-த்தல் *vaḷaiya-muḍi-,*4 செ. குன்றாவி.(v.t.) திரளக் கூட்டி முடித்தல்; to tie up, as the hair in a know. *"மணிநூற்றன வைம்பால் வளைய முடித்து" (சீவக. 2693).*

[வளையம் + முடி-.]

வளையல்[1] *vaḷaiyal,* பெ.(n.) நஞ்சு; poison.

வளையல்[2] *vaḷaiyal,* பெ.(n.) 1. மகளிரது கையணிவகை; bangle, bracelet. *"வளையல் விற்ற படலம்".* 2. கண்ணாடி (வின்.); glass. 3. வளைவுள்ளது (யாழ்.அக.); that which is bent or curved.

[வளை + அல் → வளையல்.]



வளையல்[3] *vaḷaiyal,* பெ.(n.) வங்கி பார்க்க; see *vaṅgi.*

[வள்→வள→வளை + அல் → வளையல்.]

வளையல்[4] *vaḷaiyal,* பெ.(n.) ஆலையில் இழைகள் அடுத்தடுத்து வரிசையாகச் செல்லப் பயன்படுத்தப்படும் சிறுவளையம்; a ring to regulate the thread in a row.

[வளை + அல்→ வளையல்.]

வளையல்[5] *vaḷaiyal,* பெ.(n.) கைவிலங்கு; fetters.

[வளை + அல் → வளையல் = கைகளைச் சுற்றி வளைந்த பான்மையில் அமைந்த கைவிலங்கு.]

வளையல்கொம்பு *vaḷaiyal-kombu,* பெ.(n.) வளையல்கள் கட்டப்பட்ட நான்கு கொம்புகள்; முதல் கொம்பில் 30 வளையல்களும், இரண்டாம் கொம்பில் 30 வளையல்களும், மூன்றாம் கொம்பில் 10 வளையல்களும், நான்காம் கொம்பில் 10 வளையல்களுமாக எண்பது வளையல்கள் கட்டப்பட்ட கொம்புகள்; four sticks tied with bangles, 30 each in first and second sticks and 10 each in third and fourth sticks.

[வளையல் + கொம்பு]

வளையல்மண் *vaḷaiyal-maṇ,* பெ.(n.) வளையல் செய்தற்குரிய மணல்; mineral sand of which glass bangles are made, bangle-earth.

[வளையல் + மண்]

வளையலுப்பு[1] *vaḷaiya-luppu,* பெ.(n.) 1. வளையலுக்காக பயன்படுத்துவதும், உவர் மண்ணிலிருந்து எடுப்பதுமான ஓர் வகை உப்பு; a kind of salt extracted from fuller's earth used in the manufacture of bangles. *இவ்வுப்பினால் (வாத) ஊதை, வளி, பித்தம், இரைப்பு, வயிற்றுவலி, மூட்டுப்பிடிப்பு ஆகியவை நீங்கும்.* 2. ஆறுமுறை காய்ச்சி யெடுத்த வெடியுப்பு; nitre boiled and filtered 6 times (சா.அக.).

[வளையல் + உப்பு]

வளையலுப்பு[2] *vaḷaiyal-uppu,* பெ.(n.) ஒரு வகை மருந்துப்பு (பதார்த்த. 1095); a kind of medicinal salt.

[வளையல் + உப்பு]

வளையவளைய *vaḷaiya-vaḷaiya,* வி.எ. (v.part.) திரும்பத் திரும்ப; again and again. *ஆவின்மடியில் பால் குடிக்கக் கன்றுவளைய வளைய வந்தது (உ.வ.).*

[வளைய + வளைய.]

வளையவா *vaḷaiya-vā-,*18 செ.கு.வி.(v.i.) 1. வளைந்து திரும்புதல்; to bend and move about, circle. *'வயிற்றில் குழந்தை வளைய வருவதை அவளால் உணர முடிந்தது'.* 2. சுற்றி வருதல்; to go around. *'புது மனைவியை வளைய வந்து கொண்டிருந்தான்' (உ.வ.).*

[வளை→வளைய + வா-.]

வளையற்காப்பு *vaḷaiyaṟ-kāppu,* பெ.(n.) வளையல்[1] பார்க்க; see *vaḷaiyal*[1]

[வளையல் + காப்பு]

வளையற்காரன் *vaḷaiyaṟ-kāṟāṉ,* பெ.(n.) வளையல் விற்பவன்; bangle seller.

[வளையல்+காரன். காரன்=உடைமைப் பெயரீறு.]

வளையற்செட்டி *vaḷaiyaṟ-cetty,* பெ.(n.) வளைவிச்செட்டி பார்க்க; see *vaḷaivi-c-ceṭṭi.*

[வளையல் + செட்டி]

வளையற்பச்சை *vaḷaiyaṟ-paccai,* பெ.(n.) கண்ணாடியாற் செய்த போலிப் பச்சை மணிவகை; false or duplicate emerald, made of glass.

[வளையல் + பச்சை]

வளையற்பூச்சி *vaḷaiyaṟ-pūcci,* பெ.(n.) கம்பளிப்பூச்சி வகை; a kind of caterpillar.

[வளையல் + பூச்சி]

விட்டில் பூச்சியினத்தைச் சார்ந்தது. வளையல் போன்று, சுருண்டு கொள்ளுந் தன்மையது.



வளையாகாரம் *vaḷaiyā-kāram,* பெ.(n.) சுற்றோலை; circular.

வளையாபதி[1] *vaḷaiyāpadi,* பெ.(n.) சிந்தாமணிக்கு முற்பட்ட நூல்; a work or epic belonging to period before cindāmaṇi. *இந்நூலின் ஆசிரியர் இன்னாரென்று அறியப்படவில்லை. ஆனால் இவர் சமணராக இருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது. இவர் 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்ற கருத்தும் உண்டு.*

வளையாபதி[2] *vaḷaiyā-pati,* பெ.(n.) ஐவகை காப்பியங்களுள் ஒன்று. சில பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளது (குறள், 107, உரை); an ancient epic poem, of which only a few stray stanzas are extant. one of pañja-kāviyam, (q.v.).

வளையாமாலி *vaḷaiyā-māli,* பெ.(n.) மருதாணி; a tree-nail dye-*Lawsonia alba.*

வளையில் *vaḷaiyil,* பெ.(n.) வளையல் (வின்.) பார்க்க; see *vaḷaiyal.*

[வளை → வளையில்.]

வளையிற்சுற்று *vaḷaiyiṟ-cuṟṟu,* பெ.(n.) ஊரைச் சூழ்ந்த பகுதிகள்; sorrounding region. *'ஊரைச் சுற்றி வளைந்ததாக அமைந்த நில புலங்கள்' (உ.வ.).*

[வளையில் + சுற்று]

வளையோர் *vaḷaiyōr,* பெ.(n.) வளையல் அணிந்தவர்; to wear ornament of bangle. *"நகர நம்பியர் வளையோர் தம்முடன்" (மணிமே.19:24).*

[வளை → வளையோர்.]

வளைவண்ணத்தன் *vaḷai-vaṇṇattaṉ,* பெ.(n.) சங்குபோன்று வெண்மை நிறத்தன்; a man with conch- shell whiteness.

[வளை + வண்ணத்தன்]

வளைவணன் *vaḷaivaṇaṉ,* பெ.(n.) திருமாலின் தோற்றத்துளொருவனான பலராமன்; Bala raman, one of incarnates of *Tirumāl. "மாரி மாக்கடல் வளைவணற் கிளையவன்" (திவ். பெரியதி.8:5:2).*

வளைவள-த்தல் *vaḷai-vaḷa-,* 4 செ.கு.வி. (v.i.) நிலத்தை அளவிடுதல் (வின்.); to measure or survey a field.

[வளைவு + அள-.]

குறிப்பிட்ட நிலம் மற்றும் நிலஞ்சூழ்ந்த பகுதியை அளத்தலும், அளந்து வரம்பு, எல்லை, செய்தலுமாம்.

வளைவாணன்[1] *vaḷai-vāṇaṉ,* பெ.(n.) நாக நாட்டின் மன்னன்; as king of the *Nāga-nāḍu.*

மணிமேகலையில் 24, 25, 29 ஆகிய காதைகளில், நாகநாட்டு மன்னன் குறித்த செய்தி இடம் பெற்றுள்ளது.

வளைவாணன்[2] *vaḷai-vāṇaṉ,* பெ.(n.) 1. பலராமன்; *balarāmā,* as white in colour like the conch. 2. வளைவணன் பார்க்க; see *vaḷai-vāṇaṉ.* 3. நாக நாட்டரசருள் ஒருவன்; a king of nāga-nāḍu. *"வளைவணன்றேவி" (மணிமே. 24. 55).*

வளைவாணி *vaḷai-vāṇi,* பெ.(n.) கொக்கி (வின்.); hook.

[வளைவு + ஆணி]



வளைவாயுதம் *vaḷaivāyudam,* பெ.(n.) உள் வளைந்த இடங்களையிழைக்கும் இழைப்புளி வகை; inshaver, plane for shaving the concave faces of barrel staves.

*[வளைவு + **Skt.** āyudha > த. ஆயுதம்]*

வளைவி *vaḷaivi,* பெ.(n.) 1. வீட்டிறப்பு; sloping roof. 2. வளையல்[1] பார்க்க; see *vaḷaiyal* [1].

[வளை → வளைவு → வளைவி (வே.க.4, பக்.96)]

வளைவிச்செட்டி *vaḷaivi-c-ceṭṭi,* பெ.(n.) வளையல் விற்கும் இனத்தான்; person belonging to the caste that trades in bangles.

[வளைவி + செட்டி]

வளைவில்லாமரம் *vaḷaivillā-maram,* பெ. (n.) பாக்குமரம்; arecanut tree.

[வளைவில்லா + மரம்]

வளைவிற்பொறி *vaḷaiviṟ-poṟi,* பெ. (n.) தானே அம்பு எய்யும் எந்திர வில்; engine device for shooting arrows automatically. *"வளைவிற் பொறியுங் கருவிர லூகமும்" (சிலப். 15, 207).*

[வளை + வில் + பொறி.]

வளைவு *vaḷaivu,* பெ. (n.) 1. சுற்று; circumference. 2. வட்டம்; circle. 3. கோணல்; crookedness, bend. 4. கட்டடத்தில் அமைக்கும் வில் வடிவு (C.E.M.); arch in a building. 5. வீட்டுப் புறம் (வின்.); house-premises. 6. பணிவு (யாழ்.அக.); reverence, humility, modesty.

[வளை→வளைவு (வே.க.4, பக்.96)]

வளைவுஅழுத்தம் *vaḷaivu-aḻuttam,* பெ. (n.) செங்கல் சுவர்களில் ஏற்படும் விரிசல்; crack in brick wall.

[வளைவு + அழுத்தம்]

வளைவுஇழைப்புளி *vaḷaivu-iḻaippuḷi,* பெ. (n.) வளைசல்உளி பார்க்க; see *vaḷaišal-vuḷi.*

[வளைவு + இழைப்புளி]

கலை நுணுக்கப் பணிகட்குப் பயன்கொள்ளும் சிறிய இழைப்புளி.

வளைவுக்கல் *vaḷaivu-k-kal,* பெ. (n.) கட்டட வில்வடிவுக்கு இடும் கல்; arch brick. (C.E.M.).

[வளைவு + கல்]

வளைவுக்கூரை *vaḷaivu-k-kūrai,* பெ. (n.) வளைவாக அமைத்த மேற்கூரை; arched roof, vaulted roof.

[வளைவு + கூரை]

வளைவுச்செருகுகல் *vaḷaivu-c-cerugu-kal,* பெ. (n.) வளைவில் சாய்வாகவும், ஆப்புப் போலவும் அமைக்கப்படும் கல்; a curved stoping stone, shaped-like peg.

[வளைவு + செருகு + கல்]

வளைவுதடி *vaḷaivu-taḍi,* பெ. (n.) வளவுதடி பார்க்க; see *vaḷavu-taḍi.*

[வளைவு + தடி.]

வளைவெடு[1]**-த்தல்** *vaḷai-v-eḍu-,* 4 செ. குன்றாவி. (v.t.) வளைவை நிமிர்த்துதல் (வின்.); to straighten the bend.

[வளைவு + எடு-.]

வளைவெடு[2]**-த்தல்** *vaḷai-v-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) வளைவு கட்டுதல்; to form or construct an arch.

[வளைவு + எடு-.]

வளைவெழுதகம் *vaḷai-v-eḻudagam,* பெ. (n.) எழுத்து வகை; spiral moulding, a letter or character in writing (C.E.M.).

[வளைவு + எழுது→எழுதகம்]

வளைவெளவல் *vaḷai-vouval,* பெ. (n.) வெள்ளிய வேலைப்பாடு அமைந்த ஒளியுடைய வளை; an arch with glittering architectural designs creating bright light. *"வான்கோல் எல்வளை வெளவிய பூசல்" (நற்.100-5.).*

[வளை + வெளவல்]

வற்கசஞ்சீவி *varga-šañjīvi,* பெ. (n.) கருங்குன்றி; black jeweller's bead.

வற்கடம் vaṟkaḍam,பெ.(n.) 1. வறட்சி; drought. *"நீ........ செல்லும் நீண்ட வழியில் வற்கடமான காலத்தை நினைக்கை யினாலும்" (கலித்.3, உரை).* 2. பஞ்சக்காலம்; famine. *"பாண்டி நன்னாடு பன்னிரு யாண்டு வற்கடஞ் சென்றது" (இறை, 1, உரை, பக்.6).*

[வல்→வன் + கடம்]

வற்கம்[1] vaṟgam,பெ.(n.) 1. பரியின் (குதிரை) கடிவாளம் (சூடா,); bridle, rein. 2. பரி (குதிரை) மீதிவர்தற்குரிய கலணை முதலியன; saddle and other trapings used for a horse. *"வற்கம்மிட்ட வண்பரிமாவின்" (சீவக. 1060).*

[வன்கம்→வற்கம்.]

வற்கம்[2] vaṟgam,பெ.(n.) மரப்பட்டை; bark of tree.

[வல்கம்→வற்கம்]

வற்கமார்க்கம் vaṟga-mārkkam,பெ.(n.) நாயுருவி (மலை.); a plant growing in hedges and thickets.

சிறுநீர்க்கடுப்பு, அரத்தமூலம், நச்சுக்கடி போன்றவற்றைப் போக்கும்.

வற்கராடம் vaṟkarāḍam, பெ.(n.) நகக்குறி; nail mark.

[வற்கம் + இராடம்]

Skt. *rāḍa* > *த. இராடம்.*

வற்கரி[1] vaṟkari,பெ.(n.) கரகம் (சூடா.); pitcher, jug.

வற்கரி[2] vaṟkari,பெ.(n.) வற்கம்[1], 1 பார்க்க (வின்.); see *vaṟgam.*

வற்கலம் vaṟkalam,பெ.(n.) வற்கம்[2] பார்க்க; see *vaṟgam.*

வற்கலை vaṟkalai,பெ.(n.) மரவுரி; garment made of bark. *"திருவரை யெய்தி யேமுற வற்கலை நோற்றன" (கம்பரா. சூர்ப்ப. 22).*

வற்காலம் vaṟ-kālam,பெ.(n.) வறட்காலம் பார்க்க; see *vaṟaṭ-kālam. "சில நாளில் வற்கால முற்றலும்" (பெரியபு. கோட்புலி. 5).*

க. பற்கால.

[வல்→வன் + காலம்]

வற்காலி vaṟkāli,பெ.(n.) 1. வெள்ளாடு; goat. 2. ஆடு; sheep.



வற்கிதம் vaṟkidam, பெ.(n.) ஐந்து பரியினுள் ஒன்று (பு.வெ.ஒழிபு.13, உரை); bound or leap of a horse, one of five *aśuva-kaḍi.*

வற்கு vaṟku,பெ.(n.) 1. ஆடு; sheep. 2. கஞ்சி; gruel, rice conjee. 3. அழகு; beauty, charm.

வற்குசா vaṟkuśā,பெ.(n.) கார்போகி (மலை.); scurvy pea.

வற்குணம் vaṟguṇam,பெ.(n.) கொடுமை; hardness or callousness of heart, stone or iron-heartedness. *"வற்குண வலிய தண்டும்" (பிரபோத. 30, 4).*

[வல்+வன்+குணம்.]

வற்குலிகம் var-kuligam, பெ.(n.) கரிக் குருவி (மூ.அ.); king-crow.



வற்கெனல் varkenal, பெ.(n.) வலிதாதற் குறிப்பு; signifying, becoming hard, hardening. *"வற்கென்ற நெஞ்சம் வணங்காய்"* (பு.வெ. 12, பெண்பாற். 17), *"வற்கென்ற செய்கை"* (பழ. 222).

[வன்கு→ வற்கு + எனல்.]

வற்கெனவு varkenavu, பெ.(n.) அழகு; beauty, handsome, excellence. *'வற்கெனவும் வசஞ் செய்தலு முதலாயின'* (நீலகேசி, 380, உரை).

வற்சகம் varšagam, பெ.(n.) 1. பிள்ளை; child. 2. பசுங்கன்று; calf (சா.அக.).

வற்சநாவி varša-nāvi, பெ.(n.) வச்சநாபி பார்க்க (வின்.); see *vacca-nābi.*

வற்சம் varšam, பெ.(n.) குடசப்பாலை (மலை.); conessi-bark.

வற்சமம்[1] var-šamam, பெ.(n.) குடசபாலை; a tree-*Hollarrhena antidysenterica.*

வற்சமம்[2] varsamam, பெ.(n.) வற்சம் பார்க்க (மூ.அ.); see *varšam.*

வற்சலமணி var-šala-mani, பெ.(n.) கோரோசனை; bezoar concretion found in cow or ox.

வற்பம் varpam, பெ.(n.) 1. வன்மை; hardness, as of the earth. *"வற்பமாகி யுறுநிலம்"* (மணிமே. 27, 120). 2. வறட்சி; drought. *"வற்பத்தால்...... புல் மேயாதாகும் புலி"* (பழ. 119).

[வன்→ வற்பு→ வற்பம்.]

வற்பனை var-panai, பெ.(n.) கேழ்வரகு வகை; a species of ragi.

வற்பு varpu, பெ.(n.) 1. உறுதிப்பாடு; firmness, hardness. 2. வலிமை; strength. *"அரக்கர் தலைவன் றன் வற்பார் திரடோள்"* (திவ். பெரியதி. 5, 1, 4).

க. பல்பு

[வல்பு→வன்பு→ வற்பு]

வற்புலம் varpulam, பெ.(n.) மேட்டு நிலம்; plateau, high ground. *"வற்புலஞ் சேருஞ் சிறுநுண் ணெறும்பின்"* (புறநா. 173).

[வன்புலம்→வற்புலம்]

வற்புறு-தல் varpuru-, 1 செ.கு.வி.(v.i.) 1. வலிமையடைதல்; to become strong. 2. திடப்படுதல்; to be courageous or firm. 3. ஆறுதல் அடைதல்; to console, to take heart. *"சொல்லமிர்தினால் வற்புற்றானே"* (சீவக.1122).

[வன்பு→வற்பு + உறு-.]

வற்புறுத்து-தல் varpuruttu-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. உறுதிப்படுத்திச் சொல்லுதல் (திவா.); to asseverate, affirm, assure. 2. வலிமைப் படுத்துதல் (வின்.); to strengthen, fortify.

[வற்புறு-→வற்புறுத்து-.]

வற்மம் *varmam,* பெ.(n.) வன்மம் பார்க்க; see *vanmam.*

வற்றக்காய்ச்சல் *varra-k-kāiccal,* பெ.(n.) மெலிந்தவன்; emaciated man.

[வற்றல் + காய்ச்சல்]

வற்றம் *varram,* பெ.(n.) 1. வற்றல், 1 பார்க்க; see *varral*[1]. 2. கடலின் நீர் வடிகை; ebb of tide. *'ஏற்றம் வற்றம்' (வின்.).* 3. வறட்சி (வின்.); dryness.

[வற்று → வற்றம்]

வற்றல்[1] *varral,* பெ.(n.) 1. வடிகை; subsiding. 2. வறளுகை; drying up. 3. உலர்ந்தது; that which is withered, shrunk or dried up. *"வற்றன் மரந்தளிர்த் தற்று" (குறள், 78).* 4. உலர வைத்த காய், இறைச்சி முதலியப் பொருள்; dried vegetables, flesh, etc.

[வற்று→வற்றல்]

வற்றல்[2] *varral,* பெ.(n.) 1. அடைக்காய்; dried vegetable. 2. மெலிதல்; becoming lean. 3. உலறல்; drying.

வற்றல் வகைபற்றிச் சா.அக. கூறுவது வருமாறு:- 1. நெல்லி வற்றல், 2. சுண்டை வற்றல், 3. கத்தரி வற்றல், 4. மணித்தக்காளி வற்றல்.

வற்றலோகம் *varralōgam,* பெ.(n.) உருக்கு; steel.

[வற்றல் + உலோகம்]

Skt.lōka> த. உலோகம்.

வற்றற்சூடு *varrar-šūdu,* பெ.(n.) நலம் வற்ற சுடுகின்ற சூடு; extreme heat, scorching charring.

[வற்றல் + சூடு]

வற்றனோய் *varra-nōy,* பெ.(n.) குருதி அளவிற் குன்றி உடலை மெலிவிக்கும் நோய்; anaemia. *"அத்திமயமாக்கும் வற்றனோயர்" (கடம்ப.பு. இலீலா. 97).*

[வற்றல் + நோய்]

வற்றாதமேனி *varrāda-mēni,* பெ.(n.) துருசு; copper sulphate.

வற்றாலை *varrālai,* பெ.(n.) ஓர் கிழங்கு; a kind of root.

வற்று[1]-தல் *varru-,* 5 செ.கு.வி.(v.i.) 1. சுவறுதல்; to grow dry; to dry up, as water; to evaporate. *"காமர் பூம்பொய்கை வற்ற" (சீவக. 2075).* 2. கடல் நீர் முதலியன வடிதல் (வின்.); to subside; to ebb, as the tide. 3. புண் முதலியன உலர்தல்; to become absorbed, as matter in an ulcer. 4. வாடுதல்; to wither, become dry and shrivelled, as the body. *"வற்றிய வோலை கலகலக்கும்" (நாலடி, 256).* 5. மெலிதல்; to become emaciated, as the body. *"வற்றிமற் றாற்றப் பசிப்பினும்" (நாலடி, 78).* 6. பயனற்றுப் போதல்; to become worthless or purposeless. *"அது நின்று வற்றுமெனின்" (நன். 375, மயிலை.).*

க.பத்து; ம.வரலி; து.வரு.

[வல் + து→வற்று-.]

வற்று[2] *varru-,* பெ.(n.) வற்றம், 2 (வின்.) பார்க்க; see *varram,* 2.

வற்று[3] *varru-,* பெ.(n.) கூடியது; that which is possible or able. *"நேருரைத்தாக வற்றே" (கம்பரா. மாரீச. 74).*

[வல் + து → வற்று.]

வற்று[4] *varru-*, இடை.(part.) ஒரு சாரியை (பிங்.); an expletive.

வற்றுப்பாடு *varru-p-pādu,* பெ.(n.) வற்றுகை; ebbing, decreasing, draining. *"அந்த வயலுக்கு நீர் வற்றுப் பாடில்லை" (நாஞ்.).*

[வற்று + படு →பாடு]

வற்றுபதம் *varru-padam,* பெ.(n.) சரியான பதம் தோன்றும் நிலை; a state of dryness, for hulling as of boiled paddy.

[வற்று + பதம்]

வற-த்தல் *vara-,* 4 செ.கு.வி.(v.i.) 1. காய்தல் (பிங்.); to dry up. 2. வறங்கூர், 1 பார்க்க; see *varaṅkūr-. "வானம் வறக்குமேல்" (குறள், 18).* 3. குறைந்து மெலிதல் (வின்.); to grow lean; to shrink.

க.பறு, பரி; ம.வரு; து.வரெ.

[வல் →வர் →வர →வற-.]

வறக்கடை *vara-k-kadai,* பெ.(n.) தீ முதலியவற்றால் உண்டாகும் வறட்சி; dryness due to heat, fire, etc., *"விடத்தை யிறையவன் பருகக் காட்டிய வறக்கடை தணப்ப" (காஞ்சிப்பு. பதி. 4).*

[வறம் + கடு →கடை]

ஒன்று இன்னொன்றை முட்டும் முனை அதன் கடையாதலால், முட்டற் கருத்திற் கடைமைக் கருத்துத் தோன்றிற்று. பக்கம் நோக்கியதும் மேனோக்கியதும் எனக் கடை இருவகை. பக்கம் நோக்கியது முனை அல்லது கடை; மேனோக்கியது உச்சி. தலை என்பது இவ்விரண்டிற்கும் பொது (மு.தா.பக்.100).

வறக்கணம் *vara-k-kanam,* பெ.(n.) வரட்கணம் பார்க்க; see *varat-kanam.*

வறக்கனி *vara-k-kani,* பெ.(n.) பசளை; spinach-*Spinach oleracea.*

வறக்காலன் *vara-k-kālan,* பெ.(n.) தன் குடும்பத்திற்கு போகூழ் ஏற்படும் வகையில் வந்தவன் (வின்.); one who brings adversity to his family.

[வறம் + காலன். காலன் = காலமறிந்து உயிர்களைக் கவர்வோன்]

வறக்காலி *vara-k-kāli,* பெ.(n.) தன் குடும்பத்திற்குத் தீங்கு உண்டாக வந்தவள் (வின்.); one who brings adversity to her family.

வறக்கு-தல் *varakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) வறங்கூர்-தல் பார்க்க; see *varaṅkūr-. "வானம் வறக்குமேல்" (குறள், 18).*

[வற →வறக்கு-.]

ஒ.நோ. இல →இலக்கு.

கல →கலக்கு.

வறகாலி *vara-kāli,* பெ.(n.) வெள்ளாடு; goat.

வறகுசா *varagušā,* பெ.(n.) காரபோகவரிசி; seeds psoralea corylifolia.

வறகுலி *varaguli,* பெ.(n.) வறகுசா பார்க்க; see *vara-gušā.*

வறங்கூர்-தல் *varaṅ-kūr-,* 2 செ.கு.வி. (v.i.) 1. மழை பெய்யாது போதல்; to fail, as the rain, failure of monsoon. *"மாரி வறங்கூரின் மன்னுயி ரில்லை" (மணிமே.7, 10).* 2. வறட்சி மிகுதல்; to become famine-stricken. *"நாடுவறங்கூரினுமிவ் வோடுவறங் கூராது" (மணிமே. 14, 13). "கோள்நிலை திரிந்திடின்*

மாரிவறங் கூரும்" (மணிமே.7, 9). 3. வறுமை மிகுதல்; to become utter poverty.

[வறம் + கூர்–,]

வறசமம் *vara-šamam,* பெ.(n.) குடசப் பாலை; a tree - *Nerium antidysentricum.*



வறசுண்டி *vara-šundi,* பெ.(n.) செங் கருங்காலி; catechu or cutch tree-*Acacia catechusundra.*

வறட்கஞ்சா *varat-kañjā,* பெ.(n.) ஆரணிக் கஞ்சா; a variety of Kañjā.

இதைப் பிடிப்பவர் நலக்கேடுறுவர்.

வறட்கண்டி *varat-kandi,* பெ.(n.) ஆடு தின்னாப்பாளை; a bitter plant *Aristolochia bracteata.*

வறட்கணம்[1] *varat-kanam,* பெ.(n.) கணை நோய் வகை; a kind of wasting disease.

வறட்கணம்[2] *varat-kanam,* பெ.(n.) குழந்தைகளுக்கு உடம்பு வறண்டு, நிறம் மாறி, வயிறிரைந்து, இருமல் ஏற்படுகின்ற கணைச்சூடு; a disease among children, caused by congenital heat and market, by dryness of the body, varying complexion, cough, gurgling in the abdomen etc.

[வறள் + கணம். கணம் = குழந்தை நோய் வகை.]

வறட்கணரோகம் *varat-kana-rōgam,* பெ.(n.) வறட்கணம் பார்க்க; see *varat-kanam.*

[வறட்கணம் + ரோகம்]

Skt. rōga > த. ரோகம்.

வறட்காசம் *varat-kāšam,* பெ.(n.) வறட்சியினால் ஏற்படும் ஈளை நோய் வகையில் ஒன்று; a kind of consumption or asthma due to dryness.

[வறள் + காசம். காசம் = நுரையீரலைத் தாக்கி உடலை இளைக்கச் செய்யும் ஈளை நோய்.]

Skt. kāša > த. காசம்.

வறட்காமாலை *varat-kāmālai,* பெ.(n.) 1. உடம்பு, சிறுநீர் மஞ்சள் நிறமாகி, கை, கால் வறட்சி காணுகின்ற ஒரு வகைக் காமாலை நோய்; a variety of jaundice marked by dry swollen body with other symptoms of jaundice. 2. பித்தம் அதிகமாவதால் ஏற்படும் காமாலை வகை (சீவரட். 135); a kind of jaundice.

[வறள் + கமம்→காமம் + ஆலை = காமாலை. காமாலை = பித்தம், மிகுவதா லேற்படும் ஒருவகை நோய்.]

வறட்காய்ச்சல்[1] *varat-kāyccal,* பெ.(n.) கடுங் காய்ச்சல்; burning fever with thirst.

[வறள் + காய்→காய்ச்சல். காய்ச்சல் காய்ச்சல் நோய்.]

வறட்காய்ச்சல்[2] *varaṭ-kāyccal,* பெ.(n.) வறட்சியுண்டாக்கும் சுர நோய் வகை (வின்.); a kind of emaciating fever.

மறுவ. கடுங்காய்ச்சல்.

[வறள் + காய்ச்சல்]

வறட்காலம் *varaṭ-kālam,* பெ.(n.) 1. மழையில்லாக்காலம்; drought period. 2. வறட்சிக் காலம்; period of famine.

[வறள் + காலம்]

ஒருகா. வறண்ட காலம்→வறட்காலம்.

வறட்காற்று *varaṭ-kāṟṟu,* பெ.(n.) ஈரப் பசையற்ற காற்று; dry wind.

மறுவ. மேல்கால், மேல்காற்று, கோடைக் காற்று.

[வரள் →வறள் + காற்று]

வறட்கேடு *varaṭ-kēḍu,* பெ.(n.) மழையின்மை யாலுண்டாகுந் துன்பம்; distress due to failure of monsoon or from want of rain. *"வெள்ளக்கேடும் வறட்கேடு மின்றிக்கே" (திவ். திருப்பா. 3, வ்யா. பக். 56).*

[வறல்→வறள் + கேடு]

வறட்கோதம் *varaṭ-kōdam,* பெ.(n.) மரத்துப் போதல்; dry gangrene.

[வரள் + கோதம்]

வறட்சாவி *varaṭ-cāvi,* பெ.(n.) மழை யின்மையாலான பயிர்ச்சாவி; withered or blighted crop (புதுக்.கல்.323).

[வறள் + சாவி]

வறட்சி *varaṭci,* பெ.(n.) 1. நீர்ப்பசை யறுகை; drought, dryness. *நா வறட்சி (இ.வ.).* 2. உடலனல்; low temperature of the body. 3. உடலை மெலியச் செய்யும் நோய் (வின்.); a wasting disease. 4. சொறி (வின்.); eruption on the skin, enzema.

[வறள்→வறட்சி]

வறட்சிகரப்பான் *varaṭci-karappāṉ,* பெ.(n.) குழந்தைகளுக்கு உடம்பு முழுவதும் சொறி, சிரங்கு உண்டாகி வெடிக்கின்ற ஓர் கரப்பான் நோய்; a kind of disease with symptoms of enzeme among children.

[வறட்சி + கரப்பான். கரப்பான் = குழந்தைகட்குண்டாகும் சொறிபுண் வகை.]

வறட்சித்திமிரம் *varaṭci-t-timiram,* பெ.(n.) கண்ணோய் வகை (சீவரட். 264); a kind of eye disease.

[வறட்சி + திமிரம்]

வறட்சிமேகம் *varaṭci-mēgam,* பெ.(n.) சிறுநீரக நோய்; a kind of venereal urinary affection.

[வறட்சி + மேகம்]

Skt. mēga > த. மேகம்.

வறட்சியிருமல் *varaṭci-y-irumal,* பெ. (n.) வறட்டிருமல் பார்க்க; see *vara-ṭ-irumal.*

[வறட்சி + இருமு→இருமல்]

வறட்சிவாதக்கரப்பான் *varaṭci-vāda-k-karappāṉ,* பெ.(n.) இசிவுக்கரப்பான் வகை; a kind of dry exzema.

[வறட்சி + வாதம் + கரப்பான்]

Skt. vāda > த. வாதம்.

வறட்சிவாதம் *varatci-vādam,* பெ.(n.) உடம்பு கடுத்து சதை துடித்து, எலும்பு நொந்து நாடி விழுந்து காணும் ஓர் ஊதை நோய்; a kind of rheumatic disease marked by weak pulse, twitching of the muscles, pain in the bones, etc.

[வறட்சி + வாதம்]

Skt. vāda > த. வாதம்.

வறட்சுண்டி *varat-cundi,* பெ.(n.) 1. ஆடு தின்னாப் பாளை (மலை.); worm-killer. 2. சுண்டிவகை (வின்.); floating sensitive-plant.

[வறள் + சுண்டி]

வறட்சூலை *varat-cūlai,* பெ.(n.) குடலைச் சுருட்டிப் பிடிக்கும் நோய் வகை (இ.வ.); a disease causing shooting or stabing pain in the intestines.

[வறள் + சூலை]

வறட்சேதம் *varat-cēdam,* பெ.(n.) மழை யின்மையால் பயிர் விளையாமை; crops failure due to drought.

[வறள் + சேதம்]

வறட்சேம்பு *varat-cēmbu,* பெ.(n.) சேம்பு வகை (வின்.); a garden plant, a kind of india kales.

[வறள் + சேம்பு]

வறட்சை *varatcai,* பெ.(n.) வறட்சி பார்க்க; see *varatci.*

வறட்சொறி *varat-cori,* பெ.(n.) சொறி வகை (இராசவைத். 105); a kind of itch, enzema.

[வறள் + சொறி]

வறட்சோகை *varat-šōgai,* பெ.(n.) உடல் வறண்டுபோகச் செய்யுமோர் நோய்; anaemia, with swelling and dryness of the body.

[வறள் + சோகை]

வறட்டடை *varattadai,* பெ.(n.) இரும்புச் சட்டியில் சுடப்படும் ஒருவகை அடை; a kind of rice-cake or ragi-cake baked in iron pan.

[வறடு → வறட்டு + அடு → அடை. அடை = அப்பவகை.]

வறட்டடைப்பான் *varattadaippān,* பெ. (n.) மாட்டு நோய் வகை (பெ.மாட்); a cattle-disease.

[வறடு → வறட்டு + அடைப்பான். அடைப்பான் = கால்நடை நோய் வகை.]

வறட்டல் *varattal,* பெ.(n.) உலரச் செய்கை; drying, withering.

[வறடு → வறட்டு → வறட்டல்]

வறட்டவளை[1] *varatta-valai,* பெ.(n.) தவளை ஏற்படுத்தும் ஒலி; a frog's harsh noise or squawking.

[வறள் + தவளை]

வறட்டவளை[2] *varatta-valai,* பெ.(n.) நீர் நிலைகளில் வாழாமல் நிலப்பரப்பில் வாழும் தவளை; a frog which is lived in landpart.

[வறள் + தவளை]

வறட்டாடு *varattādu,* பெ.(n.) பால் கறவாத ஆடு (இ.வ.); dry or barren sheep.

மறுவ. மலட்டாடு.

[வறள் → வறட்டு + ஆடு]

ஒ.நோ. வறட்டை

வறட்டாமரை *varaṭṭāmarai*, பெ.(n.) பாறைப் பகுதிகளில் வளர்ந்த தாமரை; lotus growing in the crevices of rocks.

[வறள் + தாமரை]

வறட்டி *varaṭṭi*, பெ.(n.) அடைபோல் தட்டிக் காய வைத்த ஆப்பி; bratty, dried cow-dung cake.

தெ.வரட, வரடி; க.பறடி, ம.வரதி; து.வரடி.

[வறள்→வறட்டு→வறட்டி]

வறட்டிருமல் *varaṭṭirumal*, பெ.(n.) தொண்டையை வறளச் செய்யும் இருமல் வகை (சீவரட். 18); dry-cough.

[வறடு→வறட்டு + இருமல்]

வறட்டு–தல் *varaṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. வற்றச் செய்தல்; to cause to dry up, to wither. 2. காயச் செய்தல்; to parch, scorch. 3. வறுத்தல்; to fry, roast.

[வறள்→வறடு→வறட்டு–.]

வறட்டுச்சாணை *varaṭṭu-c-cāṇai*, பெ.(n.) ஒரு வகைச் சாணைக் கல்; grindstone of black sand and gum lac.

[வறடு + சாணை ¹]

வறட்டுச்சொறி *varaṭṭu-c-coṟi*, பெ.(n.) ஓர் வகைச் சொறி; a kind of itch

[வறட்டு + சொறி]

வறட்டுச்சோகை *varaṭṭu-c-cōgai*, பெ.(n.) சோகை நோய் வகை; (M.L.) bright's disease.

[வறள்→வறட்டு + சோகை]

வறட்டுப்பசு *varaṭṭu-p-pašu*, பெ.(n.) பால் கறவாத ஆமா (பசு); dry or barren cow. *"வறட்டுப் பசுக்க ளென்றுந் தீபற" (திருவுந்தி. 43).*

மறுவ. வறட்டை.

[வறள்→வறடு→வறட்டு + பசு]

Skt. pašu>த. பசு.



வறட்டுப்பாக்கு *varaṭṭu-p-pākku*, பெ.(n.) வெட்டி, அவித்துலர்த்திய முற்றாத பாக்கு; tender arecanut cut, boiled and dried.

[வறட்டு + பாக்கு ¹]

வறட்டுப்பிரசவம் *varaṭṭu-p-pirašavam*, பெ.(n.) மிகக் கடினமான பிள்ளைப்பேறு; dry labour.

[வறட்டு + பிரசவம்]

Skt. pra-sava>த. பிரசவம்.

வறட்டுப்புழுக்கை *varaṭṭu-p-puḻukkai*, பெ.(n.) தீய்ந்து வெளிப்படும் பிழுக்கை; over dried faeces.

[வறள்→வறட்டு + புழுக்கை]

வறட்டுமஞ்சள் *varaṭṭu-mañjaḷ*, பெ.(n.) வறளிமஞ்சள் பார்க்க (நாஞ்.); see *varaḷi-mañjaḷ*.

[வறட்டு + மஞ்சள்]

வறட்டை *varaṭṭai,* பெ.(n.) வறடு, 2 பார்க்க; see *varaḍu,* 2. *"கோல வறட்டை" (திருமந். 505).*

[வறள்→வறடு→வறட்டு→வறட்டை.]

வறட்பசிரி *varaṭ-paširi,* பெ.(n.) பசளை வகை (மூ.அ.); a species of purslane.

[வறள் + பசிரி]

வறட்பனி *varaṭ-paṉi,* பெ.(n.) ஈரமில்லாப் பனி; less moist fog.

[வறள் + பனி.]

வறட்பால் *varaṭ-pāl,* பெ.(n.) காய்ந்து கட்டியான பால்; milk boiled into a mass. *"மேதி...... கல்லறைப் பொழிந்த வறட்பால்" (கல்லா. 95, 22).*

[வறள் + பால்[1]]

வறட்புள்தோடம் *varaṭ-puḷ-tōḍam,* பெ.(n.) குழந்தை நோய் வகை (பாலவா. 69); a children's disease.

[வறள் + புள் + தோடம்[1]]

Skt. dōsa> த. தோடம்.

வறட்பூல் *varaṭ-pūl,* பெ.(n.) வறட்பூலா (வின்.) பார்க்க; see *varaṭ-pūlā.*

[வறள் + பூல்]

வறட்பூலா *varaṭ-pūlā,* பெ.(n.) 1. வெள்ளைப் பூலா வகை; Indian snowberry. 2. புல்லாந்தி; a plant flueggia.

[வறள் + பூலா]

வறட்போக்கிரி *varaṭ-pōkkiri,* பெ.(n.) வெட்கங் கெட்டவன் (இ.வ.); impudent or impertinent rogue, immodest person.

[வறள் + போக்கிலி→போக்கிரி]

வறடன் *varaḍaṉ,* பெ.(n.) 1. உடல் மெலிந்தவன்; lean man. 2. வலுவிலி; impotent man.

தெ.வரடு; க.பரட; ம. வரடெ.

[வறள்→வறடு → வறடன்]

ஒருகா. வறட்டன்→ வறடன்.

ஆற்றலற்றவன். உடலால் மெலிந்தும் மனவலிமையற்றும் இருப்பவன்.

வறடி *varaḍi,* பெ.(n.) 1. உடல் மெலிந்தவள்; lean woman. 2. மலடி; barren or infertile woman.

[வறடன் (ஆ.பா.)→வறடி (பெ.பா.)]

வறடு *varaḍu,* பெ.(n.) 1. வறட்சி; dryness, meagreness. 2. கன்றீனா ஆமா முதலியன; barren or infertile animal, as cow etc. *"வறட்டைக் குனிந்து குளகிட்டும் பாலைக்கறந்து" (திருமந். 505).*

க. பறடு.

[வறள் → வறடு]

வறண்டல் *varaṇḍal,* பெ.(n.) உலர்த்துகை; hot and dry or wither.

வறண்டி *varaṇḍi,* பெ.(n.) 1. குப்பை வாருங் கருவி; rake, harrow. 2. வழிக்குங் கருவி; a kind of spatula.

[பறண்டு→வறண்டு→வறண்டி.]



வறண்டு-தல் *varaṇḍu-*,5 செ.குன்றாவி. (v.t.) 1. தெள்ளுதல் (பிங்.); to sift by means of winnowing fan, to winnow by tapping the fan. 2. பிறாண்டுதல் (வின்.); to scratch, as with finger-nails, claws, or spikes. 3. திருடுதல்; to rob, steal.

தெ.பருகு; க.பர்கட; ம.வரண்டுக.

[பறண்டு→வறண்டு-.]

வறண்முள்ளி *varaṇ-muḷḷi*,பெ.(n.) செம்முள்ளி; a thorny plant.

[வறள் + முள்ளி]



வறதாரு[1] *varadāru*,பெ.(n.) முள்ளிக்கீரை; thorny spinach - *Amaranthus spinosis* (சா.அக.).

வறதாரு[2] *varadāru*,பெ.(n.) முள்ளி (மலை.); Indian nightshade. 2. முள்ளி[1], 2 பார்க்க; see *muḷḷi*.

வறந்தலை *varandalai*,பெ.(n.) வறுமை; poverty, indigence. *"வறந்தலை யுலகத் தறம்பாடு சிறக்க"* (மணிமே.10-9).

வறப்பு *varappu*,பெ.(n.) குறைவு; deficiency, shortage, a lack.

வறப்பீகம் *varappīgam*,பெ.(n.) 1. மிளகாய் வகையுளொன்று; a species of chilly. 2. காய்ந்த மிளகு; dry pepper.

வறப்போக்கி *vara-p-pōkki*,பெ.(n.) இவறன்; stingy person, miser.

[வறள் + போக்கு→போக்கி]

ஒருகா. ஈயாயத்தன்

வறம் *varam*,பெ.(n.) 1. வற்றுகை; drying up, withering. *"நாடு வறங் கூரினுமிவ் வோடு வறங்கூராது"* (மணிமே.14, 13), *"பெருவறங் கூர்ந்த கானம்"* (பெரும்பாண். 23). 2. நீரில்லாமை; drought. *"கயத்திட்ட வித்து வறத்திற் சாவாது தழைக்கும்"* (புறநா. 137). 3. கோடைக்காலம்; summer or hot season. *"வறந்தெற மாற்றிய வானம்"* (கலித். 146). 4. பஞ்சம்; famine. 5. வறுமை; poverty, barrenness. *"மாரி வறங்கூர்ந் தனைய துடைத்து"* (குறள், 1010). 6. வறண்ட நிலம்; parched land, dry soil. *"வறனுழு நாஞ்சில்"* (கலித். 8.).

தெ.வரது; க.பர, வரே, வர, வரடு; ம. வரடி; து.வரடெ.

[வரம்→வறம்.]

வறமுள்ளி[1] *vara-muḷḷi*, பெ.(n.) வறண் முள்ளி பார்க்க; see *varaṇ-muḷḷi*.

[வறம் + முள்ளி]

வறமுள்ளி[2] *vara-muḷḷi*,பெ.(n.) செம்முள்ளி (வின்.); a thorny plant.

[வறம் + முள்ளி]

வறல் *varal*,பெ.(n.) 1. உலர்கை; drying up. *"வறற்குழற் சூட்டின்"* (சிறுபாண். 163). 2. வறட்சியான நிலம்; dry soil ground. *"கரிவறல் வாய்புகுவ"* (கலித். 13). 3. சுள்ளி;

dried twig. "வெண்கிடை யென்றூழ்வாடு வறல் போல" (புறநா. 75). 4. நீரில்லாமை; drought. "அருவியற்ற பெருவறற் காலையும்" (பதிற்றுப். 43. 14). 5. வறுக்கை (பதார்த்த. 1369); frying, roast. 6. வற்றல் 4 (வின்.) பார்க்க; see *varral*.

Ma. varam, varavu, varatu; **Te.** varapu, varatu; **Tu.** barantuni.

[வரல்→வறல்.]

வறலாரை *varal-ārai,* பெ.(n.) வறளாரை (சங்.அக.) பார்க்க; see *varal-ārai.*

[வறல் + ஆரை. ஆரை = புன்செய் நிலத்தில் முளைக்கும் கீரை.]

வறவறப்பு *vara-varappu,* பெ.(n.) பனித் திவலைப்போல் தோலில் ஏற்படும் மாற்றம்; state of skin in dew season.

[வறவற→வறவறப்பு.]

வறவறெனல் *vara-varenal,* பெ.(n.) உலர்ந்து கடினமாதற்குறிப்பு; onom expr. of becoming dry and hard. "பூசிய மருந்துப் பற்று வறவறென்றிருக்கிறது". "எண்ணெய் தேய்க்காமல் தோல் வறவறவென்றிருக்கிறது" (பே.வ.).

[வறவற + எனல்.]

வறவாரை *vara-vārai,* பெ.(n.) வறளாரை (வின்.) பார்க்க; see *varal-ārai.*

[வறல் + ஆரை ¹]

வறவு *varavu,* பெ.(n.) கஞ்சி (சங்.அக.); gruel.

வறவொட்டி *vara-v-otti,* பெ.(n.) பூடுவகை (வின்.); a kind of pot-herb.

[வறல் + ஒட்டு → ஒட்டி]

வறவோட்டுச்சட்டி *vara-v-ōttu-c-catti,* பெ.(n.) வரையோடு, 1 பார்க்க; see *varai-y-ōdu.*

[வறு→வற + ஓடு→ஓட்டு + சட்டி.]

வறள்¹(ளு)-தல் *varal-,* 16 செ.கு.வி.(v.i.) 1. வற்றுதல் (பிங்.); to dry up, to become dry. 2. உடம்பு மெலிதல் (வின்.); to become slim, lean or emaciated.

[வறல்→வறள்→வறளு.]

வறள்² *varal,* பெ.(n.) 1. வறல் 1, 2 பார்க்க; see *varal, 1, 2.* "வாவியடங்கலும் வறளாக" (சேதுபு. தேவி. 62). 2. வெறுமையாகை; emptiness, vacuum. "வற்றிய வேலையென்ன விலங்கையூர் வறளிற்றாக" (கம்பரா. தேரேறு. 2). 3. மணற்பாங்கு; sandy soil. "வறளடும்பின் மலர்மலைந்தும்" (பட்டினப்.64).

[வரல்→வறல்→வறள் = வறளுகை; ஒன்று மில்லாமற் போகை.]

வறள்மாந்தம் *varal-māndam,* பெ.(n.) குழந்தைகளுக்கு, முன்னுண்டது அறாமையா னேற்படும் ஓர் நோய்; a disease caused by indigestion among children.

[வறள் + மந்தம்→மாந்தம்]

வறள்முள்ளி *varal-mulli,* பெ.(n.) செம்முள்ளி; a thorny plant.

[வறள் + முள்ளி]

வறள்வலிப்பு *varal-valippu,* பெ.(n.) வயிற்று வலி வகை; colic.

[வறள் + வலிப்பு]

வறள்வாயு *varal-vāyu,* பெ.(n.) வயிற்றி லுண்டாகும் ஊதை நோய் வகை; a disease of the stomach due to wind mostly in indestinal region.

*[வறள் + **Skt.** வாயு]*

Skt. Vāyu > த. வாயு.

வறள்விதை *varaḷ-vidai,* பெ.(n.) ஊறவையாது, தெளிக்க வைக்கப்பட்ட காய்ந்த விதை; dried seed sown without being soaked in water.

மறுவ. வற(ட்டு)விதை.

மானாவாரி அல்லது புன்செய் நிலங்களில் விதைப்பதற்கான காயவைத்த விதை நெல், சோளம், கம்பு, துவரை, குதிரைவாலி போன்ற தவசங்களை குறித்ததென்க.

[வறள் + விதை]

வறளாங்குளம் *varaḷāṅ-guḷam,* பெ.(n.) நீர் வற்றின குளம்; dried tank.

வறளாரை *varaḷārai,* பெ.(n.) காய்ந்த நிலத்தில் உண்டாகும் செடிவகை (வின்.); a plant growing on dry soils, used for fodder.

[வறள் + ஆரை]

வறளி *varaḷi,* பெ.(n.) 1. உலர்ந்தது; anything dried or without moisture. *"வறளி னழல் வசமருவார்" (சிவதரு. சுவர்க்க நரக.54).* 2. வறட்டி பார்க்க; see *varaṭṭi.*

[வறள்→வறளி.]

வறளித்தனம் *varaḷi-t-tanam,* பெ.(n.) ஏழைமை; poverty, pecunary.

மறுவ. வறுமை

[வெறு→வறு→வறி→வறள். வறளி + தனம் = வெறுமை. "தனம்" = சொல்லாக்க ஈறு.]

வறளிமஞ்சள் *varaḷi-mañjaḷ,* பெ.(n.) மஞ்சள் வகை; a kind of saffron.

[வறளி + மஞ்சள். விரலிமஞ்சள் → வறளிமஞ்சள்.]

வறற்காலை *varaṟ-kālai,* பெ.(n.) நீரில்லாத காலம்; drought season. *"அருவியற்ற பெருவறற் காலையும்" (பதிற்றுப். 43, 14).*

[வறள் + கால்→காலை]

வறன் *varaṉ,* பெ.(n.) வறம் பார்க்க; see *varam.* *"வறனுண் டாயினு மறஞ்சா லியரோ" (ஐங்குறு, 312), "வறனோ டுலகின் மழைவளந் தரூஉம்".*

[வறம்→வறன்]

வறன்மூலம் *varaṉ-mūlam,* பெ.(n.) மலம் தீய்ந்து வெளிவரும் ஓர் மூலம்; a variety of visible piles, marked by very hard stools.

[வறம்→வறன் + மூலம்]

வறனுழ-த்தல் *varaṉ-uḻa-,* 4 செ.கு.வி. (v.i.) 1. நீரின்றி வருந்துதல்; to suffer by drought; to wither due to deficient rain, as crops. *"வறனுழக்கும் பைங்கூழ்க்கு" (இனி. நாற். 16).* 2. வறுமையுறுதல்; to be poverty stricken.

[வறம்→வறன்+உழ-. உழ-த்தல் = வருந்துதல்.]

வறிஞன் *variñaṉ,* பெ.(n.) நல்குரவாளன்; வறியவன்; poor man, destitute or poverty sticken person. *"வறிஞராய்ச் சென்றிரப்பர்" (நாலடி, 1).*

[வறு→வறி→வறியன்→வறிஞன்]

ஏதுமற்ற ஏதிலி; வெறுமையாளன்.

வறிது *varidu,* பெ.(n.) 1. சிறிது (தொல். சொல். 336); that which is little, small or insignificant. *"வறிது சிறிதாகும்" (தொல். 819).* 2. பயனின்மை; worthlessness; purposelessness. 3. அறியாமை (பிங்.); ignorance. 4. குறைவு (பிங்.); defect,

deficiency. 5. வறுமை; poverty, indigence, destitution. *“எம்பிரா னிரங்கி வறிது நீத்தனன்” (உபதேசகா. சிவபுண். 316).* 6. உள்ளீடற்று வெறுவிதாகை; emptiness, hollowness, vacuum. *“வறிதாகின்றென் மடங்கெழு நெஞ்சே” (ஐங்குறு.17).* 7. இயலாமை (பிங்.); impossibility, inability.

க.பறிது, பறெ; ம.வரு; து.பரெ.

[வெள்→வெறு→வறு→வறிது (மு.தா.153).]

வறியன் *variyan,* பெ.(n.) வறிஞன் (சூடா.) பார்க்க; see *variñan.*

[வெறு→வறி→வறியன்.]

வறியான் *variyān,* பெ.(n.) 1. வறிஞன்; destitute person. *“வறியார்க் கொன் றீவதே யீகை” (குறள், 221).* 2. வறியோன் 2 பார்க்க; see *variyōn* .

[வறியன்→வறியான்.]

வறியோன் *variyōn,* பெ.(n.) 1. வறிஞன் பார்க்க; see *variñan.* 2. அறிவிலான்; man devoid of sense, idiot, muff, fool, stupid. *“வறியோ னொருவன்” (சிலப். 15, 77).*

[வறியன்→வறியான்→வறியோன்.]

வறு[1]–த்தல் *varu-,*4 செ.குன்றாவி.(v.t.) 1. பொரியச் செய்தல்; to dry, grill, fry, parch, toast. *“வெயில் வறுத்த வெம்பரன்மேல்” (திவ். இயற். பெரிய. ம. 50).* 2. தொந்தரவு படுத்துதல்; to annoy, distress, disturb. *"இரவு முழுவதும் அவனுக்குள் சுரம் வறுத்தெடுத்து விட்டது" (பே.வ.).*

Te. pandu; **Ma.** vara, varavu, varal, varukka, varattuka, varaluga; **To.** parf (part); lod. bare, bara; **Pa.** vedp; **Kui.** vaja; **Kuwi.** vwajali.

[வரல்→வறள்→வற→வறு–.]

வறு[2]–தல் *varu-,*4 செ.கு.வி.(v.i.) வறுபடுதல் (வின்.); to be fried, parched or grilled, roasted.

வறுகடலை *varu-kadalai,* பெ.(n.) வறுத்த கடலை; fried pulse or gram.

மறுவ. பொரிகடலை.

[வறு[1] + கடலை]

வறுகறி *varu-kari,* பெ.(n.) வறுத்தகறி (நாமதீப. 403); fried curry, roasted meat.

மறுவ. வறுவல், உப்புக்கறி.

[வறு + கறி]

வறுகிப்பிடி–த்தல் *varugi-p-pidi-,*4 செ. குன்றாவி. (v.t.) இறுகப் பற்றுதல் (வின்.); to clasp, to hold fast and firm.

[வறுகு + பிடி–,]

வறுகு–தல் *varugu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. இறுகப் பிடித்தல்; to cling to claspfirmly. 2. பிறாண்டுதல்; to scratch, paw.

தெ.பறுகு.

[வறுகி → வறுகு–.]

வறுகுமுள் *varugu-mul,* பெ.(n.) மரத்தில் கோடு கிழிக்கும் தச்சுக் கருவி வகை; carpenter's instrument for nailing lines in wood.

[வரைவு→வருவு→வருகு→வறுகு + முள்]

வறுங்காலம் *varuṅ-kālam,* பெ.(n.) 1. வறுமைக் காலம்; period of destitution. 2. நீரில்லாக் காலம்; drought season. 3. வறட்சிக்காலம் (வின்.); times of scarcity or famine, drought season.

[வறுமை + காலம்]

வறுங்கோட்டி *varuṅ-kōṭṭi,* பெ.(n.) அறிவிலார் கூட்டம்; ignorant assembly, foolish crowd. *"புல்லா வெழுத்தாற் பொருளில் வறுங்கோட்டி" (நாலடி, 155).*

[வெறு→வறு→வறுமை + கோட்டி. கோள்→ கோட்டி.]

வறுங்கோடை *varuṅ-kōḍai,* பெ.(n.) 1. வறுங் காலம் பார்க்க; see *varuṅ-kālam.* 2. முதுவேனிற்பருவம் – கடுங்கோடை (வின்.); very dry season, severe or acut summer.

[வறு→வறுமை + கோடை. கொடு→கோடு →→காடை.]

வறுத்தவுப்பு *varutta-vuppu,* பெ.(n.) மருந்து செய்ய பயன்படுத்தும்படி, வறுக்கும் உப்பு; fried salt used when on diet, fried salt used to manufacture medicine.

[வறுத்த + உப்பு. உ→உப்பு.]

வறுத்திடி–த்தல் *varuttiḍi-,* 4 செ.கு.வி. (v.i.) உணவிற்காகச் சில தவசங்களை, வறுத்து இடித்தல்; to fry and pound. *கருஞ்சோளம், கம்பு, ஊற வைத்த விதை நெல் போன்றவற்றை சிற்றூர்களில் வாழுநர் வறுத்து இடித்து உணவாகப் பயன்படுத்துவர். வறுத்திடித்துச் செய்யும் திண்பண்டத்தின் மணமுஞ் சுவையும் சொல்லி மாளாது. துவரப் பசித்துண்டார் ஓராங் கெய்துவர்.*

[வறுத்து + இடி–. இல்→இள்→இடு→இடி.]

வறுத்துப்பேரி *varuttu-p-pēri,* பெ.(n.) கறிவகை; a kind of curry or side dish.

[வறு + உப்பேரி. உப்பு + கறி = உப்புக்கறி →உப்பேறி. உப்பேறி = உப்புடன் உசிலையிட்டுப் பொரித்த கிழங்கு அல்லது பழ உணங்கல் கறி.]

வறுத்துறுப்பு *varutturuppu,* பெ.(n.) வருத்துறுப்பு (யாழ்.அக.) பார்க்க; see *varutturuppu.*

வறுநகை *varu-nagai,* பெ.(n.) புன்சிரிப்பு (வின்.); smile.

மறுவ. இளமுறுவல்

[வள்→வர்→வரு→வறு+ நகு→நகை.]

வறுநிலம் *varu-nilam,* பெ.(n.) பாழ்நிலம்; waste land. *"கடிமலரி னன்னறு வாசம்..... வறுநிலத்து வாளாங் குகுத்தது போல்" (திவ். இயற். பெரிய. 6, 89).*

[வெறு→வறு + நிலம்]

வறுநுகர்வு *varu-nugarvu,* பெ.(n.) நுகர்ச்சி யின்மை; inexperience. *"பிராரத்த வறுநுகர் வுண்டாம்" (வேதா. சூ. 159).*

[வெறு→வறு + நுகர்→நுகர்வு]

வறுபடு–தல் *varu-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) தீயாற் பொரிதல்; to be fried, parched or grilled.

[வெறு→வறு + படு–.]

வறுபயறு *varu-payaru,* பெ.(n.) வறுத்தபயறு வகைகள்; chow-chow of various fried pulses.

[வறு + பயறு]

வறும்புனம் *varum-punam,* பெ.(n.) 1. அறுவடையானபின் வெற்றெனக் கிடக்கும் புன்செய் நிலம்; dry land lying fallow after harvest. *"வறும்புனங் கண்டு வருந்தல்" (திருக்கோ. 146).* 2. பாலைநிலம் (சங்.அக.); desert.

[வெறுமை→வறுமை + புலம்→புனம்]

வறுமை varumai, பெ.(n.) 1. நல்குரவு ஏழைமை; poverty, indigence. "நல்லார்கட் பட்ட வறுமையின்" (குறள், 408). 2. துன்பம் (சூடா.); difficulty, trouble, agony. 3. வெறுமை (வின்.); emptiness, vacuum. 4. திக்கற்ற தனிமை; helpless, loneliness. "பாரிற் செல்கின்ற வறுமையை நோக்கி" (கம்பரா. முதற்போர். 216).

மறுவ. நல்குரவு.

[வெறு→வறு→வறுமை = பொருளில்லா வெறுமை, பொருளின்மை.]

வறுமொழி varu-moli, பெ.(n.) பயனிற் சொல்; useless or idle word. "வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு" (சிலப்.16, 63).

மறுவ. சப்பைவாக்கு, வெறும்பேச்சு.

[வறுமை + மொழி. வறுமை = பொருளின்மை.]

வறுவல் varuval, பெ.(n.) எண்ணெய் அல்லது நெய்யிற் பொரித்த கறி (நாமதீப. 403); curry fried in ghee or oil.

[வறு→வறுவல்.]

வறுவிது varuvidu, பெ.(n.) குறையாக இருப்பது; that which is deficient or absent. "அடக்கமு நாணொடு வறுவிதாக" (கலித். 138, 4).

[வறு + விது]

வறுவிதை varu-vidai, பெ.(n.) வறுத்த வித்து; fried seed. "வறுவிதை நுகர்ச்சிக் கன்றியே முளைக்கு மற்றதுதான் காரணமன்று" (வேதா.சூ.163).

[வறு[1] + விதை]

வறுவியோர் varuviyōr, பெ.(n.) வறியர்; the poor. "வந்த நாவலர் சுற்றத்தார் வறுவி யோர் வாழ" (திருவாலவா. 55, 33).

[வறியர்→வறுவியர்→வறுவியோர்]

வறை varai, பெ.(n.) பொரிக்கறி; fried curry or meat. "நெய் கனிந்து வறையார்ப்ப" (மதுரைக். 756).

[வறு→வறை]

வறைக்காய்ச்சல் varai-k-kāyccal, பெ.(n.) வறட்காய்ச்சல் பார்க்க; see varaṭ-kāyccal.

[வறன்→வறை + காய்ச்சல்]

உடலனல்; அளவிற்கதிகமான வெப்பத்தினா லேற்படும், உடற்காய்வு.

வறைநாற்றம் varai-nāṟṟam, பெ.(n.) தீய நாற்றம்; bad odour, stink. "வறை நாற்றத்தைக் காட்டிப் பிடிக்குமா போல" (ஈடு, 2, 8, 4).

மறுவ. முடைநாற்றம்.

[வறை + நாற்றம்]

வறைமாதளர்ச்சி varaimā-talarcci, பெ.(n.) நல்ல மாதுளை; a kind of pomegranate.

வறைமுறுகல் varai-murugal, பெ.(n.) 1. கருகிப் போனது (ஈடு. 6, 5, 10, ஜீ); dried excessively. 2. பயனற்றது; useless thing. "அது வறைமுறுகலாகையிறே பின்பு தவிர்ந்தது" (ஈடு.6, 5, 10ஜீ.). 3. கரடு முரடானது; that which is difficult to understand, rugged, rough thing. "ஸ்ரீகீதையோபாதி வறைமுறுகலாய்ப் போமிறே" (ஈடு. 7, 9, 2).

[வறு→வறை + முறுகல்]

வறையல் *varaiyal,* பெ.(n.) 1. வறை (பிங்.) பார்க்க; see *varai.* *"மூரல்பால் வறையல்" (திருவிளை.குண்டோ. 14).* 2. பிண்ணாக்கு (வின்.); cake of crushed or pressed oil seed.

[வறு→வறை→வறையல்]

வறையாடு *varai-y-āḍu,* பெ.(n.) 1. குறும்பாடு, மலையாடு; mountain sheep. 2. வரையாடு பார்க்க; see *varai-y-āḍu.*

மறுவ. வற்காலி.

[வரை→வறை + ஆடு.]

காட்டு மூலிகைகளை உண்ணும். இவைகளின் இறைச்சி, நோய்களைப் போக்கும். மாந்தர்தம் ஆற்றலை அதிகரிக்கச் செய்யுந் தன்மைத்து.

மலைச்சாரலில், இயற்கையாக முளைத்துள்ள மூலிகைகளை உண்டு வளர்வதால், வறையாட்டின் இறைச்சி, மருத்துவக்குணம் மிக்கதாய்த் திகழ்கின்றதெனலாம்.



வறையோடு *varai-y-ōḍu,* பெ.(n.) 1. பொரிக்குஞ் சட்டியோடு; earth-pan used for parching. 2. பயனற்ற(வள்) (வன்) (து); good for nothing person or thing.

[வறு→வறை + ஓடு]

வறோதிநங்கை *varōdi-naṅgai,* பெ.(n.) மாதர்தம் நால்வகைப் பிரிவினுள் ஒரு வகையினள்; one of the four classes of woman.

[வறோதி + நங்கை]

வன்கட்பிணாக்கள் *vaṉkaṭ-piṇākkaḷ,* பெ.(n.) பாலை நிலமகளிர் (திவா.); women of desert tracts.

[வன்கண் + பிணா→பிணாக்கள்]

வன்கண் *vaṉ-kaṇ,* பெ.(n.) 1. மனக் கொடுமை; cruelty, hardness of heart, iron-heartedness, pitilessness, torture. *"தாமுடைமை வைத்திழக்கும் வன்கணவர்" (குறள், 228).* 2. வீரத்தன்மை; bravery, fortitude, resoluteness, cool determination. *"வழிவந்த வன்கணதுவே படை" (குறள், 764).* 3. பகைமை (வின்.); enmity. *"உலைவிடத் தூறஞ்சா வன்கண்" (குறள், 762).* 4. பொறாமை (வின்.); jealousy, envy. 5. கொடும் பார்வை (வின்.); evil or cruel look.

மறுவ. உளவலிமை.

[வல்→வன் + கண்]

வன்கண்ணன் *vaṉkaṇṇaṉ,* பெ.(n.)1. கொடுமை யுள்ளவன்; heartless person. *"தார்விடலை வன்கண்ண னல்கான்" (பு.வெ.11, பெண்பாற். 7.).* 2. வீரமுள்ளவன்; man of fortitude, brave and resolute man.

மறுவ. அருளற்றவன்.

[வன்கண்→வன்கண்ணன்]

வன்கண்மை *vaṉkaṇmai,* பெ.(n.) 1. கொடுமை; hardship, stone-heartedness, cruelty. *"வன் கண்மை புரிந்தனமென் றொல்கிய சிந்தையராகி" (உபதேசகா. உருத்திராக். 3).*

2. வீரம்; bravery, valour, fortitude. *"வன்க ணாடவர்" (புறநா. 3.).*

[வன்கண்→வண்கண்மை]

வன்கணம் *van-kaṇam,* பெ.(n.) வல்லினம்; the group of hard consonants.

*[வன் + கணம். கள்→களம்→கணம். த. கணம் > **Skt.** gaṇa.]*

வன்கணாளன் *vaṉkaṇ-āḷaṉ,* பெ.(n.) வன் கண்ணன் பார்க்க; see *vaṉ-kaṇṇaṉ. "வன்கணாளனேன்" (பெருங். மகத. 9, 159).*

[வன்கண் + ஆள் + அன்]

வன்கணை *vaṉkaṇai,* பெ.(n.) மரவகை; a tree. *"இவ்வெல்லையில் நின்ற வன்கணை யென்னு மரமேயுற்று" (S.I.I. iii, 408).*

[வல் → வன் + கணை. கண் →கணை = திரண்டு பருத்த பகுதி, = திரண்ட மரம்.]

வன்கனத்தம் *vaṉkaṉattam,* பெ.(n.) தவசு முருங்கை (சங்.அக.); a kind of drum-stick-*Tranquebar gendarussa.*

[வன் + கனத்தம்]

வன்கனி *vaṉ-kaṉi,* பெ.(n.) செங்காய்; hard, unripefruit. *"வாயா வன்கனிக் குலமரு வோரே" (புறநா. 207).*

மறுவ. பழக்காய்.

[வன் + கனி. குல்→கல்→கன்→கன்னி→கனி = முதிர்ந்தது, பழுத்தது.]

வன்காய் *vaṉ-kāy,* பெ.(n.) 1. முற்றிய காய் (வின்.); hard, woody fruit. 2. கடுக்காய் (சங்.அக.); chebulic myrobalan.

[வல் வன் + காய்.]

நன்கு முற்றிய விதைக்குப் பயன்படும் காய்.

வன்காந்தம் *vaṉ-kāndam,* பெ.(n.) நிலைக் காந்தம்; hard magnetic.

[வன்மை + காந்தம்.]

வன்காரம்[1] *vaṉ-kāram,* பெ.(n.) வெண்காரம் (வின்.); borax.

[வன் + காரம்]

வன்காரம்[2] *vaṉ-kāram,* பெ.(n.) வலுக்கட்டாயம் (யாழ்.அக.); force, compulsion.

[வல் → வன் + காரம்]

வன்காற்று *vaṉ-kāṟṟu,* பெ.(n.) மேற்கினின்று வீசும் வெப்பமான காற்று; gust.

மறுவ. அனற்காற்று

[வல் →வன் + காற்று]

வலிமையாக வீசும் வெப்பக் காற்று.

வன்கிடை *vaṉ-kiḍai,* பெ.(n.) 1. நோயாற் படுக்கையில் நீண்டகாலம் கிடக்கை (சங்.அக.); laid down for a long time, being bed-ridden. 2. பதுங்கி இருத்தல் (இ.வ.); lying-in-wait.

[வன் + கிடை. கிடை = கிடக்கை.]

வன்கிழம் *vaṉ-kiḻam,* பெ.(n.) 1. வலு கிழமான –வன், வள்–து; etremely or kery old person or animal. 2. தொண்டு படு கிழம்; extreme old age. 3. இளந்தைப் பருவத்தில் உண்டாம் அறிவு முதிர்ச்சி (வின்.); extreme precocity.

[வன் + கீழ்→கிழம். கிழம் = முதுமை.]

வன்குருசு *vaṉ-kurušu,* பெ.(n.) கொடிய குறுக்கு (கிருத்.); the cruel cross.

[வன் + குருசு]

E. Cross > த. குருசு.

வன்கை *vaṉ-kai,* பெ.(n.) 1. வலியகை; strong, sturdy hand, as of a labourer. *"வன்கை வினைநர்" (பதிற்றுப். 62, 16).* 2. தோற்கருவி வகை; a kind of drum. *"மத்தளங் கரடிகை வன்கை" (பதினொ. திருவாலங். மூத்த. 1, 9).*

[வல்→வன்+ கை. குல்→குய்→கய்→கெய்→கை.]

வன்கைவாரம் *vaṉ-kaivāram,* பெ.(n.) கொடும் பழி (யாழ்.அக.); cruel crime.

[வன்கை + வாரம்]

வன்கொடியன் *vaṉ-koḍiyaṉ,* பெ.(n.) 1. மிக்க கண்டிப்புள்ளவன்; very strict and harsh man. 2. கொடியவன்; wicked and cruel man.

[வன் + கொடியன். கொடுமை→கொடியன்.]

வன்கொடுமை *vaṉ-koḍumai,* பெ.(n.) கொடுங்கோன்மைச் செயல்; tyranny.

[வன் + கொடுமை. கொடு→கொடுமை.]

வன்கொலை *vaṉ-kolai,* பெ.(n.) கடுங் கொலை (வின்.); cruel murder.

[வன் + கொலை. குல்→கொல்→கொலை.]

வன்சா¹ *vaṉ-šā,* பெ.(n.) வன்சாவு (வின்.) பார்க்க; see *vaṉ-šāvu.*

வன்சா² *vaṉ-šā,* பெ.(n.) வன்சாவி (வின்.) பார்க்க; see *vaṉ-šāvi.*

[வல்→வன் + சாவி→சா]

வன்சாவி *vaṉ-šāvi,* பெ.(n.) மழையின்மை யாலாவது, பூச்சி வெட்டாலாவாது உண்டாம் பயிர்க்கேடு; crop failure due to dought or pest-sticken reasons.

மறுவ. பதர்

[வன் + சாவி. சாவி = மணி பிடியாமற் பதராய்ப் போனது]

வன்சாவு *vaṉ-sāvu,* பெ.(n.) 1. கடுஞ்சாவு; cruel death. 2. காலமல்லா காலத்துண்டாம் சாக்காடு; premature or untimely death.

[வல்→வன் + சாவு]

வன்சிரம் *vaṉciram,* பெ.(n.) வஞ்சிரம் பார்க்க; see *vañjiram.*

[வல்சிரம்→வன்சிரம்.]

வன்சிரமுள்ளி *vaṉ-šira-muḷḷi,* பெ.(n.) தூண்டில் வகை (இ.வ.); a kind of fish-hook.

[வன் + சிரம் + முள்→முள்ளி]

வன்சிறை *vaṉ-šiṟai,* பெ.(n.) 1. கடுங் காவல்; strict-confinement, rigorous imprisonment. *"வன்சிறையி லவன் வைக்கில்" (திவ். திருவாய். 1, 4, 1).* 2. மதில் (திவா.); fortress. 3. கொடுமைக்கு உள்ளாக்கும் அடிமைத்தனம் (வின்.); cruel slavery.

[வல்→வன் + சிறை. இறு→சிறு→சிறை.]

வன்சுரம் *vaṉ-šuram,* பெ.(n.) கடுமையான சுரம்; severe fever.

[வன் + சுள்→சுர→சுரம்]

வன்செலல் *vaṉ-šelal,* பெ.(n.) விரைந்து செல்லுகை; rapid movement, forced march. *"வன்செல லத்திரி" (சீவக. 1773).*

[வன் + செலல்]

வன்சொல் *vaṉ-šol,* பெ.(n.) 1. கடுஞ்சொல்; rude or harsh, word, opp. to *iṉ-šol.* 2. அறிவில்லாதவனின் மொழி; barbarious tongue. *"வன்சொல் யவனர்" (சிலப். 28,*

141). "எவன்கொலோ வன்சொல் வழங்கு வது" (குறள், 99).

மறுவ. வன்மொழி

[வன் + சொல்]

பேராசிரியர், தமது தொல்காப்பியப் பொருளதிகார வுரையில், கண்ணோட்டமின்றிச் சொல்லும் சொல் (தொல்.பொருள்.273, பேரா.). வன்சொல் என்று, குறித்துள்ளார்.

வன்சொல்விலக்கு-தல் *van-šol-vilakku-,* 5 செ.கு.வி.(v.i.) 1. பேசுங்கால் கொடிய சொற்களை நீக்கிப் பேசுதல்; to abstain harsh words, while talking. 2. பிறருக்குத் தீமை பயக்கும் சொற்களைப் பேசாதிருத்தல்; to abstrain hurting words.

[வன்சொல் + விலக்கு-.]

தண்டியலங்காரப் பழையவுரைகாரர் வன்சொல் விலக்கு பற்றிக் கூறுவது :-

"வன்சொல் சொல்லி, விலக்குவது" (பழை.தண்டி.பொரு.12). முதற்கண் கொடிய சொற்களைக் கூறி, அது தீமை பயத்தலால், பின்பு கூறாதொழிதலே வன்சொல் விலக்குதலாகும்.

வன்துருக்கி *vanturukki,* பெ.(n.) கடுக்காய்; Indian or black myrobalana.

[வன் + துருக்கி]

வன்நெஞ்சம் *van-neñjam,* பெ.(n.) கல் போல் இறுகிய நெஞ்சம்; hard-heart.

[வல்→ வன் + நெஞ்சம்.]

வன்பகை *van-pagai,* பெ.(n.) கடுமையான பகை (வின்.); deep enmity, implacable hatred.

[வன் + பகை]

வன்பரணர் *van-paranar,* பெ.(n.) கழகக் காலப்புலவர்; an ancient sangampoet.

[வன் + பரணர்]

பரணர், நெடுங்கழுத்துப் பரணர் என்று இரு புலவர்கள் உள்ளமையால், 'வன்' என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டுள்ளது. கண்டீரக் கோப்பெருநள்ளி, வல்வில் ஓரி போன்றோரைக் குறித்துப் பாடியுள்ளார். புறநானூற்றில் 148, 149, 150, 152 மற்றும் 153 ஆகிய பாடல்களை இயற்றியுள்ளார். இவர் இயற்றியதாக நற்றிணையில் 374-ஆம் பாடலை கூறுவர்.

வன்பரணர் பாடிய புறநானூற்றிலுள்ள 149ஆம் பாடல் வருமாறு :-

"நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தனர் அதுநீ
புரவுக்கடன் பூண்ட வண்மை யானே"
(புறநா.149).

நள்ளியைப் பாடும்போது, "நீ வேண்டியவற்றை யெல்லாம் எனக் களித்துவிட்டதனால், இனி என்னுடைய நா, பிற அரசர்களைப் போற்றிப் பாடாது" (புறம்.148) என்கிறார். 'பெருஞ் செல்வம் நீ யளிக்கப் பெற்றனராதலால், எம்மவராகிய பாணர் மாலை மருதம் பண்ணியும், காலைச் செவ்வழி பண்ணியும் பாடும் முறையையும் மறந்தனர்' (புறம்.149, 153) என்கின்றார்.

நள்ளி தன்னை யாரென்று புலப்படுத்தாமலே, உணவும் அணிகலனும் அளித்துச் சென்ற சிறப்பை, இவர் கூறும் அழகு, தனிச் சிறப்புடையது (புறம்.150). வல்வில் ஓரியின் வில்லாண்மையை இவர் பாராட்டியிருப்பது, இராமன் மராமரம் ஏழினையும் ஓரம்பினால் துளைத்ததை நினைவூட்டுகிறது (புறம்.152). இவர் பாடிய வேறு செய்யுள் : புறம். 255.

பரணர் பாடியனவோ, இவர் பாடியனவோ என ஐயுறும்படி வேறுபாடுடைய செய்யுட்கள் புறம்.144, 145, நற்.374.

வன்பா-தல் *vaṉbā-*, 6 செ.கு.வி.(v.i.) கடினமாதல்; to become hard. *"வன்பாயிருப்பது பிறிதில்லை" (குறள், 1063, மணக்.).*

[வல்→வன்→ வன்பு + ஆ-. வல் = கடினத் தன்மை குறித்த முதனிலை.]

வன்பாட்டம் *vaṉ-pāṭṭam*, பெ.(n.) தீய்வு, கரிவு காலத்திலும் குறையாமல் அளக்க வேண்டிய குத்தகை நெல்; fixed rent in kind of paddy due under a lease-deed which does not provide for any relief or remission against unforeseen loss due to drought. *"பதினறு கலனே தூணியாக வன்பாட்டம் அளக்கவும்" (S.I.I.V.90).*

[வன் + பாட்டம்]

வன்பாடு *vaṉ-pāḍu*, பெ.(n.) 1. வலிய தன்மை; strength, hardness. 2. முருட்டுத் தன்மை; rudeness, effrontery. *"இரந்துதீர் வாமென்னும் வன்மையின் வன்பாட்ட தில்" (குறள், 1063).*

[வன் + பாடு]

வன்பாடு குறித்துப் பரிமேலழகர் வரையறுத்துள்ளது வருமாறு :-

"முருட்டுத்தன்மை; அஃதாவது ஓராது செய்து நிற்றல்" (குறள், 1063).

வன்பார் *vaṉ-pār*, பெ.(n.) இறுகிய பாறை நிலம் (குறள், 78, உரை); hard, rocky soil.

[வல்→வன் + பார்]

வன்பால் *vaṉ-pāl*, பெ.(n.) 1. வன்பார் பார்க்க; see *vaṉ-pār*. *"வன்பாற் றெள்ளறல்" (குறுந். 65).* 2. பாலை நிலம் (பிங்.); desert tract, barren and sterile ground. 3. குறிஞ்சி நிலம் (பிங்.); hilly tract. 4. மேடு (வின்.); rising ground.

மறுவ. வன்புலம்

[வன் + பால்]

வன்பிணியுறல் *vaṉ-piṇiyuṟal*, பெ.(n.) நச்சுத் தன்மை வாய்ந்த கடுமையான நோயில் அழுந்துகை; suffering from drastic or virulent disease.

[வன் + பிணியுறல்]

கொடிய பிணியால் பெருந்துயருழத்தல், வன்பிணியுறலாகும்.

வன்பிழை *vaṉ-piḻai*, பெ.(n.) கடுங்குற்றம் (வின்.); heinous crime.

[வன் + பிழை = மிகக்கொடிய குற்றம். புள் →பிள்→பிழ்→பிழை.]

மன்னிக்கவியலாத, மாபெருங் குற்றம் வன்பிழையாகும்.

வன்பு *vaṉbu*, பெ.(n.) 1. வலிமை; strength, firmness. *"த`டுத்தேன் வன்பால்" (ஞானவா. புசுண். 99).* 2. கடினத் தன்மை; hardness, as of heart. *"வன்பியர் முன்பாற் கண்டோம்" (அரிச். பு. சூழ்வி. 36).* 3. கருத்து (வின்.); thought, opinion. 4. தோல் முதலியவற்றின் வார் (சங்.அக.); strap, as of leather.

மறுவ. வள்பு.

க. பல்பு (balpu)

[வல்→வன்→வன்பு]

ஒ.நோ. அல் + பு → அன்பு.

வன்புல் *van-pul*, பெ.(n.) புறக்காழுள்ள மரம், செடி முதலியன (திவா.); endogenous plant. *"புறக்கா ழனவே புல்லென மொழிப" (தொல்.1585).*

[வன் + புல்]

புல்லுதல் = துளைத்தல். வழக்கிறந்த இவ் வினைச் சொல்லினின்றே, உட்டுளைத் தன்மையினை, இயற்கையிலேயே வாய்க்கப்பெற்ற 'புல்' என்னுஞ்சொல் தோன்றியது.

ஈங்கு, வன்புல்லென்பது, கடியமேற் பகுதி யினையுடையதும், மூங்கிற் குடும்பத்தைச் சேர்ந்ததுமான, பனை தென்னை முதலான உட்டுளையுள்ள நிலைத்திணை வகையைக் குறிப்பதாகும். ஊனுண்ணா விலங்குணவான தாளுள்ள, நிலைத்திணை வகையைச் சார்ந்ததும், உட்டுளையினத்தைச் சேர்ந்ததுமான, தென்னை, பனை போன்றவையே வன்புல்லென்றறிக.

வன்புலம் *van-pulam*, பெ.(n.) 1. மண் திணிந்த இறுக்கமான நிலம்; hard soil. *"வன்புலந் தழீஇ" (பதிற்றுப்.75, 8).* 2. குறிஞ்சி நிலம்; hilly tract. *"வன்புலக்கேளிர்க்கு" (புறநா. 42).* 3. முல்லை நிலம்; jungle tract. *"வன்புல மிறந்த பின்றை" (பெரும்பாண். 260).*

[வல்→வன் + புலம்]

புல்→புலம் = நிலம், தோண்டப்பட்ட வயல், இடம் (சு.வி.36-37). புள்→புல் = துளை. புல்லுதல் = தோண்டுதல். இறுகிய மண் செறிந்த இடம், அல்லது நிலம், வன்புலம் எனப்படும்.

புறநானூற்றுக்கு உரைவரைந்த பழைய வுரைகாரர், "குறிஞ்சியும் முல்லையும் வன்புலம்" என்று குறித்துள்ளது காண்க (பழை.புறம்.2).

வன்புற்று *van-purru*, பெ.(n.) அரைநெறி வீங்கி, அரையாப்புக் கட்டியைபோற் காணப்படும் ஓர் வகைப் பிளவை; a hard tumour usually proceeding from the induration of a gland often terminating in a cancer - *scirrhous.*

[வன் + புற்று]

புல்→புற்று (வே.க.107).

வன்புற்று = உட்டுளையுள்ள புண்.

(ஒ.நோ.) சுல்→சுற்று.

வன்புறு-த்தல் *van-puru-*, 4 செ.குன்றாவி. (v.t.) தலைவியைத் தலைவன் ஆற்றுவித்தல்; to assure, comfort, as the lover to his beloved. *"கிழவன், வன்புறுத் தல்லது சேற லில்லை" (தொல். பொருள். 184).*

[வன்பு + உறு-, உல்→உறு-.]

வன்புறை *vanpurai*, பெ.(n.) 1. தலைவன், தலைவியை ஆற்றி வற்புறுத்துகை; assurance, comfort, given by a lover to his beloved. *"வன்புறை குறித்தல்" (தொல். பொருள். 185).* 2. தலைவன் பிரிவின் கண், வாயில்கள் தலைவியை ஆற்றுவித்தலைக் கூறும் அகத்துறை (இறை. 53); theme in which the heroine is comforted by her companions and friends, during her separation from the hero. 3. வற்புறுத்திச் சொல்பவன்; assures, comforter. *"வன்புறையாகிய வயந்தகற் குணர்த்த" (பெருங். வத்தவ. 6, 10).*

[வன்புறு→வன்புறை]

"வன்புறையென்பது வற்புறுத்துவது" (இறை.2) என்று, இறையனார் களவியலுரை இயம்பும்.

வன்புறையெதிரழிதல் *vaṉpuṟai-y-edir aḻidal*, பெ.(n.) தலைவன் ஆற்றுவித்துப் பிரிந்தபின், தனிமையால் தலைவி வருந்துதலைக் கூறும் அகத்துறை; theme describing the woes of a heroine in her loneliness after her loves has consoled and left her. *"வன்புறை யெதிரழிந்தாட்குத் தோழி......... கூறியது" (கலித். 28, துறை).*

[வன்புறை + எதிரழிதல்]

வன்பொறை *vaṉ-poṟai*, பெ.(n.) பெரும்பாரம் (வின்.); heavy burden, ponderous weight.

[வல்→வன் + பொறை]

வன்மத்தானம் *vaṉma-t-tāṉam*, பெ.(n.) வன்மம்² (வின்) பார்க்க; see *vaṉmam.*

*[வன்மம்² + **Skt.** sthāna > த. தானம்]*

வன்மம்¹ *vaṉmam*, பெ.(n.) 1. தீராப்பகை; malice, grudge, spite. *"வன்மக்களி யானை மன்" (நள, கலிநீங்கு. 58).* 2. வலி; force. *"மார்பின்..... கரஞ் சென்றுற்ற வன்மத்தைக் கண்டு" (கம்பரா. அதிகா. 228).* 3. உறுதிமொழி; vow, assurance.

[வல்→வன்→வன்–மை→வன்மம்]

வன்மம்² *vaṉmam*, பெ.(n.) 1. மறைவான உறுப்பு (வின்.); vital part of the body. 2. பலரறியச் சொல்லக்கூடாத, கமுக்கமான சொல்; confidential words that should not be ultered in the presence of all, words that must be spoken in secret atmosphere. *"வன்மமே சொல்லி யெம்மை நீ விளையாடுதி" (திவ்.திருவாய். 6,2,7).*

[மருமம்→ வருமம்→வன்மம்]

வன்மரம் *vaṉ-maram*, பெ.(n.) 1. அகக் காழுள்ள மரம் (திவா.); exogenous plant. 2. புரசு மரம் (வின்.); East Indian satin-wood.

[வல் → வன் + மரம்]

வன்மரை *vaṉ-marai*, பெ.(n.) புரசு மரம் (வின்.); East Indian satin-wood. *"வன்மரை யென்னு மரமேயுற்று" (S.I.I.iii, 408).*

[வன்மரம் → வன்மரை]

வன்மலைத்தங்கம் *vaṉ-malai-t-taṅgam*, பெ.(n.) ஒரு வகைக் கல்; திருமால் உருவமாகக் கொண்டு வழிபடுதற்குரியதும் கண்டகியாற்றில் எடுக்கப்படுவதுமான கல்; a species of ammonite yellow in colour commonly found in the Gandagi river.

[வன்மலை + தங்கம்.]

வன்மனம் *vaṉ-maṉam*, பெ.(n.) கன்னெஞ்சு (வின்.); hard heart, iron-hearted conscience.

[வல் → வன் + முன்னம்→முனம்→மனம்]

வன்மா *vaṉ-mā*, பெ.(n.) 1. வன்மான் பார்க்க; see *vaṉ-māṉ.* 2. பரி (குதிரை) ; horse. *"தாமரையை வன்மா வெனக் கொண்ட" (திருநூற். 35).*

[வல் → வன் + மா.]

வன்மான் *vaṉ-māṉ*, பெ.(n.) அரிமா (சிங்கம்); lion. *"வன் மானுகைத்த கொடி" (தக்கயாகப். 75).*

[வல் → வன் + மான்.]

வன்மி¹-த்தல் *vanmi-,* 11 செ.கு.வி.(v.i.) 1. கன்னெஞ்சு படைத்தல்; to be hard-hearted. 2. தீராப்பகை காட்டுதல்; to bear malice. 3. ஆணைசெய்தல்; to make a vow or promise. 4. மரம் காழ் கொள்ளுதல்; to be indurated, as trees.

[வன்மம் → வன்மி]

வன்மி² *vanmi,* பெ.(n.) தீய எண்ணம் கொண்டவன்; spiteful person, evil-minded man. *"காயிபாசெனுமோர் வன்மி" (இரக்ஷணிய.பக்.51).*

வன்மீகரோகம் *vanmiga-rōgam,* பெ.(n.) ஒருவகை உடல் வீக்க நோய் (இ.வ.); swelling in the neck, chest or other part of the body; elephantiasis or filariasis.

[வன்மீகம் + ரோகம்]

Skt. rōga> த. ரோகம்.

வன்மீன் *van-min,* பெ.(n.) முதலை (பிங்.); crocodile. *"மிடைந்து வன்மீனுயிர் கவர" (பிரமோத். 6, 35).*

[வல் → வன் + மீன்]



வன்மீனம் *van-minam,* பெ.(n.) வன்மீன் பார்க்க; see *van-min. "ஒரு வன்மீன நீரிடை நின்று" (காஞ்சிப்பு. புண்ணிய. 11).*

[வல் → வன் + மீனம்]

வன்முறை *van-murai,* பெ.(n.) உயிருக்கும் உடைமைக்கும் கேடு விளைவிக்கும் வகையில் செயல்படும் முறை; violence. *'மாணவர்களை வன்முறைக்குத் தூண்டுபவர்களை தண்டிக்க வேண்டும்'.*

மறுவ. வலாற்காரம்

[வல் → வன் + முறை]

வன்மை *vanmai,* பெ.(n.) 1. வலிமை; strength. *"வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை" (குறள், 153).* 2. கடினம் (வின்.); hardness. 3. வன்சொல் பார்க்க; see van-šol. *"மற்று நீ வன்மை பேசி" (பெரியபு. தடுத்தாட். 70).* 4. ஆற்றல் (வின்.); adopt, skill, ability. 5. வலாற்காரம் (வின்.); force, violence. 6. சொல்லழுத்தம் (வின்.); accent, emphasis, stress. 7. சினம்; anger, fury. *"வாங்கினன் சீதையை யென்னும் வன்மையால்" (கம்பரா. முதற்போ. 108).* 8. கருத்து (திவா.); opinion, thought, attention. 9. வல்லெழுத்து; hard consonant. *"உரம் பெறும் வன்மை" (நன். 75).*

[வல் → வன் → வன்-மை]

வன்மொழி *van-moli,* பெ.(n.) வன்சொல்¹ (வின்.) பார்க்க; see *van-šol¹.*

மறுவ. கடுஞ்சொல்

[வன்-மை + மொழி]

வன்றி *vanri*, பெ.(n.) பன்றி; swine, hog, pig. *"வன்றி படர்ந்த வழி" (தொல். பொருள். 102. உரை).*

க. கன்டி

[வல்→வன்→ வன்றி.]

வன்றிசை *vanrišai*, பெ.(n.) வடதிசை; north, direction. *"வன்றிசைக் காளிதாசன் வடமொழி" (இரகு.பாயிர.8).*

[வன் + திசை]

வன்றொடர்க்குற்றியலுகரம் *vanrodar-k-kurriyal-ugaram*, பெ.(n.) வல்லெழுத் தடுத்துத் தொடரப்பெற்ற குற்றியலுகரம் (நன். 94); the shortened vowel u of a vowel consonant following a hard consonant.

[வன்தொடர் + குற்றியலுகரம்]

வன்றொண்டன் *vanrondan*, பெ.(n.) எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படுபவரும், தேவார ஆசிரியர் மூவருள் ஒருவரும், நாயன்மார் அறுபத்து மூவருள் சிவப்பிராமணருமான சிவனடியார்; a canonized *ādi-šaiva* saint, probably of the 8th C. one of three *Tēvāram* hymnists, one of 63. *"நாவலூராளி நம்பி வன்றொண்டன்" (தேவா. 942, 10).*

மறுவ. சடையன், தம்பிரான்தோழர், நாவலர் கோன்.

[வன் + தொண்டன்]

இறைவனுடன் பூண்ட தோழமை நெறியைத் தமது வாழ்விலும் இணைத்து ஒழுகிய கரணியத்தால் நம்பியாரூர் வன்தொண்டர் என்று வழங்கப் பெற்றார்.

வன்னக்கல் *vanna-k-kal*, பெ.(n.) மருத்துவத்துக்குப் பயன்படும் ஒரு வகைக் கல் (சங்.அக.); a medicinal stone.

[வன்னம் + கல்]

வன்னக்கூர்மை *vanna-k-kūrmai*, பெ.(n.) கல்லுப்பு; rock salt.

[வன்னம் + கூர்மை]

வன்னசரம் *vanna-šaram*, பெ.(n.) பலவகை மணிகளால் செய்யப்பட்ட கழுத்தணி வகை; a neck ornament or a neclace, studded with various precious stones. *"மண்மகடன் மார்பினணி வன்னசர மென்ன" (கம்பரா. வரைக்காட்சி. 13.).*

[வன்னம் + சரம்]

வன்னசை *vannašai*, பெ.(n.) தசை நாரின் தலைப்பிலே தொடுத்திருக்கும் வயிரமுள்ள நார் போன்ற வெண்பொருள்; a hard insensible bundle of fibres by which a muscle is attached to a bone.

[வல்→வன்→ வன்னசை.]

வன்னசைநார் *vannašai-nār*, பெ.(n.) ஒருவகைத் தசைநார்; கபாடங்களின் அடிப்பாகங்கள் (சடர) தசைச் சுவர்களோடு இணைத்துக் கட்டுமோர் நட்பமான தசை நார்; the tender strings which connect the colomane carnae of the heart - Ventricles with the ventricular valves.

[வன்னசை + நார்]

வன்னத்துடரி *vanna-t-tudari*, பெ.(n.) ஓர் செடி; a prickly shrub as opposed to பின்தொடரி (சா.அக.).

[வன்னம் + துடரி]

வன்னதூலிகை *vanna-tūligai,* பெ.(n.) வண்ணக்கோல்; painter's brush.

மறுவ. வட்டிகை

[வண்ணம்→வன்னம் + தூரிகை→தூலிகை]

வன்னப்புறா *vanna-p-purā,* பெ.(n.) புறா வகை (பதார்த்த. 909); a kind of dove.

[வண்ணம்→வன்னம் + புறா]

புறவின் தசை ஈளை நோயைக் களையவல்லது என சா.அக. எடுத்தியம்பும்.



வன்னம்[1] *vannam,* பெ.(n.) 1. வண்ணம்; colour, pigment. *"அவைதாம் பளிங்கிலிட்ட வன்னம் போற் காட்டிற்றைக் காட்டி நிற்றலான்" (சி.போ. பா. 8, 3).* 2. எழுத்து; letter, character. *"மொழிகளும் வன்னமும்" (திருக்காளத். பு. 28, 9).*

[வண்ணம்→வன்னம்.]

வன்னம்[2] *vannam,* பெ.(n.) தங்கம் (சங்.அக.); gold.

[வண்ணம்→வன்னம்.]

வன்னமதை *vannamadai,* பெ.(n.)கோரோசனை; bezoar found in cattle.

வன்னரூபி *vanna-rūbi,* பெ.(n.) 1. உமை; Parvadi. *"தேசுறும் வன்ன ரூபியாய் நிறைந்த தேவியை" (காஞ்சிப்பு. சனற்குமா. 18).* 2. கலைமகள் (சங்.அக.); Kalaimagal.

*[வண்ணம்→வன்னம் + **Skt.** rūpin >த. ரூபி.]*

வன்னவட்டி *vanna-vaṭṭi,* பெ.(n.) கதவு நிலைக்கு மேலுள்ள மண்தாங்கிப் பலகை (C.E.M.); lintel, beam over window or door frames.

[வன்னம்[1] + வட்டி[2]]

வன்னவத்தி *vanna-vatti,* பெ.(n.) வன்ன தூலிகை பார்க்க; see *vanna-tūligai.*

[வன்னம் + வத்தி]

வன்னனை *vannanai,* பெ.(n.) வண்ணனை; description. *"மாமாயை வன்னனைக்கு..... முன்னிலையாம்" (ஞானவா. தாசு. 54).*

மறுவ.வரணனை.

[வண்ணனை→வன்னனை]

வன்னாடி *vannāḍi,* பெ.(n.) கடினநாடி; hard pulse.

[வன்(மை) + நாடி]

வன்னி[1] *vanni,* பெ.(n.) 1. தீ (பிங்.); fire. *"பாவவிறகுக் கெரியும் வன்னி" (திருக்காளத். பு. 21, 33).* 2. குதிரை; horse. *"மாராட்டமிவ் வன்னி" (திருவிளை. நரிபரி. 106).* 3. மரவகை; Indian mesquit. *"வன்னி மரமு மடைப்பளியுஞ் சான்றாக" (சிலப். 21, 5).* 4. கொடுவேலி (மலை.); ceylon lead wort. 5. தணக்கு (மலை.); whirling nut. 6. வன்னியன்; person of the *vanniya* caste.

வன்னி² *vaṉṉi,* பெ.(n.) 1. மாணி (பிரமசாரி) (பிங்.); bachelor-student. *"வன்னி நிலை முயலாதான்" (சேதுபு. பலதீ. 3).* 2. கிளி (பிங்.); parrot. *"வன்னியுங் காற்றுங் கலந்தேறிய வெம்மதனை" (வெங்கைக் கோ. 41).*

[வண்ணம்→வண்ணி→வன்னி]

வன்னி-த்தல் *vaṉṉi-,*4 செ.குன்றாவி. (v.t.) 1. வண்ணம் வைத்தல்; to paint. 2. வருணித்தல்; to describe.

[வண்ணி→வன்னி]

வன்னிக்காசிகம் *vaṉṉi-k-kāśigam,* பெ.(n.) முள்ளுக்கத்தரி; a thorny brinjal.

வன்னிக்காய் *vaṉṉi-k-kāi,* பெ.(n.) கடுக்காய்; chebulic myrobalan.

[வன்னி + காய். கா→காய்]

வன்னிக்காரம் *vaṉṉi-k-kāram,* பெ.(n.) அக்கிரா காரம்; a flowering tree of North Africa-*Anacyclus Pyrethrum.*

[வன்னி + காரம்]

குல் = முளைத்தல், தோன்றுதல்.

குல்→கில்→கீல்→கீர்→கீரை.

48 வகைக் கீரை வகைகளுள் ஒன்று.

வன்னிக்கீரை *vaṉṉi-k-kīrai,* பெ.(n.) முள்ளிக் கீரை; a vegetable greens.

[வன்னி + கீரை]

வன்னிக்குத்தி *vaṉṉi-k-kutti,* பெ.(n.) வன்னிக்குத்திமறவன் பார்க்க; see *vaṉṉi-k-kutti-maṟavaṉ.*

[வன்னி + குத்தி]

வன்னிக்குத்திமறவன் *vaṉṉi-k-kutti-maṟavaṉ,* பெ.(n.) மறவருள் ஒரு பிரிவு (E.T.V.32); a sub-sect of *Maṟavas.*

[வன்னிக்குத்தி + மறவன்]

வன்னிகர் *vaṉṉikar,* பெ.(n.) வன்னிகா (சங்.அக.) பார்க்க; see *vaṉṉigā.*

வன்னிகர்ப்பன் *vaṉṉikarppaṉ,* பெ.(n.) முருகக்கடவுள் (வின்.); Lord Murugaṉ.

[வன்னி + கர்ப்பன்]

வன்னிகருப்பம் *vaṉṉi-karuppam,* பெ.(n.) 1. மூங்கில் (மலை.); spiny bamboo. 2. நஞ்சு (சங்.அக.); a mineral poison.

[வன்னி + கருப்பம்]

வன்னிகற்பம் *vaṉṉi-kaṟpam,* பெ.(n.) 1. ஒரு வகை நஞ்சு; a kind of arsenic. 2. இதளியக்கட்டு (இலிங்கக் கட்டு); consolidated cinna bar. 3. உலாந்த இதளியம் (லிங்கம்); cinnabar of Holland. 4. சடைக்கஞ்சா; Kanja.

[வன்னி + கற்பம்]

வன்னிகா *vaṉṉigā,* பெ.(n.) 1. பூடு வகை; wild long pepper. 2. பொடுதலை (மூ.அ.); a prostate plant - *Lippia nodiflora.*

[வன்னி → வன்னிகா.]

வன்னிகுருத்துவேலன் *vaṉṉi-kuruttu vēlaṉ,* பெ.(n.) சீமை முள்வேல்; a tree-*Acacia ferruginca.*

[வன்னி + குருத்துவேலன். குருத்துவேலன் = முள்வேல்]

வன்னிகுன்மம் *vaṉṉi-kuṉmam,* பெ.(n.) வயிற்று நோய்; a variety of gunma disease - *Dyspepsia.*

[வன்னி + குன்மம். குன்மம் = செரிமான மின்மை, வயிற்றுவலி முதலியன காணும் வயிற்று நோய்.]

வன்னிகெற்பம் *vaṉṉi-keṟpam,* பெ.(n.) இலிங்கக்கட்டு; consolidated cinnabar.

[வன்னிகற்பம்→வன்னிகெற்பம்]

வன்னிகை[1] *vaṉṉigai,* பெ.(n.) பொடுதலை; a prostate plant-*Lippia Nodiflora.*

வன்னிகை[2] *vaṉṉigai,* பெ.(n.) எழுதுகோல்; pen, pencil. *“புத்தகமு ஞானத்து முத்திரையும்........ வன்னிகையும்” (பாரத வெண்.துதி).*

வன்னிசகாயன் *vaṉṉi-šagāyaṉ,* பெ.(n.) காற்று கடவுள்; wind-god. *“வன்னி சகாய நின்மைந்தன்” (உத்தரரா. அனுமப். 40).*

*[வன்னி + **Skt.**சகாயன்]*

வன்னிசிகரம் *vaṉṉi-šigaram,* பெ.(n.) சேவற்சூடு; cock's comb.

*[வன்னி + **Skt.** சிகரம்]*

வன்னிசுரம் *vaṉṉi-šuram,* பெ.(n.) நெருப்பன்ன சுரம், கொடிய சுரம்; virulent or severe fever.

[வன்னி + சுரம்]

வன்னித்தீ *vaṉṉi-t-ti,* பெ.(n.) நவச்சாரம் (சங்.அக.); sal ammoniac.

வன்னித்தீயோன் *vaṉṉi-t-tīyōṉ,* பெ.(n.) வன்னித்தீ பார்க்க; see *vaṉṉi-t-tī.*

[வன்னி + தீயோன்]

வன்னித்தும்பை[1] *vaṉṉi-t-tumbai,* பெ.(n.) அறிவுத் தெளிவை உண்டாக்கும் ஒரு வகை பெருந்தும்பை; a species of dead nettle that causes clarity.

[வன்னி + தும்பை]

வன்னித்தும்பை[2] *vaṉṉi-t-tumbai,* பெ.(n.) தும்பை வகை (சங்.அக.); a kind of white dead nettle.

மறுவ. பெருந்தும்பை

[வன்னி + தும்பை]

வன்னிதீபனம் *vaṉṉi-tīpaṉam,* பெ.(n.) நச்சுயிரிகொல்லி; germicide; antiseptic.

*[வன்னி + **Skt.** தீபனம்]*

வன்னிதூமநியாயம் *vaṉṉi-dūma-niyāyam,* பெ.(n.) “புகையுள்ள விடத்துத் தீயுண்டு” என்பது போலப் பொருள்களின் பிரிவின்மையைக் குறிக்கும் வழக்கு (அபி.சிந்.); a *niyāya* in illustration of inseparable association or concomittance, as of fire and smoke.

[வன்னி + தூமம் + நியாயம்]

Skt. Niyāya > த. நியாயம்.

வன்னிநாளி *vaṉṉi-nāḷi,* பெ.(n.) பவள வறுகு; a kind of grass.

[வன்னி + நாளி]

வன்னிநிமிளை *vaṉṉi-nimiḷai,* பெ.(n.) செம்பின் களிம்பு; sulphurate of antimony.

[வன்னி + நிமிளை]

வன்னிப்பட்டை *vaṉṉi-p-paṭṭai,* பெ.(n.) மரப்பட்டையினுள் ஒன்று; bark of Indian mesqrut tree.

[வன்னி + பட்டை]

வன்னிப்பிரியம் *vaṉṉi-p-piriyam,* பெ.(n.) கொடுவேலி (மலை.); ceylon leadwort.

[வன்னி + **Skt.** priya > *த. பிரியம்]*

வன்னிபலியம் *vaṉṉi-paliyam,* பெ.(n.) வன்னிப்பிரியம் (மலை) பார்க்க; see *vaṉṉi-p-piriyam.*

[வன்னி + பலியம்]

வன்னிபூ *vaṉṉi-pū,* பெ.(n.) வன்னி கர்ப்பன் (பிங்.) பார்க்க; see *vaṉṉi-karppaṉ.*

[வன்னி + பூ]

வன்னிபேடு *vaṉṉi-pēḍu,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டம், வாலாசா பாத்திற்குத் தெற்கே ஒருகல் தொலைவிலுள்ளதோ ரூர்; a village in the Kancheepuram district one mile away from south of Walajabad.

[வன்னி + பேடு]

வன்னிபோக்கியம் *vaṉṉi-pōkkiyam,* பெ.(n.) நெய் (வின்.); ghee.

[வன்னி + **Skt.***போக்கியம்]*

வன்னிமண்டலசித்தன் *vaṉṉi-maṇḍala-šittāṉ,* பெ.(n.) சித்தர்களுளொருவர்; a siddhar versed in alchemy.

[வன்னி + மண்டலம் + சித்தன்]

வன்னிமரம் *vaṉṉi-maram,* பெ.(n.) கோயில் கட்டட நிலைக்கால் செய்ய பயன்படும் உறுதி வாய்ந்த மரம்; this hard tree has been used to temple beam.

[வன்னி + மரம்]

வன்னிமன்றம் *vaṉṉi-maṉṟam,* பெ.(n.) வன்னிமரமுள்ள பொதுவிடம்; public meeting place under a *vaṉṉi* tree. *"சுடலை நோன்பிகள்.......... மடைதீ யுறுக்கும் வன்னிமன்றமும்" (மணிமே. 6, 87).*

[வன்னி + மன்று→மன்றம்]

வன்னிமாரகம் *vaṉṉi-māragam,* பெ.(n.) நீர் (வின்.); water.

[வன்னி + **Skt.** māraka > *த. மாரகம்]*

வன்னிமித்திரன் *vaṉṉi-mittiraṉ,* பெ.(n.) வன்னிசகாயன் (வின்.) பார்க்க; *vaṉṉi-šagāyaṉ.*

[வன்னி + மித்திரன்]

வன்னிமுருங்கை *vaṉṉi-muruṅgai,* பெ.(n.) முள்முருங்கை; rootchy wood tree; Red bean - *Erythrina indica.*

[வன்னி + முருங்கை]

வன்னிமேமுறி *vaṉṉi-mē-muṟi,* பெ.(n.) வடமேற்குத் திசையிலிருந்து. தென்கிழக்குத் திசை நோக்கிய கடல் நீரோட்டம்; the oceanie stream running from north-west to south-east direction.

[வன்னி + மேல்முறி→மேமுறி]

வன்னிமை *vaṉṉimai*, பெ.(n.) குறும் பரசாட்சி (வின்.); petty chieftainship, as of one belonging to the *vaṉṉiya* caste.

[வல் → வன் → வன்னி → வன்னிமை]

வன்னியடுப்பேற்றல் *vaṉṉi-y-aḍup pēṟṟal*, தொ.பெ.(vbl.n.) தீ மூட்டல்; setting fire.

[வன்னி + அடுப்பேற்றல்]

வன்னியம்[1] *vaṉṉiyam*, பெ.(n.) வரணிக்கப்பட்டது (சங்.அக.); that which is described.

[வண்ணியம் → வன்னியம்.]

வன்னியம்[2] *vaṉṉiyam*, பெ.(n.) 1. குறும்பரசரின் தன்மை; nature or characteristics of a petty chieftain. 2. உரிமை; liberty, freedom. *"இரண்டுக்குஞ் சேர வன்னிய மில்லை யிறே" (ஈடு, 7, 7, 3).* 3. பகைமை (ஈடு. 7. 7. 3. ஜீ); enmity.

[வல் → வன் → வன்னி + இயம்.]

வன்னியமறு-த்தல் *vaṉṉiyam-aṟu-*, 4 செ.குன்றாவி.(v.t.) சிற்றரசரை அழித்தல்; to destroy or subdue petty chieftains, *"வன்னிய மறுத்திருப்பதொரு குடி" (ஈடு, 5, 10. பிர).*

[வன்னியம் + அறு-. அறுதல் (த.வி.) → அறுத்தல் (பி.வி.)]

வன்னியராயன் *vaṉṉiyarāyaṉ*, பெ.(n.) ஊரகத் தெய்வம்; a village deity. *"வன்னியராயா......... வரும் பன்றிமாடா" (ஈடு, 5, 10. பிர.).*

[வன்னியம் + அரையன் → ராயன்.]

ஒ.நோ. அரைசன் → ராசன்

வன்னியவலையன் *vaṉṉiya-valaiyaṉ*, பெ. (n.) வலையர் இனத்துள் ஒரு பிரிவு (G.Tp. D.I.114); a sub-sect of the valaiya caste.

[வன்னியம் + வலையன்]

வன்னியன் *vaṉṉiyaṉ*, பெ.(n.) 1. ஓர் இனம் (G.Tp.D.I.110); a caste. 2. சாமந்தன்; feudtory prince, commander. 3. கள்ளர், வலையர் முதலிய சில இனத்தாரின் பட்டப் பெயர் (E.T.vii, 321); caste title among certain castes, as the *kaḷḷar, valaiyar*, etc.

[வல் → வன் → வன்னி → வன்னியன்]

சோழர் காலப் படையில், வலங்கைப் படைப் பிரிவிலிருந்து இடங்கைப் படையினருக்கு இன்னல் தந்தவரென்று (கல்வெட்டறிக்கை எண்.1913–34வது அறிக்கை) கல்வெட்டறிக்கை கூறுகிறது.

வன்னியா *vaṉṉiyā*, பெ.(n.) இரும்பிலி; a small tree-*Maba buxifolia.*

வன்னியிடல் *vaṉṉi-y-iḍal*, பெ.(n.) தீயிடல்; to set fire.

[வன்னி + இடல்]

வன்னியின்கெற்பம் *vaṉṉiyiṉ-keṟpam*, பெ.(n.) ஒருவகை நஞ்சு; a kind of aresenic.

[வன்னியின் + கெற்பம்]

வன்னிரேதா *vaṉṉirēdā*, பெ.(n.) சிவ பெருமான்; Siva. *"ஈசானன் வன்னிரேதா நற்சத்தியன்" (காஞ்சிப்பு. சனற். 22).*

வன்னிலம் *vaṉṉilam*, பெ.(n.) முல்லை, முல்லையடுத்த குறிஞ்சி நிலம்; hard, rocky soil.

மறுவ. கல்லாங்குத்து, கன்னிலம், வன்பார்.

[வல் → வன் + நிலம்]

வன்னிலோகம் *vanni-lōgam*, பெ.(n.) செம்பு (யாழ்.அக.); copper.

[வன்னி + Skt lōha>த. உலோகம்]

வன்னிவகன் *vanni-vagan*, பெ.(n.) காற்று; wind, as the vehicle of fire. *"தென்றலே....... வன்னிவகனாயினை" (சரபேந்திர குறவஞ்சி, 21, 7).*

வன்னிவண்ணம் *vanni-vannam*, பெ.(n.) 1. செந்தாமரை (மலை.); red lotus. 2. செவ்வாம்பல் (யாழ்.அக.); red Indian water-lily.

[வன்னி + வண்ணம்]

வன்னிவாகை *vanni-vāgai*, பெ.(n.) கருவாகை; fragrant acacia tree-*Abizzia odoratissium.*

[வன்னி + வாகை]

வன்னிவீசம் *vanni-vīšam*, பெ.(n.) பொன் (யாழ்.அக.); gold.

[வன்னி + வீசம்]

வன்னிவெள்ளம் *vanni-vellam*, பெ.(n.) வடதிசையிலிருந்து, தென் கிழக்குத் திசைநோக்கிய கடல் நீரோட்டம்; the oceanic stream running from north to south east direction under the sea.

[வன்னி + வெள்ளம்]

வன்னீர் *vannīr*, பெ.(n.) உவர் நீர்; breach water.

[உவர்நீர் → உவநீர் → வந்நீர் → வன்னீர்]

வன்னெஞ்சு *vanneñju*, பெ.(n.) கடுமையான மனம் (வின்.); hard heart, iron-hearted man.

[வல் → வன் + நெஞ்சு]

வன்னெத்து *vannettu*, பெ.(n.) நத்தைச் சுண்டி; bristly button weed; shaggy button weed - *Spermacoce hispida* (சா.அக.).

வன்னெல் *vannel*, பெ.(n.) நென்மணி (யாழ்.அக.); fully grown or ripe paddy.

மறுவ. காய்நெல்

[வன் + நெல்]

வன்னெற்று *vannerru*, பெ.(n.) நத்தைச்சூரி (மலை.); bristly button weed.

[வல் → வன் + நெற்று – வன்னெற்று.]

வனசிருங்காடம் *vana-širuṅgādam*, பெ.(n.) பெருநெருஞ்சி (மூ.அ.); a stout-stemmed herb with spiny fruits and slimy leaves.

மறுவ. யானை நெருஞ்சில்

வனத்தவசி *vanattavaši*, பெ.(n.) முருங்கை, குருகத்திப்பூடு; a plant.

[வனம் + தவசி]

வனத்தி *vanatti*, பெ.(n.) தூதுவளை; a thorny creeper (shrub) - *Solanum Trilobatum.*

வனத்துக்குடோரி *vanattu-k-kudōri*, பெ.(n.) வனதுர்க்கி பார்க்க; see *vana-turkki.*

[வனத்து + குடோரி]

வனத்தேரி *vaṉa-t-tēri*, பெ.(n.) ஆவரஞ் செடி; a shrub-*Cassia auriculata*.

[வனம் + தேரி]



வனதாரி *vaṉa-tāri*, பெ.(n.) மூக்கத்தாரி என்னும் மூலிகை செடி வகை; a medicinal plant.

[வனம் + தாரி]

வனதித்தம்[1] *vaṉa-tittam*, பெ.(n.) குடசபாலை; a tree-*Hollarrhera Antidysenterica*.

[வனம் + தித்தம்]

வனதித்தம்[2] *vaṉa-tittam*, பெ.(n.) கொடிப் பாலை (மலை.); green wax - flower.

[வனம் + தித்தம்]

வனதித்தா *vaṉa-tittā*, பெ.(n.) வட்டத்திருப்பி; a twiner-*Cissampelos pareira*.

[வனம் + தித்தா]

வனதீபம் *vaṉa-tīpam*, பெ.(n.) சண்பகம்; a flower, champaca.

[வனம் + தீபம்]

வனதுர்க்கம் *vaṉa-turkkam*, பெ.(n.) காட்டரண்; forest, as a defence. *"வனதுர்க்கம், கிரிதுர்க்கம், சலதுர்க்கம் என்னப்பட்ட மூன்று அரண்களையும்" (தக்கயாகப்.54, உரை).*

வனதுர்க்கி *vaṉa-turkki*, பெ.(n.) கடுக்காய்; chembulic myrobalan.

[வனம் + துர்க்கி]

வனதுர்க்கிசேய் *vaṉa-turkki-šēy*, பெ.(n.) கடுக்காய் பிஞ்சு; tender Indian gall nut.

[வனம் + துர்க்கி + சேய்]

வனதுர்க்கை *vaṉa-turkkai*, பெ.(n.) கொற்றவை; korṟavai (Durgai). *"வன துர்கையினுடைய புதல்வ" (திருமுரு.258, உரை).*

[வனம் + **Skt.** *durgā > துர்க்கை.]*

வனதேவிச்செடி *vaṉa-tēvi-c-cedi*, பெ.(n.) குத்துப்பிடாரி; an unknown plant (சா.அக.).

[வனதேவி + செடி]

வனப்பகையப்பன் *vaṉappagai-y-appaṉ*, பெ.(n.) 1. நம்பியாரூரர்; *šundara-mūrtti-nāyanar*, one of four saiva saints. 2. வனப்பகை என்ற பெண்ணைப் புதல்வியாகக் கொண்டவர்; one who was the father of the girl *vaṉappagai*. *"வனப்பகையப்பன் வன்றொண்டன்" (தேவா. 924. 10).*

[வனப்பகை + அப்பன்]

வனப்பகையார் *vaṉappagaiyār*, பெ.(n.) கோட்புலி நாயனாரின் மகள்; daughter of *kōṭ-puli-nāyaṉār*. *நம்பியாரூரர் பதிகத்தில் வைத்துப் பாடப்பெறும் பெருமைப் பெற்றவள்.*

வனப்பருத்தி *vaṉapparutti*, பெ.(n.) கோங்கிலவு; false tragacanth.

[வனம் + பருத்தி]

வனப்பியல் *vaṉappiyal*, பெ.(n.) வனப்பு பார்க்க; see *vaṉappu*. *"வனப்பியல் தானே வகுக்குங் காலை" (தொல்.செய்யுள்.149).*

[வனப்பு + இயல்]

எண்வகை வனப்புகளையும் உள்ளடக்கிக் கூறுவதே வனப்பியல். அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்னும் எண்வகைச் செய்யுளுறுப்புகள், திரண்டவழிப் பெறுவதோர் அழகே, வனப்பியல் எனப்படும்.

1. அம்மை என்பது சில எழுத்துகளால் ஆகிய மெல்லிய சொல்லோடும் அறம், பொருள், இன்பம் இம்மூன்றையும் கூறுந் தொடர்நிலைச் செய்யுட்கள். இவை சில இடங்களில் இவற்றை விட்டு விலகியுஞ் செல்லும் என்றும், அம்மைக்கு இலக்கியமாவன பதினெண் கீழ்க்கணக்குச் செய்யுட்களென்றும் பேராசிரியர் கூறுவர். அம்மை வனப்புறு தொடர்நிலைச் செய்யுட்கள் ஐந்தடியின் மிகாமல் வரும். அம்மை என்பது அமைதிப்பட்டு நிற்பது.

"சின்மென் மொழியாற் சீரிது நுவலின்
அம்மை தானே அடிநிமிர் வின்றே"

என்று, யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் பாடங்கொள்வர்.

காரிகையுரையாசிரியரும், இளம்பூரணரும் நூற்பா முதலடியின் இறுதி இரு சீர்களில், சீர் புனைந்தி யாப்பின் எனப் பாட வேறுபாடு கொள்வர். இதனால் சீர் புனைதல் அம்மையின் புனைவு முறையாக அமைகின்றது.

விருத்தியுரையாசிரியரும், காரிகையாசிரியரும் "ஒள்ளிய வாய பொருள்" என்ற உரை விகற்பம் கொள்வர். பேராசிரியரும், நச்சினார்க்கினியரும், "தாயபனுபவல்" என்று நூற்பா இறுதியடி இருசீர்களில் பாட விகற்பமும், "இடையிட்டு வந்த பனுவலிலக்கணத்தோடும்" என்று உரை விகற்பமும், கொள்வர். இதனால் ஒள்ளியவாய பொருள், அறம் பொருளின்பமென்னும் மூன்றும், இடையிட்டு இலக்கணமாகவும், இலக்கியமாகவும், வரும் என்பதும், அம்மையின் பொருண்மை வளர்ச்சியாக அமைகின்றன.

"அடிநிமிர் வின்மை" என்பதற்கு ஐந்தடியின் ஏறாமை என்று பேராசிரியரும், ஆறடியின் ஏறாமை என்று நச்சினார்க்கினியரும் கூறுவர். இவை அம்மையின் அடிவளர்ச்சியாகும்.

இவ் வனப்பிற்கு காட்டாக அனைவரும் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களைக் கூறுவர்.

இதனால், சீர்புனைதல் ஒள்ளியவாய பொருள், அறம், பொருளின்ப மென்னும் மூன்றும் இடையிட்டு இலக்கணமாகவும், இலக்கியமாகவும் வரல், ஆறடியின் ஏறாமை என்ற அடி வளர்ச்சி ஆகியன அம்மையின் இயல்புகளாக அமைந்து, அறநூல்களை குறிப்பதாயிற்று.

அவ்வாறு அம்மையின் வளர்ச்சி, உரையாசிரியர்கள் அளவில் அமைகின்றது.

2. அழகு என்பது செய்யுளுக்குரிய சொற்களால் சீர்பெறப் புனைந்து யாக்கப்படுவது. அழகெனப்படும் நூல்கள் வேறு வேறு வந்து தொகுக்கப்பட்டன என்றும், எட்டுத் தொகை நூல்கள் அழகு என்னும் வனப்பின் பாற்படுவன என்றும் பேராசிரியர் கூறுவர்.

"செய்யுண் மொழியாற் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே அழகெனப் படுமே"

என்பது செய்யுளியல் நூற்பா. இந் நூற்பாவிற்கு பாட வேறுபாடில்லை.

யாப்பருங்கல, காரிகை உரையாசிரியர்கள் செய்யுள் மொழி என்பதற்குச் "செய்யுட் சொல்லாகிய திரிசொல்" என விளக்குவர். இளம்பூரணர் "செய்யுட்குரிய சொல்" என்று,

அவ்வாறே குறிப்பிடுவர். பேராசிரியரும், இராகவையங்காரும் "திரிசொல் பயிலாது" என்பர். இது செய்யுள் மொழி பற்றிய உரை விகற்பமாகும்.

தொல்காப்பியர் செய்யுள் ஈட்டச் சொல்லாக இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகியவற்றைக் குறிப்பிடுவர். ஆதலின் செய்யுள் மொழியில், திரிசொல் இடம் பெறும்.

அழகின் இரண்டாவது இயல்பு "சீர் புனைந்து யாத்தல்" ஓசை இனிதாக, பொலிவு பெறப் பாடல் என்று பொதுவாகவே விளக்கப்படுகின்றது.

யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும், காரிகையாசிரியரும், இளம்பூரணரும், "துணியிரும் பரப்பகம்" என்ற தனிப் பாடலைக் காட்டாகக் கூறுவர். இலக்கண விளக்கத்தில் வைத்தியநாத தேசிகர், "துணியிரும் பரப்பகம்" என்ற தனிப் பாடலில் அடுக்கல், எழிலி, கார், ஓங்கல், கலுழி, வல்லியம் முதலிய திரிசொல் பயின்றுள்ளமை காண்க என்பர். இதனால், திரிசொல் அழகு வனப்பில் வரும் என்பதும் விளக்கப்படுகின்றது. பேராசிரியரும், நச்சினார்க்கினியரும், எட்டுத் தொகை நூற்களையும், மறைந்து போன நூலாகக் கருதப்படும் மூவடி முப்பது என்ற நூலையும், காட்டாகக் குறிப்பிடுவர்.

இதனால் அழகின் இயல்புகள், திரிசொல் முதலிய செய்யுட்சொற்களும், சீர்புனைந்து யாத்தலுமாகும்.

3. தொன்மை என்பது உரைநடை கலந்த பழையவாகிய கதைப் பொருளவாகச் செய்யப்படுவது. தொன்மைக்குச் சான்றாகப் பெருந்தேவனார் பாரதமும், தகடூர் யாத்திரையும் பொருந்தும் என்பர் பேராசிரியர். சிலப்பதிகாரமும் இதன் பாற்படுமென்பர் நச்சினார்க்கினியர்.

"தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே"

என்பது பலரும் கொண்ட செய்யுளியல் நூற்பாவாகும். இளம்பூரணர் மட்டும், முதலடியின் இரண்டாம் சீராகச் சொல்லுங்காலை என்பதைச் சேர்த்துப் பாடங் கூறுவர். இவ்வாறு பாடங் கூறினும், இளம்பூரணர் பொருள் மாறுபாடாய் ஏதும் கூறிற்றிலர்.

தொன்மையின் முதல் இயல்பாகிய உரையொடு புணர்தல் என்பதற்கு, 'உரைக்கப்படுவனவற்றின் மேற்று' என்று விருத்தியுரையாசிரியரும், 'உரையொடு பொருந்திப் போந்த' என்று இளம்பூரணரும், 'உரைவிராய்' என்று பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் கூறுவர். க. வெள்ளைவாரணர் "நெடுங்காலமாகப் பலராலும் சொல்லப்பட்டு வழங்கி வருதல்" என்பர். இலக்குவனார், "உரைநடையால் இயற்றப்பட்டன" என்பர். இராம. பெரியகருப்பன் "நெடுங்காலம் உரைக்கப்பட்டு வந்தன" என்பர். காசிராசன் "உரைத்தலோடு பொருந்திய கூற்றுவகை" என்பர். வை.கா.சிவப்பிரகாசம் "பாட்டிடை வைத்த குறிப்பு தொன்மைக்குரியது", என்று கூறுவர். இவ்வாறு 'உரையொடு புணர்தல்' என்பதற்கு உரைவிகற்பம் கொள்வர். இவற்றிலிருந்து உரைெ யாடு புணர்தல் என்பது உரையிடையிட்டு வரல், உரைநடையால் வரல், கூற்றுவகையாக வரல் என மூன்று நிலைகள் கொண்டுள்ளதை அறியலாம்.

தொன்மையின் இரண்டாவது இயல்பான, 'பழைமை மேற்று' என்பதற்குப் 'பழைமைத்தாய் நிகழ்ந்த பெற்றி' என்று விருத்தியுரையாசிரியரும், 'பழைமையவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது' என்று பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் கூறுவர். பழைமையான வரலாறுகள் என்று இலக்குவனாரும், 'புராணம்' என்று, இராம. பெரியகருப்பனும் கூறுவர். இவ்வாறு 'பழைமை மேற்றே' என்பதற்கு உரை விகற்பம் கொள்வர். இதனால் பழங்கதைகள் வரலாறுகள், புராணங்கள், இவ் வகை இலக்கியங்களாகின்றன.

இவ்வனப்பிற்குக் காட்டாக விருத்தியுரை யாசிரியர்,

"செறிதொடி உவகை கேளாய் செஞ்சுடர்த்
தெறு கதிர்ச் செல்வன்"

என்பது போல்வனவும், பாரதமும், இராமாயணமும் என்பர்.

'காந்தம்' என்ற நூலைக் காரிகையுரை யாசிரியரும், தகடூர் யாத்திரையை பேராசிரியரும், சிலப்பதிகாரத்தை நச்சினார்க்கினியரும், எடுத்துக் காட்டாகக் கூறுவர், கி.வா.சகந்நாதன் 'பாரத வெண்பா' இவ் வகைப்படும் என்பர். சங்கச் செய்யுட்களில் உவமையாக, உத்தியாக இடம் பெற்றுள்ள இராமாயண பாரதக் கதைகள், அகலிகை கதை, இரதிகாமன் கதை, கசரர் கதை, இந்திரன், சிபி, சிவன், திருமால் பலராமன் கதைகள், வடமொழிக்கே உரியன என்றும், முருகன் கதை, நிலவழித் தெய்வங்களின் செயல்கள், திருமாவுண்ணிக் கதை, கொல்லிப்பாவை, கண்ணகி கதை, தமிழுக்குரியன என்றும், இராம.பெரிய கருப்பன் பிரித்து வரிசைப்படுத்திக் காட்டுவர்.

இதனால் உரையிடையிட்டும், உரை நடையிலும், கூற்று வகையாகவும், அமையும் பழங்கதைகள், வரலாறுகள், புராணங்கள் ஆகியன தொன்மை வனப்பாகின்றன.

4. தோல் என்பது கொச்சகக் கலி போன்ற இழுமெனும் ஓசையையுடைய மெல்லிய சொற்களால், அறம் பொருளின்பம் வீடென்னும் விழுமிய பொருள்களைச் சொல்வதும், ஆசிரியப் பாப்போன்ற (பரந்த மொழியின் அமையப் பெறும்) பாட்டினால் ஒரு பழங்கதை மேல் தொடுக்கப்படுவதும் என இருவகைப்படும். முதல் வகைக்குப் பேராசிரியர், "சான்று கண்டிலம்" என்றார். நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணியைக் காட்டுகின்றார்.

"இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்"

என யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும், பேராசிரியரும் பாடங்கொள்வர். காரிகை யுரையாசிரியரும், இளம்பூரணரும், நச்சினார்க் கினியரும், ஈற்றடியின் இறுதி இரு சீர்களில் மட்டும் 'தொன்னெறிப் புலவர்' என்று பாட வேறுபாடு கொள்வர்.

'தொன்மொழிப் புலவர்' என்பதற்குப் பேராசிரியர், "பழைய கதையைச் செய்தல் பற்றி, இது முன்வரும் சூத்திரத்தாலும் பெறுதும்" என்பர். யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர், எவ்விதப் பொருளும் கூறிலர். தொன்னெறி என்பதற்குப் பழநெறியையறிந்த புலவர் என நச்சினார்க்கினியர் பொருள் கூறுவர். காரிகையுரையாசிரியரும், இளம்பூரணரும், எவ்விதப் பொருளும் கூறிலர்.

'இழுமென்மொழியால் விழுமியது நுவல்தல்' என்பது தோலின் முதல் வகையாகக் கூறப்படுகின்றது. இம் முதல்வகை இழுமென்மொழி, விழுமியது நுவல்தல் என இரண்டு இயல்புகளைக் கொண்டுள்ளது.

'இழுமென்மொழி'யை இழுமென்னும் மெல்லியவாய சொற்கள் என விருத்தியுரை யாசிரியரும், காரிகையாசிரியரும், இளம்பூரணரும், 'இனிய ஓசையுடைய சொற்கள்' என மு.வரதராசனாரும், 'மென்மை மிக்க இனிய சொற்கள்' என சி. இலக்குவனாரும், விளக்குவர்.

'விழுமியது நுவலல்' என்பதை, விழுமிய வாய்க் கிடப்பன என விருத்தியுரையாசிரியரும், காரிகையாசிரியரும், இளம்பூரணரும், விளக்குவர், பேராசிரியர் அறம் பொருளின்பம் வீடென்னும் விழுப்பொருள் பயப்பச் செய்வன என்றும், மு.வரதராசன் சிறந்த பொருள்பற்றி அமைவன என்றும், சி.இலக்குவனார் வாழ்வுக்குச் சிறப்புத்

தரும் பொருள்கள் பற்றி இயற்றப்படுவன என்றும் விளக்குவர்.

இவ்வாறு இழுமென் மொழியும், விழுமியது நுவல்தலும் உரை விகற்பமின்றிப் பொது நிலையிலேயே, விளக்கப்படுகின்றன.

இந்த வகைக்குக் காட்டாக விருத்தியுரையாசிரியரும், காரிகையுரையாசிரியரும், இளம்பூரணரும், 'பாயிரும் பரப்பகம் புதையப் பாம்பின்' என்று தொடங்கும் மார்க்கண்டேயனார் காஞ்சிப் பாட்டைக் கூறுவர். பேராசிரியர் "அவை செய்த காலத்துள்ளன கண்டிலம், பிற்காலத்து வந்தன கண்டு கொள்க" என்பர். இரா.இளங்குமரன் "காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி" என்று தொடங்கும் தனிப்பாடல் திரட்டுப் பாடலொன்றைக் காட்டுவர்.

இதனால், தோலின் முதல்வகை இழுமென்னும் இனிய ஓசையுடைய மெல்லியவாய சொற்களால், அறம் பொருளின்பம் வீடென்றும் வாழ்வுக்குச் சிறப்புத் தரும் பொருள்கள் பற்றி இயற்றப்படுவதாகும்.

'பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகல்' என்பது தோலின் இரண்டாவது வகையாகும். பரந்த மொழியும், அடிநிமிர்வும் இதன் இயல்புகளாகும்.

'பரந்தமொழி' என்பதை எல்லாச் சொற்களும் என விருத்தியுரையாசிரியரும், காரிகையுரையாசிரியரும் விளக்குவர். மு.வரதராசனாரும், இரா.இளங்குமரனும், பரந்தசொற்கள் என்றும் கூறுவர். 'அடிநிமிர்வு' என்பதைப் "பல அடியை உடையவாய்க் கிடப்பன" என விருத்தியுரையாசிரியரும், காரிகையுரையாசிரியரும், இளம்பூரணரும், விளக்குவர்.

இவ்வாறு பரந்த மொழியும், அடிநிமிர்வும், உரை விகற்பமின்றிப் பொதுநிலையதிலேயே விளக்கப்படுகின்றன.

இதற்குக் காட்டாக விருத்தியுரையாசியரும், காரிகையுரையாசிரியரும், இளம்பூரணரும் பத்துப்பாட்டைக் கூறுவர். 'பொருட்டொடர் நிலை' எனப் பேராசிரியரும், சிந்தாமணி, தேசிகப்பா என நச்சினார்க்கினியரும், காட்டாகக் கூறுவர்.

பேராசிரியரும், நச்சினார்க்கினியரும், "ஒரு கதைமேல் தொடுக்கப்பட்டன" என்பர். சி.இலக்குவனார் கதைதான் கூற வேண்டுமென்ற குறிப்பு, நூற்பாவில் இல்லை என்பர்.

இதனால் தோலின் இரண்டாவது வகையின் எல்லாச் சொற்களோடும் கூடிய கதைப் பொருளன்றியும், கதைப்பொருளாகவும், பல அடிகளால் இயற்றப்படுவனவாகும்.

5. விருந்து என்பது புதியதாகத் தொகுக்கப்படுந் தொடர்நிலை மேலது. பழைய கதையைப் புதியதாகச் சொல்வது தோல் ஆகும் என்றும், விருந்து புதியதாகத் தான் வேண்டியவற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்து வரச் செய்வதென்றும், பேராசிரியர் கூறுவர்.

விருந்துக்குச் சான்றாக முத்தொள்ளாயிரமும், பொய்கையார் முதலியோர் செய்த அந்தாதிச் செய்யுளும் அமையும் என்றும், கலம்பகம் முதலாயினவற்றையும் சான்றாகச் சொல்வர் என்றும் பேராசிரியர் கூறுவர்.

"விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"

என்று விருத்தியுரையாசிரியரும், இளம்பூரணரும் பாடல் கொள்வர், இரண்டாவது அடியின் முதல் இரு சீர்களில் மட்டும் 'புதுவது கிளந்த' என்று காரிகையுரையாசிரியரும், பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் பாட வேறுபாடு கொள்வர், இவ்வாறு பாடல் வேறுபட்டுக் கூறினும், 'புதுவது கிளந்த' என்பதற்கு விளக்கம் கூறிற்றிலர், புதுவது புனைந்த என்பதால், வடிவச் சிறப்புப்

புலப்படுத்தப்படுகிறது. ஆதலின் புதுவது புனைந்த என்று பாடங்கொள்வதே, ஏற்புடையதாகும்.

விருத்தியுரையாசிரியரும், காரிகையுரை யாசிரியரும், "விருந்து என்பது புதியவாயினவற்றின் மேற்று, அவை இப்பொழுது உள்ளாரைப் பாடும் பாட்டு" என்பர். இளம்பூரணர் 'விருந்தாவது முன்புள்ளார் சொன்ன நெறிப் போய்ப் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலது. புதிதாகப் புனைதலாவது ஒருவன் சொன்ன நிழல் வழியின்றித் தானே தோற்றுவித்தல் என்பார், பாவாணர், 'விருந்து என்பது அவ்வப்போது, புதிது புதிதாகத் தோன்றும் பலவகைப் பனுவல்கட்கும் பொதுப்பெயர் என்பர்'. கி.வா.சகந்நாதன் 'அவ்வக் காப்பியத் தலைவர்கள் காலத்தே பாடப் பெற்றமையாதலின், அவை விருந்தாகும்' என்பர். இரா.இளங்குமரன் 'இப்பொழுதுள்ளாரைப் பாடுவதும், இப்பொழுது காணப்பெறும் விந்தையினையும் நிகழ்ச்சியினையும் பாடுவதுமாம்', என்பர். இரா.காசிராசன் 'காப்பிய ஆசிரியர்கள் தாமே கதையைப் புனைந்து கொள்வது விருந்துவகை இலக்கியமெனலாம்' என்பர். கை.கா.சிவப்பிரகாசம் 'பொருள், உருவ அமைப்பு, நுவல்திறன், இவற்றின் புதுமையழகு சான்ற இலக்கியங்கள்' என்பர். இவ்வாறு உரை விகற்பம் கொள்வர்.

இதற்குக் காட்டாக விருத்தியுரையாசிரியரும், காரிகையுரையாசிரியரும், 'அவை வழிப்பட்டு அறிந்து கொள்க' என்பர், பேராசிரியர். 'முத்தொள்ளாயிரம், பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளுமென உணர்க. கலம்பகம் முதலாயினவுஞ் சொல்லுப' என்பர், தேவநேயப் பாவாணர், 'குழவி மருங்கினும் கிழவ தாகும்' (தொல்.புறத்.26) என்பது பிள்ளைத்தமிழ் என்னும் பனுவலையும், 'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' (தொல்.புறத்.30) என்பது உலா அல்லது ஊரின்னிசையையும் குறிக்கலாம் என்பர். கி.வா. சகந்நாதன் 'இராசராச விசயம், வீரணுக்க விசயம், குலோத்துங்க சோழ சரிதை' ஆகியவற்றைக் கூறுவர். வை.கா.சிவப்பிரகாசம் 'தொண்ணூற்றாறு வகைச் சிறு பிரபந்தங்கள், இக் காலச் சிறுகதை, நெடுங்கதை, தன்வரலாறு' ஆகியவற்றையும் கூறுவர்.

இதனால் விருந்து வனப்பு இயல்புகள் முன்புள்ளார் சொன்ன நெறிப்போய்ப் புதிதாகச் சொன்ன யாப்பு, இருவன் சொன்ன நிழல் வழியன்றித் தானே தோற்றுவித்ததில், இப்பொழுது உள்ளாரையும், இப்பொழுது காணப்பெறும் விந்தையினையும், நிகழ்ச்சியினையும் பாடுவது, பொருளாலும், வடிவத்தாலும் புதுமையாய் அமைவன. செய்யுளாலும், உரைநடையாலும் இயற்றப்பட்டன.

6. இயைபு என்பது ஞணநமன யரலவழள என்னும் பதினொரு மெய்யெழுத்துகளில், ஒன்றனையீறாகக் கொண்டு, செய்யுஞ் செய்யுளைப் பொருள் தொடராகவும், சொல் தொடராகவும் செய்வது. பொருளுஞ் சொல்லும் இயைந்து வரும். மணிமேகலையும், பெருங்கதையும் இதற்குச் சான்றென்பர் பேராசிரியர்.

"ஞகார முதலா னகார ஈற்றுப்
புள்ளி யிறுதி இயைபெனப்படுமே" (தொல். செய்யுள்.1496).

7. புலன் என்பது சேரி மொழிகளால் (பேச்சு வழக்குச் சொல்) எளிதிற் பொருள் உணரும்படி கூறும் கதைகள். இதற்குச் சான்றாக பேராசிரியர் கூறும் 'விளக்கத்தார் கூத்து முதலாகிய நாடகச் செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள் போல்வன' என்று கூறும் நூல்கள் இக் காலத்தில்லை.

"தெரிந்த மொழியாற் செவ்விதின் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோற்றின்
புலன்என மொழிப புலன் உணர்ந் தோரே"
(தொல்.1497).

8. இழைபு என்பது வல்லின மெய் கலந்த வல்லெழுத்துப் பயிலாமல், இருசீரடி முதலாக, எழுசீரடி அளவுள்ள கட்டளையடி ஐந்தினையும் கொண்டு, நெட்டெழுத்தும், அந் நெட்டெழுத்துப் போல் ஒலி தரும் மெல்லெழுத்தும், லகரளகரங்களும் உடைய சேரிச் சொற்களான் இயைந்து நடப்பது.

"ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்து அடக்காது
குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து
ஓங்கிய மொழியான் ஆங்ஙனம் ஒழுகின்
இழைபின் இலக்கணம் இயைந்த தாகும்"
(தொல்.1498)

கலியும் பரிபாடலும் போல்வன சான்றென்பார் பேராசிரியர்.

வனப்பிரமை *vaṉa-p-piramai,* பெ.(n.) ஓர் கற்பக மூலிகை; a rejuvenating plant.

[வனம் + பிரமை]

வனப்பிரமி *vaṉa-p-pirami,* பெ.(n.) சதுர கிரியில் விளையும் ஓர் மூலிகைச் செடி. கொடியாய் படர்ந்து நெல்லி இலையைப் போல் தடிமனாக இருக்கும். ஓர் மருந்தாகவும் பயன்படுத்துவர்; a herb growing in saturagiri hills. it is a creeper. it must be collected on auspicious day. if taken for 30 days the body becomes rejuvenated.

[வனம் + பிரமி]

வனப்பு[1] *vaṉappu,* பெ.(n.) இசை வகை; a tune. *"பெருவண்ணம் இடைவண்ணம் வனப்பென்னும் வண்ண விசை" (பெரியபு. ஆனாய. 28). "மம்மர் செய்த வனப்பியாங் கொளிந்தன" (மணிமே.22, 128).*

[வள்→ வன் + அம்–வனம்→ வனப்பு.]

வனப்பு[2] *vaṉappu,* பெ.(n.) 1. அழகு; beauty, grace, charm, loveliness, pultiness. *"செவ்வானத்து வனப்பு" (புறநா. 4).* 2. இளமைநிறம் (திருமுரு. 17, வேறுரை); fresh colour of youth. 3. பல உறுப்புந் திரண்டவழிப் பெறுவதோர் செய்யுளழகு (தொல். பொருள். 548); elegance of a literary work resulting from the perfection of its parts. 4. பெருந் தோற்றம்; largeness of size, gigantic appearance. *"வனப் பஞ்சான்" (ஏலா. 22).*

தெ. கொள் →கொன் →கொனு →கொனி = கொண்டு.

[வள்→ வன் +அம் – வனம்→ வனப்பு. வனப்பு = அழகு.]

'ள'கரமெய் தமிழிலும் திரவிடத்திலும், 'ன'கர மெய்யாகத் திரியும்.

எ.டு.:– தெள் →தென் →தேன். தெளிவு, தேறல் என்னும் சொற்களை நோக்குக.

"பெரும்பான்மையும் பல உறுப்புந் திரண்ட வழிப் பெறுவதோர் அழகு" (அடி.சிலம்பு. உரைப்பாயிரம். பேரா.தொல்.பொருள்.547).

தொல்காப்பியர் காலத்தில், செய்யுள் எழுவதற்குரிய நிலைக் களங்கள் பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என எழு வகையாய் வகுக்கப்பெற்றிருந்தன.

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பேர் எல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்"
(தொல்.1336) என்பது தொல்காப்பிய நூற்பா.

அவ் வெழுவகை நிலைக்களத்துள், பாட்டு என்பது அம்மை (1491, அழகு (1492), தொன்மை (1493), தோல் (1494), விருந்து (1495), இயைபு

(1496), புலன் (1497), இழைபு (1498) என எண்வகை வனப்பாக வகுக்கப் பெற்றிருந்தது.

வனப்பு என்னும் தூய தீந்தமிழ்ச் சொல் இருக்கவும், அதற்குப் பகரமாகக் காவியம் என்னும் வடசொல்லைக் காப்பியம் என்று திரித்து,

"நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்" (மணிமே.19:80) என்று, முதன்முதலாக காப்பியச்சொல் ஆண்டவன், சீத்தலைச் சாத்தன்.

தொல்காப்பியத்தில் இலக்கணம் கூறப்பெற்ற எண்வகை வனப்பிற்கும், இலக்கியமாயிருந்த பனுவல்களெல்லாம், அறவே இறந்துவிட்டன. ஆதலால், கி.பி.3ஆம் நூற்றாண்டிற்கும் 10ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட பத்து வனப்புகளும், ஐம்பெருங் காப்பியமென்றும், ஐஞ்சிறு காப்பியமென்றும், அக் காலத்திறுதியில் இரு கூறாக வகுக்கப்பட்டன.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐந்தும் பெருவனப்பு: நீலகேசி, சூளாமணி, யசோதரகாவியம், பெருங்கதை, நாககுமார காவியம் என்னும் ஐந்தும் சிறுவனப்பு ஆகும். பெருவனப்புள் இறுதியிற் குறிக்கப்பட்ட இரண்டும், சிறுவனப்புள் இறுதியிற் குறிக்கப்பட்ட ஒன்றும், இன்றில்லை.

வனப்பைப் பிற்காலத்திலக்கணியர், தொடர் நிலைச் செய்யுள், தனிநிலைச் செய்யுள் என்று இருவகையாகவுங் குறிப்பாராயினர்.

ஒப்புயர்வற்ற ஒருவனைத் தலைவனாகக் கொண்ட நீண்ட கதை தழுவி, காண்டம், படலம் முதலிய பெரும் பகுப்புகளைக் கொண்டு, பல்வேறு வகைப்பட்ட காலம், இடம், நிகழ்ச்சி, மக்கள் வாழ்க்கைமுறை, தொழில், பழக்கவழக்கம், அரசியல், ஊணுடையுறையுள், நிலைத்திணையும் இயங்குதிணையுமாகிய மற்ற வுயிரினங்கள் முதலிய பொருள்களைப் பற்றிய வண்ணனைகளை யுடையதாய், விரிவாய் வரும் வனப்பிலன்றி, வேறெவ் வகைப் பனுவலிலும், சொல்வளத்தைப் பேரளவாகக் காண முடியாது. அவ் வனப்புச் சொல்வளமும், வனப்பாசிரியனின் புலமைத் திறத்தைப் பெரிதும் பொறுத்ததாகும். ஐம்பெரு வனப்புகளுள் சிலப்பதிகாரமும், சிந்தாமணியும், ஐஞ்சிறு வனப்புகளுள் பெருங்கதையுமே, சொல் வளமுடையன. இம் மூன்றும் முறையே தலையிடை கடையாம்.

வனப்புவண்ணம் *vaṉappu-vaṇṇam,* பெ.(n.) இசைவகை (பெரியபு. ஆனாய. 28); a variety of melody.

[வனப்பு + வண்ணம்]

வனப்புள் *vaṉappuḷ,* பெ.(n.) பயிற்சி கொடுக்கப்பட்ட பறவை (வள்ளசத்திய ஞான.25); shepherd koel.

[வனம் + புள்]

வனபலம் *vaṉa-palam,* பெ.(n.) ஆனைத் திப்பிலி (சங்.அக.); elephant pepper.

[வனம் + பலம்]

வனபிப்பிலி *vaṉa-pippili,* பெ.(n.) காட்டுத் திப்பிலி (சங்.அக.); long pepper.

மறுவ. பெருந்திப்பிலி

[வனம் + பிப்பிலி]

வனமாலைப்பூடு *vaṉa-mālai-p-pūḍu,* பெ. (n.) மருளூமத்தை; a variety of dhatura.

[வனமாலை + பூடு]

வனமிகுத்திரி *vaṉa-migu-t-tiri,* பெ.(n.) காயாங்குலை; a plant.

[வனம் + மிகு + திரி]

வனமிரட்டி *vaṉa-miraṭṭi,* பெ.(n.) ஓர் கொடி; a climber (சா.அக.).

[வனம் + மிரட்டி]

வனமீகம் *vaṉa-mīgam,* பெ.(n.) புற்றுமண்; the earth or mud of the white ant-hill.

[வனம் + மீகம்]

வனமீன் *vaṉa-mīṉ,* பெ.(n.) முதலை; crocodile.

[வனம் + மீன்]



வனமுதம் *vaṉa-mudam,* பெ.(n.) கார்முகில் (யாழ்.அக.); cloud.

[வானமுதம்→வனமுதம்]

வனமுரை *vaṉa-murai,* பெ.(n.) முதிரை (சங்.அக.); pigeon-pea, dholl.

[வனம் + முதிரை → முரை]

வனமுள்ளாலி *vaṉa-muḷḷāli,* பெ.(n.) நறுங்குறிஞ்சா; swallow wort - *Ascleepias vormitoria* (சா.அக.).

[வனம் + முள்ளாலி]

வனமைத்தாங்கி *vaṉamai-t-tāṅgi,* பெ.(n.) கருடன்; skyroot; a creeper - *Bryonia chigaea.*

வனயீட்டி *vaṉa-y-īṭṭi,* பெ.(n.) கிடைத்தற்கரிய மூலிகை; a rare drug capable of consolidating salammoniace and used for transmuting and metal into gold.

இது சாரத்தை கட்டி, பொன்னாக்கும்.

வனராசபூண்டு *vaṉa-rāša-pūṇḍu,* பெ.(n.) சிறுதும்பை; a small variety of dead nettle or leucas.

வனவாசனம்[1] *vaṉa-vāšaṉam,* பெ.(n.) நாவி; a poisonous root-*Aconite.*

வனவாசனம்[2] *vaṉa-vāšaṉam,* பெ.(n.) புனுகுப்பூனை (யாழ்.அக.); civet cat.

[வனம் + வாசனம்]

வனி[1] *vaṉi,* பெ.(n.) செஞ்சித்திரமூலம்; a plant- plumbago rosea.

வனி² vaṉi, பெ.(n.) சுரம் (இராசவைத். 149); fever.

ம. பனி

[வல்→வன்→வனி.]

ஒ.நோ. கல்→கன்→கன்னி.

வனிக்கொடி vaṉi-k-koḍi, பெ.(n.) ஒரு வகைக்கொடி; (L.) mexican vanilla.

[வனி + கொடி]

வனீரம் vaṉīram, பெ.(n.) பெரிய திப்பிலி (மூ.அ.); long pepper.

மறுவ. காட்டுத்திப்பிலி

வனுக்கு vaṉukku, பெ.(n.) துருசு; blue vitriol-copper sulphate.

வனை-தல் vaṉai-, 2 செ.கு.வி.(v.i.) 1. உருவமையச் செய்தல்(பிங்.); to form, fashion, shape. *"வனை கலத்திகிரியும்" (சீவக. 1839).* 2. அழகுபடுத்துதல் (சூடா.); to adorn. 3. சித்திரமெழுதுதல்; to draw, paint, engrave. *"வனையலாம் படித்தலா வடிவிற்கு" (சீவக. 709).*

[வல்→ வள்→ வள→ வளை→ வனை-. சக்கரத்தைச் சுற்றி மட்கலம் அமைத்தல் (வே.க.4, பக்.96).]

வனைகோல் vaṉai-kōl, பெ.(n.) படந்தீட்டுந் தூரிகை; painter's brush. *"செம்பொற் படாமும் வனைகோலும் வாங்கினாள் நம்பி வடி வெழுத" (அழகிய நம்பியுலா. 147).*

மறுவ. வட்டிகை

[வள்→வன்→வனை + கோல். ள→ன திரிபு.]

(ஒ.நோ.) தெள்→தென்→தேன்.



செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

எட்டாம் மடலம் - இரண்டாம் பாகம்

வா - வீ

Vol. VIII - Part - II

து.இராசேந்திரன் இ.ஆ.ப

அரசு செயலாளர்

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட

இயக்கக வெளியீடு

2007

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

எட்டாம் மடலம் - இரண்டாம் பாகம்

(வா, வீ)

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

VOL. VIII - PART II

து. இராசேந்திரன், இ.ஆ.ப.
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும்
செய்தித் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு

2007

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 23

முதற் பதிப்பு : 2007

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. VIII, Part - II

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு
Government of Tamilnadu

விலை : உருபா 400/–

குறியீட்டெண் : Colon No. P.J1-J, 314"K.M4

வெளியிட்டோர் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

அச்சீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை 600 113.

நூல் கிடைக்குமிடம் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை – 600 113.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

VOL. VIII- PART II

எட்டாம் மடலம் - இரண்டாம் பாகம்
(வா - வீ)

பதிப்புக் குழு

து. இராசேந்திரன், இ.ஆ.ப.
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும்
செய்தித் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

கூர்ந்தாய்வாளர்
புலவர். இறைக்குருவனார்
திரு.க.கணேசன்

தொகுப்பாளர்கள்
திரு.முத்து.பிச்சை
முனைவர் மு.கண்ணன்
முனைவர் பா.வெற்றிச்செல்வன்
முனைவர் ச.செந்திலாண்டவன் (பகுதிப் பொறுப்பாளர்)
முனைவர் இரா.கு.ஆல்துரை
திரு.கா.இளமுருகு
திரு.ச.கி.கணேசன் (ஓவியர்)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை

20-4-2007

அணிந்துரை

அகரமுதலி திட்டத்தின் ஏழு மற்றும் எட்டாம் மடலங்கள் இதழ்களை விரிப்பது கண்டு என் இதயம் பெருமிதம் எய்துகிறது. ஒவ்வொரு மொழியிலும் அதன் சொற்களுக்கு வேர் மூலம் காண முற்படும்போது, பெரும்பாலான சொற்களின் வேர்மூலங்கள் அடுத்த மொழிகளில் சென்று நிற்கும். ஆனால், தமிழில் உள்ள சொற்களின் மூலங்கள் அனைத்தும் தமிழிலேயே அமைந்துள்ளன. இப்போது நடைமுறையில் வழங்குகிற தமிழ்ச் சொற்களும், உருவாகி வருகின்ற கலைச் சொற்களும், தொழில்நுட்பச் சொற்களும் ஏற்கனவே வழங்கிய வேர் மூலங்களிலிருந்து விரிந்தும் பெருகியும் வந்தனவும் வருவனவும் ஆகும்.

அறிவியல் வளர்ச்சி மிகுந்துள்ள இந்நாளில், செய்தித் தொடர்பாலும் தொழில் நுட்ப வளர்ச்சியாலும் உலகம் சுருங்கிவிட்ட நிலையில், ஒரு மொழியில் அண்டையயல் மொழிச் சொற்களெல்லாம் கலந்து விடுவது இயல்பு. இத்தகைய சூழ்நிலையிலும் தமிழ் தனித்தியங்க வல்லதாக நெடுங்காலமாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. இதைத்தான் பாவேந்தர் பாரதிதாசனார் 'தனித்தியங்கும் தன்மை தமிழினுக்கு உண்டு; தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு' என்று ஆணித்தரமாகப் பாடி வைத்தார்.

அவ்வாறு, தமிழ், தான் தனித்தியங்குவது மட்டுமல்லாமல், பிற மொழிகளுக்கும் சொற்களை வாரி வழங்கிக் கொண்டுள்ளது. தமிழகத்திற்கு அப்பால் தனித்தனியே பிரிந்து வழங்கிவரும் திராவிட மொழிகளுக்கெல்லாம் தமிழ்மொழி வேர் மூலங்களை வழங்கியுள்ளதால், அவற்றின் அடிப்படையிலேயே அம்மொழிகளில் சொற்கள் பெருகியுள்ளமையைக் காண்கிறோம். அதனாலேயே, 'தமிழ் திரவிடத்திற்குத் தாய்' என்று தேவநேயப் பாவாணர் பறை சாற்றினார்.

இன்னும் பல மொழிகளிலுமுள்ள சொற்களின் வேர் மூலங்களும் தமிழிலேயே இருப்பதைக் காண நேர்கிறது. இது மொழியியல் உலகின் ஆய்வுப் போக்கைப் பல திருப்பங்களுக்கு உள்ளடக்குகின்றது. நெடுங்காலமாக வழக்கத்தில் இருப்பதும், தனித்தியங்க வல்லதும், பிறமொழிகளுக்குச் சொற்களை வழங்கவல்லதுமான மொழியே 'செம்மொழி' எனச் செம்மொழி இலக்கணம் வரையறுக்கப்படுகின்றது. தமிழின் இலக்கண இலக்கிய நூல்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு மறைக்கப்பட்டிருந்த காலமான கி.பி. 1857 அளவில் தமிழகம் வந்திருந்த கால்டுவெல் பெருமகனார் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் ஓர் ஒப்புமையைக் கண்டறிந்து, "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" (The comparative grammar of Dravidian Languages) என்ற நூலை வெளியிட்டார். அதன் வழி அவர் தன் ஆராய்ச்சியில் கண்ட முடிவுதான், "தமிழ் ஒரு செம்மொழி" என்பதாகும்.

அதன்பின், ஆங்கில அறிஞர்களான, "மெக்ளின்" போன்றவர்கள் தமிழ்மொழியில் உள்ள பதிவுகளையும், தமிழர்களின் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றையும் அறிவியல், வானியல் போன்றவற்றில் அவர்கள் பெற்றிருந்த அறிவாற்றலையும் ஆராய முற்பட்டனர். அவற்றின்வழி அந்த அறிஞர் பெருமக்கள் எல்லாம், 'தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழி' (Primary Classical) என்று வழிமொழிந்து சென்றனர்

இவற்றின் தொடர்ச்சியாகத் தமிழை ஒரு செம்மொழி என அரசே அறிவிக்க வேண்டுமென்று பரிதிமாற் கலைஞர் தன் கோரிக்கையை முதன்முதலில் அரசின் முன்வைத்து வலியுறுத்தினார்.

ஆனால், இதை முழுவதுமாக அறிவியல் வழியாக மொழியியலில் நிறுவுவதற்குச் சொற்களுக்கு உரிய வேர் மூலம் காணும் சொற்பிறப்பியல் பணியே துணை நிற்கும் என்று, தன் வாழ்நாளையே சொல்லாய்வுக்கென ஒப்புவித்துக் கொண்டவர் 'மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்'. இத்தகைய பலரது தொடர்ச்சியான சிந்தனைகளின், செயல்பாடுகளின் மூலமாகத்தான் தமிழ் ஒரு செம்மொழி என்பதற்கான அங்கீகாரத்தை இன்று நாம் வென்றெடுத்துள்ளோம்; வெற்றிவாகை சூடியுள்ளோம்.

தமிழ்மொழியில் வழங்கும் சொற்களுக்கெல்லாம் வேர்மூலம் காண்பது என்பது ஆழ்கடலில் முத்தெடுக்கும் பணியினும் கடினமானது; இந்தப் பணியொன்றே தமிழ் செம்மொழி என்பதை ஏற்கச் செய்யும் முதன்மைப் பணியாகும். இப்பணியில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பல ஆண்டுகள் உழைத்து ஆராய்ச்சி நூல்கள் பலவற்றை உருவாக்கி வெளியிட்டுள்ளார்; 'உயர்தனிச்செம்மொழி' (The Primary Classical Language of the World) என்ற நூலைப் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே வெளியிட்டுள்ளார்.

தேவநேயப் பாவாணரின் இந்தச் சொல்லாராய்ச்சித் திறனை அறிந்து, அவர்தம் பணி தமிழ் உலகிற்குத் தேவை என்று நான் கருதியதால் 8.5.1974 அன்று, 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்ககம்' என்னும் ஒரு துறையைப் புதிதாக நிறுவி, அதற்குப் பாவாணர் அவர்களையே இயக்குநராகவும் நியமனம் செய்து அகர முதலித் தொகுதிகள் வெளிவர ஆவன செய்ததை இவ்வேளையில் மகிழ்வுடன் நினைவு கூர்கிறேன். அதன் பயனாக, பணிகள் சிறப்பாக நிகழ்ந்து முதல் தொகுதி அணியமாகிக் கொண்டிருக்கும் நிலையில் பாவாணர் அவர்கள் திடீரென மறைந்தார்கள். அதற்குப்பின் அவர்தம் நூல்களை அடிப்படையாகக் கொண்டு, அவரின் அணுகுமுறையிலேயே தொடர்ந்து அகர முதலித்திட்டத்தின் அடுத்தடுத்தத் தொகுதிகள் வெளிவரலாயின.

பாவாணர் மறைவுக்குப் பின்னும், ஒவ்வொரு முறையும் அரசுப்பொறுப்பு ஏற்கிற போதும் இந்தத் துறையின் வளர்ச்சியில் நான் மிகுந்த அக்கறை செலுத்தி வந்துள்ளேன். 1996ஆம் ஆண்டில் தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாட்டுக்கு எனத் தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டுச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்திற்குத் தேவையான கூடுதல் பணியாளர்கள், கணிப்பொறியமைப்பு போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

இதுவரை, மும்மூன்று தொகுதிகள் கொண்ட ஆறு மடலங்களாக மொத்தம் 18 தொகுதிகள் சென்ற ஆண்டுவரை வெளிவந்து முடிந்துள்ளன. இப்போது 'ம', 'ய', 'வ' வரிசையில் ஆறு பகுதிகள் வெளிவருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். எஞ்சிய பகுதிகளும் விரைந்து வெளிவர வேண்டும் என்பது என் அவா. இந்த அகரமுதலிப் பகுதிகள் வெளிவர உறுதுணையாய் நின்ற தமிழ் வளர்ச்சி–பண்பாடு (ம) அறநிலையத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் மற்றும் அகரமுதலித் திட்ட இயக்கத்தின் பொறுப்பு இயக்குநர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப. அவர்களுக்கும், நூல்களை உருவாக்கியுள்ள அகரமுதலித் திட்டத்தின் ஆசிரியர், பணியாளர் குழுக்களுக்கும் எனது உளமார்ந்த பாராட்டுகள் உரித்தாகுக.

என்றும்,
அன்புடன்

(மு. கருணாநிதி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
"முத்தமிழறிஞர்"
கலைஞர் மு. கருணாநிதி

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

தமிழ்நாடு அரசு

து. இராசேந்திரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையம் (ம) செய்தித் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்,

பதிப்புரை

"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" – பாவேந்தர்

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரை அவரது செந்தமிழ் ஆய்வைக் கண்டு அறிஞருலகம் பாராட்டி மகிழ்ந்தது. 'செஞ்சொற் கொண்டல்' என்னும் புலவர் பாவாணரைப் பாடுகிறார்:

"செந்தமிழ்ச் சீயம் ! சிந்தனைக் கூர்வாள் !
முந்தும் மொழியியல் மூத்த மறவன் !
உயிரும் உணர்வும் ஒண்டமிழாக
அயிர்ப்பின்றி வாழ்ந்த அயர்விலாப் புலவன்
'தமிழே முதன்மொழி ! தமிழரே முதலோர்' –
அமிழ்தென உண்மையை அனைவரும் அறிய
முழங்கிய அறிஞர் ! முழுதும் தமிழாய்
வழங்கிய காவலன் !

ஆம் புலவர் கூறியது அனைத்தும் உண்மை ! பாவாணரது அகரமுதலி ஆய்வு தமிழையும் தமிழனையும் பற்றியது ! சொல்லும் பொருளும் இயைந்து நடந்து எழில்மிக்க சோலையாகத் திகழும் செந்தமிழ்ப் பூங்காட்டில் 'வேராய்வு' என்னும் தேனெடுத்து நமக்குத் திகட்டாமல் தந்தவர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், அவர்களாவர் ! பன்மொழிப் புலவராகவும் பல்வகைக் கலையறிவு படைத்தவராகவும் விளங்கினார். அத்தகைய 'சொல்லாய்வுச் செம்மல்' காட்டிய வழியில் சொற்பொருளாய்வு செய்து தற்போது வெளிவரும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் எட்டாம் மடலத்தின் இரண்டாம் பகுதி செவ்விய முறையில் வெளிவருகின்றது !

இம்மடலத்தில் அமைந்துள்ள சொற்களின் விரிவான விளக்கங்களும் அவற்றிற்கேற்ற படங்களும் இம்மடலத்தின் விரிவையும் அகலத்தையும் ஆழத்தையும் காட்டுவதாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாகப் பாவாணர் கூறிய விளக்கங்களை ஒரு சொல் விளக்கம் மூலம் இங்கே காணலாம்.

விடை[9] *viḍai*, பெ.(n.) 1. எருது (பிங்.); bull *"பீடுடைய போர்விடையன்" (தேவா.539, 2). "தோடுடைய செவியன் விடையேறியோர்" (தேவா.)* 2. எருது ஓரை (இடபவிராசி) (பிங்.); taurus of the zodiac. 3. எருமைக்கடா; buffalo bull. *"மதர்விடையிற் சீறி" (பு.வெ.7, 14).* 4. மரையின் ஆண்; male of the bison. *"மரையான் கதழ்விடை" (மலைபடு.331).* 5. ஆட்டுக்கடா; ram. *"விடையும் வீழ்மின்" (புறநா.262).* 6. வெருகு (தொல்.பொ.623, உரை); tom-cat. 7. குதிரை (யாழ்.அக.); horse.

கூடற்கேற்ற நிலையில் எல்லா உயிரினங்களும் அதற்கேற்றவாறு பருத்திருத்தல் இயல்வு. இதனாலேயே, ஆடு மாடு சில விலங்கினங்களும் கோழி மயில் முதலிய பறவையினங்களும் பருத்த இளமை நிலையில் விடையெனப்படும். (த.வ.பக்.46).

விடைத்தல் = விம்முதல், பருத்தல், விறைத்தல், செருக்குதல்.

விலங்கினத்தில் பெரும்பாலும் ஆண் பருத்திருப்பதால், விடை என்னும் சொல் விலங்கின் ஆண்பாலை உணர்த்தும்.

விடை → விடலை = இளங்காளை, காளை போன்ற மறவன், பாலைநிலத் தலைவன்.

விடலை = L. Vitula Gk. italos-skt. vatsa.

விடை என்பது விலங்கினத்தின் ஆண்பாலைக் குறிக்கும் பொதுச் சொல்லாயினும், வழக்கு மிகுதிபற்றிச் சிறப்பாகக் காளையையே உணர்த்தும்.

வடவர் காட்டும் மூலம் வ்ருஷ் (மழைபெய்) என்பதே. மழைக் கருத்தினின்று, ஆண்மைக் கருத்தை இருவேறு வகையில் கடுகளவும் பகுத்தறிவிற்கொவ்வாதவாறு வலிந்து வருத்தி யிருக்கின்றனர்.

வ்ருஷ் = மழைபெய் (இ.வே.) மழைபோல் அம்பைப் பொழி, ஆண்மைகொள், பிறப்பிப்பு ஆற்றல் பெறு.

வ்ருஷன் = (ஒருகால், முதலில் பெய்கின்ற, தெளிக்கின்ற, சினைப்பிக்கின்ற) ஆண்மையுள்ள வலிமையுள்ள, மைந்துள்ள (இ.வே.) ஆடவன், ஆண், ஆண்விலங்கு, காளை, ஆண்குதிரை, தலைவன்.

வ்ருஷ = ஆடவன், ஆண், கணவன், ஆண் விலங்கு, காளை, விடையோரை, தலைவன், தலைசிறந்தது.

வ்ருஷப(bh.) = வ்ருஷன் (இ.வே.)

வ்ருஷப–ருஷப = காளை (இ.வே.)

வ்ருஷப என்பதன் முதற்குறையே ருஷப என்பது. ஆயினும் வடவர் அதுவந்த வழியை அறியாமலோ, வடசொல்லாகக் காட்டல் வேண்டி வேண்டுமென்றோ, ருஷ்^{2} என்பதை ருஷப என்னும் வடிவிற்கு மூலமாகக் காட்டுவர்.

ருஷ்^{2} = செல், இயங்கு; குத்து, கொல்; உந்து, தள்.

விடை என்னும் சொல்லின் திரிபாதலாலேயே, வ்ருஷ என்பதில் வகரம் உள்ளது. ஆயின், வ்ருஷ் (மழைபெய்) என்னுஞ் சொல்லொடு அதைத் தொடர்புபடுத்தி உத்திக் கொவ்வா முறையில் பொருள் தொடர்பு காட்டினர். அதனோடமையாது, ருஷப என்னும் முதற்குறைத் திரிபையும் வேறுசொல்லாகக் கொண்டு அதற்கும் பொருள் பொருந்தா முறையிற் பொருள் பொருத்தினர்.

'விடை' என்பது கொச்சை வடிவில் 'விட' என்று நிற்கும். இடையின விடைச் செருகல் வழக்கப்படி வி → வ்ரு என்றும், மெய்த்திரிபு மரபுப்படி ட → ஷ என்றும், திரிந்தனவென உண்மையறிக. (வ.மொ.வ.89–90).

[விள் → விடு → விட → விடை (சு.வி.பக். 17]

மேலும் கூறுவதென்றால் 'வா' என்னும் வினைச்சொல் வரலாற்றைப் பாவாணர் கூறியவாறு தொகுத்துள்ளதும் 'வாகைத்திணை' விரிவைத் தொகுத்துள்ளதும், பல்வேறு மூலிகைப் பெயர்களும் அவற்றின் பயன்களும் காட்டப்பட்டுள்ளதும், வாய்ச்செய்கையொலிச் சொற்களைத் தொகுத்துள்ளதும், வாழ்த்துரை வகைகளைத் தொகுத்துத் தந்துள்ளதும், வாழை வகைகளைத் தந்துள்ளதும், வினைச்சொல் வகைகளைக் காட்டியுள்ள வகைமையும் வீணை பற்றிய விளக்கமும், வேர் விளக்கங்களும் 'தமிழே உலக முதன்மொழி, தமிழனே உலக முதல் மாந்தன்' என்ற மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் முழக்கத்திற்கு அணி சேர்ப்பதாக அமைகின்றன.

மேலும் ஆங்காங்கே விரிவாக எடுத்துக் காட்டியுள்ள வண்ணப்பட விளக்கங்களும் இம்மடலத்தின் பொலிவுக்கு வலுச்சேர்க்கின்றன.

தமிழ் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் ஊக்கம் அளித்து வரும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் வெளிவர அரும்பாடுபட்ட அனைத்துப் பதிப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர்கள், பகுதிப் பொறுப்பாளர், தொகுப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

7/3/2007

து. இராசேந்திரன்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

வா

வா[1] *vā*, வகர மெய்யும் அகரத்தின் நெட்டுயிரும் சேர்ந்து பிறக்கும் உயிர்மெய்யெழுத்து; the compound of வ் and ஆ.

[வ் + ஆ]

கீழுதடு மேல்வாய்ப் பல்லைத் தொட்டிறங்குவதாற் பிறப்பது. வா.

வா[2]**-தல்** *vā-*, செ.குு.வி. (v.i.) 1. வருதல்; to come. *"தருசொல் வருசொல் ......தன்மை முன்னிலை" (தொல்.சொல்.29).* 2. நேர்தல்; to happen. *"வருப வந்துறுங்க ளன்றே" (சீவக.509).* 3. உண்டாதல்; to come into being. *"நலம் வர நாடி" (பு.வெ.ஒழிபு.9).* 4. பிறத்தல்; to be born. *"அந்தநன் மரபினில்... சந்தனு... வந்தனன்" (பாரத. குருகுல.33).* 5. மனத்துப் பதிதல்; to be known, understood, comprehended. *"அந்தப் பாடம் உனக்கு வந்ததா?".* 6. நன்கறியப்படுதல்; to become crystal clear, to be attained, as a language, a science. *"அவனுக்கு இலக்கணம் வரும்".* 7. முற்றுப்பெறுதல்; to be completed, finished. *"ஸ்ரீமான் செய்ததெல்லாம் நன்றாய் வருங்காண்" (ஈடு.7, 9, 9).* 8. இயலுதல்; to be able. *"அது என்னாற் செய்ய வாராது".* 9. மிகுதல்; to surplus, to abound, increase. *"அணிவரு பூஞ்சிலம்பு" (பு.வெ.12, பெண்பாற்.17).*

தெ. ரா; க., து. பா; ம. வா.

'வா' என்னும் வினைச்சொல் வரலாறு:

வள் → வர் → வார் → வ. வர் → வரு.

சொல்லாக்கத்தில் ட, த, ல, ழ, ள ஐந்தும் ரகரமாகத் திரியும். அத்திரிவில் லகரளகரம் பேரளவும், அவ் விரண்டனுள்ளும் ளகரம் பெரும்பான்மையும் ஆகும்.

எ-டு:

ட - ர : கடு → கடி → கரி. படவர் → பரவர்.

த - ர : விதை → விரை. ல - ர : உலவு → உரவு, குலவை → குரவை, குதில் → குதிர், பந்தல் → பந்தர்.

ழ - ர : புழை→புரை.

ள-ர : அள் → அர் → அரு → அருகு. கள் → கர் → கரு, சுள் → சுர், தெளி → தெரி, நீள் → நீர், பிள் → பிர் → பிரி, முள் → முர் → முரு → முருகு (இளமை), விள் → விர் → விரி.

முதற்காலத்தில் முதனிலையாக வழங்கி வந்த சில வினைச் சொற்கள் வழக்கற்றுப் போனதினால், இன்று அவற்றிற்குத் தலைமாறாக அவற்றின் தொழிற் பெயர்களே தமித்தும் துணைவினையொடு கூடியும் வழங்கி வருகின்றன.

எ-டு:

முதனிலை	முற்காலப் புடைபெயர்ச்சி	இக்காலப் புடைபெயர்ச்சி
நகு	நக்கான்	நகைத்தான்
தள்	தட்டான், தட்கின்றான், தட்பான்,	தளைத்தான், தளைக்கின்றான் தளைப்பான்
கள்	கட்டான், கட்கின்றான், கட்பான்	களவுசெய்தான், களவு செய்கின்றான், களவு செய்வான்.

களவாண்டான், களவாள்கின்றான், களவாள்வான்; களவாடினான், களவாடுகின்றான், களவாடுவான்; என்பனவும் தொழிற்பெயர் துணை வினை கூடி முதனிலையாகிப் புடை பெயர்ந்தனவே. ஆள், ஆடு என்பன துணை வினைகள், களவுபன், களவடி, களவுகாண் என்பனவும் துணைவினை கொண்டனவே.

இக்காலத்தில் 'வளை' என்று வழங்கிவரும் முதனிலை முற்காலத்தில் 'வள்' என்றே வழங்கிற்று.

வள்ளுதல் = வளைதல். வள்வு = வளைவு. வள்ளம் = வளைவு. வட்டம், வளைந்த அல்லது வட்டமான பொருள் (தொழிலாகு பெயர்). வள்ளி = வளைந்த கொடி.

ஒருவன் தன் உறைவிடத்தினின்று அல்லது இருப்பிடத்தினின்று ஓரிடத்திற்குப் போனபின், அங்கிருந்து உறைவிடத்திற்கு வருவது முன் பின்னாகத் திரும்பியே யாதலால், திரும்பற் கருத்தினின்றே வருகைக் கருத்துப் பிறந்தது. அதனால், திரும்பற் பொருட் சொல்லினின்றே வருகைப் பொருட்சொல் தோன்றிற்று.

திரும்புதல் = வளைதல், திசைமாறி நோக்கி நிற்றல், மீளுதல்.

மீளுதல் = திரும்பி வருதல், காலையிற் சென்று மாலையில் திரும்பினான் என்றால், திரும்பினான் என்பது திரும்பி வந்ததைக் குறித்தல் காண்க.

வலமாகவோ இடமாகவோ திரும்புதலுங் கூடுமேனும், ஒருவன் தான் போன இடத்தினின்று புறப்பட்ட இடத்திற்குத் திரும்பி வருவது முன்பின்னாகத் திரும்பியே யென்பது, சொல்லாமலே விளங்கும்.

திரும்பு என்னும் சொற்போன்றே, வளைதலைக் குறிக்கும் வேறுசில சொற்களும் மீளுதலைக் குறிக்கின்றன.

திரிதல் = வளைதல், மீளுதல். மடங்குதல் = வளைதல், மீளுதல். மறிதல் = வளைதல், மீளுதல்.

"திரிதல் மீளுதல்" (பிங்.7, 202).
"மறிதர லென்பது மீளுத லாகும்"(திவா.9)
"மறிதரல் திரிதரல் மடங்கல் மீளுதல்"
(பிங்.7 : 444)

அளைமறிபாப்பு என்னும் பொருள்கோட் பெயரிலும், மறியென்னுஞ் சொல் வளைதலையும் திசைமாறித் திரும்புதலையுங் குறித்தல் காண்க.

ஆங்கிலத்தில் வளைதலை அல்லது திரும்புதலைக் குறிக்கும் turn என்னும் சொல், re என்னும் முன்னொட்டுப் பெற்றுத் திரும்பி வருதலைக் குறிக்கின்றது. He never turned up this side என்னும் தொடரியத்தில், அச்சொல் up என்னும் முன்னீட்டொடு கூடி, வருகைப் பொருளையும் உணர்த்துகின்றது.

இதுகாறுங் கூறியவற்றால், 'வா' என்னும் வினைச்சொல் 'வளைதலைக் குறிக்கும் 'வள்' என்னும் முதனிலையினின்றே திரிந்துள்ளமை பெறப்படும்.

இற்றை முதனிலையான வளையென்னுஞ் சொல்லும், வளைய வளைய என்னும் நிகழ்கால வினையெச்ச வடுக்கிலும், வளைத்து வளைத்து என்னும் இறந்தகால வினையெச்ச வடுக்கிலும், திரும்பத் திரும்ப என்னும் பொருள் தோற்றுவித்தலைக் காண்க.

இதனால், கீழ்ப்படை முதனிலையான வள் என்னுஞ் சொல்லும், முற்காலத்தில் இப் பொருளுணர்த்தினமை உய்த்துணரப்படும்.

வள் → வர் → வார் → வா →வ. வர் → வரு. இனி, வள் → வாள் → வார் என்றுமாம். வாள் → வாளம்= வட்டம், வாள் → வாளி = வட்டமாயோடுகை.

வார் → வர் → வரு.

தமிழ் வினைச்சொற்களின் முதனிலை பெரும் பாலும் ஏவலொருமை வடிவிலேயே யுள்ளது. அவற்றுட் சிலவற்றில் மட்டும், ஏவலொருமை வடிவினின்று முதனிலை வேறுபட்டுள்ளது. அவ்வேறுபாடு மிக்க வினைகளுள் ஒன்று 'வா' என்பது, அதன் ஆட்சியிலும் புடைபெயர்ச்சியிலும், வா, வார், வர், வ, வரு என்னும் ஐவேறு வடிவுகள் காணப்படுகின்றன.

ஏவல் வடிவு, பொதுவாக முதனிலையளவில் ஒருமை பன்மையிரண்டிற்கும் பொதுவாகவே யிருக்கும். ஆயின், வருதல் வினையில் அவ்விரண்டும் வேறுபட்டுள.

ஒருமை	பன்மை
வா	வாரும் (வார்+உம்)
	வாருங்கள் (வார்+உம்+கள்)
	வம்மின் (வரு–வர்–வ + மின்)

பாரும் என்னும் பன்மை யேவலிற் பார் என்பது முதனிலையாயிருத்தல் போன்று, வாரும் என்பதில் வார் என்பதே முதனிலை யென்பது தேற்றம். ஆதலால், வார் என்னும் வடிவினின்றே ஏனை நால்வடிவுகளுந் திரிந்திருத்தல் வேண்டும். மேற்குறித்த ஐ வடிவுகளின் ஆட்சியும் வருமாறு.

1. வார்

வாரானை (வருகை) என்னும் வினைப்பெயர்; வாராமை என்னும் எதிர்மறை வினைப்பெயர்; வாரான், வாராதான் என்னும் எ.ம.வினையாலணையும் பெயர்கள்; வாரான் என்னும் எ.ம.வினைமுற்று; வாராய், வாரும், வாரீர் என்னும் உடன்பாட்டு ஏவல் வினைகள்; வாரல், வாராதி, வாராதே, வாராதீர், வாராதிர், வாரன்மின் என்னும் எ.ம. ஏவல் வினைகள்; வாரல், வாரற்க என்னும் எ.ம.வியங்கோள் வினைகள்; வாரா,

வாராத என்னும் எ.ம.பெயரெச்சங்கள்; வாராது, வாராதே, வாராமை, வாராமல், வாராமே, வாராக்கால், வாராவிடின் என்னும் எ.ம. வினையெச்சங்கள் ஆகியவற்றில் வார் என்னும் வடிவம் நிலைத்துள்ளது.

2. வா

வா என்னும் ஒருமையேவல் வினையில் மட்டும் வா என்னும் வடிவம் நிலைத்துள்ளது.

3. வ

வந்தான் என்னும் இறந்தகால வினைமுற்று; வந்தவன், வந்தான் என்னும் இ.கா. வினையாலணையும் பெயர்கள்; வந்த என்னும் இ.கா.பெயரெச்சம்; வந்து, வந்தால், வந்தக்கால், வந்தவிடத்து என்னும் வினையெச்சங்கள் ஆகியவற்றில் வ என்னும் வடிவம் நிலைத்துள்ளது. வம்மின், வம்மோ என்னும் பன்மை யேவல் வினைகள் வருமின், வருமோ என்பவற்றின் திரிபாயே யிருத்தல் வேண்டும்.

ஒருசில முதனிலைகளின் நெடின்முதல் இறந்தகால வினையிற் குறுகும்.

ஒ.நோ. தா–தந்தான்
சா – (சத்தான்) – செத்தான்
நோ – நொந்தான்
காண் – கண்டான்

4. வர்

வரவு, வரல், வரத்து என்னும் வினைப் பெயர்கள்; வராமை என்னும் எ.ம.வினைப்பெயர்; வராதவன், வராதான் என்னும் எ.ம. வினையாலணையும் பெயர்கள்; வரல், வரேல், வராதி, வராதே, வராதிர், வராதீர், வரன்மின் என்னும் எ.ம.ஏவல் வினைகள்; வரல், வரற்க என்னும் எ.ம.வியங்கோள் வினைகள்; வரா, வராத என்னும் எ.ம. பெயரெச்சங்கள்; வர என்னும் நி.கா. பெயரெச்சம்; வரின் என்னும் எ.கா. பெயரெச்சம்; வராது, வராமை, வராமல், வராமே, வராக்கால், வராவிடின் என்னும் எ.ம. வினையெச்சங்கள் ஆகியவற்றில் வர் என்னும் வடிவம் நிலைத்துள்ளது.

இதை வரு என்று கொள்ளவும் இடமுண்டு.

5.வரு

வருதல், வருகை என்னும் வினைப்பெயர்கள்; வருமை (மறுபிறப்பு) என்னும் பண்புப்பெயர்; வருகின்றவன், வருகின்றான், வருமவன் (வருபவன்), வருவான் என்னும் வினையாலணையும் பெயர்கள்; வருகின்றான், வருவான் என்னும் வினைமுற்றுகள்; வருதி, வருதிர் என்னும் ஏவல் வினைகள்; வருக, வருதல் என்னும் வியங்கோள் வினைகள்; வருவி, வருத்து என்னும் பிறவினைகள்; வருகின்ற, வரும் என்னும் பெயரெச்சங்கள்; வருவாய் என்னும் வினைத் தொகை ஆகியவற்றில் வரு என்னும் வடிவம் நிலைத்துள்ளது.

இற்றைத் தமிழில் வா என்று திரிந்துள்ள அல்லது ஈறு கெட்டுள்ள வார் என்னும் மூலத்தமிழ் முதனிலை அல்லது ஒருமை யேவல், பிற திரவிட மொழிகளிற் பின்வருமாறு திரிந்துள்ளது.

வா – கோத்தம், கோலாமி.
வா, வரி(க) – மலையாளம்
வா, வாமு, வ – குய் (kui)
வா, வர் – கடபா.
வரா, வரட் – கோண்டி (g)
வர் – நாய்க்கீ.
வெர் – பர்சி (j)
பா (b) –கன்னடம், குடகு.
ப, பர் (b) - பிராகுவி (Brahui).
பர் (பினி), பா (b) – துளு.
பர் (b) - மாலதோ
பர்னா (b) - குருக்கு (ஓராஒன்).
ரா – தெலுங்கு.
ராவா – கொண்டா.
போ – துடவம் (Toda)

இத் திரிபுகளெல்லாம் மேற்காட்டிய தமிழ்த் திரிபுகளுள் அடங்கும்; அல்லது அவற்றால் விளக்கப்படும். இவற்றுள் முதன்மையானவை வா – பா (b), வர் → வ்ரா → ரா. வா–போ என்னும் மூன்றே.

1. கன்னடத்தில் வகரமுதற் சொற்கள் பெரும்பாலும் எடுப்பொலிப் பகரமுதலவாக (b) மாறிவிடுகின்றன.

எ–டு:

தமிழ்	–கன்னடம்	தமிழ்	– கன்னடம்
வாங்கு	பங்கு (nk)	வழங்கு	பழகு(g)
வட்டம்	பட்ட	வழலிக்கை	பழல்கெ
வடுகு	படகு (g)	வழி	பளி
வணங்கு	பக்கு (gg)	வன்னம்	பள்ள
வயல்	பயல்	வளர்	பனெ
வயலை	பயலு	வளா	பளா(bh)
வயிறு	பசிறு	வளை	பளெ
வரை	பரெ	வற்று	பத்து
வலம்	பல	வற	பறு
வல்லாளன்	பல்லாள	வரகு	பரகு

வலை	பலெ	வறிது	பறிது
வாவல்	பாவல்	வறுகு	பறுகு(g)

இங்ஙனமே சில ஏனைத் திரவிட மொழிகளிலும்.

2. தெலுங்கிற் சில சொற்களின் முதலீரெழுத்துகள் முன்பின்னாக முறைமாறி விடுகின்றன. அன்று, முதலெழுத்தாகிய உயிர்க்குறில் நீண்டு விடுகின்றது.

எ-கா:

தமிழ்	தெலுங்கு	தமிழ்	தெலுங்கு
அறை	ராய்	உகிர்	கோரு (g)
இலது	லேது	உள்	லோ
உரல்	ரோலு	எழு	லேய்

வரை (எழுது) என்னுஞ்சொல் இம்முறையில் வராயு என்று திரிந்தபின், ராயு என்று முதன்மெய் கெட்டும் வழங்குகின்றது. இவ்வகையினதே வர்-வ்ரா-ரா (வா) என்னுந் திரிபும்.

3. துடவ மொழியில் பல சொற்களின் ஆகார முதல் ஓகார முதலாகத் திரிந்துள்ளது.

தமிழ்	துடவம்	தமிழ்	துடவம்
ஆடு	ஒட்	நாய்	நோய்
ஆறு	ஒற்	நாவு	நோவ்
கா	கோவ்	நான்கு	நோங்க்
காண்	கோண்	பாசி	போதி
காய்	கோய்	பாம்பு	போப்
கால்	கோல்	மார் (மார்பு)	மோர்
தாய்	தோய்	மான்	மோவ்
தான்	தோன்	வாய்	போய்
		வாழ்	போத்க்

ஆ-ஓ திரிபும், வ-ப திரிபும் சேர்ந்து வாய்-போய் என்று திரிந்தது போன்றதே, வா-போ திரிபும்.

குமரிநிலத் தமிழே திரவிட மொழிகட் கெல்லாந் தாயாதலின், இக்காலத் தமிழிலும் ஒருசில சொற்கள் திரிந்திருப்பினும், அவற்றின் திருந்திய வடிவத்தையும் ஆணிவேரையும் அறிந்துகொள்ள, போதிய சான்று அத் தமிழிலேயே உள்ளதென்று அறிதல் வேண்டும்.

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே"
(தொல்.பெய.1.).

"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகும் என்மனார் புலவர்."
(மேற்படி.2.)

"தெரிபுவேறு நிலையலும் குறிப்பிற் றோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே."
(மேற்படி.3.)

"மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா"
(தொல்.96.)

"பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்."
(மேற்படி 1.)

"முன்னும் பின்னும் வருபவை நாடி
ஒத்த மொழியாற் புணர்த்தன ருணர்த்தல்
தத்தம் மரபிற் றோன்றுமன் பொருளே."
(தொல்.பெய.91.)

இங்ஙனம் வேறெவ்வகை மொழியிலுங் கூறப்படவில்லை. கூறவும் இயலாது, பிறமொழிகள் திரிமொழிகளாதலான். அத்தகைத் தன்னே ரில்லாதது இயன்மொழியான தமிழே.

வா என்னும் சொல்லிற்கு எதிர்ச்சொல் போ என்பது. அது புகு என்பதன் திரிபு. புகுதல் உள்ளே செல்லுதல். வருதல் உள்ளிருந்து வெளியே திரும்பி வருதல். இவ் விழை இவ் ஊசியின் காதிற்குள் போகுமா என்னும் வழக்கை நோக்குக. வணங்குதல் என்னுஞ் சொல், முதலில் உடம்பு வளைந்து அல்லது தலை குனிந்து கும்பிடுதலையே குறித்தது. இன்றோ. பொதுவாகக் கைகுவித்தலை மட்டுங் குறிக்கின்றது. இங்ஙனமே, முன்பு ஒன்றன் உட்புகுதலைக் குறித்த போ என்னுஞ் சொல், இன்று ஓரிடத்திற்குச் செல்லுதலை மட்டுங் குறிக்கின்றது. தொடக்கத்தில், ஒன்றைத் துளைத்து ஊடுருவிச் சென்றதைக் குறித்த துருவுதல் என்னும் சொல், இன்று 'நாடு துருவுதல்' 'வான் துருவுதல்' என்று திறந்த வெளியிடத்தைக் கடந்து செல்லுதலையுங் குறித்தல் காண்க. இதுபோன்றே, ஓரிடத்தினின்று திரும்பி வருதல் என்று முதற்கண் பொருள்பட்ட வார்தல் அல்லது வருதல் என்னும் வினைச்சொல், இன்று வருதல் என்றுமட்டும் பொருள் படுகின்றது.

இன்றும், தன் இடத்தினின்று புறப்படும் ஒருவன் தன்னையே நோக்கிச் செல்லின், போய் வருகிறேன் என்றுதான் சொல்வான். வந்து போகிறேன் எனின், அஃது அயன்மனையிற் சொல்வதாயிருத்தல் வேண்டும்; அல்லது தானே மீண்டும் தன்மனைக்கு வந்து போதலைக் குறித்ததாகல் வேண்டும்.

ஒருவனால், தன் இடத்தினின்று நீங்குவ தெல்லாம் செல்லுதல் வினையாலும் தன் இடத்தைச் சேர்வதெல்லாம் வருதல் வினையாலும் குறிக்கப்படுதலின், நீ வருக, அவன் வருக என்று, முன்னிலையானும் படர்க்கையானுமாகிய பிறர்

தன்னிடம் சேரும் வினையும் வருகை வினையாலேயே குறிக்கப்படும். அவ்வீரிடத்தாரும் அத்தன்மையானை முன்னிலைப்படுத்தின், நான் வருகிறேன், நான் வருகிறேன் என்று தனித்தனி சொல்லலாம். நான் செல்கிறேன் எனின், அது படர்க்கையானின் இடத்தை நோக்கியதாகவே யிருத்தல் கூடும்.

இனி, வார் அல்லது வா என்னும் வினைச்சொல் பல்வேறு வடிவில் திரவிட மொழிகளில் வழங்குவது மட்டுமன்றி, மேலை ஆரிய மொழியாகிய இலத்தீனிலும், சென்று மூலத்தை யொட்டி வழங்குவது வியக்கத் தக்கதாகும்.

ளகரமெய் தமிழிலும் திரவிடத்திலும் ணகரமெய்யாகவுந் திரியும்.

எ-டு: தெள்-தென்-தேன், தெளிவு, தேறல் என்னும் சொற்களை நோக்குக.

கொள்-தெ. கொன், கொனு, தெ. கொனி = கொண்டு.

வள்-வன்-வென்-L. *veni* to come. Veni என்னும் மூலத்தினின்று, advent, avenue, circumvent, convene, event, intervene, invent, prevent, revenue, subvent, supervene, venue முதலிய சொற்கள் திரிந்துள்ளன. இவற்றுள் ஒவ்வொன்றினின்றும் சில பல சொற்கள் கிளைத்துள்ளன.

எ-டு: convene-convent, conventual, convention, conventional, conventionary, conventicle, convenient, convenience முதலியன.

கலிபோர்னியாப் பல்கலைக்கழகச் சமற்கிருத மொழிநூற் பேராசிரியர் எம்.பி. எமெனோ (M.B. Emeneau) திரவிட மொழிநூலும் இன நூலும் நாட்டுப்புறக் கதைகளும்பற்றி எழுதி, அண்ணாமலை பல்கலைக் கழகம் வெளியிட்ட கட்டுரைத் தொகுதியில் (Collected Papers) 6ஆம் கட்டுரை 'வா' 'தா' என்னும் திராவிட வினைச்சொற்கள் (The Dravidian Verbs 'come' and give) என்பது.

அதில், அவர் தமக்குத் தமிழிற் சிறப்பறிவின்மையாலும் தமிழ்ப் பொத்தகங்கள் கிட்டாமையாலும் ஈ, தா, கொடுவென்னும் சொற்களின் நுண்பொருள் வேறுபாட்டைத் தெரிந்துகொள்ள முடியவில்லை யென்று எழுதியுள்ளதற் கொப்பவே, 'வா', 'தா' என்னும் வினைச்சொற்கள் பற்றிய அவர் ஆராய்ச்சி முடிபுகளும் உள்ளன.

அவை வருமாறு:

1. வ, த என்பன மூலத்திரவிட அடிகள் (Proto Dravidian stems).

2. அ, அர் என்பன அவ்வடிகள் தன்மை முன்னிலை வினைகளாகும் போது சேர்க்கப்படும் இடைமாற்ற ஈறுகள் (transition suffixes).

3. அ உடன்பாட்டு வடிவுகளிலும், அர் எதிர்மறை வடிவுகளிலும் ஆளப்பட்டன.

4. அ+அ=ஆ என்பது சொல்லொலியன் மறுநிலை மாற்று (Morphonemic alternation).

5. வ, வந்த் என்பன வா என்னும் வினைக்கும், த, தந்த் என்பன தா என்னும் வினைக்கும், உரிய இணையடிகள்.

6. பழந்தமிழில் வார் என்றிருந்த எதிர்மறையடி புதுத் தமிழில் வர் என்று குறுகிற்று.

7. கும்மொழி திரவிட மொழியாராய்ச்சிக்குத் தமிழினும் மிகத் துணைபுரிவது.

இவற்றின் பொருந்தாமையை ஈண்டு விளக்கின் விரியும். அறிஞர் கண்டுகொள்க.

தமிழின் தொன்மை முன்மை தாய்மை தலைமைத் தன்மைகளையும் வேர்ச்சொல் விளக்கத்தையும் தமிழரே அறியாதிருக்கும் போது, அயன்மொழி பேசும் வெளிநாட்டார் சமற்கிருத அடிப்படையில் திரவிட மூலமொழியின் அடிமுடி காண்பது, நால்வர் பாராதார் நால்வாய் கண்ட கதையே யொக்கும். (வேவ.க.4, பக்.110-118).

வா³ *vā*, பெ.(n.) தாவுகை; leaping, galloping. *"வாச்செல விவுளியொடு" (புறநா.197).*

[வாவு → வா]

வா⁴ *vā,* 18 செ.கு.வி. (v.i.) 1. பெயர்தல்; come towards the speaker or the place mentioned by the speaker. *"அவர் என் அருகில் வந்து நின்றார்".* 2. பெய்தல்; come down. *"வானத்தைப் பார்த்தால் மழை வரும் போலிருக்கிறது".* 3. பாய்தல் அல்லது ஓட்டம் உடையதாக இருத்தல்; come, be restored. *"இரண்டு நாட்களாகக் குழாயில் தண்ணீர் வரவில்லை".* 4. கிடைத்தல்; arrive, come get. *"இன்று தான் எனக்கு ஊரிலிருந்து*

பணம் வந்தது". 5. போடப்பட்டிருத்தல்; run. *"மின்சாரக் கம்பி மொட்டை மாடியிலிருந்து வீட்டின் பின்பக்கமா வருகிறது".* 6. ஏற்படுத்தப்படுதல்; come up. *"அணுமின் நிலையம் வருவதை எதிர்த்துப் போராட்டம்".* 7. உட்படுதல்; feature, appear. *"ஏன் இந்தச் செலவு எந்தக் கணக்கிலும் வரவில்லை?"* 8. எழுதல், தோன்றுதல்; feel like. *"அவனுக்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்தது".* 9. உண்டாதல்; get the feeling of *"இதைச் செய்தால் ஏதாவது சிக்கல் வருமா?"* 10. இயலுதல்; be able to *"அவருக்கு ஆங்கிலம் பேச வரும்".*

வா[5] *vā,* து.வி. (ad v.) ஒரு செயல் கடந்த காலத்தில் அல்லது சற்று முன்பு தொடங்கப்பட்டுக் குறிப்பிட்ட கால எல்லை வரை தொடர்வதையும் அல்லது இனியும் தொடரும் என்பதையும் காட்டப் பயன்படுத்தப் படும் துணை வினை; an auxiliary used to indicate the period during which the action is or has been going on. *"நீங்கள் கொடுத்த பொத்தகத்தைப் படித்து வருகிறேன்".*

வா[6] *vā,* பெ.(n.) அத்தி; fig tree - Ficus glamerta.

வாக்கத்தமூலி *vākkatta-mūli,* பெ.(n.) இலுப்பை; mohwa tree - Bassia tatifolia

வாக்கம்[1] *vākkam,* பெ.(n) சரக்கொன்றை; a tree with beautiful hanging yellow flowers - Cassia fistulla.

வாக்கம்[2] *vākkam,* பெ.(n) நெய்தல் நிலத்தூர்; a place name of coastal region. கத்திவாக்கம், வில்லிவாக்கம்

[பாக்கம் → வாக்கம். (செல்வி.75. ஆனி.534)]

வாக்கல் *vākkal,* பெ.(n.) வடிக்கப்பட்ட சோறு; boiled rice from which conjee has been strained. *"கவைக்கதிர் வரகி னவைப்புறு வாக்கல்" (புறநா.215).*

கொலா. வாக்; தோட. பாக்ஸ்; க. பாகு; குட. பாக்; தெ., க. வாஞ்சு; கோண்ட். வாங்னா; குய். வாங்க; குவி. (பெ.பா.) வ்வான்காலி.

[ஒருகா: ஆக்கு → வாக்கு → வாக்கல்]

வாக்கன் *vākkan,* பெ.(n.) வாக்குக் கண்ணன் (யாழ்.அக.) பார்க்க; see *vākku-k-kaṇṇaṉ.*

[வாக்கு = வளைவு, ஒழுங்கின்மை.]

வாக்காட்டு-தல் *vā-k-kāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ஏய்த்தல் (யாழ்.அக.); to disappoint, to deceive.

[ஒருகா. அவா + காட்டு → வாக்காட்டு-,]

வாக்காமூலி *vākkā-mūli,* பெ.(n.) பொன்னூமத்தை; a variety of dhatura with yellow flowers.

[வாக்கா + மூலி]

வாக்கி *vākki,* பெ.(n.) மாறுகண்ணுள்ளவள் (யாழ்.அக.); squint-eyed woman.

[வாக்கன் → வாக்கி (பெண்பால்)]

வாக்கியேசம் *vākki-yēśam,* பெ.(n.) சிறு நீலி என்னும் மூலிகை; a plant small variety of indigofera sumatrana.

வாக்கில் *vākkil,* இடை.(part) 1. நிலையில்; in the course of doing. *"நின்ற வாக்கில் பேசிவிட்டுப் போய் விட்டான்".* 2. நேரத்தை அல்லது காலத்தை ஒட்டி; about, around. *"எப்போதும் ஐந்து மணிவாக்கில் வீடுதிரும்புவார்".*

வாக்கு[1] *vākku*, பெ.(n.) 1. திருத்தம்; perfection, correctness. *"வாக்கணங்கார், மணிவீணை" (சீவக.1473).* 2. திருந்திய வடிவு; refined form, shape. *"வாக்கமை கடுவிசைவில்" (கலித்.137).*

தெ. பாக; ம., து. வாக.

[வகு → வாகு → வாக்கு]

வாக்கு[2] *vākku*, பெ.(n.) 1. வளைவு; bend. *"கோட்டிய வில்வாக் கறிந்து" (நாலடி.395).* 2. ஒழுங்கின்மை (வின்.); irregularity.

[வாங்கு → வாக்கு]

வாக்கு[3] *vākku*, இடை. (part.) ஒரு வினையெச்ச விகுதி; a participial suffix, signifying purpose. *"கொள்வாக்கு வந்தான்" (தொல்.சொல்.231.உரை).*

வாக்கு[4]**–தல்** *vākku-*, 5 செ.குன்றாவி. (v.t.) வார்த்தல்; to pour. *"அடர் பொற்சிரகத்தால் வாக்கி" (கலித்.51).*

தெ. வாக; க. வாகு; **Ko.** va-k, **To.** Po-x; **Kod.** ba-k; **Kol.** va-ng; **Ga.** van(g); **Go.** *wāngānā*, **Kui.** *vānga*, **Kuwi.** (f) *vwāngali.*

வாக்கு[5] *vākku*, பெ.(n.) 1. பக்கம்; side, direction. *"இரண்டு கைவாக்கு மியங்கலிப்ப" (திருவிளை.தடாதகை.26).* 2. இயங்குதிசை; *'காயப்போட்ட துணி காற்றுவாக்கில் பறந்துவிட்டது' (உ.வ.) (செல்வி1.75, ஆனி 534).*

[வகு → வக்கு → வாக்கு]

வாக்கு[6] *vākku*, பெ.(n.) வகை; manner, nature. *"ஏன் இன்னும் ஒருவாக்கா யிருக்கிறாய்" (பிரதாப. விலா.105).*

வாக்குக்கண் *vākku-k-kaṉ*, பெ.(n.) மாறுகண் (வின்.); squint eye.

மறுவ. ஒன்றரைக் கண்.

[வாக்கு + கண். வாக்கு = ஒழுங்கின்மை]

வாக்குக்கண்ணன் *vākku-k-kaṇṇaṉ*, பெ.(n.) மாறுகண்ணுள்ளவன் (வின்.); squint-eyed person.

மறுவ. ஒன்றரைக் கண்ணன்

[வாக்குக்கண் → வாக்குக்கண்ணன்]

வாக்குப்பசப்பி *vākku-p-paśappi*, பெ.(n.) சதகுப்பை; the dill or sowa A. peucedanum graveloens.

[வாக்கு + பசப்பி]

வாக்குவடிவு *vākku-vaḍivu*, பெ.(n.) வடிவழகு; shapeliness. *'வாக்கு வடிவுடைய பெண்' (உ.வ.).*

[வாகு → வாக்கு + வடிவு]

வாக்கெடு–த்தல் *vākkeḍu*, 2 செ.கு.வி. (v.i.) தலைமயிர் வகிர்தல் (வின்.); to part the hair down the middle.

[வாகு → வாக்கு + எடு-,]

வாகசம் *vāgaśam*, பெ.(n.) பெரும்பாம்பு; a big snake.

வாகடநூல் *vāgaḍa-nūl*, பெ.(n.) மருத்துவ நூல்; medical science.

[வாகடம் + நூல்]

வாகடபாரி *vāgaḍa-pāri*, பெ.(n.) பச்சோந்தி; green lizard-chameleon.

[வாகடம் + பாரி]

வாகடம் *vāgaḍam*-, பெ.(n.) மருத்துவ நூல் (தக்கயாகப்.553, உரை); medical science, medical treatise.

[வாகு + அடம்]

வாகடமுறை *vāgaḍa-muṟai*, பெ.(n.) மருத்துவ நூலில் சொல்லிய முறை; according to medical science-officinal.

[வாகடம் + முறை]

வாகடமுறையற்ற *vāgaḍa-muṟai-y-aṟṟa*, பெ.(n.) நூல் முறை சாராத; unofficinal.

[வாகடம் + முறையற்ற]

வாகடர் *vagaḍar*, பெ.(n.) மருத்துவர்; physicians *"வாகடர் தங்களை யிப்பிணி யகற்றுதி ரெனவோடும்"* *(பிரமோத்.10, 15).*

[வாகடம் → வாகடர்]

வாகடவிதி *vāgaḍa-vidi*, பெ.(n.) மருத்துவ நூலிலுள்ள நெறிமுறைகள்; rules of Pharmacopoeia.

*[வாகடம் + **Skt.** விதி]*

வாகணை *vāgaṇai*, பெ.(n.) ஆற்றை அறுத்துச் செல்லும் நீரோட்டத்தைத் தடுக்கக் கட்டும் மூங்கில் முதலியவற்றாலான அணை (தஞ்.); groyne, wooden break water

[வாகு + அணை]

வாகம்[1] *vāgam*, பெ.(n.) சக்கரவாகப் பறவை; cakra bird *"வாகப் புள்ளுடன்.... அளியுஞ் சூழுமே"* *(அரிசமய. 2,4).*

வாகம்[2] *vāgam*, பெ.(n.) 1. செங்கீரை; a red leaf plant. 2. பலண்டுறுகவிடம்; a kind of arsenic. 3. புயம்; shoulder. 4. கோமேதகம்; one of nava-mani stone

வாகரம் *vāgaram*, பெ.(n) கோணாய்; wolf.



வாகவி *vāgavi*, பெ.(n.) செங்கீரை; red leaf.

வாகன் *vāgaṉ*, பெ.(n.) அழகன்; fair or handsome man *"வாகனைக்கண் டுருகுதையோ"* *(குற்றா.குற.25).*

ம., து. வாக.

[வாகு → வாகன்]

வாகனப்பாலி *vāgaṉappali*, பெ.(n.) திருகு கள்ளி; milky spurge - Euphorbia tiruchalli.

வாகனா *vāgaṉā*, பெ.(n.) பனிப்பயறு; dew gram - Phaseolus aconitifolius.

வாகி *vāgi*, பெ.(n.) அழகி (வின்.); fair, hand-some woman).

[வாகு → வாகி]

வாகிடி *vāgiḍi*, பெ.(n.) பெருமீன்வகை (மூ.அ.); porpoise

மறுவ. கடற்பன்றி.

வாகியம் *vāgiyam*, பெ.(n.) 1. புறம்; outer part, exterior. *"ஆப்பியந்தரமே வாகியமென்ன"* *(பி.வி.12).* 2. வெளி (வின்.); open, plain.

[வாகு → வாகியம்]

வாகினி *vāgiṉi*, பெ.(n.) பாதிரிமரம் (மலை.); yellow flowered fragrant trumpt-flower tree.

வாகினீபதி *vāgiṉi-pati*, பெ.(n.) 1. பெருங்கடல்; ocean. 2. படைத்தலைவன்; commander of an army.

[வாகினி → வாகினீ + பதி]

வாகு[1] *vāgu*, பெ.(n.) 1. அழகு (சூடா.); beauty. *"வாகாரிப மினாள்" (திருப்பு.135).* 2. ஒளி; light, brightness. *"இந்து வாகை" (திருப்பு. 399).* 3. ஒழுங்கு; niceness, fitness, orderliness, propriety. *"வாகா நியாய வட்டி வாங்காமல்"(பணவிடு.238) (யாழ்.அக.).* 4.திறமை; skill. *"வாகு பெறு தேர்வலவனை" (கந்தபு.மூன்றாம்.யுத்.70).* 5. தொட்டால்வாடி (அரு.அக.); a sensitive plant.

மறுவ: தொட்டாற்சிணுங்கி.

தெ. பாகு; ம., துளு. வாக.

[வகு → வாகு]

வாகு[2] *vāku*, பெ.(n.) 1. தோள் (பிங்.); arm, shoulder. *"வாகுப் பிறங்கல்" (இரகு. கடிம. 64).* 2. நேர்கோண முக்கோணத்தின் அடிக்கோடு (யாழ்.அக.); the base of a right-angled triangle. 3. பக்கம்; side, direction 4. கை; hand. *'அவருடைய கைவாகே தனி" (உ.வ.).*

ம. வாகு; தெ. பாகு; து. வாகு (g).

[பாகு → வாகு]

வாகுசம் *vāguśam*, பெ.(n.) 1. எள்; seasamon seed. 2. குப்பைக்கீரை; some rubbish greens. 3. கிளி; parrot.

வாகுசி *vāguśi*, பெ.(n.) கார்போகவரிசி; a fragrant seed - Psoralea corylifolia

வாகுசிவிரை *vāguśi-virai*, பெ.(n.) வாகுசி பார்க்க; see *vāguśi*.

[வாகுசி + விரை]

வாகுடையாள் *vāguḍaiyāḷ*, பெ.(n.) வாலுளுவையரிசி; seeds of intellect plant - Celastrus paniculata.

[வாகு + உடையாள்]

வாகுதம் *vāgudam*, பெ.(n.) ஒரு பறவை; a bird.

வாகுபுரி *vāgu-puri*, பெ.(n.) 1. தோள்வளை; armlet. *"வாகுபுரி வயங்க" (காளத்-உலா,151).* 2. முப்புரி நூல் (வின்.); sacred thread worn over the left shoulder.

[வாகு + புரி] (செல்வி. '75 ஆனி, 532)



வாகுமாலை *vāgu-mālai*, பெ.(n.) பந்தரிற் கட்டும் அணியழகுத் தொங்கல் (யாழ்.அக.); ornamental hanging in a pavilion.

[வகு → வாகு + மாலை]

வாகுமூலம்[1] *vāgu-mūlam*, பெ.(n.) கமுக்கட்டு (பிங்.); arm-pit.

மறுவ. அக்குள், விலாக்குழி.

[வாகு+மூலம்]

வாகுமூலம்[2] *vāgu-mūlam*, பெ.(n.) 1. தோள்மூலம்; shoulder. 2. கைக்குழி; palm-curve.

[வாகு + மூலம்]

வாகுயுத்தம் *vāgu-yuttam*, பெ.(n.) மற்போர் (யாழ்.அக.); fencing, the art of wrestling.

*[வாகு + **Skt.** யுத்தம்]*

வாகுரம்¹ *vāguram*, பெ.(n.) வலை (யாழ்.அக.); net.

வாகுரம்² *vāguram*, பெ.(n.) வவ்வால் (நாமதீப.252); bat.



வாகுருடம் *vāgurudam*, பெ.(n.) எருக்கிலை; leaf of madar - Calotropis gigantia.

வாகுரை *vāgurai*, பெ.(n.) பறவை பிடிக்கும் சுருக்குக் கயிறு (யாழ்.அக.); noose, snare.

மறுவ. கண்ணி.



வாகுலம் *vāgulam*, பெ.(n.) மகிழங்கனி (அரு.அக.); the fruit of the tree - Mimusops elengi.

வாகுலிகன் *vāguligan*, பெ.(n.) வெள்ளிலை மடித்துக் கொடுக்கும் வேலைக்காரன் (யாழ்.அக); attendant carrying bettle-pouch.

மறுவ. அடைப்பைக்காரன்.

வாகுலேயன் *vāgulēyan*, பெ.(n.) முருகக்கடவுள் (வின்.); *Muruga-k-kadavul.*

மறுவ. ஆறிரு கரத்தோன்.

[வாகுலை → வாகுலேயன்]

வாகுலை *vāgulai*, பெ.(n.) அறுமீனாகிய கார்த்திகைப் பெண்கள் (யாழ்.அக.); the six presiding female deities of the Pleiades.

வாகுவம் *vāguvam*, பெ.(n.) வஞ்சி; a creeping plant - Calamus rotang.

வாகுவலயம் *vāgu-valayam*, பெ.(n.) தோளணி; armlet. *"மேகலைகாஞ்சி வாகுவலயம்" (பரிபா.7,47).*

[வாகு + வளையம் → வாகுவலையம்]

வாகுவலையம் *vāgu-valaiyam*, பெ.(n.) தோள்வளை; armlet.

மறுவ. தோளணி.

வ. பாகுவலய (b).

[வாகு + வளையம். (செல்வி. 75, ஆனி 532)]

வாகுனி *vāguni*, பெ.(n.) 1. கீழ்க்காய் நெல்லி; a plant- phyll-anthus. 2. பெருங்காரை பார்க்க; see *perunkārai.*

வாகெடு-த்தல் *vākedu-*, 4 செ.குன்றாவி. (v.t.) தலைமயிர் வகிர்தல்; to part the hair down the middle.

[வாக்கு → வாகு + எடு-.]

வாகென்பு *vāgenbu*, பெ.(n.) தோள்பட்டை யெலும்பு; shoulder blade-Scapula.



வாகை

வாலுளுவை



வாசனைப்புல்

வாத நாராயணன்

[வாகு + என்பு]

வாகை *vāgai*, பெ.(n.) 1. மரவகை; sirissa, Albizzia. 2. கருவாகை; fragrant-sirissa. 3. அகத்தி; West Indian pea-tree. *"புகழா வாகைப் பூவினென்ன வளை மருப்பேனம்" (பெரும்பாண்.109).* 4. வெற்றியாளர் அணியும் மாலை (பிங்.); chaplet of sirissa flowers worn by victors. *"இலைபுனை வாகைசூடி" (பு.வெ. 8, 1, கொளு.).* 5. வெற்றி; victory. *"வாக்கும் வாகையும் வண்மையு மாறிலான்" (இரகு.யாகப். 38) (பிங்.).* 6. பகையரசரைக் கொன்று வாகைப் பூச்சூடி வெற்றியால் ஆரவாரிப்பதைக் கூறும் புறத்துறை (பு.வெ. 8,1); theme of a conquerer wearing a chaplet of sirissa flowers and celebrating his victory over royal enemies (Purap.). 7. நான்கு வரணத்தாரும் முனிவரும் பிறரும் தத்தங் கூறுபாடுகளை மிகுதிப்படுத்தலைக் கூறும் புறத்திணை (தொல்.பொருள்.74.); (Purap) theme in which the members of the four castes, hermits and others exalt their characteristic attainments. 8. நல்லொழுக்கம் (வின்.); good behaviour. 9. ஈகை (வின்.); gift. 10. மிகுதி (வின்.); plenty. 11. பண்பு(வின்.); nature. 12. தவம் (வின்.); penance.

க. பாகெ; ம. வாக; Tu. *bāge*-mara.

வாகை வகைகள்: 1. அடக்கு வாகை; Albizzia labbek. 2. காட்டு வாகை; common sirissa. 3. பெருவாகை; same as No.1 4. சிற்றிலை வாகை; fragrant sirissa - Albizza odoratissima. 5. கருவாகை; Mimosa marginata 6. மலைவாகை; hill sirissa- Albizzia procero alias pilhecolobium coriaceum 7. கொண்டை வாகை; same as No.6. 8. நல்ல வாகை; Albizza procera 9. சிலை வாகை; Albizza stipulata. 10. பிலி வாகை, கல் துரிஞ்சில்; Albizza odoratissima. 11. சாயல்வாகை; Albizzia amara. 12. சீமை வாகை; Enterolobium saman.

இவ்வாகை மரம் மிகவேகமாக ஓங்கி உயர்ந்து வளர்ந்து கட்டட வேலைக்கும் விறகுக்கும் பயன்படுவதாக உள்ளது. கால் நடைகளின் உணவுப் பற்றாக்குறையை நீக்கவல்லது; மண் அரிப்பைத் தடுக்கும்; மணலிலும் வளரும்; இதன் இலை, பூ, பட்டை, பிசின் விதை அனைத்தும் மருத்துவப்பயன் உடையவை.

–(வளம் தரும் மரங்கள் பக்.236).



வாகைத்திணை *vāgai-t-tiṇai*, பெ.(n.) பகையரசரைக் கொன்று வாகைப் பூச்சூடி ஆரவாரிப்பதைக் கூறும் புறத்துறை; theme of conquerer wearing a chaplet of sirissa flowers and celebrating his victory over royal enemies. (purap.)

வாகைத்திணையின் வகைகள்:

1. வாகை–

"இலைபுனை வாகை சூடி இகல்கலைந்து
அலைகடல் தானை அரசட்டார்த்தன்று".
பகைவேற் றைக்கொன்று வாகைமாலை
சூடி ஆரவாரித்தது (பு.வெ.கொளு. 8–1).

2. வாகையரவம் –

"வெண்கண்ணியும் கருங்கழலும்
செங்கச்சும் தகை புனைந்தன்று".
போர் மறவர் பகைவென்று வாகைமாலை
சூடியது. (பு.வெ.கொளு.8–2).

3. *அரசவாகை* –

"பகலன்ன வாய்மொழி
இகல்வேந்தன் இயல்புரைத்தன்று",

செங்கோன்மை யுடைய அரசனது இயல்பினைக் கூறியது. (பு.வெ.கொளு.8 – 3)

4. *முரசவாகை* –

"ஒலிகழலான் அகனகருட் பலிபெறு
முரசின் பண்புரைத் தன்று"
(பு.வெ.கொளு.8–4).

அரசனது வெற்றிமுரசின் தன்மையைக் கூறியது.

5. *மறக்களவழி* –

"முழுவுறழ் திணிதோளானை
உழவனாக உரைமலிந்தன்று"
(பு.வெ.கொளு.8–5).

செங்கோன் மன்னனை உழவனாக உருவகித்துப் பாராட்டியது மறக்களவழி என்னும் துறையாம்.

6. *களவேள்வி* –

"அடுதிறல் அணங்கார
விடுதிறலான் களம்வேட்டன்று"
(பு.வெ.கொளு.8–6).

வாகை சூடிய வேந்தன் களவேள்வி செய்தது.

7. *முன்தேர்க்குரவை* –

"வென்றேந்திய விறற்படையோன்
முன்தேர்க்கண் அணங்காடின்று"
(பு.வெ.கொளு.8–7).

8. *பின்தேர்க்குரவை* –

"பெய்கழலான் தேரின் பின்
மொய்வளை விறலியர் வயவரொ டாடின்று"

வென்ற மன்னனின் தேரின்பின் வீரரும் விறலியரும் கூத்தாடியது.

9. *பார்ப்பன வாகை* –

"கேள்வியாற் சிறப்பெய்தியானை
வேள்வியால் விறல்மிகுத்தன்று"

மறைகேட்டுச் சிறப்பெய்திய பார்ப்பனனுடைய வெற்றியைக் கூறுவது.

10. *வாணிக வாகை* –

"செறு தொழிலிற் சேணீங்கியான்
அறுதொழிலும் எடுத்துரைத்தன்று"
(பு.வெ.கொளு.8–2)

வணிகர்க்குரிய அறுவகைத் தொழிற் சிறப்பையும் விதந்து கூறியது. உழவு, நிரையோம்பல், வாணிபம், ஓதல், வேட்டல், ஈதல் என்னும் அறுவகைத் தொழிலினும் சிறந்தவன், வணி கருட் தலைசிறந்தவன் ஆவான்.

11. *வேளாண் வாகை* –

"மேல் மூவரும் மனம்புகல
வாய்மையான் வழியொழுகின்று"

அந்தணர் முதலிய மூவரும் விரும்பியபடி ஒழுகுதல் ஆயின் தொல்காப்பியர், வேளாளர்க்குரிய உழவு உழவொழிந்த தொழில், விருந்தோம்பல், பகடு புறந்தருதல், வழிபாடு, ஓதுதல் என்னும் அறுவகைத் தொழிலினும் அவர் சிறப்புடையராதல் அவர்க்கு வாகையாம் என்பது தோன்ற, "இரு மூன்று மரபின் ஏனோர் பக்கமும்" என வகுத்தனர். பு.வெ. நூலாசிரியர் வழிபாடொன்றை மட்டுமே விதந்து ஓதுகிறார்.

12. *பொருந வாகை* –

"புகழொடு பெருமை நோக்கி யாரையும்
இகழ்தல் ஓம்பென எடுத்துரைத்தன்று"

தன்னொடு எதிர்நின்று பொர வல்லவர் யாருமில்லை என்று கருதி – அவர்களது ஒப்பின்மை காரணமாக யாரையும் இகழாதே கொள் என அறிஞர்கள் கூறுவதாம்.

13. *அறிவன் வாகை* –

"புகழ்நுவல முக்காலமும்
நிகழ் பறிபவன் இயல்புரைத்தன்று",

இறந்தகாலம் நிகழ்காலம், எதிர்காலம் என்னும் முக்கால நிகழ்ச்சிகளையும் உணர்ந்து கூறும் அறிவனுடைய தன்மையைச் சொல்லியது. "மறுவில் செய்தி மூவகைக் காலமும், நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்" என ஆசிரியர் தொல்காப்பியர் கூறியதும் இது.

14. *தாபத வாகை* –

"தாபத முனிவர் தவத்தொடு முயங்கி
ஒவுதல் அறியா ஒழுக்குரைத் தன்று"
(பு.வெ.கொளு–14)

தவ முனிவர்கள் தம் தவவொழுக்கத்தில் பிறழாது மேம்பட்டமை.

15. *கூதிர்ப்பாசறை* –

"கூற்றனையான் வியன்கட்டூர்க் கூதிர்வாள்
துளிவழங்க
ஆற்றாமை நனிபெருகவும் அயில்வேலோன்
அளிதுறந்தன்று"
(பு.வெ.கொளு.8–15).

காமம் வருத்தும் கூதிர்க் காலத்தும் மறமே நினைந்து மன்னன் பாசறையிடத்தே தங்கியது இது.

16. வாடைப் பாசறை -

"வெந்திறலான் வியன் பாசறை வேல்வயவர் விதிர்ப் பெய்த
வந்துலாய்த் துயர் செய்யும் வாடையது மலிபுரைத்தன்று"

வாடை நலியவும் மன்னன் காமம் துறந்து பாசறைக் கண் இருந்தது வாடைப் பாசறை என்பதாம்.

17. அரசமுல்லை

"செருமுனை உயற்றுஞ் செஞ்சுடர் நெடுவேல்
இருநிலங் காவலன் இயல்புரைத் தன்று"
(பு.வெ.8–17)

மன்னனது இயல்பு மிகுதியைக் கூறியது.

18. பார்ப்பன முல்லை

"கான் மலியும் நறுந்தெரியல் கழல்வேந்தர் இகலவிக்கும்
நான்மறையோ னலம்பெருகு நடுவுநிலை உரைத்தன்று"

வேந்தர்களின் மாறுபாட்டை விலக்கிச் சந்து செய்விக்கும் அந்தணனது செப்பத் தன்மையைச் சொல்லியதாம்.

19. அவைய முல்லை

"நவைநீங்க நடுவு கூறும்
அவை மாந்தர் இயல்புரைத்தன்று"

அறங்கூற வையத்துச் சான்றோர் இயல்பினைச் சொல்லியது. அவ்வியல்பினை யுடையார் அவையத்தில் வாகையுடையார் ஆவர்.

20. கணிவன் முல்லை

"துணிபுணரும் தொல்கேள்வி
கணிவனது புகழ் கிளந்தன்று"

காலக் கணிவனுடைய திறத்தைப் புகழ்ந்தது.

21. மூதில் முல்லை

"அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்
மடவரல் மகளிர்க்கு மறமிகுத்தன்று"

பழைய மறக்குடி மகளிரின் இயல்பு மிகுதியாகிய மறப்பண்பினைக் கூறியது இத்துறை.

22. ஏறாண் முல்லை

"மாறின்றி மறங்கனலும்
ஏறாண்குடி எடுத்துரைத்தன்று"

மறப்பண்பு மேலும் மேலும் வளரும் இயல்புடைய மறக்குடியின் ஒழுக்கத்தைக் கூறியது ஏராண்முல்லை.

23. வல்லாண் முல்லை

"இல்லும் பதியும் இயல்புங் கூறி
நல்லாண் மையை நலமிகுத் தன்று"

ஒரு மறவனுடைய குடி, ஊர், பண்பு முதலியவற்றைப் பாராட்டி அவனது ஆண்மையை விதந்து கூறியது இத்துறை.

24. காவல்முல்லை – 1.

"தவழ்திரை முழங்கும் தண்கடல் வேலிக்
கமழ்தார் மன்னவன் காவல் மிகுத்தன்று"

வேந்தனது உலகங் காக்கும் தொழிலைச் சிறப்பித்தது.

25. காவல்முல்லை – 2.

"தக்காங்கு பிறர் கூறினும்
அத்துறைக் குரித்தாகும்"

அரசனது காவலியல்பினைப் பிறர் பொருந்த எடுத்துக் கூறினும் முற்கூறப்பட்ட துறையேயாம் என்பது கருத்து.

26. பேராண்முல்லை

"உளம்புகல மறவேந்தன்
களங்கொண்ட சிறப்புரைத்தன்று"

மன்னன் போர்க்களத்தை வென்று கைப்பற்றிய சிறப்பைக் கூறுவது.

27. மறமுல்லை

"வெள்வாள் வேந்தன் வேண்டியது ஈயவும்
கொள்ளா மறவன் கொதிப்புரைத் தன்று"

மறவன், மன்னன் தனக்கு வழங்கும் பொருளிடத்தில் கருத்தின்றி பகைவெல்லலே குறிக்கோளாகக் கொண்டு சினக்கும் தன்மை.

28. குடைமுல்லை

"மொய்தாங்கிய முழுவலித் தோட்
கொய்தாரான் குடை புகழ்ந்தன்று"

மன்னன் குடையைப் புகழ்ந்தது இத்துறை.

29. கண்படை நிலை

"மண் கொண்ட மறவேந்தன்
கண்படை நிலை மலிந்தன்று"

வாகை கொண்ட மன்னனின் துயிலைப் பாராட்டியது இத்துறை.

30. அவிப்பலி

"வெள்வாள் அமருட் செஞ்சோ றல்லது
உள்ளா மைந்தர் உயிர்ப்பலி கொடுத்தன்று"

போர்க்களத்தில் தம் அரசனுக்குச் செஞ்சோற்றுக் கடன் நினைந்து மறவர் தம் உயிரையே வழங்குதலைக் கூறுதல் இத்துறை.

31. சால்புமுல்லை

"வான்றோயும் மலையன்ன
சான்றோர்தம் சால்புரைத்தன்று"

சான்றோரின் இயல்பு மிகுதியைச் சொல்லியது

இத்துறை.

32. *கிணை நிலை*

"தண்பணை வயலுழவனைத்
தெண்கிணைவன் திருந்துபுகழ் கிளந்தன்று"

வேளாளனைக் கிணைப்பறை கொட்டுபவன் புகழ்ந்தது இத்துறை.

33. *பொருளொடு புகறல்*

"வையகத்து விழைவறுத்து
மெய்யாய பொருள் நயந்தன்று"

(பு.வெ.8-33)

பொய்ப் பொருளின்கண் பற்றகற்றி மெய்ப்பொருளை விரும்பியது இத்துறை.

34 *அருளொடு நீங்கல்*

"ஒலிகடல் வையகத்து
நலிவுகண்டு நயப்பு அவிந்தன்று"

(பு.வெ.கொளு.8-34)

இவ்வுலக வாழ்க்கையில் நிகழும் துன்பத்தை உணர்ந்து அதன்கண் பற்று நீங்கியது இத்துறை.

அருட்பண்பே பற்றுக் கோடாக நீங்கலின் அருளொடு நீங்கல் என்று கூறினார். இதனையே "அருளொடு புணர்ந்த அகற்சி" என்றார் தொல்காப்பியர்.

வாகைசூடு-தல் *vāgai-šūḍu*, 18 செ.குன்றா.வி. (v.t.) உரிய உயர்நிலையை அடைதல்; triumph, be crowned with success "*வெற்றி வாகை சூடினார்*".

[*வாகை + சூடு-,*]

வாகைமாலை *vāgai-mālai*, பெ.(n.) 1. போர் கல்வி கேள்வி கொடைகளில் வென்றோர் அணியும் மாலை (பிங்.); garland worn by those who are victorious in war or who are superior to others in learning or munificence. 2. சிற்றிலக்கியம் தொண்ணூற்றாறனுள் வீரனது வெற்றியைப் புகழ்ந்து பாடும் சிற்றிலக்கிய வகை; a poem in praise of the victory of a warrior, describing him as crowned with a wreath of sirissa flowers, one of 96 pirabandam.

[*வாகை + மாலை*]

வாகைமேற்புல்லுருவி *vāgaimēr-pulluruvi*, பெ.(n.) 108 கற்ப மூலிகைகளில் ஒன்று; parasite of albizzia is one of the 108 rejuvenating drugs

[*வாகை + மேல் + புல்லுருவி*]

வாகையரவம் *vāgai-y-aravam*, பெ.(n.) வெற்றிக்குறியாக வெள்ளைமாலை வீரக்கழல் செங்கச்சு முதலியவற்றை வீரர் அணிதலைக் கூறும் புறத்துறை (பு.வெ.8,2); theme describing a warrior, as being decked with a wreath of white flowers and wearing a red girdle and anklets, in token of victory.

[*வாகை + அரவம்*]

வாகைவனத்தாலாட்டு *vāgai-vaṉa-t-tālāṭṭu*, பெ.(n.) கந்தப்பையரால் 18ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற நூல்; a book written by Kandappaiar in 18th century.

[*வாகைவனம் + தாலாட்டு*]

வாகைவில்லான் *vāgai-villāṉ*, பெ.(n.) காமன் (நாமதீப.59, உரை.); *kāmaṉ*.

[*வாகை + வல்லான்*]

வாங்கம் *vāṅgam*, பெ.(n.) கடல் (யாழ்.அக.); sea

[*வாங்கு → வாங்கம். வாங்கு : வளைவு*]

வாங்கரிவாள் *vāṅgarivāḷ* பெ.(n.) வளைந்த அரிவாள் வகை (இ.வ.); curved sickle.

[*வாங்கு + அரிவாள்*]



வாங்கல் *vāṅgal*, பெ.(n.) 1. பிறர் கொடுக்க ஏற்கை (சூடா); receiving, admitting 2. கடன் வாங்குகை; borrowing. *'கொடுக்கல் வாங்கல்'.* 3. விலைக்குக் கொள்கை; buying 4. வளைவு (சூடா.); bending crookedness, curve, inclination. *"மனை ஈசானிய வாங்கலா யிருக்கிறது (சூடா.)"*. 5. மன வருத்தம்; displeasure, strained feeling. 6. தூரம்; distance. *"அவ்வூர் வாங்கலா யிருக்கிறது"*. 7. ஒரு சிற்றூரை அடுத்துள்ள பகுதி (இ.வ.); outskirts of a village. 8. ஆழம்; depth. *"வாங்கலினாற் கடலி லிறங்கப் படாது" (வின்.).* 9. குறைவு; want, unsuitability. *"இத்தலையிலே வாங்கலா யிருக்கிறது (திவ். இயற். திருவித்.86, வ்யா. பக். 420).* 10. பொன், வெள்ளி முதலியன மாற்றுக் குறைவாயிருக்கை; Inferiority in quality of gold, silver,etc. 11. வழுக்கல்; slipperiness. *"இந்த நிலம் வாங்கலாயிருக்கிறது" (வின்.).*

ம. வாங்ஙுக.

[வாங்கு → வாங்கல். (சு.வி.25)]

வாங்கலோ *vāṅgalō*, பெ.(n.) மருக்காரை பார்க்க; see *marukkārai.*

வாங்கற்கழுத்து *vāṅgar-kaḷuttu*, பெ.(n) கோணற்கழுத்து; wry-neck.

[வாங்கல் + கழுத்து]

வாங்கற்காரன் *vāṅgar-kāraṉ*, பெ.(n.) கடன் கொடுப்போன்; creditor *"வாங்கற் காரருக்கு வகை சொன்னான்" (வின்.).*

[வாங்கல் + காரன்]

வாங்கா[1] *vāṅgā*, பெ.(n.) வளைந்த நாரை; crooked neck stork.

[வாங்கு → வாங்கா] (சு.வி.25)



வாங்கா[2] *vāṅgā*, பெ.(n) ஊதுகொம்பு வகை (இ.வ.); a kind of trumpet horn.

மறுவ. தாரை.

[வாங்கு → வாங்கா. (வ.மொ.வ. 2, பக்.75)]

வாங்காணி *vāṅgāṇi*, பெ.(n.) மரவாணி (இ.வ.); wooden peg.

[வாங்கு + ஆணி]

வாங்காவில் *vāṅgāvil*, பெ.(n) போட்டி (யாழ்.அக.); rivalry.

[வாங்கு + ஆ.(எ.ம.) + வில்]

வாங்கிக்கட்டு-தல் *vāṅgi-k-kaṭṭu*, 10 செ.கு.வி. (v.i.) அடி, திட்டு முதலிய வற்றைப் பெறுதல்; to receive beating, scolding etc. *'பொய் சொல்லி என்னிடம் நன்றாக வாங்கிக்கட்டிக் கொண்டான்'.*

[வாங்கி + கட்டு-,]

வாங்கி[1] *vāṅgi*, பெ.(n.) கூட்டிக்கொடுப்போன் (வின்.); pimp.

[வாங்கு → வாங்கி]

வாங்கி[2] *vāṅgi*, பெ.(n.) குழம்பு; sauce. *"ரசவாங்கி" (இ.வ.).*

[வாங்கு → வாங்கி]

வாங்கிசநாசி *vāṅgisa-nāśi*, பெ.(n.) உதிரிமாரி என்னும் பெரியம்மை வகை; a kind of small pox in which the scabs fall off. (சா.அக.).

[வாங்கிச + நாசி]

வாங்கு[1]–தல் *vāṅgu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. வளைத்தல் (சூடா.); to bend. *"கொடுமரம் வாங்கி" (கல்லா.4).* 2. நாண்பூட்டுதல்; to string a bow. *"நாண் வாங்கலாது விற்கொண்டு" (இரகு. திக்குவி.231).* 3. இழுத்தல்; to carry away, as a flood, to draw, drag, pull *"மத்தமொலிப்ப வாங்கி" (பெரும்பாண்.156).* 4. மூச்சு முதலியன உட்கொள்ளுதல்; to take in, as breath *"மூச்சு வாங்குகிறான்".* 5. ஏற்றல்; to receive, take. *"வருக வென்றென்னை நின்பால் வாங்கிட வேண்டும்" (திருவாச.5, 68).* 6. விலைக்குக் கொள்ளுதல்; to buy *"மாதவி மாலை கோவலன் வாங்கி" (சிலப்.3,171).* 7. பெறுதல்; to get, obtain. *"எங்கு வாங்கிக் கொடுத்தாரிதழியே" (தேவா.456, 8).* 8. வரைதல்; to inscribe, indite. *"ககரத்துக்குக் கால் வாங்கினால் காவாகும்".* 9. ஒதுக்குதல்; to move to one side. *"இந்த வண்டி போம்படி அந்த வண்டியை வாங்கிக் கொள்".* 10. மீட்டும் பெறுதல்; to get back, take back *"கொடுத்ததை வாங்கினார்".* 11. செலுத்துதல்; to shoot, as an arrow; to send forth. *"வாங்கினார் மதிண் மேற்கணை" (தேவா.21, 2).* 12. தப்பும்படி உய்வித்தல்; to rescue, deliver. *"சமணர் பொய்யிற் புக்க ழுந்தி வீழாமே போத வாங்கி" (தேவா.658,7).* 13. தழுவுதல்; to embrace. *"வருமுலை பொதிர்ப்ப வாங்கி" (சீவக.584).* 14. ஒத்தல்; to resemble. *"தூணொடு பறம்பு வாங்கும் .....தோளான்" (பாரத. நிவாத. 145).* 15. அழைத்தல் (அக.நி.); to call. 16. நீக்குதல்; to remove, take away. *"வாங்குமின் மனத்துயர்" (கம்பரா. மீட்சிப். 278).* 17. பிரித்தெடுத்தல்; to seperate, eliminate. *"தானே என்றார், புறத்தினை பலவற்றுள் ஒன்றை வாங்குதலின்" (தொல். பொருள். 56, உரை).* 18. பெயர்த்தல்; to dig up, as the earth. *"புற்றம்.....வாங்கிக் குரும்பு கெண்டும்" (அகநா.72).* 19. முறித்தல்; to break off. *"வேழம்...கரும்பின் கழை வாங்கும்" (கலித்.40.).* 20. வெட்டுதல்; to cut off. *'கை கால்களை வாங்கிவிடுவேன்'.* 21. அடித்தல்; to strike. *'பிரம்பால் அவனை நாலு வாங்கு வாங்கினான்'.* 22. அழித்தல்; to destroy. *"விண்ணு மண்ணக முழுதும் யாவையும் வைச்சு வாங்குவாய்" (திருவாச.5, 96).* 23.வைதல்; to abuse, reproach. *'அவனை நல்ல வாங்கு வாங்கினான்'.*

தெ., ம. வங்கு; க. பாகு; து. பாகுணி; குட. பாங்; கொலா. வாக் (g); **To.** pa-g; **Kod.** *baŋ-g*, **Nk.** *vaaŋg*, **pa.** *vaŋg*, **Kuwi.** (f) vwangali; **Kur**. *beŋknā*.

[வங்கு → வாங்கு–, (வே.க.109)]

வாங்கு[2]–தல் *vāṅgu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. வளைதல்; to bend. *"வாங்குகதிர் வரகின்" (முல்லைப். 98).* 2. அலைதல்; to sway, wave. *"வளி வாங்கு சினைய மாமரம்" (பரிபா.7, 14).* 3. குலைதல்; to scatter, disperse. *"பகைவர் தண்டு வாங்கிப் போயிற்று".* 4. மெலிதல்; to become lean. *"உடம்பு வாங்கிப் போயிற்று".* 5. குறைதல்; to be

reduced. *"வீக்கம் வாங்கியிருக்கிறது".* 6. தாழ்தல்; to sink, subside. 7. களைத்துப் போதல்; to be exhausted. *"வாங்காமல் நீரை இறைத்துக் கொண்டிருந்தார்கள்" (வின்.).* 8. நீங்குதல்; to cease. நோவு வாங்கிப் போயிற்று. 9. ஒரு பக்கமாக ஒதுங்குதல்; to move to one side. 10. பின்வாங்குதல்; to withdraw, retreat. *"விரைவின் வாங்கி...பிழைத்த சேனை பின்வர" (திருவாலவா. 49, 50).* 11. திறந்திருத்தல்; to be opened. *"அந்தக் கடையின் கதவு வாங்கியிருந்தது".*

[வணம் → வணங்கு → வாங்கு-, (வ.மொ.வ.245)]

வாங்கு[3] *vāṅgu*, பெ.(n.) 1. வளைவு (நாமதீப. 768); bending. 2. அடி; blow. *'பிரம்பால் நாலு வாங்கு வாங்கினான்'.* 3. வசவு; abuse, rebuke. *'அவன் வாங்கின வாங்கு அவனுக்குப் போதும்'.*

க. பாகு.

வாங்கு[4] *vāṅgu*, பெ.(n.) பிச்சுவா; dagger (வளைந்த வடிவுடையதாதலின் 'பிச்சுவா' வாங்கு எனப்பட்டது).

வாங்கு - இ. (பாங்க்.) சு.வி.25.

[வணம் → வணங்கு → வாங்கு] (சு.வி.25 வ.மொ.வ.245).



வாங்கு[5] *vāṅgu*, பெ.(n.) அரிவாள்; bill-hook. *"கைகளில் வாங்கு பிடித்திருக்கின்றனர்" (எங்களூர்,32).*

மறுவ. வாங்கரிவாள்

வாங்குப்பலகை *vāṅgu-p-palagai*, பெ.(n.) கால்களுள்ள பலகையிருக்கை; bench, wooden seat.

[வாங்கு + பலகை]



வாங்கைநாராயணன் *vāṅgai-nārāyaṇaṉ*, பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

வாச்சி[1] *vācci*, பெ.(n.) 1. மரத்தைச் செதுக்கும் கருவி; adze 2. ஆடாதோடை (பரி.அக.) பார்க்க; see *āḍātōḍai*

தெ. வாடி; ம. வாச்சி; தோட. போடிசு; க. பாசி; து. பாசி, பாஜி.

[வாய் → வாய்ச்சி → வாச்சி]

வாச்சி[2] *vācci*, பெ.(n.) நூறு, ஆயிரம் உருபாய்களைக் குறிப்பது; a term to denote the hundred and thousand rupees.

வாச்சிகேவுநெசுவு *vācci-kēvu-necuvu*, பெ.(n.) ஆயிரத்து நூற்று ஐம்பது உருபாயைக் குறிப்பது; a term to denote thousand and hundred and fifty rupees.

வாச்சியம்[1] *vācciyam*, பெ.(n.)
1. வாசகத்தின் பொருள்; meaning of a word, signification of a term. *"வாதவூரன்...வாசக முதற்கு வாச்சியம்" (சிவப். பிரபந். நால்வர்.).* 2. வெளிப்படையானது (நன்.269, விருத்.); that which is manifest or clear. 3. சொல்லக் கூடியது; that which can be stated in words. 4. பழி (வின்.); blame, censure, reproach.

வாச்சியம்[2] *vācciyam*, பெ.(n.) வாத்தியம்; musical instrument. *"கூத்து விகற்பங்களுக்கு அமைந்த வாச்சியக் கூறுகளும்" (சிலப். 3, 14, உரை).*

வகைகள்: 1. தோற் கருவி, 2. நரம்புக் கருவி, 3. கஞ்சக் கருவி, 4. துளைக் கருவி.

வாச்சியமாராயன் *vācciya-mārāyaṉ*, பெ.(n.) கோயிலின் தலைமை வாச்சியக் காரன்; head musician of a temple or palace [I M P Pd 146].

[வாச்சியம் + மாராயன்]

வாச்சியார்த்தம் *vācci-y-ārttam*, பெ.(n.) சொல்லுக்கு நேரே உரிய பொருள்; literal meaning, expressed meaning, *"வாச்சியார்த்தம், முக்கியார்த்தம், அபிதார்த்தம்" (வேதா.சூ.118).*

[வாச்சியம் + அருத்தம் → அர்த்தம்]

Skt. *arthā* > த. அருத்தம்.

வாச்சியீடன் *vācci-y-īḍaṉ*, பெ.(n.) வாச்சியிட்டு வெட்டினாற் போலக் கண்டிப்பாகப் பேசுபவன்; one with sharp tongue, as an adze. *"வாச்சியீடனாக நறுக்கறப் பேசவல்லேன்" (திவ். திருமாலை, 26, வ்யா, பக்.89).*

[வாய் → வாய்ச்சி → வாச்சி + ஈடன்]

வாச்சிவாச்சி *vācci-vācci*, பெ.(n.) ஆயிரத்து நூறு உரூபாயைக் குறிப்பது; a term to denote the thousand and hundred rupees.

[வாச்சி + வாச்சி]

வாசகசாலை *vāšaga-šālai*, பெ.(n.) 1. படிப்பகம்; reading room. 2. நூலகம்; library.

[வாசகம் + சாலை]

வாசகசுரசம் *vāsaga-šurašam*, பெ.(n.) ஆடாதோடை; juice of adathoda vasica.

வாசகஞ்செய்-தல் *vāšagañ-cey-*, 1 செ.குன்றாவி. (v.t.) புகழ்ந்துரை செய்தல்; to praise, eulogise. *"நீலகண்டனும் நான் முகனும்... வாசகஞ் செய்ய நின்ற திருமாலை" (திவ்.பெரியாழ். 4, 1, 5).*

[வாசகம் + செய்]

வாசகஞானம் *vāšaga-ñāṉam*, பெ.(n.) 1. போலியான அறிவுப் பேச்சு (வின்.); lip wisdom, profession of pious wisdom. 2. பட்டறிவின்றி வாயாற் பேசும் அறிவு (வின்.); speculative knowledge.

*[வாசகம் + **Skt.** ஞானம்]*

வாசகதாட்டி *vāšaga-tāṭṭi*, பெ.(n.) பேச்சுவன்மை; skill in speech. *"செய்ய வாசகதாட்டி யவதானவக் கணை சிறக்குமவனே ராயசன்" (திருவேங். சமத. 8).*

[வாசகம் + தாட்டி]

ஒருகா. நாவன்மை, சொல்வன்மை.

வாசகதீட்சை *vāšaga-dītcai*, பெ.(n.) குருவம் ஏழனுள் ஐந்தெழுத்தைப் பதினொரு மந்திரங்களுடன் பலுக்கும் முறையைக் குரு சீடனுக்கு அறிவுரை செய்யும் சடங்கு (சி.சி.8, 3, சிவாக்.); a way of initiation, in which the guru teaches his disciple how to pronounce the *pañšākṣara* mantra and its eleven accessories, one of seven *tītcai*.

[வாசகம் + skt. dīksā > த. தீட்சை]

வாசகப்பா[1] *vāšaga-p-pā*, பெ.(n.) நாடக இலக்கியம் (வின்.); drama.

[வாசகம் + பா]

வாசகப்பா[2] *vāšaga-p-pā*, பெ.(n.) நகையூட்டு நாடகம் (புதுவை.); comedy.

[வாசகம் + பா]

வாசகப்பாங்கு *vāšaga-p-pāṅgu*, பெ.(n.) நல்ல உரைநடை; good style. *"திருத்தமான வாசகப் பாங்காயும்" (மாலுமிசா.முகவுரை).*

[வாசகம் + பாங்கு]

வாசகபதம் *vāšaga-padam*, பெ.(n.) வழக்குச் சொல் (யாழ்.அக.); colloquial word.

[வாசகம் + பதம்]

Skt. *pada* > த. பதம்

வாசகபுத்தகம் *vāšaga-puttagam*, பெ.(n.) உரைநடையில் பாடங்கள் அமைந்த நூல் (வின்.); prose reader for learners.

[வாசகம் + பொத்தகம் → புத்தகம்]

வாசகம்[1] *vāšagam*, பெ.(n.) 1. பேச்சு; speech, word of mouth. *"சிறியோர்க் கருளிய வுயர்மொழி வாசகம்" (பெருங்.வத்தவ.13,116).* 2. செய்தி; message. *"மல்குநீர்க் கண்ணேறகோர் வாசகங் கொண்டருளாயே" (திவ். திருவாய். 1, 4, 5).* 3. சொற்றொடர்; sentence, composition. *"வடமொழி வாசகஞ் செய்த நல்லேடு" (சிலப். 15, 58).* 4. செய்யுள் (சிலப். 13, 93, உரை); poetical composition, verse. 5. பிறர் கேட்க முணுமுணுக்கை (சைவச. பொது. 152, உரை); audible muttering of a mantra. 6. உரைநடை (இக்.வ.); prose. 7. வாய்பாடு; form of speech, grammatical or otherwise. *"மூரரிகள் என்பது பன்மை வாசகம்" (தக்கயாகப். 79, உரை).* 8. கடிதம் (வின்.); letter, epistle. 9. புகழ்ந்துரை; words of praise. *"வாசகஞ் செய்ய நின்ற திருமாலை" (திவ். பெரியாழ். 4, 1, 5).* 10. திருவாசகம்; the celebrated poem in praise of sivan by *Māṇikka-vašagar*. *"வள்ளுவர் சீரன்பர் மொழி வாசகம்" (தனிப்பாடல்).*

[வாசி → வாசகம் (வ்.மொ.வ.104.)]

வாசகம்[2] *vāšagam*, பெ.(n.) வாசிக்கும் அல்லது வாசித்தற்குரிய பகுதி; வாசகப் பொத்தகம்; reader.

[வாசி → வாசகம்]

வடமொழியில் வாசக என்னும் சொற்குப் பேசுதல், சொல்லுதல், ஒப்பித்தல், வெளியிடுதல் என்னும் பொருள்களே; வாசித்தல் (reading) என்னும் பொருளில்லை. அதற்கு 'வாச்' என்பது மூலம்; 'வச்' என்பது அடிமூலம். அதனின்று வசனம் என்னும் சொல் தோன்றும். 'வாச்' என்பது 'வாக்' என்று திரிந்து 'வாக்ய' என்னும் சொல்லைப் பிறப்பிக்கும்.

வாசிப்பது வேறு; சொல்வது வேறு. வடசொல் வேறுவகையில் தோன்றியிருத்தல் வேண்டும்; அல்லது தென்சொல்லினின்று ஒலியும் பொருளும் திரிந்திருத்தல் வேண்டும்.

— வ. மொ. வ. பக்.164.

வாசகம்³ *vāšagam*, பெ.(n.) ஆடாதோடை; a shrub - Adathoda vasica.

வாசகன்¹ *vāšagaṉ*, பெ.(n.) 1. பேசுவோன் (வின்.); speaker, one who speaks. 2. அரசர் திருமுன் கடிதம் முதலியன படிப்போன்; one who reads letters etc., in the presence of a king. *"வாசகன் மற்றது வாசினை செய்த பின்" (சூளா. சீய. 90).* 3. தூதன் (யாழ்.அக.); messenger.

[வாசகம் → வாசகன்]

வாசகன்² *vāšagaṉ*, பெ.(n.) காகவிடம் என்னும் செய்ந்நஞ்சு வகை; a kind of arsenic.

வாசகி *vāšagi*, பெ.(n.) கொந்தான்; a twiggy plant - Cassyta filiformis

வாசகை *vāšagai*, பெ.(n.) அரக்காம்பல்; an aquatic plant.

வாசதம் *vāšadam*, பெ.(n.) கழுதை; an animal-ass.

வாசந்தி¹ *vāšandi*, பெ.(n.) 1. குருக்கத்தி; common delight of the woods. 2. சண்பகம் (சூடா.); champak 3. திப்பலி (சங்.அக.); long pepper.

வாசந்தி² *vāšandi*, பெ.(n.) ஆடாதோடை (யாழ்.அக.); malabar nut.

வாசந்திகட்டியிழு-த்தல் *vāšandi-kaṭṭi-y-iḻu-*, 4 செ.குன்றாவி. (v.t.) துன்புறுத்துதல்; to torment, afflict (loc.).

[வாசந்தி + கட்டி + இழு-த்தல்.]

வாசந்திரம் *vāšandiram*, பெ.(n.) கொத்தமல்லி; · coriander seed - Coriandrum sativum.

வாசபுட்பம் *vāša-puṭpam*, பெ.(n.) புங்கு பார்க்க; see *puṅgu.*

[வாசம் + புட்பம்]

வாசம் *vāšam*, பெ.(n.) 1. இறகு (பிங்.); feather, wing. 2. அம்பு (யாழ்.அக.); arrow. 3. நெய் (யாழ்.அக.); Ghee. 4. உணவு (யாழ்.அக.); food. 5. அரிசி (யாழ். அக.); rice. 6. நீர் (யாழ்.அக.); water. 7. மந்திர வகை (யாழ்.அக.); a mantra. 8. வேகம் (யாழ்.அக.); speed. 9. கை மரம் (தெ.வாசமு); rafter.

வாசமாலை¹ *vāša-mālai*, பெ.(n.) வாயினிலையிற் சுற்றி அமைந்த வேலைப்பாடு (இ.வ.); ornamental work on a door-frame.

[வாசல்மாலை → வாசமாலை]

வாசமாலை² *vāša-mālai*, பெ.(n.) பந்தல் முதலியவற்றின் முகப்பிற் கட்டும் அணியழகுத் தொங்கல்; hangings in front of a pavilion or pandal.

[வாசம் + மாலை]

வாசமாற்றம் *vāša-māṟṟam*, பெ.(n.) புறநாட்டில் குடியேறுகை (புதுவை); emigration.

[வாசம் + மாற்றம்]

வாசரம் *vāšaram*, பெ.(n.) நாள் (பிங்.); day.

வாசரி *vāšari*, பெ.(n.) 1. வாக்கால் கண்டிக்கை; rebuke. *"வாசரி சொல்லி அவர் முத்திரையை நிறுத்திப் போட்டார்" (கோயிலொ.15).* 2. அலப்பி வருத்துகை (நெல்லை); troubling with unnecessary speech.

வாசல் *vāšal*, பெ.(n.) 1. கட்டடத்தின் முகப்பு வழி; gateway, portal, entrance. *"நல்ல மனைவாசலில்" (கலித். 97, உரை).* 2. வீட்டினுள் உள்ள முற்றம்; open courtyard within a house. 3. அரசவை (வின்.); King's court. *"சோழன் வாசலிலே தேவகானம் பாடுவாளொருத்தியும்" (குருபரம். பன்னீ. பக். 176).*

"வாசலிது வாசலிது"

தெ. வாகிலி; க. வாகில்.

வாசல்காரியம் *vāšal-kāriyam*, பெ.(n.) அரசன் கட்டளையை நிறைவேற்றும் அலுவலர் (M.E.R.33 of 1928-9); officer who carries out royal orders.

Skt. கார்ய > த. காரியம்.

[வாசல் + காரியம்]

வாசல்காவலாளன் *vāšal-kavalā-lan*, பெ.(n.) வீட்டு வாயிலிற் காவல் புரிபவன்; door keeper, sentry at the gate.

[வாயில் → வாசல் + காவல் + ஆளன். ஆளன் = ஓர் ஆண்பாற் பெயரீறு.]

வாசல்தெளி-த்தல் *vāšal-teli*, 4 செ.கு.வி. (v.i.) நீர் தெளித்து வாயிலைத் தூய்மை செய்தல்; sprinkle water on the floor of the courtyard as part of house work.

[வாசல் + தெளி-,]

வாசல்நிருவாகம் *vāšal-niruvāgam*, பெ.(n.) வாசல்காரியம் பார்க்க; see *vāšal-kāriyam. "திருநெல்வேலி வாசல் நிர்வாகம்... தொழிற்படுத்தி" (தெய்வச். விறலிவிடு. 77).*

[வாசல் + நிருவாகம்]

Skt. *nirvāha* > த. நிருவாகம்.

வாசல்பணம் *vāšal-panam*, பெ.(n.) பழைய வரி வகை; an ancient tax. *"வாசல் பணம் உள்பட்ட... கடமை"(S.I.I.i.93).*

[வாசல் + பணம்]

வாசல்முதலி *vāšal-mudali*, பெ.(n.) வாசல்காரியம் (M.E.R.293 of 1928-9.) பார்க்க; see *vāšal-kāriyam.*

[வாசல் + முதலி]

வாசல்வரி *vāšal-vari*, பெ.(n.) பழைய வரிவகை; an ancient tax (S.I.I.ii,115).

[வாசல் + வரி]

வாசல்வித்துவான் *vāšal-vitiuvān*, பெ.(n.) அரசவைப் புலவன்; court-poet, poet - laureate. *"சேதுபதி..... வாசல்வித்துவான் யான் கண்டாய்" (பெருந்தொ.1788).*

*[வாசல் + **Skt.** vidvān > த. வித்துவான்]*

வாசல்வினியோகம் *vāšal-viniyōgam*, பெ.(n.) பழைய வரிவகை (S.I.I.ii.115); an ancient tax.

*[வாசல் + **Skt.** viniyōga > த. வினியோகம்]*

வாசவம் *vāšavam*, பெ.(n.) பகல் பதினைந்து முழுத்தங்களுள் ஐந்தாவது (விதான. குணாகுணா.73, உரை); the fifth of the 15 divisions of the day.

வாசவல் *vāšaval*, பெ.(n.) பாசவல்; fresh rice-flake. *"தேனெய் வாசவற் குவலி" (சீவக.1562).*

[பாசவல் → வாசவல்]

வாசவிலை *vāša-vilai*, பெ.(n.) கிச்சிலி; citrus fruit, bitter orange.

[வாசம் + விலை]

வாசவுப்பு *vāša-v-uppu*, பெ.(n.) கல்லுப்பு (சித்.அக.); rock-salt.

[வாசம் + உப்பு]

வாசற்கணக்கன் *vāšar-kaṇakkaṉ*, பெ.(n.) அரண்மனைக் கணக்கன்; accountant in a palace.

[வாசல் + கணக்கு → கணக்கன்]

வாசற்கதவு *vāsar-kadavu*, பெ.(n.) வீட்டின் முகப்பு நிலைக் கதவு; front door, as of a house. *"திறம்பிற்று.....வானோர் கடி நகர வாசற் கதவு"(திவ். இயற். 2, 88).*

[வாசல் + கதவு]

வாசற்கால் *vāšar-kāl*, பெ.(n.) 1. வாயில் நிலை (இ.வ.); door - frame. 2. வாசல்; entrance. *'நல்ல நாளில் நல்ல முழுத்தத்தில் வாசற்கால் வைத்தார்கள்' (உ.வ.).*

[வாசல் + கால்]



வாசற்காவல் *vāšar-kāval*, பெ.(n.) வாயில் காப்பு; guarding, watching.

[வாசல் + காவல்]

வாசற்படி *vāšar-paḍi*, பெ.(n.) 1. வாயினிலையின் அடிப்பாகம்; door-sill,door - step. 2. வாசல்; doorway. 3. வாசனிலையின் மேற்பாகம்; lintel, shelf over the lintel. *'திறவுகோலை வீட்டு வாசற்படியில் வைத்திருக்கிறேன்', 'வீட்டுக்கு வீடு வாசப்படி' (பழ.).*

[வாசல் + படி]

வாசற்பீடம் *vāsar-pīḍam*, பெ.(n.) அல்குல்; genital organ of the female.

[வாசல் + Skt. pīta > த. பீடம்]

வாசணி *vāšaṇi*, பெ.(n.) 1. பாதிரி; a tree-Bignonia chelonoides. 2. குங்குமச் செவ்வந்தி பார்க்க; see *kuṅguma-c-cevvandi.* 3. பொற்றலைக் கையாந்தகரை; yellow flowering.

வாசனைக்கன்னி *vāšaṉai-k-kaṉṉi*, பெ.(n.) சாதிபத்திரி; mace.

[வாசனை + கன்னி]

வாசனைக்கெந்தி *vāšaṉai-k-kendi*, பெ.(n.) புன்னை; a tree.

வாசா *vāšā*, பெ.(n.) ஆடாதோடை; a shrub-adathoda vasica.

வாசாங்கம் *vāsāṅgam*, பெ.(n.) மூக்கரைச் சாரணை; a creeper.

வாசாங்கியம் *vāšāṅgiyam,* பெ.(n.) மிளகு (மலை); black-pepper.

வாசாணிமூலி *vāšāṇi-mūli*, பெ.(n.) செவ்வா மணக்கு; red variety of castor-Ricinus communis.

[வாசாணி + மூலி]

வாசாதி *vāsādi*, பெ.(n.) ஆடாதோடை; a shrub - Adathoda vasica.



வாசாப்பு[1] *vāšāppu,* பெ.(n.) வாசகப்பா (புதுவை) பார்க்க; see *vāšaga-p-pā.*

வாசாப்பு[2] *vāšāppu,* பெ.(n.) திட்டுதல்; scolding, a buse. *'அவனிடம் வாசாப்பு வாங்காதே'.*

[வசவு → வாசாப்பு]

வாசாமம் *vāsāmam* , பெ.(n.) பெருங் குறிஞ்சி பார்க்க; see *peruṅ-kuriñji.*



வாசாலகம் *vāšālagam,* பெ.(n.) பேச்சு வல்லமை; skill in speech. *"வாசாலகத்தி லுயர்மதியில்" (பிரபோத.11,94).*

மறுவ. சொல்வன்மை.

[வாய் + சாலம் → வாசாலகம்]

Skt. *Jāla* > த. சாலம்.

வாசாலகன் *vāšālagaṉ,* பெ.(n.) பேச்சுத் திறமையுள்ளோன்; persuasive speaker, man who is clever in speech.

[வாய்ச்சாலகம் → வாசாலகன்]

ஒருகா. நாவலன்.

Skt. *Jāla* > த. சால → சாலகன்.

வாசாலை *vāšālai,* பெ.(n.) பேச்சுத் திறமையுள்ளவள் (யாழ்.அக.); woman who is clever in speech.

[வாய்சாலவன் → வாசாலை. வாசாலன் (ஆ.பா.) → வாசாலை (பெ.பா.)]

Skt. *Jāla* > த. சால → சாலை.

வாசி[1] *vāši,* பெ.(n.) 1. வேறுபாடு; difference. *"ஈசனிலைமைக்கு மேனையிமையோர் நிலைக்கும் வாசியுரை" (ஏகாம்.உலா, 483).* 2. இயல்பு; quality, nature; characteristic. *"அரக்கனவன் குலத்துவாசி" (இராமநா. ஆரணி.25).* 3. தகுதி; fitness, propriety. *"ஏறினா னவ்வாசியை வாசியாக" (திருவாலவா.28,45).* 4. நல்ல நிலைமை; good, improved condition. *"அவனுக்குடம்பு வாசிதான்".* 5. நிமித்தம் (வின்.); ground, cause. *"நீ வாராத வாசி காரியங்கெட்டது".* 6. வீதம்; rate, as of interest, proportion. *"செலவளவு மாகாணிவாசியும் நாலுமா வாசியும் கழித்து" (S.I.I.iii.123).* 7. காசு வட்டம்; discount,in changing money. *"வாசி தீரவே காசு நல்குவீர்" (தேவா.572,1).*

தெ., க. வாசி.

வாசி[2]-த்தல் *vāši-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. படித்தல்; to read. *"ஓலையை..... வாசியென்றனன்" (கம்பரா.எழுச்.3).* 2. கற்றல்; to learn. *"வாசித்துங் கேட்டும்" (திவ்.இயற். நான்மு.63).* 3. வீணை முதலியன

இசைக்க ஒலிப்பித்தல்; to play on a musical instrument. *"மாதவி தன் மனமகிழ வாசித்த றொடங்குமன்" (சிலப்.7, பக். 205).* 4. புல்லாங்குழல் போன்ற துளைக்கருவியியக்குதல்; to play.

[வாய் → வாயி → வாசி → வாசி-த்தல்.]

வாயாற்படித்தல், புல்லாங்குழல் போன்ற துளைக்கருவி இயக்குதல்.

வாசினை = வாசி → வாசினை = குழல் வாசிப்பு. வாசி→வாசகம் = வாசிக்கும் அல்லது வாசித்தற்குரிய பகுதி, வாசகப் பொத்தகம் (Reader).

வடமொழியில் வாசக என்னும் சொற்குப் பேசுதல், சொல்லுதல், ஒப்பித்தல், வெளியிடுதல் என்னும் பொருள்களே உள்ளன. வாசித்தல் (reading) என்னும் பொருளில்லை. அதற்கு 'வாச்' என்பது மூலம். வச் என்பது அடிமூலம் அதினின்று வசனம் என்னும் சொல் தோன்றும். வாச் என்பது வாக் என்று திரிந்து 'வாக்ய' என்னும் சொல்லைப் பிறப்பிக்கும்.

வாசிப்பது வேறு; சொல்வது வேறு. வடசொல் வேறு வகையில் தோன்றியிருத்தல் வேண்டும்; அல்லது தென்சொல்லினின்று ஒலியும் பொருளும் திரிந்திருத்தல் வேண்டும் (வ.மொ.வ.164).

வாசி³ *vāśi,* பெ.(n.) 1. இசைக்குழல் (பிங்.); musical pipe. 2. இசைப்பாட்டு (யாழ்.அக.); tune, musical song.

வாசி⁴ *vāśi,* பெ.(n) 1. குதிரை (பிங்.); horse. *"ஏறினானவ் வாசியை" (திருவாலவா.28, 45).* 2. முதல் விண்மீன் (சூடா.); the first naksartra. 3. பறவை (யாழ்.அக.); bird. 4. அம்பு (யாழ்.அக.); arrow. 5. மூச்சு (யாழ்.அக.); breath. 6. நடுநிலை (யாழ்.அக.); justice. 7. அணிவளைவான திருவாசி; ornamental arch over the head of an idol. *"மாணிக்கவாசி முந்து சிங்காதனம்" (திருவாலவா.37:75).*

[வாளி → வாசி. (செல்வி.77. மார்கழி 237)]

வாசி⁵ *vāśi,* பெ.(n.) வசிப்பவன்; dweller, inhabitant. *"காசிவாசி".*

[வதி → வசி → வாசி. (செல்வி. 77. மார்கழி 237)]

வாசி⁶ *vāśi,* பெ.(n.) குறியீட்டுச் சொல்; expression. *"சதம் என்பது அநந்த வாசி" (தக்கயாகப்.73,உரை).*

வாசி⁷ *vāśi,* பெ.(n.) இருப்பிடம் (யாழ்.அக.); dwelling place.

வாசி⁸ *vāsi*, பெ.(n.) 1. புல்லூரி; parasitic plant. 2. உயிர்ப்பு; breath.

வாசிக்கல் *vāśi-k-kal,* பெ.(n.) காந்தம் உள்ள ஒருவகை இரும்புக்கட்டி (வின்.); black load-stone.

வாசிக்கோவை *vāśi-k-kōvai,* பெ.(n.) குதிரைக்கிங்கிணி மாலை (சூடா.); a garland of small bells, round a horse's neck.

[வாசி + கோவை.]

வாசிககாரகம் *vāśika-kāragam,* பெ.(n.) கடிதம் (யாழ்.அக.); letter.

வாசிகட்டல் *vāśi-kaṭṭal*, பெ.(n.) மூச்சினைக் கட்டுப்படுத்தல்; to control the breath.

[வாசி + கட்டு → கட்டல்]

வாசிகந்தகம் *vāśi-kandagam*, பெ.(n.) ஓர் பூண்டு; a plant.

[வாசி + கந்தகம்]

வாசிகபத்திரம் *vācika-pattiram,* பெ.(n.) கடிதம் (யாழ்.அக.); letter.

*[வாசிகம் + **Skt.** Batra > த. பத்திரம்.]*

வாசிகம் *vāšikam,* பெ.(n.) வாக்காற் செய்யப்படுவது; that which is performed by the faculty of speech. *"மானதமே வாசிகமேகாயிகமேயென..... தவமூன்றாம்" (திருவிளை.எழுகட 6).* 2. வாய்ச் செய்தி (யாழ்.அக.); word of mouth, message. 3. செய்தி; news.

வாசிகரணசிகிச்சை *vāšikarana-šigiccai,* பெ.(n.) வித்தமிழ்து (விந்து) வளரச் செய்து காமவிருப்பத்தை அதிகப்படுத்தும் உடல் வலிமை, ஆண்மை இவற்றைத் தருமருந்து; the art of increasing the secretion of semon to promote sexual desire-aphrodisiac treatment, one of the eight parts or tantrams describing the means of increasing the verite power by giving tone to the weakened organs of generation.

[வாசி + கரணம் + **Skt.** *சிகிச்சை]*

வாசிகரணம் *vāšikaranam,* பெ.(n.) 1. விந்தினை வளர்ச்சி அடையச் செய்தல்; developing virility. 2. அன்புடைக் காமம் (யாழ்.அக.); genuine love, ardent passion.

வாசிகன் *vāšigan,* பெ.(n.) தூதன்; messenger.

[வாசகன் → வாசிகன்]

வாசிகாண்(ணு)தல் *vāši-kāṇu-,* 12 செ.கு.வி. (v.i.) 1. மதிப்புக்கு மேலாக அளவு காணுதல்; to be in excess; to yield more than the estimated quantity. 2. நல்ல நிலைமைக்கு வருதல்; to show improvement, as in health.

[வாசி + காண்-,]

வாசிதம்[1] *vāšidam,* பெ.(n.) புள் முதலியவற்றின் குரல் (யாழ்.அக.); cry of birds, beasts etc.

வாசிதம்[2] *vāšidam,* பெ.(n.) 1. அறிவு; knowledge. 2. குடியேற்றுகை; settling, peopling.

வாசிப்பு *vāšippu-,* பெ.(n.) 1. கல்வியறிவு; learning, knowledge. *'அவனுக்கு நல்ல வாசிப்புண்டு'.* 2. படிப்பு; reading. *'வாசிப்புச் சாலை'.* 3. தேசிக்கூத்துக்குரிய கால் அமைப்பு வகை (சிலப்.பக்.90, கீழ்க்குறிப்பு); a kind of movement of the legs in *tēši* dance.

[வாய் → வாயி → வாசி → வாசிப்பு]

வாசியோகம் *vāši-y-ōgam,* பெ.(n.) ஒக வகை; a kind of *yōga.* *"மூலக்கனலை வாசியோகத்தா லெழுப்பி" (கோபால கிருஷ்ணபாரதி 95).*

[வாசி + ஒகம்]

வாசிரம் *vāširam,* பெ.(n.) 1. நாற்சந்தி; junction where four streets meet. 2. வீடு; house. 3. பகல்; day.

வாசிலிங்கரு *vāšilingaru,* பெ.(n.) தண்டு (மூ.அ.); stem of a plant.

வாசிவாரியன் *vāši-vāriyan,* பெ.(n.) குதிரையைப் பழக்குவதில் வல்லவன்; one skilled in training horses. *"வாசிவாரியன் ஐந்து கதியையும் பதினெட்டுச் சாரியையும் பயிற்றுகையினாலே" (மதுரைக்.389, உரை).*

வாசினி *vāšini,* பெ.(n.) பெண் குதிரை (யாழ்.அக.); mare.

[வாசி → வாசினி]

வாசினை *vāśiṉai*, பெ.(n.) 1. படிக்கை; reading. *"வாசகன் மற்றது வாசினை செய்தபின்" (சூளா. சீய. 90).* 2. யாழ் முதலியன இசைப்பிக்கை; playing on a musical instrument. *"குழலவளுடைய யாழ் வாசினையை" (சீவக.603, உரை).*

[வாசி → வாசினை, வாசினை = குழல் வாசிப்பு. (வ.மொ.வ.164)]

வாசுகன்மூச்சு *vāśugaṉ-mūccu*, பெ.(n.) கருமுகிற் செய்ந்நஞ்சு; a kind of arsenic.

[வாசுகன் + மூச்சு]

வாசுகி[1] *vāśugi*, பெ.(n.) வித்தமிழ்து (மூ.அ.); seed.

வாசுகி[2] *vāśuki*, பெ.(n.) 1. உயிர்த்துளி; semen. 2. ஆத்திமல்லிகை பார்க்க; see *āttimalligai*. 4. நாகமலை; zinc-ore

வாசுகிக்கொடி *vāśugi-k-koḍi*, பெ.(n.) நாகநஞ்சு; a kind of arsenic.

[வாசுகி + கொடி]

வாசுகிந்தன் *vāśu-kindaṉ*, பெ.(n.) எருமை முன்னை; a tree - Premna latifolia.

வாசுகிநாதன் *vāśugi-nādaṉ*, பெ.(n.) சூதநஞ்சு; a kind of arsenic.

வாசுடா *vāśuḍā*, பெ.(n.) பலகறை; cowri

வாசுதேவமூலிகை *vāśudēva-mūligai*, பெ.(n.) வெள்ளை நீர்முள்ளி, a thorny plant bearing white flowers

[வாசு + தேவ + மூலிகை]

வாசுபிகை *vāśu-pigai*, பெ.(n.) ஓர் பூடு; a herb - Pimpinella - in volucrata

[வாசு + பிகை]

வாசுரை *vāśurai*, பெ.(n.) 1. நிலம்; earth. 2. இரவு; night. 3. பெண்; woman. 4. பெண் யானை (யாழ்.அக.); female elephant.

வாசை *vāśai*, பெ.(n.) ஆடாதோடை பார்க்க; see *āḍādōḍai*.

வாஞ்சிக்கொடி *vāñji-k-koḍi*, பெ.(n.) முல்லை; a variety of Jasmine.

[வாஞ்சி + கொடி]

வாஞ்சிகம் *vāñjigam*, பெ.(n.) மூங்கிலரிசி; seeds - Concretions of bamboo.

வாஞ்சிமலை *vāñji-malai*, பெ.(n.) விடத்தாரி பார்க்க; see *viḍa-t-tāri*.

[வாஞ்சி + மலை]

வாட்காரன் *vāṭ-kāraṉ*, பெ.(n.) அரம்பத்தால் மரமறுப்பவன்; sawyer.

[வாள் + காரன்]

வாட்குடி *vāṭ-kuḍi*, பெ.(n.) மறக்குடி; race of warriors. *"வாட்குடி வன்கணவர்க்கு" (பு.வெ.4, 4).*

[வாள் + குடி]

வாட்கூத்து *vāṭ-kūttu*, பெ.(n.) வாளைப் பிடித்து ஆடுங்கூத்து; sword dance. *"உறையைக் கழித்து வாட்கூத்து ஆடிக் காட்டுவார்" (சீவக.783, உரை).*

[வாள் + கூத்து]

வாட்கோரை *vāṭ-kōrai*, பெ.(n.) ஒருவகைக் கோரை (பிங்.) (மதுரைக்.172, உரை); a kind of sedge.

[வாள் + கோரை]



வாட்சி *vāṭci*, பெ.(n.) மல்லிகை, இருவாட்சி; a variety of Jasmine.

[வாள் → வாய் → வாய்ச்சி → வாட்சி]

வாட்சூலை *vāṭ-šūlai*, பெ.(n.) ஒரு வகைச் சூலை நோய்; a kind rheumatic pain.

வாட்டசாட்டம் *vāṭṭa-šāṭṭam*, பெ.(n.) தோற்றப் பொலிவு (கொ.வ.); being stalwart and shapely. *'ஆள் வாட்டசாட்டமாய் இருக்கிறான்'.*

[வாட்ட + சாட்டம்]

வாட்டப்பொலி *vāṭṭa-p-poli*, பெ.(n.) களத்தில் அடித்துப் போடப்பட்டிருக்கும் நீண்ட நெற்பொலி (இ.வ.); long heap of paddy on the threshing-floor.

[வாட்டம் + பொலி]

வாட்டம்[1] *vāṭṭam*, பெ.(n.) 1. வாடுகை; fading, withering. 2. உலர்ச்சி; dryness. 3. மெலிவு; leanness. *"மானமங்கையர் வாட்டமும் பரிவும்..... தீர்ந்தொளி சிறந்தார்" (சீவக.2382).* 4. வருத்தம்; trouble, distress. *"வாட்டிய வாட்டஞ் சொல்லி" (அரிச்.பு.விவாக.32).*

[வாடு → வாட்டம்]

வாட்டம்[2] *vāṭṭam*, பெ.(n.) 1. ஒழுங்கான சாய்வு; slope, gradient. *"நீர்வாட்டம்".* 2. வடிவழகு; beauty of form. *'ஆள் வாட்டமாயிருக்கிறான்'.* 3. மனக்களிப்பு; sumptuousness. *'சோறு வாட்டமாய்க் கிடைத்தது'.* 4. தோற்றப் பொலிவு (கொ.வ.); being stalwart and shapely. 5. நீட்டம் (இ.வ.); length. 6. பயனுறுதல்; advantage, suitability. *'காற்று வாட்டமாயடிக்கிறது'.*

ம. வாட்டம்; க. வாட; தெ. வாடமு.

[வாள் → வாடு → வாட்டம்]

அங்கணம் வாட்ட சாட்டமாயிருந்தால் தண்ணீர் சரட்டென்று போகும் என்னும் வழக்கை நோக்குக - (வ.மொ.வ.2., பக். 85).

வாட்டம்[3] *vāṭṭam*, பெ.(n.) 1. தோட்டம் (வின்.); garden. 2. தெரு (யாழ்.அக.); street. 3. வழி (சது.); way, road.

[வாள் → வாடு → வாட்டம்]

வாட்டரவு *vāṭṭaravu*, பெ.(n.) 1. சோர்வு (யாழ்.அக.); weariness, fatigue. 2. உலர்கை (வின்.); withering, fading.

வாட்டல் *vāṭṭal*, பெ.(n.) வாட்டப்பட்ட பொருள்; roast, anything roasted.

[வாடு → வாட்டு → வாட்டல்]

வாட்டலை *vāṭṭalai,* பெ.(n.) வாட்டாளை பார்க்க (யாழ்.அக.); see *vāṭṭaḷai.*

வாட்டாங்கொடி *vāṭṭāṅ-koḍi,* பெ.(n.) சோமலதைக் கொடி; soma plant.

மறுவ. ஆட்டலாங்கொடி.

வாட்டாழை *vāṭṭāḻai,* பெ.(n.) கடற்கரையில் உண்டாம் பழச்செடி வகை (மலை.); a coastal plant yielding edible fruits.

மறுவ. கடற்றாழை.

[வாள் + தாழை]

வாட்டாளை *vāṭṭāḷai,* பெ.(n.) மெலிந்தவன் (யாழ்.அக.); emaciated man.

[வாடு → வாட்டு → ஆள்]

வாட்டாறு *vāṭṭāṟu,* பெ.(n.) மலைநாட்டுத் திருமால் திருப்பதிகளுள் ஒன்று; a *Visṇu* shrine in the Travancore state. *"வளநீர் வாட்டாற்றெழினியாதன்" (புறநா.396). "வாட்டாற்றா னடிவணங்கி" (திவ்.திருவாய்.10, 6, 2).*

[வாட்டம் + ஆறு]

வாட்டானை *vāṭṭāṉai,* பெ.(n.) அறுவகைத் தானைகளுள் ஒன்றான வாட்படை; company of swordsmen in an army, one of *aṟuvagai-t-tāṉai. "பொய்யா வாட்டானை .... தென்னவன்" (கலித்.98) (திவா.).*

[வாள் + தானை]

வாட்டி[1] *vāṭṭi,* பெ.(n.) தடவை; time, turn. *"மூன்று வாட்டி வந்து போனான்".*

தெ. மாடு; க. மாட்டு.

[வள் → வாள் → வாட்டி (மு.தா.258)]

வாட்டி[2] *vāṭṭi,* பெ.(n.) களமடிக்கும் கடைசிப் பிணையல் மாடு (இ.வ.); the bull at the farthest end from the pole in the centre of the threshing-floor in treading corn.

வாட்டி[3] *vāṭṭi,* பெ.(n.) பருத்தி; cotton.

வாட்டிப்பிடிப்பான் *vāṭṭip-piḍippāṉ,* பெ.(n.) தழுதாழை; a shrub - a hedge tree- clerodendron phlomoides *koḍi.*

[வாட்டி + பிடிப்பான்]



வாட்டிப்பிழிதல் *vāṭṭi-p-piḻidal,* பெ.(n.) வெற்றிலையை அனலில் வாட்டிக் கசக்கிச் சாறு எடுக்கும் முறை; squeezing the juice after slight heating as in betel.

[வாட்டி + பிழிதல்]

வாட்டியபுட்பம் *vāṭṭiya-puṭpam,* பெ.(n.) 1. சந்தனம்; sandalwood. 2. மஞ்சள்; turmeric.

வாட்டியம் *vāṭṭiyam,* பெ.(n.) 1. தோட்டம்; garden. 2. வீடு (யாழ்.அக.); house.

வாட்டியாயினி *vāṭṭiyāyiṉi,* பெ.(n.) அதிபலை; species of Hibiscus.

மறுவ. பேராமுட்டி.

வாட்டு[1]-தல் *vāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. உலர்த்துதல்; to cause to wither or fade; to dry; to scorch. 2. வதக்குதல்; to roast. 3. வருத்துதல்; to vex, afflict, mortify. *"எளியரை வலியர் வாட்டின் வலியரை... தெய்வம் வாட்டும்" (காஞ்சிப்பு.கடவுள் வா.7).* 4. கெடுத்தல்; to injure; to destroy. *"இனம் போக்கி நின்றாரிகல் வாட்டி" (பு.வெ.2, 5).* 5. ஆடை வெளுத்தல்; to wash, as cloth. *"ஸ்ரீவைஷ்ணவ வண்ணத்தான் திருப்பரி வட்டங்களை அழகிதாக வாட்டி" (ஈடு.5, 10, 6).*

க. பாடு; தெ. வாடு; ம. வாடுக; **Ko.** vaa-ṟ.

[வாடு → வாட்டு → வாட்டு-,]

வாட்டு[2] *vāṭṭu,* பெ.(n.) 1. பொரியல்; roasted or fried flesh or vegetable. *"மனைவாழளகின் வாட்டுடன் பெறுகுவிர்" (பெரும்பாண்.256).* 2. இடர்; affliction. *'அவனை நல்ல வாட்டு வாட்டினான்'.*

க. பாடு.

[வாடு → வாட்டு.]

வாட்டு[3] *vāṭṭu,* பெ.(n.) 1. ஒழுங்கான சாய்வு; slope, gradient. *"நீர்வாட்டுச் சரியா விருக்கிறது".* 2. அழகானது (இ.வ.); that which is handsome. 3. தகுதியானது (வின்.); that which is suitable. *'அந்தத் தொழில் எனக்கு வாட்டா யிருக்கவில்லை'.* 4. சார்பு; side, nearness. *'என் பக்கவாட்டி லிராதே'.* 5. பழக்கமிகுதியா லேற்படும் பயிற்சி; facility from frequent use, as of the right or the left hand. *'அவன் இடக்கை வாட்டுள்ளவன்'.* 6. மலிவு (வின்.); cheapness. *'அது எனக்கு வாட்டாய்க் கிடைத்தது'.*

வாட்டுசோகை *vāṭṭu-cōgai,* பெ.(n.) சோகைநோயால் உண்டாகும் வீக்க வகை; bright's disease.

வாட்படை *vāṭ-paḍai,* பெ.(n.) வாள்தாங்கிப் போர்செய்யும் வீரர்; army of soldiers armed with swords. *"வாட்படையை யோட்டி" (பட்டினப்.226, உரை).*

[வாள் + படை.]

வாட்படையாள் *vāṭ-paḍaiyāḷ,* பெ.(n.) கொற்றவை (பிங்.); Durga, as armed with sword.

[வாட்படை → வாட்படையாள்]

வாட்பல் *vāṭ-pal,* பெ.(n.) அரம்பம் போன்ற பல்லமைப்பு; serrated tooth, toothed like a saw.

[வாள் + பல்]

வாட்பல்விலக்கி *vāṭ-pal-vilakki,* பெ.(n.) 1. சிறிய அரவகை (செங்கை); tenon saw. 2. அரத்தின் பற்களை நேராக்கும் கருவி; saw-set.

[வாள் + பல் + விலக்கி.]

வாட்போக்கி *vāṭpōkki,* பெ.(n.) திருச்சி மாவட்டத்தில் அமைந்துள்ளதும் அப்பரால் பாடப்பட்டதுமான ஒரு சிவத்தலம்; one of the saiva places having the distinction of being sung by saint Appar. It is in Tiruchi District.

வாட்போக்கிக்கலம்பகம் *vāṭ-pōkki-k-kalambagam,* பெ.(n.) பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையால் கி.பி.19ஆம் நூற்றாண்டில் எழுதப் பெற்ற நூல்; a book

written by *mīṉāṭci-sundaram-piḷḷai* in 19th century.

[வாட்போக்கி + கலம்பகம்]

வாட்போக்கிநாதர்உலா *vāṭ-pōkki-nādar-ulā,* பெ.(n.) சேறை கவிராசப் பண்டிதர் என்பவரால் கி.பி.16ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நூல்; a book written by *Sēṟai Kavirāsapanditar* in 20th century.

[வாட்போக்கி + நாதர் + உலா. நாதர் = skt.]

வாட்போர் *vāṭ-pōr,* பெ.(n.) வாளால் செய்யும் சண்டை; fight with the sword. *"வாட்போரான் மிகுகின்ற..... வீரருடைய" (மதுரைக்.53, உரை).*

[வாள் + போர்]

வாடகம் *vāḍagam,* பெ.(n.) வாடகை (இ.வ.); rent.

[வாழ் → வாழகை → வாடகை → வாடகம்]

வாடகை[1] *vāḍagai,* பெ.(n.) கூலி; rent, hire. *"வாடகைக் குதிரை" (திருவேங்.சத.85).*

[வாழ் → (வாழகை) – வாடகை = வீட்டிற் குடியிருத்தற்குக் கட்டும் மாத அல்லது ஆட்டைக் கட்டணம். பின்பு இயங்குதிணைப் பொருள்களைப் பயன்படுதற்குக் கொடுக்கும் கட்டணமும் இப்பெயர் பெற்றது.]

வடவர் பட் (bhat) என்னுஞ் சொல்லை மூலமாகக்காட்டி, அதையும் ப்ருத்த (*bhṛta*) என்பதன் திரிபாக்குவர். bhṛ = பொறு, bhṛta = தாங்கப் பெற்றவன், கூலிக்கு அமர்த்தப் பெற்ற வேலைக்காரன் அல்லது உழைப்பாளி அல்லது படைஞன். இவ்வகையிலும் மூலம் தமிழ்ச் சொல்லே. பொறு = bhṛ (வ.மொ.வ. 2., பக். 85).

வாடகை[2] *vāḍagai,* பெ.(n.) 1. சுற்றுவட்டம்; region, district. *"அரசூர் வாடகையில்" (S.I.I.iii.109).* 2. தெரு (யாழ்.அக.); street. 3. கொல்லை (யாழ்.அக.); garden. 4. வாகன சாலை (யாழ்.அக.); stable. 5. மண்சுவர் (யாழ்.அக.); mud wall.

வாடநாழி *vāḍanāḻi,* பெ.(n.) பேய்ப்புடலை; a bitter wild snake gourd, good for fever - Tricosanthes lacmiosa.

வாடபதி *vāḍa-padi,* பெ.(n.) உடம்பின் கொழுப்பு; fat of the body-adipose tissue.

வாடபூமாது *vāḍapūmādu,* பெ.(n.) 1. மூலி, கொட்டைப்பாசி; a kind of moss. 2. ஒருவகை வளி; a gas.

வாடல் *vāḍal,* பெ.(n.) 1. வாடுகை; withering; drying; becoming lean; fading. 2. வாடின பொருள்; that which is faded, or withered, that which is stale or not fresh, as vegetables. 3. உலர்ந்த பூ (பிங்.); faded flower.

[வாடு → வாடல்]

வாடவசி *vāḍavaśi,* பெ.(n.) தொட்டிவிடம்; a kind of arsenic-red orpiment.

[வாட + வசி]

வாடன்சம்பா *vāḍaṉ-cambā,* பெ.(n.) மட்டநெல்வகை; an inferior kind of paddy.

[வாடன் + சம்பா]

வாடாக்கடமை *vāḍā-k-kaḍamai,* பெ.(n.) திட்டமான வரி; permanently fixed tax. *"இவ்வாண்டு முதல் வாடாக்கடமையாக நிறுத்துவித்து" (S.I.I.V.120).*

[வாடா + கடமை]

வாடாக்குறிஞ்சி *vāḍā-k-kuriñji,* பெ.(n.) உலரும் நிலையினும் தன் இயற்கை நிறம் மாறாத பூ வகை (பிங்.); a plant whose flowers do not lose colour in withering.

மறுவ. குரவகம்.

[வாடா + குறிஞ்சி]

வாடாத்தம் *vāḍāttam,* பெ.(n.) ஆல்; banyan tree - ficus bengalensis.

[வடம் + அத்தம்]

வாடாத்தாமரை *vāḍā-t-tāmarai,* பெ.(n.) பண்டைக்கால அரசர் பாணர்க்கு அளிக்கும் பொற்றாமரைப்பூ; lotus-shaped ornament of gold, presented to bards by ancient kings. *"வாடாத் தாமரை சூட்டுவெனினக்கே" (புறநா.319).*

[வாடு + ஆ + தாமரை]

வாடாப்பூ *vāḍā-p-pū,* பெ.(n.) வாடா மல்லிகை, தென்னம்பூ, பனம்பூ, பறிக்காதபூ; unfaded and unplucked flowers.

[வாடா + பூ]

வாடாமல்லி *vāḍā-malli,* பெ.(n) வாடா மல்லிகை (இ.வ.) பார்க்க; see *vāḍa-malligai.*

[வாடு + 'ஆ' (எ.ம.இ.நி.) + மல்லி]

வாடாமல்லிகை *vāḍā-malligai,* பெ.(n.) பூச்செடிவகை (வின்); bachelor's buttons.

[வாடு + 'ஆ' (எ.ம.இ.நி.) + மல்லிகை]

வாடாமாலை *vāḍā-mālai,* பெ.(n.) 1. பொன்னரி மாலை; gold necklace, as not fading like the garland of flowers. *(பூ மாலை போன்று வாடாது). "வாடாமாலை பாடினி யணிய" (புறநா.364).* 2. கிழி கிடை முதலியவற்றால் செய்யப்படும் மாலை (சிலப்.5, 33, உரை); garland made of rags, pith etc.,

[வாடு + ஆ (எ.ம.) + மாலை]

வாடாமுட்செடி *vāḍā-muṭšeḍi,* பெ.(n.) மஞ்சட்பூவுள்ள ஓர் செடி; a thorny plant with yellow flowers-Furze.

[வாடா + முள் + செடி]

வாடாவஞ்சி *vāḍā-vañji,* பெ.(n.) *கருவூர்* பார்க்க; see *karu-v-ūr. "வாடாவஞ்சி வாட்டு நின்.... நோன்றாள்" (புறநா.39).*

[வாடு + 'ஆ' (எ.ம.இ.நி.) + வஞ்சி]

வாடாவள்ளி *vāḍā-vaḷḷi,* பெ.(n.) 1. ஒரு வகைக் கூத்து; a kind of dance. *"வாடா வள்ளியின் வளம்பல தரூஉ நாடு பல" (பெரும்பாண்.370).* 2. ஓவியம் (அக.நி.); painting, picture.

[வாடு + 'ஆ' (எ.ம.இ.நி.) + வள்ளி]

வாடாவிளக்கு *vāḍā-viḷakku,* பெ.(n.) நந்தாவிளக்கு (நெல்லை); perpetually burning lamp.

[வாடு + ஆ (எ.ம.இ.நி.) + விளக்கு]



வாடாவூட்டு *vāḍā-v-ūṭṭu,* பெ.(n.) திட்டமான வரி; permanently fixed tax.

வாடி¹ vāḍi, பெ.(n.) தொட்டாற்சுருங்குஞ் செடி வகை; a sensitive plant.

வாடி² vāḍi, பெ.(n.) 1. தோட்டம் (வின்.); garden. 2. மதில் (யாழ்.அக.); wall. 3. முற்றம் (யாழ்.அக.); courtyard. 4. வீடு (யாழ்.அக.); house. 5. மீனுலர்த்துமிடம் (இ.வ.); fish-curing yard. 6. பட்டி; village, hamlet. 7. சாவடி (வாடிவீடு); rest-house 8. காணிக்காரரின் புல் வேய்ந்த மூங்கிற் குடிசை; hut of bamboo and grass, of *kāṇi-k-kārar* (G.TnD 1, 7). 9. அடைப்பிடம் (வின்.); enlosure, fenced place 10. சூழ வேலி கோலிய விறகு, மரம் முதலியன விற்குமிடம் (விறகுவாடி, மரவாடி.); yard, shed, where firewood is stored for sale.

[பாடி → வாடி (செல்வி.75, ஆடி, 606)]

வாடிக்கை vāḍikkai, பெ.(n.) 1. வழக்கம்; habit *"வேதங்களைக் கிளி வாடிக்கையாற் கற்று" (இராமநா. அயோத், 22).* 2. வழக்கமாகப் பற்றுவரவு செய்கை; custom, as in dealing. 3. முறை; usage *"உலக வாடிக்கை நிசமல்லவோ" (குமரே. சத.69).* 4. வாடிக்கைக்காரன் பார்க்க; see *vāḍikkai-k-kāraṉ.*

க., து. வாடிகெ; தெ. வாடு, வாடுக.

[பாடு → வாடுக்கை → வாடிக்கை (மு.தா.304)]

வாடிக்கைக்காரன் vāḍikkai-k-kāraṉ, பெ.(n.) 1. வழக்கமாக ஓரிடத்துப் பற்றுவரவு செய்வோன்; customer. 2. பண்டங்களை வழக்கமாக ஓரிடத்து விலைக்குக் கொடுத்து வருவோன்; customary supplier of goods

[வாடிக்கை + காரன்]

வாடிகம் vāḍigam, பெ.(n.) பிரமி² (நாமதீப. 340) பார்க்க; see *pirami.*

வாடிகை vāḍigai, பெ.(n.) 1. வாடகை² 2, 3, 4 பார்க்க; see *vāḍagai.*

வாடிவாசல்¹ vāḍi-vāšal, பெ.(n.) அரண்மனைவாசல் (இ.வ.); entrance hall of a palace or mansion.

[பாடிவாசல் → வாடிவாசல் (செல்வி.75, ஆடி. 006.)]

வாடிவாசல்² vāḍi-vāšal, பெ.(n.) 1. முல்லை நில மாட்டுத் தொழுவ வாசல்; entrance of cowshed in mullai tract. 2. இடையர் குடியிருப்புவாசல்; entrance of yadhava's colony. 3. சல்லிக்கட்டுக் காளைகளை அடைத்து வைத்திருக்கும் தொழுவ வாசல்; small entrance in the narrow passage between the ground and the place where the bulls are kept in the sport of *jalli-k-kaṭṭu* 4. பாசறை வாசல்; entrance of encampment.

[பாடிவாசல் → வாடிவாசல். (செல்வி.75, ஆடி. 006.)]

வாடிவீடு vāḍi-vīḍu, பெ.(n.) 1. பாசறை; war camp. 2. அரசன் தங்கல்மனை; royal rest-house. 3. சாவடி; choultry.

[பாடிவீடு → வாடிவீடு]

வாடிவேலி vāḍi-vēli, பெ.(n.) சிற்றூரின் எல்லைக் குறி (கோவை.); the boundary line of a village

[வாடி+வேலி]

வாடு¹-தல் vāḍu-, 5 செ.கு.வி. (v.i.) 1. உலர்தல்; to wither, fade, dry up. *"பொதியொடு பீள்வாட" (நாலடி, 269).* 2. மெலிதல்; to be emaciated, to become weak. *"எந்தோள் வாட" (கலித்.68.).* 3. மனமழிதல்; to pine away, grieve. *"வாடினேன் வாடி வருந்தினேன்"*

(திவ்.பெரியதி.1, 1, 1). 4. பொலிவழிதல்; to turn pale. "குழலியென் வாடிப் புலம்புவதே" (திருக்கோ.14). 5. தோல்வியடைதல்; to be defeated. "வாடாவஞ்சி தலைமலைந்து" (பு.வெ.3, 1, கொளு). 6. கெடுதல்; to perish. "காரிகை பெற்றதன் கவின் வாட" (கலித்.124). 7. நீங்குதல்; to be removed. "சூலமும்... கரத்தினில் வாடா திருத்தி" (கல்லா.87, 29). 8. குறைதல்; to diminish, decrease. "வாட்டருஞ் சீர்க்கண்ணகி நல்லாளுக்கு" (சிலப்.9, 40). 9. நிறை குறைதல் (இ.வ.); to fall short in weight.

க. பாடு; குட. பாட்; து. பாடுனி; தெ. வாடு; பார்ஜி. வாட்; குவி. வ்விராலி; ம. வாடுக; **Kod.** ba-d; **pa.** *vāḍ*

வாடு[2] *vāḍu,* பெ.(n.) வாடற்பூ; faded flower. "ஈங்கைவா டுதிர்புக" (கலித்.31).

[வீ → வீடு → வாடு]

வாடூன் *vāḍūṉ,* பெ.(n.) உப்புக்கண்டம்; dried flesh. "வாராதட்ட வாடூன் புழுக்கல்" (பெரும் பாண். 100).

[வாடு + ஊன்]

வாடை[1] *vāḍai,* பெ.(n.) 1. வடகாற்று (பிங்.); northwind. "வாடை நலிய வடிக்கணா டோணைசை" (பு.வெ.8, 16). 2. குளிர் காற்று (கொ.வ.); chill wind. 3. காற்று (பிங்.); wind. "வாடை யுயிர்ப்பின்" (கம்பரா. மிதிலைக். 66). 4. மணம்; fume, scent "சுகந்த வாடையின்" (திருப்பு.143). 5. வடவை பார்க்க; see *vaḍavai.* "வாடை யெரிகொள்வேலை" (திருப்பு.382).

ம. வாட; தெ. வாட; குருக். பார்னா.

வாடை[2] *vāḍai,* பெ.(n.) 1. தெருச்சிறகு (சூடா.); row of houses, as in a street. "கீழைவாடை மேலைவாடை" (சூடா.). 2. தெரு (பிங்.); street. 3. இடையர் அல்லது வேடர் வாழும் வீதி (வின்.); street where herdsmen or hunters reside. 4. குறுஞ் சிற்றூர்; village, hamlet. 5. வழி; direction. 'இதே வாடையாகப் போ'.

வாடை[3] *vāḍai,* பெ.(n.) மருந்து (பிங்.); medicine.

வாடைக்கச்சான் *vāḍai-k-kaccāṉ,* பெ.(n.) வடமேல்காற்று (யாழ்.அக.); north-west wind.

[வாடை + கச்சான். கச்சான் = மேல்காற்று, கோடைக்காற்று.]

வாடைக்கொண்டல் *vāḍai-k-koṇḍal,* பெ.(n.) வடகீழ்க்காற்று (யாழ்.அக.); north-east wind.

[வாடை + கொண்டல்]

வாடைப்பாசறை *vāḍai-p-pāšaṟai,* பெ.(n.) பாசறைக்கண் வீரர் தம் காதன் மகளிரை நினைந்து துயருறும்படி செய்கின்ற வாடைக்காற்றின் மிகுதியைக் கூறும் புறத்துறை (பு.வெ.8,16.); theme describing the north wind which blows in the camp of soldiers and distresses them by reminding them of their lady-loves.

[வாடை + பாசறை]

வாடைப்பொடி *vāḍai-p-poḍi,* பெ.(n.) 1. நறுமணத்தூள் (இ.வ.); aromatic or scented powder. 2. வயப்படுத்தும் பொடி; medicated powder that charms a person and keeps him under, fascination. "வாடைப் பொடியிட்டான்" (விறலி விடு.823).

[வாடை + பொடி. வாடை = நறுமணம்.]

வாடையவலன் *vāḍaiyavalaṉ*, பெ.(n.) பேராமுட்டி; a plant - pavonia odorata.

[வாடை + அவலன்]

வாடையிலோடு-தல் *vāḍaiyil-ōḍu-*, 5 செ.கு.வி. (v.i.) வடகாற்றின் உதவியால் மரக்கலம் பாய் விரித்துச் செல்லுதல் (வின்.); to sail with the north wind

[வாடையில் + ஒடு-,]

வாடைவசியம் *vāḍai-vaśiam*, பெ.(n.) (in magic) enchanting, charming.

[வாடை + வசியம்]

வாண்டியம்[1] *vāṇḍiyam*, பெ.(n.) பேராமுட்டி; a plant - pavonia odorata.

வாண்டியம்[2] *vāṇḍiyam*, பெ.(n.) செடிவகை; pink-tinged white sticky mallow.

வாண்டு *vāṇḍu*, பெ.(n.) மிகவும் குறும்பு செய்கிற குழந்தை; mischievous child. *'விடுமுறை விட்டால் இந்த வாண்டுகளைச் சமாளிக்க முடியாது'.*

வாண்டைக்கன்று *vāṇḍaik-kaṉṟu*, பெ.(n.) மூன்று மாத அகவைக்கு மேற்படாத பல் முளைக்காத ஆடு; the lamb which has three months old and not sprouting of teeth.

[வாண்டை + கன்று]

வாண்டையான் *vāṇḍaiyāṉ*, பெ.(n.) கள்ளர் இனத்தவரின் பட்டப் பெயர்களுள் ஒன்று; a title of the *Kaḷḷar* caste.

வாண்மங்கலம் *vāṇ-maṅgalam*, பெ.(n.) 1. பகையரசை வென்ற வேந்தன் தன் வாளினைக் கொற்றவை மேல் நிறுத்தி நீராட்டு தலைக் கூறும் புறத்துறை (தொல்.பொருள்.68, உரை); theme which describes the sword of a victorious king being placed in the hands of *koṟṟavai* and given a ceremonial bath. 2. வீரனது வாள் வென்றியாற் பசிப்பிணி தீர்ந்த பேய்ச் சுற்றம் அவன் வாளினை வாழ்த்துதலைக் கூறும் புறத்துறை (தொல். பொருள். 91.); theme which describes a victor's sword being blessed by the devils whose hunger has been satisfied by its deeds of slaughter.

[வாள் + மங்கலம்]

வாண்மண்ணுநிலை *vāṇ-maṇṇu-nilai*, பெ.(n.) நன்னீராலே மஞ்சனமாட்டிய அரச வாளின் வீரத்தைக் கூறும் புறத்துறை (பு. வெ. 6, 27); theme which describes the ceremonial bath given to a king's sword and the heroic achievements of the king with that sword.

[வாள் + மண்ணுநிலை]

வாண்முகம் *vāṇ-mugam*, பெ.(n.) வாளின் வாய்; edge of sword. *"வாண்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்" (பதிற்றுப்.58,3).*

[வாள் + முகம்]

வாண்முட்டி *vāṇ-muṭṭi*, பெ.(n.) வாளின் பிடி; handle or hilt of a sword. *'வாண்முட்டியை இடையறும்படி பிடித்த கையினர்' (சீவக. 2217, உரை).*

[வாள் + முட்டி]

வாணக்கந்தகம் *vāṇa-k-kandagam*, பெ.(n.) பொறிவாணம் முதலிய செய்தற்குரிய தனிம வகை (M.M.300.); stick-sulphur, roll sulphur, as used in fireworks.

[வாணம் + காந்து → காந்தகம் → கந்தகம்]

வாணக்கா *vāṇakkā*, பெ.(n.) நெல்லிப் பருப்பு; kernel of the fruit-Emblica-Indian goose berry.

வாணக்காரன் *vāṇa-k-kāran*, பெ.(n.) வாணவெடிகள் முதலியன செய்து விற்பவன்; one who manufactures and sells fireworks.

க. வாணகார.

[வாணம் + காரன். காரன் = வினைமுதல் உடைமை முதலிய பொருளில் வரும் ஆண்பாற் பெயரீறு.]

வாணக்குழல் *vāṇa-k-kuḷal*, பெ.(n.) அதிர்வேட்டுக்காகப் பொறிவாண மருந்து அடைக்கும் வெடிகுழாய்; metallic tube fixed in a block of wood, used for loading fireworks with gun powder.

[வாணம் + குழல்]

வாணகந்தி *vāṇa-kandi*, பெ.(n.) அரசமரம்; a sacred tree - Ficus religiosa.

[வாண + கந்தி]

வாணகந்தியுப்பு *vāṇa-kandi-yuppyu*, பெ.(n.) வெடியுப்பு; salt petre.

[வாணகந்தி + உப்பு]

வாணகம் *vāṇagam*, பெ.(n.) 1. வாணம் 1, 20 பார்க்க; see *vāṇam*. 2. ஆவின் மடி; cow's udder. 3. வேய்ங்குழல்; flute. 4. தனிமை; loneliness.

வாணகன் *vāṇagaṇ*, பெ.(n.) திருமால் (யாழ்.அக.); *visṇu*.

[ஒருகா. (வான் → வானகன் → வாணகன்)]

வாணகாந்திகம் *vāṇa-kāndigam*, பெ.(n.) சோதிப்புல்; *šōdi-p-pul*.

[வாண + காந்திகம்]

வாணகோப்பாடி *vāṇa-kō-p-pāḍi*, பெ.(n.) வாணவரசர் ஆண்டதும், மைசூர் அரசவை, கர்நூல் மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் ஆகியவற்றின் பாகங்கள் அடங்கியதுமான நாடு; the country of the *Bāṇas*, an ancient Kingdom comprising portions of the mysore state, and of the karnool and north arcot districts (S.I.I.ii, preface.27).

[வாண + கோப்பாடி]

வாணதண்டம் *vāṇa-daṇḍam*, பெ.(n.) புடைவை நெய்யுங் கருவி வகை (யாழ்.அக.); apparatus for weaving sarees.

[வாண + தண்டம்]

வாணதீர்த்தம் *vāṇa-tirttam*, பெ.(n.) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஓர் அருவி; a sacred waterfall in the Tirunelvelly District.

[வாண + **skt.** *tirtha* > த. தீர்த்தம்]

வாணபுரம் *vāṇa-puram*, பெ.(n.) வாணாசுரனது தலைநகர்; the capital of *Bāṇā's* Kingdom. "*வாணபுரம்புக்கு*" *(திவ்.திருவாய்.7,10,7).*

[வாண(ன்) + புரம்]

வாணம் *vāṇam*, பெ.(n.) 1. அம்பு; arrow. 2. தீ; fire. "*பாயும் புகைவாணங் கொடு பாணம்*" *(இரகு.நகர.24).* 3. வளைந்து செல்லும் வாணக்கட்டு முதலியன (யாழ்.அக.); rocket, fire works.

[வாளம் → வாணம். வாணம் → வ. பாண. (சு.வி. 28)]

வாணரம் *vāṇaram*, பெ.(n.) மூளையையும் முதுகந்தண்டங் கொடியையும் பற்றிய நோய்; inflammation of the brain and the spinal card-Meningitis.

வாணலி *vāṇali*, பெ.(n.) வறுக்குஞ்சட்டி; frying pan.

தெ., க. பாணலி.



வாணலிங்கம் *vāṇa-liṅgam*, பெ.(n.) வாணாசுரனாற் பூசிக்கப்பட்டதும், நருமதையில் அகப்படுவதுமான இலிங்க வகை; a form of *Liṅgam*, found in the *Narmadā* as worshipped by the Asura *Bāṇa* *"வாணனெனுமசுர ணார்சித்தான்... வாணலிங்கம்" (சைவச.பொது.85)*

[வாண + லிங்கம் → இலங்கம்]

வாணவாதம் *vāṇa-vādam*, பெ.(n.) கால் கையை சுருக்க வாங்கி இழுத்துக் கடுத்து நோயை யுண்டாக்கும் ஒரு வகை ஊதை நோய்; a kind of rheumatism.

*[வாணம் + வாதம். **Skt.** வாதம்.]*

வாணவுப்பு *vāṇa-v-uppu*, பெ.(n.) வெடியுப்பு; potassium nitrate.

[வாணம் + உப்பு]

வாணவெடி *vāṇa-veḍi*, பெ.(n.) வெடிவகை; a kind of rocket fire.

[வாணம் + வெடி]



வாணவேடிக்கை *vāṇa-vēḍikkai*, பெ.(n.) வாணங்களை வெடித்து நிகழ்த்தும் கண்கவர் காட்சி; display of fireworks.

[வாள் → வாளம் → வாணம் + வேடிக்கை]

வாணம்1 *vāṇam*, பெ.(n.) 1. கடைகால் (நெல்லை.); excavation for laying foundation 2. வெடி; cracker.

[வானம் → வாணம்]

வாணம்2 *vāṇam*, பெ.(n.) 1. அம்பு; arrow. 2. தீ; fire. *"பாயும் புகைவாணங் கொடு பாணம்" (இரகு. நகர. 24).* 3. வாணவெடி முதலியன (யாழ்.அக.); rocket fire works.

[வாளம் → வாணம். வாணம் → வ.பாண.] (சு.வி.28)

வாணன்1 *vāṇaṉ*, பெ.(n.) நெல்வகை; a kind of paddy. *"மலை முண்டன் வாணன்" (நெல்விடு. 186).*

வாணன்2 *vāṇaṉ*, பெ.(n.) 1. குடியிருப்பவன்; resident. *"அண்ட வாண ரமுதுண நஞ்சுண்டு"* (தேவா.644,6). 2. ஏதேனும் ஒரு தொழிலால் வாழ்பவன்; one who pursues

a profession or calling. "*பாவாணன்*". 3. நல்வாழ்வுள்ளவன் (வின்.); prosperous man.

[வாழ் + ந் + அன் → வாணன். 'ந்' பெயரிடை நிலை.]

வாணன்³ *vāṇaṉ,* பெ.(n.) 1. மாவலியின் மகனான ஓர் அரசன்; an asura, son of *Māvali.* "*வாணன் பேரூர்*" *(மணிமே.3.123).* 2. மாவலி தலைமுறையில் தோன்றிய அரசன்; King of a dynasty tracing its lineage from *Māvali.* "*வாண வித்தியாதரரான வாணராயர் மகா தேவியார்*" (S.I.I.iii,99). "*ஆறையர்கோன் வாணன்*" *(பெருந்தொ. 1185).* 3. பாண்டி நாட்டில் தஞ்சாக்கூர் என்ற நகரையாண்ட ஒரு தலைவன்; a chief of *Tañjakkūr,* a town in *Pāṇḍya* country. 4. மூன்றாவது விண்மீன் (திவா.); the third naksatra.

வாணன்கோவை *vāṇaṉ-kōvai,* பெ.(n.) தஞ்சைவாணன் மீது பொய்யா மொழிப் புலவரியற்றிய கோவைச் சிற்றிலக்கியம்; a *kōvai* trealise on *Tañjai-vāṇaṉ.*

வாணா *vāṇā,* பெ.(n.) வறுக்குஞ்சட்டி; frying pan.

[வாணல் → வாணா]

வாணாட்கோள் *vāṇāṭ-kōḷ,* பெ.(n.) பகைவனது அரணைக் கொள்ள நினைத்து வாளைப் புறவீடு விடுவதைக் கூறும் புறத்துறை (பு.வெ.6, 3); theme of a King sending his sword in advance at an auspicious moment, when setting out with the object of capturing the fort of his enemy.

[வாழ் + நாள் + கோள்]

வாணாத்தடி *vāṇā-t-taḍi,* பெ.(n.) சிலம்பக்கழி; zudgel used by Indian gymanasts in fencing.

வாணாய் *vāṇāy,* பெ.(n.) வாணலி பார்க்க; see *vāṇali.*

வாணாள் *vāṇāḷ,* பெ.(n.) 1. வாழுங்காலம்; life-time. 2. உயிர்; life. "*தெவ்வர்வாணாள் வீழ்ந்துக*" *(சீவக.3079).*

[வாழ் + நாள்]

வாணாளளப்போன் *vāṇāḷ-aḷappōṉ,* பெ.(n.) ஞாயிறு (நாமதீப.94); sun.

[வாணாள் + அள → அளப்பு → அளப்போன்]

வாணாளைவாங்கு-தல் *vāṇāḷai-vāṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பெருந்தொந்தரவு பண்ணுதல்; to tease, worry to death. '*ஏன் என்னுடைய வாணாளை வாங்குகிறாய்?*'

[வாணாள் + வாங்கு-.]

வாணி¹ *vāṇi,* பெ.(n.) 1. சொல் (பிங்.); word, language, speech. "*நன்கல்ல வாணி கிளத்தலடக்கி*" *(பிரமோத். 22, 19).* 2. கல்வி; learning. "*துதி வாணி வீரம்*" (பெருந்தொ. 418). 3. கலைமகள் (பிங்.); Kalai-magal, as the Goddess of learning. "*வாணியு மல்லிமென் மலரையனும்*" *(சீகாளத். பு. நான்மு. 147).* 4. சரசுவதி நதி; the river Sarasvati. "*கங்கை காளிந்தி வாணி காவிரி... நதிகள்*" *(திரு.விளை.தல.11).* 5. ஒலி தோன்றும் இடம்; source of vocal sounds. "*நாபிக்கு நால்விரல் மேலே... வாணிக் கிருவிரலுள்ளே*" *(திருமந்.616).* 6. கூத்துவகை (பிங்.); a kind of dance.

வாணி² *vāṇi,* பெ.(n.) அம்பு (பிங்.); arrow.

வாணி³ *vāṇi,* பெ.(n.) அசமதாகம் (மலை.); bishop's weed.

வாணி[4] *vāṇi,* பெ.(n.) நீர் (வின்.); water.

வாணி[5]-த்தல் *vāṇi,* 11 செ.குன்றாவி. (v.t.) அமைத்தல்; to formmake. *"மன்னுதிரு வெண்மணலை வாணித்து" (இலஞ்சி. முருகனுலா,37).*

வாணி[6] *vāṇi,* பெ.(n.) 1. சாதிபத்திரி; mace. 2. ஓமவகை; a variety of omum. 3. வாணிகம் பார்க்க; see *vāṇigam.* 4. மனோசிலை; red orpiment. 5. கோழை நீர்; mucilage. 6. இந்துப்பு; epsom salt. 7. வாலுளுவையரிசி; seed of a plant-Celastrus paniculata. 8. முடிமாமிசம்; flesh of the head.

வாணிகச்சம் *vāṇikaccam,* பெ.(n.) வறட்சுண்டி; a species of sensitive plant-Mimosa tripuctra.

வாணிகச்சாத்து *vāṇiga-c-cāttu,* பெ.(n.) வாணிகர்திரள்; caravan of traders. *'வாணிகச் சாத்தோடு போந்து தனிமையால் யான் துயருழந்தேன்' (சிலப்.11,190,உரை).*

[வாணிகம் + சார்த்து → சாத்து. (சாத்து = கூட்டம், வணிகக்கூட்டம்.)]

வாணிகச்சி *vāṇigacci,* பெ.(n.) வணிக இனப் பெண்; woman of the trading caste.

[வாணிகன் → வாணிகச்சி]

வாணிகம்[1] *vāṇigam,* பெ.(n.) 1. கொண்டு கொடுத்தற் தொழில்; trade. *"வாணிகம் செய்வார்க்கு வாணிகம்" (குறள்.120).* 2. ஊதியம்; gain, profit. *"யானோரர் வாணிகப் பரிசிலனல்லேன்" (புறநா.208).*

[வணிகன் → வணிகம் → வாணிகம்]

நாகரிக மக்கள் வாழ்க்கைக்கு, உணவு போன்றே உடை, கலம், உறையுள், ஊர்தி முதலிய பொருள்களும், பொன் வெள்ளி முதலிய செல்வமும் இன்றியமையாதிருப்பதால், பொருளாட்சித் துறையில், ஒரு நாட்டின் நல்வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையானது உழவுத் தொழிலென்றும் அதற்கடுத்தவை இயற்கையும் செயற்கையுமான விளை பொருள்களால் செய்யப்படும் பல்வேறு கைத்தொழில்களென்றும், அவற்றிற்கடுத்தது நிலவழியும் நீர்வழியும் நடத்தப் பெறும் வணிகமென்றும், பண்டைத் தமிழர் நன்கு அறிந்திருந்தனர். அதனால் மூவேந்தரும் இருவகை வணிகத்தையும் ஊக்குதற்குச் சாலைகளும் துறைமுகங்களும் அமைத்தும் அவற்றைப் பாதுகாத்தும் வந்தனர்.

வணிகம் என்பது 'வணிஜ்' என்றும் வாணிகம் என்பது 'வாணிஜ்ய' என்றும் வடமொழியும் திரியும்.

நாட்டிற்கு உள்ளிருந்து ஆட்சியைச் செவ்வையாய்ச் செய்தற்கு ஒரு மருதநிலத் தலைநகரும், நாட்டோரத்தில் கடற்கரையிலிருந்து நீர்வாணிகத்தை ஊக்குதற்கு ஒரு நெய்தல் தலைநகருமாக, இரு தலைநகரை மூவேந்தரும் தொன்றுதொட்டுக் கொண்டிருந்தனர்.

வேந்தன்	மருதத் தலைநகர்	நெய்தல் தலைநகர்
பாண்டியன்	மதுரை	கொற்கை
சோழன்	உறையூர்	புகார் (காவிரிப் பூம்பட்டினம்)
சேரன்	கருவூர்(கரூர்)	வஞ்சி.

முதலிரு கழக நூல்களும் முற்றும் அழிந்து போனமையால், பாண்டியரின் இடைக்கழகக் கால மருதநிலத் தலைநகரும் தலைக்கழகக் கால நெய்தல்நிலத் தலைநகரும் அறியப்படவில்லை. சேரர் கொங்கு நாட்டை இழந்த பின்னர், வஞ்சிக்கே கருவூர்ப் பெயரை இட்டுக் கொண்டனர்.

கோநகர்களிலும் துறை நகர்களிலும் இருந்து, நில வணிகமும், நீர் வணிகமும் செய்து வந்த நகரத்தார் அல்லது நகரமாந்தர் என்னும் வகுப்பினரை, எண்பேராயங்களுள் ஓராயமாகக் கொண்டு, அவரை மன்னர் 'பின்னோர்' என்று சிறப்பித்தும் அவருள் தலைமையானவர்க்கு 'எட்டிப்பட்டம்' வழங்கியும், மூவேந்தரும் ஊக்கி வந்தனர்.

'எட்டிப்பட்ட'ச் சின்னமாக ஒரு பொற்பூ அளிக்கப்பெறும்.

"எட்டிப் பூப் பெற்று" (மணிமே.22 : 113)

எட்டிப்பட்டம், அதைப் பெற்றிட்ட வணிகனின்

மனைவிக்கும் அல்லது மகட்கும் மதிப்புரவுப் பட்டமாக (Title of courtesy) வழங்கி வந்ததாகப் பெருங்கதை கூறுகின்றது.

"எட்டி காவிதிப் பட்டம் தாங்கிய
மயிலியன் மாதர்" (பெருங். இலாவா. 3 : 144)

எட்டிப் பட்டத்தார்க்கு, எட்டிப் புரவு என்னும் நிலமானியமும் அளிக்கப் பட்டதாக மயிலைநாதர் உரை குறிக்கும் (நன். 158).

"கோடியும் தேடிக் கொடிமரமும் நட்டி" என்னும் உலகவழக்குத் தொடர் மொழியால் கோடிப் பொன் தேடிய செல்வர்க்குக் கொடியும் ஒன்று கொடுக்கப் பெற்றதாகத் தெரிகின்றது.

எட்டுதல் = உயர்தல். எட்டம் = உயரம். எட்டி = உயர்ந்தோன். எட்டி = செட்டி. (முதன் மெய்ப்பேறு)

ஒ.நோ : ஏண் – சேண்.
ஏமம் – சேமம்.

செட்டியின் தன்மை செட்டு.

சிரேஷ்டி என்னும் வடசொல், திரு என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபான ச்ரீ (ஸ்ரீ) என்பதன் உச்சத்தர (Superlative degree) வடிவினின்று திரிந்ததாகும்.

ஒப்புத்தரம்	உறழ்தரம்	உச்சத்தரம்
ச்ரீ (ஸ்ரீ)	ச்ரேயஸ்	ச்ரேஷ்ட

நிலவாணிகம்

நிலவாணிகர் வணிகப் பண்டங்களைக் குதிரைகள் மேலும் கோவேறு கழுதைகள் மேலும் ஏற்றிக் கொண்டு கூட்டம் கூட்டமாய்க் காட்டு வழியே தமிழகத்தை யடுத்த வடுக நாட்டிற்கும், நெடுந் தொலைவான வடநாட்டிற்கும் காவற் படையுடன் சென்று ஏராளமாய்ப் பொருளீட்டி வந்தனர். அவ்வணிகக் கூட்டங்களுக்குச் சாத்து என்று பெயர். சாத்து – கூட்டம். சார்த்து → சாத்து. சார்தல் – சேர்தல்.

சாத்து = 1. கூட்டம்.

"சுரிவளைச் சாத்து நிறைமதி தவழும்" (கல். 63 : 22).

2. வணிகக் கூட்டம்.

"சாத்தொடு போந்து தனித்துய ருழந்தேன்" (சிலப். 11 : 190). சாத்து என்பது வடமொழியில் ஸார்த்த என்ற திரியும்.

வணிகச் சாத்துகளின் காவல் தெய்வமாகிய ஐயனார்க்கு சாத்தன் என்று பெயர். அதனால் வணிகர்க்குச் சாத்தன், சாத்துவன் என்னும் பெயர்கள் இயற்பெயராய் வழங்கின. ஐயனார் கோயிலில் வணிகச் சாத்தைக் குறித்தற்கு மண்குதிரை யுருவங்கள் செய்து வைத்திருத்தலைக் காண்க. சாத்தன் என்னும் தெய்வப் பெயர் வடமொழியில் 'சாஸ்தா' எனத் திரியும்.

இனி, வணிகச் சாத்தின் தலைவனும் சாத்தன் எனப்படுவான். இப்பெயரும் 'ஸார்த்த' என்றே வடமொழியில் திரியும். இதனால் வடமொழியில் சாத்தைக் குறிக்கும் சொற்கும் சாத்தின் தலைவனைக் குறிக்கும் சொற்கும் வேறுபாடின்மையும், சாத்தன் என்னும் தெய்வத்தைக் குறிக்கும் சொல் வேறுபட்டிருப்பதும், கண்டு உண்மை தெளிக.

"குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழி பெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே"
(குறுந். 11).

என்னும் குறுந்தொகைச் செய்யுள், வடுக நாட்டிற்கும்,

"நந்தன் வெறுக்கை எய்தினும் மற்றவண்
தங்கலர் வாழி தோழி !
....
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய அறைவா யும்பர்
மாசில் வெண்கோட் டண்ணல் யானை
வாயுள் தப்பிய அருங்கேழ் வயப்புலி
மாநிலம் நெளியக் குத்திப் புகலொடு
காப்பில வைகும் தேக்கமல் சோலை
நிரம்பா நீளிடைப் போகி
அரம்போழ் அவ்வளை நிலை நெகிழ்த் தோரே"
(அகநா. 25).

என்னும் நெடுந்தொகைச் செய்யுள், விந்திய மலைக்கப்பாற்பட்ட வடநாட்டிற்கும், வாணிகச் சாத்துகள் போய் வந்தமையைக் குறிப்பாற் றெரிவித்தல் காண்க.

நீர்வாணிகம்

"உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கடல் நீரிடைப் போழ"
(அகம். 255 : 1–2)

என்பதால் கடலைப் பிளந்து செல்லும் மாபெரும்

கப்பல்கள் தமிழகத்திற் செய்யப்பட்டமை அறியப்படும்.

கப்பல்கள் தங்கும் துறைமுகத்தைச் சேர்ப்பு, கொண்கு என்பது இலக்கியவழக்கு.

கீழ்க் கடற்கரையில் கொற்கை, தொண்டி, புகார் (காவிரிப் பூம்பட்டினம்) என்னும் துறைநகர்களும், மேல் கடற்கரையில் வஞ்சி, முசிறி, தொண்டி என்னும் துறைநகர்களும் இருந்தன. இடைக் கழகக் காலத்தில் பாண்டியர் துறைநகர் குமரியாற்றின் கயவாயில் (estuary) அமைந்திருந்தது. அதன் தமிழ்ப்பெயர் (அலைவாயில்) மறைந்து அதன் மொழிபெயர்ப்பான கபாடபுரம் என்னும் வடசொல்லே இன்று இலக்கிய வழக்கிலிருக்கிறது.

இரவில் வழிதப்பிச் செல்லும் கலங்கட்கு வழிகாட்டுவற்கு, ஒவ்வொரு துறைநகரிலும் கலங்கரை விளக்கம் (light house) இருந்தது. *"இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்" (சிலப். 6 : 141).*

"வான மூன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத் தோடு கலங் கரையும்
துறை" (பெரும்பாண்.349-54).

கடற்கரை, உள்நாட்டை நோக்க மிகத் தாழ்ந்த மட்டத்திலிருப்பதால், துறை நகர்கள் எல்லாம் பட்டினம் எனப்பட்டன.

பதிதல் = தாழ்ந்திருத்தல். பள்ளமான நிலத்தைப் பதிந்த நிலம் என்பர். பதி + அனம் = பதனம் → பத்தனம் → பட்டனம் → பட்டினம்.

தகரம் டகரமாவது வழக்கு.

ஒ.நோ. கொத்து மண்வெட்டி → கொட்டு மண்வெட்டி.

களைக் கொத்து → களைக் கொட்டு
பொத்து → பொட்டு, பொருத்து.
வீரத்தானம் (வ.) → வீரட்டானம்

பதனம் - படனம் = நோயாளியைப் பாதுகாத்தல்.

இனி, பதனம் என்பது, கலங்கள் காற்றினாலும் கொள்ளைக்காரராலும் சேதமின்றிப் பாதுகாப்பாய் இருக்குமிடம் என்றுமாம்.

பதனம் = பாதுகாப்பு

பட்டினம் என்பதைப் பட்டணம் என்பது உலக வழக்கு. இக்காலத்திற் பட்டணம் என்பது சென்னையைச் சிறப்பாய்க் குறித்தல் போல, அக்காலத்தில் பட்டினம் என்பது புகாரைச் சிறப்பாய்க் குறித்தது. பட்டினப்பாலை, பட்டினத்துப் பிள்ளையார் என்னும் வழக்குகளை நோக்குக.

ஒரு திணைக்கும் சிறப்பாயுரியதன்றி நகரப் பொதுப் பெயராய் வழங்கும் பதி என்னும் சொல், மக்கள் பதிவாய் (நிலையாய்) இருக்கும் இடத்தைக் குறிக்கும். பதிதல் நிலையாய்க் குடியிருத்தல்.

கப்பல்கள் துறைமுகத்திற்கு வந்து சேரும்போதும் அதைவிட்டுப் புறப்படும்போதும் முரசங்கள் முழக்கப்பட்டன.

"இன்னிசை முரசமுழங்கப்
பொன் மலிந்த விழுப்பண்டம்
நாடார நன்கிழி தரும்
ஆடியற் பெருநாவாய்" (மதுரைக்.80-3).

கப்பலில் வந்த பொருள்கள் கழிகளில் இயங்கும் தோணிகளாற் கரை சேர்க்கப்பட்டன.

"கலந்தந்த பொற்பரிசம்
கழித் தோணியாற் கரை சேர்க்குந்து"
(புறநா. 343 : 5-6).

அக்காலத்தில் காவிரியாறு அகன்றும் ஆழ்ந்தும் இருந்ததால் பெருங் கப்பல்களும் கடலில் நிற்காது நேரே ஆற்றுமுகத்திற் புகுந்தன.

"......................... கூம்பொடு
மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்"
(புறநா. 30 : 10 - 2).

"பாய் களையாது பரந்தோண்டா தென்பதனால் துறை நன்மை கூறியவாறாம்" என்று பழைய வுரை கூறுதல் காண்க.

கரிகால் வளவன் காவிரிக்குக் கரை கட்டியது இங்குக் கருதத்தக்கது.

நீர் வணிகம் நிரம்ப நடைபெற்றதால், துறைமுகத்தில் எந்நேரமும் கப்பல்கள் நிறைந்திருந்தன.

"வெளி விளங்கும் களிறு போலத்
தீம்புகார்த் திரை முன்றுறைத்
தூங்கு நாவாய் துவன்றிருக்கை"
(பட்டினப். 172-4)

ஏற்றுமதியும் இறக்குமதியும் ஏராளமாய் இருந்ததால் நாள்தோறும் ஆயத்துறைக் கணக்கர் மூடைகளை நிறுத்து உல்கு (சுங்கம்) வாங்கி, வேந்தன் முத்திரையைப் பொறித்துக் குன்றுபோற் குவித்து வைத்திருந்தனர். அவற்றிற்குக்

கடுமையான காவலிருந்தது.

"வைகல் தொறும் அசைவின்றி
உல்குசெய் குறைபடாது
....
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர் பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலி பொறித்துப் புறம்போக்கி
மதி நிறைந்த மலிபண்டம்
பொதி மூடைப் போரேறி
மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போல"
(பட்டினப். 122–39).

பல நாடுகளிலிருந்து வந்த பல்வேறு பொருள்கள் காவிரிப்பூம்பட்டினக் கடை மறுகில் மண்டிக் கிடந்தன.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்"
(பட்டினப். 155–63)

நீர் வாணிகத்தின் பொருட்டு, பல்வேறு மொழிகள் பேசும் பல் வேறு நாட்டு மக்கள் காவிரிப் பூம்பட்டினத்தில் வந்து கலந்தினிது வாழ்ந்தனர்.

"மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்"
(பட்டினப். 216 – 8).

"கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்கு நீர் வரைப்பும்"
(5 : 9–12).

யவனர் = கிரேக்கர். பின்பு உரோமரும் யவனர் எனப்பட்டார்.

மேலையாரியக் கலப்பெயர்கள்

கலங்கள் முதன் முதல் தமிழகத்திலேயே செய்யப்பட்டன. அதனால், பல கடல்துறைச் சொற்களும் கலத்துறைச் சொற்களும், மேலையாரியத்திலும், கீழையாரியத்திலும் தமிழாயிருக்கின்றன.

வாரி = நீர், பெரிய நீர் நிலையான கடல். L. mare, skt. வாரி, வாரணம் = கடல். L. marinus. E. marina **Skt.** varuna (வாருண) வார்தல் = நீள்தல். வார் – வாரி. ஒ.நோ. நீள்–நீர். வார் – வாரணம். பெரிய நீர்நிலை அல்லது வளைந்த நீர்நிலை. கரை = கடற்கரை.

"நாவாய் கரையலைக்கும் சேர்ப்ப" (நாலடி. 224)

E. shore = Land that skirts sea or large body of water. (C O.D)

c(k)-sh = ஒ.நோ : L. curtus - E. short.

படகு - LL barca, GK. baris. E. short, ML. barga, variation of barca. E barge

ட–ர. ஒ.நோ. பட்டடை – பட்டரை, அடுப்பங்கடை – அடுப்பங்கரை, படவர் – பரவர்.

கொடுக்கு – ME. croc = ON krokr,
E crook குடகு – E. coorg

நாவாய் – L. navis, GK naus skt. nau.
E. navy (கப்பற்படை)

நாவுதல் – கொழித்தல். நாவாய் கடல்நீரைக் கொழித்துச் செல்வது.

"வங்கம்........... நீரிடைப் போழ" (255 : 1–2) என்னும் அகப்பாட்டுப் பகுதியை நோக்குக.

கடலையும் கப்பலையும் காணாதவரும் நெடுகிலும் நிலவழியாய் ஆடுமாடுகளை ஓட்டிக் கொண்டு வந்தவருமாகிய இந்திய ஆரியர், நௌ என்னும் (படகைக் குறிக்கும்) வடசொல்லினின்று நாவாய்ச் சொல் வந்ததென்பது 'வாழைப்பழத் தொலியை நட்டால் வாழை முளைக்கும்' என்பது போன்றதே.

கப்பல் – **L.** seapha, **GK.** skaphos, **Ger.** schiff, **OHG** - scif.**os.**, **ON.**, **Ice** - Goth, skip. **OE.** Scip. **F.** esquif. **sp.**, port, esquife. IT schifo. **E.** skiff ship.

கப்புகள் (கிளைகள்) போன்ற பல பாய்மரங்களை யுடையது கப்பல்.

L. galea. Gk. galaia, E. galley, galleon முதலிய சொற்களும் கலம் என்னும் தென்சொல்லோடு ஒப்பு நோக்கத் தக்கன.

OS., OE. segal. OHG. segal. ON. segl E sail என்னும் சொற்களும் சேலை என்பதை ஒத்திருப்பது கவனிக்கத் தக்கது.

இங்ஙனம், கட்டுமரம் (E. catamaran) முதல் கப்பல் வரை, பலவகைக் கலப்பெயர்கள் மேலையாரிய மொழிகளில் தமிழாயுள்ளன.

நங்கூரம் = L.ancora Gk angkyra Fr ancre E anchor Pers langar.

கவடி - E. cowry

மேனாடுகட்கு ஏற்றுமதியான பொருட்பெயர்கள்

தோகை (மயில்) Heb tuki
Ar. tavus
L pavus, E pea
(cock,hen)

அரிசி - Gk , L. Oruza
It riso, OF. ris, E rice.

இஞ்சிவேர் - Gk - ziggiberis
L zingiber
OE gingiber
E ginger
Skt. Srungavera

இஞ்சிவேர் என்பது தெளிவாயிருக்கவும், வடமொழியாளர் (சிருங்ககொம்பு, வேர-வடிவம்) மான்கொம்பு போன்றது என்று தமிழரை ஏமாற்றியதுமன்றி, மேலையரையும் மயக்கியிருப்பது வியக்கத்தக்கதே.

இஞ்சுதல் = நீரை உள்ளிழுத்தல்

திப்பிலி = Gk peperi . ON, pipar OHG pfeffar L piper OE piper E pepper skt. pippali

பன்னல் (பருத்தி) - L punnus, cotton.
It panno, cloth.

கொட்டை (பஞ்சுச் சுருள்) - Ar. qutun, It,cotone. Fr coton, E cotton

கொட்டை நூற்றல் என்பது பாண்டி நாட்டு வழக்கு.

நாரந்தம் (நாரத்தை) - Ar pers naranj. Fr It, arancio, E orange

கட்டுமரம், கலிக்கோ (calico), தேக்கு (teak) பச்சிலை (pac houli) வெற்றிலை (betel) முதலிய சொற்கள் கிழக்கிந்தியக் குழும்பார் காலத்திற் சென்றனவாகும்.

கோழிக்கோட்டிலிருந்து (calicut) ஏற்றுமதியான துணி கலிக்கோ எனப்பட்டது.

குமரிக்கண்டத் தமிழக் கலவரும் கடலோடிகளும் உலக முழுவதும் கலத்திற் சுற்றினமை வடவை (Aurora Borealis) என்னும் சொல்லாலும், தமிழர் கடல் வணிகத் தொன்மை,

"முந்நீர் வழக்கம் மகடூஉ வோ டில்லை"
(தொல்.980)

என்னும் தொல்காப்பிய நூற்பாவாலும், அரபி நாட்டுக் குதிரையும் ஒட்டகமும் தொல்காப்பியத்திற் குறிக்கப்படுவதாலும், உணரப்படும்.

பேரா. நீலகண்ட சாத்திரியாரும் தாம் எழுதிய திருவிசய (Sri vijay) நாட்டு வரலாற்றுத் தோற்றுவாயில், "The more we learn the further goes back the history of eastern navigation and so far as we know, the Indian Ocean was the first centre of the oceanaic activity of man" என்று தமிழர் முதன்முதல் இந்துமாவாரியிற் கலஞ் செலுத்தியதையும் அவர் கடல் வாணிகத் தொன்மையையும் கூறாமற் கூறியிருத்தல் காண்க.

"யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"
(அகம்.149:9-10)

என்பது கிரேக்கரும் உரோமரும் பொன் கொண்டு வந்து மிளகு வாங்கிச் சென்றதையும்,

"விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கலன் உய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியோ
டனைத்தும்" (-மதுரைக். 321-23)

என்பது அரபியரும் பிறரும் குதிரை கொண்டு வந்து அணிகலம் வாங்கிச் சென்றதையும் கூறும்.

-பாவாணர். (பண்டைத் தமிழர் நாக. பண். பக்.91-100)

மேலும்,

"கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவு நின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்பநாடிக்
கொள்வதூஉம் மிகை கொளாது
கொடுப்பதூஉம் குறை கொடாது
பல் பண்டம் பகர்ந்து வீசும்" (பட்டினப். 205-21).

வாணிகம் கொள்வனையையும் விற்பனையையும் ஒப்பக் கருதுவதனாலும் பொய்க்கும் கொள்ளைக்கும் இடந்தராமையாலும்,

மொத்த வணிகர் சில்லறை வணிகர் கொள்வோர் ஆகிய முத்திறத்தார்க்கும் தீதுங்கேடு மில்லா நல்வாணிகமாம்".

–பாவாணர். திருக் .மரபு. பக்.103.

"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம்பேணிப் பிறவுந் தமபோற் செயின்" (திருக். 120).

pa. *vaṇijja*; **pk.** *vaṇijja*; **Ku.** *paṇaj*; **or.** banija; **marathi.** *vaṇaj.*

வாணிகம்[2] *vāṇigam*, பெ.(n.) ஓமவகை; carum roxburghiana.

வாணிகவென்றி *vāṇiga-veṉṟi*, பெ.(n.) வாணிகத்தாற் சிறப்பெய்திய வணிகன் தனது பொருளிற் பற்றிலனாய்ப் பிறர் மிடியை நீக்கும் பெருந்தன்மையை எடுத்துக் கூறும் புறத்துறை (புற.வெ.12, ஒழிபு,2); theme describing the selfless benefactions of a merchant who has risen to prominence by his success in business.

[வாணிகம் + வென்றி]

வாணிகன் *vāṇigaṉ*, பெ.(n.) 1. பல பண்டங்களை விற்பவன்; merchant, trader. "*அறவிலை வாணிகன்*" *(புறநா.134).* 2. வணிகன்; man of the trading caste. 3. துலாக்கோல் (பிங்.); scales, balance. 4. துலாவோரை (சூடா.); libra of the zodiac.

or. *baṇijjara*; **m.** vanijar.

[பண்ணியம் → பண்ணியன் → பண்ணிகன் → பணிகன் → வணிகன் → வாணிகன் (பண்ணியம் = பண்ணப்பட்ட பொருள், விற்பனைப் பண்டம்). (த.வ.1., பக்.58)]

வாணிகேள்வன் *vāṇi-kēḷvaṉ*, பெ.(n.) நான்முகன் (சூடா.); *Brahmā.*

[வாணி + கேள்வன்]

வாணிச்சி *vāṇicci*, பெ.(n.) 1. வாணிகச்சி பார்க்க; see *vāṇigacci*. *"மதுரையிற் பிட்டு வாணிச்சி மகற்கு" (தொல்.பொ.84, உரை) (நன்.144, மயிலை).* 2. வாணியச்சி பார்க்க; see *vāṇiyacci.*

[வாணியன் → வாணிச்சி]

வாணிச்சிமேனி *vāṇicci-mēṉi*, பெ.(n.) மாணிக்கம் (யாழ்.அக.); ruby.

[வாணிச்சி + மேனி]

வாணிச்சியம் *vāṇicciyam*, பெ.(n.) வணிகம் (வின்.); trade.

வாணிதம் *vāṇidam*, பெ.(n.) 1. கள்; toddy. 2. அகத்தி; a tree - Sesbania grandiflora alias coronilla grandiflora.

வாணிதி[1] *vāṇidi*, பெ.(n.) வாணினி, 1,2 (யாழ்.அக.) பார்க்க; see *vāṇiṉi.*

வாணிதி[2] *vāṇidi*, பெ.(n.) 1. மனோசிலை; red orpiment; red arsenic. 2. மூங்கில்; bamboo.

வாணிபன் *vāṇibaṉ*, பெ.(n.) வாணிகன், 1 பார்க்க; see *vāṇigaṉ.*

[வாணிகன் → வாணிபன்]

வாணிமலர் *vāṇi-malar*, பெ.(n.) வெண்டாமரை (மூ.அ.); white lotus.

[வாணி + மலர்]

வாணிமன் *vāṇi-maṉ*, பெ.(n.) நான்முகன்; *Brahmā.* *"பாணியாற் படைத்திலன் வாணிமன்" (பாகவத. 1, கண்ணபிரான் துவரை,25).*

[வாணி + மன்]

வாணியச்சி *vāṇiyacci,* பெ.(n.) செக்கார் இனப்பெண்; woman of the oil-monger caste.

[வாணியன் (ஆ.பா.) → வாணியச்சி (பெ.பா.)]

வாணியம் *vāṇiyam,* பெ.(n.) 1. வாணிகம், 1 (வின்.) பார்க்க; see *vāṇigam.* 2. வாணிகம், 2 பார்க்க; see *vāṇigam.* *"சிறுகாலை நாமுறுவாணியம்" (தேவா.259,3).*

வாணியன் *vāṇiyaṉ,* பெ.(n.) 1. வாணிகன். 1, 2 பார்க்க; see *vāṇigaṉ.* 2. செக்கான்; oil-monger.

வாணியன்தாதன் *vāṇiyaṉ-tādaṉ,* பெ.(n.) கம்பர் காலத்தில் அவர்க்கு எதிரியாயிருந்தவராகவும் செக்கார் குலத்தவராகவும் சொல்லப்படும் ஒரு புலவர் (தமிழ் நா.83.); a poet said to be of oil monger caste and a contemporary critic of Kampar.

வாணியன்பொருவா *vāṇiyaṉ-poruvā,* பெ.(n.) 1. வெண்மையில் பொன்வரியும் கருநீல வரியும் உள்ள கடல்மீன்; anchovy silvery, shot with gold and purple. 2. வெளிறின மஞ்சணிறமுள்ள கடல் மீன் வகை; anchory, bronze.

[வாணியன் + பொருவா]

வாணில் *vāṇil,* பெ.(n.) பலண்டுருக நஞ்சு; a kind of arsenic.

வாணிலை *vāṇilai,* பெ.(n.) பகைமேற் படையெடுத்தலை விரும்பி வேந்தன் வாளைப் புறவீடு விடுவதைக் கூறும் புறத்துறை (பு.வெ.3,4); theme of sending in advance at an auspicious moment the sword of a King who intends to advance against his enemies.

[வாள் + நிலை]

வாணினி *vāṇiṉi,* பெ.(n.) 1. நாடகக்கணிகை (வின்.); dancing woman. 2. நாணமற்றவள் (வின்.); immodest woman. 3. நுண்ணறிவு உள்ளவள் (யாழ்.அக.); clever woman.

வாணீகம் *vāṇīgam,* பெ.(n.) மாழை நீர்மம்; metalic liquid.

வாணீசன் *vāṇīšaṉ,* பெ.(n.) நான்முகன் (யாழ்.அக.); *Brahmā.*

[வாணி + ஈசன்]

Skt. *īšā* > த. ஈசன்.

வாணுதல் *vāṇudal,* பெ.(n.) 1. ஒளி பொருந்திய நெற்றி; bright forehead. *"வாணுதல் விறலி" (புறநா.89).* 2. ஒள்ளிய நெற்றியுள்ள பெண்; woman with a bright forehead. *"வாணுதல் கணவ" (பதிற்றுப்.38,10).*

[வள் → வாள் + நுதல்]

வாத்தன்று *vāttaṉṟu,* பெ.(n.) எருக்கிலை; leaf of madar - calotrois gigantia.

வாத்தாட்டுப்பலகை *vāttāṭṭu-p-palagai,* பெ.(n.) வாய்த்தட்டுப்பலகை பார்க்க; see *vāy-t-taṭṭu-p-palagai.*

[வாய்த்தாடு → வாத்தாடு + பலகை]

வாத்தாடு *vāttāḍu,* பெ.(n.) கூரையின் ஓரம் (கட்டட.நாமா.20); eaves.

[வாய்த்தடு → வாய்த்தாடு → வாத்தாடு]

வாத்தியச்சுரை *vāddiya-c-curai,* பெ.(n.) கின்னரிச் சுரை; bottle gourd used for making musical instruments.

[வாச்சியம் → வாத்தியம் + சுரை]

வாத்து வகை

கருவால் வாத்து

புள்ளிமூக்கு வாத்து

குள்ள வாத்து



செண்டு வாத்து



வாத்தியப்பெட்டி *vāddiya-p-peṭṭi*, பெ.(n.) 1. ஒத்தியப் பெட்டி; harmonium. 2. இசை மீட்டும் வடிவான கருவி; music-box as piano etc.

[வாச்சியம் → வாத்தியம் + பெட்டி]



வாத்தியபாண்டம் *vāddiya-pāṇḍam*, பெ.(n.) 1. இசைக்கருவி; musical instrument. 2. வீணை; lute.

[வாச்சியம் → வாத்தியம் + பண்டம் → பாண்டம்]

வாத்தியம் *vāddiyam*, பெ.(n.) இசைக்கருவி; musical instrument.

[வாச்சியம் → வாத்தியம்]

வாத்தியம்பண்ணு-தல் *vāddiyam-paṇṇu-*, 5 செ.கு.வி. (v.i.) நகராமுழக்குதல் (வின்.); to beat the kettle drum.

[வாத்தியம் + பண்ணு-.]

வாத்தின்விந்து *vāttiṉ-vindu*, பெ.(n.) கற்பூரச் சீலை; ammonia - Alum.

வாத்து[1]-தல் *vāttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. வாழ்த்து-, பார்க்க; see *vāḻttu-*. 2. கண்ணேறு கழிக்க மணமக்கள் முன் மஞ்சள் நீரால் ஆலத்தி சுற்றுதல் (இ.வ.); to wave saffron water before the bridel pair to ward off the evil eye.

வாத்து[2] *vāttu*, பெ.(n.) 1. தாரா (பதார்த்த. 873); duck. 2. பெருந்தாரா; goose.

க. பாது.

வகைகள் :-

1. செண்டு வாத்து, 2. கருவால் வாத்து, 3. புள்ளிமூக்கு வாத்து, 4. ஆண்டி வாத்து, 5. குள்ள வாத்து, 6. ஊசிவால் வாத்து.



வாத்து[3] *vāttu*, பெ.(n.) மரக்கொம்பு (வின்.); branch of a tree.

வாத்துக்கறி *vāttu-k-kaṟi*, பெ.(n.) நோயை அதிகரிக்கும் வாத்தின் கறி; flesh of goose not good for health, brings on several diseases.

[வாத்து + கறி]

வாத்துக்கொழுப்பு *vāttu-k-koḻuppu*, பெ.(n.) பெருந்தாராக் கொழுப்பு; adeps amserensis

[வாத்து + கொழுப்பு]

வாத்துகா *vāttugā*, பெ.(n.) மெழுகு பீர்க்கை; loofa-luffa aegyptiaca.

[வாத்து + கா]

வாத்துபோதம் *vāttu-bōdam,* பெ.(n.) சிற்ப நூல் முப்பத்திரண்டனுள் ஒன்று (இரு சமய. உலக வழக்க.சிற்ப.3.); a treatise on architecture, one of 32 *śirpa-nūl.*

[வாத்து + போதம்]

வாத்துமாதனம் *vāttu-mādaṉam,* பெ.(n.) இரு கால்களும் ஒருகையும் நீட்டி ஒரு முழங்கை யூன்றி தலைநிமிர்த்திக் கிடக்கும் இருக்கை வகை (யாழ்.அக.); a kind of posture, in which the body is supported on an elbow, the two legs and one arm being stretched out and the head held erect.

வாத்துமுட்டை *vāttu-muṭṭai,* பெ.(n.) வாத்து இடும் முட்டை; egg of goose

[வாத்து + முட்டை]

வாதவூர் *vādavūr,* பெ.(n.) மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ளதும், மாணிக்க வாசகர் பிறந்தகமுமாகிய சிவத்தலம்; one of the saiva places having the distinction of being sung by saint *Manikkavāśagar*, and birth place of Manikkavasagar. It is in Madurai District. *"வாதவூரினிற் வந்தினி தருளிப் பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்" (திரு.கீர்த்.52-53).*

வாதவூரர் *vāda-v-ūrar,* பெ.(n.) மாணிக்க வாசகர் பார்க்க; see *Māṇikka-vāśagar,* a saiva saint as born in *Tiru-vādavūr* in Madurai District. *"வாதவூர ரடியிணை போற்றி" (திருவாலவா.கடவுள்.21).*

[வாதவூர் → வாதவூரர்]



வாதவூரர்ஆனந்தக்களிப்பு *vādavūrar-āṉanda-k-kaḷippu,* பெ.(n.) சுந்தர முதலியாரால் இயற்றப்பட்ட 20ஆம் நூற்றாண்டு நூல்; a book written by Sundaramudaliar in 20th century.

[வாதவூரர் + ஆனந்தம் + களிப்பு]

வாதினிலா *vādiṉilā,* பெ.(n.) சேவகனார் கிழங்கு பார்க்க; see *cēvagaṉār-kiḷaṅgu.*

வாது[1]-தல் *vādu-*, 5 செ.குன்றாவி. (v.t.) அறுத்தல்; to cut, tear open. *"வாது வல்வயிறே வாதுவல் வயிறே" (தொல். பொருள். 79, உரை, பக்.292).*

வாது[2] *vādu,* பெ.(n.) மரக்கிளை (இ.வ.); branch of a tree.

வாந்திசுரதாகநாசனி *vāndi-śuradāgā-nāśaṉi,* பெ.(n.) வெட்டிவேர்; Khus Khus vetiveria, zizanioides.

[வாந்தி + சுரதாக (ம்) + நாசனி. **Skt.** *= நாசனி]*

வாந்திசோதினி *vāndi-śōdiṉi,* பெ.(n.) கருஞ் சீரகம்; black cumin - Nigella sativa.

வாந்தியம் *vāndiyam*, பெ.(n.) தான்றி; a tree - Terminalia bellerica.

வாந்துதம் *vāndudam*, பெ.(n.) பெரு முத்தக்காசு பார்க்க; see *perumutta-k-kāšu*.

வாப்பியம் *vāppiyam*, பெ.(n.) கோட்டம்; arabian costus - costus speciosus.

வாம்பல் *vāmbal*, பெ.(n.) மூங்கில்; bamboo.



வாமடைவைக்கல்கட்டு *vāmadai-vaikkal-kattu*, பெ.(n.) நில உரிமையாளருக்குக் கொடுக்க வேண்டிய வைக்கோற்கட்டு; straw bundle given to the land holder.

[வாய்மடை → வாமடை + வைக்கல் + கட்டு. வைக்கல் = நெற்பயிரின் உலர்தாள்.]

வாய்¹-தல் *vāy-*, 4 செ.கு.வி. (v.i.) 1. நிறைவேறுதல்; to succeed, to be gained. *"கல்வி வாயுமே" (திவ்.திருவாய்.1, 10, 11).* 2. உறுதியாக நிகழ்தல்; to happen with certainty, to come true. *"வருதல் வாய்வது" (முல்லை.20).* 3. ஏற்றதாதல்; to be fit or suitable. *"வாய்ந்த மலையும்" (குறள். 737).* 4. நிறைதல்; to be full. *"வாய்ந்த புகழ் மறைவளருந் தோணிபுரம்" (தேவா.145,3).* 5. சிறத்தல் (வின்.); to excel, surpass. 6. *வாய்²,5,6,7* பார்க்க; see *vāy*.

[வய் → வயி → வாயி → வாய்-,]

வாய்²-தல் *vāy*, 3 செ.குன்றாவி. (v.t.) 1. பெறுதல்; to obtain, realise, possess. *"வாய்ந்த மேனியெரி வண்ணமே" (தேவா.582, 6).* 2. மனநேர்தல்; to consent to, agree to. *"கொய்தழை கைபற்றிச் செய்ததும் வாயாளோ" (பரிபா.6, 66).*

[வய் → வயி → வாயி → வாய்-,]

வாய்³-த்தல் *vāy-*, 11 செ.கு.வி. (v.i.) 1. செழித்தல்; to flourish; to be luxuriant. *"வாய்க்குங் கரும்பும்" (திவ்.திருவாய்.7, 10, 4).* 2. மதர்த்தல்; to be over luxuriant in growth. *'உரம் அதிகமாய் விட்டதினால் பயிர் வாய்த்துப் போய்விட்டது' (உ.வ.).* 3. சேர்தல்; to join, unite. *"வருடையைப் படிமகன் வாய்ப்ப" (பரிபா.11, 5).* 4. திரட்டுதல்; to gather into a mass. *"கஞ்சுகம் வாய்த்த கவளம்" (பு.வெ.ஒழிபு.8).*

[வய் → வயி → வாயி → வாய்-,]

வாய்⁴ *vāy*, பெ.(n.) 1. உதடு அல்லது அலகு இவற்றினிடையிலுள்ள உறுப்பு (பிங்.); mouth; beak of birds. *"கயவர்வா யின்னாச் சொல்" (நாலடி. 66).* 2. ஏனம் முதலியவற்றின் திறந்த மேற்பாகம்; mouth, as of cup, bag, ulcer etc. *"வாயில்லை நாமங்கள் செப்ப... முத்தி பெற்ற தென்னோ தயிர்த்தாழியுமே" (அஷ்டப். திருவரங். மாலை.53). "புண்வாய் கிழித்தன" (பெருந்தொ.701).* 3. வாய்கொண்ட வளவு; mouthful. *'நாலுவாய் உண்டான்'.* 4. உதடு; lip. *"வாய்மடித் துரறி" (புறநா.298) (நாமதீப. 587).* 5. விளிம்பு; edge, rim. *"பொன்னலங்கல் ..... வாயருகு வந்தொசிந்து" (சீவக.595).* 6. படைக்கலத்தின் முனை; edge, as of a knife. *"கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து" (பொரு.242).* 7. மொழி; word. *"வணங்கிய*

வாயினராத லரிது" (குறள்.419). 8. சொல் (அக.நி.); speech, utterance. *"பண்டேயுன் வாயறிதும்" (திவ்.திருப்பா.15).* 9. குரல்; voice, tone. *"வாயுடை-மறையவர்" (திவ்.நாய்ச்.1, 7).* 10. மெய்ம்மை; truth. *"பொய்சேணீங்கிய வாய் நட்பினையே" (மதுரைக். 198) (பிங்.).* 11. சிறப்பு; excellence. *"முறியினும் வாயது" (குறுந். 62).* 12. சிறப்புடைப் பொருள்; that which is excellent. *"மடவோன் காட்சி வாயன்று" (ஞானா.10).* 13. வாசல்; opening, gate. *"நரகவாய் கீண்டாயும் நீ" (திவ்.இயற்.3, 47).* 14. வழி; way, path. *"பெரியார் நூல் காலற்கு வாய் காப்புக் கோடல் வனப்பு" (ஏலா. 23).* 15. வழிமுறை; means. *"அது தணிக்கும் வாய்நாடி" (குறள்,948).* 16. மூலம்; agency, instrumentality. *"தூதர் வாயிலிட்டு நீட்டுகையு மன்றிக்கே" (ஈடு,10,10, ப்ர).* 17. இடம்; place. *"கொக்கின் மென்பறைத் தொழுதி... எவ்வாயுங்கவர" (நெடுநல்.17).* 18. துலாக்கோலின் வரை(G.Sm.D.I.i,284); graduated mark on a steelyard. 19. தழும்பு; scar. *"வாள்வாயுமின்றி வடிவெங்கணை வாயுமின்றி" (சீவக.454).* 20. துளை (யாழ்.அக.); hole, orifice. 21. இசைக் குழல் (சூடா.); flute, musical pipe.

தெ. வாயி; க. பாய்; ம. வாய்; **Kur.** *bāi;* **Br.** *bā;* **pa.** *vāy;* **Ko.** *vāy,* **To.** poy, **Kod.** ba-y, **Tu.** *bāyi.*

[வய் → வயி → வாயி → வாய்]

வாய்[5] *vāy,* இடை(part.) 1. ஏழனுருபு (நன். 302.); a sign of the locative case. *"கங்குல் வாய்" (திவ். திருவாய், 5, 4, 7).* 2. ஓர் உவம உருபு; a particle of comparison. *"தீவாய் செக்கர்" (கல்லா. 42, 20).*

[வய் → வயி → வாயி → வாய்]

வாய்க்கசப்பு[1] *vāy-k-kašappu,* பெ.(n.) 1. வாய் கசந்திருக்கை; bitterness in the mouth. 2. மாட்டுக்கு வரும் கோமாரி நோய்; a cattle-disease.

[வாய் + கசப்பு]

வாய்க்கசப்பு[2] *vāy-k-kašappu,* பெ.(n.) பித்தத்தினால் வாயில் உண்டாகும் கசப்பு; bitterness of taste owing to biliousness, disorders, fever etc.

[வாய் + கசப்பு]

வாய்க்கட்டு *vāy-k-kaṭṭu,* பெ.(n.) 1. கண்டதைத் தின்னாமலிருக்கை; restraint in food; abstaining from eating except at meal-time and confining oneself to the regular courses. 2. மந்திரத்தாற் பேச முடியாமலும் வாயைத் திறக்க முடியாமலுஞ் செய்கை; rendering one speechless; preventing by witchcraft, animals etc, from opening their mouths.

[வாய் + கட்டு]

வாய்க்கட்டை *vāy-k-kaṭṭai,* பெ.(n.) 1. சிறுவர்க்குரிய தின்பண்டம் (இ.வ); sweets for children. 2. கையூட்டு (வின்.); tribe, tip.

[வாய் + கட்டை]

வாய்க்கடைப்புகையிலை *vāy-k-kaḍai-p-pugai-y-ilai,* பெ.(n.) வாயிலே மென்று அடக்கிக் கொள்ளும் புகையிலை யுருண்டை (புதுவை.); quid.

[வாய் + கடை + புகையிலை]

வாய்க்கணக்கு *vāy-k-kaṇakku,* பெ.(n.) 1. மனக் கணக்கு; mental arithmetic, working out sums mentally. 2. வாயால்

சொல்லுங்கணக்கு; oral statement of account, not reduced to writting.

[வாய் + கணக்கு]

வாய்க்கயிறு *vāy-k-kayiṟu,* பெ.(n.) கடிவாளக் கயிறு; rein. *"வயமாப் பண்ணி வாய்க்கயிறு பிணித்து" (பெருங். இலாவாண. 18,17).*

[வாய் + கயிறு]

வாய்க்கரிசி *vāykkariśi,* பெ.(n.) 1. எரியூட்டு முன் உறவுமுறையோராற் பிணத்தின் வாயிலிடும் அரிசி; handful of rice dropped into the mouth of a deceased person by sons and other relations, just before cremation. *"உனக்கு வாய்க்கரிசி தந்தேனுண்டிரு" (அரிச்.பு. காசிகா.62).* 2. கையூட்டு (கொ.வ.); bribe, tip. 3. மனமில்லாமற் கொடுப்பது (இ.வ); anything unwillingly parted with.

[வாய் + கு = நான்கனுருபு → வாய்க்கு + அரிசி]

வாய்க்கருவி[1] *vāy-k-karuvi,* பெ.(n.) கடிவாளம்; bit of a bridle. *"வாய்க்கருவியிற் கோத்து முடியுங் குசையிற்றலை" (நெடுநல். 178, உரை).*

[வாய் + கருவி]

வாய்க்கருவி[2] *vāy-k-karuvi,* பெ.(n.) வாய்க்குருவி (சொல்.இலக்.); a kind of bird.

[வாய் + குருவி → கருவி]

வாய்க்கரை *vāy-k-karai,* பெ.(n.) 1. கிணறு முதலியவற்றின் விளிம்பு; rim, brink or edge, as of a well. 2. உதடு; lip. *"வாய்க் கரையிலே எனக்கு ஜீவனத்தையிட்டு" (ஈடு, 6, 1, 1).*

[வாய் + கரை]

வாய்க்கரைப்பற்று *vāy-k-karai-p-paṟṟu,* பெ.(n.) 1. உதடு (ஈடு.4, 8, 8, ஜீ); lip. 2. நீர்நிலைக் கருகிலுள்ள வயல்; field near the head of a channel. *"வாய்க்கரைப் பற்றை அடுத்தூணாக வுடையவன்" (ஈடு.4,8,8).*

[வாய்க்கரை + பற்று]

வாய்க்காசு *vāy-k-kaśu,* பெ.(n.) 1. பிணத்தின் வாயில் வாய்க்கரிசியுடன் வைக்கும் பணம் (வின்.); money placed on the mouth of a corpse with *vāykkariśi* (w.). 2. கையூட்டு (கொ.வ); bribe, tip.

[வாய் + காசு]

வாய்க்காடிவார்–த்தல் *vāy-k-kaḍi-vār-,* 4 செ.கு.வி. (v.i.) மிக்க துயரத்துடனிருத்தல்; to be very sorrowful. *'அவன் வாய்க்காடி வார்த்துக் கொண்டிருக்கிறான்' (வின்.).*

[வாய் + காடி + வார்–,]

வாய்க்காரன் *vāy-k-kāraṉ,* பெ.(n.) 1. பேச்சில் வல்லவன் (இ.வ.); clever speaker, talkative man. 2. செருக்கால் மிதமிஞ்சிப் பேசுவோன் (யாழ்.அக.); man who is arrogant in speech. 3. பிறரைத் திட்டும் இயல்புள்ளவன்; man given to scandal mongering. 4. பள்ளருள் ஒரு வகை (G.Tj.D.I.90.); a sub-division of *paḷḷa* caste.

மறுவ. வாயாடி.

[வாய் + காரன்]

வாய்க்காரி *vāy-k-kāri,* பெ.(n.) 1. பேச்சில் வல்லவள் (இ.வ.); clever speaker, talkative woman. 2.செருக்கால் மிதமிஞ்சிப் பேசுபவள்; woman who is arrogant in speech. 3. பிறரைத் திட்டும் இயல்புள்ளவள் (இ.வ.); woman given to scandal-mongering.

மறுவ. வாயாடி.

[வாய் + காரி]

வாய்க்கால் *vāy-k-kāl,* பெ.(n.) 1. கால்வாய்; water-course, channel, canal. *"செய் விளைக்கும் வாய்க்காலனையார் தொடர்பு" (நாலடி.218).* 2. கொடு நுகம்; 10வது விண்மீன்; the 10th naksatra.

[வாய் + கால்]

வாய்க்காலுக்குப்போ-தல் *vāykkālukku-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) மலங்கழித்தல் (வின்.); Lit, to go to a channel, to go to stool.

வாய்க்காற்சடைச்சி *vāykkār-šaḍaicci,* பெ.(n.) வெதுப்படக்கி என்னும் மூலிகை (சங்.அக.); malabar catamint.

மறுவ. பேய்மருட்டி.

[வாய்க்கால் + சடைச்சி]

இச்செடி, வாய்க்கால் வரப்பு முதலியவிடங்களில் முளைக்கும்.

வாய்க்கிரந்தி *vāy-k-kirandi,* பெ.(n.) வாய்ப்புண் (கடம்ப.பு. இலீலா.124); thrush, a disease, Althae ulcer in the mouth.

[வாய் + **Skt.** *grandhi > த. கிரந்தி.]*

வாய்க்கிலை *vāykkilai,* பெ.(n.) வெற்றிலை (சரவண.பணவிடு.304); betel - leaf

[வாய் → வாய்க்கு + இலை]

வாய்க்கிலைகெட்டவன் *vāykkilai-keṭṭavaṉ,* பெ.(n.) 1. வறிஞன்; very poor man, as being too poor to buy betal-leaf. 2. பயனிலி; useless person.

[வாய் → வாய்க்கு + இலை + கெட்டவன்]

வாய்க்கிறுது *vāy-k-kiṟudu,* பெ.(n.) 1. செருக்கான பேச்சு; arrogant speech. *'அவன் வாய்க்கிறுது பேசுகிறான்'.* 2. பொருத்தமற்ற சொல் (யாழ்.அக.); unsuitable, inappropriate word.

[வாய் + கிறி + கிறிது]

வாய்க்குட்பேசு-தல் *vāykkuṭ-pēšu-,* 10 செ.கு.வி. (v.i.) முணுமுணுத்தல்; to mumble, mutter, murmur.

[வாய்க்குள் + பேசு-,]

வாய்க்குடுமி *vāy-k-kuḍumi,* பெ.(n.) தாடி (கொ.வ.); beard.

[வாய் + குடுமி]



வாய்க்குருவி *vāy-k-kuruvi,* பெ.(n.) விளையாட்டு ஊது குழல் (இ.வ.); toy-whistle.

[வாய்க்கருவி → வாய்க்குருவி]

வாய்க்குவந்தபடி *vāikku-vanda-paḍi,* வி.எ.(adv.) வரன்முறை இல்லாமல் மனம் போனபடி பேசுதல்; speak without restraint. *'கோபம் வந்து விட்டால் வாய்க்கு வந்தபடி திட்டுவார்'.*

[வாய்க்கு + வந்தபடி]

வாய்க்குவழங்காமை *vāykku-vaḻaṅgāmai,* பெ.(n.) 1. சுவையற்றதாகை (வின்.); unpalatability. 2. இழிவாயிருக்கை; being unspeakably vulgar.

[வாய்க்கு + வழங்காமை]

வாய்க்குவாய் *vāikku-vāy,* வி.அ. (adv.) ஒரு செய்தியைப் பலமுறை பேசுவது; frequently. *'அவள் தன் குழந்தையின் திறமையை வாய்க்கு வாய் சொல்லி மகிழ்வாள்'.*

[வாய்க்கு + வாய்]

வாய்க்குழிப்புண் *vāy-k-kuḻippuṇ,* பெ.(n.) வாயின் உட்புறத்தே சிறு சிறு புள்ளி போன்று உண்டாகும் ஒருவகையான புண்; perforating, ulcer in mouth.

[வாய் + குழிப்புண்]

வாய்க்குளறல்[1] *vāy-k-kuḷaral,* பெ.(n.) நோயினால் உளறிப் பேசுகதல்; blabber, incoherancy of speech through to be checked. *'வாதத்திற் பித்தமாகில் வாயது குளறிப் போகும்'.*

[வாய் + குளறல்]

வாய்க்குளறல்[2] *vāy-k-kuḷaral,* பெ.(n.) பக்க ஊதையினாலாவது அண்ணத்தின் நோயினாலாவது ஏற்படும் பேச்சுக் குளறல்; impaired or lost articulation from paralysis of the part from local laryngeal disease. 2. பேச்சுத் தடுமாறலாகிய ஒரு இறப்புக்குறி; a death symptom accompanied by confused speech.

[வாய் + குளரல்]

வாய்க்குற்றம் *vāy-k-kuṟṟam,* பெ.(n.) 1. தன்னையறியாமற் பேச்சில் நேரும் பிழை (வின்.); slip of the tongue, lapsus linguae. 2. பேச்சுக்குற்றம் (யாழ்.அக.); error in speech.

மறுவ. சொற்குற்றம்.

[வாய் + குற்றம்]

வாய்க்கூடு *vāy-k-kūḍu,* பெ.(n.) விலங்கின் வாயின் மேலிடுங்கூடு (நெல்லை.); small basket or other contrivance for muzzling an animal.

[வாய் + கூடு]



வாய்க்கூடை *vāy-k-kūḍai,* பெ.(n.) வாய்க்கூடு (வின்.) பார்க்க; see *vāy-k-kūḍu.*

[வாய் + கூடை]

ஒருகா. வாய்க்கூடு → வாய்க்கூடை.

வாய்க்கூலி *vāy-k-kūli,* பெ.(n.) கையூட்டு (வின்.); bribe, hush-money.

[வாய் + கூலி]

வாய்க்கேட்பார் *vāy-k-kēṭpār,* பெ.(n.) அரசனின் வாய்மொழி ஏற்றுச் செயல்படும் அலுவலர்கள் (S.I.I.ii.353); personal secretary, as to a King.

[வாய் + கேட்பார்]

வாய்க்கேள்வி *vāy-k-kēḷvi,* பெ.(n.) 1. அரசனின் கட்டளை; royal command, proclamation. *"நிவந்தஞ்செய்த நம்வாய்க் கேள்விப்படி" (S.I.I.ii.306).* 2. பிறர் சொல்லக் கேட்டறிந்த செய்தி; hearsay.

[வாய் + கேள்வி]

வாய்க்கேள்வியர் *vāy-k-kēḷviyar,* பெ.(n.) அரசக் கட்டளைகளை நிறைவேற்றுவோர்; those who execute royal commands. *"மணிக்கையை வாங்கென்று வாய்க் கேள்வியர்க்கு வருதி செய்தான்" (தனிப்பா.).*

[வாய்க்கேள்வி → வாய்க்கேள்வியர்]

வாய்க்கொப்பளித்தல் *vāy-k-koppaḷittal,* பெ.(n.) வாயில் நீரூற்றிக் கொப்பளித்தல்; gargling with water or medicinal liquid.

[வாய் + கொப்பளித்தல்]

வாய்க்கொழுப்பு *vāy-k-koḻuppu,* பெ.(n.) மதியாது பேசுகை; arrogance in speech, insolence in language.

[வாய் + கொழுப்பு]

வாய்க்கொள்ளாபேச்சு *vāy-k-koḷḷā-pēccu,* பெ.(n.) இழிவழக்கு (யாழ்.அக.); unspeakably, vulgar talk.

[வாய் + கொள் + ஆ + பேச்சு]

வாய்க்கோணல் *vāy-k-kōṇal,* பெ.(n.) நோய்வகை (கடம்ப.பு,இலீலா.139); a kind of disease.

[வாய் + கோணல்]

வாய்க்கோமாரி *vāy-k-kōmāri,* பெ.(n.) மாட்டுக்கு வாயில் வரும் நோய்வகை (M.L.); a mouth-disease, in cattle.

[வாய் + கோமாரி]

கால்நடைகளுக்கு வெப்பக்காலத்தில் வாய்க்கு உள்ளும் புறமும் கொப்புளங்களைத் தோற்றுவிக்கும் நோய்

வாய்கட்டல் *vāykaṭṭal,* பெ.(n.) 1. பத்தியங் காத்தல்; to be on diet. *'வாய் கட்டினால் பிள்ளை'.* 2. இதளிய கற்பூரம் முதலிய மருந்தினால் வாய் வெந்து போதல்; inflammation of the mouth due to mercurial poisioning. 3. வாய் திறந்து இறந்து போனவர்களுக்கு வாயைக் கட்டுதல்; if the mouth remains opened after death a bandage is applied over the mandible closing it. 4. வாய் திறவாதபடி செய்தல்; by witchcraft the mouth is tied and cannot be opened (in magic).

[வாய் + கட்டல்]

வாய்கட்டு¹-தல் *vāy-k-kaṭṭu,* 8 செ.குன்றாவி. (v.t.) 1. பேசாதிருக்கச் செய்தல்; to silence. 2. மந்திரத்தால் நச்சுயிரிகளின் வாயைத் திறவாமற் பண்ணுதல்; to charm, as a snake or beast, so as to prevent its opening its mouth.

வாய்கட்டு²-தல் *vāy-kaṭṭu,* 5 செ.கு.வி. (v.i.) 1. வாயைக்கட்டு-, 1, 2 பார்க்க; see *vāyai-k-kaṭṭu.* 2. மதிப்புரவுக் குறிப்பாக

ஆடையால் வாயை மூடுதல் (யாழ்.அக.); to cover one's mouth with cloth, as a mark of respect. 3. உடலத்தின் வாயை ஆடையாற்கட்டுதல் (யாழ்.அக.); to bind the mouth and chin of a corpse with a piece of cloth.

[வாய் + கட்டு-,]

வாய்கரை *vāy-karai,* பெ.(n.) இறங்கு துறை; ghat, ford, landing place. *'நீஞ்சப்புக்கு வாய்கரையிலே தெப்பமிழப்பாரைப் போலே' (திவ்.திருக்குறுந். 10, வ்யா.)*

[வாய் + கரை]

வாய்கரையர் *vāy-karaiyar,* பெ.(n.) ஆழ்ந்தறிய மாட்டாது மேலோட்டமான அறிவுள்ளவர்கள்; men with superficial knowledge. *"ஈஸ்வரனரியனென்று ஜகத்தை வழியடித்துண்கிற வாய்கரையரைப்போலன்றி" (திவ். இயற். 2, 60. அப்பிள்ளாருரை).*

வாய்காட்டு-தல் *vāy-k-kāṭṭu-,* 10 செ.கு.வி. (v.i.) 1. அதிகப்படியாகப் பேசுதல் (யாழ்.அக.); to wag one's tongue. 2. கெஞ்சுதல் (கொ.வ.); to cringe.

[வாய் + காட்டு-,]

வாய்காய்தல் *vāy-kāydal,* பெ.(n.) வாயுலர்தல்; drying or parching of the mouth.

[வாய் + காய்தல்]

வாய்கிழிய *vāikiḻia,* வி.எ.(adv.) வீண் பேச்சு; loudly without meaning. *'பெண்ணுரிமை பற்றி மணிக்கணக்கில் வாய்கிழியப் பேசினாலும் யாரும் மனம் மாறுவதாகக் காணோம்'.*

[வாய் + கிழி → கிழிய]

வாய்குமட்டல் *vāy-kumaṭṭal,* பெ.(n.) கக்கல் வரும்படியான நிகழ்வு; nausea.

[வாய் + குமட்டல்]

வாய்குவிந்தகுப்பி *vāy-kuvinda-kuppi,* பெ.(n.) சிறு கழுத்துப் புட்டி; narrow necked bottle.

[வாய் + குவிந்த + குப்பி]

வாய்குளிரப்பேசு-தல் *vāy-kuḷira-p-pēšu-,* 5 செ.கு.வி. (v.i.) மேலுக்கு இனிமையாகப் பேசுதல் (இ.வ.); to be honey-tongue.

[வாய் + குளர் → குளிர + பேசு-,]

வாய்குளிறு-தல் *vāy-kuḷiṟu-,* 2 செ.கு.வி. (v.i.) 1. கூச்சலிடுதல் (வின்.); to bawl out. 2. உறக்கத்தில் கனவு முதலியவற்றால் வாய் குழறுதல்; to cry out in sleep, as from fear.

[வாய் + குளிறு-,]

வாய்கூசுதல் *vāy-kūšudal,* பெ.(n.) தீச் சொற்கள் பேசுவதில் அருவருப்புக் கொள்ளுகை (கொ.வ); being ashamed to use indecent words.

[வாய் + கூசுதல்]

வாய்கூப்பு-தல் *vāy-kūppu-,* 5 செ.குன்றாவி. (v.t.) போற்றுதல்; to praise. *"மருதிடத்தா னென்றொருகால் வாய் கூப்ப" (பதினொ. திருவிடை.மும்மணி.29).*

[வாய் + கூப்பு-,]

வாய்கூம்பு-தல் *vāy-kūmbu-,* 5 செ.கு.வி. (v.i.) குவிதல்; to close, as petals of a flower. *"ஆம்பல்வாய் கூம்பினகாண்" (திவ். திருப்பா. 14).*

[வாய் + கூம்பு-,]

வாய்கொடு-த்தல்[1] *vāy-kodu-*, 4 செ.கு.வி. (v.i.) உறுதிமொழி கூறுதல்; to give word, promise. 2. பேச்சுக் கொடுத்தல் (கொ.வ.); to engage one in talk. 3. வாய்ச்சண்டை வளர்த்தல் (வின்.); to kindle a quarrel; to bandy words.

[வாய் + கொடு-,]

வாய்கொடு-த்தல்[2] *vāi-kodu-*, 4 செ.கு.வி. (v.i.) விளைவுகளை எண்ணிப் பார்க்காமல் தானாகப் போய்ப் பேசுதல்; enter into a conversation voluntarily. *'அந்த முரடனிடம் ஏன் வாய்கொடுத்தாய்?'*

[வாய் + கொடு-,]

வாய்ச்சப்பை *vāy-c-cappai*, பெ.(n.) 1. பேச்சுத் திறமற்றவ-ன்-ள் (இ.வ.); one who is not clever in speaking. 2. காற் சப்பை (Cm.M.247); foot and mouth disease in cattle.

[வாய் + சப்பை]

வாய்ச்சம்பிரதாயம் *vāy-c-cambiradāyam*, பெ.(n.) 1. பேச்சுத்திறமை (யாழ்.அக.); cleverness in talking. 2. தொன்றுதொட்டு வரும் வழக்கம்; oral tradition.

[வாய் + **Skt.** *sampra-dāya* > த. சம்பிரதாயம்.]

வாய்ச்சன்னி *vāy-c-canni*, பெ.(n.) முகத்தைக் கோணச்செய்து தோற்ற வேறுபாடு செய்யும் ஓர் இசிவு நோய்வகை; paralysis of the face.

[வாய் + **Skt.** *sanni* > த. சன்னி]

வாய்ச்சாலக்கு *vāy-c-cālakku*, பெ.(n.) வாய்ச்சாலகம் பார்க்க; see *vāy-c-cālagam.*

[வாய் + **U.** *cālak* > த. சாலக்கு]

வாய்ச்சாலகம் *vāy-c-cālagam*, பெ.(n.) சொல்வன்மை (வின்.); skill in speech, eloquence, fluency in speech.

[வாய் + **U.** *cālak* > த. சாலக்கு → சாலகம்.]

வாய்ச்சான்பிழைச்சான் *vāyccān-pilaiccān*, பெ.(n.) நிலையுறுதியற்றது; precarious affair, matter of neck or nothing.

[வாய்ச்சான் + பிழைச்சான்]

வாய்ச்சி *vāycci*, பெ.(n.) 1. மரத்தைச் செதுக்கும் கருவி; adze. *"வாய்ச்சி வாயுறுத்தி மாந்தர் மயிர்தொறுஞ் செத்தினாலும்" (சீவக.2825).* 2. செங்கல் செதுக்குங் கருவி; instrument for cutting the surface of bricks. *"வாய்ச்சியா லிட்டிகை செத்து மாந்தர்" (சீவக.2689).*

[வாய் → வாய்சி → வாய்ச்சி]



வாய்ச்சித்தலை *vāycci-t-talai*, பெ.(n.) தட்டையான தலை (யாழ்.அக.); flattened head.

[வாய்ச்சி + தலை]

வாய்ச்சுத்தம் *vāy-c-cuttam,* பெ.(n.) உண்மையுடைமை; truthfulness.

*[வாய் + **Skt.** śuddha > த. சுத்தம்]*

வாய்ச்சூலை *vāy-c-cūlai,* பெ.(n.) இதளிய மருந்தினால் ஏற்பட்ட தசைபிடிப்பு, இதளிய வேக்காடு; inflammation of the mouth by mercurial poisoning.

[வாய் + சூலை]

ஒருகா. வாய்ப்பிடிப்பு.

வாய்ச்செய்கையொலிச்சொற்கள் *vāy-c-ceykaiyoli-c-corkal,* பெ.(n.) மாந்தன் இயற்கையாகவும் செயற்கையாகவும் தன் வாயினாற் செய்யும் சில செய்கைகளும் சைகைகளும்; beckoning by mouth.

வாய்ச்செய்கை

சில வாய்ச் செய்கைகளால் ஏற்படும் வாய் நிலைகளை, அச் செய்கைகளைக் குறிக்குஞ் சொற்கள் முற்றுமாயினும் ஒரு மருங்காயினும் அமைக்குமாயின், அவை வாய்ச்செய்கை யொலியடிப் பிறந்தவையாம்.

எ-டு:

செய்கை	செய்கைக்கேற்கும் ஒலி	சொல்
வாய் திறத்தல்	அ,ஆ	அங்கா
வாய் (பெருமூச்சிற்கும்) கொட்டாவிக்கும்)	ஆ	ஆவி
வாய்ப்பற்றுதல்	அவ்	அவ்வு-வவ்வு-கவ்வு
பல்லைக்காட்டுதல்	ஈ	இளி
காற்றை வாய்வழி முன்றள்ளல்	ஊ	ஊது

'ஆ வென்று வாயைத் திறக்கிறான்', 'ஈ யென்று பல்லைக் காட்டுகிறான்' என்னும் வழக்கையும் அவ் என்று சொல்லும் போது கவ்வுகிற வாய்நிலை யமைவதையும் காண்க.

(1) ஆவி

ஆவித்தல் = வாய்திறத்தல்; வாய்திறந்து பெருமூச்சு விடுதல், கொட்டாவி விடுதல்.

ஆவி = வாய்வழிவரும் காற்று, மூச்சு (உயிர்ப்பு), உயிர் (ஆன்மா), உயிர்போன்ற தோற்றம்.

(2) அவ்வு

அவ்வு-வவ்வு-கவ்வு. இவை முறையே, ஔவு, வெளவு, கௌவு என்றும் வகைப்படும்.

அகரத் திம்பர் வகரப் புள்ளியும்
ஒள என் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.

அவ்வு (ஔவு) தல் - வாயாற் பற்றுதல். கன்று புல்லை அவ்வி (ஔவி)த் தின்கிறது என்பது வழக்கு.

அவ்-அவ-அவா = வாயினாற் பற்றுதல் போல் மனத்தினாற் பற்றும் ஆசை.

அவ-அவவு-அவாவு. அவாவுதல் - ஆசைப்படுதல். அவாவு-ஆவு. ஆவுதல் = ஆசைப்படுதல். ஆவு-ஆவல். ஆர்வத்தோடணைத்தலை ஆவிச்சேர்ந்து கட்டுதல் என்பர்.

வவ்வுதல் = வாய்ப்பற்றுதல் போற் கைப்பற்றுதல், பறித்தல், வவ்வு.

வாவு - வாவல் = பெருவிருப்பம்.

கவ்வுதல் = வாயாற் பற்றுதல்.

கவ்-கவ-கவர். கவர்தல் = பற்றுதல், விரும்புதல்.

கவர்வு விருப்பாகும் (தொல்.உயிரியல், 65)

கவ-கா-காதல். கா-காம்-காமம்-காமர்.

காம் + உறு = காமுறு. காமம்-காமன்.

கவ்வுதல் = கல்வித்தின்னுதல், தின்னுதல்.

கவ்வு-கப்பு. கப்புதல் = கவளங்கவளமாக விழுங்குதல்.

கவ்வு-கவளம்=ஒருமுறை கவ்வும் அல்லது தின்னும் அளவான உணவு.

கவ்வு-கவியம்-கவிகம்=கறுழ் (bit)

கவ-கவவு = கவ்வுதல், கவ்வினாற்போல் அணைத்தல், அகப்படுத்தல், அகத்திடுதல்.

கவவகத் திடுதல் (தொல். உயிரியல். 59).

கவவுக்கை = அணைத்த கை.

கவர்தல் = பற்றுதல், அகப்படுத்துதல், வசப்படுத்துதல்.

கவர்-கவர்ச்சி. கவ்வு-கப்பு=கவர்ச்சி.

கவர்தல்=பற்றுதல். பறித்தல், கவாஅன் = கவருங் கள்வன்.

கவர்-கவறு = கவறுஞ் சூதாட்டு, சூதாடு கருவி.

கவ்வு-கவுசனை-கவிசனை = அகத்திடும் உறை.

கவ்வு-கப்பு. கப்புதல் = அகத்திடுதல், மூடுதல்.

கவ-கவை. கவைத்தல்=அகத்திடுதல், இரு கையாலும் அணைத்தல்.

கவ்வு - (கவள்) - கவளி = கவ்வினாற் போல் மேலும் கீழும் சட்டம் வைத்துக்கட்டும் புத்தகக்கட்டு, கட்டு, வெற்றிலைக்கட்டு. கவளி-கவளிகை.

கவ்வு–கவுள் = கவ்வும் அலகு, கன்னம், உள்வாய். மேல்வாய் கீழ்வாயலகுகள் கவ்வுங் குறடு போலிருத்தலால், அலகு கொடிறு எனப்படுதல் காண்க. (கொறு–குறடு).

கவ–கவை = கவ்வும் அலகு போன்ற கவட்டை, கிளை. கவ–கவவு=கவட்டை. கவர்தல் = கவ்வும் அலகு போற் பிரிதல்.

கவர்=பிரிவு. கவை,கிளை, கவராசம் = இரு கவருள்ள கருவி (Divider). கவ்வு–கப்பு=கிளை.

(கவள்)–கவடு = கவை போன்ற தொடைச்சந்து, கவர், கவட்டை, கிளை. கவடு–கவட்டி = கவை. தொடைச் சந்து, கவடு – கவட்டை = கவை, பிரிவு, கிளை, சுண்டுவில்.

(கவள்) – கவண் = கவட்டை போன்ற கயிற்றுக் கருவி. கவண்–கவணை. கவண்–கவண்டு–கவண்டி.

கவணை கவண்டு கவண்டி என்னும் மூன்றும் கவண் என்பதன் மறுவடிவங்களே.

கவ–கவான்=தொடைச்சந்து, தொடை, தொடைச் சந்துபோல் இருமலைக்குவடுகள் பொருந்திருக்கும் இடம்.

கவ–கவல். கவலுதல் = பல கவர்படுதல். பலகவர் படுதல் போலப் பல நினைவுகொண்டு கலங்குதல். கவல் – கவலை = கவை, கிளை, கவர்த்த வழி, பல நினைவுக் கலக்கம், அக்கறை.

கவல் – கவலி. கவலித்தல் = கவலைப்படுதல்.

கவ்–கவ்வை = கவலை, கவலைப்பட்டுச் செய்யுங்கருமம், கருமம், வேலை.

கவ்–கவை=காரியம். ஒரு கருமத்திற்கும் பயன் படாதவனைக் கவைக்குதவாதவன் என்பர்.

கவலி–கவனி. கவனித்தல் = கவலையோடு (கருத்தோடு) பார்த்தல். கவனி–கவனம். (மு.தா.).

வாய்ச்செய்கை யொலிச்சொற்கள்

மாந்தன் இயற்கையாகவும் செயற்கையாகவும் தன் வாயினாற் செய்யும் சில செய்கைகளும் சைகைகளும், ஒவ்வோர் ஒலியைப் பிறப்பித்தற் கேற்ற வாய்வடிவை யமைத்து, அவ் வொலிகளின் வாயிலாய் அச் செயல்களைக் குறிக்கும் சொற்களைப் பிறப்பித்திருக்கின்றன. அச் சொற்கட்கு மூலமான அவ்வொலிகள் வாய்ச் செய்கை யொலிகளாம்.

அவ்(வு)

ஒன்றைக் கவ்வுதலை யொத்த வாய்ச்செய்கைநிலை, அவ் என்னும் ஒலியைத் தோற்றுவித்தற் கேற்றதாதல் காண்க. மேல்வாய்ப் பல் கீழுதட்டொடு பொருந்துவதே கவ்வும் நிலையாம். இந்நிலை வகரமெய்யொலிப்பிற்கே ஏற்கும்.

பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும். (தொல்.98)
மேற்பல் விதழுற மேவிடும் வவ்வே. (நன்.85)

அவ்–கவ்–வவ்.

அவ்–அவ்வு–கவ்வு–வவ்வு.

முதற்காலத்தில் அவ் என்னும் வடிவே வாயினாலும் கையினாலும் மனத்தாலும் பற்றும் மூவகைப் பற்றையும் குறித்தது. பிற்காலத்தில் அவ்வுதல் என்னுஞ் சொல் மனத்தினாற் பற்றுதலுக்கும், கவ்வுதல் என்னுஞ் சொல் வாயினாற் பற்றுதலுக்கும், வவ்வுதல் என்னுஞ் சொல் கையினாற் பற்றுதலுக்கும் வரையறுக்கப் பெற்றன. ஆயினும், இன்றும், அவ்வுதல் என்பது உலக வழக்கில் வாயினாற் பற்றுதலை உணர்த்தும்.

எ–கா:

கன்று புல்லை அவ்வித் தின்கிறது.

அவ்–ஔ, கவ்–கௌ, வ்–வௌ.

அவ்வு–ஔவு, கவ்வு–கௌவு, வவ்வு–வௌவு.

அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.
(தொல். 56)

என்பதற் கொத்து,

அகரத் திம்பர் வகரப் புள்ளியும்
ஔஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்

என்றொரு நூற்பாவும் இருந்திருத்தல் வேண்டும்.

கன்று புல்லை ஔவித் தின்கிறது.

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் (நாலடி. 70).

தெ. கவியு

வௌவிய வஞ்சி வலம்புனைய (பு.வெ.3 : 2)

வாய் ஒன்றைக் கௌவும் போது மேல்வாயும் கீழ்வாயும் குறட்டின் ஈரலகு போன்று பற்றுவதால், கவ்வுதல் (அல்லது கௌவுதல்) என்னும் சொற்குக் குறடுபோற் கவைத்திருத்தல் என்னும் கருத்துத் தோன்றிற்று. வாயின் கவைத் தன்மையை, மாந்தன் வாயினும் விலங்கு மூஞ்சியும், விலங்கு மூஞ்சியினும் பறவை மூக்கும் தெளிவாய்க் காட்டும்.

அவ் என்னும் சொல்லினின்று, வாயினாற் பற்றுதலையும் மனத்தினாற் பற்றுதலையுங் குறிக்கும் சில சொற்கள் தோன்றியுள்ளன. அவக்கு என்பது விரைந்து கௌவுதலையும், அவக்காசி என்பது விரைந்து கௌவும் ஆசையையும் உணர்த்தும்.

அவ் – அவா – அவவு.

அவவுக்கை விடுதலு முண்டு (கலித்.14)

அவவு – அவாவு. அவாவுதல் = விரும்புதல்.

அவாய்நிலை = ஒரு சொல் தன்னொடு பொருந்திப்

பொருள் முடிதற்குரிய இன்னொரு சொல்லை அவாவி (வேண்டி) நிற்றல்.

அவாவு – ஆவு. ஆவுதல் = விரும்புதல்.

செந்நெலங் கழனிச் செய்வேட் டாவிய
மறையோன். (உபதேசகா. சிவத்துரோ. 12)

ஆவிச் சேர்ந்து கட்டினான் என்பது உலக வழக்கு.

ஆவு – ஆவல். ம. ஆவல்.

கவ்வு என்னும் சொல்லினின்று, கௌவுதற் கருத்தை அடைப்படையாகக் கொண்ட சில சொற்களும், கவைத்தற் கருத்தை அடிப்படையாகக் கொண்ட பல சொற்களும், மனத்தால் அல்லது மனத்தைப் பற்றும் சில சொற்களும் தோன்றியுள்ளன.

கௌவுதல்

கல்வித்தோல் தின்னும் குணுங்கர்நாய். (நாலடி.322).

கவுள் = கன்னம். கண்ணீர் கவுளலைப்ப. (சீவக. 2050)

கவளம் = கௌவும் அல்லது வாய்கொள்ளும் அளவான உணவுருண்டை.

கவளம் = கவழம்.

கவழ மறியான் கைபுனை வேழம் (கலித். 80)

கவ்வு – கப்பு.

கப்புதல் = கொள்ளுமளவு வாயிலிட்டு மொக்குதல் அல்லது விழுங்குதல்.

அவல்பொரி கப்பிய கரிமுகன் (திருப்பு.விநாயகர்.1)

கவியம் = கடிவாளம் (பிங்.). கவியம் – Pkt. kaviya.

கவிகம் = கடிவாள இரும்பு. கவிகம் – Skt. kavika.

கவைத்தல்

கவ் – கவல் – கவர். கவ்வு – கவட்டை.

கவர்தல் = பல காலாகப் பிரிதல்.

காவிரி வந்து கவர்பூட்ட. (புறம். 35 : 8)

கவர்த்தல் = 1. வழிகள் பிரிதல்.

அறைவாய்ச் சூலத் தருநெறி கவர்க்கும். (சிலப்.11:73)

ம., தெ. கவ; க. கவலு.

2. கவர்படுதல்.

கவர் = 1. நீர்க்காற் கிளை.

தெற்குநோக்கி நீர்பாய்கிற கவருக்கு (S.I.I.iii,45)

3. பல்பிரிவு.

மகளிர் நெஞ்சம்போற் பலகவர்களும் பட்டது.
(சீவக. 1212).

4. மரக்கிளை. 5. சூலக்கிளையலகு.

ம., தெ., து. கவ; க. கவல்.

கவர்க்கால் (கவராயுள்ள முட்டுக்கட்டை, கவையுள்ள மரம், கிளை வாய்க்கால்), கவர்க் குளம்பு, கவர்ச்சுத்தியல், கவர்த்தடி, கவர்நெறி, கவராசம் (divider) முதலிய சொற்களை நோக்குக. கவர்படு பொருண்மொழி = பல்வேறு பொருள்தரும் சொல் அல்லது சொற்றொடர்.

கவர்கோடல் = பலவாறாகக் கருதி ஐயுறல்.

கவர்கோடல் தோன்றாது. (மணிமே. 27 : 22)

கவடு = 1. மரக்கிளை, கவருள்ள மரக்கிளை.

காதலுங் களிப்பு மென்னுங் கவடுவிட்டு. (சீவக.1389)

2. தொடைச்சந்து.

கவடு நுழைந்த பயல் என்பது உலக வழக்கு.

கவட்டி = ஓர் எட்டு. 3. பகுப்பு.

கவடுபடக் கவைஇய...... உந்தி. (மலைபடு.34)

தெ. கவட்ட.

கவட்டடி = மரக்கிளைக் கவர், கவை.

ம. கவ; க. கவத்த.

கவட்டை = கவை, கவண்.

கவண் = கவைபோல் இருபுறமும் கயிறு அல்லது வாருள்ள கல்லெறி கருவி.

கடுவிசைக் கவணி னெறிந்த சிறுகல். (அகம். 292)

ம. கவண்; க., து. கவணெ.

கவண் – கவணை.

கவணையிற் பூஞ்சினை யுதிர்க்கும். (கலித்.23)

கவண் – கவண்டு – கவண்டி.

கவணம் = சீலைத்துணியை இரண்டாகக் கவர்படக் கிழித்துக் கட்டும் காயக்கட்டு.

கவணி= கவணத்திற்கு குதவும் மெல்லிய சீலை.

ம. கவணி.

கவணை = கவைபோல் அமைக்கும் மாட்டுத்தொட்டி.

கவையணை – கவணை. தெ. கவணமு.

கவடு – கவடி = பிளவுபட்ட பலகறை.

ம., க. கவடி; தெ. கவ்வ (gavva).

கவடி – காடி = மாட்டுத்தொட்டி.

கவளி = 1. கவண்போல் அமைத்துத் தூக்கும் பொத்தகக் கட்டு.

புத்தகக் கவளி யேந்தி. (பெரியபு. மெய்ப். 7).

2. புத்தகக் கட்டுப்போன்ற வெற்றிலைக் கட்டு.

கவளி – கவளிகை = சிறு கவளி.

புத்தகங் கட்டி யார்த்த கவளிகையே கொலோ.
(சேதுபு. இராமதீர். 49)

கவளிகை – Skt. kavalika (கவலிக்கா).

கவான் = 1. கவைபோன்ற தொடைச்சந்து, தொடை.

கழுமிய வுவகையிற் கவாற்கொண்ட டிருந்து.
(மணிமே. பதி. 27)

2. தொடைச்சந்து போன்ற மலைப்பக்கம்.

மால்வரைக் கவான். (பட்டினப். 138)

கவை = பிளவு, பிரிவு, கவர், கிளை, கவட்டை.

கவைக்கால், கவைக்குளம்பு, கவைக்கொம்பு, கவைக்கோல், கவைத்தாம்பு, கவைத்தாளலவன் (பெரும்பாண். 208). கவைநா, கவைமுட் கருவி, கவையடி முதலிய தொடர்ச்சொற்களை நோக்குக.

ம. கவ.

கவ்வு – கப்பு = கவர்கொம்பு, கிளை, பிளவு.

கப்புங் கவரும் என்பது உலக வழக்கு.

கப்பு – கப்பி. கப்பித்தல் = கவர்படுதல்.

கப்பித்த காலையுடைய ஞெண்டினது. (பெரும்பாண். 208, உரை)

கப்பு – கப்பை. கப்பைக்கால் = கவட்டுக்கால்.

கவ்வு – காவு. காவுதல் = 1. தண்டின் இருபுறமும் கவைபோற் கலத்தை அல்லது பொருளைத் தொங்கவிட்டுத் தோளிற் சுமத்தல்.

காவினெங் கலனே. (புறம். 206)

2. தோளிற் சுமத்தல், சுமத்தல்.

ஊனைக் காவி யுழிதர்வர் (தேவா. 338 ; 1)

காவு + அடி = காவடி = 1. காவுதடி. 2. முருகன் காவடி. 3. சோற்றுக் காவடி. 4. தண்ணீர்க் காவடி.

காவடி – காவட்டு = கள்ளுக் காவடி.

காவு – கா = 1. காவடித் தண்டு.

காமமு நாணு முயிர்காவாத் தூங்கும். (குறள்.1163)

2. காவடி போன்ற துலாக்கோல்.

3. துலாம் போன்ற ஒரு நிறை.

காவென் நிறையும். (தொல். எழுத்து 169)

கப்பு = காவுந்தோள்.

கப்பா லாயர்கள் காவிற் கொணர்ந்த.

(திவ். பெரியாழ். 3 : 1 : 5)

கவல் – கவலை = 1. மரக்கிளை (பிங்.)

2. கவர்த்த வழி, பல தெருக்கள் கூடுமிடம்.

மன்றமுங் கவலையும் .... திரிந்து. (சிலப்.14 : 24).

கவலை முற்றம். (முல்லைப். 30)

3. மனக்கவற்சி, மனவருத்தம் (கவர்த்த எண்ணம்).

ம. கவல.

4. அச்சத்தோடு கூடிய அக்கறை.

கவலுதல் = கவலாறாகக் கருதி வருந்துதல். க. கவலு.

கவல் – கவலம், கவலை. கவல் – கவலி. கவலித்தல் = கவலுதல். கவை = கரிசனை, அக்கறை.

கவ்வை = கவலை.

கவ்வையாற் கலங்குமனம். (திருக்காளத். பு. 18:27)

கைப்பற்று

கவ – கவவு = 1. கையால் தழுவுதல்.

கண்ணுநுகலுங் கவுளுங் கவவியார்க்கு. (கலித்.83:17)

2. முயங்குதல்

கவவிநாம் விடுத்தக்கால். (கலித். 35)

கவவொடு மயங்கிய காலை யான்.

(தொல்.பொருள். 173).

இரு கையாலும் தழுவுதல் ஈரலகாற் கவ்வுதல் போலித்தல் காண்க.

3. அகத்திடுதல்.

கவவகத் திடுதல். (தொல். சொல். 357)

செவ்வாய் கவவின வாணகை. (திருக்கோ.108).

4. உள்ளீடு.

கவவொடு பிடித்த வகையமை மோதகம்

(மதுரைக். 626)

கவவுக்கை = அணைத்த கை.

திங்கண் முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழ்ந்தனனாய். (சிலப். 7 : 52)

கவர்தல் = 1. முயங்குதல்.

கவர்கணைச் சாமனார் தம்முன் (கலித். 94:12)

3. பறித்தல், பறித்துண்ணுதல்.

கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (குறள். 100)

4. கொள்ளையடித்தல்.

வீடறக் கவர்ந்த வினைமொழிந் தன்று

(பு.வெ. 3 : 15. கொளு)

5. பெறுதல்.

வறியோர் கவர .... எறிந்து (தஞ்சைவா. 20)

கவர்ந்தூண் = அடித்துண்ணும் உணவு.

பசியெருவை கவர்ந்தூ ணோதையும்.

(மணிமே. 6 : 117)

கவைத்தல் = 1. அணைத்தல்.

ஒவ்வெனப் பிரியவும் விடாஅன் கவைஇ

(குறிஞ்சிப். 185)

2. அகத்திடுதல்.

ஆரங் கவைஇய மார்பே (புறம் 19 : 18)

கவறு = 1. பிறர் பொருளைக் கவரும் சூதாட்டம்.

.... கள்ளுங் கவறுந் திருநீக்கப் பட்டார் தொடர்பு (குறள். 920)

2. சூதாடு கருவி.

அரும்பொற் கவறங் குறள (சீவக. 927)

மனப்பற்று

கவர்தல் = விரும்புதல்.

கவர்வுவிருப் பாகும் (தொல். சொல். 362).

கவவுதல் = விரும்புதல்.

கலிங்கம் .... கவவிக் கிடந்த குறங்கினாள் (சீவக. 1058)

கவர்ச்சி = விருப்பம். கவர்ச்சி = மனத்தை இழுக்கை.

கப்பு = கவர்ச்சி.

கப்பின்றா மீசன் கழல் (சிவ. போ. 11, 5, வெண்.)
கவ – கா. காதல் = விரும்புதல், பேரன்பு கொள்ளுதல்.
கா – காவு. காவுதல் = நச்சுதல்.

தேனைக் காவியுண் ணார்சில தெண்ணர்கள் (தேவா. 338 : 1)

கா + அம் – காம் = விருப்பம், காதல்.
ஒ.நோ: ஏ + உம் = ஏம்–யாம் – நாம். காம் + உறு = காமுறு. காமுறுதல் = 1. விரும்புதல்.

இன்பமே காமுறுவ ரேழையர் (நாலடி. 60).

2. வேண்டுதல்.

கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ (கலித். 16)

காம் – காமு – காமம்.
ஒ.நோ: விழு – விழும் – விழுமு – விழுமம். குழு – குழும் – குழுமு – குழுமம், பரு – பரும் – பருமு – பருமன்.
காமு – காமுகம் – காமுகன் – Skt. kamuka (காமுக்க).
காம் + மரு – காமரு – காமர் = விரும்பத்தக்க, அழகிய.

காமர் கடும்புனல் (கலித். 39)

காமர் கயல்புரள (நளவெ.)
காம் + அர் – காமர் = காமுகர்.
காம் + இ – காமி = காமுகன்.
களிமடி மானி காமி கள்வன் (நன். 38).
காமி – Skt. kamin (காமின்).
காமித்தல் = 1. விரும்புதல். ஒ.நோ: காதல் – காதலி.

தப்புதி யறத்தை யேழாய் தருமத்தைக் காமி யாதே (கம்பரா. நிந்த. 54)

2. காமங் கொள்ளுதல்.

காமம் = கள்வன் மனைவியரிடைப்பட்ட காதல், மணம், காமத்துப்பால் என்னும் திருக்குறட் பகுதிப் பெயரை நோக்குக. சிவகாமி = சிவனைக் காதலிக்கும் மலைமகள்.
ஒ.நோ: வேட்டல் = விரும்புதல், காதலித்தல், வேள் = திருமணம். காமம் – Gk. gamos (marriage), Skt. kama. (காம).
காமம் என்னும் சொல் முதற்காலத்திற் பொதுவான ஆசையையே குறித்தது.

காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய். (குறள். 360)
நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். (குறள். 605)

என்னும் குறள்களை நோக்குக.

பிற்காலத்தில், அச்சொல் காதல் என்னும் சொற்போல் ஆடவரின் பெண்ணாசையையும் பெண்டிரின் ஆணாசையையும் சிறப்பாய்க் குறிக்கலாயிற்று. அப் பொருளிலும், உயரிய இருதலைக் காமத்தையும் ஒருமனை மணத்தையுமே குறிக்க அது திருவள்ளுவரால் ஆளப்பெற்றது. ஆயின், இன்று, அது இடங்கழியையும் இணைவிழைச்சு விருப்பத்தையுமே குறிக்குமளவு இழிபடைந்துள்ளது. காமம் – காமன் = மணக்காதல் உண்டாக்கும் தெய்வம். The Indian Cupid.
காமன் – Skt. kama (காம).

(–தேவநேயம் பக். 67–76).

வாய்ச்சேதி *vāy-c-cēdi,* பெ.(n.) 1. பேச்சுவாக்கு; casual mention. *"நாடியதை வாய்ச்சேதியா யுரைக்க வாயெடுக்க முந்தி" (பஞ்ச.திருமுக.1198).* 2. ஆள்வழிச் சொல்லியனுப்புஞ் செய்தி; oral communication.

[வாய் + செய்தி → சேதி]

வாய்ச்சொல் *vāy-c-col,* பெ.(n.) 1. பேச்சு; utterance, speech, word of mouth. *"வாய்ச் சொற்க ளென்ன பயனு மில" (குறள்.1100).* 2. காணாவொலி; utterance of an invisible speaker, considered as an omen. *"வாய்ச்சொல் வாவாவென் றிடல்" (அறப். சத. 63).* 3. வாய்ப்பேச்சு, 2 பார்க்க; see *vāy-p-pēccu. "வாய்ச் சொல்லில் வீரரடீ" (பாரதி. தேசிய. நடிப்பு.1).*

[வாய் + சொல்]

வாய்ச்சொலவு *vāy-c-colavu,* பெ.(n.) 1. குறி சொல்லுகை; prediction, augury. 2. பின் விளையுங் கேட்டினை முன்னெடுத்துக் கூறுகை; ominous utterance.

[வாய் + சொல் → சொலவு]

வாய்சலி–த்தல் *vāy-šali-*, 4 செ.கு.வி. (v.i.) பேசி வாயயர்தல்; to be tired of speaking. *"அவன் நெடுநேரம் பேசி வாய் சலித்தான்" (வின்.).*

[வாய் + சலி–,]

வாய்சவக்களி–த்தல் *vāy-šavakkaḷi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. சுவையற்றிருத்தல்; to be insipid. 2. வெறுப்புத் தட்டுதல்; to be distasteful.

[வாய் + சவக்களி]

வாய்சளப்பு–தல் *vāy-šaḷappu*, 10 செ.குவி. (v.i.) வீண்பேச்சுப் பேசுதல் (யாழ்.அக.); to chatter; to indulge in idle talk.

வாய்சளி–த்தல் *vāy-šaḷi-*, 4 செ.கு.வி. (v.i.) வாய்சவக்களி–த்தல் (யாழ்.அக.) பார்க்க; see *vāy-šavakkaḷi-*

[வாய்சலி–த்தல் → வாய்சளி–த்தல்]

வாய்சுருங்கல் *vāy-šuruṅgal*, பெ.(n.) உணவுக் குழல்வாய் சுருங்கிப் போதல்; contraction of the lumen of a cannel.

[வாய் + சுருங்கல்]

வாய்சுருங்கியபாத்திரம் *vāy-šuruṅgiya-pāttiram*, பெ.(n.) வாய் சிறுத்த ஏனம்; a vessel with small mouth.

[வாய் + சுருங்கிய + பாத்திரம்]

Skt. *pātra > த. பாத்திரம்*

வாய்சோர்–தல் *vāy-šōr-*, 8 செ.கு.வி. (v.i.) 1. பிதற்றுதல்; to talk incoherently, as in delirium. *"வாய் சோர்ந் தாற்றா" (பெருங். வத்தவ. 7,25).* 2. வாய்தடுமாறு–, 2 (பெரிய பு.) பார்க்க; see *vāy-taḍumāṟu-*. 3. வாய்சலி (இ.வ) பார்க்க; see *vāy-šali*.

[வாய் + சோர்–,]

வாய்ஞானம்பேசல் *vāy-ñāṉam-pēšal*, பெ.(n.) முற்பழக்கமில்லா மூதுணர்வுப் பேச்சு; tall talk without experience.

[வாய்ஞானம் + பேசல்]

Pkt. *nāna > த. ஞானம்.*

வாய்த்தட்டுப்பலகை *vāy-t-taṭṭu-p-palagai*, பெ.(n.) கூரையின் முகப்பில் தைக்கும் பலகை (இ.வ); eave-board, barge-board.

[வாய் + தட்டு + பலகை]

வாய்த்தல் *vāyttal*, பெ.(n.) வாய்தல்[2] (அரு.நி.) பார்க்க; see *vāydal.*

வாய்த்தலை *vāy-t-talai*, பெ.(n.) 1. வாய்க் காலின் தலைப்பு மதகு; head-sluice of a channel. *"சுதை செய் வாய்த்தலை" (சீவக.40).* 2.தொடங்கும் இடம்; source. *"நினைவுக்கு வாய்த்தலையான நெஞ்சிலே" (திவ். திருமாலை, 34, வ்யா. பக்.112).*

[வாய் + தலை]

வாய்த்தாரை *vāy-t-tārai*, பெ.(n.) 1. படைக்கலத்தின் நுனி; edge, as of a weapon. 2. வாய்க்கரை, 1 பார்க்க; see *vāy-k-karai.*

[வாய் + தாரை]

வாய்த்திட்டம் *vāy-t-tiṭṭam*, பெ.(n.) வாயளவு; upto the mouth.

[வாய் + திட்டம்]

வாய்த்திரம் *vāy-t-tiram*, பெ.(n.) சாரணை; a plant - Trianthema monogyna.

[வாய் + திரம்]

வாய்த்தீர்த்தம் *vāy-t-tirttam,* பெ.(n.) வாய்நீர் பார்க்க; see *vāy-nir.* *"வாய்த்தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய் வலம்புரியே" (திவ்.நாய்ச்.7, 6).*

[வாய் + தீர்த்தம்]

வாய்த்துடுக்கு[1] *vāi-t-tuḍukku,* பெ.(n.) துடுக்கான பேச்சு; saucy or impertinent talk. *'இந்தச் சின்னப் பெண்ணுக்கு என்ன வாய்த்துடுக்கு !'.*

[வாய் + துடுக்கு]

வாய்த்துடுக்கு[2] *vāy-t-tuḍukku,* பெ.(n.) 1. பேச்சிற் காட்டும் விரைவு; rashness in speech. 2. பேச்சிற் காட்டும் செருக்கு; arrogance in speech.

[வாய் + துடுக்கு]

வாய்தடுமாறு-தல் *vāy-taḍumāru-,* 9 செ.கு.வி. (v.i.) 1. வாய் பதறுதல் (யாழ்.அக.); to stutter. 2. பேசுவதிற் பிழைபடுதல் (வின்.); to make a verbal mistake.

[வாய் + தடுமாறு-.]

வாய்தல்[1] *vāydal,* பெ.(n.) வாயில்; doorway, entrance. *"ஒழுகு மாடத்து ளொன்பது வாய்தலும்" (தேவா.338.7).*

[வாய் → வாய்தல்]

வாய்தல்[2] *vāydal,* பெ.(n.) நுணுக்கம் (அக.நி.); minuteness.

[வாய் → வாய்தல்]

வாய்தற்கூடு *vāydar-kūḍu,* பெ.(n.) கதவினிலை (யாழ்.அக.); door-frame. மறுவ. வாசற்கால்.

[வாய் → வாய்தல் + கூடு]

வாய்தற்படி *vāydar-paḍi,* பெ.(n.) வாயிற்படி (யாழ்.அக.); door-step.

[வாய் → வாய்தல் + படி]

வாய்தித்திப்பு *vāy-tittippu,* பெ.(n.) கோழையினால் வாய் நீரூறலில் ஏற்படும் இனிப்புச் சுவை; sweetness of the mouth caused by phlegm humour.

[வாய் + தித்திப்பு]

வாய்திற[1]**-த்தல்** *vāy-tira-,* 3 செ.கு.வி. (v.i.) 1. வாயை யகல விரித்தல்; to open one's mouth. *'பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்'.* 2. மலர்தல்; to blossom; to open, as a flower. *"நறுமென்குவளை வாய் திறந்த" (பிரபுலிங்.பிரபு தே.54).* 3. புண் கட்டி உடைதல்; to break, as a boil. 4. வெள்ளம் கரையை உடைத்தல்; to make a breach, as a flood. *"பெரும்புனல் வாய் திறந்த பின்னும்" (பு.வெ.3,21).*

[வாய் + திற-.]

வாய்திற[2]**-த்தல்** *vāy-tira-,* 3 செ.குன்றாவி. (v.t.) 1. மலர்த்துதல்; to cause to open, as the petals of a flower. *"வண்டு வாய் திறப்ப... மல்லிகை" (சிலப்.2,32).* 2. பேசுதல்; to speak. *"வாளா கிடந்துறங்கும் வாய்திறவான்" (திவ்.இயற் .நான்மு.35).*

[வாய் + திற-.]

வாய்திறந்தகாயம் *vāy-tiranda-kāyam,* பெ.(n.) நாட்படு பெரும்புண்; open wound.

[வாய்திற → வாய்திறந்த + காயம்]

வாய்திறப்பு *vāy-tiṟappu,* பெ.(n.) உணவு, நடை, தூக்கம் ஆகிய இக்குற்றத்தினால் நரம்புகளை ஏற்றிசைந்து (அனுசரித்து) வாயை மூடாமல் திறந்தபடியே இருக்கச் செய்யுமோர் வளிநோய்; a vatha disease marked by wide mouth which cannot be closed.

[வாய் + திறப்பு]

வாய்தீட்டு-தல் *vāy-tīṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t) படைக்கல முதலியவற்றின் முனை தீட்டுதல்; to sharpen the edge as of a weapon. *"கன்மிசை யறிந்து வாய் தீட்டி" (பெருங்.இலாவாண.4,168).*

[வாய் + தீட்டு-.]

வாய்ந்துகொள்(ளு)-தல் *vāyndu-koḷ-,* 13 செ.குன்றா.வி. (v.t.) பகை வென்று கைப் பற்றுதல்; to obtain by conquest. *"வாய்ந்து கொண்டடையார் வைவேல்" (இரகு.குறைகூ.7).*

[வாய்ந்து + கொள்-.]

வாய்நாற்றம் *vāy-nāṟṟam,* பெ.(n.) 1. வாயின் மணம்; sweet smell in the mouth. 2. வாயிலிருந்து தோன்றுந் தீ நாற்றம் (பைஷஜ); bad smell in the mouth.

[வாய் + நாற்றம்]

வாய்நீர்[1] *vāy-nīr,* பெ.(n.) உமிழ் நீர் (யாழ்.அக.); saliva; spittle.

[வாய் + நீர்]

வாய்நீர்[2] *vāi-nīr,* பெ.(n.) (குழூஉ) வெடியுப்பு எரிநீர்; nitric acid.

மறுவ. தலைப்பிண்டச் செயநீர்.

[வாய் + நீர்]

வாய்நீர்சுரப்பு *vāy-nīr-šurappu,* பெ.(n.) உமிழ் நீர் ஊறிப் பெருகும் ஒருவகை நோய். இதற்கு வழுக்கைத் தேங்காயும் பனங்கற்கண்டும் காலையில் 2 நாள் சாப்பிடப் போம்; supersecretion of saliva- the remedy is given above.

[வாய்நீர் + சுரப்பு]

வாய்நீரொழுகல் *vāy-nīroḻugal,* பெ.(n.) உமிழ் நீர் கடைவாயினின்றும் வடிதல்; secretion of saliva or rheum.

[வாய் + நீரொழுகல்]

வாய்நீரோட்டம் *vāy-nīrōṭṭam,* பெ.(n.) ஒரு நோய்; a disease.

[வாய்நீர் → வாய்நீரோட்டம்]

வாய்நீளம் *vāy-nīḷam,* பெ.(n.) குறை கூறுந் தன்மை; caustic tongue.

[வாய் + நீளம்]

வாய்நெகிழ்-தல் *vāy-negiḻ-,* 3 செ.கு.வி. (v.i.) மலர்தல்; to open, as a flower. *"செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து" (திவ். திருப்பா. 14).*

[வாய் + நெகிழ்-.]

வாய்நேர்-தல் *vāy-nēr-,* 3 செ.குன்றாவி. (v.t.) 1. வழங்குவதாக உறுதிமொழியளித்தல்; to promise to give or bestow. *"அறைபறை மாயன் மணி வண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்" (திவ்.திருப்பா. 16).* 2. நேர்த்திக் கடனைக் குறிப்பிட்டுச் சொல்லுதல்; to vow to make a specific offering. *"நூறுதடாவில் வெண்ணெய்*

வாய்நேர்ந்து பராவி வைத்தேன்" (திவ்.நாய்ச்.9, 6). 3. பேச்சால் உடன்படுதல்; to give one's consent orally. *"நெஞ்சு நேர்ந்தும் வாய்நேர்ந்துரையா" (பெருங். உஞ்சைக்.44,146).*

[வாய் + நேர்-.]

வாய்நோய் *vāy-nōy,* பெ.(n.) மாட்டுக்கு வாயில் வரும் நோய்; mouth disease, in cattle.

வாய்ப்பக்காட்டு-தல் *vāyppa-k-kāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) விளங்க உணர்த்துதல்; to indicate clearly. *"வாய்ப்பக்காட்டல் பாயிரத் தியல்பே" (நன்.47).*

[வாய் → வாய்ப்ப + காட்டு-.]

வாய்ப்பட்சி *vāy-p-paṭci,* பெ.(n.) காக்கை; crow. *"தேமா வனந்தனிற் கூறுவாய்ப் பட்சியுறையும்" (திருவேங்.சத.90).*

[வாய் + பட்சி. **Skt.** *= பட்சி.]*

வாய்ப்பட்டி *vāy-p-paṭṭi,* பெ.(n.) 1. வாய்க்கு வந்தபடி பேசுவோ-ன்-ள்; chatter-box, babbler. *"வள்ளல் தெரியுமடி வாய்ப்பட்டி யென்றுரைத்தார்" (ஆதியூரவதானி).* 2. கண்டதைத் தின்பவன்-ள்; one who eats whatever comes to hand.

[வாய் + பட்டி]

ஒருகா. வாய்ப்படி → வாய்ப்பட்டி.

வாய்ப்பட்டை *vāy-p-paṭṭai-,* பெ.(n.) வாய்ப்பட்டைக்கழி பார்க்க; see *vāyppaṭṭai-k-kaḻi.*

[வாய் + பட்டை]

வாய்ப்பட்டைக்கழி *vāyppaṭṭai-k-kaḻi,* பெ.(n.) கூரைமுகப்பில் ஓடுதாங்குவதற்காக வைக்கும் மூங்கில் அல்லது மரக்கட்டை; bamboo or piece of timber for supporting the tiles at the edge of a roof.

[வாய்ப்பட்டை + கழி]

வாய்ப்படு-தல் *vāy-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. வழிப்படுதல்; to find a way. *"வந்தோர் வாய்ப்பட விறுத்த வேணி" (புறநா.343).* 2. நறுஞ்சுவைப்படுதல் (யாழ்.அக.); to be relished.

[வாய் + படு]

வாய்ப்பந்தல் *vāy-p-pandal,* பெ.(n.) பகட்டுரை; empty, ostentatious word, bombast. *"அந்திவண்ண ரென்றும்... வாய்ப்பந்தலிடுவ தன்றி" (அருட்பா. vi, தத்துவ. 10).*

[வாய் + பந்தல்]

வாய்ப்பரக்கூடம் *vāippara-k-kūḍam,* பெ.(n.) பல்; tooth.

[வாய்ப்பரம் + கூடம்]

வாய்ப்பலி *vāy-p-pali,* பெ.(n.) *வாய்க்கரிசி* (தக்கயாகப்.53, உரை) பார்க்க; see *vāykkariśi.*

[வாய் + பலி. **Skt.** *bali > த. பலி.]*

வாய்ப்பறையறை-தல் *vāy-p-paṟai-y-aṟai-,* 3 செ.குன்றாவி. (v.t.) பலருமறிய வெளியிடுதல்; to proclaim, as by beat of drum or tomtom. *"வடுவுரை யாவர் பேர்ப்பார் வாய்ப்பறை யறைந்து தூற்றி" (சீவக.211).*

[வாய் + பறையறை-.]

வாய்ப்பன் *vāyppaṉ,* பெ.(n.) ஒருவகைப் பணியாரம்; a kind of cake.

[வாய் + பன்]

வாய்ப்பன்சட்டி *vāyppaṉ-šaṭṭi,* பெ.(n.) விளிம்புள்ள மட்கல வகை (யாழ்ப்.); a kind of earthen vessel with a rim.

[வாய்ப்பன் + சட்டி]



வாய்ப்பாட்டு *vāy-p-pāṭṭu,* பெ.(n.) வாயாற்பாடும் பாட்டு; vocal music.

[வாய் + பாட்டு]

வாய்ப்பாடம் *vāy-p-pāḍam,* பெ.(n.) 1. பாராமற் சொல்லும்படி நெட்டுருப் பண்ணிய பாடம்; lesson learnt by heart. 2. பொத்தகமின்றிக் கேள்வியாற் படித்த பாடம்; lesson taught orally.

[வாய் + பாடம்]

வாய்ப்பாடு *vāy-p-pāḍu,* பெ.(n.) 1. வாய்க்கிடும் உண்டி; anything to gratify the palate. *"வாய்ப்பாடு வயிற்றுப்பாடு தீர்ந்த பிறகு மற்றப்பாடு".* 2. வாய்பாடு1,2 (இ.வ) பார்க்க; see *vāy-pāḍu.*

[வாய் + பாடு]

வாய்ப்பானை *vāy-p-pāṉai,* பெ.(n.) அலப்புவோன் (வின்.); babbler.

மறுவ. உளறுவாயன்.

[வாய் + பானை]

வாய்ப்பிடிப்பு *vāy-p-piḍippu,* பெ.(n.) 1. வாய் திறக்க வொட்டாதபடி கிட்டுதல்; lock jaw. 2. மருந்தின் வேகத்தினால் வாய் வெந்து புண்ணாகி நீர் வடிந்து திறக்க வொட்டாம லிருத்தல்; inflammation of the mouth caused by irritant medicines or mercurial compounds-Mercurial ptyalism or stomatitis.

[வாய் + பிடிப்பு]

வாய்ப்பிணி *vāy-p-piṇi,* பெ.(n.) வாயிலுண்டாம் நோய்; mouth disease. *"வாய்ப்பிணியர்" (கடம்ப.பு.இலீலா.130).*

[வாய் + பிணி]

வாய்ப்பியம் *vāyppiyam,* பெ.(n.) வாய்ப்பியன் செய்த ஒரு தமிழிலக்கண நூல் (யாப்.வி.பக்.536); a treatise on Tamil grammar, now not extant, by *vāyppiyaṉ.*

வாய்ப்பிரசங்கம் *vāy-p-pirašaṅgam,* பெ.(n.) 1. உட்கருத்தின்றி உதட்டளவிற் செய்யும் சொற்பொழிவு (யாழ்.அக.); insincere, lip-deep talk. 2. திடீரென்று செய்யும் சொற்பொழிவு; extempore speech. 3. சொல்வன்மையுள்ள சொற்பொழிவு (வின்.); oratory.

*[வாய் + **Skt.** prasanga > த. பிரசங்கம்]*

வாய்ப்பிறப்பு *vāy-p-piṟappu,* பெ.(n.) வாயிலிருந்து வருஞ்சொல்; word of mouth, saying, declaration. *'அவன் வாய்ப் பிறப்பைக் கேள்'.*

[வாய் + பிறப்பு. ஒ.நோ. வாய்ச்சொல்.]

வாய்ப்பு *vāyppu,* பெ.(n.) 1. ஏற்புடை நிலைமை (ஈடு.1, 9, ப்ர); favourability, favourable, circumstance. 2. நேர்பாடு; good chance or opportunity. *"வாய்ப்போ விதுவொப்ப மற்றில்லை" (திவ். இயற். பெரிய திருவந். 40).* 3. நன்கமைந்தது; that which is appropriately formed or situated. *"நீர் வாய்ப்பும் சோலை வாய்ப்புங் கண்டு" (திவ்.திருமாலை, 24, வ்யா, பக்.83).* 4. பொருத்தம்; fitness, suitability. *'வாய்ப்புடைத் தாயிற்றோர் பொருளதி காரமாய்' (இறை.1, உரை, பக்.6).* 5. அழகு; beauty. *"மாதிரிகை யாகவுனும் வாய்ப்பினாள்" (சிவப். பிரபந். வெங்கையு.232).* 6. மிகு சிறப்பு (வின்.); surpassing excellence. 7. செல்வம்; wealth. *"எவ்வாய்ப்புமாகு மெமக்கு" (திருப்போ. சந். மாலை.73).* 8. செழிப்பு (நாமதீப.62.); fertility. 9. ஊதியம்; profit, gain. *'நமக்கு நல்ல வாய்ப்பாயிருந்தது' (ஈடு. 2, 10, 10).* 10. பேறு (இலக்.அக.); fortune.

[வாய் → வாய்ப்பு]

வாய்ப்புட்டில் *vāy-p-puṭṭil,* பெ.(n.) வாய்க்கூடு (வின்.) பார்க்க; see *vāy-k-kūḍu.*

வாய்ப்புண்[1] *vāy-p-puṇ,* பெ.(n.) 1. உள்வாயில் தோன்றும் புண்; ulcer in the mouth, stomatitis. 2. நாக்குப்புண்; inflammation of the tongue - Glossitis. 3. கடுஞ்சொல்லானுண்டாகும் மன வருத்தம்; wound caused by harsh words. *"தீப்புண் ஆறும், வாய்ப்புண் ஆறாது"*

[வாய் + புண்]

வாய்ப்புண்[2] *vāy-p-puṇ,* பெ.(n.) 1. வாய்க் கொப்புளம்; a disease thrush or aphthac. 2. பெண்ணின் கருவழியில் ஏற்படும் புண்; sore vagina.

[வாய் + புண்]

வாய்ப்புள் *vāy-p-puḷ,* பெ.(n.) நற்சொல்லாகிய குறி; chance-heard word, considered a good omen. *"நல்லோர் வாய்ப்புள்" (முல்லைப்.18).*

[வாய் + புள்]

வாய்ப்புற்று *vāy-p-puṟṟu,* பெ.(n.) வாயிலுண்டாம் நோய் வகை; a disease of the mouth. *"புழுச்செறி வாய்ப்புற்று நோயர்" (கடம்ப.பு.இலீலா.137).*

[வாய் + புற்று]

வாய்ப்புறம் *vāy-p-puṟam,* பெ.(n.) உதடு; lip. *"வாய்ப்புறம் வெளுத்து" (திவ்.நாய்ச்.1,8).*

[வாய் + புறம்]

வாய்ப்பூச்சு *vāy-p-pūccu,* பெ.(n.) 1. வாயை நீரால் துடைக்கை; cleansing or rinsing one's mouth with water. 2. சொல்லி மழுப்புகை; glossing over or varnishing with words. *'அவர் சொன்ன தெல்லாம் வாய்ப்பூச்சே'.*

[வாய் + பூச்சு]

வாய்ப்பூட்டு[1] *vāy-p-pūṭṭu,* பெ.(n.) 1. தாடையெலும்பின் பொருத்து; joint of the jaw bones. 2. வாய்க்கூடு (இ.வ.) பார்க்க; see *vāy-k-kūḍu.* 3. பேசாமற்றடுக்கை; prohibition from speaking. *"வாய்ப்பூட்டெனக்கு மிட்டான்" (விறலி விடு.823).* 4. கீழ்வாய் முகக் கட்டையில்

இரண்டு சுழியுள்ளதான மாட்டுக் குற்றவகை (பெரிய.மாட்.20); a defect of cattle, consisting of two curls on the lower Jaw. 5. கையூட்டு; bribe. *"இது அவனுக்கு வாய்ப்பூட்டாகக் கொடுத்தது" (இ.வ).* 6. வாய்வாளாதிருந்து கொண்டு நாக்கை நீட்டிக் குத்தி அல்லது தாடைகளை ஊடுறுவக் குத்திப் பூணுங் கம்பி; pin pierced through the out-stretched tongue or run across the mouth from cheek to cheek of a person who is under a vow of silence.

[வாய் + பூட்டு]

வாய்ப்பூட்டு[2] *vāy-p-pūṭṭu,* பெ.(n.) வாய் திறக்கவொண்ணா ஓர் இசிவு நோய்; a condition of tetanic spasm of the jaw muscles causing them to be rigidly closed.

[வாய் + பூட்டு]

வாய்ப்பூட்டுக்காசு *vāyppūṭṭu-k-kāšu,* பெ.(n.) வாய்முட்டுக்காசு பார்க்க; see *vāymuṭṭu-k-kāšu.*

[வாய்ப்பூட்டு + காசு]

வாய்ப்பூட்டுச்சட்டம் *vāyppūṭṭu-c-caṭṭam,* பெ.(n.) பொதுக் கூட்டங்களிற் பேசுவதைத் தடுக்குஞ் சட்டம் (இக்.வ); law restraining or prohibiting public speech.

[வாய்ப்பூட்டு + சட்டம்]

வாய்ப்பெட்டி *vāy-p-peṭṭi,* பெ.(n.) வாய்க்கூடு (வின்.) பார்க்க; see *vāy-k-kūḍu.*

[வாய் + பெட்டி]

வாய்ப்பெய்–தல் *vāy-p-pey-,* 1 செ.குன்றாவி. (v.t.) வாயிலிட்டுத் தின்னுதல்; to take in, as food, to eat. *"நிணம் வாய்ப்பெய்த பேய் மகளிர்" (மதுரைக்.25).*

[வாய் + பெய்-,]

வாய்ப்பேச்சு *vāy-p-pēccu,* பெ.(n.) 1. வாய்ச்சொல்; utterance, word of mouth. *"பின்னை யொன்றும் வாய்ப்பேச்சி லீரானால்" (அருட்பா.ii, திருவிண்.3).* 2. வெறும் பேச்சு; mere words, vain utterance. *"வாய்ப்பேச்சில் வல்லானடி".*

[வாய் + பேச்சு]

வாய்ப்பை *vāyppai,* பெ.(n.) கடன் (நாமதீப.628); debt.

ம. வாய்ப

வாய்ப்பொய் *vāy-p-poy,* பெ.(n.) மெய்ம்மையின்பாற் படும் பொய்; white lie; lie uttered with a good intention. *"துன்ப மோட்டு வாய்ப்பொய்யலாற் பொய்யொன்றுஞ் சொல்லார்" (தணிகைப்பு.நாட்.48).*

[வாய் + பொய்]

வாய்ப்பொருத்து *vāy-p-poruttu,* பெ.(n.) மூட்டுவாய்; joint, as of two planks. *'கதவின் வாய்ப்பொருத்து விலகிவிட்டது'.*

[வாய் + பொருத்து. பொருத்து = மூட்டுவாய்.]

வாய்ப்பொன் *vāy-p-pon,* பெ.(n.) கடிவாளத்தின் ஒருறுப்பு; horse's bit. *"உன்னி வாய்ப்பொன் கறித்திட" (இரகு.நகர.51).*

[வாய் + பொன்]

வாய்பாடு *vāy-pāḍu,* பெ.(n.) 1. குறியீடு; formula, symbolic expression. 2. பெருக்கல் முதலியன காட்டும் அட்டவணை; table, as of multiplication.

3. மரபுச்சொல்; idiom, cant. *"தக்கதோர் வாய்பாட்டாற் கூறுதல்" (தொல்.சொல்.17, சேனா.).* 4. வழக்கம்; practice, custom, usage. *"எங்க ளுலக வாய்பாடு" (தாயு.சச்சிதா.8).* 5. சொல்வன்மை; skill in speech. *"கட்டுரை வாய்பாடும்" (பழமொ. 258).* 6. பேச்சிடையில் பயின்று வரும் தொடரியம் (இலக்.அக.); mannerism in discourses.

[வாய் + பாடு]

ஒரே இலக்கண இயல்பையுடைய நூற்றுக் கணக்கான சொற்களை ஒரே வகையில் அடக்கிக் கொண்டு அந்த வகையில் உள்ள சொல்லை அந்த வகைக்குக் குறியீடு போல ஆளும் வழக்கம் தமிழிலக்கணங்களில் நாம் தொன்றுதொட்டுக் காணும் மரபுகளில் ஒன்று. ஓடு, ஆடு, நில், கேள், செல் முதலாய வினையடிகள் எல்லாவற்றையும் 'செய்' என்ற சொல்லால் குறிப்பதும், ஓட, ஆட, பாட, நடக்க என வரும் எல்லாச் சொற்களையும் 'செய' என்னும் சொல்லால் குறிப்பதும் மேற்காட்டிய மரபுக்கு எடுத்துக் காட்டுகளாம். இங்கே விளக்கிய இந்த முறையினை வாய்பாட்டு முறை என்பர். ஒரே இலக்கண இயல்புடைய நூற்றுக்கணக்கான சொற்களைக் குறிக்கக் குறியீடாகப் பயன்படும் சொல்லினை வாய்பாட்டுச் சொல் என்பர்.

நில், கேள், செல், முதலாயவற்றைச் செய் வாய்பாட்டு வினைகள் என்றும் ஓட, பாட, ஆட முதலாயவற்றைச் செய வாய்பாட்டு வினைகள் என்றும் இலக்கணப் புலவர்கள் சுட்டுவது வழக்கம்.

– (இலக். கலைக். பக். 107.)

வாய்பார்-த்தல் *vāy-pār,* 4 செ.கு.வி. (v.i.) பிறருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருத்தல் (இ.வ.); to listen to a talk without taking part in it.

[வாய் + பார்-.]

வாய்பாறு-தல் *vāy-pāṟu-,* 9 செ.கு.வி. (v.i.) அலப்புதல்; to babble, to chatter. *"ஸாரதி ஸாரதி என்று வாய்பாறிக் கொண்டிறே பையல்கள் வருவது" (ஈடு,3,6,10).*

[வாய் + பாறு-.]

வாய்பிடித்தல் *vāy-piḍittal,* பெ.(n.) இதளிய மருந்துகளை உள்ளுக்குக் கொடுத்தலால் ஈறு வீங்கிப் புண்ணாகி உமிழ் நீர் அதிகமாய் வடிந்து வாயில் நாற்றமுண்டாகி திறக்க வொட்டாதபடி செய்தல்; swelling of the gums and inflammation of the mouth due to mercurial poisoning, it accompanied by excessive salivation and inability to open the mouth.

[வாய் + பிடித்தல்]

வாய்பிதற்று-தல் *vāy-pidaṟṟu-,* 10 செ.கு.வி. (v.i.) நாக்குழறிப் பேசுதல்; to speak incoherently.

[வாய் + பிதற்று-.]

வாய்பிள-த்தல் *vāy-piḷa-,* 3 செ.கு.வி. (v.i.) 1. அங்காத்தல் (நாமதீப.711); to open one's mouth wide; to gape. 2. திகைத்தல்; to be non-plussed. *'கேள்வி கேட்டால் வாய் பிளக்கிறான்'.* 3. முடியாதென்று கை விடுதல்; to plead inability. *'பணத்துக்கு அவனை நம்பியிருந்தேன், அவன் கடைசியில் வாய் பிளந்து விட்டான்'.* 4. இறத்தல் (கொ.வ.); to die, used in contempt.

[வாய் + பிள-.]

வாய்பினற்று-தல் *vāy-pinaṟṟu-,* 10 செ.கு.வி. (v.i.) வாய் பிதற்று (யாழ்.அக.) பார்க்க; see *vāy-pidaṟṟu.*

வாய்புதை-த்தல் *vāy-pudai-,* 4 செ.கு.வி. (v.i.) பெரியோர் முன்னிலையில் மதிப்புரவுக் குறியாக வாயை வலக்கையால் மூடிக் கொள்ளுதல்; to cover one's mouth with

the palm of the right hand, as a mark of respect in the presence of one's superiors.

[வாய் + புதை–,]

வாய்புலற்று[1]–தல் *vāy-pularru-*, 5 செ.குன்றாவி. (v.t.) பலகாற் சொல்லுதல்; to repeat often. *"ஸத்துக்கள்..... வாய்புலற்றும் படியான தேசமானால்" (ஈடு,2,3,11).*

[வாய் + புலம் → புலற்று–,]

வாய்புலற்று[2]–தல் *vāy-pularru-*, 5 செ.கு.வி. (v.i.) வாய்பிதற்று பார்க்க; see *vāy-pidarru.*

வாய்பூசறு–த்தல் *vāy-pūšaru-*, 4 செ.கு.வி. (v.i.) வாய் பூசு–, 1. (யாழ்.அக.) பார்க்க; see *vāy-pūšu.*

[வாய் + பூசறு]

வாய்பூசு–தல் *vāy-pūšu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. வாய் கழுவுதல்; to wash or rinse one's mouth. *"புகுமதத்தால் வாய்பூசி" (திவ்.இயற்.3,70).* 2. தூய்மை (ஆசமனஞ்) செய்தல்; to sip water ceremonially, to perform *āšamanam. "நீராடிக் கால் கழுவி வாய் பூசி" (ஆசாரக்.19).* 3. வெறும்புகழ்ச்சி பேசுதல்; to flatter. 4. வாய்முட்டுப்போடு–, (வின்.) பார்க்க; see *vāy-muṭṭu-p-pōḍu-,*

[வாய் + பூசு–.]

வாய்பேசு–தல் *vāy-pēšu-*, 5 செ.கு.வி. (v.i.) தற்பெருமை பேசுதல்; to brag, boast. *"எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசு நங்காய்" (திவ்.திருப்பா.14).*

[வாய் + பேசு–.]

வாய்பொத்து–தல் *vāy-pottu-*, 10 செ.கு.வி. (v.i.) வாய்புதை பார்க்க; see *vāy-pudai. "கைகட்டி வாய்பொத்தி நிற்பாரை" (அருட்பா.VI, உறுதிகூறல்.9).*

[வாய் + பொத்து–.]

வாய்பொருத்து–தல் *vāy-poruttu-*, 10 செ.கு.வி. (v.i.) வாய்புதை (யாழ்.அக.) பார்க்க; *vāy-pudai.*

[வாய் + பொருத்து–,]

வாய்பொருமு–தல் *vāy-porumu-*, 5 செ.கு.வி. (v.i.) வாய்குளிறு (யாழ்.அக.) பார்க்க; see *vāy-kuḷiru.*

[வாய் + பொருமு–.]

வாய்போக்கு–தல் *vāy-pōkku-*, 9 செ.கு.வி. (v.i.) எளிதில் உறுதிமொழியளித்தல்; to give one's word lightly. *'பார்ப்பானுக்கு வாய் போக்காதே, ஆண்டிக்கு அதுதானும் சொல்லாதே'.*

[வாய் + போக்கு–.]

வாய்போடு–தல் *vāy-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) ஒருவன் பேசுகையில் இடையிற் புகுந்து பேசுதல்; to interject or interrupt a person when talking.

[வாய் + போடு–.]

வாய்போத்திடு–தல் *vāy-pōttiḍudal*, 20 செ.கு.வி. (v.i.) மருந்துப் பாண்டத்தின் வாயை மூடுதல்; closing the mouth of the container of the medicine.

வாய்மட்டம் *vāy-maṭṭam*, பெ.(n.) 1. ஏனம் முதலியவற்றின் மேல் மட்டம் (வின்.); top-level' up to the brim or mouth, as of a vessel. 2. பொன்னுருச் செய்யும் ஒருமுறை

(வின்.); a process in making golden beads. 3. ஏனத்தின் வாய் வளையம் (யாழ்.அக.); ring round the mouth of vessel.

[வாய் + மட்டம்]

வாய்மடி-தல் *vāy-maḍi-,* 4 செ.கு.வி. (v.i.) கூர்மழுங்குதல்; to become blunt-edged. *'ப்ருஹ்மாஸ்திரம் வாய்மடியச் செய்தே' (ஈடு.6, 1, ப்ர.).*

[வாய் + மடி-.]

வாய்மடு-த்தல் *vāy-maḍu-,* 4 செ.குன்றாவி. (v.i.) வாயினுட் கொள்ளுதல்; to put into one's mouth. *"அடியேன் வாய் மடுத்துப் பருகிக் களித்தேனே" (திவ். திருவாய். 2, 3, 9).*

[வாய் + மடு-,]

வாய்மடை *vāy-maḍai,* பெ.(n.) செய்வரப்பில் நீர்பாயும் வழி; opening in the ridge of a field for the passage of water.

[வாய் + மடை]

வாய்மண்போடு-தல் *vāy-maṇ-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. பிழைப்பைக் கெடுத்தல்; to deprive a person of his means of livelihood. 2. கொடுமை செய்தல் (யாழ்.அக.); to do a wicked act.

[வாய் + மண்போடு-,]

வாய்மணியம் *vāy-maṇiyam,* பெ.(n.) 1. வேலை வாங்கத் திறமையின்றி வாயாற் செய்யும் அதிகாரம் (கொ.வ.); ordering persons about, without ability to extract work from them. 2. சாய்கால் (இ.வ.); authority, influence.

[வாய் + மணியம்]

பணி → மணி → மணியம். *'மணியம்'* பெர்சியன் சொல் என்று சென்னை பல்கலைகழக அகரமுதலியில் குறிக்கப்பெற்றுள்ளது.

வாய்மதம் *vāy-madam,* பெ.(n.) வாய்க் கொழுப்பு பார்க்க; see *vāy-k-koḻuppu. "வாய் மதமோ வித்தை மதமோ" (குற்றா. குற. 76,1).*

[வாய் + மதம்]

வாய்மருந்து *vāy-marundu,* பெ.(n.) நச்சுயிரி தீண்டப்பட்டோரின் வாயில் நச்சுமருந்தாக பண்டுவத்தாருமிழும் வாயெச்சில் (திவ். நாய்ச். 13, 5, அரும். பக். 313); spittle spit by the doctor into the mouth of a snake-bitten patient, as an antidote or poison.

[வாய் + மருந்து, மரு → மருந்து = நலப்பொருள் தொகுதி]

வாய்மலர்-தல் *vāy-malar-,* 3 செ.குன்றாவி. (v.t.) பேசுதல்; to speak. *"மைந்தனார் வாய்மலருங்குரல் கேட்டு" (திருவிளை. மண்சும. 19).*

[வாய் + மலர்]

வாய்முகூர்த்தம் *vāi-mugūrtam,* பெ.(n.) வெல்லும் பேச்சு, பேச்சு இயல்பு; casual utterance which proves true. *'அவர் வீட்டில் இருக்க மாட்டார் என்று சொன்னாய் உன் வாய்முகூர்த்தம் அவர் வீட்டில் இல்லை'.*

[வாய் + முகூர்த்தம்]

Skt. *muhūrta* > த. முகூர்த்தம். முழுத்தம் என்பது தனித்தமிழாம்.

வாய்முட்டுக்காசு *vāy-muṭṭu-k-kāšu,* பெ.(n.) மந்தணத்தை வெளியிடா திருக்குமாறு கொடுக்கும் கையூட்டு; hush money.

[வாய் + முட்டு +காசு]

வாய்முட்டுப்போடு-தல் *vāy-muṭṭu-p-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) மந்தணத்தை வெளியிடாதிருக்குமாறு கையூட்டுக் கொடுத்தல்; to bride, to pay hush-money.

[வாய் + முட்டு + போடு-.]

வாய்முத்தம்[1] *vāy-muttam,* பெ.(n.) முத்தம்; kiss.

[வாய் + முத்தம்]

வாய்முத்தம்[2] *vāy-muttam,* பெ.(n.) பல்; tooth. *"வாய்முத்தஞ் சிந்திவிடுமோ நெல்வேலி வடிவம்மையே" (தனிப்பா.)*

[வாய் + முத்தம்]

வாய்முத்து *vāy-muttu,* பெ.(n.) *வாய்முத்தம்[1]* பார்க்க; see *vāy-muttam. "வாய்முத் தார்த்தி னல்லது தீரா துயிர்க்கென" (பெருங்.இலாவாண,16,59).*

[வாய் + முத்து]

வாய்மூட்டு[1] *vāy-mūṭṭu,* பெ.(n.) வாய்ப் பொருத்து பார்க்க; see *vāy-p-poruttu.*

[வாய் + மூட்டு]

வாய்மூ-த்தல் *vāy-mū-,* 19 செ.கு.வி. (v.i.) பேச்சில் சிறத்தல்; to excel in speech. *"வாய்மூத்த குடி" (வின்.)*

[வாய் + மூ-,]

வாய்மூடு-தல் *vāy-muḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. வாய் புதை-, (யாழ்.அக.) பார்க்க; see *vāy-pudai.* 2. பேச்சு, அழுகை முதலியன நிறுத்துதல்; to cease speaking, crying etc. *'அவரதிகாரத்தில் அழுத பிள்ளையும் வாய்மூடும்'.* 3. குவிதல்; to close, as a flower. *"தொக்க கமலம் வாய்மூட" (பிரபுலிங்.பிரபுதே.54).*

[வாய் + மூடு-,]

வாய்மூத்தவன் *vāy-mūttavaṉ,* பெ.(n.) 1. பேச்சில் முந்துவோன் (யாழ்.அக.); one who is forward in speech. 2. சிறப்புச் சொற்பொழிவாளர் (வின்.); chief speaker.

[வாய் + மூத்தவன்]

வாய்மூப்பன் *vāy-mūppaṉ,* பெ.(n.) 1. பேச்சிற் சிறந்தவன்; excellent speaker. 2. பிறர் வழக்கையெடுத்து வழக்காடுவோன் (முகவை.); one who pleads the cause of another, advocate.

[வாய் + மூ → மூப்பு → மூப்பன்]

வாய்மூழ்-த்தல் *vāy-mūḻ-,* 9 செ.கு.வி. (v.i.) வாய்மூடு-, 1 பார்க்க; see *vāy-mūḍu-, 1. "ஒளிறுவேன் மறவரும் வாய்மூழ்த்தனரே" (புறநா. 336).*

வாய்மூர் *vāimūr,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரியாற்றின் தென்கரையில் அமைந்துள்ளதும், அப்பர், சம்பந்தரால் பாடப்பட்டதுமான சிவத்தலம்; one of the saiva places having the distinction of being sung by Appar, Sampantar. It is on the south side of *Kāviri*-river bank in *tanjāvūr* District . *"திங்களொடருவரைப் பொழிற் சோலைத் தேனலங் காலைத் திருவாய்மூர்" (அப்.தேவா.247-11).*

[வாய்மூர் → திருவாய்மூர்]

வாய்மை *vāymai,* பெ.(n.) 1. சொல்; word. *"சேரமான் வாராயென வழைத்த வாய்மையும்" (தனிப்பா.i, 97, 19).* 2. தப்பாத மொழி; ever truthful word. *"பொருப்பன் வாய்மை யன்ன வைகலொடு" (கலித்.35).*

3. உண்மை; truth. *“வாய்மை யெனப்படுவ தியாதெனின்” (குறள்.291).* 4. துன்பம் (துக்கம்), துன்பம் ஏற்படல் (துக்கோற்பத்தி), துன்பமீட்சி (துக்க நிவாரணம்), துன்ப மீளல் நெறி (துக்க நிவாரண மார்க்கம்) என நால் வகைப்பட்ட புத்த மத உண்மைகள்; sublime truths numbering four viz., *tukkam, tukkōṟpatti, tukka-nivāraṇam, tukka-nivāraṇa-mārkkam. “ஒன்றிய வுரையே வாய்மை நான்காவது” (மணிமே. 30,188).* 5. வலிமை (சூடா.); strength.

"வாய்மையின் இலக்கணம் பிறர்க்கும் பிறவுயிர்கட்கும் தீங்குபயவாமை, 'வாய்மை' யதிகாரம் திருக்குறளை ஒப்புயர்வற்ற உலக அறநூலாக்கும் இயல்வரையறையாம். உண்மை, வாய்மை, மெய்ம்மை என்னும் ஒருபொருட்சொல் மூன்றும் முறையே உள்ளமும் வாயும் உடம்புமாகிய முக்கரணத்தொடு தொடர்புடையனவாகச் சொல்லப்பெறும். இனி, உள்ளது உண்மை, வாய்ப்பது வாய்மை, மெய் (substance) போன்றது மெய்ம்மை எனினுமாம்" எனப் பாவாணர் தரும் "வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந் தீமை யிலாத சொலல்" (குறள், 291) என்ற குறளுரையில் தரும் விளக்கம் கருதத் தக்கது.

[வாய் → வாய்மை]

வாய்மொழி¹-தல் *vāy-moḻi-,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. கூறுதல்; to speak. *“வாய் மொழிந்துரைக்கலுற்றாள்” (சீவக.1707).* 2. தூய மந்திரங்களை யோதுதல்; to consecrate by uttering sacred hymns. *“வாய் மொழி மங்கலக் கருவி முன்னுறுத்தி” (சீவக. 2411).*

[வாய் + மொழி-,]

வாய்மொழி² *vāy-moḻi,* பெ.(n.) 1. பேச்சு; speech. 2. எழுத்து மூலமின்றி வாயாற் கூறுஞ்சொல்; unwritten oral declaration. 3. உண்மைமொழி; truth, true word. *“வாய்மொழி வாயர் நின்புக ழேத்த” (பதிற்றுப்.37,2).* 4. மறை; the vedas. *“மாயாவாய் மொழி யுரைதர” (பரிபா.3,11).* 5. திருவாய்மொழி; *Tiruvāymoḻi. “அவ்வாய் மொழியை யாரு மறையென்ப” (பெருந்தொ.1820).*

[வாய் + மொழி]

வாய்மொழித்தேர்வு *vāymoḻi-t-tērvu,* பெ.(n.) மாணவரை நேரடியாக வினவி தெரிவு செய்யும் நிகழ்ச்சி; viva-voce, oral examination.

[வாய்மொழி + தேர்வு]

வாய்மோசம் *vāy-mōšam,* பெ.(n.) 1. வாய்க்குற்றம், 1 (கொ.வ.) பார்க்க; see *vāy-k-kuṟṟam.* 2. சொன்ன சொல் தவறுகை; failing to keep one's word.

[வாய் + மோசம்]

வாய்வட்டம் *vāy-vaṭṭam,* பெ.(n.) வாய்க்கயிறு (பிங்.) பார்க்க; see *vāy-k-kayiṟu.*

[வாய் + வடம் → வட்டம்]

வாய்வட்டமாகப்பேசு-தல் *vāy-vaṭṭam-āga-p-pēšu-,* 5 செ.குன்றாவி. (v.t.) திறமையாகப் பேசுதல் (இ.வ.); to speak cleverly.

[வாய் + வட்டமாக + பேசு-.]

வாய்வடம் *vāy-vaḍam,* பெ.(n.) வாய்க் கயிறு (நாமதீப. 210) பார்க்க; see *vāy-k-kayiṟu.*

[வாய் + வடம்]

வாய்வயிறுகட்டல் *vāy-vayiṟu-kaṭṭal,* பெ.(n.) பத்தியமாக விருத்தல்; to keep on diet.

[வாய்வயிறு + கட்டல்]

வாய்வலம் *vāy-valam,* பெ.(n.) சொல் வன்மை; skill in speech. *"தம் வாய் வலத்தாற் பாழ்த்துதி செய்து" (திருநூற்.20).*

[வாய் + வலம்]

வாய்வலி *vāy-vali,* பெ.(n.) 1. வாய்வலம் பார்க்க; see *vāy-valam. 'தன் வாய் வலியாலே புக்கதாயிற்று'.* 2. அம்பு முதலியவற்றின் முனையுறுதி (ஈடு.4,2,8); strength of the tip, as of an arrow.

[வாய் + வலி]

வாய்வழிமூச்சு *vāyvaḻi-mūccu,* பெ.(n.) 1. வாய் வழியாக விடுமூச்சு; breathing through mouth. 2. வாய் குறித்து வரும் நோய்கள்; diseases of the mouth.

[வாய்வழி + மூச்சு]

வாய்வறட்சி *vāy-vaṟaṭci,* பெ.(n.) வாய் வறட்டல்; parching of the mouth-xerostomia.

[வாய் + வறள் → வறட்சி]

வாய்வழங்கு-தல் *vāy-vaḻaṅgu-,* 5 செ. குன்றாவி. (v.t.) உண்ணுதல் (யாழ்.அக.); to eat

[வாய் + வழங்கு-,]

வாய்வளையம் *vāy-vaḷaiyam,* பெ.(n.) மிடா முதலியவற்றின் விளிம்பிற் பற்றவைக்கும் வளையம்; ring fixed round the mouth of vessel.

[வாய் + வளையம்]

வாய்வாதம் *vāy-vādam,* பெ.(n.) வாய்கடுத்து அலகு கிட்டி வியர்த்துப் பேசக் கூடாதிருக்கும் நிலைமை; a diseases causing lock jaw and perspiration.

[வாய் + **Skt.** *vādha > த. வாதம்]*

வாய்வாதம்பேசல் *vāy-vādam-pēšal,* பெ.(n.) வழக்காட்டந் தெரியாமலே பொய்யாக வழக்காடுவதாகச் சொல்லிப் பிதற்றல்; an impostor bragging he knows alchemy.

[வாய்வாதம் + பேசல்]

வாய்வாயெனல் *vāy-vāy-eṉal,* பெ.(n.) அச்சமூட்டுதற்குறிப்பு; onom expr. of threatening. *"நமுசி ப்ரப்ருதிகளை வாய்வாயென்றது திருவாழி" (ஈடு.7, 4, 1).*

[வாய் + வாய் + எனல்]

வாய்வார்த்தை *vāy-vārttai,* பெ.(n.) 1. வாய்ப்பேச்சு; word of mouth. *"வாய் வார்த்தை நற்றுதி... அயிக்கிய ஞானிகட்கு" (சித்.சிகா.42,7).* 2. நயம் பொருந்திய சொல் (கொ.வ.); soft kind of words.

[வாய் + வார்த்தை. வார்த்தை = skt.]

வாய்வாள் *vāy-vāḷ,* பெ.(n.) குறிதப்பாத வாள்; trusty sword, as aim - certain. *"வலம்படு வாய்வா ளேந்தி" (புறநா.91).*

வாய்வாளாமை *vāy-vāḷāmai,* பெ.(n.) பேசாதிருக்கை; keeping silent. *"வாய்வாளாமை... மாற்ற முரையாதிருத்தல்" (மணிமே. 30, 245-49).*

[வாய் + வாளா → வாளாமை]

வாய்வாளார் *vāy-vāḷār,* பெ.(n.) வாய் பேசாதார்; silent person. *"வலியாரைக் கண்டக்கால் வாய்வாளாராகி" (பழமொ.302).*

[வாய் + வாளா → வாளார்]

வாய்விசேடம் *vāy-vicēḍam,* பெ.(n.) 1. வாக்குச்சித்தி, 2 (யாழ்.அக.) பார்க்க; see *vākku-c-citti.* 2. வாய்மொழிச் செய்தி (இ.வ.); oral report.

*[வாய் + **Skt.** visēshā > த. விசேடம்]*

வாய்விட்டு *vāy-viṭṭu,* வி.எ.(adv.) 1. ஒளியெழுப்பி, வெளிப்படையாக; loudly. *'வலி தாங்காமல் வாய்விட்டு அரற்றினான்'.* 2. மனம் திறந்து; openly, frankly. *'துக்கத்தை யாரிடமாவது வாய்விட்டுக் சொல்'. 'வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்'.*

[வாய் + விட்டு]

வாய்விடல் *vāy-viḍal,* பெ.(n.) கொட்டாவி விடல்; yawning.

[வாய் + விடல்]

வாய்விடாச்சாதி *vāy-viḍā-c-cādi,* பெ.(n.) விலங்கு (யாழ்.அக.); dumb animal.

*[வாய்விடு + 'ஆ' எ.ம.இ.நி. + **Skt.** jāti > த. சாதி]*

வாய்விடாப்புண் *vāyviḍā-p-puṇ,* பெ.(n.) வாயில் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும் புண்; chronic ulcer of the mouth.

[வாய் + விடா + புண்]

வாய்விடு[1]-தல் *vāy-viḍu,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. பேசுதல்; to speak. *"எனப்பல வாய்விடூஉ நந்தா னென்ப" (கலித்.46).* 2. வெளிவிட்டுத் தெளிவாகச் சொல்லுதல்; to speak openly and clearly without any reservation. *"அர்த்த ப்ராப்தமானது தன்னையே இங்கே வாய்விடுகிறார்" (ஈடு,10,4,9).* 3. வெளிப்படுத்துதல்; to divulge, as secrets. *'நம்மிருவர்க்கும் நடந்ததை வாய்விடவேண்டாம்'.*

[வாய் + விடு-,]

வாய்விடு[2]-தல் *vāy-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. மலர்தல்; to blossom, open, as a flower. *"நிரையிதழ் வாய்விட்ட கடிமலர்" (கலித்.29).* 2. உரக்கவொலியெழுப்புதல்; to lift up or raise the voice. *'குழந்தை வாய்விட் டழுதது'.* 3. சூளுரை கொள்ளுதல் (சீவக. 592); to vow. 4. கொட்டாவி விடுதல் (வின்.); to yawn. 5. கடித்த கடிப்பை விட்டிடுதல்; to leave off bitting. *'உதிரங் குடித்து வாய்விட்ட அட்டைபோல' (ஈடு,4,1,7).*

[வாய் + விடு-,]

வாய்விடு[3] *vāy-viḍu,* பெ.(n.) 1. சூளுறுதி; vow. *"வண்டுபடு தேறனற வாய் விடொடு பருகி" (சீவக.592).* 2. ஆரவாரம் (சீவக.592, உரை); tumult; uproar.

[வாய் + விடு]

வாய்விடு[4]-தல் *vāy-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) ஒலித்தல்; to make noise. *"பொழிலுறு பறவையாவும் வாய்விடா தொழிந்த" (இரட்சணிய பக்.36).*

[வாய் + விடு-.]

வாய்விடை *vāy-viḍai,* பெ.(n.) கைம்மரத்தின் நுனிப்பகுதி (நெல்லை.); the extreme end of a rafter.

[வாய் + விடு → விடை]

வாய்விரணநீர் *vāy-viraṇa-nīr,* பெ.(n.) வாய்ப் புண்ணால் ஒழுகும் நீர்; salivation due to inflammation of the mouth.

[வாய் + விரணம் + நீர்]

Skt. *vraṇa* > த. விரணம்.

வாய்விரணம் *vāy-viraṇam,* பெ.(n.) 1. வாய் வெந்து புண்ணாதல்; inflammation of the mouth, cancrum oris. 2. கருவாய்ப் புண்; ulcer vagina. 3. எருவாய்ச் சீழ்ப்புண்; ulcer anus.

[வாய் + **Skt.** *vraṇa > த. விரணம்]*

வாய்விரணம்ஆற்றும்நீர் *vāy-viraṇam-āṟṟum-nīr,* பெ.(n.) 1. வாய் கொப்பளிக்கு மருந்து நீர்; decoction of some astringents for gorgling in stomatitis, ulcer mouth etc gorgle. 2. வாய்வேகம் பார்க்க; see *vāy-vēgam.*

[வாய்விரணம் + ஆற்றும் + நீர்]

வாய்விரி-தல் *vāy-viri-,* 4 செ.கு.வி. (v.i.) 1. அங்காத்தல்; to gape 2. அலப்புதல்; to be garrulous. *'அவன் வாய் விரிந்து கெட்டான்'.* 3. கெட்டாவி விடுதல் (வின்.); to yawn.

[வாய் + விரி-,]

வாய்விழுரத்தம் *vāy-viḻu-rattam,* பெ.(n.) வாய் வழியாகக் குருதி விழுதல்; hematemesis - haemoptysis.

[வாய்விழு + (அ)ரத்தம்]

வாய்விள்(ளு)-தல் *vāy-viḷ-,* 12 செ.கு.வி. (v.i.) 1. வாயைத் திறத்தல்; to open one's mouth. 2. மலர்தல்; to blossom. *"வாய் விள்ளு மென்மலர் மணமென" (பிரபுலிங். விமலை. 50).*

[வாய் + விள்(ளு)-தல்.]

வாய்விளங்கம் *vāy-viḷaṅgam,* பெ.(n.) 1. கொடிவகை (நாமதீப. 30); small elliptic leaved wind berry. 2. வாயுவிளங்கத்தின் அரிசி போன்ற மணி (வின்.); wind berry pepper-corn.

மறுவ. கேரளம், வாய்விடங்கம்.

(இதனால் சோகைநோய், வயிற்றுவலி, மிகுபருமநோய், ஊதை, பாம்புக்கடி முதலாகிய நஞ்சுகள், நுண்புழுக்கள், எருவாய்ப்புண் ஆகியன நீங்கும் என்பது தமிழ் மருத்துவம்)

தெ. வாயுவிளங்கமு; ம. விழலரி; க. வாயிவுளங்க.

வாய்வு *vāyvu,* பெ.(n.) கந்தவிடம்; a kind of arsenic.

வாய்வெட்டு *vāy-veṭṭu,* பெ.(n.) 1. பிறர் வியக்கும்படி பேசுகை (கொ.வ.); skilful, fascinating talk. 2. வாய்த்துடுக்கு 1 பார்க்க; see *vāy-t-tuḍukku.* 3. நெல் முதலியவற்றை அளக்கையிற் குவித்து அளக்காமல் தலை வழிக்கை (யாழ்.அக.); striking off the heaped up grain above the leave top of a measure, in measuring.

[வாய் + வெட்டு]

வாய்வெருவு[1]-தல் *vāy-veruvu-,* 5 செ. குன்றாவி.(v.t.) வாய் பிதற்றுதல்; to speak incoherently, as in delirium. *"அருவிசோர் வேங்கடம் நீர்மலை யென்று வாய் வெருவினாள்" (திவ். பெரியதி. 8, 2, 3). "வெருவாதாள் வாய்வெருவி" (திவ். பெரியதி, 5, 5, 1).*

[வாய் + வெருவு-.]

வாய்வெருவு²–தல் *vāy-veruvu-,* 10 செ.கு.வி. (v.i.) வாய்குளிறு, 2 பார்க்க; see *vāy-kuḻiṟu.*

[வாய் + வெருவு–.]

வாய்வேக்காடு *vāy-vēkkāḍu-,* பெ.(n.) வாய் முழுவதும் வெந்தாற் போலிருக்கும் நோய்வகை; (M.L.) thrush, a disease of the mouth, Aphthac.

[வாய் + வேக்காடு]

வாய்வேக்காளம் *vāy-vēkkāḷam,* பெ.(n.) வாய்ப்புண்; (M.L.) ulceration of the mouth - stomatitis.

[வாய் + வேக்காளம்]

வாய்வை¹–த்தல் *vāy-vai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. உண்ணுதல்; to eat. *“சிவன் வாய்வைப்ப னோவாலத்தில்” (தனிப்பா.ii, 116,295).* 2. ஊதுதல்; to blow, as a wind - instrument. *“நேமியான் வாய் வைத்த வளைபோல” (கலித்.105).* 3. சுவைத்தல்; to taste. 4. தலையிடுதல்; to meddle or interfere. *‘அவன் எல்லாவற்றிலும் வாய்வைக்கிறான்’.* 5. சிறிது பயிலுதல்; to learn a little, to have a desultory knowledge. *‘எல்லாத் துறைகளிலும் வாய் வைத்தவன் அவன்’.*

[வாய் + வை–த்தல்,]

வாய்வை²–த்தல் *vāy-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கடித்தல் (யாழ்.அக.); to bite. 2. கேட்டல் (யாழ்.அக.); to hear.

[வாய் + வை–,]

வாயகன்றகுப்பி *vāyagaṉṟa-kuppi,* பெ.(n.) வாய் அகன்ற குடுவை; wide mouthed bottle.

[வாய் + அகன்ற + குப்பி]

வாயகன்றபாண்டம் *vāyagaṉṟa-pāṇḍam,* பெ.(n.) வாய் விரிந்த பாண்டம்; a wide mouthed earthern ware, basin.

[வாய் + அகன்ற + பாண்டம்]



வாயச்சரம் *vāya-c-caram,* பெ.(n.) வாயில் ஏற்படும் சிறுசிறு குழிப்புண்; sore in the month.

[வாய் + அச்சரம்]

வாயசம் *vāyašam,* பெ.(n.) 1. காக்கை; crow. 2. காக்கை கொல்லி; a kind of medicinal herb.

வாயசாராதி *vāya-šārādi,* பெ.(n.) ஆந்தை (யாழ்.அக.); owl.

வாயசி *vāyaši,* பெ.(n.) 1. பெண் காக்கை (இலக்.அக.); hen-crow. 2. செம்மணித் தக்காளி (தைலவ.); a variety of Indian houndsberry.

வாயடி¹ *vāy-aḍi,* பெ.(n.) வாயால் மருட்டுகை; over-bearing speech, brow beating by speech, bluff. *‘வாயடி கையடி யடிக்காதே’ (உ.வ.).*

[வாய் + அடி]

வாயடி²-த்தல் *vāy-aḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) வாயடியடி பார்க்க; see *vāyaḍi-y-aḍi.* *"திருவாய்ப்பாடியிற் பெண் பிள்ளைகளை வாயடித்துத் தம் திருவடிகளிலே வந்து விழும்படி வசீகரித்து" (திவ். திருவாய். 4, 2, 2, ஆறா.).*

[வாய் + அடி-த்தல்,]

வாயடி³-த்தல் *vāy-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. வாயிலே யடித்துக் கொள்ளுதல்; to beat one's mouth, as in a grief. *"மண்புரண்டு வாயடிப்பவர்" (பிரபுலிங்.சித்த.49).* 2. அலப்புதல்; to chatter.

வாயடியடி¹-த்தல் *vāyaḍi-y-aḍi-,* 4 செ. குன்றாவி. (v.t.) வாய்ப்பேச்சால் மருட்டி வெல்லுதல்; to over power one's opponent by bluff.

[வாயடி+அடி-,]

வாயடியடி²-த்தல் *vāyaḍi-y-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) மருட்டிப் பேசுதல்; to bluff.

[வாயடி+அடி-,]

வாயடை¹ *vāy-aḍai-,* பெ.(n.) உணவு; food. *"வாயடை யமிர்தம்" (பரிபா.2, 69).*

[வாய் + அடு→அடை]

வாயடை² *vāy-aḍai-,* பெ.(n.) தாட்கிட்டி சன்னி பார்க்க; see *tāḍkiṭṭi-šaṉṉi.*

[வாய் + அடை]

வாயடை³-த்தல் *vāy-aḍai-,* 4 செ.குன்றாவி. (v.t.) பேசவொட்டாதபடி செய்தல்; to silence, as an opponent by arguments.

[வாய் + அடை-,]

வாயடைப்பு *vā-y-aḍaippu,* பெ.(n.) 1. வாய்க் கட்டு; gag. 2. உணவு; food. 3. தூக்கம் நடை ஆகியவிக்குற்றங்களினாற் பிறந்து நரம்பு களில் சார்ந்து மூடிய வாயைத் திறக்க வொட்டாதபடி செய்யுமோர் ஊதை நோய்; a disease which prevents the opening of the mouth. This is generally caused by sleeping during the day which aggravates *vāyu.*

[வாய் + அடைப்பு]

வாயம் *vāyam,* பெ.(n.) 1. நீர் (யாழ்.அக.); water. 2. பெய்கை; pouring.

வாயமுதம் *vāy-amudam,* பெ.(n.) நன்னீர்; saliva.

[வாய் + அமுதம்]

வாயல் *vāyal,* பெ.(n.) 1. வாசல் (சங்.அக.); door, entrance. 2. பக்கம் (வின்); side.

[வாசல் → வாயல்]

வாயலம்பு-தல் *vāy-alambu,* 9 செ.கு.வி. (v.i.) உண்டபின் வாய் பூசுதல்; to wash or rinse one's mouth, as after a meal.

[வாய் + அலம்புதல். (அலம்புதல் = கழுவுதல்)]

வாயவன் *vāyavaṉ,* பெ.(n.) தூதன்; ambassador. *"சொல்லென வாயவன் விளம்பலும்" (புரூரவ.போர்புரி.5).*

[வாய் → வாயவன்]

வாயவியல் *vāy-aviyal,* பெ.(n.) வாய் வெந்து புண்ணாதல்; canker oris.

[வாய் + அவி → அவியல்]

வாயழற்சி *vāy-alarci*, பெ.(n.) வாய் வேக்காடு; inflammation of mouth.

மறுவ. வாய்ப்புண்.

[வாய் + அழற்சி]

வாயறியாமல்தின்னல் *vāy-ariyāmal-tinnal*, பெ.(n.) மிதமிஞ்சி தின்னுதல்; eating excessively, glutlony.

[வாய் + அறியாமல் + தின்னல்]

வாயன் *vāyan*, பெ.(n.) 1. தூதன்; messenger. 2. ஆயன்; shepherd.

[வாய் → வாயன்]

வாயனதானம் *vāyana-tānam*, பெ.(n.) இறைவனுக்குப் படைக்கப்பட்ட படையல் பண்டங்களைக் கொடையாகப் பார்ப்பனர் களுக்கு வழங்குகை; presentation to Brahmins of the naivettiyam at the end of a *pūjā*.

[வாயனம் + தானம்]

வாயனம் *vāyanam*, பெ.(n.) 1. ஒருவகை இனிப்பான தின்பண்டம்; a kind of sweet meat. 2. வாயனதானம் பார்க்க; see *vāyanatānam*.

வாயாகு-தல் *vāy-āgu-*, 5 செ.கு.வி. (v.i.) உண்மையாதல்; to be come true. *'யானறிந் தேனது வாயாகுதலே' (தொல். பொருள். 261, உரை).*

[வாய் + ஆகு-,]

வாயாடி *vāyādi*, பெ.(n.) 1. அலப்புவோன்; talkative, loquacious person; babbler; chatterbox. 2. நாநலமுடையான் (ஈடு. 4, 8, 8); eloquent or clever speaker.

[வாயாடு → வாயாடி]

வாயாடு-தல் *vāy-ādu-*, 5 செ.கு.வி. (v.i.) சொற்றிறமாய்ப் பேசுதல்; to speak cleverly or eloquently. 2. வீண்பேச்சுப் பேசுதல்; to speak frivolously; to fabble. *"நின்னுடனே வாயாடுவோர் பான் மருவி நில்லேன்" (அருட்பா.1, நெஞ்சறி.631).* 3. ஓயாது மென்று கொண்டிருத்தல்; to be contineously munching.

[வாய் +ஆடு-,]

வாயார *vāy-āra*, வி.எ.(adv.) 1. முழுக் குரலோடு; with a full voice. *"வாயார நாம் பாடி" (திருவாச.7, 15).* 2. வாய் நிரம்ப; with a full mouth. *"வாயார வுண்டபேர்" (தாயு. சச்சிதா. 8).*

[வாய் + ஆர் → ஆர]

வாயால்குதட்டுதல் *vāyāl-kudattu-*, பெ.(n.) வாயிலிட்டு அதக்குதல்; pressing softly after receiving into the mouth as done with penis or lips by a woman. (This is a kind of perverted sexual act).

[வாய் + ஆல் + குதட்டு-,]

வாயாலெடு-த்தல் *vāyāl-edu*, 4 செ.கு.வி. (v.i.) ஒக்காளித்தல் (நாமதீப.600); to vomit.

[வாய் → வாயால் + எடு-,]

வாயாலெரையுடன் *vāyālerai-y-udan*, பெ.(n.) தேவாங்கு; an animal, sloth.

வாயாவி *vāy-āvi*, பெ.(n.) 1. கொட்டாவி (வின்.); yawn. 2. மூச்சு (யாழ்.அக.); breath.

[வாய் +ஆவி]

வாயாவிபோக்கு-தல் *vāyāvi-pōkku-*, 9 செ.கு.வி. (v.i.) 1. கொட்டாவி விடுதல்; to yawn. 2. வீணே பேசுதல் (வின்.); to speak in vain, as wasting one's breath.

[வாயாவி + போக்கு]

வாயித்தல் *vāyittal*, 4 செ.கு.வி. (v.i.) வாயாற் படித்தல்; to read in loudly.

ஒ.நோ. கண் → கணி. கடைக்கணித்தல் = கடைக்கண்ணாடி பார்த்தல். மலையாளத்தில் வாயித்தல் என்னும் வடிவம் வழங்குகின்றது. (வ.மொ.வ.163).

வாயில்[1] *vāyil*, பெ.(n.) 1. ஐம்பொறி; the five sense organs. 2. ஒன்பான் துளை; the nine opening.

வாயில்[2] *vāyil*, பெ.(n.) 1. கட்டடத்துள் நுழையும் வாசல்; gate, portal, doorway, entrance to a building. *"அடையா வாயிலவ னருங்கடை" (சிறுபாண்.206).* 2. ஐம்பொறி (பிங்.); the five organs of sense, as avenues to the self. 3. ஐம்புலன் (பொரு.நி.); the five objects of sense. 4. வழி; way. *"புகழ்குறை படூஉம் வாயில்" (புறநா.196).* 5. துவாரம்; opening. *"வருந்து முயிரொன்பான் வாயிலுடம்பில்" (நன்னெறி. 12).* 6. இடம்; place. *"வாயில் கொள்ளா மைந்தினர்" (பதிற்றுப்.81, 9).* 7. காரணம் (பிங்.); cause. *"வாயிலோய் வாயி லிசை" (பு.வெ.9,2).* 8. வழிவகை; means. *"திருநலஞ் சேரும் வாயிறான்" (சீவக.2008).* 9. தீர்வு (ஞானா.34, 21); remedy. 10. அரசவை; King's court. *"பொன்னி நாடவன் வாயிலுள்ளா னொரு புலவன்" (திருவிளை. கான்மா.5).* 11. வாயில் காப்பான் பார்க்க; see *vāyil-kāppāṉ*. *"வாயில் விடாது கோயில் புக்கு" (புறநா. 67).* 12.தூதன்; messenger. *"வயந்தக குமரனை வாயிலாக" (பெருங். மகத. 18, 30).* 13. தலைவனையும் தலைவியையும் இடைநின்று கூட்டுந் தூது; one who mediates between lovers. *"வருந் தொழிற் கருமை வாயில் கூறினும்" (தொல். பொருள். 111).* 14. திறம் (பிங்.); ability. 15. கதவு; door. *"நீணெடு வாயி னெடுங்கடை கழிந்து" (சிலப்.10, 8).* 16. வரலாறு (இலக். அக.); origin, history.

ம. வாதில்; கோட. வாய்ல்; தோட. போஸ்; க. பாகில்; து. பாகிலு; தெ. வாகிலி; கொலா. வாகல், நாய்க். வாகல்; பார்ஜி. வால்.

வாயில்காப்பான் *vāyil-kāppāṉ*, பெ.(n.) வாசலிற் காவல் செய்வோன்; door keeper. *"வாயில் காப்பானே மணிக்கதவம் தாள் திறவாய்" (திவ். திருப்பா.16).*

ஒருகா. வாயிற்காவலன்

[வாயில் + கா → காப்பான்]

வாயில்மண்போடு-தல் *vāyil-maṇ-pōḍu*, 9 செ.கு.வி. (v.i.) கேடு விளைத்தல்; to cause ruin. *"அவர்கடம் வாயில்... மண் போட்டான்" (தனிப்பா.1, 238, 8).*

[வாய் → வாயில் + மண் + போடு-.]

வாயில்மண்விழுதல் *vāyil-maṇ-viḻudal*, பெ.(n.) முற்றுங் கேடுறுகை; being completely ruined.

[வாய் → வாயில் + மண் + விழுதல்-.]

வாயில்லாப்பூச்சி *vāillā-p-pūcci*, பெ.(n.) எதிர்த்துக் கேட்கும் திறன் இல்லாதவர்; people who would not speak up. *'பாவம் வாயில்லாப் பூச்சிகள்; அவர்களால் நிலக்கிழார்களை எதிர்த்து என்ன செய்ய முடியும் ?'*

[வாயில்லா + பூச்சி]

வாயில்விழைச்சு *vāyil-viḻaiccu,* பெ.(n.) உமிழ்நீர்; saliva, spittle. *"வாயில் விழைச்சிவை யெச்சில்" (ஆசாரக்.8).*

[வாய் → வாயில் + விழை → விழைச்சு. (விழைச்சு = இளமை)]

வாயில்வேண்டல் *vāyil-vēṇḍal,* பெ.(n.) தலைவனுக்கு முகங் கொடுக்குமாறு தலைவியைப் பாணன் முதலிய தூதுவர் வேண்டிக் கொள்வதைக் கூறும் அகப் பொருட்டுறை (நம்பியகப். 95); theme describing the request of a mediator to a heroine to give audience to her lover.

[வாயில் + வேண்டல்]

வாயிலடக்கல் *vāyil-aḍakkal,* பெ.(n.) வாயிலடக்குதல்; to keep in the mouth.

[வாயில் + அடக்கல்]

வாயிலடித்தல் *vāyil-aḍi,* 4 செ.குன்றாவி. (v.t.) முற்றுங்கெடுத்தல்; to ruin.

[வாயில் + அடி-,]

வாயிலப்பு *vāyil-appu,* பெ.(n.) 1. வாய் நீரூறல், ஒரு நோய்; excessive salivation, a disease. 2. வாய் நீர்; saliva. 3. அகட்டு நீர்க்கோவை; ascites.

[வாய் + இல் → வாயில் + அப்பு. (இல் = ஏழனுருபு)]

வாயிலாக *vāilāga,* வி.எ. (adv.) மூலம், through. *'நாம் வருவதை முன்கூட்டியே தொலைபேசி வாயிலாகத் தெரிவித்து விடலாம்'.*

[வாய் → வாயில் + ஆக]

வாயிலாச்சீவன் *vāy-ilā-c-cīvaṉ,* பெ.(n.) விலங்கு; animal, dumb creature.

[வாய் + இல்லா → இலா + சீவன்]

Skt. *jīva* > த. சீவன்.

வாயிலார்நாயனார் *vāyilār-nāyaṉār,* பெ.(n.) நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவர் (பெரியபு.); a canonized *śaiva* saint, one of 63.

வாயிலாளன் *vāyil-āḷaṉ,* பெ.(n.) வாயிற்காவலன் (பிங்.); door-keeper.

[வாயில் + ஆள் → ஆளன்]

வாயிலிற்கூட்டம் *vāyiliṟ-kūṭṭam,* பெ.(n.) பாணன் முதலியோராற் கூடும் தலைவன் தலைவியரின் கூட்டம் (இலக்.வி.424.); reconciliation of lovers through the help of mediators.

[வாயில்+கூட்டம்]

வாயிலெடுக்கல் *vāyil-eḍukkal,* பெ.(n.) கக்கல்; vomitting.

[வாயில் + எடுக்கல்]

வாயிலெட்டு *vāyileṭṭu,* பெ.(n.) ஒரு ஊனானிப்பூடு; violaodorata a plant used in unani medicine.

[வாயில் + எட்டு]

வாயிலெடு-த்தல் *vāyil-eḍu-,* 4 செ. குன்றாவி. (v.t.) வாயாலெடு-, பார்க்க; see *vāyāl-eḍu.*

[வாய் + ஆல் (ஆல் = மூன்றனுருபு) + எடு-,]

வாயிலேபோடு-தல் *vāyil-ē-pōḍu-,* 10 செ.குன்றாவி. (v.t.) 1. பேச வொட்டாது குறுக்கிட்டுப் பேசித் தடை செய்தல்; to interrupt as a person, while speaking.

'எது பேசினாலும் அவளை வாயிலே போடுகிறான்'. 2.பிறர் பொருளைக் கையாடுதல்; to misappropriate. *'அவன் பிறர் பொருளை வாயிலே போட்டுக் கொள்ளுகிறவன்'.*

[வாயில் + போடு-,]

வாயிலைப்பு *vāy-ilaippu,* பெ.(n.) வாய் சுவையின்மை; bad taste in the mouth.

[வாய் + இளைப்பு → இலைப்பு]

வாயிலோர் *vāyilōr,* பெ.(n.) 1. வாயில் காப்போர்; door-keepers. *"வாயிலோயே வாயிலோயே" (சிலப். 20, 24).* 2. தூதுவர் (சங்.அக.); messengers, mediators. 3. ஒரு சார் தமிழ்க் கூத்தர் (பிங்.); a class of Tamizh dancers.

[வாயில் → வாயிலார் → வாயிலோர்]

வாயிழு-த்தல் *vāy-iḻu-,* 4 செ.கு.வி. (v.i.) சண்டை போடுதல் (Tp); to pick a quarrel.

[வாய் + இழு-.]

வாயிற்காட்சி *vāyiṟ-kāṭci,* பெ.(n.) ஐம்புலக் காட்சி (சி.சி.அளவை, 6, மறைஞா.); apprehending faculty of senses.

[வாயில் + காட்சி]

வாயிற்கூத்து *vāyiṟ-kūttu,* பெ.(n.) கூத்துவகை; a kind of dancing or acting. *"வாயிற் கூத்துஞ் சேரிப்பாடலும்" (பெருங். உஞ்சைக்.37, 88).*

[வாயில் + கூத்து]

வாயிற்படி *vāyiṟ-paḍi,* பெ.(n.) வீட்டு வாசலின் படி; door-step threshold. *"மிருதி பதினெட்டு முயர் திருவாயிற் படியாக" (குற்றா. தல. திருமால். 132). 'வீட்டுக்குவீடு வாசற்படி' (பழ.)*

[வாயில் + படி]

வாயின்மறுத்தல் *vāyiṉ-maṟu-,* பெ.(n.) தூது வந்த பாணன் முதலியவர்க்குத் தலைவி முகங்கொடுக்க மறுத்தலைக் கூறும் அகத் துறை (தொல். பொருள். 3, உரை); (akap.) theme describing the refusal of the heroine to grant interview to her lover's messengers.

[வாயில் + மறு-,]

வாயின்மாடம் *vāyiṉ-māḍam,* பெ.(n.) கோபுரம்; tower over the entrance, as of a temple. *"தீயழற் செல்வன் செலவுமிசை தவிர்க்கும் வாயின் மாடத்து" (பெருங். மகத. 3, 31).*

[வாயில் + மாடம்]

வாயினிப்பு *vāy-iṉippu,* பெ.(n.) உமிழ் நீரால் வாயில் உணரப்படும் இனிப்புணர்வு; sweetness of the mouth.

[வாய் + இனிப்பு]

வாயினிலை *vāyiṉilai,* பெ.(n.) அரசனிடத்துத் தன் வரவு கூறுமாறு வாயில் காப்போனுக்குப் புலவன் சொல்வதாகக் கூறும் புறத்துறை (பு. வெ. 9, 2); theme of a poet asking the gate-keeper at the palace to announce his arrival to the king.

[வாயில்+நிலை]

வாயினேர்வித்தல் *vāyiṉērvittal,* பெ.(n.) தலைவியிடம் தூது செல்லுமாறு தலைவன் தூதுவரை உடன்படுத்துவதைக் கூறும் அகத்துறை (நம்பியகப். 96); theme of a lover persuading his messenger to

deliver his love-message to his beloved.

[வாயில் + நேர்வு → நேர்வித்தல்]

வாயீளை *vāy-īḷai*, பெ.(n.) கோழையுடனாய வாயெச்சில்; saliva and mucus discharge from the mouth.

[வாய் + ஈளை. ஈளை = கோழை.]

வாயுதவி *vāy-udavi*, பெ.(n.) வாய்ச்சொல் அருளல்; help by words.

மறுவ. பரிந்துரை.

[வாய் + உதவி]

வாயும்வயிறுமாயிரு-த்தல் *vāyum-vaiyiṟumāiru-*, 18 செ.குன்றாவி. (v.t.) கருப்பமாக இருத்தல்; be in the state of pregnancy. *'நீ வாயும் வயிறுமாக இருக்கிற போது ஊட்டமான உணவு சாப்பிட வேண்டும்'.*

[வாயும் + வயிறுமாய் + இரு-,]

வாயுமேனி *vāyu-mēṉi*, பெ.(n.) பச்சைக்கல்; green stone.

வாயுருட்டு *vāy-uruṭṭu*, பெ.(n.) பேச்சால் மருட்டுகை (இ.வ.); browbeating.

[வாய் + உருட்டு]

வாயுள்ளவன் *vāy-uḷḷavaṉ*. பெ.(n.) உசாவி அறிந்து கொள்ளக் கூடியவன்; man of inquiring sprit, pushful man. *'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்' (பழ.).*

[வாய் + உள்ளவன்]

வாயுறு[1]-த்தல் *vāy-uṟu*. 5 செ.கு.வி. (v.i.) பேச்சினால் மெய்ம்மையை அறிவுறுத்தல்; to preach or expound the truth. *"வாயுறை வாழ்த்தே... வாயுறுத்தற்றே" (தொல். பொருள். 424).*

[வாய்மை → வாய் + உறு-,]

வாயுறு[2]-த்தல் *vāy-uṟu-*, 4 இசெ.குன்றாவி. (v.t.) வாயிலூட்டுதல்; to feed, to administer as medicine, by the mouth. *"மருந்தாகச் சிலநாட்கொண்டு வாயுறுத்தி" (சீவக. 2703, உரை).*

[வாய் + உறு-,]

வாயுறை *vāyuṟai*, பெ.(n.) 1. உண்கை; eating. *"வடுத்தீர் பகல் வாயுறை" (சிறுபஞ்.69).* 2. உணவு; food, fodder. *"பசுவுக்கொரு வாயுறை" (திருமந். 252).* 3. அறுகம்புல்; harialli grass. 4. சோறூட்டுதல்; ceremony of giving boiled rice to an infant for the first time. *"தாண்டு மதியிரு மூன்றில் வாயுறையின் சடங்கியற்றி" (குற்றா. தல. தரும. 37).* 5. கவளம் (இலக்.அக.); bolus of cooked rice. 6. மருந்து; medicine. *"வாயுறை யென்பது மருந்தாகலான்" (தொல். பொருள். 423, உரை).* 7. வாயுறைமொழி (தொல். பொருள். 423, உரை) பார்க்க; see *vāyuṟai-moḻi.* 8. தாளுருவி என்னும் மகளிர் காதணி; a kind of ear-ring, worn by women. *"வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதின்" (நெடுநல். 140).*

[வாய் + உறை]

வாயுறைமொழி *vāyuṟai-moḻi*, பெ.(n.) கேட்கும் போது வெவ்வியதாய்ப் பின்பு உறுதி தருஞ் சொல் (சி. போ. பா. 2, 2, பக். 165.); harsh but salutary words of advice.

[வாயுறை + மொழி]

வாயுறைவாழ்த்து *vāyuṟai-vāḻttu,* பெ.(n.) 1. தலைவன் வேண்டானாயினும் அவற்கு உறுதிமொழிகளைச் சான்றோர் கூறும் புறத்துறை (தொல். பொருள். 90); theme of wise men giving salutary advice to a chief nolens volens. 2. சிற்றிலக்கிய வகை தொண்ணூற்றாறனுள் ஒன்று; a variety of descriptive poetry, one of 96 *šiṟṟilakkiyam.*

[வாயுறை + வாழ்த்து]

வாயூற்று *vāyūṟṟu,* பெ.(n.) வாயில் உமிழ் நீர் சுரக்கை (யாழ்.அக.); profuse secretion of saliva.

[வாயூறு → வாயூற்று]

வாயூறச்செய்தல் *vāyūṟa-c-ceydal,* பெ.(n.) மருந்தினால் வாயில் நீரூறும்படி செய்தல்; to produce an usual secretion and discharge of saliva in a person by using medicine.

[வாயூறு → வாயூற + செய்தல்]

வாயூறல் *vāy-ūṟal,* பெ.(n.) 1. வாயில் பித்த நீர் சுரத்தல்; secretion of fluid in the mouth. 2. வாய் நீர்; saliva.

[வாய் + ஊறல்]

வாயூறு[1]-தல் *vāy-ūṟu,* 5 செ.கு.வி. (v.i.) உணவை நினைந்து உமிழ்நீர் சுரத்தல்; secretion of idiva on seing food. *"அமரர் குழாம் வாயூற" (அழகர்கல.1).*

[வாய் + ஊறு-,]

வாயூறு[2]-தல் *vāy-ūṟu,* 5 செ.குன்றாவி. (v.t.) அவாவுதல்; to long for, as welth, fame, office, learning.

[வாய் + ஊறு-,]

வாயெச்சில் *vāyeccil,* பெ. (n.) வாய்மருந்து பார்க்க; see *vāy-marundu.*

[வாய் + எஞ்சு → எச்சு → எச்சில். (எச்சில் = மீந்த உணவு, உமிழ்நீர்.]

வாயெடு-த்தல் *vāy-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. பேசத் தொடங்குதல்; to begin to speak. 2. குரலெடுத்தல்; to speak aloud, to raise the voice. *"நன்னாடு வாயெடுத் தழைக்கும்" (மணிமே. 25, 237).*

[வாய் + எடு-,]

வாயெழு-தல் *vāy-eḻu-,* 5 செ.கு.வி. (v.i.) வாயெடு (இ.வ.) பார்க்க; see *vāy-eḍu* .

[வாய் + எழு-, (எழு-தல் = தொடங்குதல்).]

வாயைக்கட்டு[1]-தல் *vāyai-k-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. உணவிற் கட்டுப்பாடாக இருத்தல்; to observe restrictions of diet. 2. சிக்கனமாக உணவு கொள்ளுதல்; to stint oneself in the matter of food. *"வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிச் சேர்த்த பொருள்".* 3. வாய்கட்டு[1], 2, 3 பார்க்க; see *vāy-kaṭṭu.*

[வாய் → வாயை + கட்டு-,]

வாயைக்கட்டு[2]-தல் *vāyai-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) வாய்கட்டு-, 1, 2 பார்க்க; see *vāy-kaṭṭu.*

[வாய் → வாயை + கட்டு-,]

வாயைப்பிள-த்தல் *vāai-p-piḷa-,* 4 செ.கு.வி. (v.i) 1. வியப்பை வெளிப்படுத்தும் வகையில் வாயைத் திறத்தல்; gape at. *'பெண் மிதிவண்டி ஓட்டினாலே வாயைப் பிளக்கும் ஊர் இது'.* 2. இறத்தல்; to die. *'கிழவர் திடீரென்று வாயைப் பிளந்து விட்டார்'.*

[வாய் → வாயை + பிள-,]

வாயொடுங்கு-தல் *vāy-oḍuṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) பேச்சடங்குதல் (யாழ்.அக.); to be tongue-tied; to be rendered speechless.

[வாய் + ஒடுங்கு-,]

வாயொலி *vāy-oli,* பெ.(n.) பாடல்; poem. *"கலியன் வாயொலிகள்" (திவ். பெரியதி. 4, 5, 10).*

[வாய் + ஒலி]

வாயோட்டல் *vāy-ōṭṭal,* பிளத்தல்; raving.

[வாய் + ஓட்டல்]

வாயோடு *vāy-ōḍu,* பெ.(n.) 1. உடைந்த பானையின் வாய்ச் சில்லு (திவ். திருமாலை 5, வ்யா. பக். 29) ; neck of a broken pot. 2. குத்தும் அரிசி முதலியன சிதறாதபடி உரலின் மேல் வைக்கும் பானைக் கழுத்துப் போன்ற கருவி (கொ.வ.); circular piece like the neck of a broken pot placed at the mouth of a mortar, while pounding paddy to prevent the grain from scattering.

[வாய் + ஓடு]

வாயோலை *vāy-ōlai* பெ.(n.) 1. தவச வளவைக் குறிப்பிட்டுக் குவியலில் வைக்கும் அதன் கணக்குக் குறிப்பு; ola memorandum of account of grain in a heap, usually kept stuck in the heap. 2. ஒற்றி உரிமையை விலைசெய்வதைக் குறிக்கும் மூல ஆவணம் (நாஞ்.); document conveying the sale or assignment of one's mortgage right.

[வாய் + ஓலை]

வார்¹-த்தல் *vār-,* 11 செ.கு.வி. (v.i.) அம்மை நோயில் முத்து வெளிப்படுதல்; to appear, as pock in small-pox. *'அம்மை வார்த்த மூஞ்சி' (கொ.வ.).*

வார்²-தல் *vār-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஒழுகுதல்; to flow, trickle. *"நெய் வார்ந்தனைய திண்கோல்" (சீவக.1697).* 2. வெளிவிடுதல்; to spread, overflow. *"நெடுநீர் வார்குழை" (நெடுநல்.139).* 3. நெடுமையாதல்; to be long. *"வார்மயி ருளரினள்" (அகநா.102.).* 4. நேராதல்; to be upright. *"வார்ந்திலங்கு வையெயிற்று" (குறுந்.14).* 5. உயர்தல் (பிங்.); to rise high. 6. ஒழுங்குபடுதல்; to be in order, to be arranged in order. *"மணல்வார் புறவில்" (மலைபடு.48).* 7. நென்மணி முதலியன பால் கட்டுதல்; to form milk, as grain. *"ஐவன வெண்ணெல் பால்வார்பு கெழீஇ" (மலைபடு.114).* 8. உரிதல்; to peel off. *"பீலி வார்ந்து" (அகநா.69).*

[வள் → வரு → வா → வார்-,]

வார்³-தல் *vār-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. மயிர் கோதுதல்; to comb, as hair. *"வாருறு வணரைம்பால்" (கலித்.58).* 2. தெரிதல் (சது.); to know.

ம. வாருக; தெ. வாரு; க. பார்; கோட. வாரி; பார்ஜி. வார்ஜாவா; குய். வாரு.

[வழி → வடி → வார்-, (மு.தா.109)]

வார்⁴-த்தல் *vār-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. ஊற்றுதல்; to pour. *"கிண்ணத்தில் வார்த்தளிக்க" (சீவரக.கணபதியு.13).* 2. உருக்கி வார்த்தல்; to cast, as metal in a mould. 3. தோசை முதலிய பணியாரஞ் செய்தல்; to prepare cakes from dough. *'தோசை வார்த்தான்'.*

[வள் → வரு → வார்-,]

வார்[5] *vār,* பெ.(n.) 1. நெடுமை (சூடா.); length, elongation. 2. கடைகயறு; churning rope. *"இளமை வாராக்....... கலக்கி" (சீவக.711).* 3. நேர்மை (சூடா.); straightness. 4. வரிசை; row. *"வாரிட்டணி வகுத்து" (விறலிவிடு.75) (நாமதீப.768).* 5. உயர்ச்சி (நாமதீப.771); height

[வள் → வரு → வார்]

வார்[6] *vār,* பெ.(n.) 1. நீர் (சூடா.); water. *"வாராயிர முகமா நுகர்மஞ்சு" (பாரத. அருச்சுனன்றவ.159).* 2. மேகம் (அக.நி.); cloud.

[வள் → வர் → வார்]

வார்[7] *vār,* பெ.(n.) வா என்னும் ஏவல்; second person imperative of the verb. *"வந்திக்க வாரென" (பரிபா.20,70). "வாரடா வுனக்கியாது தானர்தம் மகளடுக்குமோ" (பாரத.வேத்திர.12).*

[வரு → வா → வார்]

வார் → வா. (ஏவல் ஒருமை)

வார் என்னும் ஒருமை ஏவலிலும் வாரும், வாருங்கள் என்னும் பன்மை ஏவலிலும், வார்தல், வாரானை என்னும் தொழிற்பெயர்களிலும் வார் என்பது பகுதியாயிருத்தலானும் 'வா' என்னும் ஏவல் ஒருமை வடிவினின்று வாதல் வாவு என ஏதேனும் ஒரு தொழிற்பெயர் பிறவாமையானும், வருதல் என்னம் வினைக்கு ருகரங்கூடிய வரு என்பதே பகுதியாம்.

வார் என்னும் அடியினின்று முதலாவது திரியக்கூடிய வள் → வர் → வரு என்பவையே.

இங்கு வருதல் வினைக்குக் கூறியதைத் தருதல் வினைக்குங் கொள்க கோர் என்னும் சொல் 'கோ' எனக் குறைந்தது போல. வரு என்பதன் திரிபான.

'வார்' என்னுஞ் சொல்லும் 'வா' எனக் குறைந்ததென்க. 'நோ' என்னும் வினை இறந்த காலத்திலும் ஏவலிலும் நொந்தான், நொம்மாடா எனக் குறுகியது போல வா, தா என்பனவும் வ, த எனக் குறுகின.

வார் = வா. (ஏவலொருமை) (மு.தா.79.).

வார்[8] *vār,* பெ.(n.) 1. தோல்வார்; strap of leather. *"வார்பிணி முரச நாண" (சீவக.2372).* 2. தோல் (நாமதீப. 595); skin. 3. முலைக்கச்சு; bodice. *"வாரடங்கு வனமுலையார்" (தேவா.1232,6) (பிங்.).*

வார்[9] *vār,* பெ.(n.) 1. துண்டம் (நாமதீப.457); bit, piece. 2. நுண்மை(வின்.); smallness.

வார்[10] *vār,* பெ.(n.) 1. சாறு; juice. 2. சாராயம்; arrack.

வார்க்கட்டு *vār-k-kaṭṭu,* பெ.(n.) 1. வாராற் கட்டப்பட்டது; that which is tied by thongs. 2. திவவு (திருமுரு. 140; உரை); bands of catgut in a *yāḻ.*

[வார் + கட்டு]

வார்க்கயிறு *vār-k-kayiṟu,* பெ.(n.) பின்னிய தோற்கயிறு (வின்.); braided leather thong.

[வார் + கயிறு]

வார்க்குத்தி *vār-k-kutti,* பெ.(n.) வார்க் குத்து (நெஞ்சு விடு. 22, உரை) பார்க்க; see *vār-k-kuttu.*

[வார் + குத்தி]

வார்க்குத்து *vār-k-kuttu,* பெ.(n.) நீர்ப் பெருக்கு சுழித்தோடும் இடம்; whirlpool. *"கொலைக்களம் வார்க்குத்து" (ஏலாதி,12).*

[வார் + குத்து]

வார்க்குதல் *vārkkudal,* பெ.(n.) மாழை முதலியவற்றை யுருக்கிச் சாய்த்தல்; to cast in mould.

வார்காது *vār-kādu,* பெ.(n.) வடிகாது; perforated ear lengthened by weighting the ear-lobes. *"வார்காது தாழப் பெருக்கி" (திவ். பெரியாழ்.2, 3, 13).*

[வார் + காது. (வார்–தல் = நீளுதல்)]

வார்குடை *vārkuḍai,* பெ.(n.) ஒரு வகை நெல்(A.); a kind of paddy.

வார்கோல் *vār-kōl,* பெ.(n.) விளக்குமாறு; broom.

மறுவ. துடைப்பம்.

[வார் + கோல்]

வார்சிகி *vār-šigi,* பெ.(n.) ஒரு வகைக் கொடி மல்லிகை; a climber-Jasminum sambac.

வார்த்தகி *vārttagi,* பெ.(n.) கற்றாழை; aloe.

வார்த்தகு *vārttagu,* பெ.(n.) முல்லை; a variety of Jasmine.

வார்த்தம் *vārttam,* பெ.(n.) நலம்; well being.

வார்த்தரம் *vārttaram,* பெ.(n.) தண்ணீர்; water.

வார்த்தருகம் *vārttarugam,* பெ.(n.) கத்தரிக் காய்; brinjal plant-solanum melongena.

[வார் + தருகம்]

வார்த்தாகிகம் *vārttāgigam,* பெ.(n.) 1. கண்டங்கத்திரி; a prostate thorny shrub. 2. சிறுவழுதலை; a small species of brinjal plant.

வார்தேவி *vār-dēvi,* பெ.(n.) வட்டத்திருப்பி; a twiner.

வார்ப்படஇரும்பு *vārppaḍa-irumbu,* பெ.(n.) வார்த்து ஊற்றிய இரும்பு; cast iron.

[வார்ப்படம் + இரும்பு]

வார்ப்படம்[1] *vār-p-paḍam,* பெ.(n.) வார்ப்புவேலை (வின்.) பார்க்க; see *vārppu-vēlai.*

[வார் → வார்ப்பு → வார்ப்படம்]

வார்ப்படம்[2] *vār-p-paḍam,* பெ.(n.) மாழையை யுருக்கி வேண்டிய வடிவங்களில் வடித்தல்; to make things from foundary.

வார்ப்படவேலைக்காரன் *vārppaḍa-vēlai-k-kāraṉ,* பெ.(n.) வார்ப்புவேலை செய்வோன்; founder, caster.

[வார்ப்படம் + வேலைக்காரன்]

வார்ப்பனை *vār-p-paṉai,* பெ.(n.) கூந்தற்பனை பார்க்க; see *kūndar-paṉai.*



வார்ப்பாலை *vārppālai,* பெ.(n.) இரும்பு முதலியன உருக்கி வார்க்குமிடம் (புதுவை.); foundry.

[வார் → வார்ப்பு + ஆலை]

வார்ப்பிரும்பு *vārppirumbu,* பெ.(n.) பிற தனிமக் கலப்பு உடையதும் எளிதில் உடைந்து விடும் தன்மை கொண்டதுமான ஒரு வகை இரும்பு; pig iron.

[வார்ப்பு + இரும்பு]

வார்ப்பு[1] *vārppu,* பெ.(n.) 1. ஒழுக்குகை; pouring. 2. உருக்கி வார்க்கை; casting. *"வார்ப்பி னமைத்த யாப்பமை யரும்பொறி" (பெருங்.இலாவாண.18, 24).* 3. உருக்கி வார்க்கப்பட்டது; that which is cast. 4. வயிறு அகன்று வாய் கனமாகவுள்ள பாத்திர வகை (இ.வ.); a shallow, thick-liped vessel. 5. கைவளை (அக.நி.); bangle.

[வார் → வார்ப்பு]

வார்ப்பு[2] *vārppu,* பெ.(n.) 1. அருமந்த மணிகளில் எற்றின மேற்பூச்சு (திவ். பெரியாழ். 3, 3, 3, வ்யா. பக். 567.); encasing, as precious stones in an ornament. 2. மாழையை உருக்கி வார்த்தல்; to make things from foundary.

[வார் → வார்ப்பு]

வார்ப்புவேலை *vārppu-vēlai,* பெ.(n.) 1. உருக்கி வார்க்குந் தொழில்; work of casting metal 2. வார்ப்பு 1, 3 பார்க்க; see *vārppu.*

[வார்ப்பு + வேலை]

வார்ப்புருக்கு *vār-p-purukku,* பெ.(n.) வார்த்த எஃகு; cast steel.

[வார்ப்பு + உருகு → உருக்கு]

வார்ப்புலை *vārppulai,* பெ.(n.) வார்ப்பாலை (புதுவை) பார்க்க; see *vārppālai.*

[வார்ப்பு + உலை]

வார்ப்பூண்டு *vārppūṇḍu,* பெ.(n.) பூநீறு; salt extracted from the fuller's earth.

வார்பு *vārbu,* பெ.(n.) நீளவாக்கிற் சீவப்படுகை; being cut lengthwise. *"வார்புறு வள்பின்" (புறநா.50).*

[வார் → வார்பு]

வார்முதல் *vār-mudal,* பெ.(n.) உப்பளங்களிலிருந்து வாரியெடுக்கப்பட்ட உப்புக்குவியல்; heap of salt from salt-pans. *'அளத்தில் வார் முதல் அதிகமில்லை'.*

[வார் + முதல்]

ஒ.நோ. கண்டுமுதல்.

வார்மூலி *vār-mūli,* பெ.(n.) 1. பூநீறு; salt extracted from the fuller's earth. 2. வெடியுப்பு; salt petre.

[வார் + மூலி]

வார்மை *vārmai,* பெ.(n.) 1. ஒழுக்கம் (அரு.நி.); conduct. 2. நேர்மை (அரு.நி.); rectitude. 3. மதிப்புரவு; polite manners. *"வார்மை சீர்மை யறியாதவன்"* (வின்.).

[வார் → வார்மை]

வாரக்கட்டளை *vāra-k-kaṭṭaḷai,* பெ.(n.) வாரந்தோறும் வீட்டுக்கொரு நாளாக இரவலர்க்கு உணவளிக்கும் திட்டம்; system by which villagers undertake to feed mendicants etc. gratuitously in turn of one day in a week.

[வாரம் + கட்டளை]

வாரக்கட்டளைத்தம்பிரான் *vāra-k-kaṭṭaḷai-t-tambirāṉ,* பெ.(n.) வாரக் கட்டளையில் உண்ணும் சைவத்துறவி (வின்.); saiva-ascetic fed on *vāra-k-kaṭṭaḷai.*

[வாரக்கட்டளை + தம்பிரான்]

வாரக்கம் *vārakkam,* பெ.(n.) *வாரகம்¹*,1 பார்க்க; see *vāragam. "உன்றன் வாரக்கத்தைச் சீரக்கத்தை வாங்கிக் கொண்டேனோ" (குருகூர்ப்பள்ளு).* 2. பொருநராகப் பதிந்து கொள்வோர்க்குக் கொடுக்கும் முன்பணம் (வின்.); advance money paid to a soldier on enlisting.

தெ. வாரகமு.

வாரக்காணம் *vāra-k-kāṇam,* பெ.(n.) வரிவகை (S.I.I.vi.155); a tax.

[வாரம் + காணம்]

வாரக்காரன் *vāra-k-kāraṉ,* பெ.(n.) உழுங்குடியானவன் (வின்.); cultivator.

[வாரம் + காரன். (காரன் = ஆண்பாற் பெயரீறு)]

வாரக்குடி *vāra-k-kuḍi,* பெ.(n.) குடி வாரத்துக்குப் பயிரிடும் உழவன் (வின்.); tenant or cultivator who receives a fixed share of the produce.

[வாரம் + குடி. (வாரம் = மேல்வாரம் குடிவாரங்களாகிய விளைச்சலின் பங்கு)]

வாரக்குடிச்சி *vāra-k-kuḍicci,* பெ.(n.) வாரக்குடிப்பெண் (யாழ்.அக.); woman cultivator.

[வாரக்குடி → வாரக்குடிச்சி]

ஒ.நோ. வாரம் + குடி → குடிச்சி.

வாரக்குன்னல் *vāra-k-kuṉṉal,* பெ.(n.) ஒரு வகை மாட்டு நோய்; malarial fever affecting cattle.

[வாரம் + குன்னல். குன்னல் = சளி, காய்ச்சலோடு வரும் நோய்]

வாரகக்கடன் *vāraga-k-kaḍaṉ,* பெ.(n.) வேளாண்மை பொருட்டு உதவுங் கடன்; agricultural loan.

மறுவ. வேளாண்கடன்.

[வாரகம் + கடன்]

வாரகசியம் *vārakaśiyam,* பெ.(n.) கிழங்கு வகை (சங்.அக.); a kind of root.

வாரகம்¹ *vāragam,* பெ.(n.) பயிரிடுவோர்க்கு உதவியாகக் கொடுக்கும் முன் பணம்; advance given to cultivators to enable them to carry on cultivation. 2. நெல் வட்டிக்குக் கொடுக்கும் பணம் (யாழ்.அக.); money lent on agreement to pay interest in kind, i.e. paddy.

தெ. வாரகமு.

வாரகம்² *vāragam,* பெ.(n.) 1. குதிரை; horse. 2. குதிரை நடைவகை; a pace of horse.

வாரகம்³ *vāragam,* பெ.(n.) கடல் (அக.நி.); ocean or sea.

வாரகம்⁴ *vāragam,* பெ.(n.) நிலப்பனை (சங்.அக.); moosly root.

வாரகிருமி *vāra-kirumi,* பெ.(n.) வாரிகிருமி (சங்.அக.) பார்க்க; see *vārikirumi.*

வாரகீரன் *vāra-kīraṉ,* பெ.(n.) 1. அளியன் (மைத்துனன்); brother-in-law. 2. சுமையாள்; porter.

வாரங்கம்¹ *vāraṅgam,* பெ.(n.) ஆயுதப்பிடி (சங்.அக.); handle of weapon.

வாரங்கம்² *vāraṉgam,* பெ.(n.) பறவை (சங்.அக.); bird.

வாரச்சட்டம் *vāra-c-caṭṭam,* பெ.(n.) குடியானவனுக்குரிய விளை பங்கின் விளத்தம் குறிக்கும்பட்டி (W.G.); a register showing the cultivator's share of the crop.

[வாரம் + சட்டம்]

வாரசுந்தரி *vāra-šundari,* பெ.(n.) விலை மகள் (யாழ்.அக.); prostitute.

[வாரம் + சுந்தரி. Skt. = சுந்தரி]

வாரசேவை *vāra-šēvai,* பெ.(n.) பொருட் பெண்டிர் கூட்டம் (யாழ்.அக.); company of harlots.

[வாரம் + சேவை. Skt. = சேவை]

வாரஞ்சாரம் *vārañjāram,* பெ.(n.) வாரம்[2],6,7 (இ.வ.) பார்க்க; see *vāram.*

வாரட்டு *vāraṭṭu,* பெ.(n.) வாரப்பட்டை பார்க்க; see *vāra-p-paṭṭai.*

வாரட்டை *vāraṭṭai,* பெ.(n.) வாரவட்டை; beam supporting a roof.

[வாரம் + அட்டை]

வாரடகம் *vāraḍagam,* பெ.(n.) தாமரைக் காய்; heart.

வாரடம் *vāraḍam,* பெ.(n.) வயல் (சங்.அக.); field.

வாரடி[1]-த்தல் *vāraḍi-,* 4 செ.கு.வி. (v.i.) நீர் நிரவியோடுதல் (யாழ்.அக.); to spread out and flow, as water.

[வார் + அடி –,]

வாரடி[2] *vāraḍi-,* பெ.(n.) பலகறை (சங்.அக.); cowrie.

வாரடி[3] *vāraḍi,* பெ.(n.) சாட்டையடி (புதுவை.); whipping.

[வார் + அடி]

வாரடித்தல் *vāraḍittal,* பெ.(n.) கம்பியாக நீட்டுதல், வாரடித்துப் புடம் போடுதல் (போகர் 7000); to elongate as wire.

[வார் + அடித்தல்]

வாரடை[1] *vāraḍai,* பெ.(n.) பனை முதலியவற்றின் ஓலையீர்க்கு (வின்.); mid-rib, as of a palm leaf.

தெ. வரட; ம. வரிட.

[வார் + அடு → அடை]

வாரடை[2] *vāraḍai,* பெ.(n.) துலாக்கோலின் ஏற்றத் தாழ்வான நிலை; தராசின் ஏற்றத் தாழ்வான நிலை (C.G.); uneven state of the balance.

வாரடை[3] *vāraḍai,* பெ.(n.) வரடை பார்க்க; see *varaḍai.*

வாரடையோலை *vār-aḍaiyōlai,* பெ.(n.) குத்தகை ஆவணம்; deed of lease.

[வார் + அடையோலை]

வாரணக்கயிறு *vāraṇa-k-kayiṟu,* பெ.(n.) உழவுக்கயிறு; agricultural plough rope.

[வாரணம் + கயிறு]

வாரணத்தண்டம் *vāraṇa-t-taṇḍam,* பெ.(n.) கோழி முட்டை; fowl egg.

[வாரணம் + தண்டம்]

வாரப்புன்செய் *vāra-p-punšey,* பெ.(n.) வரியிடத்தக்க புன்செய்ப் பயிர் (P.T.L.); dry crops liable to be taxed.

[வாரம் + புன்செய்]

வாரணபுசை *vārana-pušai,* பெ.(n.) வாழை (சங்.அக.); plantain.

வாரணம்¹ *vāranam,* பெ.(n.) 1. சங்கு (பிங்.); conch. *"வாரணத்து வாயடைப்ப" (இரகு. நாட்டு 43).* 2. யானை; elephant. *"புகர்முக வாரணம்" (மணிமே.7, 115).* 3. பன்றி (நன். 271, மயிலை.); pig. *"கனவாரணம் பயின்றிடுந் தகையால்" (அரிசமய. குலசேக.4).* 4. தடை (பிங்.); obstacle, obstruction. 5. மறைப்பு; screen, cover. *"வாரண மாயை" (பாரத. திரௌ.17).* 6. கவசம் (பிங்.); coat of mail. 7. சட்டை (சூடா.); shirt. 8. காப்பு (வின்.); protection. 9. கேடகம் (வின்.); shield. 10. நீங்குகை (வின்.); leaving off, removal. 11. உன் மத்தம் (அக.நி.); delirium tremens, madness. 12. கோழி; fowl. *"பொறி மயிர் வாரணங் குறுங்கூ விளிப்ப" (மணிமே.7,116).* 13. உறையூர்; *uraiyūr,* an ancient capital of the *cōlas.* *"வைகறை யாமத்து வாரணங் கழிந்து" (சிலப்.11,11).*

வாரணம்² *vāranam,* பெ.(n.) மாவிலிங்கம் (வின்.); round berried cuspidate-leaved lingam tree.

வாரணம்³ *vāranam,* பெ.(n.) 1. நிலத்தைச் சூழ்ந்திருக்கும் கடல் (பிங்.); sea. *"வாரணஞ் சூழ்புவி" (தனிப்பா.ii,167,414).* 2. கேடகம்; shield. 3. சங்கு; conch.

[வள் → வர் → வார் + அணம். (வே.க.பக்.100)]

வாரணம்⁴ *vāranam,* பெ.(n.) 1. ஊமத்தம்; dhatura. 2. இலவங்கப் பட்டை; cinnamon bark.

வாரணரேகை *vārana-rēgai,* பெ.(n.) மக்களின் நல்வாழ்வைக் காட்டும் உள்ளங்கை வரை; a kind of auspicious mark on the palm of the hand. *"வள்ளி கையிற் கண்ட வாரண ரேகையீ தம்மே" (திருவாரூர்க் குறவஞ்சி).*

வாரணவல்லபை *vārana-vallabai,* பெ.(n.) *வாரணபுசை* (சங்.அக.) பார்க்க; see *vārana-pušai.*

வாரணவல்லமை *vārana-vallamai,* பெ.(n.) வாழை; plantain tree.

[வாரணம் + வல்லமை]

வாரணன்¹ *vāranan,* பெ.(n.) கணபதி; *Ganēša.* *"வாரணன் குமரன் வணங்குங் கழற் பூரணன்" (தேவா.785, 10).*

வாரணன்² *vāranan,* பெ.(n.) கடற்றெய்வம்; god of the sea tract.

[வாரணம் → வாரணன்]

வடவர் வ்ரு (கவி, மறை, சூழ்,) என்பதை மூலமாகக் காட்டி அனைத்தையும் மூடும் வானம் (all-enveloping sky) என்று பொருள் கூறுவர். இது வருணனை மழைத் தெய்வமாகக் கொண்ட இடைக்காலத்திற்கு மட்டும் பொருந்துமேயன்றி, கடல் தெய்வமாகக் கொண்ட முற்கால, பிற்கால நிலைமைக்குப் பொருந்தாது.

தமிழர் வாரணனை என்றும் கடல் தெய்வமாகவே கொண்டனர்.

"வருணன் மேய பெருமணல் லுலகமும்" (தொல். 951).

இது 'வாரணன் மேய நீர்மணலுலகமும்' என்றிருத்தல் வேண்டும். தொல்காப்பியர் வருண என்னும் வடசொல் வடிவிற்கேற்ப வருணன் என்று திரித்துக் கொண்டார்.

வடவர் காட்டும் வ்ரு என்னும் மூலத்திற்குச் சூழ்தற் பொருளுமுள்ளது.

இனி, வரி என்னும் தமிழ்ச் சொற்கு மூடுதற் பொருளுமுள்ளது. வரிதல் = மூடுதல். "புண்ணை மறைய வரிந்து" (திவ். திருவாய். 5:1:5)

வளைவுக் கருத்தடிப்படையிலேயே, வாரணம் என்பது கேடகத்தையும் சங்கையும் குறிக்கும். (வ.மொ.வ.86).

வாரணை *vāraṇai,* பெ.(n.) தடை (பிங்.); obstruction.

வாரணையம் *vāraṇaiyam,* பெ.(n.) வாரணை (வின்.) பார்க்க; see *vāraṇai*.

வாரத்தண்டு[1] *vārattaṇḍu,* பெ.(n.) வாரத்தளகு (சங்.அக.) பார்க்க; see *vārattaḷagu.*

[வாரம் + தண்டு]

வாரத்தண்டு[2] *vāra-t-taṇḍu,* பெ.(n.) கறிமுள்ளி; a thorny-shrub-solamum jacquini.

வாரத்தளகு *vārattaḷagu,* பெ.(n.) கத்திரிவகை; Indian night shade.

வாரத்தி *vāratti,* பெ.(n.) வாத நாராயணன்; a tree-Delonix elata.

வாரத்திட்டம் *vāra-t-tiṭṭam,* பெ.(n.) 1. மேல்வாரங் குடிவாரங்களின் பிரிப்பொழுங்கு; adjustment of the shares of the produce, as *mēlvāram* and *kuḍivāram.* 2. மேல் வாரதார்க்கும் குடிவாரதார்க்கும் உரிய விளை பங்கின் விவரங்குறித்துக் ஊர் கணக்கன் வைக்கும் கணக்கு; a register kept by the village accountant of the respective shares of the produce assignable to the cultivators and proprietors.

[வாரம் + திட்டம்]

வாரத்துக்குவளர்-த்தல் *vārattukku-vaḷar,* 4 செ.குன்றாவி. (v.t.) விற்பதாற் கிடைக்கும் ஆதாயத்தைச் சொந்தக் காரனோடு பகுத்துக் கொள்வதாக ஒப்புக் கொண்டு கோழி, ஆடு, பன்றி முதலியன வளர்த்தல் (வின்.); to raise, as fowls, pigs, goats etc. on an agreement to share the proceeds of the sale with the owners.

[வாரத்திற்கு + வளர்-,]

வாரத்துண்டு *vāra-t-tuṇḍu,* பெ.(n.) 1. குடிவாரத்தினின்று கழித்துச் அரசு அல்லது நில உரிமையாளரின் மேல்வாரத்தோடு கூட்டும் சிறுபகுதி (R.T); deduction made from the cultivator's share and added to that of the land lord or the government (R.T). 2. நில உரிமையாளர்க்குரிய மேல் வாரத்தின் எச்சம் (வின்.); unrealised balance of the landlord's share of the produce.

[வாரம் + துண்டு]

வாரநாரி *vāra-nāri,* பெ.(n.) விலைமகள் (யாழ்.அக.); prostitute.

[வாரம் + நாரி. நாரி = skt]

வாரநாள் *vāra-nāḷ,* பெ.(n.) நாள்; a day of the weak.

[வாரம் + நாள்]

வாரப்பட்டா *vāra-p-paṭṭā,* பெ.(n.) தவசக்குத்தகையாகக் கொடுக்கும் பட்டா; rent-deed or *paṭṭā* fixing the amount of rent in kind.

[வாரம் + பட்டா]

வாரப்பட்டை *vāra-p-paṭṭai,* பெ.(n.) மேற் கூரை தாங்கும் உத்தரம்; bressummer, beam placed horizontally to support the roof above.

[வாரம் + பட்டை]

வாரப்படு-தல் *vāra-p-paḍu,* 4 செ.கு.வி. (v.i.) உருக்கங் கொள்ளுதல் (யாழ்.அக.); to show mercy; to pity.

வாரப்பதிகம் *vāra-p-padigam,* பெ.(n.) சிறுமணவூர் முனுசாமி முதலியார் என்பவரால் 19-20ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற நூல்; a book written by *Muṉusāmi-mudaliyār* cirumanavur in 19-20th century.

[வாரம் + பதிகம்]

வாரப்பற்று *vāra-p-paṟṟu,* பெ.(n.) அரசு அல்லது நில உரிமையாளர் வாரமாகத் தவசத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு விடும் நிலம் (C.G.); lands held on the sharing tenure, a share of the produce being received by the government or landlord in kind, op. to *tirvai-p-paṟṟu.*

வாரப்பாடு *vāra-p-pāḍu,* பெ.(n.) 1. அன்பு; love. *'அவனுக்கு அவளிடத்தில் வாரப்பாடு'.* 2. உருக்கம் (யாழ்.அக.); pity, mercy. 3. ஒருபுடைச் சார்பு; partiality, bias, prepossesion.

[வாரம் + பாடு]

வாரப்பிரிவு *vāra-p-piri vu,* பெ.(n.) மேல்வாரங் குடிவாரங்களின் பிரிவு; division of shares in cultivation.

[வாரம் + பிரிவு]

வாரப்புன்செய் *vāra-p-puṉšey,* பெ.(n.) வரியிடத்தக்க புன்செய்ப் பயிர் (P.T.L); dry crops liable to be taxed.

[வாரம் + புன்செய்]

வாரபுசை *vārapušai,* பெ.(n.) வாரணாபுசை (சங்.அக.) பார்க்க; see *vāraṇāpušai.*

வாரம்[1] *vāram,* பெ.(n.) 1. மலைச்சாரல் (பிங்.); mountain slope. *"வாரமதெங்கும்..... பண்டிகளூர" (இரகு. திக்கு. 258).* 2. தாழ் வாரம் (வின்.); verandah of a house. 3. பக்கம் (சிலப்.5,136, அரும்.); side. 4. சொல்லொழுக்கமும் இசையொழுக்கமு முடைய இசைப்பாட்டு (சிலப்.3,67,அரும்.); mellifluous song. 5. கலிப்பா உறுப்புக்களு ளொன்று (தொல். பொருள். 464.); a member of *Kali Verse.* 6. பின்பாட்டு; song of an accompanist sung as a relief to the chief singer. *"தோரிய மடந்தை வாரம் பாடலும்" (சிலப்.6,19).* 7. தெய்வப் பாடல்; song in praise of a deity. *"வாரமிரண்டும் வரிசையிற் பாட" (சிலப்.3, 136).* 8. கூத்து வகை (வின்.); *(Nāṭya)* a kind of dance.

ma. *vāram;* **ka.** *vāra, vāre.*

[வார் → வாரம். (வே.க.பக்.108)]

வாரம்[2] *vāram,* பெ.(n.) 1. உரிமை (யாழ்.அக.); proprietorship, ownership. 2. குடியிறை; tax. *"நடையல்லா வாரங்கொண்டார்" (கம்பரா.மாரீச.180).* 3. வாடகை (வின்.); hire, rent. *'நான் அதை வாரத்துக்கு வளர்க்கிறேன்'.* 4. தவசக் கட்டுக்குத்தகை; lease of land for a share of the produce. 5. மேல்வாரக் குடிவாரங்களாகிய விளைபங்கு; share of a crop or the produce of a field, of two kinds, viz. *mēlvāram, kuḍi vāram.*

6. பங்கு; share, portion. *"வல்லோன் புணரா வாரம் போன்றே" (தொல். பொருள். 622, உரை.).* 7. பாதி (தொல்.பொ.464, உரை); half, moiety. 8. அன்பு; love. *"தாளிணைக்கொரு வாரமாகுமென் னெஞ்சமே" (திவ். பொருமாள் 2, 7).* 9. ஒரு பக்கச் சார்பு; partiality. *"நட்டார்க்கு வாரம்" (சிறுபஞ்.85).* 10. தடை; impediment, obstacle. *"வாரமென்னினிப் பகர்வது" (கம்பரா. அயோத். மந்திரப். 39.).* 11. திரை (யாழ்.அக.); screen. 12. வாயில் (யாழ்.அக.); doorway. 13. திரள் (யாழ்.அக.); multitude, crowd. 14. கடல் (பிங்.); sea. 15. பாத்திரம் (யாழ்.அக.); vessel. 16. தடவை; turn, time. *"செபிக்க மிருத்துஞ் செய மேழு வாரம்" (சைவச. பொது. 287).* 17. வேதச் சந்தை; *vēdic* chant or recitatioin. *"வாரமோதும் பரிசு" (T.A.S.i,8). "மண்டப மொண்டொளி யனைத்தும் வாரமோத" (திவ். பெரியதி. 2, 10, 5).*

ma. *vāram*, **ka.** *vāra*; **Kod.** va-ra; **Te.** *vāra-kamu*

வாரம்³ *vāram*, பெ.(n.) 1. வரம்பு; boundary, limit. 2. நீர்க்கரை; bank, shore.

[வார் → வாரம்]

வாரம்⁴ *vāram*, பெ.(n.) தூண் (பெருங். உஞ்சைக். 58, 46); post, pillar.

[வார் → வாரம்]

வாரம்⁵ *vāram*, பெ.(n.) யானை; elephant.

வாரம்படு-தல் *vāram-paḍu*, 4 செ.கு.வி. (v.i.) ஒரு பக்கஞ் சாருதல்; to be prejudiced or biassed, to show partiality. *"வாரம்பட்டுழித் தீயவு நல்லவாம்" (சீவக.888).*

[வாரம் + படு-,]

வாரம்பாடு-தல் *vāram-pāḍu*, 4 செ.கு.வி. (v.i.) பின்பாட்டுப் பாடுதல்; to sing in accompaniment. *"வாரம்பாடுந் தோரிய மடந்தையும்" (சிலப்.14,155).*

"வாரம் பாடுதல் என்பது பாடலைப் பாடும் ஒருமுறையாகும். வாரம் பாடுதல் மிகத் தொன்மைக் காலத்திலிருந்து தொடர்ந்து வருகிறது. நாயன்மார்கள் வாரம் பாடும் முறையைப் பெரிதும் வளர்த்துப் பேணியவர்கள்.

வாரம்பாடும்முறை

பாடுதுறையிலே முதலில் ஒருவர் அமைத்துக் கொண்டு பாடும் பாடலின் தடைவேகத்தைப் பின்னர் பாடும்போது இரட்டிப்பு வேகத்தில் பாடுவது வாரம் பாடுதல் எனப்பட்டது. அது வாரம் புணர்த்தல் என்றும் அழைக்கப்பட்டது. இன்று நடைமுறையில் அது 'ஒன்றாங்காலம் பாடுதல்', 'இரண்டாங்காலம் பாடுதல்' என்று கூறப்படுகிறது. ஒரு எ-டு. தாள எண்ணிக்கைகள் எட்டுக்குள் பாடிய ஒரு பாட்டு வரியை நாலு எண்ணிக்கைக்குள் பாடி முடிப்பது வாரம் பாடுதல் ஆகும்.

தொல்காப்பிய விளக்கம்

முதல் நூல் இயற்றியுள்ளதை நன்கு அறிந்து கொண்டு அம்முதல் நூலினின்றும் வழிநூல் செய்பவன் கைக்கொள்ளவேண்டிய நெறிகளைத் தொல்காப்பியர் வாரம் புணர்த்தும் நெறிகளுடன் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். ஒன்றை விளக்குவதற்குக் கூறப்படும் உவமையானது அனைவர்க்கும் தெரிந்ததாய் இருத்தல் வேண்டும். எனவே தொல்காப்பியர் காலத்தில் வாரம் புணர்த்திப் பாடும் முறை அனைவர்க்கும் தெரிந்ததாய், நடைமுறையில் இருந்ததாய் பெரும் வழக்குப் பெற்றுப் பரவியதாய்த் திகழ்ந்தது." – இசையறிஞர் வீ.ப.கா.சுந்தரம். செந்தமிழ்ச் செல்வி. சிலம்பு 60 ஆனி – பரல் 11 பக்கம். 473–475.

வாரம்பிரி-த்தல் *vāram-piri-*, 18 செ.குன்றாவி. (v.t.) விளைபடி நெல் முதலியவற்றைக் குடிவார மேல்வார முதலிய பங்குப்படி பிரித்தல்; to divide the harvest between the cultivator and the landlord.

வாரம்வை–த்தல் *vāram-vai-,* 4 செ.கு.வி. (v.i.) விருப்பப்படுதல்; to be attached to, to have a strong liking for, to show concern. *"என் கண்ணே வாரம் வைத்துக் காத்தனை" (தாயு.பராபர.227).*

வாரமரக்கலம் *vāra-marakkalam,* பெ.(n.) ஒரு வகை வரி (புதுக்.கல்.149); a kind of tax.

வாரமாதர் *vāra-mādar,* பெ.(n.) பொது மகள்; harlot, prostitute. *"வாரமாதர் போன்ற" (மேரு மந்.வைசயந்.17).*

வாரமிருத்தல் *vāram-iruttal,* பெ.(n.) வேதத் தேர்விற்காக கூடும் வேத வித்துக்களின் அவை (நாஞ்.); gathering of *vēdic* scholars for being examined in the *vēdās.*

வாரமிழந்தான் *vāram-iḻandān,* பெ.(n.) வடமேற்கில் உண்டாம் மின்னல் (J.N.); lightning on the north-west.

[வாரம் + இழந்தான்]

வாரமுச்சலிக்கை *vāramuccalikkai,* பெ.(n.) நிலத்திற்குரியவர் பயிரிடுபவரிடம் எழுதி வாங்கிக் கொள்ளும் உடன்படிக்கை; a written agreement executed by tenant to the landlord.

[வாரம் + முச்சலிக்கை]

வாரமூலி *vāra-mūli,* பெ.(n.) 1. வாரத்திற் கொருமுறை வயிற்றுத் தீ தணிதற்காக வேண்டி சித்தர்கள் சாப்பிடும் மூலிகை; a medicinal drug taken by siddhars once a week to appease their hunger.

[வாரம் + மூலிகை → மூலி]

வாரயம் *vārayam,* பெ.(n.) பூடுவகை (சங்.அக.); a prostrate herb.

வாரல்வலை *vāral-valai,* பெ.(n.) வலை வகை; a kind of net.

[வாரல் + வலை. (வலைஉயிரிகளைச் சூழ்ந்து அகப்படுத்தும் கயிற்றுக் கருவி)]

வாரவட்டை[1] *vāra-vaṭṭai,* பெ.(n.) வாரை[1],3 பார்க்க; see *vārai.*

வாரவட்டை[2] *vāravaṭṭai,* பெ.(n.) பாம்புச்சட்டம்; bressummer.

[வாரம் + வட்டை]

வாரவாணம் *vāra-vāṇam,* பெ.(n.) 1. பஞ்சு பெய்து தைத்த மெய்ச் சட்டை (வின்.); quilted Jacket. 2. மார்க்கவசம் (யாழ்.அக.); breast-plate.

வாரவாணி[1] *vāra-vāṇi,* பெ.(n.) பொதுமகள் (யாழ்.அக.); harlot.

[வாரம் + வாணி]

வாரவாணி[2] *vāra-vāṇi,* பெ.(n.) விறலி பார்க்க; see *viṟali.*

[வாரம் + வாணி]

வாரவாரம்[1] *vāra-varam,* பெ.(n.) கவசம் (சது.); armour.

வாரவிலாசினி *vāra-vilāśiṇi,* பெ.(n.) வாரமாதர் பார்க்க; see *vāra-mādar.*

[வாரம் + விலாசினி]

வாரளமதாடி *vāraḷa-madāḍi,* பெ.(n.) வெள்ளுமத்தை; white dhatura-Dhatura bearing white flowers - Dhatura alba.

வாராக்கதி *vāra-k-kadi,* பெ.(n.) வீடுபேறு, வானுலகு; heaven, as the place from which there is no return. *"வாராக்கதி யுரைத்த வாமன்" (சீவக. 1247).*

வாராக்காலம் *vārā-k-kālam,* பெ.(n.) எதிர்காலம்; future tense. *"வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும், ஓராங்கு வரூஉம் வினைச்சொற்கிளவி, இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள என்மனார் புலவர்" (தொல். சொல். வினை. 44).*

[வாரா + காலம்]

வாராகரம் *vār-āgaram,* பெ.(n.) கடல்; sea. *"வாராகர மேழுங்குடித்து" (திருப்பு.1035).*

வாராகி *vārāgi,* பெ.(n.) ஓர் கிழங்கு; a tuber.

வாராங்கனை *vārāṅgaṉai,* பெ.(n.) பொதுமகள்; harlot, prostitute.

வாராசனம் *vārāšaṉam,* பெ.(n.) நீர்க்குடம் (யாழ்.அக.); water-pot.

வாராடை *vārāḍai,* பெ.(n.) தோல்வார்; leather strap.

[வார் + ஆடை]

வாராததனால்வந்தது முடித்தல் *vārā-dadaṉāl-vandadu-muḍittal,* பெ.(n.) ஒரு பொருண்மைக்கு வேண்டும் இலக்கணம் நிரம்ப வாராததோர் நூற்பாலானே அங்ஙனம் வந்த பொருண்மைக்கு வேண்டும் முடிபு கொள்ளுந் தந்திர வுத்திவகை (தொல். பொருள். 666); a literary device by which the sense of a *sūtra* defectively expressed is rendered complete.

வாராந்தர *vārāndara,* பெ.(n.) கிழமைக்கு ஒரு முறையான; weekly. *'வாராந்தரப் பரிசுச் சீட்டு'.*

வாராந்தரி *vārāndari,* பெ.(n.) கிழமைத் தாளிகை; weekly journal.

வாராமற்பண்ணு-தல் *vāramar-paṇṇu,* 5 செ.குன்றாவி. (v.t.) மனப்பாடஞ் செய்தல் (கொ.வ.); to get by heart.

வாராவதி *vārā-vadi,* பெ.(n.) ஆற்றின் குறுக்காக நீண்ட வாரையால் அமைக்கப் பெற்ற பாலம்; bridge.

தெ. வாரதி; க. வாராவதி.

[வாரைவதி → வாராவதி. (மு.தா.பக். 110)]

வாராவந்தி *vārā-vandi,* பெ.(n.) கட்டாயமாய் வருவது (சங்.அக.); that which comes or occurs of necessity.

வாராவரத்து *vārā-varattu,* பெ.(n.) நேர்மைக்கேடாய் வந்தது (யாழ்.அக.); unjust or inequitable acquisition or income.

வாராவரவு *vārā-varavu,* பெ.(n.) அருமையான வருகை; rare visits. *"வாராவரவாக வந்தருளு மோனருக்கு" (தாயு. பைங்கிளி. 51).*

வாராவாரி *vārā-vāri,* பெ.(n.) மிகுதி (யாழ்.அக.); plenty.

வாராவுலகம் *vāra-v-ulagam,* பெ.(n.) 1. வாராக்கதி பார்க்க; see *vārā-k-kadi.* 2. வீரர் முதலியோர் அடைதற்குரிய விண்ணுலகம்; heaven, hero's heaven. *"வாராவுலகம் புகுத லொன்றென" (புறநா.341).*

வாராவுலகு *vārā-vulagu,* பெ.(n.) வாராக்கதி பார்க்க; see *vārākkadi.* *"வாரா வுலகருள வல்லாய் நீயே" (தேவா. 300, 9).*

வாரானை *vāraṉai,* பெ.(n.) பிள்ளைத் தமிழில் ஆண் அல்லது பெண் குழந்தையைத் தன்னிடம் வருக என்று தாய் முதலியோர் அழைப்பதைக் கூறும் பருவம் (பிங்.); a section of *piḷḷai-t-tamiḷ,* in which an one year old child is described as being invited by its mother and others to come to them, one of ten *āṉ-par-piḷḷai-t-tamil* or *peṉ-pār-pillai-t-tamil.* *"மாற்றரிய முத்தமே வாரானை" (வச்சணந். செய்.8).*

வாரானைப்பருவம் *vāraṉai-p-paruvam,* பெ.(n.) வாரானை பார்க்க; see *vāraṉai.*

[வாரானை + பருவம்]

வாரி[1] *vāri,* பெ.(n.) 1. வருவாய் (பிங்.); income, resources. *"புயலென்னும் வாரி" (குறள். 14).* 2. விளைவு; produce. *"மாரிபொய்ப்பினும் வாரி குன்றினும்" (புறநா.35).* 3. தவசம் (யாழ்.அக.); grain. 4.செல்வம் (பிங்.); wealth.

[வார் → வாரி]

வாரி[2] *vāri,* பெ.(n.) 1. மூட்டைகளை இறுக்கிக் கட்ட உதவும் கழி (இ.வ.); pole for tightening a package or pack. 2. கூரை முனையில் வைத்துக் கட்டுங் குறுக்குக் கழி; lath tied lengthwise at the edge of a thatched roof. 3. கூரையினின்று வடியும் நீரைக் கொண்டு செல்லுங் கால்; channel for draining off the rain water from a roof, water way. 4. தோணிப் பலகை (வின்.); plank across a dhoney. 5. மடை (வின்.); sluice.

ma. *vāri,* **Tu.** *bāri.*

[வார் → வாரி]

வாரி[3] *vāri,* பெ.(n.) 1. சீப்பு; comb. 2. குப்பை வாருங் கருவி; rake.

[வார் → வாரி]

ஒ.நோ: சிக்குவாரி, சிணுக்குவாரி.

வாரி[4]-த்தல் *vāri,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. தடுத்தல் (சூடா.); to hinder, obstruct. 2. ஆணையிட்டுக் கூறுதல் (யாழ்.அக.); to asseverate, swear. 3. நடத்துதல்; to conduct, drive, as a horse. *"பரிமா வாரித்த கோமான்" (இறை.13, உரை, பக். 91).*

வாரி[5] *vāri,* பெ.(n.) 1. தடை (சூடா.); impediment, obstruction. 2. மதிற்சுற்று (பிங்.); wall, fortification. *"வடவரை நிவப்பிற் சூழ வாரியாப் புரிவித்து" (கந்தபு.அசுரர் யாக.36).* 3. செண்டு வெளி; stadium. *"குஞ்சரம் வாரியுள் வளைத்தவே" (சீவக.275).* 4. பகுதி (பிங்.); portion.

[வார் → வாரி]

வாரி[6] *vāri,* பெ.(n.) 1. நீர் (பிங்.) (தக்கயாகப்.67, உரை); water. 2. வெள்ளம்(பிங்.); flood. *"வணிக மாக்களை யொத்ததவ் வாரியே" (கம்பரா. ஆற்றுப்.7).* 3. கடல் (பிங்.) (தக்கயாப். 67, உரை); sea. 4. நீர் நிலை (பிங்.); reservoir of water. 5. நூல் (அக.நி.); literary work. 6. கலைமகள் (யாழ்.அக.); *śarasvatī.* 7. வீணை வகை (சூடா.); a kind of lute. 8. இசைக் குழல் (பிங்.); flute, pipe. 9. யானையகப்படுத்துமிடம்; kheddha. *"வாரிக்கொள்ளா... வேழம்" (மலைபடு.572).* 10. யானை கட்டுங் கயிறு (யாழ்.அக.); rope for tying an elephant. 11. யானைக் கோட்டம்; elephant stable. *"குஞ்சரம்... மதிட்புடை நிலை வாரிகள்" (சீவக.81).*

வார்தல் = ஒழுகுதல். "வார்தல் போகல் ஒழுகல் மூன்றும் நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள" (தொல்.20).

[வார் → வாரி = நீர், வெள்ளம், கடல், நீர்நிலை. வார் = நீர்.]

"வாராயிர முகமா நுகர்மஞ்சு" (பாரத. அருச்சுனன்றவ. 159) – (பாவாணரின் வ.மொ.வ.85).

வாரி[7] *vāri,* பெ.(n.) 1. வாயில் (பிங்.); entrance. 2. கதவு (உரி.நி.); door. 3. வழி (பிங்.); path.

வாரி[8] *vāri,* பெ.(n.) முறையில் என்னும் பொருளில் வருஞ் சொல்; suffix meaning according to. *"வகுப்புவாரி".*

வாரி[9] *vāri,* பெ.(n.) 1. உட்காதிலுள்ள ஓர் குழி; vastibule.

வாரிக்காய்ச்சல் *vāri-k-kāyccal,* பெ.(n.) கொள்ளை நோயாகிய காய்ச்சல் (யாழ்.அக.); epidemic fever.

[வாரி + காய்ச்சல்]

வாரிக்காலன் *vāri-k-kālaṉ,* பெ.(n.) கால்நடை (இ.வ.); cattle.

வாரிக்கொண்டுபோ–தல் *vārikkoṇḍu-pō,* 8 செ.குன்றாவி. (v.t.) ஒரு சேர அழித்தல்; to sweep away; to destroy wholesale, as an epidemic.

[வாரி + கொண்டு + போ–,]

வாரிக்கொண்டுபோதல் *vāri-k-koṇḍu-pōdal,* பெ.(n.) கொள்ளை நோயால் இறத்தல்; to be carried away in pestilence.

[வாரி + கொண்டு + போதல்]

வாரிகம்[1] *vārigam,* பெ.(n.) பொன்முசுட்டை (நாமதீப.291.) ; buckler-leaved moon-seed.

வாரிகம்[2] *vārigam,* பெ.(n.) தாமரை; lotus.

[வார் → வாரிகம்]

வாரிகிருமி *vāri-kirumi,* பெ.(n.) அட்டை (யாழ்.அக.); leech.

[வாரி + கிருமி. **Skt.** *= கிருமி.]*

வாரிகேசம் *vāri-kēšam,* பெ.(n.) வெட்டிவேர்; khus-khus-vetiveria zizanioides alias andropogon muricatus.

வாரிச்சி *váricci,* பெ.(n.) வரிக்கூத்து வகை (சிலப். 3, 13, உரை, பக். 88.); a kind of masquerade dance.

[வரி → வாரி → வாரிச்சி]

வாரிசரம் *vāri-šaram,* பெ.(n.) மீன் (யாழ்.அக.); fish.

[வாரி + சரம்]

வாரிசன் *vārišaṉ,* பெ.(n.) திருமால் (யாழ்.அக.); *Visṇu.*

[வாரி + ஈசன் → வாரீசன் → வாரிசன்]

வாரிசாதம் *vārišādam,* பெ.(n.) தாமரை; lotus. *"வாரிசாதக் காலை மலரென மலர்ந்த முகமும்" (பாரத. பதினேழா. 247).*

வாரிசாமரம் *vāri-šāmaram,* பெ.(n.) நீர்ப்பாசி (சங்.அக.); moss.

வாரிசாலயன் *vārišālayaṉ,* பெ.(n.) நான்முகன் (தக்கயாகப். 67,–பி.ம்); *Brahmā.*

வாரிசாலையன் *vāri-šāl-aiyaṉ,* பெ.(n.) வருணன் (தக்கயாகப். 67) ; *Varuṇa.*

வாரிசை *vārišai,* பெ.(n.) செந்நாய்; a ferocious dog.

வாரிசோளி *vāri-šōḷi,* பெ.(n.) கதிர்க் காந்தக் கல்; sun magnetic stone.

[வாரி + சோரி]

வாரித்திரம்[1] *vārittiram,* பெ.(n.) சகோரப்புள் (யாழ்.அக.); shepherd koel.

வாரித்திரம்[2] *vārittiram,* பெ.(n.) ஒலைக்குடை (சங்.அக.); Umbrella of palm leaves.

வாரித்துறை *vāri-t-turai,* பெ.(n.) கடற்றுறை; sea-port.

[கடல் + துறை]

வாரிதம்[1] *vāridam,* பெ.(n.) மேகம்; rain-cloud, as giving water. *"வாரிதத்தின் மலர்ந்த கொடைக்கரன்" (யாசோதா. 1, 4).*

வாரிதம்[2] *vāridam,* பெ.(n.) தடை (யாழ்.அக.); obstacle.

வாரிதி[1] *vāridi,* பெ.(n.) கடல்; ocean. *"எழுவாரிதி கழியப்பாய" (தக்கயாகப். 269).*

வாரிதி[2] *vāridi,* பெ.(n.) அமுரி; urine.

வாரிதித்தண்டு *vāridi-t-taṇḍu,* பெ.(n.) பவளம் (சங்.அக.); coral.

[வாரிதி + தண்டு]

வாரிதிநஞ்சு *vāridi-nañju,* பெ.(n.) கடல் நுரை; bone of cuttle fish.

[வாரிதி + நஞ்சு]

வாரிதிநாதம் *vāridi-nādam,* பெ.(n.) 1. சங்கு; conch. 2. கல்லுப்பு; rock salt.

[வாரிதி + நாதம்]

வாரிதிவிந்து *vāridi-vindu,* பெ.(n.) கடனுரை (யாழ்.அக.); cuttle-bone.

வாரிநாதம் *vāri-nādam,* பெ.(n.) 1. கடல்; ocean. 2. கீழுலகம்; the nether world. 3. மேகம்; cloud.

வாரிநாதன் *vāri-nādaṉ,* பெ.(n.) வருணன் (யாழ்.அக.); *Varuṇa.*

வாரிநிதி *vāri-nidi,* பெ.(n.) கடல் (யாழ்.அக.); ocean.

[வாரி + நிதி. **Skt.** *= நிதி.]*

வாரிப்போதல் *vāri-p-pōdal,* பெ.(n.) கொள்ளை நோயில் சாதல்; to die in epidemic diseases such as cholea, plague etc.

[வாரி + போதல்]

வாரிப்பிரசாதம் *vāri-p-piraśādam,* பெ.(n.) தேற்றா (சங்.அக.); clearing-nut-tree.

[வாரி + **Skt.** *praśādha > த. பிரசாதம்]*

வாரிப்பிரவாகம் *vāri-p-piravāgam,* பெ.(n.) 1. நீர்ப்பெருக்கு (யாழ்.அக.); flood. 2. அருவி; waterfall.

[வாரி + **Skt.** *pravāha > த. பிரவாகம்]*

வாரிபர்ணி *vāriparṇi,* பெ.(n.) வள்ளை (சங்.அக.); creeping bindweed.

வாரிபாணி *vāri-pāṇi,* பெ.(n.) வள்ளைக் கீரை; a variety of greens-convolvulus ripens.

[வாரி + பாணி]

வாரியப்பெருமக்கள் *vāriya-p-perumakkaḷ*, பெ.(n.) ஊராளும் அவையோர்; members of a village assembly. *"ஊரமை செய்யும் வாரியப் பெருமக்களோம்" (S.I.I.i.117).*

[வாரியம் + பெருமக்கள்]

வாரியம்[1] *vāriyam*, பெ.(n.) வங்கமலை; mountain containing lead ore.

வாரியம்[2] *vāriyam*, பெ.(n.) மேல் உசாவுகைச் செய்யும் அலுவல்; office of supervision. *"ஸ்ரீ வைஷ்ணவ வாரியஞ்செய்கிற அரட்ட முக்கிதாசனும்" (S.I.I.iii.80).*

வாரியன்[1] *vāriyaṉ*, பெ.(n.) 1. மேல் உசாவுகைச் செய்வோன்; supervisor. *"வாரியர் இருவரும் கரணத்தானுங்கூடி" (T.A.S II,i,7). "வாரியர் விரைவிற் சென்று" (திருவாத. பு. மண். 19).* 2. களத்து நெல்லைச் சரியாகக் குவித்துச் சாணிப்பாற் குறியிடச் செய்து மேற்பார்க்கும் அலுவலர் (Rd.M.305); supervising officer who sees that the grain at the threshing-floor is properly heaped up and sealed with cowdung marks. 3. களத்தில் நெல்லளப்பதற்காக அதனைக் குவித்துக் கொடுப்பவன்; one who heaps up grain on the threshing-floor for measuring, Rd. 4. பள்ளரிற் சாதி நிகழ்ச்சிகளுக்கு இனத்தாரை அழைப்பவன் (இ.வ.); *paḷḷa* messenger who summons the people of his caste to attend caste meeting, festival, funerals etc.

[வாரியம் → வாரியன்]

வாரியன்[2] *vāriyaṉ*, பெ.(n.) குதிரைப்பாகன்; horseman. *"அப்புரத்தை குதிரையாக நீ அரசவாரியனாய்" (கலித்.31, உரை).*

வாரியிறை-த்தல் *vāri-y-iṟai-*, 4 செ. குன்றாவி.(v.t.) 1. சிதறச் செய்தல்; to scatter. 2. வீணாக்குதல்; to waste. 3. மிகுதியாகக் கொடுத்தல்; to give liberally.

[வாரி → இறை-,]

வாரியுளுயர்நிலம் *vāriyuḷ-uyar-nilam*, பெ.(n.) கோட்டை மதிலின் உள்ளிடமாகச் சுற்றி வருவதற்குரிய மேடான ஒடுக்கு வழி (பிங்.); high ground within the fort, adjoining its walls.

[வாரியுள் + உயர்நிலம்]

வாரியுற்பவம் *vāri-y-uṟpavam*, பெ.(n.) தாமரை (யாழ்.அக.); lotus.

[வாரி + **Skt.** *urphava* > த. உற்பவம்]

வாரியோட்டு *vāri-y-ōṭṭu*, பெ.(n.) நீரோடை; stream, canal. *"வாரியோட்டில் வலாகரித் திட்ட போல்" (மேருமந்.652).*

[வாரி + ஓடு → ஓட்டு]

வாரிரசிதம் *vāri-raśidam*, பெ.(n.) வெள்ளிமணல் (சங்.அக.); silvery sand.

[வாரி + **Skt.** *racithā* > த. ரசிதம்]

வாரிரதம் *vāri-radam*, பெ.(n.) தெப்பம் (யாழ்.அக.); raft, as in a floating, boat festival.

[வாரி + **Skt.** *rathā* > த. ரதம்]

வாரிராசி *vāri-rāśi*, பெ.(n.) கடல் (யாழ்.அக.); ocean.

[வாரி + **Skt.** *rāsi* > த. ராசி]

வாரிருகம் *vārirugam*, பெ.(n.) தாமரை (சங்.அக.); lotus.

வாரிவளை-த்தல் *vāri-vaḷai-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஒருசேரத் திரட்டுதல்; to encompass, to gather togather, to take in a sweep. *'வாரி வளைத்துச் சாப்பிடுகிறான்'.*

[வாரு + வளை-,]

வாரிவாகம் *vāri-vāgam,* பெ.(n.) மேகம் (சங்.அக.); cloud.

*[வாரி + **Skt.** vāha > த. வாகம்]*

வாரிவிடு[1]-தல் *vāri-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) வாரியிறை-, 3 பார்க்க; see *vāri-y-iṟai.*

[வாரு + விடு-,]

வாரிவிடு[2]-தல் *vāri-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) மிகுதியாகப் புனைந்துரைத்தல்; exaggiration.

[வாரி + விடு-,]

வாரிழை *vāriḻai,* பெ.(n.) அடையாள இழை; identification thread.

வாரீசம்[1] *vārīšam,* பெ.(n.) 1. வாரிசாதம் (சங்.அக.) பார்க்க; see *vāri-šādam.* 2. சிந்தாமணி (நாமதீப.385); a mythical gem.

*[வார் + **Skt.** ešhā > த. ஈசம்]*

வாரீசம்[2] *vārīšam,* பெ.(n.) கடல் (சங்.அக.); ocean.

வாரு[1]-தல் *vāru,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. அள்ளுதல்; to take by handfuls, to take in a sweep; to scoop. *"உறியொடு வாரியுண்டு" (கம்பரா. ஆற்றுப். 15).* 2. ஆவலோடு கொள்ளுதல்; to take in or grasp with avidity. *"வாரிக் கொண்டுன்னை விழுங்குவன் காணில்" (திவ். திருவாய். 9, 6, 10).* 3. தொகுத்தல்; to gather. *"கைவளம் வாரினை கொண்டு வரற்கு" (பு, வெ.9, 29).* 4. மிகுதியாகக் கொண்டு செல்லுதல்; to remove, carry off in great numbers, as plague, flood, etc. 5. கவர்தல் (திவா.); to snatch away. *"மாதர் வனைதுகில் வாரு நீரால்" (கம்பரா. ஆற்றுப். 15).* 6. திருடுதல் (யாழ்.அக.); to rob, steal. 7. தோண்டி யெடுத்தல்; to dig and take up. *"வள்ளி வாரிய குழியின்" (சீவக.1565).* 8. கொழித்தல் (திவா.); to winnow. 9. அரித்தல்; to sift, as with a sieve or by immersing in water. *"வாராதட்ட வாடூன் புழுக்கல்" (பெரும்பாண். 100).* 10. மயிர் முதலியன சீவுதல்; to comb, as the hair. *"கோதி வாரி முடித்த பாரிய கொண்டை" (அரிச்.பு.இந்திர.16).* 11. யாழ் நரம்பைத் தடவுதல்; to play upon, as the strings of a lute. *"வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்தும்" (பொருந.23).* 12. ஓலையை எழுதுதற்குரிய இதழாகச் செம்மை செய்தல்; to trim, as a palmyra leaf to write on. 13. பூசுதல் (நெடுநல்.110, உரை); to plaster, smear.

க. பாரு, பதசு; ம. வாருக; து. பார்சுனி, பாசுனி, பார்குனி; குருக். பார்னா.

மால்ட். bare.

வாரு *vāru,* பெ.(n.) திரளாய் மக்கள் பெருவாரியில் சாதல்; to sweep off or remove people in large numbers out of the world.

வாருக்கதிரோன் *vāru-k-kadirōṉ,* பெ.(n.) ஆகாச கருடன்; a twiner sky root-bryonia epigea.

[வாரு + கதிரோன்]

வாருகம் *vārugam,* பெ.(n.) 1. வெள்ளரி (மலை.); cucumber. 2. பேய்க் கொம்மட்டி (தைலவ.); colocynth.

வாருகல் *vārukal,* பெ.(n.) வாருகோல் பார்க்க; see *vāru-kōl.*

வாருகோல் *vāru-kōl,* பெ.(n.) துடைப்பம் (பிங்.); broom. *"வங்காள மேறுகினும் வாருகோ லொருகாசு மட்டன்றி யதிக மாமோ" (குமரே. சத. 46).*

[வாரு + கோல்]



வாருசி *vāruśi,* பெ.(n.) மொச்சை; field bean-dolichos lap.

வாருண்டம்[1] *vāruṇḍam,* பெ.(n.) எண்காற்புள் (பிங்.); a fabulous eight-legged bird.

வாருண்டம்[2] *vāruṇḍam,* பெ.(n.) 1. பீளை; excretion from the eyes. 2. குறும்பி; excretion from the ears, wax.

வாருணம்[1] *vāruṇam,* பெ.(n.) 1. வருணனுக் குரியது; that which realates to Varuna. 2. மேற்கு (பிங்.); west. 3. பகல் பதினைந்து முழுத்தத்துள் பதின்மூன்றாவது (விதான. குணாகுண 73, உரை) ; the 13th of the 15 divisions of a day. 4. துணைத்தொன்மம் பதினெட்டனுள் ஒன்று (பிங்.); a secondary *Puraṇa,* one of 18 *upa-purāṇam* (Q.V.). 5. கடல் (பிங்.); sea. 6. மார்பிலேனும் வயிற்றிலேனும் வெண்மை நிறமமைந்த குதிரை வகை; a species of horse whose chest or belly is white in colour. *"அந்த மை வண்ணப் பரியின்பேர் வாருணமாம்" (திருவிளை. நரிபரி. 115).* 7. மாவிலிங்கம்; round-berried cuspidate-leaved lingam tree. *"வாருண மென்போதில்" (காஞ்சிப்பு. சிவ. 61).*

வாருணம்[2] *vāruṇam,* பெ.(n.) கள் (பிங்.); spirituous liquor.

வாருணி[1] *vāruṇi,* பெ.(n.) அகத்திய முனிவன் (அபி.சிந்.); sage Agastya.

வாருணி[2] *vāruṇi,* பெ.(n.) 1. வருணன் மகள்; the daughter of *Varuṇa.* *"வருணனாருனை வாருணியென்ன" (காஞ்சிப்பு. வீராட். 44).* 2. வருணனது தேவி; the consort of *Varuṇa.* 3. வாருணம்[2] பார்க்க; see *Vāruṇam.* 4. ஆட்டாங்கொடி (தைலவ.); the *sōma* plant. 5. சதயம் (வின்.); the 24th naksatra. 6. வாருணம்[1] 2 பார்க்க; see *Vāruṇam.*

வாருணி[3] *vāruṇi,* பெ.(n.) பம்பந்திராய் பார்க்க; see *pambañdi-rāy.*

வாருதி *vārudi,* பெ.(n.) நவச்சாரம் (சங்.அக.); sal ammoniac.

வாருதிக்கெங்கை *vārudi-k-keṅgai,* பெ.(n.) கெண்டகச் சீலை; a sacred stone found in Gandaha river.

[வாருதி + கெங்கை]

வாருதித்தண்டு *vārudi-t-tanḍu,* பெ.(n.) பவளம்; coral.

[வாருதி + தண்டு]

வாருதிநாதம் *vārudi-nādam,* பெ.(n.) சங்கு; conch.

[வாருதி + நாதம்]

வாருதிப்பாசி *vārudi-p-pāši,* பெ.(n.) கடற்பாசி; sea weeds gracilaris confervoides.

[வாருதி + பாசி]

வாருதியோரக்குடிச்சி *vārudi-yōra-k-kuḍicci,* பெ.(n.) சாதிக்காய்; rutmeg, myristica fragrans.

[வாருதியோரம் + குடிச்சி]

வாருதிவிந்து *vārudi-vindu,* பெ.(n.) கடல் நுரை; bone of cuttle fish.

[வாருதி + விந்து]

வாருவகை *vāru-vagai,* பெ.(n.) தண்ணீர் (சங்.அக.); water.

[வாரு + வகை]

வாருளம் *vāru!am,* பெ.(n.) இலவங்கப் பூ; clove.

வாரூணி *vārūṇi,* பெ.(n.) 1. வாருணி[1] பார்க்க; see *Vāruni.* 2. முற்கொழுங்கால் (பூரட்டாதி); the 25th naksatra.

வாரெழுத்தாணி *vār-e!uttāṇi,* பெ.(n.) எழுத்தாணி வகை (வின்.); a kind of iron style for writing.

வாரை[1] *vārai,* பெ.(n.) 1. மூங்கில்; bamboo. *“வாரை கான்ற நித்திலம்” (கந்தபு.ஆற்று. 5).* 2. காவுதடி (வின்.); pole for carrying loads. 3. வாரி[2] 1, 2 பார்க்க; see *vāri.* 4. கைமரம் (வின்.); rafter, beam. 5. நீண்டு ஒடுக்கமானது; anything long and narrow. 6. கருஞ்சிவப்பு நிறமும் 16 அங்குல வளர்ச்சியுமுள்ள மீன் வகை; flat fish brownish or purplish black attaining 16 in. in length.

[வார் → வாரை]

வாரை[2] *vārai,* பெ.(n.) ஆவிரை (சங்.அக.); tanner's senna.

வாரை[3] *vārai,* பெ.(n.) காய் காத்து வாரை, கடம்பு, குளம்புளன் (தேரை–1001).

வாரொழுக்கு–தல் *vār-o!ukku-,* 9 செ.கு.வி. (v.i.) கயிற்றுவலைக் கட்டுதல்; to set nets. *“ஒடியெறிந்து வாரொழுக்கி” (பெரியபு. கண்ணப்ப.75).*

[வார் + ஒழுக்கு]

வால்[1] *vāl,* பெ.(n.) 1. இளமை; youth, tenderness. *“தாலப் புல்லின் வால் வெண்டோட்டு” (சிலப். 16, 35).* 2. தூய்மை (பிங்.); purity. *“ஊர்தி வால்வெள் ளேறே” (புறநா. 1).* 3. வெண்மை; whiteness. *“பணிமொழி வாலெயிறு” (குறள். 1121).* 4. நன்மை; goodness. *“வாலிதை யெடுத்த வளிதரு வங்கம்” (மதுரைக். 536).* 5. பெருமை (பிங்.); greatness. *“அரக்கர்தம் வாலிய புரமூன்று மெரித்தான்” (தேவா. 1049, 9).* 6. மிகுதி (சூடா.); abundance. *“வாலிதின் விளைந்தன வைவனம் வெண்ணெல்” (மலைபடு. 115).*

ம. வால்.

[விள் → வாள் → வால்]

வால்[2] *vāl,* பெ.(n.) 1. விலங்குகளின் பின்புறம் நீண்டு தொங்கும் உறுப்பு; tail. *“எறிந்தவேல்*

மெய்யதா வால் குழைக்கு நாய்" (நாலடி, 213).

2. நீளமானது; anything long or elongated.

3. குறும்ப-ன்-ள்; mischievous person.

4. குறும்பு (இ.வ.); mischief.

மறுவ. வாலம்.

ம. வால்; கோத. வால்ம்; தோட. போச்ம்; க. பால; குட. பாலி; தெ. வாலமு.

வால்³ *vāl,* பெ.(n.) வாலுழுவை பார்க்க; see *vāluluvai. "வட்டவாலுடனே கூட்டி" (பாலவா. 774.).*

வால்கரண்டி *vāl-karaṇḍi,* பெ.(n.) வாற்கிண்ணம் (இ.வ.) பார்க்க; see *vāṟ-kiṇṇam.*

வால்கனி *vālkaṉi,* பெ.(n.) மேன் மாடத்தில் முன்புறமாக நீண்டுள்ள அட்டாலை; balcony.

வால்காக்கை *vāl-kākkai,* பெ.(n.) காக்கையினப் பறவையில் ஒருவகை; a kind of crow.

காக்கை இனத்துடன் ஒருவிதத்தில் தொடர்பு இருப்பதால், இது இப்பெயர் கொண்டது. ஆங்கிலத்தில் மாக்பை (magpie) எனப்படும் பறவை வகைக்கு இது நெருங்கின உறவு. வால் காக்கையின் அலகு, காக்கையின் அலகைப் போல் தடித்துக் கறுத்திருக்கும். இது கருந்தலையும், வெள்ளைப் பட்டையுள்ள இறக்கையும், கருமுனை கொண்ட நீண்ட சாம்பல் நிற வாலும், சிவலை உடலும் வாய்ந்தது. அளவில், ஓரடி நீண்டகாலுட்பட ஒரு முழமிருக்கும். காட்டுப் புறங்களிலும் தோப்புக்களிலும் வால்காக்கைகளை இணை களாகவும், சிறு கூட்டங்களாகவும் காணலாம். இவை பழங்களையும், பூச்சிகளையும், சிறு பல்லிகளையும் மரங்களில் தேடியுண்ணும். பிற பறவைகளின் முட்டைகளைத் திருடித் தின்னும். ரி-ரி-ரி என்ற கரகரப்பும் வெண்கலத்தின் இனிய ஓசையும் கலந்த குரலில் வால் காக்கைகள் சில விதமாக ஒலிக்கும் - கலைக்களஞ்.7.)

மறுவ. அரிகாடை, மூக்குறுணி.

வகைகள் :

1. வால் காக்கை.
2. வெள்ளை வயிற்று வால்காக்கை.



வால்கிண்ணம் *vāl-kiṇṇam,* பெ.(n.) வாற்கிண்ணம் பார்க்க (இ.வ.); see *vāṟ-kiṇṇam.*

வால்சிப்பி *vāl-śippi,* பெ.(n.) சிப்பி முத்து; oyster pearl.

[வால் + சிப்பி]

வால்தரகு *vāl-taragu,* பெ.(n.) கால்-நடைகளுக்கு இடும் வரி (இ.வ.); tax on cattle, as calculated at so much per tail.

வால்நட்சத்திரம் *vāl-naṭcattiram,* பெ.(n.) வால்வெள்ளி; comet.

[வால் + **Skt.** *nakshatrā > த. நட்சத்திரம்]*



வால்நறுக்கு *vāl-naṟukku,* பெ.(n.) ஓலையின் அடிப்புறத்துண்டு (வின்.); ola slip cut off from the lower end of a palm-leaf.

[வால் + நறுக்கு]

வால்நீளம் *vāl-nīḷam,* பெ.(n.) வால்வீச்சு² (S.I.I.iv,86) பார்க்க; see *vāl-viccu²*. *"புழைக்கடை வால்நீளமும்".*

[வால் + நீளம்]

வால்பேரி *vāl-pēri,* பெ.(n.) காம்பை உடைய மேல் பகுதி பெரிதாகவும் கீழ்ப்பகுதி சிறியதாகவும் இருக்கும் ஒரு வகைப் பேரிக்காய்; pear.

[வால் + பேரி]



வால்மரக்கால் *vāl-marakkāl,* பெ.(n.) நீண்டு உயரமான அளவில் உள்ள பெரிய மரக்கால், 4 படி; a elevated measure of four small measures capacity.

[வால் + மரக்கால்]

வால்மரம் *vāl-maram,* பெ.(n.) சுண்ணாம் பரைக்கும் உருளை கோத்த மரம் (கட்டட சா.15) ; long pole attached to the pivot, used in a mill for grinding lime-mortar.

[வால் + மரம்]

வால்மிளகு *vāl-miḷagu,* பெ.(n.) கொடி வகை (பதார்த்த.953); piper cubeb.

இரட்டை விதையிலைத் தாவரங்களிலே பைப்பரேசியீ என்னும் மிளகுக் குடும்பத்தைச் (த.க.) சேர்ந்த பைப்பர் க்யூபெபா (piper cubeba) என்னும் இனம். இது போர்னியோ, சுமத்ரா, ஜாவா முதலிய தீவுகளில் வளரும் ஒரு கொடி. இதன் கனியை அது முற்றிலும் முதிர்வதற்கு முன்பே பறித்துவிடுவார்கள். அந்தக் காயுடன் அதன் காம்பும் ஒட்டிக் கொண்டிருக்கும். அது வால் போன்றிருப்பதனால் இந்த மிளகு வால் மிளகு எனப்படும். வால் மிளகு சற்றுக் காரமும், சிறிது கசப்பும், நறுமணமும் உள்ளது. இதன் சுவையும் மணமும் நெடுநேரம் நாவிலும் வாயிலும் நிலைத்திருக்கும். இதை வெற்றிலையோடு நறுமணப் பொருளாகப் பயன்படுத்துவதேயன்றி மருந்தாகவும் கையாள் வார்கள். இதை நீரில் வாலை வடித்து எண்ணெய் எடுக்கின்றனர். வால்மிளகை மூச்சு நோய் களுக்கும், நாட்பட்ட தொண்டை வேக்காடு ஆகியவற்றிற்கும் புகை மருந்தாகப் பயன்படுத்து கின்றனர்.

[வால் + மிளகு]



வால்முளைத்தல் *vāl-muḷaittal,* பெ.(n.) குறும்பு செய்கை; becoming mischievous, as resembling a monkey.

[வால் + முளைத்தல்]

வால்முறுக்கு-தல் *vāl-murukku-,* 5 செ. குன்றாவி. (v.t.) தூண்டிவிடுதல்; to provoke, irritate, as an animal twisting its tail.

[வால் + முறுக்கு-,]

வால்வரிக்கொடுங்காய் *vāl-vari-k-koḍuṅgāy,* பெ.(n.) வெள்ளரிக்காய் (சிலப். 16, 25, அரும்.); cucumber.

[வால் + வரி +கொடுங்காய்]



வால்வீச்சு *vāl-viccu,* பெ.(n.) 1. வாசல் முதல் கொல்லையினெல்லை வரையுள்ள வீட்டின் நீட்சியளவு; measurement from front to rear, as of a house. 2. அகலக் கட்டையாய் நீண்டிருப்பது; that which is long and narrow.

[வால் + வீச்சு]

வால்வீச்சுநிலம் *vāl-viccu-nilam,* பெ.(n.) நீளமான வரப்பினை உடைய நிலம்; land with long bund.

[வால் + வீச்சு + நிலம்]

வால்வெடி-த்தல் *vāl-veḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) கடுஞ்சினத்தினால் வாலைத் தூக்கி அடித்தல்; to lash the tail in rage, as a beast. *"வால் வெடிப்பனவாகிய சிங்கம்"* *(சீவக.1902, உரை).*

[வால் + வெடி-,]

வால்வெள்ளி *vāl-veḷḷi,* பெ.(n.) வால் நட்சத்திரம் பார்க்க (சங்.அக.); see *vāl-naṭcattiram.*

மறுவ. வால்மீன்.

[வால் + வெள்ளி]

வால்வை-த்தல் *vāl-vāi,* 4 செ.கு.வி. (v.i.) 1. வேண்டிய உறுப்புக்களைச் சேர்த்து நிறைவு செய்தல்; to add details, to give finishing touches. 2. மிகுத்துக் கூறுதல்; to exaggerate.

[வால் + வை-,]

வாலகம் *vālagam,* பெ.(n.) விலங்கின் வால் (வின்.); tail.

[வால் + அகம்]

வாலகரப்பன் *vāla-karappan,* பெ.(n.) குழந்தை அல்லது சிறுவர்களுக்கு வரும் ஒரு வகைத் தோல்நோய்; a skin disease affecting infants and children.

[வால + கரப்பன்]

வாலகருப்பிணி *vāla-karuppiṇi,* பெ.(n.) கன்னி வயதில் கருக்கொண்டவள்; pregnancy in teenage.

[வால + கருப்பிணி]

வாலகாரம் *vāla-kāram,* பெ.(n.) கரு விழியில் புகை படிந்தது போல் உண்டாகும் ஒரு வகைக் கண்ணோய்; an eye disease.

[வால + காரம்]

வாலகாசம் *vāla-kāšam,* பெ.(n.) காலையில் பார்வைப் புகைச்சலுண்டாகி சாமம் கழிந்து நீங்கி, ஒரு தருணம் பார்வை நீல நிறமாகவும், பிறகு வேறுவிதமாயும் காணப்படும் வெள்விழி சதை வளர்ந்து பார்வை நீர் நிறமாகவும் தோற்றுமோர் வகைக் கண்ணோய்; an eye disease in which the vision in the morning will be dim but becomes clear with in three hours, fleshy growth appears in the white coat, the colour of the vision changes, it affects the youth and hence the name.

[வால + காசம்]

வாலசண்டக்காய் *vāla-šaṇḍa-k-kāy* பெ.(n.) பெருந்தும்மட்டி; a large variety of melon-water melon.

[வால + சண்டக்காய்]

வாலசத்து *vāla-šattu,* பெ.(n.) சிலாசத்து; mineral said to be oozing out from mountain.

[வால + சத்து]

வாலசூரா *vālašūra,* பெ.(n.) 1. மரவகை; fish-poison cedar, walsura. 2. மலை விராலி; ochre flowered fish-poison cedar.

தெ. வாலரசி.

வாலடித்தண்டன் *vālaḍi-t-taṇḍaṉ,* பெ.(n.) சாரைப் பாம்பு; rat snake.

[வாலடி + தண்டன்]

வாலதந்திரம் *vāla-tandiram,* பெ.(n.) மருத்துவ நூல்; mid wifery.

[வால + தந்திரம்]

வாலதி *vāladi,* பெ.(n.) 1. வால்(பிங்.); tail. *"விரியுரோம வாலதிகளில்" (பாரத. காண்டவ. 18).* 2. யானை வால் (திவா.); tail of an elephant.

வாலதிப்போளம் *vāladi-p-pōḷam,* பெ.(n.) சாம்பிராணி வகை (யாழ்ப்.); gum-myrrh.

வாலநட்டகம் *vāla-naṭṭagam,* பெ.(n.) முசு முசுக்கை; a climber-bryoni-scabra.

[வால + நட்டகம்]



வாலநாள் *vāla-nāḷ,* பெ.(n.) இளமைக்காலம்; younger days.

[வால + நாள்]

வாலபாகிகம் *vāla-pāgigam,* பெ.(n.) மொந்தன் வாழை; a variety of plantain.

[வால + பாகிகம்]

வாலப்பருதி *vāla-p-parudi,* பெ.(n.) குப்பை மேனி; rubbish plant- acalypha-indica.

[வால + பகுதி]

வாலபத்திரம் *vāla-pattiram,* பெ.(n.) கருங்காலி (மூ.அ); ceylon ebony.

வாலபுட்பி *vāla-puṭpi,* பெ.(n.) முல்லை (மலை.); arabian Jasmine.

[வால + புட்பி. புட்பி = skt.]

வாலம்[1] *vālam,* பெ.(n.) 1. வால்; tail. *"கட்செவி வாலமும் பணமு மிருங்கையிற் பற்றி" (காஞ்சிப்பு. மணி கண் 14).* 2. தலை மயிர் (வின்.); hair of head. 3. நீண்டு அகலம் குறுகிய துண்டு; long narrow strip. 4. கந்தைத்துணி (யாழ்ப்.); rags, tatters.

[வார் → வால் → வாலம்]

ஒ.நோ. நீர் → நீல் (வ.மொ.வ.86)

வாலம்[2] *vālam,* பெ.(n.) எறிபடைவகை; short javelin. *"வாலமுத லாயுதம்" (கம்பரா. ஊர்தே. 69).*

வாலம்[3] *vālam,* பெ.(n.) 1. கந்தை; rag. 2. தலை மயிர்; hair.

வாலமஞ்சாடி *vālamañjāḍi,* பெ.(n.) பழைய வரிவகை (S.I.I.i.108.); an ancient tax.

வாலமனை *vāla-maṉai,* பெ.(n.) அகப்புறத்தமைந்த சிறுவீடு; out house. *"வாலமனை யகத்துச் சார்ந்தான் தலைமகன்" (இறை. 21, உரை, பக். 112).*

[வாலம் + மனை]

வாலமாதரை *vāla-mādarai,* பெ.(n.) கொட்டைக் கரந்தை; a porstate plant-sphoeranthus indicus.

[வால + மாதரை]

வாலமாலம் *vālamālam,* பெ.(n.) அரிதாரம் (மூ.அ.); yellow orpiment.

வாலமூடிகம் *vālamūḍigam,* பெ.(n.) எலி (சிவதரு. பரிகார. 70); rat,mouse.

வாலரசம் *vāla-racam,* பெ.(n.) சாதி லிங்கத்தின் வடித்த சாறு (வின்.); essence of Vermillon.

[வாலை + ரசம். ரசம் = skt.]

வாலரிக்கொடுங்காய் *vālari-koḍuṅ-kāy,* பெ.(n.) வெள்ளரி (சிலப். 16, 25, உரை); cucumber.

[வால் + அரி + கொடுங்காய்]

வாலரியுரி *vālari-y-uri,* பெ.(n.) *கிளியூறற் பட்டை* (தைலவ.) பார்க்க; see *kiḷiyūṟar-paṭṭai.*

[வால் + அரி + உரி]

வாலருவி *vāl-aruvi,* பெ.(n.) வெண்ணிலை ஊழ்கம் (தியானம்); a form of meditation. *"வாலருவி வாமன்" (சீவக.291).*

[வால் = வெள்ளை. வால் + அருவி.]

வாலவாய் *vāla-vāy,* பெ.(n.) மதுரை; Madura, as encircled by a serpent. *"வாலவாய் பொதிந்த மதிமுடித் தனிமுதல்" (கல்லா.48).*

[ஒருகா. ஆலவாய் → வாலவாய்]

வாலறிவன் *vāl-aṟivaṉ,* பெ.(n.) கடவுள்; God, as pure intelligence. *"வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" (குறள். 2).*

[வால் + அறிவன்]

வாலன்[1] *vālaṉ,* பெ.(n.) 1. குறும்பன்; mischievous fellow. 2. ஒருவகை நெல் (இ.வ.); a species of paddy.

[வால் + வாலன்]

வாலன்கண்டல் *vālaṉ-kaṇḍal,* பெ.(n.) வெண்மை நிறமுள்ள கடல் மீன்வகை; sea-fish, silvery.

[வாலன் + கண்டல்]

வாலாட்டி வகை

கருஞ்சாம்பல் வாலாட்டி

கருப்பு வெள்ளை வாலாட்டி

கொடிக்கால் வாலாட்டி

வாலாசம் *vālāšam,* பெ.(n.) மாட்டின் பின்வார் (வின்.); crupper for a bullock.

வாலாட்டிக்குருவி *vālāṭṭi-k-kuruvi,* பெ.(n.) 1. கரிக்குருவி; King-crow. 2. வலியான்; red-wagtail.

இந்தியாவில் காணக்கூடிய வாலாட்டிக் குருவிகளுள் *'கோட்டைக்கரிச்சான்'* (pied wagtail) என்ற குருவியே வலிசை போகாமல் ஆண்டு முழுவதும் இங்குத் தங்கி வாபம். இது கறுப்பும் வெள்ளையுமாக, நீண்ட வால் கொண்டிருக்கும். அளவில் மைனாவைவிடச் சிறியதாகவும் மெல்லியதாகவுமிருக்கும். வண்ணான் துறைகளிலும் ஆற்றங் கரைகளிலும் இந்தக் குருவிகளை இணைகளாகக் காணலாம். சென்னையில் இவற்றைப் பலவிடங்களில் பார்க்கலாம். அடிக்கடி இக்குருவி தன் நீண்டவாலைப் பக்கவாட்டமாக அசைப்பதிலிருந்தும் மேலும் கீழுமாக குலுக்குவதிலிருந்தும் இது வாலாட்டிக் குருவி என்று புலப்படும். ஆண் கோட்டைக்கரிச்சான் உயர்ந்த சீழ்க்கையடிக்கும் குரலில் இனிமையாகப் பாடும்.

வகைகள் :

1. கருப்பு வெள்ளை வாலாட்டிக் குருவி
2. கருஞ்சாம்பல் வாலாட்டிக் குருவி
3. கொடிக்கால் வாலாட்டிக் குருவி



வாலாட்டு[1]-தல் *vāl-āṭṭu-,* 47 செ.கு.வி. (v.i.) 1. குறும்பு செய்தல்; to do mischief, as wagging one's tail. 2. வீண் பெருமை காட்டுதல்; to put on airs.

[வால் + ஆடு → ஆட்டு]

வாலாட்டு[2] *vālāṭṭu,* பெ.(n.) 1. சேட்டை; mischief. 2. செருக்கான செயல்; arrogant deed. *"எத்தேவர் வாலாட்டும்" (திவ். இயற். நான்மு. 38).*

[வால் + ஆட்டம் → ஆட்டு]

வாலாதி *vālādi,* பெ.(n.) பந்தயவோட்டத் திற்குப் பழக்கப்பட்ட குதிரை (வின்.); horse trained for racing.

[வாலாயம் → வாலாதி]

வாலாதிகம் *vālādigam,* பெ.(n.) பேராமணக்கு; castor plant yielding big seeds,-ricinus communis.

வாலாமை *vālāmai,* பெ.(n.) 1. தூய்மை யின்மை (உரி.நி); uncleanliness, impurity. 2. தீட்டு; ceremonial impurity or pollution. *"வாலாமைந்நா ணீங்கிய பின்னர்" (சிலப். 15, 24). "வாலாமை பார்ப்பா ரிலங்குநூலோ தாத நாள்" (ஆசாரக். 48).* 3. மகளிர் தீட்டு (சூடா.); menstrual impurity.

வாலாயம்[1] *vālāyam,* பெ.(n.) 1. நடைமுறை யொழுங்கு; routine or commonness. *"வாலாயமாகவும் பழகியறியேன்" (தாயு. பரிபூரண. 1).* 2. வழக்கம்; custom. *'நான் வாலாயமாய்க் காலையில் கோயிலுக்குச் செல்பவன்'.* 3. மிகுபழக்கம்; familiarity. *"வாலாயமாய்ப் போய் விருந்துண" (அறப்.சத.68).*

தெ. வாலாயமு.

வாலாவி *vālāvi,* பெ.(n.) கருநிறக் குன்றிமணி; a black species of crab's eye.

வாலாளி *vālāḷi,* பெ.(n.) ஏலரிசி; cardamom seed.

வாலான்¹ *vālāṉ,* பெ.(n.) குட்டத்தைப் போக்கும் ஓர் நெல்; a variety of rice said to cure leprosy. 2. வீரியத்தரிசி; rice which have much vitamin. 3. வாலுளுவையரிசி பார்க்க; see *vāluḷuvai-y-ariśi.*

வாலான்² *vālāṉ,* பெ.(n.) ஒரு வகை நெல் (பதார்த்த 800.); a kind of paddy.

வாலி¹ *vāli,* பெ.(n.) 1. ஒரு குரக்கு வேந்தன்; வானரர் தலைவன், கிட்கிந்தை மன்னன் (கம்பரா. வாலிவதை.); *vāli* a monkey chief. 2. வாலுடையது; that which has a tail. 3. கரிக்குருவி (சங்.அக.); king-crow.

வாலி² *vāli,* பெ.(n.) நிலவின்கலை தோன்றும் காருவாநாள் (அரு.நி.); the first day after the new moon.

வாலி³ *vāli,* பெ.(n.) மழைத் தூறல் (அரு.நி.); drizzle.

ம. வாலுக; து. பாலுனி.

[ஆலி → வாலி]

வாலி⁴ *vāli,* பெ.(n.) ஒருவகைப் புன்செய்ப் பயிர்; horse tail millet.

மறுவ. குதிரைவாலி.

வாலி⁵ *vāli,* பெ.(n.) திருவாலியமுதனார்; the author of a portion of *Tiru-v-śaippā.* *"அமுத வாலி சொன்ன தமிழ்மாலை" (திருவிசைப். திருவாலி. 3, 11).*

வாலிகை *vāligai,* பெ.(n.) மணல் (சங்.அக.); sand.

[வால் = வெள்ளை. வால் → வாலிகை]

வாலிசை¹ *vāliśai,* பெ.(n.) 1. மணல்; sand. 2. கொடிக்காசரைக் கீரை; a kind of edible greens.

[வால் + இசை]

வாலிசை² *vāliśai,* பெ.(n.) இளம்பெண்; a young girl.

[வால் + இசை]

வாலிது¹ *vālidu,* பெ.(n.) 1. தூயது; that which is pure. 2. வெண்மையானது; that which is white. *"வாலிதாம் பக்க மிருந்தைக் கிருந்தன்று" (நாலடி, 258).* 3. நன்மையானது; that which is good or excellent. *"வாலி தன்றெனக் கூறி" (சீவக.251).*

[வால் → வாலிது]

வாலிது² *vālidu,* பெ.(n.) வலி (அக.நி.); strength.

[வலிது → வாலிது]

வாலிந்தி *vālindi,* பெ.(n.) மகப்பேறு பெற்ற மாதமே மாதவிடாய்க் கண்டு கணவனுடன் சேர்ந்து மறு கருப்பத்தைக் கொண்ட பெண்; a woman conceiving within a month or two after delivery.

வாலிமை¹ *vālimai,* பெ.(n.) வன்மை (ஈடு. 7, 7, 2); strength.

[வலி–மை → வாலிமை]

வாலிமை² *vālimai,* பெ.(n.) பெருமை (ஈடு.7, 7, 2); greatness.

[வால் → வாலிமை]

வாலியக்காரன் *vāliya-k-kāraṉ,* பெ.(n.) வேலைக்காரன்; servant.

வாலியன்[1] *vāliyaṉ,* பெ.(n.) தூய்மை யுடையவன்; holy person. *"வாலியனல் லாதோன் றவஞ் செய்தல் பொய்" (முது. காஞ். 80).*

ம. வால்.

வாலில்லாப்புச்சம் *vāl-illā-p-puccam,* பெ.(n.) குறும்புசெய் குழந்தை (இ.வ.); mischievous child.

வாலு *vālu,* பெ.(n.) வாலுளுவையரிசி (மூ.அ.); seed of the climbing staff plant.

[வால் → வாலு]

வாலுகம்[1] *vālugam,* பெ.(n.) 1. மணல்; sand. 2. வெண்மணல் (பிங்.); white sand. *"வேலை வாலுகத்து விரிதிரைப் பரப்பின்" (சிலப்.6,131).*

[வால் → வாலுகம்]

வால் = வெள்ளை. மா.அ.வி. "of doubtful derivation" *என்று குறித்திருத்தல் காண்க. (வ.மொ.வ.86]*

வாலுகம்[2] *vālugam,* பெ.(n.) 1. ஒரு வகையுப்பு; a kind of unidentified salt. 2. ஏலாவாலுகம்; a kind of cardamom. 3. வெள்ளைக்குங்கிலியம் பார்க்க; see *veḷḷai-k-kuṅgiliyam.*

வாலுகாப்பிரபை *vālugā-p-pirabai,* பெ.(n.) எழுவகை நிரயங்களுள் பெருமணல் வட்ட முடையதாகக் கருதப்படும் நிரயம் (சீவக. 2817, உரை); a hell, said to contain sand, one of eḷu-narakam (Q.V.).

[வாலுகம் + ***Skt.*** *prabhā > த. பிரபை]*

வாலுகாயந்திரம் *vālukā-yandiram,* பெ.(n.) மருந்திட்ட குப்பியைச் சூடேற்றுவதற்குப் பதித்துவைக்குஞ் சுடுமணல் நிரப்பிய பாண்டவகை (இ.வ.); sand bath, vessel of heated sand, in which a cup containing medicinal drugs is placed and heated.

[வாலுகம் + ***Skt.*** *yantrā > த. இயந்திரம்]*

வாலுகி *vālugi,* பெ.(n.) கக்கரி (புதுவை.); kakri melon.

[வால் → வாலுகி]

வாலுகை[1] *vālugai,* பெ.(n.) 1. குப்பி; bottle. 2. வாலுளுவை பார்க்க; see *vāl-uḷuvai.* 3. அடுப்பு; oven.

வாலுகை[2] *vālugai,* பெ.(n.) வாலுளுவை பார்க்க (சங்.அக.); see *vāluḷuvai.*

வாலுங்கி[1] *vāluṅgi,* பெ.(n.) கக்கரி (சூடா.); kakrimelon.

வாலுங்கி[2] *vāluṅgi,* பெ.(n.) வாலுளுவை பார்க்க (சங்.அக.); see *vāluḷuvai.*

வாலுந்தி *vālundi,* பெ.(n.) முள்வெள்ளரி; Kakri-melon.

வாலுருவிவிடு-தல் *vāl-uruvi-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) துன்பஞ் செய்யத் தூண்டி விடுதல்; to stir one to activity, to provoke, as by stroking the tail of an animal. *"வயப்புலியை வாலுருவி விடுகின்றீரே" (பாரத. சூது. 265).*

[வால் + உருவு + விடு-,]

வாலுவநூல் *vāluva-nūl,* பெ.(n.) பாக நூல்; science of cookery. *"வாலுவ நூல் போய்த் திருந்தினார்களும் வியப்பன" (கந்தபு. குமார, 69).*

வாலுவன் *vāluvaṉ,* பெ.(n.) சமைப்போன்; cook. *"நெறியறிந்த கடிவாலுவன்" (மதுரைக். 36).*

மறுவ. மடையன்.

வாலுவி *vāluvi,* பெ.(n.) ஒருவகைத் தேக்கு; a kind of teak.

[வால் → வாலுவி]

வாலுளுவை *vāl-uḷuvai,* பெ.(n.) 1. கொடி வகை; climbing staff plant. 2. முள்வேல் வகை; (L.) thorny-staff-tree.

தெ. வாலுது.

[வால் + உளுவை]

வாலுறை *vāluṟai,* பெ.(n.) அடுப்பு (சங்.அக.); oven.

[வால் + உறை]

வாலூகம்[1] *vālūgam,* பெ.(n.) முசு முசுக்கை; a climber-bryonia scabra.

வாலூகம்[2] *vālūgam,* பெ.(n.) நஞ்சு (விடம்) (சங்.அக.); poison.

வாலேந்திரபோளம் *vālēndira-pōḷam,* பெ.(n.) வெள்ளைப்போளம் (பதார்த்த. 1052.); myrrh.

[வாலதிப்போளம் → வாலேந்திரபோளம்]

வாலேபம் *vālēbam,* பெ.(n.) வாலேயம் பார்க்க (பிங்.); see *vālēyam.*

வாலேயம் *vālēyam,* பெ.(n.) கழுதை (திவா.); ass.

வாலை[1] *vālai,* பெ.(n.) எரிநீர் வடிக்கும் பாண்டம்; still, alembic, retort. *"மருந்து வாலையிலேறுகிறது".*

[வால் → வாலை]

வாலை[2] *vālai,* பெ.(n.) 1. தூய்மை; purity. 2. இதளியம் (சங்.அக.); mercury.

[வால் + வாலை]

வாலை[3] *vālai,* பெ.(n.) 1. எரிநீர்; acid. 2. இளம்பெண்; young girl. 3. சத்தி; the goddess sakti in a girl's form. 4. கற்பூர சிலாசத்து சாரம்; essence of ammonium-alum.

வாலை[4] *vālai,* பெ.(n.) சித்திரை நதி (நாமதீப. 528); the cittira river, a tributary of the Tamiraparuni.

வாலைக்கடுக்காய் *vālai-k-kaḍukkāy,* பெ.(n.) பிஞ்சுக் கடுக்காய்; tender gall nut.

[வாலை + கடுக்காய்]

வாலைக்காட்டு-தல் *vālai-k-kāṭṭu-,* 15 செ.கு.வி. (v.i.) வாலைக்கிளப்பு-, பார்க்க; see *vālai-k-kiḷappu.*

[வால் + ஐ + காட்டு-,]

வாலைக்கிண்ணம் *vālai-k-kiṇṇam,* பெ.(n.) வடிப்பதற்காகப் பயன்படுத்தும் வாயகன்ற கலம்; a vessel used for distillation alembic.

[வாலை + கிண்ணம்]

வாலைக்கிளப்பு-தல் *vālai-k-kiḷappu-,* 5 செ.கு.வி. (v.i.) குறும்பு செய்தல் (வின்.); to become mischievous.

[வால் + ஐ + கிளப்பு-,]

வாலைக்கும்மி[1] *vālai-k-kummi,* பெ.(n.) கொங்கணநாயனார் என்பவரால் கி.பி.15ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நூல் வகை; a book written by *Koṅgaṇa-nāyaṉār* in 15th century.

[வாலை + கும்மி]

வாலைக்கும்மி[2] *vālai-k-kummi,* பெ.(n.) வாலையர் என்பவரால் கி.பி.15ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்; a book written by *vālaiyar* in 15th century.

[வாலை + கும்மி]

வாலைக்குமரி *vālai-k-kumari,* பெ.(n.) இளம் பெண்; young girl.

[வாலை + குமரி]

வாலைக்குறம் *vālai-k-kuṟam,* பெ.(n.) மனோசிலை என்னும் மருந்துப்பு; a kind of salt.

[வாலை + குறம்]

வாலைகலை *vālai-kalai,* பெ.(n.) ஞாயிற்றின் கலை; vital air passing through the right nostril.

மறுவ. பிங்கலை.

[வாலை + கலை]

வாலைசாரம் *vālai-šāram,* பெ.(n.) சத்திசாரம் (மூ.அ.); a salt.

[வாலை + சாரம்]

வாலைசெயநீர் *vālai-šeya-nīr,* பெ.(n.) வழலையுப்பு, செயநீர், மதிசெயநீர்; a pungent liquid preparation from salt.

[வாலை + செயநீர்]

வாலைநீர்[1] *vālai-nīr,* பெ.(n.) வெடியுப்பு எரிநீர்; nitric acid.

[வாலை + நீர்]

வாலைநீர்[2] *vālai-nīr,* பெ.(n.) வாலையிட்டு வடித்தெடுத்த நன்னீர்; water purified by distillation, distilled water.

[வாலை + நீர்]

வாலைப்பெண் *vālai-p-peṇ,* பெ.(n.) செவ்வாமணக்கு; red variety of castor-ricinus communis.

[வாலை + பெண்]

வாலைப்பெண்போகம் *vālai-p-peṇ-bōgam,* பெ.(n.) இதனால் உடம்பிற்கு வெப்பம், மனமகிழ்ச்சி, பசி, உடம்பு வலிவு, ஒளி உண்டாம்; intercourse with young woman will cause strength, good complexion good hunger and happiness.

[வாலை + பெண் + போகம்]

வாலைமெழுகு *vālai-meḻugu,* பெ.(n.) ஒரு வகை மருந்து (யாழ்.அக.); a kind of medicinal punguent.

[வாலை + மெழுகு]

வாலையாட்டு-தல் *vālai-y-āṭṭudal-,* 7 செ.கு.வி. (v.i.) வாலைக்கிளப்பு-, (கொ.வ.) பார்க்க; see *vālai-k-kiḷappu-,*

[வால் + ஆட்டு-.]

வாலையுப்பு *vālai-yuppu,* பெ.(n.) நஞ்சுக் கொடி; placental card.

[வாலை + உப்பு]

வாலைரகுபதிகாரம் *vālai-ragupadikāram,* பெ.(n.) சீனக்காரம் (அரு.நி.); alum.

வாலைரசம் *vālai-racam,* பெ.(n.) இதளிய கருப்பூரம் (மூ.அ.); sublimate of mercury.

வாலைவடி—த்தல் *vāḷai-vadi-,* 20 செ.கு.வி. (v.i.) ஒரு பொருளைச் சூடு செய்து, ஆவியாக மாற்றி, அந்த ஆவியைக் குளிரவிட்டுப் பொருளைத் திரும்பவும் பழைய நிலையில் அடைவது வாலை வடித்தல் எனப்படும்; distillation.

பொதுவாக நீர்மங்களையே இம்முறைக்கு உள்ளாக்குகிறோம், சில திடப் பொருள்களையும் இதற்கு உள்ளாக்கலாம். ஆவியாக மாறாத கரைபொருளைக் கரைத்து, அதை நீர்மத்திலிருந்து பிரிப்பதற்கும், வெவ்வேறு கொதிநிலையுள்ள நீர்மங்களை அவற்றின் கலவையினின்று பிரிப்பதற்கும், பொருள்களைத் தூய்மை செய்வதற்கும் இம்முறை பயன்படும்.

வாலைவயது *vālai-vayadu,* பெ.(n.) 1. இளம் பருவம்; young age. 2. கற்பத்தினால் முதுமையிலிருந்து இளமையாதல்; rejuvenated body.

[வாலை + வயது]

வாவயம் *vāvayam,* பெ.(n.) துளசி; sacred basil.

வாவரசி *vāvaraśi,* பெ.(n.) வாழ்வரசி; married woman. *'அவள் வாவரசியாகப் பல்லாண்டு வாழ, வாழ்த்துகிறேன்'.*

[வாழ்வரசி → வாவரசி]

வாவரியுரி *vāvariyuri,* பெ.(n.) கிளியூறற் பட்டை (சங்.அக.); a medicinal bark.

வாவல்[1] *vāval,* பெ.(n.) 1. தாண்டுகை (பிங்.); jumping over. 2. கூத்து (பொரு.நி.); dance.

வாவல்[2] *vāval,* பெ.(n.) 1. வௌவால்; bat. *"விளவினை வாவல் குறுகா" (நாலடி, 261).*

ம. வாவல்; க. பாவலி; குட. பாபாக்கி; து. பாவலி; குவி. பாப்ல; கொலா. வெலபெ.

வாவல்[3] *vāval,* பெ.(n.) 1. பழுப்பு நிறமுள்ளதும் 2 அடி நீளம் வளர்வதுமான கடல் மீன் வகை; black pomfret brown attaining 2 ft. in length.

[வாவு → வாவல்]

வாவல்[4] *vāval,* பெ.(n.) வயா (பொரு.நி.); great desire languor during pregnancy.

[வவ்வு → வாவு → வாவல். (மு.த.பக்.23)]

வாவன்ஞாற்று *vāvaṉ-ñāṟṟu,* பெ.(n.) சித்திரப்பா வகை (பிங்.); a verse in which the words or letters are fancifully arranged.

வாவனாற்றி *vāvaṉāṟṟi,* பெ.(n.) வாவன் ஞாற்று (யாப். வி. பக். 502); a kind of verse.

[வாவல் + நால்–]

வாவி *vāvi,* பெ.(n.) 1. நீர் நிலை (பிங்.); tank, reservoir of water. *"மன்னு தண்பொழிலும் வாவியும்" (திவ். பெரியதி. 2, 3, 10).* 2. நடைக் கிணறு; well with a flight of steps down to the water. 3. ஆற்றிலோடை; stream of water running in a river bed. *"வண்டார் குவளைய வாவியும்" (சீவக. 337.).*

வாவிப்புள் *vāvi-p-puḷ,* பெ.(n.) எகினம் (அன்னம்) (இலக்.அக.); swan.

[வாவி + புள்]



வாவியோகம் *vāvi-y-ōgam,* பெ.(n.) தடாகயோகம் (சாதக சிந். 2036); an inauspicious *yōgam.*

வாவு[1]-தல் *vāvu-,* 5 செ.கு.வி. (v.i.) தாண்டுதல்; to jump over, gallop, leap. *"குன்றிடை வாவுறு கோளரி போல" (கம்பரா.பஞ்சசே, 63).*

வாவு[2] *vāvu,* பெ.(n.) 1. காருவா; the new moon day. 2. வெள்ளுவா, the full moon day. 3. விடுமுறை நாள்; holidays, school holiday, vocation, as given especially on the new moon and the full moon days.

[உவவு → வாவு]

வாவுக்காசு *vāvu-k-kāšu,* பெ.(n.) சிற்றூர்ப் பள்ளிக் கூடங்களில் வாவு நாட்களில் மாணவர்கள் ஆசிரியர்க்கு உதவும் பணம்; holidays gift of coin of small value presented by the pupil to the teacher on the new moon and full moon day in village schools.

[உவவு → வாவு → காசு]

வாவுத்தன் *vāvuttaṉ,* பெ.(n.) தோணியின் முன்பக்கம் (வின்.); prow of a vessel.

வாவுமுறை *vāvu-muṟai,* பெ.(n.) விடுமுறை (இ.வ.); vacation.

[வாவு + முறை]

வாவொட்டான் *vāvoṭṭāṉ,* பெ.(n.) கொட்டைப் பாக்கு; areca nut.

வாழ்[1]-தல் *vāḻ-,* 4 செ.கு.வி. (v.i.) 1. இருத்தல்; to be exist. 2. வாழ்ந்திருத்தல்; to live. *"வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை" (குறள், 1124).* 3. செழித்திருத்தல்; to flourish, prosper. *"வாழ்க வந்தணர் வானவ ரானினம்" (தேவா. 1177, 1).* 4. மகிழ்தல்; to be happy. *"செம்பொற் குன்றினைக் கண்டு வாழ்ந்து" (திருவாலவா. 61, 18).* 5. மனைக் கிழத்தியாக இருத்தல் (கொ.வ.); to live the life of a married woman (colloq). 6. விதிப்படி ஒழுகுதல்; to shape one's life according to a definite set of rules. *"தந்திரத்து வாழ்து மென்பார்" (ஆசாரக். 35), "வாழ்வாருக்குச் சீதேவி வாயிலே" (பழ.).*

தெ., ம., து. வாளு; **Ko.** *va-ḷ*; **Kod.** *ba-ḷ*; **Tu.** *baḷani*; **Nk.** batt; **Go.** *badaktōr*; **Kui.** *bārti.*

வாழ்[2] *vāḻ,* பெ.(n.) முறைமை (பிங்.); regularity, order.

தெ., க. வாளி.

வாழ்க்கை *vāḻkkai,* பெ.(n.) 1. சீவிக்கை; livelihood, living. *"வரு முன்னர்க் காவாதான் வாழ்க்கை" (குறள், 435).* 2. வாழ் நாள்; life-time, career. *"நெடுவாழ்க்கை" ஆசாரக். 3).* 3. இல்வாழ்க்கை; married life. *"பழியஞ்சிப் பாத்தூ ணுடைத் தாயின் வாழ்க்கை" (குறள், 44).* 4. மனைவி (யாழ்அக.); wife. 5. நல்வாழ்வு நிலை (யாழ்.அக.); happy state. 6. செல்வ நிலை (பிங்.); wealth, felicity, prosperity. 7. ஊர்

(சூடா.); village, town. 8. மருதநிலத்தூர் (திவா.); agricultural town. *'வாழ்க்கை கொடுத்தவன் கையில் வாழ்நாள் அடைக்கலம்' (பழ.).*

[வாழ் → வாழ்க்கை]

வாழ்க்கைக்குறிப்பு *vāḻkkai-k-kuṟippu,* பெ.(n.) ஒருவரின் வாழ்க்கையைப் பற்றிய குறிப்பிடத் தக்க விளக்கங்கள்; biographical details.

[வாழ்க்கை + குறிப்பு]

வாழ்க்கைத்துணை *vāḻkkai-t-tuṇai,* பெ.(n.) மனையாள்; wife. *"தற்கொண்டான் வளத் தக்காள் வாழ்க்கைத் துணை" (குறள்,51).*

[வாழ்க்கை + துணை]

வாழ்க்கைப்படு-தல் *vāḻkkai-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) திருமணமாதல்; to be married, to become a wife. *"வாழ்க்கைப் பட்டாள் கயற்கண்ணியே" (தனிப்பா. ii, 1, 1).*

[வாழ்க்கை + படு-,]

வாழ்க்கைப்படுத்து-தல் *vāḻkkai-p-paḍūttu-,* 4 செ.குன்றாவி. (v.t.) திருமணம் செய்து கொடுத்தல் (சீவக. 1490, உரை); to give in marriage.

[வாழ்க்கைப்பூடு → வாழ்க்கைப்படுத்து-,]

வாழ்க *vāḻga,* வி.மு.(v.) வாழ்த்திக் கூறும் போது பயன்படுத்தும் வினைவடிவம்; an optative form meaning live.

[வாழ் + க. க-வியங்கோள் வினைமுற்று விகுதி]

வாழ்கிறவள் *vāḻgiravaḷ,* பெ.(n.) 1. கணவனோடு வாழ்பவள் (கொ.வ.); married woman living with her husband. 2. வாழ்வரசி; married woman.

[வாழ் → வாழ்கிறவள்]

வாழ்குண்டம் *vāḻ-kuṇḍam,* பெ.(n.) மூலாதாரம்; one of the six centres of the human body situated in the anal region. Its God is vigneswarar and Goddess is *kuṇḍaliṉi,* literally means root of or source of *ātharam.*

வாழ்கொளிபுத்தூர் *vāḻkoḷi-puttūr,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்தில் சுந்தரரால் பாடல் பெற்ற சிவத்தலம்; a saiva place, having the distinction of being sung by saint Sundarar. *"மலைத்த செந்நெல் வயல் வாழ்கொளி புத்தூர்" (57).*

[வாழ்கொளிபுத்தூர் → புத்தூர் → புற்றூர்]

வாழ்ச்சி *vāḻcci,* பெ.(n.) 1. வாழ்க்கை; living. *"நிலையின் வாழ்ச்சியின்" (தொல். சொல். 80). "நின் தாளிணைக் கீழ் வாழ்ச்சி (திவ். திருவாய். 3, 2, 4).* 2. செல்வநிலை; prosperity, wealth, felicity. 3. வெற்றியாகிய செல்வம்; felicity of victory. *"வேந்து மெய்ம் மறந்த வாழ்ச்சி" (பதிற்றுப். 56, 7).*

[வாழ் → வாழ்ச்சி]

வாழ்ச்சிப்படுத்து-தல் *vāḻcci-p-paḍuttu,* 4 செ.குன்றாவி. (v.t.) வாழ வைத்தல்; to cause to prosper. *"வாய்மொழி மருங்கினான் அவனை வாழ்ச்சிப்படுத்தலின்" (தொல். பொ. 90, உரை).*

[வாழ் → வாழ்ச்சி + படுத்து-,]

வாழ்செடிப்பூண்டு *vāḻ-ceḍi-p-pūṇḍu,* பெ.(n.) பொற்றலைக் கையாந்தகரை என்னும் மூலிகை; a variety of eclypta prostata bearing yellow flowers. (சா.அக.).



வாழ்த்தணி *vālttaṇi*, பெ.(n.) இன்னார்க்கு இன்ன நன்மை இயைக வென்று முன்னியது விரிக்கும் அணி வகை (தண்டி. 88); figure of speech expressing benediction of special benefits desired by the poet for particular persons.

[வாழ்த்து + அணி]

"இன்னார்க் கின்னது இயைக என்றுதா
முன்னியது கிளத்தல் வாழ்த்தென மொழிப"
(தண்டி.88).

(எ-டு)
மூவாத் தமிழ்பயந்த முன்னூல் முனிவாழி
ஆவாழி வாழி யருமறையோர்-காவிரிநாட்
டண்ண லனபாயன் வாழி யவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை.

வாழ்த்தாரம் *vālttāram*, பெ.(n.) வாழ்த்து (இ.வ.); benediction, used in irony.

[வாழ்த்து + ஆர் → ஆரம்]

வாழ்த்தியல் *vālttiyal*, பெ.(n.) தலைவனைப் புலவன் வாழ்த்தும் புறத்துறை (புறநா.2, துறைக்குறிப்பு); theme describing the praise bestowed on a chief by a bard.

வாழ்த்தியல் எ-டு,
"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரு மென்றாங்கு
ஐம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்
வலியும் தெறலும் அளியும் உடையோய்"
(புறநா.2.1-8).

[வாழ்த்து + இயல்]

வாழ்த்து[1]-தல் *vālttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. பாராட்டுதல்; to felicitate, congratulate, bless. 2. போற்றுதல்; to praise, applaud. *"வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சம்" (தேவா. 1203, 7).* 3. மங்கலம் பாடுதல் (யாழ்.அக.); to sing songs of benediction.

க. பாழிசு.

[வாழ் → வாழ்த்து]

வாழ்த்து[2] *vālttu*, பெ.(n.) 1. நல்வாழ்த்து; benediction, felicitation. 2. போற்றி; praise. *"அவளுயிரை மாய்த்தானை வாழ்த்தே வலி" (திவ். இயற். பெரிய திருவந். 40).* 3. நூலின் தொடக்கத்துக் கூறப்படும் மங்களாசனை மூன்றனுட் கடவுளை வாழ்த்துகை; invocation or praise of the deity at the begining of a religious or literary work; one of three *maṅgaḷāšaraṇai.* (Q.V.). *"வாழ்த்து வணக்கம் வருபொருளிவற்றி னொன்று ஏற்புடைத்தாகி" (தண்டி.7). (தொல். பொ. 421, உரை.).* 4. மங்களம் பாடுகை (சங்.அக.); singing songs of benediction. 5. வாழ்த்தணி பார்க்க (தண்டி.86); see *vālttaṇi.*

க. பாழிசு

[வாழ் → வாழ்த்து]

வாழ்த்துரை *vāltturai*, பெ.(n.) பாராட்டுரை; benediction. *"மூத்தவர் பின்னவர்க்கு வாழ்த்துரை பேசல் வேண்டும்" (கரஞ்சிப்பு.*

ஒழுக்கப். 12).

[வாழ்த்து + உரை]

வாழ்த்துரை வகைகள் :

இயன்மொழி வாழ்த்து, புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து என வாழ்த்துரை மூவகைப்படும்.

ஒருவருடைய சிறந்த பண்புகளையும் அரிய ஆற்றல்களையும் எடுத்துரைத்துப் புகழ்வது அல்லது வாழ்த்துவது, இயன்மொழி வாழ்த்து.

அடுத்தூர்ந் தேத்திய இயன்மொழி வாழ்த்தும்.

(தொல்.புறத்.:35)

மயலறு சீர்த்தி மான்றோர் மன்னவன்.
இயல்பே மொழியினும் அத்துறை யாகும்.

(பு.வெ.9:195)

கடவுள் (அல்லது நீ வணங்கும் தெய்வம்) உன்னைப் பாதுகாக்க, நீ வழிவழி செல்வத்தோடு சிறந்து விளங்குக என்று, ஒருவரை வாழ்த்துவது புறநிலை வாழ்த்து.

வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே.....

(தொல்.செய்.109)

நோயாளிக்கு முன்பு கசப்பாகவும் காரமாகவுமிருந்து வருத்தினும், பின்பு நலம் பயக்கும் மருந்து, போன்று நெறி தவறியவருக்கு அல்லது அறியாதவருக்கு முன்பு கேட்பதற்கு வெறுப்பாக இருப்பினும், பின்பு நன்மை பயக்கும் நல்லறிவுரை கூறுவது வாயுறை வாழ்த்து.

வாயுறை, மருந்து.

வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்(று)
ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே.

(தொல்.செய்.111)

வாழ்த்துதல் என்பது ஒருவரை நலமாக நீடு வாழவைத்தல், அது. முற்றத் துறந்த முழு முனிவரான நிறைமொழி மாந்தர் அல்லது ஆன்றவிந் தடங்கிய சான்றோர் "நீடு வாழ்க" என்று சொல்வதனாலும், மூதறிஞர் கூறும் அறவுரை அல்லது அறிவுரையாலும் நிகழும். தனிப்பட்டவர்க்கு இவ்விரு வழியும் இயலும்: ஒரு தொகுதியார்க்கோ பின்னதே ஏற்கும்.

திருவள்ளுவர், உலகினர் அனைவர்க்கும், சிறப்பாகத் தமிழர்க்கு, உரைத்த அறவுரையும் அறிவுரையுமான திருக்குறள், திருவள்ளுவ மாலையில் மதுரை யறுவை வாணிகன் இளவட்டனார் என்னும் புலவர் பெயரிலுள்ள.

இன்பமுந் துன்பமும் என்னும் இவையிரண்டும்
மன்பதைக் கெல்லாம் மனமகிழ – அன்பொழியா
துள்ளி யுணர வுரைத்தாரே யோதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து.

என்னும் வெண்பாவின்படி, 'வாயுறை வாழ்த்து' எனப்படினும் உண்மையிற் 'புறநிலை வாழ்த்து'ங் கலந்ததேயாகும்.

இயன்மொழி வாழ்த்திற் கடவுள் வாழ்த்தும் அடங்குவதனாலும், கடவுளை ஒருவர் புகழ்வதன்றி வாழவைத்தல் என்பது பொருந்தாமையாலும், மாந்தரைப் புகழ்வதற்கும் கடவுளைப் புகழ்வதற்கும் வேறுபாடுண்மையாலும், கடவுள் வாழ்த்திலுள்ள சிறப்பான அச்சத்தோடு கூடிய அன்பு வணக்கத்தைக் குறித்தற்கு. வாழ்த்து என்னும் சொல்லின்று வழுத்து (வ.ஸ்துதி) என்னும் சொல் திரிக்கப்பட்டது.

வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று. (குறள்.1317).

என்னும் திருக்குறளில், வழுத்தினாள் என்னுஞ் சொல்லை வாழ்த்தினாள் என்னும் பொருளில் திருவள்ளுவர் ஆண்டிருப்பினும், அதைப் பாவலன் உரிமை (poetic licence) யென்றே அமைத்தல் வேண்டும்.

கடவுளை வழுத்தும் சிறப்பான கலிப்பா வகைகள் தேவபாணியெனப்படும். ஆரியர் தமிழகம் வந்தபின் "வருணப் பூதர் நால்வகைப் பாணியும்" (சிலப்.6,35-6) எனச் சிறுதெய்வ வழுத்தும் தேவபாணியெனப்பட்டமையால், முத்தொழில் புரிவோன் என்னுங் கொள்கைபற்றிக் கடவுளையொத்த சிவன் அல்லது திருமால் வழுத்துகள் பெருந்தேவபாணியெனப்பட்டன.

– தேவநேயம். 13.78 – 79.

வாழ்த்தெடு-த்தல் *vālteḍu-*, 4 செ. குன்றாவி. (v.t.) 1. பராவுதல்; to praise. *"சுரிசங்கம்... யாதென்று வாழ்த்தெடுப்பேன்" (குலோத். கோ. 321).*

[வாழ்த்து + எடு-.]

வாழ்நர் *vālnar*, பெ.(n.) வாழ்வோர்; inhabitants, residents. *"தென்புல*

வாழ்நர்க் கருங்கட னிறுக்கும் பொன்போற் புதல்வர்" (புறநா.9).

[*வாழும் → வாழுமர் → வாழுநர்*]

வாழ்நாள் *vāḷ-nāḷ*, பெ.(n.) ஆயுட்காலம்; lifetime. *"வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டலம்"* (நாலடி.22).

[*வாழ் + நாள்*]

வாழ்நாட் பல்லாண்டு வரம்பு விழாக்கள்

மக்களின் மண்ணுலக வாழ்நாட் பேரெல்லை வரவரக் குறைந்து, இன்று நூறாண்டாகக் கொள்ளப்படுகின்றது.

"மாந்தர்க்கு வயது நூறல்ல தில்லை" என்பது கபிலரகவல். ஒருவர் தாம் நினைத்தவுடன் எதிர்வந்து நிற்கும் உறவினரையோ நண்பரையோ பார்த்து, உங்கட்கு அகவை நூறு (நூறாண்டு) என்பது உலக வழக்கு. 'மக்கள் நூறாண்டு வாழ்க்கை' என்று ஒரு நூலும் மறைமலையடிகள் எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

"ஆறிலும் சாவு நூறிலும் சாவு" என்னும் உண்மையினாலும், பிள்ளை பிறந்து ஓராண்டிருப்பதும் உறுதியன்மையாலும், கருவிலேயே இறந்து சாப்பிள்ளையும் வெளிப்படுவதனாலும், கால் நூற்றாண்டு, அரை நூற்றாண்டு, முக்கால் நூற்றாண்டு, நூற்றாண்டு முதலிய பல்லாண்டு வாழ்வுகள் மட்டுமின்றி, பிறந்த நாளும் ஆண்டு நிறைவு நாட்களும் பெரும்பாலும் செல்வப் பெற்றோரால் அல்லது உற்றோராற் கொண்டாடப் படுகின்றன.

குழவியோ பிள்ளையோ இளந்தையரோ வளர்ச்சி முற்றிய ஆளோ சேதமின்றிக் காக்கப்பட்டு வந்தமைபற்றி, இறைவனுக்கு நன்றியொடு காணிக்கை செலுத்துவதும், இயன்றளவு பணஞ் செலவிட்டு உற்றார் உறவினருடன் உண்டாடி மகிழ்வதும், இக் கொண்டாட்டங்களின் நோக்கமாகும்.

அரசன் அல்லது அரசி பிறந்தநாள் ஆட்டை விழா, நாண் மங்கலம் என்றும், வெள்ளணி விழா என்றும் சொல்லப்பெறும்.

மேனாடுகளில் தோன்றிய கால் நூற்றாண்டு விழா (Silver Jubilee) வெள்ளிவிழா என்றும், அரை நூற்றாண்டு விழா பொன் விழா (Golden Jubilee) எனப்படும். விகத்தோரியா (Victoria) அரசியார் ஆட்சியின் அறுபான் ஆட்டை விழா 1987 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. வயிர விழாவை மணிவிழா என்றுங் கூறலாம்.

அறுபது நாழிகை ஒரு நாளென்றும், அறுபது நாள் ஒரு பெரும்பொழுது என்றும் காலக் கணிப்புண்மையும் 'அறுபதிற்கு மேற் கிறுகிறுப்பு' என்னும் கீழ்நாட்டுக் கொள்கையும், வலுவிறக்கத் (Climacteric) தொடக்கம் அறுபதாமாண்டென்னும், மேனாட்டுக் கொள்கையும் கி.மு.57-ல் தொடங்கிய விக்கிரம சகாத்தம் என்னும் அறுபானாண்டு மானத்திற்கும், அறுபானாட்டை விழாவிற்கும் கரணியமா யிருந்திருக்கலாம்.

முக்கால் நூற்றாண்டிற்கும் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட எண்பான் ஆட்டை விழாவைக் கதிரிய விழா (Radium Jubilee) என்னலாம்.

நூற்றாண்டிற்கு மேற்பட்ட கால விழாவை அருட்கதிர் விழா எனல் தகும். இரசிய தேசச் சாக்சியா நாட்டு சிராலி மிசிலிமோவ் (Shirali Mislimov) என்பவர் 168 ஆண்டுகளும் அவருடைய துணைவியார் பக்கு தாழி (Baku Tadzhi) என்பார் 107 ஆண்டுகளும் வாழ்ந்தனர்.

-தேவநேயம்.13. பக்.81-82.

வாழ்மகி *vāḷ-magi*, பெ.(n.) புண்ணிய வரசு; holy tree, ficus religiosa.

[*வாழ் + மகி*]

வாழ்மடந்தை *vāḷ-maḍandai*, பெ.(n.) வைப்பரிதாரம்; a prepared orpiment.

[*வாழ் + மடந்தை*]

வாழ்முதல் *vāḷ-mudal*, பெ.(n.) கடவுள் (வாழ்வுக்கு முதற்காரணன்); God, as the source or first cause of existence. *"மற்றடியேன்றன்னைத் தாங்கு நரில்லை யென் வாழ் முதலே"* (திருவாச. 6, 23).

[*வாழ் + முதல்*]

வாழ்மூலம்பாலி *vāḷ-mūlam-pāli*, பெ.(n.) புத்தான் பவளம்; one of 120 kinds of natural substances in the tamil medical science.

[வாழ் + மூலம் + பாலி]

வாழ்வரசி *vāḻ-varaši*, பெ.(n.) வாழ்கிறவள் (இ.வ.) பார்க்க; see *vāḻgiṟavaḷ*.

[வாழ்வு + அரசி]

'மனைக் கிழத்தியை வாழ்வரசி என்பது நெல்லை நாட்டு வழக்கு' (த. தி. முன். vi)

வாழ்வாட்டி *vāḻ-v-āṭṭi*, பெ.(n.) வாழ்கிறவள் (சங்.அக.) பார்க்க; see *vāḻgiṟavaḷ*.

[வாழ்வு + ஆள் → ஆட்டி]

வாழ்வாடிச்சி *vāḻ-v-āḍicci*, பெ.(n.) வாழ்கிறவள் (யாழ்.அக.) பார்க்க; see *vāḻgiṟavaḷ*.

[வாழ்வு + ஆடு → வாழ்வாடு → வாழ்வாடிச்சி]

வாழ்வி-த்தல் *vāḻvi-*, 11 செ.குன்றாவி. (v.t.) 1. வாழ வைத்தல்; to cause or help one to live. *"வாழ்விப்பா னெண்ணமோ" (அஷ்டப். நூற்றெட். 47).* 2. முறைமன்றம் மூலமாகச் சொத்தை உரியவனுக்கு ஒப்படைத்தல் (நெல்லை.); (legal) to deliver possession through court.

[வாழ் → வாழ்வி]

வாழ்விப்பு *vāḻvippu*, பெ.(n.) முறைமன்றம் மூலமாகச் சொத்தை உரியவனிடம் ஒப்படைக்கை; (legal) delivery of possession through court.

[வாழ்வி → வாழ்விப்பு]

வாழ்விழ-த்தல் *vāḻviḻa-*, 4 செ.கு.வி. (v.i.) 1. கைம்பெண்ணாதல்; to be widowed. 2. மனைவியை இழத்தல் (இ.வ.); to become a widower.

[வாழ்வு + இழ-.]

வாழ்விழந்தவள் *vāḻviḻandavaḷ*, பெ.(n.) அறுதலி (யாழ்.அக.); widow.

மறுவ. கைம்பெண்

[வாழ்வு + இழந்தவள்]

வாழ்வினை *vāḻ-viṉai*, பெ.(n.) ஆதனால் (ஆன்மா) அடையப்பெறும் நயன்மை முதலான ஐவகைப்பேறு; objectives of human pursuit. *"ஊழ்வினையும் வாழ்வினையு மோதுங் குருகையர்கோன்... வேதத்தியல்" (திவ். திருவாய். தனியன்).*

வாழ்வு *vāḻvu-*, பெ.(n.) 1. நல்வாழ்க்கை; prosperity, happiness, felicity, happy life. *"என்னிதன் மேலவட் கெய்தும் வாழ் வென்றாள்" (கம்பரா. மந்தரை. 49).* 2. பிழைப்பு; livelihood, living, career. *"வாழ்வின் வரை பாய்த னன்று" (நாலடி. 369).* 3. வாழ்க்கைச் செலவுக்காக விடப்படும் இறையிலி நிலம்; endowment of land for maintenance. *"மன்னிங்கு வாழ்வு தருதும்" (சீவக. 2347).* 4. உறை (பொரு. நி.); residing. 5. உறைவிடம்; residence. *"மதியொன்ற வுதைத்தவர் வாழ்வு" (தேவா. 276, 2).* 6. ஊர் (பொரு.நி.); town. 7. உயர்ந்த பதவி; high state or position. *"கொள்ளேன் புரந்தான் மாலயன் வாழ்வு" (திருவாச. 6, 5).* 8. செல்வம்; wealth. *"ஏத்தி வந்தார்க்கு வந்தீயும் வாழ்வு" (பு. வெ. 4, 12).* 9. முறைமை (யாழ்.அக.); course, system.

'வாழ்வும் சிலகாலம்; தாழ்வும் சிலகாலம்' (பழ.)
'வாழ்வைத் தள்ளினாலும் சாவைத் தள்ளப்படாது' (பழ.)

[வாழ் → வாழ்வு]

வாழ்வுதாழ்வு *vāḻvu-tāḻvu*, பெ.(n.) ஒருவன் வாழ்க்கையில் ஏற்படும் செல்வ நிலையும் வறுமை நிலையும்; prosperity and adversity.

[வாழ்வு + தாழ்வு]

வாழ்னாதி *vāḻ-ṉādi,* பெ.(n.) தூதுவளை; a thorny climber.

வாழகம் *vāḻagam,* பெ.(n.) வெள்ளைக் குங்கிலியம் (மலை.); konkany resin.

வாழபுட்பி *vāḻapuṭpi,* பெ.(n.) முல்லை (மலை); arabian Jasmine.

[வாலபுட்பி → வாழபுட்பி. புஷ்பம் → புட்பம் → புட்பி]

வாழமணத்தாள் *vāḻā-maṉattāḷ,* பெ.(n.) பூநீர்; salt obtained from fuller's earth or from the efforessence grown on the soil of fuller's earth.

[வாழ + மணத்தாள்]

வாழாக்குடி *vāḻā-k-kuḍi,* பெ.(n.) வாழா வெட்டி (யாழ்.அக.) பார்க்க ; see *vāḻā-veṭṭi.*

[வாழ் + ஆ + குடி. 'ஆ' எ.ம.இ.நி.]

வாழாக்கேடி *vāḻā-k-kēḍi,* பெ.(n.) மணமாகாதிருப்பவள் (யாழ்.அக.); unmarried woman, spinster.

[வாழ் + ஆ + கேடி. 'ஆ' எ.ம.இ.நி.]

வாழாக்கொடி *vāḻā-k-koḍi,* பெ.(n.) வாழா வெட்டி (இ.வ.) பார்க்க; see *vāḻā-veṭṭi.*

[வாழ் + ஆ + கொடி]

வாழாண்டி *vāḻāṇḍi,* பெ.(n.) புளி; tamarind.

வாழாத்திப்போளம் *vāḻātti-p-pōḷam,* பெ.(n.) சுறாலை (சாம்பிராணி) வகை (யாழ்ப்.); gum-myrrh.

[வாலதிப்போளம் → வாழாத்திப்போளம்]

வாழாதவள் *vāḻādavaḷ,* பெ.(n.) 1. வாழா வெட்டி பார்க்க; see *vāḻā-veṭṭi.* 2. கைம் பெண்; widow.

[வாழ் + ஆ + (த்) அவள். 'ஆ' எ.ம.இ.நி.]

வாழாவெட்டி *vāḻā-veṭṭi,* பெ.(n.) கணவனோடு சேர்ந்து வாழப்பெறாதவள் (இ.வ.); married woman not living with her husband, grass widow.

[வாழ் + ஆ + வெட்டி. வெற்று → வெட்டு → வெட்டி. 'ஆ' எ.ம.இ.நி.]

வாழி[1] *vāḻi,* வி.(v.opt.) வாழ்க என்னும் பொருளில் வரும் வியங்கோட் சொல் (நன். 168); optative meaning 'may you prosper'. *"தடமலர்த்தாள் வாழ" (திருவாச. 24, 6).*

[வாழ் → வாழி]

வாழி[2] *vāḻi,* அசைச். (exp.) ஓர் அசைச்சொல் (சூடா. 10, 16); an expletive.

[வாழ் → வாழி]

வாழி[3]-த்தல் *vāḻi-,* 11 செ.கு.வி.(v.i.) மதர்த்துப்போதல் (யாழ்.அக.); to be over luxuriant in growth and unproductive.

[வாழி → வாழி-,]

வாழிகூறு-தல் *vāḻi-kūṟu-,* 5 செ.கு.வி. (v.i.) அனைவரும் நலமுடன் வாழுமாறு வாழ்த்துதல்; wish every-body good luck.

[வாழி + கூறு-,]

வாழித்திருநாமம் *vāḻi-t-tirunāmam,* பெ.(n.) ஆசிரியரை வாழ்த்தும் பாடல்; poem of solutation to the *ācāryas.*

[வாழி + திரு + நாமம். நாமம் = skt.]

வாழிப்பு *vāḻippu*, பெ.(n.) மதர்ப்பு (யாழ்.அக.); over-luxuriant growth. *'வாழிப்பான ஆள்'* (இ.வ.).

[வாழி → வாழிப்பு]

வாழிய *vāḻiya*, வி.(v.opt.) 1. வாழி பார்க்க; see *vāḻi*. 2. ஓர் அசைச்சொல் (நன். 440); an expletive.

[வாழ் → வாழி]

வாழும்பாம்பு *vāḻum-pāmbu*, பெ.(n.) அகவை மிகுதியால் குட்டையாய்த் தேய்ந்து வீடுகளில் வாழும் என்று நம்பப்படுகின்ற நல்ல பாம்பு; cobra believed to grow short with age and live in houses or house-sites.

[வாழ் + பாம்பு → வாழும்பாம்பு]

வாழும்புடை *vāḻum-pudai*, பெ.(n.) பாம்புப் புற்று (நாஞ்.); ant-hill, snakehole.

[வாழும் + புடை]

வாழுமோர் *vāḻumōr*, பெ.(n.) வாழ்பவர்; those who live in prosperity. *"யாரிவ ணெடுந்தகை வாழுமோரே"* (பதிற்றுப். 71, 27).

[வாழ் → வாழ்வோர் → வாழுமோர்]

வாழை *vāḻai*, பெ.(n.) வாழையின் மரவகை; Plantain - Musa Paradisiaca. *"கொழு மடற் குமரி வாழை"* (சீவக.2716).

க.பாலெ; ம. வால; து.வாரெ; **ma.** *vara*; **Ko.** va-g; **To.** pa-w; **Ka.** *bāre*; **Kod.** *ba-le*; **Tu.** *bāre*.

[வாழ் → வாழை]

'வாழைக்குத் தானீன்ற காய் கூற்றம்' (பழ.)
'வாழ்கிற வீட்டுக்கு வாழை வைத்துப் பார்' (பழ.)

வாழை வகை

1. அக்கினீசுவர வாழை; 2. அடுக்கு மொந்தன்; 3. அடுக்கு வாழை; 4. அடைக்காக் குன்னன்; 5. அணில் வாழை; 6. அமிழ்த சாகரம்; 7. அமிருத பாணி; 8. அனுப்பன்; 9. ஆட்டுக் கொம்பன்; 10. ஆட்டு நேந்திரன்; 11. ஆயிரங்காய்ப் பூவன்; 12. ஆயிரங்காய் வெண்கதலி; 13. ஆனைக் கொம்பன்; 14. இலைவாழை; 15. ஈனா வாழை; 16. எரிச்சி வாழை; 17. என்னபனியன்; 18. ஏத்தசிங்கன்; 19. ஏலக்கிபாளை; 20. கப்பூர்; 21. கரிவாழை; 22. கல் வாழை; 23. கருங்கதலி; 24. கருவாழை; 25. கல்மொந்தன்; 26. கற்பூரவாழை; 27. கனயல்; 28. காஞ்சக்கேல; 29. காட்டா வாழை; 30. காட்டிலவு; 31. காட்டு இருப்பை; 32. காட்டு வாழை; 33. காபூலி வாழை; 34. காளி வாழை; 35. கானாம் வாழை (கொட்டை வாழை); 36. குழிப்பூவன்; 37. குள்ள வாழை; 38. குறி பொந்தா; 39. கொம்பு வாழை; 40. கொம்மரட்டி; 41. சக்கரக்கேளி; 42. சப்பீடவெல்சி; 43. சம்பா; 44. சாம்பல் மொந்தன்; 45. சாம்பல் மொந்தன்; 46. சாம்பிராணி மொந்தன்; 47. சிங்கன் வாழை; 48. சிச்சூ வாழை; 49. சிறுப்பு வாழை; 50. சிறுமலை வாழை; 51. சின்னச் செங்கதலி; 52. சின்ன மொந்தன்; 53. சினாலி; 54. சூரியப் பாளை; 55. செவ்வாழை; 56. சோனேரி; 57. தட்டில்லாக் குன்னன்; 58. துரை வாழை; 59. தேன் குன்னன்; 60. நவரை வாழை; 61. நாங்குநேரிப்பேயன்; 62. நாட்டு வாழை; 63. நாளிப்பூவன்; 64. நெடுநேந்திரன்; 65. நெய்ப்பூவன்; 66. நெய் மன்னன்; 67. நெய்வாழை; 68. நெல்லி வாழை; 69. நேத்திரப் பள்ளி; 70. நேத்திரப் படத்தி; 71. நேந்திரன் வாழை; 72. பச்சை நாடன்; 73. பச்சைப் பந்தீசா; 74. பச்சை யரட்டி; 75. பச்சை வாழை; 76. பசராய்; 77. படத்தி; 78. பம்பாய்ப்பச்சை; 79. பன்றி வாழை; 80. பிடிமொந்தன்; 81. புட்டு வாழை; 82. பூதிப்பாளை; 83. பூநாவல்; 84. பூவன் வாழை; 85. பூவில்லாச் சுந்தன்; 86. பேய் லாடன்; 87. பேயன் வாழை; 88. பொந்தையரட்டி; 89. மகர வாழை; 90. மட்டி; 91. மதுரங்கபாவெ; 92. மயில் வாழை; 93. மர வாழை; 94. மலை மொந்தன்; 95. மலை

வாழை; 96. மனோரஞ்சிதம்; 97. மான் சுமேரி; 98. மிந்தோலி; 99. மூங்கில் வாழை; 100. பொட்ட பூவன்; 101. மொந்தன்; 102. வெள் வாழை.

ஒற்றை விதையிலை நிலைத் திணைகளில் (ஸ்கைட்டாமினியீ) என்னும் வாழைக் குடும்பத்து மூசேசியீ என்னும் உட்குடும்பத்தைச் சார்ந்த மூசா என்னும் இனம். இதிலே 80 இனங்கள் உண்டு.

வாழை மரம் ஒரு தடவையே பூக்கும்; காய்க்கும். குலைபோட்டு அது முற்றிய பிறகு மரம் பட்டுப் போகும். அதனால் குலையை வெட்டின பிறகு மரத்தையும் அடிவரையில் வெட்டி விடுவார்கள். கீழ்க் கன்று விடப்பட்டு வந்தது வளர்ந்து பெரிய மரமாகிக் குலைபோடும். அடுத்த தலைமுறையாக அதன் கீழ்க் கன்று வளர்ந்துவரும். அதற்கு மேல் வருபவை செழிப்பாக வளர்வது மில்லை. காய் நன்றாகவோ அதிகமாகவோ விடுவதுமில்லை. அப்போது வேறு இடங்களில் கன்றுகளை நட்டுப் புதிய பயிர் வளர்ப்பார்கள்.

வாழைப் பயிர் பல வகைகளில் பயன்தருகிறது. வாழைக்காய், வாழைப்பழம், வாழையிலை, வாழைச்சருகு, வாழைப்பட்டை, வாழை நார் போன்ற அனைத்துப் பாகங்களும் மக்களுக்குப் பயன்படுவனவாய் உள்ளன.

வாழைக்கச்சல் *vāḻāi-k-kaccal,* பெ.(n.) வாழையின் இளங்காய்; very young, unripe plantain fruit.

[வாழை + கச்சல். கச்சல் = வாழையிளங்காய்]

வாழைக்கட்டை *vāḻai-k-kaṭṭai,* பெ.(n.) 1. வாழைக்கிழங்கு (வின்.); large bulbous root of the plantain tree. 2. வாழைத் தண்டு (இ.வ.) பார்க்க ; see *vāḻai-t-taṇḍu.*

[வாழை + கட்டை]

வாழைக்கன்று *vāḻāi-k-kaṉṟu,* பெ.(n.) வாழை மரத்தின் கிழங்கினின்று உண்டாகும் இளவாழை; plantain sucker or shoot.

[வாழை + கன்று]



வாழைக்காய்[1] *vāḻāi-k-kāy,* பெ.(n.) துவர்ப்புச் சுவையுடைய வாழையின் காய்; fruit of plantain it is used as vegetable. *'வாழைக்காய்ப் பொரியல்'.*

[வாழை + காய்]

'வாழைக்காய் உப்புறைத்தல் இல்' (பழ.)

வாழைக்காய்[2] *vāḻai-k-kāy,* பெ.(n.) அரையாப்புக் கட்டி; bubo.

[வாழை + காய்]

வாழைக்காய்த்தட்டுவாணி *vāḻāi-k-kāy-t-taṭṭuvāṇi,* பெ.(n.) குட்டையான குதிரை வகை (இ.வ.); a kind of short horse, pony.

[வாழை + காய் + தட்டுவாணி]

வாழைக்குட்டி *vāḻāi-k-kuṭṭi,* பெ.(n.) வாழைக்கன்று (யாழ்.அக.) பார்க்க; see *vāḻai-k-kaṉṟu.*

[வாழை + குட்டி]

வாழைக்கொல்லை *vāḻāi-k-kollai,* பெ.(n.) வாழைத்தோட்டம் (இ.வ.); plantain tope.

[வாழை + கொல்லை]

வாழைத்தடல் *vāḻāi-t-taḍal,* பெ.(n.) வாழை மரத்தின் பட்டை (இ.வ.); sheathing petiole of the plantain, plantain bark.

[வாழை + தடல்]

வாழைத்தடை *vāḻāi-t-taḍai,* பெ.(n.) வாழைத்தடல் பார்க்க; see *vāḻai-t-taḍal.*

[வாழை + தடை]

வாழைத்தண்டு *vāḻāi-t-taṇḍu,* பெ.(n.) 1. வாழை மரத்தின் தலைப்பகுதி நீங்கிய நடுத்தண்டு; stem of the plantain tree. *"வாளை... வாழைத் தண்டிற் பல துஞ்சும்" (சீவக. 2601).* 2. வாழை மரத்தின் பட்டையை உரித்த பின் உட்புறத்திருப்பதும் சமைத்துண்டற்குரியதுமான உறுப்பு (கொ.வ.); internal edible spadix of the plantain tree.

[வாழை + தண்டு]



வாழைநீர் *vāḻai-nīr,* பெ.(n.) எலும் புருக்கியைப் போக்கும் வாழை மரத்தண்டை இடித்து எடுக்கும் நீர், வாழைக் கிழங்கில் சுரக்கும் நீர்; liquid squeezed or it from the plantain stalk, if a pit is made in the stump of the plantain tree fluid will accumulate in it and it can be drawn out, it is diuretic.

[வாழை + நீர்]

வாழைப்பட்டை *vāḻāi-p-paṭṭai,* பெ.(n.) வாழைத்தடல் பார்க்க; see *vāḻai-t-taḍal.*

[வாழை + பட்டை]

வாழைப்பழத்தி *vāḻāi-p-paḻatti,* பெ.(n.) சனகிப்பூண்டு (யாழ்.அக.); buffalo-tongue milk-hedge.

மறுவ. எருமை நாக்கிப் பூண்டு.

[வாழை + பழத்தி]

வாழைப்பழம் *vāḻai-p-paḻam,* பெ.(n.) முக்கனியுள் ஒன்றான பழுத்திருக்கும் வாழையின் காய்; banana. *'வாழைப் பழத்தில் ஊசியேற்றினாற் போல' (பழ.)*

[வாழை + பழம்]



வாழைப்பிஞ்சு *vāḻāi-p-piñju,* பெ.(n.) வாழைக்கச்சல் பார்க்க; see *vāḻai-k-kaccal.*

[வாழை + பிஞ்சு. பிஞ்சு = இளங்காய்]

வாழைப் பிஞ்சினால் அரத்தக் கடுப்பு, அரத்த மூலம், அதிமூத்திரம், வயிற்றுப்புண் ஆகியன போகும் எனச் சாம்பசிவம் பிள்ளை மருத்துவ அகரமுதலி கூறும்.

வாழைப்புருதி *vāḻai-p-purudi,* பெ.(n.) வைடூரியம்; one of nine gems.

[வாழை + புருதி]

வாழைப்பூ[1] *vāḻai-p-pū,* பெ.(n.) மீன் (மதி.க.ii,38); a cant term for fish.

[வாழை + பூ]

வாழைப்பூ[2] *vāḻāi-p-pū,* பெ.(n.) வாழையின் பூ; Plantain flower clusters sheathed in spathes.

[வாழை + பூ]



வாழைப்பூவிளக்கு *vāḻāi-p-pū-viḷakku,* பெ.(n.) குத்து விளக்கு வகை (இ.வ.); lamp with a bowl shaped like a sheathing spathe of a plantain flower.

[வாழைப்பூ + விளக்கு]

வாழைமட்டம் *vāḻāi-maṭṭam,* பெ.(n.) வாழைக்கன்று (யாழ்.அக.) பார்க்க; see *vāḻai-k-kaṉṟu.*

[வாழை + மட்டம்]

வாழைமடல் *vāḻāi-maḍal,* பெ.(n.) 1. வாழைத்தடல் பார்க்க; see *vāḻai-t-taḍal.* 2. வாழைப்பூவின் மடல்; sheath of a bunch of plantain flowers.

[வாழை + மடல்]

வாழைமலடி *vāḻāi-malaḍi,* பெ.(n.) ஒரே பிள்ளையைப் பெற்றவள்; woman who has borne a single child, considered barren. *"அவள் வாழை மலடியாதலால் – புத்திரவதி யல்லள்" (குருபரம். பக். 198, கீழ்க்குறிப்பு).*

ஒ.நோ. கதலிமலடு.

[வாழை + மலடி]

வாழைமுகை *vāḻāi-mugai,* பெ.(n.) வாழையின் பூ (சீவக. 74, உரை); flower of plantain.

[வாழை + முகை]

வாழையடிவாழை *vāḻāi-y-aḍi-vāḻai,* பெ.(n.) இடையறாது தொடர்ந்து வரும் வழிமரபு; unbroken lineage as plantain suckers from one root. *"வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில்" (அருட்பா. VI, பிரியே. 4).*

மறுவ. கால்வழி.

[வாழை + அடி + வாழை]

"தந்தை மகன் வழிமுறையாக அல்லது ஆசிரிய மாணவ வழிமுறையாகத் தொடர்ந்து வரும் வரன்முறையை வாழையடி வாழை முறை என்பர்"
– (தேவநேயம் 13. பக்.82)

வாழைவலை *vāḻāi-valai,* பெ.(n.) சிறு கண்களையுடைய வலை (இ.வ.); net of small mesh.

[வாழை + வலை]

வாழைவெட்டிக்கலியாணம் *vāḻāi-veṭṭi-k-kaliyāṇam,* பெ.(n.) மூத்த மகனுக்குத் திருமணம் ஆகாதிருக்கும் பொழுது இளையவனுக்கு ஏற்பாடானால் வாழை மரத்தை முதல் மகனுக்குக் கட்டுவிக்கும் திருமணம்; fictitious marriage of an elder brother with a plantain tree adorned as

his bride, in order to enable his younger brother to marry.

[வாழை + வெட்டு + கலியாணம்]

வாள்[1] *vāḷ*, பெ.(n.) 1. ஒளி (தொல். சொல். 367); lustre, light, splendour. *"வாண்முகம்" (புறநா. 6).* 2. விளக்கம்; brightness. *"மாலை வாள் கொளா" (கலித். 119).* 3. புகழ்; fame. *'வலைய வாளராமீது' (தக்கயாகப். iii, உரை).* 4. கூர்மை (அரு.நி.); sharpness, fineness. 5. கொல்லுகை (தொல். எழுத். 401, உரை); killing. 6. கொடுமை; cruelty. *"வாளரக்கி".* 7. கத்தி; sword, scimitar. 8. ஈர்வாள்; saw. *"நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும் வாள துணர்வார்ப் பெறின்" (குறள், 334).* 9. கலப்பை (நாமதீப. 470); plough. 10. உழுபடையின் கொழு; ploughshare. 11. கத்திரிக்கோல்; scissors. *"வாளிடைப்படுத்த வயங்கீரோதி" (கலித்.36).*

தெ. வாலு; **ma.** *vāḷ*, **To.** *po-ḷ*, **Ka.** *bālu*, **Kod.** *ba-ḷikatti*, **Tu.** *bāḷu*, **Te.** *vālu.*

'வாளுக்கு ஆயிரம் தோளுக்கு ஆயிரம் சம்பாரித்தாலும் மட்டாய்ச் செலவிடு' (பழ.).

[வள் → வாள்]



வாள்[2] *vāḷ*, பெ.(n.) கயிறு (அக.நி.); string.

வாள்[3] *vāḷ*, பெ.(n.) நீர் (அக.நி); water.

வாள்[4] *vāḷ*, பெ.(n.) கச்சு (அக.நி.); bodice.

வாள்அலங்காரம் *vāḷ-alaṅgāram*, பெ.(n.) தண்டபாணி அடிகளால் கி.பி.19 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற நூல்; a book written by *Taṇḍabāṇi swami* in 19th century.

[வாள் + அலங்காரம்]

வாள்கைக்கொண்டாள் *vāḷ-kai-k-koṇḍāḷ*, பெ.(n.) கொற்றவை (சூடா.); *durgā.*

[வாள் + கை + கொண்டாள்]

வாள்செலவு *vāḷ-šelavu*, பெ.(n.) எதிர்த்து வந்த அரசனது பொருபடையிடத்து எதிரூன்றும் வேந்தன் தன் அரசவாளை முன்னதாக விடுத்தலைக் கூறும் புறத்துறை (பு.வெ.4, 7); (purap.) theme which describes a king sending his sword in advance while commencing action against an invading enemy.

(கொளு.) "அருமுனையான் அறைகூவினபின்
செருமுனைமேல் வாள்சென்றன்று"
(பு.வெ.4 – 7).

வஞ்சியார் போர்க்கழைத்தபின் அவர் படையிடத்தே காஞ்சியரசன் வாளினைப் போகவிடுதல் வாள்செலவு என்னும் துறையாம்.

எ–டு:

"உணங்கு புலவறா ஒன்னார குரம்பை
நுணங்கரில் வெம்முனைநோக்கி – அணங்கிய
குந்த மலியும் புரவியான் கூடாதார்
வந்தபின் செல்கென்றான் வாள்"

[வாள் + செலவு]

வாள்மங்கலம் *vāḷ-maṅkalam*, பெ.(n.) அரசனுடைய வாளைப் புகழ்ந்து உரைக்கும் புறத்துறை; (purap.) theme which

describes a king's sword.

"கயக்கருங் கடற்றானை
வயக்களிற்றான் வான்புகழ்ந்தன்று"
(பு.வெ. கொளு. 9-35).
"கொங்கவிழ் ஐம்பால் மடவார் வியன்கோயில்
மங்கலங் கூற மறங்கனலும் - செங்கோல்
நிலந்தரிய செல்லும் நிரைதண்தார்ச் சேரன்
வலந்தரிய ஏந்திய வாள்".
(பு.வெ.9-35 எ-டு)

[வாள் + மங்கலம்]

வாள்மாது *vāḷ-mādu,* பெ.(n.) கொற்றவை; a Goddess.

[வாள் + மாது]

வாள்மீன் *vāḷ-mīṉ,* பெ.(n.) ஒரு கடல் மீன்; sword fish.

மறுவ. ஏமங்கோலா

[வாள் + மீன்]



வாள்வட்டணை *vāḷ-vaṭṭaṇai,* பெ.(n.) வாட் போரில் இட வலமாகச் சுற்றுகை; moving to the right and left in sword play or fight. *"மன்னர்விடு சரங்க ளெல்லாம்..... வாள் வட்டணையிலே துணித்து" (பாரதவெண். 803).*

[வாள் + வட்டணை]



வாள்வரி *vāḷ-vari,* பெ.(n.) புலி; tiger, as marked with curved, brilliant stripes. *"மதகரிக் களபமும் வாள்வரிப் பறழும்" (சிலப். 25, 49).*

[வாள் + வரி]

வாள்வரிக்கொடுங்காய் *vāḷ-vari-k-koḍuṅgāi,* பெ.(n.) வெள்ளரிக்காய்; cucumber melon, as stripes. *"வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்" (சிலப்.16,25).*

[வாலரிக்கொடுங்காய் → வாள்வரிக் கொடுங்காய்]

வாள்வலம் *vāḷ-valam,* பெ.(n.) *வாள்வீரம்* பார்க்க; see *vāḷ-vīram.* *"விடலை வாள்வலங் கொண்டு காவலோம்ப" (பெருங். உஞ்சைக். 54, 141).*

[வாள் + வலம்]

வாள்வாளெனல் *vāḷ-vāḷ-eṉal,* பெ.(n.) அழுது கதறுதற்குறிப்பு; of howling, as of a dog. *"குழந்தை வாள்வாளென்கிறது".*

[வாள் + வாள் + எனல்]

வாள்வீச்சு *vāḷ-vīccu,* பெ.(n.) 1. வாளைச் சுழற்றுகை; brandishing of a sword, sword-play. 2. பரவர் நடத்தும் வாள்

விளையாட்டு; sword game, as practised among paravas.

[வாள் + வீச்சு. வீசு→வீச்சு]

வாள்வீரம்¹ *vāḷ-vīram,* பெ.(n.) வாட்போர்த் திறமை; swordsmanship, skill in the use of the sword.

[வாள் + வீரம்.ஒருகா. வால்வலம்]

வாள்வீரம்² *vāḷ-vīram,* பெ.(n.) வில்வம்; bael. *"வாள்வீரம்" (பரிபா. 11, 19).*

[மாலூர → வாள்வீரம்]

வாளகச்சிகை *vāḷa-kaccigai,* பெ.(n.) சித்திரமூலம் என்னும் மூலிகை; a shrub.

வாளகம்¹ *vāḷagam,* பெ.(n.) குந்துருக்கம்; frankincense.

வாளகம்² *vāḷagam,* பெ.(n.) வெட்டிவேர் (நாமதீப. 327); cuscuss grass.

வாளகிரி *vāḷa-giri,* பெ.(n.) உட்புறம் ஒளியும் வெளிப்புறம் கருளுங்கொண்டு நிலவுலகைச் சூழ்ந்துள்ளதாகக் கருதப்படும் மலை (சக்கரவாளம்); a mythical range of mountains. *"வாளகிரியை... நிகர்க்கு மெயிலும்" (திருவாலவா. திருநகர. 4).*

வாளத்தேலம் *vāḷa-t-tēlam,* பெ.(n.) நேர்வாளத் தெண்ணெய்; croton oil.

[வாள + தேலம்]

வாளநாதிகாமம் *vāḷanādi-kāmam,* பெ.(n.) வெள்ளை நாயுருவி; ordinary white indian burr-achyranthus aspera.

[வாள + நாதி + காமம்]

வாளப்பருப்பு *vāḷa-p-paruppu,* பெ.(n.) நேர் வாளப் பருப்பு; croton seed pulp.

[வாள + பருப்பு]

வாளப்பன் *vāḷ-appaṉ,* பெ.(n.) பழனி மலையிலுள்ள குன்றுவர் வணங்கும் ஒரு சிறு தெய்வம் (E.T.iv.122); a deity worshipped by the *Kuṉṟuvar* of the palani hills.

வாளயம் *vāḷayam,* பெ.(n.) பிரமி; a prostate plant - Gratiola moniera.

வாளம்¹ *vāḷam,* பெ.(n.) வாள்; sword. *"கையொடு புகர்வாளமும்... விழ" (பாரத. பதின்மூன். 113).*

[வாள் + அம். அம் = பெருமைப்பொருட் பின்னொட்டு]

வாளம்² *vāḷam,* பெ.(n.) யாளி (நாமதீப. 199); a mythical animal.

வாளம்³ *vāḷam,* பெ.(n.) 1. வட்டம்; circle. *"வாளமாகவோர் பவளமால்வரை... வளைந்தென்ன" (பாரத. காண்டவ. 11).* 2. சக்கரவாளம் (யாழ்.அக.); a mythical range of mountains. 3. சக்கரவாகப் பறவை; the cakra bird. *"மங்கைமார் தடமுலையெனப் பொலிவன வாளம்" (கம்பரா. பம்பை. 21).*

[வள் → வாள் → வாளம். (வ.மொ.வ.258).]

வாளம்[4] *vāḷam*, பெ.(n.) நேர்வாளம்; croton.

[வாள் → வாளம்]

வாளமலை *vāḷa-malai*, பெ.(n.) வாள்வீச்சு பார்க்க; see *vāl-viccu.* *"கழித்து வாளமலையாடி" (சீவக. 783).*

[வாள் + அமலை]

வாளரம் *vāḷ-aram*, பெ.(n.) 1. ஈர்வாளைக் கூர்மையாக்க வுதவும் அரவகை; two - edged file to sharpen the teeth of a saw. *"வாளரந் துடைத்த வைவேல்" (சீவக. 461) (வின்.).* 2. மரமறுக்கும் வாள்; saw. *'வேம்பினுடைய வாளரத்தின் வாய்போலும் விளிம்பினையுடைய அழகிய தளிரால்' (பொருந. 144, உரை).*

[வாள் + அரம்]

வாளரி *vāḷ-ari*, பெ.(n.) அரிமா (பிங்.); lion.

[வாள் + அரி]



வாளவரை *vāḷ-avarai*, பெ.(n.) கொடிவகை (பதார்த்த 707); sword-bean(m) cl, canavalia ensiformis.

மறுவ. தம்பட்டங்காய், வெள்ளையவரை.

[வாள் + அவரை]



வாளா *vāḷā*, கு.வி.எ. (adv.) 1. பேசாமல்; silently, quietly. *"வயப்பட்டான் வாளா விருப்பானேல்" (நாலடி, 325).* 2. புறக் கணிப்பாய்; indifferently. 3. பயனின்றி; uselessly, fruitlessly, vainly. *"தீவினி விளிவன் வாளா" (திவ். திருமாலை. 30).*

வாளாகம் *vāḷāgam*, பெ.(n.) முல்லைக் கொடி; a variety of jasmine creeper.

வாளாங்கு *vāḷāṅgu*, கு.வி.எ.(adv.) *வாளா* பார்க்க; see *vāḷā*. *"வாளாங்கிருப்பீர்" (தேவா. 745, 1).*

வாளாண் *vāḷāṇ*. பெ.(n.) வாளாண்மை பார்க்க; see *vāḷāṇmai*. *"வாளா ணெதிரும் பிரிவினானும்" (தொல். பொ. 107).*

ஒ.நோ. வேளாண் முகத்த களிறு (குறள்.)

[வாள் + ஆள்→ஆண்]

வாளாண்மை *vāḷ-āṇmai*, பெ.(n.) வாள்வீரம் பார்க்க; see *vāḷ-vīram.* *"வாளாண்மை செய்தற்கொத்த பிரிவு தோன்றியவழியும்" (தொல். பொருள். 107, உரை).*

[வாள் + (ஆள் → ஆண் → ஆண்மை = ஆளுந்தன்மை) ஆண்மை (குறள்.)]

வாளாது *vāḷādu,* கு.வி.எ. (adv.) வாளா பார்க்க; see *vāḷā.* *"வாளாதே போவரான் மாந்தர்கள்" (நாலடி. 30).*

வாளாமை *vāḷāmai,* பெ.(n.) பேசாதிருத்தல்; silence, quietness. *"வாய்வாளாமை... புகல்வான்" (மணிமே. 30, 245).* 2. புறக் கணிப்பு (வின்.); indifference. 3. பயனின்மை; uselessness. 4. உள் ளீடின்மை (வின்.); emptiness.

[வாளா → வாளாமை]

வாளால்வழிதிறந்தான் *vāḷāl-vaḻi-tiṟandāṉ,* பெ.(n.) பாண்டியவரசர் சிலரது பட்டப்பெயர் (I.M.P.Mr.79); appellation of certain *Pāṇḍya* Kings.

[வாள் + ஆல் + வழி + திறந்தான்]

வாளால்வழிதிறந்தான்குளிகை *vāḷāl-vaḻi-tiṟandāṉ-kuḷigai,* பெ.(n.) பழைய நாணய வகை (புதுக். கல். 325); a *Pāṇḍya* coin of ancient times.

[வாள் + ஆல் + வழி + திறந்தான் + குளிகை]

வாளால்வழிதிறந்தான்பணம் *vāḷāl-vaḻitiṟandāṉ-paṇam,* பெ.(n.) காசு வகை (புதுக்கல். 767); a kind of coin.

[வாளால் + வழி + திறந்தான் + பணம்]

வாளாவிரை *vāḷā-virai,* பெ.(n.) வாளவரை (M.M.875) பார்க்க; see *vāḷ-avarai.*

[வாளவரை → வாளவிரை]

வாளாளன் *vāḷāḷaṉ,* பெ.(n.) வாளுழவன் (பிங்.) பார்க்க; see *vāḷ-uḻavaṉ.*

[வாள் + ஆளன்]

வாளி[1] *vāḷi,* பெ.(n.) 1. வாள் வீரன்; swordsman. *"வாளிக ணிலை பெற மறலுவார்" (பரிபா. 9, 54).* 2. அம்பு; arrow. *"மார்புற வாங்குவார் வாளி" (பரிபா. 9, 54).*

தெ. வாலி.

[வாள் → வாளி]

வாளி[2] *vāḷi,* பெ.(n.) வட்டமாயோடுகை; circular course, as of a horse. *"வாளிவெம்பரி" (பாரத. குரு. 108.). "மாதிர முறப்பல வாளிபோதுமால்" (பாரத. சூது. 121). "மா.வி.அ. சுற்றளவு (Circumference) என்று மட்டும் குறித்துள்ளது" (தேவநேயம். 13, பக். 82).*

[வள் → வாள் → வாளி]

வாளி[3] *vāḷi,* பெ.(n.) ஒருவகைக் காதணி; a kind of ear-stud or ear-ring. *"வாளிமுத்தும்" (குமர. பிர. முத்து. பிள். 11) (S.I.I.ii.16).*

[வாள் → வாளி (வே.க.109)]

வாளி[4] *vāḷi,* பெ.(n.) நீர்ச்சால் வகை (இக்.வ.); bucket.

[வாள் → வாளி (வே.க.109, வ.மொ.வ. 258)]

வாளிகை *vāḷigai,* பெ.(n.) வாளி[3] பார்க்க; see *vāḷi.* *"சுட்டிகையும் வாளிகையும்" (பதினொ. திருக்கைலாய. 68).*

*[வாளி → **Skt.** vālikā > த. வாளிகை. (வ.மொ.வ.258)]*

வாளிச்சிமேனி *vāḷicci-mēṉi,* பெ.(n.) மாணிக்கம் (யாழ்.அக.); ruby.

[வாளிச்சி + மேனி]

வாளிச்சூத்திரம் *vāḷi-c-cūttiram,* பெ.(n.) நீர் இறைப்பதற்காக வாளிகள் அடுக்கடுக்காகக் கோத்த இயந்திரம் (இ.வ.); the persian wheel.

*[வாளி + **Skt.** sūdhrā > த. சூத்திரம்.]*

வாளிப்பு *vāḷippu,* பெ.(n.) உருட்சி திரட்சி; youthfulness. "*வாளிப்பான தோள்கள்*".

வாளிபோ-தல் *vāḷi-pō-,* 13 செ.கு.வி. (v.i.) குதிரை முதலியன வட்டமாயோடுதல்; to run in a circle, as a horse. "*மாதிர முறப்பல வாளிபோதுமால்" (பாரத. சூது. 121).*

வ. பாலி.

[வாளி + போ-.]

வாளியம்பு *vāḷi-y-ambu,* பெ.(n.) அலகம்பு; a kind of arrow, having a blade at its head. "*வாளியம்பன வாட்டங் கண்ணி" (அகநா. 67).*

[வாள் → வாளி + அம்பு]

வாளீரல் *vāḷ-īral,* பெ.(n.) ஈரல் வகை (யாழ்.அக.); spleen.

[வாள் + ஈரல்]

வாளுச்சம் *vāḷuccam,* பெ.(n.) கறுப்புக் கடலை; black bengal gram.

[வாள் + உச்சம்]

வாளுழத்தி *vāḷ-uḻatti,* பெ.(n.) கொற்றவை (சிலப். 12, உரை, பக். 329); Goddess of victory.

[வாள் + உழத்தி]

வாளுழவன் *vāḷ-uḻavaṉ,* பெ.(n.) 1. வாள் வீரன்; swordsman. 2. படைவீரன் (திவா.); soldier. 3. தானைத்தலைவன் (சூடா.); commander.

[வாள் + உழவன்]

வாளெடுப்பான் *vāḷ-eḍuppāṉ,* பெ.(n.) அரசனின் முன் வாளேந்தி செல்வோன் (நெடுநல். 182, உரை); sword-bearer of a King.

[வாள் + எடு - வாளெடு → வாளெடுப்பான்]

வாளேந்தி *vāḷ-ēndi,* பெ.(n.) 1. வாளேந்து வீரன் (வின்.); warrior armed with a sword. 2. கொற்றவை (யாழ்.அக.); *durgā.*

[வாள் + ஏந்து→ஏந்தி]

வாளேறு *vāḷ-ēṟu,* பெ.(n.) 1. வாட்புண்; sword-cut. '*வாளேறு காணத் தேளேறு மாயுமா போலே' (ஈடு. 3, 9, ப்ர.).* 2. ஒளி யெறிகை (தக்கயாகப். 106, உரை); dazzling.

[வாள் + ஏறு. ஏறு = எறிந்ததனாலான புண் - வடு]

வாளை¹ *vāḷai,* பெ.(n.) மூளையின் சதைப்பகுதி; a part of brain.

வாளை² *vāḷai,* பெ.(n.) 16 விரலம் வளர்வதும் வெண்ணிற முள்ளதுமான மீன் வகை; scabbard-fish, silvery attaining 16 inch. in length, Trichiurs haumela. "*வாளை வாயுறைப்ப நக்கி" (சீவக. 1198).* 2. 6 அடி வளர்வதான ஏரிவாளை; fresh water shark, attaining 6 ft. in length, wallago attu. 3. நீலங்கலந்த பச்சை வண்ணமுடையதும் 12 அடி வளர்வதுமான முள்வாளை; a sea-fish, bluish green, attaining 12 ft. in length, chirocentrus dorab.

தெ. வாலுக; க. பாளெ; ம. வாளமீன்; **Kod.** பாளெமீனி; து. பாளெமீனு.

[வாள் → வாளை]

எலும்புச் சட்டகம் உள்ள மீன் இனம். கடலின் மேற்பரப்புக்கு அருகில் பெருங் கூட்டங்களாக வாழ்பவை. இம் மீன்களின் உடல் தட்டையாக, அகலமின்றி, மிக நீளமாக, வால்புறம் கூராகவெள்ளி போல மிளிரும் வெண்ணிற முடையதாக, வாள்போல அல்லது நாடாப்போல இருக்கும். வாலில் துடுப்பு இல்லாமல் மயிர் நீண்டிருக்கும். இதனால் இம் மீன்கள் ட்ரிக்கிகூரஸ் (trichiurus) அதாவது மயிர்வால் எனப் பெயர் பெறும். உடலில் செதில்கள் இருப்பதில்லை. முதுகு நெடுகிலும் ஒரே நீண்ட துடுப்பு இருக்கும். வாயில் பற்கள் பல கூராகவும், பலமாகவும் வடிவு நன்றாக அமைந்தவையாகவும் இருக்கும். இவை இம்மீன்களுக்கு உணவாகிய சிறுமீன்களையும் இறால் முதலியவற்றையும் பிடித்துத் தின்பதற்கு ஏற்றவை.

வாளைக்கடியன் *vāḷai-k-kaḍiyaṉ,* பெ.(n.) 4 அடி வளர்வதும் நச்சு உள்ளதுமான கடற்பாம்பு வகை (யாழ்.அக.); sea-snake, attaining 4 ft. in length Enhydrinon bengalensis.

[வாளை + கடியன்]

[கடற்பாம்புகளுக்கு வழங்கும் பெயர். இவற்றின் வால் பக்கவாட்டிலே மிகவும் அழுந்தித் தட்டையாக இருக்கும். பல இனங்களிலே வால் மட்டுமன்றி வாலுக்கு முன்னே உள்ள உடம்பும் தட்டையாக இருக்கும். இவ்வித வாலும் உடம்பும் நீரில் நீந்துவதற்கு மிகவும் ஏற்றவை. இவற்றின் உடல் வாளை மீனின் உடல்போல நீண்டு தட்டையாக இருக்கின்றது. இக்காரணங்களால் வாளைக்கடியன் என்னும் பெயர் மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது.

கடற்பாம்புகளின் உடலைப் போர்த்துள்ள செதில்கள் சிறியவையாக இருக்கும். உடலின் அடிப்பக்கத்திலுள்ள செதில்களும் உடலின் மற்றப் பாகங்களில் இருப்பவை போன்ற சிறிய செதில்களே. தலையில் கேடகங்கள் ஒழுங்காக அமைந்திருக்கும்.

கடற்பாம்புகளெல்லாம் மிகக் கொடிய நஞ்சுள்ளவை. இவற்றின் நஞ்சு நாகத்தின் நஞ்சினும் கொடுமையுடையது. கடற்பாம்புகள் மீன்களைப் பிடித்துத் தின்னும்]



வாளைக்கப்பல் *vāḷai-k-kappal,* பெ.(n.) புகையிலை வகை (இ.வ.); a variety of tobacco.

[வாளை + கப்பல்]

வாளைகம் *vāḷaigam,* பெ.(n.) பித்தளை; brass.

வாற்கரண்டி *vāṟkaraṇḍi,* பெ.(n.) வாற்கிண்ணம் பார்க்க; see *vāṟ-kiṇṇam.*

[வால் + கரண்டி]

வாற்கிண்ணம் *vāṟ-kiṇṇam,* பெ.(n.) எண்ணெய் முதலியன வைத்தற்குரியதும் கைப்பிடியுள்ளதுமான கிண்ண வகை; a kind of cup with a tail-like handle, to hold oil, etc.

[வால் + கிண்ணம்]



வாற்குறுவை *vāṟ-kuṟuvai,* பெ.(n.) ஒரு வகை நெல்; a kind of paddy.

[வால் + குறுவை]

வாற்கொடி *vāṟ-koḍi,* பெ.(n.) கப்பலின் பாய்மரத்திற் கட்டும் ஒரு வகைக் கொடி (வின்.); pennon for the mizen mast.

[வால் + கொடி]

வாற்கொண்டலாத்தி *vāṟ-koṇḍalātti,* பெ.(n.) இராப்பாடிக்குருவி; paradise fly-catcher.

[வால் + கொண்டலாத்தி]



வாற்கோதும்பை *vāṟ-kōdumbai,* பெ.(n.) வாற்கோதுமை (யாழ்.அக.) பார்க்க; see *vāṟ-kōdumai.*

[வால் + கோதும்பை]

வாற்கோதுமை *vāṟ-kōdumai,* பெ.(n.) கோதுமை வகை; barley cereal.

[வால் + கோதுமை]

வாற்சகம் *vāṟśagam,* பெ.(n.) 1. கன்றுக் கூட்டம் (யாழ்.அக.); herd of calves. 2. ஆநிரை; herd of cows.

[வால் + சகம். சகம் = skt.]

வாற்படம் *vāṟ-paḍam,* பெ.(n.) நவச்சாரம்; sal tammoniac.

[வால் + படம்]

வாற்பேத்தை *vāṟ-pēttai,* பெ.(n.) தவளைக் குஞ்சு; tadpole.

[வால் + பேத்தை]

வாற்றரகு *vāṟṟaragu,* பெ.(n.) வால்தரகு பார்க்க; see *vāl-taragu.*

[வால் + தரகு]

வாறன்விளை *vāṟaṉ-viḷai,* பெ.(n.) கேரள மாநிலம் கொல்லம் அருகில் அமைந்துள்ள திருமால் பாடல் பெற்ற வைணவத் தலம்; நம்மாழ்வார் இத்தலத்தை சிறப்பித்துப் பாடியுள்ளார்; a vaishnava place having the distinction of being sung by saint N*ammāḻvār.* It is in Kerala state near *Kollam.* *"மாகம்திகள் கொடி மாடங்கள் நீடும் மதிள் திருவாறன் விளை" (நாலா–2844).*

[வாறன்விளை → திருவாறன்விளை]

வாறான் *vāṟāṉ,* பெ.(n.) கப்பற்பாய் கட்டுங்கயிறு; (Naut) small stay to the leeward of the sail to keep it in place.

தெ. வார.

வாறியுளடு *vāṟiyuḷaḍu,* பெ.(n.) மாறுபாடான அம்மை; modified small pox.

[வாரி → வாறி + உளடு]

வாறு[1] *vāṟu,* பெ.(n.) 1. வகை; manner. *"சேர்ந்துணரும் வாறின்று சேர்ந்திடீர்" (மதுரைச். உலா, 328).* 2. அடையத்தக்க பேறு; objective, goal. *"வாறாராயாதே" (திருப்பு. 993).*

[ஆறு → வாறு]

வாறு[2] *vāṟu,* பெ.(n.) வலிமை (யாழ்.அக.); strength.

[ஆற்று → ஆறு → வாறு]

வாறு[3] *vāṟu,* பெ.(n.) வரலாறு; history. *"வன்சூழியற் புலவன் வாறு சொல்வேன்" (பஞ்ச. திருமுக. 870).*

[ஆறு → வாறு]

வாறுகோ *vāṟugō,* பெ.(n.) கொம்மட்டி; a variety of melon.

[வாறு + கோ]

வாறோசுகூடன் *vāṟōšu-cūḍaṉ,* பெ.(n.) கருப்பூரவகை (சிலப். 14, 109, உரை); a kind of camphor, as probably from the forest in Baros or Fansur in the celebes.

வான்[1] *vāṉ,* பெ.(n.) 1. வானம்; sky, the visible heavens. *"வானுயர் தோற்றம்" (குறள், 272).* 2. மூலமுதற்பொருள் பிரகிருதி; primordial matter. *"வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின்" (கம்பரா. அயோத். மந்திர. 1).* 3. மேகம்; cloud. *"ஏறொடு வான் ஞெமிர்ந்து" (மதுரைக். 243).* 4. மழை; rain *"வான்மடி பொழுதில்" (பெரும்பாண். 107).* 5. தேவருலகு; celestial world. *"வான்பொரு நெடுவரை" (சிறுபாண். 128).* 6. அமுதம்; ambrosia. *"வான் சொட்டச் சொட்ட நின்றட்டும் வளர்மதி" (தேவா. 586, 1).* 7. தேவருலகம்; heaven. *"வானேற வழி தந்த" (திவ். திருவாய். 10, 6, 5).* 8. நன்மை; goodness. *"வரியணி சுடர்வான் பொய்கை" (பட்டினப். 38).* 9. பெருமை (பிங்.); greatness, largeness. *"இருடுங்கு வான்முழை" (காசிக. காசியின் சிறப். 13).* 10. அழகு; beauty. *"வான்பொறி பரந்த புள்ளி வெள்ளையும்" (கலித். 103).* 11. வலிமை (பிங்.); strength. 12. நேர்மை; regularity. *"வானிரை வெண்பல்" (கலித். 14).* 13. மரவகை (பிங்.); a kind of tree.

தெ. வாந; க. பாந; **ma.** *vāṉ, māṉam;* **Ko.** *vānm;* **To.** po-n; **Kol.** va-na; **Nk.** *vāna;* **pa.** *vāni;* **Ga.** vayin.

[மால் → மான் → வான். (வே.க.38)]

'வான் செய்த உதவிக்கு வையகம்
என்ன செய்யும்' – (பழ.)

வான்[2] *vāṉ,* இடை(part.) ஒரு வினையெச்ச ஈறு (நன். 343); an ending of verbal participle.

வான்[3] *vāṉ,* இடை(part.) உடைமைப் பொருள் காட்டும் ஒரு வடமொழி ஈறு; a sanskrit suffix meaning 'possessor of '. *"கிரியாவான்" (சி.சி.12,5).*

வான்கண் *vāṉ-kaṇ,* பெ.(n.) கதிரவன்; sun. *"வான்கண் விழியா வைகறை யாமத்து" (சிலப். 10, 1, அரும்.)*

வான்கல்லு *vāṉ-kallu,* பெ.(n.) வான் மீன்; meteorite.

[வான் + கல்லு]

வான்கழி *vāṉ-kaḻi,* பெ.(n.) துறக்கம் (திருக்கோ. 85, உரை); the highest heaven.

வான்கொடி[1] *vāṉ-koḍi,* பெ.(n.) மின்னற் கொடி; streak of lightning. *"வான்கொடி யன்னாள்" (சிலப். 1, 24).*

[வான் + கொடி]

வான்கொடி[2] *vāṉ-koḍi,* பெ.(n.) ஆகாய வல்லி; a running plant.

[வான் + கொடி]

வான்கோழி *vāṉ-kōḻi,* பெ.(n.) கோழிவகை; turkey. *"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி... ஆடினாற் போலுமே" (மூதுரை. 14).*

[வான் + கோழி]



வான்பதம் *vāṉ-padam,* பெ.(n.) முத்தி; final emancipation. *"எனக்கே வான் பதமளிக்க" (அருட்பா. VI, அருட்பெருஞ். அ. 1181).*

[வான் + பதம்]

வான்பயிர் *vāṉ-payir,* பெ.(n.) நன்செய், புன்செய்ப் பயிரல்லாத கொடிக்கால் வாழை, கரும்பு முதலிய தோட்டப் பயிர்; garden crops and fruit trees, especially valuable kinds of produce raised on wet land, as betel, plantains, sugarcane. *"வான் பயிருக்கும் நஞ்சை புஞ்சைக்கும்... ஒன்று முக்கால் கொள்ளக் கடவோமாகவும்" (S.I.I.iv.105).*

[வான் + பயிர்]

வான்பயிரம்பலம் *vāṉpayir-ambalam,* பெ.(n.) வான் பயிர்க்குரிய வரிதண்டும் அலுவல் (M.M.357); office for the collection of assessment on garden lands.

[வான்பயிர் + அம்பலம். அம்பலம் = அலுவல்]

வான்பிரயோசனம் *vāṉ-pirayōšaṉam,* பெ.(n.) மரக்கறி (யாழ்.அக.); vegetable curry.

[வான் + **Skt.** *prayōjaṉā > த. பிரயோசனம்]*

வான்புலம் *vāṉ-pulam,* பெ.(n.) உண்மை யறிவு (சீவக. 793, உரை.); true knowledge.

[வான் + புலம்]

வான்புலவு *vāṉ-pulavu,* பெ.(n.) வான்கோழிப் புலவு (இக்.வ.); pulau made of turkey.

[வான்கோழி + புலவு→வான்புலவு]

வான்மகள் *vāṉ-magaḷ,* பெ.(n.) இந்திராணி; *Indrāṇi.* *"மண்மகளு நாமகளும் வான்மகளும்" (திருவாரூ. 114).*

[வான் + மகள்]

வான்மணி *vāṉ-maṇi,* பெ.(n.) ஞாயிறு; sun. *"ஓராயிர மகல் வான்மணியொக்கும்" (பாரத. அருச்சுனன்றவ. 159).*

[வான் + மணி]

வான்மியூர் *vāṉmiyūr,* பெ.(n.) சென்னை மாவட்டத்தில் அலைவாயி லமைந்ததோரூர்; திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலம்; one of the saiva sea shore places having the distinction of being sung by saint. Sampandar. It is in Chennai District. *"கரையுலாங் கடலிற் பொலி சங்கம் வெள்ளிப்பிவள் திரையுலாங் கழி மீன் உகளுந்திரு வான்மியூர்" (140-1)*

[வான்மியூர் → திருவான்மியூர்]

வான்மிளகு *vāṉ-miḷagu,* பெ.(n.) வால் மிளகு; cubeb.

[வால் + மிளகு]

க. பாலமிணசு.

வான்மீகபலம் *vāṉmīga-palam,* பெ.(n.) எலுமிச்சை (சங்.அக.); lime.

*[வான்மீகம் + **Skt.** pala > த. பலம்]*

வான்மீகம்[1] *vāṉmīgam,* பெ.(n.) வால்மீகம்; the *Rāmāyana* of *Vālmīgi.*

வான்மீகம்[2] *vāṉmīgam,* பெ.(n.) குங்குமப்பூ (தைலவ.); saffron flower.

வான்மீகம்[3] *vāṉ-mīgam,* பெ.(n.) புற்றாஞ் சோறு; mother white ant.

வான்மீன்[1] *vāṉ-mīṉ,* பெ.(n.) விண்மீன் (புறநா. அரும்.); star.

ஒருகா. விண்மீன்.

[வான் + மீன்]

வான்மீன்[2] *vāṉ-mīṉ,* பெ.(n.) வால்விண்மீன் (பிங்.) பார்க்க; see *vāl-naṭšattiram.*

[வால் → வான் + மீன்]

வான்மெழுகு *vāṉ-meḻugu,* பெ.(n.) ஊதை நோய்களுக்காக கல்லாடத்தில் சொல்லிய ஒரு மருந்து; a medicine described in the Tamil medical book named Kalladam.

[வான் + மெழுகு]

வான்மேனி *vāṉ-mēṉi,* பெ.(n.) கொட்டான்; a tree.

[வான் + மேனி]

வான்மை *vāṉmai,* பெ.(n.) 1. தூய்மை; purity. *"வான்மையின் மிக்கார் வழக்கு" (அறநெறி.2).* 2. வெண்மை; whiteness. *"வாசியிதனிலாங் கூலம் வான்மையதோ நீன்மையதோ" (சேதுபு. கத்துரு. 8).*

[புல் → பல் → பால் → வால் → வான்மை]

வான்மைந்தன் *vāṉ-maindaṉ,* பெ.(n.) (வாயு) வளித் தேவன் (பாரத. நச்–17); *vāyu.*

[வான் + மைந்தன்]

வான்மொழி *vāṉ-moḻi,* பெ.(n.) வானொலி; voice from the heavens. *"வான்மொழி புகன்ற வாறும்" (பாரத. திரௌ. 2).*

[வான் + மொழி]

வான்வளம் *vāṉ-vaḷam,* பெ.(n.) மழை; rain. *"வான்வளஞ் சுரத்தலும்"* (மாறனலங். 176, உதா. 402)

[வான் + வளம்]

வான்விளக்கம் *vāṉ-viḷakkam,* பெ.(n.) ஞாயிறு (நாமதீப. 93); sun.

[வான் + விளக்கம்]

வான்றரு *vāṉṟaru,* பெ.(n.) கற்பகமரம்; celestial tree. *"வான்றரு மாரி வண்கை" (சீவக. 1091).*

[வான் + தரு. தரு - Skt.]

வானக்கோளமண்டலம் *vāṉa-k-kōḷa-maṇḍalam,* பெ.(n.) கோள உருண்டை (புதுவை.); circle of a sphere.

[வானம் + கோளம் + மண்டலம்]

வானத்தீ *vāṉa-t-tī,* பெ.(n.) இடி (புதுவை.); thunder.

[வானம் + தீ]

வான்றேர்ப்பாகன் *vāṉṟēr-p-pāgaṉ*, பெ.(n.) காமன் (வானத்திலுலவுந் தென்றலாகிய தேரைச் செலுத்துவோன்); *Kāma*, as riding on the south-wind through the sky. *"வான்றேர்ப் பாகனை மீன்றிகழ் கொடியனை" (மணிமே. 20, 91).*

[வான் + தேர்+ பாகன்]

வானக்கல்[1] *vāṉa-k-kal*, பெ.(n.) அடிமனைக் கல் (சங்.அக.); foundation stone.

மறுவ. கடைக்கால்.

[வானம் + கல்]

வானக்கல்[2] *vāṉa-k-kal*, பெ.(n.) காகச்சிலை (யாழ்.அக.); black loadstone.

[வானம் + கல்]

வானக்குழலாள் *vāṉa-k-kuḻalaḷ*, பெ.(n.) வெள்ளாடு; goat.

[வானம் + குழலாள்]

வானகப்புதைச்சி[1] *vāṉaga-p-pudaicci*, பெ.(n.) கருவண்டு (யாழ்.அக.); black beetle.

[வானகம் + புதை → புதைச்சி]

வானகப்புதைச்சி[2] *vāṉaga-p-pudaicci*, பெ.(n.) கதண்டுக் கல்; a kind of mineral stone.

[வானகம் + புதைச்சி]

வானகம் *vāṉagam*, பெ.(n.) 1. வானம்; sky. *"வானகத்தில் வளர் முகிலை" (தேவா. 1078, 2).* 2. விண்ணுலகு; heaven. *"இடமுடை வானகங் கையுறினும் வேண்டார்" (நாலடி, 300).* 3. செம்மரம்; red-wood. 4. *மஞ்சாடி 1* (மலை.) பார்க்க; see *mañjāḍi*[1].

[வான் + அகம்]

வானகவிநாயகர்மாலை *vāṉaga-vināyagar-mālai*, பெ.(n.) ஆறுமுகம் பிள்ளை என்பவரால் கி.பி.20ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற நூல்; a book written by *aṟumugam-piḷḷai* in 20th century.

[வானகம் + விநாயகர் + மாலை]

வானகிநீர் *vāṉagi-nīr*, பெ.(n.) மோர்; butter milk.

[வானகி + நீர்]

வானகுலாலி *vāṉa-kulāli*, பெ.(n.) கருங்கொள்; black horse gram, a creeper bearing black seeds-Dolichos biflorus - black variety.

[வானம் + குலாலி]

வானச்செடங்கி *vāṉa-c-ceḍaṅgi*, பெ.(n.) தேள் கொடுக்கியிலை; the leaf of a plant-Heletropium indicum.

[வானம் + செடங்கி]

வானசாத்திரம் *vāṉa-śāttiram*, பெ.(n.) வானூல்; astronomy.

*[வானம் + **Skt.** sāstra > த. சாத்திரம்]*

வானசோதி *vāṉaśōdi*, பெ.(n.) கோள் முதலிய ஒளி மண்டலம் (யாழ்.அக.); heavenly body.

*[வானம் + **Skt.** jyoti > த. சோதி]*

வானட்சத்திரம் *vāṉaṭśattiram*, பெ.(n.) வால்வெள்ளி (யாழ்.அக.); comet.

*[வானம் + **Skt.** naksatra > த. நட்சத்திரம்]*

வானத்தாசி *vāṉa-t-tāśi*, பெ.(n.) கழுதை; an animal, Ass.

[வானம் + தாசி]

வானத்திமிரி *vāṉa-t-timiri*, பெ.(n.) தையிலம்; medicated oil.

[வானம் + திமிரி]

வானத்தின்மீன் *vāṉattiṉ-mīṉ*, பெ.(n.) சரிகை வெள்ளி; lace silver.

[வானத்தின் + மீன்]

வானதி *vāṉadi*, பெ.(n.) கங்கை (பிங்.); the Ganges, as celestial.

*[வான் + **Skt.** nathi > த. நதி]*

வானநாடன் *vāṉa-nāḍaṉ*, பெ.(n.) 1. வானுலகத்திற்குத் தலைவன்; lord of the celestial world. *"வானநாடனே வழித்துணை மருந்தே" (தேவா. 486, 9).* 2. வானுலகில் வாழ்வோர்; inhabitant of heaven.

[வானம் + நாடன்]

வானநாடி[1] *vāṉanāḍi*, பெ.(n.) துறக்க உலகத்தவள்; she who resides in svarga. *"மையறு சிறப்பின் வானநாடி" (சிலப். 11, 215).*

[வானம் + நாடி]

வானநாடி[2] *vāṉanāḍi*, பெ.(n.) பொன்னாங் காணி (கரு.அக.); a plant growing in damp places.

[வானநாடு → வானநாடி]

வானநாடு *vāṉa-nāḍu*, பெ.(n.) 1. வானுலகம்; heaven. 2. தேவருலகம்; celestial world. *"வான நாடுடைய மன்னன்" (திருவிளை. இந்திரன்முடி. 38).* 3. *வானநாடி[2]* (தைலவ.) பார்க்க; see *vāṉanāḍi[2]*.

[வானம் + நாடு]

வானப்பத்தியம் *vāṉa-p-pattiyam*, பெ.(n.) பூத்தோன்றாது காய்க்கும் மரம் (நாமதீப. 372); tree, bearing fruit without outwardly blossoming.

[வானம் + பத்தியம்]

வானப்பாம்பு *vāṉa-p-pāmbu*, பெ.(n.) பாம்புவகை (M.M); rain snake.

[வானம் + பாம்பு]

வானபத்தி *vāṉa-patti*, பெ.(n.) பூவாது காய்க்கும் மரம்; a tree yileding fruits without visible flowers or blossoming.

[வானம் + பத்தி]

வானம்[1] *vāṉam*, பெ.(n.) 1. வானம்; firmament. *"வானத் தரவின் வாய்க்கோட் பட்டு" (கலித். 105).* 2. வானுலகம்; celestial world. *"வான மூன்றிய மதலை போல" (பெரும்பாண். 346).* 3. நெருப்பு (அரு.நி.); fire. 4. முகில்; cloud. *"ஒல்லாது வானம் பெயல்" (குறள், 559).* 5. மழை; rain. *"சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு" (குறள், 18), "தானம் தவம் இரண்டும் தங்கா வியன் உலகம் வானம் வழங்காது எனின்" (குறள், 19), "வானம் வாய்க்க மண்வளம் பெருகுக" (மணிமே. 19, 149).*

தெ. வான; க. பான (b). என்றுமாம் (மு.தா.198).

[வால் → வான் → வானம். (சு.வி.பக்.18.)]

'வானத்தை வில்லாய், வளைப்பான்; மணலைக் கயிறாய்த் திரிப்பான்' (பழ.). 'வானம் சுரக்கத் தானம் சிறக்கும்' (பழ.).

ஞாலத்தைச் சுற்றிலும் வெகு தொலைவு வரையுமுள்ள வெற்றிடம். இது உண்மையில் மையிருட்டானது. ஆயினும் உலகைச் சுற்றிலும் காற்றுமண்டல மிருப்பதனால் நமக்கு வானம் ஒளி பெற்றுத் தோன்றுகிறது. கதிரவன் புவியை ஒளி பெறச் செய்வதுடன், காற்று மண்டலத்திலுள்ள மூலக்கூறுகளின் மீதும் தன் கதிர்களை வீசி ஒளிபெறச் செய்கின்றது. நாம் மேலே வானத்தை நோக்கும்பொழுது இவ்வாறு ஒளிரும் மூலக் கூறுகளையே பார்க்கின்றோம். இவை நீல நிறக் கதிர்களையே சிறப்பாகச் சிதறுகின்ற பண்புடையனவா யிருத்தலின் வானம் நமக்கு நீலநிறமாகப் புலனாகின்றது.

காற்றில் தூசு அதிகமாயிருக்கும் பொழுது வானம் நமக்கு வெண்மையாகத் தெரிகின்றது. ஏனெனில் தூசுத் துகள்கள் எவ்வளவு நுண்மையானவையாக இருந்தபோதிலும், மூலக்கூறுகளைவிடப் பல மடங்கு பெரியவை; அதனால் இவை கதிரவனுடைய கதிரிலுள்ள நிறக்கதிர்களைச் சிதறச் செய்யாமல், கதிரவனுடைய வெண்மை ஒளியையே தோன்றச் செய்கின்றன. நாம் காற்று மண்டலத்திற்கு அப்பால் சென்று வானத்தை நோக்கின், அது மையிருட்டாகப் புலனாகும். பகலில் கூட வானில் விண்மீன்கள் புலனாகும். (கலைக்-9, பக்-251)

வானம்² *vāṉam*, பெ.(n.) 1. உலர்ந்த மரம் (பிங்.); dry tree, seasoned wood. *"வானங் கொண்டு வளர்த்தல்" (பிரபுலிங். முனிவரா. 17).* 2. மரக்கனி (பிங்.); fruit of a tree. 3. உலர்ந்த காய் (யாழ்.அக.); dry fruit. 4. உலர்ச்சி (யாழ்.அக.); withering. 5. உயிரோடிருக்கை (யாழ்.அக.); being alive. 6. போகை (யாழ்.அக.); going. 7. நறுமணம் (யாழ்.அக.); fragrance. 8. நீர்த்திரை (யாழ்.அக.); wave. 9. புற்பாய் (யாழ்.அக.); mat of straw. 10. சுவரில் பண்டங்கள் வைப்பதற்காகக் கட்டப்பட்ட மாடம் (யாழ்.அக.); cellar or shelf in the wall. 11. அடிமனைக்குழி; excavation for laying foundations. 12. கோபுரத்தின் ஒருறுப்பு (யாழ்ப்.); one of the ornamental sections of a tower.

[வான் → வானம்]

வானம்பறி-த்தல் *vāṉam-paṟi-*, 4 செ.கு.வி. (v.i.) அடிமனைக் குழி தோண்டுதல்; to dig for laying foundation.

[வானம் + பறி-.]

வானம்பாடி *vāṉam-pāḍi*, பெ.(n.) 1. புள் வகை; Indian skylark, Alauda, gulgula. 2. சகோரப்புள் (திவா.); shepherd koel. *"வானம்பாடி... அழிதுளி தலைஇய புறவில்" (ஐங்குறு. 418).* 3. வானம்பாடியாதனம் பார்க்க; see *vāṉambāḍi-ādaṉam*. *"நமஸ்காரஞ் சானுவானம்பாடி நகழ்வே" (தத்துவப். 107).*

க. பானாடி.

இதன் பெயரே இதன் இயல்பை எடுத்துரைக்கிறது. வயல்களிலும் வெளிப் பாங்கான நிலங்களிலும் வாழும் இச்சிறு பறவைகள் கபில நிறமாகத் தரையுடன் ஒத்துக் கண்ணைக் கவராது மங்கியிருக்கும். ஆனால், வேனிற் காலத்திலும், பிறகு சிறிது காலமும், ஆண் வானம்பாடி பாடிக்கொண்டே சுற்றிச் சுழன்று வானத்தில் செங்குத்தாக எழும்பும். பறவை கண்ணுக்கெட்டாத உயரத்தை அடைந்த பின்னும் வானத்திலேயே மிதந்து, இனிய குரலில் சில நிமிடங்கள் பாடும். பறவை பார்வைக்குப் புலப்படாதிருந்தும் அதன் தெளிவான இசை நம்காதுக்கெட்டும். பிறகு, தன் இறக்கைகளை மடக்கி வானிலிருந்து கல்லைப் போல் கீழ் நோக்கிப் பாயும். சிறிது தூரம் வந்தபின் இறக்கையை

விரித்துத் தன் கீழ்ப் போக்கை நிறுத்தும். பின், மறுபடியும் இறக்கை மடித்து நிலம் நோக்கிப் பாயும். மறுபடியும் இறக்கை விரித்துத் தன் வீழ்ச்சியை நிறுத்தும். இப்படிப் படிப்படியாகக் கீழிறங்கி, முடிவில் வயலில் இருக்கும் தன் பெட்டையின் அருகில் வந்திறங்கும். வானம்பாடிகள் வயற் காடுகளில் பூச்சிகளை வேட்டையாடியும், தவசங்களைத் தின்றும் வாழும். வட இந்திய வானம்பாடிக்குக் கொண்டையுண்டு.

(கலைக்.–9.பக்.–251)

வகைகள் :

1. சிறந்த இறக்கை வானம்பாடி, 2. புதர் வானம்பாடி, 3. சாம்பல் தலை வானம்பாடி, 4. சிகப்பு வால் வானம்பாடி, 5. கொண்டை வானம்பாடி, 6. சின்ன வானம்பாடி.



வானம்பாடியாதனம் *vāṉambāḍi-y-ādaṉam*, பெ.(n.) நெஞ்சு நிலத்திற்படக் கையுங்காலு மடக்கித் தரையிற் படாமற் பறக்கத் தொடங்குவது போல இருக்கும் இருக்கை வகை (தத்துவப். 107, உரை); a posture which consists in lying on the ground with face downwards and arms and legs bent as if about to fly.

[வானம்பாடி + ஆதனம்]

வானம்பார்த்தகதிர் *vāṉam-pārtta-kadir*, பெ.(n.) கொப்புத் தாழாத கதிர் (யாழ்.அக.); ear of immature grain, standing erect.

[வானம் + பார்த்த + கதிர்]

வானம்பார்த்தசீமை *vāṉam-pārtta-cīmai*, பெ.(n.) பாசன வசதியின்றிப் பருவ மழையையே நம்பியிருக்கும் நிலப்பரப்பு; rain-fed region, as depending for cultivation on seasonal rains and having no other source of irrigation.

மறுவ. புன்செய் நிலம்

[வானம் + பார்த்த + சீமை. செய்மை → சீமை]

வானம்பார்த்தபயிர் *vāṉam-pārtta-payir*, பெ.(n.) பாசன வசதியின்றிப் பருவ மழையினு தவியாற் புன்செய் நிலத்தில் விளையும் தவசம் (தஞ்சை.); crops grown on dry lands with the help of seasonal rains and without any irrigational facilities.

[வானம் + பார்த்த + பயிர்]

வானம்பார்த்தபிறவி *vāṉam-pārtta-piṟavi*, பெ.(n.) மரஞ்செடி கொடி முதலியன (யாழ்.அக.); vegetable kingdom, as depending on rains.

[வானம் + பார்த்த + பிறவி]

வானம்பார்த்தபூமி *vāṉam-pārtta-būmi*, பெ.(n.) பாசன வசதியில்லாது மழையால் விளையும் நிலம்; rain-fed cultivable land.

மறுவ. புன்செய்நிலம்

[வானம் + பார். + பூமி. பூமி = Skt.]

வானம்பாரி *vāṉam-pāri*, பெ.(n.) வானம் பார்த்தபூமி (இ.வ.) பார்க்க; see *vāṉam-pārtta-būmi*.

வானம்பாடி வகை

சாம்பல்தலை வானம்பாடி

புதர் வானம்பாடி

சிகப்புவால் வானம்பாடி

சின்ன வானம்பாடி

சிவந்த இறக்கை வானம்பாடி

கொண்டை வானம்பாடி

[வானம் + பார் → பாரி]

வானமடை *vāṉamaḍai*, பெ.(n.) கவுரிச் செய்ந்நஞ்சு (யாழ்.அக.); a prepared arsenic.

[வானம் + மடை]

வானமண்டலம் *vāṉa-maṇḍalam*, பெ.(n.) ககோளம்; vault of the heavens.

[வானம் + மண்டலம்]

வானமாமலை *vāṉa-mā-malai*, பெ.(n.) 1. நாங்குநேரியில் கோயில் கொண்டுள்ள திருமால்; the *viṣṇu* shrine at *Nāṅguṉēri*. *"வானமா மலையே யடியேன்றொழ வந்தருளே" (திவ். திருவாய். 5, 7, 6).* 2. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குநேரி; *Naṅguṉēri* in Tirunelvelly Dt.

[வானம் + மா + மலை]

சிறந்த (வைணவ) மாலியத் திருப்பதி. தமிழகத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில், திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயிலுக்குப் போகும் வழியில் 18 மைலில் இருக்கிறது. இது நான்குநேரி வட்டத்தின் தலைநகர். இதற்கு நாங்குநேரி என்ற பெயருண்டு. நம்மாழ்வார் பாடல்களில் 'சிரீவர மங்கல நகர்' என்று இவ்வூர் குறிப்பிடப் பெற்றுள்ளது.

கி.பி.1447 வரையில் நம்பூதிரிகள் வயமிருந்த இத்திருப்பதி பிறகு மாலியத் துறவிகள் கைக்கு வந்தது என்று ஒரு செப்பேடு கூறுகிறது.

வானமாமலை மடம் தென்கலை வைணவர் களுடையது. இதன் சீயர் தென் கலையாரின் ஆச்சாரியார். இது தோத்தாத்திரி மடம் என்றும் பெயர் பெற்றது. நாங்குநேரி ஏரிக்கரைக்குப் பின்னால் திருமால் கோயிலிருக்கிறது. கோயில் மிகப்பெரியது. வானமாமலை மடம் கோயில் மதிலுக்குள் உள்ளது. இது வடமொழிப் பாடசாலை ஒன்றை நடத்தி வருகிறது. திருமால் திருமுன்னரைச் சுற்றியுள்ள மண்டபத்திற்குச் சிவிலி மண்டபம் என்று பெயர். திருமாலுக்குத் தெய்வநாயகன், தோத்தாத்திரி பெருமாள், வானமாமலைப் பெருமாள் என்று பெயர்கள் வழங்குகின்றன. இவர் கிழக்கு முகமாக வீற்றிருந்த கோலத்தில் எழுந்தருளியிருக்கிறார். தாயார் சிரீவர மங்கை நாச்சியார். மூலவர் பெருமாளுக்கு நாள் தோறும் எண்ணெய் முழுக்குண்டு. இந்த எண்ணெய் திறந்த வெளியில் ஒரு காரைத் தொட்டியில் சேர்கிறது. இதற்கு மருந்தின் குணம் உண்டென்பர். விமானத்தின் பெயர் நந்தவர்த்தனம். கோயில் குளத்தின் பெயர் குணத்தின் இந்திர புட்கரணி. தேவேந்திரனுக்கும் பிரமனுக்கும் அருள் செய்ததாக வரலாறு. இத்திருப்பதி நம்மாழ்வாரின் மங்களாசாசனம் பெற்றது.

வானமாமலைஅலங்காரக்கொம்மைப் பாடல் *vāṉamāmalai-alaṅgāra-k-kommai-p-pāḍal*, பெ.(n.) தெய்வப் பெருமாள் நாயர் என்பவரால் 15ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்; a book written by *Deiva-p-perumaḷ-nāyar* in 15th century.

[வானமாமலை + அலங்காரம் + கொம்மை + பாடல். அலங்காரம் = Skt.]

வானமாமலைசதகம் *vāṉamāmalai-cadagam*, பெ.(n.) தெய்வநாயகப் பெருமாள் நாவலரால் கி.பி.19ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நூல்; a book written by *Teivanāyaga-p-perumāl-nāvalar* in 19th century.

[வானமாமலை + சதகம். சதகம் = Skt.]

வானமாமலைபஞ்சரத்தினம் *vāṉa-māmalai-pañja-rattiṉam*, பெ.(n.) அப்பு வையங்கார் என்பவரால் கி.பி.20ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற நூல்; a book written by *Appuvaiyaṅgār* in 20th century.

[வானமாமலை + பஞ்சரத்தினம்]

வானமால் *vāṉa-māl*, பெ.(n.) ஈ; fly.

[வானம் + மால்]

வானமிருகம் *vāṉamirugam*, பெ.(n.) கத்தூரி யெலும்பு (யாழ்.அக.); bone of the musk-rat.

[வானம் + **Skt.** *mirugha > த. மிருகம்]*

வானமுட்டி *vāṉa-muṭṭi*, பெ.(n.) நெட்டி லிங்கம்; a tree.

[வானம் + முட்டி]

வானமெழுகு *vāṉa-meḻugu*, பெ.(n.) பக்க ஊதைக்கும் அழுகிராந்திக்கும் கொடுக்கும் ஒரு மருந்து; a siddha medicine given for paralysis, gangrene etc.

[வானம் + மெழுகு]

வானலம் *vāṉalam*, பெ.(n.) துளசி; holy basil - ocimum sanctum.

வானர் *vāṉar*, பெ.(n.) தேவர்; celestials. *"மான்முதல் வானர்க்கு" (திருக்கோ. 155).*

[வான் → வானர்]

வானரக்கொடியோன் *vāṉara-k-koḍiyōṉ*, பெ.(n.) அருச்சுனன் (குரங்குக் கொடியை யுடையவன்) (பிங்.); Arjuna, as having a monkey banner.

[வானரம் + கொடியோன்]

வானரகதி *vāṉaragadi*, பெ.(n.) குதிரை நடை ஐந்தனுள் குரங்கைப் போல நடக்கும் நடை (திவா.); monkey-like pace of a horse, one of five aśvagadi. (Q.V.)

[வானரம் + கதி = குதிரைநடை]

வானரநேயம் *vāṉara-nēyam*, பெ.(n.) பழமுண்ணிப்பாலை (மலை.); silvery - leaved ape-flower.

[வானர + நேயம்]

வானரப்பகை *vāṉara-p-pagai*, பெ.(n.) நண்டு (சங்.அக.); crab.

[வானர + பகை]

வானரம் *vāṉaram*, பெ.(n.) குரங்கு; monkey. *"வானர முகள" (சீவக. 1168.).*

வானரம் = வாலுள்ள மாந்தன் போன்ற விலங்காகிய குரங்கு. வடவர் வனர் (வனம்) என்னும் சொல்லை மூலமாகக் கொண்டு காட்டு விலங்கு என்றும், நரஏவ என்பதை மூலமாகக் கொண்டு மாந்தனைப் போன்றது என்றும், பொருள் கூறுவர். முன்னதற்குப் பொருட் பொருத்தமும் பின்னதற்குச் சொற்பொருத்தமும் இன்மை காண்க.

வடமொழியில் இச்சொற்கு மூலமில்லை.

நரம் அல்லது நரன் என்னும் சொல் நரல் என்பதினின்று திரிந்திருக்கலாம். நரலுதல் = ஒலித்தல். மாந்தனுக்கு மொழி சிறப்பான ஒலியமைப்பாய் இருத்தல் காண்க.

[வால் + நரம் + வானரம். (வ.மொ.வ.280)]

வானரமகள்¹ *vāṉara-magaḷ*, பெ.(n.) பெண்குரங்கு; female monkey. *"வானரமகளிரெல்லாம் வானவர் மகளிராய்*

வந்து" (கம்பரா. திருமுடி. 7).

[வானரம் + மகள்]

வானரமகள்[2] *vāṉ-aramagaḷ*, பெ.(n.) வானுலகத்துப் பெண்; celestial damsel. *'வானர மகள் கொல்லோ' (இறை. 2, உரை, பக். 32).*

[வான் + அரமகள் (அரமகள் = தெய்வப்பெண்).]

வானரமங்கை *vāṉara-maṅgai*, பெ.(n.) வானரமகள்[2] பார்க்க; see *vāṉara-magaḷ*. *"வானர மங்கையரென வந்தணுகு மவள்" (திருக்கோ. 371).*

[வான் + அரமங்கை (அரமங்கை = தெய்வப்பெண்).]

வானரமதுரைத்தலபுராணம் *vāṉara-madurai-t-tala-purāṇam*, பெ.(n.) இளைய பெருமாள் பிள்ளை என்பவரால் கி.பி.19ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற நூல்; a book written by *Eḷaiya-perumāḷ-piḷḷai* in 19th century.

[வானர + மதுரை + தல + புராணம்]

வானரேந்திரன் *vāṉarēndiraṉ*, பெ.(n.) 1. அனுமன்; *hanumāṉ*. 2. சுக்கிரீவன்; sugiriva.

[வானர + இந்திரன்]

வானலம் *vāṉalam*, பெ.(n.) துளசி (யாழ்.அக.); basil.

[வான் + அலம்]

வானவர்கோன் *vāṉavar-kōṉ*, பெ.(n.) இந்திரன்; Indra, as king of the gods. *"வானவர்கோன்............ வணங்குந் தொழிலானை" (திவ். இயற். 2, 17).*

[வானவர் + கோன்]

வானவர்நாடி *vāṉavar-nāḍi*, பெ.(n.) வானரமகள்[2] (திருமந். 1058) பார்க்க; see *vāṉara-magaḷ*.

[வானவர் + நாடி]

வானவர்முதல்வன் *vāṉavar-mudalvaṉ*, பெ.(n.) நான்முகன் (திவா.); *brahmā*, as the first among the gods.

[வானவர் + முதல்வன்]

வானவர்முதுவன் *vāṉavar-muduvaṉ*, பெ.(n.) 1. நான்முகன் (பிங்.); *brahmā*. 2. சேரன் (யாழ்.அக.); *śēra* king.

[வானவர் + முதுவன்]

வானவரம்பன் *vāṉa-varambaṉ*, பெ.(n.) சேரன்; *śēra*-King. *"வானவரம்பனை நீயோ பெரும" (புறநா. 2).*

[வானம் + வரம்பு]

வானவருறையுள் *vāṉavar-uṟaiyuḷ*, பெ.(n.) கோயில் (திவா.); temple.

[வானவர் + உறையுள்]

வானவல்லி *vāṉa-valli*, பெ.(n.) மின்னற் கொடி (சங்.அக.); streak or flash of lightning.

[வானம் + வல்லி]

வானவன் *vāṉavaṉ*, பெ.(n.) 1. தேவன்; celestial being. *"நான்முகன் முதலா வானவர் தொழுதெழ" (திருவாச. 4, 1).*

2. நான்முகன் (அக.நி.); *brahmā*. 3. இந்திரன் (பிங்.); Indra. 4. ஞாயிறு; sun. *"வானவன் குலத்தொடர்" (கம்பரா. எழுச். 7)*. 5. சேரவரசன் (சிலப். 6, 73); *šēra* king. *"சினமிகு தானை வானவன்" (புறநா. 126)*.

[வான் → வானவன்]

வானவன்மாதேவி பெரியம்மைபத்து *vāṉavaṉ-mādēvi-periyammai-pattu*, பெ.(n.) கனகசபை முதலியாரால் 19–20ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற நூல்; a book written by *Kaṉagasabai-mudaliyār* in 19-20th century.

[வானவன் + மாதேவி + பெரியம்மை + பத்து]

வானவன்மாதேவி வானசுந்தரர்பத்து *vāṉavaṉ-mādēvi-vāṉa-sundarar-pattu*, பெ.(n.) கனகசபை முதலியாரால் 19–20ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற நூல்; a book written by *kaṉagasabai-mudaliyār* in 19-20th century.

[வானவன் + மாதேவி + வானசுந்தரர் + பத்து]

வானவன்விடுதூது¹ *vāṉavaṉ-viḍu-tūdu*, பெ.(n.) ஞானப்பிரகாச முதலியார் என்பவரால் 20ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்ட நூல்; a book written by *ñāṉa-p-piragāsa-mudaliyār* in 20th century.

[வானவன் + விடு + தூது]

வானவன்விடுதூது² *vāṉavaṉ-viḍu-tūdu*, பெ.(n.) யாகப்பப்பிள்ளை என்பவரால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்; a book written by *yāgappa-p-piḷḷai* in 19th century.

[வானவன் + விடு + தூது]

வானவியல்¹ *vāṉaviyal*, பெ.(n.) வான்கோள்களைப் பற்றிய அறிவியல்; astrology.

வானவியல்² *vāṉaviyal*, பெ.(n.) விண்ணில் உள்ள விண்மீன்கள், கோள்கள், முதலியவற்றைப் பற்றி விவரிக்கும் துறை; astronomy.

[வானம் + இயல்]

இவ்வுலகம் மிகப்பெரிய ஐந்தாவது கோளாகும். அது கதிரவனிடமிருந்து 92,870,000 கல் தொலைவில் கதிரவனைச் சுற்றி வருகிறது. புவி கதிரவனை ஒரு தடவை சுற்றிவர ஏறக்குறைய 3651/4 நாட்களாகின்றன. புவியின் அச்சு, துருவ விண்மீனை நோக்கி உள்ளது. புவி அந்த அச்சின் மீது தனக்குத் தானே சூழல்வதால் பகலும் இரவும் உண்டாகின்றன. புவி கதிரவனைச் சுற்றி வருவதால் வேனில், கோடை, இலையுதிர்காலம், குளிர்காலம் என நான்கு பருவங்கள் உண்டாகின்றன. இந்தப் பருவங்களில் ஞாலம் கதிரவனை நோக்கியுள்ள நிலையின் காரணமாகவே தட்பவெப்பநிலை உண்டாகின்றது.

இரவில் வானம் தெளிவாக உள்ளபோது கூட நாம் மூவாயிரம் விண்மீன்களுக்கு அதிகமாக வெறுங்கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் 200 விரல விட்டமுடைய கண்ணாடி வில்லை (lens) உள்ள மிகப்பெரிய தொலைநோக்கி வாயிலாகப் பார்த்தால் கதிரவனைப் போன்ற பல கோடி கோளங்களையும் அவை ஒவ்வொன்றையும் பல கோளங்கள் சுற்றி வருவதையும் காணலாம். நம்முடைய கதிரவன் பல விண்மீன்களை விட மிகச் சிறியது என்று தெரியும். அது பெரியதாகவும் ஒளி மிக்கதாகவும் நம்முடைய கண்களுக்குத் தெரிவதற்குக் காரணம் அது நமக்கு அண்மையில் இருப்பதேயாகும். பலவிதமான

கோளங்களையும் பற்றிய அறிவியலே வானவியல் என்பதாகும்.

வானவில் *vāṉa-vil*, பெ.(n.) 1. இந்திரவில் எனப்படும் வானில் மழைக்காலத்தில் ஏற்படும் வில் போன்ற தோற்றம்; rain-bow. *"மதிப்புறங் கவைஇய வானவிற் போல" (பெருங். இலாவாண. 19, 81).* 2. சமவ சரணத்துள் தூளி சாலமென்னும் பெயருடையதும் இந்திர வில்லின் ஒளியுடையதும் முதலாவதுமான சமணக் கோயிலின் வெளிமதில்; (Jaina) the first outer wall of the temple of Arhat in *šamava-šaraṉam*, known as *tūḷišālam*, and having the splendour of a rainbow. *"வானவிற் கடந்து" (மேருமந். 60).*

[வானம் + வில்]

(கீழிறங்கி வரும் மழைத் துளிகளின் மேலும், அருவியின் அருகே தோன்றும் நுண்ணிய துளிகளின் மீதும் கதிர் ஒளி விழுவதால் வானவில் தோன்றுகிறது. காண்பவரது முதுகு கதிரவனை நோக்கி இருந்தால்தான் வானவில்லைக் காணமுடியும். சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வானவில்கள் காணப்படுவதுண்டு.

நீர்த் துளிகளிற் புகும் கதிரொளி கோட்டமடைவதாலும், மீளுவதாலும் வானவில்கள் தோன்றுகின்றன.)



வானவீதியொளி *vāṉa-vēdiyoḷi*, பெ.(n.) வானில் வைகறையிலும் அந்தியிலும் தோன்றும் வெளிச்சம்; twilight in dawn and dusk.

கதிரவன் தோன்றுமுன் கிழக்கு வானிலும், கதிரவன் மறைவிற்குப் பின் மேற்கு வானிலும் தெரியும் ஒரு மங்கலான ஒளி. வான வெளியில் புலப்படுகின்ற இந்த ஒளியானது கதிரவனுக்கு அருகில் ஒளியதிகமாகவும் தொலைவில் செல்லச் செல்ல மங்கலாகவும் காணும். இது ஆப்பு வடிவில் தெரியும். இவ்வொளியைக் கார்முகில் இல்லாத நாட்களில் தான் காணக்கூடும். திங்கள் அண்மையிலிருப்பின் இது கண்ணுக்குப் புலப்படாது. வடகோளத்திலுள்ளோர், இதனைக் கும்ப, மீன மாதங்களில் தெளிவாகக் காணலாம். நில நடுக்கோட்டின் அருகிலுள்ளோர் ஆண்டு முழுவதிலும் இதைக் காணக்கூடும். கதிரவனுடைய ஒளி, மிதந்து கொண்டிருக்கும் மிகச்சிறிய துகள்களின் மீது பட்டு எதிரொளிப்பதுதான் இதற்குக் காரணமென்பர்.

[வானம் + வீதியொளி]

வானவுப்பு *vāṉavuppu*, பெ.(n.) வெடியுப்பு; potassium nitrate.

[வானம் + உப்பு]

வானவூர்தி *vāṉa-v-ūrdi*, பெ.(n.) வானூர்தி; aerial car. *"வலவனேவா வானவூர்தி" (புறநா. 27).*

[வானம் + ஊர்தி]

வானவெளி *vāṉa-veḷi*, பெ.(n.) திறந்த வெளியாயிருக்கும் வீட்டின் உள்முற்றம் (இ.வ); open quadrangle in a house.

[வானம் + வெளி] (செல்வி. 77 ஆடி. 591)

வானளாவி *vāṉa-ḷāvi*, பெ.(n.) வானுயர்ந்த கட்டடங்கள்; skyscrapers.

மற்றக் கட்டடங்களை விட மிகவும் உயர்ந்த மிகப் பல நிலைகளைக் கொண்ட கட்டடங்களுக்கு வானளாவி என்ற பெயர் அமெரிக்காவில் வழங்குகிறது. இக்காலத்தில் தொழிற்சாலையும் வாணிகமும் இணைந்து மிக விரைவாக முன்னேறியதால் அவற்றின் தேவைக்கேற்பப் புதுக் கட்டடச் சிற்பம் தோன்றியது. இதனால் பெரிய அலுவலகங்கள், பெரிய தொழிற்சாலைகள், பெரிய வைப்பகங்கள், பெரிய தொடர்வண்டி நிலையங்கள், பெரிய உணவு விடுதிகள் முதலியன பேரளவில் தோன்றின. இடஏந்துக் குறைவும், சிறிய நிலத்தில் பேரளவு பயன்பெறும் வாய்ப்பும், வாணிகத்தின் உயர்ந்த திறனும் வானளாவித் தோன்றக் காரணமாயின எனலாம்.

வானாசி *vāṉāśi*, பெ.(n.) கார்போகரிசி (மலை.); seed of scurfypea.

வானாசிப்பூ *vāṉāśi-p-pū*, பெ.(n.) பனி மலர்ப்பூ; rose flower.

[வானாசி + பூ]

வானாடு *vāṉāḍu*, பெ.(n.) 1. துறக்கம்: svarga. *"வானாடும் மண்ணாடும்" (திவ். பெரியதி. 4, 1, 3).* 2. வானுலகு; heaven. *"கல்லும் கனை கடலும் வைகுந்த வானாடும்" (திவ். இயற் பெரிய திருவந். 68).*

[வான் + நாடு]

வானி[1] *vāṉi*, பெ.(n.) 1. மேற்கட்டி (பிங்.); canopy. 2. துகிற்கொடி; large banner, flag. *"வானிவியன் கை நாலாயிரமுள" (இரகு. நகர. 35).* 3. கூடாரம் (யாழ்.அக.); tent. 4. ஆன்பொருநை (பிங்.); the river *amrāvadi*. 5. பவானி; the river *Bhavāni*. *"வானிநீரினுந் தீந்தண் சாயலன்" (பதிற்றுப். 86). "வட கொங்கில் வானியாற்றின்" (தேசிகப். பிர. பரமத. 53).* 6. மரவகை; a tree. *"பயினி வானி பல்லிணர்க் குரவம்" (குறிஞ்சிப். 69).* 7. காற்றாடிப்பட்டம்; paper kite. *"வானிக ளோச்சினர் வானில்" (கந்தபு. அசமுகி. நகர் காண். 9).* 8. இடிக்கொடி; streak of lightning. *"நெருப்பெழ வீழ்ந்த வானி" (இரகு. யாகப். 84.)*

[வான் → வானி]

வானி[2] *vāṉi*, பெ.(n.) படை (பிங்.); army. *"பாண்டவர் வானி குலைந்த வே" (சேதுபு. இராமதீ. 34).*

[வான் → வானி]

வானி[3] *vāṉi*, பெ.(n.) 1. ஓமம் பார்க்க; see *ōmam*, Bishop's weed.

[வான் → வானி]

வானிதம்[1] *vāṉidam*, பெ.(n.) மணல் போன்று நுண்ணிதாயிருக்குஞ் சருக்கரை (நாமதீப. 409); fine sugar.

வானிதம்[2] *vāṉidam*, பெ.(n.) கள்; toddy.

வானிதி *vāṉidi*, பெ.(n.) மனோசிலை (சங்.அக.); realgar.

வானியம் *vāṉiyam*, பெ.(n.) மரம் (யாழ்.அக.); tree.

வானிரியம் *vāṉiriyam*, பெ.(n.) பேராமுட்டி (சங்.அக.); pink-tinged white sticky mallow.

வானிலை *vāṉilai*, பெ.(n.) காற்று, ஈரப்பதம், மழை போன்றவற்றால் அமையும் நிலை; weather. "*வானிலை அறிவுப்பு*".

[வான் + நிலை]

வானிலைஅறிவிப்பு *vāṉilai-aṟivippu*, பெ.(n.) கானாவொலி; voice from heaven.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வானிலை எவ்வாறிருக்கும் என்று முன் கூட்டி அறிவதற்கு மக்கள் வரலாற்று முன்கால முதல் முயன்று வந்துள்ளனர். பண்டைக்காலத்தில் மக்கள் காற்று, மழை முதலிய வானிலை நிகழ்ச்சிகள் எல்லாம் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றல்களால் உண்டாவன என்று எண்ணி, அந் நிகழ்ச்சிகளை முன்கூட்டி அறிவதற்கு முயலாதிருந்தனர். ஆயினும் உழவர்களும் கால் நடைகளை மேய்ப்பவர்களும் தத்தம் பகுதியில் ஏற்படும் வானிலை நிகழ்ச்சிகளைக் கவனித்து வந்தார்கள், மழை எந்தக் காலம் பெய்கின்றது, எந்தக் காலம் பெய்வது நிற்கின்றது என்பவற்றிற்கான அறிகுறிகளையும் கவனித்தார்கள். அவற்றை வைத்து வானிலை அறிவை வளர்த்து வந்தனர். இத்தகைய அறிவு பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டிலும், கேரளத்திலும், உத்தரப் பைதிரத்திலும் உண்டாகியிருந்ததாகத் தெரிகிறது. கீழ்கண்ட பழமொழிகள் அதன் உண்மையைக் கூறும்.

1. "மாரி அடைக்கில் ஏரி உடைக்கும்" (பழ.).
2. "மீனமும் கொம்பும் எதிர்த்து மின்னினால், குட்டியைத் தூக்கி மேட்டிற் போடு" (பழ.).

வானிழல் *vāṉiḻal*, பெ.(n.) கானாவொலி; voice from heaven. "*வெருளின் மெய்ம்மொழி வானிழல் கூறிய பொருளி னாகும்*" *(பெரியபு. பாயி. 19).*

[வான் + நிழல்]

வானிற்கெற்பத்தி *vāṉiṟ-keṟpatti*, பெ.(n.) முத்துச்சிப்பி (யாழ்.அக.); pearl oyster.

வானிறை *vāṉiṟai*, பெ.(n.) நீர் நிறைந்த முகில்; rain-laden cloud. "*சாய னினது வானிறை யென்னும்*" *(பரிபா. 2, 56).*

மறுவ. கார்மேகம்.

[வான் + நிறை]

வானீர் *vāṉīr*, பெ.(n.) நன்னீர்; pure water or liquor amni.

[வான் + ஈரம்]

வானீரம் *vāṉīram*, பெ.(n.) வஞ்சிக்கொடி (பிங்.); common rattan of South India.

வானீளம் *vāṉīḷam*, பெ.(n.) வால் வீச்சு; length of a house or house-site. "*மனை வானீளத்துக்குக் கிழக்கும்*" *(S.I.I.iii.214).*

[வால் + நீளம்]

வானுலகம் *vāṉ-ulagam*, பெ.(n.) வானுலகு பார்க்க; see *vāṉ-ulagu*. "*போரிலிறந்தவர் வானுலகம் புகுவர்*" – 26–ஆம் புறப்பாடல் இக்கருத்துப் பற்றியதே.

[வான் + உலகம்]

வானுலகு *vāṉ-ulagu*, பெ.(n.) 1. துறக்கம் (பிங்.); celestial world, *śvarga*. 2. உம்பருலகம்; heaven. "*பாடாதார் வானுலகு நண்ணாரே*" *(சீவக. 1468).*

[வான் + உலகு]

வானேறு *vāṉēṟu*, பெ.(n.) இடியேறு; thunderbolt. "*வானேறு புரையுநின்*" *(புறநா. 265).*

[வான் + ஏறு]

வானைநிமிளை *vāṉai-nimiḷai,* பெ.(n.) அஞ்சனக்கல்; sulphurate of antimony.

[வானை + நிமிளை]

வானொலி *vāṉoli,* பெ.(n.) ஒலிவாங்கிக் கருவி; radio.

[வான் + ஒலி]

தற்கால நாகரிக வாழ்க்கையில் இன்றி யமையாத இடம் பெற்றுள்ளது. வேறு எந்தப் புத்தமைப்பையும் விட இது மக்களால் பெரிதும் விரும்பிப் பயன்படுத்தப்படுகிறது. ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரை யாவரும் வானொலி மூலம் பாடல்களையும், நாடகங்களையும், அறிவுரை களையும், செய்திகளையும் மற்ற நிகழ்ச்சிகளையும் கேட்டு மகிழ்கிறார்கள்.



வானோங்கி *vāṉ-ōṅgi,* பெ.(n.) ஆல்; banyan.

[வான் + ஒங்கு → ஓங்கி]

வானோதயம் *vāṉōdayam,* பெ.(n.) கொடி மாதளை; a kind of citrus fruit-citrus medica.

வானோர் *vāṉōr,* பெ.(n.) தேவர்; celestials.

[வான் → வானோர்]

வானோர்க்கிறை *vāṉōrkkiṟai,* பெ.(n.) வானோர்கோமான் (உரி.நி.) பார்க்க; see *vāṉōr-kōmāṉ.*

[வானோர் + இறை]

வானோர்கிழவன் *vāṉōrkkiḻavaṉ,* பெ.(n.) வானோர்கோமான் பார்க்க; see *vāṉōr-kōmāṉ. "வானோர் கிழவனின் வரம்பின்று பொலிய" (பெருங். நரவாண. 4, 55).*

[வானோர் + கிழவன்]

வானோர்கோமான் *vāṉōr-kōmaṉ,* பெ.(n.) இந்திரன் (சூடா.); Indra.

[வானோர் + கோமான்]

வானோர்மாற்றலர் *vāṉōr-māṟṟalar,* பெ.(n.) 1. அசுரர்; *asurās.* 2. இராக்கதர்; *rāksasas.*

[வானோர் + மாற்றவர்]

வானோர்முதல்வன் *vāṉōr-mudalvaṉ,* பெ.(n.) 1. நான்முகன் (சூடா.); brahma, as first among the celestials. 2. வானோர் கோமான் பார்க்க; see *vāṉōr-kōmāṉ.*

[வானோர் + முதல்வன்]

வானோர்முதுவன் *vāṉōr-muduvaṉ,* பெ.(n.) 1. வானவர்முதுவன் [1] (நாமதீப. 55) பார்க்க; see *vāṉavar-muduvaṉ.* 2. சேரன் (யாழ்.அக.); *śēra.*

[வானோர் + முதுவன்]

வி

வி[1] *vi,* வகர மெய்யும் இகரவுயிரும் சேர்ந்தியைந்து பிறக்கும் எழுத்து (வ் + இ); the comound of வ் and இ.

வி[2] *vi,* 1. தொழிற்பெயர் விகுதி; ending of the verbal noun. 2. பிறவினை விகுதி (நன். 138); suffix indicating form of a causative verb.

வி[3] *vi,* 1. விசும்பு (யாழ்.அக.); heaven. 2. பறவை (இலக்.அக.); bird. 3. காற்று (யாழ்.அக.); wind. 4. கண் (யாழ்.அக.); eye. 5. திசை (யாழ்.அக.); direction. 6. அழகு (தக்கயாகப். 506, உரை); beauty. 7. வேறாக; to separate.

[விள் → வி] (வ.மொ.வ.316)

வி[4] *vi,* இடைச்சொல். (part.) இன்மை, எதிரிடை, மாறுபாடு, மிகுதி முதலிய பொருளுணர்த்தும் ஒரு முன்னொட்டு; prefix signifying privation, change, abundance, etc. *"விராகம், விசயம், விலட்சணம்" (இலக். கொத். 100).*

விக்கல் *vikkal,* பெ.(n.) தொண்டை விக்குகை; hiccup. *"நெஞ்சே விக்கல் வராது கண்டாய்" (அருட்பா, vi, நெஞ்சொடுகிள. 10). "உண்ணுநீர் விக்கினானென்றேனா" (கலித். 51). "நாச்செற்று விக்குள்மேல் வாராமுன்" (குறள், 335).*

[இக்(கு) → விக்கு → விக்குள் → விக்கல்.]

தெ. வெக்கில்லு; க. பிக்கலு (b); ம. எக்கில், விக்குக; து. பிக்குனி; குய். வெக; குர். பெகனா; **TO.** pik; **Ma.** vikkuka; **To.** pik, piky; **Ka.** bikku; **Tu.** Bikkuni; **Te.** vekku, vegacu, vekkili; **Kui.** veka; **Kur.** *bekkhnā,* **malt.** bege.

E. hicket, hiccup, hiccough; **Skt.** ஹிக்கா.

இது ஒலிக்குறிப்புச் சொல்லாயினும், ஆரிய இனத்தினும் தமிழ் இனம் முந்தியதாகலின், இது தமிழ்ச் சொல்லேயெனத் தெளிக (வ.மொ.வ.87).

விக்கல்மாந்தம் *vikkal-māndam,* பெ.(n.) குழந்தைகளுக்கு விக்கலுடன் வரும் ஒருவகை மாந்த நோய்; a kind of convulsion attended with hiccup, common among children.

[விக்கல் + மாந்தம்]

விக்கிள் *vikkiḷ,* பெ.(n.) விக்கல் (யாழ்.அக.) பார்க்க; see *vikkal.*

[விக்கல் → விக்கிள்]

விக்கு[1]-தல் *vikku-,* 5 செ.கு.வி. (v.i.) 1. விக்கலெடுத்தல்; to hiccup. 2. விம்மி நிறைதல்; to be superabundant, chokeful. *"வயல் விக்கின பொதியும் கதிருமா யிருக்கிறது" (நாஞ்.).*

[இக்கு → விக்கு]

விக்கு[2]-தல் *vikku-,* 5 செ.குன்றாவி. (v.t.) விக்கி வெளித்தள்ளுதல்; to hiccup, bring out with interruptions of hiccups. *"உண்ணுநீர் விக்கினா னென்றேனா" (கலித். 51).*

க. பிக்கு.

[இக்கு → விக்கு]

விக்கு[3] *vikku,* பெ.(n.) விக்குள் (நிகண்டு.311) பார்க்க; see *vikkuḷ.*

[இக்கு → விக்கு]

விக்குள் *vikkuḷ,* பெ.(n.) விக்கல்; hiccup. *"நாச்செற்று விக்குண்மேல் வாராமுன்" (குறள், 335).*

க. பிக்குள்.

[விக்கல் → விக்குள்]

விகண்டி[1]-த்தல் *vigaṇḍi-,* 11 செ.கு.வி. (v.i.) 1. குணக்காய்ப் பேசுதல் (யாழ்ப்.); to raise frivolous or fallacious objections. 2. மறுத்துரைத்தல் (வின்.); to refute.

[விதண்டை → விகண்டை → விகண்டி-,]

விகண்டி[2]-த்தல் *vigaṇḍi-,* 11 செ.கு.வி. (v.i.) வேறுபடுதல் (யாழ்.அக.); to differ.

[விதண்டை → விகண்டை → விகண்டி-,]

விகண்டிதம் *vigaṇḍidam,* பெ.(n.) 1. பிரிவு (யாழ்.அக.); division. 2. வேறுபாடு (யாழ்.அக.); difference. 3. கண்டிப்பின்மை (சங்.அக.); lack of strictness.

[விதண்டை → விகண்டை → விகண்டி → விகண்டிதம்.]

விகண்டை[1] *vigaṇḍai,* பெ.(n.) 1. விதண்டை; frivolous or fallacious objection. 2. எதிர்ப்பு (வின்.); refutation. 3. கெட்ட எண்ணம் (யாழ்.அக.); wicked thought.

[விதண்டை → விகண்டை]

விகண்டை[2] *vigaṇḍai,* பெ.(n.) 1. பகைமை; hostility. 2. மனவுறுதி (யாழ்.அக.); absence of attachment, firmness.

[வெகுள் → விகண்டை.]

விகவெனல் *viga-v-eṉal,* பெ.(n.) விரைந்து செல்லுதற் குறிப்பு; expr., of swift movement. *'விகவென்று வந்தான்' (இ.வ.).*

விகாய் *vigāi* பெ.(n.) ஒரு மரம் (சங்.அக.); a tree.

[ஒருகா. உகாய் → விகாய்]

விகு-த்தல் *vigu-,* 11 செ.கு.வி. (v.i.) செருக்காதல்; to be tight, stiff or hardened. *"வயிறு வில்லைப்போல விகுத்துக் கொள்ளல்" (சீவரட். 118).*

ma. *viṉṉuka;* **Ko.** vigu; **To.** pixy; **Ka.** bigi; **Tu.** bigi, bigu, biguta; **Te.** bigi, bigutu, biguvu; **Kui.** bija.

[மிகு → விகு-,]

விகுணம் *viguṇam,* பெ.(n.) குணக்கேடு (யாழ்.அக.); bad nature.

விகுணி *viguṇi,* பெ.(n.) 1. குணங்கெட்ட-வன்-வள்-து (சங்.அக.); person or thing destitute of merit. 2. கள் (திவா.); intoxicating drink.

விகுரம் *viguram,* பெ.(n.) வெள்ளெருக்கு (சங்.அக.); white madar.

விங்களம் *viṅgaḷam,* பெ.(n.) 1. குறைவு; deficiency, deformity, imperfection. 2. திரிவு (வின்.); difference, diversity. 3. நட்பின்மை (வின்.); want of cordiality, coolness in friendship. 4. இரண்டகம்; guile, deception, treachery, tergiversation. *"இவ்விங்கள மேன் செய்தீர்" (தனிப்பா. i, 18, 30).* 5. உதவி புரியப் பின் வாங்குகை (வின்.); with holding proper aid. 6. கலிம்பு (வின்.); adulteration, alloy.

தெ. விங்களமு; க. விங்கட.

[பங்கு → பங்கம் → பிங்கம் → பிங்களம் → விங்களம்.]

விங்களி-த்தல் *vingaḷi-,* 11 செ.கு.வி. (v.i.) 1. நட்பில் மனம் வேறுபடுதல்; to be wanting in cordiality or co-operation. 2. கீழறுப்பாய் நடத்தல்; to be treacherous, deceptive, to tergiversate. 3. நிலையற்றிருத்தல்; to be unsteady. 4. பிரித்தல் (வின்.); to sift, separate.

[விங்களம் → விங்களி-.]

விங்களிப்பு *vingaḷippu,* பெ.(n.) விங்களம் பார்க்க; see *vingaḷam.*

[விங்களி → விங்களிப்பு]

விங்கு[1]-தல் *vingu-,* 5 செ.கு.வி. (v.i.) மிகுதல்; to be abundant. *"திங்கள் .... ஒளி விங்கி" (தேவா. 1157, 3).*

[வீங்கு → விங்கு]

விங்கு[2]-தல் *vingu-,* 5 செ.கு.வி. (v.i.) துளைத்தல் (இலக்.அக.); to drill, pierce.

விச்சதையன் *viccadaiyaṉ,* பெ.(n.) புல்லுருவி (மலை.); honeysuckle mistletoe.

விச்சந்தா *viccandā,* பெ.(n.) வெள்ளெருக்கு (மலை); white madar.

விச்சம் *viccam,* பெ.(n.) தாமரை வகை (மலை); a kind of lotus.

விச்சல்லி *viccalli,* பெ.(n.) கொடிவகை (யாழ்.அக.); colocynth.

மறுவ. பேய்க்கொம்மட்டி

விச்சா[1] *viccā,* வி.எ.(adv.) 1. சும்மா; without purpose. *'நான் விச்சா வந்தேன்'.* 2. தொழிலின்றி; without occupation. *'அவன் விச்சா இருக்கிறான்'.* 3. அமைதியாய்; quietly. *'பேசாதே, விச்சா இரு'.* 4. நலமாக; healthy, in good health. *'விச்சாயிருக்கிறாயா?'*

தெ. வித்ச; க. விதெ; து. விச்சு.

விச்சா[2] *viccā,* வி.எ.(adv.) அடிக்கடி; repeatedly. *'அவன் விச்சா பேசுகிறான்'.*

Pkt. viccha.

விச்சிக்கோன் *vicci-k-kōṉ,* பெ.(n.) கடைக் கழகக் காலச் சிற்றரசருள் ஒருவன்; a king of sangam period.

இவன் ஒரு மலைநாட்டுத் தலைவனாக இருக்கலாம் என்பதைக் கபிலர் இவனைக் 'கல்லக வெற்ப' என்பதனாற் கொள்ளலாம். கபிலர் பாரி மகளிரை இவனிடம் அழைத்துச் சென்று மணந்துகொள்ள வேண்டினாரென்று இவனை அவர் பாடிய புறநானூற்றுச் செய்யுள் (200) குறிப்பு அறிவிக்கின்றது. இவன் சேரமான் குடக்கோச் சேரலிரும்பொறையால் வெல்லப் பட்டான் என்பதைப் பதிற்றுப்பத்தில் ஒன்பதாம் பத்தின் பதிகம் அறிவிக்கின்றது. இவனை 'வில்பெருதானை விச்சியர் பெருமகன்' என்றும், இவன் குறும்பூர் என்னுமிடத்தில் வேந்தர்களோடு பொருதான் என்றும் பரணர் குறிப்பிடுகின்றார் (குறுந். 328).

விச்சிரல் *vicciral,* பெ.(n.) விச்சிறல் பார்க்க (பச்.மூ.); see *vicciṟal.*

விச்சிரிப்பு *viccirippu,* பெ.(n.) விச்சிலுப்பை (வின்.) பார்க்க; see *vicciluppai.*

விச்சிரும்பி-த்தல் *viccirumbi-,* 11 செ.கு.வி. (v.i.) கிளர்தல்; to burst out. *'அவன் சினத்தினால் விச்சிரும்பித்தான்'.*

விச்சிலுப்பை *vicciluppai,* பெ.(n.) அம்மை நோய்வகை (இ.வ); chicken-pox or measles.

மறுவ. சிச்சிலுப்பை.

விச்சிறல் *viccira̱l*, பெ.(n.) கோரைவகை (மலை.); a kind of sedge.

விச்சு[1]-தல் *viccu-*, 5 செ.கு.வி. (v.i.) வித்து-, பார்க்க; see *vittu*. *"நமவென்று நாமத்தை விச்சுமின்" (திருமந். 1850).*

விச்சு[2] *viccu*, பெ.(n.) விதை; seed. *"விச்சின்றி நாறுசெய்வானும்" (தேவா. 696, 2) (பிங்.).*

து. viija / viijo.

[வித்து → விச்சு]

விச்சு[3] *viccu*, பெ.(n.) மிகுதி (வின்.); abundance.

[விஞ்சு → விச்சு]

விச்சுக்கொட்டு-தல் *viccu-k-koṭṭu-*, 9 செ.கு.வி. (v.i.) வெறுப்புக்குறியாக ஒருவகை யொலி செய்தல் (வின்.); to make a peculiar sound, expressive of aversion.

[விச்சு + கொட்டு-,.]

விச்செனல்[1] *viccena̱l*, பெ.(n.) வெறுப்பைக் குறிக்கும் ஓர் ஒலிக் குறிப்பு; an expr. of aversion.

விச்செனல்[2] *viccena̱l*, பெ.(n.) வெரிச்செனல் என்பதன் மறுவழக்கு; corr. of *vericcena̱l*.

விச்செனல்[3] *viccena̱l*, பெ.(n.) அமைதியாயிருப்பதைக் குறிக்குஞ் சொல் (இ.வ); expression denoting silence.

விச்சை[1] *viccai*, பெ.(n.) 1. கல்வி; learning, education. *"விச்சைக்கட் டப்பித்தான் பொருளேபோல்" (கலித். 149).* 2. அறிவு (யாழ்.அக.); knowledge. 3. மாயவித்தை; magic power, miracle. *"எம்பெருமான் செய்திட்ட விச்சைதானே" (திருவாச. 5, 28).* 4. மந்திரம்; mantra, incantation. *"விச்சையின் மெலிந்து" (பெருங். உஞ்சைக். 53, 62).* 5. தத்துவப் பகுதியில் ஒன்று; a section of tattuvam. *"அடையா விச்சை யடையத் தடையில் விடையப்பகுதி" (ஞானா. 1, 15).*

pkt. *vijjā*.

[வித்தை → விச்சை]

விச்சை[2] *viccai*, பெ.(n.) தெரு (பிங்.); street.

விச்சை[3] *viccai*, பெ.(n.) வெள்ளெருக்கு (மலை.); white madar.

விச்சைக்கோலம் *viccai-k-kōlam*, பெ.(n.) மாயக்கோலம்; magic illusion.

[விஞ்சு → விச்சு → விச்சை + கோலம்.]

விச்சைமன்னன் *viccai-manna̱n*, பெ.(n.) விஞ்சையர் அரசன்; *vidhyādara* king. *"விச்சை மன்ன னச்சுவ னாகி" (பெருங். நரவாண. 9, 66).*

விச்சோடி *viccōḍi*, பெ.(n.) விச்சோடு பார்க்க; see *viccōḍu*.

[பிச்சு → விச்சு + சுவடி → சோடி]

விச்சோடு *viccōḍu*, பெ.(n.) இரட்டை யாயுள்ளவற்றுள் ஒன்றோடு மற்றொன்று ஒவ்வாதது (கொ.வ.); that which does not match or equal.

தெ. விட்சொடு.

[விச்சோடி → விச்சோடு]

விசக்காணம் *viśakkāṇam,* பெ.(n.) நாட்டுப் புற விளைவில் ஊர்த்தலைவற்குரிய பங்கு (S.I.I.ii.352); share if the chief of head man in the produce of a village.

[விழ → விச + காணம்]

விசகலி *viśa-kali,* பெ.(n.) மல்லிகை (நாமதீப. 308); jasmine.

விசத்தம் *viśattam,* பெ.(n.) புடல் (மலை.); snake gourd.

விசத்துரு *viśatturu,* பெ.(n.) அடப்பங்கொடி (மலை.); hare -leaf.

[விடத்துரு → விசத்துரு]

விசம் *viśam,* பெ.(n.) 1. வீதம்; rate. *"மார்கழித் திருவாதிரைக்கும் வைகாசி விசாகத்துக்கும் திருவிழாவிசம் ஒரு ஆட்டைக்கு நெல்" (S.I.I.iii, 314).* 2. செலவு (S.I.I.V.307); expense. 3. படித்தரம் (நாஞ்.); allowance; batta.

[விசை → விசம்.]

விசயம்[1] *viśayam,* பெ.(n.) 1. கருப்பஞ்சாறு; juice of the sugarcane. *"விசயமடூஉம் புகைசூழாலை தொறும்" (பெரும்பாண். 261).* 2. கருப்புக்கட்டி; jaggery. *"விசயங் கொழித்த பூழி யன்ன" (மலைபடு. 444).* 3. பாகு; treacle. *"அயிருருப் புற்ற வாடமை விசயம்" (மதுரைக். 625).*

தெ. வெட்ச, வெட்சு; க., து. விசி, விசில், விசு; ம. வெய்கில்.

[விசை → விசையம்.]

விசயன்கடுக்காய் *viśayaṉ-kaḍukkāy* பெ.(n.) கடுக்காய் வகை (பதார்த்த. 964); species of chebulic myrobalan.

விசரம் *viśaram,* பெ.(n.) 1. இரும்பிலி என்னும் செடிவகை (L.); box leaved satin ebony, supposed to be used in alchemy to convert iron into gold. 2. முதிரை என்னும் மரவகை (வின்.); East Indian satin wood, m.tr., chloroxylon swietenia.

விசரி *viśari,* பெ.(n.) தும்பை (சங்.அக.); white dead nettle.

விசல்லியகரணி *viśalliya-karaṇi,* பெ.(n.) போர்க் கருவிகளினால் ஏற்பட்ட புண்ணை ஆற்றும் மருந்து (திவா.); medicament which heals wounds, caused by weapons.

விசலம் *viśalam,* பெ.(n.) தளிர் (யாழ்.அக.); sprout.

விசலி *viśali,* பெ.(n.) படர் கொடிவகை; gulancha. *"வீழ் என்பது ஆல்..... சீந்தில்கட் குரித்து" (நன். 387, மயிலை).*

மறுவ. சீந்தில்.

விசலிகை *viśaligai,* பெ.(n.) கொடிமல்லிகை (பிங்.); malabar Jasmine.

விசவல்லி *viśavalli,* பெ.(n.) கீழாநெல்லி (மலை.); a small plant with slender green main branches.

விசாக்கோட்டி *viśā-k-kōṭṭi,* பெ.(n.) வயா நடுக்கம் (இ.வ.); morning sickness and morbid longings of a pregnant woman.

விசாதி *viśādi,* பெ.(n.) நோய்; disease. *"கொன்றுயிருண்ணும் விசாதி பசிபகை தீயன வெல்லாம்" (திவ். திருவாய். 5, 2, 6).* *'விசாதி' (உ.வ.).*

Skt. வியாதி.

விசாரத்தகடு *viśāra-t-tagaḍu,* பெ.(n.) இரும்புவளையம் (வின்.); iron hoop.

விசாலம் *viśālam,* பெ.(n.) 1. பேய்க் கொம்மட்டி (மலை.); colocynth. 2. கடம்பம்[1],1 (அக.நி.);common cadamba. 3. வெண் கடம்பு (திவா.); seaside, Indian oak. 4. பறவைவகை (யாழ்.அக.); a kind of bird. 5. மான்வகை (யாழ்.அக.); a kind of deer. 6. ஒரு நாடு (அபி.சிந்.); a country.

விசாலி-த்தல் *viśāli-,* 11 செ.கு.வி. (v.i.) விரிவு பெறுதல்; to extend, spread out, to become wide. *'படித்தால் அறிவு விசாலிக்கும்'.*

[விசாலம் → விசாலி-,]

விசி[1]-த்தல் *viśi-,* 11 செ.குன்றாவி. (v.t.) இறுகக் கட்டுதல்; to fasten, bind, tie tightly. *"திண்வார் விசித்த முழவு" (மலைபடு. 3).*

[விசி → விசி-,]

விசி[2]-த்தல் *viśi-,* 4 செ.கு.வி. (v.i.) விம்முதல்; to become swollen, over-stretched, as the abdomen from over-eating. *"விலாப்புடை மருங்கு விசிப்ப மாந்தி" (புறநா. 61).*

[விசி → விசி-,]

விசி[3]-தல் *viśi,* 4 செ.குன்றாவி. (v.t.) விசி[1] பார்க்க; see *viśi. "பசும்பொற் பலவார் விசிந்து பிணியுறீஇ..... ஏற்றுரிபோர்த்த..... கொற்றமுரசம்" (பெருங். இலாவாண. 2, 26).*

விசி[4] *viśi,* பெ.(n.) 1. கட்டு; fastening, tie. *"விசிவீங் கின்னியங் கடுப்ப" (பெரும்பாண். 56).* 2. பறையிறுக்கும் வார் (யாழ்.அக.); leather strap for drums. 3. விசிப்பலகை (திவா.); bench. 4. கட்டில் (யாழ்.அக.); cot.

தெ. பிசி.

விசி[5] *viśi,* பெ.(n.) தாமரைத்தண்டு (பிங்.); lotus stalk.

விசி[6] *viśi,* பெ.(n.) அலை (யாழ்.அக.); wave.

விசிகக்கோல் *viśiga-k-kōl,* பெ.(n.) அம்பு; arrow. *"விசிகக்கோல் செல்வன சத கோடிகள்" (கம்பரா. மூலபல. 104).*

[விசிகம் + கோல்]

விசிகிலம் *viśigilam,* பெ.(n.) மல்லிகை (யாழ்.அக.); jasmine.

விசிகை *viśigai,* பெ.(n.) 1. முலைக்கச்சு (பிங்.); bodice. 2. கருத்து (யாழ்.அக.); thought.

[விசி → விசிகை]

விசித்தி *viśitti,* பெ.(n.) கடுகு (மலை.); mustard.

விசித்துக்கட்டு-தல் *viśittu-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) இறுகக் கட்டுதல்; to bind tightly.

[விசித்து + கட்டு]

விசிப்பலகை *viśi-p-palagai,* பெ.(n.) ஊஞ்சற்பலகை (கொ.வ.); a board thick plank used as a swing etc.

தெ. விசிப்பலக.

[விசி[3] + பலகை]



விசிப்பு *višippu,* பெ.(n.) விசிப்பலகை (நாமதீப. 470) பார்க்க; see *viši-p-palagai.*

[விசி → விசிப்பு]

விசிமந்தம் *viši-mandam,* பெ.(n.) வேம்பு (மலை.); neem.

விசியுழி *viši-y-uli,* பெ.(n.) உண்மையில் நோக்கமின்றி வெற்றியே விழைவோன் செய்யும் சொற்போர்வகை (சங்கற்ப. பாயி. 2, உரை); a form of polemical discussion, the sole aim of which is victory over one's opponent and not the ascertainment of truth.

விசிரகந்தி *višira-kandi,* பெ.(n.) பொன்னரிதாரம் (யாழ்.அக.); yellow orpiment.

விசிலம் *višilam,* பெ.(n.) கஞ்சி (யாழ்.அக.); gruel.

விசிறி *viširi,* பெ.(n.) 1. உடம்பு முதலியவற்றிற் படும்படி காற்றை அசைவிக்குங் கருவி (திவா.); fan. 2. உயிர்மெய்களில் இகர ஈகாரங்களின் குறியாக எழுதப்படும் மேல் வளையுங் கோடு; curves appended to the consonants as symbols of vowels i and ī. 3. செடிவகை (வின்.); box-leaved ivory wood, m.sh., chretia buxita. 4. வண்ணக் கோடுள்ள சீலை வகை (இ.வ); a saree with coloured stripes.

[விசு → விசிறு → விசிறி. (மு.தா.பக்.68)]

வெயில் கடுமையாக உள்ள கோடை காலத்தில் செயற்கை முறையில் காற்றோட்டத்தையுண்டாக்கிக் கொள்ளுவதற்குப் பயன்படும் எளிய கருவி. இயல்பாக விசிறி இருவகைப்படும். மடிக்க முடியாதவாறு எப்போதும் விரிந்த நிலையிலேயே இருப்பது ஒருவகை. தேவையான போது மட்டும் விரித்துப் பயன்படுத்திக் கொண்டு தேவையற்ற போது மடித்து வைத்துக் கொள்ளக்கூடியது, இரண்டாம் வகை. பனையோலை, தென்னையோலை, தாள் அட்டை, மூங்கில் சிம்புகள், மருப்பு, சந்தனக் கட்டை, பட்டுப் போன்ற துணி, தோல், வெட்டிவேர், மயில் இறகு போன்ற இறகுகள் ஆகிய பல பொருள்கள் விசிறி செய்யப் பயன்படுகின்றன. பலவகையான மின்விசிறிகளும் தற்போது புழக்கத்திலுள்ளன.

[விசிறு → விசிறி]



விசிறிக்கிளிஞ்சில் *viširi-k-kiliñjil,* பெ.(n.) விசிறி வடிவாகக் காணப்படும் கிளிஞ்சில் வகை; a kind of a bivalve.

மெல்லுடலிகளிலே இரண்டு ஒடுகளுள்ள வனவாகிய தகட்டுச் செவுள் வகுப்பிலே ஒருவகைக்

கிளிஞ்சில் (pecton). இது கடலில் வாழ்வது. இந்தக் கிளிஞ்சலின் ஓடுகள் வட்டமாகவும், வெளிப்புறத்திலே பழு (rib) போன்ற வரம்புகளும், அவவற்றிற்கு இடையே பள்ளங்களும் மாறி மாறி இரண்டு ஓடுகளும் பொருத்தப் பெற்றிருக்கும். இணைப்பு முனையிலிருந்து ஓட்டின் விளிம்பை நோக்கி ஆரங்கள்போலச் சென்றிருப்பதும், இணைப்பின் முன்னும் பின்னும் ஒடுகள், செவிகள் (ears) என்னும் சிறு நீட்சிகள் பிடிகள் போல இருப்பதும் ஆகிய இயல்புகளால் இந்தக் கிளிஞ்சல்கள் விசிறி போலவே காண்கின்றன. சீப்பு போலவும் இவை காண்பதால் அப்பொருள்படும் பெக்ட்டென் என்னும் பெயர் இவற்றிற்கு இடம் பெற்றுள்ளது.

விசிறிக் கிளிஞ்சலின் ஓடுகள் பெரும்பாலும் சற்றுக் குவிவாக (convex) இருக்கும். இரண்டு ஓடுகளும் இயல்பாக ஒரே சமமாக, ஒரு பொருளும் கண்ணாடியில் காணும் அதன் நிழலும் போல ஒத்திருப்பதில்லை. ஓர் ஓட்டைவிட மற்றொன்று தாழ்வான குவிவாக அல்லது தட்டையாகவே இருக்கலாம். ஓட்டுக்குள்ளிருக்கும் போர்வை மடிப்புக்களின் (mantle folds) விளிம்பிலே உணர் நீட்சிகளும் (tentacles) கண்களும் அமைந்திருக்கும்.

[விசிறி + கிளிஞ்சல்]



விசிறிக்குருவி *viśiṟi-k-kuruvi,* பெ.(n.) விசிறி போன்ற வாலுடைய குருவி வகை; white-browed fantail, leucocerca albofrontata.

மறுவ. ஈப்பிடிப்பான். இனம் : வெண்புள்ளி விசிறிக்குருவி வெண்புருவ விசிறிக்குருவி.

[விசிறி + குருவி]



விசிறிகட்டிநட-த்தல் *viśiṟi-kaṭṭi-naḍa-,* 3 செ.கு.வி.(v.i.) 1. ஆடிநடத்தல்; to walk with a swinging motion. 2. கை வீசுதல்; to swing the hands.

விசிறிமடிப்பு *viśiṟi-maḍippu,* பெ.(n.) மேற்துண்டில் விசிறிப்போல மடிப்புக்கள் ஒன்றன்மேல் ஒன்று அமையும்படி மடிக்கை; a kind of fan-like narrow folding of washed clothes.

[விசிறி + மடிப்பு]

விசிறிமுருகு *viśiṟi-murugu,* பெ.(n.) மேற்காதிலணியும் காதணி வகை (வின்.); fan-shaped ear-ring of gold, worn on the upper part of the ear.

[விசிறி + முருகு]

விசிறியெறி-தல் *viśiṟi-y-eṟi-,* 2 செ.குன்றாவி.(v.t.) கழற்றி வீசுதல்; to cast away, to throw away. *'அவள் நகைகளை வீசியெறிந்தாள்'.*

[விசுறு + எறி – விசிறியெறி-.]

விசிறிவாழை *viśiṟi-vāḻai,* பெ.(n.) நீர்வாழை; traveller's palm.

இது ஒரு வியப்பான மரம்; ஒற்றை விதையிலை நிலைத்திணைகளிலே ஒருவகை வாழைக் குடும்பத்தைச் (musaceae) சேர்ந்த பல பருவ மரம். இதில் இரண்டு இனங்கள் உண்டு. ஒன்று தென் அமெரிக்காவிற்குரியது. மற்றோர் இனம் மடகாசுகர், இரீயூனியன் ஆகிய தீவுகளில் வாழ்வது. இந்த இரண்டாவது இனத்தையே வழிப்போக்கர் மரம் (traveller's tree) என்பார்கள். நீர் வேட்கையால் வருந்தும் வழிப்போக்கர்கள் இதன் இலையின் அடியில் சேர்ந்திருக்கும் நீரைக் குடித்து நாவறட்சி தவிர்வார்கள், ஆதலின் இம்மரம் இப்பெயர் பெற்றுள்ளது.

வாழை மரத்திலே தண்டு போலத் தோன்றும் பாகம் இலைகளின் அடிகள் (leaf bases) ஒன்றையொன்று தழுவல் முறையில் அடுக்கியிருக்கும் பச்சைத் தூண் போன்ற பாகமாகும். உண்மையான தண்டு, தரையின் கீழே இருக்கும் கிழங்கே ஆகும். இவ்வகை மரத்தின் உண்மையான தண்டு தரைக்குமேலே, தென்னை, பனை முதலியவற்றின் தண்டைப்போலத் தூண்போல நிற்கும் கெட்டியான பாகமே. இந்தத் தண்டு 20–30 அடி உயரம் வளரும். தண்டின் நுனியில் நீண்ட காம்புகள் உள்ள பல மிகப்பெரிய இலைகள் இரண்டு செங்குத்தான வரிசைகளிலே ஒரே தளத்திலே (plane) நெருக்கமான, ஒழுங்கான அடுக்காக அழகாக வளர்ந்திருக்கும். இதனால் மரம் ஒரு பெரிய விசிறிப் போலத் தோன்றும். இவ்விலைகள் வாழை இலையை ஒத்திருக்கும். இலைக்காம்பின் அடிப்பாகம் உறைபோலப் பள்ளமாக இருக்கும். அந்தப் பள்ளங்களில் நீர் சேர்ந்திருக்கும். அது குடிப்பதற்கு ஏற்றது. தாராளமாகப் போதுமான அளவில் கிடைக்கும். கத்தியினால் காம்பின் அடியில் குத்தினால் நீர் வெளியே ஓடிவரும். பூக்கள் மடல் கொத்தாக மேலேயுள்ள இலைகளின் கக்கங்களிலிருந்து உண்டாகும். பூக்காம்பிலைகள் (bracts) படகு வடிவில் இருக்கும்; அவை மிகக் கூராக நுனியில் முடியும். கனி வெடிக்கனி.

இம்மரம் அழகுக்காகப் பூங்காக்களிலும் தோட்டங்களிலும் வளர்க்கப்படுகிறது.

[விசிறி + வாழை]



விசிறு¹–தல் *viśiṟu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. விசிறியாற் காற்றெழுப்புதல்; to fan. 2. வாள் முதலியவற்றை வீசுதல்; to wave to and fro, brandish. *"நாந்தகம் விசிறு நம்புருடோத்தமன்" (திவ். பெரியாழ். 4, 7, 4).* 3. வலை முதலியவற்றை விரித்தெறிதல்; to fling, hurl, cast, as a net. *"அலைகடல்வாய் மீன்விசிறும்" (திருவாச. 8, 2).* 4. சுழற்றுதல்; to whirl round. *"விளங்கனிக் கிளங்கன்று விசிறி" (திவ். பெரியதி. 9, 8, 6).* 5. சொரிதல்; to pour forth, to sprinkle. 6. வெளித் தள்ளுதல்; to eject, discharge. *'கிடாரி கருவை விசிறி விட்டது'.* 7. போக்குதல்; to remove. *"பிறவியுமற விசிறுவர்" (தேவா. 618, 4).* 8. கை முதலியன வீசுதல்; to swing, as the arms in walking. *"வேயன தோள்விசிறி" (திவ். பெரியதி. 3, 7, 5).* 9. உயிர்மெய்களுள் இகர ஈகாரங்களின் குறியாக மேல் வளைவுக் கோடிடுதல்; to append the symbols of i and ī to the consonants.

தெ. விசரு; க. பிசுடு; ம. விசருக.

[விசு → விசிறு-,]

விசிறு²–தல் *viśiṟu-,* 5 செ.குன்றாவி. (v.t.) விசிறியாற் காற்றடிக்கச் செய்தல்; to fan.

[விசு → விசிறு-,]

விசு *viśu,* பெ.(n.) ஒரு மருந்துச் சரக்கு; a bazzar drug called Indian atees.

மறுவ. அதிவிடயம்.

விசுக்கிடு-தல் *viśukkiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. வெறுப்புக்கொள்ளுதல் (யாழ்.அக.); to become displeased. 2. மன வருத்தங் கொள்ளுதல் (வின்.); to be pained at heart.

தெ. விசுகுகொனு, விசுகு, விசுவு.

[விசுக்கு + இடு-,]

விசுக்கு[1]-தல் *viśukku-,* 5 செ.குன்றாவி. (v.t.) விரைந்து கைவீசுதல், விசிறுதல்; to fan. *'விசுக்கு விசுக்கென்று நடக்கிறாள்' (இ.வ.).*

[விசு → விசுக்கு → விசுக்கு-, (மு.தா.பக்.68)]

விசுக்கு[2] *viśukku,* பெ.(n.) வெறுப்பு; displeasure, dislike. *'அந்தச் சொல்லைக் கேட்கவும் அவனுக்கு விசுக்கு வந்து விட்டது'.*

[சிவிட்கு → விசுக்கு]

விசுக்குணி *viśukkuṇi,* பெ.(n.) சிறியது, சிறுதுண்டு; small, small piece.

மறுவ. விசுக்காணி.

[பிசுக்கு → விசுக்கு → விசுக்குணி]

விசுக்கெனல் *viśukkeṉal,* பெ.(n.) விரைந்து செல்லுதற்குறிப்பு; expr. of quick movement. *'விசுக்கென்று புறப்பட்டு விட்டான்' (நெல்லை.).*

[விசுக்கு + என → எனல்]

விசுதம் *viśudam,* பெ.(n.) 1. கொடிவகை; snake-gourd. 2. பேய்ப்புடல்; wild snake-gourd.

மறுவ. புடல்.

விசுப்பலகை *viśu-p-palagai,* பெ.(n.) விசிப்பலகை பார்க்க; see *viśi-p-palagai.*

[விசு + பலகை]

விசும்பாளர் *viśumbāḷar,* பெ.(n.) தேவர்; celestials. *"படைவிடா விசும்பாளரைப் பறித்து" (தக்கயாகப். 352).*

[விசும்பு + ஆள் + அர்]

விசும்பு[1] *viśumbu,* பெ.(n.) 1. வானம்; visible heavens, sky. *"விசும்பு தைவரு வளியும்" (புறநா. 2).* 2. தேவருலகம் (திவா.); Svarga; heaven. *"அங்கண் விசும்பி னமரர்" (நாலடி, 373).* 3. முகில் (திவா.); cloud. *"விசும்பிற் றுளிவீழி னல்லால்" (குறள், 16).* 4. திசை (பிங்.); direction.

[விள் → (விசு) → விசும்பு. (மு.தா.பக்.153)]

விசும்பு[2]-தல் *viśumbu,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. வெறுப்புடன் விலக்குதல் (வின்.); to throw away in contempt, to toss aside, to cast away. 2. கயிறு முதலியவற்றைச் சுண்டியிழுத்தல் (தஞ்சை.); to draw tight, as a rope. 3. தேம்பி அழுதல்; to sob, cry.

விசும்பு[3] *viśumbu,* பெ.(n.) 1. வீம்பு; obstinacy. *'விசும்புக்கு வேட்டையாடு கிறான்'.* 2. செருக்கு (இ.வ.); pride; arragance.

[வீம்பு → விசும்பு]

விசும்பு[4]-தல் *viśumbu-,* 5 செ.குன்றாவி. (v.t.) மீறுதல் (இ.வ.); to transgress.

விசும்பு[5]-தல் *viśumbu-,* 5 செ.கு.வி. (v.i.) செருக்குக் கொண்டிருத்தல்; to be proud or haughty. *'மாப்பிள்ளை மிக விசும்புகிறான்'.*

விசும்புவில் *viśumbu-vil,* பெ.(n.) ஒளிவட்டம்; the sphere of celestial luminaries. *"காமனார் சேமவில்லென விசும்புவில் வெருவு தெய்வமாதர்" (தக்கயாகப். 23).*

[விசும்பு + வில்]

விசும்பேற்று-தல் *viśumbēṟṟu-,* 5 செ.குன்றாவி.(v.t.) மானங்காரணமாக ஒருவனை அலுவலில் முனையச் செய்தல் (நெல்லை.); to appeal to one's pride, prestige, etc. and urge one to action.

[விசும்பு + ஏற்று-,]

விசும்பேறு *viśumbēṟu,* பெ.(n.) இடியேறு (இலக்.அக.); thunder bolt.

[விசும்பு + ஏறு]

விசுமந்தச்சூரணம் *viśumanda-c-cūraṇam,* பெ.(n.) எலுமிச்சையிலை, நாரத்தையிலை, கறிவேப்பிலை முதலியன சேர்த்து இடித்துச் செய்த மருந்துப்பொடி; a relish made of citron leaves, sweet neem and spices.

[விசுமந்தம் + **Skt.** *chūrṇa > த. சூரணம்]*

விசுமிகினி *viśumigiṉi,* பெ.(n.) வேம்ப (மலை.); neem.

விசுவநாக்கரம் *viśuva-nākkaram,* பெ.(n.) சுக்கு (சங்.அக.); dried ginger.

விசுவநாதசெட்டிவெட்டு *viśuvanāda-cetti-vettu,* பெ.(n.) பழைய காசுவகை (பணவிடு. 144); an old coin probably so named after the person who minted it.

விசுவபேடசம் *viśuva-pēdaśam,* பெ.(n.) சுக்கு (மலை.); dried ginger, as a general remedy.

விசுவம்[1] *viśuvam,* பெ.(n.) சுக்கு (நாமதீப. 356); dried ginger.

விசுவம்[2] *viśuvam,* பெ.(n.) அதிவிடை என்னும் மருந்துச் செடி; atis.

விசுளி *viśuḷi,* பெ.(n.) கள் (யாழ்.அக); toddy.

விசூகை *viśūgai,* பெ.(n.) தலைச்சுழற்சியை மிகச் செய்யும் நோய்வகை (சங்.அக.); a disease causing severe dizziness.

விசை[1] *viśai,* பெ.(n.) 1. வேகம்; haste, speed, impetus. *"வருவிசைப் புனலைக் கற்சிறை போல" (தொல். பொ. 63).* 2. நீண்டு சுருங்குந் தன்மை; elasticity, spiring. 3. விரைவு; force. 4. எந்திரம்; contrivance, as a trap, mechanism, mechanical instrument, as a lever. 5. பக்கம்; side. *"முதற் பிரகாரத்து வடக்கு விசையிற் புறவாயிலே கல்வெட்டு விப்பது" (சோழவமி. 63).* 6. பற்றுக்கோடு (வின்.); stay, prop. 7. மரவகை; a tree. *"விசைமரக்கிளவியும்" (தொல். எழுத். 282).*

தெ. செச: விசெ; ம. விச.

[...சை. (மு.தா.பக். 67)]

விசை[2]**-த்தல்** *viśai-,* 11 செ.கு.வி. (v.i.) 1. விரைவு பண்ணுதல்; to hasten, to cause to move swifly. 2. வீசுதல்; to swing. *"கால்விசைத் தோடி" (திருவாசக. 2, 135).* 3. துள்ளுதல்; to leap, hop. *"நறுநெய்க்கடலை விசைப்ப" (புறநா. 120).* 4. சிதறுதல்; to burst, split. *"கண்டொறும் விசைத்த கருப்புத் தாளமும்" (கல்லா. 59,16).* 5. கடுமையாதல்; to be forceful. *"இரும்பு விசைத் தெறிந்த கூடம்" (பெரும்பாண். 437).* 6. சினமுறுதல் (வின்.); to become angry.

விசை[3] *viśai,* பெ.(n.) வெற்றி (அரு.நி.); victory.

விசை[4] *visai,* பெ.(n.) தடவை; turn, time. *"புழைக்கை ஒருவிசை தடிந்தும்" (கல்லா. 13).*

ம. பிராவசியம்.

விசைக்கம்பு *visai-k-kambu,* பெ.(n.) நெய்வார் கருவியிலொன்று (யாழ்.அக.); a weaver's instrument.

[விசை[1] + கம்பு[1]]



விசைக்கால்[1] *visai-k-kāl,* பெ.(n.) விசைக்கம்பு பார்க்க; see *visai-k-kambu*

[விசை + கால்[1]]

விசைக்கால்[2] *visai-k-kāl,* பெ.(n.) விசைக்காற்று பார்க்க; see *visai-k-kāṟṟu*

[விசை + கால்[3]]

விசைக்காற்று *visai-k-kāṟṟu,* பெ.(n.) ஒருவன் விரைந்து செல்லும் வேகத்தால் உண்டாகும் காற்று (யாழ்.அக.); wind or movement of air caused by a person walking swiftly.

[விசை + காற்று]

விசைக்கொம்பு *visai-k-kombu,* பெ.(n.) தாழவளைத்துவிட்டதும் மீண்டும் மேற் கிளம்பும் மரக்கிளை; elastic branch of a tree, which when bent down and released springs back to its original position. *"ஈசுவரனாகிறான் பெரியா னொருவனன்றோ, அவன் விசைக் கொம்பு" (ஈடு, 3, 6, ப்ர.).*

[விசை + கொம்பு]

விசைகொள்(ளு)-தல் *visai-koḷ-,* 16 செ.கு.வி. (v.i.) 1. விரைதல்; to make haste. 2. நீண்டு சுருங்குந் தன்மையாதல்; to be elastic.

[விசை + கொள்ளு-தல்]

விசைத்தடி *visai-t-taḍi,* பெ.(n.) 1. விசைக்கம்பு (யாழ்.அக.) பார்க்க; see *visai-k-kambu.* 2. சிற்றுயிர்களைப் பிடிக்கும் பொறியின் ஒருப்பகுதி (வின்.); a part of a trap.

[விசை + தடி]

விசைதிற-த்தல் *visai-tiṟa-,* 3 செ.கு.வி. (v.i.) வேகமாக வெளிப்படுதல்; to burst out. *"விசைதிறந் துருமுவீழ்ந்த தென்ன" (கம்பரா. இரணிய. 127).*

[விசை + திற-த்தல்]

விசையம்[1] *visaiyam,* பெ.(n.) விசயம்[1] (பிங்.) பார்க்க; see *visayam.*

விசையம்[2] *visaiyam,* பெ.(n.) விசயம்[2] (பிங்.) பார்க்க; see *visayam. "அசைவி றானை விசைய வெண்குடை...... மன்னர்" (பெருங். இலாவாண. 8, 15).*

விசையம்[3] *visaiyam,* பெ.(n.) 1. விசயம்[3] 1 பார்க்க; see *visayam.* 2. விசயம்[3], 2, 3 (பிங்.) பார்க்க; see *visayam.* 3. வையம் (அரு.நி.); the earth.

விசையேற்று-தல் *viśai-y-ēṟṟu-*, 5 செ. குன்றாவி. (v.t.) 1. பொறி முதலியவற்றைத் தொழிற்படுத்த அணியமாக்கி வைத்தல் (யாழ்.அக.); to set up, as a spring or trap, to put in action, to set in motion. 2. முட்டி விடுதல்; to egg on.

[விசை + ஏற்று-,]

விஞ்சு[1]-தல் *viñju-*, 5 செ.குன்றாவி. (v.t.) மேலாதல் (பிங்.); to excel, surpass. *"விஞ்சிய ஞானம் விளங்கும்" (தாயு. பராபர. 154).*

தெ. மிந்த்சு; ம. மிஞ்சு; க., து. மிஞ்சு.

[மிஞ்சு → விஞ்சு-, (வே.க. 17)].

விஞ்சு[2]-தல் *viñju-*, 9 செ.கு.வி. (v.i.) மிகுதியாதல்; to be excessive. *"விஞ்சு குளிர்ப் பல்லவ மனுங்க" (கம்பரா. சூர்ப்ப. 31).*

[மீ → மிஞ்சு-, → விஞ்சு-, (சு.வி.பக்.57)]

விஞ்சை *viñjai*, பெ.(n.) 1. கலை; art, science. *"ஈரேழ் விஞ்சைத் திறனும்" (பாரத. வாரணா. 33).* 2. கல்வி (திவா.); learning, knowledge. 3. மிகப்பெரியதைப் பற்றின மெய்யுணர்வு; spiritual knowledge. *"விஞ்சைதனை யறிந்து மறியா தான்போல்" (கம்பரா. பிணிவிட். 122).* 4. வியத்தகு கலை; magic art. *"விஞ்சைகள் வல்லேன் விளிந்தநின் றோழரொடு... தருகுவன்" (சீவக. 520).* 5. மறைமொழி; incantation. *"விஞ்சைக ளிரண்டு மவ்வழி யூக்கினன்" (கம்பரா. தாடகை. 18).* 6. விஞ்சைப்பதி பார்க்க; see *viñjai-p-padi*. *"விஞ்சை வேந்தர்" (சீவக. 816).*

[மிஞ்சு → விஞ்சு → விஞ்சை]

விஞ்சைப்பதி *viñjai-p-padi*, பெ.(n.) மேலுலகம்; the world f the *vidyādharās*.

[விஞ்சை + பதி]

விஞ்சைமகள் *viñjai-magaḷ*, பெ.(n.) மேலுலகப் பெண்; *vidyādara* woman. *"விஞ்சை மகளவ் விழைபிடியாகி" (பெருங். நாவண. 5, 43).*

[விஞ்சை + மகள்]

விஞ்சையர் *viñjaiyar*, பெ.(n.) பதினெண் கணத்துள் ஒரு சாரார் (பிங்.); a class of demigods, one of *padiṉeṉ-kaṇam*, q.v. *"வரைமார்பர் ...... விஞ்சையர் போற் கிடந்தார்" (சீவக. 2241).*

விஞ்சையன் *viñjaiyaṉ*, பெ.(n.) புலவன்; learned man; a poet. *"வாதிமைந்த வடபுல விஞ்சையன்" (கல்லா. 42, 25).*

[வித்தை → விச்சை → விஞ்சை → விஞ்சையன்]

விட்சி *viṭci*, பெ.(n.) வெட்சி (சங்.அக.) என்பதன் மறுவழக்கு; corr. of *veṭci*.

விட்டக்கோல் *viṭṭa-k-kōl*, பெ.(n.) விட்டம்[1], 2 (வின்) பார்க்க; see *viṭṭam*, diameter.

[விட்டம்[1] + கோல்[1]]

விட்டகுதிரையார் *viṭṭa-kudiraiyār*, பெ.(n.) பாடல் வரியினால் பெயர் பெற்ற கடைக் கழகப் புலவர்; a sangam poet. *"யானையாற் பற்றி விடப்பட்ட மூங்கில், போர்க்களத்திற் செலுத்திவிடப்பட்ட குதிரையைப் போல மேலே எழும் என்று உவமையை அமைத்த சிறப்பினால் இப்பெயர் பெற்றாரென்பர்" (குறுந். 74).*

[விட்ட + குதிரையார்]

விட்டகுறை *viṭṭa-kuṟai*, பெ.(n.) முற்பிறவியில் செய்துவந்த வினையை முற்றமுடியாமல் இடையே விட்டுவிட்டதால் இப்பிறப்பில் முன்னேற்றத்திற்குக் காரணமாகும் வினைப் பயன்; karma resulting from acts left incompletely performed in a previous birth, considered as the cause of progress in the present birth, dist. fr. *toṭṭa-kuṟai*. *"புவிமேல் விட்டகுறை தொட்டகுறை யிரண்டு நிறைந்தனன்" (அருட்பா. VI, சிவதரிசன. 9).*

[விடு → விட்ட + குறை]

விட்டடி[1]-த்தல் *viṭṭaḍi-*, 3 செ.குன்றாவி. (v.t.) 1. கைவிட்டுப்போதல்; to desert. 2. வெருட்டி யடித்தல்; to drive out, chase. 3. பந்து முதலியவற்றை வெகுதூரஞ் செல்லும்படி அடித்தல் (இ.வ); to strike a long distance, as a ball.

[விடு → விட்டு + அடி-.]

விட்டடி[2] *viṭṭaḍi*, பெ.(n.) படித்து நிறுத்திய பாட்டின் இறுதியடி; the line last read or recited, as the place from which the reading or the recitation is to continue. *"விட்டடியுந் தொட்டடியும் அவனுக்குத் தெரியாது" (வின்.).*

[விடு → விட்டு + அடி]

விட்டதுறை *viṭṭa-tuṟai*, பெ.(n.) முன்னிகழ்த்திய பேச்சு செயல் முதலியவற்றில் நிறுத்தி வைத்த இடம்; place where one stopped, as in singing, reading or explaining verse.

[விடு → விட்ட + துறை]

விட்டபட்டினி *viṭṭa-paṭṭiṉi*, பெ.(n.) தொடர்ந்து பல நாட்களாகக் கிடக்கும் உண்ணாநோன்பு; fast continued for several days. *"விரதங்களால் விட்ட பட்டினியால்" (திருமுரு. 128-36, உரை).*

[விடு → விட்ட + பட்டினி]

விட்டபம் *viṭṭapam*, பெ.(n.) நிலம் (இலக்.அக.); earth.

விட்டபிறப்பு *viṭṭa-piṟappu*, பெ.(n.) முற்பிறப்பு; former or previous birth. *"விட்ட பிறப்பில் யான் விரும்பிய காதலன் திட்டிவிடமுண" (மணிமே. 11, 99).*

[விடு → விட்ட + பிறப்பு]

விட்டம் *viṭṭam*, பெ.(n.) 1. தலைக்கு மேலுள்ள முகட்டு உத்தரம்; beam or cross-beam in a building. *"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென" (அகநா. 167).* 2. வட்டத்தின் குறுக்களவு; diameter. 3. குறுக்காக இடப்பட்டது (வின்.); anything put across. 4. உடல்; human body. *"விட்டத்தி னுள்ளே விளங்க வல்லார்" (திருமந். 2904).*

ம. விட்டம்.

[முள் → முடு → முட்டு → (முட்டம்) → விட்டம். (மு.தா.பக்.100)]

விள்ளுதல் = பிரிதல், விடுதல் = பிரித்தல்.

விட்டம் = 1. குறுக்காகச் சென்று வட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் கோடு. 2. குறுக்குத்தரம். *"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென" (அகம். 167), "குருட்டுப் பூனை விட்டத்திற் பாய்ந்தது போல" (பழமொழி).*

விட்டரம் *viṭṭaram*, பெ.(n.) 1. தவத்தோர் இருக்கும்மேடை (பிங்.); seat for the use of

ascetics. 2. இருக்கை (நாமதீப. 445); seat. 3. கொள்கலம் (சது.); receptacle. 4. மரம் (யாழ்.அக.); tree. 5. ஒரு பிடி நாணல் (யாழ்.அக.); a handful of *kuśa* grass.

[விட்(ட்)டு + அரம்.]

விட்டரி *viṭṭari*, பெ.(n.) அகத்தி (மலை.); west Indian pea-tree.

[விட்டு + அரம் → அரி]

விட்டல் *viṭṭal*, பெ.(n.) விடுகை (இலக்.அக.); leaving; abandoning.

[விடு → விடல் → விட்டல்]

விட்டலக்கணை *viṭṭalakkaṇai*, பெ.(n.) இலக்கணை மூன்றனுள் சொல்லப்பட்ட கிளவியத்தின் பொருளை இயைபின்மையாற் கைவிட்டு அக்கிளவியத்திற்கு வேறுபொருள் கொள்ளுமாறு நிற்பது (இலக்.அக.); a variety of *ilakkaṇai*, in which a word is used in its secondary sense, its primary sense having been lost, one of three *ilakkaṇai*, q.v.

[விடு → விட்ட + இலக்கணை]

Skt. *Laksaṇa* > த. இலக்கணை.

விட்டவர் *viṭṭavar*, பெ.(n.) 1. பகைவர் (திவா.); enemies. 2. துறந்தோர் (சங்.அக.); ascetics.

[விடு → விட்டவர்]

விட்டவன்விழக்காடு *viṭṭavaṉ-viḻakkāḍu*, பெ.(n.) விட்டவிழுக்காடு பார்க்க; see *vitta-viḻukkāḍu*. *"விட்டவன் விழக் காட்டுக்குக் கற்பித்த தளிகையொன்று"* (S.I.I.iv.142).

[விட்டவன் + விழுக்காடு]

விட்டவாக்கச்சொல் *viṭṭa-v-ākka-c-col*, பெ.(n.) விட்டவிலக்கணையாக வருஞ்சொல் (யாழ்.அக.); word used in its secondary sense, its primary sense having been lost.

[விடு → விட்ட + ஆக்கச்சொல்]

விட்டவாகுபெயர் *viṭṭa-v-āgu-peyar*, பெ.(n.) விட்டலக்கணை (வின்.) பார்க்க; see *viṭṭa-lakkaṇai*.

[விட்ட + ஆகுபெயர்]

விட்டவாகுபெயர்

பொருத்தமில்லாத கூற்றான் நின்று ஒரு பெயர் பிறிது பொருளை உணர்த்துமானால் அதனை விட்டவாகுபெயர் என்பர்.

"இந்தப் புடவை காஞ்சிபுரம்" என்பதில் காஞ்சிபுரம் என்ற ஊரின் பெயர் விட்ட ஆகுபெயராய் புடவையை உணர்த்திற்று. 'இப்பட்டு சீனம்' என்பதும் அதுவே. (இலக். கலைக். பக். 108).

விட்டவாசல் *viṭṭa-vāšal*, பெ.(n.) சிறப்புக் காலங்களில் அரசர் முதலியோர் சென்று வரும் கோயில்வாயில்; gate open only on special occasions, as in temples, palaces etc, *"சவரிப் பெருமாள் ..... விட்டவாசலாலே புறப்பட்டு எதிரே வந்து" (திவ். பெரியதி. 8, 2, 1, வ்யா).*

[விடு → விட்ட + வாசல்]

விட்டவிலக்கணை *viṭṭa-v-ilakkaṇai*, பெ.(n.) விட்டலக்கணை (வேதா.சூ.120, உரை) பார்க்க; see *viṭṭa-lakkaṇai*.

[விடு → விட்ட + இலக்கணை]

Skt. *Laksaṇa* > த. இலக்கணை.

விட்டவிழுக்காடு *vitta-vilukkādu*, பெ.(n.) கோயிலிற் பெரியோர்க்கு மதிப்புரவுக்காக ஏற்படுத்தப்பட்ட படையல் முதலியன; special share of the offerings, etc., in a temple, set apart for a person, as an honour. *"கோயிற் கந்தாடை யண்ணனுக்கும் வாதூல ரங்காசாரியருக்கும் விட்ட விழுக்காடுகளுண்டு" (இ.வ.).*

[விடு → விட்ட + விழுக்காடு]

விட்டாடி *vittādi*, பெ.(n.) தனிமையான–வன்–வள்–து (யாழ்.அக.); lonely person or object.

[விடு → விட்ட + ஆள் → ஆளி → ஆடி]

விட்டார் *vittār*, பெ.(n.) பகைவர்; enemies. *"இன்று நாமவர்க்கு விட்டார்சொல்" (சீகாழி. கோ. 519).*

[விடு → விட்டார்]

விட்டார்த்தம் *vittārttam*, பெ.(n.) பாதிவிட்டம் (வின்.); radius, semi-diameter.

[விட்டம்[1] + அர்த்தம்[2]]

விட்டாற்றி *vittārri*, பெ.(n.) இளைப்பாறுகை (நெல்லை.) (வின்.); rest, repose.

[விடு[1] + ஆற்றி]

விட்டாற்று–தல் *vittārru-*, 5 செ.கு.வி. (v.i.) துக்கத்தை வெளியிட்டாற்றுதல்; to give vent to one's grief.

[விடு → விட்டு + ஆற்று–,]

விட்டி[1]–த்தல் *vitti-*, 11 செ.கு.வி. (v.i.) மலங்கழித்தல்; to evacuate the bowels.

விட்டி[2] *vitti*, பெ.(n.) 1. நறுவிலி, 4 பார்க்க; see *naruvili* 4. common sebestan (Nels.). 2. கோழி (யாழ்.அக.); cock. 3. முன் தள்ளிய வயிறு; pot-belly. *'சவலைப் பிள்ளைக்கு விட்டி பாய்ந்திருக்கிறது'.*

விட்டி[3] *vitti*, பெ.(n.) செடி கொடிகளின் இலை காய்களை வெட்டும் சிறுவிட்டி (வே.க.152); a kind of small variety of moth.

[வெட்டி → விட்டி]

விட்டிகை *vittigai*, பெ.(n.) விட்டில்; moth. *"தீப்பட்ட விட்டிகை போல்" (திருவிசைப். கருவூ. 10, 8).*

[விட்டில் → விட்டிகை. (வே.க.152)]

விட்டிசை *vittišai*, பெ.(n.) 1. அசையுள் எழுத்து முதலியன பிரிந்திசைக்கை (தொல். பொ. 411, உரை, பக். 340); break occuring after a letter of an acai (pros.). 2. பாட்டில் வருந்தனிச்சொல் (காரிகை, செய். 10, உரை.); detached word in a verse (pros.).

[விடு → விட்டு + இசை]

விட்டிசை–த்தல் *vittišai-*, 4 செ.கு.வி. (v.i.) அசை முதலியன பிரிந்திசைத்தல்; (Pros.) to pronounce acai, etc., with breakes. *"விட்டிசைத்து விந்த குற்றெழுத்து நேரசையாம்" (காரிகை. ஒழிபி. 2, பக். 136, உரை)*

[விடு → விட்டு + இசை–,]

விட்டிரு–த்தல் *vittiru-*, 3 செ.கு.வி. (v.i.) பகைமேற் சென்றோர் பாசறையிற் றங்குதல்; to live in camp, as on a military expedition. *"விட்டிருக்கும் பாசறையினது" (பு.வெ.3, 18, கொளு. உரை.).*

[விடு → விட்டு + இரு–,]

விட்டில் *vittil*, பெ.(n.) 1. பெரிய வெட்டுக்கிளி; locust. *"விட்டில்கிளி நால்வாய்" (சீவக. 64,*

விடதலை

விராளி



வில்வம்

விளாமரம்

உரை). 2. சிறு பூச்சி வகை; moth. *"செழிகின்ற தீப்புகு விட்டிலின்" (திருவாச. 6, 5).* 3. கொலை (அரு.நி.); murder. 4. பிராய் (சூடா.); paper tree. 5. நீண்ட மரவகை (மலை.); medium-papery ovate-to-oblong-acute-leaved kokra laurel.

[வெட்டி → விட்டி → விட்டில்]

'இல்' ஒரு சிறுமைப் பொருட் பின்னொட்டு. வே.க.152. 'விட்டிற்பூச்சியைப் போல் பறந்து திரிகிறான்' (பழ.), 'விளக்கில் விழுந்த விட்டில் பூச்சியைப் போல' (பழ.)

விட்டு[1] *viṭṭu*, பெ.(n.) திருமால்; *Tirumāl*. *"விட்டுவே நீயிங்கே வாராய்" (திவ். பெரியாழ். 2, 3, 5).*

[விண்டு → விட்டு]

விட்டு[2] *viṭṭu*, பெ.(n.) விசும்பு; sky.

[விண் → விட்டு]

விட்டுக்காட்டு-தல் *viṭṭu-k-kāṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) மங்குதல்; to fade, as colour. *'நிறம் விட்டுக்காட்டாது மிக வழுத்தம்' (பஞ்ச. திருமுக. 1157).*

[விடு → விட்டு + காட்டு]

விட்டுக்கொடு[1]-த்தல் *viṭṭu-k-koḍu-*, 4 செ. குன்றாவி.(v.t.) 1. காட்டிக் கொடுத்தல் (யாழ்ப்.); to betray, as a person, to disclose, as secrets. 2. கூட்டிக்கொடுத்தல் (யாழ்ப்.); to procure, as a woman, for the gratification of lust. 3. அடிப்பதற்குப் பந்தயத் தேங்காய் உருட்டிவிடுதல் (யாழ்ப்.); to bowl a coconut to the striker in a new year's game.

[விடு → விட்டு + கொடு-.]

விட்டுக்கொடு[2]-த்தல் *viṭṭu-k-koḍu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. இணக்கங்காட்டுதல்; to yield, consent, make concession. *"ஒருவனுக்கொருவர் விட்டுக்கொடார் களிறே" (ஈடு. 7, 4, 1).* 2. பிறனைக் கருவியாகக் கொண்டு ஒரு செயலை அறிதல் (வின்.); to use a person as a tool and see how a matter will develop.

[விடு → விட்டு + கொடு-,]

விட்டுச்சொல்(லு)-தல் *viṭṭ-c-col-*, 8 செ. குன்றாவி.(v.t.) மனத்திலுள்ளதை வெளியிட்டுக் கூறுதல்; to speak frankly or openly. *'அவள் அவனிடம் மனம்விட்டுச் சொன்னாள்'.*

[விட்டு + சொல்-,]

விட்டுசித்தர் *viṭṭu-cittar*, பெ.(n.) பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான பெரியாழ்வார்; a vaisnava saint and hymnist one of 12 *Aḻvārs*. *"விட்டுசித்தர் தங்கள் தேவரை.... வருவிப்பரேல்" (திவ். நாய்ச். 10, 10).*

[விண்டு → விட்டு + சித்தர்]

விட்டுணுகரந்தை *viṭṭuṇu-karandai*, பெ.(n.) விட்டுணுகரந்தை என்னும் மூலிகை (M.M.); Indian globe thistle.

[விட்டுணு + கரந்தை]



விட்டுணுதந்தி *viṭṭuṇu-tandi*, பெ.(n.) மூங்கில் (சங்.அக.); bamboo.

விட்டுப்பாடு-தல் *viṭṭu-p-pāḍu*, 5 செ. குன்றாவி.(v.t.) குரலை அடக்காது முழக்குவதுடன் பாடுதல்; to sing uninterruptedly with full voice.

[விடு → விட்டு + பாடு-,]

விட்டுப்பிடி-த்தல் *viṭṭu-p-piḍi-*, 4 செ. குன்றாவி. (v.t.) 1. ஒரு செயலைச் சிறிது காலம் விட்டிருந்து மீண்டுந் தொடங்குதல்; to abandon a job temporarily and begin again. *"அக்காரியந்தன்னை விட்டுப்பிடிக்க அமையும்" (திவ். இயற். திருவிருத். 46, வ்யா. பக். 264).* 2. கண்டிக்காமற் சிறிது இடங் கொடுத்தல்; to allow some degree of latitude. *'பையனிடம் கண்டிப்பாயிராமல் கொஞ்சம் விட்டுப்பிடிக்க வேண்டும்'.* 3. சற்றுப் பொறுத்து மறுபடியும் தொடர்தல்; to pause a little and resume, as in reading etc. 4. துளைக்கருவியை விரலால் தடவி இசைத்தல்; (MUS.) to run one's fingers over the keys or stops of a holed musical instrument. *"தர்ச்சனி முதலாக விட்டுப்பிடிப்பது ஆரோகணம்" (சிலப். 3, 58, அரும்.).*

[விடு → விட்டு + பிடி-,]

விட்டுப்போ-தல் *viṭṭu-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) 1. நீங்கிவிடுதல்; to be left, to be abandoned. 2. மிக்க நோவாயிருத்தல்; to have smarting pain. *'கை கால்கள் விட்டுப் போகின்றன'.*

[விடு → விட்டு + போதல்]

விட்டும்விடாதவாக்கச்சொல் *viṭṭum-viḍāda-v-ākka-c-col*, பெ.(n.) விட்டும் விடாதவிலக்கணையாக வருஞ்சொல் (யாழ்.அக.); (gram.) word in which the primary sense is partly retained and partly discarded.

விட்டும்விடாதவாகுபெயர் *viṭṭumviḍāda-v-āgupeyar*, பெ.(n.) விட்டும்விடாத விலக்கணை (வின்.) பார்க்க; see *viṭṭumviḍāda-vilakkaṇai.*

விட்டும்விடாதவிலக்கணை *viṭṭum-viḍāda- vilakkaṇai*, பெ.(n.) இலக்கணை மூன்றனுள் ஒரு சொல்லிலே ஒரு பாகத்தின் பொருளை விட்டு மற்றைப்பாகத்தின் பொருள் இயைபு பெற நிற்கும் ஆகுபொருளி (இலக்கணை) (வேதா.சூ.119) (இலக்.அக.); (gram.) a variety of *ilakkaṇai*, inwhich the primary sense of a word is partly discarded and partly retained, one of three *ilakkaṇai*, q.v.

[விட்டும் + விடாத + இலக்கணை]

Skt. *Lakshṇa* > த. இலக்கணை.

விட்டுமாறு[1]-தல் *viṭṭu-māṟu-*, 9 செ.கு.வி. (v.i.) வேறுவழியில் திரும்புதல்; to change course, to deviate.

[விடு → விட்டு + மாறு-தல்]

விட்டுமாறு[2]-தல் *viṭṭu-māṟu-*, 5 செ. குன்றாவி.(v.t.) விட்டுப்பிடி-,3 பார்க்க; see *viṭṭu-p-piḍi.*

[விடு → விட்டு + மாறு-,]

விட்டுரை-த்தல் *viṭṭurai-*, 4 செ.குன்றாவி. (v.t.) விட்டுச்சொல் (திருக்கோ. 391, உரை) பார்க்க; see *viṭṭu-c-col.*

[விடு → விட்டு + உரை-த்தல்]

விட்டுவாங்கி *viṭṭu-vāṅgi*, பெ.(n.) தன் மனைவியைப் பிறனுக்குக் கொடுப்போன்

(யாழ்ப்.); one who prostitutes his wife for gain.

[விடு → விட்டு + வாங்கி]

விட்டுவிட்டுமின்னு-தல் *vittu-vittu-minnu-*, 15 செ.கு.வி.(v.i.) விண்மீன்போல ஒளி வீசுதல்; to twinkle.

[விட்டு + விட்டு + மின்னு-தல்]

விட்டுவிடு-தல் *vittu-vidu*, 18 செ.குன்றாவி. (v.t.) 1. பிடிப்பு விடுதல்; to let go, to loose one's hold upon. 2. விலகி விடுதல்; to forego, resign, relinquish, give up, abandon.

விட்டுவிளங்கு-தல் *vittu-vilangu-*, 10 செ.கு.வி. (v.i.) நன்றாக ஒளிர்தல்; to shine with added lustre.

[விடு → விட்டு + விளங்கு-தல்]

விட்டெறி-தல் *vitteri*, 2 செ.குன்றாவி. (v.t.) 1. தூர விழும்படி எறிதல்; to throw away, to fling. *"ஒருவரை யொருவர் விட்டெறிவர்" (கம்பரா. வாலிவ. 47.).* 2. நீக்குதல்; to leave, abandon.

[விடு → விட்டு + எறி-தல்]

விட்டேற்றாளன் *vittērrālan*, பெ.(n.) விட்டேற்றி, 1 பார்க்க; see *vittērri*. *"விடருந் தூர்த்தரும் விட்டேற் றாளரும்" (மணிமே. 14, 61, அரும்.).*

[விட்டேறு→விட்டேற்று + ஆள் → ஆளன்]

விட்டேற்றி *vittērri*, பெ.(n.) 1. சுற்றத்தினின்று நீங்கிப் பிறரையும் அவ்வாறு செய்விப்போன் (மணிமே. 14, 61, அரும்.); one who forsakes his relations and induces others to do likewise. 2. தொடர்பற்றவ-ன்-ள்; one who is unconnected or unconcerned. *'அந்த செய்தியில் விட்டேற் றியா யிருப்பது நலம்'.*

மறுவ. விட்டேத்தி.

[விட்டேறு → விட்டேற்றி]

விட்டேறரணம் *vittēraranam*, பெ.(n.) விட்டேறு 1, 2 (சது.) பார்க்க; see *vittēru*.

[விட்டேறு + அரணம்]

விட்டேறு *vittēru*, பெ.(n.) 1. எறிகோல் (பிங்.) (சிலப். 15, 216, உரை); missile weapon. 2. வேல் (பிங்.); Javelin. *"புயமறவே விட்டேறு" (இரகு. நகர. 28).* 3. இகழ்ந்து கூறுங் கடுஞ்சொல்; harsh work of ridicule. *"விடருந் தூர்த்தரும் விட்டேறுரைப்ப" (பெருங். உஞ்சைக். 35, 226).*

க. புட்டேறு.

[விடு → விட்டு + ஏறு]

விட்டை *vittai*, பெ.(n.) விலங்குகளின் சாணம் (நாமதீப. 599); dung of animals or cattle.

விள்ளுதல் = நீங்குதல், வெளிப்படுத்துதல்.

[விள் → விட்டை]

'கழுதை விட்டையைக் கைநிறைய ஏந்தினாற் போல' (பழ.)

வடவர் 'விக்ஷ்' என்பதை மூலமாகக் காட்டி அதன் புணர்ப்புத் திரிபாக விட், விண் என இரு வடிவுகளைக் குறிப்பர்.

விள் → விக்ஷ் (மலம்)

ஒ.நோ. உள் → உஷ், சுள் → சுஷ்

விள் → விண். பிள் → விள். பிள் → (பிய்) - பீ. பிள் → பீள் → பீளை = கண்மலம்.

Skt. விஷ்டா (வ.மொ.வ.88)

விட்டோசை *vittōsai*, பெ.(n.) சொல்லின் எழுத்துக்களைப் பிரித்துப் பலுக்குகை (வின்.); (gram.) pronouncing the letters of a word with a pause after each.

[விடு → விட்டு + ஓசை]

விட்புலம் *vitpulam*, பெ.(n.) விண்ணுலகம்; heaven. *"எங்கட் புலங்காண் விட்புலம் போயது" (சிலப்பதி. 8).*

[விண் + புலம் – விட்புலம்]

ஒ.நோ. மண் + கலம் – மட்கலம்

விட *vida*, து.வி.(adv.) 1. மிகவும்; exceedingly, very. *"விடக்களியா நம் விழுநகர்" (திருக்கோ. 297).* 2. இடைச்சொல் (prep.) காட்டிலும்; than, compared with. *'அதைவிட இது நல்லது' (உ.வ.).*

விடக்கு *vidakku*, பெ.(n.) 1. இறைச்சி; flesh, meat. *"மீன்றடிந்து விடக்கறுத்து" (பட்டினப். 176).* 2. பிணம்; carcass. *"பரு விடக்கைப்பற்றி இரண்டு பதார்த்தம் விவாதம் ஒண்ணுமா போலே" (திவ். திருமாலை, 27, வ்யா. பக். 4).*

க., து. பிக்கு; ம.விடக்கு.

[விடுதல் = நீத்தல், உயிர்விடுதல். விடு→ விடக்கு]

விடங்கம் *vidaṅgam*, பெ.(n.) 1. புறாக்கூடு (யாழ்.அக.); dove-cot. 2. கொடுங்கை (பிங்.); curved cornice or projection. *"துப்பினால் விடங்கம்...செய்து" (திருவிளை. திருமணப். 70).* 3. சுவர்ப்புறத்து வெளி வந்துள்ள உத்திரக் கட்டை (வின்.); projection of a beam or joist outside the wall of a house. 4. வீட்டின் முகடு (பிங்.); ridge of a roof. *"வெந்நிற றண்டெடன் விடங்கத்து" (ஞானா. 9, 2).* 5. வீதிக்கொடி (பிங்.); banner hoisted in a building and projecting into the street. 6. உளியினாற் செய்யப்படாது இயற்கையாமைந்த இலிங்கம்; the naturally formed lingam, as unchiselled. *"சோதி விடங்கமே யாயினும்..... மேவினான்" (திருவாரு. 26).* 7. அழகு (பிங்.); beauty. 8. ஆண்மை (பிங்.); manliness, ability, bravery. 9. இளமை (அரு.நி); youth.

[விடு →விடர் = பிளவு. விடு → விடுதல் = தோன்றுதல். விள் → விடு (விடங்கு) → விடங்கம்.]

விடங்கர்[1] *vidaṅgar*, பெ.(n.) சிறுவழி (பிங்.); narrow way.

[ஒருகா. இடங்கர்[3] → விடங்கர். இடங்கர் = சிறுவழி]

விடங்கர்[2] *vidaṅgar*, பெ.(n.) முதலை; crocodile. *"விடங்கரான் மெலியுறுங் குலத் தின்னக மலை யழைப்ப" (வரத. பாகவத. நாரசிங். 133).*

[இடக்கு → இடங்கர்[1] → விடங்கர்]



விடங்கன்[1] *vidaṅgan*, பெ.(n.) 1. உளியினாற் செதுக்கப்படாது, தானேயுண்டான இலிங்கம்; the naturally formed lingam, as unchiselled. *"விடங்கப் பெம்மான்" (தியாக. லீலை. கடவுள்.17).* 2. நல்லுருவ

முடையவன்; person of beauteous-form, handsome person. *"வேளென வந்த நாய்கர் சுந்தர விடங்கரானால்" (திருவிளை. மாணிக். 89).*

விடுதல் = தோன்றுதல். முளைவிடுதல், பிஞ்சுவிடுதல் என்னும் வழக்கை நோக்குக. விடங்கன் = தான்றோன்றி.

[விள் → விடு → (விடங்கு) → விடங்கன்]

விடங்கன்[2] *viḍaṅgaṉ*, பெ.(n.) 1. காமுகன்; person of dissolute habits, voluptuary. *"மனைகடோறும்... விடங்க ராகித் திரிவ தென்னே" (தேவா. 56, 1).* 2. வம்பளப்பவன்; gossiper, newsmonger. *'வாருங்காணும் விடங்கரே' (இ.வ.).*

விடுதல் = நீத்தல், கட்டுப்பாடின்மை.

[விடு → (விடங்கு) → விடங்கன்]

விடங்கு[1] *viḍaṅgu*, பெ.(n.) 1. அழகு; beauty. *"விடங்கினான் மிகுவிசயன்" (பாரத. அருச்சுனன்றீர். 77) (இலக்.அக.).* 2. அரைப் பட்டிகை முதலிய அணி கலன்களின் உறுப்பு; a part of girdle and other ornaments. *"திருப்பட்டிகை யொன்றில் ..... மொட்டு ஒன்றும் விடங்கு நாலும்" (S.I.I.ii,184).*

தெ., க., து. பெடங்கு.

விடங்கு[2] *viḍaṅgu*, பெ.(n.) சிற்றின்ப நடத்தை (சிருங்கார விலாசம்); gallantry. *"விடங்குபடக் குறிபல பாடி" (பதினொ. திருவேக. திருவ. 53).*

[விடங்கன்[2] → விடங்கு]

விடத்தர் *viḍattar*, பெ.(n.) விடத்தேரை பார்க்க; see *viḍattērai*. *"திரிகாய் விடத்தரொடு" (பதிற்றுப். 13, 14).*

விடத்தல் *viḍattal*, பெ.(n.) விடத்தேரை (இலக்.அக.) பார்க்க; see *viḍattērai*.

விடத்தலை *viḍattalai*, பெ.(n.) விடத்தேரை பார்க்க; see *viḍattērai*.

க. எடத்தர; ம., து. இடத்தர; தெ. வெனுத்துரு.

விடத்தாலம் *viḍa-t-tālam*, பெ.(n.) மருந்து வகை (சங்.அக.); a medicine.

[விடம் + தாலம்]

விடத்தாளி *viḍa-t-tāḷi*, பெ.(n.) விடத்தேரை (சங்.அக.) பார்க்க; see *viḍa-t-tērai*.

[விடம் + தாளி]

விடத்துக்கரசன் *viḍattu-k-karašaṉ*, பெ.(n.) கருடக்கல் (சங்.அக.); a medicinal stone.

[விடத்துக்கு + அரசன்]

விடத்தேதொடரி *viḍattē-toḍari*, பெ.(n.) விடத்தேரை பார்க்க; see *viḍa-t-tērai*. *"முள்ளுத்தன்னிடத்தே சூழ்ந்தெழுகின்ற விடத்தே தொடரி" (பெரும்பாண். 184, உரை).*

[விடத்தே + தொடரி]

விடத்தேர் *viḍa-t-tēr*, பெ.(n.) விடத்தேரை பார்க்க; see *viḍa-t-tērai*. *"தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய" (தண்டி. 75, 2, உதா.)*

கோடாலி, மண்வெட்டி போன்ற கருவிகளுக்கு வழவழப்பும் வலுவும் கொண்ட பிடிகள் கோடுவதற்குரிய மரம். தானாகவே வேர்ச் செடிகளின் மூலம் படர்ந்து கொள்ளும் இயலுடைய விடத்தேர் ஆடுகளுக்குத் தீவனமாகவும். குதிரைகளின் வயிற்றுப் புழுக்களையும் நீக்கவும்

பயன்படுவது. மாந்தர்களின் கண்ணோய்க்கும், சிறுநீரகக் கல்லடைப்புக்கும் பயன்படும் குறுமரம்; ஆனால் பயன் தரும் ஒரு குறுமரம்; பயன்களோ பலப்பல.

– (மரம் தரும் வளங்கள் பக்.260.)

தெ. வெனுதுரு; ம. விடத்தேரி; க. எடத்தரி; **Skt.** விவ்ரிக்ஷன

விடத்தேரை *viḍa-t-térai*, பெ.(n.) முள்ளையுடைய மரவகை (பதார்த்த. 245); ashy babool.

மறுவ. விடதாரி, விடத்தார், விடத்தல், விடதலை, விடதாளி.

விடதம் *viḍadam*, பெ.(n.) 1. முகில்; cloud. 2. துரிசு; verdigris.

விடதாரி *viḍadāri*, பெ.(n.) நச்சுமுறி மருத்துவன்; physician who treats cases of poisoning or toxicity. *"வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடதாரி யாங்கதனுக் காகார மானாற்போல்" (வாக்குண். 15, பி–ம்.)*

விடதாலி *viḍadāli*, பெ.(n.) பூரான் (நாமதீப. 264); centipede.

[விடம் + தாலி]



விடந்தீஞ்சான் *viḍan-tiñšāṉ*, பெ.(n.) கொல்லைப் பல்லி என்னும் மூலிகை (மூ.அ.); a parasitic plant.

[விடம் + தீய்ந்தான் → தீஞ்சான்]

விடப்பு *viḍappu*, பெ.(n.) விடர்[1], 1 (சது.) பார்க்க; see *viḍar.*

[விடு[1] → விடப்பு]

விடபகதி *viḍapa-kadi*, பெ.(n.) குதிரைநடை ஐந்தனுள் காளையின் பெருநடை போன்ற நடை; bull-like pace of the horse, one of five acuva-kati, q.v.

[விடப + கதி]

விடம்[1] *viḍam*, பெ.(n.) அதிவிடையம் (மலை.); atis.

விடம்[2] *viḍam*, பெ.(n.) மரக்கொம்பு (பிங்.); branch of a tree.

விடம்[3] *viḍam*, பெ.(n.) மலை; mountain.

விடம்[4] *viḍam*, பெ.(n.) இடம் என்பதன் மருவிய வழக்கு; corr. of place.

விடம்பம் *viḍambam*, பெ.(n.) 1. உள்ளொன்று புறம்பொன்றான தன்மை; hypocrisy, pretence. *"விடம்ப முளைத்துள் விரவினனும்" (சிவதரு. பாவ 36.).* 2. வேடம் பூணுகை (இலக்.அக.); wearing actor's dress.

விடம்பன் *viḍambaṉ*, பெ.(n.) உள்ளொன்று புறம்பொன்றான தன்மையுடையவன் (சைவச. பொது. 552); hypocrite, pretender.

[விடம்பம் → விடம்பன்]

விடம்பனம் *viḍambaṉam*, பெ.(n.) 1. நடிப்பு; imitation, imposture, disguise. 2. நிந்தை; ridicule, mockery. 3. இடர் (யாழ்.அக.); distress.

[விடம்பம் → விடம்பனம்]

விடம்பு *vidambu*, பெ.(n.) விடர்[1],1 (வின்.) பார்க்க; see *vidar*, 1.

விடம்பை *vidambai*, பெ.(n.) பிளப்பு; cleft. *"இந்த விடம்பை நாத்தோய்க்கின்" (கலிங். 541.)*

விடயி[1]-த்தல் *vidayi-*, 11 செ.குன்றாவி. (v.t.) பொறிகள் புலனைப் பற்றுதல்; to perceive, to apprehend through the senses. *"அவையொன்றையும் விடயியா வாகலான்" (சி.போ.பா.5, 1, பக். 106, சுவாமிநா.)*

விடயி[2] *vidayi*, பெ.(n.) 1. ஐம்பொறி (இலக். அக.); five organs of sense. 2. அரசன்; king.

விடர்[1] *vidar*, பெ.(n.) 1. நிலப்பிளப்பு (பிங்.); fissure, cleft. *"கூரெரி விடர் முகை யடுக்கம் பாய்தலின்" (அகநா. 47, 6) (பிங்.).* 2. மலைப்பிளப்பு; cleft in a mountain. *"நெடுவரை யருவிடர்" (புறநா. 135).* 3. மலைக்குகை; mountain cave. *"பெருமலை விடரகத்து" (புறநா. 37).* 4. முனிவரிருப்பிடம் (சூடா.); abode of a sage. 5. காடு (சூடா.); forest.

[விள் → விடு → விடர்] (மு.தா. 100)

விடர்[2] *vidar*, பெ.(n.) பெருச்சாளி (உரி.நி.); bandicoot.

விடர்வு *vidarvu*, பெ.(n.) நிலப்பிளப்பு (பிங்.); fissure, cleft.

[விடு → விடர் → விடர்வு. (வே.க.149)]

விடரகம் *vidaragam*, பெ.(n.) 1. மலைக்குகை; mountain cave. *"விடரகமுகந்து" (மதுரைக். 308).* 2. மலை; mountain. *"விடரக நீயொன்று பாடித்தை" (கலித். 40).*

[விள் → விடு → விடர் + அகம்] (மு.தா.100)

விடரவன் *vidaravan*, பெ.(n.) பகலிற் கண் பிளவுள்ள பூனை (யாழ்.அக.); cat.

[விடர் → விடரவன்] (செல்வி. 77. ஆனி. 549)

விடரளை *vidaraḷai*, பெ.(n.) மலைப்பிளப்பிடம்; cleft in a mountain. *"நறும்பழ மிருங்கல் விடரளை வீழ்ந்தென" (ஐங்குறு. 214).*

[விள் → விடு → விடர் → விடரளை. (வே.க.149)]

விடரி *vidari*, பெ.(n.) மலை; mountain. *"விடரியங் கண்ணிப் பொதுவனை" (கலித். 101).*

[விள் → விடு → விடர் → விடரி]

விடரு *vidaru*, பெ.(n.) அதிவிடையம் (மலை.); atis.

விடருகம்[1] *vidarugam*, பெ.(n.) பூனை (நாமதீப. 223); cat.

[விடரகம் → விடருகம்] (வே.க.149)



விடல் *vidal*, பெ.(n.) 1. முற்றும் நீங்குகை; leaving, renunciation. *"சமந்தமம் விடல்" (கைவல் தத்துவ. 9). "வெல்வது வேண்டின் வெகுளி விடல்" (நான்மணி.).* 2. ஊற்றுகை (நாமதீப. 695.); pouring. 3. குற்றம் (சது.); fault.

[விள் → விடு¹ → விடல். (வே.க.பக்.113.)]

விடலம் *vidalam*, பெ.(n.) 1. உள்ளி (சங்.அக.); garlic. 2. குதிரை (யாழ்.அக.); horse.

விடலி[1] *vidali*, பெ.(n.) 1. அடங்காச் சிற்றின்ப வேட்கையுடையவள்; lustful woman. *"தடவிடலிதலையும்" (சிவதரு. பரிகார. 16).* 2. திருமணத்திற்கு முன்னர்ப் பூப்படைந்த பெண்; girl whose menstruation commences before she is married. 3. பன்னீராட்டைப் பிராயத்தாள்; girl of 12 years of age. 4. பூப்புடையாள்; woman in her periods. 5. மலடி (யாழ்.அக.); barren woman.

விடலி[2] *vidali*, பெ.(n.) கூரை வேய்வதற்குரிய புல் வகை; a kind of grass used for thatching.

[விழல் → விடல் → விடலி]

விழல் = பெரும்புல் வகை; கோரைவகை.

ஒ.நோ: குழல் = குடல், புழல் = புடல்.

விடலிபதி *vidalipadi*, பெ.(n.) ஒழுக்கமற்ற மனைவியொடு வாழ்பவன்; a man living with his wife, whose secret intimacy with another is in jeopardy; one's wife who leans with her paramour.

[விடு → விடுதல் = நீத்தல், கட்டுப்பாடின்மை. விடல் → விடலி + பதி]

Skt. pathy > த. பதி.

விடலை[1] *vidalai*, பெ.(n.) தைக்காத விடுதியிலை; loose, unstitched leaf.

[விடு¹ + இலை]

விடலை[2] *vidalai*, பெ.(n.) 1. பதினாறு முதல் முப்பதாண்டு வரையுள்ள அகவையுடையவன் (பன்னிருபா.232); youth from 16 to 30. 2. திண்ணியோன் (பிங்.); strong, powerful man. *"விறல் கெழுபோர் விடலையை" (கம்பரா. இந்திரசித். 21.).* 3. பெருமையிற் சிறந்தோன் (பிங்.); great man. 4. வீரன்; warrior. *"முதியாள் விடலைக்கு வெங்கள் விடும்" (பு.வெ.4, 21).* 5. பாலை நிலத் தலைவன் (பிங்.); chief of a desert tract. 6. மருதநிலத் தலைவன்; chief of an agricultural tract. *"விடலை நீ" (கலித். 95).* 7. மணவாளன் (சூடா.); bridegroom. 8. ஆண்மகன் (நாமதீப. 119); man. 9. இளங் காளைமாடு (நெல்லை); steer, young bull.

L. vitulas; **GK**. italos, a calf; **E.** virgin from Gr. orgao, to swell.

[விடை → விடலை]

விடலை[3] *vidalai*, பெ.(n.) 1. சூறைத் தேங்காய் (நெல்லை); coconut smashed on the ground before an idol. 2. இளநீர்; tender coconut.

ம. விடல.

[விடு¹ → விடலை]

விடவி *vidavi*, பெ.(n.) மரம்; tree. *"பாங்கர் நின்றதோர் விடவியைப் பிடுங்குவான்" (பாரத. கீசக. 34).*

விடவிடெனல் *vidavidenal*, பெ.(n.) 1. குளிர் முதலியவை பற்றி யுண்டாம் நடுக்கக்குறிப்பு; expr.signifying trembling, as from cold ehe. *'குளிர் அவனை விடவிடென்று குலுக்கி விட்டது'* 2. மெலிவுக்குறிப்பு; being lean, thin or flimsy. *'அவன் விடவிடென் றிருக்கிறான்'.* 3. சுரு சுருப்பாயிருத்தற் குறிப்பு; being active.

[விடுவிடு + எனல்]

விடவு[1] *viḍavu*, பெ.(n.) விடர்[1],1 (வின்.) பார்க்க; see *viḍar*.

விடவு[2] *viḍavu*, பெ.(n.) இழிகாமமுடைமை; licentiousness. *"ஆய்ச்சியர் கண்ணினுள் விடவே செய்து" (திவ். திருவாய். 1, 7, 5).*

விடளி *viḍaḷi*, பெ.(n.) பன்னீராட்டை அகவையாள்; girl of 12 years of age. *"மேலுறு மீராண்டினை யுடையாள் விடளி" (திருவானைக். கோச்செங். 139).*

[விடலி→விடளி.]

விடன்[1] *viḍaṉ*, பெ.(n.) 1. இழிகாமமுடையவன் (ஞானா. 35); voluptuary, sensualist. 2. கள்ளக்காதலன் (இலக்.அக.); paramour.

விடன்[2] *viḍaṉ*, பெ.(n.) வீரன்; warrior. *"விடர் கடலை மலை வான்வளர்ந்தன" (கலிங். 432).*

விடாக்கண்டன் *viḍā-k-kaṇḍaṉ*, பெ.(n.) ஒட்டாரமாக நின்று ஒன்றை நிறை வேற்றுபவன்; pertinacious, stubborn, unyielding man.

[விடு[1] + ஆ (எதிர்மறை) + கள் → கண்டு → கண்டகன் → கண்டன். கண்டன் = பிறர்க்குத் தீங்கு விளைவிப்பவன்.]

விடாக்காய்ச்சல் *viḍā-k-kāyccal*, பெ.(n.) விடாச்சுரம் (இங்.வை.157) பார்க்க; see *viḍā-c-curam*. *'விடாக்காய்ச்சலுக்கு விட்டுணு கரந்தை' (பழ.).*

[விடு[1] + ஆ (எதிர்மறை) + காய்ச்சல்]

விடாச்சுரம் *viḍā-c-curam*, பெ.(n.) தொடர்ந்து வரும் காய்ச்சல்; continuous fever, pyrexia. *'விடாச்சுரத்துக்கு விட்டுணு கரந்தை'.*

[விடு + ஆ (எதிர்மறை) + சுரம்]

விடாணம் *viḍāṇam*, பெ.(n.) விலங்கின் கொம்பு (சூடா.); horn, tusk.

விடாணி *viḍāṇi*, பெ.(n.) 1. கொம்புடைய விலங்கு; horned-animal. 2. யானை; elephant, as tusked.

விடாதகண்டன் *viḍāda-kaṇḍaṉ*, பெ.(n.) விடாக்கண்டன் (வின்.) பார்க்க; see *viḍā-k-kaṇḍaṉ*.

விடாதம் *viḍādam*, பெ.(n.) மயக்கம் (இலக்.அக.); lassitude, languor.

விடாதவாக்கச்சொல் *viḍāda-v-ākka-c-col*, பெ.(n.) விடாதவிலக்கணையாக வருஞ் சொல் (யாழ்.அக.); word which without losing its primary sense, has also a secondary sense.

[விடு[1] + ஆ (எதிர்மறை) + ஆக்கச் + சொல்]

விடாதவாகுபெயர் *viḍāda-vāgu-peyar*, பெ.(n.) விடாதவிலக்கணை (வின்.) பார்க்க; see *viḍāda-v-ilakkaṇai*.

[விடாத + ஆகுபெயர்]

தத்தம் பொருளின் நீங்காது நின்று தம் பொருளின் வேறல்லாத பொருளோடு புணரும் பெயர்களை விடாததவாகுகுபெயர் என்பர்.

மஞ்சள் என்பது தனக்குரிய பொருளை விடாமலே மஞ்சள் கிழங்கைக் குறிக்கும்போது அது விடாத ஆகுபெயராம். இனிப்புத் தின்றான் என்பதும் அது.

– (இலக்.கலைக்.பக்.108.)

விடாதவிலக்கணை *viḍāda-v-ilakkaṇai*, பெ.(n.) இலக்கணை மூன்றனுள் சொல்லின் பொருட்கும் இயைபுற நிற்கும் இலக்கணை (வேதா.சூ.120) (இலக்.அக.); a variety of *ilakkaṇai*, in which the primary sense of a word is retained along with its secondary

sense, one of three *ilakkaṇai*, q.v.

[விடாத + இலக்கணை. இலக்கணை = ஒரு பொருளைக் காட்டற்குகு உரிய சொல்லை மற்றொரு பொருட்கு தந்துரைப்பது.]

Skt. Laksana > த. இலக்கணை.

விடாதுபேசு-தல் *viḍādu-pēšu-*, 9 செ.கு.வி. (n.) பிதற்றுதல் (திவா. 1925); to blabber, to chatter interminably.

[விடாது + பேசு-,]

விடாதுரை-த்தல் *viḍādurai-*, 4 செ.கு.வி. (v.i.) விடாதுபேசு-, (நாநார்த்த. 673) பார்க்க; see *viḍādu-pēšu-.*

விடாப்படை *viḍā-p-paḍai*, பெ.(n.) கையினின்றும் விடுபடாத வாள் குந்தம் போன்ற படைக்கலன் (நாமதீப. 426); weapon held in hand and used, nonmissile weapon.

[விடா + படை]

விடாப்பிடி *viḍā-p-piḍi*, பெ.(n.) 1. உறுதியாகப் பற்றுகை; firm hold or grasp. 2. உறுதியாக நிற்கை; tenacity, pertinacity. 3. தன் முரண்டு; obstinacy. 4. மாறாமல் ஒரே நிலையி லிருக்கை; unchange-ableness.

[விடா + பிடி]

விடாப்பிடியாக *viḍā-p-piḍiyāga*, வி.எ. (adv.) தன்னிலையிலிருந்து சிறிதும் மாறாமல், சிறிதும் விட்டுக் கொடுக்காமல்; tenaciously. *'அந்தச் செய்தியாளர் விடாப்பிடியாக ஒரே கேள்வியை மாற்றி மாற்றிக் கேட்டுக் கொண்டிருந்தார்' (உ.வ.).*

[விடாப்பிடி + ஆக]

விடாப்பூட்டு *viḍā-p-pūṭṭu*, பெ.(n.) ஓய்வில்லாமை (யாழ்.அக.); being always in harness; having no rest or leisure.

[விடா + பூட்டு]

விடாமல் *viḍāmal*, வி.எ. (adv.) இடையீடின்றி; without obstruction. *'விட்டுவிட்டுப் பெய்கிற மழையினும் விடாமற் பெய்கிற தூவானம் நல்லது" (பழ.).*

விடாமழை *viḍā-maḻai*, பெ.(n.) இடையீடின்றிப் பெய்யு மழை (நாமதீப. 84); continuous rain.

மறுவ. அடைமொழி.

[விடா + மழை]

விடாமுயற்சி *viḍā-muyaṟši*, பெ.(n.) ஒன்றை அடைவதற்குத் தொடர்ந்து செய்யும் முயற்சி; perseverance. *'விடாமுயற்சி எப்படிப் பட்டவர்களையும் வெற்றி அடையச் செய்யும்'.* 'perseverance is the key to the success' (pro.).

[விடா + முயற்சி]

விடாய்¹ *viḍāi*, பெ.(n.) 1. நீர்வேட்கை; thirst. *"தண்ணீர் விடாயெடுத்தால்" (இராமநா. யுத்த. 59).* 2. களைப்பு (நாமதீப. 633); lassitude, weariness. 3. விருப்பம்; longing, craving.

[விழை → விழாய் → விடாய்] (சு.வி. 37)

விடாய்² *viḍāi*, பெ.(n.) வெப்பம்; heat. *"விண்ணும் புவியும் விடாயாற்ற" (சொக்க. உலா. 59).*

விடாய்³-த்தல் *viḍāi-*, 11 செ.கு.வி. (v.i.) 1. நீர்வேட்கையெடுத்தல்; to thirst. *"விடாய்த்த காலத்திலே வாய் நீருறுதற்கு" (மலைபடு. 136, உரை).* 2. களைப்படைதல்; to

grow faint and weary, to be tired out. *'எருது உழுகிறது, உண்ணிவிடாய்க்கிறது'.* 3. விருப்பப்படுதல்; to long for.

[விடை → விடாய் → விடாய்-, (வே.க.120)]

[ஒருகா. விழை → விழாய் → விடாய்-, (செல்வி. செப்பிடெம்பர். 47)]

விடாய்⁴ *viḍāi*, பெ.(n.) விடுமுறைநாள் (வின்.); holiday.

[விடு → விடை → விடாய்]

விடாய்⁴-த்தல் *viḍāy-*, 11 செ.கு.வி. (v.i.) செருக்குக் கொள்ளுதல் (இ.வ); to be haughty, to be stiff with pride.

[விடை → விடாய் → விடாய்-,]

விடாய்ப்பு *viḍāippu*, பெ.(n.) 1. நீர்வேட்கை; thirsting. 2. களைத்திருக்கை; being tired. 3. விருப்பம்; desire, longing.

[விழை → விழாய் → விடாய் → விடாய்ப்பு]

விடாயன் *viḍāyaṉ*, பெ.(n.) 1. நீர்வேட்கை யுள்ளவன்; thirsty person. *"விடாயன் தண்ணீர்ப் பந்தலிலே வரக்கொள்ளச் சாலுருண்டு கிடந்தாற் போலே" (ஈடு. 1, 4, 4).* 2. களைப்புற்றவன்; man faint with fatigue. *"சில தார்மிகர் ஏரிகல்லினால் ..... விடாயர் அதிலே மூழ்கி விடாய் தீர்ந்து போகா நிற்பர்கள்" (ஈடு. 1, 3, ப்ர.).* 3. காமுகன்; sensualist, voluptuary.

[விடாய் → விடாயன்]

விடாயாற்றி *viḍāyāṟṟi*, பெ.(n.) 1. இளைப்பாறல்; rest, repose, as relief from weariness. 2. இளைப்பாற்றுவது; that which affords rest or relief. *"இந்திரனது விடாயாற்றி மலை" (தக்க யாகப். 419, உரை).* 3. பெரிய திருவிழாவை யடுத்து தலைவனுக்கு (சுவாமி) இளைப் பாறலாகக் கோயிலுக்குள் நடைபெறும் திருநாள்; festivities within the temple following the main festival, when the moveable image of the deity is supposed to take rest.

[விடாய் → விடாயாற்றி]

[ஒருகா. விடாய் + ஆற்று → ஆற்றி]

விடாயெடு-த்தல் *viḍāyeḍu-*, 4 செ.கு.வி. (v.i.) விடாய்² பார்க்க; see *viḍāi*. *"தண்ணீர் விடாயெடுத்தால்" (இராமநா. யுத்த. 59).*

[விடாய் + எடு-.]

விடாரகம் *viḍāragam*, பெ.(n.) விடாலகம் (யாழ்.அக.) பார்க்க; see *viḍalagam*.

வ. விடாரக.

[விடரகம் → விடாரகம்] (வே.க.149)

விடாரம் *viḍāram*, பெ.(n.) பூனை; cat. (வே.க.149).

[விடாலம் → விடாரம்]

விடாலகம் *viḍālagam*, பெ.(n.) 1. பூனை (சூடா.); cat. 2. பொன்னரிதாரம் (யாழ்.அக.); yellow orpiment.

[விடாரகம் → விடாலகம். (வே.க.149)]

விடாலம் *viḍālam*, பெ.(n.) 1. விடாலகம்,1 (சங்.அக.) பார்க்க; see *viḍālagam*. 2. கண்மணி (யாழ்.அக.); eye-ball.

[விடாலகம் → விடாலம்] (வே.க.149)

த. விடாலம் > வ. வைடால = பூனை

விடானி *viḍāṉi*, பெ.(n.) சதுரக்கள்ளி (சங்.அக.); square spurge.

விடி¹-தல் *viḍi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. தோற்ற மாதல்; to dawn, to break, as the day. *"வெஞ்சுடர் தோன்றி விடிந்ததை யன்றே" (சீவக. 219).* 2. முடிவு பெறுதல்; to come to an end, to be ended or finished. *"வழிநடப்பதென்று விடியுமெமக் கெங்கோவே" (தனிப்பா. i, 212, 5).* 3. நற் காலத்தால் துன்பம் நீங்கி யின்புறுதல். (பரிபா. 7, 85); to see better days.

வெள் → வெளு. வெளுத்தல் = 1. வெண்மையாதல். 2. விடிதல். கிழக்கு வெளுத்தது (உ.வ.).

வெள் → வெளி → வெளித்தல் = 1. வெண்ணிறங் கொள்ளுதல் -2. விடிதல்.

வெளி → வெடி. ஒ.நோ. வெளி → வெடி = திறந்த வெளி (பிங்.) களிறு – கடிறு.

கெளிறு → ரகடிறு.

வெடிதல் = விடிதல். *"என்றூழ் வெடியாத போதிற்கொய்தான்" (செவ்வந்திப்பு. உறையூரதி.47)*

வெடி = விடிவெள்ளி (பிங்.)

வெடியல் = விடியல். வெடிவு → விடிவு

வெடி → விடி → விடிதல் = கதிரொளி தோன்றுதல்

"வெஞ்சுடர் தோன்றி விடிந்ததை யன்றே" (சீவக.219).

விடி = விடிகாலை.

"விடிபக லிரவென் றரிவரி தாய" (திவ். பெரிய.4:10:2)

விடி → விடியல். "வைகுறு விடியல்" (தொல். பொருள். 8).

"விடியல் வைகறை யிடூஉ மூர" (அகம். 196).

விடி → விடிவு → விடிவை.

"விடிவை சங்கொலிக்கும்" (திவ். திருவாய். 6 : 1 : 9)

மா.வி.அ. அல்லது வடவர் காட்டும் மூலம் வருமாறு

வ்யுஷ் (ப்யுஷ்) = 1. எரி. 2. பிரி. 3. தள், வெளிவிடு.

வி + வஸ்²(ஒளிர்) = வ்யுஸ் (vyus) = விடியல் (ச.வே.)

= வ்யுஷ் (இ.வ.) > ஆம் வேற். (இ.வே.).

வ்யுஷித – (7ஆம் வேற்) = விடியல் வ்யுஷ்ட = விடிந்து வ்யுஷ்டி = விடியல் (இ.வே.).

இதை நோக்கும்போது, விடி என்னும் சொல்லையே *'வ்யுஷ்'* என்று திரித்து அதற்கேற்ப இங்ஙனம் தித்திருக்குச் செய்திருக்கின்றனர் என்பது தெரிய வருகின்றது (பாவாணர்.வ.மொ.வ.) *'விடிந்தும் பெண்ணுக்கு முட்டாக்கோ?' (பழ.)*

வ்யுங்டி = skt. (வ.மொ.வ.)

தெ. விடியு.

[விள் → விளி → விடி → விடி-, (வே.க.பக்.136)]

விடி² *viḍi*, பெ.(n.) விடிகாலை பார்க்க; see *viḍi-kālai*. *"விடி பகலிரவென் றறிவரிதாய" (திவ். பெரியதி. 4, 10, 8).*

[விள் → விளி → விடி] (செல்வி. 77. வைகாசி பக். 498)

விடி³ *viḍi*, பெ.(n.) 1. தனிப்பட்டது (C.G.); odd item, not one of a set, single article. 2. திரைச்சீலை (சது.); curtain.

தெ. விடி; க., து. பிடி; ம. விடு.

விடி⁴-த்தல் *viḍi-*, 11 செ.கு.வி. (v.i.) மலங் கழித்தல்; to void excrement.

[விட்டித்தல் → விடி-,]

விடி[5] *viḍi*, பெ.(n.) நறுவிலி (M.M.802); sebestan.

ம. விடி.

விடிகாலை *viḍi-kālai*, பெ.(n.) பொழுது விடிகின்ற நேரம் (கொ.வ.); break of day, early morning.

[விடி[1] + காலை[1]]

விடிகுண்டு *viḍi-kuṇḍu*, பெ.(n.) விடிதற் குறியாக இடும் அதிர்வெடி; gun fired at the break of day, as time-signal.

[விடி[2] + குண்டு[1]]

விடிகோழி *viḍi-kōḻi*, பெ.(n.) விடியற் காலத்திற் கூவுஞ் சேவற் கோழி; cock crowing at dawn. *"விடிகோழி கூவுறது" (கோவ. க. 64).*

[விடி + கோழி]

விடிசங்கு *viḍi-šaṅgu*, பெ.(n.) சிலை (மார்கழி) மாதத்துப் புலர் பொழுது ஊதப்படும் சங்கம்; conch blown at the dawn of day, especially in the tamil month of *mārkaḻi.*

[விடி + சங்கு]

விடிநிலா *viḍi-nilā*, பெ.(n.) பின்னிரவில் தோன்றும் நிலவு (வின்.); moon that arose in the small hours of the morning.

[விடி + நிலா]

விடிமீன் *viḍi-mīṉ*, பெ.(n.) விடிவெள்ளி பார்க்க; see *viḍi-veḷḷi.* *"விடிமீன் முளைத்த தாளம்" (கல்லா.17, 12).*

[விடி + மீன்]

விடியங்காட்டி *viḍiyaṅ-kāṭṭi*, பெ.(n.) விடிகாலை; dawn. *'தம்பி இன்று விடியங்காட்டி வந்தான்' (உ.வ.). 'காட்டில்'* என்பது ஓர் உறழ்தர உருபு. (sign of comparative degree).

அது உலக வழக்கிற் காட்டி என்று திரிந்து காலப் பொருளில் வழங்கும்போது உறழ் தரத்தை மட்டுமின்றி ஒப்புத்தரத்தையும் (positive degree) குறிக்கும்.

இனி, விடியல்காட்டி விடியங்காட்டி என்று கொள்ளவும் இடமுண்டு, இதில், 'காட்டி' என்பது உறழ்தரவுருபல்லாத இறந்தகால வினையெச்சம்.

'காட்டில்' என்னும் உறழ்தர உருபு 'காட்டிலும்' என்று 'உம்' ஏற்கவும் செய்யும். அது உலக வழக்கில் 'காட்டியும்' என்று திரியும்.

விடியற்கருக்கல் = விடியும் பொழுதுள்ள இருட்டு. விடியற்காலம், விடியா மூஞ்சி, விடியா வழக்கு, விடியாவிளக்கு – நந்தா விளக்கு. *"விடியா விளக்கென்று மேவி நின்றேனே" (திருமந். 48)* விடியா வீடு, விடிவிளக்கு (விடியும் வரை எரிவது) விடிவெள்ளி, விடிவேளை என்பன பெருவழக்கான கூட்டுச் சொற்கள். (செல்வி. 77, வைகாசி, 498).

விடியல்[1] *viḍiyal*, பெ.(n.) விடியற்காலை, பொழுது விடிகின்ற நேரம்; break of day, dawn. *"வைகுறு விடியல் மருதம்" (தொல். பொருள். 8.).*

[விள் → விடி → விடியல். (சு.வி.பக்.17)]

விடியல்[2] *viḍiyal*, பெ.(n.) 1. மலங்கழிக்கை; voiding excrement. 2. வயிற்றுப்போக்கு; purging.

[விடி → விடியல்]

விடியல்[3] *viḍiyal*, பெ.(n.) வெளியிடம் (பிங்.); open space or place.

[வெளி → வெடி → விடி → விடியல். (வ.மொ.வ.88)]

விடியல்வைகறை *viḍiyal-vaikaṟai*, பெ.(n.) பொழுது விடிதற்கு முன்னர்த்தாகிய வைகறை; twilight before break of day. *"பிரம்பின் திரள்கனி பெய்து விடியல்*

வைகறை யீடுஉ ழூர" (அகநா. 196).

[விடியல் + வைகறை]

விடியவிடிய *viḍiya-viḍiya*, பெ.(n.) இரவு முழுவதும் (கொ.வ.); all through the night. *'தென் மாவட்டங்களில் விடிய விடியத் தெருக்கூத்து நடக்கும்' (உ.வ.). 'விடியவிடிய கதை கேட்டு இராமனுக்குச் சீதை என்ன உறவு என்று கேட்டாற்போல' (பழ.).*

விடியற்கருக்கல் *viḍiyar-karukkal*, பெ.(n.) விடிதற்கு முன்னுள்ள இருட்பொழுது; darkness preceeding break of day. *'விடியற்கருக்கலில் ஏர் பூட்டச் சென்றான்' (உ.வ.).*

[விடியல் + கரு → கருகு → கருக்கு → கருக்கல்]

விடியற்காலம் *viḍiyar-kālam*, பெ.(n.) வைகறை; break of day, dawn. *"விடியற் காலத்தே வந்து" (மதுரைக். 223, உரை). 'விடியற் காலத்தில் படிப்பது மனத்தில் நன்கு பதியும்' (உ.வ.). 'விடியற் காலம் கலியாணம், பிடியடா தம்பலம்' (பழ.). 'விடியு மட்டும் இறைத்தவனும் விடிந்த பின்பு சாலை உடைத்தவனும் சரி' (பழ.). 'விடியுமட்டும் மழை பெய்தாலும் ஒட்டாங் கிளிஞ்சில் முளைக்காது' (பழ.).*

[விடியல் + காலம்]

விடியற்பண் *viḍiyar-paṇ*, பெ.(n.) 1. விடியற்காலம் (வின்.) பார்க்க; see *viḍiyar-kālam*. 2. பூபாளம் என்னும் புறநீர்மைப் பண்; a melody type to be sung at dawn (mus).

[விடியல் + பண்]

விடியற்புறம் *viḍiyar-puṟam*, பெ.(n.) விடியற்காலம் பார்க்க; see *viḍiyar-kālam*.

[விடியல் + புறம்']

விடியற்றரம் *viḍiyarṟaram*, பெ.(n.) விடியற்காலம் (வின்.) பார்க்க; see *viḍiyar-kālam*.

[விடியல் + தரம்]

விடியாப்பானை *viḍiyā-p-pāṉai*, பெ.(n.) 1. பொந்திகையற்றவ-ன்-ள். (வின்.); one who is never satisfied. 2. விடியாமூஞ்சி பார்க்க; see *viḍiyā-mūñji*.

[விடியா + பானை]

விடியாமூஞ்சி *viḍiyā-mūñji*, பெ.(n.) தொடர்ந்து வரும் நல்வினைப்பயன் அற்றவ-ள்-ன் (வின்.); unlucky person, one who never sees the end of ones troubles, inherited by bad action or karma. *'விடியாமூஞ்சிக்கு வேலை அகப்பட்டாலும் கூலி அகப்படாது' (பழ.)*

[விடியா + மூஞ்சி]

விடியாலை *viḍiyālai*, பெ.(n.) விடிகாலை என்பதன் கொச்சைவழக்கு; corr. of *viḍi-kālai*.

[விடிகாலை → விடியாலை]

விடியாவழக்கு *viḍiyā-vaḻakku*, பெ.(n.) ஒரு பொழுதும் முடிவுபெறாத வழக்கு (இ.வ.); never-ending dispute.

[விடியா + வழக்கு. விடியா = ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.]

விடியாவிளக்கு *viḍiyā-viḷakku*, பெ.(n.) நந்தாவிளக்கு; ever-burning lamp. *"விடியாவிளக்கென்று மேவி நின்றேனே" (திருமந். 48.)*

மறுவ. விடிவிளக்கு.

[விடியா + விளக்கு]



விடியாவீடு *viḍiyā-vīḍu*, பெ.(n.) தொடர்ந்து வரும் தீவினைப் பயனுள்ள வீடு; a house with continuous bad *'karma'*.

[விடியா + வீடு]

இதன் மூலம், துன்பம் தொலைந்து இன்பங் கூடுதற்கியலாமை வெளிப்படுத்தப்பட்டது.

விடிவு[1] *viḍivu*, பெ.(n.) 1. விடிகாலை பார்க்க; see *viḍi-kālai*. *"விடபியிதன்கண் விடிவளவு மிருவே மிருத்தும்" (சேதுபு. தரும. 13).* 2. துன்பம் நீங்கியின்பம் வருகை; approach of good times, dawn of happiness. *நிற்பயம்பாடி விடிவுற் றேமாக்க" (பரிபா. 7, 85).* 3. ஒழிவு வேளை; leisure.

க. பிடவு (b).

[விடி → விடிவு] (செல்வி 77. வைகாசி 499)

விடிவு[2] *viḍivu*, பெ.(n.) விடியல்[3] (அக.நி.) பார்க்க; see *viḍiyal*.

[விடி → விடிவு]

விடிவு[3] *viḍivu*, பெ.(n.) 1. அச்சம்; fear. 2. நறும்புகை; incense.

[விடி → விடிவு]

விடிவெட்டியாள் *viḍi-veṭṭiyāḷ*, பெ.(n.) விடுதியாள் (இ.வ.) பார்க்க; see *viḍudi-y-āḷ*.

[விடி + வெட்டியாள்]

விடிவெள்ளி *viḍi-veḷḷi*, பெ.(n.) பின்னிரவில் தோன்றும் வெள்ளி மீன் (சுக்கிரன்) (வின்.); venus, as the morning star.

[விடி[2] + வெள்ளி]

விடிவேளை *viḍi-vēḷai*, பெ.(n.) விடியற் காலம் பார்க்க; see *viḍiyaṟ-kālam*.

[விடி + வேளை]

விடிவை *viḍivai*, பெ.(n.) விடியற்காலம் பார்க்க; see *viḍiyaṟ-kālam*. *"விடிவை சங் கொலிக்கும்" (திவ். திருவாய். 6, 1, 9).*

[விடி → விடிவு → விடிவை. (வ.மொ.வ.88)]

விடிவோரை *viḍi-vōrai*, பெ.(n.) அதிகாலை; early hours of the morning. *"விடிவோரை நட்டு" (திவ். திருப்பா. 3, வ்யா).*

[விடிவு[1] + ஓரை[2]]

விடு[1]–தல் *viḍu-*, 6 செ.குன்றாவி. (v.t.) 1. நீங்குதல்; to leave, quit, part with. *"தவ்வையைக் காட்டி விடும்" (குறள், 167), 'அவன் சென்ற ஆண்டே பள்ளியை விட்டுவிட்டான்; சம்பளம் போதாதென்று வேலையை விட்டு விட்டான்'.* 2. விலக்குதல்; to remove. *'அவன் காசிக்குச் சென்று வந்ததும் கத்தரிக்காயை விட்டுவிட்டான்'.* 3. நீக்குதல்; to get rid of. *"தூற்றாதே தூரவிடல்" (நாலடி, 75).* 4. பிரித்தல்; to split, separate; to disentangle, as hair. 5. கைவிடுதல்; to abandon, forsake. *'அவன் புதுமணஞ் செய்தவுடன் பழைய*

மனைவியை விட்டுவிட்டான்'. 6. போக விடுதல்; to let go. 7. அனுப்புதல்; to despatch, send away. *"தவமுது மகளை விட்டு" (குறள். 501, உரை).* 8. தொடர்பு விடுத்தல்; to liberate, set free, release. *'அவனுக்கும் எனக்கும் நீண்ட நாட்களாகத் தொடர்பு விட்டுப் போயிற்று'.* 9. நிறுத்துதல்; to give up, to leave off, discontinue. *'அந்த பழக்கத்தை விடு', 'வண்டியை விட்ட இடத்திலிருந்து ஓட்டி வந்தான்'.* 10. ஒழித்து விடுதல்; to omit, leave out. *'அந்தப் பகுதியை விட்டுப் படித்தான்'.* 11. முடித்தல்; to end, finish, conclude. 12. வெளி விடுதல்; to emit, issue, to give out, let out. 13. செலுத்துதல்; to send forth, discharge. *"எம்மம்பு கடிவிடுதும்" (புறநா. 9).* 14. எறிதல் (பிங்.); to throw. *"விடும் விடுங் கரதலத்து" (தக்கயாகப். 413.).* 15. சொரிதல்; to pour. *"கதிர் விடு தன்மையும்" (கலித். 100).* 16. கொடுத்தல்; to give, bestow. *"திருப்பணிக்கு விட்டேன்" (S. I. I. iii. 121.).* 17. சொல்லுதல்; to say, tell. *"வேலைகடப்பன் மீளமிடுக்கின் றெனவிட்டான்" (கம்பரா. மகேந்திர. 4).* 18. விளத்தமாகக் கூறுதல்; to describe in detail, to elucidate. 19. வெளிப்படக் கூறுதல்; to publish, expose, tell openly. 20. அனுமதி தருதல்; to permit, let allow. *'அவனை உள்ளே செல்ல விட்டான்'.* 21. காட்டித்தருதல்; to indicate, point out. *"கெடுதியும் விடீராயின்" (குறிஞ்சிப். 144).* 22. வெளிப்படுத்துதல்; to express, give out. *"மறைகாவா விட்டவன் புலம்பு விடு குரலோடு" (நெடுநல். 93, 4). 'மனத்திலுள்ளதை விட்டுச் சொல்' (உ.வ.).* 23. பிதிர் விள்ளுதல்; to solve, as a riddle. 24. உண்டாக்குதல்; to form. *"துளைகள் விடுகழை" (திருப்பு. 51).* 25. பிடி நெகிழச் செய்தல்; to become loose. *'பணப்பையை எங்கோ விட்டுவிட்டான்'.* 26. இடத்தினின்று நீங்குதல்; to depart, leave. *'ஊரை விட்டுவிட்டான்' (விரும்பி நீங்குதல்) 'கோட்டையை விட்டுவிட்டான்' (அஞ்சி நீங்குதல்)* 27. விடுதலை செய்தல்; to release from the prison. *'அரசரின் முடிசூட்டு விழாவன்று சிறையாளியரையெல்லாம் விட்டு விட்டனர்'.* 28. விடுமுறை யளித்தல்; to give holiday. *'வேனிற் காலத்தில் கல்வி நிலையங்களுக்கெல்லாம் விடுமுறை விடப்படும்'.* 29. இசைதல்; to consult, agree. *'காசு கொடுத்தபின் ஏவலன் உள்ளே போகவிட்டான்'.* 30. பிறருக்காக இழத்தல்; to loss for somebody. *'பொதுநலத்திற்காகத் தன்னலத்தை விட்டுக் கொடுத்தல் வேண்டும்'.* 31. ஏவுதல்; to set on. *'நாயை விட்டுக் கடிக்கச் செய்தான்'.* 32. அடித்தல்; to beat. *'கன்னத்தில் விட்டான் இரண்டு'.* 33. வினைக்கமர்த்தல்; to employ, to appoint. *'தண்ணீருக்கென்று நாலாளை விட்டிருக்கிறார்கள்'. 'காடுகெட ஆடுவிடு' (பழ.).* 34. அமைத்தல்; to make. *'வீட்டிற்கு நாற்புறமும் வாசல் விட்டுக் கட்டியிருக்கின்றனர்'.* 35. ஒளிவீசுதல்; to emit light. *'பட்டை தீர்ந்த கல் நன்றாய் ஒளிவிடும்'.* 36. புகுத்துதல்; to put in. *'பாம்புப் புற்றிற்குள் கையை விட்டான்'.* 37. இடையில் ஏடு தள்ளுதல்; to slip or miss a leaf in reading or copying. *'கள்ளேடு விட்டுப் படிக்கிறான்'.* 38. இடையில் இடம் விடுதல்; to give space. *'ஒற்றை யிடைவெளி விட்டுத் தட்டச்சடித்தல் வேண்டும்'.* 39. பொறுத்தல்; forbearing. *'கீரையை வளரவிட்டு அறுத்தல் வேண்டும்', 'கொதிக்கின்ற நீரை ஆறவிட்டுக் குடித்தல் வேண்டும்'.* 40. ஒழித்தல்; to cause to

cease. *'குடியை விட்டு விடு'.* 41. ஒதுக்குதல்; to allot. *'புதிய நகரமைப்பிற் கல்விச் சாலைக்குப் போதிய நிலம் விடப்பட்டிருக்கின்றது'. 'விட்டதடா ஆசை விளாம்பழத்து ஓட்டோடே' (பழ.).*

விடு²–தல் *vidu-*, 6 செ.கு.வி. (v.i.) 1. பிரிதல்; to be separated, divided. 2. விள்ளுதல், திறத்தல் (இலக்.அக.); to be opened. *'ஒரு விடுகதை போடு'.* 3. கட்டு அவிழ்தல்; to loosen, release. *"தளைவிட்ட தாமரை" (கலித். 77).* 4. மலர்தல்; to blossom. *"தாது பொதி போது விட" (தேவா. 1157, 6).* 5. உண்டாகுதல்; to appear; to be formed. *'மரத்தில் தளிர்விட்டிருக்கிறது'.* 6. மிகுதல்; to increase. *"ஒளிர்விட்ட வாக்கினை" (கலித். 72).* 7. தங்குதல்; to stay. *"காவினு ணயந்து விட்டார்களே" (சீவக. 1905).* 8. தவிர்தல்; to cease, stop. *'மழைவிட்டும் தூவானம் விடவில்லை' (பழ.).* 9. பிளந்திருத்தல்; to be split, broken or cracked. *'அந்தச்சுவர் விட்டுப் போயிற்று' (வின்.).* 10. நிறுத்தல்; to be let off, to be discontinued. *'அது விட்டது தெரியவில்லை'.* 11. இடைவெளி விடுதல்; to leave interspace, as in writing. *'இடைவெளி விட்டு எழுத வேண்டும்'.* 12. படிக்கையில் நிறுத்துதல்; to pause, as in reading. *'விட்டு விட்டுப் படிக்க வேண்டும்'.* 13. வலுக்குறைதல்; to lose strength. 14. விலகுதல் (இலக்.அக.); to become loose, disjointed. *'மூட்டு விட்டுப் போயிற்று'.* 15. அறுபடுதல்; to be cut. *'நூல் விட்டுப் போயிற்று'.*

Ma. *viṭuka*; **Ko.** *viṟ-*; **To.** pir; **Ka.** *biḍu*; **Kod.** *buḍ*; **Tu.** *buḍupuni*; **Te.** *viḍu*, vidusu; **Go.** *biṟsānā*; **Br.** biting.

[விள் → விடு → விடு-,]

விடு³–தல் *vidu-*, து.வி. (aux.) ஒரு துணை வினை; an auxiliary verb having the force of certainty, intensity, etc. *'வந்து விட்டான்'.*

விடு⁴–த்தல் *vidu-*, 11 செ.குன்றாவி. (v.t.) 1. அனுப்புதல்; to send away, despatch. *"போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்" (தொல். பொ. 39.).* 2. போகவிடுதல்; to let go. *"உயிர் விடுத்தலின்" (கல்லா. கணபதி).* 3. தொடர்பு (பந்தம்) விடுவித்தல்; to free, liberate, release. *"பூவலர் கொடியனாரை விடுக்கிய கோயில் புக்கான்" (சீவக. 2917).* 4. நெகிழ்த்துதல்; to loosen. 5. பிரித்தல்; to split, separate, to disentangle, as the hair. *'புரை விடுத்துரைமோ' (சீவக. 1732). "உன்னல் காலே ஊன்றல் அரையே முறுக்கல் முக்கால் விடுத்த லொன்றே". 'தலைமயிர் விடுத்துக் கொண்டிருந்தாள்'.* 6. பிதிர் விள்ளுதல்; to slove, as a riddle. 7. செலுத்துதல்; to send forth, discharge. *"ஒருட விரண்டு கூறுபட விடுத்த... வேலோய்" (கல்லா. முருகன்றுதி.).* 8. சொல்லுதல்; to stay, tell. *"செல்கென விடுத்தன்று" (பு.வெ.12, பெண்பாற். 19.).* 9. வெளிப்படக் கூறுதல்; to publish, to expose, as a secret, to say openly. 10. வெளிவிடுதல்; to emit, issue, to let out, give out. *"பெருங்காற்று விடுத்த" (கல்லா. கணபதி).* 11. விளத்தமாகக் கூறுதல்; to elucidate, to describe in detail. 12. விடை தருதல்; to answer, reply. *"வினாயவை விடுத்தல்" (நன். 40).*

[விள் → விடு → விடு-த்தல், (மு.தா. 165)]

விடு⁵–த்தல் *vidu*, 4 செ.கு.வி. (v.i.) 1. விடை பெறுதல்; to receive permission, as from a superior. *"விடுத்தேன் வாழிய குரிசில்"*

(புறநா. 210). 2. தங்குதல்; to remain. "விடுத்தான் விடுத்தற் கிடங்கூறி" (திருவாலவா. 54, 5).

விடு[6] viḍu, பெ.(n.) பகலிரவுகள் நாழிகை யளவில் ஒத்தநாள் (வின்.); equinox. "நிகரில் விடுக்களில்" (திருகாளத். பு. தல விசிட். 33).

விடுக்கு[1] viḍukku, பெ.(n.) சிற்றளவான குடிநீர்; small amount of drinking water.

[முடுக்கு → விடுக்கு (செல்வி. செப். 78-10)]

விடுக்கு[2] viḍukku, பெ.(n.) மடக்கு; a mouthful water.

[விழுங்கு → விழுக்கு → விடுக்கு (மு.தா.322)]

விடுகதை viḍu-kadai, பெ.(n.) புதிர்; riddle, enigma.

[விடு[2]- + கதை[1]]

விடுகவி viḍu-kavi, பெ.(n.) விடுபாட்டு பார்க்க; see viḍu-pāṭṭu.

[விடு[1]- + கவி]

Skt. kavi > த. கவி.

விடுகாசு[1] viḍu-kāśu, பெ.(n.) சில்லறைப் பணம் (வின்.); change, lower denomination of coins, petty cash.

[விடு + காசு]

விடுகாசு[2] viḍu-kāśu, பெ.(n.) விடுகாசு வளையல் (வின்.) பார்க்க; see viḍukāśu-vaḷaiyal.

தெ. காசு (gāzu)

[விடு + காசு]

விடுகாசுவளையல் viḍu-kāśu-vaḷaiyal, பெ.(n.) கண்ணாடி வளையல் வகை (வின்.); a glass armlet or bangle, bracelet.

[விடுகாசு[2] + வளையல்]

விடுகாது viḍu-kādu, பெ.(n.) வளர்த்துத் தொங்கவிடும் தொள்ளைக் காது; perforated ear-lobe hanging loose without any jewel. "விடுகாதானாலும் தோடிட்டு வளர்ந்த காதென்று தெரியுங்காண்" (ஈடு. 10, 1, 1).

[விடு + காது]



விடுகாலி viḍu-kāli, பெ.(n.) 1. பட்டி மாடு; cattle allowed to roam at large. 2. கட்டுக் கடங்காதவ-ன்-ள்; person under no moral restraint.

[விடு + காலி]

விடுகாலிவிளைவு viḍu-kāli-viḷaivu, பெ.(n.) பின்னறுவடை (யாழ்.அக.); belated harvest.

[விடுகாலி + விளைவு]

விடுகு viḍugu, பெ.(n.) 1. பிள்ளை; son. 2. துண்டு; piece.

[பிடுகு → விடுகு (சு.வி.பக்.15)]

விடுகுதிரை viḍu-kudirai, பெ.(n.) பகைவர் மேல் விடுங் குதிரைப் பொறி; horse-shaped

engine of war. *"விற்பொறிகள் வெய்ய விடுகுதிரை" (சீவக. 102).*

[விடு + குதிரை]

விடுகுறை[1] *viḍu-kuṟai*, பெ.(n.) விட்டகுறை (வின்.) பார்க்க; see *viṭṭa-kuṟai.*

[விடு + குறை]

விடுகுறை[2] *viḍu-kuṟai*, பெ.(n.) விடுதுறை (வின்.) பார்க்க; see *viḍu-tuṟai.*

[விடு + குறை]

விடுகோலெருது *viḍu-kōl-eṟudu*, பெ.(n.) சமயத்திலுதவும் பொருட்டு உடன் கொண்டு செல்லும் எருது (வின்.); spare bullock.

[விடு + கோல்[1] + எருது]

விடுத்தம்[1] *viḍuttam*, பெ.(n.) தடவை (வின்.); turn, times. *"எங்களூரையும் இரண்டு விடுத்தமாக அழித்து ஆளும்படி வெட்டி" (புதுக். கல். 799).*

[விடு → விடுத்தம்] (வே.க.149)

விடுத்தம்[2] *viḍuttam*, பெ.(n.) 1. மரவகை; strychnine tree. 2. எட்டி (மலை.) பார்க்க; see *eṭṭi.*

விடுத்துவிடுத்து *viḍuttu-viḍuttu*, து.வி. (adv.) அடிக்கடி (வின்.); very often, frequently.

[விடுத்து + விடுத்து]

விடுதயிர் *viḍu-tayir*, பெ.(n.) நீர்கலந்த தயிர் (இ.வ.); curd mixed with water, loose curds.

[விடு + தயிர்]

விடுதல் *viḍudal*, பெ.(n.) விடுதலை (புதுவை.); release.

[விடு → விடுதல்]

விடுதலம் *viḍu-talam*, பெ.(n.) 1. நிலாமுற்றம்; open terrace. *"தன்கோயின் மீமிசை விடுதலத்து" (திருவாலவா. 16, 1).* 2. பொது மக்களின் பயன்பாட்டிற்காக விடப்பெற்ற வெற்றுநிலம்; unoccupied or vacant site set apart for the use of the public.

தெ. விடுதல; க. பிடடெ.

[விடு + தளம் → தலம்]

Skt. ஸ்தலம் (முன்மெய்ச் சேர்பு)

விடுதலை *viḍu-talai*, பெ.(n.) 1. ஓய்வு; rest, retirement. 2. தொடர்பு நீக்கம்; release, deliverance. 3. தன்னுரிமை; liberty. *"புலையருக்கும் விடுதலை" (பாரதி. தேசீய. விடுதலை. 2).*

தெ. விடுதல.

விடுதலைப்பத்திரம் *viḍutalai-p-pattiram*, பெ.(n.) சொத்திற் பிறர்க்கு உரிமையில்லை யென்பதை உறுதிப்படுத்தும் உறுதி ஆவணம்; release deed, deed of discharge, as of mortgage, etc.

*[விடுதலை + **Skt.** patra > த. பத்திரம்]*

விடுதா–தல் (விடுதருதல்) *viḍu-tā-*, 4 செ. குன்றாவி.(v.t.) கொடுத்தனுப்புதல்; to send, as a present. *"சிறு தொட்டில்..... உனக்குப் பிரமன் விடுதந்தான்" (திவ். பெரியாழ். 1, 3, 1).*

[விடு + தா (தரு)–.]

விடுதா–தல் (விடுதருதல்) *viḍu-tā-*, 4 செ.கு.வி.(v.i.) தடையின்றி முன் செல்லுதல்; to advance unchecked. *"வெஞ்சின வேந்தன் விடுதர" (பு.வெ.4, 1, கொளு.).*

[விடு + தா (தரு)–,]

விடுதாள் *viḍu-tāḷ*, பெ.(n.) தனித்தாள் (இ.வ.); loose sheet of paper.

[விடு + தாள்]

விடுதி *viḍudi*, பெ.(n.) 1. தங்குமிடம்; lodging place, place of temporary residence; choultry. *"விடுதியே நடக்கவென்று நவிலுவீர்" (பாரத. சூது. 165).* 2. விடுதலம், 2 (இ.வ.) பார்க்க; see *viḍu-talam*. 3. தனித்த–வன்–வள்–து; that which is solitary or lonely, separated or companionless. *'விடுதியாள்', 'விடுதி மாடு', 'விடுதிப்பூ'.* 4. இசைவு; leave, permission. *'எனக்கு விடுதி தர வேண்டும்'.*

தெ. விட்டி; க. பிடதி; ம. விடுதி.

[விடு → விடுதி]

விடுதிப்பூ *viḍudi-p-pū*, பெ.(n.) விடுபூ பார்க்க; see *viḍu-pū*.

[விடுதி + பூ[3]]

விடுதிமாடு *viḍudi-māḍu*, பெ.(n.) விடுகோ லெருது பார்க்க; see *viḍu-kōl-erudu*.

[விடுதி + மாடு]

விடுதியாள் *viḍudi-y-āḷ*, பெ.(n.) வேலையில்லாதவன் (கொ.வ.); unemployed person. 2. குடும்ப அலுவலில்லாத ஆள்; single man, man without any domestic ties or duties.

[விடுதி + ஆள்[2]]

விடுதீட்டு[1] *viḍu-tīṭṭu*, பெ.(n.) கொடை ஆவணம்; gift deed. *"நாயனார் பண்டாரத் தார்க்கு விடுதீட்டுக் குடுத்த பரிசாவது" (S.I.I. V. 105).*

[விடு[1] + தீட்டு[2]]

விடுதீட்டு[2] *viḍu-tīṭṭu*, பெ.(n.) விடுதலை ஆவணம் (பத்திரம்) (ரகஸ்ய. 281); release deed.

[விடு + தீட்டு]

விடுது *viḍudu*, பெ.(n.) 1. ஆலம் விழுது; aerial root falling down from branch of banyan tree. 2. ஆழம் பார்ப்பதற்காக ஒரு முனையில் ஈயவுருண்டை கட்டிய கயிறு; sounding lead. *'கடலில் விடுது விட்டுப் பார்க்கிறது'* (naut.) *(வின்.).* 3. தூக்குருண்டை (இ.வ.); plumb-line.

[விழுது → விடுது]

விடுதுறை *viḍu-tuṟai*, பெ.(n.) படிக்கும் போது நிறுத்திப் படிக்கும் இடம் (யாழ்.அக.); place for pause in reading, singing, etc.

[விடு + துறை]

விடுதோல் *viḍu-tōl*, பெ.(n.) மேற்றோல்; epidermis. *"நரம்பொடு விடுதோல் ..... கழன்று" (மணிமே. 20, 59).*

[விடு + தோல்[3]]

விடுந்தலைப்பு *viḍun-talaippu*, பெ.(n.) சீலையின் முன்றானை (வின்.); front end of a cloth, the ornamented end of a saree.

[விடு + தலைப்பு]

விடுநகம் *viḍu-nagam*, பெ.(n.) கிட்டிக்கோல்; clamp consisting of two sticks, an instrument of torture. *"கேளாதாரை வடுக விடுநக மிட்டு" (ஈடு. 4, 8, 6).*

[விடு + நகம்[2]]

விடுநாண்[1] *viḍu-nāṇ*, பெ.(n.) இடுப்பிற் கட்டும் அரைஞாண் கொடி, கயிறு (ஈடு. 2, 5, 5); girdle, cord for the waist.

[விடு + நாண்[2]]

விடுநாண்[2] *viḍu-nāṉ*, பெ.(n.) கழுத்திலிருந்து இடைவரை தொங்கும் நாணணிவகை; a neclet ornament hanging down to the waist. *"திருக்கழுத்திற் சாத்தின விடுநாணானது திருவுந்தியளவும் தாழ" (திவ்.பெரியாழ். 2, 10, 2, வ்யா, பக். 488).*

[விடு + நாண்]

விடுநிலம் *viḍu-nilam*, பெ.(n.) வெற்று நிலம்; waste land. *"விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து" (மணிமே. 13, 51).*

[விடு + நிலம்]

விடுப்பு *viḍuppu*, பெ.(n.) 1. நீக்கம்; separation. *"விடுப்பில் குணகுணி" (வேதா. சூ. 127).* 2. துருவியறியுந் தன்மை (வின்.); inquisitiveness. 3. புதுமையானது; that which is strange or curious. *'அவன் விடுப்புக் காட்டுகிறான்' (வின்.).* 4. விருப்பம் (யாழ்.அக.); desire. 5. தானாக எடுக்கும் விடுப்பு; leave

[விடு → விடுப்பு] (செல்வி. 77, ஆடி.பக். 488)

விடுப்புக்காட்டு-தல் *viḍuppu-k-kāṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) புதுமைக்காட்சி காட்டுதல் (வின்.); to present a curious or strange spectacle or show.

[விடுப்பு + காட்டு-,]

விடுபடு-தல் *viḍu-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. நீக்கப்படுதல்; to be left, to be abandoned, relinquished. 2. விடுதலையடைதல்; to be released, liberated, as from bondage or prison.

[விடு + படு-,]

விடுபடை *viḍu-paḍai*, பெ.(n.) எறியப்படும் படை (சுக்கிர நீதி. 328); missile.

[விடு + படை]

விடுபதி *viḍu-pati*, பெ.(n.) மருமகன் (யாழ்.அக.); son-in-law.

[விடு + பதி]

விடுபாட்டு *viḍu-pāṭṭu*, பெ.(n.) தனிப்பாடல்; stray, occasional verse.

மறுவ. விடுகவி

[விடு[1] + பாட்டு]

விடுபாடு *viḍu-pāḍu*, பெ.(n.) இலக்கண வரையறை, மற்றும் தொகைப்படுத்துதல் ஆகியவற்றில் சொல்லவேண்டிய ஒன்று சொல்லப்படாதிருத்தல்; be left out, be omitted, be left undone.

[விடுபடு → விடுபாடு]

விடுபூ *viḍu-pū*, பெ.(n.) தொடுக்காத பூ; loose flower, as not strung in a garland. *"விடுபூத் தொடைப்பூக் கட்டுப்பூ" (சிலப். 5, 14, உரை).*

[விடு + பூ[3]]

விடுபேறு *viḍu-pēṟu*, பெ.(n.) பிறர்க்கு உரிமையாய் விடப்பட்ட நிலம் முதலியன (Insc.); endowment, as of lands, money, etc.

[விடு + பேறு]

விடுமலர் *viḍu-malar*, பெ.(n.) 1. மலர்ந்த பூ; blossom. *"விடுமலர்ப் பூங்கொடி போல நுடங்கி" (பரிபா. 12, 89).* 2. விடுபூ பார்க்க; see *viḍu-pū*.

[விடு + மலர்]

விடுமனை *viḍu-maṉai*, பெ.(n.) வெற்று மனையிடம் (இ.வ.); vacant house-site.

[விடு + மனை]

விடுமுதல் *viḍu-mudal*, பெ.(n.) வாணிகத் திற்கு வைத்த முதல் (இ.வ.); capital.

[விடு + முதல்]

விடுமுறி *viḍu-muṟi*, பெ.(n.) 1. விடுதலைப் பத்திரம் (இ.வ.) பார்க்க; see *viḍutalai-p-pattiram.* 2. மணமுறிப்பு செய்து கொண்டதைக் குறிக்கும் ஆவணம் (நாஞ்.); divorce deed. *(nāñ).*

[விடு + முறி]

விடுமுறை *viḍu-muṟai*, பெ.(n.) 1. அலுவலகம், கல்வி நிறுவனம் முதலியவற்றில் முறையாக அளிக்கும் ஓய்வுநாள் (இ.வ.); holiday, vocation. 2. கோடை விடுமுறை; summer holiday. 3. கிழமை விடுமுறை; weekly holiday.

[விடு + முறை]

விடுவம் *viḍuvam*, பெ.(n.) பகலிரவுகள் நாழிகையளவில் ஒத்தநாள்; equinox. *"அயனமே விடுவந்திங்கட் பிறப்பு" (வேதாரணி. தோற்ற. 82).*

[விடு → விடுவம்]

விடுவாய் *viḍuvāi*, பெ.(n.) நிலப்பிளப்பு; cleft, crevice in the surface of the earth. *"கருங்கதிரெறித்த விடுவாய் நிறைய" (அகநா. 53).*

[விடு + வாய்]

விடுவாய்செய்-தல் *viḍuvāy-šey-*, 1 செ. குன்றாவி. (v.t.) அரிதல்; to cut up, slice up, mince, as vegetables. *"கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்ய" (சிலப். 16, 30).*

[விடுவாய் + செய்-,]

விடுவி-த்தல் *viḍuvi-*, 11 செ.குன்றாவி. (v.t.) 1. விடுதலை செய்தல்; to liberate, set free, release. 2. உட்பொருளைக் கண்டு கூறுதல்; to explain, interpret, to solve, as a riddle.

[விடு → விடுவி → விடுவி-,] (செல்வி. 77, ஆடி,589)

விடுவிடெனல் *viḍuviḍeṉal*, பெ.(n.) 1. சுருசுருப்பாயிருத்தற் குறிப்பு; onom, expr. of being active, busy. 2. அச்சம் முதலிய வற்றால் மெய்ந் நடுங்குதற் குறிப்பு (இ); expr. of shivering of body out of fear etc. 3. சினங்கொள்ளுதற் குறிப்பு; being angry.

[விடுவிடு + எனல்]

விடுவெட்டி *viḍu-veṭṭi*, பெ.(n.) விடுதியாள் (இ.வ.) பார்க்க; see *viḍudi-y-āḷ.*

[விடு + வெட்டி]

விடூசி *viḍūši*, பெ.(n.) அம்பு; arrow. *"விடய மெனும் விடவிடூசி" (ஞானவா. முமுட். 13).*

[விடு + ஊசி]

விடேல்விடுகு *viḍēl-viḍugu*, பெ.(n.) பல்லவரசர் சிலரின் சிறப்புப் பெயர் (I.M.P.Tj.669); a creditable title of certain pallava kings. *"விடேல்விடுகு நீகடவும் வீதிதோறும்" (நந்திக். 74).*

[விடேல் + விடுகு]

விடேல்விடேலெனல் *viḍēl-viḍēl-eṉal*, பெ.(n.) ஈரடுக் கொலிக்குறிப்பு; an imitative sound or echo. *"மாவடு விடேல்விடேலென் றோசையும்" (பெரியபு. அரிவாட். 18).*

[விடேல் + விடேல் + எனல்]

விடேலெனல் *viḍēl-eṉal*, பெ.(n.) ஓசைக்குறிப்பு (சூடா.); an imitative sound.

"மாவின் வரிவடு விடேலெனாமுன்" (பெரியபு. அரிவாட். 22).

[விடேல் + எனல்]

விடை[1] *viḍai*, பெ.(n.) 1. மறுமொழி (நன். 386, உரை); answer, reply. 2. அனுமதி; liberty, leave, licence, permission. *"கானமின்றே போகின்றேன் விடையுங் கொண்டேன்" (கம்பரா. கைகேசி. 110).* 3. விடைக்கோழி (வின்.) பார்க்க; see *viḍai-k-kōḻi*. 4. அசைவு; movement, shaking. *"பெயர்த்திட்டானது விடைதந்தில தணுவும்" (சேதுபு. இராமனருச். 158).*

க., து. பிடெ.

[விடு² → விடை (வே.க.149)]

விடை[2] *viḍai*, பெ.(n.) மிகுதி; abundance, surplus. *"விடையரவ மன்றங் கறங்க" (பு.வெ.12. ஒழிவு. 5).*

விடை[3]-த்தல் *viḍai-*, 11 செ.குன்றாவி.(v.t.) 1. வேறுபடுத்துதல்; to seperate or alter. *"விடைப்பருந்தானை வேந்தன்" (சீவக. 555).* 2. அடித்தல்; to strike. *"விடைப்பரே மனிதருந் தம்மில் வெல்லவே" (சிவதரு. சனன. 63).* 3. கண்டித்தல் (வின்.); to reprove. 4. வெளிப்படுத்துதல் (வின்.); to reveal or expose.

[விடு → விடை → விடை-,] (சு.வி.28)

விடை[4]-த்தல் *viḍai-*, 11 செ.கு.வி.(v.i.) 1. மிகுதல்; to abound; *"புன்னை மலர் நாற்றம் விடைத்தே வருதென்றல்" (தேவா. 69, 2).* 2. கடுகுதல்; to be in haste. *"விடைத்துத் தவரை வெகுள்வானும்" (சிவதரு. பாவ. 36).*

விடை[5]-த்தல் *viḍai-*, 11 செ.குன்றாவி.(v.t.) 1. தடுத்தல்; to prevent, abstruct, parry. *"அவன் புடைத்த கைகளை விடைத்தன னகற்றி" (பாரத. கீசக. 79).* 2. வருந்துதல்; to affict, cause pain. *"விடையா வடந்தை செய் வெள்ளியம் பொருப்பினும்" (கல்லா. 51).*

விடை[6]-த்தல் *viḍai-*, 4 செ.கு.வி.(v.i.) 1. சோர்தல்; to droop, languish. *"விடையா விடையாசரணம்" (தணிகைப்பு. வீராட்ட. 12).* 2. விம்முதல்; to sob. *'விடைக்க விடைக்க அழுகிறான்'.* 3. பெருஞ் சினங் கொள்ளுதல் (சூடா.); to be very angry, to burst into a rage. *"விடைத்துவரு மிலங்கைக் கோன்" (தேவா. 159, 10).* 4. வலிப்புக் கொள்ளுதல் (வின்.); to twitch, as the legs of a beast when dying. 5. விரைத்து நிற்றல்; to stiffen up, straighten out. *'அவன் விடைத்து நிற்கிறான்'.* 6. செருக்குக் கொள்ளுதல்; to be haughty.

விடை[7] *viḍai*, பெ.(n.) வருத்தம் (யாழ்.அக.); distress, woe.

[விடை⁵ → விடை]

விடை[8]-தல் *viḍai-*, 3 செ.கு.வி. (v.i.) 1. பிரிதல் (வின்.); to become disjointed, to split. 2. சினங் கொள்ளுதல் (வின்.); to be angry. 3. குற்றஞ்சொல்லுதல் (யாழ்.அக.); to find fault, to prick holes.

க. பிடய; ம. வெடியுக.

[விடு → விடை-,] (வே.க. 149)

விடை[9] *viḍai*, பெ.(n.) 1. எருது (பிங்.); bull. *"பீடுடைய போர்விடையன்" (தேவா. 539, 2).* *"தோடுடைய செவியன் விடையேறியோர்" (தேவா.)* 2. எருது ஓரை (இடபவிராசி) (பிங்.); taurus of the zodiac. 3. எருமைக்கடா; buffalo bull. *"மதர்விடையிற் சீறி" (பு.வெ.7, 14).* 4. மரையின் ஆண்; male of the bison.

"மரையான் கதழ்விடை" (மலைபடு. 331). 5. ஆட்டுக்கடா; ram. *"விடையும் வீழ்மின்" (புறநா.262).* 6. வெருகு (தொல். பொ. 623, உரை); tom-cat. 7. குதிரை (யாழ்.அக.); horse.

கூடற்கேற்ற நிலையில் எல்லா உயிரினங்களும் அதற்கேற்றவாறு பருத்திருத்தல் இயல்வு. இதனாலேயே, ஆடு மாடு சில விலங்கினங்களும் கோழி மயில் முதலிய பறவையினங்களும் பருத்த இளமை நிலையில் விடையெனப்படும். (த.வ.பக்.46).

விடைத்தல் = விம்முதல், பருத்தல், விறைத்தல், செருக்குதல்.

விலங்கினத்தில் பெரும்பாலும் ஆண் பருத்திருப்பதால், விடை என்னும் சொல் விலங்கின் ஆண்பாலை உணர்த்தும்.

விடை → விடலை = இளங்காளை, காளை போன்ற மறவன், பாலைநிலத் தலைவன்.

விடலை = L. Vitula. Gk italos-skt vatsa.

விடை என்பது விலங்கினத்தின் ஆண்பாலைக் குறிக்கும் பொதுச் சொல்லாயினும், வழக்கு மிகுதிபற்றிச் சிறப்பாகக் காளையையே உணர்த்தும்.

வடவர் காட்டும் மூலம் வ்ருஷ் (மழைபெய்) என்பதே. மழைக் கருத்தினின்று, ஆண்மைக் கருத்தை இருவேறு வகையில் கடுகளவும் பகுத்தறிவிற்கொவ்வாதவாறு வலிந்து வருத்தியிருக்கின்றனர்.

வ்ருஷ் = மழைபெய் (இ.வே.) மழைபோல் அம்பைப் பொழி, ஆண்மைகொள், பிறப்பிப்பு ஆற்றல் பெறு.

வ்ருஷன் = (ஒருகால், முதலில் பெய்கின்ற, தெளிக்கின்ற, சினைப்பிக்கின்ற) ஆண்மையுள்ள வலிமையுள்ள, மைந்துள்ள (இ.வே.) ஆடவன், ஆண், ஆண்விலங்கு, காளை, ஆண்குதிரை, தலைவன்.

வ்ருஷ = ஆடவன், ஆண், கணவன், ஆண் விலங்கு, காளை, விடையோரை, தலைவன் தலைசிறந்தது.

வ்ருஷப(bh.) = வ்ருஷன் (இ.வே.)

வ்ருஷப–ருஷப = காளை (இ.வே.)

வ்ருஷப என்பதன் முதற்குறையே ருஷப என்பது. ஆயினும் வடவர் அதுவந்த வழியை அறியாமலோ, வடசொல்லாகக் காட்டல் வேண்டி வேண்டுமென்றோ, ருஷ்[2] என்பதை ருஷப என்னும் வடிவிற்கு மூலமாகக் காட்டுவர்.

ருஷ்[2] = செல், இயங்கு; குத்து, கொல்; உந்து, தள்.

விடை என்னும் சொல்லின் திரிபாதலாலேயே, வ்ருஷ என்பதில் வகரம் உள்ளது. ஆயின், வ்ருஷ் (மழைபெய்) என்னுஞ் சொல்லொடு அதைத் தொடர்புபடுத்தி உத்திக் கொவ்வா முறையில் பொருள் தொடர்பு காட்டினர். அதனோடமையாது, ருஷப என்னும் முதற்குறைத் திரிபையும் வேறுசொல்லாகக் கொண்டு அதற்கும் பொருள் பொருந்தா முறையிற் பொருள் பொருத்தினர்.

'விடை' என்பது கொச்சை வடிவில் 'விட' என்று நிற்கும். இடையின விடைச் செருகல் வழக்கப்படி வி → வ்ரு என்றும், மெய்த்திரிபு மரபுப்படி ட → ஷ என்றும், திரிந்தனவென உண்மையறிக. (வ.மொ.வ.89–90).

[விள் → விடு → விட → விடை (சு.வி.பக். 17]

விடை[10] *viḍai,* பெ.(n.) இளம்பாம்பு (திவ். பெரியதி. 2, 9, 6, வ்யா.); young cobra.

விடைக்கந்தம் *viḍai-k-kandam,* பெ.(n.) செம்மணித்தக்காளி (தைலவ.); black nightshade.

[விடை + கந்தம்]

விடைக்குறி *viḍai-k-kuṟi,* பெ.(n.) காளை முத்திரை; seal with the mark of shiva's bull. *"திருக்கடையை விடைக்குறியிட்டு" (திருவாலவா. பதி. 4).*

[விடை[9] + குறி]

விடைக்கோழி *viḍai-k-kōḻi,* பெ.(n.) தாயைவிட்டுப் பிரிந்து திரியக் கூடிய பருவத்துள்ள கோழிக்குஞ்சு (யாழ்.அக.); chicken old enough to roam about away from its mother hen.

[விடை[1] + கோழி]

மறுவ. கோழிச் சேவல்.

விடைகாலெறி-தல் *vidai-kaleri-*, 21 செ.கு.வி. (v.i.) 1. இறக்குங்காலத்தில் கால்கள் வலித்திழுத்தல்; to twitch the legs, as a beast or person when dying. 2. கால் மடங்குதல்; to bend the legs backward.

[விடை[5] + காலெறிதல்]

விடைகொடு-த்தல் *vidai-kodu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. மறுமொழி சொல்லுதல்; to answer. 2. அனுமதி கொடுத்தல்; to grant leave or permission. *"வினைக்கு விடை கொடுப்பாம்" (பிரபுலிங். துதி. 1).*

[விடை[1] + கொடு]

விடைகொள்(ளு)-தல் *vidai-kol-*, 16 செ.கு.வி. (v.i.) 1. வெளியேற அனுமதி பெறுதல்; to get permission, to take leave of, as when departing. *"யானும் விடைகொள்ளத் தந்தருளுகென்றனள்" (தக்கயாகப். 288).* 2. வந்து சேர்தல்; to arrive. *'இன்றைக்குத்தான் திருவல்லிக் கேணிக்கு விடை கொண்டேன்'.*

[விடை + கொள்(ளு)-,]

விடைகோள் *vidai-kōl*, பெ.(n.) விடைதழால் பார்க்க; see *vidai-talāl*. *"கதழ்விடை கோட் காண்மார்" (கலித். 103).*

[விடை[8] + கோள்]

விடைதழால் *vidai-talāl*, பெ.(n.) ஏறு தழுவதற்குரிய முல்லை நிலப்பாறையறை வித்து சினமூட்டி விடப்பட்ட ஏற்றினைத் தழுவிப்பிடிக்கை; grappling and subduing enraged bulls, as by a suitor in a test of bravery. *"தழாஅல் வேண்டும்" (தொல். பொருள். 644).*

[விடை + தழுவு → தழால். (தழால் = தழுவுகை)]

விடைதுரத்துதல் *vidai-turattudal*, பெ.(n.) வளர்ந்து பெரிதான குட்டி அல்லது குஞ்சைத் தாய்விலங்கு அல்லது பறவை தன்னினின்று அகற்றுகை; sending or driving away of the young ones by the mother animal or bird after their tutelage is over.

[விடை + துரத்துதல்]

விடைப்பாகன் *vidai-p-pāgan*, பெ.(n.) சிவ பிரான்; *śiva*, as riding the bull Nandi. *"மெய்யா விமலா விடைப்பாகா" (திருவாச. 1, 34).*

[விடை + பாகன்[3]]

விடைப்பு[1] *vidaippu*, பெ.(n.) 1. வேறு படுத்துகை; separating, dividing. *"விடைப் பருந்தானை வேந்தன்" (சீவக. 555).* 2. நீக்குகை; removal. *"விடைப்பரு வினையினாக்கம்" (தணிகைப்பு. சீபரி. 603).*

[விடை[3] → விடைப்பு]

விடைப்பு[2] *vidaippu*, பெ.(n.) 1. சினங் காட்டுகை; mani-festation of anger, wrath. 2. திமிர்; arrogance. *'அவன் மிகவும் விடைப்பாயிருக்கிறான்'.*

[விடை[4] → விடைப்பு]

விடைப்பு[3] *vidaippu*, பெ.(n.) குற்றம் (யாழ்.அக.); fault, error.

[விடை[6] → விடைப்பு]

விடைப்பேர் *vidai-p-pēr*, பெ.(n.) வரிவகை (S.I.I.vii.403); a tax.

[விடை + பேறு → விடைப்பேர்]

விடைப்பேறு *viḍai-p-pēṟu,* பெ.(n.) பழைய வரி வகை (S.I.I.ii.115); an ancient tax.

[விடை + பேறு]

விடைமுகன் *viḍai-mugaṉ,* பெ.(n.) நந்தி; Nandi, as having the face of a bull. *“விடைமுக னுரைத்தசொல் வினவி” (கந்தபு. விடை. 23).*

[விடை + முகம் → முகன்]

விடைமுரிப்பு *viḍai-murippu,* பெ.(n.) எருத்தின் திமில் (திவா); hump of an ox.

[விடை + முரிப்பு]

விடையதிகாரி *viḍai-y-adigāri* பெ.(n.) விடையிலதிகாரி பார்க்க; see *viḍayil-adigāri. “இப்படிக்கு விடையதிகாரி உய்யக் கொண்டான் எழுத்து" (S.I.I.iii.36).*

[விடை¹ + அதிகாரி]

விடையம்¹ *viḍaiyam,* பெ.(n.) 1. காட்சிப்பொருள்; objects of sense. *“விடையமறுத்து” (காசிக. அக. விந். 14).* 2. விடயம்¹, 1, 4 பார்க்க; see *viḍayam.* 3. நாடு; country, nation. *“விடையமொன்றின்றி வென்ற” (சூளா. மந்திர. 62).*

[விடு → விடை → விடையம்] (சுவி.28)

விடையம்² *viḍaiyam,* பெ.(n.) அதிவிடையம் (அரு.அக.); atis.

விடையவன் *viḍai-y-avaṉ,* பெ.(n.) 1. சிவபிரான் பார்க்க; see *sivapirāṉ. “விடையவனே விட்டிடுதி கண்டாய்” (திருவாச. 6, 1).* 2. வருணன்; *varuṇa. “நெடுந்தேருடை மீளிதானும் விடையவனாதலால்” (பாரத. குருகுல. 108, அரும். பக். 12).*

[விடை → விடையவன்]

விடையன்¹ *viḍaiyaṉ,* பெ.(n.) விடையவன்,1 பார்க்க; see *viḍai-y-avaṉ. “ஒற்றை விடையனு நான்முகனும்” (திவ். பெரியாழ். 4, 10, 4).*

[விழை → விடை → விடையன் (வே.க.120)]

விடையன்² *viḍaiyaṉ,* பெ.(n.) மிகு சிற்றின்ப வெறியன், காமுகன்; sensualist.

[விழை → விடை → விடையன் (வே.க.120)]

விடையாத்தி *viḍai-y-ātti,* பெ.(n.) விடாயாற்றி பார்க்க; see *viḍā-y-āṟṟi.*

[விடையாற்றி → விடையாத்தி]

விடையாயம் *viḍai-y-āyam,* பெ.(n.) ஏற்றையுடைய ஆனிரை; herd of cows with a bull in their midst. *"வேற்காளை விடையாயங் கொள்கென்றான் வேந்து” (பு.வெ.1, 1).*

[விடை⁷ + ஆயம்⁴ (ஆயம் = ஆக்களின் மந்தை)]

விடையாற்றி *viḍai-y-āṟṟi,* பெ.(n.) விடாயாற்றி பார்க்க; see *viḍā-y-āṟṟi.*

விடையான் *viḍaiyāṉ,* பெ.(n.) சிவன்; Sivan. *“விடையாயெனுமால்” (தேவா. திருமரு. 1).*

[விடையன் → விடையான்]

விடையிலதிகாரி *viḍaiyil-adigāri,* பெ.(n.) அரசாணை விடுக்கும் அதிகாரி; officer, who issues the royal orders. *“விடையிலதிகாரிகள் உய்யக் கொண்டானும்” (S.I.I.iii.36) (T.A.S.i.166).*

[விடை → விடையில் + அதிகாரி → விடையிலதிகாரி] (செல்வி 77, ஆடி, 588)

விடையுச்சன் *vidai-y-uccan,* பெ.(n.) திங்கள் (நாமதீப. 97); moon.

[விடை[7] + உச்சன்]

விடையூர்தி *vidai-y-ūrdi* பெ.(n.) சிவபிரான்; šiva as riding with the bull Nandi. *"விடையூர்தி யருளா லுலவுவீர்" (தாயு. சித்தர், 3).*

[விடை + ஊர்தி]

விடையோன் *vidaiyōn,* பெ.(n.) விடையவன், 1 பார்க்க; see *vidai-y-avan 1. "விடையோன் யாகசாலை புக" (தக்கயாகப். 728).*

[விடையன் → விடையோன்]

விண்[1] *vin.* பெ.(n.) 1. விரிந்த அல்லது வெளியாகிய வானம்; sky. *"விண்பொரு புகழ் விறல்வஞ்சி" (புறநா. 11).* 2. மேலுலகம்; heaven. *"விண்மீதிருப்பாய்" (திவ். திருவாய். 6, 9, 5).* 3. வானத்திலுள்ள முகில் (திவா.); cloud. *'விண்பொய்த்தால் மண்பொய்க்கும்' (பழ.). 'விண் வலிதோ மண் வலிதோ' (பழ.)*

தெ., ம. விண்ணு; து. பின்னு; மால்ட். பின்யெ.

விண்[2] *vin,* பெ.(n.) காற்றாடிப் பட்டத்தின் ஒரு கருவி (யாழ்.அக.); a contrivance in a paper kite.

விண்கொள்ளி *vin-kolli,* பெ.(n.) விண்வீழ்கொள்ளி (நாமதீப. 76) பார்க்க; see *vin-vil-kolli.*

[விண்[1] + கொள்ளி]

விண்கோ *vinkō,* பெ.(n.) வானவர் தலைவன் (நாமதீப. 60); Indra.

[விண் + கோ[3]]

விண்சுகம் *vin-šugam,* பெ.(n.) தகரை (பச்.மூ.); fetid cassia.

[விண்டுகம் → விண்சுகம்]

விண்டபூரகம் *vinda-pūragam,* பெ.(n.) மாதுளை (மலை); pomegranate.

விண்டல் *vindal,* பெ.(n.) மூங்கில்; bamboo. *"விண்டலை..... விசும்புற நீட்டிய நெறியும்" (பெருங். மகத. 15, 7) (பிங்.).*

[விண்டு[2] → விண்டல்]

விண்டலம் *vindalam,* பெ.(n.) 1. வானம் (சூடா.); sky. 2. மேலுலகம்; svarga, heaven.

[விண்[1] + தலம்[1]]

விண்டவர் *vindavar,* பெ.(n.) விண்டார் பார்க்க; see *vindār. "விண்டவர்பட" (திவ். பெரியதி. 8, 7, 5).*

[விள் → விண்டவர்]

விண்டாண்டு *vinvandu,* பெ.(n.) ஊஞ்சல் (சூடா.); swing.

[விண்டு[2] + ஆண்டு → விண்டாண்டு]

விண்டார் *vindār,* பெ.(n.) பகைவர்; separated or estranged persons, enemies, foes. *"விண்டார் பட" (இறை. 3, பக். 47).*

[விள் → விண்டார்]

விண்டு[1] *vindu,* பெ.(n.) 1. திருமால் (பிங்.); visnu. 2. அறநூல் பதினெட்டனுளொன்று; a sanskrit text-book of Hindu Law ascribed to visnu, one of 18 *tarumanūl,* q.v.

[விள் → விண்டு]

விண்டு² *viṇḍu,* பெ.(n.) 1. வானம் (சூடா.); sky. *"விண்டுலாய் நிமிர்கிரவுஞ்சகிரி" (கந்தபு. தாரக. 2).* 2. மேலுலகம்; svarga, heaven. *"விண்டுறை தேவரும் விலகிப் போயினார்" (கம்பரா. கிளைகண்டு. 138).* 3. முகில் (பிங்.); cloud. 4. காற்று (பிங்.); wind, air. 5. மலை; mountain. *"தென்புல மருங்கின் விண்டு நிறைய வாணன் வைத்த விழுநிதி" (மதுரைக். 202).* 6. மூங்கில் (பிங்.); bamboo. 7. விரிந்தது; to spread.

விள்ளுதல் = விரிதல், வெளியாதல்

விள் → வெள் → வெளி

விள் → விண். விரிந்த அல்லது வெளியாகிய வானம்

"விண்பொரு புகழ் விறல் வஞ்சி" (புறம் 11)

விள் → விண் → விண்டு. விண்டு = வானம். (மு.தா.153).

குமரிக்கண்ட முல்லை நிலத்து மக்கள் தங்கட்கும், தங்கள் ஆடுமாடுகட்கும் இன்றியமையாத மழையைத் தரும் தெய்வமென்று கருதியே, கரிய வானத்தை அல்லது முகிலை மாயோன் (கரியோன்) என்னும் பெயரால் வணங்கி வந்தனர்.

ஒ.நோ. மால் = முகில், மாயோன். இச்சொல்லே திரு என்னும் அடைமொழி பெற்றுத் திருமால் எனத் தெய்வப் பெயராய் வழங்கி வருகின்றது. ஆரியர் வேதக் காலத்தில் கதிரவனையே விஷ்ணு என்றழைத்தனர். பின்னர் தமிழரொடு தொடர்பு கொண்டு தமிழ் மதத்தை மேற்கொண்ட பின்பே 'விஷ்ணு' என்னும் சொல் திருமாலைக் குறிக்கலாயிற்று.

வடவர் காட்டும் மூலம் விஷ்¹ = வேலைசெய், ஓடு, மேம்படு, மூடு, உண். மா.வி.அகரமுதலி "Prob. for vish, 'All - pervader' or worker" என்று கருதும்.

எங்கும் நிறைந்திருப்பது என்னும் கருத்தில், 'விஷ்' என்பது 'விள்' என்பதன் திரிபே. ஒ.நோ: உள் – உஷ். சுள் = சுஷ் (வ.மொ.வ.90–91).

விண்டு³ *viṇḍu,* பெ.(n.) விட்டுணுகாந்தி² (மலை.) பார்க்க; see *viṭṭuṇu-kāndi.*

மறுவ. விட்டுணுகரந்தை.

விண்டு⁴ *viṇḍu,* பெ.(n.) விண்டுகம் (மூ.அ.) பார்க்க; see *viṇḍugam.*

[விள் → விண்டு]

விண்டுகம் *viṇḍugam,* பெ.(n.) 1. தகரை, 1 (மலை.) பார்க்க; see *tagarai,1.* 2. தாமரை (சங்.அக.); lotus.

விண்டுசித்தன் *viṇḍu-šittaṉ,* பெ.(n.) விட்டுசித்தர் (சங்.அக.) பார்க்க; *viṭṭu-šittar.*

[விண்டு + சித்தன்]

விண்டுசொல்(லு)-தல் *viṇḍu-šol-,* 8 செ. குன்றாவி. (v.t.) வெளிப்படக்கூறுதல்; to speak freely and openly; to speak without any restraint or occult.

[விள் → விண்டு + சொல்-,]

விண்டுநதி *viṇḍu-nadi,* பெ.(n.) 1. மந்தாகினி என்னும் ஆறு; the celestial Ganges. 2. பால்வீதி மண்டலம்; the milky way.

[விண்டு + நதி]

Skt. Nadi > த. நதி.

விண்டுபதம் *viṇḍu-padam,* பெ.(n.) வானம்; sky. *"விண்டுபதத் தேறு மேனி" (குமர. பிர. முத்துக். 24).*

[விண்டு + பதம்]

விண்டுபலி *viṇḍu-pali,* பெ.(n.) கருவுற்ற பெண்டிர்க்கு அக்கரு நிலைத்தற் பொருட்டுச் செய்யும் சடங்கு (திருவானைக். கோச்செங். 15); a religious ceremony, performed

when a woman is pregnant, with a view to sustaining the embryo in her womb.

[விண்டு¹ + பலி³]

விண்டுபுரம் *vinḍupuram,* பெ.(n.) காஞ்சிபுரத்தின் வேறு பெயர்; other name of *kāñjipuram.*

விண்டுராதன் *vinḍurādan,* பெ.(n.) அபிமன்னுவின் மகனான பரீட்சித்து (பாகவத. மாயவ. 41); king *parikšit,* son of Abhimanyu.

விண்டேர் *vinḍēr,* பெ.(n.) கானல்; mirage, as an air-chariot. *"விண்டேர் திரிந்து வெளிப்பட்டு" (திவ். இயற். பெரிய. ம. 48).*

[விண்¹ + தேர்³]

விண்ணகர்¹ *vinnagar,* பெ.(n.) திருமாலுலகு; vaikuntha, visnu's heaven. *"வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும்" (திவ். இயற். 1, 77).*

[விண்டு¹ + நகர்]

விண்ணகர்² *vinnagar,* பெ.(n.) விண்ணகரம் **(S.I.I.i.87)** பார்க்க; see *vinnagaram.*

[விண்டுநகர் → விண்ணகர்]

விண்ணகரம் *vinnagaram,* பெ.(n.) 1. திருமால் கோயில்; temple of *visnu.* *'பரமேச்சுர விண்ணகரம்'.* 2. தஞ்சாவூர் மாவட்டத்தில் உப்பிலியப்பன் கோயில் என வழங்கும் திருமால் கோயில்; *uppili-y-appan* koil, a place sacred to *visnu*, in the Tanjore district.

[விண் + நகரம்]

ஒருகா. விண்டு + நகரம் → விண்ணகரம்.

விண்ணதிர்ப்பு *vin-n-adirppu,* பெ.(n.) இடி முழக்கம்; rumbling of the heavens, thunder. *"விண்ணதிர்ப்பும்... பார்ப்பா ரிலங்குநூ லோதாத நாள்" (ஆசாரக். 48).*

[விண்¹ + அதிர்ப்பு]

விண்ணப்பக்கடுதாசி *vinñappa-k-kaḍudāśi,* பெ.(n.) எழுத்து மூல விண்ணப்பம் (புதுவை.); petition or written application.

[விண்ணப்பம் + கடிதம் → கடுதாசி]

விண்ணப்பக்காரன் *vinnappa-k-kāran,* பெ.(n.) 1. விண்ணப்பஞ்செய்வான் பார்க்க; see *vinnappañ-šeyvān.* 2. விண்ணப்பம் செய்வோர் (இக்.வ.); petitioner. 3. அரண் மனை முதலியவற்றில் காண வருபவர்களின் வரவைத் தெரிவிக்கும் வாயிலோன் (இ.வ.); Usher, as in a court, whose duty is to announce visitors.

[விண்ணப்பம் + காரன்¹ (காரன் : வினை முதலில் வந்த ஆண்பாற் பெயரீறு)]

விண்ணப்பஞ்செய்வான் *vinnappañ-šeyvān,* பெ.(n) கடவுள் திருமுன்பு செய்யுள் முதலியன ஓது முரிமையுள்ளவன் (ஈடு. 6, 9, 3); person who has the right to sing sacred hymns in the presence of the deity.

[விண்ணப்பம் + செய்வான்]

விண்ணப்பதார் *vinnappa-dār,* பெ.(n.) விண்ணப்பம் செய்பவர்; petitioner.

[விண்ணப்பம் + Skt. dhar > த. தார்]

விண்ணப்பப்பத்திரம் *vinñappa-p-pattiram,* பெ.(n.) எழுத்து மூலமான வேண்டுகோள்; written application or petition.

[விண்ணப்பம் + Skt. bhadrā > த. பத்திரம்]

விண்ணப்பம் *viṇṇappam,* பெ.(n.) 1. பெரியோர்முன் பணிந்து கூறும் அறிவிப்பு; supplication, respectful, or humble representation. *"அடியேன் செய்யும் விண்ணப்பமே" (திவ். இயற். திருவிருத். 1.). "ஐமேலுந்து மன்றையில் விண்ணப்பமின்றே யடியிட்டேன்" (மதுரைப் பதிற்றுப்.).* 2. கடவுள் திருமுன்பு செய்யுள் முதலியன ஓதுகை; recitation of sacred hymns in the presence of the deity. *"திருப்பதியம் விண்ணப்பஞ் செய்யவும்" (S.I.I.ii.254, 4).* 3. மனு (இக்.வ.); petition.

விண்ணப்பி-த்தல் *viṇṇappi-,* 11 செ.கு.வி. (v.i.) 1. பெரியோர்முன் பணிந்தறிவித்தல்; to supplicate. *"என் பிழையன்றென..... நின்னடிக்கே விண்ணப்பித்திருந்தேன்" (அருட்பா. vi, பிள்ளைப்பெரு. 92).* 2. செய்யுளைக் கடவுள் திருமுன்பு ஓதுதல்; to sing sacred hymns in the presence of deity, almighty 3. விண்ணப்பம் செய்தல்; to petition.

[விண்ணப்பம் → விண்ணப்பி-.]

விண்ணபத்திரம் *viṇṇa-pattiram,* பெ.(n.) விண்ணப்பப்பத்திரம் (யாழ்.அக.) பார்க்க; see *viṇṇappa-p-pattiram*

[விண்ணப்பப்பத்திரம் → விண்ணபத்திரம்]

விண்ணமங்கலம் *viṇṇamaṅgalam,* பெ.(n.) குலத்தினின்று விலக்கப்பட்ட பறையர் இறந்தபின் செல்வதாகக் கருதப்படும் இடம் (E.T vi,92), a region to which excommunicated paraiyas are said to go when they die.

விண்ணல் *viṇṇal,* பெ.(n.) காவட்டம்புல் (மலை.); citronella-grass.

மறுவ. சாமாட்சிப் புல்.

விண்ணவன் *viṇṇavaṉ,* பெ.(n.) 1. தேவன் (சிலப்.10, 189); celestial being. 2. அருகன் (சூடா.); arhat.

[விண்[1] → விண்ணவன்]

விண்ணவிணை-த்தல் *viṇṇaviṇai-,* 11 செ.கு.வி. (v.i.) மிக்க ஒளியால் கண் தெறித்தல் (தொல். எழுத்து. 482, உரை); to throb, as the eye, to be dazzled by the light.

[விண்விணை → விண்ணவிணை]

விண்ணா *viṇṇā,* பெ.(n.) கடுரோகிணி (மலை.); chiristmas rose.

மறுவ. கடுகுரோகிணி.

விண்ணாங்கு *viṇṇāṅgu,* பெ.(n.) மரவகை (யாழ்.அக.); a kind of tree.

விண்ணாணம் *viṇṇāṇam,* பெ.(n.) நாணம் (யாழ்.அக.); shame; bashfulness.

விண்ணு *viṇṇu,* பெ.(n.) திருமால்; *visṇu.* *"விரிந்தெங்குஞ் சென்றமையால் விண்ணுவுமாய்" (யாப். வி. 84).*

[விண்டு → விண்ணு.]

விண்ணுகம் *viṇṇugam,* பெ.(n.) முள்ளி (மலை.); Indian nightshade.

மறுவ. கறிமுள்ளி.

விண்ணுலகம் *viṇ-ṇ-ulagam,* பெ.(n.) 1. வானுலகு (பு.வெ.10. காஞ்சிப். 4, உரை); svarga. 2. மேலுலகம்; heaven. *"விண்ணுலகந் தருந்தேவனை" (திவ். திருவாய். 9, 3, 4.).*

[விண்[1] + உலகம்]

விண்ணுலகு *viṉṉulagu,* பெ.(n.) விண்ணுலகம் (பிங்.) பார்க்க; see *viṉ-ṉ-ulagam.* *"விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால்" (நாலடி, 233).*

[விண் + உலகு]

விண்ணெனல் *viṉṉeṉal,* பெ.(n.) 1. ஓசைக்குறிப்பு; onom.expr.signifying tinkling, as of a bell. *"விண்ணெனத் தார்மணி யார்ப்ப" (திருவாலவா. 28, 29). "நரம்பு விண்ணென இசைத்தது" (நன். பொதுவிய. 9, உரை).* 2. வெளியாதற் குறிப்பு (இலக்.அக.); being made public. 3. கண் முதலியன தெறித்தற்குறிப்பு (தொல். எழுத்து. 482, உரை); throbbing, as the eye etc. 4. விரைவுக் குறிப்பு; great speed. 5. இறுகியிருத்தற் குறிப்பு; tightness.

[விண் + எனல்]

விண்ணேறு *viṉṉēṟu,* பெ.(n.) இடி (பிங்.); thunder. *'விண்ணேறு தப்பினாலும் கண்ணேறு தப்பாது' (பழ.).*

[விண்[1] + ஏறு[3]]

விண்ணோர் *viṉṉōr,* பெ.(n.) தேவர்; celestials. *"விண்ணோர் பாவை" (சிலப். 11, 214). "வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர் பெருமானே" (திருவாச. சதகம்).*

[விண் → விண்ணோர்]

விண்பகல் *viṉ-pagal,* பெ.(n.) விண்ணளவு வளர் மூங்கில் (மலை.); bamboo, as piercing the sky.

[விண் + பகு → பகல்]

விண்பல் *viṉ-pal,* பெ.(n.) விண்டல் (சங்.அக.) பார்க்க; see *viṇḍal.*

விண்மணி *viṉ-maṇi,* பெ.(n.) ஞாயிறு (பிங்.); Sun, as the gem of the sky. *"விண்மணி பொய்ப்பினும் பொய்யாநின் வாய்மை" (வெங்கைக்கோ. 283).*

[விண் + மணி]

விண்மருந்து *viṉ-marundu,* பெ.(n.) இதளியம் (M.N.); mercury.

[விண் + மருந்து]

விண்மீன் *viṉ-mīṉ,* பெ.(n.) வான்வெள்ளி (சூடா.); star.

[விண் + மீன்[1]]

விண்முழுதாளி *viṉ-muḻudāḷi,* பெ.(n.) தேவர்களின் தலைவனான இந்திரன் (பிங்.); Indra, as ruling the entire svarga.

[விண் + முழுது + ஆளி[2] (ஆளி = ஆள்வோன்)]

விண்மூத்திரம் *viṉ-mūttiram,* பெ.(n.) நிரய வகை (சி.போ.2, 3, புதுப். பக். 204); a hell.

[விண் + மூத்திரம்]

விண்விண்ணெனல் *viṉ-viṉ-ṉ-eṉal,* பெ.(n.) 1. யாழ் நரம்பு முதலியன இசைத்தற் குறிப்பு; onom. expr. signifying, the sound of thrumming, as of the strings of a lute. 2. புண் முதலியன தெறித்து நோவெடுத்தற் குறிப்பு; throbbing pain, as of a boil.

[விள் → விண் + விண் + எனல்]

விண்விணை-த்தல் *viṉ-viṉai-,* 11 செ.கு.வி. (v.i) கண் முதலியன தெறித்தல் (தொல். எழுத்து. 482, உரை); to throb, as the eye.

[விண்ணவிணை → விண்விணை-,]

விண்வீழ்கொள்ளி *viṇ-vīḻ-koḷḷi*, பெ.(n.) விண்ணினின்று விழும் விண்மீன் போன்ற சுடர் (சூடா.); meteor, shooting star.

[விண்[1] + வீழ் + கொள்ளி]

வித்தகம்[1] *vittagam*, பெ.(n.) 1. அறிவு; knowledge, wisdom, intellect. 2. கல்வி (அரு.நி.); learning. 3. *வித்தம்[1], 3* (பிங்.) பார்க்க; see *vittam*. 4. அருண்மொழிக் கையடையாளம் (சின்முத்திரை); a hand-pose. *"வித்தகந் தரித்த செங்கை விமலையை" (கம்பரா. காப்பு.).*

வித்தகம்[2] *vittagam*, பெ.(n.) 1. திறமை; skill, ability, capability. *"வித்தகமும் விதிவசமும் வெவ்வேறே புறங்கிடப்ப" (கம்பரா. கார்முக. 19).* 2. திருத்தம்; accomplishment, perfection. *"வித்தகத் தும்பை விளைத்ததால்" (பரிபா. 9, 68).* 3. புதுமை (நாமதீப. 643); wonder, strangeness, unusuals 4. பெருமை (அரு.நி.); greatness. 5. நன்மை (யாழ்.அக.); goodness 6. வடிவின் செம்மை; regularity, as of form; symmetry. *"நூல் புடைத்தாற் போற்கிடந்த வித்தகஞ் சேர் வரிகள்" (சீவக. 1044).* 7. சிற்பம் முதலிய சிறந்த கைத்தொழில்; fine, artistic work; minute workmanship. *"குத்துமுளை செறித்த வித்தக விதானத்து" (பெருங். இலாவண. 5, 24).*

வித்தகன்[1] *vittagaṉ*, பெ.(n.) பேரறிவாளன்; wise and knowledgeable person; a great scholar.

[வித்தகம் → வித்தகன்]

வித்தகன்[2] *vittagaṉ*, பெ.(n.) 1. வல்லவன்; skilful, able person; adept *"வித்தகர் நேர்விட்ட கோழிப் புறங்கண்டும்" (பு.வெ.12, வென்றிப். 6).* 2. புதுமைத் தன்மையுடையவன்; mysterious person. *"பத்துடையடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய வித்தகன்" (திவ். திருவாய். 1, 3, 1).* 3. வயிரவன் (சூடா.); bhairava. 4. கம்மாளன் (திவா.); artificer.

[வித்தகம் → வித்தகன்]

வித்தகன்[3] *vittagaṉ*, பெ.(n.) 1. தூதன் (சூடா.); messenger. 2. இடையன் (அக.நி.); shepherd.

வித்தம்[1] *vittam*, பெ.(n.) 1. அறிவு (சூடா.); wisdom, knowledge. *"வித்தமிலா நாயேற்கும்" (அருட்பா, i, சிவநேச. 64).* 2. பொருள் (சூடா.); wealth, money. 3. பொன் (திவா.); gold. 4. நல்வினை (யாழ்.அக.); good fortune.

[வித்து → வித்தம்]

வித்தம்[2] *vittam*, பெ.(n.) பழிப்பு (சூடா.); derision, mockery.

வித்தம்[3] *vittam*, பெ.(n.) கூட்டம் (உரி.நி.); company, crowd.

வித்தம்[4] *vittam*, பெ.(n.) சூதிற் சிறுதாயம்; a cast in dice play. *"வித்தத்தாற் றோற்றான் போல்" (கலித். 136, 8).*

வித்தரம் *vittaram*, பெ.(n.) 1. அகலம்; extension, expansion, enlargement, width. *"நீளம் வித்தரமொ டுயர்ச்சி" (பாரத. இராசசூ. 8).* 2. நிரயம் (சிவதரு. சுவர்க்க நரக. 121); a hell.

வித்தரி-த்தல் *vittari-*, 11 செ.குன்றாவி. (v.t.) 1. பெருக்குதல்; to expand, to enlarge. 2. விரித்துச் சொல்லுதல்; to expound, to narrate in greater detail.

வித்தன்¹ *vittaṉ,* பெ.(n.) 1. புலவன்; learned man, man of knowledge. 2. புரவலர்; benefactor.

[வித்தகன் → வித்தன்]

வித்தன்² *vittaṉ,* பெ.(n.) ஈடுபாடுடையன் (ஈடு.); one who is absorbingly interested or involved.

வித்தன்³ *vittaṉ,* பெ.(n.) துறவி (யாழ்.அக.); ascetic, one who performs penance.

வித்தாண்மை *vittāṇmai,* பெ.(n.) புலமை (யாழ்.அக.); wisdom, scholarship.

[வித்தகம் → வித்தம் + ஆண்மை]

வித்தாயம் *vittāyam,* பெ.(n.) வித்தம்⁴ பார்க்க; see *vittam.* *“வித்தாய மிடைத்தங்கக் கண்டவன்”* (கலித். 136, 9).

[வித்தம்⁴ + ஆயம்³]

வித்தி *vitti,* பெ.(n.) 1. அறிவு; knowledge. 2. ஆராய்ச்சி; investigation, research. 3. வருவாய்; earning, acquisition, income.

வித்திகம் *vittigam,* பெ.(n.) இந்துப்பு (சங்.அக.); salt petre.

வித்து¹-தல் *vittu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. விதைத்தல்; to sow. *“வித்திய வுழவர் நெல்லொடு பெயரும்”* (ஐங்குறு. 3). 2. பரப்புதல்; to spread, broadcast. *“அண்ண லிவனேல் விளியாக் குணத்துதி நாம் வித்தாவா றென்னே”* (சீவக. 1611). 3. பிறர் மனத்துப் பதியவைத்தல்; to impress or imprint on one's mind. *“செவிமுதல் வயங்குமொழி வித்தி”* (புறநா. 206).

Ma. vittu; **Ko.** vit,vity; **To.** pit; **Ka.** bittu, **Kod.** bitt; **Tu.** bittuni; **Te.** vittu, vittanama; **Kol.** vitanam; **Nk.** vit; **Pa.** vit; **Go.** *witānā*; *Konḍa.* vit; **Kuwi.** vicanga; **Malt.** bici.

வித்து² *vittu,* பெ.(n.) 1. விதை¹, 1 பார்க்க; see *vidai.* *“சுரைவித்துப் போலுந்தம் பல்”* *(நாலடி, 315).* 2. வித்தமிழ்து (நாமதீப. 601); semen, virile. 3. தலைமுறை(வின்.); race, lineage. 4. வழிவழி (இ.வ.); posterity. 5. கருவி; means, instrument. *“முத்திக்கு வித்து முதல்வன்றன் ஞானமே”* *(திருமந். 2506).* 6. காரணம்; cause, reason. *“நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கம்”* *(குறள், 138).*

தெ., ம., து. வித்து; க. பித்து.

Skt. பீஜ.

மா.வி.அ.'of doubtful origin' என்று குறித்திருத்தல் காண்க. ஆங்கிலர் மதுரையை 'மெஜூரா' என ஒலித்தலையும் நோக்குக. (வ.மொ.வ.91).

வித்துக்காளை *vittu-k-kāḷai,* பெ.(n.) ஆனேறு (நாஞ். நா.); breeding bull.

மறுவ. பொலியெருது, பொலிகாளை.

[வித்து + காளை]

வித்துசம் *vittuśam,* பெ.(n.) கொடி வகை; hedge bind-weed.

வித்துத்து *vittuttu,* பெ.(n.) மின்னல் (சூடா.); lightning.

வித்துத்தெளி-த்தல் *vittu-t-teḷi-,* 4 செ.கு.வி. (v.i.) விதையைத் தூவுதல்; to scatter seeds, to sow.

மறுவ. விதைத்தல்.

[வித்து + தெளி-த்தல்]

வித்துப்பாடு *vittu-p-pāḍu,* பெ.(n.) விதைப்பிற்குரிய நிலம்; land seasoned for sowing standard area for a specified quantity of seed. *"பதினாழிக் காலால் எண்கல வித்துப்பாடும்" (T.A.S.i,7).*

[வித்து + பாடு]

வித்துரு[1] *vitturu,* பெ.(n.) வித்துருமம், 1 பார்க்க; see *vitturumam. "வித்துருவின் கொத்தொப்பானை" (தேவா. 682, 4).*

வித்துரு[2] *vitturu,* பெ.(n) வித்துத்து (பிங்.) பார்க்க; see *vittuttu.*

வித்துருமம் *vitturumam,* பெ.(n.) 1. பவளம் (திவா.); coral. *"வாங்குகடல் வித்துரும மாலையொளி கால" (திருவிளை. தடாதகை. 17).* 2. இளந்தளிர் (யாழ்.அக.); sprout, tender shoot

[வித்துரு → வித்துருமம்]

வித்துவஞ்சம் *vittu-vañjam,* பெ.(n)
1. மதிப்புரவின்மை; insult, disrespect.
2. பகை; enmity, hostility, antagonism.
3. வெறுப்பு; dislike; undesirability.

[வித்து + வஞ்சம்]

வித்துவேடம் *vittu-vēḍam,* பெ.(n.) பகைமை (யாழ்.அக.); enmity, hostility, nivalry.

[வித்து + வேடம்]

வித்ூகம் *vittūgam,* பெ.(n.) சாதிலிங்கம் (அரு.அக.) பார்க்க; see *šādi-lingam.*

வித்தெறி-தல் *vitteṟi-,* 3 செ.கு.வி.(v.i.) விதை விதைத்தல் (வின்.); to sow seeds.

[வித்து + எறி-.]

வித[1]-த்தல் *viḍa-,* 3 செ.குன்றாவி. (v.t.) சிறப்பாகப் பிரித்து எடுத்துரைத்தல்; to make a specific mention of, to indicate specially. *"கசதப மிகும் விதவாதன மன்னே" (நன். 164).*

வித[2]-த்தல் *viḍa-,* 4 செ.கு.வி. (v.i.) மிகுதல் (சூடா.); to be excessive, abundant. *"விதந்து பாட்டயர்ந்து" (காசிக. திரிலோசன. சிறப். 19).*

[மித → வித-,]

விதண்டம் *vidaṇḍam,* பெ.(n.) விதண்டை பார்க்க; see *vidaṇḍai.*

விதண்டவாதி *vidaṇḍa-vādi,* பெ.(n.) விதண்டாவாதி பார்க்க; see *vidaṇḍā-vādi. "வேறு வேறாகக் கூறும் விதண்ட வாதிகளை யெல்லாம்......... ஈடுறுப் புரிவ னென்றான்" (பிரபோத. 26, 104.)*

விதண்டாவாதம் *vidaṇḍā-vādam,* பெ.(n.) விதண்டை பார்க்க; see *vidaṇḍai.*

விதண்டாவாதி *vidaṇḍā-vādi,* பெ.(n.) விதண்டை செய்பவன்; captious objector, caviller.

[விதண்டை → விதண்டா + வாதி]

விதண்டை *vidaṇḍai,* பெ.(n.) 1. பிறர் கூறுவதை மறுத்துத் தன் கொள்கையை நாட்டாது வீணே கூறும் வாதம்; cavil, captious objection, idle objections against another's statement without attempting to disprove them and establishing one's own position. *"பூதங்கள் பேய்க்கோலமாய் விதண்டை பேசுமோ" (தாயு. எங்குநிறை. 7).* 2. பகை (வின்.); hostility.

விதந்தோது-தல் *vidandōdu-*, 5 செ. குன்றாவி.(v.t.) சிறப்பாக எடுத்துச் சொல்லுதல் (நன். 108, உரை); to make a specific mention of.

[விதந்து + ஓது-,]

விதப்பு[1] *vidappu,* பெ.(n.) 1. சிறப்பித்து எடுத்துச் சொல்லுகை; specific or special mention. *"விதந்து கட்டிய வழக்கு"(திவா.).* 2. விதப்புவிதி *(நன்.165, சங்கர. நமச்.)* பார்க்க; see *vidappu-vidi.* 3. விளத்தம் (பிங்.); detail. 4. புதுமை (யாழ்.அக.); wonder. 5. மதிலுறுப்புளொன்று (பிங்.); a component part of a fortification.

ம. விதம்ப்புக; தெ. veda; க. Bede; **Kod.** bede.

[வித[1] → விதப்பு]

விதப்பு[2] *vidappu,* பெ.(n.) மிகுதி (திவா.); abundance, surplus.

[வித[2] → விதப்பு]

விதப்பு[3] *vidappu,* பெ.(n.) 1. விரைவு (நாமதீப. 562); haste. 2. நடுக்கம் (பிங்.); trembling, agitation. 3. ஆசை (அரு.நி.); desire.

Ma. vitukkuka; **Ka.** bidar; **Tu.** bedaru; **Kuwi.** *peḍrali* ; **Te.** bedaru.

[விதுப்பு → விதப்பு]

விதப்புவிதி *vidappu-vidi,* பெ.(n.) சிறப்பு விதி (நன். 165, சங்கரநமச்.); special rule (gram.).

*[விதப்பு[1] + **Skt.** vidhi > த. விதி]*

விதம்பம் *vidambam,* பெ.(n.) பிறவி நஞ்சு வகை (மூ.அ.) (யாழ்.அக.); a mineral poison.

விதர்ப்பு *vidarppu,* பெ.(n.) 1. அச்சம் (யாழ்.அக.); fear. 2. நெருக்கம் (யாழ்.அக.); closeness, intimacy. 3. மல்லாட்டம் (யாழ்.அக.); battle, fight. 4. வெற்றி (சது.); victory, success.

[விதிர்ப்பு → விதர்ப்பு]

விதரம் *vidaram,* பெ.(n.) பிளப்பு (சங்.அக.); cleavage.

[விடர் → விடரம் → விதரம்]

விதலம் *vidalam,* பெ.(n.) கீழேழுலகத் தொன்று (திவா.); a nether world, one of *kīḻ-ēḻ-ulagam,* q.v

விதலை[1] *vidalai,* பெ.(n.) நடுக்கம்; trembling, shivering. *"பனிப்படு பைதல் விதலைப் பருவத்து"(பரிபா. 11, 75).*

தெ. விதலு; க., து. பெடெ; ம. விதரு.

விதலை[2] *vidalai,* பெ.(n.) புவி; the earth. *"விதலையின் விழுந்த மேவலனை..... பிடித்து"(பாரத. இராசசூ. 26).*

விதலையாப்பு *vidalai-y-āppu,* பெ.(n.) செய்யுளின் முதலும் இடையும் கடையும் பொருள்கொள்ளு முறை (இறை. 56, உரை); a mode of construction in which the central idea is conveyed by the words at the beginning, middle and end of a stanza.

[விதலை[1] + யாப்பு]

விதவிடு-தல் *vida-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) சிறப்பித்துரைத்தல்; to extol. *"இளைஞர்கள் விதவிடு கயலாலும்" (திருப்பு. 694.)*

[வித[1] + இடு – விதவிடு-,]

விதவிதெனல் *vidavi-denal,* பெ.(n.) சிறுசுடுகைக் குறிப்பு (வின்.); onom. expr. of being luke warm.

மறுவ: வெதவெதவெனல்

விதறு[1]-தல் *vidaru-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நடுங்குதல்; to tremble, to be agitated, to be shaky. *"விதறாவகை யாம்பற்றி" (ஞானவா. மனத். 8.) (திருப்பு. 162).* 2. பதறுதல் (வின்.); to be over hasty.

தெ., க., து. பெடரு.

[விதிர் → விதறு-,]

விதறு[2] *vidaru,* பெ.(n.) நடுக்கம்; trembling, shaking, agitation. *"விதறு படாவண்ணம் வேறிருந் தாய்ந்து" (திருமந். 2948).*

க. பெதுறு.

விதா *vidā,* பெ.(n.) மரவகை (பதார்த்த. 212); battle of plassey tree.

மறுவ. புரசு.

விதி *vidi,* பெ.(n.) குதிரை முதலியவற்றி னுணவு; food of horses etc.

விதிப்பாள் *vidippāḷ,* பெ.(n.) மகள் (யாழ்.அக.); daughter.

விதிமாண்டுநெல் *vidimāṇḍu-nel,* பெ.(n.) நெல்வகை (A.); a kind of paddy

விதிர்[1]-தல் *vidir-,* 4 செ.கு.வி. (v.i.) நடுங்குதல்; to shake, shiver, remble. *"விதிர்ந்தன வமரர் கைகள்" (கம்பரா. நாகபாக. 93).*

க. பிதிர்.

[விது → விதிர்-.]

விதிர்[2]-த்தல் *vidir,* 11 செ.கு.வி. (v.i.) 1. நடுங்குதல்; to tremble, quiver. *"மைபுரை மடப்பிடி மடநல்லார் விதிர்ப்புற" (பரிபா. 10, 47).* 2. அஞ்சுதல் (வின்.); to be afraid, to fear.

[விது → விதிர் → விதிர்-,]

விதிர்[3]-த்தல் *vidir-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. சிதறுதல்; to scatter, throw about. *"நெய்யுடை யடிசின் மெய்பெற விதிர்த்தும்" (புறநா. 188).* 2.தெறித்தல்; to sprinkle. *"விதிர்த்த புள்ளியன்" (சீவக. 2010.).* 3. அசைத்தல்; to shake, to brandish, as a sword. *"கையிற்றிருவாழியை விதிர்த்தான்" (ஈடு. 2, 4, 9.).* 4. உதறுதல்; to shake out, throw off. *"கலிமா..... எறிதுளி விதிர்ப்ப" (நெடுநல். 180).* 5. பலவாகப் போகடுதல்; to cut into pieces, to reduce to fragments. *"கொக்கி னறுவடி விதிர்த்த..... காடி" (பெரும்பாண். 309).* 6. சொரிதல்; to pour, as ghee in a sacrifice. *"நெய் விதிர்ப்ப நந்து நெருப்பழல்" (நான்மணி. 62).*

தெ., து. வெதரு, விதுரு; க. பிதிரு; ம. *vitaruku*; கொலா. vid, vidy; குர். *bidraānā*; குய். viti, **malt.** bidrare.

விதிர்க்குவிதிர்க்கெனல் *vidirkku-vidirk-enal,* பெ.(n.) படபடத்தற் குறிப்பு (யாழ்.அக.); expr.of trepidation.

[விது → விதிர் → விதிர்க்குவிதிர்க்கு → விதிர்க்குவிதிர்க்கெனல்]

விதிர்ப்பு[1] *vidirppu,* பெ.(n.) 1. நடுக்கம்; trembling, shivering, shaking from fear. *"அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்" (தொல். 799), "என்போற் பெருவிதிர்ப்புறுக" (புறநா. 255).* 2. அச்சம் (திவா.); tremor, fear.

தெ. விதுர்பு.

[விது → விதிர் → விதிர்ப்பு. (மு.தா.67)]

விதிர்ப்பு² *vidirppu,* பெ.(n.) மிகுதி (பிங்.); abundance.

[விதப்பு → விதிர்ப்பு]

விதிர்விதிர்-த்தல் *vidir-vidir-,* 11 செ.கு.வி. (v.i.) 1. நடுங்குதல்; to throb, flutter, quiver with intensity of feeling, to be tremulous. *"மெய்யெரி துயரின் மூழ்கி விதிர்விதிர்த்து (சீவக. 1540).* 2. ஆர்வங் கொள்ளுதல்; to be eager, to be agitated with to be ardour, anxiety. *"செங்கனகங்கண்டான் விதிர் விதிர்த்தான் சிவனடியார்க் கிடுவா னெண்ணி" (திருவாலவா. 39, 5).*

[விதிர்ப்பு → விதிர்விதிர்ப்பு] (வ.மொ.வ.315)

விதிர்விதிர்ப்பு *vidir-vidirppu,* பெ.(n.) நடுக்கம்; to throb.

[விது → விதிர் → விதிர்விதிர் → விதிர்விதிர்ப்பு (மு.தா.67)]

விதுக்குவிதுக்கெனல் *vidukku-vidu-k-kenal,* பெ.(n.) அச்சத்தால் நெஞ்சாங்குலை படபடவென்று அடித்தற் குறிப்பு; onom. expr. of palpitation of heart due to fear or shock.

[விது → விதுக்கு → விதுக்குவிதுக்கு → விதுக்குவிதுக்கெனல்]

உடலும் நெஞ்சாங்குலையும் விரைந்து அசைவது அச்சத்தைக் குறிக்குமாதலால், விரைவுக் கருத்தில் அச்சக் கருத்துப் பிறந்தது.

இங்ஙனம் அடித்துக் கொள்ளுதலை வெருக்கு வெருக்கென்றிருக்கின்றது என்பர்.

விதுப்பு *viduppu,* பெ.(n.) 1. நடுக்கம்; trembling, tremor. *"பிறைநுதல் பசப்பூரப் பெரு விதுப்புற்றாள்" (கலித். 99).* 2. விரைவு; haste. *"ஆன்றவர் விதிப்புறு விழுப்பொடு விருந்தெதிர் கொளற்கே" (புறநா. 213).* 3. பரபரப்பு; hurly-burly. *"விதிப்புறு நடுக்கமொடு விம்முவன ளாகி" (பெருங். உஞ்சைக். 36, 61).* 4. வேட்கை; desire, longing. *"மைந்தர் விதுப்புற நோக்கும்" (கம்பரா. நாட்டுப். 11).*

[விது → விதும்பு → விதுப்பு (மு.தா.66)]

விதும்பு¹-தல் *vidumbu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நடுங்குதல்; to tremble. *"மகளிர் வீழ்பூம் பொதும்பருள் விதும்பினாரே" (சீவக. 2718).* 2. விரைதல்; to hasten. *"அவர் வயின் விதும்பல்" (குறள். 127-ஆம் அதி.).* 3. ஆசைப் படுதல்; to desire, long for, hanker after. *"பேதையர் விதும்பி நின்றார்" (சீவக. 2530).*

[விது → விதும்பு-,]

"அவர்வயின் விதும்புதல்" என்னும் திருக்குறள் அதிகாரப் பெயரை நோக்குக.

விதும்பு² *vidumbu,* பெ.(n.) நடுக்கம்; trembling, tremor. *"எனை விதும்புற வதுக்கி" (தணிகைப்பு. நாரதனருள். 8).*

[விது → விதும்பு]

விதுவிது-த்தல் *vidu-vidu-,* 11 செ.கு.வி. (v.i.) மகிழ்ச்சியுறுதல்; to rejoice. *"திணியுலகம் விது விதுப்பு" (காஞ்சிப்பு. திருநகரே. 145).*

விதுவிதுப்பு *vidu-viduppu,* பெ.(n.) 1. விருப்பம்; longing, desire. 2. உடலின் குத்துநோவு; throbbing pain. *"விதுவிதுப் பாற்ற லுற்றான்" (கம்பரா. நாகபாச. 188).* 3. நடுக்கம் (இலக்.அக.); trembling.

[(முது) → விது → விதுவிது → விதுவிதுப்பு. (மு.தா.66)]

விதுளநீர் *vidu!a-nir,* பெ.(n.) வாயுவிளங்கம் (சங்.அக.); wind berry.

[விதுள + நீர்]

விதை[1]–த்தல் *vidai-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. விதை தெளித்தல்; to sow seed. 2. பரப்புதல் (இ.வ.); to publish, make public, to spread abroad. 3. செலுத்துதல்; to deliver, throw, discharge. *"விதைக்கு மப்பகழிவிற் பொருநன்" (தக்கயாகப். 726).*

விதை[2] *vidai,* பெ.(n.) 1. மரஞ்செடி கொடிகளின் பழங்களிலுள்ளதாய் அம்மரஞ் செடி கொடிகள் முளைப்பதற்குக் காரணமா யிருக்கும் வித்து; seed. *"விதைத்த விதை" (மதுரைக். 11, உரை).* 2. முளை (நாமதீப. 579); testicle. 3. தன்மாத்திரை; the subtle, primary element (phil.). *"பரிசவிதை யிரதத்தி லெழுவதாங் காற்றசைவை" (ஞானவா. தாசூ. 34).*

இந்த உலகத்தில் உள்ள உயிர்களெல்லாம் நம்மைச் சுற்றிலும் காணும் பச்சை நிலைத் திணைகளை (தாவரங்களை) தமக்கு பற்றுக் கோடாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றன. பச்சை நிலைத் திணை உயிரிகள் காற்று மண்டலத்திலுள்ள கரிவளியையும், மண்ணி லிருந்து எடுத்துக் கொண்ட நீரையும் கூட்டி, மாந்தன் உட்பட எல்லா விலங்குகளுக்கும் அடிப்படை உணவுப் பொருளான மாவுப்பொருளை விளைவு செய்கின்றன. இந்தப் பொருளியைபுக் கூட்டுச் செயலுக்கு வேண்டிய மிகவும் ஏராளமான ஆற்றலானது கதிரவனுடைய ஒளிக்கதிர் களினின்றும் பெறப்படுகின்றது. தன் உணவின் பொருட்டு, மாந்தன் நிலைத் திணைகளைப் பாதுகாத்து வளர்க்கத் தொடங்கிய கால முதல், மிகச் சிறியதும், பார்ப்பதற்கு உயிரில்லாதது போலக் காண்பதுமான விதையானது எவ்வாறு மண்ணினின்றும், கதிரொளியினின்றும் தனக்குப் பற்றுக் கோடாகிய உணவைப் பெறுகின்றது; எவ்வாறு தரமுள்ள நிலைத் திணை தழைத்து வளர்கின்றது; எவ்வாறு அது தன் இனத்தைப் பெருக்குவதற்கான எண்ணிறந்த விதைகளை உண்டாக்குகின்றது என்று வியப்படையலானான். தொடக்கக் காலங்களிலே, மாந்தன் விலங்குகளிலே 'உயிர்' என்னும் ஒரு கொள்கை இருப்பது போல, விதைகளிலும் அந்தக் கொள்கை இருக்கிறது என்று உணர்ந்திருந்தானோ என்பது தெளிவாவதில்லை. ஆயினும் மாந்தனுடைய வரலாற்றிலே, அவனுடைய வாழ்க்கையின் சின்னங்களும் சான்றுகளும் அகப்படும் தொன்மைக் காலந்தொட்டு, மாந்தன் நிலைத்திணைகளின் விதையைப் பாதுகாப்பது மிகவும் இன்றியமையாதது எனக் கருதி வந்தான் எனத் தெரிகின்றது. (கலைக்களஞ்சியம்)

தெ.வெத; க., து. பெதெ; ம. வித.

[வித்து → விதை]

விதை[3] *vidai,* பெ.(n.) பெருமை (சது.); largeness, greatness, nobility.

விதைக்காய்ச்சல் *vidai-k-kāyccal,* பெ.(n.) விதைப் பக்குவம் அடையும்படி தவசத்தை உலர்த்துகை; drying of seed-grain.

[விதை[1] + காய் → காய்ச்சல். காய்ச்சல் = உலர்ச்சி.]

விதைக்கொட்டை *vidai-k-koṭṭai,* பெ.(n.) விதை; testicle.

[விதை + கொட்டை]

விதைக்கொடி *vidai-k-koḍi,* பெ.(n.) விதைப்பையிலிருக்கும் நரம்பு வகை (M.L.); spermatic cord.

[விதை + கொடி]

விதைக்கோட்டை *vidai-k-kōṭṭai,* பெ.(n.) 1. ஒரு கோட்டை விதைப்பாடுள்ள நிலவளவு (M.M.968); superficial measure = 1.62 acres, as requiring a *kōṭṭai* of seeds. 2. கைக்கோற் புரியிற் கட்டிய விதைநெல்; seed-grain of paddy bundled in straw.

[விதை + கோட்டை]



விதைகட்டு-தல் *vidai-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) விதைக்கென்று தவசம் தனியே கட்டி வைத்தல்; to store seed-grain by bundling it up in straw.

[விதை + கட்டு-,]

விதைத்துப்பாழ் *vidaittu-p-pāḻ,* பெ.(n.) தண்ணீர்த்தட்டால் விதை செவ்வனே முளைக்காமலேனும் கதிர் பிடிக்காமலேனும் கெட்டுப் பயிரின்றிப் போகை (S.I.I.vii.279); total failure of crop due either to the seeds not sprouting properly or the seedlings not maturing on account of scanty supply of water.

[விதை → விரைத்து + + பாழ்]

விதைநெல் *vidai-nel,* பெ.(n.) விதைப் பதற்காக வைக்கப்பட்ட நென்மணி; seed-grain of paddy.

மறுவ. விதைமுதல்.

[விதை' + நெல்]

விதைநெல்லெறி-தல் *vidainel-l-eṟi-,* 3 செ.கு.வி. (v.i.) வித்திடுதற்கான நென் மணிகளை கழனியிற் தூவுதல் (வின்.); to sow seeds of paddy.

[விதைநெல் + எறி-,]

விதைப்பாடு *vidai-p-pāḍu,* பெ.(n.) 1. குறிப்பிட்ட அளவுள்ள நிலத்தில் விதைத்தற்கு வேண்டிய நென்மணியளவு (M.M); quantity of seed required to sow in a specified extent of land. 2. கலம், கோட்டை முதலிய அளவு கொண்ட விதைகளை விதைத்தற்குரிய நிலம்; standard area for sowing a specified quantity of seed, as kalam etc. 3. விதை நெல்லிலுண்டாகும் குறைவு (இ.வ.); shortage allowed for, in paddy seeds.

[விதை' + பாடு]

விதைப்பு *vidaippu,* பெ.(n.) வித்திடுகை; sowing. *'விதைப்புக் காலம்'.*

[விதை → விதைப்பு]

விதைப்புக்காலம் *vidaippu-k-kālam,* பெ.(n.) வித்திடும் பருவம்; sowing season, seed-time

[விதைப்பு + காலம்]

ஒருகா. ஆடிப்பட்டம்.

விதைப்புனம் *vidai-p-puṉam,* பெ.(n.) இதைப்புனம் (யாழ்.அக.); plot of land newly cultivated.

[இதைப்புனம் → விதைப்புனம்]

விதைப்பை *vidai-p-pai,* பெ.(n) உயிரின மூலப்பை (இ.வ.); scrotum.

[விதை' + பை']

விதைமணி *vidai-maṇi,* பெ.(n) விதைப்பதற்குரிய தவசம்; seed-grain.

[விதை + மணி]

விதைமுளை-த்தல் *vidai-muḷai-*, 4 செ.கு.வி. (v.i.) முதிர்ந்த விதை அதற்குத் தகவான சூழ்நிலையில் முளைத்தல்; sprouting.

விதை முதிரும்போது ஒருவித உறக்க நிலையை அடைகின்றது. விதையானது புதிய உயிர் பரவு வதற்கு அமைந்துள்ள உறுப்பு. ஆதலால் கருவின் உயிர்ச் செயல்கள் சில காலத்திற்கு நடைபெறாமல் தடைபட்டிருப்பது தேவையாகயிருக்கின்றது.

முளைத்தலுக்கு வேண்டிய நிலைமைகள் சிறிது காலமோ நெடுங்காலமோ இவ்வித உறக்க நிலையிலிருந்த விதைக்குத் தக்க நிலைகள் வந்து உதவும்போது, அவ்விதை முளைக்கத் தொடங்கும். உடற் செயல்கள் அடங்கிக் கிடந்த கருவிலே அச்செயல்கள் நடக்கத் தொடங்கிக் கருவின் வளர்ச்சி முன்னுக்குச் செல்லும். இந்த வளர்ச்சி நடத்தற்கு மூன்று ஆதாரங்கள் தேவை. 1. வெப்பநிலை ஏற்றதாக இருக்கவேண்டும், 2. போதுமான நீர் கிடைக்க வேண்டும், 3. உயிர்வளி தக்க அளவிற்குக் கிடைக்க வேண்டும். இம்மூன்று நிலைமைகளில் ஏதேனும் ஒன்று சரிவரக் கிடையாவிடின் கருவின் வளர்ச்சி தொடர்ந்து நடக்க முடியாது.

[விதை + முளை-,]

விதையடி-த்தல் *vidai-y-aḍi-*, 4 செ. குன்றாவி. (v.t) ஆடு மாடு முதலான கால்நடைகளின் மூலப்பையிலுள்ள விதையை நசுக்கி இல்லாமற் செய்தல்; to castrate; to emasculate

[விதை + அடி-,]

விதையெடு-த்தல் *vidai-y-eḍu-*, 18 செ. குன்றாவி. (v.t.) விதையடி-, பார்க்க; see *vidai-y-aḍi-*.

[விதை' + எடு-,]

விதைவீக்கம் *vidai-vīkkam*, பெ.(n.) விதை வீங்குகை (M L), swelling of the testicle, orchitis

[விதை + வீக்கம்]

விந்தம்[1] *vindam*, பெ.(n.) 1. அறுபத்து நான்கு கோடி கொண்ட ஒரு பேரெண் (பிங்.); the number 64,00,00,000. 2. காடு (பிங்.); jungle, forest.

விந்தம்[2] *vindam*, பெ.(n.) 1. குதிரைப்பற் செய்ந்நஞ்சு (யாழ்.அக.); a mineral poison. 2. பச்சைக்கருப்பூரம் (அரு.அக.); purified camphor.

விந்தம்[3] *vindam*, பெ.(n.) தரக்குறைவான மாணிக்க வகை (சிலப். 14, 186, உரை); infarior kind of ruby. *"புதுமமு நீலமும் விந்தமும் படிதமும்" (சிலப். 14, 186).*

விந்தம்[4] *vindam*, பெ.(n.) தாமரை; lotus. *"விந்தமாப் பிண்டி முல்லை .... நீலங்கோலலற்கு" (நாமதீப. 59).*

விந்தாக்கினி *vindā-k-kiṉi*, பெ.(n.) விந்துத்தீ (யாழ்.அக.) பார்க்க; see *vindu-t-tī*.

*[விந்து + அக்கினி. **Skt.** அக்னி.]*

விந்து *vindu*, பெ.(n.) 1. புள்ளி (உரி.நி.); dot, point. 2. துளி; drop, globule. 3. நீர்த் துளியளவு (இலக்.அக.); drop of water, as a liquid measure. 4. விழியம் (நாமதீப. 601); semen, sperm. 5. இதளியம் (நாமதீப. 395); mercury. 6. வயிரக் குற்றங்களுள் ஒன்று (சிலப். 14, 180, உரை); a flaw in diamond. 7. குறி (யாழ்.அக.); mark. 8. நெற்றிப் பொட்டு (யாழ்.அக.); tilaka. 9. நென்மூக்கு; sharp edge of grains of paddy. *"பலரதன் வாலிய விந்துவு மருவாதோரே" (ஞானா. 1, 3).* 10. புருவ நடு (யாழ்.அக.); the middle portion of the forehead between the eye-brows. 11. வட்டம் (நாமதீப. 766); circle. 12. சிவதத்துவம் பார்க்க; see *śiva-*

tattuvam. *"அலரைம்பூத மூர்தர விந்துவி னோர்தர வியைந்த" (ஞானா. 56, 19).* 13. தூயமாயை; (Saiva) pure maya. *"விந்துவின் மாயையாகி" (சி.சி. 1, 19).* 14. பதினாறு வகை ஓகக் கலையுள் ஒன்று; (Saiva) a mystic centre in the body, one of *cōṭaca-k-kalai.* *"விடகலைமேல் விந்து" (பிரசாதமாலை, 1).*

[வித்து → விந்து (வ.மொ.வ.91).]

விந்துசம் *vinduśam,* பெ.(n.) தாளி[3], 3 (சங்.அக.) பார்க்க; see *tāḷi*; a medicinal plant.

விந்துடைவு *vinduḍaivu,* பெ.(n.) விரை விழிய வொழுக்கு; quick flow of semen.

[விந்து + உடை → உடைவு]

விந்துத்தீ *vindu-t-tī,* பெ.(n.) காமத்தீ (சூடா.); sexual heat.

[விந்து + தீ]

விந்துதத்துவம் *vindu-tattuvam,* பெ.(n.) சத்துதத்துவம் (சி.போ.பா. 2, 2, பக். 139. புதுப்.); a category.

[விந்து + **Skt.** *tattuva > த. தத்துவம்]*

விந்துநட்டம் *vindu-naṭṭam,* பெ.(n.) வித்தமிழ்தின் விரைவொழுக்கு; quick flow of semen. *'விந்து விட்டவன் நொந்து கெட்டான்' (பழ.).*

[விந்து + நட்டம்]

Skt. நஷ்டம்.

விந்தையம் *vindaiyam,* பெ.(n.) மயிலடிக்குருந்து என்னும் மரம் (மலை.); false peacock's foot tree.

விநாடி *vināḍi,* பெ.(n.) விநாடிகை பார்க்க; see *vināḍigai.*

விநாடிகை *vināḍigai,* பெ.(n.) ஒரு காலநுட்பம் (யாழ்.அக.); minute portion of time = 1/60th *nāḍi*=24 seconds.

விம்பி-த்தல் *vimbi-,* 11 செ.கு.வி. (v.i.) எதிர்தோன்றல் (வின்.); to be reflected, as an image.

விம்பிகை *vimbigai,* பெ.(n.) கொவ்வை (மலை.); a common creeper of the hedges.

விம்மம் *vimmam,* பெ.(n.) 1. விம்மல், 1 பார்க்க; see *vimmal.* *"விம்ம முறுதல் வீனாவது முடைத்தோ" (பெருங். வத்தவ. 6, 37).* 2. விம்மல், 2 பார்க்க; see *vimmal.* *"விம்ம முறுமவள்" (பெருங். இலாவாண. 16, 99).*

[விம்மு → விம்மம்]

விம்மல் *vimmal,* பெ.(n.) 1. தேம்பியழுகை (பிங்.); sobbing. 2. துன்பம்; distress. *"இன்னதோர் விம்மனோவ" (கம்பரா. உருக் காட்டுப். 88).* 3. ஏக்கம்; despondency. *"நெஞ்சிற் சிறியதோர் விம்மல் கொண்டான்" (கம்பரா. பாசப். 17).* 4. வீங்குகை; being puffed up or swollen. *"உவகை பொங்க விம்ம லானிமிர்ந்த நெஞ்சர்" (கம்பரா. திருவடிதொ. 8).* 5. உள்ளப் பூரிப்பு; elation of spirits. *"வீடின ரரக்க ரென்றுவக்கும் விம்மலால்" (கம்பரா. திருவவ. 15).* 6. ஒலிக்கை (பிங்.); sounding. 7. யாழ்நரம் போசை (பிங்.); sound of lute strings.

[விம்மு → விம்மல்]

விம்மல்பொருமல் *vimmal-porumal,* பெ.(n.) 1. இன்பதுன்ப மேலீட்டால் உண்டாம் உடல் வேறுபாடு; change in the body due

to great joy or sorrow. 2. வருத்த மிகுதி; in expressible grief. *"விம்மல் பொருமலாய்ப் படுகிறாயாகாதே"* (ஈடு. 2, 1, 3).

[விம்மல் + பொருமல்]

விம்மா-த்தல் *vimmā-,* 12 செ.கு.வி. (v.i.) விம்மு 1, 2, 3 பார்க்க; see *vimmu-.* *"விம்மாந்தி யான்வீழ"* (சீவக. 1801).

[விம்மு → விம்மா-,]

விம்மிட்டம் *vimmiṭṭam,* பெ.(n.) புழுக்கம்; feeling of suffocation, feeling close and sultry. *"இரவு முழுவதும் இச்சிறு அறையுட் கிடந்து விம்மிட்டப் பட்டேன்"* (நாஞ்.).

[விம்மு → விம்மிட்டம்]

விம்மிதம்[1] *vimmidam,* பெ.(n) உடல் (பிங்.); body.

விம்மிதம்[2] *vimmidam,* பெ.(n.) 1. வியப்பு (திவா.); admiration. *"விம்மித மென்னென் றிசைக்குவ மற்றோ"* (ஞானா. 49, 9). 2. உவகை; delight *"ஐயையுந் தவ்வையும் விம்மித மெய்தி"* (சிலப். 16, 52). 3. அச்சம் (வின்.); fear.

விம்மீன் *vimmīṉ,* பெ.(n.) விண்மீன் (இ.வ); star.

[விண்மீன் → விம்மீன்]

விம்மு[1]-தல் *vimmu,* 5 செ.கு.வி. (v.i) 1. தேம்பியழுதல் (பிங்.); to heave a sob, as a child. *"சிதரரிக்கண் கொண்டநீர் மெல்விரலூழ் தெறியா விம்மி"* (நாலடி. 394). 2. வருந்துதல்; to be in distress, agony *"கொடியாள் விளைவித்த வினைக்கு விம்மி"* (கம்பரா. நகர்நீங்கு. 124). 3. மகிழ்வுறுதல் (வின்.); to rejoice. 4. பருத்தல்; to swell, to become enlarged *"வார்செலச் செல்ல விம்மும் வனமுலை"* (சீவக. 469). 5. மிகுதல்; to extend, expand, to increase. *"விம்மகிற் புகையின் மேவி"* (சீவக. 2667). 6. நிறைதல்; to be full. *"விம்ம வங்கமரர்க் கமுதளித்த வமரர் கோவே"* (திவ். பெரியாழ். 2, 2, 9). 7. மலர்தல்; to open, as a flower. *"விம்மிய பெருமலர்"* (கல்லா. 22, 48). 8. ஒலித்தல்; to sound. *"கண்மகிழ்ந்து துடிவிம்ம"* (பு.வெ. 2, 8, கொளு).

க. பிம்மு; ம. விம்முக; து. பிம்மகெ.

விம்மு[2]-தல் *vimmu-,* 5 செ.குன்றாவி. (v.t.) ஈனுதல்; to bring forth. *"சங்குவிம்மு நித்திலம்"* (சீவக. 145).

விம்மு[2] *vimmu,* பெ.(n.) எடை (நாமதீப. 794); weight, burden.

விம்முட்டம் *vimmuṭṭam,* பெ.(n.) விம்மிட்டம் (நாஞ்.) பார்க்க; see *vimmiṭṭam.*

[விம்மிட்டம் → விம்முட்டம்]

விம்முயிர்-த்தல் *vimmuyir-,* 11 செ.கு.வி. (v.i.) பெருமூச்சு விடுதல்; to heave a sigh, as from grief *"விம்முயிர்த் தினையை யாத லொண்டொடி தகுவ தன்றால்"* (சீவக. 271).

[விம்மு + உயிர்-,]

விம்முறவு *vimmuṟavu,* பெ.(n.) துன்பம்; trouble, grief, suffering, distress. *"வேட்கையூர்தர விம்முற வெய்திய மாட்சி யுள்ளத்தை மாற்றி"* (சீவக. 1634).

[விம்மு → விம்முறு → விம்முறவு]

விம்முறு-தல் *vimmuṟu-,* 1 செ.கு.வி. (v.i.) வருந்துதல்; to be in distress. *"விம்முறு நுசுப்பு நைய"* (சீவக. 606).

[விம்மு + உறு-,]

விம்மெனல் *vim-m-eṉal,* பெ.(n.) இறுகிய தாதற் குறிப்பு; onom. expr. of becoming tight. *"கட்டு விம்மென்றிருந்தது".*

[விம்மு → விம்மெனல்]

விய[1]-த்தல் *viya-,* 12 செ.கு.வி. (v.i.) 1. வியப்படைதல்; to wonder. *"கேட்டவர் வியப்பவும்" (திருவாச. 3, 154).* 2. செருக்குறுதல்; to be proud. *"செல்வமெய்தி வியந்தனை யுதவி கொன்றாய" (கம்பரா. கிட்கிந். 81).*

து. bediyuni.

விய[2]-த்தல் *viya-,* 3 செ.குன்றாவி. (v.t.) 1. வியத்தல்; to wonder at. 2. நன்கு மதித்தல்; to esteem, admire, honour. *"வம்பமள்ளரை வியந்தன்று மிழிந்தன்று மிலனே" (புறநா. 77).* 3. பாராட்டுதல்; to praise, extol, compliment, felicitate. *"விழைந்தொருவர் தம்மை வியப்ப" (நாலடி,339).*

விய[3]-த்தல் *viya-,* 2 செ.கு.வி. (v.i.) 1. கொடுத்தல் (ஈடு. 1, 1, 8, பக். 57); to give. 2. கடத்தல் (ஈடு. 1, 1, 8, பக். 57); to transcend.

வியக்கம் *viyakkam,* பெ.(n.) பெருமை (வின்.); greatness, pride, highness, nobility.

வியக்களை *viyakkaḷai,* பெ.(n.) குடிக்கூலி (யாழ்.அக.); house rent.

[வாழகை → வியக்களை]

வியங்கொள்[1](ளு)-தல் *viyaṅ-koḷ-,* 12 செ.கு.வி. (v.i.) ஏவலைக்கொள்ளுதல்; to obey orders or command; to submit. *"வினைகடைக் கூட்ட வியங்கொண்டான்" (சிலப். 9, 78).*

[வியம் + கொள்-,]

வியங்கொள்[2](ளு)-தல் *viyaṅ-koḷ-,* 12 செ. குன்றாவி.(v.t.) செலுத்துதல்; to drive, as a chariot. *"தேர்வியங் கொண்ட பத்து" (ஐங்குறு. பக். 139).*

[ஒய் → உய் → உயம் → வியம் + கொள்-, (ஒய் = செலுத்து), (உய் = செலுத்து) வியம் = ஏவல்.]

ஒ.நோ: ஏ-ஏவு = ஏகு.

'ஏவு' பிறவினைப் பொருளிலும் 'ஏகு' தன்வினைப் பொருளிலும் வழங்குகின்றன. ஆனால், இவற்றுள் ஒவ்வொன்றுக்கும் அவ் இருபொருளும் உள. உயம் → வியம். ஏவல் குறித்த 'வியம்' என்னும் சொல் மதிப்பான ஏவலுக்குப் பெயராயிற்று. "தேர்வியங்கொண்ட பத்து" என்னும் சொற்றொடரில் 'வியங்கொள்' என்னுஞ் சொல் செலுத்தற் பொருளில் வந்திருத்தல் காண்க. (ஒ.மொ.2,பக்.142)

வியங்கோள் *viyaṅ-kōḷ,* பெ.(n.) 1. ஏவல் (சூடா.); command. 2. வினைமுற்று வகை; optative mood of verbs (Gram.). *"முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி" (தொல். சொல். 224).*

மறுவ. வியங்கோள் கிளவி.

[வியங்கொள் → வியங்கோள்]

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றிடத்தும் உரைப்போனின் விருப்பத்தை வெளிப் படுத்தி ஏவல் போல வரும் கிளவிகளை வியங்கோட் கிளவி என்பர் (வியங்கோள் எனினும் ஒக்கும்)

எ-டு. நான் வாழ்க!
நீ வாழ்க!
அவன் வாழ்க! (இலக்.கலைக்.பக்.109).

வியங்கோளசை *viyaṅ-kōḷaśai,* பெ.(n.) வியங்கோள் பொருளில் வரும் அசைச் சொற்கள்; expletive words with the meanings of command. *"மாவென் கிளவி வியங்கோள் அசைச்சொல்" (தொல் காப்பியம்) (இலக். கலைக். பக். 109).*

வியநெறி *viya-neṟi,* பெ.(n.) பெரும்பாதை (வின்.); highway, main street, avenue, broad road.

[வியம்¹ + நெறி]

வியஞ்சனம் *viyañjaṉam,* பெ.(n.) 1. உணவுக்குப் பக்கத்துணையாம் கறி முதலியன (கொ.வ.); curry, as a relish for rice, sidedish. 2. கறிக்குதவும் பொருள்கள்; condiments

[வெந்த + ஆனம் = வெந்தானம் → வெஞ்சனம் → வியஞ்சனம்]

வியப்ப *viyappa,* பெ.(n.) ஓர் உவம வாய்பாடு; a particle of comparison. *"நேர வியப்ப" (தொல். பொ. 291).*

வியப்பணி *viya-p-paṇi,* பெ.(n.) வியப்பு¹, 2 (அணியி. 40) பார்க்க; see *viyappu*

[வியப்பு + அணி]

வியப்பம் *viyappam,* பெ.(n.) வியப்பு¹,1 பார்க்க; see *viyappu.* *"வேம்பணி தோளினான் வியப்ப மெய்தியே" (திருவிளை. நரிபரி. 97).*

[வியப்பு → வியப்பம்]

வியப்பு¹ *viyappu,* பெ.(n.) 1. புதுமை; amazement, surprise. *"வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர்" (மதுரைக். 764).* 2. ஒரு பயனைக் கருதி அதற்கு மாறாகிய முயற்சி செய்வதாகக் கூறும் அணி (அணியி. 40); a figure of speech which describes the efforts taken for the achievement of an object other than the one intended. 3. பாராட்டு (யாழ்.அக.); admiration. 4. மேம்பாடு; greatness, excellance. *"சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்" (குறிஞ்சிப். 15).* 5. அளவு; measurement. *"இசைத்த மூன்றின் வியப்பற விறந்த" (ஞானா. 18).*

Tu. *beḍiyuni.*

[விய → வியப்பு]

வியப்பு² *viyappu,* பெ.(n.) வியர்ப்பு 2, 3 (பிங்.) பார்க்க; see *viyappu.*

வியம்¹ *viyam,* பெ.(n.) 1. ஏவல்; command, order. *"வியங்கொள்வருதல்" (தொல். சொல். 67).* 2. உடல் (பிங்.); body. 3. போக்கு (சீவக. 1886, உரை); sending a person on his way. 4. வழி; way. *"ஆங்குவியங் கொண்மின்" (மலைபடு. 427).*

Ka. besa, besasu, besana.

வியம்² *viyam,* பெ.(n.) 1. விரிவு; extensiveness. *"வியம்பெறு தோற்றமும்" (திருக்காளத். பு. ஞானோப. 62).* 2. உயரம் (திவ். பெரியதி. 8, 7, 1, வ்யா.); height.

Ma. viyam.

வியமம் *viyamam,* பெ.(n.) பாராட்டத் தக்கது; that which is worthy of admiration. *"வியமே வாழிகுதிரை" (கலித். 96).*

[விய → வியமம்]

வியர்¹-த்தல் *viyar-,* 11 செ.கு.வி. (v.i.) 1. உடலின் மேற்புறத்து நீர்த்துளி தோன்றுதல்; to sweat, perspire. *"முயங்க யான் வியர்த்தன னென்றனள்" (குறுந். 84).* 2. பொறாமை முதலியவற்றால் மனம் புழுங்குதல்; to feel irritated, as from envy. *"வியர்த்த லைய மிகை நடுக் கெனாஅ" (தொல். பொ. 260).* 3. சினங் கொள்ளுதல் (பிங்.); to be angry.

க. பெமர்.

[விள் → விளர் → வியர்-,] (வெம்மைக் கருத்து, வே.க. 129)

வியர்² *viyar,* பெ.(n.) 1. உடலின் மேற்புறத்துத் தோன்றும் நீர்த்துளி; perspiration. *"குறுவியர் பொடித்த கோலவாண் முகத்தள்" (மணிமே. 18, 40).* 2. இளைப்பு; weariness, exhaustion. *"பந்தெறிந்த வியர்விட..... ஆடுபவே" (கலித். 40).*

[விள் → விளர் → வியர்]

வியர்ப்பு *viyarppu,* பெ.(n.) 1. வியர்வை பார்க்க; see *viyarvai.* *"வெய்துண்ட வியர்ப்பல்லது" (புறநா. 387).* 2. சினம் (திவா.); anger. 3. சினக்குறிப்பு (திவா.); mark of anger.

[வியர் → வியர்ப்பு]

வியர்வு *viyarvu,* பெ.(n.) வியர்வை பார்க்க; see *viyarvai.*

[வியர் → வியர்வு]

வியர்வை *viyarvai,* பெ.(n.) 1. வியர், 1, 2 பார்க்க; see *viyar.* 2. சினக்குறிப்பு (பிங்.); mark or indication of wrath.

[வியர் → வியர்வு → வியர்வை]

வியர்வைக்கட்டி *viyarvai-k-katti,* பெ.(n.) கோடையில் வேர்வையால் உண்டாம் புண்கட்டி (M.L.); summer boil.

[வியர்வை + கட்டி]

வியல்¹ *viyal,* கு.பெ.எ.(adv.) அகன்ற, பரந்த; extansiveness. *"விழவு வீற்றிருந்த வியலுளாங்கண்" (பதிற். 53:1), "இருநீர் வியனுலகம் வன்சொலா லென்றும் மகிழாதே" (நன்னெறி. 18) வே.க.146.*

வியல்² *viyal,* பெ.(n.) 1. பெருமை; greatness. *"மூழ்த்திறுத்த வியன்றானை" (பதிற்றுப். 33, 5).* 2. அகலம்; width, expansion, extension, vastness. *"வியலென் கிளவி யகலப் பொருட்டே" (தொல். சொல். 364).* 3. மிகுதி (சிலப். 5, 7, உரை); abundance. 4. பொன் (சங்.அக.); gold. 5. காடு (பிங்.); forest, jungle. 6. மரத்தட்டு (அக.நி.); wooden tray.

[விள் → (விய்) → வியம் → வியன் → வியல்] (மு.தா.100)

வியல்² *viyal,* பெ.(n.) பலதிறப்படுகை; diversity. *"வியன்கல விருக்கையும்" (சிலப். 5, 7).*

[வியம் → வியல்]

வியல்கனா *viyal-kanā,* பெ.(n.) திப்பிலி (மலை.) பார்க்க; see *tippili,* long pepper.

[வியல்' + கனா]

வியல்பூதி *viyal-pūdi,* பெ.(n.) வில்வம் (மலை.); beal.

வியலகம் *viyal-agam,* பெ.(n.) வியலிடம், 1 பார்க்க; see *viyal-idam.* *"விரிகடல் வேலி வியலகம் விளங்க" (சிறுபாண். 114).*

[வியல் + அகம்]

வியலிகை *viyaligai,* பெ.(n.) பெருமை (யாழ்.அக.); greatness.

[வியல் → வியலிகை] (வே.க.146)

வியலிடம் *viyalidam,* பெ.(n.) 1. உலகம்; the wide world. *"இவ்வியலிடத்தே" (திருக்கோ. 277).* 2. அகலம் (சூடா.); breadth.

[வியல் + இடம்]

வியலுள் *viyaluḷ*, பெ.(n.) அகன்ற இடம்; wide, open space. *"விழவுவீற் றிருந்த வியலு ளாங்கண்" (பதிற்றுப். 56, 1).*

[வியல் + உள்]

வியவன் *viyavaṉ*, பெ.(n.) 1. ஏவல் செய்வோன்; servant. *"இளையரை வியவரின் விடவே" (சீவக. 601).* 2. ஏவுவான் (பிங்.); commander, person in authority. 3. தலைவன்; headman, leader. *"நாட்டுவியவன் சொல்லிய எல்லை போய்" (S.I.I.ii, 352).* 4. திண்ணியன் (பிங்.); strong, bold man. 5. வழிச்செல்வோன் (பிங்.); traveller, wayfare.

க. பெசதவன

[வியம் → வியவன்]

வியவு *viyavu*, பெ.(n.) வேறுபாடு; diversity, variation. *"ஒண்பொருள்க ளுலப்பில்லனவாய் வியவாய்" (திவ். திருவாய். 7, 8, 3).*

[வியம் → வியவு]

வியன்[1] *viyaṉ*, பெ.(n.) 1. வானம்; sky. *"வியனிடை முழுவதுகெட" (தேவா. 833, 7).* 2. பெருமை (திவா.); greatness. 3. சிறப்பு (ஈடு, 8, 10, 1); excellence, speciality. 4. வியப்பு (ஈடு, 8, 10); wonderfulness. 5. அகலம் (வின்.); vastness.

[வியம் → வியன்]

வியன்[2] *viyaṉ*, பெ.(n.) எண்ணின் ஒற்றை (சினேந். 178); oddness of numbers

வியனிடை *viyaṉiḍai*, பெ.(n.) பரந்த வெளி, விசும்பு, வானம்; sky. *"வியனிடை முழுவதுகெட" (தேவா. 833 : 7).* (வியலகம், வியலிடம் என்பன பரந்த ஞாலத்தைக் குறித்தாற் போன்று, வியனிடை என்பது பரந்த வெளியாகிய வானத்தைக் குறித்தது. (இடைவெளி) (வே.க.142).

[வியன் + இடை]

வியனிலைமருட்பா *viyaṉilai-maruṭpā*, பெ.(n.) வெண்பாவடியும் ஆசிரியவடியும் ஒவ்வாது வரும் மருட்பாவகை (இலக். வி. 749, உரை); (Pros.) a kind of *maruṭpā* in which the lines of *veṇbā* and *āśiriyappā* are found confusedly mixed up.

[வியன் + நிலை + மருட்பா]

வியனிலைவஞ்சி *viyaṉilai-vañji*, பெ.(n.) மூச்சீரடி வஞ்சிப்பா (தொல். பொருள். 350, உரை); a kind of *vañji* verse with three metrical feet in each line.

[வியன் + நிலை + வஞ்சி]

வியனுலகம் *viyaṉ-ulagam*, பெ.(n.) விண்ணுலகம் (சூடா.); celestial world.

[வியன்[1] + உலகம்]

வியாவிருத்தி *viyāvirutti*, பெ.(n.) தள்ளுகை (யாழ்.அக.); exclusion, rejection.

[வியா + Skt. vṛddhi > த. விருத்தி]

வியாழக்கிழமை *viyāḻa-k-kiḻamai*, பெ.(n.) கிழமையின் ஐந்தாவது நாள்; thursday.

[வியாழன் + கிழமை]

வியாழக்குறிஞ்சி *viyāḻa-k-kuṟiñji*, பெ.(n.) குறிஞ்சியாழ்த்திறத் தொன்று (பிங்.); (mus.) a secondary melody type of *kuṟiñji* class.

[வியாழம்[2] + குறிஞ்சி]

வியாழச்சக்கரம் *viyāḻa-c-cakkaram,* பெ.(n.) அறுபது ஆண்டு வட்டம் (வின்.); the jupiter cycle of 60 years.

[வியாழன் + சக்கரம்]

வியாழசினேகன் *viyāḻa-šiṉēkaṉ,* பெ.(n.) கதிரவன் (நாமதீப. 94); sun.

*[வியாழன் + **Skt.** snēha > த. சினேகன்]*

வியாழநோக்கம் *viyāḻa-nōkkam,* பெ.(n.) 1. பிறப்பியச் சக்கரத்திற் காணப்படும் குருநோக்கம்; (Astral.) aspect of the planet jupiter, in an horoscope. 2. வியாழானுகூலம் பார்க்க; see *viyāḻāṉu-kūlam.*

[வியாழன் + நோக்கம்]

வியாழம்[1] *viyāḻam,* பெ.(n.) 1. தேவகுரு; brahaspati, the preceptor of the gods. *"வியாழத்தோடு மறைவழக் கன்று வென்ற" (திருவாலவா. திருநகரப். 13).* 2. ஒரு கோள்; jupiter, planet. *"முந்நீர்த் திரையிடை வியாழந் தோன்ற" (சீவக. 2467).* 3. வியாழக் கிழமை; thursday. *"வியாழத்தின் மிக்க சம்பத்தி னொடு சிறுவரைப் பெற்றெடுப்பான்" (அறப். சத. 69).*

[வியல் → வியலன்) → வியாழன் - கதிரவனைச் சுற்றும் கோள்கள் எல்லாவற்றிலும் பெரியது. "வியல்என் கிளவி அகலப் பொருட்டே" (தொல்.உரி.66) வியல் → வியலம் → வியாழம்]

வியாழம்[2] *viyāḻam,* பெ.(n.) பாம்பு; serpent. *"வெள்ளிவிடையில் வியாழம் புனைந்தாரைக் கண்டு" (குற்றா. குற. 35, 5).*

[வியல் → வியலம் → வியாழம்] (வே.க.146)

வியாழமாலை *viyāḻa-mālai,* பெ.(n.) வியாழமாலையகவல் (சிலப். உரைப்பா.) பார்க்க; see *viyāḻamālai-y-agaval.*

[வியாழம் + மாலை]

வியாழமாலையகவல் *viyāḻamālai-y-agaval,* பெ.(n.) இடைச்சங்கத்து நூல்களுள் ஒன்று (இறை. 1, பக். 5); a literary piece or poem of the middle *saṅgam,* not now extant.

[வியாழமாலை + அகவல்]

வியாழவட்டம்[1] *viyāḻa-vaṭṭam,* பெ.(n.) 1. வானமண்டலத்தில் குரு ஒருமுறை சுற்றிவருங் காலமாகிய பன்னீராண்டு (சங்.அக.); the period of 12 years, being the time taken by jupiter for one revolution or rotation in the universe. 2. வியாழச்சக்கரம் (வின்.) பார்க்க; see *viyāḻa-c-cakkaram.*

[வியாழ + வட்டம்]

வியாழவட்டம்[2] *viyāḻa-vaṭṭam,* வி.எ.(adv.) வியாழக்கிழமை தோறும் (வின்.); every thursday.

[வியாழ + வட்டம்]

வியாழன் *viyāḻaṉ,* பெ.(n.) வியாழம்[1] பார்க்க; see *viyāḻam.*

கோள்களுள் வியாழன் பெரிதா யிருப்பதும், வடமொழியில் அது பிருகஸ்பதி என்று பெயர் பெற்றிருப்பதும் கவனிக்கத் தக்கன. பொன் என்பது வியாழனுக்கொரு பெயராதலால் வியல் என்னும் சொல்லிற்கு பொன்னென்னும் பொருளும் தோன்றிற்றுப் போலும் (வே.க.146)

வியாழானுகூலம் *viyāḻāṉu-kūlam,* பெ.(n.) திருமணம் முதலிய நல்ல பயன்களைக் குறிக்கும் குருநோக்கம் (இ.வ.); beneficent aspect of the plant jupiter, as conducive to matrimonial happiness, etc.

*[வியாழ + **Skt.** anukūla > த. அனுகூலம்.]*

வியாளம் *viyāḷam,* பெ.(n.) 1. பாம்பு (சூடா.); snake. 2. புலி (சூடா.); tiger. 3. யாளி[1] 1 பார்க்க; see *yāḷi* a mythological animal. 4. கெட்ட குணமுள்ள யானை (வின்.); vicious elephant.

வியாளவரி *viyāḷa-vari,* பெ.(n.) கோயிற் கருவறை மதிலின் உச்சியில் யாளியுருவி லமைந்த அழகு வரி; (Arch.) a line of carbel stones having *yāḷi* images, in the inner shrine of a temple.

[வியாள + வரி]

விரகதம் *viragadam,* பெ.(n.) விரகறம் (மலை.) பார்க்க; see *viragaṟam.*

விரகறம் *viragaṟam,* பெ.(n.) வெள்ளைச் சாரணை (மலை.); horse purslane.

[விரகதம் → விரகறம்]

விரகறியாளன் *viragaṟi-y-āḷaṉ,* பெ.(n.) அறிவுடையோன்; wiseman. *"நறும்பூங் கரந்தை விரகறியாளர் மரபிற் சூட்ட" (புறநா.289).*

[விறகு + அறி + ஆள்]

விரகன் *viragaṉ,* பெ.(n.) 1. திறமையுள்ளவன்; skilful, clever person. *"விரகர் நெடுஞ்சுவர் தள்ளுமாபோலே போக்கி" (ஈடு.1, 5, 10).* 2. வல்லவன்; expert. *"தமிழ்விரகன மொழிகள்" (தேவா.132, 11).* 3. சுற்றத்தான்; kinsman. *"விரகர்கட் கெல்லாம் வெறுப்பனவே செய்யும்" (பழமொ. 123).*

விரகு *viragu,* பெ.(n.) 1. வழிவகை; means, expedient, contrivance. *"கண்ணாலே கண்டாலல்லது பஜிக்க விரகில்லை" (ஈடு. 1, 3, ப்ர).* 2. திறமை; cleverness, prudence, tact. *"விரகி னீட்டினான்" (சீவக. 328).* 3. உத்தி; cunning. *"காமம் விற்கின்ற விரகிற்றோலாப் பொய்வினை மகளிர்" (கம்பரா. இந்திர சித்துவதை. 28).* 4. நுண்ணறிவு; discretion, discriminative knowledge, sharpness. *"விரகினரில்லா வவைபோல்" (திருவானைக். சம்புமு. 41).* 5. உணர்ச்சிக் கனிவு; enthusiasm. *"வனஞ்சென்று விரகிற் புக்கான்" (மேருமந். 342).* 6. பண்ணியாரம்; confectionery. *"வேறுபல லுருவின் விரகு தந்திரீஇ" (பொருந. 108).*

தெ. வெரவு; க. பெரகு.

விரகுளி *viraguḷi,* வி.எ.(adv.) முறையாக; in order. *"விரகுளி யெழுந்த போழ்தில்" (மேரு மந். 719).*

[விரகு + உளி]

விரசல் *virašal,* பெ.(n.) விரசு[4] பார்க்க; see *virašu.* *"விரசலாய் நட".*

[விரை → விரைசு → விரசு → விரசல்.]

விரசு[1]-தல் *virašu,* 5 செ.கு.வி. (v.i.) செறிதல்; to crowd closely or compactly together. *"விரசுமகிழ்சோலை" (பதினொ. விநாயகர். இரட். 1).*

Ma. virakkuka, **Ka.** berasu; **Tu.** biravuni; **Te.** berayu; **Kur.** *birkhnā*; **Malt.** birge.

[விரவு → விரசு]

விரசு[2]-தல் *virašu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பொருந்துதல்; to join, unite. *"அகிலம் யாவையும் விரசுறு தனிக்குடை" (கம்பரா. திருவவ. 138).* *"விரசு கோலங்கள் காண விதியிலேன்" (கம்பரா. சூளா. 36).*

விரசு³ *virašu,* பெ.(n.) விரசுகணக்கு (இ.வ.) பார்க்க; see *virašu-kaṇakku.*

விரசு⁴-தல் *virašu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. மிகவும் விரைவுப்படுத்தல்; to press hard, to urge vehemently, to hasten. 2. சொல்லாற் கடிந்து வெருட்டுதல்; to repel by words of rebuke.

[விரை → விரைசு → விரசு-,]

விரசு⁵ *virašu,* பெ.(n.) விரைவு; swiftness. *'கைவிரசு' (வின்.).*

[விரை → விரைசு → விரசு-,]

விரசு⁶ *virašu,* பெ.(n.) மரவகை (M.M.802); large sebestan.

மறுவ. விரிசு, விருசு.

Ma. virisu; **Te.** virigi.

விரசுகணக்கு *virašu-kaṇakku,* பெ.(n.) விளக்கமான கணக்கு (இ.வ.); detailed or elaborate account.

[விரசு² + கணக்கு]

விரசை *virašai,* பெ.(n.) மாட்டுத்தொழுவம் (இலக்.அக.); shed for cattle.

விரட்டடைப்பன் *viraṭṭaḍaippaṉ,* பெ.(n.) மாட்டு நோய் வகை (பெ.மாட்.); a kind of cattle-disease.

[வரட்டடைப்பன் → விரட்டடைப்பன்]

விரட்டு-தல் *viraṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. துரத்துதல்; to chase, to drive away. 2. அச்சுறுத்துதல்; to frighten, to intimidate. 3. மிகவும் விரைவுப்படுத்துதல்; to urge vehemently.

[வெருட்டு → விரட்டு-,]

விரணகம் *viraṇagam,* பெ.(n.) ஆமணக்கு (சங்.அக.); castor plant.

விரல் *viral,* பெ.(n.) 1. கைகால்களினிறுதியில் ஐந்தாகப் பிரியும் உறுப்பு; finger, toe. *"விரலுளர் நரம்பின்" (பொருந. 17).* 2. விரற்கிடை பார்க்க; see *virar-kiḍai. "பாதாதி கேசாந்தம் முக்காலே நால்விரலே ஆறுதோரை உசரமும்"* (S.I.I.ii, 395). *'விரலுக்குத் தக்க வீக்கம்' (பழ.), 'விரல் உதவி விருந்தினர் உதவார்' (பழ.), 'விரல் உரலானால் உரல் என்ன ஆகும்' (பழ.), 'விரல் போகாத இடத்திலே உரல் போகுமா' (பழ.).*

தெ. வ்ரேலு; ம. விரல்; க., து. பெரெல்; **Ko.** verl; **To.** *Peṭ*; **Kod.** bera; **Kol.** vende; **Nk.** Vende; **Go.** Wirinj; **Kui.** Vanju; **Kuwi (F).** *Vwānjū.*

[விள் → விரி → விரல்]

விரல்கொடு-த்தல் *viral-koḍu-,* 4 செ.கு.வி. (v.i.) திருமணஞ் செய்தல்; to marry. *"வேசியவள் நானிருக்க விரல் கொடுத்தா ளாசையென்ன" (கோ.வ.க.33).*

[விரல் + கொடு-,]

விரல்நொடி¹ *viral-noḍi,* பெ.(n.) விரலைச் சொடக்குகை; snapping the fingers. *'ஒரு விரல் நொடி இடாது' (பழ.).*

[விரல் + நொடி]

விரல்நொடி² *viral-noḍi,* பெ.(n.) பூடுவகை (திவா.); a plant growing in hedges and thickets.

[விரல் + நொடி]

விரல்மொழி *viral-moḻi*, பெ.(n.) விரல்களின் சந்துப் பொருத்து (வின்.); knuckle, finger-joint.

[விரல் + மொழி]

விரல்வரியடையாளம் *viral-vari-adaiyāḷam*, பெ.(n.) உள்ளங்கையில் அமைந்திருக்கும் கைவரி (ரேகை); line on the palm.

ஒவ்வொரு விரலின் நுனியிலும் வரிகள் குழந்தை, கருவிலிருக்கும் போதே உண்டாகி குழந்தை தொண்டு கிழவனாகும் காலத்திலும் ஒரு சிறிதும் மாறாமல் இருந்து கொண்டிருக்கின்றன. அதுமட்டுமன்று, உலகில் பலகோடி மக்களுக்கும் ஒவ்வொருவருடைய விரல் வரியும் தனிப்பட்டது. ஒருவருடையதைப் போல வேறு யாருக்கும் இருப்பதில்லை. இரட்டைக் குழந்தைகளுடைய விரல் கைவரி (ரேகை)களும் வேறுவேறாகவே காணப்படும். விரல் வரியின் தனிப்பட்ட தன்மை, மாறாத தன்மை என்ற இந்த இரண்டு இயல்புகளையும் வைத்து ஆள் அடையாளம் கண்டுபிடிக்க இயலும்.

[விரல் + வரி + அடையாளம்]

விரல்விடு-தல் *viral-viḍu-*, 20 செ.கு.வி. (v.i.) கைவிரலை விட்டு எண்ணுதல் (இக்.வ.); to count with one's fingers.

[விரல் + விடு-.]

விரல்வை-த்தல் *viral-vai-*, 4 செ.கு.வி. (v.i.) குறும்பு செய்தல் (இ.வ.); to do or attempt mischief

[விரல் + வை-.]

விரலணி *viralaṇi*, பெ.(n.) விரலாழி (சூடா.) பார்க்க; see *viral-āḻi*.

[விரல் + அணி]



விரலம் *viralam*, பெ.(n.) விரலின் அளவு; the tamil term of angulam. *'ஐவிரலம் வளரும் ஆற்று மீன்களுண்டு' (உ.வ.).*

விரலாழி *viralāḻi*, பெ.(n.) கணையாழி (மோதிரம்); finger-ring. *"விரலாழிக்கண் பல்விதக் கண்கள் சேர்த்து" (திருவாலவா. 22,13).*

[விரல் + ஆழி]

விரலி *virali*, பெ.(n.) 1. விரலிமஞ்சள் (கொ.வ.) பார்க்க; see *virali-mañjaḷ*. 2. வெள்ளரி (மலை.); cucumber.

Ma. virali; **Ko.** valary; **To.** Paso.

[விரல் → விரலி]

விரலிப்பச்சை *virali-p-paccai*, பெ.(n.) பச்சைக்கருப்பூரம் (சங்.அக.); purified camphor.

[விரவு + பச்சை]

விரலிமஞ்சள் *virali-mañjaḷ*, பெ.(n.) மஞ்சள் வகை; a kind of turmeric.

[விரலி + மஞ்சள்]

விரலேறு *viral-ēṟu*, பெ.(n.) ஒருவகைத் தோற்கருவி (சிலப். 3, 27, உரை, பக். 106); hand-drum.

[விரல் + எறி-.]

விரவல் *viraval* பெ.(n.) கலப்பு; mixing, mixture.

[விரவு → விரவல்]

விரவலர் *viravalar,* பெ.(n.) விரவார் பார்க்க; see *viravār.* *"மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்" (நன்னெறி. 9).*

[விரவு + அல் + அர்]

விரவார் *viravār,* பெ.(n.) பகைவர்; enemies. *"விரவாருணாணுப் படலஞ்சி" (நாலடி, 88).*

விரவி *viravi,* பெ.(n.) வெள்ளரி (சங்.அக.); cucumber.

[விரலி → விரவி]

விரவியல் *viraviyal,* பெ.(n.) 1. சங்கீரணம் என்னும் கலவையணி (வீரசோ. அலங். 34, உரை); (Rhet) a figure of speech are blended. 2. வடவெழுத்து விரவிவரும் சொல்; (Gram.) word in which letters peculiar to sanskrit occur. *"இடையே வடவெழுத் தெய்தில் விரவியல்" (வீரசோ. அலங். 40).*

[விரவு + இயல்]

விரவு^{1}-தல் *viravu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கலத்தல்; to mix, mingle, to join, unite. *"விரவுமலர் வியன்கா" (நெடுநல். 27).* 2. அடைதல்; to approach, draw near. *"விரவினோர் தணக்க லாற்றா" (காஞ்சிப்பு. தக்கீ. 1).* 3. ஒத்தல்; to be similar, *akin.* *"மலைவிரவு நீண்மார்வின் மைந்தன்" (சீவக. 1885).*

க., து. பெரசு; ம. விரகுக.

விரவு^{2}-தல் *viravu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. பொருந்துதல்; to be united, joined, to be mingled, mixed. *"புலியுரி விரவிய வரையினர்" (தேவா. 450, 1).* 2. நட்புக் கொள்ளுதல்; to cultivate friendship, to keep company. *"பணிவாரொடே விரவுமின்" (தேவா. 469, 5).*

க., து. பெரசு; ம. விரகுக.

விரவு^{3} *viravu,* பெ.(n.) கலப்பு; mixture.

விரவு^{4} *viravu,* பெ.(n.) விரகு 4 (வின்.) பார்க்க; see *viragu.*

விரவுத்திணை *viravu-t-tiṇai,* பெ.(n.) உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாக வருஞ் சொல்லின் திணை (யாழ்.அக.); (Gram.) *tiṇai* of a word comman to both *uyar-tiṇai* and *agṟiṇai.*

[விரவு^{2} + திணை]

விரவுநெல் *viravu-nel,* பெ.(n.) கலப்பு நெல்; mixed paddy.

[விரவு + நெல்]

விரவுப்பெயர் *viravu-p-peyar,* பெ.(n.) இருதிணைக்கும் அல்லது அஃறிணை யிருபாற்கும் பொதுவாக வரும் பெயர் (நன்.281–282); (Gram.) noun common to both *uyar-tiṇai* and *agṟiṇai.* *"விரவுப் பெயரின் விரிந்து நின்றும்" (நன். 255).*

[விரவு + பெயர்]

பெயர்களை உயர்திணைப் பெயர் என்றும் அஃறிணைப் பெயர் என்றும் தமிழிலக்கணங்கள் இரண்டு வகையாகப் பிரிக்கும். சில பெயர்கள் அஃறிணைக்கும் உயர்திணைக்கும் பொதுவாக இரண்டு திணையிலும் விரவி வரும். இப்படி இருதிணையிலும் விரவி வரும் பெயர்களை விரவுப் பெயர் என்பர்.

உயர்திணைக்கே உரிய பெயர் அஃறிணைப் பொருளையும் குறிக்கப் பயன்பட்டு இருதிணையிலும் விரவி வருமாயின் அதனை உயர்திணை விரவுப் பெயர் என்பர்.

அஃறிணைக்கே உரிய பெயர் உயர்திணைப் பொருளையும் குறிக்கப் பயன்பட்டு இரு திணையிலும் விரவி வருமாயின் அதனை அஃறிணை விரவுப் பெயர் என்பர்.

எ.டு.

சாத்தி வந்தாள்
சாத்தி வந்தது
கொற்றன் வந்தான்
கொற்றன் வந்தது
மணி வந்தான்
மணி வந்தது
கோதை வந்தாள்
கோதை வந்தது (இலக்.கலைக்.110)

விரள்(ளு)-தல் *viral-*, 2 செ.கு.வி. (v.i.) அச்சப்படுதல் (வின்.); to be frightened; to be afraid of.

விரளம் *viralam*, பெ.(n.) 1. செறிவின்மை; being wide apart. *'மாலையில் மலர் விரளமாகத் தொடுக்கப்பட்டிருக்கிறது'.* 2. இடைவெளி (இலக்.அக.); intervening space. 3. கால நீட்டிப்பு (இலக்.அக.); leisure. 4. அருமை; rarity. *'படித்தவர்கள் விரளமாயிருக்கிறார்கள்'.*

விரளல் *viralal*, பெ.(n.) நெருக்கம் (நாமதீப. 777); narrowness, closeness, closely personal.

விரளிமஞ்சள் *virali-mañjal*, பெ.(n.) விரலிமஞ்சள் (இ.வ.) பார்க்க; see *virali-mañjal*

[விரலி → விரளி + மஞ்சள்]

விரற்கடை *virar-kadai*, பெ.(n.) விரற்கிடை (வின்.) பார்க்க; see *virar-kidai.*

விரற்கிடை *virar-kidai*, பெ.(n.) விரலகல முள்ள அளவு (வின்.); finger's breadth = 8 grains of paddy = 1/12 *šāṉ.*

[விரல் + கிடை²]

விரற்குறி *virar-kuri*, பெ.(n.) கைவிரல் வரியை ஒற்றியெடுத்த அடையாளம் (C.G.); finger impression.

[விரல் + குறி]

விரற்கொடி *virar-kodi*, பெ.(n.) பூடு வகை (திவா.); a plant growing in hedges and thickets.

[விரல்கொடி → விரற்கொடி]

விரற்சாடு *virar-šādu*, பெ.(n.) விரலுறை (சீவக. 2202, உரை); glove for the finger, put on while shooting arrows.

[விரல் + சாடு⁴]

விரற்சுற்று *virar-šurru*, பெ.(n.) நகச்சுற்று (வின்.); whitlow.

[விரல் + சுற்று]

விரற்செறி *virar-šeri*, பெ.(n.) நெளி; curved finger-ring. *"விரற்செறியினைத் திருத்தலும்" (தொல். பொ. 22, உரை).*

மறுவ. கணையாழி.

[விரல் + செறி²-,]

விரற்படுவன் *virar-paduvan*, பெ.(n.) விரலில் வரும் புண்கட்டி வகை (M.L); abscess finger, thecal abscess.

[விரல் + படுவன்]

விரற்புட்டில் *virar-puttil*, பெ.(n.) 1. விரற் சாடு பார்க்க; see *virar-šādu. "விரற்புட்டி*

லிவை சிறிய" (கலிங். 534). 2. விரற் சிமிழ் (அங்குஸ்தான்); thimble.

[விரல் + புட்டில்']

விரற்புறப்பாடு *virar-purappāḍu,* பெ.(n.) விரற்சுற்று பார்க்க; see *virar-šurru* (M.L.).

[விரல் + புறப்படு → புறப்பாடு]

விரற்பூண் *virar-pūn,* பெ.(n.) கணையாழி (மோதிரம்) (நாமதீப. 435); finger-ring.

மறுவ. விரற்செறி.

[விரல் + பூண்]

விரனெரி–த்தல் *viraneri-,* 4 செ.கு.வி. (v.i.) வருத்தத்தால் விரல்களை நெரித்தல்; to wring one's hands, squeeze one's fingers together in sign of great distress. *"மெல்விர னெரித்து விம்மி வெய்துயிர்த்து" (பதினொ. திருவாரூர்மும். 7).*

[விரல் + நெரி²–]

விராகன் *virāgan,* பெ.(n.) 1. வராகன் என்பதன் மறுவழக்கு; the derivative of *varāgan.* 2. கடவுள்; one without passion the deity. 3. அருகன் (சது.); arha.

விராகு *virāgu,* பெ.(n.) விராகம் பார்க்க; see *virāgam. "விராகெனும் வேலின் வீழ" (சீவக. 3080).*

விராய் *virāy,* பெ.(n.) 1. விறகு; fuel, firewood. *"வல்விராய் மாய வெரிதழல்" (நீதிநெறி. 64).* 2. பூச்செடிவகை; a flowering plant. *"விராய் மலர்க் கோதை" (பெருங். வத்தவ. 12,38, அரும்.).* 3. விராயம் (R.) பார்க்க; see *virāyam.*

விராயம் *virāyam,* பெ.(n.) தளவாடம் (யாழ்.அக.); materials, as for a piece of work.

விராலி *virāli,* பெ.(n.) செடிவகை (வின்.); jamaica switch sorrel.

தெ. பண்டவ செட்டு; ம. வாவலி.

இரட்டை விதையிலை நிலைத் திணைகளிலே பூந்திக்கொட்டைக் குடும்பத்தைச் சேர்ந்த சிறு மரம். இது குற்று மரமாகவும் சிறிய புதராகவும் வளர்வதுண்டு. இது கூட்டமாக உலர்ந்த இடங்களிலும் காடுகளிலும் இந்தியா நெடுகிலும் வளர்கின்றது. 8000 அடி உயரம் வரையில் இதைக் காணலாம். இதன் இலையின்மேல் நெய் பூசினது போல மெழுகுப் பொருள் உண்டு. இதன் இலைகள் ஆடுமாடு மேய்வதில்லை. மரம் கடினமானது. கடைசல் வேலைக்கும் , கைத்தடி, கருவிகளின் பிடி முதலியவை செய்யவும் உதவும். குச்சிகளை ஒடித்துக் கட்டித் துடைப்பம் போலப் பயன்படுத்துவர். இலையை எலும்பு முறிவு, அடி முதலியவற்றிற்கு வைத்துக் கட்டுவார்கள். இதன் கனி சிறகு போன்ற நீட்சி உள்ளது. அதனால், காற்றில் எளிதில் அடித்துக்கொண்டு போகப்படும். மண் கரைந்து போகாமலிருக்கவும், மணலைக் காற்று அடித்துக்கொண்டு போகாமலிருப்பதற்கும் இந்தச் செடியை நட்டுப் பயிர் செய்வார்கள். இது பெரும்பாலும் விறகாகப் பயன்படுகிறது. விராலி மலை என்பது இம் மரத்தால் பெற்ற பெயரே.

விராலிச்சம்பா *virāli-c-cambā,* பெ.(n.) சம்பா நெல்வகை (விவசா. 1); a kind of *cambā* paddy.

[விராலி + சம்பா]

விராவம் *virāvam,* பெ.(n.) ஒலி (சங்.அக.); sound.

விராவலங்காரம் *virā-v-alangāram,* பெ.(n.) கலவையணி (தண்டி. 87); a composite figure of speech in which several figures of speech are blended.

[விராவு + Skt. alankāra > த. அலங்காரம்]

விராவு[1]-தல் *virāvu-,* 5 செ.குன்றாவி. செ.கு.வி.(v.t) & (v.i) விரவு-, பார்க்க; see *viravu.* *"செம்பொன் விராவியும்" (கம்பரா. ஆற்றுப். 8).*

[விரவு → விராவு-,]

விராவு[2] *virāvu,* பெ.(n.) விராவலங்காரம் பார்க்க; see *virā-v-alaṅgāram.* *"பல்லலங் காரஞ் சேர்த்துப் பயிலுவது..... விராவாம்" (வீரசோ. அலங். 34).*

[விரவு → விராவு]

விராளி *virāḷi,* பெ.(n.) பிரிவு (வின்.); separation.

விராளிமஞ்சள் *virāḷi-mañjaḷ,* பெ.(n.) விரலிமஞ்சள் (இ.வ.) பார்க்க; see *virali-mañjaḷ.*

[விராளி + மஞ்சள்]

விரானு *virāṉu,* பெ.(n.) 1. கொடிவகை; mussell-shell creeper. 2. கொடிக் காக்கட்டான் (L); sky-blue bindweed

மறுவ. காக்கட்டான்.

விரி[1]-தல் *viri-,* 4 செ.கு.வி. (v i.) 1. பரத்தல்; to expand, to spread out *"விரிமுக விசும்பு"(சீவக. 329).* 2. மலர்தல்; to open, unfold. *"மணத்துடன் விரிந்த கைதை" (கல்லா. 2).* 3. தொக்க வேற்றுமையுருபு முதலியன வெளிப்பட விரிதல்; (Gram) to be expanded, as an elliptical sentence, to be elaborated. 4. முற்றுதல்; to become developed. 5. அவிழ்தல்; to be loosened. *"விரிந்துவீழ் கூந்தல் பாரார்" (கம்பரா. உலாவியற். 4).* 6. பிளவு கொள்ளுதல்; to split, crack, to burst asunder *'அந்தச் சுவர் விரிந்து போயிற்று'.*

தெ. விரியு; க. பிரி; ம. விரியுக; **Kod.** biri; **Tu.** biriyuni; **Pa.** virng; **Kui.** Vringa; **Kuwi.** ringali; **Kur.** *berrnā*; **Te.** ara-viri.

[விள் → விரி → விரிவு, விரிதல்] (மு.தா. 100)

விரி[2]-த்தல் *viri-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. விரியச் செய்தல்; to cause to expand, to open, unfold. 2. விளக்கியுரைத்தல்; to expound, to explain, to elaborate, as in writing or in speaking. *"நூல் விரித்துக் காட்டினும்" (நாலடி, 341).* 3. பரப்புதல்; to extend, to spread. *"பல்கதிர் விரித்தே" (புறநா. 8). "விரித்த நாணல்" (கம்பரா. கங்கை. 50).* 4. கூந்தல் முதலியவற்றை அவிழ்த்து நெகிழ விடுதல்; to unite, loosen, as the tresses of a woman. *"விரித்த கருங்குழலும்" (சிலப். 20, வெண்பா, 3).*

[விரி → விரி-,]

விரி[3] *viri,* பெ.(n.) 1. பரப்பு; expanse. 2. விரிந்த அளவு; fullness. *"சார்பெழுத்துறு விரி" (நன். 60).* 3. விரித்தல் 2 பார்க்க; see *viri-.* *"தொகைவகை விரியிற் றருகென" (நன். சிறப்புப்.).* 4. பொதிமாட்டின் மேலிடும் மெத்தைப் பை; pannier for pack-oxen, pack-saddle. 5. விரிப்பு 2 (இ.வ.) பார்க்க; see *virippu.* 6. திரை; curtain. *"விரியை யவிழ்த்துவிர'.* 7. விரியன் 1 பார்க்க; see *viriyaṉ1*, viper. *"நாகம் விரிபெடை யோடாடி விட்டற்று" (நாலடி, 240).* 8. காட்டுப் புன்னை (L.); malabar poon. 9. விரியன் 2 (L.) பார்க்க; see *viriyaṉ.*

M. viri; **Ko.** viry.

விரிக்கட்டு *viri-k-kaṭṭu,* பெ.(n.) 1. விரி 4 (வின்.) பார்க்க; see *viri-,4.* 2. சேணம் (யாழ்.அக.); saddle.

M. viri, **Ko.** viry.

[விரி + கட்டு]

விரிகண் *viri-kaṇ,* பெ.(n.) விழியை அகலச் செய்யும் கண்ணிமை நோய்வகை (வின்.); a disease of the eye-lid that causes the eye to dilate.

[விரி ²-. + கண்]

விரிகண்மணி *viri-kaṇmaṇi,* பெ.(n.) கருவிழியைப் பெருக்கச் செய்யும் மருந்து; drug that causes dilatation of the pupil of the eye.

[விரி + கண்மணி]

விரிகாங்கூலம் *viri-kāṅgūlam,* பெ.(n.) நளிநயக்கை வகை (சிலப். 3, 12, பக். 94, உரை); a hand-pose.

[விரி + காங்கூலம் = ஆட்காட்டிவிரல், பெருவிரல், நடுவிரல் ஆகியவை ஒட்டிநிற்க மோதிரவிரல் முடங்கிச் சுண்டுவிரல் நிமிர்ந்து நிற்கும் நாட்டிய நளிநயக்கை]

விரிகாசம் *virikāśam,* பெ.(n.) வெங்காரம் (சங்.அக.); borax.

விரிகி *virigi,* பெ.(n.) விரீகி (தைலவ.) பார்க்க; see *viriki.*

விரிகுடா *virikuḍā,* பெ.(n.) நிலப்பரப்புக்குள் உள் வாங்கியிருக்கும் கடற்பகுதி; bay.

கடல் அல்லது பெரிய ஏரியின் நீர், நிலப் பகுதியினுள் குடைந்து அல்லது உள்வாங்கி இருக்கும். இது குறுகலாயிருப்பின் கழி என்றும், பெரிதாயிருப்பின் குடா என்றும் பெயர் பெறும். இது பொதுவாக, நிலப்பகுதியின் தொடக்கத்தில் குறுகியும், கடல் நோக்கிச் செல்லச்செல்ல விரிந்தும் இருப்பின் விரிகுடா எனப்படும் (உ.ம்.) வங்காள விரிகுடா, பிஸ்க்கே விரிகுடா.

குடாவின் அகலம் ஏறக்குறைய சீராகவோ அல்லது கடலுடன் கலக்குமிடம் குறுகியோ இருப்பின் வளைகுடா எனப்படும் (உ.ம்.) மன்னார் வளைகுடா, மெக்சிக்கோ வளைகுடா.

விரிகுளம்பு *viri-kuḷambu,* பெ.(n.) பிளவுபட்ட காற்குளம்பு (வின்.); cloven hoof.

[விரி ¹ + குளம்பு]

விரிகொம்பன் *virikombaṉ,* பெ.(n.) பரந்த கொம்புள்ள மாடு (வின்.); ox with outspread horns.

[விரிகொம்பு → விரிகொம்பன்]

விரிகொம்பு *viri-kombu,* பெ.(n.) விலங்கின் பரந்த கொம்பு (வின்.); outspread horns.

[விரி ¹ + கொம்பு]

விரிகோணம் *viri-kōṇam,* பெ.(n.) நேர் கோணத்தைவிட அகன்ற கோணம் (இக்.வ.); (math.) obtuse angle.

[விரி ¹ + கோணம் ²]

விரிச்சி *viricci,* பெ.(n.) 1. தெய்வக்குறி; oracle. *"படையியங்கரவம் பாக்கத்து விரிச்சி" (தொல். புறத். 3).* 2. தன் னேர்ச்சியான நற்சொல்; utterance of an invisible speaker.

[விள் → விடு → விடுச்சி → விடிச்சி → விரிச்சி]

போருக்குச் செல்லுமுன் தெய்வக்குறி கேட்பது பண்டைப் படைமறவர் வழக்கம். விரிச்சி என்னும் தென் சொல்லிற்கும் வினாவைக் குறிக்கும். 'பிரச்' என்னும் வடசொல்லிற்கும், யாதொரு தொடர்புமில்லை. தெய்வக்குறி அல்லது வாய்ப்புள், மறை வெளிப்பாடாதலால் விரிச்சியெனப்பட்டது - பாவாணர் (மு.தா.56).

விரிச்சிகம் *viriccigam,* பெ.(n.) விருச்சிகம்¹ (யாழ்.அக.) பார்க்க; see *viruccigam.*

விரிச்சிகன் *viriccigan,* பெ.(n.) குறி கூறுவோன்; one who tell fortune. *"விசும்பிவர் கடவுளொப்பான் விரிச்சிக னறிந்து கூறு" (சீவக. 621)*

[விரிச்சி → விரிச்சிகன் (வே.க.150)]

விரிச்சிகை *viriccigai,* பெ.(n.) விரிசிகை² (அக.நி.) பார்க்க; see *virišigai.*

விரிச்சிநில்-தல் *viricci-nil-,* 14 செ.கு.வி. (v.i.) விரிச்சியோர்-, பார்க்க; see *viricci-y-ōr.* *"பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப" (முல்லைப். 11).*

[விரிச்சி + நில்-.]

விரிச்சியூரார் *viricciyūrār,* பெ.(n.) கடைக்கழகக் காலப் புலவர்; a sangam poet.

விரிச்சியோர்-த்தல் *viricci-y-ōr-,* 4 செ.கு.வி. (v.i.) நற்சொற் கேட்க விரும்பி நிற்றல்; to wait for the utterance of an invisible speaker. *"நெென்னீரெறிந்து விரிச்சியோர்க்கும்" (புறநா. 280).*

[விரிச்சி + ஓர்-,]

விரிசல் *virišal,* பெ.(n.) 1. பிளவு; split, crack, rent. 2. அலை; wave. *"சலங்கு விரிசலில் அகப்பட்டது" (வின்.).* 3. விரியல் 5 (தஞ்சை) பார்க்க; see *viriyal.*

[விரி → விரிசல்]

விரிசற்குளம்பு *virišar-kulambu,* பெ.(n.) விரிகுளம்பு (வின்.) பார்க்க; see *viri-kulambu.*

[விரிசல் + குளம்பு]

விரிசா *virišā,* பெ.(n.) கையாந்தகரை (சங்.அக.) பார்க்க; see *kaiyāndagarai,* a plant growing in wet places.

விரிசிகை¹ *virišigai,* பெ.(n.) விரிசா (மலை.) பார்க்க; see *virišā.*

விரிசிகை² *virišigai,* பெ.(n.) 36 கோவையுள்ள மாத ரிடையணி (திருமுரு. 16, உரை); an ornamental waist-band of 36 strings, worn by women.

விரிசு¹ *virišu,* பெ.(n.) பெரியநறுவிலி (L.); large sebesten.

ம. விரிசு.

விரிசு² *virišu,* பெ.(n.) புருசு (இ.வ.); a kind of rocket.

விரிசு³ *virišu,* பெ.(n.) அயோத்தி (நாமதீப. 506); *ayōddi.*

விரிசுழி *viri-šuli,* பெ.(n.) முதுகின் இடப்புறமுள்ள மாட்டுச் சுழிவகை; a curl on the top left side of cattle.

[விரி¹- + சுழி]

விரிஞ்சன் *viriñjan,* பெ.(n.) விரிஞ்சி ¹ (பிங்.) பார்க்க; see *viriñji.* *"வேதங்கண்ணிய பொருளெல்லாம் விரிஞ்சனே யீந்தான்" (கம்பரா. இரணிய. 1.).*

விரிஞ்சனன் *viriñšanan,* பெ.(n.) விரிஞ்சி ¹ (வின்.) பார்க்க; see *viriñši.*

விரிஞ்சி¹ *viriñji,* பெ.(n.) நான்முகன்; *brahmā.* *"விபுதாதியர் விரிஞ்சி..... சூழ்தா" (பாரத. அருச்சுனன்றவ. 113).*

விரிஞ்சி² *viriñji,* பெ.(n.) சித்திரான்னவகை (வின்.); a special preparation of rice.

உ. பிரிஞ்.

விரித்தல் *virittal,* பெ.(n.) 1. செய்யுள் விகாரம் ஒன்பதனுள் சொல்லிடையே எழுத்துத் தோன்றுவது (நன். 155); a poetic licence which consists in the augmentation of letter in the middle of a word, one of nine *šeyyuḷ-vikāram* q.v. 2. நூல் யாப்பு நான்கனுள் முன்னூலிற் தொகுத்துக் கூறப் பட்டதனை விளங்குமாறு விரித்துக் கூறுவது (தொல். பொ. 652); elaborate treatment of topics briefly summarised in a former treatise, one of four *nūl-yāppu,* q.v.

[விரி → விரித்தல்]

விரித்துரை *virittural,* பெ.(n.) அகலவுரை (பிங்.); elaborate commentary.

[விரி + உரை[6]]

விரிதூறு *viri-tūṟu,* பெ.(n.) புதர் (திவா.); thicket.

[விரி[1] + தூறு[2]]

விரிந்த *virinda,* பெ.(n.) பரப்பு மிகுதியான; abundant surface. *'விரிந்த உலகில் தெரிந்தவர் சிலர்' (பழ.).*

[விரி[1] + தூறு[2]]

விரிநிலைத்தொடர் *viri-nilai-t-toḍar,* பெ.(n.) தொகைச்சொல் முதலியவற்றை முழுநிலையில் காட்டுதல்; expand, a compound of words, etc.

'சாரைப்பாம்பு' என்பதைச் 'சாரையாகிய பாம்பு' என்று விரித்துச் சொல்லுதல்.

விரிநூல் *viri-nūl,* பெ.(n.) 1. தொகுத்துக் கூறாது விரித்துக் கூறும் நூல்; elaborate treatise. 2. மறை நூல்கள் (ஆகமங்கள்); the *āgamas. "விரிநூ லந்தணர் விழவு தொடங்க" (பரிபா. 11, 78).*

[விரி[2] + நூல்]

விரிப்பு *virippu,* பெ.(n.) 1. விரிக்கை (வின்.); spreading. 2. விரிக்குங் கம்பள முதலியன; anything spread, as cloth, carpet, table-cloth mat. 3. மலர்த்துகை; opening out. 4. பிளப்பு (வின்.); opening, parting. 5. மாட்டுக் காய்ச்சல் வகை (cm.m.248); a fever of cattle.

[விரி → விரிப்பு]

விரிபம் *viripam,* பெ.(n.) சிறு துகில் (பிங்.); small piece of cloth.

விரிபுலப்பொருட்டற்குறிப்பணி *viribula-p-poruṭṭaṟkuṟippaṇi,* பெ.(n.) ஒருவகைச் சொல்லணி; one of the thirty five rhetorical figures, a fanciful kind of metaphor.

[விரி[1] + பூ[3]]

"காமத்தீயின் புகைபோன்றிருக்கின்றது இருள்" இத் தொடரில் இருளாகிய செய்தி விரிந்து நின்றது. புகைக்கூட்டம் (செய்தி).

விரிபூ *viri-pū,* பெ.(n.) மலர்ந்த பூ; full-blown flower.

[விரி[1] + பூ[3]]

விரிபூடு *viri-pūḍu,* பெ.(n.) பற்படகம் (மலை.) பார்க்க; see *paṟ-paḍagam,* fever plant.

[விரி + பூடு]

விரிமலர் *viri-malar,* பெ.(n.) விரிபூ (வின்.) பார்க்க; see *viri-pū.*

[விரி + மலர்]

விரிமுட்டு *viri-muṭṭu,* பெ.(n.) பழைய சிற்றூர் வரி வகை (I.M.P.TP.234); an ancient village cess.

[விரி + முட்டு]

விரிமுரண் *viri-muraṇ,* பெ.(n.) ஒருவகை இசைப்பா (சிலப். 6, 35, உரை); a kind of song.

[விரி¹ + முரண்]

விரியல் *viriyal,* பெ.(n.) 1. பரப்பு (பிங்.); spread, expanse. 2. ஒளி (சூடா.); light. 3. மலர்ச்சி; blossoming. *"தாழை விரியல் வெண்டோட்டுக் கோதை மாதவி" (சிலப். 2, 17).* 4. பூமாலை; wreath of flowers. *"விளங்குகதிர்த் தொடுத்த விரியல் சூட்டி" (சிலப். 10, 133).* 5. தென்னோலையால் முடைந்த தட்டிவகை (தஞ்சை.); screen, plaited of coconut-leaves.

[விரி → விரியல்]

விரியலை *viri-y-alai,* பெ.(n.) விரியல், 5 (தஞ்சை) பார்க்க; see *viriyal.*

[விரி + அலை]

விரியறுகு *viri-y- aṟugu,* பெ.(n.) அறுகம்புல்வகை (மலை.); a kind of harialli grass.

[விரி + அறுகு]



விரியன் *viriyaṉ,* பெ.(n.) 1. ஒருவகைப் பாம்பு; viper, Daboia elegans. 2. நறுவல்லி, 1 (L.) பார்க்க; see *naṟuvalli,* common sebesten.

ம. விரியந்.

[விரி → விரியன்]



விரியாப்பு *viri-y-āppu,* பெ.(n.) களைப்பால் வரும் மயக்கம் (நெல்லை); fainting due to exhaustion.

[விரி + ஆப்பு]

விரியுருவகம் *viri-y-uruvagam,* பெ.(n.) முற்றுருவகம் (தண்டி. 35) பார்க்க; see *muṟṟuruvagam,* complete metaphor.

[விரி¹ + உருவகம்]

இது, ஆகிய முதலிய சொற்கள் வெளிப்பட்டு நிற்றலையுடையது.

விரியுரை *viri-y-urai,* பெ.(n.) விரித்துரை (வின்.) பார்க்க; see *virittuṟai.*

[விரி⁶ + உரை⁶]

விரியுவமம் *viri-y-uvamam,* பெ.(n.) பொதுத்தன்மை விரிந்து நிற்றலுடைய உவமை (தண்டி–30); a kind of simile where the common qualities of the things

compared are clearly and fully expressed, dist fr. *togai-y-uvamam.*

[விரி + உவமம்]

இது உவமானமும் உவமையுருபும் பொதுத் தன்மையும் உவமேயமும் வெளிப்படையாய் விரிந்து நிற்க வருவது. (எ-டு) *"பால்போலும் இன்சொல்".*

விரியூர்நக்கனார் *viriyūr-nakkaṉār,* பெ.(n.) கடைக் கழகக் காலப் புலவருள் ஒருவர்; a sangam poet.

இவர் பெயர் பலவாறு படிகளிற் சிதைந்து காணப் பெறுகிறது. நக்கனாரென்பது சிவபிரான் திருப்பெயர்களுள் ஒன்று. அதனை இவருக்கிட்டனர் போலும் (புறம். 332).

விரியோலை[1] *viri-y-ōlai,* பெ.(n.) 1. குருத்து விரிந்து முதிரும் பனையோலை; fully developed leaf of the palmyra tree. 2. விரியல் 5 (வின்.) பார்க்க; see viri-yal. 3. ஓலைப்பாய் (நாஞ்.); palm-leaf mat.

[விரி + ஓலை]



விரியோலை[2] *viri-y-ōlai,* பெ.(n.) தாழங்குடை; ōla umbrella. *"வர்ஷாதப பரிஹாரமான விரியோலையும்" (திவ். பெரியாழ். 3, 3, 4, வ்யா. பக். 569).*

[விரி + ஓலை]



விரிவாக *virivāga,* வி.எ.(adv.) இந்தச் செய்தி அந்த நூலில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது; in detail, elaborately.

[விரிவு + ஆ-,]

விரிவுநிகண்டு *virivu-nikaṇḍu,* பெ.(n.) நிகண்டு வகைநூல்; a kind of *nikaṇḍu.*

சூடாமணி நிகண்டை அடிப்படையாகக் கொண்டு அதன்படியே எதுகை முறையில் ஆசிரியமண்டிலப்பாவால் இயற்றப்பட்டுள்ளது. சூடாமணி நிகண்டிலுள்ள பதினோரந் தொகுதியிற் கண்ட சொற்களுடன் பல உலகவழக்குச் சொற்களையும் சேர்த்துக்கூட்டி மிக விரிவாக அமைத்துள்ளார் இந்நூலாசிரியர். இந்நூலின் இறுதிப் பகுதி பலவாறு சிதைந்துள்ளது. பல செய்யுள்கள் எண்ணிடப்படாமல் உள்ளன. 1100 செய்யுட்களுக்கு மேல் இருக்கலாம்; தெளிவாகத் தெரிவன 1036 செய்யுள்கள்.

இந்நூலாசிரியர் திருநெல்வேலி மாவட்டத் திலுள்ள வீரவநல்லூரார், நா. அருணாசல நாவலர் என்னும் பெயரினர். நூலாசிரியரே நூலுக்கு உரையும் இயற்றியுள்ளார். இவர் சைவர். இந்நூலின் காப்புச் செய்யுளில் இந்நூலைப் பற்றி, *"பொன் பொலி வீரை வேணிப் பூமிநாதன் தன் தாசன் - முன்புறுநிகண்டோடு ஏனை முதுமொழிப் பொருளனேகம் - இன்புறும் எதுகையாக இயற்றுமிந் நிகண்டை"* என்னுங் குறிப்புள்ளது. திருநெல்வேலிப் பக்க வழக்குச் சொற்கள் இதன்கண் மிகுதியாக உள்ளன.

[விரிவு + ஆ-,]

விரிவுரை *virivurai,* பெ.(n.) 1. நூலின் விரிவான உரை (நன். மயிலை. அரும்.); elaborate commentary. 2. சொற்பொழிவு (இக்.வ.); lecture.

[விரிவு + உரை[5]]

விரீஇ *virii,* பெ.(n.) விரீகி, 1 பார்க்க; see *virigi.* *"நங்கைமார் வீரிஇ யற்றவர்" (சீவக. 89).*

விரீகி *virigi,* பெ.(n.) 1. நெல் (திவா.) (சீவக. 89, உரை); paddy. 2. அரிசி (சங்.அக.); rice. 3. காரேலம் (யாழ்.அக.); a kind of cardamom.

விருக்கு *virukku,* பெ.(n.) சாதிலிங்கம் (சங்.அக.); vermilion.

விருகம் *virugam,* பெ.(n.) செந்நாய்; a kind of wild dog. *"மையார் விருகந் துருவி மறைந்தே" (கம்பரா. நகர்நீங்கு. 83) (பிங்.).*

விருத்தூண் *viruttūṇ,* பெ.(n.) புத்துணவு (இலக்.அக.); fresh food.

[விருந்து + ஊண்]

விருதம் *virudam,* பெ.(n.) வெள்ளெருக்கு (சங்.அக.); white madar.

[விருத்தம் → விருதம்]

விருதர் *virudar,* பெ.(n.) வீரர்; warriors. *"வாளி கொண்ட விருதர்" (பாரத. வாரணா. 76).*

விருதா[1] *virudā,* பெ.(n.) வீண்; uselessness, fruitlessness, that which is vain or profitless.

விருதா[2] *virudā,* பெ.(n.) வீணாய்; uselessly. *"விருதாவலைந் துழலு மடியேன்" (திருப்பு. 102).*

விருதாவளி *virudāvaḷi,* பெ.(n.) அரசர் முதலியோர் பெறும் பட்டவரிசை; detailed statement of titles, as for kings ehe.

[விருது + ஆவளி]

விருதாவன் *virudāvaṉ,* பெ.(n.) மக்கட்பதடி; good for - nothing fellow, useless fellow, lazy person. *"போக்கிடமற்ற விருதாவனை ஞானிகள் போற்றுத லற்றது" (திருப்பு. 266).*

[விருதா → விருதாவன்]

விருது[1] *virudu,* பெ.(n.) 1. பட்டம்; title. *"தலம்புகழ் விருது" (திருவாலவா. 46, 9).* 2. கொடி; banner. *"கயல் விருதனங்கன்" (தனிப்பா. i, 384, 33).* 3. வெற்றிச் சின்னம்; trophy, badge of victory. *"பருதி..... விருது மேற்கொண்டுலாம் வேனில்" (கம்பரா. தாடகை. 5).* 4. குலவழி (வின்.); pedigree, genealogy. *'விருதுக்கோ வேட்டை யாடுவது?' (பழ.). 'விருது கூறிவந்து செடியில் நுழையலாமா?' (பழ.).*

விருது

வெல் – (வில்) – (விர்) – (வீறு) = வெற்றி *"வீறு பெற வோச்சி" (மதுரைக். 54)*

விர் → விருது. 1. வெற்றிப்பட்டம்.

"தலம் புகழ் விருது" (திருவாலவா. 49,9).

2. வெற்றிக் கொடி. *"கயல்விரு தனங்கன்" (தனிப்பாடல்)*

3. வெற்றிச் சின்னம். *"பருதி விருதுமேற் கொண்டுலாம் வேனில்" (கம்பரா. தாடகை.5)*

வடவர் காட்டும் மூலம்:

வி–ருத் (d) = அழு, கரை, ஏங்கு, புலம்பு, துயர் கொண்டாடு. விருத = புகழ்ச்சிச் செய்யுள். பாடாண் பாட்டு, ஏத்துரை.

இரங்கற் செய்யுளாகிய கையறு நிலையில் ஒரு தலைவனை அல்லது வள்ளலைப் புகழ்ந்து பாடுவது வழக்கமேனும் அழுகைக் கருத்தில் வெற்றிக் கருத்துத் தோன்றுமா? என்பதை அறிஞர் ஆய்ந்து காண்க எனப் பாவாணர் (வ.மொ.வ.92) கூறுகிறார்.

தெ., க. பிருது; **Ma.** virutu; **Tu.** birdu; **Te.** birudamu.

விருது[2] *virudu,* பெ.(n.) நோன்பு (வின்.); religious vow.

விருதுக்கொடி *virudu-k-kodi,* பெ.(n.) பிறர்க்கில்லாச் சிறப்பை அறிவித்தற்குரிய கொடி; distinguishing ensign or banner.

[விருது + கொடி]

விருதுகட்டு-தல் *virudu-kattu-,* 5 செ.கு.வி. (v.i.) நினைப்பளவுக் கொள்ளுதல்; to determine, resolve firmly, as on a course of action. *"அட்டசித்தியு நலன்பருக்கருள விருதுகட்டியபொ னன்னமே" (தாயு. அகிலா. 1).*

[விருது + கட்டு-,]

விருதுகாளம் *virudu-kālam,* பெ.(n.) வெற்றிக் குறியாகிய காளம் (வின்.); trumpet of victory.

[விருது + காளம்]

விருதெழுத்து *virudeluttu,* பெ.(n.) விருதாகக் கொள்ளும் மொழி (பாண்டிச்.); motto.

மறுவ. காரணமொழி.

[விருது + எழுத்து]

விருந்தம்[1] *virundam,* பெ.(n.) 1. பூ பழம் முதலியவற்றின் காம்பு (தைலவ.); footstalk of leaves, flowers or fruits. 2. வேம்பு (சங்.அக.); margosa. 3. பானை முதலியவற்றை வைக்கும் பாதம் (யாழ்.அக.); stand for keeping pots, etc.

விருந்தம்[2] *virundam,* பெ.(n.) 1. உறவின் முறை (சூடா.); circle of relatives. *'அவர் விருந்தங்களுக்கும்'* (E.I.XXI.188). 2. விலங்கின் கூட்டம் (வின்.); herd, flock. 3. குவியல் (யாழ்.அக.); heap.

விருந்தம்[3] *virundam,* பெ.(n.) விருந்தனை (சூடா.) பார்க்க; see *virundanai.*

[விருந்து → விருந்தம் (வே.க.120)]

விருந்தமர்க்களம் *virundamarkkalam,* பெ.(n.) விருந்தாரவாரம் (வின்.); stir and bustle of a feast.

[விருந்து + அமர்க்களம்]

விருந்தர் *virundar,* பெ.(n.) விருந்தினன் பார்க்க; see *virundinan.*

[விருந்து → விருந்தர்]

விருந்தனை *virundanai,* பெ.(n.) விருந் தோம்பும் மனைவி (பிங்.); wife.

[விருந்து → விருந்தனை (வே.க.120)]

விருந்தாகம் *virundāgam,* பெ.(n.) சேம்பு (மூ.அ.); Indian kales.

விருந்தாட்டு *virundāttu,* பெ.(n.) 1. விருந்தளிக்கை; giving feasts, feasting. 2. ஆட்டைத் திருவிழா (சிலப். 6, 4, உரை); annual festival.

[விருந்து + ஆட்டு = பெயரீறு]

விருந்தாடி *virundādi,* பெ.(n.) விருந்தாளி; guest.

[விருந்தாடு → விருந்தாடி] (வே.க.120)

விருந்தாடு-தல் *virundādu-,* 5 செ.கு.வி. (v.i.) ஒரு வீட்டிற்கு விருந்தாகப் போதல் (சென்னை); to go as a guest.

[விருந்து + ஆடு-,]

விருந்தாரம் *virundāram,* பெ.(n.) 1. அழகு; beauty. 2. மேன்மை; excellence.

[விருந்து + ஆரம்]

விருந்தாளி *virundāḷi,* பெ.(n.) விருந்தினன் (வின்.); guest.

[விருந்து + ஆளி ⁷]

விருந்தாற்றுதல் *virundāṟṟu-,* 9 செ.கு.வி. (v.i.) விருந்திடு-, (ஐங்குறு. 1, உரை) பார்க்க; see *virundiḍu.*

[விருந்து + ஆற்று-,]

விருந்திடு-தல் *virundiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) நண்பர்க்கு உணவளித்து பணிவிடை செய்தல்; to give a feast, to show hospitality.

[விருந்து + இடு-,]

விருந்தினன் *virundiṉaṉ,* பெ.(n.) 1. புதியவன்; newcomer. *"விருந்தினனிவனு மன்றி" (சீவக. 1647).* 2. விருந்தினர்; guest. *"தான்போய் விருந்தினனாதலே நன்று" (நாலடி, 286).*

[விருந்து → விருந்தினன்]

விருந்து *virundu,* பெ.(n.) 1. விருந்தினர் முதலியோர்க்கு உணவளித்துப் பணிவிடை செய்தல்; feast, banquet *"யாதுசெய் வேன்கொல் விருந்து" (குறள், 1211).* 2. விருந்தினர்; guest. *"விருந்துகண் டொளிக்கும் திருந்தா வாழ்க்கை" (புறநா. 266).* 3. புதியவன்; newcomer. *"விருந்தாயடை குறுவார் விண்" (பு.வெ. 3, 12).* 4. புதுமை; newness, freshness. *"விருந்து புனலயர" (பரிபா. 6, 40).* 5. நூலுக்குரிய எண்வகை வனப்புக்களுளொன்று (தொல். பொ. 551); poetic composition in a new style. *'விருந்திட்டுப் பகை தேடினாற் போல' (பழ.). 'விருந்திலோர்க்கு இல்லைப் பொருந்திய ஒழுக்கம்' (பழ.). 'விருந்தில்லாச் சோறு மருந்து' (பழ.). 'விருந்தைப் பண்ணிப் பொருந்தப் பண்ணு' (பழ.). 'விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்கு' (பழ.).*

தெ. விந்து; ம. விருந்நு; **Ka.** birdu; **Tu.** binne; **Go**. *wartōl*; **Kui**. breenju.

[விள் → விர் → விரு → விருந்து (வே.க.120)]

விருந்துக்கூடம் *virundu-k-kūḍam,* பெ.(n.) விருந்தினரை வரவேற்கும் மாளிகைப் பகுதி (கட்டட. நாமா. 1); banqueting hall.

[விருந்து + கூடம்]

விருந்துசொல்(லு)-தல் *virundu-šol-,* 8 செ.குன்றாவி. (v.t.) விருந்துக்கழைத்தல்; to invite to a feast.

[விருந்து + சொல்-,]

விருந்துவை-த்தல் *virundu-vai-,* 4 செ.கு.வி. (v.i.) விருந்தூண் அளித்தல் (இ.வ); to give a feast.

[விருந்து + வை-,]

விருந்தூட்டு *virundūṭṭu,* பெ.(n.) விருந்தினருக்கு உணவளிக்கை; feeding of guests. *"இவ்விருந் தூட்டு முட்டில்"* (S.I.I.iii.13).

[விருந்து + ஊட்டு]

விருந்தை *virundai,* பெ.(n.) துளசி (மூ.அ.); sacred basil.

விருந்தோம்பல் *virundōmbal,* பெ.(n.) புதிதாக வருபவரை உண்டி முதலியவற்றால் வரவேற்றல் (குறள்.); welcoming and

entertaining guests. *"இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள், 81).*

[விருந்து + ஓம்பு → ஓம்பல்]

விருந்தோர் *virundōr,* பெ.(n.) 1. புதியவர் (சூடா.); newcomers. 2. விருந்தினர்; guests.

[விருந்து → விருந்தோர்]

விருப்பம் *viruppam,* பெ.(n.) 1. விருப்பம் (சூடா.); desire, liking. 2. அன்பு; love, affection. 3. பற்று (பிங்.); attachment. *'விருப்பத்தினால் ஆகாதது வீம்பினால் ஆகுமா?' (பழ.).*

ம. விரும்புக.

[விரும்பு → விருப்பு → விருப்பம் (வே.க.120)]

விருப்பன் *viruppan,* பெ.(n.) 1. விருப்ப முள்ளவன்; one who has desires. 2. அன்புள்ளவன்; one who likes, lover. *"திருப்பனையூரில் விருப்ப னாகியும்" (திருவாச. 2, 87).*

[விருப்பு → விருப்பம் →விருப்பன்]

விருப்பிள-த்தல் *viruppiḷa-,* 3 செ.கு.வி. (v.i.) நிலம் வெடித்தல்; to be split in the land.

விருப்பு *viruppu,* பெ.(n.) விருப்பம் பார்க்க; see *viruppam.* *"விருப்பறாச் சுற்றம்" (குறள், 522).*

[விரும்பு → விருப்பு] (வே.க.100)

விருப்புவெறுப்பு *viruppu-veṟuppu,* பெ.(n.) வேண்டுதல் வேண்டாமை; desire and aversion, like and dislike. *"வேண்டுதல் வேண்டாமையிலான்" (குறள், 4).*

[விருப்பு + வெறுப்பு]

விருபன் *viruban,* பெ.(n.) வெள்ளெலி (சது.); a kind of rat.

[இரும்பன் → விருபன்]

விரும்பன் *virumban,* பெ.(n.) விருப்பன் பார்க்க; see *viruppan.* *"துறையூர் விரும்பா" (தேவா. 1005, 4).*

[விரும்பு → விரும்பன்]

விரும்பார் *virumbār,* பெ.(n.) பகைவர்; enemies. *"விரும்பா ரமரிடை வெல்போர் வழுதி" (பு.வெ. 10, 2, கொளு.).*

[விரும்பு + ஆ (எதிர்மறை) + ஆர்]

விரும்பு-தல் *virumbu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. விருப்பப்படுதல்; to wish, long for, to covet, to love, like. *"நனிவிரும்பு தாளாண்மை நீருமமிழ் தாய்விடும்" (நாலடி, 200).* 2. அழுத்தமாய்க் கருதுதல் (வின்.); to think intensely of.

Mu. virumpuka.

[விள் → விர் → விரு → விரும்பு-, (வே.க.120)]

விருமதரு *viruma-taru,* பெ.(n.) மரவகை (பதார்த்த. 212); battle of plassey tree.

மறுவ. புரசு.

விருமமூலி *viruma-mūli,* பெ.(n.) பூடுவகை (சீவக. 2703, உரை); a prostrate herb.

விருவிரு-த்தல் *viruviru-,* 4 செ.கு.வி. (v.i.) 1. கடுத்தல்; to tingle with pain. 2. காமம் முதலியவற்றால் உடலூருதல்; to itch with sensual desire. *"மோகமயக்கத்தான் மேல் விரு விருக்கும்"* (தனிப்பா. i, 329, 31). 3. உறைப்பாயிருத்தல்; to be peppery in

taste. 4. சினத்தாற் பரபரத்தல்; to get flurried due to angry mood. 5. விரைதல்; to be in a hurry.

விருவிருப்பு *viruviruppu,* பெ.(n.) 1. கடுப்பு; tingling sensation. 2. காமம் முதலிய வற்றால் உடலூருகை; itching with sensual desire. 3. உறைப்பு; pungent, peppery taste. 4. சினத்தாலுண்டாம் பரபரப்பு; hurry activity due to angry. 5. விரைவு; haste, hurry.

[விருவிரு-, → விருவிருப்பு]

விருவிரெனல் *viruvirenal,* பெ.(n.) 1. கடுப்புக் குறிப்பு; tingling sensation. 2. காமம் முதலியவற்றால் உடலூருதற் குறிப்பு; itching with sensual desire. 3. உறைப்பாயிருத்தற் குறிப்பு; being peppery in taste. 4. சினத்தாலுண்டாகும் பரபரப்புக் குறிப்பு; being in a flurry owing to anger. 5. விரைவுக் குறிப்பு; hurrying.

[விருவிரு + எனல்]

விருவு *viruvu,* பெ.(n.) நிலச் சிறுவெடிப்பு; a crack in the earth.

[விள் → விரு → விருவு] (மு.தா.100)

விருவெட்டு *viru-vettu,* பெ.(n.) கருங்காரை வகை (L.); black honey thorn.

மறுவ. நக்கணி.

விருளை *virulai,* பெ.(n.) கடிவாளப் பூண் (பிங்.); ornamental knob or ring of a bridle.

விரை[1]-த்தல் *virai-,* 11 செ.கு.வி. (v.i.) விறை[2] பார்க்க; see *virai.*

விரை[2]-தல் *virai-,* 12 செ.கு.வி. (v.i.) 1. வேகமாதல்; to be speedy, swift, rapid. *"தன்னை வியந்தான் விரைந்து கெடும்" (குறள்.474).* 2. பதைத்தல்; to hurry, hasten. 3. சினங்கொள்ளுதல் (வின்.); to be importunate, intent, eager. 4. மனங் கலங்குதல்; to be perturbed, disturbed in mind. *"விரையாது நின்றான்" (சீவக. 513).*

Ma. Virayuka; **To.** Pern; **Ka.** beragu; **Kod.** beria; **Tu.** birsu.

விரை[3] *virai,* பெ.(n.) 1. மணம் (சூடா.); odour, fragrance. *"விரைசெறி கமலப் போதில் வீற்றிருந் தருளுஞ் செல்வன்" (கந்தபு. திருவவ. 100).* 2. கோட்டம், துருக்கம், தகரம், அகில், சந்தனம் என்ற ஐவகை நறுமணப் பண்டம்; perfumes, five in number, viz. *kōttam, turukkam, tagaram, agil, šandanam. "பத்துத் துவரினு மைந்து விரையினும்" (சிலப். 6, 79).* 3. நறும்புகை (சூடா.); incense. 4. கலவைச் சாந்து (சூடா.); sandal mized with perfumes. 5. பூந்தேன்; honey of flowers. *"விரைததும்பு பூம்பிண்டி" (சீவக. 1467).* 6. மலர்; flower, blossom. *"விரையுறு கடியின்" (ஞானா. 57, 43.).*

விரை[4]-த்தல் *virai-,* 11 செ.கு.வி. (v.i.) மணங்கமழ்தல்; to be fragrant, to emit perfumes. *"விரைக்குந் தீம்புகை" (காஞ்சிப்பு. இருபத். 182).*

விரை[5] *virai,* பெ.(n.) 1. விதை; seed, as of plants. *"விரை வித்தாமலே விளையும்" (வரத. பாகவத. நாரசிங்க. 105).* 2. வித்து மூலம் (அண்ட பீசம்); testicle. *'விரை ஒன்று போடச் சுரை ஒன்று முளைக்குமா?' (பழ.)*

ம. விர.

[விதை → விரை]

விரை⁶–த்தல் *virai,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. விதைத்தல்; to sow. 2. பரவச் செய்தல்; to spread abroad, diseminate. *'செய்தியை ஊரெங்கும் விரைத்தான்'.*

ம. விர.

[விதை → விரை]

விரைக்கரும்பு *virai-k-karumbu,* பெ.(n.) நடுதற்குரிய கரும்பு; sugarcane for planting.

[விதை → விரை + கரும்பு]

விரைக்காய் *virai-k-kāi,* பெ.(n.) 1. கறிக்கு உதவாது விதைக்குப் பயன்படும் முற்றற்காய்; fruit set apart for obtaining seeds. 2. விரை⁵, 2 பார்க்க; see *virai.*

[விரை + காய்]

விரைக்குவிடு–தல் *viraikku-viḍu-,* 18 செ. குன்றாவி. (v.t.) விரைக்குதவுமாறு கொடி, மரங்களிற் காய்களை முற்றவிடுதல்; to allow set apart berries, fruits, etc. to ripen on the plant itself for obtaining seeds.

[விதைக்கு → விரைக்கு + விடு–,]

விரைக்கொட்டை *virai-k-koṭṭai,* பெ.(n.) 1. நிலக்கடலை மணி; groundnut. 2. விரை⁵, 2 பார்க்க; see *virai.*

[விதைக்கொட்டை → விரைக்கொட்டை]

விரைக்கோட்டை *virai-k-kōṭṭai,* பெ.(n.) 1. ஒரு கோட்டை விதை விதைத்தற்குரிய நிலவளவு (C.G.); extent of land computed by one *kōṭṭai* of seed required to be sown in it = 1.62 acres. 2. விதைப் பதற்குரிய தவசத்தை உள்ளடக்கிச் சுற்றிக்கட்டிய வைக்கோற்கட்டு (திவ். திருமாலை, 30, வ்யா.); bundle of straw containing seed-grains of paddy. 3. விதைப்பை; scrotum.

[விதைக்கோட்டை → விரைக்கோட்டை]

விரைகால் *virai-kāl,* பெ.(n.) விதைத்தற்குரிய நிலம்; land fit for sowing.

[விதை → விரை + கால்]

விரைசொல் *virai-šol,* பெ.(n.) விரைவைக் குறிக்கும் அடுக்குச் சொல்; word repeated to indicate haste. *"விரைசொல் லடுக்கே மூன்று வரம்பாகும்" (தொல். சொல். 424).*

[விரை² + சொல்]

விரைதெளி¹–த்தல் *virai-teḷi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. நாற்றுக்காக விதையிடுதல்; to sow seeds for raising seedlings. 2. அறுகும் அரிசியும் இடுதல்; to sprinkle a mixture of rice and cynodon grass, as on a newly married couple. *"மங்கல வச்சுதந் தெளித்து ..... வாழ்த்தினர்" (சீவக. 2411).*

[விதை → விரை + தெளி–,]

விரைதெளி² *virai-teḷi,* பெ.(n.) விதை முளைக்க வித்திடுகை (இ.வ); sowing of seeds.

[விதை → விரை + தெளி]

விரைநாசம் *virai-nāšam,* பெ.(n.) பயிர் முற்றும் அழிகை; complete or total ruin of crops.

மறுவ. விதைப்பழுது, பதர்.

[விரை + நாசம்]

விரைநோய் *virai-nōy,* பெ.(n.) விரைவாதம் (பைஷஜ.) பார்க்க; see *virai-vādam.*

[விரை + நோய்]

விரைப்பண்டம் *virai-p-paṇḍam,* பெ.(n.) நறுமணப்பண்டம்; aromatic substance.

[விரை[3] + பண்டம் [1]]

விரைப்பாடு *virai-p-pāḍu,* பெ.(n.) விதைப்பாடு பார்க்க; see *vidai-p-pāḍu.*

[விரை[5] + படு → பாடு]

விரைப்பு[1] *viraippu,* பெ.(n.) விதைப்பு (வின்.) பார்க்க; see *vidaippu.*

[விரை → விரைப்பு]

விரைப்பு[2] *viraippu,* பெ.(n.) விறைப்பு பார்க்க; see *viṟaippu.*

[விரை → விரைப்பு]

விரைபோடு-தல் *virai-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. விதையிடுதல்; to sow seed. 2. அலுவல் தொடங்குதல்; to make a beginning, to commence.

மறுவ. வித்திடு-தல்

[விரை + போடு-,]

விரைமுந்திரிகை *virai-mundirigai,* பெ.(n.) மரவகை; cashew tree.

[விரை + முந்திரிகை]

விரையடி[1]-த்தல் *virai-y-aḍi-,* 4 செ. குன்றாவி.(v.t.) காளை முதலியவற்றின் விதைப் பையிலுள்ள விதையை நசுக்கி ஆண்மை இல்லாமற் செய்தல்; to castrate.

மறுவ. விதைவாங்குதல்

[விதை → விரை + அடி-,]

விரையடி[2] *virai-y-aḍi,* பெ.(n.) 1. விதைப் பாடு பார்க்க; see *vidai-p-pāḍu.* 2. நில வளவு வகை (Rd.); a measure of land = 1/8 acre.

[விரை + அடி]

விரையாக்கலி *viraiyākkali,* பெ.(n.) 1. சிவபிரானது திருவாணை; the sacred command of *śiva.* *"விரையாக்கலி யெனு மாணையும்" (பதினொ. கோயி. 4).* *"எத்திக்கினும் விரையாக்கலி யிவர்வித்து" (தணிகைப்பு. பிரம. 41).* 2. சிவபிரானை முன்னிட்டுச் செய்யும் ஆணை வகை. (பெரியபு. கோப்புலி. 4); an oath calling on *śiva* to witness.

விரையிடு-தல் *virai-y-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) விரைபோடு-, பார்க்க; see *virai-pōḍu.*

[விதை → விரை + இடு-,]

விரையெடு-த்தல் *virai-y-eḍu-,* 4 செ. குன்றாவி.(v.t.) விதையடி-, பார்க்க; see *vidai-y-aḍi.*

[விதை → விரை + எடு-,]

விரையெடுத்தவன் *virai-y-eḍuttavaṉ,* பெ.(n.) 1. விரையெடுக்கப்பட்டவன்; eunuch, castrated man. 2. வலியும் சுறுசுறுப்பு முள்ளவன்; strong and active man. 3. முதிர்ந்த பட்டறிவுள்ளவன்; man of ripe experience.

[விதை → விரை + எடுத்தவன்]

விரைவழி-த்தல் *virai-vaḻi-,* 4 செ.கு.வி. (v.i.) நறுமணப்பண்டம் பூசுதல்; to apply aromatic unguents. *"விரைவழித் திளைய ரெல்லாம்" (சீவக. 699).*

*[விரை + வழி-,]

விரைவாங்கு-தல் *virai-vāṅgu-,* 5 செ. குன்றாவி.(v.t.) விதையடி; to castrate.

[விதை → விரை + வாங்கு-,]

விரைவாதம் *virai-vādam,* பெ.(n.) 1. குடற்சரிவு; rupture, scrotal hernia. 2. விதைப்பெருக்கம் (பைஷஜ. 171); swelled, testicle, orchitis. 3. நீர்ச்சூலை; dropsy of the testicle, hydrocele. 4. விதை நோய் வகை; inflammation of the epididymis edidiymitis.

மறுவ. விரைவீக்கம்.

[விதை → விரை+வாதம்]

Skt. *vādam* > த. வாதம்.

விரைவிடு-தல் *virai-viḍu-,* 18 செ.குன்றாவி. (v.t.) விரைக்குவிடு-, பார்க்க; see *viraikku-viḍu-.*

[விரை + விடு-,]

விரைவித்து *virai-vittu,* பெ.(n.) விதைப்பதற்கென வைத்துள்ள வித்து; seed-grain.

மறுவ. விதைப்பண்டம்.

[விதை → விரை + வித்து]

விரைவினர் *viraivinar,* பெ.(n.) செயன் முனைப்புடையவர்; persons swift in action. *"வெல்வான் விரைவினர் துவன்றி" (சீவக. 615).*

[விரை → விரைவு + இன் + அர். 'இன்' சாரியை, 'அர்' பலர்பால் வினைமுற்று ஈறு]

விரைவீக்கம் *virai-vīkkam,* பெ.(n.) விரைவாதம் பார்க்க; see *virai-vādam.*

[விதை → விரை + வீக்கம்]

விரைவு *viraivu,* பெ.(n.) 1. சடுதி (வேகம்); swiftness, celerity, despatch. *"விரைவதின் வருகென" (பெருங். இலாவாண 5, 4).* 2. வெம்மை (அக.நி.); heat, warmth. 3. வேண்டுகை (அக.நி.); request. 4. உதவி (அரு.நி.); hospitality.

[விரை → விரைவு]

விரைவை-த்தல் *virai-vai-,* 4 செ.கு.வி. (v.i.) விதைப்பதற்கு நெல்லை அணியப்படுத்துதல்; to prepare paddy seeds for sowing.

[விதை → விரை⁵ + வை-,]

வில்¹-தல்(விற்றல்) *vil-,* 10 செ.குன்றாவி. (v.t.) 1. விலை செய்தல்; to sell, put on sale. *"விற்றுக்கோட்டக்க துடைத்து" (குறள், 220).*

தெ. வில்சு; க. பில்; ம. வில்; **To.** pil; **Kod.** bele; **Tu.** *bile*; **Te.** viluva.

வில்²-தல் *vil-,* 4 செ.கு.வி.(v.i.) விற்கப் படுதல்; to be sold. *"அது என்ன விலைக்கு விற்கிறது" (வின்.).*

To. pil; **Ka.** bill, bili; **Kod.** bele; **Tu.** *bilē*; **Te.** vil(u)cu, viluva,vela.

வில்³ *vil,* பெ.(n.) வில் வடிவிலுள்ள வாச்சியவகை; a bow-like musical instrument. *"பாடுகின்ற வில்லா முரசாம்" (தெய்வச். விறலி விடு. 397).*

வில்⁴ *vil,* பெ.(n.) 1. அம்பு எய்தற்குரிய கருவி; bow. *"வில்லும் வேலும்" (தொல். பொ. 638).* 2. வில்லின் நாண் (இலக். வி. 608, உரை, பக். 574); string of the bow. 3. விற்கிடை பார்க்க; see *viṟ-kiḍai.* *"நொடிப்பின் மாத்திரை நூற்றுவில் லேகுவ" (சீவக. 1773).* 4. வானவில்; rainbow. *"வரைசேர்பு வில்கிடந்தன்ன கொடிய" (நெடுநல். 109).*

5. மூலநாள் (பிங்.); the 19th naksatra. 6. ஒளி; light brilliance. *"தண்ணாரம் வில்விலங்க" (சீவக. 2959). 'வில்லடியால் சாகாதது கல்லடியால் சாகுமா?' (பழ.). 'வில்லம்போ சொல்லம்போ' (பழ.). 'வில் இல்லாதவன் அம்பு தேடுவானேன்' (பழ.). 'வில்லுக் குனியாது எய்தால், விலகாது எதிர்த்த பகை' (பழ.).*

தெ. வில்லு; க. பில்; ம. வில்; **Kod.** billi; **Tu.** billu; **Kol.** vil; **Pa.** vil; **Ga.** vind; **Go.** vil; **Konḍa.** vil, **Kui**. viḍu; **Kuwi.** *vellū*; **Br.** bil; **Ko.** vily.

வில்கண்டம் *vil-kaṇḍam,* பெ.(n.) 1. வில்லண்டம் 1, 2 பார்க்க; see *villaṇḍam.* 2. முட்டுப்பாடு; obstruction.

[வில் + கண்டம்]

வில்சுருள் *vil-śuruḷ,* பெ.(n.) வண்டிகளில் அதிர்ச்சியைத் தாங்கும் அமைப்பு; spring.

[வில் + சுருள்]

கட்டை வண்டியில் செல்வதை விட வில் வண்டியில் செல்லுவது ஏந்தாக இருக்கும். அதற்குக் காரணம் எளிதாக விளங்கும். சக்கரங்கள் தரையில் உருளும் போது ஏற்படுகின்ற அதிர்ச்சிகளைப் பெரும்பாலும் வில் என்ற உறுப்புத் தாங்கிக் கொள்கிறது. மோட்டார் வண்டி, ரெயில் வண்டி முதலியவற்றிலும் வில் உண்டு. அழுத்தியோ அல்லது இழுத்தோ விட்டுவிட்டால் முன் இருந்த நிலையை அடையும் தன்மையுள்ள உலோகத்தகடு அல்லது கம்பிச்சுருள் வில் அல்லது வில் சுருள் எனப்படும். எஃகு, வெண்கலம், இரும்பு, உலோகக் கலவைகளுள் சில ஆகியவை வில் சுருள் செய்ய பயன்படுபவை. மீள் சக்தி (Elasticity) உடைய பொருள்களே வில் சுருள் செய்ய ஏற்றவை.

கம்பியைச் சுருளாக்கி, ஆற்றிப் பதனிட்டு (Annel) அதே நிலையில் கடினப்படுத்தி வில் சுருள் செய்யப்படுகிறது.

வில்மாடம் *vil-māḍam,* பெ.(n.) விற்போல் வளைந்த கட்டடப் பகுதி; vault.

[வில் + மாடம்]

வில்யாழ் *vil-yāḻ,* பெ.(n.) வில்வடிவமான யாழ்வகை; a kind of bow-shaped lute. *"வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சி" (பெரும்பாண். 182).*

[வில் + யாழ்]



வில்லகவிரல் *vil-l-aga-viral,* பெ.(n.) விற்பிடிப்பில் இணைந்து செறிந்த விரல்; the finger that holds the bow, as pressed tightly. *"வில்லகவிரலிற் பொருந்தி" (குறுந். 370).*

[வில் + அகம் + விரல்]

வில்லகவிரலினார் *villaga-viraliṉār,* பெ.(n.) கடைக்கழகக்காலப் புலவர்களில் ஒருவர்; a sangam poet.

கை நெகிழாமல் தழுவிய நிலைக்கு வில்லைப் பிடித்த விரல்களை உவமையாக இவர் கூறியிருக்கும் சிறப்பினால் வில்லக விரலினார் என்னும் பெயர் பெற்றார். (குறுந். 370) இவ்வுவமை, "வீட்டிடந்தோறும் வில்லக விரல்போல் பொருந்தி நின்று ஒருங்கெதிர் கொள்கென்று" (சீவக. 2110) என்று திருத்தக்க தேவராலும் எடுத்தாளப்பெற்றது.

வில்லங்கக்காரன் *villaṅga-k-kāraṉ,* பெ.(n.) வழக்காடுபவன்; one who raises a dispute.

[வில்லங்கம் + காரன்.]

வில்லங்கசுத்தி *villaṅga-šutti,* பெ.(n.) 1. அடைமானம் முதலிய பந்தகம் இன்மை; absence of charge or encumbrnce on properties. 2. சொத்துரிமையில் குற்றமின்மை; absence of defect in tittle to properties.

*[வில்லங்கம் + **Skt.** suddhi > த. சுத்தி]*

வில்லங்கப்படு-தல் *villaṅga-p-paḍu,* 20 செ.கு.வி. (v.i.) 1. தொந்தரவுக்குள்ளாதல்; to be troubled. 2. அடைமானம் முதலிய பந்தகத்திற்கு உட்படுதல்; to be subject to a charge or encumbrance, as property.

[வில்லங்கம் + படு-,]

வில்லங்கம் *villaṅgam,* பெ.(n.) 1. தடை; bar, impediment, difficulty. 2. துன்பம் (தனிப்பா. 1, 387, 39); trouble distress. 3. அடைமானம் முதலிய பந்தகம்; charge or encumbrance on properties. 4. சொத்துரிமையிலுள்ள குற்றம்; defect in title to properties. 5. சிக்கல்; contest, dispute, claim. 6. வில்கண்டம் (யாழ்.அக.) பார்க்க; see *vilkaṇḍam.*

Ma. villrikam; **Ka.** vilaga.

[வில் + அடி]

வில்லடி *villaḍi,* பெ.(n.) ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்கின் குறிப்பு (C.G.); bill of landing.

[வில் + அடி]

வில்லடிக்குறி *vil-l-aḍi-k-kuṟi,* பெ.(n.) மழை பெய்தற்கு அறிகுறியாகிய வானவில் (தஞ்.சர.i, 311); rainbow, as portending rain.

[வில் + அடி + குறி]



வில்லடியம் *villaḍiyam,* பெ.(n.) வில்லடி **(C.G.)** பார்க்க; see *villaḍi.*

வில்லடிவழக்கு *villaḍi-vaḻakku,* பெ.(n.) அலைக்கழிப்பான வழக்கு; troublesome dispute.

[வல்லடி → வில்லடி + வழக்கு]

வில்லடை *villaḍai,* பெ.(n.) 1. இடையூறு; adversity, distress. *'எனக்கு அநேக வில்லடை வந்திருக்கிறது'.* 2. தடை (வின்.); impediment. 3. பகைமை (யாழ்.அக.); enmity.

[ஒருகா. வில்கண்டம் → வில்லடை]

வில்லண்டம் *villaṇḍam,* பெ.(n.) 1. வலுக்கட்டாயம் (யாழ்ப்.); force, compulsion. 2. வில்கண்டம், 2 (யாழ்.அக.) பார்க்க; see *vilkaṇḍam.*

[வில்கண்டம் → வில்லண்டம்]

வில்லம்[1] *villam,* பெ.(n.) வில்வம் பார்க்க; see *vilvam. "வடிவுடை வில்லம்" (திருமந். 1720).*

வில்லம்² *villam,* பெ.(n.) பெருங்காயம் (யாழ்.அக.); asafoetida.

வில்லம்³ *villam,* பெ.(n.) குகை (யாழ்.அக.); cave.

[புல் → பில் → பிலம் → (பில்லம்) → வில்லம்]

வில்லரணம் *vil-l-araṇam,* பெ.(n.) விற்படையாலாகிய காவல்; policing by bowmen or archers; fence of bows. *"வில்லரண மரணமாக" (முல்லைப். 42).*

[வில் + அரணம்]

வில்லவன் *villavaṉ,* பெ.(n.) 1. சேரன்; *šēra* king, as having a banner with the figure of a bow. *"வில்லவன் வந்தான்" (சிலப். 27, 238) (திவா.);* 2. கரும்பு விற்கொண்ட காமன்; kāma, as having a sugarcane bow. *"வில்லவன் விழவினுள்" (கலித். 35).*

[வில் → வில்லவன்]

வில்லன் *villaṉ,* பெ.(n.) வில்லி¹, 1, 5, 6. பார்க்க; see *villi¹1,5,6. "தொடைமாண்ட கண்ணியன் வில்லன்" (கலித்.37).*

[வில் → வில்லன்]

வில்லாண்மை *vil-l-āṇmai,* பெ.(n.) விற்றிறமை (வின்.); skill or expertise in archery.

[வில் + ஆண்மை = ஆளுந்தன்மை]

வில்லார் *villār,* பெ.(n.) 1. வில்லாளர்; bowmen. 2. வேடர்; hunters.

க. பில்லார்.

[வில் → வில்லார்]

வில்லாள் *villāḷ,* பெ.(n.) வில்லாளன் (புறநா. 168, உரை) பார்க்க; see *villāḷaṉ.*

க. பில்லாள்.

[வில் + ஆள்]

வில்லாளன் *vil-l-āḷaṉ,* பெ.(n.) விற்றொழிலில் வல்லவன்; archer, one skilled in archery, an expert archer. *"சரந்துரந்த வில்லாளனை" (திவ். பெரியாழ். 2, 1, 10).*

[வில் + ஆள் → ஆளன்]

வில்லாளி *villāḷi,* பெ.(n.) வில்லாளன் பார்க்க; see *villāḷaṉ.*

ஒ.நோ உழைப்பாளி, தொழிலாளி.

[வில் + ஆள் → ஆளி]

வில்லி¹ *villi,* பெ.(n.) 1. வில்லாளன் பார்க்க; see *villāḷaṉ. "மும்மதிலெய்த வில்லி" (திருவாச. 9, 5).* 2. காமன் (பிங்.); *kāma.* 3. வீரபத்திரன் (பிங்.); virabhadra. 4. அருச்சுனன் (யாழ்.அக.); arjuna. 5. இருளன், 1 (கொ.வ.) பார்க்க; see *iruḷaṉ*, member of the *iruḷa* caste. 6. வேடன் (வின்.); hunter.

க. பில்லா.

[வில் → வில்லி]

வில்லி² *villi,* பெ.(n.) வில்லிபுத்தூராழ்வார், 2 பார்க்க; see *villiputtūr-āḷvār. "குறும்பியளவாய்க் காதைக் குடைந்து தோண்டி யெட்டினமட்டும் அறுப்பதற்கு வில்லியில்லை" (தமிழ்நா. 230).*

[வில்லிபுத்தூரார் → வில்லி]

வில்லிங்கம் *villiṅgam,* பெ.(n.) வில்லங்கம் (C.G.) பார்க்க; see *villaṅgam.*

வில்லிடு-தல் *villiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) ஒளி வீசுதல்; to shine, sparkle, flash. *"பொலஞ் செய் கோதை வில்லிட" (சிலப். 29, கந்துகவரி.)*

[வில் + இடு-,]

வில்லிபாரதம் *villi-bāradam,* பெ.(n.) வில்லிபுத்தூரார் ஆசிரிய மண்டிலப்பாவில் இயற்றிய மாபாரதநூல்; the epic poem *Mahā-bhārada* composed or framed in Tamil viruttam, by *villi-puttūrār.*

[வில்லி + பாரதம்]

வில்லிபுத்தூர் *villi-puttūr,* பெ.(n.) பெரியாழ்வாரும் ஆண்டாளும் தோன்றிய ஊர்; *śrīvilliputtūr,* the birth place of *Peri-y-āḻvār* and *Aṇḍāḷ.* *"வில்லிபுத்தூர் விட்டுசித்தன்" (திவ். திருப்பல். 12).*

வில்லிபுத்தூரர் *villi-puttūrar,* பெ.(n.) வில்லிபுத்தூராழ்வார் பார்க்க; see *villi-puttūrāḻvār.*

[வில்லிபுத்தூர் + அர் = பெருமைப் பொருட் பின்னொட்டு]

வில்லிபுத்தூராழ்வார் *villiputtūr-āḻvār,* பெ.(n.) 1. பெரியாழ்வார்; *periyāḻvār,* as born in *śrīvilliputtūr.* 2. 14-ஆம் நூற்றாண்டினரான தமிழ்ப்பாரத நூலாசிரியர்; a poet, the author of the Tamil *Mahā-bhārada,* 14th C.

மாபாரதத்தைத் தமிழில் பாடிப் புகழ் பெற்றவர். தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருமுனைப்பாடி நாட்டில் உள்ள சனியூரில் பிறந்தவர். வீரராகவன் என்பது இவருடைய தந்தையின் பெயர். இவர் மாலியக் குடும்பத்தில் பிறந்ததனால், ஆழ்வார்களுள் ஒருவராகிய வில்லிபுத்தூரார் என்று அழைக்கப்படும் பெரியாழ்வார் பெயரே இவருக்கு இடப்பட்டது.

இவருடைய வரலாற்றுக்கு அடிப்படையாயுள்ளது, இவருடைய மகனான வரந்தருவார் பாடிய சிறப்புப் பாயிரமே. அதன்படி அவர் பார்ப்பனர் என்றும், கல்வி கேள்விகளில் சிறந்து பல்வகைப்பட்ட தமிழ்ப் பாடல்களைப் பாடும் திறமை பெற்றவரென்றும், அதனால் தமிழ் நாட்டு மூவேந்தரும் இவருக்கு வரிசை விருது முதலியன வழங்கினார்களென்றும் அறியலாம். இவர் சமயத்தில் மாலியரென்பதை வரந்தருவார் பாயிரத்தாலும், பாரதத்தின் ஒவ்வொரு சருக்கத்தின் முதலிலுள்ள கடவுள் வணக்கச் செய்யுள்களாலும் அறியலாம். ஆனால் இவர் சிவனை வெறுப்பவர் அல்லர். சிவனைப் பற்றிப் பேச நேரிடும் இடங்களிலெல்லாம் அவரை உயர்வாகவே பேசுகிறார். இவ்வுண்மையைப் பதின்மூன்றாம் போர்ச் சருக்கத்திலும் அருச்சுனன் தவநிலைச் சருக்கத்திலும் காணலாம்.

இவருக்குப் புரவலனாக விளங்கியவன் வரபதி ஆட்கொண்டான் என்னும் அரசன். அவன் கொங்கர் குலத்தலைவனாய்த் திருமுனைப்பாடி நாட்டில் வக்கபாகை என்னும் ஊரிலிருந்து ஆட்சி செலுத்தியவன். அவன் இவரைப் பாரதக் கதையைத் தமிழில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டபடி இவரும் பாரதம் பாடினார் என்று வரந்தருவார் பாயிரத்தால் தெரிய வருகிறது. இந்த அரசனை வில்லி பல இடங்களில் புகழ்ந்து பாடி இருக்கிறார்.

[வில்லிபுத்தூர் + ஆழ்வார்]

வில்லிமை *villimai,* பெ.(n.) விற்றிறமை; skill or expertise in archery. *"மிறைத்தார் புரமெய்த வில்லிமை" (பதினொ. திருவேகம். திருவந். 59).*

மறுவ. வில்லாண்மை

[வில் → வில்லிமை]

வில்லியடி *villi-y-aḍi,* பெ.(n.) உள்ளங்கால் பதியாத அடிச்சுவடு (இ.வ.); indistinct footprint, as of a man of the Irula caste.

[வில்லி^{1} + அடி^{3}]

வில்லியர் *villiyar,* பெ.(n.) 1. வில்லார் (வின்.) பார்க்க; see *villār.* 2. நீலமலை முதலிய இடங்களில் வாழும் இருளர் என்னும் வேட்டுவ இனத்தினர்; *Iruḷas,* a tribe of hunters inhabiting the Nilgiris and the adjacent plains.

[வில்லி → வில்லியர்]

வில்லியாதன் *villi-y-ādaṉ,* பெ.(n.) திண்டிவனத்தருகிலுள்ள மாவிலங்கை என்ற நகரத்தில் வாழ்ந்த ஒரு தலைவன் (புறநா. 379); a chief of *māvilaṅgai* town near *tiṇḍivaṉam.*

[வில்லி + ஆதன் [1]]

வில்லுகன் *villugaṉ,* பெ.(n.) சிற்றாமுட்டி; a kind of medicinal herb.

[வில்லி + ஆதன் [1]]

வில்லுப்பாட்டு *villu-p-pāṭṭu,* பெ.(n.) கொடைவிழா முதலியவற்றில் வில்லடித்துப் பாடும் பாட்டு (நெல்லை.); song sung to the accompaniment of a vil, in *kōḍai* festival etc.

பொது மக்கள் மரபுவழிப் பாடி வருகிற பாடலைப் பல்வரிக் கூத்து என்பர் அடியார்க்கு நல்லார். வில்லுப்பாட்டை இதன் வகையிலே ஒன்று எனலாம். ஏனைய ஏற்றப்பாட்டு இறவைப் பாட்டிலும் வில்லடியாகிய இது வேறானது. சிற்றூர்த் தெய்வங்களின் திருவிழாக் காலங்களிலே முத்தாரம்மன், இசக்கி, நீலி, சங்கிலி, பூதத்தார், சாத்தன், சுடலைமாடன் கதைகள் வில்லடியுடன் பாடப்பெறும். மேலும், போரிலே இறந்த வீரர் வரலாறுகளும், கணவருடன் உடன்கட்டையேறி உயிர் நீத்த கற்புடை மனைவியர் வரலாறுகளும் வில்லடிக்குப் பொருளாகும். இவ்வினத்தில் சின்னத்தம்பி முத்துப்பாட்டன் கதைகள் பெரும் புகழ் பெற்றன.

பொதுமக்களிடையே பத்தி, கைம்மாறு கருதா உதவி, காதல், வீரம் முதலிய பெருங் குணங்களை வளர்க்க இக்கதைகள் பயன்படுகின்றன. உள்ளத்தின் உணர்ச்சிகளை வெளியிட மாந்தனுக்குக் கிடைத்த கருவிகளிலே வில்லடியும் ஒன்று. வில்லடியின் உறுப்புக்கள் பல. அவற்றுள் கதிரும், குடமும், உடுக்கும் முதன்மையானவை. கதிர் என்பது ஏறத்தாழ ஒன்பதடி நீளமும் 3 1/2 விரலக் கனமும் வாய்ந்த ஒரு கம்பு. இது கூந்தற்பனையின் வயிரம் பாய்ந்த அடிமரத்தால் ஆயது. இதன் முனைகள் இரண்டிலும் பொருந்தியிருக்கும் குப்பிகளைத் தோல் முறுக்காலமைந்த வடகயிற்றால் இழுத்துக் கட்டியிருப்பதால், கதிர் வில்போல வளைந்து காணப்படும். இந்த வில்லிலே வெண்கல வார்ப்பாலான சதங்கைகள் பொருந்தியிருக்கும். ஒருமண் குடத்தினுடைய கழுத்தின் புறத்திலே வில் கட்டப்படும். வைக்கோல் புரியாலாகிய புரிமணை மீது குடம் வைக்கப்படும்.

தோல் பட்டைகளாலான (பந்தடி மட்டை போன்ற) பத்தி கொண்டு குடத்தின் வாயிலே தட்டும்போது மதங்க (மிருதங்கம்) ஒலி போன்ற ஓசை தோன்றும். இதற்கு ஒத்து மதங்கம் போல ஒலிப்பது உடுக்கு. வெண்கல வார்ப்பாலாகிய உடுக்கையின் இருபக்கமும் மாட்டுச் சவ்வால் போர்த்தப்பட்டிருக்கும். வலப்பக்கச் சவ்விலே கைவிரலால் தட்டும் போது எழும்பும் ஒலிக்கு ஒத்து இடப்பக்கச் சவ்வு அதன் குறுக்கே கட்டியுள்ள வீணை என்ற குதிரைவால் மயிர்கள் மீது அதிர்ந்து விண் என்று ஒலிக்கும்.

வெண்கலக் கிண்கிணி பொருத்தப் பெற்ற வீசுகோல் இரண்டு கொண்டு வில்நாண் வடத்திலே சாடும் போது கிண்கிணியும் சதங்கைகளும் மாறிமாறி ஒலிக்கும். தாளக் கருவியாகப் பயன்படும் தாளத்தின் அடித்தாளம் இரும்பாலும் மேல்தாளம் வெண்கல வார்ப்பாலும் ஆனவை–தட்டுவதற்குச் சப்பளாக் கட்டைகளும் உண்டு.

புலவர் பாடும்போது வீசுகோலும் வில் நாணும் இயங்கா, ஏனைய தாளவரிசைகள் அடங்கி ஒலிக்கும். புலவர் பாடிய பாடலை வாங்கி உடன் அமர்ந்தோர் சேர்ந்து பாடும் போது அவர்கள் கையிலே உள்ள கருவிகள். குடம், உடுக்கு, சல்லரி (ஜால்ரா) கட்டை, வீசுகோல் முதலியன வியப்பான ஒற்றுமையுடனும் விரைவுடனும் இயங்கி இசை வெள்ளத்தைப் பெருக்கும்.

கதைப்போக்கிலே புதிய கட்டம் தொடங்கும் ஒவ்வொரு சமயத்திற்குத் தகுந்த விருப்பம், வெறி, கைநளிநயத்துடன் புலவர் பாடுவதால் கதை முழுவதும் உயிர்க்களைத் ததும்பி நிற்கும்.

(எ–டு) முத்துப்பாட்டன் கதை கலப்பு மண அடிப்படையில் அமைந்தது. பட்டன் பகடையின் பெண்களை மணந்து கொள்கிறான். மணமான அன்றிரவே தற்செயலாய் நேர்ந்த மாடுபிடி சண்டையில் இறந்து விடுகிறான். அவன் மனைவியராகிய பொம்மியும் திம்மியும்

தீப்பாய்கிறார்கள். இக்கதை வில்லுப்பாட்டில் சிறப்பாக அமைந்துள்ளது.

இக்காலத்தில் இக்கலை அருகி வந்தாலும் காலச் சூழ்நிலைக்கேற்ப எல்லாப் பொருள் நிலையிலும் கதைப் போக்கினை அமைத்துக் கொண்டு பாடுவோர் ஒருசிலர் உள்ளனர். இக்கலையை ஊக்குவிப்பது தமிழர்தம் மரபை வேரூன்றச் செய்வதாகும்.

[வில் → வில்லு + பாட்டு]



வில்லுமன் *villuman*, பெ.(n.) செடிவகை (மலை.); rose-coloured sticky mallow.

மறுவ. சிற்றாமுட்டி.

வில்லுவம் *villuvam*, பெ.(n.) வில்வம் 1 (பிங்.) பார்க்க; see *vilvam*, bael.

[வில்வம் → வில்லுவம்]

வில்லுழு-தல் *villuḻu-*, 1 செ.கு.வி. (v.i.) விற்போர் செய்து வாழ்தல்; to earn one's living as a bowman. *"வில்லுழு துண்மார்" (புறநா. 170).*

[வில் + உழு-,]

வில்லுறுதி *villuṟudi*, பெ.(n.) வில்லூர்திப் பட்டென்னும் ஒருவகைப் பட்டுத் துணி; a kind of silk cloth.

வில்லூதிப்பட்டு *villūdi-p-paṭṭu*, பெ.(n.) ஒருவகைத் துணி (வின்.); a kind of cloth.

[வில்லூதி + பட்டு]

வில்லூன்றிப்புழு *vil-l-ūṉṟi-p-puḻu*, பெ.(n.) உடலை மேலும் கீழுமாக நெளித்து வளைந்து வளைந்து செல்லும் ஒருவகைப் புழு (ஞான. 20, உரை); a kind of worm which moves in an undulating manner.

[வில் + ஊன்றி + புழு]



வில்லேப்பாடு *vil-l-ēppāḍu*, பெ.(n.) அம்பு விழும் எல்லை; the boundary where arrow falls. *"வில்லேப்பாட்டிடை யெவ்வெம் மருங்கினுந் தெரிவோற்கு" (பெருங். உஞ்சைக். 53, 68).*

[வில் + ஏ + படு- ஏப்படு → ஏப்பாடு]

வில்லேருழவர் *vil-l-ēr-uḻavar*, பெ.(n.) 1. வீரர்; warrior, brave soldier, bowmen. *"வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க சொல்லே ருழவர் பகை" (குறள், 872).* 2. வேடர்; hunters. *"கடுங்கணை வில்லேருழவர்.... மாமலை" (பு.வெ.12, இருபாற். 1).* 3. பாலை நில மாக்கள்; inhabitants of the desert tract. *"மாரி வளம் பெறா வில்லேருழவர்" (சிலப். 11, 210.).*

[வில்லேருழவு → வில்லேருழவர்]

வில்லேருழவு *vil-l-ēr-uḻavu*, பெ.(n.) விற்போர் செய்து வாழ்கை; profession of a

bowman. *"வில்லேரு ழவினின் னல்லிசை" (புறநா. 371).*

[வில் + ஏர் + உழவு]

வில்லை¹ *villai,* பெ.(n.) 1. வட்டமாயிருப்பது; that which is circular. 2. நறுமண வில்லை; scented tablet. 3. ஒட்டுத் துணி; patched cloth. 4. வில்லைமுருகு (வின்.) பார்க்க; *villai-murugu.* 5. ஊழியன் அணியும் வட்டமான மாழைத் தகடு; metal badge on a servant's belt. 6. தலையணி வகை; a kind of head-ornament. 7. வில்லைச் சாதம் பார்க்க; see *villai-c-cādam.*

[வல் → வில் → வில்லை]

வில்லை² *villai,* பெ.(n.) வில்வம் (யாழ்.அக.) பார்க்க; see *vilvam.*

[விள் → விள → விளவம் → விலவம் → வில்வம் → வில்லம் → வில்லை]

வில்லை³ *villai,* பெ.(n.) வட்டமான துண்டு; round slice. *"கைக் கரும்பை வில்லை செய்யக் காணேனான்" (அழகிய நம்பி யுலா. 148).*

[வல் → வில் → வில்லை]

வில்லைச்சாதம் *villai-c-cādam,* பெ.(n.) கோயில்களிற் கிடைக்கும் கட்டிச் சோறு; ball of cooked rice-offering available in temples.

மறுவ. பட்டைச்சோறு.

*[வில்லை¹ + **Skt.** sādam > த. சாதம்]*

வில்லைச்சேவகன் *villai-c-cēvagaṉ,* பெ.(n.) 1. வில்லைத் தகடு அணிந்த ஊழியன்; liveried servant. 2. வட்டாட்சிப் பணியாளன் (இ.வ.); Taluk peon.

*[வில்லை + **Skt.** sēvak > த. சேவகன்]*

வில்லைமுருகு *villai-murugu,* பெ.(n.) காதணிவகை (வின்.); a kind of ear-ornament.

[வில்லை + முருகு]

வில்லோர் *villōr,* பெ.(n.) வில்லாளர்; bowmen. *"வடிநவி லம்பின் வில்லோர் பெரும" (புறநா. 168).*

[வில் → வில்லார் → வில்லோர்]

வில்லோர்நிலை *villōr-nilai,* பெ.(n.) வில்லில் அம்பினைத் தொடுத்து எய்வார்க்குரிய (பைசாசம், மண்டிலம், ஆலீடம், பிரத்தியாலீடம் என்ற) நால்வகை விற்போர் நிலை (பிங்.); position of archers in shooting, of four kinds, viz., *paiśāśam, maṇḍilam, āliḍam, pirattiyāliḍam.*

[வில்லோர் + நிலை]

வில்வட்டம் *vil-vaṭṭam,* பெ.(n.) விற்றொழில்; archery. *"வில்வலான் வில்வட்டங் காய்ந்தான் றன்னை" (தேவா. 961, 2).*

[வில் + வட்டம்]



வில்வட்டு *vilvaṭṭu,* பெ.(n.) வில்லூதிப்பட்டு பார்க்க; see *villūdi-p-paṭṭu.*

வில்வதளம் *vilva-taḷam,* பெ.(n.) சிவ வழிபாட்டிற்கு ஏற்றதான மூவிலைகளை யுடைய வில்வத்தழை; trifoliate bael leaf used in *śaiva* worship.

[வில்வம் + தளம்]

வில்வதிப்பட்டு *vilvadi-p-paṭṭu,* பெ.(n.) வில்லூதிப்பட்டு (இ.வ) பார்க்க; see *villudi-p-paṭṭu.*

வில்வபத்திரம் *vilva-pattiram,* பெ.(n.) வில்வதளம் பார்க்க; see *vilva-taḷam.*

[வில்வம் + **Skt.** *patra > த. பத்திரம்]*

வில்வபத்திரி *vilva-pattiri,* பெ.(n.) வில்வபத்திரம் (வின்.) பார்க்க; see *vilva-pattiram.*

[வில்வம் + **Skt.** *patri > த. பத்திரி]*

வில்வம் *vilvam,* பெ.(n.) 1. மரவகை (பதார்த்த 448); bael. 2. பெரியமாவிலங்கம் (L) பார்க்க; see *periya-māvilaṅgam,* a species of garlic-pear. *'வில்வப் பழம் தின்பார் பித்தம் போக, பனம்பழம் தின்பார் பசிபோக' (பழ.).*

தெ. பிலவமு; க. பீட்டா; ம. குவலம்; **Skt.** பில்வ; **pees.** shul; **Hindi.** Bel.

விள் → விளம். வெள்ளையான தோடுடைய கனி.

விள் → விளா → விளவு – விளவம்

விளம் → விளர் → விளரி = விளர். விளா – விளாத்தி.

விளவம் → விலவம் → வில்வம் = கருவிளத்திற்கினமான கூவிளம். வடமொழியில் மூலமில்லை. (வ.மொ.வ. 92).

பில்வ, வில்வ = skt.

[இரட்டை விதையிலை நிலைத் திணைகளிலே கிச்சிலிக் குடும்பத்தைச் சேர்ந்த சிறிய மரம் (Aegle marmeelas). இது இந்தியா, மியான்மர், இலங்கை ஆகிய பகுதிகளில் வளர்கிறது. இது ஓர் இலையுதிர் மரம். 20–25 அடி உயரம் வளரும், 3–4 அடி சுற்றளவிருக்கும். நேரான கூரிய முட்கள் இலைக் கக்கங்களிலிருக்கும். காட்டு மரங்களில் முள் அதிகம். வளர்க்கும் வகைகளில் முள் குறைவு. இலைகள் மூன்று சிற்றிலைகளுள்ள கூட்டிலைகள். அவை மணமுள்ளவை. பூக்கள் பச்சை கலந்த வெண்மை நிறமுள்ளவை. பன்னீர் போன்ற நறுமணமுள்ளவை. மேழம், விடை, கடக மாதங்களில் இம்மரம் பூக்கும். கனி சிலையில் முதிரும். கனி உருண்டையானது. 2–4 விரல விட்டமிருக்கும்; ஓடு வழுவழுப்பாகவும், கடின மாகவும், பசுமை கலந்த சாம்பல் நிறம் அல்லது சற்று மஞ்சள் நிறமுள்ளதாகவும், மணமுள்ளதாகவும் இருக்கும். காட்டு மரங்களில் கனி சிறிதாக இருக்கும். வளர்க்கும் வகைகளில் பெரிதாக இருக்கும். விதைகள் பல. அவை நீள் சதுரமாகப் பக்கத்துக்குப் பக்கம் அழுந்திச் சப்பையாக இருக்கும். விதையின் மேல்தோல் கோழை போன்றிருக்கும். விதைகள் கிச்சிலி நிறமாகத் தடிப்பான, குழகுழப்பான உறையில் அழுந்திக் கிடக்கும். இந்த மரம் வேரிலிருந்து உண்டாகும் குருத்துக்களினாலும் பரவும்.

இம்மரத்தின் வேர், இலை, பூ, பிஞ்சு, காய், பழம் ஆகியவை மருந்தாகப் பயன்படுகின்றன. வயிற்றுப்போக்கு, குன்மம் முதலிய நோய்களுக்கு இது பயன்படுகிறது. பழம் சற்று இனிப்பாக இருக்கும். அதிலிருந்து இனிப்புப் பருகம் (ஷர்பத்) செய்கின்றார்கள்.]



வில்வமாலை *vilva-mālai,* பெ.(n.) பொன் அல்லது வெள்ளியினால் வில்வஇலை உருக்களாகச் செய்து கோத்த கழுத்தணி (யாழ்.அக.); a neck ornament consisting of silver or gold bael leaves.

[வில்வம் + மாலை]

வில்வரி *vil-vari,* பெ.(n.) பழைய வரிவகை (I.M.P. cg.689); an ancient tax.

[வில் + வரி 5]

வில்வலன் *vilvalan,* பெ.(n.) வாதாபியின் தமையனான அசுரன்; an asura elder brother of *vātābi,* destroyed by Agastya. *"மேயின விருமைந்தர் வில்வலன் வாதாவி" (கந்தபு. வில்வலன் வாதா. 10).*

வில்வளைவு *vil-vaḷaivu,* பெ.(n.) கட்டடத்தில் விற்போன்ற வளைவு (பாண்டிச்.); bow-shaped arch, as in a building.

[வில் + வளைவு]



வில்வாதசன்னி *vil-vāda-šanni,* பெ.(n.) சன்னிவகை (M.L.); tetanus.

வில்வாள் *vil-vāḷ,* பெ.(n.) ஒருவகை வாளரம் (C.E.M.); bowsaw, locksaw.

[வில் + வாள் 1]

வில்வித்தை *vil-vittai,* பெ.(n.) வில்லிலிருந்து அம்பெய்யும் கல்வி (வின்.); archery, art of using the bow.

[வில் + வித்தை]

Skt. *vidyā* > த. குலவித்தை.

வில்விழா *vil-viḻā,* பெ.(n.) 1. விற்போர்; joust or tournament, as a festival of the bow. *'வீரர்..... வில்விழாவை விரும்ப' (பு.வெ.3, 1, உரை).* 2. மலைவேடர் தம் சிறுவர்க்கு விற்றொழில் பயிற்றத் தொடங்கும் நிகழ்வு; introductory ceremony of hillmen initiating their children in the art of archery. *"வில்விழா வெடுக்கவென்று விளம்பினன் வேடர் கோமான்" (பெரியபு. கண்ணப்ப. 31).*

[வில் + விழா]

வில்வீசு-தல் *vil-vīšu-,* 5 செ.கு.வி. (v.i.) ஒளிவிடுதல்; to shed light. *"மின்னுமாமணி மகர குண்டலங்கள் வில்வீசும்" (திவ். பெரியதிரு. 8, 1, 3).*

[வில் + வீசு-,]

வில்வெட்டு *vilveṭṭu,* பெ.(n.) வில்லூதிப்பட்டு (இ.வ.) பார்க்க; see *villūdi-p-paṭṭu.*

வில்வேதம் *vil-vēdam,* பெ.(n.) *தனுர்வேதம்* பார்க்க; see *tanur-vēdam,* a secondary *vēda.* *"ஆயுள் வேதம் வில்வேதம்" (காஞ்சிப்பு. சனற். 41).*

*[வில் + **Skt.** vēda > த. வேதம் = அறிவியம், கலை]*

Skt. *vēda* > த. வேதம்.

விலஃகு-தல் *vilaku-,* 5 செ.குன்றாவி. (v.t.) விலக்கு பார்க்க; see *vilakku.* *"விலஃகி*

வீங்கிரு ளோட்டுமே ..... முத்தினினம்" (நன். 90, உரை).

[விலகு → விலஃகு-,]

விலக்கடி[1] *vilakkadi,* பெ.(n.) 1. விலக்கத் தக்கது; that which is prohibited. *"இவ்வடியறியாதாரிறே உபயாந்தரங்களாகிய விலக்கடிகளிற் போகிறவர்கள்" (ஈடு. 4, 1, ப்ர.).* 2. மாறானது; that which is contrary. *"ஸம்ஸாரத்துக்கு விலக்கடி தேடிக் கொண்டு" (ஈடு. 1, 2, 8).* 3. விலக்காக வுள்ளது; that which is an exception. 4. தடை; obstacle, restraint, felter. *"இதுக்கு வேறு விலக்கடியில்லை"(ஈடு. 6, 8, 1).* 5. புறம்பாக்குகை (இ.வ); excommunication, expulsion. 6. பாதத்தைக் குறுக்கே வைத்தளக்கும் அடியளவு; linear measure, being the breadth of the human foot. *"22 அடியும் ஒரு விலக்கடியுங் கொண்டது கம்பு"*(Rd.).

[விலக்கு + அடி]

விலக்கடி[2] *vilakkadi,* பெ.(n.) சண்டையிடும் இருவர்க்கு விலக்குபவரால் உண்டாம் அடி (இ.வ); blow given to two persons fighting with a view to separate them.

[விலக்கு + அடி]

விலக்கணன் *vilakkanan,* பெ.(n.) சிறப்பியல் புடையவன்; one who has special or distinguishing attributes; esteemed person. *"மிழலைமேய விலக்கணா" (தேவா. 582, 9).*

[இலக்கணன் → விலக்கணன்]

விலக்கணி *vilakkani,* பெ.(n.) 1. முன்ன விலக்கு (தண்டி. 43) பார்க்க; see *munna-vilakku,* a figure of speech. 2. வெளிப்படையான விலக்கை ஒரு சிறப்புக் கருத்தோடு சொல்வதாகிய அணி (அணியி. 98); a figure of speech in which a well-known negation is stated with a special significance.

[விலக்கு + அணி]

முன்ன விலக்கணி

"முன்னத்தின் மறுப்பது முன்னவிலக்கே
மூவகைக் காலமும் மேவியதாகும்"

ஒரு பொருளைக் குறிப்பினால் விலக்கின் அது முன்னவிலக்கு என்னும் அணியாம். அஃது இறப்பு எதிர்வு, நிகழ்வு என்னும் மூவகைப்பட்ட காலங்களோடும் கூடியதாம். இம்முக்காலங்களைக் கூற்றொடுங் குறிப்பொடுங் கூட்ட அறுவகையாம்.

எ.டு.

"பாலன் றனதுருவா யேழுலகுன் – டாலிலையின்
மேலன்று கண்டுயின்றாய் மெய்யென்பர் – ஆலன்று
மேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்"
(தண்டி.43).

விலக்கம்[1] *vilakkam,* பெ.(n.) 1. விலகி யிருக்கை; sparseness, as of plants placed apart, separation. 2. மாதவிடாய்; menses. 3. ஊரைவிட்டு நீங்குகை (வின்.); desertion of a place.

[விலகு → விலக்கு → விலக்கம்]

விலக்கம்[2] *vilakkam,* பெ.(n.) 1. வழங்காமல் விலக்குகை; prohibition. 2. விலக்கடி[1], 5 (வின்.) பார்க்க; see *vilakkadi.*

[விலக்கு → விலக்கம்]

விலக்கற்பாடு *vilakkar-pādu,* பெ.(n.) ஒழிபு; restriction, exception. *"இதனால் விலக்கற்பாடின்றி வேண்டியது செய்வர்" (குறள், 1073, உரை).*

[விலக்கு- + பாடு [1]]

விலக்கியற்கூத்து *vilakkiyaṟ-kūttu,* பெ.(n.) ஒருவகைக் கூத்து (தொல். பொ. 91, உரை); a kind of dance.

[விலக்கு + இயல்[2] + கூத்து]

விலக்கியற்சூத்திரம் *vilakkiyar-cūttiram,* பெ.(n.) பொது வகையான் விதிக்கப் பட்டதனை அவ்வகையாகா தென்பது குறிக்கும் நூற்பா (யாப். வி. பாயி. 1, பக். 11); rule of exception from the operation of a general rule.

[விலக்கு + இயல் + **Skt.** *sūtra > த. சூத்திரம்]*

விலக்கு[1]-தல் *vilakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. விலகச் செய்தல்; to turn aside, to divert, to avert, to prevent; to cause, to leave, to put out of the way. *"விற்படை விலக்குவ" (சீவக. 567).* 2. கூடாதென்று தடுத்தல்; to forbid, prohibit. *"யாம் வேண்டேமென்று விலக்கவும்" (கலித். 94).* 3. தடைசெய்தல்; to check, retard, obstruct. *"விண்ணிற் றிங்கள் விலக்குதன் மேயினார்" (சீவக. 902).* 4. அழுத்துதல்; to inset, fix. *"வேல் விலக்கி" (திணை மாலை. 30).* 5. மாற்றுதல் (பிங்.); to change, to vary. 6. வேலையினின்று தள்ளுதல்; to dismiss, as from a post. 7. வேண்டாத வற்றை நீக்கிவிடுதல் (வின்.); to eschew, discard, remove Irrelevent things. 8. கண்டனம் செய்தல் (வின்.); to repudiate, to controvert, to condemn. 9. பிரித்தல்; to separate. *'அவர்களைச் சண்டை செய்யாதபடி விலக்கு'.*

Ma. villakkam; **Ka., Te.** vilu.

[விலகு → விலக்கு]

விலக்கு[2] *vilakku,* பெ.(n.) 1. வேண்டாத தென்று ஒதுக்குகை; prohibition, injuction not to do a thing. *"பிறனில் வேட்கை யின்னன விலக்கதா மே" (பிரபோத. 39, 16).* 2. தனி; seclusion. *'அவன் யாரோடுஞ் சேராது விலக்காயிருக்கிறான்'.* 3. சிறப்பு நெறியீடு; rule of exception. *'இந்த நூற்பாவிற்கு விலக்கென்ன?'.* 4. தடை; hindrance, obstruction. 5. விலக்குக் கருமம் பார்க்க; see *vilakku-k-karumam. "விலக்கொடு பிராயச்சித்த மெனவைந்து வினைகள்" (பிரபோத. 39, 13).* 6. ஐந் தொழில்களுள் வீரன் தன்மேல் வரும் அம்புகளைத் தடுக்கை (சீவக. 1676, உரை); activity of a warrior in warding off arrows aimed at him, one of *pañśa-kiruttiyam.* 7. மாதவிடாய்; menses. 8. வழு (வின்.); error, fault. 9. விலக்கணி (தண்டி. 45, உரை) பார்க்க; see *vilakkaṇi.*

Ma. vilakkam; **Te.** vilu

விலக்குச்சீட்டு *vilakku-c-cīṭṭu,* பெ.(n.) ஒருவனை நீங்கிக் கொள்ளும்படியனுப்பப் படும் ஆணை (நாஞ். நா); order to keep oneself away.

[விலக்கு + சீட்டு]

விலக்குருவகம் *vilakkuruvagam,* பெ.(n.) உருவகிக்கப்பட்ட பொருளினிடத்து அத் தன்மை யில்லையென்ற விலக்கோடு கூடி வரும் உருவகவணி (தண்டி. 36, உரை); a kind of metaphor in which certain distinguishing features of the object of comparison are pointed out, as absent in the thing compared.

[விலக்கு + உருவகம்]

"வல்லி வதன மதிக்கு மதித்தன்மை
இல்லை யுளதே லிரவன்றி – எல்லை
விளக்கு மொளிவளர்த்து வெம்மையா லெம்மைத்
துளக்கு மியல்புளதோ சொல்" (தண்டி.36, உரை)

விலக்குவமை *vilakkuvamai,* பெ.(n.) உவமேயத்திற்கு உயர்வு தோன்ற உவமானத்திலே ஒப்புமைக்கு விலக்காயுள்ள சில தன்மைகள் புலப்படக் கூறும் அணிவகை (தண்டி. 31, உரை); a kind of simile in which, with the object of praising the *upamēyam*, certain characteristics absent in *uvamēyam* are pointed out as being present in the *upamāṉam.*

[விலக்கு + உவமை]

பாரிபாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே

இதில் பாரிக்கு முகிலை உவமை கூறுதல் புலவர்க்குக் கருத்தன்று என்னும் கருத்தைக் குறிப்பாகக் கூறி உவமையை விலக்குதலால் இது விலக்குவமையாம். (தண்டி. 31, உரை)

விலக்குறுப்பு *vilakkuṟuppu,* பெ.(n.) நாடகவுறுப்புவகை (அபி.சிந்.) அவை பதினான்கு வகைப்படும்; a section in drama.

[விலக்கு + உறுப்பு]

விலகு¹-தல் *vilagu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. நீங்குதல்; to withdraw; to leave. 2. பின்னிடுதல்; to recede. 3. ஒதுங்குதல்; to step aside and give way. 4. ஒழுங்கு தவறுதல்; to deviate from, to go astray, to err. 5. இடம் விட்டுப் பெயர்தல்; to be dislocated, to fall out of position. 6. பிரிதல்; to separate, to get away. 7. அசைதல்; to move. *"விலகு குண்டலத்தன்" (திவ். திருவாய். 8, 8, 1).* 8. செல்லுதல்; to proceed, go. *"விலகுஞ் சில வேழம்" (இரகு.யாகப். 19).* 9. தூரத்தி லிருத்தல்; to be far off. 10. மாதவிடாயாதல்; to be in menstrual periods. 11. ஒளிவிடுதல் (வின்.); to sparkle, shine.

விலகு²-தல் *vilagu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. எறிதல் (பிங்.); to throw, cast. *"விலகிற் பிழையாச் சூலத்தே" (தக்கையாகப். 224).* 2. விட்டு நீங்குதல்; to part from, separate from. *'அவனை விலகிப் போ'.*

விலங்கடி¹ *vilaṅgaḍi,* பெ.(n.) மாட்டு நோய்வகை (மாட்டு.வை.); a disease of cattle.

[விலங்கு + அடு¹ → அடி]

விலங்கடி²-த்தல் *vilaṅgaḍi-,* 4 செ. குன்றாவி.(v.t.) விலங்குமாட்டுதல்; to bind with fetters or handcuffs. *"இருகால் விலங்கடியா தேவிடில்" (பஞ்ச. திருமுக. 1658).*

[விலங்கு + அடி-,]

விலங்கம் *vilaṅgam,* பெ.(n.) விலங்கு, 4 (திவா.) பார்க்க; see *vilaṅgu.*

[விலங்கு → விலங்கம்]

விலங்கரசு *vilaṅgarašu,* பெ.(n.) அரிமா; lion, as the king of beasts. *"விலங்கரசனைய காளை" (சீவக. 2092).*

[விலங்கு + அரசு ²]



விலங்கரம் *vilaṅgaram,* பெ.(n.) வாளரவகை; a saw, especially for conch-shells. *"விலங்கரம் பொரூஉம் வெள்விளை போழ்நரொடு" (மணிமே. 28, 44).*

[விலகு → விலங்கு + அரம்[1]]

விலங்கல் *vilaṅgal,* பெ.(n.) 1. குறுக்கா யிருக்கை; lying athwart or across. 2. மலை; hill, mountain. *"விலங்கண் மீமிசை" (மலைபடு. 298).* 3. கலங்கனீர் (திவா.); turbid water, puddle. 4. பிரசயம் (தொல். எழுத். 88, உரை) பார்க்க; see *pirašayam*, a tone occuring in a series of unaccented syllables following a svarita. 5. பண்மாறி நரம்பிசைக்கை; abrubt change of the tune, change of tune from one to another, as on a stringed instrument. *"காகுளி விலங்கல்" (திருவாலவா. 57, 26).*

[விலங்கு → விலங்கல்]

விலங்கன் *vilaṅgaṉ,* பெ.(n.) விலாங்கு பார்க்க; see *vilāṅgu.*

[விலங்கு → விலாங்கு → விலங்கன்]

விலங்கி *vilaṅgi,* பெ.(n.) வேலி (ஞான. 26, 5): hedge, fence.

தெ. வெலுங்கு

[விலங்கு → விலங்கி]

விலங்கியல் *vilaṅgiyal,* பெ.(n.) விலங்குகளைப் பற்றிய ஆராய்ச்சியியல்; zoology.

[நிலைத்திணைகளும் விலங்குகளுமாகிய உயிர்களைப் பற்றிய ஆராய்ச்சி உயிரியல் எனப்படும். விலங்குகளைப் பற்றிய ஆராய்ச்சி விலங்கியலாகும். விலங்குகள் என்னும்போது நாம் நாற்கால் விலங்குகள் மயிர்ப் போர்வையுள்ள பாலூட்டிகள், இறகுப் போர்வையுள்ள பறவைகள், செதிற் போர்வையுள்ள ஊர்வன, நீரில் வாழும் தவளைகள் ஆகியவற்றை மட்டும் குறிப்பதில்லை. மீன்கள், பூச்சிகள், தேள், புழு, நத்தை, ஓரணு உயிரிகள் ஆகிய எல்லாவற்றையும் குறிக்கிறோம். சுருங்கச் சொல்லின் நிலைத்திணை உயிரின் அல்லாத எல்லா உயிருடைப் பொருளும் விலங்கேயாகும். நிலைத்திணை உயிரிகள் தமக்கு வேண்டிய உணவைத் தாமே நிறைவு செய்து கொள்ளக்கூடிய ஆற்றலுள்ளவை. விலங்குகள் என்பவை நிலைத்திணை உயிரிகளிலிருந்து அல்லது வேறு விலங்குகளிலிருந்து தமக்கு வேண்டிய உணவைப் பெறுபவை. இந்தப் பண்பினாலே விலங்குகளை எளிதில் வேறுபடுத்தி யுணர்ந்து கொள்ளலாம்.]

[விலங்கு → விலங்கியல்]

விலங்கினர் *vilaṅgiṉar,* பெ.(n.) பகைவர்; enemies, foes. *"விலங்கினர் தம்மை யெல்லாம் வேரொடும் விளியநூறி" (கம்பரா. மகேந்திர. 21.).*

[விலங்கு → விலங்கினர்]

விலங்கு[1]-தல் *vilaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. குறுக்கிடுதல்; to lie athwart, to be transverse. *"ஆறுகெட விலங்கிய வழலவி ராரிடை" (கலித். 2).* 2. மாறுபடுதல்; to change, become different. *"விலங்கானே னாதலினால் விலங்கினேன்" (கம்பரா. சடாயு. 22).* 3. விலகு-, 1, 2, 3, 5, 6 பார்க்க; see *vilagu-*. *"பருவரை நாடனீங்கி விலங்காது நெஞ்சுடைந்தது" (திருக்கோ. 150, உரை). 4.* விலகு-, 4 *பார்க்க;* see *vilagu.* *"வாவெனச் சென்றாய் விலங்கினை" (கலித். 84).* 5. விலகு-, 11 பார்க்க; see *vilagu.* *"வில்விலங்கிய வீரரை" (கம்பரா. பிரமாத். 60).*

[வில் → விலகு → விலங்கு]

விலங்குகள்



விலங்கு²–தல் *vilaṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தடுத்தல்; to hinder, obstruct. *"விலங்குந ரீங்கில்லை வெள்வேலோய்" (பு.வெ.12. பெண்பாற். 19).* 2. களைதல் (பிங்.); to pluck, pull up and remove. 3. கொல்லுதல்; to slay. *"கழல் வேந்தர் படைவிலங்கி" (பு.வெ.7, 15, கொளு.).* 4. அழித்தல்; to destroy. *"ஒரு வரங்கொண்டு விலங்கென..... அவனுருவு திரித்திட்டோன்" (பரிபா. 5, 31).* 5. எறிதல் (அக.நி.); to throw. 6. செலவிடுதல் (அக.நி.); to let pass.

[வில் → விலகு → விலங்கு]

விலங்கு³ *vilaṅgu,* பெ.(n.) 1. குறுக்கானது; that which is transverse, across or crosswise. *"விலங்ககன்ற வியன்மார்ப" (புறநா. 3).* 2. மாவும் புள்ளும்; beast or bird, as having their bodies not erect but horizontal. *"விலங்கு மக்களும் வெருஉப்பகை நீங்கும்" (மணிமே. 12, 95).* *"விலங்கானே னாதலினால் விலங்கினேன்" (கம்பரா. சடாயு. 22).* 3. மான்; deer. *"விலங்கு மலைத்தமைந்த..... நாட்டத்து" (மலைபடு. 45).* 4. கை கால்களில் மாட்டப்படுந் தளை (சூடா.); fetters, shackles, manacles. 5. வேறுபாடு; difference. *"விலங்கோரார் மெய் யோர்ப்பின்" (கலித். 52).* 6. தடை; obstruction, hindrance. *"இந்த வினையுடல் விலங்காகும்" (ஞானவா. லீலை. 34).* 7. உயிர் மெய்யெழுத்துக்களில் இ, ஈ, உ, ஊ முதலிய உயிர்களைக் குறிக்கும் அடையாளமாக மேலுங் கீழுமுள்ள வளைவு (தொல். எழுத். 17, உரை); curve added to a consonant, above or below as the symbol of the vowel i or *ī* or u or *ū.* 8. குன்று (அரு.நி.); hill. 9. விலங்கல், 4 (பி.வி. 40, உரை) பார்க்க; see *vilaṅgal.* *'விலங்கை விட்டுத் தொழுவில் மாட்டிக் கொண்டது போல' (பழ.).*

விலங்கு⁴ *vilaṅgu,* பெ.(n.) உடல் (திவ். திருச்சந். 56, வ்யா. பக். 162); body, as fettering the soul.

விலங்குக்காட்சித்தோட்டங்கள் *vilaṅgu-k-kāṭci-t-tōṭṭaṅgaḷ,* பெ.(n.) உயிர்க்காட்சிச் சாலை; zoological park.

[காணக் கிடைக்காதனவும், பழக்கமில்லா தனவும், குறிப்பாகக் காட்டில் வாழ்பவனவுமான பல விலங்குகளை உயிருடன், அவற்றின் வாழ்விற்குத் தகவான ஏந்துகளுடன் பாதுகாத்து வைக்கப்பெறும் இடங்கள். பெரும்பாலும் பல பொருட்காட்சிச் சாலைகளின் தொழில்களுள் பலவற்றை இவையும் செய்கின்றன. இவை பொதுவாக எல்லோருக்கும், முதன்மையாகச் சிறுவர்களுக்கும் ஆங்குச் சேகரித்து வைத்துள்ள விலங்கினங்களின் பழக்க வழக்கங்களையும், அவற்றின் உணவு வகைகள், பிறப்பு, வளர்ச்சி முதலியவற்றையும் நேர்முகமாக அறியக்கூடிய வாய்ப்பைத் தருகின்றன. இவற்றால் மக்கள் விலங்கினங்களை உயிரோடு கண்டு, அவற்றோடு பழக வாய்ப்பு உண்டு. நாட்டுப்புற மக்களொடு நகர மக்களும் இவற்றைக் காணப் பெரிதும் விரும்புகின்றார்கள். உலகத்தின் பல்வேறுபட்ட பல மூலை முடுக்குகளில் உள்ளவற்றை ஒன்றாக ஒரே இடத்தில் காண இத்தோட்டங்கள் வாய்ப்பாகின்றன., பெருக்கமின்றித் தொகையில் குன்றி அற்றுப்போகும் நிலையிலிருந்து வரும் விலங்கினங்களை இந்நிலையங்கள் காப்பாற்று கின்றன. இவை அறிவியலுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. விலங்கினங்களுள் ஏதேனும் ஒருவகை படைப்புக் குன்றுமாயின், உலகத்துள் எந்த ஆற்றலாலும் அவற்றை மறுபடியும் படைக்க இயலாது. இவை விலங்கினங்கள் தாமாகவும், தன்னுரிமை யாகவும், அச்சமின்றியும் இயற்கையாக வாழ வசதியளிக்கப்பட்ட பெரு வியப்புச் சாலைகளாகும். இவையும் ஒருவகையில் விலங்கினக் கண்காட்சிச் சாலைகளே. இவை பல திறப்பட்டவைகளும், குன்றி வருவனவுமான காடுறை விலங்கினங்களின் பெருக்கம் குன்றாமல் வளர உதவுகின்றன.

இறுதியாக, இவ்வகையானெல்லாம் விலங்கினக் கண்காட்சி சாலைகளில் விலங்

கினங்களைப் பற்றி அணியமாக்கப்பட்ட குறிப்புகள், அவற்றைப் பற்றிய அறிவு வளரப் பெரிதும் உதவுகின்றன. மேற்படி காட்சிச் சாலைகளில் விலங்கினங்கள் உயிரோடு வளர்க்கப்பட்டு வருவதனால், விலங்கினங்களின் உடலமைப்பு, மனநிலை, ஒலி, குரல், நடவடிக்கைகள், உணவு, அவற்றை உண்பிக்கும் முறை, இனப்பெருக்கம், காதல், தாய்மை, அகவை, நோய், இவற்றைப் பற்றிய ஆராய்ச்சிக்குக் காட்சிச் சாலைகள் சிறந்த கருவியாகின்றன]

விலங்குகதி *vilaṅgu-kadi,* பெ.(n.) நால்வகை நிலைகளுள் ஒன்றான விலங்குநிலை; birth as living being a stage in the transmigration of souls, one of *nāṟ-kati,* q.v.

[விலங்கு + கதி = உயிர்கள் தேவகதி, மக்கட்கதி, விலங்குகதி, நரககதி என நான்கு நிலைகளாக எடுக்கும் பிறப்பு]

விலங்குச்சுழி *vilaṅgu-c-cuḻi,* பெ.(n.) உடையவனைச் சிறைப் புகுத்துவதாகக் கருதப்படும் மாட்டின் முதுகுச் சுழி; involuted curls on the back of cow or ox, as portending imprisonment to its owner.

[விலங்கு + சுழி]

விலங்குநர் *vilaṅgunar,* பெ.(n.) 1. விலகி யிருப்பவர்; those who stand off. 2. விலக்குபவர்; those who obstruct or cause to turn aside or seperate. *"விலங்குந ரீங்கில்லை" (பு.வெ.12, பெண்பாற், 19).*

[விலகு → விலங்கு → விலங்குநர்]

விலங்குபாய்-தல் *vilaṅgu-pāy-,* 5 செ.கு.வி. (v.i.) குறுக்குப்பாய்தல்; to jump aside or across. *"விலங்குபாய்வன..... கலிமா" (சீவக. 1770.).*

[விலங்கு + பாய்-,]

விலங்குபோடு-தல் *vilaṅgu-pōḍu,* 20 செ.கு.வி. (v.i.), 19 செ.குன்றாவி. (v.t.) கைகால்களில் தளையிடுதல்; to handcuff, put in chains or felleis.

[விலங்கு + போடு-,]



விலங்கூண் *vilaṅgūṇ,* பெ.(n.) விலங்குகட்கு உணவிடும் அறச் செயல் (சூடா.); feeding animals, considered an act of charity.

[விலங்கு + ஊண்]

விலத்தல் *vilattal,* பெ.(n.) நீங்குகை (யாழ்.அக.); separation.

[விலகு → விலத்து → விலத்தல்]

விலத்தி *vilatti,* பெ.(n.) நெருக்கமின்மை; sparseness, being not close. *'இந்த ஆடையில் நூலிழை விலத்தியா யிருக்கிறது'.*

[விலத்து-, → விலத்தி]

விலத்து-தல் *vilattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) விலக்கு (யாழ்.அக.) பார்க்க; see *vilakku.*

[விலக்கு → விலத்து-,]

விலர் *vilar,* பெ.(n.) மரவகை; a kind of tree. 'விலர்ங்கோடு' (தொல். எழுத். 363, உரை).

விலவில-த்தல் *vilavila-,* 11 செ.கு.வி. (v.i.) 1. மிகநடுங்குதல்; to tremble exceedingly. *"கொக்கு வல்லூறுகண் டென்ன விலவிலத்து" (தனிப்பா.* i, 171, 23). 2. மிகவும் வலுவிழத்தல்; to become extremely weak. *'பசியால் கை கால்கள் விலவிலத்துப் போயின'.* 3. நெருக்க மின்றியிருத்தல்; to be sparse, not close. *'இந்தத் துணி விலவிலவென்று என்று உள்ளது' (உ.வ.).*

Ma. vilakkam; **Ka.** (vili. vilivilisu); **Te.** vilavila; **Kui.** vida.

விலவு[1] *vilavu,* பெ.(n.) விலா பார்க்க; see *vilā. "விலவறச் சிரித்திட் டேனே" (திவ். திருமாலை. 34).*

[விலா → விலவு]

ஒ.நோ. நிலா → நிலவு

விலவு[2]-தல் *vilavu,* 5 செ.கு.வி. (v.i.) விலாவி-, பார்க்க; see *vilāvi. "விலவித் தவித்தேனை விழித்தொருகாற் பாராயோ" (தனிப்.).*

விலா *vilā,* பெ.(n.) 1. மார்பின் பக்கம்; sides of the chest in body. *"கழுகும் பாறும் விலா விற்றுக் கிடந்தவன்றே" (சீவக. 804).* 2. விலாவெலும்பு பார்க்க; see *vilā-v-elumbu.*

ம. விலாவு.

[வில் → விலா]

விலாக்குடை *vilā-k-kuḍai,* பெ.(n.) விலா,1 (நெல்லை) பார்க்க; see *vilā.*

[விலா + குடை]

விலாக்குறிப்பு *vilā-k-kuṟippu,* பெ.(n.) பொத்தகப் பக்கங்களின் யாதானுமொரு மருங்கிடுங் குறிப்பு (இக்.வ.); marginal note.

[விலா + குறிப்பு]

விலாக்கூடு *vilā-k-kūḍu,* பெ.(n.) மார்புக்கூடு (இ.வ.); chest.

[விலா + கூடு]

விலாக்கொடி *vilā-k-koḍi,* பெ.(n.) விலாவெலும்பு (யாழ்.அக.); rib.

[விலா + கொடி]

விலாங்கு *vilāṅgu,* பெ.(n.) பழுப்பு வண்ணமும் நான்கு அடி வளர்ச்சியும் உள்ள பாம்பு போன்ற மீன்வகை (பதார்த்த. 940); eel, brownish, attaining more than 4 ft. in length.

[விலங்கு → விலாங்கு]



விலாச்சுழி *vilā-c-cuḻi,* பெ.(n.) விலாவைச் சுருட்டியிழுக்கும் ஒருவகை நுரையீரல் நோய்(M.L.); rapid respiration producing flattening of the chest-walls in flanks; a lung disease.

[விலா + சுழி]

விலாசம் *vilāśam,* பெ.(n.) 1. வாழை (அரு.நி.); plantain. 2. நீபம்[1], 1,2,3,4 (அரு.நி.) பார்க்க; see *nibam.*

விலாசு¹-தல் *vilāśu,* 5 செ.குன்றாவி. (v.t.) அழகுற அணிதல் (சரப. குற. 32, 3, உரை); to put on attractively.

விலாசு²-தல் *vilāśu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. முற்றுந் தோல்வியுறச் செய்தல்; to rout, to defeat out and out, as in a discussion. *'வாதத்தில் எதிரியை விலாசிவிட்டான்'* 2. வலுவாக அடித்தல்; to beat soundly or strongly. *'சண்டையில் நன்றாக விலாசி விட்டான்' (இ.வ.).*

[விளாசு → விலாசு-,]

விலாடி-த்தல் *vilāḍi-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. எண்ணை பிரித்தல் (இ.வ); to seperate. 2. வரி முதலியன இரட்டை மடங்கு கொடுத்தல் (வின்.); to pay doubly, tribute or tax etc. 3. பல மடங்கு கொடுத்தல்; to pay manifold. *'ஒன்றுக்கு ஐந்தாக விலாடிக் கொடுப்பா யானால் கடன் கொடுப்பேன்' (இ.வ.).*

விலாத்தோரணம் *vilā-t-tōraṇam,* பெ.(n.) விலாவெலும்பு (யாழ்.அக.) பார்க்க; see *vilā-v-elumbu.*

[விலா + தோரணம்]

விலாப்பாரிசம் *vilā-p-pāriśam,* பெ.(n.) விலா 1 பார்க்க; see *vilā.*

[விலா + பாரிசம்]

விலாப்புடை *vilā-p-puḍai,* பெ.(n.) விலா 1 பார்க்க; see *vilā.* *"விலாப்புடை பெரிதும் வீங்க" (சீவக. 400).*

[விலா + புடை ³]

விலாப்புடைத்தல் *vilā-p-puḍaittal,* பெ.(n.) உண்ட உணவின் நிறைவால் இருபக்கமும் விலாப்புறம் வீங்குகை (வின்.); bulging out of the nib sides, as when the stomach is full. *'விருந்தில் விலாப்புடைக்க வுண்டான்'* (உ.வ.).

[விலா + புடைத்தல்]

விலாப்புறம் *vilā-p-puṟam,* பெ.(n.) விலா 1 பார்க்க; see *vilā 1.* *"இரு விலாப்புறத்தும்" (கொக்கோ, 2, 12.).*

[விலா + புறம்]

விலாம்பிச்சை *vilām-biccai,* பெ.(n.) விலாமிச்சை (வின்.) யின் மறுவழக்கு.

விலாமிச்சு *vilā-miccu,* பெ.(n.) விலாமிச்சை பார்க்க; see *vilā-miccai.*

விலாமிச்சை *vilā-miccai,* பெ.(n.) இலாமிச்சை (பதார்த்த. 996) பார்க்க; see *elāmiccai.* white cuscus grass.

[இலாமிச்சை → விலாமிச்சை]

விலாய் *vilāy,* பெ.(n.) 1. துன்பம் (யாழ்.அக.); trouble, suffering. 2. சண்டை (நாஞ்.சா); quarrel.

விலாரி *vilāri,* பெ.(n.) 1. வெள்ளைக்கடம்பு பார்க்க; see *veḷḷai-k-kaḍambu,* bridal-couch plant. 2. நீண்ட செடிவகை; jamaica switch sorrel.

விலாவலக்கு *vilā-v-alakku,* பெ.(n.) விலாவெலும்பு பார்க்க; see *vilā-v-elumbu.* *"விலாவலக்குக..... அடிக்கடி சிரித்தன" (கலிங். 216).*

[விலா + அலக்கு = எலும்பு]

விலாவி-த்தல் *vilāvi-,* 11 செ.கு.வி. (v.i.) அழுதல்; to bewail, lament. *"முதுநகர் விலாவிக்கின்றதே" (சீவக. 1092).*

விலாவெலும்பு *vilā-v-elumbu,* பெ.(n.) மார்பின் பக்கவெலும்பு; குறுக்கெலும்பு; rib.

மறுவ. விலாக்கூடு.

[விலா + வெலும்பு]

விலாவொடி[1] *vilā-v-oḍi,* பெ.(n.) விலாப்பக்கம் ஒடியும்படி சிரிக்குஞ் சிரிப்பு; side-splitting laughter. *"வெள்ளை கண்டன வணிவாராகி..... விலாவொடி யாக்கினாரால்" (திருவாலவா. 38, 48).*

[விலா + ஒடி]

விலாவொடி[2]**-த்தல்** *vilā-v-oḍi,* 4 செ. குன்றாவி.(v.t.) 1. கடுமையாக வேலை வாங்குதல்; to extract hard work from. 2. பெருஞ் சிரிப்பு மூட்டுதல்; to cause side-splitting laughter. *"வீதியினுறுமவர் தங்களை விலாவொடிப்பும்" (திருவாலவா. 54, 22).*

[விலா + ஒடி-,]

விலாழி *vilāḻi,* பெ.(n.) 1. குதிரையின் வாய் நுரை; foam from a horse's mouth. *"நீங்கா விலாழிப் பரித்தானை" (பு.வெ.4, 22.).* 2. யானைத் துதிக்கை யுமிழ் நீர் (சூடா.); spittle or exudation from an elephant's trunk. *"அங்கையின் விலாழி யாக்கி" (தாயு. மௌன. 1.).*

விலாளம் *vilāḷam,* பெ.(n.) 1. பூனை (பிங்.); cat. *"அலமரு விலாளத்தைப் பார்த்து" (விநாயகபு. 26, 35).* 2. ஆண்பூனை (திவா.); tom-cat.

[விடாரம் → விலாளம்]

விலூபன்னிவிழு *vilūpaṉṉiviḻu,* பெ.(n.) 1. பெருங்குரும்பை (மலை.) பார்க்க; see *peru-ṅ-kurumbai.* 2. கிலுகிலுப்பை, 2,3 (மலை.) பார்க்க; see *kilu-kilubbai.*

விலை *vilai,* பெ.(n.) 1. விற்கை (சூடா.); selling, sale. 2. விலைத்தொகை; price, cost, value in exchange. *"யாரும் விலைப் பொருட்டா லூன்றருவா ரில்" (குறள், 256.).* 3. மதிப்பு; value. *"விலையுடைக் கூறை போர்க்கு மொற்றர்" (தேவா. 1082, 9).*

[வில் → விலை]

விலைக்கணிகை *vilai-k-kaṇigai,* பெ.(n.) பொதுமகள்; harlot, prostitute. *"மாயப்பொய் கூட்டி மயக்கும் விலைக்கணிகை" (பரிபா. 20,49.).*

மறுவ. விலைமாது, விலைமகள், விலைநலப் பெண்டிர், பரத்தை, பொது மகளிர்.

[விலை + கணிகை]

விலைக்கழிவு *vilai-k-kaḻivu,* பெ.(n.) வாங்கிய விலையில் தள்ளுபடியாவது (இக்.வ.); discount in sale price.

[விலை + கழிவு]

விலைக்காமர் *vilai-k-kāmar,* பெ.(n.) விலைமகள்; harlots. *"காமனார்புரம் விலைக்காமர் வீதியே" (இரகு. நகரப். 8).*

[விலை + காமம் → காமர்]

விலைக்காரன் *vilai-k-kāraṉ,* பெ.(n.) விலைகாரன் (வின்.) பார்க்க; see *vilai-kāraṉ.*

[விலை + காரன்]

விலைக்கிரயச்சீட்டு *vilaikkiraya-c-cīṭṭu,* பெ.(n.) விலையாவணம்; sale deed.

[விலை + கிரயம் + சீட்டு. கிரயம் = உருது]

விலைக்கிரயம் *vilai-k-kirayam,* பெ.(n.) பெறுமணத் தொகை (வின்.); selling price.

மறுவ. விலைமதிப்பு.

[விலை + கிரயம்]

விலைகட்டு-தல் *vilai-kaṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) விலை மதிப்பை (பெறுமானத்தொகை) உறுதிப்படுத்துதல் (வின்.); to set or fix a price.

[விலை + கட்டு-,]

விலைகாரன் *vilai-kāraṉ*, பெ.(n.) பெறுமானத் தொகையைக் கொடுத்துப் பண்டங்கொள்வோன் (யாழ்.அக.); purchaser.

[விலை + காரன்[1]]

விலைக்குறி-த்தல் *vilai-k-kuṟi*, 4 செ.கு.வி. (v.i.) விலைமதித்தல்; to estimate the price.

[விலை + குறி-,]

விலைகூவு-தல் *vilai-kūvu-*, 5 செ. குன்றாவி. (v.t.) விலைகூறு-, 2 பார்க்க; see *vilai-kūṟu*.

[விலை + கூவு-,]

விலைகூறு-தல் *vilai-kūṟu-*, 5 செ. குன்றாவி. (v.t.) 1. பண்டத்தின் விலையைச் சொல்லுதல்; to tell the product price. 2. விற்பதாக கூவிச் சொல்லுதல்; to offer for sale publicly, by crying out. *"மீன்களை ... விலைகூறி விற்ற ... மீன் பிடிப்பார்" (மதுரைக். 256, உரை).*

[விலை + கூறு-,]

விலைகொடுத்துயிர்காத்தல் *vilai-koḍuttuyir-kāttal*, பெ.(n.) கொல்லப்படும் விலங்குகளைப் பணங் கொடுத்து உயிர் மீட்கும் அறச்செயல் (பிங்.); saving a life by payment of ransom, considered as an act of charity.

[விலை + கொடு-, + உயிர்காத்தல்]

விலைகொள்[1](ளு)தல் *vilai-koḷ-*, 16 செ. குன்றாவி.(v.t.) விலைக்கு வாங்குதல்; to buy, purchase.

[விலை + கொள்-,]

விலைக்கொள்(ளு)-தல் *vilai-koḷ*, 12 செ.கு.வி. (v.i.) அதிக விலையுடையதாதல்; to be costly or valuable; to be at prohibitive cost.

[விலை + கொள்-,]

விலைகோள் *vilai-kōḷ*, பெ.(n.) 1. விலை மதிப்புப் பெறுகை; worthiness. 2. சிப்பி முத்தின் குணங்களுள் ஒன்று (திருவாலவா. 25, 16); a characteristic quality of pearls.

[விலைகொள் → விலைகோள்]

விலைச்சரக்கு *vilai-c-carakku*, பெ.(n.) விலைப்படுத்த வைத்திருக்கும் பண்டம்; products or goods or articles kept ready for sale.

மறுவ. விலைப்பண்டம்.

[விலை + சரக்கு]

விலைச்சேரி *vilai-c-cēri*, பெ.(n.) பலபண்டம் விற்குமிடம்; bazaar, market, fair. *"பல்விலைவாணிகர் நல்விலைச் சேரி" (பெருங். மகத. 3, 77).*

மறுவ. அங்காடி, சந்தை.

[விலை + சேரி]

விலைசவு-த்தல் *vilai-šavu-*, 4 செ.கு.வி. (v.i.) விலைசளை-, பார்க்க; see *vilai-šalai-*,

[விலை + சவு-,]

விலைசளை-த்தல் *vilai-šaḷai,* 4 செ.கு.வி. (v.i.) விலைகுறைதல்; to decrease or fall in price.

[விலை + சளை-,]

விலைசிராவணை *vilai-širāvaṇai,* பெ.(n.) விலைத்தீட்டு பார்க்க; see *vilai-t-tīṭṭu.* *"சங்கரதேவற்கு இறையிழித்துவிற்று விலைசிராவணை செய்து கொடுத்தோம்"* (S.I.I.iii.105).

[விலை + சீராவணம் → சிராவணை]

விலைஞன் *vilaiñan,* பெ.(n.) 1. விற்பவன்; seller. *"மைந்நிண விலைஞர்" (மணிமே. 28, 33).* 2. வணிகன் (சது.); merchant.

[விலை → விலைஞன்]

விலைத்தண்டம் *vilai-t-taṇḍam,* பெ.(n.) பழைய வரிவகை (Insc.); an ancient tax.

[விலை + தண்டம்]

விலைத்தரம் *vilai-t-taram,* பெ.(n.) நெல்வரியை கைப்பண வரியாக மாற்றிவந்த பணவரி (நாஞ். நா.); commuted value of paddy tax.

விலைத்தரவு *vilai-t-taravu,* பெ.(n.) விலையாவணம் (S.I.I.viii, 357); sale deed.

[விலை + தரவு]

விலைத்தீட்டு *vilai-t-tīṭṭu,* பெ.(n.) விலையோலை; sale-deed. *"சாத்தனது விலைத்தீட்டு" (தொல். சொல். 81, உரை).*

[விலை + தீட்டு]

விலைத்துண்டு *vilai-t-tuṇḍu,* பெ.(n.) 1. சிற்றூர்களில் சில்லறையாக விற்கும் நெல்விலைக்கும் மதிப்பு விலைக்குமுள்ள வேறுபாட்டை ஈடு செய்வதற்காகக் குடிவாரத்திலிருந்து மேல்வாரத்தாருக்குச் செலுத்தும் அதிக வரி; a charge paid out of the *kuḍivāram* by cultivators to the *mēlvāratār* or to the government on account of the difference between the price at which the cultivators had sold their grain and the estimated retail prices at the place of sale. 2. அடக்கவிலைக்கும் விற்கிற விலைக்குமுள்ள வேறுபாட்டால் நேரும் இழப்பு (இ.வ.); loss due to the difference between the sale price and the cost price.

[விலை + துண்டு]

விலைத்தூக்கம் *vilai-t-tūkkam,* பெ.(n.) விலையேற்றம் பார்க்க; see *vilai-y-ēṟṟam.* *'நல்லெண்ணெய் விலை தூக்கமாக இருக்கிறது'.*

[விலை + தூக்கு → தூக்கம்]

விலைதீர்-தல் *vilai-tīr-,* 4 செ.கு.வி. (v.i.) விலை உறுதியாதல் (வின்.); to settle or confirm the price.

[விலை + தீர்-,]

விலைநலப்பெண்டிர் *vilai-nala-p-peṇḍir,* பெ.(n.) பரத்தையர்; harlots. *"விலைநலப் பெண்டிரிற் பலர்மீக் கூற" (புறநா. 365).*

[விலை + நலம் + பெண்டிர்]

விலைப்பட்டி *vilai-p-paṭṭi,* பெ.(n.) 1. விற்ற பண்டங்களின் விலைக் குறிப்பு; list of prices; invoice. 2. விற்பனைக் கணக்கு; sales account.

[விலை + பட்டி, பட்டி = அட்டவணை, அட்டவணைக்குறிப்பு.]

விலைப்படு-தல் *vilai-p-paḍu-*, 20 செ.கு.வி. (v.i.) விலையாதல்; to be sold.

[விலை + படு-,]

விலைப்பண்டம் *vilai-p-paṇḍam*, பெ.(n.) விலைச்சரக்கு பார்க்க; see *vilai-c-carakku*.

[விலை + பண்டம்]

விலைப்பணம் *vilai-p-paṇam*, பெ.(n.) விலைத்தொகை (வின்.); price money.

[விலை + பணம்]

விலைப்பருவம் *vilai-p-paruvam*, பெ.(n.) 1. விலையின் நிலைமை (யாழ்.அக.); position of the market. 2. விலையாகும் காலம்; time of sale.

[விலை + பருவம்]

விலைப்பலி *vilai-p-pali*, பெ.(n.) பயன்கருதித் தெய்வங்கட்கிடும் படையல்; sacrificial offering given to deities, with a view to gaining their favour. *"விலைப்பலி யுண்ணும் மலர்பலி பீடிகை" (சிலப். 12, 43).*

[விலை + பலி]

Skt. Bali > த. பலி.

விலைப்பிரமாணக்கச்சாத்து *vilai-p-piramāṇa-k-kaccāttu*, பெ.(n.) விலைத்திட்டு பார்க்க; see *vilai-t-tiṭṭu*.

[விலைப்பிரமாணம் + கச்சாத்து. கச்சாத்து = பற்றுச்சீட்டு]

Skt. *pramāna* > த. பிரமாணம்

விலைப்பிரமாணம் *vilai-p-piramāṇam*, பெ.(n.) விலைத்தீட்டு (S.I.I.i, 104) பார்க்க; see *vilai-t-tiṭṭu*.

[விலை + பிரமாணம்]

Skt. *pramāna* > த. பிரமாணம்.

விலைப்பிரமாணவிசைவுதீட்டு *vilai-p-piramāṇa-v-iśaivutiṭṭu*, பெ.(n.) விலைத்தீட்டு (S.I.I.iv, 127) பார்க்க; see *vilai-t-tiṭṭu*.

[விலைப்பிரமாணம் + இசைவுச்சீட்டு → இசைவுதீட்டு. இசைவுதீட்டு = ஒப்புகை ஆவணம்.]

Skt. *pramāna* > த. பிரமாணம்.

விலைப்போ-தல் *vilai-p-pō-*, 8 செ.கு.வி. (v.i.) விலைபோ-, பார்க்க; see *vilai-pō-*.

[விலை + போ-,]

விலைபெறு-தல் *vilai-peṟu*, 5 செ.கு.வி. (v.i.) 1. தக்க விலை பெறுதல்; to be worth, a good price. *"நல்லாவின் கன்றாயி னாகும் விலைபெறூஉம்" (நாலடி,115).* 2. விலை போ-, பார்க்க; see *vilai-pō-*. 3. மதிப்பு மேம்படுதல்; to be valued high.

[விலை + பெறு-,]

விலைபேசு-தல் *vilai-pēšu-*, 9 செ.குன்றாவி. (v.t.) விலைபற்றி உசாவுதல்; to bargain or discuss the price of, to negotiate price.

[விலை + பேசு-,]

விலைபொருந்து-தல் *vilai-porundu-*, 5 செ.கு.வி. (v.i.) விலை தகுதியாதல் (வின்.); to be worth the price.

[விலை + பொருந்து-,]

விலைபோ-தல் *vilai-pō-*, 9 செ.கு.வி. (v.i.) விலையாதல்; to fetch a price. *'நல்ல மாடானால் உள்ளூரிலே விலை போகாதா?'.*

[விலை + போ-,]

விலைபோடு-தல் *vilai-pōḍu-,* 9 செ.கு.வி. (v.i.) விலைத்தொகை குறித்தல் (வின்.); to estimate or fix a price.

[விலை + போடு-,]

விலைமகள் *vilai-magaḷ,* பெ.(n.) பரத்தை; harlot. *"விலைமக ளனைய நீயும் கல்லிய லாதி யென்றான்" (கம்பரா. அகலி. 79), 'விலைமகட்கு அழகு தன்மேனி மினுக்குதல்' (பழ.).*

மறுவ. பொதுமகள்.

[விலை + மகள்]

விலைமதிப்பு *vilai-madippu,* பெ.(n.) விலை மதிப்பிடுகை; estimate of price.

[விலை + மதிப்பு]

விலைமாது *vilai-mādu-,* பெ.(n.) விலைமகள் பார்க்க; see *vilai-magaḷ.*

[விலை + மாது]

விலைமானம் *vilai-māṉam-,* பெ.(n.) விலைமதிப்பு (யாழ்.அக.) பார்க்க; see *vilai-madippu.*

[விலை + மானம்]

விலைமேவு-தல் *vilai-mēvu-,* 10 செ.கு.வி. (v.i.) 1. விலையை ஒத்துக் கொள்ளுதல் (வின்.); to agree the price. 2. எளிதாக விலையாதல்; to be easily saleable.

[விலை + மேவு-,]

விலையருத்தம் *vilai-y-aruttam,* பெ.(n.) விலைப்பணம் (நாஞ்.நா); purchase money.

*[விலை + **Skt.** artha > த. அருத்தம்]*

விலையாட்டி *vilaiyāṭṭi,* பெ.(n.) பண்டம் விற்பவள்; trades woman. *"கள் விலையாட்டி" (சிலப். 12, உரை, பக். 320).*

[விலை + ஆட்டி. ஆட்டி = பெண்பாலீறு. ஒ.நோ. மூதாட்டி.]

விலையாவணம் *vilai-y-āvaṇam,* பெ.(n.) விலைத்தீட்டு பார்க்க; see *vilai-t-tīṭṭu. "நிலமுற்றும் விற்று விலையா வணஞ்செய்து கொடுத்தோம்" (S.I.I.iii.110).*

[விலை + ஆவணம்]

விலையாள் *vilai-y-āḷ,* பெ.(n.) அடிமை; slave. *"விலையாளா வடியேனை வேண்டுதியோ" (திவ். பெரியதி. 5, 5, 2).*

மறுவ. தொழும்பன்

[விலை + ஆள்[1]]

விலையாளன் *vilai-y-āḷaṉ,* பெ.(n.) விலைகூறி பண்டம் விற்போன் (வின்.); seller, dealer, merchant.

[விலை + ஆள் → ஆளன்.]

விலையிடு-தல் *vilai-y-iḍu,* 20 செ.கு.வி. (v.i.) விலைபோடு-, பார்க்க; see *vilai-pōḍu. "தேவிக்காவதோர் காற்கணி நீ விலையிடுதற்காதியோ" (சிலப். 16, 112).*

[விலை + இடு-,]

விலையிறங்கு-தல் *vilai-y-iṟaṅgu,* 10 செ.கு.வி. (v.i.) விலைத்தொகைகுறைத்தல்; to reduce or fall in price.

மறுவ. விலை வீழ்-தல்.

[விலை + இறங்கு-,]

விலையுணி *vilai-y-uṇi,* பெ.(n.) 1. விலைக்குத் தன்னை விற்பவன் (வின்.); one who sells himself, as a slave to clear off or in lieu

of a debt. 2. கடனுக்காக உடைமையை இழந்தவன்; one whose entire property is sold or lost for clearing debt. 3. விலைக்கு வாங்கி விற்கப்படும் அடிமை (வின்.); slave, resold.

[விலை + உண் → உணி]

விலையுயர்–தல் *vilai-y-uyar-,* 2 செ.கு.வி. (v.i.) 1. விலைத் தொகை மிகுதல்; to raise in price. 2. பெருமதிப்புடையதாதல்; to be valuable.

[விலை + உயர்–,]

விலையேற்றம் *vilai-y-ēṟṟam,* பெ.(n.) 1. விலைத்தொகை மிகுகை; raise in price. 2. அதிகவிலை யுடையதாகை; costliness; prohibitive cost.

[விலையேறு → விலையேற்றம்]

விலையேற்று–தல் *vilai-y-ēṟṟu-,* 5 செ. குன்றாவி.(v.t.) பண்டங்களின் விலை மிகும்படி செய்தல்; to raise the price, as of an article.

[விலை + ஏற்று–,]

விலையேறு–தல் *vilai-y-ēṟu,* 5 செ.கு.வி. (v.i.) விலையுயர் பார்க்க; see *vilai-y-uyar.*

[விலை + ஏறு–,]

விலையொட்டு–தல் *vilai-y-oṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) பண்டங்களின் விலையைச் சிறிது கூட்டிச் சொல்லுதல் (வின்.); to add slightly to the price.

[விலை + ஒட்டு–,]

விலையொறு–த்தல் *vilai-y-oṟu,* 4 செ.கு.வி. (v.i.) விலை அதிகமாதல் (யாழ்ப்.); price on ascending trend.

[விலை + ஒறு–,]

விலையொறுப்பு *vilai-y-oṟuppu,* பெ.(n.) விலையேற்றம் (யாழ்ப்.); escalation of price.

[விலை + ஒறுப்பு]

விலையோலை *vilai-y-ōlai,* பெ.(n.) விலைத்தீட்டு பார்க்க; see *vilai-t-tīṭṭu.* *"இதுவே விலையோலை ஆவதாகவும்" (S.I.I.iii, 154, 23).*

[விலை + ஓலை]

விலைவன் *vilaivaṉ,* பெ.(n.) கூலியின் பொருட்டாக ஒன்றைச் செய்பவன்; one who does a thing for money, one does a thing in anticipation of money or remuneration. *"மற்றிவன் விலைவன் போலான்" (புறநா.152).*

[விலை → விலையன் → விலைவன்]

விலைவாசி *vilaivāśi,* பெ.(n.) விலையளவு; rate of price, current price trend.

[விலை + வாசி]

விலைவிழு–தல் *vilai-viḻu-,* 2 செ.கு.வி. (v.i.) விலையிறங்கு–, பார்க்க; see *vilai-iṟaṅgu.*

[விலை + விழு–,]

விலைவை–த்தல் *vilai-vai,* 19 செ.கு.வி. (v.i.) விலைபோடு–, (யாழ்.அக.) பார்க்க; see *vilai-pōḍu-,*

[விலை + வை–,]

விவரநாலிகை *vivara-nāligai,* பெ.(n.) மூங்கில் (சங்.அக.); bamboo.

[வயிர் → வயிரம் → வெயிரம் → விவரம் + நாலிகை]

விவரம் *vivaram,* பெ.(n.) 1. துளை; fissure, hole, cavity, hollow, vacuity. 2. மலைக் குகை (சூடா.); cave. 3. இடைவெளி; intervening space. *"பிலங்களேழு மதனிடையிடை விழுந்த.... வேர் விவரம்" (தக்கயாகப். 147).* 4. வரலாற்றுக் குறிப்பு; particulars, details; circumstance, as of a narrative.

[வயிர் → வயிரம் → வெயிரம் → விவரம்]

விழ *vila,* பெ.(n.) விழா பார்க்க; see *vilā. "விழ வித்தாய் வீடுபெற்றான்" (சீவக. 3114).*

[விழா → விழ]

விழக்குழிபாய்ச்சு-தல் *vila-k-kuli-pāyccu-,* 9 செ.கு.வி. (v.i.) 1. படுகுழியில் வீழ்த்துதல்; to throw into a deep pit. 2. பிறனுக்கு இடையூறு செய்து வினைக்கேடு விளைத்தல்; to thwart an undertaking by putting obstacles in the way.

[விழு → விழ + குழிபாய்ச்சு-,]

விழத்தட்டு-தல் *vila-t-tattu-,* 5 செ. குன்றாவி.(v.t.) 1. கீழ்விழும்படித் தள்ளுதல்; to overthrow, fell down. 2. பிறன் கையிலுள்ளதைத் தட்டிவீழ்த்துதல்; to fall a thing dashing out of another's hand.

[விழு → விழ + தட்டு-,]

விழத்தள்ளு-தல் *vila-t-tallu-,* 5 செ. குன்றாவி.(v.t.) விழத்தட்டு-, (வின்.) பார்க்க; see *vila-t-tattu.*

[விழு → விழ + தள்ளு-,]

விழம்பு *vilambu,* பெ.(n.) சோறு (யாழ்.அக.); boiled rice.

[அவிழ் → விழம்பு]

விழல்[1] *vilal,* பெ.(n.) விழுகை; falling. *"பாவாடை விடலொன்றே நரகத்தில் விழலொன்றே".*

[விள் → விழல்] (வே.க.156)

விழல்[2] *vilal,* பெ.(n.) 1. பயனின்மை; worthlessness, being valueless. *"அழல தோம்பு மருமறையோர் திறம் விழல தென்னு மருகர்" (தேவா. 366, 7) (பிங்.).* 2. நாணற்புல் வகை; a variety of sacred grass. *"காமரெழில் விழலுடுத்த" (திவ். பெருமாள். 9, 7).* 3. பயனற்ற கோரைவகை; a kind of sedge. 5. ஒரு நறுமண வேர்; cuscus grass.

[விள் → வெள் → விழல்]

Ma. *viral;* **Ka.** *biril;* **Te.** *vidavali.*



விழல்கட்டி *vilal-katti,* பெ.(n.) விழற்புல்லாற் பின்னுவோன் (இ.வ); one who knits sacred grass.

[விழல் + கட்டு → கட்டி]

விழலரிசி *vilalarisi,* பெ.(n.) புல்லினத்தைச் சேர்ந்த கோரையரிசி; rice of the sedge.

[விழல் + அரிசி]

இவ்வரிசியை நொய்யாக்கிக் கஞ்சி காய்ச்சியுண்ண எந்நோய்கள் நீங்கும் என்பதை

குணபாடப் பாடல் காட்டுகிறது.

"விழலரிசி யென்றான் மிகுபித்த மேகும்
அழல் குடலின் வாதம் அகலும் – துழவு
திரிதோட மேகவிவை சேராவா நீயுங்
குறியா இதையறிந்து கொள்" (கு.பா.)

விழலன் *vilalan,* பெ.(n.) ஒன்றுக்கும் உதவாதவன்; idler, worthless man, a man of good for nothing. *"விழல னெனையாள நினைவாய்" (திருவேங். சத. 86).*

மறுவ. உதவாக்கரை, விழலி.

[விழல் → விழலன்] (வே.க.156)

விழலாண்டி *vilal-āṇḍi,* பெ.(n.) சோம்பித்திரியும் வீணன் (வின்.); idler, worthless man; lazy fellow.

[விழல் → விழலாண்டி] (வே.க.156)

விழலி *vilali,* பெ.(n.) ஒன்றுக்கும் உதவாதவள்; idle woman, worthless woman, a woman of good for nothing. *"வீணிகள் விழலிகள்" (திருப்பு. 890).*

[விழல் → விழலன் → விழலி] (வே.க.156)

விழலுக்கிறை-த்தல் *vilalukkirai-,* 4 செ.கு.வி. (v.i.) வீண்பாடுபடுதல்; to labour unprofitably, as watering unproductive grass. *'விழலுக் கிறைத்த நீர்போல' (பழ.).*

[விழலுக்கு + இறை-,]

விழவணி *vila-v-aṇi,* பெ.(n.) நன்னாளில் அணியும் ஒப்பனை; adornment of the person on festive occasions, as marriage etc. *"வதுவை விழவணி வைகலுங் காட்டினை" (கலித். 98).*

[விழவு + அணி]

விழவர் *vilavar,* பெ.(n.) விழா கொண்டாடுவோர்; those who celebrate a festival. *"தண்பதங்கொள் விழவ ரோதை சிறந்தார்ப்ப" (சிலப். 7, பக். 206).*

[விழா → விழவு → விழவர்]

ஒ.நோ. உழவு → உழவர்

விழவாற்றுப்படு-த்தல் *vilavāṟṟu-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) விழாவை நிறைவு செய்தல்; to bring a festival to a close, ralidiction. *"விழவாற்றுப்படுத்த பிற் புல்லென்ற களம்போல" (கலித். 5.)*

[விழவு → விழா + ஆற்றுப் படு-த்தல்,]

விழவி *vilavi,* பெ.(n.) பூடுவகை; a plant. *"ஒருபிடி விழவியிலையும்" (தஞ். சர.* iiii, 290).

விழவு *vilavu,* பெ.(n.) 1. விழா பார்க்க; see *vilā. "முந்நீர் விழவி னெடியோன்" (புறநா. 9).* 2. விளையாட்டு; pastime. *"ஊரனொடப்பு விழவமரும் பணிமொழி யரிவை" (பு.வெ.12. பெண்பாற். 10).* 3. அவா (அரு.நி.); desire, longing. 4. இரட்டை ஓரை (மிதுனராசி) (பிங்.); gemini of the zodiac.

[விழா → விழவு]

விழவுக்களம் *vilavu-k-kaḷam,* பெ.(n.) விழா நடைபெறும் இடம்; place of celebration of a festival. *"விழவுக்கள நந்தி" (குறிஞ்சிப். 192).*

[விழா → விழவு + களம் [2]]

விழவேடெடு-த்தல் *vila-v-ēḍedu-,* 4 செ.கு.வி. (v.i.) நூலினைத் திருடிக் கொள்ளுதல்; to steal one's book. *"அவ்வூரில் விழவே டெடுத்துக் கொண்டறிதல்..... செய்வாரில்லை" (திவ். பெரியதி. 8,1, 8. வ்யா.).*

[விழ + ஏடு + எடு-,]

விழற்கட்டு *viḻaṟ-kaṭṭu,* பெ.(n.) விழற்புல் வேய்ந்த வீடு (யாழ்.அக.); house thatched with *viḻal* grass.

[விழல் + கட்டு]

விழற்கிறை-த்தல் *viḻaṟkiṟai-,* 4 செ.கு.வி. (v.i.) விழலுக்கிறை-, பார்க்க; see *viḻalu-k-kiṟai-.* *"சுத்தப் பாமரராய் விழற்கிறைத்துப் பட்டனரால்" (பிரபோத. 13, 14), 'விழலுக்கு இறைத்த நீர்' (பழ.).*

[விழலுக்கு + இறை-,]

விழற்கூரை *viḻaṟ-kūrai,* பெ.(n.) விழற்புல் வேய்ந்த கூரை; roof of *viḻal* grass thatch.

மறுவ. கூரைவீடு.

[விழல் + கூரை]



விழற்பாய் *viḻaṟ-pāy,* பெ.(n.) விழற்புல்லாற் பின்னிய பாய்; mat made of *viḻal* grass. *'வெயில்நாளில் விழற்பாயும் குளிர்நாளில் கோரைப்பாயும்' (உ.வ.).*

[விழல் + பாய்[2]]

விழா *viḻā,* பெ.(n.) 1. விழாக்கொண்டாட்டம்; festive occasion, festivity, celebration of an event. *"ஆலமர் செல்வன்... மகன் விழாக் கால்கோளென்று" (கலித். 83).* 2. திருமணக் கொண்டாட்டம்; celebration of a marriage. *"அரசிளங் குமரர்க்குயர் விழா நடத்தி" (திருவாலவா. 25, 24).*

ம. விழா.

[விழு → விழை → விழா]

[விழாக்கள் பண்டைக்கால மக்கள் ஒன்று சேர்ந்து நடத்தும் கூட்டுச் சடங்கிலிருந்து தோன்றியனவாகும். பண்டைமக்கள், தனி ஒருவருக்கோ குழுவினருக்கோ தீங்கான நெருக்கடி உண்டாகும் காலத்தில் அதை நீக்கிக் கொள்வதற்காகவும், அந்தக் காலத்தில் உண்டாகும் உள்ளக்கிளர்ச்சி அமைதி யடைவதற்காகவும் சடங்குகளில் கலந்துகொள்வது வழக்கமாயிருந்தது.

நாட்டுப்புறத்தில் நடைபெறும் பலவகையான விழாக்கள் பெரும்பாலும் மதத் தொடர்பானவையாகும். இந்த விழாக்கள் புராண இதிகாசங்களிலுள்ள பல நிகழ்ச்சிகளை அடிநிலையாகவுடையன. இவை நாடகம், நடனம், பாடல்கள், விளையாட்டுகள் என்றவாறு கொண்டாடப்பெறும். இவை மக்களை ஒற்றுமைப்படுத்தும்; மதக்கொள்கைகளை இறவாமல் பாதுகாக்கும் ஆற்றலுடையன.

வேளாண்மை செய்வோர் பருவகால வேறுபாடுகளுக்குத் தக்க விழாக்களும், நாற்று நடுதல், அறுவடை செய்தல் போன்ற பல நிகழ்ச்சிகளுக்குத் தக்க விழாக்களும் உடையர். கடக(ஆடி)த் திங்களில் தென்னிந்திய ஆறுகள் வெள்ளப் பெருக்குடையன. அக்காலங்களில் மக்கள் ஆற்றுத் தெய்வங்களை வழிபடும் விழாக்கள் நடத்திப் பயிரிடத் தொடங்குவர். சுறவத்(தை) திங்களில் அறுவடை விழாவாகப் பொங்கல் விழாவைக் கொண்டாடுவர். அச்சமயம் அறுவடை செய்த தவசத்தை ஞாயிற்றுக் கடவுளுக்குப் படைப்பர். இவ்வாறு இந்திய மக்கள் மற்ற நாட்டார் போலவே வாழ்வின் இன்றியமையாத கட்டங்களில் விழாக்களை நடத்தி, நாகரிகத்தை இறவாமற் பாதுகாப்பர்]

விழாக்கடி *viḻā-k-kaḍi,* பெ.(n.) விழாக்காட்சி (வின்.); sights of a festival.

[விழா + கடி[5]]

விழாக்கால்கோள் *viḻā-k-kāl-kōḷ,* பெ.(n.) திருவிழாத் தொடக்கம்; commencement of a festical. *"ஆலமர் செல்வன் மகன் விழாக் கால்கோள்" (மணிமே. 3, 144.).*

[விழா + கால்கோள்]

விழாக்கோள் *viḻā-k-kōḷ,* பெ.(n.) திருவிழாக் கொண்டாட்டம்; celebration of a festival. *"விழாக் கோளெடுத்த நாலேழ் நாளினும்" (மணிமே. 1, 7).*

[விழா + கோள்]

விழாக்கோளாளர் *viḻā-k-kōḷāḷar,* பெ.(n.) அரசர் முதலியோர் ஆணைப்படி திருவிழா நடத்துவோர்; those who conduct a festival, as by order of a king and others. *"விழாக்கோ ளாளரைக் குழாத்திடைத் தரீஇ" (பெருங். உஞ்சைக். 37, 247).*

[விழாக்கோள் + ஆளர்]

விழாப்புறம் *viḻā-p-puṟam,* பெ.(n.) திருவிழா நடைபெறுதற்கு விடப்பட்ட இறையிலி நிலம் (T.A.S.i,6); land-endowment for the conduct of festivals.

[விழா + புறம் ¹]

விழால் *viḻāl,* பெ.(n.) விழாலரிசி (தைலவ.) பார்க்க; see *viḻāl-ariši.*

[விழல் → விழால்]

விழாலரிசி *viḻāl-ariši,* பெ.(n.) ஒருவகைப் புல்லரிசி (தைலவ.); seed of a kind of grass.

தெ. விடவலி.

[விழால் + அரிசி]

விழாவணி *viḻā-v-vaṇi,* பெ.(n.) 1. விழவணி பார்க்க; see *viḻa-v-aṇi.* 2. திருவிழாச் சிறப்பு; ceremonial grandeur, as of festivities. *"நித்தல் விழாவணி நிகழ்வித் தோனே" (சிலப். உரைபெறுகட். 4).* 3. வீரனது போர்க்களம்; state or appearance of an armed warrior for battle. *"வில்லின் செல்வன் விழாவணி விரும்பி நோக்கி" (கம்பரா. மீட்சிப். 55).*

[விழா + அணி]

விழி¹-த்தல் *viḻi-,* 11. செ.கு.வி. (v.i.) 1. கண்திறத்தல்; to awaken; to open the eyes. *"இமையெடுத்துப் பற்றுவே னென்றியான் விழிக்குங்கால்" (கலித். 144).* 2. உறக்கம் தெளிதல்; to wake from sleep. *"உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" (குறள்,339).* 3. விழிப்பாக இருத்தல்; to be watchful, beware of, to be vigilant, to be wide awake alert. *'அவன் சோர்வு போகாமல் விழித்துக் கொண்டிருப்பவன்'.* 4. உண்ணித்து நோக்குதல்; to look at attentively or pointedly. *" நாட்டார்கள் விழித்திருப்ப... நாயினுக்குத் தவிசிட்டு" (திருவாச. 5, 28).* 5. மருண்டு நோக்குதல்; to gaze, stare. *"விண்ணின்று மிழியாம லெப்போதும் வானோரர் விழிக்கின்றதே" (பிரபோத. 6, 14).* 6. ஒளிர்தல்; to shine. *"பொன்னு ணிருள் கெட விழிப்ப" (சீவக. 2280).* 7. தெளிவாதல்; to be clear. *"மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" (தொல். சொல். 394).* 8. உயிர் வாழ்தல்; to be alive. *"அழற்கணாக மாருயிருண்ண விழித்தலாற்றேன்" (மணிமே. 23, 70).*

[விள் → விழி → விழி-,] (வே.க.143)

விழி[2] *viḻi,* பெ.(n.) 1. கண் (பிங்.); eye. *“விழியிலா நகுதலை” (தேவா. 345, 5).* 2. மிண்டை; eye-ball. 3. அறிவு; knowledge; wisdom. *“தேறார் விழியிலா மாந்தர்” (திருமந். 177).*

Skt. வித்; ம. மிழி.

[விள் → விழி]

விழி = 1. அறிவு. 2. ஒதி (ஞானம்).

"தேறார் விழியிலா மாந்தர்" (திருமந். 177).

L. Vide, **E.** vide, **Skt.** Vid = to know.

வித்யா, வித்வான், வைத்ய, வேத, வேதஸ் (dh.) முதலிய பலசொற்கள் 'வித்' என்னும் மூலத்தினின்று பிறந்தவையே.

ஆகவே ஆரியர்க்கு ஞானமும் வித்தையும் தமிழினின்றே தோன்றின என அறிக.

வித்யா என்னும் வடசொல், தமிழில் வித்தை, விச்சை, விஞ்சை என முறையே திரியும். ஆரியர் இதைக் கொண்டு, விழி என்பதன் திரிபே 'வித்' என்பதை அறியாத தமிழரை மயக்குவர் (வ.மொ.வ.92).

விழிக்கட்பேதைப்பெருங்கண்ணனார் *viḻi-kaṭ-pēdai-p-peruṅkaṇṇaṉār,* பெ.(n.) கடைக்கழகப் புலவர்; a sangam poet.

கடைக்கழகக் காலப் புலவருள் ஒருவர். இவரியற் பெயர் பெருங்கண்ணனார் என்பது இவர் செய்யுளில் (நற். 242) மான் குட்டியை விழிக்கட் பேதையென அழைத்துள்ளதால் இப்பெயர் பெற்றாரென்பர்.

விழிகண்குருடு *viḻi-kaṇ-kuruḍu,* பெ.(n.) வெளித்தோற்றத்தில் விழியில் மாறு பாடின்றியே கண்தெரியாமை; blindness without any apparent defect in the eye. *“அவமுறு விழிகண்குருடொடு மாவி யயர்வுறும்” (கடம்ப. பு. இலீலா. 104.).*

[விழிகண் + குருடு]

விழிகண்ணன் *viḻi-kaṇṇaṉ,* பெ.(n.) கண்பார்வையுள்ளவன்; one who is not blind. *'குருடர்க்கு வைத்த அறச்சாலையில் விழிகண்ணர் புகுதரலாமோ வென்று' (திவ். அமலனாதி. 3, வ்யா. பக். 46).*

[விழி + கண்ணன்]

விழிச்சி *viḻicci,* பெ.(n.) காதுக்குள் வெடிக்குங்கட்டி (M.L); inflammation of the internal ear, otitis.

மறுவ. எழுச்சி.

விழிஞம் *viḻiñam,* பெ.(n.) திருவிதாங் கூரிலுள்ள ஒரு துறைமுகப்பட்டினம்; a harbour town on the seacost of Travancore. *“விழிஞக் கடற் கோடியுள் வேல்வலங்கைக் கொண்டான்” (இறை. 3, உரை).*

விழிதுறை *viḻituṟai,* பெ.(n.) 1. நீர்க்கரை; shore, bank, ford. 2. இறங்குதுறை; ghat, ford.

[இழிதுறை → விழிதுறை]

விழிப்ப *viḻippa,* இடை.(part.) முற்றும் விளங்க, தெளிவாக; to be clear, to illustrate. *"மொழிப் பொருட் காரணம் விழிப்பத்தோன்றா" (தொல்.உரி.96).*

சொற்களின் பொருட்களுக்குக் காரணம் உண்டு என்பது மட்டும் தேற்றம்.

விழிப்பு *viḻippu,* பெ.(n.) 1. விழிக்கை; waking up, awakening. 2. எச்சரிக்கை; watchful ness, vigilance, awareness. 3. சிறந்து விளங்குகை (வின்.); conspicuousness, prominence. 4. செய்வது தெரியாமல் திகைக்கை; blinking caution in ignorance.

[விள் → விழி → விழிப்பு]

விழிபிதுங்கு-தல் *vil̠i-piduṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) வேலை நெருக்கடியால் வருந்துதல்; to suffer from over work.

[விழி + பிதுங்கு-,]

விழிமி *vil̠imi,* பெ.(n.) விழுதி (பிங்.) பார்க்க; see *vil̠udi.*

விழியம் *vil̠iyam,* பெ.(n.) வித்தமிழ்து; semen.

விழியன் *vil̠iyan̠,* பெ.(n.) 1. பெருங் கண்ணுடையவன் (வின்.); one having large prominent eyes. 2. பிதுங்கிய விழி யுடையவன்; one having bulging eyes.

[விழி → விழியன்]

விழிவாதம் *vil̠i-vādam,* பெ.(n.) இமைகளையாட்டும் கண்ணோய்வகை (சீவரட்); a disease of the eye that causes twitching.

*[விழி + **Skt.** vāda > த. வாதம்]*

விழிவிழுங்கி *vil̠i-vil̠uṅgi,* பெ.(n.) கண்ணோய்வகை (யாழ்.அக.); an eye-disease.

[விழிவிழுங்கு → விழிவிழுங்கி]

விழு¹-தல் *vil̠u-,* 4 செ.கு.வி. (v.i.) 1. கீழ் நோக்கி யிழிதல்; to fall, fall down, to descend; to flowdown. *"விழுஉமவ்வெள் ளருவி" (பதிற்றுப். 78, 1).* 2. நிலம் படியச் சாய்தல்; to lie prostrate, as in reverence. *"பாடல் புரிந்து விழுந்தெழுந்து..... பயில்வித்தார்" (பெரியபு. திருநா. 309).* 3. சோர்ந்து வீழ்தல்; to fall down exhausted. *"வெஞ்சினவீரர் விழுந்தனர்" (கம்பரா. இராவணன்வதை. 36.).* 4. நோய் வாய்ப்பட்டுக் கிடத்தல்; to fall sick or ill, to be bed-ridden. 5. தோற்றுப்போதல்; to be defeated or overthrown. *'அவன் வாக்கு வாதத்தில் விழுந்துவிட்டான்'. 'விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்கிறார்'.* 6. தாழ்தல்; to fall low, decline, slash as prices, to sink to a lower leve. *'விலை விழுந்து விட்டது'.* 7. கெடுதல்; to be destroyed, ruined. *"விழுந்தன கொடிய தீவினைப் பரப்பெலாம்" (பிரபுலிங். அக்கமா. உற். 11).* 8. சாதல்; to die. *'அவர் விழுந்து போனார்'.* 9. மறைதல்; to set, as the sun. *"விழுந்த ஞாயிறு வெழுவதன் முன்" (கம்பரா. காப்பு. 9).* 10. வழக்கிலின்றி ஒழிதல்; to fall into desuetude to be iobsolete. 11. தங்குதல்; to settle, to be fixed. *'அவன் நினைவு அதிலே விழுந்தது'.* 12. திரண்டு கூடுதல்; to crowed to gether, to swarm. *'மக்கள் வந்து விழுகிறார்கள்'.* 13. கிடைத்தல்; to be allotted, to fall to one's lot or share. *'சீட்டு அவனுக்கு விழுந்தது'.* 14. பதிதல்; to be imprinted. *'புகைப்படம் நன்றாய் விழுந்திருக்கிறது'.* 15. வெளித் தோன்றுதல்; to appear, to be formed, to come out. *'துளை விழுந்த மரம்'. 'மாட்டுக்கு இரண்டு பல் விழுந்திருக்கிறது'. 'கிழங்கு விழுந்தது'.* 16. நேர்தல்; to take place, happen. 17. கழிதல்; to pass, to pass away. *'இப்படி நாள் விழுகை யாலும்' (S.I.I.V.140).* 18. ஒருவன் மீது தாக்கிச் செல்லுதல். *'பகைமேல் விழுந்தான்'.* 19. விருப்பங் கொள்ளுதல்; to exhibit desire. *"ஐம்புலன் மேல் விழுந்து" (திருநூற். 13).* 20. இடத்திற் பொருந்துதல்; to fit into position. 21. உரிமை முதலியன இறங்குதல்; to devolve. 22. பிறத்தல்; to be born, used in contempt. *'பெண் கட்டை விழுந்தது'.* 23. சொல் முதலியன வெளிப்படுதல்; to

issue, proceed from,. as speech. 24. பிரிவு படுதல்; to become detached. 25. கீழ் நோக்கிப் பாய்தல்; to swoop. 26. ஆறு முதலியன கூடுமிடம்; to decharge, empty as ariver. 27. தொங்குதல்; to hang down, droop. 28. கடுஞ்சினங் கொள்ளுதல்; to fall into a rage. 29. முகம் முதலியன வாடுதல்; to lose animation, as face. 30. பணம் முதலியன முடங்கிக் கிடத்தல்; to be locked up, as capital.

க. பீழு; **Ma.** *viruka*; **Ko.** vig; **To.** pid; **Ka.** *birisu*; **Kod.** bu.L; **Tu.** *būruni*; **Te.** biddu; **Kui.** *vriva*; **Kuwi.** briali.

[வீழ் → விழு–,]

விழு²–தல் *vilu-,* 4 செ.கு.வி. (v.i.) விரும்புதல், விருப்பங்கொள்ளுதல்; to desire. *"ஐம்புலன்மேல் விழுந்து" (திருநூற். 13) (வே.க.119).*

விழு³–த்தல் *vilu-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. விழச் செய்தல்; to cause to fall, to throw down. *"பழைய கால்விழுத்த நெடுவேலைவீழ் வெற்பனை" (பாரத. இராசசூய. 64).* 2. மடியச் செய்தல்; to cause to die. *"நமன்றமர்... விழுப்பதன் முன்" (தேவா. 420. 6).* 3. களைதல்; to abandon, to remove, mitigale, enadicate. *'அரைத்துணியை விழுத்து வை'.*

[விழு¹ → விழு–,]

விழு⁴ *vilu,* பெ.எ.(adj.) 1. சிறந்த; excellent, sublime pure, blessed. *"விழுப்பேற்றி னஃதொப்ப தில்லை" (குறள், 162).* 2. துன்பமான (சீவக. 2355); distressing, grievous.

[விழு¹ → விழு]

விழுக்காடிடு–தல் *vilukkādidu-,* 18 செ. குன்றாவி.(v.t.) கூறிடுதல்; to apportion. *"ஒன்று மிரண்டுமாகப் பகுதியை விழுக்காடிட்டு" (சீவக. 798, உரை).*

[விழுக்காடு + இடு–,]

விழுக்காடு *vilukkādu,* பெ.(n.) 1. வீழ்கை; falling, flowing down, as of a waterfall. *"மலைநீர் விழுக்காடு" (திருவாலவா. 54, 9).* 2. கீழ் நோக்கான பாய்ச்சல்; swoop, as of a kite. *"பருந்தின் விழுக்காடு" (நன். 18, மயிலை.).* 3. பங்கு(வின்.); share, portion, lot. 4. மேனி; proportion, rate. *"நூறுகுழிக்குக் கலனேநானாழி நெல்லும் கால் பணமும் விழுக்காடு கொள்ளக் கடவதாகவும்"* (S.I.I.i, 93, 7). 5. தற்செயல்; chance. *"பகவத் குணானுபவம் வழிந்த பேச்சுகள் விழுக்காட்டாலே பண்ணான படி" (ஈடு. 3, 6, 11).* 6. மேல்வருவது; that which is in store in the future. *"இவனும் விழுக்காடறியாதே அகப்பட்டுக் கொடு நின்றான்" (ஈடு. 6, 1, 5, ஜீ.).* 7. பொருளின்றிக் கூட்டியுரைக்கப்படுஞ் சொல்; expletive. *"என்றால் என்பது ஓர் சொல் விழுக்காடு" (சீவக. 1886, உரை).* 8. எதிர்நிலைப் பொருள்; implication, implied sense. *"விழுக்காட்டாலே சொன்னார்" (ஈடு. 3, 3, 5.).*

விழுக்கு¹ *vilukku,* பெ.(n.) மென்று தின்னாமல் ஒருசேர வுட்கொள்ளுகை; gulp, swallow. *'ஒரு விழுக்கு விழுங்கினான்'.*

[விழுங்கு → விழுக்கு]

விழுக்கு² *vilukku,* பெ.(n.) 1. ஊன் கொழுப்பு; fat, suet. *"விழுக்கொடு விரைஇய வெண்ணிணச் சுவையினள்" (புறநா. 371).* 2. எண்ணெய்ப் பிசுக்கு; oiliness, grease.

ஒ.நோ. விழுது.

விழுக்குப்புரட்டு *viḻukku-p-puraṭṭu,* பெ.(n.) எண்ணெயில் வேகவைத்தெடுத்த கறிவகை (நாஞ்.); a relish prepared in oil.

மறுவ. வறுவல்.

[விழுக்கு + புரட்டு]

விழுங்கு-தல் *viḻungu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. மென்று தின்னாமல் ஒருசேர வுட் கொள்ளுதல்; to swallow, gulp, as food. *"தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று" (குறள், 931).* 2. முற்றும் விழுங்குதல்; to devour, consume, to absorb, to exhaust. *'நெருப்பு எல்லாவற்றையும் விழுங்கிவிட்டது'.* 3. தெளிவின்றிப் பேசுதல் (வின்.); to ulter indistinctly. 4. சொற்களை மழுப்புதல்; to be hesitant in speech, slurring over words. *'ஏன் விழுங்கி விழுங்கிப் பேசுகிறாய்'.* 5. வெல்லுதல்; to overcome. *"வெம்பு காலினை விழுங்கிட... உம்பர் மீதினிமிர் வாசுகி யொத்தான்" (கம்பரா. இராவணன் தானை. 3).* 6. கவர்தல்; to seize, capture, rob. *"விடையுடை யினநிரை விழுங்கன் மேயினார்" (சீவக. 1817).* 7. கொல்லுதல்; to kill. *"கல்லாமந்திரி விஷழுங்கப்பட்டான்" (சீவக. 385).* 8. எங்கும் நிறைதல்; to pervade; to swarm everywhere. *"வானகம் விழுங்கினர் விண்ணவர் வெளியின் றென்னவே" (கம்பரா. திருவவ. 85).*

தெ. மிங்கு; க. முங்கு; ம. விழுங்க.

விழுங்கும்பாம்பு *viḻuṅgum-pāmbu,* பெ.(n.) மதிற்பொறிவகை (சிலப். 15, 216, உரை); a deadly defensive machine in a fortress.

[விழுங்கு + பாம்பு]

விழுச்சிறை *viḻu-c-ciṟai,* பெ.(n.) சீரிய சிறைவாசம்; imprisonment without loss of dignity or honour. *"விலங்கி வில்லுமிழும் பூணான் விழுச்சிறைப் பட்டபோழ்தும்" (சீவக. 1167).*

[விழு⁴ + சிறை]

விழுச்செல்வம் *viḻu-c-celvam,* பெ.(n.) பெருஞ்செல்வம்; great fortune, immense wealth; imperishable treasure. *"கேடில் விழுச்செல்வங் கல்வி" (குறள், 400).*

[விழு¹ + செல்வம்]

விழுசுமை *viḻu-šumai,* பெ.(n.) பெருஞ்சுமை (யாழ்.அக.); heavy burden.

[விழு¹ + சுமை]

விழுத்தகை *viḻu-t-tagai,* பெ.(n.) பிறர்க்கில்லாத சிறப்பு; unequalled or uncomparable excellence. *"விழுத்தகை பெறுகென" (பரிபா. 11, 117).*

[விழு⁴ + தகை]

விழுத்தண்டு *viḻu-t-taṇḍu,* பெ.(n.) பெரிய ஊன்றுகோல்; large stick for support in walking. *"தொடித்தலை விழுத்தண் டூன்றி" (புறநா. 243).*

[விழு + தண்டு]

விழுத்தம் *viḻuttam,* பெ.(n.) கருஞ்சீரகம் (வின்.) பார்க்க; see *karuñcīragam.* black cumin.

விழுத்தாட்டு-தல் *viḻu-t-tāṭṭu-,* 5 செ. குன்றாவி.(v.t.) விழத்தட்டு-, பார்க்க; see *viḻa-t-taṭṭu-.*

[விழுக்காட்டு → விழுத்தாட்டு]

விழுத்திணை *viḻu-t-tiṇai,* பெ.(n.) உயர்குலம்; noble family. *"வேற்றுமை யில்லா*

விழுத்திணைப் பிறந்து" (புறநா. 27).

[விழு[1] + திணை]

விழுத்து[1]-தல் *viluttu-,* 5 செ.குன்றாவி.(v.t.) விழு[2]-, பார்க்க; see *vilu.* *"விழுத்தினன் சிரமெனும் வெகுளி மீக்கொள" (கம்பரா. இராவணன்வதை. 155).*

க. பிளிசு.

[விழு → விழுத்து]

விழுத்து[2] *viluttu,* பெ.(n.) இலக்கு; direction, aim, goal. *"அந்த விழுத்திலே ஓடினேன்" (இ.வ.).*

[விழு → விழுத்து]

விழுதி *viludi,* பெ.(n.) மருந்துச் செடிவகை; a straggling shrub with wimple oblong leaves and greenish flowers.

இரட்டை விதையிலை நிலைத்திணைகளிலே ஆதொண்டைக் குடும்பத்தைச் சேர்ந்த புதர் போன்ற குற்றுமரம். இதன் இலைகள் தனியிலைகள். கனி சூலகம் தாங்கியின் முனையில் இருக்கும். அது வெடிக்கும் விதைகளைச் சுற்றிலும் கிச்சிலி நிறமான சவ்வு மூடியிருக்கும். பறவைகள் இதைத் தின்னும். விதைகள் பறவைகளால் பரவலுறும். விழுதியின் இலையும் வேரும் மருந்தாகப் பயன்படும்.

விழுதிக்கீரை *viludi-k-kirai,* பெ.(n.) விழுதியின் இலை; leaves of *viludi.*

[விழுதி + கீரை]

"விழுதித் தழைகரப்பான் வெண்மேகம் நீங்கும்
பழுபடுவன் சூலைநோய் மாறும் - எழுபேதி
யாக்குமதி மந்தம் அகக் கிருமி துன்மலமும்
போக்கும் அதுவே புகல்" (கு.பா.)

விழுது *viludu,* பெ.(n.) 1. ஆலமரம் முதலியவற்றின் கிளைகளினின்று இறங்கும் வேர்த்தொகுதி (பெரும்பாண். 357, உரை); aerial root, as of the banyan. *"விழுதுடைத் தனியாலென விருந்த தொல்வியாதனை முகநோக்கி" (வில்லி. பாரத. சம்பவச்சருக்கம். 10.)* 2. தலை மயிர்ச் சடையின் ஒருகால் (இ.வ.); lock of hair. 3. நெசவுக்கருவி யுறுப்புள் ஒன்று; heddles. 4. ஆழமளக்குங் கருவி (Naut.); lead for sounding. 5. இறுகிக் கட்டியான நெய்; ghee in congealed state. 6. வெண்ணெய்; butter. *"ஆய்ச்சி விழுதுண்ட வாயானை" (திவ். இயற். 3. 25).* 7. கொழுப்பு (வின்.); fat. 8. நீர் விட்டரைத்துத் திரட்டியது; paste, pulpy mass. *'இந்த உழுந்து தோசைக் கரைத்தால் விழுது காணுமா?'*

க. பிலலு; ம. விழுது; தெ. *ūda.*

[விழு → விழுது]



விழுதுக்கயிறு *viludu-k-kayiru,* பெ.(n.) 1. நெசவுக் கயிறுவகை; thread of linen, wound on the two beams, which the slay moves up and down. 2. கடலின் ஆழமறிய உதவுங்கயிறு; (Naut. Man.71) sounding-line.

[விழுது + கயிறு]

விழுதுசாந்து *viludu-šāndu,* பெ.(n.) மையாக அரைத்த சுண்ணச் சாந்து (இ.வ.); mortar ground to a pulpy mass.

[விழுது + சாந்து]

விழுதுவிடு-தல் *viḻudu-viḍu-*, 20 செ.கு.வி. (v.i.) 1. ஆல் முதலியவற்றின் கிளைகளி னின்றும் வேர் வெளிப்பட்டுத் தோன்றுதல்; to drop or let down aerial roots, as banyan. 2. ஆழமளத்தல் (வின்.); to take soundings, to cast the lead-line.

[விழுது + விடு-,]

விழுந்தான்கொட்டு *viḻundāṉ-koṭṭu*, பெ.(n.) ஒருவன் இறந்ததைக் குறிக்கும் பறைமுழக்கு (இவ); a peculiar beat of drum, indicating the death of a person.

மறுவ. சாப்பறை.

[விழுந்தான் + கொட்டு]

விழுந்துபோ-தல் *viḻundu-pō-*, 8 செ.கு.வி. (v.i.) 1. கீழ் விழுதல்; to fall down. 2. இறத்தல்; to die. 3. குறுக்கு வழியாகச் செல்லுதல்; to cut across. *'அந்த ஊருக்கு இந்த வழியே விழுந்து போகவேண்டும்'.*

[விழு → விழுந்து + போ-,]

விழுப்பகை *viḻu-p-pagai*, பெ.(n.) சீரிய பகை; enmity towards the great. *"வேந்தனொடு நாடுதரு விழுப்பகை யெய்துக" (புறநா. 306).*

[விழு[4] + பகை]

விழுப்பம் *viḻuppam*, பெ.(n.) 1. விழுமம் 1, பார்க்க; see *viḻumam*. *"ஒழுக்கம் விழுப்பந் தரலான்" (குறள், 131).* 2. நன்மை (பிங்.); good, benefit. 3. குலம் (பிங்.); family ancestry pedigree. 4. விழுமம், 4 பார்க்க; see *viḻumam*. *"நின் விழுப்ப நீக்குதி" (விநாயகபு. 57, 23.).*

[விழு → விழுப்பம்]

விழுப்பரையன் *viḻupparaiyaṉ*, பெ.(n.) 1. விழுப்பாதராயன், 1 **(I.M.P.Tj. 89)** பார்க்க; see *viḻu-p-pāda-rāyaṉ*. 2. விழுப்பாதராயன், 2 பார்க்க; see *viḻu-pāda-rāyaṉ*. *"வேளாளனான விழுப்பரை யனுக்குக் கோயிற்கணக்கனென்றும்" (கோயிலொ. 44).*

[விழுப்பம் + அரையன்]

விழுப்பாதராயன் *viḻu-p-pāda-rāyaṉ*, பெ.(n.) 1. தமிழ் அரசர்க்குக் கீழ்ப்பட்ட தலைவரில் ஒருசாராரின் பட்டப்பெயர்; a title of a class of vassals of the Tamil kings.(I.M.P.Sm.47). 2. கோயிலிற் கடவுள் திருமுன்பு கணக்கு வாசிக்கும் உரிமையுடைய மரபினன்; a class of people whose duty is to read the accounts of a temple in the presence of the deity. *"பாண்டி பதினாலுக்கும் வேண்டிய விழுப்பா தராயர்" (திருவாலவா. அரும்.).*

[விழு[4] + பாதம்[1] + அரையன் → ராயன்]

விழுப்பாதிராசன் *viḻu-p-pādi-rāšaṉ*, பெ.(n.) விழுப்பாதராயன், 1 (I.M.P.Tj. 1092) பார்க்க; see *viḻu-p-pāda-rāyaṉ*. .

விழுப்பிணி *viḻu-p-piṇi*, பெ.(n.) தீராத முற்றிய நோய்; disease in an advanced acute and incurable stage. *"விழுப்பிணிப்போழ்து மறுமை மனத்தாரேயாகி" (நாலடி, 329).*

[விழு[4] + பிணி]

விழுப்பு[1] *viḻuppu*, பெ.(n.) 1. கழிக்கப்படுவது; anything cast off . *"விழுப்புற வதுக்கியிட்டு" (சீவக. 2771).* 2. நீராடுதல் செய்யுமுன் உள்ள தூய்மையின்மை; state of ceremonial impurity before daily bath. *'விழுப்புத் துணி'.*

[விழு → விழுப்பு]

விழுப்பு² *vil̤uppu,* பெ.(n.) விழுப்பம் 1,3,4 (அரு.நி.) பார்க்க; see *vil̤uppam.*

[விழுப்பம் → விழுப்பு]

விழுப்புண் *vil̤u-p-puṇ,* பெ.(n.) 1. போரில் முகத்தினும் மார்பினும் பட்ட புண்; wound of a warrior on his face or chest received in battle. *"விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள் வைக்கும்" (குறள், 776).* 2. இடும்பை தரும் புண்; grievous wound. *"கொழுவாய் விழுப்புண் குரைப்பொலியும்" (சீவக. 2355).*

[விழு⁴ + புண்]

விழுப்புரம் *vil̤u-p-puram,* பெ.(n.) தமிழ்நாட்டு ஊர்ப்பெயர்; a place name of Tamil Nadu.

இயற்கை வனப்புகள் இல்லாத சமநிலம். செழிப்பானது. இதன் கிழக்குக் கரையோரம் வங்காள விரிகுடா உள்ளது. புதுச்சேரி இதன் எல்லையருகில் இருக்கின்றது.

சென்னைக்குத் தெற்கே 101 கல் தொலைவிலுள்ளது. தென்னிந்தியாவிலுள்ள இன்றியமையாத தொடர்வண்டி சந்திப்புகளில் ஒன்று. இங்கிருந்து ஐந்து இருப்புப் பாதைகள் பிரிந்து செல்கின்றன.

[வில்லிபுரம் → விழுப்புரம்]

விழுப்பேரரையர் *vil̤u-p-pēr-araiyar,* பெ.(n.) தமிழ்த் தலைவரில் ஒரு சாரார் பட்டப் பெயர்; a little of a-class of Tamil chieftains.

[விழு + பேர்⁴ + அரையர்]

விழுப்பொருள் *vil̤u-p-poruḷ,* பெ.(n.) மேலான பொருள்; the highest object or thing. *"விண்ணகத்தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருளே" (திருவாச. 20, 9).*

[விழு + பொருள்]

விழுபாலை *vil̤u-pālai,* பெ.(n.) கொடிவகை (யாழ்.அக.); a creeper.

[விழு¹ + பாலை]

விழுமம் *vil̤umam,* பெ.(n.) 1. சிறப்பு (தொல். சொல். 353); excellence, greatness, sublimity, eminence, magnificence, superiority. 2. சீர்மை (தொல். சொல். 353); good state. 3. தூய்மை (இ.வ); purity. 4. இடும்பை; distress, affliction. *"நின்னுறு விழுமங் களைந்தோள்" (அகநா. 170).*

[விழு⁴ → விழுமம்]

விழுமலை *vil̤u-malai,* பெ.(n.) கதிரவன் மறையும் மலை; the western mountain beyond which the sun is supposed to set. *"எழுமலை விழுமலை புடைமணி யாக" (கல்லா. 19).*

[விழு¹ + மலை⁴]

விழுமா-த்தல் *vil̤umā-,* 12 செ.கு.வி. (v.i.) சிறப்படைதல்; to attain to eminence or glory. *"மகளிர் விழுமாந்தனர் தங்கொழு நரைக் காத்தே" (நற். 320).*

[விழுமம் + யா⁴-த்தல் → விழுமா-த்தல்]

விழுமிய *vil̤umiya,* பெ.எ.(adj.) சிறந்த; pre-eminent, excellent. *"விழுமிய பெறலரும் பரிசி னல்குமதி" (திருமுரு. 294).*

விழுமியதுபயத்தல் *vil̤umiyadu-payattal,* பெ.(n.) நூலழகு பத்தனுள் சீரிய பொருளை யுணர்த்தலாகிய அழகு (நன். 13); inculcating noble teaching, one of ten *nūl-al̤agu,* q.v.

[விழுமியது + பயத்தல்]

விழுமியர் *viḻumiyar,* பெ.(n.) விழுமியோர் பார்க்க; see *viḻumiyōr.* *"விழுமிய ரென்னினு மவர்பா லிரவாமை" (பிரபோத. 30, 72).*

[விழுமம் → விழுமியர்]

விழுமியோர் *viḻumiyōr,* பெ.(n.) சிறந்தோர்; excellent persons, persons of pre-eminence. *"வாகனங் கையுறினும் வேண்டார் விழுமியோர்" (நாலடி, 300).*

[விழுமியர் → விழுமியோர்]

விழுமீன்[1] *viḻumīṉ,* பெ.(n.) வீழ்மீன் பார்க்க; *see vīḻ-mīṉ, meteor.*

[விழு[1]– + மீன்[1]]

விழுமீன்[2] *viḻu-mīṉ,* பெ.(n.) உல்லம் 1 பார்க்க; see *ullam1*, hilsa.

[விழு + மீன்]

விழுமுதல் *viḻu-mudal,* பெ.(n.) வாணிகத்தின் முதலீடு (இ.வ.); capital invested in a business.

[விழு + முதல்]

விழுமுறு–தல் *viḻumuṟu-,* 2 செ.கு.வி. (v.i.) துன்புறுதல்; to be distressed or afflicted. *"வேந்து விழுமுறினே" (புறநா. 318).*

[விழுமம் + உறு–,]

விழுமெனல் *viḻum-eṉal,* பெ.(n.) விழுவிழெனல் பார்க்க; see *viḻu-viḻeṉal.*

விழுவிழெனல் *viḻu-viḻeṉal,* பெ.(n.) 1. வழவழப்பாதற்குறிப்பு (வின்.); sliminess, slipperiness. 2. பசை பிடித்தற்குறிப்பு (யாழ்.அக.); pastiness.

[விழுவிழு + எனல்]

விழை[1]–தல் *viḻai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. விரும்புதல்; to wish, desire, love, to be anxious for, to covet. *"இன்பம் விழையான் வினைவிழைவான்" (குறள், 615)* 2. நன்குமதித்தல்; to esteem. *"ஒன்னார் விழையுஞ் சிறப்பு" (குறள், 630).* 3. ஒத்தல்; to resemble. *'மழைவிழை தடக்கை' (தொல். பொ. 289, உரை).*

[விழு – விழை. விழை–, (வே.க.119)]

விழை[2]–தல் *viḻai-,* 2 செ.கு.வி. (v.i.) நெருங்கிப் பழகுதல் (இ.வ.); to move closely or intimately.

[இழை → விழை]

விழைச்சி *viḻaicci,* பெ.(n.) 1. நலவழக்கம்; enjoyment. *'மன்னர்விழைச்சி' (சிலப். 2, 2, உரை).* 2. விழைச்சு,1 பார்க்க; see *viḻaiccu1.* *'அறுவகைப்பட்ட பாசாண்டிகரும் இணைவிழைச்சி தீதென்ப' (இறை. 1. உரை. பக். 9).*

[விழை → விழைச்சி]

விழைச்சு *viḻaiccu,* பெ.(n.) 1. புணர்ச்சி; sexual union, intercourse. 2. இளமை; tenderness, youth.

[விழை → விழைச்சு (வே.க.120)]

விழைந்தோன் *viḻaindōṉ,* பெ.(n.) 1. நண்பன்; friend. 2. கணவன்; husband..

[விழை → விழைந்தான் → விழைந்தோன்] (வே.க.120)

விழைநன் *viḻainaṉ,* பெ.(n.) விழைந்தோன் பார்க்க; see *viḻaindōṉ.*

[விழை → விழைநன்]

விழைய *vilaiya,* பெ.(n.) ஓர் உவமவாய்பாடு (தொல். பொ. 289); a particle of comparison.

[விள் → விழை → விழைய]

விழையார் *vilaiyār,* பெ.(n.) பகைவர்; enemies. *"விழையார் விழையப் படுப"* *(குறள், 810).*

[விழை → விழை + ஆர்]

விழைவு *vilaivu,* பெ.(n.) 1. புணர்ச்சி (பிங்.); copulation. 2. விருப்பம்; desire. *"விழைவோ விழுமிதே" (பு.வெ.9, 41).* 3. யாழி னுள்ளோசை (பிங்.); vibration of a lute.

[விழை → விழைவு]

விள்[1](ளு)-தல் *vil-,* 2 செ.கு.வி. (v.i.) 1. மலர்தல் (சூடா.); to open out, expand, to unfold, as a blossom. 2. உடைதல்; to crack. *'அந்தப் பழம் கீழேவிழுந்ததனால் விண்டு போயிற்று'.* 3. வெடித்தல் (யாழ்.அக.); to split, burst. 4. மாறுபடுதல்; to be at variance, to be opposed. *"விள்வாரை மாறட்ட வென்றிமறவர்" (பு.வெ. 1.14).* 5. தெளிவாதல்; to become clear.

Ma. *villuka*; **Tu.** bulluni; **pa.** *velng*; **Kui.** *vlēnda*; **Kur.** *belbelrnā.*

[புள் → விள் → விள்ளு-,] (வே.க.142)

விள்[2](ளு)தல் *vil-,* 13 செ.குன்றாவி. (v.t.) 1. பிளத்தல்; to break open, to split. *'பழத்தை விண்டான்'.* 2. பகைத்தல்; to hate. *"விண்டு..... மண்டினார்" (சீவக. 418).* 3. நீங்குதல்; to be separated from, to leave. *"வினைகளும் விண்டனன்" (தேவா. 928, 7).* 4. சொல்லுதல்; to say, tell, state. *"தன்னிடத்து வந்து விள்ளான்" (திருவாலவா. 33, 10).* 5. வெளிப்படுத்துதல்; to reveal, make known. *"உமக்கே விண்டு பேசினல்லால்" (அஷ்டப். திருவரங்கக். 70).* 6. வாய் முதலியன திறத்தல்; to open, as the mouth. *"வாய்விண்டு கூறும்" (பாகவத. 1. தன்புத்திர. 29).* 7. பிதிர் முதலியன விடுத்தல்; to slove, as a riddle or conundrum. *'இந்தப் பிதிரை விள்ளு'.* 8. கலத்தல், விரும்புதல்; to mingle, to desire.

[பிள் → விள் → விள்ளு-,] (வே.க.142)

விள்கை *vilgai,* பெ.(n.) விட்டகலுகை; leaving. *"விள்கை விள்ளாமை விரும்பி" (திவ். திருவாய். 1, 6, 5).*

[விள் → விள்கை] (செல்வி 177 ஆனி, 542)

விள்ளல் *villal,* பெ.(n.) 1. பிரிவு; separation. *"விலங்கிற்கும் விள்ள லரிது" (நாலடி, 76).* 2. மலர்கை (சூடா.); unfolding, as of a flower. 3. தழுவுதல் (சூடா.); embracing. 4. நெடுநாரை என்னும் மரவகை; wynaad coffee cherry-nutmeg.

[விள் → விள்ளல்]

விள்ளோடன்தேங்காய் *villōdan-tēṅgāy,* பெ.(n.) உள்ளீடான பருப்பு, சிரட்டை யினின்று எளிதாகப் பெயருந் தேங்காய் (யாழ்ப்.); coconut in which the kernel parts easily from the shell.

[விள் + ஓடு + தேங்காய்]

விள[1]-த்தல் *vila-,* 4 செ.கு.வி. (v.i.) விலக்கல்; to remove.

[வில் → வில → விலத்து → விளத்து → விளத்தல் (சு.வி.27)]

விள² *viḷa,* பெ.(n.) வெண்தோட்டுக்காய் மர வகை (தொல். எழுத். 181, உரை); wood-apple.

[முள் → விள் → விள (மு.தா.161)]

விள³ *viḷa,* பெ.(n.) விளவு⁴ (பிங்.) பார்க்க; see *viḷavu.*

விள⁴ *viḷa,* பெ.(n.) விளவு⁶ (பிங்.) பார்க்க; see *viḷavu.*

விளக்கங்காண்(ணு)-தல் *viḷakkaṅ-kāṇ-,* 16 செ.குன்றாவி. (v.t.) ஆராய்ந்தறிதல்; to test. *"தொண்டரை விளக்கங்காண" (பெரியபு. திருநீல கண்ட. 10).*

[விளக்கம் + காண்-.]

விளக்கணம் *viḷakkaṇam,* பெ.(n.) 1. பொடி வைத்துப் பொருத்துகை (யாழ்.அக.); soldering. 2. பற்றுப்பொடி; solder.

[விளக்கு → விளக்கணம்] (வே.க.135)

விளக்கணி *viḷakkaṇi,* பெ.(n.) *தீவகம்¹,2 (அணியி. 15)* பார்க்க; see *tīvagam,* a figure of speech.

[விளக்கு + அணி]

விளக்கணை-த்தல் *viḷakkaṇai-,* 4 செ.கு.வி. (v.i.) விளக்கைப் பெருக்குதல்; to extinguish a lamp.

கெடுத்தல் எனப் பொருள்படும் அணைத்தல் என்பது மங்கலச் சொல்லன்றாதலின் 'பெருக்குதல்' என்று சொல்வது தமிழ்நாட்டு மரபு.

[விளக்கு + அணை-,]

விளக்கத்தார்கூத்து *viḷakkattār-kūttu,* பெ.(n.) வழக்கு வீழ்ந்த ஒரு நாடகத் தமிழ் நூல் (தொல். பொ. 553. உரை); a treatise on dramaturgy, not now extant.

விளக்கப்பிரைசிதான் *viḷakka-p-piraiśidāṉ,* பெ.(n.) குற்ற உசாவலுக்குரிய நடுவர்; examining magistrate.

விளக்கம் *viḷakkam,* பெ.(n.) 1. தெளிவான பொருள்; elucidation, explanation. 2. தெளிவு; clearness, perspicuity. *'நீ சொல்வது விளக்கமாக இல்லை'.* 3. ஒளி; light. *"ஊர்சுடு விளக்கத்து" (புறநா. 7).* 4. நிலவின்கலை (சது.); phase of the moon. 5. விளக்கு; lamp. *"குடியென்னுங் குன்றா விளக்கம்" (குறள், 601).* 6. கணையாழி; ring. *"செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்து" (நெடுநல். 144).* 7. புகழ்; praise. *"தாவில் விளக்கந் தரும் (குறள், 853).* 8. ஆய்கை (யாழ்.அக.); investigation. 9. சான்று ஆய்கை நடக்கும் முறைமன்றம்; court of the first instance, where evdence is taken. 10. மிகை; plenty. *'விளக்கமாய்க் கொடு' (நெல்லை.).*

க. பெளகு (*beḷahu*)

[விளக்கு → விளக்கம்] (வே.க.136)

விளக்கவி-த்தல் *viḷakkavi-,* 4 செ.கு.வி. (v.i.) விளக்கணை-, பார்க்க; see *viḷakkaṇai.*

[விளக்கு + அவி-,]

விளக்கிசைக்குறி *viḷakkiśaikkuṟi,* பெ.(n.) படிக்கையில் மூன்று மாத்திரை நிறுத்துவதற்கு இடுங்குறி; colon, a punctuation mark (:).

[விளக்கு + இசை⁴- + குறி]



தொங்கு சரவிளக்கு

நந்தா விளக்கு

குத்துவிளக்கு

விளக்கிடு[1]-தல் *viḷakkiḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. விளக்கேற்றுதல்; to light lamps. 2. கோயிலில் திருவிளக்கேற்றி வைத்தல்; to burn lights in the temple, as an act of piety.

[விளக்கு + இடு-,]

விளக்கிடு[2]-தல் *viḷakkiḍu-,* 18 செ. குன்றாவி.(v.t.) விளங்கச் செய்தல்; to explain to throw light upon.

[விளக்கு + இடு-,]

விளக்கிடுகல்யாணம் *viḷakkiḍu-kalyāṇam,* பெ.(n.) கார்காத்த வேளாளரில் மணம் புரியாத பெண்களுக்கு 7 அல்லது 11 ஆம் வயதிற் செய்யப்படுஞ் சடங்குவகை (E.T.vii.380); an auspicious ceremony performed before a girls marriage, generally in her seventh or ninth year, among *kārkātta vēlāḷas.*

[விளக்கிடு + கல்யாணம்]

விளக்கீடு *viḷakkīḍu,* பெ.(n.) திருவாரல் நாளில் (கார்த்திகையன்று) விளக்கேற்றுகை; lamplighting on the evening of *tiru-k-kārttigai.* *"கார்த்திகை நாள்..... விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்" (தேவா. 1118, 3).*

[விளக்கிடு → விளக்கீடு]

விளக்கு[1]-தல் *viḷakku,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. தெளிவாக்குதல்; to make clear, to explain, elucidate. *"சொல்லிக் காட்டிச் சோர்வின்று விளக்கு" (மலைபடு. 79).* 2. அறிவிப்புப்படுத்துதல்; to make illustrious. *"தம்மை விளக்குமால்" (நாலடி.132).* 3. துலக்குதல்; to clearn, brighten, polish. *'பல்லை விளக்குகிறான்', 'பாத்திரத்தை விளக்குகிறான்'.* 4. தூய்மையாக்குதல்; to purify. *'குருவினருளிச்செயல் மனத்தை விளக்கும்'.* 5. பரிமாறுதல்; to distribute, serve. *"அட்டன யாவையும் விளக்கின மிவர்க்கே" (விநாயகபு. 53, 29).* 6. துடைப்பத்தாற் பெருக்குதல்; to sweep, clear up. 7. பொடியிட்டுப் பற்றவைத்தல்; to solder. *"பொன்னின் பட்டைமேற் குண்டுவைத்து விளக்கின வளை"* (S.I.I.ii.182).

[விள் → விள → விளங்கு → விளக்கு-,] (வே.க.135)

விளக்கு[2]-தல் *viḷakku-,* 5 செ.குன்றாவி. (v.t.) பெரிதாக்குதல் (இ.வ.); to enlarge.

[விளங்கு → விளக்கு-,]

விளக்கு[3] *viḷakku,* பெ.(n.) 1. ஒளிதருங் கருவி; lamp, light. *"எல்லா விளக்கும் விளக்கல்ல" (குறள், 299).* 2. ஒளிப்பிழம்பு (அக.நி.); lustre, band of rays. 3. ஒளிபெறச் செய்கை; brightening. *"நிலம் விளக்குறுப்ப" (மதுரைக். 705).* 4. விளக்கு நாண்மீன் (சுவாதி நட்சத்திரம்); the 15th *nakṡatra.* *'விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழுகிறதா? (பழ.), 'விளக்கை வைத்துக் கொண்டு நெருப்புக்கு அலைகிறதா? (பழ.), 'விளக்கு ஒளிக்கு ஆசைப்பட்ட விட்டில் போல' (பழ.)*

ஆதியில் குகையில் மாந்தன் வாழ்ந்த காலத்திலேயே ஏதோ ஒருவகையான விளக்கைப் பயன்படுத்தி வந்தான். உருகிய கொழுப்பை அவ் விளக்கில் எரிபொருளாகப் பயன்படுத்தினான். குகை மாந்தர்கள் பயன்படுத்திய விளக்கை எகிப்தியர் சீர்திருத்தி யமைத்தனர். உட்கூடான கல்லில் கொழுப்பை நிரப்பி, பஞ்சாலான திரியை அதனூடே செலுத்தி, எகிப்தியர் தம் விளக்கை யமைத்தனர். சுட்ட மட்பாண்டம், வெண்கலம்

ஆகியவற்றால் செய்த விளக்கைக் கிரேக்கரும் ரோமானியரும் பயன்படுத்தினர். ஆளி விதையெண்ணெயை அவர்கள் எரிபொருளாகப் பயன்படுத்தினர்.

நாகரிகம் முன்னேற்றம் அடைந்தபின் மக்கள் அகல் விளக்கு, குத்து விளக்கு, மெழுகுத்திரி விளக்கு, சிமிழ் விளக்கு, பெட்ரோமாக்ஸ் எனப்படும் ஆவி விளக்கு என பலவகையான விளக்குகளைப் பயன்படுத்தினர்.

விளக்குகள் பலபெயர்களால் உச்சியில் பலவகை உருவங்கள் வைத்துச் செய்யப்பட்டுள்ளன. இவற்றைக் குத்து விளக்கு எனவும் அழைப்பர்.

1. மதியொளி விளக்கு, 2. அன்ன விளக்கு, 3. கிள்ளை விளக்கு, 4. மயில் விளக்கு, 5. குயில் விளக்கு, 6. நாகர் விளக்கு, 7. கிளை விளக்கு, 8. கம்பி விளக்கு, 9. காய் விளக்கு, 10. தண்டு விளக்கு, 11. சிலை விளக்கு, 12. குருவி விளக்கு, 13. அகல் விளக்கு, 14. நிலை விளக்கு, 15. புருஷா மிருக விளக்கு, 16. ஒதிமக் கிளை விளக்கு, 17. முக்கிளை விளக்கு, 18. காமாட்சி விளக்கு, 19. மணி விளக்கு, 20. மாயோன் விளக்கு, 21. ஏழுதலை நாக விளக்கு, 22. காமதேனு விளக்கு, 23. சரோருக விளக்கு, 24. மங்கல விளக்கு, 25. பத்மாசன முருகன் விளக்கு, 26. பதும விளக்கு, 27. கஜலட்சுமி விளக்கு, 28. சந்நிதி விளக்கு, 29. கின்னரி விளக்கு, 30. கிண்கிணி விளக்கு, 31. கன்னி விளக்கு, 32. காமன் விளக்கு, 33. திருமண விளக்கு, 34. தாரா விளக்கு, 35. ஈழச்சியல் விளக்கு, 36. மலையாண்சியல் விளக்கு, 37. அரைதலை விளக்கு, 38. சோழியச்சியல் விளக்கு, 39. ஆரக்குட விளக்கு, 40. அனந்தலை விளக்கு, 41. எரிக்கடை விளக்கு, 42. பகர்வோர் விளக்கு, 43. கைவினை விளக்கு, 44. ஊழ்உறு விளக்கு, 45. குடக்கால் விளக்கு, 46. கடைக் கெழு விளக்கு, 47. மீன் திமில் விளக்கு, 48. ஒழியா விளக்கு, 49. காவலர் விளக்கு, 50. மான் விளக்கு

இவையே யன்றித் தமிழகத்தில் புழக்கத்தில் உள்ள விளக்கு வகைகள்.

1. கைவிளக்கு, 2. பாவை விளக்கு, 3. நந்தா விளக்கு, 4. தூண் விளக்கு, 5. தூக்கு விளக்கு, 6. சர விளக்கு, 7. அகல் விளக்கு.

தெ. வெளுகு (g); க. பெளகு (b); ம. விளக்கு.



1 2 3

விளக்குக்குச்சோறூட்டு-தல் *viḷakkukku-c-cōṟūṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) நாட்கதிர் கொண்டதும் நெருப்பின் பொருட்டு விளக்கு முன்பாகப் புதிய சோறு படைத்தல் (வின்.); to make an offering of boiled rice before a burning lamp in thanks-giving to the God of fire, on gathering in the first sheaves.

[விளக்கு + சோறூட்டு-,]

விளக்குக்குடிமக்கள் *viḷakku-k-kuḍi-makkaḷ*, பெ.(n.) கோயிலில் விளக்கிடும் பணியாளர் (S.I.I.iv.281); lamp-lighters in a temple.

[விளக்கு + குடிமக்கள்]

விளக்குக்குப்புதிதூட்டு-தல் *viḷakkukku-p-pudidūṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) விளக்குக்குச்சோறூட்டு-, (வின்.) பார்க்க; see *viḷakkukku-c-cōṟūṭṭu-*.

[விளக்கு + கு + புதிதூட்டு-,]

விளக்குக்கூடு *viḷakku-k-kūḍu*, பெ.(n.) 1. விளக்குத்தகழி பார்க்க; see *viḷakku-t-tagaḷi*. 2. விளக்குக் கூண்டு 1,3 பார்க்க; see *viḷakku-k-kūṇḍu*. 3. விளக்குமாடம், 1 (வின்.) பார்க்க; see *viḷakku-māḍam*. 4. விளக்கை உள்வைத்து வானத்துச் செல்லவிருக்கும் கூண்டு; balloon carrying

காமாட்சி விளக்கு

கஜலட்சுமி விளக்கு

குத்து விளக்கு

நந்தா விளக்கு

a light.

[விளக்கு + கூடு]



விளக்குக்கூண்டு *viḷakku-k-kūṇḍu,* பெ.(n.) 1. கலங்கரை விளக்கம் (கொ.வ.) பார்க்க; see *kalaṅkarai-viḷakkam,* lighthouse. 2. விளக்குக் கூடு 4 பார்க்க; see *viḷakku-k-kūḍu.*

[விளக்கு + கூண்டு]



விளக்குக்கொளுத்து-தல் *viḷakku-k-koḷuttu-,* 5 செ.கு.வி. (v.i.) விளக்கேற்று–, பார்க்க; see *viḷakkēṟṟu.*

[விளக்கு + கொளுத்து–,]

விளக்குத்தகழி *viḷakku-t-tagaḻi,* பெ.(n.) விளக்கு ஏற்றுவதற்கு உரிய அகல் (யாழ்.அக.); oil-receptacle in a lamp.

[விளக்கு + தகழி]

விளக்குத்தண்டு *viḷakku-t-taṇḍu,* பெ.(n.) விளக்கு ஏற்றி வைக்கும் தகழியைத் தாங்கும் தண்டு; lamp-stand, standard of a lamp.

[விளக்கு + தண்டு]

விளக்குத்தாங்கி *viḷakku-t-tāṅgi,* பெ.(n.) ஒளிகாட்டி (தீவட்டிக்காரன்); torch-bearer.

[விளக்கு + தாங்கி]

விளக்குத்தாள் *viḷakku-t-tāḷ,* பெ.(n.) விளக்குத்தண்டு (யாழ்.அக.) பார்க்க; see *viḷakku-t-taṇḍu.*

[விளக்கு + தாள்]

விளக்குத்தூண் *viḷakku-t-tūṇ,* பெ.(n.) 1. மின் விளக்கு இல்லாத பண்டைநாளில் தெருக்கள் தோறும் மூலைச் சந்திப்புகளில் வைக்கப்பட்டு இருந்த எண்ணெய் விளக்கைத் தாங்கிய தூண்கள்; pillars having oil lamps in the junction of the streets in olden times. 2. மதுரையில் உள்ள ஓர் இடத்தின் பெயர்; a place name in Madurai.

[விளக்கு + தூண்]

விளக்குநாய்ச்சியார் *viḷakku-nāycciyār*, பெ.(n.) 1. திருவிளக்கு நாச்சியார், 1 பார்க்க; see *tiruviḷakku-nāycciyār*, lamp in a house, regarded as a goddess. 2. திருவிளக்கு நாச்சியார், 2 பார்க்க; see *tiruviḷakku-nācciyār*, metallic image of a woman holding a lamp in her hands.

[விளக்கு + நாச்சியார்]

விளக்குநிலை *viḷakku-nilai*, பெ.(n.) 1. அரசனது கோலோடு விளக்கும் ஒன்று பட்டோங்குவதைக் கூறும் புறத்துறை (தொல். பொா. 90); theme describing the royal lamp as flourishing inseparably with the royal sceptre. 2. வலமாகத் திரியாநிற்கும் விளக்கு அரசனது வெற்றியைக் காட்டுவதாகக் கூறும் புறத்துறை (பு. வெ. 9, 12); theme describing the movement of a lamp from left to right, indicating the victory of a king. 3. சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறனுள் வேலும் அதன் தலையும் விலங்கா தோங்கியவாறு போலக் கோலும் விளக்கும் விலங்காதோங்குவதாகக் கூறுவது (சது.); a poem on the theme of *viḷakku-nilai*, in which the royal sceptre and the royal lamp are described as flourishing inseparably, as the spear and the spear-head, one of 96 *śiṟṟilakkiyam* q.v. 4. விளக்குத்தண்டு (அக.நி.) பார்க்க; see *viḷakku-t-taṇḍu*.

[விளக்கு + நிலை]

விளக்குப்பாடம் *viḷakku-p-pāḍam*, பெ.(n.) இரவிலேற்றிய விளக்கின் முன்னிருந்து பிள்ளைகள் படிக்கும் பாடம் (இ.வ.); lesson learnt at night under a lamp.

[விளக்கு + பாடம்]

விளக்குப்பாதம் *viḷakku-p-pādam*, பெ.(n.) 1. விளக்குத்தண்டு (வின்.) பார்க்க; see *viḷakku-t-taṇḍu*. 2. விளக்குத் தண்டின் அடிப்பாகம்; foot of the lamp-stand.

[விளக்கு + பாதம்]

விளக்குப்பார்-த்தல் *viḷakku-p-pār-*, 4 செ.கு.வி. (v.i.) விளக்கேற்று-, (இ.வ.) பார்க்க; see *viḷakkēṟṟu-*.

[விளக்கு + பார்-,]

விளக்குப்பிணம் *viḷakku-p-piṇam*, பெ.(n.) இருட்டு; darkness. *"விளக்குப்பிணம் போலே காணவொண்ணாதபடி" (ஈடு. 5, 7, 4).*

[விளக்கு + பிணம்.]

விளக்குப்புறம் *viḷakku-p-puṟam*, பெ.(n.) கோயிலில் விளக்கிடுதற்கு விடப்பட்ட இறையிலி நிலம்; endowment created for lights in a temple. *"நந்தா விளக்குப்புற மாகென" (சீவக. 2564).*

[விளக்கு + புறம்]

விளக்குப்பொருத்து-தல் *viḷakku-p-poruttu-*, 5 செ.கு.வி. (v.i.) விளக்கேற்று-, (வின்.) பார்க்க; see *viḷakkēṟṟu-*.

[விளக்கு + பொருத்து-,]

சரவிளக்கு

அடுக்குக் கொத்து விளக்கு

பாவை விளக்கு

விளக்குப்போடு[1]-தல் *viḷakku-p-pōḍu-*, 8 செ.கு.வி. (v.i.) விளக்கேற்று-, பார்க்க; see *viḷakkēṟṟu*.

[விளக்கு + போடு-,]

விளக்குப்போடு[2]-தல் *viḷakku-p-pōḍu-*, 8 செ.கு.வி. (v.i.) கட்குடித்தல் (யாழ்ப்.); to drink intoxicating liquors.

விளக்குமாடம் *viḷakku-māḍam*, பெ.(n.) 1. விளக்கு வைப்பதற்கான சுவர்ப்புரை (வின்.); niche in a wall for lamps. 2. திருவிளக்கிடும் கோயிலிடம் (T.A.S.i, 176); place for lights in a temple.

[விளக்கு + மாடம்]

விளக்குமாற்றுக்கட்டை *viḷakkumāṟṟu-k-kaṭṭai*, பெ.(n.) 1. தேய்ந்த துடைப்பம்; old and worn-out broom. 2. ஒரு பழிச்சொல் (இ.வ.); a term of reproach. *'விளக்குமாற்றுக் கட்டைக்குப் பட்டுக்குஞ்சம் கட்டியது போல' (பழ.).*

[விளக்குமாறு + கட்டை]

விளக்குமாறு *viḷakkumāṟu*, பெ.(n.) துடைப்பம் (தைலவ.); broom. *'புது விளக்குமாறு நன்றாகக் கூட்டும்' (உ.வ.), 'விளக்கு மாற்றுக்குப் பட்டுக் குஞ்சமா?' (பழ.).*

[விளக்கு + மாறு,]

விளக்குறு-த்தல் *viḷakkuṟu-*, 4 செ. குன்றாவி. (v.t.) ஒளிபெறச் செய்தல்; to brighten, give splendour to. *"நிலம் விளக்குறுப்ப" (மதுரைக். 705).*

[விளக்கு + உறு-,]

விளக்கெண்ணெய் *viḷakkeṇṇey*, பெ.(n.) 1. விளக்கிடுவதற்கு உதவும் ஆமணக் கெண்ணெய் (கொ.வ.); castrol oil, as used for lamps. 2. மருந்தாக உதவும் ஆமணக்கெண்ணெய் (கொ.வ.); medicinal castor oil. 3. வேப்பெண்ணெய் (யாழ்.அக.); oil extracted from neem seeds. *'முதலிச்சம்பம் விளக்கெண்ணெய்க்குக் கேடு' (பழ.). 'விளக்கெண்ணெயைத் தடவிக் கொண்டு ஆற்று மணலில் புரண்டாலும் ஒட்டுகிறதுதான் ஒட்டும்' (பழ.).*

[விளக்கு + எண்ணெய்]

விளக்கேற்றிவை[1]-த்தல் *viḷakkēṟṟi-vai-*, 4 செ.கு.வி. (v.i.) 1. விளக்கேற்று-, பார்க்க; see *viḷakkēṟṟu-*. 2. திருமணம் செய்து வைத்தல்; to help to marry. *'இவனுக்குக் காலத்தில் ஒரு விளக்கேற்றி வைக்க நினைக்கிறேன்' (வின்.).*

[விளக்கு + ஏற்றி + வை-,]

விளக்கேற்றிவை[2]-த்தல் *viḷakkēṟṟi-vai-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. நிலைநிறுத்துதல்; to set up, establish. *'அழியவிருந்த குடும்பத்தை விளக்கேற்றி வைத்தான்'.*

[விளக்கேற்றி + வை-,]

விளக்கேற்று-தல் *viḷakkēṟṟu-*, 5 செ.கு.வி. (v.i.) விளக்கையேற்றுதல்; to light lamps.

[விளக்கு + ஏற்று-,]

விளக்கைக்குளிரவை-த்தல் *viḷakkai-k-kuḷira-vai-*, 5 செ.கு.வி. (v.i.) விளக்கணை (இ.வ.) பார்க்க; see *viḷakkaṇai*.

[விளக்கை + குளிர + வை-,]

விளக்கைச்சமனஞ்செய்-தல் *viḷakkai-c-camaṉañ-šey*, 3 செ.கு.வி. (v.i.) விளக்கணை (இ.வ.) பார்க்க; see *viḷakkaṇai*.

[விளக்கு + சமனம் + செய்-,]

விளக்கைநிறுத்து-தல் *vilaikkai-niruttu-,* 5 செ.கு.வி. (v.i.) விளக்கணை பார்க்க; see *vilakkanai.*

[விளக்கை + நிறுத்து-,]

விளகம் *vilagam,* பெ.(n.) சேங்கொட்டை (மலை.); marking-nut tree.

விளங்கம் *vilangam,* பெ.(n.) கொடிவகை (நாமதீப.310); small elliptic cuspidate-leaved windberry.

விளங்கவை-த்தல் *vilanga-vai-,* 4 செ. குன்றாவி.(v.t.) 1. தெளிவாக்குதல்; to make position clear, to make record clear. 2. விளக்கேற்றிவை-, பார்க்க; see *vilakkerri-vai.* 3. புகழ்பெறச் செய்தல்; to make illustrious or renowned. *'பெற்ற வயிற்றை விளங்க வைக்க வேண்டும்'.*

[விளங்க + வை-,]

விளங்கவைத்தல் *vilanga-vaittal,* பெ.(n.) நூலழகு பத்தனுள் கூறப்படும் பொருளைத் தெளியச் சொல்லுவது (நன். 13); perspicuity, clearness of expression, one of ten *nūl-alagu* q.v.

[விளங்க + வைத்தல்,]

விளங்கிப்பேர் *vilangi-p-pēr,* பெ.(n.) நிலவிளத்த அடங்கல் (இ.வ.); history of lands, fields, etc., given in the old settlement register or *adangal.*

[விளங்கு → விளங்கி + பேர்]

விளங்கிழை *vilangilai,* பெ.(n.) பெண்; woman, as wearing bright jewels. *"விளங்கிழை தமியளானாள்" (சீவக. 303).*

[விளங்கு + இழை]

விளங்கு¹-தல் *vilangu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ஒளிர்தல்; to shine. *"பகல் விளங்குதியாற் பல்கதிர் விரித்தே" (புறநா. 8).* 2. வெளிப் படையாதல்; to become renowned, illustrious. *'அவன் பெயர் எங்கும் விளங்கும்'.* 3. பளபளத்தல்; to be polished. 4. தெளிவாதல்; to be clear or plain. *'நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை'.* 5. வெற்றி வளர்ச்சியாதல்; to be prosperous, successful. *'அந்தக்குடி விளங்கவில்லை'.* 6. மிகுதல்; to excel, become great. *"திறல் விளங்கு சேர்த்தானை" (பு.வெ. 4, 8).*

க. பெளகு; ம. விளங்நுக; தெ. வெலுங்கு, ஒண்மைக் கருத்து.

[விள் → விள → விளங்கு-, (செல்வி வைகாசி பக். 496)]

விளங்கு²-தல் *vilangu-,* 5 செ.குன்றாவி.(v.t.) அறிதல் (யாழ்ப்.); to know.

ம. விளங்நு(க); தெ. வெலுங்கு; க. பெளகு (belagu)

விளங்கு³ *vilangu-,* பெ.(n.) அரத்தைவகை (பதார்த்த. 985); lesser galangal.

விளங்குதாரணத்ததாகுதல் *vilangu-dāranattatāgudal,* பெ.(n.) நூலழகு பத்தனுள் மேற்கோள் எளிதாக விளங்குவது (நன். 13); being furnished with appropriate illustrations, one of ten *nūl-alagu* q.v.

[விளங்கு + Skt. udhāran > த. உதாரணம் + அத்து + ஆகுதல்]

விளங்குதிங்கள் *vilangu-tingal,* பெ.(n.) வெள்ளி மீன் (சுக்கிரன்) (திவா.); venus, as

the shining planet.

[விளங்கு + திங்கள்.]

விளங்குபொன் *viḷaṅgu-poṉ,* பெ.(n.) மாழையாற் செய்த கண்ணாடி; metallic mirror. *"விளங்கு பொன்னெறிந்த நலங்கிளர் பலகையொடு"* (புறநா. 15).

[விளங்கு + பொன்]

விளங்கொளி *viḷaṅgoḷi,* பெ.(n.) அருகன் (திவா.); arhat, as the shining light.

[விளங்கு + ஒளி]

விளச்சீர் *viḷa-c-cīr,* பெ.(n.) நிரையசையில் முடியும் இயற்சீர் (யாப்.வி.); foot of two *asai* ending in nirai, either *kūviḷam* or *karu-viḷam.*

[விளம்² + சீர்]

விளத்தம் *viḷattam,* பெ.(n.) விளக்கம்; description. (வே.க.136).

[விளத்து → விளத்தம்]

விளத்தாரு *viḷa-t-tāru,* பெ.(n.) வெண்கடம்பு (மலை.); sea-side Indian oak.

விளத்து-தல் *viḷattu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. விலக்குதல் (யாழ்.அக.); to except, to exclude. 2. விளக்கமாகக் கூறுபடுத்திக் கூறுதல்; to explain.

[விள் → விள → விளத்து-, (செல்வி, 77 சைகாசி, 497)]

விளப்பு *viḷappu,* பெ.(n.) 1. சொல்லுகை; saying. 2. புகழ் பரவுகை; becoming famous. *"தனிச்சிறையில் விளப்புற்ற"* (திவ். திருவாய். 4, 8, 5).

[விளம்பு → விளப்பு]

விளம்¹ *viḷam,* பெ.(n.) 1. அடம்; long-felt hatred, spite. 2. செருக்கு; self-conceit. 3. கடுஞ்சினம்; violent anger. *'விருந்திற்குத் தம்மை யழைக்கவில்லை யென்று விளமெடுத்துத் திரிகின்றான்' (உ.வ.) (வே.க.134).* 4. பெருஞ் சினத்திற் கொட்டும் நஞ்சு; poison.

E. Venom; **Skt.** விஷ; **L.** Venenum; **Fr.** Venin.

[விள் → விளம்]

விளம்² *viḷam,* பெ.(n.) 1. விளா¹(அரு.நி.); see *viḷa,* wood-apple. 2. இயற்சீரின் இறுதி நிரை வாய்பாடு; symbolic expression for nirai. *"விளமுன் னேரும்".* 3. வெள்ளையான தோடுடைய கனி; wood apple.

க. பௌல.

[விள் → விளம் (வ.மொ.வ.264)]

விளம்பகதி *viḷambagadi,* பெ.(n.) விளம்பம் பார்க்க; see *viḷambam.*

[விளம்பம் + கதி]

விளம்பம் *viḷambam,* பெ.(n.) 1. சுணக்கம் (ஈடு. 6, 1, ப்ர.); slowness, tardiness, delay. 2. இலயவகை (பரத. தாள. 51); a variety of ilayai indicating a slow pace.

[விளம்பு → விளம்பம்]

விளம்பரம் *viḷambaram,* பெ.(n.) அறிக்கை (கொ.வ.); advertisement, proclamation, notice, publication, publicity.

ம. விளம்பரம்.

[விளம்பு → விளம்பரம் (வே.க.143)]

விளம்பனம்[1] *vilambanam,* பெ.(n.) *விளம்பம், 1* பார்க்க; see *vilambam.*

[விளம்பம் → விளம்பனம்]

விளம்பனம்[2] *vilambanam,* பெ.(n.) பண்டைக்காலத்து மக்களின் வழக்க வொழுக்கம் முதலியவற்றை ஆடியும் பாடியுங் காட்டுகை (திவா.) (யாப். வி. பக். 526); imitation of ancient customs and manners, with acting and singing.

[விளம்பம் → விளம்பனம்]

விளம்பி[1] *vilambi,* பெ.(n.) கள் (திவா.); toddy, as causing unguarded utterance.

[விளம்பு → விளம்பி (வே.க.143)]

[கள்ளைச் சொல்விளம்பி என்பது மருத்துவர் குழூஉக்குறி.]

விளம்பி[2]-த்தல் *vilambi-,* 11 செ.கு.வி. (v.i.) சுணங்குதல்; to delay, procrastinate. *"நீங்கள் மந்தாயுசுக் களாகையாலே விளம்பிக்க வொண்ணாது" (ஈடு. 1, 3, 11).*

விளம்பிதம் *vilambidam,* பெ.(n.) 1. சுணக்கம் (நாமதீப. 562); slowness. 2. விளம்பம், 2 பார்க்க; see *vilambam. "விளம்பித நெறி வழாமல்...... ஆடும்" (கம்பரா. ஊர்தே. 106).*

விளம்பிநாகனார் *vilambi-nāganār,* பெ.(n.) நான்மணிக்கடிகை இயற்றிய ஆசிரியர்; a poet, author of *Nān-mani-k-kadigai.*

விளம்பு[1]-தல் *vilambu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. சொல்லுதல்; to speak, tell, say. *"உற்றது விளம்ப லுற்றேன்" (சீவக. 1694).* 2. வெளிப்படக் கூறுதல்; to proclaim openly, make public, reveal. *"உடையது விளம்பேல்" (ஆத்திசூடி).* 3. பரப்புதல் (பிங்.); to spread abroad. 4. பழகுதற்காகப் பிள்ளைகள் எழுத்தின்மே லெழுதுதல் (இ.வ.); to trace letters over the model of a copy. 5. பரிமாறுதல் (நாமதீப. 711); to serve food. 6. ஆய்தல் (வின்.); to inquire into.

ம. விளம்புக; **To.** pily; **Tu.** bulpuni; **Te.** *vilambaramu.*

[விள் → விளம்பு → விளம்பு-, (வே.க.143)]

விளம்பு[2] *vilambu,* பெ.(n.) சொல் (நன்.458); word, speech.

[விள் → விளம்பு]

விளமேலடி *vilamēladi,* பெ.(n.) நெல் நீங்கிய மற்றைய தவச விளைவிற்கு இடும் வரி (இ.வ.); assessment levied on crops other than paddy.

[விளை[3] + மேல் + அடி[1]]

விளர்[1]-தல் *vilar-,* 4 செ.கு.வி. (v.i.) 1. வெளுத்தல்; to become pale, to whiten. *"விளரும் விழுமெழும்" (திருக்கோ. 193).* 2. முதிராதிருத்தல்; to be imperfect, to be immature. *"விளரா வன்பின்" (விநாயகபு. 52, 18).*

க. பெளர்; ம. விளர்க.

விளர்[2]-த்தல் *vilar-,* 11 செ.கு.வி. (v.i.) 1. வெளுத்தல்; to become white or pale. *"விளர்த்த வாளினை அசைத்து" (பு.வெ.7, 21, உரை).* 2. வெட்குதல்; to feel ashamed. "மேய கலைப்பெண் விளர்ப்ப" (பிரபுலிங். மாயை பூசை. 50).

விளர்[3] *vilar,* பெ.(n.) 1. வெண்மை; whiteness. *"கொழுங்கொடி விளர்க்காய்*

கோட்பத மாக" (புறநா. 120). 2. கொழுப்பு (பிங்.); fat. 3. கொழுமை (வின்.); fertility. 4. இளமை (பிங்.); tenderness. 5. முற்றாதது; that which is immature or imperfect. "விளரில் பூசனை" (திருவானைக் குபேர. 2). 6. நேர்மை; straightness. "விளர்நிறீஇ" (கல்லா. 8). 7. பெருஞ்சினம் (அரு.நி.); great anger, wrath, fury. 8. வெறுப்பு (அக.நி.); hatred.

க. பௌர்; ம. விளர்.

[விளம் → விளர். (சினக்கருத்து. வே.க.134)]

விளர்[4]-தல் *viḷar-,* 5 செ.குன்றாவி. (v.t.) கூப்பிடுதல்; to call. "வையமுற்றும் விளரியதே" (திவ். இயற். திருவிருத். 82).

[விள் → விளர்-,]

விளர்[5] *viḷar,* பெ.(n.) இளங்கொம்பு; twig.

[வளார் → விளர்]

விளர்ப்பு *viḷarppu,* பெ.(n.) வெளுப்பு (யாழ்.அக.); whiteness.

[விளர் → விளர்ப்பு]

விளரி[1] *viḷari,* பெ.(n.) 1. இளமை (பிங்.); tenderness, youth. 2. மிக்க வேட்கை (பிங்.); great or longing desire. 3. மிகுதி (வின்.); abundance, surplus.

[விள் → விளரி (மு.தா.68)]

விளரி[2] *viḷari,* பெ.(n.) 1. ஏழிசையு ளொன்று (திவா.); the sixth note of the gamut, one of seven *isai,* q.v. 2. நெய்தற்குரிய இரங்கற்பண்; a melody-type of the neydal class, suited for mourning. "விளரியுறு தருந் தீந்தொடை நினையா" (புறநா. 260). 3. யாழ் (அக.நி.); *yāḻ.*

விளரி[3] *viḷari,* பெ.(n.) விளா[1] (அரு.நி.) பார்க்க; see *viḷā,* wood-apple.

விளரிப்பாலை *viḷari-p-pālai,* பெ.(n.) பாலைப்பண்களுளொன்று (பிங்.); a melody-tupe of *pālai* class.

[விளரி + பாலை]

விளவரிசி *viḷa-v-arisi,* பெ.(n.) அறுவகையரிசியு ளொன்று (சங்.அக.); a medicinal drug, one of *aṟuvagai-y-arisi.*

[விள + அரிசி]

விளவு[1] *viḷavu,* பெ.(n.) ஒருவகை நறுமண மரம்; eagle-wood.

மறுவ. அகில்

[விள் → விள → விளவு]

விளவு[2]-தல் *viḷavu-,* 5 செ.குன்றாவி. (v.t.) விளாவு[1]-தல் (வின்.) பார்க்க; see *viḷāvu-.*

விளவு[3] *viḷavu,* பெ.(n.) விளா[1] (பிங்.) பார்க்க; see *viḷā.*

விளவு[4] *viḷavu,* பெ.(n.) நிலம் முதலியவற்றிற் பிளப்பு (பிங்.); cleft, crack.

[பிளவு → விளவு]

விளவு[5]-தல் *viḷavu-,* 5 செ.கு.வி. (v.i.) கமராதல் (வின்.); to split, to burst asunder.

[விடவு → விளவு-,]

விளவு[6] *viḷavu,* பெ.(n.) இளமை (பிங்.); youth.

[விளர்[1] → விளவு]

விளா[1] *viḷā,* பெ.(n.) மரவகை (பு.வெ.10. சிறப். 1, உரை); wood-apple.

இரட்டை விதையிலை நிலைத்திணை உயிரிகளிலே கிச்சிலிக் குடும்பத்தைச் சேர்ந்த மரம். இந்த இனத்தில் ஒரே ஒரு இனமே உண்டு. இந்தோனேசியா, மலேயா பகுதிகளில் வளர்வது. இந்தியா நெடுகிலும் உலர்வான பகுதிகளில் காட்டு மரமாகவும் வளர்ப்பு மரமாகவும் இருக்கிறது. சாலையருகிலும் சிற்றூர்களின் பக்கங்களிலும் இம்மரத்தைக் காணலாம்.

இது ஒரு சிறிய இலையுதிர் மரம். கிளைகள் முள்ளுள்ளவை; இலைகள் இறகுக் கூட்டிலைகள்; கனிகள் உருண்டையாக இருக்கும். கனியின் ஒடுகள் மரப்பொருளால் ஆனது; கடினமானது; சொரசொரப்பானது; உள்ளே சற்று இனிப்பும் மணமும் உள்ள, உண்ணக்கூடிய சதை இருக்கும். அதிலே பல தட்டையான விதைகள் புதைந்திருக்கும். கனிகள் நளி மாதம் முதல் மீனம் வரையில் கிடைக்கும். துவர்ப்புச் சுவையுடைய இச்சதைப் பகுதியில் வெல்லமும் சிறிது உப்பும் சேர்த்து உண்ணச் சுவையாக இருப்பதுடன் பித்தமும் போகும் எனக் (சா.அக.) கூறுகிறது.

மறுவ. கடிப்பகை, கபித்தம், விளவு, வெள்ளில்.

தெ. வெலக; ம. விலவ; க. பேலட.

[விள → விளா]



விளா² *viḷā*, பெ.(n.) உழவில் வருஞ் சுற்று; a turn or round in ploughing. *"விளாக் கொண்டு உழும் உழவர்" (சிலப். 27. 230, அரும்.).*

விளாக்குலைகொள்(ளு)-தல் *viḷā-k-kulai-koḷ-*, 13 செ.குன்றாவி. (v.t.) 1. எங்கும் நிறைந்திருத்தல்; to overspread, pervade. *"ஒரு திருவடியே பூமிப்பரப்படங்கலும் போய் விளாக்குலை கொண்டது" (திவ். இயற். திருவிருத். 58. வ்யா. பக். 321).* 2. உட்கொள்ளுதல்; to swallow.. *"ஸ்துத்ய குணங்களை விளாக்குலை கொள்ளும் படியான பாடல்கள்" (ஈடு,2.7.6).*

[வளா → விளா + குலை + கொள்-,]

விளாக்கை-த்தல் *viḷākkai-*, 4 செ. குன்றாவி.(v.t.) உழுதல்; to plough. *"நுகமின்றி விளாக்கைத்து" (திருவாச. 26, 8).*

[விளா² + கை³-,]

விளாக்கொள்(ளு)-தல் *viḷā-k-koḷ-*, 3 செ. குன்றாவி.(v.t.) எங்கும் நிறைதல்; to spread everywhere, pervade. *"தாவியன் றுலகமெல்லாந் தலை விளாக்கொண்ட வெந்தாய்" (திவ். திருமாலை. 35).*

[வளா → விளா + கொள்-,]

விளாக்கோல்(லு)-தல் *viḷā-k-kōl-*, 10 செ.கு.வி. (v.i.) கழனியைச்சுற்றி ஒரு வட்டம் உழுதல் (இ.வ.); to plough one turn or round.

மறுவ. படைசால்.

[விளா² + கோல்-,]

விளாகம் *viḷāgam*, பெ.(n.) 1. சூழ்ந்தவிடம்; surrounding area. *"பைம்பொழில் விளாகத்து" (தேவா. 734, 6). "சோழிய விளாகம்" (ஊர்ப்).* 2. போர்க்களம்; battlefield. *"வென்றவர் விளாகந் தன்னுட் சென்றிலேன்" (தேவா. 1193, 1) (பிங்.).*

ம. விளாகம்.

[வளாகம் → விளாகம்]

விளாசு-தல் *viḷāśu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. அடித்தல் (கொ.வ.); to beat, strike. 2. மனத்தில் உறுத்தப்பேசுதல்; to harangue.

[விலாசு[2]-தல் → விளாசு-,]

விளாத்தி *viḷātti*, பெ.(n.) விளா[1] (மலை.); wood -apple.

[விளா [1] → விளாத்தி]

விளாப்பு *viḷāppu*, பெ.(n.) பிறர்க்குப் பங்கில்லாமற் கொண்டது (யாழ்.அக.); anything solely and exclusively owned.

[ஒருகா. வளை[2] → விளா → விளாப்பு]

விளாப்பூசை *viḷā-p-pūśai*, பெ.(n.) சிவன் கோயிலில் வைகறையில் நிகழும் பூசை (இ.வ.); the early morning worship in a *śivaṉ* temple.

[விளா + பூசை[2]]

விளாம்பிசின் *viḷām-piśiṉ*, பெ.(n.) விளாமரத்தின் பிசின்; gum exuded by wood-apple tree.

[விளா[1] + பிசின்]

விளாம்பூச்சு *viḷām-pūccu*, பெ.(n.) சித்திரப் பூச்சு வகை (யாழ்.அக.); a kind of painting.

[முலாம்பூச்சு → விளாம்பூச்சு]

விளார் *viḷār*, பெ.(n.) வளார்; twig.

விளாவு[1]-தல் *viḷāvu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கலத்தல்; to mix, as cold water with hot water. *"கடல் வெதும்பினால் விளாவ நீரில்லை"* *(ஈடு. 2, 2, அவ.)*. 2. தழுவிக் கொள்ளுதல் (திவா.); to embrace, move in a friendly way with. 3. விளாசு-, பார்க்க; see *viḷāśu-*.

[வளாவு → விளாவு-,]

விளாவு[2]-தல் *viḷāvu-*, 5 செ.குன்றாவி. (v.t.) சுற்றிச்சுற்றி உழுதல்; to plough round and round. *"பாழ்ச் செய் விளாவி"* *(திருவாச. 40, 9)*.

[வளாவு → விளாவு-,]

விளாவு[3]-தல் *viḷāvu-*, 9 செ.கு.வி. (v.i.) சுற்றுதல்; to wave round. *"முன்பு வயலிட னாக முன்னி விளாவிய"* *(தணிகைப்பு. நாட்டு. 129)*.

[வளாவு-தல் → விளாவு-,]

விளாறு[1] *viḷāṟu*, பெ.(n.) பெருக்கெடுத் தோடும் ஆறு; flooded stream. *'அடித்து அரத்தம் விளாறாகப் பெருகிற்று' (கொ.வ.)*.

ஒ.நோ. வளாறு.

[வெள்ளம் + ஆறு → விளாறு]

விளாறு[2] *viḷāṟu*, பெ.(n.) வளார் (இ.வ.) பார்க்க; see *vaḷār*, twig. *'கையகப்பட்ட திருடனைப் புளிய விளாறால் போட்டுப் பிய்த்து எடுத்துவிட்டனர் ஊர்மக்கள்'.*

விளி[1]-தல் *viḷi-*, 4 செ.கு.வி. (v.i.) 1. இறத்தல்; to die. *"விளிந்தாரின் வேறல்லர்"* *(குறள்.143)*. 2. அழிதல்; to perish, to be ruined, to become extinct. *"விளிவதுகொல்..... மறவர் சினம்"* *(பு.வெ.1.15)*. 3. குறைதல்; to diminish. *"விளியா நோயுழந்து"* *(கலித். 53). 4. கழிதல்;* to pass away. *"வேண்டுநாள் வறிதே விளிந்தால்"* *(கம்பரா. நிந்தனை. 31)*. 5. ஒய்தல்; to cease, to be interrupted. *"நாரை... விளியாது நரலும்"* *(கலித். 128)*.

6. சினம் கொள்ளுதல்; to be angry. *'விளிந்தாரே போலப் பிறராகி' (பழமொழி. 182).* 7. நாணமடைதல்; to be overcome with shame, ashamed. *"கவிதை பரமன் சொலவிளிந்து" (திருவாலவா. 16, 22).* 8. இழிவடைதல்; to be dishonoured or disgraced. *"கற்றவ ரவைநடு விளிய" (திருவாலவா. 57, 5).* 9. வருத்தப்படுதல் (வின்.); to suffer, regret. 10. மறிதல் (வின்.) (சது.); to turn about.

விளி²–தல் *vi/i-,* 2 செ.குன்றாவி. (v.t.) சொல்லுதல்; to say, speak, tell. *"தீவிளி விளிவன்" (திவ். திருமாலை.30).*

[விள் → விளி→ விளி–,]

விளி³–த்தல் *vi/i-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. அழைத்தல்; to call, summon. *"கூற்றத்தைக் கையால் விளித்தற்றால்" (குறள், 894).* 2. சொல்லுதல்; to say, speak, tell. *"இராமநாமம் விளித்திட" (கம்பரா. சம்பா. 59).* 3. பாடுதல்; to sing. *"பஞ்சுரம் விளிப்பினும்" (ஐங்குறு. 311), "விளியாதான் கூத்தாட்டுக் காண்டலும்" (திரிகடு. 11).* 4. அழித்தல்; to destroy, ruin, collapse. *"முதல் விளிக்கும் வினையைப் புரியற்க" (விநாயகபு. 2, 59).* 5. கொல்லுதல்; to kill. *"வெஞ்சின வரக்கரை விளித்து வீயுமோ" (கம்பரா. நிந்தனை. 48).* 6. சினத்தல்; to anger. *"விளிந்தாரே போலப் பிறராகி" (பழமொ. 182) (செல்வி. 77 வைகாசி 475).* 7. மறைந்தவனை வெளிப்படுத்துவது போற் கூப்பிடுதல்; to call.

[விள் → விளி → விளி–,]

L. pello; E. appeal, repeal etc. (ஒ.மொ.216)

பேசுவோன் படர்க்கையோரைத் தன் முகமாக அழைப்பதனை விளி என்பர். பெயர்கள் விளிப் பொருளையேற்கும் போது அதனைத் தமிழிலக்கணங்கள் எட்டாம் வேற்றுமையாகக் கொள்ளும் (இலக்.கலைக்.112).

விளி⁴–த்தல் *vi/i-,* 4 செ.கு.வி. (v.i.) பேராரவாரஞ் செய்தல்; to roar, shout. *"விளித்துப்பின் வேலைதாவும் வீரன்" (கம்பரா. கடறாவு. 33).*

[விள் → விளி–,]

விளி⁵ *vi/i,* பெ.(n.) 1. ஓசை; sound. *"வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்" (பெரும்பாண். 300).* 2. இசைப்பாட்டு; song. *"விளியாக்கொண்டு" (சீவக. 2691).* 3. சொல்; word, speech. *"தீவிளி" (திவ். திருமாலை. 30).* 4. கொக்கரிப்பு; shout of excitement, frenzy or joy. *"எடுத்தனர் விளியும் சங்கும்" (சீவக. 447).* 5. அழைப்பு (பிங்.); call. 6. எட்டாம் வேற்றுமை; (gram.) vocative case. *"விளியெனப் படுப" (தொல். சொல். 114).*

[விளி ²–, → விளி.]

விளி⁶ *vi/i,* பெ.(n.) ஐந்தாம் சுரம் (திவா.); (mus.) the fifth note of the gamut.

[இளி ³ → விளி]

விளிக்கூத்து *vi/i-k-kūttu,* பெ.(n.) சீழ்க்கைக் கூத்து; dancing with whistling. *"நாத்தலை மடிவிளிக் கூத்தொடு" (சீவக. 120).*

[விளி³ + கூத்து]

விளிகொள்பெயர் *vi/i-ko/-peyar,* பெ.(n.) விளியினையேற்கும் பெயர்கள்; the nouns which accepted the vocative case.

விளிகொள்ளாப்பெயர்கள் *viḷi-koḷḷā-p-peyargaḷ,* பெ.(n.) விளியினையேற்காத பெயர்கள்; the nouns which are not accepted the vocative case.

[அவன், அவள் முதலாய பெயர்கள் விளி ஏற்பதில்லை. விளி ஏலாத பெயர்களைத் தமிழிலக்கணங்கள் தொகுத்துக் கூறி அவற்றை விளிகொள்ளாப் பெயர்கள் என்று குறிக்கின்றன.

நுமன், நுமள், நுமர் என்பனவும் எவன், எவள், எவர், எவை, எது என்பனவும் யாவன், யாவள், யாவர், யாவை, யாது என்பனவும் அவன், அவள், அவர், அவை, அது என்பனவும், இவன், இவள், இவள், இவர், இவை, இது என்பனவும், உவன், உவள், உவர், உவை, உது என்பனவும், தாம், தான் என்பனவும், பிறன், மற்றையான் முதலாயினவும் விளிகொள்ளாப் பெயர்கள் என்பர்]

(இலக். கலைக். 112).

விளிந்தார் *viḷindār,* பெ.(n.) இறந்தவர்; the dead. *"விளிந்தாரின் வேறல்லர்" (குறள். 143), "விளிந்தார் ஈமம் – விளக்காக" (சீவக.).*

[விளி ¹ → விளிந்தார்]

விளிப்பு *viḷippu,* பெ.(n.) 1. ஓசை; sound. *"விளிப்பறை போகாது" (மணிமே. 3, 63).* 2. இரைச்சலிடுகை (நாமதீப. 670); calling loudly, shouting.

[விளி ² → விளிப்பு]

விளிம்பு *viḷimbu,* பெ.(n.) 1. ஓரம் (நாமதீப. 546); border, edge, rim. 2. கரை; brink, margin. *"விளிம்பு தெற்றி முற்றுவித்து" (கம்பரா. நகரப். 20).* 3. கண்ணிமை (பிங்.); eyelid. 4. எயிறு (பிங்.); gums.

ஒ.நோ. வடிம்பு.

Ma. *viḷimbu.*

[விளி ¹ → விளிம்பு]

விளிம்புகட்டு-தல் *viḷimbu-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. பாய் முதலியவற்றிற்கு ஓரம் அமைத்தல்; to form a ring, to form the border, as in mat-making. 2. புண் ஆறி ஓரம் வைத்தல் (வின்.); to form proud flesh around a wound.

[விளிம்பு + கட்டு-,]

விளிவி-த்தல் *viḷivi-,* 11 செ.குன்றாவி.(v.t.) 1. பிறனொருவனைக் கூப்பிடும்படி ஆளனுப்புதல்; to send one to call another. 2. கொல்லச் செய்தல்; to cause to kill.

[விளி ² → விளிவி-,]

விளிவு¹ *viḷivu,* பெ.(n.) 1.. இறப்பு (சூடா.); death. 2. கேடு; ruin. *"விளிவின்று... ஒருநீயாகித் தோன்ற" (திருமுரு. 292).* 3. உறக்கம்; sleep. *"காடுதேர் வேட்டத்து விளிவிடம் பெறா அது" (அகநா. 58).* 4. இடையறவு; interruption, cessation. *"விளிவின்று... தளிபொழிசாரல்" (பரிபா. 12. 2).* 5. நாணம்; shame. *"பேசரும் விளிவிற் கூடி" (திருவாலவா. 32, 7).* 6. கடுஞ்சினம்; great anger. *"பாவிமேல் விளிவு சரத நீங்கலதாம்" (கம்பரா. மீட்சிப். 130) (அக.நி.).*

[விளி ¹ → விளிவு]

விளிவு² *viḷivu,* பெ.(n.) வீரரார்ப்பு; warriors shout, war-cry. *"விளிவொடு விழியு மிழந்தார்" (கம்பரா. கிங்கர. 28).*

[விளி ² → விளிவு]

விளிவேற்றுமை *viḷi-vēṟṟumai,* பெ.(n.) எட்டு வகை வேற்றுமைகளில் ஒன்று;

[எண் வகை வேற்றுமைகளில் விளி வேற்றுமையும் ஒன்று. பெயர்கள் விளிப்பொருளில் ஆளப்படும் போது அதனை விளிவேற்றுமை என்பர்.

ஏனைய வேற்றுமைகளிலிருந்து விளிவேற்றுமை சொல்லியல்பாலும் தொடரியல்பாலும் வேறுபடு மாற்றை உணர்ந்த தொல்காப்பியர் விளி வேற்றுமைக்கு விளிமரபு என ஒரு தனியியலையே அமைத்திருக்கிறார். எல்லாப் பெயர்களும் விளி ஏற்பதில்லை என்பதும் விளிவேற்றுமை ஏற்கும்போது பெயர்கள் சாரியை பெறுவதில்லை என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது] (இலக்.கலைக்.113).

விளை¹-தல் *viḷai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. தவசம் முதலியன விளைதல்; to be produced. *"ஆற்ற விளைவது நாடு" (குறள், 732).* 2. பயன்றருதல்; to be productive. *'இந்த நிலம் நன்றாய் விளையுமா?'* 3. உண்டாதல் (பிங்.); to result. *'முற்பகற் செய்யிற் பிற்பகல் விளையும்'.* 4. முதிர்தல்; to mature, ripen, as grain. *"புன்புல மயக்கத்து விளைந்தன தினையே" (ஐங்குறு. 260).* 5. நிகழ்வித்தல்; to occur, happen. *"நாசமிவடனால் விளைந்த தென்னா" (கம்பரா. மாயாசீ. 62).*

க. பெள், ம. விளயுக; **Ko.** *veḷu*; **To.** *peḷ*; **Ka.** *beḷe*; **Kod.** *boḷe*; **Tu.** *bulē*; **Te.** velayu, belayu.

[விள் → விளை → விளை-,]

விளை²-த்தல் *viḷai-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. பயிர் முதலியன வளரச்செய்தல்; to raise cropscet, cause to grow. *"செய்விளைக்கும் வாய்க்கா லனையார் தொடர்பு" (நாலடி, 218).* 2. உண்டாக்குதல்; to produce, bring into being. *"புகழ் விளைத்தல்" (பு.வெ.2.14).* 3. புரிதல்; to perform, as worship. *"பூசனை விளைத்த வாறும்" (விநாயகபு. பதிக. 22).*

[விளை ¹-, → விளை-,]

விளை³ *viḷai,* பெ.(n.) 1. விளைவு, 1 (அரு.நி) பார்க்க; see *viḷaivu.* 2. விளைவு, 4 பார்க்க; see *viḷaivu.* 3. பட்டறிவு; experience, enjoyment. *"விளைவயின் மாண்டற் கரிதாம் பயன்" (குறள், 177).* 4. புன்செய்க் காடு (நெல்லை.); dry land. 5. நீரேறாத மேட்டு நிலம் (வின்.); high ground far above the level of the water-course. 6. நகர்சூழ் காவற்காடு (நாமதீப. 519); forest round a city, serving as a defence.

க. பெளெ.

[விள் → விளை]

விளை⁴ *viḷai,* பெ.(n.) காக்கட்டான் என்னும் கொடி; mussel-shell creeper. *"விளையின் மென்பூ" (கம்பரா. கார்காண். 32);*

[கருவிளை → விளை]

விளை⁵ *viḷai,* பெ.(n.) 1. நரம்பு (அரு.நி.); string. 2. மீன்வகை (யாழ்.அக.); a kind of fish.

[விள் → விளை]

விளைகரி *viḷai-kari,* பெ.(n.) நிலக்கரி (வின்.); coal, mineral coal.

[விளை ¹- + கரி ¹]

விளைச்சல் *viḷaiccal,* பெ.(n.) 1. விளைவு, 4 (சிலப். 6, 30 அரும்.) பார்க்க; see *viḷaivu.* 2. முற்றிவரும் பயிர் (வின்.); ripening grain. 3. விளைவு 1, 2, 6, 7 பார்க்க; see *viḷaivu.* 4. இளமையிலேயே முதிர்ந்த அறிவு (இ.வ.); precocity.

[விளை-, → விளைச்சல்]

விளைஞர் *viḷaiñar,* பெ.(n.) மருத நிலமாக்கள்; agriculturists.

[விளை → விளைஞர்]

விளைதயிர் *viḷai-tayir,* பெ.(n.) நன்கு கெட்டியான தயிர்; curd in robustness.

[விளை + தயிர்]

மறுவ. கெட்டித்தயிர்.

விளைநிலம் *viḷai-nilam,* பெ.(n.) பயிரிடக்கூடிய நிலம்; fertile ground, arable land, land suitable for raising crops. *"விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்" (நாலடி, 133).*

[விளை¹- + நிலம்]

விளைநீர் *viḷai-nīr,* பெ.(n.) பாசனத்துக்குரிய நீர்; water for irrigation. *"விளைநீராக வளர்ந்தபடி" (திவ். திருப்பா. 17. வ்யா. பக். 164).*

[விளை + நீர்]

விளைநீரடை-த்தல் *viḷainīr-aḍai-,* 4 செ.கு.வி. (v.i.) பாசனத்திற்கு வேண்டிய அளவுக்கு நீரைத் தேக்கிக் கொள்ளுதல்; to let water into a field, in quantity sufficient for its irrigation. *"விளை நீரடைத்துக் கொண்டு" (ஈடு. 6, 2. ப்ர.).*

[விளைநீர் + அடை-,]

விளைப்பு *viḷaippu,* பெ.(n.) செய்கை (யாழ்.அக.); doing.

[விளை² → விளைப்பு]

விளைபுலம் *viḷai-pulam,* பெ.(n.) விளைநிலம் (தக்கயாகப். 2, உரை) பார்க்க; see *viḷai-nilam.*

[விளை¹ + புலம்]

விளைபொருள் *viḷai-poruḷ,* பெ.(n.) நிலத்தில் விளையும் பொருள்; produce, product.

[விளை + பொருள்]

விளையவை-த்தல் *viḷaiya-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. முதிரச் செய்தல் (வின்.); to cause to mature or ripen. 2. பயன் படச் செய்தல்; to make a thing serve its purpose, to make use of. 3. விளைவுண்டாகச் செய்தல்; to cause to be productive. 4. இறுகிக் கட்டியாகும்படி விடுதல் (வின்.); to allow to crystallize, harden. 5. அவுரிச்சரக்கை அழுகவைத்தல் (வின்.); to set aside to ferment, as indigo. 6. ஈமக்காட்டில் பிணத்திற்கு நெருப்பு மூட்டுதல் (வின்.); to kindle a fire for burning a corpse in burial ground, to cremate.

[விளைய + வை-,]

விளையாட்டம்¹ *viḷaiyāṭṭam,* பெ.(n.) விளையாட்டு பார்க்க; see *viḷaiyaṭṭu.* *"பிள்ளை விளையாட்ட மனைத்தினும்" (திவ். பெருமாள். 7, 9).*

[விளையாடு → விளையாட்டம்]

விளையாட்டம்² *viḷai-y-āṭṭam,* பெ.(n.) விளைநிலம் பார்க்க; see *viḷai-nilam.* *"கோவில் விளையாட்ட மெங்கும்" (குற்றா. குற. 98).*

[விளை¹ + ஆடு → ஆட்டம்]

விளையாட்டம்மை *viḷaiyāṭṭammai,* பெ.(n.) 1. மணல் வாரியம்மைவகை; measles. 2. சின்னம்மை; chicken-pox.

[விளையாட்டு + அம்மை. அம்மை = அம்மை நோய்வகை]

விளையாட்டரங்கம் *viḷaiyāṭṭaraṅgam,* பெ.(n.) விளையாடவும், விளையாட்டுப்

பயிற்சி பெறவும், சுற்றிலும் பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்க ஏந்துடையதுமான அரங்கம்; stadium.

[விளையாட்டு + அரங்கம்]



விளையாட்டு *viḷaiyāṭṭu,* பெ.(n.) 1. பொழுது போக்குக்குரிய மகிழ்ச்சிச் செயல்; play, sport, pastime, recreation. *"இன்று நீர்விளையாட்டினுள்" (சீவக. 903).* 2. துன்ப மின்றி எளிதாகச் செய்யுந் தொழில்; that which is done with ease without strain. *"பெருவிளையாட் டைந்தாடும் பிஞ்ஞகன்" (திருவாலவா. நாட்டுச். 1.).* 3. வேடிக்கை; fun. *"நான் இதை விளையாட்டாகச் சொன்னேன்" (வின்.).* 4. விளையாடல், 3 பார்க்க; see *viḷaiyāḍal* 3. 5. கலைத்தொழில் எட்டனுள் பாட நினைத்த வண்ணத்திற் சந்தத்தை விடுகை (சீவக. 657, உரை); adapting the *candam* to the *vaṇṇam*, one of eight *kalai-t-toḻil*, q.v.

விளையாட்டின் கூறுகள்

1. கட்சி பிரித்தல்

இரு கட்சியார் விளையாடும் விளையாட்டு களிலெல்லாம் முதலாவது கட்சி பிரித்துக் கொள்ளல் வேண்டும். ஆற்றலும் மூப்பும் வாய்ந்த இருவர் முதலில் கட்சித் தலைவராய் அமர்ந்து கொள்வர். அதன்பின், பிறர் இருவர் இருவராய்ச் (இவ்விருவராய்ச்) சேர்ந்து தமக்குக் கவர்ச்சியான வெவ்வேறு புனைபெயரிட்டுக் கொண்டு, கட்சித் தலைவரிடம் சென்று "இவ்விரு பெயராருள் உமக்கு எவர் வேண்டும்?" எனக்கேட்பர். கட்சித்தலைவர் யாரேனும் ஒருவரைத் தெரிந்து கொண்டு அவரைத் தம் கட்சியிற் சேர்த்துக் கொள்வர். இங்ஙனம் இவ்விருவராய்ச் சேர்ந்து செல்லற்கு உத்திகட்டுதல் என்று பெயர். கட்சித் தலைவனைப் பொதுவாக 'அண்ணாவி' என அழைப்பர். இவை பாண்டி நாட்டு வழக்கு.

உத்தியாளர் கட்சித் தலைவரைக் கேட்கும் போது, காற்றைக் கலசத்தில் அடைத்தவன் வேண்டுமா, கடலைக் கையால் நீந்தினவன் வேண்டுமா? என்றும், வானத்தை வில்லாய் வளைத்தவன் வேண்டுமா, மணலைக் கயிறாய்த் திரித்தவன் வேண்டுமா? என்றும் பிறவாறும், அருஞ்செயல் ஆற்றிய பழமறவரின் சிறப்புப் பெயர்களையே கூறிக்கேட்பர். இத்தகைய பெயர்களைக் *"கூடிவரு வழக்கின் ஆடியற் பெயர்"* என்பர் தொல்காப்பியர் (சொல் : 165)

மகளிராயின், தாந்தாம் விரும்பிய பூப்பெயரைச் சொல்லிக் கேட்பர்.

2. தொடங்கும் கட்சியைத் துணிதல்

இரு கட்சியாருள் யார் முந்தி யாடுவதென்று துணிதற்கு, உடன்பாடு, திருவுளச்சீட்டு ஆகிய இரு முறைகளுள் ஒன்று கையாளப் பெறும். இவற்றுட் பின்னதே பெரும்பான்மை. காசு சுண்டல், ஒடெறிதல் முதலியன திருவுளச் சீட்டின் வகைகளாம்.

இரு கட்சியாரில்லாது ஒருவரே பிறரையெல்லாம் ஓடிப் பிடிக்கும் விளையாட்டுக்களில், புகையிலைக் கட்டை யுருட்டல், சிறட்டையெறிதல், நீருட்சுண்டல், கைமேற்கை வைத்தல், மரபுரை கூறல் முதலியன, அவ்வவ் விளையாட்டிற் கேற்பத் திருவுளச் சீட்டு வகையாய் அமையும். கோலி ஆட்டத்தில் கோலிபுருட்டுவதில் பிறரை மேற்கொண்டவர் முந்தியாடுவர்.

3. இடை நிறுத்தல்

ஒரு விளையாட்டின் இடையில் ஓர் ஆடகர்க்கு ஆடையவிழ்தல் முடிகுலைதல் முதலிய தற்செயலான தடைகள் நிகழின், அன்று அவற்றைத் திருத்தற்கு ஏதேனுமொரு மரபுச் சொல்லைச் சொல்லிச் சற்று ஆட்டை நிறுத்திக் கொள்ளலாம். பாண்டி நாட்டில் *'தா'* என்பதும், சேர

கொங்குநாட்டில் *'அம்பேல்'* என்பதும் இடைநிறுத்த மரபுச் சொல்லாம்.

4. தோல்வித் தண்டனை

முட்டு வாங்கல், எதிரியைச் சுமத்தல் முதலிய மெய்வருத்தமும் காசுத் தண்டமும் இருவகைத் தோல்வித் தண்டனையாம்.

'இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்'

என்னும் குறளிலுள்ள 'அடுத்தூர்வது' என்னும் தொடர் விளையாட்டில் வென்றவர் தோற்றவர் மேல் குதிரையேறும் என்பதைக் குறிப்பான் உணர்த்துவதாகும்.

தண்டனையே யில்லாது விளையாடுவது முண்டு. தண்டனையுண்மையும் இன்மையும், தண்டனையில் வகையும் அளவும் விளையாட்டைத் தொடங்கு முன்னரே, பேசி முடிவு செய்யப் பெறும்.

5. ஆடைதொடல் கணக்கன்மை

ஒருவர் பிறரைத் தொடும் விளையாட்டுக் களிலெல்லாம் உடம்பைத் தொடுதலின்றி ஆடையைத் தொடுதல் கணக்காகாது. "வண்ணான் சீலைக்கு வழக்கில்லை" என்பது இந்நெறிமுறை பற்றிய பழமொழியாகும்.

6. தவற்றால் ஆடகர் மாறல்

ஆட்டு நிகழும் போது ஆடுகிறவன் தவறின், அடுத்தவன் ஆடல் வேண்டும்.

7. வென்றவர்க்கு மறு ஆட்ட வசதி

ஓர் ஆட்டையில் வென்றவர்க்கு மறு ஆட்டையில் முந்தியாடுவது அல்லது எதிர்க்கட்சியில் பிடிக்கப்படுவது போன்ற வசதியளிக்கப்பெறும்.

8. இடத்திற்கேற்ப வேறுபடல்

பல ஆட்டுக்களை ஆடு முறையும், அவற்றிற் சொல்லும் மரபுரைகளும் இடத்திற்கு இடம் சிறிதும் பெரிதும் வேறுபட்டிருப்பது, இயல்பு.

9. ஆட்டைத்தொகை வரம்பின்மை

எவ்விளையாட்டிலும் இத்துணை ஆட்டை ஆடித் தீர வேண்டும் என்னும் கடுவரம்பில்லை, ஆடுவார் விருப்பம் போல் எத்துணை ஆட்டையும் ஆடலாம். பொதுவாக, ஓர் ஆட்டையில் தோற்றவன் அடுத்த ஆட்டையில் வெற்றி, நம்பிக்கை கொள்ளின், அதை ஆடுமாறு எதிரியை வற்புறுத்துவது வழக்கம்.

10. நடுநிலை

விளையாட்டு இருபாலர்க்கும் இருபருவத்தார்க்கும் இன்பம் விளைவிப்பதே யாயினும், நடுநிலை போற்றாக்கால் இன்பத்திற்கு மாறாகத் துன்பமே விளையும். பணையம் வைத்தாடினும் வையாதாடினும் கெலித்தவர்க்கு மகிழ்ச்சியும் தோற்றவர்க்கு வருத்தமும் உண்டாவது திண்ணம். தோற்றவர் நடுநிலை போற்றின், அவ்வருத்தத்தை ஆற்றிக் கொள்வர். அல்லாக்கால் தம் தோல்வியை ஒப்புக் கொள்ளாது கலாம் விளைப்பர். அல்லது கரவு நெறியால் வெல்ல முயல்வர்.

விளையாட்டிற் பெரியோருந் தப்புவர் என்பது, 'சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானும், தாமப்பல் கண்ணனும் வட்டுப் பொருவுழிக் கைகரப்ப வெகுண்டு வட்டுக் கொண்டெறிந் தானைச் சோழன்மகனல்லை யெனத் தாமப்பல் கண்ணனார் கடிந்து கூறிய புறப்பாட்டால் (43) அறியக் கிடக்கின்றது.

பெரியோரும் விளையாட்டில் தப்புவராயின் சிறியோர் தப்புவதைச் சொல்ல வேண்டுவதில்லை. சிறுவர் விளையாட்டில் நிகழ்ந்த சிறு சண்டையின் விளைவாக எத்துணையோ பெரியோர் தம் கண்ணன்ன கேளிரைப் பகைத்ததும், அதனாற் பெருஞ் செல்வத்தைத் தொலைத்ததும் உண்டு. இதனால்தான் சிறுவர் சண்டையில் பெரியோர் தலையிடக் கூடாது என்னும் நெறிமுறையும் எழுந்தது.

விளையாட்டின்பம் கருதிப் பிறர்க்கு நோவைத் தருவனவும் செய்தல் கூடாது. பிறர் நோவையும் தன்நோவு போற் பேணுந் தன்மை, விளையாட்டிற்கு இன்றியமையாததாகும். இராமன் தன் பையற் பருவத்தில் மந்தரையின் கூனில் மண் ணுண்டையால் அடித்ததற்காகத் தன் காளைப் பருவத்தில் பதினாலாண்டு அரசிழக்க நேர்ந்தது என்று இராமகாதை கூறும். இங்ஙனம் விளையாட்டே வினையானது என்றில்லாவாறு கூடி விளையாடும் ஆடகரெல்லாம் நடுநிலையைப் போற்றல் வேண்டும். (பாவாணர் – தமிழ் நாட்டு விளையாட்டுக்கள்). *'விளையாட்டாய் இருந்தது வினையாய் முடிந்தது'* (பழ.)

[விளையாடு → விளையாட்டு]

விளையாட்டுக்காட்டு-தல் *viḷaiyāṭṭukkāṭṭu-,* 10 செ.கு.வி. (v.i.) 1. குழந்தைகட்குப் போக்குக் காட்டுதல்; to divert attention of children. 2. கண்கட்டு வித்தை முதலியன காண்பித்தல்; to exhibit one's magical powers, art, etc. 3. வேடிக்கைக் காட்டுதல்; to play tricks.

[விளையாட்டு + காட்டு-,]

விளையாட்டுக்கூட்டம் *viḷaiyāṭṭukkūṭṭam,* பெ.(n.) 1. களித்து விளையாடுவதற்கு உரியவரின் கூட்டம் (தக்கயாகப். 307, உரை); merry or gay company. 2. காரணமின்றிச் சேரும் மாந்த ரீட்டம் (யாழ்.அக.); idle crowd gathering together for no purpose.

[விளையாட்டு + கூட்டம்]

விளையாட்டுடைமை *viḷaiyāṭṭuḍaimai,* பெ.(n.) பொம்மை (புதுவை.); toy.

[விளையாட்டு + உடைமை]

விளையாட்டுப்பண்டம் *viḷaiyāṭṭu-p-paṇḍam,* பெ.(n.) குழந்தைகள் விளையாடு வதற்கான பொருள்கள்; things for playful children. *'விளையாட்டுப் பண்டம் வீடு வந்து சேராது' (பழ.).*

விளையாட்டுப்பிள்ளை *viḷaiyāṭṭu-p-piḷḷai,* பெ.(n.) 1. சிறுபிள்ளை (யாழ்.அக.); little child, as playful. 2. சிறுபிள்ளைத் தனமாக நடப்பவ-ன்-ள்; person behaving in a silly way. 3. கவலையின்றியிருப்பவ-ன்-ள்; irresponsible. *'விளையாட்டுப் பிள்ளை நஞ்சிற்கு அஞ்சாது' (பழ.).*

[விளையாட்டு + பிள்ளை]

விளையாட்டுபொம்மைகள் *viḷaiyāṭṭu-p-pommaigaḷ,* பெ.(n.) குழந்தைகள் வைத்து விளையாடும் பொம்மைகள்; dolls.

[பொம்மைகள் குழந்தைகளைக் கவர்ந்து மகிழ்விக்கின்றன. பொம்மைகளால் கவரப்படாத குழந்தையே இல்லை எனலாம். இந்த ஆர்வத்தை அறிவு வளர்க்கும் துறையில் திருப்பி விடுதலே சிறந்த குழந்தை வளர்ப்பு முறையாகும்.

விளையாட்டுப் பொம்மைகள் விலை உயர்ந்தவை என்றும், அதனால் அவை செல்வர்களின் குழந்தைகளுக்குத்தான் ஏற்றவை என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. இது முற்றிலும் தவறானது. குழந்தைகளை வளர்க்கும் அறிவுடன் புதுமையாகச் சிந்திக்கும் திறன் சிறிதளவேனும் இருந்தால், குறைந்த செலவில் தம் குழந்தைகளுக்கு ஏற்ற விளையாட்டுப் பொம்மைகளைப் பெற்றோர் அளிக்க முடியும்.

குழந்தை விளையாட்டுப் பொம்மைகளில் காட்டும் ஆர்வம், பிற்காலத்தில் வாழ்க்கையில் காட்டும் ஆர்வத்தின் துவக்கமேயாம். வளர வளரக் குழந்தை பொம்மைகளில் கொண்டுள்ள ஆர்வம் வாழ்க்கைசு சிக்கல்களுக்கு மாறுகிறது. விளையாட்டுப் பருவத்தில் பொம்மைகளினால் வளம்பெற்ற ஆர்வமே, மகிழ்ச்சியும் பயனும் மிக்க வாழ்க்கைக்குச் சிறந்த அடிப்படையாகும்]

விளையாடல் *viḷaiyāḍal,* பெ.(n.) 1. பொழுது போக்குகை (நாமதீப. 701.); play, sport. 2. கடவுளின் திருவிளையாடல்; sport of the gods. 3. இன்ப ஆடல்; amorous sport.

[விளையாடு → விளையாடல்]

விளையாடு-தல் *viḷaiyāḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. பொழுதுபோக்காக மனத்துக்கு இன்பந்தருஞ் செயலைப்புரிதல்; to play, sport, recreate. *"காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி" (திருவாச. 7, 12).* 2. துள்ளிக்குதித்தல்; to gambol. 3. வேடிக்கையாகச் செய்தல்; to do an act light-heartedly. 4. பகடி செய்தல்; to be playful, humorous or funny.

[விள் → விளை → விளையாடு-,]

பிள் → விள் = விளை = விருப்பம். விளையாடுதல் = விருப்பமாய் ஆடியோடித் திரிதல் அல்லது ஒரு வினை செய்தல். "கெடவரல் பண்ணை யாயிரண்டும் விளையாட்டு" (தொல்.உரி.) என்பதற்கேற்ப, விளையாடல் என்னும் சொற்குப் பயிர்த்தொழில் செய்தல் போல் நடித்து மகிழ்தல் என்னும் பொருளும் பொருந்துமேனும், விரும்பியாடுதல் என்னும் பொருளே சிறந்ததாகத் தோன்றுகின்றது. (பாவாணர். வே.க.119).

விளையாநிலம் *viḷai-y-ā-nilam,* பெ.(n.) களர்நிலம் (பிங்.); brackish soil.

மறுவ. உவர்நிலம், உவர்க்களம்.

[விளை + ஆ.எதிர்மறை இடைநிலை + நிலம்]

விளையுங்காலம் *viḷaiyuṅ-kālam,* பெ.(n.) அறுப்புக் காலம் (யாழ்.அக.); time of harvest, harvest season.

மறுவ. அறுவடைக்காலம்

[விளையும் + காலம்]

விளையுள் *viḷaiyuḷ,* பெ.(n.) 1. நாட்டமைதி ஆறனுளொன்றான விளைச்சல்; produce, crop. one of six *nāṭṭamaidi,* q.v. *"பெயலும் விளையுளுந் தொக்கு" (குறள், 545).* 2. முதிர்கை; maturing. *"வேய்ப் பெயல் விளையுட் டேக்கட் டேறல்" (மலைபடு. 171).* 3. வயல் (பிங்.); field. 4. உள்ளம் (அரு.நி.); mind.

[விளை + உள்²]

நாட்டில் விளைவன : நெல், வாழை, கரும்பு, மஞ்சள், இஞ்சி, வெற்றிலை பாக்கு முதலியன.

காட்டில் விளைவன : எள், பயறு, தேன், அரக்கு, சந்தனம், புனுகு காசறை (கஸ்தூரி) முதலியன.

மலையில் விளைவன : ஏலம், மிளகு, அகில், மருப்பு (தந்தம்) மரம், பொன், மணி, முதலியன.

கடலில் விளைவன : உப்பு, மீன், இறால், சங்கு, முத்து, பவழம், ஓர்க்கோலை முதலியன (குறள். 730)

விளைவி-த்தல் *viḷaivi-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. விளையச் செய்தல்; to cause to grow, to cultivate. 2. செயற்கை வழியாகப் பயிர் முதலியன வளர்த்தல் (வின்.); to stimulate growth by artificial means. 3. பயன் தருதல்; to yield results, to bring about consequencesd, to be fruitful.

[விளை → விளைவி]

விளைவு *viḷaivu,* பெ.(n.) 1. விளைகை; growth, ripening. 2. முதிர்ச்சி; maturity, ripening. *"விளைவமை தயிரொடு மிசைகுவர்" (சீவக. 122).* 3. முதுமை (பிங்.); old age. 4. விளைபொருள்; produce, crop, yield. *"விச்ச தின்றியே விளைவு செய்குவாய்" (திருவாச. 5, 96).* 5. பழம்; fruit. *"வெள்ளில் விளைவுதிரும்" (பு.வெ.10. சிறப்பிற். 1).* 6. பயன்; result, consequence. *"விளைவின்கண் வீயா விழுமந் தரும்" (குறள், 284).* 7. கைகூடுகை; success, grain. *"வேண்டிய பொருளின் விளைவு நன்கறிதற்கு..... சொல்லோர்த்தன்று" (பு.வெ.1, 4).* 8. ஆக்கம் (நாமதீப. 623); increase. 9. நிகழ்ச்சி;

event, happening. *"விளைவுரையென்று விட்டார்..... மெய்ம்மை யோர்வார்" (கம்பரா. பிணிவீ. 116).* 10. விளையுமிடம்; place where anything is produced. *"வினைக்கு விளைவாயது" (மணிமே. 4, 113).* 11. வயல் (யாழ்.அக.); field. 12. மேகம் (பிங்.); cloud. 13. நாடகச்சந்தி ஐந்தனுளொன்று (சிலப். 3, 13, உரை); denouement or solution in a play, one of five *nādaga-c-šandi*, q.v. *'விளையும் பயிர் முளையிலே தெரியும்' (பழ.).*

க. பௌவிகெ; ம. விள.

[விளை → விளைவு]

விளைவுபலன் *viḷaivu-palaṉ,* பெ.(n.) விளையுபொருள்; produce.

மறுவ. விளைச்சல்

[விளைவு + பயன் → பலன் [1]]

விற்கண்டம் *viṟ-kaṇḍam,* பெ.(n.) கட்டட வுறுப்புக்களுள் ஒன்று (S.I.I.V. 236); arch.

[வில் + கண்டம்]

விற்காயம் *viṟ-kāyam,* பெ.(n.) முற்காலத்தில் வழங்கிய வரிவகை (S.I.I.vii.404); an ancient tax.

[வில் + காயம்]

விற்காரன் *viṟ-kāraṉ,* பெ.(n.) வில்லாளன்; archer, bowman.

க. பில்கார.

மறுவ. வில்லேறுழவர்.

[வில் + காரன் [1]]

விற்கால் *viṟ-kāl,* பெ.(n.) வளைந்த கால் (வின்.); bowleg.

[வில் + கால்]

விற்கிடை *viṟkiḍai,* பெ.(n.) நான்கு முழங்கொண்ட அளவு; bow's length = 4 cubits. *"அத்தவெற்பிரண்டு விற்கிடை யெனப்போயாதவன் சாய்தல் கண்டருளி" (பாரத. பதினேழாம். 237).*

[வில் + கிடை]

விற்குடி *viṟ-kuḍi,* பெ.(n.) எண்வீரட்டங்களுள் ஒன்றும் திருவாரூர் மாவட்டத்திலுள்ளது மாகிய ஒரு சிவன் கோயில்; a *śiva* shrine in the Thiruvaerur district, one of *aṭṭa-viraṭṭam*, q.v.

விற்குன்று *viṟ-kuṉṟu,* பெ.(n.) மேரு மலை; mount *mēru*, as *śiva's* bow. சிவபிரானது வில். *"பள்ளிக்குன்றம் விற்குன்று மொழிய" (தக்கயாகப். 536).*

[வில் + குன்று]

விற்கோடி *viṟ-kōḍi,* பெ.(n.) 1. சிலைத் தீவு; *daṉus-kōḍi*. *"விற்கோடியிற் குடைந்துளோர் பவம்..... ஓடும்" (சேதுபு. கந்த. 79).* 2. ஒரு பேரெண் (அரு.நி.); a big number.

[வில் + கோடி [3]]

விற்படை *viṟ-paḍai,* பெ.(n.) 1. வில்லாகிய படைக்கருவி; bow, as a weapon. *"விற்படை நிமிர்ந்த தோளான்" (சீவக. 1710).* 2. விற்றானை பார்க்க; see *viṟṟāṉai*. *"விற்படை யிருக்கின்ற ஊர்களிலே" (பெரும்பாண். 82. உரை).* 3. அம்பு; arrow. *"விற்படை விலக்குவ பொற்புடைப் புரவியும்" (சீவக. 567).*

[வில் + படை]

விற்பணம் *viṟ-paṇam,* பெ.(n.) வில்லின் பொருட்டுச் செலுத்தும் வரி (S.I.I.i.81); a tax on bows.

[வில் + பணம்]

விற்பனவு *vir-paṉavu,* பெ.(n.) விற்பனை (யாழ்.அக.) பார்க்க; see *virpaṉai.*

[விற்பனை → விற்பனவு]

விற்பனன் *virpaṉaṉ,* பெ.(n.) விற்பன்னன் பார்க்க; see *virpaṉṉaṉ.*

[விற்பன்னன் → விற்பனன்]

விற்பனை *virpaṉai,* பெ.(n.) விற்றல் பார்க்க; see *virral.*

[வில் → விற்பனை]

விற்பனைப்பத்திரம் *virpaṉai-p-pattiram,* பெ.(n.) விலை ஆவணம்; sale deed.

Skt. patra > த. பத்திரம்.

[விற்பனை + பத்திரம்]

விற்பாட்டு *vir-pāṭṭu,* பெ.(n.) விற்போன்ற இசைக்கருவியை யொலிக்கச் செய்து கதை தழுவிப் பாடும் பாட்டு; a kind of narrative poem sung to the accompaniment of a bow-like musical instrument.

மறுவ. வில்லுப்பாட்டு

[வில் + பாட்டு]

விற்பிடி[1] *vir-piḍi,* பெ.(n.) வில்லைப் பிடிக்குங் கையினுள்ளளவு; the inside measure of the hand holding a bow. *"விற்பிடியளவாதலுமெல்லாம் கொள்க" (தக்கயாகப். 41).* 2. இணையாவினைக்கை முப்பத்து மூன்றனுள் கட்டை விரலை நிமிர்த்திச் சுட்டுவிரல் முதலிய நான்கு விரல்களையும் உட்புறம் வளைப்பதாகிய மெய்ப்பாடு வகை (சிலப். 3, 18, உரை); a gesture with one hand in which the four fingers other than the thump are held together and bent in while the thumb is kept separate and held upright, one of 33 *iṇaiyā-viṉai-k-kai,* q.v.

[வில் + பிடி ²]

விற்பிடி[2]-த்தல் *vir-piḍi-,* 4 செ.கு.வி.(v.i.) வில்வித்தை பயிலத் தொடங்குதல்; to stand or commence learning archery. *"திண்ணன் விற்பிடிக்கின்றா னென்று" (பெரியபு. கண்ணப்ப. 29).*

[வில் + பிடி-,]

விற்பிடிமாணிக்கம் *virpiḍi-maṇikkam,* பெ.(n.) சிறந்த மாணிக்கம்; superior ruby. *"தன் கைக்கடங்காத விற்பிடி-மாணிக்கத்தைப் பெற்றவன்" (திவ். திருப்பல். வ்யா. ப்ர.).*

[விற்பிடி + மாணிக்கம்]

விற்பு *virpu,* பெ.(n.) விறப்பு (அரு.நி.) பார்க்க; see *virappu.*

விற்புட்டில் *vir-puṭṭil,* பெ.(n.) விரலுறை; glove. *"விற்புட்டிலிட்டு" (பாரதவெண். 775).*

[விரற்புட்டில் → விற்புட்டில்]

விற்புரமுத்திரை *virpura-muttirai,* பெ.(n.) முத்திரைவகை (செந். x. 424); a hand-pose.

[விற்புர + முத்திரை]

விற்புருதி *virpurudi,* பெ.(n.) விப்புருதி (யாழ்.அக.) பார்க்க; see *vippurudi.*

விற்புருதிக்கிழங்கு *virpurudi-k-kiḻaṅgu,* பெ.(n.) அமுக்கிராக்கிழங்கு (சங்.அக.); tuber of Indian wintercherry.

[விற்புருதி + கிழங்கு]



விற்பூட்டு *vir-pūttu,* பெ.(n.) 1. பூட்டுவிற்பொருள்கோள் பார்க்க; see *pūttu-vir-poruḷkōḷ,* a mode of construing verse. *'விற்பூட்டு விதலையாப்பு' (இறை. 56, உரை).* 2. கத்தரிவகை (பெருங். வத்தவ. 14, 32); a kind of egg-plant or brinjal.

[வில் + பூட்டு]

விற்பூட்டுப்பொருள் *virpūttu-p-poruḷ,* பெ.(n.) பூட்டுவிற்பொருள்கோள் (வின்.) பார்க்க; see *pūttu-vir-poruḷ-kōḷ,* a mode of construing verse.

[விற்பூட்டு + பொருள்]

விற்பூட்டுப்பொருள்கோள் *virpūttu-p-poruḷkōḷ,* பெ.(n.) பூட்டுவிற்பொருள் கோள் (வின்.); a mode of construing verse.

[விற்பூட்டு + பொருள்கோள்]

விற்பூண்பொருள்கோள் *virpūṇ-poruḷkōḷ,* பெ.(n.) பொருள்கோள் எட்டனுள் செய்யுளின் முதலிலும் ஈற்றிலும் உள்ள சொற்கள் தம்முள் இயையப் பொருள் கொள்ளும் முறை (நன். 415); a method of construng a verse by taking together the first and last words one of eight *poruḷ-kōl,*q.v.

[ஒரு செய்யுளில் முதலில் நிற்கும் சொல்லும் ஈற்றில் நிற்கும் சொல்லும் இயைந்து பொருள் பயக்குமாயின் அதனை விற்பூண் பொருள்கோள் என்பர். வில்லில் உள்ள நாண் இருதலையும் சேரப்பூட்டி நிற்பது போல இப்பொருள்கோள் அமைவதால் விற்பூண் பொருள்கோள் என்றனர்]

விற்பொறி *virpori,* பெ.(n.) சேரவரசரது வில்லிலாஞ்சனை; the bow-emblem of the *šēra-kings.* *"இமயஞ் சூட்டிய வேம விற்பொறி" (புறநா. 39).*

[வில் + பொறி = இலாஞ்சனை]

விற்றல் *virral,* பெ.(n.) விலைசெய்கை; selling, sale.

[வில் → விற்றல்]

விற்றானை *virrāṇai,* பெ.(n.) அறுவகைப் படையுள் வில் வீரர்களாலான படை (திவா.); the battalion of archerss in an army, one of *aruvagai-t-tāṇai,* q.v.

[வில் + தானை]

விற்று *virru,* பெ.(n.) விள்ளுகை (அரு.நி.) பார்க்க; see *viḷḷugai,* dividing.

விற்றுமுதல் *virru-mudal,* பெ.(n.) விற்றுவந்த பணம் (C.G.); sale proceeds. *'அவனுக்கு நாள்தோறும் விற்றுமுதல் கொழிக்கிறது' (உ.வ.).*

[வில் → விற்று + முதல்]

விற்றூண் *virrūṇ,* பெ.(n.) விற்றுண்ணற்குரிய சில்லரைப் பண்டங்கள்; sundry articles which can be sold for daily food. *"விற்றூ ணொன்றில்லாத நல்கூர்ந்தான் காண்" (தேவா. 1097, 1).*

[வில் → விற்று+ ஊண்]

விற்றூற்றுமூதெயினனார் *virrūrru-mūteyinaṉār,* பெ.(n.) கடைக்கழகப் புலவர்; a sangam poet.

கடைக்கழகப் புலவர்களில் ஒருவர், இவரை முந்நூற்று மூதெயினனார் என்றும் சில படிகள் கூறும். விற்றூறு, முத்தூறு என்பவை ஊர்களின் பெயர்கள், மூதெயினன் என்னும் பெயர் இவரை வேடர் மரபினரென்றும் முதியவரென்றும் காரணங் காட்டுகின்றன. எனவே, இது இவருக்கியற் பெயரெனலாகாது. தமிழருடைய திருமண முறையை இவர் அகநானூற்றில் மிக அழகாகக் கூறுகிறார். திங்களை சகடு (உரோகிணி) கூடிய நேரம் திருமணத்திற்கு நல்ல நேரம் என்பது இவர் கருத்தென்றும், மண நாளன்று வாகையிலையையும் அறுகின் கிழங்கையும் நூலிற் சேர்த்துக் கட்டி மணமகளுக்குச் சூட்டுவதும், மணநாளிரவிலேயே மணமக்களைப் பள்ளியறையிற் சேர்ப்பதும் அந்நாளைய வழக்கமென்றும் அச்செய்யுள் அறிவிக்கின்றது. தலைமகளைப் போர்த்தியிருந்த போர்வையை நீக்கியவுடன் வெளிப்படும் அவள் உருவம் உறை நீங்கிய வாள்போலக் காணப்பட்டதென்று இவர் கூறியுள்ளார். (அகம்.136). இவர் பாடிய வேறிரு செய்யுட்களும் அகநானூற்றில் உள்ளன (37, 288). குறுந்தொகையில் 372 ஆம் செய்யுள் இவர் பாடியது.

விற்றூற்றுவண்ணக்கன்தத்தனார் *virrūrru-vaṇṇakkaṉ-tattaṉār,* பெ.(n.) கடைக்கழகக் காலப் புலவர்; a sangam poet.

கடைக்கழகப் புலவர்களில் ஒருவர். விற்றூறு என்பது ஓர் ஊர். இவ்வூரில் மூதெயினனார் என்னும் புலவரொருவரும் இருந்தனரென அகநானூற்றாலும் குறுந்தொகையாலும் அறிய முடிகிறது. வண்ணக்கன் என்பது காசுத் தேர்வு செய்வோனைக் குறிக்கும். இத் தொழிலினருட் புலவர்கள் பலர் இருந்தனரெனத் தொகை நூல்களால் அறியலாம். தத்தனார் என்பது இவரது இயற்பெயர். இவர் செய்யுளில் பாண்டியனையும் மதுரையையும் கூறுகிறார் (நற். 298).

விற்றெனல் *virreṉal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு (வின்.); onom. expr. of whirring sound, as a stone whirled in the air.

விற்றொற்றிப்பரிக்கிரயம் *virrorri-p-parikkirayam,* பெ.(n.) விற்றலும் ஒற்றி வைத்தலும் பண்டமாற்றுதலும்; sale, mortgage and exchange or barter. *"விற்றொற்றிப்பரிக்கிரயத்துக்கு உரித்தாவதாகக் கொடுத்தோம்" (S.I.I.i.105).*

[வில் → விற்று + ஒற்றி + பரிக்கிரயம். பரிக்கிரயம் = விற்பனை.]

விற-த்தல் *vira-,* 12 செ.கு.வி. (v.i.) 1. செறிதல்; to be dense; close, to be intense. *"கலுழ்ந்துவீ ழருவிப்பாடு விறந்து" (நெடுநல். 97).* 2. மிகுதல்; to abound, increase. *"களிப்பு விறக்கவிடும் பண்டங்கள் பெருகக் கூட்டில்" (பதிற்றுப். 40, 18, உரை).* 3. வெற்றி பெறுதல்; to conquer. 4. போர் செய்தல் (வின்.); to fight. 5. வெருவுதல்; to fear. *"விறப்பே வெருஉப் பொருட்டு மாகும்" (தொல். சொல். 348).*

க. வெறெ.

விறகாள் *viragāḷ,* பெ.(n.) விறகு சுமந்து விற்போன்; fire wood seller, one who hawks fire wood. *"விறகாளாய்ச் சாதாரி பாடுமாறும்" (திருவாலவா. பதி. பாயி. 8).*

[விறகு + ஆள்[2]]

விறகு *viragu,* பெ.(n.) 1. எரிக்குங்கட்டை; fire wood, fuel. *"நாறு நறும்புகை விறகின்" (சீவக. 131).* 2. வேள்வித் தீக்குரிய சுள்ளிகள்; sacrificial fuel. *"களிறுதரு விறகின் வேட்கும்" (பெரும்பாண். 499), 'விறகு கோணலானாலும் நெருப்பு பற்றாதா?' (பழ.). 'விளங்கா மடையன் விறகுக்குப் போனால்*

விறகு கிடைத்தாலும் கொடிகிடைக்காது' (பழ.).

Ma. *viṟuku*, **Ko.** verg; **To.** berkh; **Tu.** bejakire; **Konda.** *veṟgu*; **Kui.** veju, vejgu, (pl. veska); **Kuwi.** *vegū* (pl. veska).

விறகுக்கட்டு *viṟagu-k-kaṭṭu*, பெ.(n.) கட்டிய விறகுத் தொகுதி; bundle of fire wood. *"விறகுக்கட்டு மூன்றும்" (S.I.I. iii, 188, 7). 'விறகுக் கட்டுக் காரனுக்கு நாரை வலம் ஆனால் ஒரு பணம் விற்கிறது, ஒன்றே காற்பணம் விற்கும்' (பழ.).*

[விறகு + கட்டு.]

விறகுக்கட்டை *viṟagu-k-kaṭṭai*, பெ.(n.) எரிக்கவுதவும் மரத்துண்டு (வின்.); piece of firewood.

[விறகு + கட்டை]

விறகுகாடு *viṟagu-kāḍu*, பெ.(n.) 1. விறகின் தொகுதி; heap of fire wood. *"மரக்காடான விறகுகாடு எரிந்த தொத்தது" (தக்கயாகப். 329, உரை).* 2. விறகு வெட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட காடு (இக்.வ.); reserved forest for fire wood.

[விறகு + காடு]

விறகுதலையன் *viṟagu-talaiyaṉ*, பெ.(n.) 1. விறகாள் (வின்.) பார்க்க; see *viṟagāḷ*. 2. விறகுவெட்டி (யாழ்.அக.) பார்க்க; see *viṟagu-veṭṭi*. 3. முட்டாள் (வின்.); stupid person; fool; idiot.

[விறகு + தலையன்]

விறகுவெட்டி *viṟagu-veṭṭi*, பெ.(n.) விறகு தறிப்பவன்; wood - cutter.

[விறகு + வெட்டு → வெட்டி. 'இ' வினை முதலீறு.]

விறப்ப *viṟappa*, பெ.(n.) ஓர் உவம வாய்பாடு (தொல். பொ. 287); a particle of comparison.

[விற→விறப்ப]

விறப்பு *viṟappu*, பெ.(n.) 1. செறிவு; crowdedness, density, intensity. *"விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே" (தொல். சொல். 347).* 2. பெருக்கம் (வின்.); increase. 3. வலிமை (பிங்.); strength. 4. வெற்றி (சூடா.); victory. 5. போர் (சூடா.); battle. 6. அச்சம் (தொல். சொல். 348); fear.

[விறு → விற → விறப்பு] (மு.தா.89)

விறல்[1] *viṟal*, பெ.(n.) 1. வெற்றி; victory. *"விறலீனும் வேண்டாமை யென்னுஞ் செருக்கு" (குறள், 180).* 2. வீரம் (யாழ்.அக.); bravery. 3. வலி; strength. *"விறல்விசயனே வில்லுக்கிவ னென்றும்" (தேவா. 647, 2).* 4. பெருமை (பிங்.); greatness; nobility. 5. சிறப்பு; distinctive excellence; honour. *"பெருவிறல் யாணர்த்தாகி" (புறநா. 42, 12).* 6. உள்ளக் குறிப்புப் பற்றி உடம்பிற்றோன்றும் வேறுபாடு" (தொல். பொ. 249, உரை); physical expression of emotion.

[விற → விறல்]

விறல்[2](லு)-தல் *viṟal-*, 5 செ.கு.வி.(v.i.) சினத்தோடு எதிர்த்துச் செல்லுதல்; to rush forward with rage, to oppose in an angry mood. *"மதுரைமுன்னா விறலி வருகின்றதது" (திருவிளை. மாயப்பசு. 9).*

விறல்கோளணி *viṟal-kōḷ-aṇi*, பெ.(n.) பகை அல்லது அதன் துணையின் மேற் செலுத்தும் வலிமையைக் கூறும் அணிவகை (அணியி. 58); a figure of speech in which is described the heroic acts against an enemy or his allies.

[விறல் + கோள்¹+ அணி²]

விறல்வென்றி *viṟal-veṉṟi,* பெ.(n.) போர் வீரத்தாலுண்டாகிய வெற்றி; victory due to one's prowess. *"இன்னிசைய விறல் வென்றித் தென்னவர் வயமறவன்" (புறநா. 380, 4).*

[விறல் + வென்றி]

விறலி *viṟali,* பெ.(n.) 1. உள்ளக் குறிப்புப் புறத்து வெளிப்பட ஆடுபவள் (தொல். பொ. 91); female dancer who exhibits the various emotions and sentiments in her dance. 2. பாண்குலப் பெண் (பிங்.); woman of the *pāṉ* caste. 3. பதினாறு வயதுப் பெண் (யாழ்.அக.); girl who is 16 year old.

எண்வகைச் சுவையும் மனத்தின் கண்பட்ட குறிப்புகளில் புறத்துப் போந்து புலப்பட ஆடுகின்றவள். இவ்வாறு ஆடுவது விறலாகலின் 'விறல்பட ஆடுவாள்' விறலி எனப்பட்டாள். விறலிக்கு இனவரையறையில்லை யென்பர் நச்சினார்க்கினியர் (தொல்.பொருள்-91 உரை) பாண் இனப் பெண்ணை விறலி யென்று பிங்கலந்தை என்னும் நிகண்டு கூறும். மதுரைக் காஞ்சியில், 'பாணர் வருக பாட்டியர் வருக' (749) என்னுமிடத்துப் பாட்டியர் என்னுஞ் சொற்குப் பாணிச்சியர்என நச்சினார்க்கினியர் கூறுவர். பாணர் பாடுவோரும் விறலியர் ஆடுவோருமாக இருத்தலின் பாட்டியர் என்பவரே பாணிற் பெண்பாலாயிருத்தல் வேண்டும். எனினும் பாணருங் கூத்தரும் பொருநரும் விறலியரும் பாடுவோரும் ஆடுவோருமாக அக் கலைகளிலே வல்லவராகத் தமிழகத்தி லிருந்தனரென்றும், அவர்கள் தமிழக முடியுடை வேந்தர் மூவரையும் குறுநிலமன்னரையுஞ் செல்வரையும் கண்டு ஆடிப்பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்தனரென்றும் தமிழ் நூல்களிலிருந்து தெரிகிறது.

[விறல் → விறலி]

விறலியாற்றுப்படை *viṟali-y-āṟṟu-p-paḍai,* பெ.(n.) அரசன்பாற் பரிசில் பெற்ற ஓர் விறலி பரிசில் பெற விரும்பும் விறலியை அவன்பால் ஆற்றுப்படுத்தலைக் கூறும் புறத்துறை (பு.வெ. 9, பாடாண் 31); theme in which a *viṟali* who had been rewarded by a king directs another *viṟali* to the royal presence to obtain rewards. *"திறல்வேந்தன் புகழ்பாடும் விறலியை ஆற்றுப்படுத்தன்று" (பு.வெ.9-31).*

வள்ளலிடத்தே விறலியை ஆற்றுப்படுத்துவது, பாணாற்றுப்படை முதலிய நான்கும்

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"
(புறத். 36)

எனத் தொல்காப்பியர் தொகுத்துக் கூறினார்.

[விறலி + ஆற்றுப்படை.]

விறலிவிடுதூது *viṟali-viḍu-tūdu,* பெ.(n.) காமுகனாய்த் திரிந்த ஒருவன் தான் கழிந்ததற் கிரங்கிப் பின் ஓர் தலைவனை யடுத்துப் பரிசில்பெற்றுத் தன் மனைவிபால் ஓர் விறலியைத் தூதனுப்புவதாகக் கூறும் சிற்றிலக்கியம்; a poem in which a person who led the life of a profligate repents and sends a *viṟali* as a messenger to his wife to acquaint her with his good fortune in obtaining the partronage of a chieftain and to conciliate her.

[விறலி + விடு + தூது]

விறலோன் *viṟalōṉ,* பெ.(n.) 1. திண்ணியன் (பிங்.); robust, strong and verile man. 2. வீரன்; warrior, hero. *"விறலோன் மார்பம் புல்லேம் யாமென" (பு.வெ. 9, 47).* 3. அருகன் (பிங்.); arhat.

[விறல் → விறலான் → விறலோன்]

விறற்சொல் *viṟaṟ-col,* பெ.(n.) வெற்றியைக் குறிக்கும் சொல்லின் மூலம் வெற்றி உடையானைக் குறித்தல்; to denote a successful person in the manner of successful word.

விறன்மிண்டநாயனார் *viṟaṉmiṇḍa-nāyaṉār,* பெ.(n.) நாயன்மார் அறுபத்து மூவருள் நம்பியாரூரர் (சுந்தரமூர்த்திகள்) காலத்தவரான ஒரு சிவனடியார் (பெரியபு.); a cononized *šaiva* saint, a contemporary of *šundaramūrtti-nāyaṉar,* one of 63.

பெரிய புராணத்துட் கூறப்பெறும் அறுபத்து மூவருள் (சிவனடியார்) ஒருவர். இவர் சேர நாட்டில் கொல்லம் துறைமுக நிலையத்திற்குக் கிழக்கே செங்குன்றூரிலே பிறந்தவர். இவர் சிவபெருமா னடியவர்களிடத்திலும் சிவபிரான் திருவடியிலும் பேரன்புடையவர். சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருப்பதிகளுக்குச் சென்று வழிபடுவது இவர் வழக்கம். அப்பகுதிகளில் சிவனடியார்களை நேரில் வணங்கிய பிறகே திருக்கோயிலுக்குச் செல்வார். ஒருமுறை இவர் திருவாரூருக்குச் சென்றார். அங்குள்ள தேவாசிரிய மண்டபத்தில் அடியார்கள் குழுமியிருந்தனர். அப்போது அங்கு வந்த நம்பியாரூரர் அடியார்களை வணங்காமலே திருக்கோயிலுக்கு ஒரு புறமாக ஒதுங்கிச் செல்வதை இவர் கண்டார். இவர் மனம் வருந்தி, 'அடியார்களை வணங்காமற் செல்கின்ற வன்றொண்டன் அடியார்களுக்குப் புறகு!' என்று கூறினார். அம்மொழி கேட்ட நம்பியாரூரர், இவருடைய அன்புடைமை கண்டு வியந்து, திருத்தொண்டத் தொகை பாடி அடியார்களை வணங்கினார்.

இவ்வாறு சிவ நெறியைப் பலகாலும் காப்பாற்றிவந்த விறன்மிண்டர், சிவபெருமா னருளால் சிவகணத்தவராகும் பேறு பெற்றார். இத்தகு சிறப்புடன் நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகை பாடுதற்குக் காரணராயிருந்த இப்பெரியாரை நம்பியாரூரர், 'விரி பொழில் சூழ் குன்றையார் விறன் மிண்டர்க் கடியேன்' என்று திருத்தொண்டத் தொகையிற் சிறப்பித்துள்ளார்.

விறாசு *viṟāšu,* பெ.(n.) பருவான்களைத் (பருங்கொம்பு) திருப்பும்படி அவற்றிற் கட்டுங் கயிறு; brace (M.naut. 86).

விறாட்டி *viṟāṭṭi,* பெ.(n.) வறட்டி; bratty.

[வறட்டி → விறாட்டி]

விறாண்டு-தல் *viṟāṇḍu-,* 5 செ.குன்றாவி. (v.t.) பிராண்டு-, (வின்.); to scratch.

விறாய் *viṟāy,* பெ.(n.) செருக்கு; sauciness. *"அவனுக்கு விறாய் அதிகம்" (வின்.).*

[வீறு → விறாய்]

விறிசாய் *viṟišāy,* வி.எ.(adv.) விரைவாக; swiftly. *"விறிசாய் நடக்கிறான்" (வின்.).*

[விறிசு → விறிசாய்]

விறிசு *viṟišu,* பெ.(n.) ஒருவகை வாணம்; rocket. *"விறிசெனவே சிதறி" (திருப்போ. சந். பிள்ளைத். முத்தப். 9).*

தெ. பிருசுலு; *birisū. grōvi;* க. பிறிசு.

[விரைசு → விரிசு → விறிசு]

விறிசுவிடு-தல் *viṟišu-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. விறிசுவாணத்தை மேலெழ விடுதல்; to send up a rocket. 2. பொய்யுரைகட்டிப் பேசுதல்; to tell lies.

[விறிசு + விடு-,]

விறுதா *viṟudā,* பெ.(n.), வி.எ. (adv.) விருதா (நாமதீப. 645) பார்க்க; see *virudā.*

விறுமதண்டம் *viṟumadaṇḍam,* பெ.(n.) மாதவிக்கொடி; common delight of the woods.

மறுவ. குருக்கத்தி.

விறுமதரு *viṟumadaru,* பெ.(n.) புன்முருக்குப்பூடு (சங்.அக.); a plant.

விறுமமூலி *viṟuma-mūli,* பெ.(n.) பூடுவகை; a prostrate herb.

மறுவ. பிரமி.

[பிரமமூலி → விறுமமூலி]

விறுமன் *viṟumaṉ,* பெ.(n.) சிற்றூர்ப் பெண் தெய்வம் (யாழ்.அக.); a village deity.

விறுமாண்டி *viṟumāṇḍi,* பெ.(n.) சிற்றூர்த் தெய்வம்; a village deity.

விறுவிறு–த்தல் *viṟu-viṟu-,* 11 செ.கு.வி. (v.i.) 1. மேற்பூச்சு உலர்ந்ததனால் விறுவிறென்றிழுத்தல்; to twitch, as when a coating of paste on one's body dries up. *"சேறு உலர்ந்து விறுவிறுத்த உடல்" (அகநா. 17, உரை).* 2. காரம் உறைத்தல்; to be pungent. *'மிளகாய் விறுவிறுக்கின்றது'.* 3. புண் குத்தெடுத்தல் (வின்.); to throb, as a boil. 4. சினம் பொங்குதல் (இ.வ.); to fret with anger, to rage. 5. விரைதல் (சங்.அக.); to hasten, hurry.

[விறுவிறு → விறுவிறுத்தல்]

விறுவிறுப்பு *viṟuviṟuppu,* பெ.(n.) 1. மேற்பூச்சு உலர்ந்ததனால் விறுவிறென்றிழுக்கை; twitching, as when a coating of paste on one's body dries up. 2. சார்ப்பு (உறைப்பு); pungency. 3. புண் முதலியன குத்தெடுக்கை; throbbing pain, as of a boil. 4. கடுஞ்சினம் (வின்.); rage. 5. சுறுசுறுப்பு (இ.வ.); briskness, activity.

[விறுவிறு → விறுவிறுப்பு]

விறுவிறெனல் *viṟuviṟeṉal,* பெ.(n.) 1. விறுவிறென்றிழுத்தற் குறிப்பு; மலைத்தல் (வின்.); twitching pain. 2. உறைத்தற் குறிப்பு; being pungent in taste. 3. குத்தெடுத்தற் குறிப்பு; throbbing, as of a boil. 4. சினக்குறிப்பு; being angry. 5. விரைவுக்குறிப்பு; speed, rapid motion. *'விறுவிறென்று கல்வந்து விழுந்தது'.*

[விறுவிறு + எனல்]

விறுனல் *viṟuṉal,* பெ.(n.) கப்பலிலுள்ள ஒருவகைத் துளை (naut); scupper hole.

விறை[1]–த்தல் *viṟai-,* 11 செ.கு.வி. (v.i.) 1. மரத்துப்போதல்; to grow stiff, as from cold, to become numb. 2. குளிர் முதலியவற்றால் நடுங்குதல் (இ.வ.); to shiver, as from cold. 3. வியத்தல்; to become bewildered. *'குதிரை விறைத்துப் பார்க்கிறது'.* 4. செருக்குக் காட்டுதல்; to assume airs. *'யாரிடத்தில் விறைக்கிறாய்?'.*

க. பெரெ; ம. விரக்க; **Ko.** verk; **Tu.** *beṟagu,* **Te.** *veṟāgu;* **Kui.** *brā.*

[விறு → விறை → விறைத்தல் (மு.தா.244)]

விறை[2]–த்தல் *viṟai-,* 11 செ.கு.வி. (v.i.) 1. பெருமை கொள்ளல்; sense of pride. 2. சினத்தல்; get angry.

[விறு → விறை → விறைத்தல் (சு.வி.28)]

விறைப்பு *viṟaippu-,* பெ.(n.) 1. விறைத்துப் போகை (யாழ்.அக.); numbness, stiffness, as from cold. 2. நடுக்கம்; shivering. *'குளிர் என்ன விறைப்பு விறைக்கிறது'.* 3. மலைப்பு (யாழ்.அக.); bewilderment. 4. செருக்குக் காட்டுகை; assuming airs; self-abandon.

Ma. virakka; **Ko.** veru; **To.** *per*, **Ka.** *birasa*, *birasu*, *birisu*, *birusu*, *biru*; **Tu.** *birgāḷ*, *birsu*, **Te.** *birusu*, birusu.

[விறை → விறைப்பு]

விறையல் *viraiyal,* பெ.(n.) குளிர்நடுக்கம்; shivering. *"வெடுவெடென் றுடல் விறையலாகி" (வள்ளி, கதை Ms.).*

[விறை → விறையல்]

வின்மை *vinmai,* பெ.(n.) 1. விற்றொழில்; archery. *"தெம்மாறு வின்மை முதலாய செயல்கள் யாவும்" (பாரத. அருச்சுனன்ற. 88).* 2. வில்வன்மை (இலக்.அக.); skill, adept, expertise in archery.

மறுவ. வில்லாண்மை.

[வில் → வின்மை]

வின்னப்படு-தல் *vinna-p-padu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. சிதைதல்; to be marred, injured, to be damaged, as an idol with pieces broken off. *"வின்னப்படுத்தி.... வெருட்டுவனே" (தனிப்பா. ii, 158, 394).* 2. காயப்படுதல் (இ.வ.); to be hurt, wounded. 3. தடைப்படுதல்; to be frustrated. 4. மனம் வேறுபடுதல்; to be estranged.

[வின்னம் + படு-தல்]

வின்னம் *vinnam,* பெ.(n.) பின்னம்¹ (யாழ்.அக.) பார்க்க; see *pinnam.*

[பின் → பின் → பின்னம் → வின்னம்]

வின்னா *vinnā,* பெ.(n.) கடுரோகிணி (மலை.); christmas rose.

வின்னாண் *vinnāṇ,* பெ.(n.) வில்லை வளைத்துப் பூட்டுங் கயிறு (யாழ்.அக.); bow-string.

[வில் + நாண் ²]

வின்னூல் *vinnūl,* பெ.(n.) வில்வித்தை (யாழ்.அக.); art of archery.

[வில் + நூல்]

வின்னூலாளன் *vinnūl-āḷan,* பெ.(n.) விற்பயிற்சியளிக்கும் ஆசிரியன்.

[வின்னூல் + ஆளன்]

வினகம் *vinagam,* பெ.(n.) சேங்கொட்டை (வின்.); marking-nut tree.

[வில் + நகம் ¹]

வினதை *vinadai,* பெ.(n.) கருடனது தாய்; the mother of *garuḍa.* *"மழைபுரை பூங்குழல் வினதை" (கம்பரா. சடாயுகா. 27).*

வினயம்¹ *vinayam,* பெ.(n.) 1. வினையம்¹ 1, 4, 5, 6 பார்க்க; see *vinaiyam.* 2. சூழ்ச்சி; device, means, stratagem. *"என் மனது கன்ற வினயங்கள் செய்தாள்" (விறலிவிடு. 420).* 3. கொடுஞ்செயல்; wicked deed. *"இனம்வள ரைவர்கள் செய்யும் வினயங்கள் செற்று" (தேவா. 212, 7).*

[வினை → வினயம்]

வினயம்² *vinayam,* பெ.(n.) 1. நன்னயம்; good breeding, propriety of conduct. 2. வணக்கவொடுக்கம்; பேச்சு, விடை முதலியவற்றில் வெளிப்படுத்தும் பணிவும் அடக்கமும் நிறைந்த தன்மை; modesty, politeness. *"வினயத்தொடு குறுக" (தேவா. 908, 8).* 3. அடக்கம்; self-control, disipline. 4. தேவரைப் புகழ்ந்து கூறும்

பாட்டுவகை (சிலப். 8, 26, உரை); a kind of song in praise of the gods.

வினவு-தல் *vinavu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. உசாவுதல்; to question, enquire. *"அனையையோ நீயென வினவுதி யாயின்" (கலித். 76).* 2.ஆய்வு செய்தல்; to investigate, to examine or review judicially. *"நமன்றம ரென்றமரை வினவப்பெறுவா ரலரென்று" (திவ். பெரியதி. 10, 6, 5).* 3. செவியேற்றல்; to give ear to, listen to, pay attention to. *"மேயாயே போல வினவி" (கலித். 82).* 4. கேள்விப்படுதல்; to hear, receive news of. *"மெலிந்திலன் சுதனென..... காரியும் வினவா" (அரிசமய. பராங்.25).* 5. நினைதல்; to bear in mind to think over. *"திருவடி வினவாக் கருவுறை மாக்கள்" (கல்லா. 8).*

[வினா → வினவு]

வினவுநர் *vinavunar,* பெ.(n.) 1. உசாவுவோர்; enquirers, questioners. 2. செவியேற்பவர்; listeners, hearers. *"வினவுந ரின்றி நின்று வேண்டுவ கூறுவாரும்" (சீவக. 466).*

[வினவு → வினவுநர்]

வினா¹-தல் *vinā-*, 5 செ.குன்றாவி. (v.t.) வினவு- பார்க்க; see *vinavu*. *"வினாதல் வினாயவை விடுத்தல்" (நன். 41).*

[விள் → (விளவு) → வினவு → வினாவு → வினாதல்] (சு.வி.28)

வினா² *vinā,* பெ.(n.) 1. கேள்வி; question. 2. அறியான் வினா, ஐயவினா, அறிவொப்புக் காண்டல் வினா, அவனறிவுதான் காண்டல்வினா, மெய்யவற்குக் காட்டல் வினா என ஐவகையாகவும் (தொல். சொல். 13, இளம்) அறியான் வினா, ஐயவினா, அறிபொருள் வினா என மூவகையாகவும் (தொல். சொல். 13) அறிவினா, அறியான் வினா, ஐயவினா, கொளல் வினா, கொடைவினா, ஏவல் வினா என அறுவகையாகவும் (நன். 385, உரை) இலக்கண நூல்களிற் கூறப்படும் கேள்விகள்; question, of five kinds, viz., *ariyān-vinā, aiya-vinā, arivoppu-k-kāndal-vinā, avanarivu-tān-kāndal-vinā, mey-y-avarkku-k-kāttal-vinā,* according to *Tolkāppiyam Ilambūranam*: of three kinds viz., *ariyān-vinā, aiya-vinā, ariporul-vinā,* according to *Tolkāppiyam šēnāvaraiyam* of six kinds. viz., *ari-vinā, ariyān-vinā, aiya-vinā, kolal-vinā, kodai-vinā, ēval-vinā,* according to *Nannūl.* 3. சொல் (சூடா.); word. 4. நுண்ணறிவு; sagacity, prudence, discretion, sharpness, discernment, shrewdness. *'அவனுக்கு வினாப் போதாது' (வின்.).* 5. கவனம்; attention. *'வினாவோடே கேள்' (வின்.).* 6. நினைவு; memory, remembrance. *"அது எனக்கு வினா வில்லை" (வின்.).* 7. தமிழ்க் கணக்கில் ஒரு தொகையின் பகுதிகளான தனி யெண்ணுக்கும் பின்ன வெண்களுக்குமுரிய பெயர்; a technical term for a part, integral or fractional, of a number. *'இரண்டேகாலரைக்கால் என்பது இரண்டு, கால், அரைக்கால் என்ற மூன்று வினாக்கள் கொண்டது' (வின்.).*

பேசுவோன் கேட்போனிடத்திருந்து விடையை எதிர்பார்த்து வினாச்சொற்களைப் பெய்து அமைக்குந்தொடர் வினாத் தொடராம். இந்த வினாச் சொற்கள் விகுதி வினா, வேர்ச்சொல் வினா என இரு வகைப்படும். யார், யாது, எவள் முதலாயின வேர்ச்சொல் வினாக்கள். ஆகார, ஓகார, ஏகார விகுதிகளைப் பெற்றுவரும் வினாச்சொற்கள் விகுதி வினாக்களாம். தமிழிலக்கணங்கள் வினாத் தொடர்களை

அறுவகையாகப் பிரித்துள்ளன. அவை :

1. அறிவினா – ஆசிரியன் இந்நூற்பாவிற்குரிய பொருள் யாது ? என்பது.

2. அறியா வினா – மாணவன் இந்நூற்பாவிற்குப் பொருள் யாது? என்பது.

3. ஐயவினா – அங்கே கிடப்பது பாம்போ பழுதையோ? என்பது.

4. கொளல் வினை – வணிகனுழைச் சென்று பொன் உளவோ மணி உளவோ? என்பது.

5. கொடை வினா – சாத்தனுக்கு ஆடை இல்லையோ? என்பது.

6. ஏவல் வினா – அமுதா உண்டாயோ? என்பது. (இலக். கலைக். 114.)

Ma. Uinavuka; **Ko.** vent; **To.** pint; **Te.** vinu; **K.** vin(u)cu; **Kol.** vin-; **Nk.** vin; **pa.** ven; *Konḍa.* ven; **Kui.** venba; **Kuwi.** venjali; **Kur.** *mennā*; **Malt.** mene; **Br.** bining; **Go.** *wankānā.*

வினா³ *viṉā,* இடைச். (prep.) அன்றி; without, except. *'தங்களைவினா எனக்கியார் துணை?'*

வினாக்குறிப்பு *viṉā-k-kuṟippu,* பெ.(n.) வினாவுடன் குறிப்பு முற்றுப் பொருளதாய் வருஞ்சொல்; interrogative, functioning as a predicate. *'எவன், யாது'.*

[வினா² + குறிப்பு]

வினாங்கு *viṉāṅgu,* பெ.(n.) நிணம்; fat.

[விளர் → வினாங்கு] (சு.வி.29)

வினாச்சொற்கள் *viṉā-c-coṟkaḷ,* பெ.(n.) வினாவை உணர்த்தும் சொற்கள்; words denoting questions.

[வினா + சொற்கள்]

பாவாணர் விளக்கம் :

சுட்டுச் சொற்கள் போன்றே வினாச் சொற்களும் தமிழிலும் திரவிடத்திலும் ஒரெழுத்துச் சொல்லாகவும் பலவெழுத்துச் சொல்லாகவும் இருக்கும். எ–டு: எ, எந்த.

வினாவெழுத்துக்கள் மூன்றென்றார் தொல்காப்பியர் "ஆ ஏ ஓ அம்மூன்றும் வினாஅ" (தொல். 32) இவற்றையே பவணந்தியார் ஐந்தாக விரித்துரைத்தார்.

"எயா முதலும் ஆஓ ஈற்றும்
ஏயிரு வழியும் வினாவா கும்மே" (நன்.67)

இவ்வைந்தும் மூல அளவில் ஒரெழுத்தாகவே தோன்றுகின்றன. ஏ–எ, ஏ–யா, ஆ–ஓ.

இவற்றுள் சொல்முதலில் வரும் எ, ஏ, யா என்னும் மூன்றும் சுட்டெழுத்துப் போன்றே வகர மெய்யும் தகர மெய்யும் அடுத்து வினாப் பெயராகும் எ–டு. எவன், எது.

எவை என்பதின் திரிபான 'எவி' என்னும் தெலுங்கச் சொல் அற்றுச் சாரியையேற்று வேற்றுமைப் படும்பொழுது எவட்டி எனத் திரியும். இங்ஙனமே எவ், ஏவ் என்னும் வினாச் சொற்களும் முறையே வெ, வே, வை முன் பின்னாக எழுத்து முறை மாறி நிற்கும். இத்திரிபுகளின் வகரமுதலே ஆரிய மொழிகளில் ககரமாக மாறியுள்ளது. வெ–கெ–க. வே–கே–கா.

இவ் வ–க–திரிபு. தெலுங்கை யடுத்த மராத்தியிலேயே தொடங்கி விடுகின்றது. மராத்தி முதலில் ஐந்திரவிடத்துள் ஒன்றளவும், பின்பு நடுத்திரவிடம் என்று கருதத் தக்கதாயும், அதன் ஐம்பிராகிருதத்துள் ஒன்றாயும், இருந்தமை கவனிக்கத் தக்கது.

தமிழ் ஆரிய மொழிகளுக்கு முன்தோன்றிய மொழியாதலின் அதில் நேரியல் வினாச் சொற்களும் உறவியல் வினாச் சொற்களும் (Relative) வினாச் சொற்களும் வேறு பிரிக்கப் பெறவில்லை.

எ–டு,
யார் என்ன செய்தார்? – நேரியல்
யார் என் சொன்னாலும் – உறவியல்

இந்திய ஆரிய மொழிகளில், நேர்வினாச் சொற்களுக்கு வகரத்தின் திரிபான ககர வடியும், உறவியல் வினாச் சொற்களுக்கு எகரத்தின் திரிபான யகரவடியும் ஆளப் பெறுகின்றன. யகரம் ஐகரமாகவும் திரியும்.

நேர்வினா – உறவியல் வினா
மராத்தி
இந்தி – கஹான் யவரான் – ஜஹான்
வடமொழி – குத்ர யத்ர

சில தமிழ் வினாச் சொற்கள் வடிவிலேனும் பொருளிலேனும் வடமொழியிற் சற்றே

வேறுபட்டுள்ளன.

தமிழ்	வடமொழி

எ-டு. எதோள் = எங்கு யத்ர = எங்கு (வடிவு)
எதா = எங்கே யதா = என்று (பொருள்)
– பாவாணரின் வடமொழி வரலாறு – பக் 284.

வினாடி *vināḍi,* பெ.(n.) விநாடிகை; a minute portion of time.

வினாதல்விடை *vinātal-viḍai,* பெ.(n.) வினாவே இன்னொரு வினாவுக்கு விடையாக வருமாயின் அது வினாதல் விடை; reply in the form of a counter question. *'உன் நண்பனைச் சந்தித்தாயா'* என்றவழி *'சந்திக்க மாட்டேனா?'* என்பது வினாதல் விடை.

மறுவ. வினாவெதிர் வினாதல்.

வினாதலிறை *vināḍal-iṟai,* பெ.(n.) வினாவடிவமான மறுமொழி (நன்.386); interrogation serving as a reply to a question.

[வினா → வினாதல் + இறை [2]]

வினாப்பெயர் *vinā-p-peyar,* பெ.(n.) வினாவெழுத்தினடியாகப் பிறந்த பெயர்ச்சொல் (நேமிநா. சொல். 31); interrogative pronoun.

1. ஏ-ஏன் (ஒருமை) – ஏம் (பன்மை) ஏன் – ஏவன். ஏம் – ஏவம் ஏன் என் ஏன் என். என் + அ = என்ன. ஏன் என்னும் வினாப்பெயர், இன்று காரணம் வினவும் குறிப்பு வினையெச்சமாகவும் வினை முற்றாகவும் வழங்குகின்றது.

2. ஏவன், ஏவன், ஏவர், ஏது, ஏவை

இவ்வடிவங்களால், ஆவன், ஈவன், ஊவன் முதலிய நெடில் முதல் சுட்டுப் பெயர்களும் ஒரு காலத்தில் வழங்கினவோ என ஐயறக் கிடக்கின்றது. ஏது என்னும் பெயர் ஒரு பொருள் வந்த வழியை வினவும் குறிப்பு முற்றாகவும் இன்று வழங்குகின்றது.

3. யாவன், யாவள், யாவர், யாவது, யாவை
ஏ-யா. யா – யாவை. யாவது = யாது.

சுட்டுவிளக்கம்

4. எவன், எவள், எவர், எது, எவை
ஏ-எ, எ + அது = எவ்வது – எப்படி ?

வினாப்பெயர்கள் இன்று 'ஏ' 'எவ்' 'யா' என மூவகையடிகளைக் கொண்டுள்ளன. இவற்றுள் 'ஏ' எவ் அடிகள் தெலுங்கில் வேற்றுமைத் திரிபில், 'வே' என இலக்கணப் போலி (metathesis) யாகி, பின்பு ஆரியமொழிகளில் 'கெ' எனப் போலித் திரிபு கொள்ளும், வ.க.போலி. எ-டு. சிவப்பு – சிகப்பு. ஆவா (ஆ + ஆ) ஆகா. 'யா' அடி ஆரிய மொழிகளில் 'ஜா' எனத் திரியாதும் தொடர்கொள் (Relative) வினாச் சொற்களைப் பிறப்பிக்கும்.
–(தேவநேயம் 12–பக்.133)

[வினா [2] + பெயர்]

வினாப்போக்கு-தல் *vinā-p-pōkku-,* 8. செ.கு.வி. (v.i.) கேள்வி கேட்டல்; to question to enquire into. *"குறிகூடியிருந்து வினாப்போக்கி ஒத்தெழுத்திட்டு"* (S.I.I.vii, 412).

[வினா + போக்கு-,]

வினாமுதற்சொல் *vinā-mudaṟ-col,* பெ.(n.) வினாவெழுத்தை முதலிற் பெற்று வந்துள்ள சொல் (தக்கயாகப். 585, உரை); prefixed interrogative word.

[வினா [2] + முதற்சொல்]

வினாவழு *vinā-vaḻu,* பெ.(n.) வினாவைப் பொருளியைபில்லாதபடி வழங்குகை (தொல். சொல். 14. சேனா.); incorrect use of an interrogative. *'இந்தக் காளை எவ்வளவு கறக்கும்'.*

[வினா [2] + வழு]

வினாவழுவமைதி *vināvaḻu-v-amaidi,* பெ.(n.) வினா வழுவை ஆமென்று

அமைத்துக் கொள்வது (தொல். சொல். 14. சேனா); sanction by usage of an incorrect use of an interrogative.

[வினாவழு + அமைதி]

வினாவறி-தல் *viṉā-v-aṟi-*, 3 செ.கு.வி. (v.i.) அறியுந்திறமை யுண்டாதல் (வின்.); to begin, to have powers of understanding.

[வினா + அறி-,]

வினாவறிபருவம் *viṉāvaṟi-paruvam*, பெ.(n.) பகுத்தறிவு உண்டாம் பருவம்; age of discretion, when a child is capable of understanding the meaning of questions put.

[வினாவறி + பருவம்]

வினாவிசைக்குறி *viṉā-v-isai-k-kuṟi*, பெ.(n.) கேள்விக் குறி; mark of interrogation (?).

[வினா ² + இசை ⁴ + குறி]

வினாவிடை *viṉā-viḍai*, பெ.(n.) 1. வினா உருவமான விடைவகை (நன். 386, உரை); reply in the form of a question. 2. கேள்வியும் விடையும்; question and answer. 3. வினாவிடைப்புத்தகம் பார்க்க; see *viṉā-viḍai-p-puttagam*.

[வினா + விடை]

வினாவிடைப்புத்தகம் *viṉā-viḍai-p-puttagam*, பெ.(n.) வினாவும் விடையுமாக அமைந்த நூல் (வின்.); catechism.

[வினாவிடை + புத்தகம்]

வினாவினைக்குறிப்பு *viṉāviṉai-k-kuṟippu*, பெ.(n.) வினாவே குறிப்பு வினையாக வருவது; question word which act as a symbolic verb, without variation of tense.

யாது, யார் என்பன இவ்வாறு வந்த வினாவினைக் குறிப்புச் சொற்கள்; அவன் யார்?, அவள் யார்?, அவர் யார்? அது யாது? அவை யாவை?

வினாவு-தல் *viṉāvu-*, 5 செ.குன்றாவி. (v.t.) வினவு-, பார்க்க; see *viṉāvu-*. *"ஆக்க மதர்வினாய்ச் செல்லும்" (குறள், 594).*

வினாவுத்தரம் *viṉā-v-uttaram*, பெ.(n.) ஒரு பொருளைக் காட்டும் ஒரு மொழியினைப் பிரித்து ஒருவனுடைய பல்வேறு வகை வினாவிற்கும் விடையாகுமாறு அமைக்குஞ் சொல்லணி வகை (மாறனலங். 280) (பிங்.); a kind of composition in which a word having a particular significance is split into a number of words, each serving as a reply to a question set before.

[வினா ² + உத்தரம் ¹]

வினாவுள்ளவன் *viṉā-v-uḷḷavaṉ*, பெ.(n.) தெளிமதியுள்ளவன் (வின்.); man of judicious or calm temperament.

[வினா + உள்ளவன்]

வினாவெண்பா *viṉā-veṇbā*, பெ.(n.) மெய்கண்டசாத்திரம் பதினான்கனுள் வினா வடிவமாய் வெண்பாக்களால் அமைந்ததும் உமாபதி சிவாசாரியர் இயற்றியதுமான சிவனியக் கொண்முடிபு நூல்; a text-box on *śaiva siddhānta* philosophy by *umāpati-śivāśariyar*, in *veṇbā* metre and in the form of questions, one of 14 *meykaṇḍa-śāttiram*, q.v.

[வினா + வெண்பா]

வினாவெதிர்வினாதல் *viṉā-v-edir-viṉādal*, பெ.(n.) ஒருவனது வினாவுக்கு எதிர் வினா வடிவமாகக் கூறும் உத்தரம்

(தொல். சொல். 14. இளம்); reply in the form of a counter-question.

மறுவ. வினாதல் விடை.

[வினா + எதிர்வினாதல்]

வினாவெழுத்து *vipā-v-eluttu,* பெ.(n.) சொல்லின் முதலில் அல்லது இறுதியில் வந்து வினாப்பொருளைத் தரும் எழுத்து (நன். 67); initial or final letter of a word, indicating interrogation.

[வினா + எழுத்து]

வினை *vipai,* பெ.(n.) 1. தொழில்; act, action, deed, work. *"செய்திரங்கா வினை" (புறநா.10).* 2. நல்வினை, தீவினை என இருவகைப்பட்ட முன்வினை; karma, as the accumulated result of deeds done in previous-births, of two kinds, viz. *nal-vipai, ti-vipai.* 3. நான்கு வினைகள் (வேதநீயம் ஆயுஷ்யம் நாமம் கோத்திரம்) (சீவக. 3114, உரை); the four results of karma, viz., *vētaniyam, ayusyam, nāmam, kōttiram.* 4. வினைச்சொல் (தொல். சொல். 198); verb. 5. செய்தற் குரியது; thing to be done or performed. *"அவனை வேறல் வினையன்றால்" (கம்பரா. சூளா. 2).* 6. நீக்கவினை செயல் (பரிகாரச் செயல்); remedial measure. *"வினையுண்டே யிதனுக் கென்பார்" (கம்பரா. நாகபாச. 194).* 7. மேற் கொண்ட செயல்; work on hand; work undertaken. *"வினைவகை யென்றிரண்டி னெச்சம்" (குறள், 674).* 8. தீச் செயல்; evil deed. *"தாய்வினை செய்யவன்றோ கொன்றனன் றவத்தின் மிக்கோன்" (கம்பரா. கும்பகர்ண. 143).* 9. முயற்சி; effort. *"வினைக்கண் வினையுடையான் கேண்மை" (குறள், 519).* 10. போர்; war. *"செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர்" (புறநா. 6).* 11. ஏய்ப்பு; deceitfulness, guile. *"வினை களைந்தனர் நண்புகொண் டொழுகினர்" (உபதேசகா. பஞ்சாக். 33).* 12. சூழ்ச்சி; art, cunning, deceit. *"வினையி னென்வயின் வைத்தனன்" (கம்பரா. அயோத். மந்திரப். 69).* 13. கருத்து (யாழ்.அக.); thought, design. 14. தொந்தரவு; trouble. *'அது அதிக வினை செய்யும் போலிருக்கிறது' (வின்.).* 15. சீழ்; pus. *'இந்தப் புண்ணில் இன்னும் வினையிருக்கின்றது'.* 16. இரண்டைக் குறிக்கும் குழூஉக்குறி (தைலவ. தைல.); a cont term signifying two. *'வினை விதைத்தவன் வினை அறுப்பான் தினை விதைத்தவன் தினை அறுப்பான்' (பழ.).*

Ma. vina; **Tu.** benpini.

வினை

வேற்றுமை உருபுகளை ஏலாததாய், காலக் கிளவிகளை ஏற்பதாய் வரும் சொற்கள் வினை எனப்படும். இந்த வினை தெரிநிலை வினை குறிப்பு வினை என இருவகைப்படும். இவற்றின் அமைப்பினைக் கீழ்வருமாறு காட்டலாம்.

தெரிநிலைவினை

பகுதி	காலஇடைநிலை	பாலிடவிகுதி
செய்	த்	ஆன்
படி	த்த்	ஆன்

குறிப்பு வினை

பகுதி	பாலிடவிகுதி	
	அன்	நல்
	அன்	ஊர்
	அன்	

மேற்காட்டிய அமைப்பிலிருந்து வினைக்குப் பகுதியும் பாலிட விகுதியும் இன்றியமையாதன என்பது விளங்குகின்றது. கால இடைநிலைகளைப் பெற்று வரும் வினைகள் தெரிநிலை வினைகள். கால இடைநிலைகளைப் பெறாமல் வரும் வினைகள் குறிப்பு வினைகள். (இலக். கலைக். 115).

வினைக்கட்டு *vipai-k-kattu,* பெ.(n.) வினைகளின் கட்டு; the bondage of karma. *"தமிழ்..... கேட்பவர் தம் வினைக்கட்டறுமே" (தேவா. 977. 11).*

[வினை + கட்டு]

வினைக்களம் *viṉai-k-kaḷam,* பெ.(n.) போர்க்களம்; battlefield. *"அங்கண் மேவரும் வினைக்களத்து" (திருவாலவா. 46, 17).*

[வினை + களம் ²]

வினைக்காலம் *viṉai-k-kālam,* பெ.(n.) நல்வினைக்காலம்; auspicious time. *'வினைக்காலம் வருங்காலம்; மனை வழியும் தெரியாது' (பழ.).*

வினைக்கீடு *viṉai-k-kīḍu,* பெ.(n.) செய்த வினையின் பயன் (சி.போ.பா.அவை. பக். 13); resultant effect of one's karma.

[வினை + ஈடு.]

வினைக்குடுக்கை *viṉai-k-kuḍukkai,* பெ.(n.) வஞ்சனை மிக்கவன் (வின்.); man full of guile and crafty schemes.

[வினை + குடுக்கை]

வினைக்குணம் *viṉai-k-kuṇam,* பெ.(n.) மனக்கடுப்பு (வின்.); spitefulness.

[வினை + குணம்]

வினைக்குறிப்பு *viṉai-k-kuṟippu,* பெ.(n.) குறிப்பு வினை (நன். 321, உரை); conjugated appellative participle, indefinite or finite.

[வினை + குறிப்பு]

வினைக்குறிப்புமுற்று *viṉaikkuṟippu-muṟṟu,* பெ.(n.) குறிப்பு வினை முற்றாய் வருவது (புறநா. 68, உரை); finite, conjugated appellative participle.

[வினைக்குறிப்பு + முற்று]

வினைக்குறை *viṉai-k-kuṟai,* பெ.(n.) வினையெச்சம்; vabal participle refairing a verb to complete the sense.

[குறை என்னும் சொல் ஒரு பொருள் அல்லது உறுப்பு இல்லாக் குறையை முதலிற் குறித்து, பின்பு அக்குறையால் ஏற்படும் தேவையையும் தேவையான பொருளையும் ஆகுபெயராக உணர்த்திற்று.

நிறை என்பதன் மறுதலை குறை (குறள். 612)]

வினைக்கேடன் *viṉai-k-kēḍaṉ,* பெ.(n.) 1. முன் வினையை யொழிப்பவன்; one who destroys by experiencing the bondage of karma accumulated in previous births. *"வினைக்கேட னென்பாய் போல்" (திருவாச. 5, 22).* 2. வேலையைத் தடை செய்து கெடுப்போன் (இ.வ.); one who puts obstacles or felters in the way of an undertaking with a view to spoil it.

[வினை + கேடன்]

வினைக்கேடு *viṉai-k-kēḍu,* பெ.(n.) 1. வீணானது; that which is useless. *"வினைக்கேடு பலபேசி வேண்டியவா திரிவீர்" (தேவா. 677, 5).* 2. செயலறுகை (நாமதீப. 641); inactivity. 3. சுணக்கம் (இலக்அக.); delay; slow approach.

[வினை + கேடு]

வினைச்செவ்வெண் *viṉai-c-cevveṇ,* பெ.(n.) தொடர்ந்துவரும் வினை யெச்சங்களில் எண்ணிடைச் சொல் தொக்கு வருவது (நன். 429, மயிலை); ellipsis of connective particles in a series of *viṉai-y-eccam.*

[வினை + செவ்வெண்]

வினைச்சொல் *viṉai-c-col,* பெ.(n.) பொருளின் புடைபெயர்ச்சியைத் தெரிவிக்குஞ் சொல் (நன். 269); verb.

ஊண் வினைகள் :

உறிதல், உறிஞ்சுதல் } நீர்ப்பொருளையும் நெகிழ்ச்சிப் பொருளையும் காற்றால் வாய்க்குள் இழுத்தல்.

குடித்தல் – நீர்ப்பொருளை இயல்பாக உட்கொள்ளுதல்.

பருகுதல் – நீர்க்கலத்திற் பற்படக் குடித்தல்.

அருந்துதல்– சிறிது சிறிதாகக் குடித்தல்.

மண்டுதல் – மண்டியுட்படக் குடித்தல்.

மாந்துதல் – பேரளவாகக் குடித்தல்.

சப்புதல் – ஒன்றைமெல்லாது நாவிற்கும் அண்ணத்திற்கும் இடையிலிட்டு நெருக்கி, அதன்சாற்றை மெல்ல மெல்ல உறிஞ்சுதல்; அல்லது அப் பொருளைச் சிறிது சிறிதாகக் கரைத்தல்.

சுவைத்தல் – ஒன்றை மென்று அதன் சுவையை நுகர்தல்.

சவைத்தல் – மெல்லிய பொருளை மெல்லுதல், குழந்தை தாய்ப்பாலைச் சப்புதல்.

சூம்புதல், சூப்புதல் } தித்திப்புக் குச்சும் மூளையெலும்பும் விரலும் போன்றவற்றை வாயிலிட்டுச் சப்புதல்.

தின்னுதல் – பழமும் பலகாரமும் போன்ற சிற்றுண்டியை மென்று உட்கொள்ளுதல்.

உண்ணுதல் –கவளங் கவளமாகச் சோற்றை உட்கொள்ளல்.

சாப்பிடுதல் – குழம்பும் சாறும் மோரும் (அல்லது அவற்றுள் ஒன்று) கலந்த சோற்றைக் கவளங் கவளமாகக் கறிவகைகளுடன் (அல்லது அவையின்றி) உட்கொள்ளுதல்.

மடுத்தல், வாய்மடுத்தல் } கம்பங்கஞ்சியும் கேழ்வரகுக் கூழும் போன்றவற்றைக் கட்டிகட்டியாகக் கூட்டில் தொட்டுண்ணுதல், கவளங் கவளமாகப் பிறர் ஊட்டுதல்.

அசைத்தல், அசைவு செய்தல் } விலங்கு அசையிடுவதுபோல் அலகையசைத்து மென்று உட்கொள்ளுதல்.

அயிலுதல் – குழந்தை அளைந்து சோறுண்ணுதல்.

அயில் – அயின் – அயினி = உணவு.

"தாலி களைந்தன்று மிலனே பால்விட்
டயினியு மின்றயின் றனனே".....
(புறம். எஎ).

அள்ளல் = நெருக்கம், குழைந்தசேறு.

அள் – (அய்) – அயில்.

அளிதல் = கலத்தல், குழைதல்.

அள் – அளாவு. அள் – அளை.

"சிறுகை யளாவிய கூழ்." (குறள்.64)

"......................................இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்."
(நள. கலிதொ.68).

ஒ.நோ : பள் – (பய்) – பயில். பயிலுதல் பழகுதல்.

கப்புதல் – மொக்கி விரைந்து உட்கொள்ளுதல்.

மொக்குதல் = வாய்நிறையக் கொண்டு மெல்லுதல்.

"கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணி"
(திருப்பு. விநாயக. க)

மிசைதல் – விருந்தினரை யுண்பித்து மிஞ்சியதை யுண்ணுதல்.

"வித்து மிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்"
(குறள்.85).

மொசித்தல் – பலர் கூடி யுண்ணுதல்.

"விழவின் றாயினும் படுபதம் பிழையாது
மையூன் மொசித்த வொக்கலொடு"
(புறம். 96).

"மொய்கொண் மாக்கள் மொசிக்கவூண்
சுரந்தனள்" (மணிமே.19–136).

மொய்த்தல் = திரளுதல்.

மொய் – மொயி – மொசி.

மொசிதல் = மொய்த்தல்.

"கடுந்தே றுறுகிளை மொசிந்தன
துஞ்சும்" (பதிற்றுப். 71 : 6)

ஆர்தல் - வயிறு நிரம்ப வுண்ணுதல்.

விழுங்குதல் – மெல்லாதும் சுவை பாராதும் ஒரே தடவையில் விரைந்து வாய்வழி வயிற்றிற்குள் இடுதல்.

உட்கொள்ளுதல் – எவ்வகையிலேனும் வயிறு சேர்ப்பித்தல். இது எல்லா ஊண் வினைகட்கும் பொதுவாம்.

கடைக்கழகக் காலத்திற் புலவர் பலர் மரபும் (Idiom) தகுதியும் (Propriety) போற்றாமையால், பலசொற்கள் தம் சிறப்புப் பொருளை இழந்து விட்டன.

இன்று, குளம்பி (காப்பி) சாப்பிடுதல், சுருட்டுக் குடித்தல், கொசுவலை, தேட்கடி என்பன மரபுவழுவாம். இவை, குளம்பி குடித்தல், சுருட்டுப் பிடித்தல் அல்லது புகைத்தல், உலங்கு வலை அல்லது நுளம்பு வலை, தேட்கொட்டு என்றிருத்தல் வேண்டும். சம்பளத்தை (Salary) ஊதியம் (profit, gain) என்பதும் வழுவாம். இலக்கணப்புலமை நிரம்பாதவர் நூலாசிரியரும் பொத்தக ஆசிரியரும் ஆவதனாலும் மரபு கெடுகின்றது.

– (பாவாணர் தமிழர் வரலாறு 105–107)

[வினை + சொல்]

வினைசூழ்-தல் *viṉai-šūḻ-,* 2 செ.கு.வி. (v.i.) தீங்கிழைக்க வெண்ணுதல் (வின்.); to plot evil or harm.

[வினை + சூழ்-,]

வினைசெய்யிடம் *viṉai-šey-y-iḍam,* பெ.(n.) ஒருவினை உடனிகழ்கின்ற பிறிதொரு வினைக்கு இடமாவது (பி.வி. 16); locative absolute.

[வினை + செய்இடம்]

வினைசெயல்வகை *viṉai-šeyal-vagai,* பெ.(n.) வினையைச் செய்யுந்திறம் (குறள், அதி. 68); method of action, modes of action; conduct of affairs.

[வினை + செயல்வகை]

வினைஞர் *viṉaiñar,* பெ.(n.) 1. தொழில் வல்லோர்; workers; artisans, artificers. *"தண்டமிழ் வினைஞர் தம்மொடுகூடி" (மணிமே. 19, 109).* 2. மருத நில மாக்கள் (திவா.); agriculturists. 3. கம்மாளர் (யாழ்.அக.); smiths. 4. கூத்தர் (திவா.); dancers. 5. கடைமகள் (சூத்திரர்) (பிங்.); *šūdras.* 6. வணிகர் (திவா); *vaišyas.* 7. வேளாளர் (இலக்.அக.); *vēḷāḷas.*

வினைத்தலை *viṉai-t-talai,* பெ.(n.) போர்க்களம்; battle field. *"வினைத் தலையிலே வந்தவாறே" (ஈடு. 4, 6, 1).*

[வினை + தலை]

வினைத்திட்பம் *viṉai-t-tiṭpam,* பெ.(n.) தொழில் செய்வதில் மனத்திண்மை; powerful acts, firmness, resolutensss in action greetness of will. *"வினைத்திட்ப மென்பது ஒருவன் மனத்திட்பம்" (குறள், 661).*

[வினை + திட்பம்]

வினைத்திரிசொல் *viṉai-t-tirišol,* பெ.(n.) 1. திரிந்த வினைச்சொல் (சீவக. 223, உரை); verb in an abnormal form. 2. வழக்கிலின்றி அரிதிற் பொருளுணர்தற்குரிய வினைச்சொல் (நன். 273); verb not in common use or absolute and not easily understood.

[வினை + திரிசொல்]

வினைத்திரிபு *viṉai-t-tiribu,* பெ.(n.) தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களையும், மூன்று காலங்களையும் காட்டுதற்கு வினைச்சொல் அடையும் மாற்றம்; conjugation of a verb.

[வினை + திரிபு]

வினைத்திறப்பொருத்தம் *viṉaittira-p-poruttam,* பெ.(n.) மணமக்கள் இருவரும் சூழ்ச்சி, வலிமையிலும் சுறுசுறுப்பிலும் ஒத்திருப்பது, வினைத்திறப் பொருத்தம் ஆகும். அவருள் ஒருவர் விரைமதியும் தாளாண்மையும் உடையராயிருக்க இன்னொருவர் மந்தமதியும், சோம்பலு முடையவராகயிருப்பின் அவர்தம் இல்லற வாழ்க்கை ஒற்றுமையும் இன்பமும் உடையதாயிராது. (தமி. திரு. 48); hormony in the life of couple.

வினைத்தூய்மை *viṉai-t-tūymai,* பெ.(n.) செய்யப்படும் வினைகள் பொருளேயன்றி அறமும் புகழும் பயந்து நல்லவாகை (குறள். அதி. 66); purity in action which brings in not merely wealth but also religious merit and fame.

[வினை + தூய்மை]

வினைத்தொகை *viṉai-t-togai,* பெ.(n.) காலங்கரந்த பெயரெச்சத் தொடர் (நன். 364); elliptical compound in which a verbal root forms the first component; a compound that can function or be operative in all the three tenses.

[வினை + தொகை]

மூன்று காலத்திற்கும் பொருந்தும் வகையில் இருக்கும் தொகைச்சொல். வினைப்பெயரும் பெயரும் சேர்ந்து அமைந்த தொகையினை வினைத்தொகை என்பர். சொல்யானை, வரு பொருள் முதலாயின வினைத் தொகைகளாம். கேள், கல், பார், நட ஆகிய நான்கு வாய்பாடு களுக்கும் உரிய வினைகள் வினைத்தொகையினை அமைப்பதில்லை. இதற்கு விதிவிலக்காகக் குடிதண்ணீர், அடிமாடு முதலிய சில வினைத் தொகைகளைக் காணலாம். பார் யானை, நடயானை என வினைத் தொகைகள் அமையாமை காண்க.

நன்னூலாரின் கருத்துப்படி வினைத் தொகையின் முதலுறுப்பு பெயரெச்சம் என்று கொள்ளப்படும். (இலக்.கலைக்.பக்.116).

வினைத்தொடர்ச்சி *viṉai-t-toḍarcci,* பெ.(n.) தீவினையின் பயன் (நாமதீப. 291); effect of evil deeds upon the soul.

[வினை + தொடர் → தொடர்ச்சி]

வினைத்தொழிற்சோகீரனார் *viṉai-t-toḻiṟ-cōkīraṉār,* பெ.(n.) கடைக்கழகக் காலப் புலவர்; a sangam poet.

இவர் செய்யுளில் நள்ளிரவிற் கடற்கரைக் கானலும் கடல் சார்ந்த ஊரின் தெருக்களும் இருக்கும் நிலை அழகுறக் கூறப் பெற்றுள்ளது (நற். 319). இவர் தம் பெயர்க் காரணம் அறிய முடியவில்லை.

வினைதீயார் *viṉai-tīyār,* பெ.(n.) தீவினையோர்; sinners, men of evil deeds. *"வெறுமின் வினைதீயார் கேண்மை" (நாலடி, 172).*

மறுவ. கீழ்கள்.

[வினை + தீயார்]

வினைதீர்-த்தல் *viṉai-tīr-,* 4 செ.கு.வி.(v.i.) 1. முன் வினையைப் போக்குதல்; to eradicate the bondage of karma. *"வினையேன் வினைதீர் மருந்தானாய்" (திவ். திருவாய். 1, 5, 6).* 2. இடையூறு நீக்குதல் (யாழ்.அக.); to remove or dismiss obstacles or constraints.

[வினை + தீர்-,]

வினைதீர்த்தான் *vinai-tirttān*, பெ.(n.) 1. வேழமுகத்தோன் (யாழ்.அக.); *Ganēśan*. 2. புள்ளிருக்குவேளூர்ச் சிவன்; Lord sivan of a abide in the place *pullirukkuvēlūr*.

மறுவ. அறிவு (ஞான)க் கொழுந்து.

[வினைதீர் → வினைதீர்த்தான்]

வினைநர் *vinainar*, பெ.(n.) வினைஞர், 1 பார்க்க; see *vinaiñar*, workmen, artisans. *'அரிய லார்கை வன்கை வினைநர்' (பதிற்றுப். 62, 16).*

[வினை → வினைநர்]

வினைப்பகுதி *vinai-p-pagudi*, பெ.(n.) பகுசொல்லில் வினையைக் குறிக்கும் பகுதியாகிய முதனிலை (நன். 137, சங்கர.); verbal base of a derivative word.

[வினை + பகுதி]

வினைப்படுத்துவினை *vinai-p-paḍuttu-vinai*, பெ.(n.) தான் சேர்ந்து வரும் வினையல்லாத சொற்களுக்கு வினைத் தன்மை தரும் வினை; verb that serves as a verbalizer. *'சமையல் செய்'* என்பதில் *'செய்'* என்பது வினைப்படுத்து வினையாகச் செயல்படுகிறது.

[வினைப்படுத்து + வினை]

வினைப்பயன் *vinai-p-payan*, பெ.(n.) முன் வினையின் விளைவு; result of karma, fruit of action in previous birth. *"பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்" (மணிமே. 24, 107).*

[வினை + பயன்]

வினைப்பெயர் *vinai-p-peyar*, பெ.(n.) 1. தொழிற்பெயர்; verbal noun. *"செயலென்னும் வினைப்பெயர்" (நெடுநல். 171, உரை).* 2. வினையாலணையும்பெயர் பார்க்க; see *vinaiyāl-anaiyum-peyar*. *"வினைப் பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே" (நன். 141). "எழுதாள் மகிழாள் காதினள் என்னும் வினைப்பெயரான் முடித்து" (சிலப். 4, 47-57, உரை).* 3. செய் தொழிலினால் ஒருவனுக்கு வரும் பெயர்; name given to a person from his action or vocation. *"நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே வினைப்பெயர்" (தொல். சொல். 165).*

[வினை + பெயர்]

[வினையிலிருந்து பிறந்த பெயரை வினைப்பெயர் என்பர். தொல்காப்பியர் வினைப்பெயரையும் வினையாலணையும் பெயரையும் வேறுபடுத்திப் பேசவில்லை; ஆனால் நன்னூலார் வினைப் பெயரையும் வினையாலணையும் பெயரையும் தெளிவாக வேறுபடுத்தி விளக்குகிறார். நன்னூலார் கருத்துப்படி வினைப்பெயர் அல்லது தொழிற் பெயர் படர்க்கைக்கு மட்டுமே உரியதாம். வினையாலணையும் பெயர், தன்மை, முன்னிலை படர்க்கை ஆகிய மூவிடத்திற்கும் உரியதாம்.

உணல், தினல். வரல், செலல் என வருவன வினைப்பெயர் அல்லது தொழிற்பெயர். உண்டேனை, உண்டாயை, உண்டானை என வருவன வேற்றுமை ஏற்ற வினையாலணையும் பெயர்.

வினைப்பெயர் என்பதும் தொழிற்பெயர் என்பதும் ஒன்று. தொல்காப்பியர் வினைப்பெயர், வினையாலணையும் பெயர் இரண்டையுமே வினைப்பெயர் என்றும் (தொல்.சொல்.பெயர்.14) குறிக்கின்றார்]

மறுவ. வினைப்பெயர்க் கிளவி.

வினைபாராட்டு-தல் *vinai-pārāṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) வினைவளர்-, (யாழ்.அக.) பார்க்க; see *vinai-valar*.

[வினை + பாராட்டு-,]

வினைமாற்று *viṉai-māṟṟu,* பெ.(n.) முன்சொன்ன தொழிலொழிய இனி வேறொன்று என்பதைக் காட்டுவதாகிய பொருண்மை; signification of the introduction of an alternative verb in a sentence. *"வினைமாற் றசைநிலை" (தொல். சொல். 264).*

[வினை + மாற்று]

வினைமாற்றுச்சொல் *viṉaimāṟṟu-c-col,* பெ.(n.) வினைமாறுவதைத் தெரிவிக்கும் 'மற்று' முதலிய இடைச்சொல்; an expletive word in a sentence, introducing an alternative verb, as *maṟṟu.*

[வினைமாற்று + சொல் ³]

வினைமுதல் *viṉai-mudal,* பெ.(n.) கருத்தா; subject. *"வினைமுதல் மாத்திரை விளக்கல்வினைக் குறிப்பே" (நன். 321).*

மறுவ. வினையன்.

[வினை + முதல்]

எழுவாயை வினைமுதல் என்று குறிப்பதுண்டு. 'அவன் உங்களைப் பார்த்துப் பேசினான் என்ற தொடரில் 'அவன்' வினைமுதல் அல்லது எழுவாய். "பேசினான்" என்பதை வினை முதலுக்கு உரியவினை என்ற பொருளில் வினைமுதல் வினை என்பர் (நன்.344).

வினைமுதற்றொழில் *viṉaimudaṟṟoḻil,* பெ.(n.) செயப்படுபொருள்(வின்); object.

[வினைமுதல் + தொழில்]

வினைமுற்று *viṉai-muṟṟu,* பெ.(n.) முற்றுவிகுதி கொண்ட வினைச்சொல் (நன். 323, மயிலை); finite verb.

[வினை + முற்று]

தொடர்ப் பொருள் குன்றி நிற்கின்ற வினையினை வினைமுற்று என்பர். இந்த வினைமுற்று குறிப்பு, வினை என இருவகைப்படும்.

செயல் முடிவதைக் குறிப்பதாகவும் சொற்றொடரில் பயனிலையாகவும் வரும் வினைச்சொல் என்றும் கூறலாம்.

வினைமுற்றுத்தொடர் *viṉai-muṟṟu-t-toḍar,* பெ.(n.) வினைமுற்றை முதலில் கொண்டு அதனைத் தொடர்ந்து அமையும் முற்றுத் தொடர்; sentence with finite verb in first.

எ.டு. வந்தான் கந்தன்.

வினைமுறுகுதல் *viṉai-muṟugudal,* பெ.(n.) ஊழ்வினை முதிர்ந்து பயன்றரு நிலையிலாகை (யாழ்.அக.); maturation of one's past karma or destiny.

[வினை + முறுகு¹-தல்]

வினைமூளுதல் *viṉai-mūḷudal,* பெ.(n.) வினைமுறுகுதல் பார்க்க; see *viṉai-muṟugudal.*

[வினை + மூளுதல்]

வினைமை *viṉaimai,* பெ.(n.) 1. செய் தொழிலின் தன்மை; nature of a deed. 2. தொழிலுடைமை; property of functioning. *"அவை மூவினைமையில்" (சி.போ.1).*

[வினை → வினைமை]

வினையடை *viṉai-y-aḍai,* பெ.(n.) வினைச் சொற்கு அடையாக வரும் சொற்கள்; verb qualifier, adverb.

எ-டு. இன்று வந்தான், அழகாகப்

பாடினான், உரக்கப் பேசினான், நடந்து வந்தான், அங்கே நின்றான், ஏன் சிரிக்கிறான்?

[வினை + அடை]

வினையம்[1] *viṉaiyam,* பெ.(n.) 1. செய்தொழில் (பிங்.); action, deed. *"வேண்டுமாறு புரிதியைய வினைய நாடி" (கந்தபு. ஏமகூடப். 30).* 2. முன்வினை; past karma or destiny. *"காவலர்க் கரசாய் வாழ்ந்து வினையம தறுத்து" (கம்பரா. காப்பு).* 3. வழிவகை; device, means. *"மிகை செய்வார் வினைகட்கெல்லா மேற்செய்யும் வினையம் வல்லான்" (கம்பரா. இரணிய. 147).* 4. வஞ்சகம் (கொ.வ.); cunning, deceit, sly. 5. வஞ்சக வேலைப்பாடு; deceptive workmanship. *"மருங்குடை வினையமும்" (கம்பரா. இலங்கைகே. 20).* 6. வினையம்[1], 3 பார்க்க; see *viṉayam*. 7. நிகழ்ச்சி; happening, event. *"மேல்வரும் வினைய மோர்ந்திலை" (கந்தபு. மூவாயிர. 5).*

[வினை → வினையம்]

வினையம்[2] *viṉaiyam,* பெ.(n.) வினயம்[2] பார்க்க; see *viṉaiyam.*

வினையழுத்து-தல் *viṉai-y-aḻuttu,* 10 செ.கு.வி. (v.i.) வினைவளர்-, (யாழ்.அக.) பார்க்க; see *viṉaivaḷar.*

[வினை + அழுத்து-,]

வினையள-த்தல் *viṉai-y-aḷa-,* 3 செ.கு.வி. (v.i.) வினைவளர்-, (வின்.) பார்க்க; see *viṉai-vaḷar.*

[வினை + அள-,]

வினையன் *viṉaiyaṉ,* பெ.(n.) 1. தொழில்செய்பவன்; doer, worker. *"புலைவினையர்" (குறள், 329).* 2. வஞ்சகன்; cunning or guileful man.

[வினையம் → வினையன்]

வினையாட்டி *viṉaiyāṭṭi,* பெ.(n.) 1. ஏவல் வேலை செய்பவள்; female servant. 2. தீவினையுடையவள்; ill-fated woman. *"வினையாட்டியேன் காதன்மையே" (திவ். திருவாய். 6, 1, 1).*

[வினையாளன் → வினையாட்டி. ஒ.நோ. திருவாட்டி, மூதாட்டி]

வினையாண்மை *viṉai-y-āṇmai,* பெ.(n.) தொழிலைச் செய்து முடிக்குந் திறமை; capacity or talent to accomplish or do a work. *"வினையாண்மை வீறெய்த லின்று" (குறள், 904).*

[வினை + ஆண்மை]

வினையாலணையும்பெயர் *viṉaiyāl-aṇaiyum-peyar,* பெ.(n.) வினைமுற்று பெயர்த்தன்மைப்பட்டு வருவது (நன். 286); verbal noun, personal noun in the form of a finite verb.

[வினையால் + அணையும் + பெயர்]

வினையின் அடியாகப் பிறந்ததாய்ப் பாலிட விகுதிகளை ஏற்றதாய் அமைந்துள்ள பெயர்களை வினையாலணையும் பெயர் என்பர். இது குறிப்பு வினையாலணையும் பெயர், தெரிநிலை வினையாலணையும் பெயர் என இருவகைப்படும். நல்லவன், தீயவன், வலியவன், எளியவன் என்பன குறிப்பு வினையாலணையும் பெயர்கள். வந்தவன், சென்றவன் முதலான பெயர்கள் தெரிநிலை வினையாலணையும் பெயர்கள்.

நல்லன், தீயன் முதலாய குறிப்பு வினைமுற்றுகளே பழந்தமிழில் குறிப்பு வினையாலணையும் பெயர்களாகவும் வருவதுண்டு, அவ்வாறே, வந்தான், சென்றான் முதலாய

முற்றுகளே பழந்தமிழில் தெரிநிலை வினையாலணையும் பெயர்களாக வருவதுண்டு. தொழிற்பெயர் அல்லது வினைப் பெயர் வினையாலணையும் பெயரிலிருந்து வேறுபட்ட ஒன்று (இலக்.கலைக்.117).

வினையாள் *viṉayāḷ,* பெ.(n.) வினையாளன், 1 பார்க்க; see *viṉai-y-āḷaṉ.* *"வினையாளை வேலையிடத்து" (பெருந்தொ. 404).*

வினையாளன் *viṉai-y-āḷaṉ,* பெ.(n.) 1. தொழிலியற்றுவோன்; one who is engaged in a work, worker. *"கணக்குவினையாள ரொடு" (பெருங். மகத. 12, 50).* 2. ஏவலாளன் (யாழ்.அக.); servant. 3. தீவினையுடையவன்; ill-fated man.

[வினை + ஆளன்]

வினையிடைச்சொல் *viṉai-y-iḍaiccol,* பெ.(n.) வினைத்தன்மை பெற்றுவரும் இடைச்சொல்வகை (நன். 269, மயிலை); particle having the characteristics of a verb.

[வினை + இடைச்சொல்.]

வினையியற்சொல் *viṉai-y-iyaṟšol,* பெ.(n.) உலக வழக்கிலுள்ள வினைச் சொல் (நன். 269, மயிலை); verb in popular use.

[வினை + இயற்சொல்]

செந்தமிழ் நிலத்து மொழியாய்க் கற்றோர்க்கும் கல்லாதவர்க்கும் தம் பொருளை இயல்பாக விளக்கும் வினைச்சொல். (நன். பெயரிய. 14).

வினையிலி *viṉai-y-ili,* பெ.(n.) கடவுள் (இலக். அக.); God, as free from karma; the Lord.

[வினை + இன்–மை]

வினையின்மை *viṉai-y-iṉmai,* பெ.(n.) இறைவனெண்குணங்களில் வினைப்பயன் இல்லாமையாகிய குணம் (பிங்.); being unaffected by karma, one of eight attributs or *iṟaivaṉ-eṇguṇam* q.v.

[வினை + இன்மை]

வினையுரிச்சொல் *viṉai-y-uriccol,* பெ.(n.) வினைக்கு அடையாய் வருஞ்சொல் (வின்.); adverb.

[வினை + உரிச்சொல்]

வினையுருபு *viṉai-y-urubu,* பெ.(n.) வினைச் சொல்லின் உறுப்பான இடைநிலை ஈறு முதலியன (நன். 420, உரை); component particle of a verb, as *iḍainilai,* vigudi.

[வினை + உருபு.]

வினையுரைப்போர் *viṉai-y-uraippōr,* பெ.(n.) தூதர் (பிங்.); messengers, ambassadors.

[வினை + உரைப்போர்]

வினையுவமம் *viṉai-y-uvamam,* பெ.(n.) தொழில் பற்றி வரும் ஒப்புமை (தொல். பொ. 276, உரை); comparison based on the actions of the objects compared.

[வினை + உவமம்]

வினையுவமை *viṉai-y-uvamai,* பெ.(n.) வினையுவம் பார்க்க; see *viṉai-y-uvam.*

[வினை + உவமம்]

வினையெச்சக்குறிப்பு *viṉaiyecca-k-kuṟippu,* பெ.(n.) குறிப்புவினையெச்சம் (நன். 342, உரை) பார்க்க; see *kuṟippu-viṉai-y-eccam,* partciple of an appellative verb.

[வினையெச்சம் + குறிப்பு]

வினையெச்சம் *viṉai-y-eccam,* பெ.(n.) வினையைக் கொண்டு முடியும் குறைவினை (நன். 342); verbal participle, requiring a verb to complete the sense.

மறுவ. வினையெஞ்சு கிளவி.

[வினை + எச்சம்]

தமிழிலக்கண மரபுப்படி, எச்சவினைகள், வினை கொண்டு முடியும் போது அவை வினையெச்சம் எனப்படும். அந்த வினையெச்சங்களைச் செய்து, செய, செயின் என வாய்ப்பாட்டு முறையில் தமிழிலக்கணங்கள் வகைப்படுத்தி விளக்கும். (இலக். கலைக். 118).

வினைச்சொல்லைத் தன் பொருள் முடிவிற்கு வேண்டுவதும் வினைச்சொல்லிலிருந்து பெறப்படுவதுமான வடிவம் என்றும் கூறும்.

வினையெச்சவினைக்குறிப்புமுற்று *viṉa-y-ecca-viṉai-k-kuṟippu-muṟṟu,* பெ.(n.) குறிப்பு வினைமுற்று வினையெச்சப் பொருளதாய் வருவது (புறநா. 44, உரை); appellative verb used participially.

[வினையெச்சம் + வினைக்குறிப்பு + முற்று]

வினையெஞ்சணி *viṉai-y-eñjaṇi,* பெ.(n.) வினை யெஞ்சி நிற்பதாகிய ஒப்பனை வகை (யாழ்.அக.); a figure of speech in which the finite verb is omitted.

[வினை + எஞ்சு + அணி²]

வினையெஞ்சுகிளவி *viṉai-y-eñju-kiḷavi,* பெ.(n.) வினையெச்சம் (தொல். எழுத். 204) பார்க்க; see *viṉai-y-eccam.*

[வினை + எஞ்சு + கிளவி]

வினைவயிற்பிரிதல் *viṉai-vayiṟ-piridal,* பெ.(n.) தலைவன் தலைவியை நீங்கி வேந்தனாணையாற் பகைமேற் பிரியும் பிரிவைக் கூறும் அகத்துறை (முல்லைப். உரையவதாரிகை); theme describing the separation of a hero from his beloved when he proceeds under orders against his king's enemy.

[வினை + வயின் + பிரிதல்]

வினைவர் *viṉaivar,* பெ.(n.) 1. தொழிலினர்; workers, doers, agents. *"வேந்துபிழைத் தகன்ற வினைவராயினும்" (பெருங். உஞ்சைக். 38, 94).* 2. சந்துசெய்விப்பவர்; mediators. *"நட்பாக்கும் வினைவர்போல்" (கலித். 46, 8).* 3. அமைச்சர்; minister. *"கொலையஞ்சா வினைவரால்" (கலித். 10.).*

[வினை → வினைவர். ஒ.நோ. அறிவர்]

வினைவலம்படு-த்தல் *viṉai-valam-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) எடுத்துக்கொண்ட செயலை வெற்றிபெறச் செய்தல்; to complete a business successfully (to a successful conclusion). *"வினைவலம் படுத்த வென்றியோடு" (அகநா. 74).*

[வினை + வலம்¹ + படு. வலம்படு-தல் = வெற்றியுண்டாதல்]

வினைவலர் *viṉai-valar,* பெ.(n.) 1. பிறரேவிய வினைகளைச் செய்வோர்; those who do an act under orders, as of a king. *"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்" (தொல். பொ. 23).* 2. தொழில் செய்வதில் வல்லமை யுள்ளோர்; skilled workmen; expert, a dept. *"வினைவல ரியற்றிய.... புகையகல்" (பெருங். உஞ்சைக். 42, 88).*

[வினை + வலன்²]

வினைவலி *viṉai-vali,* பெ.(n.) 1. அரண் முற்றுதல் அரண்கோடல் முதலிய தொழில்களின் அருமை; the difficulty of an enterprise (undertaking), as besieging or capturing a fort. *"வினைவலியுந் தன்வலியும்" (குறள், 471).* 2. வினைத் திட்டம் (வின்.) பார்க்க; see *viṉai-t-tiṭṭam.* 3. ஊழ்வினையின் வலிமை; the power of destiny.

[வினை + வலி¹]

வினைவழிச்சேறல் *viṉai-vaḻi-c-cēṟal,* பெ.(n.) வினைவயிற்பிரிதல் பார்க்க; see *viṉai-vayiṟ-piridal.*

[வினை + வழி + சேறல்]

வினைவளர்–த்தல் *viṉai-vaḷar-,* 4 செ.கு.வி. (v.i.) பகை விளைத்தல் (வின்.); to create ill-will, enmity or spite.

[வினை + வளர்–,]

வினைவாங்கு–தல் *viṉai-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) வினையைப் புலப்படுத்தல்; to indicate the line or course of action, to direct the affairs, as of a state, job description. *"பேதையோன் வினைவாங்க" (கலித். 27).*

[வினை + வாங்கு–,]

வினைவிநாசன் *viṉaivi-nāšaṉ,* பெ.(n.) கடவுள் (யாழ்.அக.) (தீவினையை ஒழிப்பவன்); god, as the destroyer of karma.

*[வினை + **Skt.** viṉāsa >த. விநாசன்]*

வினைவிளை–த்தல் *viṉai-viḷai-,* 5 செ.கு.வி. (v.i.) பொல்லாங்கு செய்தல் (யாழ்.அக.); to do a wicked act. *'வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான்' (பழ.).*

[வினை + விளை–,]

வீ

வீ¹ *vī,* பெ.(n.) 'வ்' என்னும் மெய்யெழுத்தும் நெட்டுயிரான ஈ காரமும் சேர்ந்து பிறந்த உயிர்மெய்யெழுத்து; the compound of 'வ்' and 'ஈ'.

வீ² *vī,* பெ.(n.) கருவுறுதல்; conceiving. (சா.அக.)

வீ³–தல் *vī-,* 4 செ.கு.வி.(v.i.) 1. அழிதல்; to perish, to cease, to disappear. *"வீயாச் சிறப்பின்" (புறநா. 15).* 2. சாதல்; to die. *"சிலைத் தெழுந்தார் வீந்தவிய" (பு.வெ.3,7).* 3. நீங்குதல்; to leave. *"வினைப்பகை வீயாது பின்சென் றடும்"* (குறள். 207). 4. மாறுதல்; to change, to vary, to deviate as from one's course. *"வானின் வீயாது சுரக்கும்" (மலைபடு.76).*

Ka. *bī,* **Te.** *vīgu.*

[வீள் → (வீய்) → வீ–,]

வடவர் வி–இ⁵ என்று மூலங்காட்டி வ்யய் (vyay) = பிரிந்து போ (to go apart or in different directions) என்று விரித்து விளக்குவர். 'வி' என்பது 'விள்' என்பதன் திரிபு. 'இ' என்பது இயல் என்பதன் முதனிலை. இயல் = செல்கை, நடக்கை. (வ.மொ.வ.93).

வீ⁴-த்தல் *vi-,* 11 செ.குன்றாவி. (v.t.) அழித்தல்; to destroy. *"ஏழுய ருலகமும் வீக்கின்றான்" (கம்பரா. முதற்போ. 118).*

[வீ → வீ-,]

வீ⁵ *vi,* பெ.(n.) 1. அழிவு; ruin, destruction. *"வீகலந்த மஞ்ஞை போல்" (சீவக. 1104).* 2. இறப்பு (பிங்.); death. 3. நீக்கம் (பிங்.); separation, removal. 4. மடிவு (பிங்.); dropping, languishing. 5. மலர்; flower. *"வீகமழ் நெடுஞ்சினை" (புறநா. 36).* 6. மகரந்தம்; pollen. *"பூவணையின் வீயை" (மேருமந். 1058).*

க. *bi,* தெ. *vigu.*

[வீத்தல் → வீ]

வீ⁶ *vi,* பெ.(n.) பறவை (பிங்.); bird.

வீக்கக்கணம் *vikka-k-kaṇam,* பெ.(n.) கருவிலுண்டாகிய போதே ஏற்படும் சூட்டினால் ஏற்படுவதும், உடம்பு முழுவதும் வீங்கிக் காணப்படுவதுமான குழந்தை நோய்; a children's disease caused by congenital heat and marked by swelling of the body.

[வீக்கம் + கணம்.
கணம் = குழந்தை நோய்வகை]

வீக்கம்¹ *vikkam,* பெ.(n.) 1. உடலுறுப்பு வீங்குகை; enlargement, swelling, inflammation. *'கால் வீக்கம்'.* 2. புண் முதலியவற்றின் புடைப்பு; contusion, cellulitis. 3. நீர்ச்சுரப்பால் உடல் வீங்கும் நோய்; dropsy, oedema. 4. தோள் முதலியன பூரிக்கை (யாழ்.அக.); puffing of the limes. 5. மிகுதி (பிங்.); abundance. 6. கூட்டம்; crowd. *"விண்பிளந் தேங்க வார்க்கும் வானர வீக்கம்" (கம்பரா. இராவண. கள. 26).* 7. பெருமை; greatness; nobility. *"விசயனும் வீக்கமற்றான்" (சீவக. 2192).* 8. செருக்கு; pride. *"இலங்கைக் கோமான்றன்னை..... வீக்கந் தவிர்த்த விரலார் போலும்" (தேவா. 56. 10).* 9. விருப்பம் (யாழ்.அக.); longing, hankering. *'வீக்கமோ தூக்கமோ?' (பழ.).*

[வீங்கு → வீக்கம்]

வீக்கம்² *vikkam,* பெ.(n.) 1. கட்டு (சூடா.); bond, tie. 2. இடையூறு; trouble, obstacle. *"வீக்கஞ் செய்தார் தவத்தினுக்கு" (திருவிளை. பன்றிக்குட்டி. முலை. 6).* 3. மூடுகை (திவா.); covering, packing. 4. இறுக்கம்; tightness. *'வீக்கம் கண்டால் தூக்கமாம்' (பழ.).*

[வீக்கு → வீக்கம்]

வீக்கம்³ *vikkam,* பெ.(n.) வேகம்; swiftness. *"சில்லிவரன் செல்லும் வீக்கம்" (புரூரவ. போர்புரி.33).*

[வீங்கு → வீக்கம்]

வீக்கம்வாடல் *vikkam-vāḍal,* பெ.(n.) நோயினால் ஏற்பட்ட வீக்கம் குறைதல்; resolving of the swelling.

[வீக்கம் + வாடல்]

வீக்கமாந்தம் *vikka-māndam,* பெ.(n.) குழந்தைகளுக்கு காதும் கண்ணும் வீங்கி நாக்கு, புண்ணாகிக் காய்ச்சலையுண்டாக்கு மோர் மாந்த நோய்; a digestive disease of children marked by swelling of ears, eyes, inflammation of the tongue and fever.

[வீக்கம் + மந்தம் → மாந்தம்]

வீக்கமிறங்குதல் *vikkamiraṅgudal,* பெ.(n.) உடலின் மேற்பகுதியிலிருந்த வீக்கங் குறைந்து மெல்ல மெல்லக் கீழ்நோக்கி யிறங்குகை (வின்.); subsiding of a swelling and its transition from the upper to the lower parts of the body.

[வீக்கம் + இறங்குதல்]

வீக்கு[1]-தல் *vikku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கட்டுதல்; to tie up. *"கச்சையும் வீக்கினன்" (சீவக. 1836).* 2. அடக்குதல்; to control, restrain. *"புலன்கள் வீக்கியும்" (கம்பரா. காட்சிப். 72).* 3. தடுத்தல்; to hinder. *"உயிர்ப்பினை வீக்கி" (பாகவத. 2. மாயவனிலை. 8) "கொழும்புகை வீக்கி மாடந் திறந்திட" (சீவக. 534).* 4. அடித்தல் (நெல்லை.); to strike.

ம. வீக்குக.

[வீங்கு → வீக்கு → வீக்கு-,]

வீக்கு[2] *vikku,* பெ.(n.) 1. கட்டுகை; tying, binding. *"பேர்யாழ்... யாப்புறு புரிஞாண் வீக்கு முதலவிழ" (பெருங். உஞ்சைக். 52,86).* 2. இறுகுகை; tightness. *"தானை வீக்கற விசித்து" (சீவக. 1086).* 3. அடிக்கை (நெல்லை.); beating.

[வீக்கு[1] → வீக்கு]

வீக்கு[3]-தல் *vikku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. நிறைத்தல்; to fill. 2. விரைவாகச் செலுத்துதல்; to urge, force out. *"வீக்கினான் றாரை வெய்தா" (சீவக. 2661).*

[வீங்கு → வீக்கு-,]

வீக்கு[4] *vikku,* பெ.(n.) 1. பெருமை; greatness, nobility. *"வீக்கறுத்து..... வஞ்சமறுத் திடுகென்றான்" (சீவக. 2207).* 2. மிகுதி (பொரு.நி); abundance, surplus. 3. கணித முறை (பொரு.நி.); a mode of calculation.

[வீங்கு → வீக்கு]

வீக்கு[5]-தல் *vikku-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. உயிரைப் போக்குதல்; to kill. *"வீக்கு..... வெவ்விடத்தை" (கம்பரா. இராவணன் வதை. 122).* 2. அழித்தல் (யாழ்.அக.); to destroy, ruin.

[வீ-, → வீக்கு-,]

வீகம்[1] *vigam,* பெ.(n.) 1. பூட்டு (யாழ்.அக.); padlock. 2. கணையாழி (திவா.); ring. 3. விரைவு; rapidity, speed, hurry. *"இப்போது நீயிருந்தாயாகில் வீகமென்" (ஈடு. 7,6. அவ.).*

தெ. பீகமு; க. பீக; ம. வீகம்.

வீகம்[2] *vigam,* பெ.(n.) 1. காற்று; wind. 2. பறவை; bird.

[வீ → வீகம்]

வீகமுத்திரை *viga-muttirai,* பெ.(n.) கோயிற்கதவைப்பூட்டி இடும் முத்திரை (இ.வ.); seal set on locked doors. especially of a temple.

[வீகம்[1] + முத்திரை]

வீகாசம் *vikāšam,* பெ.(n.) 1. பகட்டு; pomp and show. 2. தனிமை; solitude; loneliness.

வீங்கச்செய்வது *viṅga-c-ceyvadu,* பெ.(n.) உடம்பில் அடிபடுவதனாலோ ஒவ்வா மருந்துகளாலோ உடம்பு வீங்கிப்போவது; to cause swelling-tumescent.

வீங்கப்பண்ணல் *vīṅga-p-paṇṇal,* பெ.(n.) வீங்கச் செய்வது பார்க்க; see *vīṅga-c-ceyvadu,* tumidity.

[வீங்க + பண்ணல்]

வீங்கல் *vīṅgal,* பெ.(n.) 1. மிகுதி (பொரு.நி.); abundance, plenty. 2. பொருளைப் பெறும் பொருட்டு ஏக்கங் கொள்ளுகை (வின்.); morbid desire, longing. 3. இளைத் திருப்பவ-ன்-ள் (இ.வ); lean, emaciated person. 4. வீங்கி,1 பார்க்க; see *vīṅgi.* *"வீங்கலிவன்" (விறலிவிடு. 825).* 5. உறங்குகை (வின்.); sleeping.

[வீங்கு → வீங்கல்]

வீங்கி *vīṅgi,* பெ.(n.) 1. ஒன்றன்மீது ஏக்கங் கொண்டிருப்பவ-ன்-ள் (யாழ்.அக.); person having morbid desires. *"கறிக்கு வீங்கி".* 2. சேங்கொட்டை, 1 (மலை.); marking-nut.

[வீங்கு → வீங்கி]

வீங்கிநாரி *vīṅgi-nāri,* பெ.(n.) ஒன்றன்மீது ஏக்கங் கொண்டிருப்பவள்; woman having morbid desires. *'பஞ்சைநாரி பணிகாரஞ் சுட்டாள், வீங்கிநாரி விசாரப்பட்டாள்' (பழ.).*

[வீங்கி + நாரி 4]

வீங்கிவிழி-த்தல் *vīṅgi-viḻi-,* 4 செ.குன்றாவி. (v.t.) கண்ணுறுத்தி இமைகனத்து, திறந்தால் குத்தல் வலியும் கடைக் கண்ணில் மூங்கில் முளைபோல் கூர்மையான சதை வளர்ந்தும் கண் சிவப்பு, எரிச்சல், வீக்கம், புடைப்பு, நீர் வடிதல் ஆகியவிக் குணங்களையுடைய வோர் கண்ணோய்; a disease of the eye marked by irritation, thickening of the eye lids, some growth in the angle of the eye, causing swelling, burning ozing tears etc.

[வீங்கி + விழி-,]

வீங்கிவெடி *vīṅgi-veḍi,* பெ.(n.) ஒன்றன் மீது ஏக்கங் கொண்டு அழுது புலம்புதல்; weeping for not getting or loosing something.

வீங்கிவெடி-த்தல் *vīṅgi-veḍi-,* 4 செ. குன்றாவி.(v.t.) ஒன்றன் மீது ஏக்கம் கொண்டு அழுது புலம்புதல்; to swell and burst as dead body.

[வீங்கி + வெடி-,]

வீங்கு-தல் *vīṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. பருத்தல் (நாமதீப. 710); to increase in size, to bulge. 2. பூரித்தல்; to swell. *"மணந்தநாள் வீங்கிய தோள்" (குறள், 1233).* 3. வீக்கமுறுதல் (பொரு.நி.); to become morbidly inflamed and swollen. 4. வளர்தல் (அக.நி.); to grow. 5. மிகுதல்; to be copious or excessive; to increase. *"வளம் வீங்கு பெருக்கம்" (பதிற்றுப். 24, 17).* 6. நெருங்குதல் (சூடா.); to be close, crowded. 7. இறுகுதல்; to become tight and pressing. *"வீங்கிறை தடக்கையின்" (குறிஞ்சிப். 123).* 8. விறைப்பாய் நிற்றல்; to be taut and not slack; to be stiff. *"விளரூண் றின்ற வீங்குசிலை மறவர்" (அகநா. 89. 10).* 9. மேனோக்கிச் செல்லுதல்; to go up, to ascend. *"நாவிளிம்பு வீங்கி" (தொல். எழுத். 96).* 10. மெலிதல்; to become emaciated. *'அவன் வீங்கலாயிருக்கிறான்'.* 11. ஏக்கங் கொள்ளுதல்; to have morbid desires. 12. உறங்குதல் (யாழ்.அக.); to sleep.

க. பீகு; ம. வீங்குக; தெ. வீகு.

வீங்குகரப்பான் *vingu-karappāṉ,* பெ.(n.) வீக்கத்தை யுண்டாக்கும் ஒருவகைக் கரப்பான் நோய்; an eczema causing swelling.

[வீங்கு + கரப்பான். கரப்பான் = குழந்தைகளுக்கு உண்டாகும் சொறி, புண்வகை]

வீங்குகால் *vingu-kāl,* பெ.(n.) பத்து வகை வளிகளுள் ஒன்று (வாயு.); one of the ten vital airs. It stays in the dead body when all others have left and causes it to swell and burst then it leaves it i.e. on 3rd day.

[வீங்கு + கால்]

வீங்குபுள்[1] *vingu-puḷ,* பெ.(n.) ஒரு பறவை; a bird.

[வீங்கு + புள்]

வீங்குபுள்[2] *vingu-puḷ,* பெ.(n.) வீங்குபுள் தோஷம் (பாலவா. 69) பார்க்க; see *vingupuḷ-dōšam.*

[வீங்கு- + புள்]

வீங்குபுள்தோஷம் *vingu-puḷ-dōsam,* பெ.(n.) மாலை நள்ளிரவு முதலிய காலமல்லாக் காலங்களில் குழந்தைகளை வீட்டுக்கு வெளியில் எடுத்துச் செல்லுகையில் சில பறவைகளின் நிழல் படுவதால் உண்டாவதாகக் கருதப்படும் நோய் வகை (பாலவா. 71); a disease of children, attributed to the flight of certain birds overhead when they are taken outside the house at dusk, midnight or other inauspicious hour.

[வீங்கு + புள் + **Skt.** *dōsā > த. தோஷம்]*

வீங்குவாயு *vingu-vāyu,* பெ.(n.) விதையைப் பற்றிய 6 வகை வளியுளொன்று; swelling of the testicles due to *vaḷi.*

[வீங்கு + **Skt.** *vāyu > த. வாயு]*

வீங்குவிரைவாதம் *vingu-virai-vādam,* பெ.(n.) இரண்டு விரையும் வீங்கி இரு கால் நரம்பிழுத்து மிக்க வலியுண்டாய் மலம் போகாமலும் வளி பரியாமலும் குளிர் கண்டு கண் புகைந்து வரும், ஒருவகை நோய் (யூகி-1200); orchitis marked by constipation, flatulence, chillness, pain in the legs etc.

[வீங்கு + விரை + வாதம்]

Skt. *vāda* > த. வாயு.

வீங்கை *vingai,* பெ.(n.) 1. ஒருவகை அசைவு; a movement. 2. ஆடல் வகை; a mode of dancing. 3. குதிரை நடைவகை; a pace of a horse.

[வீங்கு → வீங்கை]

வீச்சம் *viccam,* பெ.(n.) நாற்றம்; smell, effluvium.

[வீசு → வீச்சு → வீச்சம்] (மு.தா.65)

காற்றானது நீண்டு செல்வதால் அதனொடு கலந்த வாசனையும் நீண்டு செல்கின்றதென்க. வீசுதல் என்னும் சொல், வழக்கில் தீய நாற்றத்தையே குறிக்கும்.

வீச்சரிவாள் *viccarivāḷ,* பெ.(n.) அறுவாள்வகை (இ.வ.); a kind of billhook.

மறுவ. புல்லரிவாள்.

[வீச்சு + அறுவாள் → அரிவாள்]



வீச்சலை vīccalai, பெ.(n.) ஆழிப்பேரலை; tsunami.

[வீச்சு + அலை]

வீச்சாட்டம் vīccāṭṭam, பெ.(n.) 1. பரப்பகலம் (வின்.); spaciousness, roominess. 2. வீச்சு, 5 பார்க்க; see vīccu. 3. நன்னிலைமை; good circumstances, profilable increase..

[வீச்சு + ஆடு → ஆட்டம்]

வீச்சு vīccu, பெ.(n.) 1. எறிகை; throw, cast, as of a net. *"எறிந்த வீச்சுத் தவ்விட..... வாளொடுந் தழுவிக் கொண்டான்" (கம்பரா. அதிகா. 213).* 2. சிறகடிக்கை; beat, flat, as of wings. 3. அடி; blow, strike. 4. ஆட்டுகை; swinging, oscillation. *'ஊஞ்சலை ஒரு வீச்சு வீசியாடினாள்'.* 5. நீளம்; length. *'அந்த வீடு வீச்சா யிருக்கிறது'.* 6. விரைவு; quickness, rapidity. *'அவன் வீச்சாக நடக்கிறான்'.* 7. ஓட்டம்; sweep, glance. 8. நோய் வகை (யாழ்.அக.); a disease. 9. வலிமை (வின்.); strength. 10. தற்பெருமை; self-boasting, arrogant talk. *'யாரிடத்தில் இந்த வீச்சு'.* 11. ஆந்தை முதலியவற்றின் ஓசை; dry, screech as of an owl. *"வாய்ச்சிறு புதுப்புள் வீச்சுறு விழுக்குரல்" (பெருங். உஞ்சைக். 55, 89).* 12. மெய்யெழுத்துக்கள் உயிரெழுத்தோடு சேர்ந்து வரும் போது கொள்ளும் ஒருவகைக் குறியீடு; a vowel-sign of vowel-consonants. 13. வளைவு (கட்டட. நாமா. 16); curve. 14. வீச்சம் (இ.வ.) பார்க்க; see vīccam.

க. பீசு.

[வீசு → வீச்சு]

வீச்சுக்காரன் vīccu-k-kāraṉ, பெ.(n.) 1. மிகுதியாக செலவு செய்பவன் (யாழ்.அக.); person driven to extravagance, spend thift. 2. தற்பெருமை பேசுவோன்; boastful person, braggart.

[வீச்சு + காரன்]

வீச்சுக்காரி vīccu-k-kāri, பெ.(n.) வரம்புமீறி செலவு செய்பவள்; extravagant woman. 2. பெருமை பேசுபவள்; boastful woman. 3. விலைநலப் பெண்டிர்; prostitute.

[வீச்சு + காரி]

வீச்சுசன்னி vīccu-śaṉṉi, பெ.(n.) இசிவு நோய்வகை (வின்.); lockjaw, tetanus.

[வீச்சு + சன்னி]

Skt. Janni > த. சன்னி.

வீச்சுப்புத்து vīccu-p-puttu, பெ.(n.) ஒரு வகைப் புண்; an ulcer.

[வீச்சு + புத்து]

வீச்சுலை vīccuIai, பெ.(n.) காற்று வீசும் உலை; blast furnace.

[வீசு → வீச்சு + உலை]

வீச்சுவலி *viccuvali,* பெ.(n.) நரம்புகளை இழுத்துவிடும் ஒரு வகை வலிப்பு; a spasm in which the muscles or muscular fibres contract and relax alternately in quick succession.

[வீச்சு + வலி]

வீச்சுவலை *viccu-valai,* பெ.(n.) மீன்பிடி வலைவகை (இ.வ.); a kind of casting net.

மறுவ. எறிவலை, மணிவலை.

ம. வீச்சுவல.

[வீசு → வீச்சு + வலை. வலை = மீனுள்ளிட்ட கடல்வாழ் உயிரிகளைச் சூழ்ந்து அகப்படுத்தும் கருவி]

வாய்ப்பக்கம் நீர்ப்பரப்பில் எறிந்து மையமூடாக நாற்புறக் கோடியும் இழுக்கப்படத் தக்க வகையில் அமைவுற்ற பெரிய வட்ட வடிவமான மீன்பிடி வலை.

வீச்சுவிளக்கு *viccu-viḷakku,* பெ.(n.) மாழைகளை (அல்) மாழைகளினாலான அணிகலன்களை உருக்கவும், காய்ச்சவும் பயன்படுத்தும் காற்று வீசும் விளக்கு; blast lamp.

[வீசுவிளக்கு → வீச்சுவிளக்கு]



வீச்சுவீச்செனல் *viccu-viccenal,* பெ.(n.) கதறுதற்குறிப்பு; onom. expr, of screaming.

[வீச்சு + வீச்சு + எனல்]

வீச்சுவேனுமாய் *viccu-vēnum-āy,* வி.எ. (adv.) அளவில் மிகுதியாய்; with a free hand, liberally, as in measuring.

[வீசு → வீச்சு + வியனுமாய் → வேனுமாய்]

வீச்சேணி *viccēṇi,* பெ.(n.) வீசுகாலேணி (சங்.அக.); a kind of ladder.

[வீச்சு + ஏணி¹]

வீசக்கணக்கு *viša-k-kaṇakku,* பெ.(n.) கணக்கு வகை (M.E.R.1931-32, P.55); a mode of calculation.

வீசகணிதம் *viša-kaṇidam,* பெ.(n.) கணித வகை; algebra.

[வீசம் + கணிதம்]

வீசகரி *višakari,* பெ.(n.) வேங்கை மரம் (சங்.அக.); East Indian kino tree.

[வீசம் + கரி]

வீசகா *višakā,* பெ.(n.) வீசகரி (சங்.அக.) பார்க்க; see *višakari.*

வீசம்¹ *višam,* பெ.(n.) மாகாணி (பிங்.); the fraction, 1/16.

தெ. வீசமு; க. வீச; து. வீசு, வீச; ம. வீசம்.

வீசல் *višal,* பெ.(n.) 1. எறிகை (பிங்.); throwing. 2. வரையாது கொடுக்கை (திவா.); giving liberally; unconcelled liberality.

[வீசு → வீசல்]

வீசனம் *vīšaṉam,* பெ.(n.) 1. சிற்றால வட்டம் (சூடா.); small fan. 2. விசிறி (திவா.); fan.

[வீசு → வீசனம்]

வீசானம் *vīšāṉam,* பெ.(n.) திருகுவட்டம் (பாண்டிச்.); a small wedge shaped reel.

[வீசு → வீசானம்]

வீசி[1] *viši,* பெ.(n.) 1. அலை; wave, ripple. *"வீசிகள் கவரியாக" (கந்தபு. திருவவ. 110).* 2. சிறுக்கம் (இலக்.அக.); trifle, a little reduction.

[வீசு → வீசி]

வீசி[2] *viši,* பெ.(n.) நலம் (இலக்.அக.); health; welfare.

வீசி[3] *viši,* பெ.(n.) சதகுப்பை; dill or sowa seed.

வீசிக்கட்டு-தல் *viši-k-kaṭṭu,* 5 செ.குன்றாவி. (v.t.) விரிவாகக் கட்டுதல்; to build in large proportions. *"தூணுமெழ வீசிக்கட்டி" (கோயிலொ. 3).*

[வீசு + கட்டு-,]

வீசிதரங்கநியாயம் *višitaraṅga-niyāyam,* பெ.(n.) அலைகள் போல ஒன்றன்பின் னொன்று தொடர்ந்து வருதலைக் கூறும் நெறி (இலக்.அக.); the *nyāya* of the wave undulation, typifying an uninterrupted and regular succession or series, as of waves.

[வீசி + தரங்கம் + நியாயம்]

Skt. *Niyāya* > த. நியாயம்.

வீசிநட-த்தல் *viši-naḍa-,* 3 செ.கு.வி.(v.i.) 1. காலை எட்டி வைத்து விரைவாக நடத்தல்; to take long and quick strides, as in walking. 2. நெடுந்தொலைவு செல்லுதல்; to go long distance. *'வீசி நடந்தால் வெள்ளி வீசம் குறையும்' (பழ.)*

[வீசி +நட-,]

வீசிப்பிடி-த்தல் *viši-p-piḍi-,* 2 செ. குன்றாவி. (v.t) மூச்சை இழுத்து உள்ளே கும்பித்துப் பிறகு சீராக விடுதல்; a breath exercise followed by siddhas. *"வீசிப் பிடிக்கும் விறகறியாரில்லை" (திருமந்.).*

வீசிப்போ-தல் *viši-p-pō-,* 8 செ.கு.வி.(v.i.) வீசிநட-, பார்க்க; see *viši-naḍa-,.*

[வீசி + போ-,]

வீசிமாலி *višimāli,* பெ.(n.) கடல் (இலக்.அக.); sea.

[வீசி + மாலி]

வீசியடி-த்தல் *viši-y-aḍi-,* 2 செ.குன்றாவி. (v.t.) ஓங்கியடித்தல்; to strike with force, swinging the arm.

[வீசி- + அடி-,]

வீசிவில்லிடு-தல் *viši-villiḍu-,* 5 செ. குன்றாவி.(v.t.) தேர் முதலிய நெம்பத்தணி போடுதல்; to apply a lever as in raising the wheel of a car. *"வீசிவில்லிட் டெழுப்பினாலும் எழுப்பப் போகாதிருத்தல்" (திவ். திருப்பா. 23, வ்யா. பக். 203).*

[வீசு + வில்லிடு-,]

வீசு¹-தல் *višu,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. எறிதல் (பிங்.); to throw, fling, as a weapon, to cast, as a net. *"நின்ற*

மண்ணாயினுங் கொண்டு வீசுமினே" (திவ். இயற். திருவிருத். 53). 2. சிறகடித்தல்; to flap, as wings. *"வீசுஞ் சிறகாற் பறத்திர்" (திவ். இயற். திருவிருத். 54).* 3. ஆட்டுதல்; to swing, as the arm. *"மூங்கில் போன்றிருந்துள்ள தோள் வீசி" (திவ். பெரியதி. 3. 7. 5. வ்யா).* 4. இரட்டுதல்; to fan. *"முழவுத் தோளோச்சித் தண்ணென வீசியோயே" (புறநா. 50. 13).* 5. சுழற்றுதல்; to wave, flourish, as a sword. *"வருமாய ரோடுடன் வளைகோல் வீச" (திவ். பெரியாழ். 3, 4, 6).* 6. அடித்தல்; to strike, beat, flog. *'கழியால் அவனை வீசினான்'.* 7. விரித்து நீட்டுதல்; to open out, spread, to lengthen, stretch. *"இருஞ்சிறை வீசியெற்றி" (கம்பரா. சடாயுவுயிர். 107).* 8. மிகுத்திடுதல் (அரு.நி.); to accumulate. 9. வரையாது கொடுத்தல் (பிங்.); to give liberally. *"இரவலர் புன்கண்டீர நாடொறும் உரைசா னன்கலம் வரைவில வீசி" (பதிற்றுப். 54. 8).* 10. சிந்துதல்; to spill. *"கண்ணீர்க் கடலாற் கனைதுளி வீசாயோ" (கலித். 145).* 11. சிதறுதல்; to strew, scatter, sow, as seeds. *"கொள்பத மொழிய வீசிய புலனும்" (புறநா. 23).* 12. களைதல்; to lay aside, throw off. *"உடலுறு பாசம்வீசா தும்பர்ச் செல்வாரு மொத்தார்" (கம்பரா. கடறாவு. 11).* 13. செய்யா தொழிதல்; to abandon, to leave off, to drop. *"சுடுவேனது தூயவன் வில்லினாற்றற்கு மாசென்று வீசினேன்" (கம்பரா. சூளா. 18).*

தெ. வீசு; க. பீசு; ம. வீசுக; **Ko.** vic; **To.** pis; **Kod.** bi-j (bi-di); து. bijuni; **Go.** *mihitānā*, **Kui.** vinja; **Kur.** *bikhrnā*, **malt.** bengre.

[விசு → வீசு] (மு.தா.பக்.68)

வீசு²-தல் *vīsu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. காற்று முதலியன அடித்தல்; to blow, as the wind. *"வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்" (தேவா. 1203,1).* 2. பரவுதல்; to spread, to be diffused or emitted, as fragrance, rays, etc. *"ஞானவாசம் வீசி ப்ரகாசியா நிற்ப" (திருப்பு. 1132).* 3. தீநாற்றம் அடித்தல்; to be emitted, as a bad foul smell.

வீசுதல் = மணம் வீசுதல், மணத்தல்.

வீச்சம் = மணம், நாற்றம். நாறு என்னும் சொற்போன்றே வீசு என்பதும், செய்யுள் வழக்கில் நறுமணத்தையும் உலக வழக்கில் தீய மணத்தையும் உணர்த்தும்.

வாஸ் → வாஸ = மணம். வாஸ் என்பது பெயரடி வினையே. மா.வி.அகராதி. "perhaps only Nom. fr.next" என்று குறித்திருத்தல் காண்க. 'next' என்றது 'வாஸ' என்னும் சொல்லை. (வ.மொ.வ.93).

வீசுகாலேணி *vīsu-kāl-ēṇi*, பெ.(n.) தாங்குகால்களிரண்டுள்ள ஏணி வகை (வின்.); a kind of ladder with two supporting legs. step-ladder.

[வீசு- + கால் + ஏணி]



வீசுகோல் *vīsu-kōl*, பெ.(n.) 1. வீசுவில் (வின்.) பார்க்க; see *vīsu-vil*. 2. வில்லுப்

பாட்டுப் பாடும்போது வில்லடிக்கப் பயன்படும் கோல் வகை (நாஞ்.நா.); a kind of rod used for striking the bow in singing *viṟ-pāṭṭu.*

[வீசு + கோல்]

வீசுகோற்காரன் *vīšukōṟ-kāraṉ,* பெ.(n.) வில்லுப்பாட்டில் வில்லடிப்போன் (நெல்லை); one who plays with the vil instrument in *villu-p-pāṭṭu.*

[வீசு + கோல் + காரன்]

வீசுதமர் *vīšu-tamar,* பெ.(n.) துரப்பண வகை (வின்.); bow drill.

[வீசு + தமர்]

வீசுதவர் *vīšu-tavar,* பெ.(n.) வீசுதமர் (யாழ்.அக.) பார்க்க; see *vīšu-tamar.*

[வீசு + தவர்²]

வீசுவில் *vīšu-vil,* பெ.(n.) துரப்பண மிழுக்கப் பயன்படும் வில்; drill bow.

[வீசு + வில்]



வீசுவிற்குடம் *vīšu-viṟ-kuḍam,* பெ.(n.) துரப்பணக் கூடு (வின்.); case for a drill bow.

[வீசுவில் + குடம்]

வீசேறு-தல் *vīšēṟu,* 5 செ.குன்றாவி. (v.t.) மேலேறுதல்; to be upraised. *"வீசேறிய புருவத்தவர்" (தேவா. 69, 10).*

[வீசு + ஏறு-,]

வீசை¹ *vīšai,* பெ.(n.) நாற்பது பலங்கொண்ட எடுத்தலளவை; viss, a measure of weight = 40 palams.

தெ. வீசெ.

வீசை² *vīšai,* பெ.(n.) நீண்டு வளரும் மேலுதட்டு மயிர்; moustache.

[வீசு → வீசை]

தலைமயிரும் தாடியும் நீண்டு வளர்வனவேயாயினும், குறுக்காக நீண்டு வளர்வது மீசையொன்றே யாதலின், அது வீசையெனப்பட்டது. (மு.தா.பக்.68).

வீசை³ *vīšai,* பெ.(n.) வாழை; plantain.

வீசைத்தூக்கம் *vīšai-t-tūkkam,* பெ.(n.) காற்குன்றி மணி எடை; gold-smith's weight = 1/4 *kuṉṟi.*

[வீசம்² + தூக்கம்²]

வீட்டன் *vīṭṭaṉ,* இடை.(part), தோறும் என்று பொருள்படும் ஓர் ஈறு; a distributive suffix meaning each, every. *"ஆட்டை வீட்டன் பொலிசை காசு அரைக்கால்" (S.I.I.ii. 97).*

[வட்டம் → விட்டன் → வீட்டன்]

வீட்டார் *vīṭṭār,* பெ.(n.) வீட்டிலுள்ள மக்கள்; members of a household; family members.

[வீடு → வீட்டார்]

வீட்டாள் *viṭṭāḷ,* பெ.(n.) மனைவி (யாழ்.அக.); wife.

[வீடு → வீட்டாள்]

ஒ.நோ. இல் → இல்லாள்

வீட்டிருப்பு *viṭṭiruppu,* பெ.(n.) குடும்ப நிலை; state of the family, family affairs. *"வீட்டிருப் பறியாத ஆண்பிள்ளை" (விநோதரச. 24).*

[வீடு → வீட்டு + இருப்பு]

வீட்டிலொன்று *viṭṭil-oṉṟu,* பெ.(n.) முப்பூவி லொன்று; one of the three salts.

[வீட்டில் + ஒன்று]

வீட்டிறப்பு *viṭṭiṟappu,* பெ.(n.) மேற்கூரையின் தாழ்ந்த பக்கம் (சூடா.); eaves of the roof of a house.

[வீடு → வீட்டு + இறப்பு]

ஒ.நோ. இறப்பு,7.

வீட்டினெருப்பு *viṭṭiṉeruppu,* பெ.(n.) அகத்தி; a tree.

வீட்டு[1]-தல் *viṭṭu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. கொல்லுதல் (சூடா.); to kill. *"அந்தகன் றூதர் வீட்டு முன்னரே" (உபதேசகா. சிவபுரா. 40).* 2. அழித்தல்; to destroy. *"என்றன் வெந்தொழில் வீட்டிட" (திருவாச. 41. 5).* 3. நீக்குதல்; to remove. *"பிணியை வீட்டி மணித்தடந் தோளினாற்குக் கொடுத்தியோ" (கம்பரா. மிதிலைக். 97).*

[வீழ்த்து → வீட்டு-,]

வீட்டு[2]-தல் *viṭṭu,* 5 செ.குன்றாவி.(v.t.) தள்ளுதல்; to cast into, throw in. *"இரவியைச் சிறையில் வீட்டினான்" (கந்தபு. அமரர் சிறைபு. 3).*

[வீழ்த்து → வீட்டு-,]

வீட்டுக்கப்புறம் *viṭṭukkappuram,* பெ.(n.) வீட்டுக்குத்தூரம் பார்க்க; see *viṭṭukku-t-tūram.*

[வீட்டுக்கு + அப்புறம்]

வீட்டுக்கரு *viṭṭu-k-karu,* பெ.(n.) ஐங்காய மெழுகு பார்க்க; see *aiṅkāya-meḻugu.*

வீட்டுக்காரர் *viṭṭukkārar,* பெ.(n.) கணவர்; husband.

[வீடு → வீட்டு + காரர்]

வீட்டுக்காரன் *viṭṭu-k-kāraṉ,* பெ.(n.) 1. வீட்டுக்குரியவன்; landlord of a house. 2. வீட்டுக்காரர் பார்க்க; see *viṭṭu-k-kārar.*

[வீடு → வீட்டு + காரன்[1]]

வீட்டுக்காரி *viṭṭu-k-kāri,* பெ.(n.) 1. வீட்டுக் குடையவள்; landlord of a house. 2. மனைவி; wife.

மறுவ. மனையாள்.

[வீடு → வீட்டு + காரி]

வீட்டுக்காரியம் *viṭṭu-k-kāriyam,* பெ.(n.) குடும்ப வேலை; house hold affairs. *"நம் சேனாதிபதி விண்ணப்பத்தால் நம் வீட்டுக் காரியம் செய்யும் கோவணவர்" (Pudu. Insc. 791).*

[வீடு → வீட்டு + Skt. kārya > த. காரியம்]

வீட்டுக்கிரியை *viṭṭu-k-kiriyai,* பெ.(n.) வீட்டிற் செய்யுஞ் சாச்சடங்குப் பகுதி (யாழ்.அக.); part of the funeral ceremonies, performed at the house.

[*வீடு → வீட்டு +* **Skt.** *kiriyā > த. கிரியை*]

வீட்டுக்குட்சாட்சி *viṭṭukkuṭ-cāṭci,* பெ.(n.) வீட்டிலிருப்பவர்களுடைய சான்று மூலம் (வின்.); domestic evidence.

[*வீடு + உள்* [2] *+* **Skt.** *sakshi > த. சாட்சி*]

வீட்டுக்குடையவன் *viṭṭukkuḍaiyavaṉ,* பெ.(n.) 1. வீட்டுக்கு உரியவன் (வின்.); owner of a house. 2. குடும்பத் தலைவன் (வின்.); head of a family. 3. ஒரைக்குரிய (இராசி) தலைவர்; lord of a zodiacal sign.

[*வீடு → வீட்டுக்கு + உடையவன்*]

வீட்டுக்குத்தூரம் *viṭṭukku-t-tūram,* பெ.(n.) வீட்டுக்குவிலக்கு (யாழ்.அக.) பார்க்க; see *viṭṭukku-vilakku.*

[*வீடு → வீட்டுக்கு + தூரம்*]

வீட்டுக்குவிலக்கம் *viṭṭukku-vilakkam,* பெ.(n.) வீட்டுக்குவிலக்கு பார்க்க; see *viṭṭukku-vilakku.*

[*வீடு → வீட்டுக்கு + விலக்கம்*]

வீட்டுக்குவிலக்கு *viṭṭukku-vilakku,* பெ.(n.) மகளிர் மாதவிடாய்; menstruation, as necessitating a woman to stay outside her house during her periods.

[*வீடு → வீட்டுக்கு + விலக்கு*]

வீட்டுக்குவெளி *viṭṭukku-veḷi,* பெ.(n.) மாதவிலக்கு; menses.

[*வீடு → வீட்டுக்கு + வெளி*]

வீட்டுக்குளிர்ச்சி *viṭṭu-k-kuḷircci,* பெ.(n.) தீயபெண்கடவுள்களுக்கு வீடுகளில் இடும் காணிக்கை (யாழ்ப்.); offerings made to demons when worshipped at home.

[*வீடு → வீட்டு + குளிர்ச்சி*]

வீட்டுக்கோழி *viṭṭu-k-kōḻi,* பெ.(n.) வீடுகளில் வளர்க்கப்படும் கோழி; domesticated fowl.

[*வீடு → வீட்டு + கோழி*]

வீட்டுச்சாமான் *viṭṭu-c-cāmāṉ,* பெ.(n.) 1. வீட்டிற்குரிய தட்டு முட்டுகள்; household furniture and utensils. 2. வீட்டுப் பண்டம், 2, 3 பார்க்க; see *viṭṭu-p-paṇḍam.*

[*வீடு → வீட்டு + சாமான்*]

saman = urdhu.

வீட்டுச்சீட்டு *viṭṭu-c-ciṭṭu,* பெ.(n.) 1. வீட்டை விலைகொடுத்து வாங்கிய ஒப்பந்தம், உறுதி முதலிய ஆவணம் (வின்.); title-deeds relating to one's house. 2. குடும்ப வழக்கு (இ.வ.); monetary transactions of a family.

[*வீடு → வீட்டு + சீட்டு*]

வீட்டுச்சுகம் *viṭṭu-c-cugam,* பெ.(n.) வீட்டிற் பெறக்கூடிய இன்பம்; domestic felicities.

[*வீடு → வீட்டு +* **Skt.** *suga > த. சுகம்* [1]]

வீட்டுச்செலவு *viṭṭu-c-celavu,* பெ.(n.) உணவு முதலியவற்றிற்கு ஆகுஞ் செலவு; household expenditure, opp. to *veḷi-c-celavu.*

[*வீடு → வீட்டு + செலவு*]

வீட்டுத்தீ *viṭṭu-t-ti,* பெ.(n.) அகத்தி; a tree. (சா.அக.)

வீட்டுத்தெய்வம் *vīṭṭu-t-teyvam,* பெ.(n.) 1. குடும்பப் பெண் கடவுள் (இ.வ.); household deity. 2. மங்கலப் பெண்டு; woman who dies during the lifetime of her husband and is worshipped as a deity by her family.

மறுவ. குலதெய்வம்.

[வீடு → வீட்டு + தெய்வம்]

வீட்டுத்தேவை *vīṭṭu-t-tēvai,* பெ.(n.) வரிவகை *(S.I.I.vii, 63);* a tax.

[வீடு → வீட்டு + தேவை]

வீட்டுத்தேன் *vīṭṭu-t-tēṉ,* பெ.(n.) வீடுகளில் ஈக்கள் கட்டும் அடையின் தேன்; honey collected from the honey comb built in the houses.

[வீடு → வீட்டு + தேன்]

வீட்டுநெறி *vīṭṭu-neṟi,* பெ.(n.) வீடுபேற்றிற் குரிய வழி; path to salvation. *"வீட்டு நெறிப்பால்" (ஔவைக் குறள்).*

[வீடு → வீட்டு + நெறி [3]]

அறிவுமிக்கு உலகவாழ்வை வெறுத்து வீட்டு நெறியில் நின்ற தமிழ்நாட்டுத் துறவிகளே அந்தணரென்னும் அறவோ ரெனப்பட்டனர்.

வீட்டுப்பண்டம் *vīṭṭu-p-paṇḍam,* பெ.(n.) 1. வீட்டுச்சாமான் (வின்.) பார்க்க; see *vīṭṭu-c-cāmāṉ.* 2. வீட்டுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள்; household provisions. 3. வீட்டிற் செய்யப்படும் பொருள்கள்; home-made articles.

[வீடு → வீட்டு + பண்டம் [1]]

வீட்டுப்பூசை *vīṭṭu-p-pūšai,* பெ.(n.) கடவுளுக்கு வீட்டிற் செய்யும் வழிபாடு; worship of the deity at home.

[வீடு → வீட்டு + பூசை]

வீட்டுப்பெண் *vīṭṭu-p-peṇ,* பெ.(n.) 1. குடும்பத்திலே பிறந்த பெண்; daughter of the family. 2. மகன் மனைவி (வின்.); daughter-in-law.

[வீடு → வீட்டு + பெண்]

வீட்டுப்பெண்சாதி *vīṭṭu-p-peṇšādi,* பெ.(n.) முறையாக மணந்த மனைவி; one's own wedded wife. *"வீட்டுப் பெண்சாதி வேம்பும் காட்டுப்பெண்சாதி கரும்பும்" (வின்.).*

*[வீடு + **Skt.** jādi > த. சாதி, பெண்சாதி]*

வீட்டுமணியம் *vīṭṭu-maṇiyam,* பெ.(n.) 1. வளமனை உட்படு கருமத் தலைவர் (வின்.); stewardship, management of a house or family. 2. வீட்டு அலுவல்களை மேற்பார்ப்பவன் (இ.வ.); steward.

[வீடு → வீட்டு + மணியம்]

வீட்டுலகம் *vīṭṭulagam,* பெ.(n.) மேலுலகம்; heaven. *"தேவர் பெருமானை... நாவி னவிற்றாதார் வீட்டுலக நண்ணாரே" (சீவக. 1467).*

[வீடு → வீட்டு + உலகம்]

வீட்டுவரி *vīṭṭu-vari,* பெ.(n.) வீட்டுக்காகச் செலுத்தும் வரி; house-tax. *"வீட்டுவரி யெப்பொழுதும் வேண்டா மெனநிறுத்தி" (பணவிடு. 46).*

[வீடு → வீட்டு + வரி [5]]

வீட்டுவழக்கம் *vīṭṭu-vaḻakkam,* பெ.(n.) குடும்பத்தில் நடந்து வரும் வழக்கம்; family usage, tradition, opp. to *nāṭṭu-vaḻakkam.*

[வீடு → வீட்டு + வழக்கம்]

வீட்டுவாசல் *vīṭṭu-vāšal,* பெ.(n.) வீட்டின் முன்புற வாயில்; the front gate of a house.

[வீடு → வீட்டு + வாசல்]

வீட்டுவாடகை *vīṭṭu-vāḍagai,* பெ.(n.) குடிக்கூலி; house-rent.

[வீடு → வீட்டு + வாடகை]

வீட்டுவாடை *vīṭṭu-vāḍai,* பெ.(n.) வீட்டு வாடகை (யாழ்.அக.) பார்க்க; see *vīṭṭu-vāḍagai.*

[வீடு → வீட்டு + வாடை[4]]

வீட்டுவிசாரணை *vīṭṭu-višāraṇai,* பெ.(n.) வீட்டுமணியம், 1 (வின்.) பார்க்க; see *vīṭṭu-maṇiyam.*

[வீடு → வீட்டு + **Skt.** *visārana > த. விசாரணை]*

வீட்டுவிசாரம் *vīṭṭu-višāram,* பெ.(n.) குடும்பக் கவலை; cares of a householder, worries of a family.

[வீடு → வீட்டு + **Skt.** *vicāra > த. விசாரம்]*

வீட்டுவீரன் *vīṭṭu-vīraṉ,* பெ.(n.) வீட்டிலிருந்து வீரம்பேசும் கோழை (பயங்கொள்ளி) (யாழ்.அக.); one who effects heroism at home but is really a coward outside.

மறுவ. வாய்ச் சொல் வீரன்

[வீடு → வீட்டு + வீரன்]

வீட்டுவேலை *vīṭṭu-vēlai,* பெ.(n.) 1. வீட்டிற் செய்து கொணருமாறு இடப்படும் வேலை (இக்.வ.); home-work, home exercise. 2. குடும்ப வேலை (கொ.வ.); domestic duties. 3. பெருக்குதல், துணிதுவைத்தல் முதலிய தொழில்; menial service, as washing, sweeping, etc. 4. வீடு கட்டுந் தொழில்; house-building work.

[வீடு → வீட்டு + வேலை]

வீட்டுள்ளார் *vīṭṭuḷḷār,* பெ.(n.) 1. வீட்டுக் குரியார்; inmates of a house. 2. தன் வீட்டில் குடியிருக்கும் வீட்டுடைமையாளர்; house holders.

[வீடு → வீட்டு + உள்ளார்]

வீட்டெலி *vīṭṭeli,* பெ.(n.) இல்லெலி (புறநா. அரும்.); house rat.

[வீடு → வீட்டு + எலி]

வீட்டைச்சுற்று-தல் *vīṭṭai-c-cuṟṟu-,* 5 செ.கு.வி.(v.i.) வெளியேறி வேலை செய்யாமல் தன்வீட்டிலேயே திரிந்து கொண்டிருத்தல்; to be hanging about one's own house, to be a stay-at-home.

[வீடு → வீட்டை + சுற்று-,]

வீட்டோடுங்கூட்டோடும் *vīṭṭōḍuṅ-kūṭṭōḍum,* வி.எ.(adv.) வீடு முழுவதும் (T.A.S.V.224); throughout the house. *'பொங்கல் பண்டிகைக்கு வீட்டோடும் கூட்டோடும் தூய்மை செய்தாயிற்று' (உ.வ.).*

[வீட்டோடும் + கூட்டோடும்]

வீட்டோடேயிருந்துபத்தியங்காத்தல் *viṭṭōḍē-y-irundu-pattiyaṅ-kāttal,* பெ.(n.) நோய்வாய்க் காலத்தில் வீட்டில் ஒய்வாகவிருந்து மருந்தே உணவாகவும் உணவே மருந்தாகவும் கொண்டு உணவுக் கட்டுப்பாட்டில் இருத்தல்; to observe diet and remain at home taking rest.

[வீட்டோடே + இருந்து + பத்தியம் + காத்தல்]

வீடடைத்தல் *vīḍaḍaittal,* பெ.(n.) சாவு முதலியவற்றால் தலைமுறையற்று வீடு மூடிக்கிடக்கை; closing of a house due to extinction of a family, as by death.

[வீடு + அடைத்தல்]

வீடறு-த்தல் *vīḍaṟu-,* 4 செ.குன்றாவி.(v.t.) வழக்கு முதலியன தீர்த்தல்; to settle, as a case or dispute. *"வழக்குமாறுபட்டு வந்தோர்க்கு அவ்வழக்கு வீடறுப்பன்" (பொருந. 188, உரை)*

[வீடு + அறு-,]

வீடாயிரு-த்தல் *vīḍā-y-iru-,* 2 செ.கு.வி. (v.i.) தங்கியிருத்தல்; to encamp, to stay. *"சீவலவன் மங்கலத்து நாம் வீடாயிருக்க"* (T.A.S.vi.158).

வீடாரம் *vīḍāram,* பெ.(n.) 1. பாசறை (பு.வெ.8, 16, கொளு, உரை); camp. 2. வீடு (வின்.); house.

தெ. பிடாரமு; க. பிடார.

[வீடு → வீடாரம்]

வீடாவழி *vīḍā-vaḻi,* வி.எ.(adv.) வீடு வீடாக(வின்.); door to door. *'இவ்விரவலன் வீடாவழிச்சென்று இருக்கிறான்' (உ.வ.).*

[வீடு + ஆ + வழி]

வீடி[1] *vīḍi,* பெ.(n.) கொற்றன் (மலை.); a parasitic leafless plant.

வீடி[2] *vīḍi,* பெ.(n.) வேரிலாக் கொத்தான்; rootless plant.

வீடி[3] *vīḍi,* பெ.(n.) வெற்றிலை பாக்கு (தாம்பூலம்) (இலக். அக.); betel and betel nut.

[மிடையம் → விடையம் → வீடி]

வீடிகை *vīḍigai,* பெ.(n.) 1. வெற்றிலை (மலை.); betel. 2. வெற்றிலைச் சுருள் (வின்.); roll of betel leaves with arecanut, spices and lime.

[மிடையம் → விடையம் → வீடிகை]



வீடு[1] *vīḍu,* பெ.(n.) 1. விடுகை; leaving. *"நட்டபின் வீடில்லை" (குறள், 791).* 2. விடுதலை; emancipation, freedom, liberation, release; to set free. *"நெடுங்கை விலங்கின் வீடுபெறல் யாதென" (பெருங். நரவாண. 3. 107).* 3. வினைநீக்கம்; freedom from the bondage of karma. *"வீடெனப்படும் வினைவிடுதல் (சீவக. 2846).* 4. முடிவு (பிங்.); completion; settlement, end. 5. அழிவு; dissolution of the universe. *"நுகர்ச்சி யுறுமோ மூவுலகின்*

வீடுபேறு" (திவ். திருவாய். 8. 10. 6), 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' (பழ.). 6. படைப்பு (திவ். திருவாய். 8, 10, 6, பன்னீ.); creation. 7. வீடுபேறு; heaven, as the final release or liberation, immortality. *"வீடுடையானிடை" (திவ். திருவாய். 1, 2, 1).* 8. வானுலகு; Svarga, Indra's heaven. *"வீரிய ரெய்தற் பால வீடு" (பு.வெ. 8.30).* 9. மனை; house, habitation, abode. *"வீடறக் கவர்ந்த" (பு.வெ. 3. 15. கொளு).* 10. ஓரை (இராசி.) (இ.வ); zodiacal sign. 11. சதுரங்கத்தில் காய்களிருத்தற்கு உரிய இடம் (தானம்) (இ.வ.); squares, as of a chess board. 12. கட்டாட்டத்திற் பழமெடுத்தற்குரிய இடம்; winning place or goal in a board of an indoor game. 13. தேற்றா பார்க்க; see *teṟṟā*. clearing nut tree. *"காழிருள் வீடும்" (பெருங். உஞ்சைக். 41. 33).* 14. ஒன்றைக் குறிக்குங் குழூஉக்குறி (தைலவ.); a cant term signifying one. *'வீடு அசையாமல் தின்னும்; யானை அசைந்து தின்னும்' (பழ.). 'வீடு கட்டுவது அரிது; வீடு அழிக்கிறது எளிது' (பழ.). 'வீடு கட்டும் முன்னம் கிணறு வெட்ட வேண்டும்' (பழ.). 'வீடு போபோ என்கிறது; காடு வாவா என்கிறது' (பழ.). 'வீடு வெறுவீடு வேலூர் அதிகாரம்' (பழ.). 'வீடு வெறுவீடாய் இருந்தாலும் மணியம் ஏழுஊர்' (பழ.). 'வீட்டில் அழகு வேம்பு அடியாகும்' (பழ.). 'வீட்டுக் கருமம் நாட்டுக்கு உரையேல்' (பழ.). 'வீட்டுக்கு அழகு விளக்கு' (பழ.). 'வீட்டுச் செல்வம் மாடு; தோட்டச் செல்வம் முருங்கை' (பழ.). 'வீட்டுச் சோற்றைத் தின்று வீண் சண்டைக்குப் போவானேன்' (பழ.). 'வீட்டு வேலை பாராதவன் நாட்டு வேலை பார்ப்பானா?' (பழ.). 'வீட்டுக்கு வீடு எதிர்வீடு ஆகாது' (பழ.). 'வீட்டைக் கட்டிக் குரங்கைக் குடிவைத்தது போல' (பழ.). 'வீட்டைக் கட்டிப்பார்; கலியாணம் செய்துபார்' (பழ.).*

மக்கள் குடியிருக்கும் மனைக்குத் தமிழில் வீடு என்று பெயர். பேரின்ப உலகிற்கும் வீடு என்றே பெயர். இவ்விரு பெயரும் ஒரு சொல்லே.

மாந்தன் பகலெல்லாம் உழைத்துக் களைத்து உணவு அல்லது பொருள்தேடி, மாலைக் காலத்தில் மனையாகிய வீட்டையடைந்து இளைப்பாறி இன்புற்றிருக்கிறான்.

எழுவகையான எல்லையற்ற பிறவிகளில் உழன்று அறத்தை ஈட்டிய ஆன்மா அல்லது அப்பிறவிகளில் அலைந்து திரிந்து வீட்டுநெறிச் செலவை முடித்த ஆன்மா, அடையும் பேரின்ப உலகும் வீடுபோலுதலின் வீடெனப் பட்டதென்க.

வீட்டின் வகை

1. வீடு = நிலையான உறைவிடம், 2. மனை = வீட்டு நிலம் (ஆட்சிப் பொருள்), 3. இல், இல்லம் = வளமான வீடு, 4. அகம் = உள்வீடு, 5. உறையுள் = தங்குமிடம், 6. குடிசை = தாழ்ந்த சிறு கூரை வீடு, 7. குடில் = இலையால் வேய்ந்த சிறுகுடிசை, 8. குடிலம் = பெருங்குடில் (பர்ண சாலை), 9. குடிகை = சிறுகோயில், 10. குச்சு வீடு = சிறுகூரை வீடு, 11. மச்சு வீடு = மெத்தை வீடு, 12. கூடு = நெற்கூடுபோல் வட்டமான சிறுவீடு,13. கொட்டகை = சுவர் அல்லது நெடுஞ்சுவர் இல்லாத நீண்ட கூரைவீடு, 14. கொட்டில் = தொழுவம் அல்லது ஆயுதச் சாலை, 15. சாலை = பெருங்கூடம், 16. வளைவு = ஒருவருக்குச் சொந்தமான பலவீடுகள் சேர்ந்த விடம், 17. வளைசல் = வீடு முதலியவற்றின் சுற்றுப்புறம் அல்லது சூழ்நிலம், 18. வளாகம் = திருமடம், 19. மாளிகை = மாண்பான குடும்பம்; பெருவீடு, 20. மாடம் = மேனிலை, 21. மாடி = மேனிலை வீடு, 22. குடி = ஒரு குடும்பம் அல்லது குலம் வகிக்கும் தெரு அல்லது வீட்டுத் தொகுதி, 23. அரண்மனை : அரண் அல்லது பாதுகாப்புள்ள அரசன் மனை, 24. பள்ளி = படுக்கும் வீடு, 25. மடம் = துறவிகள் தங்கும் பெருங்கூடம் அல்லது மண்டபம். —பாவாணர், (சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் பக்.49).

Ka. *biḍ-āgu*, **Te.** *viti.*

நாகரிகமற்ற பழங்காலத்தில் மக்கள் மண்ணாலும் கற்பாறைகளாலும் சுவர்கள் எழுப்பி, இலைகளாலும் கிளைகளாலும் கூரை வேய்ந்து, அதற்குள் வசித்துவந்தார்கள். கிடைத்த பொருள் எதுவானாலும் அதைக் கொண்டு வீடு என்று பெயர் கொண்ட ஓர் உறைவிடம் அமைத்துக் கொண்டார்கள். நாகரிகம் வளரவளர மண்ணைச் சுட்டுச் செங்கற்கள் செய்து, அதனால் வீடு கட்டத் தொடங்கினர். நல்ல களிமண் அகப்படாத இடங்களிலும், கற்பாறை மிகுந்த இடங்களிலும், பாறாங்கற்களைத் தகுந்த அளவுக்கு உடைத்து அதையே வீடு கட்டுவதற்கு இன்றும் பயன்படுத்துகிறார்கள். இக்காலத்தில் சுதைமாவையும் கருங்கல் சல்லியையும் மணலையும் சேர்த்துச் செய்த சுதைமாக் கலவை எனப்படும் பொருள் மிகவும் பயன்பட்டு வருகிறது இத்துடன் எஃகுக் கம்பிகளையும் சேர்த்து வலுவூட்டிய சுதைமாக் கலவை என்பதும் பயன்பட்டு வருகிறது.

வீடு²–தல் *vīḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கெடுதல்; to perish, to be destroyed. *"வினை..... வீடுமே" (தேவா. 360, 8).* 2. சாதல்; to die. *"வீடுமளவும் விடுகின்றிலேனே" (திருமந். 1654).* 3. ஒழிதல்; to cease, end. *"தளர் நடை வருத்தம் வீட" (பெரும்பாண். 250).*

[வீழ் → வீடு]

வீடு³–தல் *vīḍu,* 5 செ.குன்றாவி.(v.t.) விடுதல் (வின்.); to let off, leave off.

[விடு → வீடு]

வீடுகட்டுதல் *vīḍu-kaṭṭudal,* 1. இல்லம் எழுப்புதல்; to construct a house. 2. சிலம்ப விளையாட்டில் சிலம்பத்தைச் சுற்றியபடி சுற்றி வருதல்; brandish a staff.

வீடுகொள்(ளு)¹–தல் *vīḍu-koḷ-,* 13 செ.குன்றாவி.(v.t.) மீண்டும் பெறுதல்; to recover, get back. *"ஆருயிரைக் கூற்றம் விழுங்கிய பின் வீடுகொண்டற்றால்" (பு.வெ. 2. 1).*

[வீடு + கொள்(ளு)–,]

வீடுகொள்(ளு)–தல் *vīḍu-koḷ-,* 13 செ.கு.வி. (v.i.) வரி முதலியன நீங்கப் பெறுதல்; to be exempted from, as from payment of tax. *"பழஞ் செய்க்கடன் வீடு கொண்டது" (புறநா. 35).*

[வீடு + கொள்–ளுதல்]

வீடுசெய்–தல் *vīḍu-šey-,* 1 செ.குன்றாவி. (v.t.) 1. துறத்தல்; to renounce, relinguish. *"வீடுமின் முற்றவும் வீடுசெய்து" (திவ். திருவாய். 1,2,1).* 2. விடுதலை செய்தல்; to release. 3. வரி முதலியன விட்டுக் கொடுத்தல்; to remit, as taxes. *"கறை வீடு செய்ம்மென" (சிலப். 28, 204).* 4. காணிக்கை செய்தல்; to surrender, as to God. *"உம்முயிர் வீடுடையானிடை வீடுசெய்ம்மினே" (திவ். திருவாய். 1. 2. 1).*

[வீடு + செய்–,]

வீடுசேர்–தல் *vīḍu-šēr-,* 3 செ.கு.வி. (v.i.) அழிதல்; to be destroyed or ruined. *"வீடுசேரநீர் வேலைகான் மடுத்து" (கம்பரா. நாட்டுப். 61).*

[வீடு + சேர்–,]

வீடுண்ணசாலி *vīḍuṇṇa-šāli,* பெ.(n.) தோலிற் காணப்படும் மச்சம்; mole.

மறுவ. மரு.

வீடுதூங்கி *vīḍu-tūṅgi,* பெ.(n.) பிறனை யடுத்து மதிப்பிழந்து வாழ்வோன் (யாழ்.அக.) (வின்.); hangeron, sponger; parasite.

[வீடு + தூங்கி]

வீடுநர் *vīḍunar,* பெ.(n.) இறப்பவர்; those who die, mortals. *"விண்ணவரும் வீடுநரே" (விநாயகபு. 22. 15).*

[வீழ்த்து → வீட்டு → வீடு → வீடுநர்]

வீடுநுழை-தல் *vīḍu-nūḻai-,* 2 செ.கு.வி. (v.i.) தீயவெண்ணத்துடன் பிறன் வீட்டினுட் புகுதல்; to tresspass; to enter into a house with an evil intent.

[வீடு + நுழை-,]

வீடுபார்-த்தல் *vīḍu-pār-,* 4. செ.குன்றாவி. (v.t.) மணவினை முடிந்த சின்னாட் சென்ற பின் மணமகள் பெற்றோர் மணமகன் வீடு சென்று தம் மகள் மனையறம் நடத்தும் திறத்தை பார்த்தல் (த.தி.பக். 21); parent's to be examined their bride's newly married life at her home.

வீடுபெயர்[1]**-தல்** *vīḍu-peyar-,* 2 செ.கு.வி. (v.i.) இருப்பிடம் விட்டு வேறிடஞ் செல்லுதல் (வின்.); to change one's residence or abode or habitat; to migrate. *'வீடு பெயர்ந் தாயிற்றா?' (உ.வ.).*

[வீடு + பெயர்-,]

வீடுபெயர்[2]**-த்தல்** *vīḍu-peyar-,* 3 செ.கு.வி. (v.i.) வீடுபெயர்[1] (வின்.) பார்க்க; see *vīḍu-peyar.*

[வீடு + பெயர்]

வீடுபேறு *vīḍu-pēṟu,* பெ.(n.) முத்திநிலை; final emancipation, salvation, altainment, bliss divine. *"விண் பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானை" (தேவா. 268. 5).*

இல்லறத்தாலும் வீடுபெறலாமென்பது தமிழர் மதமும் திருவள்ளுவர் கொள்கையுமாகும்.

"வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்" (குறள், 38)

"அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்" (குறள், 46)

"இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை" (குறள், 47)

"ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து" (குறள், 48).

என்னுங் குறள்களை நோக்குக.

துறவறமும் ஒருகுலத்தார்க்கு மட்டும் உரியதன்றி எல்லார்க்கும் பொதுவாம். அவாவும் செருக்கும் அடியோடு ஒழிந்தாலொழிய ஒருவன் வீட்டையடைய முடியாது.

பேய்போல் திரிந்து பிணம்போற் கிடந்திட்ட
பிச்சை யெல்லாம்
நாய்போ லருந்தி நரிபோ லுழன்றுநன்
மங்கையரைத்
தாய்போற் கருதித் தமபோலெவர்க்கும்
தாழ்ச்சிசொல்லிச்
சேய்போ லிருப்பர்கண் டீருண்மை ஞானந்
தெரிந்தவரே. (பட்டினத். பாடல்)

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. (குறள், 34)

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை. (குறள், 345)

நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன
நீமனமே
மாற்றிப் பிறக்க வகையறிந் தாயில்லை மாமறைநூல்
ஏற்றித் தொழூஉம் எழுகோடி மந்திரம் என்ன கண்டாய்
ஆற்றைக் கடக்கத் துறைதெரி யாமல்
அலைகின்றையே (பட்டினத். பாடல்).

இச்செய்யுட்களால், சிறுபிள்ளைபோல் மறுபடியும் பிறந்து செருக்கடங்கி ஆசை வேரறுத்தவரன்றி, செல்வத் தொடர்புள்ளவரும், ஆரவாரமாக ஆடையணிபவரும் தம்மைப் பிறப்பால் சிறந்தவராகக் கருதுபவரும் மனமாறாது ஆரிய மந்திரங்களை யோதுபவரும், வடமொழியைத் தேவ மொழி யென்றும் தென்மொழியைக் கீழோர் மொழி (நீசபாஷை) யென்று கூறுபவரும் திருக்குறளை ஓதக் கூடாதென்பவரும் வீட்டுலகையடைவது ஒட்டகம்

ஊசியின் காதில் நுழைவதினும் அரிதாயிருக்கு மென்று அறிந்து கொள்க. இனி, விருந் தோம்பாமையால் இல்லற வகையாலும் செருக்கடங் காமையால் துறவற வகையாலும், ஆரியர் வீடடைவதும் இயலாதென அறிந்து கொள்க.

– (தேவநேயம் பக்.136–137)

[வீடு + பேறு]

வீடும்விளக்குமாய்வை-த்தல் *vīḍum-viḷakkum-āy-vai-,* 4 செ.குன்றாவி.(v.t.) ஒருவனை வாழவைத்தல்; to start or settle one in life, to make one prosper in life. *'அவரை வீடும் விளக்குமாய் வாழவைத்தவர் இவர்தான்' (உ.வ).*

[வீடும் + விளக்குமாய் + வை-,]

வீடுமாற்று-தல் *vīḍu-māṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) ஒரு வீட்டை விட்டு மற்றொரு வீட்டிற்குக் குடிபோதல்; to migrate or shift from one house to another.

[வீடு + மாற்று-,]

வீடுமாறு-தல் *vīḍu-māṟu-,* 5 செ.கு.வி. (v.i.) வீடுமாற்று-, பார்க்க; see *vīḍu-māṟṟu.*

[வீடு + மாறு-,]

வீடுமூலி *vīḍu-mūli,* பெ.(n.) முப்பு; the three mystic salts.

வீடுவாசல் *vīḍu-vāšal,* பெ.(n.) வீடும் அதைச் சார்ந்த பொருளும்; house and its appurtenances. *'அவன் வீடு வாச லில்லாதவன்'.*

[வீடு + வாசல்]

வீடுவி-த்தல் *vīḍuvi-,* 9 செ.குன்றாவி.(v.t.) அழிவு செய்தல்; to cause, to perish, to destroy to ruin. *"காலனை விடுவித்து" (தேவா. 444. 3).*

[வீடு → வீடுவி-,]

வீடெடு-த்தல் *vīḍeḍu-,* 18. செ.கு.வி.(v.i.) 1. வீடுகட்டுதல்; to build a house. *"வீடெடுக்க அஸ்திபாரஞ் செய்பவர்" (பரத. ஒழிபி. 3. உரை).* 2. அடித்தளமிடுதல்; to lay the foundation. *"நல்ல வீடெடுப்பவர்" (பரத. ஒழிபி. 3.).* 3. வாடகைக்கு வீடு எடுத்தல்; to take house for rent.

[வீடு + எடு-,]

வீண் *vīṇ,* பெ.(n.) 1. பயனின்மை (சூடா.); uselessness, unprofitableness. 2. பயனற்றது; that which is unprofitable. 3. தேவையற்றது; unneccessariness. *"வீண்பேசி மடவார்கை வெள்வளைகள் கொண்டால்" (தேவா. 677, 3).*

ம. வீண்.

[விள் → வீள் → வீண்] (வே.க.155)

வீண்கத்து *vīṇ-kattu,* பெ.(n.) பயனற்ற பேச்சு; profitless words, as empty noise.

மறுவ. பயனிற்சொல்.

[வீண் + கத்து-,]

வீண்காரியம் *vīṇ-kāriyam,* பெ.(n.) பயனற்ற செயல் (நன். 298, உரை); useless deed; unprodrative work.

மறுவ. வெட்டிவேலை.

[வீண் + காரியம்]

Skt. *Kārya* > த. காரியம்.

வீண்காலம் *vīṇ-kālam,* பெ.(n.) பயனின்றிப் போக்குங் காலம்; time spent in vain, time wasted to while time away.

[வீண் + காலம்]

வீண்குறிசொல்லுவோன் *viṇ-kuṟi-šolluvōṉ,* பெ.(n.) போலியாகக் கணியக்குறி (சோதிடக்குறி) சொல்லிப் பிழைப்போன் (சுக்கிர நீதி. 176); sham astrologer.

[வீண் + குறிசொல்லுவோன்]

வீண்செயல் *viṇ-šeyal,* பெ.(n.) வீண்காரியம் பார்க்க; see *viṇ-kāriyam.*

[வீண் + செயல்]

வீண்செலவு *viṇ-šelavu,* பெ.(n.) பயனற்ற பணச்செலவு; profitless expenditure.

[வீண் + செலவு]

வீண்சொல் *viṇ-šol,* பெ.(n.) பயனிற் சொல் (வின்.); idle , word, unprofitable discourse.

மறுவ. வெற்றுரை.

[வீண் + சொல்³]

வீண்சோறுதின்னி *viṇ-šōṟu-tiṉṉi,* பெ.(n.) சோற்றுக்குக் கேடாய் ஒன்றுக்கு முதவாதிருப் பவ-ன்-ள் (வின்.); useless person.

[வீண் + சோறு ¹ + தின்னி]

வீண்டம்பம் *viṇ-tambam,* பெ.(n.) பயனற்ற ஆரவாரம்; vain show; that which is more for show than for use.

மறுவ. பகட்டு.

[வீண் + டம்பம்]

வீண்தெண்டம் *viṇ-teṇḍam,* பெ.(n.) 1. சிறிதும் பயனின்மை (கொ.வ.); sheer waste. 2. முறைகேடான ஒறுப்புக் கட்டணம் (அநீதமான அபராதம்) (வின்.); unjust fine.

[வீண் + தெண்டம்]

வீண்தேங்காய் *viṇ-teṅgāy,* பெ.(n.) தேங்காயுருட்டியாடும் பந்தய வாட்டத்தில் எளிதில் உடையுந் தேங்காய் (யாழ்ப்.); coconut that breaks easily, as in a game.

[வீண் + தேங்காய்]

வீண்நியாயம் *viṇ-niyāyam,* பெ.(n.) 1. சாக்கு (இ.வ.); pretext, excuse. 2. பயனற்ற உரையாட்டு; profitless argument.

[வீண் + நியாயம்]

Skt. *Niyāya* > த. நியாயம்.

வீண்பத்தி *viṇ-patti,* பெ.(n.) மூடநம்பிக்கை (வின்.); superstition.

[வீண் + பத்தி]

வீண்பாக்கு *viṇ-pākku,* பெ.(n.) உணவு கொள்ளாத வேளைகளில் தின்னும் பாக்கு (வின்.); betel-nut chewed at other times than after meal, dist. fr. *ūṉ-pākku.*

[வீண் + பாக்கு ¹]

வீண்பாடு *viṇ-pāḍu,* பெ.(n.) 1. பயனற்ற வேலை; profitless task, non-profitable interprise. 2. பயனற்ற முயற்சி; profitless or wasteful effort.

[வீண் + பாடு]

வீண்பிரதிட்டை *viṇ-piratiṭṭai,* பெ.(n.) தற்பெருமை (வின்.); vanity; self-boashing.

*[வீண் + **Skt.** பிரதிஷ்டை > த. பிரதிட்டை]*

வீண்பொழுதுபோக்கு-தல் *viṇ-poḻudu-pōkku-,* 5 செ.கு.வி.(v.i.) காலத்தை வீணே கழித்தல் (வின்.); to while one's time away.

[வீண் + பொழுதுபோக்குதல்]

வீண்போக்கு *viṇ-pōkku,* பெ.(n.) பொருத்த மற்ற சாக்குவார்த்தை; vain, lame excuse.

[வீண் + போக்கு]

வீண்போக்குப்போக்கு[1]-தல் *viṇ-pōkku-p-pōkku-,* 5 செ.குன்றாவி.(v.t.) விடுதல் (வின்.); to let off, leave off.

[விடு → வீடு]

வீண்போக்குப்போக்கு[2]-தல் *viṇ-pōkku-p-pōkku-,* 5 செ.கு.வி.(v.i.) வீண்பொழுது போக்குதல் (இ.வ.); to waste or while away the time, to be idle.

[வீண் + போக்கு + போக்குதல்]

வீண்வம்பு *viṇ-vambu,* பெ.(n.) 1. முறை கேடான பேச்சு அல்லது செயல் (இ.வ.); mischievous talk or deed. 2. பயனற்ற வம்பளப்பு; idle gossip. 3. தேவையில்லாத தலையீடு; வலுச்சண்டை; unnecessary interference. *'வீண் வம்புக்குப் போகாதே'.*

[வீண் + வம்பு]

வீண்வார்த்தை *viṇ-vārttai,* பெ.(n.) வீண் சொல் (கொ.வ.) பார்க்க; see *viṇ-šol.*

*[வீண் + **Skt.** வார்த்தை]*

வீண்விதி *viṇ-vidi,* பெ.(n.) இழக்கச் செய்யும் விதி; illfate; misfortune; evil destiny.

மறுவ. போகூழ்.

*[வீண் + **Skt.** விதி]*

வீண்வீம்பு *viṇ-vimbu,* பெ.(n.) தேவையற்ற விடாப்பிடி; unjustifiable obstinacy; stubborn unyielding.

[வீண் + வீண்பு → வீம்பு]

மறுவ. முரண்டு.

வீணணி *viṇaṇi,* பெ.(n.) இழிவான அணிகலன் (பாண்டி.); trinket.

[வீண் + அணி]

வீணத்தனம் *viṇa-t-taṉam,* பெ.(n.) ஒழுங்கின்மை (நாஞ்.நா.); wickedness.

[வீணன் + தனம்[1]]

வீணன் *viṇaṉ,* பெ.(n.) 1. பயனற்றவன்; useless fellow. *"வீணர்க்குள் வீணன்" (அரிச். பு. 4. சூழ்வினை. 19).* 2. சோம்பேறி (வின்.); idle or lazy fellow. 3. ஒழுக்கக் கேடனாவன் (இ.வ.); one given to wicked ways. *'வீணருக்குச் செய்ததெலாம் வீண்' (பழ.). 'வீணுக்கு உழைக்கிறவன் வீணன்' (பழ.). 'வீண் இழவுக்கு மாரடிக்கிறதா?' (பழ.).*

மறுவ. மக்கட் பதடி.

[வீண் → வீணன்] (வே.க.பக்.156)

வீணாகரணம் *viṇā-karaṇam,* பெ.(n.) யாழ் இசைத்தல் (யாழ்.அக.); playing on the lute.

[வீணை + கரணம்]

Skt. *Karaṇa* > த. கரணம்.

வீணாகானம் *viṇā-kāṉam,* பெ.(n.) யாழிசை; music played on the lute.

[வீணை + கானம்]

Skt. *Ghānam* > த. கானம்

வீணாட்டம் *viṇāṭṭam,* பெ.(n.) வீண்பாடு (யாழ்.அக.) பார்க்க; see *viṇ-pāḍu.*

[வீண் + ஆட்டம்]

வீணாடிவீணன் *vīṇāḍivīṇaṉ,* பெ.(n.) வீணாதிவீணன் (நாஞ்.நா) பார்க்க; see *vīṇādi-vīṇaṉ.*

[வீணாடி + வீணன்]

வீணாத்தண்டு *vīṇā-t-taṇḍu,* பெ.(n.) வீணாதண்டம் பார்க்க; see *vīṇā-taṇḍam.* *"வீணாத் தண்டூடே வெளியுறத் தானோக்கி" (திருமந். 588).*

[வீணை → வீணா + தண்டு]

வீணாதண்டம் *vīṇā-taṇḍam,* பெ.(n.) 1. வீணைக்காம்பு; neck of a lute. 2. முதுகெலும்பு; spine, as like the neck of the lute.

[வீணை → வீணா + தண்டு → தண்டம்]

வீணாதண்டம் *vīṇā-taṇḍam,* பெ.(n.) 1. முள்ளெலும்பு; vertebrae. 2. முதுகந்தண்டு; vertebral column.

மறுவ: வீணாதண்டு.

[வீணை → வீணா + தண்டம்]

வீணாதண்டு *vīṇā-taṇḍu,* பெ.(n.) வீணாதண்டம், 1 (இலக்.அக.) பார்க்க; see *vīṇā-taṇḍam.*

[வீணை + தண்டு]

வீணாதிவீணன் *vīṇādi-vīṇaṉ,* பெ.(n.) 1. முற்றும் பயனற்றவன்; entirely worthless person. 2. கயவன் (இ.வ.); rogue. 3. உரிமையில்லா திருக்கையிலும் தனக்கு உரிமையுண்டென்று வழக்காடுபவன் (தஞ்சை.); person who persists in making unjust claims.

[வீணன் + அதி + வீணன். அதி = மிகுதிப்பொருள் தரும் முன்னொட்டு]

வீணாரவீணன் *vīṇāravīṇaṉ,* பெ.(n.) வீணாதிவீணன் பார்க்க; see *vīṇādi-vīṇaṉ.* *"வீணரவீணனைப் போனீதி செய்வர்" (தண்டலை. சத. 55).*

வீணாவாதன் *vīṇā-vādaṉ,* பெ.(n.) வீணை இசைப்போன் (யாழ்.அக.); one who plays on the *vīṇai.*

வீணானுபந்தம் *vīṇāṉu-bandam,* பெ.(n.) வீணைக்குடம்; the pot of the *vīṇai.*

[வீண் + Skt. aṉubandha > த. அனுபந்தம்]

வீணி *vīṇi,* பெ.(n.) மலைக்குறட்டை; spindle tree.

வீணிழவு *vīṇiḻavu,* பெ.(n.) பயனற்றது; that which is profitless, as labour. *'வீணிழவுக்கு மாரடிக்கிறேன்'.*

[வீண் + இழவு]

வீணை[1] *vīṇai,* பெ.(n.) யாழ்வகை; a kind of indian lute. *"எம்மிறை நல்வீணை வாசிக்குமே" (தேவா. 1199. 7). "மாசில் வீணையும் மாலை மதியமும்" (தேவா.)*

விண் = வில்நரம்பு தெறித்தற் குறிப்பு.
விண்விண் = 1. யாழ் நரம்பு இசைத்தற் குறிப்பு.
2. புண்ணினால் நரம்பு நோவெடுத்தற் குறிப்பு.

[விண் → வீணை]

"நாரதன் வீணை நயந்தெரி பாடலும்" (சிலப். 6:18)
"மங்கலம் இழப்பவீணை" (சிலப்.6:22)
"மாசில் வீணையும் மாலை மதியமும்" (அப்பர்)

ஆரியர் வருமுன்பே தலைக்கழகத் தமிழ் முத்தமிழாய் வழங்கி வந்ததினாலும் நாரதர் தமிழ்நாடு வந்தே 'இசைத்தமிழ் கற்றுப்

பஞ்சபாரதீயம்' என்னும் இசைத்தமிழ் நூலியற்றியதாலும் கி.பி.2 ஆம் நூற்றாண்டுச் சிலப்பதிகாரம் வீணையைக் குறித்தலாலும் 7ஆம் நூற்றாண்டில் அப்பர் "மாசில் வீணை" (குற்றமற்ற யாழ்) என்று பாடியிருத்தலாலும், வீணை 11 ஆம் நூற்றாண்டில் வடக்கினின்று வந்த ஆரிய இசைக்கருவி என்பார் கூற்று, தமிழ் வெறுப்பால் எழுந்தது என்க.

வீணை தமிழர் இசைக்கருவியே என்பதைப் 'பாணர் கைவழி' என்னும் நூலுட் கண்டு தெளிக.

வடவர் வேண் என்றொரு சொல்லைப் படைத்து இசைக்கருவியியக்குதல் என்று பொருள் கூறி, வேணு (மூங்கில்) என்னும் சொல்லோடு தொடர்பு காட்ட விரும்புவர். வேணு என்பது 'வேய்' என்னும் தென்சொல்லின் திரிபாகத் தெரிகின்றது.

மேலும் அதன் பொருந்தாமையையும் 'விண்' என்பதன் முழுப் பொருத்தத்தையும் பகுத்தறிவுள்ளார் கண்டறிக.

மா.வி.அகராதி. "of doubtful derivation" என்று குறித்திருத்தலையும் மூலங்காட்டாமையையும், வேண் என்னும் சொல்லைப் பற்றி "prob. artificial" என்று கருதுதலையும் நோக்குக.

(வ.மொ.வ.பக்.93–94)

"நாரதர் வீணை நயந்தெரி பாடலும்
. . . . .
மங்கல மிழப்ப வீணை மண்மிசைத்
தங்குக இவளென" (சிலப்.ம–18–23)

என்பதாலும், நாரதனின் தமிழகத் தொடர்பும் இசைப் புலமையும் அறியப்படும். வீணை என்பது தமிழர் நரப்புக் கருவி; நரம்பு விண்ணென்ன இசைப்பது வீணை. நோயினால் நரம்பு வலிக்கும்போது நரம்பு விண்விண் எனத் தெறிக்கின்றது என்று கூறும் உலக வழக்கை நோக்குக.

[விண் → வீண் → வீணை]

வ. வீணா. மூங்கிலைக் குறிக்கும் வேணு என்னும் வடசொல்லினின்று, வீணை அல்லது வீணா என்னும் சொல்லைத் திரிப்பது பொருந்தாது.

வேதக்காலத்தில் ஆரியருக்கு நரப்புக் கருவியுமில்லை; இசைப்புலமையும் இல்லை. ஒரு நரம்பில் ஒரேயிசை (சுரம்) இசைப்பது யாழ் என்றும், ஒரு நரம்பில் மெலிவு சமன் வலிவு என்னும் முந்நிலைகளுள் ஒன்றும் பலவும் இசைப்பது வீணை என்றும் வேறுபாடறிக.

செங்கோட்டி யாழும், சகோட யாழும் வீணை வகைகளே. இவற்றுள் முன்னது மெட்டுள்ளது; பின்னது கோட்டியம் (கோட்டு வாத்தியம்) போல் மெட்டில்லது. – (பாவாணர் – தமிழர் வரலாறு – கலவுநிலைக் காண்டம் பக்.158).

இந்திய இசைக்கே ஓர் அணிகலனாக விளங்கும் இசைக்கருவி வீணையாகும். கலைமகளின் கையில் வீணையிருப்பது அக்கருவியின் பெருமையை நன்கு புலப்படுத்துகிறது. 'வீணை, வேணு, மதங்கம் (மிருதங்கம்) என்று தொன்றுதொட்டுச் சிறப்பாகப் போற்றப்பட்டு வரும் மூன்று கருவிகளில் வீணை முதல் இடம் பெற்றுள்ளது. பண்களின் (இராகங்களின்) வடிவங்களைப் புலப்படுத்தும் நுட்பச் சுருதிகளையும், கமகங்களையும், இந்த கருவியில் தெளிவாக இசைத்துக் காட்டலாம். இசைத் தத்துவங்களையும், இசை நுணுக்கங்களையும் விளக்கிக் காட்டுவதற்கு இது மிக நன்கு பயன்படும்.

இக்காலத்தில் வீணையென்பது, மெட்டுக்களுடன் கூடிய, மீட்டி இசைக்கப்படும் கம்பிக் கருவியையே குறிக்கும். ஆனால் பண்டைக் காலத்தில் வீணையென்னும் சொல்லைப் பொதுவாக எல்லாக் கம்பிக் கருவிகளுக்கும் பயன்படுத்தினர். 'சத தந்திரி வீணை' என்பது நூறு கம்பிகளுடன் கூடின கருவியைக் குறித்தது. இந்தச் சததந்திரி வீணையே பாரசீகத்தில் சந்தூர் என்றும், ஸ்பெயினில் சால்தரி என்றும் வழங்கி வந்தது. மெட்டுகளுடன் கூடிய வீணை ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டதாகக் கூறலாம். மைசூரிலுள்ள பேலூர், ஹளேபீடு கோயில்களிலுள்ள சிற்பங்களில் மெட்டுக்களுடைய வீணையை, முதன் முதலில் காண்கிறோம். பட்டீசுவரர் கோயிலிலும் மெட்டுப் போட்ட வீணையின் சிற்பத்தைக் காணலாம். யாழ்க் கருவியில் ஒவ்வொரு கம்பியையும் ஒவ்வொரு சுரத்திற்குரிய சுருதி கூட்டித் தேவையான பண்ணை வாசித்தார்கள். ஆனால் பண்டைக் காலத்து வீணையில் 2 அல்லது 4 கம்பிகளே பயன்பட்டன. தேவையான சுரங்களை ஒரு கம்பியின் அந்தந்த இடங்களில் விரலால் கம்பியை அழுத்தி

இசைத்தனர். இக்காலத்திய வீணை 17 ஆம் நூற்றாண்டில், தஞ்சாவூரில் அரசுபுரிந்த இரகுநாத மன்னரின் காலத்தில் உருவாக்கப்பட்டது. இக்காரணம் பற்றியே இதைத் தஞ்சாவூர் வீணையென்றும், இரகுநாத வீணையென்றும் அழைப்பதுண்டு.

வீணையின் அமைப்பு

வீணை, நரம்புக் கருவிகளில் மீட்டுக் கருவிகள் என்னும் வகுப்பைச் சேர்ந்தது. அதில் 31/2 மேலிசை இசைக்கலாம். மாழையினால் செய்யப்படும் கம்பிகளே அதில் பயன்படும். இசைப்பதற்காக 4 கம்பிகள் தண்டியின் மேலும், தாளத்திற்கும் சுருதிக்கும் 3 கம்பிகள் பக்கவாட்டிலும் இருக்கும். இசைப்பதற்காக உள்ள 4 கம்பிகள், குடத்தின் மேல்பாகத்திலுள்ள லங்கர் வளையங்களில் பிணைக்கப்பட்டுக் குதிரையின் மேலும் மெட்டுக்களின் மேலும் சென்று, தலைப் பாகத்திலுள்ள பிரடைகளில் முடுக்கப்பட்டிருக்கும், தாளக் கம்பிகள், லங்கரிலுள்ள வளையங்களில் பிணைக்கப்பட்டுப் பக்கக் குதிரை அல்லது பக்க வளைவின் மேல் சென்று, தண்டியின் பக்கத்திலுள்ள மூன்று பிரடைகளில் முடுக்கப்பட்டிருக்கும். லங்கர்கள் நாகபாசத்தில் சுற்றப்பட்டிருக்கும்.

வீணையின் பாகங்கள் :

குடம், குடத்தின் மேல் பலகை, தண்டி, தண்டியின் மேல்பலகை, தண்டியின் மேல் இருபக்கங்களிலுள்ள காடிச்சக்கை, காடிச் சக்கையின் மேல் பொருத்தப்பட்டிருக்கும் மெழுகுச் சட்டம், மெழுகுச் சட்டத்தின் மேல் பொருத்தப்பட்டுள்ள 24 வெண்கல மெட்டுக்கள், சுரைக்காய், 7 பிரடைகள், கழுத்துப் பாகம், யாளிமுகம், இரண்டு குதிரைகள், 7 தந்திகள் பிணைக்கப்பட்டிருக்கும் 7 லங்கர்கள். அந்த லாங்கர்களின் மேல் நுட்பச் சுருதி செய்வதற்கு ஏந்தாகவுள்ள வளையங்கள், 7 தந்திகள் (5 எஃகுத் தந்திகளும், 2 பித்தளைத் தந்திகளும்), நாகபாசம் ஆகியவை. தண்டியானது குடப்பக்கத்தில் சற்றுப் பருத்தும், கழுத்துப் பக்கத்தில் சற்றுச் சிறுத்துமிருக்கும். யாளிமுகம் கீழ்நோக்கி யிருக்கும். மெட்டுக்கள் வெண்கலம், வெள்ளி, பித்தளை, எஃகு என்னும் மாழைகளில் (உலோகங்களில்) செய்யப்படும். வீணையின் இடப்பக்கத்திலுள்ள சுரைக்காய் தாங்கியாகவும், ஒலி பெருக்கியாகவும் பயன்படும்.

வீணை செய்யப்படும் முறை

வீணை பலா மரத்தினால் செய்யப்படும். மைசூரில் கறுப்பு மரத்தினாலும் வீணையைச் செய்கிறார்கள். ஒரே மரத்துண்டினின்றும், குடமும் தண்டியும் குடையப் பட்டிருப்பின், அதை ஏகாண்ட வீணை யென்பர். வழக்கமாகக் குடம் ஒரு மரத்துண்டினின்றும், தண்டி மற்றொரு துண்டினின்றும், தலைப்பாகம் வேறொரு மரத்துண்டினின்றும் செய்து பொருத்தப் பட்டிருக்கும். தந்தத்தினாலும், மான் கொம்பினாலும், தாமரைப்பூ வேலைகள் செய்து, வீணையை அணி செய்வது வழக்கம். வீணையை நிறுத்தி வைத்தும் இசைப்பதுண்டு, படுக்க வைத்தும் இசைப்பதுண்டு, வலக்கை ஆட்காட்டி விரலினாலும், நடு விரலினாலும் தந்திகளை மெட்டுக்களின்மேல் அழுத்தி, வீணையை இசைப்பார்கள். வீணையின் இசை இனிமையாக இருக்கும். மெட்டுக்களைச் சரியான இடங்களில் அமைப்பதற்கு ‘மேளம் செய்தல்’ என்று பெயர். தஞ்சாவூர் வீணையிலும் திருவனந்தபுர வீணையிலும் குடத்தின் மேல் நாபுகள் அல்லது கோடுகள் கீறப்பட்டிருக்கும். மைசூர், பொப்பிலி வீணைகளில் இம்மாதிரி நாபுகள் இல்லை.

(கலைக்.)

[விண் → வீண் → வீணை]



வீணை² *vīṇai,* பெ.(n.) மின்னல்; lightning.

வீணைக்காணி *vīṇai-k-kāṇi,* பெ.(n.) கோயிலில் வீணை இசைக்கும் உரிமை (I.M.P. Tj. 465) ; right of playing on the *vīṇai* in a temple.

[வீணை + காணி]

வீணைச்செல்வம் *vīṇai-c-celvam,* பெ.(n.) மாதங்கி, 3 (சீவக.411, உரை) பார்க்க; see *mādaṅgi.* the Goddess of *yāḻ.*

[வீணை + செல்வம்]

வீணைத்தண்டு *vīṇai-t-taṇḍu,* பெ.(n.) வீணாதண்டம், 1 (சீவக. 717, உரை) பார்க்க; see *vīṇā-taṇḍam.*

[வீணை + தண்டு]

வீணைமிருகம் *vīṇai-mirugam,* பெ.(n.) 1. கத்தூரி பார்க்க; see *kattūri.* 2. எலும்பு பார்க்க; see *elumbu.*

*[வீணை + **Skt.** mirugha > த. மிருகம்]*

வீணைமீட்டு-தல் *vīṇai-mīṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) யாழ்நரம்பை ஒன்றியுணர்ந்து சுருதி சேர்த்தல்; to tune the *Yāḻ.*

[வீணை + மீட்டு-. மீட்டுதல் = யாழின் நரம்பை விரலாற் சுண்டுதல்]

வீணையர் *vīṇaiyar,* பெ.(n.) 1. வீணை இசைப்பதில் வல்லார்; expert players on the *vīṇai.* *"இன்னிசை வீணையர் யாழின ரொருபால்" (திருவாச. 20,4).* 2. பதினெண் கணத்துள் ஒரு தொகுதியார் (திவா.); Gandharvas.

[வீணை → வீணையர்]

வீணைவலிக்கட்டு *vīṇai-vali-k-kaṭṭu,* பெ.(n.) யாழின் வார்க்கட்டு (வின்.); fret of a *vīṇai* ; place where the strings of a *yāḻ* are held down by the fingers.

[வீணை + வலி + கட்டு]

வீணைவாசி-த்தல் *vīṇai-vāśi-,* 4 செ.கு.வி. (v.i.) யாழ் இசைத்தல்; to play on the *yāḻ.*

[வீணை + வாசி-,]

வீத்து[1] *vittu,* பெ.(n.) 1. அடிக்கை (வின்.); flogging. 2. நீளம் (இ.வ); length.

[வீச்சு → வீத்து]

வீத்து[2]**-தல்** *vittu-,* 5 செ.குன்றாவி.(v.t.) அடித்தல் (இ.வ.); to flog.

வீத்து[3]**-தல்** *vittu-,* 5 செ.குன்றாவி.(v.t.) ஊற்றுதல்; to pour. *'என் பாத்திரத்திலும் கொஞ்சம் கஞ்சி வீத்துங்கள்'.*

மறுவ. வீழ்த்து.

வீத்துகம் *vittugam,* பெ.(n.) 1. சதகுப்பை; dill or sowa seeds. *2. வெள்ளரி;* cucumber. (சா.அக.)

வீத்துமம் *vittumam,* பெ.(n.) சதகுப்பை, 1 (மலை.); dill.

வீதசாகி *vida-šāgi,* பெ.(n.) விலாமிச்சை வேர்; fragrant root which is brown or black in colour. (சா.அக.)

வீதசோகம் *vida-šōgam,* பெ.(n.) அசோகம் (இலக்.அக.); *ašoka.*

வீதசோகன் *vida-šōgaṉ,* பெ.(n.) அருகக் கடவுள் (சூடா.); Arhat, as free from sorrow.

வீதபுட்பி *vida-puṭpi,* பெ.(n.) குக்கில்; a fragrant gum-resin. (சா.அக.)

வீதம்[1] *vidam,* பெ.(n.) 1. அளவுமுறை; rate, ratio. *'எனக்கு அவன்வீதங் கொடுத்தான்'.* 2. பங்கு; share, portion.

[விழு → விகு → விகுதம் → வீதம்]

வீதம்[2] *vidam,* பெ.(n.) 1. விடுகை (சூடா.); abandonment, abolition. 2. விடப்பட்டது (இலக்.அக.); that which is forsaken or relinquished. 3. அமைதி (இலக்.அக.); peace.

[விடு → வீடு → வீடம் → வீதம்]

வீதம்[3] *vidam,* பெ.(n.) தகரம்; tin. (சா.அக)

வீதல் *vidal,* பெ.(n.) 1. சாவு (சூடா.); death. 2. வறுமை (திவா.); poverty.

[வீ → வீதல்] (வ.மொ.வ.265).

வீதலகம் *vidalagam,* பெ.(n.) செங்கண் மாரி; letrus. (சா.அக.)

வீதனகோபம் *vidana-kōbam,* பெ.(n.) முன்கழுத்துக் கழலை என்னும் நோய்; goitre, bronchocele. (சா.அக.)

வீதனகோளம் *vidana-kōlam,* பெ.(n.) உடலில் உள்ள நாளமில் சுரப்பிகளுள் ஒன்று; thyroid gland. (சா.அக.)

வீதி[1] *vidi,* பெ.(n.) 1. தெரு (பிங்.); street. *"வாழ்த்தொலிபோய் வீதிவாய்க் கேட்டலுமே" (திருவாச. 7.1).* 2. கதிரவன் முதலிய கோள்கள் செல்லும் வழி; the sun's path, orbit of celestial bodies. 3. வழி; direction, way. *"கனிந்த கீதவீதியே... ஓடியெய்தினார்" (சீவக. 2039).* 4. முறை; means. *"தியான வீதியான்... வீட்டுல கெய்தும்" (சூளா. முத். 4).* 5. ஒழுங்கு (வின்.); row, order. 6. நாடக வகைப் பத்தனுள் காமவிச்சை மிகுந்த பரத்தையிடத்துக் கொண்ட காதலைக் குறித்து ஒருவர் அல்லது இருவர் நடிப்பதான ஓரங்க நாடகவகை(சிலப். பக். 84 கீழ்க் குறிப்பு); a species of drama in one act and with one or two actors, the theme being love for a lascivious prostitute, one of ten *rūbagam,* q.v. 7. அகலம்; width, breadth. *"வீதிவே னெடுங் கண்ணியர்" (தேவா. 168. 2). 'அந்தத் துணியின் வீதி எவ்வளவு?'* 8. நேரோட்டம் (பிங்.); running straight, as of a horse. *"வினைதகு வட்டமும் வீதியும் பத்தியும்" (சீவக. 1839).* 9. வையாளி வெளி (வின்.); place for breaking horses. 10. ஒளி (இலக்.அக.); light. 11. மேடை (யாழ்.அக.); platform.

[வியம் → (வியதி) → வீதி]

வீதி[2] *vidi,* பெ.(n.) குதிரை (யாழ்.அக.); horse.

வீதிக்குத்து *vidi-k-kuttu,* பெ.(n.) தெருக்குத்து; an inauspicious position of a house.

[வீதி[2] + குத்து]

வீதிகுத்து-தல் *vidi-kuttu-,* 10. செ.கு.வி. (v.i.) ஓடியாடுதல்; to run hither and thither. *"வீதிகுத்திய குறுந்தாட்பாரிடம்" (கல்லா. 41).*

[வீதி + குத்து-,]

வீதிகோத்திரம் *vidi-kōttiram,* பெ.(n.) வீதிகோத்திரன், 1 (இலக்.அக.) பார்க்க; see *vidi-kōttiran.*

*[வீதி + **Skt.** kothra > த. கோத்திரம்]*

வீதிகோத்திரன் *vidi-kōttiran,* பெ.(n.) 1. தீக் கடவுள்; the God of fire. 2. கதிரவன்; sun.

*[வீதி + **Skt.** kōthra > த. கோத்திரன்]*

வீதிப்பாய்ச்சல் *vīdi-p-pāyccal,* பெ.(n.) தெருக்குத்து; an inauspicious position of a house.

[வீதி[1] + பாய்ச்சல்]

வீதிப்போக்கு *vīdi-p-pōkku,* பெ.(n.) இசையின் நேர்செலவு; even movement of music in the same pitch. *"அசைபொடு வீதிப்போக்கு முருகியல்" (திருவிளை. விறகு. 28).*

[வீதி + போக்கு]

வீதிமறிச்சான் *vīdi-maṟiccāṉ,* பெ.(n.) குறித்த இடங்களில் கீழ்மக்கள் வராதபடி தடுக்க இடப்படும் தட்டி முதலியன (நாஞ். நா.); tatti, etc. put up in specified localities to shut out low-caste people, as in festivals.

[வீதி + மறி → மறிச்சான்]

வீதியிலேவிடு-தல் *vīdiyilē-viḍu-,* 20 செ. குன்றாவி.(v.t.) குழந்தை முதலியவற்றை பற்றுக்கோடின்றி விட்டு விடுதல்; to leave adrift, to leave uncared for , as children.

[வீதி → வீதியிலே + விடு-,]

வீதிவர்ணச்சேலை *vīdi-varṇa-c-cēlai,* பெ.(n.) ஒருவகைப் புடைவை; a kind of saree. *"வீதிவர்ணச் சேலை யொன்று விந்தையாம்" (விறலிவிடு. 714).*

[வீதி **Skt.** *varṇa > த. வண்ணம் + சேலை]*

வீதிவர்ணம் *vīdi-varṇam,* பெ.(n.) *வீதிவர்ணச்சேலை* பார்க்க; see *vīdivarṇa-c-cēlai.*

[வீதி + **Skt.** *varṇa > த. வர்ணம்]*

வீதிவிடங்கன்[1] *vīdi-viḍaṅgaṉ,* பெ.(n.) திருவாரூரில் கோயில் கொண்டு திருவிழாக் காலத்தில் உலாப்புறம் காணும் கடவுளாகிய சிவபெருமான்: the moveable image of siva, worshipped at *Tiru-v-ārūr.*

[வீதி + விடங்கன்]

வீதிவிடங்கன்[2] *vīdi-viḍaṅgaṉ,* பெ.(n.) நான்கு திங்களில் விளையும் நெல்வகை; a kind of paddy, maturing in four months. *"வீதிவிடங்க னென்ற மெய்ப்பேரும்" (நெல்விடு. 191).*

[வீதி + விடங்கன்]

வீதிவிலாசம் *vīdi-vilāśam,* பெ.(n.) தெருவில் உலா வருகை (வின்.); taking a walk along the streets.

[வீதி + **Skt.** *vilāśa > த. விலாசம்]*

வீப்பகழி *vī-p-pagaḻi,* பெ.(n.) காமனது மலரம்பு (உரி.நி); the flower-arrow of *kāmaṉ.*

[வீ + பகழி]

வீபணி *vīṇaṇi,* பெ.(n.) 1. கடைவீதி (சது.); bazaar-street. 2. விபணி பார்க்க; see *vipaṇi,* shop.

வீபத்து *vīpattu,* பெ.(n.) திங்கள் (சது.); moon.

[வீ + பத்து]

வீம்பன் *vīmbaṉ,* பெ.(n.) 1. தற்பெருமைக் காரன்; boaster, braggart. 2. செருக் குடையவன்; proud person. 3. விடாப் பிடியாளன்; pertinacious person.

[வீம்பு → வீம்பன்] (செல்வி, 77.ஆடி. பக். 595)

வீம்பாட்டம் *vimbāṭṭam,* பெ.(n.) 1. வீண் பகட்டு; ostentatious display. 2. தற் பெருமை பேசுகை; bragging.

[வீம்பு + ஆட்டம்]

வீம்பு *vimbu,* பெ.(n.) 1. தற்புகழ்ச்சி; boast, swagger, bombast, vaunt. *"வீம்பு நாரியர்" (திருப்பு. 772).* 2. செருக்கு; pride. 3. விடாப்பிடி (ஒட்டாரம்); obstinacy. *'வீம்புக்கு வேடம் கொள்ளாதே' (பழ.)*

ம. வீம்பு.

[வீண் → வீண்பு → வீம்பு] (செல்வி, 77, ஆடி.595)

வீம்புக்காரன் *vimbu-k-kāraṉ,* பெ.(n.) வீம்பன் (வின்.) பார்க்க; see *vimbaṉ.*

[வீம்பு + காரன்]

வீம்புப்பேச்சு *vimbu-p-pēccu,* பெ.(n.) தற்புகழ்ச்சி; boasting speech. *'வீம்பு பேசுகிறவன் அழிவான்; வீரியம் பேசுகிறவன் விழுவான்' (பழ.).*

[வீம்பு + பேச்சு]

வீம்புவைத்தியன் *vimbu-vaittiyaṉ,* பெ.(n.) போலி மருத்துவர் (புதுவை.); quack doctor

[வீம்பு + Skt. vaidya > த. வைத்தியன்]

வீமசக்கிரம் *vima-šakkiram,* பெ.(n.) புளிவஞ்சி பார்க்க; see *puḷi-vañji.*

வீமசேனன் *vima-šēṉaṉ,* பெ.(n.) பீமன் 1; bhima. *"அருச்சினன் தமையனான வீமசேனன்" (சிறுபாண். 240. உரை).*

வீமஞ்சிகாந்தம் *vimañji-kāndam,* பெ.(n.) ஊசிக் காந்தம்; loadstone which attacts small needles; magnet.

வீமதேவன் *vima-dēvaṉ,* பெ.(n.) பதினொரு உருத்திரருள் ஒருவர் (பிங்.); a rudra, one of *ēgādaša-ruttirar,* q.v.

வீமபாகம் *vima-pāgam,* பெ.(n.) பீமபாகம் (குற்றா. குற. 17); excellent cooking.

வீமபீசம் *vimapišam,* பெ.(n.) அண்டவீக்கம் (வின்.); hydrocele.

[வீமம் + Skt. bijā > த. பீசம்]

வீமம் *vimam,* பெ.(n.) 1. அச்சம்; fearfulness, dreadfullness. *"வீமப்பேரொளியாய விழுப்பொருள்" (தேவா. 327. 8).* 2. அச்சந் தருவது (வின்.); fearful thing. 3. நிரய (நரகம்) வகை; a hell. *"அதன் கீழ் வீமம்" (சிவதரு. சுவர்க்கநரக. 109).* 4. பருமன் (வின்.); bulkiness.

வீமமந்தி *vima-mandi,* பெ.(n.) கழுதைத் தும்பை பார்க்க; see *kaḻudai-t-tumbai.*

வீமவீடணம் *vima-viḍaṇam,* பெ.(n.) நிரயவகை (நரகம்) (சிவதரு. சுவர்க்க. நரக. 109); a hell.

[வீமம் + வீடணம்]

வீமன் *vimaṉ,* பெ.(n.) 1. பீமன் 1 பார்க்க; see *pimaṉ.* the second son of *pāṇḍu.* *"மிடுக்கிலாதானை வீமனே... என்று" (தேவா. 647. 2).* 2. தமயந்தியின் தந்தை; father of damayanti. 3. பச்சைக் கருப்பூரவகை (பதார்த்த. 1077); a kind of purified camphor.

வீமி *vimi,* பெ.(n.) எட்டுவகை எழுத்துகளி லொன்று; one of the eight mystic letters.

வீமியச்சரம் *vīmi-y-accaram,* பெ.(n.) குழந்தைகளுக்கு ஈரல் நொந்து காய்ச்சலுடன் மயக்கம், குளிர், தலைவலி, நீர்வேட்கை போன்ற குணங்கள் காணும் ஒருவகை நோய்; a disease of the children marked by fever, giddiness, chill, headache, thirst etc. due to the liver is affected.

[விமி + அக்கரம் → அச்சரம்]

வீமேச்சுரவுள்ளமுடையான் *vīmēccura-v-uḷḷamuḍaiyāṉ,* பெ.(n.) ஒரு கணிய நூல் (சோதிடம்); an astrological work.

வீயம் *vīyam,* பெ.(n.) 1. வித்து; seed. *"அகோசர வீயத்தை" (திருமந். மாயி. 100).* 2. அரிசி (பிங்.); rice.

தெ. பீயமு; க. பீய; **Kol.** பீயம்.

வீயு *vīyu,* பெ.(n.) ஆடுதின்னாப்பாளை (மலை.); worm killer.

வீர்தி *vīrdi,* பெ.(n.) வேலி (பிங்.); hedge, fence.

வீர்வீரெனல் *vīr-vīr-eṉal,* பெ.(n.) கத்துதற் குறிப்பு; onom. expr. of screaming, shrieking.

Ma. vīr; **Kui.** verevere.

வீரக்கட்டி *vīrakkaṭṭi,* பெ.(n.) ஓர் மருந்து; a lump of per Chloride of mercury. (சா.அக.)

வீரக்கட்டு *vīra-k-kaṭṭu,* பெ.(n.) 1. வீரத்தைக் கட்டும் முறை; consolidated per-chloride of mercury. 2. வில்வப் பழத்தைக் கீறி வீரத்தை உள்ளே வைத்து, சீலை செய்து மணல் மறைவில் புடம் போட்டு, இப்படி 10 முறை 10 பழத்தில் போட வீரம் கட்டும்; a lump of perchloride of mercury is inserted into the bael fruit, and luted with clay and cloth, then calcined in sand bath, repeat the proces 9 more times, the per-chloride gets consolidated. (சா.அக.)

வீரக்கல் *vīra-k-kal,* பெ.(n.) நடுகல் (இ.வ.); memorial stone.

[வீரம் + கல்.]

வீரக்கழல் *vīra-k-kaḻal,* பெ.(n.) ஆண்மைக் குறியாக வீரரணியும் காலணி; string of little bells worn on the leg, as a sign of heroism.

[வீரம் + கழல்]

வீரக்கிலேதம் *vīrakkilēdam,* பெ.(n.) ஒருவகை மஞ்சள் புண் கழுவுநீர்; a yellow lotion for cleaning and dressing ulcers and sores.

*[வீரம் + **Skt.** kilētha > த. கிலேதம்]*

வீரக்குட்டி *vīra-k-kuṭṭi,* பெ.(n.) வீரரிற் சிறந்தோன் (யாழ்.அக.); eminent warrior.

[வீரம் + குட்டி]

வீரக்குடியான் *vīra-k-kuḍiyāṉ,* பெ.(n.) மங்கலம் மற்றும் இரங்கத்தக்க காலங்களில் சங்கு கொம்பு முதலியனவூதும் பணி செய்பவன் (வின்.); one employed to sound the trumpet or conch on joyful or mournful occasions.

[வீரம் + குடியான்]

வீரக்குடிவெள்ளாழன் *vīra-k-kuḍi-veḷḷāḻaṉ,* பெ.(n.) வேளாளர் குல வகையில் ஒரு பிரிவினர்; a sub-caste of *vēḷāḷā.*

[வீரக்குடி + வெள்ளாழன்]

வீரக்குழல் *vīra-k-kuḻal,* பெ.(n.) முன்கையில் அணியும் கரும்பொற்காப்பு (யாழ்.அக.); a piece of armour for the forearm.

[வீரம் + குழல்³]

வீரக்கொடி¹ *vīra-k-koḍi,* பெ.(n.) வெற்றிக் கொடி (பு.வெ.9, 39, உரை); banner of victory.

[வீரம் + கொடி]

வீரக்கொடி² *vīra-k-koḍi,* பெ.(n.) வெற்றிலைக்கொடி; betelvine-piper betel.

[வீரம் + கொடி]



வீரக்கொம்பு *vīra-k-kombu,* பெ.(n.) படையெழுச்சியில் ஊதுங்கொம்பு; martial trumpet. *"சங்கும் கரிய வீரக்கொம்பும்" (பு.வெ. 2, 3, உரை).*

[வீரம் + கொம்பு]

வீரகங்கணம் *vīra-kaṅgaṇam,* பெ.(n.) வீரகடகம் (வின்.) பார்க்க; see *vīra-kaḍagam.*

[வீரம் + கங்கணம்]

வீரகடகம் *vīra-kaḍagam,* பெ.(n.) வீரர் அணியும் கைவளை (வின்.); warrior's bracelet. *"கடகம் செறிந்த கையே" (மணிமே. 6, 144).*

[வீரம் + கடகம்]

வீரகண்டாமணி *vīra-kaṇḍāmaṇi,* பெ.(n.) வீரக்குறியாக அணியும் மணி கட்டிய கழல்; ring with little bells, worn on the leg, as a mark of heroism. *"வீரகண்டாமணி விருது காலிட்டு" (கொண்டல்விடு. 494).*

[வீரம் + கண்டாமணி]

வீரகண்டை *vīra-kaṇḍai,* பெ.(n.) வீரக்கழல் (வின்.) பார்க்க; see *vīra-k-kaḻal.*

க. வீரகண்டே.

[வீரம் + கண்டை]

வீரகத்தி *vīra-katti,* பெ.(n.) வீரனைக் கொன்ற தீவினை (இலக்.அக.); sin of killing a hero or warrior.

[வீரம் + Skt. hati > த. கத்தி]

வீரகதவுப்பு *vīra-kada-v-uppu,* பெ.(n.) வளையலுப்பு; a variety of salt used in making glass bangles. (சா.அக.)

வீரகம் *viragam,* பெ.(n.) அலரி, 2 (இலக். அக.) பார்க்க; oleander.

வீரகவசம் *vira-kavasam,* பெ.(n.) வீரர் அணியும் மெய்புகு கருவி; warrior's armour.

[வீரர் + கவசம்]



வீரகவிராயர் *vira-kavirāyar,* பெ.(n.) வீரையாசுகவிராயர் பார்க்க; see *virai-y-āsu-kavirāyar.*

வீரகாந்தம் *vira-kāndam,* பெ.(n.) ஊசிக் காந்தம்; load-stone attracting needles; magnet.

[வீரம் + காந்தம்]

வீரகுடியான் *vira-kudiyān,* பெ.(n.) வீரக்குடியான் (வின்.) பார்க்க; see *vira-k-kudiyān.*

[வீரம் + குடியான்]

வீரகெம்பீரன் *vira-kembiran,* பெ.(n.) வீரச்செருக்குடையான் (வின்.); proud or magnificent hero.

[வீரம் + கம்பீரன் → கெம்பீரன்]

Skt. *gambirā* > த. கம்பீரன்.

வீரகேசரி *virakēsari,* பெ.(n.) 1. முருகனின் ஒன்பது வீரர்களுள் ஒருவர்; a hero in skanda's army, one of *nava-virar,* q.v. 2. விக்கிரமாதித்தன் (வின்.); king *vikkiramādittan.*

[வீரம் + கேசரி]

Skt. *Kēsari* > த. கேசரி.

வீரகேந்திரமங்கை *virakēndira-mangai,* பெ.(n.) மூக்குறா பார்க்க; see *mūkkurā.*

வீரகேயூரம் *vira-kēyūram,* பெ.(n.) வீரரணிவதற்கு உரியதும் இரும் பொன்னாலானதுமான தோள்வளை (யாழ்.அக.); warrior's armlet of iron.

[வீரம் + கேயூரம்]

வீரகோஷம் *vira-kōsam,* பெ.(n.) வீரர்களின் ஆர்ப்பரவம்; warrior's shout, war-cry.

*[வீரம் + **Skt.** kōsha > த. கோஷம்]*

வீரச்சங்கிலி *vira-c-cangili,* பெ.(n.) வீரசங்கிலி (சிலப். 6, 99, அரும்.) பார்க்க; see *vira-sangili.*

[வீரம் + சங்கிலி]

வீரச்சலங்கை *vira-c-calangai,* பெ.(n.) வீரரணியும் காற்சதங்கை (இ.வ.); string of little bells, worn on the legs by heroes.

[வீரம் + சலங்கை]

வீரச்சுண்ணம் *vira-c-cunnam,* பெ.(n.) சுண்ணவகை; calcined white powder of per-chloride of mercury which has the properties of calcium i.e. turns, turmeric solution red.

[வீரம் + சுண்ணம்]

வீரச்சுவை vira-c-cuvai, பெ.(n.) வீரம்[1], 2 (சிலப். 3, 13, உரை) பார்க்க; see viram.

[வீரம் + சுவை]

வீரச்செந்தூரம் vira-c-cendūram, பெ.(n.) திருமூலர் 'வ' கார உபதேசம் (அறிவுரை) 200 ல் சொல்லியுள்ள ஒரு வகைச் செந்தூரம்; red calcined powder of per-chloride of mercury mentioned in *Tirumūlar 'va'gāra ubadēšam.*

வீரச்செல்வி vira-c-celvi, பெ.(n.) கொற்றவை (பிங்.); *durgai.*

[வீரம் + செல்வி]

வீரசங்கிலி vira-šangili, பெ.(n) 1. வீரத்திற்கு அறிகுறியாகக் கையிலணியும் பொன்னணி; gold chain worn as an armlet, as a sign of heroism. *"வீரசங்கிலி கேயூரம்" (பிரபுலிங். பிர. 9).* 2. மகளிர் கழுத்தணி வகை (சிலப். 6, 99, உரை); a woman's necklace.

[வீரம் + சங்கிலி]

வீரசம்பன்குளிகை virašamban-kuligai, பெ.(n.) 14-ஆம் நூற்றாண்டில் வழங்கிய நாணயவகை (I.M.P.N.A.7); a coin current in the 14th C.

[வீரசம்பன் + குளிகை]

வீரசயந்திகை virašayandigai, பெ.(n.) 1. போர்; war. 2. வீரர் நிகழ்த்துங் கூத்து வகை; a dance performed by warriors.

[வீரம் + சயந்திகை]

வீரசயனம் vira-šayanam, பெ.(n.) திருமாலின் திருப் பள்ளிகொள் நிலைவகை; a reclining posture of *višnu.*

[வீர + Skt. sayana > த. சயனம்]

வீரசாகி[1] virašāgi, பெ.(n.) அழிஞ்சில்; a tree.

வீரசாகி[2] virašāgi, பெ.(n.) சேங்கொட்டை (மலை.); marking nut tree.

[வீர + சாகி]

வீரசாசனம் virašašanam, பெ.(n.) வீரர்களுக்கு கொடுக்கும் நிலம் முதலியன (I.M.P.Cg. 682); land and other property assigned to warriors.

[வீரம் + Skt. šāšanā > த. சாசனம்]

வீரசிங்காசனம் vira-šingāšanam, பெ.(n.) வீரர்கள் இருத்தற்குரிய அரியுருவவிருக்கை; throne of heroes. *"வீரசிங்காசனத்து...... வீற்றிருந் தருளிய" (S.I.I.i. 134).*

[வீரம் + சிங்காசனம்]

Skt. சிங்காசனம்.

வீரசிங்காதனபுராணம் vira-šingādana-purānam, பெ.(n.) கி.பி. 1719-ல் வேலைய தேசிகரும் கோட்டூர் உமாபதி சிவாச்சாரியரும் இயற்றிய ஒரு வீரசைவ புராணம்; a *vira-šaivapurāna*, by *vēlaiya dēšikar* and *umāpati šivāšāriyar* of *kōttur* composed in 1719 A.D.

வீரசின்னம் vira-šinnam, பெ.(n.) வீரர் விருதுகளில் ஒன்றான ஊதுகொம்பு; a kind of bugle forming part of the paraphernalia of a hero. *"வீரசின்னந் தான்முழங்க" (கூளப்ப. 48).*

[வீரம் + சின்னம்]



வீரசுவர்க்கம் *vīra-šuvarkkam,* பெ.(n.) இறந்த வீரரடையுந் வானுலகப் பதவி; warrior's heaven; heavenly abode attained by warriors after their brae death in a combat.

[வீரம் + **Skt.** *swarkka > த. சுவர்க்கம்]*

வீரசூடிகை *vīra-šūḍigai,* பெ.(n.) வீரர் நெற்றியிலணியும் அணி வகை; an ornament for the forehead, worn by warriors. *"வீர சூடிகை நெற்றியி னயலிட்டு விசித்தார்" (கம்பரா. பஞ்சசேனா. 18).*

[வீரம் + சூடிகை]

வீரசூரம் *vīra-šūram,* பெ.(n.) போராண்மை (வின்.); heroic valour.

[வீரம் + சூரம்]

வீரசூரன் *vīra-šuran,* பெ.(n.) 1. அதிவீரன்; valiant hero. 2. வீரதீரன் பார்க்க; see *vīra-tīran.*

[வீரம் + சூரன்]

வீரசூலி *vīra-šuli,* பெ.(n.) ஒரு சிற்றூர்ப் பெண் தெய்வம் (இ.வ.); a village goddess.

[வீரம் + சூலி]

வீரசெயநீர் *vīra-šeyanīr,* பெ.(n.) இதளியம் சேர்த்து வடிக்கப்படும் மருந்து நீர்; pungent liquid extracted from per-chloride of mercury. (சா.அக.)

வீரசெல்வி *vīrašelvi,* பெ.(n.) சத்தி சாரணை என்னும் மூலிகை; a prostate plant.

வீரசேனன் *vīra-šēnan,* பெ.(n.) நள அரசனின் தந்தை (நைடத. நளன்றூது. 14); the father of *Naḷan.*

வீரசேஷை *vīrašēsai,* பெ.(n.) வரிவகை(S.I.I.vii.290); a kind of tax.

[வீரம் + **Skt.** *sēshā > த. சேஷை]*

வீரசைவம் *vīra-šaivam,* பெ.(n.) சிவனியக் (சைவம்) கொள்கையுள் இலங்கம் (இலிங்கம்) அணியச் செய்து கொள்ளும் கோட்பாடு (சமயம்); the lingayat sect *šaivaism.*

வீரசைவம் என்பது தோன்றியங்களில் (ஆகமம்) கூறியுள்ள சைவ நெறியாகும். இருபத்தெட்டு தோன்றிய நூல்களின் இறுதிப் பகுதிகள் வீரசைவக் கொள்கைகளையும் சடங்குகளையும் கூறுவதால் வீரசைவம் என்பது தோன்றியங்களின் ஒரு வகையாகும். இது சைவ சமயத்தினின்று பிறந்ததாயிருப்பினும், தனி இயல்புடைய ஒரு சமயக் கொள்கையே. இலிங்க உருவத்தில் சிவனைப் பரதெய்வமாக வழிபடுவது சைவத்துக்கும் வீரசைவத்துக்கும் பொதுவான கொள்கையாகும். ஆயினும் சைவமும் வீரசைவமும் வழிபடக் கையாளும் முறைகள் வேறுபடுவன. சைவர்கள் இலிங்கத்தைக் கோயிலில் வைத்து வழிபடுவர். வீரசைவர்கள் அதனைக் கைத்தலத்தில் வைத்து வழிபடுவர். தத்துவங்கள் முப்பத்தாறு என்று கூறுவதும் இரண்டுக்கும் பொதுவானது. ஆனால் சைவமதம் அவற்றை உலகத் தோற்ற முறையில் விளக்குகிறது. வீரசைவ மதம் உளவியல் முறையிலேயே விளக்குகிறது.

[வீரம் + சைவம்]

வீரசோழர் *vīra-šōḻar,* பெ.(n.) சோழ அரசர்களின் பட்டப் பெயர்களுள் ஒன்று; a title for *chōla* Kings.

இப்பெயர் பெற்றவர்கள் இரு சோழ அரசரும் ஓர் இளவரசரும் ஆவர்.

1. முதற் பராந்தக சோழர் (ஆ.கா.907 - 953) ராஞ்டிரகூட அரசன் மூன்றாம் கிருஷ்ணனை முதலில் நடந்த போரில் வென்றதால் வீரசோழர் என்ற பட்டம் பெற்றார்.

2. கங்கை கொண்ட சோழர் என்ற முதலாம் இராசேந்திரரின் (ஆ.கா.1014-1044) மகனான வீரராசேந்திரருக்கு (ஆ.கா.1063-70) இப்பெயர் வழங்கியது. பொன்பற்றி எனும் நகரின் சிற்றரசரான புத்தமித்திரர் என்பவர் இவ்வரசர் விருப்பத்திற்கேற்ப ஐந்திலக்கணங்களும் அடங்கிய நூல் ஒன்றெழுதி, அதற்குச் செய்வித்தோர் பெயரால் வீரசோழியம் எனப் பெயரிட்டுள்ளார். நூலாசிரியர் அரசரைப் பலவாறு பாராட்டியுள்ளார்.

3. முதற் குலோதுங்க சோழரின் (ஆ.கா.1070-1122) ஆண் மக்கள் எழுவருள் இரண்டாமவரின் பெயர். இவர் இருமுறை (1078-84, 1089-93) வேங்கியில் அரசப் படிநிகராளியாக இருந்து அதை ஆண்டு வந்தார். அக்காலத்தில் இவர் ஒரு பாண்டியனோடு வடபுலத்தில் பொருது வென்றார். இவர் தம் தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே இறந்து பட்டதால் இவருக்கு இளவலான விக்கிரம சோழர் தம் தந்தைக்குப் பின் பட்டம் எய்தினார்.

வீரசைவன் *vīra-šaivaṉ,* பெ.(n.) வீரச்சிவனிய மதத்தான்; a follower of the sect of *vīra-šaivam.*

[வீரம் + சைவன்]

வீரசொர்க்கம் *vīra-šorkkam,* பெ.(n.) வீரசுவர்க்கம் (இலக்.அக.) பார்க்க; see *vīra-šuvarkkam.*

[வீரம் + சொர்க்கம்]

வீரசோ *vīrašō,* பெ.(n.) வாணாசுரன் நகர்; a city of the Asura *bāṇa.* "*வீரசோ வென்னும் அரணத்தை*" *(பு.வெ.6, 7, உரை).*

[வீரம் + சோ]

வீரசோழன் *vīra-šōḻaṉ,* பெ.(n.) 1. பதினொன்றாம் நூற்றாண்டில் ஆண்டவனும் வீரசோழியத்தை இயற்றுவித்தவனுமான சோழவரசன்; a *Cōḻa* king, 11th C, Patron of the author of *vīrašōḻiyam.* "*வீரசோழன் றிருப்பெயராற் பூமேலுரைப்பன்*" *(வீரசோ. பாயி. 3).* 2. தஞ்சை மாவட்டத்தில் இவனால் வெட்டப்பட்ட ஓர் ஆற்றின் பெயர்; a river name which was orginated by *Choḻa* king *vīra-šoḻaṉ.*

வீரசோழியம் *vīrašōḻiyam,* பெ.(n.) வீரசோழன் பெயரால் புத்தமித்திரர் இயற்றிய தமிழிலக்கண நூல்; a grammatical treatise, by Puttamittirar, named after *vīra-šōḻaṉ.*

[வீரசோழன் → வீரசோழியம்]

வடமொழி இலக்கணத்தைத் தமிழில் முதன்முதலாகக் கூறிய இலக்கண நூல்; இது எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி முதலியவற்றைச் சுருக்கிக் கூறுவது. இந்நூலாசிரியர் பொன்பற்றியூர் என்னும் ஊரினர். (அபி-சிந்.).

வீரட்டம் *vīraṭṭam,* பெ.(n.) வீரட்டானம் (தேவா. 1222, 2) பார்க்க; see *vīraṭṭāṉam.*

வீரட்டாணம் *vīraṭṭāṇam,* பெ.(n.) வீரட்டானம் (வின்.) பார்க்க; see *vīraṭṭāṉam.*

வீரட்டானம் *vīraṭṭāṉam,* பெ.(n.) 1. சிவபெருமானது வீரம் விளங்கிய இடம் (தேவா. 1222, 2); sacred place where *šiva's*

heroism was manifested. 2. கூத்து வகை (வின்.); a kind of dance.

[வீரம் + தானம் → வீரட்டானம்]

எட்டு வீரட்டத் தலங்கள் :

1. கண்டியூர், 2. கடலூர், 3. திருவதிகை, 4. வழுவூர், 5. பறியலூர், 6. கோவலூர், 7. திருக் குறுக்கை, 8. விற்குடி.

வீரடங்கல் *vīradaṅgal,* பெ.(n.) மருந்தின் வேகமடங்கல்; decrease of the virulence of medicine.

[வீறு → வீரு → வீரடங்கல்]

வீரணம் *vīraṇam,* பெ.(n.) இலாமிச்சை வேர்; khus khus.

வீரணமூலகம் *vīraṇamūlagam,* பெ.(n.) விலாமிச்சவேர்; a fragrant root of grass.

வீரணன் *vīraṇaṉ,* பெ.(n.) வீரமுள்ளவன்; brave hero. *"அருமுறவினோ டொளிதிகழ் வீரண ருறைவது"* (தேவா. 579, 9).

[வீரம் → வீரணன்]

வீரணி[1] *vīraṇi,* பெ.(n.) இலாமிச்சை (வின்.); cuscus grass.

வீரணி[2] *vīraṇi,* பெ.(n.) மிளகு (மலை.); pepper.

வீரணுக்கன் *vīraṇukkaṉ,* பெ.(n.) 1. ஓர் இனம்; a caste. 2. வீரணுக்க இனத்தினன் (நன். 275, மயிலை); man of the caste of *vīraṇukkaṉ.*

வீரணுக்கிச்சி *vīraṇukkicci,* பெ.(n.) வீரணுக்க இனப் பெண் (நன்.276, மயிலை); a woman of the caste of *vīraṇukkaṉ*

[வீரணுக்கன் → வீரணுக்கிச்சி]

அணுக்கன் (ஆ.பா.) - அணுக்கி, அணுக்கிச்சி (பெ.பா.)

வீரத்தட்டி *vīra-t-taṭṭi,* பெ.(n.) மான்றோற் பட்டை (யாழ். அக.); badge of deerskin.

[வீரம்[1] + தட்டி[1]]

வீரத்துக்கதீதம் *vīra-t-tukkatīdam,* பெ.(n.) அண்டச் சுண்ணம்; white calcined powder of cranium bones or egg shell.

[வீரத்திற்கு + ***Skt.*** *atīta > த. அதீதம்]*

வீரத்துவம் *vīrattuvam,* பெ.(n.) வீரம்[1],1 (வின்.) பார்க்க; see *vīram* bravery, heroism.

[வீரம் + தத்துவம்]

வீரத்தைப்பெந்தம்பண்ணி *vīratta-p-pendam-paṇṇi,* பெ.(n.) நீர்க்கடம்பு; a kind of herb which is used in medicine.

[வீரத்தை + பெந்தம்பண்ணி]

வீரதச்சுவன் *vīrataccuvaṉ,* பெ.(n.) காமன் (சது.); *kāma.*

வீரதத்துவம்[1] *vīra-tattuvam,* பெ.(n.) கொடிவேலி; a shrub.

வீரதத்துவம்[2] *vīra-tattuvam,* பெ.(n.) வீரத்துவம் (வின்.) பார்க்க; see *vīrattuvam.*

[வீரம் + தத்துவம்]

வீரதண்டை *vīra-taṇḍai,* பெ.(n.) வீரக்கழல் (யாழ்.அக.) பார்க்க; see *vīra-k-kaḻal.*

[வீரம் + தண்டை]

வீரதரம் *viratalam,* பெ.(n.) விலாமிச்சவேர்; coleus osmirrhizon.

வீரதரன் *virataran,* பெ.(n.) வீரருள் மிக்கான்; great hero or warrior. *"கவன நெடும்பரி வீரதரன் காவிரி நாடுடையான்" (கலிங். 515).*

Skt. *Dharan* > த. தரன்.

[வீரம் + தரன்]

வீரதரு *virataru,* பெ.(n.) 1. வீரசாகி (நாமதீப. 291) பார்க்க; see *vira-śāgi.* 2. நீர்மருது (மலை.); arjuna. 3. விடத்தேரை (மலை.); ashy babool.

வீரதாரு *viratāru,* பெ.(n.) விடத்தலை பார்க்க; see *viḍattalai.*



வீரதீரன் *vira-tiran,* பெ.(n.) 1. துணிவு மிக்க வீரன்; valiant hero. 2. ஒன்பது வீரர்களுள் ஒருவர் (கந்தபு. துணைவர். 33); a hero in skanda's army, one of *nava-virar,* q.v.

[வீரம் + தீரன்]

வீரதுரந்தரன் *vira-turandaran,* பெ.(n.) 1. ஆண்மையுள்ள வீரன்; hero, worthy of the name. 2. மாமல்லன்; leader of a band of warriors, champion.

[வீரம் + **Skt.** *durandrā > த. துரந்தரன்]*

வீரதை *viradai,* பெ.(n.) வீரம்[1], 1 பார்க்க; see *viram,* heroism. *"வேதனைக் கிடமாதல் வீரதையன்று பேதைமையாம்" (கம்பரா. கார்கா. 69)*

[வீரம் → வீரதை]

வீரந்தரம் *virandaram,* பெ.(n.) 1. மயில்; peacock. 2. மார்புக்கவசம்; armour for the chest.

வீரநீர் *vira-nir,* பெ.(n.) அமுரி; urine.

வீரப்பட்டயம் *vira-p-paṭṭayam,* பெ.(n.) வீரப்பட்டிகை (யாழ்.அக.) பார்க்க; see *vira-p-paṭṭigai.*

[வீரம் + பட்டயம்]

வீரப்பல் *vira-p-pal,* பெ.(n.) பூதம் முதலியவற்றின் கோரப்பல் (இ.வ.); long, curved tooth, as of malignant deities.

[வீரம் + பல்]

வீரப்பாடு *vira-p-pāḍu,* பெ.(n.) 1. பேராண்மை; heroism, manliness. *"வீரப்பாட்டுக்குத் தலையான சக்ரவர்த்தி திருமகன்" (ஈடு. 6, 1, 10).* 2. வெற்றி (வின்.); victory.

[வீரம் + பாடு]

வீரப்பிரதாபம் *vira-p-piratābam,* பெ.(n.) வீரப்பாடு பார்க்க; see *vira-p-pāḍu.*

[வீரம் + **Skt.** *pradhaba > த. பிரதாபம்]*

வீரப்பேர் *vira-p-pēr,* பெ.(n.) வீரம் பற்றிப் புனையும் பெயர்; title conferred upon a person in recognition of his heroism. *"சீலப்பேர் வீரப்பேர் என்று அநேகமா யிருக்குமே" (ஈடு. 2, 5, 6).*

[வீரம் + பேர்]

வீரப்போர் *vīra-p-pōr,* பெ.(n.) வீரர்களின் நெறி தவறாத போர்; fight or combat in strict conformity with the code of honour

[வீரம் + போர்]

வீரபஞ்சரன்காசு *vīra-pañjaraṉ-kāšu,* பெ.(n.) காசு வகை (M.E.R. 14 of 1924-C); a coin.

[வீரம் + பஞ்சரன் + காசு]

வீரபட்டம் *vīra-paṭṭam,* பெ.(n.) 1. வீரபட்டிகை பார்க்க; see *vīra-paṭṭigai. "வீரபட்டத் தொடு திலகமின்னவே" (கம்பரா. கடிம. 54).* 2. தெய்வத் திருமேனிகட்கு அணியும் நெற்றியணிவகை; a jewel on the forehead of deities.

[வீரம் + பட்டம்]

வீரபட்டிகை *vīra-paṭṭigai,* பெ.(n.) வீரர் வெற்றிக்குறியாக நெற்றியில் அணியும் பொற்றகடு; frontlet of gold worn on the forhead of a warrior, as a sign of victory. *"நுதலணி யோடையிற் பிறழும் வீரபட்டிகை" (கம்பரா. கரன்வ. 159).*

[வீரம் + பட்டிகை]

வீரபத்திரக்கலிக்கம் *vīrapattira-k-kalikkam,* பெ.(n.) திரிகடுகு, இந்துப்பு, தூய்மை செய்த நேர்வாளம், கடுக்காய், இலவங்கம் சமனெடை கொண்டு வெந்தயச் செடி சமூலச் சாற்றாலரைத்துச் செய்யும் மாத்திரை. அதையிழைத்துக் கண்ணிலிட சன்னி காய்ச்சல், முக்குற்றம் போம்; an eye salve prepared as said above and applied to the eye during delirium. (சா.அக.).

[வீரபத்திரம் + கலிக்கம்]

வீரபத்திரதேவன் *vīrapattira-dēvaṉ,* பெ.(n.) வீரபத்திரன் (சீவக. 2285, உரை) பார்க்க; see *vīrapattiraṉ.*

[வீரபத்திரன் + தேவன்]

வீரபத்திரம்[1] *vīra-pattiram,* பெ.(n.) குதிரை வேள்விக்குரிய குதிரை (இலக்.அக); horse fit for the horse-sacrifice.

[வீரம் + பத்திரம்]

வீரபத்திரன்[2] *vīra-pattiraṉ,* பெ.(n.) சிவபெருமானது நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவரும் தக்கன் வேள்வியை யழித்தவருமான கடவுள்; the god who emanated from *śiva's* frontal eye and destroyed *Dakkaṉ's* sacrifice. *"முத்துவீரபத்திரனெனுந் திறலுடை முதல்வன்" (கந்தபு. வீரபத். 14).*

[வீரம் + பத்திரன்]

வீரபத்ராஞ்சனம் *vīrapatrāñjaṉam,* பெ.(n.) சன்னிபாதக் காய்ச்சலுக்காக கண்ணிற்கு இடும் கலிக்கம், இது ஆயுர்வேத மருந்து; an ayurvedic collyrium for delirious fevers.

[வீரம் + பத்ரம் + அஞ்சனம். அஞ்சனம், பத்ரம் = Skt.]

வீரபத்தினி *vīra-pattiṉi,* பெ.(n.) 1. வீரனுடைய மனைவி; wife of a hero. 2. மறக் கற்புடையாள்; wife celebrated for her *maṟa-k-kaṟpu* or militant chastity, woman of herioc continence. *"ஆரஞ ருற்ற வீரபத்தினி" (சிலப். பதி. 42).*

[வீரம் + பத்தினி]

வீரபற்பக்களிம்பு *viraparpa-k-kalimbu,* பெ.(n.) ஒரு வகை மருந்துக் களிம்பு; ointment containing ammoniated of mercury.

[வீரம் + களிம்பு]

வீரபற்பம் *vira-parpam,* பெ.(n.) இதளியத்தை நீறாக்கிச் செய்யப்படும் ஒருவகை மருந்து; white calcined powder of perchloride of mercury used as medicine, ammoniated mercury.

[வீரம் + பற்பம்]

வீரபாண்டியன் *vira-pāndiyan,* பெ.(n.) 1. பாண்டியவரசருள் ஒருவன்; a *pāndya* king. 2. முகத்தலளவைக் கருவி வகை (Insc.); a dry measure of capacity.

[வீரம் + பாண்டியன்]

வீரபாண்டியன்காசு *vira-pāndiyan-kāšu,* பெ.(n.) வீரபாண்டியன் காலத்து வழங்கிய ஒரு நாணயம் (புதுக்.கல்.); a coin issued by *vira-pāndiyan.*

[வீரம் + பாண்டியன் + காசு[3]]

வீரபாணம் *vira-pānam,* பெ.(n.) வீரபானம் (இலக்.அக.) பார்க்க; see *vira-pānam.*

[வீரம் + பாணம்]

வீரபானம் *vira-pānam,* பெ.(n.) வீரர்கள் மாந்தும் மது; invigorating drink of warriors. *"வீரபானமிருக்கும் குழாய்" (சீவக. 1874, உரை).*

[வீரம் + பானம்]

வீரபாவனை *vira-pāvanai,* பெ.(n.) தென்னங் குரும்பையைக் குடைந்து, வீரத்தை வைத்து இதற்கு 6 பங்கிடை விறட்டி, கீழ் பாதி மேல் பாதியாகப் புடமிட்டு எடுக்கக் கால் கட்டு ஆகும். இப்படியே 10 புடமிட்டு எடுப்பதே வீரபாவனை; இதனால் வீரம் சுத்தியாகிக் கால் கட்டாகும். இப்படியே 40–50 தடவை செய்தால் முழுக்கட்டாகும்; another method of consolidating the per-chloride of mercury is given above. (சா.அக.).

வீரபுரந்தரன் *vira-purandaran,* பெ.(n.) முருகனின் ஒன்பது வீரருள் ஒருவர் (நாமதீப. 35); a hero in skanda's army, one of *nava-virar,* q.v.

*[வீரம் + **Skt.** purandrā > த. புரந்தரன்]*

வீரபுருஷன் *vira-purusan,* பெ.(n.) வீரமுள்ளவன்; warrior, hero. *"வீரபுருஷர் குடர்களின் உதிரத்தை" (தக்கயாகப். 100, உரை).*

*[வீரம் + **Skt.** purushā > த. புருஷன்]*

வீரபைரவி *vira-bairavi,* பெ.(n.) கொற்றவை கோலம் பூண்ட பெண்துறவி; female ascetic wearing the garb of a bhairavi. *"நாக சாகினிகள் வீரபைரவிகள்" (தக்கயாகப். 593).*

[வீரம் + பைரவி]

வீரபோகசாதி *vira-bōgašādi,* பெ.(n.) பயிரபதி இனமாகிய ஆண் இனம் 4–ல் ஒன்று; one of the four divisions of men.

[வீரம் + போகம் + சாது]

Skt. *Bhōga* > த. போகம்.

Skt. *jādhi* > த. சாதி

வீரபோகம் *vīra-bōgam,* பெ.(n.) பழைய வரிவகை (I.M.P.S.A. 86); an ancient tax.

[வீரம் + போகம்]

Skt. *Bhōga* > த. போகம்.

வீரம்[1] *vīram,* பெ.(n.) 1. பேராண்மை; heroism, bravery. *"கன்மே னிற்பர் தம்வீரந் தோன்ற" (சீவக. 2302).* 2. ஒன்பது வகை மெய்ப்பாடுகளுள் ஆண்மையை விளக்குஞ் சுவை (சிலப். 3, 13, உரை); the sentiment of heroism, one of *nava-rašam,* q.v. 3. வலிமை; strength, might. *"வீரநோய் வெகுளி" (சீவக. 2771).* 4. மேன்மை (யாழ். அக.); excellence, esteem. 5. வரிக்கூத்துவகை (சிலப். 3, 13, உரை); a kind of masquerade dance. 6. சிவத் தோன்றியம் இருபத்தெட்டனு ளொன்று (சைவச. 333, உரை); an ancient *šaiva* scripture in sanskrit, one of 28 *šivagamam* q.v. 7. வீராசனம் பார்க்க; see *virāšaṉam.* *"பதுமநகரில் வீரம்" (பிரபோத. 44, 68).* 8. மிளகு (யாழ்.அக.); pepper. 9. கஞ்சி (யாழ்.அக.); gruel. 10. அத்திவகை (யாழ்.அக.); a kind of fig. 11. முதுகு (நாமதீப. 585); back. 12. மலை; mountain. *"வீரந் துஞ்சுவ வெண்மதி" (இரகு. குசன. 71), 'வீரம் பேசுகிறவன் அழிவான்; வீரியம் பேசுகிறவன் விழுவான்', 'வீரன் கேண்மை கூர் அம்பாகும்' (பழ.).*

வீரம்[2] *vīram,* பெ.(n.) 1. சவ்வீரம், 2 (வின்.); corrosive sublimate. 2. மருந்துவகை; a kind of medicine.

வீரம்[3] *vīram,* பெ.(n.) இஞ்சி[2], 1 (யாழ்.அக.); ginger.

வீரம்[4] *vīram,* பெ.(n.) 1. விலாமிச்ச வேர்; khus khus. 2. கஞ்சி; rice gruel. 3. மலையில் இயற்கையாய் விளையும் பொருள்; a natural kind of medicine found in the mountains. 4. பரங்கி நஞ்சு; a mercurial compound. 5. தங்கம்; refined gold. 6. நஞ்சுக்கொடி; placental cord. 7. வேங்கை; Indian kino tree.

வீரம்பேசு-தல் *vīram-pēšu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. தன் வல்லமையைத் தானே புகழ்தல்; to boast of one's own prowess. 2. ஆண்மைத் திறங் கூறுதல் (வின்.); to hector, swagger.

[வீரம் + பேசு-தல்]

வீரமகரம் *vīra-magaram,* பெ.(n.) கோயிற்றிருமேனிகள் உலாவருங்காலத்தும் வேந்தர்கள் வீதியுலா வருங்காலத்தும் அவர்களுக்கு முன்னே மதிப்புரவாக எடுத்துச் செல்லும் விருது வகைகளுள் ஒன்று (யாழ்.அக.); a fish-shaped emblem being part of the paraphernalia carried before deities or kings.

[வீரம் + மகரம்]



வீரமகள் *vīra-magaḷ,* பெ.(n.) மலைமகள் (சீவக. 411, உரை); *Malai magaḷ,* parvadi.

[வீரம் + மகள்]

வீரமகேச்சுரன் vira-magēccuran, பெ.(n.) ஒன்பது வீரருள் ஒருவர் (வின்.); a hero in skanda's army, one of nava-virar, q.v.

[வீரம் + மகேச்சுரன்]

வீரமகேந்திரன் vira-magēndiran, பெ.(n.) ஒன்பது வீரருள் ஒருவர் (வின்.); a hero in skanda's army, one of nava-virar, q.v.

[வீரம் + மகேந்திரன்]

வீரமங்கை vira-mangai, பெ.(n.) மலைமகள் பார்க்க; see *Malai-magal.*

மறுவ. மலைமடந்தை.

[வீரம் + மங்கை]

வீரமடங்கல் vira-madangal, பெ.(n.) வீரடங்கல்; abatement of virulence.

[வீரம் + அடங்கல்]

வீரமணி[1] vira-mani, பெ.(n.) திருமூலர் வகார வுபதேசத்திற் சொல்லியுள்ள ஓர் முறை. வீரத்தைக் கட்டி மணியாகச் செய்து, இதை இழைத்து நாக்கில் தடவச் செத்தவனும் எழுந்து பேசுவான்; per-chloride of mercury is made into a ball by a process mentioned in Tirumoolar vagara upadesham 200. it is said that even a dead will come back to life if it is applied to the tongue.

[வீரம் + மணி]

வீரமணி[2] vira-mani, பெ.(n.) 1. விராடக் குரு என்னும் குரு மருந்தினால் வீரத்தைக் கட்டிச் செய்த மணி; perchloride of mercury ball prepared by using magic of விராடக்குரு. 2. வீரமணி கெவுனம் பாய்வதற்கும் வாயிலிட்டு வாயு வேகமாய் நடப்பதற்கும் பிறர் தன்னைக் கண்ட போது நடுங்கும்படி செய்விக்கும் வீரத்தைக் கட்டிச் செய்த ஒரு வித மணி (இதை பசுவின் மேல் வைக்கப் பால் கொடாது); this ball is useful to make one travel in the air, to walk fast, and to make others tremble.

[வீரம் + மணி]

வீரமத்தாளி viramattāli, பெ.(n.) யானை நெருஞ்சில்; a stout - stemmed herb with spiny fruits and slimy leaves.

மறுவ. பெருநெருஞ்சில்.



வீரமந்திரம் vira-mandiram, பெ.(n.) வேண்டும் போது நிற்கவும் பறந்து செல்லவும் குதிரையின் காதில் ஓதும் மறைமொழி; mantra uttered in a horse's ears, so as to enable it to fly or stop as the rider pleases. *"வெம்பரிமான்செவி வீரமந்திரம் ..... நீ மொழிகென" (சீவக. 791).*

[வீரம் + மந்திரம்]

வீரமயேச்சுரர் vira-mayēccurar, பெ.(n.) வீரசைவ முனிவர்; vira-śaiva ascetic. *"பெரிய மடந்தனில் வாழ் வீரமயேச்சுரர் வாழியே" (தக்கயாகப். பக். 255).*

[வீரம் + மயேச்சுரர்]

வீரமயேசுரன் *vīramayēšuraṉ,* பெ.(n.) வீரமகேச்சுரன் (நாமதீப. 35) பார்க்க; see *vīra-magēccuraṉ.*

[வீரம் + மயேசுரன்]

வீரமயேந்திரன் *vīra-mayēndiraṉ,* பெ.(n.) வீரமகேந்திரன் (நாமதீப. 35) பார்க்க; see *vīra-magēndiraṉ.*

[வீரம் + மயேந்திரன்]

வீரமாகாளன் *vīra-mā-kāḷaṉ,* பெ.(n.) ஐயனார் சேனைத்தலைவரான சிற்றூர்த் தெய்வம்; a village deity, the head of *Aiyaṉār's* hosts. *"வெய்யரிற் பெரிதும் வெய்யோன் வீரமாகாளனென்போன்" (கந்தபு. மகாகாளர். 3).*

[வீரம் + மா + காளன்]

வீரமாகாளி *vīra-mā-kāḷi,* பெ.(n.) காளிதேவி; *kāḷi,* as the ferocious goddess.

[வீரம் + மா + காளி]



வீரமாகேசம் *vīra-mākēšam,* பெ.(n.) வரிக்கூத்துவகை (சிலப். 3, 13. உரை, பக். 88); a kind of masquerade dance.

[வீரம் + மாகேசம்]

வீரமாபுரந்தரன் *vīra-mā-purandaraṉ,* பெ.(n.) வீரபுரந்தரன் (கந்தபு. துணைவர். 29) பார்க்க; see *vīra-purandaraṉ.*

[வீரம் + மா + புரந்தரன்]

வீரமாதிப்பூண்டு *vīra-mādi-p-pūṇḍu,* பெ.(n.) நச்சு மூலிகை; a poisonous shrub.

[வீரமாதி + பூண்டு]

வீரமாமகேந்திரன் *vīra-mā-magēndiraṉ,* பெ.(n.) வீரமகேந்திரன் (கந்தபு. துணைவர். 27) பார்க்க; see *vīra-magēndiraṉ.*

[வீரம் + மா + மகேந்திரன்]

வீரமாமுனிவர் *vīra-mā-muṉivar,* பெ.(n.) கி.பி.1680 முதல் 1747 வரை வாழ்ந்த கிறித்தவ ஆசிரியர். சதுரகராதி, தேம்பாவணி, தொன்னூல் விளக்கம் முதலிய நூல்கள் இயற்றியவரும் இத்தாலிய நாட்டவருமான அப்பர்; Father Beschi, an Italian jesuit, 1680-1747, author of *cadur-agarādi, Tēmbāvaṇi, Toṉṉūl-viḷakkam,*etc works.

தமிழ் நாட்டிற்கு வந்தபொழுது, தம் பெயரைத் தைரியநாத சுவாமி எனச் சிறப்பாக அமைத்துக் கொண்டார். அவருடைய இயேசு நாதர் பணியின் ஆர்வமும் தமிழ்ப் புலமையும் கண்ட அக்கால மதுரைச் சங்கத்தார், தைரிய நாத சுவாமியை வீரமாமுனிவர் எனத் தமிழால் அழைத்தனர். சந்தா சாகிப் எனும் அவர் நண்பர் அவரது துறவின் மாண்பை உணர்ந்து 'இஸ்மதி சந்நியாசி' என அவர்க்குப் பட்டம் அளித்தார்.

வீரமாமுனிவர் தமிழ் நாட்டிற்கு வந்த காலத்தில், முதல் ஐந்து ஆறு ஆண்டுகள், காமநாயக்கன்பட்டி, கயத்தாறு, மதுரை, தஞ்சாவூர்,

அரியலூர் முதலான இடங்களில் தொண்டாற்றினார். தமிழ் நாட்டின் தட்பவெப்ப நிலைகளால் அவர் நலிவுற்றாரேனும், தளர்வுற்றார் அல்லர்; சமய நூலைத் தமிழனுக்குத் தமிழனாய் இருந்து கற்பிக்க வேண்டும் என்னும் மதுரை மிஷன் தீர்மானத்தை மனத்திற் கொண்டு, தமிழ்மொழியை நன்றாகப் பேசவும் எழுதவும் கற்று, இலக்கிய இலக்கண நூல்களை ஐயந்திரிபற ஆராய்ந்து, தாமும் அந்நூல்கள் இயற்றும் ஆற்றல் பெற்றனர். அவர் தொடர்புடைய இரு கோயில்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்புடையதாகக் கூறப்படும் கோனான் குப்பத்தில் அவர் தமிழ் நாட்டுப் பெண்மணிபோல் தேவதாயார் திருவுருவம் அமைத்து, அவரைப் பெரியநாயகி அம்மையார் எனப்போற்றி, அவர் திருவருள் வேண்டித் தேம்பாவணி எனும் பெருங்காப்பியம் யாத்தார். 1717-இல் தஞ்சாவூர் அரசின் கத்தோலிக்கக் குடிகள் இன்புறுமாறு ஏலாக் குறிச்சியில் அமைந்திருந்த அடைக்கலமாதா கோயிலில் சிறப்பு விழா நடத்தித் திருக்காவலூர்க் கலம்பகம் பாடினார். அந்த ஆண்டு முதல் 1742 வரை ஏலாக் குறிச்சியே அவர் திருத்தொண்டிற்கு நடுநிலைக் களமாக விளங்கியது.

1742-இல் முதுமை காரணமாகத் தூத்துக் குடியில் வந்து ஒருவாறு ஒய்வுபெற்று, அவர் தம் அகராதியையும் இலக்கண நூல்களையும் எழுதி வந்தார். பின்பு சேர நாட்டின் அம்பலக் காட்டில் நிறுவப்பெற்ற குரு மடத்தில் தங்கியிருந்து, 1747 பிப்ரவரி 4 ஆம் நாள் இறைவன் திருவடி நிழல் எய்தினார். அவர் கல்லறை இருக்கும் இடம் இன்னதென ஐயந்திரிபற அறிதற்கு இதுகாறும் போதிய சான்றுகள் கிடைத்தில.

அவர் தமிழ்நாட்டில் வாழ்ந்த காலம் அரசியற் புரட்சிகள் நாட்டைத் துன்புறுத்திய காலம், மாராட்டியர், மொகலாயர், ஆந்திரர் ஆகியோர் தமிழ் நாட்டில் அரசுரிமை பாராட்டிய காலம், மதுரை மன்னர்க்கும் சேது பதியார்க்கும் பகை நிகழ்ந்த காலம், தமிழ் நாட்டின் பற்பல இடங்களில் கொடிய போர்கள் நடந்த காலம். கத்தோலிக்கக் குருக்களுக்குப் பலவகை இன்னல்கள் விளைந்த காலம். முனிவர் தாமும் ஒருகால் சிறையிடப் பெற்றுக் கொள்ளத் தீர்ப்புக்கு ஆளாகி, நண்பர் சிலர் உதவியால் விடுதலை பெற்றார். அவரது கல்விப் புலமையினால், அரசியல் தலைவர்கள் பலர் அவருக்கு நண்பர்களாகிக் கத்தோலிக்கர் உரிமைகளை உற்ற வேளையில் காப்பாற்றி வந்தனர். சந்தா சாகிப் அவரை நண்பராய்க் கொண்டதும் அல்லாமல், அவரைச் சிலகாலம் தமக்குத் திவானாகவும் நியமித்து வைத்திருந்தனர் என்று கூறுவர். அவருடைய உரைநடைநூல்கள் தரங்கம்பாடியிலுள்ள டேனியர் சபையின் கொள்கைக்கு மறுப்பாக எழுந்தவை.

தமிழ் நாட்டிற்கு வருவதற்கு முன்னமே, இத்தாலியம், கிரேக்கம், ஈபுறு, இலத்தீன், போர்ச்சுகேசியம் முதலாய மொழிகளையும், அவற்றின் இலக்கியங்களையும் அவர் கற்றுணர்ந்திருந்தனர். இங்கு வந்ததும் தமிழ் மொழியைப் பயின்றறிந்தார். வடமொழி, தெலுங்கு, உருது மொழிகளை நன்கு கற்றார். தமிழுக்குத் தாமே இலக்கணம் வகுக்கப் புகுந்த பொழுது, ஏ,ண, முதலாய எழுத்துக்களின் வடிவங்களில் சிற்சில மாற்றங்கள் அமைத்தனர் என்பர். மேலை நாட்டுக் கலைகளிலும் மொழிகளிலும் புலமை வாய்க்கப் பெற்றவராதலின் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் அவர் புதுமுறைகளைப் புகுத்தவல்ல பெருமையுடையார் ஆயினர். தம் முப்பதாம் ஆண்டிற்குப் பின்னர்ப் பிற மொழிகற்று, இத்துணைப் புலமை எய்தி, பல்வேறு துறைகளில் நூல்கள் இயற்றியுள்ள பெரியார் இவர் ஒருவரை அன்றி, இவர்க்கு இணையாக வேறு எவரேனும் உலக இலக்கியத்திலேயே இதுகாறும் யாம் காணப் பெற்றிலம். பிற்காலத்தில் தமிழில் இயற்றப்பெற்ற கிறித்தவ இலக்கியங்களுக்கு இவரே முனைவராகவும், வழிகாட்டியாகவும், தந்தையாகவும் விளங்குகின்றார். இவர் எழுதிய தமிழ் நூல்களிலும், பற்பல மொழிகளில் வரைந்துள்ள திருமுகங்களிலும், இவருடைய தமிழ்ப் பற்றும் தணியா வேட்கையும் ததும்பி நிற்கின்றன. இவர் எழுதியுள்ள நூல்கள் மிகப் பல. அவை அனைத்தும் நம் காலத்திற்கு வந்து எட்டில. பதிப்பிற்கு வாராத சில ஏடுகள் ஐரோப்பாவின் நூற்கூடங்களில் இருக்கின்றன எனக் கூறுகின்றனர். இதுகாறும் பதிப்பிக்கப் பெற்று வெளிவந்துள்ள இன்றியமையாத நூல்கள் பற்றி ஒரு சிறிது இங்கே

அறிவது நலம்.

செய்யுள் நூல்கள் :

தேம்பாவணி :

இந்நூல் இயேசு பெருமானின் காவல் தந்தையாகிய சூசையப்பரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றிய பெருங்காப்பியம். விவிலிய மறையிலிருந்து 150 வரலாற்றுப் பகுதிகளும், கத்தோலிக்கத் திருச்சபையின் கொள்கைகளும், அறிவுரைகளும், வழிபாட்டு முறைகளும், கதை வடிவாகவும், தத்துவ வடிவாகவும் இதில் இடம் பெற்றுள்ளன. தேம்பாவணி கிறித்தவர்க்குக் கலைக்களஞ்சியமாய் விளங்கி நிற்கின்றது. இது சீவக சிந்தாமணி நடையை ஒட்டிய பெருங் காப்பியம். முன்னோர் மொழிந்த பொருளை மட்டுமே அன்றி, அவர் மொழிகளையும் பொன்னேபோல் இவர் இந்நூலுள் போற்றி வைத்திருக்கின்றார். ஆதலின் திருவள்ளுவர், திருத்தக்கதேவர், சேக்கிழார், மாணிக்கவாசகர், கம்பர் முதலான புலவர் பெருமக்களின் சொல்லும் பொருளும் ஆங்காங்கே மிளிர்கின்றன. அவ்வாறே மேலை நாட்டுப் பெரும் புலவராகிய ஹோமர், வர்ஜில், தாந்தே, தாசோ போன்றவர் கருத்துக்களையும் அவர் தமது காப்பியத்தில் புகுத்தியுள்ளார். இக்காப்பியத்திற்கு அவர் தாமே ஓர் உரை எழுதினார் எனக் கூறுகின்றனர். அவ்வுரை நமக்குக் கிடைத்திலது.

திருக்காவலூர்க் கலம்பகம் :

கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள ஏலாக்குறிச்சி என்னுமூரில், அடைக்கல மாதா கோயில் நிறுவப் பெற்றிருந்தது. அவ்வூரையே திருக்கோவலூர் எனவும் அழைத்தனர். தஞ்சாவூர்ப் பகுதிகளில் மராட்டியரால் துன்புற்ற கிறித்தவர்களும் இங்குத் தம் ஞானக் கடன்களைத் தீர்க்குமாறு வந்து சென்றனர். அரியலூர் மழவராயர் அக்கோயிலுக்கு ஓர் இடத்தை நன்கொடையாக நல்கினர். முனிவர், அத்திருக் கோயிலில் எழுந்தருளியுள்ள அடைக்கல மாதாவை இனிய கலம்பகப் பனுவலால் பாடினார்.

கித்தேரி அம்மாள் அம்மானை :

போர்ச்சுகல் நாட்டில், மன்னர் மகளாராகப் பிறந்து, கன்னி நோன்பு பூண்ட நவகன்னியரில் ஒருவராய், கி.பி.130-ல் தம்மைப் பெற்ற தந்தையின் கட்டளையினாலேயே, திருமறைச் சான்றாராய்த் தலை இழந்து உயிர் துறந்த கித்தேரி அம்மையார் திருவுருவத்தைத் திருக்காவலூரில் நிறுவி, அவர் திருவரலாற்றையும், அவர் நிகழ்த்திய புதுமைகளையும் வெண்செந்துறையால், 1,100 திருக்கண்ணிகள் கொண்ட அம்மானைப் பனுவலாக அவர் பாடினார்.

உரைநடை நூல்கள் :

தமிழ் உரைநடைக்குத் தத்துவபோதகரே தந்தை என்பர். வீரமா முனிவரால் அது வளம்பெற்று உயர்ந்தது. வேதவிளக்கம் தரங்கம்பாடி டேனியர் சபையின் போதனைகளை மறுத்துக் கத்தோலிக்க சபையின் போதனைகளை நிலைநிறுத்துவது. பேதமறுத்தல் டேனியர் கொள்கைகளையும் ஒத்தேரினர் கொள்கைகளையும் ஒருங்கே மறுத்துரைப்பது, வேதியர் ஒழுக்கம் கத்தோலிக்க சபை உபதேசிகர் கடைப்பித் தொழுக வேண்டும் ஒழுக்க முறைகளையும், கடமைகளையும் விளக்கியுரைக்கும் பெருநூல். இதன் அருமை பெருமைகளை உணர்ந்து, இவருடைய எதிர்வாதிகள் தாமும், பிற்காலத்தில் இதனை அச்சிட்டுத் தமது சபை உபதேசிகர் வகுப்பிற்குப் பாடப் புத்தகமாக வைத்து இவற்றை ஞான்றும் வழங்கி வருகின்றனர். இது அவருடைய உரைநடை நூல்களில் சிறந்தது என அறிஞர் போப்பையர் புகழ்ந்துள்ளார். பரமார்த்த குரு கதை நகைச்சுவை நிறைந்து, பஞ்சதந்திரம் போன்று பல நீதிகளை விளக்கியுரைப்பது.

இலக்கண நூல்கள் :

கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் விளக்கம் ஆகியவையாம். தொன்னூல் விளக்கம் ஐந்திலக்கணங்களையும் நூற்பாக்களால் எடுத்துக் கூறுகின்றது. இது வீரசோழியம், இலக்கண விளக்கம் என்னும் நூல்கள் போன்றது எனச் சிலர் மொழிவர். உற்று நோக்கி ஆராய்வோர் அவற்றிலும் இது பலவகைச் சிறப்புடையது எனக் காண்பர்.

அகராதிகள் :

தமிழ் - லத்தீன் அகராதி, இதில் 9,000 கொடுந்தமிழ்ச் சொற்களுக்கும் சொற்றொடர் களுக்கும், லத்தீன் மொழியில் விரிவாகப் பொருள்

கூறப்பட்டிருக்கின்றது.

போர்ச்சுகேசியம் - தமிழ் - லத்தீன் அகராதி :

இந்நூலில் 4,400 போர்ச்சுகீசியச் சொற்களுக்குத் தமிழிலும் இலத்தீனிலும் விளக்கம் கூறப்பட்டிருக்கிறது.

சதுரகராதி :

இதுவே பிற்காலத் தமிழ் அகராதிகளுக் கெல்லாம் தந்தை, பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு பிரிவுகள் உடையது. பிங்கலம், திவாகரம், சூடாமணி முதலான பல்வகை நிகண்டுகளிலுமுள்ள சொற்களையெல்லாம் பொறுக்கியெடுத்து, அகர வரிசையாகத் தொகுத்து, மேலை நாடுகளில் வழங்கிய அகராதி முறையில் யாத்த அரிய நூல்.

மொழி பெயர்ப்பு நூல்கள் :

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இவர் லத்தீனில் மொழி பெயர்த்துள்ளார். பிற்காலத்தில் ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன் முதலான ஐரோப்பிய மொழிகளில் தோன்றிய திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல்களுக்கெல்லாம் இதுவே அடிப்படையாய் உதவியது. பரமார்த்த குரு கதை முதலான நூல்களை லத்தீன் முதலாய வேற்று மொழிகளில் பெயர்த்துள்ளனர்.

வீரமார்த்தாண்டன் *viramārttāṇḍaṉ*, பெ.(n.) 1. பெருமாவீரன்; illustrious hero. 2. ஒன்பது வீரர்களுள் ஒருவர்; a hero in skanda's army, one of nava-virar, q.v. *"மரகதத்திபால் வீரமார்த்தாண்டன் வந்தனனே" (கந்தபு. துணைவர். 31).*

[வீரம் + **Skt.** *marttānda > த. மார்த்தாண்டன்]*

வீரமாலை *vira-mālai*, பெ.(n.) 1. வெற்றி மாலை (யாழ்.அக.); garland of victory. 2. வீரனைப் புகழ்ந்து பாடும் பாடல் வகை (புதுக். கல். 966); a kind of poem or song in praise of a warrior.

[வீரம் + மாலை]

வீரமுட்டி *vira-muṭṭi*, பெ.(n.) வாள் முதலிய படைக்கருவிகளை அணிந்து செல்லும் நெறியில் மனவுறுதி மிக்க வீரசைவத் துறவி; fanatical vira-Saiva mendicant who goes about armed with sword and shield. *"உண்பான் தின்பான் சிவப்பிராமணன், கத்துக்கு நிற்பான் வீரமுட்டி" (பழ.).*

[வீரம் + முட்டி]

வீரமுடி *vira-muḍi*, பெ.(n.) வீரரணியுந் தலைக்கவிகை (கிரீடம்); warrior's crown.

[வீரம் + முடி]



வீரமுத்திரிகை *vira-muttirigai*, பெ.(n.) காலின் நடுவிரலணி (வின்.); a ring worn on the middle toe.

[வீரம் + முத்திரிகை]

வீரமுரசு *vira-murašu*, பெ.(n.) மும்முரசு களுள் வீரத்தின் அறிகுறியாக முழக்கும் முரசம்; drum of heroism, one of *mu-m-murašu*, q.v. *"மயிரான்மிக்க கண்ணினை யுடைய வீரமுரசொலிப்ப" (பு.வெ. 8,17, உரை).*

[வீரம் + முரசு]



வீரமுழவு *vira-mulavu,* பெ.(n.) முரசு, நிசாளம், துடுமை, திமிலை என நால்வகையான போர்ப்பறை; war drum of four kinds viz. *murašu, Nišāḷam, tuḍumai, timilai.* *"முன்சொன்ன வீரமுழவு நான்கும்" (சிலப். 3, 27, உரை, பக். 106).*

[வீரம் + முழவு]

வீரமெழுகு[1] *viramelugu,* பெ.(n.) ஈளை நோய்க்கு மருந்தாகிய விலாங்கு மீனின் தைலம் வாங்கி வீரத்திற்கு வீரம் கட்டிய மெழுகு; per-chloride is turned into wax like substance when treated with the fat of eel-snake like fish-it removes phlegm.

வீரமெழுகு[2] *viramelugu,* பெ.(n.) ஒரு பலம் வீரத்தை சீலையிலிட்டு முடிந்து பழங்கலையத்தில் நான்கு இளநீர் விட்டு அதில் தோலாந்திரமாகக் கட்டி இரண்டு நாழி எரித்து அடுப்புக்கு மேல் தொங்கவிட்டு உலர்த்தி எடுக்கவும், தேன், முலைப்பால், இஞ்சி ரசம் இவைகளில் கொடுக்கவும், சன்னி காய்ச்சல் குற்றம் போம். இச்சா பத்தியம், மாலை மிளகு கியாழம் கொள்ளவும்; a siddha preparation for cronical fever.

வீரமொழி *vira-moli,* பெ.(n.) துணிவுடன் உரத்து மொழிகை; defiant speech. *"கண்ணகி சொல்லிய வீரமொழி" (சிலப். 25, 82, அரும்.).*

[வீரம்[1] + மொழி[2]]

வீரயாகம் *vira-yāgam,* பெ.(n.) வீரபத்திரன் பொருட்டுச் செய்யும் வேள்விவகை (யாழ்.அக.); a sacrifice in honour of *virapattiran.*

*[வீரன் + **Skt.** yakya > த. யாகம்]*

வீரரசம் *vira-rašam,* பெ.(n.) வீரம்[1], 2 (சிலப். 3, 13, உரை) பார்க்க; see *viram[1].*

*[வீரம் + **Skt.** raša > த. ரசம்]*

வீரரதம் *vira-radam,* பெ.(n.) அம்பு (யாழ்.அக.); arrow.

*[வீரம் + **Skt.** rathā > த. ரதம்]*

வீரராக்கதன் *vira-rākkadan,* பெ.(n.) வீரராட்சதன் பார்க்க; see *vira-rāṭcadan.* (கந்தபு. துணைவர். 30).

*[வீர + **Skt.** rakshasha > த. ராக்கதன்]*

வீரராட்சதன் *vira-rāṭcadan,* பெ.(n.) ஒன்பதுவீரருள் ஒருவர் (வின்.); a hero in skanda's army one of *nava-virar,* q.v.

*[வீரம் + **Skt.** rakshasha > த. ராட்சதன்]*

வீரராயன்பணம் *vira-rāyan-paṇam,* பெ.(n.) பழைய காசு வகை (பணவிடு. 142); an ancient coin.

[வீரம் + அரையன்ராயன் + பணம்]

வீரலட்சுமி *vira-laṭcumi,* பெ.(n.) வீரலஷ்மி பார்க்க; see *vira-lasmi.*

*[வீரம் + **Skt.** lakshimi > த. லட்சுமி]*

வீரலஷ்மி *vira-lasmi*, பெ.(n.) 1. வீரத்திற் குரிய கடவுள்; the Goddess of bravery. 2. வீரமாகிய செல்வம்; bravery, heroism, as wealth. 3. வெற்றிக்குரிய கடவுள்; the Goddess of victory.

*[வீரம் + **Skt.** latcumi > த. லஷ்மி]*

வீரவசந்தம் *vira-vašandam*, பெ.(n.) பண்வகை (பரத. ராக. பக். 102); a specific melody type.

*[வீரம் + **Skt.** vasanta > த. வசந்தம்]*

வீரவஞ்சி *vira-vañji*, பெ.(n.) வஞ்சிக்கொடி; rattan creeper - calamus rotang.

[வீரம் + வஞ்சி]

வீரவண்டயம் *vira-vandayam*, பெ.(n.) வீரவெண்டையம், 1 (திவ். திருப்பா. 17. வ்யா.) பார்க்க; see *vira-vendaiyam.*

[வீரம் + வண்டயம்]

வீரவரை-த்தல் *vira-v-arai-*, 4 செ.குன்றாவி. (v.t.) திறங் கொண்ட மட்டும் வலுவாக மருந்தைக் கல்வத்திட்டரைத்தல்; to grind well with the best of ability and power.

[வீரம் + அரை-,]

வீரவளை *vira-valai*, பெ.(n.) வீரரணியும் கடகம்; warrior's armlet. *"வீரவளையை யுடைய தோளாகிய துடுப்பால்" (புறநா. 26. உரை).*

[வீரம் + வளை]

வீரவாகு *vira-vāgu*, பெ.(n.) 1. ஒன்பது வீரருள் ஒருவர்; a hero in skanda's army, one of *nava-virar.* q.v. *"செம்மணிப் பாவை தன் னிடத்தில் வீரவாகுவந் துதித்தனன்" (கந்தபு. துணைவர். 25).* 2. காசியில் அரிச்சந்திரனை விலைக்குப் பெற்ற பறையன்; the *paraiya* who purchased hariccandra, in Benares.

வீரவாதம் *vira-vādam*, பெ.(n.) வீரர் உரத்துக் கூறும் ஆண்மைப் பேச்சு; defiant speech of warriors.

*[வீரம் + **Skt.** vata > த. வாதம்]*

வீரவாரம்[1] *vira-v-āram*, பெ.(n.) வீரரணியும் வெட்சிமாலை (யாழ்.அக.); garland of *vetci* flowers, won by warriors.

[வீரம் + ஆரம்]

வீரவாரம்[2] *vira-v-āram*, பெ.(n.) பேராரவாரம்; tumultuous noise. *'அங்கு என்ன சிறப்பு? வீரவாரம் செய்கிறார்களே'.*

[வீரம் + ஆரவாரம்]

வீரவாளிச்சேலை *vira-vāli-c-cēlai*, பெ.(n.) வீரவாளிப்பட்டு (வின்.) பார்க்க; see *vira-vāli-p-pattu.*

வீரவாளிப்பட்டு *vira-vāli-p-pattu*, பெ.(n.) ஓவியப்பட்டுச்சீலை வகை (வின்.); a kind of silk saree printed with curious devices.

[வீரவாளி + பட்டு]

வீரவான் *vira-vān*, பெ.(n.) மாவீரன்; warrior, hero.

[வீரன் + அவன் → வீரனவன் → வீரவான்]

வீரவிரதம் *vira-viradam*, பெ.(n.) வீரன் பயிலுங் கொடிய நோன்பு; rigorous austerities, as practised by a warrior. *"வீரவிரதமவள் பிடித்து..... மெலிவுற்றார்" (செவ்வந்திப்பு..... சூரவாதி. 139).*

[வீரம் + விரதம்]

வீரவிருட்சம் *vīra-viruṭšam,* பெ.(n.) சேமரம்; marking nut tree.

[வீரம் + விருட்சம்]

வீரவிருக்ஷம் *vīra-viruksam,* பெ.(n.) வீரசாகி (வின்.) பார்க்க; see *vīra-šāgi.*

*[வீரம் + விருக்ஷம். விருஷம் = **Skt.**]*

வீரவுப்பு[1] *vīra-v-uppu,* பெ.(n.) பூரணாதியுப்பு; a kind of salt.

[வீரம் + உப்பு]

வீரவுப்பு[2] *vīra-v-uppu,* பெ.(n.) கல்லுப்பு (மூ.அ.); rock-salt.

[வீரம் + உப்பு]

வீரவெட்சிமாலை *vīra-veṭci-mālai,* பெ.(n.) தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களுள் வெட்சி மாலை சூடிப் பகைவர் நிரை கவர்ந்து வந்த வீரனது வெற்றித் திறத்தைத் பத்து உறுப்புக்களோடு புகழும் நூல் (சது.); a poem in praise of *tašāngam* of a hero who, crowned with a wreath of *veṭci* flowers, captures his enemy's cattle, one of 96 pirapandam, q.v.

[வீரம் + வெட்சி + மாலை]

வீரவெண்டையம் *vīra-venḍaiyam,* பெ.(n.) 1. வீரக்கழல் பார்க்க; see *vīra-k-kaḻal.* 2. திருவாரூர்த்தியாகராசரது பட்டாக்கத்தி; sword of the god TIYAGARAJA at *Tiru-v-ārūr.* *"வீரவெண்டையப் பிரதாபர் தியாகராசர்" (தனிப்பா. i, 280. 25).*

[வீரம் + வெண்டையம்]

வெண்டையம் = வீரர் காலணி.

வீரவெறி *vīra-veṟi,* பெ.(n.) வீரத்தாலான மதர்ப்பு (யாழ்.அக.); frenzy of heroism.

[வீரம் + நெறி]

வீரவைணவன் *vīra-vaiṇavaṉ,* பெ.(n.) மதப்பற்றுடைய மாலிய சமயத்தோன்; fanatical, uncompromising, vaisnaya having ardent faith in *Vaishnnavism.* *'நெறிப்பற்று மிக்க மாலியக் கோட்பாடுடையவன்'.*

[வீரம் + வைணவன்]

வீரன் *vīraṉ,* பெ.(n.) 1. ஆண்மையுள்ளவன்; hero, warrior. *"நன்னீர் சொரிந்தனன் வீரனேற்றான்" (சீவக. 489).* 2. வீரபத்திரன்; virabhadra. *"நெற்றி விழிக்கவந்து பணிந்துநின்றனன் வீரனே" (தக்கயாகப். 334).* 3. அருகன்; arhat. *"வீரன் றாணிழல் விளங்க நோற்றபின்" (சீவக. 409).* 4. படைத் தலைவன் (திவா.); commander. 5. வீடுமன் (யாழ்.அக.); *Bhīsma.* 6. மதுரைவீரன்; a village deity. 7. நெருப்பு (யாழ்.அக.); fire. 8. வேள்வித்தீ (யாழ்.அக.); sacrificial fire. 9. கூத்தாடி (யாழ்.அக.); dancer.

'வீரன் கேண்மை கூர் அம்பாகும்' (பழ.).

வீராகம் *vīrāgam,* பெ.(n.) வீரயாகம் (இலக்.அக.) பார்க்க; see *vīra-yāgam.*

*[வீரம் + **Skt.** yakya > த. யாகம்]*

வீராகரன் *vīrāgaraṉ,* பெ.(n.) மாவீரன்; great warrior. *"மின்னும் புகழ்க்கு நல்லோனே வீராகரனே" (திருவாலவா. 54,4).*

வீராசனம் *vīrāšaṉam,* பெ.(n.) 1. ஒக இருக்கை ஒன்பதனுள் இடது தொடையில் வலது தாளையும் வலது தொடையில் இடது தாளையும் வைத்து உட்காரும் இருக்கை

வேறுபாடு; hero-posture, a yōgic posture which consists in placing the right foot on the left thigh and the left foot on the right thigh, one of nine *āšanam*, q.v. 2. போர்க்களம் (யாழ்.அக.); battle-field.

*[வீரம் + **Skt.** āšanā > த. ஆசனம்]*

வீராசாரன் *virāšāran,* பெ.(n.) வீரசைவன் (அரு.நி. 8) பார்க்க; see *vira-šaivan.*

[வீர + ஆசாரன்]

வீராசிகா *virāšigā,* பெ.(n.) நாணற்புல், தருப்பைப்புல்; sacrificial grass.

வீராணத்தான் *virāṇattān,* பெ.(n.) வீராணப்பறை கொட்டும் ஐவர் (பஞ்சமர்) வகையினன்; a division of paraiyar who beat the *virāṇam* drum.

[வீராணம் → வீராணத்தான்]

வீராணம்[1] *virāṇam,* பெ.(n.) ஒருவகைப் பெரியபறை; a large, double drum. *"வீராணம் வெற்றிமுரசு" (திருப்பு. 264)*

தெ. வீராணமு; க. வீராண்ய.



வீராணம்[2] *virāṇam,* பெ.(n.) வீரநாராயண ஏரி என்பது வழக்கில் சுருங்கி 'வீராணம்' என வழங்கும் தென்னாற்காடு மாவட்ட ஏரி; the term *veeranārayaṇa ēri* conscised as (veeranam) a great lake in south Arcot Dt.

வீராணிக்கிழங்கு *virāṇi-k-kiḻaṅgu,* பெ.(n.) 1. பூடுவகை; viper's grass. 2. வீராணிக் கிழங்கின் வேர்; root of viper's grass.

[வீரணம் + கிழங்கு]

வீராணிவாழை *virāṇi-vāḻai,* பெ.(n.) ஒருவகை வாழை; a kind of plantain.

[வீராணி + வாழை]

வீராதனம் *virādaṉam,* பெ.(n.) வீராசனம் (தத்துவப். 107. உரை) பார்க்க; see *virāšaṉam.*

[வீரம் + ஆதனம்]

வீராதிவீரன் *virādi-viraṉ,* பெ.(n.) வீரர்களுட் சிறந்த வீரன்; hero among heroes.

[வீரன் + அதி + வீரன். அதி = மிகுதிப் பொருள் தரும் முன்னொட்டு]

வீராந்தகன் *virāndagaṉ,* பெ.(n.) ஒன்பது வீரருள் (கந்தபு. துணைவர். 32); a hero in skanda's army, one of *nava-virar,* q.v.

[வீர + அந்தகன்]

வீராப்பு *virāppu,* பெ.(n.) செருக்கு (யாழ்.அக.); pride, arrogance.

மறுவ. இறுமாப்பு.

[வீறாப்பு → வீராப்பு]

வீராபிடேகம் *virābiḍēgam,* பெ.(n.) பகைவென்ற அரசர்க்குச் செய்யும் திருமுழுக்காட்டு (சீவக. 2326. உரை); ceremony of anointing a victorious king.

வீராய்-தல் *viray-*, 10 செ.குன்றாவி.(v.t.) சிறிதுசிறிதாக ஒன்றுகூட்டுதல் (யாழ்.அக.); to scrape together; to gather together little by little.

[பீராய் → வீராய்-,]

வீராவளி *viravali,* பெ.(n.) வீரவெறி (யாழ்.அக.) பார்க்க; see *viraveri.*

[வீரம் + ஆவலிப்பு → வீராவளி ஆவலிப்பு = செருக்கு]

வீராவேசம் *virāvēšam,* பெ.(n.) வீரவெறி (யாழ்.அக.) பார்க்க; see *vira-veri.*

[வீரம் + **Skt.** *āvēsā > த. ஆவேசம்]*

வீராளிப்பட்டு *virali-p-pattu,* பெ.(n.) மாத விலக்குக்குரிய சேலை; menrustal cloth.

[வீராளி + பட்டு]

வீரி[1] *viri,* பெ.(n.) 1. வட்டத்திருப்பி; twiner-cissampelos pareira. 2. பங்கம் பாளை; a bitter prostate plant.

வீரி[2] *viri,* பெ.(n.) 1. வீரமுள்ளவள்; heroic woman. 2. காளி (சூடா.); *kāļi.* 3. கொற்றவை (துர்க்கை); *Durgā.* *"வேலார்கை வீரியைமுன் படைத்தார் போலும்" (தேவா. 597.6).* 4. சிற்றூர் பெண் தெய்வம்; a village goddess. 5. அரிவாண்முனைப்பூண்டு; sickle-leaf.

[வீரம் → வீரி]

வீரிட்டழு-தல் *virittalu-,* 1 செ.கு.வி.(v.i.) கூக்குரலெடுத்துக் குழந்தைத் திடுமென் றழுதல்; as in children - to cry deeply.

வீரிடம் *viridam,* பெ.(n.) நாவல்,1 (மலை.); jumoonplum.

தெ. நேரெடு.

வீரிடு-தல் *viridu-,* 20 செ.கு.வி.(v.i.) திடீரெனக் கத்துதல்; to cry out suddenly, to scream, make a sharp, shrill sound. *"வீரிட்டரக்கியர்..... அழ" (இராமநா. உயுத். 58).*

[வீறிடு → வீரிடு-,]

வீரிணிகா *viriņikā,* பெ.(n.) வில்வம்; a sacred tree - batel tree - Aegle marme losa.

வீரிப்பால் *viri-p-pal,* பெ.(n.) எருக்கம் பால்; milk drawn from calotropis gingantia.

வீரிப்பாவிகம் *viri-p-pāvigam,* பெ.(n.) எட்டிவிரை; seeds of nuxvomica.

வீரிப்பாளை *viri-p-pālai,* பெ.(n.) பங்கம் பாளை; a bitter ash coloured prostate plant.

வீரிமுத்து *viri-muttu,* பெ.(n.) கொட்டை முத்து; castor seed.

வீரியத்தரிசி *viriyattariśi,* பெ.(n.) வாளானரிசி; a kind of rice.

வீரியதேசு *viriya-tēšu,* பெ.(n.) வல்லாரை; a prostate plant.

வீரியன் *viriyan,* பெ.(n.) ஓர் பூண்டு; a plant.

வீரியன்னம் *viriyannam,* பெ.(n.) மருள்; a kind of medicinal herb.

மறுவ. மரநாக.



வீரியாடி *viriyāḍi,* பெ.(n.) நரிப்பயறு; a green pulse. (சாஅக.)

வீருஅண்டம் *viru-aṇḍam,* பெ.(n.) அண்ட நோய்; a disease of the scrotum. (சாஅக.)

வீருதம்[1] *virudam,* பெ.(n.) படர்ந்து காய்க்கும் கொடிகள்; spreading plant. (சாஅக.)

வீருதம்[2] *virudam,* பெ.(n.) மிடைதூறு (வின்.); bush, small shrub. (சாஅக.)

வீரெனல் *virenal,* பெ.(n.) திடீரெனக் கத்தும் ஒலிக்குறிப்பு; onom.expr. of a sharp, shrill cry. *'குழந்தை வீரென்று கத்திற்று'.*

வீரை[1] *virai,* பெ.(n.) 1. கடல் (பிங்.); sea. *"திரை வீரை" (திருவிசை. திருமாளி. 3,5).* 2. துன்பம் (பிங்.); affliction, trouble. 3. மரவகை; a kind of tree. *"புகைந்த வீரை யெரிந்தவே" (கலிங். 63).* 4. நெல்லி, 1 (இலக்.அக.) பார்க்க; see *nelli*. 5. முந்திரிகை[2], 1 (இலக்.அக.); common grape vine. 6. வட்டத்திருப்பி (தைலவ.); sickle-leaf. 7. மயிர் மாணிக்கம் (பிங்.); common snakewood buckthorn.

வீரை[2] *virai,* பெ.(n.) 1. மனைவி (யாழ்.அக.); wife. 2. தாய் (யாழ்.அக.); mother. 3. வாழை (சங்.அக.); plantain.

வீரையாசுகவிராயர் *virai-y-āšukavirāyar,* பெ.(n.) 16–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும் அரிச்சந்திரப் பழங்கதை (புராணம்) இயற்றிய வருமான புலவர்; *āšukavi-rāyar* of virai, author of *Ariccandira-palaṅ-kadai.*

[வீரை + ஆசுகவிராயர்]

வீரோத்துங்கன் *virōttuṅgaṉ,* பெ.(n.) வீரத்தாற் சிறந்தவன் (வின்.); person famed for his valour.

[வீர + உத்துங்கன்]

வீரோதம் *virōdam,* பெ.(n.) நல்ல மாதுளை; good pomegranate.

வீவு *vivu,* பெ.(n.) 1. அழிவு; ruin, destruction. *"வீவி லாற்றலொரா மீளி" (சீகாளத். பு. கண்ண. 50).* 2. இறப்பு (பிங்.); death. 3. கெடுகை; eradication, removal. *"வீவருங் கடுநோய்" (குறிஞ்சிப். 3).* 4. முடிவு; end. *"வீவில் சீரன்" (திவ். திருவாய். 4,5,3).* 5. குற்றம்; defect, flaw. *"போகலர் யாவும் வீவுக வியற்றல்" (ஞானா. 53, 18).* 6. இடையீடு; interruption, intervel. *"வீவின்றி நின்றவர்க் கின்பக் கதிசெய்யும்" (திவ். திருவாய். 7, 5, 11.).*

[வீ → வீவு]

வீழ்[1]–தல் *vīḻ-,* 4 செ.கு.வி.(v.i.) 1. விழு[1]–,1 பார்க்க; see *viḻu*[1]. *"விசும்பிற் றுளிவீழி னல்லால்" (குறள், 16).* 2. விழு[1]–,2,3,4,5,6 பார்க்க; see *viḻu*[1]-. 3. விழு[1]–, 7 பார்க்க; see *viḻu*[1]. *"பயன்மர மெல்லாங் கனியுதிர்ந்து வீழுந்தற்று" (நாலடி, 17).*

4. விழு¹-, 8 பார்க்க; *vīḻu¹*. *"கிடங்கோ டருமிளை காத்து வீழ்ந்த வேலோர்" (பு.வெ. 5, 4, கொளு.).* 5. விழு¹-, 9. பார்க்க; see *vīḻu¹*. *"வீழ்கதிரென" (மணிமே. 30, 103).* 6. விழு¹-, 10, 11 பார்க்க; see *vīḻu¹*. 7. விழு¹-, 12 பார்க்க; see *vīḻu¹*. *"ஒருநாளே வெள்ளநிதி வீழும்" (சீவக. 496).* 8. விழு¹-, 13,14,15,16,17,18. பார்க்க; see *vīḻu¹*. 9. நீங்குதல்; to be separated. *"திருவீழ் மார்பிற் றென்னவர் கோவே" (சிலப். 20, 23).* 10. விழு¹-, 19 பார்க்க; see *vīḻu¹*. *"அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்" (தொல். பொருள். 68). "தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர்" (குறள், 1191).* 11. விழு¹, 20, 21, 22, 23, 24, 25, 26 பார்க்க; see *vīḻu*. 12. விழு¹-, 27 பார்க்க; see *vīḻu¹*. *"வீழ்கயிற் றூசல்" (அகநா. 38).* 13. விழு¹-, 28, 29 பார்க்க; see *vīḻu¹*.

[விள் → வீள் → வீழ் → வீழ்-] (மு.தா. 69)

வீழ்²-த்தல் *vīḻ-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. வீழச்செய்தல்; to cause to fall. *"கூற்றென வேழம் வீழா" (சீவக. 2283).* 2. வீணாகக் கழித்தல்; to let pass, to waste. *"வீழ்த்தவா வினையேன் கெடுங் காலமே" (தேவா. 1203, 7).*

க. பீழிசு; து. பூரு.

[வீழ் → வீழ்]

வீழ்³-த்தல் *vīḻ-*, 4 செ.கு.வி.(v.i.) தாழ விருத்தல்; to hang down. *"கொழுங்கொடி வள்ளித் தாழவீழ்க் கும்மே" (புறநா. 109).*

வீழ்⁴-த்தல் *vīḻ-*, 11 செ.கு.வி.(v.i.) நோயால் விழச் செய்தல்; causing to fall as from disease of illness.

வீழ்⁵ *vīḻ*, பெ.(n.) 1. விழுது, 1 பார்க்க; see *vīḻudu*. *"நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்கு" (புறநா. 58).* 2. மங்கலநாண்; cord on which the marriage-badge is strung. *"அவர் முலையாகத்து..... நெடுவீழ் தாழ" (நெடுநல். 137).*

க. பீழல்.

[வீ → வீழ்]

வீழ்⁶ *vīḻ*, இடை. (part.) ஓர் உவமவுருபு (தண்டி. 33); a particle of comparison.

வீழ்க்காடு *vīḻ-k-kāḍu*, பெ.(n.) 1. வீழ்ச்சி; swooping. *"பருந்தின் வீழ்க்காடு" (இறை. 4, பக். 57).* 2. வீதம்; rate. *'ஒவ்வொருவனுக்கும் இரண்டு வீழ்க்காடு கொடுத்தான்'.*

[வீழ் + காடு]

வீழ்க்கை *vīḻkkai*, பெ.(n.) விளக்கு (சுவாதி) நாள் (பிங்.); the 15th naksatra.

வீழ்கதி *vīḻ-kadi*, பெ.(n.) நிரயம் (நரகம்) (யாழ்.அக.); hell.

[வீழ்¹- + கதி]

கதி = நிலை.

வீழ்கதிர் *vīḻ-kadiru*, பெ.(n.) மறையும் கதிரவன் (மணிமே. 30, 103); setting sun.

மறுவ. படுஞாயிறு.

[வீழ் + கதிர்]

வீழ்ச்சி *vīḻcci*, பெ.(n.) வீழ்வு பார்க்க; see *vīḻvu*.

[வீழ் → வீழ்ச்சி]

வீழ்ச்சை *vīḻccai*, பெ.(n.) குற்றம் (நாஞ்.); fault; defect.

ம. விழ்ச்ச.

ஒருகா: வரு → வீழ் → வீழ்ச்சை.

வீழ்த்து-தல் *vīḻttu-,* 5 செ.குன்றாவி.(v.t.) வீழ்²-,1 பார்க்க; see *vīḻ.* *"அம்பா லறுத்தறுத்து வீழ்த்தினனே" (பாரத. பதினேழாம். 170).*

[வீழ் → வீழ்த்து]

வீழ்ந்தாடல் *vīḻndāḍal,* பெ.(n.) துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை என ஐவகைப்பட்ட கூத்துவகை (சிலப். 3, 14, உரை, பக். 89); a kind of dance, of which there are five forms, viz., *tuḍi, kaḍaiyam, pēḍu, marakkāl, pāvai.*

[விழா → வீழ் → வீழ்ந்து + ஆடல்]

வீழ்நாள் *vīḻ-nāḷ,* பெ.(n.) வீணாள்; day spent in vain. *"வீழ்நாள் படாஅமை நன்றாற்றின்" (குறள், 38).*

மறுவ. வீண்காலம்.

[வீழ் + நாள்]

வீழ்ப்பிரமி *vīḻ-p-pirami,* பெ.(n.) ஒழுக்குப் பிரமியம், தென்னம் பூவால் போம்; gonorrhoea, gleet, it is cured by coconut flower.

வீழ்பிடி *vīḻ-piḍi,* பெ.(n.) 1. குறைவு; decrease. 2. வெறுப்பு; dislike.

[வீழ் + பிடி]

வீழ்பு *vīḻpu,* பெ.(n.) சுள்ளி; twig, small stick. *"நெடுஞ்சினைத் ததர்வீழ் பொடித்துக் கட்டிய வுடையினன்" (மணிமே. 3, 107).*

வீழ்மீன் *vīḻ-mīṉ,* பெ.(n.) விண்வீழ்கொள்ளி (தொல். பொருள். 91, உரை); meteor.

மறுவ. எரிமீன்.

[வீழ் + மீன்]

வீழ்வு *vīḻvu,* பெ.(n.) 1. விழுகை; falling; descending. 2. பாய்ச்சல்; swoop. *"பருந்தின் வீழ்வு" (நன். 19).* 3. விருப்பம்; desire. *"வீழ்வுகொடு வாளா விழுகின்றாய்" (அருட்பா.i, நெஞ்சறி. 540).*

ம. விழு.

[வீழ் → வீழ்வு]

வீழ்வேயம் *vīḻ-vēyam,* பெ.(n.) கொடிச் சம்பங்கி; climbing sampak.



வீழ *vīḻa,* இடை. (part.) ஓர் உவமவுருபு (தொல். பொருள். 2); a particle of comparison.

வீழி¹ *vīḻi,* பெ.(n.) 1. நீர்முள்ளி; a thorny plant. 2. அயத்தை ஈயமாக்கி பார்க்க; see *ayattai-ēyamākki.* 3. மரவிழுது; adventitious root.

வீழி² *vīḻi,* பெ.(n.) மருந்துச்செடி வகை; a straggling shrub with simple oblong leaves and greenish flowers. *"வீழிவாயின் கனிவா யொரு மெல்லியல்" (கம்பரா. புனல்விளை. 28).* 2. தஞ்சாவூர் மாவட்டத்தி

லுள்ள திருவீழிமிலை என்னும் சிவன் கோயில்; a *śiva* shrine in the Tanjore district. *"ஆய வீழி கொண்டீர்" (தேவா. 600, 9). "காழிமாநகர் வாழி சம்பந்தன் வீழிமிழலைமேல் தாழும் மொழிகளே" (தேவா. 3)*

வீழி[3] *vīḻi,* பெ.(n.) இளமையாக்கும் மருந்துச் சரக்குள் ஒன்று; a rujuvenated drug.

மறுவ. விழுதி, நாட்டு விழி.

வீழிச்சாறு *vīḻi-c-cāṟu,* பெ.(n.) விழுதிச்சாறு; juice of *viḻudi.*

வீழிச்சூரணம் *vīḻi-c-cūraṇam,* பெ.(n.) வீழிவேர்ப்பொடி; powder of the root of *vīḻi.*

வீழிப்பட்டை *vīḻi-p-paṭṭai,* பெ.(n.) விழுதிப்பட்டை; bark of *viḻudi.*

வீழியர் *vīḻiyar,* பெ.(n.) பார்ப்பனருள் ஒரு வகையினர்; a division of *smārta Brāhmans.*

வீழிறாழை *vīḻiṟāḻai,* பெ.(n.) தென்னை பார்க்க; see *teṉṉai.* coconut-palm. *"வீழிறாழைக் குழவித்தீநீர்" (பெரும்பாண். 357).*

[வீழ் + இல் + தாழை]



வீலி *vīli,* பெ.(n.) வெள்ளி; silver.

வீளெனல் *vīḷeṉal,* பெ.(n.) திடீரெனக்கத்தும் ஓசைக்குறிப்பு; onom. expr. of a shrill, sudden noise or cry.

[வீரெனல் → வீளெனல்]

வீளை *vīḷai,* பெ.(n.) 1. சீழ்க்கை; whistling. *"மடிவிடு வீளையர்" (குறிஞ்சிப். 161).* 2. சிள்ளென்ற ஓசை; shrill sound. *"வீளைப் பருந்தின்" (அகநா. 33).* 3. ஒலி; noise. *"வீளைக் கடுங் கணையால்" (பு.வெ. 10,8).*

தெ. ஈல; **Ko.** *viḷu.*

வீற்றம் *vīṟṟam,* பெ.(n.) வீற்று, 1 (வின்.) பார்க்க; see *vīṟṟu.*

[வீற்று → வீற்றம்] (செல்வி '77 ஆனி, 545)

வீற்றா-தல் *vīṟṟā-,* 6 செ.கு.வி. (v.i.) பிரிவுபடுதல்; to be dismembered, to become separate. *"மறிந்து சகடம் வீற்றாகி...... வீழ்ந்ததால்" (பாகவ. 10, சகட. 2).*

[வீற்று + ஆ-,]

வீற்றிரு-த்தல் *vīṟṟiru-,* 3 செ.கு.வி.(v.i.) 1. சிறப்போடிருத்தல்; to sit in state or majestically. *"கேள்விக்கோ வீற்றிருந்த" (சீவக. 30).* 2. வேறுபாடு தோன்ற இருத்தல்; to sit with unique distinction. *"வீற்றிருந் தேழுலகுந் தனிக்கோல் செல்ல" (திவ். திருவாய். 4, 5, 1).* 3. இறுமாந்திருத்தல் (சூடா.); to sit proudly. 4. கவலையின்றி யிருத்தல்; to be care-free. *"நாடு..... வீற்றிருந்தாண்மோ வென்றான்" (சீவக. 2901).* 5. தனிமையாயிருத்தல் (யாழ்.அக.); to sit alone.

[வீறு → வீற்று + இரு-,]

வீற்றிருக்கை *virrirukkai,* பெ.(n.) அரசிருக்கை; throne. *"நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின்" (குறள், 789).*

[வீற்றிரு → வீற்றிருக்கை]



வீற்றினிதிருந்தபெருமங்கலம் *virrinidirunda-perumangalam,* பெ.(n.) பாடாண் திணையின் வகைகளுள் ஒன்றாக வருவதும், அரசன் தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாமையால் தன் மிகுதி தோன்ற இறுமாந்திருத்தலுமாகிய புறத்துறை; (purap.) thane praising a hero's fame, power, etc.

"கூற்றிருந்த கொலைவேலான்
வீற்றிருந்த விறல்மிகுத்தன்று" (பு.வெ.920).

அரசன் தனது அரியணை மீது செம்மாந்திருந்த வெற்றியைப் பாராட்டியது இத்துறை.

எ-டு.

அழலவிர் பைங்கண் அரிமான் அமளி
நிழலவிர் பூண் மன்னர் நின்றேத்தக் கழல்புனைந்து
வீமலிதார் மன்னவனாய் வீற்றிருந்தான்
வீங்கொலிநீர்ப்
பூமலி நாவற் பொழிற்கு.

வீற்று *virru,* பெ.(n.) 1. வேறுபடுகை (பிங்.); being different; diversity. 2. துண்டு; piece. *"வீற்று வீற்றாகி யோடி விழுதலும்" (கம்பரா. கும்பக.187).* 3. கூறு; division, class. *"தந்தை தன்னைய ராயிரு வீற்றும்" (இறை. 28).* 4. தனிமை (வின்.); solitariness. 5. வளைவு (வின்.); curve. 6. பக்கம்; side. *"இருவீற்று முரித்தே சுட்டுங்காலை" (தொல். பொருளியல். 26).*

[வீறு → வீற்று] (செல்வி 'ஆனி' 77, பக். 545)

வீற்றுச்சட்டம் *virru-c-cattam,* பெ.(n.) வளைவுச்சட்டம்; circular frame-work.

[வீற்று + சட்டம்]

வீற்றுத்தெய்வம் *virru-t-teyvam,* பெ.(n.) உடலிலமர்ந்து காட்சியின்பத்தை யுண்டாக்குந் தெய்வம் (சீவக. 411, உரை); the Goddess dwelling in the body and giving it beauty.

[வீறு → வீற்று + தெய்வம்]

வீற்றுப்பொருள் *virru-p-porul,* பெ.(n.) சில்லறைப் பண்டம் (வின்.); sundry goods.

[வீற்று + பொருள்]

வீற்றும் *virrum,* குவி.எ.(adv.) மற்றும்; in addition, besides. *"வீற்று மாயிரம் வெங்கணை யுந்தினான்" (கந்தபு. சிங்கமு. 402).*

[வீற்று → வீற்றும்] (செல்வி. '77' ஆனி 545)

வீற்றுவளம் *virru-valam,* பெ.(n.) பிறநாட்டுக்கில்லாத செல்வம் (மலைபடு. 68); natural wealth peculiar to a country.

[வீற்று + வளம்]

வீற்றுவளைவு *virru-valaivu,* பெ.(n.) வட்டமான கட்டட வளைவு; circular arch.

[வீற்று + வளைவு]



வீற்றுவீற்றாக *vīṟṟu-vīṟṟāga*, வி.எ.(adv.) வெவ்வேறாக; severally, separately.

[வீற்றுவீற்று + ஆக]

வீற்றுவீற்று *vīṟṟu-vīṟṟu*, பெ.(n.) வெவ்வேறு; separateness. *"வெளிற்றுப் பனந்துணியின் வீற்று வீற்றுக் கிடப்ப" (புறநா. 35). "வீற்று வீற்றோடு மயிலினம்போல்" (களவழி. 29).*

[வீற்று + வீற்று]

வீறல் *vīṟal*, பெ.(n.) வெடிப்பு; crack.

[வீறு → வீறல்]

வீறாட்டம் *vīṟāṭṭam*, பெ.(n.) இறுமாப்பு; arrogance. *"வீறாட்ட முற்றழியு மாறாட்டகத் தடியன்" (பேரின்பக்கீர்த். பக். 104).*

[வீறு + ஆடு → ஆட்டம்]

வீறாப்பு *vīṟāppu*, பெ.(n.) இறுமாப்பு; arrogance. *"இந்தமுறுக்கேன் வீறாப்பேன்" (தனிப்பா. i, 88, 173).*

வீறிட்டழு-தல் *vīṟiṭṭaḻu-*, 2 செ.குன்றாவி. (v.t.) வீர்வீரெனல்; make a shrill.

வீறிட்டோடல் *vīṟiṭṭōḍal*, பெ.(n.) நோய் முழுவதுங் குணப்படுதல்; entirely freed from disease.

வீறிடு-தல் *vīṟiḍu-*, 6 செ.கு.வி.(v.i.) வீரிடு-, பார்க்க; see *vīriḍu-*.

[வீரிடு → வீறிடு-,]

வீறு[1]-தல் *vīṟu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. மேம்படுதல்; to be distinguished, to be eminent. *"போரூர் வீறிவா ழாறுமா முகனே" (திருப்போ. சந். குறுங்கழி. 3, 1).* 2. மிகுதல்; to increase. *"வீறுமுண்டி மிசைந்திட" (கந்தபு. தானப். 20).* 3. கீறுதல்; to scratch, as with the point of an instrument; to tear. *"நின்மெய்க்கட் குதிரையோ வீறியது" (கலித். 96).*

M. *vīṟu*; **K.** *beṟe*; **Tu.** *biruni*; **Te.** *viruga-baḍu*.

வீறு[2]-தல் *vīṟu-*, 5 செ.குன்றாவி.(v.t.) 1. வெட்டுதல்; to split, cut. *"தெய்வவாள் வீறப் பொன்றினன்" (கம்பரா. சம்பா. 43).* 2. அடித்தல்; to beat, flog. *'அவனை நன்றாய் வீறினேன்' (இ.வ).*

வீறு[3] *vīṟu*, பெ.(n.) 1. தனிப்பட்ட சிறப்பு; distinctive excellence. *"வீறெய்தி மாண்டார்" (குறள், 665).* 2. வெற்றி; victory. *"வீறுபெற வோச்சி" (மதுரைக். 54).* 3. வேறொன்றிற்கில்லா அழகு; unique beauty. *"வீறுயர் கலச நன்னீர்" (சீவக. 489).* 4. பொலிவு; splendour. *"சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி" (திருமுரு. 283).* 5. பெருமை (இல்க்.அக.); greatness. 6. மிகுதி; abundance, plenty. *"வாணிகர் வீற்றிலாபம் விளைவுழிச் சேறல்போல" (சேதுபு. திருநாட். 42).* 7. நல்வினை; good fortune, merit. *"விசையை யென்றுல கோடிய வீறிலேன்" (சீவக. 1814).* 8. மருந்து முதலியவற்றின் வினை விளை வேகம்; strenth, as of medicines or poisons;

power. *'அந்த மருந்துக்கு வீறில்லை'.* 9. தன்முனைப்பு; arrogance. *"கங்கை வீறடக்கும்..... சடையாய்" (காஞ்சிப்பு. வாணிச். 84).* 10. வெறுப்பு (யாழ்.அக.); dislike, disgust. 11. ஒளி (வின்.); light, brightness. 12. வேறு; separateness. *"வீறுவீறியங்கும்" (புறநா. 173).* 13. தனிமை (வின்.); solitariness. 14. அடி; blow, strike. *'நாலு வீறு வீறினான்'.*

வீறு⁴ *vīṟu,* பெ.(n.) 1. மருந்துச் சத்து; essence of medicine. 2. மருந்தின் பயன்விளைவுத் திறம்; power of medicine.

வீறுகம் *vīṟugam,* பெ.(n.) கொடி நவ்வல்; creeper-jamune.

வீறுகுட்டம் *vīṟu-kuṭṭam,* பெ.(n.) நலனழி குட்டநோய்; virulent leprosy.

[வீறு + குட்டம்]

வீறுதணிதல் *vīṟu-taṇidal,* பெ.(n.) மருந்தின் விரைவு குறைவுபடல்; abating of the virulence of medicine.

[வீறு + தணிதல்]

வீறுதிங்கனி *vīṟutiṅgaṉi,* பெ.(n.) அணிற்பிள்ளை; squirrel.

[வீறு + திங்கனி]

வீறுவாதம் *vīṟu-vādam,* பெ.(n.) விசியுழி பார்க்க; see *viśiyuḻi,* a form polemical discussion. *"வீறுவாதம் புகலும் வாய் வாதநோயாளர்க்கும்" (தாயு. மலை வளர். 3).*

[வீறு + **Skt.** *vādhā > த. வாதம்]*

வீறெனல் *vīṟeṉal,* பெ.(n.) வீரெனல் பார்க்க; see *vīreṉal.*

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

எட்டாம் மடலம் - மூன்றாம் பாகம்

(வெ - வௌ)

Vol. VIII - Part - III

து. இராசேந்திரன், இ.ஆ.ப.
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு
2007

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

எட்டாம் மடலம் - மூன்றாம் பாகம்

(வெ - வௌ)

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

VOL. VIII-PART III

து. இராசேந்திரன், இ.ஆ.ப.
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும்
செய்தித் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு

2007

87208

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 24

முதற் பதிப்பு : 2007

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. VIII, Part - III

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு
Government of Tamilnadu

விலை : உருபா 400/–

குறியீட்டெண் : Colon No. P.J1-J, 314"K.M4

வெளியிட்டோர் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

அச்சீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை 600 113.

நூல் கிடைக்குமிடம் : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்
அண்ணாநகர், சென்னை – 600 040.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை – 600 113.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

VOL. VIII- PART III

எட்டாம் மடலம் - மூன்றாம் பாகம்

(வெ - வெள)

பதிப்புக் குழு

து. இராசேந்திரன், இ.ஆ.ப.

அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும்

செய்தித் துறை

மற்றும்

இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

கூர்ந்தாய்வாளர்

புலவர். இறைக்குருவனார்

தொகுப்பாளர்கள்

திரு.முத்து.பிச்சை

முனைவர் மு.கண்ணன்

முனைவர் பா.வெற்றிச்செல்வன்

முனைவர் ச.செந்திலாண்டவன்

முனைவர் இரா.கு.ஆல்துரை

திரு.கா.இளமுருகு (பகுதிப் பொறுப்பாளர்)

திரு.ச.கி.கணேசன் (ஓவியர்)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 20.4.2007

அணிந்துரை

அகரமுதலி திட்டத்தின் ஏழு மற்றும் எட்டாம் மடலங்கள் இதழ்களை விரிப்பது கண்டு என் இதயம் பெருமிதம் எய்துகிறது. ஒவ்வொரு மொழியிலும் அதன் சொற்களுக்கு வேர் மூலம் காண முற்படும்போது, பெரும்பாலான சொற்களின் வேர்மூலங்கள் அடுத்த மொழிகளில் சென்று நிற்கும். ஆனால், தமிழில் உள்ள சொற்களின் மூலங்கள் அனைத்தும் தமிழிலேயே அமைந்துள்ளன. இப்போது நடைமுறையில் வழங்குகிற தமிழ்ச் சொற்களும், உருவாகி வருகின்ற கலைச் சொற்களும், தொழில்நுட்பச் சொற்களும் ஏற்கனவே வழங்கிய வேர் மூலங்களிலிருந்து விரிந்தும் பெருகியும் வந்தனவும் வருவனவும் ஆகும்.

அறிவியல் வளர்ச்சி மிகுந்துள்ள இந்நாளில், செய்தித் தொடர்பாலும் தொழில் நுட்ப வளர்ச்சியாலும் உலகம் சுருங்கிவிட்ட நிலையில், ஒரு மொழியில் அண்டையயல் மொழிச் சொற்களெல்லாம் கலந்து விடுவது இயல்பு. இத்தகைய சூழ்நிலையிலும் தமிழ் தனித்தியங்க வல்லதாக நெடுங்காலமாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. இதைத்தான் பாவேந்தர் பாரதிதாசனார் 'தனித்தியங்கும் தன்மை தமிழினுக்கு உண்டு; தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு' என்று ஆணித்தரமாகப் பாடி வைத்தார்.

அவ்வாறு, தமிழ், தான் தனித்தியங்குவது மட்டுமல்லாமல், பிற மொழிகளுக்கும் சொற்களை வாரி வழங்கிக் கொண்டுள்ளது. தமிழகத்திற்கு அப்பால் தனித்தனியே பிரிந்து வழங்கிவரும் திராவிட மொழிகளுக்கெல்லாம் தமிழ்மொழி வேர் மூலங்களை வழங்கியுள்ளதால், அவற்றின் அடிப்படையிலேயே அம்மொழிகளில் சொற்கள் பெருகியுள்ளமையைக் காண்கிறோம். அதனாலேயே, 'தமிழ் திரவிடத்திற்குத் தாய்' என்று தேவநேயப் பாவாணர் பறை சாற்றினார்.

இன்னும் பல மொழிகளிலுமுள்ள சொற்களின் வேர் மூலங்களும் தமிழிலேயே இருப்பதைக் காண நேர்கிறது. இது மொழியியல் உலகின் ஆய்வுப் போக்கைப் பல திருப்பங்களுக்கு உள்ளடக்குகின்றது. நெடுங்காலமாக வழக்கத்தில் இருப்பதும், தனித்தியங்க வல்லதும், பிறமொழிகளுக்குச் சொற்களை வழங்கவல்லதுமான மொழியே 'செம்மொழி' எனச் செம்மொழி இலக்கணம் வரையறுக்கப்படுகின்றது. தமிழின் இலக்கண இலக்கிய நூல்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு மறைக்கப்பட்டிருந்த காலமான கி.பி. 1857 அளவில் தமிழகம் வந்திருந்த கால்டுவெல் பெருமகனார் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் ஓர் ஒப்புமையைக் கண்டறிந்து, "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" (The comparative grammar of Dravidian Languages) என்ற நூலை வெளியிட்டார். அதன் வழி அவர் தன் ஆராய்ச்சியில் கண்ட முடிவுதான், "தமிழ் ஒரு செம்மொழி" என்பதாகும்.

அதன்பின், ஆங்கில அறிஞர்களான, "மெக்ளின்" போன்றவர்கள் தமிழ்மொழியில் உள்ள பதிவுகளையும், தமிழர்களின் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றையும் அறிவியல், வானியல் போன்றவற்றில் அவர்கள் பெற்றிருந்த அறிவாற்றலையும் ஆராய முற்பட்டனர். அவற்றின்வழி அந்த அறிஞர் பெருமக்கள் எல்லாம், 'தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழி' (Primary Classical) என்று வழிமொழிந்து சென்றனர்.

இவற்றின் தொடர்ச்சியாகத் தமிழை ஒரு செம்மொழி என அரசே அறிவிக்க வேண்டுமென்று பரிதிமாற் கலைஞர் தன் கோரிக்கையை முதன்முதலில் அரசின் முன்வைத்து வலியுறுத்தினார்.

ஆனால், இதை முழுவதுமாக அறிவியல் வழியாக மொழியியலில் நிறுவுவதற்குச் சொற்களுக்கு உரிய வேர் மூலம் காணும் சொற்பிறப்பியல் பணியே துணை நிற்கும் என்று, தன் வாழ்நாளையே சொல்லாய்வுக்கென ஒப்புவித்துக் கொண்டவர் 'மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்'. இத்தகைய பலரது தொடர்ச்சியான சிந்தனைகளின், செயல்பாடுகளின் மூலமாகத்தான் தமிழ் ஒரு செம்மொழி என்பதற்கான அங்கீகாரத்தை இன்று நாம் வென்றெடுத்துள்ளோம்; வெற்றிவாகை சூடியுள்ளோம்.

தமிழ்மொழியில் வழங்கும் சொற்களுக்கெல்லாம் வேர்மூலம் காண்பது என்பது ஆழ்கடலில் முத்தெடுக்கும் பணியினும் கடினமானது; இந்தப் பணியொன்றே தமிழ் செம்மொழி என்பதை ஏற்கச் செய்யும் முதன்மைப் பணியாகும். இப்பணியில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பல ஆண்டுகள் உழைத்து ஆராய்ச்சி நூல்கள் பலவற்றை உருவாக்கி வெளியிட்டுள்ளார்; 'உயர்தனிச்செம்மொழி' (The Primary Classical Language of the World) என்ற நூலைப் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே வெளியிட்டுள்ளார்.

தேவநேயப் பாவாணரின் இந்தச் சொல்லாராய்ச்சித் திறனை அறிந்து, அவர்தம் பணி தமிழ் உலகிற்குத் தேவை என்று நான் கருதியதால் 8.5.1974 அன்று, 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்ககம்' என்னும் ஒரு துறையைப் புதிதாக நிறுவி, அதற்குப் பாவாணர் அவர்களையே இயக்குநராகவும் நியமனம் செய்து அகர முதலித் தொகுதிகள் வெளிவர ஆவன செய்ததை இவ்வேளையில் மகிழ்வுடன் நினைவு கூர்கிறேன். அதன் பயனாக, பணிகள் சிறப்பாக நிகழ்ந்து முதல் தொகுதி அணியமாகிக் கொண்டிருக்கும் நிலையில் பாவாணர் அவர்கள் திடீரென மறைந்தார்கள். அதற்குப்பின் அவர்தம் நூல்களை அடிப்படையாகக் கொண்டு, அவரின் அணுகுமுறையிலேயே தொடர்ந்து அகர முதலித்திட்டத்தின் அடுத்தடுத்தத் தொகுதிகள் வெளிவரலாயின.

பாவாணர் மறைவுக்குப் பின்னும், ஒவ்வொரு முறையும் அரசுப்பொறுப்பு ஏற்கிற போதும் இந்தத் துறையின் வளர்ச்சியில் நான் மிகுந்த அக்கறை செலுத்தி வந்துள்ளேன். 1996ஆம் ஆண்டில் தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாட்டுக்கு எனத் தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டுச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்திற்குத் தேவையான கூடுதல் பணியாளர்கள், கணிப்பொறியமைப்பு போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

இதுவரை, மும்மூன்று தொகுதிகள் கொண்ட ஆறு மடலங்களாக மொத்தம் 18 தொகுதிகள் சென்ற ஆண்டுவரை வெளிவந்து முடிந்துள்ளன. இப்போது 'ம', 'ய', 'வ' வரிசையில் ஆறு பகுதிகள் வெளிவருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். எஞ்சிய பகுதிகளும் விரைந்து வெளிவர வேண்டும் என்பது என் அவா. இந்த அகரமுதலிப் பகுதிகள் வெளிவர உறுதுணையாய் நின்ற தமிழ் வளர்ச்சி–பண்பாடு (ம) அறநிலையத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் மற்றும் அகரமுதலித் திட்ட இயக்கத்தின் பொறுப்பு இயக்குநர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப. அவர்களுக்கும், நூல்களை உருவாக்கியுள்ள அகரமுதலித் திட்டத்தின் ஆசிரியர், பணியாளர் குழுக்களுக்கும் எனது உளமார்ந்த பாராட்டுகள் உரித்தாகுக.

என்றும்,
அன்புடன்

(மு. கருணாநிதி)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
"முத்தமிழறிஞர்"
கலைஞர் மு. கருணாநிதி

து. இராசேந்திரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையம் (ம) செய்தித் துறை
மற்றும்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்,

பதிப்புரை

உலக அரங்கில் தொன்மையும் வளமையும் மிக்க தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்ற இலக்கண–இலக்கிய மரபுச் செல்வங்களையும், உலக மாந்தர் அனைவருக்கும் வாழ்வியல் அறநெறி வகுத்தளித்த திருக்குறளையும் பெற்றுள்ள செவ்வியல் மொழி அன்னைத் தமிழாகும்.

'மொழிப் பொருட் காரணம் விழிப்பத்தோன்றா' என்ற தொல்காப்பியத்தின் மெய்யியல் உண்மையை உலகுக்கு உணர்த்திடவும், ஞாலத் தமிழ்மொழியே உலகின் முதன்மொழி என்று நிறுவிடவும், செந்தமிழ் மீட்பர் பாவாணரின் வேர்ச்சொல்லாய்வு தமிழ் மொழியின் சிறப்புக்கு மேலுமொரு அணிகலனாகும்.

செந்தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படையானப் பணிகளில் முதன்மையானது அகரமுதலி உருவாக்கம் எனில் அது மிகையன்று. சொற்பொருள் தெளிவு, இலக்கண வரையறை, புதிய கலைச் சொல்படைப்பு ஆகிய மொழியின் இன்றியமையாத விளக்கங்களை மொழி ஆர்வலர்களுக்கும், மொழியாராய்ச்சியில் ஈடுபடும் வல்லுநர்களுக்கும் ஆற்றுப்படுத்தும் முனைப்பில் சொற்பிறப்பு அகரமுதலிகள் (Etymology Dictionaries) பெரிதும் துணை புரிகின்றன. உலகின் பல மொழிகளிலும் வெளிவந்துள்ள அகரமுதலிகளைப் போல், தமிழிலும் சொற்பிறப்பு அகரமுதலிகள் வெளியிடும் நோக்கில் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் பேரகரமுதலி வெளியீடுகள் வரிசையில் எட்டாம் மடலம் – மூன்றாம் பாகத்தை (வெ–வௌ) வெளியிடுகின்றது.

பேச்சு வழக்கு, இலக்கிய வழக்கு, வட்டார வழக்கு, மீட்டுருவாக்கம், ஆணிவேர், பக்கவேர், சல்லிவேர் என்று சிறப்புற விளக்கும் பாவாணரின் பல்துறை ஆய்விற்குச் சான்றாக சில சொற்களை இப்பகுதியில் காணலாம்.

வெக்கை = 1. வெப்பம், 2. புழுக்கம்.
[வெள் → வெள்கை → வெட்கை → வெக்கை]

வெங்கம் = மிக்க வறுமை
[வெள் → வெண்கு → வெங்கு → வெங்கம்]

வெஞ்சனம் = சமைத்த கறியுணவு; குழம்பு, வேகவைத்த கூட்டு.
[வெந்த + ஆணம் வெஞ்சணம் → வெஞ்சனம்]

வெண்டுதல் = இல்லாத பொருளுக்கு ஆசைப்படுதல்.
[விள் → வெள் → வெண்டு → வெண்டுதல்]

வேட்கை = 1. பற்றுள்ளம், 2. காம விருப்பம்
[வெள் → வேள் → வேட்பு → வேட்கை]

வேர் = மரத்தின் அடிவேர், 2. சொல்லின் அடிப்பகுதி
[விள் → விளர் → வியர் → வேர்]

வேற்றுமை = 1. வேறுபாடு, 2. ஒப்புமையின்மை, 3. முரண்.
[வெறு → வேறு → வேற்றுமை]

வையம் = 1. நிலப்பகுதி, 2. குதிரை பூட்டிய தேர், 3. பல்லக்கு.
[வள் → வய் → வை → வையம்]

தமிழ் வரலாற்றையும், செந்தமிழ்ச் சிறப்பையும் தோய்ந்து ஆராய்ந்து ஞாலத் தமிழே உலகின் முதன்மொழி என்று நிறுவிக் காட்டிய பாவாணரின் தமிழ்த்தொண்டு நின்று நீடுபுகழ் நல்கும் என்பது திண்ணம்.

தமிழ் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் ஊக்கம் அளித்து வரும் நம் மாண்புமிகு **முதலமைச்சர்** அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர அயராதுழைத்த அலுவலர்கள், ப்திப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர்கள், பகுதிப் பொறுப்பாளர் மற்றும் தொகுப்பாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டினையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

7/3/2000

து. இராசேந்திரன்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

வெ

வெ *ve,* பெ.(n.) தமிழ் நெடுங்கணக்கில் 'வ்' என்ற மெய்யெழுத்தும் 'எ' என்ற உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய் எழுத்து; the compound of 'v' and 'a'.

[வ் + எ = வெ]

வெஃகல் *vekkal,* பெ.(n.) 1. மிக விருப்பம்; excessive disire. 2. பேராசை (சது.); avarice.

[வெள் → வெள்கு → வெஃகு → வெஃகல். (வேக.பக்.120) (சது.)]

வெஃகா *vekkā,* பெ.(n.) 1. காஞ்சிபுரத் தருகில் ஓடும் வேகவதி ஆறு; vekavati, a river near conjeevaram. *"சேயாற்றாலும் வெஃகாவினாலும் .... நீரிழிந்தவழி"(S.I.I. 352, 115).* 2. திருமால் திருப்பதிகளுளொன்று (திவ். இயற். 3, 62); a *visṇu* shrine.

வெஃகாமை *vekkāmai,* பெ.(n.) 1. அவாவின்மை; absence of desire. 2. பிறர் பொருளை அடையக் கருதாமை; absence of cupidity. *"வெஃகாமை வேண்டும் பிறன்கைப் பொருள்" (குறள், 178).* 3. வெறுப்பு; dislike. (w.).

[வெஃகு + ஆ + மை. 'ஆ' எ.ம.இ.நி. "வெள் → வெள்கு → வெஃகு + ஆ + மை. வெஃகாமை = அவாவின்மை.] (வே.க.பக்.120).

வெஃகு-தல் *vekku-,* செ.குன்றாவி.(v.t.) 1. மிக விரும்புதல்; to desire. *"அருள் வெஃகி" (குறள், 176).* 2. பிறர் பொருளை இச்சித்தல்; to covet. *"இலமென்று வெஃகுதல் செய்யார்" (குறள், 174).*

[வெள் → வெள்கு → வெஃகு → வெஃகுதல். வெஃகுதல் = விரும்புதல். (வே.க.பக்.120)]

வெக்கடுப்பு *vekkaḍuppu,* பெ.(n.) 1. கடுகடுப்பு; sternness of countenance. 2. கண்ணோய் வகை; sore-eyes without inflammation (w.).

[வெம்–மை + கடுப்பு → வெக்கடுப்பு]

வெக்கம் *vekkam,* பெ.(n.) வெட்கம் பார்க்க; see *veṭkam.*

[வெள் → வெள்கு → வெட்கு → வெட்கம் → வெக்கம். (வே.க.பக்.140)]

வெக்களி-த்தல் *vekkaḷi-,* செ.கு.வி.(v.i.) வானந் தெளிவாதல்; to clear up, as the weather; to be bright with sunshine.

[வெக்காளி → வெக்களி → வெக்களித்தல். (வே.க.பக்.133)]

வெக்கறை *vekkaṟai,* பெ.(n.) கூச்சப்படுபவன் (இலங்.); shy person.

[வெக்கம் → வெக்கறை]

வெக்காயம் *vekkāyam,* பெ.(n.) சூடு; heat. *"சம்சார வெக்காயந் தட்டாதபடி போய்" (ஈடு. 5, 9, 5).*

[வெம்மை + காய் → வெக்காய் → வெக்காயம்]

வெக்காலி¹ *vekkāli,* பெ.(n.) 1. வெள்ளி நாகை; a tree-anogeissus latifolia. 2. வெண் கருங்காலி அல்லது வெண்காலி;

[வெண்-மை + கால் → வெட்காலி → வெக்காலி]

வெக்காலி² *vekkāli,* பெ.(n.) கருங்காலி மரவகை; a kind of button tree.

[வெட்காலி → வெக்காலி]

வெக்காளம் *vekkāḷam,* பெ.(n.) 1. மழையின்றி இனிதாயிருக்குங்காலம்; fair weather without rain (w.). 2. புழுக்கம்; sultriness. 3. துயரம்; grief (யாழ்.அக.).

[வே → வேக்காளம் → வெக்காளம். (வே.க.பக்.133)]

வெக்காளி-த்தல் *vekkāḷi-,* செ.கு.வி.(v.i.) 1. வானந் தெளிவாதல்; to clear up. as the weather. to be bright with sunshine. 2. மனத்துயர்படுதல் (யாழ்.அக.); to be grieved at heart.

[வெக்காளம் → வெக்காளி → வெக்காளித்தல். (வே.க.பக்.133)]

வெக்காளிப்பு *vekkāḷippu,* பெ.(n.) மழையின்றி இனிதாயிருக்குங் காலம்; fair weather without rain (w.).

[வெக்காளம் → வெக்காளி → வெக்காளிப்பு. (வே.க.பக்.133)]

வெக்கை *vekkai,* பெ.(n.) 1. சூடு; heat. *"பூவில் வெக்கை தட்டும்" (ஈடு. 5, 9, 2).* 2. புழுக்கம்; sultriness. 3. சூடான பகுதியிலிருந்து வீசும் அனல்; radiated heat, as from a hot place radiated heat, as from a hot place. 4. வெக்கைச் சூடு பார்க்க; see *vekkai-c-cūḍu.* 5. வைசூரி நோய்; por-small-box (w.). 6. மாட்டு நோய் வகை; cattle plague. 7. கடா விடுங்களம்; threshing-floor. *"வெக்கைப் பருஉப்பகடுதர்த்த..... நெல்லின்" (பதிற்றுப். 71, 3).*

[வெள் → வெள்கை → வெட்கை → வெக்கை. (வே.க.பக்.131)]

வெக்கைச்சூடு *vekkai-c-cūḍu,* பெ.(n.) 1. கணைச்சூடு பார்க்க; see *kaṇai-c-cūḍu.*

[வெள் → வெள்கை → வெட்கை → வெக்கை + சூடு]

வெக்கைதட்டு-தல் *vekkai-taṭṭu-,* செ.கு.வி. (v.i.) 1. சூடு உண்டாதல்; to be affected with heat. *"பூவில் இழியில் அதில் வெக்கை தட்டுமென்று" (ஈடு. 1. 4. 7).* 2. வெட்டைநோயால் வருந்துதல்; to suffer from leucorrhea.

[வெள் → வெள்கை → வெட்கை → வெக்கை + தட்டு. (வே.க.பக்.131)]

வெக்கைநோய் *vekkai-nōy,* பெ.(n.) 1. வைசூரி நோய்; por small-pox (w.). 2. மாட்டு நோய் வகை; cuttle plague.

[வெள் → வெள்கை → வெட்கை → வெக்கை + நோய்]

வெகிச்சீமை *veki-c-cīmai,* பெ.(n.) வெளியெல்லை; outer limit. *'புறப்பாட்டெல்லை யென்னும் வெகிச் சீமைக்கண் வருவது அபாதானம்' (பி.வி. 11, உரை).*

[வெகி + சீமை]

வெகிர்முகம் *vegir-mugam,* பெ.(n.) வெளிமுகம்; outer or external side. *"மகரிகை நிறைய வெகிர்முக மாக்கி" (பெருங். மகத. 17, 161).*

[வெகிர் + முகம்]

வெகு[1] *vegu,* பெ.எ.(adj.) 1. பல; many. 2. அதிகமான; much. *"வெகுகனக வொளி குலவும்" (திருப்பு. 20).*

[மிகு → வெகு]

வெகு[2]**-த்தல்** *vegu-,* செ.குன்றாவி.(v.t.) மிகுத்தல்; to be excessive, abundant (யாழ்.அக.).

[வெகு → வெகு-த்தல்]

வெகு[3] *vegu,* இடை.(part.) 1. குறிப்பிடப்படும் தன்மையின் மிகுதியைக் காட்டுவது (வினையடையின் முன்) தன்மையை வலியுறுத்திக் கூறுவது; an intensifier, very. *'காய்கறிவிலை வெகு மலிவு, கதையின் ஆரம்பமே வெகு ஜோர், குதிரை வெகு வேகமாக ஓடத் தொடங்கியது'.* 2. (தூரத்தைக் குறிக்கையில்) சராசரி அளவைவிட அதிகமான, (காலத்தைக் குறிக்கையில்) நீண்ட; (of distance) away or off, (of time) long. *'இந்த ஊருக்குத் தண்ணீர் வெகு தொலைவிலிருந்து கொண்டுவரப் படுகிறது'. 'நாங்கள் வெகு நாட்களாக நண்பர்கள்'.*

[மிகு → வெகு]

வெகுகாமி *vekukāmi,* பெ.(n.) 1. பொன்னிமிளை; yellow bismuth. 2. தொழுகண்ணி பார்க்க; see *tholu-kanni.*

வெகுகொடுமை *vegu-kodumai,* பெ.(n.) கொடிய நஞ்சு; a kind of arsenic.

[வெகு + கொடுமை]

வெகுச்சுரு *vegu-c-curu,* பெ.(n.) வெகுசுரதம் 1, 2 (பொருட். நி.) பார்க்க; see *vegu-curadam 1, 2.*

[வெகு + சுரு]

வெகுச்சுருதம் *vegu-c-curudam,* பெ.(n.) வெகுசுருதம் 1, 2 பார்க்க; see *vegu-c-curutam 1, 2.*(w.).

[வெகு + சுருதம்]

வெகுசனம் *vegu-canam,* பெ.(n.) மக்கள் கூட்டம்; crowd of people.

*[வெகு + **Skt.** Jana > த. சனம்]*

வெகுசனவாக்கு *vegucana-vākku,* பெ.(n.) பொதுமக்களின் கருத்து; popular voice or opinion.

*[வெகு + **Skt.** Jana > த. சனம் + வாக்கு]*

வெகுசாய் *vegu-šāy,* வி.எ.(adv.) 1. பெரும்பாலும்; almost, most probably. *'வெகுசாய் இன்று மழை பெய்யும்'.* 2. வெகுவாய் பார்க்க; see *veguvāy.*

வெகுசு *vekucu,* பெ.(n.) மிகுதி (யாழ்.அக.); plenty.

வெகுசுருதம் *vegu-curudam,* பெ.(n.) 1. மிகுந்த கேள்வி; wide information. 2. பரந்த கல்வி; extensive knowledge. 3. சிற்பநூல் முப்பத்திரண்டனுள் ஒன்று (இரு சமய உலக வழக். சிற்பசாத். 3); a treatise on architecture, one of 32 *cir-pa-nūl,*q.v.

*[வெகு + **Skt.** suruta > த. சுருதம்]*

வெகுட்சி[1] *vegutci,* பெ.(n.) பூவரசு; portia tree.



வெகுட்சி² *vekuṭci,* பெ.(n.) சினம்; wrath, rage. *"கடையிடை தெரியார் தம்முட் டாக்கிய விம்ம வெகுட்சியுள்" (பெருங். இலாவாண. 2, 83–84).*

[வெகுள் → வெகுட்சி]

வெகுட்டல் *vekuṭṭal,* பெ.(n.) அச்சுறுத்தல்; to threaten.

[வெகு → வெகுட்டல்]

வெகுடு *vekuḍu,* பெ.(n.) நாணல்; reed.

[வெள்கு → வெகுடு]

வெகுண்டம் *vekuṇḍam,* பெ.(n.) கரும்பு (மூ.அ.); sugancane.

[வெகு + கண்டம் → வெகுண்டம்]

வெகுணோக்கு *veku-nōkku,* பெ.(n.) சீற்றப்பார்வை; angry look. *"வெருக்கு விடையன்ன வெகுணோக்கு" (புறநா. 324).*

[வெகுளி + நோக்கு]

வெகுதாவம் *veku-tāvam,* பெ.(n.) விடத்தேர் பார்க்க; see *viḍa-t-tēr.*

வெகுதூரமோடல் *veku-dūra-mōḍal,* பெ.(n.) பொன்னுக்கு மாற்றுயர்தல்; in alchemy to increase the quality of gold.

வெகுநாயகம் *veku-nāyagam,* பெ.(n.) பலருடைய ஆட்சி; government, rule or leadership in the hands of many. *"மொழியும் வெகுநாயகஞ் சேரிடமும்" (அறப். சத. 57).*

[வெகு + தூரம் + ஓடல்]

வெகுநியாயம் *veku-niyāyam,* பெ.(n.) வெளியரங்கபூசை; external worship (w.).

*[வெகு + **Skt.** nyāya > த. நியாயம்]*

வெகுபத்திரி *veku-pattiri,* பெ.(n.) **1.** கத்தரிக்காய்; brinjal. **2.** சிறுநெல்லி; otaheite gooseberry. **3.** முள்ளுள்ள செடி; thorny plant. **4.** வற்றியபொருள்; that which is dry.

*[வெகு + **Skt.** patra > த. பத்திரி]*

வெகுபரணி *veku-baraṇi,* பெ.(n.) சிறு செடிவகை; stemless plant.

வெகுபிட்டம் *vegu-piṭṭam,* பெ.(n.) விரிவு (யாழ்.அக.); expanse.

[வெகு + பிட்டம்]

வெகுபுத்திரி *vegu-puttiri,* பெ.(n.) **1.** கீழா நெல்லி (தைலவ.); a small plant. **2.** துளசி (சங்.அக.); sacred basil.



வெகுபுத்திரிகை *vegu-puttirigai,* பெ.(n.) நரிப்பயறு; dew gram-phaseolus aconitifolius.

வெகுமஞ்சரி *vegu-mañjari,* பெ.(n.) துளசிச்செடி (இலக். அக.); sacred basil.

வெகுமதி¹ *vegumati,* பெ.(n.) நன்கொடை; reward, present.

[வெகு + மதி]

வெகுமதி²-த்தல் *vegumati-,* செ.குன்றாவி. (v.t.) 1. மேலாக மதித்தல்; to consider to be of great value, to estimate highly. 2. கண்ணியம் பண்ணுதல்; to treat with respect.

[வெகுமதி → வெகுமதித்தல்]

வெகுமாரி *vegu-māri,* பெ.(n.) 1. பெருமழை; heavy rain. 2. மிகுதி; increase.

[வெகு + மாரி]

வெகுமானக்காரன் *vegumāṉa-k-kāraṉ,* பெ.(n.) பாசாங்குக்காரன்; man of pretensions (w.).

[வெகுமானம் + காரன்]

வெகுமானம் *vegumāṉam,* பெ.(n.) 1. நன்கொடை; present. 2. பெருமதிப்பு; great respect. *"வெகுமான மாகிலு மவமானமாகிலும் மேன்மையோர் செய்யி லழகாம்" (அறப். சத. 45).* 3. பாசாங்கு; pretension.(w.). 4. பண்புநயம்; civility (w.).

[வெகு + மானம்]

வெகுமானி¹-த்தல் *vegu-māṉi-,* செ. குன்றாவி.(v.t.) 1. கண்ணியம் செய்தல்; to treat with respect. 2. பண்நயம் காட்டுதல்; to treat with civility (w.). 3. இனாங் கொடுத்தல்; to make presents.

வெகுமானி²-த்தல் *vegu-māṉi-,* செ.கு.வி (v.i). பெருமை பாராட்டுதல்; to pretend to greatness (w.).

[வெகுமானம் → வெகுமானித்தல்]

வெகுமுகம் *vegu-mugam,* பெ.(n.) பலவாறாகக் கிளைப்பது (யாழ்.அக.); that which divides in to several branches in many directions.

[வெகு + முகம்]

வெகுமூத்திரம்¹ *vegu-mūttiram,* பெ.(n.) அடிக்கடி நீரிறங்கும் நோய், அதிமூத்திரம், இதைத் தண்ணீர் விட்டான் கிழங்கு நிறுத்தும்; polyurea, this is cured by water root.

[வெகு + மூத்திரம்]

வெகுமூத்திரம்² *vegu-mūttiram,* பெ.(n.) நீரழிவு நோய்; diabetes.

[வெகு + மூத்திரம்]

வெகுமூலம்¹ *vegu-mūlam,* பெ.(n.) வெட்டி வேர்; khus-khus-vetiveria zizanioides.

வெகுமூலம்² *vegu-mūlam,* பெ.(n.) முருங்கை மரவகை (இலக்.அக.); horse-radish tree.



வெகுர் *vegur,* பெ.(n.) 1. சூட்டினால் வரும் பரு; a wort caused by heat. 2. வேர்க்குரு; rash due to prickly heat.

வெகுரகாலி *vegura-kāli,* பெ.(n.) வெக்காளி; a tree.

வெகுரசம் *vegu-racam,* பெ.(n.) கரும்பு (மலை.); sugarcane.

[வெகு + **Skt.** *rāsa > த. இரசம்]*

வெகுரூபன் *vegu-rūpan,* பெ.(n.) 1. அனைத்து விதமான வடிவங்களை எடுக்கும் பச்சை ஓணான்; chamelion. 2. திருமால் (யாழ்.அக.); *viṣṇu.* 3. சிவன்; siva. 4. மன்மதன் (யாழ்.அக.); *kāma.* 5. பிரமன்; *brahmā.*



வெகுலாங்கம் *vegulāṅgam,* பெ.(n.) ஆடு தின்னாப் பாளை (மலை.); worm killer.

வெகுலாதி *vegulādi,* பெ.(n.) வெகுலாலி பார்க்க (சங்.அக.); see *vekulāli.*

வெகுலாதிகம் *vegulādigam,* பெ.(n.) 1. வெட்டுப்பாக்கு; cut arecanut. 2. சிற்றேலம்; small cardamum.

வெகுலாலி *vegulāli,* பெ.(n.) சிற்றேலம் (மலை.); a species of cardamom.

வெகுவசனம் *vegu-vacanam,* பெ.(n.) பன்மை எண்ணிக்கை (பி.வி. 24, உரை, பக். 44); plural number.

[வெகு + **Skt.** *vasana > த. வசனம்]*

வெகுவாக *veguvāga,* வி.எ.(adv.) மிகவும்; very much. *'புயல் தென் மாநிலங்களை வெகுவாகப் பாதித்தது, மருந்து நோயை வெகுவாக ஊறுபடுத்தியது'.*

[மிகு → வெகு → வெகுவாக]

வெகுவாசமுடையோகி *veguvāsa-mudai-yōgi,* பெ.(n.) வசம்பு; sweet flag-acorus calamas.

வெகுவாதகம் *vegu-vādakam,* பெ.(n.) வெட்டிவேர்; khus-khus-vetiveria zizanoides.

வெகுவாய் *vegu-vāy,* வி.எ.(adv.) மிகுதியாக; very much, greatly.

[வெகு → வெகுவாய்]

வெகுவாய்ச்சொல்(லு)-தல் *veguvāy-c-col(lu)-,* செ.குன்றாவி. (v.t.) 1. விளத்தமாகச் சொல்லுதல்; to speak at great length. 2. வற்புறுத்திக் கூறுதல்; to speak with great insistence (w.).

[வெகுவாய் + சொல்]

வெகுவிதம் *veku-vidam,* பெ.(n.) நானா வகை (சூடா.); multiplicity.

[வெகு **Skt.** *vita > த. விதம்]*

வெகுவிரீகி *veku-viriki,* பெ.(n.) அன்மொழித்தொகை (பி.வி. 20, உரை); an elliptical compound word.

வெகுள் *vegu!,* பெ.(n.) கூரை வேய்வதற்குப் பயன்படும் ஒருவகைப்புல் (செங்கை. வழ.); a grass used for thatched roof.

வெகுள்(ளு)-தல் *veku!(!u)-,* செ.குன்றாவி. (v.t.) & செ.கு.வி.(v.i.) 1. கோபித்தல்; to be angry. *"வேர்த்து வெகுளார் விழுமியோர்" (நாலடி, 64).* 2. பகைத்தல்; to hate, dislike. *"கல்லான் வெகுளுஞ் சிறுபொருள்" (குறள், 870).*

[வே → வேகு → வெகுள் → வெகுள்தல். (வே.க.பக். 135)]

வெகுள்வு *veku!vu,* பெ.(n.) முக்குற்றங்களுள் ஒன்றான கோபம்; anger (w.).

[வேகு → வெகுள் + உ → வெகுள்வு. (வே.க.பக். 135)]

வெகுளல் *vegu!al,* பெ.(n.) வெகுளுதல்; choler, anger.

[வேகு → வெகுள் + அல் → வெகுளல். (வே.க.பக். 135)]

வெகுளாமை *vekulāmai,* பெ.(n.) கோபியாமை; absence of anger. *"புணரின் வெகுளாமை நன்று" (குறள், 308).*

[வெகுள் + ஆ + மை]

வெகுளி *vegu!i,* பெ.(n.) 1. முக்குற்றங்களுள் ஒன்றான கோபம்; anger, one of *mu-k-kuṟṟam.* q.v. *"வெகுளி கணமேனுங் காத்த வரிது" (குறள், 29).* 2. வெறுப்பு; dislike. *"ஒரு பொருளிடத்தும் விழைவொடு வெகுளியுறாது" (திருப்போ. சந். குறுங்கழி 5, 3).* 3. கபடமற்றவ–ன்–ள்; simple-minded person.

[வேகு → வெகுள் + இ → வெகுளி. (வே.க.பக். 135)]

வெகுளிப்பு *vekulippu,* பெ.(n.) 1. கோபம்; anger. (திவ். இயற். திருவிருத். 17, வ்யா. பக். 117).

[வேகு → வெகுள் → வெகுளி + இ → வெகுளிப்பு. (வே.க.பக். 135)]

வெகுளிவிலக்கு *veku!i-vilakku,* பெ.(n.) ஓரலங்காரம், அது வெகுளி தோன்றக்கூறி விலக்குவது; avoid anger.

[வெகுளி + விலக்கு]

வெங்கடுப்பு *veṅ-kaḍuppu,* பெ.(n.) 1. அழற்சியின்றி வரும் கண்ணோய்; sore eyes without inflammation. 2. வெண் கடுப்பு பார்க்க; see *veṇ-kaḍuppu.*

[வெம்மை + கடுப்பு → வெங்கடுப்பு]

வெங்கண்[1] *veṅkaṇ,* பெ.(n.) 1. வெங்காயம்; onion-alliumcepa. 2. மீன்வகை; a fish with protruburent eyes.

[வெம்மை + கண் → வெங்கண்]

வெங்கண்[2] *veṅkaṇ,* பெ.(n.) 1. அழலெடி விழிக்குங்கண்; fried eye. *"வெங்கட் புள்ளூர்ந்து வந்து" (திவ். திருவாய். 6, 8, 5).* 2. கொடுமை; cruelty. *"வெங்கண் வேந்தர்" (பெருங். வத்தவ. 6, 32).* 3. பொறாமை; jealousy (w.). 4. பகைமை; enmity, spite (w.). 5. கண்ணூறு; evil eye. 6. குத்துவா பார்க்க; see *kuttuvā.* *'தன் கண்ணைக் கொடுத்து வெங்கண்ணை வாங்க வேண்டும்'.*

[வெம்மை + கண் → வெங்கண்]

வெங்கண்டல் *veṅ-kaṇḍal,* பெ.(n.) மரவகை; a kind of tree.

[வெண்மை + கண்டல் → வெங்கண்டல்]

வெங்கண்ணன் *veṅ-kaṇṇaṉ,* பெ.(n.) குழந்தை நோய்வகை; a kind of children disease.

வெங்கண்ணனார் *veṉkaṇṇaṉār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a sangam poet. இவர் நற்றிணையில் 232–ஆம் பாடலைப் பாடியுள்ளார்.

வெங்கணன் *veṅ-kaṇaṉ,* பெ.(n.) கொடியவன்; cruel man.

[வெம்மை + கண்ணன் → கணன்]

வெங்கணாத்தி *veṅkaṇātti,* பெ.(n.) வெங்கிணாத்தி பார்க்க; see *veṅkiṇātti.*

வெங்கதிர் *veṅ-katir,* பெ.(n.) வெங்கதிர்ச் செல்வன் பார்க்க; see *veṅkatir-c-celvaṉ.*

[வெம்(மை) + கதிர்]

வெங்கதிர்ச்செல்வன் *veṅkatir-c-celvaṉ,* பெ.(n.) சூரியன்; sun. *"விசும்பி னுரி ருளகற்றும் வெங்கதிர்ச்செல்வன் போல" (புறநா. 56).*

[வெங்கதிர் + செல்வன்]



வெங்கதிர்மதலை *veṅkatir-madalai,* பெ.(n.) கர்னன் (பிங்.); karna.

[வெங்கதிர் + மதலை]

வெங்கதிரோன் *veṅ-katirōṉ,* பெ.(n.) வெங்கதிர்ச்செல்வன் பார்க்க; see *veṅkadir-c-celvaṉ.* *"வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி" (திவ். பெருமாள். 10, 1).*

[வெம்மை + கதிரோன்]

வெங்கம் *veṅgam,* பெ.(n.) மிக்கவறுமை; extreme poverty. *'வெங்கம் பரந்த அம்மையார்க்கு திருவிளக்கெண்ணெய் அழுதுபடி'.*

[வெள் → வெண்கு → வெங்கு → வெங்கம். (வே.க.பக். 155)]

வெங்கருது *veṅgarudu,* பெ.(n.) விளைவில்லாத கதிர், நன்கு விளைந்த வயலிலும் ஊடூடே இந்த மாதிரி வெண் நிறக் கதிர் பறிந்திருக்கும்; chaff, empty ears of grain.

[வெம்மை + கதிர் → வெங்கதிர்]

வெங்கல் *veṅgal,* பெ.(n.) பூச்சு வேலைகளில் பூச்சு பளபளப்பாக இருக்க பூசப் பயன்படும் கல் சுவரில் சுண்ணாம்புப் பூச்சு பளபளப்பாக இருக்க இக்கல்லால் நன்றாகத் தேய்ப்ப துண்டு (கோ. வழக்.) (தஞ். வழ.); a kind of stone used for shining on plastering in the wall. It is also used to rub on whitewash to glitter.

[வெள் → வெண்கு → வெங்கு → வெங்கல். (வே.க.பக். 155)]

வெங்கலக்கல்வம் *veṅkala-k-kalvam,* பெ.(n.) மருந்துகள் உலோகக் களிம்பேறாதபடி வெங்கலத்தினால் செய்த மருந்தரைக்கும் கல்வம், கண் நோய் மருந்துகள் அரைக்குங் கருவி; mortar for grinding medicines made of bell-metal.

[வெங்கலம் + கல்வம்]

வெங்கலக்கல்வம்செப்புக்குழவி *veṅkala-k-kalvam-ceppu-k-kuḻavi,* பெ.(n.) உலோகக் களிம்பேறாதபடி வெங்கலத்தினால் செய்த மருந்தரைக்கும் கருவி, கண் நோய் மருந்து தயாரிக்கப் பயன்படுவது; bell metal mortar and copper pestle to grind medicines for the eyes.

[வெங்கலம் + கல்வம் + செப்புக்குழவி]

வெங்கலக்கும்பா *veṅgala-k-kumbā,* பெ.(n.) வெண்கலத்தால் ஆன சாப்பிடும் கும்பா உயரமாக இருக்கும். குடவம் (பித்தளை) போல் களிம்பூறாது. ஓசைக்குப் பெயர் போனது வெங்கலம்; a bronze fowl not rusty as brass famous for sowed.

[வெங்கலம் + கும்பா]



வெங்கலச்சிலை *veṅgala-c-cilai,* பெ.(n.) ஒரு வகை கடைப் பொருள்; a mineral stone- one of the 120 kinds of nature substance referred to in tamil siddha medicine.

[வெண்கலம் + சிலை]

வெங்கலத்தாலம் *veṅgala-t-tālam,* பெ.(n.) வெங்கலத்தட்டு, தாம்பாளம்; plate or dish made of bell - metal.

[வெங்கலம் + தாலம்]

வெங்கலபாத்திரம் *veṅkala-pāttiram,* பெ.(n.) வீட்டுக்குரிய வெண்கலத்தாற் செய்த ஏனம்; bronze vessel for domestie use.

*[வெங்கலம் + **Skt.** pātra > த. பாத்திரம்]*

வெங்கலம்[1] *veṅkalam,* பெ.(n.) 1. இரண்டு பாகம் செம்பும் ஒரு பாகம் வெள்ளியமும் சேர்த்து உருக்கி வார்த்து, கிண்ணி முதலிய ஏனங்கள் செய்யுமோர் மாழை; alloy of 2 parts copper and one part of tin (pewter). 2. வெண்கலம் பார்க்க; see *veṇkalam.*

[வெண்கலம் → வெங்கலம்]

வெங்கலம்[2] *veṅgalam,* பெ.(n.) வெண்கலம் பார்க்க; see *veṇ-kalam.*

வெங்கலம்[3] *veṅgalam,* பெ.(n.) செம்பும் வெள்ளீயமும் கலந்து உருக்கி உண்டாக்கும் கலப்பு உலோகம்; bell-metal, bronze an alloy of copper and tin.

[வெண்கலம் → வெங்கலம்]

வெங்கலாமை *veṅkalāmai,* பெ.(n.) ஆமைவகை; a kind of tortoise.

[வெங்கலம் + ஆமை]

வெங்கள் *veṅgaḷ,* பெ.(n.) கடுக மயக்குங் கள்; highly intoxicating liquor. *"வெங்கட் டொலைச்சிய விருந்திற் பாணி" (சிலப். 10, 131).*

[வெம் (மை) + கள்]

வெங்களம் *veṅgaḷam,* பெ.(n.) போர்க்களம்; battle field. *"மறமன்னர் வெங்களத்து வேலுயர்த்த வேந்து" (பு.வெ. 9, 11).*

[வெம் (மை) + களம்]

வெங்கன் *veṅkaṉ,* பெ.(n.) வறுமையாளன்; pauper.

[வெங்கம் → வெங்கன்]

வெங்கனை *veṅgaṉai,* பெ.(n.) கடல்மீன் (முகவை. மீனவர்); sea fish.



வெங்காக்கணம் *veṅkākkaṇam,* பெ.(n.) வெள்ளைக்காக்கணம் பார்க்க (பரி.அக.); sea *veḷḷai-k-kākkaṇam.*

[வெண்–மை + காக்கணம்]

வெங்காய்ச்சல் *veṅ-kāyccal,* பெ.(n.) உப்பிடப்படாமல் வெறுமனே வெயிலிற் காயும் மீன் காய்ச்சல் (முகவை. மீன.); drying of unsalted fish.

[வெறுமை + காய்ச்சல் → வெங்காய்ச்சல்]

வெங்காயக்கிழங்கு *veṅkāya-k-kiḻaṅgu,* பெ.(n.) நாக்கு அச்சரத்தைப் போக்கக்கூடிய வெங்காயத்தின் அடி மூலம்; bulb of onion capable of removing ulcers on the tongue. it is vegetable of all round value it assists digestion and gives tone to the stomach and is a good septic for indigestion it increases the healthy action of kidneys and produces proper sleep. it is long used for ulcer stomach. the syrup of onion is specific for colds and cough even for colds in the chest and throat. the gas from the well crused onion heals chronic ulcers when they are exposed to it.

[வெங்காயம் + கிழங்கு]

வெங்காயக்கோரை *veṅkāya-k-kōrai,* பெ.(n.) புல்வகை; a kind of grass.

[வெங்காயம் + கோரை]

வெங்காயத்தழை *veṅkāya-t-taḻai,* பெ.(n.) வெங்காயத்தினிலை; leaf of onion.

[வெங்காயம் + தழை]

வெங்காயத்தாமரை *veṅkāya-t-tāmarai,* பெ.(n.) நீர்ப்பூடுவகை; a parasitic water-plant.

[வெங்காயம் + தாமரை]

வெங்காயத்தாமரைப்பாசி *veṅkāya-t-tāmarai-p-pāsi,* பெ.(n.) ஒருவகைக் கடற்பாசி; a kind of ceylon moss. (தஞ்சை. மீன.).

[வெங்காயம் + தாமரை + பாசி]

வெங்காயப்பூ *veṅkāya-p-pū,* பெ.(n.) வெங்காயத்தைப் போன்று மடல்களைக் கொண்ட பூ, குன்மம் குடல் ஊதை நோய் அறவே போம்; onion flower.

[வெங்காயம் + பூ]

வெங்காயப்பூக்கோரை *veṅgāya-p-pūkkōrai,* பெ.(n.) கோரைவகை; a kind of sedge.

[வெங்காயம் + பூ + கோரை]

வெங்காயப்பூண்டு *veṅgāya-p-pūṇḍu,* பெ.(n.) கடற்கரையோரங்களில் வளரும் செடி; a coasted plant or shrub. (தஞ்சை. மீன.).

[வெங்காயம் + பூண்டு]

வெங்காயம்[1] *veṅgāyam,* பெ.(n.) ஈருள்ளி; onion-allium cepa. 1. வெங்காயம். 2. ஈர வெங்காயம். 3. நரிவெங்காயம். 4. வெள்ளை வெங்காயம். 5. சிறு வெங்காயம்.

[வெண் (மை) + காயம்]



வெங்காயம்[2] *veṅgāyam,* பெ.(n.) இதில் 2 வகையுண்டு, சிவப்பு, வெள்ளை. இதன் சாற்றை மூக்கினால் உறிஞ்ச மூச்சு அழற்சியைத் தடுக்கடும். வயிற்று வலி குன்மம் குடலைப் பற்றிய இழுப்பு நோய் இவைகளைக் குணப்படுத்தும்; it is used as condiment. it acts as refeingent stimulent and diuretic. it is capable of healing chronic ulcers.

வெங்காயம்[3] *veṅgāyam,* பெ.(n.) உரிக்க உரிக்க தனித் தனியாக வந்துவிடக் கூடிய தோல் அடுக்குகளால் ஆன, காரச்சுவை கொண்ட ஒரு வகை பூண்டு; onion.

[வெண்–மை + காயம் → வெங்காயம்]

வெங்காயம்[4] *veṅgāyam,* பெ.(n.) வெண்காயம் பார்க்க (பதார்த்த. 445); see *veṇ-kāyam.*

வெங்காயவடகம் *veṅkāya-vaḍagam,* பெ.(n.) நறுக்கிய வெங்காயத்துடன் உளுத்தம் பருப்பு, கடுகு முதலியவை சேர்த்துச் சிறு உருண்டையாக உருட்டிக் காயவைத்து எடுத்துப் பொரித்துப் பயன்படுத்தும் துணை உணவுப் பொருள்; a kind of onion preparation dried in the sun and fried before use.

[வெங்காயம் + வடகம்]

வெங்காயவெடி *veṅkāya-veḍi,* பெ.(n.) சிறுவெடி; small fireworks.

[வெங்காயம் + வெடி]

வெங்கார்[1] *veṅ-kār,* பெ.(n.) வெப்பம் (யாழ்.அக.); heat.

[வெம் (மை) + கார்]

வெங்கார்[2] *veṅ-kār,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[வெம் (மை) + கார்]

வெங்கார்நாற்றம் *veṅkār-nāṟṟam,* பெ.(n.) தலைப்பெயன் மழையாற் சாய்ந்த மண்ணினின்று எழும் ஆவிநாற்றம்; odour caused by rain falling on hot, dry ground. *"காடுகள் தரும் வெங்கார் நாற்றமும்" (பரிபா. 20, 10, உரை).*

[வெங்கார் + நாற்றம்]

வெங்கார்மண் *veṅkār-maṇ,* பெ.(n.) கதிரவன் வெப்பத்தாற் சூடேறிய நிலம் (சீவக. 250, உரை); soil hot with sun's heat.

[வெங்கார் + மண்]

வெங்காரப்பொடி *veṅkāra-p-poḍi,* பெ.(n.) புண்களுக்குப் போடும் மருந்து; borax powder.

மறுவ. வெண்காரம், பொரிகாரம், டங்கணம்.

[வெண்காரம் + பொடி]

வெங்காரம்[1] *veṅ-kāram,* பெ.(n.) மருந்துச் சரக்குவகை (பதார்த்த. 1103); borax. *"வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும்" (நீதிநெறி. 59).*

வெங்காரம்[2] *veṅ-kāram,* பெ.(n.) புண்ணுக்கு இடும் ஒருவகைக் காரம்; a kind of caustic.

வெங்காரிப்பு *veṅ-kārippu,* பெ.(n.) வயல்நிலம் அதிகவெப்பத்தால் வெடிக்கை; cracking of agricultural land by excessive heat.

[வெங்கார் → வெங்காரிப்பு]

வெங்காரிப்புவெட்டு-தல் *veṅkārippu-veṭṭu-,* செ.குன்றாவி.(v.t.) அறுவடைக்குப் பிறகு வயலுக்கு நீர்விட வரப்பு வெட்டுதல்; to open the ridge for watering a field for the first time after harvest.

[வெங்காரிப்பு + வெட்டுதல்]

வெங்காருடைப்பு *veṅkār-uṭaippu,* பெ.(n.) கதிரவன் வெப்பத்தால் வயல்வரப்பு பிளந்திருக்கை; cracking of ridges in wet lands owing to venkar.

[வெங்கார் + உடைப்பு]

வெங்கான்வெளி *veṅkāṉ-veḷi,* பெ.(n.) நீரற்ற நிலப்பகுதி (யாழ்.அக.); desert, arid land.

[வெம்(மை) + கான் + வெளி]

வெங்கிங்கல் *veṅgiṅkal,* பெ.(n.) கண்ணாடி போன்று பளபளப்பாக உள்ள சிக்கிமுக்கிக்கல். கோலப்பொடி செய்யப் பயன்படுகிறது (வ.ஆ.வழ.).

[வெண் → வெண்கு → வெங்கு → வெங்கி + கல்]

வெங்கிணாத்தி *veṅkiṇātti,* பெ.(n.) பெரிய மலைப்பாம்பு வகை; a huge, mountain snake (w.).



வெங்கியம் *veṅkiyam,* பெ.(n.) 1. குறிப்புப் பொருள் (நன். 269, விருத்.); suggested sense, meaning hinted at. 2. குத்தலான சொல்; wit, sarcasm (w.). 3. எல்லை வரம்பு (யாழ்.அக.); line of demarcation.

வெங்கிராயன்வெளி *veṅkirāyaṉ-veḷi,* பெ.(n.) வெங்கான்வெளி பார்க்க; see *veṅkāṉ-veḷi.*

[வெங்கான் → வெங்கிரான் → வெங்கிராயன் + வெளி]

வெங்குசம்பா *veṅku-campā,* பெ.(n.) சம்பா நெல்வகை; a kind of campa paddy.

[வெண் → வெண்கு → வெங்கு + சம்பா]

வெங்குமரிப்பூடு *veṅkumari-p-pūḍu,* பெ.(n.) பேராமணக்கு; castor plant producing large seeds-ricinus communis.

[வெங்குமரி + பூடு]

வெங்குரு[1] *veṅkuru,* பெ.(n.) 1. சீர்காழி; *sīrkāḻi.* *"சோலைகள் சூழ்ந்த வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே" (தேவா. 85, 1).*

[வெம் (மை) + குரு]

வெங்குரு[2] *veṅkuru,* பெ.(n.) 1. கூற்றுவன்; yama. *"கடுந்தூதர்........... பற்றித்தம் வெங்குருவின் பாற்காட்ட" (போற்றிப் பஃறொடை).* 2. தோல் அழற்சி; sun burn.

[வெம் (மை) + குரு]

வெங்குருவேந்தர் *veṅguru-vēndar,* பெ.(n.) வெங்குரு என்பது சீர்காழியின் பெயர்களில் ஒன்று; *veṅguru* is a one name of *śīgāḻi.*

அசுரர்கள் வழிபட்டமையால் இப்பெயர் உண்டாக்கியது. திருஞான சம்பந்தர் இவ்வூரில் தோன்றிச் சிறந்து விளங்கியமையின் திருஞான சம்பந்தர் வெங்குரு வேந்தர் என்று சிறப்புப் பெயரை அடைந்தார்.

[வெங்குரு + வேந்தர்]

வெங்கெடுத்தை *veṅkeḍuttai,* பெ.(n.) நச்சுத் தன்மையுள்ள வெண்ணிறக் கெடுத்தை மீன் (தஞ்சை. மீன.); poisonous white *keḍuttai* fish.

வெங்கைக்கலம்பகம் *veṅkai-k-kalam-pakam,* பெ.(n.) சிவபிரான் மீது சிவப்பிரகாசர் பாடிய திருவெங்கைக் கலம்பகம் என்னும் நூல்; a kalampakam poem on siva at venkai by *civa-p-pirakācar.*

[வெங்கை + கலம்பகம்]

வெங்கைக்கோவை *veṅkai-k-kōvai,* பெ.(n.) வெங்கைச் சிவபிரான் மீது சிவப்பிரகாசர் இயற்றிய கோவைச் சிற்றிலக்கியம்; a *kōvai* poem on siva at venkai, by civappirakasar.

[வெங்கை + கோவை]

வெங்கைபடுகனி *veṅkaipaḍukaṉi,* பெ.(n.) சீந்திற் கொடி; moon creeper-tinospora cordifolia.

[வெங்கை + படுகனி]



வெங்கையலங்காரம் *veṅkai-y-alaṅ-kāram,* பெ.(n.) வெங்கை சிவபிரான் மீது சிவப்பிரகாசர் பாடிய சிற்றிலக்கியங்களுள் ஒன்று; a work on siva at *veṅkai,* by *civappirakācar.*

[வெங்கை + அலங்காரம்]

வெங்கையுலா *veṅkai-y-ulā,* பெ.(n.) வெங்கைச் சிவபிரான் மீது சிவப்பிரகாசர் இயற்றிய உலாநூல்; a ula poem on siva at *veṅkai,* by *civappiakācar.*

[வெங்கை + உலா]

வெங்கொதிப்பு *veṅkodippu*, பெ.(n.) பெருங்கொதிப்பு; great heat.

[வெம்-மை + கொதிப்பு → வெங்கொதிப்பு]

வெங்கோல் *veṅ-kōl*, பெ.(n.) வெங்கோன்மை பார்க்க; see *veṅkōṉmai*.

[வெம்மை + கோல்]

வெங்கோலன் *veṅkōlaṉ*, பெ.(n.) கொடுங் கோலையுடைய மன்னன்; tyran, cruel ruler. *"வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன்" (குறள், 563).*

[வெங்கோல் + அன்]

வெங்கோன்மை *veṅkōṉmai*, பெ.(n.) கொடுங்கோல்; cruel government.

[வெங்கோல் + மை]

வெச்சம் *veccam*, பெ.(n.) மாணிக்கக் குற்றவகை; a defect in rubies. *"வெச்சம் பொரிவு" (கல்லா. 98).*

வெச்சமுது *veccamudu*, பெ.(n.) சமைத்த உணவு; cooked food. *"வெச்சமுது மண்டபமும்" (T.A.s.i, 100).*

[வெச்சு + அமுது]

வெச்சு *veccu*, பெ.(n.) வெம்மை; heat.

[வெய்து → வெச்சு]

வெச்சுவெச்செனல் *veccu-veccenal*, பெ.(n.) வெச்செனல் பார்க்க; see *veccenal*. (w.)

[வெச்சு + வெச்சு + எனல்]

வெச்சுவெந்நீர் *veccu-vennīr*, பெ.(n.) சுடுநீர் (யாழ்.அக.); hot water.

[வெச்சு + வெந்நீர்]

வெச்செனல் *veccenal*, பெ.(n.) 1. வெம்மைக் குறிப்பு; being hot, becoming heated. *"தண்ணென்று வெச்சென்று" (குமர. பிர. மீனாட்பிள்ளைத். 1).* 2. கடுமையாதற்குறிப்பு; being harsh. *"தமதீஞ் சொல் வெச் சென்றிடச் சொல்லி" (சீவக. 2015).*

[வெச்சு + எனல்]

வெச்செனவு *veccenavu*, பெ.(n.) சூடு; heat. *"தண்ணெனவும் வெச்செனவுந் தந்து" (சேதுபு. கடவுள். 3).*

[வெச்செனல் → வெச்செனவு]

வெசவி *vecavi*, பெ.(n.) வெப்பகாலம்; hot weather.

[வெச்சு → வெசவி]

வெஞ்சம்¹ *veñcam*, பெ.(n.) வஞ்சம்¹ பார்க்க; see *vañjam*¹.

[வஞ்சம் → வெஞ்சம்]

வெஞ்சம்² *veñcam*, பெ.(n.) கோபம் (யாழ்.அக.); anger.

[வஞ்சம் → வெஞ்சம்]

வெஞ்சமம்¹ *veñ-camam*, பெ.(n.) பாலைப் பண்வகை (நம்பியகப்.); a melody-type of the *pālai* class.

[வெம்மை + சமம்]

வெஞ்சமம்² *veñ-camam*, பெ.(n.) கொடுமையான போர்; war, battle. *"விளிந்தா ரொழிந்தார் வெஞ்சமத்தில்" (பாரத. பன்னிரண்டாம். 73).*

[வெம் (மை) + சமம்]

வெஞ்சமன் *veñ-camaṉ,* பெ.(n.) இயமன்; yaman (w.).

[வெம்மை + சமன்]

வெஞ்சனபண்டாரம் *veñcaṉa-paṇḍāram,* பெ.(n.) வெஞ்சனம்[1] பார்க்க; see *veñcaṉam.*

[வெஞ்சனம் + பண்டாரம்]

வெஞ்சனம் *veṉ-caṉam,* பெ.(n.) 1. சமைத்த கறியுணவு; vegetable relish. 2. கறிக்குதவும் பண்டம்; condiment. 3. குழம்பு; sauce (w.). 4. மெய்யெழுத்து; consonant (w.).

ஆணம் - வெஞ்சணம் என்னும் இரு சொற்களும் பெரும்பாலும் கீழ்வகுப்பாரிடையே வழங்குகின்றன. ஆணம் என்னும் சொல்லே வெந்த குழம்பைத்தான் குறிக்கும். ஆயினும் பச்சடியினின்று தெளிவாய் வேறுபடுத்திக் காட்டற்கு வெந்த என்னும் அடை பெற்றது. "நண்டாணமுங் களியும் தின்றாலோ தெரியும்" என்பது பழமொழி. இதில் ஆணம் என்பது சமைத்த குழம்பைக் குறித்தல். காண்க. (வ.மொ.வ. பக். 267).

[வெந்த + ஆணம் → வெஞ்சணம் → வெஞ்சனம்]

வெஞ்சிலைச்செல்வன் *veñ-cilai-c-celvaṉ,* பெ.(n.) வீரபத்திரன்; virabhadra (w.).

[வெம்(மை) + சிலை + செல்வன்]

வெஞ்சினக்காரன் *veñ-ciṉa-k-kāraṉ,* பெ.(n.) கடுங்கோவக்காரன்; man of strong feeling of anger.

[வெஞ்சினம் + காரன்]

வெஞ்சினம்[1] *veñ-ciṉam,* பெ.(n.) கடுங்கோபம்; extreme anger. *"வெஞ்சின மின்மையும்" (சிறுபாண். 210).*

[வெம்மை + சினம்]

வெஞ்சினம்[2] *veñ-ciṉam,* பெ.(n.) வெஞ்சனம் 1, 2, 3 பார்க்க; see *veñ-caṉam 1,2,3. "வெஞ்சினங்களென்றும் விரும்பாளே" (தனிப்பா. 1, 304, 25).*

[வெஞ்சனம் → வெஞ்சினம்]

வெஞ்சுடர் *veñ-cuḍar,* பெ.(n.) சூரியன்; sun. *"வெஞ்சுடரொளியுநீ" (பரிபா. 3, 6, 7).*

[வெம்மை + சுடர்]

வெஞ்சொல் *veñ-col,* பெ.(n.) கடுஞ்சொல்; harsh word. *"கருமன நச்சு வெஞ்சொற் கட்டியங்காரன்" (சீவக. 744).*

[வெம்-மை + சொல்]

வெஞ்சோறு[1] *veñ-cōṟu,* பெ.(n.) சுடுசோறு; cooked rice, as hot. *"எயிற்றிய ரட்ட வின்புளி வெஞ்சோறு" (சிறுபாண். 175).*

[வெம்(மை) + சோறு]

வெஞ்சோறு[2] *veñ-cōṟu,* பெ.(n.) கறி சேர்க்கப்படாத சோறு; plain rice, without curry.

[வெண்(மை) + சோறு]

வெட்கக்கேடு *veṭka-k-kēḍu,* பெ.(n.) வெட்கம் பார்க்க; see *veṭkam.*

[வெட்கம் + கேடு]

வெட்கங்கெட்டவன் *veṭkaṅ-keṭṭavaṉ,* பெ.(n.) இழிவானவன்; shameless fellow.

[வெட்கம் + கெட்டவன்]

வெட்கம்கெடு-த்தல் *veṭkam-keḍu-,* செ.குன்றாவி. (v.t.) இழிவு படுத்துதல்; to disgrace (w.).

[வெட்கம் + கெடு]

வெட்கஞ்சிக்கி *vețkañ-cikki,* பெ.(n.) நாணமின்மை; want of modestry (w.).

[வெட்கம் + சிக்கி]

வெட்கப்படு-தல் *vețka-p-paḍu-,* செ.கு.வி. (v.i.) 1. நாணமடைதல்; to be ashamed. 2. கூச்சமடைதல்; to be bashful. *'அந்தப் பெண் புருடர் முன் வர வெட்கப்படுகிறாள்'.*

[வெட்கம் + படு-]

வெட்கப்படுத்து-தல் *vețka-p-paḍuttu-,* செ.கு.வி. (v.i.) இழிவு படுத்துதல்; to put to shame (w.).

[வெட்கம் + படுத்து-,]

வெட்கம் *vețkam,* பெ.(n.) 1. அவமானம் (சூடா.); shame. *"வெட்கத்துக்குக் காடிளனி நானோ" (இராம. யுத்த. 32).* 2. கூச்சம்; coyness, bashfulness.

[வெட்கு → வெட்கம்]

வெட்கறை *vet-karai,* பெ.(n.) வெட்கங்கெட்டவன் பார்க்க; see *vețkań-keṭṭavan.*(w.)

[வெட்கு + அறு → வெட்கறை]

வெட்காலி *vet-kāli,* பெ.(n.) மரவகை; a kind of button tree.

[வெண்-மை + கால் → வெட்காலி]

வெட்கிளுவை *vet-kiluvai,* பெ.(n.) காட்டுக்கிளுவை; hill balsam tree. (w.)

[வெண்-மை + கிளுவை → வெட்கிளுவை]

வெட்கு *vețku,* வி.(v.) அவமானம் அடைதல்; feel disgraced. *'நாங்கள் வெட்கித் தலைகுனியும்படி ஒரு செயலைச் செய்து விட்டாயே, மனைவியை அடித்தது வெட்கும்படியான செயல் இல்லையா'.*

[வெள்கு → வெட்கு]

வெட்கு-தல் *vețku-,* செ.கு.வி. (v.i.) 1. நாணப் படுதல்; to be ashamed. 2. கூச்சப்படுதல்; to be bashful. 3. அஞ்சுதல்; to be afraid (w.).

[வெள்கு → வெட்கு]

வெட்குவெட்கெனல் *vețku-vețkenal,* பெ.(n.) வெட்கக்குறிப்பு (யாழ்.அக.); expr. of shame.

[வெட்கு + வெட்கு + எனல்]

வெட்கெனல் *vețkenal,* பெ.(n.) வெள்ளறி வினனாதற்குறிப்பு; expr. of shallowness, empty-headedness. *"வெட்கென்றார் வெஞ்சொலா விண்புறுவார்" (நான்மணி. 73).*

[வெட்கு + எனல்]

வெட்சி *vețci,* பெ.(n.) 1. செடிவகை; scarlet ixora.m.sh. *"செங்கால் வெட்சிச் சீறிதழ்" (திருமுரு. 21).* 2. போர்த் தொடக்கமாக வெட்சிப் பூ அணிந்து பகைவர் நிரையைக் கவர்தலைக் கூறும் புறத்துறை (தொல். பொ. 57); theme describing a king's follower wearing *vețci* flowers and capturing the cows of the enemy.



வெட்சிக்கரந்தை *vetci-k-karandai,* பெ.(n.) பகைவர் கவர்ந்து கொண்ட ஆனிரையை மீட்பதைக் கூறும் புறத்துறை (தொல். பொ. 57, உரை); theme-describing had captured them.

[வெட்சி + கரந்தை]

வெட்சிப்பூ *vetci-p-pū,* பெ.(n.) நறுமணப் பூ வகை; a fragrant white flower of Ixora coccinea.

[வெட்சி + பூ]

வெட்சிமறவர் *vetci-maravar,* பெ.(n.) பகைவர் நிரையைக் கவரச் செல்லும் மறவர் (தொல். பொ. 58, உரை); soldiers who captue the cows of the enemy.

[வெட்சி + மறவர்]

வெட்சிமாலையன் *vetci-mālaiyan,* பெ.(n.) குமரன்; god of *kumaran.*

[வெட்சி + மாலையன்]

வெட்சியரவம் *vetci-y-aravam,* பெ.(n.) பகைமுனையிடத்து நிரைகவரப்போகும் போது உண்டாம் ஆரவாரத்தைக் கூறும் புறத்துறை (பு.வெ. 1, 3); theme describing the tumult of warriors making preparation to go forth to capture enemy's cows.

[வெட்சி + அரவம்]

வெட்ட *vetta,* பெ.எ. (adj.) 1. அதிகமான; much. 2. தெளிவான; clear (w.).

[வெள் → வெட்ட]

வெட்டத்தண்ணீர் *vetta-t-tannīr,* பெ.(n.) இருட்பொழுதில் பளபளக்கும் கடல்நீர் (நெல்லை.மீன.); shining or glittering sea at dark night-sea-water.

[வெட்ட + தண்ணீர்]

வெட்டதிராமூலி *vetta-tirā-mūli,* பெ.(n.) யானைநெருஞ்சில் பார்க்க; see *yānai-neruñcil.*

வெட்டம் *vettam,* பெ.(n.) வெளிச்சம்; light.

[வெள் → வெட்டம்]

வெட்டரிவாள் *vettarivāl,* பெ.(n.) அரிவாள் வகை; billhook.

[வெட்டு + அரிவாள்]



வெட்டல் *vettal,* பெ.(n.) 1. வெட்டுதல்; cutting. 2. கொல்லுதல்; killing.

[வெட்டு → வெட்டல்]

வெட்டவழி *vetta-vali,* பெ.(n.) பலர் செல்லும் நெறி; beaten track (w.).

[வெட்ட + வழி]

வெட்டவிடி *vetta-vidi,* பெ.(n.) அதிகாலை (திவ். திருப்பா. 29, வ்யா. பக். 248).

[வெட்ட + விடி]

வெட்டவெடி-த்தல் *vetta-vedi-*, செ.கு.வி. (v.i.) அதிகக் கோபங்கொள்ளுதல்; to be wild with anger. *"வெட்ட வெடித்தார்க்கோர் வெவ்வழலன் காண்" (தேவா. 1143, 9).*

[வெட்ட + வெடி]

வெட்டவெளி *vetta-veli*, பெ.(n.) 1. திறந்த வெளியிடம்; open plain. *"வெட்ட வெளியாக விளங்கும் பராபரமே" (தாயு. பராபர. 362).* 2. வெளிப்படையானது; that which is clearly evident (w.)

[வெட்ட + வெளி]

வெட்டவெளிச்சம் *vetta-veliccam*, பெ.(n.) 1. பெரும் பிரங்கொளி; broad day light. 2. வெளிப்படையானது; that which is clearly evident. (w.)

[வெட்ட + வெளிச்சம்]

வெட்டவெளியாக *vetta-veli-y-āka*, வி.எச்.(adv.) வெளிப்படையாக; publicity. (w.)

[வெட்டவெளி + ஆக]

வெட்டவெளிவிமலன் *vetta-veli-vimalan*, பெ.(n.) கல்லுப்பு; rock salt.

வெட்டறாமூலி *vettarā-mūli*, பெ.(n.) நத்தைச் சூரி (யாழ்.அக.); bristly button weed.

வெட்டனம் *vettnam*, பெ.(n.) வெட்டெனம் பார்க்க (யாழ்.அக.); see *vettenam.*

வெட்டனவு *vettanavu*, பெ.(n.) 1. கடுமை (யாழ்.அக.); cruelty. 2. கெட்டியாயிருக்கை; hardness. 3. வெடுக்குத்தனம்; being cut and dry. 4. மனவுறுதி (வலிமை); force.

[வெட்டெனல் → வெட்டனவு]

வெட்டாங்கிளி *vettān-kili*, பெ.(n.) வெட்டுக்கிளி; large locust (w.).

[வெட்டு → வெட்டாம் + கிளி]

வெட்டாட்டம் *vettāttam*, பெ.(n.) தாய ஆட்டவகை; a game of dice.

[வெட்டு + ஆட்டம்]



வெட்டாந்தரை[1] *vettān-tarai*, பெ.(n.) காய்ந்திறுகிய நிலம் (யாழ்.அக.); dry hard ground, without vegetation.

[வெட்டை + ஆ + தரை]

வெட்டாந்தரை[2] *vettān-tarai*, பெ.(n.) கடலடிப்பரப்பு (தஞ்சை. மீன.); undepth sea.

வெட்டி[1] *vetti*, பெ.(n.) 1. மண்வெட்டி; spade (w.). 2. வழி (சது.); path, road, way. *"ஒளியெலா நிரம்பிய நிலைக்கோர் வெட்டியே" (அருட்பா. vi, ஆற்றாமை கூறல், ii, 2).* 3. பழைய வரிவகை; 4. வெட்டியான் 1, 2 பார்க்க; see *vettiyān1, 2.*

[வெட்டு → வெட்டி]



வெட்டி[2] *vetti,* பெ.(n.) பயனின்மை; uselessness. *'என்னை வெட்டிக்குப் பெற்று வேலிக்காலிற் போட்டிருக்கிறதா'?*

[வெற்று → வெட்டு → வெட்டி]

வெட்டி[3]-த்தல் *vetti-,* செ.கு.வி.(v.i.) கடுகடுப்பாதல்; to be harsh. *"இத்தனை போது படுத்தின சிறுமையாலே வெட்டித்து" (திவ். திருநெடுந். 21, வ்யா. பக். 188).*

[வெட்டு → வெட்டி]

வெட்டி[4] *vetti,* பெ.(n.) வெட்டிவேர் பார்க்க (யாழ்.அக.); see *vetti-vēr.*

வெட்டி[5] *vetti,* பெ.(n.) வேலை என்பதோடு இணைந்து வரும் சொல்; a word which occurs in combination with *vēlai.*

[வெற்று → வெட்டு → வெட்டி]

வெற்றுவேலை → வெட்டுவேலை

வெட்டிக்காசு *vetti-k-kāsu,* பெ.(n.) பழைய வரிவகை; an ancient tax. (I.M.p.cg. 1068).

[விள் → வெள் → வெட்டு → வெட்டி + காசு → வெட்டிக்காசு. (வே.க.பக்.151)]

வெட்டிக்கால்நண்டு *vetti-k-kāl-nandu,* பெ.(n.) வலையை வெட்டுங் கடல் நண்டு (குமரி. மீன.); a sea crab that cuts net.

[வெட்டு → வெட்டி + கால் + நண்டு]



வெட்டிக்குப்பெறு-தல் *vettikku-p-peru-,* செ.குன்றாவி.(v.t.) இலவசமாகக் கிடைத்தல்; to get grat is or for nothing.

[வெற்றுக்குப் பெறுதல் → வெட்டிக்குப் பெறுதல்]

வெட்டிக்கொட்டு-தல் *vetti-k-kottu-,* செ.குன்றாவி. (v.t.) 1. மண் முதலியன தோண்டி அப்புறப்படுத்துதல்; to dig and remove, as earth. 2. வெட்டிச்சாய்[3] பார்க்க; see *vetti-c-cāy.* *'அவன் வெட்டிக் கொட்டினானோ'?* 3. வெட்டிக்கொடு பார்க்க; see *vetti-k-kodu.*

[விள் → வெள் → வெட்டு → வெட்டி + கொட்டு-தல்]

வெட்டிக்கொடு-த்தல் *vetti-k-kodu-,* செ.குன்றாவி. (v.t.) 1. தாராளமாகக் கொடுத்தல்; to give liberally. 2. உதவுதல்; to help one with.

[விள் → வெள் → வெட்டு → வெட்டி + கொடு]

வெட்டிச்சாய்-த்தல் *veṭṭi-c-cāy-,* செ. குன்றாவி.(v.t.) 1. மரம் முதலியன முறித்து வீழ்த்துதல்; to cut down. 2. கொல்லுதல்; to kill out right. 3. பெருங்காரியங்களைச் செய்தல்; to accomplish, as great things. 4. வெட்டிக்கொடு பார்க்க; see *veṭṭi-k-koḍu.*

[விள் → வெள் → வெட்டு → வெட்டி + சாய்த்தல்]

வெட்டிச்சோறு[1] *veṭṭi-c-cōṟu,* பெ.(n.) பழைய வரிவகை; an ancient tax (Insc.).

[வெட்டி + சோறு]

வெட்டிச்சோறு[2] *veṭṭi-c-cōṟu,* பெ.(n.) தண்டச்சோறு; food given to a useless mouth.

[வெற்று + சோறு]

வெட்டிது *veṭṭidu,* பெ.(n.) கடுமையானது; that which is harsh. *"வெட்டிதாக வார்த்தை சொல்ல" (ஈடு. 3, 5, 7).*

[வெட்டி-மை → வெட்டிது]

வெட்டிநிலம் *veṭṭi-nilam,* பெ.(n.) தரிசுநிலம்; waste land, as lying waste.

[வெற்று + நிலம்]

வெட்டிப்பயல் *veṭṭi-p-payal,* பெ.(n.) பயனற்றவன்; worthless fellow (w.).

[வெட்டி + பயல்]

வெட்டிப்பாட்டம் *veṭṭi-p-pāṭṭam,* பெ.(n.) பழைய வரி வகை; an ancient tax. *"வெட்டிப் பாட்டமும் .... எப்பேர்ப்பட்ட இறைகளு முட்பட" (Insc).*

[வெட்டி + பாட்டம்]

வெட்டிப்பாடு-தல் *veṭṭi-p-pāḍu-,* செ.கு.வி. (v.i.) ஒரு புலவன் தன்னைப் பழித்துக் கூறிய சொற்களாலன்றிப் பிறவாறு அவனைப் பழித்துப்பாடுதல்; to compose a poem in retort, without using the opponent's qhraseology.

[வெட்டி + பாடு]

வெட்டிப்புடவை *veṭṭi-p-puḍavai,* பெ.(n.) பழையவரிவகை; an ancient tax. (S.I.I.i, 91).

[வெட்டி + புடவை]

வெட்டிப்புரட்டு-தல் *veṭṭi-p-puraṭṭu-,* செ.கு.வி.(v.i.) கடுமையாக வேலை செய்தல்; to work hard.

[வெட்டு + புரட்டு → வெட்டிப்புரட்டு]

வெட்டிப்பேச்சு *veṭṭi-p-pēccu,* பெ.(n.) வீணான பேச்சு; vain talk, useless speech. *'வெட்டிப்பேச்சுப் பேசாதே காரியத்தை முடி'.*

[வெட்டி + பேச்சு]

வெட்டிப்பேசு¹-தல் *veṭṭi-p-pēcu-,* செ. குன்றாவி.(v.t.) 1. எதிர்த்துச் சொல்லுதல்; to retort. 2. கண்டித்துச் சொல்லுதல் (சங்.அக.); to rebuke.

[வெட்டு பேசு → வெட்டிப்பேசு]

வெட்டிப்பேசு¹-தல் *veṭṭi-p-pēcu-,* செ.கு.வி. (v.i.) கடுமையாகப் பேசுதல்; to speak harshly.

[வெட்டு பேசு → வெட்டிப்பேசு]

வெட்டிமுறி¹-த்தல் *veṭṭi-muṟi-,* செ.கு.வி. (v.i.) (இகழ்ச்சி தொனியில் கூறுகையில்)

பெரிதாகச் செய்தல்; do wonderful job. *'நீ வீட்டில் வெட்டி முறித்தது போதும் கடைக்குப் போய் இந்தச் சாமான்களை வாங்கி வா'.*

[வெட்டி + முறி–,]

வெட்டிமுறி²–த்தல் *vetti-muri-,* செ. குன்றாவி.(v.t.) வெட்டிச்சாய் 1,2,3 பார்க்க; see *vetti-c-cāy 1,2,3.*

[வெட்டு + சாய் → வெட்டிமுறி]

வெட்டிமை *vettimai,* பெ.(n.) 1. கொடுமை; harshless. 2. வன்பேச்சு; harshless of speech. *"உறவற்ற சொல்லாலே வெட்டிமை யெல்லாம் சொல்லவில்லை" (திவ்.திருப்பா. 15, வ்யா. பக். 149).* 3. சினம் (சங்.அக.); anger. 4. வெட்டியானூழியம்; service of vettiyan.

[வெட்டு → வெட்டிமை]

வெட்டியார்பறையர் *vettiyār-paraiyar,* பெ.(n.) சில விழா நிகழ்ச்சிக் காலங்களில் பறை கொட்டல் புரியும் பறையர்வகையார்; a sub-division of the paraiyas, who act as drummers on certain ceremonial occasions (M.M.655).

[வெட்டியான் + பறையர் → வெட்டியார்பறையர்]

வெட்டியான் *vettiyān,* பெ.(n.) 1. ஒரு வகைச் சிற்றூர் ஊழியக்காரன்; a village menial servant. 2. பிணஞ்சுடுவோன் (யாழ்.அக.); one who exemates corpres. 3. பயிர்களை வெட்டியழிக்கும் பூச்சிவகை; an insect that cuts off the leaves of crops (w.).

[வெட்டு → வெட்டியான்]

வெட்டிரம் *vettiram,* பெ.(n.) இலந்தை; indian plum-zizyphus jujuba.

வெட்டிரும்பு *vettirumbu,* பெ.(n.) இரும்பு வெட்டும் உளி (யாழ்.அக.); cold chisel.

[வெட்டு + இரும்பு]



வெட்டிவரி *vetti-vari,* பெ.(n.) பழைய வரிவகை; an ancient tax.

[வெட்டி + வரி]

வெட்டிவார்த்தை *vetti-vārttai,* பெ.(n.) வெட்டிப்பேச்சு பார்க்க; see *vetti-p-pēccu.*

*[வெட்டி + **Skt.** vārtta > த. வார்த்தை]*

வெட்டிவீரன் *vetti-viran,* பெ.(n.) சிறந்த வீரன் (யாழ்.அக.); man of supreme heroism.

[வெற்றி → வெட்டி + வீரன்]

வெட்டிவேதினை *vetti-vētinai,* பெ.(n.) பழைய வரிவகை; an ancient tax (I.M.p.Tj. 94).

[வெட்டி + வேதினை]

வெட்டிவேர்[1] *vetti-vēr,* பெ.(n.) ஒரு வகைப் புல்லின் அடிவேர்; khus-khus whitish yellow root-vetiveria zizaniodes. it contains a resin and volatilc oil. it is a stimulent, diaphoretic and aromatic.

மறுவ. விழல்வேர், குறுவேர், விலாமிச்சை வேர், கஸ்கஸ்.

[வெட்டு → வெட்டி + வேர்]

வெட்டிவேர்[2] *vetti-vēr,* பெ.(n.) இலாமிச்சைப் புல் (பதார்த்த. 477); cuscus-grass. 2. கருப்பு இலாமிச்சை; black cuscus-grass.

[வெட்டு → வெட்டி + வேர்]

வெட்டிவேலை *vetti-vēlai,* பெ.(n.) பயனற்ற செயல்; futile enterprise.

[வெற்றுவேலை → வெட்டிவேலை]

வெட்டிவை *vetti-vai,* பெ.(n.) வெட்டிமை 1,2,3 பார்க்க (யாழ்.அக.); see *vettimai 1,2,3.*

[வெட்டிமை → வெட்டிவை]

வெட்டு[1]-தல் *vettu-,* செ.குன்றாவி. (v.t.) 1. வாள் முதலியவற்றால் பிளவுபட எறிதல்; to cut, as with a sword or axe. *"அரியயன்றலை வெட்டி வட்டாடினார்" (தேவா. 369, 2).* 2. எழுத்து முதலியன பொறித்தல்; to engrave. 3. தோண்டுதல்; to dig, as a well. *'கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது'.* 4. தவச அளவில் தலை வழித்தல்; to strike of, as the top of a measure, in measuring grain. *'தலை வெட்டி அள'.* 5. தலைமுடியைக் கத்தரித்தல்; to crop, as the head. 6. துணி முதலியன துண்டித்தல்; to cut, as a cloth. 7. ஆட்டக் காயைப் பயனற்றதாக நீக்குதல்; to take away, as a piece in chess and other games. 8. புழுக்கடித்தல்; to injure, as insects. 9. அழித்தல்; to destroy. 10. மறுத் துரைத்தல்; retort, refute. *'எப்போதும் வெட்டியே பேசுகிறான்'.* 11. கடிந்து பேசுதல்; to speak harshly.

[விள் → வெள் → வெட்டு-தல்]

வெட்டு[2]-தல் *vettu-,* செ.கு.வி. (v.i.) 1. பளிச் சென மின்னுதல்; to flash suddenly, as light ring. 2. கடுமையாதல்; to be harsh. *"வெட்டிய மொழியினன்" (கம்பரா. குகப். 9).* 3. திடீரென்று நற்பேறு உண்டாதல்; to have a sudden stoke of fortune.

[விள் → வெள் → வெட்டு-தல்]

வெட்டு[3] *vettu,* பெ.(n.) 1. துண்டிப்பு; cutting. *'ஒரு வெட்டில் அந்த மரம் விழும்'.* 2. வெட்டுதலா லுண்டாம் புண் முதலியன; wound, cut. 3. எழுத்து முதலியன பொறிக்கை; engraving. *'கல்வெட்டுச் சாசனம்'.* 4. ஒருவகைப் பழைய சிறு காசு; an ancient small coin. *"தன்னுடைய வெட்டென்றும்" (பணவிடு. 143).* 5. தையல் துணி வெட்டுகை; cutting by tailor. 6. தலை முடி கத்திரிக்கை; cropping the hair. 7. ஆட்டக்காயை நீக்குகை; removing a piece in chess and other games. 8. தீடீரென வரும் நற்பேறு; stroke of fortune. *'அவனுக்குத் திடீரென ஒரு வெட்டு வெட்டிற்று'. 'இரண்டாயிர உரூபா கிடைத்தது'.* 9. பாட்டு; ostentation. 10. வஞ்சனை; cunning. 11. நாயை ஓட்டும் போது கூறும் சொல்; an expression used

in driving away dogs.

[விள் → வெள் → வெட்டு. (வே.க.பக்.151)]

வெட்டுக்கட்டை *veṭṭu-k-kaṭṭai,* பெ.(n.) கிளையற்ற அடிமரம்; stump.

[விள் → வெள் → வெட்டு + கட்டை → வெட்டுக்கட்டை. (வே.க.பக்.151)]

வெட்டுக்கத்தி *veṭṭu-k-katti,* பெ.(n.) கத்திவகை; cleaver, chopper.

[விள் → வெள் → வெட்டு + கத்தி → வெட்டுக்கத்தி. (வே.க.பக்.151)]



வெட்டுக்கல் *veṭṭu-k-kal,* பெ.(n.) சொறிக்கல்; laterite.

[வெட்டு + கல்]

வெட்டுக்கன்று *veṭṭu-k-kaṉṟu,* பெ.(n.) பால் மறந்த கன்று (யாழ்.அக.); weaned calf.

[விட்ட → வெட்ட → வெட்டு + கன்று]

வெட்டுக்காடு *veṭṭu-k-kāḍu,* பெ.(n.) திருத்தியமைத்த காட்டு நிலம்; jungle land cleared and brought under cultivation.

[வெட்டு + காடு]

வெட்டுக்காயப்பச்சிலை *veṭṭu-k-kāya-p-paccilai,* பெ.(n.) செடிவகை; a plant-clitoria ternata.

[வெட்டு + காயம் + பச்சிலை]

வெட்டுக்காயம் *veṭṭu-k-kāyam,* பெ.(n.) வெட்டினாலுண்டாம்புண்; cut, incised wond.

[விள் → வெள் → வெட்டு + காயம் → வெட்டுக்காயம்]

வெட்டுக்கால் *veṭṭu-k-kāl,* பெ.(n.) மாட்டின் தீச்சுழிவகை (பெ.மாட்.); an inauspicious sign or mark in cattle.

[வெட்டு + கால்]

வெட்டுக்கிளி *veṭṭu-k-kiḷi,* பெ.(n.) ஒருவகைப் பூச்சி; grass hopper. (w.)

[வெட்டு + கிளி]



வெட்டுக்குத்து *veṭṭu-k-kuttu,* பெ.(n.) கத்தி முதலிய கூரான படைக்கலங்களைக் கொண்டு செய்யுஞ் சண்டை; fighting with sharp weapons.

[வெட்டு + குத்து]

வெட்டுக்குத்துப்பழி *veṭṭu-k-kuttu-p-paḻi,* பெ.(n.) வெட்டுப்பழி பார்க்க; see *veṭṭu-p-paḻi.*

[வெட்டுக்குத்து + பழி]

வெட்டுக்குருத்து *veṭṭu-k-kuruttu,* பெ.(n.) வெட்டுப்பட்ட இடத்தில் தோன்றும் குருத்து (திவா.); shoot sprouting in a lopped tree.

[வெட்டு + குருத்து]

வெட்டுக்குருந்து *veṭṭu-k-kurundu,* பெ.(n.) செடிகளின் இளங்குருத்து அல்லது தண்டு; newly sprouted part of a plant.

[வெட்டு + குருந்து]

வெட்டுக்குளம்பு *veṭṭu-k-kuḷambu,* பெ.(n.) கால்நடையின் பிளவுற்ற குளம்பு (அபி.சிந்.); cloven hoofed.

[வெட்டு + குளம்பு]

வெட்டுக்கூர் *veṭṭu-k-kūr,* பெ.(n.) கூராணி; pointed nail.

[வெட்டு + கூர்]

வெட்டுக்கை *veṭṭu-k-kai,* பெ.(n.) குறுக்கு வடிவாக இணைக்கப்பட்ட கைமர அமைப்பு; a wooden instrument jointed horizontally.

[வெட்டு + கை]

வெட்டுகிற *veṭṭukira,* பெ.எ. (adj.) கூரிய, ஊடுருவிச் செல்லுந் தன்மையுடையது; trenchant.

வெட்டுச்சட்டை *veṭṭu-c-caṭṭai,* பெ.(n.) பெண்கள் அணியும் ஒருவகை அங்கி; a kind of jacket for girls.

[வெட்டு + சட்டை]

வெட்டுச்சந்தம் *veṭṭu-c-candam,* பெ.(n.) சந்தனச் சிராய்; pieces of sandal wood.

[வெட்டு + சந்தம்]

வெட்டுடையாதி *veṭṭuḍaiyāti,* பெ.(n.) காட்டெருமை; wild buffalo.



வெட்டுண்டபுண் *veṭṭuṇḍa-puṇ,* பெ.(n.) வெட்டுக்காயம் பார்க்க; see *veṭṭu-k-kāyam.*

[வெட்டுண்ட + புண்]

வெட்டுண்(ணு)-தல் *veṭṭuṇ(ṇu)-,* செ.கு.வி. (v.i.) முற்படுதல்; to be cut.

[வெட்டு + உண்]

வெட்டுணி[1] *veṭṭuṇi,* பெ.(n.) திப்பிலி மூலம் (சா.அ.); root of long pepper-piper longum.

வெட்டுணி[2] *veṭṭuṇi,* பெ.(n.) 1. கீழ்ப்படியாத பிள்ளை; disobedient child. 2. கொடூரன்; villain.

[வெட்டுண் + இ]

வெட்டுத்தட்டு *veṭṭu-t-taṭṭu,* பெ.(n.) பறையின் வாய்வார்; ear of a drum (w.).

[வெட்டு + தட்டு]

வெட்டுத்தாக்கு *veṭṭu-t-tākku,* பெ.(n.) மண்ணெடுத்த குழி; excavated pit.

[வெட்டு + தாக்கு]

வெட்டுத்தாவு *vettu-t-tāvu,* பெ.(n.) குளம் ஏரி முதலியவற்றில் வெட்டப்பட்ட ஆழமான பகுதி; tank pit, deep portion of a tank.

[வெட்டு + தாவு]

வெட்டுப்பகை *vettu-p-pagai,* பெ.(n.) *வெட்டுப்பழி* பார்க்க; see *vettu-p-pali.* *'இட்டவன் இராவிட்டால் வெட்டுப்பகை'.*

[வெட்டு + பகை]

வெட்டுப்படு-தல் *vettu-p-padu-,* செ.கு.வி.(v.i.) *வெட்டுண்* பார்க்க; see *vettun.* *'வெட்டுப்பட்டாய் மகனே தலை நாளின் விதிப்படியே' (தனிப்பா. 1, 149, 54).*

[வெட்டு + படு-,]

வெட்டுப்படை *vettu-p-padai,* பெ.(n.) வாட்படை; army of swordsmen (w.).

[வெட்டு + படை]

வெட்டுப்பழி *vettu-p-pali,* பெ.(n.) தீராப்பகை; martal feud. *'அவனுக்கும் இவனுக்கும் வெட்டுப்பழி குத்துப்பழியாக இருக்கிறது'.*

[வெட்டு + பழி]

வெட்டுப்பாக்கு *vettu-p-pākku,* பெ.(n.) இரண்டாகப் பிளக்கப்பட்ட மட்டமான பாக்கு; split arecanut of inferior greality.

[வெட்டு + பாக்கு]

வெட்டுப்பாக்குவெட்டி *vettu-p-pākku-vetti,* பெ.(n.) பாக்குவெட்டிவகை; a kind of arecanut cracker.

[வெட்டு + பாக்கு + வெட்டி]



வெட்டுப்பாய்ச்சி *vettu-p-pāycci,* பெ.(n.) கருத்த கடல் மீன் (தஞ்சை.மீன.); a blackish sea fish.

[வெட்டு + பாய்ச்சி]

வெட்டுப்பூச்சி *vettu-p-pūcci,* பெ.(n.) வெட்டுக்கிளி பார்க்க; see *vettu-k-kili.*

[வெட்டு + பூச்சி]

வெட்டுமரம் *vettu-maram,* பெ.(n.) கட்டடப் பணிகளுக்குப் பயன்படும் மரங்கள்; woods used for building activities.

[வெட்டு + மரம்]

வெட்டுமருந்து *vettu-maruntu,* பெ.(n.) வெட்டிக் கொள்ளப்படும் மருந்து வகை; medicinal herbs, roots, barks, etc., as obtained by cutting.

[வெட்டு + மருந்து]

வெட்டுமாலை *vettu-mālai,* பெ.(n.) வெட்டுத்தாக்கு பார்க்க; see *vettu-t-tākku.*

[வெட்டு + மாலை]

வெட்டுமாறன் *vettu-māran,* பெ.(n.) வெறிதரும் ஒருவகைப் பண்டம் (யாழ்.அக.); an intoxicant.

[வெட்டு + மாறு → வெட்டுமாறன்]

வெட்டுமுளை *vettu-mulai,* பெ.(n.) புதிதாக அடிக்கப்பட்ட காசு; money recently minted (w.).

[வெட்டு + முளை]

வெட்டுமுனை *vettu-munai,* பெ.(n.) உளி, வாள் போன்ற தச்சுக்கருவிகளின் வெட்டும் கூர்மைப் பகுதி (தச்.பொறி.); sharp end of carpentry instiverts like saw, chisel etc.

[வெட்டு + முனை]

வெட்டுருக்கு *vetturukku,* பெ.(n.) ஒன்பானுலகில் ஒன்று, அதாவது கருவங்கம்; one of nine metals lead.

[வெட்டு + உருக்கு]

வெட்டுரை[1] *vetturai,* பெ.(n.) வெடு வெடுப்பான பேச்சு (யாழ்.அக.); cutting word, harsh speech.

[வெட்டு + உரை]

வெட்டுரை[2] *vetturai,* பெ.(n.) வெட்டுரைப் பணம் பார்க்க; see *vetturai-p-panam* (w.).

[வெட்டு + உரை]

வெட்டுரைப்பணம் *vetturai-p-panam,* பெ.(n.) கள்ள நாணயம் (யாழ்.அக.); bad coin.

[வெட்டுரை + பணம்]

வெட்டுவாய் *vettu-vāy,* பெ.(n.) 1. அறுபட்ட புண்வாய்; gash, opening of a cut. 2. பொருத்து; joining(w.).

[வெட்டு + வாய்]

வெட்டுவாலி *vettu-vāli,* பெ.(n.) வெட்டுக்கிளி பார்க்க; see *vettu-k-kili.*(w.).

[வெட்டுக்கிளி → வெட்டுவாளி → வெட்டுவாலி]

வெட்டுவாள் *vettu-vāl,* பெ.(n.) வெட்டுக் கத்திவகை (யாழ்.அக.); a kind of chopper.

[வெட்டு + வாள்]

வெட்டுவெட்டெனல் *vettu-vettenal,* பெ.(n.) 1. இனக்குறிப்பு; being angry. 2. கடுமைக் குறிப்பு (யாழ்.அக.); being harsh. 3. அச்சக் குறிப்பு; being frightened. 4. ஒளி விடற் குறிப்பு; dazzling (w.). *'வெயில் வெட்டுவெட்டென்றெறிக்கிறது'.*

[வெட்டு + வெட்டு + எனல்]

வெட்டுவேர் *vettu-vēr,* பெ.(n.) வெட்டிவேர்[1] பார்க்க (பிங்.); see *vettivēr*[1].

[வெட்டு + வேர்]

வெட்டுவேளாண்மை *vettu-vēlānmai,* பெ.(n.) அறுவடை; harvest (w.).

[வெட்டு + வேளாண்மை]

வெட்டுளி *vettuli,* பெ.(n.) வெட்டிரும்பு பார்க்க; see *vettirumbu.*

[வெட்டு + உளி]

வெட்டெனல்[1] *vettenal,* பெ.(n.) கடுமைக் குறிப்பு; expr. of harshness. *'வெட்டெனப் பேசன்மின் (தேவா. 1241, 3).*

[வெட்டை + எனல்]

வெட்டெனல்[2] *vettenal,* பெ.(n.) மௌனமாய் இசைத்தற்குறிப்பு; expr. of giving consent by silence. *"ஆய்ச்சி........... குறுங் கயிற்றாற் கட்ட வெட்டென் றிருந்தான்" (திவ். பெரியதி. 5, 9, 7).*

[வெற்றெனல் → வெட்டெனல்]

வெட்டெனவு *vettenavu,* பெ.(n.) 1. கடுமை; severity, harshness. 2. வன்மை; hardness. 3. வன்மையானது; that which in severe or hard. *"வெட்டெனவு மெத்தெனவை வெல்லாவாம்" (மூதுரை. 33).*

[வெட்டெனல் → வெட்டெனவு]

வெட்டேறு *vettēru,* பெ.(n.) போர்க் கருவிகள் (யாழ்.அக.); a weapon.

[விட்டேறு → வெட்டேறு]

வெட்டை[1] *vettai,* பெ.(n.) 1. வெப்பம்; heat. *"அனல் வெட்டையாற் சுருண்டு" (இராமநா. உயுத். 14).* 2. நிலக்கொதி; heat of the ground (w.). 3. காமவிச்சை; passion, lust. *"காம வேட்டையிலே மதிமயங்கி" (தனிப்பா. i, 195, 10).* 4. நோய்வகை; gonorrhoea.

[வெட்கை → வெட்டை]

வெட்டை[2] *vettai,* பெ.(n.) 1. வெறுமை; emptiness. 2. பயனின்மை; uselessness. *'தங்கம் வெட்டையாய்ப் போய்விட்டது'.* 3. காய்ந்திறுகிய நிலம்; hard ground. 4. அழிவு; ruin. *'அவன் தொட்டவிடமெல்லாம் வெட்டை தான்'.* 4. கடினத்தன்மை; hardness (w.).

[வெட்டி → வெட்டை]

வெட்டை[3] *vettai,* பெ.(n.) வெளி (சங்.அக.); open land.

[வெளி → வெட்டை]

வெட்டைக்கிரந்தி *vettai-k-kiranti,* பெ.(n.) வெட்டைச் சூட்டினாலேற்பட்ட கரப்பான்புண்; rashes caused by venereal disease.

[வெட்டை + கிரந்தி]

வெட்டைச்சுரம் *vettai-c-curam,* பெ.(n.) உடம்பின் அதிக சூட்டினால் வந்த காய்ச்சல்; fever due to venereal heat.

[வெட்டை + சுரம்]

வெட்டைச்சூடு *vettai-c-cūdu,* பெ.(n.) பெண்ணின்பத்தினாலேற் பட்ட சூடு; heat caused by inter course-venereal heat.

[வெட்டை + சூடு]

வெட்டைநாள் *vettai-nāl,* பெ.(n.) மிகுந்த சூடான தட்பவெட்பம்; very hot weather.

[வெட்டை + நாள்]

வெட்டைப்பிடிப்பு *vettai-p-pidippu,* பெ.(n.) 1. வளிப்பிடிப்பு நோய்வகை; rheumatism. 2. விதை வீக்கம்; inflammation of the testicles, orchitis.

[வெட்டை + பிடிப்பு]

வெட்டைமுடிதல் *vettai-mudital,* பெ.(n.) மேக வேட்டை தீர்தல்; cure of venereal affection.

[வெட்டை + முடிதல்]

வெட்டையனல் *vettai-yanal,* பெ.(n.) வெட்டைச்சூடு; congenital heat.

[வெட்டை + அனல்]

வெட்டையாய்ப்போதல் *vettaiyāy-p-pōdal,* பெ.(n.) தீய்ந்து போதல்; over heated not malleable, becoming brittle.

[வெட்டையாய் + போதல்]

வெட்டையிருமல் *vettai-yirumal,* பெ.(n.) சூட்டினால் உண்டாகும் இருமல்; cough due

to excess heat.

[வெட்டை + இருமல்]

வெட்டைவாள்கூடு *vettai-vāl-kūdu,* பெ.(n.) 1. விட்டில் கட்டுகிற அரக்கு; lac taken from the wasp nest built in houses. 2. குழவிக்கூடு; waspnest.

[வெட்டை + வாள் + கூடு]

வெட்டைவெளி *vettai-veli,* பெ.(n.) வெட்டவெளி [1] (சங்.அக.) பார்க்க; see *vetta-veli* [1].

[வெட்டை + வெளி]

வெட்டொழிவு *vettolivu,* பெ.(n.) நிலத்தைப் பயன்படுத்திய செலவிற்குக் கொடுக்கும் தொகை; allowance for improvements made on land by the tenant.

[வெட்டு + ஒழிவு]

வெட்பகடம் *vetpa-katam,* பெ.(n.) வெளிப்பகட்டு; outward show.

[வெள் + பகடம்]

வெட்பலாவிகம் *vetpala-vikam,* பெ.(n.) வெள்வேல்; white babool.

[வெட்பலா + விகம்]

வெட்பாடம் *vet-pādam,* பெ.(n.) வாய்ப்பாடம்; lesson learnt merely by rote.

[வெள் + பாடம்]

வெட்பாலை *vet-pālai,* பெ.(n.) 1. மரவகை (பிங்.); dyeing rosebay. 2. குடசப் பாலை; connesibark.

[வெள் + பாலை]

வெட்பாலையரிசி *vetpālai-y-arisi,* பெ.(n.) மருந்துச் சரக்குவகை; a medicinal druk.

[வெட்பாலை + அரிசி]

வெட்பாலைவிதை *vetpālai-vidai,* பெ.(n.) வெட்பாலரிசி பார்க்க; see *vetpālarisi.*

[வெட்பாலை + விதை]

வெட்பாவட்டை *vetpā-vattai,* பெ.(n.) 1. பாவட்டைவகை(வின்.); a species of pavattai plant. 2. ஆடாதோடை; a shrub adhathoda vesica.

[வெள் + பாவட்டை]



வெட்புகார் *vet-pugār,* பெ.(n.) மழை நீரற்ற மேகம் (யாழ்.அக.); rainless cloud.

[வெள் + புகார்]

வெட்புலம் *vet-pulam,* பெ.(n.) வெற்றிடம்; bare ground. *'வெட்புலந் தன்னிற் சோகமிஞ்சவே' (பாரத. நுச்சுப். 33).*

[வெள் + புலம்]

வெட்பூண்டு *vet-pūndu,* பெ.(n.) வெள்ளைப் பூண்டு; garlic-allium satirum.

[வெள் + பூண்டு]



வெட்பூல்[1] *veṭ-pūl,* பெ.(n.) சாம்பல் நிறப் பூலா; a variety of poola.

[வெள் + பூல்]

வெட்பூல்[2] *veṭ-pūl[2],* பெ.(n.) வெள்ளைப்பூலா பார்க்க; see *veḷḷi-p-pūlā.*

[வெள் + பூல்]

வெட்பூலா *veṭ-pūlā,* பெ.(n.) சாம்பல் நிறப் பூலா; a variety of poola.

[வெள் + பூலா]

வெடங்குறுணி *veḍaṅ-kuṟuṇi,* பெ.(n.) மர வகை; stag's-horn trumpet-flower tree.

வெடவெட-த்தல் *veḍa-veḍa-,* செ. குன்றாவி.(v.t.) (உடல்) அதிக அளவில் வேகத்துடன் நடுங்குதல்; shiver (markedly). *'அதிகாலையில் ஆற்றில் குளித்து விட்டு ஈர வேட்டியுடன் வெடவெடத்தபடி நின்றான்'. 'சிறு வயதில் அவரைப் பார்க்கும் போது எனக்கு கைகாலெல்லாம் வெட வெடக்கும்'.*

[வெட + வெட-,]

வெடி[1]-த்தல் *veḍi-,* செ.கு.வி. (v.i.) 1. பிள வடைதல்; to crack, to split. *"வெடிக்கின்ற விப்பியுணித்திலம்" (தஞ்சைவா. 232).* 2. ஓசையெழப் பிளவுறுதல்; to burst with a noise. 3. அதிர் வேட்டு முதலியன எழுதல்; to explode. 4. வெடியோசை யுண்டாதல்; to make an explosive noise. *"வெடித்த வேலை" (கம்பரா. இலங்கையெரி. 10).* 5. மலர்தல்; to blossom. *"வெடித்த போதெல்லாம் .. .. கொய்தான்" (செவ்வந்திப்பு. உறையூரழி. 47).* 6. வெளிக் கிளம்புதல்; to shoor forth, as tender leaves. *'இந்தச் செடியில் மூன்றிலை வெடித்திருக்கிறது'.* 7. விறைத்து மேலே கிளம்புதல்; to stiffen and stand upright, to be raised. *"வெடித்தவாற் சிறு கன்று" (அரிச்பு. விவாக. 267).* 8. பொறாமையால் துடித்தல்; to burst with envy.

[விள் → வெள் → வெடி] (வ.மொ.வ. 259).

வெடி[2] *veḍi,* பெ.(n.) 1. வேட்டு; explosion, as of a gun. 2. ஓசை; noise. *"மடிவிடு வீளையர் வெடிபடுத் தெதிர" (குறிஞ்சி. 161).* 3. இடி (சூடா.); thunder. 4. வேட்டெஃகம்; gun. 5. வாணம்; fire works. 6. வெடியுப்பு பார்க்க; see *veḍi-y-uppu.* 7. சிற்றேலம் (மூ.அ.); a kind of cardamom. 8. பிளவு; split, cleft. *"வெடியோடும் வெங்காணம்" (ஐந். ஐம். 36).* 9. பகை; hate. *"வெடிபடு போர்த்தொழில் காண" (சீவக. 776).* 10. கேடு; ruin. *"வெடிபடக் கடந்து" (மதுரைக். 233).* 11. அச்சம் (பிங்.); fear. 12. நிமிர்ந் தெழுகை; shooting up. *"வெடிவேய் கொள்வதுபோல" (புறநா. 302).* 13. தாவுகை; leaping. *"வெடிபோன பருவவாளை" (அரிச்.பு. விவாக. 218).* 14. நறும்புகை (பிங்.); fragrant incense. 15. தீய நாற்றம்; bad smell. *"வெடிதரு தலையினர்" (தேவா. 912, 6).* 16. நறுமணம்; good smell (w.). 17. கள் (சூடா.) ; boddy.

18. கவறாட்டத்து வழங்கும் ஒரு குழூஉக்குறி; a cant term, in dice-play. *"விஞ்சிய மகிழ்வொடு வெடியென் றோதுவார்" (கந்தபு. கயமுகனுற். 167).* 19. பெரும்பொய்; big lie.

[விள் → வெள் → வெடி] (வ.மொ.வ. 259).

வெடி³–தல் *vedi-,* செ.கு.வி.(v.i.) 1. விடிதல்; to dawn, to break. *"சூபாதெல்லா மென்றூழ் வெடியாத போதிற் கொய்தான்" (செவ்வந்திப்பு. உறையூரழி. 47).* 2. நற்காலத்தால் துன்பம் நீங்கி துன்புறுதல்; to see better days. 3. முடிவு பெறுதல்; to come to an end.

[விடி → வெடி]

வெடி⁴ *vedi,* பெ.(n.) விடிவெள்ளி (பிங்.); venus, as the morning star.

[விடி → வெடி]

வெடி⁵ *vedi,* பெ.(n.) வெளி (பிங்.); open plain.

[வெளி → வெடி]

வெடிக்கச்செய்–தல் *vedikka-c-cey-,* செ.கு.வி. (v.i.) முழக்கத்துடன் வெடிக்கச் செய்தல்; detonate.

[வெடிக்க + செய்–,]

வெடிக்கயிறு *vedi-k-kayiru,* பெ.(n.) வெடி மருந்திலிடுந் திரிக்கயிறு; quick-match.

[வெடி + கயிறு]

வெடிக்குதல் *vedikkutal,* பெ.(n.) வெடித்தல்; sprout.

[வெடி → வெடிக்குதல்]

வெடிகாரம் *vedi-kāram,* பெ.(n.) உப்பு வகை (மூ.அ.); a kind of salt.

[வெடி + காரம்]

வெடிகிரந்தி *vedi-kiranti,* பெ.(n.) மேகப் புண்வகை; venereal ulcer (w.).

[வெடி + கிரந்தி]

வெடிகுரல் *vedi-kural,* பெ.(n.) 1. இயல்பு மாறிய குரல்; hoarse voice. 2. இசைக்கு மாறுபட்ட ஓசை; discordant note or voice. *"காகுளி கீழோசை வெடிகுரனாசி" (திருவிளை. விறகுவிற்ற. 30).*

[வெடி + குரல்]

வெடிசன்னி *vedi-sanni,* பெ.(n.) சன்னி வகை (யாழ்.அக.); a kind of canni.

[வெடி + சன்னி]

வெடிசிரிப்பு *vedi-sirippu,* பெ.(n.) பெருஞ் சிரிப்பு (சிலப். 15, 64, உரை); loud laugh, boisterous laugh.

[வெடி + சிரிப்பு]

வெடிசூலை *vedi-cūlai,* பெ.(n.) சூலை நோய்வகை; a kind of colic.

[வெடி + சூலை]

வெடித்தகுரல் *veditta-kural,* பெ.(n.) 1. ஓரத்த குரல்; loud voice (w.). 2. வெடி குரல் 1, 2 பார்க்க; see *vedi-kural 1, 2.*

[வெடித்த + குரல்]

வெடித்தசொல் *veditta-col,* பெ.(n.) வெடுவெடுப்பான பேச்சு (யாழ்.அக.); harsh speech.

[வெடித்த + சொல்]

வெடித்துக்கிளம்பு–தல் *vedittu-k-kiḷambu-,* செ.குன்றாவி.(v.t.) பல்வகையில் ஈற்றினை ஊடுருவி வெளிப்படுதல்; erupt.

[வெடித்து + கிளம்பு-,]

வெடிதீர்-தல் *vedi-tīr-,* செ.கு.வி. (v.i.) குண்டு போடுதல்; to fire a shot (w.).

[வெடி + தீர்-,]

வெடிநாற்றம் *vedi-nāṟṟam,* பெ.(n.) 1. தீ நாற்றம் (இராமநா. உயுத். 74); bad smell. 2. வெடிமருந்து சுட்ட நாற்றம்; smell of gun-powder when it explodes.

[வெடி + நாற்றம்]

வெடிப்பஞ்சு *vedi-p-pañju,* பெ.(n.) வெடி மருந்தாகச் செய்த பஞ்சு; gun cotton.

[வெடி + பஞ்சு]

வெடிப்பட்டடை *vedi-p-paṭṭaḍai,* பெ.(n.) பொட்டில் பார்க்க; see *poṭṭil* (w.).

[வெடி + பட்டடை]

வெடிப்படி-த்தல் *vedi-p-paḍi-,* செ.கு.வி. (v.i.) 1. நாற்றம் வீசுதல்; to emit bad ordour. 2. வாந்திக் குணமுண்டாதல்; to be gualmish, as from a bad odour. 3. வெறுப்பாதல்; to be disgusting (w.).

[வெடிப்பு + அடி]

வெடிப்பந்துச்செண்டு *vedi-p-pandu-c-cenḍu,* பெ.(n.) ஒருவகைப் பூச்செண்டு; a ball of flowers.

[வெடி + பந்து + செண்டு]

வெடிப்பந்துப்பூ *vedi-p-pandu-p-pū,* பெ.(n.) வெடிப்பந்துச்செண்டு பார்க்க; see *vedi-p-pandu-c-cenḍu.*

[வெடி + பந்து + பூ]

வெடிப்பரங்கி *vedi-p-paraṅgi,* பெ.(n.) ஒரு வகை பரங்கிப் புண்; a venereal sore.

[வெடி + பரங்கி]

வெடிப்பலா *vedi-p-palā,* பெ.(n.) ஆனைப் பலா; wild durian-cullenia excelsa.

[வெடி + பலா]

வெடிப்பாய்ப்பேசல் *vedippāy-p-pēšal,* செ.குன்றாவி. (v.t.) வெறுப்பாய்ப் பேசல்; revolting speech, talk offensively.

[வெடிப்பாய் + பேசல்]

வெடிப்பில்லி *vedi-p-pilli,* பெ.(n.) வெறுமையினால் உடம்பில் வெடித்து புண் உண்டாகச் செய்யும் ஒரு வகை நோய்; disease caused by sorcery or witch craft, and it is marked by fissures and ulcers all over the body.

[வெடி + பில்லி]

வெடிப்பிளந்தகால் *vedi-p-piḷanda-kāl,* பெ.(n.) வெடிப்புள்ள குதிகால்; fissured heel.

[வெடி + பிளந்த + கால்]

வெடிப்பு *vedippu,* பெ.(n.) 1. ஓசையோடு வெடித்து எழுகை; explosion. 2. பிளப்பு (சங்.அக.); chin, gap. 3. தீ நாற்றம்; bad smell. 4. வெறுப்பு; disgust (w.). 5. குற்றமான சொல்; objectionable language. *"பிறிதோர் வெடிப்பு முரைத் தறியேன்" (அருட்பா. vi, திருவருட்பெருமை. 10).* 6. கண்டிப்பு; strictness. 7. சிறப்பு; splendour. *'காரியம் வெடிப்பாய் நடந்தது'.* 8. அழிவு; ruin. *"வெடிப்பு நின்பசுநிரை மேய்க்கப் போக்கு" (திவ். திருவாய். 10, 3, 6).*

[வெடி → வெடிப்பு]

வெடுப்புக்காட்டுதல் *veḍuppu-k-kāṭṭutal,* பெ.(n.) சினப்புக் கொள்ளுதல்; exasperation.

[வெடுப்பு + காட்டுதல்]

வெடிப்புண்டகால் *veḍi-p-puṇḍa-kāl,* பெ.(n.) பித்தத்தினால் வெடிப்பாகி வலியைத் தரும் குதிகால்; fissured heel.

[வெடிப்புண்ட + கால்]

வெடிப்புபாண்டுக்கல் *veḍippu-pāṇḍu-k-kal,* பெ.(n.) சுவர் வெடிப்பிற் பொருத்தப் படுங்கல் சுவர்களில் வெடிப்பு அல்லது விரிசல் ஏற்படும்போது சுவர் அகலத்திற்கு சுமார் 1/2 அடி கணத்தில் வெடிப்பு வாக்கில் இரண்டு அல்லது மூன்று பாண்டுக்கற்கள் சுவரில் பொருத்தப்படும். சுவரில் பொருத்தப்படும் இக்கற்கள் சுவரில் மேலும் வெடிப்புகள் விழாமல் காக்கும் (பொ.வழ.); a stone inserted to thwart or arrest crakes.

[வெடிப்பு + பாண்டுக்கல்]

வெடிபடு-தல் *veḍi-paḍu-,* செ.கு.வி. (v.i.) 1. பேராசையுண்டாதல்; to explode with a loud noise. *"வெடிபட முழங்குஞ்சொல் லான்" (சீவக. 265).* 2. சிதறுதல்; to scatter. *"மாற்றார் வெடிபட் டோடல்" (புறநா. 93).* 3. அச்சமுறுதல்; to fear. *"வெடிபட்டு வீற்று வீற்றோடு மயிலினம் போல்" (கவைழி. 29).*

[வெடி + படு-,]

வெடிபலவன்[1] *veḍi-palavaṉ,* பெ.(n.) பூடுவகை; a kind of plant whose seed-pods burst with noise(w.).

[வெடி + பலவம் → வெடிபலவன்]

வெடிபலவன்[2] *veḍi-palavaṉ,* பெ.(n.) படுவங்கீரை (மலை.); a kind of greens.

[வெடி + பலவன்]

வெடிபாணவுப்பு *veḍi-pāṇa-vuppu,* பெ.(n.) வெடியுப்பு பார்க்க (விறலிவிடு. 619); see *veḍi-y-uppu. "இந்துப்பு வெடிபாணவுப்பு" (விறலிவிடு. 619).*

[வெடி + பாணம் + உப்பு]

வெடிபோடு-தல் *veḍi-pōḍu-,* செ.கு.வி. (v.i.) வெடிதீர் பார்க்க; see *veḍi-tīr.*

[வெடி + போடு-,]

வெடிமருந்து *veḍi-marundu,* பெ.(n.) வெடிப்பதாற் குண்டு முதலியவற்றை வெளிக் கிளப்பும் வாண மருந்து; gun powder (w.).

[வெடி + மருந்து]

வெடியல்[1] *veḍiyal,* பெ.(n.) வெடி[2] பார்க்க; see *veḍi*[2] (w.).

[வெடி → வெடியல்]

வெடியல்[2] *veḍiyal,* பெ.(n.) விடியல்; dawn.

[வெடி → வெடியல்]

வெடியாதி *veḍiyāti,* பெ.(n.) சீந்திற் கொடி; moon-creeper-menispermum cordifolium.



வெடியுப்பீயம் *vedi-yuppiyam,* பெ.(n.) ஈயவுப்பு வகை; nitrate of lead.

[வெடியுப்பு + ஈயம்]

வெடியுப்பு[1] *vedi-y-uppu,* பெ.(n.) 1. ஓர் உப்பு; salt petre-potassium nitrade. 2. பூநீரில் காய்ச்சும் ஐந்தாம் காய்ச்சலுப்பு; a salt which is prepared after fire process from fuller's earth. 3. பொட்டிலுப்பு; salt petre. 4. தலை முடியுப்பு; salt prepared from the human skull.

[வெடி + உப்பு]

வெடியுப்பு[2] *vedi-uppu,* பெ.(n.) வெடி மருந்துக்கு உதவும் உப்பு (பதார்த்த. 1092); nitre, saltpeter.

[வெடி + உப்பு]

வெடியுப்புக்கட்டி *vediyuppu-k-katti,* பெ.(n.) 1. கொறுக்காய்ப் புளி; a thorny tree-pithecolobium dulce. 2. சுரம்புன்னையின் வேர்ச்சாறு; juice of the root of *surappunnai.*

[வெடியுப்பு + கட்டி]

வெடியுப்புக்கட்டு[1] *vediyuppu-k-kattu,* பெ.(n.) 1. அம்பளங்காய்; a plant-spondias mangifera, consolidated petre. 2. தலையோட்டின் மாவு மேல் கீழ் வைத்து எரிக்க மேற்படி உப்பு கட்டும்; a single piece of salt petre is placed in the midst of cranial bone powder and heated it gets consolidated.

[வெடியுப்பு + கட்டு]

வெடியுப்புக்கட்டு[2] *vediyuppu-k-kattu,* பெ.(n.) வெடியுப்பை வேங்கை செய நீரில் போட்டுக் காயவைத்து எடுக்கக் கட்டிவிடும், கட்டியபின் கரிநெருப்பில் வைத்து உருக்கிட இளகி உருகும், இந்த வெடியுப்பு கட்டு மாந்தை அரிசி எடை 3 நாள் சாப்பிட குன்மம் போம்; the method of preparing consolidated salt-petre, and its alchemical use and medicinal use are mentioned above.

[வெடியுப்பு + கட்டு]

வெடியுப்புக்கிரந்தி *vedi-yuppu-k-kiranti,* பெ.(n.) ஒரு வகை கழலை நோய்; a kind of tumour.

[வெடியுப்பு + கிரந்தி]

வெடியுப்புச்சுண்ணம் *vediyuppu-c-cunnam,* பெ.(n.) ஒருவகை சுன்ன மருந்து; a kind of calcined medicine with basic property of calcium prepared out of salt-petre.

இதை இரண்டு மண்டலம் சாப்பிட இதனால் நரப்பணைப்பு போகும், சதை வலுத்திடும், தேகம் மெத்த நாளிருக்கும், வாசி திறப்படும், நரை திரை பறக்கும்.

[வெடியுப்பு + சுண்ணம்]

வெடியுப்புத்தம்பி *vediyuppu-t-tambi,* பெ.(n.) புளி நறளைக் கிழங்கு; root of a plantcissuc acida.

[வெடியுப்பு + தம்பி]

வெடியுப்புத்திராவகம்[1] *vediyuppu-t-tirāvagam,* பெ.(n.) 1. வெடியுப்பினால் இறக்கிய திராவகம்; nitric acid. 2. வாலை நீர்; a medicinal liquid obtained by distillation. 3. வாய் நீர்; saliva. 4. குமரி நீர்; urine of a female.

*[வெடியுப்பு + **Skt.** drdvaka > த. திராவகம்]*

வெடியுப்புத்திராவகம்² *vediyuppu-t-tirāvagam,* பெ.(n.) வெடியுப்பினின்றும் எடுக்கப்படும் வெடிய அமிலம்; nitric acid (w.).

[வெடியுப்பு + **Skt.** *drdvaka > த. திராவகம்]*

வெடியுப்புமண் *vediyuppu-man,* பெ.(n.) வெடியுப்புச் சத்துள்ள மண்; soil containing salt petre or potash.

[வெடியுப்பு + மண்]

வெடியுப்பைக்கண்டவர் *vediyuppai-k-kandavar,* பெ.(n.) வெடியுப்பைக் கட்டியவர்; one who has consolidated salt-petre.

வெடியோசைக்காரி *vediyōšai-k-kāri,* பெ.(n.) அண்டக்கல் பார்க்க; see *anda-k-kal.*

[வெடியோசை + காரி]

வெடிரசம் *vedi-rašam,* பெ.(n.) ஒரு வகை சாறு; fulminating mercury.

[வெடி + **Skt.** *rasa > த. இரசம்]*

வெடில் *vedil,* பெ.(n.) 1. வேட்டு; explosion, as of a gun. 2. தீய நாற்றம் (யாழ். அக.); foul smell.

[வெடி → வெடில்]

வெடிலுப்பு *vedil-uppu,* பெ.(n.) வெடியுப்பு பார்க்க; see *vedi-yuppu.*

[வெடில் + உப்பு]

வெடிவத்தை *vedi-vattai,* பெ.(n.) வெடி வைத்து மீன் பிடித்தற்குரியதோர் மரக்கலம் (முகவை. மீன.); a catamaran with deternators or explosives.

[வெடி + வத்தை]

வெடிவால் *vedi-vāl,* பெ.(n.) மாட்டுக் குற்றவகை (மாட்டுவை.சிந்.); to an inauspicious mark in the tail of cattle.

[வெடி + வால்]

வெடிவு *vedivu,* பெ.(n.) 1. விடிகை; dawning. 2. நற்காலம் வருகை; dawning of better days. *"வெடிவு காலம் வாராதா".* 3. விடியற்காலம்; dawn.

[வெடி → வெடிவு]

வெடிவை¹-த்தல் *vedi-vai-,* செ.குன்றாவி. (v.t.) 1. துப்பாக்கியாற் சுடுதல்; to shoot with a gun. 2. கெடுக்கப் பார்த்தல்; to seek an opportunity to destroy or injure.

வெடிவை²-த்தல் *vedi-vai-,* செ.கு.வி. (v.i). 1. திகைக்கும்படி பொய்ச் சொற்கள் சொல்லுதல்; to make a surprisingly false statement. 2. சண்டைமூட்டுதல்; to foment or start a gwarrel. *'இல்லாவற்றை யெல்லாஞ் சொல்லி அவன் வெடிவைத்து விட்டான்'.*

[வெடி + வை-,]

வெடிவை³-த்தல் *vedi-vai-,* செ.கு.வி.(v.i.) திட்டம் போட்டுக் கெடுத்தல்; உலை வைத்தல்; to everthing to undermine ruin (S.O.). *'அதிகாரியிடம் ஏதோ சொல்லி என் வேலைக்கு வெடி வைத்து விட்டான்'.*

[வெடி + வை-,]

வெடுக்-என்று *veduk-enru,* வி.எ. (adv.) 1. எதிர்பாராத முறையில், திடீரென்று; unexpectedly, suddenly. *'பின்னால் வந்து கொண்டிருந்த நாய் வெடுக்கென்று காலைக் கடித்து விட்டது'.* 2. ஓரிரு சொற்களில் மனத்தை வருத்தும் படியான; sharply,

curtly. *'என்னால் முடியாது என்று வெடுக்கென்று பதில் சொன்னான்'.*

[வெடுக் + என்று]

வெடுக்கன் *vedu-k-kan,* பெ.(n.) 1. கடுகடுப் புள்ளவன்; crabbed person (w.). 2. சினங் கொள்பவன் (யாழ்.அக.); angry person.

[வெடுக்கு → வெடுக்கன்]

வெடுக்கு[1] *vedukku,* பெ.(n.) 1. வெடு வெடுப்பு பார்க்க; see *vedu-veduppu.* 2. வெட்டெனவு பார்க்க (யாழ்.அக.); see *vettenavu.*

[வெடுக்கெனல் → வெடுக்கு]

வெடுக்கு[2] *vedukku,* பெ.(n.) புலால் நாற்றம் (இலங்.), தீய நாற்றம்; foul odour.

வெடுக்குச்சொடுக்கு *vedukku-c-codukku,* பெ.(n.) வெடுவெடுப்பு பார்க்க; see *vedu-veduppu.*

[வெடுக்கு + சொடுக்கு]

வெடுக்குவெடுக்கெனல் *vedukku-vedukkenal,* பெ.(n.) வெடுக்கெனல் பார்க்க; see *vedu-k-kenal.*

[வெடுக்கு + வெடுக்கு + எனல்]

வெடுக்குனுசொல்லுதல் *vedukkunu-collu-,* பெ.(n.) முகத்தை முறித்துக் கொண்டு சினத்துடன் பேசுவதை வெடுக் கென்று சொல்வார்கள்; an expression of wrath or anger. *'புள்ளெரிய எதுக் கெடுத்தாலும் இப்படியா வெடுக்கு வெடுக்குனு சொல்றது?'* என்பார்கள்.

[வெடுக்குனு + சொல்லுதல்]

வெடுக்கெனல் *vedu-k-kenal,* பெ.(n.) 1. ஒடிதலின் ஓசைக்குறிப்பு; noise of breaking. *"அஷ்டதிக்கெச தந்தங்களை வெடுக்கென் றொடித்த" (இராமநா. ஆரணி. 20).* 2. திடீரெனக் குறிப்பு; suddenness and unexpectedness. 3. விரைவுக் குறிப்பு; quickness. *"காலின் முட்டைக்கவும் வெடுக் கென்றசைத் தெடுத்தால்" (தாயு. சுகவாரி. 5).* 4. பேச்சிற் கடுகடுப்பாயிருத்தற் குறிப்பு; churlishness in talk. *'வெடுக்கென்று பேசுகிறான்'.* 5. குத்து நோவுக் குறிப்பு; shooting pain.

[வெடுக்கு + எனல்]

வெடுத்தலாம் *veduttalām,* பெ.(n.) விடத்தேரை (இலத்.); ashy babool.

வெடுப்பு *veduppu,* பெ.(n.) வெடுவெடுப்பு பார்க்க (யாழ்.அக.); see *vedu-veduppu.* *'வெடுவெடுப்பு காட்டுதல்' (உ.வ.).*

[வெடிப்பு → வெடுப்பு]

வெடுபாலை *vedu-pālai,* பெ.(n.) பாலை– மரவகை; a tree.

வெடுவெடு–த்தல் *vedu-vedu-,* செ.கு.வி. (v.i.) 1. சினத்தாற்கோபத்தாற் படபடத்தல்; to quiver with rage. *"வெடுவெடுத் தெழுந்தவன் றனாற்றலை யழிக்கவல்லார்" (தேவா. 776).* 2. கடுகடுப்பாய்ப் பேசுதல்; to speak roughly.

[வெடுவெடெனல் → வெடுவெடு–,]

வெடுவெடுத்தசொல்லி *vedu-vedutta-colli,* பெ.(n.) கடுஞ்சொற் கூறுபவ–ன்–ள் (வின்.); one who is churlish in speech.

[வெடுவெடு + சொல் → சொல்லி → வெடுவெடுத்தசொல்லி. 'இ' உடைமைப் பொருளீறு.]

வெடுவெடுத்தவன் *veḍu-veḍuttavaṉ*, பெ.(n.) வெடுக்கன் பார்க்க (வின்.); see *veḍukkaṉ*.

[வெடுவெடு + அன் → வெடுவெடுத்தவன்]

வெடுவெடுப்பு *veḍu-veḍuppu*, பெ.(n.) கடுகடுப்பு (வின்.); crabbedness.

[வெடுவெடு + பு → வெடுவெடுப்பு]

வெடுவெடெனல் *veḍu-veḍeṉal*, பெ.(n.) 1. பெருஞ்சிரிப்பின் ஒலிக்குறிப்பு (பிங்.); laughing loudly. *"வெடுவெடென்ன நக்கு" (பதினொ. திருவாலங்கா. மூத்த. 2)*. 2. நடுக்கக் குறிப்பு; shivering with cold. *'குளிர் வெடுவெடென்றாட்டுகிறது'*. 3. விரைவுக் குறிப்பு; being quick. 4. சினக் குறிப்பு; being angry, petulant. *'வெடுவெடென்று பேசுகிறான்'*. 5. ஒல்லியா யிருத்தல் குறிப்பு; being thin or slender.

[வெடுவெடு + எனல்]

வெண்அல்லி *veṉ-alli*, பெ.(n.) வெண்மை நிற நீர் அல்லி; white water lily.

[வெண் (மை) + அல்லி]

வெண்கட்டுக்கொடி *veṉ-kaṭṭu-k-koḍi*, பெ.(n.) சிறு கட்டுக் கொடி; small variety of coagulating creeper-cocculus villosus.

[வெண் (மை) + கட்டு + கொடி]

வெண்கடம்பு *veṉ-kaḍambu*, பெ.(n.) மரவகை; a kind of tree. *"வெண்கடம்பு பந்தணிந்தவே" (சீவக. 1650)*.

[வெண் (மை) + கடம்பு]

வெண்கடல் *veṉ-kaḍal*, பெ.(n.) பாற்கடல் (பெருங். உஞ்சைக். 57, 113, அரும்.); sea of milk.

[வெண் (மை) + கடல் → வெண்கடல்]

வெண்கடலி *veṉ-kaḍali*, பெ.(n.) வெண் தேக்கு; white teak-lager-lroemia lanceolata.

[வெண் (மை) + கடலி]

வெண்கடலை *veṉ-kaḍalai*, பெ.(n.) ஒரு வகை கொண்டைக் கடலை; white bengal gram-cicer arietinum.

[வெண் (மை) + கடலை]

வெண்கடவன் *veṉ-kaḍavaṉ*, பெ.(n.) வெண்கொட்டை பார்க்க; see *veṉ-koṭṭai*.

[வெண் (மை) + கடவன்]

வெண்கடன் *veṉ-kaḍaṉ*, பெ.(n.) வெண்ணிலைக்கடன் பார்க்க (இ.வ.); see *veṉṉilai-k-kaḍaṉ*.

[வெண் (மை) + கடன் → வெண்கடன்]

வெண்கடிகம் *veṉ-kaḍigam*, பெ.(n.) வெப்பாலை பார்க்க; see *veppālai*.

[வெண் (மை) + கடிகம்]

வெண்கடுகு *veṉ-kaḍugu*, பெ.(n.) கடுகுவகை (பிங்.); white mustard.

[வெண் (மை) + கடுகு → வெண்கடுகு]

வெண்கடுப்பு *veṉ-kaḍuppu*, பெ.(n.) கண்ணோய் வகை; (M.L.) inflammation of the conjunctival membrane of the eye.

[வெண் (மை) + கடுப்பு → வெண்கடுப்பு]

வெண்கண் *veṉ-kaṉ*, பெ.(n.) வெங்கண் 6 பார்க்க (வின்.); see *veṅgaṉ*.

[வெண் (மை) + கண் → வெங்கண்]

வெண்கண்டங்கத்தரி *veṇ-kaṇḍaṅ-kattari,* பெ.(n.) வெள்ளைக் கண்டங் கத்திரி; thorny plant bearing white flowers and fruits-solanumjacquini.

[வெண் (மை) + கண்டங்கத்தரி]



வெண்கண்டர் *veṇ-kaṇḍar,* பெ.(n.) வெள்ளைத் துரிசி, பால் துத்தம்; white vitriol-zinc sulphate country.

[வெண் (மை) + கண்டர் → வெண்கண்டர்]

வெண்கண்டல் *veṇ-kaṇḍal,* பெ.(n.) 1. சிறு மரவகை (இலத்.); white mangrove, s.tr. 2. மரவகை; papery-barked obtuse-leaved mangrove,m.tr.

[வெண் (மை) + கண்டல் → வெண்கண்டல்]

வெண்கண்ணன் *veṇ-kaṇṇaṉ,* பெ.(n.) கழகக்காலப் புலவர், இவர் பெயர் பொதும்பில் கிழான் வெண்கண்ணனார் எனவும் காணப்படும்; a sangam poet another name was called *podumbil-kiḻāṉ-veṇkaṇṇaṉār.* இவர் அகநானூற்றில் 130–192–ஆம் பாக்களைப் பாடியுள்ளார்.

வெண்கதிர் *veṇ-kadir,* பெ.(n.) வெங்கதிரோன் பார்க்க (இலக்.அக.); see *veṅkadirōṉ.*

[வெண் (மை) + கதிர்]

வெண்கதிரோன் *veṇ-kadirōṉ,* பெ.(n.) கதிரவன் (வின்.); the sun.

[வெங்கதிரோன் → வெண்கதிரோன்]

வெண்கமலம் *veṇ-kamalam,* பெ.(n.) 1. வெண்டாமரை; white lotus. 2. நிரைய வகை (சிவதரு. சுவர்க்க நரக.114); a hall.

[வெண் (மை) + கமலம்]

Skt. Kamalam > த. கமலம்

வெண்கமலை *veṇ-kamalai,* பெ.(n.) கலைமகள் (இலக்.அக.); sarasvati.

[வெண் (மை) + கமலை]

Skt. Kamala > த. கமலை

வெண்கயல் *veṇ-kayal,* பெ.(n.) வெள்ளியைப் போலிருக்கும் ஒரு வெண்ணிறக்கெண்டை மீன் (சங்.நூல. மீன்கள்.); silvery kendai fish.

[வெண் (மை) + கயல்]



வெண்கரப்பான் *veṇ-karappāṉ,* பெ.(n.) பாற்கரப்பான் பார்க்க; see *pār-karappāṉ.*

[வெண் (மை) + கரப்பான்]

வெண்கரு *veṇ-karu,* பெ.(n.) முட்டையின் வெள்ளைக்கரு; the white of egg.

[வெண் (மை) + கரு]

வெண்கருங்காலி *veṇ-karuṅkāli,* பெ.(n.) 1. வெக்கால் பார்க்க; see *vekkāl.* 2. வெள்ளைக்கருங்காலி பார்க்க; see *veḷḷai-k-karuṅkāli.*

[வெண் (மை) + கருங்காலி]

வெண்கருங்குழல் *veṭṭai-nāl,* பெ.(n.) தாமரைக் கிழங்கு; root of lotus.

[வெண் (மை) + கருங்குழல்]

வெண்கருச்சத்து *veṇ-karu-c-cattu,* பெ.(n.) முட்டையின் வெள்ளைக் கருவைப் போன்ற புரதம்; protein or albuminoids.

[வெண் (மை) + கருச்சத்து]

Skt. Sakthi > *த. சத்து.*

வெண்கருநீர் *veṇ-karunīr,* பெ.(n.) முட்டையின் வெண்கரு; white of an egg.

[வெண் (மை) + கருநீர்]

வெண்கரும்பு *veṇ-karumbu,* பெ.(n.) ஆலைக் கரும்பு; white sugancane-saccharum officinarum.

[வெண் (மை) + கரும்பு]

வெண்கருவிளை[1] *veṇ-karuviḷai,* பெ.(n.) வெள்ளைக் காக்கணம்; a twiner bearing white flowers-chitoria ternalia.

[வெண் (மை) + கருவிளை]

வெண்கருவிளை[2] *veṇ-karuviḷai,* பெ.(n.) வெண்காக்கணம் பார்க்க (சங்.அக.); see *veṇ-kākkaṇam.*

[வெண்–மை + கருவிளை]

வெண்கல் *veṇ-kal,* பெ.(n.) 1. வெள்ளைக் கல்; (C.E.M.) quartz. 2. சலவைக்கல் (வின்.); white marble.

[வெண் (மை) + கல்]

வெண்கல்கொட்டை *veṇkal-koṭṭai,* பெ.(n.) மலை வெண் கொட்டை; a hill tree-loptopetallum wightianum.

[வெண் (மை) + கல் + கொட்டை]

வெண்கல்லு *veṇ-kallu,* பெ.(n.) சலவைக் கல்; white stone-marble stone-cilabluster.

[வெண் (மை) + கல் → கல்லு]

வெண்கலக்குரல் *veṇkala-k-kural,* பெ.(n.) வெண்கலக் குழல் போன்று கணீரென ஒலிக்கும் குரல்; resounding voice, full throated voice.

[வெண்கலம் + குரல்]

வெண்கலநிமிளை[1] *veṇkala-nimiḷai,* பெ.(n.) நிமிளை; bismuth pyrites.

[வெண்கலம் + நிமிளை]

வெண்கலநிமிளை[2] *veṇkala-nimiḷai,* பெ.(n.) அம்பாரை; bismuth, a tonic.

[வெண்கலம் + நிமிளை]

வெண்கலப்பட்சி *veṇkala-p-paṭci,* பெ.(n.) பறவை வகை (இ.வ.); a bird.

[வெண்கலம் + பட்சி]

வெண்கலப்பாத்திரம் *veṇkala-p-pāttiram,* பெ.(n.) பொருட்கலங்களிலொன்று; vessel made of bell metal.

*[வெண்கலம் + **Skt.** pātra > த. பாத்திரம்]*

வெண்கலப்பானை *veṇkala-p-pāṉai,* பெ.(n.) வெண்கலத்தால் செய்யப்பட்ட பாத்திர வகை; pot of bronze.

[வெண்கலம் + பானை]

வெண்கலபற்பம் *veṇkala-paṟpam,* பெ.(n.) வெண்கலமாகிய உலோகத்தைப் புடமிட்டப் பொடி; white calcined powder of bell metal.

[வெண்கலம் + பற்பம்]

வெண்கலம்[1] *veṉ-kalam,* பெ.(n.) செம்பும் வெள்ளியமும் கலந்து உருக்கி உண்டாக்கும் கலப்பு உலோகம் (பிங்.); bell-metal, bronze, an alloy of copper and tin. *"வெண்கலப் பத்திரங் கட்டி விளையாடி" (திவ். பெரியாழ். 1, 9, 8).*

[வெண் (மை) + கலம்]

வெண்கலம்[2] *veṉ-kalam,* பெ.(n.) நாள் (அக.நி.); day.

வெண்கலி[1] *veṉ-kali,* பெ.(n.) வெண்கடுகு; white mustard-brassica alba.

வெண்கலி[2] *veṉ-kali,* பெ.(n.) வெண் கலிப்பா பார்க்க (வின்.); see *veṇkalippā.*

[வெண் (மை) + கலி]

வெண்கலிப்பா *veṇkali-p-pā,* பெ.(n.) வெண்டளை பெற்றுவரும் கலிப்பாவகை; a kind of kali verse with *veṉ-ḍaḷai.*

[வெண்கலி + பா]

வெண்கவி *veṉ-kavi,* பெ.(n.) 1. வெண்பா; veṇpā verse. 2. பொருளாழமற்ற கவி; verse, not pregnant with ideas.

[வெண் (மை) + கவி]

Skt. kavi > த. கவி

வெண்கழற்சி *veṉ-kaḻaṟci,* பெ.(n.) வெள்ளைக் கழற்சிக் கொடி; thorny creeper bearing white bonduc nut-caesalpinia bonducella (alba.).

[வெண் (மை) + கழற்சி]



வெண்களமர் *veṉ-kaḷamar,* பெ.(n.) 1. மருதநில மாக்கள் (தொல். சொல். 16, உரை); inhabitants of the agricultural tract. 2. வேளாளர் (அக.நி.); *vēḷāḷas.*

[வெண் (மை) + களமர்]

வெண்களி *veṉ-kaḷi,* பெ.(n.) வெள்ளைக் கரும்பு; white sugarcane-saccharum officinarum.

[வெண் (மை) + களி]

வெண்களிமண் *veṉ-kaḷimaṇ,* பெ.(n.) வெள்ளைக் களிமண்; white clay-claymarl.

[வெண் (மை) + களிமண்]

வெண்களிற்றரசு *veṉ-kaḷiṟṟaraśu,* பெ.(n.) வேந்தனின் வெள்ளை யானை (ஐராவதம்); indra's elephant. *"வால் வெண்களிற்றரசு வயங்கிய கோட்டத்து" (சிலப். 5, 143).*

[வெண் (மை) + களிறு + அரசு]

வெண்கற்றாழை *veṇ-kaṟṟāḻai,* பெ.(n.) ஒரு வகைக் கடல் மீன். சாம்பல் நிறம் படர்ந்த இம்மீனின் முதுகுப் பரப்பு பச்சை நிறத்தினால் மேலும் கருமையாய்க் காணப்படும். உடலின் பக்கப் பகுதிகளும் வயிற்றுப் பரப்பும் வெண்ணிற முடனிருக்கும் (மீன. பொ.வ.); a kind of sea fish with dark colour on its back, because of combination of green and ash colours. It sides and lower portion are white in colour.

[வெண் (மை) + கற்றாழை]

வெண்கற்றுகள் *veṇ-kaṟṟukaḷ,* பெ.(n.) சலவைகற்பொடி; marble dust.

[வெண் (மை) + கற்றுகள்]

வெண்கற்றை *veṇ-kaṟṟai,* பெ.(n.) சவரிக் காரம் பார்க்க; see *cavari-k-kāram.*

[வெண் (மை) + கற்றை]

வெண்கன்னான் *veṇ-kaṉṉāṉ,* பெ.(n.) வெண்கல வேலை செய்யும் கன்னான்; smith working in bell-metal. *"வெண் கன்னானுக்குக் கைங்கர்யம்................. எல்லாம் வார்ப்பித்துப் புதிதாகப் பண்ணுகிறது" (கோயிலொ. 94).*

[வெண் (மை) + கன்னான்]

வெண்காக்கட்டான் *veṇ-kākkaṭṭāṉ,* பெ.(n.) வெள்ளைக்காட்டான்; a twining plant-clitoria ternatea (albiflora).

[வெண் (மை) + காக்கட்டான்]

வெண்காக்கணம் *veṇ-kākkaṇam,* பெ.(n.) வெள்ளைக்காக்கணம் (குறிஞ்சிப். 68, உரை); white-flowered-shell creeper.

[வெண் (மை) + காக்கணம்]

வெண்காக்கியம் *veṇ-kākkiyam,* பெ.(n.) வெள்ளை மிளகு; white pepper-piper nigrum.

[வெண் + காக்கியம்]

வெண்காக்கை *veṇ-kākkai,* பெ.(n.) வெண்காக்கணம் பார்க்க; see *veṇ-kākkaṇam.*

[வெண் (மை) + காக்கை]

வெண்காகம் *veṇ-kāgam,* பெ.(n.) வெள்ளைக் காக்கை; white crow.

[வெண் (மை) + காகம்]

வெண்காசம் *veṇ-kāšam,* பெ.(n.) கண்நோய்வகை (யாழ்.அக.); sore-eyes.

[வெண் (மை) + காசம்]

வெண்காசுக்கட்டி *veṇ-kāšu-k-kaṭṭi,* பெ.(n.) வெண்ணிறமான காசுக்கட்டி; white catachew-palladium.

[வெண் (மை) + காசுக்கட்டி]

வெண்காட்டுநங்கை *veṇ-kāṭṭu-naṅgai,* பெ.(n.) திருவெண்காட்டு நங்கை (அபி.சிந்.), திருத்தொண்டருடைய மனைவி; wife of *ciṟu-t-toṇḍar.* *'சிறுத்தொண்டருடைய தொண்டுகட்கு உடந்தையாயிருந்து மகனாகிய சீராளனை அறுத்துக் கறி சமைத்தாள்'.*

[வெண் (மை) + காடு + நங்கை]

வெண்காடு[1] *veṇ-kāḍu,* பெ.(n.) திருவெண்காடு என நாகை மாவட்டத்தில் உள்ள ஊர்; a village *tiruveṇkāḍu* in *Nāgai* district.

சீர்காழிக்குத் தென் கிழக்கே ஏழு – எட்டு கல் தொலைவில் இருக்கும் இடம் இது, முக்குளம். ஆல், வில்வம், கொன்றை என்ற மூன்று கோயில் மரங்கள் இக்கோயிலின் சிறப்பு. திருநாவுக்கரசர், *"பாகிடுவான் சென்றேனைப் பற்றி நோக்கிப் பரிசறித் தென் வளைகவர்ந்தார் பாவியேனை மேக முகிலரிஞ்சும் சோலை சூழ்ந்த வெண்காடு மேவிய விகிர்தனாரே" (249–4) எனப் பாடுகின்றார்.*

வெண்காடு[2] *veṇ-kāḍu,* பெ.(n.) ஒரு சிவதலம்; siva temple.

வெண்காந்தள்[1] *veṇ-kāntaḷ,* பெ.(n.) வெள்ளைப் பூவுடைய காந்தள்; november flower plant bearing white flowers-gloriosa superba-opposite of *cheṅkāntaḷ.*

[வெண் (மை) + காந்தள்]

வெண்காந்தள்[2] *veṇ-kāntaḷ,* பெ.(n.) செடிவகை (புறநா. 90, உரை); white species of malabar glory lily.

[வெண் (மை) + காந்தள்]

வெண்காமாலை *veṇ-kāmālai,* பெ.(n.) ஒரு வகைக் காமாலை நோய்; a variety of jaundice.

[வெண் (மை) + காமாலை]

வெண்காய்ச்சல் *veṇ-kāyccal,* பெ.(n.) சிறு சுரம்; (M.L.)low fever.

[வெண் (மை) + காய்ச்சல்]

வெண்காய்வேளை *veṇ-kāy-vēḷai,* பெ.(n.) வெள்ளைக் கொள்ளுக் காய் வேளை; white species of *veḷḷai-koḷḷu-k-kāy-vēḷai*, a plant tephrosia purpurea.

[வெண் (மை) + காய் + வேளை]

வெண்காயத்தாள் *veṇ-kāyattāḷ,* பெ.(n.) வெங்காய இலை; onion leaves.

[வெண்காயம் + தாள்]

வெண்காயம் *veṇ-kāyam,* பெ.(n.)
1. பூடுவகை (வின்.); onion, allium cepa.
2. உள்ளி (யாழ்.அக.); garlic.

[வெண் (மை) + காயம்]

வெண்காரக்களிம்பு *veṇkāra-k-kaḷimbu,* பெ.(n.) களிம்பு மருந்து வகை; boric ointment.

[வெண்காரம் + களிம்பு]

வெண்காரக்குடோரி *veṇkāra-k-kuḍori,* பெ.(n.) பொன்னாக்கம் செய்யும் போது உருக்கு முகத்தில் பயன்படுத்துவது; a mixture of borax (act as a catalatic agent) added to aid quick melting of substances in alchemy.

வெண்காரச்சுண்ணம் *veṇkāra-c-cuṇṇam,* பெ.(n.) 1. முப்பூச் சுண்ணம்; a king like medicine prepared of the three salts. 2. வெங்காரத்தினின்றும் புடமிட்டெடுக்கும் ஒரு வகைச்சுண்ண மருந்து; a calcined powder prepared of borax.

[வெண்காரம் + சுண்ணம்]

வெண்காரசிகம் *veṇ-kāraśigam,* பெ.(n.) வெப்பாலை; a tree.

[வெண்காரம் + சிகம்]

வெண்காரசுத்தி *veṇ-kāra-śutti,* பெ.(n.) பொரித்த வெண்காரம், பொரிகாரம்; purification of borax.

[வெண்காரம் + சுத்தி]

வெண்காரத்தூள் *veṇkāra-t-tūḷ,* பெ.(n.) களிம்புத் தூள்; powder of borax, boric powder.

[வெண்காரம் + தூள்]

வெண்காரப்பதங்கம் *veṇkāra-p-pataṅgam,* பெ.(n.) ஒரு விதப் பதங்கம்; boric acid.

[வெண்காரம் + பதங்கம்]

வெண்காரம்[1] *veṇ-kāram,* பெ.(n.) வெங்காரம்; borax. *"ஏலம் வெண்காரம்" (விறலிவிடு. 616).*

[வெண்–மை + காரம் → வெண்காரம்]

வெண்காரம்[2] *veṇ-kāram,* பெ.(n.) 1. பொரிகாரம்; borax-barborate of soda-sodium biboras. இது வாய்ப்புண் உதடு வெடிப்பு முலைக்காம்பு வெடிப்புகளுக்கு மேல் தடவலாம். 2. 3 மாதத்திய இருப்பிண்டம்; foetus of third month.

[வெண் (மை) + காரம் → வெண்காரம்]

வெண்காரமது *veṇkāra-madu,* பெ.(n.) வெண்காரத்தினின்று உருவாக்கிய தேன்; borax honey.

[வெண்காரம் + மது]

வெண்காரலவணம் *veṇkāra-lavaṇam,* பெ.(n.) சாறு வராத் தழைகளில் சாறு வரச் செய்யும் ஒரு வகை தயாரித்த வுப்பு; a prepared salt which is capable of extracting juice from brittle leaves which ordinarily don't yield juice.

[வெண்காரம் + இலவணம்]

வெண்காரவுள்ளி *veṇkāra-vuḷḷi,* பெ.(n.) வெள்ளை வெங்காயம்; white onion-allium cepe (alba).

[வெண் (மை) + காரம் + உள்ளி]

வெண்காரி *veṇkāri,* பெ.(n.) சினக்காரம்; alum.

வெண்காரை[1] *veṇ-kārai,* பெ.(n.) அரைத்த சுண்ணாம்பு (யாழ்.அக.); pounded chunam.

[வெண் (மை) + காரை → வெண்காரை]

வெண்காரை[2] *veṇ-kārai,* பெ.(n.) சீமைக்கொஞ்சி; micro-nuton extoca.

[வெண் (மை) + காரை]

வெண்கால் *veṇ-kāl,* பெ.(n.) யானை மருப்பினால் செய்த கட்டில் முதலியவற்றின் கால் (பெருங். உஞ்சைக். 33, 63); leg made of ivory, as of cot, etc.

[வெண் (மை) + கால்]

வெண்காலி[1] *veṇ-kāli,* பெ.(n.) வெட்காலி பார்க்க (பதார்த்த. 457); see *veṭ-kāli.*

[வெண் (மை) + காலி]

வெண்காலி[2] *veṇ-kāli,* பெ.(n.) மரவகை; a tree.

கருங்காலியை ஒத்தது. இதனால் பித்தம் அரத்த குற்றம் தினவு, குட்டம் கபம் போகும்.

வெண்காலி[3] *veṇ-kāli,* பெ.(n.) ஒருவகை மரம்; a kind of button tree.

[வெண் (மை) + காலி]

வெண்காவல் *veṇ-kāval,* பெ.(n.) வெறுங் காவல் (இ.வ.); simple imprisonment.

[வெண் (மை) + காவல்]

வெண்காவளி *veṇ-kāvaḷi,* பெ.(n.) வெள்ளைப் பூடு; garlic-allium sativum.

[வெண் (மை) + காவளி]

வெண்காவிளை *veṇ-kāviḷai,* பெ.(n.) கொடிவகை; white-flowered.

[வெண்–மை + காவிளை]

வெண்காவெளி *veṇ-kāveḷi,* பெ.(n.) வெள்ளைப்பூண்டு பார்க்க (மூ.அ.); see *veḷḷai-p-pūṇḍu.*

[வெண் (மை) + காய் + உள்ளி]

வெண்காவேளை *veṇ-kāvēḷai,* பெ.(n.) வெண்காவிளை பார்க்க (மூ.அ.); see *veṇ-kāviḷai.*

[வெண் (மை) + காய்வேளை]

வெண்காழ் *veṇ-kāḻ,* பெ.(n.) 1. மரத்தின் உள்ளீடு; core of tree. 2. முயலெறியுந் தடிவகை (ஐங்குறு. 421); a small stick, used in hunting rabbits.

[வெண் (மை) + காழ்]

வெண்கிடை *veṇ-kiḍai,* பெ.(n.) நெட்டிவகை; white-flowered sola. *"சிறுகோல் வெண்கிடை" (புறநா. 75).*

[வெண் (மை) + கிடை]

வெண்கிடைச்சி *veṇ-kiḍaicci,* பெ.(n.) வெண்கிடை பார்க்க (வின்.); see *veṇ-kiḍai.*

[வெண் (மை) + கிடைச்சி]

வெண்கிலுகிலுப்பை *veṇ-kilu-kiluppai,* பெ.(n.) பேய்மிரட்டு பார்க்க; see *pēy-mirattu.*

[வெண் (மை) + கிலுகிலுப்பை]

வெண்கிழமை *veṇ-kiḻamai,* பெ.(n.) வெள்ளிக்கிழமை; friday. *"வெண்கிழமை யம்பிகை தரும் வரத்தால்" (உபதேசகா. சிவவிரத. 322).*

[வெண் (மை) + கிழமை]

வெண்கிளி *veṇ-kiḷi,* பெ.(n.) வெள்ளைக் கிளி; white parrot.

[வெண் (மை) + கிளி]

வெண்கிளுவை *veṇ-kiḷuvai,* பெ.(n.) முள்ளில்லாக் கிளுவை மரவகை (வின்.); a species of thornless balsam.

[வெண் (மை) + கிளுவை]

வெண்கிளுவைப்பட்டை *veṇ-kiḷuvai-p-paṭṭai,* பெ.(n.) கிளுவைமரப்பட்டை; bark of balsa modeoran caudatum.

[வெண் (மை) + கிளுவைப்பட்டை]

வெண்கீரி *veṇ-kīri,* பெ.(n.) வெள்ளைக்கீரி பார்க்க (வின்.); see *veḷḷai-k-kīri.*

[வெண் (மை) + கீரி]

வெண்கீரைத்தண்டு *veṇ-kīrai-t-taṇḍu,* பெ.(n.) வெள்ளைக் கீரைத்தண்டு; amaranth stem.

[வெண் (மை) + கீரை + தண்டு]

வெண்குகம் *veṇ-kugam,* பெ.(n.) வெண்கடலை; சிறு கடலை; white bengal gram-cicer arietinum.

[வெண் (மை) + குகம்]

வெண்குங்கிலியம் *veṇ-kuṅgiliyam,* பெ.(n.) வெள்ளைக் குங்கிலியம்; conkany resin, boswellia serrata (glabra).

[வெண் (மை) + குங்கிலியம்]

வெண்குஞ்சம் *veṇ-kuñjam,* பெ.(n.) வெள்ளைக் குன்றி மணி; white jeweller's bead.

[வெண் (மை) + குஞ்சம்]

வெண்குட்டசாந்தி *veṇ-kuṭṭa-šānti,* பெ.(n.) வெண்குட்டத்தைப் போக்கும் மருந்து; வெள்ளைப் பூண்டை ஒன்பான்சாரத்துடன் அரைத்து வெண் குட்டத்தின் மேல் தடவ மாறும்; a remedy for leucoderma, sal ammoniac, and garlic are made into a paste and applied over the affected part.

[வெண்குட்டம் + சாந்தி. சமந்தி → சாந்தி.]

வெண்குட்டம் *veṇ-kuṭṭam,* பெ.(n.) உடலில் வெள்ளையாகப் படரும் குட்ட நோய்வகை (கடம்ப. பு. இல்லா. 118); white leprosy.

[வெண் (மை) + குட்டம் → வெண்குட்டம்]

வெண்குட்டம்போக்கி *veṇkuṭṭam-pōkki,* பெ.(n.) இலந்தைக்கட்டைத்தைலம் பார்க்க; see *ilandai-k-kaṭṭai-t-tailam.*

வெண்குடக்கு *veṇ-kuḍakku,* பெ.(n.) வெண்தேக்கு; white teak-lageristro-emia lanceslata.

[வெண் (மை) + குடக்கு]

வெண்குடை *veṇ-kuḍai,* பெ.(n.) வெண்கொற்றக்குடை பார்க்க; see *veṇ-koṟṟa-k-kuḍai. "மண்டலமின்செய் வெண்குடை" (சீவக. 860).*

[வெண் (மை) + குடை]

வெண்குண்டுமணி *veṇ-kuṇḍu-maṇi,* பெ.(n.) வெள்ளைக்குண்டுமணி; white jeweller's bead.

[வெண் (மை) + குண்டுமணி]

வெண்குந்தி *veṇ-kundi,* பெ.(n.) வெள்ளைக் குங்கிலியம்; conkany resin boswellia serrata (glabra.).

[வெண் (மை) + குந்தி]

வெண்குந்திரிக்கபற்பம் *veṇ-kundiri-k-ka tpaṟpam,* பெ.(n.) பல் நோயைப் போக்கும் வெள்ளைக் குங்கிலிய பற்பம்; purified resin of boswellia serrata (glabra.) is powdered and used as baspam, it is purified by boiling with tender cocoanut-water.

[வெண் (மை) + குந்திரிக்கற்பம்]

வெண்குப்பைமேனி *veṇ-kuppai-mēṇi,* பெ.(n.) குப்பைமேனி; rubbish plant - acalypha indica.

[வெண் (மை) + குப்பைமேனி]



வெண்குமுதம்[1] *veṇ-kumudam,* பெ.(n.) வெண்ணெய்தல் (யாழ்.அக.) பார்க்க; see *veṇṇeydal.*

[வெண் (மை) + குமுதம்]

வெண்குமுதம்[2] *veṇ-kumudam,* பெ.(n.) 1. கண்களில் பஞ்சு போல் வெண்புள்ளி யுடைத்தாய்ப் பரவிக் குத்தலுடன் பார்வை மழுங்கி வலியை உண்டாக்கும் ஒரு வகைக் கண்ணோய்; disease of the pupil of the eye, marked by pain and which dots on the black of the eyes. 2. வெள்ளாம்பல்; flower-white lily white nymphane.

[வெண் (மை) + குமுதம்]

வெண்குருக்குச்செடி *veṇ-kurukku-c-ceḍi,* பெ.(n.) குருக்கு பார்க்க; see *kurukku.*

[வெண் (மை) + குருக்குச்செடி]

வெண்குருகடம் *veṇ-kurukaḍam,* பெ.(n.) உடம்பின் அரத்தத்தில் பரவியிருக்கும் அணுக்கிருமி; white corpuscle.

[வெண் (மை) + குருகடம்]

வெண்குருதி *veṇ-kurudi,* பெ.(n.) புண் முதலியவற்றிலிருந்து கசியும் ஊனீர், நிணநீர்; lymph.

[வெண் (மை) + குருதி]

வெண்குருவை *veṇ-kuruvai,* பெ.(n.) வெண்ணிறமான ஒரு குருவை நெல்; a variety of paddy.

[வெண் (மை) + குருவை]

வெண்குவளை *veṇ-kuvaḷai,* பெ.(n.) வெள்ளை அல்லி; indian white water lily.

[வெண் (மை) + குவளை]

வெண்குறண்டி *veṇ-kuṟaṇḍi,* பெ.(n.) வெள்ளைக் குறண்டி; a white variety of thorny shrub.

மறுவ. வெண் கொறண்டி.

[வெண் (மை) + குறண்டி]

வெண்குறிஞ்சி *veṇ-kuṟiñji,* பெ.(n.) பூநிறு; efflloresscence grown on the soil of fuller's earth.

[வெண் (மை) + குறிஞ்சி]

வெண்குன்றி *veṇ-kuṉṟi,* பெ.(n.) 1. வெள்ளைக்குன்றி பார்க்க (வின்.); see *veḷḷai-k-kuṉṟi.* 2. அதிமதுரம்[2], 1 பார்க்க (மலை.); see *adimaduram.*

[வெண் (மை) + குன்றி]

வெண்குன்று *veṇ-kuṉṟu,* பெ.(n.) முருகன் எழுந்தருளியுள்ள இடங்களுள் ஒன்று (சுவாமிமலை) (சிலப்.குன்றக்குரவை. பாட்டுமடை. 1); a shrine sacred to skanda.

[வெண் (மை) + குன்று]

வெண்கூதாளம்[1] *veṇ-kūdāḷam,* பெ.(n.) நீர்த்தாளி; a plant. 2. தாளி; a creeper of convolrulus order.

[வெண் (மை) + கூதாளம்]

வெண்கூதாளம்² *veṉ-kūdāḷam,* பெ.(n.) வெண்டாளி ¹ பார்க்க; see *veṇḍāḷi.* "*வெண்கூதாளத்துத் தண்பூங் கோதையர்*" *(பட்டினப். 85).*

[வெண் (மை) + கூதாளம்]

வெண்கூளி *veṉ-kūḷi,* பெ.(n.) வெண்ணிறப் பருந்து; white eagle.

[வெண் (மை) + கூளி]

வெண்கெண்டை *veṉ-keṇḍai,* பெ.(n.) வெண்மை நிறமுடையதும் 12 அங்குலம் வளர்வதுமான கெண்டை மீன் வகை; white carp, silvery, attaining 12 in. length.

[வெண் (மை) + கெண்டை]

வெண்கை *veṉkai,* பெ.(n.) 1. தொழில் செய்து பழகாத கை; hand unused to work. "*வெண்கை மகளிர்*" *(பதிற்றுப். 29, 6).* 2. சங்கு வளை யணிந்த கை (பதிற்றுப். 29, உரை); hand wearing conch bangles. 3. நளிநயம் செய்யாது தாளத்திற்கு இசைவிடும் கை; hand that beats time, without being engaged in gesticulation. "*முடிவிற் போக்கிய வெண்கை*" *(பதிற்றுப். 61, 7).* 4. வெள்ளிய கைப்பிடி; white-coloured handle. "*வெண்கை யொள்வாள்*" *(பெரும்பாண். 71).*

[வெண் (மை) + கை]

வெண்கொக்கு *veṉ-kokku,* பெ.(n.) வெள்ளைக்கொக்கு; white stork.

[வெண் (மை) + கொக்கு]



வெண்கொடி *veṉ-koḍi,* பெ.(n.) 1. வெற்றிக் கொடி; flag of victory. "*விசய வெண்கொடி*" *(புறநா. 362).* 2. சரசுவதி (பெரியபு. தடுத்தாட். 97); sarasvadi.

[வெண் (மை) + கொடி]

வெண்கொடிமூலம் *veṉ-koḍi-mūlam,* பெ.(n.) வெள்ளைபடமூலம்; root of leadwort bearing white flowers plumbage geylanica.

[வெண் (மை) + கொடிமூலம்]

வெண்கொடிவேலி¹ *veṉ-koḍivēli,* பெ.(n.) வெண்படமூலம்; keadwirt bearing white flowers-plumbago zeylanica.

[வெண் (மை) + கொடிவேலி]

வெண்கொடிவேலி² *veṉ-koḍivēli,* பெ.(n.) கொடுவேலி வகை (சங்.அக.); a species of ceylon lead-wort.

[வெண் (மை) + கொடிவேலி]

வெண்கொம்பன்பாகல் *veṉ-kombaṉ-pāgal,* பெ.(n.) பாகல் கொடிவகை; a creeper bearing white long carilla fruits-momordica charantia.

[வெண் (மை) + கொடி]



வெண்கொம்புப்புல் *veṇ-kombu-p-pul*, பெ.(n.) பேய்ப்புடல் பார்க்க; see *pēy-p-puḍal*.

[வெண் (மை) + கொம்புப்புல்]

வெண்கொல் *veṇ-kol*, பெ.(n.) வெள்ளி (இலக்.அக.); silver, as the white metal.

[வெண் (மை) + கொல்]

வெண்கொள்ளு *veṇ-koḷḷu*, பெ.(n.) நரைக்கொள்ளு; white horse gram-dolichos biflorus.

[வெண் (மை) + கொள்ளு]

வெண்கொளுஞ்சி *veṇ-koḷuñji*, பெ.(n.) வெள்ளைக் கொழுஞ்சி; wild indigo bearing white flowers-tephrosia-purpurea.

[வெண் (மை) + கொளுஞ்சி]

வெண்கொற்றக்குடை *veṇ-koṟṟa-k-kuḍai*, பெ.(n.) அரசனது வெற்றி குறிக்கும் வெண்ணிறக் குடை (சிலப். 5, 173, உரை); white umbrella of victory, one of the theinsignia of royalty.

[வெண் (மை) + கொற்றம் + குடை]

வெண்கொற்றன் *veṇ-koṟṟaṉ*, பெ.(n.) கழகக் காலப் புலவர்; a sangam poet.

தன்னை வருத்தும் ஈயின் குரலோசையைக் கேட்ட அளவிலேயே ஆவு (பசு) நடுங்க அதன் கழுத்திலுள்ள மணி ஒலிக்கும் என்று இவர் ஈயின்பால் ஆவுக்குள்ள அச்சத்தைப் புலப்படுத்தி அம்மணியோசை தலைவிக்குக் காமநோயை மிகுப்பதை இந்த ஒரு குறுந்தொகைப் பாட்டில் காட்டியுள்ளார். *“சிறைபனி யுடைந்த சேயரி மழைக்கட் பொறையரு நோயொடு புலம்பலைக் கலங்கிப் பிறருங் கேட்குநர் உளர்கொல் உறை சிறந்து ஊதை தூற்றும் கூதிர் யாமத்து ஆனுளம் புலம்புதொ றுளம்பும் நாநவில் கொடுமணி நல்கூர் குரலே” (குறுந். 86).*

வெண்கோட்டம்[1] *veṇ-kōṭṭam*, பெ.(n.) 1. ஓமாலிகை முப்பத்திரண்டனுளொன்றான நறும்பண்டம் (சிலப். 4, 77, உரை); a fragrant substance one of 32 *ōmalikai*. g.v. 2. செடிவகை; Arabian costum. *“பால்வெண் கோட்டமும்” (பெருங். உஞ்சைக். 50, 29).* 3. சுற்று மதிற்சுவர்; pellitory root.

[வெண் (மை) + கோட்டம்]

வெண்கோட்டம்[2] *veṇ-kōṭṭam*, பெ.(n.) கோட்டம் பார்க்க; see *kōṭṭam*.

[வெண் (மை) + கோட்டம்]

வெண்கோடல் *veṇ-kōḍal*, பெ.(n.) வெண்காந்தள் பார்க்க; see *veṇ-kāntaḷ*. *“வெண்கோட விலைச்சுருளில்” (பெரியபு. ஆனாய. 16).*

[வெண் (மை) + கோடல்]

வெண்கோல் *veṇ-kōl*, பெ.(n.) வெள்ளி; silver.

[வெண் (மை) + கோல்]

வெண்கோழி *veṇ-kōḻi,* பெ.(n.) வெண்ணிறமான கோழி; white bowl.

[வெண் (மை) + கோழி]

வெண்சங்கு *veṇ-šaṅgu,* பெ.(n.) ஒரு மூலி, வெண் காக்கட்டான், வெண் காக்கணம்; a twining plant bearing white flowers.

[வெண் (மை) + சங்கு]

வெண்சதைவிழியுந்தல் *veṇ-šadai-viḻiyundal,* பெ.(n.) கண்களில் வெள்ளைச் சதையைப், படரச்செய்து வலியை உண்டாக்கும் ஒரு வகைக் கண்நோய்; appearance of white film over the black part of the eye, slowly shrounding it entirely and attended with acute pain.

[வெண் (மை) + சதை + விழியுந்தல்]

வெண்சந்தனச்சிராய் *veṇšandaṉa-c-cirāy,* பெ.(n.) வெள்ளைச் சந்தனக் கட்டையினின்று பிளந்த சிறு துண்டுகள்; small pieces of white sandal-shaving or scraping of white sandal.

[வெண் (மை) + சந்தனச்சிராய்]

வெண்சந்தனம் *veṇ-šandaṉam,* பெ.(n.) வெள்ளைச் சந்தனம்; white sandal tree-santanum album.

[வெண் (மை) + சந்தனம்]

வெண்சலசம் *veṇ-šalašam,* பெ.(n.) வெண்டாமரை; white lotus.

[வெண் (மை) + சலசம்]

Skt. salasa > த. சலசம்.

வெண்சலசை *veṇ-šalašai,* பெ.(n.) கலைமகள்; *sarašvati.*

Skt. *salasa* > த. சலசம்.

வெண்சாந்து *veṇ-šāndu,* பெ.(n.) சுண்ணாம்புச்சாந்து; lime mortar, as white.

[வெண் (மை) + சாந்து]

வெண்சாமரம் *veṇ-šāmaram,* பெ.(n.) வெண்சாமரை பார்க்க; see *veṇ-šāmarai.*

[வெண் (மை) + சாமரம்]

வெண்சாமரை *veṇ-šāmarai,* பெ.(n.) அரசச் சின்னமாகக் கொள்ளப்படும் கவுரி மானின் மயிர்க்கற்றை (பதார்த்த. 1475); white hair of the yak, used as fly-whisk and reckoned as one of the insignia of royalty.

[வெண் (மை) + சாமரை]

வெண்சாய்மரை *veṇ-šāy-marai,* பெ.(n.) வெண்சாமரை பார்க்க; see *veṇ-šāmarai.*

[வெண்சாமரை → வெண்சாய்மரை]

வெண்சாயத்தான் *veṇ-šāyattāṉ,* பெ.(n.) ஒருவகைக் கொடிய நஞ்சு; a kind arsenic.

வெண்சாரணை *veṇ-šāraṇai,* பெ.(n.) வெள்ளைச் சாரணை; it is useful for rejuvenation.

[வெண் (மை) + சாரணை]

வெண்சாரை¹ *veṇ-šārai,* பெ.(n.) சாரைப்பாம்பு; white rat-snake (w.).

[வெண் (மை) + சாரை]



வெண்சாரை² *veṇ-šārai,* பெ.(n.) 1. வழலை பார்க்க; see *vaḻalai.* 2. சுக்கிலம்; semen. 3. அரியதாய் அகப்படும் வெள்ளைச் சாரைப்பாம்பு; white ral snake found rarely. 4. நஞ்சுக்கொடி; placental cord. 5. மருத்துவ உப்பு; the three universal salt.

[வெண் (மை) + சாரை]

வெண்சாரைக்கொழுப்பு *veṇ-šārai-k-koḻuppu,* பெ.(n.) 1. வழலை நாதவுப்பு; a kind of prepared salt. 2. வெள்ளைச் சாரைப் பாம்பின் கொழுப்பு; fat of white rat snake.

வெண்சாரைச்சுன்னம் *veṇ-šārai-c-cuṇṇam,* பெ.(n.) 1. நஞ்சக் கொடிச் சுன்னம், குடற் சுன்னம்; calcined navel cord.

வெண்சாறடை *veṇ-šāraḍai,* பெ.(n.) வெள்ளைச் சாரணை பார்க்க; see *veḷḷai-c-cāraṇai.*

[வெண் (மை) + சாறடை]

வெண்சித்தகத்தி *veṇ-šitta-katti,* பெ.(n.) வெண்சிற்றகத்தி பார்க்க; see *veṇ-širra-katti.*

[வெண் (மை) + சித்தகத்தி]

வெண்சித்திரமூலம் *veṇ-šittira-mūlam,* பெ.(n.) வெண்கொடிவேலி பார்க்க; see *veṇ-koḍi-veḷi.*

[வெண் (மை) + சித்திரமூலம்]

வெண்சிவதை¹ *veṇ-šivadai,* பெ.(n.) பூடுவகை (பதார்த்த. 1061); white bindweed.

[வெண் (மை) + சிவதை]

வெண்சிவதை² *veṇ-šivadai,* பெ.(n.) சிவதை வேர், கைப்பு துவர்ப்பு பித்தம் வயிற்றுப் பூச்சி போகும்; root of a plant ipomaea trupenthum. it is purgative the black variety is a drastic purgative.

வெண்சிறுகடுகு¹ *veṇ-širu-kaḍugu,* பெ.(n.) வெண்கடுகு; white mustard. *"நெய்யோடே வெண்சிறுகடுகையும் அப்பி" (திருமுரு. 228, உரை).*

[வெண் (மை) + சிறு (மை) + கடுகு]

வெண்சிறுகடுகு² *veṇ-širu-kaḍugu,* பெ.(n.) கதவுகளில் பூசப்படும், பேய்க்குப் பகையானது (சிலப்.); painted in doors to anest evil spirit.

[வெண் (மை) + சிறு (மை) + கடுகு]

வெண்சிவப்பு *veṇ-šivappu,* பெ.(n.) ஒரு நிறம்; russet.

[வெண் (மை) + சிவப்பு]

வெண்சிற்றகத்தி *veṇ-šiṯṯgatti,* பெ.(n.) வெண்செம்பை; a plant bearing white flower-cassia cupidata.

[வெண் (மை) + சிற்றகத்தி]

வெண்சிறுமா *veṇ-širumā,* பெ.(n.) கண்ணோய்க்குப் பயன்படுத்தப்படும் ஒரு மருந்து; a medicine used for the diseases of the eye.

வெண்சீடம் *veṇ-šīḍam,* பெ.(n.) கொட்டைக் கரந்தை பார்க்க; see *koṭṭai-k-karandai.*

வெண்சீந்தில் *veṇ-šīndil,* பெ.(n.) அமுதவல்லிக் கொடி; moon creeper-tinosper-mum cordifolia.

வெண்சீர் *veṇ-šīr,* பெ.(n.) வெண்பாவுரிச்சீர் (இலக். வி. 718); a metrical foot.

[வெண் (மை) + சீர்]

வெண்சீர்வெண்டளை *veṇšīr-veṇḍaḷai,* பெ.(n.) வெண்பாவுரிச் சீர் முன் நேர் வந்து ஒன்றுந் தளைவகை (காரிகை. உறுப். 10); a kind of talai in which a *veṇpā-v-uri-c-cīr* foot succeeds another foot beginning with *nēr.*

[வெண்சீர் + வெண்டளை]

வெண்சீரகம் *veṇ-šīragam,* பெ.(n.) சீரகம்; cumin seed.

[வெண் (மை) + சீரகம்]



வெண்சுக்கான் *veṇ-šukkāṉ,* பெ.(n.) வெள்ளைச் சுக்கான்கல், இது ஒரு துணைச்சாறு பொருள்; white lime stone, one of the 120 natural substances.

[வெண் (மை) + சுக்கான்]

வெண்சுக்கான்கல் *veṇ-cukkāṉ-kal,* பெ.(n.) சுக்கான் கல்வகை; a kind of kunkar, a lime-stone (w.).

[வெண் (மை) + சுக்கான் + கல்]

வெண்சுக்கிரன் *veṇ-cūkkiraṉ,* பெ.(n.) குழந்தைகளின் கருவிழியைச் சுற்றிலும் நெருப்பு நிறத்தையுண்டாக்கும் ஒரு கண்ணோய்; an eye disease in children causing redness around the black of the eye.

வெண்சுடர் *veṇ-šuḍar,* பெ.(n.) வெண்கதிரோன் பார்க்க; see *veṇ-kadirōṉ* (w.).

[வெண் (மை) + சுடர்]

வெண்சுண்டை *veṇ-šuṇḍai,* பெ.(n.) வெண்மைநிறமுள்ள சுண்டை; white variety of solanum torvum.

[வெண் (மை) + சுண்டை]

வெண்சுண்ணத்தி *veṇ-cuṇṇatti,* பெ.(n.) சீனக்காரம்; alum.

வெண்சுதை *veṇ-cudai,* பெ.(n.) சுவர்களிலும் மேற்கட்டியிலும் உருவங்கள் செய்யப் பயன்படும் அரைத்த சுண்ணாம்பு; hime mortar used for shaping figures on walls and outer structure.

[வெண் (மை) + சுதை]

வெண்சுதைக்குன்று *veṇ-šudai-k-kuṉṟu,* பெ.(n.) செய்குன்று வகை; a kind of artificial mound. *"தலைத்தோன் றருவிய வெண்சுதைக் குன்றொடு வேண்டுவ பிறவும்" (பெருங். உஞ்சைக். 33, 5).*

[வெண் (மை) + சுதை + குன்று]

வெண்சுரம் *veṇ-šuram,* பெ.(n.) ஒரு வகைச் சுரநோய்; a variety of fever.

[வெண் (மை) + சுரம்]

வெண்சுருமாக்கல் *veṇ-šurumākkal,* பெ.(n.) ஒரு வகை மருந்துக்கல்; white antimony.

வெண்செந்துறை *veṇ-šenduṟai,* பெ.(n.) இரண்டடிகள் தம்முள் அளவொத்து வருஞ் செய்யுள் வகை (வீரசோ. யாப். 14); couplet of lines of equal feet.

[வெண் (மை) + செந்துறை]

வெண்செம்பை *veṇ-šembai,* பெ.(n.) வெண்சிற்றகத்தி பார்க்க; see *veṇ-širṟakatti.*

[வெண் (மை) + செம்பை]

வெண்செவ்வந்தி *veṇ-ševvanti,* பெ.(n.) வெள்ளை சாமந்திப்பூ; white clarysanthe mum flower.

[வெண் (மை) + செவ்வந்தி]

வெண்சேல் *veṇ-šēl,* பெ.(n.) வெண்ணிற முடையதோர் ஆற்று மீன் (தஞ்சை. மீன.); a whitish river fish.

[வெண் (மை) + சேல்]



வெண்சோளம் *veṇ-šōḷam,* பெ.(n.) சோளவகை; species of great millet.

[வெண் (மை) + சோளம்]



வெண்சோறு *veṇ-šōṟu,* பெ.(n.) வெள்ளரிசியாற் சமைத்த வெறுஞ் சோறு; white rice looked but unmixed with sauce or condiment. *"வெண்சோற்றுப் புக்கடகு வைக்க" (தனிப்பா. 1, 273, 14).*

[வெண் (மை) + சோறு]

வெண்டகரை[1] *veṇḍakarai,* பெ.(n.) வெள்ளைப் பூவுடைய தகரை; white flowered cassia tora.

[வெண் (மை) + தகரை]

வெண்டகரை[2] *veṇḍakarai,* பெ.(n.) மரவகை; a kin of tree, cassia glauca.

[வெண் (மை) + தகரை]

வெண்டணக்கு *veṇḍaṇakku,* பெ.(n.) வெள்ளைத்தணக்கு; white catamaran tree.

[வெண் (மை) + தணக்கு]

வெண்டயம் *veṇḍayam,* பெ.(n.) வெண்டையம் பார்க்க; see *veṇḍayam.* *"துரோகரைக்காய் வெண்டயத்தாற் சூபெனை" (விறலிவிடு. 30).*

[வெண்டையம் → வெண்டயம்]

வெண்டரளமேனி *veṇḍaraḷa-mēṉi,* பெ.(n.) வெள்ளை நஞ்சுவகை; a kind of arsenic.

வெண்டலை *veṇḍalai,* பெ.(n.) 1. தசைநீங்கி எலும்பு மாத்திரமாகியதலை; fleshless, bony head. *"வெண்டலையுட்கச் சிரித்து" (நாலடி, 50).* 2. தலையோடு; skull. *"படுவெண்டலையிற் பலிகொண்டுடில்வீர்" (தேவா. 946, 3).* 3. வெண்டலைக்கடன் பார்க்க; see *veṇḍalai-k-kaḍaṉ.*

[வெண் (மை) + தலை]

வெண்டலைக்கடன் *veṇḍalai-k-kaḍaṉ,* பெ.(n.) வெண்ணிலைக்கடன் பார்க்க; see *veṇṇilai-k-kaḍaṉ.*

[வெண்ணிலை → வெண்டலை + கடன்]

வெண்டளை *veṇḍaḷai,* பெ.(n.) வெண்பாவுக்குரிய தளை; a kind of *taḷai* peculiar to *veṇpā* verse.

[வெண் (மை) + தளை]

வெண்டன் *veṇḍaṉ,* பெ.(n.) வெண்டேக்கு; white teak-legerstramiq lancealata.

[வெண் (மை) → வெண்டன்]

வெண்டாது *veṇḍādu,* பெ.(n.) 1. திருநீறு (பிங்.); sacred ashes. 2. வெள்ளி (இலக். அக.); silver.

[வெண் (மை) + தாது]

வெண்டாமரை *veṇḍāmarai,* பெ.(n.) வெண்மை நிறமான தாமரைப்பூ; white lotus. *"செந்தாமரை வெண்டாமரை" (தக்கயாகப். 319).*

[வெண் (மை) + தாமரை]

வெண்டாமரைமகள் *veṇḍāmarai-magaḷ,* பெ.(n.) நாமகள் (பிங்.); sarasvati.

[வெண்டாமரை + மகள்]

வெண்டாமரையாள் *veṇḍāmarai-y-āḷ,* பெ.(n.) வெண்டாமரைமகள் பார்க்க (திவா.); see *veṇḍāmarai-magaḷ.*

[வெண்டாமரை + ஆள்]

வெண்டாவி *veṇḍāvi,* பெ.(n.) பட்டினி கிடந்து பின் உண்கையாலுண்டாம் அசதி; drowsiness caused by taking food after a fast (w.).

[வெண்டு + ஆவி]

வெண்டாவியத்துவருதல் *veṇḍāviyattu-varudal,* பெ.(n.) மிகவும் களைத்துச் சோர்வடைந்த நிலை; extreme tiredness.

[வெண்டாவியுற்று → வெண்டாவியத்து + வருதல்]

வெண்டாழிசை *vendāḷisai,* பெ.(n.) மூன்றடியாய் வேற்றுத்தளை விரவி ஈற்றடி முச்சீரான் இறுவதாகவேனும் சிந்தியல் வெண்பா ஒரு பொருண் மேல் மூன்றடுக்கி வருவதாக வேனுமுள்ள வெண்பாவின் இனம் (யாப்.வி. 66, உரை); a kind of stanza which either consists of a single triplet of which the first two lines are of four each and the last line is of three feet or forms one of a set of three *cintiyal-venpa* bearing on a single theme.

[வெண் (மை) + தாழிசை]

வெண்டாழை[1] *vendāḷai,* பெ.(n.) வெள்ளைத் தாழை மரம்; white pandanus or screw pine-pandanus odoratissimus its white flower has no smell.

[வெண் (மை) + தாழை]

வெண்டாழை[2] *vendāḷai,* பெ.(n.) தாழை வகை; a kind of *tāḷai.* *"வெண்டாழை பூத்து விளக்கெரிய" (தனிப்பா. 1, 153, 62).*

[வெண் (மை) + தாழை]

வெண்டாளி[1] *vendāḷi,* பெ.(n.) தாளிவகை (திருமுருகு. 192, உரை); white catamaran tree.

[வெண் (மை) + தாளி]

வெண்டாளி[2] *vendāḷai,* பெ.(n.) இறந்துபட்ட கடைக்கழக நூல்களுள் ஒன்று (இறை, 1, உரை, பக். 5); a poem of the middle sangam, not now extent.

வெண்டான் *vendān,* பெ.(n.) வெண்டேக்கு பார்க்க; see *vendēkku.*

[வெண்டன் → வெண்டான்]

வெண்டி[1] *vendi,* பெ.(n.) 1. இன்மையால் வருந்துபவன்; one who is in great want. 2. வீண்; useless.

[வெண்டு → வெண்டி]

வெண்டி[2] *vendi,* பெ.(n.) ஆடை நெய்யும் பாவகை; warp after it has been sized.

[வெண்டு → வெண்டி]

வெண்டி[3] *vendi,* பெ.(n.) வெண்டை பார்க்க; see *vendai* (w.).

[வெண்டு → வெண்டி]

வெண்டி[4] *vendi,* பெ.(n.) வெண்டிக்காய்; a vegetable fruit, ladies finger-hibiscus esculentus.

[வெடி → வெண்டி. ஒ.நோ. கடி → கண்டி.]

வெண்டிக்காய்[1] *vendi-k-kāy,* பெ.(n.) வெண்டை பார்க்க; see *vendai.*

[வெண்டி + காய்]

வெண்டிக்காய்[2] *vendi-k-kāy,* பெ.(n.) வெண்டிச் செடியின் காய்; ladies finger.

[வெண்டி + காய்]

வெண்டிரை *vendirai,* பெ.(n.) கடல்; sea. *"தகைபெற்ற வெண்டிரை" (கலித். 124).*

[வெண் (மை) + திரை]

வெண்டு[1]-தல் *vendu-,* செ.கு.வி. (v.i.) 1. வற்றிப் போதல்; to dry, as in the sun. *"வெண்டிப் பழுத்தெழும்பிய முதுகும்" (திருப்பு. 802).* 2. களைத்தல்; to be exhausted (w.). *'வெண்டி வெறித்து வந்தான்'.* 3. இல்லாததற்கு ஆசைப்படுதல்; to be in great want, to hanker. *'அவன்*

சோற்றுக்கு வெண்டிக்கிடக்கிறான்'. (உ.வ.).

[விள் → வெள் → வெண்டு → வெண்டுதல். (இ.வ.) (வே.க.பக்.120). வெண்டுதல் = இளைத்துப்போதல்.]

வெண்டு² *vendu,* பெ.(n.) 1. உட்டுளை; hollowness, as of a pipe (w.). 2. மரங்களின் உள்ளீட்டைப் போக்கும் நோய்வகை; a disease which causes hollowness in trees. *"உயிரை வெண்டார் குழலாக்க வேண்டுமோ" (திருக்காளத். உலா, 567).* 3. கரும்பு (மலை.); sugarcane. 4. நெட்டி; sola pith. 5. கடுக்கன்புரி (யாழ்.அக.); twist of an ear-ring.

[விள் → வெள் → வெண்டு]

வெண்டுக்காய் *vendu-k-kāy,* பெ.(n.) வெண்டை பார்க்க; see *vendai* (w.).

[வெண்டி + காய் → வெண்டுக்காய்]

வெண்டுகில் *vend-ugil,* பெ.(n.) வெள்ளைத்துணி; white cloth (w.).

[வெண் (மை) + துகில்]

வெண்டுத்தம்¹ *venduttam,* பெ.(n.) மயிற்றுத்தம் (யாழ்.அக.); suphate of copper.

[வெண் (மை) + துத்தம்]

வெண்டுத்தம்² *venduttam,* பெ.(n.) வெள்ளைத் துத்தம், பால் துத்தம்; white vitroil-sulphate of zinc.

[வெண் (மை) + துத்தம்]

வெண்டுமிளகாய் *vendu-milagāy,* பெ.(n.) காய்ந்துலர்ந்த ஒரு வகைக் குண்டு மிளகாய், குடமிளகாய்; a variety of dried chilly which is round.

[விள் → வெள் → வெண்டு + மிளகாய்]

வெண்டுளசி *vendulaśi,* பெ.(n.) 1. திருநீற்றுப் பச்சை; sweet basil. 2. துளசி வகை; ocimumgratissimum.

[வெண் (மை) + துளசி]

வெண்டுறை¹ *vendurai,* பெ.(n.) மூன்றடி முதல் ஏழடியீறாக அடிகளைப் பெற்றுச் சீர் குறைந்தும் மிக்கும் வருதலையுடைய வெண்பாவின் வகை (காரிகை) (யாப். வி. பக். 537); a kind of stanza consisting of three to seven lines of unequal length.

[வெண் (மை) + துறை]

வெண்டுறை² *vendurai,* பெ.(n.) திருவண்டு துறை என இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊர்; now, in *tañjāvūr* district a village as called *tiru-vandu-durai.*

சேக்கிழார் இதனைத் *திருமலி வெண்டுறை* என்பார் (34-574). சம்பந்தர் பதிகம் இறைவன் விரும்புமிடம் வெண்டுறை என்பதை எல்லாப் பாடல்களிலும் குறிக்கிறது (319). துறை என்பது ஆற்றுத் துறையாக இருக்கலாம். வெண்ணிலம் என்பதற்கு வெறுந்தரை, மணற்பாங்கான தரை என்று தமிழ் சென்னை அகராதி பொருள் உரைப்பதை நோக்க, *மணற்பாங்கான துறை* என்ற நிலையில் வெண்டுறை என்ற பெயர் அமைந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

[வெள் → வெண் + துறை]

வெண்டுறைச்செந்துறைப்பாட்டு *vendurai-c-cendurai-p-pāttu,* பெ.(n.)

கலிவரி சிற்றிசை பேரிசை சிற்றிசைச் சிற்றிசை என்ற பகுதிகளையுடை இன்னிசைப் பாட்டு வகை (யாப். வி. பக். 538);

[வெண்டுறை + செந்துறை + பாட்டு]

வெண்டுகிக்கரும்பு *veṇḍūki-k-karumbu,* பெ.(n.) வெள்ளைக் கரும்பு; white sugan-cane saccharum officinarum.

[வெண் (மை) + தோகை + கரும்பு]

வெண்டேக்கு *veṇḍēkku,* பெ.(n.) நீண்ட மரவகை; a kind of lager tree.

[வெண் (மை) + தேக்கு]

வெண்டேர் *veṇḍēr,* பெ.(n.) கானல்; mirage. *"வெண்டே ரோடுங் கடங்காய் மருங்கில்" (அகநா. 179).*

[வெண் (மை) + தேர்]

வெண்டேர்ச்செழியன் *veṇḍēr-c-celiyaṉ,* பெ.(n.) இடைக் கழகத் தொடக்கத்தில் இருந்தவனாகக் கூறப்படும் பாண்டியன் (இறை.1, உரை, பக். 5); a pandya king who is said to have reigned at the beginning of the middle sangam.

[வெண் (மை) + தேர் + செழியன்]

வெண்டை *veṇḍai,* பெ.(n.) 1. செடிவகை; okra, s.sh. 2. வெண்டைக்காய்; ladies finger.

[விள் → வெள் → வெண்டு → வெண்டை]

வெண்டைக்காய் *veṇḍai-k-kāy,* பெ.(n.) வெண்டிக்காய் பார்க்க; see *veṇḍi-k-kāy.*

[விள் → வெள் → வெண்டு → வெண்டை + காய்]



வெண்டையம் *veṇḍaiyam,* பெ.(n.) 1. வீரர் காலனி; warriors anklet. *"வீரவெண்டைய முழங்க" (திருப்பு. 750).* 2. குதிரை முதலியவற்றின் காற்சதங்கை; hollow ring with pebbles inside, tied to the feet of horses or elephants. *"வெண்டையங் கவடி" (அரிச். பு. வேட்டந். 13).* 3. கட்டை விரல்; thumb-ring.

[வெண்டு → வெண்டையம்]

வெண்டொழுநோய் *veṇḍolu-nōy,* பெ.(n.) வெண்குட்டம் பார்க்க; see *veṉ-kuṭṭam.* *"கருஞ் சிரங்கு வெண்டொழுநோய்" (ஏலாதி. 57).*

[வெண் (மை) + தொழுநோய்]

வெண்டோடு *veṇṭōḍu,* பெ.(n.) பனந்தோடு; calyx-leaf of palmyra. *"வெண்டோடு நிரைஇய வேந்துடை யருஞ்சமம்" (பதிற்றுப். 40, 10).*

[வெண் (மை) + தோடு]

வெண்டோன்றி[1] *veṇḍōṉṟi,* பெ.(n.) வெள்ளைத் தோன்றி மலர்; white november flower-gloriosa superba.

[வெண் (மை) + தோன்றி]

வெண்டோன்றி² *vendōnri,* பெ.(n.) வெண் காந்தள் பார்க்க; see *venkāntaḷ.* (w.).

[வெண் (மை) + தோன்றி]

வெண்டோன்றித்தைலம் *vendōnri-t-tailam,* பெ.(n.) குட்டத்திற்குப் பயன்படுத்துவதும் கிழங்கினின்றும் வடிக்கப்பட்டதுமான நெய்மம் (தைலம்); medicated oil extracted from the plough root by the process of *kuḻi-t-tailam.* it is used for leprosy.

வெண்ணகரு *venna-karu,* பெ.(n.) வெள்ளை அகிற் கட்டை; aquila or eagle-wood-aquilaria agalocha.

[வெண் (மை) + அகில் → அகிர் + அகிரு]

வெண்ணகில் *vennakil,* பெ.(n.) வெள்ளை அகில்–மரவகை; white cedar-dysaxylum malabaricum.

[வெண் (மை) + அகில்]

வெண்ணகை *vennagai,* பெ.(n.) 1. வெள்ளிய பல்; clean, white tooth. *"முத்தன்ன வெண்ணகையாய்" (திருவாச. 7, 3).* 2. புன்னகை; smile. *"அல்லமன் வெண்ணகை செய்து வெப்பும்" (பிரபு. லிங். சித்தரா. 36).*

[வெண் (மை) + நகை]

வெண்ணஞ்சு *vennañju,* பெ.(n.) 1. ஊன்விசேடம்; a kind of fleshy substance. *"விழுக்கொடு வெண்ணெஞ்சு" (சீவக. 1584).* 2. நிணம் (சீவக. 1584, உரை); marrow in the bone.

[வெண் (மை) + நஞ்சு]

வெண்ணடம்பு *vennadambu,* பெ.(n.) வெள்ளையடப்பங்கொடி பார்க்க; see *veḷḷai-yadappan-kodi.*

[வெண் (மை) + அடம்பு]

வெண்ணத்தை *vennattai,* பெ.(n.) நத்தைவகை; a kind of snail.

[வெண் (மை) + நத்தை]

வெண்ணரி *vennari,* பெ.(n.) நரிவகை; a kind of fox. *"விளரிக் கொட்பின் வெண்ணரி கடிகுவென்" (புறநா. 291).*

[வெண் (மை) + நரி]



வெண்ணலாத்தி *vennalātti,* பெ.(n.) ஒரு வகைப் பாம்பு; a kind of snake.

[வெண் (மை) + ஆத்தி]

வெண்ணலாந்தை *vennalāntai,* பெ.(n.) வெண்ணாந்தை பார்க்க; see *vennāntai.*

[வெண்ணாந்தை → வெண்ணலாந்தை]

வெண்ணலாற்றி *vennalāṟṟi,* பெ.(n.) மிளகு தக்காளி; a plant good for angular stomatitis-solanum nigrum.

வெண்ணலை *vennalai,* பெ.(n.) வெண்ணலை. எவ்வகை ஈடும், பிடிபாடும்



வெண்ணங்கு

வெண் காசினி கீரை

வெண் மந்தாரை

வெண் கொடி வேலி

இல்லாமல் கொடுக்கப்பட்ட கடன். நெல்லை வட்டாரத்தில் நிர்கதியாய் விடப்பட்டவர்; a loan given without any mortgage or security. *'என்னெ இப்படி வெண்ணலையா விட்டிட்டுப் போயிட்டாரே'* என்பார்கள்.

[வெண்ணிலை → வெண்ணலை]

வெண்ணறிவு *veṇṇaṟivu,* பெ.(n.) அறிவின்மை; ignorance.

[வெள் + அறிவு → வெள்ளறிவு → வெண்ணறிவு]

வெண்ணறுகு *veṇṇaṟugu,* பெ.(n.) வெள்ளறுகு; a plant-adenema hyssopifolium-or exacum hyssopifolium.

[வெண் (மை) + அறுகு]

வெண்ணாகம் *veṇṇāgam,* பெ.(n.) வெள்ளீயம்; tin.

[வெண்–மை + நாகம் → வெண்ணாகம்]

வெண்ணாகனார் *veṇṇākaṉār,* பெ.(n.) கழகக்காலப் புலவர்; a sangam poet. இவர் அகநானூற்றில் 247–ஆம் பாடலைப் பாடியுள்ளார்.

வெண்ணாகை *veṇṇāgai,* பெ.(n.) வெள்ளை நாகை; milling tona hortensis.

[வெண் (மை) + நாகை]

வெண்ணாங்கு *veṇṇāṅgu,* பெ.(n.) 1. ஓடை செடி; crotolaria-ochlandra travancorica. 2. ஓடைக்கொடி; a creeper com bretum ovalifolium. 3. சிற்றிலைப்புலவு; pterospermum suberi folium alias qacerifolium. 4. மரவகை; creamy-leaved lancewood, m.tr. 5. நீண்ட மரவகை; maple-leaved lance wood, l.tr.

[வெண் (மை) + நாங்கு]

வெண்ணாத்தி *veṇṇātti,* பெ.(n.) 1. வெள்ளையாத்தி, ஆத்தி; bearing white flowers-bauhinia variegata (candida). 2. ஒரு வகைப் பாம்பு; a snake.

[வெள் → வெண் + ஆத்தி]

வெண்ணாந்தை *veṇṇāndai,* பெ.(n.) பெரும்பாம்புவகை; python.

(பனை மரம் அல்லது தூணைப் போல் பருத்து உடம்பு வழுவழுப்பாய் வாலுந்தலையும் ஒரே மொத்தமாய் வெள்ளை வரிகளை யுடைத்தாய் ஆடு, கோழி, மாடுகளை விழுங்கும் பாம்பு வகை).

வெண்ணாயுருவி *veṇṇāyuruvi,* பெ.(n.) நாயுருவி வகை; white species of indian burr. (w.).

[வெண் (மை) + நாயுருவி]



வெண்ணாரி *veṇṇāri,* பெ.(n.) பூடுவகை (சங்.அக.); a plant.

வெண்ணாரை *veṇṇārai,* பெ.(n.) 1. நாரை வகை (சூடா.); indian crane. 2. மரவகை; a tree.

[வெண் (மை) + நாரை]



வெண்ணாவல்[1] *veṇṇāval,* பெ.(n.) 1. வெள்ளை நாவல் மரம்; jambo tree yielding white fruits. *'இது அரத்த அணுக்களையும் விந்து அணுக்களையும் உண்டாக்குவதும் உட்சூடு போக்குவதுமான ஒரு மூலிகை'.* 2. ஒருவகைச் செயற்கை உப்பு (சத்தியுப்பு); a kind of prepared salt. 3. மருத்துவ உப்பு; a medicine prepared out of the three salt used for all diseases-kind of medicine. 4. நஞ்சுக் கொடி; navel cord.

[வெண் (மை) + நாவல்]

வெண்ணாவல் *veṇṇāval,* பெ.(n.) நாவல் வகை; a kind of rose-apple, in tr. *"வீறுயர் வெண்ணாவற் கனியொன்று" (திருவானைக். சம்பு. 5).*

[வெண் (மை) + நாவல்]

வெண்ணாவல்சுரல் *veṇṇāval-šural,* பெ.(n.) ஏமமலை; the sacred gold mountain one of the eight chief ranges in india.

வெண்ணாவி *veṇṇāvi,* பெ.(n.) வெள்ளை ஆவிரை; white bachnang.

[வெண் (மை) + ஆவிரை → ஆவி]

வெண்ணாவிரை *veṇṇā-virai,* பெ.(n.) வெள்ளை ஆவிரையாகிய ஒரு வகைக் கற்ப மூலி; a kind of cassia auriculate used for longevity.

[வெண் (மை) + ஆவிரை]

வெண்ணி *veṇṇi,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர்; a village at *Thañjāvūr* Dt.

சோழநாட்டில் நீடாமங்கலத்திற்கு மேற்கேயுள்ள ஒரு ஊர். அது தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்று. கோயில் வெண்ணி என இக்காலத்து வழங்கும். அவ்வூரையும், அதனைச் சூழ்ந்துள்ள இடங்களையும் பார்க்கையில் அந்த இடம் பண்டைக்காலத்தில் மிகப்பெரிய நகராக இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது.

வெண்ணிக்குயத்தியார் *veṇṇi-k-kuyattiyār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a *šangam* poet.

வெண்ணிலம் *veṇṇilam,* பெ.(n.) 1. வெறுந் தரை; bare ground (w.). 2. மணற்பாங்கான தரை (யாழ்.அக.); sandy soil.

[வெண் (மை) + நிலம்]

வெண்ணிலவு *veṇṇilavu,* பெ.(n.) மதியொளி; moonlight. *"வெண்ணிலவின் பயன்றுய்த்தும்" (பட்டினப். 114).*

[வெண் (மை) + நிலவு]

வெண்ணிலாவொழுகு *veṇṇilā-voḻugu,* பெ.(n.) நில நஞ்சு வகை; a kind of blue arsenic.

வெண்ணிலுவை *veṇṇiluvai,* பெ.(n.) 1. பணக்கடன் மீதி; arrears of cash debt. 2. கைமாற்றுக்கடன் (யாழ்.அக.); temporary loan without security.

[வெண் (மை) + நிலுவை]

வெண்ணிலை *vennilai,* பெ.(n.) வெண்ணிலைக்கடன் பார்க்க; see *vennilai-k-kadan.*

[வெண் (மை) + நிலை]

வெண்ணிலைக்கடன் *vennilai-k-kadan,* பெ.(n.) ஈடுகொட்டாது வாங்குங்கடன்; loan obtained wihtout pledge or mortgage.

[வெண்ணிலை + கடன்]

வெண்ணிலைப்பத்திரம் *vennilai-p-pattiram,* பெ.(n.) 1. ஈடுகொட்டாத கடனைக் குறிக்கும் ஆவணம்; simple bond, without pledge or mortgage. 2. ஈடுகொட்டாது எழுதிக் கொடுக்குங் கைக்குறிப்பு; note.of.hand, as without security (w.).

*[வெண்ணிலை + **Skt.** patra > த. பத்திரம்]*

வெண்ணிறம் *venniram,* பெ.(n.) சங்க நஞ்சு; a kind of white arsenic.

வெண்ணீர் *vennir,* பெ.(n.) வெண்மையான நீர்; semen. *"வெண்ணீர் வாயுவினான் மாதர் செந்நீரோடு கூடி.......... கருவாகும்" (சூத. ஞான. 10, 9).*

[வெண் (மை) + நீர்]

வெண்ணீர்த்தெளிவு *vennir-t-telivu,* பெ.(n.) தேத்தான் கொட்டை; clearing nut-strychnos potatorum.

[வெண்ணீர் + தெளிவு]

வெண்ணீலம் *vennilam,* பெ.(n.) நிறம்; slate blue, blush.

[வெண் (மை) + நீலம்]

வெண்ணீறு[1] *venniru,* பெ.(n.) திருநீறு; sacred ashes. *"விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற்பூசி" (தேவா. 811, 2).*

[வெண் (மை) + நீறு]

வெண்ணீறு[2] *venniru,* பெ.(n.) 1. கற் சுண்ணாம்பு நீறு; slaked lime.

[வெண் (மை) + நீறு]

வெண்ணுருட்டி *vennu-rutti,* பெ.(n.) விட்ணுகாந்தி; a prostate plant-sphoeranthus indicus.

வெண்ணுரை *vennurai,* பெ.(n.) 1. மீன் நீரில் இரைதலினாலுண்டாகும் நுரை; fishing movement escaped foam. 2. கடலடிப் பாறையில் மோதுதலால் உண்டாகும் நுரை (செங்கை.மீன.); foam bubbles due to dashing in the rocky area under the sea.

[வெண் (மை) + நுரை]

வெண்ணூமத்தை *vennūmattai,* பெ.(n.) வெள்ளுமத்தை; dhatura bearing white flowers-dhatura alba.

[வெண் (மை) + ஊமத்தை]

வெண்ணெட்டி *vennetti,* பெ.(n.) வெண்கிடை பார்க்க (புறநா. அரும்.); see *ven-kidai.*

[வெண் (மை) + நெட்டி]

வெண்ணெய் *venney,* பெ.(n.) 1. தயிரிலிருந்து கடைந்தெடுக்கப்படும் சத்து; butter. *"சேதாநறு மோர் வெண்ணெயின்" (பெரும்பாண். 306).* 2. வெண்ணெய்ப்பதம் பார்க்க; see *venney-p-padam.*

[வெண் (மை) + நெய்]

வெண்ணெய்க்கல் *veṇṇey-k-kal,* பெ.(n.) மலையின் ஒட்டில் நிற்கும் பெரிய குண்டுக்கல்; ball of rock standing on a hill.

[வெண்ணெய் + கல்]

வெண்ணெய்ச்சுறா *veṇṇey-c-cuṟā,* பெ.(n.) 1. வெண்மையும் சிவப்பும் கலந்த நிறமுடையதும் 18 அங்குலம் வளர்வதுமான மீன்வகை; batten fish, silvery shot with purple, attaining 18 in. in length.

[வெண்ணெய் + சுறா]

வெண்ணெய்த்தாழி *veṇṇey-t-tāḻi,* பெ.(n.) 1. வெண்ணெய் வைக்குஞ் சட்டி; butter-storing pot. 2. வெண்ணெய்தாழிதிருவிழா பார்க்க; see *veṇṇey-t-tāḻi-tiruviḻā.*

[வெண்ணெய் + தாழி]

வெண்ணெய்த்தாழிதிருவிழா *veṇṇey-t-tāḻi-tiruviḻā,* பெ.(n.) கண்ணன் வெண்ணெய் திருடிய நிகழ்வுத் தொடர்பாக நடத்தப்பெறும் பெருமாள் கோயில் திருவிழா; a *Perumāḷ* temple festival in which *kaṇṇan's* of stealing butter is represented.

[வெண்ணெய் + தாழி + திருவிழா]

வெண்ணெய்த்தெழி *veṇṇey-t-teḻi,* பெ.(n.) கடைந்த மோரைக் கையால் அலைக்கும் ஓசை; sound produed in shaking the churned butter-milk with the hand. *"வெண்ணெய்த் தெழி கேட்கு மண்மையால்" (கலித். 108).*

[வெண்ணெய் + தெழி]

வெண்ணெய்தல் *veṇṇeytal,* பெ.(n.) ஆம்பல் வகை (பிங்.); white indian water-lily.

[வெண் (மை) + நெய்தல்]

வெண்ணெய்நல்லூர் *veṇṇey-nallūr,* பெ.(n.) 1. நம்பியாரூரரைச் சிவபிரான் தடுத்தாட் கொண்டதும் மெய்கண்ட தேவர் பிறந்ததும் கடலூர் மாவட்டத்தினுள்ளதுமான சிவத் தலம்; a siva shirine in the south arcot district, where saint suntarar was claimed by lord siva as his salve and devotee and where *meykaṇḍa-tēvar* was born. 2. கம்பருக்குப் புரந்த சடையப்ப வள்ளல் வாழ்ந்ததும் தஞ்சை மாவட்டத்தி லுள்ளதுமான ஓர் ஊர்; a place in the Tanjore district where cataiyan the patron of the poet kamqar, lived.

[வெண்ணெய் + நல்லூர்]

வெண்ணெய்ப்பதம் *veṇṇey-p-padam,* பெ.(n.) நெய்ம (தைல) மருந்து காய்ச்சும் பக்குவ வகை; a stage in the pereparation of midicinal oil, when it is in the form of a pulqy mass.

[வெண்ணெய் + பதம்]

வெண்ணெய்ப்பாரை *veṇṇei-p-pārai,* பெ.(n.) சாம்பல் நிறமுள்ளதும் ஓர் அடி நீளம் வளர்வதுமான மீன் வகை; horse-mackerel, greyish, attaining 1 ft. in length, caranyire.

[வெண்ணெய் + பாரை]



வெண்ணெய்ப்புளி *veṇṇey-p-puḷi,* பெ.(n.) வேர்வையில் கலந்துள்ள ஒரு வகைப் புளிப்புப் பொருள்; a sour substance mixed in perpiration.

[வெண்ணெய் + புளி]

வெண்ணெய்மதுரம் *veṇṇey-maduram,* பெ.(n.) கண்டில்வெண்ணெய் பார்க்க; see *kaṇḍilveṇṇey.*

[வெண்ணெய் + மதுரம்]

வெண்ணெய்விரை *veṇṇey-virai,* பெ.(n.) சாப்பிராவிரை; arnotto seed.

[வெண்ணெய் + விரை]

வெண்ணெய்வெட்டி *veṇṇey-veṭṭi,* பெ.(n.) 1. கூர் மழுங்கியது; anything blunt. 2. பயனற்றவன்; worthless fellow. 3. வீரமில்லாதவன்; coward. *'அவன் வெண்ணெய் வெட்டி வீரன்'.*

[வெண்ணெய் + வெட்டி]

வெண்ணெல் *veṇṇel,* பெ.(n.) ஒருவகை மலைநெல்; mountain paddy. *"அடுமகண் முகந்த வளவா வெண்ணெல்"* (புறநா. 399).

[வெண் (மை) + நெல்]

வெண்ணை *veṇṇai,* பெ.(n.) 1. வெண்ணெய் நல்லூர் 1 பார்க்க (சி.சி.சுப. பாயி. 2); see *veṇṇey-nallūr.* 2. வெண்ணெய்நல்லூர் 2 பார்க்க (கம்பரா. நூகபள். 263); see *veṇṇey-nallūr.*

வெண்ணையூர் *veṇṇaiyūr,* பெ.(n.) வெண்ணெய்நல்லூர் 2 பார்க்க (கம்பரா. திருமுடி. 38); see *veṇṇey-nallūr.*

[வெண்ணை + ஊர்]

வெண்ணொச்சி *veṇṇocci,* பெ.(n.) மரவகை (பதார்த்த. 528); five leaved chaste tree.

[வெண் (மை) + நொச்சி]

வெண்ணொச்சில்விரை *veṇṇoccil-virai,* பெ.(n.) வாய்விளங்கம்; berries-emblica ribes.

வெண்ணோ[1] *veṇṇō,* பெ.(n.) ஒரு கண்ணோய் வகை; an eye disease.

வெண்ணோ[2] *veṇṇō,* பெ.(n.) வெண்ணோவு 1 பார்க்க (யாழ்.அக.); see *veṇṇōvu.*

[வெண் (மை) + நோ]

வெண்ணோக்காடு[1] *veṇṇōkkāḍu,* பெ.(n.) கண் கூசி கடுத்து நீர் வடிந்து உடம்பில் எரிச்சல் கண்டு கண் சீறு சிவப்பாகி நிலவு வெளிச்சத்தில் விழிக்க முடியாது கண்ணொலி குன்றி நடக்க முடியாமற் செய்யுமோர் கண்ணோய்; an eye disease.

[வெண் (மை) + நோக்காடு]

வெண்யோக்காடு[2] *veṇṇōkkāḍu,* பெ.(n.) குழந்தை பிறப்புக்கு முன் உண்டாகும் வேதனை; false labour pains (w.).

[வெண் (மை) + நோக்காடு]

வெண்ணோவு *veṇṇōvu,* பெ.(n.) 1. வெக்கடுப்பு பார்க்க; see *vekkaḍuppu.* 2. வெண்ணோக்காடு பார்க்க; see *veṇṇōkkāḍu.*

[வெண் (மை) + நோவு]

வெண்தகரை *veṇ-tagarai,* பெ.(n.) வெண்டகரை பார்க்க; see *veṇḍakarai.*

[வெண் (மை) + தகரை]

வெண்தகர் *veṇ-tagar,* பெ.(n.) வெள்ளாடு; goat.

[வெண் (மை) + தகர்]



வெண்தணக்கு *veṇ-taṇakku,* பெ.(n.) சாம்பல்தணக்கு; white catamaran tree, girrtia rottleriformis.

[வெண் (மை) + தணக்கு]

வெண்தாது *veṇ-tādu,* பெ.(n.) வெள்ளி; silver.

[வெண் (மை) + தாது]

வெண்தாழை *veṇ-tāḻai,* பெ.(n.) வெண்டாழை பார்க்க; see *veṇḍāḻai.*

[வெண் (மை) + தாழை]

வெண்தீவிரம் *veṇ-tīviram,* பெ.(n.) 1. வெள்ளைக்காக்கணங்கொடி பார்க்க; see *veḷḷai-k-kākkaṇaṅ-koḍi.*

[வெண் (மை) + **Skt.** *tīvra > த. தீவிரம்]*

வெண்துத்தம் *veṇ-tuttam,* பெ.(n.) வெள்ளைத்துத்தம் பார்க்க; see *veḷḷai-t-tuttam.*

[வெண் (மை) + துத்தம்]

வெண்துத்தி *veṇ-tutti,* பெ.(n.) பால்துத்தி பார்க்க; see *pāl-tutti.*

[வெண் (மை) + துத்தி]

வெண்துருசி *veṇ-turuśi,* பெ.(n.) வெள்ளைத் துருசு; white vitriol-sulphate of zinc.

[வெண் (மை) + துருசி]

வெண்துவரை *veṇ-tuvarai,* பெ.(n.) வெள்ளைத்துவரை; white red-gram-cajanus cajan.

[வெண் (மை) + துவரை]

வெண்துளசி *veṇ-tuḷaśi,* பெ.(n.) வெண்டுளசி பார்க்க (மலை.); see *veṇḍuḷaśi.*

[வெண் (மை) + துளசி]

வெண்தூதகி *veṇ-tūtaki,* பெ.(n.) வெண் சாரணை பார்க்க; see *veṇ-śāraṇai.*

வெண்தூதுவளை *veṇ-tūdu-vaḷai,* பெ.(n.) வெள்ளைத்தூதுவளைச்செடி; a thorny climber-solanum trilobatum.

[வெண் (மை) + தூதுவளை]



வெண்தேக்கு¹ *veṇ-tēkku,* பெ.(n.) மரவகை; a tree-lager slroemia lanceolata.

[வெண் (மை) + தேக்கு]

வெண்தேக்கு² *veṇ-tēkku,* பெ.(n.) வெண்டேக்கு பார்க்க; see *veṇ-ḍēkku.*

[வெண் (மை) + தேக்கு]

வெண்தேமல் *veṇ-tēmal,* பெ.(n.) தேமல் நோய் வகை; a fungus, disease of the skin.

[வெண் (மை) + தேமல்]

வெண்தொயிலி *veṇ-toyili,* பெ.(n.) துயிலிக்கீரை; agreens.

[வெண் (மை) + தொயிலி]

வெண்நொச்சி *veṇ-nocci,* பெ.(n.) வெண்ணொச்சி பார்க்க; see *veṇṇocci.*

[வெண் (மை) + நொச்சி]

வெண்பச்சைக்கடலை *veṇ-paccai-k-kaḍalai,* பெ.(n.) பசுமைக்கடலை; green bengal gram.

[வெண் (மை) + பச்சை + கடலை]

வெண்பசலி *veṇ-pašali,* பெ.(n.) வெள்ளைப் பசலைக் கீரை; a creeper-basella alba.

[வெண் (மை) + பசலி]

வெண்பசும்பால் *veṇ-pašum-pāl,* பெ.(n.) வெண்ணிறமான பசுவின் பால்; milk of white cow.

[வெண் (மை) + பசு + பால்]

வெண்பட்டு *veṇ-paṭṭu,* பெ.(n.) வெள்ளை நிறமுள்ள பட்டு; white silk. *வெண்பட்டுடுத்து (சீவக. 2358).*

[வெண் (மை) + பட்டு]

வெண்படலம் *veṇ-paḍalam,* பெ.(n.) கண்ணிற் படரும் நோய் வகை; an eye disease.

[வெண் (மை) + படலம்]

வெண்படலிகை *veṇ-paḍaligai,* பெ.(n.) வெள்ளித்தட்டு; silver tray. *"மணிக்குஞ்சி வெண்படலிகைக் குமரனீப்பது" (சீவக. 3031).*

[வெண் (மை) + படலிகை]

வெண்படி *veṇ-paḍi,* பெ.(n.) வெண்சோறு பார்க்க; see *veṇ-šōṟu.* *'இன்று கோவிலுக்கு நாழியரிசி வெண்படிக்காகக் கொடுத்திருக்கிறேன்' (உ.வ.).*

[வெண் (மை) + படி]

வெண்படை *veṇ-paḍai,* பெ.(n.) நெய்தற்கரிய நூற்பா; warp, in weaving. *"ஒன்றேற்றி வெண்படைக்கோ ளொன்று" (பழமொழி. 125).*

[வெண் (மை) + படை]

வெண்பதம் *veṇ-padam,* பெ.(n.) இளம்பதம்; condition of being heated slightly (w.).

[வெண் (மை) + பதம்]

வெண்பயறு *veṇ-payaṟu,* பெ.(n.) கரும்பயறு; black pulse.

[வெண் (மை) + பயறு]

வெண்பருத்தி *veṇ-parutti,* பெ.(n.) வெள்ளைப் பருத்திப் பஞ்சு; white cotton.

[வெண் (மை) + பருத்தி]



வெண்பலகறை *veṇ-pala-kaṟai,* பெ.(n.) கவடி; cowry white.

[வெண் (மை) + பலகறை]

வெண்பலி *veṇ-pali,* பெ.(n.) சாம்பல் (பிங்.); ash.

[வெண் (மை) + பலி]

வெண்பா *veṇpā,* பெ.(n.) நால்வகைப் பாக்களுள் ஒன்று (தொல். பொ. 417); one of the four principal kinds of stanzaforms.

[வெண் (மை) + பா]

வெண்பாக்கம் *veṇ-pākkam,* பெ.(n.) சென்னை மாவட்டத்தில் இருந்த ஓர் ஊர்; a village once existed in chennai District.

சென்னைக்கருகில் உள்ள பூண்டி நீர்த் தேக்கத்துள் மூழ்கியது. நீர்த் தேக்கக் கரையில் புதிய கோயிலொன்று கட்டப்பட்டுள்ளது என்ற எண்ணம் இதனைக் குறித்து அமைகிறது. நம்பியாரூரர் பதிகம் இதனைக் குறித்தமைகிறது. *ஏராரும் பொழினிலவு வெண்பாக்கம் இடம் கொண்ட காராரு மிடற்றான்* எனப் பாடுகின்றார் இவர் (99–41).

வெண்பாசி *veṇ-pāśi,* பெ.(n.) பாசிமணி வகை; a kind of white bead. *"வெண்பாசி பூண்டு" (திருவாலவா. 52, 3).*

[வெண் (மை) + பாசி]

வெண்பாட்டம் *veṇ-pāṭṭam,* பெ.(n.) 1. கோடையிற் பெய்யும் மழை; summer shower. *"வெண்பாட்டம் வெள்ளம் தரும்" (பழமொழி. 300).* 2. முன் பணமின்றி விடுங் குத்தகை; lease in which no premium is paid, dist. Fr.

[வெண் (மை) + பாட்டம்]

வெண்பாட்டு *veṇ-pāṭṭu,* பெ.(n.) வெண்பா; one of the four principal kinds of poetic forms, vemba verse.

[வெண் (மை) + பாட்டு]

வெண்பாண்டம் *veṇ-pāṇḍam,* பெ.(n.) அரத்த மில்லாத வெளுத்த உடம்பு; pale, anemic body.

[வெண் (மை) + பாண்டம்]

வெண்பாண்டு *veṇ-pāṇḍu,* பெ.(n.) பிறந்தது முதல் மீந்தோல் வெண்மை ஆவதற்குக் காரணமான நோய்வகை; albinism.

[வெண் (மை) + பாண்டு]

வெண்பாதிரை *veṇ-pādirai,* பெ.(n.) 1. பொன்னிறமுள்ள பூவுடைய மரவகை; yellow-flowered fragrant trumpt flower tree. 2. வெள்ளைப் பூவுடைய மரவகை; white-flowered trumpet-flower tree.

[வெண் (மை) + பாதிரை]

வெண்பாப்பாட்டியல் *veṇpā-p-pāṭṭiyal,* பெ.(n.) குணவீரப் பண்டிதர் வெண்பாவினால் இயற்றிய பாட்டியல் நூல்; a work on poetics in *veṇpā* verse, by *kunavira-pāntitar.*

[வெண்பா + பாட்டியல்]

வெண்பாப்புலி *veṇpā-p-puli,* பெ.(n.) 1. வெண்பா பாடுவதில் வல்லவன்; title of poets who are experts in composing *veṇpā* verse (w.).

[வெண்பா + புலி]

வெண்பாமாலை *veṇpā-mālai,* பெ.(n.) புறப்பொருள் வெண்பா மாலை; a treatise on the topic of puṟamin *veṇpā*verse. *"புறப்பொருள் விழாவின்று விளங்க வெண் பாமாலை யெனப் பெயர்நி றிஇ" (பு. வெ. சிறப்.).*

[வெண்பா + மாலை]

வெண்பார்க்கல் *veṇ-pārkkal,* பெ.(n.) சுக்கான்கல்; calcareous earth.

[வெண் (மை) + பார் + கல்]

வெண்பாவுரிச்சீர் *veṇpā-v-uri-c-cīr,* பெ.(n.) நேர்நேர்நேர், நிரைநேர்நேர், நேர்நிரைநேர், நிரைநிரைநேர் என வெண்பாவுக்கு உரியவையாக வரும் நேரீற்று மூவசைச் சீர் (யாப். வி. 12, 61); a metrical foot of three acai. i.e. of the value of three long syllables, chiefly found in veMpA, of four varieties, viz, *nēr-nēr-nēr (---), nirai-nirai-nēr (uu--), nēr-nirai-nēr(-uu-), nirai-nirai-nēr(uuuu).*

[வெண்பா + உரிச்சீர்]

வெண்பாவை *veṇ-pāvai,* பெ.(n.) நாமகள்; sarasvati. *"திருப்பூவணார்மேல் வெண்பாவையுலாம் பூவையுலாப் பாடலே" (பூவண. உலா. காப்பு).*

[வெண் (மை) + பாவை]

வெண்பித்தளை *veṇ-pittaḷai,* பெ.(n.) வெள்ளைப்பித்தளை பார்க்க; see *veḷḷai-p-pittaḷai.*

*[வெண் (மை) + **Skt.** pittala > த. பித்தளை]*

வெண்பிறப்பு *veṇ-piṟappu,* பெ.(n.) வெள்ளியுயிர் (மணி. 27, 152); a kind of birth.

[வெண் (மை) + பிறப்பு]

வெண்பிறை *veṇ-piṟai,* பெ.(n.) வெள்ளிய பிறைத் திங்கள்; the bright crescent moon. *"அந்தி வானத்து வெண்பிறை தோன்றி" (சிலப். 4, 23).*

[வெண் (மை) + பிறை]

வெண்பீலி *veṇ-pīli,* பெ.(n.) சீனக்காரம்; alum.

[வெண் (மை) + பீலி]

வெண்பு *veṇ-pu,* பெ.(n.) வெண்ணிலம்; plain land.

*[வெண் (மை) + பூ. **Skt.** bhu > த. பூ]*

வெண்புகைச்சல் *veṇ-pugaiccal,* பெ.(n.) கண் விழியில் சதை வளர்ந்து கருத்த பாவை வெளுப்பேறி வலியுண்டாகி அரிப்பெடுத்து பீளைக் கட்டி பார்வை பலவிதமாய்க் காட்டுமோர் வகைக் கண்ணோய்; an eye disease.

[வெண் (மை) + புகைச்சல்]

வெண்புடலை *veṇ-puḍalai,* பெ.(n.) வெள்ளைப்புடலை பார்க்க; see *veḷḷai-p-puḍalai.*

[வெண் (மை) + புடலை]

வெண்புணர்ச்சிமாலை *veṇ-puṇarcci-mālai,* பெ.(n.) முந்நூறு வெண்பாக்கள் கொண்ட சிற்றிலக்கிய வகை; a poem of three hundred stanzas in *veṇpā* metre (w.).

[வெண் + புணர்ச்சி + மாலை]

வெண்புரசு *veṇ-purašu,* பெ.(n.) புண்ணாற்றுதல் வேண்டி சித்தருண்ணும் மூலிகை; butea bearing white flowers-butea frondosa.

வெண்புழுக்கல் *veṇ-puḻukkal,* பெ.(n.) 1. இளம்புழுக்கல்; under boiling. 2. இளம் புழுக்கலரிசி; rice obtained by husking par-boiled paddy.

[வெண் (மை) + புழுக்கல்]

வெண்புழுக்கு *veṇ-pu!ukku,* பெ.(n.) வெண்புழுக்கல் பார்க்க (யாழ்.அக.); see *veṇ-pu!ukkal.*

[வெண் (மை) + புழுக்கு]

வெண்புழுங்கல் *veṇ-pu!uṅgal,* பெ.(n.) வெண்புழுக்கல் பார்க்க; see *veṇ-pu!ukkal.*

[வெண் (மை) + புழுங்கல்]

வெண்புறா *veṇ-purā,* பெ.(n.) வெள்ளைபுறா; white dove. இதன் கறி பத்தியத்திற்குதவும், வெண்குட்டம் கரப்பான் சொறி போகும்.

[வெண் (மை) + புறா]



வெண்பூகன் *veṇ-pūgaṉ,* பெ.(n.) கழகக்காலப் புலவர்; a sangam poet.

இவர் குறுந்தொகை 83-ஆம் பாடலைப் பாடியுள்ளார்.

வெண்பூசனை *veṇ-pūšaṉai,* பெ.(n.) திருமணப் பூசினி; ashpumpkin-benincasa cerifera.

[வெண் (மை) + பூசுனை → பூசனை]

வெண்பூசினி *veṇ-pūšiṉi,* பெ.(n.) மணப் பூசினி; ash pumpkin-benincasa cerifera.

[வெண் (மை) + பூசுனை → பூசினி]

வெண்பூதச்சி *veṇ-pūtacci,* பெ.(n.) இரசித நஞ்சு; a kind of arsenic.

வெண்பூதனார் *veṇ-pūdaṉār,* பெ.(n.) கழகக் காலப்புலவர்; a sangam poet.

இவர் குறுந்தொகையின் 83-ஆம் பாடலை உவமை நயத்துடன் பாடி சங்க இலக்கியத்திற்குச் சிறப்புச் சேர்த்துள்ளார்.

வெண்பூதியார் *veṇ-pūdiyār,* பெ.(n.) கழகக் காலப் புலவர், வெள்ளூர் கிழார் மகனார் வெண்பூதியார் எனவும் இவர் பெயர் காணப்படும்; a sangam poet, another name was called *ve!!ur-ki!āṉ-magaṉār-veṇpūdiyaṉ.*

இவர் குறுந்தொகையில் 97, 174, 219-ஆம் பாடல்களைச் சிறப்பாகப் பாடி புகழ் சேர்த்துள்ளார்.

வெண்பூபூத்தல் *veṇ-pū-pūttal,* பெ.(n.) bearing white flowers-albiflora.

[வெண் (மை) + பூ + பூத்தல்]

வெண்பூம்பட்டு *veṇ-pūm-paṭṭu,* பெ.(n.) வெண்பட்டாடைவகை; a kind of cloth of white silk. *"வெண்பூம்பட்டிற்றிண் பிணியமைந்த பள்ளிக் கட்டில்" (பெருங். இலாவாண. 3, 136).*

[வெண் (மை) + பூ + பட்டு]

வெண்பூமான் *veṇ-pū-māṉ,* பெ.(n.) நாமகள் (நாமதீப. 56); sarasvati.

[வெண் (மை) + பூமகள் → பூமாள் → பூமான்]

வெண்பூலி *veṇ-pūli,* பெ.(n.) மரவகை; a tree.

[வெண் (மை) + பூலி]

வெண்பூனைக்காஞ்சொறி *veṇ-pūṉai-k-kāñ-coṟi,* பெ.(n.) பூனைக்காஞ்சொறி; bearing white seeds.

[வெண் (மை) + பூனை + காஞ்சொறி].

வெண்பெருமான் *veṇ-perumāṉ,* பெ.(n.) கடமை என்ற விலங்கு; nilghau, the great antelope.

[வெண் (மை) + பெரு–மை + மான்]

வெண்பொங்கல் *veṇ-poṅgal,* பெ.(n.) பருப்பு, நெய் முதலியன சேர்த்துச் செய்த பொங்கல் வகை; a preperation of rice boiled with dhal, ghee, etc.

[வெண் (மை) + பொங்கல்]

வெண்பொடி *veṇ-poḍi,* பெ.(n.) திருநீறு; sacred ash. *"வெண்பொடியும்.......... அக்கமாமணிகளுமே............ வனைந்தார்" (பிரமோத். 20, 17).*

[வெண் (மை) + பொடி]

வெண்பொத்தி *veṇ-potti,* பெ.(n.) துகில்வகை (சிலப். 14, 108, உரை); a kind of garment.

[வெண் (மை) + பொத்தி]

வெண்பொன் *veṇ-poṉ,* பெ.(n.) 1. வெள்ளி; silver. *"வெண்பொற் கட்டின்மேல்" (சீவக. 2421).* 2. சுக்கிரன்; venus. *"மேலா வெண்பொன் போருறு காலை" (புறநா. 389).*

[வெண் (மை) + பொன்]

வெண்பொன்மலை *veṇ-poṉ-malai,* பெ.(n.) கயிலைமலை; mount kailash.

[வெண் (மை) + பொன் + மலை]

வெண்மட்டக்கருத்து *veṇ-maṭṭa-k-karuttu,* பெ.(n.) மேலெழுந்த வாரித் தீர்மானம்; superficial judgement (w.).

[வெண்மட்டம் + கருத்து]

வெண்மட்டம் *veṇ-maṭṭam,* பெ.(n.) 1. மேலெழுந்த வாரி; superficiality (w.). 2. நுணுக்க வேலைபாடில்லாத சாதாரண வேலை (யாழ்.அக.); plain work.

[வெண் (மை) + மட்டம்]

வெண்மட்டவேலை *veṇ-maṭṭa-vēlai,* பெ.(n.) 1. பொதுவகை வேலை; plain work. 2. மேலெழுந்த வாரியாகச் செய்யும் வேலை; superficial work (w.).

[வெண்மட்டம் + வேலை]

வெண்மண்டலம் *veṇ-maṇḍalam,* பெ.(n.) வெள்ளை விழி; white of the eye-sclera.

[வெண் (மை) + மண்டலம்]

வெண்மண்டை *veṇ-maṇḍai,* பெ.(n.) இரப்போர் கைக்கொள்ளும் உண்கலவகை; a kind of beggar's bowl. *"ஊன் கொண்ட வெண்மண்டை" (புறநா. 386).*

[வெண் (மை) + மண்டை]

வெண்மணல் *veṇ-maṇal,* பெ.(n.) வெள்ளை மணல்; white sand.

[வெண் (மை) + மணல்]

வெண்மணி *veṇ-maṇi,* பெ.(n.) 1. முத்து; pearl (w.). 2. கருவிழியைச் சுற்றியுள்ள வெள்ளை வட்டம்; the white ring round the pupil of the eye, the white eye.

[வெண் (மை) + மணிபொடி]



வெண்மணிப்பூதி *veṇ-maṇi-p-pūdi,* பெ.(n.) கழகக் காலப் பெண் புலவர்; a female sangam poet.

இவர் குறுந்தொகையின் 299-ஆம் பாடலில் தலைவியின் காதல் ஏக்கத்தை அழகு நயத்துடன் பாடியுள்ளார்.

வெண்மத்தன் *veṇ-mattaṉ,* பெ.(n.) வெள்ளுமத்தை; dhatura bearing white flowers-datura alba.

[வெள் + உன்மத்தன்]



வெண்மதி *veṇ-mati,* பெ.(n.) 1. சந்திரன்; the moon (w.). 2. வெள்ளைச்சேம்பு (சங்.அக.); indian kales.

[வெண் (மை) + மதி]

வெண்மயிர் *veṇ-mayir,* பெ.(n.) 1. நரைத்த மயிர்; grey hair (w.). 2. வெண்சாமரை (சது.) பார்க்க; see *veṇ-šāmarai.*

[வெண் (மை) + மயிர்]

வெண்மருது *veṇ-marudu,* பெ.(n.) பிள்ளை மருது; a tree-terminalia paniculata.

[வெண் (மை) + மருது]

வெண்மலக்கழிச்சல் *veṇ-mala-k-kaḻiccal,* பெ.(n.) இதுவே குழந்தைகளுக்குக் காணும் வெள்ளுடைப்புக் கழிச்சல்; white faeces or excrements as a sign of indigestion in children.

[வெண் (மை) + மலம் + கழிச்சல்]

வெண்மலம் *veṇ-malam,* பெ.(n.) வெள்ளை நிறமாக மலம் வெளிப்படல்; white faeces a sign of jaundice.

[வெண் (மை) + மலம்]

வெண்மலர்நாயகம் *veṇ-malar-nāyagam,* பெ.(n.) கருவண்டு; black beetle.

[வெண் (மை) + மலர் + நாயகம்]

வெண்மலை *veṇ-malai,* பெ.(n.) வெள்ளி மலை பார்க்க; see *veḷḷi-malai* (w.).

[வெண் (மை) + மலை]

வெண்மழை *veṇ-maḻai,* பெ.(n.) வெண்முகில் 1 பார்க்க; see *veṇ-mugil.* *"வெண்மழை போலாச் சென்றா லியரோ" (பதிற்றுப். 55).*

[வெண் (மை) + மழை]

வெண்மறி *veṇ-maṟi,* பெ.(n.) வெள்ளாடு; goat.

[வெண் (மை) + மறி]

வெண்மாசுபடலம் *veṇ-māšu-paḍalam,* பெ.(n.) கண்ணில் வெள்ளை மாசு படர்ந்து கரகரத்து வலி உண்டாக்கும் ஒரு வகைக் கண்ணோய்; an eye disease-albugineaoculi.

[வெண் (மை) + மாசு + படலம்]

வெண்மாடம் *veṇ-māḍam,* பெ.(n.) ஒருவகை ஊர்தி; a kind of vehicle. *"வையமுந் தேரும் வகை வெண்மாடமும்" (பெருங். உஞ்சைக். 42, 18).*

[வெண் (மை) + மாடம்]

வெண்மாதுளை *veṇ-māduḷai,* பெ.(n.) வெள்ளை மாதுளஞ் செடி; po megranate tree bearing fruits which remain colourless.

[வெண் (மை) + மாதுளை]

வெண்மாழை *veṇ-māḻai,* பெ.(n.) வெள்ளிப் பொருள்; things made of silver.

[வெண் (மை) + மாழை]

வெண்மிளகாய் *veṇ-miḷagāy,* பெ.(n.) வெள்ளை மிளகாய்; white chilly.

[வெண் (மை) + மிளகாய்]

வெண்மிளகி *veṇ-miḷagi,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[வெண் (மை) + மிளகு → மிளகி]

வெண்மிளகு *veṇ-miḷagu,* பெ.(n.) வெள்ளை மிளகு; white pepper.

[வெண் (மை) + மிளகு]

வெண்மிளகுதக்காளி *veṇ-miḷagu-takkāḷi,* பெ.(n.) வெள்ளை மிளகுத் தக்காளி, மிளகுத் தக்காளி; solanum nigrum.

[வெண் (மை) + மிளகு + தக்காளி]

வெண்மீன் *veṇ-mīṉ,* பெ.(n.) விடிவெள்ளி; venus. *"வெண்மீன் திசை திரிந்து தெற்கேகினும்" (பட்டினப். 14).*

[வெண் (மை) + மீன்]

வெண்முகில் *veṇ-mugkil,* பெ.(n.) 1. மழை பெய்யும் நிலையை அடையாத வெற்று மஞ்சு; white, rainless cloud, *"வெண்முகிற் பொடிக்கும் வெய்யோன் போல" (பெருங். உஞ்சைக். 47, 198).* 2. மழை மிகுதியாய்ப் பெய்யும் வெண்ணிறமான மஞ்சு; a mythical white cloud believed to rain heavily. *"ஒளிகொள் வெண்முகிலாய்ப் பரந்தெங்கும் பெய்யுமாமழை" (தேவா. 176, 2).*

[வெண் (மை) + முகில்]

வெண்முருக்கம் *veṇ-murukkam,* பெ.(n.) வெள்ளை மண முருக்கம்; thorny indian coral tree bearing white flowers-erythrina indica (alba).

மறுவ. வெண் முருங்கை.

[வெண் (மை) + முருக்கம்]

வெண்முள்ளி *veṇ-muḷḷi,* பெ.(n.) வெள்ளை முள்ளிக் கீரை; a thorny plant-barleria cuspilata.

[வெண் (மை) + முள்ளி]

வெண்மெழுகு *veṇ-meḻugu,* பெ.(n.) வெள்ளை மெழுகு; white wax-cera alba.

[வெண் (மை) + மெழுகு]

வெண்மேகப்படுவன் *veṇ-mēga-p-paḍuvaṉ,* பெ.(n.) தோல் நோய் வகை; a skin disease.

[வெண்மேகம் + படுவன்]

வெண்மேகம் *veṇ-mēgam,* பெ.(n.) வெள்ளை மேகம்; gonorrhoea.

[வெண் (மை) + மேகம்]

வெண்மை[1] *veṇmai,* பெ.(n.) 1. வெள்ளை நிறம்; whiteness. 2. ஒளி; brightness. 3. இளமை (சூடா.); tender age. 4. மனக் கவடின்மை; simplicity. 5. அறிவின்மை; ignorance. *"வெண்மையுடையார் விழுச் செல்ல மெய்தியக்கால்" (நாலடி, 2).* 6. புல்லறிவுடைமை; self-conceit. *"வெண்மை யெனப் படுவதியாதெனின்" (குறள், 844).*

[வெள் → (வெள்மை) → வெண்மை]

வெண்மை[2] *veṇmai,* பெ.(n.) 1. நீர்க்கடம்பு; a tree-stephegyne parviflora. 2. வேளை; a plant-cleome pentaphylla.

[வெள் → (வெள்மை) → வெண்மை]

வெண்மைப்புரட்சி *veṇmai-p-puraṭci,* பெ.(n.) நாட்டில் பெருமளவில் பால் பண்ணைகளைப் பெருக்கும் திட்டம்; scheme for increasing milk production (in India) white revolution.

[வெண்மை + புரட்சி]

வெண்மையறிவு *veṇmai-y-aṟivu,* பெ.(n.) அறிவின்மை; Ignorance.

[வெண்மை + அறிவு]

வெண்மொச்சை *veṇmoccai,* பெ.(n.) மொச்சை; field bean which is white-dalichos lab lab (typicus.).

[வெண் (மை) + மொச்சை]

வெண்மொந்தன் *veṇ-montaṉ,* பெ.(n.) வாழை வகை; a kind of plantain.

[வெண் (மை) + மொந்தன்]

வெண்வங்கம் *veṇ-vaṅgam,* பெ.(n.) வெள்ளீயம்; white lead-tin.

[வெண் (மை) + வங்கம்]

வெண்வெளியங்கம் *veṇ-veḷiyaṅgam,* பெ.(n.) வெண்கூளி; a large white eagle.

[வெண் (மை) + வெளியங்கம்]

வெண்வெயிலா *veṇ-veyilā,* பெ.(n.) வெண்டேக்கு பார்க்க; see *veṇṭēkku.*

[வெண்வேயிலை → வெண்வெயிலா]

வெண்வேயிலை *veṇ-vēyilai,* பெ.(n.) வெண்தேக்கு; a tree-lagerstromia lancealata.

[வெண் (மை) + வேய் + இலை]

வெண்வேல் *veṇ-vēl,* பெ.(n.) வெள்வேல் பார்க்க; see *veḷ-vēl.*

[வெண் (மை) + வேல்]

வெண்வேலன் *veṇ-vēlaṉ,* பெ.(n.) வெள்வேல் 2 பார்க்க; see *veḷ-vēl.*

[வெண் (மை) + வேலம் → வேலன்]

வெத்தம் *vettam,* பெ.(n.) தெளிவு; clearness.

[வெற்று → வெத்து → வெத்தம்]

வெத்தாக்குக்கூடு *vettākku-k-kūḍu,* பெ.(n.) கப்பலில் திசைகாட்டும் கருவி வைக்கும் பெட்டி; binnacle.

[வளி → வெளி + தாக்கு + கூடு]

வெத்திலை *vettilai,* பெ.(n.) வெற்றிலை; betel leaf, piper betel.

[வெற்று → வெத்து + இலை]



வெத்திலைப்பட்டை *vettilai-p-paṭṭai,* பெ.(n.) வெற்றிலைப்பட்டை பார்க்க; see *verrilai-p-paṭṭai.*

[வெத்திலை + பட்டை]

வெதரி *vetari,* பெ.(n.) இலந்தை 1 பார்க்க; see *ilantai1.* *"வெதரி வனத்துறை வாதராயணன்" (சேதுபு. அசுவற். 66).*

வெதரிவனம் *vetari-vaṉam,* பெ.(n.) இமயச்சாரலில் உள்ள சிவதலம்; a hermitage sacred to *visṇu.*

[வெதரி + வனம்]

Skt. *vaṉa* > த. வனம்.

வெதிர்[1] *vetir,* பெ.(n.) மூங்கில்; bamboo.

[வெடி → வெடில் → வெதில் → வெதிர்]

வெதிர்த்தல்[2] *vetirttal,* பெ.(n.) அஞ்சுதல், சினத்தல், நடுங்குதல்; fear, angry, trembling.

[விதிர் → வெதிர் → வெதிர்த்தல்]

வெதிர்[3]-த்தல் *vetir-,* செ.கு.வி.(v.i.) நடுங்குதல்; to tremble. *"வெதிர்க்கு நரகமே" (தணிகைப்பு. வீராட்ட. 50).*

[விதிர் → வெதிர்]

வெதிர்[4] *vetir,* பெ.(n.) 1. நடுக்கம்; trembling. *"வடலை குமட்டி வெதிரெழுத்து" (காசிக. வயிர. 22).* 2. வெதிரம் பார்க்க; see *vetiram.* *"சிறியிலை வெதிரினெல் விளையுமே" (புறநா. 109).* 3. விரிமலர் (பிங்.); open flower.

[விதிர் → வெதிர்]

வெதிர்[5] *vetir,* பெ.(n.) செவிடு (பிங்.); deafness. *"வெதிரெனுங்கொ லென்னு மாறு...... வைகினான்" (பாரத. சூது. 187).*

[வயிர் → வெதிர்]

வெதிர்ங்கோல் *vetir-ṅ-kōl,* பெ.(n.) மூங்கிற்கோல்; bamboo rod. *"ஒரு வெதிர்ங் கோலை முறித்து நீட்ட" (தொல். பாயி. உரை).*

[வெதிரங்கோல் → வெதிர்ங்கோல்]

வெதிர்ப்பு *vetirppu,* பெ.(n.) 1. அச்சம்; fear (w.). 2. நடுக்கம் (சது.); trembling. 3. கலக்கம் (திவா.); confusion. 4. ஓர் சினக் குறிப்பு; a symptom of anger (w.).

[விதிர் → வெதிர் → வெதிர்ப்பு]

வெதிரம்[1] *vetiram,* பெ.(n.) செவிடு; deafness.

[வயிர் → வெதிர் → வெதிரம்]

வெதிரம்[2] *vetiram,* பெ.(n.) மூங்கில்; bamboo. *"குடசமும் வெதிரமும்" (சிலப். 13, 157).*

[வெதிர் → வெதிரம்]

வெதிரன் *vetiraṉ,* பெ.(n.) செவிடன்; deaf person. *"மகர் வெதிரர்" (சேதுபு. 2–வது சக்கர. 14).*

[வெதிர் → வெதிரன்]

வெதிரி *vetiri,* பெ.(n.) வெதிரம் பார்க்க (மலை.); see *vetiram.*

[வெதிர் → வெதிரி]

வெதிரேகம் *vetirēkam,* பெ.(n.) 1. வேறுபாடு; difference. 2. எதிர்மறை; negation. 3. மரபு வழி (மேருமந். 697, உரை); transformation.

வெதுக்கல் *vedukkal,* பெ.(n.) வெதுப்பல், வெதும்பலன்; whisper, murmur.

[வெதுக்கு → வெதுக்கல்]

வெதுக்கலன் *vedukkalaṉ,* பெ.(n.) துன்பம் முதலியவற்றால் உடல் இளைத்தவன் (யாழ்.அக.); person emaciated by grief.

[வெதுக்கு → வெதக்கலன்]

வெதுக்கு-தல் *vetukku-,* செ.குன்றாவி. (v.t.) வெதுப்பு பார்க்க; see *vetuppu.*

வெதுப்பச்சூரி *veduppa-c-cūri,* பெ.(n.) நத்தைச்சூரி பார்க்க; see *nattai-c-cūri.*

[வெதுப்பம் + சூரி]

வெதுப்படக்கி[1] *vedu-p-paḍakki,* பெ.(n.) 1. எரு முட்டைப் பீநாறி, இதுவே பேய் மிரட்டி; a plant-ballota disticha. 2. வெப்பத்தை ஆற்றி; cooler. 3. வெளுத்த கழிச்சல், வளிக்காய்ச்சல் போகும்; it cures white diarrhoea and fever.

[வெதுப்பு + அடக்கி]

வெதுப்படக்கி[2] *vetuppaṭakki,* பெ.(n.) 1. செடிவகை; false nettle (w.). 2. பேய் மருட்டி (பதார்த்த. 543); malabar catamint.

[வெதுப்பு + அடக்கி]

வெதுப்பம் *veduppam,* பெ.(n.) 1. இளஞ்சூடு; warmth, moderate heat. 2. சூட்டால் உண்டாகும் வயிற்றுப் போக்கு; frothy diarrhoea, due to heat in the system (w.).

[வெதும்பு → வெதுப்பு → வெதுப்பம்]

வெதுப்பல் *veduppal,* பெ.(n.) வாட்டல், வதக்கல், வெதுப்புதல்; heating gently in small heat. 2. வறுத்தல்; frying.

[வெதுப்பு → வெதுப்பல்]

வெதுப்பி *vetuppi,* பெ.(n.) ஒற்றைப் பேய்மிரட்டி (பாலவா. 494); a medicinal herb.

[வெதுப்பு → வெதுப்பி]

வெதுப்பு[1]-தல் *vetuppu-,* செ.குன்றாவி.(v.t.) 1. வாட்டுதல்; to warm, heat gently. *"தீயிலே வெதுப்பியுயிரொடுந் தின்ன" (தாயு. சிவன்செயல். 5).* 2. பழுக்கக் காச்சுதல்; to make red-hot. *"மீட்டும் வெதுப்பியதோர் செவ்வேல்" (தஞ்சைவா. 113).*

[வெதும்பு → வெதுப்பு]

வெதுப்பு² veduppu, பெ.(n.) 1. வெதுப்பம் 1 பார்க்க; see veduppam1.(w.). 2. மாட்டு நோய் வகை (மாட்டுவை. சிந். 63); a cattle-disease. 3. காய்ச்சல் நோய் வகை (சங்.அக.); a fever.

[வெதும்பு → வெதுப்பு]

வெதும்பு-தல் vetumpu, செ.கு.வி. (v.i.) 1. இளம் சூடாதல்; to become warm. 2. சிறிது வாடுதல்; to lose freshness (w.). 3. வெம்மையாதல்; to be hot or heated. *"விண்குளிர் கொள்ள வோங்கும் வெண்குடை வெதும்புமாயின்" (சூளா. மந்திர. 26).* 4. கொதித்தல்; to boil. *"விழிநீர்களூற்றென வெதும்பி யூற்ற" (தாயு. கருணாகர. 9).* 5. சினங்கொள்ளுதல் (பிங்.); to be enraged. 6. மனங்கலங்குதல்; to be disturbed in mind. *"வெதும்பி யுள்ளம்" (திருவாச. 5, 1).*

[வெது → வெதும்பு]

வெதுப்புக்கழிச்சல் vetuppu-k-kaliccal, பெ.(n.) குழந்தைகளுக்கு நுரைக்காணும் ஒரு கழிச்சல்; brothy diarrhoea in children.

[வெதுப்பு + கழிச்சல்]

வெதுப்புக்கொள்ளல் vetuppu-k-kollal, பெ.(n.) சூடேறல்; to get body heated.

[வெதுப்பு + கொள்ளல்]

வெதுப்புண்டாதல் vedu-p-pundātal, பெ.(n.) சூடுண்டாதல்; getting heated or warm.

[வெதுப்பு + உண்டாதல்]

வெதுப்புதல் vedu-p-pudal, பெ.(n.) வாட்டுதல்; heating the medicinal leaf gently in the fire.

[வெதும்பு → வெதுப்பு → வெதுப்புதல்]

வெதுப்புவந்துற்றபோது veduppu-candurra-pōdu, பெ.(n.) காய்ச்சல் கண்ட போது; when feverish.

[வெதுப்பு + வந்துற்றபோது]

வெதுப்பைவிருவித்தல் veduppai-viruvittal, பெ.(n.) சூட்டைப் போக்கல்; to abate the heat.

[வெதுப்பை + வெருவித்தல் → விருவித்தல்]

வெதும்பக்காய்ச்சல் vedumpa-k-kāyccal, பெ.(n.) மருந்து நெய்யைச் சூடுண்டாகும்படி காய்ச்சுதல்; to heat the medicated oil.

[வெதும்பு → வெதும்ப + காய்ச்சல்]

வெதும்பல் vedumpal, பெ.(n.) 1. வாடல்; withering. 2. ஒரு நோய்; a disease.

[வெதும்பு → வெதும்பல்]

வெதும்பா vedumbā, பெ.(n.) வெள்ளை யாதளை; a plant.

வெதும்பிக்கொள்ளல் vedumbi-k-kollal, பெ.(n.) இடித்துக் கொள்ளல்; pulverising or powdering.

[வெதுப்பி → வெதும்பி + கொள்ளல்]

வெதும்புதல் vedumbutal, பெ.(n.) வெதும்பல் பார்க்க; see vedumbal.

[வெதும்பு → வெதும்புதல்]

வெதும்பு-தல் vedumbu-, செ.கு.வி.(v.i.) 1. வாடுதல்; be withered, wilt. *'கடுமையான வெயிலால் வெற்றிலைக் கொடி வெதும்பி விட்டது'.* 2. (மனம்) குமைதல், வருந்துதல்; be grieved. *'வீட்டின் அவல நிலையை எண்ணி மனம் வெதும்பினார்'.*

[வெதும்புதல் → வெதும்புதல்]

வெதுவெது-த்தல் *vetuvetu-,* செ.கு.வி. (v.i.) 1. அரைகுறையாக வேதல்; half cooked. 2. இளஞ் சூடாயிருத்தல்; to become lukewarm. 3. சிறிது வாடுதல்; to be partially withered (w.).

[வெதுவெதெனல் → வெதுவெது-த்தல்]

வெதுவெதுப்பு *vedu-veduppu,* பெ.(n.) இளஞ்சூடு; lukewarmness (w.).

[வெதுவெது → வெதுவெதுப்பு]

வெதுவெதெனல் *vedu-vedenal,* பெ.(n.) இளஞ்சூடாதற் குறிப்பு; lukewarm.

[வெதுவெது → வெதுவெதெனல்]

வெந் *ven,* பெ.(n.) முதுகு (பிங்.); back.

[வெரிந் → வெந்]

வெந்தசூடாமணி *venda-šūdā-mani,* பெ.(n.) வெட்பூலா; a plant-caeya arborea.

வெந்தநெல் *venda-nel,* பெ.(n.) புழுங்கல் நெல்; parboiled paddy.

[வே → வெந்த + நெல்]

வெந்தபுண் *venda-pun,* பெ.(n.) வெந்நீர் பட்டு கொப்பளித்த புண்; scald.

[வே → வெந்த + புண்]

வெந்தம் *ventam,* பெ.(n.) பந்தம்; bondage.

[பந்தம் → பெந்தம் → வெந்தம்]

வெந்தயக்காடி *ventaya-k-kādi,* பெ.(n.) வெந்தயம் உழுந்து அரிசி முதலியன சேர்த்துச் செய்யுங் காடி; a kind of gruel made of Fenugreek seeds, black gram, rice, etc.

[வெந்தயம் + காடி]

வெந்தயக்காய் *vendaya-k-kāy,* பெ.(n.) வெந்தயம் சேர்ந்த ஒருவகை ஊறுகாய்; pickle mixed up with seed of fenu-greek.

[வெந்தயம் + காய்]

வெந்தயக்கீரை *ventaya-k-kirai,* பெ.(n.) வெந்தயச் செடியின் இலை; fenugreek plant, which is used as vegetable greens-trigonella foenum graecum. இதனால் வயிற்றுப்பிசம் போகும்.

[வெந்தயம் + கீரை]

வெந்தயச்சம்பா *ventaya-c-campā,* பெ.(n.) சம்பா நெல்வகை; a kind of *campā* paddy.

[வெந்தயம் + சம்பா]

வெந்தயச்சாறு *ventaya-c-cāru,* பெ.(n.) கறிவகை; a kind of sauce.

[வெந்தயம் + சாறு]

வெந்தயம் *ventayam,* பெ.(n.) 1. வெந்தய அரிசி; fenugreek seed. 2. செடிவகை (பதார்த்த. 1042); fenu greek, s.sh.

[மெல் → மெல்து) → மெத்து → மெந்து → மெந்தியம் → வெந்தியம் → வெந்தயம்]

வெந்தயவம்மை *vendayavammai,* பெ.(n.) 1. வெந்தய விரை போல் கொப்புளங் கண்டு தொண்டை கம்பி 2-3 நாளில் இறங்கும் ஒரு அம்மை நோய்; a variety of small pox in which the pustules are as big as fenugreek which fades in 3 days-scarlatna simplx. 2. காய்ச்சலடித்து 3 நாளில் தலையில் குருதோன்றி 7-ம் நாளில் நீர்க்கட்டி 9-ம் நாளிலிறங்கும் ஒருவகை அம்மைநோய்; a kind of small pox.

[வெந்தையம் + அம்மை]

வெந்தல்[1] *vental,* பெ.(n.) கருகியது; that which is over-boiled.

[வே → வெந்தல்]

வெந்தல்[2] *vental,* பெ.(n.) வெந்தயம் பார்க்க (மலை.); see *ventayam.*

[வெந்தயம் → வெந்தல்]

வெந்தலயம் *vendalayam,* பெ.(n.) வெந்தயம் பார்க்க; see *vendayam.*

[வெந்தயம் → வெந்தலயம்]

வெந்தலையோடு *ventalaiyōḍu,* பெ.(n.) வெள்ளைத் தலை மண்டையோடு; white skull bone.

[வெண்டலை → வெந்தலை + ஒடு]

வெந்தழல் *ven-taḻal,* பெ.(n.) சிவந்தெரியும் தீ; glowing fire. *"வெந்தழலின் வீழ்வனிது வேதமொழி யென்றான்" (பாரத. பதின்மூன். 179).*

[வெம் (மை) + தழல்]

வெந்தழலல் *vendaḻalal,* பெ.(n.) புழுக்கமடைதல்; swelter.

[வே → வெந்து + அழல் → அழலல்]

வெந்தழிவு *ventaḻivu,* பெ.(n.) பயிர் காய்ந்து கருகிப் போதலால் உண்டாகும் பயிரழிவு; loss of crop due to the withering up of plants.

[வே→ வெந்து + அழிவு]

வெந்தாரைச்சூடு *ventārai-c-cūḍu,* பெ.(n.) நீர்த்தாரைச்சூடு; heat in the urethra.

[வெந்தாரை + சூடு]

வெந்தி[1]**-த்தல்** *venti-,* செ.கு.வி. (v.i.) 1. சினங் கொள்ளுதல் (திருப்பு. 136); to get angry. 2. சூடாதல்; to be hot.

[வே → வெந்தி-த்தல்]

வெந்தி[2]**-த்தல்** *venti-,* செ.கு.வி. (v.i.) ஒற்றுமையாதல்; to be united.

[வெந்தம் → வெந்தி-த்தல்]

வெந்தி[3]**-த்தல்** *venti-,* செ.குன்றாவி. (v.t.) கட்டுதல்; to bind.

[வெந்தம் → வெந்தி-த்தல்]

வெந்திப்பு[1] *ventippu,* பெ.(n.) 1. கொதிப்பு; heat. 2. சினம்; anger. *"வெந்திப்புடன் வருமவுணேசனையே" (திருப்பு. 136).*

[வெந்தி → வெந்திப்பு]

வெந்திப்பு[2] *ventippu,* பெ.(n.) கட்டு (திருப்பு. 136, கீழ்க்குறிப்பு); bond, union.

[வெந்தி → வெந்திப்பு]

வெந்தியம் *ventiyam,* பெ.(n.) வெந்தயம் பார்க்க; see *ventayam.*

[மெந்தியம் → வெந்தியம்]

வெந்திறல் *ven-tiṟal,* பெ.(n.) பெருவலிமை; great strength. *"வெந்திறற் றடக்கை வென்வேற் பொறைய" (பதிற்றுப். 86).*

[வெம் (மை) + திறல்]

வெந்து *ventu,* பெ.(n.) சுற்றம் (யாழ்.அக.); relative.

[பந்து → பெந்து → வெந்து]

வெந்துசனம் *vendušanam,* பெ.(n.) சுற்றத்தார்; relative, kith and kin.

*[வெந்து + **Skt.** jana > த. சனம்]*

வெந்துப்பு *ven-tuppu,* பெ.(n.) வெந்திறல் பார்க்க; see *ventiral. "வெந்துப்பின் வேந்து செறப்பட்டவர்" (குறள், 895).*

[வெம் (மை) + துப்பு]

வெந்துபோதல் *vendu-pōdal,* பெ.(n.) வெந்துழலல்; swelter.

[வே → வெந்து + போதல்]

வெந்துயர் *ventuyar,* பெ.(n.) மிக்கவலி; extreme pain.

[வெம் (மை) + துயர்]

வெந்துயர்க்கண்ணீர் *ventuyar-k-kannir,* பெ.(n.) ஆறாத வெந்த புண்ணால் உண்டாகும் துன்பக் கண்ணீர்; teers of deep and bitter grief.

[வே → வெந்து + துயர் + கண்ணீர்]

வெந்துருகல் *venturugal,* பெ.(n.) பழைய காசு வகை (பணவிடு. 138); an ancient coin.

[வே + உருகு → உருகல்]

வெந்துருதாசை *vendurutāšai,* பெ.(n.) ஊர்க்கள்ளி பார்க்க; see *ūr-k-kalli.*

வெந்துளி *ventuli,* பெ.(n.) துன்பக் கண்ணீர்; tear-drops of sorrow, as hot. *"வீழ்தரு வெந்துளி விரலி னீக்கி" (பெருங். இலாவாண. 10, 63).*

[வெம் (மை) + துளி]

வெந்தேக்கிரி *ven-tēkkiri,* பெ.(n.) நெருப்பெரிதல்; burning fire.

[வே → வெந்து → வெந்தேகு + எரி]

வெந்தேக்கு *ventēkku,* பெ.(n.) வெண்தேக்கு; white teak-lager-stroemia lanceolata.

[வெண்தேக்கு → வெந்தேக்கு]

வெந்தேட்கொடுக்கி *ventēd-kodukki,* பெ.(n.) பெரியதேட்கொடுக்கி பார்க்க; see *periya-tēd-kodukki.*

[வெம் (மை) + தேள் + கொடுக்கி]

வெந்தேளி *ventēli,* பெ.(n.) வெண்ணிறத் தேளிமீன் (தஞ்சை. மீன.); a kind of sea fish.

[வெண் (மை) + தேளி]



வெந்தை *ventai,* பெ.(n.) 1. நீராவியிலே புழுங்கியது; anything cooked in steam. *"புளிப்பெய்தட்ட வேணை வெந்தை வல்சியாக" (புறநா. 246).* 2. பிட்டு (பிங்.); meal-cake. *"வெந்தை தோசையே" (கந்தபு, தானப்ப, 8),*

[வே → வெந்தை]

வெந்தையம் *ventaiyam,* பெ.(n.) வெந்தயம் பார்க்க; see *ventayam.*

[வெந்தியம் → வெந்தயம்]

வெந்தோதிகம் *ventōtikam,* பெ.(n.) அழிஞ்சில்; hill sack tree-alangium acuminatum.

வெந்தோன்றி[1] *ven-tōṉṟi,* பெ.(n.) வெண்காந்தன் பார்க்க; see *veṇ-kāntaṉ.*

[வெண் (மை) + தோன்றி]

வெந்தோன்றி[2] *ven-tōṉṟi,* பெ.(n.) மேல் நோக்கிப் படரும் செடி (மூ.அ.); a climbing shrub.

[விண் (வெண் → வெம்) + தோன்றி]

வெந்தோன்றிகா *ventōṉṟikā,* பெ.(n.) கண்ணுப்பீளை; waxy deposit in the corners of the eye.

[வெண் (மை) + தோன்றிகா]

வெந்நிடு—தல் *ven-n-iṭu-,* செ.கு.வி.(v.i.) புறங்காட்டுதல் (பு.வெ. 7, 12, உரை); to retreat, as turning one's back.

[வெரிந் → வெந் + இடு-,]

வெந்நீர் *ven-nīr,* பெ.(n.) சுடுநீர்; hot water. *"வெந்நீர்........ இல்லஞ் சுடுகலாவாறு" (பழ. 51).*

[வெம் (மை) + நீர்]

வெந்நீர்காயம் *vennīr-kāyam,* பெ.(n.) சுடுநீரால் உண்டாகும் புண்; scald caused by boiling water.

[வெந்நீர் + காயம்]

வெந்நீர்க்கொப்புளம் *vennīr-k-koppuḷam,* பெ.(n.) வெந்நீர் படுவதினாலெழுங் கொப்புளம்; vesicles caused by hot water.

[வெந்நீர் + கொப்புளம்]

வெந்நீர்விரணம் *vennīr-viraṇam,* பெ.(n.) உடம்பில் வெந்நீர் படுவதினா லேற்பட்ட புண்; ulcer caused by hot water-scald.

[வெந்நீர் + விரணம்]

Skt. *Raṇam* > த. விரணம்.

வெந்நீரூறல் *vennīrūṟal,* பெ.(n.) கருக்குச் சாயம்; decoction.

[வெந்நீர் + ஊறல்]

வெப்பக்கட்டி *veppa-k-kaṭṭi,* பெ.(n.) வெப்புக்கட்டி பார்க்க; see *veppu-k-kaṭṭi* (w.).

[வெப்பம் + கட்டி → வெப்புக்கட்டி]

வெப்பக்கதிர்ப்புமாணிகள் *veppa-k-kadirppu-māṉikal,* பெ.(n.) வெப்பநிலை பார்க்க; see *veppa-nilai.*

[வெப்பம் + கதிர்ப்புமானிகள்]

வெப்பக்குடுவை *veppa-k-kuḍuvai,* பெ.(n.) வெப்பத்தைக் காத்து நிற்கும் குடுவை (அ) சாடி; thermos flask.

[வெப்பம் + குடுவை]

வெப்பகலல் *veppakalal,* பெ.(n.) உடற்சூடு நீங்கல்; vanishing of heat in the body.

[வெப்பு + அகலல்]

வெப்பகற்றல் *veppakaṟṟal,* பெ.(n.) உடம்பின் சூடு தணித்தல்; to abate the heat in the body.

[வெப்பு + அகற்றல்]

வெப்பங்கொள்ளல் *veppaṅ-koḷḷal,* பெ.(n.) வெப்பமுறல்; to get warm or becoming heated.

[வெப்பம் + கொள்ளல்]

வெப்பசாரம் *veppa-cāram,* பெ.(n.) 1. மனத்துயர்; grief (w.). 2. சினம்; indignatiion. 3. பொறாமை; spite, spleen.

[வெப்பம் + சார் → வெப்பசாரம்]

வெப்பத்தால்திணறல் *veppattāl-tiṇaṟal,* பெ.(n.) கொதிப்பினால் திக்குமுக்காடல்; sweltry.

[வெப்பம் → வெப்பத்தால் + திணறல்]

வெப்பத்தி *veppatti,* பெ.(n.) வறட்பூலா (சங்.அக.); Indian snowberry.

[வெப்பம் → வெப்பத்தி]

வெப்பந்தணித்தல் *veppan-taṇittal,* பெ.(n.) சூடுதணிதல்; cooling or lowering the temperature.

[வெப்பம் + தணித்தல்]

வெப்பநிலை *veppa-nilai,* பெ.(n.) ஒரு பொருளில் வெப்பம் எந்த அளவுக்கு உள்ளது என்பதைக் குறிப்பதாகும்; indication of grade of heat.

[வெப்பம் + நிலை]

வெப்பநிலைக்குறைவுவிகிதம் *veppa-nilai-k-kuṟaivu-vigitam,* பெ.(n.) வளி மண்டலத்தில் மேல் நோக்கிச் செல்லும் பொழுது வெப்பநிலை மாறும் கோணம் வெப்பநிலைக் குறைவுக் கோணமாகும்; low rates in the any region.

முகில் உருவாதல், இடி, மழை, வளி மண்டலத்தில் கொந்தளிப்பின் மிகுதி முதலியவற்றை முன்கூட்டியே தெரிந்து கொள்ள வானிலையியலாருக்கு இக்குறைவுக் கோணம் மிகவும் உதவுகிறது.

வெப்பம் *veppam,* பெ.(n.) 1. சூடு; heat. *"நீர்கொண்ட வெப்பம் போற்றானே தணியுமே" (நாலடி, 68).* 2. காய்ச்சல்நோய்; fever. *"மீனவற்சுடு வெப்ப மொழித்து" (திருவாலவா. 37, 1).* 3. கோபம்; indignation. *"வெப்பமுற்றோ னவிநயம் (சிலப். பக். 70).* 4. பொறாமை; spite. 5. ஆசை (சூடா.); desire. 6. துயர்; sorrow. 7. நிரையம் (நரகம்) (இ. போ. பா. 2, 3, பக். 20); a hell.

[வெம்பு → வெப்பு → வெப்பம். (தே. நே. பக். 103)]

வெப்பமானி *veppa-māṉi,* பெ.(n.) (இதளியம் விரிவடைவதன் அடிப்படையில்) வெப்ப அளவைக் கண்டறிய உதவும் கருவி; thermometer.

[வெம்பு → வெப்பு → வெப்பம் + மானி]

வெப்பர் *veppar,* பெ.(n.) 1. வெப்பம் பார்க்க; see *veppam.* *"அணிமுலைத் தடத்தி னொற்றி வெப்பராற் றட்பமாற்றி" (சீவக. 1746).* 2. சூடான உணவு; hot food. *"புத்தகற் கொண்ட புலிக்கண் வெப்பர்...... உண்ட பிள்ளை" (புறநா. 269, 4).*

[வெம்பு → வெப்பு → வெப்பர்]

வெப்பல் *veppal,* பெ.(n.) சாம்பல் நிறங் கலந்த செந்நிறமுள்ளதும் கல்லின்றிக் கட்டி கட்டியாக உள்ளதுமான நிலவகை; an inferior of soil, light greyish brown earth, limpy and free stones.

[வெம்பு → வெப்பு →வெப்பல். தே.நே.பக்.103)]

வெப்பாலரிசி *veppālariśi,* பெ.(n.) வெட்பாலை அரிசி; seeds of *veḍpālaiariśi.*

[வெப்பால் + அரிசி]

வெப்பாலை *veppālai,* பெ.(n.) மருந்துப் பூடுவகை; a medicinal tree wrightia tinctoria alias wanti dysenterica.

[வெம்பு → வெப்பு → வெப்பாலை]



வெப்பாற்றி *veppāṟṟi,* பெ.(n.) அனலாற்றி; cooler.

[வெம்பு → வெப்பு → வெப்பாற்றி]

வெப்பி-த்தல் *veppi-,* செ.குன்றாவி. (v.t.) 1. சூடாக்குதல்; to heat. 2. மனக்கொதிப்பு உண்டாக்குதல்; to make one hot with anger. *"வென்றடுகிற பாரை வெப்பித்து" (பழமொ. 294).*

[வெப்பு → வெப்பி → வெப்பித்தல்]

வெப்பிடி *veppiḍi,* பெ.(n.) வெயில் தாக்கல்; sun-stroke.

[வெப்பு → வெப்பி → வெப்பிடி]

வெப்பியாரம் *veppiyāram,* பெ.(n.) மனத் துயர் (யாழ்.அக.); grief.

[வெப்பத்துயரம் → வெப்பியாரம்]

வெப்பிரத்தம் *veppirattam,* பெ.(n.) இதனால் வாய் நாற்றமுண்டாகும்; blood vitiated with heat and it causes bad smell in the mouth.

[வெப்பு + ரத்தம்]

வெப்பிராளம் *veppirāḷam,* பெ.(n.) மனக்குழப்பம்; mental agitation.

[வெப்பியாரம் → வெப்பிராளம்]

வெப்பு *veppu,* பெ.(n.) 1. சூடு; heat. 2. காய்ச்சல் நோய்; fever. 3. கோபம்; anger. *"வெப்பமுற்றோனவி நயம்" (சிலப். பக். 70).* 4. சீற்றம்; anger. *"வெப்புடை மெய்யுடை வீரன்" (கம்பரா. அயோமுகி. 62).* 5. பொறாமை; spite. 6. ஆசை (சூடா.); desire. 7. கொடுமை; severity. *"வெப்புடை யாடூஉச் செத்தனென் மன்யான்" (பதிற்றுப். 86, 4).* 8. தொழுநோய் (சிலப். உரைபெறு கட்டுரை. 1, உரை); leprosy.

[வெம்பு → வெப்பு]

ம., தெ. வெப்பு; து. பெப்பு (b)

வெப்புக்கட்டி[1] *veppu-k-kaṭṭi,* பெ.(n.) 1. சூட்டினாலேற்பட்ட கட்டி; boils abscess formed due to heat. 2. வெப்பினால் வயிற்றிலுண்டாகும் கட்டி; enlargement due to fever. 3. காய்ச்சற்கட்டி; enlargement of spleen or liver or both.

[வெப்பு + கட்டி]

வெப்புக்கட்டி[2] *veppu-k-kaṭṭi,* பெ.(n.) நாட்பட்ட காய்ச்சலினால் உண்டாகும் வயிற்றுக்கட்டிவகை; a smelling in the intestines, accurring after chronic fevers. (w.).

[வெப்பு + கட்டி → வெப்புக்கட்டி]

வெப்புக்கழிச்சல் *veppu-k-kaḻiccal,* பெ.(n.) சூட்டினாலுண்டாகும் கழிச்சல்; diarrhoea caused by excessive heat in the system.

[வெப்பு + கழிச்சல்]

வெப்புக்கொதி[1] *veppu-k-kodi,* பெ.(n.) வெப்பத்தினாலுண்டாகும் ஒரு வகைக் கணச் சூடு; feeling hot due to congenital heat-there may be no rise in temperature.

[வெப்பு + கொதி]

வெப்புக்கொதி *veppu-k-kodi,* பெ.(n.) காய்ச்சலினால் உண்டாகும் காங்கை; slight fever (w.).

[வெப்பு + கொதி → வெப்புக்கொதி]

வெப்புக்கொதிப்பு *veppu-k-kodippu,* பெ.(n.) வெப்பத்தினாலுண்டாகும் ஒரு வகைக் கணச்சூடு; feeling hot due to congenital heat.

[வெப்பு + கொதிப்பு]

வெப்புச்சுரம் *veppu-c-curam,* பெ.(n.) சூட்டுக் காய்ச்சல்; fever caused by heat in the system.

[வெப்பு + சுரம்]

வெப்புசன்னி *veppu-šanni,* பெ.(n.) சூடு; apoplexy due to sunstroke or long exposure in sun's heat.

[வெப்பு + சன்னி]

வெப்புத்தாகம் *veppu-t-tāgam,* பெ.(n.) சூடு அல்லது வறட்சியினாற் காணும் தாகவிடாய்; thirst due to heat.

[வெப்பு + தாகம்]

வெப்புத்தீரல் *veppu-t-tiral,* பெ.(n.) சூடு கழிதல்; being cured of heat in the system.

[வெப்பு + தீரல்]

வெப்புநட்சத்திரம் *veppu-natcattiram,* பெ.(n.) காய்ச்சல் விண்மீன் (விதான. குணாகுண. 40, உரை); the 7th or 9th naksatra from that with which Jupiter is in conjunction.

[வெப்பு + நட்சத்திரம்]

Skt. Nakshatra > த. நட்சத்திரம்.

வெப்புநாற்றம்[1] *veppu-nārram,* பெ.(n.) முடைநாற்றம்; foul smell (w.).

[வெப்பு + நாற்றம்]

வெப்புநாற்றம்[2] *veppu-nārrām,* பெ.(n.) 1. கெட்ட நாற்றம்; foetid smell. 2. அழுகல் நாற்றம்; putrid smell.

[வெப்பு + நாற்றம்]

வெப்புநீர் *veppu-nir,* பெ.(n.) 1. ஆவிநீர்; vapour. 2. நோய்; a disease.

[வெப்பு + நீர்]

வெப்புநோய் *veppu-nōy,* பெ.(n.) 1. காய்ச்சல் சூடு; slight fever. *"வெப்புநோயா் நீரின் மூழ்கின் வெம்மையாறுமே கொலாம்" (நைடத. கைக்கிளை. 2).* 2. தொழுநோய்; leprosy. *"வெப்பு நோயுங் குருவும்" (விலப். உரைபெறுகட். 1).*

[வெப்பு + நோய்]

வெப்புப்பார்வை *veppu-p-pārvai,* பெ.(n.) வெப்புப்பாவை பார்க்க; see *veppu-p-pāvai.*

[வெப்பு + பார்வை]

வெப்புப்பாவை[1] *veppu-p-pāvai,* பெ.(n.) கட்டிவகை; a kind of distemper in the bowels with offensive smell, swelling in the bowels after chronic fever.

[வெப்பு + பாவை]

வெப்புப்பாவை² *veppu-p-pāvai* பெ.(n.) வெப்புக்கட்டி பார்க்க (யாழ்.அக.); see *veppu-k-katti*.

[வெப்பு + பாவை]

வெப்புப்பாவைக்கட்டு *veppu-p-pāvai-k-kattu*, பெ.(n.) வெப்புக்கட்டி பார்க்க; see *veppu-k-katti* (w.).

[வெப்பு + பாவை + கட்டு]

வெப்புப்பிணி *veppu-p-pini*, பெ.(n.) காந்தப் பொடியால் தீரும் ஒருவகை நோய்; disease due to heat, the remedy is kantha (load stone) chenduram.

[வெப்பு + பிணி]

வெப்புமிஞ்சல் *veppu-miñjal*, பெ.(n.) சூடதிகரித்தல்; increase of heat in the body.

[வெப்பு + மிஞ்சல்]

வெப்புவெப்பெனல் *veppu-veppenal*, பெ.(n.) சினக்குறிப்பு, துயர்க்குறிப்பு; fury agony.

[வெப்பு + வெப்பு + எனல்]

வெப்புள் *veppul*, பெ.(n.) வெம்மை; heat. *"வெப்புள் விளைந்த வெங்கை" (புறநா. 120).*

[வெம்பு → வெம்புள்]

வெப்புறுதல் *veppurutal*, பெ.(n.) சூடுண்டாதல்; growing warm.

[வெப்பு + உறுதல்]

வெப்பூட்டுதல் *veppūttutal*, பெ.(n.) 1. சூடுண்டாக்கல்; to heat gently. 2. வேக வைத்தல்; to boil.

[வெப்பு + ஊட்டுதல்]

வெம்பகல் *vem-pakal*, பெ.(n.) நடுப்பகல் (தக்கயாகப். 164, உரை); midday.

[வெம் (மை) + பகல்]

வெம்பசி *vempasi* பெ.(n.) வயிற்றைக் கிள்ளும் பசி (பெரும் பசி); pinching hunger.

[வெம் (மை) + பசி]

வெம்பரப்பு *vem-parappu*. பெ.(n.) 1. வெற்று நிலம்; uncultivated waste. 2. மிகுதியான பரபரப்பு; excessive flurry to.

[வெறும் + பரப்பு]

வெம்பல்¹ *vempal*. பெ.(n.) 1. மிகுவெப்பம்; tropical heat. *"வெயில் வீற்றிருந்த வெம்பலை யருஞ்சுரம்" (நற். 84).* 2. சீற்றம் (சூடா.); anger. 3. வாடலானது; that which has faded. 4. பிஞ்சிற் பழுத்துக் கெட்ட காய்; prematurely ripe fruit (w.).

[வெம்பு → வெம்பல்] (மே.க.பக். 130)

வெம்பல்² *vembal*. பெ.(n.) (காய்கறியைக் குறிக்கையில்) வெப்பத்தால் ஊறுபாடுற்றது; (of vegetables) faded and shrivelled.

[வெம்பு → வெம்பல்]

வெம்பளிக்கை *vempalikkai*, பெ.(n.) இறுமாப்பு; pride (w.).

[வெம்பு → வெம்பளிக்கை]

வெம்பற்று *vemparru*, பெ.(n.) சூடான பற்று; warm plaster.

[வெம் (மை) + பற்று]

வெம்பறவை *vem-paravai*, பெ.(n.) எண்காற்புள்; fabulous eight-legged bird.

[வன்பறவை → வெம்பறவை]



வெம்பா *vempā,* பெ.(n.) மூடபனி; mist. *'வெம்பாப் பெய்தால் சம்பா விளையும்'.*

[வெண்பு → வெம்பு → வெம்பா]

வெம்பாடம் *vempāḍam,* பெ.(n.) மரவகை; a kind of tree-ventilago madras patam.

[வெம்பாடு → வெம்பாடு → வெம்பாடம்]

வெம்பாடல் *vempāḍal,* பெ.(n.) 1. வாடல்; fading-withering. 2. சினங்கொள்ளல்; to getting angry.

[வெம்பு + ஆடல் → வெம்பாடல்]

வெம்பியகாய் *vembiya-kāy,* பெ.(n.) பிஞ்சில் வெம்பிய பழம்; premature fruit.

[வெம்பு → வெம்பிய + காய்]

வெம்பிளாந்தி *vempiḷānti,* பெ.(n.) மனங்குழம்பியவன் (யாழ்.அக.); on who is confused.

[வெம் (மை) + பிராந்தி → பிளாந்தி]

வெம்பிளிக்கை[1] *vembiḷikkai,* பெ.(n.) செவ்வெருக்கிலை; yellow or riped madar leaf.

வெம்பிளிக்கை[2] *vembilikkai,* பெ.(n.) 1. இறுமாப்பு; pride (w.). 2. புறக்கணிப்பு; disregard. *"தரும்பொருளை வெம்பிளிக்கை பண்ணாதே".*

[வீம்பளிக்கை → வெம்பிளிக்கை]

வெம்பு[1]-தல் *vembu,* செ.கு.வி.(v.i.) 1. மிகச் சூடாதல்; to be very hot. *"மலை வெம்ப" (கலி. 13).* 2. வாடுதல்; to fade. *"வேரோடு மரம்வெம்ப" (கலித். 10, 4).* 3. மனம் புழுங்குதல்; to be distressed in mind. *"வெம்பினா ரரக்க ரெல்லாம்" (தேவா. 776, வ.).*

[வெம் → வெம்பு → வெம்பு-தல்] (வேக.பக். 130)

வெம்பு[2]-தல் *vembu,* செ.கு.வி. (v.i.) 1. விரும்புதல்; to desire. *"வெம்ப லூர்ந்துலாம் வேனிலானினே" (சீவக. 410).* 2. சினத்தல்; to be angry. 3. பிஞ்சில் பழுத்தல்; to become prematurely ripe. 4. வெஞ்சினம்; violent anger.

[வெம் → வெம்பு → வெம்புதல்]. (தே.நே.பக்.102.)

வெம்பு[3]-தல் *vembu,* செ.கு.வி. (v.i.) ஒலித்தல்; to sound. *"பம்பை வெம்பின" (சீவக. 2222).*

வெம்பு[4] *vembu,* பெ.(n.) வாடுதல்; becoming prematurely ripe.

[வெம் → வெம்பு]

வெம்புழுங்கல் *vempuḻuṅgal,* பெ.(n.) இளம்புழுக்கலரிசி; rice obtained by husking parboiled paddy.

[வெம் → வெம்பு → வெம்புழுங்கல்]

வெம்புறு *vemburu,* பெ.(n.) வெம்மை; heat (w.).

[வெம் → வெம்பு → வெம்புறு]

வெம்புனல் *vempuṉal,* பெ.(n.) உத்தாமணி; a twining plant hedge cotton-daemia extense.

வெம்போடு *vembōḍu,* பெ.(n.) பெரும்போட்டு ஆளுக்கு எதிரிடை வெத்துவேட்டு, ஏமாற்றுக்காரன்; deceirt, crafty person.

வெம்மணல்[1] *vemmaṇal,* பெ.(n.) உதவிச்சாறு வகைகளிலொன்று; one of the 120 natural substance.

வெம்மணல்[2] *vemmaṇal,* பெ.(n.) நிரையம் (இறந்தோர் உலகு); a hell.

[வெம் (மை) + மணல்]

வெம்மாலி *vemmāli,* பெ.(n.) வெள்ளூமத்தை; dhature bearing white flowers-dature alba.

[வெண்மாலி → வெம்மாலி]

வெம்மூற்று *vemmūṟṟu,* பெ.(n.) வெந்நீர் ஊற்று; hot spring, thermal spring.

[வெம் (மை) + ஊற்று → வெம்மூற்று]

வெம்மை *vemmai,* பெ.(n.) 1. வெப்பம்; heat. *"அழலென்ன வெம்மையால்" (கலித். 11).* 2. கடுமை (சீவக. 744); severity, harshness. 3. சீற்றம்; anger. *"வேகயானை வெம்மையிற் கைகௌ" (சிலப். 15, 47).* 4. விருப்பம் (தொல். சொல். 334); desire. 5. வல்லமை; mightiness, valour. *"உலகமூன்றுமென் வெம்மையி னாண்டது" (கம்பரா. அதிகா. 4).*

ம. வெம்பு; தெ. உம்ம.

[வெள் → வெய் → வெய்மை → வெம்மை. (தே.நே.பக்.102)]

வெம்மைப்பொட்டணம் *vemmai-p-poṭṭaṉam,* பெ.(n.) ஒற்றிடம்; hot-fomentation.

[வெம்மை + பொட்டணம்]

வெம்மையாற்றல் *vemmai-yāṟṟal,* பெ.(n.) சூட்டைத் தணித்தல்; cooling the heat in the system.

[வெம்மை + ஆற்றல்]

வெய்து *veytu,* பெ.(n.) 1. வெப்பமுள்ளது; that which is hot. *"சிறுநெறி வெய்திடை யுறாஅ தெய்தி" (அகநா. 203).* 2. வெப்பம் (மதுரைக். 403, உரை); heat. 3. வெப்பமுள்ள பொருளாலிடும் நற்றடம்; fomentation. 4. துக்கம்; sorrow. *"வெய்துறு பெரும்பயம்" (ஞானா. 35, 3)* வி.எ.(adv.) விரைவில்; speedily. *"வேந்தன் வெருவந்து வெய்துகெடும்" (குறள், 569).*

[வெய்யது → வெய்து] (வே.க.பக். 130)

வெய்துபிடி–த்தல் *veytu-piḍi-,* செ.கு.வி. (v.i.) 1. ஒற்றடங்கொடுத்தல்; to apply fomentation. 2. நீராவியால் உடலை வேர்க்கச் செய்தல்; to use steam as a sudorific.

[வெய்து + பிடி]

வெய்துயிர்-த்தல் *veytuyir-,* செ.கு.வி.(v.i.). வெப்பமாக மூச்சு விடுதல்; to breath hot, as in grief. *"வெய்துயிர்த்துப் பிறைநுதல் வியர்ப்ப" (அகநா. 207).*

[வெய்து + உயிர்-த்தல்]

வெய்துரை *veyturai,* பெ.(n.) கடுஞ்சொல்; harsh word.

[வெய்து + உரை]

வெய்துறல் *vey-tural,* பெ.(n.) அச்சக்குறிப்பு, சினக் குறிப்பு, துன்பம்; fear, rage, woe, pain.

[வெய்து + உறல்]

வெய்துறு-தல் *veyturu-,* செ.கு.வி.(v.i.) 1. மனங்கலங்குதல் (பிங்.); to be perplexed. 2. துன்புறுதல்; to be distressed. 3. சீற்றங் கொள்ளுதல்; to be angry.

[வெய்து + உறு-தல்]

வெய்தெனல் *veytenal,* பெ.(n.) 1. வெப்பக் குறிப்பு; being hot. 2. விரைவுக் குறிப்பு (சூடா.); being in haste. 3. கொடுமைக் குறிப்பு; being creel.

[வெய்து + எனல்]

வெய்ய *veyya,* பெ.எ.(adj.) 1. வெப்பமான; hot. *"வெய்ய கதிரோன் விளக்காக" (திவ். இயற். 1, 1).* 2. கொடிய; fierce, cruel. 3. விரும்புதற்குரிய; desirable. *"வெய்ய நெய்" (தக்கயாகப். 506).*

[வெள் → வெய் → வெய்ய]

வெய்யது *veyyatu,* பெ.(n.) 1. சூடானது (யாழ்.அக.); that which is hot. 2. கொடியது; that which is cruel. 3. தாங்க முடியாதது; that which is unbearable. *"அரும் பெரு மூப்பும் வெய்யதாயது" (கம்பரா. மந்திரப். 62).*

[வெய் → வெய்யது]

வெய்யநட்சத்திரம் *veyya-natcattiram,* பெ.(n.) 1. அறிவன் கோள் நின்ற நாளுக்குப் பதினெட்டா நாளும், இருபத்து நான்காம் நாளும் (விதான. குணா. 40, உரை); the 18th and 24th naksatra counted from the naksatra occupied by mercury. 2. மகம், பூரம், பரணி நாட்கள் (விதான. பஞ்சாங்க. 20, உரை); the 10th, 11th and the 2nd naksatram.

[வெய்ய + நட்சத்திரம்]

Skt. natchathra > த. நட்சத்திரம்.

வெய்யநீர் *veyya-nir,* பெ.(n.) வெந்நீர் (யாழ்.அக.); hot water.

[வெய்ய + நீர்]

வெய்யமாந்தம் *veyya-mantam,* பெ.(n.) சூட்டினால் ஏற்பட்ட மாந்த நோய்; indigestion caused through excess of heat.

[வெய்ய + மாந்தம்]

வெய்யல் *veyyal,* பெ.(n.) வெயில்; sunlight (w.).

[வெயில் → வெய்யல்]

வெய்யவன் *veyyavan,* பெ.(n.) 1. வெய்யன் 1, 2 பார்க்க; see *veyyan.* 2. வெய்யோன் 2 பார்க்க; see *veyyon.* *"வெய்யவனூருந் தேரின்" (பெருங். இலாவாண. 8, 172).* 3. தீத் தெய்வம்; fire-god. *"வெய்யவன் படையை விட்டான்" (கம்பரா. அதிகாய. 203).* 4. வெய்யன் 4 பார்க்க; see *veyyan.*

[வெய் → வெய்யவன்]

வெய்யன் *veyyaṉ,* பெ.(n.) 1. கொடியவன்; cruel person. *"வெய்யனா யுலகேழுட னலிந்தவன்" (திவ். பெரியதி. 5, 3, 3).* 2. வெய்யவன் 3 பார்க்க; see *veyyavaṉ.* 3. வெய்யோன் 2 பார்க்க; see *veyyōṉ.* 4. விருப்பமுள்ளோன்; one who is desirous or eager. *"நல்லூரன் புதுவோர்ப் புணர்தல் வெய்யனாயின்" (கலித். 75, 10).*

[வெள் → வெய் → வெய்யன்] (வே.க.பக். 129)

வெய்யனீர் *veyyaṉīr,* பெ.(n.) கதிரவன் ஒளிக்கதிரால் சூடான நீர்; water heated by the rays of the sun.

[வெய்யல் + நீர்]

வெய்யில் *veyyil,* பெ.(n.) வெயில் பார்க்க; see *veyil.* *"நிழல் வெய்யில் சிறுமை பெருமை" (திவ். திருவாய். 6, 3, 10).*

[வெய் → வெயில் → வெய்யில்]

வெய்யில்தாழ *veyyil-tāḻa,* வி.எ.(adv.) மாலையில்; in the evening (w.). *'வெய்யில் தாழவா'.*

[வெயில் → வெய்யில் + தாழ்]

வெய்யிற்குளிர *veyyiṟ-kuḷira,* வி.எ.(adv.) வெய்யில்தாழ பார்க்க; see *veyyil-tāḻa* (w.). *"வெய்யிற் குளிரவா".*

[வெயில் → வெய்யில் + குளிர]

வெய்யிற்சூடு *veyyiṟ-šūḍu,* பெ.(n.) கதிரவன் வெப்பம்; sun's heat.

[வெயில் → வெய்யில் + சூடு]

வெய்யோன் *veyyōṉ,* பெ.(n.) 1. வெய்யன் 1 பார்க்க; see *veyyaṉ.* *"ஆர்த்தனர் வெய்யோர்" (கந்தபு. முதனாட்போ. 49).* 2. சூரியன்; sun. *"வெய்யோனொளி" (கம்பரா. கங்கை. 1).* 3. வலது மூக்குத் துளை; right nostril. *"இலகு வெய்யோனிற் பதினாறளவை விடல்" (காசிக. யோக. 23).* 4. வெய்யவன்[3] பார்க்க; see *veyyavaṉ.* 5. வெய்யன் 4 பார்க்க; see *veyyaṉ.* *"பொன்னறைதான் கொடுத்தான் புகழ்வெய்யோன்" (சீவக. 237).*

[வெய் → வெய்யோன்]

வெயர்[1]-த்தல் *veyar-,* செ.கு.வி.(v.i.) 1. வேர்வை நீர் உண்டாதல்; to perspire. *"புனைநுதல் வெயர்க்க" (பாரத. பன்னிரண். 47).* 2. சீற்றம் கொள்ளுதல்; to be angry.

[வியர் → வெயர் → வெயர்-த்தல்] (வே.க. 129)

வெயர்[2] *veyar,* பெ.(n.) வேர்வை நீர்; sweat. *"வெயர்பொடிப்பச் சினங் கடைஇ" (பு.வெ. 7, 13, கொளு.).*

[வியர் → வெயர்] (வே.க. 129)

வெயர்ப்பு *veyarppu,* பெ.(n.) 1. வெயர் 2 பார்க்க; see *veyar.* *"குறுவெயர்ப் பொழுக்கென" (கல்லா. 16, 5).* 2. வேர்வை உண்டாகை; sweating. 3. சீற்றம்; anger. *"வெஞ்சமம் விளைத்தன வெயர்ப்பால் (இரகு. திக்குவி. 112).*

[வியர் → வெயர் → வெயர்ப்பு]

வெயர்வு *veyarvu,* பெ.(n.) வெயர் 2 பார்க்க (திவா.); see *veyar.*

[வியர் → வெயர் → வெயர்வு]

வெயர்வை *veyarvai,* பெ.(n.) வெயர் 2 பார்க்க; see *veyar.*

[வியர் → வெயர் → வெயர்வை] வே.க.பக். 129)

வெயில் *veyil,* பெ.(n.) 1. கதிரவன் வெளிச்சம்; sunlight, sunshine. *"துகில் விரித்தன்ன வெயில விருருப்பின்" (நற். 43).* 2. கதிரவன் வெப்பம்; heat and glare of the sun, as on a tropical day. *"என்பிலதனை வெயில் போலக் காயுமே" (குறள், 77).* 3. கதிரவன்; the sun. *"வெயிலிள நீலவே போல் விரிகதிரிடை வீச" (கம்பரா. வனம்புகு. 2).* 4. ஒளி (சூடா.); brilliance. *"மணியிழையின் வெயில்" (கம்பரா. நாட். 42).*

[வெள் → வெய் → வெயில்]

ம. வெயில்; க. பிகில் (b).

வெயில்தடுப்பி *veyil-taduppi,* பெ.(n.) கட்டட வாயில் பலகணிகளில் வெயில் மறைக்கும் சுவரில் அமைந்த தடுப்பு அமைப்பு (பொ. வழக்.); sun shade.

[வெயில் + தடுப்பி]

வெயில்தாழ்-தல் *veyil-tāl-,* செ.குன்றாவி. (v.t.) மாலை; evening, sunset.

[வெயில் + தாழ்-,]

வெயில்நீக்கி *veyil-nīkki,* பெ.(n.) குடை (தக்கயாகப். 257, உரை); unbrells.

[வெயில் + நீக்கி]

வெயில்படர்ந்தநீர் *veyil-padarnta-nīr,* பெ.(n.) வெயிலினால் சூடு கொண்ட நீர்; water heated by the sun, it is used to give bath to the patients cured of small pox.

[வெயில் + படர்ந்த + நீர்]

வெயில்வதக்கம் *veyil-vadakkam,* பெ.(n.) வெயிலிற் காய்தல்; to dry in the sun.

[வெயில் + வதக்கம்]

வெயிலடித்தல் *veyil-adittal,* பெ.(n.) 1. கதிரவன் வெளிச்சம்; sun light. 2. வெப்பக்கதிர்; sunshine.

[வெயில் + அடித்தல்]

வெயிலுந்தரவிந்தம் *veyiluntara-vintam,* பெ.(n.) 1. தாமரை; lotus-which is opens when the sun appears. 2. வெண்டாமரை; white lotus.

[வெயில் + உந்து அரவிந்தம்]

Skt. Aravinda > த. அரவிந்தம்.



வெயிலுறைத்தல் *veyil-uraittal,* பெ.(n.) கதிரவன் ஒளி வீசுதல்; sunshine (w.).

[வெயில் + உறைத்தல்]

வெயிலெறித்தல் *veyil-erittal,* பெ.(n.) வெயிலடித்தல் பார்க்க; see *veyil-adittal.*

[வெயில் + எறித்தல்]

வெயிலோன் *veyilōn,* பெ.(n.) ஞாயிறு; the sun. *"வெயிலோனு மேல் பாற்குன்றிற் கிட்ட" (பாரத. முதற்போர். 73).*

[வெயில் + அன் → வெயிலோன்]

வெயிற்காய்தல் *veyiṟ-kāytal,* பெ.(n.) வெயிலிற் குளித்தல், வெயிலிற் குளிர்த்தலால் மினுமினுப்புப் பெறுதல்; to take sun bath, the sun shining.

[வெயில் + காய்தல்]

வெயிற்குளி-த்தல் *veyiṟ-kuḷi-,* பெ.(n.) 1. வெயிலில் காய்தல்; to be exposed to the sun. 2. கதிரவன் வெப்பத்தில் குளிர் காய்தல்; to bath in the sun.

[வெயில் + குளி-த்தல்]

வெயிற்குளிர்-தல் *veyiṟ-kuḷir-,* செ.கு.வி. (v.i.) மாலையில் கதிரவன் மெல்ல மறைதல் பொருட்டு வெம்மை தணிதல் (யாழ்.அக.); to become mild, as the evening sun.

[வெயில் + குளிர்-தல்]

வெயிற்பாழ் *veyiṟ-pāḻ,* பெ.(n.) மழையின்றி வெயில் காய்வதால் உண்டாகும் பயிர்க்கேடு; loss of crop due to drought, one of *mu-p-pāḻ.* q.v.

[வெயில் + பாழ்]

வெயிற்றுகள் *veyiṟṟukaḷ,* பெ.(n.) வெயிலில் பறக்கும் அணுத்துகள்; mote in a sunbeam. *"வாய்ப்பறியலனே வெயிற்றுக ளனைத்தும்" (பதிற்றுப். 20, 6).*

[வெயில் + துகள்]

வெயின்மறை *veyiṉ-maṟai,* பெ.(n.) வெயிலை மறைக்கும் கருவி; that which protects one from the heat of the sun, as an unbrells. *"கற்பகவல்லி சாதியைத் தமக்கு வெயின்மறையாக" (தக்கயாகப். 11, உரை).*

[வெயில் + மறை → வெயின்மறை]

வெயினோ *veyiṉō,* பெ.(n.) வெயிலின் பாதிப்பால் உண்டாகும் நோய்; sun-stroke.

[வெயில் + நோ → வெயினோ]

வெரிக்குது *verikkudu,* பெ.(n.) வெருட்சி கொள்ளுகிறது; bewildening lead or go astray. *'யோவ், குடையை மடக்கு, மாடு வெரிக்குது'.*

வெரிந் *verin,* பெ.(n.) முதுகு; back. *"வெரிநெனிறுதி" (தொல். எழுத். 300).*

[வெந் → வெரிந்]

வெரிமருந்து *veri-marundu,* பெ.(n.) விட மருந்து (மூ.அ.); poisonous drug.

[எரி + மருந்து → வெரி மருந்து]

வெரு *veru,* பெ.(n.) எச்சம்; fear. *"வெருவரு நோன்றாள்...... கரிகால் வளவன்" (பொருந. 147).*

[வெருவ → வெரு]

வெருக்குவிடை *verukku-viḍai,* பெ.(n.) காட்டுப் பூனையின் ஆண்; male of wild ceet. *"வெருக்குவிடை யன்ன வெகணோக்கு" (புறநா. 324).*

[வெருகு + விடை → வெருக்குவிடை]

வெருக்கொள்(ளு)-தல் *veru-k-koḷ(ḷu)-,* செ.கு.வி.(v.i.) அச்சங்கொள்ளுதல்; to be afraid. *"வெருக்கொண்டு பதைபதைத்து" (குசேலோ. குசேலர்வைகுந்த. 57).*

[வெரு + கொள்]

வெருக்கொள்ளி *veru-k-koḷḷi,* பெ.(n.) மனத்திண்மையில்லாதவன்; person who lacks courage, coward.

[வெருக்கொள் → வெருக்கொள்ளி]

வெருக்கோள் *veru-k-kōḷ*, பெ.(n.) அச்சங் கொள்ளுகை; fearing. *"வெருக்கோளுற் றதுநீங்க" (பெரியபு. தடுத்தாட். 114).*

[வெருக்கொள் → வெருக்கொள்ளுகை]

வெருகங்கிழங்கு¹ *verukaṅ-kiḻaṅgu*, பெ.(n.) வெருகு¹, 4 பார்க்க; see *verugu.*

[வெருகு → வெருகம் + கிழங்கு]

வெருகங்கிழங்கு² *verugaṅ-kiḻaṅgu*, பெ.(n.) ஒருவகை மூலிகைக் கிழங்கு; a stout long root of the plant-arum macrorhizon.

[வெருகன் + கிழங்கு]

வெருகடி *verukaṭi*, பெ.(n.) 1. பூனையின் அடி (யாழ்.அக.); cat's paw. 2. மூன்று விரல்களின் நுனிகளால் எடுக்குமளவு; a large pinch, as much as can be taken up with tips of thumb and two fingers (w.). *'அந்தச் சூர்ணத்தில் வெருகடித் தூள் உட்கொண்ண வேண்டும்'.*

[வெருகு + அடி → வெருகடி]

வெருகடித்தூள் *verukadi-t-tūḷ*, பெ.(n.) ஒரு சிட்டிகைப் பொடி; one pinch of powder.

வெருகடு *veru-kaḍu*, பெ.(n.) பூனைக்காலி பார்க்க; see *pūṉai-k-kāli.*

வெருகம் *verukam*, பெ.(n.) வாலின் கீழிடம் (பிங்.); the under side of tail.

வெருகா *verugā*, பெ.(n.) நீர் முள்ளி; a thorny weed used as medicine-hygrophila auriculate alias astercantha longifolia.

வெருகு¹ *veruku*, பெ.(n.) 1. ஆண்பூனை (திவா.); tom-cat. 2. காட்டுப்பூனை (பிங்.); wild cat. *"வெருக்கு விடை யன்ன" (புறநா. 324).* 3. மரநாய்; toddy cat. 4. வெண்கிடை (பிங்.); white-flowered sola.

[மெருகு → வெருகு]



வெருகு² *verugu*, பெ.(n.) மெருகு (யாழ்.அக.); polish.

[மெருகு → வெருகு]

வெருட்சி¹ *veriṭci*, பெ.(n.) 1. மருட்சி; bewiderment. 2. மருளுகை; shyness. 3. அச்சம்; fear.

[வெருள் → வெருட்சி]

வெருட்சி² *veruṭci*, பெ.(n.) மயக்கம்; giddiness.

[வெருள் → வெருட்சி]

வெருட்டல் *veruṭṭal*, பெ.(n.) அச்சமுறுத்தல், மயக்கல்; fear, allurement.

[வெருள் → வெருட்டு → வெருட்டல்]

வெருட்டி *veruṭṭi*, பெ.(n.) வெருட்டுவது; that which frightens. *"வேழவெண்டிரட டக்கை வெருட்டி" (சீவக. 174).*

[வெருட்டு → வெருட்டி]

வெருட்டு-தல் *veruttu-,* செ.குன்றாவி.(v.t.) 1. அச்சமுறுத்துதல்; to terrify, frighten. *"பாம்பினொடு படர்சடைக வைகாட்டி வெருட்டி" (தேவா. 676, 2).* 2. மலைக்கச் செய்தல்; to confuse, stupefy. *"வடிவழகாலே நாட்டை வெருட்டித் திரிகிற காமன்" (ஈடு. 2, 7, 8).* 3. விலங்குகள் முதலியவற்றை ஓட்டுதல்; to drive away an animals. 4. வேகமாகச் செல்லத் தூண்டுதல்; to drive fast. *'வண்டி மாட்டை வெருட்டு' (உ.வ.).*

[வெருள் → வெருட்டு]

வெருட்டு[2] *veruttui,* பெ.(n.) 1. கூச்சமுண்டாக்குகை; causing shyness (w.). 2. அச்சமுண்டாக்குகை; causing fear. 3. ஓட்டுகை; driving away. 4. வேகமாகச் செல்லத் தூண்டுகை; driving fast.

[வெருள் → வெருட்டு]

வெருணி *veruni,* பெ.(n.) ஆடு தீண்டாப் பாளை; a bitter worm killer - an ash coloured prostate plant aristolochia bracteata.



வெருணை[1] *verunai,* பெ.(n.) 1. செடிவகை (பதார்த்த. 534); pavetta. 2. ஒருவகைச் சிறு மரம் (மூ.அ.); common bottle flower, s.tr.

[வெருணை → வெருணை]

வெருணை[2] *verunai,* பெ.(n.) பாவட்டை; a small tree-pavata indica.

வெருப்பறை *veru-p-parai,* பெ.(n.) போர் முரசு; war-drum. *"வென்றி யெய்துதல் வேண்டு நாமென வெருப்பறை கொட்டி" (பெருங். மகத. 24, 29).*

[வெரு + பறை]

வெருவந்தம்[1] *veru-vantam,* பெ.(n.) அச்சம்; fear (w.).

[வெருவா → வெருவந்தம்]

வெருவந்தம்[2] *veru-vantam,* பெ.(n.) ஒரு வகைக் கொடி; a kind of creeper.

வெருவருநிலை *veru-varu-nilai,* பெ.(n.) அம்பு தன் மார்பைப் பிளப்பவும் நிலத்தில் விழாமல் நின்ற வீரனது நிலையைக் கூறும் புறத்துறை (பு.வெ. 7, 23, கொளு.); theme describing the attitude of a warrior who does not fall down even when his breast is pierced through and through by the arrows of his enemies.

[வெருவரு + நிலை]

வெருவல் *veruval,* பெ.(n.) வெருவுதல்; to be alarmed.

[வெரு → வெருவல்]

வெருவயிறு *veru-vayiru,* பெ.(n.) வெறும் வயிறு; empty stomach.

[வெறுவயிறு → வெருவயிறு]

வெருவலர் *veru-valar,* பெ.(n.) பகைவர்; enemies. *"வெருவலர் புரந்தீய" (உபதேசகா. சூராதி. 3).*

[வெரு + அல் + அர் → வெருவலர்]

வெருவா–தல் (வெருவருதல்) *veruvā-*, செ.கு.வி.(v.i.) 1. அச்சந்தருதல்; to be fearful. *"வெருவெரு தானைகொடு செருப்பல கடந்து" (பதிற்றுப். 70, பதி.).* 2. அஞ்சுதல்; to be afraid. *"வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்" (குறள், 599).*

[வெரு + வா → வெருவா]

வெருவு¹–தல் *veruvu-*, செ.குன்றாவி.(v.t.) & செ.கு.வி.(v.i) 1. அஞ்சுதல்; to be afraid of, to be alarmed. *"யானை வெரூஉம் புலிதாக் குறின்" (குறள், 599).*

[வெருள் → வெருவு]

வெருவு² *veruvu*, பெ.(n.) அச்சம்; fear. *"வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும்" (தொல். பொ. 111).*

[வெருள் → வெருவு]

வெருவெரு–த்தல் *veru-veru-*, செ.கு.வி. (v.i.) அஞ்சுதல்; to be afraid. *"உயிர் நடுங்கி.......... வெருவெருத்து நின்ற னரால்" (உபதேசகா. சூராதி. 49).*

[வெருள் → வெருவு → வெருவெரு–த்தல்]

வெருள்¹(ளு)–தல் *veru!(!u)-*, செ.கு.வி.(v.i.) 1. மருளுதல்; to be startled, perplexed. *"எனைக் கண்டார் வெருளா வண்ணம் மெய்யன்பை யுடையாய் பெறநான் வேண்டுமே" (திருவாச. 32, 3).* 2. அஞ்சுதல்; to be frightened. *"பெருங்குடியாக்கம் பீடற வெகுளி" (பெருங். மகத. 24, 84).* 3. குதிரை முதலியன மருளுதல்; to shy, to be skittish.

[வெருள் → வெருள்(ளு)–தல்]

வெருள்² *veru!*, பெ.(n.) 1. மனக்கலக்கம் (சூடா.); per plexity. 2. பயம்; fear. 3. அஞ்சத்தக்கது; that which is fearful. *"நின்புகழிகழ்வார் வெருளே" (திருவாச. 6, 17).*

[வெரு → வெருள்]

வெருள்வு¹ *veru!vu*, பெ.(n.) வெருட்சி; skittishness.

[வெரு → வெருள் → வெருள்வு]

வெருள்வு² *veru!vu*, பெ.(n.) மயக்கம்; vertigo.

[வெரு → வெருள் → வெருள்வு]

வெருளல் *veru!al*, பெ.(n.) மயங்கல்; to be infatuated. 2. பயப்படல், மருளல்; fearing.

[வெரு → வெருள் → வெருளல்]

வெருளார்–த்தல் *veru!ār-*, செ.கு.வி.(v.i.) 1. திகைத்தல்; to be startled. 2. மயங்குதல் (யாழ்.அக.); to be confused.

[வெருள் + ஆர் → வெருளார்–த்தல்]

வெருளி¹ *veru!i*, பெ.(n.) 1. வெருட்சி; bewilderment. *"வெகுளி மாடங்கள்" (சீவக. 532).* 2. வெருளச் செய்யும் புல்லுரு முதலியன; scare-crow, that which causes terror. 3. செல்வச் செருக்கு; pride of riches. *"வெருளி மாந்தர்" (சீவக. 73).*

[வெருள் → வெருளி]

வெருளி² *veru!i*, பெ.(n.) சோளக்கொல்லைப் பொம்மை; scarecrow.

[வெரு → வெருள் → வெருளி]



வெருளிப்பிணை *veruḷi-p-piṇai,* பெ.(n.) பெண்மான் வகை (பெருங். இலாவாண. 15, 31); a kind of doe.

[வெருளி + பிணை → வெருளிப்பிணை]

வெருளுதல் *veruḷutal,* பெ.(n.) வெருளல் பார்க்க; see *veruḷal.*

[வெரு → வெருள் → வெருளுதல்]

வெர்ப்பேந்தி *ver-p-pēnti,* பெ.(n.) மலைதாங்கி; a plant.

[வெர்ப்பு + ஏந்தி]

வெருனை *veruṇai,* பெ.(n.) 1. செடிவகை (பதார்த்த. 534); pavetta indica. 2. ஒருவகைச் சிறுமரம்; common bottle flower, s.tr.

[வெருணை → வெருனை]

வெரூஉ *verūu,* பெ.(n.) வெருவு பார்க்க; see *veruvu.* *"வெரூஉப்பறை" (பொருந. 171).*

[வெருவு → வெரூஉ]

வெரூஉதல் *verūutal,* பெ.(n.) மருண்டஞ்சுகை; being afraid. *"அலமா லரயிடை வெரூஉத லஞ்சி" (குறிஞ்சிப். 137).*

[வெருவு → வெரூஉதல்]

வெல்(லு)-தல் *vel(lu)-,* செ.குன்றாவி.(v.t.) 1. வெற்றி கொள்ளுதல்; to conquer, over come. *"எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்" (முல்லைப். 57).* 2. ஒழித்தல்; to destroy, romove. *"வல்வினை வெல்லவன்" (திருநூற். 99).* 3. ஒத்தல்; to resemble. *"வேங்கை வென்ற சுணங்கு" (ஐங்குறு. 324).* செ.கு.வி.(v.i). 4. மேம்படுதல்; to excel. *"விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே" (பெரியபு. பாயி. 4).*

[வெல் → வெல்(லு)-தல்]

வெல்புகழ் *vel-pugaḻ,* பெ.(n.) போர்க்கண் வெற்றியினால் உண்டாகும் புகழ்ச்சி; fame due to victory in war. *"பாடினார் வெல்புகழைப் பல்புலவர்" (பு.வெ. 8, 1).*

[வெல் + புகழ்]

வெல்லச்சாராயம் *vella-c-cārāyam,* பெ.(n.) வெல்லப் பாகினின்று காய்ச்சும் சாராயம்; liquor from jaggery.

[வெல்லம் + சாராயம்]

வெல்லச்சீடை *vella-c-cīḍai,* பெ.(n.) அரிசிமாவும் வெல்லமும் சேர்த்துச் செய்த சீடைப் பணியாரம்; ball-cake of rice-flour made with coarse cane-sugar.

[வெல்லம் + சீடை]

வெல்லடி *vellaḍi,* பெ.(n.) வலைவகை; a kind of net.

[வல் → வெல் → வெல்லடி]

வெல்லந்தி *vellanti,* பெ.(n.) விடத்தேர்; a plant-mint-mentha crispa.

வெல்லப்பாகு[1] *vella-p-pāku,* பெ.(n.) கருப்பஞ்சாற்றைக் காய்ச்சி உண்டாக்கும் குழம்பு; treacle.

[வெல்லம் + பாகு]

வெல்லப்பாகு[2] *vella-p-pāku,* பெ.(n.) 1. இன்தேன்பாகு நீர்; syrup. 2. வெல்லப் பருகை; solution of jaggery.

[வெல்லம் + பாகு]

வெல்லப்பாணி *vella-p-pāṇi,* பெ.(n.) வெல்லம் கரைத்த நீர்; solution of jaggery.

[வெல்லம் + பாணி]

வெல்லம்[1] *vellam,* பெ.(n.) கருப்பஞ்சாற்றுக் கட்டி; jaggery, unrefined cane-sugar. *"வெல்லச்சொ ணாவலர்க்கு" (தனிப்பா. i,* 305, 1).

வெல்லம்[2] *vellam,* பெ.(n.) 1. கரும்பு வெல்லம்; sugarcane jaggery. 2. பனைவெல்லம்; palmyra jaggery.

வகைகள் :
1. நல்ல வெல்லம்.
2. பனை வெல்லம்.
3. ஈச்ச வெல்லம் ; date jaggery
4. தெங்கின் வெல்லம்; jaggery from cocoanut toddy.

[வெல் → வெல்லம்]

வெல்லல் *vellal,* பெ.(n.) கொடிவகை; small elliptic-cuspidate leaved windberry.

வெல்லவட்டு *vella-vaṭṭu,* பெ.(n.) வெல்லத்தைக் காய்ச்சிச் சக்கரமாக ஊற்றிய துண்டு; circular piece of juggery. *"வெல்லவட்டுப் போல் வார்த்தை சொல்லி" (கவிகுஞ். 10).*

[வெல்லம் + வட்டு]

வெல்லவல் *vellaval,* பெ.(n.) வெல்லஞ் சேர்த்துப் பிசறிய அவல்; a sweet preparation of aval or parched rice.

[வெல்லம் + அவல் → வெல்லவல்]

வெல்லி[1] *velli,* பெ.(n.) சிற்றேலம் (மலை.); a species of cardamom.

வெல்லி[2] *velli,* பெ.(n.) திறமை சாலிப்பெண்; clever woman.

[வெல் → வெல்லி]

வெல்லுமா *vellumā,* பெ.(n.) புலி; tiger (w.).

[வெல் + மா → வெல்லுமா]



வெல்லை *vellai,* பெ.(n.) வெள்ளை நிறம்; whiteness. *"வெல்லை யறுவை நீக்கி" (சிவதரு. சிவஞானதான. 36).*

[வெள்ளை → வெல்லை]

வெல்வி *velvi,* பெ.(n.) வெற்றி; victory.

[வெல் → வெல்வி]

வெலங்கப்பாறை *velaṅga-p-pāṟai,* பெ.(n.) தொலைதூரக் கடலடிப் பாறை (மீன.பொ.வ.); rock in the deepest ocean.

[விலகு → விலங்கம் → வெலங்கம் + பாறை]



வெலங்கப்போதல் *velaṅga-p-pōdal,* பெ.(n.) தொலைவாய்க் கடல் மேற்செல்லுதல் (முகவை. மீன.); sailing for a long distance.

[விலகு → விலங்கு → வெலங்கம் + போதல்]

வெலத்தி *velatti,* பெ.(n.) வெலித்தி² பார்க்க; see *velitti.*

வெலவெல–த்தல் *velavela-,* செ.கு.வி.(v.i.) 1. களைத்தல்; to be faint with fatigue. *'பசியால் வெலவெலத்துப் போனான்'.* 2. கைகால் உதறுதல்; to guake, temble, as one's limbs. *"குளிரால் கைகால்கள் வெலவெலக்கின்றன".* 3. மலைத்தல்; to be dazed, astonished. *'அவன் பேச்சைக் கேட்டு வெலவெலத்துப் போனான்'.*

[வெலவெல → வெலவெல–த்தல்]

வெலவெலப்பு *vela-velappu,* பெ.(n.) 1. சோர்வடைதல்; fainting by fatigue. 2. களைப்பு; weariness. 3. கைகால் உதறல்; shivering of the limbs. 4. வலுக்குறைவால் நோதல்; convulsion due to weakness.

[வெலவெல → வெலவெலப்பு]

வெலி *veli,* பெ.(n.) 1. புறம்பாக்குகை; banishment. 2. எழுத்தினின்றும் தவறான பகுதியை விலக்குகை; expunging.

[வலி → வெலி]

வெலிகம் *velikam,* பெ.(n.) கற்றாழை (மலை.); aloe.

[வெலி → வெலிகம்]



வெலிகயம் *velikayam,* பெ.(n.) சுக்காக் கீரை; country sorrel-rumex vesicarius.

வெலிசாத்து *veli-cāttu,* பெ.(n.) ஆளைப் பிடிக்கவும், சொத்தைக் கட்டுப் படுத்தவும் இடுங் கட்டளை; warrant, as of arrest or attachment. *'வெலிச்சாத்து விட்டு வீட்டைத் தடைப்படுத்தியிருக்கிறேன்'.*

[வலி → வெலி + சாற்று → சாத்து]

வெலித்தி *velitti,* பெ.(n.) 1. ஒல்லி; lean person. 2. ஆடை முதலியன கடுத்தமின்றி யிருக்கை; being lose in texture. 3. வெள்ளோசை 1, 2 பார்க்க; see *veḻḻōsai.*

[வெலி → வெலுத்தி]

வெலீஇயோன் *velīiyōṉ,* பெ.(n.) வெல்வித்தோன்; on who caused victory. *"நிற்கூறும்மே வெலீஇயோ னிவனென" (புறநா. 125).*

[வெல் → வெலீஇ → வெலீஇயோன்]

வெலுப்பி *veluppi,* பெ.(n.) ஒற்றைப் பேய் மருட்டி; a plant-phlomis zeylanica.

வெலுமசந்தி *velumasanti,* பெ.(n.) மூலிகை, உத்தாமணி; a twining plant, hedge cotton-daemia extensa.



வெவ்வர் *vevvar,* பெ.(n.) வெம்மை; heat. *"வெவ்வ ரோச்சம் பெருக" (பதிற்றுப். 41, 20).*

[வெம்-மை → வெவ்வர்]

வெவ்விடாய் *vev-viḍāy,* பெ.(n.) கடுந்தாகம்; intense thirst. *"வெவ்விடாய் தளிவுற" (பாரத. நூலாம்போர். 46).*

[வெம் (மை) + இடாய்]

வெவ்விது *vevvitu,* பெ.(n.) 1. சூடானது; that which is hot. 2. கொடியது; that which is harsh or cruel. *"சினமிக்கு வெவ்விதா யெழுந்து" (கலித். 102, 20, உரை).*

[வெம் (மை) → வெவ் + து → வெவ்விது]

வெவ்வியன் *vevviyaṉ,* பெ.(n.) கோபி, வெப்பமுடையோன்; quick-tempered man, man of angry mood.

[வெம் (மை) → வெவ்வன் → வெவ்வியன்]

வெவ்வினை *vevviṉai,* பெ.(n.) 1. கொடிய வினை; relehtless karma. 2. போர் (யாழ்.அக.); battle.

[வெம் (மை) + வினை]

வெவ்வுயிர்-த்தல் *vev-v-uyir-,* செ.கு.வி. (v.i.) வெய்துயிர் பார்க்க; see *vey-tuyir.* *"உள்ள மலங்க....... வெவ்வுயிர்க்கும்" (திவ். திருவாய். 2, 4, 6).*

[வே + உயிர்-த்தல்]

வெவ்வுயிர்த்தல் *vev-vuyirttal,* பெ.(n.) பெருமூச்செறிதல்; sighing.

[வே + உயிர்-த்தல்]

வெவ்வுயிர்க்கொள்(ளு)-தல் *vevvuyir-k-koḷ(ḷu)-,* செ.கு.வி. (v.i.) வெய்துயிர் பார்க்க; see *vey-tuyir.* *"வெவ்வுயிர்க் கொண்டு" (திவ். திருவாய். 10, 3, 3).*

[வெவ்வுயிர் + கொள்(ளு)-தல்]

வெவ்வுரை *vevvurai,* பெ.(n.) கடுஞ்சொல்; harsh language. *"வெவ்வுரை யெங்கட்கு விளம்பினிர்" (மணி. 25, 53).*

[வெம் (மை) + உரை]

வெவ்வுழவு *vev-v-uḻavu,* பெ.(n.) மேலுழவு; superticial ploughing.

[மே → வே + உழவு]

வெவ்வெஞ்செல்வன் *vev-veñ-celvaṉ,* பெ.(n.) வெம்மையுடையதும் விரும்பப் படுவதுமாகிய இளஞாயிறு; the rising sun, as one whose warmth is welcome or pleasing. *"வெவ்வெஞ்செல்வன் விசும்பு படர்ந்தாங்கு" (பொருந. 136).*

[வெம் (மை) + வெம் (மை) + செல்வன்]

வெவ்வேகம் *ve-v-vēgam,* பெ.(n.) கொடிய நஞ்சு; virulent poison. *"வெவ்வேகங் கொதித்தெழுந்து" (திருக்காளத். பு. காளன்.7).*

[வெம் (மை) + வேகம்]

வெவ்வேறு *vevvēṟu,* பெ.(n.) தனித்தனி; separateness.

[வேறு + வேறு → வெவ்வேறு]

வெவிச்சைக்கெண்டை *veviccai-k-keṇḍai,* பெ.(n.) வெண்மை நிறமுடையதும் ஆறு விரலம் வளர்வதுமான மீன்வகை; carb, silvery, attaining 6 in. in length, cheta argentea.

[வெளிச்சைக்கெண்டை → வெவிச்சைக் கெண்டை]



வெழுமூட்டு-தல் *veḻu-mūṭṭu-,* செ. குன்றாவி.(v.t.) 1. வழுவழுப்பாக்குதல்; to polish. *"தீற்றிய சுண்ணாம்பை வெழுமட்டு".* 2. குற்றம் மறைத்துப் பேசுதல்; to smooth over, as a fault. செ.கு.வி.(v.i). 3. தோலுரிதல்; wear off. as the skin.

[வழுமூட்டு → வெழுமூட்டு-தல்]

வெழுமுண்டகாயம் *veḻu-muṇḍa-kāyam,* பெ.(n.) தோலுரிந்த புண்; abrasion.

[வழுவுண்ட → வெழுமுண்ட + காயம்]

வெழுமூள்(ளு)-தல் *veḻu-mūḷ(ḷu)-,* செ.கு.வி. (v.i.) 1. தோள் மூடுதல்; to be covered with skin. 2. வழுவழுப்பாதல்; to be smooth or soft. 3. அமைதியாயிருத்தல்; to be silent. 4. வெழமூட்டு பார்க்க; see *veḻa-mūṭṭu.*

[வழு + மூள் → வெழுமூள்(ளு)-தல்]

வெழுமெனல் *veḻum-eṉal,* பெ.(n.) வழுவழுப்புக்குறிப்பு; expr. of being smooth to the touch.

[வெழுமூள் → வெழுமெனல்]

வெள்[1] *veḷ,* பெ.எ.(adj.) 1. வெண்மையான; white. *"வெள்ளரைக் கொளீஇ" (மலைபடு. 562).* 2. உள்ளீடற்ற; empty, blank. 3. கலப்பில்லாத; pure, unadulterated. 4. ஒளி பொருந்திய; shining bright. *"வெள்வேல் விடலை" (அகநா.).*

[வெண்-மை → வெள்]

வெள்[2] *veḷ,* பெ.(n.) கூர்மை (நாமதீப. 427); sharpness.

[வள் → வெள்]

வெள்கல் *veḷkal,* பெ.(n.) அச்சம், வெட்கம், வெட்குதல்; fear, shame, ashame.

[வெள் → வெள்கல்]

வெள்கு-தல் *veḷgu-,* செ.கு.வி.(v.i.) 1. வெட்டுதல்; to be ashamed. *"வெள்கிட மகுடஞ் சாய்க்கும்" (கம்பரா. வாலிவதை. 73).* 2. கூச்சப்படுதல்; to be coy, bashful. *"தான்றன் வென்றியை யுரைப்பவெள்க" (கம்பரா. திருவடி. 9).* 3. அஞ்சுதல்; to fear. *"வெந்தனகள் கொன்டெறிய வெள்கிம் மயிர்க் கவுரிமா விரியுமே" (சீவக. 1897).* 4. மனங்குலைதல் (பிங்.); to shudder, to be perplexed.

[வெள் → வெள்கு-தல்]

வெள்யாடு *vel-yāḍu,* பெ.(n.) வெள்ளாடு பார்க்க (தொல். சொல். 17, உரை); see *veḷḷāḍu.*

[வெள் + யாடு]

வெள்வக்கணை *veḷ-vakkaṇai,* பெ.(n.) வெள்ளை வக்கணை; forest gaub-diospyrus montana.

வெள்வங்கப்பற்பம் *veḷ-vaṅka-p-paṟpam,* பெ.(n.) வெள்ளீய பற்பம்; calcined tin cures skin diseases especially in the generative organs.

[வெள் + வங்கம் + பற்பம்]

வெள்வங்கம்[1] *veḷ-vaṅgam,* பெ.(n.) மருந்துவகை (இராசவைத். 102, உரை); a kind of medicine.

[வெள் + வங்கம்]

வெள்வங்கம்[2] *veḷ-vaṅgam,* பெ.(n.) வெள்ளீயம்; white lead-tin.

[வெள் + வங்கம்]

வெள்வரகு *veḷ-varagu,* பெ.(n.) வரகுவகை; aspecies of millet. *"வெள்வரகுழுத கொள்ளுடைக் கரம்பை" (பதற்றுப். 75, 11).*

[வெள் + வரகு]

வெள்வரி *veḷ-vari,* பெ.(n.) 1. கண்ணோய் வகை (சீவரட். 267); an eye-disease. 2. பலகறை (மூ.அ.); cowry. 3. வெள்ளரி பார்க்க (சிலப். 16, 25, அரும்.); see *veḷḷari.*

[வெள் + வரி]

வெள்வரியங்கம் *veḷ-variyaṅgam,* பெ.(n.) அடுக்கு வாகை பார்க்க; see *aḍukku-vāgai.*

[வெள் + வரியங்கம்]

வெள்வரை-த்தல் *veḷ-varai,* செ.கு.வி. (v.i.) 1. கிழக்கு வெளுத்தல்; to dawn. *"வெள்வரைப் பதன் முன்னந் துறைபடிந்து" (திவ். நாய்ச். 1, 2).*

[வெள் + வரை-த்தல்]

வெள்வரைப்பு *veḷ-varaippu,* பெ.(n.) கிழக்கு வெளுக்கை; break of dawn. *"வெள்வரைப் பின் முன்னெழுந்து" (திவ். பெரியாழ். 3, 8, 9).*

[வெள்வரை + பு → வெள்வரைப்பு]

வெள்வவ்வால் *veḷ-vavvāl,* பெ.(n.) சாம்பல் நிறமுள்ளதும், ஓரடி வளர்வதுமான வவ்வால் மீன் வகை (பதார்த்த. 936); silver pomfret, greyish neutral tint with purplish reflections, attaining 1 ft. in length.

[வெள் + வவ்வால்]



வெள்வளையார் *veḷ-vaḷaiyār,* பெ.(n.) சங்கு வளையல் அணிந்த மகளிர்; women, as wearing white conch bracelets. *"வெம்முரண் வேந்தரும் வெள் வளையார் தோள் விழைந்து" (பு.வெ. 9, 24).*

[வெள் + வளையார்]

வெள்வாகை *veḷ-vākai,* பெ.(n.) வாகை மரவகை; white siris,1,tr.

[வெள் + வாகை]

வெள்வாடை *veḷ-vāḍai,* பெ.(n.) இளந்தென்றல் (யாழ்.அக.); gentle breeze.

[வெள் + வாடை]

வெள்வாரி *veḷ-vāri,* பெ.(n.) வெள்ளீய மணல்; tin ore.

[வெள் + வாரி]

வெள்வாள் *veḷ-vāḷ,* பெ.(n.) ஒளியுள்ள கூரிய வாள்; shining sword. *"வெள்வாள் வேந்தன்" (பு.வெ. 8, 27, கொளு).*

[வெள் + வாள்]

வெள்விழி *veḷ-viḻi,* பெ.(n.) வெள்ளை விழி (சீவரட். 265); white of the eye.

[வெள் + விழி]

வெள்விளர்–த்தல் *veḷ-viḷar-,* செ.கு.வி.(v.i.) வெள்ளவிளர் பார்க்க (தொல். எழுத். 482, உரை); see *veḷḷa-viḷar.*

[வெள் + விளர்–.]

வெள்விளா *veḷ-viḷā,* பெ.(n.) வெண்டேக்கு; ben teak.

[வெள் + விளா]

வெள்விளா *veḷ-viḷā,* பெ.(n.) விளாமரவகை; white wood-apple.

[வெள் + விளா]

வெள்வீச்சு *veḷ-viccu,* பெ.(n.) தொடக்க நிலைப் பேச்சு; empty boast.

[வெள் + வீச்சு]

வெள்வெங்காயம்[1] *veḷ-veṅkāyam.* பெ.(n.) 1. வெங்காயம்; onion. 2. வெள்ளைப்பூண்டு (சங்.அக.); garlic.

[வெள் + வெங்காயம்]

வெள்வெங்காயம்[2] *veḷ-veṅkāyam.* பெ.(n.) வெண்மையான ஈருள்ளி; white coloured allium cepa. 2. நரிவெங்காயம்; wild onion.

[வெள் + வெங்காயம்]

வெள்வெட்சி[1] *veḷ-veṭcit,* பெ.(n.) 1. பாவட்டை; common bottle flower. 2. வெட்சி பார்க்க; see *veṭci* (w.).

[வெள் + வெட்சி]

வெள்வெட்சி[2] *veḷ-veṭci.* பெ.(n.) வெள்ளை வெட்சிப் பூ; white ixora flower.

[வெள் + வெட்சி]

வெள்வெட்டிவேர் *veḷ-veṭṭi-vēr,* பெ.(n.) இலாமிச்சை (சங்.அக.); cuscus-grass.

[வெள் + வெட்டிவேர்]

வெள்வெட்டை *veḷ-veṭṭai,* பெ.(n.) வெட்டை நோய்; gleet.

[வெள் + வெட்டை]

வெள்வெடி *veḷ-veḍi,* பெ.(n.) 1. குண்டு இல்லாத துமுக்கி; blank cartridge. 2. வெள்வீச்சு பார்க்க; see [illegible] 3. வெள்ளடி[3] பார்க்க; see *ve*[illegible]

[வெள் + வெடி]

வெள்வெள்ளரி *veḷ-veḷḷari,* பெ.(n.) வெள்ளரி வகை; white cucumber.

வெள்வெற்றிலை *veḷ-veṟṟilai,* பெ.(n.) வெள்ளை வெற்றிலைக் கொடி, கற்பூர வெற்றிலை; a creeper yielding whie betel leaf.

[வெள் + வெற்றிலை]

வெள்வேங்கை *veḷ-vēṅgai,* பெ.(n.) வேங்கை மரவகை; siris,1. to.

[வெள் + வேங்கை]

வெள்வேம்பு[1] *veḷ-vēmpu,* பெ.(n.) வேப்ப மரவகை (பரி.அக.); a kind of margosa.

[வெள் + வேம்பு]

வெள்வேல் *veḷ-vēl,* பெ.(n.) 1. பேய்க் கருங்காலி; tamarind-like cutch. 2. வேல்வகை; panicled babool, m.tr.

[வெள் + வேல்]

வெள்வேலம் *veḷ-vēlam,* பெ.(n.) வெள்வேல் 2 பார்க்க; see *veḷ-vēl.*

[வெள் + வேலம்]

வெள்வேலம்பட்டை *veḷ-vēlam-paṭṭai,* பெ.(n.) வெள்ளை வேலம் பட்டை; bark of the iron coloured mimosa-mimosa ferruginea.

[வெள் + வேலம் + பட்டை]

வெள்வேலன்[1] *veḷ-vēlaṉ,* பெ.(n.) வெள்வேல் பார்க்க; see *veḷvēl.*

[வெள்வேலம் → வெள்வேலன்]

வெள்வேலன்[2] *veḷ-vēlaṉ,* பெ.(n.) ஒள்ளிய வேல்தாங்கிய வீரன்; warrior armed with a bright spear(w.).

[வெள் + வேல் + அன்]

வெள்வேலா *veḷ-vēlā,* பெ.(n.) வெள்வேல் 2 பார்க்க; see *veḷ-vēl.*

[வெள்வேல் → வெள்வேலா]

வெள்வேலான் *veḷ-vēlāṉ,* பெ.(n.) வேலமரம்; a tree-acacia arabica.

[வெள் + வேலான்]

வெள்வேலிகம் *veḷ-vēligam,* பெ.(n.) வேலிப்பருத்தி; hedge cotton twiner-daemia extense.

[வெள் + வேலிகம்]

வெள்வேலோன் *veḷ-vēlōṉ,* பெ.(n.) வெள்வேலன் பார்க்க; see *veḷ-vēlaṉ* (w.).

[வெள் + வேல் → வேலோன்]

வெள்வேள் *veḷ-vēḷ,* பெ.(n.) 1. வேலமரம்; acacia leucophlacea. 2. பட்டை சாராய மரம்; a tree arractacacia.

[வெள் + வேல் → வேள்]

வெள்வௌவால் *veḷ-vauvāl,* பெ.(n.) ஒரு மீன்வகை; a rhomboid sized white fish.

[வெள் + வௌவால்]

வெள்ளக்கட்டுப்பாடு *veḷḷa-k-kaṭṭu-p-pāḍu,* பெ.(n.) வெள்ளத்தடுப்பு; flood control.

வெள்ளக்கட்டுப்பாடு: வெள்ளத்தின் அளவைக் கணக்கிட்ட பின்னர், அடுத்து அதனால் ஏற்படும் சேதங்களைத் தடுப்பதற்கு வேண்டிய வழிகளைக் கையாள வேண்டும். பொதுவாகக் கையாளப்படும் வழிகளாவன: 1. ஆற்றுப்பகுதியைத் துப்புரவாக்கி நீரோட்டத்தைத் விரைவுபடுத்துதல். 2. நீர்த்தேக்கங்கள் (Reservoirs) அமைத்தல். 3. மண்ணாலான கரைகள் (levees) அல்லது

வெள்ளத்தடுப்பு மதில்கள் (flood walls) அமைத்தல்., 4. வெள்ளத் திருப்பு வழிகள் (flood ways) அமைத்தல். 5. நீர்புகா (flood proof) நிறுவனங்கள் அமைத்தல். 6. நில காப்பு முறைகளால் வெள்ளத்தைக் குறைத்தல். 7. வெள்ளப் பகுதியிலிருந்து மக்களை வெளியேற்றல் வெள்ளப் பகுதியின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தல் (flood plain zoning).

வெள்ளத்தால் ஏற்படும் சேதம் வெள்ள நீரின் அளவைவிட நீரோட்டத்தில் ஏற்படும் நீர்மட்ட உயரத்தையே பொறுத்திருக்கிறது. எனவே ஆற்றுப் படுகையிலும் அதன் இரு மருங்கிலும் வளரும் களைகளைக் களைவதன் மூலமும் நீரோடும் பகுதியைச் சற்று ஆழமாக்குவதன் மூலமும், துப்புரவாக்குவதன் மூலமும், ஆற்றுப் போக்கில் உள்ள வளைவுகளைக் குறைத்து நேராக்குவதன் மூலமும் நீரோட்டத்தை அதிகப்படுத்தி நீர் மட்டத்தைக் குறைக்கலாம்.

வெள்ளக் கட்டுப்பாட்டிற்கு மிகுதியாகப் பயன்படுபவை நீர்த்தேக்கங்களாகும். வெள்ளத்தைத் தடுத்துத் தேக்கி, அத்தேக்கத்தின் கீழுள்ள நீரோட்டத்தின் இருபுறத்திலும் சேதம் ஏற்படாத அளவில் தண்ணீரைக் கட்டுப்படுத்தி ஓடவிடுவது ஒரு நோக்கமாகும். ஆங்காங்கு வெள்ளக் கட்டுப்பாட்டிற்கென்றே நீர்த்தேக்கங்கள் கட்டப்படுகின்றன வெனினும், பெரும்பாலான நீர்த்தேக்கங்கள் *'பலநோக்கு நீர்த்தேக்க'* வகையைச் சேர்ந்தவை. வெள்ளக் கட்டுப்பாடு மட்டுமின்றி வேளாண்மை, மின்னாக்கம், குடிதண்ணீர் ஆகியவற்றிற்கும் அவை அமைக்கப்படுகின்றன.

வெள்ளத்தால் ஏற்படும் சேதத்தைத் தடுப்பதற்கு முயன்ற நாள் தொடங்கி மண் கரைகள் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. பின்னர் வெள்ளத்தடுப்பு மதில்களும் பயன்படுத்தப்பட்டன. மண் கரைகள் மண்ணாலும், வெள்ளத்தடுப்பு மதில்கள் கற்காரை, கருங்கற்கள் இவற்றாலும் கட்டப்படுகின்றன. மண்ணைப் பயன்படுத்தினால் வெள்ளக் காலத்தில் தீங்கு நேராமல் கண்காணிப்பது இன்றியமையாததாகும். இதற்கென வெள்ளத் தடுப்புப் படைகள் (flood fighting squads) நிறுவப்பட்டுள்ளன.

ஆற்றின் ஒரு பகுதிக்கு வந்து சேர்ந்த வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதைவிட, அவ் வெள்ளத்தின் அளவை அதன் தோற்றவாயிலேயே குறைப்பது சிறந்ததாகும். ஒரு நீர்ப்பரப்பில் பெய்யும் மழையின் முழு அளவும் ஆற்றுக்கு வந்து சேருவதில்லை. ஆற்றுக்கு வரும் மழைநீரின் அளவு பல காரணங்களால் குறைகிறது. நீர் வரும் பரப்பின் நிலம் பயன்படுத்தப்படும் முறை அக்காரணங்களில் ஒன்றாகும். செடி கொடி வகைகளும் வயல்களும் நிறைந்திருந்து, நீரோடும் சரிவுகளில் ஆங்காங்கு நீரோட்டத்தைத் தடுக்கும் வரப்புகளும் நிறைந்திருக்குமாயின், ஆற்றை வந்தடையும் மழைநீர் குறைகிறது. இதுபோன்ற முறைகளை நீர் வரும் பரப்பின் முதன்மையான பகுதிகளில் கையாண்டு வெள்ளத்தைக் குறைப்பதும் பயனுள்ளதாகும். வெள்ளத்தைத் தடுப்பதை விட, அதனால் ஊறுபடக்கூடிய பகுதிகளிலிருந்து வெளியேறி விடுவது சில சமயங்களில் எளிதாக இருக்கலாம். வெள்ளத்தைப் பற்றி எச்சரிக்கை செய்ய வசதிகள் இருக்குமாயின், இம் முறையைக் கையாண்டு வெள்ளம் வருமுன் ஊறுபடக் கூடிய பகுதிகளிலிருந்து மக்களையும் கால்நடைகளையும் வெளியேற்றலாம்.

மக்கள் உயிர்ச் சேதத் தடுப்பு, உடல்நலப் பாதுகாப்பு போன்றவை பொருளியல் அடிப்படையில் அளவிடமுடியாத நன்மைகளாகும்.

[வெள்ளம் + கட்டுப்பாடு]

வெள்ளக்காடு *ve*ḷḷ*a-k-kā*ḍ*u*, பெ.(n.)
1. நீரால் நிலப்பரப்பு நிறைகை; inundation by flood. *"புழைக்கடை யெல்லாம் வெள்ளக் காடாய்விட்டது" (பே.வ.).* 2. பெருவெள்ளம்; excessive flood.

[வெள்ளம் + காடு → வெள்ளக்காடு]

வெள்ளக்கால் *ve|la-k-kal,* பெ.(n.) வெள்ளநீர்; great flood. *"கழனியை வெள்ளக்கால் வந்து கோத்ததென" (பரிபா. 7, 33, உரை).*

[வெள்ளம் + கால்]

வெள்ளக்குடி *ve|la-k-kudi,* பெ.(n.) தாகநீர்; drink. *"இன்று காருவா (அமாவாசை) ஆதலால் இரவில் கொஞ்சம் வெள்ளக்குடி இருக்கட்டும்".*

[வெள்ளம் + குடி]

வெள்ளக்கேடு *ve|la-k-kēdu,* பெ.(n.) வெள்ளப்பாழ் பார்க்க; see *ve|la-p-pā|.* *"வெள்ளக்கேடும் வறட்கேடு மின்றிக்கே" (திவ். திருப்பா. 3, வ்யா.).*

[வெள்ளம் + கேடு]

வெள்ளகத்தி *ve|-|-akatti,* பெ.(n.) அகத்தி வகை (மூ.அ.); west indian pea-tree.

[வெள் + அகத்தி]

வெள்ளகில் *ve|lakil,* பெ.(n.) அகில் மரம்; a white species of eagle wood tree-aquilaria agalocha.

[வெள் + அகில்]

வெள்ளங்காட்டி *ve|lan-kātti,* வி.எ.(v.i.) விடியற் காலையில்; early in the morning.

[வெள்ளெனல் + காட்டி]

வெள்ளச்சி *ve|lacci,* பெ.(n.) 1. ஒரு வகை தொட்டி நச்சு; a kind of arsenic. 2. சீனக்காரம்; alum.

வெள்ளச்சிப்பி *ve|la-c-cippi,* பெ.(n.) பொன்னிமிளை; yellow bismuth.

[வெள்ளம் + சிருப்பி]

வெள்ளச்சாவி *ve|la-c-cāvi,* பெ.(n.) வெள்ளப்பாழ் பார்க்க; see *ve|la-p-pā|* (Insc. Pudu. 343).

[வெள்ளம் + சாவி]

வெள்ளச்சேதம் *ve|la-c-cēdam,* பெ.(n.) 1. வெள்ளப்பாழ் பார்க்க; see *ve|la-p-pā|* (w.). *"தமிழ்நாட்டில் வெள்ளச் சேதத்தைப் பார்வையிட நடுவணரசுக் குழு வருகை".*

[வெள்ளம் + சேதம்]

வெள்ளஞ்சு *ve|lañju,* பெ.(n.) காட்டுப்பச்சிலை; dal bergia lanceolaria.

வெள்ளட்டை *ve|lattai,* பெ.(n.) மர அட்டை; wood louse.



வெள்ளடம்பு *ve|-|-adambu,* பெ.(n.) கொடி வகை; moon-flower, m,ch.

[வெள் + அடம்பு]

வெள்ளடி[1] *ve|ladi,* பெ.(n.) 1. வெளிப்படை; openness (w.). 2. விளம்பரப்படுத்துதல்; publicity. 3. உள்ளீடின்மை; emptiness (w.). 4. எளிமை; simplicity. 5. பொதுவிடம்; common place.

[வெள் → வெள்ளடி]

வெள்ளடி[2] *veḷḷaḍi,* பெ.(n.) 1. வெறுங்கால்; uncovered foot. 2. வெண்பாவுக்குரிய அடி (யாப். வி. 85, உரை); metrical line pertaining to *veṇpā.*

[வெள் + அடி]

வெள்ளடி[3] *veḷḷaḍi,* பெ.(n.) வெருட்டு (யாழ்.அக.); Intimidation.

[வெள் → வெள்ளடி]

வெள்ளடிச்சேவல் *veḷḷaḍi-c-cēval,* பெ.(n.) காலின் முள் செதுக்கப்படாத சண்டைச் சேவல்; fighting cock with spurs uncut (w.).

[வெள் + அடி + சேவல்]



வெள்ளடிவலை *veḷḷaḍi-valai,* பெ.(n.) மணிவலையில் ஒரு கூறு (தஞ்சை. மீன.); a part of gem studded net.

வெள்ளடிவெருட்டு *veḷḷaḍi-veruṭṭu,* பெ.(n.) வெள்வீச்சு பார்க்க; see *veḷ-viccu.*

[வெள்ளடி + வெருட்டு]

வெள்ளடை[1] *veḷḷaḍai,* பெ.(n.) வெற்றிலை; betel. *"வெள்ளடைத் தம்பல்" (கம்பரா. கார்காண். 29).*

[வெள் + அடை]

வெள்ளடை[2] *veḷḷaḍai,* பெ.(n.) 1. விண்வெளி; the great cosmic space. 2. திருக்குருகாவூரிலுள்ள சிவன் கோயில்; the siva shrine at *Tiru-k-kurukāvūr.* *"விளங்கொளி குருகாவூர் வெள்ளடை யுறைவானே" (தேவா. 61, 10).*

[வெள் + அடை]

வெள்ளணங்காட்டி *veḷḷaṇa-ṅ-kāṭṭi,* செ.கு.வி. (v.i.) வெள்ளங்காட்டி பார்க்க; see *veḷḷaṅ-kāṭṭi.*

[வெள்ளம் + அணங்காட்டி]

வெள்ளணி *veḷḷaṇi,* பெ.(n.) தலைவிக்கு மகன் பிறந்த செய்தியைத் தலைமகன் அறிந்து கொள்ளும் பொருட்டுத் தோழி அணிந்து கொள்ளும் வெண்மை நிறமுள்ள ஆடை முதலியன (தஞ்சைவா. 388, தலைப்பு); white dress worn by a maid to signify to her load that her lady is delivered of a son. 2. அரசன் பிறந்தநாள் ஒப்பனை (சீவக. 614, உரை); decorative dress of the king on his birthday. 3. அரசன் பிறந்த நாள் விழா; festival celebrating the king's birthday. *"அடித்தளை நீக்கும் வெள்ளணியாம்" (சிலப். 27, 229).*

[வெள் + அணி]

வெள்ளணிவிழா *veḷḷaṇi-viḻā,* பெ.(n.) வெள்ளணி[3] பார்க்க; see *vaḷḷaṇi[3]*

[வெள்ளணி + விழா]

வெள்ளந்தி[1] *veḷḷandi,* பெ.(n.) வஞ்சகமின்மை, வெள்ளை மனம்; honesty, plain-hearted man.

[வெள் + அகம் → அகந்தி]

வெள்ளந்தி² *ve!!andi,* பெ.(n.) 1. வெள்ளை மணத்தன்; வெளுத்ததெல்லாம் பாலென்று நினைப்பவன்–நம்புவோன்; white-hearted man, innocent. 2. உலகிய லறிவில்லான் (முகவை. மீன.); ignorant of worldly affairs or knowledge.

[வெள் + அகம் → அகந்தி]

வெள்ளப்பகுதி *ve!!a-p-paguti,* பெ.(n.) வெள்ளம் சூழ்ந்த நிலப்பகுதி; tide-land.

[வெள்ளம் + பகுதி]

வெள்ளப்பாடு *ve!!a-p-pāḍu,* பெ.(n.) 1. பள்ளமான வயனிலம்; low-lying fields. *'வெள்ளப்பாடான கிராமம்'.* 2. வெள்ளப் பாழ் பார்க்க; see *ve!!a-p-pā!.*

[வெள்ளம் + பாடு]

வெள்ளப்பாழ் *ve!!a-p-pā!,* பெ.(n.) வெள்ளம் மிகுதியால் நேரும் பயிர்க்கேடு; injury to crops by flood, one of *mu-p-pā!.*

[வெள்ளம் + பாழ்]

வெள்ளப்பிடிப்பு *ve!!a-p-piḍippu,* பெ.(n.) நீரோட்டமின்றிக் காணக்கூடுங் கடல் – நீரின் தன்மை (செங்கை. மீன.); sea bed quality of water.

[வெள்ளம் + பிடிப்பு]

வெள்ளப்பூடுச்சங்கு *ve!!a-p-pūḍu-c-caṅgu,* பெ.(n.) ஒரு சிறிய சங்கு; a small conch.

[வெள்ளம் + பூடுச்சங்கு]



வெள்ளப்பெருக்கு *ve!!a-p-perukku,* பெ.(n.) பெருமழையால் ஏற்படும் வெள்ளநீர்; heavy fall of rain.

[வெள்ளம் + பெருக்கு]

வெள்ளம் *ve!!am,* பெ.(n.) 1. நீர்ப்பெருக்கு (பிங்.); flood, deluge. *"வெள்ளந்தாழ் விரிசடையாய்" (திருவாச. 3, 1).* 2. கடல்; sea. *"மகர வெள்ளத் திறத்தால்" (கம்பரா. கடல்காண். 2).* 3. கடலலை (பிங்.); sea-wave. 4. நீர்; water. *'குடிக்க வெள்ளங் கொண்டுவா'.* 5. ஈரம் (பிங்.); moisture. 6. மிகுதி (சூடா.); abundance. 7. பேரெண் (தொல். எழுத். 393); a large number. 8. உண்மை; truth (w.). *'இது கள்ளமா வெள்ளமா?'. 'தமிழில் வெள்ளமென்பது மிகுதிப் பொருளைக் குறிக்கும் சிறப்புச் சொல்லாகவும், மலையாளத்தில் பொதுப் பொருளைக் குறிக்கும் சொல்லாகவும் வழங்கப்படுகிறது'.*

[வெண்–மை → வெள்ளம்]

வெள்ளம்பர் *ve!!ambar,* பெ.(n.) வெண்மை நிறமான ஒரு வகை அம்பர்; white amber.

வெள்ளம்போடு-தல் *ve!!am-pōḍu-,* செ.கு.வி. (v.i.) 1. கட்குடித்தல்; to drink liquor. 2. வெள்ளமெடு பார்க்க; see *ve!!a-meḍu.*

[வெள்ளம் + போடு-,]

வெள்ளமெடு-த்தல் *veḷḷam-eḍu-,* செ.கு.வி. (v.i.) 1. நீர் பரவுதல்; to be deluged (w.). 2. பெருக்கெடுத்தல்; to be in floods.

[வெள்ளம் + எடு-த்தல்]

வெள்ளர் *veḷḷar,* பெ.(n.) 1. வெண்ணிற முடையார்; whitemen. 2. கவடமற்றவர்; honest men. *"கள்ளரோ புகுந்தீ ரென்ன ...... வெள்ளரோ மென்று நின்றார்" (தேவா. 1190, 9).*

[வெள் → வெள்ளர்]

வெள்ளரசு *veḷ-ḷarašu,* பெ.(n.) அரசமரவகை (சங்.அக.); a kind of pipal tree.

[வெள் + அரசு]

வெள்ளரணை *veḷ-ḷ-araṇai,* பெ.(n.) சீலைப் பேன் (சங்.அக.); lice in clothes.

[வெள் → அரணை → வெள்ளரணை]

வெள்ளரவம் *veḷḷaravam,* பெ.(n.) விடியற்கால ஓசை. *"வெள்ளரவம் கேட்டிலையோ"* (திருப்பாவை).

[வெள் + அரவம்]

வெள்ளரவவெற்பு *veḷḷarava-veṟpu,* பெ.(n.) திருவேங்கடமலை; mount *Tiruvēṅkaḍa-malai.*



வெள்ளரளி *veḷḷaraḷi,* பெ.(n.) 1. பழக்கொடி; a creeper cucumis sativus.

[வெண்-மை + அரளி]

வெள்ளரா *veḷḷaṟā,* பெ.(n.) நீலநிறமுடையதும் நான்கு அடி வளர்வதுமான கடல் மீன் வகை; sea-fish, bluish, attaining 4 ft. in length.

[வெள் → வெள்ளரா]

வெள்ளராமுள்ளி *veḷḷarā-muḷḷi,* பெ.(n.) வெள்ளரா மீனைப் பிடிக்க உதவும் தூண்டில் வகை; a fish-hook for catching sea-fish.

[வெள்ளரா + முள்ளி]

வெள்ளரி *veḷḷari,* பெ.(n.) 1. கொடிவகை (பிங்.); cucumber. 2. புள்ளி முலாம்பழம்; mottled-melon. *"பிட்டு வெள்ளரிப் பழம்" (திருப்பு. விநாயகர்துதி. 3).* 3. கக்கரி; kakkari-melon.

[வெள் + அரி → வெள்ளரி]



வெள்ளரிசி¹ *veḷḷariši,* பெ.(n.) அறுகும் அரிசியும் கூடியது (திவா.); grains of rice used in benediction.

[வெள் + அரிசி]

வெள்ளரிசி² *veḷḷariši,* பெ.(n.) பச்சரிசி; raw rice.

[வெள் + அரிசி]

வெள்ளரிஞ்சகெண்டை *vellariñja-kendai,* பெ.(n.) மஞ்சள் நிறமுள்ளதும் ஓரடி வளர்வதுமான ஆற்று மீன் வகை; corp, orange, attaining 1 ft. in length.

[வெள்வரி + கெண்டை]

வெள்ளரிதாரம் *vellari-tāram,* பெ.(n.) வெள்ளை அரிதாரம்; white realgar.se.

[வெள் + அரிதாரம்]

வெள்ளரிப்பழம்[1] *vellari-p-palam,* பெ.(n.) 1. எளிதில் நோயுறும் தன்மையுள்ளவன்; a person of delicate health. *'பிள்ளை வெள்ளரிப் பழம் தான்'.* 2. நோயுற்றவன்; person of sound health, as fresh and plump as a ripe cucumber.

[வெள்ளரி + பழம்]

வெள்ளரிப்பழம்[2] *vellari-p-palam,* பெ.(n.) பழவகை; musk melon - fruit of cucumber.

[வெள்ளரி + பழம்]

வெள்ளரிப்பிஞ்சு *vellari-p-piñju,* பெ.(n.) பிஞ்சு வெள்ளரிக்காய்; tender fruit of cucumber diuretic.

[வெள்ளரி + பிஞ்சு]

வெள்ளரிப்பூசணி *vellari-p-pūšaṇi,* பெ.(n.) பூசணி வகையிலொன்று; cucumis melon- a creeper.

[வெள்ளரி + பூசணி]

வெள்ளரிவிதை *vellari-vidai,* பெ.(n.) வெள்ளரிப் பழத்தின் விதை; seed of cucumber.

[வெள்ளரி + விதை]

வெள்ளரிவித்து *vellari-vittu,* பெ.(n.) வெள்ளரிப் பழத்தில் உள்ள விதை; the seed of cucumber fruit.

[வெள்ளரி + வித்து]

வெள்ளரிவிரையெண்ணெய் *vellari-virai-yenney,* பெ.(n.) வெள்ளரி விதையினின்று இறக்கும் நெய்மம்; an oil extracted from the seeds of cucumber of musk melon.

[வெள்ளரி + விரை + எண்ணெய்]

வெள்ளரிவேர் *vellari-vēr,* பெ.(n.) வெள்ளரியின் வேர்; root of cucumber.

[வெள்ளரி + வேர்]

வெள்ளல்லி[1] *vellalli,* பெ.(n.) வெள்ளாம்பல்[1] பார்க்க (பிங்.); see *vellāmbal.*

[வெள் + அல்லி → வெள்ளல்லி]

வெள்ளல்லி[2] *vellalli,* பெ.(n.) வெள்ளாம்பல்; white water lily-nymphae slellate bearing white flowers.

வெள்ளல்லிவிரை *vellalli-virai,* பெ.(n.) வெள்ளையல்லி விதை; seeds of white water lily.

[வெள் + அல்லி + விரை]

வெள்ளல்லிவேர் *vellalli-vēr,* பெ.(n.) வெண்மை நிற அல்லி வேர்; root of white water lily.

[வெள் + அல்லி + வேர்]

வெள்ளலத்திப்பட்டை *vella-latti-p-pattai,* பெ.(n.) வெள்ளலத்தியின் பட்டை; bark of *vellalatti.*

[வெள்ளலத்தி + பட்டை]

வெள்ளலரி[1] *ve*l*lalari,* பெ.(n.) அலரி வகை; linear-leaved oleander.

[வெள் + அலரி → வெள்ளலரி]

வெள்ளலரி[2] *vellalari,* பெ.(n.) 1. அலரிப்பூ மரம்; a tree. 2. வெள்ளரளி; nerium odorum bearing white flowers.

வெள்ளவரை *vella-varai,* பெ.(n.) அவரைவகை; country bean.

[வெள் + அவரை]

வெள்ளவாசி *vella-vāśi,* பெ.(n.) அகவிலையின்படி விதிக்கப்படும் தீர்வை; rate of assessment according to the market-price of grain.

[விலைவாசி → வெள்ளவாசி]

வெள்ளவாரி *vella-vāri,* பெ.(n.) 1. வரத்து வாய்க்கால்; feeder channel. 2. வெள்ளநீர் வடியும் வடிகால்; channel to drain off flood-water.

[வெள்ளம் + வாரி]

வெள்ளவிளர்-த்தல் *vella-viḷar-,* செ.கு.வி. (v.i.) மிக வெண்மையாதல்; to become very white, as a washed cloth.

[வெள் → வெள்ளவிளர்]

வெள்ளவெளி *vella-veli,* பெ.(n.) விண்வெளி; the great cosmic space. *"கலந்திடில் வெள்ளவெளி யாம்" (தொல். எழுத். 482, உரை).*

[வெள் → வெள்ளவெளி]

வெள்ளழிஞ்சில் *vellaliñjil,* பெ.(n.) வெள்ளை அழிஞ்சில்; white variety of *aliñjil.*

வெள்ளழுகல்[1] *vellalugal,* பெ.(n.) பூஞ்சைக் காளாண் பிடித்தழுகியது (யாழ்.அக.); that which has become putrid and moss-grown.

[வெள் + அழுகல்]

வெள்ளழுகல்[2] *vellalukal,* பெ.(n.) அழுகி வெண்ணிறம் பூத்தல்; formation of white coating-fungus growth-after putrefaction.

[வெள் + அழுகல்]

வெள்ளறிவன் *vellarivan,* பெ.(n.) அறிவீனன்; uneducated, fool.

[வெள் + அறிவன்]

வெள்ளறிவு *vellarivu,* பெ.(n.) அறிவின்மை; senselessness. *"விலங்கன்ன வெள்ளறிவினார்" (நாலடி, 375).*

[வெள் + அறிவு]

வெள்ளறுகு *vel-l-arugu,* பெ.(n.) 1. அறுகம் புல்வகை; whie bermuda grass. 2. புல் வகை; small chiretta (w.).

[வெள் + அறுகு]

வெள்ளறுவை *vellaruvai,* பெ.(n.) வெள்ளைத்துளி; white cloth. *"தூவெள் ளறுவை" (புறநா. 286).*

[வெள் + அறுவை]

வெள்ளனி *vellani,* பெ.(n.) வெண் பாதிரி மரம்; a tree-stereos-permum chelonoides.

[வெள் + அனி]

வெள்ளா *vellā,* பெ.(n.) ஒரு வகை கடல் மீன் (முகவை. மீன.); a kind of sea-fish.



வெள்ளாங்கம் *ve!!āṅgam,* பெ.(n.) வெள்வரியங்கம் பார்க்க; see *ve!-vari-yaṅkam.*

வெள்ளாங்கு *ve!!āṅgu,* பெ.(n.) வெள்ளாஞ்சு பார்க்க; see *ve!!āñcu.*

வெள்ளாங்குடி *ve!!āṅ-kuḍi,* பெ.(n.) வேளாளர் வாழும் ஊர்ப்பகுதி; part of a village where *vē!ā!as* live.

[வெள்ளான் + குடி]

வெள்ளாங்குருகு *ve!!āṅ-kurugu,* பெ.(n.) வெண்ணாரை வகை; a species of white crane. *"வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தன" (ஐங்குறு. 151).*

[வெள் + ஆ + குருகு → வெள்ளாங்குருகு]

வெள்ளாஞ்செட்டி *ve!!āṉ-ceṭṭi,* பெ.(n.) வேளாளருள் வாணிபஞ் செய்யும் பிரிவினர்; person belonging to class of *vē!ā!as* who trade (w.).

[வெள்ளான் + செட்டி]

வெள்ளாட்டி *ve!-!-āṭṭi,* பெ.(n.) 1. பணிப் பெண்; maid servant. *"ஒரு வெள்ளாட்டி யையும் சம்பாதித்து" (ஈடு. 4, 1, 7).* 2. வைப்பாட்டி; concubine.

[வெள் → வெள்ளாட்டி]

வெள்ளாட்டிறைச்சி *ve!!āṭṭiṟaicci,* பெ.(n.) வெள்ளாட்டுக் கறி; mutton.

[வெள்ளாடு + இறைச்சி]

வெள்ளாட்டுக்கண்டம் *ve!!āṭṭu-k-kaṇḍam,* பெ.(n.) வெள்ளாட்டு உப்புக் கண்டம்; salted dried meat of goat.

[வெள்ளாடு + கண்டம்]

வெள்ளாட்டுக்குட்டி *ve!-!āṭṭu-k-kuṭṭi,* பெ.(n.) ஆட்டுக்குட்டி; kid.

[வெள்ளாடு + குட்டி]

வெள்ளாட்டுநீர் *ve!!āṭṭu-nīr,* பெ.(n.) வெள்ளாட்டு மூத்திரம்; urine of a goat.

[வெள்ளாடு + நீர்]

வெள்ளாட்டுநெய் *ve!!āṭṭu-ney,* பெ.(n.) ஆட்டுப்பால் நெய்; goat's ghee.

[வெள்ளாடு + நெய்]

வெள்ளாட்டுப்பால் *ve!-!āṭṭu-p-pāl,* பெ.(n.) வெள்ளாட்டின் பால்; goat's milk.

[வெள்ளாடு + பால்]

வெள்ளாட்டுப்பித்து *ve!!āṭṭu-p-pittu,* பெ.(n.) வெள்ளாட்டு ஆசை; bile of goat.

[வெள்ளாடு + பித்து]

வெள்ளாட்டுப்புழுக்கை *ve!!āṭṭu-p-pu!ukkai,* பெ.(n.) வெள்ளாட்டின் மலம்; the dung of goat.

[வெள்ளாடு + புழுக்கை]

வெள்ளாட்டெச்சம் *ve!!āṭṭeccam,* பெ.(n.) வெள்ளாட்டுப்புழுக்கை பார்க்க; see *ve!!āṭṭu-p-pu!ukkai.*

[வெள்ளாடு + எச்சம்]

வெள்ளாடிச்சி *veḷḷāḍicci,* பெ.(n.) வெள்ளாளச்சி பார்க்க (இலக். வி. 178); see *veḷḷāḷacci.*

[வெள்ளாழச்சி → வெள்ளாடிச்சி]

வெள்ளாடியனார் *veḷḷāḍiyaṉār,* பெ.(n.) கழகக்காலப் புலவர்; a sangam poet.

இவர் மதுரை மாவட்டத்திலுள்ள வெள்ளோடு என்னும் ஊரினராக இருக்கலாம். புலி தான் அடித்த யானை இடப்புறமாக வீழின் மிசையாது என்று புலியின் மானத்தினை விளக்குகின்றார். இவர் பாடியதாக அகநானூற்றில் ஒரு செய்யுள் காணப்படுகின்றது. இவர் பாலைத்திணையின் சிறப்பினை விளக்குகின்றார். இவர் வெண்வட்டியார் என்றும் வழங்கப் பெறுவர்.

வெள்ளாடு *veḷḷāḍu,* பெ.(n.) ஆடுவகை (நன். 266, உரை); goat. *"மனிதர் காராட்டை வெள்ளாடென்ப தொக்குமால்" (பிரபுலிங். பிரபு தேவர்வந்த. 59).*

[வெள் + ஆடு → வெள்ளாடு]

வெள்ளாண்செட்டி *veḷḷāṇ-ceṭṭi,* பெ.(n.) வெள்ளாஞ்செட்டி பார்க்க; see *veḷḷāñ-ceṭṭi.*

[வெள்ளான் + செட்டி]

வெள்ளாண்பிள்ளை *veḷḷāṇ-piḷḷai,* பெ.(n.) 1. வேளாளச் சிறுவன் (தொல். எழுத். 338); *vēḷāla* boy. 2. வேளாளன் பார்க்க; see *vēḷāḷaṉ.*

[வெள்ளாண் + பிள்ளை]

வெள்ளாண்மரபு *veḷḷāṇ-marabu,* பெ.(n.) வேளாளர் இனம்; the *vēḷāla* caste. *"வெள்ளாண் மரபுக்கு வேதமெனா" (நாலடி, தனிப்பா.).*

[வெள்ளான் + மரபு]

வெள்ளாண்மை *veḷḷāṇmai,* பெ.(n.) வேளாண்மை; cultivation.

[வேளாண்மை → வெள்ளாண்மை]

வெள்ளாண்வாழ்க்கை *veḷḷāṇ-vāḻkkai,* பெ.(n.) வேளாளனது வாழ்வு; calling of *vēḷāla.*

[வெள்ளாண்மை + வாழ்க்கை]

வெள்ளாத்திபோளம் *veḷḷātti-pōḷam,* பெ.(n.) வெள்ளைப்போளம் பார்க்க (இங்.வை.); see *veḷḷai-p-pōḷam.*

வெள்ளாந்தை[1] *veḷḷāntai,* பெ.(n.) மலைப் பாம்பு வகை; a species of rock snake (w.).

[வெள் → (வெள்ளான்) → வெள்ளாந்தை]

வெள்ளாந்தை[2] *veḷḷāntai,* பெ.(n.) 1. ஆந்தை; a bird-owl. 2. மலைப்பாம்பு; mountain snake.

[வெள் → (வெள்ளான்) → வெள்ளாந்தை]

வெள்ளாப்பு[1] *veḷḷāppu,* பெ.(n.) வெள்ளை மேற்கட்டி; white awning or canopy.

[வெள் + ஆப்பு. யாப்பு → ஆப்பு]

வெள்ளாப்பு[2] *veḷḷāppu,* பெ.(n.) வெண்ணுரைக் கடலலை (செங்கை. மீன.); foam sea waves.

[வெள் + ஆப்பு. அலைப்பு → ஆப்பு]

வெள்ளாப்பு[3] *veḷḷāppu,* பெ.(n.) வைகறை; dawn, early morning.

[வெள் → வெள்ளாப்பு]

வெள்ளாப்புத்தொழில் *vellāppu-t-tolil,* பெ.(n.) வைகறைப் பொழுதில் கடல்மேற் சென்று மீன் பிடிக்கும் தொழில் (நெல்லை. மீன.); fishing activities in sea in early morning.

[வெள்ளாப்பு + தொழில்]

வெள்ளாம்பல் *vellāmbal,* பெ.(n.) 1. நீர்க் கொடிவகை; esculent white water-lily. *"அளியதாமே சிறுவெள்ளாம்பல்" (புறநா. 248).* 2. வெண்ணெய்தல் பார்க்க (பிங்.); see *venneytal.*

[வெள் + ஆம்பல்]

வெள்ளாம்பிள்ளை *vellām-pillai,* பெ.(n.) வெள்ளாண்பிள்ளை1 பார்க்க ; see *vellān-pillai.*

[வெள்ளாண் + பிள்ளை]

வெள்ளாமணக்கு *vellā-manakku,* பெ.(n.) காட்டாமணக்கு வகை (பதார்த்த. 530); common physic nut.

[வெள் + ஆமணக்கு]

வெள்ளாமை¹ *vellāmai,* பெ.(n.) வேளாண்மை; cultivation.

[வேளாண்மை → வெள்ளாமை]

வெள்ளாமை² *vellāmai,* பெ.(n.) 1. கடலாமை வகை; white sea turtle. 2. பறையாமை; a fresh-water tortoise.

[வெள் + ஆமை]

வெள்ளாரல் *vellāral,* பெ.(n.) மீன்வகை; a kind of fish. *"தகு வெள்ளாரல் தும் பையன்" (பறாளை. பள்ளு. 16).*

[வெள் + ஆரல்]

வெள்ளாரை *vellārai,* பெ.(n.) நஞ்சுக்கொடி; umbilical card.

வெள்ளாரைச்சுன்னம் *vellārai-c-cunnam,* பெ.(n.) குடற்சுன்னம்; a medicinal powder prepared out of umbilical card.

வெள்ளால் *vellāl,* பெ.(n.) நீண்ட மரவகை; java fig.l.tr.

வெள்ளாவலை *vellā-valai,* பெ.(n.) கரைக்கடற்பரப்பில் - அண்மைக் கடற்பரப்பில் வலைத்தற்குரிய மீன் வலைகளுளொன்று (தஞ்சை. மீன.); fish net knitted in coastal areas.

வெள்ளாவலைக்காரன் *vellā-valai-k-kāran,* பெ.(n.) வெள்ளாவலை வைத்து மீன்பிடிப்பவர் (தஞ்சை. மீன.); fisherman who uses net prevelant in coastal areas.

[வெள்ளாவலை + காரன்]

வெள்ளாவி¹ *vellāvi,* பெ.(n.) ஆடையை வெளுக்க உதவும் நீராவி; steam used for bleaching cloths.

[வெளு + ஆவி]

வெள்ளாவி² *vellāvi,* பெ.(n.) துணியினின்று எண்ணெய் கக்கி அழுக்கு நீங்குவதற்கு

வண்ணார் உவர் மண்ணிட்டு வேக வைத்தல்; boiling clothes by washerman in fuller's earth solution.

[வெளு + ஆவி]

வெள்ளாவிகட்டு-தல் *veḷḷāvi-kaṭṭu-*, செ.குன்றாவி.(v.t.) வெளுத்தற்குரிய ஆடைகளை நீராவியில் இடுதல்; to treat clothes with steam.

[வெள்ளாவி + கட்டு-,]

வெள்ளாவிதட்டல் *veḷḷā-vidaṭṭal*, பெ.(n.) ஆவி பிடித்தல்; vapour bath.

[வெள்ளாவி + தட்டல்]

வெள்ளாவிநீர் *veḷḷāvi-nīr*, பெ.(n.) வண்ணார் வெள்ளாவிக்காக வைத்து எரித்த நீர், இதில் உடம்பு குளித்தால் சொறி போகும்; the liquid that remains after boiling the clothes in fuller's earth solutions.

[வெள்ளாவி + நீர்]

வெள்ளாவிபிடி-த்தல் *veḷḷāvi-piḍi-*, பெ.(n.) வெள்ளாவிதட்டல் பார்க்க; see *veḷḷāvidaṭṭal*.

[வெள்ளாவி + பிடி-,]

வெள்ளாவிரை[1] *veḷḷā-virai*, பெ.(n.) சிறு மரவகை; glaucous-leaved eglandular senna, s.tr.

[வெள்ளா + விரை]

வெள்ளாவிரை[2] *veḷḷā-virai*, பெ.(n.) ஆவிரை வகை; a kind of plant-cassia auriculata.

வெள்ளாவிவை[1]-த்தல் *veḷḷāvi-vai-*, செ. குன்றாவி.(v.t.) 1. நன்றாக அடித்தல்; to beat severely. *"பயலை நன்றாக வெள்ளாவி வைத்தனுப்பி விட்டான்"* (பே.வ.). 2. வெள்ளாவிகட்டு பார்க்க; see *veḷḷāvi-kaṭṭu* (w.).

[வெள்ளாவி + வை-.]

வெள்ளாவிவைத்தல்[2] *veḷḷāvi-vaittal*, பெ.(n.) ஆவிபட வைத்தல்; to keep in the vapour.

[வெள்ளாவி + வைத்தல்]

வெள்ளாழச்சி *veḷḷāḻacci*, பெ.(n.) வெள்ளாளச்சி பார்க்க; see *veḷḷāḷacci*.

[வெள்ளாளச்சி → வெள்ளாழச்சி]

வெள்ளாழன் *veḷḷāḻaṉ*, பெ.(n.) வெள்ளாளன் பார்க்க; see *veḷḷāḷaṉ* (w.).

[வேளாளன் → வெள்ளாழன்]

வெள்ளாளச்சி *veḷḷāḷacci*, பெ.(n.) வேளாள இனப்பெண்; *veḷāḷa* woman.

[வெள்ளாளன் → வெள்ளாளச்சி]

வெள்ளாளர் *veḷḷāḷar*, பெ.(n.) பூவைசியர், மருத நிலமாக்கள்; agriculturists, formers, peasants.

[வேளாளர் → வெள்ளாளர்]

வெள்ளாளன் *veḷḷāḷaṉ*, பெ.(n.) வேளாள மரபினன் (தொல். எழுத். 338, உரை); man of the *veḷāḷa* caste.

[வேளாளன் → வெள்ளாளன்]

வெள்ளாறு *veḷḷāṟu*, பெ.(n.) புதுக் கோட்டையில் உள்ளதும் சோழ பாண்டிய நாடுகளுக்கு இடையெல்லை ஆனதுமான ஓர் ஆறு (தனிப்பா. 1, 126, 2); a river that flows through the pudukkottah state,

forming the traditional boundary between the *cōḻa* and the *paṇḍya* kingdoms.

[வெள் + ஆறு]

வெள்ளான் *veḷḷāṉ,* பெ.(n.) *வெள்ளாளன்* பார்க்க; see *veḷḷāḷaṉ.* *"வெள்ளான் நத்தங்கள்" (S.I.I.ii,114).*

[வெள்ளாளன் → வெள்ளான்]

வெள்ளான்குடி *veḷḷāṉ-kuḍi,* பெ.(n.) வெள்ளாங்குடி பார்க்க; see *veḷḷāṅ-kuḍi.*

[வெள்ளான் + குடி]

வெள்ளான்செட்டி *veḷḷāṉ-ceṭṭi,* பெ.(n.) வெள்ளாஞ்செட்டி பார்க்க; see *veḷḷāñ-ceṭṭi* (w.).

[வெள்ளான் + செட்டி]

வெள்ளான்வகை *veḷḷāṉ-vagai,* பெ.(n.) வேளாளர்க்குரிய ஊர்ப்பங்கு முதலியன; that which belongs to the *vēḷāla* class, as lands in a village. *"வெள்ளான் வகையாய் வருகின்ற நிலம்" (S.I.I.ii,54).*

[வெள்ளான் + வகை]

வெள்ளானை[1] *veḷḷāṉai,* பெ.(n.) 1. இந்திரனது யானை; Indra's elephant. *"வெள்ளானைச் சருக்கம்" (பெரியபு.).* 2. வெள்ளை யானை; white elephant.

[வெள் + ஆனை]

வெள்ளானை[2] *veḷḷāṉai,* பெ.(n.) வாலை சாறு; mercury extracted from virmilion and other mercurial compounds.

வெள்ளானையத்தி *veḷḷāṉai-yatti,* பெ.(n.) சாறு; mercury.

வெள்ளானையுள்ளோன் *veḷḷāṉai-yuḷḷōṉ,* பெ.(n.) அய்யனார் (நாமதீப. 43); *aiyaṉār.*

[வெள்ளானை + உள்ளோன்]

வெள்ளானையூர்ந்தோன் *veḷḷāṉai-y-ūrntōṉ,* பெ.(n.) இந்திரன் (நாமதீப. 60); Indra.

[வெள்ளானை + ஊர்ந்தோன்]

வெள்ளானைவாழை *veḷḷāṉai-vāḻai,* பெ.(n.) வாழை வகை; a kind of plantain (Insc. Pudu. 929).

[வெள்ளானை + வாழை]

வெள்ளி[1] *veḷḷi,* பெ.(n.) 1. வெண்மை; whiteness. *"வெள்ளி நோன்படை" (புறநா. 41).* 2. வெண்ணிறமுள்ள மாழைவகை (பிங்.); silver. *"விண்ணரு வெள்ளி வெற்பின்" (சீவக. 1646).* 3. வெள்ளிக் காசு வகை; a silver coin. 4. விண்மீன்; star. *"வானத்திலுள்ள வெள்ளியைக் கணக்கிட முடியுமா?" (உ.வ.).* 5. வெள்ளிக்கோள்; the planet venus. *"இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும்" (புறநா. 35).* 6. அறிவின்மை; ignorance. *"வெள்ளியை யாதல் விளம்பினை" (கம்பரா. வேள்வி. 29).* 7. இனப் பெருக்க விந்து; semen virile. *"வெள்ளியுருகியே பொன்வழி யோடாமே" (திருமந். 834).*

[வெள் → வெள்ளி. 'இ' உடைமைப் பொருளீறு.]

வெள்ளி[2] *veḷḷi,* பெ.(n.) 1. மாழை வகை; silver argentum. 2. கருக்கன் வெள்ளி; impure silver. 3. சொக்க வெள்ளி; pure silver.

4. கல்வெள்ளி; hard and inferior with much alloy. 5. சாறு வெள்ளி; silver obtained from mercury.

வெள்ளிக்கட்டன் *veḷḷi-k-kaṭṭaṉ,* பெ.(n.) 1. வெள்ளைக் கட்டுகளையுடைய விரியன் பாம்பு; russell's viper. 2. கண்ணாடி விரியன் பார்க்க; see *kaṇṇāḍi-viriyaṉ.*



வெள்ளிக்கண் *veḷḷi-k-kaṇ,* பெ.(n.) சுவர்க்கண்; wall eye.

[வெள்ளி + கண்]

வெள்ளிக்கரு *veḷḷi-k-karu,* பெ.(n.) மருந்துப் புடம் வைப்பதன் முன் அதனை மூடும் மூடிவகையில் ஒன்று (மூ.அ.); a kind of covering for drugs, used in sublimating them.

[வெள்ளி + கரு]

வெள்ளிக்கலியாணம் *veḷḷi-k-kaliyāṇam,* பெ.(n.) மணமக்கள் திருமணம் முடித்து இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவுபெறும் நாளன்று கொண்டாடும் விழா; silver wedding.

[வெள்ளி + கலியாணம்]

வெள்ளிக்காசு *veḷḷi-k-kāšu,* பெ.(n.) 1. வெள்ளித் துட்டு; silver coin. 2. ஒருவகை மீன் (சங்.அக.); a kind of fish.

[வெள்ளி + காசு]

வெள்ளிக்காடிக்காரம் *veḷḷi-k-kāḍi-k-kāram,* பெ.(n.) 1. காடிக்காரம்; silver nitrate-agno3. 2. இது கண் விளிம்புகள் வீங்கிக் கண்ணில் பூ வளர்ந்திருப்பதைக் கரைக்கும்; lunar caustic-agentina nitrus. useful for eye disease.

[வெள்ளி + காடிக்காரம்]

வெள்ளிக்காரம் *veḷḷi-k-kāram,* பெ.(n.) நெருப்புக்கல் (மூ.அ.); nitrate of silver.

வெள்ளிக்காறு *veḷḷi-k-kāṟu,* பெ.(n.) உருக்கி வார்த்த வெள்ளிக்கட்டி; bar of silver (w.).

[வெள்ளி + காறு]

வெள்ளிக்கிழங்கு *veḷḷi-k-kiḻaṅgu,* பெ.(n.) வள்ளிக்கிழங்கு; sweet potato.

[வெள்ளி + கிழங்கு]

வெள்ளிக்கிழமை *veḷḷi-k-kiḻamai,* பெ.(n.) கிழமையின் (வாரம்) ஆறாவது நாள்; Friday.

[வெள்ளி + கிழமை]

வெள்ளிக்குன்றம் *veḷḷi-k-kuṉṟam,* பெ.(n.) இரசிமலை; silver mountain.

[வெள்ளி + குன்றம்]

வெள்ளிக்கோல் *veḷḷi-k-kōl,* பெ.(n.) துலாக் கோல்வகை; a kind of steel-yard. *'வெறுநாய் சந்தைக்குப் போனால் வெள்ளி அடிபட்டு வரும்'.*

[வெள்ளி + கோல்]



வெள்ளிக்கோல்வரையன் *veḷḷi-k-kōl-varaiyaṉ,* பெ.(n.) வெள்ளிக்கோலின் வரைகளைப் போன்ற வரிகளையுடைய பாம்புவகை (சங்.அக.); a snake with white marks resembling those on a *veḷḷi-k-kōl.*

[வெள்ளிக்கோல் + வரை]

வெள்ளிக்கோள் *veḷḷi-k-kōḷ,* பெ.(n.) கதிரவனைச் சுற்றிச் செல்லும் இரண்டாவது வான்கோள்; the prightest planet second in order of distance from the sun, venus.

[வெள்ளி + கோல்]

வெள்ளிச்சரிகை *veḷḷi-c-carikai,* பெ.(n.) வெள்ளியால் இழைத்த ஆடைக் கரை; silver lace.

[வெள்ளி + சரிகை]

வெள்ளிச்சி *veḷḷicci,* பெ.(n.) கழுதைமான் புள்ளி பார்க்க; see *kaḻutai-māṉ-puḷḷi.*

வெள்ளிச்சுண்ணம் *veḷḷi-c-cuṇṇam,* பெ.(n.) சுண்ணச்சாந்து; a white calcined powder with properties of calcium.

இதனால் மூலச்சூடு போகும், சிறு பிள்ளை உடல் போல் விசை கொண்டு இருக்கும், நடந்தால் இளைப்புத் தோன்றாது.

[வெள்ளி + சுண்ணம்]

வெள்ளிச்செம்பு *veḷḷi-c-cembu,* பெ.(n.) வெள்ளிக்கலயம்; silver transmuted into copper.

[வெள்ளி + செம்பு]

வெள்ளிசா *veḷḷicā,* பெ.(n.) வெண்மையான கடல்மீன்வகை; grey mallet.

[வெள்ளி + சாய்]

வெள்ளிடம் *veḷḷiḍam,* பெ.(n.) இடைவெளி; vacant space. *"எள்ளிட வெள்ளிட மின்றென வீண்ட" (கந்தபு. அவைபுகு. 25).*

[வெள் + இடம்]

வெள்ளிடி *veḷḷiḍi,* பெ.(n.) 1. கோடையில் மழை பெய்யாது இடிக்கும் இடி; thunder from summer clouds, as not followed by rain. *"அத்தசையிலே வெள்ளிடி விழுந்தாற் போலே" (திவ். திருநெடுந். 28, வ்யா. பக். 236).* 2. எதிர்பாராது திடீரென வரும் ஆபத்து; sudden stroke of misfortune (w.).

[வெள் + இடி]

வெள்ளிடை *veḷḷiḍai,* பெ.(n.) 1. வளி மண்டலம்; atmospheric space. *"நெடு வெள்ளிடையாகி நிலனுமாகி" (தேவா. 879, 10).* 2. வெளியிடம்; open space. *"உள்ளுரு வெபதா வெள்ளிடை வாயிலும்" (மணி. 6, 44).* 3. இடைவெளி; space. *"வெள்ளிடை யின்றாய்...... தொகுவார்" (பிரமோத். 20, 25).* 4. தெளிவு; clearness.

[வெளி + இடை]

வெள்ளிடைமலை *veḷḷiḍai-malai,* பெ.(n.) யாவரும் அறியும்படி தெளிவாயிருப்பது; that which is perfectly clear, as a hill in a plain.

[வெள்ளிடை + மலை]

வெள்ளிடைமன்றம் *veḷḷiḍai-manṟam,* பெ.(n.) காவிரிப்பூம்பட்டினத்தில் முன்னாளில் இருந்த ஒரு மன்றம்; once upon a period were hall at *kāviri-p-pūmpaṭṭinam.*

இம் மன்றத்தில் வைக்கப்பட்ட பொருள்களை எவருங் கனவு செய்யத் துணியார்.

[வெள்ளிடை + மன்றம்]

வெள்ளிண்டங்கொடி *veḷḷiṇḍaṅ-koḍi,* பெ.(n.) வெள்ளிண்டு பார்க்க; see *veḷḷiṇḍu.*

[வெள்ளிண்டு → வெள்ளிண்டம் + கொடி]

வெள்ளிண்டு[1] *veḷḷiṇḍu,* பெ.(n.) கொடிவகை; shining-leaved soap pod.

[வெள் + இண்டு]

வெள்ளிண்டு[2] *veḷḷiṇḍu,* பெ.(n.) ஒரு நுரையிண்டு, ஒரு வகை இண்டஞ்செடி; angular stalked acacia-acacia intsia.

வெள்ளித்தகடு *veḷḷi-t-tagaḍu,* பெ.(n.) வெள்ளிப்பட்டை; silver sheet.

[வெள்ளி + தகடு]

வெள்ளித்தடி *veḷḷi-t-taḍi,* பெ.(n.) பெரியோர் முன் எடுத்துச்செல்லும் விருதுகளுள் ஒன்றான வெள்ளி கட்டியதடி; silver rod, an item of paraphernala, carried in procession before great person.

[வெள்ளி + தடி]

வெள்ளித்தடிச்சேவகன் *veḷḷi-t-taḍi-c-cēvagan,* பெ.(n.) வெள்ளித்தடியைத் தூக்கிச் செல்லும் பணியாளன்; peon who carries a *veḷḷi-t-taḍi.*

[வெள்ளி + தடி + சேவகன்]

வெள்ளித்திரை *veḷḷi-t-tirai,* பெ.(n.) (திரைப்படம் காட்டுவதற்கான) வெண்ணிறத் திரை; silver screen (for screening films).

[வெள்ளி + திரை]

வெள்ளித்திருமணம் *veḷḷi-t-tirumaṇam,* பெ.(n.) வெள்ளிக்கலியாணம் பார்க்க; see *veḷḷi-k-kaliyāṇam.*

[வெள்ளி + திருமணம்]

வெள்ளித்தோற்றம் *veḷḷi-t-tōṟṟam,* பெ.(n.) புதன் கோளின் தோற்றம் (சுக்கிரோதயம்); rising of verrus.

[வெள்ளி + தோற்றம்]

வெள்ளிது *veḷḷidu,* பெ.(n.) வெளிப்படையானது; that which is plain. *"நுண் பொருட்டாகிய பொருள் கேட்டார்க்கு வெள்ளித் தன்றி உள்ளுடைத்தாகி" (தொல். பொ. 656, உரை).*

[வெண்–மை + வெள்ளிது]

வெள்ளிநகம் *veḷḷi-nagam,* பெ.(n.) கைலாசம்; celestrial city, sky or heaven.

[வெள்ளி + நகம்]

வெள்ளிநண்டு *veḷḷi-naṇḍu,* பெ.(n.) வெள்ளிபோற் பளபளத்துக் காணக் கூடுமொரு கடல்நண்டு (செங். மீன.); a silvery sea erab.

[வெள்ளி + நண்டு]

வெள்ளிநாணயம் *veḷḷi-nāṇayam,* பெ.(n.) வெள்ளியில் அடிக்கப்பட்ட பணம்; silver coin.

[வெள்ளி + நாணயம்]

Skt. *Naṇaka* > த. நாணயம்.

வெள்ளிநிமிளை *veḷḷi-nimiḷai,* பெ.(n.) 1. நிமிளை வகை; bismuth ore. 2. நிமிளை மருந்துவகை; silver coloured bismuth (w.).

[வெள்ளி + நிமிளை]

வெள்ளிநிலை *veḷḷi-nilai,* பெ.(n.) துன்பம் நீங்க வான்கோள் மழை பெய்வித்தலைப் புகழ்ந்து கூறும் புறத்துறை (பு.வெ. 9, 16); theme praising the planet on his pavers to cause rain and relieve distress.

[வெள்ளி + நிலை]

வெள்ளிநீதுருசு *veḷḷi-nī-turušu,* பெ.(n.) காடிக்காரம்; silver nitrate.

[வெள்ளி + நீதுருசு]

வெள்ளிப்பணம் *veḷḷi-p-paṇam,* பெ.(n.) வெண் பொற்காசு; a silver coin.

[வெள்ளி + பணம்]

வெள்ளிப்பணிதி *veḷḷi-p-paṇidi,* பெ.(n.) 1. வெள்ளிநகை; silver ornament. 2. வேலைப் பாடமைந்த வெள்ளித்தட்டம்; decorated silver-plate (w.).

[வெள்ளி + பணிதி]

வெள்ளிப்பல்லக்கு *veḷḷi-p-pallakku,* பெ.(n.) பல்லக்குவகை; a palanguin.

[வெள்ளி + பல்லக்கு]

வெள்ளிப்பாட்டு *veḷḷi-p-pāṭṭu,* பெ.(n.) வெள்ளிப்பாடல் பார்க்க; see *veḷḷi-p-pāḍal.*

[வெள்ளி + பாட்டு]

வெள்ளிப்பாடல் *veḷḷi-p-pāḍal,* பெ.(n.) பழைய நூல்களில் வெள்ளி என்ற பாவலரால் புதியனவாகப் பாடிச் செருகப்பட்ட பாடல்; stanzas inter polated in ancient poems by a poet called *veḷḷi.*

[வெள்ளி + பாடல்]

வெள்ளிப்பாளம் *veḷḷi-p-pāḷam,* பெ.(n.) உருக்கி வார்த்த வெள்ளியின் பாளம்; bar of silver (w.).

[வெள்ளி + பாளம்]

வெள்ளிப்பிரிவு *veḷḷi-p-pirivu,* பெ.(n.) வெள்ளிக்கோள் மாறுநிலை; declination of the planet venus (w.).

[வெள்ளி + பிரிவு]

வெள்ளிப்பிள்ளையார் *veḷḷi-piḷḷaiyār,* பெ.(n.) வெள்ளிப்பிள்ளையார்நோன்பு பார்க்க; see *veḷḷi-p-piḷḷaiyār-nōṉbu.*

[வெள்ளி + பிள்ளையார்]

வெள்ளிப்பிள்ளையார்நோன்பு *veḷḷi-p-piḷḷaiyār-nōṉbu,* பெ.(n.) வேளாளக் கட்டுக் கழுத்திகள் கொண்டாடும் நோன்பு வகை; a fast observed by *vēḷāla* married women.

[வெள்ளி + பிள்ளையார் + நோன்பு]

வெள்ளிப்பொடி *veḷḷi-p-poḍi,* பெ.(n.) 1. வெள்ளிஅராவிய பொடி; silver fillings. 2. வெள்ளிமணல்; silver ore.

[வெள்ளி + பொடி]

வெள்ளிபழுத்தல் *veḷḷi-paḻuttal,* பெ.(n.) பொன்னாதல்; silver transmuted into gold.

[வெள்ளி + பழுத்தல்]

வெள்ளிபற்பம் *veḷḷi-paṟpam,* பெ.(n.) வெள்ளியை நீற்றிச் செய்த மருந்து வகை; block oxide of silver.

[வெள்ளி + பற்பம்]

Skt. Bhasman > த. பற்பம்.

வெள்ளிப்பூச்சு *veḷḷi-p-pūccu,* பெ.(n.) வெள்ளி மெருகு; coating with silver.

[வெள்ளி + பூச்சு]

வெள்ளிபூத்தல் *veḷḷi-pūttal,* பெ.(n.) 1. விண்மீன்களின் தோற்றம்; rising of the stars. 2. விடியற்காலை வெள்ளிக்கோள் தோன்றுதல்; rising of the planet venus at early dawn.

[வெள்ளி + பூத்தல்]

வெள்ளிமடந்தாள் *veḷḷi-maḍantāḷ,* பெ.(n.) வெள்ளிமடந்தான்கெண்டை பார்க்க (யாழ்.அக.); *veḷḷi-maḍandāṉ-keṇḍai.*

[வெள்ளி + மடந்தாள்]

வெள்ளிமடந்தான் *veḷḷi-maḍandāṉ,* பெ.(n.) சிறிய ஆற்றுக் கெண்டை மீன்; a very small river fish.

[வெள்ளி + மடந்தான்]

வெள்ளிமடந்தான்கெண்டை *veḷḷi-maḍantāṉ-keṇḍai,* பெ.(n.) கெண்டை மீன்வகை; a kind of *keṇḍai* fish (w.).

[வெள்ளி + மடந்தான் + கெண்டை]



வெள்ளிமடந்தை *veḷḷi-maḍantai,* பெ.(n.) நீண்ட செடிவகை; moossanda of ceylon.l.sh.

[வெள்ளி + மடந்தை]

வெள்ளிமண் *veḷḷi-maṇ,* பெ.(n.) இயற்கை மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் ஒருவகை துணைநீர்மப் பொருள்; one of the natural substances mentioned in siddha medicine.

[வெள்ளி + மண்]

வெள்ளிமணல் *veḷḷi-maṇal,* பெ.(n.) 1. வெள்ளி கலந்த மணல்; silver ore. 2. வெண்மணல்; white sand.

[வெள்ளி + மணல்]

வெள்ளிமதிப்பு *veḷḷi-madippu,* பெ.(n.) விண்மீனை அடையாளங்கண்டு நேரங் காலத்தை மற்றும் திசையையறிதல் (மீன. பொ. வ.); finding of time, period and direction based on stars.

[வெள்ளி + மதிப்பு]

வெள்ளிமயமான *veḷḷi-mayamāṉa,* பெ.(n.) வெண்ணிறமான; argent.

[வெள்ளி + மயமான]

வெள்ளிமயிர்த்தழை *veḷḷi-mayir-t-taḻai,* பெ.(n.) வெள்ளிலை; white leaf plant.

[வெள்ளி + மயிர்த்தழை]

வெள்ளிமலாம் *veḷḷi-malām,* பெ.(n.) வெள்ளிமுலாம் பார்க்க (யாழ்.அக.); see *veḷḷi-mulām.*

[வெள்ளி + மலாம்]

வெள்ளிமலை *ve*ḷḷ*i-malai,* பெ.(n.) 1. கயிலை மலை; mt. kailas. *"வெள்ளிமலை யெடுத்துலக மூன்றுங் காவலோன்" (கம்பரா. சூர்ப்ப. 39).* 2. ஒருமலை (சூடா.); a mountain.

[வெள்ளி + மலை]

வெள்ளிமன்றம் *ve*ḷḷ*i-manram,* பெ.(n.) வெள்ளியம்பலம் பார்க்க (திருவாலவா. நகரச். 4); see *ve*ḷḷ*iyambalam.*

[வெள்ளி + மன்றம்]

வெள்ளிமாடம் *ve*ḷḷ*i-mādam,* பெ.(n.) அரண்மனைவகை (சிலப். 25, 5); sea kind of royal residence.

[வெள்ளி + மாடம்]

வெள்ளிமித்துரு *ve*ḷḷ*i-mitturu,* பெ.(n.) கோடா சூரி; a kind of arsenic.

வெள்ளிமீன் *ve*ḷḷ*i-min,* பெ.(n.) வெள்ளிக் கோள்; venus. *"வெள்ளி மீனை யொருகைக் குட்பிடித்து" (கொண்டல்விடு. 191).*

[வெள்ளி + மீன்]

வெள்ளிமுலாம் *ve*ḷḷ*i-mulām,* பெ.(n.) வெள்ளிப் பூச்சு; coating or plating with silver.

[வெள்ளி + முலாம்]

வெள்ளியகாகச்சி *ve*ḷḷ*iya-kākacci,* பெ.(n.) வெண்கரும்பு; white sugarcane-saccharum officinarum.

[வெள்ளிய + காகச்சி]

வெள்ளியங்கிரி *ve*ḷḷ*iyankiri,* பெ.(n.) வெள்ளிமலை1 பார்க்க (பிங்.); see *ve*ḷḷ*i-malai.*

[வெள்ளி + அம் + கிரி]

Skt. Giri > த. கிரி.

வெள்ளியங்குன்று *ve*ḷḷ*iyan-kunru,* பெ.(n.) வெள்ளிமலை பார்க்க; see *ve*ḷḷ*i-malai.*

[வெள்ளி + அம் + குன்று]

வெள்ளியப்பிரகம் *ve*ḷḷ*iya-p-pirakam,* பெ.(n.) வெள்ளையப்பிரகம்; white mica.

வெள்ளியம் *ve*ḷḷ*iyam,* பெ.(n.) மரவகை (மலை.); wood-apple.

[வெள்ளில் → வெள்ளியம்]

வெள்ளியம்பலத்தம்பிரான் *ve*ḷḷ*iyambala-t-tambirān,* பெ.(n.) வெள்ளி[1],8 பார்க்க; see *ve*ḷḷ*i[1],8.*

[வெள்ளியம்பலம் + தம்பிரான்]

வெள்ளியம்பலம்[1] *ve*ḷḷ*i-y-ambalam,* பெ.(n.) மதுரைக் கோயில் ஆடவல்லான் மன்றம்; the sacred hall dedicated to nataraja in the siva temple a madurai. *"வெள்ளியம்பலத்து நள்ளிருட் கிடந்தேன்" (சிலப். பதி. 40, 41).*

[வெள்ளி + அம்பலம்]

வெள்ளியம்பலம்[2] *ve*ḷḷ*i-yambalam,* பெ.(n.) வெண் பொற்றகடு வேயப்பட்ட மன்றம்; mountain containing silver ore.

வெள்ளியம்பலவாணத்தம்பிரான் *ve*ḷḷ*iyampala-vāna-t-tampirān,* பெ.(n.) வெள்ளி [1], 8 பார்க்க; see *ve*ḷḷ*i [1], 8.*

[வெள்ளியம்பலம் + வாணன் + தம்பிரான்]

வெள்ளயம்பெருமலை *ve*ḷḷ*ayam-perumalai,* பெ.(n.) விஞ்சையர்களுடைய மலை; a mountain of demigods.

[வெள்ளயம் + பெருமலை]

வெள்ளியா *veḷḷiyā,* பெ.(n.) நெத்தி போலுஞ் சிறிய மீன் (நெல்லை. மீன.); a kind of tiny fish.

வெள்ளியார் *veḷḷiyār,* பெ.(n.) 1. வெண்ணிற முடையவர்; white coloured person. 2. பெருமகன்; noble-man. *"வெள்ளியார் ணங்க விரைந்தருள் செய்வான்" (திவ். பெரியதி. 4, 10, 7).* 3. சிவன் (திவ். பெரியதி. 9, 7, 9, வ்யா); siva. 4. வெள்ளி (திவ். பெரியதி. 4, 10, 7, வ்யா); sukra.

[வெள்ளி → வெள்ளியார்]

வெள்ளியிலைச்செடி *veḷḷiyilai-c-ceḍi,* பெ.(n.) வெள்ளி மடந்தை பார்க்க; see *veḷḷi-maḍantai.*

[வெள்ளி + இலை + செடி]

வெள்ளியுயிர் *veḷḷi-y-uyir,* பெ.(n.) மக்கட் பிறப்பு (சீவக. 3111, உரை); human being.

[வெள்ளி + உயிர்]

வெள்ளியெழுதல் *veḷḷi-yeḻutal,* பெ.(n.) விண்மீன் தோன்றுதல் (திவ். திருப்பா. 13); rising of the morning star.

[வெள்ளி + எழுதல்]

வெள்ளிரேக்கு *veḷḷi-rēkku,* பெ.(n.) மிக மெலிதாக அடிக்கப்பட்ட வெள்ளித் தகடு; silver leaf.

[வெள்ளி + இரேக்கு]

U. *Rēk* > த. இரேக்கு.

வெள்ளில்[1] *veḷḷil,* பெ.(n.) 1. விளாம்பழம்; fruit of wood-apple. *"மன்ற விளவின் மனைவீழ் வெள்ளில்" (புறநா. 181).* 2. விளா[1] பார்க்க (பிங்.); see *viḷā.*

[வெள் + இல்]

வெள்ளில்[2] *veḷḷil,* பெ.(n.) பாடை; bier. *"வெள்ளிற்பாடை" (மணி. 6, 93).*

[வெள் + இல்]

வெள்ளிலங்காடு *veḷḷilaṅ-kāḍu,* பெ.(n.) சுடுகாடு; cremation ground. *"வெள்ளிலங் காட்டிடை.... நடமாடிய நாதன்" (தேவா. 439, 10).*

[வெள்ளில் + காடு]

வெள்ளிலத்தி *veḷḷi-latti,* பெ.(n.) விளாம்பழம் (தைலவ.); wood-apple.

[வெள்ளில் + அத்தி]

வெள்ளிலை[1] *veḷḷilai,* பெ.(n.) 1. வெற்றிலை; betel leaf. *"வெள்ளிலைத் தம்பல் கண்டார்" (கம்பரா. வரைக். 49).* 2. வெள்ளிமடந்தை பார்க்க; see *veḷḷi-maḍantai.*

[வெள் + இலை]

வெள்ளிலை[2] *veḷḷilai,* பெ.(n.) படைக்கலத்தின் அலகு; sharp edge, as of a spear. *"வெள்ளிலை வேலினான்" (சீவக. 328).*

[வெள் + இலை]

வெள்ளிலைப்பற்று *veḷḷilai-p-paṟṟu,* பெ.(n.) வெற்றிலைக்கவளி; bundle of betel leaves. *"அடைக்காயமுதுக்கு...... வெள்ளிலைப் பற்றொன்பதும்" (S.I.I.iii, 188).*

[வெள்ளிலை + பற்று]

வெள்ளிலையமுது *veḷḷilai-yamutu,* பெ.(n.) வெற்றிலைத் தம்பலப் படையல்; offering of betel, as to a diety.

[வெள்ளிலை + அமுது]

வெள்ளிலோத்தி *veḷḷi-lōtti,* பெ.(n.) செடிவகை; a plant.

வெள்ளிலோத்திரம் *veḷḷi-lōttiram,* பெ.(n.) 1. வெண்பூவுள்ள மரவகை; a tree with white flowers. *“வெள்ளிலோத்திரத்தின் பூம்பொருக்க தைத்த சாந்தின்” (சீவக. 622).* 2. விளாம்பழம்; wood-apple. 3. விளாம் பட்டை; bark of wood-apple tree (w.).

[வெள்ளி + உலோத்திரம்]

Skt. *lōdhra* > த. உலாத்திரம்.

வெள்ளிவரைகாப்போன் *veḷḷi-varai-kāppōṉ,* பெ.(n.) நந்தி (நாமதீப. 42); nanti, as guarding mt. kailas.

[வெள்ளி + வரை + காப்போன்]

வெள்ளிவவ்வால் *veḷḷi-vavvāl,* பெ.(n.) சாம்பல் நிறமும், சிவப்பு நிறமும் கலந்ததும் ஓரடி வளர்வதுமான மீன்வகை; silver pomfret, greyisl netural tint with purplish reflexions, attaining 1 ft. in length.

[வெள்ளி + வவ்வால்]

வெள்ளிவள்ளி *veḷḷi-vaḷḷi,* பெ.(n.) மகளிரணியும் வெள்ளித் தோள்வளை; a kind of silver armlet, worn by women. *“வெள்ளிவள்ளியின் விளங்கு தோணலார்” (சீவக. 420).*

[வெள்ளி + வள்ளி]



வெள்ளிவாரம் *veḷḷi-vāram,* பெ.(n.) வெள்ளிக்கிழமை பார்க்க (சிலப். 23, 135); see *veḷḷi-k-kiḻamai.*

[வெள்ளி + வாரம்]

வெள்ளிவிழா *veḷḷi-viḻā,* பெ.(n.) ஓர் அமைப்பின் அல்லது இயக்கத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்; 25th anniversary of an event.

[வெள்ளி + விழா]

வெள்ளிவெற்பு *veḷḷi-veṟpu,* பெ.(n.) கயிலை மலை (சூடா.); mt. kailas.

[வெள்ளி + வெற்பு]

வெள்ளிவேர் *veḷḷi-vēr,* பெ.(n.) சல்லி வேர் (சங்.அக.); rootlet.

[வெள்ளி + வேர்]

வெள்ளிழுது *veḷḷiḻutu,* பெ.(n.) வெண்ணெய்; butter. *“வெண்மை வெள்ளிழுது” (குறுந். 277).*

[வெள் + இழுது]

வெள்ளிறகுமந்தாரை *veḷḷiṟaku-mantārai,* பெ.(n.) வெள்ளைமந்தாரை பார்க்க (யாழ்.அக.); see *veḷḷai-mantārai.*

[வெள் + இறகு + மந்தாரை]

வெள்ளிறா *veḷḷiṟā,* பெ.(n.) வெள்ளிறால் பார்க்க (வி.); see *veḷḷiṟāl.*

[வெள் + இறால்]

வெள்ளிறால் *veḷḷiṟāl,* பெ.(n.) 1. மீன்வகை; white prawn. 2. கடல் மீன் வகை; a sea-fish.

[வெள் + இறால்]



வெள்ளீயச்சீலை *ve||iya-c-cīlai,* பெ.(n.) துணை நீர்மப் பொருள்; one of 120 natural substances mentioned in siddha medicine.

[வெள்ளீயம் + சீலை]

வெள்ளீயப்பிறப்பி *ve||iya-p-pirappi,* பெ.(n.) வெள்ளைநாகணம் பார்க்க; see *ve||ai-nākaṇam.*

[வெள்ளீயம் + பிறப்பி]

வெள்ளீயபற்பம் *ve||iya-parpam,* பெ.(n.) மருந்துப்பொடி; calcined powder of tin good for skin diseases.

[வெள்ளீயம் + பற்பம்]

Skt. Bhasman > த. பற்பம்.

வெள்ளீயம்[1] *ve||iyam,* பெ.(n.) மாழை வகை (பதார்த்த. 1174) (வி.); tin.

[வெள் + ஈயம்]

வெள்ளீயம்[2] *ve||iyam,* பெ.(n.) வெண்ணாகம்; white lead-slannum pewter.

இதன் பொடி மலத்தை உண்டு பண்ணவும் மேகத்தைப் போக்கவும் பசி தீர்வும் பயன்படும்.

வெள்ளீயமணல்[1] *ve||iya-maṇal,* பெ.(n.) வெள்ளீயங்கலந்த மணல்; sand mixed with tin.

[வெள்ளீயம் + மணல்]

வெள்ளீயவுப்பு *ve||iya-vuppu,* பெ.(n.) துத்த நாகவுப்பு; white vitriol, zincisulphas.

[வெள்ளீயம் + உப்பு]

வெள்ளீரல் *ve||īral,* பெ.(n.) 1. மணிக்குடர்; mesentery. 2. நுரையீரல்; lungs.

[வெள் + ஈரல் → வெள்ளீரல்]

வெள்ளீரல் *ve||īral,* பெ.(n.) நெஞ்சாங்குலை (வி.); lung.

[வெள் + ஈரல்]

வெள்ளுகா *ve||ukā,* பெ.(n.) உகாமரம் பார்க்க; see *ukā-maram.*

[வெள் + உகா]

வெள்ளுடும்பு *ve||uḍumbu,* பெ.(n.) உடும்பு வகை; white guana.

[வெள் + உடும்பு]



வெள்ளுடைக்கழிச்சல் *ve||uḍai-k-kaliccal,* பெ.(n.) வெண் மலக் கழிச்சல்; white coloured purging.

[வெள்ளுடை + கழிச்சல்]

வெள்ளுடைப்பணி *veḷḷuḍai-p-paṇi,* பெ.(n.) மெய்நோகாமல் (அழுக்குப்படாமல்) மேலோட்டமாகச் செய்யும் வேலை; white-scholar job.

[வெள்ளுடை + பணி]

வெள்ளுப்பு[1] *veḷḷuppu,* பெ.(n.) வெண்மை நிறமான உப்பு; white salt. *"வெள்ளுப்புப் பகருநர்" (மணி. 28, 31).*

[வெள் + உப்பு → வெள்ளுப்பு]

வெள்ளுப்பு[2] *veḷḷuppu,* பெ.(n.) 1. வெள்ளை யுப்பு; white common salt.

[வெள் + உப்பு]

வெள்ளுயிர் *veḷḷuyir,* பெ.(n.) செம்மை உயிர்த்துடிப்பு; pure soul. *"என்னை வெள்ளுயிராக்கவல்ல" (திவ். திருப்பல், 8).*

[வெள் + உயிர்]

வெள்ளுரம் *veḷḷuram,* பெ.(n.) வெள்ளை யுரம்; a medicine prepared with tin and other mineral salt.

[வெள் + உரம்]

வெள்ளுருட்டு *veḷḷūruṭṭu,* பெ.(n.) வெறுமனே அச்சுறுத்துகை (வி.); empty threat.

[வெள் + உருட்டு]

வெள்ளுவரி *veḷḷu-vari,* பெ.(n.) நல்ல நீர்; good drinking water. *"வெள்ளுவரி சேய்க்கு" (சினேந். 366).*

[வெள் + வரி]

வெள்ளுவா *veḷḷuvā,* பெ.(n.) வெள்ளை யானை; white elephant. *"வெள்ளுவாப்பிட ரேறிய வேந்தனே முதல்" (பறாளை. பள்ளு. 8).*

[வெள் + உவா]

வெள்ளுழவு *veḷḷuḻavu,* பெ.(n.) நிலத்தில் ஈரம் அல்லது காய்ச்சல் அதிகம் இல்லாத காலத்தில் உழும் உழவு; ploughing while the land is neither very dry nor very wet.

[வெள் + உழவு]

வெள்ளுழவுப்பயிர் *veḷḷuḻavu-p-payir,* பெ.(n.) பக்குவமான ஈரத்தில் உழுது விதைத்து உழவுசால் தோன்ற விளையும் பயிர்; young crops on land properly moist when sown, the furrows being visible.

[வெள்ளுழவு + பயிர்]

வெள்ளுள்ளி *veḷḷuḷḷi,* பெ.(n.) வெள்ளைப் பூண்டு (சிலப். 11, 88, உரை); garlic.

[வெள் + உள்ளி]

வெள்ளுள்ளித்தைலம் *veḷḷuḷḷi-t-tailam,* பெ.(n.) வெள்ளைப் பூண்டு நெய்; oil extracted from garlic.

[வெள்ளுள்ளி + தைலம்]

Skt. Taila > த. தைலம்.

வெள்ளுள்ளிநெய் *veḷḷuḷḷi-ney,* பெ.(n.) வெள்ளைப் பூண்டினின்று செய்யப்படும் மருந்துநெய்; medicated ghee prepared with garlic as chief ingredient. *"இது பெண்கள் அத்தி வெட்டைக்குக் கொடுக்கலாம்".*

[வெள்ளுள்ளி + நெய்]

வெள்ளுள்ளிப்பருப்பு *veḷḷuḷḷi-p-paruppu,* பெ.(n.) பூண்டுப்பல்; tooth of garlic.

[வெள்ளுள்ளி + பருப்பு]

வெள்ளுளுவை *veḷḷuḷuvai,* பெ.(n.) உளுவை மீன்வகை (சங்.அக.); a kind of uluvai fish.

[வெள் + உளுவை]



வெள்ளுறட்டி *veḷ-ḷ-uṟaṭṭi,* பெ.(n.) பணியார வகை (யாழ்.அக.); a kind of sweetmeat.

[வெள் + ரொட்டி]

வெள்ளுறி *veḷḷuṟi,* பெ.(n.) சமணத் துறவிகள் கைக்கொண்ட உறிவகை (பெருங். உஞ்சைக். 36, 228); a kind of net-bag used by Jain monks.

[வெள் + உறி]

வெள்ளூக்காப்பியனார் *veḷḷū-k-kāppiyaṉār,* பெ.(n.) இடைக் கழகப் புலவருளொருவர்; a middle sangam poet.

வெள்ளூச்சி *veḷḷūcci,* பெ.(n.) நத்தை வகை; a kind of snail.

[வெள் + ஊச்சு → வெள்ளூச்சி]

வெள்ளூமத்தை *veḷḷūmattai,* பெ.(n.) 1. சிறிய ஊமத்தை வகை; white flowered asiatic thorn-apple. 2. பெரிய ஊமத்தை வகை; thorn-apple. 3. அடுக்கூமத்தை பார்க்க; see *aḍu-k-kūmattai.*

[வெள் + ஊமத்தை]



வெள்ளூர்க்காப்பியன் *veḷḷūr-k-kāppiyaṉ,* பெ.(n.) இடைக்கழகப் புலவருளொருவர் (இ.க.உ.); a middle sangam poet.

[வெள்ளூர் + காப்பியன்]

வெள்ளெடுப்பு *veḷḷeḍuppu,* பெ.(n.) வெளுப்பான கழிச்சல்; white coloured diarrhoea.

[வெள் + எடுப்பு]

வெள்ளெண்ணெய் *veḷḷeṇṇey,* பெ.(n.) மரவெண்ணெய்; wood oil tree of india-dipterocarpus indicus.

[வெள் + எண்ணெய்]

வெள்ளெரி *veḷḷeri,* பெ.(n.) நரம்பிலுண்டாகும் கட்டியைப் போக்கும் ஓர் பூண்டு; a plant.

[வெள் + எரி]

வெள்ளெரிக்காய் *veḷḷerikkāy,* பெ.(n.) வெள்ளரிக்காய் பார்க்க; see *veḷḷarikkāy.*

[வெள் + எரி + காய்]

வெள்ளெருக்கங்காய்ப்பஞ்சு *veḷḷerukkaṅkāy-p-pañju,* பெ.(n.) இக் காயின் பஞ்சைப் பாலில் தோய்த்து உருள்கடலையளவு உண்டை செய்து 2,3 மாதப் பிண்டங்களை வெளிப்படுத்தக்

கொடுக்கலாம்; the hairs on the seeds of the calolropis can be used to expel 2 or 3 foet us the method of administering it is given above.

[வெள்ளெருக்கங்காய் + பஞ்சு]

வெள்ளெருக்கம்பழுப்பு *vellerukkam-paluppu,* பெ.(n.) மஞ்சள் நிற எருக்கஞ் சருகு; the yellow old leaf of calortropis which bears white flowers.

[வெள்ளெருக்கம் + பழுப்பு]

வெள்ளெருக்கம்பால்[1] *vellerukkam-pāl,* பெ.(n.) எருக்கம்பால் சுளுக்கு, பேரூதை (மகாவாதம்), நளிர் (சன்னிபாதம்) போகும்; the milk of calotropis is subificient can be used externally for sprain etc. it enters into the preparation of some medicated oils.

[வெள்ளெருக்கம் + பால்]

வெள்ளெருக்கம்பால்[2] *vellerukkam-pāl,* பெ.(n.) வெள்ளைப்பூ பூக்கும் ஒரு வகை எருக்கஞ்செடி; calotropis bearing white flowers.

[வெள்ளெருக்கம் + பால்]

வெள்ளெருக்கிலையார் *velleru-k-kilaiyār,* பெ.(n.) கழகக்காலப் புலவர்; a sangam poet.

இவரால் பாடப்பட்டோன் வேள் எவ்வி அவனிறந்த பின்பும் இவரிருந்து புலம்பினர். இறந்த அவனுக்கு அவன் மனைவி சிறிய இடத்திற் பிண்டம் வைத்தலைக் கண்டு கூறுதல் வாயிலாக அவன் பெருங்கொடையைப் புலப்படுத்தினர். இவர் பாடியனவாகப் புறநானூற்றில் இரண்டு செய்யுட்கள் உள்ளன. (புறம்.234)

வெள்ளெருக்கு *vel-l-erukku,* பெ.(n.) எருக்குவகை; white madar, 1 sh. *"வெள்ளெருக்கரவம் விரவுஞ்சடை" (தேவா. 160, 1).*

[வெள் + எருக்கு]



வெள்ளெருக்குத்தைலம் *vellerukku-t-tailam,* பெ.(n.) வெள்ளெருக்கினின்றும் செய்யப்படும் மருந்து நெய்; medicated oil of calotropis an old calcifie mercury and bind sal ammoniac. *"நாட்சென்ற வெள்ளருக்கின் தைலந் தன்னில் ரசம் நீறும் நவச்சாரம் கட்டிப்போமே" (பிரம–200)*

[வெள்ளெருக்கு + தைலம்]

Skt. Taila > த. தைலம்.

வெள்ளெருக்குநார் *vellerukku-nār,* பெ.(n.) இரசமணியை கோப்பதற்காக கயிறாகத் திரித்த எருக்கம்நார்; fibre extracted from (white) calotropis is used as waist thread for infants and to thread mercury ball.

[வெள்ளெருக்கு + நார்]

வெள்ளெல் *vellel,* பெ.(n.) 1. வெள்ளை எள்; white gingelly seeds. 2. கழுவித் தூய்மை செய்த எள்; loashed and rubbed gingelly seeds which look white.

[வெள் + எல்]

வெள்ளெலி *ve*//*eli*, பெ.(n.) எலி வகை; a species of rat. *"குரூமயிர்ப் புன்றாள் வெள்ளெலி" (அகநா. 133).*

[வெள் + எலி]

வெள்ளெலிச்செவிச்செடி *ve*//*eli-s-sevi-c-cedi*, பெ.(n.) கத்தரிமணியிலை பார்க்க; see *kattari-maniyilai*.

[வெள்ளெலி + செவிச்செடி]

வெள்ளெலும்பு[1] *ve*//*elumbu*, பெ.(n.) சதையற்ற வெண்ணிற எலும்புத் துண்டு; white bone without ay flesh. *'நாய் கடித்த வெள்ளெலும்பு'.*

[வெள் + எலும்பு]

வெள்ளெலும்பு[2] *ve*/-/-*elumbu*, பெ.(n.) தேய்ந்து தசை கழிந்த எலும்பு; balanced bone. *"உள்ளங்கால் வெள்ளெலும்பு நோவ" (பெருந்தொ. 1239).*

[வெள் + எலும்பு]

வெள்ளெழுச்சி *ve*//*elucci*, பெ.(n.) வெள்ளைக் கொப்புளத் தொற்று நோய்வகை; white impetigo.

[வெள் + எழுச்சி]

வெள்ளெழுத்து[1] *ve*//*eluttu*, பெ.(n.) 1. கண் புகைச்சலினால் உருவங்கள் புலப்படாது கண் கூசிப் படிக்க முடியாது மறைக்கும் ஒரு கண்ணோய்; an eye disease marked by inability to read. 2. கண் புகைச்சல்; short-an eye sight due to old age.

[வெள் + எழுத்து]

வெள்ளெழுத்து[2] *ve*/-/-*eluttu*, பெ.(n.) எழுத்து முதலியன விளங்கத் தெரியாமைக்குக் காரணமாகிய பார்வைக் குறை; long sight.

[வெள் + எழுத்து]

வெள்ளெள் *ve*//*e*/, பெ.(n.) வெள்ளை நிறமான எள்வகை; a white species of sesame. *"வெள்ளெட் சாந்து" (புறநா. 246).*

[வெள் + எள்]

வெள்ளென்பு *ve*/-/-*enbu*, பெ.(n.) வெள்ளெலும்பு பார்க்க; see *ve*//*elumbu*. *"வெள்ளென் பூழ்பெற" (சீவக. 803).*

[வெள் + என்பு]

வெள்ளென *ve*//*ena*, பெ.(n.) 1. அதிகாலையில்; early in the morning. *'வெள்ளென எழுந்திருக்க வேண்டும்' (பே.வ.).* 2. குறித்த காலத்திற்கு முன்னமே; beforehand, betimes. *'பகலில் வெள்ளென வந்துவிட்டாய்'.*

[வெள்ளெனல் → வெள்ளென]

வெள்ளெனல் *ve*//*enal*, பெ.(n.) 1. வெண்மையாதற்குறிப்பு; becoming white. *'வெள்ளென விளர்த்தது" (நன். 423, மயிலை).* 2. தெளிவாதற்குறிப்பு; becoming clear. *"வெள்ளென நோவா தோன்வயிற் றிரங்கி" (புறநா. 207).* 3. பொழுது விடிதற் குறிப்பு; dawning of day.

[வெள் + எனல்]

வெள்ளேடு *ve*//*ēdu*, பெ.(n.) 1. வெற்றேடு; blank *ōla*, palm leaf not written upon. *"வெள்ளேட் டங்கண் வித்தக மெழுதிய" (பெருங். உஞ்சைக். 32, 69).*

[வெள் + ஏடு]

வெள்ளேறன் *vel̤l̤ēṟaṉ,* பெ.(n.) பழுதான இரும்பு (யாழ்.அக.); scrapiron.

[வெள் + ஏறன்]

வெள்ளேறி *vel̤l̤ēṟi,* பெ.(n.) வீட்டின் புறக்கடைத் தடுப்புத் தட்டி கட்டப் பயன்படும் மரவகை (தருச். வழக்.); a kind of wood used for fencing or screening partition.

[வெள் + ஏறி]

வெள்ளை[1] *vel̤l̤ai,* பெ.(n.) 1. வெண்மை; whiteness. *"வெள்ளை வெள்யாட்டுச் செச்சை" (புறநா. 286).* 2. பலராமன்; balaraman. *"மேழிவலனுயத்த வெள்ளை" (சிலப். 14, 9).* 3. சுண்ணாம்பு; lime mortar. 4. சுண்ணாம்பு, பால், மோர் என்ற மூன்று வெண்மையான பண்டங்கள்; the three whitethings, viz, *cunnāmpu, pāl, mōr. "வெள்ளை வெள்ளை என்பார்கள் மேதினியோர்" (பணவிடு. 341).* 6. வெள்ளீயம்; white lead (w.). 7. வயிரம்; diamond. 8. பச்சை மணிக் குற்றம் எட்டனுள் ஒன்று (சிலப். 14, 184, உரை); a flaw in emerads. 9. சங்கு (ஈடு. 6, 1, 5, அரும்.); conch. 10. கள் (பிங்.); toddy. 11. மலைப் பூண்டு; wight's indian nettle. 12. வெள்ளைப்பாடாணம் (மூ.அ.); a mineral poison. 13. நோய் வகை; gonorrhoea. 14. கடினத்தன்மை (வி.); hardness. 15. வேங்கை மரம் (மலை.); Indian kinotree. 16. வெள்ளைத்துணி; white cloth. 17. வெளுப்பு; wash. *"கோடியொரு வெள்ளை குமரி யொரு பிள்ளை".* 18. வெள்ளை மாடு; white cow. *"பானிற வண்ணன் போற் பழிதீர்ந்த வெள்ளை" (கலித். 104).* 19. வெள்ளாடு; goat. *"துருவை வெள்ளை யொடு விரைஇ" (மலைபடு. 414).* 20. சம்பா நெல் வகை; a variety of *campā* paddy. 21. கபடமற்றவன்–வள்–து; guileless person or animal. *"வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை" (கொன்றைவே.).* 22. அறிவில்லாதவன்; ignorant person. 23. பற்றற்றவன் (ஈடு. 6, 1, 5, அரும்.); person who has no attachments. 24. புன்மை; trifling. *"வெள்ளைமழை யென்றே விளம்பு" (சினேந். 421).* 25. வெண்பா; *veṇpā* metre. *"வெள்ளையுட் பிரதளை விரவா" (யாப். 22).*

[வெண் (மை) → வெள்ளை]

வெள்ளை[2] *vel̤l̤ai,* பெ.(n.) வெள்ளைப் புரசு; bastored kino-butea frondosa bearing white flowers. 2. வெள்ளாட்டுக் குட்டி; kid. 3. வெள்ளி; silver. 4. பொடி; calcined medicinal powder. 5. வெள்ளை நஞ்சு; white arsenic. 6. சங்கு நஞ்சு; sanku pazhanam. 7. கள்; toddy. 8. இளம் பருவம்; young age. 9. வழலை; soap. 10. பூவழலை பார்க்க; see *pūval̤alai.* 11. முட்டையின் வெண்கரு; white of an egg. 12. வெட்டை; gleet. 13. மேக வெட்டை; ochitis. 14. பொரித்த சீனாகாரம்; roasted alum.

வெள்ளைக்கட்டை *vel̤l̤ai-k-kaṭṭai,* பெ.(n.) சம்பா நெல்வகை; a kind of *campā* paddy.

[வெள்ளை + கட்டை]

வெள்ளைக்கடப்பு *vel̤l̤ai-k-kaḍappu,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[வெள்ளை + கடப்பு]

வெள்ளைக்கடம்பு *vel̤l̤ai-k-kaḍambu,* பெ.(n.) 1. நீண்ட கடம்ப மரவகை; a kind of cadamba tree. 2. நீண்ட மரவகை; bridal-couch plant. l.tr.

[வெள்ளை + கடம்பு]

வெள்ளைக்கடம்பை *veḷḷai-k-kaḍambai,* பெ.(n.) வெள்ளைக்கடம்பு பார்க்க; see *veḷḷai-k-kaḍambu.*

[வெள்ளை + கடம்பை]

வெள்ளைக்கடுக்காய் *veḷḷai-k-kaḍukkāy,* பெ.(n.) கடுக்காய் மரவகை; white myrobalan of cuddapal, l.tr.

[வெள்ளை + கடுக்காய்]

வெள்ளைக்கடுகு *veḷḷai-k-kaḍugu,* பெ.(n.) வெண்கடுகு பார்க்க; see *veṇ-kaḍugu.*

[வெள்ளை + கடுகு]

வெள்ளைக்கடுதாசி *veḷḷai-k-kaḍutāśi,* பெ.(n.) வெள்ளைத்தாள்; white paper.

[வெள்ளை + கடுதாசி]

வெள்ளைக்கடுப்பு *veḷḷai-k-kaḍuppu,* பெ.(n.) நோய்வகை; a disease.

[வெள்ளை + கடுப்பு]

வெள்ளைக்கண்டக்கத்தரி *veḷḷai-k-kaṇḍa-k-kattari,* பெ.(n.) ஒரு வகை வெள்ளைப் பூவுள்ள கண்டங் கத்திரி; so lanum jacquini bearing whtie flowers and fruits it is a thorny shrub.

[வெள்ளை + கண்டக்கத்தரி]

வெள்ளைக்கண்டம் *veḷḷai-k-kaṇḍam,* பெ.(n.) இளமைப் பேறுக்காக சித்தருண்ணும் மூலிகை; a herb eaten by siddhars for rejureṅation.

[வெள்ளை + கண்டம்]

வெள்ளைக்கண்டர் *veḷḷai-k-kaṇḍar,* பெ.(n.) வெண் துரிசு; white vitriol-zinc sulphate.

[வெள்ளை + கண்டர்]

வெள்ளைக்கண்ணி *veḷḷai-k-kaṇṇi,* பெ.(n.) செடிவகை; pink-tinted heart-leaved glory tree, l.sh.

[வெள்ளை + கண்ணி]

வெள்ளைக்கத்தரி *veḷḷai-k-kattari,* பெ.(n.) வெண் கத்தரிக்காய்; white brinjal.

[வெள்ளை + கத்தரி]

வெள்ளைக்கத்தரி² *veḷḷai-k-kattari,* பெ.(n.) ஒரு வகைப் பாம்பு; a variety of snake.

[வெள்ளை + கத்தரி]

வெள்ளைக்கத்தலை *veḷḷai-k-kattalai,* பெ.(n.) ஒருவகைக் கடன் மீன்; a sea fish-sciaena miles.

[வெள்ளை + கத்தலை]

வெள்ளைக்கத்தூரிப்பட்டை *veḷḷai-k-kattūri-p-paṭṭai,* பெ.(n.) மரப்பட்டை; the bark of a tree.

[வெள்ளை + கத்தூரி + பட்டை]

Skt. *Kastūri* > த. கத்தூரி.

வெள்ளைக்கரடி *veḷḷai-k-karaḍi,* பெ.(n.) கரடிவகை; whtie bear, polar fear (w.).

[வெள்ளை + கரடி]

வெள்ளைக்கரந்தை *veḷḷai-k-karantai,* பெ.(n.) வெண்கரந்தை பார்க்க; see *veṇ-karantai.*

[வெள்ளை + கரந்தை]

வெள்ளைக்கரிசலாங்கண்ணி *veḷḷai-k-karišalāṅ-kaṇṇi,* பெ.(n.) கரிப்பான்; ordinary eclipta aiba.

[வெள்ளை + கரிசலாங்கண்ணி]

வெள்ளைக்கரு *veḷḷai-k-karu,* பெ.(n.) கோழிமுட்டையியுள் வெண்மையான பாகம்; the white of egg (w.).

[வெள்ளை + கரு]

வெள்ளைக்கருங்காலி *veḷḷai-k-karuṅkāli,* பெ.(n.) மரவகை; egg-fruited ebony, m.tr.

[வெள்ளை + கருங்காலி]

வெள்ளைக்கருடன் *veḷḷai-k-karuḍaṉ,* பெ.(n.) ஒரு வகைக் கருடன்; a variety of brahmini kite.

[வெள்ளை + கருடன்]

வெள்ளைக்கரும்பு *veḷḷai-k-karumbu,* பெ.(n.) வெள்ளை நிறக் கரும்பு; white sugar-cane-saccharum officinarum.

[வெள்ளை + கரும்பு]

வெள்ளைக்கல்[1] *veḷḷai-k-kal,* பெ.(n.) 1. வெண்ணிற சலவைக்கல்; white marble. 2. மங்கலான ஒளியுள்ள மணிக்கல்; gem, whitish or pale in lustre. 3. வயிரம் போன்று பட்டை செதுக்கிய கண்ணாடிக்கல்; glass cut in imitation of diamond. 4. வெள்ளைராசிக்கல் பார்க்க; see *veḷḷai-rāši-k-kal.*

[வெள்ளை + கல்]

வெள்ளைக்கல்[2] *veḷḷai-k-kal,* பெ.(n.) 1. கருங்கல் வகைகளுள் ஒன்று (பொ.வ.); a variety of granite. 2. குறிஞ்சி நிலத்தில் மண்கீழ் அமைந்த பாறை வகைகளுள் ஒன்று (கூவ நூல்); under ground rock or granite in arable land.

[வெள்ளை + கல்]

வெள்ளைக்கல்[1] *veḷḷai-k-kal,* பெ.(n.) 1. மூன்று மாதத்திய கருப்பிண்டம்; 3 months old foetus. 2. அண்டக்கல் பார்க்க; see *aṇḍa-k-kal.* 3. சுக்கான் கல்; lime stone. 4. வழலை பார்க்க; see *vaḻalai.* 5. கல்லுப்பு; rock salt. 6. படிகக்கல்; crystal.

[வெள்ளை + கல்]

வெள்ளைக்கல்[2] *veḷḷai-k-kal,* பெ.(n.) மீன (பங்குனி) மாதத்தில் பனியிரவில் காற்றில்லாக் காலத்தில் கதிர் போல் வளர்ந்திருக்கும் ஒரு கல், உவர் நிலத்தின் அடியில் இருக்கும் கல்; the stone found at the bottom of the fuller's earth or the efflorescence grown in the soil of fuller's earth in the month of march-april.

[வெள்ளை + கல்]

வெள்ளைக்கல்சுண்ணம் *veḷḷai-k-kal-šuṇṇam,* பெ.(n.) 1. பிண்டச் சுண்ணம்; a white medicinal powder made from the foetus of three months old. 2. நிலத்தி னடியிலிருக்கும் வெள்ளைக் கல்லைக் காளவாயில் வேக வைத்து நீற்றி எடுக்கும் சுண்ணம்; slaked lime.

[வெள்ளை + கல் + சுண்ணம்]

வெள்ளைக்கல்சுண்ணாம்பு *veḷḷai-k-kal-šuṇṇāmbu,* பெ.(n.) சுண்ணாம்புக்கல் வகைகளுள் ஒன்று (மது. வழ.); a variety of lime.

[வெள்ளை + கல் + சுண்ணாம்பு]

வெள்ளைக்கல்சுத்தி *vellai-k-kal-šutti,* பெ.(n.) உவர்மண் தரையின் அடியிலிருக்கும் வெள்ளைக் கல்லை உவர் மண்ணில் தண்ணீரூற்றிக், கலக்கி அதில் கழுவி யெடுப்பது; washing the stone in the solution of fuller's earth, is its purification.

[வெள்ளை + கல்சுத்தி]

வெள்ளைக்கல்செயநீர் *vellai-k-kal-šeya-nīr,* பெ.(n.) அண்ட செயநீர்; a pungent prepared liquid from andakkal.

[வெள்ளை + கல் + செயநீர்]

வெள்ளைக்கல்லுப்பு *vellai-k-kalluppu,* பெ.(n.) பிண்டவுப்பு; salt extracted from *vellai-k-kal.*

[வெள்ளை + கல்லுப்பு]

வெள்ளைக்கலியாணமுருக்கம் *vellai-k-kaliyāṇa-murukkam,* பெ.(n.) வெள்ளைப்பூ பூக்கும் கலியாண முருக்க மரம்; erythrina indica (bearing white flowers) albiflora.

[வெள்ளை + கலியாண + முருக்கம்]

வெள்ளைக்கலியாணமுருக்கு *vellai-k-kaliyāṇa-murukku,* பெ.(n.) மரவகை; white coral tree, m.tr.

[வெள்ளை + கலியாண + முருக்கு]

வெள்ளைக்கலுவம் *vellai-k-kaluvam,* பெ.(n.) வெள்ளைக் களிமண்ணால் செய்த சீமைக்கலுவம்; mortar made of white stone.

[வெள்ளை + கலுவம்]

வெள்ளைக்கவி *vellai-k-kavi,* பெ.(n.) 1. புன் மொழிகளாற் கவிபாடுவோன் (வெண்பாப். செய். 48); one who composes verses in inelegant language. 2. பிறரைத் தொடங்கச் செய்து கவிபாடுவோன்; eulogist who gets another to begin his poem (w.). 3. வெண்கவி 1, 2 பார்க்க; see *ven-kavi 1,2.*

[வெள்ளை + கவி]

Skt. Kavi > த. கவி.

வெள்ளைக்கழற்கொடி *vellai-k-kalar-kodi,* பெ.(n.) வெள்ளைக்கழற்சிக் காய்க் கொடி; bonducnut creeper bearing white nuts-caesalpinia bonducella.

[வெள்ளை + கழற்கொடி]

வெள்ளைக்கழிச்சல் *vellai-k-kaliccal,* பெ.(n.) மாந்தக் கழிச்சல்; diarrhoea in children which is coloured white caused by indigestion.

[வெள்ளை + கழிச்சல்]

வெள்ளைக்கற்கண்டு *vellai-k-karkandu,* பெ.(n.) சீனிக் கற்கண்டு; sugan candy.

[வெள்ளை + கற்கண்டு]

வெள்ளைக்கற்பூரம் *vellai-k-karpūram,* பெ.(n.) வெள்ளைச் சூடம் (வி.); a species of champhor.

[வெள்ளை + கற்பூரம்]

வெள்ளைக்கற்பொடி *vellai-karpodi,* பெ.(n.) வெள்ளைக் கற்சுண்ணாம்பு நீறு; white slaked lime.

[வெள்ளை + கற்பொடி]

வெள்ளைக்கற்றளை *veḷḷai-k-kaṟṟaḷai,* பெ.(n.) 1. வெள்ளை நிறமானதும் இரண்டடி வளர்வதுமான கடல்மீன்வகை; sea-fish, silvery attaining 2 ft. in length. 2. வெளிறின பசுமைநிறம் உடையதும் இரண்டு அடி வளர்வதுமான கடல்–மீன்வகை; sea-fish, greyish darkened with green, attaining 2 ft. in length.

[வெள்ளை + கற்றளை]

வெள்ளைக்கற்றாழை *veḷḷai-k-kaṟṟāḻai,* பெ.(n.) ஒருவகை கற்றாழை; a variety of aloe.

[வெள்ளை + கற்றாழை]

வெள்ளைக்காக்கட்டான் *veḷḷai-k-kākkaṭṭāṉ,* பெ.(n.) வெள்ளைக்காக்கணம் பார்க்க; see *veḷḷai-k-kākkaṇam* (w.).

[வெள்ளை + காக்கட்டான்]

வெள்ளைக்காக்கணம் *veḷḷai-k-kākkaṇam,* பெ.(n.) கொடிவகை; white-flowered musell-shell creeper, s.cl.

[வெள்ளை + காக்கணம்]

வெள்ளைக்காக்கி *veḷḷai-k-kākki,* பெ.(n.) வெள்ளைக்காக்கணம் பார்க்க (பரி.அக.); see *veḷḷai-k-kākkaṇam.*

[வெள்ளை + காக்கி]

வெள்ளைக்காக்குறட்டை *veḷḷa-k-kākkuṟaṭṭai,* பெ.(n.) வெள்ளைக்காக்கணம் பார்க்க; see *veḷḷai-k-kākkaṇam.*

[வெள்ளை + காக்குறட்டை]

வெள்ளைக்காக்கை *veḷḷai-k-kākkak,* பெ.(n.) இல்பொருளுக்கு எடுத்துக்காட்டாக வுள்ள காக்கை; white crow, typical of a non-existent thing.

[வெள்ளை + காக்கை]

வெள்ளைக்காகம் *veḷḷai-k-kāgam,* பெ.(n.) வெண்காக்கை; white crow.

[வெள்ளை + காகம்]

வெள்ளைக்காகிதம் *veḷḷai-k-kākitam,* பெ.(n.) 1. வெள்ளைத் தாள்; white paper. 2. எழுதாத தாள்; blank paper (w.).

[வெள்ளை + காகிதம்]

U. *Hāgas* > த. காகிதம்.

வெள்ளைக்காசுக்கட்டி *veḷḷai-k-kāšu-k-kaṭṭi,* பெ.(n.) சிவப்புக்காசுக் கட்டிக்கு எதிரானது; white catechu-hyderabad catechu.

[வெள்ளை + காசுக்கட்டி]

வெள்ளைக்காஞ்சொறி *veḷḷai-k-kāñcoṟi,* பெ.(n.) 1. காஞ்சொறி; a plant-tragia in volucrata. 2. எருமைக்காஞ்சொறி பார்க்க; see *erumai-k-kāñcoṟi.*

[வெள்ளை + காஞ்சொறி]

வெள்ளைக்காட்டமணக்கு *veḷḷai-k-kāṭṭamaṇakku,* பெ.(n.) வெண்காட்டா மணக்கு; white jatropha.

[வெள்ளை + காட்டமணக்கு]

வெள்ளைக்காட்டாமணி *vellai-k-kāttāmaṇi,* பெ.(n.) உத்தாமணி (அச்சாணி மூலி); a twiner title being a hedge plant bearing fruit with cotton fibres inside.

[வெள்ளை + காட்டாமணி]

வெள்ளைக்காணம் *vellai-k-kāṇam,* பெ.(n.) கொள்வகை; a kind of horse-gram.

[வெள்ளை + காணம்]

வெள்ளைக்காந்தி *vellai-k-kānti,* பெ.(n.) மலை மூலிகை வகை; a mountain herb.

[வெள்ளை + காந்தி]

வெள்ளைக்காயா *vellai-k-kāyā,* பெ.(n.) மரவகை; narrow-oblong-leaved tree bilberry, s.tr.

[வெள்ளை + காயா]

வெள்ளைக்கார் *vellai-k-kār,* பெ.(n.) மழைக்காலத்தில் அறுவடையாகும் கார்நெல் வகை; a variety of kār paddy harvested in the rainy season.

[வெள்ளை + கார்]

வெள்ளைக்காரச்சீலை *vellai-k-kāra-c-cīlai,* பெ.(n.) வெள்ளை நஞ்சு, கெளரி, குங்கிலியம், சவுட்டுப்பு, வெ.குங்கிலியம், சுட்ட துணிச் சாம்பல் பொடி செய்து காய்ச்சித் துணியிலூட்டிய காரச்சீலை (கார பிளாஸ்திரி); a plaster prepared with the drugs mentioned above.

[வெள்ளை + காரச்சீலை]

வெள்ளைக்காரம் *vellai-k-kāram,* பெ.(n.) வெங்காரம்; borah.

[வெள்ளை + காரம்]

வெள்ளைக்காரர் *vellai-k-kārar,* பெ.(n.) வெள்ளை நிற மாந்தர்; whites, westener.

[வெள்ளை + காரர்]

வெள்ளைக்காரன் *vellai-k-kāraṉ,* பெ.(n.) ஐரோப்பிய இனத்தான்; european, white man.

[வெள்ளை + காரன்]

வெள்ளைக்காரன்கவளி *vellai-k-kāraṉ-kavaḷi,* பெ.(n.) தேர்க்கள் பார்க்க; see *tēr-k-kaḷ.*

[வெள்ளை + காரன் + கவளி]

வெள்ளைக்காரி *vellai-k-kāri,* பெ.(n.) உவளர் நிலம்; fuller's earth.

[வெள்ளை + காரி]

வெள்ளைக்காரி *vellai-k-kāri,* பெ.(n.) (பொதுவாக) மேல் நாடுகளைச் சேர்ந்தவள், (குறிப்பாக) இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவள்; (generally) white woman, (esp.) an english woman.

[வெள்ளை + காரி]

வெள்ளைக்காரை *vellai-k-kārai,* பெ.(n.) வெண்காரை; pounded chunam.

[வெள்ளை + காரை]

வெள்ளைக்காரை *vellai-k-kārai,* பெ.(n.) வெண்காரை; pounded chunam.

[வெள்ளை + காரை]

வெள்ளைக்காலா *vellai-k-kālā,* பெ.(n.) ஒரு வகை கடல் மீன்; elevtherone matctradacfylum.

[வெள்ளை + காலா]



வெள்ளைக்கிரிகர்ணி *vellai-k-kiri-karṇi,* பெ.(n.) அவுரி; indigo plant.

வெள்ளைக்கிலுகிலுப்பை *vellai-k-kilukiluppai,* பெ.(n.) செடிவகை (பதார்த்த. 254); rattle wort.

[வெள்ளை + கிலுகிலுப்பை]

வெள்ளைக்கிழாத்தி *vellai-k-kiḻātti,* பெ.(n.) பொரியலுக்குகந்த கடல்மீன் (நெல்லை. மீன.); a sea fish fit for roasting.

[வெள்ளை + கிழாத்தி]

வெள்ளைக்கிளி *vellai-k-kiḷi,* பெ.(n.) கிளிவகை (வின்.); cockatoo, cacatuina.

[வெள்ளை + கிளி]

வெள்ளைக்கீரி *vellai-k-kīri,* பெ.(n.) மற்றைக் கீரிகளிலும் சிறப்பு வாய்ந்ததாய் அவற்றால் தூக்கிச் செல்லப்படுவதாகக் கருதப்படுவதும் வெண்ணிறமுள்ளதுமான சிறிய கீரிவகை (யாழ்.அக.); a white mongoose of diminutive size, said to be superior to other mongooses and to be carried by them.

[வெள்ளை + கீரி]

வெள்ளைக்கீரை *vellai-k-kīrai,* பெ.(n.) கீரை வகை (சங்.அக.); a kind of greens.

[வெள்ளை + கீரை]

வெள்ளைக்குங்கிலியம் *vellai-k-kuṅkiliyam,* பெ.(n.) 1. நீண்ட மரவகை (இலத்.); indian gum anime, vateria indica. 2. வெள்ளைக் குங்கிலிய மரப்பிசின்; gum anime, a resinous exudation from indian gum anime. 3. மரவகை (இலத்.); konkani resin, boswellia serrata-glabra.

[வெள்ளை + குங்கிலியம்]

வெள்ளைக்குட்டம்[1] *vellai-k-kuṭṭam,* பெ.(n.) வெண்குட்ட நோய்; white leprosy, leucoderma.

[வெள்ளை + குட்டம்]

வெள்ளைக்குட்டம்[2] *vellai-k-kuṭṭam,* பெ.(n.) வெண்குட்டம் (செங்கை.); white leprosy (C.G.).

[வெள்ளை + குட்டம்]

வெள்ளைக்குடிநாகனார் *vellai-k-uḍi-nāgaṉār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a sangam poet.

வெள்ளைக்குடி யென்பது இவரது ஊர். இவர் தம்முடைய பழைய நிலங்களுக்குரிய வரிப் பணத்தைச் செலுத்துவதற்கு ஆற்றாதவராகிச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனுக்குச் செவியறிவுறுத்தி அச்செய்களை முற்றூட்டாகப் பெற்றனர் என்பது இவர் பாடிய புறநானூற்றுச் செய்யுளால் தெரிவருகின்றது, மற்றூட்டு–சர்வமானியம். இன்னும் இவர் வாக்காக நற்றிணையில் இரண்டு பாடல்கள் உள்ளன. (புறம்.35).

வெள்ளைக்குதிரை *veḷḷai-k-kudirai,* பெ.(n.) 1. வெண்ணிறக் குதிரை; white horse. 2. கள்; toddy. 3. சீலைப்பேன்; louse in clothes.

[வெள்ளை + குதிரை]

வெள்ளைக்குதிரைக்குளம்பு *veḷḷai-k-kutirai-k-kuḷambu,* பெ.(n.) குதிரைக் குளம்பு; இதைச் சுட்டுக் கரியாக்கித் தடவச் சில புண்நோய்கள் குணப்படும்; white horse hoof its burnt ash bucals ulcers.

[வெள்ளை + குதிரை + குளம்பு]

வெள்ளைக்குதிரைமேலேறல் *veḷḷai-k-kutirai-mēlēṟal,* பெ.(n.) கள், சாராயம் முதலியன குடித்தல்; being intoxicated with drinks.

[வெள்ளை + குதிரை + மேலேறல்]

வெள்ளைக்குந்தரிக்கம் *veḷḷai-k-kuntarikkam,* பெ.(n.) வெள்ளை தாமர், இது வெளிர் பச்சை அல்லது மஞ்சள் நிறக் கட்டிகளாய் இருக்கும்; indian copal-white dammer-vateria indica. இத்துடன் மெழுகு எண்ணெய் சேர்த்துக் களிம்பு செய்து புண்களுக்கும், சூரணித்துப் பல் வலிக்கும் போடலாம்.

[வெள்ளை + குந்தரிக்கம்]

வெள்ளைக்குந்துகம் *veḷḷai-k-kuntukam,* பெ.(n.) வெள்ளைக்குந்துருக்கம் (இலத்.) பார்க்க; see *veḷḷai-k-kunturukkam.*

வெள்ளைக்குந்துருக்கம் *veḷḷai-k-kunturukkam,* பெ.(n.) வெள்ளைக் குங்கிலியம் 1 பார்க்க (இலத்.); see *veḷḷai-k-kuṅkiliyam.*

[வெள்ளை + குந்துருக்கம்]

வெள்ளைக்குப்போடு-தல் *veḷḷaikku-p-pōḍu-,* செ.குன்றாவி.(v.t.) அழுக் காடைகளை வெளுக்கப் போடுதல் (வின்.); to send one's clothes to wash.

[வெள்ளை + போடு-,]

வெள்ளைக்குமுதம் *veḷḷai-k-kumudam,* பெ.(n.) கருவிழி நோய்; an eye diseases of cornea.

[வெள்ளை + குமுதம்]

வெள்ளைக்குறுவை *veḷḷai-k-kuṟuvai,* பெ.(n.) வெண்ணிறமுடையதும் 2 அல்லது 3 மாதங்களில் விளையக் கூடிய குறுவை நெல்வகை; a white species of kuruvai paddy caltivated throughout the year, maturing in two or three months.

[வெள்ளை + குறுவை]

வெள்ளைக்குன்றி[1] *veḷḷai-k-kuṉṟi,* பெ.(n.) கொடிவகை (இலத்.); a kind of indian liquorice plant, abrus precatorius-albiflora.

[வெள்ளை + குன்றி]

வெள்ளைக்குன்றி[2] *veḷḷai-k-kuṉṟi,* பெ.(n.) வெண்ணிறக் குன்றி மணி; white jeweller's head-abrus preca lorius bearing white seeds.

[வெள்ளை + குன்றி]

வெள்ளைக்குன்றிகம்[1] *veḷḷai-k-kuṉṟikam,* பெ.(n.) வெள்ளைகுங்கிலியம் 1 பார்க்க (இலத்.); see *veḷḷai-kuṅkiliyam.*

[வெள்ளை + குன்றிகம்]

வெள்ளைக்குன்றிகம்[2] *veḷḷai-k-kuṉṟikam*, பெ.(n.) வெள்ளைக்குந்திருக்கம் பார்க்க; see *veḷḷai-k-kuntirukkam*.

[வெள்ளை + குன்றிகம்]

வெள்ளைக்குன்றிமணி *veḷḷai-k-kuṉṟi-maṇi*, பெ.(n.) ஒரு குன்றி மணி; a kind of red seed of crab's eye.

[வெள்ளை + குன்றிமணி]

வெள்ளைக்கெளிறு *veḷḷai-k-keḷiṟu*, பெ.(n.) வெள்ளைக்கெளுத்தி பார்க்க; see *veḷḷai-k-keḷutti*.

[வெள்ளை + கெளிறு]

வெள்ளைக்கெளுத்தி *veḷḷai-k-keḷutti*, பெ.(n.) வெண்ணிறமானதும் பதினெட்டு விரல நீளம் வளர்வதுமான ஆற்று மீன் வகை; a river-fish, silvery, attaining 18 in. in length, macrones cavasius.

[வெள்ளை + கெளுத்தி]

வெள்ளைக்கொட்டல் *veḷḷai-k-koṭṭal*, பெ.(n.) வெட்டை ஒழுக்கு; gonorrhoea.

[வெள்ளை + கொட்டல்]

வெள்ளைக்கொடி[1] *veḷḷai-k-koḍi*, பெ.(n.) 1. வெற்றிலை வகை; a variety of betel (G.Sm.D.1,i,215). 2. அமைதி உடன் பாட்டிற்கு அறிகுறியாகக் காட்டுங் கொடி; flag of truce, white flag.

[வெள்ளை + கொடி]

வெள்ளைக்கொடி[2] *veḷḷai-k-koḍi*, பெ.(n.) கற்பூரக்கொடி பார்க்க; see *karpūra-k-koḍi*.

[வெள்ளை + கொடி]

வெள்ளைக்கொடுவேலி *veḷḷai-k-koḍuvēli*, பெ.(n.) கொடுவேலி (இலத்.); white-flowered lead wort.

[வெள்ளை + கொடுவேலி]

வெள்ளைக்கொம்பு *veḷḷai-k-kombu*, பெ.(n.) நரை மயிர் (யாழ்.அக.); grey hair.

[வெள்ளை + கொம்பு]

வெள்ளைக்கொய்யா *veḷḷai-k-koyyā*, பெ.(n.) பெருங்கொய்யா மரவகை (இலத்.); white guava.

[வெள்ளை + கொய்யா]

Braz. Guava > த. கொய்யா.

வெள்ளைக்கொழுஞ்சி *veḷḷai-k-koḻuñci*, பெ.(n.) வெண்கொழுஞ்சி பார்க்க; see *veṉ-koḻuñci*.

[வெள்ளை + கொழுஞ்சி]

வெள்ளைக்கோங்கு *veḷḷai-k-kōṅgu*, பெ.(n.) நீர்க்கோங்கு (இலத்.); iron wood of malabar.

[வெள்ளை + கோங்கு]

வெள்ளைக்கோட்டி *veḷḷai-k-kōṭṭi*, பெ.(n.) பயனில பேசும் அறிவிலார் கூட்டம்; assembly of idlers or shallow persons. *"வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழியின்" (சிலப். 30, 198).*

[வெள்ளை + கோட்டி]

வெள்ளைக்கோட்டும்பை *veḷḷai-k-kōṭṭumbai*, பெ.(n.) தும்பை; leucas.

[வெள்ளை + கோட்டும்பை]

வெள்ளைக்கோயில் *vellai-k-kōyil,* பெ.(n.) பழந்தமிழ்நாட்டில் பலதேவன் வழிபாடு நிகழ்ந்த தென்பது இலக்கியங்களால் அறியப்படும். வெண்ணிறம் வாய்ந்த அத்தேவனை, *"வால்வளை மேனி வாலியோன்"* என்று சிலப்பதிகாரம் குறிக்கின்றது. அவரை வெள்ளை மூர்த்தி என்றும், பல தேவன் என்றும் பண்டைத் தமிழர் அழைப்பாராயினர் தாமிரபரணி யாற்றின் கரையில் வெள்ளைக் கோயில் துறை ஒன்றுண்டு. பழைய பல தேவர் வழிபாட்டை அது நினைவூட்டுவதாகும்; a shrine in ancient Tamil as revealed from literature.

"வால்வளை மேனி வாலியோன்" என்பதற்கு வெள்ளி வளை (சங்கு) போலும் நிறத்தையுடைய வெள்ளை மூர்த்தி என்று பொருள் உரைத்தார் அடியார்க்கு நல்லார்.

[வெள்ளை + கோயில்]

வெள்ளைக்கோரான் *vellai-k-kōrān,* பெ.(n.) கொடிவகை; acuminate-leaved jungle geranium.

[வெள்ளை + கோரான்]

வெள்ளைக்கோலச்சுறா *vellai-k-kōla-c-curā,* பெ.(n.) பருமீன் வகையுளொன்று; a kind of stout fish.

[வெள்ளை + கோலச்சுறா]

வெள்ளைகட்டு-தல் *vellai-kattu-,* செ.கு.வி. (v.i.) 1. வெள்ளாடையுடுத்தல்; to be dressed in white. *'அவன் வெள்ளை கட்டியிருந்தான்'.* 2. மங்கல அணியிழந்த மையைக் குறிக்க வெள்ளையாடையுடுத்தல்; to be put on white clothes, as a sign of widowhood. 3. வெள்ளாடையால் மேற்கட்டி கட்டுதல்; to spread a white ceiling cloth.

[வெள்ளை + கட்டு-,]

வெள்ளைகட்டுதல்[1] *vellai-kattutal,* பெ.(n.) வெள்ளை ஒழுக்கு நிற்றல்; cured gonorrhoea.

[வெள்ளை + கட்டுதல்]

வெள்ளைகட்டுதல்[2] *vellai-kattutal,* பெ.(n.) மேற்கட்டி கட்டுதல்; bandage.

[வெள்ளை + கட்டுதல்]

வெள்ளைச்சங்கு *vellai-c-cangu,* பெ.(n.) 1. ஒரு வகைச் சங்கு; white conch. 2. சங்கஞ் செடி; four spined monetia-azema tetracnatha.

[வெள்ளை + சங்கு]

வெள்ளைச்சண்டிக்கார் *vellai-c-candikkār,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy (A.).

[வெள்ளை + சண்டிக்கார்]

வெள்ளைச்சதிகம் *vellai-c-catikam,* பெ.(n.) வெண்மிளகு; white pepper.

[வெள்ளை + சதிகம்]

வெள்ளைச்சந்தனம் *vellai-c-cantanam,* பெ.(n.) மரவகை; wooly melon feather foil.

[வெள்ளை + சந்தனம்]

வெள்ளைச்சம்பா *vellai-c-cambā,* பெ.(n.) சம்பா நெல்வகை (இ.வ.); a variety of *campā* paddy.

[வெள்ளை + சம்பா]

வெள்ளைச்சக்கரை *vellai-c-carkkarai,* பெ.(n.) 1. சீனிச் சருக்கரை; white sugar. 2. உப்பு; salt.

[வெள்ளை + சர்க்கரை]

வெள்ளைச்சாடரணை *vellai-c-cādāṇai,* பெ.(n.) வெண்சாரணை பார்க்க; see *veṉ-šāraṇai.*

[வெள்ளை + சாடரணை]

வெள்ளைச்சாமந்தி *vellai-c-cāmanti,* பெ.(n.) வெள்ளைச்செவ்வந்தி பார்க்க (மூ.அ.); see *vellai-c-cevvanti.*

[வெள்ளை + சாமந்தி]

வெள்ளைச்சாரடை *vellai-c-cāradai,* பெ.(n.) வெள்ளைச்சாரணை பார்க்க; see *vellai-c-cāraṇai.*

[வெள்ளை + சாரடை]

வெள்ளைச்சாரணை[1] *vellai-c-cāraṇai,* பெ.(n.) ஒரு வகைச் சாரணை; இதன் சாறு பா(டா)ணத்துக்கு சுருக்கு கொடுத்துக் காட்டவுதவும் (சத்தி சாரணை); a plant-irianthema decandra-good diuretic used for eye diseases also.

[வெள்ளை + சாரணை]

வெள்ளைச்சாரணை[2] *vellai-c-cāraṇai,* பெ.(n.) சாரணை வகை (வின்.); horse-purslane.

[வெள்ளை + சாரணை]

வெள்ளைச்சாரை[1] *vellai-c-cārai,* பெ.(n.) நீண்ட மரவகை; a tree.

[வெள்ளை + சாரை]

வெள்ளைச்சாரை[2] *vellai-c-cārai,* பெ.(n.) 1. உப்பு மணி; solidified salt made into beads. 2. கட்டிய கல்லுப்பு; consolidated salt. 3. வழலை பார்க்க; see *valalai.*

[வெள்ளை + சாரை]

வெள்ளைச்சாறுவேளைவேர் *vellai-c-cāṟu-vēlai-vēr,* பெ.(n.) 1. ஒரு வகை மூலிகை; root of trianthema decandra. it can be used as a rejuvenating drug. 2. நீர் இறங்கக் கொடுக்கும் வேர்; it is diuretic.

[வெள்ளை + சாறு + வேளை + வேர்]

வெள்ளைச்சி *vellaicci,* பெ.(n.) நஞ்சு வகை; a kind of arsenic.

வெள்ளைச்சிந்தூரம் *vellai-c-cintūram,* பெ.(n.) சவ்வீரம்; per-chloride of mercury.

[வெள்ளை + சிந்தூரம்]

வெள்ளைச்சிமுலைப்பால் *vellaicci-mulaippāl,* பெ.(n.) 1. சிவப்பு நிறப் பெண்ணின் முலைப்பால்; the breast milk of a fair coloured woman. 2. மருந்துப் பொருள்; it is useful for preparing internal medicines.

[வெள்ளைச்சி + முலைப்பால்]

வெள்ளைச்சிலாந்தி *ve!!ai-c-cilānti,* பெ.(n.) மரவகை (இலத்.); narrow-leaved button flower.

[வெள்ளை + சிலாந்தி]

வெள்ளைச்சிறுமணியன் *ve!!ai-c-ciru-maniyan,* பெ.(n.) ஆறரைமாதத்தில் விளையக்கூடிய சிறு மணியன் நெல்வகை; a variety of *cirumaniyan* paddy, maturing in 61/2 months.

[வெள்ளை + சிறுமணியன்]

வெள்ளைச்சிறுவழுதலை *ve!!ai-c-ciru-valutalai,* பெ.(n.) கத்தரிவகை; white small brinjal.

[வெள்ளை + சிறு + வழுதலை]

வெள்ளைச்சீலை *ve!!ai-c-cilai,* பெ.(n.) வெள்ளை துணி (நாஞ்.); white cloth.

[வெள்ளை + சீலை]

வெள்ளைச்சீலைக்குத்தடுக்கிடு-தல் *ve!!ai-c-cilai-k-kuttadukkidu-,* செ.கு.வி. (v.i.) நன்றாக ஒப்பனை செய்து கொள்ளும் பணக்காரருக்குப் பணிவிடை செய்தல் (நாஞ்.); to do honour to well dressed or rich persons.

[வெள்ளை + சீலைக்கு + தடுக்கிடு-,]

வெள்ளைச்சீலைப்பண்டாரம் *ve!!ai-c-cilai-p-pandāram,* பெ.(n.) வெள்ளை வேட்டிப்பண்டாரம் பார்க்க (நாஞ்.); see *ve!!ai-vētti-p-pamdāram.*

[வெள்ளை + சீலை + பண்டாரம்]

வெள்ளைச்சுக்கான் *ve!!ai-c-cukkān,* பெ.(n.) துணை நீர்மப் பொருள்; white lime stone one of 120 natural substances mentioned in tamil siddha medicine.

[வெள்ளை + சுக்கான்]

வெள்ளைச்சுமங்கலி *ve!!ai-c-cumankali,* பெ.(n.) கைம்பெண் (இ.வ.); widow, a term of abuse.

[வெள்ளை + சுமங்கலி]

Skt. Sumangali > த. சுமங்கலி.

வெள்ளைச்சுரிதகம் *ve!!ai-c-curitagam,* பெ.(n.) வெண்டளையில் வரும் கலிப்பாவின் இறுதியுறுப்புவகை (கலித். 143, உரை); the last member in a kaliverse, constructed with *ventalai.*

[வெள்ளை + சுரிதகம்]

வெள்ளைச்சுறா *ve!!ai-c-curā,* பெ.(n.) ஒரு வகைக் கபில நிறமும் இருபது அங்குல வளர்ச்சியுமுள்ள கடல் மீன் வகை; a sea fish, sandy brown, attaining 20 in. in length.

[வெள்ளை + சுறா]



வெள்ளைச்சூரைச்செடி *ve!!ai-c-cūrai-c-cedi,* பெ.(n.) சூரைச்செடி பார்க்க; see *šūrai-c-cedi.*

[வெள்ளை + சூரைச்செடி]

வெள்ளைச்செந்தூரம் *vel̤l̤ai-c-centūram,* பெ.(n.) ஈயவெள்ளி; white lead.

[வெள்ளை + செந்தூரம்]

வெள்ளைச்செம்பை *vel̤l̤ai-c-cembai,* பெ.(n.) வெள்ளைப்பூ பூக்கும் சிற்றகத்தி; cassia cuspidata bearing white flowers.

[வெள்ளை + செம்பை]

வெள்ளைச்செவ்வந்தி *vel̤l̤ai-c-cevvanti,* பெ.(n.) செவ்வந்தி வகை (வின்.); white chrysanthemum.

[வெள்ளை + செவ்வந்தி]

வெள்ளைச்சேம்பு *vel̤l̤ai-c-cēmpu,* பெ.(n.) சேம்பு வகை (சங்.அக.); a species of indian kales.

[வெள்ளை + சேம்பு]

வெள்ளைச்சேல் *vel̤l̤ai-c-cēl,* பெ.(n.) பால்போலும் வெண்ணிற முடையதொரு மீன் (மீன.பொ.வ.); a milky white fish.

[வெள்ளை + சேல்]

வெள்ளைச்சேவல்[1] *vel̤l̤ai-c-cēval,* பெ.(n.) ஒரிப்பி (நெல்லை. மீன.); a cock species.

[வெள்ளை + சேவல்]

வெள்ளைச்சேவல்[2] *vel̤l̤ai-c-cēval,* பெ.(n.) வெண்ணிறச் சேவல் இதன் தலையை அல்லது கொண்டையை உளியால் சீவி அரத்தத்தைக் கதவு, நிலை, பலகணி, உத்தரம், குறுக்குக் கட்டைகளில் *"ஓம் நசி மசி–நசி மசி"* என்று கூறியவாறே தடவுவர் (முக. வழக்.); chiselling its head or throat the blood is smeared on doors, its frames, windows, beam rafter ultering oom nasi-masi nasi masi.

[வெள்ளை + சேவல்]

வெள்ளைச்சொல் *vel̤l̤ai,-c-col* பெ.(n.) 1. எளிய சொல் (வின்.); common, plain word. 2. நாகரிகமற்ற சொல் (கொச்சை.); vulgar word.

[வெள்ளை + சொல்]

வெள்ளைச்சோளம் *vel̤l̤ai-c-cōl̤am,* பெ.(n.) சோளவகை (வின்.); white species of great milet.

[வெள்ளை + சோளம்]

வெள்ளைசாத்து–தல் *vel̤l̤ai-šāttu-,* பெ.(n.) வெள்ளைபூண்–, பார்க்க; see *vel̤l̤ai-pūṉ.* *"வெள்ளை சாத்திக்கொண்டு சடக்கென அரங்கமா நகரை விட்டுப் புறப்பட்டு" (குருபரம். 362).*

[வெள்ளை + சாத்து–,]

வெள்ளைடாமர் *vel̤l̤ai-tāmar,* பெ.(n.) வெள்ளைக்குந்திரிகம் பார்க்க; see *vel̤l̤ai-k-kuntirikam.*

வெள்ளைத்தகரை *vel̤l̤ai-t-tagarai,* பெ.(n.) சிறு பூடு வகை; sulphur-flowered seena.

[வெள்ளை + தகரை]

வெள்ளைத்தங்கம் *vel̤l̤ai-t-taṅgam,* பெ.(n.) மாழை வகை; platinum.

[வெள்ளை + தங்கம்]

வெள்ளைத்தணக்கு *vel̤l̤ai-t-taṉakku,* பெ.(n.) முட்டைக்கோங்கு; whirling rut.

[வெள்ளை + தணக்கு]

வெள்ளைத்தம்பட்டை *veḷḷai-t-tampaṭṭai,* பெ.(n.) வாளவரை (இலத்.); sword-bean.

[வெள்ளை + தம்பட்டை]

வெள்ளைத்தமிழ் *veḷḷai-t-tamiḻ,* பெ.(n.) எளிய நடையிலமைந்த தமிழ் (வின்.); simple plain tamil.

[வெள்ளை + தமிழ்]

வெள்ளைத்தனம் *veḷḷai-t-taṉam,* பெ.(n.) கபடமின்மை; simplicity, plainness.

[வெள்ளை + தனம்]

வெள்ளைத்தாமரை *veḷḷai-t-tāmarai,* பெ.(n.) வெண்டாமரை; white lotus flower it is prescribed for heat produced in the liver and produced by medicine.

[வெள்ளை + தாமரை]

வெள்ளைத்தாரை *veḷḷai-t-tārai,* பெ.(n.) 1. ஆவின் பிட்டத்தருகில் உள்ள வெண்ணிறக் கோடு; white streak near the root of the tail of cow. 2. வெள்ளைத் தாரையுள்ள பசு; cow with *veḷḷai-t-tārai.*

[வெள்ளை + தாரை]

வெள்ளைத்தாள் *veḷḷai-t-tāḷ,* பெ.(n.) 1. சோளப்பயிர் நோயுள் ஒன்று; a pest incident to maize crop. 2. வெண்ணிற ஏடு; blank sheet of paper.

[வெள்ளை + தாள்]

வெள்ளைத்தினை *veḷḷai-t-tiṉai,* பெ.(n.) வெண்ணிறமுள்ள தினைவகை (வின்.); white italian millet.

[வெள்ளை + தினை]

வெள்ளைத்துத்தம் *veḷḷai-t-tuttam,* பெ.(n.) துத்தநாகமுங் கந்தகமுங் கலந்த உப்புவகை; sulphate of zinc, white vitriol.

[வெள்ளை + துத்தம்]

வெள்ளைத்துத்தி *veḷḷai-t-tutti,* பெ.(n.) வெண்துத்தி; abutilon.

[வெள்ளை + துத்தி]

வெள்ளைத்தும்பி *veḷḷai-t-tumbi,* பெ.(n.) சாம்பல் நிறமும் ஐவிரல வளர்ச்சியுமுள்ள கடல்மீன்வகை; sea-fish, greyish attaining 5 in. in length.

[வெள்ளை + தும்பி]

வெள்ளைத்துமட்டன் *veḷḷai-t-tumaṭṭaṉ,* பெ.(n.) வெள்ளைத்தம்பட்டை பார்க்க; see *veḷḷai-t-tampaṭṭai.*

[வெள்ளை + தம்மட்டம்[2]]

வெள்ளைத்துரட்டிமரம் *veḷḷai-t-turaṭṭi-maram,* பெ.(n.) 1. வெள்ளைத்திரட்டு; a curved thorny variety (white + iron hook + tree). 2. நாக்குழிஞ்சான்; wood is white silky backed round leaved tree, covered all over with greyish pubescence-capparis grandis.

[வெள்ளை + துரட்டி + மரம்]

வெள்ளைத்துரிசு *veḷḷai-t-turišu,* பெ.(n.) துருசுவெள்ளை; calcined blue vitriol.

[வெள்ளை + துரிசு]

வெள்ளைத்துரிசை *veḷḷai-t-turišai,* பெ.(n.) மலைப்புனகு; wight's indian nettle.

[வெள்ளை + துரிசை]

வெள்ளைத்துவரை[1] *vel̤l̤ai-t-tuvarai,* பெ.(n.) வெண்துவரை; white coloured red-gram - cajanus cajan.

[வெள்ளை + துவரை]

வெள்ளைத்துவரை[2] *vel̤l̤ai-t-tuvarai,* பெ.(n.) 1. மரவகை; leafy fruited ebony. 2. வக்கணை; mattled ebony. 3. துவரைச் செடிவகை; a variety of pigeon-pea.

[வெள்ளை + துவரை¹]

வெள்ளைத்துளசி *vel̤l̤ai-t-tul̤aši,* பெ.(n.) வெண்துளசிச் செடி; ordinary sacred tulasy - acimum sanctum.

[வெள்ளை + துளசி]

வெள்ளைத்துறட்டி *vel̤l̤ai-t-tuṟaṭṭi,* பெ.(n.) சிறுமரவகை (இலத்.); silky-backed round - leaved caper tree.

[வெள்ளை + துறட்டி]

வெள்ளைத்தூதுவளை *vel̤l̤ai-t-tūduval̤ai,* பெ.(n.) வெள்ளைப் பூப் பூப்பதும் ஒரு வகைப் புண்ணைக் குணமாக்குவதுமான மூலிகைக் கொடி; three lobed night shade baring white flowers, a rejuvenating drug- solanum lrilo batum (albiflora).

[வெள்ளை + தூதுவளை]

வெள்ளைத்தேக்கு *vel̤l̤ai-t-tēkku,* பெ.(n.) வெண்டேக்கு; white teak.

[வெள்ளை + தேக்கு]

வெள்ளைத்தேமல் *vel̤l̤ai-t-tēmal,* பெ.(n.) வெண்தேமல்; a fungus disease of the skin.

[வெள்ளை + தேமல்]

வெள்ளைத்தேன் *vel̤l̤ai-t-tēṉ,* பெ.(n.) வெண்ணிறத்தேன்; இது பத்தியத்திற்குதவும்; white honey.

[வெள்ளை + தேன்]

வெள்ளைத்தேன்மெழுகு *vel̤l̤ai-t-tēṉ-mel̤ugu,* பெ.(n.) வெண் மெழுகு; cera alba.

[வெள்ளை + தேன் + மெழுகு]

வெள்ளைத்தொட்டாற்சிணுங்கி *vel̤l̤ai-t-toṭṭāṟ-ciṇuṅgi,* பெ.(n.) வெண்தொட்டாற் சிணுங்கி; touch me not plant bearing white flowers.

[வெள்ளை + தொட்டாற்சிணுங்கி]

வெள்ளைதோல் *vel̤l̤ai-t-tōl,* பெ.(n.) வெண்குட்டம்; leucoderma.

[வெள்ளை + தோல்]

வெள்ளைநகரம் *vel̤l̤ai-nakaram,* பெ.(n.) மதுரையில் இருந்த பலதேவர் கோயிலை *'வெள்ளை நகரம்'* என்று சிலப்பதிகாரம் குறிக்கின்றது. (ஊர்காண்காதை. 9); Bala deva temple at Madurai is called vellai nagaram, as from Cilapatikaram.

[வெள்ளை + நகரம்]

வெள்ளைநண்டு *vel̤l̤ai-naṇḍu,* பெ.(n.) வெண்ணிறமான நண்டு; white crab.

[வெள்ளை + நண்டு]

வெள்ளைநண்டுத்திருக்கை *vel̤l̤ai-naṇḍu-t-tirukkai,* பெ.(n.) திருக்கை மீன் வகையு ளொன்று; a kind of Tiruccai fish.

[வெள்ளை + நண்டு + திருக்கை]



வெள்ளைநமை *ve!!ai-namai,* பெ.(n.) வெள்ளை நாகை; button tree - anogeissus latifolia.

[வெள்ளை + நமை]

வெள்ளைநறுந்தாளி *ve!!ai-naruntā!i,* பெ.(n.) வெண்டாளி (சிலப். 13, 156, உரை); white catamaran tree.

[வெள்ளை + நறுமை + தாளி]

வெள்ளைநன்னாரி *ve!!ai-nannāri,* பெ.(n.) வெண்நன்னாரி; ordinary sassaparilla.

[வெள்ளை + நன்னாரி]

வெள்ளைநாகனம் *ve!!ai-nāganam,* பெ.(n.) வெள்ளை நேர்வாளம், a purgative shrub-croton tigilium.

[வெள்ளை + நாகனம்]

வெள்ளைநாகம் *ve!!ai-nāgam,* பெ.(n.) வெள்ளைநாகை பார்க்க; see *ve!!ai-nāgai.*

[வெள்ளை + நாகம்]

வெள்ளைநாகர் *ve!!ai-nāgar,* பெ.(n.) பலதேவர்; *Balarāma.* 1. புகர் வெள்ளை நாகர்தங்கோட்டம் (சிலப். 9, 10.)

[வெள்ளை + நாகர்]

வெள்ளைநாகை *ve!!ai-nāgai,* பெ.(n.) நீண்டமரவகை(இலத்); glabrous elliptic obtuse-leaved button tree.

[வெள்ளை + நாகை]

வெள்ளைநாங்கு[1] *ve!!ai-nāṅgu,* பெ.(n.) மரவகை (இலத்); Cannon-ball tree of the southern hills.

[வெள்ளை + நாங்கு]

வெள்ளைநாங்கு[2] *ve!!ai-nāṅgu,* பெ.(n.) வெண்ணாங்கு; asteriastigma macrocarpum.

[வெள்ளை + நாங்கு]

வெள்ளைநாயுருவி *ve!!ai-nāyuruvi,* பெ.(n.) வெண்ணாயுருவி; ordinary indian burrachyranthus aspera.

[வெள்ளை + நாயுருவி]

வெள்ளைநாவல்[1] *ve!!ai-nāval,* பெ.(n.) நாவல் வகை (இலத்.); hemispheric-tubed rose-apple.

[வெள்ளை + நாவல்]

வெள்ளைநாவல்[2] *ve!!ai-nāval,* பெ.(n.) 1. பயன் மிகுதி; white jamun. 2. வெண்ணாவல் பார்க்க; see *vennāval.* அகப்படுவதரிது.

[வெள்ளை + நாவல்]

வெள்ளைநாவி *ve!!ai-nāvi,* பெ.(n.) நாவி வகை (பதார்த்த. 1055); a species of aconite.

[வெள்ளை + நாவி]

வெள்ளைநாவினி *vellai-nāviṇi,* பெ.(n.) வெள்வேலங்காய்; fruit of white babool tree-acocia leucophtaea.

[வெள்ளை + நாவினி]

வெள்ளைநிறத்தாள் *vellai-niṟattāḷ,* பெ.(n.) கலைமகள் (பிங்.); sarasvati, as white in complexion.

[வெள்ளை + நிறத்தாள்]

வெள்ளைநீர்முள்ளி *vellai-nīr-mulli,* பெ.(n.) கற்ப மூலிகையிலொன்று; a rejuvenating drug thorny plant with white flowers hygrophila auriculata. இதன் வேர் முதல் இலை ஈறாகவுள்ள எல்லாவற்றிலும் தாம்பிரம் நீறாகும், பூவின் சாற்றினால் இதன் கட்டுறும்.

[வெள்ளை + நீர் + முள்ளி]

வெள்ளைநீலாம்பரம் *vellai-nīlāmbaram,* பெ.(n.) செடிவகை (இலத்.); crested purple nail dye.

[வெள்ளை + நீலாம்பரம்]

வெள்ளைநுணா *vellai-nuṇā,* பெ.(n.) மரவகை (இலத்.); bracteate dyeing mulberry.

[வெள்ளை + நுணா]

வெள்ளைநெல் *vellai-vel,* பெ.(n.) நெல் வகை (யாழ்.அக.); a kind of paddy.

[வெள்ளை + நெல்]

வெள்ளைநொச்சி *vellai-nocci,* பெ.(n.) வெண்ணொச்சி (இலத்.); five leaved chast tree.

[வெள்ளை + நொச்சி]

வெள்ளைநோக்கம் *vellai-nōkkam,* பெ.(n.) வெள்ளைநோக்கு பார்க்க; see *vellai-nōkku.*

[வெள்ளை + நோக்கம்]

வெள்ளைநோக்கு *vellai-nōkku,* பெ.(n.) கள்ளமற்ற பார்வை; guileless look, look of innocence. *"வெள்ளை நோக்கின் .... மழலையின் சொலார்" (சீவக. 1099).*

[வெள்ளை + நோக்கு]

வெள்ளைப்பசலி *vellai-p-paśali,* பெ.(n.) வெண் வசளை; a creeper-basella alba.

[வெள்ளை + பசலி]

வெள்ளைப்பசளை *vellai-p-paśaḷai,* பெ.(n.) வெண்பசளைக் கீரை; a creeper-basella alba.

[வெள்ளை + பசளை]

வெள்ளைப்பட்டாணி *vellai-p-paṭṭāṇi,* பெ.(n.) வெண்ணிற உருள் கடலை வகை; field pea.

[வெள்ளை + பட்டாணி?]

வெள்ளைப்படல் *vellai-p-paḍal,* பெ.(n.) நோய்வகை; leucorrhoea.

[வெள்ளை + படல்]

வெள்ளைப்படலம் *vellai-p-paḍalam,* பெ.(n.) 1. கண்ணோய் வகை; an eye disease marked by flesh growth which is white in colour. 2. வெள் விழியில் சவ்வு படர்ந்து கண் புகைச்சல் மற்றும் பார்வை மங்கல் உண்டாகும்; a spreading growth in the white of the eye.

[வெள்ளை + படலம்]

வெள்ளைப்பணியாள் *ve!!ai-p-paṇiyā!,* பெ.(n.) கலைமகள்; saraswathi, god of knowledge.

[வெள்ளை + பணி → பணிஆள்]

வெள்ளைப்பரண்டா *ve!!ai-p-paraṇḍā,* பெ.(n.) வெண்ணிறப் பரண்டா மீன் (தஞ்சை. மீன.); a white variety of *paraṇḍā* fish.

[வெள்ளை + பரண்டா]

வெள்ளைப்பவளம் *ve!!ai-p-pava!am,* பெ.(n.) ஒருவகை மணி (யாழ்.அக.); a kind of gem.

[வெள்ளை + பவளம்]

வெள்ளைப்பற்பம் *ve!!ai-p-paṟpam,* பெ.(n.) மாழைத்துகள்; calcined metallic powder.

[வெள்ளை + பற்பம்]

Skt. Basman > த. பற்பம்

வெள்ளைப்பனங்கிழங்கு *ve!!ai-p-paṉaṅ-ki!aṅgu,* பெ.(n.) வெண்பனங்கிழங்கு; polypodeum taxifolium.

[வெள்ளை + பனம் + கிழங்கு]

வெள்ளைப்பனையேறி *ve!!ai-p-paṉai-yēṟi,* பெ.(n.) ஒரு வகை கடல் மீன்; a silvery white sea fish with brown spots in the upper third of body in front half-imbassis dussumieri.

[வெள்ளை + பனையேறி]

வெள்ளைப்பாகல்[1] *ve!!ai-p-pākal,* பெ.(n.) கூழ் (பாகல்) வகை (யாழ்.அக.); white balsam pear.

[வெள்ளை + பாகல்]

வெள்ளைப்பாகல்[2] *ve!!ai-p-pākal,* பெ.(n.) வெள்ளைப் பாகற்காய்க்கொடி; climber bearing white carilla fruit (bitter gourd-momordica charatia).

[வெள்ளை + பாகல்]

வெள்ளைப்பாசாணசுத்தி *ve!!ai-p-pāšāṇa-šutti,* பெ.(n.) தெளிந்த வெள்ளை நஞ்சு; purification of white arsenic.

வெள்ளைப்பாசாணம்[1] *ve!!ai-p-pāšāṇam,* பெ.(n.) பிறவி நஞ்சு முப்பத்திரெண்டனு ளொன்று (பதார்த்த. 1160); a mineral poison, one of 32.

வெள்ளைப்பாசாணம்[2] *ve!!ai-p-pāšāṇam,* பெ.(n.) ஒரு வகை நஞ்சு; white oxide of arsenic. இது மாழைகளைப் போல் நிலத்திலிருந்து வெட்டியெடுக்கப்படும்.

[வெள்ளை + பாசாணம்]

வெள்ளைப்பாசி *ve!!ai-p-pāši,* பெ.(n.) வெண்ணிறக் கடற்பாசி (முகவை. மீன.); a kind of sea moss.

[வெள்ளை + பாசி]

வெள்ளைப்பாட்டு *ve!!ai-p-pāṭṭu,* பெ.(n.) வெண்பா; one of the four principal kinds of pactic form.

[வெள்ளை + பாட்டு]

வெள்ளைப்பாதிரி *ve!!ai-p-pādiri,* பெ.(n.) பாதிரி மரவகை (இலத்.); trumpet flower.

[வெள்ளை + பாதிரி]

வெள்ளைப்பாயறு *ve!!ai-p-pāyaṟu,* பெ.(n.) எருக்கிலை; leaf madar-calotropis giganteci.

வெள்ளைப்பாவட்டை *vellai-p-pāvattai,* பெ.(n.) வெண்மை நிறப் பூக்களையுடைய பாவட்டை; pavata indica bearing white flowers.

[வெள்ளை + பாவட்டை]

வெள்ளைப்பித்தளை *vellai-p-pittalai,* பெ.(n.) வெண் குடவம் (பித்தளை); german silver.

[வெள்ளை + பித்தளை]

Skt. *pittalā* > த. பித்தளை.

வெள்ளைப்பில்லாஞ்சி *vellai-p-pillāñji,* பெ.(n.) 1. செடிவகை; a plant or shrub bearing white fruits. 2. பூலா; phyllanthas multiflorus or fluggea lemcopyrus.

[வெள்ளை + பில்லாஞ்சி]

வெள்ளைப்பிள்ளை *vellai-p-pillai,* பெ.(n.) கவடமற்றவன் (வஞ்சகமற்றவன்) –(யாழ்.அக.); innocent man. 2. மரவகை; small - leathery - dowry glabrate ovatelance dented acuminate-leaved child's amulet-tree.

[வெள்ளை + பிள்ளை]

வெள்ளைப்பீர்க்கு[1] *vellai-p-pīrkku,* பெ.(n.) பீர்க்கு வகை (மலை.); sponge gourd.

[வெள்ளை + பீர்க்கு]

வெள்ளைப்பீர்க்கு[2] *vellai-p-pīrkku,* பெ.(n.) வெண்பீர்க்கு; white luffa.

[வெள்ளை + பீர்க்கு]

வெள்ளைப்புடலை *vellai-p-pudalai,* பெ.(n.) வெண்புடலை; white coloured snake gourd-Tricho santhes anguina.

[வெள்ளை + புடலை]



வெள்ளைப்புண் *vellai-p-pun,* பெ.(n.) ஊன் வெளுத்து மெல்லியதாய் மேல் வளர்ந்து எளிதிலாறாத புண் (இங். வை. 301); weak ulcer, wound with large flabby pale granulations.

[வெள்ளை + புண்]

வெள்ளைப்புத்தி *vellai-p-putti,* பெ.(n.) 1. அறியாமை; innocence. 2. அறிவுக்குறை (இ.வ.); stupidity.

[வெள்ளை + புத்தி]

Skt. Buddhi > த. புத்தி.

வெள்ளைப்புரசு *vellai-p-purašu,* பெ.(n.) செடிவகை (இலத்.); lilac silky labur num.

[வெள்ளை + புரசு]

வெள்ளைப்புள்ளி *vellai-p-pulli,* பெ.(n.) கரப்பான்; eczema.

[வெள்ளை + புள்ளி]

வெள்ளைப்புனல்முருங்கை *vellai-p-punal-murungai,* பெ.(n.) 1. புண்ணாற்றும் மூலிகை; rejuvenating medicine. 2. கற்ப மூலிகை; a rejuvenating drug.

[வெள்ளை + புனல் + முருங்கை]

வெள்ளைப்புனுகு *ve*ḷ*ḷai-p-pu*ṉ*ugu,* பெ.(n.) அரசர்கள் நெற்றியில் பொட்டாகப் பயன் படுத்துவது; white civet used as a mark in the bore head by Rajahs.

[வெள்ளை + புனுகு]

வெள்ளைப்புனை *ve*ḷ*ḷai-p-pu*ṉ*ai,* பெ.(n.) மரவகை (இலத்.); cuspidated-leaved calycine copton.

[வெள்ளை + புனை]

வெள்ளைப்பூகிகம் *ve*ḷ*ḷai-p-pūkikam,* பெ.(n.) வெள்ளரி; cucumber-cucumis sativus.

[வெள்ளை + பூகிகம்]

வெள்ளைப்பூங்கார் *ve*ḷ*ḷai-p-ūṅkār,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[வெள்ளை + பூங்கார்]

வெள்ளைப்பூச்சு *ve*ḷ*ḷai-p-pūccu,* பெ.(n.)
1. வெள்ளையடிக்கை; white washing.
2. தவறு முதலியவற்றை மழுப்பி மறைக்கை (இ.வ.); glossing over, as mistakes.

[வெள்ளை + பூச்சு]

வெள்ளைப்பூசனி *ve*ḷ*ḷai-p-pūša*ṉ*i,* பெ.(n.) ஒருவகைப் பூசனிக்காய்; a kind of gourd; as gourd creeper-beṅincasa cerifera.

மறுவழக்கு : பெரும்பூசனி, கலியாணப் பூசனி, சாம்பற் பூசனி.

[வெள்ளை + பூசனி]

வெள்ளைப்பூடு *ve*ḷ*ḷai-p-pū*ḍ*u,* பெ.(n.)
1. மருத்துவ உப்பு; medicinal three salts.
2. பூடுவகை; garlic-allium satiram.

[வெள்ளை + பூடு]

வெள்ளைப்பூண்டு[1] *ve*ḷ*ḷai-p-pū*ṇ*ḍu,* பெ.(n.) கடற்கரையோரத்தில் வளருஞ் சங்கு (புதுகை. மீன.); conch growing near sea-bed.

[வெள்ளை + பூண்டு]

வெள்ளைப்பூண்டு[2] *ve*ḷ*ḷai-p-pū*ṇ*ḍu,* பெ.(n.) சமையலுக்குப் பயன்படுத்தும் ஒருவகைப் பூண்டு (பதார்த்த. 1048); garlic.

[வெள்ளை + பூண்டு]

வெள்ளைப்பூண்டு[3] *ve*ḷ*ḷai-p-pū*ṇ*ḍu,* பெ.(n.) மருத்துவ குணம் கொண்ட பூடுவகை; garlic allium sativum.

[வெள்ளை + பூண்டு]

வெள்ளைப்பூண்டுச்சாறு *ve*ḷ*ḷai-p-pū*ṇ*ḍu-c-cā*ṟ*u,* பெ.(n.) பூண்டிலிருந்து எடுக்கப்படும் சாறு இதை விரலால் தொட்டு உள் நாக்கின் வளர்ச்சிக்குத் தடவ சுருக்கமாகும்; juice of garlic, elongated uvula is cured if touched with this juice.

[வெள்ளை + பூண்டு + சாறு]

வெள்ளைப்பூத்தாளி *ve*ḷ*ḷai-p-pūttā*ḷ*i,* பெ.(n.) செந்தணக்கு (இலத்.); false traga-canth.

[வெள்ளை + பூத்தாளி]

வெள்ளைப்பூதுத்தி *ve*ḷ*ḷai-p-pū-tutti,* பெ.(n.) வெண்பூ விடும் ஒரு வகை துத்தி; in idna mallow bearing white flowers-abutilon indicum (albiflora).

[வெள்ளை + பூ + துத்தி]

வெள்ளைப்பூந்தூதுவளை *ve*ḷ*ḷai-p-pūn-tūdu-va*ḷ*ai,* பெ.(n.) வெள்ளைத் தூதுவளை; prickly shoonday bearing white flowers solanum trilobatum (albiflora).

[வெள்ளை + பூ + தூதுவளை]

வெள்ளைப்பூம்பாளை *veḷḷai-p-pūmpāḷai,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy (A.).

[வெள்ளை + பூம்பாளை]

வெள்ளைப்பூலா *veḷḷai-p-pūlā,* பெ.(n.) 1. பூலாவகை; small indian snowberry. 2. வெள்ளைப்பூலாஞ்சி பார்க்க; see *veḷḷai-p-pūlāñji.*

[வெள்ளை + பூலா]

வெள்ளைப்பூலாஞ்சி¹ *veḷḷai-p-ūplāñji,* பெ.(n.) வெள்ளைப் பூலா; white honey shrub which bears white fruits-fluggealeacopyrus.

[வெள்ளை + பூலாஞ்சி]

வெள்ளைப்பூலாஞ்சி² *veḷḷai-p-pūlāñji,* பெ.(n.) பெருஞ்செடி வகை (இலத்.); indian snow berry.

[வெள்ளை + பூலாஞ்சி]

வெள்ளைப்பூவாத்தி *veḷḷai-p-pūvātti,* பெ.(n.) மரவகை (இலத்.); white variegated mountain ebony.

[வெள்ளை + பூவாத்தி]

வெள்ளைப்பூவி *veḷḷai-p-pūvi,* பெ.(n.) கோவை; coccinia indica.

[வெள்ளை + பூவி]

வெள்ளைப்பூவில்சூதங்கட்டி *veḷḷai-p-pūvil-šūdaṅ-kaṭṭi,* பெ.(n.) விட்டுணு கரந்தை; a plant-sphoeranthes indicus.

வெள்ளைப்பெருங்காயம் *veḷḷai-p-peruṅkāyam,* பெ.(n.) ஒரு வகை வைப்புப் பெருங்காயம்; white asafoctide.

[வெள்ளை + பெருங்காயம்]

வெள்ளைப்பெரும்பாடு *veḷḷai-p-perumbāḍu,* பெ.(n.) அரத்தம் வெண்ணிறமாக மாறி ஒழுகப் பெற்ற ஓர் பெரும்பாடு; leucorrhoea.

[வெள்ளை + பெரும்பாடு]

வெள்ளைப்பேச்சு *veḷḷai-p-pēccu,* பெ.(n.) 1. வெளிப்படையான சொல்; plainb speech. 2. கவடமில்லாத பேச்சு; guileless speech.

[வெள்ளை + பேச்சு]

வெள்ளைப்பொன் *veḷḷai-p-poṉ,* பெ.(n.) மாற்றுக் குறைவான தங்கம்; pale gold, as an inferior alloy.

[வெள்ளை + பொன்]

வெள்ளைப்பொன்னாவிரை¹ *veḷḷai-p-poṉṉā-virai,* பெ.(n.) செடிவகை (வின்.); italian senna.

[வெள்ளை + பொன்னாவிரை]

வெள்ளைப்பொன்னாவிரை² *veḷḷai-p-poṉṉā-virai,* பெ.(n.) ஆவிரை வகையுள் ஒன்று; a white species of cassia-cassia obarata.



வெள்ளைப்போக்கு *vellai-p-pōkku,* பெ.(n.) வெள்ளை யொழுக்கு நோய்; gohorrhoes.

[வெள்ளை + போக்கு]

வெள்ளைப்போளம்[1] *vellai-p-pōlam,* பெ.(n.) சிறுமரவகை (பைஷஜ. 133); myrrh.

[வெள்ளை + போளம்]

வெள்ளைப்போளம்[2] *vellai-p-pōlam,* பெ.(n.) ஒரு வகை மணி (யாழ்.அக.); a kind of gem.

[வெள்ளை + போளம்]

வெள்ளைப்போளம்[3] *vellai-p-pōlam,* பெ.(n.) 1. வாலேந்திர போளம்; a kind of recinous gum - balsa modendran myrrh. 2. கருஞ் சிவப்பும் கசப்பும் நறுமணமுமுடைய ஒரு வகைப் பிசின்; bayce balsam, myrrh, woman bol.

வெள்ளைபுரள்(ளு)-தல் *vellai-pural(lu)-,* செ.கு.வி. (v.i.) மல்லாக்கக் கிடத்தல் (யாழ்.அக.); to lie on one's back with face turned skyward.

[வெள்ளை + புரள்(ளு)-,]

வெள்ளைபூசு-தல் *vellai-pūšū-,* செ.கு.வி. (v.i.) 1. சுண்ணாம்படித்தல்; ti wgute wash. 2. தவறு முதலியவற்றை மழுப்புதல்; to gloss over, as mistakes. 3. வெள்ளை வை-, பார்க்க; see *vellai-vai-,*

[வெள்ளை + பூசு-,]

வெள்ளைபூண்(ணு)-தல் *vellai-pūn(nu)-,* செ.கு.வி. (v.i.) வெள்யாடையுடுத்தல் (வின்.); to put on white dress.

[வெள்ளை + பூண்(ணு)-,]

வெள்ளைமகன் *vellai-magan,* பெ.(n.) மூடன்; sim pleton. *"வெள்ளை மகன் போல் விலாவிற நக்கு" (மணி. 14, 36).*

[வெள்ளை + மகன்]

வெள்ளைமட்டவா *vellai-mattavā,* பெ.(n.) கூறி (மீன்து.அக.) பார்க்க; see *kūri.*

[வெள்ளை + மட்டவா]

வெள்ளைமட்டி *vellai-matti,* பெ.(n.) வெள்ளைமருது 2 பார்க்க (இலத்.); see *vellai-marudu.*

தெ. தெல்லமட்டி.

[வெள்ளை + மட்டி]

வெள்ளைமட்டிவாயன் *vellai-matti-vāyan,* பெ.(n.) வெள்ளை நிறமும் 16 விரல வளர்ச்சியுமுள்ள கடல்மீன்வகை; seafish, silvery attaining 16 in. in length.

[வெள்ளை + மட்டிவாயன்]

வெள்ளைமட்டுவா *vellai-mattuvā,* பெ.(n.) வெள்ளை மட்டிவாயன் பார்க்க; see *vellai-matti-vāyan.*

[வெள்ளை + மட்டுவா]

வெள்ளைமடந்தை *vellai-madandai,* பெ.(n.) வெள்ளி மடந்தை (இலத்.) பார்க்க; see *velli-madandai.*

[வெள்ளை + மடந்தை]

வெள்ளைமந்தாரம்[1] *vellai-mandāram,* பெ.(n.) வெண்முகில் 1 பார்க்க; see *ven-mukil1.*

[வெள்ளை + மந்தாரம்]

வெள்ளைமந்தாரம்² *vellai-mandāram,* பெ.(n.) வெள்ளைமந்தாரை பார்க்க (இ.வ.); see *vellai-mandārai.*

[வெள்ளை + மந்தாரம்²]

வெள்ளைமந்தாரை¹ *vellai-mandārai,* பெ.(n.) கொக்கு மந்தாரை; taper-pointed mountain ebony.

[வெள்ளை + மந்தாரை]

வெள்ளைமந்தாரை² *vellai-mandārai,* பெ.(n.) 1. ஒரு வகை வெள்ளைப் பூஞ்செடி; a flowering plant-bauhinia acuminata. 2. ஒரு கற்ப மூலிகை; a plant used in longevity of life.

வெள்ளைமந்தி *vellai-mandi,* பெ.(n.) மந்தி வகை; bonnet monkey.

[வெள்ளை + மந்தி]

வெள்ளைமயிர் *vellai-mayir,* பெ.(n.) நரை மயிர் (பைஷஜ); grey hair.

[வெள்ளை + மயிர்]

வெள்ளைமரம் *vellai-maram,* பெ.(n.) மர வகை; white cedar (C.E.M.).

[வெள்ளை + மரம்]

வெள்ளைமருதம் *vellai-marudam,* பெ.(n.) உறுதியான மரவகைகளுள் ஒன்று, உத்தரம், விட்டம், பட்டியல்களாகப் பயன்படுவதுண்டு (பொ. வழ.); a strong stable wood, used as beam, rafter etc.

[வெள்ளை + மருதம்]

வெள்ளைமருது¹ *vellai-marudu,* பெ.(n.) 1. பூமருது; flowering murdah. 2. நீர்மருது (இலத்.); arjuna.

[வெள்ளை + மருது]

வெள்ளைமருது² *vellai-marudu,* பெ.(n.) வெள்ளைப் பூ பூக்கும் ஆற்று மருத மரம்; a tree-terminalia arjuna myrobalan.

வெள்ளைமருதை *vellai-marudai,* பெ.(n.) வெள்ளைமருது பார்க்க; see *vellai-marudu.*

[வெள்ளை + மருதை]

வெள்ளைமழை *vellai-malai,* பெ.(n.) சிறு மழை; scanty, light rain. *"வெள்ளை மழையென்றே விளம்பு" (சினேந். 4, 21).*

[வெள்ளை + மழை]

வெள்ளைமனம் *vellai-manam,* பெ.(n.) கவடமற்ற தூயமனம்; simple, guileless mind.

[வெள்ளை + மனம்]

வெள்ளைமனிதன் *vellai-manidan,* பெ.(n.) வெள்ளைக்காரன் பார்க்க; see *vellai-k-kāran.* 2. கவடமற்றவன்; simple minded person.

[வெள்ளை + மனின்]

Skt. manu-ja > த. மனிதன்.

வெள்ளைமாதளை *vellai-madalai,* பெ.(n.) ஒரு மாதளை; a species of pomogranate.

[வெள்ளை + மாதளை]

வெள்ளைமாதுளை *vellai-madulai,* பெ.(n.) வெள்ளை விதைகளையுடைய மாதுளை வகை; a kind of pomegranate having white seeds in its fruit.

[வெள்ளை + மாதுளை]

வெள்ளைமாளர் *vel̤l̤ai-māl̤ar,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a sangam poet. இவர் பாடிய ஏறாண் முல்லைத் துறை (புறநா. 296) மிக்க பொருள் நயமுடையது.

வெள்ளைமிளகாய் *vel̤l̤ai-mil̤akāy,* பெ.(n.) வெண்மிளகாய்; white chily.

[வெள்ளை + மிளகாய்]

வெள்ளைமிளகி *vel̤l̤ai-mil̤agi,* பெ.(n.) மடங்கல், கன்னி மாதங்களில் விதைத்து ஐந்து மாதங்களில் அறுவடையாகும் சம்பாநெல்வகை; a kind of *campā* paddy, sown in *avaṇi puraṭṭāśi*, maturing in five months.

[வெள்ளை + மிளகி]

வெள்ளைமிளகு[1] *vel̤l̤ai-mil̤aku,* பெ.(n.) 1. மரவகை (பதார்த்த. 952); china pepper. 2. மிளகு (இலத்.); common pepper. 3. கருமிளகிலிருந்து செய்யப்படும் வெண்மிளகு; white pepper, prepared from black pepper. 4. வெள்ளைமிளகி பார்க்க; see *vel̤l̤ai-mil̤aki.*

[வெள்ளை + மிளகு]

வெள்ளைமிளகு[2] *vel̤l̤ai-mil̤aku,* பெ.(n.) 1. வெண்ணிறமான மிளகு; white pepper is only black-pepper rid off its skin. வயிற்று வலி முதலியவற்றுக்குப் (கிரகணி, சிலேஷ்மவாதம், சீழ்ப்பிரமேகம்) பயன்படுத்த நல்ல குணம் தரும். 2. தோலைப் போக்கின மிளகுப் பழத்தின் வித்து; pepper rid of its skin. 3. பழத்தின் விதை; seed of a fruit.

[வெள்ளை + மிளகு]

வெள்ளைமுயல் *vel̤l̤ai-muyal,* பெ.(n.) வெண்முயல்; white rabbit.

[வெள்ளை + முயல்]



வெள்ளைமுரல் *vel̤l̤ai-mural,* பெ.(n.) செத்தமுரல் (மீன்து.அக.) பார்க்க; see *setta-mural.*

[வெள்ளை + முரல்]

வெள்ளைமுருக்கு *vel̤l̤ai-murukku,* பெ.(n.) வெள்ளைப் பூவுடைய கலியாண முருங்கை மரம்; a thorny tree bearing white flowers-erythrina indica (albiflora).

[வெள்ளை + முருக்கு]

வெள்ளைமுழி *vel̤l̤ai-muḻi,* பெ.(n.) வெண்முழி; an eye in which the white part is very large wall eye. it is a popular name for glaucoma (a disease of a eye).

[வெள்ளை + முழி]

வெள்ளைமுள்முருங்கை *vel̤l̤ai-mul̤-muruṉkai,* பெ.(n.) வெள்ளைப் பூ பூக்கும் கலியான முருங்கை; a thorny tree bearing white flowers eythrina indica (albiflora).

[வெள்ளை + முள் + முருங்கை]

வெள்ளைமுள்வேல் *vel̤l̤ai-mul̤-vēl,* பெ.(n.) குடைவேல் (இலத்.); buffalo-thorn cutch.

[வெள்ளை + முள்வேல்]

வெள்ளைமுள்ளி[1] *vellai-mulli,* பெ.(n.) செடி வகை; (L.) lesser yellow nail-dye.

[வெள்ளை + முள்ளி]

வெள்ளைமுள்ளி[2] *vellai-mulli,* பெ.(n.) கடல்படு சிப்பியுளொருவகை (நெல்லை. மீன.); a sea based oyster a sea shell-fish.

வெள்ளைமூங்கில் *vellai-mūṅkil,* பெ.(n.) மூங்கில் வகை; yellow bamboo.

[வெள்ளை + மூங்கில்]

வெள்ளைமூர்த்தி *vellai-mūrtti,* பெ.(n.) 1. பலதேவர் (சிலப். 5, 171, உரை); bala *dēva.* 2. நின்மலவடிவன்; one whose form is pure or immaculate.

[வெள்ளை + மூர்த்தி]

Skt. *mūrti* > த. மூர்த்தி.

வெள்ளைமெய்யாள் *vellai-meyyāl,* பெ.(n.) வெள்ளைமேனியாள் பார்க்க (சூடா.); see *vellai-mēniyāl.*

[வெள்ளை + மெய்யாள்]

வெள்ளைமெழுகு *vellai-melugu,* பெ.(n.) சுத்தி செய்த தேன் மெழுகு; purified honey wax.

[வெள்ளை + மெழுகு]

வெள்ளைமேகம் *vellai-mēgam,* பெ.(n.) வெண்முகில்; white venereal discharge.

[வெள்ளை + மேகம்]

வெள்ளைமை *vellaimai,* பெ.(n.) அறிவின்மை; ignorance. *"வெள்ளைமை கலந்த .... புன்சொன்மாற்றம்"* (பெருங். இலாவாண. 19, 21).

வெள்ளைமைனா *vellai-maiṉā,* பெ.(n.) பாப்பாத்தி மைனா; pagoda-thrush (M.M.533).

[வெள்ளை + மைனா]

வெள்ளையகில் *vellai-yakil,* பெ.(n.) வெள்ளை நிறமான அகிற்கட்டை; white species of eagle wood.

[வெள்ளை + அகில்]

வெள்ளையஞ்சனக்கல் *vellai-yañcaṉa-k-kal,* பெ.(n.) ; white aatimony which is applied to the conjanctive to ensure acute vision.

[வெள்ளை + அஞ்சனக்கல்]

வெள்ளையடம்பு *vellai-yadambu,* பெ.(n.) வெண்ணடம்பு; white adambo.

[வெள்ளை + அடம்பு]

வெள்ளையடி-த்தல் *vellai-y-adi-,* செ.கு.வி. (v.i.) வெள்ளை பூசு-, 1, 2 பார்க்க; see *vellai-pūšu-, 1, 2.*

[வெள்ளை + அடி-,]

வெள்ளையடுக்கரளி *vellai-yadu-k-karali,* பெ.(n.) அடுக்கலரி; nerium bearing double whorl flowers-nerium odorum.

[வெள்ளை + அடுக்கு + அரளி]

வெள்ளையணு *vellai-yaṉu,* பெ.(n.) அரத்தத்தில் விரைவாக நகரக் கூடியதும் நோயை எதிர்க்கும் ஆற்றலைக் கொண்டதுமான வெள்ளை நிற உயிரணு; white blood cell, white corpuscle.

[வெள்ளை + அணு]

வெள்ளையத்தி *ve!!ai-yatti,* பெ.(n.) கல்லத்தி; a kind of big tree.

[வெள்ளை + அத்தி]

வெள்ளையப்பம் *ve!!ai-yappam,* பெ.(n.) ஒரு வகை உப்புப் பணியாரம் (இ.வ.); a savoury cake made of dough.

[வெள்ளை + அப்பம்]

வெள்ளையப்பன் *ve!!ai-yappaṉ,* பெ.(n.) வெள்ளிக்காசு – பணம் (கொச்சை); the silver rupee.

[வெள்ளை + அப்பன்]

வெள்ளையம்புலி *ve!!aiyam-puli,* பெ.(n.) முட்டையின் வெண்கரு; white of an egg-albumen.

[வெள்ளையம் + புலி]

வெள்ளையம்மான்பச்சரிசி *ve!!aiyammāṉ-paccariši,* பெ.(n.) அம்மான் பச்சரிசி வகை (வின்.); a plant.

வெள்ளையரிங்கை *ve!!ai-yariṅkai,* பெ.(n.) வெள்ளுருவை பார்க்க; see *ve!!uruvai.*

[வெள்ளை + அரிங்கை]

வெள்ளையல்லி *ve!!ai-alli,* பெ.(n.) அல்லி; water lily bearing white flowes.

[வெள்ளை + அல்லி]

வெள்ளையலரி *ve!!ai-yalari,* பெ.(n.) வெள்ளலரி; nerium odorum-albiflora.

[வெள்ளை + அலரி]

வெள்ளையவரை *ve!!ai-yavarai,* பெ.(n.) வெண்மை நிறவகை; dolichos lab lab (tropical) bearing white fruits kitchen garden white lab lab.

[வெள்ளை + அவரை]

வெள்ளையவுரி *ve!!ai-yavuri,* பெ.(n.) வெண்ணிறமான அவுரிச்செடி; a white species of indigo plant.

[வெள்ளை + அவுரி]

வெள்ளையறிக்கை *ve!!ai-aṟikkai,* பெ.(n.) ஒன்றைக் குறித்த அரசின் கொள்கை நிலையை விளக்கும் அறிக்கை; white paper.

[வெள்ளை + அறிக்கை]

வெள்ளையன் *ve!!aiyaṉ,* பெ.(n.) 1. வெண்மை நிறமுள்ளவன்; skinned person, albino. 2. வெள்ளைக்காரன் பார்க்க; see *ve!!ai-k-kāraṉ.* 3. வெள்ளையப்பன் பார்க்க; see *ve!!ai-yappaṉ.*

வெள்ளையாடை *ve!!ai-yāḍai,* பெ.(n.) 1. கைம்பெண் உடுக்கும் வெள்ளைப் புடவை; white cloth worn by widows. 2. வெள்ளைவேட்டி பார்க்க; see *ve!!ai-vētti.*

[வெள்ளை + ஆடை]

வெள்ளையாதளை *ve!!ai-yādaḷai,* பெ.(n.) வெண்ணிற ஆதளை; white castor, castor plant bearing whtie seeds.

[வெள்ளை + ஆதளை]

வெள்ளையாமணக்கு *ve!!ai-yāmaṇakku,* பெ.(n.) வெண்ணாமணக்கு; castor, castor plant bearing white seeds.

[வெள்ளை + ஆமணக்கு]

வெள்ளையாமிதம் *ve!!ai-yāmitam,* பெ.(n.) வெண்முள்ளிக்கீரை பார்க்க; see *veṉ-mu!!i-k-kīrai.*

வெள்ளையாவரை *vel̤l̤ai-yāvarai,* பெ.(n.) ஒரு வகை யாவரை; a plant.

[வெள்ளை + யாவரை]

வெள்ளையாவிரை *vel̤l̤ai-yāvirai,* பெ.(n.) வெள்ளையாவரை பார்க்க; see *vel̤l̤ai-yāvarai.*

[வெள்ளை + யாவிரை]

வெள்ளையானை *vel̤l̤ai-yānai,* பெ.(n.) 1. வெண்ணிறமுள்ள யானை; white elephant. 2. தேவேந்தனின் ஊர்தியாகிய யானை (அயிராவதம்) (திருவிளை.); indra's elephant. 3. அதிகச் செலவு (புதுமை.); possession which is burdensome owing to the high cost of its maintenance. *'அந்த வெள்ளை யானைக்கு நம்மால் தீனிபோட முடியாது'.*

[வெள்ளை + யானை]

வெள்ளையானையூர்தி *vel̤l̤ai-yānai-yūrdi,* பெ.(n.) வானவர்க்கரசன்; indra as riding the white elephant airavatam. 2. ஐயனார் (பிங்.); *aiyaṉār.*

[வெள்ளை + யானை + ஊர்தி]

வெள்ளையானைவாகனன் *vel̤l̤ai-yānai-vāgaṉaṉ,* பெ.(n.) வெள்ளையானையூர்தி (இலக்.அக.) பார்க்க; see *vel̤l̤ai-yānai-yūrdi.*

[வெள்ளை + யானை + வாகனன்]

Skt. *vāhana* > த. வாகனன்.

வெள்ளையானைவேர் *vel̤l̤ai-yānai-vēr,* பெ.(n.) இறைச்சி; meat.

[வெள்ளை + யானை + வேர்]

வெள்ளையிண்டு[1] *vel̤l̤ai-yiṇḍu,* பெ.(n.) வெள்ளிண்டு பார்க்க; (L) see *vel̤l̤iṇḍu.*

வெள்ளையிண்டு[2] *vel̤l̤ai-yiṇḍu,* பெ.(n.) கருவேலமரம்; acacia intsia.

வெள்ளையிறால் *vel̤l̤ai-iṟāl,* பெ.(n.) இந்த இறால் ஒரு விரல் அளவுடையதாயிருக்கும் பொழுது கடலிலிருந்த ஆற்றுத் துறையிலும், கழியிலும் புழுந்து அங்கு வளரும். அவ்வாறு வளரும் பொழுது சிறிது பச்சை நிறமாகக் காணப்படும் (செங்கை. மீன.); IRAL fish migrates, when it attains of finger's size, to bark water and natural saltpan. At this stage it looks as slight given colour.

[வெள்ளை + இறால்]

வெள்ளையிலை *vel̤l̤ai-yilai,* பெ.(n.) வெள்ளிமடந்தை (இலத்.) பார்க்க; see *vel̤l̤i-maḍantai.*

[வெள்ளை + இலை]

வெள்ளையிற்கூடுதல் *vel̤l̤aiyiṟ-kūḍudal,* பெ.(n.) கடல்மேற் சென்று மீன் பிடி தொழிற்பட்டார் உணவு கொள்ள முற்படுதல்; taking food by fishermen engaged in fishing.

[வெள்ளையில் + கூடுதல்]

வெள்ளையீரல் *vel̤l̤ai-yīral,* பெ.(n.) வெள்ளீரல் பார்க்க; see *vel̤l̤īral.*

[வெள்ளை + ஈரல்]

வெள்ளையீருவல்லி *vel̤l̤ai-īruvalli,* பெ.(n.) கூட்டரளிமரம் பார்க்க; see *kūṭṭaral̤i-maram.*

[வெள்ளை + ஈருவல்லி]

வெள்ளையீருள்ளி *vel̤l̤ai-yīrul̤l̤i*, பெ.(n.) வெண்ணிறமான வெங்காயம்; white coloured onion-allium cepa.

[வெள்ளை + ஈருள்ளி]

வெள்ளையுஞ்சள்ளையும் *vel̤l̤aiyu-ñ-cal̤l̤aiyum*, பெ.(n.) வெண்மையானவுடை; white dress or clothes. *'அவன் வெள்ளையுஞ்சள்ளையுமாய்ப் போகிறான்'* *(இணைமொழி).*

வெள்ளையுப்பி *vel̤l̤ai-uppi*, பெ.(n.) கருப்புக்கெதிரான உப்பிலாங் கொடி; ordinary stinking swallow wort-pentatropis micrphylla.

[வெள்ளை + உப்பி]

வெள்ளையுருவாள் *vel̤l̤ai-yuruvāl̤*, பெ.(n.) வெள்ளைமேனியாள் பார்க்க (நாமதீப. 56); see *vel̤l̤ai-mēṉiyāl̤*.

[வெள்ளை + உருவாள்]

வெள்ளையுள்முள்ளு *vel̤l̤aiyul̤-mul̤l̤u*, பெ.(n.) குடைவேல்; acacia plomifrous.

[வெள்ளையுள் + முள்ளு]

வெள்ளையூடகம் *vel̤l̤ai-vūḍagam*, பெ.(n.) வெண்ணிறத்து ஊடகமெனுங் கடல் மீன் (முகவை. மீன.); a white sea fish called UDAGAM.

[வெள்ளை + ஊடகம்]

வெள்ளையூதம் *vel̤l̤ai-yūdam*, பெ.(n.) வெண்கடுகு; white mustard.

வெள்ளையூமத்தை *vel̤l̤ai-yūmattai*, பெ.(n.) 1. வெள்ளூமத்தை பார்க்க; see *vel̤l̤ūmattai*. 2. அடுக்கூமத்தை; downy datura.

[வெள்ளை + ஊமத்தை]

வெள்ளையெருக்கு *vel̤l̤ai-yerukku*, பெ.(n.) வெண்மைநிற எருக்கஞ் செடிவகை; mader bearing white flowers-calotrop is gigantea-albiflora.

[வெள்ளை + எருக்கு]

வெள்ளையெடு-த்தல் *vel̤l̤ai-yeḍu-*, செ.கு.வி. (v.i.) 1. பாடையுடன் மேற்கட்டி யெடுத்தல் (இ.வ.); to carry the pall. 2. அழுக்காடைகளை வெளுத்தற்கு எடுத்துப் போதல்; to take clothes to the wast.

[வெள்ளை + எடு-]

வெள்ளையெழுத்து *vel̤l̤ai-yeḻuttu*, பெ.(n.) வெள்ளெழுத்து பார்க்க; see *vel̤l̤eḻuttu*.

[வெள்ளை + எழுத்து]

வெள்ளையெள்ளு *vel̤l̤ai-yel̤l̤u*, பெ.(n.) 1. கழுவி தூய்மைசெய்து மேல் தோலைப் போக்கிய எள்ளு; segame washed and cleaned of its skin. 2. எள்ளு வகையில் ஒன்று; white variety of sesame-sesamum orientale.

[வெள்ளை + எள்ளு]

வெள்ளையெறி-தல் *vel̤l̤ai-yeṟi-*, செ.கு.வி. (v.i.) 1. வெண்மை பெறச் செய்தல் (மலைபடு. 441, உரை); to whiten or brighten. 2. வெள்ளை வீசு-, பார்க்க; see *vel̤l̤ai-vīśu-*.

[வெள்ளை + எறி-,]

வெள்ளையொட்டடை *vel̤l̤ai-yoṭṭaḍai*, பெ.(n.) நெல்வகை (இ.வ.); a kind of paddy.

[வெள்ளை + ஒட்டடை]

வெள்ளையொழுக்கு *vellai-yolukku,* பெ.(n.) மேக நோய்; a venereal disease in which there is frequent discharge of semen - a transparent mucous discharge from the urethra.

[வெள்ளை + ஒழுக்கு]

வெள்ளையோக்காளம் *vellai-yōkkālam,* பெ.(n.) வெறுவாய் குமட்டல்; nausea.

[வெள்ளை + ஒக்காளம்]

வெள்ளையோடு *vellai-ōdu,* பெ.(n.) மேற்கூரை அமைக்கப் பயன்படும் ஒட்டு வகை, மங்களூர் ஒடு (தெ.ஆ.வழ.); a kind of tiles used for roofing, mangalore tiles.

[வெள்ளை + ஒடு]

வெள்ளையோன் *vellai-yōn,* பெ.(n.) வெள்ளைமூர்த்தி 1 பார்க்க (தக்கயாகப். 368); see *vellai-mūrtti.*

வெள்ளைரசிதம் *vellai-rašidam,* பெ.(n.) வைப்பு நஞ்சுகளில் ஒன்று; one of the prepared arsenic. 2. வெள்ளி; silver.

வெள்ளைராசிக்கல் *vellai-rāši-k-kal,* பெ.(n.) நன்றாகச் சுடப்படாத செங்கல்; half-burnt brick.

[வெள்ளை + ராசிக்கல்]

Skt. *Rāši* > த. இராசி → ராசி.

வெள்ளைரோசா *vellai-rōšā,* பெ.(n.) மலர்களில் ஒருவகை – முளரி; indian white rose-rosa alba - a cooling medicine in fever.

[வெள்ளை + ரோசா]

Lat. Rosa > த. உரோசா → ரோசா.

வெள்ளைவசநாபி *vellai-vašanābi,* பெ.(n.) ஒரு வகை நச்சு மூலிகை; a white aconite root.

வெள்ளைவட்டன் *vellai-vattan,* பெ.(n.) வேளாளன் (நாமதீப. 152); *vēlāla.*

[வெள்ளை + வட்டன்]

வெள்ளைவண்ணாத்தி *vellai-vannātti,* பெ.(n.) வண்ணாத்திப் பூச்சிவகை; a gryish moth.

[வெள்ளை + வண்ணாத்தி]



வெள்ளைவதனத்தி *vellai-vadanatti,* பெ.(n.) ஒரு மூலி; a plant.

வெள்ளைவர்க்கம் *vellai-varkkam,* பெ.(n.) வெள்ளெருக்கம் பால்; milk taken from madar-calotropis bearing white flowers.

*[வெள்ளை + **Skt.** varga > த. வர்க்கம்]*

வெள்ளைவரகு *vellai-varagu,* பெ.(n.) வரகுவகை; a kind of white millet. *"வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும்" (புறநா. 392).*

[வெள்ளை + வரகு]



வெள்ளை அலரி

வெள்ளை குன்றிமணி



வெள்ளை வெங்காயம்



வெள்ளை வெட்சி

வெள்ளைவவ்வால் *vel̤l̤ai-vavvāl,* பெ.(n.) சாம்பல் நிறங் கலந்த செந்நீல வண்ணமும் ஓரடி வளர்ச்சியுமுள்ள கடல் மீன்வகை; a sea-fish, greyish neutral tint with purplish reflection, attaining 1ft. in length.

[வெள்ளை + வவ்வால்]

வெள்ளைவள்ளைக்கிழங்கு *vel̤l̤ai-val̤l̤ai-k-kil̤aṅku,* பெ.(n.) வெண்ணிறமான வள்ளி; white sweet potato-a creeper - Ipomoea digitata alias Ipomoea batatas.

[வெள்ளை + வள்ளை + கிழங்கு]

வெள்ளைவாடாமல்லிகை *vel̤l̤ai-vāḍā-mallikai,* பெ.(n.) பால் வாடாமல்லிகை; a white species of amaranth-gomphrena grobosa.

[வெள்ளை + வாடா + மல்லிகை]

வெள்ளைவாயன் *vel̤l̤ai-vāyaṉ,* பெ.(n.) கமுக்கத்தை மறைக்கமுடியாது வெளியிடுபவன்; babbler, one who cannot keep secrets.

[வெள்ளை + வாயன்]

வெள்ளைவாரணன் *vel̤l̤ai-vāraṇaṉ,* பெ.(n.) இந்திரன் (திவா.); indra, as riding the white elephant *airāvatam.*

[வெள்ளை + வாரணன்]

வெள்ளைவாள் *vel̤l̤ai-vāl̤,* பெ.(n.) பரம உணர்வு நிலை; a kind of meditation on the supreme spirit. *"வெள்ளைவாள் கொண்டு வீரனை வாழ்த்துவதே" (திருநூற். 19).*

[வெள்ளை + வாள்]

வெள்ளளைவிரலி *vel̤l̤ai-virali,* பெ.(n.) விலாரி, செடிவகை; a plant.

[வெள்ளை + விரலி]

வெள்ளைவிராலி *vel̤l̤ai-virāli,* பெ.(n.) விலாரி–செடிவகை; a plant.

[வெள்ளை + விராலி]

வெள்ளைவிரி–த்தல் *vel̤l̤ai-viri-,* செ.கு.வி. (v.i.) பெரியோரை வரவேற்கத் தரையில் வெள்ளாடை விரித்தல்; to spread a white cloth on the floor for guests to walk on in a reception.

[வெள்ளை + விரி–,]

வெள்ளைவிருத்தம் *vel̤l̤ai-viruttam,* பெ.(n.) வெளிமண்டிலம் (விருத்தம்) (வீரசோ. யாப். 15); a kind of stanza.

[வெள்ளை + விருத்தம்]

வெள்ளைவிழி *vel̤l̤ai-vil̤i,* பெ.(n.) கண் விழியில் வெண்மையுள்ள பாகம்; white of the eye.

[வெள்ளை + விழி]

வெள்ளைவீசு–தல் *vel̤l̤ai-vīsu-,* செ.கு.வி. (v.i.) 1. வெள்ளாடை அல்லது வெண் கொடியை அசைத்து அடையாளங் காட்டுதல் (வின்.); to make signals with a white flagor cloth. 2. மகிழ்ச்சிக்கான அடையாளமாக ஆடையை மேலே வீசுதல்; to wave one's cloth for joy.

[வெள்ளை + வீசு–,]

வெள்ளைவெங்காயம் *vel̤l̤ai-veṅkāyam,* பெ.(n.) வெள்ளைவெண்காயம் பார்க்க; see *vel̤l̤ai-veṇ-kāyam.*

[வெள்ளை + வெங்காயம்]

வெள்ளைவெட்சி *veḷḷai-veṭci,* பெ.(n.) செடிவகை (இலத்.); white flowered pink jungle geranium.

[வெள்ளை + வெட்சி]



வெள்ளைவெண்காயம் *veḷḷai-veṇ-kāyam,* பெ.(n.) 1. வெண்ணிறமான பூடுவகை; white onion. 2. வெள்ளைப்பூண்டு பார்க்க; see *veḷḷai-p-pūṇḍu.*

[வெள்ளை + வெண்காயம்]

வெள்ளைவெளு-த்தல் *veḷḷai-veḷu-,* செ.கு.வி.(v.i.) ஆடையை யழுக்ககற்றி வெள்ளையாக்குதல்; to wash clothes.

[வெள்ளை + வெளு-,]

வெள்ளைவெளேர்-என்று *veḷḷai-veḷēr-eṉṟu,* வி.எ.(adv.) மிகவும் வெண்மையாக; brilliantly white. *'வெள்ளை வெளேரென்று இருந்த வேட்டி எப்படி ஆகிவிட்டது!'*

[வெள்ளை + வெளேர் + என்று]

வெள்ளைவெளேரெனல் *veḷḷai-veḷēreṉal,* பெ.(n.) மிக வெண்மையாதற்குறிப்பு; being exceedingly white.

[வெள்ளை + வெளேர் + எனல்]

வெள்ளைவெற்றிலை *veḷḷai-veṟṟilai,* பெ.(n.) வெண்ணிறமான வெற்றிலை வகை; betel leaf of a whitish kind.

[வெள்ளை + வெற்றிலை]

வெள்ளைவேட்டி *veḷḷai-vēṭṭi,* பெ.(n.) 1. இல்லறத்தான் உடுக்கும் வெண்ணிற ஆடை; white cloth, as worn by house holder. 2. வெள்ளை 16 பார்க்க; see *veḷḷai 16.*

[வெள்ளை + வேட்டி]

வெள்ளைவேட்டிக்காரன் *veḷḷai-vēṭṭi-k-kāraṉ,* பெ.(n.) வெள்ளைவேட்டிப்பண்டாரம் பார்க்க (இ.வ.); see *veḷḷai-vēṭṭi-p-paṇḍāram.*

[வெள்ளை + வேட்டிக்காரன்]

வெள்ளைவேட்டிப்பண்டாரம் *veḷḷai-vēṭṭi-p-paṇḍāram,* பெ.(n.) மாசுமறுவற்ற ஆடையணிந்து சோம்பேறியாய்த் திரிபவன் (நெல்லை.); idler who is scrupulouly neat in his dress.

[வெள்ளை + வேட்டி + பண்டாரம்]

வெள்ளைவை-த்தல் *veḷḷai-vai-,* செ.கு.வி. (v.i.) வீட்டுக்கு மெருகு சுண்ணாம்பு பூசுதல்; to plaster, as the walls of a new house.

[வெள்ளை + வை-,]

வெள்ளைவௌவால் *veḷḷai-vauvāl,* பெ.(n.) வெள்ளை வாவல் (செங்கை. மீன.) பார்க்க; see *veḷḷai-vāval.*

[வெள்ளை + வௌவால்]

வெள்ளொக்கலர் *veḷḷokkalar,* பெ.(n.) 1. குற்றமற்ற மரபினர் (நன். 408, உரை); persons of spotless lineage. 2. முட்டில் செல்வத்துக் கிளையினை யுடையார் (நன்.

407, மயிலை.); persons whose relations are exceedingly wealthy. 3. மாசற்ற சுற்றத்தினையுடையார் (நன். 407, மயிலை); persons whose relations are spotless in character.

வெள்ளொத்தாழிசை *ve!!o-t-tā!iśai,* பெ.(n.) வெண்டாழிசை (காரிகை, செய். 7, உரை); a kind of metre.

வெள்ளொலியல் *ve!!oliyal,* பெ.(n.) சேலைக் குஞ்சம் (யாழ்.அக.); a flywhisk of cloth.

வெள்ளொளி[1] *ve!!oli,* பெ.(n.) சுடரொளி; lime light.

[வெள் + ஒளி]

வெள்ளொளி[2] *ve!!oli,* பெ.(n.) வெள்ளெழுத்து; long sight.

[வெள் + ஒளி]

வெள்ளொளிப்பருவம் *ve!!oli-p-paruvam,* பெ.(n.) வெள்ளெழுத்துண்டாம் அகவை (ஈச்சுர நிச்சயம். 139); age when long sight commences.

[வெள்ளொளி + பருவம்]

வெள்ளோக்காளம் *ve!!ō-k-kā!am,* பெ.(n.) உள்ளிருந்து உமிழ் நீரை மட்டும் வெளியேற்றுங் குமட்டல் (பாலவா. 1018); vomitting when saliva only is emiited.

வெள்ளோங்காளம் *ve!!ō-ṅ-kā!am,* பெ.(n.) வெள்ளோக்காளம் பார்க்க (யாழ்.அக.); see *ve!!ō-k-kō!am.*

வெள்ளோசை *ve!!ōśi,* பெ.(n.) 1. பாடும் போது தோன்றும் வெடித்த குரலாகிய இசைக்குற்றம்; discordant note. *“இவற்றின் த்வனியில் வெள்ளோசையாய்க் கழியுண்பதில்லை” (ஈடு. 5, 9, 6).* 2. பெருங் குரல் (திருவாலவா. 57, 26, கீழ்க்குறிப்பு); cracked voice. 3. வெண்பாவுக்குரிய ஓசை (கலித். 52, உரை); rhythm peculiar to *venpā.*

[வெள் + ஓசை]

வெள்ளோட்டம் *ve!!ōṭṭam,* பெ.(n.) 1. நோட்டம் பார்க்குமாறு புதுத்தேர் முதலியவற்றை முதன்முதலாக நடத்துகை; dragging a new temple-car for the first time in trial, trial run. 2. ஒன்றனை பயன்படுத்துவதற்கு முன் செய்து பார்க்கும் சோதனை (இ.வ.); preliminary test. 3. ஒருவன் நோக்கத்தை அறிய முன்னாற் செய்யும் செயல்; feeler.

[வெள் + ஓட்டம்]

வெள்ளோடன் *ve!!ōḍan,* பெ.(n.) ஓட்டில் ஒட்டாது கழன்றிருக்கும் தேங்காயுள்ளீடு (யாழ்.அக.); copra kernel adhering loosely to the shell.

[வெள் + ஓடன்]

வெள்ளோடு *ve!!ōḍu,* பெ.(n.) 1. வெள்ளை மேலோடு; white shell. 2. வெண்மையுடன் மஞ்சட் பச்சை நிறமும் இருபது விரல வளர்ச்சியுமுள்ள கடல் மீன் வகை; sea-fish silvery yellowish green attaining 20 in. in length. 3. வெண்கலம் பார்க்க; see *ven-kalam.* *‘வெள்ளோட்டுப் பாத்திரம்’.*

[வெள் + ஓடு]

வெள்ளோத்திரம் *ve!!ōttiram,* பெ.(n.) வெள்ளைப் பூவுள்ள மரவகை; a tree with white flowers. *“மால் வெள்ளோத்திரத்து ...... வாலிணர்” (ஐங்குறு. 301).*

[வெள் + லோத்திரம்]

Skt. *Lōdhra* > த. உலோத்திரம் → லோத்திரம்.

வெள்ளோந்தி *vellōnti,* பெ.(n.) ஓந்தி வகை (வின்.); a white species of chameleon.

வெள்ளோலை *vellōlai,* பெ.(n.) 1. எழுதப் படாத ஓலை; blank ōlai. *"வெள்ளோலை கண்பார்க்கக் கையாலெழுதானை" (தனிப்பா. i, 109, 49).* 2. முத்திரையிடப் பெறாத ஓலை; unstamped *ōla.* *'வெள்ளோலை யாதாரம்'.*

[வெள்ளை + ஓலை]

வெளம் *veḷam,* பெ.(n.) சினம், கடுப்பு; angry, impatience, exasperation. *'வெளம் வந்தா அவ்வளவுதான். போட்டு ஒடைச்சிட்டுப் போயிடுவான்'.*

[வலம் → வெலம் → வெளம்]

வெளி[1] *veḷi,* பெ.(n.) 1. புறம்; outside. *'வெளியே போ'.* 2. நிலப்பரப்பு; open space, plain. 3. விண்வெளி; space, as an element, sky. *"வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி" (திருவாச. 4, 141).* 4. இடைவெளி; intervening space, room, gap. *"வானகம் விழுங்கினார் விண்ணவர் வெளியின் றென்னவே" (கம்பரா. திருவவதாரம். 85).* 5. வெளிப்படை; openness, plainness. 6. விளம்பரம்; publicity. *'கமுக்கங்கள் வெளியாய் விட்டன'.* 7. வெளித்தோற்றம் பார்க்க; see *veḷi-t-tōṟṟam.* 8. வழிவகை; means, way. *"அன்னவை தீரும் வெளி பெற்றோம்" (கம்பரா. மகேந். 3).*

[விள் → வெள் → வெளி]

வெளி[2]-த்தல் *veḷi-,* செ.கு.வி.(v.i.) 1. வெளிப் படையாதல்; to be open or public. *"வெளித்து வைகுவ தரிதெனவவருருமேவி ஒளித்து வாழ்கின்ற தருமமன்னாள்" (கம்பரா. ஊர்தேடு. 136).* 2. உத்தி முதலியன வெளியாதல் (சப்.); to come to light, as dishonest tricks.

[விள் → வெள் → வெளி → வெளி-,]

வெளி[3] *veḷi,* பெ.(n.) 1. தூய்மை; purity. *"உளம்வெளி செய்திடும்" (சேதுபு. அசுவ. 76).* 2. வெண்பா; *veṇpā* metre.

[விள் → வெள் → வெளி]

வெளி[4]-த்தல் *veḷi-,* செ.கு.வி.(v.i.) 1. விடிதல்; to break, as the day. 2. தெளிதல்; to clear as the sight after dimness, or the sky after cloudiness, to brighten, as the sun or moon after being obscured, to become clear, as the meaning of an obscure verse. 3. வெண்ணிறம் கொள்ளுதல் (கம்பரா. ஊர்தேடு. 136); to become white. 4. பயனில தாதல் (இலக். அக.); to become useless. 5. வெறிதாதல் (யாழ்.அக.); to be vacant.

[விள் → வெள் → வெளி-,]

வெளி[5] *veḷi,* பெ.(n.) 1. மீன்வகை; a fish. 2. பெண்; girl.

[வெள் → வெளி]

வெளிக்கட்டு *veḷi-k-kaṭṭu,* பெ.(n.) வீட்டின் முன்பாகம்; front portion of a building.

[வெளி + கட்டு]

வெளிக்கண் *veḷi-k-kaṇ,* பெ.(n.) வெளிப் புறக்கண்; external eye.

[வெளி + கண்]

வெளிக்கரு *veḷi-k-karu,* பெ.(n.) 1. பூப்புச் சேலை; menustral cloth. 2. வணிகக்குலப் பிண்டக்கரு; foetus of merchant class.

[வெளி + கரு]

வெளிக்கவசம் *veḷi-k-kavašam,* பெ.(n.) வெளிப்புறக்குப்பாயம்; external coat.

[வெளி + கவசம்]

வெளிக்காட்சி *veḷi-k-kāṭci,* பெ.(n.) வெளித் தோற்றம் பார்க்க (வின்.); see *veḷi-t-tōṟṟam.*

[வெளி + காட்சி]

வெளிக்காது *veḷi-k-kādu,* பெ.(n.) வெளிப்புறக்காது; external ear.

[வெளி + காது]

வெளிக்கால் *veḷi-k-kāl,* பெ.(n.) நீர் வெளியேறிச்செல்லும் வாய்க்கால்; outlet, drainage or surplus channel.

[வெளி + கால்]

வெளிக்கிடு-தல் *veḷi-k-kiḍu-,* செ.கு.வி. (v.i.) வாய்ப்பகட்டாகச் சொல்லுதல்; to speak formally or glibly.

[வெளிக்கு + இடுதல்]

வெளிக்குப்பேசு-தல் *veḷikku-p-pēšu-,* செ.குன்றாவி.(v.t.) மனத்திற் பகைமை யிருக்கவும் பார்வைக்கு அது தோன்றாதவாறு பேசுதல்; to speak smoothly hiding one's hatred.

[வெளிக்கு + பேசு-,]

வெளிக்குப்போ-தல் *veḷikku-p-pō-,* செ.கு.வி. (v.i.) மலங்கழித்தல் (கொ.வ.); to ease one self.

[வெளிக்கு + போ-,]

வெளிக்குவா-தல் (வெளிக்குவருதல்) *veḷikku-vā-,* செ.கு.வி.(v.i.) 1. வெளிப் படுதல்; to become public. *'அவன் மறைத்து வைத்தது வெளிக்கு வந்து விட்டது'.* 2. மல வெளிப்பாட்டுணர்ச்சி உண்டாதல்; to feel urged to stool.

[வெளிக்கு + வா-,]

வெளிக்கொண்டுவ(ரு)ா-தல் *veḷi-k-koṇḍu-v(ru)ā-,* செ.கு.வி.(v.i.) வெளிப் படுத்துதல், வெளிக்கொணர்தல்; bring out (the abilities, talent, etc.). *'குழந்தையின் முழுத் திறமையையும் வெளிக்கொண்டு வரும் பயிற்சி இது'.*

[வெளிக்கு + கொண்டுவரு-தல்]

வெளிக்கொணர்-தல் *veḷi-k-koṇar-,* செ.கு.வி.(v.i.) தெரியச் செய்தல், வெளிப்படுத்துதல்; bring out (what is hidden), draw out. *'கறுப்புப் பணத்தை வெளிக்கொணர்வதற்கான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்'.*

[வெளிக்கு + கொணர்-தல்]

வெளிக்கோட்டுருவம் *veḷi-k-kōṭṭuruvam,* பெ.(n.) (ஒன்றின் வடிவம்) வெளிக் கோடுகளால் மட்டும் புலப்படுகிற தோற்றம்; contour, silhouette. *'கதிரவன் மறைவின் போது கோயில் கோபுரம் வெளிக் கோட்டுருவமாகத் தெரிந்தது'.*

[வெளிக்கோட்டு + உருவம்]

வெளிக்கோணம் *veḷi-k-kōṇam,* பெ.(n.) சுவர் கட்டும்போது கொத்து வேலைக்காரர் முதலில் அதன் வெளிக் கோணங்களை ஆறு

அல்லது ஏழு வரிசைகள் வரை அமைத்துக் கொண்டு அவற்றை மிகத் திருத்தமாகச் சரி செய்து கொண்டு பின்னர் இடையிலுள்ள நேரான பகுதியைச் செங்கற்களால் நிரப்புதலாகும். (பொ.வழ.); initial anything, selling of angles with six or seven layer of bricks for walls before actually filling the straight line with bricks.

[வெளி + கோணம்]

வெளிக்கோபம் *veḷi-k-kōbam,* பெ.(n.) மேலெழக் காட்டுஞ் சினம் (வின்.); out ward, pretended displeasure.

[வெளி + கோபம்]

Skt. *Kōpa* > த. கோபம்.

வெளிக்கோயில் *veḷi-k-kōyil,* பெ.(n.) பெரிய கோயிலைச் சார்ந்ததும் அதற்குப் புறம்பிலேயுள்ளதுமான கோயில் (பொ.வழ.); outer spaced temple attached to a big temple.

[வெளி + கோயில்]

வெளிக்கோள் *veḷi-k-kōḷ,* பெ.(n.) வெளியாக்குகை (நாமதீப. 733); revealing.

[வெளி + கோள்]

வெளிகண்டசொல் *veḷi-kaṇḍa-šol,* பெ.(n.) வெளிப்படையான சொல் (வின்.); plain word.

[வெளிகண்ட + சொல்]

வெளிகாண்(ணு)-தல் *veḷi-kāṇ(ṇu)-,* செ.கு.வி. (v.i.) மழை பெய்தபின் வானம் முகிலின்றித் தோன்றுதல் (இ.வ.); to clear, as the sky after rain.

[வெளி + காண்(ணு)-,]

வெளிகொடுவெளியே *veḷi-koḍu-veḷiyē,* வி.எ. (adv.) வெளிப்படையாய்; publicity. *"வெளிகொடு வெளியே தேவர்களுக்கு அம்ருதத்தைக் கொடுத்துவிட்ட மஹாபாஹு" (ஈடு. 1, 3, 1).*

[வெளிகொடு + வெளியே]

வெளிகொண்டமூலி *veḷi-koṇḍa-mūli,* பெ.(n.) வெள்ளூமத்தை; dhatura bearing white flowers-datura alba.

[வெளிகொண்ட + மூலி]

வெளிகொள்(ளு)-தல் *veḷi-koḷ(ḷu)-,* பெ.(n.) வெளிச்சைக்கெண்டை பார்க்க; see *veḷiccai-k-keṇḍai.*

[வெளி + கொள்]

வெளிச்சங்காட்டு[1]-தல் *veḷiccaṅ-kāṭṭu-,* செ.கு.வி.(v.i.) 1. வழி முதலியன தெரிய விளக்கு முதலியவற்றால் ஒளி காண்பித்தல்; to furnish light, to brandish a torch in order to light one's path. 2. ஒளியாற் கப்பல் முதலியவற்றுக்கு அடையாளம் தெரிவித்தல்; to show a light as a signal at sea. 3. ஒளி செய்தல்; to shine.

[வெளிச்சம் + காட்டு-,]

வெளிச்சங்காட்டு[2]-தல் *veḷiccaṅ-kāṭṭu,* செ.கு.வி.(v.i.) 1. தோன்றுதல் (வின்.); to appear. 2. பகட்டுப் பேச்சால் மழுப்புதல் (இ.வ.); to put one off with empty words. 3. வெளிக்குப் பகட்டாகத் தோன்றுதல்; to be showy, gandy in dress.

[வெளிச்சம் + காட்டு]

வெளிச்சங்காணுதல் *veḷicca-ṅ-kāṇutal,* பெ.(n.) 1. விடியற்காலமாகை; day break.

2. தெளிவாகை (இ.வ.); becoming clear.

[வெளிச்சம் + காணுதல்]

வெளிச்சம்¹ *veḷiccam,* பெ.(n.) 1. ஒளி; light. 2. விளக்கு; lamp. *'அந்த அறைக்கு ஒரு வெளிச்சங் கொண்டுவா'.* 3. தெளிவு (வின்.); clearness.

வெளிச்சம்² *veḷiccam,* பெ.(n.) 1. வெளிப் படை; publicity. *"வீரமெல்லா மின்றைக்கு வெளிச்சமாக" (இராமநா. உயுத். 28).* 2. பகட்டு; show.

வெளிச்சம்போட்டுக்காட்டு-தல் *veḷiccam-pōṭṭu-k-kāṭṭu-,* செ.குன்றாவி. (v.t.) விளம்பரப்படுத்துதல்; make public. *'இந்த வாரப் பத்திரிகை அவரைப் பற்றிய உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது'.*

[வெளிச்சம் + போட்டுக்காட்டு-,]

வெளிச்சம்போடு¹-தல் *veḷiccam-pōḍu-,* செ.கு.வி.(v.i.) 1. வணிகப் பொருள் ஒளிபடத் தோன்றச் செய்தல் (வின்.); to make a display, to make things, appear in a favourable light. 2. விளக்கேற்றுதல்; to light, as lamp to switch on, as electric light.

[வெளிச்சம் + போடு-,]

வெளிச்சம்போடு²-தல் *veḷiccam-pōḍu-,* செ.கு.வி.(v.i.) உள்ளதை மறைத்துப் பொய்த் தோற்றங்காட்டுதல் (வின்.); to make false pretensions.

[வெளிச்சம் + போடு-,]

வெளிச்சமா-தல் *veḷiccam-ā-,* செ.கு.வி. (v.i.) 1. விடிதல்; to dawn. 2. விளங்குதல்; to come to light.

[வெளிச்சம் + ஆதல் → வெளிச்சமா-தல்]

வெளிச்சவீடு *veḷicca-vīḍu,* பெ.(n.) கலங்கரை விளக்கம்; lighthouse.

[வெளிச்சம் + வீடு]



வெளிச்சாடை *veḷi-c-cāḍai,* பெ.(n.) 1. வெளிப்பகட்டு (வின்.); outward show, mere profession. 2. வெளித்தோற்றம், 1 பார்க்க; see *veḷi-t-tōṟṟam 1.*

[வெளி + சாடை]

வெளிச்சாயல் *veḷi-c-cāyal,* பெ.(n.) வெளித்தோற்றம், 1 பார்க்க (வின்.); see *veḷi-t-tōṟṟam 1.*

[வெளி + சாயல்]

வெளிச்சி¹ *veḷicci,* பெ.(n.) 1. காதுநோய் வகை; abscess in the external ear. 2. விளாம்பிசின் (மூ.அ.); gum of the wood-apple tree.

வெளிச்சி² *veḷicci,* பெ.(n.) 1. ஒளி மரம் (நாஞ்.); a tree said to shine at night. 2. மரவகை (இலத்.); small obovate oblong cuspidate leaved cornel. 3. மீன்வகை; a kind of fish. shell.

வெளிச்சிப்பிசின் *veḷicci-p-pišiṉ,* பெ.(n.) விளாம் பிசின்; gum of wood-apple tree-gum of feronia elephantum.

[வெளிச்சி + பிசின்]

வெளிச்சியெண்ணெய் *veḷicci-yeṇṇey,* பெ.(n.) விளவ எண்ணெய் ; oil from *veḷicci.*

[வெளிச்சி + எண்ணெய்]

வெளிச்சிறப்பு[1] *veḷi-c-ciṟappu,* பெ.(n.) வெளிப்பகட்டாகச் செய்யுங் கோலம்; adornment of the outside, out ward decoration.

[வெளி + சிறப்பு]

வெளிச்சிறப்பு[2] *veḷi-c-ciṟappu,* பெ.(n.) அறிவுத் தெளிவு; clearness of wisdom. *"பகவத் பிரசாதத்தால் வந்த வெளிச்சிறப்பாலே" (ஈடு. 3, 4, 2).*

[வெளி + சிறப்பு]

வெளிச்செண்ணெய் *veḷi-c-ceṇṇey,* பெ.(n.) தேங்காயெண்ணெய் (நாஞ்.); coconut oil.

[வெளி + எண்ணெய் → வெளிச்செண்ணெய்]

வெளிச்செலவு *veḷi-c-celavu,* பெ.(n.) குடும்பத்திற்கன்றிப் புறம்பாகச் செய்யப்படும் பொருட் செலவு (கொ.வ.); expenses other than the ordinary house hold expenses.

[வெளி + செலவு]

வெளிச்சை *veḷiccai,* பெ.(n.) வெளிச்சைக் கெண்டை பார்க்க; see *veḷiccai-k-keṇḍai.* *"வெளிச்சை மீறும்" (அழகர்கல. 86).*

[வெளி → வெளிச்சை]

வெளிச்சைக்கெண்டை *veḷiccai-k-keṇḍai,* பெ.(n.) 1. வெண்ணிறமும் அறுவிரல வளர்ச்சியுமுள்ள கெண்டைமீன்வகை; a kind of carp, silvery, attaining 6 in. in length chela argen tea. 2. வெண்மை நிறமுடையதும் ஏறக்குறைய ஆறுவிரலம் வளர்வதுமான கெண்டைமீன் வகை; a kind of carp, silvery, attaining at lease 6 in. in length chela culpeoides.

[வெளிச்சை + கெண்டை]

வெளிச்சைப்பிசின் *veḷiccai-p-pišiṉ,* பெ.(n.) முருங்கை அல்லது நறுவிலிப் பிசின்; gum of moringa or naruvili.

[வெளிச்சை + பிசின்]

வெளிசங்கம் *veḷi-šaṅgam,* பெ.(n.) வெளியரங்கம் பார்க்க (வின்.); see *veḷiyaraṅgam.*

[வெளி + சங்கம்]

Skt. *saṅgha* > த. சங்கம்.

வெளிசம் *veḷišam,* பெ.(n.) தூண்டில் (நாமதீப. 450); fish-hook.

[வெளி → வெளிசம்]

வெளிசுரம் *veḷi-šuram,* பெ.(n.) உடலில் பரவும் ஒரு வகை காய்ச்சல்; a kind of fever that is felt out side.

[வெளி + சுரம்]

வெளித்தட்டு *veḷi-t-taṭṭu,* பெ.(n.) பொறுப்பின்றி செயல் நடத்துகை (யாழ்.அக.); irresponsible action.

[வெளி + தட்டு]

வெளித்தாமரை *veḷi-t-tāmarai,* பெ.(n.) வா (ஆகாய)த் தாமரை; sky lotus.

[வெளி + தாமரை]

வெளித்துகம் *veḷi-t-tugam,* பெ.(n.) முருக்க மரம்; a tree-butea frondosa.

வெளித்தோல் *veḷi-t-tōl,* பெ.(n.) மேல்தோள்; epidermis.

[வெளி + தோல்]

வெளித்தோற்றம் *veḷi-t-tōṟṟam,* பெ.(n.) 1. மேற்பார்வைக்குக் காணும் காட்டு; out ward appearance. 2. உருவெளித் தோற்றம் (வின்.); hallucination, vision. 3. விளைச்சல் (யாழ்.அக.); birth, growth, evolution. 4. காட்சி; being manifest or perceptible to the senses.

[வெளி + தோற்றம்]

வெளிதிற¹-த்தல் *veḷi-tiṟa-,* செ.குன்றாவி. (v.t.) 1. வெளியிடுதல் (யாழ்.அக.); to let out express. 2. வெளிப்படையாதல் (வின்.); to be frank. *'வெளி திறந்து சொன்னான்'.*

[வெளி + திற-,]

வெளிதிற²-த்தல் *veḷi-tiṟa-,* செ.கு.வி.(v.i.) வெளிர்த்துக் காட்டு-, 1 பார்க்க; see *veḷirttu-k-kāṭṭu-, 1.*

[வெளி + திற-,]

வெளிது *veḷitu,* பெ.(n.) 1. வெண்மையானது; that which is white. *"நிறம் வெளிது செய்து" (திவ். இயற். 3, 56).* 2. வெள்ளிய ஆடை; white cloth. *"வெளிது விரித்துடீஇ" (புறநா. 279).*

வெளிநடப்பு *veḷi-naḍappu,* பெ.(n.) (ஓர் அவையில் உறுப்பினர்கள்) எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அவை நடவடிக்கைகளைப் புறக்கணித்து வெளியில் எழுந்து செல்லுதல்; walkout (in an assembly). *'கூறியவற்றைத் திரும்பப்பெற அமைச்சர் மறுத்ததால் எதிர்க்கட்சியினர் வெளி நடப்புச் செய்தனர்'.*

[வெளி + நடப்பு]

வெளிநபர் *veḷi-nabar,* பெ.(n.) (ஒரு நிறுவனம், அமைப்பு முதலியவற்றோடு) தொடர்பு இல்லாதவர்; out sider, stranger. *'வெளிநபர்கள் முன் அனுமதி பெற்றுத்தான் தொழிற்சாலைக்குள் நுழைய வேண்டும்'.*

[வெளி + நபர்]

U. Nafar > த. நபர்.

வெளிநாட்டம் *veḷi-nāṭṭam,* பெ.(n.) தீ நெறியில் ஒழுகுகை (இ.வ.); leading an immoral life.

[வெளி + நாட்டம்]

வெளிநாடு¹-தல் *veḷi-nāḍu-,* செ.கு.வி.(v.i.) வெளியிற் காணப்படுதல் (யாழ்.அக.); to be seen outside or in public. 2. தீய நெறியில் ஒழுகுதல் (இ.வ.); to lead an immoral life.

[வெளி + நாடு]

வெளிநாடு² *veḷi-nāḍu,* பெ.(n.) 1. வேற்று நாடு; foreign country. 2. வெளியுலகம்; the world at large. *"வெளிநாடுகாணப் புறப்பட விட்டும்" (ஈடு. 4, 5, 10).*

[வெளி + நாடு]

வெளிநீர் *veḷi-nīr,* பெ.(n.) மழை நீர்; rain water.

[வெளி + நீர்]

வெளிநீருண்ணீர் *veḷi-nīruṇṇīr,* பெ.(n.) இதுவே முன்னீர், பின்னீர்; coryza.

[வெளிநீர் + உள்நீர்]

வெளிப்பகட்டு *veḷi-p-pagaṭṭu,* பெ.(n.) வெளிமயக்கு பார்க்க; see *veḷi-mayakku.*

[வெளி + பகட்டு]

வெளிப்பகடம் *veḷi-p-pagaḍam,* பெ.(n.) வெளிமயக்கு பார்க்க; see *veḷi-mayakku.*

[வெளி + பகடம்]

வெளிப்பகடு *veḷi-p-pagaḍu,* பெ.(n.) வெளிப்பகட்டு பார்க்க; see *veḷi-p-pagaṭṭu.*

[வெளி + பகடு]

வெளிப்பசப்பு *veḷi-p-pašappu,* பெ.(n.) 1. வெளிமயக்கு பார்க்க; see *veḷi-mayakku.* 2. வெளித்தோற்றத்தில் அமைதியாய்ப் பேசுகை; speaking blandly.

[வெளி + பசப்பு]

வெளிப்படல் *veḷi-p-paḍal,* பெ.(n.) 1. தோன்றல்; appearing. 2. பிண்டம் வெளிப்படல்; presentation of the foetus.

[வெளி + படல்]

வெளிப்படு¹-தல் *veḷi-p-paḍu-,* செ.கு.வி. (v.i.) 1. வெளியே வருதல்; to come out, issue forth as breath. 2. வெளிப்படத் தோற்றுதல்; to become manifest or evident, to become public, to be revealed. *"பரவா வெளிப்படா... உரவோர்கட் காமநோய்" (நாலடி, 88).* 3. பொருள் விளக்கமாதல்; to be clear, explicit. *"வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா" (தொல். சொல். 298).* 4. வெளிவா-, 2 பார்க்க; see *veḷivā-, 2.*

[வெளி + படு-,]

வெளிப்படு²-த்தல் *veḷi-p-paḍu-,* செ.கு.வி. (v.i.) வெளிப்படுத்து-, பார்க்க; see *veḷi-p-paḍuttu-.* *"தத்தமாற்றல்.......... வெளிப்படுத் தன்று" (பு.வெ. 4, 6, கொளு).*

[வெளி + படு-]

வெளிப்படுத்து-தல் *veḷi-p-paḍuttu-,* செ. குன்றாவி.(v.t.) 1. பலர் அறியத் தெரிவித்தல் (வின்.); to reveal, divulge. 2. காட்டுதல்; to show express. 3. வெளியே வரச்செய்தல்; to cause to issue or come out, to eject. 4. புத்தகம் பதிப்பித்தல் (இ.வ.); to publich, as a book. 5. வெளியேற்று-, 1 பார்க்க; see *veḷiyēṟṟu,1.*

[வெளி + படுத்து-,]

வெளிப்படை *veḷi-p-paḍai,* பெ.(n.) 1. தெளிவானது (நன். 269); that which is evident, clear or obvious. 2. மேற் பார்வையில் தோன்றுவது; that which is aparent. 3. விளம்பரம்; publicity. 4. பல பொருள் குறிக்குஞ் சொல்லை ஒரு பொருட்கு உரித்தாக்கும் பொருட்டு ஏற்றதோர் அடை கொடுத்துக் கூறும் அணிவகை (புறநா. 17, உரை); a figure of speech in which the meaning of an ambiguous word is made clear by the use of a qualifying word, as *pāyavēṅkai.*

[வெளி + படை]

வெளிப்படைச்சொல் *veḷi-p-paḍai-c-col,* பெ.(n.) இயல்பாய் விளங்கி நிற்கும் மொழி; clear word.

[வெளிப்படை + சொல்]

வெளிப்படைநிலை *veḷippaḍai-nilai,* பெ.(n.) அறத்தொடு நிற்றல் (களவியற். 122);

[வெளிப்படை + நிலை]

வெளிப்படையுவமம் *veḷi-p-paḍai-yuvamam,* பெ.(n.) குறிப்பானன்றித் தெளிவாக அறியப்படும் உவமம் (இலக். வி. 639, உரை); explicil simile.

[வெளிப்படை + உவமம்]

வெளிப்பயன் *veḷi-p-payaṉ,* பெ.(n.) 1. வெளிப்படத் தெரியக்கூடிய பயன்; visible gain or advantage. 2. வெளிப்பொருள் பார்க்க (வின்.); see *veḷi-p-poruḷ.*

[வெளி + பயன்]

வெளிப்பாடு[1] *veḷi-p-pāḍu,* பெ.(n.) மறைதலின்றி வெளிப்பட்டுத் தோன்றுகை; coming out, appearing in public. *"வெளிப்பாட்டுச் சருக்கம்" (பாரத.).* 2. பெரியோர்க்கு அளிக்குங் கையுறை (சப்.); presents to great persons.

[வெளி + பாடு]

வெளிப்பாடு[2] *veḷi-p-pāḍu,* பெ.(n.) (ஒன்று மற்றொன்றை) வெளிப்படுத்துவதாக இருப்பது; manifestation, over sign. *'நாங்கள் தேர்தலில் அடைந்திருக்கும் வெற்றி எங்கள் மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடு'.* 2. (எண்ணம், உணர்வு முதலியவற்றை) வெளிப்படுத்துவது அல்லது வெளியிடுவது; expression, communication. *'கவிதை கவிஞனின் எண்ண வெளிப்பாட்டுச் சாதனம்'.*

[வெளி + பாடு]

வெளிப்பிடம் *veḷi-p-piḍam,* பெ.(n.) கடலடிப் பரப்பில் வலை பாய்ச்சுதற்கேற்ற இடம் (தஞ்சை. மீன.).

[வெளி + பிடம்]

வெளிப்பு[1] *veḷippu,* பெ.(n.) 1. வெளிப்புறம் (யாழ்.அக.); outside. 2. வெளியிடம்; open space unenclosed place.

வெளிப்பு[2] *veḷippu,* பெ.(n.) தெளிவு (யாழ்.அக.); clearness, brightness.

வெளிப்புடம்போடல் *veḷi-p-puḍam-pōḍal,* பெ.(n.) மறைப்பில்லாமல் திறந்தபடி புடமிடுதல்; ordinary calcination with cow dung cakes.

[வெளிப்புடம் + போடல்]

வெளிப்புரைச்சவ்வு *veḷi-p-purai-c-cavvu,* பெ.(n.) உடம்பின் வெளிப்புற தோல் பாகங்களை அடிப்படையாகக் கொண்டு நிற்கும் சவ்வு; an external tining membrance.

[வெளிப்புரை + சவ்வு]

வெளிப்புற்று *veḷi-p-puṟṟu,* பெ.(n.) புற்று நோய்வகை; cancer (m.l.).

[வெளி + புற்று]

வெளிப்புறப்படப்பிடிப்பு *veḷi-p-puṟa-p-paḍappiḍipu,* பெ.(n.) (பெரும்பாலும்) திரைப்படம் எடுக்க வெளி இடங்களில் நடத்தப்படும் படப்பிடிப்பு; outdoor shooting.

[வெளிப்புறம் + படப்பிடிப்பு]

வெளிப்பேச்சு *veḷi-p-pēccu,* பெ.(n.) 1. நாட்டுச் செய்தி; rumour. 2. உண்மையற்ற பேச்சு; hallow in sinceretalk.

[வெளி + பேச்சு]

வெளிப்பொருள் *veḷi-p-poruḷ,* பெ.(n.) தெளிவாயறியப்படும் பொருள் (வின்.); obvious meaning.

[வெளி + பொருள்]

வெளிபொருள் *veḷi-poruḷ,* பெ.(n.) வெளிப்பொருள் பார்க்க (யாழ்.அக.); see *veḷi-p-poruḷ.*

[வெளி + பொருள்]

வெளிமடை *veḷi-maḍai,* பெ.(n.) கோயிற்புரம் பேயுள்ள சிறுதெய்வங்களுக்குப் படைக்கும் படையல் (சப்.); offerings to the attendent deities outside a temple.

[வெளி + மடை]

வெளிமயக்கம் *veḷi-mayakkam,* பெ.(n.) கண்ணோய் வகை; an eye disease.

[வெளி + மயக்கம்]

வெளிமயக்கு *veḷi-mayakku,* பெ.(n.) வெளித்தோற்றத்தாலுண்டாம் மதிமயக்கம்; fascination due to outward show. *"எல்லாம் வெளிமயக்கே" (பட்டினத். தனிப்பா.).*

[வெளி + மயக்கு]

வெளிமருந்து *veḷi-marundu,* பெ.(n.) புறத்திடும் மருந்து; medicine for external application or use (C.G.).

[வெளி + மருந்து]

வெளிமனிதன் *veḷi-maṉitaṉ,* பெ.(n.) அயலான்; stranger.

[வெள் + மனிதன்]

Skt. manu-ja > த. மனிதன்.

வெளிமா *veḷimā,* பெ.(n.) காட்டுமா; wild mango.

[வெளி → வெளிமா]

வெளிமான்[1] *veḷimāṉ,* பெ.(n.) 1. மான்வகை (வின்.); revine deer. 2. பெண்மான்வகை (யாழ்.அக.); hind, female deer.

[வெளு + மான்]



வெளிமான்[2] *veḷi-māṉ,* பெ.(n.) கழகக் காலத்துத் தலைவருள் ஒருவன்; a chief of the *śaṅgam* age. *"வெளிமானுழைச் சென்றார்க்கு" (புறநா. 162).*

[வெளி + மான்]

வெளிமான்[3] *veḷi-māṉ,* பெ.(n.) பெருஞ் சித்தரனரால் பாடப்பட்ட சிற்றரசன்; a chieftarin, sung by peruncittanar.

[வெளி + மான்]

மிக்க கொடையுளோன். இவன் இறக்கும் போது பெருஞ்சித்திரனார்க்குப் பரிசு கொடுக்குமாறு தம்பிக்கு ஆணை செய்திருந்தான். அவன் கூறிய அளவிற் சிறிது கொடுப்ப பெருஞ்சித்திரனார் ஏற்றுக் கொள்ளாமற் போய், குமணனை யடைந்து, யானையும் பொன்னும் பெற்று, மீண்டுபுக்கு அவனை நோக்கி, இரப்போர்க்குக் கொடுப்பவ ரில்லையுமல்லர். யான் பெற்று வந்து ஊர்ப்புறத்தே

கட்டியிருக்கும் யானை குமணன் தந்த பரிசில், யான் போய் வருகிறேன் என்னுங் கருத்தினை யுடைய "இரவலர் புரவலை நீயுமல்லை, புரவல ரிரவலர்க்கில்லையுமல்ல ரிரவலருண்மையுங் காணினியிரவலர்க், கீவோருண்மையுங் காணினி நின்னூர்க், கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த, நெடுநல்யானை யெம் பரிசில், கடுமான்றோன்றல் செல்வல் யானே" என்னும் பாடலைக் கூறிப் போயினார்.

வெளிமுகடு *veḷi-mugaḍu,* பெ.(n.) உலகில் புறவெல்லை; the atmost limit of space. *"அகில வெளிமுகடிய" (பாரத. ஆறாம் போர். 22).*

[விள் → வெள் → வெளி + முகடு] (தே.நே.பக்.124)

வெளிமுசுக்கை *veḷi-muśukkai,* பெ.(n.) காட்டு முசுக்கை; wild climber with hairy stem and leaves-bristly bryonia-mukia scabrella.

[வெளி + முசுக்கை]

வெளிமுற்றம் *veḷi-muṟṟam,* பெ.(n.) 1. வீட்டின் வெளிப்புறத்துள்ள திறந்த வெளி; courtyard of a house. 2. சமையலறையில் ஏனம் முதலியன தூய்மை செய்யும் முற்றம்; place marked off in a kitchen for washing utensils.

[விள் → வெள் → வெளி + முற்றம்]

வெளிமூலம் *veḷi-mūlam,* பெ.(n.) குடலிறக்க நோய் (மூளைகள் வெளித்தோன்றும் மூலநோய் வகை); external piles (M.L.).

[விள் → வெள் → வெளி + மூலம்]

வெளியங்கம் *veḷi-y-aṅkam,* பெ.(n.) பகட்டு; outward show, pomp.

[வெளி + அங்கம்]

Skt. *Aṅga* > த. அங்கம்.

வெளியச்சு *veḷi-accu,* பெ.(n.) தேரின் வெளிப்புறச் சக்கரங்கள் நான்கிற்கும் முன்பின் அமைந்த இரண்டு அச்சு (பொ.வழ.); two axis for front and book wheels of chariot.

[வெளி + அச்சு]

வெளியடை *veḷi-y-aḍai,* பெ.(n.) திரைச்சீலை (வின்.); curtain, veil.

[வெளி + அடை]

வெளியந்தரம் *veḷi-y-antaram,* பெ.(n.) இடைவெளி (தக்கயாகப். 147, உரை); intervening space.

[வெளி + அந்தரம்]

Skt. Antara > த. அந்தரம்.

வெளியரங்கம் *veḷi-y-araṅkam,* பெ.(n.) 1. வெளிப்படை; openness, publicity. *"வெளியரங்கம் பெறத்தந்தோம்" (குற்றா. தல. 16, 54).* 2. தெளிவானது (வின்.); that which is clear, obvious or evident.

[விள் + வெள் → வெளி + அரங்கம்]

வெளியா-தல் *veḷi-y-ā-,* செ.கு.வி.(v.i.) வெளிப்படு¹-, பார்க்க; see *veḷi-p-paḍu-.* *"வெளிநின்ற மாற்றம் வெளியான பின்" (பாரத. வெளிப்பாட்1டு. 17).*

[விள் → வெளி → வெளியா-தல்]

வெளியாக்கு¹-தல் *veḷi-y-yākku-,* செ. குன்றாவி.(v.t.) வெளிப்படுத்து-, பார்க்க; see *veḷi-p-paḍuttu-,*

[வெள் → வெளி + ஆக்கு-,]

வெளியாக்கு²–தல் *veḷi-y-ākku-,* செ.குன்றாவி.(v.t.) வெளிப்படுத்துதல்; make public disclose. *'வினாத்தாளை முன்னதாக வெளியாக்கிய அதிகாரிகள் மீது நடவடிக்கை'.*

[வெளி + ஆக்கு–,]

வெளியாகாமை *veḷiyākāmai,* பெ.(n.) மாதவிடாயாகாதிருத்தல்; absense of menses.

[வெளி + ஆகாமை]

வெளியாகு–தல் *veḷiyāku-,* செ.கு.வி.(v.i.) (திரைப்படம் தேர்தல் முடிவுகள் போன்றவை) வெளியிடப்படுதல்; be released. *'பள்ளி இறுதித் தேர்வு முடிவுகள் நாளை வெளியாகும்'.* 2. (உண்மை முதலியவை) வெளிப்படுதல்; become public, become known. *'என்றாவது ஒரு நாள் உண்மை வெளியாகும்'.*

[வெளி + ஆகு]

வெளியாடை *veḷi-y-āḍai,* பெ.(n.) 1. ஒப்பனைத் தொங்கற் சீலை (வின்.); curtain, hanging, tapestry. 2. உடலை மூடிக்கொள்ளும் ஆடை; veil, outer-wear.

[வெளி + ஆடை]

வெளியார்¹ *veḷiyār,* பெ.(n.) அறிவிலார்; senseless persons. *"வெளியார் முன் வான்சுதை வண்ணங் கொளல்" (குறள், 714).*

[வெள் → வெளி → வெளியார்]

வெளியார்² *veḷiyār,* பெ.(n.) புறம்பானவர்; outsiders, strangers.

[வெள் → வெளி → வெளியார்]

வெளியாள் *veḷiyāḷ,* பெ.(n.) தொடர்பில்லாத பேர்வழி; அயலான், வேற்றவன்; a person who is not connected (with the affair), out sider. *'வெளியாள் வேண்டாம் நாமே செய்து கொள்வோம்'.*

[வெள் → வெளி → வெளியாள்]

வெளியிடு–தல்¹ *veḷi-y-iḍu-,* செ.குன்றாவி. (v.t.) வெளிப்படுத்து–, பார்க்க; see *veḷi-p-paḍuttu.*

[வெள் → வெளி → வெளியிடு–தல்]

வெளியிடு–தல்² *veḷi-y-iḍu-,* செ.கு.வி.(v.i.) வெளிவாங்கு–, (யாழ்.அக.) பார்க்க; see *veḷi-vāṅku-.*

[வெள் → வெளி → வெளியிடு–தல்]

வெளியில் *veḷiyil,* வி.எ.(adv.) வெளியே பார்க்க; see *veḷiyē.*

[வெள் → வெளி → வெளியில்]

வெளியீடு–தல் *veḷi-yīḍu-,* பெ.(n.) (அஞ்சல் தலை, திரைப்படம் முதலியவற்றை) பயன் பாட்டிற்குக் கிடைக்கச் செய்தல்; release (stamps, film, etc.). *'புதிய அஞ்சல் தலையை அரசு வெளியிட்டது'. 'அந்தப் படம் அடுத்த மாதம் வெளியிடப்படும்'.* 2. செய்தி, உணர்ச்சி முதலியவற்றைப் பலரும் அறியும் வகையில் வெளிப்படுத்துதல்; reveal, publich. *'தயங்கித் தயங்கி செய்தியை வெளியிட்டான்'. 'மேற்கூறிய செய்திகளை அந்தத் தாளிகை வெளியிட்டிருக்கிறது'. 'தன்னுடை வியப்பை வெளியிடாமல் இருக்க முடியவில்லை'.* 3. (நூல் முதலியவற்றை) அச்சிட்டு வெளிக்கொண்டு வருதல்; publich. *'வெளியிட்ட ஆயிரம் படிகளும் விற்பனையாகிவிட்டன'.*

[வெள் → வெளி → வெளியிடு → வெளியீடு] *(தே.நே.பக். 124)*

வெளியீட்டாளர் *veḷiyīṭṭāḷar,* பெ.(n.) நூல்களைப் பதிப்பித்து வெளியிடுபவர்; publisher.

[வெள் → வெளி → வெளியிடு → வெளியீடு → வெளியீட்டாளர்]

வெளியீடு *veḷiyīḍu,* பெ.(n.) 1. (அச்சடிக்கப் பட்டு அல்லது உருவாக்கப்பட்டுப் பொது மக்களுக்காக) வெளியிடுதல்; (the act of) publishing, release (of book, bonds, film, etc.), issue. *'புத்தக வெளியீட்டு விழாவில் அமைச்சர் கலந்து கொண்டார்', 'புதிய பங்குப் பத்திரங்களின் வெளியீடு நாளை தொடங்கும்'.* 2. (வெளியிடப்பட்ட நூல் முதலியவற்றின்) படி; copy (of the publication). *'எங்களிடம் எல்லாப் பதிப்பகத்தாரின் வெளியீடுகளும் கிடைக்கும்'.* 3. (எண்ணம், கற்பனை முதலியவற்றை) வெளிப்பாடு; expression. *'கருத்து வெளியீட்டுச் சுதந்திரம்'. 'வெளியீட்டுத் திறன் உள்ளவன் கலைஞன் ஆகிறான்'.*

[வெள் → வெளி → வெளியிடு → வெளியீடு]

வெளியுப்பு *veḷiyuppu,* பெ.(n.) கட்டுப்பு, இயல்பாக உணவில் பயன்படுத்தும் கறியுப்பு; common salts.

[வெள் → வெளி + உப்பு]

வெளியுறவு *veḷiyuṟavu,* பெ.(n.) ஒரு நாடு பிற நாடுகளுடன் அரசியல், பண்பாடு, வாணிபம் முதலிய துறைகளில் கொள்ளும் உறவு; foreign affairs, foreign relations (of a country). *'வெளியுறவு அமைச்சர்'. 'வெளியுறவுக் கொள்ளை'.*

[வெள் → வெளி + உறவு]

வெளியூர் *veḷiyūr,* பெ.(n.) (ஒருவர் குடியிருக்கும் ஊர் அல்லாத) பிற ஊர்; place other than one's residence. *'அப்பா வெளியூர் போயிருக்கிறார், நாளை தான் வருவார்'.*

[வெளி + ஊர்]

வெளியெரிப்பொறிகள் *veḷiyeri-p-poṟikaḷ,* பெ.(n.) வெல்லப் பொறிகளில் ஒருவகை; a combustion.

வெப்பப்பொறிகள் வெப்ப ஆற்றலை இயக்க ஆற்றலாகப் பயன்படத்தக்க வடிவில் மாற்றுகின்றன. ஒரு பொருள் எரிந்து அதனால் உண்டாகும் வெப்பத்தைக் கொண்டு இயக்க ஆற்றலை உண்டு பண்ணும் பொறிகளுக்கு எரிபொறிகள் என்று பெயர். இவற்றை உள்ளெரி பொறிகள், வெளியெரி பொறிகள் என இருவகைப் படுத்தலாம். தானியங்கி (automobiles) பொறிகளும், வளிமப் பொறிகளும் (Gas turbines) முதல்வகையைச் சாரும். நீராவி பொறிகளும், நீராவி விசையாழிகளும் இரண்டாவது வகையைச் சேர்ந்தன. வளி மண்டலத்தின் அழுத்தத்தை விட அதிகமான அழுத்த நிலையில் கொதி கலத்தினுள் நீராவி உருவாக்கம் செய்யப்படுகிறது. அழுத்தம் அதிகமாக இருப்பதனால் வெப்ப நிலையும் அதிகமாகவே இருக்கும் அந்த நிலையில் நீராவியில் நிறைந்த அளவு வெப்பம் அடங்கியிருக்கும். நீராவியிலுள்ள வெப்பத்தை வேலைக்கு மாற்றுகின்ற பொறிகளே வெளியெரி பொறிகள்.

[வெளியெறி + பொறிகள்]

வெளியே *veḷiyē,* வி.எ.(adv.) 1. எல்லையைத் தாண்டி, உள்ளே இல்லாமல்; outside, out. *'வீட்டுக்கு வெளியே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்'. 'கடையை விட்டு வெளியே வந்தார்'. 'உறையிலிருந்து கத்தியை*

வெளியே எடுத்தான்'. 2. (பேச்சால் அல்லது செயல்பாடுகளால்) பிறர் அறியும்படி, மறைவாக இல்லாமல்; in public, openly. *'வெளியே சொன்னால் வெட்கக் கேடு'. 'என் மேல் உள்ள சீற்றத்தை அவர் வெளியே காட்டிக் கொள்ள வில்லை'.*

[வெள் → வெளி → வெளியே]

வெளியேற்று-தல் *veli-y-ērru-,* செ. குன்றாவி.(v.t.) 1. வெளியே போகச் செய்தல்; to expel. 2. நாடு கடத்துதல்; to transport, to extern. 3. வெளிப்படுத்து-, 3 பார்க்க; see *veli-p-paduttu-.*

[விள் → வெள் → வெளி + ஏற்று-,]

வெளியேறு-தல் *veli-y-ēru-,* செ.கு.வி.(v.i.) 1. வெளியே போதல்; to get out, as from a house. 2. வீட்டை விட்டு ஓடிப்போதல்; to abandon one's home and go away. *'அவன் வெளியேறி விட்டான்'.* 3. வெளியூருக்குக் குடிபோதல்; to migrate. 4. ஏதத்தினின்று தப்பித்து வருதல்; to escape from a danger.

[விள் → வெள் → வெளி + ஏது]

வெளிர் *velir,* பெ.எ.(adj.) (நிறத்தில்) அடர்த்தி குறைந்த; light, pale. *'வெளிர் மஞ்சள்'. 'வெளிர் நீலம்'.*

[வெளி → வெளிர்]

வெளிர்த்துக்காட்டு-தல் *velirttu-k-kāttu-,* செ.கு.வி.(v.i.) 1. மழை பெய்த பின் வானம் வெளுத்தல்; to clear, as the sky after rain. 2. வெளிறின நிறமாகத் தோன்றுதல்; to appear pale.

[வெளிர்த்து + காட்டு-தல்]

வெளில்[1] *velil,* பெ.(n.) 1. யானைத்தறி; post to which elephants are tied. *"களிறிலவாகிய புல்லரை நெடுவெளில்" (புறநா. 127).* 2. தயிர் கடைதறி (பிங்.); churning rod. 3. கம்பம் (வின்.); stake, post. 4. அணில்; squirrel. *"நீடுமரச் சோலை விழைவெளிலாடுங் கழை வளர் நனந்தலை" (அகநா. 109).*

[வெளி → வெளில்]

வெளில்[2] *velil,* பெ.(n.) வெள்ளில்[2] (பிங்.) பார்க்க; see *vellil.*

[வெளி → வெளில்]

வெளிவந்தை *veli-vantai,* பெ.(n.) மாட்டின் மேலுள்ள உண்ணி; tick, an external parasite, on cattle.

[வெளி → வெளிவந்தை]

வெளிவர்த்தகம் *veli-varttagam,* பெ.(n.) இரு நாடுகளுக்கு இடையே நடைபெறும் வாணிபம்; foreign trade, trade between two regions.

[வெளி + **Skt.** *vartaka > த. வர்த்தகம்]*

வெளிவ(ரு)-தல் *veli-vā-,* செ.குன்றாவி. (v.t.) 1. (புத்தகம், கட்டுரை, கதை முதலியவை தாளிகையில்) வெளியாதல், (திரைப்படம் முதன் முறையாக) திரையிடப் படுதல்; (of books etc.) be published, (of films, etc.) be released. *'தாளிகையில் தன் கட்டுரை வெளி வந்திருக்கிறதா என்று ஆவலோடு பார்த்தார்'. 'இப்போது வெளிவரும் படங்களில் கதை இருப்பதாகத் தெரியவில்லை'.*

[வெள் → வெளி → வெளிவரு-தல்]

வெளிவா–தல் (வெளிவருதல்) *veḷi-vā-,* செ.கு.வி.(v.i.) 1. பலராலுமறியப்படுதல்; to be public. 2. பலருக்கும் கிடைக்குமாறு பதிப்பிக்கப்படுதல்; to be published.

[வெள் → வெளி → வெளிவா–தல்]

வெளிவாங்கு–தல் *veḷi-vāṅku-,* செ.கு.வி. (v.i.) மழை பெய்தபின் முகில் கலைந்து வெளிச்சமாதல் (யாழ்.அக.); to become clear, as the sky after rain.

[வெளி + வாங்கு–,]

வெளிவாசல் *veḷi-vāšal,* பெ.(n.) 1. கட்டடத்தின் வெளியிலிருக்கும் வாசல்; outer gate. 2. வீட்டின் முகப்பிலுள்ள முற்றம்; open space in front of a house.

[வெளி + வாசல்]

வெளிவாசலுக்குப்போ–தல் *veḷi-vāšalukku-p-pō-,* செ.கு.வி.(v.i.) வெளிக்குப் போ–, பார்க்க; see *veḷikku-p-pō-.*

[வெளிவாசலுக்கு + போ–தல்]

வெளிவாய் *veḷi-vāy,* பெ.(n.) 1. மறை பொருளை வெளியிடும் சொல் (யாழ். அக.); word disclosing a secret. 2. பாண்டத்தின் வெளிப்புற விளிம்பு; the outer rim or lip of a vassel.

[வெளி + வாய்]

வெளிவாய்[2] *veḷi-vāy,* பெ.எ.(adj.) வெளிப் படையாய்; openly. *'வெளிவாய்ச் சொல்'.*

[வெளி + வாய்]

வெளிவாய்க்கல் *veḷi-vāy-k-kal,* பெ.(n.) கட்டடச் சுவரில் அழகியற் கூறுகள் முன்பக்கத்தில் தோன்றுமாறு செதுக்கப்பட்ட கல் (பொ.வழ.); a stone projected in architectural design in the wall of a building.

[வெளி + வாய்க்கல்]

வெளிவாய்ப்படுகை *veḷi-vāy-p-paḍukai,* பெ.(n.) ஆறு குளங்களையடுத்துப் புறம்பாகவுள்ள நிலம்; land adjacent to and outside the bund of a river or tank.

[வெளிவாய் + படுகை]

வெளிவாயன் *veḷi-vāyaṉ,* பெ.(n.) பூட்டகத்தை (இரகசியம்) வெளிவிடுபவன் (யாழ்.அக.); one who lets out secrets.

[வெள் → வெளி + வாயன்]

வெளிவிடு–தல் *veḷi-viḍu-,* செ.குன்றாவி. (v.t.) பலரறியச் செய்தல்; to reveal, make known.

[வெளி + விடு–தல்]

வெளிவிருத்தம் *veḷi-viruttam,* பெ.(n.) மூன்றடியாலேனும் நான்கடியாலேனும் முற்றுப்பெற்று அடிதோறும் இறுதியில் ஒரு சொல்லையே தனிசொல்லாகக் கொண்டு வெண்பாவுக்கு இனமாய் வரும் பாவகை (காரிகை. செய். 7, உரை); a kind of stanze belonging to the *veṉpā* class and consisting of three or four lines, each line ending with the same *taṉi-c-col.*

[வெளி + விருத்தம்]

Skt. vṛtta > த. விருத்தம்.

வெளிவிழுதல் *veḷi-viḻutal,* பெ.(ȵ.) குடல் நிலத்தில் தாழ்கை; ruptured intestines, hernia. *'அவனுக்கு வெளிவிழுந்திருக்கிறது'.*

[வெளி + விழுதல்]

வெளிவிவகாரம் *veḷi-vivakāram,* பெ.(n.) வெளியுறவு பார்க்க; see *veḷi-yuravu.*

[வெளி + விவகாரம்]

Skt. *vyava-hāra* > த. விவகாரம்.

வெளிவீதி *veḷi-vīdi,* பெ.(n.) கோயில் முதலியவற்றிற்கு வெளிப்புறமுள்ள தெரு; boulevard or street surrounding a temple, fort or town.

[வெளி + வீதி]

வெளிவு *veḷivu,* பெ.(n.) வெளிப்படை 1, 2 பார்க்க; see *veḷi-p-paḍai.*

[விள் → வெள் → வெளி → வெளிவு] (தே.நே.பக். 86)

வெளிவெருட்டு *veḷi-veruṭṭu,* பெ.(n.) வெளிப்பகட்டு பார்க்க (யாழ்.அக.); see *veḷi-p-pagaṭṭu.*

[வெளி + வெருட்டு]

வெளிவேடம் *veḷi-vēḍam,* பெ.(n.) 1. தன்னுருவைப் பிறர் அறியாதபடி பூச்சு முதலியவற்றால் மறைக்கை; disguise. 2. வெளித்தோற்றம்; outward show. 3. வஞ்சகம்; hypocrisy.

[வெளி + வேடம்]

Skt. *vēsa* > த. வேடம்.

வெளிற்றுக்குணம் *veḷiṟṟu-k-kuṇam,* பெ.(n.) இழிவான குணம்; immodesty, indecency.

[வெளிற்று + குணம்]

வெளிற்றுப்பனை *veḷiṟṟu-p-paṉai,* பெ.(n.) கூர்மையற்ற பனை; palmyra having no hard core. *"வேனில் வெளிற்றுப் பனை போலக் கையெடுத்து" (அகநா. 333).*

[வெளிற்று + பனை]

வெளிற்றுமரம் *veḷiṟṟu-maram,* பெ.(n.) 1. காழ்ப்பில்லாத மரம் (பிங்.); soft, pithy tree with out core. 2. மரவகை (முள்ளுமுருக்கு) (அக.நி.); east indian coral tree.

[வெளிற்று + மரம்]

வெளிற்றுரை *veḷiṟṟurai,* பெ.(n.) பயனில் சொல்; unmeaning word, rain, empty speech. *"வெளிற்றுரை விடுமினென்றான்" (சீவக. 1431).*

[வெள் → வெளி → வெளிற்றுரை]

வெளிறர் *veḷiṟar,* பெ.(n.) அறிவில்லார்; fools, shipid people.

[வெளி → வெளிறர்]

வெளிறல் *veḷiṟal,* பெ.(n.) வெளுத்தல்; becoming pale.

[வெள் → வெளி → வெளிறல்]

வெளிறன் *veḷiṟaṉ,* பெ.(n.) 1. அறிவில்லாதவன் (யாழ்.அக.); ignorant man. 2. கீழ் மகன் (பிங்.); mean person.

[வெளி → வெளிறன்]

வெளிறின *veḷiṟiṉa,* பெ.(n.) சோகை பிடித்த; wan.

[வெளி → வெளிறின]

வெளிறு-தல் *veḷiṟu-,* செ.கு.வி.(v.i.) 1. வெண்மையாதல்; to grow white. 2. நிறங் கெடுதல்; to become pale. *'அவன் முகம் வெளிறிப் போயிற்று'.*

[வெள் → வெளி → வெளிறு-தல்] (தே.நே.பக்.85).

வெளிறு[2] *veḷiṟu,* பெ.(n.) 1. வெண்மை; whiteness. *"வெளிறு சேர்நிணம்" (கம்பரா. கரன். 155).* 2. நிறக்கேடு; paleness, pallor. 3. வெளிச்சம்; light. *"கதிர்வே றுணையா வெளிறுவிரவ வருதிகண்டாய்" (பதினொ. திருவாரூர்மும். 9).* 4. வெளிப்படுகை; becoming clear or manifest. *"வெளிறுற்ற வான்பழியாம்" (திருக்கோ. 254).* 5. பயனின்மை; uselessness. *"வெளிற்றுரை" (சீவக. 1431).* 6. அறியாமை; stupidity, ignorance. *"ஆசற்றார் கண்ணும் ...... இன்மை யரிதே வெளிறு" (குறள், 503).* 7. இளமை; tenderness, youth. *"வெளிற்றுப் பனந்துணியின்" (புறநா. 35).* 8. திண்மையற்றது; that which is not dense. *"வெளிறான இருளன்றிக்கே" (ஈடு. 2, 1, 8).* 9. குற்றம்; fault, defect. *"வெளிறில் வாள்" (சீவக. 3074).* 10. காழ்ப் (வயிரம்) பின்மை; having no hard core. *"வெளிறி னோன் காழ்" (புறநா. 23).* 11. வெளிற்று மரம் 1 பார்க்க; see *veḷiṟṟu-maram 1.* *"வெளிறு முன் வித்திப் பின்னை வச்சிரம் விளைத்த லாமோ" (சீவக. 2613) (திவா.* MSS). 12. செடி வகை (மலை.); common sebesten.

[வெள் → வெளி → வெளிறு]

வெளிறு *veḷiṟu,* பெ.(n.) 1. அலிமரம்; a tree without a solid portion either inside or outside. 2. வெளுத்தல்; becoming pale. 3. நறுவிலி; a tree.

[வெள் → வெளி → வெளிறு] (தே.நே.பக்.85).

வெளு[1]-த்தல் *veḷu-,* செ.கு.வி.(v.i.) 1. வெண்மையாதல்; to become white. *"கீர்த்தி வெளுத்ததே" (கலிங். 243).* 2. நிறங்கெடுதல்; to become pale, to lose colour. *'அந்தப் புடவை வெளுத்துவிட்டது'.* 3. விடிதல்; to dawn. *'கிழக்கு வெளுத்தது'.* 4. உண்மை நிலை வெளிப்படுதல்; to become clear or manifest. *'அவர் பெருமையெல்லாம் வெளுத்துவிட்டது'.*

[வெ → வெளு → வெளு-த்தல்] (தே.நே.பக்.85)

வெளு[2]-த்தல் *veḷu-,* செ.குன்றாவி.(v.t.) 1. ஆடையொலித்தல்; to whiten, bleach, wash, as clothes. 2. புடைத்தல்; to durb, beat hard.

[வெ → வெளு → வெளுத்தல்]

வெளுக்கங்கல் *veḷukku-ṅ-kal,* பெ.(n.) சுக்கான் கல்; lime stone.

[வெளுக்கம் + கல்]

வெளுச்சி *veḷucci,* பெ.(n.) விளாம் பிசின்; gum of wood-apple-feronia elephantum.

வெளுத்தபாதிரி *veḷutta-pādiri,* பெ.(n.) மரவகை; indian calosanthas.

[வெளுத்த + பாதிரி]

வெளுத்தபிசின் *veḷutta-piśiṉ,* பெ.(n.) வெளுத்தற் பிசின்; white gum.

[வெளுத்த + பிசின்]

வெளுத்தமுகம் *veḷutta-mugam,* பெ.(n.) வெளிறிய முகம்; pale face.

[வெளுத்த + முகம்]

வெளுத்தமேகசலம் *veḷutta-mēga-śalam,* பெ.(n.) வெள்ளை நோய்; gonorrhoea.

[வெளுத்த + மேகசலம்]

வெளுத்தல்[1] *veḷuttal,* பெ.(n.) மரவகை (யாழ்.அக.); a tree.

வெளுத்தல்[2] *veluttal,* பெ.(n.) 1. மரவகை; a tree. 2. வெள்ளையாக்கல்; calcining. 3. வெண்மையாதல்; growing white-albication.

[வெ → வெளு → வெளுத்தல்] (தே.நே.பக். 85).

வெளுத்தலரி *veluttalari,* பெ.(n.) அலரிவகை; pagoda tree.

வெளுத்துக்கட்டு-தல் *veluttu-k-kattu-,* செ.குன்றாவி.(v.t.) (பலரும் பாராட்டும் வகையில் அல்லது வியக்கும் வகையில் ஒன்றை) சிறப்பாகச் செய்தல்; do very well. *'அப்பா வேடத்தில் நடிகர் வெளுத்துக் கட்டியிருக்கிறார்'.*

[வெளுத்து + கட்டு-,]

வெளுத்துநீறுதல் *veluttu-nirutal,* பெ.(n.) மருந்து வெண்ணிறமாகி தூளாகுதல்; medicine turning white and powdery.

[வெளுத்து + நீறுதல்]

வெளுத்துவாங்கு[1]-தல் *veluttu-vānku-,* செ.கு.வி.(v.i.) மிக நன்றாகச் செய்தல்; to do a thing in an admirable manner.

[வெளுத்து + வாங்கு]

வெளுத்துவாங்கு[2]-தல் *veluttu-vānku-,* செ.குன்றாவி.(v.t.) வெளு-, பார்க்க; see *velu-.*

[வெளுத்து + வாங்கு]

வெளுத்துவிடு-தல் *veluttu-vidu-,* செ.கு.வி & செ.குன்றாவி.(v.i. & v.t.) வெளுத்து வாங்கு-, பார்க்க; see *veluttu-vānku-.*

[வெளுத்து + விடு]

வெளுப்பத்தி *velu-p-patti,* பெ.(n.) எலும்பு; bone.

வெளுப்பி *veluppi,* பெ.(n.) 1. குண்டுமணி; jeweller's bead. 2. புறங்கைநாறி பார்க்க; see *purankai-nāri.*

[வெளு → வெளுப்பி]

வெளுப்பு *veluppu,* பெ.(n.) 1. வெண்மை; whiteness. 2. நோயால் உடல் வெளிறுகை; pallor, as from illness. 3. ஆடை வெளுக்கை; bleaching, washing of clothes. 4. புடைக்கை; drubing, beating.

[வெ → வெளு → வெளுப்பு] (தே.நே.பக். 85).

வெளுப்புக்கலவை *veluppu-k-kalavai,* பெ.(n.) வெண்மையாக்கும் பொருள்; bleaching.

[வெளுப்பு + கலவை]

வெளுப்புக்காகச்சி *veluppu-k-kākacci,* பெ.(n.) வெண்கரும்பு; white sugar-cane-saccharum offcinarum.

[வெளுப்பு + காகச்சி]

வெளுப்புடும்பு *veluppudumbu,* பெ.(n.) வெள்ளையுடும்பு; white guana.

[வெளுப்பு + உடும்பு]

வெளுப்புநீர் *veluppu-nir,* பெ.(n.) வெளுப்பதற்கு பயன்படும் நீர்மம்; washing fluid.

[வெளுப்பு + நீர்]

வெளுப்பேறல் *veluppēral,* பெ.(n.) வெளுத்தல்; to become white.

[வெளுப்பு + ஏறல்]

வெளுரல் *ve!ural,* பெ.(n.) வெளுத்தல், சுண்ணாமாகல்; to be calcined.

[வெ → வெளு → வெளுரல்]

வெளுரி *ve!uri,* பெ.(n.) வெளுத்தல்; to become white.

[வெ → வெளு → வெளுரி]

வெளுவெளு-த்தல் *ve!u-ve!u-,* செ.கு.வி. (v.i.) 1. வெண்மையாதல் (வின்.); to become white. 2. நிறங்கெடுதல்; to become pale.

[வெளு + வெளு-,]

வெளுவெளுப்பு¹ *ve!u-ve!uppu,* பெ.(n.) 1. வெளுப்பு 1 பார்க்க; see *ve!uppu1*. 2. வெளுப்பு 2 பார்க்க (யாழ்.அக.); see *ve!uppu 2*.

[வெ → வெளு → வெளுவெளுப்பு]

வெளுவெளுப்பு² *ve!u-ve!uppu,* பெ.(n.) நோயடைந்த வெண்மை; pale.

[வெளு → வெளுவெளுப்பு]

வெளுவெளுவெனல் *ve!u-ve!u-v-enal,* பெ.(n.) 1. மிக வெண்மையாதற் குறிப்பு; extreme whiteness. 2. நிறம் வெளிறுதற் குறிப்பு; extreme paleness. 3. நையப் புடைத்தற் குறிப்பு; sound thrashing. 4. கொண்டாடத்தக்க விதத்தில் ஒன்றைச் செய்தற் குறிப்பு; doing a thing in an admirable manner.

[வெளுவெளு + எனல்]

வெளுவை *ve!uvai,* பெ.(n.) வெண்மையாகை (யாழ்.அக.); becoming white.

[வெ → வெளு → வெளுவை]

வெளேரெனல் *ve!ērenal,* பெ.(n.) 1. வெண்மையாதற்குறிப்பு; appearing white. 2. நிறம் வெளிறுதற்குறிப்பு; looking pale.

[வெளேர் + எனல்]

வெற்பஞ்சனம் *ver-pañjanam,* பெ.(n.) நீலாஞ்சனக்கல், துருசு; blue vitriol-copper sulphate.

வெற்பன் *verpan,* பெ.(n.) குறிஞ்சி நிலத் தலைவன் (பிங்.); chief of *kuriñci* tract.

[வெள் → வெறு → வெற்பன்]

வெற்பிரதம் *ver-piratam,* பெ.(n.) ஒருவகை மருந்துக்கல் (தைலவ.); foliated crystallised gypsum.

வெற்பு *verpu,* பெ.(n.) 1. மலை (பிங்.); mountain, hill. *"மால்வரை நிவந்த சேணுயர் வெற்பில்" (திருமுரு. 12).* 2. பக்க மலை (ஐங்குறு. அரும்.); foothill spur.



வெற்பேந்தி¹ *ver-pēnti,* பெ.(n.) செடிவகை; sickle-leaf.

வெற்பேந்தி² *ver-pēnti,* பெ.(n.) மலை தாங்கிப் பூடு; a plant-sida acuta. இதனால் பாரிப்பு, இழுப்பு நோய் நீங்கும்.

வெற்றம் *verram,* பெ.(n.) 1. வெற்றி பார்க்க; see *verri.* *"வேற்றுப்புலம் போகி நல் வெற்றங் கெடுத்து" (சிலப். 11, 212).* 2. வீரம் (அக.நி.); courage.

[வெல் → விர் → விறு → வீறு → வெற்றம்]

வெற்றர் *verrar,* பெ.(n.) 1. ஏழைகள்; poor people. *"வீடுதோ றிரந்தும் பசியறாதயர்ந்த வெற்றரைக் கண்டுளந் துடித்தேன்" (அருட்பா. iv, பிள்ளைப் பெரு. 58).* 2. பயனற்றார்; worthless persons. *"நின்ற னடியரோடன்றி மற்றுமோர் வெற்றருள் வாழேன்" (அருட்பா. ii, அவத்தொழிற். 8).*

[வெற்று + அர்]

வெற்றல் *verral,* பெ.(n.) வெற்றி பார்க்க; see *verri.* *"வெற்றல் வேல்வேந்தர்க் கினது" (இனி. நாற். 36).*

வெற்றாள் *verrāl,* பெ.(n.) 1. வேலையில்லாத வ-ன்-ள்; un employed person. 2. குடும்பச் சுமையின்றித் தனித்திருப்பவ-ன்-ள் (யாழ்.அக.); lonely person without any family responsibilities. 3. பயனற்றவ-ன்-ள்; worthless person.

[வெற்று + ஆள்]

வெற்றி[1] *verri,* பெ.(n.) வெல்கை, வாகை (பிங்.); victory, success, conquest, triumph. *"வெற்றிக்கருளக்" (கொடியான். திவ். நாய்ச். 13,7).*

[வெல் → விர் → விறு → வீறு = வெற்றி] (தே.நே.பக். 89)

வெற்றி[2] *verri,* பெ.(n.) 1. (போர், போட்டி முதலியவற்றில் எதிர்ப்பவரை) தோற்கடித்துப் பெறும் உயர்வு; victory, success. *'அவர் ஆயிரம் ஒப்போலை வேறுபாட்டில் வெற்றி பெற்றுள்ளார்'. 'வெற்றி தோல்வி இல்லாமல் போட்டி முடிவடைந்தது'.* 2. (எடுத்துக் கொண்ட முயற்சியின்) பயன் நிறைந்த முடிவு; successful completion. *'உன் முயற்சிகள் வெற்றி பெற என் வாழ்த்துகள்'. 'பேச்சு வெற்றி அடைந்தது'.* 3. (திரைப்படம் நாடகம் முதலியவை நல்ல வசூல் கொடுத்து) நீண்ட நாள் நடைபெறும் நிலை; (of films) a box office hit. *'கலைப் படங்கள் வெற்றி அடைவதில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.*

[வெல் → (வில்) → (விர்) → விறு → (வில்) → வீறு = வெற்றி] (தே.நே.பக்.89)

வெற்றிக்கடுக்காய் *verri-k-kaḍukkāy,* பெ.(n.) பெரிய மரவகை (தைலவ.); crape myrtle.

[வெற்றி + கடுக்காய்]

வெற்றிக்கம்பம் *verri-k-kambam,* பெ.(n.) *வெற்றித்தம்பம்* பார்க்க (யாழ்.அக.); see *verri-t-tambam.*

[வெற்றி + கம்பம்]

வெற்றிக்கரந்தைமஞ்சரி *verri-k-karantai-mañcari,* பெ.(n.) தொண்ணூற்றாறு வகைப் பனுவ(பிரபந்தம்)லுள் பகைவர் கவர்ந்து சென்ற நிரையைக் கரந்தை மாலை சூடிய வீரர் மீட்பதைக் கூறும் நூல் வகை; a poem celebrating the recovery of cattle from the enemies who had captured them by warriors in pursuit wearing karantai, one of 96 kinds pirapantam.

[வெற்றி + கரந்தை + மஞ்சரி]

வெற்றிக்கீர்த்தி *veṟṟi-k-kīrtti,* பெ.(n.) வெற்றிப்புகழ் பார்க்க (தக்கயாகப். 483, உரை); see *veṟṟi-p-pugaḻ.*

[வெற்றி + கீர்த்தி]

வெற்றிக்குதிரை *veṟṟi-k-kudirai,* பெ.(n.) போட்டி (பந்தயம்)யில் வென்ற குதிரை (யாழ்.அக.); winning horse in a race.

[வெற்றி + குதிரை]

வெற்றிக்கொடி *veṟṟi-k-koḍi,* பெ.(n.) வாகையைக் குறிக்க எடுக்கும் கொடி; flag of victory. *"இவ்வாயர் மகள் தோள்........ வெற்றிக்கொடியை உண்டாக்கினவாம்" (கலித். 101, 37, உரை).*

[வெற்றி + கொடி]

வெற்றிகாண்(ணு)-தல் *veṟṟi-kāṇ(ṇu)-,* செ.கு.வி.(v.i.) வெற்றிபெறுதல் (வின்.); to gain a victory, to win.

[வெற்றி + காண்(ணு)-,]

வெற்றிகொள்ளல் *veṟṟi-koḷḷal,* பெ.(n.) வெல்லுதல்; win, succeed.

[வெற்றி + கொள்ளல்]

வெற்றிலைச்சருகு *veṟṟilai-c-caruku,* பெ.(n.) காய்ந்த வெற்றிலை இல்லை; dried betel leaf.

[வெற்றிலை + சருகு]

வெற்றிச்சின்னம் *veṟṟi-c-cinnam,* பெ.(n.) வென்ற பரிசிற்பொருள்; trophy.

[வெற்றி + சின்னம்]

வெற்றிச்சீட்டு *veṟṟi-c-cīṭṭu,* பெ.(n.) குலுக்கல் பரிசுச் சீட்டில் வெற்றியைக் குறிக்குஞ் சீட்டு (யாழ்.அக.); the winning tickets, as in a lottery.

[வெற்றி + சீட்டு]

வெற்றிசூடு-தல் *veṟṟi-cūḍu-,* செ.கு.வி. (v.i.) வெற்றி பெறுதல்; to gain a victory.

[வெற்றி + சூடு-,]

வெற்றிடக்குழல்கள் *veṟṟiṭa-k-kuḻalgaḷ,* பெ.(n.) தொடக்ககாலக் கணிப்பொறியில் பயன்படுத்தப்பட்ட மின்னணு உறுப்பு; vacumm tubes.

[வெற்றிடம் + குழல்கள்]

வெற்றிடம்[1] *veṟṟiḍam,* பெ.(n.) வெறுமையான இடம் (பொருந. 245, உரை); vacant place.

[வெற்று + இடம்]

வெற்றிடம்[2] *veṟṟiḍam,* பெ.(n.) 1. காற்றில்லாத விடம்; vaccum. 2. வெறுவெளி; etheric space.

[வெற்று + இடம்]

வெற்றித்தண்டை *veṟṟi-t-taṇḍai,* பெ.(n.) வீரக்கழல் (யாழ்.அக.); anklet warn on the leg, as a sing of victory.

[வெற்றி + தண்டை]

வெற்றித்தம்பம் *veṟṟi-t-tambam,* பெ.(n.) 1. வாகைக்கம்பம் (வின்.); column erected in commemoration of a victory, triumphal column. 2. வெற்றிக் கொடியைக் கட்டியுள்ள கம்பம் (யாழ்.அக.); staff on which is hoisted the flag of victory.

[வெற்றி + தம்பம்]

Pkt. Tamba > த. தம்பம்.

வெற்றித்துவசம் *veṟṟi-t-tuvašam,* பெ.(n.) வெற்றிக்கொடி; victory or triumph.

[வெற்றி + துவசம்]

Skt. Dhvaja > த. துவசம்.

வெற்றிப்பத்திரம் *veṟṟi-p-pattiram,* பெ.(n.) இரு பக்கத்தார் உரையையும் கேட்ட பின்னர் கொடுக்கப்படும் வெற்றியாவணம் (சுக்கிரநீதி. 92); document embodying the judicial decision in a contested case.

[வெற்றி + பத்திரம்]

Skt. Bhadra > த. பத்திரம்.

வெற்றிப்பரிசு *veṟṟi-p-paricu,* பெ.(n.) வெற்றி வாகை சூடிய பொருள்; memorial of victory.

[வெற்றி + பரிசு]

வெற்றிப்பாடு *veṟṟi-p-pāḍu,* பெ.(n.) வெற்றியாற் பெற்ற பெருமை; greatness attained by victory. *"வெற்றிப்பாடுங் குணப்பாடும்........ தெற்றிப்பாட" (தமிழ்நா. 234).*

[வெற்றி + பாடு]

வெற்றிப்புகழ் *veṟṟi-p-pugaḻ,* பெ.(n.) 1. வெற்றியால் உண்டாகும் புகழ் (வின்.); fame due to victory, as in war. 2. போரில் அடைந்த வெற்றியைப் புகழ்கை; eulogy on a viclorious campaign.

[வெற்றி + புகழ்]

வெற்றிப்பூ *veṟṟi-p-pū,* பெ.(n.) வெற்றிக் குறியாக அணியப்படும் பூ, வாகை மாலை (பிங்.); flcwer worn as a sign of victory.

[வெற்றி + பூ]

வெற்றிமகள் *veṟṟi-makaḷ,* பெ.(n.) வெற்றி மடந்தை பார்க்க; see *veṟṟi-maḍantai.* *"பிறரை வென்று வெற்றி மகளைத் தன்னிடத்து மீட்டுக்கொண்டு" (பு.வெ.ஒழிபு. 13).*

[வெற்றி + மகள்]

வெற்றிமடந்தை *veṟṟi-maḍantai,* பெ.(n.) வெற்றித்திருமகள் (செயலெட்சுமி); the goddess of victory.

[வெற்றி + மடந்தை]

வெற்றிமாலை *veṟṟi-mālai,* பெ.(n.) வெற்றி வாகை பார்க்க; see *veṟṟi-vāgai.*

[வெற்றி + மாலை]

வெற்றிமுரசு *veṟṟi-murašu,* பெ.(n.) வெற்றிக் குறியாக முடிக்கப்படும் பேரிகை; drum beaten in token of victory.

[வெற்றி + முரசு]



வெற்றிமை[1] *veṟṟimai,* பெ.(n.) 1. வெற்றியாகிய தன்மை; victoriousness, victory. 2. மேம்பாடு; distinctive, greatness. *"ஆரழலாய் நிமிர்கின்ற வெற்றிமையென்" (தோ. 1019, 9).*

[வெற்றி → வெற்றிமை]

வெற்றிலை



வெட்டிவேர்



வெண் சந்தனம்



வெள்ளை காக்கட்டான்

வெற்றிமை² *verrimai,* பெ.(n.) வெறுமை; emptiness, barrenness, bareness. *"முதுகுந் தலையும் வெற்றிமைப் பட்டுப் பருஷமா யிராதபடி" (திவ். திருநெடுந். 21, வ்யா. பக். 173).*

[வெறுமை → வெற்றுமை]

வெற்றிலை *verrilai,* பெ.(n.) 1. கொடிவகை; betel pepper. 2. பாக்குஞ் சுண்ணாம்புஞ் சேர்ந்து மென்று தின்பதற்குரிய வெற்றிலைக் கொடியின் இலை; betel leaf. *"பருகுநீர் தின்னும் வெற்றிலை" (திவ். திருவாய். 6, 7, 1).*

[வெள்ளிலை → வெற்றிலை] (தே.நே.பக். 126)

வெள்ளிலை = பூ காய் கனியில்லாத வெறுங்கொடியின் இலை.

வெற்றிலைக்கத்தூரி *verrilai-k-katturi,* பெ.(n.) செடிவகை; musk mallow.

வெற்றிலைக்காய் *verrilai-k-kāy,* பெ.(n.) வெற்றிலைக் கொடியின் காய் (யாழ்.அக.); fruit of betel vine.

[வெற்றிலை + காய்]

வெற்றிலைக்கால் *verrilai-k-kal,* பெ.(n.) வெற்றிலைத்தோட்டம் (வின்.) பார்க்க; see *verrilai-t-tōttam.*

[வெற்றிலை + கால்]

வெற்றிலைக்காளாஞ்சி *verrilai-k-kālāñci,* பெ.(n.) வெற்றிலைப்படிக்கம் பார்க்க; see *verrilai-p-padikkam.*

[வெற்றிலை + காளாஞ்சி]

வெற்றிலைக்கொடி *verrilai-k-kodi,* பெ.(n.) தம்பல (தாம்பூல)வல்லி; betel vine.

[வெற்றிலை + கொடி]

வெற்றிலைக்கொழுந்து¹ *verrilai-k-kolundu,* பெ.(n.) வெற்றிலை 1 பார்க்க; see *verrilai 1.*

[வெற்றிலை + கொழுந்து]

வெற்றிலைக்கொழுந்து² *verrilai-k-kolundu,* பெ.(n.) இளவெற்றிலை; tender betel leaf.

[வெற்றிலை + கொழுந்து]

வெற்றிலைச்சரை *verrilai-c-carai,* பெ.(n.) வெற்றிலைத்தட்டி (யாழ்.அக.) பார்க்க; see *verrilai-t-tatti.*

[வெற்றிலை + சரை]

வெற்றிலைச்சாறு *verrilai-c-cāru,* பெ.(n.) வெற்றிலையைக் கசக்கி எடுக்கும் சாறு, நஞ்சை சுருக்கிடவுதவும்; juice of betel leaf, used for treating arsenic.

[வெற்றிலை + சாறு]

வெற்றிலைசுருட்டி *verrilai-šurutti,* பெ.(n.) ஒரு வகைப் புழு; a kind of worm which rools the betel leaf.

[வெற்றிலை + சுருட்டி]

வெற்றிலைச்சுருள் *verrilai-c-curuḷ*, பெ.(n.) வெற்றிலையிற் பாக்குவைத்துக் கட்டிய சுருள்; betel leaves rolled up with areca-nut parings.

[வெற்றிலை + சுருள்]

வெற்றிலைச்செல்லம் *verrilai-c-cellam*, பெ.(n.) வெற்றிலைப்பெட்டி பார்க்க; see *verrilai-p-peṭṭi.*

[வெற்றிலை + செல்வம்]

வெற்றிலைசுருட்டி *verrilai-curuṭṭi*, பெ.(n.) வெற்றிலைப் புழுவகை (யாழ்.அக.); a betel pest.

[வெற்றிலை + சுருட்டி]

வெற்றிலைத்தட்டம் *verrilai-t-taṭṭam*, பெ.(n.) வெற்றிலைத்தட்டு பார்க்க; see *verrilai-t-taṭṭu.*

[வெற்றிலை + தட்டம்]

வெற்றிலைத்தட்டி[1] *verrilai-t-taṭṭi*, பெ.(n.) வெற்றிலையை உள்ளடக்கி வைக்கும் வாழையிலை முதலியவற்றாலான கூடு (யாழ்.அக.); cover made of plaintain leaves, straw or ola, for betels.

[வெற்றிலை + தட்டி]

வெற்றிலைத்தட்டி[2] *verrilai-t-taṭṭi*, பெ.(n.) வெற்றிலைச்சருகு; dried betel leaf.

[வெற்றிலை + தட்டி]

வெற்றிலைத்தட்டு *verrilai-t-taṭṭu*, பெ.(n.) வெற்றிலை பாக்கு, சுண்ணாம்பு முதலியன வைக்குந் தட்டம்; salver for betels, areca-nut, chunam, etc.

[வெற்றிலை + தட்டு]

வெற்றிலைத்தண்டுலம் *verrilai-t-taṇḍulam*, பெ.(n.) வேம்பின் மேற் புல்லுருவி; parasitic plant on neem tree.

[வெற்றிலை + தண்டுலம்]

வெற்றிலைத்தம்பலம் *verrilai-t-tambalam*, பெ.(n.) வெற்றிலை பாக்கு மென்ற எச்சில் (யாழ்.அக.); red spittle of chewed betel leaves.

[வெற்றிலை + தம்பலம்]

வெற்றிலைத்தாம்பாளம் *verrilai-t-tāmbāḷam*, பெ.(n.) வெற்றிலைத்தட்டு பார்க்க; see *verrilai-t-taṭṭu.*

[வெற்றிலை + தாம்பாளம்]

வெற்றிலைத்தோட்டம் *verrilai-t-tōṭṭam*, பெ.(n.) வெற்றிலைக்கொடி பயிர் செய்யுந் தோட்டம்; betel garden.

[வெற்றிலை + தோட்டம்]

வெற்றிலைநறுக்கி *verrilai-narukki*, பெ.(n.) செடிவகை (யாழ்.அக.); a kind of plant.

வெற்றிலைநாரி *verrilai-nāri*, பெ.(n.) ஒருவகைப் புல்; a kind of grass.

வெற்றிலைநாறி *verrilai-nāri*, பெ.(n.) ஒரு வகைப் புதர் (யாழ்.அக.); a kind of shrub.

[வெற்றிலை + நாறி]

வெற்றிலைப்பட்டி *verrilai-p-paṭṭi*, பெ.(n.) வெற்றிலைச்சுருள் பார்க்க; see *verrilai-c-curuḷ.*

[வெற்றிலை + பட்டி]

வெற்றிலைப்பட்டை *verrilai-p-pattai,* பெ.(n.) காட்டுக்குமிழ்; mulberry of western ghats-callicarpes lanata.

[வெற்றிலை + பட்டை]

வெற்றிலைப்படலிகை *verrilai-p-padaligai,* பெ.(n.) வெற்றிலை வைக்குங் கூடை (சீவக. 826, உரை); basket for betels.

[வெற்றிலை + படலிகை]

வெற்றிலைப்படிக்கம் *verrilai-p-patikkam,* பெ.(n.) தம்பலந் துப்புங் கலம்; spittoon.

[வெற்றிலை + பழுக்கம்]

வெற்றிலைப்பழு *verrilai-p-palu,* பெ.(n.) பழுத்த வெற்றிலை; sere betel.

[வெற்றிலை + பழு]

வெற்றிலைப்புழு *verrilai-p-pulu,* பெ.(n.) வெற்றிலைப்பூச்சி பார்க்க; see *verrilai-p-pūcci.*

[வெற்றிலை + புழு]

வெற்றிலைப்பூச்சி *verrilai-p-pūcci,* பெ.(n.) வெற்றிலையிலுள்ள நச்சு புழு; a kind of small worm in betel leaves, said to be poisonous.

[வெற்றிலை + பூச்சி]

வெற்றிலைப்பூமணி *verriai-p-pūmaṇi,* பெ.(n.) மகளிரணி வகை (யாழ்.அக.); a kind of jewel worn by women.

[வெற்றிலை + பூமணி]

வெற்றிலைப்பெட்டி *verrilai-p-petti,* பெ.(n.) வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு முதலியன வைக்கும் சிறு பெட்டி; a small box for betels, areca-nuts, chunam, etc.

[வெற்றிலை + பெட்டி]



வெற்றிலைப்பை *verrilai-p-pai,* பெ.(n.) தம்பலம் (தாம்பூலம்) வைக்கும் பை; a bag for betels, areca-nut, parings, etc.

[வெற்றிலை + பை]

வெற்றிலைபாக்கு *verrilai-pākku,* பெ.(n.) தம்பலம் (தாம்பூலம்); betels and areca-nuts.

[வெற்றிலை + பாக்கு]

வெற்றிலைபாக்குக்கொடு-த்தல் *verrilai-pākku-k-kodu-,* செ.கு.வி.(v.i.) 1. தம்பலம் (தாம்பூலம்) வழங்கி மதிப்புரவு (மரியாதை) செய்தல்; to show civility by the distributiion of betels and areca-nuts. 2. வெற்றிலையிடு-, 2 பார்க்க; see *verrilai-y-idu-, 2.*

[வெற்றிலை + பாக்கு + கொடு-,]

வெற்றிலைபாக்குவை-த்தல் *verrilai-pākku-vai-,* செ.கு.வி.(v.i.) வெற்றிலை வை-, பார்க்க; see *verrilai-vai-.*

[வெற்றிலை + பாக்கு + வை-,]

வெற்றிலைபோடு-தல் *verrilai-pōdu-,* செ.கு.வி.(v.i.) தம்பலம் பூணுதல்; to chew betel.

[வெற்றிலை + போடு-,]

வெற்றிலைமடல் *verrilai-madal,* பெ.(n.) வெற்றிலை வைக்கும் பெட்டிவகை; a small box for betels.

[வெனற்றிலை + மடல்]

வெற்றிலைமடிப்பு *verrilai-madippu,* பெ.(n.) வெற்றிலைச் சுருள்; roll of betel leef and Arecaunut.

[வெற்றிலை + மடிப்பு]

வெற்றிலையமுது *verrilai-yamudu,* பெ.(n.) இறைவன் படையலுக்கான வெற்றிலை; betels offered to deities. *"வெற்றிலை யமுது அறுபதுக்குமாக"(S.I.I.iii,116,32).*

[வெற்றிலை + அமுது]

வெற்றிலையிடு-தல் *verrilai-yidu-,* செ.கு.வி. (v.i.) 1. வெற்றிலைபாக்குக்கொடு-,1 பார்க்க; see *verrilai-pākku-k-kodu-,1.* 2. பிரிந்து செல்வதற்கு வெற்றிலை வழங்கி விடை கொடுத்தல்; to give permission to leave, by the giving of betels and areca-nuts. *"கொன்று வருகிறோம் எங்களுக்கு வெற்றிலையிட்டருளீர்" (ஈடு. 4, 1, 2).*

[வெற்றிலை + இடு-,]

வெற்றிலைவல்லி *verrilai-valli,* பெ.(n.) வெற்றிலைக்கொடி; betel vine-piper betel.

[வெற்றிலை + வல்லி]

வெற்றிலைவள்ளி *verrilai-valli,* பெ.(n.) வள்ளிக்கொடிவகை (இலத்.); betel yam.

[வெற்றிலை + வள்ளி]

வெற்றிலைவள்ளிக்கிழங்கு *verrilai-valli-kilangu,* பெ.(n.) 1. உணவுக்குரிய ஒரு வகைக் கிழங்கு; vegetable root. இதுவே காய்த்துளசிக் கிழங்கு. 2. நாகவள்ளிக் கிழங்கு; dioscorea opposititolia.

[வெற்றிலை + வள்ளி + கிழங்கு]

வெற்றிலைவாணியர் *verrilai-vāniyar,* பெ.(n.) இலைவாணியர் பார்க்க; see *ilai-vāniyar* (S.I.I.iv.496).

[வெற்றிலை + வாணியர்]

வெற்றிலைவெடிபதம் *verrilai-vedipadam,* பெ.(n.) இட்ட வெற்றிலை வெடிக்கும் பருவம் வரை காய்ச்சப்படும் மருந்தெண்ணெய்ப்பதம் (யாழ்.அக.); a stage in the boiling of medicinal oil, when a betel thrown into it will crackle.

[வெற்றிலை + வெடிபதம்]

வெற்றிலைவை-த்தல் *verrilai-vai-,* செ.கு.வி. (v.i.) வெற்றிலைபாக்கு வைத்து திருமணம் முதலிய சிறப்பிற்கு உறவினர் நண்பர் முதலியோரை அழைத்தல்; to invite relations, friends, etc. by offering betels and areca-nuts, as to a wedding.

[வெற்றிலை + வை-,]

வெற்றிவாகை *verri-vāgai,* பெ.(n.) வெற்றிக் குறியாகச் சூடும் வாகைமாலை; wreath of siris flowers, worn as an emblem of victory.

[வெற்றி + வாகை]

வெற்றிவெறிது *verri-veridu,* பெ.(n.) பயன் சிறிதுமின்மை; absolute worthlessness. *"வெற்றி வெறிதே பெற்றதாய் வேம் பேயாக வளர்த்தாளே" (திவ். நாய்ச். 137).*

[வெற்றி + வெறிது]

வெற்றிவேற்கை *veṟṟi-vēṟkai,* பெ.(n.) தமிழில் உள்ள ஒரு அறநூல்; code of laws, treatise on civil and religious duties in tamil.

ஆத்திசூடி என்பதைப் போல் இது வெற்றிவேற்கை என்று தொடங்கும் முதலை யுடைமையால் இவ்வாறு பெயர் பெற்றது. இதற்கு நறுந்தொகை யெனவும் பெயர் உண்டு. இந்நூற் செய்யுட்கள் யாவும் நூற்பா வடிவில் அமைந்துள்ளன. இப்பாக்கள் பெரும்பாலும் ஒவ்வோரடியால் ஆகியவை 84 பாடல்கள் இதனில் உள்ளன. இதனை இயற்றியவர் அதி வீரராமபாண்டியர் என்னும் அரசராவர்.

[வெற்றி + வேற்கை]

வெற்றிவேற்செழியன் *veṟṟi-vēṟ-ceḻiyaṉ,* பெ.(n.) இவன் பாண்டி நாட்டில் கொற்கையில் இருந்து அரசு செய்தவன்; he was administration at koṟkai in *pāṇḍināḍu.*

பாண்டியன் நெடுஞ்செழியன் தான் அரசு முறை கோயதன் விளைவாக மாண்ட பிறகு மதுரை நகர் புரப்பாரின்றிக் கெட்டழிந்து நல்ல மழையில்லாமையாலும் வேறு பல செயல்களாலும் நாடு நாடோறுஞ் சீரழிந்து கொண்டிருந்தது. கொற்கையில் இருந்த இவன் மதுரையை அடைந்து அரசாட்சியை மேற்கொண்டான். நேர்ந்துள்ள தீமைகட்கெல்லாம் கழுவாய் செய்தான். அதன் பிறகு நாடு செழித்து நன்னிலைக்கு வந்தது.

வெற்றிழுப்பு *veṟṟiḻuppu,* பெ.(n.) பயனற்ற செயல்; rain attempt, futile effort.

வெற்று *veṟṟu,* பெ.எ.(adj.) 1. (ஒன்றில் இருக்க வேண்டியது) எதுவும் இல்லாத வெறும்; empty, bare, blank. *'வெற்றுத் துமுக்கியைக் காட்டி அச்சுறுத்தி விட்டான்'. 'இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு வெற்று மார்போடு நின்று பூசை செய்தார்'.* 2. எதிர்பார்க்கும் பயனை விளைவிக்காத; useless. *'சிக்கலுக்குத் தீர்வு இல்லை, ஆக நாம் இதுவரை வெற்றுப் பேச்சுதான் பேசிக் கொண்டிருந்திருக்கிறோம்'.*

[வெள் → வெறு → வெற்று] (தே.நே.பக்.126)

வெற்றுக்கட்டை *veṟṟu-k-kaṭṭai,* பெ.(n.) வெற்றாள் 2 பார்க்க; see *veṟṟāḷ 2.*

[வெள் → வெறு → வெற்று + கட்டை]

வெற்றுக்கால் *veṟṟu-k-kāl,* பெ.(n.) வெறுங் கால்; bare foot.

[வெள் → வெறு → வெற்று + கால்]

வெற்றுகம் *veṟṟukam,* பெ.(n.) வட்டத்துத்தி; a plant-abutilon indicum.

வெற்றுடம்பு *veṟṟuḍambu,* பெ.(n.) 1. சதைப் பிடிப்பில்லாதவுடம்பு; body without much flesh. 2. இயல்பானவுடம்பு; body in its natural state, mere body. 3. கருப்ப மில்லாதவுடம்பு; body without conception. 4. உடையுடுத்தாதவுடம்பு; naked body.

[வெறு → வெற்று + உடம்பு] (தே.நே.பக்.126)

வெற்றுடம்புக்காரி *veṟṟuḍambu-k-kāri,* பெ.(n.) கருப்பமடையாத பெண்; woman not carring.

[வெற்றுடம்பு + காரி]

வெற்றுடல் *veṟṟuḍal,* பெ.(n.) 1. வெறிதாய உடம்பு; bare, unadorned body. 2. பிணம்; corpse, as lifeless. *"விருந்தினராய் வந்தாரை வெற்றுடலா நோக்கும் பெருந்திருவி" (சீவக. 1969).*

[வெள் → வெறு → வெற்று → வெற்றுடல்] (தே.நே.பக்.126)

வெற்றுப்பேச்சு *verru-p-pēccu,* பெ.(n.) வீண்பேச்சு; Idle talk.

[வெற்று + பேச்சு]

வெற்றுரை *verrurai,* பெ.(n.) பொருளற்ற சொல்; meaningless word. *"வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை" (நீதிநெறி. 21).*

[வெள் → வெறு → வெற்று → வெற்றுரை]

வெற்றுவட்டி *verru-vaddi,* பெ.(n.) வட்டிப் பணம்; pure interest. மொத்த வட்டியில், உருவாக்க வட்டி, முதலீடு, வரவு செலவுகள் வட்டியை கழித்தபின் எஞ்சி நிற்பதே வெற்று வட்டி.

[வெற்று + வட்டி]

வெற்றெலும்பன் *verrelumban,* பெ.(n.) ஒல்லியானவன்; bare bone.

[வெற்று + எலும்பன்]

வெற்றெலும்பு *verrelumbu,* பெ.(n.) சதை கழிந்தவெலும்பு; bone rid of flesh.

[வெற்று + எலும்பு]

வெற்றெனத்தொடுத்தல் *verrena-t-toduttal,* பெ.(n.) நூற்குற்றம் பத்தனுள் பயனில் சொற்றொடர்படக் கூறுவது (நன். பொது.); prolixity or verbosity in literary composition, as being barren of ideas, one of 10 *nūr-kurram.*

வெற்றெனல் *verrenal,* பெ.(n.) வெறுமை யாதற்குறிப்பு; expr. of being empty.

[வெறு → வெற்று → வெற்றெனல்]

வெற்றொழிப்பு *verrolippu,* பெ.(n.) ஒன்றன் தன்மையை மறுத்து வேறொன்றன் தன்மையை ஏற்றிக் கூறும் அணி வகை (யாழ்.அக.); a figure of speech, being a variety of avanuti.

வெற்றோலை *verrōlai,* பெ.(n.) 1. எழுதப் படாத ஓலை; blank, unwritten ola. 2. மகளிரணியும் பனையோலைச் சுருளாலான காதணி; roll of palmyra leaf, worn in the ear-lobe, by women. *'உமக்கு வாழ்க்கைப்பட்டு வெறுங் காதும் வெற்றோலையுமாய் நிற்கிறேனே'.*

[வெறு → வெற்று → வெற்றோலை] (தே.நே.பக். 126)

வெறி¹-தல் *veri-,* செ.கு.வி.(v.i.) செறிதல் (பிங்.); to be abundant.

வெறி² *veri,* பெ.(n.) 1. ஒழுங்கு; order, orderliness. *"வெறி நிரை வேறாகச் சார்ச்சாரலோடி" (கலித். 11).* 2. வட்டம் (பிங்.); circle.

வெறி³ *veri,* பெ.(n.) 1. கள் (பிங்.); toddy. 2. குடிமயக்கம் (வின்.); drunkenness, drunken fury, intoxication. 3. மயக்கம் (வின்.); giddiness. 4. கலக்கம் (பிங்.); bewilderment, confusion, perturbation. 5. பித்து (பயித்தியம்); madness, insanity. *'வெறிநாய்'.* 6. மதம் கொள்கை; frenzy. 7. சினம்; anger. 8. விரைவு (அக.நி.); quickness, hastiness. 9. நறுமணம்; fragrance. *"வெறிகமழ் வணரைம் பால்" (கலித். 57).* 10. வெறியாட்டு பார்க்க (பிங்.); see *veri-y-āttu.* *"வெறிபுரி யேதில் வேலன்" (அகநா. 292).* 11. வெறிப்பாட்டு பார்க்க; see *veri-p-pattu.* *"வேலனேத்தும் வெறியுமுளவே" (பரிபா. 5, 15).* 12. முரட்டுத் தனம்; savagery, wildness. 13. பேய் (பிங்.);

devil. 14. தெய்வம்; deity. *"வெறியறி சிறப்பன்" (தொல். பொ. 60, உரை).* 15. ஆடு; sheep. *"இறும்கலா வெறியும்" (மணி. 19, 97).* 16. பேதைமை (பிங்.); ignorance. 17. அச்சம் (பிங்.); fear. *"வெறிகொளாக மாயையாதலின்" (ஞானா. 59, 5).* 18. நோய் (பிங்.); disease.

[வெள் → வெறு → வெறி]

வெறி⁴–த்தல் *veṟi-,* செ.கு.வி.(v.i.) 1. குடியால் மயங்குதல்; to be drunk, intoxicated. 2. பித்துப் பிடித்தல்; to become mad. *'வெறித்த நாய்'.* 3. மதங் கொள்ளுதல்; to be frenzied. *"வெறி பொறி வாரணத்து" (கலித். 43).* 4. திகைத்தல் (வின்.); to stare. 5. கடுமையாதல்; to be furious. *"உருமேறு வெறித்து வீழ" (கம்பரா. வாலிவ. 30).* 6. வெருவுதல், அஞ்சுதல்; to be fringhtened. *"நெஞ்சம் வெறியா" (கலித். 143).* 7. விலங்கு முதலியன வெருளுதல்; to shy, as a beast. *"வெறித்து மேதியோடி" (தேவா. 693,3).* 8. ஆவலெபாடு பார்த்தல் (வின்.); to look with longing eyes. 9. விறைத்து நிற்றல்; to stand stiff, to stand on end, as hair. *"வெறித்த குஞ்சியன்" (காசிக. சிவ. நிருதி. 16).*

வெறி⁵–த்தல் *veṟi-,* செ.கு.வி.(v.i.) 1. ஆட்களின்றி வெறுமையாதல்; to become empty, as a place devoid of inhabitants. *'அரசனில்லாத அரண்மனை வெறித்துப் போயிற்று'.* 2. வானந்தெளிதல்; to clear away, as clouds. *'மழை நின்று வெறித்துவிட்டது'.*

[வெள் → வெறு → வெறி–த்தல்]

வெறி⁶ *veṟi,* பெ.(n.) வெறிச்சு பார்க்க; see *veṟiccu. "இல்லம் வெறியோடிற் றாலோ" (திவ். பெரியாழ். 3, 8, 1).*

வெறி⁷ *veṟi,* பெ.(n.) நாற்றம்; smell.

[வெறு → வெறி]

வெறி⁸–த்தல் *veṟi-,* செ.கு.வி.(v.i.) வெறுமையுடன் உற்று நோக்குல், பார்வை ஒன்றின் மீது நிலைத்தல்; stare blankly, give a vacant stare. *'சாப்பிடப் பிடிக்காமல் சோற்றை வெறித்தபடி உட்கார்ந்திருந்தான்'.* 2. (மாடு முதலியவை) மிரளுதல்; be faightened. *'குடையைக் கண்டால் மாடு வெறிக்கும் என்று தெரியாதா?'*

[வெறு → வெறி–தல்]

வெறிக்கடுக்காய் *veṟi-k-kaḍukkāy,* பெ.(n.) பேய்க் கடுக்காய்; a kind of wild gallnut.

[வெறி + கடுக்காய்]

வெறிக்கப்பார்–த்தல் *veṟikka-p-pārttal,* பெ.(n.) பரக்கப் பார்த்தல், மரணக்குறி; staring, a death symptom.

[வெறிக்க + பார்த்தல்]

வெறிக்கப்பார்–த்தல்² *veṟṟikka-p-pār-,* செ.குன்றாவி. (v.t.) இமையாது வெகுண்டு நோக்குதல்; to glare at.

[வெறிக்க + பார்–,]

வெறிக்கல் *veṟi-k-kal,* பெ.(n.) சுக்கான்கல்; lime-stone.

[வெறி + கல்]

வெறிக்களம் *veṟi-k-kaḷam,* பெ.(n.) வெறியாட்டயரும் இடம்; place where *veṟi-y-āṭṭu* takes place. *"வெறிக்களங் கடுப்ப" (பெருங். இலாவாண. 2, 104).*

[வெறி + களம்]

வெறிக்குணம் *veri-k-kunam,* பெ.(n.) 1. பித்துக்குணம்; mad quality. 2. முரட்டுக் குணம்; eccentric. 3. கழிகாமம்; lusty.

[வெறி + குணம்]

வெறிக்குதல் *verikkutal,* பெ.(n.) வெறி கொள்ளல் பார்க்க; see *veri-kollal.*

[வெறு → வெறி → வெறிக்குதல்]

வெறிக்கூத்து[1] *veri-k-kūttu,* பெ.(n.) வெறியாட்டு பார்க்க; see *veri-y-āttu.* (பு.வெ. 12. இருபாற். 10, தலைப்பு).

[வெறி + கூத்து]

வெறிக்கூத்து[2] *veri-k-kūttu,* பெ.(n.) இது தெய்வம் ஏறியாடுகிற வெறிக் கூத்தாகும்; priest dancing under possession by skanda.

வேலனாகிய பூசாரிகையில் வேலேந்திச் செம்பட்டாடையுடுத்திச் செவ்வணியணிந்து, செஞ்சந்தனம் பூசித் தொண்டகப்பறை ஒலிக்க ஆடுவான். இவன் வேலையேந்தியாடுகிற படியால் வேலன் எனப்படுவான்.

[வெறி + கூத்து]

வெறிகொள்(ளு)-தல் *veri-kol(lu)-,* செ.கு.வி. (v.i.) 1. மயக்கங் கொள்ளுதல்; to become dizzy, to be intoxicated. 2. பித்து கொள்ளுதல்; to be crazy or mad. 3. வெறி[4]–, 3 பார்க்க; see *veri[4]–,* 3. *"வெறி கொண் மத மலைகளும்" (பாரத. பதினாறாம்போர். 25).* 4. (மூர்க்கம்) முருடம் கொள்ளுதல்; to become furious.

[வெறி + கொள்(ளு)-தல்]

வெறிகோள் *veri-kōl,* பெ.(n.) வெறியாட்டு பார்க்க; see *veri-y-āttu. "வெறிகோள் பண்ணியுந் தொழிறலை பெயர்த்தவன்" (பெருங். உஞ்சைக். 32, 94).*

[வெறி + கோள்]

வெறிச்சி *vericci,* பெ.(n.) அழுகண்ணி; a plant found in marshing places from which water contionuously oozes out- a carnirorous plant - drosera indica. 2. சண்பகம்; a flower-champaca.

[வெறி → வெறிச்சி]

வெறிச்சு *vericcu,* பெ.(n.) ஆட்களின்றி வெறுமையாகை; emptiness, as of a place devoid of inhabitants. *"வெறிச்சான திருமாளிகை" (திருபுரம். 536).*

[வெறிது → வெறிச்சு]

வெறிச்செனல் *vericcenal,* பெ.(n.) ஆட்களின்றி வெறுமையாதற்குறிப்பு; expr. of being vacant or empty, as a place devoid of inhabitants. *'மனைவியும் குழந்தைகளும் ஊருக்குப் போன பிறகு வீடு வெறிச்செனு இருக்கிறது'.*

[வெறிச்சு + எனல்]

வெறிச்சோடு-தல் *vericcōdu-,* செ.கு.வி. (v.i.) (ஓர் இடம்) ஆட்கள் நடமாட்டம் இல்லாமல் இருத்தல், வெறுமையாதல்; wear a desolate look. *'திருமணம் முடிந்த பிறகு வீடுவெறிச்சோடி விட்டது'.*

[வெறு → வெறி + சோடு-,]

வெறிசிங்கி *veri-śingi,* பெ.(n.) வயிற்றுப்புண்; ulcer.

[வெறி + சிங்கி]

வெறித்தசிங்கம் *veritta-śiṅgam,* பெ.(n.) 1. உப்பு மணி; a bead made by melting to consolidated salt. 2. கட்டியகல்லுப்பு; consolidated rock-salt. 3. உப்பு; the three universal salts.

வெறித்தபார்வை *veritta-pārvai,* பெ.(n.) அச்சுறுத்தும் பார்வை; fearful look.

[வெறித்த + பார்வை]

வெறித்தல் *verittal,* பெ.(n.) மயக்குறல்; being intoxicaled or stupified.

[வெறி → வெறித்தல்]

வெறிதருமருந்து *veri-taru-marundu,* பெ.(n.) மயக்கத்தை யுண்டாக்கு மருந்து; an intoxicating drug-bang.

[வெறிதரு + மருந்து]

வெறிது *veridu,* பெ.(n.) 1. ஒன்றுமில்லாமை; emptiness. 2. பயனின்மை; uselessness, futility. *"வெறிது நின் புகழ்களை வேண்டாரி லெடுத்தேத்தும்" (கலித். 72).* 3. அறிவின்மை (யாழ்.அக.); stupidity.

[வெறு—மை → வெறிது]

வெறிநாய் *veri-nāy,* பெ.(n.) வெறி பிடித்த நாய்; rabid dog.

[வெறி + நாய்]

வெறிநாய்க்கடி *verināy-k-kaḍi,* பெ.(n.) நச்சணுக்களால் உண்டாகும் கொடி நோய் வகை; rabie.

இந்நோய் கண்டிருக்கும் நாய், பூனை, நரி, ஓநாய் ஆகிய விலங்குகள் கடித்தால் மக்களுக்கு இந்நோய் தொற்றும். இந்நோய் கண்ட விலங்குகளின் உமிழ் நீரில் நச்சணுக்கள் நிறைந்திருக்கும். இவை மக்களை நக்கினாலும், நக்கின இடத்தில் புண் இருந்தால் அதன் மூலம் நோய் தொற்றிக்கொள்ளும். சில நாடுகளில் சிலவகை வௌவால்கள் கடிப்பதனாலும் மக்களுக்கு இந்நோய் பரவுகிறது. மூளைப் பிறழ்ச்சியும், தாங்க முடியாத துன்பமும், நீர் வேட்கையும், தண்ணீரைக் கண்டால் நடுக்கமும், எதையும் விழுங்க முடியாத தவிப்பும் இந்நோயின் அறிகுறிகள். இறுதியில் இந்நோய் கண்டவர்கள் இறந்து போகின்றார்கள்.

[வெறிநாய் + கடி]

வெறிநாய்கடிப்பைத்தியம் *verināy-kaḍi-p-paittiyam,* பெ.(n.) வெறிநாய் கடியால் ஏற்பட்ட பித்து; canine madness.

*[வெறிநாய் + கடி + பித்து → **Skt.** பைத்தியம்]*

வெறிநாற்றம் *veri-nāṟṟam,* பெ.(n.) புணர்ச்சிக்குப் பின் பிறக்கும் நாற்றம் (ஐங்குறு. 93, உரை); a kind of odour perceived after sexual inter course.

[வெறி + நாற்றம்]

வெறிநீர் *veri-nīr,* பெ.(n.) 1. சாராயம்; arrack. 2. பருகை; drink causing giddiness.

[வெறி + நீர்]

வெறிப்பாட்டு *veri-p-pāṭṭu,* பெ.(n.) வெறியாட்டில் நிகழும் பாடல் (பரிபா. 5, 15, உரை); song sung in *veri-y-āṭṭu.*

[வெறி + பாட்டு]

வெறிபாடியகாமக்கண்ணியார் *veri-pāḍiya-kāma-k-kaṇṇiyār,* பெ.(n.) கழகக் காலப் பெண் புலவர்; a female sangam poet.

வெறியென்பது தெய்வமேறப்பெற்று ஒருத்தியாடுதல். இது வெறியாட்ட மெனவும்

வழங்கும். இதன் இயல்பை நன்றாக விளக்கிப் பாடியிருத்தலால் 'வெறிபாடிய' என்னும் அடைமொழி இவர் பெயர்க்குமுன் சேர்க்கப் பெற்றது. (அகநா. 22, 92; நற். 268). இவர் புறநானூற்றில் பாடிய செருவிடை வீழ்தல், குதிரை மறமென்னுந் துறைப்பாடல்கள் அறிதற் பாலன.

வெறிப்பானவேரு *veṟippāṉa-vēru,* பெ.(n.) வெள்ளரிசி பார்க்க; see *veḷḷariši.*

[வெறிப்பான + வேரு]

வெறிப்பு¹ *veṟippu,* பெ.(n.) 1. கண்கூச்சம்; dazzle, glare. *"கோல வெறிப்பினான்........ மாலைக் கண் கொண்டவே" (சீவக. 2397).* 2. ஏக்கறவு (வின்.); longing in consequence of privation. 3. கொடுமை; jarring. *'அந்தப்பாட்டு வெறிப்பாயிருக்கிறது'.* 4. மது மயக்கம் (வின்.); drunkenness.

[வெறி → வெறிப்பு]

வெறிப்பு² *veṟippu,* பெ.(n.) பஞ்சம் (வின்.); famine.

[வெறு → வெறி → வெறிப்பு]

வெறிப்பு³ *veṟippu,* பெ.(n.) மயக்கம்; intoxication, drunkness.

[வெறி → வெறிப்பு]

வெறிபிடி-த்தல் *veṟi-piḍi-,* செ.கு.வி.(v.i.) வெறிகொள்-, பார்க்க; see *veṟi-koḷ-.*

[வெறி + பிடி-,]

வெறிமகள் *veṟi-magaḷ,* பெ.(n.) இழிமகள்; hell-cat.

[வெறி + மகள்]

வெறிமயக்கம் *veṟi-mayakkam,* பெ.(n.) குடிவெறி; drunkness.

[வெறி + மயக்கம்]

வெறிமருந்து *veṟi-marundu,* பெ.(n.) 1. நஞ்சு; arsenic. 2. மயக்கத்தையுண்டாக்கு மருந்து; drug causing giddiness-intoxicating drug.

[வெறி + மருந்து]

வெறிமலர் *veṟi-malar,* பெ.(n.) 1. நறுமண மலர் (திருக்கோ. 96, உரை); fragrant flower. 2. தெய்வத்துக்குரிய பூ (திருக்கோ. 96, உரை); flower offered to a god.

[வெறி + மலர்]

வெறிமுண்டன் *veṟi-muṇḍaṉ,* பெ.(n.) பித்துப்பிடித்த தடியன்; mad fellow.

[வெறி + முண்டன்]

வெறியயர்-தல் *veṟi-y-ayar-,* செ.கு.வி.(v.i.) வெறியாடு-, பார்க்க; see *veṟi-y-āḍu-.* *"வேலன் வெறியயர் வியன்களம் பொற்ப" (அகநா. 97).*

[வெறி + அயர்-,]

வெறியன்¹ *veṟiyaṉ,* பெ.(n.) 1. பித்துக் கொண்டவன்; an insane man. 2. மயக்கங் கொண்டவன்; a giddy person. 3. குடியன்; drunkard. 4. கஞ்சா பிடித்தவன்; ganjah smoker.

[வெறி → வெறியன்]

வெறியன்² *veṟiyaṉ,* பெ.(n.) 1. குடிவெறி யுள்ளவன்; drunkard. 2. பித்தன்; madman. 3. கடுமையானவன்; furious person.

[வெறி → வெறியன்]

வெறியன்[3] *veṟiyaṉ*, பெ.(n.) யாதும் அற்றவன்; empty, distitute person. *"வெறியரன்றோ குணங்களான் விரிஞ்சன் முதலா மேலானோர்" (கம்பரா. உருக்காட்டு. 111).*

[வறியன் → வெறியன்]

வெறியாட்டம் *veṟiyāṭṭam*, பெ.(n.) 1. வன் முறைச் செயல், மிகுசினம்; rampageous conduct, frenzy. *'இனக்கலவரத்தைத் தகுந்த வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு கயவர்கள் வெறியாட்டம் போட்டனர்'.* 2. (குறி சொல்பவர்) தெய்வ வெறி வந்து ஆடும் ஆட்டம்; dance (of a soothsayer) possessed by spirit, frenzied state.

[வெறி + ஆட்டம்]

வெறியாட்டாளன்[1] *veṟiyāṭṭāḷaṉ*, பெ.(n.) 1. பித்துப் பிடித்தவன்; madman. 2. தேவர்க் காடுவோன்; dance before the fanes of tutelarly gods bacchanalian.

[வெறி + ஆட்டாளன்]

வெறியாட்டாளன்[2] *veṟiyāṭṭāḷaṉ*, பெ.(n.) வெறியாடல் புரியும் வேலன் (பு.வெ.9.41, உரை); priest dancing under possession by skanda.

[வெயாட்டு + ஆளன்]

வெறியாட்டு[1] *veṟi-y-āṭṭu*, பெ.(n.) 1. வேலனாடல் (பு.வெ. 1, 21, தலைப்பு); dance of a priest possessed by skanda. 2. களியாட்டம்; frantic or mad play. *"வெறியாட்டுக் காளாய்" (தாயு. கற்புறு. 2).*

[வெறி + ஆட்டு]

வெறியாட்டு[2] *veṟi-y-āṭṭu*, பெ.(n.) பித்து பிடித்திடுதல்; madness.

வெறியாட்டுப்பறை *veṟiyāṭṭu-p-paṟai*, பெ.(n.) வெறியாட்டில் முழங்கும் குறிஞ்சி நிலப் பறை (இறை. 1, பக். 17); drum of *kuriñji* tract, used in *veṟi-y-āṭṭu*.

[வெறியாட்டு + பறை]

வெறியாடல்[1] *veṟiyāḍal*, பெ.(n.) 1. வெறி கொள்ளல்; becoming mad. 2. பேயாட்டம்; devil dance. 3. மயக்கத்தினால் கூத்தாடல்; dancing through intoxicating.

[வெறி + ஆடல்]

வெறியாடல்[2] *veṟiyāḍal*, பெ.(n.) வெறியாட்டு பார்க்க; see *veṟi-y-āṭṭu*.

[வெறி + ஆடல்]

வெறியாடு-தல் *veṟi-y-āḍu-*, செ.கு.வி.(v.i.) வெறியாட்டாடுதல்; to dance under possession by skanda.

[வெறி + ஆடு-,]

வெறியாள் *veṟiyāḷ*, பெ.(n.) வெறியாட்டாளன் (குறுந். 366) பார்க்க; see *veṟiyāṭṭāḷaṉ*.

[வெறி + ஆள்]

வெறியுறை *veṟiyuṟai*, பெ.(n.) 1. மயக்க முண்டாக்கும் ஒரு வகை மருத்துவமுறை; giving chloroform. 2. பித்துப் பிடிக்கச் செய்யும் மருந்து; medicine causing insanity.

[வெறி + உறை]

வெறியெடு-த்தல் *veṟi-y-eḍu-*, செ.கு.வி. (v.i.) வெறியாட்டு நிகழ்த்துதல்; to conduct a *veṟi-y-āṭṭu*. *"தமர்வெறி யெடுப்புழி அதனை விலக்கக் கருதிய தோழி" (ஐங்குறு. 28, உரை).*

[வெறி + எடு-,]

வெறியெடுத்தல் *veṟiyeḍuttal,* பெ.(n.) வெறிகொள்ளல், மதங்கொள்ளல்; becoming fascivious of rusty.

[வெறி + எடுத்தல்]

வெறியேறி *veṟiyēṟi,* பெ.(n.) நெருப்பு; fire.

[வெறி + ஏறி]

வெறியோடு[1]-தல் *veṟi-y-ōḍu-,* செ.கு.வி. (v.i.) 1. ஒளி மிகுதியால் கண் வெறித்துப் போதல்; to be dazzled, as eyes by excessive brilliancy. *"பல புண் மின்னலுங் கண்கள் வெறியோடி விட்டனவே" (பாரத. பதினேழாம் போர். 168).* 2. ஆற்றாமையுறுதல்; to be in despair, to be inconsolable.

[வெறி + ஓடு-,]

வெறியோடு[2]-தல் *veṟi-y-ōḍu-,* செ.கு.வி. (v.i.) வெறி[5]-, 1 பார்க்க; see *veṟi*[5]*-,1.* *"இல்லம் வெறியோடிற்றாலோ" (திவ். பெரியாழ். 3, 8, 1).*

[வெறி + ஓடு-,]

வெறியோன் *veṟiyōṉ,* பெ.(n.) பேய்த்துவரை; a wild gram.

வெறிவாகை *veṟi-vāgai,* பெ.(n.) பன்றி வாகை; bastard rose wood-dalbiergia paniculata.

[வெறி + வாகை]

வெறிவிலக்கல் *veṟi-vilakkal,* பெ.(n.) வெறிவிலக்கு (ஐங்குறு. 247, உரை) பார்க்க; see *veṟi-vilakku.*

[வெறி + விலக்கல்]

வெறிவிலக்கு *veṟi-vilakku,* பெ.(n.) தலைவிக்குக் காமத்தாலுண்டான நோயை வேறு காரணத்தாலுண்டானதாகக் கொண்டு அந்நோயைத் தணிக்க வேண்டிச் செய்யும் வெறியாட்டைத் தடுத்து நிற்றலைக் கூறும் அகத்துறை; theme of opposing the *veṟi-y-āṭṭu* performed with a view to curing a lovesick women under a mistaken impression that she is ill.

[வெறி + விலக்கு]

வெறு[1]-த்தல் *veṟu-,* செ.குன்றாவி. (v.t.) 1. அருவருத்தல்; to detest, loathe. *"வெறுமின் வினைதீயார் கேண்மை" (நாலடி, 172).* 2. பகைத்தல்; to hate. 3. வெகுளுதல் (சூடா.); to be angry at. 4. விரும்பா திருத்தல்; to dislike. 5. பற்றுவிடுதல்; to renouce, to be free from attachments. *"வெறுத்தார் பிறப்பறுப்பாய் நீயே" (தேவா. 310, 10).*

[வெறு → வெறுத்தல்]

வெறு[2]-த்தல் *veṟu-,* செ.கு.வி.(v.i.) 1. மிகுதல் (தொல். சொல். 347); to abound. *"வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்" (புறநா. 53).* 2. துன்பமுறுதல்; to be afflicted. *"எதிரேவருமே சுரமே வெறுப்பவொரேந்த லோடே" (திருக்கோ. 243, உரை).*

[வெறு → வெறுத்தல்]

வெறு *veṟu,* பெ.(n.) வெறுமை, வெறு வென்னேவல்; vapidness.

[வெள் → வெறு]

வெறுக்கச்சாப்பிடல் *veṟukka-c-cāppiḍal,* பெ.(n.) மணம் சலிக்கும் வரையுண்ணல்; to eat to satiety.

[வெறுக்க + சாப்பிடல்]

வெறுக்கவெறுக்க *verukka-verukka,* வி.எ.(adv.) வேண்டாமென்று தள்ளக்கூடிய வளவு மிகுதியாக; in a surfeiting measure.

[வெறு → வெறுக்க]

வெறுக்கை[1] *verukkai,* பெ.(n.) 1. அருவருப்பு; aversion, loathing. *"தாதுண வெறுகைய வாகி" (ஐங்குறு. 93).* 2. வெறுப்பு; dislike. 3. மிகுதி; abundance. 4. செல்வம்; wealth. *"நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்டு" (பதிற்றுப். 55, 4).* 5. பொன் (பிங்.); gold. 6. வாழ்வின் அடிப்படையாயுள்ளது; life-spring. *"பரிசிலர் வெறுக்கை" (பதிற்றுப். 38, 9).* 7. கையுறை; offering, as to a superior. *"தொடைமலர் வெறுக்கை யேந்தி" (சீவக. 2708).* 8. ஊக்கம்; self-assertion. *"ஒளி ஒருவற்கு உள்ள வெறுக்கை" (குறள், 971)*

வெறுக்கை[2] *verukkai,* பெ.(n.) கனவு (அக.நி.); dream.

[வெறு → வெறுக்கை]

வெறுக்கைக்கிழவன் *verukkai-k-kilavan,* பெ.(n.) செல்வத்துக்குரியவன் (குபேரன்.); *kubēra,* as the god of wealth. *"வெறுக்கைக் கிழவன் மகளென்ன" (சீவக. 1871).*

[வெறுக்கை + கிழவன்]

வெறுங்கல்லறை *veruṅkallarai,* பெ.(n.) பிணத்தை அடக்கம் செய்யாது நினைவுக் குறியாகக் கட்டப்பட்ட கல்லறை (பொ.வழ.); cemetery.

[வெறும் + கல்லறை]

வெறுங்காய் *veru-ṅ-kāy,* பெ.(n.) பாக்கு; areca-nut.

[வெறு–மை + காய்]

வெறுங்கால் *veruṅ-kāl,* பெ.(n.) வெற்றுக் கால்; bare foot.

[வெறு–மை + கால்]

வெறுங்காவல் *veru-ṅ-kāval,* பெ.(n.) வேலை வாங்குதலில்லாமல் அடைத்து வைத்திருக்குஞ்சிறை; simple imprisonment, opp. to *kaḍuṅ-kāval.*

[வெறு–மை + காவல்]

வெறுங்கை *veru-ṅ-kai,* பெ.(n.) 1. ஒன்று மில்லாத கை; emptyhand. *"வெறுங்கை யோடிலங்கைபுக்கான்" (கம்பரா. கும்பக். 1).* 2. வறுமை; poverty. *"வெறுங்கையா ரென்னும் பேரின் மென்மையை வன்மை செய்யும்" (சேதுபு. இலக்குமி. 31).*

[வெறு–மை + கை]



வெறுங்கைது *veru-ṅ-kaidu,* பெ.(n.) வெறுங்காவல் பார்க்க; see *veruṅ-kāval.*

[வெறு–மை + கைது]

வெறுங்கோது *veruṅ-kōdu,* பெ.(n.) 1. பயனற்றது; chaff, worthless staff. 2. ஒன்றுக்குமுதவாத–வன்–வள்–து; good for nothing person or thing.

[வெறு–மை + கோது]

வெறுஞ்சோறு *veṟuñ-cōṟu,* பெ.(n.) வெஞ்சனமில்லாத உணவு; plain rice without curry, etc.

[வெறு-மை + சோறு]

வெறுத்தகு-தல் *veṟu-t-tagu-,* செ.கு.வி. (v.i.) செறிதல்; to abound. *"வெறுத்தக்க பண்பொத்தல்" (குறள், 993).*

[வெறு + தகு-,]

வெறுத்தார் *veṟuttār,* பெ.(n.) 1. வெறுப் புற்றவர்; haters, those who dislike. 2. பற்றற்றோர்; those who have renounced the world. *"வெறுத்தார் பிறப்பறுப்பாய் நீயே" (தேவா. 310, 10).*

[வெறு → வெறுத்தார்]

வெறுத்தாள் *veṟuttāḷ,* பெ.(n.) பல பெண் குழந்தைகளைப் பெற்றுச் சலித்தோர் மேலும் பெறுதலில் வெறுப்புற்று இதுவே கடைப்பெண்ணாக (சம்பூரணம்) என்று பிறந்த பெண்குழந்தைக்கிடும் பெயர்; name given to the last of a number of female children, showing that their parents wish to have no more daughter.

[வெறு → வெறுத்தாள்]

வெறுத்திசை *veṟu-t-tišai,* பெ.(n.) வெறுத் திசைப்பு பார்க்க; see *veṟu-t-tišaippu.* *"இன்னோசைத்தாய் வெறுத்தி சையின்றாம்" (தொல். பொ. 323, உரை).*

[வெறு + இசை]

வெறுத்திசைப்பு *veṟu-t-tišaippu,* பெ.(n.) யாப்பின் ஓசைக் குற்றவகை (யாப். வி. பக். 403); discordant rhythm in a stanza.

[வெறு + இசைப்பு]

வெறுந்தண்ணீர் *veṟun-taṇṇīr,* பெ.(n.) இயல்பான நீர்; water only (in prescribing diet).

[வெறு(மை) + தண்ணீர்]

வெறுந்தப்பறை *veṟu-n-tappaṟai,* பெ.(n.) முழுத்தவறு (வின்.); complete error.

[வெறு-மை + பறை]

வெறுந்தரை *veṟun-tarai,* பெ.(n.) 1. விரிப்பு முதலிய இடாத தரை; bare, uncovered floor or ground. *'வெறுந் தரையில் அவர் இருந்தார்'.* 2. கட்டாந்தரை; land devoid of vegetation. 3. பயனில்லாப் பொருள்; worthless thing. *"அவனோடு கலந்து பிரிந்து வெறுந்தரையா யிருக்கிற எனக்கு" (ஈடு. 1, 4, 2).*

[வெறு-மை + தரை]

வெறுந்தலை *veṟu-n-talai,* பெ.(n.) தலைப் பாகையணியாத தலை (வின்.); bare uncovered head.

[வெறு-மை + தலை]

வெறுநரையோர் *veṟu-naraiyōr,* பெ.(n.) முழுநரையுள்ள முதியவர்; very old persons, as having their hair turned completely grey. *"விரவு நரையோரும் வெறுநடை யோரும்" (பரிபா. 10, 22).*

[வெறு-மை + நரை]

வெறுநிலம் *veru-nilam,* பெ.(n.) வெறுந் தரை 1 பார்க்க; see *veru-n-tarai1.* *"நின்மகன் அவந்தனாய் வெறு நிலத்திருக்கலான போது" (கம்பரா. மந்தரைப். 55).* 2. வெறுந்தரை 2 பார்க்க; see *veru-n-tarai 2.*

[வெறு–மை + நிலம்]

வெறுநுகம் *veru-nukam,* பெ.(n.) விளக்கு (சோதி) நாள்; the 15th nakšatra.

[வெறு(மை) + நுகம்]

வெறுநெற்றி *veru-nerri,* பெ.(n.) நீறணியா நெற்றி; bare forehead without sectarian marks.

[வெறு(மை) + நெற்றி]

வெறுப்பு[1] *veruppu,* பெ.(n.) 1. அருவருப்பு; disgust, aversion. 2. பகைமை; hatred, enmity. 3. சினம் (சூடா.); wrath. 4. விருப் பின்மை; dislike displeasure. *"வெறுப்பில வேண்டும்" (குறள், 696).* 5. துன்பம் (பிங்.); affliction. 6. கலக்கம் (திவா.); confusion. 7. அச்சம் (பிங்.); fear. 8. செறிவு (தொல். சொல். 347); abundance.

[வெறு → வெறுப்பு]

வெறுப்பு[2] *veruppu,* பெ.(n.) வெறுமை உணர்வு, மனச்சோர்வு, சலிப்பு; feeling of emptiness (caused by frustration). *'வாழ்க்கையில் வெறுப்புத் தட்டிவிட்டது'. 'பதவி உயர்வு கிடைக்காததால் வெறுப்பு அடைந்திருக்கிறார்'.*

[வெறு → வெறுப்பு]

வெறுப்புக்காட்டுதல் *veruppu-k-kāttutal,* பெ.(n.) பரிவுகாட்டாமை; unaffection.

[வெறுப்பு + காட்டுதல்]

வெறுப்புக்கொடு–த்தல் *veruppu-k-kodu-,* செ.கு.வி.(v.i.) 1. அருவருப்பு உண்டாம்படி நடத்தல்; to behave in a disgusting manner. 2. அருவருப்பு உண்டாக்குதல் (யாழ்.அக.); to be disgusting.

[வெறுப்பு + கொடு–,]

வெறும் *verum,* பெ.எ.(adj.) 1. உள்ளடக்கம் இல்லாத; empty. *'எண்ணெய் இல்லாத வெறுங் குடுவை'. 'வெறும் வயிற்றில் மாத்திரை சாப்பிடாதே'.* 2. (உடல், உடலுறுப்பு முதலியவை குறித்து வருகையில்) எதுவும் அணியாத! உடன் வேறு எதுவும் இல்லாத; bare, naked. *'யாரோ அலறும் ஒலி கேட்டதும் வெறும் உடம்போடு தெருவுக்கு ஓடிவந்தார்'.* 3. 'வேறு எதுவும் இல்லாமல் குறிப்பிட்டது மட்டும் தான்' என்பதைக் கூறப்பயன்படும் சொல்; mere, nothing but. *'இதெல்லாம் வெறும் பொய்ச்செய்தி'. 'வெறுசோற்றை எப்படிச் சாப்பிட முடியும்?'*

[வெறு → வெறும்]

வெறும்பருக்கை *verum-parukkai,* பெ.(n.) வெறுஞ்சோறு பார்க்க; see *veruñ-cōru.*

[வெறு(மை) + பருக்கை]

வெறும்பாட்டம் *verum-pāttam,* பெ.(n.) வெண்பாட்டம் பார்க்க; see *ven-pāttam.*

[வெறு–மை + பாட்டம்]

வெறும்பானை *verum-pānai,* பெ.(n.) வெற்றுப்பானை, ஒன்றுமில்லாப்பானை; empty pot.

[வெறு(மை) + பானை]



வெறும்பேச்சு *verum-pēccu,* பெ.(n.) வீண்சொல்; unneccessary-talk.

[வெறு(மை) + பேச்சு]

வெறும்பிலுக்கு *verum-pilukku,* பெ.(n.) வீண்பகட்டு; mere glitter, foppery. *'வெறும்பிலுக்கு வண்ணான் மாற்று'.*

[வெறு(மை) + பிலுக்கு]

வெறும்புறங்கூற்று *verumpuraṅ-kūrru,* பெ.(n.) அலர்மொழி (யாழ்.அக.); scandal.

[வெறும்புறங்கூறு → வெறும்புறங்கூற்று]

வெறும்புறங்கூறு–தல் *verum-puraṅ-kūru-,* செ.கு.வி.(v.i.) 1. குறளை கூறுதல் (திவா.); to spread tales. 2. அலர் தூற்றுதல் (யாழ்.அக.); to utter slanderous words.

[வெறு(மை) + புறம் + கூறு]

வெறும்புறம் *verum-puram,* பெ.(n.) 1. ஒன்றுமில்லாத நிலை; empty condition. *"வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டுங் கையிலே" (ஈடு. 1, 8, 9).* 2. காரணமின்மை; absence of reason or purpose. *"வெறும்புறத்திலே தன்னதல்லாததைத் தன்னதென்று ஏறட்டுக் கொள்ளக் கடவ அவன்" (ஈடு. 9, 8, 7).*

[வெறு(மை) + புறம்]

வெறும்பூ *verum-pū,* பெ.(n.) பிஞ்சில்லாப்பூ; flower only.

[வெறு(மை) + பூ]



வெறும்பெரியவன் *verum-periyavan,* பெ.(n.) அறிவில் முதிராது தோற்றத்தால் மட்டும் பெரியவனாகத் தோன்றுபவன்; one who is a grown-up physically but not intellectually.

[வெறு(மை) + பெரியவன்]

வெறும்பொய் *verum-poy,* பெ.(n.) மெய்யின் கலப்பு அற்ற முழுப்பொய்; down right lie, unmixed false hood.

[வெறு(மை) + பொய்]

வெறும்வயிறு *verum-vayiru,* பெ.(n.) 1. ஒன்றுமில்லா வயிறு; empty stomach. 2. கருவுறாத வயிறு; abdomen with impregnation.

[வெறு(மை) + வயிறு]

வெறுமணம் *veru-maṇam,* பெ.(n.) மணமின்மை; odorless.

[வெறு(மை) + மணம்]

வெறுமன் *veruman,* பெ.(n.) வீண்; worthlessness. *"அப்பச்சை வெறுமனாகாமே" (ஈடு. 4, 10, 7).*

[வெறு(மை) + மன்]

வெறுமனே *verumanē,* வி.எ.(adv.) 1. வீணாக; in vain, without advantage. 2. வேலையின்மை; without doing anything, idly. *"வெறுமனே தாளத்திற்கு இசைவிடும் எழிற்கையினை" (பதிற்றுப். 61, உரை).*

[வெறுமன் → வெறுமனே]

வெறுமனை *verumanai,* வி.எ.(adv.) வெறுமனே (யாழ்.அக.) பார்க்க; see *verumanē.*

[வெறுமன் → வெறுமனை]

வெறுமை *verumai,* பெ.(n.) 1. ஒன்றுமின்மை; emptiness, rapidness. 2. பயனின்மை; profitlessness, uselessness. *"வெறுமையின் மனைகள் வாழ்ந்து" (தேவா. 838, 3).* 3. அறிவின்மை; ignorance. *"வெறுமையினவரைப் போக்கி" (சீவக. 1908).* 4. வறுமை; poverty. *"வெறுமை யிடத்தும்.......... மறுமை மனத்தரே யாகி" (நாலடி, 329).* 5. கலப்பின்மை; quality of being unmixed or pure. *'வெறுஞ் சிவப்பு'.*

[வெறு → வெறுமை]

வெறுமைநிலை *verumai-nilai,* பெ.(n.) வறிதான நிலை; state of being empty.

[வெறுமை + நிலை]

வெறுமைபோக்கி *verumai-pōkki,* பெ.(n.) முண்டினிவிருட்சம் பார்க்க; see *mundini-virutšam.*

[வெறுமை + போக்கி]

வெறுமொருவன் *veru-moruvan,* பெ.(n.) தனித்த ஒருவன்; single, solitary person. *"கலகமாரன் வெறுமொருவனால்" (தக்கயாகப். 25).*

[வெறு(மை) + ஒருவன்]

வெறுமொன்று *verum-onru,* பெ.(n.) தனித்த ஒன்று; single, solitary thing. *"தாம வில்லு வெறுமொன்று முன்னம்" (தக்கயாகப். 23).*

[வெறு(மை) + ஒன்று]

வெறுவயிறு *veru-vayiru,* பெ.(n.) 1. ஒன்று மில்லா வயிறு; empty stomach. 2. கருவுறாத வயிறு; abdomen with impregnation.

[வெறு(மை) + வயிறு]

வெறுவாக்கிலங்கெட்டவன் *veru-vākkilaṅ-kettavan,* பெ.(n.) வெறுவாய்க்கிலை கெட்டவன் பார்க்க; see *veru-vāy-k-kilai-kettavan.*

[வெறுவாய்க்கு + இலை + கெட்டவன்]

வெறுவாய் *veruvāy,* பெ.(n.) வறிதானவாய்; empty mouth.

[வெறு(மை) + வாய்]

வெறுவாய்க்கிலைகெட்டவன் *veruvāy-k-kilai-kettavan,* பெ.(n.) ஒன்றுமில்லாத ஏழை எவறும் வாயில் வெற்றிலை போட்டுக் கொள்ளவும் ஏதுமற்றவன் (சீவக. அரும்.); extremely poor man, as not even having a betel leaf to chew, used in contempt.

[வெறுவாய்க்கு + இலை + கெட்டவன்]

வெறுவாய்க்குமட்டல் *veṟuvāy-k-kumaṭṭal,* பெ.(n.) வெள்ளோர்க்காளம் பார்க்க; see *veḷḷōr-k-kāḷam.*

[வெறு(மை) + வாய் + குமட்டல்]

வெறுவாய்கூறு-தல் *veṟuvāy-kūṟu-,* செ.கு.வி.(v.i.) பிதற்றுதல் (வின்.); to babble.

[வெறு(மை) + வாய் + கூறு]

வெறுவாய்பசப்பு[1]-தல் *veṟu-vāy-paśappu-,* செ.கு.வி.(v.i.) வெறுவாயலட்டு 1 பார்க்க (யாழ்.அக.); see *veṟu-vāy-alaṭṭu 1.*

[வெறு(மை) + வாய் + பசப்பு]

வெறுவாய்பசப்பு[2]-தல் *veṟu-vāy-paśappu-,* செ.குன்றாவி.(v.t.) வெறுஞ் சொற்களால் வசப்படுத்துதல்; to loax with empty words.

[வெறு(மை) + வாய் + பசப்பு]

வெறுவாயலட்டு-தல் *veṟu-vāy-alaṭṭu-,* செ.கு.வி.(v.i.) 1. வீண் பேச்சுப் பேசுதல் (யாழ்.அக.); to ulter empty or useless words. 2. வெறுவாய்கூறு-, பார்க்க; see *veṟu-vāy-kūṟu-.* 3. தற்பெருமை பேசுதல்; to brag.

[வெறு(மை) + வாய் + அலட்டு-தல்]

வெறுவியர் *veṟu-viyar,* பெ.(n.) 1. பயனற்றவர்; worthless, insignificant persons. *"இருபிறப்பும் வெறுவியரா யிருந்தார் சொற் கேட்டு" (தேவா. 962, 5).*

[வெறு(மை) + இயர்]

வெறுவெளி *veṟu-veḷi,* பெ.(n.) வெற்றிடம்; etheric space.

[வெறு (மை) + வெளி → வெறுவெளி]

வென்[1] *veṉ,* பெ.(n.) வெற்றி; victory. *"வென்டுவெற் செழிய" (புறநா. 19).*

[வெல் → வென்]

வென்[2] *veṉ,* பெ.(n.) வெந் பார்க்க; see *ven.* *"மயில்வென் றனில்வந்தருளுங் கனபெரி யோனே" (திருப்பு. 10).*

தெ. வென்னு; க. பென்னு.

[வெரிந் → வென்]

வென் *veṉ,* பெ.(n.) முதுகு; back.

[வெரிந் → வென்]

வென்றநாமங்கொடு-த்தல் *veṉṟa-nāma-ṅ-koḍu-,* செ.கு.வி. (v.i.) ஒருவனுக்கு அவனை வென்றடக்கியவன் பெயரைக் கொடுத்தல்; to give a person the name of his conqueror. *"உத்தம சோழனென் றிவர் தமக்கு வென்ற நாமங் கொடுத்து" (S.I.I.iv,29-30).*

[வெல் + நாமம் + கொடு-,]

Skt. *Nāman* > த. நாமம்.

வென்றவன் *veṉṟavaṉ,* பெ.(n.) 1. வெற்றி பெற்றவன்; victor. *"வென்றவன் வென்றவன் வேள்வியில் விண்ணவர் தங்களை" (தேவா. 1024, 5).* 2. பற்றற்றுப் பேறுபெற்றவன்; siddha, as one who has renounced the world. *"வென்றவ னுலகம் பெற்ற வேந்து" (சீவக. 956).* 3. வென்றோன், 2 பார்க்க; see *veṉṟōṉ, 2.* *"வென்றவன் பாதஞ் சேர்ந்து" (சீவக. 1437).*

[வெல் → வென் → வென்றவன்]

வென்றான் *venrān,* பெ.(n.) வென்றோன் பார்க்க; see *venrōn.* *"வென்றான் வினையின் றொகை" (சூளா. காப்பு.).*

[வெல் → வென் → வென்றான்]

வென்றி *venri,* பெ.(n.) வெற்றி; victory, triumph. *"வேலன்று வென்றி தருவது" (குறள், 546).*

ம. வின்னி.

[வெல் → வென் → வென்றி]

வென்றிக்கூத்து *venri-k-kūttu,* பெ.(n.) மாற்றானொடுக்கமும் மன்னனுயர்ச்சியுங் காட்டுங் கூத்து (சிலப். 3, 13, உரை); *(nātya)* dance exhibiting the downfall of the enemy and the triumph of one's king.

[வென்றி + கூத்து]

வென்றிக்கொடி *venri-k-kodi,* பெ.(n.) வெற்றிக்கொடி; victoriya triumph.

[வென்றி + கொடி]

வென்றிமாலை *venri-mālai,* பெ.(n.) 1. வெற்றிவாகை (யாழ்.அக.); see *verri-vākai.* 2. வெற்றி வரிசை; series of victories. *"வென்றிமாலை கேட்டு" (சீவக. 2325).*

[வென்றி + மாலை]

வென்றிமாலைக்கவிராயர் *venri-mālai-k-kavirāyar,* பெ.(n.) 17-ஆம் நூற்றாண்டி லிருந்து வரும் திருச்செந்தூர்ப் புராணம் இயற்றியவருமாகிய ஆசிரியர்; a poet author of *tiruccentūr-p-purāṇam,* 17th C.

[வெற்றிமாலை + கவிராயர்]

வென்றியன் *venriyan,* பெ.(n.) வென்றோன் 1 பார்க்க; see *venrōn 1.* *"செருமேம்பட்ட வென்றியர்" (கலித். 27, 25).*

[வெல் → வென் → வென்றியன்]

வென்றோர் *venrōr,* பெ.(n.) புலனடங்கப் பெற்றோர், வெற்றியடைந்தோர்; controller of senses, victorious person.

[வெல் → வென் → வென்றோர்]

வென்றோன் *venrōn,* பெ.(n.) வென்றவன் 1, 2 பார்க்க; see *venravan 1, 2.* 2. அருகக் கடவுள் (சூடா.); arhat, as one who conquered the world by his renunciation.

[வெல் → வென் → வென்றோன்]

வென்னிடுதல் *vennidutal,* பெ.(n.) புறங் கொடுத்தல்; retreat.

[வெரிந் → வெந் → வென் → இடுதல்]

வென்னீர் *vennīr,* பெ.(n.) சூடான நீர்; hot water.

[வெந்நீர் → வென்னீர்]

வென்னீர்ப்புண் *vennīr-p-pun,* பெ.(n.) கொதிநீர்பட்ட புண்; scalds.

[வெந்நீர் → வென்னீர் + புண்]

வென்னீறாதல் *vennīrātal,* பெ.(n.) நீற்றுப் போதல், பற்பமாதல்; to slake, as lime.

[வெறுநீறு → வென்னீறு + ஆதல்]

வெனப்பீலி *vena-p-pili,* பெ.(n.) இருவேலி; khus-khus root - vetiveria zizanioides.

வெனப்பீலிகம் *vena-p-piligam,* பெ.(n.) இருவேலி; khus-khus root - vetiveria zizanioides.

வே

வே[1] *vē,* பெ.(n.) தமிழ் நெடுங்கணக்கில் 'வ்' என்ற மெய்யெழுத்தும் 'ஏ' என்ற உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் எழுத்து; the compound of v and ē.

[வ் + ஏ = வே]

வே[2] *vē,* 13 செ.கு.வி. (v.i.) 1. எரிதல்; to burn. *"புனத்து வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே" (நாலடி, 180).* 2. வெப்பமாதல்; to be hot, sultry, as the weather, to be scorched. *'வெயிற்காலமாகையால் பகலெல்லாம் வேகின்றது'.* 3. அழலுதல்; to be inflamed, as the stomach. 4. கொதிக்கும் நீர் எண்ணெய் முதலிய வற்றிற் பக்குவப்படுதல்; to be boiled, cooked, as rice. *'சோறு வேகவில்லை'.* 5. புடம் வைக்கப்படுதல்; to be refined by burning in a crucible as gold. *"வெந்தெரி பசும்பொன்" (சீவக. 585).* 6. துன்பமுறுதல்; to be distressed by grief or passion. *'துயரச் செய்தி கேட்ட என் மனம் வேகின்றது'.* 7. சினமுறுதல்; to be angry. *"கட்டூர் நாப்பண் வெந்து வாய்மடித்து" (புறநா. 295).*

[வ் + ஏ = வே]

வே[3] *vē,* பெ.(n.) வேவு (யாழ்.அக.); spying.

வேக்கா *vēkkā,* பெ.(n.) கொருக்காப்புளி; a tree-pithecolobium duice.

[வே → வேக்கா]



வேக்காடு[1] *vēkkāḍu,* பெ.(n.) 1. எரிகை; burning. *'செங்கலுக்கு வேக்காடு பற்றாது'.* 2. கொதிக்கும் நீர் முதலியவற்றில் வேகுகை; boiling, cooking. 3. அழற்சி; inflammation, as of the stomach. 4. வெந்த புண் (வின்.); burn, scald. 5. வெப்பம்; heat. *'இன்றைக்குக் காற்றில்லாமல் வேக்காடா யிருக்கிறது?'* 6. பொறாமை; envy, jealosy, heart-burning. *'இந்த வேக்காடு உனக்கேன்?'*

[வே + காடு]

வேக்காடு[2] *vēkkāḍu,* பெ.(n.) 1. (அரிசி காய்கறி முதலியவை) வெந்திருக்கும் நிலை; boiled state. *'முட்டையை அரை வேக்காட்டில் கொடு'.* 2. புழுக்கம்; sultriness. *'மின்விசிறி இல்லாமல் இந்த வேக்காட்டில் எப்படி வேலை செய்வது?'*

[வே + காடு]

வேக்காளப்படு-தல் *vēkkāḷa-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. மனத்துயரப்படுதல்; to be pained. 2. வெட்கப்படுதல்; to be shy.

[வேக்காளம் + படுதல்]

வேக்காளம்[1] *vēkkāḷam,* பெ.(n.) 1. வேக்காடு (இ.வ.) பார்க்க; see *vēkkāḍu.* 2. கோபம் (இ.வ.); anger. 3. மனத்துயர்;

grief, sorrow. 4. வெட்கம் (யாழ்.அக.); shyness.

[வே → வேக்காளம்]

வேக்காளம்² *vēkkāḷam,* பெ.(n.) 1. மழையில்லாக் காலம்; a dry period without rain. 2. வெக்காளம்; sultriness. 3. வாய் வேக்காளம்; navsia.

[வே → வேக்காளம்]

வேகசரம் *vēgacaram,* பெ.(n.) ஒட்டகம் (வின்.); camel.



வேகசாரம் *vēgacāram,* பெ.(n.) 1. ஒட்டகம்; camel. 2. குதிரை; horse. 3. வேகமாக மூச்சு விடல்; hard breathing. 4. துரிதமாக நடத்தல்; fast walking.

வேகடம் *vēgaḍam,* பெ.(n.) 1. மணியின் மாசுநீக்குகை; polishing and cleaning gems. *"வேகடஞ்செய் மணியென மின்னினார்" (கம்பரா. நீர்விளை. 22).* 2. புதுமை வேலை (வின்.); fancy work. 3. இளமை; youthfulness. 4. மீன் வகை (வின்.); a kind of fish.

[வே → வேகடம்]

வேகடன் *vēgaḍaṉ,* பெ.(n.) 1. வேகடி பார்க்க; see *vēgaḍi.* 2. இளைஞன்; youth.

[வே → வேகடன்]

வேகடி *vēgaḍi,* பெ.(n.) 1. மணிமாசு நீக்குவோன்; one who cleans and polishes gems. *"வேகடி துரிசறுத்தடுக்கு வானது போல்" (உபதேசகா. சிறப்புப். 12).*

[வேகடம் → வேகடி]

வேகடை *vēgaḍai,* பெ.(n.) வேகடம் பார்க்க (வின்.); see *vēgaḍam.*

[வேகடம் → வேகடை]

வேகடைத்தாள்¹ *vēgaḍai-t-tāḷ,* பெ.(n.) ஒளியுள்ள ஒருவகை மெல்லிய வண்ணத் தகடு (வின்.); foliated tinsel.

[வேகடை + தாள்]

வேகடைத்தாள்² *vēgaḍai-t-tāḷ,* பெ.(n.) குருநாப்பட்டை; a thin metallic leaf.

[வேகடை + தாள்]

வேகடையாள் *vēgaḍai-yāḷ,* பெ.(n.) வீண்பகட்டான ஆள் (வின்.); fop.

[வேகடை + ஆள்]

வேகடைவேலை *vēgaḍai-vēlai,* பெ.(n.) உண்மையில்லாத (போலி) வேலை (வின்.); unsubstantial work.

[வேகடை + வேலை]

வேகத்தடுப்பு / வேகத்தடை *vēga-t-taḍuppu / vēga-t-taḍai,* பெ.(n.) (வாகனங்களின் வேகத்தைக் குறைப்பதற்காகச் சாலையில்) குறுக்கே சற்று மேடாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் அமைப்பு; speed breaker. *'இந்த சாலையின் சந்திப்பில் வேகத்தடை வந்த பின் விபத்துகள் குறைந்து விட்டன'.*

[வேகம் + தடுப்பு / வேகம் + தடை]

வேகத்தி *vēgatti*, பெ.(n.) பூ வழலை; a kind of salt obtained from fuller's earth.

வேகப்பந்துவீச்சு *vēga-p-pandu-viccu*, பெ.(n.) (கிரிக்கெட்) (மட்டைப் பந்து விளையாட்டில்) மிகுந்த வேகத்தில் பந்து வீசப்படுதல்; (in cricket) fast bowling. *'அவருடைய வேகப்பந்து வீச்சுதான் இன்றைய கட்டத்தின் சிறப்பு அம்சம்' (உ.வ.).*

[வேகம் + பந்து + வீச்சு]



வேகப்புள் *vēga-p-pul*, பெ.(n.) கருடன்; sacred kite. *"வேகப்புள்ளின் வெவ்விசை கேட்ட நாகமகளிரின்" (பெருங். உஞ்சைக். 44, 44).*

[வேகம் + புள்]

வேகம்[1] *vēgam*, பெ.(n.) 1. விரைவு; swiftness, quickness. *"மதியினுக்கிவர்ந்த வேகமா மணிநாகம்" (சீவக. 982).* 2. விரைவளவு; speed, velocity, impetuosity. *'அவன் குதிரை வாயுவேகமாய்ச் சென்றது'.* 3. விசை; force. *"வேகமொடு வந்தெழு வேகவதி யாறு" (திருவாலவா. 7, 6).* 4. வலிமை; power, strength. *'மருந்தின் வேகம் இன்னுந் தணியவில்லை'.* 5. கோபம்; anger. *"ஓவா வேகமொடுருத்து" (கலி. 103).* 6. மனக் கலக்கம்; agitation, unrest. *"வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க" (திருவாச. 1, 6).* 7. கடுமை; severity. *'சுரம் வேகமாயடிக்கிறது'.* 8. மலக்கழிவு (சாரங்க. 244, கீழ்க்குறிப்பு); expulsion of urine, faeces, etc. 9. விந்து (யாழ்.அக.); semen. 10. நச்சு; poison. *"அரசு கான்ற வேகம் மிக்கட்ட தன்றே" (சீவக. 1274).* 11. நாற்றம் பார்க்க; see *nāṟṟam*, bad odour. *'வேகமடிக்கின்றது'.* 12. வெள்ளப் பெருக்கு (இலக்.அக.); flood. 13. கீழ் (அக.நி.); lowness. 14. பரவுகை (அரு.நி.); circulation, as of poison. 15. உடம்பு (அரு.நி.); body. 16. கொடி வகை (சங்.அக.); hare leaf. 17. சினம்; anger. *"ஓவா வேகமோ டுருத்து" (கலித். 103).*

[வே → வேகு → வேகம்] (வே.க.பக். 135)

வேகமடக்கல் *vēga-madakkal*, பெ.(n.) வேகநிரோதம் பார்க்க; see *vēga-nirōdam*.

[வேகம் + மடக்கல்]

வேகர் *vēgar*, பெ.(n.) தூதுவர்; messenger, courier. *"நல்வேந்தனுக் குரைத்தனர் வேகர்" (கம்பரா. அகலி. 39).*

தெ. வேகருலு.

[வேயர் → வேகர்]

வேகரம் *vēgaram*, பெ.(n.) 1. கடுமை (சங்.அக.); severity. 2. உறைப்பு (யாழ்.அக.); pungency.

[வேகம் → வேகரம்]

வேகவதி *vēgavati*, பெ.(n.) 1. வைகை; the vaigai river in the madura district. *"வேகமொடு வந்தெழு வேகவதி யாறு"*

(*திருவாலவா. 7, 6*). 2. காஞ்சீபுரத்தருகில் ஓடும் கம்பாநதி (குருபரம். 170) (காஞ்சிப்பு. தலவி. 23); the kampa river near kanjeevaram. 3. தன் காதற்றிறத்தாற் புகழ் விளங்கிய ஓர் இளவரசி; a princess famed for her constancy. *"வேகவதி யென்றுரைக்குங் கன்னி"* (*திவ். இயற். பெரிய. ம. 52*).

[வேகம் → வேகவதி]

வேகவை-த்தல் *vēgavai-*, செ.குன்றாவி. (v.t.) சூடாற் பக்குவப்படுத்துதல்; to boil.

[வே → வேகு → வேகவை-,]

வேகா *vēgā*, இடை. (part.) 1. வேகாது; unboiled. 2. வேகமின்மை; slow.

[வேகாது → வேகா]

வேகாத்தலை *vēgā-t-talai*, பெ.(n.) விண் வெளி; open atmosphere.

[வேகா + தலை]

வேகாத்தலைவழுக்கை *vēgā-t-talai-vaḻukkai*, பெ.(n.) இள வழுக்கை; a foetus three months old.

[வேகாத்தலை + வழுக்கை]

வேகாதம் *vēgātam*, பெ.(n.) மலக்கட்டு; a state of bowels in which the irregular evacuations are very hard and expelled with difficulty-costiveness.

[வே → வேகாதம்]

வேகாதுப்பு *vēgāduppu*, பெ.(n.) முடியண்ட படருப்பு; a kind of salt prepared out of human skull.

[வே → வேகாதுப்பு]

வேகாமை *vēgāmai*, பெ.(n.) பச்சை; raw.

[வே → வேகாமை]

வேகாரி¹ *vēgāri*, பெ.(n.) கட்டாய வேலை (இ.வ.); compulsory labour.

[வே → வேகாரி]

வேகாரி² *vēgāri*, பெ.(n.) பழைய வரி வகை (S.I.I.V.95); an ancient tax.

[வே → வேகாரி]

வேகாவரி¹ *vēgāvari*, பெ.(n.) நன்றாகச் சுடப்படாத செங்கல் (இ.வ.); underburnt brick.

[வே + ஆ + வரி]

வேகாவரி² *vēgāvari*, பெ.(n.) ஒன்றுக்கும் உதவாதவ-ன்-ள் (இ.வ.); good-for-nothing person.

இ. பேகர்.

[வே + ஆ + வரி]

வேகாவாரி *vēgāvāri*, பெ.(n.) வேகாவரி¹ பார்க்க; see *vēgā-vāri.*

[வே + ஆ + வாரி]

வேகாளம்¹ *vēgāḷam*, பெ.(n.) 1. காங்கை; heat. 2. வேக்காடு; sultriness. *"அணிலத்தாம் வேகாளத்தைத் தணிக்கும்"* (*பதார்த்த. 428*). 2. கோபம் (வின்.); anger.

[வேக்காளம் → வேகாளம்]

வேகாளம்² *vēgāḷam*, பெ.(n.) விரைவு (வின்.); swiftness.

[வேகம் → வேகாளம்]

வேகாளம்³ *vēgāḷam*, பெ.(n.) வெக்காளம் பார்க்க; see *vekkāḷam*.

[வெக்காளம் → வேக்காளம்]

வேகி¹-த்தல் *vēgi-*, 11 செ.கு.வி. (v.i.) 1. விரைதல்; to be swift. *"பாச தரனெதிர் நீலயயிலொரு பாகனென வேகியா" (பாரத. மணி மான். 52).* 2. கோபித்தல்; to be angry. *"சம்பரன் வேகித்து மதமுறு மிமையோர் சேனை வதஞ்செய்வான்" (ஞானவா. வீம. 16).*

[வேகம் → வேகு → வேகி]

வேகி² *vēgi*, பெ.(n.) 1. வேகமுடையவ-ன்-ள் (இலக்.அக.); one who is agile or quick. 2. கோபமுடையவ-ன்-ள்; angry person. *"வேகியானாற்போற் செய்த வினையினை வீட்டலோரார்" (சீ.சீ. 1, 50).* 3. வஞ்சகமுடைய வ-ன்-ள் (நாமதீப. 171); deceilful person.

[வேகம் → வேகு → வேகி]

வேகி³ *vēgi*, பெ.(n.) மிளகாய்; chilly.

வேகிகம் *vēgigam*, பெ.(n.) அடம்புக்கொடி பார்க்க; see *adambu-k-kodi*.

வேகிதன் *vēgitaṉ*, பெ.(n.) விரைவுடையான் (சுக்கிரநீதி. 114); one who is quick, as in action.

[வேகம் → வேகு → வேகிதன்]

வேகிதை *vēgidai*, பெ.(n.) விரைவு (யாழ்.அக.); swiftness.

[வேகம் → வேகு → வேகிதை]

வேகு-தல் *vēgu-*, செ.கு.வி. (v.i.) காய்தல்; boiling.

[வே → வேகு → வேகுதல்]

வேங்கக்கல் *vēṅga-k-kal*, பெ.(n.) ஒரு வகைக்கல்; a kind of stone, white translucent quartz.

வேங்கடக்கோட்டம் *vēṅgaḍa-k-kōṭṭam*, பெ.(n.) தொண்டை மண்டலத்தின் கோட்டங்களுள் திருப்பதி மலையைச் சூழ்ந்த நாட்டுப்பகுதி; Mt. tiruppati and the surrounding region, a division of *toṇḍai-māṇḍalam*.

[வேங்கடம் + கோட்டம்]

வேங்கடம்¹ *vēṉgaḍam*, பெ.(n.) 1. தமிழ் வழங்கு நிலத்தின் வடவெல்லையான திருப்பதி மலை; the tiruppati hills which formed the northern boundary of ancient tamil country. *"வடவேங்கடந் தென்குமரி" (தொல். பாயி).* 2. திருப்பதி என்ற திருமால் திருக்கோயில்; tiruppati a *visṇu* shrine.

வேங்கடாசலபதி *vēṉgaḍacala-pati*, பெ.(n.) திருவேங்கடத்துக் கோயில் கொண்ட திருமால்; *visṇu*, as the lord of lit. tiruppati.

[வேங்கடாசலம் + பதி]



வேங்கடாசலம் *vēṅgaḍa-calam*, பெ.(n.) வேங்கடம் 1 பார்க்க; see *vēṅkaḍam*.

[வேங்கடம் + அசலம்]



வேங்கை



வேம்பு

வேலிப்பருத்தி

வேங்கடாசலமூர்த்தி *vēṅgaṭācala-mūrtti*, பெ.(n.) வேங்கடாசலபதி பார்க்க; see *veṅgaḍacala-pati.*

[வேங்கடாசலன் + மூர்த்தி]

வேங்கடாசலன் *vēṅgaḍā-calaṉ*, பெ.(n.) வேங்கடாசலபதி பார்க்க; see *vēṅkaṭācala-pati.*

வேங்கடேசன் *vēṅgaḍēšaṉ*, பெ.(n.) வேங்கடாசலபதி பார்க்க; see *vēṅgaḍācala-pati.*

[வேங்கடம் + ஈசன்]

வேங்கடேசுவரன் *vēṅgaḍēšuvaraṉ*, பெ.(n.) வேங்கடாசலபதி பார்க்க; see *vēṅkaṭāšalapati* (M.N.A.327).

[வேங்கடம் + ஈசுவரன்]

வேங்கியம் *vēṅgiyam*, பெ.(n.) 1. குறிப்புப் பொருள் (சங்.அக.); suggested sense. 2. வியங்கியம் 2 பார்க்க; see *viyaṅgiyam.* 3. வெட்கம்; shame. *'அவளை வேங்கிய மில்லாமற் பேசினான்'.*

வேங்கை[1] *vēṅgai*, பெ.(n.) 1. புலிவகை; tiger. felis tigris. *"குயவரி வேங்கை யனைய வயவர்" (பு.வெ. 3, 23).* 2. நீண்ட மரவகை; east indian kino tree. 1.tr., ptero carpus marsulpium. *"சந்தனமும் வேங்கையும் வேமே" (நாலடி, 180).* 3. மலை; a hill. *"வேங்கை வெற்பின்" (புறநா. 336).* 4. வேங்கைநாடு பார்க்க; see *vēṅgai-nāḍu. "வேங்கை வளநாடன்" (வீரசோ. அலங். 23).* 5. பொன் (பிங்.); gold. 6. புலி தொடக்கி; a thorny shrub which see.

தெ. வேகி; ம. வேன்னா.

[வேம் → வேங்கை] (மு.தா.145)

வேங்கை[2] *vēṅgai*, பெ.(n.) நீண்ட மரவகை; east indian kino tree. 1.tr., ptero carpus marsulpium. *"சந்தனமும் வேங்கையும் வேமே" (நாலடி, 180).*

வேங்கை வகைகள் :

1. வேங்கை; indian kino tree. 2. சிறு வேங்கை; Bredelia retusa. 3. முள்வேங்கை; Bredelia montana. 4. சந்தன வேங்கை; Pterocarpus santalina. 5. உதிர வேங்கை; pterocarpus marsu pium. 6. சோலை வேங்கை (காட்டு சாதிக்காய்); wild mace-myristica malabarica. 7. சாற்று வேங்கை (பெண் மரம்). 8. பெண் வேங்கை. (same as No.7). 9. மணி முத்து வேங்கை. 10. வச்சிர வேங்கை.

வேங்கைக்கல் *vēṅgai-k-kal*, பெ.(n.) வேங்கக்கல் பார்க்க; see *vēṅga-k-kal.*

[வேங்கை + கல்]

வேங்கைக்குறித்தோன் *vēṅgai-k-kuṟittōṉ*, பெ.(n.) சிங்கம்; lion.

[வேங்கை + குறித்தோன்]

வேங்கைநாடு *vēṅgai-nāḍu*, பெ.(n.) கோதாவரி கிருட்டினா மாவட்டத்தைச் சேர்ந்ததும் பத்துப் பதினோராம் நூற்றாண்டு களில் சோழ மன்னனால் ஆட்சி செய்யப்பட்டு வந்ததுமான ஓர் நாடு; the *vēṅgi* country comprising the godavari and the kistna districts, ruled by the *cōḻas* in the 10th and 11th C.

[வேங்கை + நாடு]

வேங்கைப்பிசின் *vēṅgai-p-pišiṉ*, பெ.(n.) வேங்கை மரத்தின் பிசின்; the gum obtained from the indian kino tree.

[வேங்கை + பிசின்]

வேங்கைமண்டலம் *vēṅgai-maṇḍalam*, பெ.(n.) வேங்கைநாடு பார்க்க; see *vēṅgai-nāḍu*. *'வடதிசை வேங்கை மண்டலங் கடந்து'.*

[வேங்கை + மண்டலம்]

வேங்கைமரம் *vēṅgai-maram*, பெ.(n.) உறுதிவாய்ந்த மரவகைகளுள் ஒன்று, கட்டட வேலைகளுக்குப் பயன்படும் சிறந்த மரவகையாகும் (பொ.வழ.); a kind of wood strongest.

[வேங்கை + மரம்]

வேங்கையூறாகம் *vēṅgai-yūṟāgam*, பெ.(n.) வேங்கைப்புலி; a large streaked tiger-man eater.

[வேங்கை + யூறாகம்]



வேங்கைவயிரம் *vēṅgai-vayiram*, பெ.(n.) வேங்கை மரத்து வயிரப்பாகம்; the middle hard core of the trunk of the tree-indian kino.

[வேங்கை + வயிரம்]

வேச்சென்றிரு-த்தல் *vēccenṟiru-*, செ. குன்றாவி. (v.t.) சூடு ஆறாதிருத்தல்; to remain warm.

[வே + சென்றிரு]

வேசகம்[1] *vēšagam*, பெ.(n.) 1. யானை வாலின் நுனி (பிங்.); tip of an elephant's tail. 2. வால் (சூடா.); tail. 3. குதிரையின் பிடரிமயிர் (நாமதீப. 211); horse's mane.

வேசகம்[2] *vēšagam*, பெ.(n.) வீடு (யாழ்.அக.); dwelling place, house.

வேசங்கை *vēšaṅgai*, பெ.(n.) ஒன்பது நிதியுளொன்று (சீவசம். MS.); one of nava-niti.

வேசடை *vēšaḍai*, பெ.(n.) துக்கம் (யாழ்.அக.); sorrow.

வேசதாரி *vēšadāri*, பெ.(n.) வேடதாரி பார்க்க; see *vēḍadāri*.

[வேடதாரி → வேசதாரி]

வேசம்[1] *vēšam*, பெ.(n.) வேடம்[1] பார்க்க; see *vēḍam*.

[வேடம் → வேசம்]

வேசம்[2] *vēšam*, பெ.(n.) 1. நுழைவு; entrance. 2. வீடு (யாழ்.அக.); house. 3. வேசையர் தெரு (யாழ்.அக.); street of harlots.

வேசம்[3] *vēšam*, பெ.(n.) கூர்ப்பு (யாழ்.அக.); vehemence.

வேசம்[4] *vēšam*, பெ.(n.) வேடகம் பார்க்க (வின்.); see *vēḍagam*.

வேசம்[5] *vēšam*, பெ.(n.) வேசை[2] பார்க்க (யாழ்.அக.); see *vēcai*.

வேசம்[6] *vēšam*, பெ.(n.) ஒனித்து வாரம்; vestribule of vulva-vagina.

வேசயப்பத்திரி *vēšaya-p-pattiri*, பெ.(n.) இலவங்கப் பத்திரி; cinnamon leaf.

[வேசயம் + பத்திரி]

வேசயம் *vēšayam*, பெ.(n.) இலவங்கம்; clove.

வேசரம்[1] *vēšaram*, பெ.(n.) வேசறவு பார்க்க; see *vēšaṟavu*.

தெ. வேசரமு.

வேசரம் *vēšaram*, பெ.(n.) 1. தெலுங்கு மொழி (வின்.); the telugu language. 2. சிற்ப வகை; a style of architecture. *"நாகரந் திராவிடம் வேசர மற்றுங் கிளந்தவற்றுளோர் பெற்றியின்.......... ஆலயங் காண்டக வெடுபோர்" (காஞ்சிப்பு. சிவ. 52).*

வேசரம்[3] *vēšaram*, பெ.(n.) ஒட்டகம் (யாழ்.அக.); camel.

வேசரி *vēšari*, பெ.(n.) கோவேறு கழுதை; mule. *"மணியணி வேசரி" (பரிபா. 22, 24).* 2. கழுதை (பிங்.); ass.

[வே → வேசரி]

வேசறவு *vēšaṟavu*, பெ.(n.) 1. மனச்சோர்வு; weariness, fatique. 2. துக்கம்; sorrow. *"வேசற வொழிதி" (காஞ்சிப்பு. தழுவக். 214).*

[வேசறு + உ]

வேசறிக்கை *vēšaṟikkai*, பெ.(n.) வேசறவு பார்க்க; see *vēšaṟavu*. *"இன்ப வீட்டினிடைத் துயின்றே வேசறிக்கை தீர்வேனா" (திருப்போ. சந். கொச்சகக்கலி. 4).*

[வேசறு + அறிக்கை]

வேசறு-தல் *vēšaṟu-*, 6 செ.கு.வி. (v.i.) 1. மனஞ் சோர்தல்; to be weary, fatiqued. 2. வருந்துதல்) to be vexed, distressed. *"என் பிழைக்கே குழைந்து வேசறுவேனை" (திருவாச. 6, 50).*

தெ. வேசறு; க. பேசறு.

[ஏசறு → வேசறு]

வேசனம் *vēšaṉam*, பெ.(n.) 1. மருதநிலத்தூர் (வின்.); town in an agricultural teract. 2. வீடு (யாழ்.அக.); house. 3. வாயில் (யாழ்.அக.); gate.

வேசனைநாற்றம் *vēšaṉai-nāṟṟam*, பெ.(n.) கதிரவன் வெப்பத்தாற் குளம் முதலியவற்றின் நீரினின்றெழும் நாற்றம்; odour due to the action of the sun's heat, as from a pond, etc. *"யாற்று வெந்நாற்று வேசனை நாற்றங் குதுகுதுப்ப" (பரிபா. 20, 13).*

[வேசனை + நாற்றம்]

வேசா *vēšā*, பெ.(n.) வேசி பார்க்க; see *vēši*. *"வேசாக்கள் பின்செல் வறியானில் விளங்க" (கந்தபு. பானுகோ. 41).*

[வே → வேசா]

வேசாடல் *vēšāḍal*, பெ.(n.) மனக்கலக்கம் (யாழ்.அக.); mental agitation.

க. பேகாடா.

[வேசறவு + ஆடு-.]

வேசாடை *vēšāḍai*, பெ.(n.) வேசடை (யாழ்.அக.) பார்க்க; see *vēšaḍai*.

வேசாறல் *vēšāṟal*, பெ.(n.) 1. சோர்வு; weariness. 2. துக்கம்; sorrow. *"நினைக்கினும் வேசாறலாறுமடி" (அருட்பா. vi, அனுபவ. 44).* 3. ஆறுகை (யாழ்.அக.); becoming consoled or pacified. 4. களைப்பாறுகை (யாழ்.அக.); rest.

தெ. வேசாறு; க. பேஜாறு; ம. பேஜாறா.

[வேசாறு → வேசாறல்]

வேசாறு[1]-தல் *vēšāṟu-*, செ.கு.வி. (v.i.) 1. வேசறு-, 1 (வின்.) பார்க்க; see *vēšaṟu-*. 2. வேசறு-, 2 பார்க்க (யாழ்.அக.); see *vēšaṟu-*. 3. களைப்பாறுதல் (யாழ்.அக.); to rest. 4. ஆறுதல் (யாழ்.அக.); to be consoled or pacified.

[வேசறு → வேசாறு]

வேசாறு[2] *vēšāṟu*, பெ.(n.) வேசாறல் பார்க்க; see *vēšāṟal*. *'உடம்பு மிகவும் வேசாறா யிருக்கிறது'.*

வேசி[1] *vēši*, பெ.(n.) 1. பரத்தை (பிங்.); courtesan, whore. 2. கூடா ஒழுக்கம் (விபசாரி) (யாழ்.அக.); adult.

வேசி[2] *vēši*, பெ.(n.) 1. மிளகுத் தக்காளி; a plant-solanum nigrum. 2. வேசை பார்க்க; see *vēšai*.

வேசிக்கள்ளன் *vēši-k-kaḷḷaṉ*, பெ.(n.) பரத்தையர்தரகன் (வேசியுறவுள்ளவன்) (வின்.); whore-monger.

[வேசி + கள்ளன்]

வேசிகை *vēšigai*, பெ.(n.) 1. வாயில்; entrance. 2. யோனிவாய்; vagina.

[வேசி → வேசிகை]

வேசித்தனம் *vēši-t-taṉam*, பெ.(n.) 1. பரத்தைமை (வின்.); harlotry. 2. பிறர்மனை நயத்தல்; adultery. 3. பகட்டு; coquetry.

[வேசி + தனம்]

வேசிதம் *vēšidam*, பெ.(n.) ஊடிழைமம்; seton.

அறுவையில் சிறப்பாக விலங்குடல் தோலடி யூடாக ஊருதல் தடுப்பிற்காகவும் செயற்கைப்புண் மூலம் மருந்துச் சீநீர் பெறுவதற்காகவும் ஊடு செலுத்தப்படும் மயிர் அல்லது இழையாலான துய்க்கற்றை; ஊடுசீநீர், ஊடிழைமம் வழிப் பெறப்படும் செயற்கைச் சீநீர்.

வேசிநங்கை *vēši-naṅgai*, பெ.(n.) மிளகாய் நங்கை; a plant.

[வேசி + நங்கை]

வேசிப்பழம் *vēši-p-paḻam*, பெ.(n.) எலுமிச்சம்பழம்; lime fruit.

[வேசி + பழம்]

வேசிப்பார்வை *vēši-p-pārvai*, பெ.(n.) புணர்ச்சி நோக்கு; look with a desire for sexual intercourse.

[வேசி + பார்வை]

வேசியம் *vēšiyam*, பெ.(n.) 1. வேசம்[2], 3 பார்க்க (சங்.அக.); see *vēšam*. 2. பரத்தையர் வீடு; house of prostitute.

[வேசி → வேசியம்]

வேசியர்பால் *vēšiyar-pāl*, பெ.(n.) பரத்தையின்பால்; breast milk of prostitutes- not useful for any kind of medicines - internal or external.

[வேசியர் + பால்]

வேசியாடு-தல் *vēši-y-yāḍu-*, செ.கு.வி. (v.i.) கற்பொழுக்கந் தவறி நடத்தல் (யாழ்.அக.); to become an adulteress; to walk the street, as a prostitute.

[வேசி + ஆடு-,]

வேசியை *vēšiyai*, பெ.(n.) வேசி (யாழ்.அக.) பார்க்க; see *vēši*.

[வேசி → வேசியை]

வேசிவிடையான் *vēśi-viḍaiyāṉ*, பெ.(n.) கழுதை; ass.

[வேசி + விடையான்]



வேசை[1] *vēśai*, பெ.(n.) வேசி பார்க்க; see *vēśi*. *"வேசையர் நட்பும்" (நாலடி, 371).*

[வேசி → வேசை]

வேசை[2] *vēśai*, பெ.(n.) ஊதியம் (சம்பளம்) (யாழ்.அக.); wage, remuneration.

வேட்களம் *vēṭ-kaḷam*, பெ.(n.) திருவேட்களம் என்ற பெயரில், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஊர்; its name *tiru-vēṭkaḷam* village placed in *ten-ārkkāḍu* district.

சிதம்பரத்திற்குப் பக்கத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை ஒட்டியுள்ளது என்ற எண்ணம் அமைகிறது. 'வேட்களம்' என்ற நிலையில் பார்க்கும்போது, வேட்டையாடும் நிலைவாய்ந்த களம் என்ற பொருள் அமைகிறது. எனவே வேடர்கள் வாழ்ந்த பகுதியக இருந்திருக்கலாம். சம்பந்தர், அப்பர் இத்தலத்து இறைவனைப் பாடிப் பரவியுள்ளனர்.

வேட்கை[1] *vēṭkai*, பெ.(n.) 1. பற்றுள்ளம்; desire, want, appetite. *"வேட்கையெல்லாம் விடுத்தென்னை....... திருவடிக்கட் கூட்டினை" (திவ். திருவாய். 4, 9, 9).* 2. பத்து நிலைகளுள் ஒன்றான காம விருப்பம் (நம்பியகப். 36, உரை); amorousness, one of ten avattai, q.v.

[வெள் → வேள் → வேட்பு → வேட்கை] (தே.நே.பக். 145)

வேட்கை[2] *vēṭkai*, பெ.(n.) காமவிருப்பம்; sexual desire.

[வெள் → வேள் → வேட்பு → வேட்கை]

வேட்கைத்துணைவி *vēṭkai-t-tuṇaivi*, பெ.(n.) மனைவி (வின்.); wife.

[வேட்கை + துணைவி]

வேட்கைநீர் *vēṭkai-nīr*, பெ.(n.) 1. விடாய் தணிக்கும் நீர் (வின்.); water to quench one's thirst. 2. காமநீர்; a fluid discharge in a woman from orgasm in sexual inter course.

[வேட்கை + நீர்]

வேட்கைநோய் *vēṭkai-nōy*, பெ.(n.) 1. வேட்கை பார்க்க; see *vēṭkai*. *"வேட்கை நோய் கூர நினைந்து கரைந்துகும்" (திவ். திருவாய். 9, 6, 7).* 2. வயா (புறநா. 20, 14, உரை); morbid appetite or longings of women during pregnancy.

[வேட்கை + நோய்]

வேட்கைப்பெருக்கம் *vēṭkai-p-perukkam*, பெ.(n.) பேராசை (பிங்.); great desire.

[வேட்கை + பெருக்கம்]

வேட்கைபெருக்கம் *vēṭkai-perukkam*, பெ.(n.) காமநோய்; excess of love for intercourse-amorousness.

[வேட்கை + பெருக்கம்]

வேட்கைமுந்துறுத்தல் *vēṭkai-munturuttal*, பெ.(n.) தலைவி தன் விருப்பத்தைத் தலைவன் முன் கூறும் புறத்துறை (பு.வெ. 12, 1); theme of a woman giving expression to her love in the presence of her loneq.

[வேட்கை + முந்துறுத்தல்]

வேட்கைமை *vēṭkaimai*, பெ.(n.) வேட்கை பார்க்க; see *vēṭkai*. *"வேட்கைமை யென்னு நாவில்" (சீவக. 2729).*

[வேள் → வேட்கைமை]

வேட்கோ *vēṭ-kō*, பெ.(n.) குயவன்; potter. *"வேட்கோச் சிறா அர் தேர்க்கால் வைத்த பசு மட் குருஉத்திரள்" (புறநா. 32).*

[வேள் + கோ³]



வேட்கோபன் *vēṭkōpaṉ*, பெ.(n.) வேட்கோ (யாழ்.அக.) பார்க்க; see *vēṭkō*.

[வேட்கோ → அன்]

வேட்கோவன் *vēṭkōvaṉ*, பெ.(n.) வேட்கோ பார்க்க (பெரியபு. திருநீல கண்டநாய. 1); see *vēṭkō*.

[வேட்கோ + அன்]

வேட்சாடை *vēṭcāḍai*, பெ.(n.) வேட்டாடை; a mode of wearing clothes by males.

[வேட்டி + ஆடை¹]

வேட்சி *vēṭci*, பெ.(n.) வேட்கை பார்க்க; see *vēṭkai*. *"வெளிப்பட் டிறைஞ்சினும் வேட்சியு மாமே" (திருமந். 437).*

[வேள் → வேட்சி]

வேட்சை¹ *vēṭcai*, பெ.(n.) விருப்பம் (யாழ்.அக.); desire.

[வேள் → வேட்சை]

வேட்சை² *vēṭcai*, பெ.(n.) புடைவை (யாழ்.அக.); saree.

வேட்டக்குடி¹ *vēṭṭa-k-kuḍi*, பெ.(n.) வேட்டுவர் வீடு; hunter's quarer. *"வேட்டக் குடிதொறும்" (புறநா. 333).*

[வேடு¹ + குடி]

வேட்டக்குடி² *vēṭṭa-k-kuḍi*, பெ.(n.) வேட்டக்குடி என, காரைக்காலுக்கு அருகில் அமைந்துள்ளது இவ்வூர்; this village near by *kārai-k-kāl* as called *vēṭṭa-k-kuḍi*.

வேட்டம் குடி வேட்டையாடும் மக்கள் வாழ்ந்த குயிருப்புப் பகுதி (வேட்டை–வேட்டையாடுதல்) என்பதே பொருத்தமாக அமைகிறது. சம்பந்தர் இங்குள்ள சிவனைப் புகழ்கின்றார். இவ்வேட்டக் குடி வேடர்கள் வாழ்ந்த குடியிருப்பாக இருக்கலாம் என்பது, காட்டுப்பகுதி என்ற எண்ணத்தாலும் உறுதிப்படுகிறது.

வேட்டகண்ணனார் *vēṭṭa-kaṇṇaṉār*, பெ.(n.) கழகக் காலப் புலவர்; a sangam poet.

இவர் சாதியில் வேடர் என்று தெரிகிறது. வேட்டம் – வேட்டை. இவர் தாம் வேடர் என்பதற்கியைக் குறுந்தொகையில் தோழி கூற்றில் *"தலைமகனுடைய குற்றேவல் மகன்", "நெய்கனி குறும் பூழ் காயமாக, ஆர்பதம் பெறுக"* என்று

நெய்யிற் பொரித்த காடை இறைச்சியைக் கூறியுள்ளார். வேட்டக் கண்ணனார் என்பது கண்ணப்ப நாயனாரை நினைவுறுத்துகின்றது.

வேட்டகம்[1] *vēṭṭagam*, பெ.(n.) மனைவியின் பிறந்த வீடு; house of one's wife's people. *"புக்கு வேட்டகத்தினி லுண்ணும் புன்மையோர்" (நைடத. நகர்நீங். 17).*

[வேள் + அகம்[1]]

வேட்டகம்[2] *vēṭṭagam*, பெ.(n.) தலைப்பாகை (யாழ்.அக.); turban.

[வேள் + அகம்]



வேட்டகம்[3] *vēṭṭagam*, பெ.(n.) பிசின்; gum.

வேட்டஞ்செய்-தல் *vēṭṭañ-cey-*, செ. குன்றாவி. (v.t.) வேட்டையாடு பார்க்க; see *vēṭṭai-y-āḍu-*. *"வேட்டஞ் செய் காண்டாம்" (அரிச். பு.).*

[வேட்டம் + செய்-,]

வேட்டணம் *vēṭṭaṇam*, பெ.(n.) 1. சூழ்கை; surrounding. 2. காது; ear. 3. சுவர்; wall.

[வேள் → வேட்டணம்]

வேட்டம்[1] *vēṭṭam*, பெ.(n.) 1. வேட்டை; hunting, chase. *"வயநாய் பிறபடவேட்டம் போகிய குறவன்" (அகநா. 182).* 2. கொலை (பிங்.); murder.

தெ., க. வேட; ம. வேட்ட.

[வேள் → வேட்டை → வேட்டம்]

வேட்டம்[2] *vēṭṭam*, பெ.(n.) 1. விருப்பம்; desire. *"உயர்ந்த வேட்டத்துயர்ந்திசி னோர்க்கு" (புறநா. 214).* 2. விரும்பிய பொருள்; the thing desired. *"வேட்டம் போகிய......... தும்பி" (கலித். 46).*

க. வேட.

[வேள் → வேட்டை → வேட்டம்]

வேட்டம்[3] *vēṭṭam*, பெ.(n.) 1. பிசின்; gum. 2. சாரம்; essence.

வேட்டமாடு-தல் *vēṭṭam-āḍu-*, 5 செ. குன்றாவி. (v.t.) வேட்டையாடு-, பார்க்க; see *vēṭṭai-y-āḍu-*. *"செழுங்கடல் வேட்ட மாடி" (சீவக. 2770).*

[வேட்டம் + ஆடு-,]

வேட்டல் *vēṭṭal*, பெ.(n.) 1. வேள்வி செய்தல்; sacrificing, one of *antaṇan-aṟu-toḻil*, q.v. *"ஓதல் வேட்ட லவைபிறர் செய்தல்"* (பதிற்றுப். *24, 6).* 2. மணம்; marriage. 3. விரும்புகை (பிங்.); desiring. 4. ஏற்கை (அரு.நி.); begging.

[வேள் → வேட்டல்]

வேட்டனம் *vēṭṭaṉam*, பெ.(n.) கூத்தின் உறுப்புகளுள் ஒன்று (சிலப். பக். 81, கீழ்க்குறிப்பு); a gesture or movement in dancing.

வேட்டாரன் *vēṭṭāraṉ*, பெ.(n.) வேட்டைக் காரன் 2 (நாஞ்.) பார்க்க; see *vēṭṭai-k-kāraṉ*.

[வேள் → வேட்டை → வேட்டாரன்]

வேட்டாவளியன் *vēṭṭā-vaḷiyaṉ*, பெ.(n.) வேட்டுவன் 4 (இ.வ.) பார்க்க; see *vēṭṭuvaṉ*.

[வேட்டம் + வளியன்]

வேட்டாள் *vēṭṭāḷ*, பெ.(n.) 1. மனைவி (யாழ்.அக.); wife. 2. மணமானவள் (வின்.); married woman.

[வே → வேட்டாள்]

வேட்டான் *vēṭṭāṉ*, பெ.(n.) 1. விரும்புவோன்; one who desires. *"வேட்டார்க் கினிதாயி னல்லது நீர்க்கினி தென்றுண்பவோ நீருண்பவர்" (கலித். 62).* 2. கணவன் (யாழ்.அக.); husband. 3. மணமானவன் (வின்.); married man. 4. நண்பன் (யாழ்.அக.); friend.

[வேள் → வேட்டான்]

வேட்டி *vēṭṭi*, பெ.(n.) ஆடவர் புனையும் ஆடை; man's clothes. *"வேட்டியுந் தாழ்வடமும் வெண்ணீறும்" (ஒழிவி. சரியைக் கழற்றி. 4).*

[வெட்டி → வேட்டி]

வேட்டித்துணி *vēṭṭi-t-tuṇi*, பெ.(n.) வேட்டி பார்க்க; see *vēṭṭi*. *'வேட்டித் துணிக்கு விதியில்லாதவன்'.*

[வேட்டி + துணி]

வேட்டிதம் *vēṭṭidam*, பெ.(n.) 1. சூழ்கை (இலக்.அக.); surrounding. 2. சூழப் பெற்றது; that which is surrounded. 3. தடை (இலக்.அக.); obstacle. 4. மடிப்பு (யாழ்.அக.); folding. 5. ஒரு வகைக் கூத்து (யாழ்.அக.); (*nāṭya*) a kind of dance.

[வேட்டி → வேட்டிதம்]

வேட்டிதகம் *vēṭṭidagam*, பெ.(n.) வேட்டிதம் பார்க்க; see *vēṭṭidam*.

[வேட்டி → வேட்டிதகம்]

வேட்டு[1] *vēṭṭu*, பெ.(n.) வேட்டையாடுந் தொழில்; the occupation of hunting. *"வேட்டென்னுந் தொழிலுடையானை வேட்டுவன் என்றலின்" (தொல். பொ. 21, உரை).*

[வேடு → வேட்டு]

வேட்டு[2] *vēṭṭu*, பெ.(n.) வெடி; report of a gun. *'தப்பட்டை யொலிவல் வேட்டு' (அறப். சத. 63).*

[வேடு → வேட்டு]

வேட்டுப்பறி-தல் *vēṭṭu-p-paṟi-*, 20 செ.கு.வி. (v.i.) 1. வெடி வெடித்தல்; to burst, explode, as a cartridge. 2. கீழ்நோக்குக் காற்று விடுதல்; to break wind.

[வேட்டு + பறி]

வேட்டுவன் *vēṭṭuvaṉ*, பெ.(n.) 1. வேடன்[1] பார்க்க (சூடா.); see *vēḍaṉ*. *"வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று" (குறள், 274).* 2. வேட்டைக்குச் செல்வோன்; one who goes hunting. *"யானை வேட்டுவன் யானையும் பெறுமே (புறநா. 214).* 3. குறிஞ்சி நிலத்திற் குரிய ஆடவன்; man of the *kuriñci* track. *"ஆயர் வேட்டுவர்" (தொல். பொ. 21).* 4. குளவி (பிங்.); hornet. *"வேட்டுவனாமப் புழுப்போல்" (சி.போ. 1, 2, 2).* 5. நாண்மீன்களுள் பத்தாவது (மகம்) (பிங்.); the 10-th naksatra.

[வேடு → வேட்டுவன்]

வேட்டுவாளி *vēṭṭu-vāḷi*, பெ.(n.) வேட்டுவன் 4 பார்க்க (சங்கற்ப. 9, உரை); see *vēṭṭuvaṉ*.

[வேட்டுவாள் + இ]

வேட்டுவாளியன் *vēṭṭu-vāḷiyaṉ,* பெ.(n.) வேட்டுவாளி (சங்.அக.) பார்க்க; see *vēṭṭu-vāḷi.*

[வேட்டுவாளி + அன்]

வேட்டுவிடு[1]-தல் *vēṭṭu-viḍu-,* செ.குன்றாவி. (v.t.) திருடுதல்; to steal, rob.

[வேட்டு + விடு-,]

வேட்டுவிடு[2]-தல் *vēṭṭu-viḍu-,* செ.கு.வி. (v.i.) 1. வேட்டுப்பறி-, பார்க்க; see *vēṭṭu-p-paṟi-.* 2. பொய்சொல்லுதல்; to bib.

[வேட்டு + விடு-,]

வேட்டுவித்தி *vēṭṭu-vitti,* பெ.(n.) குறிஞ்சி நிலப்பெண் (தொல். பொ. 20, உரை); women of the *kuṟiñci* tract.

[வேட்டு + வித்தி]

வேட்டுவேளான் *vēṭṭu-vēḷāṉ,* பெ.(n.) வேட்டுவன் 4 பார்க்க; see *vēṭṭuvaṉ.* *"கிட்டமும் வேட்டுவேளானும் போலே" (ஆசாரிய. 11).*

[வேட்டு + வேளான்]

வேட்டுவை *vēṭṭuvai,* பெ.(n.) வெடிவை பார்க்க; see *veḍivai.*

[வேட்டு + வை]

வேட்டை[1] *vēṭṭai,* பெ.(n.) 1. வேட்டம்[1],1 பார்க்க; see *vēṭṭam.* *"வேட்டை வேட்கை மிக" (கம்பரா. நகர்நீங். 74).* 2. வேட்டையிற் கிடைக்கும் பொருள்; hunt, game killed in hunting. *"பிடித்தலு நமக்கு வேட்டை வாய்த்ததின்று" (திருவாலவா. 44, 38).* 3. கொலை; murder. *"ஆடுவனே யின்னு மாருயிர் வேட்டை" (திருநூற். 56).*

[வேடு → வேட்டை]

வேட்டை[2] *vēṭṭai,* பெ.(n.) 1. இளைப்பு; weariness. 2. துன்பம்; affliction.

வேட்டைக்கடா *vēṭṭai-k-kaḍā,* பெ.(n.) வேட்டைக்குப் பழக்கிய கடா (யாழ்.அக.); ram trained for hunting.

[வேட்டை + கடா]

வேட்டைக்காரன்[1] *vēṭṭai-k-kāraṉ,* பெ.(n.) 1. வேட்டுவன் 1 பார்க்க; see *vēṭṭvaṉ.* 2. வேட்டையாடும் ஒரு வகையினர்; person belonging to the hunting caste.

[வேட்டை + காரன்]

வேட்டைக்காரன்[2] *vēṭṭa-k-kāraṉ,* பெ.(n.) 1. செந்நாய் பார்க்க; see *cennāy.* 2. வேட்டைநாய் பார்க்க; see *vēṭṭai-nāy.*

[வேட்டை + காரன்]

வேட்டைகட்டு-தல் *vēṭṭai-kaṭṭu-,* செ.கு.வி. (v.i.) வேட்டை மேற் செல்லுதல்; to go hunting. *"பொங்குகடல் வேட்டைகட்டி" (கொண்டல் விடு. 71).*

[வேட்டை + கட்டு-,]

வேட்டைநாய் *vēṭṭai-nāy,* பெ.(n.) வேட்டையாடப் பழகிய நாய்வகை; a special breed of hunting dogs. *"வேட்டை நாய்போற்கடிக்க வருஞ் சிலநேரம்" (தனிப்பா. i, 264, 1).* 2. கடிக்கும் நாய் (யாழ்.அக.); biting dog.

[வேட்டை + நாய்]



வேட்டைப்பல் *vēṭṭai-p-pal,* பெ.(n.) வளைந்த யானைக்கோடு (வின்.); tusk, fang.

[வேட்டை + பல்²]

வேட்டைப்பை *vēṭṭai-p-pai,* பெ.(n.) வேட்டையாடுதற்குரிய மருந்து வெடி முதலியவை வைக்கும் பை; hunters pouch for cartridges, etc.

[வேட்டை + பை]

வேட்டைபிடி-த்தல் *vēṭṭai-piḍi-,* செ.கு.வி. (v.t.) வேட்டையாடு-, பார்க்க; see *vēṭṭai-y-āḍu-. 'குலைக்கிற நாய் வேட்டை பிடிக்குமா?'*

[வேட்டை + பிடி-,]

வேட்டையவியல் *vēṭṭai-y-aviyal,* பெ.(n.) அவியற்கறி வகை (யாழ்.அக.); a kind of curry preparation.

[வேட்டை + அவியல்]

வேட்டையாடு-தல் *vēṭṭai-y-āḍu-,* செ.குன்றாவி.(v.t.) கொல்லுதற் கேனும் பிடித்தற்கேனும் காட்டிலுள்ள விலங்கு முதலியற்றைத் துரத்திச் செல்லுதல்; to chase, hunt. *"கானகத் தெய்தி நீ வேட்டை யாடி விலங்கின மாய்த்து" (அரிச்.பு. வேட்டஞ். 3).*

[வேட்டை + ஆடு-,]

வேட்டையிராகம் *vēṭṭai-y-irāgam,* பெ.(n.) வேட்டைக்குரிய பண்; hunting note.

[வேட்டை + இராகம்]

வேட்டைவாளி *vēṭṭai-vāḷi,* பெ.(n.) குளவி வகை (கோயிற்பு. பதஞ். 80, உரை); a kind of hornet.

[வேட்டை + வாளி]

வேட்டோன் *vēṭṭōṉ,* பெ.(n.) மணமானவன் (சங்க.அக.); married man. 2. கணவன் (நாமதீப. 193); husband. 3. நண்பன் (யாழ்.அக.); friend. 4. விரும்புவோன் (பிங்.); one who desires.

வேட்பாளர் *vēṭpāḷar,* பெ.(n.) தேர்தலில் போட்டியிடுபவர்; candidate (for election to an office). *'எங்கள் தொகுதி வேட்பாளர்'.*

[வேள் → வேட்பு → வேட்பாளர்]

வேட்பித்தல் *vēṭpittal,* பெ.(n.) அந்தணரறு தொழிலுள் ஒன்றான வேள்வி செய்விக்கை (பிங்.); conducting sacrifies as priests, one of *antaṇar-aṟu-toḻil,* q.v.

வேட்பு *vēṭpu,* பெ.(n.) விருப்பம் (யாழ்.அக.); desire.

[வேள் → வேட்பு]

வேட்புமனு *vēṭpu-maṉu,* பெ.(n.) தகவல்களை நிரப்பிக் கையெழுத்திட்டு முன்வைப்புத் தொகையுடன் (தேர்தல் அதிகாரியிடம்) அளிக்கும் படிவம்; nomination papers. *'கட்சி வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்ய ஊர்வலமாக வந்தனர்'.*

[வேட்பு + மனு]

வேடகம் *vēḍagam,* பெ.(n.) காதணிவகை (அக.நி.); an ear-ornament.

வேடங்கட்டு-தல் *vēḍaṅ-kaṭṭu-,* செ.கு.வி. (v.i.) மாறுவேடம் கொள்ளுதல்; to put on a disguise.

[வேடம் + கட்டு-,]

வேடங்காட்டு-தல் *vēḍaṅ-kāṭṭu-,* செ.கு.வி. (v.i.) போலியாக நடித்தல் (வின்.); to dissemble, to appear in false light.

[வேடம் + காட்டு-,]

வேடச்சி *vēṭacci,* பெ.(n.) வேட்டுவகுலப் பெண்; women of the hunter tribe.

[வேடன் → வேடச்சி]

வேடச்சேரி *vēḍa-c-cēri,* பெ.(n.) வேடரூர்; hamlet of hunters.

[வேடன் + சேரி]

வேடசம் *vēḍacam,* பெ.(n.) பிரம்பு; calamus rotang.

வேடணம் *vēḍaṇam,* பெ.(n.) வளைக்கை (சங்.அக.); surrounding.

வேடதாரி *vēḍatāri,* பெ.(n.) 1. (கூத்து, நாடகம் முதலியவற்றில் நடிப்பதற்காக) வேடம் தரித்தவர்; one who plays a role in a drama. 2. (சுய ஆதாயம் தேடும் உள் நோக்கத்துடன்) வெளியில் வேறு விதமாகப் பேசி நடிப்பவர், வெளிவேடம் போடுபவர்; one who masks his intentions hypocrite. *'சமூக சேவை என்ற போர்வையில் வேடதாரிகள்'.*

[வேடம் + தாரி]

வேடந்தாங்கல்[1] *vēḍan-dāṅgal,* பெ.(n.) தமிழ்நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டத்தில் உள்ள ஊர்; this village located at *madurāndagam* taluk in *ceṅgarpaṭṭu* district state of *tamil-nāḍu.*

சென்னையில் இருந்து 54 மைல் தொலைவில் இருக்கிறது. இங்கு 74 ஏக்கர் பரப்புள்ள பெரிய ஏரி ஒன்று இருக்கிறது. அதற்குள் ஏராளமான கடப்ப மரங்கள் இருக்கின்றன. அம்மரங்களில் ஆயிரக் கணக்கான பறவைகள் பல நாடுகளிலும் இருந்து செப்டம்பர்த் திங்கள் முதல் மார்ச்சுத் திங்கள் வரையில் வந்து தங்கி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. ஏரி நீரில் மரங்கள் இருப்பதால் பறவைகளுக்குத் தீங்குண்டாவதில்லை. வேடந்தாங்கல் மக்கள் இப்பறவைகளுக்கு எவ்வகையான தீங்கும் நேராதவாறு 150 ஆண்டு களாகப் பாதுகாத்து வருகின்றனர். இவைகளைப் பார்ப்பதற்குப் பல ஊர்களிலிருந்தும் மக்கள் வருகின்றதால் சுற்றுலாத் தலமாகவும் இருந்து வருகிறது.

வேடந்தாங்கல்[2] *vēḍan-dāṅgal,* பெ.(n.) பறவைகள் புகலிடம்; birds shelter.

தமிழக வனவிலங்குப் புகலிடங்களில் கருங்குழிக்கு அருகில் நீர்ப்பறவைகள் வந்து தங்கும் வேடந்தாங்கல் புகலிடம் முக்கியமான இடமாகும். சுமார் 15 வெவ்வேறு வகை நீர்ப்பறவைகள், நத்தைகுத்தி நாரை, நரையான் (gray herons), வக்கா (night herons), மடையான் (pond herons), வெண்கொக்கில் நான்கு வகைகள், கங்கணம் (ibis), கரண்டி அலகி (spoon bill), மூன்று வகை நீர்க் காக்கைகள், பாம்புத்தாரா ஆகிய பறவைகள் வேடந்தாங்கல் ஏரியின் மையத்தில் உள்ள கடப்ப மரங்களில் கூடுகட்டி இனப்பெருக்கம் செய்கின்றன.

வேடம்[1] *vēḍam,* பெ.(n.) 1. உடை முதலியவற்றாற் கொள்ளும் வேற்று வடிவம்; disguise. *"கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்......... கொங்கை நற்றடம் படிந்தும்" (திருவாச. 2, 15).* 2. உடை; clothes, dress.

[வேள் → வேடம்]

வேடம்[2] *vēḍam,* பெ.(n.) விருப்பம்; desire. *"வேண்டற் கரிய விடயங்களின் வேட மாற்றி" (பாரத. சம்பவ. 53).*

க. வேட.

[வேள் → வேடம்]

வேடம்[3] *vēḍam,* பெ.(n.) 1. (நடிப்பவர்) பாத்திரத்திற்கு ஏற்பச் செய்து கொள்ளும் ஒப்பனை; costume due to a part in a drama, make-up. 2. (திரைப்படம், நாடகம் முதலியவற்றில்) பாத்திரம்; role (in a film, etc.). *'கதாநாயகியாக நடித்தவர் அம்மா வேடத்தில் நடிக்க ஆரம்பித்து விட்டார்'.*

[வேள் → வேடம்]

வேடம்கட்டு-தல் *vēḍam-kaṭṭu-,* செ. குன்றாவி.(v.t.) (நாடகம் முதலியவற்றில்) பாத்திரம் ஏற்று நடித்தல், வேடம் தரித்தல்; play roles (in drama, etc.). *'அந்த காலத்தில் அவர் கள்ள பார்ட் வேடம் கட்டிக்கொண்டு வசனம் பேசினால் அரங்கமே அதிரும்'.*

[வேடம் + கட்டு-,]

வேடன்[1] *vēḍan,* பெ.(n.) 1. வேட்டுவன்; hunter, fowler. *"வெந்தொழில் வேடரார்த்து" (சீவக. 421).* 2. பாலை நிலத்திற்குரியவன் (திவா.); man of the *pālai* tract.

[வேடு → வேடன்]

வேடன்[2] *vēḍan,* பெ.(n.) வேடதாரி 1 பார்க்க (கந்தபு.); see *vēḍadāri 1.*

[வேடம் → வேடன்]

வேடாங்கயிறு *vēḍāṅ-kayiṟu,* பெ.(n.) கட்டுமரத்தில் நுனி மற்றும் அடிப்பக்கத் தினைக் கட்டியிணைக்கும் பெருங்கயிறு (தஞ்சை. மீன.); large rough.

[வேடம் + கயிறு]

வேடிக்கை *vēḍikkai,* பெ.(n.) 1. விளையாட்டு; amusement, diversion, fun. *"மெள்ளக் கூடிக் கலந்திருந்து கொள்வதோ வேடிக்கை" (பணவிடு. 314).* 2. வியப்புக்காட்சி; show. *'வேடிக்கை பார்க்கப் போனான்'.* 3. அணி செய்தல் (அலங்கரிப்பு) (இலக்.அக.); decoration.

தெ. வேடுகா.

[வேடு → வேடிக்கை]

வேடிக்கைக்காரன் *vēḍikkai-k-kāraṉ,* பெ.(n.) வியப்புச் செய்கையுடையவன்; droll person.

[வேடிக்கை + காரன்]

வேடிக்கைகாட்டு-தல் *vēḍikkai-kāṭṭu-,* செ.கு.வி.(v.i.) வியப்பானச் செயல் செய்தல்; to divert, amuse.

[வேடிக்கை + காட்டுதல்]

வேடிக்கைசெய்-தல் *vēḍikkai-cey-,* செ.கு.வி. (v.i.) வேடிக்கைகாட்டு-, பார்க்க; see *vēḍikkai-kāṭṭu-,*

[வேடிக்கை + செய்-,]

வேடிக்கைப்பேச்சு *vēḍikkai-p-pēccu,* பெ.(n.) விளையாட்டு தனமான சொல்; divertin talk, banter.

[வேடிக்கை + பேச்சு]

வேடிக்கைபார்-த்தல் *vēḍikkai-pāṛt,* செ. குன்றாவி.(v.t.) (காண்பது) விளையாட் டாகவும் தெம்பாகவும் கவனித்தல்; enjoy the scenes, witness passively. *'நீ அவனை அடித்தால் நாங்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருப்போமா?'*

[வேடிக்கை + பார்-,]

வேடிக்கைமனிதன் *vēḍikkai-maṉitaṉ,* பெ.(n.) வேடிக்கைக்காரன் பார்க்க; see *vēḍikkai-k-kāraṉ.*

[வேடிக்கை + மனிதன்]

வேடிக்கையரங்கம் *vēḍikkai-y-araṅgam,* பெ.(n.) உடற்பயிற்சி மற்றும் உலாவரும் காட்சி முதலான வேடிக்கைகள் காட்டுமிடம் (வட்டங்கு); circus.

[வேடிக்கை + அரங்கம்]

வேடிச்சி *vēḍicci,* பெ.(n.) வேடச்சி பார்க்க; see *vēḍacci.* *"வேடிச்சி கொங்கை விரும்புங் குமரனை" (கந்தரல. 53).*

[வேடச்சி → வேடிச்சி]

வேடிதம் *vēḍidam,* பெ.(n.) மூலிகைகளைக் காய்ச்சுவதால் உண்டாகும் நாற்றம் (வின்.); unpleasent smell, as in boiling medicinal plants.

[வேடு → வேடிதம்]

வேடு[1] *vēḍu,* பெ.(n.) 1. வேடர் தொழில்; hunting. *"வேட்டொடு வேய்பியிலழுவத்துப் பிரிந்து நின்னாய்" (அகநா. 318).* 2. வேட குலம்; the caste of hunters. *"வேடுமுடை வேங்கடம்" (திவ். இயற். நான்மு. 47).* 3. வேடன் (இலக்.அக.); hunter. 4. வரிக் கூத்துவகை (சிலப். 3, 13, உரை); a kind of masquerade dance.

க. பேடா.

[வேள் → வேடு]

வேடு[2] *vēḍu,* பெ.(n.) 1. கலத்தின் வாயை மூடிக்கட்டும் ஆடை (வின்.); cover for the mouth of a vessel. 2. மூடுகை (யாழ்.அக.); covering. 3. வடிகட்டுசீலை; cloth for filtering or straining. 4. பொட்டணம் (யாழ்.அக.); small packet.

தெ. வேசை; க. வேடி; ம. வேடு.

[வேள் → வேடு]

வேடுகட்டல் *vēḍu-kaṭṭal,* பெ.(n.) பாத்திரத்தின் வாயை சீலைத் துணியால் மூடல்; covering the mouth of a vessel with a cloth on which the substance to be boiled in vapour is put.

[வேடு + கட்டல்]

வேடுகட்டு-தல் *vēḍu-kaṭṭu-,* செ.கு.வி.(v.i.) 1. பானையின் வாயை சீலையாற் கட்டுதல் (வின்.); to tie a cloth over the mouth of a pot. 2. பொட்டணங் கட்டுதல் (யாழ்.அக.); to tie into a bundle.

[வேடு + கட்டு-,]

வேடுகா *vēḍugā,* பெ.(n.) பாதிரி; trumpet flower tree-sterospermum chelonoides.

வேடுபறி *vēḍu-paṟi,* பெ.(n.) 1. வழிப்பறி; highway robbery. *"சுந்தரர் வேடுபறி".* 2. திருமங்கை மன்னன் திருமாலை வழிபறிக்க முயன்றதைக் கொண்டாடுந் திருவிழா (பெருந்தொ. 1863, தலைப்பு); a festival celebrating *tirumaṅgai-maṉṉaṉ's* attempt to rob *viṣṇu* on the highway.

[வேட + பறி]

வேடுமுள் *vēḍu-muḷ,* பெ.(n.) வேலமரவகை (இலத்.); pulpy podded black babool.

[வேடு + முள்]

வேடுவழி[1] *vēḍu-vaḻi,* பெ.(n.) நீண்ட மரவகை; pulpy-podded black babul.

[வேடு + வழி]

வேடுவழி[2] *vēḍu-vaḻi,* பெ.(n.) வேடுமுள் பார்க்க; see *vēḍu-muḷ.*

[வேடு + வழி]

வேடுவன் *vēḍuvaṉ,* பெ.(n.) 1. வேடன்; hunter. *"வீரத்தாலொரு வேடுவனாகி" (தேவா. 485, 4).* 2. வேட்டுவன் 4 பார்க்க (யாழ்.அக.); see *vēṭṭuvaṉ.*

[வேடு → வேடுவன்]

வேடை[1] *vēḍai,* பெ.(n.) 1. வேட்கை; desire longing. *"வள்ளிக்கு வேடைகொண்ட பெருமாளே" (திருப்பு. 288).* 2. காமநோய்; lovesickness. *"கொண்டதோர் வேடை தீரும்" (கந்தபு. ததீசியுத். 74).* 3. தாகம்; thirst. *"சால வருந்தின வேடையோடி" (கம்பரா. திருவடி. 24).*

க. வேட.

[வேண் → வேடு → வேடை] (தே.நே.பக்.99)

வேடை[2] *vēḍai,* பெ.(n.) மரக்கலம் (யாழ்.அக.); boat, vessel.



வேடை[3] *vēḍai,* பெ.(n.) 1. வெப்பம்; heat, intense dryness. *"வேடையதெய்த வெதுப்பினும்" (திருவாரூ. 522.).* 2. மழையில்லாக் காலம்; season of drought. *"கொடி வேடைப்படலாற் சோர்ந்து" (இரகு. திருவவ. 29).* 3. வேடைக்காலம் 1 பார்க்க; see *vēḍai-k-kālam.*

[வேடு → வேடை]

வேடை[4] *vēḍai,* பெ.(n.) செட்டிகள் வசிக்குந் தெரு (யாழ்.அக.); street where merchants live.

வேடைக்காலம் *vēḍai-k-kālam,* பெ.(n.) 1. கோடைக்காலம் (வின்.); hot season, summer. 2. வேடை[3], 2 பார்க்க; see *vēḍai.*

[வேடை + காலம்]

வேண்[1] *vēṇ,* பெ.(n.) வேணாடு பார்க்க; see *vēṇāḍu.* *"குடங்கற்கா வேண்பூழி" (நன். 272, மயிலை.).*

[வெள் → வேள் → வேண்] (தே.நே.பக்.145)

வேண்[2] *vēṇ,* பெ.(n.) விருப்பம் (யாழ்.அக.); desire. *"ஒன்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி" (நன். 272, மயிலை).*

ம. வேண்.

[வேள் → வேண்]

வேண்[3] *vēṇ,* பெ.(n.) ஆசைப் பெருக்கம்; excess desire.

[வேள் → வேண்]

வேண்டப்பாடு[1] *vēṇḍa-p-pāḍu,* பெ.(n.) வேண்டற்பாடு பார்க்க (தக்கயாகப். அரும்.); see *vēṇḍar-pāḍu.*

[வேண்டல் + பாடு]

வேண்டப்பாடு[2] *vēṇḍa-p-pāḍu,* பெ.(n.) பொருள் நிரம்புதற்குரியதாய்த் தொக்கு நிற்குஞ் சொற்றொடர்; (Gram) words which are understood, in an elliptical constraction. *"நின்றவில்லி, வீரபத்திர தேவர்க்கு எதிரே பொருதற்கு நின்றவில்லி யென்பது வேண்டப்பாடு" (தக்கயாகப். 704, உரை).*

[வேண்டல் + பாடு]

வேண்டல் *vēṇḍal,* பெ.(n.) 1. விரும்புகை (பிங்.); desiring. 2. விண்ணப்பம்; petition.

[வேண்டு → வேண்டல்]

வேண்டலன் *vēṇḍalaṉ,* பெ.(n.) பகைவன் (சேதுபு.); enemy.

[வேண்டு + அ + அன்]

வேண்டவிருப்பு *vēṇḍa-viruppu,* பெ.(n.) விருப்பின்மை; reluctance.

[வேண்டு + ஆ + விருப்பு]

வேண்டற்பாடு *vēṇḍar-pāḍu,* பெ.(n.) 1. விருப்பம் (தக்கயாகப். 506, உரை); desire. 2. தேவை; need. 3. பெருமை; greatness, as compelling obeisance. *"அவன் தொழும்படியான வேண்டற்பாடுடைய தான் தொழாநின்றாள்" (ஈடு. 2, 4, 4).* 4. கருவம்; pride. *"பூதகணநாதர் கருட பகவானை வேண்டற்பாடு கெடுத்தது" (தக்கயாகப். 554, உரை).*

[வேண்டல் + பாடு]

வேண்டாத்தலையன் *vēṇḍā-t-talaiyaṉ,* பெ.(n.) 1. அஞ்சாதவன்; dare-devil. 2. முரடன்; rough-mannered person.

[வேண்டு + ஆ + தலையன்]

வேண்டாத்தனம் *vēṇḍā-t-taṉam,* பெ.(n.) 1. தவறு; wrong, wickedness. 2. வேண்டாப்பொறுப்பு பார்க்க; see *vēṇḍā-p-poṟuppu.*

[வேண்டு + ஆ + தனம்]

வேண்டாத *vēṇḍāda,* பெ.எ. (adj.) சிக்கல் ஏற்படுத்தக் கூடிய, தேவையில்லாத; unnecessary. *'வேண்டாத வேலைகளை யெல்லாம் ஏன் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்கிறாய்?'*

[வேண்டு + ஆ → வேண்டாத]

வேண்டாதகாரியம் *vēṇḍāda-kāriyam,* பெ.(n.) தேவையில்லாத செயல்; unnecessary act or business.

[வேண்டு + ஆ + அன்]

வேண்டாதவன் *vēṇḍādavaṉ,* பெ.(n.) 1. விரும்பப்படாதவன்; undesirable man. 2. பகைவன்; enemy.

[வேண்டு + ஆ + அன்]

வேண்டாதார் *vēṇḍādār,* பெ.(n.) 1. விருப்பமற்றவர்; those who have no desires. *"வளம்பட வேண்டாதார் யார் யாருமில்லை"* (நாலடி, 103). 2. வேண்டார் 2 பார்க்க; see *vēṇḍār.* *"வேண்டாதார் நெஞ்சுட்க"* (கலித். 100).

[வேண்டு + ஆ + அர்]

வேண்டாப்பாடு *vēṇḍā-p-pāḍu,* பெ.(n.) வேண்டாப்பொறுப்பு பார்க்க; see *vēṇḍā-p-poruppu.*

[வேண்டு + ஆ + பாடு]

வேண்டாப்பொறுப்பு *vēṇḍā-p-poruppu,* பெ.(n.) பொறுப்பின்மை; indifference, irresponsibility.

[வேண்டு + ஆ + பொறுப்பு]

வேண்டாம் *vēṇḍām,* வி.(v.) 1. இன்றியமையாது வேண்டத்தக்கதன்று என்பது குறிக்கும் வியங்கோள்வினை; verb meaning will not be required or will not be necessary, indispensade. *"ஓதாம லொருநாளு மிருக்கவேண்டாம்".* 2. இன்றியமையாத தன்று என்ற பொருளில் ஐம்பால் மூவிடத்திற்கும் உரியதாய் வரும் எதிர் கால வினைமுற்று; verb in the future tense used in all genders, numbers and persons meaning (a) will not be required; உறவின்மை முதலியவற்றைக் குறிக்கும் ஐம்பால் மூவிடத்திற்கும் உரியதாய் வரும் எதிர்கால வினைமுற்று; (b) will stand into no relation to. 3. அவசியமின்மை என்பதைக் குறிக்கும் வினை; auxilliary verb meaning must not.

[வேண்டு + ஆ + அம்]

வேண்டாமை *vēṇḍāmai,* பெ.(n.) 1. வெறுப்பு; aversion, dislike. *"வேண்டுதல் வேண்டாமை யிலான்"* (குறள், 4). 2. அவாவின்மை; absence of desire, contentment. *"வேண்டாமை யன்ன விழுச் செல்வ மீண்டில்லை"* (குறள், 363).

[வேண்டு + ஆ + மை]

வேண்டார் *vēṇḍār,* பெ.(n.) 1. வேண்டாதார் 1 பார்க்க; see *vēṇḍādār.* 2. பகைவன்; enemies. *"வேண்டார் பெரியர் விறல்வேலோன் றானிளையன்"* (பு.வெ. 10, பொது. 6).

[வேண்டு + ஆ + அர்]

வேண்டாவெறுப்பு *vēṇḍā-veṟuppu,* பெ.(n.) மெத்தனம், கருத்தின்மை; indifference, unconcern. *'அவன் அந்தக் காரியத்தை வேண்டா வெறுப்பாய்ச் செய்கிறான்'.*

[வேண்டு + ஆ + வெறுப்பு]

வேண்டி *vēṇḍi,* மு.செ.(prep.) பொருட்டு; for the sake of. *'அதை எனக்கு வேண்டிச் செய்'.*

[வேண்டு + இ]

வேண்டிக்கேள்-தல் (வேண்டிக்கேட்டல்) *vēṇḍi-k-kēḷ-, (vēṇḍi-k-kēṭṭal)* செ. குன்றாவி.(v.t.) மன்றாடிக் கேட்டல் (யாழ்.அக.); to besseech.

[வேண்டு + கேள்-தல்]

வேண்டிக்கொள்(ளு)-தல் *vēṇḍi-k-koḷ(ḷu)-*, செ.குன்றாவி. (v.t.) வழிபாடு; to solicit, pray for, request.

[வேண்டு + கொள்(ளு)-தல்]

வேண்டிய¹ *vēṇḍiya*, பெ.எ.(adj.) 1. இன்றியமையாத; indispensable. 2. தேவையான; required. 3. போதுமான; sufficient. 4. மிகுதியான; many. *"வேண்டிய நாள் என்னோடும் பழகிய நீ" (தாயு. மண்டலத். 10).*

[வேண்டு → வேண்டிய]

வேண்டிய² *vēṇḍiya*, பெ.எ.(adj.) 1. தேவையான, போதுமான; necessary, adequate. *'கல்லூரி தொடங்குவதற்கு வேண்டிய வசதிகள் கிராமத்தில் இல்லையா?'* 2. (பழக்கத்தில்) நெருக்கமான; close (to S.O.). *'அவர் உனக்கு வேண்டிய நபர் என்று தெரிகிறது'.* 3. (செய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் பின்) நிர்ப்பந்தத்தையோ அவசியத்தையோ வெளிப்படுத்தப் பயன்படுவது; (after infinitive) used to indicate obligation, necessity, etc. *'செய்ய வேண்டிய வேலை நிறைய இருக்கிறது'. 'படிக்க வேண்டிய புத்தகம்'.*

[வேண்டு → வேண்டிய]

வேண்டியது *vēṇḍiyadu*, பெ.(n.) 1. இன்றியமையாதது; that which is indispensable. *"பயிருக்கு வேண்டியது மழை".* 2. தேவையானது; that which is required. *'பானை செய்யக் குயவனுக்கு மண்ணோடு சக்கரமும் தண்டமும் வேண்டியது'.* 3. போதுமானது; that which is sufficient. 4. மிகுதியானது; that which is abundant. 5. வேணது 2 பார்க்க; see *vēṇadu2*.

[வேண்டு + அது]

வேண்டியமட்டும் *vēṇḍiya-maṭṭum*, வி.எ. (adv.), பெ.(n.) 1. அவசியமான அளவில்; as much as is indispensable. 2. தேவையான அளவில்; as much as is required. 3. போதுமான அளவில்; sufficiently. 4. மிகுதியாக; abundantly.

[வேண்டிய + மட்டும்]

வேண்டியவன் *vēṇḍiyavaṉ*, பெ.(n.) 1. அன்பிற்குரியவன்; friend, favourite. 2. ஒருவனது நன்மையை நாடுபவன், நலன் விரும்பி; well-wisher, interested person. *'அரசனுக்கு மந்திரி வேண்டியவன்'.*

[வேண்டு + அவன்]

வேண்டியிரு-த்தல் *vēṇḍiyiru-*, செ.கு.வி. (v.i.) இன்றியமையாததாயிருத்தல்; to be necessary or indispensable. *'இந்தக் காலத்திற்குப் படாடோபம் வேண்டியிருக்கிறது'.*

[வேண்டு + இரு]

வேண்டு¹-தல் *vēṇḍu-*, செ.குன்றாவி.(v.t.) 1. விரும்புதல்; to want desire. *"பகலோடு செல்லாது நின்றீயல் வேண்டுவன்" (கலித். 145).* 2. வழிபடுதல் (பிங்.); to beg, entreat, request. *"வேண்டித்தேவ ரிரக்கவந்து பிறந்ததும்" (திவ். திருவாய். 6, 4, 5).*

3. விரும்பிக் கேட்டல்; to listen to with eagerness. *"அன்னை வாழி வேண்டன்னை" (ஐங்குறு. 101).* 4. விலைக்கு வாங்குதல் (நாமதீப. 704); to buy purchase.

[வேள் → வேண்டு-தல்]

வேண்டு²-தல் *vēṇḍu-,* செ.கு.வி.(v.i.) இன்றியமையாததாதல்; to be indispensable, to be necessary. *"வேண்டுமே காக்கை கடிவதோர் கோல்" (நாலடி, 41).*

[வேள் → வேண்டு]

வேண்டுகோள் *vēṇḍu-kōḷ,* பெ.(n.) மன்றாடுதல், வழிபடுதல்; supplication, request, entreaty. *"வென்று பத்திரஞ் செய்து நின் வேண்டுகோளென்றார்" (திருவிளை. விறகு. 51).*

[வேண்டு-. + கொள்-,]

வேண்டுகோள்வரி *vēṇḍu-kōḷ-vari,* பெ.(n.) வரிவகை (S.I.I.iv.79); a tax.

[வேண்டு + கொள் + வரி]

வேண்டுநர் *vēṇḍunar,* பெ.(n.) விரும்புவோர்; those who wish for or desire a thing. *"வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட" (திருமுரு. 248).*

[வேண்டு + நர்]

வேண்டும் *vēṇḍum,* வி.வி.(v.opt.) 1. இன்றியமையாது வேண்டத்தக்கது என்பது குறிக்கும் வியங்கோள் வினை; verb meaning 'will be required' or 'will be necessary, indispensable'. *"வேந்தனீயாகி வையமிசைபடக் காத்தல் வேண்டும்" (சீவக. 201).* 2. இன்றியமையாதது என்ற பொருளில் ஐம்பால் மூவிடத்திற்கும் உரியதாய் வரும் எதிர்கால வினைமுற்று; verb in the future tense used in all genders, numbers and persons, meaning (a) will be required. *'எனக்குப் புத்தகம் வேண்டும்'. 'உறவு முதலியவற்றைக் குறித்து ஐம்பால் மூவிடத்திற்கும் உரியதாய் வரும் எதிர்கால வினைமுற்று';* (b) will be required. *'அவன் உனக்கு என்ன வேண்டும்?'.* 3. அவசியம் என்பதைக் குறிக்கும் வினை; auxilliary verb meaning 'must'.

[வேள் → வேண்டும்]

வேண்டுமளவு *vēṇḍumaḷavu,* பெ.(n.) போதுமட்டும்; as much as required, quantum sufficit.

[வேண்டும் + அளவு]

வேண்டுமென்று *vēṇḍum-eṉṟu,* வி.எ. (adv.) 1. முழுமனதோடு; intentionally. *'அதை வேண்டுமென்று செய்தேன்'.* 2. பிடிவாதமாய்; wilfully. *'பலர் தடுக்கவும் வேண்டுமென்று அந்தக் காரியத்தைச் செய்கிறான்'.*

[வேண்டும் + என்று]

வேண்மாள்¹ *vēṇ-māḷ,* பெ.(n.) வேளிர்குலப் பெண்; women of *vēḷiri-tribe. "வேண்மாள் அந்துவஞ் செள்ளை" (பதிற்றுப். 9-ஆம் பதி.).*

[வேண்மான் → வேண்மாள்]

வேண்மாள்² *vēṇ-māḷ,* பெ.(n.) சேரன் செங்குட்டுவனுடைய மனைவி; wife of *cēraṉ-ceṅguṭṭuvaṉ. 'கண்ணகிக்குக் கோயிலமைக்க வேண்டுமென்று தன் கணவனிடந் தெரிவித்து அவ்வாறே கோயில் அமைப்பித்தவன்'.*

[வேண்மான் → வேண்மாள்]

வேண்மான் *vēṇ-māṉ,* பெ.(n.) வேளிர் குலத்து மகன்; male member of *vēḷir*-tribe. *"நன்னன் வேண்மான்" (அகநா. 97).*

[வேண் + மான்]

வேண *vēṇa,* பெ.எ.(adj.) வேண்டிய பார்க்க; see *vēṇḍiya.*

[வேண்டு → வேண]

வேணகை *vēṇagai,* பெ.(n.) சுற்றுமதில் (பிங்.); surrounding wall, outer fortification.

வேணது *vēṇadu,* பெ.(n.) 1. வேண்டியது *1,2,3,4* பார்க்க; see *vēṇḍiyadu.* 2. மனத்துத் தோன்றியது; whatever strikes the mind. *"காணாமல் வேணதெல்லாங் கத்தலாம்" (தனிப்பா. i, 92, 6).*

[வேண்டியது → வேணது]

வேணவா *vēṇavā,* பெ.(n.) வேட்கைப் பெருக்கம் (பெருவிருப்பம்) (தொல். எழுத். 288, உரை); ever-increasing desire, intense desire.

[வேண் + அவா = வேணவா] (தே.நே.பக்.95)

இதை வேட்கை + அவா என்று பிரிப்பது பொருந்தாது.

வேணன் *vēṇaṉ,* பெ.(n.) வைதேகனுக்கு அம்பட்டப் பெண்ணினிடம் பிறந்தவன் (சங்.அக.); person born of a barber girl and a *vaitēkaṉ.*

வேணாட்டடிகள் *vēṇāṭṭaḍigaḷ,* பெ.(n.) 1. வேணாட்டு அரசன்; ruler of *vēṇāṭṭu* (T.A.S.ii,184). 2. திருவிசைப்பாவியற்றிய ஆசிரியருள் ஒருவரான பெரியார் (திருவிசைப்பாயி. 3); a *śaiva* saint one of the authors of *tiru-v-icai-p-pā.*

[வேணாடு + அடிகள்]

வேணாடர் *vēṇāḍar,* பெ.(n.) வேணாட்டடிகள் பார்க்க (திருவிசைப். பாயி. 2); see *vēṇāṭṭaḍigaḷ.*

[வேணாடு + அர்]

வேணாடு *vēṇāḍu,* பெ.(n.) கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டனுள் திருவிதாங்கூர் நாட்டில் அடங்கிய பெரும் பகுதி; (நன். 273) (T.A.S.i,296); the region comprising the major portion of modern travancore, whre a dialect of tamil was spoken, one of 12 *koṭun-tamiḻ-nāḍu.* q.v.

[வேள் + நாடு]

வேணாவியோர் *vēṇāviyōr,* பெ.(n.) கதிரவன் வெப்பத்தால் உலகந் துன்புறாமல் அதனை தம்மேல் தாங்கி அக்கதிரோனுடன் செல்லும் ஒருசார் முனிவர் குழாம் (புறநா. 43, உரை); a band of rsis who accompany the sun obstructing the heat of the sun from affecting the earthfully and thus prevent suffering.

[விண்ணாவியோர் → வேணாவியோர்]

வேணி¹ *vēṇi,* பெ.(n.) 1. சடை (பிங்.); matted hair. 2. பின்னிய மயிர்; plaited hair. 3. மரவேர் (யாழ்.அக.); root. 4. வசம்பு (தைலவ. தைல. 19); sweet flag. 5. நதி (பிங்.); river. 6. நீர்ப்பெருக்கு (இலக்.அக.); flood.

வேணி² *vēṇi,* பெ.(n.) 1. தெரு; street. 2. சேரி; village.

வேணி³ *vēṇi,* பெ.(n.) 1. வானம் (பிங்.); atmospheric space. 2. வெளி (இலக். அக.); open space.

வேணி⁴ *vēṇi,* பெ.(n.) பேய்ப்பீர்க்கு; loofa-lufaaegyptiaca.

வேணிகை *vēṇigai,* பெ.(n.) பின்னிய மயிர் (யாழ்.அக.); braided hair.

வேணியளம் *vēṇiyaḷam,* பெ.(n.) மத்தள வகை (பரத. ஒழிபி.13); a kind of *mattaḷam.*

வேணினர் *vēṇiṉar,* பெ.(n.) விரும்புபவர்; those who love or desire. *"வேலனை திருபதமும் வேணின ரேணினரே" (சிவதரு. சுவர்க்க. சேட. 48).*

[வேண்டு + அர் → வேணினர்]

வேணீர் *vēṇīr,* பெ.(n.) தாகவேட்கை நீங்க உண்ணு நீர்; water to allay thirst. *"வேணீ ருண்ட குடையோ ரன்னர்" (கலித். 23).*

[வேள் + நீர்]

வேணீரம் *vēṇīram,* பெ.(n.) பூவந்தி¹,1 (மூ.அ.) பார்க்க; see *pūvandi.*

வேணீறு *vēṇīṟu,* பெ.(n.) 1. நறுவிலி; cordia obligua. 2. வெண்ணீறு பார்க்க; see *veṇṇīṟu.*

வேணு¹ *vēṇu,* பெ.(n.) 1. குழலா தொண்டை; a plant-cappans aphylles. 2. பற்பாடகம்; fever plant-mollugo cerviana. 3. தலைச்சன் குழந்தை தலை மண்டை யோட்டிலிருந்து செய்யப்படும் ஒருவித அண்டச் சுண்ணம்; the calcined white powder prepared from cranial bones of the first born.

[வேள் + உ → வேணு]

வேணு² *vēṇu,* பெ.(n.) 1. மூங்கில் (பிங்.); bamboo. 2. இசைக்குழல்; reed-pipe. வேணுகானம். 3. உட்டுளையுள்ள குழல் (பிங்.); hollow tube. 4. வில் (பிங்.); bow. *"வேணுப்புரி தொடை புரளவாங்கி" (இரகு. மீட்சிப். 65).* 5. தனுராசி (இலக். வி. 882); sagittaripus of the zodiac. 6. வாள் (சூடா.); sword.

வேணுகம் *vēṇukam,* பெ.(n.) யானைத் தொட்டி (சிந்தாமணி. நிகண்டு.); elephants goad.

[வேணு → வேணுகம்]

வேணுசபலம் *vēṇu-šabalam,* பெ.(n.) மூங்கிலரிசி; bamboo seed.

[வேணு + சபலம்]

வேணுநம் *vēṇu-nam,* பெ.(n.) மிளகு; pepper-piper nigrum.

[வேணு + நம்]

வேணுபத்திரி *vēṇu-pattiri,* பெ.(n.) 1. மூங்கிலிலை; bamboo leaf. 2. பால் பெருங்காயம்; white asafoetida. 3. மூங்கிலிலையில் மனோசிலை சிவந்திடும்; red orpiment is calcified as red powder by the leaf of bamboo.

[வேணு + பத்திரி]

வேணும் *vēṇum,* து.வி.(v.opl.) வேண்டும் பார்க்க; see *vēṇṭum.* *"வேணுமாகில் வேணுமென்று" (பாரத. சூது. 165).*

[வேணு → வேணும்] (பாரத. சூது. 165)

வேணுமளவு *vēṇumaḷavu,* வி.அ. (adj.) வேண்டுமட்டும்; to the desired amount-Adlibitum, as much is requisite quantum tibet.

[வேணும் + அளவு]

வேணுமென்று *vēṇum-eṉṟu,* எ.வி. (adv.) வேண்டுமென்று பார்க்க; see *vēṇḍumeṉṟu.*

வேணூல் *vēṇūl,* பெ.(n.) காமநூல்; treatise on erotics. *"அம்மடாவாரியலானவும்....... ஆடவர் செய்கையும்...... விளம்பிடும் வேணூல்" (கந்தபு. இந்திரபுரி. 25).*

[வேள் + நூல்]

வேத்தவை *vēttavai,* பெ.(n.) அரசவை; royal assembly. *"இசைபெறு திருவின் வேத்தவை" (மலைபடு. 39).*

[வேந்து + அவை ³]

வேத்தன்¹ *vēttaṉ,* பெ.(n.) அறிந்தோன் (இலக்.அக.); one who knows.

வேத்தன்² *vēttaṉ,* பெ.(n.) வேத்தியன் பார்க்க (கம்பரா. மீட்சிப். 116); see *vēttiyaṉ.*

வேத்தாள் *vēttāḷ,* பெ.(n.) வேறு ஆள், சூழ்நிலைக்கு அன்னியர்; the other person.

வேத்தியம் *vēttiyam,* பெ.(n.) 1. அறியப் படுவது; that which is known. *"அநுபலத்தி வேத்தியம்" (சி.சி. அளவை, 1, சிவாக. பக. 113).* 2. அடையாளம் (யாழ்.அக.); mark, sign.

வேத்தியல் *vēttiyal,* பெ.(n.) 1. வேந்தனது தன்மை (நன். 409, மயிலை); kingly nature. 2. அரசன்முன் ஆடும் கூத்துவகை; a kind of dance performed in the presence of a king, opp. to *potu-v-iyal.* *"வேத்தியல் பொதுவியலென விருதிறத்துக் கூத்தும்" (சிலப். 14, 148, உரை).* 3. வேத்தியன்மலிபு பார்க்க (புறநா. அரும்.); see *vēttiyaṉ-malipu.*

[வேந்து + இயல்]

வேத்தியன் *vēttiyaṉ,* பெ.(n.) அறியத் தக்கவன்; one who is knowable. *"சட்சுவினால் வேத்தியன்".*

வேத்தியன்மண்டபம் *vēttiyaṉ-maṇḍapam,* பெ.(n.) அரசனது பேரோலக்க மண்டபம்; durbar hall of a king. *"வேத்தியன் மண்டப மேவிய பின்னர்" (சிலப். 28, 79).*

[வேத்தியன் + மண்டபம்]

வேத்தியன்மலிபு *vēttiyaṉ-malipu,* பெ.(n.) மறமன்னனது மேம்பாட்டினை வீரர் சொல்லுதலைக் கூறும் புறத்துறை (பு.வெ. 2, 13); theme in which warriors expatiate upon the greatness of a heroic-king.

[வேத்தியன் + மலிபு]

வேத்திரகரன் *vēttira-karaṉ,* பெ.(n.) நந்திதேவன் (இலக்.அக.); nanti.

வேத்திரச்சாய் *vēttira-c-cāy,* பெ.(n.) பிரப்பங்கோரை (தைலவ.); sedge.

[வேத்திரம் + சாய்]

வேத்திரத்தாள் *vēttira-t-tāḷ,* பெ.(n.) பிரப்பங் கிழங்கு (தைலவ.); tuber of ratten reed.

[வேத்திரம் + தாள்]

வேத்திரதரன் *vēttira-daraṉ,* பெ.(n.) 1. வாயிற்காவலன் (வின்.); gate-keeper. 2. நந்திதேவன் (யாழ்.அக.); nanti. 3. கட்டியக்காரன் (யாழ்.அக.); herald, panegyrist.

வேத்திரப்படை *vēttira-p-paḍai,* பெ.(n.) பிரம்பாகிய கருவி; cane, as a weapon. *"வேத்திரப் படையாற் றாக்கி" (திருவிளை. பாயி. 17).*

[வேத்திரம்¹ + படை]

வேத்திரபாணி *vēttira-pāṇi*, பெ.(n.) கூட்டத்தை ஒதுக்குதற்குக் கையிற் பிரம்பு தாங்கியுள்ள பணியாளன் (கோயிலொ. 57); attendant who, with a cane in his hand, maintains order in a crowd.

வேத்திரம்[1] *vēttiram*, பெ.(n.) உப்பங்கோரை; a kind of grass.

வேத்திரம்[2] *vēttiram*, பெ.(n.) 1. பிரம்பு; rattan. *"வேத்திரக் கரத்தோர்" (தணிகைப்பு. அகத்தி. 84).* 2. அம்பு (வின்.); arrow.

வேத்திரம்[3] *vēttiram*, பெ.(n.) இலந்தை (மலை.); jujube tree.

வேதகப்பொன் *vēdaga-p-poṉ*, பெ.(n.) புடமிட்ட பொன்; refined gold. *"அல்லாத பொன்னிற்காட்டில் வேதகப் பொன்னுக்கு ஏற்றமுண்டு" (திவ். திருமாலை, 39, வ்யா.).*

வேதகம்[1] *vēdagam*, பெ.(n.) 1. புடமிடுகை; refining, as of gold. *'வேதகப் பொன்'.* 2. புடமிட்டபொன்; refined gold. *"விளங்காநின்ற வேதகமே" (தாயு. பெற்ற. வட். 10).* 3. இரும்பு முதலிய உலோகங்களைப் பொன்னாக்கும் பண்டம்; agent to transmute baser metals into gold. *"இன்புறு வேதகத் திரும்பு பொன்னானாற் போல" (பெரியபு. கண்ணப். 154).*

வேதகம்[2] *vēdagam*, பெ.(n.) 1. சூடம் (இலக்.அக.); camphor. 2. தவசம் (வித்து) (யாழ்.அக.); grain.

வேதகாரன் *vēda-kāraṉ*, பெ.(n.) 1. கூடை பின்னுவோன் (சூடா. 2, 32); worker in bamboo. 2. நெய்வோன் (யாழ்.அக.); weaver.

வேதங்கம் *vēdaṅgam*, பெ.(n.) ஒரு வகைத் துகில் (சிலப். 14, 108, உரை); a kind of fine cloth.

வேதசம் *vēdašam*, பெ.(n.) 1. பிரம்பு வகை (இலக்.அக.); rattan palm, m.cl.,calamus rotang. 2. நாணை புல் (ஈடு.); sacred grass.

வேதசம்[2] *vēdašam*, பெ.(n.) பெருவிரலடி (யாழ்.அக.); part of the hard under the root of the thumb.

வேதசம்[3] *vēdašam*, பெ.(n.) ஒரு வகை வெள்ளி; a variety of silver.

வேதசன்னம் *vēda-šaṉṉam*, பெ.(n.) அத்தி; fig tree-ficus.

வேதசாரம் *vēda-cāram*, பெ.(n.) 1. நாணற்-புல்; reed, a kind of grass. 2. வெண் கருங்காலி; a white species of Acacia tree-Diospyros tupru.

வேததுடங்கன் *vēda-dadu-ḍaṅgaṉ*, பெ.(n.) சாரைப்பாம்பு; male cobra.

வேதநாதம் *vēda-nādam*, பெ.(n.) வெள்ளெருக்கு; madar bearing white flowers-calotropis gigantea (albiflora).

[வேதம் + நாதம்]



வேதநாயகம்பிள்ளை (மாயவரம்) *vēdanāyagam-piḷḷai (māyavaram),* பெ.(n.) (1824–89) பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்; he has belongs to 18th century.

பெண் புத்தி மாலை, நீதி நூல், சர்வ சமரச கீர்த்தனை, பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம் முதலியன இவர் செய்த நூல்கள் (1887).

வேதபுட்பி *vēda-puṭpi,* பெ.(n.) வெள்ளை காக்கணம்; a twiner bearing white flowers-fitoria ternatea (albiflora).

வேதரிக்கண்டபூடு *vēdari-k-kaṇḍa-pūḍu,* பெ.(n.) பிரண்டை; a climbing plant - vitex quadrangularis.



வேதவரிசி *vēda-variśi,* பெ.(n.) வாலுவை யரிசி; seeds of gymnosporia motana.

வேதவல்லி *vēda-valli,* பெ.(n.) ஒரு வகை பூண்டு; a plant-acacia farniciana alias vechellia farniciana.

இது பெரிய செடியாகவும் அல்லது மரமாகவும் இருக்கும், முட்களுண்டு, இதன் விதைகள் இரண்டு வரிசையாயிருக்கும், பூக்கள் உருண்டை வடிவமாயும் இலைகள் தழைகளின் இரு பக்கங்களிலும் உண்டு. வங்காளம், அசாம் மற்றெங்கும் விளையும், இதிலிருந்து சிறப்பாக பிசின் எடுப்பதுண்டு; இதன் பூ வாலையில் வைத்தால் வாசனைத் திரவியம் வரும், மார்கழி, தையில் பூ பூக்கும்.

வேதவாரிதி *vēda-vāridi,* பெ.(n.) கத்தூரியலரி; a variety of nerium odorum.

வேதவித்தாரம் *vēda-vittāram,* பெ.(n.) வாலைப்பூநீர் பார்க்க; see *vālai-p-pū-nīr.*

[வேதம் + வித்தாரம்]

வேதன்[1] *vēdaṉ,* பெ.(n.) கடுக்காய் (மலை.); chebulic myrobalan.

வேதன்[2] *vēdaṉ,* பெ.(n.) 1. சூதம்; mercury. 2. கல்லுப்பு; rock salt. 3. கடலாத்தி; a plant-sterospermum xylocarpus.

வேதனம் *vēdaṉam,* பெ.(n.) பொன் (யாழ்.அக.); gold.

வேதனா *vēdaṉā,* பெ.(n.) செவ்விறகு; red fuel or red feather.

வேதனி[1] *vēdaṉi,* பெ.(n.) வெந்தயம்; fenugreek.

வேதனி[2] *vēdaṉi,* பெ.(n.) நோயை உண்டாக்குவது; that which causes pain or disease.

வேதனை *vēdaṉai,* பெ.(n.) 1. நோய்; disease. 2. துன்பம்; suffering, affliction.

வேதனைதீர்தல் *vēdaṉai-tirdal,* பெ.(n.) வருத்தந் தீர்தல்; being releived off pain.

[வேதனை + தீர்தல்]

வேதனைப்படல் *vēdaṉai-p-paḍal,* பெ.(n.) 1. துன்பப்படல்; being tormented. 2. நோயினால் வருந்தல்; suffering from disease or pain.

[வேதனை + படல்]

வேதநி *vēdani,* பெ.(n.) வெந்தயம்; fenegreek seed - Trigonella foenumgracum.

வேதாக்கினிகுமரன் *vēdākkiṉi-kumaraṉ,* பெ.(n.) குப்பைமேனி; rubbish plant-acalypha indica.

[வேதாக்கினி + குமரன்]



வேதாந்தசாரம் *vēdānda-šāram,* பெ.(n.) தாமரைக் கிழங்கு; root of lotus.

வேதாந்தபாம்பாட்டி *vēdānda-pāmpāṭṭi,* பெ.(n.) பாம்பாட்டி சித்தர்; one of the *pāmpāṭṭi* siddhar.

வேதாந்தவாதி *vēdānda-vādi,* பெ.(n.) துருசு (மயில்துத்தம்); blue vitriol, copper sulphate.

வேதாரன் *vēdāraṉ,* பெ.(n.) பல்லி; lizard.

வேதாளக்கன்னி *vēḍāla-k-kaṉṉi,* பெ.(n.) நிலவாகை; a tree which see.

வேதாளம் *vēdāḷam,* பெ.(n.) 1. பேய் (திவா.); demon, ghost, goblin, vampire. 2. பிசாசு; devil. *"வேதாள கடகமேய மாயோளே" (தக்கயாகப். 104).*

வேதி[1]-த்தல் *vēdi-,* செ.குன்றாவி.(v.t.) 1. வேதி பார்க்க; see *vēdi.* 2. உலோகத்தை மற்றொன்றாக மாற்றுதல்; transmuting. 3. பிளத்தல்; splitting, dividing.

வேதி[2] *vēdi,* பெ.(n.) 1. வேறாக்கல்; to transmute metals as in alchemy. 2. விகாரப்படுத்தல்; to practice alchemy. 3. பிரித்தல்; chemically decomposing. 4. பேதி பார்க்க; see *pēdi.*

வேதிகை[1] *vēdigai,* பெ.(n.) பிரிக்குந் தன்மை; the act of chemical decomposition.

வேதிகை[2] *vēdigai,* பெ.(n.) 1. திண்ணை (பிங்.); plat form, pial. *"பவளத் திரள்காற் பைம்பொன் வேதிகை" (சிலப். 5, 148).* 2. மணமேடை (பிங்.); marriage dais. 3. காலுள்ள இருக்கை மேடை (கோயிலொ. 15); stool, pedestal. 4. கடவுளுக்கு உணவாக உயிர்களைக் கொன்று காணிக்கையிடும் மேடை; altar, raised platform for oblations of rice, etc. in temple. 5. பூசனை செய்யும் இடம்; place of worship (saiva.). 6. பலகை (அக.நி.); plank. 7. தெரு (பொதி.நி.); street.

வேதியன் *vēdiyaṉ,* பெ.(n.) சீனக்காரம் (மூ.அ.); alum.

வேதியியல் *vēdi-y-iyal,* பெ.(n.) பொருள்களில் மூலக் கூறுகளையும் அந்த மூலக்கூறுகள் எந்தச் சூழ்நிலையில் எவ்வாறு ஒன்றோடு ஒன்று வினை புரிகின்றன என்பதையும் விவரிக்கும் அறிவியல் துறை வேதியியல்; chemistry.

வேதினம் *vēdiṉam,* பெ.(n.) ஈர்வாள்; saw. *"வேதினத்துப்பவும்" (சிலப். 14, 176).*

வேது[1] *vēdu,* பெ.(n.) 1. வெம்மை; heat, warmth. *"வேது செய் சாந்தமும்" (சீவக. 2675).* 2. சூடான ஒற்றடம்; fomenatation. *"வேதினொற்றி" (கலி. 106).* 3. கார மருந்து (சங்.அக.); caustics pungent medicine.

[வெய்து → வேது] (வே.க.பக். 130)

வேது[2] *vēdu,* பெ.(n.) மூலிகை அல்லது சரக்குகளை தண்ணீரிற் போட்டுக் காய்ச்சியிறக்கி, அந்த ஆவியை வேதனை யுள்ள இடத்தில் படும்படி செய்தல், அதாவது ஆவி காட்டல்; vapour bath with using drugs or without using drugs.

[வெய்து → வேது]

வேது[3] *vēdu,* பெ.(n.) 1. தண்ணீர்; water. 2. வெய்து; that which is warm. 3. வேர்வை யுண்டாக்கு மருந்து; sudorific medicine - that which produces perspiration-Diaphoretic.

வேதை *vēdai,* பெ.(n.) 1. பொன்னாக்கல்; transmuting into gold. 2. துயரம்; grief. *"ஏதையா விந்த வேதை" (இராமநா. கிசு. 14).*

[வேது → வேதை]

வேதைக்கன்னி *vēdai-k-kaṉṉi,* பெ.(n.) வேதைக்கனிப்பூடு பார்க்க; see *vēdai-k-kaṉippūḍu.*

வேதைக்கனிப்பூடு *vēdai-k-kaṉi-p-pūḍu* பெ.(n.) நாய்வேளை; a plant - cleome viscosa.

வேதைக்குரு *vēdai-k-kuru,* பெ.(n.) மட்டரக உலோகங்களைப் பொன்னாக்கும் முயற்சியில் பயன்படுத்தும் உப்பு; universal salt or substance used in alchemy.

[வேதை + குரு]

வேதைசத்துரு *vēdai-šatturu,* பெ.(n.) வெள்ளிய மணல்; tin-ore.

[வேதை + சத்துரு]

வேதைசிந்தூரம் *vēdai-šindūram,* பெ.(n.) உலோகங்களைப் பொன்னாக்கும் மருந்து; a red calcified powder used to transmute base metal into gold.

[வேதை + சிந்தூரம்]

வேதைமருந்து *vēdai-marundu,* பெ.(n.) வேதியல்; elixir.

[வேதை + மருந்து]

வேதைமுகம் *vēdai-mugam,* பெ.(n.) உருக்குமுகம்; melting point.

[வேதை + முகம்]

வேதையாடல் *vēdai-y-āḍal,* பெ.(n.) சமராடுதல், (வாதஞ் செய்தல்); practising alchemy.

[வேதை + ஆடல்]

வேதைவேங்கை *vēdai-vēṅgai,* பெ.(n.) உதிர வேங்கை; a tree-pterocarpus marsupium.

[வேதை + வேங்கை]

வேந்தர்படை *vēndar-paḍai,* பெ.(n.) இந்திரகோபம்; an insect which is of red velvety appearance.

[வேந்தர் + படை]

வேந்தவை *vēndavai,* பெ.(n.) வேத்தவை பார்க்க; see *vēttavai.* *"இவ்வகை யுரைசெய விருந்த வேந்தவை" (கம்பரா. மந்திரப். 80).*

வேந்தன்[1] *vēndaṉ,* பெ.(n.) 1. இமையவர் கோன்; indra. *"வேந்தன் மேய தீம்புன லுலகமும்" (தொல். பொ. 5).* 2. அரசன்; king. *"பாடல் சான்ற விறல் வேந்த னும்மே" (புறநா. 11).* 3. பகலவன் 1 (சூரியன்) (சூடா.); 4. திங்கள் (சந்திரன்) (சூடா.); moon. 5. வியாழன் (சூடா.); brhaspati.

[வேய் → வேய்ந்தோன் → வேந்தன்] (வே.க.பக். 121)

வேந்தன்[2] *vēndaṉ,* பெ.(n.) 1. அரசமரம்; a tree-ficus religioga. 2. வெள்ளிக்கோள்; venus. 3. புதன்கோள்; mercury.

வேந்தன்தாரம் *vēndaṉ-dāram,* பெ.(n.) வாணகெந்தி; sulphur used in fire works.

[வேந்தன் + தாரம்]

வேந்தன்பட்டை *vēndaṉ-paṭṭai,* பெ.(n.) அரசம்பட்டை; bark of peepal tree-ficus relisiosa.

[வேந்தன் + பட்டை]

வேந்தன்வெகுளி *vēndaṉ-veguḷi,* பெ.(n.) கொடிய நஞ்சு; a kind of arsenic.

[வேந்தன் + வெகுளி]

வேந்திசம் *vēndišam,* பெ.(n.) வெண்மிளகு; white pepper.

வேந்து *vēndu,* பெ.(n.) 1. அரசபதவி; kingly position. *"வேந்தறும் வேந்து கெடும்" (குறள், 899).* 2. அரசியல் (பு.வெ. 4, 5, உரை); kingdom, royalty. 3. பகலவன் (அரு.நி.); indra. 4. அரசன்; king. *"வெந்தப்பின் வேந்து செறப்பட்டவர்" (குறள், 895).*

[வே → வேந்து]

வேந்துரு *vēnduru,* பெ.(n.) ஏழாந்தலை முறையில் தந்தைவழி முன்னோன் (வின்.); ancestor in the sixth degree in the paternal line.

வேந்தோன்றி[1] *vēntōṉṟi,* பெ.(n.) 1. காந்தள்; a climber-Gloriosa superba. 2. கார்த்திகை கிழங்கு; plough root - Gloriosa superba.

வேந்தோன்றி[2] *vēn-tōṉṟi,* பெ.(n.) கலப்பைப் கிழங்கு (வின்.); malabar glory lily.

வேநிபம் *vēnibam,* பெ.(n.) வேப்ப மரம்; neem tree-melia indica.

வேப்பங்கள் *vēppaṅ-kaḷ,* பெ.(n.) வேப்ப மரத்தினின்று வடியும் நீர் (வின்.); a sour juice that oozes from margosa trees, used medicinally.

[வேப்பம் + கள்]

வேப்பங்காய் *vēppaṅ-kāy,* பெ.(n.) (கசப்புச் சுவை உடைய) வேப்ப மரத்தின் காய்; (the bitter) fruit of the neem tree. *'அவனுக்கு கணக்கு என்றால் வேப்பங்காய்'.*

[வேப்பம் + காய்]

வேப்பங்குடிநீர் *vēpaṅ-kuḍi-nīr,* பெ.(n.) வேப்பம் பட்டையினின்று வடித்த கருக்குநீர்; decoction prepared from margosa bark. *"இவ்வேப்பங்குடிநீரை யன்றே நானுன்னைக் குடிக்கச் சொல்லுகிறது" (ஈடு. 1, 10, 4).*

[வேப்பம் + குடிநீர்]

வேப்பங்கொட்டை *vēppaṅ-koṭṭai,* பெ.(n.) வேம்பின் விதை; seeds of margosa.

[வேப்பம் + கொட்டை]

வேப்பங்கொழுந்து *vēppaṅ-koḻundu,* பெ.(n.) வேப்பிலைக் கொழுந்து; tender leaf of margosa tree.

[வேப்பம் + கொழுந்து]

வேப்பநெய் *vēppa-ney,* பெ.(n.) வேப்பெண்ணெய் பார்க்க (பதார்த்த. 157); see *vēppeṉṉey.*

[வேப்பம் + நெய்]

வேப்பம்பட்டை *vēppam-paṭṭai,* பெ.(n.) வேம்பின் பட்டை இப்பட்டையை விட காய்ச்சல் தளிர் காய்ச்சல் இவற்றிற்கு பயன்படுத்துவதுண்டு, இதன் சூரணம் கல்பமாக பயன்படுத்தலாம், இம்மருந்துக் குடிநீர் (கஷாயம்) காய்ச்சலுக்கு பிற்பாடு பலகாரியாகவும் பல புண்ணிற்கும் அக்கினி மந்தத்திற்கும் பயன்படுத்தலாம். வேப்ப மரத்தின் பட்டை, 100 வருடத்திய வேப்பம் பட்டையும் பூவரசம் பட்டையும் கற்பத்துக்குச் சமானமாகக் கருதப்படும்; bark of margosa tree used a tonic in medicine-melia azardirachta.

[வேப்பம் + பட்டை]

வேப்பம்பதினி *vēppam-patiṉi,* பெ.(n.) வேப்ப மரத்தினின்றிறக்கும் பதனி; unfermented liquid got from very aged neem tree.

[வேப்பம் + பதினி]

வேப்பம்பருப்பு *vēppam-paruppu,* பெ.(n.) வேப்பங் கொட்டையினுட் பருப்பு, இது மருந்துப் பொருளாகப் பயன்படும்; the kernal of the seed of margosa, it is an general antidote.

[வேப்பம் + பருப்பு]

வேப்பம்பாசி[1] *vēppam-pāśi,* பெ.(n.) ஒரு நீர்ப்பூண்டு; a water plant, moss-chara corallina.

[வேப்பம் + பாசி]

வேப்பம்பாசி[2] *vēpam-pāśi,* பெ.(n.) பயிரைக் கெடுக்கும் ஒரு வகைப் பாசி (யாழ்.அக.); a kind of moss, affecting crops.

[வேப்பம் + பாசி]

வேப்பம்பிசின் *vēppam-piśiṉ,* பெ.(n.) வேப்ப மரத்தின் பிசின்; gum of margosa.

[வேப்பம் + பிசின்]

வேப்பம்பூ *vēppam-pū,* பெ.(n.) 1. வேப்ப மரத்தின் பூ, இதன் மருந்துக்குடிநீர் கல்லீரலின் தொழிலைச் சரிபடுத்தும்;

flowers of margosa. its decoction regulates the action of liver. 2. நாட் சென்ற வேப்பம் பூவால் பித்தத்தாலுண்டான பெரு மூர்ச்சை நாக்கு தோசம் மலக் கிருமி போகும்; old dried flowers are better than the fresh flowers.

[வேப்பம் + பூ]

வேப்பம்வித்து *vēppam-vittu,* பெ.(n.) வேப்பங்கொட்டை; margosa seed.

[வேப்பம் + வித்து]

வேப்பம்வேர் *vēppam-vēr,* பெ.(n.) வேம்பின் வேர்; root of margosa.

[வேப்பம் + வேர்]

வேப்பமரம் *vēppa-maram,* பெ.(n.) வேம்பு 1 பார்க்க; see *vēmbu1.*

[வேப்பம் + மரம்]

வேப்பமுத்து *vēppa-muttu,* பெ.(n.) வேம்பின் கொட்டை (வின்.); seed of margosa fruit.

[வேப்பம் + முத்து]

வேப்பமொட்டு *vēppa-moṭṭu,* பெ.(n.) வேப்பம் பூவின் அரும்பு; flower buds of margosa.

[வேப்பம் + மொட்டு] ·

வேப்பரிசி *vēppariśi,* பெ.(n.) வேப்பம் பருப்பு; kernel of the margosa seeds.

[வேப்பம் + அரிசி]

வேப்பலகு *vēppalagu,* பெ.(n.) வேப்பிலையின் ஈர்க்கு (வின்.); petiote or rib of margosa leaf.

[வேப்பம் + அலகு]

வேப்பாலிகம் *vēppāligam,* பெ.(n.) வெட்பாலை; a tree-nerium antidysenterica.

வேப்பாலை[1] *vēppālai,* பெ.(n.) கசப்பு வெட்பாலை (பதார்த்த. 235); conessi bark.

வேப்பாலை[2] *vēppālai,* பெ.(n.) 1. ஒரு செடி; a plant. 2. வேப்பாலிகம் பார்க்க; see *vēppāligam.*

வேப்பிலைக்கட்டி[1] *vēppilai-k-kaṭṭi,* பெ.(n.) நாரத்தையிலை உப்பு மிளகாய் முதலிய வற்றாற் செய்யும் மணமிக்க உணவு வகை; a kind of relish made of *nārrata's* leaves, salt, chilies, etc.

[வேப்பிலை + கட்டி]

வேப்பிலைக்கட்டி[2] *vēppilai-k-kaṭṭi,* பெ.(n.) புளி, விளா எலுமிச்சை கிச்சிலி இவைகளின் சேர்த்திடித்து உண்டை செய்துலர்த்திப் பித்தத்தைத் தணிப்பதற்காக பயன்படுத்தும் ஒரு உருண்டை; a bolus got by grinding margosa tender leaves, tamerind, wood-apple leaves, tamerind, wood-apple leaves, lime and bitter-orange leaves.

[வேப்பிலை + கட்டி]

வேப்பிலைக்கருக்கு *vēppilai-k-karukku,* பெ.(n.) வாசல் அமைக்கப்படும் அழகிய மரவேலைப் பாடுகளுள் ஒன்று (பொ.வழ.); .

[வேப்பிலை + கருக்கு]

வேப்பிலைநங்கை *vēppilai-naṅgai,* பெ.(n.) மிளகாய் நங்கை பார்க்க; see *miḷagāy-naṅgai.*

[வேப்பிலை + நங்கை]

வேப்பிலையடி-த்தல் *vēppilai-y-aḍi-,* செ.கு.வி.(v.i.) 1. வேப்பிலையால் உடம்பில் அடித்து மந்திரித்து நோய் தீர்த்தல்; to effect a magic cure by passing a handful of neem twings over the body. 2. இசையாத புலனத்தில் ஒருவனை இசைவிக்க முயலுதல்; to coax a person to yield.

[வேப்பிலை + அடி-,]

வேப்பீர்க்கு *vēppīrkku,* பெ.(n.) வேப்பிலையின் ஈர்க்கு; the rib of the margosa leaf.

[வேம்பு + ஈர்க்கு → வேப்பீர்க்கு]

வேப்பு *vēppu,* பெ.(n.) வேம்பு பார்க்க; see *vēmbu.*

[வேம்பு → வேப்பு]

வேப்பூலிகம் *vēppūligam,* பெ.(n.) பூனைக்காலி பார்க்க; see *pūṉai-k-kāli.*

வேப்பெண்ணெய் *vēppeṇṇey,* பெ.(n.) வேப்பங் கொட்டையினின்று எடுக்கும் நெய்; oil extracted from margosa seeds.

[வேப்பம் + எண்ணெய்]

வேபம் *vēbam,* பெ.(n.) அசைவு; movement, shaking. *"வேபமொன்றில்லாத சிந்தை" (மேருமந். 99).*

வேபனம் *vēbaṉam,* பெ.(n.) 1. வேபம் பார்க்க (இலக்.அக.); see *vēpam.* 2. பயம் (யாழ்.அக.); fear.

வேபாக்கு *vē-pākku,* பெ.(n.) வேகுகை; heating, boiling. *"வேபாக் கறிந்து" (குறள், 1128).*

வேபி-த்தல் *vēpi-,* 11 செ.கு.வி.(v.i.) நடுங்குதல்; to tremble, quake. *"வேபியாப் பசியின் வாடி" (மேருமந். 366).*

வேம் *vēm,* பெ.(n.) வேகும்; will boil.

வேம்பர் *vēmpar,* பெ.(n.) நீர் முதலியன இறைக்குங் குழாய்; pump.

வேம்பருலக்கை *vēmpar-ulakkai,* பெ.(n.) நீர்க்குழாய்க் கருவியில் நீரை இழுப்பதற்குரிய உலக்கை; plunger of a pump.

வேம்பற்றூர்க்கண்ணன்கூத்தனார் *vēmparṟūr-k-kaṇṇaṉ-kūttaṉār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a *saṅgam* poet.

வேம்பற்றூர் என்பது மதுரைக்கு வடகிழக்கில் இரண்டு காதத்தில் வைகை நதிக்கு வடக்கே உள்ளது. பண்டைக்காலந் தொட்டுத் தமிழ் அறிஞர் வாழும் இடம் இது. இப்போது மேம்பத்தூர் என்று வழங்குகிறது. வேம்பற்றூர்க் குமரனார் என்பவரின் பாடல்கள் அகத்திலும், புறத்திலும் உள்ளன. இவர் கூத்தாடுந் தொழிலையுடையவர். *"வேல, நீ கொடுக்கும் பலியைச் சிலம்பன் ஒண்டாரகலமும் உண்ணுமே"* என்று தோழி கூற்றில் இவர் அமைத்துள்ள கருத்தைப் பிற்காலத்தவர் அங்ஙமே எடுத்தாண்டனர். (தமிழ் நெறி. மேற் 104; பாண்டிக் கோவை; கிளைவித் தெளிவு) குறுந்தொகையில் இவர் பாடிய பாடலொன்று இடம் பெற்றுள்ளது (குறுந். 362).

வேம்பற்றூர்க்குமரனார் *vēmparṟūr-k-kumaraṉār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a *saṅgam* poet.

வேம்பற்றூர் என்பது மதுரைக்குக் கிழக்கே உள்ள ஒரு ஊர்; வேம்பத்தூரென இக்காலத்து வழங்கும்; குலசேகரச் சதுர்வேதி மங்கலமென்றும் இதனுக்கு ஒரு பெயர் உண்டென்று சிலாசாசனத்தால் தெரிகிறது. கடைச்சங்கப் புலவர் காலந்தொடங்கி இன்றுவரை அந்தணர்களே தமிழ்ப் புலவர்களாக இவ்வூரில் விளங்கியிருத்தல் கண் கூடாதலாலும், பெயராலும்

இவர் அந்தணராகக் கருதப்படுகிறார். இவர் பாடியனவாக அகநானூற்றில் ஒன்றும், புறநானூற்றில் ஒன்றுமாக இரண்டு செய்யுட்கள் உள்ளன. (புறம். 317).

வேம்பன் *vēmbaṉ,* பெ.(n.) பாண்டியன்; *pāṇḍiyaṉ.* as wearing a garland of margosa flowers. (வேப்பம்பூ மாலையை யுடையவன்) *"சினையலர் வேம்பன் றேரானாதி" (சிலப். 16, 149).*

வேம்பனம் *vēmbaṉam,* பெ.(n.) கள் (யாழ்.அக.); toddy.

வேம்பா[1] *vēmbā,* பெ.(n.) வேம்பர் பார்க்க; see *vēmbar.*

வேம்பா[2] *vēmbā,* பெ.(n.) வெந்நீர் சுடவைக்குங் கலம்; vessel for heating water, salamander.

வேம்பா-தல் *vēmbā-,* செ.கு.வி.(v.i.) 1. கசப்பாதல்; to be bitter. 2. வெறுப்புக் குரியதாதல்; to be disliked. *"என்னையும் வேம்பாக்கி" (தனிப்பா. i, 411, 45).*

வேம்பாடம் *vēmbāḍam,* பெ.(n.) வேம்பாடை பார்க்க; see *vēm-pāḍai.*

வேம்பாடம்பட்டை *vēmpāḍam-paṭṭai,* பெ.(n.) சுருள் பட்டை, சாயப்பட்டை; a bark-ventiligo madras patana.

[வேம்பாடம் + பட்டை]

வேம்பாடை *vēmpāḍai,* பெ.(n.) ஒரு வகை கொடி; red creeper.

வேம்பாணி[1] *vēmpāṇi,* பெ.(n.) சிறிய ஆணிவகை (வின்.); small nail.

வேம்பாணி[2] *vēmpāṇi,* பெ.(n.) கிராணி, ஒரு நாட்பட்ட நோய்; a disease-chronic diarrhoea.

வேம்பாதிகம் *vēmpādigam,* பெ.(n.) நிலவேம்பு; ground neem, the creat-andrographi's paniculata.

வேம்பின்கண்ணியன் *vēmbiṉ-kaṇṇiyaṉ,* பெ.(n.) வேம்பன் பார்க்க (பிங்.); see *vēmbaṉ.*

[வேம்பின் + கண்ணியன்]

வேம்பின்மேற்புல்லுருவி *vēmbiṉ-mēṟ-pulluruvi,* பெ.(n.) ஒரு கற்ப மூலிகை, 108 கற்ப மூலிகைகளுள் ஒன்று; a parasitic plant on neem tree.

[வேம்பின் + மேல் + புல்லுருவி]

வேம்பு *vēmbu,* பெ.(n.) 1. மரவகை; neem, margosa, m.tr. azadirachta indica. *"வேம்பின் பைங்கா யென்றோழி தரினே" (குறுந். 196). 'மனைக்கு வேம்பு, மன்றுக்குப் புளி' (பழ.).* 2. கசப்பு; bitterness of taste. 3. வெறுப்பு; dislike. *"வேம்புற்ற முந்நீர் விழுங்க" (சீவக. 513).*

ம. வேம்பு; தெ. வேமு; க.,து. பேவு (b)

[வே → வேம்பு] (வே.க.பக். 80)



வேம்புக்கொட்டை *vēmbu-k-koṭṭai,* பெ.(n.) வேப்பம் விரை; seed of margose.

[வேம்பு + கொட்டை]

வேம்புசிமிழ் *vēmbu-cimil*, பெ.(n.) வேப்பங் கட்டையினால் செய்த மருந்து வைக்கும் பரணை; a small box made of margosa wood for preserving medicines.

[வேம்பு + சிமிழ்]

வேம்புவகை *vēmbu-vagai*, பெ.(n.) வேப்ப மரம்; margosa tree-neem tree-Axardirachta indica alias melia indica. 1. சிவனார் வேம்பு – shiva's neem - indigofera asphalathoides. 2. மதகிரி வேம்பு – Bischopia javanica. 3. கரு வேம்பு – black neem - Garuga pinnate. 4. மலை வேம்பு, நாய் வேம்பு – Melia azardirachta. 5. சாக்கரை வேம்பு, 6. நிலவேம்பு – Indian chiretta - Andro - graphis paniculata. 7. கறி வேம்பு – curry leaf - Murraya Koenegil. 8. நீர் வேம்பு – Pteris genus. 9. சன்னத் துருக்க வேம்பு – 10. வடிவேம்பு – cippadessa fruiticosa. 11. சந்தன வேம்பு – cedrela toona. 12. பெரு வேம்பு, 13. சிறு வேம்பு.

[வேம்பு + வகை]

வேமண்கல் *vēmaṇ-kal*, பெ.(n.) செங்கல்; brick. *"வேமண்கல்லே விரிசுடர்ச் செம் பொற்றின் கல்லாயின"* *(பெரியபு. ஏயர். 50).*

[வேமண் + கல்]

வேமம் *vēmam*, பெ.(n.) நெய்வார் தறி; loom. *"வேம முதல தாமினி தகற்ற"* *(ஞான.15).*

வேமா *vēmā*, பெ.(n.) வேமம் பார்க்க; see *vēmam*. *"ஆடைக்கு நாடா வேமா முதலியன"* *(தருக்க. சங். 42).*

வேமானியர் *vēmāṉiyar*, பெ.(n.) வானவர் (விமானத்திற் திரிதல்); celestials, as borne in heavenly cars. *"வேமானியர்தம் மகளிரின்"* *(சீவக. 2455).*

வேய்¹-தல் *vēy-*, செ.குன்றாவி.(v.t.) முடுதல்; to cover, as a building, to roof, thatch. *"பிறங்கழல் வேய்ந்தன"* *(பு.வெ. 3, 22).* 2. சூடுதல்; to put on, as a garland, to wear, as crown. *"புதன் மானப் பூவேய்ந்து"* *(மதுரைக். 568).* 3. சூழ்தல்; to surround. *"மாலையை வேய்ந்தரிக்கு மிஞிறு"* *(சீவக. 1769).* 4. பதித்தல்; to set, as gems. *"வேய்ந்த மாமணிக் கவசமும்"* *(பாரத. காண்டவ. 8).*

[மேய் → வேய் → வேய்தல்] (தமி.வ.பக். 72)

வேய்² *vēy*, பெ.(n.) 1. மூங்கில்; bamboo. *"வேய்ப்பெயல் விளையுட் டேக்கட் டேறல்"* *(மலைபடு. 171).* 2. மூங்கிற்கோல்; bamboo rod. *"வேயகமாயினுஞ் சோராவகை யிரண்டேயடியாற் றாயவன்"* *(திவ். இயற். திருவிருத். 61).* 3. உட்குளைப் பொருள் (பிங்.); tube anything hollow. 4. புனர்பூசம்; the seventh naksatra. *"வேய்புனர் பூசமும்"* *(கம்பரா. திருவவதாரப். 102).* 5. வேய்கை (அக.நி.); covering, roofing. 6. மாடம் (நாமதீப. 494); mansion. 7. வினை (அக.நி.); karma. 8. யாழ் (அரு.நி.); *yāḻ*. 9. உன்னிப்புச் (கவனம்) செய்கை (அரு.நி.); composition, as of a song.

வேய்³-த்தல் *vēy-*, செ.குன்றாவி.(v.t.) ஒற்றராற் செய்தியறிதல் (மதுரைக். 642, உரை); to spy out. *"வேய்த்திறே, களவு காண்பது"* *(ஈடு. 3, 8, 3).*

[மேய் → வேய்–,] (மு.தா.பக். 80)

வேய்⁴ *vēy*, பெ.(n.) 1. குறளைச் சொல்; report, as of a spy. *"ஒற்றனாகிய வேயே"* *(தொல். பொ. 58).* 2. ஒற்றன்; spy. *"வேயுரைப்பதென வந்து விளம்ப"* *(கம்பரா. இராவணனன்றா. 15).* 3. ஒற்றனைத் தெரிந்து கொண்ட

கூறுபாட்டினைக் கூறும் புறத்துறை (பு.வெ. 1, 6); theme describing the choice on spies.

வேய்⁵-த்தல் *vēy-*, செ.குன்றாவி. (v.t.) வஞ்சித்தல்; to deceive.

வேய்க்கண் *vēy-k-kaṇ,* பெ.(n.) மூங்கிற் கணு (நாமதீப. 297); bamboo joint.

[வேய் + கண்]

வேய்ங்குழல் *vēy-ṅ-kuḻal,* பெ.(n.) புல்லாங் குழல்; bamboo pipe. *"ஆயர்கள் வேய்ங்குழ லோசையும் விடைமணிக் குரலும்" (திவ். திருப்பள்ளியெழுச். 4).*

[வேய் + குழல்]

வேய்தல்¹ *vēydal,* பெ.(n.) கூரையால் மூடப்பட்ட வீடு (பிங்.); thatched house. 2. துளை (அரு.நி.); tube.

[மேய் → வேய் → வேய்தல்]

வேய்தல்² *vēydal,* பெ.(n.) ஒற்று (அரு.நி.); spying.

வேய்ந்துணி *vēy-n-tuṇi,* பெ.(n.) ஊதுகுழல்; bamboo pipe. *"வேய்ந்துணி யலமரும் புறத்தர்" (சீவக. 1848).*

[வேய் + துணி]

வேய்நெல்லு *vēy-nellu,* பெ.(n.) குடிகள் செலுத்துங் கடமைகளுளொன்று; a customary due from the cultivator (T.A.S.iii.32).

[வேய் + நெல்லு]

வேய்ம்பரம்பு *vēy-m-parambu,* பெ.(n.) மூங்கிற்பாய்; bamboomat.

[வேய் + பரம்பு]

வேய்வனம் *vēy-vaṇam,* பெ.(n.) திருநெல்வேலித் தலம் (திருவிளை. 31, 2); *tiru-nel-vēli* believed to have been originally a bamboo forest.

[வேய் + வனம்]

வேய்வு¹ *vēyvu,* பெ.(n.) மூடுகை (சங்.அக.); covering.

[மேய் → வேய் → வேய்வு] (தமி.வ.பக். 72)

வேய்வு² *vēycu,* பெ.(n.) ஏய்ப்பு (சங்.அக.); deceiving.

வேய்வை *vēyvai,* பெ.(n.) யாழ் நரம்புக் குற்றவகை; a defect in a lute string. *"வேய்வை போகிய விரலுளர் நரம்பின்" (பொருந. 17).*

வேயர்¹ *vēyar,* பெ.(n.) ஒற்றர் (பிங்.); spies.

[மேய் → வேய் → வேயர்]

வேயர்² *vēyar,* பெ.(n.) வேயல் பார்க்க (வின்.); see *vēyal.*

வேயர்³ *vēyar,* பெ.(n.) பார்ப்பனக்குடிவகை; a class of brahmins. *"வேயர்தங்கள் குலத்துதித்த விட்டுசித்தன்" (திவ். பெரியாழ். 5, 4, 11).*

வேயரிசி *vēy-ariśi,* பெ.(n.) மூங்கிலரிசி (திவா.); seed of the bamboo.

[வேய் + அரிசி]

வேயல் *vēyal,* பெ.(n.) சிறுமூங்கில் (நன். 71, மயிலை.); short-sized bamboo.

[மேய் → வேயல்]

வேயாம் *vēyām,* பெ.(n.) வேரடம் பார்க்க (மூ.அ.); see *vēraḍam.*

வேயாமாடம் *vēyā-māḍam,* பெ.(n.) நிலாமுற்றம்; open terrace of the upper storey, as uncovered. *"வேயா மாடமும் வியன்கல விருக்கையும்" (சிலப். 5, 7).*

[வேயா + மாடம்]



வேயிகாரம் *vēyi-kāram,* பெ.(n.) வெண்காரம்; borax.

[வேய் + காரம்]

வேயிலை *vēyilai,* பெ.(n.) மூங்கிலிலை; leaf of bamboo, it is an emmenagogue.

[வேய் + இலை]

வேயுள் *vēyuḷ,* பெ.(n.) 1. மூடுகை; covering. *"வேயுள் விசும்பு" (பு.வெ. 8, 28).* 2. மலர்கை; blossoming. *'வேயுளம் பட்டுப் பூசை கண் கறுப்பு' (கல்லா. 20, 5).* 3. வேயந்த மாடம் (சூடா.); terraced house. 4. மேன்மாடி; upper storey. *"விசித்திரத் தியற்றிய வித்தக வேயுள்" (பெருங். இலாவண. 6, 65).* 5. மாடம் (நாமதீப. 494); mansion.

[மேய் → வேய் → வேயுள்] (மு.தா.பக். 80)

வேர்[1] *vēr,* பெ.(n.) 1. மரஞ்செடிகளை மண்ணின் மேல் நிலை நிற்கச் செய்து அவை உணவேற்க உதவுவதான அடிப்பகுதி (சூடா.); root. 2. ஒரு வகை நறுமண வேர்; black cuscuss grass. *"வேர் சூடுமவர்கள் மண்பற்றுக் கழற்றாதாப் போலே" (ஸ்ரீ வசன. 169).* 3. திப்பிலிவேர்(தைலவ.); root of long pepper. 4. வேர் போன்றது; anything root like. *"அலகை யன்ன வெள்வேர்ப் பீலிக் கலவ மஞ்ஞை" (மலைபடு. 234).* 5. அடிப்படை; foundation. 6. காரணம்; cause. *"வேரறு .... வடிவாகி" (ஞானவா. வைராக். 76).*

க. பேரு.

[விள் → விளர் → வியர் → வேர்] (செல்வி.77. வைகாசி, 499)

வேர்-த்தல் *vēr-,* செ.கு.வி.(v.i.) 1. உடலின் மேல்புறத்து நீர்த்துளி தோன்றுதல்; to sweat, perspire. *"வேர்த்து வெகுளார் விழுமியோர்" (நாலடி, 64).* 2. மனப் புழுக்கம்; to feel irritated. 3. சினங்கொள்தல்; to be angry, indignant. *"பாலன்மேல் வேர்ப்பது செய்த வெங்கூற்று" (தேவா. 82, 7).* 4. அஞ்சுதல்; to be afraid. *"வேர்த்தா ரதுகண்டு விசும்புறைவோர்" (கம்பரா. அதிகா. 22).*

க. பேமர்.

[வெயர் → வேர் → வேர்த்தல்]

வேர்[3] *vēr,* பெ.(n.) 1. வேர்வை; perspiration. *"வேரொடு நனைந்து" (பொருந. 80).* 2. சினம் (வின்.); anger.

[வெயர் → வேர்]

வேர்[4] *vēr,* பெ.(n.) மூங்கில்; bamboo. *"வேர் என்று மூங்கிலுக்குப் பேராய்" (திவ். பெரியாழ். 2, 6, 1. வ்யா. பக். 360).*

[விளர் → வியர் → வேர்] (தமி.வ.பக். 72)

வேர்க்கடலை *vēr-k-kaḍalai,* பெ.(n.) நிலக்கடலை; ground-nut.

[வேர் + கடலை]



வேர்க்கடலைப்பருப்பு *vēr-k-kaḍalai-p-paruppu,* பெ.(n.) நிலக்கடலை விதை; ground nut kernel.

[வேர்க்கடலை + பருப்பு]

வேர்க்கடலைபிண்ணாக்கு *vēr-k-kaḍalai-piṇṇākku,* பெ.(n.) வேர்க்கடலைப் பருப்பை செக்கிலிட்டு ஆட்டுவதால் உண்டாகும் பிண்ணாக்கு; இது உரமாகவும், மாடுகளுக்கு உணவாகவும் பயன்படுத்தப்படுகிறது; ground nut cake-used as manure and food for cattle.

[வேர்க்கடலை + பிண்ணாக்கு]

வேர்க்கடலையெண்ணெய் *vēr-k-kaḍalai-y-eṇṇey,* பெ.(n.) வேர்க்கடலை பருப்பி லிருந்து எடுக்கும் எண்ணெய்; ground nut oil used for cooking.

[வேர்க்கடலை + எண்ணெய்]

வேர்க்கசாயம் *vēr-k-kaṡāyam,* பெ.(n.) வேர்களைக் கொண்டு இறக்குங் கசாயம்; a decoction prepared from roots. e.g., தசமூல கசாயம்.

[வேர் + கசாயம்]

வேர்க்கட்டை *vēr-k-kaṭṭai,* பெ.(n.) வசம்பு; sweet flag - a drug - A corus calamus.

[வேர் + கட்டை]

வேர்க்கல் *vēr-k-kal,* பெ.(n.) கரப்பின் மேற்பரப்பிலுள்ள சிறு கற்கள் அல்லது மணல் (முகவை. மீன.); piece of rock.

[வேர் + கல்]

வேர்க்காந்தி *vēr-k-kāndi,* பெ.(n.) விட்ணு காந்தி; a prostate plant with blue flowers used for fevers-sphoeranthes indicus.

[வேர் + காந்தி]

வேர்க்கியாழம் *vē¢-k-kiyāḻam,* பெ.(n.) வேர்க்கசாயம் பார்க்க; see *vēr-k-kaṡāyam.*

வேர்க்கிழங்கு *vēr-k-kiḻaṅgu,* பெ.(n.) வேரிலுள்ள கிழங்கு; tuber, rhizome.

[வேர் + கிழங்கு]



வேர்க்கிறது *vēr-k-kiṟadu,* பெ.(n.) 1. வியர்க்கிறது; to be perspiring. 2. சினமாயிருக்கிறது; to be angry.

வேர்க்குச்சு *vēr-k-kuccu,* பெ.(n.) நெய்வார் கருவிவகை; weaver's brush, as made of rools of grass.

[வேர் + குச்சு]

வேர்க்குமருந்து *vērkku-marundu,* பெ.(n.) வியர்வையை உண்டாக்கும் மருந்து; sudorific.

[வேர்க்கு + மருந்து]

வேர்க்குரு *vēr-k-kuru,* பெ.(n.) வியர்வையா லுண்டாகும் சிறுபரு; rash due to.

ம. வேர்குரு.

[வேர்³ + குரு ³]

வேர்க்குறி *vēr-k-kuri,* பெ.(n.) சினக்குறிப்பு (வின்.); sign of anger.

[வேர் + குறி]

வேர்க்கொம்பு *vēr-k-kombu,* பெ.(n.) 1. பூடுவகை (மலை.); ginger-plant. 2. சுக்கு (தைலவ.); dried ginger.

[வேர்¹ + கொம்பு]

வேர்க்கொழுந்து *vēr-k-koḻundu,* பெ.(n.) வேலங்கொழுந்து; tender leaves of Acacia arabica. uses for eye diseases.

[வேர் + கொழுந்து]

வேர்கல்(லு)-தல் *vēr-kal(lu)-,* செ.குன்றாவி. (v.t.) வேரொடு அழித்தல்; to oot out. *"அறத்தை வேர் கல்லும்.......... பொய்ச் சூதை மிக்கோர்கள் தீண்டுவரோ" (நள. கலிதொ. 40).*

[வேர் + கல்(லு)-,]

வேர்ச்சாயம் *vēr-c-cāyam,* பெ.(n.) சாய வேரிலிருந்து இறக்கிய சாயம் (வின்.); dye from chay root.

[வேர் + சாயம்]

வேர்த்துக்கொட்டு-தல் *vērttu-k-koṭṭu-,* செ.கு.வி.(v.i.) அதிகமாக வேர்வை நீர் வடிதல்; to perspire profusely.

[வேர்-, + கொட்டு-,]

வேர்த்துவடி-தல் *vērttu-vaḍi-,* செ.கு.வி. (v.i.) 1. வேர்த்துக் கொட்டு-தல் பார்க்க; see *vērttu-k-koṭṭu-.* 2. ஆவி குளிர்ந்து திரவமாக வடிதல்; to be distilled, as liquors. *"வேர்த்து வடிந்தாற் சாராயம்".*

[வேர்த்து + வடி-,]

வேர்த்தோல், வேர்த்தோலி *vēr-t-tōl, vēr-t-tōli,* பெ.(n.) வேர்ப்பட்டை; bark of the root.

[வேர் + தோல், வேர் + தோலி]

வேர்நீர் *vēr-nīr,* பெ.(n.) வேர்வை பார்க்க; see *vērvai.*

[வேர் + நீர்]

வேர்ப்படலம் *vēr-p-paḍalam,* பெ.(n.) கண்ணோய் வகை (யாழ்.அக.); an eye-disease.

[வேர் + படலம்]

வேர்ப்பலா *vēr-p-palā,* பெ.(n.) மரவகை (வீரசோ. தொகை. 8); jack tree.

[வேர் + பலா]

வேர்ப்பார் *vēr-p-pār,* பெ.(n.) சினமாயிருக்கிறவர்; one who is angry.

[வேர் + பார்]

வேர்ப்பிடுங்கல் *vēr-p-piḍuṅgal,* பெ.(n.) நோய் குணப்படுவதற்கு மந்திரம் சொல்லி செடியின் வேரைப் பிடுங்கல்; plucking the root as a sign of curing diseases.

[வேர் + பிடுங்கல்]

வேர்ப்பு *vērppu,* பெ.(n.) வேர்³ பார்க்க (வின்.); see *vēr.*

க. பேவரு.

[வியர் → வேர் → வேர்ப்பு] (தமி.வ.பக். 72)

வேர்ப்புழு *vēr-p-puḻu,* பெ.(n.) வேர்ப்பூச்சி பார்க்க; see *vēr-p-pūcci.*

[வேர் + புழு]

வேர்ப்பூச்சி *vēr-p-pūcci,* பெ.(n.) வேரிலிருந்தபடி அதனைத்தின்று செடியைக் கெடுக்கும் பூச்சிவகை; a grub that eats off the root-tips and fibrils of a plant and quickly destroys it.

[வேர் + பூச்சி]

வேர்பு *vērpu,* பெ.(n.) வேர்[3] பார்க்க (சங்.அக.); see *vēr.*

வேர்பொடி-த்தல் *vēr-podi-d,* செ.கு.வி. (v.i.) வேர்வை நீரரும்புதல்; to perspire. *"இடைப்புருவங் கோட்டித் துடிப்ப வேர் பொடிப்ப" (கம்பரா. ஊர்தேடு. 111).*

[வேர் + பொடி-,]

வேர்வாசம் *vēr-vāšam,* பெ.(n.) ஒருவகை நறுமண வேர் (திவா.); cuscuss grass.

[வேர் + வாசம்]

வேர்வாளி *vēr-vāli,* பெ.(n.) காதணி வகை (S.I.I. viii, 68); an ear-ornament.

[வேர் + வாளி]

வேர்விடு-தல் *vēr-vidu-,* செ.கு.வி.(v.i.) வேர்விழு-தல் பார்க்க; see *vēr-vilu-.*

[வேர் + விடு-,]

வேர்விழு-தல் *vēr-vilu-,* செ.கு.வி.(v.i.) செடி முதலியன நிலத்தில் நிலைத்து நிற்கும் படி வேர் பதிந்தோடுதல்; to take root.

[வேர் + விழு-,]

வேர்வு *vērvu,* பெ.(n.) வேர்[3], 1 பார்க்க; see *vēr.* *"தென்றல் வந்தெ னையன் திருமுகத்தின் வேர்வகற்ற" (கூளப்ப. 99).*

[வேர் → வேர்வு]

வேர்வெட்டு *vēr-vettu,* பெ.(n.) ஒரு வகைப் பல்நோய்; a disease of the tooth.

வேர்வை *vērvai,* பெ.(n.) வேர்[3], 1 பார்க்க; see *vēr.*

க. பேவரு.

வேர்வைசுரம் *vērvai-šuram,* பெ.(n.) வேர்வைக் காய்ச்சல்; sweating fever, a vontagious malignant fever marked by dark coloured sweat-Ephemera maligna - Anglicus sudor.

[வேர்வை + சுரம்]

வேர்வைதட்டல் *vērvai-tattal,* பெ.(n.) வியர்வை யுண்டாதல்; perspiring.

[வேர்வை + தட்டல்]

வேர்வையுண்டாக்கி *vērvai-yundākki,* பெ.(n.) வியர்வையுண்டாக்கு மருந்து; a medicine or drug which promotes sweating - Diaphoretics.

[வேர்வை + உண்டாக்கி]

வேர்வைவாங்கி *vērvai-vāṅgi,* பெ.(n.) வியர்வை சுரப்பிகள் வாயிலாக வியர்வை வெளிப்படுதல் (M.M.966); sudorific.

[வேர்வை + வாங்கி]

வேரகம் *vēragam,* பெ.(n.) கருப்பூரம் (மூ.அ.); camphor.

வேரச்சுக்கொடி *vēraccu-k-kodi,* பெ.(n.) சந்தன வகை (சிலப். 14, 108, உரை); a species of sandal wood.

[வேரச்சு + கொடி]

வேரடம் *vēradam,* பெ.(n.) முள்மரவகை (சூடா.); jujube tree.

வேரம்[1] *vēram,* பெ.(n.) வெகுளி (பிங்.); anger, wrath. *"காணா நின்ற வேரங்களற்ற" (மேருமந். 149).*

வேரம்[2] *vēram,* பெ.(n.) 1. மஞ்சள் (மலை.); turmeric. 2. (அடப்பங்) கொடிவகை (மலை.); hare leaf. 3. ஒரு வகை செடி (யாழ்.அக.); indian kales.

வேரம்[3] *vēram,* பெ.(n.) 1. செய்குன்று; artificial mound. *"சிகரமோ ரிலக்கஞ் சூடி வீசுபொன் சுடர நின்ற வேரமொன்று" (கந்தபு. நகரழி. 1).* 2. கோபுரம் (நாமதீப. 493); tower. 3. மேகக்கூட்டம் (வின்.); mass of clouds, as in the morning with the sun behind.

வேரம்[4] *vēram,* பெ.(n.) உடம்பு; body.

வேரமுட்டி *vēra-mutti,* பெ.(n.) செடிவகை (நாமதீப. 326); pink-tinged white sticky mallow.

வேரல்[1] *vēral,* பெ.(n.) 1. சிறுமூங்கில்; small bamboo. *"நுண் கோல் வேரல்" (மலைபடு. 224).* 2. புறக்காழ்வுள்ள மூங்கில் வகை (சூடா.); spiny bamboo. 3. மூங்கிலரிசு (பிங்.); seed of bamboo.

வேரல்[2] *vēral,* பெ.(n.) வேர்க்கை (இ.வ.); perspiring.

வேரறு-த்தல் *vēraru-,* செ.குன்றாவி.(v.t.) வேரோடு அழித்தல்; to root out, extirpate. *"அவர் வேரெறுப்பென் வெருவன் மின்" (கம்பரா. அகத்தியப். 22).*

[வேர் + அறு-.]

வேரற்கு *vērarku,* பெ.(n.) சீந்தில்; moon creeper-Tionospernum cordifolia.

[வேர் + அற்கு]

வேரறப்பிடுங்கல் *vērara-p-pidungal,* பெ.(n.) 1. வேரொடு பறித்தல்; to weed out. 2. முழுதும் குணமாக்கல்; to root out as in disease.

[வேர் + அறப்பிடுங்கல்]

வேரி[1] *vēri,* பெ.(n.) 1. தேன்; honey. *"கமலங் கலந்த வேரியும்" (திருக்கோ. 301).* 2. கள்; toddy. *"கடிகமழ் வேரிக் கடைதோறுஞ் செல்ல" (பு.வெ. 4, 25).* 3. ஒரு வகை நறுமண வேர் (திவா.); cuscuss grass. 4. ஓமாலிகை முப்பத்திரண்டனுளொன்று (சிலப். 6, 77, உரை); an aromatic, one of 32 *ōmālikai.* 5. நறுமணம்; frangrance, scent.

வேரி[2] *vēri,* பெ.(n.) 1. பூந்தேன்; honey in flowers. 2. பழச்சாறு; juice of fruits. 3. வெட்டிவேர்; fragrant yellow root-khus khus -vetivaria zizanioides alias Andropogam aromaticus.

வேரிச்சுமம் *vēri-c-cumam,* பெ.(n.) வெள்ளெருக்கு (சங்.அக.); white madar.

[வேரி + சுமம்]

வேரிசாத்தன் *vēri-cāttan,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a sangam poet.

[வேரி + சாத்தான்]

இவர் குறுந்தொகையில் 278–ஆம் பாடலைப் பாடியுள்ளார்.

வேரித்தண்டு *vēri-t-tandu,* பெ.(n.) தேன் வைக்குங் குழாய் (இலக்.அக.); tube for keeping honey.

[வேரி + தண்டு]

வேரிமீதகம் *vēri-midagam,* பெ.(n.) 1. இருவேலி; khus khus root. 2. வேரி பார்க்க; see *vēri.*

[வேரி + மீதகம்]

வேரியன் *vēriyan,* பெ.(n.) பகைவன்; foe. *"பண்டை வேரியர் கடாம்" (நீலகேசி. 95).*

வேரில்லாக்கொத்தான் *vērillā-k-kottān,* பெ.(n.) ஒரு வகை கொத்தான் கொடி; a variety of கொத்தான் moss creeper - cassytha americana.

[வேரில்லா + கொத்தான்]

வேருக்குள்பாடாணசித்தி *vērukkuḷ-pāḍāṇa-šitti,* பெ.(n.) உரோம விருட்சம்; a kind of tree.

வேரூன்றல் *vērūnṟal,* பெ.(n.) வேர்பற்றல்; taking root.

[வேர் + ஊன்றல்]

வேரூன்று-தல் *vērūnṟu-,* செ.கு.வி.(v.i.) 1. செடி முதலியன நிலைபெற்று நிற்கும்படி அவற்றின் வேர் நிலத்திற் பதிந்தோடுதல் (ஈடு. 4, 8, 5); to take root. 2. அசைக்க முடியாத படி உறுதியாய் நிலை நாட்டப் பெறுதல்; to be established or settled firmly.

[வேர் + ஊன்று-,]

வேரூன்றுகட்டி *vērūnṟu-kaṭṭi,* பெ.(n.) அடிகனத்த கட்டி; thick based abscess-deep rooted abscess.

[வேரூன்று + கட்டி]

வேரெழுத்து *vēreḻuttu,* பெ.(n.) மூலவெழுத்து (திருமந். 970); primary, basic or fundamental letter, as of a mantra.

[வேர் + எழுத்து]

வேரையாட்டுபயிர் *vēraiyāṭṭu-payir,* பெ.(n.) இலவங்கப்பட்டை; cinnamon bark-cinnamomum zeylanicum.

[வேரையாட்டு + பயிர்]

வேரோடழிதல் *vērōḍaḻidal,* பெ.(n.) வேருடன் கெடுதல்; being ruined totally.

வேரோடு-தல் *vērōḍu-,* செ.கு.வி.(v.i.) வேரூன்று-தல் பார்க்க; see *vērūnṟu-.* *"பழமறையி னுச்சிமிசை வேரோடி" (பிரமோத். 22, 102).*

வேல்¹ *vēl,* பெ.(n.) 1. நுனிக் கூர்மையுடைய கைவேல்; dart, spear, lance, javelin. *"நெடுவேல் பாய்ந்த மார்பின்" (புறநா. 297).* 2. திரிசூலம்; trident. *"கையது வேல் நேமி" (திவ். இயற். 1, 5).* 3. போர்க்கருவி (பிங்.); weapon. 4. ஈட்டிவகை (சிலப். 15, 216, உரை); a kind of spear. 5. வெல்லுகை (அரு.நி.); conquering. 6. பகை (அரு.நி.); enemy.

[வெல் → வேல்]

வேல்² *vēl,* பெ.(n.) 1. மரவகை; babul. 2. வேல் வகை (இலத்.); Panicled babul. 3. *உடை⁵* பார்க்க; see *uḍai.* 4. புறக்காழ் உள்ள மூங்கில் வகை (நாமதீப. 296); spiny bamboo.

வேல்³ *vēl,* பெ.(n.) ஒரு மரம்; a thorny tree. 1. வேலம் or வேலா - Acacia arabica, 2. பச்சை வேல் - Acacia genus, 3. சீமை வேல் - Acacia dealbata. 4. பரங்கி வேல், 5. பீவேல் - Acacia Farniciana, 6. நல்ல வேல், 7. வெள்வேல் - Acacia leucophalaca (white babool), 8. கருவேல் - Acacia arabica, 9. சீமைச் சிறுவேல் - Common

wattle - Acacia decurrenus, 10. கடிவேல் – Acacia melanoxylon. 11. கஸ்தூரி வேல் – Acacia farni ciana. 12. உடைவேல் – arrow thorn tree-Acacia planifrons alias A. ebornea, 13. குடை வேல் – Umbrella thorn babool - Acacia tomentosa, 14. பீக்கருவேல் – Acacia eburnea, 15. கந்தர் வேல் – jungle nail - Acacia tomentosa, 16. சீமை வெள்வேல் – Acacia ferruginea, 17. வெள்ளை முள்வேல் – same as No.18, 18. முள்வேல் – rubber thorn - Acacia latronum, 19. பேய்வேல் – Acacia farniciana, 20. கூந்தல் வேல் – Acacia tomentosa.

[வெல் → வேல்]

வேல்கந்தி *vēl-kanti,* பெ.(n.) செடிவகை (சங்.அக.); scabrous ovate unifoliate tick-trefoil.

[வேல் + கந்தி]

வேல்கம்பு *vēl-kambu,* பெ.(n.) (முற் காலத்தில் போர் வீரர்கள் பயன்படுத்திய) மேல் பகுதியில் இலை வடிவக் கூரிய உலோக முனையைக் கொண்ட ஆயுதம்; a long staff with a leaf-like metal edge used as a weapon, a kind of spear.

[வேல் + கம்பு]



வேல்சங்கு *vēl-šangu,* பெ.(n.) 1. முட்சங்கு; a conch with thorny edges. 2. உபரசச் சரக்கு; a mineral body.

[வேல் + சங்கு]

வேல்தாரி *vēl-dāri,* பெ.(n.) ஒரு வகை நெடுங்கோட்டுப் புடைவை; a kind of saree with long stripes.

[வேல் + தாரி]

வேல்முகம் *vēl-mugam,* பெ.(n.) கல்லாரை; a creeper.

[வேல் + முகம்]

வேல்லசம் *vēl-lašam,* பெ.(n.) மிளகு; pepper-piper nigrum.

வேல்லி *vēlli,* பெ.(n.) கொடி; a creeper.

வேல்விழிமாது *vēl-viḻimādu,* பெ.(n.) கண்டங்கத்திலி; a thorny shrub-solanum xanthocarpum.

[வேல் + விழி + மாது]

வேல்விழியாள் *vēl-viḻiyāḷ,* பெ.(n.) கத்தூரி மஞ்சள்; a kind of turmeric-curcuma aromatica.

[வேல் + விழியாள்]

வேலங்காய்க்கொலுசு *vēlan-kāy-k-kolušu,* பெ.(n.) வேலங்காய்களைப் போலும் குண்டுகளையுடைய காலணி வகை; a silver anklet with beads resembling babul fruit.

[வேலங்காய் + கொலுசு]

வேலங்குச்சி *vēlaṅgucci,* பெ.(n.) கருவேலங் குச்சி, பல்லுக்குறுதி; a twig of Acacia arabica 8 inches long and of finger's thickness is used as tooth-brush, it strengthens the teeth.

[வேலம் + குச்சி]

வேலசம் *vēlaśam,* பெ.(n.) மிளகு (சங்.அக.); pepper.

வேலப்பதேசிகர் *vēlappa-dēśigar,* பெ.(n.) பதினேழாம் நூற்றாண்டில் திருவாவடுதுறை யாதீனத்து ஆசானாயிருந்தவரும் திருப்பறியலூர்ப்புராணம் பாடியவருமான ஆசிரியர் (அபி.சிந்.); a head of *tiruvāḍuturaimutt* and author of *tirupparíyalūr-p-purāṇam,* 17C.

வேலம்[1] *vēlam,* பெ.(n.) ஒரு வகை மரம்; a thorny tree- Acacia genus.

வேலம்[2] *vēlam,* பெ.(n.) தோட்டம் (யாழ்.அக.); garden.

வேலம்பட்டை *vēlam-paṭṭai,* பெ.(n.) வேலமரத்துப்பட்டை; babul bark.

[வேல் + பட்டை]

வேலம்பட்டைச்சாராயம் *vēlam-paṭṭai-c-cārāyam,* பெ.(n.) போதையும் பித்த சினமும் உண்டாகும்; arrack prepared from the bark of Acacia.

[வேலம் + பட்டை + சாராயம்]

வேலம்பாசி[1] *vēlam-pāśi,* பெ.(n.) பாசிவகை (மூ.அ.); a kind of moss.

[வேலம் + பாசி]

வேலம்பாசி[2] *vēlam-pāśi,* பெ.(n.) ஓர் பூண்டு; a herb-vallisneria spirahs.

[வேலை + பாசி]

வேலம்பிசின் *vēlam-piśiṉ,* பெ.(n.) பிசின் வகை; gum arabic.

[வேல் + பிசின்]

வேலமரம் *vēla-maram,* பெ.(n.) (கலப்பை போன்ற வேளாண் கருவிகள் செய்யப் பயன்படுத்தும்) இரு வரிசையாகப் பிரிந்த சிறு இலைகளைக் கொண்ட ஒரு வகை முள் மரம்; babul.

வேலன் *vēlaṉ,* பெ.(n.) 1. வேற்காரன்; spearman. 2. முருகன் (பிங்.); skanda. 3. முருகன் பூசனை செய்பவன் (திருமுரு. 222); priest worshipping skanda.

[வேல் → வேலன்]

வேலனாடல் *vēlaṉāḍal,* பெ.(n.) வேலன் ஆடும் வெறியாட்டு கூத்து (பிங்.); dancing of a priest under possession by skanda.

[வேலன் + ஆடல்]

வேலா *vēlā,* பெ.(n.) கருவேல்; Acacia arabica.

வேலாமீன் *vēlā-mīṉ,* பெ.(n.) பழுப்பு நிறத்தில் காணப்படும் ஆழக் கடல் மீன் (முகவை. மீன.); a kind of sea fish.



வேலாமுற்றாழை *vēlā-muṟṟāḻai,* பெ.(n.) கடற்றாழை பார்க்க; see *kaḍaṟṟāḻai.*

வேலாமேற்புல்லுருவி *vēlā-mēṟ-pulluruvi,* பெ.(n.) வேலமரவகை; parasitic plant growing on the acacia tree.

வேலாயுதம் *vēl-āyudam,* பெ.(n.) வேல்[1],1 பார்க்க; see *vēl.*

[வேல் + ஆயுதம்]

வேலாயுதமான் *vēlāyuda-māṉ,* பெ.(n.) சிம்மம்; lion.

வேலாயுதன் *vēlāyudaṉ,* பெ.(n.) முருகன்; skanda, as wielding the lance. *"வேதாகம சித்ர வேலாயுதன்" (கந்தரலங். 17).*

[வேல் + ஆயுதன்]

வேலாரை *vēlārai,* பெ.(n.) கடலாரை பார்க்க; see *kaḍalārai.*

வேலாவலயம் *vēlā-valayam,* பெ.(n.) வேலாவலையம் பார்க்க (அக.நி.); see *vēlā-valaiyam.*

[வேல் + வலயம்]

வேலாவலையம் *vēlā-valaiyam,* பெ.(n.) 1. கடல்; sea, as the boundary of the earth. 2. நிலம்; earth, as boundary by the sea. *"வேலாவலயம் விளக்கி" (மாறனலங். 217. உதா. 517).*

[வேல் + வலையம்]

வேலாழி *vēlāḻi,* பெ.(n.) கடல்; sea. *"வேலாழி சூழுலகு" (திணைமாலை. 62).*

வேலான் *vēlāṉ,* பெ.(n.) வேற்படை தாங்கியவன்; spearman.

[வேல் + அன்]

வேலி[1] *vēli,* பெ.(n.) 1. முள், கழி முதலியவற்றாலான அரண்; hedge, fence. *"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்" (குறுந். 18).* 2. மதில் (பிங்.); wall. 3. காவல் (பிங்.); custody, watch, guard. *"நிறைநாண் வேலி நீங்கி" (கல்லா. 87, 3).* 4. நிலம் (பிங்.); land. *"சாலிவேலியுந் தழீஇய வைப்பும்" (கம்பரா. நாட்டுப். 12).* 5. வயல் (பிங்.); field. 6. நில அளவு; land measure = 6.74 acres (G.Ti.D. 1, 135). 7. பசுக்கொட்டில் (பிங்.); cowshed. 8. ஊர் (பிங்.); village. *"பன்னிரு வேலி கொண்டருளுஞ் செய்கை கண்டு" (தேவா. 176, 2).* 9. வேலிப்பருத்தி பார்க்க (மூ.அ.); see *vēli-p-parutti.* 10. இலவுவகை; red-flowered silk cotton tree. *"வேலியங் குறுஞ்சூல் விளைகாய்ப் பஞ்சினம்" (கல்லா. 87).* 11. ஓசை (அரு.நி.); sound. 12. காற்று (அரு.நி.); wind.

தெ. வேலுகு; க. பேலி; ம. வேலி.

[வேல் → வேலி]

வேலி[2] *vēli,* பெ.(n.) 1. கொடிவேலி; plumbago. 2. கரும்பு; sugar-cane.

[வேல் → வேலி]

வேலி[3] *vēli,* பெ.(n.) (நில அளவையில்) இருபது மா கொண்ட அளவு; a land measure of twenty ma (equal to 6.67 acres).

[வேல் → வேலி]

வேலிக்கள்ளி *vēli-k-kaḷḷi,* பெ.(n.) கள்ளிவகை (சங்.அக.); a kind of spurge.

[வேலி + கள்ளி]



வேலிக்காசு *vēli-k-kāšu,* பெ.(n.) பழைய வரி வகை (S.I.I.iii, 142); an ancient village- tax.

[வேலி + காசு]

வேலிக்காரம் *vēli-k-kāram,* பெ.(n.) வெண்காரம்; borax.

[வேலி + காரம்]

வேலிக்கால் *vēli-k-kāl,* பெ.(n.) 1. வேலி; hedge, fence. 2. வேலிகட்டிய தோட்டம்; fenced garden. 3. வேலி கட்ட நடுங்கழி (வின்.); stake in hedging.

[வேலி + கால்]

வேலிக்கொடி *vēli-kodi,* பெ.(n.) வேலிப்பருத்தி பார்க்க; see *vēli-p-parutti.*

[வேலி + கொடி]



வேலிக்கொவ்வை *vēli-k-kovvai,* பெ.(n.) கோவை; a climbing plant-Bryonia grandis.

[வேர + கொவ்வை]

வேலிகட்டு-தல் *vēli-kattu-,* செ.குன்றாவி. (v.i.) கழி முதலியவற்றால் இடத்தைச் சூழத்தடுத்து வரம்பிடுதல்; to hedge, fence, as a field's to make a hedge or fence.

[வேலி + கட்டு-,]

வேலிகம்[1] *vēligam,* பெ.(n.) கற்றாழை (சங்.அக.); aloe.

வேலிகம்[2] *vēligam,* பெ.(n.) ஒரு வகை மலநோய்; a disease due to worms in the intestines.

[வேலி → வேலிகம்] (மு.தா.81)

வேலிகொளுவு-தல் *vēli-koluvu-,* செ. குன்றாவி.(v.t.) வேலிகட்டு-தல் பார்க்க (வின்.); see *vēli-kattu-*

[வேலி + கொளுவு-,]

வேலித்துத்தி *vēli-t-tutti,* பெ.(n.) செடிவகை (இலத்.); pipal-leaved evening mallow, m.sh., abutilon polyandrum.

[வேலி + துத்தி]

வேலிதம் *vēlidam,* பெ.(n.) கட்டு; bandage.

வேலிநாயகம் *vēli-nāyagam,* பெ.(n.) காட்டாமணக்கு; wild castor plant-Jatropha carcas.

[வேலி + நாயகம்]

வேலிநோய் *vēli-nōy,* பெ.(n.) ஒரு வகை நோய்; a kind of disease.

[வேலி + நோய்]

வேலிப்பயறு *vēli-p-payaṟu,* பெ.(n.) பழைய நாணய வரி வகை (S.I.I.i, 89); an ancient tax in cash.

[வேலி + பயறு]

வேலிப்பயிர் *vēli-p-payir,* பெ.(n.) தோட்டங்களில் விளைவிக்கும் பயிர்; plant grown in gardens.

[வேலி + பயிர்]

வேலிப்பருத்தி[1] *vēli-p-parutti,* பெ.(n.) உத்தாமணி, உத்தமதாளி, அச்சாணி மூலி; a twiner title being a hedge plant bearing fruit with cottony fibres inside-Dog's bane; whitlow plant-Daemia extensa. The whole plant is emetic and expectorant, and used mostly in children's disease.

[வேலி + பருத்தி]

வேலிப்பருத்தி[2] *vēli-p-parutti,* பெ.(n.) கொடிவகை (பதார்த்த. 578); stinking swallow wort, m.cl., damia extensa.

[வேலி + பருத்தி]

வேலிப்பாகல் *vēli-p-pāgal,* பெ.(n.) பாகல் வகை (வின்.); a kind of caper plant.

[வேலி + பாகல்]

வேலிப்பாசி *vēli-p-pāśi,* பெ.(n.) பாசிவகை (M.M.); hedge moss, sida humilis.

[வேலி + பாசி]

வேலிபோடு-தல் *vēli-pōḍu-,* செ.குன்றாவி. (v.t.) வேலிகட்டு-தல் பார்க்க; see *vēli-kaṭṭu-.*

[வேலி + போடு-,]

வேலிமுள் *vēli-muḷ,* பெ.(n.) கருவேல் முள்; thorn of Acacia arabica.

[வேலி + முள்]

வேலிமுறி-த்தல் *vēli-muṟi-,* செ.கு.வி.(v.i.) வேலியழி-தல் பார்க்க; see *vēli-yaḻi-.*

[வேலி + முறி-,]

வேலிமூங்கில் *vēli-mūṅgil,* பெ.(n.) செடிவகை (வின்.); a major shrub, Justicia betonica.

[வேலி + மூங்கில்]

வேலியடை-த்தல் *vēli-y-aḍai-,* செ. குன்றாவி.(v.t.) வேலிகட்டு-தல் பார்க்க; see *vēli-kaṭṭu-.*

[வேலி + அடை-,]

வேலியழி-த்தல் *vēli-y-aḻi-,* செ.கு.வி.(v.i.) 1. காவலடைப்பை அழித்தல்; to destroy or remove afence. 2. வரம்பு கடத்தல்; to transgress bounds.

[வேலி + அழி-,]

வேலிறை *vēliṟai,* பெ.(n.) வேலாயுதன் பார்க்க (சூடா.); see *vēlāyudaṉ.*

[வேல் + இறை]

வேலின்மேற்புல்லுருவி *vēlin-mēr-pulluruvi,* பெ.(n.) வேலாமேற்புல்லுருவி பார்க்க; see *vēlā-mēr-pulluruvi.*

[வேலின் + மேல் + புல்லுருவி]

வேலுத்தம்பிதளவாய் *vēlu-t-tambi-taḷavāy,* பெ.(n.) வீரபாண்டியக் கட்டபொம்மன், பூலித்தேவர் முதலியவர்களைப் போல் அந்நாளில் கேரள விடுதலைக்கு வெள்ளைக் காரர்களை எதிர்த்தவர் இவர்; that day agianst britishman Kerala Independent like *virapāṇḍiya-k-kaṭṭabomman, pūli-t-tēvar.*

இவர் பிறந்த ஊர் குமரி மாவட்டத்தில் உள்ள தலைக்குளம் என்பதாகும். இவர் கி.பி.1765–ஆம் ஆண்டில் பிறந்து பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை வாழ்ந்திருந்தார். வேணாட்டு அமைச்சராக இருந்து நேர்மையான ஆட்சி புரிந்தவர். தன்மானங்காக்கும் பொருட்டுத் தலையைத் தம்பியிடம் கொடுத்தவர். இவருடைய புகழைப் பரப்பும் நாடகங்களை மக்கள் இன்றும் நடிக்கின்றனர். இவர் பயன்படுத்திய வாளை இவருடைய குடும்பத்தினர் இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த இராசேந்திர பிரசாத்திரடம் கொடுத்தனர். அவ்வாள் தில்லியில் உள்ள தேசியப் பொருட்காட்சி மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

[வேலுத்தம்பி + தளவாய்]

வேலூர்க்கிழான் *vēlūr-k-kiḻāṉ,* பெ.(n.) தொண்டை நாட்டில் குமிழம்பட்டு என்னும் சிற்றூரில் இருந்த ஒர வள்ளல்; a small village *kumiḻampaṭṭu* were one donar at *toṇḍai-nāḍu.*

[வேலூர் + கிழான்]

பஞ்சகாலம் ஒன்று நேரிட்ட பொழுது இவன் தன்னை நாடிவந்த பல புலவர்களையும், பிறரையும் உணவிட்டுக் காப்பாற்றினான்.

வேலேறு *vēlēṟu,* பெ.(n.) வேல் தைத்த புண்; wound caused with a javelin. *"வேலேறு படத் தேளேறு மாய்ந்தாற்போல" (இறை. 2, பக். 39).*

[வேல் + ஏறு]

வேலை¹ *vēlai,* பெ.(n.) 1. தொழில்; work, labour, task. *"வேலை யுலகிற் பிறக்கும் வேலையொழிந்தோ மில்லை" (அட்டப். திருவரங்கக். 54).* 2. காரியம்; business, matter. *'என்ன வேலையாய் வந்தாய்?'.* 3. வேலைப்பாடு; workmanship. *'இந்த நகையில் அமைந்த வேலை மிகவும் அருமையானது'.* 4. வேலைத்திறன் பார்க்க; see *vēlai-t-tiṟaṉ.* 5. பதவி; situation, office. *'உனக்கு எங்கே வேலை?'.*

[வேல் → வேலை] (வ.மொ.வ. 268)

ம. வேல; து. பேலு.

வேலை² *vēlai,* பெ.(n.) 1. காலம் (பிங்.); time, timit of time. *"மணந்தா ருயிருண்ணும் வேலை" (குறள், 1221).* 2. கடற் கரை (பிங்.); sea-shore. *"பௌவ வேலை" (கந்தபு. மேருப். 46).* 3. கடல் (பிங்.); sea, ocean. *"வேலை நஞ்சுண் மழை தருகண்டன்" (திருவாச. 6, 46).* 4. அலை (பிங்.); wave. *"வேலைப்புணரி" (திவ். இயற். திருவிருத். 75).* 5. கானல்; sandy tract. *"வேலை யாத்திரை செல்யாறு" (பரிபா. 19, 18).*

[வேல் → வேலை]

வேலை³ *vēlai,* பெ.(n.) 1. கரும்பு (மலை.); sugarcane. 2. வெண்காரம் (சங்.அக.); borax.

வேலை⁴ *vēlai,* பெ.(n.) 1. நிகழ்காலம்; present time. 2. நோய்; disease. 3. பனி; dew. 4. வேளை பார்க்க; see *vēḷai.*

வேலைக்கந்தகம் *vēlai-k-kandagam,* பெ.(n.) 1. கடற்பாசி; sea weeds. 2. ஒரு கருப்பொருள்; one of the 120 natural substances.

[வேலை + கந்தகம்]

வேலைக்கள்ளி *vēlai-k-kaḷḷi,* பெ.(n.) வேலை செய்யாமல் ஏமாற்றுபவள்; woman who shirks work. *"வேலைக்கள்ளிக்குப் பிள்ளைச் சாக்கு".*

[வேலை + கள்ளி]

வேலைக்காரத்தனம் *vēlaikkāra-t-taṉam,* பெ.(n.) வேலைத்திறன் பார்க்க; see *vēlai-t-tiṟaṉ.*

[வேலைக்காரன் + தனம்]

வேலைக்காரன்[1] *vēlai-k-kāraṉ,* பெ.(n.) 1. ஊழியன்; man-servant. 2. தொழிலாளி; workman, labourer. 3. தொழில்வல்லவன்; skilled worker. 4. சூழ்ச்சி செய்பவன்; trickster. *'அவன் பெரிய வேலைக்காரன்'.*

[வேலை + காரன்]

வேலைக்காரன்[2] *vēlai-k-kāraṉ,* பெ.(n.) வைக்கோல் தள்ளுந் தடி; rake.

[வேலை + காரன்]

வேலைக்காரி *vēlai-k-kāri,* பெ.(n.) பணிப்பெண்; servant-maid.

[வேலை + காரி]

வேலைக்காலம் *vēlai-k-kālam,* பெ.(n.) வேலை செய்யும் நேரம்; period of work.

[வேலை + காலம்]

வேலைக்கூலி *vēlai-k-kūli,* பெ.(n.) குறிப்பிட்ட வேலைக்குக் கொடுக்குங் கூலிப்பணம்; wage for a specific item of work, dist, fr. *nāt-kūli.*

[வேலை + கூலி]

வேலைக்கேடு *vēlai-k-kūḍu,* பெ.(n.) வினைக்கேடு பார்க்க; see *viṉai-k-kēḍu.*

[வேலை + கேடு]

வேலைகாட்டு-தல் *vēlai-kāṭṭu-,* செ.கு.வி. (v.i.) வேலைத்தனம்பண்ணு-தல் பார்க்க; see *vēlai-t-taṉam-paṇṇu-.*

[வேலை + காட்டு-,]

வேலைகொள்(ளு)[1]-தல் *vēlai-koḷ(ḷu)-,* செ.கு.வி.(v.i.) அதிக வேலை செய்யும் படியாதல்; to involve labour. *'அதைச் செய்யத் தொடங்கினால் இன்னும் வேலை கொள்ளும்'.*

[வேலை + கொள்(ளு)-,]

வேலைகொள்(ளு)[2]-தல் *vēlai-koḷ(ḷu)-,* செ.குன்றாவி.(v.t.) வேலை வாங்கு-தல் பார்க்க; see *vēlai-vāṅgu-.*

[வேலை + கொள்(ளு)-,]

வேலைச்சுருக்கு *vēlai-c-curukku,* பெ.(n.) வேலை அதிகங் கொள்ளாமை; economy of labour.

[வேலை + சுருக்கு]

வேலைசாய்[1]-தல் *vēlai-cāy-,* செ.கு.வி. (v.i.) முடிவுக்கு வருதல்; to come an end, as life. *'அவர் பாடு வேலை சாய்ந்து விட்டது'.*

[வேலை + சாய்-,]

வேலைசாய்^{2}–த்தல் *vēlai-šāy-,* செ. குன்றாவி.(v.t.) 1. மேற்கொண்ட தொழில் முடித்தல்; to finish as a job. *'அந்த காரியத்தை வேலை சாய்த்து விட்டான்'.* 2. அழித்தல்; to ruin, make an end of. *'அவன் அந்தக் குடியை வேலை சாய்த்து விட்டான்'.* 3. கொலை புரிதல்; to slay, murder.

[வேலை + சாய்^{2}–,]

வேலைசெய்^{1}–தல் *vēlai-cey-,* செ.கு.வி. (v.i.) 1. தொழிலியற்றுதல்; to do work. *'வேலை செய்தாற் கூலி; வேடம் போட்டாற் காசு'.* 2. மழிப்பு செய்தல்; to shave. 3. சூழ்ச்சி செய்தல்; to play tricks. 4. வேலைத் தனம்பண்ணு–, 2 பார்க்க; see *vēlai-t-tanam-pannu-.*

[வேலை + செய்–,]

வேலைசெய்^{2}–தல் *vēlai-cey-,* பெ.(n.) 1. (இயந்திரம் முதலியவை) இயங்குதல்; (machine, etc.) function. *'கணிப்பொறி வேலைசெய்யும் விதமே தனி'.* 2. (மருந்து போன்றவை) பாதிப்பை அல்லது பலனைத் தருதல்; (of medicine, etc.) act on, work. *'அரை மணி நேரத்துக்கு முன்பு குடித்த மருந்து இப்போதுதான் வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறது'.*

[வேலை + செய்–,]

வேலத்தலம் *vēlai-t-talam,* பெ.(n.) வேலைத் தலை பார்க்க (கொ.வ.); see *vēlai-t-talai.*

[வேலை + தலம்]

வேலைத்தலை *vēlai-t-talai,* பெ.(n.) வேலை நடக்குமிடம்; place of work.

[வேலை + தலை]

வேலைத்தனம் *vēlai-t-tanam,* பெ.(n.) வேலைத்திறன் பார்க்க; see *vēlai-t-tiran.*

[வேலை + தனம்]

வேலைத்தனம்பண்ணு–தல் *vēlai-t-tanam-pannu-,* செ.கு.வி.(v.i.) 1. வேலையில் திறமை காட்டுதல்; to show one's skill or handiwork. 2. குறும்பு பண்ணுதல்; to do mischief, to create trouble. 3. வேலை செய்–, 3 பார்க்க; see *vēlai-cey-.*

[வேலைத்தனம் + பண்ணு–,]

வேலைத்திறம் *vēlai-t-tiram,* பெ.(n.) வேலைத்திறன் பார்க்க; see *vēlai-t-tiran.*

[வேலை + திறம்]

வேலைத்திறமை *vēlai-t-tiramai,* பெ.(n.) வேலைத்திறன் பார்க்க; see *vēlai-t-tiran.*

[வேலை + திறமை]

வேலைத்திறன் *vēlai-t-tiran,* பெ.(n.) 1. தொழில் செய்வதில் வல்லமை; efficiency or skill, as in an art or craft. 2. குறும்புச் செயல்; mischief, trick.

[வேலை + திறன்]

வேலைத்துறட்டு *vēlai-t-turattu,* பெ.(n.) மாவகை; tree caper.

[வேலை + துறட்டு]

வேலைத்தொல்லை *vēlai-t-tollai,* பெ.(n.) அதிக வேலையால் உண்டாகும் நெருக்கடி; pressure of work.

[வேலை + தொல்லை]

வேலைதீர்^{1}–தல் *vēlai-tīr-,* செ.கு.வி.(v.i.) வேலைசாய்^{1}–, பார்க்க; see *vēlai-cāy-.*

[வேலை + தீர்–,]

வேலைதீர்²–த்தல் *vēlai-tīr-,* செ.குன்றாவி. (v.t.) வேலை சாய்²–, பார்க்க; see *vēlai-cāy-*

[வேலை + தீர்–,]

வேலைநாணயம் *vēlai-nāṇayam,* பெ.(n.) 1. வேலையில் நேர்மை; honesty in work. 2. செய்யப்படும் வேலையின் மேம்பாடு; excellence of work.

[வேலை + நாணயம்]

வேலைநாள் *vēlai-nāḷ,* பெ.(n.) பணி நாள்; working day.

[வேலை + நாள்]

வேலைநிறுத்தம் *vēlai-niṟuttam,* பெ.(n.) 1. வேலையின்றியிருக்கை; stoppage of work, as on holidays. 2. வேலைமறியல் பார்க்க; see *vēlai-mariyal.*

[வேலை + நிறுத்தம்]

வேலைநிறுத்தம் *vēlai-niṟuttam,* பெ.(n.) பொதுப்பணிநிறுத்தம்; General strike.

[வேலை + நிறுத்தம்]

தொழில் துறையில் வேலை நிறுத்தம் என்பது தொழிலாளர் பெற்றுள்ள வன்மையானதோர் கருவியாகும். தத்தம் குறைகளை நீக்கிக் கொள்ளவும், ஊதிய உயர்வு பெறவும் தொழிலாளர்கள் இந்த கருவியைப் பயன்படத்துகின்றனர். குறிப்பிட்ட ஒரு தொழில் முழுவதிலுமோ அல்லது குறிப்பிட்ட ஒரு மாநிலத்திலோ நடைபெறும் வேலை நிறுத்தத்திலும் பொது வேலை நிறுத்தம் என்று பெயர். சமூகத்தையும் அரசாங்கத்தையும் எதிர்த்து எல்லாத் தொழில் நிறுவனங்களிலும், ஆலைகளிலும், போக்குவரத்துத் துறைகளிலும் பொருளாக்கத்தை நிலைகுலையச் செய்யும் வேலை நிறுத்தம் தேசிய வேலை நிறுத்தம் எனப்படும்.

19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொழிற் சங்கத் தலைவர்கள் வேலை நிறுத்தங்களை நடத்தத் தலைப்பட்டனர். 1829 முதல் 1842 வரை வேலை நிறுத்தங்கள் பல நடந்தன. ஓவன் (owen) என்பார் நாட்டில் இயங்கிவந்த தொழிற் சங்கங்களை யெல்லாம் இணைத்துப் பொது வேலை நிறுத்தம் ஒன்று நடத்தி வெற்றி பெற முயற்சி செய்தார். ஆனால் அவ்வேலை நிறுத்தம் தோல்வியடைந்தது. பொது வேலை நிறுத்தம் மக்கள் கருத்திற்கு ஒவ்வாமல் அவர்களுடைய ஆர்வமும் ஆதரவும் பெறக் கூடாமல் மறைந்துவிட்டது.

முதல் உலக போருக்குப் பின் தொழிலாளர் களிடையே வேலை நிறுத்தங்கள் மீண்டும் மீண்டும் தோன்றின. நிலக்கரிச் சுரங்கத் தொழிலில் பல கிளர்ச்சிகள் ஏற்பட்டன. 1926 ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் நாள் முதல் ஒன்பது நாட்களுக்குப் பொது வேலை நிறுத்தம் நாடு முழுவதும் நடைபெற்றது. 15 இலட்சம் தொழிலாளர்கள் இதில் ஈடுபட்டனர். இதனால் அரசாங்கத்திற்கு 4,33,000 பவுன் நட்டம் ஏற்பட்டது. ஆனால் இப்பொது வேலை நிறுத்தம் வெற்றியடையவில்லை.

"வேலை நிறுத்தம் அநீதியானது; மனிதத் தன்மையற்றது; ஊதாரித்தனமானது; கொடுமை வாய்ந்தது சமூக விரோதமானது" என்று ஹாப்சன் (hobson) கூறுகின்றார். வேலை நிறுத்தம் தொழிலாளரின் வாழ்க்கையையே குலைக்கக் கூடியதாகும். அது எய்வோர் மீதே திரும்பிப் பாயும் ஒரு படையாகும். இதனால் தொழில் நிருவாகத் தினரும் தொழிலாளரும் நேர்முகமாகவோ நடுவர்கள் மூலமாகவோ தமக்குள் ஏற்படும் தொழிற் பூசல்களைத் தீர்த்துக் கொள்ளுவது முன்னேற்ற மடைந்த நாடுகளில் சிறந்த முறையாகக் கருதப்படுகிறது. இம்முறையில் வேலை நிறுத்தம் அறவே தவிர்க்கப்படுகிறது.

வேலை நிறுத்தம் என்பது தொழிலாளர்கள் சட்டத்தின் மூலம் பெற்றுள்ள அடிப்படை உரிமையாகும். ஆனால் சமூகத்துக்கு அதனால் ஏற்படும் தீய விளைவுகளினால் மக்கள் அதற்குத் தம் ஆதரவைத் தருவதில்லை.

வேலைநீர் *vēlai-nīr,* பெ.(n.) கல்லுப்பு; rock salt.

[வேலை + நீர்]

வேலைநேரம் *vēlai-nēram,* பெ.(n.) 1. வேலை செய்தற்குரிய காலம்; period of work. 2. வேலை செய்கின்ற வேளை; work-time.

[வேலை + நேரம்]

வேலைப்பரீட்சை *vēlai-p-parīṭcai,* பெ.(n.) ஒருவனது வேலைத்திறமையை ஆராய்கை; trial of one's skill in buisiness. 2. வேலைத்திறன் பார்க்க; see *vēlai-t-tiṟaṉ.*

[வேலை + பரீட்சை]

வேலைப்பாடு[1] *vēlai-p-pāḍu,* பெ.(n.) வேலைத்திறன் பார்க்க; see *vēlai-t-tiṟaṉ.*

[வேலை + பாடு]

வேலைப்பாடு[2] *vēlai-p-pāḍu,* பெ.(n.) (கலைப் பொருள், கைவினைப்பொருள், முதலியவற்றில்) அழகும் நுணுக்கமும் வெளிப்படும் வகையில் திறமையாகச் செய்யப்படும் வேலை; craftsmanshi, workmanship. *'சிற்ப வேலைப்பாடு நிறைந்த கோயில்', 'பின்னால் வேலைப்பாடுகள் உடைய கைப்பை'.*

[வேலை + பாடு]

வேலைப்பார்-த்தல் *vēlai-p-pār-,* செ.குன்றாவி.(v.t.) பணிபுரிதல், தொழில் செய்தல்; do work, work (in an office, etc.). *'ஒரு உணவு விடுதியில் வேலைபார்க்கிறார்'.*

[வேலை + பார்-,]

வேலைபண்ணு-தல் *vēlai-paṇṇu-,* செ.கு.வி. (v.i.) வேலைசெய்-தல் பார்க்க; see *vēlai-cey-.*

[வேலை + பண்ணு-,]

வேலைபிடி-த்தல் *vēlai-piḍi-,* செ.கு.வி.(v.i.) வேலைகொள்-தல் பார்க்க; see *vēlai-koḷ-.*

[வேலை + பிடி-,]

வேலைபோட்டுக்கொடு-த்தல் *vēlai-pōṭṭu-k-koḍu-,* செ.குன்றாவி.(v.t.) (ஒருவருக்கு) வேலை கிடைக்க ஏற்பாடு செய்தல், வேலை ஏற்படுத்தித் தருதல்; help (S.O.) with a job. *'என் மகனுக்கு உங்கள் நெசவாலையில் ஒரு வேலை போட்டுக் கொடுங்கள்'.*

[வேலை + போட்டு + கொடு-,]

வேலைமறியல் *vēlai-maṟiyal,* பெ.(n.) 1. ஒருவனை வேலை செய்யவொட்டா மற்றடுக்கை; slopping a person in his work. 2. தொழிலாளர் கூடிப்பேசி வேலையை ஒரே காலத்தில் நிறுத்துகை; strike.

[வேலை + மறியல்]

வேலைமானம் *vēlai-māṉam,* பெ.(n.) வேலைத்திறன் 1 பார்க்க; see *vēlai-t-tiṟaṉ.*

[வேலை + மானம்]

வேலைமினக்கெட்டவன் *vēlai-miṉa-k-keṭṭavaṉ,* பெ.(n.) 1. பயனற்ற வேலை செய்து வீண்பொழுது போக்குபவன்; one who wastes his time in useless work. 2. வேலையின்றி சோம்பியிருப்பவன்; idler.

[வேலை + மினக்கெடு + அன்]

வேலைமினக்கெடு-தல் *vēlai-miṉakkeḍu-,* செ.கு.வி.(v.i.) வேலைமெனக்கிடு-தல் பார்க்க; see *vēlai-meṉa-k-kiḍu-.*

[வேலை + மினக்கெடு-,]

வேலைமினக்கேடு *vēlai-minakkēdu,* பெ.(n.) பயனுள்ள வேலை யொன்றுமின்றி யிருக்கை; being without any useful work. 2. வீணான செயல்; wasted labour.

[வேலை + மினக்கேடு]

வேலைமுலைமாதர் *vēlai-mulai-mādar,* பெ.(n.) தூதுவளை; a thorny climber, three tobed night shade-solanum trilobatum.

[வேலை + முலை + மாதர்]



வேலைமெனக்கிடு-தல் *vēlai-mena-k-kidu-,* செ.கு.வி.(v.i.) 1. பயனுள்ள வேலையொன்று மின்றியிருத்தல்; to be without any useful work. 2. செய்த காரியம் வீணாதல்; to have one's labour wasted.

[வேலை + மெனக்கிடு-,]

வேலைமேற்போ-தல் *vēlai-mēr-pō-,* செ.கு.வி.(v.i.) தன் வேலையைக் கவனிக்கப் போதல்; to go on duty, to go to work. *'மந்திரி வேலை மேற் போயிருக்கிறார்'.*

[வேலை + மேல் + போ-,]

வேலையாள் *vēlaiyāl,* பெ.(n.) கூலிக்கு வேலை செய்பவன்; workman, labourer, servant.

[வேலை + ஆள்]

வேலையில்லாத்திண்டாட்டம் *vēlaiyillā-t-tindāttam,* பெ.(n.) வேலை கிடைக்காத நிலை; unemployment. *'மக்கள் தொகை அதிகமாக அதிகமாக வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகமாகிக் கொண்டு போகிறது'.*

[வேலையில்லா + திண்டாட்டம்]

வேலையிற்றுயின்றோன் *vēlaiyirruyinrōn,* பெ.(n.) பாற்கடலிற் பள்ளி கொண்டவன், திருமால் (சூடா.); *visnu,* as sleeping on the sea of milk.

[வேலை + துயில் + அன்]

வேலையைக்காட்டு-தல் *vēlaiyai-k-kāttu-,* செ.குன்றாவி.(v.t.) குறும்பு செய்தல்; play dirty tricks. *'உங்களிடம் மட்டுமல்ல, வேறு சிலரிடமும் அவன் வேலையைக் காட்டியிருக்கிறான்'.*

[வேலையை + காட்டு-,]

வேலைருசிவஞ்சி *vēlairuśi-vañji,* பெ.(n.) சித்தாமுட்டி; a drug - pavonia zeylanica.

[வேலை + ருசி + வஞ்சி]

வேலைவளர்-த்தல் *vēlai-valar-,* செ.கு.வி. (v.i.) வேலையை நீட்டித்தல்; to prolong work.

[வேலை + வளர்-,]

வேலைவாங்கு¹-தல் *vēlai-vāngu-,* செ. குன்றாவி.(v.t.) பிறரை ஏவி வேலை செய்யும்படி ஏவுதல்; to get work done, to exact work from.

[வேலை + வாங்கு¹-,]

வேலைவாங்கு²–தல் *vēlai-vāṅgu-,* செ.கு.வி. (v.i.) வேலைகொள்–, பார்க்க; see *vēlai-koḷ-.*

[வேலை + வாங்கு–,]

வேலைவை¹–த்தல் *vēlai-vai-,* செ.கு.வி. (v.i.) வீண் வேலையிடுதல்; to cause one to work unnecessarily.

[வேலை + வை–,]

வேலைவை²–த்தல் *vēlai-vai-,* செ.கு.வி. (v.i.) ஒருவனைக் காணுதல் முதலிய வற்றிற்கு நேரங் குறிப்பிடுதல்; to make appointments.

[வேலை + வை–,]

வேவம்¹ *vēvam,* பெ.(n.) தனிமை (அரு.நி.); loneliness.

[ஏகம் → வேவம்]

வேவம்² *vēvam,* பெ.(n.) துன்பம் (அரு.நி.); distress.

க. பேவசா.

[எவ்வம் → வேவம்]

வேவல் *vēval,* பெ.(n.) முற்காலத்து வழங்கிய நாணயவகை; an ancient coin. *"வேவல் புழுங்க லென்றும்" (பணவிடு. 25).*

[வே → வேவல்]

வேவாள் *vēvāḷ,* பெ.(n.) ஒற்றன்; spy. *"வேவா ளனுப்பும் விசாரிப்பும்" (பணவிடு. 25).*

[வேவு + ஆள்]

வேவி¹ *vēvi,* பெ.(n.) வேவி–த்தல் பார்க்க; see *vēvi-.*

வேவி²–த்தல் *vēvi-,* செ.குன்றாவி.(v.t.) வேகவைத்தல்; boiling.

வேவு¹ *vēvu,* பெ.(n.) ஒற்று; spying, espionage.

[வேய் → வேவு]

வேவு² *vēvu,* பெ.(n.) வேகை; burning, boiling.

[வே → வேவு]

வேவு³ *vēvu,* பெ.(n.) வேள்வு 2 பார்க்க; see *vēḷvu.*

[வேள்வு → வேவு]

வேவுகாரன் *vēvu-kāraṉ,* பெ.(n.) ஒற்றன்; spy.

[வேவு + காரன்]

வேவுபார்–த்தல் *vēvu-pār-,* செ.குன்றாவி. (v.t.) வேய்³–தல் பார்க்க; see *vēy-.*

[வேவு + பார்–,]

வேவெடு–த்தல் *vēveḍu-,* செ.கு.வி.(v.i.) *வேள்வெடு–, 1* பார்க்க; see *vēḷ-veḍu-.*

[வே + வெடு–,]

வேவை *vēvai,* பெ.(n.) வெந்தது; that which is boiled or cooked. *"பராரை வேவை பருகெனத் தண்டி" (பொருந. 104).*

[வே → வேவை]

வேழ் *vēḻ,* பெ.(n.) கரும்பு; sugar cane - saccharum officinarum.

[வே → வேழ்]

வேழ்வி *vēḻvi,* பெ.(n.) வேள்வி (அரு.நி.); corr. of.

[வேள்வி → வேழ்வி]

வேழக்கரும்பு *vēḻa-k-karumbu,* பெ.(n.) நாணல்வகை; kaus, a large and coarse grass. *“வேழக் கரும்பினொடு மென் கரும்பு” (பெரியபு. ஏனாதி. 2).*

[வேழம் + கரும்பு]

வேழக்கைலாதி *vēḻakkai-lādi,* பெ.(n.) மதனப்பூ பார்க்க; see *madaṉa-p-pū.*

[வேழம் + கைலாதி]

வேழக்கோது *vēḻa-k-kōdu,* பெ.(n.) சாறு நீங்கிய கரும்புச் சக்கை; refuse of crushed sugarcane after the juice is extracted. *“சாற்று வேழக்கோது போல்” (காஞ்சிப்பு. நகர. 52).*

[வேழம் + கோது]

வேழக்கோல் *vēḻa-k-kōl,* பெ.(n.) பேய்க் கருப்பந்தட்டை (பெரும்பாண். 263. உரை); stem of kaus.

[வேழம் + கோல்]

வேழகம் *vēḻagam,* பெ.(n.) பீர்க்கு; loofa-ribbed gourd - luffa acutangula.

வேழதி *vēḻadi,* பெ.(n.) மூங்கில்; bamboo.

வேழம் *vēḻam,* பெ.(n.) 1. கரும்பு (பிங்.); sugar cane. 2. வேழக்கரும்பு பார்க்க (பெரும்பாண். 263, அரும்.); see *vēḻa-k-karumbu.* 3. நாணல் வகை (பிங்.); european bamboo read. *“வேழப்பழனத்து” (மதுரைக். 257).* 4. மூங்கில் (பிங்.); spiny bamboo. 5. கொடி வகை (பீர்க்கு) (மூ.அ.); sponge gourd. 6. புல்வகை (யாழ்.அக.); kaus, a large and coarse grass. 7. இசை (பிங்.); music. 8. யானை; elephant. *“இரவுப் புனமேய்ந்த வுரவுச்சின வேழம்” (அகநா. 309) (பிங்.).* 9. இடராசி (பரிபா. 11, 2, உரை); aries of the zodiac. 10. பரணி நட்சத்திரம் (பரிபா. 11, 2, உரை); the 2nd naksatra. 11. விளாம் பழத்திற்கு வருவதொரு நோய்; a disease affecting the fruit of the wood-apple. *“வேழந்துற்றிய வெள்ளிலே போல்” (சீவக. 232).* 12. ஒரு வகைப் பூச்சி (பொதி.நி.); an insect.

[வெள் → வேள் → வேளம் → வேழம்] (வே.க.பக். 140)

வேழம்பம் *vēḻambam,* பெ.(n.) 1. வஞ்சகம்; deceit, trick. *“வேழம் பத்தைவர் வேண்டிற்று வேண்டிப்போய்” (தேவா. 472, 1).* 2. ஏளனம்; ridicule mockery.

[வே → வேழம்பம்]

வேழம்பர் *vēḻambar,* பெ.(n.) 1. கழைக் கூத்தர் (பிங்.); pole-dancers. 2. நகைப் பூட்டுத்திறனாளர் (விதூஷகர்) (சிலப். 26, 130); professional wits or humourists. 3. கேலி செய்வோர் (சிலப். 5, 53, உரை); those who ridicule or mock.

[வேழம்பம் → வேழம்பர்]

வேழவெந்தீ *vēḻa-ven-dī,* பெ.(n.) யானைத்தீ நோய்; a disease that causes great hunger. *“வேழ வெந்தீயினீங்கி” (சீவக. 401).*

[வேழம் + வெம்–மை + தீ]

வேழாகிகம் *vēḻākigam,* பெ.(n.) 1. பூவந்திக் கொட்டை; soap nut. 2. பூவந்திக்கொடி; a creeper.

வேள்[1]–தல் (வேட்டல்) *vēḷ-, (vēṭṭal),* செ. குன்றாவி.(v.t.) 1. வேள்விசெய்தல்; to offer sacrifices. *“ஓதல் வேட்டல்” (பதிற்றுப். 24, 6).* 2. மணம்புரிதல்; to marry. *“மெய்ந்நிறை

மூவரை மூவரும் வேட்டார்" (கம்பரா. கடிமணப். 102). 3. விரும்புதல்; to desire. *"வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது" (புறநா. 20).* 4. நட்பு கொள்ளல்; to love. *"மலர்ந்து பிற்கூம்பாது வேட்டதே வேட்டதா நட்பாட்சி" (நாலடி, 215).*

[வெள் → வேள் - வேட்டல் → வேள்-தல்] (வே.க.பக். 121)

வேள்[2] *vēḷ,* பெ.(n.) 1. திருமணம்; marriage. *"வேள்வாய் கவட்டை நெறி" (பழமொ. 360).* 2. விருப்பம் (வின்.); desire. 3. காமன்; *kāma. "வேள் பட விழி செய்து" (தேவா. 1172, 8).* 4. முருகக்கடவுள்; skanda. 5. வேளிர் குலத்தான்; one belonging to the vēḷirclass. *"தோன்முதிர் வேளிர்" (புறநா. 24).* 6. சளுக்கு வேந்தன் (பிங்.); *cāḷukya* king. 7. சிற்றரசன் (சூடா.); petty ruler, chief. 8. பண்டைத் தமிழரசரால் வேளாளர் பெற்ற ஒரு சிறப்புரிமைப் பெயர் (தொல். பொ. 30); title given by ancient tamil kings to vēḷāḷas. *"செம்பியன் தமிழவேள் என்னுங் குலப்பெயரும்" (S.I.S.iii,22).* 9. சிறந்த ஆண் மகன் (யாழ்.அக.); illustrious or great man, hero. *"பாப்பைவேளே" (பெருந்தொ. 1766).* 10. மண் (யாழ்.அக.); earth.

[வெள் → வேள்] (வே.க.பக். 121)

வேள்[3] *vēḷ,* பெ.(n.) செப்பு நெருஞ்சில்; a prostate plant - Indigofera enno-ophylla.

வேள்புலம் *vēḷ-pulam,* பெ.(n.) சளுக்கியர்க் குரிய நாடு (S.I.I.iii, 160); the country of the *cāḷukyas.*

[வேள் + புலம்]

வேள்புலவரசன் *vēḷ-pulavarašaṉ,* பெ.(n.) சளுக்குவேந்தன் (திவா.); *cāḷukya* king.

[வேள்புலம் + அரசன்]

வேள்மான் *vēḷ-māṉ,* பெ.(n.) இவன் ஒரு குறுநில மன்னன்; tributary, petty.

செங்கண்மா என்னும் நகரில் இருந்து அரசு செய்தான். சிறந்த வள்ளல் புலவர்களைப் போற்றுவதில் மிகுந்த ஊக்கங் காட்டினான். இவனிடத்தில் அன்புகொண்ட பெருங்கௌசிகனார் என்னும் புலவர் இவன் மீது மலைபடுகடாம் என்னும் சிறந்த பாடலைப் பாடினார்.

வேள்வி *vēḷvi,* பெ.(n.) 1. ஐவகை வேள்வி; sacrifice. *"முன் முயன் றரிதினின் முடித்த வேள்வி" (அகநா. 220).* 2. ஐவகையாகம்; spiritual discipline. 3. வேள்விக்குழி; sacrificial pit. 4. பூசை; service, worship. *"வேள்வியி னழயில் விளம்புவோரும்" (பரிபா. 19, 43).* 5. மணம்; marriage. *"நாமுன்பு தொண்டுகொண்ட வேள்வியில்" (பெரியபு. தடுத்தாட். 127).* 6. கொடை (பிங்.); bevenolence, gift. 7. நல்வினை; religious merif. *"ஆள்வினை வேள்வியவன்" (பு.வெ. 9, 27).* 8. கொல்லும் வலிவுடைய பேய்கண், வயிறார வுண்ணும்படி பரந்த வலியினை யுடைய வீரன் போர்புரிந்து பகையழித்ததைக் கூறும் புறத்துறை; (purap) theme eulogising a warrior on his destroying his enemies to feast devils with ther dead bodies. *"பண்ணிதைஇய பயங்கெழு வேள்வியின்" (அகநா. 13).* 9. பத்தாவது நாண்மீன்; the 10th naksatra.

[வெள் → வேள் → வேள்வி] (வே.க.பக். 121)

ம., தெ. வேள்வி; க. பேலுவெ (b).

வேள்விக்கபிலை *vēlvi-k-kabilai,* பெ.(n.) வேள்விக்குரிய பால் முதலியவற்றை கொடுத் துதவும் பசு (தொல். பொ. 177, உரை); cow that yields milk, ghee, etc, necessary for

a sacrifice.

[வேள்வி + கபிலை]

வேள்விக்குடி *vēḷvi-k-kuḍi,* பெ.(n.) தேவார பாடல்களில் இடம் பெற்ற குடியிருப்புகளில் ஒன்று; humble dwelling.

குடி என்னும் சொல் ஊர்ப்பெயர்களில் அமைந்த குடியிருப்பை உணர்த்துவதாகும். இளையான் குடியிற் பிறந்த மாறன் என்ற திருத்தொண்டர் இளையான்குடி மாறன் என்று பெரிய புராணத்தில் பேசப்படுகின்றார்.

[வேள்வி + குடி]

வேள்விக்குண்டம் *vēḷvi-k-kuṇḍam,* பெ.(n.) வேள்விக்குழி (பிங்.); sacrificial pit.

[வேளவி + குண்டம்]

வேள்விக்குவேந்தன் *vēḷvikku-vēndaṉ,* பெ.(n.) வேள்வி நாயகன் பார்க்க (சூடா.); see *vēḷvi-nāyagaṉ.*

[வேள்விக்கு + நாயகன்]

வேள்விச்சாலை *vēḷvi-c-cālai,* பெ.(n.) வேள்வி நிகழ்த்தும் இடம்; sacrificial hall. *“வேள்விச் சாலையின் வேந்தன் போந்தபின்” (சிலப். 30, 170).*

[வேள்வி + சாலை]



வேள்வித்தறி *vēḷvi-t-taṟi,* பெ.(n.) வேள்வித் தூணம் பார்க்க (பிங்.); see *vēḷvi-t-tūṇam.*

[வேள்வி + தறி]

வேள்வித்தூண் *vēḷvi-t-tūṇ,* பெ.(n.) வேள்வித்தூணம் பார்க்க (சூடா.); see *vēḷvi-t-tūṇam.*

[வேள்வி + தூண்]

வேள்வித்தூணம் *vēḷvi-t-tūṇam,* பெ.(n.) வேள்வியில் கடவுளுக்கு உணவான உயிரியைக் கட்டிவைக்கும் தம்பம்; stake to which the sacrificial victim is fastened. *“மணிச்சிரல்.......... வேள்வித் தூணத் தசைஇ” (பெரும்பாண். 316).*

[வேள்வி + தூணம்]

வேள்விநாயகன் *vēḷvi-nāyagaṉ,* பெ.(n.) இமையவர் கோன் (பிங்.); indra, as the lord of sacrifices.

[வேள்வி + நாயகன்]

வேள்விநிலை *vēḷvi-nilai,* பெ.(n.) 1. அரசன் வேள்வி செய்த பெருமையைப் புகழ்ந்து கூறும் புறத்துறை (பு.வெ. 9, 15); *(puṟap)* theme describing the greatness of sacrifies performed by a king. 2. தலைவன் சேதாவினை நாட்காலையிற் கொடுக்குங் கொடைச் சிறப்பினைக் கூறும் புறத்துறை (தொல். பொ. 90); *(puṟap)* theme describing the benevolence of a chief in making gifts of red cows, in the early hours of the day.

[வேள்வி + நிலை]

வேள்விமலை *vēḷvi-malai,* பெ.(n.) திவ்விய மருந்து மூலிகைகளையுடைய ஒரு மலை;

mountain containing many extra ordinary drugs.

[வேள்வி + மலை]

வேள்விமுதல்வன் *vēḷvi-mudalvaṉ,* பெ.(n.) 1. வேள்வித் தலைவன் (பரிபா. 3, 4, 5, உரை); sacrificer, one who performs a sacrifice. 2. வேள்வி நாயகன் பார்க்க; see *vēḷvi-nāyakaṉ.* *“விலங்கென விண்ணோர் வேள்விமுதல்வன்” (பரிபா. 5, 31).*

[வேள்வி + முதல்வன்]

வேள்வியாசிரியன் *vēḷvi-y-āciriyaṉ,* பெ.(n.) வேள்வி செய்விக்கும் போற்றாளி (தொல். பொ. 75, உரை); priest who conducts a sacrifice.

[வேள்வி + ஆசிரியன்]

வேள்வியாளன் *vēḷvi-y-āḷaṉ,* பெ.(n.) 1. பார்ப்பனன் (திவா.); brahmin. 2. கொடையாளன் (பிங்.); munificent person.

[வேள்வி + ஆளன்]

வேள்வியின்பதி *vēḷviyiṉ-pati,* பெ.(n.) திருமால் (பிங்.); *visṇu,* as the lord of sacrifice.

[வேள்வியின் + பதி]

வேள்வு *vēḷvu,* பெ.(n.) 1. வேள்வி; sacrifice. *“விழவும் வேள்வும் விடுத்தலொன்றின் மையால்” (சீவக. 138).* 2. மணத்தில் மணமக்கள் வீட்டார்கள் வரிசையாக வெடுக்கும் உணவுப்பண்டம்; presents of food-stuffs from the hose of the bridegroom to that of the bride and vice versa, at a wedding (C.N.). 3. அரும் பண்டம் (யாழ்.அக.); rare commodity.

[வேள் → வேள்வு]

வேள்வெடு-த்தல் *vēḷveḍu-,* செ.கு.வி.(v.i.) 1. மணமகன் வீட்டாருக்கு மணமகள் வீட்டாரும் மணமகள் வீட்டாருக்கு மணமகன் வீட்டாரும் விருந்துக்குரிய வரிசைப் பண்டங்களை யனுப்புதல்; to send presents of food-stuffs from the house of the bride groom to that of the bride and vice versa, at a wedding. 2. பல பண்டந் தேடிக் கொண்டு போதல் (யாழ்.அக.); together and carry varied articles.

[வேள்வு + எடு]

வேளம் *vēḷam,* பெ.(n.) 1. சோழராற் சிறைபிடிக்கப்பட்ட உயர் குலத்து மகளிர் அடிமையாக வாழும்படி அமைத்த அரண்; fortified place where ladies of rank captured in war were kept as slaves by the *cōḷas.* *“மீனவர் கானகம்புக............ வேளம்புகுமடவீர்” (கலிங். 41).* *“வீர பாண்டியனை முடித்தலை கொண்டு அவன் மடக்கொடியை வேளமேற்றி”* (S.I.I.iii,217). 2. இருப்பிடம்; quarters (S.I.I.ii,440).

[வெள் → வேள் → வேளம்]

வேளமேற்று-தல் *vēḷa-mēṟṟu-,* செ.குன்றாவி.(v.t.) சிறைபிடித்த மகளிரை வேளத்தில் அமர்த்துதல் (S.I.I.iii, 217); to confine ladies of rank captured in war within a *vēḷam.*

[வேளம் + ஏற்று-,]

வேளன் *vēḷaṉ,* பெ.(n.) வேளான் பார்க்க; see *vēḷāṉ.*

[வேள் → வேளன்]

வேளா[1] *vēḷā,* வி.எ.(adv.) ஒரு பயனுமின்றி (பிங்.); to no purpose.

[வாளா → வேளா]

வேளா[2] *vēḷā,* பெ.(n.) செம்மண் நிறமுள்ளதும் இருபது அடி நீளம் வளர்வதுமான சுறாமீன் வகை; sawfish, sandy brown, attaining 20 ft. in length, pristis zyzrom.

வேளாகெடுத்தை *vēḷā-keḍuttai,* பெ.(n.) நச்சுத் தன்மையுடன் கூடிய பெரும் முட்களை யுடைய மீன் (தஞ்சை. மீன.); a kind of fish which have the large poisonous thorns.

[வேளா + கெடுத்தை]

வேளாச்சுறா *vēḷā-c-curā,* பெ.(n.) பெரிய சுறா மீன் வகை; a large cetaceous fish-Grampus.

[வேளா + சுறா]



வேளாட்டி *vēḷāṭṭi,* பெ.(n.) வெள்ளாட்டி பார்க்க (இலக். வி. 45, உரை); see *veḷḷāṭṭi.*

வேளாண்மாந்தர் *vēḷāṇ-māndar,* பெ.(n.) வேளாளர் (தொல். பொ. 635); *vēḷāḷar.*

[வேளாண் + மாந்தர்]

வேளாண்மாந்தரியல்பு *vēḷāṇ-māndariyalbu,* பெ.(n.) ஆணை வழிநிற்றல், அழிந்தோரை நிறுத்தல், கைக்கடனாற்றல், கசிவகத்துண்மை, ஒக்கல் போற்றல், ஒவாமுயற்சி, மன்னிறைதருதல், ஒற்றுமை கோடல், விருந்து புறந்தருதல், திருந்திய வொழுக்கம் என்ற வேளாளர்க்குரிய பத்துவகைத் தன்மைகள் (வின்.); characteristics of the *vēḷāḷas*, ten in number viz., *āṇai-vaḻi-niṟṟal, aḻintōrai-niṟuttal, kaikkaṭaṉ-āṟṟal, kacivaga-t-tuṇmai, okkal-pōṟṟal, ovā-muyaṟci, maṉṉiṟai-tarutal, oṟṟumai-kōḍal, virundu-puṟantarutal, tiruntiya-v-oḻukkam.*

[வேளாண்மை + மாந்தர் + இயல்பு]

வேளாண்மை *vēḷāṇmai,* பெ.(n.) 1. கொடை (பிங்.); gift, bounty, liberatity. 2. உதவி; beneficence, help. *"விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள், 81).* 3. பயிர் செய்யும் தொழில்; cultivation of the soil, agriculture, husbandry. 4. உண்மை (பிங்.); truth. *"வேளாண்மை தானும் விளைந்திட" (கொண்டல்விடு. 84).*

[வேள் → வேளான் → வேளாண்மை] (வே.க.பக். 122)

வேளாண்மையமர்க்களம் *vēḷāṇmai-y-amarkkaḷam,* பெ.(n.) அறுவடைக்காலத்து நிகழும் நெற்களத் தாரவாரம்; stir and bustle of harvest.

[வேளாண்மை + அமர்க்களம்]

வேளாண்வாகை *vēḷāṇ-vāgai,* பெ.(n.) வேளாளன் செய்தற்குரிய கடமைகளை நிறைவேற்றலைக் கூறும் புறத்துறை (பு. வெ. 8,11); theme of exalting a *vēḷāḷa* for doing the duties laid upon him by caste rules.

[வேளாண் + வாகை]

வேளாண்வாயில் *vēḷāṇ-vāgai,* பெ.(n.) இரத்தல் (யாசிக்கை); begging, as offering an outlet for liberality. *"வேளாண்வாயில் வேட்பக் கூறி" (பொருந. 75).*

[வேளாண் + வாயில்]

வேளாதரம் *vēḷādaram,* பெ.(n.) 1. ஒருவகைப் புரசமரம்; a tree. 2. வைம்புரசு; Butea frodosa.

வேளாரி *vēḷāri,* பெ.(n.) (விராலி) செடிவகை (லத்.); Jamaica switch sorrel.

வேளாவளி *vēḷāvaḷi,* பெ.(n.) 1. பண் (பரத. இராக. 56); (mus.) a specific melody-type. 2. செவ்வழிக்குப் புறமான பண்திற வகை (சிலப். 14, 160-167, உரை); a secondary melody - type of the cevvali - class.

வேளாவேளை *vēḷā-vēḷai,* வி.எ.(adv.) 1. சிற்சில சமயத்தில்; at one time or another, occasionally. 2. உரிய காலத்தில்; at the proper time. *'நீ வேளாவேளையில் வரவேண்டும்'.*

[வேளை + வேளை]

வேளாளர்செய்கை *vēḷāḷar-ceykai,* பெ.(n.) வேளாண்மாந்தரியல்பு பார்க்க (பிங்.); see *vēḷāṇ-māntar-iyalpu.*

[வேளாளர் + செய்கை]

வேளாளரறுதொழில் *vēḷāḷaṟu-toḻil,* பெ.(n.) உழவு, பசுக்காவல், வாணிபம், கயிலுவம், காருகவினை, இ.ரு பிறப்பாளர்கேவல் செயல் என்னும் வேளாளர்க்குரிய அறுவகைத் தொழில் (திவா.); the six occupations of the *vēḷāḷas.*

[வேளாளரறு + தொழில்]



வேளாளன் *vēḷāḷaṉ,* பெ.(n.) 1. ஈவோன் (பிங்.); liberal person. *"வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்" (திரிகடு. 12).* 2. ஒரு குலம்; *vēḷāḷa,* a caste. 3. வேளாள வகுப்பினன்; a person of *vēḷāḷa* caste. 4. வணிகன் (வைசியன்) (பிங்.); vaisya. 5. கடைமகன் (சூத்திரன்) (பிங்.); *śūdra.*

[வேள் → வேளாளன்]

வேளான் *vēḷāṉ,* பெ.(n.) 1. குலப்பெயர்; a caste title. *"மதுராந்தக மூவேந்த வேளான்" (S.I.I.ii,10).* 2. குயவர் வகுப்புப் பெயர்; a title of persons belonging to the kuyavar caste.

[வேள் → வேளான்]

வேளானுகூலம் *vēḷāṉukūlam,* வி.எ.(adv.) விதிப்படி; according to fate.

வேளிர் *vēḷir,* பெ.(n.) 1. தமிழ் நாடாண்ட ஒரு சார் அரசர் குலத்தார்; a class of ancient cheifs in the tamil country. *"நாற்பத் தொன்பது வழிமுறை வந்த வேளிருள் வேளே" (புறநா. 201).* 2. சளுக்கு வேந்தர் (திவா.); the *cāḷukyas.* 3. குறுநில மன்னர் (சூடா.); petty cheifs.

[வேள் → வேளிர்]

வேளிருகைச்சீலை *vēḷirugai-c-cīlai,* பெ.(n.) கரும்பு; sugar cane - saccharum officinarum.

[வேளிருகை + சீலை]

வேளுகி *vēḷugi,* பெ.(n.) வேம்பாடம் பட்டை பார்க்க; see *vēmpāḍam-paṭṭai.*

வேளுங்கி *vēḷuṅgi,* பெ.(n.) வேம்பாடல் பார்க்க; see *vēmpāḍal.*

வேளுங்கு *vēḷuṅgu,* பெ.(n.) 1. மரவகை (மலை.); tube in tube wood, tr., dalbergia paniculata. 2. ஒரு வகைக்கொடி (சங்.அக.); red creeper.

வேளுசி *vēḷuci,* பெ.(n.) அகிற்கட்டை; eagle-wood.

வேளை[1] *vēḷai,* பெ.(n.) 1. காலம், 1,2,3,6 பார்க்க; see *kālam.* 2. வினைப்பயன் (கரும வினை.) (யாழ்.அக.); ethical causation.

[வே → வேளை]

வேளை[2] *vēḷai,* பெ.(n.) 1. நாய்க்கடுகுச்செடி (சங்.அக.); black vailay. *"வேளை வெண்பூ" (புறநா. 23).* 2. செடிவகை; a sticky plant that grows best in sandy places.

[வேள் → வேளை]

வேளை[3] *vēḷai,* பெ.(n.) 1. ஒரு வகை பூடு. இதன் இலைகளைப் பச்சையாகவே பயன்படுத்தலாம்; இதனின்று ஒரு வித காரமான எண்ணெய் எடுக்கலாம்; அது சீக்கிரத்தில் ஆவியாய்ப் போகக் கூடியது; இதன் இலையின் சாற்றைப் பிழிந்து காதுகளில் விட, சீல் வடிதலும் காது வலியும் குணப்படும். இதன் சூரணம் குழந்தைகளுக்கு கொடுப்பதுண்டு; வெள்ளைப் பூண்டுடன் மருந்துக் குடிநீர் காய்ச்சி அதனின்று தைல மெடுத்து குட்டம் முதலாகிய தோல் நோய்களுக்கு கொடுக்கலாம். இதிலிருந்து தைலமிறக்கித் தலை முழுக சீதளம், ஊதை சிலேட்டுமம், ஊதை இவைகள் போகும்; நல்வேளை வேர் பல் விளக்க உதவும், அழகு உண்டாகும்; a medicinal plant. cleome pentaphylla; Its leaves are edible and used as greens. Its root is used as tooth brush, and it causes brightness of the face. Its juice along with that of garlic is used to consolidate vermilion. That vermillion is very useful for fevers (by C.D.). 2. மூளையின் இறைச்சி; cerebrum or cerebellu. 3. காலம் (பிங்.); time.

வேளை வகைகள்; the varieties are

1. தை வேளை – a plant - cleome felina.
2. நல்ல வேளை – a useful variety of *vēḷai.*
3. நாய்வேளை – a plant - cleome viscosa.
4. முக்கா வேளை – Galega spinosa.
5. கொள்ளுக்காய் வேளை – Tephrosia purpurea alias T.villosa.

[வேலை → வேளை] (தே.நே.பக். 159)

வேளைக்காரர் *vēḷai-k-kārar,* பெ.(n.) அரசர்க்கு வேளைப்படி உரிய பணியைத் தாம் செய்யவியலாதபோது தம்முயிரை மாய்த்துக் கொள்வதாக விரதம் பூண்ட பணியாளர்; devoted servants who hold them-selves responsible for a particular service to their king at stated hours and vow to stab themselves to death if they fail in that. *"பூவேளைக் காரரைப் போலே...... கைமேலே முடிவா ரொருவரிறே" (ஈடு. 5, 1, 9).*

[வேளை + காரர்]

வேளைக்காரன் *vēḷai-k-kāraṉ,* பெ.(n.) தீமை உண்டாக்கும் காலக் கடவுள்; evil time, personified. *'வேளைக்காரன் இப்படி படுத்துகிறான்'.*

[வேளை + காரன்[1]]

வேளைக்குறை *vēḷai-k-kuṟai,* பெ.(n.) தீயகாலம் (வின்.); bad times.

[வேளை + குறை]

வேளைப்பாசை *vēḷai-p-pāšai,* பெ.(n.) செடிவகை; Rhombleaved morning mallow, sida rhombifolia.

[வேளை + பாசை]

வேளைப்பிசகு *vēḷai-p-pušagu,* பெ.(n.) வேளைக்குறை பார்க்க; see *vēḷai-k-kuṟai.*

[வேளை + பிசகு]

வேளைப்பிழை *vēḷai-p-piḻai,* பெ.(n.) வேளைக் குறை பார்க்க (வின்.); see *vēḷai-k-kuṟai.*

[வேளை + பிழை]

வேளைபார்-த்தல் *vēḷai-pār-,* செ.கு.வி. (v.i.) 1. நன் முழுத்தம் பார்த்தல்; to fix an auspicious hour. *'பெண்ணை ஊருக்கு அனுப்ப வேளை பார்க்க வேண்டும்'.* 2. தக்க அமையம் பார்த்தல்; to wait for an opportunity.

[வேளை + பார்-,]

வேளைபூண்(ணு)-தல் *vēḷai-pūṇ(ṇū)-,* செ.கு.வி.(v.i.) மன்றாடுதல் (யாழ்.அக.); to beseech.

[வேளை + பூண்(ணு)-,]

வேளையம் *vēḷaiyam,* பெ.(n.) வெற்றிலை பாக்கு; betel leaves and areca-nuts.

க. வீளைய.

[வடையம் → வேளையம்]

வேற்கழலி *vēṟ-kaḻali,* பெ.(n.) உடம்பின் நரம்பு; nerves of the body.

வேற்காரன் *vēṟ-kāraṉ,* பெ.(n.) 1. வேற் கருவியுடைய மறவன்; spearman. 2. அரச பணியின் படைக்கலக் கையன்; armed servant of a king. *"ராஜாக்கள் ராஜத்துரோகம் பண்ணினவர்களை நலிகைக்கு வேற்காரரை வரவிடுமா போலே" (ஈடு. 1, 4, 9).*

[வேல்[1] + காரன்[1]]

வேற்குஞ்சரன் *vēṟ-kuñjaraṉ,* பெ.(n.) தேவாங்கு; an animal, sloth.

[வேல் + குஞ்சரன்]

வேற்கோட்டம் *vēṟ-kōṭṭam,* பெ.(n.) முருகவேள் கோயில்; temple of skanda. *"உச்சிக்கிழான் கோட்ட மூர்க்கோட்டம் வேற்கோட்டம்" (சிலப். 9, 11).*

[வேல் + கோட்டம்]

வேற்றலம் *vēṟṟalam,* பெ.(n.) காற்று (பிங்.); wind.

வேற்றவன் *vēṟṟavaṉ,* பெ.(n.) 1. அயலான்; stranger. *"வேற்றவர்க் கெட்டா யோகர்" (சேதுபு. தோத். 43).* 2. பகைவன்; enemy. *"வேற்றவ ரார்த்தனர்" (கம்பரா. இராவணன்வதை. 78).*

[வெறு → வேறு + அன்] (வே.க.பக். 147)

வேற்றாள் *vēṟṟāḷ,* பெ.(n.) 1. அன்னிய மானவ-ன்-ள்; stranger. *"வேற்றாளென்ன வொண்ணாதபடி" (ஈடு. 5, 10, 2).* 2. பறை (வின்.); pariah.

[வெறு → வேறு → வேற்று + ஆள்] (வே.க.பக்.147)

வேற்றான் *vēṟṟāṉ,* பெ.(n.) 1. வேற்றவன் 1 பார்க்க; see *vēṟṟavaṉ. "வேற்றார்க டிறத்திவன் றஞ்சமென் வீரவென்றான்" (கம்பரா. வாலிவ. 33).* 2. வேற்றவன் 2 பார்க்க; see *vēṟṟavaṉ. "வேற்றாரை வேற்றார் தொழுத லிளிவரவு" (பரிபா. 20, 71).*

[வெறு → வேறு → வேற்று + ஆன்] (வே.க.பக். 147)

வேற்றானை *vēṟṟāṉai,* பெ.(n.) அறுவகைத் தானையுள் ஒன்றான வேற்படை (திவா.); force of spearmen in an army, one of *aṟuvakai-t-tāṉai.*

[வேள் + தானை]

வேற்றிசைப்பா *vēṟṟicai-p-pā,* பெ.(n.) சருக்கம் அல்லது இலம்பகத்தின் முடிவில் வேறுபாடான இசைபெற்று வரும் பா வகை (திவா.); a verse in a distinctive metre at the end of a carukkam or ilampakam.

[வேறு + இசை + பா]

வேற்று *vēṟṟu,* பெ.எ.(adj.) 1. பிற; other, besides one's own. *'வேற்று மொழிச் சொற்கள் பல் நம் மொழியில் வழங்குகின்றன'.* 2. தொடர்பு இல்லாத, புதிய; unfamiliar, new. *'வேற்று மனிதர்களைக் கண்டு குழந்தை அழுகிறது'.*

[வெறு → வேறு → வேற்று] (வே.க.பக். 147)

வேற்றுக்காற்று *vēṟṟu-k-kāṟṟu,* பெ.(n.) 1. திசைமாறி வீசுங்காற்று; wind from a different direction. 2. அபானவாயு; fart.

[வெறு → வேற்று + காற்று]

வேற்றுக்குடக்கன்வெட்டு *vēṟṟu-k-kuḍa-k-kaṉ-veṭṭu,* பெ.(n.) பழைய நாணய வகை (பணவிடு. 133); an ancient coin.

[வேறு → வேற்று + குடக்கன்வெட்டு]



வேற்றுக்குரல் *vēṟṟu-k-kural,* பெ.(n.) 1. அன்னியர்குரல்; strange voice. 2. மாறு குரல்; unnatural tone, disguised voice.

[வேறு → வேற்று + குரல்]

வேற்றுக்குழல் *vēṟṟu-k-kuḻal,* பெ.(n.) 1. மாறு குரல்; change of voice. 2. தொண்டைக்கம்மல்; hoarse voice.

[வேறு → வேற்று + குழல்]

வேற்றுடம்பு *vēṟṟuḍambu,* பெ.(n.) மாறான வுடம்பு; change in the appearance of body - through diseases.

[வேறு → வேற்று + உடம்பு]

வேற்றுத்தாய் *vēṟṟu-t-tāy,* பெ.(n.) நற்றாயல்லாத மாற்றாந்தாய்; step-mother.

[வேறு → வேற்று + தாய்]

வேற்றுநர் *vēṟṟunar,* பெ.(n.) மாறுவடிவங் கொண்டவர்; persons in disguise. *"நாற்றுவர் முற்றி வேற்றுந ராகென" (பெருங். மகத. 1, 94).*

[வேறு → வேற்று → வேற்றுநர்]

வேற்றுநிலைமெய்ம்மயக்கம் *vēṟṟu-nilai-mey-m-mayakkam,* பெ.(n.) க்,ச்,த்,ப் வொழிந்த பதினான்கு ஒற்றுக்களும் தம்முடன் பிறமெய்கள் வந்து மயங்குகை (நன். 110, உரை); (Gram) coalescence of a consonant except k.c.t.p with a consonant other than itself, in conformity with the rules, as in *paṅku,* opp. to *utaṉilai-meymmayakkam.*

[வேறு → வேற்று + நிலை + மெய் + மயக்கம்]

வேற்றுப்புலம் *vēṟṟu-p-pulam,* பெ.(n.) 1. தனக்கு அன்னியமான விடம்; strange place, foreign place. 2. பகையிடம்; enemy's country. *"வேற்றுப் புலத்திறுத்து" (புறநா. 31).*

[வேறு → வேற்று + புலம்]

வேற்றுப்பொருள்வைப்பு *vēṟṟu-poruḷ-vaippu,* பெ.(n.) சிறப்புப் பொருளைச் சாதிப்பதற்குப் பொதுப் பொருளையும், பொதுப்பொருளைச் சாதிப்பதற்குச் சிறப்புப் பொருளையும் அமைத்துக் கூறும் அணி (தண்டி. 46); a figure of speech in which a particular notion is substantiated by a general notion or vice versa.

[வேறு → வேற்று + பொருள் + வைப்பு]

வேற்றுமணாளன் *vēṟṟu-maṇāḷaṉ,* பெ.(n.) அயலான் (யாழ்.அக.); paramour.

[வேறு → வேற்று + மணாளன்]

வேற்றுமனிதன் *vēṟṟu-maṉitaṉ,* பெ.(n.) அன்னியன்; stranger.

[வேறு → வேற்று + மனிதன்]

வேற்றுமுகம் *vēṟṟu-mugam,* பெ.(n.) 1. அன்னியமுகம்; face of a stranger, unfamiliar face. *'அந்தக் குழந்தைக்கு வேற்றுமுகமில்லை'.* 2. விருப்பு வெருப்பைக் காட்டும் மாறுமுகம்; altered face, indicating one's displeasure.

[வேறு → வேற்று + முகம்]

வேற்றுமுனை *vēṟṟu-muṉai,* பெ.(n.) பகைப்படை; enemy's army. *"வேலூன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்" (அகநா. 67).*

[வேறு → வேற்று + முனை]

வேற்றுமை *vēṟṟumai,* பெ.(n.) 1. வேறுபாடு; difference. *"வேற்றுமையின்றிக் கலந் திருவர் நட்டக்கால்" (நாலடி. 75).* 2. முரண்; antipathy. *"காமம் புகர்பட வேற்றுமைக் கொண்டு பொருள்வயிற் போகுவாய்" (கலித். 12).* 3. ஒப்புமையின்மை; dissimilarity, disagreement. 4. ஒரு பொருளின் வேறு பாடு காட்டற்குரிய தன்மை; characteristic mark distinguishing an in dividual or species. 5. செயப்படு பொருண் முதலாயின வாகப் பெயர்பொருளை வேறுபடுத்துவது (தொல். சொல். 62); (Gram.) case. 6. வேற்றுமை யுருபு பார்க்க (நன்.420); see (Gram) *vēṟṟumai-yurubu.* 7. வேற்றுமைப் புணர்ச்சி பார்க்க (நன். 151); see *vēṟṟumai-p-puṇarcci.* 8. வேற்றுமையணி பார்க்க (தண்டி. 49); see *vēṟṟumai-y-aṇi.*

[வெறு → வேறு → வேற்றுமை] (வே.க.பக். 146)

வேற்றுமைகாட்டு-தல் *vēṟṟumai-kāṭṭu-*, செ.கு.வி.(v.i.) வேறுபாடு காட்டுதல் (யாழ்.அக.); to differentiate, to make a difference, to make invidious distinction.

[வேற்றுமை + காட்டு-,]

வேற்றுமைத்துணை *vēṟṟumai-t-tuṇai*, பெ.(n.) படை பொருள் முதலிய புறப் பொருள்களால் அரசர்க்கு அமையுந் துணை (குறள், 861, உரை); external help derived by a king from his army, wealth, etc.

[வேற்றுமை + துணை]

வேற்றுமைத்தொகை *vēṟṟumai-t-togai*, பெ.(n.) வேற்றுமையுருபு தொக்கு வருந் தொடர் (நன். 363); a compound in which the case-ending is elliptical.

[வேற்றுமை + தொகை]

வேற்றுமைநயம் *vēṟṟumai-nayam*, பெ.(n.) வேறுபடுத்திப் பார்க்கும் முறை (நன். 451); view point of diffrentiation, opp. to *oṟṟumai-nayam*.

[வேற்றுமை + நயம்]

வேற்றுமைநிலை *vēṟṟumai-nilai*, பெ.(n.) பொருளணிவகை (யாப். வி. பக. 511); a figure of speech.

[வேற்றுமை + நிலை]

வேற்றுமைப்புணர்ச்சி *vēṟṟumai-p-puṇarcci*, பெ.(n.) வேற்றுமையுருபுகள் இடையில் விரிந்து தொக்கும் வரு சொற்கள் புணர்வது (நன். 152, உரை); (Gram.) combination of two words, the case-ending of the first of which is either expressed or understood.

[வேற்றுமை + புணர்ச்சி]

வேற்றுமைமயக்கம் *vēṟṟumai-mayakkam*, பெ.(n.) ஒரு வேற்றுமையுருபு வேறொரு வேற்றுமைப் பொருளில் வருகை; (Gram.) antiptosis, use of one case for another.

[வேற்றுமை + மயக்கம்]

வேற்றுமையணி *vēṟṟumai-yaṇi*, பெ.(n.) ஒப்புமையுடைய இருபொருளை ஒரு பொருளாக வைத்து இவற்றை தம்முள் வேற்றுமைப்பட அழகுறக் கூறுவது வேற்றுமையணியாம்; a figure of speech in which the difference between the things compared is mentioned explicitly.

[வேற்றுமை + அணி]

வேற்றுமையுருபு *vēṟṟumai-y-urubu*, பெ.(n.) இரண்டு முதல் ஏழு வரையிலுமுள்ள ஆறு வேற்றுமைகளை உணர்த்தும் உருபுச்சொல் (நன்.); (gram.) case endings of the six cases from the accusative to the locative.

[வேற்றுமை + உருபு]

வேற்றமைவிரி *vēṟṟumai-viri*, பெ.(n.) வேற்றுமையுருபு விரிந்து நிற்குந்தொடர்; (gram.) compound in which the case ending is expressed.

[வேற்றுமை + விரி]

வேற்றுரு *vēṟṟuru*, பெ.(n.) மாற்றுருவம்; disguised form or shape. *"யாவரும் விளைபொரு ளுரையார் வேற்றுருக் கொள்கென" (மணி. 26, 69).*

[வேற்று + உரு]

வேற்றுவன் *vēṟṟuvaṉ,* பெ.(n.) அயலான்; stranger. *"வேற்றுவ ரில்லா நுமரூர்க்கே செல்லினும்" (சீவக. 1550).*

[வேறு → வேற்று → வேற்றுவன்]

வேற்றுவேடம் *vēṟṟu-vēḍam,* பெ.(n.) மாறுவேடம்; disguise.

[வேறு → வேற்று + வேடம்]

வேற்றொலிவெண்டுறை *vēṟṟoli-veṇ-ḍuṟai,* பெ.(n.) முன்பிற் சில அடிகள் ஓரோசையாயும் பின்பிற் சில அடிகள் மற்றோரோசையாயும் வரும் வெண்டுறை வகை (காரிகை. செய். 7, உரை); a kind of *veṇ-tuṟai* in which the first few lines have one kind of rhythm and the succeding lines have a different kind of rhythm.

[வேறு → வேற்று + ஒலி + வெண்டுறை]

வேற்றோன் *vēṟṟōṉ,* பெ.(n.) வேற்றுவன் பார்க்க; see *vēṟṟuvaṉ.* *"வேற்றோன் போல மாற்றம் பெருக்கி" (பெருங். இலாவாண. 8, 147).*

[வேறு → வேற்று → வேற்றோன்] (வே.க.பக். 146)

வேறா-தல் *vēṟā-,* செ.கு.வி.(v.i.) 1. பிரிதல்; to be separated, disunited. 2. பிறிதாதல்; to be different. *'உடல் உயிரின் வேறாயது'.* 3. மாறுபடுதல்; to become different or altered. *"வளம் பெறினும் வேறாமோ சால்பு" (பு.வெ. 8, 31).* 4. மனம் மாறுபடுதல்; to change in one's mind. *"வினை வகையான் வேறாகு மாந்தர் பலர்" (குறள், 514).* 5. முன்னைய தன்மை குலைதல்; to be spoilt, as in quality. *"வெறி கொள் வியன் மார்பு வேறாகச் செய்து" (கலித். 93).* 6. சிறப்புடையதாதல்; to be distinguished or particularised; to be special. *"நிமித்தஞ் சொல்வார் பலருள்ளும் நின்னை வேறாகக் கொண்டு" (திணைமாலை. 90, உரை).* 7. ஒதுக்காதல்; to be away from. *"வேறாகக் காவின் கீழ்ப்போதரு" (கலித். 94).* 8. தனியாதல்; to be alone. *"சீவக சாமி வேறா விருந்தாற்கு" (சீவக. 1872).*

[வேறு + ஆ]

வேறிடம் *vēṟiḍam,* பெ.(n.) தனியிடம் (யாழ்.அக.); solitude, retreat.

[வேறு + இடம்]

வேறு *vēṟu,* பெ.(n.) 1. பிறிது; other, that which is different. *"வேறோர் பரிசிங்கொன்றில்லை" (திருவாச. 33, 5).* 2. பிரிந்தது; that which is separated. 3. கூறுபாடு; class, kind. *"இருவேறுலகத்தியற்கை" (குறள், 374).* 4. பகைமை (சீவக. 755); enmity, opposition. 5. எதிரிடையானது; that which is opposite. 6. தீங்கு; evil. *"அறிந்ததோ வில்லைநீ வேறோர்ப்பது" (கலித். 95).* 7. புதிது; that which is new. *"யாம் வேறியைந்த குறும்பூழ்ப்போர் கண்டேம்" (கலித். 95).* 8. சிறப்புடையது; that which is special or distinct; that which is distinguished or particularised. *"அவ்விருதிறத்தார்க்கும் இவ்வறம் வேறாகச் சிறந்தமையின்" (குறள், 120, உரை), "வேறாக நின்னை வினவுவேன்" (திணைமாலைநூற். 90).* 9. தனி (சீவக. 1872); solitariness. 10. காவியம் முதலியவற்றில் செய்யுள் வேறுபாட்டினைக் குறிப்பதற்கு இடும் தலைப்புச் சொல்; a word used as a heading in poems, to indicate change of metre.

[விறு → வெறு → வேறு] (வே.க.பக். 145)

வேறுகொள்(ளு)-தல் *vēṟu-koḷ(ḷu)-*, செ. குன்றாவி.(v.t.) 1. தனிமையான இடத்தைச் சேரவிடுதல்; to remove to a secluded place. *"கொடிய வல்வினையேன் றிறங் கூறுமின் வேறுகொண்டே" (திவ். திருவாய். 6, 1, 9).* 2. சிறப்புடையதாக மதித்தல்; to mark out, to treat with special regard. *"வேறு கொண் டும்மையா னிரந்தேன்" (திவ். திருவாய். 6, 1, 10).* 3. மாறாகக் கொள்ளுதல்; to understand differently. *"வெளிறிலாக் கேள்வியானை வேறு கொண்டிருந்து சொன்னான்" (சீவக. 200).*

[வேறு + கொள்(ளு)-,]

வேறுசெய்-தல் *vēṟu-šey-*, செ.குன்றாவி. (v.t.) 1. பகை விளைத்தல்; to cause dissensions, to create enmity. *"வேந்த னும்மையும் வேறுசெய்து" (சீவக. 755).* 2. வேறுகொள்-, 2 பார்க்க; see *vēṟu-koḷ-*. *"வீரனார் வேறுசெய்து தம்முளென்னை வைத்திடாமையால்" (திவ். திருச்சந். 116).*

[வேறு + செய்-,]

வேறுநினை-த்தல் *vēṟu-niṉai-*, செ.கு.வி. (v.i.) 1. திரிபாக நினைத்தல்; to think differently to isunderstand. 2. உதவி செய்தவர்க்கு தீங்கு செய்ய எண்ணுதல்; to be ungreateful and think of doung evil.

[வேறு + நினை-,]

வேறுநினைவு *vēṟu-niṉaivu*, பெ.(n.) கருத் தின்மை; absence of mind, inattention.

[வேறு + நினைவு]

வேறுபடு[1]-தல் *vēṟu-paḍu-*, செ.கு.வி.(v.i.) வேறா-, பார்க்க; see *vēṟā*. *"வேறுபட டாங்கே கலுழ்தி" (கலித். 91).*

[வேறு + படு-,]

வேறுபடு[2]-த்தல் *vēṟu-paḍu-*, செ.குன்றாவி. (v.t.) வேறுபடுத்து-, பார்க்க; see *vēṟu-paḍuttu-*.

[வேறு + படு-,]

வேறுபடுத்து-தல் *vēṟu-paḍuttu-*, செ. குன்றாவி.(v.t.) 1. மாற்றுதல்; to change, alter. 2. வேற்றுமை; to make different. 3. நட்புப் பிரிவினை செய்தல் (குறள், 467, உரை); to sow discord between, to alienate. 4. பிரித்தல் (சங்.அக.); to separate.

[வேறு + படுத்து-,]

வேறுபண்ணு[1]-தல் *vēṟu-paṉṉu-*, செ. குன்றாவி.(v.t.) வேறுபடுத்து-தல் பார்க்க; see *vēṟu-paḍuttu-*.

[வேறு + பண்ணு-,]

வேறுபண்ணு[2]-தல் *vēṟu-paṉṉu-*, செ.கு.வி. (v.i.) 1. மன வருத்தங் கொள்ளச் செய்தல்; to create misunderstanding. *'அவன் அண்ணனுக்கும் தம்பிக்கும் வேறு பண்ணுகிறான்'.* 2. எதிரிடை செய்தல்; to do the very opposite. *'தகப்பன் சொன்னதற்குப் பிள்ளை வேறு பண்ணுகிறான்'.*

[வேறு + பண்ணு-,]

வேறுபாட்டொழிப்பு *vēṟu-pāṭṭoḻippu*, பெ.(n.) அவநுதியணிவகை (யாழ்.அக.); a variety of avanuti.

[வேறு + பாட்டொழிப்பு]

வேறுபாடு *vēṟupāḍu*, பெ.(n.) 1. வேற்றுமை; difference. *"மேலைக் கிளவியொடு வேறுபாழலிவே" (தொல். சொல். 217).* 2. மன மாறுபாடு; disagreement. *"சுண்ணத்திற் றோன்றிய வேறுபாடு" (சீவக. 903).* 3. வேற்றுமை 2 பார்க்க; see *vēṟṟumai* 2.

"காமதன் மங்குற்றப் படும்படி அதனோடு வேறு பாடுகொண்டு" (கலித். 12, உரை).

வேறுமருந்து *vēṟu-marundu,* பெ.(n.) ஒரு மருத்துவரிடம் மருந்து சாப்பிடுங்காலத்தில் அதை விட்டு மற்றொருவரிடம் வாங்கி சாப்பிடும் மருந்து; to take medicine from another physician while taking from one.

[வேறு + மருந்து]

வேன் *vēṉ,* பெ.(n.) மிகுதி (வின்.); excess.

[வியன் → வேன்]

வேன்காண்(ணு)-தல் *vēṉ-kāṇ(ṇu)-,* செ.கு.வி. (v.i.) அளவில் அதிகமாயிருத்தல்; to be in excess. *'நெல்லை யளந்ததில் இரண்டு மரக்கால் வேன்கண்டது'.*

[வேன் + காண்(ணு)-,]

வேன்மகன் *vēṉ-magaṉ,* பெ.(n.) முருக பூசை செய்பவன்; the sacrificing priest. *"வெறியவர் வெங்களத்து வேன்மகன்" (நாலடி, 16).*

[வேன் + மகன்]

வேனல்¹ *vēṉal,* பெ.(n.) 1. வெப்பம்; heat. *"வேனன்மல்கி வெண்டேர் சென்ற வெந்நிலம்" (சீவக. 2578).* 2. வேனிற்காலம்; hot season. *"நீடிய வேனிற்பாணி" (சிலப். 8, வெண்பா. 2).* 3. சினம்; anger. *"வேனலானை யுரித்த வீரட்டரே" (தேவா. 960, 5).*

[வேனில் → வேனல்]

வேனல்² *vēṉal,* பெ.(n.) கானல்; glare.

[வேனில் → வேனல்]

வேனற்கட்டி *vēṉaṟ-kaṭṭi,* பெ.(n.) வேனிற் காலத் துண்டாகுஞ் சிரங்கு; summer boil.

[வேனல் + கட்டி]

வேனிகா *vēṉikā,* பெ.(n.) கத்தூரி; musk.

வேனில்¹ *vēṉil,* பெ.(n.) 1. வேனிற்காலம் பார்க்க; see *vēṉiṟ-kālam. "வேனிலாயினுந் தண்புனலொழுகுந் தேனூர்" (ஐங்குறு. 54).* 2. இளவேனில்; spring season. 3. வெப்பம்; heat. *"வேனி னீடிய சுரனிறந்தோரே" (அகநா. 201).* 4. கானல் (பிங்.); mirage.

[வே → வேனில்]

வேனில்² *vēṉil,* பெ.(n.) 1. ஒப்பனை; decoration. 2. அழகு; beauty. 3. பொலிவு; splendour.

[வேய் → வேனில்]

வேனில்³ *vēṉil,* பெ.(n.) 1. வெயிற்காலம்; summer season. 2. எச்சிலுமிழ் நீர்; saliva-sputum.

[வே → வேனில்]

வேனில்நீர் *vēṉil-nīr,* பெ.(n.) 1. எச்சில் நீர்; spit. 2. உமிழ் நீர்; saliva.

[வேனில் + நீர்]

வேனிலவன் *vēṉilavaṉ,* பெ.(n.) வேனிலான் பார்க்க; see *vēṉilāṉ. "வேனிலவன் மேனுதல் விழித்தவன்" (பாரத. முதற்போர். 63).*

[வேனில் + அவன்]

வேனிலாளி *vēṉilāḷi,* பெ.(n.) வேனிலான் பார்க்க (பிங்.); see *vēṉilāṉ.*

[வேனில் + ஆளி]

வேனிலான் *vēṉilāṉ,* பெ.(n.) காமன்; *kāma,* as god of spring. *"வேனிலான் வருநெறி வெண்முள் வித்தினார்" (சீவக. 2635).*

[வேனில் + ஆன்]

வேனிற்காலம் *vēṉiṟ-kālam,* பெ.(n.) கோடைக்காலம்; hot season, summer.

[வேனில் + காலம்]

வேனிற்பச்சை *vēṉiṟ-paccai,* பெ.(n.) தேட்கொடுக்கி பார்க்க; see *tēṭ-koḍukki.*

[வேனில் + பச்சை]

வேனிற்பள்ளி *vēṉiṟ-paḷḷi,* பெ.(n.) நிலாமுற்றம்; open terrace of a house, as a place for resting and enjoying the moon light during summer. *"மேனிலை மருங்கின் வேனிற் பள்ளியேறி" (சிலப். 8, 18).*

[வேனில்' + பள்ளி]

வேனிற்பாசறை *vēṉiṟ-pāsaṟai,* பெ.(n.) போர் மேற் சென்ற அரசன் வேனிற் காலத்துத் தங்கும் படை வீடு (தொல். பொ. 76); summer camp of a king waging war, dist. fr., *kirtiṟ-p-pācaṟai.*

[வேனில் + பாசறை]

வேனின்மாலை *vēṉiṉ-mālai,* பெ.(n.) நூற்றொகுதி (பிரபந்தம்) தொண்ணூற் றாறனுள் இளவேனில் முதுவேனில் என இருதிறப்பட்ட பருவங்களையும் சிறப்பித்துக் கூறும் நூல் (வீரசிங்காதன. அகளங்க. 7); a poem describing the two divisions of the hot season, *iḷa-vēṉil* and *mudu-vēṉil,* one of 96 pirapantam.

[வேனின் + மாலை]

வேனீற்று *vēṉīṟṟu,* பெ.(n.) வேனிற்பச்சை பார்க்க; see *vēṉiṟ-paccai.*

[வே → வேனீற்று]

வை

வை¹ *vai,* பெ.(n.) தமிழ் நெடுங்கணக்கில் 'வ்' என்ற மெய்யெழுத்தும் 'ஐ' என்ற உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய் எழுத்து; the compound of 'v' and 'ai'.

[வ் + ஐ = வை]

வை²–தல் *vai-,* செ.குன்றாவி.(v.t.) 1. பழித்தல்; to abuse, revile. *"வைதா னொருவ னொருவனை" (நாலடி, 325).* 2. சினந் துரைத்தல்; to curse. *"வைத வைவின்" (கம்பரா. சிறப். 5).* 3. ஏய்த்தல்; to deceive. *"வையாது வழக்குரைத்தன்று" (பு.வெ. 1, 18, கொளு.).*

வை³–த்தல் *vai-,* செ.குன்றாவி.(v.t.) 1. இடுதல்; to put, place. *"வழக்கினுள் வைக்குந் தன்னாளை" (குறள், 776).* 2. அளித்தல்; to bestow. *"ஓர் கண்மணி நிற்கென வைத்ததும்" (கம்பரா. சூளா. 81).* 3. இருக்கச் செய்தல்; to seat. *"புறங்கடை வைத்தீவர் சோறும்" (நாலடி, 293).* 4. பள்ளிக்கு அனுப்புதல்; to put to school. *"பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே" (தனிப்பா.).* 5. வேலை முதலியவற்றில் அமர்த்துதல்; to appoint. 6. சேமித்தல்; to lay by, deposit, store up. *"வைத்த பொருளும்" (நாலடி, 273).* 7. பாதுகாத்தல்; to keep in custody, to guard. 8. தனியாக ஒதுக்குதல்; to reserve, set apart. *"வைத்தனன் றனக்கே தலையுமென்னாவும்" (தேவா. 351, 1).* 9. சிறையிலிடுதல்; to detain, as in prison. 10. உடைத்தாயிருத்தல்; to possess, have, keep, hold in possession. *"புன்னை

நித்திலம் வைப்பவும்" (சிறுபாண். 149), 'நிரம்பப் பணம் வைத்திருக்கிறான்'. 11. அமைதல்; to obtain. *'இது எத்தனை அறை வைத்த பெட்டி?'.* 12. ஒரு ஆண் தன் மனைவியல்லாத பெண்ணையும், ஒரு பெண் தன் கணவனல்லாத ஆணையும் வைப்பாக வைத்துக் கொள்ளுதல்; keep company with, to keep, as mistress. 13. நிலை மாறாதபடி செய்தல்; to allow to remain unaltered. 14. உண்டாக்கல்; to create, set up. *"வைத்தானை வானோருலக மெல்லாம்" (தேவா. 384, 8).* 15. உருவாக்குதல்; to prepare. *'குழம்பு வை'.* 16. நடத்துதல்; to conduct or maintain for profit. *'கடை வைத்திருக்கிறான்'.* 17. மதித்துப் போற்றுதல்; to pay due regard to. *'தந்தை தாயாரை வைத்திருப்பதிலிருந்து ஒருவன் குணத்தை அறியலாம்'.* 18. உண்மையென்று கொள்ளுதல்; to imagine, suppose. 19. வரையறுத்தல்; to fix, determine. *"வைத்த நாள்வரை யெல்லை" (திவ். திரவாய். 3,3,10).* 20. கணக்கு முதலியன எழுதி வருதல்; to maintain, as accounts. 21. எடுத்துச் சொல்லுதல்; to mention. *"கண்மணி நிற்கென வைத்ததும் வைப்பாய்" (கம்பரா. சூளா. 81).* 22. மனத்திற் கொள்ளுதல்; to consider. *"மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்" (குறள், 214).* 23. வழிபடல்; to meditate upon. *"சிந்தை யிலவன்றன் சேவடி வைத்து" (சிலப். 11, 106).*

[வை → வை-த்தல்]

வை⁴–த்தல் *vai-,* பெ.(n.) ஒரு துணைவினை; an auxiliary verb. *'அங்கே போட்டு வை'.*

வை⁵–த்தல் *vai-,* செ.கு.வி.(v.i.) 1. (போட்டி, தேர்வு முதலியவற்றை) நடத்துதல்; conduct, hld (an event). *'பொதுக்குழுக் கூட்டத்தை அடுத்த முறை மதுரையில் வைத்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது'.* 2. (ஒன்றை நடத்துவதற்காக நாள்) தேர்ந்தெடுத்தல், முடிவு செய்தல்; fix (a date). *'உங்கள் பெண் திருமணத்தை எந்த மாதம் வைத்திருக்கிறீர்கள்?'* 3. (உணவுப் பொருள் முதலியவற்றை உண்ணத்) தருதல்; provide (sth. as food), feed. *'பசிக்கிறது, சீக்கிரம் சாப்பாடு வை'.* 4. (கடை) ஏற்படுத்துதல், அமைத்தல், நடத்துதல்; have or run (ashop). *'அவர் வெகு நாளாகக் கடை வைத்து நடத்தி வருகிறார்'.* 5. (தொலைக் காட்சி, வானொலி, இசைத்தட்டு முதலிய வற்றை) இயங்கச் செய்தல்; switch on (a radio), play (a record, etc.). *'அந்த இசைத்தட்டை இன்னொரு தடவை வை'.*

[வை → வை-த்தல்]

வை⁶ *vai,* பெ.(n.) கூர்மை (தொல். சொல். 387); sharpness, keenness, point.

[வள் → (வய்) → வை] (மு.தா.28)

வை⁷ *vai,* பெ.(n.) 1. வைக்கோல் பார்க்க; see *vai-k-kōl. "வைத்துாறு போலக் கெடும்" (குறள், 435).* 2. புல் (பொதி. நி.); grass.

வை⁸ *vai,* இடை.(part.) தொழிற்பெயர் ஈறுகளுள் ஒன்று; suffix of verbal nouns. *'போர்வை'.*

வை⁹–த்தல் *vai-,* செ.குன்றாவி.(v.t.) 1. கடினமான நோய்; severe disease. 2. வையென்னெவல்; put.

வைக்கோல் *vai-k-k-kōl,* பெ.(n.) நெற் பயிரின் உலர்ந்த தாள்; straw of paddy.

[வை⁵ + கோல் ¹]

மறுவ. வைக்கல் (யாழ்.அக.)

வைக்கோல்மெத்தை *vaikkōl-mettai,* பெ.(n.) நோயாளிகள் படுப்பதற்காக மருத்துவ மனைகளில் அமைக்கும் ஒரு வகைப் படுக்கை அமளி; straw bed-lectus stramineus.

[வைக்கோல் + மெத்தை]

வைக்கோல்வாரி *vaikkōl-vāri,* பெ.(n.) கம்பம் பயிர்வகை (யாழ்.அக.); a kind of kampu crop.

[வைக்கோல் + வாரி]

வைக்கோற்கந்து *vaikkōṟ-kandu,* பெ.(n.) நெற்களத்தைச் சுற்றி வைக்கப்படும் வைக்கோல் வரம்பு; heap of straw enclosing the threshing floor.

[வைக்கோல் + கந்து]

வைக்கோற்குதிரை *vaikkōṟ-kudirai,* பெ.(n.) வெள்ளத்தைத் தடுக்கக் கரையுடைப் பிலிடும் மண்பொதிந்த வைக்கோற்புரியின் கட்டு (வின்.); bundle of straw and earth to stop the breach of a bund.

[வைக்கோல் + குதிரை]

வைக்கோற்கூளம் *vaikkōṟ-kūḷam,* பெ.(n.) வைக்கோற்பதர்; chaff of straw.

[வைக்கோள் + கூளம்]

வைக்கோற்துரும்பு *vaikkōṟ-turumbu,* பெ.(n.) காய்ந்து உலர்ந்த நெற்பயிர்த்தாள்; straw of paddy.

[வைக்கோல் + துரும்பு]

வைக்கோற்பழுதை *vaikkōṟ-paḻudai,* பெ.(n.) வைக்கோற்புரி பார்க்க (யாழ்.அக.); see *vaikkōṟ-puri.*

[வைக்கோல் + பழுதை]

வைக்கோற்பாம்பு *vaikkōṟ-pāmbu,* பெ.(n.) 1. வைக்கோற்குதிரை பார்க்க (வின்.); see *vaikkōṟ-kudirai.* 2. மாறு வேடம் (யாழ். அக.); disguise. 3. மாயை; illusion.

[வைக்கோல் + பாம்பு]

வைக்கோற்புரி *vaikkōṟ-puri,* பெ.(n.) வைக்கோலை முறுக்கிய திரி; large, twisted stand of straw, hay-band.

[வைக்கோல் + புரி]

வைக்கோற்பொம்மை *vaikkōṟ-pommai,* பெ.(n.) வைக்கோற் பழுதுகளை வைத்து செய்யும் ஒரு பொம்மை; man of straw.

[வைக்கோல் + பொம்மை]

வைக்கோற்போர் *vaikkōṟ-pōr,* பெ.(n.) வைக்கோற்குவியல்; straw stack or haystack.

[வைக்கோல் + போர்]

வைக்கோலட்டை *vaikkōl-aṭṭai,* பெ.(n.) வைக்கோலால் செய்யப்படும் ஒருவகைத் தட்டி; straw board.

[வைக்கோல் + அட்டை]

வைகச்சம் *vaigaccam,* பெ.(n.) மேலாடை (யாழ்.அக.); upper garments.

[மெய் → வை + கச்சம்]

வைகசரம் *vaigaśaram,* பெ.(n.) இலவங்கப் பத்திரி; cinnamon leaf.

வைகமூலி *vai-kamūli,* பெ.(n.) சல்லிக்கொடி; naval cord.

வைகல் *vaikal,* பெ.(n.) 1. தங்குகை (பிங்.); dwelling, staying. 2. கழிகை; passing. *"மத்துக் கயிறடா வைகற்பொழுது நினையூஉ" (பதிற்றுப். 71, 16).* 3. வைகறை 1 பார்க்க (சூடா.); see *vaikaṟai.* 4. நாள்; day. *"இன்னா வைகல் வாரா முன்னே செய்ந்நீ முன்னிய வினையே" (புறநா. 363).* 5. கழிந்த நாள் (பிங்.); day that has passed away. 6. வேளை; instant, moment. *"மாதவி தன்னோ டணைவுறு வைகலி னயர்ந்தனன்" (சிலப். 3, 173).*

[வை + கல்]

வைகலம் *vai-kalam,* பெ.(n.) வைகல் 4 பார்க்க (அக.நி.); see *vaikal.*

[வை + கலம்]

வைகலும் *vai-kalum,* வி.எ.(adv.) நாடோறும்; daily, everyday. *"அடிசில் பிறர்நுகர்க வைகலும்" (பு.வெ. 10, 8).*

[வைகல் → வைகலும்]

வைகறை[1] *vai-kaṟai,* பெ.(n.) 1. விடியல்; daybreak. *"வைகறைமலரு நெய்தல்" (ஐங்குறு. 188).* 2. வைகறையாமம் பார்க்க (அக.நி.); see *vaikaṟai-yāmam.*

[வை + கறை]

வைகறை[2] *vai-kaṟai,* பெ.(n.) தங்குமிடம்; residential place.

[வை + கறை]

வைகறைப்பாணி *vaikaṟai-p-pāṇi,* பெ.(n.) அதிகாலையிற் கொட்டும் இசைக்கருவி வொலி; sound of the drum played early in the morning. *"கிணை நிலைப் பொருநர் வைகறைப் பாணியும்" (சிலப். 13, 148).*

[வைகறை + பாணி]

வைகறையாமம் *vaikaṟai-yāmam,* பெ.(n.) விடியும் முன்னுள்ள இரவுப் பொழுது; the last *yāmam* or period of three hours, preceding day break. *"வைகறை யாமந் துயிலெழுந்து" (ஆசாரக். 5).*

[வைகறை + யாமம்]

வைகாபூர் *vaigāpūr,* பெ.(n.) திருவைகாவூர் என்று, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊர் இது; this vinage *tiru-vaigāvūr* in *tañjāvūr* district.

கொள்ளிட ஆற்றங் கரைத்தலம் இது. திருஞான சம்பந்தர் இவ்வூரின் சிறப்புக் குறித்து பாடியுள்ளார்.

[வைகு + கா + ஊர் = வைகாவூர் → வைகாபூர்]

வைகார்ப்பு *vai-kārppu,* பெ.(n.) இடையறாத ஆரவாரம்; unceasing, lumultuous noise. *"வைகார்ப் பெழுந்த மைபடு பரப்பின்" (பதிற்றுப். 41, 22).*

[வைகு + ஆர்ப்பு]

வைகாலம் *vai-kālam,* பெ.(n.) சாயங்காலம் (யாழ்.அக.); evening.

[வை + காலம்]

வைகிருள் *vai-kiruḷ,* பெ.(n.) விடியற்காலத் திருள்; darkness-immediately before dawn.

[வை + கிருள்]

வைகு-தல் *vaiku-,* செ.கு.வி.(v.i.) 1. தங்குதல்; to halt, stay, tarry; to reside dwell. *"நெடுந்திமிற் றெழிலொடு வைகிய தந்தைக்கு" (அகநா. 60). "மாலெரியாகிய*

வரதர் வைகிடம்" (தேவா. 467, 9). 2. போது கழிதல்; to pass, as time. *"அமுது செய்கைக்குப் போது வைகிற்று" (ஈடு. 7, 10, 4).* 3. வற்றுதல்; to dry up, as a river. *"காவிரி வைகிய காலத்தினும்" (தஞ்சைவா. 71).* 4. விடிதல்; to dawn, as the day. *"வைகுறு மீனின்" (பெரும்பாண். 318).* 5. புணர்தல்; to cohabit. *"காசுகண் பரிய வைகி" (சீவக. 586).*

[வை → வைகு-தல்]

வைகுசுடர் *vaigu-cuḍar,* பெ.(n.) விடியுமளவும் எரியும் விளக்கு; light that burns all night. *"வைகுசுடர் விளங்கும் வான்றோய் வியனகர்" (அகநா. 87).*

[வைகு + சுடர்]

வைகுபுலர்விடியல் *vaiku-pular-viḍiyal,* பெ.(n.) வைகுறுவிடியல் பார்க்க; see *vaikuṟu-viḍiyal. "வைகுபுலர் விடியல் வயவர் சூழ்வர" (பெருங். உஞ்சைக். 56, 149).*

[வைகு + புலர் + விடியல்]

வைகுறா *vaikuṟā,* பெ.(n.) தும்பை; a plant-leucas aspeva.

[வை + குறா]

வைகுறு *vaikuṟu,* பெ.(n.) 1. வைகறையாமம் பார்க்க; see *vaikaṟai-yāmam. "வைகுறு விடியல்" (தொல். பொ. 8).* 2. விடியல் (தொல். விருத். 38); day break.

[வைகு + உறு]

வைகுறுமீன் *vaikuṟu-mīṉ,* பெ.(n.) விடிவெள்ளி; morning star. *"வைகுறு மீனிற் றோன்றும்" (அகநா. 17).*

[வைகுறு + மீன்]

வைகுறுவிடியல் *vaikuṟu-viḍiyal,* பெ.(n.) காலம்; early dawn. *"வைகுறுவிடியலியம்பிய சொல்லே" (புறநா. 233).*

[வைகுறு + விடியல்]

வைகை *vaikai,* பெ.(n.) வையை பார்க்க; see *vaiyai.*

[வையை → வைகை]

வைகைத்திருமலை *vaikai-t-turumalai,* பெ.(n.) வைகானூரை அடுத்திருந்த ஊர்; its next village *vaikāṉūr.*

வட ஆர்க்காட்டில் திருமலை என்னும் குன்றம் ஒன்றுண்டு. அது வைகானூரை அடுத்திருத்தலால் வைகைத் திருமலை எனவும் வழங்கும். மன்னரால் மதிக்கப்பெற்ற சமண முனிவர்கள் அம் மலையில் வாழ்ந்ததாகத் தெரிகின்றது. இராசராச சோழன் காலத்தில், *"கொலை புரியும் படையரசர் கொண்டாடும் குண வீரமா முனிவன்"* என்று புகழப் படுகின்ற ஒரு முனிவர் திருமலை யேரிக்குக் கலிங்குகட்டி, வைகை மலையின் இரு மருங்கும் நெல் விளையக் கண்டு களித்தார் என்று அம்மலைக் கல்வெட்டொன்று கூறுகின்றது.

[வைகை + திருமலை]

வைகைத்துறைவன் *vaikai-t-tuṟaivaṉ,* பெ.(n.) பாண்டியன் (பிங்.); the *pāṇḍya* king as lord of the vaikai region.

[வைகை + துறை + அன்]

வைச்சிரம் *vaicciram,* பெ.(n.) வச்சிரம் பார்க்க; see *vacciram.*

வைச்சுப்பாடு-தல் *vaiccu-p-pāḍu-,* செ.குன்றாவி.(v.t.) வைத்துப்பாடு-, பார்க்க; see *vaittu-p-pāḍu-.*

[வை + பாடு]

வைச்சூற்றி *vai-c-cūṟṟi,* பெ.(n.) நீர்மப் பொருள் ஊற்ற உதவும் கருவி (Funnel), வைத்தூற்றி; funnel.

[வைத்து ஊற்றி → வைச்சூற்றி]

வைசந்தி *vai-candi,* பெ.(n.) முன்னை மரம்; a tree, Its root is used in medicine, leaves, edible - premana integrifolia.

வைசயந்தி *vaicayandi,* பெ.(n.) தபதாழை; a medicinal shrub, used for rheumatism-cleodendron phlomoides.

[வை + சயந்தி]

வைசயாதி *vaiśayādi,* பெ.(n.) தழுதாழை; a tree-cleodendron phlomoides.

[வை + சயாதி]

வைசனி *vaiśaṉi,* பெ.(n.) 1. ஆமிரம்; mango tree. 2. புளியமரம்; tamarind tree.

[வை + சனி]

வைசாரிணம் *vai-śāriṇam,* பெ.(n.) மீன்; a fish.

வைசிகம்[1] *vaiśigam,* பெ.(n.) 1. உயிருடன் கூடிய உடலை அறுத்து அறிவது; to learn by cutting the living organism. 2. உடலையும் உயிரையும் பிரித்து அறியும் வல்லமை; a supernatural power of separating body from the soul.

வைசிகம்[2] *vaiśigam,* பெ.(n.) 1. தளிர்; tender leaf. 2. காரணம் (யாழ்.அக.); cause.

வைத்தகண்வாங்காமல் *vaitta-kaṇ-vāṅgāmal,* வி.எ.(adv.) (பார் என்ற வினையுடன்) ஒருவரின் அல்லது ஒன்றின் மீது பதித்த பார்வையைச் சிறிதும் விலக்காமல்; gazing fixedly at (sth.). *'வந்ததிலிருந்து அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறான்'.*

[வைத்த + கண் + வாங்காமல்]

வைத்தியநாததேசிகர் *vaittiyanāda-dēśigar,* பெ.(n.) 17-ம் நூற்றாண்டினரும் இலக்கண விளக்கம் முதலிய நூல்கள் இயற்றியவருமான ஆசிரியர்; *vaittiyanāta-tecikar,* the author of *ilakkaṇa-viḷakkam* and other works, 17th C.

[வைத்தியநாத + தேசிகர்]

வைசூரி *vaicūri,* பெ.(n.) பெரியம்மை நோய்; small-pox.

[வை + சூலி → சூரி]

வைசூலி = கூர்மையான சூலப்படையையுடைய பெண் தெய்வம்.

வைசூரிக்காய்ச்சல் *vaiśūri-k-kāyccal,* பெ.(n.) அம்மையினாலுண்டாகுங் காய்ச்சல்; variolous fever.

[வைசூரி + காய்ச்சல்]

வைசூரிசுரம் *vaiśūri-śuram,* பெ.(n.) அம்மைக் காய்ச்சல்; variolous fever.

[வைசூரி + சுரம்]

வைசூரித்தடிப்பு *vaiśūri-t-taḍippu,* பெ.(n.) அம்மை நோய் தடிப்பு; red spots preseding the pustulation in small-pox.

[வைசூரி + தடிப்பு]

வைசூரிப்பால் *vaiśūri-p-pāl,* பெ.(n.) அம்மைப்பால்; cow-pox vaccine - virus of cow-pox.

[வைசூரி + பால்]

வைத்தங்கி *vai-t-tangi,* பெ.(n.) கற்றாழை; aloe.

[வை + தங்கி]



வைத்தநிதி *vaitta-niti,* பெ.(n.) வைத்தமாநிதி பார்க்க; see *vaitta-mā-niti.* *"வைத்தநிதியே மணியே யென்று வருந்தி" (தேவா. 983, 5).*

[வை + நிதி]

வைத்தமாநிதி *vaitta-mā-niti,* பெ.(n.) சேமித்து வைக்கப்பட்ட பொருட்குவை; hoarded wealth. *"வைத்தமாநிதியா மது சூதனையே யலற்றி" (திவ். திருவாய். 6, 7, 11).*

[வை + மா + நிதி]

வைத்தூற்றி *vaittūṟṟi,* பெ.(n.) கூம்பு வடிவமுள்ள புனல்; funnel.

[வைத்து + ஊற்றி]

வைத்து¹ *vaittu,* இடை.(part.) ஓர் அசைச் சொல்; an expletive. *"இப்பாதகத்தைக் கண்டு வைத்தும்" (சீவக. 681, உரை).*

[வை → வைத்து]

வைத்து² *vaittu,* இடை.(part.) (ஒருவரை) கருவியாக அல்லது (ஒன்றை) காரணமாகப் பயன்படுத்து; using (the services of one), taking advantage of (sth.). *'இவனை வைத்து எல்லா வேலைகளையும் முடித்து விட்டேன்'.* 2. (இயல்பாக அறிந்திருக்க வேண்டியதையும் அறிந்திராத நிலையில்) முறையாகப் பயன்படுத்தி; using properly. *"காதை வைத்துக் கேள் உனக்கே தெளிவாகப் புரியும்'.* 3. (இட வேற்றுமை – இல் என்பதன் பின்) ஒருவரைக் குறிப்பிடும் இடத்தோடு தொடர்புபடுத்திக் கூறப் பயன்படுவது; associating the action with the place strongly. *'அவரை மதுரையில் வைத்துப் பார்த்தேன்'.*

[வை → வைத்து]

வைத்துக்கொண்டு *vaittu-k-koṇḍu,* இடை. (part.) ஓர் அசைச்சொல்; an expletive. *"பௌத்த மதங்களில் வைத்துக் கொண்டு வைபாஷிகள்" (ஈடு. அவ.).*

[வைத்து + கொண்டு]

வைத்துக்கொள்(ளு)¹–தல் *vaittu-k-koḷ(ḷu)-,* செ.குன்றாவி.(v.t.) 1. உரிமையாகக் கொள்ளுதல்; to keep for one's self. 2. நிகழ்ச்சிக்காக உண்மைபோல் ஒப்புக் கொள்ளுதல்; to suppose, take for granted. *'நீ சொன்ன படியே வைத்துக் கொள்'.* 3. வைப்பாட்டியாக அல்லது கள்ளக் கணவனாக அமர்த்திக் கொள்ளுதல்; to keep as a mistress or concubine.

[வைத்து + கொள்(ளு)–,]

வைத்துக்கொள்²–தல் *vaittu-k-koḷ-,* செ. குன்றாவி.(v.t.) (தருக்கம் முதலிய வற்றுக்காக ஒன்றை) ஏற்றல்; suppose (for the sake of argument) assume. *'அவர் சொன்னது உனக்குப் புரியவில்லை என்றே வைத்துக் கொள்வோம்'.*

[வைத்து + கொள்–,]

வைத்துக்கொள்³-தல் *vaittu-k-koḷ-,* செ.கு.வி.(v.i.) 1. கவனித்துக் கொள்ளுதல், புரத்தல்; treat, take care of, look after. *'அவர் என்னை நன்றாகத்தான் வைத்துக் கொண்டார்'.*

[வைத்து + கொள்-,]

வைத்துப்பாடு-தல் *vaittu-p-pāḍu-,* செ. குன்றாவி.(v.t.) மணப்பெண் முதலான வர்களை ஒப்பனை செய்து மணையில் வைத்து நலம்பாடுதல்; to decorate and seat on a platform, as a bride, pregnant woman, etc., and sing auspicious songs.

[வைத்து + பாடு-,]

வைத்தூறு *vaittūṟu,* பெ.(n.) வைக்கோற் குவை; straw-stack. *"எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்" (குறள், 435).*

[வை + தூறு]

வைதகிகம் *vaidakigam,* பெ.(n.) திப்பிலி; long pepper-piper longum.

வைதர்ப்பம் *vai-darppam,* பெ.(n.) பல்நோய்; disease of the root of tooth.

[வை + தர்ப்பம்]

வைதளாலம் *vai-taḷālam,* பெ.(n.) காரல் கத்திரி; apbint.

[வை + தளாலம்]

வைந்நுதி *vai-n-nudi,* பெ.(n.) கூரிய நுனி; sharp point. *"வேற்றலையன்ன வைந்நுதி" (பெரும்பாண். 87).*

[வை + நுதி]

வைந்நுனை *vai-n-nuṉai,* பெ.(n.) வைந்நுதி பார்க்க; see *vai-n-nudi. "வைந்நுனைப் பகழி" (முல்லைப். 73).*

[வை + நுனை]

வைநாகணத்தி *vai-nāgaṇatti,* பெ.(n.) காக்கட்டான்; a twiner plant-cliforia ternatea (typica).



வைநாகதம் *vai-nāgadam,* பெ.(n.) கறியுப்பு; common salt.

[வை + நாகதம்]

வைநாகப்பூ *vai-nāgappū,* பெ.(n.) சிறுநாகப்பூ பார்க்க; see *śiṟu-nāgappū.*

[வை + நாகப்பூ]

வைநாகமல்லி *vai-nāga-malli,* பெ.(n.) நாகமல்லிகை பார்க்க; see *nāga-malligai.*

[வைநாகம் + மல்லி]

வைநாகமாலி *vaināga-māli,* பெ.(n.) காஞ்சிரை; nux-vomica.

[வை + நாகமாலி]

வைநாகமுட்டி *vaināga-muṭṭi,* பெ.(n.) விசமட்டி; nux-vomica.

[வை + நாகமுட்டி]

வைப்பகம் *vai-p-pagam,* பெ.(n.) 1. வங்கி (பணம் கொடுக்கல் வாங்கல் நிதி மனை); bank. 2. ஆற்றங்கரை, ஏரிக்கரை; land along each side of a river (or) lake.

[வைப்பு + அகம்]

வைப்பரிதாரம் *vai-p-paridāram,* பெ.(n.) வைப்பு நஞ்சு முப்பத்திரண்டனுளொன்று; a prepared arsenic, one of 32 *vaipp-p-pāsānam.*

[வைப்பு + அரிதாரம்]

வைப்பிலக்கணம் *vai-p-pilakkaṉam,* பெ.(n.) ஓமசிங்கி, கெந்தி, பச்சைக் கற்பூரம், செய்நஞ்சு வகைகள் முதலான சரக்குகளில் வைப்பு முறையைக் கூறும் மச்சமுனி கலை ஞானம் எண்ணூற்றின் ஐந்து கண்டங் களிலோர் காண்டம்; processes of prepared various drugs. They are given in one of five parts of Machamuni kalaignanam.

வைப்பன் *vaippaṉ,* பெ.(n.) எய்ப்பினில் வைப்பு போன்றவன்; one who is a treasure. *"தொழும் பாள ரெப்ப்பினில் வைப்பனே" (திருவாச. 5, 392).*

[வைப்பு + அன்]

வைப்பாட்டி *vaippāṭṭi,* பெ.(n.) கூத்தியாள்; concubine.

[வைப்பு + ஆள்]

வைப்பிடம் *vaippiḍam,* பெ.(n.) பண்டம் முதலியன வைக்குமிடம்; place of deposit. *"நின் சேவடிகளிரண்டும் வைப்பிடமின்றியே கலங்கினேன்" (திருவாசக. 30, 3).*

[வைப்பு + இடம்]

வைப்பிருக்கை *vaippirukkai,* பெ.(n.) பண்டசாலை (நாமதீப. 490); store-house.

[வைப்பு + இருக்கை]

வைப்பு[1] *vaippu,* பெ.(n.) 1. வைக்கை; placing. *"பிற பொருள் வைப்போடு" (சிலப். 10, கட்டுரை, 17).* 2. வைப்பு; deposit, hoard, treasure. *"நல்லடியார் மனத் தெய்ப்பினில் வைப்பை" (தேவா. 818, 2).* 3. புதையல்; buried treasure, treasure-trove. *"செண்டெறிந்து வைப்பெடுத்த செயலும்" (திருவிளை. மேருவை. 1).* 4. இடம் (பிங்.); place. 5. நிலப்பகுதி; land. *"கண்ணகன் வைப்பிற்றாயினும்" (புறநா. 18).* 6. ஊர்; town. *"வேறு பல் வைப்பும்" (திருமுரு. 224).* 7. உலகம்; world. *"வேத முற்றியங்கு வைப்பின்" (கம்பரா. பிணிவீட். 113).* 8. செயற்கையானது; that which is artificial. 9. செயற்கைச் சரக்கு; artificial preparation. *"வைப்புப் பாசாணம்".* 10. கொலை செய்யும் நினைப்பு; witchcraft causing evil, sorcery, black art. 11. பாழ்ப் பொருள்; articles of witch craft. 12. கூத்தியாள் வைத்துக் கொள்கை; concubinage. 13. வைப்பாட்டி பார்க்க; see *vaippāṭṭi.* 14. கலிப்பா வகையின் இறுதி யுறுப்பு (தொல். பொ. 448); (Pros.) short, final lines of certain kinds of kali verse.

[வை → வைப்பு]

வைப்பு[2] *vaippu,* பெ.(n.) மருந்துகளை மருத்துவ முறைப்படி செய்தல்; preparation of medicines according to the rules prescribed in the medical science.

[வை → வைப்பு]

வைப்புக்கட்டு *vaippu-k-kaṭṭu,* பெ.(n.) பொய்யான கட்டுமானம் (வின்.); fabrication, concoction.

[வைப்பு + கட்டு]

வைப்புச்சரக்கு *vaippu-c-carakku,* பெ.(n.) 1. மருத்துவ முறைப்படி செய்யப்பட்ட மருந்துச் சரக்கு; prepared drugs as opposed to (இயற்கைச் சரக்கு) Natural drugs. 2. செய் நஞ்சு வைப்பு, சிவப்பு சவ்வீர வைப்பு, வீரவைப்பு, மலையுப்பு, சூடன் (இரச கற்பூரம்), பச்சைக் கற்பூரம், மான் மதம், கம்புகம் (அபினி), பளிங்கு கற்பூர வைப்பு, பெருங்காய வைப்பு, வைர வைப்பு, செம்பு வைப்பு, நாற்பச்சை வைப்பு; (in mantric science) to put certain articles in the house or compound of the enemy to do him farm; (in medicine) artificial substistutes or prepared substitutes for natural substances.

[வைப்பு + சரக்கு]

வைப்புச்செப்பு *vaippu-c-ceppu,* பெ.(n.) 1. அணிகலன்கள் முதலிய உடைமைகள்; jewels and utensils, belongings. 2. பண்டங்கள் வைக்கும் பெட்டி முதலியன; receptacle for articles.

[வைப்பு + செப்பு]

வைப்புத்தொகை *vaippu-t-togai,* பெ.(n.) இருப்புச் செல்வம்; செலுத்தப்பட்ட முன் பணம்; deposit (in a bank or paid to an agency, etc.). *'வைப்புத் தொகையிலிருந்து வைப்பகங்கள் கணிசமான ஊதியம் பெறுகின்றன'.*

[வைப்பு + தொகை]

வைப்புப்பவளம் *vaippu-p-pavaḷam,* பெ.(n.) செயற்கைப் பவளம் (சினேந். 76); artificial coral.

[வைப்பு + பவளம்]

வைப்புப்பாசாணம் *vaippu-p-pāšāṇam,* பெ.(n.) முப்பத்திரண்டு வகைப்பட்ட செயற்கை நஞ்சு வகை; prepared arsenic, of which there are 32 kinds.

[வைப்பு + பாசாணம்]

வைப்புப்பு *vaippuppu,* பெ.(n.) செயற்கை யுப்பு; artificial salt.

[வைப்பு + உப்பு]

வைப்புப்புழுகு *vaippu-p-puḻugu,* பெ.(n.) புழுகுப் பூனையினின்று வெளிவரும் புழுகு (வின்.); civet discharged by the civet cat.

[வைப்பு + புழுகு]

வைப்புப்பொருள் *vaippu-p-poruḷ,* பெ.(n.) நற்செல்வம் (சேமநிதி); reserve fund.

[வைப்பு + பொருள்]

வைப்புநிதி *vaippu-nidi,* பெ.(n.) (வைப்பகம், நிறுவனம் போன்றவை) வைத்திருக்கும் அல்லது (குறிப்பிட்ட காரணத்திற்காக) ஒதுக்கியிருக்கும் தொகை; reserves (of money in a bank); allotted fund. *'ஆண்டு இறுதியில் இந்த வங்கியின் மொத்த வைப்புநிதி முந்நூறு கோடி ரூபாய்'.*

[வைப்பு + நிதி]

Skt. Nidi > த. நிதி.

வைப்புமுத்து *vaippu-muttu,* பெ.(n.) செயற்கைமுத்து (சினேந். 103, உரை); artificial pearl.

[வைப்பு + முத்து]

வைப்புமுறை *vaippu-murai,* பெ.(n.) மருந்துகளைச் செய்ய, தூய்மை (சுத்தி) ஈடு, கூட்டு முதலாகிய நெறிமுறைகள்; rules of preparing in several courses.

[வைப்பு + முறை]

வைப்புவை-த்தல் *vaippu-vai-,* செ.குன்றாவி. (v.t.) 1. வைப்பாட்டியாக ஒருத்தியைக் கொள்ளுதல்; to keep as a concubine. 2. இன்மை இல்பொருள் (சூனியம்) வைத்தல்; to cause evil by witch craft.

[வைப்பு + வை-,]

வைப்புழி *vaippuḻi,* பெ.(n.) பொருள் முதலியன சேமித்து வைக்கும் இடம்; store house. *"பொருள் வைப்புழி" (குறள், 226).*

[வைப்பு + உழி]

வைம்புரசு *vai-m-puraśu,* பெ.(n.) 1. கரும் புரசு; the sation wood-chloroxylon swietenia. 2. வைமறை பார்க்க; see *vaimarai.*

[வை + புரசு]

வைமறை *vaimarai,* பெ.(n.) உடம்பு வலியைப் போக்கும் ஒரு மரம்; a tree useful in removing bodily pain - chloroxylon swietenia.

வையகம் *vaiy-a-gam,* பெ.(n.) 1. நிலப்பகுதி; earth, world. *"வையகம் வணங்க வாளோச்சினன்" (பு.வெ. 3, 7).* 2. வையம் 2,3,4,5,7 பார்க்க (யாழ்.அக.); see *vaiyam.*

[வன் → வய் → வை + அகம்]

வையகமூலி *vaiyaka-mūli,* பெ.(n.) கொடி வகை (மூ.அ.); a kind of creeper.

[வையகம் + மூலி]

வையங்காரை *vaiyaṅ-kārai,* பெ.(n.) காரை பார்க்க; see *kārai.*

[வையம் + காரை]

வையஞ்சேர்-தல் *vaiyañ-cēr-,* செ.கு.வி. (v.i.) 1. நிலத்தில் விழுதல்; to fall to the ground. 2. இறத்தல்; to-die. *"வையஞ் சேர்வான் அழைத்தது (கம்பரா. உருக்காட்டுப். 74).*

[வையம் + சேர்-,]

வையம் *vaiyam,* பெ.(n.) 1. நிலப்பகுதி; earth. *"வையங்காவலர் வழிமொழிந்தொழுக" (புறநா. 8).* 2. குதிரை பூண்டிழுக்கும் தேர் (சிலப். 6, 120) (பிங்.); chariot drawn by horses. 3. கூடாரவண்டி; covered cart. *"மானமர் நோக்கியும் வைய மேறி" (சிலப். 6, 120).* 4. பல்லக்கு (சீவிகை) (சூடா.); palanquin. 5. ஊர்தி; conveyance. 6. எருது; bullock. 7. உருள் (உரோகிணி) (பிங்.); the 4th naksatra. 8. விளக்கு; lamp. 9. யாழ் (அக.நி.); *yāḻ.*

[வள் → வய் → வை → வையம்]

வையமகள் *vaiya-magaḷ,* பெ.(n.) நிலமகள்; the goddess of earth. *"வையமகளை யடிப்படுத்தாய்" (பு.வெ. 9, 3).*

[வையம் + மகள்]

வையவித்து *vaiya-vittu,* பெ.(n.) கடுக்காய்; gall-nut-myrobalam.

[வையம் + வித்து]

வையாபுரி *vaiyā-puri,* பெ.(n.) பழனி; *Paḻaṉi,* in the madura district. *'வையாபுரிக்குளம்'.*

[வை + ஆவி + புரி]

கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய பேகன் அரசாண்ட ஊர் வைகாவூர் என்றும் வையாபுரி என்றும் வழங்கிற்று.

வையாரிகம் *vaiyārigam,* பெ.(n.) கிளியூரற் பட்டை; a fragrant drug.

வையாவிக்கோப்பெரும்பேகன் *vaiyāvi-k-kōp-perumbēgaṉ,* பெ.(n.) கடையெழு வள்ளல்களில் ஒருவர் (புறநா. 141); a chief famed for his liberality.

[வையாகி + கோப்பெரும்பேகன்]

வையாளி *vaiyāḷi,* பெ.(n.) 1. குதிரை செல்லும் நீண்ட சாலை; pathway for horses. *"வையாளியலங்கரித்து" (திருவாலவா. 27, 69).* 2. குதிரையேற்றம்; riding on horse-back.

வையாளிவிடு-தல் *vaiyāḷi-viḍu-,* செ.குன்றாவி.(v.t.) குதிரை பாய்ந்தோடும்படி ஓட்டுதல் (வின்.); to gallop a horse.

[வையாளி + விடு-,]

வையாளிவீதி *vaiyāḷi-vīdi,* பெ.(n.) வையாளி 1 பார்க்க (திவா.); see *vāiyāḷi 1.*

[வையாளி + வீதி]

வையிஞ்சி *vaiyiñji,* பெ.(n.) நிலப்பனை; ground palm-curculigo orchioides.

வையை *vaiyai,* பெ.(n.) மதுரை மாவட்டத்தில் ஓடும் ஆறு; the vaigai river in the Madura district. *"வையை சூழ்ந்தவளங்கெழு வைப்பின்" (புறநா. 71, 10).*

[வைகை → வையை] (தே.நே.பக்.159)

வைகை = தங்கிச் செல்லும் ஆறு. தங்கிச் செல்லுதலாவது மெல்லச் செல்லுதல்.

வையைத்துறைவன் *vaiyai-t-tuṟaivaṉ,* பெ.(n.) பாண்டியன் (திவா.); the *Pāṇḍya* king, as ruling the vaigai region. *"வையைத் துறைவன் மதுராபுரித் தென்னன்" (பெருந்தொ. 1410).*

[வையை + துறைவன்]

வைரி *vairi,* பெ.(n.) பகைவன்; enemy.

[வயிர் → வயிரி → வைரி] (மு.தா. 246).

வைவச்சுதம் *vaivaccudam,* பெ.(n.) மஞ்சள்; turmeric-curcumalonga.

வைவு *vaivu,* பெ.(n.) 1. வசவு; abuse. 2. சாவிப்பு (சாபம்); curse. *"வைத வைவின்" (கம்பரா. சிறப். 5).*

[வை → வைவு]

வொ

வொ *vo,* பெ.(n.) தமிழ் நெடுங்கணக்கில் 'வ்' என்ற மெய்யெழுத்தும் 'ஒ' என்ற உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய் எழுத்து; the compound of 'வ்' and 'ஒ'.

[வ் + ஒ]

வோ

வோ *vō,* பெ.(n.) தமிழ் நெடுங்கணக்கில் 'வ்' என்ற மெய்யெழுத்தும் 'ஓ' என்ற உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய் எழுத்து; the compound of 'வ்' and 'ஓ'.

[வ் + ஓ]

வெள

வெள[1] *vau,* பெ.(n.) தமிழ் நெடுங்கணக்கில் 'வ்' என்ற மெய்யெழுத்தும் 'ஔ' என்ற உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய் எழுத்து; the compound of 'வ்' and 'ஔ'.

[வ் + ஔ]

வெள[2](வு)-தல் *vau,* செ.குன்றாவி.(v.t.) வெளவு பார்க்க; see *vauvu.*

வெளவால் *vouvāl,* பெ.(n.) வவ்வால் பார்க்க; see *vavvāl.*

வெளவால்வலை *vauvāl-valai,* பெ.(n.) மீன் பிடிக்கும் வலை வகை; a kind of fishing net.

[வவ்வால் + வலை]

வெளவாலோட்டி *vauvāl-ōṭṭi,* பெ.(n.) வவ்வாலோட்டி பார்க்க; seee *vauvalōṭṭi.*

[வெளவால் + ஓட்டி]

வெளவானத்தி *vouvāṉatti,* பெ.(n.) மண்டபத்தின் ஒருவகை மேல் முகடு (பெருங். மகத. 4, 16, குறிப்புரை); a kind of vaulted roof.

[வெளவால் + நத்து + இ]

வெளவு-தல் *vouvu-,* செ.குன்றாவி.(v.t.) 1. கைப்பற்றுதல்; to seize, snatch. 2. ஆறலைத்தல்; to commit highway robbery. *"வெளவுநர் மடிய" (அகநா. 1).* 3. திருடுதல் (யாழ்.அக.); to steal. 4. கவர்தல்; to rivet attention, fascinate. *"கண்வெளவு காட்சிய" (சீவக. 1774).* 5. பாவம் பேய் முதலியன பற்றிக் கொள்ளுதல்; to attack as sin; to possess, as an evil spirit. *"பொய்யா நின் வாயில்சூள் வெளவல்" (பரிபா. 8, 84).* 6. மேற் கொள்ளுதல்; to undertake. *"அவ் விரதத்தை வெளவுவோர்" (விநாயகபு. 38, 9).* 7. வவ்வு[3] பார்க்க; see *vavvu[3].*

[வ் + ஔ + உ]

வெளவுலம் *vouvulam,* பெ.(n.) மரவகை (சுக்கிரநீதி, 228); a kind of tree.

ழ்

ழ் *ḻ,* தமிழ் நெடுங்கணக்கில் பதினைந்தாம் மெய்யான இடையெழுத்து; the 15th consonant, a liquid medial.

ழ

ழ *ḻa,* தமிழ் நெடுங்கணக்கில் 'ழ்' என்னும் இடையின மெய்யெழுத்தும் 'அ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய்யெழுத்து; the compound of ழ் and அ.

[ழ் + அ]

ழா

ழா *ḻā,* தமிழ் நெடுங்கணக்கில் 'ழ்' என்னும் இடையின மெய்யெழுத்தும் 'ஆ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய்யெழுத்து; the compound of ழ் and ஆ.

[ழ் + ஆ]

ழி

ழி *ḻi*, தமிழ் நெடுங்கணக்கில் 'ழ்' என்னும் இடையின மெய்யெழுத்தும் 'இ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய்யெழுத்து; the compound of ழ் and இ.

[ழ் + இ]

ழீ

ழீ *ḻī*, தமிழ் நெடுங்கணக்கில் 'ழ்' என்னும் இடையின மெய்யெழுத்தும் 'ஈ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய்யெழுத்து; the compound of ழ் and ஈ.

[ழ் + ஈ]

ழு

ழு *ḻu*, தமிழ் நெடுங்கணக்கில் 'ழ்' என்னும் இடையின மெய்யெழுத்தும் 'உ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய்யெழுத்து; the compound of ழ் and உ.

[ழ் + உ]

ழூ

ழூ *ḻū*, தமிழ் நெடுங்கணக்கில் 'ழ்' என்னும் இடையின மெய்யெழுத்தும் 'ஊ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய்யெழுத்து; the compound of ழ் and ஊ.

[ழ் + ஊ]

ழெ

ழெ *ḻe*, தமிழ் நெடுங்கணக்கில் 'ழ்' என்னும் இடையின மெய்யெழுத்தும் 'எ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய்யெழுத்து; the compound of ழ் and எ.

[ழ் + எ]

ழே

ழே *ḻē*, தமிழ் நெடுங்கணக்கில் 'ழ்' என்னும் இடையின மெய்யெழுத்தும் 'ஏ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய்யெழுத்து; the compound of ழ் and ஏ.

[ழ் + ஏ]

ழை

ழை *ḻai*, தமிழ் நெடுங்கணக்கில் 'ழ்' என்னும் இடையின மெய்யெழுத்தும் 'ஐ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய்யெழுத்து; the compound of ழ் and ஐ.

[ழ் + ஐ]

ழொ

ழொ *ḻo*, தமிழ் நெடுங்கணக்கில் 'ழ்' என்னும் இடையின மெய்யெழுத்தும் 'ஒ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய்யெழுத்து; the compound of ழ் and ஒ.

[ழ் + ஒ]

ழோ

ழோ *lō*, தமிழ் நெடுங்கணக்கில் 'ழ்' என்னும் இடையின மெய்யெழுத்தும் 'ஓ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய்யெழுத்து; the compound of ழ் and ஓ.

[ழ் + ஓ]

ழௌ

ழௌ *lau*, தமிழ் நெடுங்கணக்கில் 'ழ்' என்னும் இடையின மெய்யெழுத்தும் 'ஔ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர் மெய்யெழுத்து; the compound of ழ் and ஔ.

[ழ் + ஔ]

ள்

ள் *l*. தமிழ் நெடுங்கணக்கில் பதினாறாம் மெய்யான இடையெழுத்து; the 16th consonant, a liquid medial.

ள

ள *la*, தமிழ் நெடுங்கணக்கில் 'ள்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'அ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ள் and அ.

[ள் + அ]

ளா

ளா *lā*, தமிழ் நெடுங்கணக்கில் 'ள்' என்னும் இடையின மெய்யெழுத்தும். 'ஆ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ள் and ஆ.

[ள் + ஆ]

ளி

ளி *li*, தமிழ் நெடுங்கணக்கில் 'ள்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'இ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ள் and இ.

[ள் + இ]

ளீ

ளீ *lī*, தமிழ் நெடுங்கணக்கில் 'ள்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஈ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ள் and ஈ.

[ள் + ஈ]

ளு

ளு *lu*, தமிழ் நெடுங்கணக்கில் 'ள்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'உ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய்யெழுத்து; the compound of ள் and உ.

[ள் + உ]

ளூ

ளூ /a, தமிழ் நெடுங்கணக்கில் 'ள்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஊ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ள் and ஊ.

[ள் + ஊ]

ளெ

ளெ /e, தமிழ் நெடுங்கணக்கில் 'ள்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'எ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ள் and எ.

[ள் + எ]

ளே

ளே /ē, தமிழ் நெடுங்கணக்கில் 'ள்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஏ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ள் and ஏ.

[ள் + ஏ]

ளை

ளை /ai, தமிழ் நெடுங்கணக்கில் 'ள்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஐ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ள் and ஐ.

[ள் + ஐ]

ளொ

ளொ /o, தமிழ் நெடுங்கணக்கில் 'ள்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஒ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ள் and ஒ.

[ள் + ஒ]

ளோ

ளோ /ō, தமிழ் நெடுங்கணக்கில் 'ள்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஓ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ள் and ஓ.

[ள் + ஓ]

ளௌ

ளௌ /au, தமிழ் நெடுங்கணக்கில் 'ள்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஔ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ள் and ஔ.

[ள் + ஔ]

ற்

ற் /, தமிழ் நெடுங்கணக்கில் பதினேழாம் மெய்யான வல்லெழுத்து; thee 17th consonant, a hard medial.

ற

ற *ṟa,* தமிழ் நெடுங்கணக்கில் 'ற்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'அ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ற் and அ.

[ற் + அ]

றா

றா *ṟā,* தமிழ் நெடுங்கணக்கில் 'ற்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஆ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ற் and ஆ.

[ற் + ஆ]

றி

றி *ṟi,* தமிழ் நெடுங்கணக்கில் 'ற்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'இ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ற் and இ.

[ற் + இ]

றீ

றீ *ṟī,* தமிழ் நெடுங்கணக்கில் 'ற்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஈ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய்யெழுத்து; the compound of ற் and ஈ.

[ற் + ஈ]

று

று *ṟu,* தமிழ் நெடுங்கணக்கில் 'ற்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'உ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ற் and உ.

[ற் + உ]

றூ

றூ *ṟū,* தமிழ் நெடுங்கணக்கில் 'ற்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஊ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ற் and ஊ.

[ற் + ஊ]

றெ

றெ *ṟe,* தமிழ் நெடுங்கணக்கில் 'ற்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'எ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ற் and எ.

[ற் + எ]

றே

றே *ṟē,* தமிழ் நெடுங்கணக்கில் 'ற்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஏ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய்யெழுத்து; the compound of ற் and ஏ.

[ற் + ஏ]

றை

றை ṟai, தமிழ் நெடுங்கணக்கில் 'ற்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஐ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ற் and ஐ.

[ற் + ஐ]

றொ

றொ ṟo, தமிழ் நெடுங்கணக்கில் 'ற்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஒ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ற் and ஒ.

[ற் + ஒ]

றோ

றோ ṟō, தமிழ் நெடுங்கணக்கில் 'ற்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஓ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ற் and ஓ.

[ற் + ஓ]

றௌ

றௌ ṟou, தமிழ் நெடுங்கணக்கில் 'ற்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஔ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ற் and ஔ.

[ற் + ஔ]

ன்

ன் ṉ, தமிழ் நெடுங்கணக்கில் பதினெட்டாம் மெய்யான மெல்லெழுத்து; the 18th consonant, a nasal.

ன

ன ṉa, தமிழ் நெடுங்கணக்கில் 'ன்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'அ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ன் and அ.

[ன் + அ]

னா

னா ṉā, தமிழ் நெடுங்கணக்கில் 'ன்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஆ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ன் and ஆ.

[ன் + ஆ]

னி

னி ṉi, தமிழ் நெடுங்கணக்கில் 'ன்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'இ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ன் and இ.

[ன் + இ]

னீ

னீ *ṉī*, தமிழ் நெடுங்கணக்கில் 'ன்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஈ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ன் and ஈ.

[ன் + ஈ]

னு

னு *ṉu*, தமிழ் நெடுங்கணக்கில் 'ன்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'உ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ன் and உ.

[ன் + உ]

னூ

னூ *ṉū*, தமிழ் நெடுங்கணக்கில் 'ன்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஊ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ன் and ஊ.

[ன் + ஊ]

னெ

னெ *ṉe*, தமிழ் நெடுங்கணக்கில் 'ன்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'எ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய்யெழுத்து; the compound of ன் and எ.

[ன் + எ]

னே

னே *ṉē*, தமிழ் நெடுங்கணக்கில் 'ன்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஏ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ன் and ஏ.

[ன் + ஏ]

னொ

னொ *ṉo* தமிழ் நெடுங்கணக்கில் 'ன்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஒ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ன் and ஒ.

[ன் + ஒ]

னோ

னோ *ṉō*, தமிழ் நெடுங்கணக்கில் 'ன்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஓ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய் யெழுத்து; the compound of ன் and ஓ.

[ன் + ஓ]

னௌ

னௌ *ṉau*, தமிழ் நெடுங்கணக்கில் 'ன்' என்னும் இடையின மெய்யெழுத்தும், 'ஔ' என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து உருவான உயிர்மெய்யெழுத்து; the compound of ன் and ஔ.

[ன் + ஔ]

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

ஒன்பதாம் மடலம் - முதற் பாகம்

[இணைப்பு மடலம்]

(அ-கௌ)

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language

[Supplementary Volume]

Volume IX - Part-I

முனைவர் இரா. மதிவாணன்

மதிப்புறு இயக்குநர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட

இயக்கக வெளியீடு

தமிழ்நாடு அரசு

2010

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

ஒன்பதாம் மடலம் – முதற் பாகம்

[இணைப்பு மடலம்]

(அ–கௌ)

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language

[Supplementary Volume]

Volume IX - Part-I

முனைவர் இரா. மதிவாணன்
மதிப்புறு இயக்குநர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட
இயக்கக வெளியீடு
தமிழ்நாடு அரசு
2010

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 29.

முதற் பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு 2041 ஆடவை (ஆனி) (June 2010)

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. IX, Part-I

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு

© Government of Tamilnadu

விலை : உருபா 400/–

Price : Rs. 400/-

குறியீட்டெண் : Colon No.P J1-J, 314"K.M4

வெளியிட்டோர் :

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்,
அண்ணாநகர், சென்னை–600 040.

Published by :

Directorate of Tamil Etymological Dictionary Project,
C- 48, Ist Floor, T.N.H.B.,
IInd Avenue, Anna Nagar,
Chennai - 40.

அச்சீடு :

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை–600 113.

Printed at :

International Institute of Tamil Studies,
Tharamani, Chennai - 113

நூல் கிடைக்குமிடங்கள் :

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்,
அண்ணாநகர், சென்னை–600 040.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை–600 113.

Copies available at :

Directorate of Tamil Etymological Dictionary Project,
C- 48, Ist Floor, T.N.H.B.,
IInd Avenue, Anna Nagar,
Chennai - 40.

International Institute of Tamil Studies,
Tharamani, Chennai - 113

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

கலைஞர் மு.கருணாநிதி

செம்மொழிச் செம்மல் கலைஞர் பெருந்தகையே
செம்மாந்த செந்தமிழர் பாவாணர் நுண்ணோக்கில்
சீர்கொள் அகரமுதலி வெளியிட்டுப்
பேர்கொண்டீர் வாழ்க நெடிது!

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 26.5.2010

வாழ்த்துரை

செந்தமிழ் மொழியின் வேர்ச்சொல் வித்தகர் மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் அவர்களை இயக்குநராகக் கொண்டு, 1974ஆம் ஆண்டில், அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் உருவாக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியை 12 மடலங்களில் 31 தொகுதிகளாகக் கலைக்களஞ்சிய அமைப்பில் விரிவாக உருவாக்கி வெளியிடத் திட்டமிட்டது. அதன்படி, இதுவரை, 11 மடலங்களில் 28 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த நூல் தொகுதிகளில் விடுபட்ட சொற்கள் தொகுக்கப்பட்டு, ஒன்பதாம் மடலத்தின் இணைப்பாக இரண்டு பாகங்கள் 29, 30 ஆகிய இரு தொகுதிகளாக உருவாக்கப்பட்டுள்ளன. இந்த இரு நூல்களும் கோவை மாநகரில் நடைபெறும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் வெளியிடப்படுவது மிகுந்த பாராட்டுக்குரியது.

இதனைத் தொடர்ந்து, 12வது மடலமாக, அதாவது, 31ஆம் தொகுதியாகச் ‘சொற்பிறப்பு நெறிமுறைகள்’ என்னும் பெயரில் இறுதித் தொகுதி விரைவில் வெளியிடப்படவுள்ளது.

கழக அரசு அமையும் காலங்களில் மட்டுமே கனிவோடு கவனம் செலுத்தப்பட்டு, கடந்த 36 ஆண்டுகளாக நடைபெற்று வரும் செந்தமிழ்ச் சொற்பிறப்புப் பேரகரமுதலி திட்டத்தின் நூல்கள் அனைத்தும் அன்னைத் தமிழின் அரிய அணிகலனாகவும், ஆராய்ச்சியாளர்களுக்கு ஏற்றதோர் கருவூலமாகவும் திகழும் என உறுதியாக நம்புகிறேன். இப்பணியில் ஈடுபட்ட தமிழறிஞர் பெருமக்கள் அனைவரையும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

(மு.கருணாநிதி)

மொழிஞாயிறு
ஞா.தேவநேயப்பாவாணர்



ஞால முதன்மொழி எந்தமிழே என்றென்று
சால நிறுவிய பாவாணச் செம்மலே
நின்று நிலவும் சொற்பிறப்பு காட்டியதால்
பொன்றாது நின்றதும் பேர்!

க. முத்துசாமி, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

தமிழ் வளர்ச்சி,அறநிலையங்கள் (ம)
செய்தித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

நாள்: 02–06–2010

அணிந்துரை

"நன்று தமிழ் வளர்க ! – தமிழ்
நாட்டினில் எங்கணும் பல்குக! பல்குக!
என்றும் தமிழ் வளர்க! – கலை
யாவும் தமிழ்மொழியால் விளைந்தோங்குக"

என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியதைப்போன்று எல்லாக் கலைகளும் செம்மொழித் தமிழில் சிறப்புற வளர்ந்தோங்கும் காலம் தமிழ்நாட்டில் வந்தாயிற்று. **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்களின் சீரிய முயற்சியினால் 'தமிழ்' இன்று செம்மாந்த நிலையை அடைந்திருக்கின்றது.

நம் செம்மொழித் தமிழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வண்ணம் தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படையான பணிகளில் அகரமுதலி உருவாக்குவதும் தலைசிறந்த தமிழ்ப்பணியாகப் போற்றப்படுகிறது. தனித்தமிழ் காத்த மொழிநூலறிஞர் ஞா. தேவநேயப் பாவாணரின் சொற்பிறப்பு ஆராய்ச்சி அவரது 'ஞாலமுதன்மொழிக் கொள்கை' என்னும் அடிப்படையில் அமைந்தது. இக்கொள்கைக்கு அண்மைக் காலத்தில் உலக மொழியியல் அறிஞர்களிடையில் ஊக்கம் தருவோர் எண்ணிக்கை விரைவாகப் பெருகி வருகிறது. அத்தகு பெருமைக்குரிய பாவாணர் செய்த அரிய ஆராய்ச்சியின் அடிப்படையில்தான் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் உருவாக்கப்பெற்று, அவர்கள் வழி நடத்தியவண்ணம் அகரமுதலியின் பன்மடலங்களாகப் பாவாணர் கருதியவண்ணமே வெளிவந்துள்ளன. அத்தகைய தொடர்முயற்சியில் இவ்வியக்ககத்தின் வாயிலாக வெளிவந்த அகரமுதலித் தொகுதிகளில் விடுபட்டவையெல்லாம் தொகுக்கப்பெற்று இப்போது இரண்டு தொகுதிகள் கொண்ட இணைப்பு மடலமாக வெளிவந்துள்ளது. அவற்றை **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் தம் பொற்கரங்களால் வெளியிட இருக்கின்றார்கள் என்பது நமக்குப் பெருமகிழ்ச்சியளிக்கின்றது. என்றென்றும் பீடு பெற பாடாற்றித் தமிழுக்குச் செம்மொழி அரியணை தந்த **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் ஊட்டிய ஊக்கம் அகரமுதலி **30** தொகுதிகளாக மலர்ந்துள்ளது.

இணைப்பு மடலங்களுக்குப் பின்னர் வெளிவரவேண்டிய சொற்பிறப்பு நெறிமுறை மடலத்தையும் விரைந்து முடித்து வெளியிடும் பணி நடைபெற்று வருகிறது. இத்தகைய சீரிய முயற்சியில் ஈடுபட்டுள்ள செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மதிப்புறு இயக்குநரையும் மற்றும் பதிப்பாசிரியர்கள், சிறப்புநிலைத் தொகுப்பாளர்கள், அனைத்துப் பணியாளர்களையும் சிறப்பாகப் பாராட்டுகிறேன்.

(க. முத்துசாமி)

பதிப்புரை

செம்மொழித் தமிழின் சீரார்ந்த முன்மைக்கும் தொன்மைக்கும் அடிப்படைக் கருவி நூலாக இருப்பது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி. உலகில் இதுவரை வெளிவந்துள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிகள் அனைத்தினும் மேம்பட்டதாகத் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி விளங்க வேண்டும் எனப் பேராசான் மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் கனவு கண்டார். அதனை அரசின் திட்டமாக்கிப் பாவாணருக்கென்றே தனித்த ஓர் இயக்ககத்தை உருவாக்கிய **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் முத்தமிழ்க் கலைஞர்** அவர்கள் பாவாணரின் நெட்ட நெடுங்கனவை நீடு நிலைத்த நனவாக்கியதை அகரமுதலி தொகுப்புப் பணி நிறைவுற்று வெளிவந்துள்ள 30 தொகுதிகளில் இன்று காண்கிறோம். இறுதித் தொகுதியான சொற்பிறப்பு நெறிமுறைகள் 31 ஆம் தொகுதியாக விரைவில் வெளிவரவுள்ளது.

உலக மொழிகளில் ஆங்கிலம், பிரஞ்சு, செருமானியம், உருசியம், சீனம், இலத்தீனம், சமற்கிருதம் ஆகியவற்றில் சொற்பிறப்பு அகரமுதலிகள் வெளிவந்துள்ளன. இந்திய மொழிகளில் தெலுங்கு, நேப்பாள மொழிகளில் வெளிவந்தவை சிறப்பாக அமையவில்லை. குடும்ப மொழிகளுக்காக வெளிவந்த பரோஎமனோவரின் Dravidian Etymological Dictionary (DED). அல்தாய்க்கு மொழிகளுக்காக வெளிவந்த Etymological Dictionary of Altaic languages (EDAL). பின்லாந்து பேராசிரியர் அன்னு பனு அகோலா வெளியிட்ட SUDURALJAN (சுமேரியன் திரவிடம் ஊரல் மொழிகள் சப்பானியம் ஆண்டியன் இன்கா மொழி) அகரமுதலி ஆகியவை ஒப்பீட்டு அகரமுதலிகளாக (Comparative Dictionary) உள்ளன. இவற்றில் சொற்பிறப்பின் மூலத்தைத் தேடும் முயற்சி முழுமையாக எடுக்கப்படவில்லை.

12000 பக்கங்களில் இரண்டு இலக்கம் சொற்களை உள்ளடக்கி அனைத்துச் சொல்லாட்சிகளுக்கும் வேர்மூலமுட இனச்சொல்வகைப்பாடும் காட்டும் முயற்சியில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி வீறார்ந்த வெற்றி நடை பயின்றுள்ளது. பல்வேறு காரணங்களால் அகரமுதலிப் பணி தொடர்ந்த இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகியது. திட்டமிட்ட கால வரம்புக்குள் நிறைவுறுத்த இயலாமல் வேறுவழியின்றி காலநீட்டிப்பை எதிர்கொள்ள நேர்ந்தது வருந்தத்தக்கதாயிற்று. நெடுங்காலமாகப் புலமை நலம் பொதுளிய திறப்பாடு மிகுந்த இயக்குநர் பணியிடம் நிரப்பப்படவில்லை. அரசு செயலாளரே கூடுதல்

பொறுப்பு இயக்குநராக நீடிக்க நேர்ந்ததாலும் புலமை சான்ற இயக்குநரின் ஒரு சீரான மேற்பார்ப்பு இல்லாத நிலையிலும் அகரமுதலிச் சொற்பதிவுகளிலும் சீரான பதிப்புப் பணியிலும் குறைபாடுகள் காணப்படுகின்றன என்பது உண்மையே. இக்குறைபாடுகளைக் களைந்து ஆக்சுபோர்டு ஆங்கில அகரமுதலி போல் பன்னிரு பெருந்தொகுதிகளில் திருந்திய பதிப்பு Revised edition of (TED) Tamil Etymological Dictionary வெளியிட அரசுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

"வினைச் சொற்களின் பெருக்கம் செம்மொழிச் சிறப்பை நிலைநாட்டும். அத்தகைய வினைச்சொல் பெருவளத்தை தமிழில் நான் காண்கிறேன்" என 'அருள்மிகு வினோபா அடிகள் குறிப்பிட்டார். அது உலக மொழிகளில் வேர்வீழ்த்து ஐரோப்பிய மொழிகளில் விழுதூன்றியதைக் கால்டுவெல் பெருமகனாரும் யாழ்ப்பாணத்து நல்லூர் ஞானப்பிரகாச அடிகளாரும் வலியுறுத்தினர். பாவாணர் அதனை மெய்ப்பித்துக் காட்டினார். அகரமுதலியில் செம்மொழித் தமிழின் வேர்வளம் விளக்கப்பட்டுள்ளது.

திராவிடமொழிகளிலும் ஏனைய உலகமொழிகளிலும் இனச்சொல் காட்டியிருப்பது, படவிளக்கம் தந்திருப்பது, இன்றியமையாத சொற்களுக்கு விரிவான விளக்கம் தந்திருப்பது, பிற அகரமுதலிகளில் காணப்படும் பிழைபாடுகளைச் சுட்டிக்காட்டித் திருத்தியிருப்பது, புதிய கலைச் சொற்களைப் படைத்திருப்பது, வடமொழிச் சொல்லாட்சிகளுக்கு நிகரான தமிழ்ச் சொற்கள் தந்திருப்பது, தமிழில் புகுந்துள்ள வேற்று மொழிச் சொற்களைத் தனியாகப் பிரித்து முத்தொகுதி அயற்சொல் மடலமாக வெளியிட்டிருப்பது, ஏட்டில் பயிலாத நாட்டுப்புறத்துத் தமிழ்ச் சொல்லாட்சிகளைத் தேடித் தொகுத்திருப்பது இன்றியமையாத இலக்கணக் குறிப்புகள் தந்திருப்பது ஆகியவை இந்த அகரமுதலியின் சிறப்புக் கூறுகள் எனலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாகப் பாவாணர் எண்ணிய வண்ணம் இதுவரை வெளிவந்துள்ள உலகச் சொற்பிறப்பு அகரமுதலிகளில் காணப்படாத சிறப்புக்கூறுகள் பெருமளவில் இந்த அகரமுதலித் தொகுப்புகளில் இடம் பெற்றிருப்பது இத்திட்டப் பணியின் தனிச்சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. இப்பணியில் எங்களை ஈடுபடுத்திய **மாண்புமிகு முதலமைச்சருக்கும்**, தமிழ் வளர்ச்சி அரசு செயலாளருக்கும் என்றும் பொன்றா நன்றியுடையோம். இப்பணியில் அயராது உழைத்த திட்டப்பணி தமிழறிஞர்கள் அனைவருக்கும் நன்றி உரியது.

இரா. மதிவாணன்
மதிப்புறு இயக்குநர்

பதிப்புக்குழு

முனைவர் **இரா. மதிவாணன்**, மதிப்புறு இயக்குநர்
தலைவர்–பதிப்புக்குழு

முனைவர் **மு.கண்ணன்**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

முனைவர் **ச. செந்திலாண்டவன்**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

முனைவர் **இரா.கு.ஆல்துரை**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

திரு.**கா. இளமுருகு**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

திரு.**ச.கி. கணேசன்**, சிறப்பு நிலை ஓவியர் – முதனிலை

திரு. **மா. பூங்குன்றன்**, பதிப்பாசிரியர்

திரு.**க.கணேசன்**, பதிப்பாசிரியர்

திரு.**சு.வீரவேலு**, பதிப்பாசிரியர்

திருவாட்டி.**வே.உமாராணி**, உதவிப் பதிப்பாசிரியர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

ஒன்பதாம் மடலம் – முதற் பாகம்

[இணைப்பு மடலம்]

(அ–கௌ)

அ

அஃகாக்காலை *akkākālai,* பெ.எ. (adj.) அளவு குறையாதாயின்; if not diminished. *"ஆய்தம் அஃகாக் காலையான"* (தொல். 2:7).

[அஃகு→அஃகா+காலை]

அஃகாமை, *akkāmai,* பெ.(n.) குறையாமை; undiminished. *"அஃகாமை செல்வத்திற்கு யாதெனின்"* (குறள்.178).

[அஃகு+ஆ+மை]

அஃகி[1] *akki,* வி.எ. (adj.) அருகி; seldom *"குறித்து எதிர் மொழிதல் அஃகித் தோன்றும்"* (தொல். 22:42).

[அல்கு → அஃகு → அஃகி]

அஃகி[2] *akki,* பெ. (n.) ஊற்றுநீர், spring water. *"மேலிடா அஃகி ஊறும் பைம்புனல்"* (நி.க.சூ.5:27).

[அல்கு–அஃகு+அஃகி]

[அஃகம் – நீரூற்று. அஃகு → அஃகம் → அஃகி. அல்கு–அஃகு–அஃகி. ஊற்று நீர்: பார்க்க]

அஃகியநுட்பம் *akkiya-nuttpam,* பெ. (n.) குறை அறிவு; shallow knowledge; *"உயர்ந்த கட்டிலு ரும்பில் சுற்றத்து அகன்ற தாயத்து அஃகிய நுட்பத்து"* (மலை. 550–1).

[அஃகி+நுட்பம்]

அஃகியோன் *akkiyōn,* பெ.(n.) குறைவுற்றோன்; not well. *"சொல்லவும் ஆகாது அஃகியோனே"* (குறு. 346 :8).

[அஃகு → அஃகியோன்]

அஃகு–தல் *akku-,* செ.குன்றாவி. (v.t.) மெல்லுதல், உண்ணுதல்; to chew, eat.

க அகி.

[அல்கு–அஃகு]

அஃதை *akdai,* (பெ.) (n.) சோழ மன்னன் மகளின் பெயர்; name of the daughter of a chola king.

து அக்கு.

[அஃகு – அஃதை]

[அஃகுதல் = சிறிதாதல். அஃதை = இளையவள், சிறியவள். மகளிர்க்கு இளமைப்பெயர் இயற்பெயராதல் உண்டு]

அஃறிணை *akrinai,* பெ. (n.) உயர்வு அல்லாதது ஆகிய உயிரின வகைமை (சாதி); neuter gender. *"புகர் அறக் கிளந்த அஃறிணை மேன"* (தொல். 2 :49).

[அல் + திணை]

அஃறிணைஇயற்பெயர் *akrinai-iyarpeyar* பெ. (n.) ஆன்றோரால் இடப்பட்டு இயல்பாக வழங்கும் பெயர்;neuter noun; *தெரிநிலை உடைய அஃறிணை இயற்பெயர்"* (தொல். 14 :17).

[அல்திணை + அஃறிணை + இயற்பெயர்]

அஃறிணைக்கிளவி *akkirinai-kilavi,* பெ. (n.) அஃறிணைப் பொருளைக் குறிக்கும் சொல்; word denoting neuter gender, *"அஃறிணைக் கிளவி என்று எண் ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்"* (தொல். 10 :43).

[அல் + திணை →அஃறிணை+கிளவி]

அஃறிணைப்பெயர் *akrinai-p-peyar* பெ. (n) அஃறிணைப் பொருளைக் குறிக்கும் பெயர்ச் சொல்;noun denoting neuter gender, *"உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயர் என்று"* (தொல். 4 :15).

[அஃறிணை+பெயர்]

அஃறிணைவிரவுப்பெயர் *akrinai-viravu-p-peyar,* பெ. (n.) உயர்திணையிலும் அஃறிணை யிலும் கலத்தலையுடைய பொதுப் பெயர்ச் சொல்; common noun. *"அஃறிணை விரவுப் பெயர் இயல்புமார் உளவே"* (தொல். 5 :13).

[அஃதிணை + விரவு + பெயர்]

அக்கசாலை *akkasālai,* (பெ.) (n.)கொற்கை மூதூர்க்கு அருகே அமைந்த ஊர்; a name of a village near korkai.

[அக்க(ம்)+சாலை]

அக்கசாலை='காசு அடிக்கும் இடம், அக்கசாலையை உடைய ஊரும் அக்கசாலை என்று பெயர்பெற்றது.

அக்கசாலைப்பெரும்பள்ளி *akkasālai-p-perumpalli,* (பெ.) (n.) ஆழ்வார் பேரில்

உண்டாக்கப்பட்ட புத்த மதப்பள்ளி; "அக்க சாலைப் பெரும்பள்ளி ஆழ்வார் கோயிலுக்குத் திருவுத்சவம்" (4VNM 3. P 47.)

[அக்கசாலை+பெரும்+பள்ளி]

அக்கட்டாஎன *akkaḍā-eṉa*,(இடை)(int.) சும்மாஇருத்தல் (இடை)(int.) to keep quiet. Expression of repose (கொ.வ.வ.சொ.).

[அக்கடா(ஒலிக்குறிப்பு)+என]

அக்கட்டை *akkaḍḍai*, (பெ.) (n.) அந்தப்பக்கம் (கொ.வ.வ.) that side.

[அ+கடை–அக்கடை–அக்காட்டை]

அக்கடா *akkḍḍā*, பெ.(n.) மண்ணெண்ணெய்த் திரியடுப்பைப் பற்ற வைக்க உதவும் நுனியில் தக்கை பொருத்திய கம்பி; a wire device to lit the kerosine stove. (வ.சொ.அக.)

அக்கதம் *akkadam*, பெ.(n.) மங்கல அரிசி; unbroken grains of rice mixed with turmeric or saffron used in benediction or worship. "அறுகு வெள்ளரிசி கட்டி அக்கதம் என்றாகும்"

[அக்கம் (தவசம்)→அக்கதம்]

அக்கநீர் *akkanīr*, பெ. (n.) புறத்தே புலப்படாமல் அகத்தே இருக்கும் நீர்; the fluid found inside green vegetation.

[அக்க(ம்) + நீர்]

அக்கப்படம் *akkappaḍam*, பெ. (n.) அடியார் அணியும் ஆடை ; a cloth piece of a saint. "*அக்கப்படம் கோவணம் நெய்து*"(நம். 3 :80).

[அக்கம் + படம். அக்கம்–செம்மை, படம் = அணியும் சீலை]

அக்கம் *akkam*, பெ. (n.) மிகுதி; excess. [அஃகம்–தவசம். அஃகம்–அக்கம். தவச விளைச்சல் போன்ற மிகு பெருக்கம். ஏராளம்.]

அக்கமாலை *akkamālai*, (பெ.) (n.) நான்முகனின் பிரம்மாவின் சிற்பத்தில் வலது மேற்கை ஏந்தியிருக்கும் மாலை.string of beads in the hands of Brahma.

[அக்கம் +மாலை]

அக்கரக்காலம் *akkarakkālam*,பெ.(n.) எழுத்தை (அட்சரத்தை) ஒலிக்கும் காலயளவு; time measure for an alphabet.

[அக்கரம் +காலம்]

அக்கராப்பாளையம் *akkarāppāḷayam*, பெ. (n.) வேலூர் மாவட்டம் ஆரணிக்கு அருகில் உளள ஓர் ஊர். name of the village in the Vellore District near the Aarani.

[அக்காரம்–அக்கரம் +பாளையம்]

அக்கரைதேசிகள் *akkaraitesigaḷ*, (பெ.) (n.) ஓர் இனப் பிரிவு; a kind of race. "மலைமண்டலத்து அக்கரை தேசிகளில் கிட்டிணன் நாறணநம்பி" (KANOT. 19681134). (கல். அக.).

[அக்கரை+தேசிகள்]

அக்கழித்தல் *akkaḻi-*, 4 செ.குன்றாவி. (v.t.) வேருடன் அழித்தல்; ruin.

[அக்கு+அழி–த்தல்]

அக்கழி *akkaḻi*,பெ.(n.) தாழ்ப்பாள்; latch.

மறுவ. அகக்கழி

[அகம்+கழி]

அக்காமக்காஞ்சீமை *akkamakāñcīmai*, பெ. (n.) சேய்மையில் இருக்கும் ஊர், இடம்; a distant place.*(இ.வ.)*.

[அக்கா+அக்காம்+சீமை]

அக்காரக் கனி *akkārak-kaṉi*,பெ. (n.) இனிய சுவை மிகு பழம் பொருள்; "*கடிகைத் தடங்குன்றின் மிசை இருந்த அக்காரக் கனியை (மங்:8:9:4).*"

[அக்காரம்+கனி]

அக்காரடிசில் *akkāraḍcil*, பெ.(n.) சருக்கரைப் பொங்கல்; rice boiled in milk with ghee and sugar. "*நூறு தடா நிறை அக்காரடிசில்*". *(திவ்.திருப்ப. 9:6)*

[அக்காரம் – சருக்கரை. அடுதல் → அடிசில். அக்காரம் + அடிசில்]

அக்கால் *akkāl*, இடை .(int.) அப்போது, then "அக்கால் வருவார் எங்காதலோரே" (குறுந். 277 : 8.)

[அ+கால்]

அக்கி *akki*,பெ.(n.) 1. தீ; fire."அக்கி உமிழ்ந்தது வாயுக் கரத்திலே"(*திருமந்.370.*) 2. கண், eye "நயனம் நேத்திரமே அக்கம் . . . . அக்கி . . . . கண் ஆம்"(சூடா.2:96)

[அஃகு→அக்கு→அக்கி]

அக்கு *akku*, பெ. (n.) 1. அன்பு; affectionï love 2. பரிவு; special care. 3. பற்று; innate desire.

[அல் – நெருக்கம், அன்பு. அல் + கு – அஃகு – அக்கு]

அக்குத்தாப்பாபேசு–தல் *akkuttappāpēsu-*, செ.கு.வி. (v.i) முறைகேடாகப் பேசுதல்; to speak indecently. (வ.சொ.அக.)

[எக்குத்தப்பாகப்பேசு →அக்குத்தப்பாகப் பேசு]

அக்குத்தொக்கு இல்லாதவன் *akkuttokku illādavan*, பெ. (n.) orphan. *'பாசத்தைப் பெறவோ செலுத்தவோ யாரும் இல்லாதவன்;* one who has none to be affectionate *அவனுக்கு அக்குதொக்கு இல்லை'.* (வ.சொ.அக.).

[அக்கு + தொக்கு + இல்லாதவன்]

அக்குரன் *akkuran*, பெ. (n.) இடையெழு வள்ளல்களுள் ஒருவன்; one of the seven beneficient chieftains in ancient Tamil nadu. *"அக்குரன் அனையை. (பதிற்றுப்).*

மறுவ. அக்குமாரன்.

தெ.அக்குட(ஆற்றல்சான்றமறவன்)

க.அக்காடு–முடிவுக்கு கொண்டுவா.

[அக்கு–பணியச்செய், அடக்கியாள்]

அகச்சிறுமுழா *agaccirumuḷa* பெ.(n.) ஒருகண் பறை; a drum has one centre head where it is tapped. 35:3

[அகம்+சிறு+முழா]

அகச்சுவை *agaccuvai* பெ. (n.) இசை யோசையில் உள்ள ஒரு சுவை; an intrinsic musical note.

[அகம்+சுவை]

அகஞ்சேரல் *agancēral*, பெ. (n.) வீடு சென்று சேர்தல் to reach house. (கொ.வ. வ.சொ.)

[அகம் + சேரல்]

அகட்டு(பெ.)(n.)நன்றாக விரித்தல்;to wide open. (கொ.வ.வ.சொ.).

[அகற்று – அகட்டு(கொ.வ.)]

அகடு *agaḍu* பெ. (n.) யாழின் உறுப்புகளாகிய பத்தர் உச்சி வறுவாய் ஆகியனவற்றைக் குறிக்குஞ்சொல்;a term referring to certain parts of the har-pyāl.35:3.

[அகு – அகடு]

அகடுறல் *agaḍuṟal*,வி.எ. (adv.) நடுவு நிலைமை அடைதல்; neutral position, impartiality. *"அகடுற யார் மாட்டும் நில்லாது செல்வம்.." (நாலடி: 2).*

[அகடு + உறல்]

அகணிநாடு *agaṇi-nāḍu*,பெ. (n.) மருதநாடு; agriculatural tract of land. *"அசற அப்புலத்து அகணி நாடு ஒரீஇ"*

[அகணி+நாடு]

அகணிநார் *agaṇinār*, பெ.(n.) மரப்பட்டையின் உட்பக்கத்து நார்; fibre in the inner side of the bark.

[அகணி+நார்]

அகணிமுறம் *aganimuṟam*,பெ.(n.) தென்னை பனைகளின் மட்டை நாரினைக் கொண்டு இரண்டடைப் பின்னல்களுடன் அழகாக உறுதியாக முடையப்பட்ட, விலையும் அதிகமுள்ள முறம். (இ.வ.) ; winnow plaitted with upper rind of the stem of the coconut and palmayra frond.

[அகணி + முறம்.]

அகத்தரையர் *agattaraiyar*,பெ.(n.) சிவன்; மாதொருபாகன்;god siva. *"இமவான் பெற்ற பெண்ணகத் தரையர்" (நாவு : 1: 64 : 6).*

[அகத்து – அகத்து+அரையர்]

அகத்தியல் *agattiyal*,பெ. (n.) மனநிலை; disposition of the mind. *"அகத்து இயல் முகத்துக் காட்ட".*

[அகம்+அத்து+இயல்]

அகத்திருள் *agattiruḷ,* பெ. (n.) அறியாமை; ignorance said to be the darkness of mind *"அகத்திருளும் நிறைகங்குல் புறத்திருளும் (பெரிய. 1338).*

[அகம்+அத்து+இன்+அள்]

அகத்தினள் *agattinaḷ,* பெ. (n.) மனத்தில் உள்ளவள்;. one who is seated in mind. *"அரிமலர்க் கண்ணி நின் அகத்தினள் ஆக". (பெருங். 74 : 45).*

அகத்துக் கூன் *agattu-kūṉ,* பெ. (n.) உவளக (அந்தப்புரத்து)க் கூனி ; disabled servant maid in the royal quarters of the queen. *"புறத்து அமைச்சின் நன்றகத்துக் கூன்" (பழ. 295).*

[அகம் + கூன்]

அகத்துண்டம் *agattuṇḍam,* (பெ.) (n.) குறைபடும் தொகை;deficit amount. "குடிமகன் ஊணொபாதி படகிடந்த சிகை அகத் துண்டம் காட்டாதொழிய" (SII, viii, 25.)

[அகம் + துண்டம்]

அகத்துளை *agattuḷai,* பெ. (n.) உள்துளை; hollow space. *"அறைகண் மருங்கின் அகத்துளை இன்றி". (பெருங். 76 : 19).*

[அகம் + துளை.]

அகத்தூண் *agattūṇ,* பெ. (n.) வண்டியின் ஒருறுப்பு; part of cart. *"அகத்தூண் அமைதி". (பெருங். 58 : 54).*



அகத்தெழு வளியிசை *agatteḻuvaḷiuisai,* பெ. (n.) அடிவயிற்றிலிருந்து உந்தப்படுகின்ற காற்றினால் எழும் ஓசை; the distinct sound produced by rising air from the navel.

[அகம் +அத்து+எழு+வளி+ஓசை]

அகத்தெழுவளி *agatteḻu-vaḷi,* பெ. (n.) அடிவயிற்றில் (மூலாதாரத்தில்) எழுகின்ற காற்று; the air rising from the navel. *"அகத்து எழு வளி இசை அரில்தப நாடி" (தொல். 3 : 20).*

[அகம் +அத்து+எழு+வளி]

அகத்தோன் செல்வம் *agathoṉselvam,* பெ. (n.) மதிலின் உள்ளிடத்தில் உள்ளவனது செல்வ மிகுதி; wealth in the fort of a king. *"அகத்தோன் செல்வமும் .... புறத்தோன் அணங்கிய பக்கமும்." (தொல். 20 : 10).*

[அகம்+அத்து+(ஆன்)ஓன்+செல்வம்]

அகநகர்ச்சுற்றம் *aga-nagar-c-cuṟṟam,* பெ. (n.) அரசனின் உடன் சுற்றம் (பரிசனங்கள்); official staff of the king. *"அரசும் உரிமையும் அகநகர்ச் சுற்றமும் ஒரு மதில் எல்லைக்காத்தல் நின் கடன்" (மணி. 25 : 122 : 23).*

[அகம் +நகர்+சுற்றம்]

அகநிலை (பெ.) (n.) பரதக்கலையில் கையாளும் ஒரு முத்திரை நிலை. an hand posture in Bharathanatyam.

[அகம் +நிலை]

அகநிலைக் கோவை *aga-nilai-kōvai,* பெ. (n.) அக ஒழுக்கம் பற்றிய தொகுப்பு; a collection of works on love themes. *"ஐந்திணை தழுவிய அகநிலைக் கோவை" (ப.பா. 341.).*

[அகம்+நிலை+கோவை]

அகமேனி *agamēṉi,* பெ. (n.) உள்நிலை; intention. *"மிகமேனி மெலிவு எய்தி மேகலையும் ஈடு அழுந்து என் அகமேனி ஒழியாமே"* (சட. 9 : 7 : 10)

[அகம் + மேனி]

அகரமுதலான் *agara-mudalāṉ,* பெ. (n.) சிவபெருமான்; Śivaṉ. *"அகர முதலானை அணி ஆப்பனூரானை" (தேவா.சம். 1:88 –5).*

[அகம்+முதலான்]

அகரத்தன் *agarattan,* பெ. (n.) அகரமாகிய திருமால்; God Thirumal. *"எட்டெழுத்துள் ஓது அகரத்தனை"* (அட. 7 :95).

[அகரம்+அத்து+அன்]

அகராதி² *agarādi* பெ. (n.) அதிகம் படித்தவர்களை அழைக்கும் கிண்டற் சொல்; a metaphorical term to represent an erudite scholar. அவன் ஒரு அகராதி (இ.வ.)

[அகம்+அறுதி]

அகரு *agaru,* பெ. (n.) **அகில்** பார்க்க; see agil. *"அகரு வாழை எமை ஆரம் இணைய" (பரி. 12:5)*

[அகில் + அகரு]

அகப்படை *agappaḍai,* பெ. (n.) கமுக்க (அந்தரங்க)ப் படை; confidentials militory force *"உறுதியில் பொரு தமது அகப்படை" (வி.பா. 28 : 47.).*

[அகம் + படை]

அகப்பாகுடி *agappākuḍi,* பெ. (n.) சேர நாட்டு உம்பர்க்காட்டுப் பகுதியில் மலையிடையிருந்த குறுநாட்டுப் பகுதி;a region in *umbarkadu* area in the western range forest of Kerala.

<u>மறுவ.</u> அகப்பா. **க.** பாகுடி.

[அகழ்ப்பு (அகழி)– அகழ்ப்பா– அகழிசூழ்ந்த கோட்டை(அகழ்ப்பா–குடி– அகழிப்பாகுடி (அகழ்ப்பா நகர் குடியிருப்பு) அகழ்ப்பா என்னும் சொல்லே சிந்து வெளியில் அரப்பா எனத் திரிந்திருக்கக்கூடும்.]

அகப்புரை *aga-p-purai,* பெ. (n.) தாழ்வாரம்; verandah.

[அகம்+புரை]

அகப்புரை *aga-p-purai,* பெ. (n.) நுழை வாயிலைத்தாண்டிப் பக்கவாட்டில் அமைந்த அறை; front room adjacent to the entrance.

[அக்க(ம்)+சாலை]

அகப்பைநோய் *agappainōy,* பெ. (n.) உணவு இல்லாமல் மெலிந்து நோயாளியைப் போல் காணப்படுதல்;the unfed and underfed looking like a patient, due to the scarcity of food. (வ.சொ.அக.).

[அகப்பை + நோய்]

அகம் *agam,* பெ. (n.) திமிர், செருக்கு; haughtiness pride (இ.வ.)

[அகு(அகை)–அகம்]

அகங்காரம் *agangāram,* பெ. (n.) செருக்கு; conceit, arrogance.

[அகம் + காரம் = அகங்காரம் > அகம்.]

அகம்படி *agambaḍi,* பெ. (n.) 1. குடும்பம்; family. (தெ.கோ.சா.3 : 2).

[அகம் + படி]

அகம்படிமறமுதலி *agampaḍimaṟamudali,* (பெ.) (n.) அகம்படி மறவர் என்ற வீரர்களுக்குத் தலைவன்; Captain of the soldiers known an agambadi maravar *"குலோத்துங்க சோழக் கடம்பராயந் அகம்படி மறமுதலிகளில்"* (IPS, 181.)

[அகம்படி+ மறம்+முதலி]

அகம்படிமுதலிகள் *agambaḍimudaligal,* பெ. (n.) அந்தப்புரத்து அதிகாரிகள்; (தெ.கோ.சா.3 : 2); Officers of the royal chamber meant for queen.

[அகம் + படி + முதலிகள்]

அகம்பரன் *agambaran,* பெ. (n.) நானே கடவுள் எனும் கோட்பாடு;a doctrine imagining self as god. *"அகம்பரன் என்னாது அரங்கனை நாடில்" (அட். 3 : 88).*

[அகம்+பரன்]

அகம்பன் *agamban,* பெ. (n.) அசைவு இல்லாதவன்; (ஓர் அரக்கன்) a dare devil, name of a giant; *"அவ்வுரை கேட்டு வந்தான் அகம்பன் என்று அமைந்த கல்விச் செவ்வியான் ஒருவன்". (ஆர. 77: 68).*

[அகம்பு+ அன்]

அகம்பால் *agampāl,* பெ. (n.) உள்ளே, in, innermost part.; *"யாதும் யாவரும் இன்றி நின் அகம் பால் ஒடுங்கி". (சட. 1: 4).*

[அகம்+பால் அகம் = உள்ளே. இடம். அகம்பால் =உள்ளிடம் உள்ளே.]

அகம்பிரமம் *agampiramam,* பெ. (n.) யானே முழுமுதற் பொருள் the doctrine imagining self as god; *"அல்லிறந்து பகலிறந்து அகம்பிரமம் இறந்து போய்" (சிவ 200).*

[அகம்+பிரமம்]

அகம்வறியோன் *agam-variyōn,* பெ. (n.) முழுமகன் (அறிவிலி); fool. *"அகம் வறியோன் நண்ணல் நல் கூர்ந்தன்று". (முது. 9 : 8).*

[அகம்+வறியோன்]

அகம்படி வேளான் *agmbadi-vēlan,* பெ. (n.) வீரபாண்டியனின் நான்காம் ஆட்சியாண்டில் கி.பி. 1301 இல் இருந்த அரண்மை உவளகக் (அந்தப்புர)க் காவலர். name of the palace guard during the period of Veerappandiayan during 1012 A.D.

[அகம்படி+வேள்+ஆன்]

அகமகிழ்வு *aga-magilvu,* பெ. (n.) அகமகிழ்ச்சி பார்க்க; see agamagilcci *"அழகு தன் அக மகிழ்வுற". (சூளா. 437.).*

[அகம்+மகிழ்வு]

அகமண்டலம் *aga-mandalam,* பெ. (n.) உள்வட்டம்; inner circle. *"மலை ஆறும் ஏழு கடலும் பாதமலர் சூழ் குளம்பின் அக மண்டலத்தின் ஒரு பால் ஒருங்க". (மங். 11: 4-3).*

[அகம்+மண்டலம்]

அகமருடணம் *aga-marudanam,* பெ. (n.) மறை மந்திரச் சிறப்பு; speciality of sacred hymns; *"அன்றியும் விசேட மிக்க அகமருண்டணங்களாவன" (தி.தி. 48: 10).*

[அகம் + மருடணம்]

அகமலர் *aga-malar,* பெ. (n.) நெஞ்சக் கமலம் heart respresented as lotus; *"அக மலர் மேல் மன்னும்" (சிலப் 12:3:3).*

[அகம்+மலர்]

அகமலை *agamalai,* (பெ.) (n.) பெரியகுளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Periyakulam Taluk.

[அகம்+மலை]

அகமணை *aga-manai,* பெ. (n.) ஓடத்தின் உட்கட்டை; wooden piece on a boat; *"துறை படி அம்பி அகமணை ஈறும்". (ஐங். 17 : 8).*

[அகம்+மணை]

அகமனை *aga-manai,* பெ. (n.) உள்வீடு inner appartment; *"அனைய வேலை அகமனை எய்தினன்" (அயோ. 4 : 223).*

[அகம்+மனை]

அகமார்க்கம்[1] *aga-markkam,* பெ. (n.) அருளியல்பு. kind approach *"வாதனையைச் சொல்லும் அக மார்க்கத் தால் அவர்கள் மாற்றினர்காண்" (சை : சா : 2 : 50).*

[அகம்+மார்கம்]

அகமார்க்கம்[2] *agamārkkam,* பெ. (n.) 1. மெய்க்கூத்து; நாட்டியவகை; a kind of dance. (தெ.கோ.சா.3 : 2).

[அகம் + மார்க்கம்]

அகமிடறு *aga-midaru,* பெ. (n.) குரல்வளை; larynx. *"ஐத்தானத்து அகமிடறு சுற்றி" (நாவி. 6 : 93-2).*

[அகம்+இடறு]

அகயாறு *agayāru,* (பெ.) (n.) ஆற்றோரத்தின் உள் நிலப்பகுதி; protruding bank towards the stream. *"நிலத்திலும் அகயாற்றுப் படுகையிலும்"* (SII, xvii, 604.).

[அகம்+ஆறு]

அகரக்கிளவி *agara-r-kilavi,* பெ. (n.) அகரஎழுத்து; the letter a.

[அகரம்+ கிளவி]

அகரந்தென் *agaranten,* (பெ.) (n.) சைதாப் பேட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Saidapet Taluk.

[ஒருகா. தென் அகரம்>அகரந்தென்.]

அகரப்பயிற்சி *agarapayirci* பெ. (n.) அகரத்தை அளபெடையாக நீள ஒலித்தும், சுரத் தானங்களில் ஒலித்தும் பழகும் முறை; a

musical practice of signing allowing extra vowellength.

[அகரம்+பயிற்சி]

அகரம்தூளி *agaramthūḷi,* பெ. (n.) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். name of the village in chengalpattu taluk.

[அகரம்+தூளி]

அகராதி பிடித்தவன் (பெ.) (n.) எதற்கும் ஒத்து வராதவன்; unadjustable person.

[அகராதி+பிடித்தவன்]

அகவனசம் *agavaṉašam,* பெ. (n.) மனமாகிய தாமரை; as mind compared to lotus. *"அகவனசம் முகவனசம் அவை மலர்" (ஒட். 5:92). அகத்தாமரை பார்க்க.*see *agattamarai.*

[அகம் + வனசம்]

அகவையாள் *agavaiyāḷ,* பெ. (n.) உடல் வளர் நிறைவுக்கு உட்பட்ட பருவத்தாள்;age bound prescribed. *"ஈர் ஆறு ஆண்டு அகவையாள்" (சிலப். 11: 24.)*

[அகவை +ஆள்]

அகழ் எலி *agal-eli,* பெ. (n.) ஒரு வகை எலி; a kind of a rate. *"இரும்பல் அகழ் எலி" (நிக. 8: 224).*

[அகழ்+எலி]

அகம்பன்மாலாதனார் *agambanamaālā danār,* பெ. (n.) கடைக்கழகப் புலவரின் பெயர்; name of a sangam poet.

[அகம்பன் (சமணரின் இயற்பெயர்)+ மால் (அருகன்) + ஆதன்.]

பாண்டி நாட்டு அகமலை ஊரினராகிய சேரர் குடியினர்.

அகவிரை *agavirai,* பெ. (n.) உள்ளிடத் திருக்கும் (கபோதகத்தலை என்னும்) வீட்டின் உறுப்பு; a small plank on the inner pillar. *"நல் இல் அகவிரை உறையும் வண்ணப் புறவின்" (நற். 71: 7-8.).*

[அகவு-அறை. இறை-இரை. (கொ.வ.)]

அகலக்கரை *agala-k-karai,* பெ. (n.) அகலமுள்ள பெரிய சரிகைக் கரை (ம.வ.கொ. 67); broad border of a cloth.

[அகலம் + கரை]

அகலக்கவி *agala-k-kavi,* பெ. (n.) விரித் துரைக்கும் பாடல்; (வித்தாரக் கவி) descriptive poem. *"இவ்வகையே காட்டும் அகலக் கவிக்கு" (வெ. பா. 22.)*

[அகலம்+கவி]

அகலகோட்டா *agalakōṭṭa,* (பெ.) (n.) ஒசூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Husur Taluk.

[ஒருகா. அகழி+கோட்டை]

அகலத்தவன் *agalattavaṉ,* (பெ.) (n.) பெருமையுடையோன்; honourable person *"ஆளியைச்சேர்ந்த அகலத்தவனுக்கிளைய"* (SII, vi,167.).

[அகலம்+அத்து+அவன்]

அகலந்தோன் *agalantoṉ,* பெ. (n.) அகலமான மார்பை உடையவன்; a man of broad chest. *"மான்மதச் சாந்து ஆர் அகலந்தோன் வரைபோலும் தோற்றம்" (பரி. 16:44-6).*

[அகலம் (மார்பு)+அத்து+அவன்]

அகலநீக்கு-தல் *agalanikku-,* செ.கு.வி. (v.i.) அழித்துவிடுதல்; to destroy. *"அதிராஜரை அகலநீக்கி"* (E1, xvii,16.).

[அகல+நீக்கு]

அகலப்பா *agalappā,* பெ. (n.) **அகலக்கவி** பார்க்க; see agala-k-kvi. *"ஈங்கு அகலப் பாக்கள் இரண்டு" (வெ.பா.: 27.)*

[அகலம்+பா]

அகலம் *agalam* (பெ.) (n.) யாழின் ஓர் உறுப்பு. (12 : 38.);a part of harp.

[அகல்+அம்]

அகலமணி *agalamaṇi,* பெ. (n.) ஒருவகை அணிகலன்; a kind of ornament. *"ஆணி 49 அகலமணி 101ம்"* (SII, viii, 329.).

[அகலம்+மணி]

அகலாப்பிணி *agalāppiṇi,* பெ. (n.) தீராத நோய். prolonging desease; *"அகலாப் பிணி இல்லோர்." (வெ.பா. 78.)*

[அகலாத+பிணி]

அகலிடத்தவர் *agaliḍattavar,* (பெ.) (n.) உலகத்தவர்.people; *"அன்றுவந்தென்னை அகலிடத்தவர் முன்னே ஆளதாக என்று ஆவணங் காட்டி." (வன். 7 : 62–5.).*

[அகலிடம்(உலகம்)+அத்து+அவர்]

அகலிடப்பாரம் *agaliḍa-p-pāram,* (பெ.) (n.)நாடாளும் பெரிய பொறுப்பு; நிலத்தைத் தாங்கும் சுமை.the responsibility on the person who is ruling the country; withstand the weight of the land.; *"அகலிடப்பாரம் அகல நீக்கி." (சிலப். 30 : 180.)*

[அகலிடம்+பாரம்]

அகலியா *agaliyā,* பெ.எ., (adj.) பெருகாத; not increasing; *"உகலி ஆழ்கடல் ஓங்குபார் உளீர் அகலியா வினை அல்லல் போய் அறும்." (சம். 2 : 25 : 1.).*

[அகல்+இஆ]

அகலியான் *agaliyāṉ,* (பெ.) (n.) கடவுள்; அகன்றவன்; god; *"ஆழாதே ஆழ்ந்தான் அகலாது அகலியான்." (சேர. 3 : 3.).*

[அகலி+ஆன்]

அகலோகம் *agalōgam,*பெ.(n.)சூழிடம். surrounding *"அகலோகம் எல்லாம் அடியவர்கள் தற்சூழ" (பூந் : 2 : 6.)*

[அகல்+உலகம்]

அகவடித்தட்டு–தல் *agavaḍittaṭṭu-,*செ. குன்றாவி. (v.t.) நடனம் ஆடுகையில் காலின் பாதத்தால் தரையைத் தட்டுவது;tap the floor with soul of the feet. (35 : 11.).

[அகம்+அடி+தட்டு]

அகவயம் *agavayam,* பெ. (n.) மனவயம் (சங்கற்பம்).intension; *"தன் அக வசத்து வருவு தங்க" (யுத். 36 : 3).*

[அகம்+வயம்]

அகவயல் *agavayal,* பெ. (n.) மருதநிலம் wet land; *"அகவயல் இளநெல் லரிகால் சூடு" (பரி. 7 : 27).*

[அகம் + வயல்]

அகவர்[1] *agavar,* பெ. (n.) நாட்டில் வாழ்பவர். local people; *"அகவர் நீனிற முல்லைப்பஃறிணை நுவல" (பொரு. 220 – 21.).*

[அகம்+அவர்]

அகவர்[2] பெ. (n.) பாட்டுப்பாடும் பாணருள் ஒரு வகையினர்.bards who sing lyrics.(35:11.)

[அகவு+அக்]

அகவரை *agavarai,* பெ. (n.) உள்ளிடம். upto inner place ; *"ஆழித்தாழி அகவரைத் திரிவோர்." (மணி. 6 : 173.)*

[அகம்+வரை]

அகவல்விருத்தம் *agaval-viruttam,* பெ. (n.) ஆசிரிய விருத்தம்; a metre in prosody *"அகவல் விருத்தம் கட்டளை யொலியும் கலியின் விருத்தமும் கவின் பெறு பாவே". (ப.பா. : 189)*

[அகவு – அகவல்+விருத்தம்]

அகவலம் *agavalam,* (பெ.) (n.) அரக்கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in arakkoṇam Taluk.

[அகம்+ வலம்]

அகவலன் *agavalaṉ,* பெ. (n.) அழைத்துப் புகழும் பாணன்.a bard addresses while singing; *"கண்டி நுண்கோல் கொண்டு களம் வாழ்த்தும் அகலவன் பெறுக மாவே." (பழி. 43 :27 :8).*

[அகவு–அகவல்+அன்]

அகவலை *agavalai,* பெ. (n.) நெடுவலை. long net.; *"தடம் கண் விழிகளின் அகவலைப் படுப்பான்." (சட. 6 : 2 : 9).*

[அகம்(உள்ளாழ்ந்த– நீண்ட) +வலை]

அகவாய் *agavāy,* பெ. (n.) உள் கால்வாய்; internal canal. *"இவ்வூர் அகவாயின் வெங்கூர் நாலாங் கண்ணாற்று"* (SII, xiii, 287.).

[அகம் + வாய்]

அகவான் *agavāṉ,*அகழ்வான்பார்க்க அகழ்வான்;see *agaḻvāṉ*

அகவிதழ் *agavidal,* (பெ.) (n.) மலர்களின் உள் இதழ்;inner petal 5. *"அம்முகை மிசை அம்மலர் அகவிதழ்த் தண் பனி உறைத்தரும்." (கலி. 77 : 6–7.).*

[அகழ்+இதழ்]

அகவினை *agavinai,* பெ. (n.) 1. இடையூறு; கீழறுப்பு; disturb. (தெ.கோ.சா.3 : 2).

[அகம் + வினை]

அகவுநர் பெ. (n.) கிணைப் பறையை முழக்கிக் கொண்டு பாடுபவர்; bards who sings with beating kiṇai-p-paṟai.

[அகவு + அகவுநர்]

அகவுயிர் *agavuyir,* பெ.(n.) ஆதன், (ஆன்மா); soul.

[அகம் + உயிர்]

அகழ்ந்தோர் *agalndōr,* தோண்டினவர்; sdiggers. "ஆர்கலி அகழ்ந்தோர் கங்கை அவனியில் கொணர்ந்தோர்."

[அகழ்வான்–அகவான்]

அகழ்வான் *agalvāṉ,* பெ. (n.) வயல் வரம்புகளிலும் நிலத்திலும் நிறைய வளைகளைத்தோண்டியபின் பாதுகாப்பிற்காக வளைகளின் முகப்புகளில் மண் தள்ளி அடைத்து விட்டு ஏதாவது ஒரு வளையில் மட்டும் பாதுகாப்பாக இருக்கும் ஒருவகை யெலி. (இ.வ.);a rate which lives in a particular hole after digging many holes and sealing them.

[அகழ்–அகழ்வான் அகவான் = நிலத்தை அகழ்ந்து வளை தோண்டுவது]

வரப்புகளிலும் நிலத்திலும் நிறைய வளைகளைத் தோண்டிவிட்டு தோண்டிய வளைகளின் முகப்புகளில் மண்ணைத் தள்ளி அடைத்து விட்டு ஏதாவது ஒரு வளையின் உள்ளே இருக்கும் எலி வகை.

அகழ்வினையாளர் *agalvinaiyālar,* பெ. (n.) தோண்டும் தொழிலைச் செய்பவர்;diggers. *"அகழ்வினையாளரை அவ்வயின் தரீஇ" (பெருங். 90 : 78.).*

[அகழ்+வினை+ஆளர்]

அகழ்வோன் *agalvōṉ,* பெ.(n.) தோண்டுபவன்; diggers. *"நீர்திகழ் சிலம்பின் நன் பொன் அகழ்வோன்" (அக. 282 : 4).*

[அகழ்+(ஆன்)ஓன்]

அகழுநன் *agalunaṉ,* பெ. (n.) **அகழ்வோன்** பார்க்க; see agalvōṉ. *"பொருள் உடையார் பொருள் கொள்வான் அகழுநன் போன்று இலையோ" (நீல. 5 : 32.).*

[அகழ்+உ+நன்]

அகளங்கமூர்த்தி *agalanga-mūrti,* பெ. (n.) புத்தன்; Buddha. *"சுதன் அகளங்கமூர்த்தி ....பூமிசை நடந்தோன் புத்தன்" (நிக. 1 : 26.) இலையோ" (நீல. 5 : 32.).*

[அல்+களங்கம்+மூர்த்தி]

அகளசகளத்தார் *agalasagalattār,* பெ. (n.) அருவுருவர்; visible and non-visible god. (சகளவடிவினர்) *"ஆன நடம் ஐந்து அகள சகளத்தர்" (மூல. 2727).*

[அகளம்+சகளம்+அத்து+ஆர்]

அகளத்தி *agalatti,* (பெ.) (n.) ஆளத்தி என்பதன் முதல் வடிவம்; correct form of the word *ālatti*

[அகல்–ஆல்–கள்+அத்தி]

அகன்கூனை *agaṉ-kūnai,* பெ. (n.) கருப்பஞ் சாறு காய்ச்சும் கொப்பரை; a broad vessel. *"எந்திரத்து ஒழுகு சாறு அகன் கூனையின் ஊழ் முறை முழுசி" (சிட். 15 : 48.).*

[அகல்+கூனை]



அகன்பதி *agan-p-pati,* (பெ.) (n.) பேரூர்;a big town. *"பங்கியப் பாசடைத் தடம் சூழ்*

பழனநாட்டு அகன் பதிகள் பலவும் நண்ணி." *(பெரிய.2357.).*

[அகல் +பதி]

அகன்மணி *agan-mani,* (பெ.) (n.) மாணிக்கம்;diamond. *"அரதனம் சலாகை அகன்மணி." (நிக.தி. 6-7.).*

[அகல்+மணி]

அகன்றார் *aganrar,* பெ. (n.) செல்வசெழிப்பு உடையவர்; well to do people. *"அழுக்கற்று அகன்றாரும் இல்லை" (குறள். 17 : 10.).*

[அகல்+அகன்றார்]

அகன்றான் *agalnrān,* பெ. (n.) நீங்கினவன்; sage. *"மூப்பின் கண்நன்மைக்கு அகன்றானும்" (திரி. 17 : 1).*

[அகன்று-அகன்றான்]

அகன்றிசினோர் *aganrcivnār,* பெ. (n.) அன்புடையவர்; beloved people. *"கள்வர் போல்வர் நீ அகன்றிசினோர்க்கே" (குறு. 127 : 6).*

[அகன்று+இசின்+(ஆர்)ஓர்]

அகன்றிடல் *aganridal,* தொ.பெ.(vbl.n.) நீங்குதல்;relief. *"வயிறு உற்ற அடு சூலை மறப்பிணி தான் அந்நின்ற நிலைக்கண் அகன்றிடலும்" (பெரிய. 1341.).*

[அகன்று+இடல்]

அகன்றிலர் *agantrilar,* பெ. (n.) நெருங்கினர்; close friendly people *"அழுத்தினர் அழுந்திலர் அகன்றிலர் அகன்றார்." (யுத். 12 : 16.).*

[அகன்று+இல்+அர்]

அகனும் புறனும் *aganum-puranum,* பெ. (n.) உள்ளும் புறமும்;in and out *"இழுக்கா யாப்பின் அகனும் புறனும்" (சில. 8).*

[அகம்-அகன்+உம்+புறன்+உம்]

அகாலகாலன் *agālakālan,* பெ. (n.) எமன் போன்றவன்; one who is like yamā. *"அகங்க்ப விக்ரமந் அகாலகாலன்"* (SII, iii, 2066.).

[அகாலம்+காலன்]

அகியம் *agiyam,* பெ. (n.) இரும்பு; iron. *"கருங்கொல்அகியம் கருந்தாது அயிலும் இரும்பின் பெயரே" (நிக.பி. 6 : 141.).*

[எஃகு-அஃகு-அகியம்]

அகில்குடம் *agilkudam,* பெ. (n.) நறும்புகைக் குடம்; fragrant smoke pot. *"தாழ நாற்றுமின் தாமங்கள் அகில்குடம் பரப்பி" (சீவ. 12 : 12.).*

[அகில்+குடம்]

அகில்கூட்டு *agilkūttu,* பெ. (n.) ஒரு வகை மண (வாசனைக்) கலவை; fragrant paste of sandal wood. *"வந்து சந்தனம் கர்ப்பூரம் உடன்னரிகாசு செந்தேன் அந்த ஏலங்கள் என்ப அகில் கூட்டு ஓர் ஐந்தும் தாமே" (நிக. 12 : 37.).*

[அகில் +கூட்டு]

அகிலகலாவல்லி *akilakalāvalli,* பெ. (n.) கலைமகள்; Godess of learning *"என்று சொல்லி அகிலா கலா வல்லி இறைஞ்சி இருத்தலுமே" (ஒட். 5 : 220).*

[அகிலம்+கலை+வல்லி]

அகிளி *a gili ,* (பெ.)(n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurantakam Taluk.

[ஒருகா.அருள்-அகுனி-அகிளி]

அகினி (பெ.) (n.) பனை மட்டையிலிருந்து உரித்தெடுக்கப்பட்ட நார்; palmyra fibre.

[அகணி-அகினி) (கொ.வ.)]

கூடை பின்னலில் பயன்படும் அழுத்தமான பட்டை. (ம.வ.சொ.67)

அகிற்குறை *akirkurai,* பெ. (n.) அகில் மரக் கட்டை; agil wood piece *"பரிய அகிற்குறை பிளந்து புகைப்பார்கள் பாங்கு எல்லாம்" (பெரிய. 2235.)*

[அகில்+குறை]

அகுதை *agudai,* பெ. (n.) குறுநில மன்னன் பெயர்; name of a chieftain *"வயங்கு பெருந்தானை அகுதை" (அகம்112.)*

க. அகுந்தலெ (உயர்வு-மேன்மை)

[ஆகு-ஆகுந்தி-அகுந்தி-(பெருக்கம், மிகுதி, உயர்வு, தலைமை)]

அகை–த்தல் *agai-*, செ.கு.வி. (v.i.) வருந்துதல்; feeling. *"கழுப்பல ஏற்றி அகைப்பர்" (சூளா. 1939).*

[அகு–அகை]

அகோ *ako*, இடை (part) இகழ்ச்சிக் குறிப்பு இடைச்சொல்; onomo. expression. *"அரசனின் அகத்து மாட்சி அகோ பெரிது" (யசோ. 1: 64.).*

[அஃதோ +அதே+அகோ]

அங்கக்களரி *anga-k-kaḷari*, பெ. (n.) ஒரு மதிப்புரவுச் சின்னம்; an honorary symbol offered by a king. *"நமக்கு உண்டான வரிசை: பாவாடை, சேமயிர் அடக்கம், நாடகசாலை, பகல்விளக்கு, ஏறச்சங்கு, இறங்கு சங்கு, அங்கச்களரி, புலித்தண்டை"* (IPS, 715.).

[அங்கம் +களரி]

அங்கலி *angali*;பெ. (n. பசி;hunger.

தெ. ஆங்கிலி.

[அங்கல்–வயிறு சுருங்கல், பசி. அங்கல்–அங்கலி]

அங்கி காரியம் *aṅgikāriyam*,பெ. (n.) தீயில் செய்யப்படும் வேள்வி முதலியன; sacrificial ceremonies. *"அர்த்தயாமத்துக்குச செந்நெலரிசி குறுணியிரு நாழியும் அங்கி கார்யத்துக்கும் கூழாகும்."* (SII,xix 322.).

[அங்கி +காரியம்]

அங்கக்கிரியை *aṅgākriyai*, பெ. (n.) தாளம் போடும் போது கையாற் செய்யும் வினைகள்; counting poses of hand. நடனத்தின் போது உடல் உறுப்புக்களால் செய்யும் வினைகள்; poses of body and movements while dancing.

[அங்கம்+ skt. கிரியை]

அங்கணநீர் *angaṇanīr*, பெ. (n.) சாய்க்கடை நீர்; drainage water. *"ஊர் அங்கணநீர் உரவு நீர்ச் சேர்ந்தக் கால்" (நால. 18 : 5.).*

[அங்கணம்+நீர்]

அங்கணம் திறந்தவெளிக் குளிப்பிடம்; open bathing place. *'இப்படி அங்கணமா இருந்தா எப்படிக் குளிக்கிறது?'* (வ.சொ.அக.).

2. வீட்டினுள் அங்கணம் போன்று அமைத்த கழுதை கட்டுமிடம்; stable of ass. (வ.சொ.அக.).

[அங்கு+அணம்]

அங்கணர்தம்பாணி பெ. (n.) ஆறு நரம்புகளை யுடைய பண்; tune from six stringed musical instrument.

[அங்கணி+தம்+பாணி]

அங்கணாரிட்டு *angaṇāriṭṭu*, வி.எ. (adv.) புருவநெறித்து; shrinking the brow. *"சொக்கனும் அங்கணாரிட்டுத் துடை தட்டிச் சிரித்தருளி" (தி.தி. 52 : 8.).*

[அம்+கண்+(ஏறிட்டு)ஆரிட்டு(சொ.வ.]

அங்கணாளர் *angaṇāḷar*, பெ. (n.) சிவன்; Siva *"அங்கணாளர் தம் அபி முகத்தினில் அடி உறைப் போல்" (பெரிய. 2986).*

[அம்+கண்+(அறிட்டு) ஆரிட்டு] (சொ.வ.)

அங்கத்தன் *angattan*, பெ. (n.) அகன்ற மார்பை உடையவன்;a person who is having broad chest. *"அப்பனே அலர்மேல் மங்கை அங்கத்தனே" (அட. 6 : 30.).*

[அங்கம்+அத்து+அன்]

அங்கத்தார் *angattār*, பெ. (n.) அங்க நாட்டு மக்கள்; people belonging to Anga land. *"அந்தமில் சீர் அங்கத்தார்" (பெ.பா. 3 : 183.).*

[அங்கம்+அத்து+ஆர்]

அங்கத்தார்கோ *angattārkō*, பெ. (n.) கன்னன்;karnan(Mahabharat). *"அந்தமில் சீர் அங்கத்தார் கோவே" (பெ.பா. 3 : 183.).*

[அங்கம்+அத்து+ஆர்+கோ]

அங்கத்தாளம் *angattālam* பெ. (n.) தாளத்தின் உறுப்புகளின் வழியாக அமைந்த எண்ணிக்கைத் தாளம்.

[அங்கம்+தாளம்]

அங்கம் *aṅgam*, பெ.(n.) வயிறு; stomach.அங்கம் காயுது.(இ.வ.).

[அங்கு+(வளைவு)+அம்]

அங்கம்ஐந்து *angamaindu*, பெ.(n.) ஐந்தியம்,பஞ்சாங்கம்; Astrlogical calendar.

"திதியே வாரம் நாள் யோகம் கரணம் எனப் பகரும் சோதிப் பஞ்சாங்கம் ஆகும்." (நிக.தி. 12:63.).

[அங்கம்+ஐந்து]

அங்கம்நான்கு *angamnāngu,* பெ.(n.) நாற்படை, சதுரங்கம்; four frontier in the militiary. *"சதுரங்கம் யானை, தேர், குதிரை, காலாள்." (நிக.தி. 12:38.).*

[அங்கம்+நான்கு]

அங்கம்பத்து *angampattu,* பெ. (n.) பத்து உறுப்பு,தசாங்கம்;a country consisting of ten parts. *"ஆறும் மலையும் யானையும் குதிரையும் நாடும் ஊரும் கொடியும் முரசும் தாரும் தேரும் தசாங்க எனப்படும்.". (நிக.தி. 12 : 154.).*

[அங்கம்+பத்து]

அங்கமணி (பெ.) (n.) சிற்பங்களிற் காணலாகும் ஓர் மார்பணி;chest cover seen in statues. (5 : 71.).

[அங்கம்+மணி]

அங்கமாலை *angamālai,* பெ. (n.) நாவுக்கரசர் இயற்றிய பதிகங்களுள் ஒன்று;One of the poetic composition of Appar. *"செல்கதி காட்டிடப் போற்றும் திரு அங்க மாலையும்" (பெரிய. 1660.).*

[அங்கம்+மாலை]

அங்கராக்கு *angarākku* (பெ.) (n.) சட்டை (கொ.வ.வ.சொ.);shirt.

[அங்னம்+அரக்கு]

அங்குஅட்டை *angattai* பெ. (n.) சரிகை போடப் பயன்படும் சுங்குவிற்கு இணையாகப் பயன்படுத்தப்பெறும் சாகாடு தறிக்குரிய துளைகள் உடைய அட்டை; A plate containing holes used in parity with a border of cloth. (நெ. தொ. சொ. 51.).

[அங்கு+அட்டை]

அங்குத்தறி *anguttary* பெ. (n.) சுங்கின் உதவியால் சரிகை வடிவங்களை மாற்றி அமைத்தற்குரிய தறி வகை; the loom that change its designs.

[அங்கு+தறி]

அங்குறளி *ankurali* பெ. (n.) கோள்மூட்டுபவர்; backbitter

[அம்+குறளி]

அங்குவள்ளி *anguvalli,* (பெ.) (n.) பெரியகுளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Periyakulam Taluk.

[அங்கு+(பள்ளி) வள்ளி]

அங்கணம் *anganam* (பெ.) (n.) வீட்டின் அளவினைக் குறிக்கப் பயன்படும் சொல்; anganam a tamil word used to measure house area.

[(அங்கணம்) முற்றத்தைக் குறித்த சொல். நீட்டலளவுகுறித்த அங்கணமாயிற்று)]

அச்சஞ்சு *accanju,* பெ. (n.) ஐந்தைந்து வீதம்;each of five. *"இந்நிலக் கடமையில் அச்சஞ்சு பழங்காசு வெவ்வேற்று வகை இரட்டி"* (SII, xiv, 41.).

[(ஐந்து)அஞ்சு+ஆஞ்சு]

அச்சானியம் *accāniyam,* பெ. (n.) தீக்குறி; bad omen. *'எப்போதும் அச்சானியம் பேசாதே?'* (வ.சொ.அக.).

[அழிச்சல்–அழிச்சாலியம்–அழிச்சானியம் (கொ.வ.)]

அச்சாரம் *accāram* பெ. (n.) ஒரு பொருளை வாங்குவதற்கு அடையாளமாக முன்பணம் தந்து உறுதிப்படுத்திக் கொள்ளுதல்; a token advance to purchase a thing. *'அச்சாரம் போட்ட பின்னே என்னடா பேச்சு மாத்தற?'* (வ.சொ.அக.).

[அச்சு + ஆரம்]

அச்சாளத்தி *accālatti* பெ. (n.) ஆளத்தி பாடுதலில் ஒரு வகை; a type of song in tamil. 35:21

[அச்சு+ஆளத்தி]

அச்சி *acci,* (பெ.) (n.) கட்டை வண்டியின் அச்சாணி; wooden cart wheel pivotal nail. (கொ.வ.வ.சொ.).

[அச்சாணி– அச்சு– அச்சி(கொ.வ.)]

அச்சிபிச்சலாம் *accipiccalām*, பெ. (n.) உடல் குடல் எல்லாம்; that means all the parts of the body.

[அச்சு+பிச்சு+எல்லாம்]

அச்சி மரக்கயிறு *accimarakkayiṟu*, பெ. (n.) மாட்டுக்கயிறு ;a rope.

[அச்சு+மரம்+கயிறு]

அச்சிமரக்குண்டு *accimarakundu*, பெ. (n.) அச்சுமரக்குழி; a mould.

[அச்சு+மரம்+குண்டு(குழி)]

அச்சிமுட்டி *accimuṭṭi*, பெ. (n.) அச்சு நூலும் துணி நூலும் சேரும் இடம். a device in loom.

[அச்சு(அச்சி)+முட்டி]

அச்சு *accu*, பெ. (n.) மட்பாண்டத் திரிகை சுழலும் நடுவ (மைய) இரும்புக் கம்பி. (ம.வ.சொ. 67.);pinholdofpotter'swheel.



அச்சுக்கட்டு *accukkaṭṭu*, (பெ.) (n.) காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[அச்சு+கட்டு]

அச்சுக்கட்டை *accukkāṭṭai*, பெ. (n.) மட்பாண்டங்களில் முத்திரையிடும் கட்டை. (ம.வ.சொ. 67.). block of wood having design for sealing pottary.

[அச்சு+கட்டை]

அச்சுக்கோ–த்தல் *accu-kō* செ.குன்றாவி. (v.t.) நூலைத் தறியில் இணைத்தல். (ம.வ.சொ. 67.).; to set up thread in weavers loom.2.நெய்து முடிந்த பின் மீண்டும் புதிய பாவு நூலைத் தறியில் இணைத்தல். (நெ.தொ.க.51.) connectin new thread pan.

[அச்சு + கோ–]

அச்சுக்கோல்[1] *accu-k-kōl*, பெ. (n.) நூலை இழுத்துக் கட்டும் நீண்ட வடிவ குச்சி. (நெ.தொ. க.(51.).a length stick used in loom.

[அச்சு + கோல்]

அச்சுக்கோல்[2] *accu-k-kōl*, பெ. (n.) வடி நூலின் மேலும் கீழுமாக உள்ள சிறிய நீள உருளைக் குச்சி. (நெ.தொ. க. 51.);a stick used in loom.

[அச்சு + கோல்]

அச்சுச்சட்டி பெ. (n.) முத்திரையிடப்பட்ட சட்டி. (ம.வ.சொ. 67.).; sealed pot.

[அச்சு + சட்டி]

அச்சுத்தொழில் *accu-t-toḻil*, பெ. (n.) நூல் செய்தித்தாள் போன்றன அச்சிடும் பணி; the profession of printing.

[அச்சு + தொழில்]

அ ச்சுப்பலகை *accu-p-palagai*,பெ. (n.)அச்சு வெல்லம் வார்க்கப் பயன்படும் பலகை; jaggery mould.

[அச்சு + பலகை]



அச்சுப்பானை பெ. (n.) **அச்சுச்சட்டி** பார்க்க; (ம.வ.சொ. 67.); see accu-c-caṭṭi

[அச்சு + பானை]

அச்சுபிணை–த்தல் *accupiṇai-* செ.குன்றாவி. (v.t.) (n.) பிணைத்தல், பாவினைப் பண்ணையி லுள்ள இழைகளுடன் தறிக்கு வெளியே பண்ணையைக் கொண்டு இணைத்தல். (நெ. சொ. க. 52.);connecting device in loom.

[அச்சு+பிணை]

அச்சுமரம் பெ. (n.) அச்சு இணைந்த ஆளுயர நீள் சதுரமான கருவி. (நெ. சொ. க. 52.);device in loom.

அச்சுவெல்லம் *accuvellam,* பெ. (n.) கருப்பஞ்சாற்றுக்கட்டி; jaggery moulded in the shape of a cone with the top flattened.

[அச்சு + வெல்லம் அச்சில் (கட்டளையில்) வார்த்தெடுத்த வெல்லம்]



அச்செடு–த்தல் *accedu-,* செ.கு.வி. (v.t.) திரிகையில் வைத்து வேண்டிய வடிவம் செய்தல். (ம.வ.சொ. 67.); the control pin of a potter's wheel.

[அச்சு+எடு]

அசடை *aśaḍai,* பெ. (n.) மிகச் சிறிய மீன்வகை; a kind small fish. (இ.வ.).

[அசரை–அசடை]

அசதி *aśadi* பெ. (n.) சோர்வு, அயர்வு. (நெ. வ.வ.சொ. 35.).tiredness.

[அயர்தி+அயதி+ அசதி]

அசப்பு *aśsappu,* பெ. (n.) ஒரு கோணம் ஒப்புமை; resemblence. *'ஒரு அசப்புல அவள் பார்க்க நன்றாக இருப்பாள்.'* (வ.சொ.அக.).

[அயப்பு–அசப்பு]

அசமணிப்பலகை *asamaṇi-p-palagai,* பெ. (n.) மணவிழவில் மங்கலப் பொருள்கள் வைக்கும் பலகைத் தட்டு; a wooden plate used to keep auspicious things in marriage ceremony.

[அசமணி+பலகை]

கசவர் பழங்குடிகளின் சொல்லாட்சி.

அசமந்தம் *aśamandam,* பெ. (n.) அறிவு மழுங்கல், சோம்பல்; stupidity laziness. *'அவன் ரொம்ப அசமந்தம்வே.'* (வ.சொ.அக.).

[அயர் > அசர் > அச + மந்தம்]

அசல் *aśal,* பெ. (n.) துணி காயப் போட உதவும் மூங்கிற் கழி, கயிறு முதலியன; a cloths line, rope, etc. (வ.சொ.அக.).

[அயல்–அசல்]

அசனம் *asanam,* பெ. (n.) கோழி அறுத்து பொங்கலிட்டு அன்னதானம் செய்தல். (நெ.வ.வ.சொ. 26.) a village festival.

[ஆச்சி–அசி+காடு]

அசி *asi,* பெ. (n.) அரசமரம்; pipal tree.

மறுவ. அசாகம்

[அரசு – அசு – அசி]

அசிக்காடு *asikkāḍu,* பெ. (n.) மயிலாடுதுறை யிலிருந்து 15 கி.மீ. தொலைவிலுள்ள ஓர் ஊர். nameofavillage15km.from mayiladuturai.

[அசி (அரசமரம்) + காடு]

அசுகுசு *aśukuśu,* பெ. (n.) மிகவும் அரு வருப்பானது; most disgust, loathing. (இ.வ.)

[அசு+குசு]

அசும்பு *aśumbu,* பெ. (n.) நெல்வயலில் நெருக்கமாக முளைக்கத் தொடங்கி யிருக்கும் களைகள்; a kind of weed in paddy field. (இ.வ.).

[அசு+அசும்பு]

அசுரதாரு *asuratāru,* பெ. (n.) மரச் சிற்பங்களைச் செய்யவுதவும் மரவகைகள்; kind of woods used to make wooden icon statues. 5:21.

அசேகம் *asēgam,* பெ. (n.) முழுவதும் அவ்வளவும்; whole, entire. *'அந்த விழாவுக்கு ஊரு அசேகமும் வந்து விட்டது.'* (வ.சொ.அக.).

[ஒருகா.அச்சு–அசேகம்]

அசை *aśai,* பெ. (n.) படுக்கை தலை யணைகளை வைக்கவுதவும் மரத்தினாலான சட்டக்கோவைத் தொங்கல்; swinging wooden stand for the bed and pillows. (வ.சொ.அக.).

[அசு–அசை]

அசைசிமிழ் *aśaisimil,* பெ. (n.) மாட்டின் அசையும் திமில் குறையுடையது என்றும் குடும்பத்திற்கு ஆகாது என்றும் கருதப்படுவது; moving hump on a bullock's back; it is considered as a bad omen. (வ.சொ.அக.).

[அலை–அயை–அசை+சிமிழ்]

அசையாப்பிடாரி *asaiyā-p-pidāri,* பெ. (n.) அடங்காதவள்; uncontrollable woman. (கொங்கு.வ.).

<u>மறுவ.</u> அடங்காப்பிடாரி

[அசையாத+பிடாரி]

அசையெழுத்து *asai-ys-eluttu,* பெ. (n.) மெய் உயிரொலியுடன் கூடியிருப்பதை அடையாளப்படுத்தும் எழுத்து;syllabic letter.

[அசை+எழுத்து]

தமிழில் க,கா,கி,கீ, என்பன போன்று வரும் உயிர்மெய் எழுத்துகள் அசையெழுத்துகளாம்.

அறிவியம் *arivíayam,* (பெ.) (n.) இயல்உலகு, இயற்கை நெறிகள் ஆகியவற்றைக் குறித்த ஆய்வும் அறிவும்; science.

<u>மறுவ.</u>அறிவியல்.

[அறிவு+இயம்]

அஞ்சல் *añjal,* பெ. (n.) வேகம்; speed. *'போய்விட்டு இப்போ ஒரு அஞ்சல்ல திரும்பிடுவேன்.'* (வ.சொ.அக.).

[அச்சல்+அஞ்சல்]

அஞ்சலகுஞ்சம் *anjalakunjam* (பெ.) (n.) கோலிகுண்டு; play ball of glass. 'அஞ்சல குஞ்சம்'.

அஞ்சலி *anjali* (பெ.) (n.) இரட்டைக் கை முத்திரைகளில் ஒன்று; one of the two hand impression.

அஞ்சலித்தட்டு *anjali-t-tattu* (பெ.) (n.) கும்மி நடனத்தில் கைகளைத் தட்டும் முறை. (2 : 107); method of clapping in the *kummi* dance.

[அஞ்சலி+தட்டு]

அஞ்சலிஅத்தம் *anjaliattam* பெ. (n.) சிற்பங் களில் காணப்பெறும் ஒரு வகையான திருக்கரம்; a type of hand seen in the icon statues.

[அஞ்சலி+அத்தம்]

அஞ்சலிஅத்தமுத்திரை *anjaliattamuttirai* (பெ.) (n.) திருமலை நாயக்கர் உருவம் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ள முத்திரை, சிற்ப முத்திரைகளில் ஒன்று; one of the icon statues with impression of Thirumalainayakker.

[அஞ்சலி+அத்தம்+முத்திரை]

அஞ்சனம் *añjanam,* பெ. (n.) ஒரு வகை நெல்; a kind of paddy.

[அஞ்சு–அஞ்சனம்]

அஞ்சாங்கல் *anjaankal,* (பெ.) (n.) சிறுவர் விளையாடும் ஒரு வகை விளையாட்டு; a type of game played by children. (கொ.வ.வ.சொ.).

[ஐந்து–அஞ்சு+அம்+கல்]

அஞ்சாடுதல் *añjadu-* (பெ.) (n.) கருவுற்ற பெண்ணுக்கு 5ஆவது மாத்தில் நடைபெறும் சீர்; presentation given to pregnant lady in the fifth month of her pregnancy. (கொ.வ.வ.சொ.3).

[ஐந்து–அஞ்சு+ஆடு]

அஞ்சாமடை *añjāmadai,* பெ. (n.) பரமக்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Paramagudi Taluk.

[ஐந்தாம்–அஞ்சாம்+மடை]

அஞ்சியத்தைமகள்நாகையார், *añji-yattai-magal-nāgaiyār,* பெ. (n.) பெண்பாலார் புலவர்; woman poet.

[அஞ்சி+அத்தை+மகள்+நாகையார்]

நாகை என்பது இவளுடைய பெயர். தகடூர் அதிகமான் அரசர்களில் அஞ்சி என்னும் அரசன் ஒருவனின் அத்தை மகள்.

அஞ்சுகுளம்பாய் *anjukuḷampāi* பெ. (n.) வடிவம் பொறித்த பாய்; (ம.வ.தொ. 67.). a mat with design.

[அஞ்சுகுளம் + பாய்]

அஞ்சாலி *añjāli,* பெ. (n.) எழுத்து மூலமான ஒப்புதல்; a written agreement. *"பொறியாரையும் ஊராரையும் வளைச்சு அஞ்சாலி எழுதிப் படிப்பிச்சுக் கடமையுங் கொண்டு"* (TAS, iii, p. 59-63.).

[அஞ்சல்–அஞ்சாலி]

அஞ்சி *anji* பெ. (n.) 1. குறுநில மன்னனைக் குறித்த பெயர்; name of a chieftain. 2. அதியமான் மரபினன்; name of Adiyaman clan of chera dynasty.

ம.அஞ்சி–படைத் தலைவன்.க.அன்சு (அஞ்சு) பங்கு, பிரிவு.

[அஞ்சல்– பிரிப்பு. அஞ்சி–குறு நிலப் பகுதிக்கு (தன் பங்குக்கு) த்தலைவன்.]

இராவணன் தம்பி வீடணனின் பெயரும் அஞ்சி என்பர். அஞ்சுபவன் எனத்தவறாகப் பொருள் கொண்டதால் வடமொழியில் வீபிஷணன் எனப்பெயரிடடனர்.

அஞ்சிஅஃதைமகள் நாகையார் *anjiakdai magalnāgayār.* பெ. (n.) பெண்பாற் புலவரின் பெயர்; name of a Tamil poetess.

ம. அஞ்சி. க. அன்சு. (அஞ்சு) பங்கு, பிரிவு.

[அஞ்சி (குறுநிலத்தலைவன்) – அஃதை+மகள்+நாகை+ஆர்]

அஞ்சு எனும் சொல் பங்கு எனப் பொருள்படுதலால் தனக்குத் தரப்பட்ட பங்காகிய நிலப்பகுதியின் குறுநிலமன்னன் எனப்பொருள் படுகிறது.

அஞ்சிதம் *anjiṭṭam* பெ.) (n.) தெருக்கூத்தில் கதை மாந்தர்களாய் பிரிந்து ஒதுங்கி நிற்கும் நிலை; allotted position of characters in street drama.

[அஞ்சு–அஞ்சிதம்]

அஞ்சுகட்டிப்பூ *añjukaṭṭi-p-pū,* பெ. (n.) ஒரு வகை அணிகலன்; a kind of ornament. *"அஞ்சுகட்டிப்பூப்பன்னிரண்டில்"* (SII, ii, 51.).

[அந்த+கட்டி+பூ]

அஞ்சுபுல் *ancu-p-pul,* பெ. (n.) பழங்குடி மக்கள் கூரை வேயப்பயன்படுத்தும் புல்; a grass variety used by tribes for thatching roof.

[அஞ்சு+புல்]

அஞ்சுவண்ணப்பேறு *añjuvaṉṉap-pēṟu,* பெ. (n.) ஒரு வகை மதிப்புரவு; an hounour. *"ஈஸ்ளீப்பு இருப்பானுக்கு அஞ்சு வண்ணமுபெடியாலும் வாயனத்தாலும் பாகுடமும் அஞ்சுவண்ணப் பேறும் பகல் விளக்கும்"* (EI, iii, 11.).

[ஐந்து+வண்ணம்+பேறு]

அஞ்செட்டி *anceṭṭy,* (பெ.) (n.) ஒசூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Hosur Taluk.

[அஞ்சன்+செட்டி]

அட்டகம் *aṭṭagam,* பெ. (n.) எட்டு பாகம் கொண்ட நிலக்கூறு; *"திருவடி சோமாசியார் அட்டகத்துக்கு மேக்கும்."* (SII, xiv, 19.).

[எட்டு–எட்டகம்–அட்டகம்]

அட்டணக்கால் *attana-kal* (பெ.) (n.) ஒரு கால் மேல் மற்றொரு காலைப் போடுதல். (கொ.வ.வ.சொ.36). **அட்டணைக்கால் பார்க்க;** see *aṭṭanam-k.kāl,*

[அட்டனை–அட்டணம்+கால்]



அட்டலங்காய்புட்டலங்காய் *attalangkāyputta lankāy*,(பெ.)(n.) குழந்தைகள் காலினை நீட்டி ஆடும் விளையாட்டு. (14–7).a play of childrens leg.

[அட்டலம்+காய்+புட்டலம்+காய்]

அட்டமாணியம் *attamaniyam*, பெ. (n.) ஊதியம் வாங்காமல் செய்யும் அதிகாரம்; non salaried people's prerogative. '*ஏலே, என்ன ரொம்பத்தான் அட்டமணியம் பண்ணிக்கிட்டு அலையுதே?*' (வ.சொ.அக.).

[அட்டம்(குறுக்கு)+மணியம்]

அட்டளைக்கல் *attalaikkal*, பெ. (n.) தரையில் அடுக்கும் நெல் மூட்டைகளுக்குக் கீழே போடப்படும் கல்; a stand like stones applied in the bottom of rice bags, to prevent moisture. '*மூட்டைக்குக் கீழே அட்டளைக்கல் போடுதே, இல்லாட்டி ஈரம் படிக்கும்.*' (வ.சொ.அக.).

[அட்டாலை → அட்டளை + கல்]

அட்டாலி *attali* (பெ.) (n.) வீட்டின் மேல் பகுதியில் உள்ள பரண். (கொ.வ.வ.சொ.3).a shelf in the roof of a house.

[அட்டாளி – அட்டாலி]

அட்டாதுட்டி *attātutti*, பெ.) (n.) தாறுமாறு; disorder,improper, rough behaviour.

[அட்டம் +(துட்டம்) துட்டி]

அட்டாளப்பலகை *attāla-p-palakai*, பெ. (n.) சுவரில் பொருத்தப்பட்டிருக்கும் பொருள்கள் வைக்கும் பலகை; a wooden loft. (வ.சொ.அக.).

த.வ. அட்டாளம்.

[அட்டாலை → அட்டாளை + பலகை]

அட்டாளி *attāli*, பெ. (n.) **அட்டாளப்பலகை** பார்க்க; see attāla-p-palagai.

[அட்டாலி → அட்டாளி]

அட்டான் *attan*, பெ. (n.) கொன்றவன்; a killer *"கடந்து அட்டான் கேழ் இருங் குன்று" (பரி. 2:47:6.).*

[அடு–அட்டான்]

அட்டி *atti*, பெ. (n.) வரிசை; row. '*மூட்டை எத்தனை அட்டி வைத்தாய்*'.

[அள்–அட்டு–அட்டி]

அட்டிட்டல் *atti-*, பெ.(n.) சமைத்துப் படைத்தல்; to cook and serve. *"அட்டிட்டல் காணாது போதியோ பூம் பாவாய்" (சம். 2:47:6.).*

அட்டிப்பேறு *attiperu*, பெ. (n.) நீர் வார்த்துக் கொடுத்து ஒப்படைத்தல்; to made gifts by pouring water on the right hand of the donee. (தெ.கோ.சா.3 : 2).

[அட்டு + இ + பேறு]

அட்டியல் போடுதல் *attiyalpōdu-*, செ.கு.வி. (v.i.) மூட்டைகளை ஒன்றின் மேல் ஒன்றாகச் சேர்த்து அடுக்குதல்; an arrangement of bags in order, to hold each other. '*மூட்டைகளை அட்டியல் போடு.*' (வ.சொ.அக.). படைத்தல்; (மாகேசுவர பூசை);offering.

[கட்டியில்+போடு]

அட்டில்பள்ளியார் *attilpalliyār*, பெ. (n.) மடைப்பள்ளியில் உள்ளவர்; cusinary staff. *"ஆராட்டும் பணையமாகக் கொள்வது அட்டில் பள்ளியார் பணிக்குரியார்."* (EI. xxxiii, 33.).

[அட்டியல்+பள்ளி+ஆர்]

அட்டிற்று *attirrru*, பெ. (n.) சமையல் அறையிலுள்ள உணவு; feast. *"அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே". (படி. 59:2.).*

[அட்டு + இட்டு]

அட்டு–தல் *attu-*, செ.குன்றாவி.(v.t.) உண்பித்தல்; to hoast *"பாசம் தீக் கட்டுப்பலி அட்டினார்கள்". (மூல. 150).*

[ஆடு–அட்டு]

அட்டுக்குஞ்சு (பெ.) (n.) பிறந்து ஓரிரு நாள்களே ஆன பறவைக் குஞ்சு. (கொ.வ.வ.சொ.3); a newly born bird.

[அடு(அடை)-அட்டு+குஞ்சி]

அட்டுக்குட்டி (பெ.) (n.) பிறந்து ஓரிரு நாள்களே ஆன குட்டி. (கொ.வ.வ.சொ.3).

[அடு(அடை)-அட்டு+குட்டி]



அட்டு-தல் *aṭṭu-,* செ.குன்றா.வி. (v.i.) செலுத்துதல்; to remit. *"இப்படி வழுவாமேய் அட்டுக."* (SII, xiii, 44.).

[அடு-அட்டு]

அட்டுப்பால் (பெ.) (n.) தாயினை இழந்த குட்டிகளுக்கு வளரும் வரை புட்டிலில் பால் கொடுத்தல் to feed with feeding bottle. (கொ.வ.வ.சொ.3).

[அடு+பால்]

அட்டுவார் *aṭṭuvār-,* பெ. (n.) கோவில்களில் சமைப்பவர்; temple cook. *"திருமடைப்பள்ளி அட்டுவார் இருவற்கும்"*(EI, xxviii, 47.).

[அடு-அட்டு+ஆர்]

அட்டுவி-த்தல் *aṭṭuvitt-,* செ.குன்றாவி. (v.i.) அமைப்பித்தல்; to construct. *"கரையட்டுவிச்சு காரும் வெட்டுவிச்சு"*(SII, v, 727.).

[அட்டு-அட்டுவி]

அட்டூண் *attooṇ,* (பெ.). (n.) சமைத்த உணவு; cooked food. *"முட்டாது நடா அம் அட்டு ஊண் கம்பலும்". (பெருங். 60: 87).*

[அட்டு+ஊண்]

அட்டை எழுத்து *aṭṭaieḻuttu,* பெ. (n.) அ முதல் னகரம் வரையுள்ள எழுத்துகள் அடங்கிய அரிச்சுவடிப் பொத்தகம்.

[அட்டை+எழுத்து]

அடக்கம் பெ. (n.) பழம்பெரு தோற்கருவியினுள் ஒரு வகை. a kind of drum.

[அடக்கு-அடக்க]

அடக்கற்பாலு-தல் *adakkarpalu-,* (பெ.). (n.) ஈமக் கடனைச் செய்ய இயலுதல்;capability of burrying the deceased. *"நடுக்கம் இல் நாமும் முன் நின்று அடக்கற் பாலம் என்று". (பெருங். 105 : 187 – 8).*

[அடக்கல்-(புதைத்தல்)+பாலு]

அடக்கினார்கொளல் *adakkinārkoḷal,* (பெ.) (n.) அடக்கிக் கொள்ளல்.;to control himself. *"அத்தகு மரபின் அடக்கினர் கொளலே" (ப.பா. 58.).*

[அடக்கு-அடக்கினார்+ கொளல்]

அடக்குதல் (பெ.). (n.) அவியச்செய்தல்; to reduce stiffness. *"கொண்டடி மகளிரைப் பான்மையின் பிணித்துப் படிற்றுரை அடக்குதல்"(மணி. 18:109–10.).*

[அடங்கு-அடக்கு]

அடக்குவி-த்தால் *adakkuvi-,* (பி.வி.). (v.caus.) அமைந்திருக்கச் செய்த; to subdue. *"அடக்குவித்தால் ஆர் ஒருவர் அடங்காதாரே." (நாவு. 6:95–3.).*

அடக்குவி-த்தல் *adakkuvi-,*செயப்.வி (caus.v) ஈமக்கடன்களைச் செய்வித்தல்; to perform last rites. *"அமரர் புகழத்தமனின் அடக்குவித்து ஈமம் ஏற்றி". (பெருங். 105 : 189–90.).*

[அடக்கு+வி]

அடங்கலும் *aḍangalum,* இடை.(part) முழுதும்;entire. *“பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும் பசியும் பிணியும் பகையும் நீங்கி”. (சிலப்.5 : 11–2).*

[அடங்கல்+உம்]

அடங்காஒழுக்கம் *aḍangāoḷukkam,* (பெ.). (n.) ஐம்பொறிகள் அடங்காமல் பரத்தையரிடம் செல்லும் புறத்து ஒழுக்கம்;immoral sexual contact as a result of incapability of controlling senses.; *“அடங்கா ஒழுகத்து அவன்வயின் அழிந்தோளை” (தொல். 22:9).*

[அடங்கா+ஒழுக்கம்]

அடங்காக் கம்பலை *aḍangākkambalai,* (பெ.). (n.) கட்டுப்பாடற்ற பேரோசை;uproar. *“நால்வகை வருணத்து அடங்காக் கம்பலை உடங்கு இயைத்து ஒலிப்ப.” (சிலப். 6:164–5).*

[அடங்காத+கம்பலை]

அடங்காக்கால் *aḍangākkāl,* (வி.எ.). (adv.) அங்காவிடில்;if not suibmissive. *“ஏற்பானும் தானும் அடங்காக்கால்.” (அற. 84.).*

[அடங்காத+ கால்]

அடங்காதோர் *aḍangādōr,* (பெ.). (n.) பகைவர்;enemies. *“அடி புறந்தருகுவர் அடங்காதோரே” (புற. 35 : 34.).*

[அடங்கு+ஆ–(தவர்)தோர்]

அடங்கானாய் *aḍangānay,* (வி.எ.). (adv.) தணியானாகி; crossing the limit of self control. *“இடங்கழி காமமொடு அடங்கானாய்” (மணி. 10 : 22.).*

[அடங்கான்+ஆய்]

அடங்கியகற்பு *aḍangiyakarppu,* (பெ.). (n.) கற்பு;chastity of compassionate attitude. (அமைதி நிலையில் வெளிப்படும் கற்பு) *“அடங்கிய கற்பின் நலங்கேழ் அரிவை.” (குற. 339 : 1:8.)*

[அடங்கி+அ+கற்பு]

அடங்கியசாயல் *aḍangiyacāyal,* (பெ.) (n.) மென்மைத் தன்மை; soft behaviour. *“ஆறிய கற்பின் அடங்கிய சாயல்” (பதி. 16 : 10.)*

[அடங்கு+அ+சாயல்]

அடங்கியான் *aḍangiyāṉ,* (பெ.) (n.) மனம் மொழி மெய்கள் தீயவழியில் செல்லப் பெறாதவன்;a man of self control. *“நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்.” (குறள். 13 : 4.).*

[அடங்குபவன்–அடங்கியான்]

அடங்கினர் *aḍanginar,* (பெ.) (n.) 1. பணிவு உடையவர்; one who is submissive. *“நல் தவ முனிவரும் கற்று அடங்கினரும்”. (மணி.26:74).* 2. உறவினர்; relations. *“சொல் அவிந்து இனிது அடங்கினரே மாக்கள்” (குறு. 6 1 2).*

[அடங்கு–அடங்கினர்]

அடங்கினார் *aḍanginār,* (பெ.) (n.) விதித்தன செய்து விலக்கிய ஒழிவார்; *“அடங்காது அடங்கினார்க்கு ஈதல் இடையே”. (அற. 84.).*

அடங்குழி *aḍankuḷi,* (வி.எ.) (adv.) உறங்கும் பொழுது: while sleeping. *“விழித்துழி விழித்தும் அடங்குழி அடங்கியும்”. (கல். 7 :3).*

[அடங்கு+உழி]

அடசல் *aḍasal,* (பெ.) (n.) திண்டிவனம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[அடைசல்–அடசல்]

அடசல் *adasal,* (பெ.) (n.) இட்டிலியை வேக வைத்து எடுக்கும் அளவு;number of set while cooking of steamed cake (*iddly)* at steamed point. (கொ.வ.வ.சொ.3).

[அடைசல்–அடசல்]

அடறவிளை *adaṟaviḷai,* (பெ.) (n.) அகத்தீசுவரம் வட்டத்திலுள்ளள சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[அடறு+விளை–மிளை–விளை]

அடசுவயல் *adaśuvayal,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[அடை–அடைசு–அடசு+வயல்]

அடந்தை *adandai,* (பெ.) (n.) தொண்டரடிப் பொடியாழ்வாரது திருவரங்கத்து வனங்கள்;

flower garden. *"அடந்தை நடந்தை வனஞ்சூழ் அரங்கத்து அரவணை" (அட். 2 : 20.).*

[அடு–அடைந்தை]

அடப்பு (பெ.) (n.) 1.மூடி;lid. 2.குடுவை; mug.(கொ.வ.வ.சொ.37).

[அடைப்பு–அடப்பு]

அடம் *aḍam*, பெ. (n.) திடம், அழுத்தம்; strength, power. 'மாடு நல்ல அடமா இருக்கு' (வ.சொ.அக.).

[அடு–அடம்]

அடர்த்தல் *adar-*,(தொ.பெ.)(v.n.) உதைத்தல்; kicking *"அல்லாத காலனை முன் அடர்த்தல் தோன்றும்" (நாவு. 6 : 18 : 3.).*

[அடு–அடர்]

அடர்த்தருளி *adarttaruḷi*, வி.எ. (adv.) பிளந்து; to cut into two. *"அன்று இருகூறாய் அடர்த்தருளி" (ஒட். பா. 1).*

[அடு–அடர்த்து+அருள்]

அடர்த்தவர் *aḍarttavar*,(பெ.) (n.) அழுத்தியவர்; *"இலங்கைக் குரிசிலைக் குலவரைக் கீழ் உற அடர்த்தவர்" (சம். 3 93 – 8).*

[அடு–அடர்த்ததவர்]

அடர்த்தல் *aḍarttal*, (தொ.பெ.) (vbl.n.) மெலிவித்தல்; to weaken *"எடுப்பன் என்று இலங்கைக் கோன் வந்து எடுத்தலும் இருபது தோள் அடர்த்தனே ஆலவாயில் அப்பனே." (நாவு. 4 : 62 10.).*

[அடர்–அடர்த்தல்]

அடர்த்தோன் *aḍarttōn*,(பெ.)(n.) தழுவினவன்; one who subdued the bull. *"வனம் தலை ஏறு அடர்த்தோன்". (நம். 2 :56).*

[அடு–அடர்]

அடர்ந்தவர் *aḍarndavar*, (பெ.) (n.) போர் செய்தவர்; fighters. *"அங்கு அடர்ந்தவர் தம்மை அடர்ந்து" (தி.தி. 14 :10).*

[அடு–அவர்]

அடர்ந்தேற்றம் *aḍarndēṟṟam*, பெ. (n.) மொத்தமாக வரையறுக்கப்பட்ட வரி; totally defined tax. (தெ.கோ.சா.3 : 2).

[அடர்ந்து + ஏற்றம்]

அடர்வான் *aḍarvāṉ*, (பெ.) (n.) போர் செய்பவன்;warrior. *"வாளால் மடிவித்து வலித்து அடர்வான்" (யுத். 20 : 82.).*

[அடர்–அடர்வான்]

அடர்வித்தல் *aḍarvittal*,தொ.பெ. (vbl.n.) வருந்தச் செய்தல்; to annoy. *"செறிகழல் சேர் திருவடியின் விரலால் அடர்வித்தான் இடம் விரி நீர் வியலூரே." (சம். 1: 13 : 8.).*

[அடர்–அடர்வி]

அடர்வு *aḍarvu*, (பெ.) (n.) நெருக்கம்; very close. *"உரம் நெரிதர வரை அடர்வு செய்தவன்." (சம். 11: 125 : 8.).*

[அடர்+அடர்வு]

அடரப்பட்டான் *aḍarappaṭṭāṉ*, (பெ.) (n.) அடக்கப்பட்டவன்; one subdued. *"அரக்கன் ஆண்மை அடரப்பட்டான் இறை." (சம்.1:57 : 9.).*

[அடர+பட்டான்]

அடலோர் *aḍalōr*, (பெ.) (n.) வலிமை உள்ளோர்; strong warrior. *"அடலோர் பயிற்றும் நின் சுடர் மொழி ஆண்மையும்" (இலா. 15 : 2)*

[அடல்+(ஆர்)ஓர்]

அடவி *aḍavi*, பெ. (n.) 1. போர்ப்படை; army. (தெ.கோ.சா.3 : 2).

[அடர் + வி]

அடவிப்புடவி *aḍavippuḍavi*, (பெ.) (n.) காட்டை அடுத்துள்ள நிலம்;proximity of forest area. *"விந்தாடவிப் புடவி போய்" (ஒட். 4: 13).*

[அடவி+புடவி]

அடவிளாகம் *aḍaviḷāgam*, பெ. (n.) செங்கற்பட்டு மாவட்டத்தில்உள்ள ஓர் ஊர்; name of the village in Chengalpattu.

[அடர்+விளாகம்]

அடாஅது *aḍaadu*, வி.எ. (adv.) சமைக்காமல்; without cooking. *"அடா அது அட்ட அமுதம் வாய்மடுத்து" (சேர. 2 : 28.).*

[அடு–அடாது]

அடாக்களியவர் *adakkaliyavar,* (பெ.) (n.) ஒழுக்கக்கேடு பண்ணாத களிப்பையுடையவர்; merry men with decency. *"சீவகன் அடாக்களியவர் தொழில் காண ஏகினான்." (சீவ. 4 : 66.).*

[அடாத+களி+அவர்]

அடாதான் *adādān,* (பெ.) (n.) பொருந்தாதவன்; enemy. *"அடாதான்பால், ஈரடியான் மூவுலகும் கொண்டானை" (ஒட். 1:215:16.).*

[அடாதவன்–அடாதான்]

அடி *adi,* பெ. (n.) கூடைகளுக்கு முதலில் போடும் குச்சியால் ஆன பின்னல். (ம.வ.தொ. 68.) ; bottom plait. 2. கட்ட விளையாட்டில் காய் களை நகர்த்தி, வெற்றி பாதை அடி எனப்படும். to make the items in such a way to gain success.3.ஒயிலாட்டத்தின் வகை; stylish step in oyllāṭṭam.

[அடு–அடி]

அடி அற்று *adiyarru,* வி.எ. (adv.) கட்டுக் குலைந்து; to disunite. *"யோசனை ஐ இரண்டின் அளவு அடி அற்று உக" (கிட். 11 : 36.).*

[அடி+(அறு)அற்று]

அடிக்க *adikka,* (வி.எ.) (adv.) வீச; to below as wind. *"மாரியது கூந்தல் மறித்து அடிக்க" (பெ.பொ. 9:519.).*

[அடி–அடிக்க]

அடிக்கடி *adikkadi,* இடை.(part) அடுத்தடுத்தது; successively, often. *"அலக்கு உக அலக்கு உக அடிக்கடி சிரித்தன" (கலிங். 9 : 18.).*

அடிக்கருத்து *adikkaruttu,* பெ. (n.) ஓர் உரை, ஒரு கட்டுரை அல்லது கலைப் படைப்பின் உட் பொருள்; theme.

[அடி+கருத்து]

அடிக்கள் *adikkal,* (பெ.)(n.) பாதங்கள்;feet. *"காட்டீர் ஆணீர் நும்தம் அடிக்கள்" (மங்.4:9: 7.).*

[அடி+கள்–அடிகள்(அடிக்கள்–வழுவமைதி)]

அடிக்காறை *adikkārai,* பெ. (n.) காலில் அணியும் ஒருவகையணிகலன்; a kind of ornament which is worn an anklet.

[அடி–காறை]

அடிக்கிண்டிவிடுதல் *adi-k-kindividu,* செ.குன்றாவி. (v.t.) கீழுள்ள வைக்கோலை மேலே உதறுதல். (வ.வ.வே.க. 10.).to take and spread the hay from beneath.

[அடி+கிண்டி+விடு]

அடிக்கில் *adikkil,* வி.எ. (adv.) வீசினால்; if blown. *"மாருதம் சண்டம் அடிக்கில் என்" (மூல. 2850).*

[அடி–அடிக்கில்]

அடிக்குருகு *adikkurugu,* (பெ.) (n.) அடிக் குருத்து; sprout at the base. *"செம்பொடிப் புரத்திக் கயங்களைக் கொம்பு ஒடித்து அடிக் குருகு துற்றியே" (ஒட். 5 :496.)*

[அடி+குருகு]

அடிகள்மார் (பெ.) (n.) கோயிலில் நடனத்தைப் பேணிய மகளிர். (8:71);dancers in temple.

[அடி+கள்+மார்]

அடிகளார் *adigalār,* (பெ.) (n.) இறைவயன் அடியவர்; *"பரமர் எம் அடிகளார்" (சம். 1:75 :2).*

[அடிகள்+கள்+ஆர்]

அடிகளேம் *adigalēm,* (பெ.) (n.) அடியேங்கள்; respected persons. *"இந்த அடிகளேம் பணி நடத்த விரைவொடு வருவான் ஏக வேண்டும்." (கோ.பு. 5:108.).*

[அடிகள்+(யாம்)ஏம்]

அடிகிட்டி (பெ.) (n.) கிட்டிப்புள் குச்சியைப் பலவாறு அடித்து விளையாடல். (ம.வி. 41.).the way of playing kittipul game.

[அடி+கிட்டி]

அடிகுடிமை *adikudimai,* பெ. (n.) ஊழியம் செய்யும் குடிகள்; labourers working place or land. *"மக்கள் மருமக்களை யடிகுடிமை வடக்கிலறையறூநந்நாரான மேலைக்கோட்டை பெரும்புலியூர்"* (IPS. 683.).

[அடி+குடிமை]

அடிகேள் *adigēl,* (பெ.) (n.) அடிகள் என்பதன் விளி; elongation of vocative form. *"மால்விடை மேல் வருவீர் அடிகேள் சொலீர்." (சம். 2:1:8.).*

[அடிகள்–அடிகேள்]

அடிச்சுதளி *adiccutali,* பெ. (n.) பெருக்கி நீர்தெளித்துத் தூய்மை செய்தல்; cleaning. *"மாமண்டபமும் திருமடப்பள்ளியும் அடிச்சுதளியும்"* (TAS. iv. 148 - 50.).

[அடித்து(+அடிச்சு)+(தெளி)தளி]

அடிச்சேடம் *adiccēdam,* (பெ.) (n.) அடியை அருச்சித்த மலர்; *"திருவடிச் சேடமும் திகழச் சூடினான்." (சூளா. 217.).*

[அடி+சேடம்]

அடிச்சோறு *adiccōru,* (பெ.) (n.) பாத்திர அடியில் ஒட்டியுள்ள சோறு. (கொ.வ.வ.சொ.4.). rice sticken at the bottom of the vessel.

[அடி+சோறு]

அடிசில்கலம் *adisilkalam,* (பெ.) (n.) அடிசில் ஆக்கும் கலம்; (சோறு சமைக்கும் பாத்திரம்); cooking vessel. *"அடிசில் கலம் கழீஇக் கருணை ஆர்ந்த இள வாளை" (சீவ. 13 :3.).*

[அடிசில்+கலம்]

அடிசில்குழிசி (பெ.) (n.) *adisilkulisi,* சோற்றுப் பானை; *cooking vessel. "குன்றா அடிசில் குழிசி காணினும்" (பெருங். 37 :253.).*

[அடிசில்+குழிசி]

அடிசில்நூல் *adisilnūl,* (பெ.) (n.) சமைக்கும் முறை பற்றிக் கூறும் நூல்; a treatise on cookery. *"ஐவருள் ஒருவன் அன்ன அடிசில் நூல் மடையன்" (சீவ. 13 : 137.).*

[அடிசில்+நூல்]

அடிசூடு-தல் *adisūdu-,* செ.குன்றா.வி. (v.t.) வணங்குதல்; to pay obeyance. *"எழுந்து துள்ளினான் வீழ்ந்து இணை அடி சூடினான்." (வி.பா. 27 :77.).*

[அடி + சூடு]

அடிசேர்-தல் *adisēr-,* செகுன்றாவி. (v.t.) வீழ்ந்து வணங்குதல்; to prostrate. *"தப்பினேன் என்று அடி சேர்தலும் உண்டு." (கலி.89 :15.).*

[அடி+சேர்]

அடித்தடி *adittadi,* (பெ.) (n.) அடிக்கும் தடி;attacking stick. *"அடல் நாக எலும்பு எடுத்து நரம்பில் கட்டி அடித் தடியும் பிடித்து" (கலிங். 7 :4.).*

[அடி+தடி]

அடித்தமை *adittamai,* (பெ.) (n.) அடித்த செயல்; *"பொன் புரையும் மேனியில் அடித்தமை பொறாது" (வி.பா. 12 :109.).*

[அடித்தல்–அடித்தமை]

அடித்தளை *adittalai,* (பெ.) (n.) காலில் உள்ள விலங்கு;chain placed around a prisoner's ankles. *"கூடா மன்னர் அடித்தளை நீக்க அருள் சிறந்து ஒரு பால்" (சில. 5:182:3.).*

[அடி+தளை]

அடித்திசை *adittisai,* (பெ.) (n.) அடியிருக்கும் திசை; direction of the feet. *"தடக்கை கூப்பி நின் அடித் திசைக்கு இறைஞ்ச" (பெருங். 47 : 96.).*

[அடி+திசை]

அடித்தொண்டன் *adittondan,* (பெ.) (n.) மெய்யுணர்வு செய்யும் பணியினன்; an ardent devotee. *"ஆரூர் நறுமலர் நாதன் அடித் தொண்டன்" (நாவு. 4 : 102 : 3.).*

[அடி+தொண்டன்]

அடித்தொழிலாட்டி *adittolilātti,* (பெ.) (n.) குற்றவேல் செய்பவள்; a maid servant. *"ஐயை காணீர் அடித் தொழிலாட்டி" (சில. 16 : 12.).*

[அடி+தொழில்+ஆட்டி]

அடித்தொழும்பன் *aditolumban,* (பெ.) (n.) திருவடித் தொண்டு செய்பவன்; a sincere servant. *"உம் அடித் தொழும்பனேனைப் பயங்கெடுத்து" (பெரிய. 3516.).*

[அடி+தொழும்பு+அன்+ஏன்]

அடிதண்டம் *aditandam,* பெ. (n.) செய்யாத குற்றத்திற்கு இடப்பட்ட கட்டாய ஒறுப்புக் கட்டணம்; compulsory fine levied for a crime or fault actually not committed. (வ.சொ.அக.).

[அடி+தண்டம்]

அடிதாள் பெ. (n.) அறுவடையில் தண்டு விட்டு அறுக்கப்பட்ட நெல்தாள். paddy stalk cut leaving the stem.

[அடி+தாள்]

அறுத்துக்கட்டிய நெற்பயிர் அரிதாள் எனவும் அறுத்தப்பின் எஞ்சிநின்ற அடிக் கட்டைத் தாள் அடித்தாள் எனவும் வழங்கப் பெறும். இத்தாளிலிருந்து வளர்ந்த நெற்பயிர் தாளடிப் பயிர் எனப்படும்.

அடிதுடி (பெ.) (n.) சண்டை; quarrel. (கொ.வ.வ.சொ.4.).

[அடி+தடி–அடிதடி–அடிதுடி] [கொ.வ.]

அடிதொடல் *aḍitoḍal,*(பெ.) (n.) அடியைத் தொட்டு ஆணையிடுதல்; to take oath touching the feet. *"தன் பரங்குன்றத்து அடிதொட்டேன் என்பாய்" (பரி. 8 : 62.).*

[அடி+தொடு+ அல்]

அடிதொடர் *aḍitoḍar-,* (பெ.) (n.) அடியோடு தொடர்பு பட்டு;connected with *"அடி தொடர்ந்து ஈர்ந்து நிலம் தோயும் இரும் பிடித் தடக்கையின்" (சிறு.18 : 9.).*

[அடி+தொடர்]

அடிதொடு கடன் *aḍitoḍukaḍan,* (பெ.) (n.) சூளுற்ற கடன்;ceremony regarding oath taken. *"நின் அடி தொடு கடன் இது மிடறு உகுகுருதி" (சில.12 : 17.).*

[அடி+தொடு+கடன்]

அடிதொடு குன்று *aḍittoḍukuṉṟu,* (பெ.) (n.) வணங்கப்படும் குன்று; the hill worshiped *"ஐய சூளின் அடி தொடு குன்று" (பரி.8 : 70.).*

[அடி+தொடு+குன்று]

அடிதோய்–தல் *aḍitōy-,* (செ.கு.வி.) (v.i.) காலால் தீண்டல்; to touch with leg. *"கை வைக்கவும் அடி தோயவும் உடன் நின்று கலிக்கும் தொய்வக்க கொடி திசை தைவர நிற்பீர்" (ஒட். 5 : 11.).*

[அடி+தோய்]

அடி நடத்து–தல் *aḍi-naḍattu-,* செ.கு.வி. (v.i.) திருடியவனின் கால் தடத்தை வைத்து திருட்டைக் கண்டு பிடித்தல்; to find out the theft by tracing the foot print of the thief.

[அடி+நடத்து]

அடிநிமிர்கிளவி *aḍinimirkiḷavi,* (பெ.) (n.) பெருகி வரும் பண்ணத்தி; extending line of a stanza. *"அடி நிமிர் கிளவி ஈர் ஆறு ஆகும்." (தொல். 26 : 175.).*

[அடி+நிமிர்+கிளவி]

அடிநிமிர்வு *aḍinimirvu,* (பெ.) (n.) அடிகள் மிக்கு வருதல்; lines increasing. *"அம்மை தானே அடி நிமிர்வு இன்றே" (தொல். 26 : 227.).*

[அடி+நிமிர்வு]

அடிநிழல் *aḍiniḻal,* (பெ.) (n.) அருள்; compassion. *அடி நிழல்வட்டம் அடையத் தரூஉம்" (பெருங். 47 : 78.).*

[அடி+நிழல்]

அடிநீர் *aḍinīr,* (பெ.) (n.) கால் கழுவு நீர்; water treatment for washing the feet. *"காதலன் அடிநீர், சுடுமண் மண்டையில் தொழுதனள் மாற்றி" (சில. 16 : 38 – 9.).*

[அடி+நீர்]

அடிப்பார் *aḍippār,* (பெ.) (n.) உழவர்; farmer *"ஏர் அடிப்பார் கோல் எடுப்ப" (ந.வெ. 3 : 41.).*

[அடி+ப்+ப்+ஆர்]

அடிப்பது *aḍippadu,* (பெ.) (n.) வீசுவது; that which blows. *"கொம்புக்கும் அப்பால்அடிப்பது ஓர் காற்று உண்டு" (மூல. 2928).*

[அ+அடிப்பது]

அடிப்பாணர் *aḍippāṇar,*(பெ.) (n.) அடிமையாகிய பாணர்; *slave pāṇar "அடிப்பாணர் எனப் பிழைத்தார் அநேகர் ஆங்கே" (கலிங்.11 : 158.).*

[அ+பாணர்]

அடிப்பலகை *aḍippalagai* பெ. (n.) திருவையில் மண்ணை உருட்டி வைக்கும் பலகை. (ம.வ.தொ. 68.);a wooden plank used by the potters.

[அடி+பலகை]

அடிப்பான் *attippān* (பெ.) (n.) விளையாடுபவன் வைத்திருக்கும் குண்டு, எறிகுண்டு, தெல்லு; rural play or strike stone ball.

[அடி+ப்+ப்+ஆன்]

அடிப்பான்காய் *adippānkāy*, பெ. (n.) எதிர் கட்சிக்காரர் குறிப்பிட்டுச் சொன்ன காயினை அடித்தல். (எறிகாய் விளையாட்டு); to hit the aimed one.

[அடிப்பான்+காய்]

அடிப்புறம் *adippuram*, (பெ.) (n.) குதிக்கால்; hind leg. *"ஓர் காலனைக் கருத்து அடிப்புறத்தினால் நிறத்து உதைத்த" (சம்.2 : 98 : 2.).*

[அடி+புறம்]

அடிப்பொடி[1] *adippodi* (பெ.) (n.) பாதத்தூசுக்கு நிகரான அடியார்; devotee. *"தொண்டர் அடிப்பொடி ஆழ்வார்" (தேசி. 12 : 16.).*

[அடி+பொடி]

அடிப்பொடி[2] *adippodi*, பெ. (n.) கால் தூசி; dust on the foot. *"அடிப்பொடி என் தலைமேலும்"* (SII. xii. 54.).

[அடி+பொடி]

அடிபோடு–தல் *adipōdu-* செ.கு.வி.(v.i.) நின்ற நிலையில் ஆடும் கும்மியாட்டம். (2:92.). kummi play in standing position.

[அடி+போடு]

அடிப்போடுதல் *adi-p-pōdu-*, 20 செ.கு.வி. (v.i.) கூடை பின்னுவதற்கு முதல் முதலில் அடிப்போடுதல்; knitting the base for basket.

[அடி+போடு]

அடிபடாதவர் *adipadādavar*, (பெ.) (n.) அடிக்கப்படாதவர்; not beaten *"விண்ணில் உறை வானவரில் யார் அடிபடாதவர் விரிஞ்சன் அரியே முதலினோர்." (வி.பா. 12 : 107.).*

[அடி+படாதவர்]

அடிபந்து *adipandu* பெ. (n.) எறியும் பந்து; playball.

[அடி+பந்து]

அடிபறி–த்தல் *adi-pari-*, செ.கு.வி.(v.t.) சூழ்ச்சி செய்தல்; to plot, conspire.

[அடி+பறி]

அடிபிடிதாங்கி *adipiditāngi*, (பெ.) (n.) முதுகுளத்தூர்வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[அடி+பிடி+தாங்கி]

அடிபுதைதொடுதோல் *adipudaitodutōl*, (பெ.) (n.) செருப்பு; sandal,shoe. *"நிரை புறத்து அடிபுதை தொடு தோல் பறைய ஏகி." (அக. 101 : 9.).*

[அடி+புதை+தொடு+தோல்]

அடிபெயர்த்தாடு–தல் *adipayar-t-tādu-* செ.கு.வி. (v.i.) அடைவுகள் இட ஆடுதல்; to step and dance.

[அடி+பெயர்த்து+ஆடு]

அடிபெயர்த்திடுவான் *adipeyar-t-tiduvā-n*, (பெ.) (n.) நடந்து செல்பவன்; one who walks. *"வெள்ளிடை வெயிலில் புள்ளி வெயர்பொடிப்ப அடி பெயர்த்திடுவான் ஒருவன்." (ப.பி. 3 : 16 : 42.)*

[அடி+பெயர்த்து+இடுவான்]

அடிமடி *adimadi* பெ. (n.) ஆடையினுள் மடிப்பு (நெ.தொ.சொ. 52); inner fold of dress.

[அடி+மடி]

அடிமயக்கு *adimayakku*, (பெ.) (n.) சித்திர கவி வகை; a kind of picture poetry in prosody. *"சொற்றிடும் மாலை மாற்றே சூழிகுளம்*

அடிமயக்கு .... சருப்பதோபத்திரங்கள் .... சித்திர கவி என்றாமே" (நிக.க. 12 : 26 : 27 – 28).

[அடி+மயக்கு]

அடிமாட்டுவிலை, *aḍi-māṭṭuvilai,* பெ. (n.) குறைவான விலை; lowest rate of a thing.

[அடிமாடு+விலை]

அடிமாடு= கறிசமைக்கக் கொல்வதற்குரிய மாடு. இதன் விலை வேறு பணிகளுக்காக வாங்கும் மாட்டின் விலையைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும். அடித்தல் = கொல்லுதல்.

ஒ.நோ. கோழியடித்தல்.

அடிமாடு *aḍi-māḍu,* (பெ.) (n.) இறைச் சிக்காகக் கொல்லப்படும் மாடு. (கொ.வ. வ.சொ.4.) cow or bull to be killed for meat.

[அடி+மாடு]

அடிமுறை *aḍi-muṟai,* (பெ.) (n.) தற்காப்பு விளையாட்டுகளில் ஒன்று அடவு (14–8); one of the methods of self protection.

[அடி+முறை]

அடிமைத்தனம் *adimai-t-taṉam,* (பெ.) (n.) பிறருக்குக்கட்டாயத்தொண்டு செய்யும் நிலைமை; compulsory slavery system.

[அடிமை+தனம்]

அடிமைத் தொழில் *aḍimaittoḻil,* (பெ.) (n.) திருப்பணி; voluntary service. *"மால் குறள் ஆன அந்தணர்க்கு அடிமைத் தொழில் பூண்டாயே." (மங். 2 : 1 – 1.).*

[அடிமை+தொழில்]

அடிமைப்பணி *adimaippaṇi,* (பெ.) (n.) தொண்டு; service of an ardent devotee. *"மீளா அடிமைப்பணி செய்யப் புகுந்தேன்: (சட. 9 : 8 : 4.)*

[அடிமை+பணி]

அடிமைபுகு–தல் *aḍimaipugu-,* (பெ.) (n.) ஆட்படுவது; entrusting one self for voluntary service. *"ஆடு புள் கொடி ஆதி மூர்த்திக்கு அடிமை புகுவதுவே." (சட. 4 : 10 – 7.).*

[அடிமை+புகு]

அடிமொழி *aḍimoḻi,* (பெ.) (n.) அடிமொழி மாற்று என்னும் பொருள்கோள்; a constructing method of a poem. *"அடிமொழி சுண்ணம் .... பொருளொடு ஒன்பான்." (நேமி. செ. 67.).*

[அடிமை+மொழி]

அடியகம் *aḍiyagam,* (பெ.) (n.) பாதச் சுவட்டின் இடம்; the place of foot print. *"பெருங்களிறு மித்தஅடியகத்து." (அக. 155 : 11.).*

[அடி+அகம்]

அடியவள் *aḍiyavaḷ,* (பெ.) (n.) பத்திமை கொண்டவள் (பக்தை); devotee. *"ஆங்கு அது தன்னில் அடியவட்கு ஆகம் பாங்காய் மண் சுமந்து அருளிய பரிசும்." (வாச. 2 : 46.).*

[அடி+skt. antaram]

அடியன்தரம் *aḍiyaṉtaram,* பெ. (n.) இடையூறு; disturbance. *"இப்பூமி பாட்டமாண்டு முட்டிரட்டியும் அடியன்தரமும் தீர்த்து"* (TAS. iii. 169 - 71.).

[அடி+அன்தரம்]

அடியான் *aḍiyāṉ,* பெ. (n.) ஏசுதற்சொல்; an abusive term, scolding word. (வ.சொ.அக.).

[அடி+ஆன்]

அடியிசை *aḍiisai,* (பெ.) (n.) அடி ஓசை; sound of step. *"அடியிசை கேட்கும் எல்லை அகன்று" (பெருங். 47 : 36– 7.).*

[அடி+இசை]

அடியிடல் *aḍiiḍal,* (பெ.) (n.) 1.அடி வைத்தல்; to step. *"தச்சு விடுத்தலும் தாம் அடியிடலும்" (வாச. 296.).* 2.தொடக்கம் செய்தல்; to inaugurate. *"பிறர் கொள்ளும் ஆர்வத்துக்கு அன்றே அடியிட்டாள்." (ஒட். 6 : 133.).*

[அடி+இடல்]

அடியிணை *aḍiiṇai,* (பெ.) (n.) இரண்டு பாதங்கள்; feet. *"ஐவரை வென்றோன் அடியிணை அல்லது." (சில. 10 : 198.).*

[அடி+இணை]

அடியில் *aḍiyil,* (பெ.) (n.) கீழ்ப்பகுதியில்; below, bottom. *"பல்லோர் காணும் பருஉத்திரள் அடியில். (பெருங். 60 : 119.).*

[அடி+இல்]

அடியில்தொடுவன *adiyiltoḍuvana,* (பெ.) (n.) மிதியடி; shoe. *"அடியில் தொடுவன பாதுகை, மிதியடி" (நிக.தி. 7 : 247.).*

[அடியில்+தொவன்]

அடியுறை மகளிர் *aḍiyuṟaimagaḷir,* (பெ.) (n.) இறைவன் கோயிலில் உறைந்து கூத்தாடும் மகளிர்;dancers in the temple. *"அடியுறை மகளிர் ஆடும்தோளே" (பரி. 14 : 5).*

[அடி+உறை+மகளிர்]

அடியுண்டவன் *aḍiyuṇḍavan,* (பெ.) (n.) அடிப்பட்டவன்; wounded person. "அடியுண்டவன் ஆவி குலைந்து அயரார்" (யுத்.20:90).

[அடி+உண்டவன்]

அடிவட்டணை *aḍivaṭṭaṇai,* (பெ.) (n.) பாதங்களால் இயற்றும் நாட்டிய வகை; step-dance. *"அடிவட்டணைகள் கட்ட நடம் அடி' (சம். 3 : 75 – 4.).*

[அடி+வட்டணை]

அடிவண்டல் *aḍivaṇḍal,* பெ.(n.) குடும்பத்தின் கடைசிக் குழந்தை, கடைக்குட்டி; the last child in a family.

[அடி+வண்டல்]

அடிவம்பு *aḍivambu,* (பெ.) (n.) அடியின் விளிம்பு;the brim of the foot. *"சற்று அடி வம்பு அசைந்துச் சடைமுடி இலங்கும் தூது மற்றும் ஓர் கங்கை என்ன வருபவன்"' (திதி. 28 : 9.).*

[அடி+(வடிம்பு)வம்பு]

அடிவலம்கொள்ளல் *aḍivalamkoḷḷal,* (பெ.) (n.) விடைபெறுதல்; taking leave of. *"ஏதம் இல் புகழினால் யான் அடிவலம் கொள்ளல் என்னா" (சூளா. 570.).*

[அடி+வலம்+கொள்ளல்]

அடிவழி *aḍivaḻi,* (பெ.) (n.) அடியினது வழி; track of the step. *"அடிவழிப் படூஉம் உரிமையுள் கம்மியன்" (பெருங். 47 : 31).*

[அடி+வழி]

அடிவாளி *aḍivāḷi,* (பெ.) (n.) காமனின் முதல் அம்பாகிய தாமரை; lotus the first arrow of the god, *kāman. "அடிவாளி விள்ளும் பகற்காலம்" (ஒட். 3 : 275.).*

[அடி+வாளி]

அடிவினைக்காரன் *aḍivinai-k-kāran,* (பெ.) (n.) மிகவும் கொடியவன், கீழறுப்பவன், cut throat. 2.காட்டிக் கொடுப்பவன்; traitor. *(மீனவ).)*

[அடி+வினை+காரன்]

அடுக்கம் *aḍukkam,* (பெ.) (n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thirukkoyilur Taluk.

[அடுக்கு+அம்]

அடுக்கம்பாறை *aḍukkampāṟai,* (பெ.) (n.) வேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in vellore Taluk.

[அடுக்கம்+பாறை]

அடுக்களைக்காணி *aḍukkaḷai-k-kāṇi,* பெ. (n.) கோயில் மடைப்பள்ளிச் செலவுக்கு விடப்படும் நிலம்; the land donated to meet the expenses cookery. *"சந்திரப் பிரவேசமே அடுக்களக் காணியா ஸ்ரீதுல்யம் சார்த்திப் பட்டயம் கொடுக்கையில்"* (TAS. viii. P. 7-8.).

[அடுக்களை+காணி]

அடுக்கிய கோடி *aḍukkiyakōḍi,* (பெ.) (n.) பல்கோடி; multi crore. *"அடுக்கிய கோடி பெறினும் குடிப் பிறந்தார் குன்றுவ செய்தல் இலர்." (குறள். 96 : 4.).*

[அடுக்கிய+கோடி]

அடுக்குந *aḍukkuna,* (பெ.) (n.) பலவாகத் தொடர்ந்து வருவன; that which continues in multiples *"வினை எஞ்சு கிளவி சொல் முறை முடியாது அடுக்குந வரினும்" (தொல். 15 : 36.).*

[அடுக்கு+ந]

அடுகாடு *aḍukāḍu,* (பெ.) (n.) சுடலை (சுடுகாடு); burial ground. *"அடுகாடு சேர அறமனார்" (பர. 90).*

மறுவ இடுகாடு.

[அடு+காடு]

அடுகிற்பார் *aḍukiṟpār,* (பெ.) (n.) கொல்ல வல்லார்; the killers. *"வென்று அடுகிற்பாரை வேர்ப்பித்து."* *(படி. 65 : 1).*

[அடுக்கி+பார்]

அடுகுரல் *aḍukural,* (பெ.) (n.) கொல்லும் குரல் ஓசை; roar of a lion. *"அடு குரல் அரச சீயம் அதனை"* *(சூளா. 1143.).*

[அடு+குரல்]

அடுகை *aḍukai,* (பெ.) (n.) சமைத்தல்; cooking. *"சோறு அடுகை கற்கைக்கு"* *(ஒட். 6 : 119.).*

க.அடிகெ.

[அடு+கை+]

அடுங்கரை *aḍuṅkarai,* (பெ.) (n.) இடிகரை; eroded bank. *"உரவுத் திரை அடுங்கரை வாழையின் நடுங்க"* *(குறி. 178 – 79.).*

[அடும்+கரை]

அடுங்கால் *aḍuṅkāl,* பெ.எ. (adj.) துன்பம் நேரும் பொழுது;at the time of difficulty. *"இன்பம் கடல் மற்று காமம், அஃது அடுங்கால் துன்பம் அதனின் பெரிது."* *(குறள். 117 – 6.).*

[அடும்+கால்]

அடுத்தது *aḍuttadu,* (பெ.) (n.) அருகில் உள்ள பொருள்; thing adjaceut. *"அடுத்தது காட்டும் பளிங்கு போல்"* *(குறள். 7 1– 6.).*

[அடு+த்+த்த+து]

அடுத்தல்செல் *aḍuttalsel,* செ.குன்றாவி. (v.t.) சேர்ப்பித்தல்;to entrust. *"உடைத்த பின்றை அல்லது நங்கையை அடுத்தல் செல்லான் அரசன்"* *(பெருங். 95 : 86 – 7.).*

[அடுத்தல்+செல்லான்]

அடுத்தவர் *aḍuttavar,* (பெ.) (n.) அடைக்கலம் அடைந்தவர்; refugee *"அடாத மன்னரை அடர்ந்து அடுத்தவரை அஞ்சல் என்று"* *(வி.பா. 10 : 50.).*

[அடுத்த+அவர்]

அடுத்ததாட்டி *aḍūttadāṭṭi,* அடுத்தமுறை; again next time. (கொ.வ.வ.சொ.4.).

[அடுத்த+(தடவை) தாட்டி]

அடுத்துள்ளோர் *aḍuttuḷōr,* (பெ.) (n.) சுற்றத்தார்; relation. *"அத்தலை தம்பிமாரும் தாயரும் அடுத்துளோடும்"* *(யுத். 26 : 16.).*

[அடுத்து+உள்ளோர்]

அடுத்தூண் *aḍuttūṉ,* பெ.(n.)மாதச் செலவுக்கு வேண்டிய பணம்; money needed for monthly expenses. (தெ.கோ.சா.3 : 2).

[அடுத்து + ஊண்]

அடுதொறும் *aḍutoṟum,* (பெ.) (n.) போர்புரியும் போதெல்லாம், பொருந்தோறும்; through out the war period. *"அட்டு ஆனானே குட்டுவன் அடுதொறும் பெற்று ஆனாரே பரிசிலர் களிறே"* *(பதி. 41 : 1–2.).*

[அடு+தொறும்]

அடுப்பாம்மூலை *aḍuppānmūlai* (பெ.) (n.) தென்கிழக்கு மூலை (அக்கினி மூலை); (கொ.வ.வ.சொ.4.).south east corner of the house.

[அடுப்பு+ஆம்+மூலை]

அடுப்புக்குட்டு (பெ.) (n.) அடுப்பின் ஓரத்தில் இருக்கும் உருண்டை வடிவத் திட்டு. (கொ.வ.வ.சொ.4.).; earthen oven with three protruding knobs.

[அடுப்பு+குட்டு]



அடுபவர் *aḍubavar,* (பெ.) (n.) வருந்துபவர்; those who suffer. *"படு பொருள் இன்றி நெல்லிற் பதடிபோல் உள்ளிலர் மெய் அடுபவர்"* *(பெரிய. 2717.).*

[அடு+ப்+அவர்]

அடுபாக்கு *aḍupākku*, வி.எ.(adv.) கெடுப்பதற்கு; to destroy. *"நலிந்து ஒருவர் நாறும் அடுபாக்குப் புக்கால்." (பழ. 354.).*

[அடு+பாக்கு]

அடுபால் *aḍupāl*, (பெ.) (n.) கொதிக்கும் பால்; boiling milk. *"அடு பால் அன்ன என் பசலை மெய்யே" (நற். 175 : 9).*

[அடு+பால்]

அடுபிணம் *aḍupiṇam*, (பெ.) (n.) கொலையுண்ட பிணம்; body killed. *"கொன்று ஆற்றுத் துறந்த மாக்களின் அடு பிணம்." (நற். 329 : 2.).*

[அடு+பிணம்]

அடுபுகை *aḍupugai*, (பெ.) (n.) ஊர் சுடு புகை; blazing fire and smoke coming from settlements during war. *"அடா அ அடு புகை அட்டு மலர் மார்பன்." (பதி. 20 : 1.).*

[அடு+புகை]

அடுமகள் *aḍumagaḷ*, (பெ.) (n.) சமைப்பவள்; cooking woman. *"அடு மகள் முகந்த அளவா வெண்ணெல்." (புற. 399 : 1.).*

[அடு+மகள்]

அடுமடா *aḍumaḍā* (பெ.)(n.) சமைக்கும் பானை; cooking pot. *"எடு மடா நமக்கு என்று சென்று புக்கு அடு மடா எலாம் அற அருந்தியே" (ஒட். 5 : 508.).*

[அடு+(மிடா)மடா]

அடுவது *aḍuvadu*, (பெ.)(n.) காய்ச்சப்படுவது; to be boiled. *"உலைப் பெய்து அடுவது போலும் துயர்." (நால். 12 : 4.).*

[அடு+வ்+அது]

அடுவல்போடு-தல் *aḍuval-pōḍu-*, செ.கு.வி. (v.i.) மா, வெள்ளரி, வாழை போன்றவற்றின் காய்களைக் குழி தோண்டிப் புதைத்துப் பழுக்க வைத்தல்; to ripe the unripened fruits by putting in a pit.

[அடுவல்+போடுதல்]

அடுவான் *aḍuvāṉ*, பெ. (n.) சமையற்காரன்; temple cook *"நந்தவனக் குடிகள் மூவர் சாலைக்கு அடுவான் ஒருத்தன்"* (SII. v. 625.).

[அடு+வ்+ஆன்]

அடுவி *aḍuvi*, (பெ.) (n.) பொருந்துபவள்; one who fits in. *"உவர் நீங்கு கற்பின் எம் உயிர் உடம்பு அடுவி." (அக. 136 : 19.).*

[அடு+இ]

அடைக்கல் *aḍaikkal*, (பெ.) (n.) தூர்த்தல்; அடைத்தல்; to stop, curb. *"குரங்குகள் மலையை தூக்கக் களித்துத் தாம் புரண்டிட்டு ஓடித் தரங்க நீர் அடைக்கல் உற்ற கலம் இலா அணிலும் போலேன்." (தொண்: 27.).*

[அடை-அடைக்கல் (அடைத்தல்)]

அடைக்கல அத்தம் *aḍaikkala-a-ttam* பெ.(n.) சிற்பங்களில் காணப்பெறும் திருக்கரத்தின் வகை. 5:55.:25.; an hand pose in sculpture.

[அடைக்கலம்+அத்தம்]

அடைக்கலக்கை *aḍaikkalakkai*, (பெ.) (n.) இரு கைகளையும் நெஞ்சுற நோக்கி நெகிழ்ந்து நிற்பது; state of worshiping by folding palms towards bosom.

[அடைக்கலம்+ கை]

அடைக்கலக்காதை *aḍaikkālakadai*, (பெ.) (n.) சிலப்பதிகாரக்காதையின் உட்பிரிவுகளுள் ஒன்று; one of the cantos in cilappathigaram. *"அடைக்கலக் காதையும் கொனலக்களக் காதையும்." (சில: ப : 76.).*

[அடைக்கலம்+காதை]

அடைக்கலப்பத்து *aḍaikkalppattu*, (பெ.)(n.) திருவாசகத்தில் உள்ள ஒரு பதிகம்; a chapter in Thiruvacagam. *"அங்கணன்தனை நினைத்து அங்கு அடைக்கலப் பத்து முன்னாத் தூங்க வாசகங்கள் ஓதத் தொடங்கினார் வடக்கு நோக்கி." (தி.தி. 28 : 24.).*

[அடைக்கலம் + பத்து]

அடைக்காயமுது *aḍai-k-kāyamdu*, பெ.(n.) பாக்கு; betel nut/areca-nut. *'நெல்லு உமியும் அடைக்காயமுது பாக்கு பத்துக்கும்'* (தெ.கோ. சா.3 : 2).

[அடைகாய் + அமுது]

அடைக்குழி *aḍai-k-kuḻi*, (பெ.) (n.) பல்லாங் குழியில் நிரப்ப இயலாத வெற்றுக்குழி (நெ.வ.).empty pit in play board.

[அடை+குழி]

அடைகில்லார் *aḍaikilār,*(பெ.)(n.) பெறாதவர்; non-receivers. *“ஒப்பு அடைகில்லார் எல்லாம் உலந்தனர்.” (சுற். 11: 16.).*

[அடை+அடைகு]

அடைகுளிர் *aḍaikuḷir,* (பெ.) (n.) பெரும் பனி; severe cold. *“ஆரப் பொதும்பனி அடைகுளிர் சாரல்.” (கல். 84 : 29.).*

[அடை+குளிர்]

அடைகுறடு *aḍaikuraḍu,* (பெ.) (n.) பட்டடை; anivil. *“பட்டடை அடை குறடே.” (நிக.தி. 7 : 214.).*

[அடை+குறடு]

அடைகொடாதான் *aḍaikoḍān,* (பெ.) (n.) நிறைத்து வையாதவன்; one who has not stored. *“அருளினை நெஞ்சத்து அடை கொடாதானும்.” (திரி. 89.).*

[அடை+கொடா+ஆன்]

அடைச்சல் *aḍaiccal,* (பெ.) (n.) செருகுதல்; insert *“அடைச்சல் சருகுதல் ஆம் செருகுதற்கே.” (நிக.தி. 9:14.).*

[அடை+அடைத்தல்]

அடைத்தட்டி *aḍai-t-taṭṭi,* பெ. (n.) கட்டை வண்டியில் ஏற்றப்படும் எரு, மண் போன்ற பொருள்கள் முன் பகுதியில் சிந்தாதவாறு பொருத்தப்படும் மூங்கில் பட்டைகளினால் (பிளாச்சு) ஆன தட்டி, படல் முதலியன (இ.வ.).side screw used to support in a loaded cart.

[அடை+தட்டி]



அடைத்தான் *aḍaittāṉ,* (பெ.) (n.) தாங்கி நின்றான்; one who buttressed. *“அடைத் தானாம் சூலம் மழு.” (நாவு. 6 : 15 : 5.).*

[அடை+த்+த்+ஆன்]

அடைத்திட்டவன் *aḍaittiṭṭavaṉ,* வி.எ.(adv.) அடைந்தவன்; one who reached *கடலை அடைத்திட்டவன் காண்மின்.” (மங். 10 : 6 – 7.).*

[அடைத்து+இட்டவன்]

அடைதரும் தோறும் *aḍaitarum-tōrum,* வி.எ. (adv.) வரும் பொழுது எல்லாம்; whenever he comes. *“கிளையொடு மகிழும் குன்ற நாடன் அடைதரும் தோறும் அருமை தனக்கு உரைப்ப.” (நற். 165 : 5 – 6.).*

[அடை+தரும்+தோறும்]

அடைதட்டி *aḍai-taṭṭi,* பெ. (n.) அடைத்தட்டி பார்க்க; see *aḍaittaṭṭi*

[அடை + தட்டி]

அடைநீர் *aḍainīr,* (பெ.) (n.) சேர்ந்த தண்ணீர்; stored water. *“குடை அடை நீரின் மடையினள் எடுத்த.” (அக. 275 : 2.).*

[அடை+நீர்]

அடைப்பு *aḍaippu,* பெ. (n.) விலங்குகளின் பக்கவயிறு, விலாப்புறம்; the rib-side of animals. ‘என்னடா மேய்த்தாய் மாடு அடைப்பு நிரம்பவில்லை.’ (வ.சொ.அக.).

[அடை–அடைப்பு]

அடைப்பது *aḍaippadu,* (பெ.) (n.) தடுப்பது; stopping. *“நரைத் தலை முதியோள் இடித்து அடு கூலி கொண்டு அடைப்பது போல உடைப்பது நோக்கி.” (கல். 49 : 24–5.).*

[அடை–அடைப்பது]

அடைபலகை *aḍaipalagai,* பெ. (n.) கட்டை வண்டியில் மேல்பாகத்தில் நெடுக்கு வாட்டத்தில் பொருத்தப்படும் இரு நீளமான பலகைகள்; two planks fixed in a cart.



[அடை+பலகை]

அடைமூக்கு (பெ.) (n.) மூக்கில் சளி அடைப்பு. (கொ.வ.சொ.5.); severe cold.

[அடை+மூக்கு]

அடைமுட்டுப் பலகை *adai-muttu-p-palagai* பெ. (n.) பனை, தென்னை போன்ற மரமேறுபவர்களின் கத்தி முதலான பொருள்களை வைத்து இடுப்பில் கட்டிக் கொள்ளும் பெட்டிப் பலகை; basket made of spathe of palm, used by the people who climb palmtrees.

[அடை +முட்டு+பலகை]



அடையாதவர் *adaiyādavar*, (பெ.) (n.) சேராதவர்; those who not reach. *"நெய்த்தானம் அடையாதவர் என்றும் அமர் உலகம் அடையாரே." (சம். 1: 15 : 6.).*

[அடை+ஆ+த்+அவர்]

அடையாமல் *adaiyāmal*, வி.எ. (adv.) மூடாமல்; not closed. *"அடைவோம் நாம் போய்ச் சிவபுரத்து உள் அணியார் கதவு அடையாமே" (வாச. 607.).*

[அடை-அடையாமல்]

அடையாமை *adaiyāmai*, (பெ.) (n.) அடையா வண்ணம்; not touched *"அவலம் வந்து அடையாமை" (சம். 1: 118 : 8.).*

[அடை+ஆ+மை]

அடையார்முந்தி *adaiyār-mundi*, பெ. (n.) சேலையின் தலைப்பு முந்தி அல்லது மேல் முந்தி வகை; a kind of outer end of a saree or cloth.

[அடையார்+முந்தி. முந்தானை→ முந்தி.]

அடையாறு *adaiyāru-*, (பெ.) (n.) 1.செங்கற் பட்டிலுள்ள செம்பரம்பாக்கத்து ஏரியினின்று புறப்பட்டுச் சென்னை வழியாகக் கடலோடு கலக்கும் ஓர் யாறு; a river in Chennai. 2.அடையாறு கடலில் கலக்கும் பகுதி (பாக்கம்); the place where the river *adaiyār* joins Bay of Bengal Sea.

[அடை+ஆறு]

அடையாவண்ணம் *adaiyāvannam*, (பெ.) (n.) குறுகாதவாறு; *"காப்பார் காலன் அடையா வண்ணம்." (சம். 1: 12 : 6.).*

[அடை+ஆ+வண்ணம்]

அடையாளஅட்டை *ādaiyāla-attai*, பெ. (n.) ஒருவருடைய அடையாளத்தை உறுதிப் படுத்தும் வகையில் அவர் தம் நிழற்படம் பெயர், முகவரி முதலிய குறிப்படங்கிய அட்டை; identity card.

[அடையாளம் + அட்டை]

அடையாளக்குறிப்பு *adaiyāla-k-kurippu*, (பெ.) (n.) சிறிதளவான ஒன்றன் அடையாளம்; a small sign.

மறுவ. அறிகுறி.

[அடையாளம்+குறிப்பு]

அடையுழவு *adaiyulavu*, பெ. (n.) குத்தகையுழவு; lease cultivation. *"பொருள் கவருவும் அடையுழவும் பாட்டமாளவும் குடியிருக்கவும்"* (SII. v. 772.).

[அடை+உழவு]

அடையோடு *adai-y-ōdu*,பெ.(n.)அடைகாக்க மணல், பரப்பி முட்டைகளை வைக்கும் கூடைபோன்ற ஓடு.shells used to keep sand for hatching.

[அடை + ஒடு]

அடைவு *aḍaivu* (பெ.) (n.) ஒன்றிலிருந்து மற்றொன்றை அடைவது, நெருங்கிச் சேர்வது. (14 :236.);one adhering to another.

[அடை+அடைவு]

அடைவைத்தபெட்டை *adaivaittapeṭṭai*, பெ. (n.) அடைகாத்துக் கொண்டிருக்கும் கோழி; brooding hen. *"அடைவைத்த பெட்டையாட்டம் எதற்கு வீட்டிலேயே அடைந்து கிடக்கிறாய்?"* (இ.வ.).

[அடை+வைத்த+பெட்டி]

அண்டக்கிடாரம் *aṇḍakkiḍāram*, பெ. (n.) அளவில்லாதது; that which is immeasurable. 'அவனுக்குச் சினம் அண்டகிடாரம் முட்டிப் போயிற்று' (வ.சொ.அக.).

[அண்டம்+கிடாரம்]

அண்டங்கரி *aṇḍaṅkari*, பெ. (n.) அண்டங் காக்கையின் நிறம் போன்ற அடர்த்தியான நிறம்; utter black, that which is compared with jungle crow. (வ.சொ.அக.).

[அண்டம்+கரி]

அண்டப்புளுகன் *aṇḍappḷugaṉ*,பெ. (n.) மிகப்பெரிய பொய் பேசுகிறவன்; monstrous liar. 'அவன் அண்டப் புளுகனாயிற்றே?' (வ.சொ.அக.).

[அண்டம்+புளுகு+அன்]

அண்டப்புளுகு *aṇḍa-p-puḷugu*,பெ. (n.) மிகப்பெரிய பொய்; monstrous lie. 'அவன் அண்டப் புளுகு ஆகாசப்புளுகு பேசுகின்ற ஆள்' (வ.சொ.அக.).

[அண்ட+புளுகு]

அண்டர் *aṇḍar*, (பெ.) (n.) 1. குன்று மலை போன்றவற்றின் மேலே வாழ்பவர்; hill dwellers.2. ஆடு மாடுகளை மேய்ப்போர்; cattle raisers. 3. மீனவர்; fishermen.

ம. அண்டிலர். அண்டத்தி (ஓடக்காரி).

[அண்(மேல்) – அண்டர்]

அண்டரி *aṇḍari*, (பெ.) (n.) திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vriddhachalam Taluk.

[அண்டர்–அண்டரி]

அண்டல் *aṇḍal*, தொ. பெ. (vbl.n.) ஈடு செய்தல்; satisfy, by way of compensating something else. 'அது அதற்கு ஒரு மாதிரியா அண்டல் பண்ணி வைத்திருக்கிறது.' (வ.சொ.அக.).

[அண்டு+அல்]

அண்டலி *aṇḍali*,பெ.(n.)காஞ்சிபுரம் மாவட்டத்தில் கோவிலூர்க்கு அருகே உள்ள ஓர் ஊர்; name of the village in Kanchipuram near gthe kovilur.

[அண்டல்–அண்டலி]

அண்டலை *andalai*,(பெ.) (n.) நெருங்குதல்; coming in close contact. *"கண்டு உணராமை கடு மாப் புலி ஒன்று அண்டலை முதலிய கண்டும் அறியாமை" (மணி. 27 : 69 – 70.).*

[அண்டல்+ஐ]

அண்டாபானை *aṇḍāpāṉai*, பெ. (n.) நெல் அவிக்கவும், விழாக்காலங்களில் சோறு சமைக்கவும் பயன்படுத்தும் பித்தளையால் ஆன பெரிய ஏனம். (இ.வ.);a large vessel for cooking.

[அண்டா+பானை]



அண்டிப் பருப்பு *aṇḍi-p-paruppu*,பெ. (n.) அண்டிக் கொட்டை பார்க்க; see *aṇḍi-k-koṭṭai* (வ.சொ.அக.).

[அண்டி+பருப்பு]

அண்டிப்பருவம் *aṇḍi-p-paruvam*, பெ. (n.) புறாக்குஞ்சின் இறக்கை முளைக்காத இளம் பருவம்; early stage of dove. (வ.சொ.அக.).

[அண்டி+பருவம்]

அண்டு *aṇḍu-* , செ.கு.வி.(v.i.) சிதைந்து கிடத்தல்; piling up of waste. 'குப்பை யெல்லாம் அண்டு கிடக்கிறது.' (வ.சொ.அக.).

[அண்டு+து–அண்டு]

அண்டு–தல் *aṇḍu-* , செ.கு.வி. (v.i.) நெருங்குதல்; to be close together. 'ஏன் இப்படி அண்டுகிறாய்? தள்ளி உட்கார்.' (வ.சொ.அக.).

[அள்→அண்→அண்டு]

அண்ண *aṇṇa*, வி.எ. (adv.) இயைய; according to. *"சார்பின் தோன்றித் தத்தமில் மீட்கும் இலக்கு அண்ணத் தொடர்தலின்." (மணி. 30 : 17 –8.).*

[அண்+அ]

அண்ணமுண்டி *aṇṇamuṇḍi-*,பெ.(n.) அண்ணன் மனைவி, அண்ணி; wife of one's elder brother. (வ.சொ.அக.).

[அண்ணன்+(பெண்டு) முண்டி(கொ.வ.)]

அண்ணாத்து–தல் *aṇṇāttu-*, செ.கு.வி. (v.i.) ஏனத்தில் உள்ள கூழ் போன்றவற்றை மேலே தூக்கி ஒரே மூச்சில் குடித்தல்;to drink at a stretch.

[அண்ணா–அண்ணாத்து]



அண்ணாவி *aṇṇavi*, பெ. (n.) வில்லுப் பாட்டினைக் கற்று தரும் ஆசிரியர்; folk song teacher

[அண்ணன்–அண்ணாவி]

அண்ணியர் *aṇṇiyar*, (பெ.) (n.) அடுத்து உள்ளவர்; close friends. *"அண்ணியர் அகன்றவர் திறத்தும் ஆணையான்." (சூளா. 52.).*

[அண்ணு+இ+அர்]

அண்ணுக்குத்திஉழவு *aṇṇukuttiuḻavu*, பெ. (n.) நன்கு சரிவர உழப்படாத நிலப்பதம்; பெரும்பாலும் அன்றே உழுது விதைக்கும் படியான நிலப்பதம் (இ.வ.); make shift cultivation.

[அண்ணா+குத்து+உழவு]

அண்மு–தல் *aṇmu-* செ.கு.வி. (v.t.) நெருங்கு தல்; to come close. *"அம் கண் நாயகற் காண வந்து அண்மினார்." (அயோ. 7–10.).*

[அன்–அண்மு]

அணக்கம் *aṇakkam*, பெ. (n.) அறிகுறி; indication, symptom. 'அவர் வீட்டில்தான் இருக்கிறாரா? அணக்கமே இல்லையே.' (வ.சொ.அக.).

[அணங்கு–அணக்கு+அம்]

அணக்குடி *aṇakkuḍi*, (பெ.) (n.) கும்பகோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kumbakkaaaam Taluk.

[அணை+குடி]

அண–த்தல் *aṇai*, செ.குன்றா.வி (v.t.) தலை தூக்கிப் பார்த்தல்; to raise head and see. *"மலை உறை பகைத்து வான் உறைக்கு அணக்கும்." (கல். 253 : 20.).*

[அண் – அண]

அணங்குஆட்டுமுதியோள் *aṇaṅguāṭṭu mudiyōl*, (பெ.) (n.) குறிசொல்பவள்; foreteller woman. *"அணங்கு ஆட்டு முதியோள் முறம் கொள் நெல் எடுக்க". (கல். 17 : 24.).*

[அணங்கு+ஆட்டு+முதியோர்]

அணங்குற்றோர் *aṇaṅguṟṟōr,* (பெ.) (n.) நோய் உற்றோர்; those afflicted. *"பின்னிருங் கூந்தல் அணங்குற்றோரே." (ஐங். 173:4.).*

[அணங்கு+உற்றோர்]

அணங்கொடி *aṇaṅkoḍi,* (பெ.) (n.) அணுகு கின்ற அழகிய கொடி; visible flag. *"அணங்கொடி மாடவீதி ஆரூர் எம் அடிகளாரே." (நாவு. 4 53 – 8.).*

[அணங்கு+கொடி]

அணந்தல் *aṇandal,*(பெ.)(n.) திருவண்ணாமலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvannamalai Taluk.

[ஒருகா. அண்ணன்+ஏந்தல்.]

அணப்பு *aṇappu,* (பெ.) (n.) விளை வயலின் ஒரு பகுதி (கொ.வ.வ.சொ.5.);a small division in field.

[அண–அணைப்பு]

அணிஅளகு *aṇiaḷagu,* பெ. (n.) புணிக் கோலுடன் உள்ள புணையல் அளவு (நெ.கொ.க. 52.); a measure in handloom work.

[அணி+அலகு]

அணிக்கடவு *aṇikaḍavu,*(பெ.) (n.) உடுமலைப் பேட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Udumalipet Taluk.

[அணி+கடவு]

அணிகள் *aṇṇgaḷ,* (பெ.) (n.) படை வகுப்புகள்; cadre of army. *"அணிகள் ஒரு முகமாக உந்தின." (கலிங். 11 : 134.).*

[அணி+கள்]

அணிகிலாதவர் *aṇigilādavar,* (பெ.) (n.) பூசாதவர்; one who has not smeared vibuti on the forehead. *"வெண்ணீறு அணி கிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே." (வாச. 518.).*

[அணிக்கு+இயலாதவர்]

அணிகிற்பார் *aṇigiṟpār,* (பெ.) (n.) சூடிக் கொள்வோர்; one who wears. *"இத்தலத்தினில் இம் மலர்ப் பரிமளம் இல்லை என்று அணிகிற்பார்." (வி.பா. 42 : 69.).*

[அணி+அணிகிற்பார்]

அணிகோல் *aṇikōl,* பெ. (n.) அணி தெரி வதற்காக இழைகள் அணி மாறி வரும் இடங்களில் பயன்படுத்தும் கோல். (நெ.கொ.க. 52.); an implement in loom.

[அணி+கோல்]

அணித்தக *aṇitaga,* வி.எ. (adv.) அழகு பொருந்த;fitting *"அணித்தகப் பல் பூங் கானல் அல்கிலம் வருதல்." (அக. 20 : 9–10.).*

[அணி+தக]

அணித்தகு *aṇittagu,* பெ.எ. (adj.) அணிபெற வகுக்கத்தக்க; appropriate. *"அணித்தகு புரி குழல் ஆயிழை தன்னொடும்" (சில. 15 : 99.).*

[அணி+தகு]

அணித்தகை *aṇittagai,* (பெ.) (n.) பேரழகன்; a smart person. *"பணித்த மாற்றம் அணித் தகைக்கு உரைப்ப." (பெருங். 36 : 354.).*

[அணி+தகை]

அணிதா *aṇitā-,* செ.கு.வி. (v.t.) அழகு செய்; adding smartness. *"ஆடியும் ஆடையும் அணிதரு கலன்களும்." (சில. 28 : 63.).*

[அணி+தரு]

அணிதைவரல் *aṇitaivaral,* தொ.பெ.(abln.n.) அணிவகைளைச் செறித்தலும் திருத்தலும்; adjust ornaments and reset dress. *"ஊழ் அணிதைவரல் உடை பெயர்த்து உடுத்தலொடு." (தொல். 24 : 14.).*

[அணி+தைவரல்]

அணிந்தருளி *aṇindaruḷi,* வி.எ. (adv.) அணிந்து கொண்டு; clad with jwellery. *"அழகின் மேல் அழகுற அணி அனைத்தும் அணிந்தருளி." (கலிங். 10–49.).*

[அணிந்து+அருளி]

அணி–தல் *aṇi-,* செ.குன்றாவி. (n.) தடவுதல்; smear. *"அரை விளை கலை நல்லார் அறுகின் நெய் அணிந்தனரே." (சீவ. 12 : 53 .).* 2. தாங்குதல்; to wear *"சடை மேல் இள மதியோடு ஆறு அணிந்தார்." (சம். 3 : 65 : 3.).*

3. உடுத்தல்; to dress. *"கருமானின் உரி ஆடை மீது இலங்க அணிந்தான் இடையோர் தொடி" (சம். 1: 2 : 2.).*

[அண்+அணி]

அணி நகை *aṇinagai,* (பெ.) (n.) ஒளி பொருந்தியஅணிகள்; glittering jewellery. *"அணிநகை இடை இட்ட ஈகையம் கண்ணிபோல்." (கலி. 32 : 4.).*

[அண்+நகை]

அணிமா *aṇimā,* (பெ.) (n.) அட்டமாசித்திகளின் சிறப வடிவங்களில் ஒன்று (5 :117.); a feature in sculpture.

[அண்–அணி+மா]

அணிமாவலி *aṇimāvali,* (பெ.) (n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[அணி + மாவலி]

அணிமாறுதல் *aṇimāṟudal,* பெ. (n.) இழை தன் அணியில் செல்லாமல் வேறொரு அணியுடன் சேர்ந்திருத்தல். (நெ.கொ.க. 52.). changing of thread line in handloom operation.

[அணி+மாறுதல்]

அணியாதோர் *aṇiyātōr,* (பெ.) (n.) அணிகலன் பூணாதவர். those who are not wearing ornaments. *"இறை கொண்டோருள் அணியாதோரை ஆராய்ந்து வழி தரும்." (பெருங். 40 : 42 – 3.).*

[அணி+ஆ +த்+(ஆர்)ஓர்]

அணியாவயல் *aṇiyāvayal,* (பெ.) (n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[அணியா+வயல்]

அணில் வால் பூண்டு *aṇilvālpūṇḍu,* பெ. (n.) வயல்களில் வளரும் களைச்செடி. (வ.வ.வே.க.10); a weed.

[அணில்+வால்+பூண்டு]

அணிலாடி *aṇilāḍi,* (பெ.) (n.) செஞ்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Senji Taluk.

[அணில்+ஆடி]

அணிவி–த்தல் *aṇivi-,* செயப்.வி. (v.caus.) எழுதச் செய்தல்; to make to write. *"அங்கு அதன் பாகத்து ஈரத்து அருகுகலாம் அணிவித்திட்டான்." (சூளா. 930.).*

[அணி–அணிவி]

அணிவீதி *aṇivīdi,* (பெ.) (n.) மடவளகாம்; mutt complex *"அண்ணலவன் கண் எதிரே அணி வீதி மடி விடை மேல்." (பெரிய. 130.).*

[அணி+வீதி]

அணிற்காலன் *aṇiṟkālan,* (பெ.) (n.) மாடு வகை;species of cow.

[அணில்+காலன்]

அணிற்பிள்ளை[1] (பெ.) (n.) நான்கு கட்டத்திற்குள் சிறு கல்லினை எடுத்து ஆடல்;a children's play.

[அணில்+பிள்ளை]

அணிற்பிள்ளை[2] (பெ.) (n.) காக்கைக்குஞ்சு விளையாட்டில் மற்றொரு பெயர்.; name of a game.

[அணில்+பிள்ளை]

அணிந்தவை *aṇidavai,* (பெ.) (n.) ஒப்பனை செய்யப்பட்டவை; decorated. *"கோல யானை நால் இரண்டு மிகையா ஆயிரம் அணிந்தவை." (பெருங். 60 : 203 – 4.).*

[அணி–அணிந்தவை]

அணிந்திடு–தல் *aṇindiḍu-,* செ.குன்றா.வி. (v.t.) நிறுத்தி விடுதல்;to stop. *"அப்பெருஞ் சேனையில் அவனை உள்ளறத் துப்பு உற அணிந்திடின் துன்னல் ஆகுமோ." (வி.பா. 41: 187.).*

[அணிந்து+இடு]

அணு ஆர் அணி *aṇu-ār-aṇi,* (பெ.) (n.) உயிர்க்கு உயிராகிய திருவருள்; blessing that thrills the innermost soul. *"ஆயும் அளிவும் கடந்து அணு ஆர் அணி." (மூல. 1239.).*

[அணு+ஆர்+அணி]

அணுகஒட்டு–தல் *aṇugaoṭṭu-,* செகுன்றா.வி. (v.t.) சேரவிடல்; allow to join. *"அவனுடன் அணுக ஒட்டேன்." (வி.பா. 27 : 156.).*

[அணுக+ஒட்டு]

அணுக்க சேவகம் *aṇukkasēvagam,* (பெ.) (n.) அருகில் இருந்து செய்யும் தொண்டு;to be near and serve always. *"ஓவா அணுக்கச் சேவகத்தில் உள்ளோர்." (பெரிய. 13491.).*

[அணுக்கம்+சேவகம்]

அணுக்கர் *aṇukkar,* (பெ.) (n.) அகத் தொண்டர்; close devotees. *"அணுக்கருக்கு அணிய செம்பொன் அம்பலத்தாடி." (மாளி. 4 : 4).*

[அண்+அணுக்கர்]

அணுக்கள் *aṇukkaḷ,* (பெ.) (n.) ஐம் பூதங்களுக்குக் காரணமான மூலப் பொருள்கள்; source particles to the five elements of the nature. *"நிறைந்த இவ்வணுக்கள்ள பூதமாய் நிகழின்." (மணி. 27 : 138).*

[அணு+கள்]

அணுக்கிமார் *aṇukkimār,* (பெ.) (n.) அருகிலிருந்து ஏவல் செய்யும் பெண்டிர்; close maid servents. *"அரம்பையார் ஒத்துள அணுக்கிமாரும் அநேகர் இருக்கவே." (கலிங். 11 : 10.).*

[அணுக்கம்+அணுக்கி+மார்]

அணுகா அணிமை *aṇugāaṇmai,* (பெ.) (n.) உடனாந்தன்மை; inseparable union. *"அவ்வினைப் பயன் நீ அணுகா அணிமை." (ப.பி. 5 : 5 –6.).*

[அணுகா+அணிமை]

அணுகா முன்னம் *aṇugāmuṇṇam,* (பெ.)(n.) சேர்வதற்கு முன்னம்;before reaching *"அற்றவன் தலை மீது ஓங்கி அண்டம் உற்று அணுகா முன்னம்." (யுத். 28 : 53.).*

[அணுகாத+முன்னம்]

அணுகியான் *aṇugiyāṇ,*(பெ.) (n.) நெருங்கிய வன்; close person. *"யாதும்அணுகாது அணுகியான்." (சே.3 – 4.).*

[அணுகியவன்–அணுகியான்]

அணுகிற்றல் *aṇukiṟṟal,* தொ.பெ. (vbl.n.) கிட்டுவேன்; meeting. *"யான் உன்னை எங்கு வந்து அணுகிற்றனே." (சட.3 :2–5.).*

[அணுகு+நிற்றல்–அணுகிற்றல்]

அணுகுபு *aṇugubu,* வி.எ. (adv.) அண்ணிதாக; closely. *"தாள் நிழல் மருங்கின் அணுகுபு குறுகி." (பொரு.149.).*

[அணுகு+பு]

அணுகுறு–தல் *aṇuguṟu-,*செ.குன்றாவி. (v.t.) நெருங்குதல்;nearing. *"அண்டர் தானவர் அரக்கரும் அணுகுறா வனத்தில்." (வி.பா. 14 : 25.).*

[அணுகு+தல்]

அணுவில்அணு *aṇuvilaṇu,*(பெ.) (n.) உயிர்க்கு உயிர்; inner most soul. *"அணுவில்அணுவின் பெருமையில் நேர்மை." (மூல. 668.).*

[அணு+இல்+அணு]

அணைக்காடு *aṇṇai-k-kāḍu,*(பெ.) (n.) 1.அணை நீர்ப்பாசனவயல்; fertile land of dam irrigation. 2.மிக அதிக விளைச்சல்; excessive production of food grains.இந்தத் தடவை அணைக்காடாக விளைச்சல் கண்டிருக்கிறது.(இ.வ..).

[அணை+காடு]

அணைகிலார் *aṇaigilār,*(பெ.) (n.) சேராதவர்; those who not approached. *"ஆனைக்*

காவில் அம்மானை அணைகிலார்." (நாவு. 15: 31: 1.).

[அணுகு+இல்+ஆர்]

அணைகு-தல் *aṇaigu-,* செ.குன்றாவி. (v.t.) சேருதல்; joining. *"அறிவர் மா அணிண அரங்கின் மீது தூங்கு மலர்த் தாம வாசங் கொண்டு அணைகுவீரே." (கலம். 70.).*

[அணை+கு]

அணை-த்தல் *aṇai-,* 2.செ.கு.வி. (v.i.) உதைகொடுத்தல்; to give a good thrash. 'அவனை இரண்டு அணை அணைத்தால் தான் சும்மா இருப்பான்.' (வ.சொ.அக.).

[அண்-அணை]

அணைசு *aṇaisu,* பெ. (n.) ஒன்றனுக்குப் பக்கத் துணையாயிருப்பது, காப்பு; support.

[அணை → அணைசு - அணைந்து இருப்பது]

அணைசுப்பலகை *aṇaisu-p-palagai,* பெ. (n.) பூ வேலைப்பாடுகள் அமைந்த கதவுகளின் பின்புறம் வலிமைக்காகவும் காப்பிற்காகவும் இணைக்கப்படும் பலகை; the plank which supports the engraved front side of a door.

மறுவ. தாங்கு பலகை

[அணைசு+பலகை]



அணைசுவர் *aṇaisuvar,* பெ. (n.) சுவருக்கு முட்டாகக் கட்டும் சுவர்; supporting wall.



மறுவ. உதைசுவர், முட்டுச்சுவர்

அணைத்தவன் *aṇaittavan,* (பெ.) (n.) தடுத்தவன்; *one who checked. "வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்து." (பால. 13 : 30.).*

[அண்-அணை]

அணைந்தவன் *aṇaindavan,* (பெ.) (n.) செய்பவன்; performer. *"மயேந்திரப் பள்ளியுள் ளோடு அணைந்தவன் கழல் உணர்ந்து உய்ம்மினே." (சம். 3 : 31-9.).*

[அணை-அணைத்தவன்]

அணைந்துள்ளோர் *aṇaindu||ōr,* (பெ.) (n.) உடன்இருந்தோர்; those who accompanied. *"சீர் பெருகு நில நக்கர் ....மற்று எனையோர் அணைந்துள்ளோர்." (பெரிய.3153.).*

[அணைத்து+உள்ளோர்]

அணைப்பார் *aṇaippār,* (பெ.) (n.) நினைப்பவர்; those who remember. *"ஆகத்து அணைப்பார் அணைவதே ஆயிர வாய் நாகத்து அணையாள் நகர்." (பொ. 32.).*

[அணை-அணைப்பார்]

அணைப்பிடி-த்தல் *aṇaippiḍi-,* 2.செ.கு.வி. (v.i) வெயிலில் அலைதல், தொடர்ந்து அனலில் இருத்தல் போன்றவற்றால் சிறுநீர் வலியுடன் சொட்டுச் சொட்டாக வெளியேறுதல் (இ.வ.); urinary trouble.

[அணை(தடை)+பிடி]

அணைப்புச்சக்கை *aṇaippu-c-cakkai,* பெ. (n.) வாசற்காலின் மேற்புறத்தில் வெளிப்புறமாக

ஓவிய வேலைப்பாடுகளைக் கொண்ட பலகையை அணைத்துப் பிடிக்குமாறு பக்கவாட்டில் பொருத்தப்படும் அகலமான சட்டம்.broad wooden plank fixed to the side frames of the door to hold sculptured figurines.

[அணைப்பு+சக்கை]

அணைமுதல் *anaimudal*, (பெ.)(n.) தறி;loom. *"பணை நிலைப் புரவியின் அணை முதல் பிணியிக்கும் கழி சூழ் படப்பை." (பட். 312.).*

[அணை+முதல்]

அணையாத அன்பு *anaiyāda anbu*, (பெ.) (n.) நிலையான அன்பு; standard love. *"அணையாத அன்பே உடைய அனலாடி." (மூல. 2576.).*

[அணையாத+அன்பு]

அணைவுக்கை *anaivukkai* (பெ.) (n.) பிணையலின் ஒரு பிரிவு; a hand pose in dance.

[அணைவு+கை]

அத்தக்கூலி *attakkūli*, (பெ.) (n.) வேலை இருந்தால் மட்டுமே கூலி வாங்கும் தொழிலாளி. (கொ.வ.வ.சொ.5.). labourer who gets daily wage.

[அற்றை–அத்தை–அத்த+கூலி]

அத்தளி புத்தளி *attaliputtali*, (பெ.) (n.) சிறு குழந்தைகள் கையினைத் தரையில் ஊன்றி விளையாடல் (14–9); children play.

[அத்தளி+புத்தளி] (ஒலிக்குறிப்பு)

அத்தாச்சோடு *attāccōḍu*,(பெ.)(n.) அவ்வளவு பெரியது; thing such a big. (கொ.வ.வ.சொ.5.).

[அத்தனை+(சுவடு) சோடு]

அத்தாணி *attāni*, (பெ.) (n.) பவானி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Bhavani Taluk.

[ஒருகா. ஆற்று+அணி–ஆற்றணி–அத்தாணி.]

அத்தாளத்திருவமுது *attālat-tiruvamudu*, பெ. (n.) இராச் சாப்பாடு; dinner. *"இரா அத்தாளத் திருஅமிர்தத்தின்னு அரி அஞ்ஞாழியும் கூடே"* (TAS. v. P 63 - 83.).

[அத்தாளம்+திரு+அமுது]

அத்தாழம் *attāḷam*, பெ. (n.) மாலைக்காலம்; evening time. *"அத்தாழத் திருவமிர்தினும் அந்தியின் முன்னை அரி அளக்கக் கடவிர்"* (TAS. iii. 8, 189 - 91.).

[எல்(கதிரவன்)–அல் (தாழ்) தாழம்]

அத்தாளம் *attāḷam*, பெ. (n.) இரவு உணவு; supper.

[அல்+தாளம்]

அத்திந்தல் *attindal*, பெ. (n.)விழுப்புரத்திற்கு அருகில் உள்ள ஓர் ஊர். Name of the village near *viḷuppuram.*

[ஒருகா. அத்தன்+ஏந்தல்]

அத்திப்பற்று *atti-p-parru*, பெ. (n.) செய்யாறு வட்டத்தில் உள்ள ஓர் ஊர்.Name of the village in Syarue.

[அத்தி+ பற்று.]

திருவோத்தூர்கல்வெட்டிலும்வல்லம் கல்வெட்டிலும் அத்திபற்று என்னும் பெயர் காணப்படுகிறது.

அத்திமல்லன் *atti-mallan*, பெ. (n.) ஓர் இயர்பெயர்;a proper name.

[அத்தி+மல்லன்]

செய்யாறு திருப்போத்தூர் இறைவனுக்கு சந்தனப் பூச்சுக்கும் கற்பூரத்திற்கும் பிறவற்றிற்குமாக 12000 காசுகளை முதலீடாக அத்திமல்லன் சம்புவராயன் ஈன்ற எதிரிலிச் சோழசம்புவராயன் தானம் புரிந்துள்ளான்.

அத்தியாண்டான் *attiyāndān*, பெ. (n.) ஓர் இயர்பெயர்; a proper name.

[அத்தி+ ஆண்டான்.]

இரண்டாம் இராசராசனுடைய ஆட்சி யாண்டில் திருவோத்தூர் கோயில் விளக்கு வைக்க வேண்டி 30 பசுகளை தானமாக வழங்கினான். இவனுடைய காலம் 1167 கோப்பெருஞ்சிங்கன் பாடல் கல்வெட்டு களைக் கொண்ட அத்தியை இவன் ஆண்டவன்.

அத்திகோசத்தார் *attikōsattār,* (பெ.) (n.) வணிகச் சாத்துக்சகுத் துணையாகச் சென்ற யானைப் படை மறவர்; escorting soldiers for elephant wing of the army.

[அத்தி+கோசத்தார்]

அத்திமூர் *attimūr,* (பெ.) (n.) போளூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Polur Taluk.

ஒருகா.[அத்திமரம்+ஊர்]

அத்தியந்தல் *attiyandal,*(பெ.) (n.) திருவண்ணாமலை வடத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvannamalai Taluk.

[அத்தி+ஏந்தல் (ஏரி)]

அத்தினாபுரம் *attiṉāpuram,*(பெ.) (n.) அத்தி என்பவனால் வடநாட்டில் பாரத காலத்தில் நிறுவப்பட்ட நகரம்; capital city of pandavas named by the king *atti* being the master mind of the construction of the city.(பாரத.குரு.68)

[அத்தியின்+புரம்–அத்தினாபுரம்]

வடமொழியில் இது Hastinapuri *எனத்திரிந்தது.*

அத்துபடி *aṭṭupaḍi,* (பெ.) (n.) முழுமையான அறிவு (கொ.வ.வ.சொ.6.);thoroughly well known.

[அற்று+படி]

அத்துபோ–தல் *attu-pō,* செ.கு.வி. (v.i.) அறுந்து விடுதல்; to be cut off. (கொ.வ.வ.சொ.6.).

[அற்று+போ]

அத்துமீறு–தல் *attumīṟu-,* செ.கு.வி. (v.i.) வரம்பு கடத்தல்; to cross the limit, trespass.

[அத்து+மீறு]

அதக்கு (பெ.) (n.) வாயில் ஏதாவது ஒன்றைப் போட்டுமெல்லுதல்(கொ.வ.வ.சொ.6.);chewing something.

[அதை-அதைக்கு]

அதகப்பாடி *adakappāḍi,* (பெ.) (n.) தர்மபுரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Dharmapuri Taluk.

[அதிகன்+பாடி]

அதப்பித்தாள் *adappu-t-tāḷ,* பெ. (n.) நிழல் பகுதியில் கதிர் வளர்ச்சியடைந்து காணப்படும் நெற்பயிர்; fertile paddy growth in the shaddy area.

[அதைப்பு+தாள்]

அதமன்கோட்டை *adamankōṭṭai,* பெ. (n.) அதியமான் கோட்டை, தகடூர் நாட்டு வள்ளல் அதியமான் வாழ்ந்ததும் தருமபுரிக்கு அருகில் 5 கல் தொலைவில் உள்ளதும் ஆகிய ஊர். Name of the village 5 k.m. from Dharmapuri.

[அதியமான்→அதமன்+கோட்டை.]

அதருண்டாதல் *adaruṇḍādal,* பெ. (n.) 1. கழிவு உண்டாகை;formation of a deposit or sediment. 2. கிட்டம் ஏற்படுகை; formation of dross on iron or steel. (சா.அக.)

[அதர்+உண்டாதல்.]

அதலபாதாளம் *atalapātāḷam,* பெ. (n.) அளவிட முடியாத ஆழம் அல்லதுபள்ளம்; immeasurable depths, chasm. மணல் முகட்டு மேலிருந்து அதலபாதாளத்தில் தள்ளிவிடுவது போன்ற காட்சி மெய்சிலிர்க்க வைத்தது. (வ.சொ.அக.).

[அவல்–அதல்–அதலம்+பாதாளம்]

அதளை *adaḷai,*(பெ.)(n.)மதுரை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurai Taluk.

[அதளம்–அதளை(செடி)]

அதளைவயல் *adaḷaivayal,* (பெ.) (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppathur Taluk.

[அதளை(செடி)+வயல்]

அதாட்டியம் *adsṭṭiyam,*பெ. (n.) வல்லமை; strength. (வ.சொ.அக.).

[அத்து–அத்தட்டு–அதாட்டு+அம்]

அதிக்கிராவி *adikirāvi,*பெ. (n.) நெல் வகையுள் ஒன்று; a kind of paddy. *"மணவாரியும் சம்பாவும் அதிக்கிராவியும் விரைச்சு*

புழுக்கோளாயிப் போக" (TAS. v. P 208.).

[அதி+கிராவி]

அதிகப்பாடி *adigapādi,* பெ. (n.) சேலம் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். Name of the village in salem.

[அதிகன்+பாடி]

அதிகமான் *adigamān,* பெ. (n.) தகடூர் நாடாண்ட சேரர் குடிச் சிற்றரசன்; a king of Cera family who ruled Tagadur region.

[அதியன் → அதிக + (மகன்) மான் → அதிகமான்.]

அதிகமான் நெடுமான் அஞ்சி *adiga-mān-nedumān-anji,* பெ. (n.) அதிகமான்[1] பார்க்க see *adiga-mān.*

[அதிகன்–அதிகமான்]

அதிகரணந்தண்டம் *adikaranamtandam,* பெ. (n.) மேல் நீதி மன்றத்தில் செலுத்தும் ஒறுப்புக் கட்டணம்; a fine paid in the high court. *"கரணத் தண்டமும் அதிகரணத் தண்டமும்"* (SII, ii, 73.).

[அதிகரணம்+தண்டம்]

அதிகன் *adigan,* (பெ.) (n.) 1. அதியமான் குடி மரபினன்; chieftain of chera dynasty. 2. மேம்பட்டவன்; man of high position.

க. அத்திக (தலைவன்). து. அதிக (சொத்தினை ஆளும் குடியுரிமை). தெ. அதிக்கு (மேம்பட்டவன்).

[அதி–அதியன்–அதிகன்]

அதிகாரச்சியார் *adikāricciyār,* பெ. (n.) பெண் அதிகாரி; lady officer *"அதிகாரிச்சியார் ஐயாரன் தேவியார் முன் செய்கின்ற நிபந்தத்திற்கு முதலாக"* (SII, vii, 1017.).

[அதிகாரம்+(அத்தி) அச்சி+ஆர்]

அதிகை *adigai,* பெ. (n.) தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பண்ணுருட்டிக்கு அருகில் உள்ள ஓர் ஊர்; name of the village in south arcot near the Panrutti.

[அதியன் → அதிகை.]

அதிட்டானமானம் *adittānamānam,* பெ. (n.) சிற்பங்களின் உயரத்தினை முடிவு செய்யும் மரபு 5:20; deciding the height of statue.

[அதிட்டானம்+மானம்]

அதிபங்கத்தோற்றம் *adbangattrram,* (பெ.) (n.) முடிமுதல் அடிவரை ஒழுங்கின்றி அமைந்த சிற்பவடிவம் (5–38.); irregular shape of the statue.

[அதி+பங்கம்+தோற்றம்]

அதிபங்கம் *adbangam,* (பெ.) (n.) சிற்பநிலை களிற் ஒன்று (1:120); a posture of statue.

[அதி+பங்கம்]

அதியமான் நல்லூர் *adiyamannallūr,* பெ. (n.) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; name of the village in chengalpattu.

[அதியமான்+நல்லூர்.]

அதியமான்பெருவழி *adiyamānperuvali,* (பெ.) (n.) அதியமான் பெயரிலமைந்த நெடுஞ்சாலை; highway named after *adiyamān* the chieftain of *tagadūr.*

[அதியமான் +பெருவழி]

அதியமான்பெருவழிக்கல் *adiyamān peruvali-k-kal,* (பெ.) (n.) அதியமான் பெயரிலமைந்த நெடுஞ்சாலையில் நடப்பட்ட காவதக்கல்; milestone erected each at a distance of 5 miles (*kāvatam)* in the highway named after *ādiyaman, king of cēra* clan.

அதியன்விண்ணத்தனார் *adiyanvinnattanār,* (பெ.) (n.) ஒரு புலவரின் பெயர்; name of a poet.

[அதியமான்+விண்ணத்தன்+ஆர்.]

அதிரசக்கட்டை *atirasakkattai,* பெ. (n.) அதிரசத்தில் உள்ள எண்ணெயை அழுத்தி வடிக்குமாறு செய்யப்பட்ட இருபகுதிகளைக் கொண்ட மரக்கருவி; a twin wooden plank need to squeeze extract oil in fried rie cake.



[அதிரசம்+கட்டை]

அதிரடிப்படை *adirad-p-padai,* (பெ.) (n.) திடுமென தாக்குதல் நடத்தத் தேர்ந் தெடுக்கப்பட்ட மறவர் குழு; commando squad.

[அதிரடி+படை]

அதிரல் *adiral,* பெ. (n.)ஒரு வகைக் கொடி; a creeper, dillenia Indica.

[அதிர்–அதிரல்]

அதிரவீசுங்கை பெ.(n.)நூற்றியெட்டு ஆடலியக்கங்களில் ஒன்று;one of 108 dance movements.

[அதிர+வீசும்+கை]

அதிராம்பட்டினம் *adiraāmpattinam,* பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரு கடற்கரை நகரம். Name of the village in T*anjavūr.*

[எதிரான்(இளவரசர்)–அதிரான்+பட்டினம்]

அதிருத்ரகும்மி *adirudrakummi,*(பெ.) (n.) கும்மிப்பாடலின் ஒருவகை, விரைவுக்கும்மி; a play of laddies.

[அதி+உருத்திரம்+கும்மி]

அந்தக் கழுதை இந்தக் கழுதை *andak-kaludai inda-kkaludai,* பெ. (n.) கண்ணா மூச்சி விளையாட்டினைப் போன்ற விளை யாட்டு. a children's game similiar to hide and seek.

[அந்த+கழுதை+இந்த+கழுதை]

அந்தப்பம் *andappam,* பெ. (n.)கொங்கு நாட்டில் உள்ள ஓர் ஊர்; name of the village *kongunadu.*

[ஒருகா. ஏந்தல் + குப்பம்]

அந்தர காந்தாரம் *antarakāndāram* பெ. (n.) வன்சுரங்களில் ஒன்று; a musical note.

[அந்தரம்+காந்தாரம்]

அந்தரத்தாசி *andara-t-tāsi,* (பெ.) (n.) அந்தி நேரத்தில் உலவும் விலைமகள்; prostitute wandering in the evening. *(முகவை)*

[அந்திநேரம் –அந்தரம்+தாசி]

அந்தரத்தாசி என்பது நிரந்தரத்தாசி என்பதன் எதிர்ச்சொல்.

அந்தராசியாக *antarāsiyāga,* பெ. (n.) எந்தவொரு பிடிமானமும் இல்லாமல் ஏதிலியாக; vagabond.

[அந்தரம்+வாசியாக]

அந்தராசிபிழைப்பு *antarāsipilaippu,* பெ. (n.) உறுதியற்ற வேலை பிழைப்பு (இ.வ.);indefinite work, unstable livelyhood.

[அந்தரம்+வாசி+பிழைப்பு]

அந்தராயவேணிமயம் *antarāyavēnimayam,* பெ. (n.) ஒரு வகை வரி; a kind of tax. *"திருநந்தவனக் குடிகள் ஒன்பதின்மார்க்கு அந்தராய வேணிமயம் நீக்கி"*(SII, iv, 1285.).

[அந்தராயம்+வேள்+நியமம்]

அந்தரி *antari* பெ. (n.) பண்டைய தோற் கருவியினுள் ஒன்று; a musical drum.



அந்தரிமுழவு பெ. (n.) கொற்றவையாகிய அந்தரியை வழிபடும் விழாவில் முழக்கப்படும் முழவு; a musical drum.

[அந்தரி+முழவு]

அந்தளகத்தார் *andaļakattār*, பெ. (n.) பல்லக்கு வீரர்; pallanquin bearer. *"அடைத்த நியாயம் உத்தம சோழத் தெரிந்த அந்தளகத்தார்"* (SII, ii, 12.).

[அந்தளகம்+அத்து+ஆர்]

அந்தளி *andaļi*, (பெ.) (n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[அம்+தளி]

அந்தன் *andan*, பெ. (n.) அழகன் (திருப்பு.40); handsome man.

க. அந்த.[அம் → அந்தனம் → அந்தம்-அந்தன்].

அந்தி *andi*, பெ. (n.) பாலையாழில் பிறக்கும் பண் (13 : 120.).a musical note.

[அந்து+அந்தி]

அந்திக்களை *andik-kaļai*, பெ. (n.) களைவெட்டு அதிகமாக இருக்கும் போது, மதிய இளைப் பாறலுக்குப் பின் நிகழ்த்தும் களைவெட்டு; evening part-time work in the field.

[அந்தி+களை+வெட்டு]

(இதற்குக் காலை களைவெட்டும் கலியை விடக் குறைவாக இருக்கும்.) (இ.வ.)

அந்திநடவு *andinaḍavu*, (பெ.) (n.) காலை 10 மணி முதல் மாலை வரை நடும் நடவு செய்தல்; implanting work done till evening.

[அந்தி+நடவு]

அந்திப்பூட்டு *andi-p-pūttu*, பெ. (n.) வயல் களில் மாலை நேரங்களில் உழவு செய்வது; tilling the land in the evening.

[அந்தி+பூட்டு]

ஏர் ஓட்டுதல், கமலை ஓட்டுதல், எரு வடித்தல் போன்ற வேலைகளில் உச்சிப் பொழுதில் மதிய உணவு மற்றும் ஓய்விற்குப் பின் தொடர்ந்து செய்யும் வேலை; (இ.வ.)



அந்தியம் *andiyam*, பெ. (n.) பத்தாயிரம் (குவளை) கோடி குறித்த பேரெண். (1000 000 000 000); thousand billion.

[அந்து-அந்தியம்]

அந்தியிழவு *andi-yilavu*, பெ. (n.) இறந்தோரின் வீட்டில் பதினெட்டு நாள் வரையிலும் மாலையில் ஒப்பாரி வைத்து அழும் நிகழ்ச்சி; lamenting song sung for 18 days in the house of the deceased.

[அந்தி+இழவு]

ஒரு வகை இனத்தாரில் இறந்தோர் வீட்டில் பதினெட்டாம் நாள் சடங்கு வரையில் நாள்தோறும் மாலையில் உறவின் முறையாரும் தெரு மக்களும் ஒப்பாரி வைத்து அழுது புலம்பும் நிகழ்ச்சியில் மகளிர் மட்டும் இடம் பெறுவர்.

அந்திரன் *andiran*, பெ. (n.) தேவன், கடவுள்; celestial person, god. அந்திரனை ஆரூரில் அம்மான் தன்னை (தேவா.723-4)

[அண்+தன்-அந்தன்-அந்தரன்-அந்திரன்]

அந்திவயல் *andivayal*, பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[அந்தி+வயல்]

அந்துகம் *andugam*, பெ. (n.) 1. வீரக்கழல்; anklet. 2. யானை கட்டும் இரும்புத் தொடரி (சங்கிலி);chain used to fasten the leg of elephant.

[அத்து(தொடு, சேர்)-அந்து-அந்துகம்]

அந்துவஞ்சேள்ளை *anduvan ceļļai*, பெ. (n.) தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் மனைவி; name of chera queen and wife of

the chera king. *tagadurerindaperuncērall irumporai.*

[அந்துவன்+செள்ளை]

மையூர் (மைசூர்) கிழான் மகளாகிய அந்துவஞ்செள்ளை அந்துவன் மரபைச் சார்ந்தவள்.

அந்துவன் *anduvan,* பெ. (n.) அண்ணன், மூத்தவன்; elder person, 2. அழகியவன்; smart person, beloved person. **3.** நெருங்கியவன்; a close friendly person. அந்துவற்கொரு தந்தை ஈன்ற மகன்' (பதிற்.)

க. அந்து(சேர்தல்)து அந்தப்ப, அந்தய்ய, ம. அந்திக்க–(அருகில்)அந்தி– தமக்கை.

[அண் (மேல்) + து – அந்து + அன் – அந்துவன்(மேலோன்,உயர்ந்தவன்)]

அந்தோமா *andōmā,* கு.வி.எ. (ap.adv.) அந்தப் பக்கமாக. (இ.வ.); that side.

[அந்த+ஓரமாக]

அந்தோளகம் *andōlogam,* பெ. (n.) பல்லக்கு; palanquin. *"பகல் விளக்கும் பாவாடையும் அந்தோளகமும் குடையும்"* (EI, iii, 11.).

[அந்தோள்+அகம்]

அநங்கதுந்துமி *anangatundumi,* (பெ.) (n.) துந்துமி இசைக்கருவியின் வேறுபெயர்; name of a musical drum.

[அணங்கு(காளி)+துந்துமி]

அநாதிவெயில் *anādiveyil,* பெ. (n.) நின்று களைப்பாற நிழல் எதுவுமற்ற வெட்ட வெளியில் காயும் உச்சி வெயில் (இ.வ.); midday hot sun unbearable on the plains.

[அநாதி+வெயில்]

அப்பணங்கட்டு–தல் *appana-n-kattu-,* செ.குன்றாவி. (v.t.) ஒருவரின் செலவிற்கு பிறர் உதவி புரிதல்; expense met with by others; ஒருவரின் பயணம் முதலியவற்றிற்குத் தேவையான உதவிகளைச் செய்து ஆயத்தப்படுத்தல்; (இ.வ.) to extend monetary help for travelling purpose.

[அறப்பணம் +கட்டு]

அப்பணை *appaṇai,* பெ. (n.) கட்டளை; order. *"இருகண நாயக்கற்கு ஸமுக அப்பணையும் பண்ணி தர்ம சாரனமுங் குடுத்து"* (SII. xviii. 751.).

[அப்பு–அப்பணை]

அப்பளாவரம் *appaḷāvaram,* (பெ.) (n.) பொன்னேரி வட்டத்திவிலுள்ள சிற்றூர்; a village in ponneri Taluk.

[ஒருகா. அப்பணை+புரம்]

அப்பன் *appan,* (பெ.) (n.) தன்னுடைய மகனை அப்பன் என்று அழைக்கும் கொங்கு நாட்டு மரபு; a word of endearment used by father to address his son.

[அப்பு+அப்பன்]

அப்பனம்மா *appanammā,* (பெ.) (n.) அப்பாவும் அம்மாவும்; both fater and mother.

[அப்பனும்+அம்மாவும்]

அப்பாடி *appādi,* பெ. (n.) பின்னால் வரப் போகும் தீங்கினைச் சுட்டும் சொல்; a word denoting bad symptom or omen. 'அப்பாடி! நான் மாட்டேனப்பா.' (வ.சொ.அக.).

[அப்பன்+அடி]

அப்பிச்சி[1] *appicci,* பெ. (n.) அப்பாவின் தம்பி, சித்தப்பா; father's younger brother.

[அப்பு–(அத்மதி)இத்தி]

அப்பிச்சி[2] *appicci,* (பெ.) (n.) அம்மாவின் அப்பா; maternal grand father.

[அப்பு+(அத்தி)இத்தி]

அப்பு *appu,* பெ. (n.) ஐயா; sir. *'அப்பு உங்களைத்ததானே.'*

[அப்பன்–அப்பு(விளி)]

அப்புக்கட்டை *appu-k-kaṭṭai,* பெ. (n.) ஏருழவு பிறழாமல் இருப்பதற்காக ஏரின் மேக்காலுக்கு மேல் வைத்து அடிக்கும் கட்டை; a wooden piece fixed in the yoke.

[அப்பு+கட்டை]

அப்பூடு *appūḍu,* (பெ.) (n.) அப்பொழுதும்; then.

[அப்+பூடு]

அம்சி *amsi,* (பெ.) (n.) விளவங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vilavancode Taluk.

ஒருகா.*[அம்புத்தி–அம்சி]*

அம்பணப்பராரைக்கட்பறை *ampānapārarai-k-katparai,* பெ. (n.) அம்பணமரக்கால் வடிவில் செய்யப்பட்ட பறை; a shape of measure ment type of musical drum.

[அம்பணம்+பராரை+கண்+பறை]

அம்பர் *ambar,* பெ. (n.) திருநள்ளாற்றிலிருந்து 11 கி.மீ. தொலைவிலுள்ள ஓர் ஊர். name of a village which is 11 K.M. away from *Tirunallār.*

[அம்பல்–அம்பர்]

இவ்வூர் அம்பர் நாட்டின் தலைகரமாகும். பிற்காலத்தில் இவ்வூர் "விக்கிர சோழபுரம்" எனப்பெயர் பெற்றது.

அம்பர் அருவந்தை *ambar-aruvandai,* பெ. (n.) மயிலாடுதுறை வட்டத்தில் அமைந்துள்ள ஓர் ஊர். name of a village in *Mayilāduturai taluk.*

[அம்பர்+அருவந்தை]

அம்பர்திருமாகாளம் *ambartirumāgālam,* பெ. (n.) மயிலாடுதுறை வட்டத்தில் அமைந்துள்ள ஓர் ஊர். name of the village in Mayiladuturai taluk.

[அம்பர்+திரு+மா+காளம்]

அம்பர்புறத்தூர் *ambarpurattūr,* பெ. (n.) பேரரளத்திலிருந்து 8 அயிரமாத்திரி (கி.மீ.) தொலைவில் அமைந்துள்ளஓர் ஊர்.name of the village 8 K.M. away from *Pērālam.*

[அம்பர்+புறம்+அத்து+ஊர்]

அம்பல் *ambal,* (பெ.) (n.) நன்னிலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Nannilam Taluk.

[அம்பு+அம்பல்]

அம்பலக் கூத்தர் பட்டர் *ambalkūttarpattar,* பெ. (n.) விக்கிரம சோழன் காலத்தில் திருவோத்தூர் திருவுண்ணாழிகை அவை (சபை)யில் இருந்தவர். (காலம் 1124); a member *tiruvunnāliga* assembly of Vikkirama Cholan (1124).

[அம்பம்+கூத்தர்+பட்டர்.]

அம்பி *ambi,* பெ. (n.) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; name of the village in Chengalpattu district.

[அம்பு–அம்பி]

அம்பிலி *ambili,* பெ. (n.) மல்லாக்கப்படுத்துக் கால்களை மடக்கிய நிலையில், பாத மடக்கில் குழந்தையை உட்கார வைத்து பாதத்தோடு குழந்தையைத் தூக்கித் தூக்கிப் போட்டுச் சிரிப்புக் காட்டும் விளையாட்டு; (இ.வ.);a childish play.

[அம்பல்+அம்பிலி]

அம்பிலித்தொட்டி (பெ.) (n.) நாய்க்கு உணவு இடும் சிறு சட்டி;a small earthen vessel meant for dog.

[அம்புளி+அம்பிலி+தொ(ச)ட்டி]

அம்பிளிக்கை *ambilikkai,* (பெ.) (n.) பழனி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Palani Taluk.

[அம்புளிச்சை–அம்புளிக்கை]

அம்பு நடனம் *ambu nadanam,* பெ. (n.) இலங்கையில் வேடர்கள் ஆடுகின்ற ஒரு வகை நடனம்;a dance performed by hunting tribe in celon.

[அம்பு+நடனம்]

அம்மன் எடுப்பு *amman eduppu,* (பெ.) (n.) ஊருக்கு வெளியேயுள்ள அம்மனை வழிபட்டு கொண்டாடுவது; celebration of rural deity.

[அம்மன்+எடுப்பு]

அம்மன்கொண்டாடி *ammankondādi,* (பெ.) (n.) தெய்வமேறி ஆடலில் அம்மன் அருள் ஏற்று ஆடுபவன்; a possessed priest in a temple.

[அம்மன்+கொண்டாடி]

அம்மன் கோயில்பட்டி *ammankovilpatti,* பெ. (n.) சேலம் மாவட்டத்தில் காரையூர்க்குத் தென்கிழக்கில் உள்ள ஓர் ஊர்; name of a village in salem south east to *kārayūr.*

[அம்மன்+கோயில்+பட்டி]

அம்மாப் பாளையம் *ammāppalayam,* பெ. (n.) விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; name of the village in *viluppuram.*

[அம்மன்+பாளையம்]

அம்மாம்பொட்டு *ammāmpottu,* பெ. (n.) ஒருவகை மேளக் கொட்டுப் போலப் பொட்டுப் பொட்டாக விழும் சற்றே பெரிய மழைத் தூறல்கள்; light rain falling in big drops. *'மானம் இப்பதான் கார்த்திய மாசம் மாதிரி அம்மாம் பொட்டு போட்டுக்கிட்டு நிக்குது'* (இ.வ.).

[அம்+அம்+பொட்டு]

அம்மனைக்காய் *ammanai-k-ai,* பெ. (n.) அம்மானை விளையாட்டில் பயன்படும் காய்; balls used in the *ammanai.* (girls' game of keeping a number of balls in the air, some rising while others are following.)

[அம்மனை+காய்.]

அம்மான்கால் *ammānkāl,* பெ. (n.) தாய் மாமன் உறவு; அம்மா வழி உற (இ.வ); maternal relationship.

[அம்மான்+கால்]

அம்மான்வரிசை *ammānvarisai,* பெ. (n.) குடும்பத்தில் இறப்போ, பிறப்போ மற்றுள்ள நிகழ்வுகளோ அனைத்திலும் சடங்கு செய்யும் உறவினர்க்குத் தாய்மாமனால் கொடுக்கப் படும் துணிமணி, பொன்நகை முதலிய சீர்வரிசை;gifts offered by maternal uncle.

[அம்மான்+வரிசை]

அம்மானியாக *amāniyāga,* வி.எ. (adv.) பெரும்பட்டினியாக(க் கிடத்தல்); hunger stricken.

[அம்மாணி+ஆக]

அம்மானை ஆட்டம் *amānai āttam,* (பெ.) (n.) தட்டாங்கல் விளையாட்டினைக் குறிக்கும் சொல்; a children game.

[அம்மானை+ஆட்டம்]

அம்மிச்சி *ammicci,* (பெ.) (n.) அம்மாவின் அம்மா; maternal grand mother.

[அம்மை+(அத்தி) இத்தி]

அம்மை நாயக்கனூர் *ammaināyakkanūr,* பெ. (n.) கொடைக்கானல் வழியில் உள்ள ஓர் ஊர்; name of the village on the way to *kodaikkanal.*

[அம்மன்+நாயக்கனூர்]

அம்முண்டி *ammundi,* (பெ.) (n.) அரக்கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Aarkkonam Taluk.

[ஒருகா. அமர்+அன்]

அமஞ்சாக்கி *amanjākkai,*(பெ.)(n.) அறந்தாங்கி தாலூக்காவிலுள்ள சிற்றூர்; a village in Arantagi Taluk.

[ஒருகா.அமண+சாக்கி]

அமணி *amani,* பெ. (n.) திருவாடானை வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[ஒருகா. அம்+மணி]

அமர் அடக்கி *amaradakki,* பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். name of the village in *Tanjavūr* district.

[அமர்+அடக்கி]

உள்நாட்டுக் கலகத்தை ஒடுக்கக்கூடிய ஒரு வீரன் 'அமர்அடக்கி' என்று அழைக்கப்பட்டான். அவனுடைய பெயராலேயே இவ்வூர் வழங்கப்பட்டது.

அமர்வு *amarvu,* பெ. (n.) குறிப்பிட்ட செயலாற்றும் காலப்பகுதி; session, sitting; கருத்தரங்கின் முதல் அமர்வில் என் கட்டுரையைப் படித்துவிட்டேன்.

[அமர்+அமர்வு]

அமரகுந்தி *amarakundi,* (பெ.) (n.) ஓமலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Omalur Taluk.

[அமரன்+குந்தி]

அமரகோன் *amarakōn,* பெ. (n.) மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்து (1314) திருவாய்ப் பாடி நாட்டவர். *tiruvāyappādi,* man who

lived during *māravārma sundarapandian period* (1314).

[அமர்+கோன்= அமரகோன்]

அமரடக்கி *amaradakki,* (பெ.) (n.) நிலக் கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Nilakottai Taluk.

[அமர்+அடக்கி]

அமரன் *amaran,* பெ. (n.) வித்தமிழ்தை (இந்திரியத்தை)க் கட்டுக்குள் வைத்து ஆள்வோன்;one who controls the semen.

[அமர்+அன்]

அமரபயங்கரன் *amarapayangaran,* பெ. (n.) கொங்கு நாட்டு அரசர்களில் ஒருவன்; a king of *kongu* country.

[அமா+அ+பயங்கரன்]

அமரன்வயல் *amaranvayal,* பெ. (n.) திரு வாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[அமர்(போர்வீரன்)+வயல்]

அமரோசை பெ. (n.) ஒருவகையான சுரநிரல்; a musical fluctuation.

[அமர்+ஓசை]

அமளை *amalai,* பெ. (n.) மழைநீரை மட்டுமே நம்பியிருக்கும் மானா வாரிப் பயிரில் விழும் பசளி போன்ற ஒருவகைக் களை; a weed like pasali (வ.சொ.அக.).

[அமல்–அமலை–அமளை)]

அமானம் *amānam,* பெ. (n.) முடிவு தெரியாதது; that which is infinitive. *'இப்படியே அமானமா பேசிக்கொண்டு இருந்தால் எப்படி?.'* (வ.சொ.அக.).

[அல்+மானம்]

அமானிவெயில் *amāniveyil,* பெ. (n.) **மிகுந்த வெயில்** பார்க்க;excessive head of the sun.

[அல்+(மானம்)–அமானி (அளவுகடந்தது) + வெயில்]

அமுக்கடி *amukkadi,* பெ. (n.) கிடைத்ததைப் பற்றிக் கொள்ளுதல்; grabbing whatever available. *'அவன் அமுக்கடிக் காரனாயிற்றே!'* (வ. சொ. அக.).

[அமுக்கு+அடி]

அமுசு *amusu,* பெ. (n.) அழகு, பேரழகு; beauty, charming.

[அம்(அழகு)அம்முது–அமுசு]

அமுக்கிராபொடி *amukkirā-podi,* பெ. (n.) அமுக்கிராக் கிழங்குடன், திரிகடுகு, ஏலம், கிராம்பு, சிறு நாவற்பூ முதலிவற்றைக் கலந்து செய்த மருந்துப் பொடி; a mixture of the powdered drugs such as horse-root dry ginger, pepper,long pepper, cardamum, cloe, cassia buds.

[அமுக்கிரா+பொடி]

அமு–அமுக்கு=அமுத்துதல். வீக்கத்தை அமுக்குதல். குறைக்கும் மருத்துவ இயல்பு கொண்டது. அமுக்கலாங்கீரை எனப் பெயர் பெற்று பேச்சு வழக்கில் அமுக்கலாங்கீரை – அமுக்கராக் கீரை எனத் திரிந்தது.

அமுதகண்டலி (பெ.) (n.) பழம்பெரும் இசைக்கருவி ; a musical instrument.

[அமுதம்+கண்டம்+அளி]

அமுதகுண்டலி பெ. (n.) தோற்கருவியினுள் ஒன்று; a parcussion instrument.

[அமுது+குண்டலி]

அமுதவல்லபன் *amudavallaban,* பெ. (n.) 1314ல் வாழ்ந்த திருவாய்ப்பாடி நாட்டவர்.*a tiruvāypādd* man who lived during 1314.

[அமுதன்+வல்லபன்]

அமுதுபடி *amudhupadi,* பெ. (n.) உணவுச் செலவு; expenditure of food stuff.

[அமுது+படி]

அமுதூர் *amudūr,* (பெ.) (n.) வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wandiwash Taluk.

[அமுது+ஊர்]

அமைச்சகம் *amaiccagam,* பெ. (n.) ஓர் அமைச்சரின் பொறுப்பிலிருக்கும் அரசு ஆளுவத்துறை; ministry.

[அமைச்சு + அகம்]

அமைச்சரவை *amaccaravai* பெ. (n.) அரசுத் துறைகளை ஆளுவம் செய்யும் (நிருவகிக்கும்) அமைச்சர்கள் அடங்கிய குழு; council of minister; cabinet.

[அமைச்சர்+அவை]

அமைதி உருவங்கள் (பெ.) (n.) அடக்கமான தோற்றம் கொண்ட சிற்பங்கள் (11 : 43.); sculpture of calmpose.

[அமைதி+உருவம்+கள்]

அமைதிவாரி *amaidivāri,* (பெ.)(n.) ஆசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடைப் பட்டிருக்கும் பசுபிக் கடல். pacific ocean.

[அமைதி+வாரி]

அறுமை *a̲rumai,* பெ. (n.) ஆறாம்நாள் (சஷ்டி); sixth day.

[ஆறு → ஆறு–அறுமை]

அமைப்பாளன் *amai-p-pā̲lan,* எதாவது ஒரு நோக்கத்தின் பொருட்டு செயற்படவுள்ள மக்கள் குழுவை ஏற்படுத்துபவர். organizer.

[அமைப்பு+ஆளன்.]

அமைப்பு *amai-p-pu,* பெ.(n.) ஏதாவது ஒரு நோக்கத்தின் பொருட்டு ஏற்படுத்திக் கொள்ளும் மக்கள் குழு; organization.

[அமை–அமைப்பு.]

அய் *ay,* பெ. (n.) விலங்கினங்கள் குட்டிகளை ஈன்ற குட்டிகளின் மேல் இருக்கும் வழுவழுப்பான ஈரப்பசை; moisture on the skin of the new born animal. '*ஈன்று, அய் உலரவில்லை அதற்குள் என்ன தலைப்பிறட்டு பண்ணுகிறது பார் அந்தக் கன்னுக்குட்டி.*'

[அள்+அய்]

அய்யன்கொம்பு (பெ.) (n.) தாயின் கால் கட்டை விரலில் குழந்தைகள் கை வைத்து விளையாடுதல்; child's play.

[ஐய்யன்–அய்யன்+கொம்பு]

அய்யனார் (பெ.) (n.) நாட்டுப்புற மரபில் மழைக்கடவுளாகக்கருதப்பெறும் தெய்வம்;folk deity of rain.

[ஐயன்+ஆர்]

அய்யனேரி *ayyaneri,* (பெ.) (n.) திருத்தணி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruthani Taluk.

[ஐயன்+ஏரி]

அய்யும் பொய்யும் *ayyumpoyum,* பெ. (n.) உண்மையும் புனைவும்; (இ.வ).;truth and false.

[ஐயும்+பொய்யும்]

அயன் *aya̲n,* பெ. (n.) தரமுயர்ந்த சரக்கு; a fine product. '*இது நல்ல அயனான சரக்கு.*

[ஐ+ன்–அய்ன். ஐ–அழகு, உயர்வு]

அயன்மொழி *aya̲nmo̲li,* பெ. (n.) ஒரு மொழி பேசும் இடத்திற்கு அப்பால் பேசப்படும் வேற்றுமொழி; foreign language.

[அயல்+மொழி]

அயிக்கா மங்கலம், *ayikkāmaṅgalam,* பெ. (n.) நாகப்பட்டினம் வட்டத்திலுள்ள சிற்றூர்; name of the village in Nagapattinam taluk.

[ஐ+அக்கா+மங்கலம்]

அயிர்ப்பு (பெ.) (n.) திறப்பண்களின் ஒரு வகை. (113 : 119.).;a musical note.

[அயிர்+அயிர்ப்பு]

அரச்சஅலேக்கிய ஏலேலக்கும்மி *aracca alekkiya ēlēlakummy,* (பெ.) (n.) ஒரு வகையான கும்மிப்பாடல்; a kind of *kummi* play.

[ஏலேலம்+கும்மி]

அரத்தை *arattai* (பெ.) (n.) திருமால் சிற்பத்தின் இருப்பு நிலைகளில் ஒன்று. (52 : 34.);one of the posture of Thriumāl.

[அரத்தை>Skt அர்ச்சை]

அரிசிப்பொரி *ariśi-p-pori,* (பெ.)(n.) பொரிந்த அரிசி;parched rice.

[அரிசி+பொரி]

அருஞ்செயல் *aruñceyal,* (பெ.)(n.) அருவினை பார்க்க; see *aruvi̲nai.*

[அரு(ம்)+செயல்]

அருவினை *aruvi̲nai* (பெ.) (n.) ஏதாவது ஒரு துறையில் இதுவரை செய்ய முடிந்ததற்கும் மேலாகச் செய்வது; record, achievement.

'இருவேம் ஆய்ந்த ஏமஞ்சால் அருவினை (குறிஞ்சி)

மறுவ. அருஞ்செயல், சாதனை.

[அரு+வினை]

அரைமண்டி *araimaṇḍi* (பெ.) (n.) தமிழ் ஆடற்கலைக்கு அடிப்படைக் கோட்பாட்டினை வழங்கும் உடலமைவு; fundamental first pose in dance of the Tamils.

[அரை+மண்டி]

அரைஅத்தம் *araiarattam,* பெ. (n.) சிற்பிகள் செதுக்கும் இறைவடிவின் திருக்கரம் ; hand pose of god.

[அரை+அத்தம்]



அரக்கப்பரக்க *arakka-p-parakka,* வி.எ. (adv.) படப்படப்பான வேகத்துடன்; hasty. *'அவன் எந்த வேலைகளையும் கடைசி நேரத்தில் அரக்கப் பரக்கத்தான் செய்வான்'* (வ.சொ.அக.).

[அரக்க+பரக்க]

அரக்கம்பி *araikambi,* பெ. (n.) பலகணியில் குறுக்குச் சட்டத்தில் பொறுத்தப்பட்ட கம்பி; iron rod fixed in window.

[அரம்+கம்பி]



அரக்கிக்கொடு-த்தல் *arakki-k-koḍu-,* செ.கு.வி. (v.i.) சிக்கல்களைப் பெரிது படுத்தாமல் மனம் பொறுத்துப் போதல், சாக்குபோக்கு சொல்லி நாளைக் கடத்துதல்; (இ.வ.). to adjust to the situation.

[அரக்கி+கொடு]

அரக்குக்கூண்டு *arakku-k-kūṇḍu,* பெ. (n.) அரக்கு போன்ற பொருளினால் கட்டப்பெற்ற குளவிக்கூடு; wasp-hive.

[அரக்கு+கூண்டு]

அரகண்டநல்லூர் *arangaṇḍanullūr,* பெ. (n.) அரையணி நல்லூர் பார்க்க; see *arayani nullūr.*

. [அரையணி நல்லூர் → அரகண்ட நல்லூர்]

அரங்கநாதர் சேவைப்பாடல் (பெ.) (n.) அரங்கநாதர் எனும் இறைபற்றிய சேவைப் பாடல்; prayer song of Arunganather.

[அரங்கம்+நாதன்+சேவை+பாடல்]

அரங்கம் *aragam,*(பெ.) (n.) குண்டினை வைக்கும் இடம் சதுர அரங்கு (த.நா.வி.). a square place or stage.

[அரங்கு–அரங்கம்]

அரங்கம் *arangam,* (பெ.) (n.) சேலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk.

[அரங்கு + அம்]

அரசங்கட்டு *arasankattu,* பெ. (n.) பல்லாங் குழியில் கட்டாட்ட வகையில் ஒன்று; an indoor games.

[அரசன் + கட்டு]

அரசம்பூர் *arasambūr,* (பெ.) (n.) சேலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk.

[அரசன்+புரம்]

அரசமரத்திருமணம் *araša-mara-tirumaṇam,* பெ. (n.) குழந்தைஇல்லாதவன் பிள்ளைப் பேறடையும் பொருட்டு அரச மரத்தை நட்டு மகனாக் கருதி வளர்த்துப் பின் அவ்வரசமரத்திற்கு வேப்பமரத்தை மனைவியாக்கிச் செய்யும் திருமணச் சடங்கு (உ.வ.); rites of marriage performed with a pipal tree as bridegroom and margosa as bride the pipal having beenplanted by a sonless person with a view to a begetting a son and havingbeen reared by him as his first son.

[அரசமரம்+திருமணம்]

அரசல் புரசலாக *arašal purasalāga,* - வி.எ. (adv.) அரைகுறையாக (கொ.வ.வ.சொ.8.) defective, imperfect.

[அரைசல்+புரைசல்+ஆக]

அரசாணி *arasāṇi,* (பெ.) (n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[அரசு+காணி]

அரசித்தி *arasidi,*(பெ.)(n.) ஆகமங்கள் இயம்புகின்ற காளி சிற்பத்தின் வேறு வடிவம் (11 : 48.).

[அரன்+சித்தி]

அரசிதழ் *arasidal,* பெ. (n.) (அரசின் அறிவிப்புகள், பணிக்குத் தெரிவு செய்யப் பட்டவர்களின் பெயர்கள் வெளியாகும்) அரசின் அதிகார வரம்புக்குட்பட்டதோர் ஏடு; gazette.

[அரசு+இதழ்]

அரசி மாணிக்கம் *arašimāṇikkam,* பெ. (n.) சிறந்தமாணிக்கம்; best rubi. *“திருப்பட்டிகை நானும் அரசி மாணிக்கமும் படுகண்ணும் கள்ளிப்பூவும்”* (SII. ii. 93.).

[அரசி+மாணிக்ககம்]

அரசிலை *arasilai,* (பெ.) (n.) விழாக் காலங்களில் இசைக்கப்படும் ஒரு சலங்கைக் கருவி; a musical instrument.

[அரசு+இதழ்]



அரசிறாமணி *arasirāmaṇi,* (பெ.) (n.) திருச்செங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruchengode Taluk.

[ஒருகா. அரசு+இறை+மானியம்]

அரசு *arasu,* பெ. (n.) பல்லாங்குழியில் ஒரு குழியின் பெயர் (கு.வ.); a dip in the board of pallan kuḷi.

[அரசன்–அரசு]

அரசு ஊழியர் *arasu ūliyar,* பெ. (n.) மாநில, நடுவண் அரசு அலுவலகங்களில் பணிபுரிபவர்; government servant, either state government or central government.

[அரசு+ஊழியர்]

அரசுசுற்று–தல் *arasusurru-,* செ.கு.வி. (v.i.) புதுமணமக்கள் திருக்கோயில்களில் உள்ள அரசும் வேம்பும் சேர்ந்து இருக்கும் மரத்தைச் சுற்றிவரும் சடங்கு; (இ.வ.);a ceremony of

coming round arasuvembu trees in the marriage.

[அரசு+சுற்று]

அரசு சுற்றியப் பிறகே கணவன் மனைவி உறவு உறுதியாகும்.

அரசுடைமையாக்கு-தல் *araśudaimai-y-ākku-,* செ.கு.வி. (v.t.) தனியொருவரால் அல்லது தனியாரால் தொடங்கப்பட்ட ஒரு தொழிலை அல்லது நிறுவனத்தை அரசு தன் உரிமையாக்குதல்; nationalisation.

[அரசு+உடைமை+ஆக்கு]

அரசுவயல் *arasuvayal,* (பெ.) (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ளலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[அரசு+வயல்]

அரசூர் *arasūr,* பெ. (n.)செய்யாறு வந்தவாசி சாலையில் உள்ள ஓர் ஊர். name of the village way on *seyāruvandavaāsi*road.

[அரசு+ஊர்]

அரசூர் என்பது அரைசூர் எனவும் வழங்கப்பட்டது.

அரசைமுரசம் *arasaimurasam,* (பெ.) (n.) மயிர்க்கண் முரசின் மற்றொரு பெயர்;a name of a royal drum.

[அரசு+முரசம்]

அரட்டாம் பெரட்டு *arattāmperattu,* பெ. (n.) போதுமானதாக இல்லாதது, உறுதியில்லாதது; (இ.வ.); insufficiency.

[அரை-அரட்டு+ஆர்-(புரை)புரட்டு]

அரண்மனைச் சிறுவயல் *aranmanai c-ciru vayal,* பெ. (n.) சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி சிவகங்கைப் பாதையில் அமைந்துள்ள ஊர். name of the village in sivagangai.

[அரண்மனை+சிறுவயல்]

அரண்மனைக்காப்பு (பெ.) (n.) கோடியம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டு பிற தெய்வங்களுக்குக் கட்டப்படும் காப்பு;a ritual observed in temple festival.

[அரண்மனை+காப்பு]

அரணைப்புத்தி *aranai-p-putti,* பெ. (n.) நினைவுக் குறைவு; failure in memory.

[அரணை+புத்தி]

அரதைப்பெரும்பாழி *aradai-p-perumpāli,* பெ. (n.) அரித்துவார மங்கலம் என்று அழைக்கப் படும் கடலூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். name of the village in cuddalore.

[ஒருகா.அருகதன்+பெரும்+பாழி]

அரப்பு *arappu,* (பெ.) (n.) தலைக்குத் தேய்த்துக் குளிக்கப் பயன்படும் துரிஞ்சில் மர இலைப் பொடி. (கொ.வ.வ.சொ.8.).powder of Turinjil tree leaves used while taking oil bath.

[அரைப்பு+அரப்பு]

அரம்புலி *arampuli,* பெ. (n.) பெண் குழந்தை களின் குறியை மூடியிருக்குமாறு அரைநாண் கொடியில் கோத்துக் கட்டப்படும் அரசிலை வடிவிலான வெள்ளி அல்லது பொன்னணி கலன்; pipal leaf shaped metal piece to hide nudity worn on the waist of femal children.

[அரசு+இலை+பொலி]

அரப்பேடு *arappēdu,* (பெ.) (n.) 1. மதுராந்தகம் வட்டத்திலுள்ளசிற்றூர். a village in Madu rantakam Taluk. 2.தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். a village name in T*anjāvūr.*

[அரப்பு+பேடு]

அரம் *aram,* பெ. (n.) தேர்ந்த மரப்பகுதியை நயப்படுத்த உதவும் குத்து முனைகளை உடைய பட்டையான இருப்புக் கருவி. (நெ.தொ.க. 53.).; file of a carpenter.

[அருவு-அராவு-அரம்]



அரல் *aral* பெ. (n.) நாக்கு போன்ற வடிவில் உள்ள கடல் வாழ் உயிரி; a tongue shaped marine fish variety.

[அரு–அரல்]



இதில் கொத்து கொத்தாக இருப்பதை அரல் என்பர். அருவருப்பான தோற்றமுடையது நாய் அரல். பெரியது பேய் அரல்.

அரவக்கடில் (பெ.) (n.) சிற்பங்களை அணி செய்யும் ஓர் அணிகலன்; ornament figuration in sculpture.

[அரவம்+கடில்]

அரவாட்டம் *aravāṭṭam,* பெ. (n.) பாம்பு ஊர்வது போன்று தொடர்ந்து எழும் மெல்லிய ஒலி; a mild sound compared with snake's movement. (வ.சொ.அக.).

[அரவம்+ஆட்டம்]

அரளக்கல் *araḷak-kal,* பெ. (n.) கருங்கற் பாறையில் உடைத்தெடுக்கப் பெற்று, வீட்டுச் சுவர் வைப்பதற்கேற்ற கல்;boulder piece used in contructing wall.

[அரள்+கல்]

அரளவாடி *araḷāvaḍi,* (பெ.) (n.) திருக்கோயிலூர் தாலூக்காவிலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[அரளை+வாடி]

அரளி *araḷi,* (பெ.) (n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[அரளி(செடி)–அரளி]

அரற்று *aṟṟu* பெ. (n.) ஒரு வகையான திறப் பண்; a musical note.

[அராறு–அரற்று]

அரனேரி *aranēri,* (பெ.) (n.) திருப்பெரும்புதூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sriperumpudur Taluk.

[அரன்+ஏரி]

அராகம் (பெ.) (n.) முல்லை நிலத்தின் திறப்பண் (13 : 119.). a musical note.

[அராவு–அராகம்]

அராளம் (பெ.) (n.) ஒருவகையான ஒற்றை முத்திரை நிலை. ;a dancing pose.

[அரள்+அராளம்]

அரி பெ. (n.) நெற்கதிரை அறுவடை செய்தல் (வ.வ.வே.க.110). harvesting the paddy field.

[அரிதல்–அரி]

அரிஓம் *ariōm,* பெ. (n.) முதன் முதலாக ஒன்றைத் தொடக்குதல்; to start as a first venture. *'முதன்முதலாக அரிஓம் என்று இப்பொழுதுதான் வீடுகட்ட ஆரம்பித் திருக்கிறார்; இந்த நேரத்தில் மகள் செலவு வந்து விட்டது'* (இ.வ.).

[அரி (அரிச்சுவடி) + ஓம்]

அரிக்கன்சட்டி *ari-k-kāṇcaṭṭi* பெ. (n.) அரிசி களைவதற்குப் பயன்படும் உலோகம் மற்றும் மண்ணாலான சட்டி; அரிக்கண்சட்டி பார்க்க; see *arikkaṇcaṭṭi*

[அரி+கண்–அரிக்கண்–அரிக்கன் (கொவ)]



அரிக்குஞ்சு (பெ.) (n.) மிகச் சிறிய மீன் குஞ்சு; tiny fish.

[அரி+குஞ்சு]

அரிக்குரல் தட்டைப்பறை (பெ.) (n.) ஒரு வகையான பறை ; a drum which produces shrill sound.

[அரி+குரல்]

அரிக்குருவி *ari-k-kuruvi,* பெ. (n.) வயல்களில் விளைந்திருக்கும் நெல்மணிகளைக் கூட்டம் கூட்டமாக வந்து தின்னும் சிட்டுக் குருவி வகை; (இ.வ.).; a kind of sparrow group.

[அரி+குருவி]



அரிக்கூடுஇன்னியம்; *arikkūduinniyam,* (பெ.) (n.) மிக நுண்ணிய ஓசைகளை எழுப்பும் பறை வகை; a drum producing minute musical sound. (35 : 60.).

[அரிக்குரல்(கூடும்) கூடு+இன்னியம்]

அரிக்கொடா *ari-k-kedā,* பெ. (n.) அறுத்து வரிசையாகப் போட்டிருக்கும் அரிகிடைகளிலும் அறுவடைக்கு விளைந்து சாய்ந்து கிடக்கும் பயிர்களிலும் வந்து உட்கார்ந்து நெல் மணிகளைக் கொறித்து வேகமாக நடந்து ஓடக் கூடிய பறவை வகை; (இ.வ.). a bird.

[அரி+கடா–அரிக்கெடா (கொ.வ.)]

அரிக்கிடையாக *arikidaiyāga,* பெ. (n.) ஒட்டுமொத்தமாக;all in one group. *"வீட்டில் ஒரு வயது பிள்ளையைத் தனியே விட்டு விட்டு எல்லாரும் அரிகிடையாக கூத்துப் பார்க்கப் போய்விட்டால் என்ன பொருள்?"*

[அரி+கிடை+ஆக]

அரிகரண்டி (பெ.) (n.) வாணலியில் வறுத்ததை சுடு எண்ணெயிலிருந்து எடுக்க உதவும் கரண்டி; ladle made of metal.

[அரி+கரண்டி]



அரிகிலவாடி *arikilavādi,* (பெ.) (n.) அரக்கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arkkonam Taluk.

ஒருகா. [அரி+குளம்+வாடி]

அரிகிடை *arrikidai* (பெ.) (n.) நெல் வயலில் அறுவடைத் தாளைக் கட்டாமல் குவியலாகப் போட்டுவைக்கும்கிடப்பு. (கொ.வ.வ.சொ.9.). heap of harvested paddy stalk.

[அரி+கிடை]

அரிச்சந்திரன்முடக்கு *ariccandiranmudakku,* பெ. (n.) அரிச்சந்திரனாகிய வெட்டி யானுக்குச் சேரவேண்டிய கால் பணத்தைச் செலுத்தும் சுடுகாட்டின் நுழைவாயில்; entrance area to burial ground. *"அரிச்சந்திரன் முடக்கில் பிணம் வந்ததும் அதுவரை வீட்டை நோக்கி வந்த பிணத்தின் முகத்தைச் சுடுகாட்டை நோக்கி இருக்குமாறு பாடையை மாற்றி எடுத்துச் செல்வர்."*

மறுவ நடுக்கட்டு.

[அரிசசந்திரன்+முடக்கு]

அரிசிக்கருக்காய் *araccikkarukkāi,* பெ. (n.) முதிராத நெல் நடுக்கட்டு எனப்படுந் தமிழ் மரபு;unripped paddy.

[அரிசி+கருக்காய்]

அரிசிக்காளான் *arisi-k-kālān,* பெ. (n.) பட்டமரங்கள், புற்றுகளில் காணப்படும் மிகச்

சிறுவகைக் காளான்; small size mushroom.

[அரிசி+காளான்]

அரிசிக்குழை *ariśikkuḷai,* பெ. (n.) நெற்பயிரில் கிளைத்து வளரும் ஒருவகைக் களை; a kind of weed in rice field. (வ.சொ.அக.).

[அரிசி+குழை]

அரிசிப்பூடு *ariccipūdū,* (பெ.) (n.) சிறு இலைகளை உடைய ஒருவகைப் பூண்டு; a plant of small leaves.

[அரிசி+பூடு]

அரிசில்கிழார் *arisilkiḷār,* (பெ.) (n.) சோழ நாட்டில் அரிசில் என்னும் ஊரில் வாழ்ந்த சங்கப் புலவர்; a sangam poet of arisil village in chola country.

[அரிசில்+கிழார்]

அரிசிற்கரைப்புத்தூர் *arisiṟkaraiputtūr,* பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். name of the village in *Tanjavūr.*

[அரிசில்+கரை+புத்தூர்]

அரிதப்போதிகை *arida-p-pōdigai,* (பெ.) (n.) யானையின் பின்னங்கால் தொடரி; the hind leg chain of elephant.

[அரிதம்+போதிகை]



அரிப்பாள் *arippāḷ,* பெ. (n.) அரிசியிலிருந்து கல்லை நீக்கும் பெண்;woman who sifts rice with seive. "*அரிசி அரிப்பாளுக்கும் உத்தமாக்கிரம் உண்ண*" (SII. viii. 679.).

[அரி+அரிப்பாள்]

அரிப்பான் *arippān,* பெ. (n.) சலிப்பான்; sieve.

[அரி–அரிப்பான்]

அரிமளம் *arimaḷam,* பெ. (n.) புதுக்கோட்டையிலிருந்து 18 அயிரமாத்திரி (கி.மீ.) தொலைவிலுள்ள ஓர் ஊர். name of a village18 k.m. from pudukkottai.

[ஒருகா. அரி+வளம்]

அரிமாகர்ணஅத்தம் *arimākarna attam* பெ. (n.) சிற்ப வல்லுநர் வடிவமைக்கும் திருக்கரம்; hand pose chiseled by the sculptor.

[அரிமா+கர்ணம்+வளம்]

அரியறாவி *ariyaṟāvi,* (பெ.) (n.) விருத்தாசலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Virddhachalam Taluk.

[ஒருகா.அரியல்+(தாவு)தாவி]

அரியக்குடி *ariyakkuḍi,* பெ. (n.) புதுக்கோட்டை மாவட்டத்தில் காரைக்குடிக்கு அருகில் உள்ள ஓர் ஊர். name of a village from pudukottai.

[அரியல்+குடி]

அரியநாயகபுரம் *ariyanāyagapuram,* பெ. (n.) நெல்லை நகருக்குத் தென் மேற்கே பத்து கல் (மைல்) தூரத்தில் உள்ள ஊர்; name of the town situated in south west in *Tirunalvēli.*

[அரியநாதமுதலியார் – அரிய நாயகம் + புரம்]

நாயக்கர்கள் மதுரையில் அரசு புரிந்த போது பெருந்துணை புரிந்தவர் அரியநாத முதலியார் என்பர்.

அரியலூர் *ariylūr,* பெ. (n.) அரியாற்றூர்; பார்க்கக; see *ariyāṟṟūr.*

[அரியாற்றூர்→அரியலூர்]

அரியாற்றூர் *ariyāṟṟūr,* பெ. (n.) மன்னார்குடி வட்டத்தில் அமைந்துள்ள ஊர்.name of the village in mannarkudi.

[அரியாறு+ஊர்–அரியாற்றூர்]

அரியூர் *ariyūr,* பெ. (n.) வேலூர் மாவட்டம் வேலூர்க்கு அருகில் உள்ள ஓர் ஊர்; name of the village in *vellore.*

[அரி+ஊர்]

கற்கால மக்கள் அதிகமாக வாழ்ந்ததன் சான்றுகளாகப் பல சின்னங்கள் இங்குள்ள காடுகளில் கிடைத்துள்ளன.

அரிவடைபோடு-தல் *arivadaipōdu-*, செ.கு.வி. (v.i.) களிமண்ணைக் குழைத்துப் பச்சைச் செங்கற்களாக அறுத்துக் காயவைத்தல்; raw wet brick laid to dry in the sun.

[அரிவடை+போடு]

அரிவரிப்பு (பெ.) (n.) அருவருப்பு; disgust.

[அருவருப்பு–அரிவரிப்பு.(கொ.வ.)]

அரிவித்தி *arivitti*, பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādānai Taluk.

[அரிவித்தி]

அரிவெட்டி *arivetti*, பெ. (n.) அதிகமாக உண்பவன்; one who eats more and more. 'சரியான அரிவெட்டியா இருக்கானே உன்மகன்?'

[அரி(அரிசி–சோறு)+ வெட்டி]

அரிவேதனை *arivēdanai*, பெ. (n.) பசபசவென அரிப்பெடுத்துத் துன்பம் தரும் ஒருவகைச் சொறிசிரங்கு; scabies. (வ.சொ.அக.).

[அரி+வேதனை]

அரிச்சுஎடுத்தல் *ariccueduttal*, (பெ.) (n.) துருவித் துருவிக் கேட்டல்; to enquire deeply.

[அரித்து(அரிச்சு)+எடுத்தல்]

அரிகாவூர் *arikāvūr*, பெ. (n.) செய்யாறு ஆரணி சாலையில் உள்ள ஓர் ஊர். name of the village in *Cey-yaru* way to *arani salai*

[அரி+கா+ஊர்]

அருகியல்பண் *arugialpan*, (பெ.) (n.) பண் வகையினுள் நாற்பெரும்பண் வகை;a class of primary melody type.

[அருகியல்+பண்]

அருகிளுப்பு *arukiluppu*, பெ. (n.)1. கூச்சம்; shyness. 2.மனவருத்தம், துன்பம்; distress. *'அவன் முகத்தில் விழிக்க எனக்கு அருகிளுப்பா இருக்கு'.* (இ.வ.).

[அருகல்–அருகலிப்பு–அருகிளுப்பு (கொ.வ.)]

அருகேரி *arugēri*, (பெ.) (n.) விருத்தாசலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Virddhachalam Taluk.

[அருகு+ஏரி]

அருகோடை *arukōdai*, பெ. (n.) இராமநாதபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ramanathapuram Taluk.

[அருகு+ஓடை]

அருங்குருக்கை *arungurukkai*; (பெ.) (n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[அரும்+குருக்கை]

அருங்குணம் *arunkunam*, (பெ.) (n.) வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in wandiwash Taluk.

[அரும் + (குளம்) குணம்]

அருணோன்மாலை (பெ.) (n.) சிற்ப வடிவிலான கடிபந்தனத்தில் இருந்து தொங்கும் அணிகலன்; a jewellary design seen in sculpture.

[அருணன்+மாலை]

அருந்தொலைவு *aruntolaivu*, பெ. (n.) கிணற்றின் அதிகப்படியான ஆழம்; the maximum depth in a well. *'அருந் தொலைவில் கிடக்கும் தண்ணீரை இறைப்பதனால் வேகமாகப் போய் பாயமாட்டேன்குது'.* (இ.வ.).

[அரும்+தொலைவு]

அருந்தோடு *aruntōdu*, (பெ.) (n.) வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in wandiwash Taluk.

[அரும்+தோடு (ஓடை)]

அரும்பொட்டி *arumbotti*, (பெ.) (n.) சிற்பங் களின் கழுத்தணி வகையினுள் ஒன்று (5:76.); a design in jewellary.



[அரும்பு+ஒட்டி]

அருமந்தை *arumantai*, பெ. (n.)காஞ்சி மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். name of the village in *Kanji*.

[அருவன்+அந்தை]

அருமன் *aruman*, (பெ.) (n.) 1.அருமை (அன்பு)க்கு உரியவன்; beloved person. 2.அழகன்; smart person. 3.சிறந்தவன்; gentleman, man of excellance. 4. மேலோன்; a person of high position.

தெ.அரிமி (அன்பு). க.அருமை (அன்பு).ம.அருவ. (அழகு, பெண்) பிராகு.அர்வத் (மனைவி)

[அருமை+அன்–அருமையன்–அருமன்]

அருமாத்து *arumāttu*, பெ. (n.) 1. ஒப்புக்கு அமைவது; eye wash. *'அருமாத்துக்குப் பிள்ளையைப் பெற்றுவிட்டு இப்படியா தெருவில் அலைய விடுவது?'* (இவ.).2. கடமை; duty. 3. அரிப்பு; irritation.

[அரு+மாத்து]

அருமுழிதேவன் *arumuḻidēvan*, பெ. (n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[அருண்மொழி+தேவன்]

அருமுளை *arumuḷai*, (பெ.) (n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[அரு+முளை]

அருமைக்காரர்[1] *arumai-k-kārar* (பெ.) (n.) கொங்கு வேளாளர் இனத்தில் திருமணத்தை நடத்துபவர்; Tamil priest authorised to conduct marriage ceremonies for kongu vellālars.

[அருமை+காரர்]

அருமைக்காரி[2] *arumaikkāri*,(பெ.)(n.) கொங்கு வேளாளர் திருமணத்தில் பெண்ணுக்குரிய சடங்குகளைச் செய்யும் பெண்; Tamil priestess authorised to conduct marriage ceremonies for kongu vellalars.

[அருமை+காரி]

அருமைப்பெரியவர் *arumaiperiavar*, (பெ.) (n.) அருமைக்காரரைச் சுட்டும் வேறு பெயர்; a name of *arumai-k-kārar*.

[அருமை+பெரியவர்]

அருவம் *aruvam*, (பெ.) (n.) பெரிய பானை; large water pot.

[அரு–அருவம்]

அருவெட்டிப்படி *aruveṭṭip-paḍi*, பெ.(n.) மரத்தாலான படி; a measure made of wood.

ஒருகா.[அரி+அட்டு+படி]

அருவு *aṟuvu*, பெ. (n.) **அறுகங்கட்டை** பார்க்க; see *aṟukaṅkaṭṭai*.

[அருகு–அருவு]

அருவோவியங்கள் *aruvōviyangaḷ*, (n.) ஒரு நாட்டுப்புறக் கைவினைக் கலை; an handicraft.

[அரு+ஓவியங்கள்]

அருள் கேட்டு *aruḷkēṭṭu*, பெ. (n.) வேலூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். name of the village in *vellore*.

[அருள்+கேட்டு]

அருள்மொழிதேவச் சதுர்வேதிமங்கலம் *aruḷ moḻi dēva-c-cadurvēdi mangalam*, பெ. (n.) மன்னார்குடி வட்டத்தில் உள்ள ஓர் ஊர். name of the village in *mannarkudi*.

[அருள்மொழி+தேவன்+சதுர்வேதி+மங்கலம்]

அருளவாடி *aruḷavāḍi*, (பெ.) (n.) கோபி செட்டிபாளையம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a

village in Gopichetti Palayam Taluk.

[அருளன்+வாடி]

அருக்குளா *arukkuḷā,* பெ. (n.) நெய்மீன்; a kind of fish that smells as ghee.

[அரு+(குளவு)குளா]

அருகெடுப்பு *arukeḍuppu,* பெ. (n.) குடியான வனின் நிலவருமானத்தில் கணிச மாகச் செலவு ஏற்படுத்தும் கூறு; remarkable portion of the expenditure of farmer crop.

[அருகு+எடுப்பு]

அருவுதல் *aruvu-,* செ.கு.வி. (v.i.) தீர்ந்து போதல்; to become empty. *'அருவாகிப்போச்சு'*

[அரு-அருவு]

அரூர் *arur,* பெ. (n.) தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்.name of the village in *Dharumapuri.*

[ஒருகா. ஆர்(ஆத்தி)+ஊர்]

அரைக்கல் *araikkal,* பெ.(n.) கோலி விளை யாட்டில் அடித்த குண்டு கோட்டில் போய்ச் சிக்கி நின்று விடுதல்; striker ball got stopped in the marker line.

[அரை-கல்]

அரைக்களை[1] *araikkaḷai,* பெ. (n.) களை வகை யினுள் ஒன்று; a weed.

[அரை+களை]

அரைக்களை[2] *araikkaḷai,* பெ. (n.) ஒரெண்ணளணிக்கைக்குள் இரண்டு குறில்கள் அடைந்து ஒலிக்கும் நேரம்; pronouncing double short vowels at a time.

[அரை-களை]

அரைக்கொட்டு *araik-k-koṭṭu,* பெ. (n.) பாதியாகத் தேய்ந்த மண்வெட்டி; a blunt showel.

[அரை+கொட்டு]

அரைசீர் *araicīr,* பெ. (n.) **அஞ்சுமாசச் சீர்** பார்க்க; (இ.வ.) gift given on the fifth month of pregnancy.

[அரை+சீர்]

அரைசீலைசாமான்கள் *araicelaicāmāṉgaḷ,* (பெ.) (n.) சடங்குகளில் பயன்படுத்தப்படும் சமையற்பொருள்கள்; provisions for cooking used for rituals.

[அரைசல்-அரைசிலை+சாமான்கள்]

அரைசூருடையான் *araisūruḍaiyāṉ,* பெ. (n.) முதலாம் குலோத்துங்கன் ஆட்சியின் போது (1081) பாரசூர் நாட்டு இருங்கலையில் வாழ்ந்தவன்; a person lived during the reign of the chola king Kulottungan - I.

[அரைசு(அரசு)+ஊர்+உடையாள்]

அரைத்துரிதம் பெ.(n.)தாளக்குறியீடு வகைகளுள் ஒன்று;a time measure in music.

[அரை+துரிதம்]

அரைமனசும்தலைவலியுமாக *araimaṉasum talaivaliyumāga,* பெ.எ. (adj) முழு மன நிறைவுடன் இல்லாமல்; (இ.வ.). un satisfactarily.

[அரை+மனது+சும்+தலைவலி+உம்+ஆக (மரபுத் தொடர்)*]*

அரைமனை *araimaṉai,* பெ. (n.) அரண்மனை; palace. *"அரைமனையில் கணக்கிலும் எழுதுவித்த விட்ட அளவுக்கு"* (SII. xxii. 194.).

[அரண்மனை-அரைமனை(கொ.வ.)]

அரையணி *araiyaṇi,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādanāi Taluk.

[அரை-அணி]

அரையர்சேவை *araiyarsēvai,* (பெ.) (n.) அரையர் இனத்தினர் வைணவக் கோயில் களில் நிகழ்த்தும் இசைச் சார்புக் கலை; chanting of holy devotional hymns by the vaishnava priests.

[அரையர்+சேவை]

அல்பத்துவசுரம் *alpatuacuram,* பெ. (n.) ஓர் இராகத்தைப் பாடும் போது மிகக் குறைவாக ஒலிக்கப்பெறும் சுரம் ;a melody type in a low voice.

[அல்கு-(அல்பம்)-அல்பத்துவம்+சுரம்]

அல்லாடு-தல் *alādu-,* (செ.கு.வி.) (v.i.) தொல்லைப்படுதல், துன்பப்படுதல்; to suffer.

[அல்லல்+ஆடு]

அல்லாண்டை *allāṇḍai,* பெ. (n.) இவன் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்திய கோபாலராயன் என்பவரின் மகன்; a courtlord who lived during the period of *maravarman sundara pandian.*

[அல்+ஆண்டை]

ஆக்களையும், எருதுகளையும் பெற்றுக் கொண்டு பாலும், நெய்யும் திருவோத்தூர் கோயிலுக்கு வழங்க உடன் பட்ட இடையர் குலத்தவன்.

அல்லி அரசாணிபானை *alli ārašāṇipāṇai,* பெ. (n.) திருமண நிகழ்ச்சியில் வைக்கும் மண்பானை; decorated pottery set at the marriage dias; அரசாணிப்பானைப் பார்க்க see *arasani-p-panai.*

[அல்லி+அரசாணி+பானை]



அல்லிக்குழி *allikuzhi,* (பெ.) (n.) திருவள்ளூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvallur Taluk.

[அல்லி+குழி]

அல்லிக்கோல் *allik-kol,* பெ. (n.) பாவையின் குச்சியில் கயிறு கட்டிச் சரி செய்தல்; tie rope and adjust the hair of a woman.

அல்லு-தல் *allu-,* செய்குன்றாவி. (v.t.) கலப்பையை நுகத்தடியின் நடுவில் இணைத்துக் கட்டுதல் (வ.வ.வே.க.11). to fasten, plough to the yoke.

[அல்+அல்லு]

அல்லுக்கயிறு *alli-k-kayuru,* பெ. (n.) அல்லுப் போட்டு கட்டும் கயிறு. (ம.வ.தொ. 68.) to tie up with rope.

[அல்லு+கயிறு]

அல்லுபிடித்தல் *allupiḍital,* பெ. (n.) பாவையியனைக் கஞ்சி போட்டு காய வைத்தல்; an operation of making dry in handloom.

[அல்லு+பிடித்தல்]

அல்லேரி *allēri,* (பெ.) (n.) வேலூர் வட்டடத்திலுள்ள சிற்றூர்; a village in vellore Taluk.

[அல்லு+ஏரி]

அலக்கு *alakku,* (பெ.) (n.) நுனியில் வளைந்த கத்தி பொருத்தப்பட்ட மூங்கிற்கழி; a bamboo pole fixed with a bent knife.(மீனவ.).

[அல-அலக்கு]



அலகு[1] *alagui,* பெ. (n.) பொதுவாக நான்கு எண்ணிக்கைகளைக் குறிக்கும். ஒரு வகை தாளக் குறியீடு; a time measure.

[அல்-அலகு]

அலகு[2] *alagu,* பெ. (n.) நடப்படும் நெற் பயிர்களின் வரிசை; row of paddy plant. *"நடவு வெலாத்தியா தெரியுது; இன்னும் ஒரு அலகா நெருக்கிப் போடுங்க"* (இ.வ.).

[அல்-அலகு]

அலகுக்கருது *alagukkarudu*, (பெ.) (n.) அலகுகதிர்; decorative ear of corn.

[அலகு+கதிர்]



கொங்கு நாட்டில் அறுவடை முடியும் தறுவாயில் நெற்கதிர்களை கட்டி வீடு, கோயில்களில் தொங்கவிடுவர். (கொ.வ.வ.சொ.10.).

[அலகு+கதிர்]

அலகுகாவடி *alagukāvadi*, பெ. (n.) சற்றே கரடுமுரடாக நடந்தால் குத்திவிடும்படியான அலகுகளின்வரிசையணியாகச் செய்யப்பெற்ற காவடி; a ritual in temple festival.

[அலகு+காவடி]



அலங்கமலங்கஅடி-த்தல் *alngamalangadi-*, செ.கு.வி. (v.i.) அரண்டு அஞ்சி ஓடும் படியாக அலங்கோலப்படுத்தி விரட்டுதல்; chasing rudely so as to flee bewilderly.

[அலங்க+மலங்க+அடி]

அலங்காரதாசிகள் *alangāradāsigal*, (பெ.) (n.) திருவிழா நிகழ்ச்சிகளில் பரதம் ஆடும் தேவரடியார்; dancing women on festival occasions.

[அலங்காரம்+தாசி+கள்]

அலங்கியம் *alangiam*, (பெ.) (n.) தாராபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Dharapuram Taluk.

[அலங்கு-அலங்கியம்]

அலங்கிரி *alangiri*, (பெ.) (n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[அலங்கு+கிரி]

அலங்கு *alaṅgu*, பெ. (n.) எறும்பு தின்னி; ant eater.

மறுவ. நலுங்கு.

[அல்-அல-அலங்கு]



அலம் *alam*, பெ. (n.) ஏர்; plough.

[உலம்→உலம்: வளைவு. வளைந்த கொடுக்கு, கொடுக்குள்ள தேள்போன்ற வடிவுள்ள ஏர்; கலப்பை. த. அலம் →Skt. hala.



அலண்ட ஈரம் *alanda-iram*, பெ. (n.) நிலத்தில் ஈரம் வறண்ட தன்மை; dry land. "*அலண்ட ஈரத்தில் விதைத்த எள்ளு முளைக்கவில்லை.*"

[அல–அலண்ட+ஈரம்]

அலண்டுபோடு–தல் *alandupōdu-*, செ.கு.வி. (v.i.) 1. அஞ்சிப் பதறுதல்;to get bewildered. "*பிள்ளை இருட்டில் எதையோ பார்த்து அலண்டு போயிருக்கிறான்*" 2. ஈரம் வறண்டு போதல்; to get dried. "*கொல்லையில் ஈரம் அலண்டு போய் விட்டது*".

[அல–அலண்டு+போ]

அலபத்திரம் *alapattiram*,(பெ.) (n.) ஒற்றை முத்திரை நிலையில் ஒன்று; single hand pose in dance.

[அலம்+பத்திரம்]

அலம்பு–தல் *alambu-*, செ.கு.வி. (v.i.) கால்நடைகள் மேய்த்தல்; grazing. "*கரம்புல மாடுகளை அலம்படிச்சி ஓட்டிவா*" (இ.வ.).

[அல–அலம்பு]

அலம்பு பனை *alambu-panai*, (பெ.) (n.) ஆண் பனை; male palmyra.

[அலம்பு+பனை]

அலர்மொழிப்பாடல்கள் *alarmoli-p-pādalgal*, (பெ.) (n.) நாட்டுப்புறக் காதைப் பாடல்களின் ஒரு பிரிவு; a reaction of folk songs.

[அலர்+மொழி+பாடல்கள்]

அலர *alara*, பெ. (n.) கொஞ்சம் கூட ஈரமில்லாமல் காயப்போடுதல்; to make dry in the sun. '*விதைநெல்லை அலரக் காயப்போட வேண்டும்*' (வ.சொ.அக.).

[அலர்–அலர]

அலவரை *alavarai*, பெ. (n.) பனங்கதிர்; flower of palmira. (வ.சொ.அக.).

[அல–அலவரை]

அலவலாதி *alavalādi*, (பெ.) (n.) வம்பு மொழி; idle talk, gossip.

மறுவ. *வம்புப்பேச்சு, வீண்பேச்சு.*

[அலவல்+ஆதி]

அலவாட்டு *alavāttu-*,பெ.(n.) தொடர்ச்சியாகச் செய்யப்படும் விரும்பத்தகாத செயல்; (இ.வ.); continuation of undesired activities.

[அலவு+ஆட்டு]

அலவுசட்டி (பெ.) (n.) தப்பாட்டத்தில் பயன் படுத்தப்படும் ஓர் இசைக்கருவி; a musical instrument.

[அல–அலவு+சட்டி]

அலறிப்போகு–தல் *alarippōgu-*, செ.கு.வி. (v.i.) நில அதிர்வினால் அல்லது வெடி அதிர்வினால் சுவர், மரம் போன்றவற்றில் விரிசல் விடுதல் (இ.வ.); to get split wall, tree etc. due to earthquake or explosive sound.

[அலறி+போதல்]

அலாக்குத்தா *alākkuttā*, வி.எ. (adv.) தொய்வில்லாமல் ஒரே முயற்சியில் முடித்தல்; to complete the work at a stretch. "*அப்படியே அவனை அலாக்குத்தா பிடித்துத் தூக்கி வெளியே போட்டான் வீரன்*" (இ.வ.).

[அலக்கு+குத்து+ஆக]

அலாதகம் *alātagam*, (பெ.) (n.) தெருக்கூத்தில் கட்டைக் கட்டியாடும் பாத்திரங்கள் பின்பற்றும் அடி வரிசை (14 : 272.); stepping styles in street drama.

[அலை–அலாதகம்]

அலார் *alār,* (பெ.) (n.) வீண்பழி, புரளி; slander.

[அலர் – அலார்]

அலிக்கி பெ. *alikki,* (n.) மேளத்திற்குப் பயன்படும் பானை. (ம.வ.தொ. 69.); pot used for musical purposes.

[அலக்கு–அலிக்கி]

அலுக்கம் *alukkam,* பெ. (n.) மெல்லிய நடமாட்டம்; சந்தடி. (வ.சொ.அக.); a low sounds of slow movement.

[அலுக்கு–அலுக்கம்]

அலுக்கி *alukki* (பெ.) (n.) உருட்டும் போது உரசிச் செல்லும் குண்டு; a rolling ball.

[அலுக்கு–அலுக்கி]

அலுக்குளி *alukkuḷi,* (பெ.) (n.) கோபி செட்டிபாளையம் வட்டத்திலுள்ள சிற்றூர்;a village in Gobichettipalayam Taluk.

[ஒருகா.அல்லி+குழி]

அலுப்பஞ்சுளுப்பாமா *aluppṇculuppamā,* பெ.எ. (adj.) மிகவும் இழிவாகவும் ஏளனமாகவும்; derisively. *"உன்னிடம் கூலி வேலைக்கு வந்து விட்டதால் அலுப்பஞ் சுளுப்பமா எடை போடாதே; எங்க உடம்பிலேயும் இரத்தந்தான் ஓடுது"* (இ.வ.).

[அலுப்பம்+ சுளுப்பம்+ஆக]

அலுவலகஉதவியாளர் *aluvalaga udaviyāḷar,* பெ. (n.) அலுவலகத்துக்கு உதவியாக இருப்பவர்; office assistant.

[அலுவலகம்+உதவியாளர்]

அலுவலகப்பணி *aluvalaga-p-paṇ,* பெ.(n.) ஓர் அலுவலகத் தொடர்பாக அலுவலகத்தை விட்டு வெளியே ஆற்றும் பணி; official duty.

[அலுவலகம்+பணி.]

அலுவலகம் *aluvalagam,* பெ. (n.) பணி அல்லது தொழில் செய்யும் இடம்; a place of work, office.

[அலுவல்+அகம்.]

அறிவின்மை *arivinmai,* பெ. (n.) மடமை; ignorance.

[அறிவு+இன்மை.]

அலுப்பு *aluppu,* (பெ.) (n.) சலிப்பு, சோம்பல்; dullness, laziness.

[அல்+அலுப்பு]

அலுவலர் *aluvalar,* பெ. (n.) 1.உழைப்பில் அல்லது வேலையில் ஈடுபட்டவர். a worker, 2. அதிகாரி, officer.

[அலுவல்+அர்]

அலை *alai,* பெ. (n.) பல்லாங்குழியில் சிறப்பு வெற்றியைக் குறிக்கும் சொல். (செ.வ.) ;a word denoting win in dice.

[அல்+அலை]

அலைகாற்று *alaikārru,* பெ. (n.) இடைவெளி விட்டு வேகமாகக் கடல் அலையைப் போன்று சீறிச்சீறி வீசுங்காற்று; a wind surge.

[அலை+காற்று]

அலைகொம்பு *alaikombu,* பெ. (n.) குற்றமுடையதெனக் கூறப்படும் மாட்டுக் கொம்பில் ஒருவகை;a defective type horn of a cow.

[அர்–அலை+கொம்பு]

அலைவாரி *alaivāri,* பெ. (n.) ஏரி மற்றும் அணைப் பகுதியின் அடியில் அலையின் காரணமாக மண்ணரிக்காமல் இருக்கக் கருங்கல் அல்லது செங்கல் கொண்டு வாட்டச் சாய்விற்குக் கட்டப்படும் சுவர்; (இ.வ.);a supporting wall erected to stop erosion in a lake or dam.

[அலை+வாரி]

அவக்காச்சி *avakkācci,* பெ. (n.) நுகர்வுகளின் மீது கொள்ளும் வெறி; craving for enjoyments.

[அவா+காய்ச்சி]

அவஞ்சி *avanji,* (பெ.) (n.) ஒரு வகையான தோற்கருவி; a kind of drum.

[அவை–அவஞ்சி]

அவட்டை *avaṭṭai,*(பெ.)(n.)இறந்தோரின் ஆவி; spirit of dead person.(மீனவ.)

[ஒருகா. அவடு–அவட்டை]

அவட்டைசொவட்டை *avaṭṭaisovaṭṭai,* பெ. (n.) அயர்ச்சி மற்றும் சோர்வினால் வரும் மயக்கம்; giddiness, due to tiredness. *"வெயிலில் முந்திரிக் காட்டில் அலைந்தது அவட்ட சொவட்ட கண்டு போச்சி"* (இ.வ.).

[அவல்–அவட்டை–சொவட்டை]

அவத்தாண்டை *avattāṇḍai,* பெ. (n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[அவம்+தண்டலம்]

அவதாளம் பெ. (n.) சிறந்த நிகழ்ச்சிகளின் மங்கலத்தைக் கெடுத்து தீமையைக் கொடுக்கும் தாளவகை; inauspicious time measure in music performance.

[அவம்+தாளம்]

அவரவயல் *avaravayal,* (பெ.) (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[அவரை+வயல்]

அவரிவிளை *avarivilai,* (பெ.) (n.) அகத்தீசுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[அவரி+விளை(மிளை–விளை)]

அவல்பதம் *aval-padam,* பெ.(n.) நெல் அரிசியாவதற்குரிய பக்குவம்;proper stage paddy to be pounded.

[அவல்+பதம்]

காய்ந்து கொண்டிருக்கும் நெல்லின் அரிசியை பல்லில் வைத்துக் கடிக்கும் போது நொறுங்காமல் நசுங்குகிற பக்குவம்.

அவலிவனல்லூர் *avalivanallūr* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்;name of the village in Thanjavur.

[ஒருகா. அவல்–அவலி+வன+நல்லூர்]

அவனிவீமன் *avanivīman,* பெ. (n.) விக்கிரம சோழன்ஆட்சிக் காலத்தில் (1123) அரியவூர் ஊரவையில் இருந்த உறுப்பினன்;a member of ariyavur sabai of (1125 AD) Vekkiranacholan period.

[அவனி+வீமன்]

அவிந்து போ–தல் *avintu-pō-,* செ.கு.வி (v.t.) சோறு குழைந்து போதல்; rice over boiled.

[அவி–அவிந்து+போ]

அவளிவணல்லூர் *avaḷivaṇanallūr,* (பெ.) (n.) இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்;name of the village in Thanjavur.

அவள்=காளான்; அவணம். கொட்டைப் பாக்கின் மிகுதி.

[அவள்+அவணம்+நல்லூர்]

அவிநயன் *avinayan,* (பெ.) (n.)1.மெய்ப்பாடு வுளப்படுத்திக் கூத்துக் (நாட்டியம்) கலை நூல் எழுதிய முதல் நூலாசிரியின்பெயர்.The first exponant and author of (Bharatnatya) Avinnayam dance treatise in ancient Tamil.அவிநயக்கூத்து (சிலப். 3.12). 2.கூத்தன்; dancer.

[அவி+நயன்]

அவியுணவு *avi-y-uṇavu,* பெ. (n.) வேள்வித் தீயில் இடப்படும் பொருள்கள்;edibles thrown in the sacred fire.

[அவி + உணவு]

அவிழ்த்துவிடு–தல் *aviḻttu-viḍu-,* செ.கு.வி (v.t.) பொய் பேசுதல்; to lie to speak falsehood.

[அவிழ்த்து+விடு]

அவுசாரி *avusāri,* பெ. (n.) ஒழுக்கங்கெட்டவள்; an adulterated woman. *'அவள் ஊர் மேய்கிற அவுசாரி யாயிற்றே'.* (வ.சொ.அக.).

[அவி+சாரி]

அவுட்டு *avuṭṭu,*(பெ.) (n.) விளையாட்டை விட்டு வெளியேறுதல்; to set out from the game.

[E.out→த.அவுட்டு]

அவுட்டுவிடு–தல் *avaṭṭuviḍu,* பெ. (n.) பொய் பேசுதல்; to speak lie. *"விட்டால் போதும் அவன் நெய்வேலி இருக்கிற இடமே எங்கள் இடந்தான்னு பெரிய அவுட்டா விடுவான்"* (இ.வ.).

[அவிழ்த்து+விடு]

அவுடு *avuḍu* பெ. (n.) தொடையிடுக்கு; in between thighs. *'அவுட்டுக்குள்ள பாய்கிறான்.'*

[அவுடி—அவுடு]

அவையக்கத்து *avayakkattu,* பெ. (n.) முட்டையிட்ட கோழி அடைகாக்க அணியமாக இருப்பதைக் காட்டக் கொக், கொக் என்று சிறகை விரித்துப் போர்த்திய படி எழுப்பும் குரல்; (இ.வ.); the cakling sound of a brooding hen.

[அவையம்+(கத்தல்) கத்து]

அவையத்தாப்பொட்டை *avaiyatta-p-pōṭṭai,* பெ. (n.) அடை காக்கும் கோழி;brooding hen.

[அவை+அத்து+பெட்டை]

அவையம் *avaiyam,* பெ. (n.) அடைகாத்தல்; brooding. *"அவையத்தில் இருக்கிற கோழிமேல் பேன் அதிகமாக இருக்கிறது."* (இ.வ.).

[அவை—அவையம்]

அழகானந்தல் *aḻagānandal,* (பெ.) (n.) திரு வண்ணாமலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvannamalli Taluk.

[அழகன்+ஏந்தல் (ஏரி)]

அழகிய சீயன் *azakiasiyan,* பெ. (n.) மூன்றாம் இராச இராசன் காலத்தில் வாட்குடை வடகழனி என்ற ஊரில் வாழ்ந்தவன்; a devotee of *vāṭkuḍaivaḍakaḻāni village.*

[அழகிய + சீயன்.]

வாட்குடை வடகழனி என்ற ஊரில் நந்தவனத்தைப் பாதுகாத்துக் கொண்டு திருவோத்தூர் இறைவனுக்கு நாள்தோறும் குறுணிப்பூ அளித்து வந்தவன் இவன்.

அழகிய சோழநல்லூர் *aḻagiyacōḻanallūr,* பெ. (n.) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்.a village in *kanniyakumari* district.

[அழகிய +சோழ நல்லூர்]

தேரூர் ஊரம்மன் பெயர் அழகிய சோழ நங்கை. இயல்பாகவே அழகிய சோழ நல்லூர் என்பது சோழர் மேலாண்மையைச் சுட்டியுணர்த்தும் சிறப்பு பெயராயிற்று.

அழகிய பாண்டியன் *aḻagiyaPāṇḍiayan,*பெ. (n.) பொதிய மலையிலுள்ள ஓர் ஊர்.a village in *podiyamalai.*

[அழகிய + பாண்டியன்]

பொதிய மலைச் சிற்றரசனாகிஆய் என்பவனை வென்று மேம்பட்டஅப் பாண்டியன் தன் வெற்றிச் சிறப்பு விளக்குதற்பொருட்டு அம்மலையடி வாரத்திலுள்ள ஓர் ஊருக்கு அழகிய பாண்டிய புரம் என்று பெயரிட்டான் என்பர்.

அழகுச்சம்பா பெ. (n.) நெல்வகை;a variety of paddy.

[அழகு+சம்பா]

அழண்டுபோ—தல் *alaṇdupō-,* செ.கு.வி. (v.i.) பதனழிதல்; to get rotten.

[அழன்று — அழண்டு+போ]

அழல்உயிர்ப்பு *aḻal-uyirppu,*பெ. (n.) 1. மூக்கின் வழியாக வரும் உயிர்ப்பு; breath coming from the nostrils. 2. தீப்போல் வெப்பமான மூச்சு; breath hot as fire.

[அழல் + உயிர்ப்பு]

அழல்கரப்பான் *aḻal-karappāṉ,* பெ. (n.) கரப்பான் வகை; a variety of cockcroch.

[அழல்+கரப்பான்]

அழல்கருப்பை *aḻal-karuppai,* பெ. (n.) சாமைப் பயிர்; a kind of millet.

[அழல்+கருப்பை]

அழல்குணப்பாடு *aḻal-kuṇa-p-pāḍu,* பெ. (n.) நெருப்பு அல்லது வேறுவகை வெப்பத்தினால் உடம்பிலுள்ள நோயைக் குணப்படுத்துதல்; treatment of diseases in the system by the application of heat thermotherapy.

[அழல்+குணப்பாடு]

அழல்குணம் *alar-kuṇam,*பெ.(n.) உடம்பிலுள்ள சூட்டை எழுப்புங்குணம்; the quality of producing heat, thermogenic property.

[அழல்+குணம்]

அழல்குமரம் *a]al-kumaram,* பெ. (n.) ஒரு கூட்டு மருந்து; a compound medicine.

[அழல் + குமரம்]

அழல்குமரன் *alalr-kumaran,* பெ.(n.)முருகக் கடவுள்; Lord Murugan as off spring of agni.

[அழல் + குமரன்]

அழல்சமன்மை *alal-samanmai,* பெ. (n.) 1. செரிமான ஆற்றலை ஒழுங்குபடுத்துதல்; regulation of digestion. 2. செரிமான ஆற்றலைத் தூண்டுதல்; stimulation of digestion.

[அழல் + சமன்+மை]

அழல்திசை *alal-tisai,* பெ. (n.) அழல் மூலை பார்க்க; see alal-mūlai.

[அழல் + திசை]

அழல்நிகழ்ச்சி *alal-nigalcci,* பெ. (n.) 1. நெருப்பினால் ஏற்பட்ட நிகழ்ச்சி; that which happened from the action of fire or in resulting from fire. 2. நெருப்பின் தோற்றம்; production of fire.

[அழல் + நிகழ்ச்சி]

அழல்மூலை *alal-mūlai,* பெ. (n.) தென் கீழ்த்திசை; the south east quarter, as under the guardianship of Agni.

[அழல் + மூலை]

அழலச்சம் *alalaccam,* பெ. (n.) நெருப்பைக் காண நேர்ந்தவிடத்துண்டாகும் அச்சம்; morbid dread of fire a heat, Thirmophobia.

[அழல் + அச்சம்]

அழலழிவு *alalalivu,* பெ. (n.) தீயினாலுண்டாகும் உலகழிவு; destruction of the world of fire.

[அழல்+அழிவு]

அழலன் *alalan,* பெ. (n.) செவ்வாய்; mars.

[அழல்+அன்]

அழலாற்றல் *alal-ārral,* பெ. (n.) 1. செரிமான ஆற்றல்; the power of digestion. 2. நெருப்பின் வல்லமை; the power of fire.

[அழல் + ஆற்றல்]

அழலுப்பு *alaluppu,* பெ. (n.) வெடியுப்பு; a kind of salt.

[அழல்+உப்பு]

அழலோன் *alalon,* பெ. (n.) தீக்கடவுள்; the god of fire.

[அழல்+(ஆன்) ஓன்]

அழற்கண்டம் *alar-kandam,* பெ. (n.) வயிற்றுத் தீ; abdominal or gastric fire.

[அழல் + கண்டம்]

அழற்கம்பம் *alar-kambam,* பெ. (n.) 1. நெருப்புத் தூண்; piller of fire. 2. நெருப்பு முதலானவற்றைச் சுடாதிருக்கச் செய்யும் மாயக்கலை; suspending the action of fire - a kind of magic.

[அழல் + கம்பம்]

அழற்கம்பன் *alar-kamban,* பெ. (n.) சிவன்; Sivan in the form on a column of fire.

[அழல் + கம்பன்]

அழற்கல் *alar-kal,* பெ. (n.) சக்கிமுக்கிக் கல்; flint, pyrites.

[அழல் + கல்]

அழற்கொப்புளம் *alar-koppulam,* பெ. (n.) நெருப்புக் கொப்புளம்; a collection of watery fluid beneath the superficial layer of the skin - bilister.

[அழல் + கொப்புளம்]

அழற்சட்டி *alar-catti,* பெ. (n.) நெருப்பிடு கலம்; fire - pan, censer.

[அழல் + சட்டி]



அழற்பிழம்பு *alar-pilambu,* பெ. (n.) தீ நாக்கு; flame of fire.

[அழல்+பிழம்பு]

அழற்போக்கு *alar-pōkku,* பெ. (n.) உடம்பில் வெப்பம் பரவியிருக்கும் நிலைமை; the distributions of heat in the system.

[அழல் +போக்கு]

அழற்சான்று *alar-canru,* பெ. (n.) மணச் சடங்கில் தீ வளர்த்து அதனை முன்னிலைப் படுத்துதல்; confirming the marriage in the presence of sacred fire.

[அழல் + சான்று]

அழிக்கால்துறை *alikālturai,* (பெ.) (n.) அகத்தீசுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agatheeswaram Taluk.

[அழிகால்+துறை]

அழிகாடு (பெ.) (n.) வேளாண்மை முடிந்த பின்னும் உழவு செய்வதற்கு முன்னும் மாடுகளை மேயவிடும் நிலப்பகுதி. (கொ.வ.வ.சொ.12.); harvested area left for grazing.

[அழி+காடு]

அழிசி[1] *alisi,*(பெ.) (n.) 1. பழங்காலப் புலவர் பெயர்; name of a poet. 2.ஆற்றுக் கழிமுகப் பகுதியைச் சார்ந்தவன்; a man from an area of confluence of a river.

[அழி(ஆற்றுக்கழிமுகம்)-அழிசி]

அழிசி[2] *alisi,* பெ.(n.)சோழர் கால மன்னனான 'பொலம் பூண்' என்ற அரசன் காலத்தவன், ஆதன் என்ற கடைக்கழகக் காலப் புலவரின் தந்தை; father of the sangam period poet, *ādan* who lived during the period of cholaking *'Polampūn'.*

[அழி +அழிசி]

அழிசிகுடி *alisikudi,* பெ. (n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[அழிசி+குடி]

அழிஞ்சிக்குச்சி பெ. (n.) தட்டு பின்ன பயன்படும் குச்சி, (ம.வ.தொ.); a stick used to spin basket.

[அழிஞ்சி+குச்சி]

அழிபாடு *alipādu,* பெ. (n.) விற்பனை; sales. *'இந்த மாதம் சரக்கு அழிபாடு நன்றாகவுள்ளது'* (இ.வ.).

மறுவ. அழிவு.

[அழி+பாடு]

அழிமானம் *alimānam,* பெ. (n.) தோட்டங் களுக்கு ஆடுமாடுகளால் ஏற்படும் அழிவு; damage by cattle in the farm or garden. *'தோட்டத்தில் ஆடுகளை விட்டு அவர்கள் செய்யும் அழிமானம் தாங்க முடியவில்லை.'* (ம.சொ.அக.).

[அழி+மானம்]

அழியாநிலை *aliyāniali,* (பெ.) (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[அழியாத+நிலை]

அழிவு *alivu,* பெ. (n.) விற்பனை; sales. *'சந்தைக்கு வந்த சரக்கு எல்லாமே அழிவாகி விட்டது.'*

[அழி-அழிவு]

அழுகுனி ஆட்டம் *aliguniāttam,* (பெ.) (n.) திருட்டுத் தொழில். (கொ.வ.வ.சொ.12.); activities of theft.

[அழுகுனி+ஆட்டம்]

அழுங்கு (பெ.) (n.) பாலையாழுக்குரிய பண்வகை; a musical note.

[அழு-அழுங்கு]

அழுத்தம் *aluttam,* பெ. (n.) துன்பம்; distress. *'அவன் கூட வாழ்வது பெரிய அழுத்தம்.'* (வ.சொ.அக.).

[அழுத்து+அம்]

அழுதுவடி-த்தல் *aludu-vadi-,* 2.செ.கு.வி. (v.i.) பொலிவின்றி இருத்தல்;to be dull, dispirited.

[அழு→ அழுது+வடி-,]

அழும்பில்நாடு *alumbil-nādu,* பெ. (n.) புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள அம்பு நாடு; a country of *Paudukōttai* region at present it is called *ambunādu.*

[அழும்பில்+நாடு]

அழும்பு *aḻumbu,* (பெ.) (n.) வீணான செயல்களில் ஈடுபடுதல். (கொ.வ.வ.சொ.); vain activities.

[அழிவு–அழிம்பு–அழும்பு]

அழுவுதொழுவு *aḻuvutoḻuvu,* பெ.(n.) குடும்பம் நிலபுலம் தொடர்பான வேலைகள், சிக்கல்கள்; family responsibilities. *"அழுவு தொழுவு எந்த வேலையும் அவனுக்கு இல்லை அதுதான் ஊரைச் சுற்றித் திரிகிறான்."* (இ.வ.).

[அழுவு–தொழுவு]

அள்ளல் *aḷḷal,* (பெ.) (n.) எண்வகை இசைக் கரணங்களுள் ஒன்று; one of eight musical practices.

[அள்–அள்ளல்]

அள்ளிக்கிடாசு–தல் *aḷḷikkiḍāsu-,* செ.கு.வி. (v.i.) பொய்ச்செய்தி பரப்புதல்; (இ.வ.); to gossip false propoganda.

[அள்ளி+கிடாசு]

அள்ளிகோல் *aḷḷikol,* பெ. (n.) தறியில் பாவை குஞ்சம் பிரிக்கும் கோல்;an implement used in loom.

[அள்ளி+கோல்]

அள்ளிப்போடு–தல் *aḷḷippōdu-,* செ.கு.வி. (v.i.) பொய்யைச் சொல்லித் தூண்டிவிடுதல்; to rouse calamity by false propoganda. *"எவளோ அள்ளிப்போட்டு இந்தக் குடும்பத்தைக் கெடுத்துவிட்டாள்."* (இ.வ.).

[அள்ளி+போடு]

அள்ளுக்கம்பி *aḷḷu-k-kambi,* பெ. (n.) வண்டியச்சு; cart axle.

[அள்ளு+கம்பி]



அள்ளுக்குத்திப்பூட்டு–தல் *aḷḷukkutti-p-pūṭṭu-,* செ.கு.ன்றாவி. (v.t.) நுகத்தடிப் பூட்டுக் கயிற்றின் நீளத்தைக் குறைக்க, முடிச்சு உள்ள முனையில் கயிற்றை இரு வளையமாக வளைத்துப் போட்டுப் பூட்டுதல்; (இ.வ.); to make a type knot.

[அள்ளுக்குத்தி+பூட்டு]

அள்ளுகயிறு; *aḷḷukayiṟu,* பெ. (n.) பண்ணையில் கோல்களை மேலும் கீழும் இரு பக்கத்திலும் இழுத்துப் பிடிக்கும் கயிறு. (நெ.தொ.க.).

[அள்ளு+கயிறு]



அளக்கை *aḷa-k-kai,* பெ.(n.) 1. அளத்தல்; measuring; நில அளவிடல்; land survey. 2. தீர்வை நிலஅளக்கை; land cess.

மறுவ. அளப்பு.

[அள–அளக்கை]

அள்ளுத்தறி *aḷḷittaṟi,* பெ. (n.) கயிறு போன்ற வற்றால் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும் தறி வகை. (நெ.தொ.க. 53.). tightly fastened loom.

[அள்ளு+தறி]

அள்ளுபிடித்தல் *aḷḷuipidittal,* பெ. (n.) பாவு அறுவாக்கல், பாவு கட்டுதல் (நெ.தொ.க. 53.); arrangement in loom.

[அள்ளு+பிடி]

அள்ளுவிரைப்படு–தல் *aḷḷuvirai-p-paḍu-,* செ.கு.வி. (v.i.) காளைகளுக்குக் காயடித்தல்; castrating.

[அள்ளு+விதை(விரை)+படு]

அள்ளைக்கட்டி இழுப்பு *aḷḷai-k-kaṭṭi iḻuppu,* செ.கு.வி. (v.i.) ஒரு வகை வலிப்பு நோய்; a disease.

[அள்ளை+கட்டி+இழுப்பு]

அள்ளைக்கட்டி இழு-த்தல் *aḷḷai-k-kaṭṭi iḻu-,* செ.கு.வி. (v.i.) நெஞ்சுக் கூட்டின் பக்கவாட்டு எலும்புகளை இழுத்தல் (ஒருவகை வலிப்பு); a strain felt on side ribes.

[அள்ளை+கட்டி+இழு]

அள்ளைக்கழி *aḷḷai-k-kaḻi,* பெ. (n.) **சாத்துக்கழி** பார்க்க; see *cāttu-k-kaḻi.*

[அள்ளை+கழி]

அளம்பளம் *aḷambaḷam,* (பெ.) (n.) கள்ளக் குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakurichchi Taluk.

[ஒருகா. அளம்+பள்ளம்]

அள்ளைக்கயிறு *aḷḷai-k-kayiṟu,* பெ. (n.) மரமேறும் போது மரத்தொடு சேர்த்து இடையில் கட்டிக் கொள்ளப்பயன்படும்தோல் கயிறு; leather rope used by tree claimbers.

[அள்ளை+கயிறு]

அளவாக *aḷavāga,* பெ.எ. (adj.) ஒரே சன்னமாக நடவு செய்யும் முறை; implanting sparsely.

[அளவு+ஆக]

அளவாங்குத்திருவை *aḷavāṅguttiruvai,* பெ. (n.) மட்பாண்டம் செய்யும் திருவை. (ம.வ.தொ. 69.); an implement used in pottery.

[அளவாங்கு + திருவை]

அளவு *aḷavu,* பெ. (n.) தட்டையாகவும் கெட்டி யாகவும் உள்ள மூங்கில் பத்தை. (நெ.தொ.க.); flatend hard splinters of bamboo.

[அள்–அளவு]

அளவுகோல் *aḷavukōl,* பெ. (n.) அள்ளுத் தறியில் பாவை கொஞ்சம் கொஞ்சமாகப் பிரித்துக் கொடுப்பதற்குரிய கோல். (நெ.தொ. க. 53.); an implement in loom.

[அளவு+கோல்]

அளவூர் *aḷavūr,* (பெ.) (n.) காஞ்சிபுரம் வட்டத்தி லுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[அளம் (உப்பளம்)+ஊர்]

அளி *aḷi,* பெ. (n.) சகதி, நாற்றம் கொண்ட சேறு; mud with bad smell. (வ.சொ.அக.).

[அள்+அளி]

அளித்தரை *aḷi-t-tarai* பெ.(n) சேற்று நிலம்.; muddy place. அளித்தரையில் நடக்காதே (இ.வ.)

[அள்–அளி+தரை]

அளியாப்பதி *aḷiyāppadi,.* திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādānai Taluk.

[அழியா+பதி]

அளையம் *aḷayam,* பெ.(n.) செம்பும் வெள்ளீயமும் கலந்த கலப்பு மாழை; alloy.

[அளை + அம்]

அறக்கட்டளை *aṟakkaṭṭaḷai,* பெ. (n.) பொது நலனை மேம்படுத்தும் செயற்பாடுகளுக்காகத் தனியார் அல்லது அரசு ஏற்படுத்தும்செல்வ ஒதுக்கீட்டு (நிதி) அமைப்பு; endowment, trust.

[அறம்+கட்டளை]

அறக்கட்டிப்பேசு-தல் *aṟakkaṭṭi-p-pēsu-,* செ.கு.வி. (v.i.) ஒருசிக்கலை நாளைப் பேசித் தீர்க்கலாம் என்று அரைகுறையாக விடாமல் முழுவதுமாகப் பேசி முடித்தல்; (இ.வ.).;to take a final decision without postponing.

[அற+கட்டி+பேசு]

அறவழித்தாங்கி *aṟavaḻi-t-tāṅgi,* பெ.(n.) அறவிடைத்தாங்கி என்றழைக்கப்படும் செய்யாறு வட்டத்தில் உள்ளது ஊர். name of the village in *ceyyāru.*

[அறவழி+தாங்கி.(புத்தமதத்தினரின் ஊர்.)]

அறவுணவுச்சாலை *aṟavuṇavu-c-cālai,* (பெ.) (n.) துறவியரும் இரப்போரும் உண்டுதங்கும் இடம்;choultry where; pilgrims and religious mendicants are fed and provided accommodation.

[அறவுணவு+சாலை]

அறங்கணக்குப்பொறங்கணக்கு *aṟaṅkkaṇakku-p-poṟaṅkaṇakku,* பெ. (n.)

ஒருசெலவின் அனைத்துக் கணக்குகளையும் பார்க்கும் கணக்கு வழக்கு;auditing minutely. *"அறங்கணக்குப் பொறங்கணக்கு பார்க்கிற இடத்தில் எவன் வேலைக்குப் போவான்?"* (இ.வ.).

[அற+கணக்கு+புற+கணக்கு]

அறளக்கல் *aṟaḷakkal,* பெ. (n.) உருளைக்கல். *"அறளக் கல்லா இருந்தா பொறுக்கிப் போடலாம்; சரளக்கல்லா இருந்தால்?"* (நிலம் பற்றிய சொலவடை).

[அறளை+கல்]

அறற்குழல் *aṟaṟkuḻal,* (பெ.) (n.) ஏழிசை நரம்புட்குரிய சுருதி அளவில் ஏழு சுரங்களும் ஒலிக்குமாறுஇடைவெளிகளை வரையறுத்துத் துளைகள் அமைக்கப்பட்ட புல்லாங் குழல்; a flute with proper structure of holes.

[அறல்+குழல்]

அறாக்களை *aṟākkaḷai,* பெ. (n.) புற்கள் சரியாக அகற்றப்படமாலும் மண்ணில் எல்லா இடத்திலும்கொத்தப்படாமலும் குறைபாடுள்ள களைவெட்டு வேலை; (இ.வ.).inadequate and incomplete weeding work.

[அறாத+களை]

அறாத்தல் *aṟāttal,* பெ. (n.) விடலைகளின் தொல்லையான செய்கைகள்; (இ.வ.);nuisance of the youngsters.

[அறாவு+அறாத்தல்]

அறாமிஞ்சி *aṟāmiñji,* பெ. (n.) நச்சரிப்பவன்; one who is pressing again and again. *"அறாமிஞ்சி கேட்டால் பின்னும் பத்து ரூபாய் கொடுப்பான்?"* (இ.வ.).

[அற+மிஞ்சி]

அறிவியம் *aṟiviyam,* பெ. (n.);இயல் உலகு, இயற்கைநெறிகள் ஆகியவற்றைக் குறித்த ஆய்வும் அறிவும்;scientific studies.

மறுவ. அறி.

[அறிவு+இயம்]

அறிவுப்புலன் *aṟivu-p-pulaṉ,* பெ. (n.);அறிவுக் கருவி;organ of senses.

[அறிவு+புலன்]

அறிவிப்புப்பலகை *aṟivippu-p-palagai,* பெ. (n.) அலுவலகங்களில் அல்லது பொதுவிடங்களில் அறிவிப்புத் தாங்கிய அல்லது ஒட்டப்பட்ட பலகை;noticeboard.

[அறிவிப்பு+பலகை—அறிவிப்பு— பார்க்க]



அறுத்துப்பேசு-தல் *aṟuttu-p-pēsu-,* செ.கு.வி. (v.i.) ஈவு இரக்கமின்றி அறக்கட்டிப் பேசுதல்; (இ.வ.).;to speak firmly and decesively; to say final word.

[அறுத்து+பேசு]

அறுதலைப்பயல் *aṟutalaippayal,* பெ. (n.) கைம்பெண்ணின் மகன்; widow's son. *அறுதப் பயபுள்ள* (இ.வ.)

[அறுத்(தாலி)தலி+பயல்]

அறுதாலி *aṟutāli,* பெ. (n.) ஒரு வசவுச் சொல்; a word used while scolding - lit. widow. widow's son.

[அறு+தாலி]

அறுதி *aṟdi,* பெ. (n.) எடுப்பு (கீர்த்தனைப் பல்லவி) அமைப்பில் கடைசியில் வரும் தனிச் சொல்லுக்கு முன் வரும் நெட்டிசைச் சொற்கட்டு; elongated expletive at the end of a line in music.

[அறு—அறுதி]

அறுதிப்பெரும்பான்மை *āṟudi-p-perumpāṉmai,* பெ. (n.) பிற கட்சிகளின் கூட்டில்லாமல் தனித்தே ஆட்சி அமைக்கத் தேவையான உறுப்பினர் எண்ணிக்கை, தனிப்பெரும்பான்மை; absolute majority.

[அறுதி+பெரும்பான்மை]

அறுந்தல் *arundal,* பெ. (n.) கிடைத்தற்கு அருமை, தட்டுப்பாடு; scarcity. *"கத்தரிக்காய் அறுந்தலாய் போய் விட்டது"* (வ.சொ.அக.).

[அறு–அறுந்தல்]

அறுநிழல் *aru-nilal,* பெ. (n.) அடர்த்தியாக இல்லாமல் ஆங்காங்கே வெயில்படும்படியான நிழல்; spaced shadow. *"ஏன் முருங்க மரத்து அறுநிழலில் உட்கார்ந்து இருக்கிறாய்.? (பே.வ.).*

[அறு+நிழல்]

அறுப்பறு–த்தல் *aruppaṟu-,* பெ. (n.) பன்னறுவாளால் கதிரறுத்தல்– அறுவடை செய்தல்; to harvest, to reap.

[அறுப்பு+அறு]

அறுப்பாள் *aruppāḷ,* பெ. (n.) நெற்கதிரை அறுவடை செய்யும் பெண். (வ.வ.வே.க. 11.). reaping woman in the field.

[அறு+ப்+ப்+ஆள்]

அறுப்புச்சட்டி *aruppu-c-caṭṭi,* பெ. (n.) திருவையிலிருந்து அறுத்து எடுக்கும் சட்டி. (ம.வ.தொ. 69.). ; pottery just taken from the potters wheel.

[அறுப்பு+சட்டி]

அறுப்புச்சுகம் *aruppu-sukkam,* பெ. (n.) பெண்களுக்குச் சொத்துரிமை வருமுன், குழந்தையில்லாத கைப்பெணுக்குச் கணவன் வீட்டாரால் பணமாகவோ, சொத்தாகவோ அளிக்கப்பட்ட பொருளாதார – வாழ்வாதார ஏந்து (வசதி); sources of livelyhood offered to a issuless widow by the family of her husband.

[அறுபு+சுகம்]

அறுபத்திநான்குமனைவெள்ளான் செட்டி கனப்பு *arubattinānguumanainellāncetti kanappu,* (பெ.) (n.) கோடியம்மனுக்கு செட்டியார் இனத்தினர் கட்டும் கனப்பு (67 : 11.); it is one of the chettiyar castes.

அறுபெரும்பொழுது *aruperumpoludu,* பெ. (n.) இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி ஆகிய ஆறுபெரும்பொழுது; the six season of a year viz.

[அறு+பெரும்+பொழுது]

வேத ஆரியரின் முன்னோர் இருந்த வடமேலை நாடுகட்கு இளவேனில் (spring), கோடை(summer), வறளை(autumn), மாரி (winter), என்னும் நாற்பெரும் பொழுதே உரியன. தென்னாடு வந்து தமிழரோடு தொடர்பு கொண்ட பின்னரே தமிழகத்திற்குரிய அறுபெரும் பொழுதுகளையும் ஆரியர்கள் மொழி பெயர்த்துக் கொண்டனர்.

தமிழ்	வடமொழி
இளவேனில்	வஸந்த்த
முதுவேனில்	க்ரீஷ்ம
கார்	வர்ஷ
கூதிர்	சரத்
முன்பனி	அச்சிர
பின்பனி	ஹேமந்த்த

(வட.வர.298.)

அறுவைமருத்துவம் *aruvaiimaruttuvam,* பெ. (n.) அறுப்பு மருத்துவம்; surgery.

[அறுவை+மருத்துவம்]

அறுவடைத்திருநாள் கும்மி (பெ.) (n.) கும்மிப் பாடலின் ஒரு பிரிவு; a variety in kummi ply.

[அறுவடை+திருநாள்+கும்மி]

அறுவடைப்பாடல் *aruvaḍai-p-pāḍal,* (பெ.) (n.) மள்ளரின் உழவுத்தொழில் சார்ந்த பாடல்; an harvest song of mallar communinity.

[அறுவடை+பாட்டு]

அறுவணி *aruvaṇi,* (பெ.) (n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[அறு+அணி]

அறுவியகல் *aruviyakal,* பெ. (n.) செங்கல் சூளையின் வெளிப்புறச்சுவரில் பாதி வெந்ததும் வேகாததுமான கல்; (இ.வ.).; brick in the outer portion of the kiln not burnt properly.

மறுவ. அரை வேக்காட்டுக்கல்.

[அறுவு+இ+அ+கல்]

அறுவு-தல் *aṟuv-*, செ.கு.வி. (v.i.) முள்குத்தி இற்றுப்போன இடத்தில் தடவிப் பார்க்கும் போது விரல்களில் படுதல்;broken piece of thorn feelable by touch.

[அறு-அறுவு]

அறைஞ்சி (பெ.) (n.) பேரோசை எழ அடித்தல். (கொ.வ.வ.சொ.); striking to make loud sound.

[அறை-அறைஞ்சி]

அறைபறை *araiparai*, (பெ.) (n.) செய்தியைத் தெரிவிக்கும் பறை. message informing drum. '*அறை பறை யன்னார் கயவர்' (குறள்).*'

[அறை+பறை]

அறைவண்டி *araivaṇḍi*, பெ. (n.) வில்வண்டி; oval shaped roofed bullock cart. (வ.சொ.அக.).

மறுவ. கூடார வண்டி.

[அறை+வண்டி]



அறுகங்கட்டை *aṟugaṅkkaṭṭai*, பெ. (n.) நாட்பட்ட தடித்த உறுதியான தண்டுகளைக் கொண்ட அடர்த்தியான அறுகம்புல்; (இ.வ.). grass with strong stalk.

[அறகம்+கட்டை]

அறைகடல் *araikaḍal*, பெ. (n.) ஒலிக்கும் கடல்; roaring sea. "*அறைகடல் வளாகம்*"(EI . xxii. 16.).

[அறை+கடல்]

அணுக்கவிளக்கு *aṇukkaviḷakku*, பெ. (n.) கருவறைத் திருமேனிக்குப் பக்கத்தில் எரியும் விளக்கு; close light for the deity in sanctum sanctoriam. "*இராவை யந்திக்கு அணுக்க விளக்காக எரிய வைத்த விளக்கு*" (SII. viii. 66.).

[அணுக்கம்+விளக்கு]



அணுகுமுறை *āṇugumuṟai*, பெ.(n.)ஒன்றைச் செய்ய அல்லது சொல்லப் பின்பற்றும் வழிமுறை; method of approach.

[அணுகு+முறை]

அன்பில் *aṉbil*, (பெ.) (n.) திருச்சிராப்பள்ளிக்கு அருகே உள்ள ஊர்; name of a village near village near *Tiruccirappalli.*

[அன்பு+இல். இல்=மக்கள்வாழும் வீடு. அன்பின் இருப்பிடம் அன்பில்]

அன்மருதை *anmarudai*, (பெ.) (n.) வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in wandiwash Taluk.

[ஒருகா. அன்+மருது]

அன்முறை *aṉmuṟai*, பெ. (n.) 1. ஒழுங்கின்மை; irregularity. 2. நேர்மையின்மை; injustice.

[அல்+முறை]

அன்றாடங்காய்ச்சிகள் *āṉṟāḍaṅkāyccigal*, பெ. (n.) அற்றை நாள் வருவாயில் அன்றைய வாழ்க்கையை நடத்துவோர்; poor persons who make living only through daily wages.

[அன்றாடம்+ காய்ச்சிகள்]

அன்றில்பெடை *anrilpedai*, பெ. (n.) இணை பிரியாத அன்புக்கும் உயிரொன்றிய காதல் பிணைப்புக்கும் கற்புக்கும் அடையாளமாக விளங்கும் பெண் பறவை;a bird known for chastity and inseparable affectionate loyal sincere partnership in life. ஒன்றில் காலைஅன்றில் போல புலம்புகொண்டுறையும் புன்கண் வாழ்க்கை (நற்.124).

[அன்றி+இல்–அன்றில் – அகன்று இல்லாதது, துணையின்றி வாழாத பறவை. துணைப் பறவை இறந்தால் தானும் இறந்துவிடும் பறவை. ஆண் பறவை மகன்றில் (மகன்+அன்றில்) எனப்படும்]

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கடைக்கழக இலக்கியங்களில் அன்றில் பறவையின் இயல்புகளைப் பண்டைப் புலவோர் தக்காங்கு விளக்கியுரைத்துள்ளர்.

"மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில் துணையொன்று பிரியினும் துஞ்சா காண்".(அகம்.50:11–12)

"நெருப்பினன்ன செந்தலை யன்றில் இறவினன்ன கொடுவாய்பெடையொடு

..........பையென நரலும்.(குறுந்.160)

துணை புணர் அன்றில் உயவு கேட்டொறும் (நற்.32)

மன்றிரும் பெண்ணை மடல்சேர் அன்றில்

என்துயர் அறிந்தனை நரறியோ.(கலித்.129)

மகன்றிலொடுஅன்றில்உறைந்தன உயிரொன்றி (கம்பரா.)

செந்தலை, மடிந்த மூக்கு ஒருக்கணமும் பிரியாத இயல்பு அன்றிலின் அடையாளமாகும். இணைந்து கொஞ்சுவதை உயவும் என்றும் பிரிந்து ஒலமிடுவதை நரலும் என்றும் பழந்தமிழ்ப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

அன்னச் சம்பா *annac-cambā*, பெ. (n.) பழைய நெல் வகை. (வ.வ.வே.க.); an old variety of paddy.

[அன்னம்+சம்பா]

அன்னசாகரம் *annasāgaram*, (பெ.) (n.) தருமபுரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Dharmapuri Taluk.

[அன்னம்+சாகரம்]

அன்னத்தட்டு பெ. (n.) சோறு ஆற வைக்கும் தட்டு. (ம.வ.தொ. 69.). a plate for hot rice to get cool.

[அன்னம்+தட்டு]

அன்னம்பாறு–தல் *annampāṟu-*,செ.கு.வி. (v.i.) இல்லாமையைச் சொல்லிக் கொண்டிருத்தல்; to speak one's own poverty. *"சும்மா அன்னம்பாறுனா உள்ளதும் போய்விடும்."* (வ.சொ.அக.).

[அன்னம்+பாறு+(பறத்தல்)]

அன்னம்பிடி–த்தல் *annampiḍi-*, செ.கு.வி. (v.i.) தவசங்களின் கதிர் மணியில் பால்கோக்கும் பருவம். (வ.சொ.அக.). grain forming stage.

[அன்னம்+பிடி]

அன்னவெறி *annaveṟi*, பெ. (n.) உணவு உண்பதில் ஓர் அரக்கத் தன்மை (வ.சொ.அக.).; over anxiety to eat.

[அன்னம்+வெறி]

அன்னாடு *annāḍu*, (பெ.) (n. நாள்தோறும். (கொ.வ.வ.சொ.13.).daily.

[அன்றாடம்–அன்னாடு கொ.வ.]

அன்னி *anni* (பெ.) (n.)1.ஆண்பாற்பெயர்; a name of a person.2.தந்தை; father.

[அல்–அன்–அன்னை(தாய்–அன்பு நிறைந்தவள்)–அன்னன்(தந்தை–அன்புநிறைந்தவன்)–அன்னி]

அன்னிகுடி *annikkuḍi*, பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில் பாபநாசத்திற்கு அருகில் உள்ள ஓர் ஊர்; name of the village in Thanjavur near Papanasam.

[அன்னி+குடி]

அன்னி– குறுநிலத் தலைவன், கழக இலக்கியம். (அகம் 196,262,45,145–ஆகிய வற்றில் இவனைப் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன.

அன்னிமிஞிலி *annimiñili,* (பெ.) (n.) பழங்காலப் பெண்பாற் பெயர்; feminine name in ancient Tamil. *'அன்னிமிஞிலி போல மெம்மலிந்து'* *(அகம்.196-12, 262-12)*

[அல்-அன்-அன்னை (தாய்-அன்பு நிறைந்தபவள்)-அன்னன் (தந்தை-அன்பு +நிறைந்தவன்)-அன்னி]

அனசுப்பலகை பெ. (n.) அணைசுப் பலகை பார்க்க; *see anaisu-p-palagai* கதவுகளின் பின்புறம் வலிமைக்காக இணைக்கப்படும் பலகை. (ம.வ.சொ. 68.); supporting wooden plank.

[அணைசு + பலகை]

அனத்தம் *anatham,* (பெ.) (n.)1. அழியும் காலம்; period of destruction. 2.அழிம்பு, அழிவு (இ.வ.); destruction.

[அல்+நத்தம்]

அனந்தலை *anantdalai,* (பெ.) (n.) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wallajah Taluk.

[அணந்தல்+தலை]

அனந்தலை விளக்கு *anandalaivillakku,* பெ. (n.) ஒருவகைக் கோயில் விளக்கு; a kind of lamp, which is lit in temples. *"அனந்தலை விளக்கு உள்கருவும்"* (SII, v, 521.).

[அனந்தலை+விளக்கு]

அனற்பிறவன் *anar-piravan,* பெ. (n.) முருகக் கடவுள்; lord Murugā as born of the god of fire.the presence of sacred fire.

[அனல் + பிறவன்]

அனிக்கி *anikki,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādānai Taluk.

[அனுக்கன்-அனுக்கி]

அனிகுருந்தன் *anikurundan,* (பெ.) (n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[அலி+குருந்தன்]

அனுக்காவூர் *anukkavur,* பெ. (n.) செய்யாற்றிலிருந்து வந்தவாசி செல்லும் சாலையில் செயாற்றிலிருந்து தென் திசையில் 1. அயிரி மாத்திரி (கி.மீ.) தொலைவில் உள்ள ஊர்.a village 1 k.m. away from *seyyāru.*

[அனுக்கன்+கா+ஊர்]

அனுக்காவூர் கிழவன் *anukkāvūr kilavan,* பெ. (n.) வீரராசேந்திரன் என்ற மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சி ஆண்டில் திருவோத்தூர் கோயில் விளக்கு வைக்க ஆக்களை அளித்த அனுக்காவூர் வெள்ளாளன் (1180.); a farmer of *anukkāvūr* who donoted cows to get ghee to lit lamp in Tiruv*ōtūr* temple.

[அனுக்காவூர் + கிழவன்.]

அனுங்கல் பெ. (n.) சுரங்களுடன் மிக நுண்ணிய சுருதி அளவுடைய ஒலிகளை இணைத்து நடுங்க ஒலித்தல்; a musical aspect.

[அனுங்கு+அனுங்கல்]

அனுசம் (பெ.) (n.) ஒலகத்தின் (நாதசுரம்) உறுப்புகளில் ஒன்று. (12 : 3.).; a part of wind instrument, nadaswaram.

[அனு-அனுசம்]

அனுசாரணி பெ. (n.) தம்பூராவில் உள்ள சுருதி நரம்பு; a string inTambura instrument.

[அனுசரணி-அனுசாரணி]



அனுசு *anusu,* பெ. (n.) இழைப்புளியில் உள்ள உளியை நெருக்கிப் பிடித்திருக்குமாறு இறுக்கமாக அடிக்கப்பட்டிருக்கும் கனத்த இரும்புத் தகடு; (இ.வ.).; aside iron plate driven in to hold tightly.

அனுப்பத்தூர் *anuppattūr,* பெ. (n.) சேயாற்றி லிருந்து வந்தவாசி செல்லும் சாலையில் உள்ள ஓர் ஊர். a village in vandavasi Taluk. அநுப்பு என்பது பழைய வரி வகை.

[அனுப்பு+அத்து+ஊர்.]

அனுபட்சத்திருமேனிகள் *anupaṭcāttirumēnigaḷ,* (பெ.) (n.) சிற்பவல்லுனரால் உருவாக்கம் பெற்ற சிற்பங்கள்; sculptures of speciality.

[அனுபட்சம்+திருமேனி+கள்]

அனுமனேரி *anumanēri,* பெ. (n.) பரமகுடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Paramagudi Taluk.

[அனுமன்+ஏரி]

அனேரி *anēri,* (பெ.) (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruppattur Taluk.

ஆ

ஆவுடையப்பன் *āvuḍaiappaṉ,* பெ. (n.) சிவன்; God Siva.

[ஆவு + உடை + அப்பன்]

ஆணாதிக்கம் *āṇādikkam,* பெ. (n.) ஆண்களின் மேலாதிக்கம்; domination of men.

[ஆண் + ஆதிக்கம்]

ஆதியோடந்தமாக *āadiyōḍandamāga,* பெ. (n.) ஆரம்பம் முதல் முடிவு வரை முழுவதுமாக; from the beginning to the end.

[ஆதி + ஒரு ++ அந்தம் + ஆக]

ஆட்சிச்சொல் *āṭci-c-col,* பெ. (n.) மக்கள் ஆளும் அன்றாடச் சொல்; usage (of a word).

[ஆட்சி + சொல்]

ஆகுமானம் *āgu-māṉam,* பெ. (n.) ஒரு செயலைச் செய்வதற்கான பணம், பொருள் போன்றவை; money and material meant for a particular work.

[ஆகு+மானம்]

ஆட்டுக்குடில் *āṭṭu-k-kuḍil,* பெ. (n.) ஆட்டுக் குட்டிகளை அடைக்கும் கூடு; a pen for young *[ஒருகா. அன்னன் +ஏரி]* அன்னன்= தந்தை, தலைவன்.ones of goat.

[ஆடு → ஆட்டு + குடில்]



ஆடிக்கழிவுத் திருவிழா *āḍikkaḻivu-t-tiruviḻa,* பெ. (n.) அம்மனுக்கு நடைபெறும் திருவிழா; (67 :23); festival of a village goddess.

[ஆடிக்கழிவு+திரு+விழா]

ஆடிக்கழிவுநாள் *āḍikkaḻivunāḷ,* பெ. (n.) அம்மன் கோயில் திருவிழா நடைபெறும் நாள்(67 :22); festival of a village goddess.

[ஆடிக்கழிவு+நாள்]

ஆட்சிச்சொல்அகராதி *āṭci-c-col.agarādi,* பெ. (n.) அரசு நடைமுறையிலுள்ள கலைச் சொற்களின் தொகுப்பான அகராதி; glossary of official technical terms usedby the government.

[ஆட்சிச்சொல்+அகராதி]

ஆக்கம் *ākkam,* பெ. (n.) சிறப்பு; greatness. *"ஆக்கம் பொங்குது" (இ.வ.).*

[ஆகு +ஆக்கம்]

ஆக்காட்டு—தல் செ.கு.வி. (v.i.) வாயைத் திறந்து காட்டுதல்; (கொ.வ.வ.சொ.13.) to open the mouth widely.

[ஆ+காட்டு காண் (த.வி.) →காட்டு (பி.வி)]

ஆக்கிப்போடு–தல் *ā-k-ki-p-pōḍu-,* செ.குன்றாவி. (v.t.) சமைந்த, பக்குவமடைந்த பெண்ணுக்கு உறவினர்கள் விருந்து வைத்தல்; to offer feast to a matured girl by her relatives.

[ஆக்கி +போடு–,]

ஆக்குப் பூட்டு பெ. (n.) எளிதில் பிரிக்க முடியாத வகையில் கயிற்றில் போடும் ஒரு வகை முடிச்சு; a kind of knot. (கொ.வ.வ.சொ.13.).

[ஆக்கு+பூட்டு]



ஆக்கூர் பெ. *ākkūr* (n.) நாகை மாவட்டத்தில் மயிலாடுதுறை பொறையாறு வழிச்சாலையில் அமைந்த ஓர் ஊர்; a village in Nagai dt.

[ஆக்கு + ஊர்]

ஆக்கை *ākkai,* பெ. (n.) நெற்கதிரைக் கட்டும் வைக்கோல் கயிறு; a twisted rope made of straw. (வ.வ.வே.க.12.).

[ஆக்கு →ஆக்கை]

ஆகமாக *āgamāga,* வி.எ. (adv.) நன்றாக, சரியாக; twisted that which is good, perfect. *"ஆகமாக் கூட எழுதவில்லை அதற்குள்கரிமுனையை உடைத்துவிட்டான்".* (இ.வ.).

[ஆகு–ஆகம்+ஆக]

ஆகரம் *āgaram,* பெ. (n.) உறைவிடம்; shelter. *"திருக்கோடிகாவில் சிறுநங்கை ஈச்வராகரத்து மஹாதேவர்க்கு திருவிளக்கு"* (SII, xii, 55).

[அகரம்–ஆகரம்]

ஆகரி *āgari,* பெ. (n.) குறிஞ்சிப் பண்ணோடு தொடர்பு உடைய இசைக்கூறு; a musical part of kurinji-p-paṇ. (13 : 118).

[ஆகுளி – ஆகரி]

ஆகாரவீறு *ākāravīṟu,* பெ. (n.) பலவின்பால் எதிர்மறைக் குறிப்பு வினை முற்றுச் சொல்லின் ஈறு; ending part of the negative verb. (வ.சொ. அ.க.). "குதிரைகள் ஓடா"

[ஆகார(ம்)+ஈறு]

ஆகாவளி *āgāvaḷi,* பெ. (n.) ஒரு வேலைக்கும் பயனற்றவன் (கொ.வ.வ.சொ.14.); useless person.

[(ஆ)– ஆகு+ (போ) போகு – ஆகு – ஆதாயம். கூடுதல் வருவாய். போகு – (போதல்) இழப்பு]

[ஆகா+(ஆள்–ஆளி) வளி]

ஆகாவிசாதி *āgavisādi,* பெ. (n.) நவமணிகளில் ஒருவகை; *"பளிங்கு இரண்டும் ஆகாவிசாதி ஒன்றும்"* (Sii, xii, 93).

ஆகுபோகு *āgupōgu,* பெ. (n.) ஆதாயமும் இழப்பும் (இலாப நட்டம்); loss and gain; எந்தத் தொழிலிலும் ஆகுபோகுகள் இருக்கத்தான் செய்யும்;

[ஆகு+போகு]

ஆகுமானம் *āgu-māṉam,* பெ. (n.) ஒரு செயலைச் செய்வதற்கான பணம், பொருள் போன்றவை; monetary source.

[ஆகு+மானம்]

ஆச்சக்குழி *ācca-k-kuḻi,* பெ. (n.) சாலையிலுள்ள ஆழமான பள்ளங்கள்; pits and holes on pathwayor road.

[ஆழ் – ஆழ்ச்ச + குழி]

ஆச்சமார் *āccamār,* பெ. (n.) பெரியோர், புரவலர்; eldersand *"கைக்கோளப் பெரும்*

படையோமினால் சமைப்பித்து எங்கள் ஆச்சமார் திரிக " (Sii, xii, 93).

[அத்தன்–அச்சன்–ஆச்சன்+ஆர்]

ஆச்சன் *āccaṉ*, பெ. (n.) தகப்பன்; father (தெ.கோ.சா. 3 :2).

[அத்தன்=அச்சன்→ஆச்சன்]

ஆச்சிமாடு *āccimāḍu*, பெ. (n.) குழந்தைக்குப் பால் கொடுப்பதற்காகத் தாயின் வீட்டிலிருந்து பரிசமாக மணமகன் வீட்டிற்குக் கொடுக்கும் மாடு; presentation of a milking cow given to bridegroom from bride's family for feeding young child. (கொ.வ.வ.சொ.14.).

[ஆய் – ஆய்ச்சி + மாடு]

ஆசனக்கட்டை *āsaṉa-k-kaṭṭai*, பெ. (n.) நெய்பவர் உட்காரும் இடம்; (நெ.தொ.க. 43.).a weaver's seat.

[ஆசனம்+கட்டை]

ஆசனாம்பட்டு *āsanāmpaṭṭu*, பெ. (n.) வேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in vellore Taluk.

[ஆசான்+ஆம்+பட்டு]

ஆசான் *āšāṉ*, பெ. (n.) முல்லைநிலத்தின் திறப்பண்களில் ஒன்று; a melody type.

[ஆசு–ஆசான்]

ஆசிரிகரு *āsirikaru*, பெ. (n.) ஆசிரியர், அருக (சமண)த் துறவியின் பட்டப்பெயர்; preceptor a title of jaina monk. "*சந்திர நந்தி ஆசிரிகரு நிசீதிகை*" (Sii, xvii, 262).

[ஆசிரியர்–ஆசிரிகர்+உ. கன்னடத் திரிபு]

ஆசிரியப் பதினம் *āsiriya-p-padiṉam*, பெ. (n.) ஆசிரிய மண்டிலத்தால் அரசியல் உறுப்புகள் பத்தனையும் பாடும் பாடும் பனுவல் வகை. (தொன்.283,உரை.) தசாங்கத்தயல்; a poem in *āsiriyam* metrecelebratingtheten constituents of a kingdom, one of 96 pirabandam.

[ஆசிரியம் + பதினம்]

ஆசு *āšu*, பெ. (n.) செருப்பின் அடியில் குதிக்கால் பகுதியில் வைக்கும் தோல்; (கொ.வ.வ.சொ.14.).; a piece attached to the hind bottom of the shoe.

[அல் – அச்சு – ஆசு]

ஆட்சித்துறை *atci-t-turai*, பெ. (n.) அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் துறை; government department.

[ஆட்சி + துறை]

ஆட்டக்கரகம் *āṭṭa-k-karagam*, பெ. (n.) ஆடவரால் ஆடப்படுகின்ற கரகவகை. (14:162.); a kind of 'karaga dance' played by males.

[ஆட்டம்+கரகம்]

ஆட்டம் *āṭṭam*, பெ. (n.) தவறான நடத்தை; bad character."*அவன் ஆட்டம் கொஞ்ச நஞ்சமா?*"(இ.வ.).

[ஆடு →ஆட்டம்]

ஆட்டமடி–த்தல் *āṭṭamaḍi-*, செ.கு.வி. (v.i.) விளையாட்டில் வெல்லுதல் (த.நா.வி.); to win the game.

[ஆட்டம் + அடி–,]

ஆட்டுக்கத்தி *āṭṭu-k-katti*, பெ. (n.) மீன் வகையுள் ஒன்று; strong ulara - a fish.

[ஆட்டு+கத்தி]

ஆட்டுக்காம்புமாடு *āṭṭu-k-kāmbu-māḍu-*, பெ. (n.) இருமடி மட்டுமே காணக்கூடும் மாடு;

[ஆட்டுக்காம்பு+மாடு.]

ஆட்டுக்காரன் *āṭṭu-k-kāraṉ*, பெ. (n.)ஆடு மேய்ப்பவன்; shephard.

[ஆடு→ஆட்டு+காரன்.]

ஆட்டுக்கால்முடிச்சு *āṭṭukkālmuḍiccu*, பெ. (n.) முடிச்சுகளுள் ஒருவகை; a kind of knot. "*நன்றாக ஆட்டுக்கால் முடிச்சு போட்டுக் கட்டு*"(இ.வ.).

[ஆட்டுக்கால்++முடிச்சு]

ஆட்டுக்கிடாய்ச்சண்டை *āṭṭuk-k-idāay caṇḍai*, பெ. (n.) சேர்வையாட்டத்தில் இரு ஆட்டக்காரர்கள் ஆட்டினைப் போல் சண்டை யிடுதல்; bulling like the goats.

[ஆட்டுக்கிடாய்+சண்டை]

ஆட்டுக்குமாரி *āttukkumari,* பெ. (n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[ஆட்டு+குமரி]

ஆட்டுக்குலைமுடிச்சு *āṭṭu-k-kulai,* பெ.(n.)முடிச்சுவகை; a kind of knot.

[ஆடு→ஆட்டு+காரன்.]

ஆட்டுப்பட்டி *āttuppaṭṭi,* பெ. (n.) ஆடுகளை அடைத்து வைக்கும் தடுப்பு; (கொ.வ.வ.சொ.14.). enclosure for the goat and sheep.

[ஆடு →ஆட்டு +பட்டி]

ஆட்டுப்பொத்தை *āṭṭuppottai,* பெ. (n.) அகத்தீசுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheesuvaram Taluk.

[ஆடு+ பொற்றை →பொத்தை]

ஆட்டூர் *āṭṭur,* பெ. (n.) நாகை மாவட்டத்தில் மங்கை நல்லூர்க்கு நான்கு அயிரமாத்தி (4 கி.மீ.) தொலைவில் அமைந்த ஊர்; a village 4 k.m. away from Mangainallur in Nagai district.

[ஆடு→ஆட்டூர்.]

ஆட்டை *āṭṭai,* பெ. (n.) முறை, தடவை; occassion. *"இவன் இந்த ஊருக்கு எத்தனை ஆட்டை வந்திருக்கிறான்."* (இ.வ.)

[ஆடு-ஆட்டு-ஆட்டை]

ஆட்டைக்காணம் *āṭṭaikkāṇam,* பெ. (n.) ஓர் ஆண்டுக்கான வரி; annual tax. *"உக்கிர மங்கலம் பாட்டம் ஆட்டைக் காணம் கொள்விது"* (TAS, viiip43-44).

[ஆண்டு-ஆட்டை+காணம்]

ஆட்டைத்திசை *āṭṭai-t-tisai,* பெ. (n.) ஆண்டுக்கு ஒருமுறை கொடுக்க வேண்டிய கடமை; annual tax *"நிழல் வகையில், கோயிலுக்கு போம் ஆட்டைத் திசை கொடாதவன்"* (IA, xx, p. 290.)

[ஆண்டு→ ஆட்டை+திசை.]

ஆடகசாலை *āḍaga-sālai,* பெ. (n.) ஆடல் வகைகட்குரிய பெரிய அரங்க சாலை; theatre." (35:107.).

[ஆடு+அகம்+சாலை]

ஆடணி *āḍaṇi,* பெ. (n.) நடனமாடுதலுக்கேற்ற அழகு (35:107.); attracting appearance for dancing.

[ஆடு+அணி]

ஆடல்வரை *āḍalvarai,* பெ.(n.) முன் தேர்க் குரவை, பின்தேர்க்குரவை, வாளமலை, கழல் நிலை, வாடாவள்ளி, வெறியாடல்; folk dances.

ஆடற்குறுப்பு *āḍarkuruppu,* பெ. (n.) பதினோர் வகை ஆடல்கள் ஒவ்வொன்றுக்கும் உள்ள உறுப்பு; (35:113.). aspects of eleven variety of classical dances.

[ஆடல்+உறுப்பு]

ஆடற்பற்று *āḍarparru,* பெ. (n.) பாவைக் கூத்துக்காகக் கம்பராமாயணத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஏறக்குறைய இரண் டாயிரம் பாடல்கள் மற்றும் அதற்கான விளக்கங்கள்; "(51:36.). about 2000 poems selected form Kambaramayanam for need of folklore.

[ஆடல்+பற்று]

ஆடற்புரவி *āḍarpuravi,* பெ. (n.) போர்க் குதிரை; cavalry. *"ஆடற் புரவிளங் கரியும் அரிவையர் குழாத்தொடு மகப்படப் பிடித்து"* (Ei, xxi, p. 38.) (கல்.).

[அடு-ஆடு-ஆடல்+புரவி]

ஆடிநோன்பு பெ. (n.) ஆடிப்பண்டிகை; (கொ.வ.வ.சொ.14.).; festivel in the month of ādi.

[ஆடி+நோன்பு]

ஆடுகளம் *āḍukaḷam,* பெ. (n.) விளையாட்டுக் கான பரந்த வெளியிடம்; play ground.

மறுவ விளையாட்டுத்திடல்.

[ஆடு+களம்.]

ஆடுகாலி *āḍukāli,* பெ. (n.) ஓரிடத்தில் நிலை கொண்டு நில்லாதவனைக் குறிப்பிடுவது, ஒரு வசவுச் சொல்; (இ.வ.) a term referring to a vagabond.

[ஆடு+காலி]

ஆடுங்கூத்தியர் *ādaṅukūttiyar,* பெ. (n.) கூத்தில் பங்கேற்கும் பெண்டிர்; (59 : 4.). dancing girla.

[ஆடும்+கூத்தியர்]

ஆடுதுறை *āḍuturai,* பெ.(n.)தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். a village inThanjavur.

ஆடையூர் *āḍaiyūr,*பெ.(n.) திருவண்ணாமலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvaṇṇāmalai Taluk.

[ஆடை+ஊர்]

ஆண்டகளூர் *āṇḍagalūr,*பெ.(n.) இராசிபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Rasipuram Taluk.

[ஆண்டை + அகளி + ஊர்]

ஆண்டார்பந்தி *āṇḍārpandi,* பெ. (n.) பூந் தோட்டத்திலிருந்து 9 கி.மீ. தொலைவில் உள்ள ஓர் ஊர். a village 9k.m. away from *Pūntōṭṭam.*

[ஆடு→ஆட்டு+காரன்.]

ஆண்டாளூர் *āṇḍālūr,*பெ.(n.)திருவண்ணாமலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvannamalai Taluk.

[ஆண்டாள்+ஊர்]

ஆண்டிக்கோலம் *āṇḍi-k-kōlam,* பெ. (n.) துறவுக்கோலம்;manifestationofrenunciation.

[ஆண்டி+கோலம்]

ஆண்டிமடம் *āṇḍimaḍam,* பெ. (n.) ஆண்டி களும் இரப்போரும் அயலூர் எளியாரும் தங்குமிடம்; choultary where medicants, beggers and pilgrims stay.

[ஆண்டி+மடம்.]

ஆண்டி *āṇḍi,* பெ. (n.) சிற்றூர்க் கோயில் பூசகர்; priest in the small village. (கொ.வ.வ.சொ.15.).

[ஆண்டவன்–ஆண்டி]

ஆண்டிவிளை *āṇḍiviḷai,* பெ. (n.) அகத்தீசுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agasthēsuvaram Taluk.

[ஆண்டி+விளை]

ஆண்பிள்ளையான் *āṇpillaiyāṉ,* பெ. (n.) கணவன்; husband *(செட்டிநாட்டு வழக்கு).*

[ஆண் + பிள்ளை + ஆன். இது ஆம் பிள்ளையான் எனத் திரிந்துள்ளது.*]*

ஆண்திறல் *āṇtiral,*பெ.(n.) திறன் சான்ற ஆண்மகன்; strong brave talented male.

பெங். மண்; அண்ட்ரென். Gk.*anūr, āndros. து.ஆண்சேவு.*

[ஆண்+ திறல்]

ஆண்பாற்பெயர் *āṇpāṟpeyar,*பெ.(n.)ஆண், ஆண்விலங்கு ஆகியவற்றைக் குறிக்கும் சொல்வடிவம்; masculinenoun.

[ஆண்பால்+பெயர்.]

ஆண்பால் உயர்திணை: ஆண், ஆடவன், ஆடூஉ, ஆண்பிள்ளை, ஆண்மகன், மகன், மாந்தன்.

ஆண்பால் அஃறிணை: ஆண், அப்பர், இரலை, உதள், ஏறு, ஏற்றை, ஒருத்தல், கடா, கடுவன், கண்டி, கலை, களிறு, காளை, சலகன், சே, சேவல், தகர், புகல், போத்து, மோத்தை, விடை. (த.வ.1,139).

அஃறிணை: ஒன்றன் பாலில் பெரும்பாலும் ஆண்பால் பெண்பால் வேறுபாடு இருக்காது என்றாலும் சில சொற்கள் பால் வேறுபாட்டினைக் காட்டுகின்றன. எழுவாயாக வரும் இச்சொற்களுக்கு இணையாக வினைமுற்றில் பால் வேறுபாடு இருக்காது.

ஆணடிகண்மார் *āṇaḍikaṇmār,* பெ. (n.) ஆண்துறவியர்; mendicants. *"ஆணடிகன் மார்க்கு நியத நெல்லு முக்குறுணியாக"* (SII, xiv, p. 86.)

[ஆண்டிகள்+மார்]

ஆணடிமை *āṇaḍimai,* பெ. (n.) அடிமையான ஆண்;a male slave. *"இவர் தம்முடைய கல்லியாண இடுவித்த ஆணடிமை பெண்ணடிமையால் இருநூறு அடிமையும்"* (VCR, xviii, p. 16-19.)

[ஆண்+அடிமை]

ஆண்பண்புள்ளஒயிலாட்டம் *āṉ-paṇbuḷḷa-oyilaṭṭam,* பெ. (n.) ஒயிலாட்டத்தின்

வகைகளில் ஒன்று; (60 : 53.). a kind of 'oyil' dance.

[ஆண்+பண்பு+ஒயிலாட்டம்]

ஆணத்தி *āṇatti*, பெ. (n.) செப்பேட்டு ஆணையைக் குறிப்பிட்ட ஊருக்கு யானை மீது ஏறிச்சென்று சேர்ப்பிக்கும் அதிகாரி; announcing authority of royal proclamation being seated on elephant.

[ஆவணம் – ஆவணத்தி – ஆணத்தி]

ஆணவக்கை *āṇavakkai*, பெ. (n.) நாட்டியத்தில் இரட்டை கைகளின் ஒரு பிரிவு; (35 : 201.).a dancing pose.

[ஆணவம்+கை]

ஆணி *āṇi*, பெ. (n.) யாழின் உறுப்புகளில் ஒன்று; (1:24.).a part of *yāl*.

[ஆண்+ஆண்+ஆணி]

ஆணிகிழவன் ஏறன்பிச்சன் *āeṇikilavan ēṟanpiccan*, பெ. (n.) விக்கிரம சோழன் ஆட்சியில் அரியாவூர் அவையில் இருந்த ஓர் உறுப்பினன்(1125); a member of āriyavūr assembly of vikirama cholan.

[ஆணி + கிழவன்]

ஆணெல் *āṇel*, பெ. (n.) நெல்லாக இறுக்கும் வரி; paddy paid as tax. "தலையரையும் ஆணெல்லும் திங்கட்சோறும்" (sii.vi.p.324.).

[ஆணை+நெல்]

ஆத்தமனையாள் *āttamaṉaiyāl*, பெ. (n.) பொற்றாலி புனைந்து கைக்கொண்ட மனையாள்; bride, who adorned golden *tāli*, while performing marriage ceremony. "ஆத்த மனையா ளகத்தி லிருக்கவே காத்த மனையாளைக்கா முறுங்காளை"(திருமந்.244)

[யாத்த – ஆத்த + மனையாள்]

ஆத்து–தல் *āttu-*, செ.கு.வி. (v.i.) அமுக்கிக் கொள்ளுதல்; ஏமாற்றுதல். to cheat. *"கொடுத்த பணத்தை ஆத்திவிட்டான்".*

[ஆற்று – ஆத்து]

ஆத்தோடை *āttōḍai*, பெ. (n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[ஆற்று → ஆத்து + ஒடை]

ஆதரம் *ādaram*, பெ. (n.) ஓடக்கூலி; boat fare.

[ஆது–(ஓடம்,தெப்பம்)ஆதரம் (ஓடக்கூலி)]

ஆதன் *ādaṉ*, பெ. (n.) புலவர் அழிசியாரின் தந்தையான சோழ நாட்டுப் புலவர்; a Chola country poet, poet *Aḷiši's father*.

ஆதனம் *ādaṉam*, பெ. (n.) ஓகநூல் கூறும் இருக்கை நிலை; a yogic posture. "பங்கய மாதி பதந்தபல் ஆதனும் அங்குள வாம்இரு நாளும்" (திருமந்.540)

[ஆதன் + அம் → ஆதனம். இச்சொல் 'ஆசனம்' என வடமொழியில் திரிந்தது.]

ஆதனவினி *ādaṉaviṉi*, பெ. (n.) கொங்கு சேர அரசர் மரபுவழியைச் சேர்ந்தவன்; a king of Kongu Chera dynasty.

[ஆதன் + அவினி]

ஆதனூர் *ādaṉūr*, பெ. (n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkurichi Taluk.

[ஆதன்+ஊர்]

ஆதாரம் *ādāram*, பெ. (n.) (ஆறாதாரங் களுக்கும் ஆதாரமான) சுழி முனை நாடி; oint of eternal bliss. "ஆதாரத் துள்ளே அறிந்து சிவனும்ருவைப் பேதமற அர்ச்சிக்கும் ஆறு" *(ஔவைக்குறள்74)*

[ஆது – ஆதாரம்]

ஆதாளை *ātaḷai*, பெ. (n.) ஒரு வகை மூலிகைச் செடி; a kind of herbal plant.

[அதளை–ஆதாளை]

ஆதிஇலட்சியங்கள் *ādiilaṭciyangaḷ*, பெ. (n.) தியாகராச சுவாமிகள் முத்துசுவாமி தீட்சிதர் சியாமா சாத்திரிகள் ஆகியோர் இயற்றிய பாடல்களின் இசை மரபு. (1 :70); musical tradition of the trios Thiyagaraja swamigal Muthuswami Decttidar and Syama swamigal.

[ஆதி+இலட்சியம்+கள்]

ஆதிக்கேழல் *ādi-k-kēḻal*, பெ. (n.) பன்றியாகத் தோற்றரவு செய்த திருமால்; incarnation of

Vishnu as a pig. *"திருமாலாதிக் கேழலாகி யாதுஞ்சலியா"* (sii, iii, p. 64.)

[ஆதி+கேழல்]

ஆதிச்சநல்லூர் *ādicca nallūr,* பெ.(n.) ஆதித்த நல்லூர் பார்க்க; see *ādittanallur*

[ஆதித்த–ஆதிச்ச+நல்லூர்]

ஆதிசாரம் *ādisāram,* பெ. (n.) சிற்பக்கலை இலக்கணங்களைக் கூறும் நூல்; treatise on music.

[ஆதி+சாரம்]

ஆதித்தகுட்டி *ādittakuṭṭi,* பெ. (n.) 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சோழ நாட்டு அதிகாரி; an officer of *Choḷa* country during 9th century.

[ஆதித்தன் + குட்டி]

ஆதித்த நல்லூர் *āditta nallur,* பெ. (n.) பொருநை ஆற்றங்கரையிலிருந்த தென் பாண்டி நாட்டுத் தொல்பழங்கால நகரம்; சிந்துவெளி நாகரிகத்துக்குச் சம கால நாகரிகத் தொல்பொருள் ஆய்விடம்; an ancient city on the river Porunai of south Pandiy a kingdom, an archaeological site of Indus valley period.

[ஆதித்தன்+நல்லூர்]

ஆதித்தன்உய்யவந்தான் *adittanuyyavan dāṉ,* பெ. (n.) 1124–ல் வாழ்ந்த சோழ அதிகாரி; an officer of *Choḷa* country during 1124.

[ஆதித்த+உய்யவந்தான்]

ஆதிவாயிலார் *ādivāyilār,* பெ. (n.) பரத சேனாபதியம் எனும் இசை நூலின் ஆசிரியர்; (1: 16).author of paradasenapatiyam.

[ஆதிவாயில் + ஆர்]

ஆதிறைப்பாட்டம் *ādiṟai-p-pāṭṭam,* பெ. (n.) கால்நடைகளின் மீது இடப்பட்ட வரி; tax for cattles (தெ.கோ.சா. 3 : 2).

[ஆ+திறை+பாட்டம்]

ஆதீண்டுகுற்றி *ātīṇḍukuṟṟi,* பெ.(n.) ஆக்கள் முதுகைத் தேய்த்துக் கொள்ள ஏதுவாக நட்டு வைத்திருக்கும் கல்; stone erected to facilitate cattle for rubbing body.

மறுவ மாடுரசுகல்.

[ஆ+தீண்டு+குற்றி]



ஆது *ādu,* பெ. (n.) தெப்பம், புணை; boat.

[ஆ–(ஆதுதுதல்–(முன்செல்லுதல்) ஆது]

ஆதுவம் *āduvam,* பெ. (n.) யாழுக்கு நேரும் நான்கு குற்றங்களில் ஒன்று; (35 : 116.).a defect in harp.

[ஆற்று+ஆத்து+ஆதுவம்]

ஆந்துபோ–தல் *āndupō-,* செ.கு.வி. (v.i.) பயிர் முளைத்து மேல் மழை இல்லாமல் கருகிப் போகும் நிலை; (இ.வ.). to fail as of crop.

[அவிந்து – ஆந்து + போ–,]

ஆந்தூங்கி *āntūṅgi,* பெ. (n.) சோம்பேறி; lazy fellow. *'அவன் ஆந்தூங்கிப் பயலாயிற்றே; அவனை வேலைக்கு வைக்கலாமா?"*

[அறு–ஆ+தூங்கி]

ஆந்தைக்கூட்டம் *āndaik-kūṭṭam,* பெ. (n.) கொங்குவேளாளர் குலத்தைக் குறிக்குஞ் சொல்; a class among Kongu Vellalas.

[ஆந்தை+கூட்டம்]

ஆப்பாடி *āppāḍi,* பெ. (n.) கடலூர் மாவட்டத்தில் கொள்ளிடத் தென்கரையில் அமைந்த ஓர் ஊர் திருவாப்பாடி என அழைக்கப்படுகின்றது. name of the village in cuddalore kolliodam south shore.

[ஆய் + பாடி]

ஆப்பிராய் *appirāy,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvādānai Taluk.

ஆப்பு *āppu,* பெ. (n.) உழவுக் கருவிகள் ஆடாமல் இருப்பதற்குச் செருகும் சிறிய மரக் குச்சி; (வ.வ.வே.க.12.).a supporing piece of wood.

[அகப்பு–ஆப்பு]

ஆம்பல் *āmbal,* பெ. (n.) ஆம்பல் மலர் அடியாகப் பெயர் பெற்ற பண்; a musical note.

[அம்பு–அம்பல்+ஆம்பல்]

ஆம்பூர் *āmbūr,* பெ.(n.)வேலூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in vellore district.

[ஆண்மையூர்→ஆம்பூர்]

ஆம்போதி *āmbōdi,* பெ. (n.) அவினாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Avināsi Taluk.

[அறவன் + போதி]

ஆமக்கண் *āmakkaṉ,* பெ. (n.) கணவன் என்பதைக் குறிக்கும் நெல்லை வட்டாரச் சொல்; (64 : xv).;husband.

[ஆண்+மகன்]

ஆமந்தகடவு *āmandakadavu,* பெ. (n.) உடு மலைப்பேட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Udumalpettai Taluk.

[ஆ+மந்தை+கடவு]

ஆமாஞ்சி *āmāñji,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantāngi Taluk.

[ஆ+(மந்தை)மந்தி–மஞ்சி]

ஆமாத்தூர் *āmāttūr,* பெ. (n.) கடலூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்.name of the village in cuddalore.

[ஆ + மாத்தூர்]

ஆமூர் *āmūr,*பெ.(n.)நாகை மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். a village in Nagai district.

[ஆவூர் – ஆமூர்]

ஆமை[1] *āmai,* பெ. (n.) சிற்பங்களில் உள்ள ஒரு வகையான மார்பணி; an ornament design in sculpture.

[அம் – ஆமை]

ஆமைக்கொடாப்பு *āmaikkodāppu,* பெ. (n.) இரவில் காவலுக்குத் தங்குபவர்களுக்கான கூண்டுக் கொடாப்பு; (கொ.வ.வ.சொ.15.).a semi circular shelter for nightwatch.

[ஆமை+கொடாப்பு]



ஆமைபிரக்கி *āmāipirakki,* பெ. (n.) அருப்புக் கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[ஆவு (மாடு) – ஆவை – ஆமை + பெருக்கி]

ஆய்குடி *āykudi,* பெ. (n.) பொதிய மலைச் சாரலில் உள்ள ஓர் ஊர்; a village in Podiyamalai slope.

[ஆய்+குடி]

ஆய்முதுகுடி *āymudukudi,* பெ. (n.) தொன்முது தமிழ்க்குடி வழியினருள் குறிப்பிட்டுக் கூறப்படும் ஆய்மரபினர்; āydynasty of the Chera kings being the oldest.)

[ஆ –மாடு, ஆனிரை.ஆ –ஆய்– ஆயர் குடிப்பெயர். வடபுலத்தில் இம்மரபினர் யாதவர் எனப்பட்டனர்.]

ஆய்ந்துவிடு–தல் *āynduvidu-,*செ.குன்றாவி. (v.t.) கரவடமாகக் கவர்தல்;to take away stealthily. "*அகழிக்கு இடங்கொடுத்து அவள் ஆய்ந்து விட்டால் என்ன செய்வது?*"

[அகைந்து–ஆய்ந்து+விடு]

ஆய்வாளர் *āyvāḷar,*பெ.(n.)1. துறையில் தேர்ந்தெடுத்த தலைப்பில் ஆராய்ச்சி செய்பவர்;

researcher, investigator, analyst.

[ஆய்வு + ஆளர்]

ஆய்வுஅலுவலர் *āyvualuvalar,* பெ. (n.) கண் காணிப்பு அதிகாரி, inspecting officer.

[ஆய்வு + அலுவலர்]

ஆய்வுநிலை *āyvunilai,* பெ. (n.) கருத்துகள் ஆய்வு நடைமுறை, பட்டறிவு ஆகியவற்றின் அடிப் படையில் வரும் முடிவுநிலை; empirical stage.

[ஆய்வு+நிலை]

ஆய்வுநெறி *āyvuneṟi,* பெ. (n.) ஆராயக்கூடிய வழிமுறை; research methodology. இக் காலத்தில் ஆய்வுநெறி நன்கு வரையறுக்கப் பட்டதாக இருக்கிறது.

[ஆய்வு+நெறி]

ஆயக்காரன் புலம் *āyakkāranpulam,* பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Tanjavur.

[ஆயம்+காரன்+புலம், வரி தண்டுவோர் இருந்த இடம்]

ஆயதி *āyadi,* பெ. (n.) வருமானம்; income. *"ஆறு கூறினால் புரவும் ஆயதியும் பொன்னும் பெறுமாறு"* (Ei, iv, p. 32.)

[ஆய்–ஆயதி]

ஆயம் *āyam,* பெ. (n.) ஏழிசையின் பகுப்புகளில் முதல்வகை; first of the seven musical notes.

[ஆ–ஆயம்]

ஆயம் *āyam,* பெ. (n.) 1. பயன்; benefit. 2. ஆதாயம் (லாபம்); gain.

[ஆ–ஆயம்]

ஆயல் *āyal,* பெ. (n.) அரக்கோணம் வட்டத்தி லுள்ள சிற்றூர்; a village in Arakkōnam Taluk.

[ஆய் + அல்]

ஆயாக்கிரந்தை *āyākkirandai,* பெ. (n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattūr Taluk.

[ஆய் + கரந்தை]

ஆயாதிபோடு–தல் *āyādipōḍu-,* செ.கு.வி. (v.i.) வீடுகட்ட அடிமனையாகிய கடைகால் இடுதல்; to lay foundation for the building to be constructed.

மறுவ கடைகால்.

[ஆயத்தம்–ஆயத்தி–ஆயாதி +போடு]

ஆயாதிமரபு *āyadimarabu,* பெ. (n.) படிமங் களின் உயரத்தினை அமைக்க பழம் மரபு முறைகளில் ஒன்றினைத் தேர்ந்து எடுக்கும் நிலை; a traditional selection of measurement.

[ஆயாதி–மரவு]

ஆயிரங்காலத்துப்பயிர் *āyiraṅkālattu-p-ayir,* பெ.(n.) திருமணம்; marriage. "

[ஆயிரம்+காலம்+அத்து+பயிர்]

ஆயிரமங்கலம் *āyiramangalam,* பெ. (n.) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wallajah Taluk.

[ஆயிரம்+மங்கலம்]

ஆயிரவேலி *ayiravēli,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvādānai Taluk.

[ஆயிரம்+வேலி]

வரி தண்டுவதற்கு ஏந்தாகச் சோழர் காலத்தில் ஆயிரம்வேலி விளைநிலம் பரப்பு கொண்ட ஊர்கள் ஒருங்கிணைக்கப்பட்டன. அத்தகைய ஊர்த்தொகுதி ஆயிரம்வேலி எனப்பட்டது. ஆயிரவேலி அயிரூர் வனவாசி ஈராயிரம் போன்ற சொல்லாட்சிகளை நோக்குக.

ஆயிலம் *āyilam,* பெ. (n.) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Walajah Taluk.

[ஆயல் – ஆயலம் – ஆயிலம்]

ஆர்வக்கோளாறு *ārva-k-kōḷaṟu,* பெ. (n.) ஆர்வ மிகுதியால் வலிந்து செயற்படுதல்; doing things voluntarily due to over enthusiasm.

[ஆர்வம்+கோளாறு]

ஆர்வலம் *ārvalam,* பெ. (n.) திருத்துறைப் பூண்டி வட்டத்திலுள்ள ஓர் ஊர்; a village in

Tiruturaipūṇḍi. 'அவிவலம்' என்று அழைக்கப் படுகிறது.

[ஆர் (ஆத்தி) + வல்லம்]

ஆரஞ்சி *arañji,* பெ.(n.) திருவண்ணாமலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvaṇṇamalai Taluk.

[ஆர் + அஞ்சி]

ஆரணி *āraṇi,* பெ.(n.) வேலூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். a village in Vellore district.

[ஆறு+அணி. ஆறுகள் அழகு சேர்க்கின்ற ஊர்]

அத்தி மரங்கள் நிறைந்த காடாக இருந்த இடத்தைக் 'கரிகாலன்' என்ற மன்னன் கமண்டல நதி அருகே ஊராக்கியது 'ஆறு அணி'.

ஆரல்வாய் மொழி *āralvāymoḻi,* பெ.(n.) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in *Kanniyakumari.*

[ஆரல் + வாய் + மொழி]

ஆரவல்லிஆட்டம் *aravalliāṭṭām,* பெ.(n.) கரகாட்டத்தின் அமைப்பு முறை; a method of arranging 'karagam'

[ஆரவல்லி+ஆட்டம்]

ஆரவல்லிசூரவல்லி *aravallisūravalli,* பெ. (n.) கரகாட்டத்துக்கு வாசிக்கப்படும் ஆரவல்லி சூரவல்லி கூத்துப்பாடல்களின் இசை; the magic for kūttuppāḍal in karagāṭṭam.

ஆராய்தல்எழால் *ārāydaleḻāl,* பெ.(n.) எழால் வகையினுள் ஒன்று; a kind of musical notes of the yāḻ.

[ஆராய்தல் + எழால்]

ஆராயன் சோலை மண்டைநம்பி *ārāyan sōlaimaṇḍainambi,* பெ.(n.) விக்கிரம சோழன் ஆட்சிகாலத்தில் காருவா (அமாவாசை) நாள்களில் இறைவன் வீதிஉலா வரவும் அமுது மேற்கொள்ளவும் நிலம் தானமாக விடப்பட்டதற்குச் சான்றாளராக ஒப்பமிட்டுள்ளவன். (இவனுடைய காலம் 1123.); who attested for the land given to meet the expenditure for procession of deities during new moon days and offering food during the Vikkiramādittiya Chola period.

ஆராவயல் *ārāvayal,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvāḍāṉai Taluk.

[ஆராத+வயல்]

ஆரியக்கல் *āriya-k-kal,* பெ.(n.) கேழ்வரகு அரைக்கும் எந்திரக்கல்; hand-mill.

[ஆரியம்+கல்]

ஆரியக்குச்சரி *āriya-k-kuccari,* பெ.(n.) மருதத்திற்குரிய பண்வகை; (13:121.); a morning melody type peculiar to agricultural tracts.

[ஆரியம்+குச்சரி]

ஆரியக்கூத்தாடிகள் *āriya-k-kūttaḍigaḷ,* பெ. (n.) தொம்பக் கூத்தினை நிகழ்த்துகின்ற கலைஞர்கள்; folklorsts of northern style.

[ஆரியக்கூத்து+ஆடிகள்]

ஆரியத்தாள் *āriya-t-tāḷ,* பெ.(n.) கேழ்வரகுத் தட்டை; stalk of ceusive coracana.

[ஆரிய(ம்)+தாள்]

ஆரியப்படை *āriya-p-paḍai,* பெ. (n.) வட புலத்தில் கூட்டுக் கொள்ளையராக இருந்த குழுவினர் (யௌதேயர்); The army of robbers. ஆரியப் படை கடந்த நெடுஞ் செழியன் (சிலம்பு) ஆரியப்படையின் உடைந்து (அகம்.336–19).

[ஆரியம்+படை]

இராசத்தானம், மத்தியப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் இருந்த ஆறலைக் கள்வர். சோகியாபர் (Johia bar) எனும் ஊரின் பெயரால் வடமொழியில் யௌதேயர் என்று குறிப்பிடப்பட்டனர்.

ஆரியப்படையூர் *ariyapadaiyūr,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள ஓர் ஊர்; a village in Tanjavur near kumbakonam.

[ஆரியப்படை + ஊர்]

ஆரியர்கயிறாடுபறை *āriyarkayirāḍuparai,* பெ.(n.) பறைவகையினுள் ஒன்று; (35:135.); a kind of drum.

[ஆரியர்+கயிறு+ஆடு+பறை]

ஆரோசை *ārōsai,* பெ.(n.) சுரநிரல்களில் ஒன்று; a musical note.

[ஆர்+ஓசை]

ஆலக்கொடி *ālakkoḍi,* பெ. (n.) நான்கு இலைகளைக் கொண்ட படர்கொடி; (வ.வ.வே.க. 12.). climber of four leaves.

[ஆலை – ஆல + கொடி]

ஆலக்கோயில் *āla-k-koil,* பெ. (n.) சிற்பச் செய்திகளைப் புரிந்துகொள்ள துணை செய்யும் கோயில் வகை; a type of temple construction.

ஆலங்காட்டாண்டி *ālaṅkāṭṭaṇḍi,* பெ. (n.) கூத்து வகையினுள் ஒன்று; (136 :.); dance variety.

[ஆலங்காடு+ஆண்டி]

ஆலக்குழி *āḷakkuḷi,* பெ. (n.) ஆலைக்குழி, பனைவெல்லப்பாகு காய்ச்ச வெட்டப்படும் பெரிய குழி; (கொ.வ.வ.சொ.16.). a pit dug make a lug oven.

[ஆலை+குழி]

ஆலங்கட்டி *āḷaṅkaṭṭi,* பெ. (n.) மழைபெய்யும் போது உறைந்து கட்டியாகி விழும் பனிக் கட்டிகள்; (கொ.வ.வ.சொ.16.);hail.

[ஆலி–ஆலம்+கட்டி]

ஆலங்காயம் *ālaṅgāyam,* பெ. (n.) திருப் பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[ஆலம் + (காயன்) காயம்]

ஆலங்காத்தான் *alaṅgāṭṭāṉ,* பெ.(n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[ஆலம் + காத்தான்]

ஆலச்சட்டி *āla-c-caṭṭi,* பெ. (n.) மாவு, கூலங்கள் போன்றவற்றை வைத்துக் கொள்ள பயன்படுத்தி வந்த பெரிய மண்பாண்டம்; receptacle pot.

[ஆல(ம்)+ சட்டி.]

ஆலத்தூர் *ālattūr,* பெ. (n.) திருநள்ளாற்றுக்குத் தெற்கே 6 கி.மி. தொலைவிலுள்ள ஓர் ஊர்.a village south to Tirunḷḷāar.

[ஆலம் + அத்து + ஊர்]

ஆலத்தூர் கிழார் *ālyattūr kilār,* பெ. (n.) கிள்ளிவளவனைப் பாடிய கழகக்காலப் புலவர்; a poet of kaazham (sangam) a period.

[ஆலத்தூர்+கிழார்]

ஆலயத்தாளம் *ālayattāḷam,* பெ. (n.) பறை வாசிப்பின் ஒரு வகை; a kind of temple drum.

[ஆலயம்+தாளம்]

ஆலமரம் *ālāmaram,* பெ. (n.) கியாக் கியாக் குருவி விளையாட்டில் பயன்படும் சொல்; (த.நா.வி.).a word used in child's play.

[ஆலம் + மரம்]

ஆலமுண்டி *ālamuṇḍi,* பெ. (n.) காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். a village in Kancheepuram.

[ஆலம் + உண்டி (உண்டவன்]

ஆலவேலி *ālaveli,* பெ.(n.) மயிலாடுதுறை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mayiladuturai Taluk.

[ஆலம்+வேலி]

ஆலன்விளை *ālaṉviḷai,* பெ. (n.) அகத்தீசுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheesuvaram Taluk.

[ஆலம்+விளை]

ஆலாடு *ālāḍu,* பெ. (n.) பொன்னேரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ponneri Taluk.

ஆலாத்திகுருவி *āḷātti-k-kuruvi,* பெ. (n.) வயல் வெளிகளில் நண்டைத் தின்னும் ஒரு வகைக் குருவி; (கொ.வ.வ.சொ.16.).a kind of sparrow.



[ஆலாத்தி+குருவி]

ஆலாம்பாடி *ālāmpādi,* பெ. (n.) ஒரு வகை மாடு; (கொ.வ.வ.சொ.16.).a cow variety.

[ஆலம்+பாடி]

ஆலி *āli,* பெ. (n.) ஆலியாட்டத்திற்காகச் செய்யப்படும் மிகப்பெரிய மாந்தருவப் பொம்மை; a doll in the shape of a man.

[ஆல்–ஆலி]

ஆலிடம் *āliḍam,* பெ. (n.) நடனத்தில் இடம் பெறும் ஒருவகைக் கால் நிலை; a step or a leg posture in play.

[அகல் + இடம்]

ஆலியாட்டம் *āliyāṭṭām,* பெ. (n.) அச்ச மூட்டும் பேய் பூதவுருவங்களைத் தாங்கியாடும் ஆட்டம்; a dance with devil posture.

[ஆலி+ஆட்டம்]

ஆலேந்தல் *ālēndal,* பெ. (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[ஆல்+ஏந்தல் (ஏரி)]

ஆலை *ālai,* பெ. (n.) கைத்தறி நெசவில் நூலைப்பாவு ஆக்குவதற்கு உதவும் உருளை; ஒருவகைக் கால் நிலை; a device in handloom weaving.

[ஆல்(சுற்றுதல், சுழற்றுதல்–ஆலை]

ஆவஞ்சி *āvañji,* பெ. (n.) மாட்டின் அடிவயிற்றுத் தோலாற் மூடப்பட்ட இடக்கையாகிய பறை; a kind of drum.

[ஆ+வஞ்சி (இளந்தோல்)]

ஆவலம் *āvalam,* பெ.(n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkōyilur Taluk.

[ஆ+வல்லம்]

ஆவனம் *avaṇam,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādānai Taluk.

[ஆ+வனம்]

ஆவாகுளம் *āvākuḷam,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantāngi Taluk.

[ஆவி+குளம்]

ஆலேந்தல் *ālēndal,* பெ. (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[ஆல்+ஏந்தல்]

ஆவிச்சட்டி *āvi-catti,* பெ. (n.) பிட்டு செய்யப் பயன்படும் சட்டி; (ம.வ.சொ. 70.); a vessel to steam 'pittu', a kind of confectionery.

[ஆவி+சட்டி]

ஆவிடையார்கும்மி *āviḍaiyārkummmi,* பெ. (n.) கும்மிப் பாடலிற் ஒரு வகை; a kummi play.

[ஆவுடையார்+கும்மி]

ஆவியூர் *āviyūr,* பெ.(n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[ஆவி + ஊர்]

ஆவிப்பதனம் *āvi-p-padanam,* பெ. (n.) நீராவியினால் பதப்படுத்துகை; steam curing.

[ஆவி + பதனம்]

ஆவியார் *āviyār,* பெ.(n.) பழனியை ஆண்ட வேளிர் மரபினர்; a Veḷir ruler of Paḻaṇi.

[ஆவி + ஆர்]

ஆழ்வார் *āḻvār,* பெ. (n.) அரையர் இன மக்கள் தாளத்தைக் குறிக்க வழங்குஞ் சொல்; (4 : 24).

a term used for symbol by `Aryar' people. 2.சேவைப்பலகையைக் குறிக்க அரையர்கள் வழங்கும் சொல்;

[ஆள் – ஆழ் + வார்]

ஆவூர் *āvūr,* பெ.(n.) இப்போது ஆனூர் என்று அழைக்கப்படுகிற கொங்குநாட்டில் உள்ள ஓர் ஊர்; a village in Kongunadu.

[ஆ + ஊர்]

ஆள்கட்டு *āḷkaṭṭu,* பெ. (n.) ஆள்பலம்; (கொ.வ.வ.சொ.16.); man power.

[ஆள்+கட்டு]

ஆழளவை *āḻaḷavai,* பெ. (n.) கடலின் அழத்தை அளவிடும் கருவி; sonar equiment.

[ஆழ்+அளவை]

ஆள்குடி *āḷkuḍi,* பெ. (n.) ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆட்சியாளர் தொடர் வரிசை, அரசர்களின் வழிவழிமரபு; dynasty.

[ஆள்+குடி]

ஆள்திறன் *āḷtiṟan,* பெ. (n.) திறனாளன்; capable person.

[ஆள்+திறன்]

ஆள்நிலம் *āḷnilam,* பெ. (n.) ஒரு நாட்டிற்குச் சொந்தமான நிலப்பகுதி, நாட்டாட்சிப் பரப்பு, நாட்டுரிமை எல்லை; territory.

[ஆள்+நிலம்]

ஆள்வார் *aḷvār,* பெ. (n.) படப்புக்குப் பக்கத்தில் இருபுறமும் இருக்கும் இடம்; side places adjacent to a hay rick.

[ஆள்+இ+ஆர்]

ஆள்படி *āḷpaḍi,* பெ. (n.) கூலி; wage.

[ஆள்+படி]

ஆளமுட்டு *āḷamuṭṭu,* பெ. (n.) ஆள் உயர நீராழம்; fathom depth.

[ஆள்+அம்மட்டு]

ஆளார்ப்பச்சாலி *āḷārppa-c-cāli,* பெ. (n.) அகலமாகச் சேர்த்து ஒலிக்கப்படுவது; group singing.

ஆளிக்குட்டி *aḷikkuḍi,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvāḍāṉai Taluk.

[யாளி – ஆளி + குடி]

ஆளித்திடல் *āḷittiḍal,* பெ. (n.) சிப்பியின் படுகை; oyster bed.

[ஆளி + திடல்]

ஆள்கட்டு *āḷkaṭṭu,* பெ. (n.) ஆள் வலிமை; (கொ.வ.வ.சொ.16.); man power.

[ஆள்+கட்டு]

ஆளும்கட்சி *āḷumkaṭci,* பெ. (n.) மக்களாட்சி அமைப்பில் பெரும்பான்மை நேரி (வாக்கு) களைப் பெற்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் கட்சி; ruling party.

[ஆளும்+கட்சி]

ஆளுமை *āḷumai,* பெ. (n.) மாந்தனொருவனின் தனிப்பட்ட குணத் தொகுப்பு; personality, individuality.

[ஆள் → ஆளுமை]

ஆளுநர் *āḷunar,* பெ. (n.) நடுவண் அரசால் பரிந்துரைக்கப்பட்டுக் குடியரசுத் தலைவரால் அமர்த்தம் பெறும் மாநில ஆளுவ (நிருவாக)ப் பொறுப்புடைய தலைவர்; a person appointed by the president to govern a state, governer.

[ஆள் → ஆளுநர்]

ஆளுவர் *āluvar,* பெ. (n.) 1. துளு நாட்டு மன்னர்பெயர்; name of the chieftains of Thulu nadu. 2.அலுவலகப் பணிகளுக்காகக் ஆனது குறிப்பிட்ட நிறுபவனத்தை மேற்

பார்க்கும் ஆளுவ(நிருவாக) அதிகாரி; administrative officer, executive officer.

[ஆள்–ஆளுவர்]

ஆளேறும்திலா *ālerumtilā,* பெ. (n.) ஒரு வகையான ஏற்றப்பாடல்; a kind of 'ērram' song.

[ஆளே+ஏறும்+துலா]

ஆற்றமாட்டாதவன் *ārramāṭṭādavan,* பெ. (n.) இயலாதவன்; one who is incapable. *"ஆற்றமாட்டாதவனை இங்கிருந்து போகச் சொல்" (இ.வ.)*

[அற்று–ஆற்ற+மாட்டாதவன்]

ஆற்றுக்குகை *ārru-k-kugai,* பெ. (n.) ஆற்றின் கரை; river bank. *(தொ.கோ. சா.3:2)*

[ஆறு →ஆற்று + குகை]

ஆற்றுக்குலைத்தலைவாய் *ārry-k-kulai talaivāy,* பெ. (n.) ஆற்றங்கரையில் உள்ள தெரு; river bank street. *"கீழ்க் கோடிய வாய்க்காலுக்கும் ஆற்றுக் குலைத் தலைவாயின் நிலத்துக்கும்"* (SIIi, xix, p. 321.)

[ஆற்றுக்கு+உலை+தலைவாய்]

ஆற்றுவண்டல் *ārruvaṇḍal,* பெ. (n.) ஆற்றோரா இருக்கும வண்டல் பகுதி;haugh.

[ஆற்று + வண்டல்]

ஆறறிவு *ārarivu,* பெ. (n.) பகுத்தறியும் திறன்; rational faculty, sixth sense. *"ஐந்தறிவுள்ள விலங்குகளை ஆறறிவுள்ள மனிதனால் வெல்ல முடியாதா என்ன?"*

[ஆறு + அறிவு]

ஆற்றுவரம்பு *ārruvarambu,* பெ. (n.) கல்குளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kalkulam Taluk.

[ஆறு+வரம்பு]

ஆறுசல்லைக்கயிறு *ārusalaikkayiru,* பெ. (n.) (வடம்) ஆறு பெரும் புரிகளைக் கொண்ட கயிறு; (ம.வ.தொ. 70.).; rope which has six big strands.

[ஆறு+சால்வை+கயிறு]

ஆறுசல்லைக்கயிறு *ārusalaikkayiru,* பெ. (n.) (வடம்) ஆறு பெரும் புரிகளைக் கொண்ட கயிறு; (ம.வ.தொ. 70.).; rope which has six big strands.

[ஆறு+சால்வை+கயிறு]

ஆறுபாதி *arupādi,* பெ.(n.) மயிலாடுதுறை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mayilāḍuturai Taluk.

[ஆறு + பாதி]

ஆனந்தக்களிப்பு *ānanta-k-kaḷippu,*பெ.(n.) சித்தர்கள் தோற்றுவித்த ஒருவகை இசைப் பாடல்; a rythm designed by Siddhas.

[ஆனந்தம் + களிப்பு]

ஆனந்தை *ānandai,* பெ. (n.) குறிஞ்சிக்குரிய முப்பத்திரண்டு பண்களில் ஒன்று; one of thirty two 'kurinjipan'

[ஆனந்தம் + ஐ]

ஆனமானத்திரி *ānamāanattiri,* பெ.(n.) துணியால் முறுக்கிச் செய்த திரி கொண்டு விளையாடல்; a play with twisted of cloth.

ஆயி *āyi,* பெ. (n.) தாலாட்டுச் சொல்; a term used while singing lullaby to make a child to sleep. *"இச்சொல்லையே திரும்பத் திரும்பச் சொல்லிப் பாடுவது வழக்கம்."*

[ஆ + இ]

இ

இங்கட்கு *ingaṭku,* பெ. (n.) எங்களுக்கு; to us. *"சிந்தையினாலிய விங்கட்கிது நன்றெனா"* (SII, xiv, p.44.)

[எங்கள்+கு]

இசலானி *isalāni,* பெ. (n.) அரக்கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arokkōṇam Taluk. (இ.வ.)

[இசல்+அணி]

இசலிமடை *isalimaḍai,* (பெ.) (n.) அருப்புக் கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk. (இ.வ.)

[இகலி+இசலி+மடை]

இச்சிலாத்தி *iccilātti,*(பெ.)(n.) மன எரிச்சல், அமைதி கொள்ள முடியாமை; irritational mood.

மறுவ:அச்சலாத்தி.
[அச்சலாத்தி–இச்சலாத்தி]

இசுவல் *isuval,* (பெ.) (n.) இடையூறு தொல்லை; hinderance. "இசுவல் இல்லாமல் இருக்க வேண்டும்"

மறுவ. இடுக்காட்டம்.

[இழுவல்+இசுவல்]

இசைமணி *isaimaṇi,* (பெ.) (n.) தாளத்திற்குப் பயன்படும் சிறு சதங்கைகள்; small silver bells for steps in dance.

[இசை+மணி]



இசைமை *isaimai,* (பெ.) (n.) தொழில் முறைபாணி; professional method.

[இசை+மை]

இசைவேளாளர் *isaivēḷāḷar,* (பெ.) (n.) கோயில் மேளக்குழுவில் தவில் வாசிக்கும் இசைக்கலைஞர்; drummers in temple.

[இசை+வேளாளர்]

இட்டகவேலி *iṭṭagavēli,* (பெ.) (n.) கல்குளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kalkulam Taluk. (இ.வ.)

[இட்டகம்+வேலி]

இட்டிகைப்படை *iṭṭigai-p-paḍai,* பெ. (n.) செங்கல் கட்டடம்; house built by bricks. *"இத்தேவர்க்கு முன்னிட்டிகைப் படையாலுள்ள ஸ்ரீகோயிலை"* (SII, xix, p.292.)

[இட்டிகை+(படு)படை]

இடங்கன்சாலை *iḍangansālai,*(பெ.) (n.) திருச்செங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruchengode Taluk. (இ.வ.)

[இடங்கன்+சாலை]

இடம்பாடிகள் *iḍampāḍigaḷ,*(பெ.) (n.) வில்லுப்பாட்டு பாடுவோரில் ஒரு பிரிவினர்;a sect of singers of bow song.

[இடம்+பாடி]

இடமுறை *iḍamuṟai,* (பெ.) (n.) வட்டப் பாலையில் ஏழுபாலைகள் பிறக்கின்ற முறை; a feature in musical note.

[இடம்+முறை]

இடிவிலகி *iḍivilagi,* (பெ.) (n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk. (இ.வ.)

[இடி+விலகி]

இடுக்கை *iḍukkai,*(பெ.) (n.) உடுக்கையின் பண்டைய பெயர்; (12:16); a name of 'udukkai'

இடுகட்டி *idukkatti*,(பெ.) (n.) குறவன் குறத்தியாட்டத்தில் பயன்படுத்தப்படும் ஓர் இசைக்கருவி; a musical instrument, used in kuravan kurattiyattam.

[இடு+(கொட்டி) கட்டி]

இடுகுபறை *iduguparai*, (பெ.) (n.) ஒருவகையான பறை; a kind of drum.

[இடுகு+பறை]

இனவன் *inavan*, பெ. (n.) தன் இனத்தான்; man of same group. இவன் எங்கள்இனவன் (இ.வ.)

[இனம்+அவன்]

இடைச்செறி *idaicceri*, (பெ.) (n.) ஒரு வகையான கையணி; a kind of hand ornament.

[இடை+செறி]



இடைசுருங்கிப்பறை *idaisuruṅgipparai*, (பெ.) (n.) திமிலையின் வேறொருபெயர்; an another name of Timilai.

[இடை+சுருங்கி+பறை]

இடைத்தரகர் *idai-t-taragar*, (பெ.) (n.) பெரும்பாலும் வணிகவொப்பந்தம் போன்ற பெரும் பேரத்தை முடித்து வைப்பவர்;middle man.

[இடை+தரகர்]

இடைநாழிகை *idaināligai*, பெ. (n.) சிற்பக் கலையில் அர்த்த மண்டபச் சுவரைக் குறிக்குஞ் சொல்; a name for the wall of ardhamandapa in architecture.

[இடை+நாழிகை]

இடைபனுவலியர் *idaippanuvaliyar*, பெ. (n.) வாய்மொழி இலக்கியத்தில், தாமே புதிய புதிய அடிகளைக் கோப்பவர்; introduction in a oral song.

[இடை+பனுவல்+இயர்]

இடைபெருத்தபறை *idaipperuttaparai*, பெ. (n.) பறை வகையினுள் ஒன்று; a kind of drum.

[இடை+பருத்த+பறை]

இண்டாவி *indāvi*, பெ. (n.) திறன், ஆற்றல்; energy to do work. "அங்கே போய்ச் சேர்வதற்குள் நம்ம இண்டாவி அற்றுப் போய்விடும் போலுள்ளதே" (இ.வ.)

[ஈண்டு+ஆவி]

இண்டை *indai*, பெ. (n.) சிவனின் சிற்பத்தில் காணப்பெறும் மாலை வகை; (5 : 74) a flower decoration in sculpture of siva.

[இண்டு–இண்டை].

இணை *inai*,பெ. (n.) ஏழிசைத் தொகுதியில் இரண்டாமிசையையும், ஏழாமிசையையும் குறிக்குஞ்சொல்; a name of musical note.

[இள்–இண்–இணை]

இணைப்பறடு *inaipparadu*,பெ. (n.) சமமான நகங்களைக் கொண்டதாகக் கால்களை வைத்து கைகளைக் கொடிபோலத் தொங்குவிட்டு உடலை இயல்பாக வைத்தாடல்; a dance pose.

[இணை +பறடு]

இணைமுகப்பறை *iṇaimugappaṟai,* பெ. (n.) இரண்டு பக்கமும் ஓசையெழுப்பும் முழவுகளின் பொதுப் பெயர்; double side drum.

[இணை+முகம்+பறை]



இணைவிழைச்சுத்தன்மை *iṇaviḷaccuttaṉmai,* பெ. (n.) நாட்டுபுறக் காதற் பாடல்களில் உள்ள ஒரு கூறு; a feature in folk dance.

[இணைவிழைச்சு+தன்மை]

இணைவிழைச்சுப்பொருண்மை *iṇai viḷaiccupporuṇmai,* பெ. (n.) நாட்டுப் புறக் காதல் பாடல்களில் உள்ள ஒரு கூறு; theme of love in folk dance.

[இணை+விழைச்சு+பொருண்மை]

இதம்பாடல் *idampāḍal,* (பெ.) (n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukalattur Taluk. (இ.வ.)

[இதை–இதம் + பாடல்].

இதழ்முனை *itaḷmuṉai,* (பெ.) (n.) சிறப்புச் சிறப்பையுணர்த்த இசைத்தூண்களின் உச்சியில் அமைக்கப்பெறும் முனை; top decordation in pillars of temple.

[இதழ்+முனை]

இந்தளம் *indaḷam,* (பெ.) (n.) பகற்பொழுதுக் குரிய பண்வகை; music for day time.

[ஒருகா. இன்+தாளம்]

இந்திரகாளியம் *indirakāḷiyam,* (பெ.) (n.) இசைநூல்களில் ஒன்று; a treatise of music. (1:16).

[இந்திரகாளியன்–இந்திரகாளியம்]

இந்திரம் *iraṅtiram,* பெ. (n.) தாள முழக்கில் நேரும் தவறான இடைவெளி; a fallacy in time measure.

[இல் (துளை, பிசகு, விடுபாடு) +து– இந்து–இந்திரம்]

இந்திரமடி *indiramaḍi,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādānai Taluk.

[இந்திரம்+மடி (வயல்)]

இந்திரவிழாப்பாடல்கள் *indiraviḷāppāḍalgaḷ,* பெ. (n.) கொங்கு நாட்டில் பாடப்பெறும் உழத்தியரின்பள்ளுப்பாடல்களின் இன்னொரு வடிவம்; an another form of palluppāḍal in 'koṅgu Nāḍū'.

[இந்திரவிழா+பாடல்கள்]

இப்பரி *ippari,* பெ. (n.) இந்த வகை; this kind. *"உலகுக்குச் சந்திரனும் உள்ளளவும் அஞ்சு வண்ணம் ஸந்ததி பிர்ருதி ஸ்ரீ இப்பரி அறிவென."*

[இ+பரிசு]

இம்மாகுளம் *immākuḷam,* பெ. (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[ஒருகா. இம்மான்+குளம்]

இமிலை *imilai,* பெ. (n.) ஓர் இசைக்கருவி; a kind of music instrument.

[இம்–(இமிழ்)இமிலை]

இயக்கு *iyakku,* பெ. (n.) "மண்டிலம்" என்பதைக் குறிக்கும் வேறு பெயர்; an another name of mandilam.

[இய–இயக்கு]

இயங்கன் *iyangan,* பெ. (n.) அனைத்து வகை ஆட்டத்திற்கும் அடிப்படை நிலையாக அமைவது; common base for all games.

[இயங்கு–இயங்கன்]

இயம் *iyam,* பெ. (n.) பழம் பெரும் இசைக்கருவி; an ancient music instrument.

[இய–இயம்]

இயவு[1] *iyavu,* பெ. (n.) இசைக் கருவியின் வேறு பெயர்;a name of music instrument. 2.தாளத்தின் செலவு; step measure.

[இய–இயவு]

இரக்காபோகம் *irakkābōgam,* பெ. (n.) காவலுக்காகச் செலுத்தும் வரி; *"இரக்கா போகம் ஆட்டு கற்கடக ஞாயிற்று மகத்தினான்"* (TAS, iii, p. 159-69). a kind of tax for watching.

[இரா+காவல்+போகம்]

இரங்கிசை முரசம் *irangisaimurasam,* பெ. (n.) இரக்கத்தையுணர்த்தும் வண்ணம் கொட்டப்படும் முரசம்;a drum sound of lamentation.

[இரங்கு+ இசை + முரசம்]

இரட்டல் *irattal,* பெ. (n.) இசைமாறி ஒலித்தல்; anti note.

[இரட்டு–இரட்டல்]

இரட்டி *iratti,* பெ. (n.) ஒரு தாளக்கூறு இரண்டாகப் பெருகுதல்; a step measure.

[இரட்டு–இரட்டி]

இரட்டித்தொத்தல் *iratti-t-to-ttal,* பெ. (n.) ஒரெண்ணிக்கைக்கு இரு தட்டுகள் தட்டித் தாளம் போடுதல்; two claps for one unit.

[இரட்டித்து+ஒத்துதல்]

இரட்டைக்கை *iratti-k-kai,* பெ. (n.) அடியார்க்கு நல்லார் கூறாத இரட்டைக் கைவகை; double hand pose.

இரட்டைச்சுரப்பிறழ்ச்சிப்பண் *irattai-c-curapppralcicippan,* பெ. (n.) ஒரு வகையான பிறழ்ச்சிப்பண்; varying musical note.

[இரட்டை+சுரம்+பிறழ்ச்சி+பண்]

இரட்டைவால்கட்டுதல் *irattai-vālkattu-,* பெ. (n.) புலி ஒப்பனையில் குறிப்பிடத்தக்க ஒரு கூறு; a fashion made in tiger dance.

[இரட்டு+இரட்டை+ வால்–ஒப்பனை]

இரண்டுகளை *irandukalai,* பெ. (n.) களை வகையினுள் ஒன்றான ஒரெண்ணிக்கைக்குள் எட்டுக் குறில்கள் அடைந்து ஒலிக்கும் நேரம்.; a time duration of eight short vowels. 'தகதின தகதின'

[இரண்டு+களை]

இரண்டொத்துடைத்தாளம் *irandottudaittālām,* பெ. (n.) இரண்டு தட்டுதல்களை ஒரு தொகுதியாகக் கொண்ட தாளம்; a time mesure of double clapp.

[இரண்டு+ஒத்து+தாளம்]

இரவசேரி *iravaseri,* (பெ.) (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādānai Taluk. (இ.வ.)

[இரவு+சேரி]

இரவு *iravu,* (பெ.) (n.) இரவல்;hand loan. *'இரவு கொடுத்த நாச்சியா, இருந்து அழ விடமாட்டா?'* (பழ.)

[இர–இரவு]

இரவை *iravai,* (பெ.) (n.) இராப்போது; night. *"இரவைக்கும் குறுணியும்"* (Sii, iii 51-)

[இரவு–இரவை]

இரனியூர் *iraṉiyūr,* பெ. (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[இரணியல்+ஊர்]

இராக்காட்டி *irākkāṭṭi,* (பெ.) (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādānai Taluk. (இ.வ.)

[இரவு+காட்டி]

இராகபுடமுறை *irāgapuḍamuṟai,* (பெ.) (n.) இசைப்பாடல்களை (கீர்த்தனங்களை) எழுதுவதற்காக அடிப்படையான முறையாக ஆபிரகாம் பண்டிதரால் அறிமுகப்படுத்தப்பட்ட முறை; a method adapted for music.

[இராகம்+புடம்+முறை]

இராசதாசிகள் *irāsatāsigaḷ,* (பெ.) (n.) தூய கொடிக்கம்பத்தின் முன் பரதம் ஆடுபவர்கள்; dancers in front of flag post.

[இராச+தாசிகள்]

இராசி *irāsi,* (பெ.) (n.) நாணய வகை; a kind of coin. "ஆண்டு ஒன்றுக்கு வாடாக் கடமையாக இராசி இருபத்து அஞ்சு பணம் கடமை கொள்ளவும்" (IPS, 424)

[இராசன்+இராசி]

இராமகிருட்டிண நாயுடு *irāmakiriṭṭiṇa nāyudu,* (பெ.) (n.) பொய்க்கால் குதிரை யாட்டத்தை முதன் முதலில் கண்டு பிடித்தவர்; one who introduced poykkāl dance.

[இராமகிருட்டிண+நாயுடு]

இராமாயணச்சேவைப்பாட்டு *irāmāyaṇaccēvaippāṭu,* (பெ.) (n.) சேவைப் பாடல்களிற் ஒரு வகை; folk song.

[இராமாயணம் + சேவை + பாட்டு]

இராயபுரம்கும்மி *irāyapuramkummi,* (பெ.) (n.) ஒருவகையான கடைக்கால் கும்மிப்பாடல்; a kind of kummi.

[இராயபுரம்+கும்மி]

இருகுபிலா *irugupilā,* (பெ.) (n.) விளவங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vilavancode Taluk. (இ.வ.)

[ஒருகா. இருங்கு+பலா]

இருங்கல் *iruṅgal,* (பெ.) (n.) அரக்கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arkkonam Taluk. (இ.வ.)

[இரும் +கல்]

இருசு *irusu,* (பெ.) (n.) தேர்ப்பாகத்தில் ஒன்று; a part of temple car.

[இரு–இருசு]

இருட்டடிப்பு *iruṭṭaḍippu,* பெ. (n.) ஒரு செய்தி அல்லது நிகழ்ச்சி வெளியே தெரியாதவாறு அல்லது பரவாதவாறு மறைத்தல்; black out.

[இருட்டு + அடிப்பு]

இருள்தூங்குவறுவாய் *iruḷtūṅguvaṟuvāy,* (பெ.) (n.) யாழின் பத்தரின் உட்பகுதி; a part in the *hārp.*

[இருள்+தூங்கு+வறுவாய்]

இருதல்வாரிபட்டா *irudalvāripaṭṭā,* (பெ.) (n.) திருத்தணி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruthani Taluk. (இ.வ.)

[இரு+தலை + வரி + பட்டா]

இருப்புப்பதிவேடு *iruppu-p-padivēḍu,* பெ. (n.) கையிருப்பிலுள்ள பொருள்களின் பதிவேடு; stock register.

[இருப்பு + பதிவு + ஏடு]

இருப்புளி *iruppuḷi,* (பெ.) (n.) திருச்செங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruchengode Taluk. (இ.வ.).

[இரும்+புளி]

இரும்பிலி *irumbili,* (பெ.) (n.) 1. கல்குளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kalkulam Taluk. (இ.வ.). 2.செங்கற்பட்டு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chengelput Taluk. (இ.வ.). 3.செஞ்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Senji Taluk. (இ.வ.).

[இரும்+புளி]

இரும்பை *irumbai,* (பெ.) (n.)1. திண்டிவனம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk. (இ.வ.). 2.விழுப்புரம் மாவட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Villupuram District.

[இரும்+புளி–இரும்புளி–இரும்பை]

இருமதி *irumadi,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādānai Taluk.

[இரு+மதி]

இருமேனி *irumēṉi,* (பெ.) (n.) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ramanathapuram District.

[இரு+மேனி]

இருவணிவயல் *iruvaṇivayal,* பெ. (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[இரு+அணி+வயல்]

இருள்நீக்கி *irulnikki,* பெ. (n.) மன்னார்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in MannārgudiTaluk.

[இருள்+நீக்கி]

இரையூர் *iraiyūr,* (பெ.) (n.) திண்டிவனம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk. (இ.வ.).

[ஒருகா. இறை–இரை+ஊர்]

இல்லத்தரசி *illattarasi,* பெ. (n.) 1. மனைவி; wife. 2. குடும்பத்தலைவி; house wife.

[இல்லம் + அத்து + அரசி]

அத்து – சாரியையாக வரும் இணைப்பு இடைச்சொல்.

இல்லிப்பூடு *illi-p-p-ūḍu,* (பெ.) (n.) செஞ்சிகை பூண்டு; a kind of herb. "அருகு இல்லிப்பூடும் இராவணன் மோவாழும் எழுந்து மணல் குன்றாம் நிலமும்"(SII,v,990).

[இல்லி+பூண்டு]

இல்லோடு *ilōḍu,* பெ. (n.) செஞ்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Senji Taluk. (இ.வ.).

[இல்+ஓடு]

இலக்கணிவயல் *ilakkaṇivayal,* (பெ.) (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādānai Taluk. (இ.வ.).

[இலக்கு+அணி+வயல்]

இலஞ்சனி *ilanjaṇi,* (பெ.) (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādānai Taluk. (இ.வ.).

[இலஞ்சி+அணி]

இலத்தாளம் *ilattāḷam,* (பெ.) (n.) ஒரு வகையான சேரநாட்டு (கேரள) இசைக் கருவி; (1:53) a kind of music instrument in Keraḷā

[இலை+தாளம்]

இலந்தையடி *ilandayaḍi,* (பெ.) (n.) அகத்தீசுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheeswaram Taluk. (இ.வ.).

[இலந்தை+அடி]

இலம்பகூர் ஆசனம் *ilambakūrāsaṉam,* (பெ.) (n.) நான்முகனின் சிற்பம் அமைந்து உள்ள இருக்கை நிலை; a yogic posture of Bramma in architecture.

இலுப்பகுணம் *illuppakuṇam,* (பெ.) (n.) போளூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Polur Taluk. (இ.வ.)

[ஒருகா.இலுப்பை+குளம்]

இலேகனி *ilēkaṉi,*(பெ.)(n.) தூரிகையைப்பற்றிக் குறிப்பிடுகின்ற சிறப்பு நூல்; (5 : 15). a special type of brush.

[இலக்கு+நூல்]

இலைவாங்கி *ilaivāṅgi,* பெ. (n.) இலை தைக்கும் ஊசி; needle meant for knitting leaves.

[இலை+வாங்கி]

இளமங்கை *iḷamaṅgai,* பெ. (n.); இளம் பெண்; young lady.

[இளம் + மங்கை]

இருண்டகாலம் *iruṇḍakālam,* பெ. (n.) வரலாறுகளில் தெளிவு கிடைக்காத காலம்; a dark period in history.

[இருள் – இருண்ட + காலம்]

இறையாண்மை *iṟai-y-āṇmai,* பெ. (n.) ஆட்சி; reign.

[இறை (அரசன்) + ஆண்மை]

இழவைத் தெம்மாங்கு *lavai-t-temmāṅgu,* (பெ.) (n.) தொகையறாத த்ன்மையில் இழைந்து இசைத்துப் பாடும் தெம்மாங்குப் பாடல்; (57 : 22); a type of temmangu song.

மறுவ. நெட்டுத்தெம்மாங்கு

[இழைவை+தெம்மாங்கு]

இள்ளிமுள்ளி *iḷḷimuḷḷi,* (பெ.) (n.) பரமக்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Paramagudi Taluk. (இ.வ.).

[இள்ளி+முள்ளி]

இளமணி *iḷamaṇi,* (பெ.) (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk. (இ.வ.).

[இள+மணி]

இளமதியம் *iḷamadhiyam,* (பெ.) (n.) முற்பகல்நேரம்;forenoon.

[இள+மதியம்]

இளிச்சாக்கொம்பு *iḷiccā-k-kombu,* (பெ.) (n.) மாட்டுக் கொம்பின் ஒரு வகையமைப்பு; a kind of horn in cow.

[இளிச்சா+கொம்பு]

இளைப்பாறுதல் *iḷai-p-pāṟu-,* (பெ.) (n.) பச்சைக்காளி பவளக்காளி அம்மன்கள் அருள் வழங்கியபின் நடைபெறும் சடங்கு; a ceremany in the village temple.

[இளைப்பு+ஆறுதல்]

இளையானை *iḷaiyaṉai,* (பெ.) (n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk. (இ.வ.)

[ஒருகா. இளையன்+ஐ]

இழைபுவண்ணம் *iḻaibuvaṇṇam,* (பெ.) (n.) ஒரு சந்தப் பாடல்; a rhythamic song.

[இழைபு+வண்ணம்]

இறந்தகதை *irandakadai,* (பெ.) (n.) கதையாடலில் ஒரு பிரிவு; a section in folk lore of lamentation.

[இறந்த+கதை]

இறந்துபட்ட வாதைகள் *irandupaṭṭavādagaḷ,* (பெ.) (n.) வில்லுப்பாட்டில் இறப்புப்பற்றிய கதையாடல்களுக்குரியவர்; one who narrates the lamentation feature in villuppāṭṭu.

[இறந்துபட்ட+வாதைகள்]

இறுக்கான் *iṟukkāṉ,* (பெ.) (n.) பயிரில் கதிர் வெளியே தள்ளமுடியாமல் நின்றுவிடும் ஒருநோய்; a kind of disease in crops.

[இறுக்கு+ஆன்]

இறுதிஊர்வலம் *iṟudiūrvalam,* பெ. (n.) சவவுடம்பை இடுகாட்டிற்குத் தக்க மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லுதல்; funeral procession.

[இறுதி + ஊர்வலம்]

இறுதிச்சடங்கு *iṟudi-c-caḍaṅgu,* பெ. (n.) இறந்தாரை நல்லடக்கம் செய்யும் வரை தொன்றுதொட்டு பின்பற்றப்படும் முறைமை கள்; funeral rites.

[இறுதி + சடங்கு]

இறுமான் *iṟumāṉ,* (பெ.) (n.) பெருச்சாளியில் ஒருவகை; a kind of Bandikoot.

[இறுக்கு+ஆன்]

இறுவாய் திறந்தகுழல் *iṟuvāytiṟandakuḻal,* (பெ.) (n.) குழல் வகையினுள் ஒன்று; a kind of flute.

[இறு+வாய் + திறந்த + குழல்]



இனக்கனேரி *iṉakaṉēri,* (பெ.) (n.) ஊர்ப் பெயர்; name of a village.

[இணக்கன் – இனக்கன் + ஏரி]

இனவன் *iṉavaṉ,* பெ. (n.) தன் இனத்தான்; man of same group.

[இணம் + அவன்]

ஈ

ஈக்கி *īkki,* (பெ.) (n.) தட்டையில் உரித்த அல்லது உரிந்த தோலின் பகுதி; a peeling.

[ஈக்கு–ஈக்கி]

ஈகரை *īgarai,* (பெ.) (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādānai Taluk. (இ.வ.).

[இடி +கரை]

ஈச்சங்காரணை *iccaṅkāraṇai,* (பெ.) (n.) செங்கற்பட்டு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chengelput Taluk. (இ.வ.)

[ஈச்சம்+காரணை]

ஈசனி *īsaṉi,* (பெ.) (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādānai Taluk. (இ.வ.)

[ஒருகா. ஈயல்–ஈசனி]

ஈசத்துவம் *īsattuvam,* (பெ.) (n.) அட்டமாசித்திகளின் சிற்பம்; sculptures of eight achievements.

[ஈச்சம்+காரணை]

ஈசானம் *īsāṉam,* (பெ.) (n.) சிவனின் சிற்ப வடிவில் உச்சி நோக்கிய முகம்; up ward face in sculpture.

[ஈசன்–ஈசானியம்]

ஈசானமுகம் *īsāṉamugam,* (பெ.) (n.) விசுவப் பிரம்மனின் சிற்பத்திலுள்ள முக வகை; face type of viswa Brahma in sculpture.

[ஈசானம்+முகம்]

ஈசுதல் *īsu-,* செ.கு.வி. (v.i.) உரசிக் கொண்டுசெல்லுதல்; to go slightly dashing.

[ஈசு–ஈசுதல்]

ஈசுவக்கன் *īsuvakkaṉ,* பெ. (n.) அணிகலன் களை வடிவமைக்கும் சிற்பியர்; sculptors who design ornament in sculpture.

[இசைவுகன்–ஈசுவக்கன்]



ஈத்தை *īttai,* பெ. (n.) முதிராத கதிர்; tender crop. *'கதிர் ஈத்தையாப் போயிற்று'*

[ஈன்–ஈத்தை]

ஈமத்தாழி *īma-t-tāḻi,* பெ.(n.) உடலை எரித்த சாம்பல், எலும்பு முதலியனவடங்கிய பானை; an earthen vessel containing the bones and ashes of the dead.

மறுவ : ஈமப்பானை

[ஈமம் + பானை]

ஈமப்பார்ப்பான் *īma-p-pārppāṉ,* பெ. (n.) சவத்தை எரியூட்டும் சடங்கினை நடத்து விக்கும் பார்ப்பனன்; brahmin who conducts the funeral rights of the dead cremated.

[ஈமம் + பார்ப்பான்]

ஈயாப்பொத்தி *īyāppotti,* பெ. (n.) எதையும் எவருக்கும் ஈயாத இவறன்(கருமி); miser.

[ஈயான்+ பொத்தி]

ஈரடிமேல்வைப்பு *īrādimēlvaippui,* பெ. (n.) பாடலுக்குரிய ஈரடிகளுக்கு மேல் ஒன்று அல்லது ஈரடிகளை வைப்பது; adding additional lines to a poem.

[ஈர்+அடி+மேல்+வைப்பு]

ஈரநிலம் *īranilam,* பெ. (n.) பாடலைப் பாடும் வகையினுள் ஒன்று;a method of singing.

[ஈரம்+நிலம்]

ஈருசு *īrusu,* பெ. (n.) மானம்; self respect. *'கொஞ்சமாவது ஈருசு வேண்டாமா?' (இ.வ.)*

[ஈர்–ஈருத்து–ஈருசு]

ஈருசுரி *īrusuri,* பெ. (n.) பிள்ளைத் தாய்ச்சி; pregnant woman. *நீ ஈருசுரி, மெதுவாக நடக்க வேண்டும். (கொங்.வ.)*

[இரு–ஈர்+(உயிரி) உசிரி]

ஈரெட்டு *īreṭṭu,* பெ. (n.) உறுதியில்லாத; உறுதியின்மை; uncertainity.

[இரு →இரட்டு – ஈரெட்டு (இருவகை) → ஈரெட்டு.]

ஈரோப்பி *īrōppi,* பெ. (n.) உயரம், ஈடு, எடுப்பு மிகு தோற்றம் கொண்டவன்; a tall and sturdy person like European.

[Europe - ஈரோப்பி.]

உ

உலகவாழ்க்கை *ulagavāḷkkai,* பெ. (n.) உலகில் வாழும் வாழ்வு; mundane existence.

[உலகம் + வாழ்க்கை]

உகரக்கிளவி *ugara-r-kiḷavi,* பெ. (n.) 'உ' எனும் எழுத்து; the vowel 'u'

[உகரம் + கிளவி]

உங்கன் *uṅgaṉ,* பெ.(n.) ஆண்பாற்பெயர் ;name of a male person.

ம. உங்கன். தெ. உங்கிம்ப்பு, (உங்குவழு–பரிசு, காணிக்கை)

[உங்கு–பெருமிதம், எழுச்சி, உங்கு–உங்கன்]

உங்கு *ungu,* பெ. (n.) சங்கில் விட்டு ஊற்றப்படும் பால்;milk in conch. *"உங்கு சாப்பிடு கண்ணா; உங்கு."*

[இங்கா – உங்கா – உங்கு]

உச்சநீதிமன்றம் *uccanīdimaṉṟam,* பெ. (n.) நாடு முழுமைக்குமான தலைமை நீதிமன்றம்; supreme court.

[உச்சம் + நீதி + மன்றம்]

உச்சகாரம் *uccagāram,* பெ. (n.) 'சு' எனும் எழுத்து; the letter 'cu'

[உ + ச – சு]

உச்சாடம் *uccāḍam,* பெ. (n.) கடுஞ்சினம் பொங்கும் மனநிலை; furious mentality. *அவன் உச்சாடமாக இருக்கிறான். பேச்சு கொடுக்காதே.(மீனவ.)*

[உச்சி–உச்சாளம்–உச்சாடம்]

உச்சிச்செலுந்தில் *ucci-c-celundil,* பெ. (n.) ஒருவகை மரம்; a kind of tree.

[உச்சல் + இலந்தை]

உச்சிமலை *uccimalai,* பெ. (n.) விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். name of the village in viluppuram.

[உச்சி + மலை]

உச்சுவா *uccuvā,* பெ. (n.) விடுமுறை; holiday. *'நாளைக்கு நமக்கு உச்சுவாவா?'*

[ஒருகா. உற்சவ + உவா]

உஞ்சை மாகாளம் *unjaimākāḷam,* பெ. (n.) உச்சயினி நகரிலுள்ள சிவன் கோயில்; siva temple at ujjaini (M.P.).

[உஞ்சை(துரிஞ்சில்மரம்)+மாகாளம்–மாகாளனாகிய சிவன் கோயில்)

மாகாளம்–மாகாணம் எனத் திரிந்து கோயிலைக் குறிப்பது உண்டு.

உட்பாய்தல் *uṭpāydal,* பெ. (n.) உட்புகுதல்; influx.

[உள்+பாய்தல். பாய்+தல்→பாய்தல். 'தல்' தொ.பெ.ஈறு]

உடம்பழிவு *uḍampaḻivu,* பெ.(n.) உடல் நலிவு; ill health.

[உடம்பு+அழிவு]

உடம்பு இறங்கு–தல் *udambu iraṅgu-,* செ.கு.வி. (v.t.) கருக்கலைதல்; abortion. அவளுக்கு நான்காம் மாதத்திலேயே உடம்பு இறங்கி விட்டது. (இ.வ.)

[உடம்பு+இறங்குதல்]

உடல்நூல் *uḍalnūl,* பெ. (n.) உயிரினங்கள் இயங்கும் முறை, இயற்கையான செயற்பாடு ஆகியன குறித்த அறிவியல் முறையான ஆய்வு; physiology.

மறுவ உடலிங்கியல்.

[உடல்+நூல்]

உடல்வெக்கை *uḍalvekkai*,பெ.(n.) மாட்டிற்கு வெயில் காலத்தில் வரும் நோய்; a disease of cow.

[உடல்+வெகிர்]

உடல் இயங்கியல் *uḍaliyaṅgiyal*, பெ. (n.) உயிர்ப்பொருள்களில் இயங்குமுறை அல்லது இயற்கையான செயற்பாடுகளைக் குறித்த அறிவியல்; physiology.

[உடல்+இயங்கியல்]

உடற்கல்வி *uḍaṟ-kalvi*,பெ.(n.) பலவகைப் பயிற்சி மூலம் அளிக்கும் உடல்வளத்திற்கான கல்வி; physical education.

[உடல்+கல்வி]

உடற்பயிற்சி *uḍaṟ-payiṟcci*,பெ.(n.) உடம்பை வளமாகவும் வலிமையாகவும் வைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளும் உடல் இயக்கும் செயல்கள்; physical exercise.

[உடல்+பயிற்சி]



உடற்குறி *uḍaṟ-kuṟi*, பெ. (n.) உடலுறுப்புகளால் காட்டும் அடையாளம்; bodily sign, mark.

[உடல்+குறி]

உடன்பங்காளி *uḍaṉpaṅgāḷi*, பெ. (n.) தந்தை வழிவந்த ஆண் உறவினர்;relative by father's side. *'நெருங்கிய பங்காளி'*

[உடன்+பங்கு+ஆளி]

உடுமலைப்பேட்டை *uḍumalai-p-pāṭṭai*,பெ.(n.) திருப்பூர் மாவட்த்தில் உள்ள நகரம்; a town in Tiruppur district.

[உடு+மலை+பேட்டை]

உடு–உடும்பு. உடும்பு மிகுதியாக இருந்த மலை உடுமலை.

உடுமீன் *uḍumīṉ*, பெ.(n.) ஐங்கோண வடிவத்திலுள்ள கடல் மீன்வகை (நட்சத்திரமீன்); starfish.

[உடு(விண்மீன்)+மீன்]



உடைப்பெயர் *uḍai-p-payar*, பெ. (n.) உயர்திணைப் பெயர்களில் உடைமை கரணியம் பெற்று வைக்கப்பட்டுள்ள பெயர்; put up name, that name about any of his belonging.

குட்டுவன்– குட்டநாட்டுத் தலைவன்.
[உடை+பெயர்]

உண்ணாடகம் *uṉṉādagam*,பெ. (n.) நாடகத்துள்ளேயே நடக்கும் துணை நாடகம்; a plat within a play.

[உள்+நாடகம்]

உண்ணீர்மை *unnirmai,* பெ.(n.) மனத் தூய்மை; purity of mind. *"தருமமே சார்பாக உள்நீர்மை வீறும் உயர்ந்து" (ஔ.நல்:32).*

[உள்+நீர்மை]

உணர்ந்தறி-தல் *unarndari-,* செ.குன்றாவி. (v.t.) ஒன்றை முழுமையாகப் புரிந்து கொள்ளுதல்; to comprehend, to understrand completely.

[உணர்ந்து+அறி-,]

உத்தமவுறுப்பு *uttama-vu-ruppu,* பெ.(n.) தலை; head.

[உத்தம(ம்)+உறுப்பு]

உத்தமாங்கம் *uttamāngam,* பெ. (n.) உத்தமவுறுப்பு பார்க்க; see *uttama-vuruppu. "புத்தன் உத்தமாங்கம் உருண்டு வீழ்க எனப்பெறா உரைமுன்விட்டார்" (பெரியபு.2811).*

[உத்தம(ம்)+அங்கம்]

உத்தர குரு *uttaraguru,* பெ.(n.) இன்பநுகர்ச்சி இடங்கள் (போக பூமி) ஆறனுள் ஒன்று; one of the blissful regions where the fruits of good karma are enjoyed six in number. *"அத்தரு திருவின் அருந்தவம் முடிந்தோர் உத்தர குருவின் ஒப்பத்தோன்றிய" (சிலப்.2::9:10)*

[உத்தர(ம்)+குரு]

உத்தரகுருவம் *uttara kuruvam,* பெ. (n.) அருந்தவம் கொடுக்கும் "சுருங்காச் செல்வத்து உத்தர குருவம் ஒத்த அம்மை" (பெருங். இலாவண. 7, 141) உத்தரகுரு பார்க்க; see uttarakuru. *"உத்தர குருவமொத்த சும்மை"* (பெருங். இலாவண. 7, 141)

[உத்தரம்+குருவம்]

உத்தரப்பலகை *uttara-p-palagai,* பெ.(n.) தூணின் மீது வைக்கும் பலகை; the plank fixed on a pillar. *"உத்தரம் பலகையோடு அரங்கின் பலகை வைத்த இடைநிலம்." (சிலப்:3:103:4).*

[உத்தரம்+பலகை]

உத்தரவேதி *uttaravēdi,* பெ.(n.) வேள்வித் தீயுள்ள இடம்; altar of sacrifice fire. *"உத்தர வேதியில் நின்ற ஒருவனை". (பெரியபு.1:9:6).*

[உத்தர(ம்)+வேதி]

உத்தராபதம் *uttarāpadam,* பெ. (n.) வடநாடு; North India. *"உத்தராபதத்தும் ஒப்புமை இல்லாப் பத்திராபதி" (பெருங். 38 : 289-9).*

[உத்தர(ம்)+பதம்-உத்தராபதம்→உத்தரபதம்]

உத்தரன் *uttaran,* பெ. (n.) தாங்கும் திறனுடையவன்; one who bears anything.

[உத்து+உத்தரன்]

உத்தராயணம் *uttarāyanam,* பெ. (n.) வடக்கு முகமாகச் செல்லும் சுறவம் (தை) முதல் ஆறுமாத காலம்; a period of fix months from January.

[உத்தர(ம்)+அயணம்]

உத்தரி *uttari,* பெ. (n.) குதிரை; horse. *"வயங்கு கொய்யுளை யுத்தரிச்சலதியும்" (இரகு. திக்குவி.133).*

[உத்து-உத்தரி]

உத்தரியம் *uttāriyam,* பெ.(n.) மேலாடை; cloth worn loosely over the shoulders, upper garment. *"அறுவை யுத்தரியந் தனி விசும்பிலெறிந்தார்க்குந் தன்மையாலே" (பெரியபு. திருஞான.95).*

[உத்தரி→உத்தரியம்]

உத்திசை *uttisai*,பெ.(n.)அப்பக்கம்.(அப்புறமான இடம்); the other side. "உத்திசை விஞ்சை மாதர் உறையுளை முறையின் உற்றான்".

[உ+திசை]

உத்திட்டம் *uttittam*,பெ.(n.)வண்ணக் குழிப்புகளின் (சந்தங்களின்) *அறுவகைத் தெளிவுகளுள் ஒன்று;* one of six clarity note of musical flow. *"ஒப்பார் உறழ்ச்சியும் கேடும் உத்திட்டமும் ஒன்று இரண்டு என" (வீரசோ.133).*

[உத்து+திட்டம்]

உத்திட்டன் *uttittan*,பெ.(n.)நோற்றுவினை *களைவோன்;* a man who practices religious austerities to discard 'karma'. *"மனை துறந்து மாதவர் தாள் அடைந்துநோற்று வினை யறுப்பான் உத்திட்டன் ஆம்" (அருங்.172).*

[உத்து – உத்திட்டன்]

உத்தூளித்தல் *uttūli*, *செ.குன்றா.வி.*(v.t.) *நீரில் குழைக்காமல் வரியின்றிப் பூசுதல்;* to smear sacred ash etc, without mixing water. "திருநீற்றை உத்தூளித்து ஒளிமிளிரும் வெண்மையாலோ"(வாச.126).

[உத்தம்+தூளி]

உதகவன் *udakavan*,பெ.(n.)நெருப்பு; fire. *"அழல் உதாசனன் சங்கு தேயுதழல் வசு உதகவன்".*

[ஊற்று→ஊத்து→ஊத்தகம்→உதகம்→ உதகவன்=நீரால் அழிக்கப்படுபவன்]

உதவாக்கரை *udavā-k-karai*, பெ. (n.) குளம் ஏரி ஆறு ஆகியவற்றின் உறுதியில்லாததும் இடிந்து அல்லது அரிக்கப்பட்டுக் கரைந்து போவதுமான மண்கரை; நீரின் உதைப்புதாக்கும் கரைக் கட்டுமானம் இல்லாத நீர்நிலை, கரைப் பகுதி; erosive banks of river, well, tank, reservoir etc. 2.*பயன்படபாதவன்;* useless fellow. *மறுவ இடிகரை.*

[உதவாத+கரை உதவாதகரை, (நீரின் பாதுகாப்புக்கு உதவாத கரை)]

உதயஞாயிறு *udayañāyiru*, பெ. (n.) இளங்கதிரவன்; morning sun. *"உதய ஞாயிற்றுத் திசைமுகம்நோக்கி" (பெருங்.79–130).*

[உதய(ம்)+ஞாயிறு]

உதய மண்டிலம் *udayamandilam*,பெ.(n.) கதிரவன் உலகம் (சூரிய மண்டலம்); regions of the sun. *"அற்றவன் தலை அறுமுறை எழுந்து எழுந்து அண்டத்து ஒற்ற வானகம் உதய மண்டிலம் என ஒளிர" (புக்.32–8).*

[உதய(ம்)+மண்டிலம்]

உதயராசி *udayarāsi*,பெ.(n.)வைகறை;early morning, *"உதயராசியிற் புணர்ந்தாகம் புகும் நரசியைப் புகுவன்" (அ.வெ.2.329)*

[உதய(ம்)+ராசி]

உதவித்தொகை *udavi-t-togai*, பெ. (n.) ஒருவர் கல்வி கற்பதற்கு உதவும் வகையில் அளிக்கும் தொகை; scholarship.

[உதவி + தொகை]

உதைப்பு *udaippu*, பெ. (n.) குறைதல்; dificiency. *'கணக்கில் ஆயிரம் ரூபாய் உதைப்பு ஏற்படுகிறது.' (உ.வ.)*

[உதை–உதைப்பு]

உப்பகாரம் *uppagāram*, பெ. (n.) உகரம் சேர்ந்த பகரம், 'பு' எனும் எழுத்து; to letter 'pu'

[உ + பகாரம் – (ப் + உ – பு)]

உப்பல் *uppal*,பெ.(n.)பொறாமை, அழுக்காறு; envy.*அவன் உப்பல் எடுத்தவன். (த.வ.)*

[உப்பு(தல்)=(மனம்வெதும்பி பெருமூச்சு விடுதல்) – உப்பல்]

உப்புக்கலிகெளுத்தி *uppukallikeḷutti*, பெ. (n.) உப்பில் ஊற வைத்த மீன் வகைகள்; aricus faloarius.

[உப்பு + கல் + கெளுத்தி]

உம்பர்நாள் *umbarnāḷ*, பெ. (n.) மேனாள்; former day. *"உம்பர் நாள் கள்வார் நறுங்கோதை காரணமாகக் கொள்வான் மருங்கு எண்ணி வந்தார்" (பு.வெ.94)*

[உம்பர்+நாள்]

உம்மைவினை *ummaivinai*, பெ. (n.) முன்வினை; karma of previous birth. *"உம்மை வினை வந்து உருத்தல் ஒழியாது எனும் மெய்மைக்கிளவி விளம்பிய பின்னும்" (மணிமே. 26:32–3)*

[உம்மை+வினை]

உமண்சாத்து *umaṇsāttu*, *பெ.*(n.) உப்பு வணிகர் *கூட்டம்;* group of salt sellers. *"உமண்சாத்து இறந்த ஒழிகல் அடுப்பின்" (அக.119–8)*

[உமண்+சாத்து]

சார்த்து – சாத்து சேர்ந்து செல்லும் வணிகக் கூட்டம்

உமை *umai*, *பெ.*(n.) அம்மா;mother.

[அம்மா→அமா→உமை]

உய்வழி *uyvaḻi*, பெ. (n.) தப்பும் வழி; escaping route. *"நெஞ்சில் ஒன்றும் உய்வழி காணான்".*

[உய்+வழி]

உயர்நீதிமன்றம் *uyarnīdimaṉṟam*, பெ. (n.) அவ்வம்மாநிலத்திற்கான தலைமை முறை மன்றம்; high court.

[உயர் + நீதி + மன்றம்]

உயர்ந்தோருலகம் *uyarndōrulagam*, பெ. (n.) தேவருலகம்;celestial world, paradise. *"ஈண்டுச்செய் நல்வினை யாண்டுச்சென் றுணீஇயர் உயர்ந்தோ ருலகத்துப் பெயர்ந்தன னாகலின்" (புறநா 174 – 19 – 20).*

[உயர்ந்தோர்+உலகம்]

உயிர்க்கலை *uyirkkalai*, பெ. (n.) உயிரெழுத்து; vowel. "ஒதும்எழுத்தோடுஉயிர்க்கலை மூ அஞ்சுகம்" (மூல.963)

[உயிர்+கலை]

உயிர்க்கொடை *uyirkkoḍai*, *பெ.*(n.) உணவு தரும்அறம்;.virtue of offering food. "உயிர்க் கொடை பூண்ட உரவோய் ஆகிக் கயக்கு அறு நல் அறம் கண்டனை என்றலும்" (மணிமே. 11: 078)

[உயிர்+கொடை]

உயிர்ச்சேதம் *uyir-c-cēdam*, *பெ.*(n.) உயிரி (பிராணி)களின் அழிவு;(கோ.வ.);loss of life.

[உயிர்+சேதம்]

உயிர்த்தானம்[1] *uyir-t-tāṉam*, *பெ.* (n.) உயிர்நிலை; seat of life, any vital part of the body.

[உயிர் + தானம்]

உயிர்த்தானம்[2] *uyir-t-tāṉam*, *பெ.* (n.) உயிரையளிக்கை;gift of life, saving one's life.

[உயிர் + தானம்]

உயிர்த்தீ *uyir-t-tī*, *பெ.*(n.) உயிருக்கு மூலாதார மான மூன்று வகைத் தீ (சூடா); the three vital fires which sustain life.

[உயிர்+தீ]

உயிர்த்தூய்மை *uyirttūymai*, *பெ.*(n.) புலம்பன் தெளிவு (ஆன்ம சுத்தி); purity of soul. "பழ வினையும் ஒருங்காக உயிர்த்தக்கால் உயிர்த்தூய்மை வீடென்றாள்" (*நீல:4:47)*

[உயிர்+தூய்மை]

உயிர்த்தொடர் *uyirttodar, பெ.*(n.)குற்றியலுகரம் ஆறனுள் ஒன்று;one of the six *"kurriyalugaram"*."ஈர் எழுத்து ஒருமொழி உயிர்த்தொடர் ஆய்தொடர் மூன்றே உகரம் குறுகிடன்" (தொல்.9:1)

[உயிர்+தொடர்]

உயிர்நாடி *uyinādi, பெ.*(n.) ஒன்று நிலைப்பதற்கு முதன்மையானது; vital. 'கவிதைக்கு உயிர் நாடி உணர்ச்சியே'.

[உயிர்+நாடி]

உயிர்நாடிச்சொல் *uyirnādi-c-col,* பெ. (n.) அகத்தியமான அடிப்படைச் செய்தி; very very important message.

[உயிர் + நாடிசொல்]

உயிர்ப்படை *uyirppadai, பெ.* (n.) மெய்க்காவல்; guarding. ".மண் உயிர்ப்படை பின் தொடர்ந்து மயான வாழ்வு முடித்து". (கோ.5.5–90)

[உயிர்+படை]

உயிர்ப்பிராணி *uyir-p-pirāni, பெ.* (n.) உயிரி, குறிப்பாக விலங்கு. (சீவ.செந்து) (கொ.வ.); term used for living creature, usu. restricted to inferior animals.

[உயிர்+பிராணி]

உயிர்மூச்சு *uyir-mūccu, பெ.*(n.)1. உயிர்வளி; oxigen. 2. உயிர்போன்று வாழ்வதற்கு இன்றியமையாதது; the breath of life.' "உரிமை பெறுவதொன்றே எம் உயிர் மூச்சு".

[உயிர்+மூச்சு]

உயிர்வளர்–த்தல் *uyirvaļar-,* பெ. (n.) வாழ்தல்; living.

[உயிர் + வளர்]

உயிர்வளி *uyirvali,* பெ. (n.) உயிர்க்காற்று; oxygen.

[உயிர்+வளி]

உயிர்வேதனை *uyir-vēdanai, பெ.* (n.) உயிர்க்குத்துன்பம் விளைப்பவை. (திவா.); source of pain or distress, of which 12 kinds are mentioned.

[உயிர்+வேதனை]

உயிரச்சம் *uyiraccam, பெ.*(n.)உயிருக்கு தீங்கு நேரும் என்னும் அச்சம்; dread of death. "அறம்பொரு ளின்ப முயிரச்சம் நான்கின் திறந்தெரிந்து தேறப் படும்" (குறள்.500)

[உயிர்+அச்சம்]

உயிரிசைவுமாற்றம் *uyirisaivumārram, பெ.* (n.) ஒரு சொல்லில் இடம் பெற்ற ஓர் உயிரொலியின் தாக்கத்தால் அச்சொல்லில் உள்ளதொரு உயிரொலி மாறுதல்; harmonic sequence of vowels.

[உயிரிசைவு+மாற்றம்]

<u>எ.டு.</u> வடகு→வடுகு. இறுதியுகரம் அதற்கு முன்னுள்ள டகரத்தில் அகரத்தை உகரமாக மாற்றியுள்ளது.

உயிரின்பம் *uyir inbam, பெ.* (n.) இன்பம், வீட்டின்பம்; blissful state. "உயிர்கட்கு துயர்தீர்த்து உயிர் இன்பம் ஆக்கும் சொல்லான்" (நீலா.க.வா.1).

[உயிர்+இன்பம்]

உயிரீசன் *uyarīšan, பெ.*(n.)பெருவுடையார் (மகேசன்). *šivan,* the supreme lord. "உணரில் ஆதி தேவதையும் உயிர் ஈசன் ஆமே" (சை.சா.4:2:5:3).

[உயிர்+ஈசன்]

உரப்பு–தல் *urappu-,* செ.கு.வி. (v.i.) அழுக்காக்குதல்; to make dirty. *'சட்டையை இப்படி உரப்பிக் கொண்டு வந்தால் யார் துவைப்பது?"*

[உர–உரப்பு]

உரற்பாணி *urarpāni, பெ.* (n.) தவசத்தை உரலிலிட்டுக் குத்தும் போது பாடும் வள்ளைப்பாட்டு; song in praise of a hero,

sung by women when husking or hulling grains. "தொடிமால் உலக்கைத் தூண்டு உரல் பாணி நெடுமால் வரைய குடிஞையோடு இரட்டும்" (அக.9:11-3).

[உரல்+பாணி]

உரிச்சொற்கிளவி *uriccoṟkiḷavi*, பெ. (n.) உரிச்சொல் வகைப்பாடு; classified term for uriccal.

[உரி+ சொல் + கிளவி]

உரித்திரம் *uruttiram*, பெ.(n) 1. மஞ்சள் (மலை), turmeric 2. மரமஞ்சள் (மலை) tree turmeric உருத்திரம் பார்க்க, see urittiram

உரித்துலுக்கன் *uri-t-tulukkaṉ*, *பெ.* (n.) ஒருவகைப் பழைய கொள்ளைக் கூட்டத்தான்; Thug. (M.M.).

[உரி+துலுக்கன்]

உருக்குத்தூள் *urkkuttūḷ*, *பெ.* (n.) உருக்கு இரும்புப் பொடி; steel powder.

[உருக்கு+தூள்]

உருக்குலைவு *urukkulaivu*, *பெ.*(n.) முன்னுருவம் அழிந்துபோதல்; injury to the surface or beauty of the body - Defacement or disfigurement.

[உரு+குலைவு. குலை→குலைவு.]

உருட்டி *uruṭṭi*, *பெ.* (n.) மீன் வகையுள் ஒன்று; sucker fish.

[உருள்+உருட்டி]



உருத்து *uruttu*, பெ. (n.) சொந்தபந்தத்தின் மேல் ஏற்படும் அக்கறை; affection towards on kith and kin.

[உரு-உருத்து]

உருப்புனை-தல் urup-punai செ.குன்றா.வி. (v.t.) உடை முதலியவற்றால் மாறு வேடம் கொள்ளுதல்; to disguise. "யாரும் எவருவும் உருப்புனைந்து இருவர் மேவக் கண்டான்" (தி.தி. 33.10)

(உரு + புனை-,)

உருவம் காட்டி *uruvamkāṭṭi*, பெ.(n) கண்ணாடி; mirror. (பி.நி.152-3)

(உருவம் + காட்டி)

காண் (த.வி.) காட்டு (பி.வி.) - காட்டி

உருவரை *uruvarai*, *பெ.*(n.) எண்ணம், குறிப்பு, திட்டம்; design.

[உரு+வரை]

உருவலிப்பு *uruvalippu*, *பெ.* (n.) மனத்தில் உருக்காட்சிகளைத் தோற்றுவிக்கும் அல்லது புதுக் கருத்துகளை உருவாக்கும் ஆற்றல்; imagination.

[உருவ(ம்)+வலிப்பு]

உருவாஞ்சுருக்கு *uruvañsurukku*, பெ. (n.) எளிதாக அவிழ்க்கப்படும் முறையில்போடும் முடிச்சு; a knot to be released easily.

[உருவும்+சுருக்கு]

உருவாரச் சம்மட்டி *uru-vāra-c-camaṭṭi*, வீழிச்செடி (மலை). a straggling shrub with simple oblong leaves and greenish flowers.

(உருவாரம் + சம்மட்டி)

உருள்தண்டம் *urul-tandam,*பெ.(n.) கோயிற் திருச்சுற்றினை உடலாற் புரண்டு வலம் வருகை (அங்கப்பிரதட்சணம்); rolling the body to the right, around a sacred place like temple, generally in fulfilment of a vow.

[உருள் + தண்டம்]



உருளைக்காந்தம் *uruḷai-k-kāndam,* பெ.(n) ஒரு வகைக் காந்தக்கல் (மூ.அ.); variety of lodestone.

(உருளை + காந்தம்)

உல்லாவலை *ullāvalai,பெ.*(n.)உல்லம் எனும் மீன்களைப் பிடிப்பதற்குரிய வலை; fishing-net used to catch hilsa fish.

[உல்லம்–உல்லா+வலை]

உரிமம் *urimam,* பெ. (n.) ஓர் இடத்தைப் பயன்படுத்துதல், ஒரு தொழிலை மேற்கொள்ளுதல் போன்றவற்றுக்கு உரிய அலுவலரிடமிருந்து பெறப்படும் இசைவாணை உரிமம்; licence

[உல் – உரி– உரிமம்]

உரிமைமகளிர் *urimaimagaḷir,* பெ. (n.) அரசனின் அல்லது தனிமாந்தனின் மனைவியர்; wives of king or ordinary men.
[உரிமை + மகளிர்]

உருத்திரக் கணிகை *uruttira-k-kaṇigai,* பெ.(n) சிவன் கோயில் ஆடல் மகள் (தாசி); dancing girl of a Siva temple "உருத்திர கணிகையர் கவரி வீச" (பரத.ஒழிபி.29 உரை)

(உருத்திரன்+கணிகை)

குள் > குண் > குணி. குணித்தல் = அளத்தல், அளவிடுதல் – குணிப்பு = அளவு. குணி > கணி, கணித்தல் = அளவிடுதல், கணக்கிடுதல். கணி = கணிப்பவன். கணி > கணியன். கண் > கணி > கணிகை = தாளத்தை அளந்து ஆடுபவள்.)

உருத்திரக் கணிகைமார் *uruttira kaṇigaimār* பெ.(n) சிவன் கோயில் பொதுமகளிர் (தாசியர்); courtesan of Sivan temple. "உருத்திர கணிகைமாராம் பதியிலார் குலத்துள்" (பெரியபு:278)

(உருத்திர(ன்) + கணிகைமார்)

உருத்திரக்கலன் *uruttira-k-kalaṉ* பெ. (n) சிவமணி, அக்கமணி; rudrak bead, "உருத்திரக்கலனும் நிலவு உமிழ் புண்ணியம் பால் நிறச் சாந்தமும்" (கல். 57–21)

(உருத்திரன் + கலன்)

உருத்திரக்கன்னியர் *uruttira-kaṉṉiyar*பெ. (n) உருத்திர கணத்தைச் சேர்ந்த மகளிர், damsels who are among Siva's attendants "சாமரை யுருத்திர கன்னியரிரட்ட" (காஞ்சிப்பு. சார்ந்தாசயப் 36)

(உருத்திரம்(ன்) + கன்னியர். கன்னி > கன்னியர், 'அர்' ப.பா.ஈறு. கன்னுதல் = பழுத்தல். அரத்தங்கன்னுதல் = வெப்பத்தினாலாவது அழுத்தத்தினாலாவது உள்ளங்கையிலும், உள்ளங்காலிலும் அரத்தங் கட்டி சிவத்தல்.)

கன் > கன்னி > கனி – பழம். இது கன்னி என்னும் சொல்லின் தொகுத்தல். கன் > கன்னி = பூப்படைந்த பெண், சமைந்தவள், பக்குவமானவள். கன்னி > Skt, Kanya

உருத்திரசடை uruttirasaḍai, பெ. (n) திருநீற்றுப்பச்சை, (செடி வகை) (மூ.அ); sweet basil

(உருத்திரன் + சடை)

சள்ளுதல் = சிக்குதல். சள் > சடு > சடை = கற்றை, இயற்கையான மயிர்க்கற்றை. கற்றையான அல்லது கொத்தான பொருள்களையும் சடையுணர்த்தும், அதிலும் புல் முதலியவற்றில் கற்றையாக இருப்பதைக் குறிப்பது இயல்பே.

உருத்திர சாதனம் uruttira šādaṉam பெ.(n) சிவச்சின்னங்கள்; insignia of Sivan, beads of Siva emblem. "பூதி அணிவது..." கண்டிகை ஓதியவர்க்கும் உருத்திர சாதனம்" (மூல : 1662)

மறுவ. உருத்திராக்கம்

(உருத்திர(ன்) + சாதனம்)

உருத்திர சூத்தம் *uruttira - sūttam,* பெ.(n) உருத்திரனைப் புகழ்ந்து கூறும் ஒரு மறை (வேத) மந்திரம்; a - Rg - vedic. hymn addressed to Rudra.

(உருத்திர(ன்) + சூத்தம்)

உருத்திர பஞ்சமம் *uruttira panjamam* பெ.(n) ஒரு வகை அராகம் : a melody type "காந்தார பஞ்சமம் உருத்திர பஞ்சமம்" (நக: 10.168)

(உருத்திர(ன்) + பஞ்சமம்)

உருத்திர பட்டம் *uruttirapaṭṭam* பெ.(n) தோட்பட்டிகை; shoulder - strap "யுத்த வடத்து இளநாகம் உருத்திர பட்டம் வேண்டும்" (நாவு 4:2:3)

(உருத்திர(ன்) + பட்டம்)

உருத்திரபூமி *uruttira-būmi,* பெ.(n) சுடுகாடு; burning ground, where Siva is said to dance.

(உருத்திரம் + பூமி)

உருத்திர முடிச்சு *uruttira-muḍiccu,* பெ.(n) பூணூல் முடிச்சுவகை; spiral knot of the sacred thread esp. as tied by Saivas

(உருத்திர(ன்) + முடிச்சு)

உருத்திர ரோகம் *uruttira - rōgam,* பெ.(n) மாரடைப்பு(வின்..) angina pectoris breast pang being a disease in the anakatam or rudra-centre one of the dynamic nerve - plexuses in the body.

(உருத்திரம் + ரோகம்)

உருத்திரவிருதயம் uruttira - v - irudayam, பெ.(n) நூற்றிறெட்டு உப நிடதங்களுள் ஒன்று; name of a upanisad

(உருத்திரம் + இருதயம்)

உருத்திர வீணை *uruttira-vīṇai,* பெ.(n) யாழ்வகை (சிவரக. உருத்திரவீணை); Rudra's vīṇa, somewhat resembling the aeolian harp in action.

(உருத்திர + வீணை)



உருத்திரவுப்பு *uruttira - v - uppu,.* பெ.(n) வெடியுப்பு, salt petre

(உருத்திர + உப்பு)

உப்புதல் = பொங்கியெழுதல். உப்பு = உவர்த்துப் பொங்கியெழும் சத்து; = உவர்ப்புக்கல்

உருத்திராக்கப் பூனை *uruttirāṭca-p-pūnai,* பெ.(n) அடியார் வேடம் பூண்ட கயவன் (வஞ்சகன்); cat which puts on a rosary of rudraksa beads, said of one who assumes the garb of a devotee with an unworthy object in view; profound dissembler. "இராப் போதிலே யுருத்திராட்சப் பூனை தானே" (தண்டலை 29)

(உருத்திராக்கம் + பூனை)

உருத்திராக்கம் *uruttirākkam,* பெ.(n) உருத்திராக்க மரத்தின் மணி; rudraksa nuts worn as sacred beads and used in rosaries by Saivas, so called because these beads represent the eyes of Siva "உருத்திராக்கம்விழுமியவணி"(திருவானைக் கோச்சொல். 49) 2. மரவகை (மூ.அ.) rudraksa tree. 3. உலங்காரை; wild olive 4. மரவகை; downy - nerved olive linden. 5. துப்பாக்கி மரம்; musket tree.

(உருத்திரம் + அக்கம்)

மறுவ அக்கமணி, கடவுள் மணி, சிவமணி, தெய்வ மணி, நாயக மணி, கண்மணி, கண்டம் கண்டி, கண்டிகை, முன்மணி கூர்முனை களைக் கொண்டது எனப் பொருள்படுவது.

கள்மணி. கள்மணி என்பது கண்மணி என்று புணரும். குள் > கள் முள். கள் > கள்ளி = முள்ளுள்ள செடி. கள் > கண்டு = கண்டங்கத்தரி. கண்டு > கண்டி = முனைகள்ள உத்திராக்கம். கண்டி > கண்டிகை = உருத்திராக்கமாலை. வேத காலத்துத் தெய்வமான உருத்திரனை (ருத்ர) சிவனொடு இணைத்துக் கொண்டபோது கண்மணி என்னும் கூட்டுச் சொல்லைக் கண்+மணி என்று தவறாகப் பிரித்துக் கொண்டனர். அதுபோலவே அக்கம் என்னும் தென் சொல்லை அக்ஷி என்று திரித்து அதற்குக் கண் என்று வடமொழி வழிப் பொருளூட்டி விட்டனர்.

உருத்திராக்க முகம் *uruttirākk-mugam* பெ.(n) உருத்திராக்க மணியின் மேற்பக்கத்தின் பிரிவு; parts between lines on rudraksa nuts.

(உருத்திராக்கம் + முகம்)

உருத்திராகாரம் *uruttirā-gāram.* பெ.(n) கடுஞ்சீற்றத் தோற்றம்; ferocious visage, fierce countenance. "அவன் உருத்திரா காரமாயிருக்கிறான்."

(உருத்திர(ன்) + ஆகாரம்)

உருத்திராக்ககடுக்கன் *uruttirā-kka-kaḍukkan* பெ. (n) கடுக்கன் வகை; ear-ring of rudraksa nuts.

(உருத்திராக்கம் + கடுக்கன்)

உருத்திராக்கக்கரை *uruttirā-kka-k-karai,* பெ.(n) ஆடைகளின் கரை வகை; border of cloth with rudraksa design.

(உருத்தராக்கம் + கரை)

உருத்திராக்கக்கண்டி *uruttirakkak-kandi,* பெ.(n) உருத்திராக்கக்கண்டிகை பார்க்க, see uruttirakkak kandigai

(உருத்திராக்கம் + கண்டி)

உருத்திராக்கக் கண்டிகை *uruttirākkak-kaṇḍigai,* பெ.(n) அக்கமணி (உருத்திராக்க)

மாலை. necklace of rudraksa beads worn with or without gold.

(உருத்திராக்கம் + கண்டிகை)

உருத்திராட்சக் கரை *uruttiratca-k-karai* பெ.(n) உருத்திராக்கக் கரை பார்க்க; uruttirakka-k-karai

(உருத்திராட்சம் + கரை)

த. உருத்திராக்கம் > skt. rudraksa> த. உருத்திராட்சம்

உருத்திராட்சப் பூனை *uruttirāṭca-p-pūnai* பெ.(n) உருத்திராக்கப் பூனை பாக்க; see uruttirakka-p-punai.

(உருத்திராட்சம் + பூனை)

த. உருத்திராக்கம் > skt.rudraksa > த. உருத்திராட்சம்

உருத்திராட்சம் *uruttirāṭcam,* பெ.(n) உருத்திராக்கம் பார்க்க; see uruttirakkam

உருத்திராணி *uruttirāṇi,* பெ.(n) ஏழு 1. (சத்த) கன்னியருளொருத்தி; Rudrani, energy of Rudra, one of catta madar, 2. உருத்திரை. பார்க்க; see uruttirai "சுருதி சருவாணி சரச்சோதியுருத்திராணி" (கூர்மபு. திருக்கலி. 22)

(உருத்திரம் + ராணி)

உருத்திரை uruttirai பெ.(n) மலைமகள் (உமை); Parvati "ஆசிரியை காமக்கோட்டி அம்பிகை.... உருத்திரை உமை அம்மை திருநாமம் என்ப" (நிக.பி. 2:14)

[உருத்திரன் (ஆ.பா.) உருத்திரை (பெ.பா.)]

உருமகாலம் *uruma-kālam,* பெ.(n) கோடைக்காலம்(வின்); hot weather.

மறுவ. உச்சிஉருமம்

(உரும(ம்) + காலம்)

உருமுத்துவசன் *urumuttuvasan,* பெ.(n) மின்னலைத் தன்கொடியில் உடையவன், இந்திரன், Indra, who has on his banner the symbol of lightning. "உருமுத்துவசன் மைந்தன்" (பாரத. புட்பாய. 178)

(உருமு + துவசன்)

(skt.dhvaja (கொடி) > த. துவச > துவசன்)

உருவகி – த்தல் *uruvagi-,* 11. செ.குன்றாவி. (v.t) உருவகப்படுத்துதல்; to speak metaphorically.

[உருவம் – உருவகி]

உருவச்சாதகம் *uruva-c-cādagam,* பெ.(n) உருவசாத்திரம் பார்க்க; see uruvacattiram. "உருவச்சாதகத்துக்கேற்பப் பெண்ணலங் கிடந்த பேதை" (சீவக (1571)

[த. உருவம் + சாதகம்]

உருவசாத்திரம் *uruva-cāttiram,* பெ.(n) உறுப்பமைதியால் ஏற்படும் உயர் விழிவுகளைக் கூறும் நூல்; science of the shape, features and marks of the human body, including palmistry and physiognomy and of the characterstic qualities betokened, by them, one of aṟupattu nalu kalai.

[உருவம் + சாத்திரம்]

உரையன் *uraiyan,* பெ.(n) புகழுடையவன்; renouned person. "மறவர் கையகத்து உய்ந்த கன்றுடைப் பல் ஆதன் நிரையொடு வந்த உரையன் ஆகி" (புறநா : 260:17–9)

(உரை – உரையன்)

உரையாட்டு *uraiyāṭṭu,* பெ.(n) விடை, மறுமொழி; answer "உரையாட்டு இல்லை; உறுதவத்தீர்" (*சிலப்:10-3*)

(உரை + ஆட்டு. ஆடு - ஆட்டு)

உரையாடல் *urai-y-āḍal* தொ.பெ. (vbl.n.) கருத்துகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் வகையில் பேசுதல். கலந்து பேசுதல்; conversation

(உரை + ஆடல். ஆடு - ஆடல்)

உரை வந்துறும் பதம் *urai vandurum Padam,* பெ. (n) மழலைப் பருவம்; childhood "உரை வந்துறும் பதத்தே உரைமின்கள்" (கபி.2:16)

(உரைவந்துறும் + பதம்)

உரைவரவு *uraivaravu* பெ.(n) தூதுவழிச் சொல்; report of an embassy. "தென் கொற்கைச் சேரமான் உரைவரவு பார்த்திருக்கும் நெஞ்சு" (முத்தொள். 1556)

(உரை + வரவு)

உரைவாணர் *uraivāṇar,* பெ.(n) புலவர்; poet, learned person. "உரைவாணர் தங்கள் நவை காணின் மாற்றும் குமார குலோத்துங்கன்" (நட். 3:363)

(உரை + வாணர்)

உரைவாதி *uraivādi,* பெ.(n) உலகம் நான்முகன் (பிரமன்) படைப்பு என உரைப்பவன். (சுத்தப் பிரமவாதி); one who holds the tenet that the universe is an egg or Brahma "விரையாது உணரும் அது வீடு எனவே வரையாது உரைவாதி வகுத்தனனே" (சை.சா. 4:1:197)

(உரை + வாதி)

உரை விகற்பம் *uraivigaṟpam* பெ.(n) மாறான கூற்று; different view of a commentary etc. "வேற்று உரை விகற்பமும் உண்மைப் பொருளும் உலோகாயதன் உணர்வே" (மணிமே. 27:272)

(உரை + விகற்பம்)

உரைவித்தகம் *uraivittagam,* பெ.(n) சொல்வன்மை; eloquence, command of language "உரை வித்தகம் எழுவார் காண்பவே, கையுள் சுரைவித்துப் போலும் தம் பல்" (நால். 32.5)

மறுவ. சொற்றிறம்.

(உரை + வித்தகம்)

உல்லாகன் *ullāgan,* பெ.(n) நோய் நீங்கி உடல் நலம் தேறியோன்; getting healthy after sickness. "உலவு நோய் உற்று ஒழிந்தோன் உல்லாகன் பதாதி" (நிக.சூ. 2-40)

(உல்லாகம் - உல்லாகன்)

உலககர்த்தா *ulaga - karttā,* பெ.(n) கடவுள், god, the maker of the world.

(உலகம் + கர்த்தா)

உலகங்காத்தாள் *ulagaṅ-kāttāḷ* பெ.(n) அவுரி (மலை); Indian Indigo

[உலகம் + காத்தாள்]

உலக சஞ்சாரம் *ulaga-canjāram,* பெ.(n) உலகஞ்சுற்றி வருகை; journey around the world.

[உலகம் + சஞ்சாரம்]

உலகத்தவர் *ulagattavar* பெ.(n) உலகத்து மக்கள்; people of the world. "உயர்நிலை உலகத்தவரும் பிறரும்" (பெருங். 131. 73-4)

(உலக(ம்) + அத்து + அவர்)

உலக நயன் *ulaga nayan,* பெ.(n) உலக நெறி, உலக நடை; customs and usages of the world. "செம்புண் உறுத்தவரை தின்பர் அறத்தோடு நின்று உலகநயன் இயலா மாந்தர்" (அற:98)

(உலக(ம்) + நயன்)

உலகநாதன் *ulaga-nādan,* பெ.(n) கடவுள், god, lord of the world.

(உலகம் + நாதன்)

உலகப் பிரசித்தி *ulaga-p-pirasitti,* பெ.(n) உலகமெங்கும் பரந்த புகழ்; universal renown.

(உலகம் + பிரசித்தி)

உலகபத்ததி *ulaga-pattadi,* பெ.(n) உலகத்தாரொழுகும் வழி; way of the world.

(உலக(ம்) + பத்ததி)

உலக மயக்கு *ulaga mayakku,* பெ.(n) உலக மூடம் பார்க்க; see ulaga mūḍam

(உலக(ம்) + மயக்கு)

உலக மன்னன் *ulaga mannan,* பெ.(n) மன்னர் மன்னன் (சக்கரவர்த்தி); emperor "உலக மன்னவர்திரு நாள் ஒளிமுடி அணிந்து நின்றவர்போல்" (சிவ. 7–2) மறுவ. பேரரசன்

(உலக(ம்) + மன்னன்)

உலகமாதா[1] *ulagamāda,* பெ.(n) உலக வன்னை பார்க்க; see ulaga vannai "பாரதி வாணி... உலக மாதா.. வாக்கின் செல்வியே நோக்கிய பெயரே" (நிக. தி. 1.19)

(உலக(ம்) + மாதா)

உலகமாதா[2] *ulaga-mādā,* பெ. (n) 1. கலைமகள் (திவா); Sarasvati, Lit, mother of world. 2. உமை (Siva) Parvati, the mother of the Universe. 3. செம்மணித் தக்காளி (தைலவ–தைல.19) பார்க்க; see Semmani-t-takkali.

[உலகம் + மாதா]

உலக மூடம் *ulagamūḍam,* பெ.(n) உலக மயக்கு; mental delusion, stupor, bewilderment, sberration of mind, as from ignorance, fascination, etc. "மாமாங்கம் ஆடல் மணல் குவித்தல்... ஆடொடு எருமை அறுத்தல் இவை உலக மூடம் என உணரற்பாற்று" (அற.15)

(உலக(ம்) + மூடம்)

உலகவிளக்கு *ulagaviḷakku,* பெ. (n.) உலக முழுமைக்கும் இன்றியமையாத ஒளியையும் வெப்பத்தையும் தருவதுமான நாண்மீன்; the sun.

[உலகம் + விளக்கு]

உலகயாத்திரை *ulaga-yāttirai,* பெ.(n) உலக நடை; mundane matters business of the world, worldly affairs.

(உலக(ம்) + யாத்திரை)

உலையாணிக்கோல் *ulaiy-āṇi-k-kōl, பெ.* (n.) உலையில் வைத்த இரும்புப் பொருளைப் புரட்டுவதற்கும் கரியைக் கிளறி விடுவதற்கும் பயன்படும் உருண்டையானதும் நீளமானதுமான கொல்லுக்கருவி; blacksmith's instrument.

மறுவ. உலவாணிக்கோல்.

உலகரீதி *ulaga-rīdi,* பெ.(n) உலக முறை; order of the world.

(உலக(ம்) + ரீதி)

உலகவன்னை *ulagavannai,* பெ.(n) நாமகள்; goddess of learning, sarasvati

(உலக(ம்) + அன்னை)

உலக வாஞ்சை *ulaga-vāñjai,* பெ.(n) உலகச் செய்திகளிலுள்ள பற்று; ardent desire for wordly enjoyments,

(உலக(ம்) + வாஞ்சை)

உலக வாதம் *ulaga - vādam,* பெ.(n) (ஐதிகம்) மரபு, (சி.சி. அளவை 1, சுப்பிர.) tradition.

(உலக(ம்) + வாதம்)

உலக வார்த்தை *ulagavārttai,* பெ.(n) பொய்ப்பரப்பு (வதந்தி); common talk, Popular report, rumour, "அன்னதே உலக வார்த்தை ஆவது" (ஆள. 518)

(உலக(ம்) + வார்த்தை)

skt.vartta > த.வார்த்தை

உலக வாழ்வு *ulaga-vālu,* பெ.(n) இக வாழ்வு; worldly prosperity.

(உலகம் + வாழ்வு)

உலக விடைகழி *ulagaviḍaikali,* பெ.(n) ஊர் வாயில்; entrance of a village. "உலக விடைகழி ஒருங்குடன் நீங்கி" (சில. 10.27)

(உலக(ம்) + இடைகழி)

உலக வியாபாரம் *ulaga - viyābāram* உலகளாவிய வாணிகம்; worldly affairs, business of the world. "உலக வியாபார வழக்கில் வளைத்தலைக்க" (அருட்பா 6, தற்போது 9)

(உலக(ம்) + வியாபாரம்)

உலக விருத்தம் *ulaga viruttam,* பெ.(n) உலக வழக்கொடு மாறுபட்டது; contrariety to common usage. "உலக விருத்தம் உலகின் மாறாத உரை இலகு மதி சந்திரன் அல்ல என்றல்" (மணிமே. 29:162-3)

[(உலக (ம்) + விருத்தம்)

skt.viruddha > த. விருத்தம்]

உலக வேடணை *ulaga-vēḍanai,* பெ.(n) ஏடணாத்திரயத்தொன்று (திருவாலகட்); attachment to the world, one of etana-t-tirayam.

skt. +vetanai > த. உலக வேடணை)

உலகாயதம் *ulagāyaḍam,* பெ. (n) உலோகாயதம் (பிங்) பார்க்க, see ulokayatam.

(skt. lokayata > த. உலகாயதம்)

உலகிகம் *ulagigam,* பெ.(n) உலகம், worldliness. "உலகிக மன்புடைமை" (அருங்கலச். 41)

[உலகம் + இகம்]

உலகு *ulagu,* பெ.(n) உலகம் பார்க்க, see ulagam

ம. உலகு

[உல-உலகு]

உலகொழுக்கு *ulagoḷukku* பெ.(n) உலகநயன் பார்க்க; ulaganayan. "உலகொழுக்கு இறவாது உயர் புகழ் காந்தம்" (தண்.த. 23).

(உலக(ம்) + ஒழுக்கு-ஒழு - ஒழுகு - ஒழுக்கு)

உலர்த்துசூலை *ularttu-cūlai,* பெ.(n) சூலை நோய் வகை (சுவரட்); anarthritic disease.

[உலர்த்து + சூலை]

உலர்ந்தம் ularndam, பெ.(n) தண்டு (மூ.அ.); stalk

[உலர் + உலர்ந்தம்]

உலர்மின்கலம் *ullārminkalam, பெ.*(n.)உலர் மீன்கலம்; dry battery.

[உலர்+மின்+கலம்]

உலர்வெளுப்பகம் *ularveḷuppagam, பெ.*(n.) வேதிப்பொருள் பயன்படுத்தித் துணி வெளுத்துச் சலவை செய்து தரும் பணியிடம்; dry-clean shop.

[*உலர் + வெறுப்பகம்*]

உலவாக்கலம் *ulavā-k-kalam* பெ. (n) அமுதசுரபி; a vessel supplying inexhaustible food.

(உலவாத + கலம்)

உலவு *ulavu,* பெ. (n.) மரவகையுள் ஒன்று; a kind of tree.

[உல்–உலா]

உலாப்புறம் *ulā-p-puram,* பெ.(n) சிற்றிலக்கிய (பிரபந்த) வகைகளுள் ஒன்று. one of the poetic composition of 96 vareities. "உனை அன்பால் திரு உலாப்புறம் பாடினேன்" (பெரியபு. 4280)

(உலா + புறம்)

உலாப்போக்கு *ulā-p-pōkku,* பெ.(n) வலம் வருதல்; procession. "சிறப்பு இன்று உலாப்போக்கு அறத்தகை அண்ணல்" (பெருங். 117–22) 2. காற்றாடச் சுற்றிவரல்; strolling.

(உலா + போக்கு. போ - போகு - போக்கு)

உலைக்கல் *ulai-k-kal*, பெ.(n) உலைக்கூட்ட பயன்படும் கல்; stone used to form oven. "கருங்கைக் கொல்லன் விசைத்தெறி கூடமொடு பொரூஉம் உலைக்கல் லன்ன வல்லா ளன்னே" (புற. 170: 15–17)

பட. ஒலெகல்லு

(உலை + கல்)

உலைக்குருகு *ulai-k-kurugu,* பெ.(n) கொல்லுலையிலுள்ள நெருப்பூதுந்துருத்தி; smith's bellow. "கொல்லன் ஊதுலைக் குருகின் உள்ளுயிர்த்து அகமும்" (நற். 125:3.4)

மறுவ. உலைத்துருத்தி

(உலை + குருகு)



உலையமுது *ulai-y-amudu*, பெ.(n) உலைத் தண்ணீர் பார்க்க, see ulai-t-taṇṇīr

(skt. ulai + amudu > உலையமுது)

உலையாணிக்கோல் *ulaiyāṇi-k-kōl,* பெ.(n) மாடு முதலியவற்றிற்குச் சூடு இடுதற்குரிய கம்பி; branding iron, instrument for cauterising 'சூட்டுக்கோல் உலையாணிக் கோல் எனச் சொல்ப' (நிக.தி. 7:167)

மறுவ. சூட்டுக்கோல்

(உலையாணி + கோல்)

உலையிற்பிணந்தின்னி *ulaiyir-pinantinni,* பெ.(n) ஒரு வகை மாழை மூலப்பொருள் (தாது) மாமிச வேதி(வின்) kind of ore.

[உலையில் + பிணம் + தின்னி]

உலோகம் *ulōgam,* பெ.(n) உலகம் (திவா.); the world.

(உலகம் - உலோகம்)

லோக என்னும் வடசொற்கு முன் உகரம் சேர்த்து உலகத்தை உலோகம் என்பது பொருந்தா வழக்கு, தவிர்த்தல் வேண்டும்.

உலோக யாத்திரை *ulōga-yāttirai,* பெ.(n) உலக நடை; way of the world; worldly affairs. "உலோக யாத்திரைக ளதிகரியா துறுநர்க்கு" (வேதா. சூ. 164)

(உலகம் - உலோகம் + யாத்திரை)

உலோக வாதம் *ulōga-vādam,* பெ.(n) மரபு (ஐதிகம்) (சி.சி. அளவை 1, ஞானப்); Popular report, tradition

[உலகம் + வாதம்]

உவகைமுத்து *uvagai-muttu,* பெ.(n) உவகைக் கண்ணீர்; large drops of tears of joy.opp.to புலம்புமுத்து.

(உவகை + முத்து)

உவட்டிற்கூர்மை *uvaṭṭir-kūrmai,* பெ.(n) ஒருவகை மாழை மூலப்பொருள் (தாது) (மாமிச பேதி)(வின்); Kind of ore.

[உவடு + இல் + கூர்மை]

உவணவூர்தி *uvaṇa-v-ūdi,* பெ.(n) திருமால்; Lord Vishnu. "மாதவன் கொடியோன் உவணவூர்தி என்று இவை நாராயணன் திருநாமம் ஆகும்" (நிக.பி. 2–38)

[உவணம் + ஊர்தி]

உவமக்கிளவி *uvama-k-kiḷavi,* பெ.(n) உவமவுருபு; sign of comparision. "வினை எஞ்சு கிளவியும்" (தொல் 7–2)

(உவம(ம்) + கிளவி)

உவமாநிலம் *uva-mā-nilam,* பெ.(n) சுவர்.(பிங்.) wall.

(உவம + நிலம்)

உவமானசங்கிரகம் *uvamāna-sangiragam,* பெ. (n) மகளிர் உறுப்புகளுக்கு உவமை கூறும் ஒரு நூல்; name of short treatise on the various objects of comparison for the several items of feminine beauty and grace by Tiruvenkata Aiyer, 14th C.

(உவமை + சங்கிரகம்)

உவவுமதி *uvavu madi,* பெ.(n) வெள்ளுவா, முழுத்திங்கள்; full moon "உவவுமதி உருவின் ஓங்கல் வெண்குடை" (புறநா: 3–1)

(உவவு + மதி)

உவர்மண்காரம் *uvar-maṇ-kāram,* பெ.(n) உழை மண்; fuller's earth.

உவரச்சொல் *uvara-c-col,* பெ.(n) கடுஞ் சொல்; harsh word. "உவரச்சொல் வேருடைய காடு உகந்து ஆடிய ஏகம்பரனார்" (ப.பி. 4–75)

(உவர் > உவரம் + சொல்)

உவரி *uvari-, பெ.* (n.) கீழைக் கடலில் உள்ள பாண்டியரின் துறைமுகப் பட்டினம்; a pandiya sea port on the eastern coast of pandya kingdom.

<u>மறுவ</u> உப்பரி.

[*உவர்–உவரி*]

சாலமன் மன்னனின் கப்பல் உவரித் துறைக்கு வந்தது என்பதால் இதன் காலம் கி.மு.1000 எனக் கருதப்படுகிறது.

உவாய் *uvāy,* பெ.(n) உவாத்தேக்கு. பார்க்க, see uva-t-tekku.

[உவை – உவாய்]

உவைச்சன் *uvaiccan,* பெ.(n) உவச்சன் (தெ.க.தொ;. 11.275). பார்க்க, see uvaccan.

உழணி *u!ani, பெ.* (n.) வயலில் நீரைத் தேங்க வைக்க அல்லது வெளியேற்றப் பயன்படுத்தும் தோணி வடிவக் கருவி; boat-shaped wooden trough for bailing water from fields.

[உழன் – உழணி]

உழப்பாம்பு *u!appāmbu,பெ.* (n.) மண்ணுளிப் பாம்பு; a kind of snake.

உழவுத்தடி *u!avu-t-tadi,பெ.*(n.)கலப்பை நுகத்தடி; yoke.

[உழவு + தடி]

உழலைமரம் *u!alai-maram,* பெ.(n) வாயிலின் குறுக்கே தடையாகக் கோக்கும் மரம்; block of wood kept across an entrance to prevent going in. "உழலை மரத்தைப் போல தொட்டன ஏறு" (கலித். 106–21–2)

(உழலை + மரம்)

உழிஞ்சில் *u!iñjil,* பெ. (n) உசிலை மரம்; a tree 'நெற்று உடையதாலும் காற்றில் ஒலிப்பதாலும் வாகையொடு உழிஞ்சில் மயங்கின் (அடியார்க்கு நல்லார் 11.76.207)

[உழி – உழிஞ்சில்]

உழுந்தோதனம் *u!undōdanam,* பெ.(n) உழுத்தம் பயிற்றோடு கலந்திட்ட சோறு (பதார்த்த 1408), a preparation of food made of rice mixed with bruised black-gram and boiled together.

(உழுந்து + ஓதனம்)

உழுத்தகர் *u!uttagar,* பெ.(n) உழுந்தின் மேல் தோல்; rind of black gram "பருத்திவேலிச் சீறூர் மன்னன் உழுத்தகர் உண்ட ஓய் நடைப் புரவி" (புறநா: 299:1–2)

(உழுந்து – உழு + தகர்)

உள்துறை *u!-turai,பெ.*(n.)ஒரு நாட்டின் அல்லது ஒரு மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு முதலிய வற்றுக்குப் பொறுப்பாக அமைந்துள்ள அரசுத்துறை; internal affairs; home ministry.

[உள் + துறை]

உள்நெருப்பு *u!neruppu,* பெ. (n) மனக் கொதிப்பு; excitement in mind, as from sorrow. "உள்நெருப்பு எழத்தனது உடல் நெருப்பு எழும்" (வி.பா: 21–43)

(உள் + நெருப்பு)

உள்நோக்கம் *y!nōkkam,* பெ. (n.) (செயலொன்றைச் செய்பவர் மற்றவர்க்கு வெளியில் தெரியாதவகையில்) உள்ளூரக் கொண்டிருக்கும் (கெட்ட) எண்ணம்; hidden intention.

[உள் + நோக்கம்]

உள்நோக்கல் *u!nōkkal,* பெ.(n) ஊழ்கம் அகநோக்கம்; meditation.

[உள் + நோக்கல், நோக்கு → நோக்கல்]

உண்ணோக்கல் பார்க்க

உள்ளாட்சி *u!-!-ātci, பெ.* (n.) சிற்றூர் (ம) நகரம் போன்ற பேரூர்களில் வாழ்வோர் தத்தம் வாழிடங்களுக்கான நிருவாகத்தை படி நிகராளி (பிரதிநிதி)கள் மூலம் நடத்தும் முறை; local self-government.

[உள் + ஆட்சி]

உள்வாய் *ū!vāy,* பெ. (n.) சக்கரம் உருளும்போது குடத்தினுள் அச்சு உராயுமிடம்; inner part of axis.

[உள் + வாய்]

உள்வரிக்கோலம் *ulvari-k-kōlam,* பெ.(n) பொய்யுரு; disguise "உள்வரிக் கோலத்து உறுதுணைதேடி" (சிலப். 5:215–6)

(உள்வரி + கோலம்)

உள்வரிப்பாணி *ulvari-p-pāṇi,* பெ.(n) பிறிதொரு உருவம் கொண்டும் கொள்ளாதும் பாடி வாழ்த்தும் பாட்டு; song of benediction sung by person in disguise or otherwise. "புள் ஊர் கடவுளைப் போற்றுதும் போற்றுதும் உள்வரிப்பாணி ஒன்று உற்று" (சில.17–28:6–7)

(உள்வரி + பாணி)

உள்வளி *ulvaḷi,* பெ.(n) மார்பை இடமாகக் கொண்டு மூக்கு, கண்டம், தொப்புள் ஆகிய இடங்களில் உலாவிப் பேச்சுக்கு முதற் காரணமாயும் உடம்பிற்கு நிறம், ஒளி, நினைப்பு ஆகிய குணங்களை யுண்டாக்கும் பத்து வளி (தசவாயு) களில் ஒன்று. (பதானன்) One of the ten vital airs (nerve-current) originating in the naval region and having its seat in the parts of the body. "நிறை உயிர் முயற்சியின் உள்வளி துரப்ப எழும் அணுத்திரள்" (நன். 74)

(உள் + வளி)

உள்வீச்சுச்சன்னி *ul-viccu-c-caṉṉi,* பெ.(n) ஒரு வகை இசிவு (சன்னி) நோய் (வின்); internal convulsions.

[*உள் + வீச்சு + சன்னி*]

உள்வெக்கை *ulvekkai,பெ.*(n.)மாட்டிற்கு வரும் ஒரு வித நோய்; a disease affecting cow.

[*உள் + வெக்கை*]

உள்ளக்கிடக்கை *ulla-k-kiḍakkai, பெ.* (n.) மன விருப்பம்; one's desire. அவன் பேசிய முறையைக் கொண்டு அவன் உள்ளக் கிடக்கையை அறியமுடிந்தது.

[*உள்ளம் + கிடக்கை*]

உள்ளடக்கம் *ullaḍakkam,பெ.*(n.)கட்டுரை போன்றவற்றில் அடங்கியுள்ளவற்றின் தலைப்புகளைக் குறிக்கும் முன்பகுதி; content.

[*உள் + அடக்கம்*]

உள்ளத்தான் *ullattan,* பெ.(n) மனம் உடையவன்; a man who has inclination towards something. "என் மேல் வைத்த உள்ளத்தான் என வயந்தமாலை மாதவிக்கு ஒரு நாள் கிளந்த மாற்றம் கேட்டேன்". (மணிமே. 4:80–2)

(உள்ளம் + அத்து + ஆன்)

உள்ளப்பான்மை *ulla-p-pāṉmai,* பெ.(n) மனநிலை; state of mind "பரவிய மன்னன் உள்ளப்பான்மை யார் பகர வல்லார்"

(உள்ள(ம்) + பான்மை)

உள்ளமுது *ullamudu,* பெ.(n) அறிவில் வெளிப்படும் பேரின்பம்; bliss attained by wisdom "தெள் அமுது உறைச்சிவாய என்று உள் அமுது உற ஒரு கால் உரைத்திரும்" (மூல. 2704)

(உள் + அமுது)

உள்ளுக்குச்சாப்பிடு–தல் *ullukku-c-cāppiḍu-*,செ.குன்றாவி(v.t). மருந்துண்ணுதல்; to take internally as medicine.

(உள் + உள்ளுக்கு + சாப்பிடு–)

உள்ளுணர்வு *ulluṇarvu,* பெ.(n) அகவிழிப்பு நிலை, அறிவு; inner consciousness awakering of the mind, knowledge. 'ஒங்கு எழுங் கலைக்கு உள் உணர்வு ஆனவன்' (மூல. 1386)

(உள் + உணர்வு)

உள்ளுறவர் *ullur̤avar*, பெ.(n) ஓர் ஊரின் கண் வாழ்வோர்; residents of a village or town. 'உள்ளுறவரால் உணர்ந்தால் முதல் எனினும் எல்லாமை வேண்டும்' (பழ. 108)

(உள் + உரவர்)

உள்ளுறை பகைஞர் *ulluraipagaiñar*, பெ.(n) உட்பகைவர்; internal enemy, man of rancour at heart without inward passion of friendship. "கள்ளரின் சுரந்து உரைகாமம் ஆதிவம் உள்ளுறை பகைஞருக்கு ஒதுங்கி வாழ்வெனோ" (கம்ப. அயோ.1:17)

(உள் + உறை + பகைஞர். பகை பகைஞர்)

உளநாள் *ulanāl*, பெ.(n) வரையறுக்கப்பட்ட வாழ்நாள்; pre-determined or prescribed life time. "உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது" (சிலப். 30–200)

(உள + நாள்)

உளநூல் *ulanūl*, பெ.(n) மனம் மற்றும் மாந்தான் நடத்தை முறை குறித்த அறிவியல்; psychology.

(உள்ள(ம்)–உள(ம்) +நூல்)

உளப்பாங்கு *ulā-p-pāngu*, பெ.(n) மனநிலை; state of mind.

(உள(ம்) + பாங்கு)

உளம்புநர் *ulambunar*, பெ.(n) அலைப்பவர்; those who drive out the animals from thicket in hunting. 'இலங்கு ஒளி மருப்பின் கைம்மா உளம்புநர்' (கலித். 23.1)

(உளம்பு + நர்)

உளவியல் *ulaviyal*, பெ.(n) உளநூல் பார்க்க; see ulanū.

(உள்ள(ம்) – உள(ம்) + இயல்)

உளவியலாளர் *ulaviyalālar*, பெ.(n) உளவியல் அறிஞர்; psychologist.

(உளவியல் + ஆளம்)

உளவுகோல் *ulavukōl*, பெ.(n) குதிரைச் சவுக்கு; horse - whip "மச்ச நாடன் மாமதலை... அச்சம் அற்று இருந்து உளவுகோல் அருணனின் கொள்ள" (வில்லி.பா. 22–64)

(உளவு + கோல்)



உளவுத்துறை *ulavuttur̤ai*, பெ.(n) உள்ளாராயும் துப்புத்துறை; the department which deals in spying.

(உளவு + துறை)

உளிக்கருவி *uli-k-karuvi*, பெ.(n) கணிச்சி; battle-axe "உளிக்கருவி தளிகைக் கருவி என்று இசைப்ப கணிச்சிப் பெயரின் வழங்கும் கருவி" (நிக.தி. 7–26)

(உளி + கருவி)

உளில் *ulil,* பெ.(n) ஒரு நீர்வாழ் பறவை, உள்ளான்; common snipe "உன்னம் நாரை மகன்றில் புதா உளில்" (சுத். 2–149)

[*உள் + இல்*]



உற்கம் *urkam, பெ.*(n.) விண்வீழ்கொள்ளி (புறம்.4); meteor.

[*உல் – உற்கு – உற்கம்*]

உற்கு–தல் *urku-,* 5. செ.கு.வி.(v.i.) விண்ணினின்றும் எரிகொள்ளி விழுதல்; to shoot through the sky, as a meteor "திசையிரு நான்கு முற்க முற்கவும்"(புறம் 41, 4)

(உல் + கு – உல்கு → உற்கு–)

உற்கை *urkai,* பெ.(n) 1. கடைக்கொள்ளி, fire brand. "உற்கையென்றெறியும்" (நைடத. நகர. 2) 2. விண்வீழ் கொள்ளி, meteor. "இழிந்தவானுற் கையென்ன" (பாரத. இரண்டா.9). 3. விண்மீன் (சூடா). star

(உல் – கு – உற்கு – உற்கை)

உற்றகாலை *urrakālai,* பெ.(n) தொடங்கும் போது; when starting. "ஒரு மகன் ஆன்நிரை கொள்ள உற்ற காலை" (சிலப். 12–12)

(உறு → உற்ற + காலை)

உறங்கு–தல் *urangu-* 15. செ.கு.வி.(v.i.) செயலற்று இருத்தல்; being without work. 'ஆற்றுவ செய்யாது நாளும் உறங்குதல் காரணம் என்னை' (அற. 168)

(உற → உறங்கு)

உறம் *uram,* பெ.(n) உறவு; entering upon. "விளைவு அறிவார் பண்டை மெய் உறம் செய்வார்" (மூல. 1325)

(உறு → உறம்)

உறவாடி *uravāḍi,* பெ.(n) மாப்பிள்ளை பெண்களைக் கொண்டு கொடுத்து உறவு கொண்ட பெற்றோர் (சம்பந்தி); parent of one's son-in-law or daughter -in-law.

(உறவு – உறவாடி)

உறவாரை *uravārai,* பெ.(n) வெல்லப் பாகை உலர்த்த உதவும் பட்டையான முனை கொண்ட கோல்; iron rod used in drying molases.

(உறு–உற + வாரை)

உறழ்ந்தோன் *uralndōn,* பெ.(n) மாறுபட்டவன்; a man of discordant. 'ஒய்யப்போ வாளை உறழ்ந்தோன் இவ்வாணுதல்' (பரி: 20–41)

(உறழ்ந்தவன் → உறழ்ந்தோன்)

உறழ்நிலை *uralnilai,* பெ.(n) ஒத்த தன்மை; state of equality. "பாணர் புலி நோக்கு உறழ்நிலை கண்ட கலிகெழு குறும்பூர் ஆர்ப்பினும் பெரிதே" (குறு. 328.6–8)

(உறழ் + நிலை)

உறழ்பு *uralbu,* பெ.(n) வேறுபாடு; admission of an option in the combination of words in regard to a letter undergoing a change or remaining unchanged. "இயல்பா குநவும்

உறழா குநவுமென்று ஆயீரியல வல்லெழுத்து வரினே" (தொல். 5-9)

(உறழ் → உறழ்பு)

உறிக்காவாளர் *uṟi-k-kāvāḷār,* பெ.(n) உளித்தொங்கும் காவடியைச் சுமப்போர், இடையர், those who bear balancing pole for carrying, burdens, "மறித்தோண் நவியத்து உறிக்கா வாளரொடு" (சிலப். 15-205)

(உறிக்கா + ஆளர்)

உறுக்கல் *uṟukkal,* பெ.(n) பாய்தல்; jumping. 'குப்புற;; உகளுதல் குதித்தல் பாய்தல் உறுக்கலும் மதித்தலும் உரைப்பா அகற்கே' (நிக.தி. 9:57-58)

(உறு → உறுக்கு → உறுக்கல்)

உறுத்து-தல் *uṟuttu-* 5 செ.குன்றாவி.(v.t) செலுத்துதல்; to send "முகத்து உறுப்பு ஒத்த வகையால் விரல் உறுத்தி வாய்பூசல்" (ஆ.கோ.27)

(உறு → உறுத்து)

உறுப்பாண்மை *uṟuppāṇmai,* பெ.(n.) உறுப்பினர் தகுதி; membership.

[உறுப்பு+ஆள்+மை]

உறுப்பில் பிண்டம் *uṟuppil-piṇḍam,* பெ.(n) கருவில் வடிவுறுமுன் சிதைந்த தசைப்பிண்டம்; aborted embryo. "சிறப்பில் சிதடு முறுப்பில் பிண்டமும்" (புறநா. 28)

(உறுப்பு + இல் + பிண்டம்)

உறுபெயர் *uṟupeyar,* பெ.(n) பெரும்புகழ்; great fame. 'ஒப்புவழி உவத்தல் உறு பெயர் கேட்டல்' (தொல். 24-22)

(உறு + பெயர்)

உறுமிப்பு *uṟumippu,* பெ. (n.) வேக்காடு, புழுக்கம்; sultry.

[உரும்-உறும்-உறுமிப்பு]

உறுவோன் *uṟuvōṉ,* தொடங்குவோன்; a man who commences. "அப்பொருள் நிகழ்வும் கட்டும் வீடும் மெய்ப்பட விளம்பு என விளம்பல் உறுவோன்" (மணிமே. 27-169-70)

(உறு - உறுவோன்)

உறை *uṟai,* பெ.(n) தவசம் கொட்டி வைக்க உதவும் பெரிய மண் தாழி; a barrel like earthen vessel used to store foodgrains,

(உறு - உறை)

உறைக்காலம் *uṟai-k-kālam,* பெ.(n) வெண்கலக் காலம்; bronze age.

(உறை + காலம்)

உறைகாரன் *uṟai-kāran,* பெ.(n) காரோடன் (சிலப். 5, 32, உரை), sheath maker.

[உறை+காரன்]

உறைகோடு-தல் *uṟai-kōḍu-,* செ.கு.வி. (v.i) பருவமழை பெய்யாதொழிதல் (குறள் 559), to fail, as rain in its season

(உறை + கோடு)

உறைப்பெட்டி *uṟai-p-peṭṭi,* பெ.(n) நெல் குத்தும்போது சிதறாதவாறு உரலைச் சுற்றிப் பொருத்தியிருக்கும் நார்க்கூடை; a circular frame work of fibre to keep around mostar in pounding.

(உறை + பெட்டி)

உன்னம் *uṉṉam,* பெ. (n.) படகு; boat



ஊ

ஊக்கறை *ūkkaṟai,* பெ. (n.) ஒழுங்கான கொம்பு, நிறம், உறுப்புகள் இல்லாத தோற்றத்தில் அருவருக்கத் தக்க மாடுகள்; ugly cattle.

[ஊக்கு–ஊக்கறை]

ஊக்குநர் *ūkkunar,* பெ.(n) முயல்பவர்; one who motivates, prompts. 'உள்ளம் அழிய ஊக்குநர் மிடல்தடிந்து' (பதிற். 13–18)

(ஊக்கு + நர்)

ஊகாமுள் *ugā-muḷ,* பெ.(n) ஊகம் புல்லின் முள்; spring them of broomstick - grass

(ஊகம் + முள்)

ஊகாரம் *ūkāram,* பெ.(n) உயிர்நெட்டெழுத்து ஊ; the long vowel u "ஊ காரம் நவவொடு நவிலா" (தொல். 2–42)

(ஊ + காரம் – காரம் எழுத்துச் சாரியை)

ஊங்காரம் *ūṅgāram,* பெ. (n.) பெரிதாக ஓசை எழுப்புதல்; to make loud noise. *'உன் ஊங்காரம் என்னிடம் செலிக்காது'*

[ஊ–ஊங்காரம்]

ஊச்சி *ūcci,* பெ. (n.) நத்தை; snail.

[ஊ–ஊச்சி]



ஊசாட்டம் *ūsāṭṭam,* பெ. (n.) ஒற்று அறிதல்; நோட்டம் பார்த்தல்;to spy. *'அவன் மெல்ல வந்து ஊசாட்டம் பார்க்கிறான்'*

[ஊசு–ஊசாட்டம்]

ஊணுழைப்பு *ūṇ-uḻaippu,* பெ. (n.) உணவுக் காக உழைத்தல்; to toil for bread.

[ஊண் + உழைப்பு]

ஊசிக்காந்தம் *ūsi-k-kāndam,* பெ.(n) இரும்பை இழுக்குங் காந்தக்கல்; loadstone magnet.

[ஊசி+காந்தம்]

ஊசிவேர் *ūci-vēr,* பெ.(n) சிறுவேர்; tiny root, thin as a needle. "ஊசிவேரோடும் பக்க வேரோடும் மாய்த்து" (ஈடு, 1, 2, 3, ஜீ)

(ஊசி + வேர்)

ஊஞ்சில் *ūnjil,* பெ.(n) உசில்; black sirissa.

(ஊஞ்சு + இல்)

ஊட்டுகொடு–த்தல் *ūṭṭu-koḍu-,*பெ. (n.) காவு கொடுத்தல்; to offer for slaughtering.

மறுவ. காவு

[உண்–ஊட்டு + கொடு]

ஊடகங்கள் *ōḍagaṅgaḷ,* பெ. (n.) அன்றாட நடவடிக்கைகளை வெளிப்படுத்த உதவும் சாதனம்; medium.

[ஊடகம் + கள்]

ஊடகத்திரளி *ūḍaga-t-tiraḷi,* பெ.(n) மீன் வகை (வின்); a kind of fish

(ஊடகம் + திரளி)

ஊடுபயிர் *ūḍupayir,* பெ. (n.) மிளகாய், கத்தரி, மற்றும் பிறகாய்கறிச் செடிகளின் வரப்பில்

ஊடுபயிராக வேறொரு பயிரை விளைவித்துப் பயன்பெறல்; a side crop, or by crop.

மறுவ. ஊடு சாகுபடி.

[ஊடு+பயிர்]

ஊட்டுநள் *uttunal,* பெ.(n) உண்பிப்பவள்; woman who feeds. பசி களைய ஒடுகைக் கொண்டு நின்று ஊட்டுநள் போல் (மணிமே. 18:115-6)

(ஊட்டு + நள்)

ஊத்தம் *ūttam,* பெ. (n.) திமிர்; arrogance

[ஊது – ஊத்தம்]

ஊத்தை குடியன் *ūttai-kuḍiyan,* பெ.(n) ஒரு பேய் (பிசாசம்) (யாழ். அக); a goblin

(ஊத்தை + குடியன்)

ஊதாவூமத்தை *ūdāūmattai,* பெ.(n) ஊமத்தை வகை; purple datura.

(ஊதா + ஊமத்தை)

ஊதுகணை *ū-du-kaṇai,* பெ.(n) கணை நோய் வகை; a wasting disease of childhood

(ஊது + கணை)

ஊதுகரப்பான் *ū-du-karappāṉ,* பெ.(n) குழந்தைகளுக்கு வரும் கரப்பான்நோய் வகை (மூ.அ); an eruptive disease of children, resulting from bad humours in the system and attended with swelling of the body.

(ஊது + கரப்பான்)

ஊதுபுரளி *ūtupurali,* பெ. (n.) 1. வயிறு ஊதிப் போகும் நோய் வகை; a disease. 2. பொய்; lie.

ஊதுமாந்தம் *ūdu-māndam,* பெ.(n) குழந்தைகளுக்கு மாந்தத்தால் வயிறு விம்மும் நோய் வகை; abdominal swelling brought on by indigestion, a disease of children. "ஊதுமாந்தம்விட் டோடுவ துண்மையே" (பாலவா. 218)

(ஊது + மாந்தம்)

ஊதுவழலை *ū-du-vaḷalai,* பெ.(n) ஒரு வகைப் பாம்பு; a kind of brown snake.

மறுவ. ஊது சரட்டை



ஊமைக்காரி *ūmaikkāri,* பெ. (n.) மணி பிடிக்காத வெற்றுக் கதிர்; empty corn.

மறுவ. ஊமைக்கதிர்

[ஊமை+காரி]

ஊமைக்குறும்பு *ūmai-k-kuṟumbu,* பெ. (n.) அமைதியான குறும்புத் தனம்; mischief.

ஊர்க்கட்டு *ūrkkattu,* பெ. (n.) ஊர் ஒழுங்குமுறை; ஒற்றுமை.; integrity.

[ஊர்+கட்டு]

ஊர்க்காறுபாறு *ūr-k-kāṟupāṟu,* பெ.(n) ஊர் நேர்கேட்பு (விசாரணை), உசாவல்; managment of the public affairs of a village or town.

[ஊர் + காறுபாறு]

ஊர்க்கோட்டம் *ūr-k-kōttam,* பெ. (n) கயிலாயம்; place in Himalayas supposed to be the abode of Lord Sivan "உச்சிக்கிழான்

கோட்டம் ஊர்க்கோட்டம் வேற் கோட்டம்" (சில. 9:11)

(ஊர் + கோட்டம் – கோடு → கோட்டம்)

ஊர்காப்பாளர் *ūr-kāppāḷar*, பெ. (n) ஊர்க் காவலர்; village guard. "நூல் வழிப் பிழையா நுணங்கு தேர்ச்சி ஊர் காப்பாளர்" (மதுரைக். 646–7)

(ஊர் + காப்பாளர் கா– காப்பு + ஆளர்)

ஊர்ச்சுற்று *ūr-c-cuṟṟu*, பெ.(n) நகச் சுற்று; whitlon. ஊர்ச்சுற்றின் மேலே உரல் விழுந்ததுபோல். (பழ.)

மறுவ. உகிர்ச்சுற்று, நகச்சுற்று

(உகிர்+சுற்று–உகிர்ச்சுற்று+ஊர்ச்சுற்று கொ.வ.)

ஊர்திறம் *ūr-tiṟam*, பெ.(n) செம்மணி; கெம்பு வகை; inferior ruby which improves in lustre when placed over a thin coloured plate of gold

[ஊர் + திறம்]

ஊர்ப்புகைச்சல் ūr-p-pugaiccal, பெ.(n) 1. ஊரில் தீய நிமித்தமாகத் தோன்றும் புகை நிறம்(வின்); appearence of smoke at a distance, regarded as an inauspicious omen. 2. பொய்ப்புரளி (ஊர்வதந்தி); rumour

(ஊர் + புகைச்சல்;. புகை → புகைச்சல்)

ஊரிழவு *ūrilavu*, பெ. (n.) ஊரில் உறவினர் அல்லாதார் வீட்டு இறப்பு நிகழ்வு; a death of non-relatives.

[ஊர்+இழவு]

ஊரடங்கு–தல் *ūradaṅgu*, செ.கு.வி. (v.i.) ஊரார் துயிலுதல்; sleeping time of the people.

[ஊர்+அடங்கு]

ஊரடங்குஉத்தரவு *ōradaṅguuttaravu*, பெ. (n.) மக்கள் வெளியே நடமாடக்கூடாது என்று சட்டப்படியாகப் பிறப்பிக்கப்பட்ட ஆணை; curfew.

[ஊரடங்கு + உத்தரவு]

ஊரார் *ūrar*, பெ.(n) ஊரில் வாழ்பவர்; inhabitants of a village or town. "மலை இடையிட்ட நாட்டரும் அல்லர், மரந்தலை தோன்றா ஊரரும் அல்லர்" (குறுந். 203:1–2)

[ஊர் + அர்]

ஊராங்கி *ūrāṅgi*, பெ. (n.) ஊர்வலம்; கலியாண ஊர்வலம். procession.

[ஊர்–ஊராங்கி]

ஊரார்வீடு *ūrār-vīḍu*, பெ. (n.) அயலார் வீடு; house of others.

[ஊர்+ஆர் + வீடு]

ஊருடன்மூலி ūrudanmūli, பெ.(n) முருங்கை (சங்.அக.); horse - radish tree.

(ஊர் + உடல் + மூலி)

ஊருவாரக்கொடி ūruvārakkoḍi, பெ.(n) வெள்ளரி (சித்.அக.) mottled melon

[உருவாரம் + கொடி]



ஊரெட்டு ūr-eṭṭu, பெ.(n) வரி வகை (தெ.இ.க.தொ. 2. பக். 521); a kind of tax

[ஊர் + (அட்டு) எட்டு]

ஊரை *ūrai,* பெ.(n) மலைநெல் (நாமதீப); mountain paddy.

மறுவ வரை. நெல் (ஊர் – ஊரை)

ஊழ்கனி *ūlkaṇi,* பெ.(n) பதனழிந்த பழம்; rotten or decayed fruit. “உடம்பொடு முகங்கள் ஒவ்வார் ஊழ்கனி மாந்தி வாழ்வர்” (சீவ. 13–244)

(ஊழ் + கனி)

ஊழ்விதி ūḷ-vidi, பெ.(n) பழவினைப் பயன் (வின்); inevitable result of deeds done in former births.

மறுவ ஊழ்வினை

ஊழக்காதன் *ūḷakkādaṉ,* பெ. (n.) சீழ் வழியும் காதுகளை உடையவன்; one who has ear with pus.

[ஊழை+காதன்]

ஊழப்பாடி *ūḷappaḍi,* பெ. (n.) குழப்பம்; turmoil.

[உழப்பு+அடி]

ஊழலாற்றி *ūlalāṟṟi,* பெ.(n) மரவகை (தைலவ. தைல. 124); a medicinal tree

(ஊழல் + ஆற்றி)

ஊழிநாயகன் *ūḷi-nāyagaṉ,* பெ.(n) ஊழிமுதல்வன் பார்க்க; see ūḷi-mudalvan. “அழியா ஆழிநாயகன்” (கந்தபு. தெய்வ. 194)

(ஊழி + நாயகன்)

ஊழிநீர் *ūḷi-nīr,* பெ.(n) உலக முடிவிலுண்டாகும் கடல் கோள் (வின்); water which prevails at the last deluge which submerges the world.

(ஊழி + நீர்)

ஊளைநண்டு *ūḷainaṇḍu,* பெ. (n.) மிக மென்மையான ஓடுகளைக் கொண்ட, உணவிற்காகாத வெள்ளை நிற நண்டுகள்; white crabs which are not edible.

மறுவ. பால் நண்டு

[ஊழ்–ஊள்–ஊளை+நண்டு]



ஊறாப்பு *ūṟāppu,* பெ.(n) தினவு (இலக்); itching sensation.

[உறு–ஊறு–ஊறாப்பு]

ஊன்கண் *ūṉkaṇ,* பெ.(n) புறக்கண்; physical eye, opp.aga-k-kan. “ஊன் கணினார் கட்டு உற்றதை உரைக்கும்” (மணிமே. 21–128)

(ஊன் + கண்)

ஊடுதட்டு *ūḍutaṭṭu,* பெ. (n.) கைகலப்பு; clash.

[ஊடு+தட்டு]

ஊறி *ūṟi,* பெ. (n.) பெரிய உடம்பும் பெரிய வயிறும் உடையவன்; a big bellied fat

[இனம்–எனம் (கொ.வ.]

எ

எக்கட்டான் *ekkaṭṭāṉ,* பெ. (n.) பிஞ்சு நிலக்கடலை, எள்ளுக்காய் போன்றவற்றின் மேல் அமர்ந்து அவற்றினுள்ளே இருக்கும் பாலை விரைவாக உறிஞ்சிச் சக்கையாக்கும் ஒரு வகைப் பூச்சி; an insect *'எள்ளுக்காயில் மருந்து போடப்பா; இல்லையானால் எக்கட்டான் உறிஞ்சிவிடும்.'*

[இக்கு–எக்கு–எக்கட்டான்]

எக்கண்டம் *ekkaṇḍam,* பெ. (n.) கேலி, கிண்டல், ஏகடியம்; redicule.

க. சக்கந்த

[எக்கு–எக்கண்டம்]

எக்காளம் *ekkāḷam,* பெ. (n.) கும்மாளம்; over enjoyment. *'எக்காளம் போடாமல் சும்மா இருங்கப்பா'*

[எக்கு–எக்காளம்]

எகத்தாரு *egattāru,* பெ. (n.) ஏராளம், நினைத்ததை விட மிக அதிகம்; abundance.

[எகம் + (தரல்) தாரு]

எச்சப்பிறவி *ecca-p-piṟavi,* பெ. (n.) ஊனமுற்றபிறவி; defect by birth

[எச்சம் + பிறவி]

எச்சவினை *eccaviṉai,* பெ. (n.) வினையெச்சம்; adverb.

[எச்சம் + வினை]

எச்சிஇளைச்சி *ecciiḷaicci,* பெ. (n.) மெலிவு; feeble. *'ஆள் எச்சி இளைத்துப் போனான்'.* slimness.

[எய்த்து+இளைத்து]

எசலிப்பு *esalippu,* பெ. (n.) நண்பர்களுக்குள் போட்டி; competition among friends.

[எகல்–எகில்–எசலிப்பு]

எணல் *eṇal,* பெ. (n.) நிழல்; shadow.

[இள்–எள்–எண்–எணல்]

எதரம் *edaram,* பெ. (n.) கொலைவெறி; roguish fury.

[எதிர்–எதிரம்]

எதிர்நீச்சல் *edirnīccal,* பெ. (n.) எதிர்த்து வாழ்தல்; to meet the challenges

[எதிர் + நீச்சல்]

எதிர்ச்சொல் *edir-c-col,* பெ. (n.) ஒரு சொல்லின் பொருளுக்கு நேரெதிரான பொருளுடைய சொல்; antonyml, opposite.

[எதிர் + சொல்]

எதிர்பார்ப்பு *edirpārppu,* பெ. (n.) முன் கூட்டியே எண்ணிப்பார்ப்பது; hope, expectation.

[எதிர் + பார்ப்பு]

எதிர்மறைப்பெயரெச்சம் *edirmaṟai-p-peyareccam,* பெ. (n.) எதிர்மறைப்பொருள் தரும் எச்சச்சொல்; negative (adjective.)

[எதிர்மறை + பெயர் + எச்சம்]

எதிர்மறைவினையெச்சம் *edirmaṟaivinai-y-eccam,* பெ. (n.) எதிர்மறைப் பொருள் தரும் எச்சவினை; negative adverb.

[எதிர்மறை + வினை + எச்சம்]

எரசல் *erasal,* பெ. (n.) தூவானம்;drisling.

[இறைச்சல்–எரசல் (கொ.வ.)]

எரிநீரம் *eri-niram,* பெ.(n.) பட்ட இடத்தில் அல்லது பொருள்களை எரித்து விடும் தன்மையுள்ள நீர்மம்; acid which corrode or burn the parts of which they are applied.

[எரி+ நீரம்]

எருமைநாக்கு *erumainākku,* பெ. (n.) ஒருவகைப்புல்; a kind of grass.

[எருமை+நாக்கு]

எழுத்துவிளக்கு *eluttu-vilakku,* பெ.(n.) தமிழ் மொழியிலுள்ள முப்பது எழுத்துகளைக் குறிக்கு முகத்தான் கோயிலிலேற்றப் பெறும் முப்பது விளக்கு; row of 30 lights set in temples, as representing the 30 letters

[எழுத்து + விளக்கு]

எளந்தமனசு *elantmanasu,* பெ. (n.) இளகிய, இரக்கம் நிறைந்த மனம்; compassion pity.

[இள–எளந்த+மனசு]

எளந்தரம் *elandaram,* பெ. (n.) ஆண்குறி இருக்குமிடம்; male organ. *'எளந்தரத்திலே மிதித்துவிட்டான்'*

[இளம்+தரம்]

எளவாங்கி *elavāngi,* பெ. (n.) தைக்கும் ஊசி; needle.

[இலை – எள+வாங்கி]

எறைக்கான் *eraikkān,* பெ. (n.) எலி வளையில் உள்ள கள்ள வழி;secret hole in rafter.

[இறை–இறைக்கன்]

எனம் *enam,* பெ. (n.) வசதி;well to do. *'நல்ல எனமான ஆளு' (இ.வ.)*

[இன் – எனம்]

ஏ

ஏங்கல் தாங்கல் *ēngaltāngal,* பெ. (n.) தக்க தருணம், இன்றியமையாத நேரம்;come in time.

[ஏங்கல்+தாங்கல்]

ஏத்தகுடி *ēttakudi,* பெ. (n.) பெண் எடுத்த குடி; bride's house.

[ஏற்ற(ஏத்த)+குடி (கொ.வ.)]

ஏடாசி *ēdāsi,* பெ. (n.) வேடிக்கைப் பேச்சு;reduculing remarks.

[ஏளனம்–ஏடம்]

ஏராங்கடேசி *ērankadēsi,* பெ. (n.) ஆகக் கடைசி; at last.

[ஈறாம்–ஏராம்+கடைசி]

ஏழ்மை *ēlmai,* பெ. (n.) 1. வறுமை; poverty. 2. பொருள்வசதியின்மை; want of means.

[இல்–இம்–ஏழ்–ஏழ்மை]

இரண்டு ஒகாரங்கள் சேர்ந்து நெடில் ஓகாரம் ஆகும் என்பது சிந்துவெளி நாகரிகக் காலத்தமிழர் எழுத்து முறை. + குறி மகர மெய் குறித்தது.இவை ஒன்று சேர்ந்து ஓங்காரவடிவம் கொண்டது.

ஏழரைச்சேவல் *ēḻarai-c-cēval,* பெ. (n.) பின்னிரவு 3 மணிக்குக் கூவும் சேவல்; cock crowing at 3 A.M.

மறுவ. ஏழரைக்கோழி

[ஏழு+அரை+சேவல்]

யாமக்கோழி கூவுவதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். விடியலுக்கு முன்பு இரவு 3 மணிக்குக் கோழி கூவுதை மலையாள நாட்டில் ஏழரைக்கோழி கூவுகிறது என்பர். பழங்காலக் கணக்குப்படி இரண்டரை நாழிகை கொண்ட கால அளவு இக்காலத்தில் ஒரு மணி நேரத்தைக் குறிக்கும். ஏழரை நாழிகை மூன்று மணியைக் குறிப்பதால் இரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகு பின்னிரவு 3 மணியளவில் கூவும் கோழியை ஏழரைக் கோழி என்றனர். இதிலிருந்து வெள்ளைக்காரர்களுக்கு முன்பே ஒரு நாளை இரவு பன்னிரண்டு மணியிலிருந்து தொடங்கும் வழக்கம் தமிழ்நாட்டில் நிலவியது என்பதை உய்த்துணரால். கணியம் (நூதகம்) கணிக்கும் சிலர் காலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை ஒரு நாள்என்று கணிப்பதும், முகமதியர் ஒரு நாள் மாலை 6 மணி முதல் மறுநாள் மாலை 6 மணி வரை ஒரு நாள் என்று கணிப்பதும் நாளடைவில் ஆங்காங்கு தோன்றிய வழக்கங்களாகும்.

சேவல் கூவுவதைக் கோழி கூவுகிறது எனும் மக்கள் வழக்கு மரபுவழுவமைதி.

ஏழாம்பொருத்தம் *ēḻāmporuttam,* பெ. (n.) ஒருவர் மற்றொருவரோடு ஒத்துப் போக முடியாத நிலை, இருவரிடையே காணப்படும் இணக்கமற்ற நிலை; incompatibility.

[ஏழாம்+பொருத்தம்]

ஏளா *ēḷā,* பெ. (n.) கணவன் மனைவியை அழைக்கும் சொல்;a word of endearment used by husband to address wife.

மறுவ. ஏட்டி, அடியே, ஏய், ஏபிளா

[யாழ்–ஏழ–ஏளா]

ஏற்றகுடி *ēṟṟakuḍi,* பெ. (n.) பெண் எடுத்த குடி; brides house.

[ஏற்ற+குடி]

ஐ

ஐந்தாம்படை *aindāmpaḍai,* பெ. (n.) (ஒரு நாட்டை அல்லது அமைப்பைச் சார்ந்தவர்களாக இருந்து கொண்டே) எதிரிகளுக்கு உதவி செய்வோர்; fifth column.

[ஐந்தாம் + படை]

ஐயரவு *iyaravu,* பெ. (n.) மனக்கூச்சம்; மனத்தில் தோன்றும் ஒருவித அருவருப்பு; a slid/at feeling/detachment.

[ஐ+அரவு]

ஐயாவு *ayyāvu,* பெ. (n.) சிறு குழந்தைகளைச் செல்லமாக அழைக்கும் சொல்; a word of endearment while referring to children.

[ஐயா – ஐயாவு]

[ஒற்றை–ஒத்த+பெயரி–பேரி]

ஒ

ஒக்கலும்மக்களும் *okkalummakkaḷum,* பெ. (n.) உறவினர்கள் அனைவரும்;all relatives.

[ஒக்கல்+உம்+மக்கள்+உம்]

ஒச்சம் *occam,* பெ. (n.) 1. குறைபாடு; defect. 2. மாட்டுச் சந்தைச் சொல்லாட்சி; a term used in cattle market.

[உத்து – ஒத்து – ஒச்சம். உழவர், தரகர் வழக்கு மதுரை]

ஒச்சாயி *occāyi,* பெ. (n.) முக்குலத்தோரால் வழிபடப்படும் பெண் தெய்வம்; female deity worshipped by certain sections of Mukkulattor.

[உத்தம்–உச்சம்–ஒச்சம்+ஆயி (உயர்ந்த தெய்வம்]

முக்குலத்தோரிடையே ஒச்சனன், ஒச்சாண்டி ஒச்சித்தேவர் எனும் இயற்பெயர்கள் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

ஒட்டுப்படை *oṭṭu-p-paḍai,* பெ. (n.) ஒட்டுச்சுவர்; supporting wall.

[ஒட்டு + படை]

ஒத்தப்பேரன், *otta-p-pēran,* பெ. (n.) தனியாள்; lonely person.

[ஒற்றை–பெயரன்]

ஒத்தப்பேரி *otta-p-pēri,* பெ. (n.) தனியாளாக இருக்கும் பெண்; lonely woman. *'ஒத்தப்பேரி நான் என்ன செய்வேன்'*

[ஒற்றை–ஒத்த+பேரி]

ஒப்புநோக்குதல் *oppunōkku-,* பெ. (n.) ஒன்றை மற்றொன்றோடு ஒப்புநோக்குதல் இணைத்துக் காணுதல்; comperision, contrast.

[ஒப்பு + நோக்கு]

ஒப்பிலி *oppili,* பெ. (n) ஒப்பில்லாதவள்; who is incomparable.

[ஒப்பு + இல்லி]

ஒப்பேறாதது *oppērādadu,* பெ. (n.) கைசேராதது, பிழைக்காதது; that not regainable.

[ஒப்பு–ஏறாதது]

ஒயிலாட்டம் *oyilāṭṭam,* பெ. (n.) கையில் வண்ணத்துணிகளை வைத்துக் கொண்டு கும்மி அடிப்பதுபோல் சுற்றிவந்து ஆடும் ஒரு நாட்டுப்புற நடனம்; a kind of folk dance by a group in a circle waving colourful handkerchief.

த.வ. ஒயில்கும்மி

[ஒயில் + ஆட்டம்]

ஒருஆளம்பனை *oruāḷampaṉai,* பெ. (n.) 80 பனை மரங்கள் கொண்டது என்ற கணக் கீட்டுச் சொல்; a group of 80 trees.

[ஒரு+ஆள்+அம்+பனை]

ஒருங்கிணை–த்தல் *oruṅgiṇai-,* செ. குன்றாவி. (v.t.) ஒன்றாக இணைத்தல் அல்லது சேர்த்தல்; link up, integrate. 2. ஒன்றின் கீழ்க் கொண்டு வருதல்; bring under, compile.

[ஒருங்கு + இணை–,]

ஒரும்பு *orumbu,* பெ. (n.) வறட்சி, பற்றாக்குறை, புழுக்கம்;draught. *'இந்த ஆண்டு ஒரும்பாகி விட்டது மழையே கிடையாது'.*

[உரும்பு–ஒரும்பு]

ஒருமனதாக *orumaṉadāga,* வி.எ. (adv.) கருத்து வேற்றுமை இல்லாமல்; unanimously.

[ஒரு + மனது + ஆக]

ஒருவழிப்பாதை *oruvaḻi-p-pādai,* பெ. (n.) வாகனங்கள் ஒரு திசையில் மட்டுமே போவதற்கு அனுமதிக்கப்பட்ட வழி; one-way

[ஒருவழி + பாதை]

ஒழுகுஒழுகாய் *oḻukuoḻukāy,* பெ. (n.) வரிசை வரிசையாய்;line or row one by one.

[ஒழுகு+ஒழுகு+ஆய்]

ஒன்றரைவாடம் *oṉṟaraivāḍam,* பெ. (n.) ஒருநாள் விட்டு ஒருநாள்; alternative day.

[ஒன்று+ஒறு+வாடம்]

ஒன்றிணை–தல் *oṉṟiṇai,* பெ. (n.) ஒன்றாகச் சேர்தல்; to get united.

[ஒன்று + இணைத்தல்]

ஒடுக்குமுறை *oḍukkumuṟai,* பெ. (n.) கண்டித்தொடுக்குகை; repressive measure.

[ஒடுக்கு + முறை]

ஒரேருழவர் *ōrēruḻavar,* பெ. (n.) ஒரே ஏர்க்காரர்; a man of single of plough.

[ஓர் + ஏர் + உழவன்]

ஒங்காரம் *ongānam,* பெ. (n.) சுவசுதிக் எனப்படும் வலச்சுற்றான மங்கலக் குறியீடு; auspicious symbol *swastik.*

[ஓம் + காரம் – ஓங்காரம்]



ஒங்காளம் *ongālam,* பெ. (n.) அருவருப்பு; dislike. *'அவன் நடந்து கொள்வதை நினைத்தால் ஓங்காளமா இருக்கிறது'.*

[ஓக்காளம் –ஓக்களிப்பு-ஓங்காளம்]

ஒச்சம் *ōccam,* பெ. (n.) ஓசை, ஒலி;sound. *'மணியோச்சம் கேட்கிறது'.*

[ஓசை–ஓச்சம் (கொ.வ.)]

ஒட்டுநர் *oṭṭunar,* பெ. (n.) பேருந்து, மகிழுந்து முதலியவைகளை ஓட்டும் பணிபுரிபவர்; driver.

[ஓட்டு – ஓட்டுநர்]

ஒமலிப்பு *ōmalippu,* பெ. (n.) ஓவலை; hatred.

[ஓமல்–ஓமலிப்பு]

ஒமாங்குளி *ōmānguli,* பெ. (n.) குரும்பையில் (குரும்பலில்) பழுத்த மிகச் சிறிய பனம் பழம்;a small palm fruit.

[ஓமம் + குளி]

ஒய்வூதியம் *ōyvūdiyam,* பெ. (n.) அரசு பணியிலிருந்து ஒய்வு பெறுபவருக்கு ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தால் வழங்கப் படுகின்ற ஊதியம்; pension.

[ஓய்வு + ஊதியம்]

ஒயாக்கண்ணு *ōyākkaṉṉu,* பெ. (n.) மாறுகண், ஒன்றரைக் கண்; squint eye.

[ஓய்–ஓயா+கண்ணு]

ஒர்சல் *ōrsal,* பெ. (n.) கணக்குத் தீர்த்தல்; to settle in account.

[ஓர்–ஓரிசல் – ஓர்சல்]

ஒர்மை *ōrmai,* பெ. (n.) நினைவு, நினைப்பு; memory.

ம. ஓர்ம.

[ஓர்–ஓர்மை]

ஒரங்கட்டு *ōraṅkaṭṭu,* பெ. (n.) புறக்கணித்தல்; neglecting.

[ஓரம் + கட்டு]

ஒரணோர் *oraṇēr,* பெ. (n.) சற்றொப்ப 20 குறுக்கை (ஏக்கர்) நிலம் கொண்ட வேளாண் ஆளுவம்; a farm of an individual management.

[ஓர்+ ஆள் + ஏர்]

ஒரை *ōrai,* பெ. (n.) ஒரு தடவை; once. *"ஒரு ஓரை சொன்னால் போதும்; புரிந்து கொள்வோம்"*

[ஓர்–ஓரை]

ஒலமடைதல் *ōlamaḍai-,* செ.கு.வி. (v.i.) எதிர்பாராத துக்கம்;unexpected grief.

[அவலம்–ஓலம்+அடைதல்]

ஒவணியம் *ovaṇiyam,* பெ. (n.) மருத்துவம் முதலான கவனிப்பு;complete care including medical treatment.

[உவணி – ஓவணியம்]

க

கக்கதாசம் *kakkadāsam*, பெ.(n) ஒசூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Hosur Taluk.

[கக்கன் + (தாசன்) தாசம்]

கக்கண்டு *kakkaṇḍu*, பெ.(n) கண் இமை நுனியில் வரும் பரு, கண்கட்டி; sty on the eye lid.

[கண்+கண்டு-கக்கண்டு]

கக்கிட்டி *kakkiṭṭi*, பெ.(n) கண்ணுக்கு அருகில் வரும் வீக்கம்; a swelling near the eye. (கொ.வ.வ.சொ.39.)

[கண்+கட்டி-கண்கட்டி-கக்கட்டி →கக்கிட்டி .]

கக்கு *kakku* பெ.(n) ஒரு வேட்டி நெய்து முடிந்தவுடன் எடுக்கும் இடை வெளி; the gap left after a dhoti in weaving. (நெ.தொ.க.55).

[கங்கு - கக்கு]

கக்குவான் கயிறு *kakkuvāṉ kayiru*, பெ.(n) குழந்தைகளின் கழுத்தில் மந்திரித்துக் கட்டப்படும் கயிறு; amulet tied around children's neck.

கக்குவான் கயிறு ஒண்ணு கட்டு புள்ளைக்குச் சரியாகப் பூடும். (உ.வ.).

[கக்கு > கக்குவான்+கயிறு]

ககுபம் *kagupam*, பெ.(n) திசை; direction. "மாதிரம், ஆசை, வம்பல், திசைப்பெயர், ககுபம் காட்டையும் ஆம்". (நிக.தி.5:5-6).

[ககு - ககுபம்]

கங்கணம் கட்டு-தல் *kaṅganam kaṭṭu-*, செ.குன்றாவி.(v.t.) 1. மஞ்சட்கிழங்கு கட்டிய மஞ்சள் கயிற்றை மணிக்கட்டில் கட்டும் உறுதி ஏற்பு சடங்கு; a ceremony of oath taking by way of tieing a yellow thread on the wrist. 2. முன்னோக்கம் கொள்; to preconceive notion. நீ என்ன, கங்கணம் கட்டிக்கொண்டு சண்டைக்கு வருகிறாயா. (உ.வ.).

[கை+அங்கணம்-கங்கணம்]

கங்கணி *kaṅgaṇi*, பெ.(n) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[கண் + காணி]

கங்கள வேடக்கும்பி *kaṅgaḷavēdakkummi* பெ.(n) கும்மிப்பாட்டின் ஓர் ஆய்வு;

கங்கனான அழகிய சுந்தரக்கோன் *kangaṉana alagiya sundarakon*, பெ.(n) மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் தி.பி.1314ஆம் ஆண்டு திருவோத்தூர் கோயிலுக்கு பால் இயவன்; one who are milk and ghee to the temple.

கங்காணி *kaṅgāṇi*, பெ.(n) கால் காணி; ¼ measure.

[கால்+காணி]

கங்காளம் *kaṅgālam*, பெ.(n) சிற்பங்களில் உள்ள தோளணி; armlet of statue..

[கங்கு+ஆளம்]

கங்கு *kaṅgu*, பெ.(n) (கம்மங்) கதிரினின்று தவசமணிகள் நீக்கப்பட்ட பகுதி; ear of corn wihout grains.

[கல்-கங்கு(கருப்பு நிறமுடையது]

கங்குகட்டு-தல் *kaṅgukaṭṭu*, செ.குன்றாவி. (v.t.) பாய் நெசவு செய்த பின்னர் அதன் ஆரங்களைச் சீவி மடித்துக் கட்டுவது; to stitch the edge of a mat after plaiting.

[கங்கு+கட்டு]

கங்குநீர் *kaṅgunir*, பெ. (n) மூன்றாம் நாள் நாற்றங்காலுக்குப் பாய்ச்சும் நீர்; irrigating to a field on third day of transplantation.

[கங்கு+நீர்]

மறுவ. எடுப்பு நீர்

கங்குபத்திரம் *kaṅgupattiram*, பெ. (n.) அம்பு; arrow.

[கங்கு+பத்திரம்]

கங்குபுரட்டியடி-த்தல் *kangupurattiyadi-*, செ.குன்றாவி (v.t.) நெற்கதிரை சாய்த்து அடித்தல்; to thrash paddy on stalk on the ground.

[கங்கு+புரட்டி + அடி]

கங்கை *kankai*, பெ.(n) கிளித்தட்டு விளையாட்டில் உட்காருவதற்கான இடத்தை அடையாளப்படுத்த போடப்படும் வட்டம்; to identify one's round - place in a game coco.

[கொங்கு–கங்கு – கங்கை]

கங்கை மொள்ளு-தல் *kankaimōḷḷu-*, செ.கு.வி. (v.i.) ஏரித் தண்ணீரைக் குடத்தில் நிரப்பி அருளாடி (சாமியாடி) வருதல்; the lake water in a pot and dance with a divines grace.

[கங்கை (நீர்) + மொள்]

கச்சடா *kaccaḍā*, பெ.(n) எண்ணெய்க் கச்சல்; (கொ.வ.வ.சொ. 39.) sediment.

[கழிச்சல் – கச்சடா]

கச்சல் *kaccal*, பெ. (n.) நெய்யும் போது பயன்பாடு இல்லா நூல்; waste (thread) accumulated while leaving.

[கழிச்சல் – கச்சல்]

கச்சிக்குவாச்சான் *kachchikkuvāccāṉ*, பெ.(n) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[கச்சிக்கு + வாய்த்தான்]

கச்சிரம் *kacciram*, பெ.(n) திருத்துறைப்பூண்டி வட்டத்தில் அமைந்துள்ள ஒரு ஊர்; a village in Thiruthuraipundi. இவ்வூர் தற்போது 'கச்சினம்' என்று அழைக்கப் படுகிறது.

[கச்சில் – கச்சிரம்]

கச்சூர் *kaccūr*, பெ.(n) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர்; a village in Thanjavur. கல்வெட்டுப்பெயர் "நித்திய வினோத நல்லூர்" என ஆயிற்று.

[கச்சில் + ஊர்]

கச்சைக்கட்டி *kaccai-k-kaṭṭi*, பெ.(n) நிலக்கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Nilakottai Taluk.

[கச்சை (போட்டி) + கட்டி]

கச்சை *kaccai*, பெ.(n) குறுகிய நீரோடை; a narrow stream.

[கச்சு–கச்சை]

கசங்கு *kasangu*, பெ.(n) கூடை பின்னப் பயன்படும் ஈச்சமரத்தின் நார்; fiber of *iccam* tree for making basket.

[கசம்–கசங்கு]

கசம் *kaśam*, பெ.(n) அழுக்கு; filth.

[கயம் – கசம்]

கசமுசா *kasamusa*, பெ.(n) வெளிப்படையாகச் சொல்லாமல் முணுமுணுத்தல்; to murmur as a secret.t (கொ.வ.வ.சொ. 40.)

[கசமுச (ஒலிக்குறிப்பு)]

கசறு-தல் *kaśaṟu-*, செ.கு.வி. (v.i.) நச்சரித்தல், மேலும் மேலும் விலை குறைத்துக் கேட்டல்; haggle for a trifling gain to gains.

[கய–கச–கசறு]

கசாங்கு *kaśangu*, பெ.(n) ஒலைகளால் ஆன கயிறு; rope made of palm leaves.

[கசல் – கசாங்கு]

கசைக்குச்சி *kasaikucci*, பெ.(n) கலசங்களைத் தாங்கி நிற்கும் குச்சி. *(ம.வ.தொ.75.)* supporting sticks.

[கசை + குச்சி]

கஞ்சம் *kañjam*, பெ.(n) தோற்கருவி செய்யப் பயன்படும் ஒரு மாழை (உலோகம்); a metel used to make one of the leather musical insturment.

[கஞ்சு (வெண்கலம்)–கஞ்சம்]

கஞ்சனூர் *kanjanur*, பெ.(n) தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவேலங்காடு கும்பகோணம் வழிச்சாலையில் அமைந்த ஒரு ஊர்; a village in Thanjavur on way to Thiruvalangadu Kumbakkonam salai.

[கஞ்சன் + ஊர்]

கஞ்சிகாய்ச்சு *kañjikāyccu*, செ.கு. வி. (v.i.) பல்லாங்குழியில் முன்பே பிரித்து ஆடத் தொடங்குதல்; to start the game played with cowries on a *'pallānguli'*.

[கஞ்சி + காய்ச்சல்]

கஞ்சிகை எழினி *kañjigai-eluni*, பெ.(n) உருவு திரை; curtain. "கஞ்சிகை எழினியிற் கரந்து நிற்போரும்". (பெருங்.44:51).

[கஞ்சிகை + எழினி]

கஞலுவார் *kañalūvār*, பெ.(n) பத்தியால் வழிபட்டு நிற்போர்; praying the tutelary deity. "கான நாடித் திருமுன்றில் கவின கஞலுவார்" (ஒட்.5:80).

[கஞல் = கஞலுவார்]

கட்கொண்டி *katgōndi*, பெ.(n) கள்ளாகிய உணவு; toddy as a food. "கட்கொண்டிக் குடிப் பாக்கத்து" (மது.137).

[கள் + கொண்டி]

கட்சி–பிரி *katcipiri-*, செ.குன்றாவி.(v.i.) குழு விளையாட்டில் இரு அணியாக பிரிக்கும் முறை. 'உத்தி பிரிக்கும் முறை'; form two teams in group events.

[கட்சி + பிரி]

கட்டக்குருத்து *katta-k-kuruttu*, பெ.(n) அறுவடை செய்தபின் எஞ்சியிருக்கும் பயிரின் அடிப்பகுதி மீண்டும் தழைத்தல்; after cutting the top part of the stalk the stem let to grow up as sprout.

[கட்டை + குருத்து]

கட்ட கழனி *kattakkalani*, பெ.(n) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர்; a village in Chengalpattu.

[கட்டை + கழனி]

கட்டகொட்டு *kattakottu*, பெ. (n.) தேய்ந்துபோன மண்வெட்டி. (வ.வ.வே.க.16.) wornout shovel.

[கட்டை + கொட்டு]

கட்பொம்முஇசை *kattapommuisai*, பெ. (n.) கரகாட்டத்திற்குரிய, நையாண்டியிசையில் இடம்பெறும் கட்டபொம்மு கூத்து, நாடகம் இவற்றின் இசை; musich of tolk dance.

[கட்டபொம்மு + இசை]

கட்டம் *kattam*, பெ. (n.) ஆடவர் விளையாட்டு வகை (மதுரை); a game played by men.

[கட்டு – கட்டம்]

கட்டவிளையாட்டு[1] *kattavilai-y-āttu*, பெ. (n.) 1. கட்டங்கள் வரையப்பட்டு காய்களை நகர்த்தி விளையாடும் ஆட்டம்; a game played with cowries in a chess.

[கட்டம் + விளையாட்டு]

சில மூன்று கோடுகள், நான்கு கோடுகள், மூலைக்கோடுகள் எனப் பல வகைகள் உள்ளன.

கட்டவிளையாட்டு[2] *kattavilai-y-āttu*, பெ.(n) ஆடுபுலி போன்ற விளையாட்டு; one of the country game using dice.

[கட்டம் + விளையாட்டு]

கட்டாஞ்சி *kattañci*, பெ.(n) கவைகளின் நாற்புறமும் முட்களைக் கொண்டு திண்மையாக வளரும் முட்செடி; a thorn plant.

[காட்டு + ஆஞ்சி]

கட்டாய்இணைதல் *kattāy-iṇaidal*, பெ.(n) இடுப்பைக் கையால் வளைத்துக் கொண்டு மற்றவர்களைத் தொடும் விளையாட்டு; a kind of play.

[கட்டு + ஆய் + இணைதல்]

கட்டால் *kaṭṭāl*, தொ.பெ.(vbl.n.) அழித்தல்; destruction. “உம்முடைய கைக்கு அடைந்தான் உயிர்காக்கக் கடவீர், எங்களைக் கட்டால்” (யுத்.16:349).

[கடு (வெட்டு) – கட்டு + ஆல்]

கட்டாலகன் *kattalagan*, பெ.(n) ஓர் இயற்பெயர்; proper name.

[கட்டல் + (அவன்) அகன்]

கட்டாளம் *kaṭṭāḷam* , பெ.(n) ஒரு சொற்கட்டுடன் ஓர் ஒற்று எழுத்தைக் கூட்டி அகலமாக்குதல்; add and joint lettter in sentences to increase the size.

[கட்டு + ஆளம்]

கட்டிக்கயிறு *kaṭṭikkayiṟu*, பெ. (n.) 3 பிரிகளைக் கொண்டது; rope made of trible twist.

[கட்டி + கயிறு]

கட்டிப்பொன் *kaṭṭi-p-pon*, பெ.(n) காசு, நாணயம் ஆகியவை வார்க்கப்படுவதற்கு முன்பு எடையளவில் வார்க்கப்பட்ட பொற்கட்டிகள்; gold bar.

[கட்டு + ஆளம்]

மறுவ. பனங்கட்டிப்பொன், பொன் கருப்பு

[கட்டி+பொன்]

தேங்காய்ச் சிரட்டை அரையுருளை மட்பாண்டம் ஆகியவற்றில் பனைவெல்லம் போல் வைக்கப் பட்டிருந்த பொற்கட்டிகள் கேரள திருவனந்தபுரம் சார்ந்த சாமியார் மடம் சுரங்கப்பாதை தோண்டிய போது வெளிப்பட்டதாகக் கூறுவர்.

கட்டிநாடு *kattinādu*, பெ.(n) கொங்கு நாட்டின் வடக்கே அமைந்த ஊர்; name of a village from Coimbatore in North side.

[கட்டை + நாடு > கட்டிநாடு]

இந்நாட்டை அரசாண்ட பரம்பரையார் ‘கட்டியர்’ ‘கட்டி’ என்று பெயர் பெற்றிருந்தனர்.

கட்டி *kaṭṭi*, பெ.(n) தாராமங்கலப் பகுதியை ஆண்டு வந்தகட்டி மரபினர்; kaṭṭi name of petty ruler clan in the area around river Bavani and Tara mangalam.

[கட்டு + கட்டி]

கட்டியாம் பந்தல் *kattiyam panthal*, பெ.(n) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர்; name of the village in Chengalpattu District.

[கட்டியான + பந்தல்]

கட்டில்கை *kaṭṭilkai*, பெ. (n.) கட்டிலின் கைப்பிடி; side frame of cot .

[கட்டில் + கை]

கட்டிவளத்தானியம் *kaṭṭivaḷa-t-tāṉiyam*, பெ.(n) இறந்தவர்களைப் புதைத்த பின் இடுகாட்டில் ஏழைகளுக்குக் கொடுக்கப்படும் தவசம் (தானியம்); grains offered at burial ground after burying the dead.

[கட்டி + வளம் + தானியம்]

கட்டு–தல் *kaṭṭu*, செ.குன்றாவி. (v.t.) கிளித்தட்டு விளையாட்டில் இறங்கும் கட்சியாரைத் தடுத்தல் (மதுரை); to stop the aponent team in the game *'kiḷitaṭṭu'*.

[கள் – கட்டு]

கட்டுக்கட்டு–தல் *kaṭṭu-k-kaṭṭu*, செ.கு.வி. (v.i.) பல்லாங்குழியில் மூலைக்குழியில் போடாமல் வைத்தல்; to see that do not drop the cowries in the corner packet in '*pallānguli*'.

[கட்டு+கட்டுதல்.]

கட்டுக்கரை *kattukkarai*, பெ. (n) அறந் தாங்கியிலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[கட்டு + கரை]

கட்டுக்காசு *kāttu-k-kasu*, பெ.(n) வைப்புப் பணம்; deposit. (யாழ்ப்.).

மறுவ. செலுத்துபணம்

[கட்டு+காசு]

கட்டுகுளிகை *kattukulikai*, பெ. (n) புணர்ச்சியின் போது உயிர்ப்புச் சத்துக் கூடவும், வீணாக விந்து ஒழுகுவதைத் தடுக்கவும் குங்குமப்பூ, அபினி, அரத்திப்பழம் விதை ஆகியவற்றுடன் சாதிக்காயைச் சேர்த்துத் தேன்விட்டு அரைத்து மாலை ஆறுமணிக்குத் தின்னும் கடலையளவு மாத்திரை; (தம்பனக் குளிகை); a bengal gram size pill made of saffron, opium, seed of apple, nutmeg.

[கட்டு + குளிகை]

கட்டு சட்டு *kattu cattu*, பெ.(n) சிக்கனம்; thrifty.

மறுவ. கட்டுச்செட்டு

[கட்டு+சட்டு]

கட்டுங்கை *kattungai*, பெ.(n) மத்தளத்தை இசைக்கும் முறைகளில் ஒன்று; a method of playing mattalam.

[கட்டும்+ கை]

கட்டு *kattu-*, பெ.(n) கிளித் தட்டு ஆட்டத்தில் பயன்படும் சொல்; a word used in one of the country game.

[கள் – கட்டு]

கட்டுத்துறைவாதம் *kattutturaivādam*, பெ. (n.) மாட்டிற்கு ஏற்படும் ஊதை (வாத) நோய். (வ.வ.வே.க.16.); a disease of cow.

கட்டுபாண்டி *kattup-pāndi*, பெ.(n) பல்லாங்குழியிலுள்ள கற்கள் தனக்கு உரிமைப்படுத்துதல்; winning points. *'pallānguli'*

[கட்டு + பாண்டி]

கட்டுப்போடு–தல் *kattupōdudal*, செ. குன்றாவி. (v.i.) நாடாவில் ஊசி, வில், டிம்மி ஆகியவை விட்டுப்போனால் ஒட்ட வைத்து சரி செய்தல்; to make knot to connect the threa while it torn in stitching.

[கட்டு + போடு]

கட்டு நிட்டு *kattu nittu*, பெ.(n) கட்டுப்பாடு; control

[கட்டு + நிட்டு – மரபினச்சொல்]

கட்டு மணல் *kattu manal*, பெ.(n) கல் படிகள் நிரம்பிய பகுதிகளில் ஆழ்துளைக் கிணறு தோண்டும்போது கிடைக்கும் கெட்டி மணல்; hard sad got while installing borewell.

[காட்டு + மணல்]

கட்டுமாவடி *kattumāvadi*, பெ.(n) அறந்தாங்கி வட்டத்தின் சிற்றூர்; a village in Arantāngi Taluk.

[கட்டு + மா + அடி]

கட்டுமான் *kattumān*, பெ.(n) கட்டுபாண்டி பார்க்க; seekaltu pandi.

கட்டுமூட்டை *kattumūttai*, பெ.(n) சாக்கிலிட்டு வைக்கோலால் கட்டிய நெல் மூட்டை. (வ.வ.வே.க.16.)stitched gunny bag o paddy.

[கட்டு + மூட்டை]

கட்டுரை–த்தல் *katturai-*, செ. குன்றாவி. (v.t.) வழக்குரைத்தல்; one who carry on a dispute. "காவலன் முன்னர் யான் கட்டுரைத்தேன்" (சில 9:50).

[கட்டு + உரை]

கட்டுவாங்கம் *kaṭṭuvāṅgam,* பெ.(n) சிற்பங்களில் காணப்பெறும் பொருள்களில் ஒன்று; a feature in sculpture.

[கட்டு + வாங்கம்]

கட்டுனவாய் *kaṭṭunavai,* பெ.(n) பொட்டலம், பொதிந்த பொதி வாய்; opening of a small bag.

[கட்டின + வாய்]

கட்டைச் சூளை *kaṭṭai-c-cūlai,* பெ.(n) பெரிய மரக்கட்டையைக் கொண்டு எரித்து தரமான செங்கற்களை உருவாக்கும் சூளை; kiln designed to get standard bricks.

[கட்டை + சூளை]

கட்டைத்தாளம் *kaṭṭai-t-tāḷam,* பெ.(n) பண்டைய தாளவிசைக் கருவி; an ancient musical instrument.

[கட்டை + தாளம்]

கட்டேரி *kaṭṭēri,* பெ.(n) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruppattur taluk.

[கட்டு + ஏரி]

கட ஒலி *kaḍa oli,* பெ.(n) மத யானையின் பிளிறொலி; roar as an elephant. "உடன் பயந்த கடஒலி ஏற்றும்" (கல் 13:9).

[கட + ஒலி]

கடக்கம் *kaḍakkam,* பெ.(n) மயிலாடுதுறை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mayuram Taluk.

[கடம் (பாலை நிலம்) – கடக்கம்]

கடக்குட்டி *kaḍa-k-kuṭṭi,* பெ.(n) கடைசியாக பிறக்கும் குழந்தை; youngest child in a family.

[கடைக்குட்டி + கடக்குட்டி]

கடகஅத்தம் *kaḍagattam,* பெ.(n) இறைவடிவ சிற்பத்தின் திருக்கரப் பெயர்; the hand of deity in sculpture.

[கடக(ம்) + அத்தம்]

கடக நோன்பு *kaḍaganōṉpu,* பெ.(n) கடக (ஆடி)த் திங்களில் கொண்டாடப்படும் பண்டிகை; a festival in the month of Ādi.

[கடக(ம்) + நோன்பு]

கடகரி *kaḍa-kari,* பெ.(n) ஆண் யானை; male elephant. "விண்ட கடகரி மேகமொடு அதிர" (பரி.தி.1:57).

[கடம் + கரி]

கடகம்[1] *kaḍagam,* பெ.(n) பரதத்தில் உள்ள ஒற்றை முத்திரை நிலைகளில் ஒன்று; a hand posture in baratham.

[கடகு + கடகம்]

கடகம்[2] *kaḍagam,* பெ.(n) நன்னிலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Nannilam Taluk.

[கடாகம் + கடகம்]

கடகம்[3] *kaḍagam,* பெ.(n) காலில் அணியும் ஒரு வகை அணிகலன்; a leg ornament.

[கடகு – கடகம்]

கடகாமுகம் *kaḍagāmugam,* பெ.(n) சிற்பநூல்கள் இயம்பும் முத்திரை வகை; a posture found in treetise.

[கடகம் + முகம்]

கடசல்புடி *kaḍagalpuḍi,* பெ. (n) களைக்கொட்டு, மண்வெட்டி போன்றவற்றிற்குக் கடைசல் இயந்திரத்தால் கடையப்பட்ட பிடி; handle made by lathe.

[கடைசல் + பிடி]

கடஞ்சூளை *kaḍaṉcūlai,* பெ.(n) குயக் கலயங்கள் சுடும் காலவாய்; "கடம் சூளை ஒன்றிற் கிடந்து" (ஜீவ.189). kiln for making pottery.

*[கடம் + சூளை]

கடம்பம் *kadambam*, பெ.(n) முடக்குவாதம், மூட்டுவலி, இடுப்பு வலிக்கு மருந்தாகப் பயன்படும் மரம்; a tree of medical use.

[கடம்பு – கடம்பம்]

கடம்பாளம் *kadampālam*, பெ.(n) மிதவை நங்கூரத்திற்குப் பயன்படும் கயிறு; buoy anchor rope.

[கடம்பு – கடம்பாளம்]

இவ்வூரில் நடந்த போரில் 'களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல்' நன்னனை வென்றான். "உருள் பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை' (பதிற்–4ஆம் பத்து).

கடம்பூர் *kadambur*, பெ.(n) பாபநாசம் வட்டத்தில் உள்ள ஒரு ஊர்; a village in papanasam.

[கடம்பு + ஊர்]

கடமான் *kaddamaan*, பெ.(n) இந்தியாவில் காணப்படும் ஒரு வகை மான்; sambar

[கடம் + மான்]

கடமுலைகுச்சி *kadamulaikucci*, பெ.(n) மாட்டின் கழுத்துப்பகுதி வெளிவராமல் இருக்க நுகத்தடியின் நுனிப்பகுதியில் செருகும் குச்சி. (வ.வ.வே.க.16.)

[கடமுலை + குச்சி]

கடயல் *kadayal*, பெ.(n) விளவங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vilavancode Taluk.

[கடல் + அயல்]

கடல் ஏற்றம் *kaddal yētrram*, பெ.(n) கடல் பகுதியில் ஏற்றமும் வற்றுதலும்; up surge of the sea.

[கடல் + ஏற்றம்]

கடல்திரட்டு *kaddal tirattu*, பெ.(n) முனைத் திட்டு; head land.

[கடல் + திரட்டு]

கடல்நீரடிப்பாறை *kadal niradi parrai*, பெ.(n) நீரின் அடியில் உள்ள கற்பாறை; reaf.

[கடல் + நீர் + அடி + பாறை]

கடல் முரசோன் *kadal muracon*, பெ.(n) காமன்; cupid. "மால் மகன் கடல் முரசோன்... காமன் பெயரே".

[கடல் + முரசோன்]

கடல்வழி மைல் *kadalvalimail*, பெ.(n) கடற்செலவு தொடர்பான எல்லைக் கணக்கு; naritical mile.

[கடல் + வழி + மைல்]

மறுவ. கடல் வழிக்கல்

கடல்வாய் *kadal vāy*, பெ.(n) வரம்பு; மேல் உச்சி; ridge.

[கடல் + வாய்]

கடலாழமானி *kaddalazhamaani*, பெ.(n) கடலின் ஆழத்தை அளக்க பயன்படும் கருவி; fathometer.

[கடலாழம் + மானி]

கடலேறு–தல் *kadal-ēru-*, செ.குன்றாவி. (v.t.) மரக்கலமேறிக் கடலிற் செல்லுதல்; ŏvoyage.

[கடல்+ஏறு]

கடலலை *kadalalai*, பெ.(n) ஒற்றைக்கை முத்திரையில். முதலாவதான கொடிமூலம் உரைக்கப்படும் ஒரு முத்திரை; a hand posture in dance.

[கடல் + அலை]

கடலி *kadali*, பெ.(n) செஞ்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Senji Taluk.

[கடல் + கடலி]

கடலமுத்து *kadalal-muttu*, பெ.(n) நிலக்கடலை விதை; ground nut .

[கடலை + முத்து]

கடவம் *kaḍavam*, பெ.(n) பனைமரத்து ஓலையைக் கொண்டு முடையப்பட்ட பெட்டி; basket.

[கடகம் > கடவம் (கொ.வ.)]

கடவா நில்–தல் *kaḍavā-nil-*, செ.கு.வி.(v.i.) செல்லுதல்; pasing the way. "கல் அதர் அத்தம் கடவா நின்றுழி" (மணி.13:39).

[கடவா + நில்]

கடவுள் வீதி *kaḍavul-vēdi*, பெ.(n) துறக்க (சொர்க்க) உலக வீதி; Indra's heaven. "கடவுள் வீதியில் விசும்பிடை படக் கடுதியோ (ஒட.5:70–7).

[கடவுள் + வீதி]

கடாச்சண்டை *kaḍā-c-canḍai*, பெ.(n) ஆட்டுக்கடாக்களை ஒன்றுடனொன்று மோதவிடுதல்; ram - tight.

[கடா + சண்டை]

கடிச்சின்னம் *kaḍi-c-cinnam*, பெ.(n) அரைமண்டியில் வலதுகால் அதன் இடத்திலேயே ஊன்றியிருக்க இடதுகாலின் குதியை மட்டும் நிலத்தில் ஊன்றிக் கைகள் இரண்டையும் தோளளவுக்கு மேல் உயர்த்தி அதனதன் பக்கங்களிலேயே நீட்டித் தொங்கவிடப்பட்டுள்ள நிலை; a posture in dance.

[கடி + சின்னம்]

கடிசூத்திரம் *kḍi-sūtiram*, பெ.(n) தேவாரத்தில் கூறப்பெற்ற சிறப்ப அணிகலன்; an ornament mentioned in devatram.

[கடி + சூத்திரம்]

கடிப்பிணை *kaḍi-p-piṇai*, பெ.(n) சிறப்பங்களின் காதணியாக சிறப்ப நூலார் கூறுவது; an ornament in sculpture.

[கடி + பிணை]

கடுக்கு *kaḍukku*, பெ.(n) ஆண்கள் காதில் அணியும் அணிகலன்; (கொ.வ.வ.சொ. 41.) ear ring for man.

[கடு – கடுக்கு]

கடுகுசந்தை *kaḍugusandai*, பெ.(n) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[கடுகு + சந்தை]

கடுமுடுக்கு *kaḍumuḍukku*, பெ.(n) மிகுந்த விரைவு (மிகு அவசரம்); utmost urgency. கடுமுடுக்குச் சேவகமாம் கம்பரிசிச் சம்பளமாம் (பழ.)

[கடு + முடுக்கு]

கடுவாக்களி *kaḍuvākkali*, பெ.(n) கோளத்தில் புலியாட்டத்திற்குரிய பெயர்; dance with tiger margnerade.

[கடுவாய் (பிலி) + களி]

மறுவ. புலிக்களி

கடூர் *kaḍūr*, பெ.(n) திண்டிவனம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[கடு + ஊர்]

கடேனி *kaḍēṇi*, பெ.(n) கல்குளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kalkulam Taluk.

[ஒருகா. சடல் + அணி]

கடைச்சாவி *kaḍaic-cāvi*, பெ.(n) அச்சின் இருபுறமும் போடப்படும் இரும்பு ஆணி. (வ.வ.வே.க.)axil bolt.

[கடை + சாவி]

கடைசிக்கல் *kaḍaicikkal*, பெ.(n) கல்லெடுத்தல் விளையாட்டுச் சொல்; a term used in children's.

[கடைசி + கல்]

கடைமடை *kaḍaimaḍai*, பெ.(n) தருமபுரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Dharmapuri Taluk.

[கடை + மடை]

கடையம் *kaḍaiyam*, பெ.(n) விழுப்புரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Villupuram Taluk.

[கடை + அம்]

கடையனேந்தல் *kaḍaiyanēndal*, பெ.(n) அருப்புக்கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[கடையன் + ஏந்தல் (ஏரி)]

கடையாட்டம் *kaḍaiyaṭṭam*, பெ.(n) கடைசி விளையாட்டு; final game.

[கடை+ஆட்டம். ஆடு–ஆட்டம்]

கண்டத்திச் சிற்பம் *kandatti-c-ciṟpam*, பெ.(n) பெண் தெய்வத்தின் தலை மட்டும் சிற்பமாக உள்ள நிலை; bust-relief goddess in sculpture.

[கண்டத்து + சிற்பம்]

கண்கட்டிவிளையாடு–தல் *kaṇkaṭṭi-viḷaiyāḍu-*, பெ.(n) வட்டத்திற்குள் கண்ணைக் கட்டிக் கொண்டு விளையாடல்; a children's play.

[கண்கட்டி + விளையாடுதல்]

கண்டசாய்ப்பு *kaṇḍaccāyppu*, பெ.(n) தமிழிசையின் ஒரு கூறு; a feature in Tamil music.

[கண்டம் + சாய்ப்பு]

கண்டப்பாடல் *kaṇḍa-p-pāḍal*, பெ.(n) மிடற்று குரலைச் சுட்டும் சொல்; a term demoting vocal music.

கண்டகசோதனை *kaṇtaka-sōtoṇai*, பெ.(n) குற்றவாளியைத் தண்டித்தல்; punishing culsrit.

[கண்டகம் + சோதனை]

கண்டர் *kandar*, பெ.(n) வீரர்; warriar. "அமரபு புசங்கள் முப்புரியரிடை கண்டருள் கண்டப் பல்லவரையன்". (Sil, XIX, 163).

[கண்டு (திரட்சி, வலிமை) – கண்டா]

கண்டாயம் *kaṇḍāyam*, பெ.(n) ஒரு வகை வரி; a kind of tax.

[கண்டர் + இயம்]

கண்டவரட்டி *kaṇḍavaraṭṭi*, பெ.(n) வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wandiwash Taluk.

[ஒருகா. கண்டர் + விரட்டி > வரட்டி]

கண்டி *kaṇḍi*, பெ.(n) தேவாரம் கூறுகின்ற சிற்பத்தின் மார்பணி; a chest ornament mentioned in devaram.

[கண்டு – கண்டி]

கண்டிகை *kaṇḍigai*, பெ.(n) சிற்பங்களில் உள்ள ஒரு மார்பணி. a chest ornament found in sculpture.

[கண்டி – கண்டிகை]

கண்டிநடனம் *kaṇḍi-naḍaṇam*, பெ.(n) இலங்கையின் நாட்டுப்புற நடனம்; dance of ceylon.

[கண்டி + நடனம்]

கண்டியமடை *kaṇḍiya-maḍai*, பெ.(n) விழுப்புரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Villupuram Taluk.

[கண்டியன் + மடை]

கண்டியர்பறை *kaṇḍiyar-paṟai*, பெ.(n) பறைவகையினுள் ஒன்று; a kind of drum.

[கண்டியர் + பறை]

கண்டினிவயல் *kaṇḍiṇivayal*, பெ.(n) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[கண்டன் – கண்டினி + வயல்]

கண்டை *kaṇḍai*, பெ.(n) திருமங்கலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirumangalam Taluk.

[கண்டு – கண்டை]

கண்ணகியம்மன்குளிர்த்தி *kannagiyamman-kulirtti,* பெ.(n) கொம்புமுறி விளையாட்டில், தேர்களின் ஊர்வலத்திற்கு மறுநாள் நடைபெறும் விழாச்சடங்கு; ritual of a temple festival.

[கண்ணகி + அம்மன் + குளித்தி]

கண்ணடக்கம் *kannadakkam,* பெ. (n) தீப்பாய்ந்தம்மனால். கண்பார்வை குணமானோர் அவ்வம்மனுக்குச் செய்யும் காணிக்கை; eye ornament presented to the deity.

[கண் + அடக்கம்]

கண்ணந்தல் *kannandal,* பெ.(n) விழுப்புரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Villupuram Taluk.

emple festival.

[கண்ணன் + ஏந்தல்]

கண்ணாடிக்கூடு *kannādi-k-kūdū,* பெ.(n) மூக்குக் கண்ணாடி வைத்துக்கொள்ளும் கூடு; spectacles cover.

[கண்ணாடி + கூடு]

கண்ணாமுழி *kannāmuli,* பெ.(n) கண்; eye.

[கண்ணின் + விழி]

கண்ணாமூச்சி *kannāmūcci,* பெ.(n) ஓமலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Omalur Taluk.

[ஒருகா. கன்னாறு + முச்சி]

கண்திறத்தல் *kantirattal,* தெ.பெ. (vbi.n.) தோற்பாவை நிழற்கூத்துக்கானப் பொம்மைகள் உருவாக்கும் இறுதிப் பகுதி; the treatment part of the work in making doll.

[கண் + திறத்தல்]

கண்பழத்தார் *kanpalattār* பெ.(n) சேவையாட்டம் ஆடும் கம்பளத்தாரைக் குறிக்குஞ் சொல்; a term mentiong the kanbalattar.

[கண்பழுத்து + ஆர்]

கண்மாக்கிணை *kanmākkinai* பெ.(n) ஒரு வகையான இசைக்கருவி; a musical instrument.

[கண் (ஒரு கண்) + மா + கிணைப்பறை]

கண்விடுதல் *kanvidudal* தொ.பெ. (vbl.n.) ஓவிய உருவாக்கத்தின் ஒரு கூறு; drawing eye as a last feature drawing sculpture

[கண் + விடு]

கணக்காந்தை *kanakkāndai,* பெ.(n) பரமக்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Paramakudi Taluk.

[கண் + காந்தை (காணல்)]

கணக்கி *kanakki,* பெ.(n) அருப்புக்கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[கணக்கன் – கணக்கி]

கணக்குச்சொல்லு–தல் *kanakku-c-collu-,* செ.கு.வி.(v.i.) அருள்வாக்குச் சொல்லுதல்; to foretell future.

[கணக்கு + சொல்]

கணக்கு *kanakku* பெ. (n) 1. ஊழ் (விதி) fate. 2. வாழ்நாள்; life time.

[கள்–கண்–கணக்கு]

கணங்கூர் *kanangūr,* பெ.(n) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkuricci Taluk.

[கணக்கு + ஊர்]

கணிச்சி *kanicci,* பெ.(n) கிருட்டிணகிரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Krishnagiri Taluk.

[கணி–கணிச்சி]

கணியாமூர் *kaṇiyāmūr*, பெ.(n) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakurici Taluk.

[கணியன் + ஆமூர்]

கணியான் ஆட்டம் *kaṇiyāṇāṭṭam* பெ.(n) சுடலைமாடன் இசக்கியம்மன் செங்கிடாக்காரன் ஆகிய கோயில் விழாக்களில் நடைபெறும் ஆட்டம்; a dance in suddalaimadan Isakki sengidikkaran festival.

[கணியன் + ஆட்டம்]

கத்தரிகை *kattarigai*, பெ.(n) பரதத்தில் பின்பற்றப்படும் ஒரு வகையான ஒற்றை முத்திரை நிலை; a posture in Baradan.

[கத்தரி–கத்தரிகை]

கத்தாழமுட்டி *kattālamuṭṭi*, பெ.(n) கற்றாழை செடியின் அடிபாகம். (கொ.வ.வ.சொ. 42.) bottom part of aloe.

[கத்தாழ + முட்டி]

கத்தாழை *kattālai*, பெ.(n) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[கல் + தாழை]

கத்திகட்டிச்சேவல் *kattikaṭṭic-cēvan* பெ.(n) கால்களின் கத்திகட்டி சண்டைக்கு விடப்படும் சேவல்; the cock which is tied with a razar on its leg in a cock fight.

[கத்தி+கட்டி+சேவல்]

கத்திரக்கை *kattirakkai*, பெ.(n) மத்தளத்தை இசைக்கும் ஒரு முறை; a mode of playing mattalam.

[கத்திரம் + கை]

கத்தேரி *kattēri*, பெ.(n) திருச்செங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruchengode Taluk.

[கல்லத்தம் + ஏரி]

கதயன் *kadayaṉ*, பெ.(n) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

கதவணி *kadavaṇi*, பெ.(n) கிருட்டிணகிரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Krishnagiri Taluk.

[கதவம் + அணி]

கதவாளம் *kadavāḷam*, பெ.(n) குடியாத்தம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Gudiyattam Taluk.

[கதம் (வெப்பம்) + ஆளம்]

கதனை *kadaṉai*, பெ.(n) வெடி; (கொ.வ.வ.சொ. 42.)explosive.

[காய்தல் – கதல் – கதனை]

கதிர் *kadir*, பெ.(n) வில் எனும் இசைக்கருவியில் பொருத்தப்படும் வெண்கலக்குப்பி; a brasscap found in the musical instrument 'vil'

[கது –கதிர்]

கந்தனேரி *kandaṉēri*, பெ.(n) வேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vellore Taluk.

[கந்தன் + ஏரி]

கந்தாடு *kandāḍu*, பெ.(n) திண்டிவனம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[கந்து + ஆடு]

கந்திலி *kandili*, பெ.(n) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruppattur Taluk.

[கந்து – கந்தில் – கந்திலி – கந்து – தெய்வம் உறையும் மரக்குற்றி]

கந்துகவரி *kandukavari*, பெ.(n) நாட்டுப்புறச்சிறார், சிறுமியர் பாடும் பந்தடிக்கும் பாடல்; children's play song.

[கந்திகம் + வரி]

கப்பறை *kapparai* பெ.(n) தாய விளையாட்டில் ஒரு கணக்கு; a score in *'tāyam'.*

[கப்பு – கப்பறை]

கப்பாணிகயிறு *kappāṇikayiru* பெ.(n) கூரைக்கட்டுதலுக்குப் பயன்படும் கயிறு. *(ம.வ.தொ.77)* rope used to the hay etc. kept a root.

[கப்பு + ஆணி + கயிறு]

கப்பூர் *kappūr,* பெ.(n) விழுப்புரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Viluppuram Taluk.

[ஒருகா. கருப்பு + ஊர்]

கபால உரிமை *kabālaurrimai* பெ.(n) கோடியம்மன் திருவிழாவில் அம்மன்களை வழி நடத்திச்செல்லும் உரிமை; a right in temple worship.

[கபாலம் + உரிமை]

கபாலம் *kapālam* பெ.(n) இறையுருவம் கொண்ட வெண்கலத்தாலான சின்னம்; a emblem.

[கணக்கு + ஊர்]

கபாலவடம் *kabālavaḍam,* பெ.(n) சிற்ப அணிகலன்களில் ஒன்று; in ornament in sculpture.

[கபாலம் + வடம்]

கபாலி *kabāli,* பெ.(n) சிவனியப் பிரிவுகளில் ஒன்று; a doctrine of Sivam.

[கபாலம் – கபாலி]

கபித்தம் *kabittam,* பெ.(n) பரத நடனக் கலைஞர் வெளிப்படுத்தும் ஒற்றை முத்திரை நிலை; an hand posture.

கபிலக்குறிச்சி *kabila-k-kuṟicci,* பெ.(n) நாமக்கல் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Namakkal Taluk.

[கபிலம் + குறிச்சி]

கபோதம்[1] *kabōdam,* பெ.(n) ஒற்றை முத்திரை நிலை; single hand pose in dance an hand posture.

[கபோதம் – புறாநிலை]

கம்மங்காடு *kammaṅgāḍu,* பெ.(n) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantābgi Taluk.

[கம்பு + அம்+ காடு]

கம்மஞ்சோறு *kammañjōṟu,* பெ.(n) கம்பால் செய்யப்பட்ட சோறு; (கொ.வ.வ.சொ. 43.)

[கம்பு + அம்+ சோறு]

கம்மந்தட்டு *kammantaṭṭu,* பெ.(n) காய்ந்த கம்புப் பயிர்; dried stalk of the bulrish millet.

[கம்பு + தட்டு – கம்புதட்டு – கம்மந்தட்டு]
தட்டு →தட்டை→தட்டு

கம்மம்மாவு *kammam-māvu,* பெ.(n) கம்பை அரைத்து வெல்லம் சேர்த்து செய்யப்படும் மாவு; the bulrnsh millet flour mixrf with jaggery.

[கம்மம் + மாவு]

கம்மு–தல் *kammu-,* செ.குன்றாவி. (v.t.) இருட்டுதல்; to start darkening.

[கம் – கம்மு]

கம்பங்கூத்தாடி *kambaṅ-kūttāḍi,* பெ.(n) கம்பின் துணையோடு கூத்தாடுபவர்; pole dancer.

[கம்பு + அம் + கூத்து + ஆடி]

கம்பரக்கத்தி *kambara-k-katti,* பெ.(n) கேப்பை (ராகி). சோளம் போன்றவற்றை அறுக்க உதவும் பிறை வடிவிலான கத்தி. *(கொ.வ.வ.சொ. 43.)* cresent knife of harvest, ragi, jowaretc.

[கம்பு + அறு + கத்தி]

கம்பளிக்குப்பம் *kambaḷi-k-kuppam*, பெ.(n) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruppattur Taluk.

[கம்பளி + குப்பம்]

கம்பனி[1] *kambaṉi*, பெ.(n) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[கும்பல் – கும்பலி – கம்பனி]

கம்பனி[2] *kambaṉi*, பெ.(n) பரமக்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Paramakudi Taluk.

[கும்பல் – கும்பலி – கம்பனி]

கம்பாலி *kambāli*, பெ.(n) அருப்புக்கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[ஒருகா. கம்மம் + பள்ளி]

கம்பிக்குடி *kambi-k-kuḍi*, பெ. (n) அருப்புக் கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[கம்பி + குடி]

கம்புஉமி *kambu-ūmi*, பெ.(n) கம்புத்தவசத்தின் மீது குடியிருக்கும் உமி; cob of the bulrush millet after the grain has been removed.

[கம்பு + உமி]

கம்பை *kambai*, பெ.(n) குறவன் குறத்தியாட்டத்தில் இடம் பெறும் ஒரு வகை இசைக்கருவி. a musical instrument used in kurattiattam.

கமலக்குடி *kamala-k-kuḍi*, பெ.(n) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[கமலம் + குடி]

கமுதக்குடி *kamuda-k-kuḍi*, பெ.(n) பரமக்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Paramakudi Taluk.

[கமுதம் + குடி]

கயத்தம் *kayattam*, பெ.(n) இறைவடிவின் திருக்கைப் பெயர்; hand of deity.

[கயம் + அத்தம்]

கயமா *kayamā*, பெ.(n) யானை; elephant. "கயமாய் பேணி கலவாது ஊரவும்" (பரி.20:19).

[கயம் + மா]

கயமுனி *kayamūṉi*, பெ.(n) யானைக்குட்டி; young of elephant. "பொய்பொரு கயமுனி முயங்கு கை கடுப்ப" (மலை.107).

[கயம் (யாகை) + முனி (கன்று)]

கயலாணை *kayalāṇai*, பெ.(n) கயல் சின்னம் பெற்ற பாண்டிய ஆட்சி; the rule of 'pandiya' kind.திரைக் கடலேய் எல்லையாகப் பார் முழுதுந் கயலாணை.

[கயல் + ஆணை]

கயன்மரம் *kayaṉmaram*, பெ.(n) பயன்படாத மரம்; useless tree. "பயன் மரம் அல்லது கயன் மரம் இல்லா" (பெருங்.71:28).

[கய + கயன் + மரம்]

கயிற்றுக்கோலாட்டம் *kayiṟṟu-k-kōlāṭṭam*, பெ.(n) கோலாட்ட விளையாட்டு; a 'kolatta' game

[கயிறு + கோலாட்டம்]

கயிறுருவிவிடு-தல் *kayiṟuruvi-viḍu*, செ.கு.வி.(v.i.) எருது முதலியவற்றை வெளியேறும்படி அவிழ்த்து விடுதல்; to let loose bull etc.

[கயிறு + உருவி + விடு-,]

கர்ணகைகூத்து *karṇa-kai-kūttu*, பெ.(n) இடுக்கி மாவட்டத்தைச் சார்ந்த மன்னான் இனப் பழங்குடியினர் ஆடும் கூத்து; a dance played by 'Mannantribe'

[கண்ணகி + கூத்து]

கர்ப்பூரவிலை *karppuravilai*, பெ.(n) பயிரிட்ட கோயில் நிலங்களுக்கான வரி; tax collected for the temples arable hand.

[கருப்பூரம் + விலை]

கரகரவண்டி *karakaravanḍi*, பெ.(n) சுற்றி விளையாடும் சிறுமியர் ஆட்ட வகை; a children's game.

[கரகர (ஒலிக்குறிப்பு) + வண்டி]

கரகிராமம் *karakirāmam*, பெ.(n) அரசுக்கு வரி செலுத்தும் தனிச்சிற்றூர்; hamlet which pay tax to Government. 2. தன்னைத்தானே சுற்றி விளையாடும் விளையாட்டு வகை; a game.

[கரம் + கிராமம்]

கரசோறு *karaśōṟu*, பெ.(n) நீரையும் தயிரைச் சேர்த்து கரைத்த சோறு; *(கொ.வ.வ.சொ. 43.)* cooked riced mixed with butter milk.

[கரை + சோறு – கரைசோறு – கரசோறு]

கரடி *karaḍi*, பெ.(n) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[காடு (சிறுகுன்று) – கரடி]

கரடிக்கல் *karaḍikkal*, பெ.(n) திருமங்கலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirumangalam Taluk.

[காடி + கல்]

கரடிக்குடி *karaḍikkuḍi*, பெ.(n) வேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vellore Taluk.

[கரடி + குடி]

கரடிசித்தூர் *karaḍi-chittūr*, பெ.(n) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakuricci Taluk.

[கரடி + சிற்றூர்]

கரடியூர் *karaḍiyūr*, பெ.(n) சேலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk.

[கரடி + ஊர்]

கரண்டமுகுடம் *karaṇḍa-mūgūdam*, பெ.(n) பானையடுக்கு போன்ற மகுடம். crown resembling pottery layer. "பொற் பண்டாரத்துக்கு முதலாக ஒடுக்கின ரத்நங் கட்டின கரண்டமுகுடம்" (Sii, IV, 499).

[கரணியம் + முகுடம்]

கரண்டை[1] *karaṇḍai*, பெ.(n) கால் தாண்டி விளையாட்டில் கரண்டைக் காலினைப் பிடித்துக் குனிந்து நிற்கும் நிலை (மதுரை மாவட்டம்). a bending pose in children's game.

[கரண்டு – கரண்டை]

கரணப்பந்து *karaṇa-p-pandu*, பெ.(n) துண்டு. சட்டைத் துணியை முறுக்கிச் செய்த திரியைக் கொண்டு விளையாடல்; a children's play.

[கரணம் + பந்து]

கரணம் *karaṇam*, பெ.(n) தலை கீழாகப் பாய்கை (மதுரை மாவட்டம்); somarsamlt.

[கரு–கரணம்]

கரணிக்கசோடி *karanikkacōḍi*, பெ.(n) கணக்கர் வரி; tax for village accountant.

[கரணம்–கரணிக்கம் + சோடி]

கரணை *karaṇai*, பெ.(n) சிறுசிறு துண்டுகளாக வெட்டப்பட்ட கரும்பு; sugercane pieces.

[காள – கரணை]

கரவம் *karavam*, பெ.(n) வஞ்சம். vengence. "ஞாலம் இடு பிச்சை தம் கரவம் ஆக உழிதந்து" (சம்.3:83:7).

[காவு–கரவம்]

கரிக்கண்டானி *kari-k-kaṇḍāṇi*, பெ.(n) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[கரி + கண்டன் + ஆனி]

கரிக்கல் *karikkal*, பெ.(n) அரக்கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arakkonam Taluk.

[கரு-கரி + கல்]

கரிக்காலி *karikkāli*, பெ.(n) திண்டுக்கல் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Dindukkal Taluk.

[கரு-கரி + (கல்லி) காலி]

கரிக்கிலி *karikkili*, பெ.(n) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurandagam Taluk.

[கரு-கரி + (கல்லி) கிலி]

கரிகந்தாங்கல் *karigantāṅgal*, பெ.(n) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wallajah Taluk.

[கரிகன் + தாங்கல் (ஏரி)]

கருக்கடை *karu-k-kaḍai*, பெ.(n) உற்றறிதல், பொறுப்பு; observation, attending with care.

[கருக்கு-கருக்கடை]

கருக்காத்தி *karukkātti*, பெ.(n) திருவாடணை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[கருக்கல் + ஆத்தி]

கருக்காமாலை *karukkāmālai*, பெ.(n) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurandagam Taluk.

[கருக்கல் + மாலை]

கருக்கை *karukkai*, பெ.(n) கடலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Cuddalore Taluk.

[கரு-கருக்கை]

கருக்காத்தி *karukkatti*, பெ.(n) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[கருக்கல் + ஆத்தி]

கருங்காத்து *karuṅgāttu*, பெ.(n) அதிக ஈரப்பதத்துடன் வீசும் காற்று; *(கொ.வ.வ.சொ. 44.)*

[கரும் + காற்று]

கருங்குருவை *karuṅkuruvai*, பெ.(n) நெல் வகை. *(வ.வ.வே.க.17.)* a variety of paddy

[கரும் + குருவை]

கருஞ்சுத்தி *karuñcutti*, பெ.(n) பரமக்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Paramakudi Taluk.

[கரும் + சுழுத்தி]

கருஞ்செவலை *karuṉ-cēvali*, பெ.(n) மாட்டின் நிறம்; brownish colour.

[கரும் + செவலை]

கருடி *karuḍi*, பெ.(n) சிலம்பம்; the play cilambam.

[காருடி-கருடி]

கருணாவயல் *karuṇā-vayal*, பெ.(n) பரமக்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Paramakudi Taluk.

[கருணன் + வயல்]

கருதூசி *karudūsi*, பெ.(n) இரட்டையில் தாருக்குச்சியை சொருகி சுற்றப் பயன்படும் கருவி. *(நெ.தொ.க.55).* a device in loom.

[கரு + தூசி]

கருநிலம் *karunilam*, பெ.(n) செங்கல்பட்டு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chingleput Taluk.

[கரு + நிலம்]

கருப்படித்துண்டு *karuppaḍi-t-tuṇḍu*, பெ.(n) கடலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Cuddalore Taluk.

[கரும்பு + அடி + துண்டு]

கருப்பனூர் *karuppanūr,* பெ.(n) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruppattur Taluk.

[கரும்பன் + ஊர்]

கரும்பாடு *karumbāḍu,* பெ.(n) அகத்தீசுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[கரும் + பாடு]

கருப்புச்சட்டி *karuppu-c-caṭṭi,* பெ.(n) கன்னடக்காரர்களால் செய்யப்படும் சட்டி; black pottery.

[கருப்பு + சட்டி]

கருப்பூர்உக்கடை *karuppūr-ukkaḍai,* பெ.(n) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[கருப்பூர் + உக்கடை]

கரும்பூர் *karumbūr,* பெ.(n) குடியாத்தம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Gudiyattam Taluk.

[கரும்பு + ஊர்]

கருமள் *karumaḷ,* பெ.(n) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[கரு + மால்]

கருமாண்டபதி *karumāṇḍapati,* பெ.(n) கிருட்டிணகிரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Krishnagiri Taluk.

[கருமாண்டன் + பதி]

கருமாயம் *karumāyam,* பெ.(n) 1. தொந்தரவு; trouble, 2. கருவினை; black magic.

[கரு + மாயம்]

கருவடிப்பங்கு *karuvaḍipañgu,* பெ.(n) மண் கருப்பாக இருக்கும் பகுதி; black soil

[கருவடி + பங்கு]

கருவ மரம் *karuvamaram,* பெ.(n) நாட்டு மர வகை. *(ம.வ.தொ.77.)* a tree.

[கருவேல் + மரம்]

கரை உருளை *karaiurruḷai,* பெ.(n) கரைப்பாவு சுற்றுவதற்கு உதவும் கரை உருளை. *(ம.வ.தொ.77.)* a device in loom.

[கரை + உருளை]

கரைக்கன்னி *karai-k-kanni,* பெ.(n) கரை நூல்; thread used for border in weaving. *(நெ.தொ.க.56)*

[கரை+கன்னி. கண்ணி > கன்னி]

கரையர் *karayar,* பெ.(n) சிண்டு நடனம் ஆடுகின்ற பழங்குடி மக்கள்; a tribe.

[கரு + கரையர்]

கல்பாவி *kalpāvi,* பெ.(n) பவானி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Bavani Taluk.

[கல் + பாவி]

கல்பிடித்தல் *kal-piḍittal,* பெ.(n) அம்மானை விளையாட்டு வகை; a variety of 'ammanai' game.

[கல் + பிடித்தல்]

கல்மாரி *kalmāri,* பெ.(n) மழை வரும்போது விழும் பனிக்கட்டித்துகள்; *(கொ.வ.வ.சொ. 45.)* hail.

[கல் + மாரி]

கல்யாணக்கொட்டு *kalyāṇakkoṭṭu,* பெ.(n) தப்படித்தல் வகைகளில் ஒன்று; a mode of beating drum.

[கலியாணம் + கொட்டு]

கல்யாணதிருமேனி *kalyāna-trumēni,* பெ.(n) நோயற்ற உடல்; healthy body.

[கலியாணம் + திருமேனி]

கல்யாணம் *kalyāṇam,* பெ.(n) குதிரைக் கல்லு விளையாட்டில் பயன்படுத்துதல்; a term used at 'kudiraikkal' game.

[கலியாணம்–கல்யாணம்]

கல்யாணி *kalyāṇi,* பெ.(n) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkuricci Taluk.

[கலியாணி – கல்யாணி]

கல்லடம் *kalladam,* பெ.(n) கோடியம்மன் திருவிழாவில் காளிவேடம் பூணுபவர் அணியும் உடை; dress worn by the devotee.

[சல்லடம் – கல்லடம்]

கல்லடர் *kalladar,* பெ.(n) மலைக்குகை; mountain cavern. "கான மொடு கல்லடருள் இல இடரும் நீங்கி" (நீல. 1:9).

[கல் + சுடர்]

கல்லல் *kallal,* பெ.(n) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[கல் – கல்லல்]

கல்லாங்காடு *kallāṅgādu,* பெ.(n) கல் நிறைந்த நிலம்; *(கொ.வ.வ.சொ. 45.)* a grand or stone.

[கல் + அம் + காடு]

கல்லாடை *kallāḍai,* பெ.(n) சிற்பியர் வடிவமைக்கும் ஓர் அணிகலன்; an ornament in sculpture.

[கல் – ஆடை]

கல்லாம்பிரம்பு *kallāmpirambu,* பெ.(n) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[கல் + அம் + பிரம்பு]

கல்லாமண்ணா *kallāmaṇṇā,* பெ.(n) தொட்டு விளையாடல்; a game of children.

[கல்லா + மண்ணா]

கல்லிமடையான் *kallimaḍaiyaṉ,* பெ.(n) ஒரு வகை நெல்; *(கொ.வ.வ.சொ. 45.)* a variety of paddy.

[கல்லி + மடை + ஆன்]

கல்லுக்குச்சி *kallukucci,* பெ.(n) குச்சியினையும் கல்லினையும் தொட்டு விளையாடுதல்; a game with pebbles and sticks.

[கல்லு + குச்சி]

கல்லுச்சோளம் *kalluc-cōḷam,* பெ.(n) சோள வகை. *(வ.வ.வே.க.17.)* a variety of fowar.

[கல் + சோளம்]

கல்லுவைத்தல்[1] *kallu-vaittal,* பெ.(n) நெற்றியில் கல்லை வைத்து தண்டித்தல்; punishing in laping pebbles on forehead.

[கல்லு + வைத்தல்]

கல்லெடுத்தல்[2] *kalleḍuttal,* பெ.(n) பல கற்களை ஓர் இடத்திற்கு கொண்டுவரும் விளையாட்டு வகை (மதுரை மாவட்டம்); a game of children.

[கல் +எடுத்தல்]

கல்லெடுத்தல்[3] *kalleḍuttal,* பெ.(n) சிறு கற்களை வரிசையாக வைத்து எடுத்து விளையாடுதல்; playing with pebbles a children game.

[கல் +எடுத்தல்]

கல்லேரி *kallēri,* பெ.(n) திருவண்ணாமலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvannamalai Taluk.

[கல் + ஏரி]

கலங்காணி *kalaṅgāṇi,* பெ.(n) நாமக்கல் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Namakkal Taluk.

[ஒருகா. கலிங்கு + காணி]

கலசங்குடி *kalasaṅgudi,* பெ.(n) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[கலசம் + குடி]

கலஞ்சொரிகளிறு *kalañcōri-kaḷiru,* பெ.(n) மரக்கலங்களில் கடல் வழியாகக் கொண்டு

வரப்பட்ட யானைகள். elephants brought from foreign country by ship. "தீ வாந்தரத்து பூபாலர் திறை விடுத்த கலஞ்சொரி களிறு முறை முறை நிற்ப" (முதல். குலோத்துங்கன்.மெய்கீர்த்தி).

[கலம் + சொரி + களிறு]

கலப்பக்காடு *kalappa-k-kāḍu*, பெ.(n) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[கலப்பை + காடு]

கலவாங்கட்டி *kalavāṅkaṭṭi*, பெ.(n) உடைந்த ஓடு (மதுரை மாவட்டம்); broken tiles.

[கலவாய் + கட்டி]

கலன் *kalaṉ*, பெ.(n) கடன், உரிமைத் தொடர்பு. dept. or right. "இந்நிலத்துக்கு எப்பேறுபட்ட கலனும் இல்லை. கலனுளவாய்த் தொற்றுங் கால் நாங்களே தீத்து குடுக்கக் கடவோம்". (தெ.கல்.தொ.12 பகு.1 கல்.190).

[கள் – களன் – கலன்]

கலி *kali*, பெ.(n) வடவர் சூது விளையாட்டில் தோல்வியினைக் குறிக்கும் சொல் (மதுரை மாவட்டம்); a term used to refer to depat in game by northewers.

[கல் – கலி]

கலிகடந்தான் *kali-kaḍandāṉ*, பெ.(n) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[கலி + கடந்தான்]

கலிங்கலேரி *kaliṅgalēri*, பெ. (n) திரு வண்ணாமலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvannamalai Taluk.

[கலிங்கு + கலிங்கல் + ஏரி]

கலிங்கியம் *kaliṅgiyam*, பெ. (n) கோபி செட்டிப்பாளையம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Gopichettipalayam Taluk.

[கலிங்கு – கலிங்கல் + ஏரி]

கலிதீர்த்தான் *kali-tīrttāṉ*, பெ.(n) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[கலி + தீர்த்தான்]

கலிதேரி *kalitēri*, பெ.(n) திருவண்ணாமலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvannamalai Taluk.

[கலியன் – கலிதன் + ஏரி]

கலிவாப்பங்கு *kalivāppaṅgu*, பெ.(n) களிமண் நிலப்பகுதி. *(வ.வ.வே.க.17.)* clay ground.

[களி – களிவை + பங்கு]

கலை–த்தல் *kalai*, செ.கு.வி.(v.i.) ஒரு குழிக்காயை எடுத்தல் (திருச்சி.வ); to take from one pit.

[கலை – கலைத்தல்]

கவட்டை *kavaṭṭai*, பெ.(n) கிளிகடி கருவி (மதுரை மாவட்டம்); a device to frighten and device parrots.

[கவடு – கவட்டை]

கவட்டைக்கம்பு *kavaṭṭai-k-kambu*, பெ. (n) இரண்டாகப் பிளந்துள்ள கம்பு வண்டி யுருட்டுதல் விளையாட்டில் பயன்படுவது; forked pole.

[கவட்டை + கம்பு]

கவணை[1] *kavaṇai*, பெ.(n) விருத்தாசலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Viruddhachalam Taluk. *(கொ.வ.வ.சொ. 43.)*

[கவண் – கவணை]

கவணை[2] *kavaṇai*, பெ.(n) வாய்க்கால் நீரோட்டத்தைத் தடுக்கப் போடும் தடுப்பு; an obstantion made at flowing water cannel.

[கவண் – கவணை]

கவுண் *kavuṇ*, பெ.(n) கயிற்றில் கட்டப்பட்ட பட்டையான தோலில் கல்லை வைத்துச் சுழற்றி

வீசி எறியும் சிறு கருவி; sling, made up of for branch.

[கவண் – கவுண்]

கவுறுவாய்க்கால் *kavuṟuvāykkāl*, பெ.(n) சிறு வாய்க்கால்; *(கொ.வ.வ.சொ. 47.)* a small canee.

[கவை + உறு + வாய்க்கால்]

கழநிகோல் *kaḻani-kol*, பெ.(n) ஒரு நில அளவு கோல்; a linear measurement pole. "இந்நிலம் கழநி கோலால் ஆயிரத்து நாநூறு குழி". (Sii, III,156).

[கழநி + கோல்]

கழிதட்டு *kaḻitaṭṭu*, பெ.(n) மாடுகள் தின்னாமல் கழிக்கும் தீவனத்தட்டை; left over stalk etc of toddes.

[கழி + தட்டு]

கழிமடை *kaḻimaḍai*, பெ.(n) நீர் கடைசியாகச் சென்று சேரும் மடை; *(கொ.வ.வ.சொ. 47.)* to last end channel of tant.

[கழி + மடை]

மறுவ. கடை மடை

கழுகேர்கடை *kaḻukērkaḍai*, பெ.(n) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[கழுகு + ஏர் + கடை]

கழுஞ்சிக்கல் *kaḻuñjikkal*, பெ.(n) சிறுவர்களின் ஒரு வகை விளையாட்டு; a chileren's game

[கழுஞ்சி + கல்]

கழுத்துக்கட்டி *kaḻuttu-k-kaṭṭi*, பெ. (n) வண்டியில் மாட்டைக் கட்டுவதற்காகக் கழுத்தில் பிணைக்கப்பட்டிருக்கும் கயிறு; *(கொ.வ.வ.சொ. 47.)*

[கழுத்து + கட்டி]

கழுதூர் *kaḻudūr*, பெ.(n) விருத்தாசலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Viruddhachalam Taluk.

[கழுது + ஊர்]

கழுமலம் *kaḻumalam*, பெ.(n) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thirukkoyilur Taluk.

[கெழுமல் – கழுமல் + அம்]

கள்ளக்காத்தான் *kaḷḷa-k-kāttāṉ*, பெ.(n) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[கள்ளர் + காத்தன்]

கள்ளக்காரி *kaḷḷakkāri*, பெ. (n) அருப்புக் கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[கள்ளன் + காரி]

கள்ளக்காய் *kaḷḷakkāy*, பெ.(n) நிலக்கடலை; *(கொ.வ.வ.சொ. 47.)* groundnut.

[கடலைக்காய் – கள்ளக்காய்]

கள்ளத்தி *kaḷḷatti*, பெ.(n) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[கள்ளன் + அத்தி]

கள்ளந்திரி *kallandiri*, பெ.(n) மதுரை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurai Taluk. *(கொ.வ.வ.சொ. 47.)*

[கள்ளன் + திரி]

கள்ளமுத்து *kaḷḷamuttu*, பெ.(n) கட்டாட்டத்தில் திருட்டுத்தனமாக முத்து போடுதல்; deceiving play.

[கள்ளம் + முத்து]

கள்ளிக்குடி *kalli-k-kudi*, பெ.(n) பாண்டிய நாட்டுச் சிற்றூர்; a village in Pandiya territory.

[கள்ளி + குடி]

கள்ளி *kalli*, பெ.(n) ஒரு வகை மாட்டு நோய்; a kind of cattle disease. "பெருமானடிகளுக்கு குடுத்த பசு கள்ளி கொள்ள காக்கமாட்டாது". (Sii, XIX, 151).

[கள் – கள்ளி]

கள்ளுக்கலயம் *kaḷḷu-k-kalayam*, பெ.(n) பதனியெடுக்கப் பயன்படும் கலயம். *(ம.வ.தொ. 78.)* earthern pot used to tap palm juice.

[கள்ளு + கலயம்]

கள்ளுத்தண்ணி *kaḷḷuttaṇṇi*, பெ.(n) கள்; *(கொ.வ.வ.சொ. 47.)* toddy.

[கள்ளு + தண்ணீர்]

களக்குடி *kaḷa-k-kuḍi*, பெ.(n) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[களக்காய் – களம் + குடி]

கள்ங்கண்ணி *kaḷaṅkaṇṇi*, பெ.(n) களத்தின் அடியில் தங்கும் மண்ணோடு கூடிய நெல். *(வ.வ.வே.க. 18.)* left out paddy on the threshing floor.

[களம் + தண்ணி]

களகண்மாய் *kaḷakaṇmāy*, பெ.(n) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[களம் + கண்மாய்]

கள(த்)திரம் *kalatiram*, பெ.(n) மனைவி; wife. விலக்குமவன் தந்தையைக் கொன்று தள்ளையைக் களத்திரம்". (TAS ii, p, 173-207).

களதம் *kaladam*, பெ.(n) பெருச்சாளி; bandicoot. "மூடிகம், களதம், உந்துரு, பெருச்சாளி" (நிக.பி.8:221).

[கள்ளதம் – களதம்]

களபங்குடி *kaḷabaṅguḍi*, பெ.(n) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[களபம் + குடி]

களமணிசம் *kalamanisam*, பெ.(n) வளமிக்க நெற்கதிர். fine paddy corn. "பொற்றாமரை மலர்மிசை விளைவுறு களமணிசமென மிளிர்ந்தி லங்கு". (PNDCP.P.95-115).

[கள் – கள + மணியம்]

களரி *kaḷari*, பெ. (n)இராமநாதபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ramanadhapuram Taluk.

[களம் – களரி]

களரிப்பணம் *kaḷari-p-paṇam*, பெ. (n) திருமணம் முடிந்த பிறகு பணிசெய் குடிகளுக்கு கொடுக்கப்படும் அன்பளிப்பு; *(கொ.வ.வ.சொ. 47.)*

[களரி + பணம்]

களவா *kaḷavā*, பெ.(n) செஞ்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Señji Taluk.

[குள + வாய்]

களவாணி *kaḷavāṇi*, பெ.(n) திருடன்; *(கொ.வ.வ.சொ. 47.)* thief.

[களவு + ஆளி]

களிப்பாக்கு *kaḷi-p-pākku*, பெ.(n) பல்லாங்குழிக் காயாகத் தஞ்சையில் பயன்படுத்தும் பாக்கு; are canut used for playing indoor-game.

[களி + பாக்கு]

களியல் *kaḷiyal*, பெ.(n) விளவங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vilavangodu Taluk.

[கழியல் – களியல்]

களுகாடி *kaḷukāḍi*, பெ.(n) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[கழுகு + ஆடி]

களையூர் *kaḷaiyūr,* பெ.(n) கடலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Cuddalore Taluk.

[களை + ஊர்]

கற்கடகம் *kaṟkadagam*, பெ.(n) கடக (ஆடி) மாதம். "இவ்வாட்டை கற்கடக ஞாயிற்று வெள்ளிக்கிழமை". (SII, III, 106).

[கல் + கடகம்]

கற்கடகம் *kaṟkaḍagam*, பெ.(n) இரட்டைக் கை முத்திரையின் ஒரு வகை; double hand pose in dance.

[கல் + கடகம்]

கற்கடை *kaṟkadai*, பெ.(n) கற்குவியல்; mound of stones. "தென்வடமான பெருவழிக்கும் கற்கடைக்கும் மேற்கு". (IPS.559).

[கல் + (கிடை) கடை]

கற்பகம் *kaṟpagam*, பெ.(n) சேலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Selam Taluk.

[கல் + (பாங்கம்) பகம்]

கற்பூரக்குடுக்கை *kaṟpūra-k-kuḍukkai*, பெ.(n) பரமக்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Paramakudi Taluk.

[கற்பூரம் + கொடுக்கை]

கற்றாழைச்சரடு *kaṟṟāḷai-c-caraḍu*, பெ.(n) கற்றாழை நாரை எடுத்துச் சரடு சரடாக பாய் பின்ன நூலாக்குதல்; aleo fiber.

[கல் + தாழை + சரடு]

கறம் *kaṟam*, பெ.(n) கருமை; black colour. "கறம் படுமனத்தின் ஒங்கும் கார் அமண் குண்டர். (தி.தி.37:51).

[கறு – கறம்]

கறையான்குழி *kaṟayāṉkuḻi*, பெ.(n) அகத்தீசுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[கறையான் + குழி]

கன்லூர் *kaṉlūr*, பெ.(n) பொன்னேரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ponneri Taluk.

[கன்னல் (கரும்பு) + ஊர்]

கன்னங்குறிச்சி *kaṉṉaṅkuricci*, பெ.(n) சேலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Selam Taluk.

[கள்ளான் + குறிச்சி]

கன்று *kaṉṟu*, பெ.(n) கையணி வகையினுள் ஒன்று; an hand ornament.

[கல் + து– கனது – கன்று]

கன்னித்தும்பு *kaṉṉi-t-tumbu*, பெ.(n) கன்று குட்டிகளுக்கு போடும் சிறிய தும்பு; *(கொ.வ.வ.சொ. 48.) asmallrope*

[குன்னி – கன்னி + தும்பு]

கன்னிவிடை *kaṉṉiviḍai*, பெ.(n) முதன் முதலாக முட்டை இடும் கோழி; *(கொ.வ.வ.சொ. 48.)* hen laying egg for the first time

[கன்னி + விடை]

கனக்குலம் *kaṉa-k-kūlam*, பெ. (n) மேகக்கூட்டம். cloud. "கனக்குலம் ஏழும் சேரக் கல்மழை பொழிந்தது என்ன". (வி.பா.46:39).

[கணம் – கனம் + குலம்]

கனககிரி *kaṉagagiri*, பெ.(n) திருச்செங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruchengode Taluk.

[கனகம் + கிரி]

மறுவ. பொற்கோடு

கனம் *kaṉam*, பெ.(n) இசைபாடும் முறைமைகளிற் ஒன்று; a method of singing.

காக்கட்டான்விதை *kākkaṭṭāṉ-vidi,* பெ.(n.) கொடிக்காக்கட்டான் விதை; kaladana seeds or seeds of the plant.

கசப்பான இவ்விதை பெருவயிறு, தொண்டைக் கம்மல், தோல் நோய் இவற்றிற்கும் சளியைப் மல வழியாய் வெளிப்படுத்தவும் பயன்படும் (சா.அக.).

காக்கட்டான்வேர் *kākkaṭṭāṉ-vēr,* பெ.(n.) காக்கணங் கொடியின் வேர்; mussell-shell root.

[காக்கட்டான் + வேர்.]

நீரைப் பிரித்து, மலத்தை இளக்கும், காக்கணங்கொடியின் வேர் மூத்திரப்பை, மூத்திரத் தாரை ஆகியவற்றில் ஏற்படும் அழற்சியைப் போக்கி வெள்ளை, வெட்டை நோய்களையும் குணமாக்கும். இவ்வேரின் பொடி குழந்தைகளின் மாந்தம், காய்ச்சல், இருமலைப் போக்கும் (சா.அக.).

காக்கணங்கொடி *kākkaṇaṅ-koḍi,* பெ.(n.) கொடிக்காக்கட்டான்; sky-blue blind weed, smaller morning glory - *Ipomaea hederacea* (சா.அக.).

[காக்கணம் + கொடி.]

காக்கலை *kākkalai,* பெ.(n.) குறட்டை; bitter-gourd - *Trichosanthes palmata* (சா.அக.).

காக்களி *kākkaḷi,* பெ.(n.) தேட்கொடுக்கி; Indian turnsole or Indian heliotrope - *Heliotropium indicum* (சா.அக.).

[கா + களி.]



காக்கனம் *kākkaṉam,* பெ.(n.) **காகனம்** பார்க்க; see *kāgaṉam* (சா.அக.).

காக்காய்க்கடி *kākkāy-k-kaḍi,* பெ. (n.) பெரும்பாலும் சிறுவர்கள் தின்பண்டம் போன்றவற்றை எச்சில் படாமல் துணியால் மூடிக் கடிக்கும் முறை; practice of splitting sweet meats, etc., in which the object is not directly bitten but through a cloth prevalent among children. *அந்த மிட்டாயில் எனக்குக் காக்காய்க் கடி கடித்துக் கொடு "காக்காய் கடி கடிச்சு கொடுத்த கமருகட்டு மிட்டாயி, சோக்கா வாங்கி போட்டுக்கிட்டு விட்டானய்யா கொட்டாவி (நா.பா.)".*

[காக்காய் + கடி.]

காக்காய்க்குளியல் *kākkāy-k-kuḷiyal,* தொ.பெ. (vbl.n.) முழு உடம்பையும் நனைக்காமல் தண்ணீரை அள்ளித் தெளித்துக் குளிக்கை; wash head in a hurry. *காக்காய்க் குளியல் போட்டு விட்டு ஐந்து நிமையத்தில் வந்து விடுகிறேன்.*

[காக்காய் + குளியல்.]

காக்காய்க்கொள் *kākkāy-k-koḷ,* பெ.(n.) காக்காய்க்கொல்லி எனும் செடிவகை; a plant - *Coeculus indicus.*

[காக்காய் + கொள்.]

காக்காய்க்கொல்லிவிதை *kākkāy-k-kolli-vidai,* பெ.(n.) மருந்தாகப் பயன்படும் காக்கைக் கொல்லிக்கொடியின் விதை; berries of crow-creeper or bitter creeper-*Fructus cocculi of chemists* (சா.அக.).

[காக்கைக்கொல்லி →காக்காய்க்கொல்லி + விதை.]

காக்கினி *kākkiṉi,* பெ.(n.) குருஞ்சூலி மரம்; toon tree - *Cedrela toons* (சா.அக.).

மறுவ. அகச்சூலி

காக்குமிளம் *kākkumiḷam,* பெ.(n.) நீர்க்குளிரி அல்லது நீர்ச்சேம்பு; water-archer - *Saggitaria obtusifolia* (சா.அக.).

[காக்கு + மிளம்.]

காக்குறட்டை *kākkuṟaṭṭai,* பெ.(n.) 1. காக்கணங் கொவ்வை; mussell-shell creeper. 2. கருங் காக்கணத்தி; palmated gourd; blue mussell-shell creeper - *Clitoria ternatea* (சா.அக.).

[கா + குறட்டை]

காக்கைக்கண்ணன் *kākkai-k-kaṇṇaṉ,* பெ.(n.) ஒற்றைப் பார்வை உடைய கண்ணன்; squiant-eyed man (சா.அக.).

[காக்கை + கண்ணன்.]

காக்கைப்பாலை[1] *kākkai-p-pālai,* பெ.(n.) பாலை மரவகை; cluster - flowered croton - *Gelonium lanceolatum* (சா.அக.).

[காக்கை + பாலை.]

காக்கைப்பாலை[2] *kākkai-p-pālai,* பெ.(n.) கருப்பு வேப்பிலை மரம்; false wampee tree - *Micromelum Pubescens* (சா.அக.).

[காக்கை + பாலை.]

காக்கைப்பித்து *kākkai-p-pittu,* பெ.(n.) காக்கையின் பித்தம்; the bile of crow's bladder (சா.அக.).

[காக்கை + பித்து.]

காக்கைப்பிலை *kākkai-p-pilai,* பெ.(n.) ஒரு வகைப்பூடு; false kamela - *Casearia esculenta* (சா.அக.).

[கால் + கைப்பு + இலை.]

காக்கைவலிச்சுழற்சி *kākkai-vali-c-cuḻaṟci,* பெ.(n.) கால்கை வலியால் ஏற்படும் தலைச் சுழற்சி; vertigo which attends or fellows an epileptic attack - *Epileptic vertigo* (சா.அக.).

[கால் + கைவலி + சுழற்சி.]

காக்கைவேர் *kākkai-vēr,* பெ.(n.) **காக்கட்டான் வேர்** பார்க்க; see *kākkaṭṭāṉ-vēr* (சா.அக.).

[காக்கை + வேர்.]

காக்கைவேலி *kākkai-vēli,* பெ.(n.) கொடிவகை; stinking swallow wort - *Damia extensa* (சா.அக.).

[காக்கை + வேலி.]

காக்கொரட்டை *kā-k-koraṭṭai,* பெ.(n.) கருப்புக் காக்கட்டான்; blue flowered mussell-shell creeper - *clitorea ternatea (typica)* (சா.அக.).

[கா+ குறட்டை.]

காகக்கரிப்பான் *kāga-k-karippāṉ,* பெ.(n.) கருப்புக் கரிசலாங்கண்ணி; a black variety of eclipse plant - *Eclipta prostata* (சா.அக.).

[காகம் + கரிப்பான்.]

காககங்கு *kāgakaṅgu,* பெ.(n.) ஒரு வகைப்புல்; a kind of panic grass - *Panicum milliaceum* (சா.அக.).

[காகம் + கங்கு.]

காககுடம் *kāga-kuḍam,* பெ.(n.) எள்; sessamum seed (சா.அக.).

[காகம் + குடம்.]

காகச்சிலந்தி *kāga-c-cilandi,* பெ.(n.) ஒரு வகைச் சிலந்திப் பூச்சி; a species of spider.

[காகம் + சிலந்தி.]

இது உடம்பில் பட்ட இடத்தில் வெளுத்தும், சிவந்தும் கொப்புளமெழுப்பும். அதனால் விக்கல், இரைப்பு, அதிக தாகம், மூர்ச்சை, உறக்கம் கெடுதல், மார்பு நோய் முதலிய துன்பங்கள் ஏற்படும் (சா.அக.).



காகச்சுரம் *kāga-c-curam,* பெ.(n.) கரும் புள்ளிகளை எழுப்பும் ஒரு வகைக் காய்ச்சல்; a kind of developing black or dark eruptions or spots in the body (சா.அக.).

[காகம் + சுரம்.]

காகசம்பு *kāga-šambu,* பெ.(n.) 1. கறுப்பு நாவற்பழம்; black jaumoon - *Ardisia humilis.* 2. சம்பு நாவல்; malacca jaumoon (சா.அக.).

[காகம் + சம்பு.]

காகசி *kāgaši,* பெ.(n.) மணித்தக்காளி; black-berried solanum - *Solanum nigrum* (சா.அக.).

[கா + கசி.]

காகண்டகம் *kā-gaṇḍagam,* பெ.(n.) 1. மருக்காரை; common emetic nut - *Randia dumetorum.* 2. பறவைக் கொல்லி அல்லது பருந்து; destroyer of birds or hawk; falcon (சா.அக.).

[கா + கண்டகம்.]

காகண்டம் *kā-gaṇḍam,* பெ.(n.) பிரண்டை; adamant creeper - *Vitex quadrangularis* (சா.அக.).

[கா + கண்டம்.]

காகண்ணான் *kā-kaṇṇāṉ,* பெ.(n.) சாதிக்காய்; a kind of nutmeg - *Goniothaiamus wyanadensis* (சா.அக.).

[கா + கண்ணான்.]

காகணந்தி *kāgaṇandi,* பெ.(n.) **காகணந்திரை** பார்க்க; see *kāgaṇa-n-tirai* (சா.அக.).

காகணந்திரை *kagaṇa-n-tirai,* பெ.(n.) குன்றிக் கொடி; country liquorice - *Abrus preoatorius* (சா.அக.).

[காகணம் + திரை.]

காகணம் *kāgaṇam,* பெ.(n.) ஒரு வகைக் குட்ட நோய்; a kind of leprosy.

[கா + கணம்.]

இது கருஞ் சிவப்பு கொப்புளங்களை எழுப்பும். பூச்சிகளின் குற்றத்தினால் உண்டாவது (சா.அக.).

காகத்திருப்பி *kāga-t-tiruppi,* பெ.(n.) திப்பிலி; long pepper - *piper longum* (சா.அக.).

[காக்கம் + திருப்பி.]

காகத்தீருகம் *kāga-t-tīrugam,* பெ.(n.) காட்டுப் புகையிலை; wild tobacco - *Lobelia nicotianaefolia* (சா.அக.).

[காகம் + தீருகம்.]

காகதாளி *kāga-tāḷi,* பெ.(n.) மரவகை; Ceylon ebony (செ.அக.).

[காகம் + தாளி.]

காகதிக்தம் *kāga-tiktam,* பெ.(n.) குன்றி; crab's eye - *Abruos precatorious* (சா.அக.).

[காகம் + திக்தம்.]

காகதிண்டு *kāga-tiṇḍu,* பெ.(n.) ஒருவகைக் கருங்காலி; a kind of ebony - *Diospyros tomentosa* (சா.அக.).

[காகம் + திண்டு.]

காகதித்தம் *kāga-tittam,* பெ.(n.) குருஞ்சூலி மரவகை; toon tree - *Cedrela toona* (சா.அக.).

[காகம் + தித்தம்.]

காகதிந்துகம் *kaga-tindugam,* பெ.(n.) 1. கருந்தும்பை; black tumbai flower of the leucas genus. 2. பெருந்தும்பை; large black toombay - *Aniso meles malabarica.* 3. எட்டி; nux vomica - *Strychnos nux vomica* (சா.அக.).

[காகம் + திந்துகம்.]

காகதிறம் *kāga-tiṟam,* பெ.(n.) குறிஞ்சா; Indian or country ipecacuanha - *Asclepias asthmatica* (சா.அக.).

[காகம் + திறம்.]

காகதுண்டகம் *kāga-tuṇḍagam,* பெ.(n.) ஒரு நீர்க்கோழி; a kind of water-fowl (சா.அக.).

[காகம் + துண்டகம்.]

காகதுண்டி *kāga-tuṇḍi,* பெ.(n.) காக்கைப் பொன்; tinsel of brass leaf (சா.அக.).

[காகம் + துண்டி.]

காகதும்பி *kāga-tumbi,* பெ.(n.) 1. ஒரு வகைக் கருப்புத் தும்பி மீன், கடல் மீன்; a brownish black sea fish called black toomby - *Gymna-Pistusniger.* 2. முதுகின் புறம் கருப்பாயுள்ள தும்பி மீன்; another variety of toomby - *Pterois volitans.* 3. மற்றொரு வகைத் தும்பி மீன்; another variety - *Pterois miles.* 4. கருங்காலி; Mysore coromandal ebony - *Diospyros tupru.* 5. கருப்பு மரம்; black ebony - *Diospyros melan-oxylon.* 6. ஒரு நரும்பிலி மரம்; south Indian pine-*Podo carpus latifolia.*

[காகம் + தும்பி.]

காகதூண்டி *kāga-tūṇḍi,* பெ.(n.) காகதுண்டி பார்க்க; see *kāga-tuṇḍi* (சா.அக.).

காகந்தகம் *ka-kandagam,* பெ.(n.) ஆற்று முள்ளங்கி; wall radish - *Blumea arita* (சா.அக.).

[கா + (கந்தம்) கந்தகம்.]

காகந்தம் *kā-kandam,* பெ.(n.) 1. கருவக்களை மரம்; a kind of ebony - *Diospyros tementosa.* 2. ஒரு சிலந்திப் பூச்சி; a kind of spider (சா.அக.).

[கா + கந்தம்.]

காகந்துரத்தி *kāga-n-turatti,* பெ.(n.) 1. ஆதொண்டை; thorny caper - *Capparis horrida.* 2. காத்தொட்டி; Ceylon caper - *Capparis zeylanica* (சா.அக.).

[காகம் + துரத்தி.]

காகநகம் *kāga-nagam,* பெ.(n.) கருப்பும், சிவப்புமானத் தழும்புகளை உடம்பில் உண்டாக்கும் ஒரு தோல் நோய்; a skin disease characterised by dark-red or black-coloured patches with burning pain in the affected parts (சா.அக.).

[காகம் + நகம்.]

காகநாசத்துவம் *kāga-nāšattuvam,* பெ.(n.) 1. நாக மல்லிகை; snake jasmine - *Rhinacanthus communis.* 2. பேய்ச் சேம்பு; a bitter plant (சா.அக.).

[காகம் + நாசத்துவம்.]

காகநாசிகம் *kāga-nāšigam,* பெ.(n.) ஒரு பூடு; a plant - *Leca hirta* (சா.அக.).

[காக்கை + பாலை.]

காகநாபி *kāga-nābi,* பெ.(n.) கருநாவிக் கிழங்கு; black aconite root - *Glorisa superba* (சா.அக.).

[காகம் + நாபி.]

காகநாமன் *kāga-nāmaṉ,* பெ.(n.) 1. உட்சூடு; internal heat. 2. உடம்பின் சூடு; bodily heat. 3. உடம்பினுள் இருக்கும் நெருப்பு; internal or gastric fire. 4. பசி; hunger. 5. மனக்கொதிப்பு; anger. 6. உள்ளறிவு; internal knowledge.

[காகம் + நாமன்]

உட்சூடாவன : வெட்டைச்சூடு, பித்தச்சூடு, கணச்சூடு, கருப்பச்சூடு, மூலச்சூடு, காமச்சூடு முதலியன (சா.அக.).

காகநேமி *kāga-nēmi,* பெ.(n.) ஒரு பளபளப்பான கருப்புப் பிசின்; black dammer; resin.

இது மேற்குக் கரை காடுகளில் விளையும் ஒரு மரத்தின் அடி பகுதியைக் கீறி எடுக்கப்படும் உறைந்த பால். இது கருப்பூரத் தைலத்தை விட அதிகமாகப் புகையும் (சா.அக.).

[காகம் + நேமி.]

காகபரி *kāga-pari,* பெ.(n.) காக்கைப் பொன்; brass tinsel (சா.அக.).

[காகம் + பறி.]

காகபுச்சம் *kāga-puccam,* பெ.(n.) குயில்; Indian cuckoo - *Cuculus orientalis* (சா.அக.).

[காகம் + புச்சம்.]

காகபுட்டம் *kāga-puṭṭam,* பெ.(n.) **காகபுச்சம்** பார்க்க; see *kāga-puccam.*

காகப்பிருகம் *kāga-p-pirugam,* பெ.(n.) 1. கருப்புத் தும்பை; black toombay indica. 2. கதும்பை, பேய் மருட்டி; Malabar catmint - *Anisomeles malabarica.* 3. கருங்காலி; coromandal ebony. 4. கருப்பு மரம்; black ebony - *Diospyros melanoxylon* (சா.அக.).

[காகம் + பிருகம்.]

காகமலடு *kāga-malaḍu,* பெ.(n.) முதலில் இரண்டு பிள்ளைகளைப் பெற்றுப் பின்பு இல்லாதிருக்கை; a woman who has begot two children (சா.அக.).

[காகம் + மலடு.]

காகமாசித்தைலம் *kaga-māśi-t-tailam,* பெ.(n.) செம் மணித்தக்காளிச் சாற்றுடன் சில கடைச் சரக்குகளைச் சேர்த்து வடித்த எண்ணெய்; a medicated oil in which the red-berried nightshade forms the chief ingredient along with other drugs (சா.அக.).

[காகமாசி + Skt. தைலம்.]

காகமுண்ணுங்காசம் *kāgamuṇṇuṅ-kāśam,* பெ.(n.) காக்கைகள் விருப்பப்பட்டு உண்ணும் கோழையையும், சளியையும் வெளிப்படுத்தும் ஈளை நோய்; a kind of asthma attended with a discharge of phlegm or mucous fondly picked up by crows (சா.அக.).

[காகம் + உண்ணும் + Skt. காசம்.]

காகயா *kāgayā,* பெ.(n.) காத்தொட்டிக் கொடி; a thorny creeper - *Ceylon caper* (சா.அக.).

[கா + கயா.]

முட்செடியாகிய இதற்கு ஆதண்டன், ஆதொண்டன், காத்தொட்டி என்று பல பெயர் களுண்டு. இதன் இலைகள் அழற்சியைப் போக்கி, பசியை உண்டாக்கும். வேர்ப்பட்டை வலியையும், வேட்கையும் போக்கும். கக்கலையும் போக்கும் (சா.அக.).

காகருடி *kā-karuḍi,* பெ.(n.) 1. குயில்; Indian cuckoo. 2. பன்றி; hog (சா.அக.).

[காகம் + ருடி.]

காகலிரவம் *kāgal-iravam,* பெ.(n.) **காகரூடி** பார்க்க; see *kā-karuḍi* (செ.அக.).

காகவசுகம் *kāgava-šugam,* பெ.(n.) ஆலமரம்; banyan tree (சா.அக.).

[காகம் + வசுகம்.]

காகவிருட்சம் *kāga-viruṭcam,* பெ.(n.) புல்லூரி; parasite or mistle-toe (சா.அக.).

[காகம் + விருட்சம்.]

காகவேப்பிலை *kāga-vēppilai,* பெ.(n.) கருப்பு வேப்பிலை; false wampee tree - *Micromelum pubescens* (சா.அக.).

[காகம் + வேப்பிலை.]

காகளகம் *kāgaḷagam,* பெ.(n.) குரல்வளை; larynx (சா.அக.).

[கா + களகம்.]

காகனாசனி *kāganāšani,* பெ.(n.) 1. சேவகனார் கிழங்கு; plough root - *Methonica superba.* 2. சிற்றாமல்லி; short-tubed Arabian jasmine - *Jasminum sambuc (typica)* (சா.அக.).

[காகம் + நாசினி.]

காகனார் *kāganār,* பெ.(n.) நான்மணிக் கடிகை இயற்றிய புலவர்; the versor of *nānmaṇi-k-kaḍigai* (அபி.சிந்.).

[காகன் + ஆர்.]

காகாட்சிகோளநியாயம் *kākāṭci-kōḷaniyāyam,* பெ.(n.) காகத்தின் இரு கண்களுக்கும் ஒன்றே மணியானாற் போல ஒரே சொல் அல்லது தொடர் ஈரிடத்து இயைந்து பொருள் விளக்கும் நெறி; illustration of the single eye-ball of the crow functioning through both the eyes, to explain the same word or phrase being construed twice (செ.அக.).

*[காகாட்சி + கோளம் + **Skt.** நியாயம்.]*

காகாபாலை *kāgā-pālai,* பெ.(n.) **காக்கைப் பாலை** பார்க்க; see *kākkai-p-pālai* (சா.அக.).

காகாபிசாசு *kākā-pišāšu,* பெ.(n.) அரத்த முண்ணும் வெளவாற் பறவை; a kind of vampire-bat of black colour and bristling hair (செ.அக.).

[காகம் + பிசாசு.]

காகாரண்டகி *kākāranḍagi,* பெ.(n.) **காகண்டம்** பார்க்க; see *kākanḍam* (சா.அக.).

காகாவல்லி *kākā-valli,* பெ.(n.) **காகதித்தம்** பார்க்க; see *kāga-tittam* (சா.அக.).

காகித்தம் *kāgittam,* பெ.(n.) **காகித்திரம்** பார்க்க; see *kāgittiram* (செ.அக.).

காகித்திரம் *kāgittiram,* பெ.(n.) குறிஞ்சா; Indian ipecacuanha - *Tylophora asthmatica* (சா.அக.).

[காகம் + அத்திரம்.]

காகிமசாரி *kāgimašāri,* பெ.(n.) **காகித்திரம்** பார்க்க; see *kāgittiram* (சா.அக.).

காகிமம் *kāgimam,* பெ.(n.) **காகி** பார்க்க; see *kāgi* (சா.அக.).

காகுகீரை *kāgu-kīrai,* பெ.(n.) இனிப்பான ஒரு வகைச் சிறுகீரை; a kind of small sweet greens - *Amaranthus genus* (சா.அக.).

[காகு + கீரை.]

காகுதம் *kāgudam,* பெ.(n.) அண்ணம்; palate (சா.அக.).

[காகு – காகுதம்.]

காகுராசி *kāgu-rāši,* பெ.(n.) 1. கொடிவகை; snake -gourd - *Trichosanthes anguina.* 2. பேய்ப்புடல்; wild snake-gourd (செ.அக.).

[காகு + ராசி.]

காகெந்து *kākendu,* பெ.(n.) **காகப்பிருகம்** பார்க்க; see *kāga-p-pirugam* (சா.அக.).

காகேடளி *kā-kēḍaḷi,* பெ.(n.) ஒரு கடைச்சரக்கு (கருஞ்சீரகம்); black cumin (சா.அக.).

[காகு + ஏடளி.]

காகேந்து *kā-kēndu,* பெ.(n.) **காகெந்து** பார்க்க; see *kā-kendu.*

காகோட்சி *kā-kōṭci,* பெ.(n.) 1. பாகற்கொடி; spiked bitter cucumber - *Momordica charantia.* 2. ஒரு வகைக் கசப்புப் பாகல்; an unknown bitter variety of pagal plant (சா.அக.).

[கா + கோட்சி.]

காகோடகம் *kā-kōḍagam,* பெ.(n.) காட்டு முருங்கை; jungle moringa; senna-leaved French honey suckle - *Ormocarpum sennoides* (சா.அக.).

[கா + கோடகம்.]

காகோடரிசி *kā-kōḍariśi,* பெ.(n.) வாலுளுவை; spindle tree - *Celastrus paniculata* (சா.அக.).

[கா + கோடரிசி.]

காகோதும்பரிகை *kākōtumbarigai,* பெ.(n.) பேயத்தி மரம்; wild fig tree; devil's fig tree - *Ficus hispida alias F.daemonum* (சா.அக.).

[கா + கோதும்பரி + கை.]

காகோர்ப்பலம் *kāgōr-p-palam,* பெ.(n.) செவ்வாம்பல்; red water-lilly - *Nymphae rubra* (சா.அக.).

[காக + உற்பலம்.]

காகோலி *kāgōli,* பெ.(n.) தண்ணீர் விட்டான் கிழங்கின் இயல்பையுடைய ஒரு பூடு; a plant having qualities a kin to that of the water-root - *Asparagus racemosus* (சா.அக.).

[கா + கோல.]

காகோளிகா *kā-kōḷigā,* பெ.(n.) தேட்கொடுக்கி; Indian turnsole or Indian heliotrope - *Heliotropium indicum* (சா.அக.).

[கா + கோளிகம்.]

காகோளிச்சிறுமி *kākōḷi-c-ciṟumi,* பெ.(n.) சிர காகோளி; caper shrub - *Capparis sphylla* (சா.அக.).

[கா + கோளி + சிறுமி.]

காகோறினி *kākōṟiṉi,* பெ.(n.) அசோகு; Asoka tree - *Saracaindica* (சா.அக.).

[கா + கோலினி.]

காகோனியம் *kā-kōṉiyam,* பெ.(n.) **காகேடளி** பார்க்க; see *kā-kēḍaḷi* (சா.அக.).

காங்கேருகம் *kāṅgērugam,* பெ.(n.) நாகபலை; sweet smelling hare foot - *Uraria lagopoides* (சா.அக.).

[காங்கு + ஏறுகம்.]

காங்கேருகி *kāṅkērugi,* பெ.(n.) 1. ஒரு மரம்; a tree. 2. பீர்க்கு; gourd plant - *Luffa acutangula* (சா.அக.).

[காங்கு + ஏறுகி.]

காங்கைதணிக்குமருந்து *kāṅgai-t-taṇikku-marundu,* பெ.(n.) 1. உடம்பில் ஏற்படும் காய்ச்சல், வெள்ளைநோய், கபாலச் சூடு, முதலிய நோய்களால் ஏற்படும் வெப்பத்தை ஆற்றும் மருந்து; the medicine which abates or allays the heat in the system due to diseases such as fever, venereal heat, brain-heat etc., and tends to cool the system, *Refrigerant.* 2. அழற்சியைத் தணிக்கும் மருந்து; any medicine counter acting the inflammation or irritation caused by fever, etc., *Antiphlogestics* (சா.அக.).

[காங்கை + தணிக்கு + மருந்து.]

காங்கைபூமி *kāṅgai-būmi,* பெ.(n.) வெப்ப நிலம்; hot place (சா.அக.).

[காங்கை + பூமி.]

காச்சக்கீரை *kācca-k-kīrai,* பெ.(n.) புளிச்சைக் கீரை; Indian brown hemp - *Hibiscus cannabinus* (சா.அக.).

[காச்சல் + கீரை.]

காச்சப்பட்டா *kācca-p-paṭṭā,* பெ.(n.) சூநாறிமரம்; umbelled yellow - flowered resin seed (செ.அக.).

[காச்சல் + பட்டு.]

காச்சப்பட்டை *kācca-p-paṭṭai,* பெ.(n.) ஒரு மரப்பட்டை; resin-seed shrub - *Pittosporum tetraspermum* (சா.அக.).

[காச்சல் + பட்டை.]

காச்சம் *kāccam,* பெ.(n.) **காச்சக்கீரை** பார்க்க; see *kācca-k-kīrai* (சா.அக.).

காச்சரக்கு *kāccarakku,* பெ.(n.) **காச்சக்கீரை** பார்க்க; see *kācca-k-kīrai* (சா.அக.).

காச்சரக்குநார் *kāccarakku-nār,* பெ.(n.) புளிச்சைக்கீரை; Indian brown hemp (செ.அக.).

[காச்சரக்கு + நார்.]

காச்சல் *kāccal,* பெ.(n.) வெப்பு நோய்; fever (சா.அக.).

மறுவ. காய்ச்சல்

காச்சற்கட்டி *kāccaṟ-kaṭṭi,* பெ.(n.) 1. வெப்பு நோயால் வயிற்றுள் காணுங் ஈரற் கட்டி; enlargement of the spleen from fever. 2. காய்ச்சி யெடுத்தக் கட்டி; lump of any substance derived from boiling (சா.அக.).

[காய்ச்சல் + கட்டி.]

காச்சாத்திரம் *kāc-cāttiram,* பெ.(n.) காட்டாத்தி; yellow mountain ebony - *Bauhinia tomentose* (சா.அக.).

[கா + சாத்திரம்.]

காச்சிரக்கு *kāccirakku,* பெ.(n.) புளிச்சைக்கீரை; Indian brown hemp - *Hibiscus Cannabinus* (செ.அக.).

[T. Kāci > த. காச்சி.]

காச்சுப்பு *kāccuppu,* பெ.(n.) **காய்ச்சுப்பு** பார்க்க; see *kāy-c-cuppu* (சா.அக.).

காச்சுரக்கை *kāccurakkai,* பெ.(n.) உலர்ந்த சுரக்குடுக்கை; dried bottle-gourd (சா.அக.).

[காய் (காய்ந்து) + சுரக்கை.]

காச்சுரக்கைநார் *kāccurakkai-nār,* பெ.(n.) புளிச்சைக்கீரை; Indian brown hemp - *Hibiscus Cannabinus* (செ.அக.).

[காய் + சுரக்கை + நார்.]

காச்சுரம் *kāccuram,* பெ.(n.) **காச்சக்கீரை** பார்க்க; see *kācca-k-kīrai* (சா.அக.).

காச்சுலவணம் *kāccu-lavaṇam,* பெ.(n.) 1. சவட்டுப்பு; salt produced from the earth impregnated with soda. 2. துருசு குருவாகு மோர் உப்பு; a salt capable of converting copper sulphate or copper acetate into a quintessence salt having.alchemical virtues (சா.அக.).

[காய்ச்சு + (இ)லவணம்.]

காச்சுலவணவுப்பு *kāccu-lavaṇa-uppu,* பெ.(n.) **காச்சுலவணம்** பார்க்க; see *kāccu-lavaṇam* (சா.அக.).

காச்சுவா *kāccuvā,* பெ.(n.) சிற்றாமல்லி; short -tubed Arabian jasmine - *Jasminus sambac* (சா.அக.).

[காய் + சுவல்.]

காச்சுவாதம் *kāccu-vādam,* பெ.(n.) பிள்ளைப் பேற்றுக் காய்ச்சல்; puerperal fever (சா.அக.).

[காய்ச்சல் + வாதம்.]

காச்சுறுக்குக்கீரை *kāccurukku-k-kīrai,* பெ.(n.) **காச்சக்கீரை** பார்க்க; see *kācca-k-kīrai* (சா.அக.).

காச்சை *kāccai,* பெ.(n.) காயாச்செடி; a plant.

[கய – காயா– காச்சை.]

இதற்குக் காயாம் பூச்செடி அல்லது சிறுகாசா என்றும் பெயர். 10–12 அடி உயரம் வளரும் இச்செடி குட்டையாகவும், இதன் இலைகள் சிறு காம்புகளாகவும், பூக்கள் நீல நிறமாயும் இருக்கும். இதன் இலைகளைக் கொண்டு வண்ணமூட்டலாம். இதன் வகைகள் :

1. சிறுகாசா – small ironwood tree, *Meme - Cylon edule*; 2. பெருங்காசா – big variety; 3. காகைக் காசா – wild ironwood tree; 4. வெள்ளைக் காசா – narrowmall ironwood tree, *Meme - Cylon edule*; 5. பூங்காசா; many-flowered iron wood - *Memecylon edule* (சா.அக.).

காச்சொறிக்கீரை *kāccori-k-kīrai,* பெ.(n.) **காச்சக்கீரை** பார்க்க; see *kācca-k-kīrai* (சா.அக.).

காசக்கினி *kāšakkini,* பெ.(n.) சிறு தேக்கு; bettle-killer - *Cleodendron serratum* (சா.அக.).

[கய – காய – காச + நெக்கினி.]

காசக்கூறு *kāša-k-kūru,* பெ.(n.) ஈழை நோயின் வகை; various kinds of asthma (சா.அக.).

[காசம் + கூறு.]

காசகந்தம் *kāša-gandam,* பெ.(n.) ஒரு வேர்; a species of root (சா.அக.).

காசகாமலம் *kāšakāmalam,* பெ.(n.) ஒரு கண் நோய்; a disease of the eye (சா.அக.).

[காசம் + காமலம்.]

காசப்புல் *kāšā-p-pul,* பெ.(n.) ஒரு பொன்னிறமான புல் வகை; a yellow or gold-coloured grass (சா.அக.).

[காசம் + புல்.]

காசபத்திரம் *kāša-pattiram,* பெ.(n.) பூச பத்திரி; an unidentified drug (சா.அக.).

[காசம் + பத்திரம்.]

காசமலம் *kāša-malam,* பெ.(n.) கண் நோயினால் உண்டாகும் கண்ணழுக்கு; morbid fluid or other impurities secreted by the eye in cataract etc. (சா.அக.).

[காசம் + மலம்.]

காசமாதாரி *kāša-mādāri,* பெ.(n.) பொரும்பிலி; a species of horse gram plant (சா.அக.).

[காசம் + மாதாரி.]

காசமுறுக்கி *kāša-murukki,* பெ.(n.) கருப்பு விழியில் நரம்பு சிவந்து, வெள்ளை விழியில் தசை வளர்ந்து, கீழிமையை உறுத்தி நீர் வடிந்து, மிகுந்த வலியோடு, பல் வலியையும், தலை வலியையும் உண்டாக்கும் ஒரு கண்ணோய் (அக.நய.விதி.); a disease of the eye marked by inflammation of the optic-nerve, morbid growths on the white of the eye, irritation of the lower lid, watery discharge, distressing pain, tooth-ache, headache etc. (சா.அக.).

[காசம் + உறுக்கி.]

காசாக்கிழங்கு *kāšā-k-kilangu,* பெ.(n.) மஞ்சள் கலந்த சிவப்பு நிறமான முள்ளங்கி இனத்தைச் சேர்ந்த ஒரு வகைக் கிழங்கு; a kind of yellowish red root resembling horse radish (சா.அக.).

[காசம் + கிழங்கு.]

காசல்விதை *kāšal-vidai,* பெ.(n.) காசல் கீரையின் விதை; seed of *kāšal-kīrai* (சா.அக.).

[காச்சல் + விதை.]

காசலவணம் *kāša-lavaṇam,* பெ.(n.) ஐந்து வகை உப்புகளில் (பஞ்சலவணத்துள்) ஒன்று; one of *pañca-lavaṇam*, salt of potash or soda in crystalline state (செ.அக.).

*[காச + **Skt.** இலவணம்.]*

காசாக்கு-தல் *kāšākku-,* 5 செ.கு.வி.(v.i.) தன்னலத்தையே குறியாகக் கொண்டு எதையும் விற்றுப் பணம் சேர்த்தல்; cash in on something. *நடிகையின் தந்தை மகளின் புகழைக் காசாக்குவதில் குறியாக இருக்கிறார். அவன் மண்ணைக் கூடக் காசாக்கி விடுவான்.*

[காசு + ஆக்கு-தல்.]

காசாகிதம் *kāšāgidam,* பெ.(n.) அரைக்கீரை; round-headed amaranth - *Amarantus gangeticus* (சா.அக.).

காசாகுவாகு *kāšāguvāgu,* பெ.(n.) 1. கருப்புத் தக்காளிச் செடி. இது சூதத்தைக் கட்டும்; a black *takkāḷi* plant; it is supposed to consolidate mercury. 2. மிளகுத் தக்காளி; mad apple - *Solanum melongena* (சா.அக.).

[காசா + ஆகு + வாகு.]

காசாநிறம் *kāšā-niṟam,* பெ.(n.) 1. திப்பிலி மூலம்; root of piper longum. 2. ஒரு சிகப்பு நிறம்; a sort of deep red colour (சா.அக.).

[காசம் + நிறம்.]

காசாப்பற்று *kāšā-p-paṟṟu,* பெ.(n.) தனது பற்று; dues, as to a shop, bank, etc. (செ.அக.).

[U. Khāsā > + த. காசா.]

[காசு + பற்று.]

காசாம்பூ *kāšāmbū,* பெ.(n.) காயாவின் பூ; flower of the kaya tree (சா.அக.).

[காயாம் – காசாம் + பூ.]

காசாம்பூவர்ணத்தான் *kāšāmbū-varṇattāṉ,* பெ.(n.) 1. துரிசு; blue vitriol. 2. காய்ச்சற் பாடாணம்; a mineral poison (சா.அக.).

[காயாம்பூ + வண்ணத்தான்.]

காசாலினி *kāšāliṉi,* பெ.(n.) பழு பாகல்; buffalo carolah - *Momordica hispida* (சா.அக.).

காசாவிருட்சம் *kāšā-viruṭcam,* பெ.(n.) குடசபாலை; milk plant - *Dregea volubilis* (சா.அக.).

காசாவில்லை *kāšā-villai,* பெ.(n.) சிறப்புச் சந்தனக் கூட்டு (யாழ்.அக.); sandal paste with special fragrant ingredients (செ.அக.).

[காசா+ வில்லை]

காசாளர் *kāšāḷar,* பெ.(n.) வங்க, அலுவலகம் முதலியவற்றில் பணம் தருதல், பெறுதல் ஆகியவற்றையும் அவை தொடர்பான பிற பணிகளையும் கவனிக்கும் பதவி வகிப்பவர்; cashier.

[காசு + ஆளர்.]

காசானிஇலை *kāšāṉi-ilai,* பெ.(n.) காயாச் செடியின் இலை; leaves of iron wood tree - *Memicylon tinctoria* (சா.அக.).

[காயா – காசானி+ இலை.]

காசிக்கட்டி *kāši-k-kaṭṭi,* பெ.(n.) **காசுகட்டி** பார்க்க; see *kāšu-kaṭṭi* (சா.அக.).

காசிக்கிருட்டி *kāši-k-kiruṭṭi,* பெ.(n.) பறவை வகை (யாழ்.அக.); a bird.

காசிக்கிருட்டிணன் *kāši-k-kirusṇaṉ,* பெ.(n.) 1. சீரகம்; cummin seed - *Cuminum cyminum.* 2. சாதிபத்திரி; mace; nut-meg (சா.அக.).

மறுவ. சாதிக்காய்

[காசி + கிருட்டிணன்.]

காசிக்குடபதி *kāśi-k-kuḍapadi,* பெ.(n.) கழுதை; ass (சா.அக.).

[காசி + குடபதி.]

காசிகம் *kāśigam,* பெ.(n.) புழுக்கொல்லிப் பூடு; worm killer - *Aristolochia bracteata* (சா.அக.).

[காசு–காசிகம்.]

காசிகாவகத்தி *kāśigāvagatti,* பெ.(n.) அகத்தி மரவகை; west Indian pea-tree - *Sesbania grandiflora* (சா.அக.).

[காசிகம் + அகத்தி.]

காசிடை *kāśiḍai,* பெ.(n.) காசினிறை அளவு; the weight of a pie (an old Indian copper coin) (சா.அக.).

[காசு + எடை = காசெடை→காசிடை.]

காசிடைபுகட்டல் *kāśiḍai-pugaṭṭal,* பெ.(n.) காசிளைவு உள்ளுக்குச் செலுத்துகை; to administer internally anything weighing a pie as medicinal oil (சா.அக.).

[காசு + எடை + புகட்டல்.]

காசித்து *kāśittu,* பெ.(n.) உடலை நரைதிரையின்றி நெடுநாள் இருக்கச் செய்யும் பேறு; rejuvenation (சா.அக.).

[கா + சித்து.]

காசிப்பலிகம் *kāśi-p-paligam,* பெ.(n.) கேந்திர வல்லி; an unidentified creeper (சா.அக.).

[காசி + பலிகம்.]

காசிபன் *kāśibaṉ,* பெ.(n.) அத்தியிடம் தேவர்களையும், திரியிடம் அசுரர்களையும் பெற்ற ஒரு முனிவன்; a rsi, said to be the father of Devas by aditi, and of asuras by diti. *"காசிபனார் தந்தது" (வள்ளுவமா.14)* (செ.அக.).

[காயன் – காயிபன் – காசிபன்.]

காசிரோர்த்தம் *kāśirōrttam,* பெ.(n.) தொட்டாற் சுருங்குஞ் செடிவகை; sensitive plant called touch-me-not - *Mimosa pudica* (செ.அக.).

[கா + சிரம் + ஊர்த்தம்.]

காசிவாசனி *kāśi-vāśaṉi,* பெ.(n.) குறும் பூசினி; a kind of pumpkin (சா.அக.).

[காகி + வாசனி.]

காசுக்கட்டிப்பில்லை *kāśu-k-kaṭṭi-p-pillai,* பெ.(n.) காய்ச்சுக் கட்டியை மருந்துச் சரக்குகளோடு கலந்து சக்கரை இட்டுத் திரட்டிய வில்லைகள்; tablets prepared by mixing catechu and other medicinal drugs with sugar, *Catechu lozenges* (சா.அக.).

[காசுகட்டி + வில்லை.]

காசுக்கருதி *kāśu-k-karudi,* பெ.(n.) பொற் காசுகளில் முதல் தரமானது, நற்காசென்றும் பெயர் பெறும்; superior quality gold coins. *"காசுக் கருதித் துளையிலும் உரையிலும் நிறையலும் வழுவாதது தீப்போக்குச் செம்பொன்" (தெ.இல்.கல்.தொ.8, கல்.199). (கல்.அக.).*

[காசு + கருதி.]

காசுக்கட்டல் *kāśu-k-kaṭṭal,* பெ.(n.) **காசுபோடல்** பார்க்க; see *kāśu-pōḍal* (சா.அக.).

காசுகடமை *kāśu-kaḍamai,* பெ.(n.) காசாகப் பெரும் வரி; tax payable in money (செ.அக.).

[காசு + கடமை.]

காசுகரப்பன் *kāśu-karappaṉ,* பெ.(n.) உடம்பில் நமைச்சல் ஏற்பட்டு, சொறிந்த

இடத்தில் சிவந்து, காசு மாதிரி தடித்துக் குருக்கள் கிளம்பும் ஒரு கரப்பன்; eruption of small round patches of the size of a pie resembling the effects of nettlestings (சா.அக.).

[காசு + கரப்பன்.]

காசுகல் *kāšukal*, பெ.(n.) நிறைகல்; standard weight for weighing jewels (செ.அக.).

[காசு + கல்.]

காசுசின்னம் *kāšu-šinnam*, பெ.(n.) சோழ பாண்டியர் ஆட்சியில் உயர்ந்த முதல் மதிப்புக் காசு; first made coin of the pomdya and chola perif. *"ஒரு காசு தலையாக ஒரு சின்னங் கடையாகவும்" (தெ.கல்.தொ.8, கல்.148).*

[காசு + சின்னம்.]

கடைசியாக கொள்ளப்பட்ட பின்ன மதிப்பு சின்ன காசு – சின்னம் என்பதாகும். உருபா–பைசா போன்றதாகும். இது சோழ நாட்டில் நடைமுறையில் இருந்த காசு மதிப்பீட்டு முறை.

காசுபோடல் *kāšu-pōdal*, பெ.(n.) காசு எடை மருந்து கூட்டல் அல்லது சேர்த்தல்; adding or mixing a pie-weight of medicine (சா.அக.).

[காசு + எடை.]

காசுரண்டம் *kāšuranḍam*, பெ.(n.) நாயுருவி; Indian burr - *Achyrantnes aspera* (சா.அக.).

காசுலவணம் *kāšu-lavanam*, பெ.(n.) வளையலுப்பு; salt used in the manufacture of bangles known as glass gall (சா.அக.).

[காய்ச்சு – காசு + லவணம்.]

காசுலவம் *kāšulavam*, பெ.(n.) **காசுலவணம்** பார்க்க; see *kāšu-lavanam* (சா.அக.).

காஞ்சதம் *kāñjadam*, பெ.(n.) புங்க மரம்; puṅgu tree - *Dalbergia arborea* (சா.அக.).

[காஞ்சனம் + நதம்.]

காஞ்சநாகரம் *kāñja-nāgaram*, பெ.(n.) ஒரு கடைச் சரக்கு; a bazzaar drug (சா.அக.).

காஞ்சனபுட்பி *kāñjana-puṭpi*, பெ.(n.) மஞ்சள் பூவுள்ள ஒரு பூடு; a plant akin to premna spinosa with yellow flowers (சா.அக.).

[காஞ்சனம் + புட்டு.]

காஞ்சனமாலிதம் *kāñjana-mālidam*, பெ.(n.) கொத்தவரை; cluster bean - *Cysmopsis psoralioides* (சா.அக.).

காஞ்சனமாலை *kāñjana-mālai*, பெ.(n.) 1. கண்ணன் (கர்ணன்) மனைவி; wife of *karṇā*. 2. மலையத்துவச பாண்டியன் மனைவி; wife of *Malaiya-t-tuvaša Pāṇḍiyā*. 3. பாண்டியன் மகள்களில் ஒருத்தி;one of the daughter of *Pāṇḍiyā* king. 4. பெருங்கதையின் தலைவி வாசவ தத்தையின் உயிர்த் தோழி; the close friend of *vāšava-tattai* (அபி.சிந்.).

[காஞ்சனம் + மாலை.]

காஞ்சனமாலைகோயில் *kāñjana-mālai-kōyil*, பெ.(n.) ஏழு கடல்களும் தம்முள் அடங்கிய தடாகத்தின் தென் மேற்கில் உள்ள பழமையான கோவில்; an ancient temple in South West direction of a tank seven sea.

[காஞ்சனமாலை + கோயில்.]

இதில் சலகண்டேசுவரரென்ற பெயருடைய சிவபெருமானும், அவரைக் கண்டு வணங்கிய நிலையில் காஞ்சனமாலையின் வடிவமும் அமைக்கப்பட்டுள்ளது (அபி.சிந்.).

காஞ்சனாகுவயம் *kāñjanā-kuvayam*, பெ.(n.) சண்பகம்; champak, *Michelia champaca* (சா.அக.).

காஞ்சனாவயம் *kāñjaṉā-vayam,* பெ.(n.) ஊமத்தைச் செடிவகை; thorn apple - *Datura* (சா.அக.).

காஞ்சிகவடகம் *kāñjiga-vaḍagam,* பெ.(n.) 1. உசிலை (மசலா) இட்ட கூழ் வடகம்; rice gruel seasoned with condiments. 2. புளித்த கூழும், துவையலும் சேர்ந்த உணவுப் பொருள்; a dish consisting of sourgruel meal and paste ground with several condiments (சா.அக.).

காஞ்சிகி *kāñjigi,* பெ.(n.) கொழுமிச்சை; citron; bitter orange - *Citrus aurantium* (சா.அக.).

காஞ்சிதம் *kāñjitam,* பெ.(n.) கூத்துக்குரிய அசைவுக(பாதங்க)ளுள் ஒன்று (சிலப்.); a kind of pose.

காஞ்சிநதி *kāñji-nadi,* பெ.(n.) மேலைச் சிதம்பரம் அல்லது பேரூரிலுள்ள ஆறு; a river in west Chidambaram or a river in Perur (அபி.சிந்.).

காஞ்சிப்புலவனார் *kāñji-p-pulavaṉār,* பெ.(n.) மதுரைக்காஞ்சி பாடிய மாங்குடி மருதனார்; the versor of *madurai-k-kāñji.*

[காஞ்சி + புலவனார்.]

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனை நிலையாமை அறிவுறுத்த வேண்டி மதுரைக்காஞ்சி பாடியதனால் மதுரைக் காஞ்சி புலவரென்றும், காஞ்சிப் புலவரென்றும் கூறப்பெறுவாராயினர். மாங்குடிக் கிழார் என்பவரும் இவரே. வேளாண் குடியினரான இவர் பாண்டியனது அவைக்களப் புலவராகவும் விளங்கினார் (அபி.சிந்.).

காஞ்சிபுரம்சபாபதிமுதலியார் *kāñjipuram-šabāpati-mudaliyār,* பெ.(n.) சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பணிபுரிந்த தமிழ்ப்புலமை உடைய புலவர்; a Tamil scholar who stuited at Pacciappan college.

பெரியபுராணம், திருவிளையாடல் மற்றும் சில தல புராணங்களுக்கு உரை இயற்றி உரையாசிரியர் எனப் பெயர் பெற்றவர். எழுபது வருடங்களுக்கு முன் வாழ்ந்தவர். தமிழில் அருணாசல சதகம் முதலியன இயற்றியவர் (அபி.சிந்.).

காஞ்சிரங்களம் *kāñjiraṅgaḷam,* பெ.(n.) 1. இனிகம்; sweetness. 2. எட்டி மரம்; strychnine tree - *Strychncs nux vomica* (சா.அக.).

காஞ்சிரம்பழம் *kāñjiram-paḻam,* பெ.(n.) எட்டிப்பழம்; fruit of the strychnine tree (சா.அக.).

காஞ்சிரைமேற்புல்லுருவி *kāñjirai-mēṟ-pulluruvi,* பெ.(n.) எட்டி மரத்தின் மேல் முளைக்கும் புல்லுருவி; a parasite on the strychnine tree (சா.அக.).

காஞ்சிபுரம் *kāñjipuram,* பெ.(n.) பழங்காலத்தில் இருந்த சிறந்த ஏழு நகரங்களுள் ஒன்று; *Kāñjipuram,* one among the sacred city of Tamil Nadu (சா.அக.).

காஞ்சீரகம் *kāñjīragam,* பெ.(n.) செந்தொட்டி; scorpion leaf - *Tragia involucrata* (சா.அக.).

காஞ்சுரை *kañjurai,* பெ.(n.) 1. உலர்ந்த சுரைக்காய்; dried bottle-gourd. 2. சுரைக் குடுக்கை; fruit of bottle-gourd which when dried and emptied of its contents is used by beggars as a feeder-bottle - *Fakeer's bottle.* 3. எட்டி; strychnine tree - *Srychncs nux vomica* (சா.அக.).

காஞ்சூரை *kāñjūrai,* பெ.(n.) **காஞ்சுரை** பார்க்க; see *kāñjurai* (சா.அக.).

காஞ்சொறியொற்றல் *kāñjoṟi-y-oṟṟal,* தொ.பெ.(vbl.n.) காஞ்சொறிப்பூடை உடம்பிற்படும்படிச் செய்து தினவை

உண்டாக்கல்; touching one with a nettle plant to cause itching sensation (சா.அக.).

[*காஞ்சொறி + ஒற்றல்.*]

காட்சிப்பிரமாணம் *kāṭci-p-piramāṇam,* பெ.(n.) ஆறுவகை அளவைகளுள் ஒன்று; perception, means of perception (செ.அக.).

[*காட்சி* + **Skt.** *பிரமாணம்.*]

காட்சியளி-த்தல் *kāṭci-y-aḷi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஒருவர் அல்லது ஓர் இடம் தொடர்பாக ஏதேனும் ஒரு தோற்றம் தருதல்; appear, present oneself in a particular manner. '*அந்த மருத்துவர் எப்போதும் சிரித்த முகத்துடன் காட்சியளிப்பார். திருவிழாக் கோலத்தில் நகரமே ஒளிமயமாகக் காட்சியளித்தது'.* 2. இறைவன், பெரியோர் காட்சி தருதல்; appear of God, devotees, holy person.

[*காட்சி + அளி-த்தல்.*]

காட்சியா-தல் *kāṭci-yā-,* 6 செ.கு.வி.(v.i.) தூக்கத்தில் தோன்றல், கனவில் தோன்றல்; appearance in a vision (சா.அக.).

[*காட்சி + ஆ-தல்.*]

காட்டகுட்டம் *kāṭṭa-kuṭṭam,* பெ.(n.) ஒரு பறவை; an unidentified bird (சா.அக.).

காட்டஞ்சம் *kāṭṭañjam,* பெ.(n.) செவ்விறகு; red fuel or firewood. It is said to be used in alchemy, because of its fumes having extraordinary virtues (சா.அக.).

காட்டமிர்தம் *kāṭṭamirdam,* பெ.(n.) தில்லைப்பால்; tiger's milk - *Excoecaria agallocha.*

[*காட்டு + அமிர்தம்.*]

இதைக் காட்டிலுள்ள சித்தர்கள் அருந்துவதால் இப்பெயர் பெற்றது. (சா.அக.).

காட்டமிர்து *kāṭṭamirdu,* பெ.(n.) காட்டில் விளையும் பொருட்கள்; forest produce.

[*காட்டு + அமிர்து.*]

அவையாவன : அரக்கு, கருந்தினை, தேன், நாவி, மயிற்பீலி, தேன்கூடு முதலியன (சா.அக.).

காட்டரலி *kāṭṭarali,* பெ.(n.) காட்டு மா; jungle mango - *Gerbera odollam* (சா.அக.).

காட்டரளி[1] *kāṭṭaraḷi,* பெ.(n.) காட்டு அரளி மரம்; wild nerium or jungle mango - *Cerebra odallam alias C.lactaria* (சா.அக.).

[*காட்டு + அரளி.*]

காட்டரளி[2] *kāṭṭaraḷi,* பெ.(n.) 1. காட்டரளி; wild gannair; willow leaved water croton - *Homonoia riparia.*

[*காட்டு + அலகு.*]

காட்டலகு *kāṭṭalagu,* பெ.(n.) காட்டு அலகு மரம்; an unidentified tree; but believed to be referring to *kāṭṭaraḷi* which see (சா.அக.).

[*காட்டு + அரளி.*]

காட்டலகுக்குழல் *kāṭṭalagu-k-kuḻal,* பெ.(n.) மருந்தை வைத்து அவிப்பதற்காகப் பயன்படுத்தும் காட்டலகு மரத்தினாற் செய்த குழாய்; a wooden tube made out of the alagu tree used for roasting medicine (சா.அக.).

[*காட்டு + அலகு + குழல்.*]

காட்டலாகிரி *kāṭṭalāgiri,* பெ.(n.) கொடி மாதுளை; creeping emanaur - *Punicum genus* (சா.அக.).

காட்டாசான் *kāṭṭāšāṉ,* பெ.(n.) திருநெல்வேலி மாவட்டம் முதலிய இடங்களில் வாழும் குறுந்தொழிற் பிரிவினர்; a sect ot people who live in *tirunelvēli* district.

[*காட்டு + ஆசான்.*]

இவர்கள் கூடைகட்டுவர்; கிளிஞ்சல் சுடுவர் (அபி.சிந்.).

காட்டால் *kāṭṭāl,* பெ.(n.) பேய் ஆல் அல்லது கல் ஆல்; forest banyan tree or demon fig. - *Ficus citrifolia.*

[காட்டு + ஆல்.]

இதன் பட்டை மருந்திற்குப் பயன்படும் (சா.அக.).

காட்டாவங்கம் *kāṭṭāvaṅgam,* பெ.(n.) வெள்ளைக் கழற் கொடி; a white species of bonducella (சா.அக.).

காட்டிக்கொள்(ளு)-தல் *kāṭṭi-k-kol-,* 13 செ.கு.வி.(v.i.) ஒன்றைப் போல் போலியாக (பாவனை) செய்தல்; try to pass for someone; put on airs. *அவன் தன்னை அறிவாளி போல் காட்டிக் கொண்டான்.*

[காட்டி + கொள்(ளு)-தல்.]

காட்டுச்சேனா *kāṭṭu-c-cēṉā,* பெ.(n.) நிலவாவிரையில் ஒருவகை; a species of senna growing wild.

[காடு + சேனா.]

காட்டிஞ்சிமூலம் *kāṭṭiñji-mūlam,* பெ.(n.) வெள்ளைச் சாரண வேர்; one styled trianthema - *Trianthema Obcordata* (சா.அக.).

காட்டிதோசணா *kāṭṭi-tōšaṇā,* பெ.(n.) திப்பிலி; long pepper - *Piper longum* (சா.அக.).

காட்டிராட்சி *kāṭṭirāṭci,* பெ.(n.) அரத்தை; galangal - *Alpinia galanga* (சா.அக.).

காட்டிருப்பவல் *kāṭṭiruppaval,* பெ.(n.) ஒரு கொடி; a kind of creeper - *Indian cudweed, Gnaphalium indicum* (சா.அக.).

[காட்டு + இருப்பு + அவல்.]

இதற்குப் புத்தர்கைச் சம்மட்டி, காயசித்தி, உப்புநீக்கி, காரீய செந்தூரி, கானல் கள்ளி முதலிய பல பெயர்கள் உண்டு (சா.அக.).

காட்டினாமணத்தி *kāṭṭiṉāmaṇatti,* பெ.(n.) 1. பேய் ஆமணக்கு; wild castor - *Baliospermum axillare.* 2. சீமை ஆமணக்கு; bronze-leaved physic nut - *Jatropha gossy-pifolia* (சா.அக.).

காட்டிகை *kāṭṭigai,* பெ.(n.) இண்ட` முள்ளு; fine-leaved acacia - *Acacia pennata* (சா.அக.).

காட்டுக்கத்தோதிகம் *kāṭṭu-k-kattōdigam,* பெ.(n.) சாமை; little millet - *Panicum miliare* (சா.அக.).

காட்டுக்கரணை *kāṭṭu-k-karaṇai,* பெ.(n.) பாவட்டை; Indian pavatta - *Pavetta indica* (சா.அக.).

காட்டுக்குறி *kāṭṭu-k-kuṟi,* பெ.(n.) மாலியப் (வைணவ) பார்ப்பனருள் ஒரு சாராருக்குரிய குடிபெயர்; a sect of vaishnava 'parpar'. *"இவ்வூர் பண்டிதவத்ஸலச்சேரி காட்டுக்குறி பஞ்சுகிரமவித்தன்" (தெ.கல். தெ.19, கல்.58). "ஸ்ரீ கிருஷ்ணபட்டனும் காட்டுக்குறி வெண்ணய கிரமவித்தனும்" (தெ.கல்.தொ.IV கல்–133) (கல்.அகர.).*

காட்டுக்கருஞ்சீரகம் *kāṭṭu-k-karuñ-cīragam,* பெ.(n.) ஒரு கடைச் சரக்கு; black cumin, *Nigellasativa* (சா.அக.).

[காட்டு + கரும் + சீரகம்.]

காட்டுக்கர்ப்பூரகிச்சிலிக்கிழங்கு *kāṭṭu-k-karppūra-kiccili-k-kiḻaṅgu,* பெ.(n.) காட்டு பூலாங் கிழங்கு; forest orange root of - *Curcuma genus* (சா.அக.).

[காட்டு + கர்ப்பூர + கிச்சிலி + கிழங்கு.]

காட்டுக்கரோசயம் *kāṭṭu-k-karōšayam,* பெ.(n.) சாரப் பருப்பு; pulp of cuddapah almond (சா.அக.).

[காட்டு + கரோசயம்.]

காட்டுக்கள்ளி *kāṭṭu-k-kaḷḷi,* பெ.(n.) மலைக்கள்ளி; hill kalli; leper's plant.

[காட்டு + கள்ளி.]

இதன் பூ மஞ்சள் நிறம். இலைகளை வதக்கிக் காயம், புண் முதலியவைகளுக்கு வைத்துக் கட்ட, அழற்சி அல்லது எரிச்சல் போம். (சா.அக.).

காட்டுக்கறிவேப்பிலை *kāṭṭu-k-kaṟi-vēppilai,* பெ.(n.) **காட்டுக்கருவேப்பிலை** பார்க்க; see *kāṭṭu-k-karu-vēppilai* (சா.அக.).

[காட்டு + கறிவேப்பிலை.]

காட்டுக்கருவேப்பிலை *kāṭṭu-k-karu-vēppilai,* பெ.(n.) ஆனாந்தளை; axilflowered shrubby Indian wampee - *Clansena wildenovi* (சா.அக.).

[காட்டு + கரு + வேப்பிலை.]

காட்டுக்கிச்சிலிக்கிழங்கு *kāṭṭu-kiccili-k-kiḻaṅgu,* பெ.(n.) ஒரு மணமுள்ள கிழங்கு; jungle zedoary of the hedychium genus (சா.அக.).

[காட்டு + கிச்சிலி + கிழங்கு.]

காட்டுக்கிழங்கு *kāṭṭu-k-kiḻaṅgu,* பெ.(n.) 1. சிறு வள்ளிக் கிழங்கு; small sweet yam or chinese yam - *Dioscorea aculeata.* 2. காட்டில் விளையுங் கிழங்கு; bulbous roots found grown in forests; forest esculent roots so called from its growth in the forest (சா.அக.).

[காட்டு + கிழங்கு.]

காட்டுக்கிளிப்பிள்ளை *kāṭṭu-k-kiḷi-p-piḷḷai,* பெ.(n.) காட்டில் வசிக்கும் கிளிப்பிள்ளை; jungle parrot - *Taccocua leschenaultii alias zandostomers sirkeer* (சா.அக.).

[காட்டு + கிளிப்பிள்ளை.]

காட்டுக்குளஞ்சி *kāṭṭu-k-kuḷañji,* பெ.(n.) **காட்டுக்குளாஞ்சி** பார்க்க; see *kāṭṭu-k-kuḷāñji* (சா.அக.).

[காட்டு + குளாஞ்சி.]

காட்டுக்கொங்கை *kāṭṭu-k-koṅgai,* பெ.(n.) ஒரு வகைக் கோங்கு; prussic acid tree - *Pygerum wightiana* (சா.அக.).

[காட்டு + கொங்கை.]

காட்டுக்கொசு *kāṭṭu-k-kośu,* பெ.(n.) காட்டில் உலாவும் கொசு; wild mosquitoes (சா.அக.).

[காட்டு + கொசு.]

காட்டுக்கொட்டி *kāṭṭu-k-koṭṭi,* பெ.(n.) கொட்டிக்கிழங்கு; a variety of Indian water-lily root (சா.அக.).

[காட்டு + கொட்டி.]

காட்டுக்கொத்தமல்லி *kāṭṭu-k-kottamalli,* பெ.(n.) காட்டில் விளையும் கொத்தமல்லி; wild coriander (சா.அக.).

[காட்டு + கொத்தமல்லி.]

காட்டுகொழுமிச்சை *kāṭṭu-k-koḻumiccai,* பெ.(n.) 1. கசப்பு எலுமிச்சை; bitter lime. 2. கசப்பு நாரத்தை; bitter orange (சா.அக.).

[காட்டு + கொழுமிச்சை.]

காட்டுக்கொள்ளி *kāṭṭu-k-koḷḷi,* பெ.(n.) தின்றிடந் தீய்ஞ்சான்; a plant c.f. மல்லைப்பூடு (சா.அக.).

[காட்டு + கொள்ளி.]

காட்டுக்கொன்னை *kāṭṭu-k-koṉṉai,* பெ.(n.) காட்டுக் கொன்றை; wild condray, wight's inga - *Mimosa bigemina.*

[காட்டு + கொன்றை.]

இதன் இலையை இட்டு காய்ச்சிய நீரினாற் குட்டம் போம், தலைமயிர் வளரும் (சா.அக.).

காட்டுகஞ்சா *kāṭṭu-kañjā,* பெ.(n.) இமயமலை, காசுமீரம் இக்காடுகளில் தானாகவே பயிராகும் மதமதக்கச் செடி; wild hemp found growing wild in western Himalayas and Kasmere - *Cannabis sativa* (சா.அக.).

[காட்டு + கஞ்சா.]

காட்டுகை *kāṭṭugai,* பெ.(n.) புகை காட்டுதல்; the act of applying smoke - *Fumigation* (சா.அக.).

காட்டுச்சதுரகள்ளி *kāṭṭu-c-cadura-kaḷḷi,* பெ.(n.) சதுரக் கள்ளி; square spurge - *Euphorbia antiquorum* (சா.அக.).

[காட்டு + சதுரக்கள்ளி.]

காட்டுச்சம்பங்கி *kāṭṭu-c-cambaṅgi,* பெ.(n.) 1. நீலகிரிச் சண்பகப் பூ; white-stalked tulip tree of Nilgiris; white champak - *Michelia nilgrica.* 2. உரோம வாசனி; forest champak - *Plumeria aculifolia* (சா.அக.).

[காட்டு + சம்பங்கி.]

காட்டுச்சாதிபத்திரி *kāṭṭu-c-cādi-pattiri,* பெ.(n.) 1. பொதுவாகக் காட்டில் விளையும் மரங்கள்; forest trees in general. 2. கான் (வன) சாதிப் பத்திரி; forest mace - *Myristica horsfieldii* (சா.அக.).

[காட்டு + சாதிபத்திரி.]

இதற்கு வாசனையிராது.

காட்டுச்சார்வளை *kāṭṭu-c-cārvaḷai,* பெ.(n.) மூக்கரணைச் சாரணை; white trianthema - *Trianthema decandra* (சா.அக.).

காட்டுச்சிறுசாமை *kāṭṭu-c-ciṟu-šāmai,* பெ.(n.) காட்டில் விளையும் சாமை; wild small millet - *Panicum antipodum* (சா.அக.).

[காட்டு + சிறுசாமை.]

காட்டுச்சின்னி *kāṭṭu-c-cinni,* பெ.(n.) கான் (வன)ச்சின்னி; a wild species of Indian shrubby copper leaf - *Acalypha fruticosa* (சா.அக.).

[காட்டு + சின்னி.]

காட்டுச்சீயக்காய் *kāṭṭu-c-cīyakkāy,* பெ.(n.) 1. காட்டுச்சிகை; sensitive tree - *Mimosarubicaulis.* 2. பேய்ச்சீயக்காய்; rusty mimosa; narrow-leaved soap pod - *Acaciapennata* (சா.அக.).

[காட்டு + சீயக்காய்.]

காட்டுச்சுண்டெலி *kāṭṭu-c-cuṇḍeli,* பெ.(n.) காட்டில் வாழும் சுண்டெலி; forest mouse - *Mus rodentia.*

[காட்டு + சுண்டெலி.]

இது உனாணி மருத்துவத்தில் மிகுதியாக மருந்திற்குப் பயன்படும் (சா.அக.).

காட்டுச்சுரம் *kāṭṭu-c-curam,* பெ.(n.) மலைச்சுரம்; malarial fever (சா.அக.).

[காட்டு + சுரம்.]

காட்டுச்சேப்பன் *kāṭṭu-c-cēppan,* பெ.(n.) காட்டில் விளையும் சேப்பங் கிழங்கு; Egyptian yam - *Colocasia antiquorum* (சா.அக.).

[காடு + சேப்பன். சேம்பு →சேப்பன்.]

காட்டுச்சேவல் *kāṭṭu-c-cēval,* பெ.(n.) காட்டில் இருக்கும் சேவற் கோழி; wood-cock.

[காட்டு + சேவல்.]

இதன் இறைச்சி அதிக சூடு, தாது ஊட்டத்தைத் தரும். அழற்சியைப் போக்கும். வியர்வையை உண்டாக்கும்; மேலும் வலிமையைத் தரும் (சா.அக.).

காட்டுச்சோதி *kāṭṭu-c-cōdi,* பெ.(n.) சோதி மரம்; an unidentified tree supposed to be luminous in the dark (சா.அக.).

காட்டுசாதிக்காய் *kāṭṭu-šādi-k-kay,* பெ.(n.) 1. பொதுவாகக் காட்டில் விளையும் மரங்கள்; forest trees in general. 2. காட்டுச்சாதி பத்திரி; wild mae - *Myristica malabarica.* 3. பெரிய காட்டு சாதிக்காய்; malabar nutmeg - *Myristica malabarica.*

[காட்டு + சாதிக்காய்.]

இதன் உள்சதைப் பற்றை எடுத்து இடித்து கொதிக்க வைத்து மஞ்சள் நிறமான ஓர் எண்ணெய் எடுப்பார்கள். இது வலியில்லா புண்களுக்குப் பூசுவதற்கு உதவும். இதை நல்ல எண்ணெயோடு கலந்து காற்றுப் பிடிப்புக்குப் பூசலாம். எண்ணெய் விளக்கும் எரிக்கலாம் (சா.அக.).

காட்டுசெட்டிப்பூ *kāṭṭu-ceṭṭi-p-pū,* பெ.(n.) மாசி பத்திரி; Indian absinth - *Artimeslavulgaris* (சா.அக.).

காட்டுண்ணி *kāṭṭuṇṇi,* பெ.(n.) காட்டில் காணப்படும் ஒரு வகை நஞ்சுண்ணி; a poisonous, tick or blood sucker found in forests.

[காட்டு + உண்ணி.]

இது கடித்தால் வீக்கம், தடிப்பு இவைகள் காணும் (சா.அக.).

காட்டுத்தர்ப்பை *kāṭṭu-t-tarppai,* பெ.(n.) முழு முதல் (பிரம) தர்ப்பைப் புல்; cock's skin grass - *Panicum crusgalli* (சா.அக.).

[காட்டு + தர்ப்பை.]

காட்டுத்தர்பார் *kāṭṭu-t-tarbār,* பெ.(n.) வரைமுறை இல்லாமல் தன்னிச்சையாகச் செயல்படும் போக்கு (நிர்வாகம்); anarchy. (குற்றம் சுமத்தியவனையே தூக்கில் போடும் காட்டுத்தர்பார்!) (க்ரியா.).

[காட்டு + தர்பார்.]

காட்டுத்திப்பிலிக்கொடி *kāṭṭu-t-tippili-k-koḍi,* பெ.(n.) சிறு மூலம்; long pepper - *Piper longum* (சா.அக.).

[காட்டு + திப்பிலி + கொடி.]

காட்டுத்துருக்கம் *kāṭṭu-t-turukkam,* பெ.(n.) காட்டுக் குந்துருக்கம்; forest dammer (சா.அக.).

[காட்டு + துருக்கம்.]

காட்டுத்துழாய் *kāṭṭu-t-tuḷāy,* பெ.(n.) 1. இலட்சுமித் துளசி; wild basil or black basil - *Ocimum adscendens.* 2. கருந் துளசி; a black variety of holy basil found in forests. 3. நாய்த் துளசி; white basil or dog basil - *Ocimum canum* (சா.அக.).

[காட்டு + துழாய்.]

காட்டுத்தொனி *kāṭṭu-t-toṉi,* பெ.(n.) 1. பிண்டி; *ašōkā* tree - *Saraca indica.* 2. நெட்டிலிங்கம்; Indian mast-tree (சா.அக.).

[காட்டு + தொனி.]

காட்டுநாடு *kāṭṭu-nāḍu,* பெ.(n.) களவேள்வி நாடு; the *kaḷavēḷvi* city (அபி.சிந்.).

[காட்டு + நாடு.]

காட்டுநாயகம் *kāṭṭu-nāyagam,* பெ.(n.) கிரந்தி நாயகம்; a lant supposed to cure syphitic sores, and glandular swellings. it is so called from its great usefulness in medicine as a forest plant (சா.அக.).

[காட்டு + நாயகம்.]

காட்டுநீரடிமுத்து *kāṭṭu-nīraḍi-muttu,* பெ.(n.) காட்டு நீர் வெட்டி; forest tamana oil tree - *Hydnocarpus venenata* (சா.அக.).

[காட்டு + நீரடி + முத்து.]

காட்டுப்பலிதம் *kāṭṭu-p-palidam,* பெ.(n.) கருவாப் பட்டை; bark of small cinnamon

- *Cinnamomum verum* (சா.அக.).

[காட்டு + பலிதம்.]

காட்டுப்பழுபாகல் *kāṭṭu-p-paḻubāgal,* பெ.(n.) பழுபாகல்; buffalo carolah; prickly carolah - *Momordica hispida* (சா.அக.).

[காட்டு + பழுபாகல்.]

காட்டுப்பனச்சி *kāṭṭu-p-paṉacci,* பெ.(n.) **காட்டுக்கறிவேப்பிலை** பார்க்க; see *kāṭṭu--k-kaṟi-vēppilai* (சா.அக.).

காட்டுப்பாகிகம் *kāṭṭu-p-pāgigam,* பெ.(n.) குறண்டி; corandy - *Lepidagathis scariosa* (சா.அக.).

காட்டுப்பால்வள்ளி *kāṭṭu-p-pāl-vaḷḷi,* பெ.(n.) ஒரு காட்டு மூலி; a forest milk creeper - *Cryptolepis bucbanania* (சா.அக.).

[காட்டு + பால்வள்ளி.]

காட்டுப்பிரசினம் *kāṭṭu-p-piraśiṉam,* பெ.(n.) பிணங்களை எரித்தற்குரிய (அபரக்கிரியைக்குரிய) மந்திரமடங்கிய மறைப்பகுதி (வேதப்பகுதி); section of the vēdaconsisting mostly of mantras used in funeral rites (செ.அக.).

[காட்டு + Skt. பிரசினம்.]

காட்டுப்பிரா *kāṭṭu-p-pirā,* பெ.(n.) **காட்டுப்பிராய்** பார்க்க; see *kāṭṭu-p-pirāy* (சா.அக.).

காட்டுப்பிராயம் *kāṭṭu-p-pirāyam,* பெ.(n.) காட்டில் வளரும் பிராய் மரம்; cododepas calycinum (சா.அக.).

காட்டுப்பலா *kāṭṭu-p-palā,* பெ.(n.) 1. பலா; jungle jack tree - *Artocarpus hirsuta.* 2. மலைப்பலா; mountain jack - *Nauclea purpures* (சா.அக.).

[காட்டு + பலா.]

காட்டுப்பின்னை *kāṭṭu-p-piṉṉai,* பெ.(n.) 1. கேரள (மலையாள)த்தில் வளரும் புன்னை மரம்; Malabar poon - *Calophyllum tomentosum.* 2. காட்டுப் புன்னை மரம்; forest poon tree - *Rhizophora mucronata* (சா.அக.).

[காட்டு + பின்னை.]

காட்டுப்புங்கிகம் *kāṭṭu-p-puṅgigam,* பெ.(n.) திரளங் கொடி; an unidentified creeper (சா.அக.).

[காட்டு + புங்கிகம்.]

காட்டுப்புளிச்சைமரம் *kāṭṭu-p-puḷiccai-maram,* பெ.(n.) ஒரு வகைப் புளிச்சை மரம்; a tree - *Aatidesma acida* (சா.அக.).

[காட்டு + புளிச்சை + மரம்.]

காட்டுப்பூவன் *kāṭṭu-p-pūvaṉ,* பெ.(n.) பூவம்; eye-ball tree - *Nephelium longasa* (சா.அக.).

[காட்டு + பூவன்.]

காட்டுமசகம் *kāṭṭu-maśagam,* பெ.(n.) காட்டுக்கொசு; a species of mosquito. *இது கடித்த இடத்தில் நமைச்சலும், வீக்கமும், எரிச்சலும் உண்டாகும்* (சா.அக.).

[காட்டு + மசகம்.]

காட்டுமயிலை *kāṭṭu-mayilai,* பெ.(n.) 1. நொச்சி மரவகை; tall chaste tree - *Vitex altissima.* 2. மரவகை; water peacock's foot tree - *Vitex leucoxylon* (செ.அக.).

[காட்டு + மயிலை.]

காட்டுமராட்டி *kāṭṭu-marāṭṭi,* பெ.(n.) குருவிக்காரன்; kuravan.

காட்டுமருது *kāṭṭu-marudu,* பெ.(n.) 1. கருப்பு மருத மரம்; black marutham or negroe's olive - *Terminalia tomentosa.* 2. இரும்பிலி; black satinwood - *Maba buxifolia* (சா.அக.).

[காட்டு + மருது.]

காட்டுமனிதன் *kāṭṭu-maṉidaṉ,* பெ.(n.) 1. நாகரிகமற்றவன்; wild, uncivilized man. 2. வாலில்லாக் குரங்கு; man of the woods, chimpanzee, orangoutang (செ.அக.).

[காட்டு + மனிதன். மனுஷன் → மனுடன் → மனிடன் → மனிதன்.]

காட்டுமனோரஞ்சிதம் *kāṭṭu-manō rañjidam,* பெ.(n.) மர மனோரஞ்சிதம்; forest cananga tree - *Cycas circinalis* (சா.அக.).

[காட்டு + மனோரஞ்சிதம்.]

காட்டுமாங்காய் *kāṭṭu-māṅgāy,* பெ.(n.) 1. காட்டில் காணப்படும் மாமரம்; jungle mango tree - *Mangifera indica.* 2. புளி மாங்காய்; sour mango; buchananis mango - *Buchanania angustifolia* (சா.அக.).

[காட்டு + மாங்காய்.]

காட்டுமாம்பழம் *kāṭṭu-māmbaḻam,* பெ.(n.) 1. காட்டு மா மரம்; jungle mango-*Spondias mangifera.* 2. ஊதளை; odallum called also jungle mango from the resemblance of the fruit - *Cerbera odallum alias Cerbera manghus.* 3. காட்டு மாமரம்; jungle mango or Cuddappa almond - *Buchanania latifolia alias Spondias mangifera* (சா.அக.).

[காட்டு + மாம்பழம்.]

காட்டுமாவிதை *kāṭṭu-mā-vidai,* பெ.(n.) சாரப் பருப்பு; the seed of jungle mango or cuddappa almond seed (சா.அக.).

காட்டுமிருகாண்டி *kāṭṭu-mirugāṇḍi,* பெ.(n.) காட்டுமிறாண்டி (யாழ்.அக.); rude fellow, savage (செ.அக.).

[காட்டு + மிருகம் + ஆண்டி. **Skt.** *Mrga > த. மிருகம்.]*

காட்டுமிறாண்டி *kāṭṭu-miṟāṇḍi,* பெ.(n.) நாகரிகமில்லா மாந்தன்; rustic, rude, ill-bred-person, savage (சா.அக.).

மறுவ. விலங்காண்டி

[காட்டு + மிருகம் + அண்டி. **Skt.** *Mrga > த. மிருகம்.]*

காட்டுமுட்டை *kāṭṭu-muṭṭai,* பெ.(n.) 1. காட்டு எருமுட்டை; dung of cattle naturally found dried in forests. 2. ஆவின் உலர்ந்த சாணம் (காட்டு விரட்டி); dried cow dung; dried dung of cattle in general (சா.அக.).

[காட்டு + முட்டை.]

காட்டுமுட்டைநெருப்பு *kāṭṭu-muṭṭai-neruppu,* பெ.(n.) காட்டு முட்டையை எரித்த நெருப்பு; fire obtained from *kāṭṭu-muṭṭai* (சா.அக.).

[காட்டு + முட்டை + நெருப்பு.]

காட்டுமுந்திரிகை *kāṭṭu-mundirigai,* பெ.(n.) 1. காட்டுக் கொடி முந்திரிகை; jungle grape vine - *Vitis latifolia.* 2. காட்டுக் கொட்டை முந்திரிச் செடி; wild cashew nut - *Anacardium occidentale* (சா.அக.).

[காட்டு + முந்திரிகை.]

காட்டுலவங்கம் *kāṭṭu-lavaṅgam,* பெ.(n.) காட்டு இலவங்கப் பட்டை; wild cinnamon tree or country cinnamon, *Cinnamomum iners alias c.eucalyptoidus.*

[காட்டு + இலவங்கம். இலவங்கம் = கருவாப் பட்டை (இணைப்பு).]

இது ஒரு சிறிய மரம். இதன் இலையைக் கசக்க மணமாயிருக்கும்; உள் பட்டையைச் சாதாரணமாகக் கருவாப்பட்டைக்குப் பதிலாய் விற்று ஏமாற்றுவார்கள். இது மிக்க பருமையாகவும், பெரிதாயும் இருக்கும்; வளைவாயிருக்குமே அல்லது மற்றொன்றைப் போல் சுருட்டையாய் இராது;

மணமும், சுவையும் வேறுபட்டு இருக்கும். இதன் காய்ந்த மொக்கு கருவாப் பட்டையைப் போல் காற்றைப் போக்கிப் பசியை உண்டாக்கும் தன்மை கொண்டது. இதன் விதைகளை இடித்துத் தேன் அல்லது சர்க்கரையில் கலந்து சீதபேதி, இருமல் இவைகளுக்குக் கொடுக்கலாம்; மற்ற கடைச் சரக்குகளோடு சேர்த்து காய்ச்சலுக்குப் பயன்படுத்தலாம். இதன் பட்டை கறிக்கூட்டா (மசாலா)கவும் வழங்கலாம் (சா.அக.).

காட்டுவா *kāṭṭuvā,* பெ.(n.) 1. பேயத்தி; devil fig - *Diospyros embryopteris.* 2. காட்டில் விளையும் அத்தி; wild fig - *Ficus hispida* (சா.அக.).

காட்டுவாழ்புங்கம் *kāṭṭuvāḻ-puṅgam,* பெ.(n.) செந்நாய்; a red variety of ferocious dog; hound (சா.அக.).

[காட்டு + வாழ் + புங்கம்.]

காட்டுவாளவரை *kāṭṭu-vāḷavarai,* பெ.(n.) காட்டில் வளரும் வாள் போன்ற அமைப்புடைய அவரை; wild aword bean, *Canavalia ensiformis* (சா.அக.).

[காட்டு + வாள் + அவரை.]

காட்டுவிரட்டி *kāṭṭu-viraṭṭi,* பெ.(n.) **காட்டு முட்டை** பார்க்க; see *kāṭṭu-muṭṭai* *இது புடத்திற்குச் சிறந்தது* (சா.அக.).

[காட்டு + விரட்டி.]

காட்டைவிடம் *kāṭṭu-viḍam,* பெ.(n.) காட்டில் உள்ள நஞ்சுப் பூடு; deadly poison plant - *Haemodictyon suberectum* (சா.அக.).

[காட்டு + விடம்.]

காட்டுவெண்சாமை *kāṭṭu-veṇšāmai,* பெ.(n.) **காட்டுவெள்ளைச்சாமை** பார்க்க; see *kāṭṭu-veḷḷai-c-cāmai* (சா.அக.).

[காட்டு + வெண்சாமை.]

காட்டுவெள்ளைச்சாமை *kāṭṭu-veḷḷai-c-cāmai,* பெ.(n.) காட்டில் விளையும் சாமை; wild white millet, Panicum prostatum (சா.அக.).

[காட்டு + வெள்ளை + சாமை.]

காட்டுள்ளிக்கிழங்கு *kāṭṭuḷḷi-k-kiḻaṅgu,* பெ.(n.) காட்டில் விளையும் வெங்காயக் கிழங்கு; the bulbous root of the jungle onions (சா.அக.).

[காட்டு + உள்ளி + கிழங்கு.]

காட்டுளுந்து *kāṭṭuḷundu,* பெ.(n.) காட்டில் விளையும் உளுந்து; forest black gram (சா.அக.).

[காட்டு + உளுந்து.]

காட்டூர்கிழார்மகனார்கண்ணனார் *kāṭṭūr-kiḻār-maganār-kaṇṇanār,* பெ.(n.) கடைச்சங்கம் மருவிய புலவர்; the poet who belonged to the last ancient Šaṅgam (அபி.சிந்.).

காட்டெரி *kāṭṭeri,* பெ.(n.) 1. ஒருவகை மணமுள்ள மரம்; eagle wood - *Aquilaria agallocha.* 2. கள்ளி; spurge (சா.அக.).

காட்டெருமுட்டை *kāṭṭeru-muṭṭai,* பெ.(n.) 1. **காட்டுமுட்டை** பார்க்க; see *kāṭṭu-muṭṭai.* 2. வயலில் இருந்து எடுத்த ஆவினது சாணம் (வயலெரு முட்டை); cow dung of cattle dung found dry on pasture lands (சா.அக.).

காட்டெருமைவிருட்சம் *kāṭṭerumai-viruṭcam,* பெ.(n.) எருமை மரம்; unknowned tree (சா.அக.).

[காட்டு + எருமை + விருட்சம்.]

இது தில்லை மரத்தைப் போல் பாலுள்ள மரம். இது உடல் இளமைக்குப் பயன்படும். இது வேப்பந்தூருள்ள இடங்களில் முளைக்கும்.

இதனருகில் போய் எருமைக் கன்றைப் போல் கனைனக்க ஓரிலை உதிரும். ஆகவே இதற்கு

இப்பெயர் வந்தது. அடிமரத்தைக் கொத்தினால் பால் வழியும். அது மிகவும் காரமானது. தில்லைப் பாலைக் காட்டிலும் கொடியது. பட்டவிடமெல்லாம் வெந்து புண்ணாகும். இதனால் 64 வித நஞ்சும் சுத்தியாகும். அதைக் கொண்டு மெழுகு, நீற்றினம் முதலியவைகள் செய்யலாம் (சா.அக.).

காட்டெலுமிச்சந்துளசி *kāṭṭelumicca-n-tuḷaši,* பெ.(n.) காட்டில் விளையும் எலுமிச்சந் துளசி; a forest variety of *elumicca-n-tuḷaši* (சா.அக.).

[காட்டு + எலுமிச்சை + துளசி.]

காடெழுகரம்பு *kāteḻu-karambu,* பெ.(n.) செடிகொடிகள் மண்டிக்காடாக எழுந்து நிற்கும் சமனில்லாத நிலப்பரப்பு; place tract of land. *"ஏரிக்கு மேற்கு காடெழு கரம்பு" (தெ.கல்.தொ.17, கல்.304). (கல்.அக.).*

[காடு +எழுகரம்பு.]

காட்டேணி *kāṭṭēṇi,* பெ.(n.) காட்டுமாடு அதாவது காட்டு ஆ அல்லது காட்டெருது; wild cow or wild ox, bison - *Gaveous ganrus* (சா.அக.).

[காடு + ஏணி.]

காட்டேரிமூலி *kāṭṭēri-mūli,* பெ.(n.) கருமத்தை; black dhatura or stramonium (சா.அக.).

[காட்டேறி →காட்டேரி + மூலி.]

காட்டைப்புடம் *kāṭṭai-p-puḍam,* பெ.(n.) 1. காடை உயரமளவு அதாவது மூன்று எருவில் போடும் புடம்; a small fire with three cow dung cackes used for calcining oxidising metals and metallic compounds. 2. ஒரெருப் புடம்; calcination with a single dried cow-dung cake (சா.அக.).

[காடை + புடம்.]

காட்டோங்கம் *kāṭṭōṅgam,* பெ.(n.) 1. காட்டில் வாழும் எருமை; wild buffalo - *Bubulusanni.* 2. கடகை நீறு; a farinaceous substance procured from the Indian arrow root - *Curcuma angustifolia.* 3. சதுரக்கள்ளி; square spurge - *Euphorbia antiquorum.* 4. எருக்கு; madar plant - *Caltropis gigantea.* 5. காட்டு வெள்ளை வெங்காயம்; gungle white onion - *Urginia indica.* 6. கள்ளிப் பொது; milk spurge-*Euphorbia genus.* 7. திருகு கள்ளி; twist-spurge - *Euphorbia tirucalli* (சா.அக.).

[காடு + ஓங்கு > ஓங்கம்]

காட்டோமவல்லி *kāṭṭōma-valli,* பெ.(n.) 1. ஒரு வகை மருந்துச் செடி; thick-leaved lavender - *Anisochilus carnosum.* 2. ஒரு வகை நறுமணச் செடி; country borage - *Coleus aromaticus* (சா.அக.).

[காட்டு + ஓமவல்லி.]

காடச்சரம் *kāḍa-c-caram,* பெ.(n.) ஒரு நீர் நோய்; a urinary disease (சா.அக.).

[காடம் + சரம்.]

காடம்பூ *kāḍambū,* பெ.(n.) மஞ்சள் பூ பூக்கும் ஒரு செடி; hairy yello-flowered laurustinus - *Viburnum hebanthum* (சா.அக.).

[காடம் + பூ.]

காடவர்கோன் *kāḍavar-kōṉ,* பெ.(n.) காஞ்சியை ஆண்ட அரச மரபைச் சார்ந்தவர்; a king who ruled *kāñji.*

[காடவர் + கோன்.]

இவர் காஞ்சியில் சிவாலயம் கட்டி அதற்கு குடமுழுக்கு செய்ய நாள் குறித்தார். சிவன் இவருக்குக் காட்சியளித்து, பூசலார் நாயனார் செய்யும் குடமுழுக்கிற்குப் போவதால் நாள் மாற்றி வைக்குமாறு வேண்டினார். இவர் நாளை மாற்றி வைத்து, பூசலாரைத் தேடிக்கண்டு களித்து இன்பமடைந்தார் (அபி.சிந்.).

காடாற்றுமுன்னெலும்பு *kāḍāṟṟu-muṉṉ elumbu,* பெ.(n.) சுடுகாட்டில் பிணம் சுட்ட எலும்பு; unburnt bones left after the cremation of a dead body (சா.அக.).

[காடு + ஆற்று + முன் + எலும்பு.]

காடிக்காரத்தழும்பு *kāḍi-k-kāra-t-taḻumbu,* பெ. (n.) காடிக்காரத்தை அடிக்கடி பயன் படுத்துவதனால் சதை கறுத்து ஏற்படும் தழும்பு; discoloration of the skin caused by prolonged or frequent application of nitrate of silver - *Argyria* (சா.அக.).

[காடி + காரம் + தழும்பு.]

காடிகட்டுண்டழுவாள் *kāḍi-kaṭṭuṇḍaḻuvāḷ,* பெ.(n.) மாவிலங்கம்; garlic near - *Crataeva religiosa* (சா.அக.).

[காடி + கட்டுண்டு + அழுவாள்]

காடிகானா *kāḍi-kāṉā,* பெ.(n.) வண்டியை நிறுத்தப் பயன்படும் கட்டடம்; cart-stand, carriage-house, shed for keeping carts (செ.அக.).

[U.gādi-khāva > த. காடிகானா.]

காடிச்செயநீர் *kāḍi-c-ceya-nīr,* பெ.(n.) இளநீரையும், இள வழுக்கையையும் சேர்த்துக் கரைத்துத் தெளிவித்து, அத்துடன் சுண்ணாம்பு நீர் விட்டுக் கலக்கி, சூரிய ஒளியில் வைத்துப் பிறகு தெளிவிறுத்து வடித்த காடி. இது சிந்தூரம் செய்ய உதவும்; a strong pungent fermented liquid filtered after exposing to the sun's rays a solution of lime water and the cocoanut extract obtained from a mixture of tender cocoanut and its water. This is used for preparing red oxides (சா.அக.).

[காடி + செயநீர்]

காடிலை *kāḍilai,* பெ.(n.) கல்லுமா; kidney plum - *Pygeum gardneri* (சா.அக.).

[காடு + இலை.]

காடிவகை *kāḍi-vagai,* பெ.(n.) பல வகைக்காடி; the different varieties of vinegar - *Aceta* (சா.அக.).

[காடி + வகை.]

காடிவைப்பு *kāḍi-vaippu,* பெ.(n.) காடி செய்யும் முறை; the process in the manufacture or preparation of vinegar (சா.அக.).

[காடி + வைப்பு.]

காடினம் *kāḍiṉam,* பெ.(n.) மூளையின் முன்பக்கத்து கூரிய முனை (கூச்சு) என்னும் உருண்டை வடிவம்; oval prominences at the sides of the anterior pyramids of the oblongata - *Olivery body* (சா.அக.).

[காடு + இனம்.]

காடுபடுவளன் *kāḍupaḍu-vaḷaṉ,* பெ.(n.) அரக்கு, தினை, தேன், கருந்தினை, நாவி, மயிற்பீலி முதலியன; forest products.

[காடு + படு + வளம்.]

காடுவசாதி *kāḍuva-šādi,* பெ. (n.) காடுகளில் வாழக்கூடிய ஒருவகைக் குலம்; one of the caste who living in forest (செ.அக.).

[காடு + வாழ் + சாதி.]

காடுவெட்டியசோழன் *kāḍu-veṭṭiya-cōḻaṉ,* பெ.(n.) காஞ்சி நாடாண்ட சோழர்களில் ஒருவன்; a king who ruled *kāñji*

[காடு + வெட்டிய + சோழன்.]

குலபூடணபாண்டியன் மதுரையை ஆண்ட காலத்தில் இவன் மதுரைக்கு வந்து வணங்க எண்ணினான். பாண்டியனுக்கு அஞ்சி வராமல் இருந்த சோழனை, சிவன் சித்தர் உரு கொண்டு வழித்துணையாய் வந்து மதுரையை வணங்க உதவினார். கோவிலில் இருந்த மீன் முத்திரையை, புலி முத்திரையாக சிவன் மாற்றினார். இதனைப்

பாண்டியனுக்கு உணர்த்தி, சோழனுடன் நட்பு கொள்ளச் செய்தார் (அபி.சிந்.).

காடைச்சாறு *kāḍai-c-cāṟu,* பெ.(n.) காடை இறைச்சியினின்று இறங்கிய சாறு; essence of the flesh of quail boiled with various other ingredients.

[காடை + சாறு.]

இதனால் இளைத்த உடல் பருக்கும். படுக்கையாய்க் கிடப்பவர்கள் தேறுவர் (சா.அக.).

காடைத்தனம் *kāḍai-t-taṉam,* பெ.(n.) முரட்டுத்தனம் (ரௌடித்தனம்) (இலங்.); rowdyism. *அவர்களின் காடைத்தனத்தால் பல உயிர்கள் இரை(பலி)யாயின (க்ரியா.).*

[காடு – காடை + தனம்.]

காண்டம் *kāṇḍam,* பெ.(n.) 1. மலைவேம்பு; hill margosa - *Melia azadirach alias M.Composita.* 2. கானற்பலா; jungle jack - *Artocarpus hirsuta* (சா.அக.).

[கா + அண்டம்.]

காண்டம்பனை *kāṇḍam-paṉai,* பெ.(n.) மலைக்கமுகு; hill areca-nut palm of Travancore - *Bentinckis Coddapana* (சா.அக.).

[கா – அண்டம் + பனை.]

காண்டரிக்கன் *kāṇḍarikkaṉ,* பெ.(n.) **காண்டரிசாரணை** பார்க்க; see *kāṇḍari-šāraṇai* (சா.அக.).

காண்டரிசாரணை *kāṇḍari-šāraṇai,* பெ.(n.) சத்தி சாரணை அல்லது மூக்கிரட்டை; spreading hogweed - *Boerhaavia repens* (சா.அக.).

காண்டவசூரணம் *kāṇḍava-šūraṇam,* பெ.(n.) 1. தாளிசபத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், இலவங்கப் பட்டை, ஏலம் முதலிய தணிகை மருந்துகளைச் சேர்த்து இடித்து ஈளை நோய்க்குக் கொடுக்கும் ஒரு பொடி மருந்து; a sedative medicine consisting of a mixture of several powdered drugs such as dried giner, pepper, long pepper, cumin seed; cardamom and other sedative agents. 2. காற்றை (வாயுவை)க் கண்டிக்கக் கொடுக்கும் மருந்து; a drug formerly used against flutulence - *zeodoti* (சா.அக.).

[காண்டவம் + சூரணம்.]

காண்டாதிக்கிருதம் *kāṇḍāti-k-kirudam,* பெ.(n.) நில வேம்புடன் வேறு கடைச் சரக்குகளைச் சேர்த்து நெய்யிலிட்டுக் காய்ச்சி வடித்த மருந்து நெய்; a medicinal ghee prepared with ground neem as a chief ingredient along with other bazaar drugs (சா.அக.).

[காண்டம் + ஆதி + கிருதம்.]

காண்டிகையுரை *kāṇḍigai-y-urai,* பெ.(n.) **காண்டிகை** பார்க்க; see *kāṇḍigai.*

காண்டியயம் *kāṇḍiyayam,* பெ.(n.) வெக்கை; intensity of heat (சா.அக.).

[காண்டி + அயம்.]

காணரூட்டம் *kāṇarūṭṭam,* பெ.(n.) இது ஒரு கடைச் சரக்கு; black hellebore - *Helleborumniger* (சா.அக.).

[காணார் + ஊட்டம்.]

காணாக்கடிசொறி *kāṇā-k-kaḍi-coṟi,* பெ.(n.) பூச்சிக் கடியினால் உண்டாகும் சொறி; itching due to poisonous bites (சா.அக.).

[காணா + கடிசொறி.]

காணாக்கடிநஞ்சு *kāṇā-k-kaḍi-nañju,* பெ.(n.) 1. சில் நஞ்சு; the poisonous effects of an unknown insect or creature. 2. சிறு பாம்பு நஞ்சு; small snake poison (சா.அக.).

[காணா + கடி + நஞ்சு.]

காணாக்கிரந்தி *kāṇā-k-kirandi,* பெ.(n.) 1. உடம்பில் உண்டாகும் கிரந்திப் புண்; internal ulcers or venereal sore. 2. ஆண் அல்லது பெண் குறியிற் காணும் கிரந்திப் புண்; a syphilitic sore forming on the genital of a male or female - *Chancre* (சா.அக.).

காணாத்திருத்தி *kāṇā-t-tirutti,* பெ.(n.) பிறர் பார்க்கக் கூடாத இடம் அதாவது ஆண், பெண் குறி; the genitals which are the private parts in a male or a female (சா.அக.).

காணாதுகடல்புகு-தல் *kāṇādu-kaḍal-pugu-,* செ.கு.வி.(v.i.) நோய் மீண்டும் வாராது இருத்தல்; total sappearance without relapse, said of disease (சா.அக.).

[காணாது + கடல் + புகு.]

காணாப்பத்தியம் *kāṇā-p-pattiyam,* பெ. (n.) அவ மருந்துணவு; deviation from the observance of the prescribed diet (சா.அக.).

[காணா + பத்தியம்.]

காணாப்புள்தோடம் *kāṇā-p-puḷ-tōšam,* பெ. (n.) குழந்தைகளுக்குக் காணும் பறவைக் குற்றம் (தோஷம்); a morbific diathesis in children said to be due to the evil influence reflected on them while birds are retiring to their nest.

இதனால் உச்சி, கண் முதலிய இடங்களில் குழி விழல், முலையுண்ணாமை, பச்சை நிறமாய்க் கழிதல், பறவையைப் போல் சீறி அழுதல் முதலிய குணங்கள் காணும் (சா.அக.).

காணாம்படுவோம் *kāṇam-paḍuvōm,* பெ. (n.) காணப்பொன் தண்டப்படுவோம் (காணாம் பொற்காசு); a kind of tax. *"நிலைப் பொலியூட்டாகத் திங்கடோறுமாக குடும்போமானோம் முட்டு வதாயிற் தர்மாஸதத்து நிசதி நாலேகால் காணம் படுவோமானோம்" (தெ.கல்.தொ.12, கல்.70).*

[காணம் = பொற்காசு. காணம் + படுவோம்.]

காணாமேகம் *kāṇā-mēgam,* பெ.(n.) ஆண் அல்லது பெண் குறிகளில் வரும் வெள்ளை (மேக)ப் புண்; a venereal sore found on the genitals - *Chancroid* (சா.அக.).

[காணா + மேகம்.]

காணாவஞ்சனி *kāṇā-vañjaṇi,* பெ.(n.) மறைப்பு மை, அதாவது சித்தர்கள் தங்களை மறைத்துக் கொள்வதற்காகப் பயன்படுத்தும் மை; a blackd paint prelpared by siddhars and used by them to become invisible to others (சா.அக.).

[காணா + (அஞ்சனம்) அஞ்சனி.]

காணாவியாதி *kāṇā-viyādi,* பெ.(n.) 1. கரணியம் இன்னதெனத் தெரியாத நோய்; a disease which could not be diagonised. 2. உள் நோய்; internal disease which could not be ascertained without operation. 3. பார்க்கக்கூடாத இடங்கள் அதாவது ஆண் அல்லது பெண் குறிகளில் காணும் நோய்; a disease of the genitals either in males or females. 4. உள்ளுறுப்புகளில் காணும் நோய்; disease of internal organs (சா.அக.).

காணிகொண்டாரும்அடைகொண்டாரும் *kāṇi-koṇḍārum-aḍai-koṇḍārum,* வி.அ.(adv.) நிலத்தைப் பரம்பரையாக உரிமையுடன் நுகரும் உரிமையாளரும், பயிரிடும் பகுதி உரிமை கொண்டாரும் (உரிமையாளர் - குத்தகையாளர் பகுதி உரிமை-உள்குத்தகை); contractor, lessee, to let out farm lease out as land. *"இக்கோயில் காணி கொண்டாரும் அடை கொண்டாரும் இக்கோயில் திறந்து முறை செய்தாரே இவ்விளக்கு எரிக்கக் கடவோ*

மானோம்" (முதற் குலோத்துங்கன், கி.பி.1105, தெ.இ.கல்.தொ.5 கல்.1001). (கல்.அக.).

[காணிகொண்டாரும் + அடைகொண்டாரும்.]

காணிமாடு *kāṇi-māḍu,* பெ.(n.) குத்தகை காணியைப் போன்று இடையர் உரிமையுடன் பெற்றுள்ள பயன்தரும் மாடு; to let out and lease out as a cow. *"மலையம் பாக்கத்து மன்றாடி பெருமாள் மகன் சேரக் கோனேன் இவ்வெருமை பத்தும் காணி மாடா கக்கைக் கொண்டு அருண்மொழி தேவன் உழக்கால்" (தெ.கல்.தொ.7, கல்.539). (கல்.அக.).*

[காணி + மாடு.]

தவச விளைவினால் பயன்தரும் நிலங்களைக் காணியாட்சியாகப் பெறுதலைப் போன்று, பால்வளம் தருதல் மாடெனும் செல்வத்தாலாதனான். மாடு காணி மாடென்று கருத்துடன் கூறப்பட்டுள்ளது. காணியாட்சி போன்ற உரிமையுடன் இடையர் பெறும் மாடு.

காணிமாறினநிலம் *kāṇi-māṟiṉa-nilam,* பெ. (n.) காணியாட்சி நிலத்திணை. அப்பணி செவ்வனே நிகழாத குற்றத்தால், காணியாட்சி உரிமையினை மாற்றி மற்றொரு பணியாளனுக்கு உரிமை செய்யும் நிலம்; to obtain a contract of lease. *"இந்நாட்டு குலோத்துங்க சோழன் கருப்பூரில் துரோகஞ் செய் நாரை காணி மாறின நிலமும்" (தெ.கல்.தொ.5, கல்.708). (கல்.அக.).*

[காணி + மாறினநிலம்.]

காத்தவராயன் *kāttava-rāyaṉ,* பெ. (n.) 1. வரலாற்றில் மறைவுண்ட மக்களைளத் துன்பத்தினின்று காப்பாற்றிய மறவனின் பெயர்; name of a hero who protected people from great danger or calamity. 2. மலைமகள் அமைத்த பூங்காவைக் (நந்தவனத்திற்குக்) காவல் செய்தவன்; a village deity.

[காத்த + அரையன்.]

இரண்டாம் பொருள் பின்வரும் தொன்மக் கதை தழுவியது. சிவன் உலக உயிர்கள் எல்லாவற்றையும் காப்பவர் என்னும் கருத்தில் மாறுபட்ட மலைமகள் ஒரு எறும்பைப் பிடித்துப் பரணியில் அடைத்து வைத்தார். மறுநாள் அதைத் திறந்து பார்க்க, அவ்வெறும்பின் வாயில் ஒரு சிறு அரிசி இருந்தது. தான் செய்த செயலைச் சிவனிடம் தெரிவித்தார். சிவன் மலைமகளை நோக்கி அந்த எறும்பைத் துன்பஞ் செய்ததற்கு நீ ஒரு பூங்காவை ஏற்படுத்தி அந்தக் கழுவாயை (பாவம்) போக்குக என்றார். மலைமகளும் அவ்வாறே பூங்காவை ஏற்படுத்தி அதன் காவலுக்குச் சிவனிடமே ஒருவனைப் பெற்று அவனுக்கு காத்தான் என்று பெயரிட்டார். அவனே காத்தவராயன் ஆவான். இவன் ஆரியமாலை முதலிய பல பெண்களை மணந்தவன் (அபி.சிந்.).

காத்தாலை *kāttālai,* பெ.(n.) விடியற்காலம்; early morning (செ.அக.). *காலங்காத்தாலை எழுந்து கழனி வேலைக்குப் போக வேண்டும் (வ.வரி.).*

[காலை + அத்தில் காலத்தில் – காத்தாலை (கடுங்கொச்சை).]

காத்தேனி *kāttēṉi,* பெ.(n.) மணித்தக்காளி; black-berried solanum - *Solanum nigrum* (சா.அக.).

காதட்டி *kādaṭṭi,* பெ.(n.) ஆதொண்டை; thorny caper - *Capparis horrida alias C.zeylanica* (சா.அக.).

[கால் + (தொடு) தொட்டி.]

காதடி *kādaḍi,* பெ.(n.) செவியடி; that portion behind the lobe of the ear (சா.அக.).

[காது + அடி.]

காதவடி *kādavaḍi,* பெ.(n.) **காதடி** பார்க்க; see *kādaḍi* (சா.அக.).

காதழற்சி *kādaḻaṟci,* பெ.(n.) மிகு வெப்பத்தினால் காதிற்குள் ஏற்படும் எரிச்சல்; inflammation of the ear-*Otitis* (சா.அக.).

[காது + அழற்சி. அழற்சி = கொதிப்பு, எரிவு.]

காதழுக்கு *kādaḻukku,* பெ.(n.) குறும்பீ; ear-wax - *Cerumen* (சா.அக.).

[காது + அழுக்கு.]

காதார *kādāra,* வி.எ.(adv.) 1. தன் காதுகளில் பட; with one's own ears. *அவள் சொன்ன சொல்லை என் காதாரக் கேட்டேன் (வட்.வழ.).* 2.நிரம்ப; to the full satisfaction of the ears (செ.அக.).

[காது + ஆர.]

காதில்சீழ்வடி-தல் *kādil-cīḻ-vaḍi-,* 4 செ.கு.வி. (v.i.) காதில் புண்கட்டி ஏற்பட்டு அதனால் சீழ் வெளிப்படுதல்; a purulent discharge from the ear - *Otorrhoea* (சா.அக.).

[காதில்சீழ் + வடி-தல்.]

காதில்போட்டுக்கொள்(ளு)-தல் *kādil-pōṭṭu-k-koḷ-,* 16 செ.கு.வி.(v.i.) பிறர் சொல்வதைக் கேட்டு உரிய கவனம் செலுத்துதல்; pay head to; listen to. *நான் வீடு மாற்ற வேண்டும் என்று சொல்வதை நீங்கள் காதில் போட்டுக் கொள்வதே இல்லை. கைத்தறி நெசவாளர்களின் கோரிக்கைகளைக் காதில் போட்டுக் கொள்ளாமல் செயல்படுகிறார்கள்.*

[காதில் + போட்டு + கொள்-தல்.]

காதில்போட்டுவை-த்தல் *kādil-pōṭṭu-vai-,* 4 செ.கு.வி.(v.i.) கவனத்தில் கொள்ளும்படி ஒன்றைத் தெரிவித்தல்; put in a word; mention. *என் பையன் வேலை பற்றிய செய்தியை உங்கள் காதில் போட்டு வைக்கிறேன்.*

[காதில் + போட்டு + வை-த்தல்.]

காதில்வாங்கு-தல் *kādil-vāṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. ஒருவர் சொல்வதைக் கவனமாகக் கேட்டல்; pay head to; lend one's ear. *அவர் கூறுவதைக் காதில் வாங்காமல் நீ பேசிக்கொண்டே போனால் என்ன அர்த்தம்?.* 2. **காதில்போட்டுக் கொள்-தல்** பார்க்க; see *kādil-pōṭṭu-k-koḷ-.*

[காதில் + வாங்கு-தல்.]

காதின்பின்பொகுட்டு *kādiṉ-piṉ-poguṭṭu,* பெ. (n.) காதிற்குப் பின் புறத்திலுள்ள முலைக்காம்பொத்த சிறிய பொகுட்டு; the tiny bony prominence of the skull just behind the ear - *Mastoid process* (சா.அக.).

[காது + பின் + பொகுட்டு.]

காதின்புறம் *kādiṉ-puṟam,* பெ.(n.) வெளிக்காது; the outer ear - *Concha* (சா.அக.).

[காது + புறம் - காதுபுறம்→காதின்புறம்.]

காதினருகு *kādiṉarugu,* பெ.(n.) 1. காதின் வெளிப்புறம்; the external portion of the ear, *Concha.* 2. காதின் இதழ்; lob of the ear. 3. காதின் முருந்து; gristle of the ear (சா.அக.).

[காது + இன் + அருகு.]

காதுக்கருவி *kādu-k-karuvi,* பெ.(n.) காது கேட்பதில் குறைபாடு உள்ளவர்களின் கேட்கும் திறனை மிகுதிப்படுத்த காதில் பொருத்திக் கொள்ளும் குறு மின் கருவி; hearing aid.

[காது + கருவி.]

காதுக்குடைவான் *kādu-k-kuḍaivāṉ,* பெ.(n.) காதைக் குடைந்து தூய்மை செய்ய பயன்படுத்தும் கருவி; an instrument for cleaning the ear - *Ear-pick* (சா.அக.).

[காது + குடைவான்.]

காதுக்கொப்புளம் *kādu-k-koppuḷam,* பெ. (n.) வெளிக் காதில் காணும் கொப்புளம்; boil in the external ear. *இது உடம்பின் வலிமை குறைவினாற் காணும். இதனால் குத்தல், வலி மிகுதியாகும் (சா.அக.).*

காதுகுற்று-தல் *kādu-kurru-,* செ.கு.வி. (v.i.) காதில் ஊசி அல்லது வேறு கருவியிட்டு துளையிடுதல்; boring a hole in the lobe of the ear with a needle or other sharp instrument; to bore or pierce the ear, as a ceremony (சா.அக.).

[காது + குற்று.]

காதுகொடுத்துக்கேள்-தல் *kādu-koduttu-k-kēl-,* 16 செ.கு.வி.(v.i.) உன்னிப்பாகக் கேட்டல்; give one's ear to; listen attentively. *அவன் சொல்வதைச் சிறிது நேரம் காது கொடுத்துக் கேள்.*

[காது + கொடுத்து + கேள்.]

காதுடனெட்டி *kādudanetti,* பெ.(n.) நெருஞ்சி; caltrops - *Tribulus terrestris* (சா.அக.).

[கால் + தொடுவன் + எட்டி.]

காதுத்தண்டு *kādu-t-tandu,* பெ.(n.) 1. கீழ்க்காது சேரணை; ear-flap. 2. காதினருகு; lobes of the ear (சா.அக.).

காதுத்துவாரம் *kādu-t-tuvāram,* பெ.(n.) காதின் வழி; ear-hole; external passage of the ear - *Aurium meatus* (சா.அக.).

காதுநடு *kādu-nadu,* பெ.(n.) செவிப்பறை; middle ear or ear-drum-*Tympanum* (சா.அக.).

காதுநோய் *kādu-nōy,* பெ.(n.) 1. காதில் உண்டாகும் நோய்கள்; disease of the ear in general. 2. காதுவலி; ear-ache - *Otalgia* (சா.அக.).

[காது + நோய்.]

காதுநோவு *kādu-nōvu,* பெ.(n.) **காதுநோய்** பார்க்க; see *kādu-nōy* (சா.அக.).

காதுப்பறை *kādu-p-parai,* பெ.(n.) காதின் ஒலிச் சவ்வு; ear-drum (சா.அக.).

[காது + பறை.]

காதுப்பிதுக்கம் *kādu-p-pidukkam,* பெ.(n.) வெளிக்காது உள்ளடங்காமல் விரிவாய்க் காணல்; marked protrusion of the ears (சா.அக.).

[காது + பிதுக்கம்.]

காதுப்புண் *kādu-p-pun,* பெ.(n.) காதில் புண், புரை முதலியவற்றால் ஏற்படும் கட்டி; sores or ulcers from abscesses etc., ulceration of the ear (சா.அக.).

[காது + புண்.]

காதுப்புழு *kādu-p-pulu,* பெ.(n.) காதில் ஈ புகுந்து முட்டை வைப்பதனாலும், அல்லது நோய் புண்கட்டி முதலிய கரணியங்களாலும் காதிற்குள் உண்டாகும் புழு அல்லது பூச்சிகள்; worms or germs formed in the ear due to a fly depositing its egg therein or through other causes such as diseases, wounds, injuries etc (சா.அக.).

[காது + புழு.]

காதுப்புற்று *kādu-p-purru,* பெ.(n.) காது நரம்புகளில் சளி நீர் நிறையப் பெற்று அதனால் கெடு சதை வளர்ந்து பருக்கும் ஒரு புண்; herpes zoster of the ear, due to herpetic inflammation of the facial nerve arising from accumulation of bad fluid - *Zoster oticus. இது அக்கியைப் போல் இருக்கும்* (சா.அக.).

[காது + புற்று.]

காதுபட *kādu-pada,* பெ.(n.) செய்தி கேட்கும் அளவுக்குத் தெரியும்படியாக; in one's hearing. *உன்னைப் பற்றி மோசமாக அவன் காதுபடப் பேசினாள்.*

[காது + பட.]

காதுமத்திமம் *kādu-mattimam,* பெ.(n.) குறைவான கேட்கும் திறன்; dullness of hearing - *Amblyacusia* (சா.அக.).

[காது + மத்திமம்.]

மறுவ. காது மந்தம்

காதுமந்தன் *kādu-mandaṉ,* பெ.(n.) காது கேளாதவன்; a deafman; one who is thick of hearing (சா.அக.).

[காது + மந்தன்]

காதுமலம் *kādu-malam,* பெ.(n.) காதுக் குறும்பி; ear-wax (சா.அக.).

[காது + மலம்.]

காதுமூர்ச்சை *kādu-mūrccai,* பெ.(n.) காது நோயினால் ஏற்படும் களைப்பு; a swoon or fainting observed in patients suffering from aural diseases - *Ear-faint* (சா.அக.).

[காது + மூர்ச்சை.]

காதுமூளி *kādu-mūḷi,* பெ. (n.) 1. அறுந்த காது; torn ear. 2. அந்தக் கேடா (அவலட்சணமா)ன காது; deformed ear (சா.அக.).

[காது + மூளி.]

காதுவாதை *kādu-vādai,* பெ. (n.) 1. உட்காதின் குத்தல் வலி; acute boring pain in the ear, *Otalgia.* 2. காதின் தொந்தரவு; trouble or sufferings from pain in the ear - *Otalgia* (சா.அக.).

[காது + வாதை.]

காதுவிறைப்பு *kādu-viṟaippu,* பெ.(n.) காதுமுறைப்பு; stiffness of the outer ear (சா.அக.).

[காது + விறைப்பு.]

காதுவீக்கம் *kādu-vīkkam,* பெ.(n.) காதிற்குள் ஏற்படும் நோய் அல்லது புண்ணினால் உண்டாகும் வீக்கம்; swelling of the ear through inflammatory diseases (சா.அக.).

[காது + வீக்கம்.]

காதுவெளியா-தல் *kādu-veḷiyā-,* பெ.(n.) 1. காதடைப்பு நீங்குதல்; to be free from dullness of hearing. 2. செவிடு குணப்படுதல்; the curing of deafness (சா.அக.).

காதெலும்பு *kādelumbu,* பெ.(n.) கன்னப்பொறி எலும்பு; temporal bone (சா.அக.).

[காது + எலும்பு.]

காதைக்கடி-த்தல் *kādai-k-kaḍi-,* செ.கு.வி. (v.i.) காதைக் கடிப்பது போல் நெருங்கி வந்து செய்தியை மெதுவாகச் சொல்லுதல்; கிசுகிசுத்தல்; whisper. *வெளிப்படையாகச் சொல் காதைக் கடிக்காதே.*

[காதை + கடி-த்தல்.]

காதைப்பொத்து-தல் *kādai-p-pottu-,* செ.கு.வி. (v.i.) ஓசை கேட்காதபடிக் காதை மூடுதல்; to shut the ears to prevent hearing (சா.அக.).

[காதை + பொத்து.]

காதொட்டி *kādoṭṭi,* பெ.(n.) 1. அறுந்து போன காதை ஒட்டச் செய்யும் மருந்து; a medicine or drug capable of re-uniting the two edges of a torn ear of a female. 2. சிற்றாமுட்டி; fragrant sticky mallow - *Pavonia odorata* (சா.அக.).

[காது + ஒட்டி.]

காதொலி *kādoli,* பெ.(n.) 1. காதின் ஒலி; sound of the ear. 2. உள்ளொடுக்க (யோகாப்பியாசத்)த்தில் காதில் கேட்கும் சிலம்பொலி, சங்கு ஒலி முதலியன; the different kinds of melodius sounds heard at a certain stage in yoga practice, such as, the creeking of anklet, the blowing of conch etc. (சா.அக.).

[காது + ஒலி.]

காதொழுக்கு *kādoḻukku,* பெ.(n.) காதில் சீழ் வடிகை; discharge of pus from the ear (சா.அக.).

காதோடம் *kādōḍam,* பெ.(n.) வெண்கடம்பு; white cadamba - *Anthocephalus cadumba* (சா.அக.).

காதோடுகாதாக *kādōḍu-kādāga,* வி.அ. (adv.) மிகவும் மெதுவான குரலில் கமுக்கமாக; in a hushed voice; in a whisper. *காதலர் இருவரும் கட்டிலில் அமர்ந்து காதோடு காதாகப் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டேன்.*

[காது + ஒடு + காது + ஆக]

காந்தஅயசு *kānda-ayašu,* பெ.(n.) அயச்சிலை; iron ore (சா.அக.).

காந்தக்கவர்ச்சி *kānda-k-kavarcci,* பெ.(n.) காந்தத்திற்கு இயல்பிலேயே இரும்பு முதலியவைகளிடத்து உண்டான இழுக்குந் தன்மை; the influence of a magnet upon certain metallic substances cheifly iron - *Magnetic attraction* (சா.அக.).

[காந்தம் + கவர்ச்சி.]

காந்தக்களிமண் *kānda-k-kaḷiman,* பெ. (n.) திருமண் அல்லது திருமால் அன்பர்கள் அணியக்கூடிய வெண்மை கலந்த மஞ்சள் நிறமுடைய திருமண் (கோபிச் சந்தனம்); common magnesian clay used by a class of the Hindus for putting on naman the sectarian mark on the forehead. 2. நாமவெள்ளை; white earth used by Vaishnavites for namam obtained from duwaraka. 3. மஞ்சள் திருச்சுண்ணம்; aluminous yellow earth obtained from the Ganges at Haridwar used by Madhwas (சா.அக.).

[காந்தம் + களிமண்.]

காந்தக்கிண்ணம் *kānda-k-kiṇṇam,* பெ.(n.) காந்தத்தினால் செய்த ஒரு வாயகன்ற ஏனம்; a baisn made out of magnetic mettalic compound.

[காந்தம் + கிண்ணம்.]

இதில் பாலை விட்டால் பொங்கினாலும் வழியாதென்றும், இச ரிய (பாதரச)த்தை விட்டால் இதளியங் கட்டி, வெள்ளியைப் போல் ஆகுமென்றும் கூறப்படுகிறது. இதைச் சித்தர்கள் உடல் நரை திரையின்றி வெகு நாள் இருக்க வேண்டி உண்பதற்கு முன் கற்பத்தை இதில் இட்டு காதுகாப்பார்கள். இக்கிண்ணம் செய்யும் முறை மிகவும் கமுக்க (இரகசிய)மானது (சா.அக.).

[காந்தம் + கிண்ணம்.]

காந்தக்கிண்ணி *kānda-k-kiṇṇi,* பெ.(n.) காந்த உண்கலம்; magnetic eating dish.

[காந்தம் + கிண்ணி.]

இதைச் செய்யும் முறை : காந்தத்தைக் கல்லுப்பு, மெழுகு இவைகளுடன் கலந்து உருக்கி விந்தினால் சுருக்குக் கொடுக்க கண் விட்டாடும். அப்போது வார்ப்பில் ஊற்றிக் கிண்ணியாக அடித்துக் கொள்வது (சா.அக.).

காந்தச்சுண்ணம் *kānda-c-cuṇṇam,* பெ. (n.) காந்தத்தைப் புடமிட்டு சுண்ணச் சத்தாக மாற்றிய மருந்து; an alkaline compound of magnet obtained by calcination.

[காந்தம் + சுண்ணம்.]

இதைப் பாலுடன் சேர்த்து நாற்பது நாட்கள் உண்ண உடம்பின் காந்தல், வெக்கை, வெதுப்பு, சூலை, பாண்டு, வயிற்றுப்போக்கு (கிராணி) முதலிய நோய்கள் போம் (சா.அக.).

காந்தச்சத்தி *kānda-c-catti,* பெ.(n.) காந்தத்திற்கு உள்ள இழுக்கும் ஆற்றல்; magnetic power (சா.அக.).

[காந்தம் + சத்தி.]

காந்தச்சத்து *kānda-c-cattu,* பெ.(n.) 1. காந்தத்தின் வலிமை; magnesium; essence of magnesia. 2. காந்த சாரம்; magnetism (சா.அக.).

[காந்தம் + சத்து.]

காந்தச்சத்துக்கிண்ணி *kānda-c-cattu-k-kiṇṇi,* பெ.(n.) **காந்தக்கிண்ணம்** பார்க்க; see *kānda-k-kiṇṇam* (சா.அக.).

காந்தச்சத்துச்சுண்ணம் *kānda-c-cattu-c-cuṉṉam,* பெ.(n.) காந்தத்தில் இருந்து வலிமையை (சத்து) எடுத்து அதை மற்ற பொருள்களோடு சேர்த்து புடத்திலிட்டு எடுத்த சுண்ணம்; an alchemical compound obtained by the calcination of a mixture of several alkaline compounds in which the essence of magnet forms the cheif ingredient. *இது வாதத்திற்கு உதவும் (சா.அக.).*

[காந்தம் + சத்து + சுண்ணம்.]

காந்தச்சத்துவம் *kānda-c-cattuvam,* பெ.(n.) காந்தத்தின் இயல்பான வலிமை; natural magnetic power (சா.அக.).

[காந்தம் + சத்துவம்.]

காந்தச்சாரம் *kānda-c-cāram,* பெ.(n.) காந்தத்தின் வலிமை; a peculiar property or power possessed by bodies or animals whereby they naturally attract or repel one another, *Magnetism* (சா.அக.).

[காந்தம் + சாரம்.]

காந்தச்சிகிச்சை *kānda-c-cigiccai,* பெ.(n.) 1. காந்தம் கலந்த மருந்தைக் கொண்டு செய்யும் மருத்துவம்; a treatment effected through medicine prepared from magnet mixed with otheringredients - *Magneto-theraphy.* 2. மந்திர உச்சரிப்பினால் அல்லது மனோ சத்தியினால் நோய்களைக் குணப்படுத்துகை; magnetic treatment effected by chanting of mantrams or a cure effected through animal magnetism - *Hypnotic cure* (சா.அக.).

[காந்தம் + சிகிச்சை.]

காந்தச்சிங்கி *kānda-c-ciṅgi,* பெ.(n.) காந்தம் சேர்ந்த ஒரு நஞ்சு மருந்து; a poisonous compound containing magnet as one of the ingredients (சா.அக.).

[காந்தம் + சிங்கி.]

காந்தச்சூசி *kānda-c-cūši,* பெ.(n.) காந்த ஊசி; magnetic needle (சா.அக.).

காந்தச்செந்தூரம் *kānda-c-cendūram,* பெ.(n.) காந்தத்தைப் புடமிட்ட சிவப்புத் தூள்; a redoxide obtained by calcination of magnet - *Magnetic oxide of iron* (சா.அக.).

[காந்தம் + செந்தூரம்.]

காந்தண்மலரான் *kāndaṉ-malarāṉ,* பெ.(n.) சவர்க்காரம்; fuller's earth; bleaching powder (சா.அக.).

[காந்தம் + மலரான்.]

காந்தத்துருவம் *kānda-t-turuvam,* பெ.(n.) காந்தத்தின் வலிமுனை; magnetic pole (சா.அக.).

[காந்தம் + துருவம்.]

காந்தப்பட்சி *kānda-p-paṭci,* பெ.(n.) மயில்; pea-cock - *Pavo cristatus* (சா.அக.).

காந்தப்பலம் *kānda-p-palam,* பெ.(n.) காந்த ஆற்றல்; magnetic power (சா.அக.).

காந்தப்பன்னிகம் *kānda-p-paṉṉigam,* பெ.(n.) சன்னி நாயகம்; a plant prescribed as a specific for apoplexy or in cases of delirium (சா.அக.).

[காந்தம் + பன்னிகம்.]

காந்தப்பாத்திரம் *kānda-p-pattiram,* பெ.(n.) **காந்தக்கிண்ணம்** பார்க்க; see *kānda-k-kiṉṉam* (சா.அக.).

காந்தப்பாடாணம் *kānda-p-pāḍāṇam,* பெ.(n.) பிறவி நஞ்சு வகை; a mineral poison (செ.அக.).

*[காந்தம் + **Skt.** பாடாணம்.]*

காந்தப்புடம் *kānda-p-puḍam,* பெ.(n.) மந்தாரை; mountain ebony (சா.அக.).

காந்தம்பிடித்தபொடி *kāndam-piḍitta-poḍi,* பெ.(n.) காந்தத்தில் ஒட்டியுள்ள பொடி; a mass of soft iron at the extremity of a magnet - *Armature* (சா.அக.).

[காந்தம் + பிடித்த + பொடி.]

காந்தமண்சத்து *kānda-maṇ-šattu,* பெ.(n.) காந்த மண்ணைப் போதுமான அளவு எரித்து எடுக்கும் ஒரு வெண்ணிறமான ஊட்டம் (சத்து); magnesia or oxide of magnesia extracted from magnesium carbonate by application of heat (சா.அக.).

[காந்தம் + மண் + சத்து.]

காந்தமண்பற்பம் *kānda-maṇ-paṟpam,* பெ.(n.) காந்த மண்ணினின்று அணியம் (தயாரிக்கும்) செய்யும் பற்பம்; magnesium carbonate obtained from magnesite - *Magnisial carbonas.*

[காந்தம் + மண் + பற்பம்.]

இது காந்தமண் கலந்த சுண்ணாம்புக் கல்லுக்குள் இயற்கையாகவே இருக்கும். இது வெண்ணிறமான பொடி, மருந்திற்குப் பயன்படும் (சா.அக.).

காந்தமதீர்த்தம் *kāndama-tīrttam,* பெ.(n.) தென் கடற்கரையிலுள்ள நீர்நிலை; dool near southern seashore.

[காந்தமன் + தீர்த்தம்.]

காந்தமயம் *kānda-mayam,* பெ.(n.) 1. கவர்ச்சியான அல்லது மேன்மையான காந்த ஆற்றல்; influence or predominence of magnetic power. 2. காந்தமும், இரும்பும் சேர்ந்தது an alloy of magnet and iron (சா.அக.).

[காந்தம் + மயம்.]

காந்தமாட்டு-தல் *kānda-māṭṭu,* செ.கு.வி. (v.i.) 1. காந்த மூட்டுதல்; to induce magnetic properties, that is to render a piece of iron magnetic. 2. காந்தத்தை அறைத்தல்; to grind loadstone into a powder (சா.அக.).

[காந்தம் + ஆட்டுதல்.]

காந்தமின்சாரம் *kānda-minšāram,* பெ.(n.) காந்தத்தைக் கொண்டு மூட்டும் மின்சாரம்; electricity induced by means of a magnet - *Magneto electricity* (சா.அக.).

[காந்தம் + மின்சாரம்.]

காந்தமின்னிராயம் *kānda-minnirāyam,* பெ.(n.) காந்த மின்சார ஓட்டம்; magneto electric current (சா.அக.).

[காந்தம் + மின் + இரையம்.]

காந்தமின்னுபகாரம் *kānda-minn ubagāram,* பெ.(n.) காந்த மின்சாரக் கருவிகள்; magneto-electric current (சா.அக.).

காந்தமூசை *kānda-mūšai,* பெ.(n.) காந்தத்தினால் செய்த குகை; a crucible made of magnet (சா.அக.).

[காந்தம் + மூசை.]

காந்தயச்சாரி *kāndaya-c-cāri,* பெ.(n.) காய்ப் பூவரசு அல்லது காட்டுப் பூவரசு; false fern tree - *Fillicium decipiens* (சா.அக.).

[காந்தம் + அயச்சாரி.]

காந்தரசவிருட்சம் *kāndarasa-viruṭcam,* பெ. (n.) ஒளி மரம்; a tree luminous in the dark.

இதில் காந்தம், பாதரசம் இலைகளின் ஆற்றல் உள்ளதாகக் கருதி இப்பெயர் அமைந்தது போலும். இதன் வெளிச்சத்தினால் இரவு, பகல் தோன்றாது. இம்மரம் வாதத்திற்குப் பயன்படும் என்று கருதப்படும் (சா.அக.).

காந்தலாய்ப்போ-தல் *kāndalāy-p-pō-,* 8 செ.கு.வி.(v.i.) தீய்ந்து போதல்; to become

scorched (சா.அக.).

[காந்தல் + ஆய் + போ-தல்.]

காந்தலோகம் *kānda-lōgam,* பெ.(n.) 1. காந்தம்; magnet. 2. வார்த்த இரும்பு; cast-iron. 3. காந்தமும் இரும்பும்; magnet and iron. 4. நில உலகம்; earth which in itself is a magnet (சா.அக.).

[காந்தம் + உலோகம். கந்து → காந்து → காந்தம். கந்துதல் = பற்றுதல், கந்து = பற்றுக்கோடு.]

காந்தவயசு[1] *kānda-vayašu,* பெ.(n.) அயமண்; iron ore.

[காந்தம் + அயசு.]

காந்தவயசு[2] *kānda-vayašu,* பெ.(n.) காந்த மருந்துகளைச் சாப்பிட்டு அதனால் அடைந்த அகவை முதிர்வு; life pralonged by the use of the calcined preparations of magnet (சா.அக.).

*[காந்தம் + **Skt.** வயசு.]*

காந்தவலி *kānda-vali,* பெ.(n.) காந்தத் திற்குள்ள இழுக்கும் ஆற்றல்; the attractive power of magnet (சா.அக.).

[காந்தம் + வலி.]

காந்தவி *kānda-vi,* பெ.(n.) சிறுவழுதலை; prickly night shade - *Solanum indicum* (சா.அக.).

[காந்தம் – காந்தவி.]

காந்தவிருசு *kānda-virušu,* பெ.(n.) காந்தத்தினால் செய்த அச்சு (இருசு); magnetic axis (சா.அக.).

[காந்தம் + இருசு.]

காந்தாமற்கருகாமலெடு-த்தல் *kāndāmar-karugāmaledu-,* செ.கு.வி. (v.i.) பக்குவ நிலையழியாத படியும், தீயாமலும் பொங்கி எடுக்கும் நிலை; a stage at which boiled substances are taken out without being over-boiled or scorched (சா.அக.).

[காந்தாமல் + கருகாமல் + எடு.]

காந்தாயசம் *kāndāyašam,* பெ.(n.) அயக்காந்தம்; iron mixed with magnet or the containing magnetic power (சா.அக.).

[காந்தம் + ஆயசம்.]

காந்தாரகம் *kāndāragam,* பெ.(n.) ஒரு வகைக் கரும்பு; a kind of sugarcane (சா.அக.).

[காந்தம் + ராகம்.]

காந்தாளி *kāndāḷi,* பெ.(n.) சின்னி மரம்; birch-leaved acalypha - *Acalypha fruiticosa* (சா.அக.).

[காந்து + ஆளி.]

காந்திகம் *kāndigam,* பெ.(n.) காந்த ஆற்றல்; magnetism.

[காந்து + இகம்.]

இவ்வாற்றலினால் நோய்களைக் குணப் படுத்தலாம். இது ஆங்கிலேயருக்கும், செருமானி யருக்கும் தெரியும் முன்னமே வெகு காலமாய் நமது நாட்டில் பயன்படுத்தப்பட்டு வந்தது (சா.அக.).

காந்திகாட்டு-தல் *kāndi-kāṭṭu-,* பெ.(n.) வெப்பம் தாக்குகை; imparting heat (சா.அக.).

[காந்தி + காட்டல்.]

காந்திதாயகம் *kāndi-tāyagam,* பெ.(n.) ஒரு மரம்; an unknown tree (சா.அக.).

காந்திமதி *kāndi-madi,* பெ.(n.) ஒளி யுடையவள்; woman having bright features (செ.அக.).

*[காந்தி + மதி. **Skt.** மத் > த.மதி.]*

காந்தமான் *kāndi-mān,* பெ.(n.) ஒளி யுடையவன்; man having bright features (சா.அக.).

மறுவ. காந்தமன்

[காந்தம் + மான் – காந்தமான்]

இச்சொல் காந்தமன் எனும் விரிவு

காந்தியானமருந்து *kāndiyāna-marundu,* பெ. (n.) சூட்டை உண்டாக்கும் மருந்து; warmth producing medicine (சா.அக.).

காந்தியதிகமேனி *kāndiyadiga-mēni,* பெ. (n.) காவி நிறமுடைய கல்; reddle (செ.அக.).

[காந்தி + அதிகமேனி.]

காந்தியிரு-த்தல் *kāndiyiru-,* செ.கு.வி. (v.i.) அதிகச் சூட்டினால் கருத்தல்; blackened by being over-burnt or scorched (சா.அக.).

[காந்தி + இரு.]

காந்தியுடமூலி *kāndiyuḍa-mūli,* பெ.(n.) 1. ஒளி மரம்; a plant luminous in the dark. 2. நீல ஒளி; bright blue leaved plant (சா.அக.).

[காந்தி + உடல் + மூலி.]

காந்தோரகம் *kāndōragam,* பெ.(n.) செங்கரும்பு; red-coloured sugarcane (சா.அக.).

காப்பகம் *kāppagam,* பெ. (n.) பொறுப்பேற்றுக் கவனிக்கும் இல்லம்; home for orphans, the aged, etc. *குழந்தைகள் காப்பகம், மனநலக் காப்பகம், முதியோர் காப்பகம் , ஊனமுற்றோர் காப்பகம்.*

[காப்பு + அகம்.]

காப்பாளர் *kāppāḷar,* பெ. (n.) 1. விடுதி போன்றவற்றில் தங்கியிருப்போரைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு ஏற்றவர்; warden. *விடுதிக் காப்பாளர், எதிலியர் இல்லக் காப்பாளர்.* 2. பாதுகாப்பாளர்; guardian.

[காப்பு + ஆளர்.]

காப்பிடம் *kāppiḍam,* பெ.(n.) ஒற்றிடம்; fomentation (சா.அக.).

[கப்படம் – காப்படம் – காப்பிடம் (கொ.வ.)]

காப்பியக்குடி *kāppiya-k-kuḍi,* பெ. (n.) ஒரு குடிப்பெயர்; a family name (அபி.சிந்.).

[காப்பியன் (உழவன்) + குடி.]

காப்பியஞ்சேந்தனார் *kāppiyañ-jēndanār,* பெ.(n.) பாலைத் திணையைச் சிறப்பித்து நற்றிணைப் பாடல் பாடிய கழகப் புலவர்; a *śaṅgam* poet.

[காப்பியம் + சேந்தனார்.]

சேந்தன் என்பது இவரின் இயற்பெயர். உழவன் என்னும் காப்பியக் குடியில் பிறந்ததால் பெற்ற பெயர்

காப்பியாற்றுக்காப்பியனார் *kāppi-y-āṟṟu-k-kāppiyanār,* பெ.(n.) களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைப் பாடிப் பரிசில் பெற்ற புலவர்; A poet who received award from *kalaṅkāy-k-kaṇṇi-nārmuḍi-cēral* (அபி.சிந்.).

[காப்பி + ஆறு + காப்பியன் + ஆர்.]

காப்பிரிசல்லாத்து *kāppiri-śallāttu,* பெ. (n.) சுருண்டு கிடக்கும் காட்டு சல்லாத்து; curled endive - *Chichorium endiva.*

[காப்பிரி + சல்லாத்து.]

இது சுருட்டையுள்ள சல்லாத்துக் கீரைச் செடி. இது உடம்பின் சூட்டை அறுத்துக் குளிர்ச்சியைத் தரும் (சா.அக.).

காப்பிரியெலுமிச்சை *kāppiri-y-elumiccai,* பெ.(n.) காட்டு எலுமிச்சை; Indian wild lime - *Atlantia monophylla* (சா.அக.).

[காப்பிரி + எலுமிச்சை.]

காப்பில் *kāppil,* பெ.(n.) 1. மீனவர்கள் மீன் பிடிக்க பயன்படுத்தக்கூடிய கூரிய ஈட்டி போன்ற கருவி; barbed fishing-spear. 2. கப்பலின் பாயை முன்பாகவோ, பின்பாகவோ நீட்டுவதற்கு உதவும் கழி போன்ற தோணியின் உறுப்பு; a spar used in ships to extend the heads of fore-and-aft sails (செ.அக.).

[காப்பு + இல்.]

[E. gaff > த. காப்பில்.]

காப்புக்குரியகடவுள் *kāppukkuriya-kaḍavuḷ,* பெ.(n.) காப்பாக நூன்முகத்து உரைக்கப்படும் தெய்வம்; a derty which protects.

[காப்புக்கு + உரிய + கடவுள்.]

காப்புக்கட்டல் *kāppu-k-kaṭṭal,* பெ.(n.) பேய், பூதம் அல்லது கெடுதல் செய்கை, சூழியம் (சூனியம்) வைத்தல் இவைகள் அணுகாதபடி பாதுகாப்புக்காகக் கடவுளை வேண்டி மாழை (உலோகம்)யால் ஆன தகடு அல்லது மஞ்சள் கயிற்றை நோயாளிகளின் கையில் கட்டுகை; tying an amulet or a yellow string after praying to God, as a protective against the influence of evil spirits and other acts of malevolence (சா.அக.).

[காப்பு + கட்டல்.]

காப்புகாவரிசி *kāppugāvariśi,* பெ.(n.) **கார்போகவரிசி** பார்க்க; see *kārbōgav ariśi* (சா.அக.).

காப்புநீக்கு-தல் *kāppu-nīkku-,* 5 செ.கு.வி. (v.i.) கட்டி வைத்துள்ள ஓலைச்சுவடியை அதன் கட்டை அவிழ்த்துத் திறத்தல்; to unloose and open, as a book of palmyra leaves. *"பரந்தநூல் காப்பு நீக்கி" (தணிகைப்பு.அகத்.167). (செ.அக.).*

[காப்பு + நீக்கம்.]

காப்புரிமை *kāppurimai,* பெ. (n.) 1. கண்டுபிடித்த ஒரு பொருளுக்கு அல்லது அதற்குச் சூட்டிய பெயருக்குக் குறிப்பிட்ட காலம் வரை அதைத் தான் மட்டுமே செய்து விற்பனை செய்ய அரசில் பதிவு செய்து பெறும் உரிமை; patent. *இன்றியமையாத சிறிய மருந்து வகைகளுக்குக் கூடப் பெரிய நிறுவனங்கள் காப்புரிமை பெறுகின்றன.*

[காப்பு + உரிமை.]

காப்புறுதி *kāppuṟudi,* பெ.(n.) காப்பீடு செய்தல்; insurance (க்ரியா.).

[காப்பு + உறுதி.]

காப்புறை *kāppuṟai,* பெ.(n.) நோய்கள் வராதபடிக்குக் காக்கும் மருந்துகள்; medicines which act as preventives in diseases.

[காப்பு + உறை.]

இது தமிழ் மருத்துவ முறைப்படி காப்பு, நீக்கம், நிறைப்பு ஆகிய மூவகை மருந்துகளுள் ஒன்று (சா.அக.).

காம்பசி *kāmbaśi,* பெ.(n.) செந்நெருஞ்சில்; a red variety of oaltrops - *Tribulus terrestris* (சா.அக.).

காம்பம் *kāmbam,* பெ.(n.) **காம்பசி** பார்க்க; see *kāmbaśi* (சா.அக.).

காம்பாய்-தல் *kāmbay-,* 1 செ.கு.வி.(v.i.) இலைக் காம்புகளைக் கிள்ளுதல் அல்லது நீக்குதல்; removing the foot stalk of leaves; separating the foot stalk from leaves (சா.அக.).

[காம் + ஆய்.]

காம்பு *kāmbu,* பெ.(n.) 1. முலைக்காம்பு; nipple. 2. மயிர்க்காம்பு; hair-follicle. 3. இலைக்காம்பு; foot stalk.

காம்புக்கழலை *kāmbu-kaḻalai,* பெ.(n.) காம்பைப் போன்ற கட்டி; a long projecting tumour growing from a more or less marked pedicle or stem in the ear, nose, lower gut, female genital and sometimes in the throat - *Polypus or polypoid tumour* (சா.அக.).

[காம்பு + கழலை.]

காம்புகி *kāmpugi,* பெ.(n.) நாகப்பிரண்டை; a speicies of adamant creeper so called probably of its shape like the cobra (சா.அக.).

[காம்பு + அகி.]

காம்புரி *kāmburi,* பெ.(n.) மூங்கில்; bamboo (சா.அக.).

[காம்பு + உரி.]

காம்போதியார் *kāmbōdiyār,* பெ.(n.) கழகம் மருவிய புலவர்களில் ஒருவர்; the poet who belonged to last *šaṅgā*age (அபி.சி.ந்.).

காமக்கணிப்பசலையார் *kāma-k-kaṇi-p-pašalaiyār,* பெ.(n.) கழகக் காலப் பெண்பாற் புலவர்; poetess of sangama age.

இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாடல்கள் கிடைத்துள்ளன. மகளிர்க்குண்டாகும் பசலையைப் பாராட்டிப் பாடினமையின் இவர் பசலையாரெனப்பட்டார் போலும் (அபி.சிந்.).

காமக்களை *kāma-k-kaḷai,* பெ. (n.) பெண்ணின் காமத்தின் அளவாக கலவியில் குறி வழியாய் வெளிவரும் காமநீர்; a fluid discharge in a woman from orgasm in sexual intercourse. This is unknown in western science (சா.அக.).

[காமம் + களை.]

காமக்கிழத்தியர் *kāma-k-kiḻattiyar,* பெ.(n.) பலருக்கும் உரியவர் அன்றி ஒருவருக்கே உரிமை பூண்டு வரும் குலப்பரத்தையர்; female the patren comeray from a proskitute family.

[காமம் + கிழத்தி + ஆர்.]

காமக்கினி *kāmakkiṉi,* பெ.(n.) **காமத்தீ** பார்க்க; see *kāmatti* (செ.அக.).

[காமம் + அக்கினி. Skt. Agni > த. அக்கினி.]

காமக்கிரீடை *kāma-k-kirīḍai,* பெ.(n.) காம விளையாட்டு; amorous sport (சா.அக.).

[காமம் + கிரீடை. Skt. krīdai> த. கிரீடை.]

காமக்கொடியோன் *kāma-k-koḍiyōṉ,* பெ.(n.) ஒருவகைச் செய் நஞ்சு; a kind of arsenic (சா.அக.).

[காமம் + கொடியோன்.]

காமக்கொடுமை *kāma-k-koḍumai,* பெ.(n.) காமக்கேட்டால் கொடிய செயலைச் செய்கை; cruelty with sexual perversion - *Tyrannism* (சா.அக.).

[காமம் + கொடுமை.]

காமகக்கோபி *kāmaga-k-kōbi,* பெ.(n.) செடிவகை; tuscan jasmine - *Jasminum sambacflore manoraepleno* (சா.அக.).

[காமம் + கக்கோபி.]

காமகட்கதலம் *kāmagaṭga-talam,* பெ.(n.) தாழை; common screw-pine of India - *Pandanus odoratissimus* (சா.அக.).

காமகரம் *kāmagaram,* பெ.(n.) காமுகம் அதாவது காமத்தை உண்டாக்கும் மருந்து; any medicine that promotes sexual desire - *Aphrodisiac* (சா.அக.).

[காமம் + கரம்.]

காமகருக்கல் *kāma-karukkal,* பெ.(n.) மூன்று மாதத்திய கரு (பிண்டம்); foetus three month's old (சா.அக.).

[காமம் + கருக்கல்.]

காமகலை *kāma-kalai,* பெ.(n.) ஒரு விலைமகளின் பெயர்; name of a prostitute.

[காம + கலை.]

இவள் காசிக்குச் சென்று கங்கையில் குளித்து தம் நாட்டு அரசன் வீரசேனனுக்குக் காசியின் பெருமையைக் கூறி முத்தியடைந்தவள் (அபி.சிந்.).

காமகத்தூரி *kāma-kattūri,* பெ.(n.) திருநீற்றுப்பச்சை; love-musk - *Ocimum basilicum* (சா.அக.).

காமகாந்தம் *kāma-kāndam,* பெ.(n.) **காமுகம்** பார்க்க; see *kāmugam* (சா.அக.).

காமகாமின் *kāma-kāmiṉ,* பெ.(n.) காமத்தினால் ஏற்படும் பல வகை விருப்பங்கள்; various

desires or wishes following lust; the dictates of sexual passion (சா.அக.).

காமகாரம் *kāma-kāram,* பெ.(n.) பொறுமை; envy, jealousy impelled by selfishness (செ.அக.).

[காமம் + காரம்.]

காமகுணம் *kāma-kuṇam,* பெ.(n.) காமவெறி; passion (சா.அக.).

[காமம் + குணம்.]

காமகேசரி *kāma-kēśari,* பெ.(n.) மிகுதியான காமம்; excess of sexual desire (சா.அக.).

[காம + கேசரி.]

காமகேளி *kāma-kēḷi,* பெ.(n.) 1. காம விளையாட்டு; sexual perversion. 2. புணர்ச்சி; coition; copulation (சா.அக.).

[காமம் + கேளி.]

காமச்சுரம் *kāma-c-curam,* பெ.(n.) புணர்ச்சியின் பொருட்டு மிக்க விருப்பத்தினால் ஏற்படும் காய்ச்சல்; amative fever or fever-lust.

[காமம் + சுரம்.]

இதனால் மனக்கவலை, மயக்கம், உணவு வெறுப்பு, நெஞ்சு வலி, இளைப்பு முதலிய குணங்களுண்டாம். மேலும் ஆண்குறி, பெண்குறி, தொப்புள், முலை முதலிய இடங்களில் ஓர் உணர்ச்சியையும் சில பொழுதுகளில் உடம்பில் எரிச்சலையும் உண்டாக்கும் (சா.அக.).

காமசரம் *kāmacaram,* பெ.(n.) மாமரம்; mango tree - *Mangifera indica* (சா.அக.).

காமசனனி *kāma-śaṉaṉi,* பெ.(n.) வெற்றிலை; betel-pepper - *Piper betle* (சா.அக.).

[காமம் + சனனி.]

காமசாதி *kāma-śādi,* பெ.(n.) கொக்கோக நூலின்படி வகுக்கப்பட்ட நான்கு வகை பெண் இனங்கள்; the four classes of women as stated above divided according to their lust and enumerated in the Tamil erotic science of Kokkogamuni (சா.அக.).

[காமம் + சாதி.]

காமசாரம் *kāma-śāramm,* பெ.(n.) 1. கசகசாச் செடியின் பால்; opium, inspissated juice of *Papaver somniferum.* 2. மாமரம்; mango tree (சா.அக.).

[காமம் + சாரம்.]

காமசித்தங்கம் *kāma-cittaṅgam,* பெ.(n.) காமக்கவலையும், காமத்தினவும் உள்ளவன்; one whose mind and body is overcome with sexual passion (சா.அக.).

[காமம் + சித்தங்கம்.]

காமசுந்தரம் *kāma-ššundaram,* பெ.(n.) ஆவு (பசு); cow (சா.அக.).

[காமம் + சுந்தரம்.]

காமஞ்சுருக்கி *kāmañ-curukki,* பெ.(n.) காம விருப்பத்தைத் தணிக்கும் மருந்து; an agent that lessens the sexual impulse - *Antaphrodisiac* (சா.அக.).

[காமம் + சுருக்கி.]

காமஞ்சேர்குளத்தார் *kāmañcēr-kuḷattār,* பெ.(n.) கடை கழகக் காலத்துப் பெண்பாற் புலவர்; the women poet who belonged to the last ancient Śaṅgam (அபி.சிந்.).

காமஞாலத்தி *kāma-ñālatti,* பெ.(n.) 1. முள்மர வகை; jujube-tree - *Zizyphus jujuba.* 2. நீர்நிலை; water tank (சா.அக.).

[காமம் + ஞாலத்தி.]

காமணம் *kāmaṇam,* பெ.(n.) 1. சிறுமூலம்; small root. 2. திப்பிலி; long-pepper (சா.அக.).

[கா + மணம்.]

காமணி[1] *kāmaṇi,* பெ.(n.) நவச்சாரம் (யாழ்.அக.); nitre (செ.அக.).

[கா + மணி.]

காமணி[2] *kāmaṇi,* பெ.(n.) 1. எரியுப்பு (வெண்காரம்); ammonium chloride. 2. கையாந்தகரை; eclipse plant - *Eclypta prostrata* (சா.அக.).

[கா + மணி.]

காமத்தானம் *kama-t-tāṉam,* பெ.(n.) கொக்கோக நூலிற் கண்டபடி பெண்கள் உடம்பில் காமம் தங்கி நிற்பதாகக் கருதப்படும் சில இடங்கள்; certain parts of the female body the excitation of which caused by a male through impress of nails etc.

[காமம் + தானம்.]

இவை நகக் குறி முதலியவைகளினால் கூச்சம் ஏற்படுத்திக் காமப் பெருக்கை உண்டாக்கக் கூடிய இடங்கள் (சா.அக.).

காமத்திராசமூலம் *kāmattirašamūlam,* பெ.(n.) 1. கருப்புத் தக்காளிச் செடி; a black Takkali plant (un identified). 2. மிளகுத் தக்காளி; mad apple - *Solanum melongena* (சா.அக.).

[காமத்திராச + மூலம்.]

காமத்தேகம் *kāma-t-tēgam,* பெ.(n.) காம விருப்பத்தை மிகுதியாகக் கொண்ட உடல்; the body of a amorous person; the body of a person easily susceptitible to sexual passion (சா.அக.).

[காமம் + தேகம்.]

காமத்தேகி *kāmattēgi,* பெ.(n.) **காமவிகாரி** பார்க்க; see *kāma-vigāri* (சா.அக.).

காமத்தைக்களையப்பண்ணி *kāmattai-k-kaḷaiya-p-paṇṇi,* பெ.(n.) பூனைக்காலி; cowhage - *Mucana pruriens* (சா.அக.).

[காமத்தை + களையம் + பண்ணி.]

காமதகனமூர்த்தி *kāma-tagaṉa-mūrti,* பெ.(n.) மன்மதனை எரித்த திருவுரு; God šiva.

காமதம் *kāmadam,* பெ.(n.) நிலத்தில் விழுந்த பின் எடுத்துக் கொள்ளப்படும் ஆவின் (பசுவின்) சாணம் (சைவச.பொது.169, உரை); cow dung secured after it has fallen on the ground (செ.அக.).

[கா + மதம்.]

காமதனம் *kāmadaṉam,* பெ.(n.) ஊமத்தை; datura plant (சா.அக.).

காமதுரம் *kāmaduram,* பெ.(n.) 1. சாராயம்; arrack, liquor. 2. கள்ளு; toddy. 3. ஓர் இனிமை (மதுரம்)யான பருகம்; a sweet drink (சா.அக.).

[கா + மதுரம்.]

காமதூதி *kāma-tūdi,* பெ.(n.) 1. பெண்குயில்; the female of an Indian cuckoo. 2. பாதிரி மரம்; trumpet flower tree - *Bignonia suaveolens* (சா.அக.).

[காமம் + தூதி.]

காமதூதிகம் *kāma-tūdigam,* பெ.(n.) ஒரு பூடு; a plant - *Tiaridium indicum* (சா.அக.).

[காமம் + தூதிகம்.]

காமநாயகம் *kāma-nāyagam,* பெ.(n.) காமத்தை விளைவிக்கும் ஒரு வகை ஒட்டுந் தன்மை கொண்ட பிசின்; a resin supposed to promote sexual desire.

[காமம் + நாயகம்.]

இது பாரசிக நாட்டில் இருந்து வரும் ஒரு யுனானிச் சரக்கு (சா.அக.).

காமப்பயித்தியம் *kāma-p-payittiyam,* பெ.(n.) **காமவெறி** பார்க்க; see *kāma-veṟi* (சா.அக.).

காமப்பற்று *kāma-p-paṟṟu,* பெ.(n.) 1. காம விருப்பம்; sexual desire. 2. மனதின் தீக்குணங்களுள் ஒன்று; libidinous propensities. 3. உலகப்பற்று; wordly desire (சா.அக.).

[காமம் + பற்று.]

காமப்பித்தன் *kāma-p-pittaṉ,* பெ.(n.) புணர்ச்சியின் மீதே நினைவுள்ளவன்; one who is affected with erotomania - *Erotomaniac* (சா.அக.).

[காமம் + பித்தன்.]

காமப்பிராந்தி *kāma-p-pirāndi,* பெ.(n.) 1. காமப்பித்து; emotional insanity characterised by exhibitions of extravagant affection for persons of the opposite sex or of excessive sexual desire - *Erotomania.* 2. காமமயக்கம்; delusion in love (சா.அக.).

[காமம்+ பிராந்தி.]

காமப்பிரியகாரி *kāma-p-piriyakāri,* பெ.(n.) அழுக்கிறா; burr wood - *Physalis flexyosa* (சா.அக.).

[காமம் + பிரியகாரி.]

காமப்புரட்டு *kāma/-p-puraṭṭu,* பெ.(n.) காம நுகர்ச்சியின் மாறுபாடு; disorder of the sexual impulse - *Erotopathy* (சா.அக.).

[காமம் + புரட்டு.]

காமபலம் *kāma-balam,* பெ.(n.) 1. காம விருப்பம்; sexual desire. 2. காமத்தை விளைவிக்கும் ஒரு வகை மாம்பழம்; a species of mango-fruit promoting sexual passion. 3. காமத்தை உண்டாக்கும் பழம்; any fruit tending to increase sexual passion (சா.அக.).

*[காமம் + பலம். **Skt.** palam > த. பலம்.]*

காமபலை *kāmapalai,* பெ.(n.) மாம்பழம்; mango known as love-fruit - *Mangifera indica* (சா.அக.).

[காமம் + பலை.]

காமபீடம் *kāma-pīḍam,* பெ.(n.) மனிதர்கள் அடைய விரும்பும் வீடு பேற்றினை அளிக்கக் கூடிய வல்லமையுள்ள காஞ்சிபுர நகரம்; the place where one's desires are all fulfilled, conjeevaram. *"முத்திபோகம்..... கொடுத்திடுந் தன்மையற் காமபீடமென்று" (கந்தபு. திருநகரப்.70)* (செ.அக.).

*[**Skt.** kāma + பீடம்.]*

காமபீடிதம் *kāma-pīḍidam,* பெ.(n.) காம வேதனை; torment of plant (சா.அக.).

[காமம் + பீடிதம்.]

காமபூதம் *kāma-pūdam,* பெ. (n.) 1. மக்களுக்குக் கனவில் மிகுதியாகக் காமவிருப்பத்தை மூட்டும் அரமகள் (மோகினி) என்னும் ஒரு பெண் பூதம்; a female demon known as mohini exciting excessive sexual desire in dreams of men or women. 2. தான் கருத்து வைத்த தலைவன் அல்லது தலைவியை நினைவிற் காணல்; the appearance of her lover in a woman's dream or of his love in a man's dream; the vision of a lover in dream. 3. காமத்தால் ஏற்படும் ஒரு நோய்; love-sickness (சா.அக.).

[காமம் + பூதம்.]

காமபோகம் *kāma-bōgam,* பெ.(n.) காம நுகர்ச்சி; gratification of lust of sexual desire (சா.அக.).

[காமம் + போகம்.]

காமபோசம் *kāma-pōšam,* பெ.(n.) 1. கமேலா மாவு மரம்; kamela tree - *Rottleria tinctoria.* 2. ஓரூர்; Cambodia (சா.அக.).

[காமம் + போசம்.]

காமபோகி *kāma-bōgi,* பெ.(n.) குன்றி (யாழ்.அக.); crab's eye (செ.அக.).

காமமயக்கம் *kāma-mayakkam,* பெ.(n.) காமவெறி; delusion in love; infatuation (சா.அக.).

[காமம் + மயக்கம்.]

காமமுள்ளான் *kāmamuḷḷāṉ,* பெ.(n.) காம விருப்பங் கொண்டவன்; an amorous man; a lascivious person (சா.அக.).

[காமம் + உள்ளான்.]

காமமுற்றவள் *kāmamuṟṟavaḷ,* பெ.(n.) விருப்பம் கொண்டவள்; an amorous woman (சா.அக.).

[காமம் + உற்றவள்.]

காமமூடன் *kāma-mūḍaṉ,* பெ. (n.) **காமப்புரட்டன்** பார்க்க; see *kāma-p-puraṭṭaṉ* (சா.அக.).

காமமோகம் *kāma-mōgam,* பெ.(n.) காமத்தினால் உண்டாகும் மயக்கம் (பிரமை); infatuation through lust (சா.அக.).

[காமம் + மோகம்.]

காமர் *kāmar,* பெ.(n.) காமுகர்; lascivious persons. *"கருங்கடைக் கண்ணயில் காமர்நெஞ்சினை யுருங்குவ" (கம்பரா. நகரப்.46)* (செ.அக.).

காமர்த்தகாவிரணம்போக்கி *kāmarttagā viraṇam-pōkki,* பெ.(n.) **காமரீகம்** பார்க்க; see *kāmarīgam* (சா.அக.).

காமரசம் *kāma-rašam,* பெ.(n.) 1. அகத்தியர் மருத்துவ நூலில் சொல்லியுள்ள ஒரு மருந்து; an aphrodisiac preparation described in Agastiyar's treatise on medicine. 2. மாமரம்; mango tree. 3. காம இன்பம்; sexual enjoyment (சா.அக.).

[காமம் + ரசம்.]

காமரசாகிகம் *kāma-rašāgigam,* பெ.(n.) பேரீந்து; wild date fruit - *Phoenix dactylifera* (சா.அக.).

[காமம் + ரசாகிகம்.]

காமரசேபிகம் *kāma-rašēbigam,* பெ.(n.) நத்தைச் சூரி; button-weed - *Spermacoci hispida* (சா.அக.).

[காமம் + ரசேபிகம்.]

காமரதிவினோதம் *kāma-radi-viṉōdam,* பெ.(n.) 1. சித்தினி இனப் பெண்; one of the 4 classes of women divided according to lust, *Furoruterimus.* 2. அழகி (லீலாவதி); a femal affected with an insane sexual desire - *Nymphomaniac.* 3. மகளிர் கலவி விளையாட்டு; wanton sport of women (சா.அக.).

[காமன் + ரதி + வினோதம்.]

காமரிசி *kāmariši,* பெ.(n.) நெருஞ்சில்; caltrops - *Tribulus terrestris* (சா.அக.).

காமரீகம் *kāmarīgam,* பெ.(n.) புல்லுருவி; Indian mistletoe - *Loranthus elasticus alias L. Pentandrus* (சா.அக.).

[காமம் – காமரீகம்]

காமலதை *kāmaladai,* பெ.(n.) 1. ஆண்குறி; penis. 2. காமவல்லி; love-creeper - *Ipomaeaquamoclit* (சா.அக.).

காமலின் *kāmaliṉ,* பெ.(n.) காமாலையினால் தாக்கப்பட்டவன்; one suffering from jaundice (சா.அக.).

காமவதி *kāmavadi,* பெ.(n.) மரமஞ்சள்; tree turmeric - *Coscinium fenestratum* (சா.அக.).

[காமம் = காமவதி.]

காமவல்லபம் *kāma-vallabam,* பெ.(n.) மாமரம்; mango tree (சா.அக.).

[காமம் + வல்லபம்.]

காமவலை *kāma-valai,* பெ.(n.) காமம் கொள்ளும்படிச் செய்யும் சூழ்ச்சி; a device by which one is entangled or ensnared in lust (சா.அக.).

[காமம் + வலை.]

காமவலைவீசல் *kāma-valai-višal,* பெ.(n.) காமத்திற்கு உட்படுத்துகை அதாவது காம

விருப்பத்தை உண்டாக்குகை; inducing of sexual passion by a woman through cunning devices; ensnaring a man to sexual delights of women (சா.அக.).

[காமம் + வலை + வீசல்.]

காமவளை *kāma-vaḷai,* பெ.(n.) பெண்குறி; orifice of the vagina (சா.அக.).

[காமம் + வளை.]

காமவிகாரம் *kāma-vigāram,* பெ.(n.) காமத்தினால் உண்டாகக் கூடிய வேறுபாடு; the physical and mental changes brought about by intense love. *"வெம்மைக் காமவிகாரம் பெறுதியால்" (உபதேசகா.அயமுகி.72) (செ.அக.).*

[Skt. kāma + விகாரம்.]

காமவிகாரி *kāma-vigāri,* பெ.(n.) காமக் குறும்புடையோன்; a person with disordered sexual impulse - *Erotopath* (சா.அக.).

[காமம் + விகாரி.]

காமவிச்சை *kāmaviccai,* பெ.(n.) காமவிருப்பம்; sexual desire; venereal oestrum (சா.அக.).

[காமம் + இச்சை.]

காமவிச்சையுள்ள *kāmaviccai-y-uḷḷa,* பெ.(n.) காமத்தனமுள்ள; salacious, lecherous (சா.அக.).

[காமம் + இச்சையுள்ள.]

காமவிருத்தி *kāma-virutti,* பெ.(n.) காம மிகுதி; increase of sexual passion (சா.அக.).

[காமம் + விருத்தி.]

காமவிருந்தம் *kāma-virundam,* பெ.(n.) பாதிரிப்பூ; trumpet flower - *Bignonia suaveolens* (சா.அக.).

[காமம் + விருந்தம்.]

காமவெறுப்பு *kāma-veṟuppu,* பெ.(n.) காம விருப்பமின்மை; morbid dislike for sexual love - *Erotophobia* (சா.அக.).

[காமம் + வெறுப்பு.]

காமன்கோட்டம் *kāmaṉ-kōṭṭam,* பெ.(n.) காமன் கோவில்; the temple of *kāmaṉ* (சா.அக.).

[காமன் + கோட்டம்.]

இராசகிரியத்தின் புறநகரில் உள்ள சோலையில் இக்கோவில் இருந்தது. இதில் தலைவன், தலைவி இருத்தற்குரிய மணவறையும் தோட்டமும் இருந்தன. ஏழு நாட்கள் இங்கு விழா நடந்தது. பெருங்கதை உதயணன் பதுமாவதியை முதலில் கண்டு களித்தது இக்கோட்டத்தின் வாயிலிலேதான் (அபி.சிந்.)

காமாக்கினி *kāmākkiṉi,* பெ.(n.) காமமாகிய நெருப்பு; venereal principle manifesting itself in the form of sexual desire, one of three *uyir-t-tī* (சா.அக.).

[காம + Skt. அக்கினி → காமக்கினி → காமாக்கினி.]

காமாகமனம் *kāmāgamaṉam,* பெ.(n.) காமத்தின் வழியே நடக்காமல் அவ்விருப்பத்தை வேறு வழியாக மாற்றுகை; the process of deviating sexual motive powers from their sexual aims or objects to new aims other than sexual - *Sublimation* (சா.அக.).

[காமம் + ஆகமனம்.]

காமாங்கம் *kāmāṅgam,* பெ.(n.) மாமரம்; mango tree (சா.அக.).

[காம + அங்கம்.]

காமாச்சி *kāmācci,* பெ.(n.) காவட்டம்புல்; citronella grass - *Andropogon nardus.*

இது 3–6 அடி உயரம் இருக்கும். மணமுள்ளது; சிறிது கசப்புத் தன்மை கொண்ட

இது வயிற்றுக் கோளாறுகளைப் போக்கும் (சா.அக.).

காமாசோமாவென்று *kāmāšōmāvenṟu,* வி.அ.(adv.) திருத்தமாக இல்லாமல்; ஒழுங்கானபடி இல்லாமல்; in a haphazard manner. *போதிய பணம் இல்லாததால் காமாசோமாவென்று முடித்துவிட்டார்*

[காமா + சோமா + என்று.]

காமாதிகாரம் *kāmādikāram,* பெ.(n.) காமத்தின் தூண்டுகை; influence of sexual passion or desire (சா.அக.).

[காம + அதிகாரம்.]

காமாதுரம் *kāmāduram,* பெ.(n.) காம விருப்பம்; voluptuousness (சா.அக.).

காமாந்தம் *kāmāndam,* பெ.(n.) 1. குயில்; Indian cuckoo. 2. காமக்குருடு; blind with lust; blinded through love (சா.அக.).

காமாயு *kāmāyu,* பெ.(n.) கருடன்; brahminy kite (சா.அக.).

காமாலைநாசனி *kāmālai-nāšaṉi,* பெ.(n.) காமாலையைப் போக்கும் ஒரு வகை மூலிகை (இருள் விடு செடி); a plant capable of curing jaundice (சா.அக.).

[காமாலை + நாசனி.]

காமாலைநிவர்த்தி *kāmālai-nivartti,* பெ.(n.) கீழாநெல்லி; Indian annual phyllanthus - *Phyllanthus niruri* (சா.அக.).

[காமாலை + நிவர்த்தி.]

காமாலைமகோதரம் *kāmālai-magōdaram,* பெ.(n.) நடுக்கல் காய்ச்சல் கண்டு உடம்புலர்ந்து, புறங்கால் வீங்கி, தலைவலி காணும் ஒரு வகைக் காமாலை; dropsy attended with jaundice (சா.அக.).

[காமாலை + மகோதரம்.]

காமாலையத்திசுரநாசினி *kāmālai-y-atti-šura-nāšiṉi,* பெ.(n.) திருநாமப்பாலை; oval-leaved china root - *Smilar macrophylla* (சா.அக.).

[காமாலை + அத்தி + சுரம் + நாசினி.]

காமாலையத்திசுரம் *kāmālai-y-atti-šuram,* பெ.(n.) காமாலை நோயினால் ஏற்படும் எலும்பைப் பற்றிய ஒரு காய்ச்சல்; a kind of fever affecting the bones of a patient suffering from jaundice (சா.அக.).

[காமாலை + அத்தி + சுரம்.]

காமாலைவீக்கம் *kāmālai-vīkkam,* பெ.(n.) காமாலை நோயினால் ஏற்படும் வீக்கம்; swelling due to jaundice (சா.அக.).

[காமாலை + வீக்கம்.]

காமாவேசம் *kāmā-vēšam,* பெ.(n.) காமக்கோலம்; ecstatic frenzy through sexual desire - *Nympholepsy* (சா.அக.).

[காம + ஆவேசம்.]

காமி *kāmi,* பெ.(n.) 1. வழலையுப்பு; alchemical salt. 2. அதிகக் காமம் உடைய பெண்; a voluptuous woman (சா.அக.).

[காமம் – காமி.]

காமியம் *kāmiyam,* பெ.(n.) 1. கருதிச் செய்வது; inference to be done. 2. நேர்ந்து செய்வது; in sight to be done. *"தம்முடைய இட்டகாமியம் முடிகைக்கு இவ்வூர் திருப்புறத்துறை மஹாதேவர்க்கு தம்முடைய காணியாக நிலம் – குடுத்தமையின்" (தெ.இ.கல்.தொ.7, கல்.496) (கல்.அக.).*

[காமம் – காமியம்.]

காமியகம் *kāmiyagam,* பெ.(n.) நற்பேறு பெற்ற இடம்; sacred place (அபி.சிந்.).

[காமி + அகம்.]

காமியகுரு *kāmiya-guru,* பெ.(n.) சிவ பத்தியையும், அறத்தையும் அறிவுறுத்தக் கூடிய குரு; preceptor who inculcates devotion and righteousness.

"அறத்தைப் போதகஞ்செய் திருமையினு மின்பமருள்பவனே..... காமியகுரு" (தேவா.சு.16). (செ.அக.).

[காமியம் + குரு.]

காமிருகம் *kāmirugam,* பெ.(n.) மான்மதம்; musk - *Moschus moschiferus* (சா.அக.).

[கா + மிருகம்.]

காமிலம் *kāmilam,* பெ.(n.) ஒரு நோய்; an unknown disease (சா.அக.).

காமினம் *kāminam,* பெ.(n.) புணர்ச்சி செய்கை; having sexual intercourse (சா.அக.).

காமினிபோகம் *kāmini-bōgam,* பெ.(n.) சித்தினி சாதிப் பெண்ணோடு புரியும் கலவி; sexual enjoyment with a voluptuous woman (சா.அக.).

[காமினி + போகம்.]

காமினிபோகரோகணி *kāmini-bōga-rōgani,* பெ.(n.) புல்லுருவி; mistletoe - *Loranthuselasticus* (சா.அக.).

[காமினி + போகம் + ரோகணி.]

காமுகக்கள்ளன் *kāmuga-k-kallan,* பெ.(n.) எருமை; Buffalo (சா.அக.).

[காமுகம் + கள்ளன்.]

காமுகக்காசம் *kāmuga-k-kāšam,* பெ.(n.) அதிகப் புணர்ச்சியினால் உண்டாகும் கோழை (காசம்); sexual asthma (சா.அக.).

[காமுகம் + காசம்.]

காமுகம் *kāmugam,* பெ.(n.) 1. பூங் கொன்றை; cassia flower - *Cassia fistula.* 2. அசோக மரம்; asoka tree - *Jonesia Asoka.* 3. குறிஞ்சா; spring creeper - *Gaerthera racemosa.* 4. பெட்டையை விட்டுப் பிரியாத புறா; a male pigeon inseparable from its mate (சா.அக.).

[காமம் - காமுகம்.]

காமுகன் *kāmugan,* பெ.(n.) காமவெறி கொண்டவன்; lustful man.

[காமம் - காமுகன்.]

காமுகி *kāmugi,* பெ.(n.) காமமுடையவள்; a lustful woman (சா.அக.).

காமுறல் *kāmural,* பெ.(n.) மோகமடைகை; lustfulness (சா.அக.).

[காமம் + உறல்.]

காமுனி *kāmuni,* பெ.(n.) கண்ணனுக்குப் பூணூல் அணிவித்தவன்; initiatory ceremony intended to God *kannā* (அபி.சிந்.).

காமூரி *kāmūri,* பெ.(n.) 1. காமவிருப்பம்; sexual desiïllre. 2. *சிற்றின்பம்*; sexual pleasure (சா.அக.).

காமேதகம் *kāmēdagam,* பெ.(n.) இந்திர கோபப்பூச்சி; a scarlet insect of velvetty appearance.

[காமம் - காமேதகம்.]

இதற்குப் பட்டுப் பூச்சி என்றும் பெயர். இது ஆண்டில் முதல் மழை பெய்தவுடன் திறந்த வெளிகளில் காணப்படும் (சா.அக.).

காமோத்தீபகம் *kāmō-t-tīpagam,* பெ.(n.) காமத்தைத் தூண்டும் பொருள்கள் (பண்டங்கள்); substances promoting sexual desire; any drug that aroses sexual instinct - *Aphrodisiac* (சா.அக.).

[காமம் - உத்தீபகம்.]

காமோதகம் *kāmōdagam,* பெ.(n.) 1. காமநீர்; seminal discharge in a male. 2. **காமக்களை** பார்க்க; see *kāma-k-kalai* (சா.அக.).

[காமம் - உதகம்.]

காமோபாதை *kāmōpādai,* பெ.(n.) காமநோய்; love sickness (சா.அக.).

[காமம் + Skt. உபாதை.]

காய்-த்தல் *kāy-*, செ.கு.வி.(v.i.) 1. மரத்தில் காய்விடல்; bearing fruit. 2. முதிர்தல்; nmaturing as in *kadir-vidal* as corn. 3. பரு அல்லது கழலை உண்டாதல்; appearance or formation of warts, tumours or other hard eruptions on the body as in cases of small-pox or syphilis (சா.அக.).

காய்-தல் *kāy-*, செ.கு.வி.(v.i.) 1. புண்ணாதல்; healing as of a wound. 2. மெலிதல்; becoming emaciated. 3. காய்ச்சல் காய்தல்; raging with fever; being feverish. 4. உலர்தல்; drying. 5. பட்டினியாய் இருத்தல்; starving. 6. சூடேறல்; getting heated. 7. பழுக்கக் காய்தல்; getting red-hot. 8. உடம்பு சுடுதல்; growing warm. as of body in temperature. 9. பசையறல்; as in *udadukāydal*, parching as of lips or the mouth. 10. களைப்புறல்; getting exhausted. 11. அழித்தல்; killing. 12. வெட்டுதல்; cutting. 13. காய்ச்சலுறல்; getting feverish. 14. வாடல்; withering (சா.அக.).

காய்க்குமரம் *kāykku-maram*, பெ.(n.) காய் காய்க்கும் மரம்; tree bearing fruit as opposed to *kāyā-maram* (சா.அக.).

[காய்க்கும் + மரம்.]

காய்க்குள்பாடாணங்கட்டி *kāykkul-pādānan-katti*, பெ.(n.) பேய்க்குமட்டி; bitter apple - *Cucumis colocynthis* (சா.அக.).

[காய்க்குள் + பாடாணம் + கட்டி.]

காய்ச்சகட்டி *kāyccakatti*, பெ.(n.) 1. காசுக் கட்டி; Indian catechu. 2. காய்ச்சலால் வயிற்றுள் காணுங் ஈரற் கட்டி; enlargement of the spleen from fever. 3. காய்ச்சி எடுத்தக் கட்டி; lump of any substance derived from boiling (சா.அக.).

[காய்ச்சு + கட்டி.]

காய்ச்சல் *kāyccal*, பெ.(n.) 1. பசி; hunger as in *vayirru-k-kāyccal*. 2. வறட்சிக் காற்று; dry weather. 3. காய்ச்சுதல்; boiling; heating (சா.அக.).

[காய் →காய்ச்சல்.]

காய்ச்சற்காரி *kāyccar-kāri*, பெ.(n.) காய்ச்சலால் தாக்குண்ட பெண்; a woman who is suffering from fever (சா.அக.).

[காய்ச்சல் – காய்ச்சற்காரி. காரி உடைமைப் பொருள் பெண்பாலீறு.]

காய்ச்சற்பாடாணம் *kāyccār-pādānam*, பெ.(n.) பிறவி நஞ்சு (பாஷாண) வகைகளுள் ஒன்று; a mineral poison (செ.அக.).

[காய்ச்சல் + பாடாணம்]

காய்ச்சற்பட்டை *kāyccar-pattai*, பெ.(n.) 1. பூநாறிப்பட்டை; yellow-flowered resin seed - *Pittosporum tetraspermum*. 2. உலர்ந்த பட்டை; dried bark. 3. சுரப்பட்டை; chincona bark (சா.அக.).

[காய்ச்சல் + பட்டை.]

காய்ச்சாற்றல் *kāy-c-cārral*, பெ.(n.) கொதிக்க வைத்துப் பிறகு ஆற்றுகை; to cool after boiling (சா.அக.).

[காய் + ஆற்றல்.]

காய்ச்சாற்றியநீர் *kāyccārriya-nīr*, பெ.(n.) கொதிக்க வைத்துப் பிறகு ஆற வைத்த நீர்; water boiled and cooled (சா.அக.).

[காய்ச்சி + ஆற்றிய + நீர்.]

காயச்சிப்பந்தி *kāya-c-cippandi*, பெ.(n.) நிலையான பதவியில் இருப்பவர்; permanent establishment; holder of permenant post (செ.அக.).

[U.qāim> த. காயம்.]

காய்ச்சிறக்கல் *kāy-c-ciṟakkal*, பெ.(n.) 1. வாலையில் இட்டு இறக்குகை; distilling. 2. நெருப்பில் கொதிக்க வைத்து வடிகட்டுகை; filtering after boiling (சா.அக.).

[காய்ச்சி + இறக்கல்.]

காய்ச்சுகை *kāy-c-cugai*, பெ.(n.) 1. சுடுகை; the operation of heating - *Calefaction.* 2. கொதிக்க வைக்கை; the process of vapouraisation by bubble formation (சா.அக.).

[காய் – காய்ச்சுகை]

காயசித்திச்சி *kāya-šitticci*, பெ.(n.) 1. சிறு கீரை; pig's greens - *Amaranthus campestris.* 2. பொன்னாங்காணி; mari-gold vebesina - *Illecebrum sessile.* 3. பெரு மலர்க்கொன்றை; a species of cassia with large flowers (unidentified) (சா.அக.).

[காயம் + சித்திச்சி.]

காயசித்திச்சுண்ணம் *kāya-citti-c-cuṇṇam*, பெ. (n.) கருப்பூரசிலாசத்து; crystallized or foliated gypsum used as a medicine (செ.அக.).

[காயம் + சுத்தி + சுண்ணம்]

காயசித்தியானோன் *kāya-šittiyāṉōṉ*, பெ. (n.) 1. நீண்ட காலம் உடல் நீடித்திருக்கக் கூடியவன்; one who has attained the power of *kāya-citti.* 2. வைப்புப் பாடாண வகை; a prepared arsenic (செ.அக.).

[காயம் + சித்தி + ஆனோன்.]

காய்ச்சுண்டை *kāy-c-cuṇḍai*, பெ.(n.) **காசுக்கட்டி** பார்க்க; see *kāšu-k-kuṭṭi* (செ.அக.).

காய்ச்சுப்பால் *kāyccu-p-pāl*, பெ.(n.) முப்பால்களுள் ஒன்றான, காய்ச்சிய பால் (யாழ்.அக.); boiled milk, one of *mu-p-pāl* (செ.அக.).

[காய்ச்சு + பால்.]

காய்ச்சுபால் *kāyccu-pāl*, பெ.(n.) கொதிக்க வைத்த பால்; boiled milk (சா.அக.).

[காய்ச்சு + பால்.]

காய்ச்சுமுறை *kāyccu-muṟai*, பெ.(n.) காய்ச்சி வடிக்கும் முறை; the process of boiling down decoctions, medicated oils, syrups etc.

[காய்ச்சும் + முறை.]

எண்ணெய் முதலியவைகளை எட்டிலொன்று. ஆறில் ஒன்று அல்லது நான்கில் ஒன்றாக தமிழ் நூல் முறையிற் சொல்லியபடி காய்ச்சும் முறை (சா.அக.).

காய்ச்சுவச்சிரம் *kāyccu-vacciram*, பெ.(n.) காய்ச்சித் தயாரித்த பிசின் (வச்சிரம்); glue obtained by boiling from certain parts of animalsï Gelatine (சா.அக.).

[காய்ச்சு + வச்சிரம். வயிரம் → வசிரம் → வச்சிரம்.]

காயம்பேரிஜ் *kāyam-pērij*, பெ.(n.) **காயந் தீர்வை** பார்க்க; see *kāyan-tīrvai* (செ.அக.).

[U. qāim-beriz > த. காயம்.]

காய்ஞ்சிப்போ-தல் *kāyñji-p-pō-*, செ.கு.வி. (v.i.) உலரல்; growing dry; getting dried (சா.அக.).

[காய்ஞ்சி + போ-.]

காய்ஞ்சொறி *kāy-ñ-coṟi*, பெ.(n.) செந்தொட்டி; scorpion leaf - *Tragia involucrata* (சா.அக.).

[காய் + சொறி.]

இது ஒரு முறுக்கேறிய கொடி. இதன் இலைகள் முசுமுசுப்பாயிருக்கும். இதன் சுனை உடம்பில் பட்டால் கடுக்கும். பூக்கள் சிறிது பச்சை

நிறக்கொத்துகளாக இருக்கும். சிலவேளை ஒரே காம்பில் நிறைய உண்டு. மேல் பூ ஆண், அடிப்பூ பெண். ஆண்டுதோறும் பூக்கும். இதன் சிறு வேருக்கு எவ்வித மணமும், சுவையும் இராது.

இதன் வேர் மேகத்திற்கு நல்லது. இதைக் காய்ச்சிக் குடிக்க மூத்திரக் கட்டை உடைத்து நீரைப் பிரிக்கும். இதன் சாற்றை ஆவின் பாலில் சர்க்கரை இட்டுக் கொள்ள காய்ச்சல், சொறி, சிறங்கு இலைகள் போம். இதன் காயை நசுக்கிக் கட்டிகளுக்கு வைத்துக் கட்ட பழுத்து உடையும் (சா.அக.).

காய்ந்ததிராட்சை *kāynda-tirāṭcai,* பெ.(n.) 1. உலர்ந்த கொடி முந்திரி; dried grape. 2. பாகில் இட்ட கொடி முந்திரி; raisin (சா.அக.).

[காய்ந்த + திராட்சை.]

காய்ந்தபேரீந்து *kāynda-pērīndu,* பெ.(n.) கச்சூரம்; dried date-fruit (சா.அக.).

[காய்ந்த + பேரீந்து.]

காய்நீர்க்கயம் *kāy-nīr-k-kayam,* பெ.(n.) வெந்நீர் ஊற்று; hot water spring (சா.அக.).

[காய் + நீர் + கயம்.]

காய்நீர்விரணம் *kāy-nīr-viraṇam,* பெ.(n.) வெந்நீரினால் ஏற்பட்ட சூட்டுப்புண் (விரணம்); a burn or injury caused by bot water or other hot liquid, *Scald* (சா.அக.).

*[காய் + நீர் + **Skt.** விரணம்.]*

காய்ப்படாமை *kāy-p-paḍāmai,* பெ.(n.) காய்க்காமை; not yielding fruit; unproductiveness (சா.அக.).

[காய் + படாமை.]

காய்ப்பரு *kāy-p-paru,* பெ.(n.) 1. பழுக்காத கட்டி; unripe boil. 2. கடினப் பரு; any horny growth such as a wart, *Keratosis.* 3. காய்ப்பு; callosity (சா.அக.).

[காய் + பரு.]

காய்பலம் *kāy-balam,* பெ.(n.) 1. தான்றி; a tree, devil's abode - *Terminalia belerica.* 2. தேக்கு; teak - *Tectona grandis* (சா.அக.).

[காய் + பலம்.]

காய்புட்டியெண்ணெய் *kāypuṭṭi-y-eṇṇey,* பெ.(n.) கையாப்புடை இலையினின்று செய்யும் எண்ணெய்; medicated and distilled oil extracted from leaves - *Cajuputi oleum oil* (சா.அக.).

[கையா + புடை + தைலம்.]

இது மிகத் தெளிவாகவும், துலக்கமுள்ளதாகவும், பச்சை நிறமாகவும் உள்ளது. எளிதில் ஆவியாய்ப் போகக் கூடியது. கற்பூரத்தைப் போல் மணமாயிருக்கும். இதை மருந்தாக உள்ளுக்குக் கொடுக்கச் சுறுசுறுப்பை உண்டாக்கும். வியர்வையைப் பிறப்பிக்கும். பூசு மருந்தாகப் பயன்படுத்தத் தோல் சிவக்கும். காய்ச்சல், பாரிசவாயு, நரம்பிசிவு, வாதவலி குணமாகும். வாந்தி பேதிக்குச் சிறந்த மருந்தாகும். வயிற்றுவலி, வயிற்றிசிவு, சூதக சன்னி முதலியவை போம் (சா.அக.).

காய்விடு-தல் *kāy-viḍu-,* பெ.(n.) சிறுவர்கள் ஒருவரோடொருவர் பேசாத வகையில் நட்பை முறித்தல்; of children break friendship. *மிட்டாய் தராவிட்டால் உனோடு காய்விட்டு விடுவேன் என்றான் (க்ரியா.),*

[காய் + விடு-தல்.]

காய்வெட்டி *kāy-veṭṭi,* பெ.(n.) கழலை, பரு முதலிய சதை வளர்த்தியை அறுக்கப் பயன்படுத்தும் கத்தி; a knife or instrument for removing tumours, warts etc. (சா.அக.).

[காய் + வெட்டி.]

காயக்காரம் *kāya-k-kāram,* பெ.(n.) 1. உடம்பைச் சுட்டுக் கொப்புளிக்கச் செய்யும் காரமருந்து; blistering agent. 2. சதையைச் சுட்டுப் புண்ணாக்கும் ஒரு கார மருந்து; a substance which burns or corrodes the

skin such as lunar caustic. 3. காயமருந்து; any corrosive substance, as an acid (சா.அக.).

[காயம் + காரம்.]

காயக்குத்தகை *kāya-k-kuttagai,* பெ.(n.) நிலையான குத்தகை ஏற்பாடு; permanent lease (செ.அக.).

[U.qāim > த. காயம்.]

காயங்கரை *kāyaṅkarai,* பெ.(n.) ஓர் ஆறு; a river.

[காயம் + கரை.]

இதன் கரையில் பிரமதருமன் எனும் புத்த முனிவன் தவம் செய்து கொண்டிருந்தான்.

காயங்கள்கதிர்போலாக்கி *kāyaṅgaḷ-kadir-pōlākki,* பெ.(n.) 1. புளிச்சிறு கீரை; sour-sorrel - *Oxalis coniculata.* 2. உடம்பை இளைக்கச் செய்யும் மருந்து; any medicine or agent reducing the corpulency or the bulk of the human body (சா.அக.).

[காயங்கள் + கதிர் + போலாக்கி.]

காயச்சுரம் *kāya-c-curam,* பெ.(n.) காயம், சூட்டுப்புண் (விரணம்) இவைகளினால் ஏற்படும் காய்ச்சல்; a fever which follows a wound or injury - *Traumatic fever* (சா.அக.).

[காயம் + சுரம்.]

காய்சண்டிகை *kāya-caṇḍigai,* பெ.(n.) தேவர் உலகப் பெண்; a celestial woman.

இவள் தன் கணவனுடன் பொதியமலையின் வளம் காணச் சென்றாள். அங்கு விருச்சிகர் என்னும் முனிவர் பொருட்டு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பழுத்து அவர் பசியைப் பன்னிரண்டு ஆண்டு வரை போக்கவல்ல நாவற்கனியைக் காலால் சிதைத்துவிட்டாள். எனவே அம்முனிவர் கொடுத்த சாவிப்பால் (சாபம்) யானைத்தீ என்னும் கொடிய பசி நோயால் வருந்திய இவள் மணிமேகலை தந்த உணவால் பசி நீங்கினாள். பின் தன் உலகம் செல்கையில் விந்தமலை காக்கும் விந்தாகடிகையால் இழுக்கப்பட்டு அவள் வயிற்றில் அடங்கினாள் (அபி.சிந்.).

காயசலம் *kāya-šalam,* பெ.(n.) 1. சிறுநீர்; urine. 2. உடம்பினின்று கசியும் வியர்வை நீர்; perspired water (சா.அக.).

[காயம் + சலம்.]

காயசிகிச்சை *kāya-šigiccai,* பெ.(n.) 1. மருந்துகளை வைத்துச் செய்யும் மருத்துவம்; practice of physic by pure medicine. 2. உடம்பையடுத்த காய்ச்சல், நீரழிவு, ஈழை நோய் முதலியவைகளுக்கு மருந்து கொடுப்பது; treatment of bodily diseases such as fever, diabets, consumption, diarrhoea etc. with the aid of medicine. 3. உடம்பைப் பற்றி உண்டாகும் காற்று (வாதம்) பித்தம், ஈழை நோய்களையும், அவற்றிற்கு உண்டான மருத்துவ முறைகளையும் பற்றிக் கூறும் நூல்; a medical treatise bearing on all diseases caused by the three humours of the system and the treatment relating to each of them (சா.அக.).

[காயம் + Skt. சிகிச்சை.]

காயசிட்சை *kāya-šiṭcai,* பெ.(n.) **காய சிகிச்சை** பார்க்க; see *kāya-šigiccai* (சா.அக.).

[காயம் + Skt. சிட்சை.]

காயசித்திகணத்திலாக்கி *kāyašitti-kaṇattilākki,* பெ. (n.) 1. சதுகமரம்; an unknown tree said to be useful in rejuvenation. 2. உடம்பை ஒரு நொடிப்பொழுதில் கெட்டிப்படுத்தும் மருந்து; any medicine or agent tending to

rejuvenate the human system instantaneously (சா.அக.).

[காயம் + சித்தி + கணத்தில் + ஆக்கு.]

காயசித்திநிறத்தி *kāya-šitti-niṟatti,* பெ.(n.) உடலை இளமையாக்கும் ஒரு மூலிகை (ஆத்திமல்லிகை); a herb used in rojuvenation (சா.அக.).

[காயம் + சித்தி + நிறத்தி.]

காயசித்திமூலிகை *kāyašitti-mūligai,* பெ.(n.) உடம்பை வலிவடையச் செய்யும் பச்சிலை மருந்து; a rejuvenating herb (சா.அக.).

[காயம் + சித்தி + மூலிகை.]

காயசித்தியடை-தல் *kāyašitti-y-aḍai-,* செ.கு.வி.(v.i.) உடம்பை நிலைக்கச் செய்தல்; getting the body firmly established (சா.அக.).

[காயம் + சித்தி + அடை.]

காயசித்தியாக்கி *kāyašitti-y-ākki,* பெ.(n.) 1. சேங்கொட்டை; dhoby's nut - *Semecarpus anacardium.* 2. உடலை நீண்ட காலம் இளமையாக வைக்கும் மருந்து; any medicine or agent promoting longevity (சா.அக.).

[காயம் + சித்தி + ஆக்கி.]

காயசுட்கம் *kāya-šuṭkam,* பெ.(n.) நிழலில் உலர்த்தல்; drying anything in the shade without exposing it to sunlight (சா.அக.).

[காயம் + சுட்கம்.]

காயத்தழும்பு *kāya-t-taḻumbu,* பெ.(n.) அடிபட்ட காயத்தினால் ஏற்பட்ட தழும்பு; scar, cicatrix (சா.அக.).

[காயம் + தழும்பு.]

காயகல்பம் *kāya-kalpam,* பெ.(n.) நீண்ட நாள் இளமையாக வாழ எண்ணி உட்கொள்ளும் மருந்து; elixir; more often in a semi solid form to keep oneself young (க்ரியா.).

[காயம் + கல்பம்.]

காயத்தைக்கல்லாக்கி *kāyattai-k-kallākki,* பெ.(n.) உடம்பைக் கல்லைப் போல் கெட்டியாக்கும் மருந்து; any medicine tending to strengthen the body making it as hard as a stone (சா.அக.).

[காயத்தை + கல்லாக்கி.]

காயதைக்கற்றூணாக்கி *kāyattai-k-kaṟṟūṇākki,* பெ.(n.) 1. **காயத்தைக் கல்லாக்கி** பார்க்க; see *kāyattai-k-kallākki.* 2. உடம்பைக் கல் தூணைப் போல் கெட்டியாகச் செய்யும் மருந்து; a medicine rendering the body as strong as a stone pillar (சா.அக.).

[காயத்தை + கல் + தூணாக்கி.]

காயத்தைச்செம்பாக்கி *kāyattai-c-cembākki,* பெ.(n.) **காயத்தைப் பவளமாக்கி** பார்க்க;see *kāyattai-p-pavaḷamākki* (சா.அக.).

[காயத்தை + செம்பு + ஆக்கி.]

காயத்தைப்பவளமாக்கி *kāyattai-p-pavaḷamākki,* பெ.(n.) 1. செந்திராய்; a red speicies of tiray. 2. உடம்பைச் செந்நிறமடையச் செய்யும் மருந்து; any medicine lending a red colour to the body (சா.அக.).

[காயத்தை + பவளமாக்கி.]

காயத்தைலம் *kāya-t-tailam,* பெ.(n.) 1. கடுகு, ஓமம், வெந்தயம், உள்ளி, பெருங்காயம் முதலிய ஐந்து கூட்டுப் பொருட்கள் (ஐங்காயத் தைலம்); the five vegetable stimulants. 2. உடம்பிற்குப் பூசும் எண்ணெய்; any medicated oil used for anointing the body with. 3. பெருங்காயம் சேர்ந்த தைலம்; any oil prepared with

asafoetida as the chief ingredient (சா.அக.).

[காயம் + Skt. தைலம். திலம்→தைலம்.]

காயத்தைவேதிச்சி *kāyattai-vēdicci,* பெ.(n.) 1. கருப்பு நொச்சிச் செடி; willow leaved justicia, *Justicia gendarussa alias J.vulgaris.* 2. உடம்பைப் பொன்னிறமடையச் செய்யும் மருந்து; any medicine tending to develop a golden lustre inthe body (சா.அக.).

[காயத்தை + வேதிச்சி.]

காயந்திர்வை *kāya-n-tirvai,* பெ.(n.) அறுதியிட்டு குறிக்கப்பெற்ற நிலவரி; permanent assessment (செ.அக.).

[U.qāim> த. காயம்+திர்வை]

காயநிலை *kāya-nilai,* பெ.(n.) 1. உடம்பின் நிலைமை; condition of the body. 2. காயத்தின் நிலைமை; state of the wound or injury (சா.அக.).

[காயம் + நிலை.]

காயநோய் *kāya-nōy,* பெ.(n.) 1. உடம்பின் நோய்; bodily disease. 2. காயத்தினால் ஏற்பட்ட நோய்; any disease due to wound or injury - *Traumatopathy* (சா.அக.).

[காயம் + நோய்.]

காயப்படல் *kāya-p-paḍal,* பெ.(n.) காயமடைதல்; being wounded (சா.அக.).

[காயம் + படல்.]

காயப்படு-த்தல் *kāya-p-paḍu-,* செ.கு.வி. (v.i.) காயம் உண்டாக்கல்; causing or inflicting an injury or wound (சா.அக.).

[காயம் + படு-.]

காயப்பூண்டு *kāya-p-pūṇḍu,* பெ.(n.) 1. அரிவாள்மணைப் பூடு; sickle leaf - *Sida acuta.* 2. காயத்திற்கு வைத்துக் கட்டும் பூண்டு; a plant bruised and applied to wounds as a curve (சா.அக.).

[காயம் + பூண்டு.]

காயபலம் *kāya-balam,* பெ.(n.) 1. ஒரு சிறிய மரம்; the name of a small tree found in the North West of Hindustan. *இதன் மணமுள்ள பட்டையும், விதைகளும் மருந்திற்குப் பயன்படும். பழம் தின்பதற்கு உதவும்.* 2. உடம்பின் வலிமை; bodily strength (சா.அக.).

[காயம் + பலம்.]

காயபேதி *kāya-bēdi,* பெ.(n.) 1. மூவிலைக் குருந்து; a species of kurundu (unidenified) conspicuous by its three leaves. 2. **காயத்தைவேதிச்சி** பார்க்க; see *kāyattai-vēdicci* (சா.அக.).

[காயம் + Skt.பேதி.]

காயம்படு-த்தல் *kāyam-paḍu-,* செ.கு.வி. (v.i.) காயம் உண்டாக்கல்; inflicting wound (சா.அக.).

[காயம் + படு-.]

காயம்பண்ணல் *kāyam-paṇṇal,* தொ.பெ. (vbl.n.) 1. பிள்ளைப்பேற்று மருந்து கூட்டல்; preparing medicine for lying in women. 2. புண் உண்டாக்கல்; causing wound (சா.அக.).

[காயம் + பண்ணல்.]

காயம்போடல் *kāyam-pōḍal,* தொ.பெ. (vbl.n.) பிள்ளைப் பேற்றுக் காலத்தில் பெருங்காயம் சேர்த்து மருந்து செய்தல்; preparing medicine with asafoetida as a chief ingredient for the use of lying-in women (சா.அக.).

[காயம் + போடல்.]

காயம்பௌனாகவுல் *kāyam-paunākavul,* பெ.(n.) ஏற்பட்ட நிலத்தீர்வையில்,

முக்கால்வாசி நிலையாகச் செலுத்தும் குத்தகை உடன்படிக்கை; a cowle, according to the terms of which three-quarters of the original assessment is permanently payable (செ.அக.).

[Arab. qaim + Hind. pauna > த.காயம் + பௌனா + கவுல்.]

காயம்சமாபந்தி *kāyam-samā-pandi,* பெ.(n.) நிலையான நிலவரித் திட்டம்; permanent settlement (செ.அக.).

காயம்சோடி *kāyam-sōḍi,* பெ. (n.) கொடையாக வழங்கப்பட்ட தீர்வை அறுதியிடப்பட்ட நிலம்; land on a fixed quit-rent not subject to variation with reference to cultivation or produce (செ.அக.).

[Skt. kāyam+ ஜோடி த. சோடி]

காயமடை-தல் *kāyamaḍai-,* செ.கு.வி.(v.i.) 1. கத்தி முதலிய கருவிகளினால் உடம்பில் தழும்படைதல்; sustaining injury or wound in the body with a knife or other sharp weapons. 2. உடல் இளமையடைதல்; securing eternal youth; attaining success in rejuvenation (சா.அக.).

[காயம் + அடை-.]

காயமாகு-தல் *kāyamāgu-,* செ.கு.வி.(v.i.) பணி நிரந்தரமாதல்; of job become permanent. *உனக்கு வேலை காயமாயிற்றா?.*

[காயம் + ஆகு-தல்.]

காயமாயம் *kāyamāyam,* பெ.(n.) உடல் நிலையாமை; the vanishing away of the human body (சா.அக.).

[காயம் + மாயம்.]

காயமாற்றம் *kāyamāṟṟam,* பெ.(n.) 1. காயத்திற்குச் செய்யும் மருத்துவம்; treatment of a wound. 2. உடலின் மாற்றம்; change of body, as from old to young. 3. பருமையி(தூலத்தி)னின்று நுண்மை (சூக்குமத்திற்)க்கு மாறுகை; changing or transformation of the human body from the physical into the astral state (சா.அக.).

[காயம் + மாற்றம்.]

காயமாற்று-தல் *kāyamāṟṟu-,* செ.கு.வி. (v.i.) 1. **காமமாற்று-தல்** பார்க்க; see *kāmamāṟṟu-.* 2. உடல் இளமையாதல்; rejuvenating the body. 3. உருமாறல்; assuming a different body (சா.அக.).

[காயம் + ஆற்றல்.]

காயமாற்று-தல் *kāyamāṟṟu-,* செ.கு.வி. (v.i.) 1. உடம்பில் ஏற்பட்ட புண்களை ஆற்றுதல்; curing or healing the external injuries, Vulneration. 2. உடம்பை ஏமாற்றுதல்; transformation of the human body as from the physical into the subtle state (சா.அக.).

[காயம் + ஆற்று-. காயம் + மாற்று-.]

காயமாற்றுமருந்து *kāyamāṟṟu-marundu,* பெ.(n.) 1. உடம்பில் பட்ட புண்களை ஆற்றும் மருந்து; a medicine or any plant, drug or preparation useful in the cure of wounds - *Vulnerary* (சா.அக.).

[காயம் + ஆற்றும் + மருந்து.]

காயமாறுங்காலம் *kāyamāṟuṅkālam,* பெ.(n.) 1. இறப்பு கிட்டிய வேளை; the moments of death. 2. உடலில் ஏற்பட்ட காயம் குணமாகும் காலம்; the period of healing, as of a wound or an injury. 3. உடல் மாற்றமடையுங் காலம்; the period of visible change in the human body. 4. கிழத்தனமடையுங் காலம்; the period of attaining old age (சா.அக.).

[காயம் + ஆறும் + காலம்.]

காயமிருத்தி *kāyamirutti,* பெ.(n.) 1. சவர்க்காரம்; dhoby's earth. 2. சர்க்கரை வேம்பு; sweet neem. 3. உடலை நீண்ட காலம் நிலை நிறுத்தும் மருந்து; any medicine or agent promoting longevity (சா.அக.).

[காயம் + இருத்தி.]

காயமிறுகல் *kāyamiṟugal,* பெ.(n.) 1. உடம்பு இறுகுகை; body getting heardened. 2. உடம்பு கெட்டிப்படுகை; invigoration of the system (சா.அக.).

[காயம் + இறுகல்.]

காயமூலிகை *kāyamūligai,* பெ.(n.) **காய கற்பமூலிகை** பார்க்க; see *kāyakaṟpa-mūligai* (சா.அக.).

காயமுண்டோன் *kāyamuṇḍōṉ,* பெ.(n.) காயம்பட்டவன்; wounded person (சா.அக.).

[காயம் + உண்டோன்.]

காயமுருக்கி *kāyamurukki,* பெ.(n.) 1. உடலை இளைக்கச் செய்யும் நோய்; a disease causing emaciation of the body as consumption. 2. உடம்பை இளைக்கச் செய்யும் மருந்து; any drug or medicine capable of reducing the bulk or causing emaciation of the human body (சா.அக.).

[காயம் + உருக்கி.]

காயல்மரம் *kāyal-maram,* பெ.(n.) பனிச்சை மரம்; back-water tree - *Diospyros embryopteris* (சா.அக.).

[காயல் + மரம்.]

காயவான் *kāyavāṉ,* பெ.(n.) 1. காயத்தை இறுத்தியவன் (துறவி); one who rejuvenated the system. 2. காயம் அடைந்தவன்; a wounded man (சா.அக.).

[காயம் + அவன்]

காயவியல் *kāyaviyal,* பெ.(n.) 1. அவியல் காய்; the baking of vegetable curry in steam. 2. காய்கறி சமையல்; the preparation of vegetable curry (சா.அக.).

[காய் + அவியல்.]

காயல் *kāyal,* பெ.(n.) காய்ச்சல்; fever

[காய் – காயல் (வேதல், வெப்பம்.]

காயலா *kāyalā,* பெ.(n.) காய்ச்சல்; fever (செ.அக.). **காயல்** பார்க்க; see kāyal.

[காயல்→காயலா. U.kāhilā> த. காயலா.]

காயவள்ளி *kāyavaḷḷi,* பெ.(n.) 1. சர்க்கரை வள்ளிக் கிழங்கு; sweet potato - *Ipomaea batatas.* 2. வெற்றிலை வள்ளிக் கிழங்கு; betel yam - *Dioscorea opositifolia.* 3. சீரக வள்ளி; Malacca yam - *Dioscorea bulbifera.* 4. காட்டுக்காய் வள்ளி; granada yam - *Dioscorea sativa* (சா.அக.).

[காய + வள்ளி.]

காயவிலை *kāyavilai,* பெ.(n.) 1. காயத்திற்கு வைத்துக் கட்டும் இலை; leaf applied to wounds as a curative. 2. காக்கட்டான் இலை; leaf of crow creeper - *clitorea ternatea* (சா.அக.).

[காய் + இலை.]

காயாங்குலைச்செடி *kāyāṅgulai-c-ceḍi,* பெ.(n.) காயா மரம்; a barren tree (சா.அக.).

[காயாங்குலை + செடி.]

காயாசுவாதம் *kāyāśuvādam,* பெ.(n.) பிள்ளைப்பேற்றுக் காய்ச்சல்; puerperal fever (சா.அக.).

[காயா + சுவாதம்.]

காயாதிகற்பம் *kāyādikaṟpam,* பெ.(n.) 1. அமுதம்; nectar. 2. உடலை நெடுநாள் இளமையாக வைத்திருக்க உட் கொள்ளுமோர் மருந்தெண்ணெய்; a medicated oil used for rejuvenation (சா.அக.).

[காயாதி + கற்பம்.]

காயத்தம் *kāyaštam,* பெ. (n.) 1. கடுக்காய்; galnut. 2. நெல்லிக்காய்; Indian gooseberry - *Emblica offioinalis.* 3. துளசி; holy basil - *Ocimum sanctum.* 4. அசோகு; Asoka tree - *Saraca indica.* 5. தேட் கொடுக்கி; Indian turnsole or Indian heliotrope - *Heliotroium indicum.* 6. கடிச்சை; false kamela - *Casearia tomentosa.* 7. ஒரு பூடு; a plant - *Tizyphus napeca.* 8. கொடிய நஞ்சு; a virulent type of poison. 9. கொடியரசு; wild peepul creeper - *Ficus arnottiana.* 10. ஏலம்; cardamons (சா.அக.).

*[காய + **Skt.** அஸ்தம்.]*

காயாதிகற்பமூலி *kāyādikarpa-mūli,* பெ.(n.) 1. சித்தர்கள் கற்ப நூலின்படி நெடுநாள் உடலை இளமையாக வைக்க வேண்டி சாப்பிடும் மூலிகைகள்; drugs taken by siddhars for retaining the body for a long period and thus promoting longevity. 2. சித்தர்கள் நூற்படி கற்ப முறையில் கடுக்காயை ஆதியாகச் சொல்லி வரும் மூலிகைகள்; rejuvenating drugs commencing with galnut, as enumerated in the siddhars science (சா.அக.).

[காயாதி + கற்பமூலி.]

காயாப்பேரீஞ்சு *kāyā-p-pērīñju,* பெ.(n.) 1. காட்டு பேரீச்சை மரம்; barren date tree - *Phoenix genus.* 2. சீமையீச்சம்; English fern-palm - *Cycus circinalis* (சா.அக.).

[காயா + பேரீஞ்சு.]

காயாரோகணம் *kāyā-rōganam,* பெ.(n.) **காரோணம்** பார்க்க; see *kārōṇam* (செ.அக.).

*[**Skt.** kāyā-rōhana>த. காயாரோகணம். காயாரோசணம்→காரோணம். காயம் + ஆரோகணம். உடலில் ஏறியிருத்தல்.]*

காயில் *kāyil,* பெ.(n.) 1. கடல் நீர் பெருகி நிற்கும் கழிகளுள்ள கரை காயல்; back water. 2. ஒத நீர்க்கரை; seashore. 3. காயல் பட்டினம்; a village in Tirunelvelly District once a famous port the mouth of the Tamaraparani, where marco polo landed (கல்.அக.).

[காயல் →காயில்.]

கார்-த்தல் *kār-,* செ.கு.வி.(v.i.) உப்புக் கரித்தல்; to be saltish; having saline tase (சா.அக.).

[கரித்தல் – கார்த்தல்.]

கார்க்கவன் *kārkkavaṉ,* பெ.(n.) ஒரு மாலிய வணிகன்; a vaishnavite merchant.

[கார் →கார்க்கவன்.]

இவன் வயிணவன் என்றும் ஒருவருடன் கூடிப் பல வணிகரைக் கொன்று, ஒரு கோவிலில் ஏற்றிய விளக்கைக் காண வயிணவனுடன் முத்தி பெற்றான் (அபி.சிந்.).

கார்க்கன் *kārkkaṉ,* பெ.(n.) ஒரு முனிவன்; a saint. *தொண்டை நாட்டில் திருக்காரகத்தில் திருமால் அருள் பெற்றவன் (அபி.சிந்.).*

[கார் →கார்க்கன்.]

கார்க்கோல் *kār-k-kōl,* பெ.(n.) கார்போகவரிசி; hazel-leaved psorales - *Psoraleacoriflora* (சா.அக.).

[கார் + கோல்.]

கார்க்கோளி *kār-k-kōḷi,* பெ.(n.) 1. கருப்புகொள்; black horse gram - *Cassia absus.* 2. கருஞ்சீரகம்; nigella-seeds. 3. தேட்கொடுக்கி; Indian turnsole

- *Pandamus Odoratissimus alias Heliotropium indicum.* 4. நிலப்பனை; ground palm - *Curculigo drehioides.* 5. முத்தக்காசு; koray root - *Cyperus rotundus* (சா.அக.).

[கார் + கோளி.]

கார்கரணை *kār-karaṇai,* பெ.(n.) கருணைக்கிழங்கு (பதார்த்த.415); elephant-yam - *Typhonium orixense* (செ.அக.).

[காறுகருணை→காறாக்கருணை = சேனைக் கிழங்கு. காறு→காரு→கார்.]



கார்கருணை *kārkaruṇai,* பெ.(n.) **காருகரணை** பார்க்க; see *kārukaraṇai* (சா.அக.).

கார்காஞ்சிரம் *kār-kāñjiram,* பெ.(n.) கருப்பு எட்டிப் பூடு; bitter luffa-*Peristrophe bicalyculata.*

[கார் + காஞ்சிரம்.]

இதன் அடித்தண்டு அறுகோண வடிவாகும். கிளைகள் உடையது; வெளிறிய சிவப்பு நிற பூக்களைக் கொண்டது. இதன் சமூலத்தை அரிசி களைந்த நீரில் இடித்துப் போட்டு காய்ச்சிய நீரைக் கொடுக்க பாம்புக்கடி குணமாகும் (சா.அக.).

கார்காத்தார் *kār-kāttār,* பெ.(n.) **கார் காத்தவேளாளர்** பார்க்க; see *kārkātta-vēḷāḷar* (செ.அக.).

[கார்காத்தார் = மழையின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்.]

கார்காலம் *kār-kālam,* பெ.(n.) **கார்ப் பருவம்** பார்க்க; see *kār-p-paruvam* (செ.அக.).

[T. kārukālamu>M. kārkkālam > த. கார் காலம்.]

கார்குவளை *kārkuvaḷai,* பெ.(n.) மழை காலத்தில் பூக்கும் குவளைப் பூ; water-lily flowering in rainy season (சா.அக.).

[கார் + குவளை.]

கார்கை *kārgai,* பெ.(n.) துவரை; common dholli; red gram - *Cajanus indicus* (சா.அக.).

[கார் → கார்கை]

கார்கோணி *kārkōṇi,* பெ.(n.) சிறுசெடிவகை (பதார்த்த.263); turnsole - *Heliotropium indicum* (செ.அக.).

[கார் +கோணி]

கார்கோழி *kār-kōḻi,* பெ. (n.) 1. காட்டுக் கொள்; black horse - gram - *Cassiaabsus.* 2. சீரகவகை (பதார்த்த. 1034); black cumi - *Nigella sativa* (செ.அக.).

[கார் +கோழி]

கார்ப்பவம் *kārppavam,* பெ.(n.) உணவுக்குரிய ஒருவகைக் கிழங்கு; கருணைக் கிழங்கு; an esculent root known as elephant-foot yam or purple-stalked a dragon - *Dracontium Polyphyllum alias Typhonium trilobatum* (சா.அக.).

[கார் – கார்ப்பவம்]

கார்ப்பான *kārppāṉa,* பெ. (n.) 1. உறைப்பான; acrid; pungent. 2. உவர்ப்பான; saltish (சா.அக.).

[கார்ப்பு + ஆன.]

கார்முகில்வண்ணம் *kārmugil-vaṉṉam,* பெ.(n.) தீ முறுகல் நஞ்சு; a dark grey coloured arsenic (சா.அக.).

[கார் + முகில் + வண்ணம்.]

கார்முகிற்பாடாணம் *kārmugiṟ-pāḍāṇam,* பெ. (n.) ஒரு வகை வைப்பு நஞ்சு; a prepared arsenic so called from its colour of the clouds (சா.அக.).

[கார் + முகில் + பாடாணம்.]

கார்மேகசாரம் *kār-mēga-šāram,* பெ.(n.) காசியுப்பு (யாழ்.அக.); a mineral salt (செ.அக.).

[கார் –மேக + சாரம்.]

கார்வங்கம் *kārvaṅgam,* பெ.(n.) கருவங்கம்; black-lead (சா.அக.).

[கார் + வங்கம்.]

கார்வளங்கொண்டமண்டலம் *kār-vaḷaṅ-koṇḍa-maṇḍalam,* பெ.(n.) பாண்டி நாட்டில் உள்ள மண்டலங்களுள் ஒன்று; one of the part where in *Pāṇḍiya-nāḍu* (அபி.சிந்.).

[கார் + வளம் + கொண்ட + மண்டலம்.]

காரக்குழம்பு *kāra-k-kuḻambu,* பெ.(n.) உறைப்பான புளிக்குழம்பு; a kind of hot sauce with a tamarind base.

[காரம் + குழம்பு.]

காரகக்கொம்பு *kāraga-k-kombu,* பெ.(n.) கருப்பு மாட்டுக் கொம்பு; horn of a black ox (சா.அக.).

[காரகம் + கொம்பு.]

காரகத்தி *kāragatti,* பெ.(n.) கருப்பகத்தி; black sesbane (சா.அக.).

[கார் + அகத்தி.]

காரகப்பட்டை *kāraga-p-paṭṭai,* பெ.(n.) 1. வெட்டைச் சூடு அல்லது வெப்பத்தினால் உடம்பின் மேற்காணும் படை நோய்; a disease like eczema found on the surface of the skin in any part of the body due to venereal causes. 2. வெள்ளைநோய்ப்படை; ring-worm. 3. உள்ளங்கை, உள்ளங்காலிற் காணும் படை; red spots on the palms and soles - *Acrodynic erythema* (சா.அக.).

[காரகம் + பட்டை.]

காரகம் *kāragam,* பெ.(n.) 1. முதலை; crocodile. 2. **காரகப்படை** பார்க்க; see *kāraga-p-paḍai* (சா.அக.).

காரச்சம் *kāraccam,* பெ.(n.) அம்மான் பச்சரிசிச் செடிவகை; an annual with erect or procumbent branches - *Euphorbia hirta* (சா.அக.).

[கார் + அச்சம்.]

காரச்சரக்கு *kāra-c-carakku,* பெ.(n.) 1. சாம்பலுப்பு, பூநீறு முதலிய கடுங்கார உப்பு வகைகள்; caustic substances, such as, caustic potash, caustic soda, fuller's earth etc. 2. கருங்கல் அழிவதால் அம்மண்ணின்று எடுக்கும் காரமான சரக்கு தென்னிந்தியாவில் இக்கார மண் அதிகம்; alkaline drug found in Southern India which is particulary rich in alkaline and earthly minerals, one source of which is decaying granites. 3. தமிழ் மருத்துவத்தில் சொல்லியுள்ள உறைப்பான சரக்குகள்; strong and pungent drugs enumerated in Tamil medicine.

[காரம் + சரக்கு.]

உப்பு வகைகள் :– 1. அண்டவெண்கரு; albumen. 2. அப்பிரகம்; mica. 3. இரும்பு; iron. 4.கடல்நுரை; sea froth. 5. கல்லுப்பு; sea-salt. 6. காரீயம்; black lead and so on. 7. கிளிஞ்சிலோடு; bivalve-shell. 8. கெவுரி; yellow arsenic. 9. சங்கு; chank. 10.சூடன்; camphor. 11. சூதம்; mercury. 12. தங்கம்; gold. 13. தொட்டி; a kind of arsenic. 14. நாகம்; zinc. 15. பச்சைக் கருப்பூரம்; crude camphor. 16. மூத்திரம்; urine. 17. விந்து; semen. 18. வீரம்; perchloride of mercury. 19. வெடியுப்பு; nitre. 20. வெண்ணெய்; butter (சா.அக.).

காரச்சிவப்பு *kāra-c-civappu,* பெ.(n.) புண், புரை, பிளவை முதலியவைகளுக்குப் பயன்படுத்தும் ஒரு வகை சிகப்புக் கடுங்காரத் தண்ணீர்; a red strong and pungent lotion contemplated in Agastya's work used in surgery for washing or cleaning sores, wounds, cancers, carbuncles etc., (சா.அக.).

[காரம் + சிவப்பு.]

காரச்சுண்ணம் *kāra-c-cuṇṇam,* பெ.(n.) 1. முப்புச் சுண்ணம்; an old name for universal solvent and for a medicine curative of all congestions - *Alcahest.* 2. உடன் சுட்ட சுண்ணாம்பு; unslaked lime. 3. காரமான சுண்ணம்; powerful alkaline compound (சா.அக.).

[காரம் + சுண்ணம்.]

காரச்சூடு *kāra-c-cūḍu,* பெ.(n.) காரத்தினால் தோலினைச் சுடல்; caustic application; burning or corroding the skin with a caustic substance.

[காரம் + சூடு.]

காரச்சேவு *kāra-c-cēvu,* பெ.(n.) **காராச் சேவு** பார்க்க; see *kāra-c-cēvu.*

காரச்சோடம் *kāra-c-cōḍam,* பெ.(n.) காரச்சோடா உப்பு; caustic soda (சா.அக.).

[காரம் + சோடம்.]

காரச்சோடா *kāra-c-cōḍā,* பெ.(n.) **காரச்சோடம்** பார்க்க; see *kāra-c-cōḍam* (சா.அக.).

[காரம் + சோடா.]

காரசகரம் *kārašagaram,* பெ.(n.) ஒரு வகை நஞ்சு மருந்துப் பூடு; an unknown poisonous medical plant (சா.அக.).

[காரம் + சகரம்.]

காரசத்து *kārašattu,* பெ.(n.) 1. பூநீர் ஆற்றல் (சத்து); sodium. 2. சாம்பல் ஆற்றல்; potash. 3. ஒரு தாது; potassium (சா.அக.).

[காரம் + சத்து.]

காரசாரச்சரக்கு *kāracāra-c-carakku,* பெ.(n.) 1. உறைப்பான சரக்கு; pungent drug. 2. உப்புச் சரக்கு; alkali and acid drugs (சா.அக.).

[காரம் + சாரம் + சரக்கு.]

காரசாரநீர் *kārašāra-nīr,* பெ.(n.) பனிக் குடத்து நீர்; fluid of amniotic sac - *Liquor amni* (சா.அக.).

[காரம்சாரம் + நீர்.]

காரசாரநீறு *kārašāra-nīṟu,* பெ.(n.) பூநீறு; fuller's earth (சா.அக.).

[காரசாரம் + நீறு.]

காரசாரப்பஞ்சபூதம் *kārašāra-p-pañja pūdam,* பெ.(n.) ஐந்து வகைக் கூறான உப்புப் புளிவகைச் சரக்குகள்; the five kinds of salt and acid drugs divided according to the first principles of the five elements.

[காரம் + சாரம் + பஞ்ச + பூதம்.]

காரப் பஞ்சபூதம் : 1. வெடியுப்பு; earth, nitre. 2. கல்லுப்பு; water, common salt. 3. வளையலுப்பு; fire, glass gall. 4. சீனம்; air, alum. 5. பூநீறு; sky, fuller's earth (சா.அக.).

காரசாரமின்மை *kārašāram-iṉmai,* பெ.(n.) 1. சுவையில்லாமை; tastelessness insipid. 2. உப்பு, புளிப்பு, காரம் இல்லாமை; devoid of the taste of salt, acid and alkali. 3. உறைப்பில்லாமை; devoid of pungency (சா.அக.).

[காரம் + சாரம் + இன்மை.]

காரசாரவுப்பு *kārašāra-v-uppu,* பெ.(n.) 1. கல்லுப்பு; sea-salt. 2. காரம், சாரம், உப்பு மூன்றும் கூடிய பொருள்; any substance

consisting of atleast all the three kinds, that is alkali, acid and salt. 3. காரம், புளி, உப்புச் சரக்கு வகைகள்; the three kinds of drugs that is alkali, acid, and salt. 4. இருப்பத்தைந்து சரக்குகளான உறைப்பான உப்பு வகைகள்; alkaline salts consisting of 25 drugs.

[காரம் + சாரம் + உப்பு.]

உறைப்பான உப்பு வகையாவன : 1.அமுரி; urine salt. 2. இணங்கன்; nitre or salt-petre. 3. இந்துப்பு; rock-salt. 4. எவட்சாரம்; another variety of prepared salt. 5. ஏம்பச்சாரம்; an alchemical salt. 6. கடல் நுரை; sea froth. 7. கல்லுப்பு; sea-salt. 8. கற்பூரம்; medicinal camphor. 9. காகிச்சாரம்; benares salt. 10. காய்ச்சு லவணம்; purified nitre. 11. கெந்தி லவணம்; sulphur salt. 12. கோதிலா லவணம்; pure salt. 13. சத்தி சாரம்; a prepared salt. 14. சவட்டுப்பு; salt from fuller's eath. 15. சாரம் அல்லது நவாச்சாரம்; salammoniac. 16. சிந்து லவணம்; sindh salt. 17. சீனம்; alum. 18. சூடன்; ordinary camphor. 19. பிடாலவணம்; a variety of glass gall. 20. பூநீறு காரம்; soda. 21. பொன்னம்பர்; amber. 22. மீனம்பர்; ambergiris. 23. வழலை அல்லது சவர்க்காரம்; fuller's earth. 24. வளையலுப்பு; glass-gall. 25. வெண்காரம்; borax (சா.அக.).

காரசாராதி *kārasārāti,* பெ.(n.) 1. காரமும் சாரமும் உள்ள பொருள்; any substance containing the properties of both alkali and acid. 2. உறைப்புள்ள பொருள்; pungent substance. 3. காரசாரம் முதலியவைகள்; acid, alkali etc. (சா.அக.).

[காரம் + சாரம் – சாராதி.]

காரசீரம் *kārašīram,* பெ.(n.) கருஞ்சீரகம்; black cumin - *Nigellasativa* (சா.அக.).

[காரம் + சீரம்.]

காரசுரம் *kārašuram,* பெ.(n.) காட்டு மல்லிகை; wild jasmine (சா.அக.).

காரணக்காரி *kāraṇakkāri,* பெ.(n.) வட்டச்சாரணை; purslance leaved trianthema - *Trianthema pentandra* (சா.அக.).

[காரணம் + காரி]

காரணகாரியம் *kāraṇa-kāriyam,* பெ.(n.) ஒரு செயலின் அடிப்படைக் காரணங்களும் அதன் விளைவுகளும்; cause and effect; object and reason. *இது ஏன் இப்படி நடந்தது என்பதற்கான காரண காரியங்களை அலசிப் பார்க்க வேண்டும்.*

[காரணம் + காரியம்.]

காரணகேவலம் *kāraṇa-kēvalam,* பெ.(n.) காரணாவத்தை மூன்றனுள் ஆதன்கள் உலகம் அழியக்கூடிய காலம் வரை ஆணவ மலத்தாலே மறைப்பூண்டு கிடப்பது துன்ப நிலை (சிவப்.கட்.15); the major condition of the soul in which it remains inert and united to Aṇavam, awaiting the period of creation, one of three kāraṇāvattai (சா.அக.).

[காரணம் + Skt. கேவலம்.]

காரணசகலம் *kāraṇa-šagalam,* பெ.(n.) மூன்று வகையான காரணாவத்தைகளுள், ஆதன் உடல் மூலமாக பிறப்பு இறப்புகளுக்கு உட்படும் துன்பநிலை (சிவப்.கட்.15); the major condition of the soul in which it is invested with bodies and subjected to births and deaths, one of three kāraṇāvattai (செ.அக.).

[காரணம் + Skt. சகலம்.]

காரணசத்தி *kāraṇa-šatti,* பெ.(n.) 1. வெடியுப்பு; saltpetre, Nitrate of Potash. 2. தமிழ் நூலின்படி வெடியுப்பு, சோற்றுப்பு,

கல்லுப்பு, பூ நீர் இவைகளை அமுரியி (சிறுநீரி)ல் இட்டுக் காய்ச்சி எடுக்கும் ஒரு வகைச் செய்யுப்பு; a salt prepared by dissolving a mixture of saltpetre, common salt, rock salt and fuller's earth in a sufficient quantity of urine and the boiling the solution till the water is completely evaporated (சா.அக.).

[காரணம் + சத்தி.]

காரணசரீரம் *kāraṇa-šarīram,* பெ.(n.) ஐந்து வகை வளராக்கமான (பரிணாமமான) தூல உடம்பிற்குக் காரணமாயுள்ள நுட்பமான உடம்பு; the subtlest and innermost rudiment of the body, causal frame (சா.அக.).

*[காரணம் + **Skt.** சரீரம்.]*

காரணசிவதத்துவம் *kāraṇa-šiva-tattuvam,* பெ.(n.) சிவ மெய்ம்மை (தத்துவங்)களுள் ஒன்று; one of the šiva-tattuvam (சி.சி.1, 66, ஞானப்.) (செ.அக.).

[காரணம் + சிவம் + தத்துவம்.]

காரணசுத்தம் *kāraṇa-šuttam,* பெ.(n.) காரணாவத்தை மூன்றனுள் மல நீக்கம் பெற்ற ஆதன் (ஆன்மா) கடவுளின் திருவடிகளில் ஒன்று சேரும் அவத்தை (சிவப்.கட்.15); the major condition of the soul in which it becomes united to the feet of the Lord, freed (செ.அக.).

*[காரணம் + **Skt.** சுத்தம்.]*

காரணத்தின்காரணம் *kāraṇattiṉ-kāraṇam,* பெ.(n.) கரணியத்தின் மறு (பிரதி) கரணியம்; cause against cause - *Causa causati* (சா.அக.).

[காரணத்தின் + காரணம்.]

காரணநோய் *kāraṇa-nōy,* பெ.(n.) இன்ன வகையில் உண்டானது என்று அறிந்து கொள்ளக்கூடிய நோய்; disease in which the causes can be determined through diagnosis (சா.அக.).

[காரணம் + நோய்.]

காரணம் *kāraṇam,* பெ.(n.) பிறிதொன்றற் காகாமல் எப்பொழுதும் (நியதமாய்) காரியத்திற்கு முன் நிற்பது; reason which stands as a cause for doing a thing.

காரணமாயை *kāraṇa-māyai,* பெ.(n.) உடல் கரணிய இன்ப நுகர்ச்சி போகங்களுக்கு முதற் கரணியமாயுள்ள மாயை (சி.சி.2, 50, நிரம்ப); māyā, as the primordial, original principle from which all manifestations of matter are evolved, and into which they are finally resolved (செ.அக.).

*[காரணம் + **Skt.** மாயை.]*

காரணமாலையணி *kāraṇa-mālai-y-aṇi,* பெ. (n.) பின்பின்னாக வருவனவற்றிற்கு, முன்முன்னாக வருவனவற்றைக் காரணங் களாகவேனுங் காரியங்களாக வேனும் சொல்லுதல்; figure of speech in which a chain of causes and corresponding effects occur.

காரணிக்கம் *kāraṇikkam,* பெ.(n.) 1. வரலாறு; history. 2. செபமாலை; rosary (செ.அக.).

காரணியம் *kāraṇiyam,* பெ.(n.) குதிரைச் செவி; horse-ear or spogel - *Plantago ovata* (சா.அக.).

காரத்திராட்சரசம் *kāra-t-tirāṭcarašam,* பெ.(n.) கொடி முந்திரிச் சாற்றில் இருந்து செய்யும் காரமான பருகம்; an ardent drink prepared from vine or fruit juices, Brandy (சா.அக.).

*[காரம் + **Skt.** திராட்ச+ரசம்.]*

காரத்துணி *kārattuṇi,* பெ. (n.) 1. புண்களுக்கு இடும் காரமான திரி;

corrosive plaster inserted into wounds. 2. கொப்புளத்தை எழுப்பும் சீலை; plaster producing a vesication - *Blistering plaster*. 3. கெட்ட ஊண், புண், புரை, பிளவை இவைகளுக்கிடும் அல்லது சலாகை கொண்டு செலுத்தும் கார மருந்துச் சீலை; a plaster or lint steeped with or soaked in pungent or acrimonious drugs and applied externally or inserted by a probe into an ulcer with proud flesh, into phagedenous ulcers, sores with sinuses carbuncle etc., Rubefacient plaster. 4. மிளகு, மிளகாய், கடுகு, சாதிக்காய், இலவங்கம் முதலிய காரமான பொருட்கள் சேர்ந்த *காரச்சீலை*; a plaster containing pungent substances such as pepper, capsicum or chilly, mustard, nutmeg, cloves etc., - *Spice plaster* (சா.அக.).

[காரம் + துணி.]

காரத்தூமை *kāra-t-tūmai*, பெ.(n.) காரமான மாதவிடாய்; menstrual blood with alkaline properties (சா.அக.).

[காரம் + தூமை.]

காரதோசம் *kāra-tōšam*, பெ.(n.) கார மருந்துகளால் ஏற்பட்ட நஞ்சுக் குற்றம்; slow chemical poisoning (சா.அக.).

[காரம் + தோசம்.]

காரப்பச்சை *kāra-p-paccai*, பெ.(n.) 1. புண் புரைகளுக்குப் போடும் காரமான பசை; a caustic plaster used for wounds. 2. கம்மாளர்கள் பயன்படுத்தும் குன்றிமணிப் பசை; jeweller's cement or solder prepared by goldsmiths out of crab's eye seed and alum; (சா.அக.).

[காரம் + பச்சை.]

காரப்பற்று *kāra-p-parru*, பெ.(n.) புண்ணுக்கு இடும் காரமான பற்று; an external application of pungent drugs for wounds (சா.அக.).

[காரம் + பற்று.]

காரப்புகையிலை *kāra-p-pugai-y-ilai*, பெ.(n.) சுருட்டிற்குப் பயன்படுத்தும் காரமான புகையிலை; tobacco with a strong and pungent smell used chiefly for smoking (சா.அக.).

[காரம் + புகையிலை.]

காரப்புடல் *kāra-p-pudal*, பெ.(n.) பேய்ப்புடல்; devil's snake gourd or bitter snake-gourd - *Trichosnthus cucumarika* (சா.அக.).

[காரம் + புடல்.]

காரப்பூண்டு *kāra-p-pūndu*, பெ.(n.) காரப் பொருட்கள் அடங்கிய சாம்பலை எடுப் பதற்காக எரிக்கும் பூண்டு; plants from which ashes are obtained for extracting alkaline substances such as potash, soda etc. (சா.அக.).

[காரம் + பூண்டு.]

காரபத்திரகம் *kārapattiragam*, பெ.(n.) **காரபத்திரம்** பார்க்க; see *kārapattiram* (சா.அக.).

[காரம் + பத்திரகம்.]

காரபூமி *kāra-būmi*, பெ.(n.) உவர்மண் நிலம்; soil of fuller's earth (சா.அக.).

[காரம் + பூமி]

காரபேதி *kārabēdi*, பெ.(n.) குழந்தை களுக்குக் கொடுக்கும் கார மருந்து; pungent drugs given to children (சா.அக.).

[காரம் + பேதி]

காரம்பூ *kārambū*, பெ.(n.) பூநீறு; fuller's earth (சா.அக.).

[காரம் + பூ.]

காரம்போடல் *kāram-pōḍal*, தொ.பெ. (vbl.n.) 1. காரமான பொருட்களை இழைத்துப் புண்களுக்கு இடல்; application of caustic to the wound. 2. உணவுக் கறிக்குக் காரம் கூட்டல்; adding pungent stuffs to curry. 3. மாழைகளை உருக்கக் காரம் சேர்த்தல்; adding flux for melting purposes (சா.அக.).

[காரம் + போடல்.]

காரமசாலை *kāramašālai*, பெ.(n.) 1. காரமுள்ள பொடி; any pungent powder. 2. புகையிலைப் பொடி; tobacco snuff powder. 3. மூக்கிற்குள் இழுத்து நோயைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தும் மருந்துப் பொடி; a medicinal powder used for sniffing to alleviate pain in diseases such as smelling salt. 4. கார மருந்து சேர்ந்த பொடி; caustic powder. 5. குழம்பு கறிக்கூட்டுப் பொடி; powder of hot-stuffs used in kitchen, such as condiments, or pungent spices. 6.கச்சக் கருவாட்டுப் பொடி; small dried fish (சா.அக.).

[காரம் + மசாலை.]

காரமாத்திரை *kāra-māttirai*, பெ.(n.) 1. கட்டி, வீக்கம் இவைகளுக்குப் பூசும் மருந்து; a caustic pill macerated and used as an external application. 2. குழந்தைகளுக்குக் கோழையைப் போக்குவதற்காகக் கொடுக்கும் மான் மணத்தி (கத்தூரி) அல்லது ஆமணத்தி மாத்திரை; a strong pill containing musk or cow's bezoar as chief ingredients, given, internally for children to bring out phlegm (சா.அக.).

[காரம் + மாத்திரை.]

காரமான *kāramāṉa*, பெ.எ. (adj.) 1. கார்ப் பான; brackish; caustic; corrosive. 2. உறைப்பான; racy piquant (சா.அக.).

[காரம் + ஆன.]

காரமித்துரு *kāramitturu*, பெ.(n.) கார மருந்துகளுக்கு உதவியாக இருக்கும் மருந்து; drugs friendly to alkaline drugs (சா.அக.).

[காரம் + Skt. மித்துரு.]

காரமுள்ள *kāramuḷḷa*, பெ.எ. (adj.) காரத்தினால் சதையை அரிக்குந் தன்மையுள்ள; corrosive; alkaloidal (சா.அக.).

[காரம் + உள்ள.]

காரரிசி *kārariši*, பெ.(n.) மட்டையரிசி; a red course rice (சா.அக.).

[கார் + அரிசி.]

காரல்லி *kāralli*, பெ.(n.) கருப்பு அல்லி; memecylon - *Carallia integerrima* (சா.அக.).

[கார் + அல்லி.]

காரலவணம் *kāralavaṇam*, பெ.(n.) கார உப்பு; corrosive salt (சா.அக.).

[காரம் + லவணம்.]

காரவர்க்கம் *kāra-varkkam*, பெ.(n.) 1. கார வகை; alkalies. 2. காரமான பொருள்; pungent substances (சா.அக.).

[காரம் + வர்க்கம்]

காரவலி *kāravali*, பெ.(n.) 1. மிதி பாகற்காய்; small spiked bitter cucumber - *Momordica humilis.* 2. பாகற் கொடி; small snake-gourd - *Momordica charantia.* 3. வெற்றிலைக் கொடி; betel wine - *Piper betle* (சா.அக.).

[காரம் + வல்லி.]

காரவன்னம் *kāra-vaṉṉam*, பெ.(n.) குழம்புச் சோறு; boiled rice mixed with sauce (சா.அக.).

[காரம் + அன்னம்.]

காரவுப்பு *kāra-v-uppu*, பெ.(n.) 1. காரமுள்ள உப்பு; pungent salt. 2. கடுங்கார உப்பு; corrosive salt. 3. நாக்குக்கு உறைப்பான உப்பு; acrimonious or acrid salt (சா.அக.).

[காரம் + உப்பு.]

காரவுருண்டை *kāra-v-uruṇḍai*, பெ.(n.) குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்களைத் தடுக்கவும், பசி உண்டாக்கவும், பொதுவாகத் தலைமுழுக்காட்டியவுடன் இழைத்துக் கொடுக்கும் ஒரு காரமான மாத்திரை; it is used in every household for treating children as a preventive or as a rule especially when they are given a bath, to prevent coled and promote hunger .

[காரம் + உருண்டை.]

இது சீரகம், கருவேப்பிலை, உப்பு, மிளகு, ஓமம் இவைகளைச் சம அளவாக எடுத்து அரைத்துத் திரட்டிய உருண்டை (சா.அக.).

காரவெல்லம் *kāra-vellam*, பெ.(n.) 1. **கார வலி** பார்க்க; see *kāravali.* 2. பலாமரம்; jack-fruit tree - *Atrocarpus hirstua.* 3. காரஞ் சேர்ந்த வெல்லம்; jaggery mixed with some acrid substance (சா.அக.).

[காரம் + வெல்லம்.]

காரவெள்ளை *kāra-veḷḷai*, பெ.(n.) 1. ஒரு வகைச் சுரை; a kind of gourd - *Mimordica charantia.* 2. **காரச்சுண்ணம்** பார்க்க; see *kāra-c-cuṇṇam*(சா.அக.).

[கார + வெள்ளை.]

காரளவம் *kāraḷavam*, பெ.(n.) கறுப்புக் கடலை; black bengal gram (சா.அக.).

[கார் + அளவம்.]

காரளன் *kāraḷaṉ*, பெ.(n.) சூரபத்மன் படைத் தலைவரில் ஒருவன்; a army chief in Surapatman's army.

இவன் காட்டெருமை உருக்கொண்ட விகாரனுடன் கூடி, தான் காட்டுப் பன்றி உருவம் கொண்டு விநாயகரிடம் வந்து இறந்தவன் (அபி.சிந்.).

காரளிகம் *kāraḷigam*, பெ.(n.) ஒரு முள்செடி; a thorny plant, yellow-berried night shade - *Solanum jacquini alias S.Xanthocarpum* (சா.அக.).

[கார் + அளிகம்.]

காராக்கினி *kārākkiṉi*, பெ.(n.) நோய் அல்லது நஞ்சைக் கண்டித்தல்; removing poison or the disease (சா.அக.).

[கார் + அக்கினி.]

காராச்சேவு *kārā-c-cēvu*, பெ.(n.) கடலை மாவுடன் மிளகாய்ப் பொடி கலந்து பிசைந்து அச்சின் மூலம் சிறு குச்சியாகப் பிழிந்து எண்ணெய்யில் இட்டுச் செய்யும் தின் பண்டம்; a kind of snack made from a paste of chickpea flour mixed with chilli powder and fried in oil in the shape of small sticks.

[காரம் + சேவு.]

காராட்டுப்பால் *kārāṭṭu-p-pāl*, பெ.(n.) வெள்ளாட்டுப் பால்; goat's milk. *இது நோய்களுக்கு உதவும் (சா.அக.).*

[காராட்டு + பால்.]

காராடம் *kārāḍam*, பெ.(n.) மருக்காரை; common emitic nut - *Randia dumetorum* (சா.அக.).

[கார் + ஆடம்.]

காராம்பசும்பால் *kārāmpašumpāl,* பெ.(n.) காராவின் பால்; the milk of the cow with black tongue and udder.

[கார் + ஆ + Skt. பசு + பால்.]

இதனால் விழிப்பிணி, கயம் குணம் ஆகும் (சா.அக.).

காராமணிக்கீரை *kārāmaṇi-k-kīrai,* பெ.(n.) காராமணிச் செடியின் இலை; edible leaves of cow-gram plant (சா.அக.).

[காராமணி + கீரை.]

காட்டு + ஆமணக்கு – காட்டாமணக்கு. காட்டாமணக்கு→ காட்டாமணி→ காடாமணி →காறாமணி→காராமணி.

காராமையோடு *kārāmai-y-ōḍu,* பெ.(n.) கருப்பு ஆமை ஓடு; black tortoise-shell (சா.அக.).

[கார் + ஆமை + ஓடு.]

காராயி *kārāyi,* பெ.(n.) அடி ஈரல் அல்லது மண்ணீரல்; spleen (சா.அக.).

[கார் + ஆயி.]

காராவு *kārāvu,* பெ.(n.) நாக்கு, மடி, முலைக் காம்பு இவைகள் கருத்த ஆ; a sacred cow, the tongue, the under and nipple which are black (சா.அக.).

[கார் + ஆ– காரா – காராவு.]

காராவெண்ணெய் *kārāveṇṇey,* பெ.(n.) ஆ வெண்ணெய்; butter from cow's milk (சா.அக.).

[கார் + ஆ + வெண்ணெய்.]

காரான் *kārāṉ,* பெ.(n.) 1. எருமை; buffalo. 2. **காராவு** பார்க்க; see *kārāvu* (சா.அக.).

[கார் + ஆன்.]

காரானை *kārāṉai,* பெ.(n.) 1. முகில்; cloud. 2. கறுத்த யானை; black elephant. 3. காட்டுப் பலா; wild durian - *Cullenia excelsa* (சா.அக.).

[கார் + ஆனை.]

காரிக்கண்ணனார் *kāri-k-kaṇṇaṉār,* பெ. (n.) கடைச்சங்கம் மருவிய புலவர்களில் ஒருவர்; the poet who belonged to the last ancient Šaṅgam (சா.அக.).

காவிரிபூம்பட்டிணத்துக் காரிக்கண்ணனார் என்பவரும் இவரே. வணிகர் குலத்தவர். இவர் பாடிய பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு மற்றும் திருவள்ளுவர் மாலையில் இடம் பெற்றுள்ளன.

காரிக்கம் *kārikkam,* பெ.(n.) **காரிக்கன்** பார்க்க; see *kārikkaṉ* (செ.அக.).

காரிகடுமலை *kārikaḍumalai,* பெ.(n.) **காரீயமலை** பார்க்க; see *kārīyamalai* (சா.அக.).

[காரி + கடு + மலை.]

காரிகமூலி *kārigamūli,* பெ.(n.) 1. காட்டு முருங்கை; wild Indian horse radish - *Moringa concanensis.* 2. புனல் முருங்கை; oval-leaved Indigo - *Indigofera trita.* 3. ஆடாதோடை; a kind of plant eaten only by goats - *Justicia adhatoda.* 4. சிறு மாவிலங்கை; forest small lingam tree - *Crataeva religiosa.* 5. பூனை முருங்கை; jungle moringa - *Ormocarpum sennoides.* 6. பவளப் பூலா; wild moringa or coral berry tree - *Bryonia rhamnoides.* 7. கசப்பு முருங்கை; bitter moringa. 8. காரிகத்தைப் போக்கும் மூலிகை; any green herb curing eczema (சா.அக.).

[காரிகம் + மூலி.]

காரிகல் *kārikal,* பெ.(n.) நத்தைச்சூரி; bristly button-weed - *Spermacoce hispida* (சா.அக.).

[காரி + கல்.]

காரிகா *kāriga*, பெ.(n.) வறட்சுண்டி; ஆடு தின்னாப் பாளை; worm-killer, woody - *Aristolochia bracteata* (சா.அக.).

காரிகாலம் *kārikālam*, பெ.(n.) பாகற்கொடி; small bitter-gourd - *Momordica charantia* (சா.அக.).

[காரி + காலம்.]

காரியாற்றுத்துஞ்சியநெடுங்கிள்ளி *kāri-y-āṟṟu-t-tuñjiya-neḍuṅkiḷḷi*, பெ.(n.) சோழ பரம்பரையைச் சார்ந்தவன்; a king who belonged to Chōḻā dynasty.

[காரி + ஆறு + துஞ்சிய + நெடுங்கிள்ளி.]

உறையூரில் இருந்த இவன் கோவூர்கிழாரால் பாடப்பெற்றவன். சோழன் நலங்கிள்ளிக்குப் பகைவன். இவனை நெடுங்கிள்ளி என்றும் கூறுவர் (அபி.சிந்.).

[காரி + ஆறு + துஞ்சிய + நெடும் + கிள்ளி.]

காரியாறு *kāri-y-āṟu*, பெ.(n.) ஒரு ஆறு; a river.

[காரி + ஆறு.]

நெடுங்கிள்ளி என்னும் சோழன் இறந்த இடம் (அபி.சிந்.).

காரிரத்தம் *kārirattam*, பெ.(n.) 1. கருப்பு அரத்தம்; venous blood. 2. ஆடுதின்னாப் பாளை; worm killer, woody - *Aristolochia bracteata* (சா.அக.).

[காரி + ரத்தம்.]

காரிரத்னகவிராயர் *kāri-ratṉa-kavirāyar*, பெ.(n.) ஒரு மாலியர்; the person who belonged to the vaiṇavā caste.

இவர் திருநெல்வேலி மாவட்டம் ஆழ்வார் திருநகரியை அடுத்த பேறையூரில் சற்றேறக் குறைய 300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தவர். மாறனலங்காரவுரை, பரிமேலழகர் நுண் பொருண்மாலை முதலியன இயற்றியவர் (அபி.சிந்.).

காரிழைநாதம் *kāriḻai-nādam*, பெ.(n.) கந்தகம்; sulphur (செ.அக.).

[கார் + கழை + நாதம்.]

காரிவிகாரி *kārivigāri*, பெ.(n.) குதிரை; horse (சா.அக.).

[காரி + விகாரி.]

காரிவிதை *kāri-vidai*, பெ.(n.) கண்டங் கத்திரி விதை; seeds of Indian prickly night shade (சா.அக.).

[காரி + விதை.]

காரீடம் *kārīḍam*, பெ.(n.) எரு முட்டைக் குவியல்; heap of cow-dung cakes (சா.அக.).

[கார் + இடம்.]

காரீமை *kārīmai*, பெ. (n.) கொடிவேலி; Ceylon leadwort - *Plumbago zeylanica* (சா.அக.).

[கார் - காரீமை.]

காரீயச்செம்பி *kārīya-c-cembi*, பெ.(n.) செந்திராய்; a red plant of Mollugo (chick-weed) genus (சா.அக.).

[காரீயம் + செம்பி.]

காரீயச்செம்பு *kārīya-c-cembu*, பெ.(n.) காரீயத்தோடு மற்றச் சரக்குகளைச் சேர்த்து உருக்கி எடுக்கும் செம்பு; pure copper extracted from black lead by melting it with other ingredients (சா.அக.).

[காரீயம் + செம்பு.]

காரீயசத்துரு *kārīya-śatturu*, பெ.(n.) கருப்பு ஈயத்தின் பகைச் சரக்குகள்; enimical drugs of black lead.

[காரீயம் + Skt. சத்துரு.]

காரீயத்தின் பகைச் சரக்குகள் :
1. அண்டம்; fowl's egg or human skull. 2. தகட்டுத்தாள்; mica. 3. அயக் காந்தம்; calcined

oxide of magnetic iron. 4. இராசவர்த்தகம்; lapis lazuli. 5. கல்லுப்பு; sea-salt. 6. கல்நார்; asbestos. 7. கெந்தி; sulphur. 8. கிளிஞ்சில்; bi-valve shell. 9. கெவுரி; yellow arsenic. 10. சாத்திர வேதி;a mineral dissolvent. 11. நண்டு; river-crab. 12. நத்தை; snail. 13. நற் சுண்ணம்; calcium carbonate. 14. நிமிளை; bismuth or antimony. 15. வெடியுப்பு; nitre (சா.அக.).

காரியமலை *kāriya-malai,* பெ.(n.) காரீயம் வெட்டி எடுக்கும் மலை; mountain wherefrom black lead ore is dug out - *Black lead mine* (சா.அக.).

[கார் + ஈயம் + மலை.]

காரீயமித்துரு *kāriya-mitturu,* பெ.(n.) காரீயத்திற்கு வேண்டிய நட்பான (அனுகூலமான) சரக்குகள்; friendly drugs to black lead.

[காரீயம் + Skt. மித்துரு.]

1. கல் மதம்; bitumen. 2. இதளியம் (சூதம்); mercury. 3. செம்பு; copper. 4. தவளை; frog. 5. நாகம்; zinc. 6. பூ நாகம்; earth-worm. 7. மயில் (மயூரச்) செம்பு; copper from peacock's feather. 8. வங்கம்; lead. 9. வெள்ளி; silver (சா.அக.).

காரீரம் *kārīram,* பெ.(n.) குழலா தொண்டை; common caper - *Capparis aphylla alias C. Sodada.*

[கார் – காரீரம்]

இது ஒரு முட்செடி. இதன் பழத்தை உண்ணலாம். கொழுந்தைப் பொடி செய்து கொப்புளிக்கும் மருந்தாகப் பயன்படுத்தலாம். இப்பூடை பச்சையாகவே கொளுத்தினால் கொழுந்து விட்டு எரியும் (சா.அக.).

காருக்குளம்பு *kāru-k-kuḷambu,* பெ.(n.) கிராம்பு; clove (சா.அக.).

[கார் + குளம்பு]

காரும்பாதி *kārumpādi,* பெ.(n.) கரு வண்டு; black beetle (சா.அக.).

[கார் (கருநிறம்) → காரும்பாதி.]

காருராசி *kāru-rāśi,* பெ.(n.) கொடிவகை (மலை.); snake - gourd (செ.அக.).

காருகச்சி *kāru-kacci,* பெ.(n.) கக்கரிக்காய்; field - cucumber - *Cucumis melo* (சா.அக.).

[கார் – கச்சி]



காருடயூகம் *kāruḍa-yūgam,* பெ.(n.) கருடன் வடிவில் அமைக்கப்படும் ஒரு படைவகுப்பு; garuda-shaped array of an army. *"வீடுமனும் வகுத்தான் கருங்கா ருடயூகம்" (பாரத.மூன்றாம்போ.2) (செ.அக.).*

[கலுழன்→கருடன்→காருடன்+Skt. வியூகம்.]

காருடவிஞ்சை *kāruḍa-viñjai,* பெ.(n.) **காருடவிச்சை**[1] பார்க்க; see *kāruḍa-viccai.* *"காருடவிஞ்சை வித்தகர்" (பெரியபு. திருஞான.1062) (செ.அக.).*

[கலுழன்→கருடன்→காருடன் + விஞ்சை.]

காருடவிச்சை[1] *kāruḍa-viccai,* பெ.(n.) நஞ்சு மருத்துவம்; art of counteracting poison by charms, incantations, etc. (செ.அக.).

[கலுழன்→கருடன்→காருடன் + விச்சை.]

[வித்தை – விச்சை]

காருடவிச்சை² *kāruḍa-viccai,* பெ. (n.) ஏமாற்று விச்சை, ஏமாற்றுக்கலை; legerdemain, jugglery (செ.அக.).

[தெ.காரடமு→காரடம்→காருடம் + விச்சை.]

[வித்தை - விச்சை]

காருடன் *kāruḍaṉ,* பெ.(n.) ஏமாற்றுக்காரன்; jugglar.

[காரடன்→காருடன்.]

காருகத்திரி *kāru-kattiri,* பெ.(n.) தொண்டையில் விருவிருப்பை உண்டாக்கும் காரற் கத்திரி; a kind of brinjal the taste of which lends irritation to the throat; brinjal with an acrid taste (சா.அக.).

[காரு + கத்திரி.]

காருகத்தொழில் *kāruga-t-toḻil,* பெ.(n.) நெய்தற்றொழில் (சிலப்.5, 17, உரை); spinning, weaving (செ.அக.).

[காருகம் + தொழில்.]

காருகம்¹ *kārugam,* பெ.(n.) 1. நெய்யுந் தொழில் (சிலப்.5, 17, உரை); spinning and weaving. 2. ஊழிய வேலை; menial service, servile labour as carrying burdens (செ.அக.).

காருகம்² *kārugam,* பெ.(n.) இல்லறம்; life of a householder. *"காருக மடந்தை" (மணிமே.23, 105) (செ.அக.).*

காருகம்³ *kārugam,* பெ.(n.) குரோசாணி யோமம்; khorassan ajwaus-*Hyoscyamus niger* (சா.அக.).

காருகரணை *kāru-karaṇai,* பெ.(n.) காரற் கருணை; caustic potato; itching yam - *Amorphophallus campanullatus.* சாப்பிட்டால் தொண்டையில் விறுவிறுப்பை உண்டாக்கும் ஒரு வகைக் கரணைக் கிழங்கு. இதன் வேர் கொடிய காரமானது. சூடுண்டாக்க வெளிப்பூச்சு மருந்தாகப் பயன்படும். இதைத் துண்டித்து, புளியிட்டு ஊறுகாய் போடலாம். பாகிலிட்டுச் சமைத்து நாட்பட வைத்துப் பயன்படுத்தலாம். இதன் நச்சுத் தன்மையைப் போக்க இரண்டு மூன்று முறை கூட வேக வைக்க வேண்டி வரும் (சா.அக.).

[காரல் –காரு + கரணை]

காருகவடி *kāruga-v-aḍi,* பெ.(n.) கோள்களின் (கிரக) நிலை; position of a planet. *"காருகவடிப் பயின்று" (சிலப்.26: 25) (செ.அக.).*

[Skt. graha > த. காருகம். காருகம் + அடி.]

காருகவி *kārukavi,* பெ.(n.) விடத்தலை; ashy babool; sore-eye plant - *Dichrostachys cinera* (சா.அக.).

காருகன்¹ *kāruga<u>n</u>,* பெ.(n.) 1. நெசவுத் தொழில் செய்வோன்; weaver. *"கட்டு நுண்வினைக் காருகரிருக்கையும்" (சிலப். 5:17).* 2. துணி வெளுப்பவன் (வண்ணான்); washerman. 3. ஓவியன் (யாழ்.அக.); painter (செ.அக.).

[காருகம் – காருகன்]

காருகன்² *kārugaṉ,* பெ.(n.) கொலை செய்பவன் (சூடா.); murderer (செ.அக.).

காருடதந்திரம் *kāruḍa-tandiram,* பெ.(n.) நஞ்சு நீக்கும் மந்திரங்கள் முதலியவற்றைக் கூறும் நூல்; a work dealing with the art of removing poison with charms, etc. (செ.அக.).

[Skt. gāruḍa+ tantra த. காருடதந்திரம்.]

காருடபுராணம் *kāruḍa-purāṇam,* பெ.(n.) ஒரு தொன்ம நூல்; a kind of mythology book (அபி.சிந்.).

காருடம்[1] *kārudam,* பெ.(n.) 1. கருட குழுகாயம்; a flock of kites. *"காருடங் கண்ட பாந்தட் கணமென" (கந்தபு. தாரகன்வ.54).* 2. கலைகள் அறுபத்து நான்கனுள் நஞ்சு நீக்கும் கலை; art of removing poison with charms, mantras, etc., invoking Garuḍa, one of aṟupattu-nāṅgu kalai. 3. நூற்றி யெட்டு அறிவுப் பகுதிகளுள் (உபநிடதங் களுள்) ஒன்று; name of an Upanisad. 4. பதினெண் தொன்மங்களுள் ஒன்றான கருட புராணம் (கந்தபு.பாயி.55); a chief purāṇa. 5. பச்சைக் கல்; green stone, igneous rock,composed chiefly of felspar and hornblend. *"முத்தந் துப்புக் காருடம்" (திருவிளை.மாணிக்.48) (செ.அக.).*

[கார் – காருடம்]

காருடம்[2] *kārudam,* பெ.(n.) 1. மருக்காரை; emetic-nut. 2. கொடிவகை; snake-gourd - *Trichosanthes anguina* (செ.அக.).

காருவன் *kāruvaṉ,* பெ.(n.) **காருவாகன்** பார்க்க; see *kāruvāgaṉ* (செ.அக.).

காருவாகன் *kāruvāgaṉ,* பெ.(n.) துணிகளைத் துவைப்போன் (வண்ணான்); washerman. *"சாணகம் உவர்கார முதலியவற்றால் காருவாகன்..... நின்மாக்கா நிற்பன்" (சி.சி.2, 52, மறை.) (செ.அக.).*

[கார் + வாகன்.]

காருளநாங்கி *kāruḷanāṅgi,* பெ. (n.) கொத்தான்; air-plant, air creeper - *Cassytha filliformis* (சா.அக.).

[காருளம் + நாங்கி.]

காருன்னி *kāruṉṉi,* பெ.(n.) ஆடுதின்னாப் பாளை; worm killer; woody - *Aristolochia bracteata* (சா.அக.).

காரூடகூடன் *kārūḍa-kūḍaṉ,* பெ.(n.) ஒரு *சிவகூட்டத் தலைவன்*; one of the head of celestial host to Šivā (அபி.சிந்.).

காரைக்கட்டி *kārai-k-kaṭṭi,* பெ. (n.) 1. காய்ச்சுக் கட்டி அல்லது பற்காவிக்கட்டி; catechu or black catachu - *Catechu nigrum of chemists.* 2. ஒரு பல் நோய்; a disease of the teeth - *Calcareous deposit.*

[காரை + கட்டி.]

இதனால் ஊத்தைக் கட்டி பல்லின் மேல் இருக்கும் பளிங்கு விழுந்து அகலும் (சா.அக.).

காரைக்கட்டு *kārai-k-kaṭṭu,* பெ.(n.) பல்லின் அடியில் ஊத்தை படர்கை; formation of hard crust or concretion in the teeth (சா.அக.).

[காரை + கட்டு.]

காரைக்கரிக்கான் *kārai-k-karikkāṉ,* பெ.(n.) உளுந்து; black-gram - *Phaseolus mungoglaber* (சா.அக.).

[காரை + கரிக்கான்.]

காரைத்தேகிகம் *kārai-t-tēgigam,* பெ.(n.) துத்தி; Indian marshmallow - *Sida mauritiana* (சா.அக.).

காரைப்பழம் *kārai-p-paḻam,* பெ.(n.) காரைச்செடியின் பழம்; honey thorn fruit (சா.அக.)

[காரை + பழம்.]

காரைப்பொடி *kārai-p-poḍi,* பெ.(n.) காய்ந்த ஒரு சிறு மீன்; a small bride-fish - *Equuala genus* (சா.அக.).

[காரை + பொடி.]

காரையெலும்பு *kārai-y-elumbu,* பெ.(n.) கழுத்தின் கீழ் இரு பக்கமும் தோள் மூட்டுவரை அமைந்துள்ள எலும்பு; collar bone.

[காரை + எலும்பு.]

காரைவேர் *kārai-vēr,* பெ.(n.) 1. காரைச் செடியின் வேர்; root of kārai plant. 2. பல்லினடி; the bottom or root of the teeth at the cemented portions (சா.அக.).

[காரை + வேர்.]

கால்கட்டு *kāl-kaṭṭu,* பெ.(n.) ஆணுக்குத் திருமணம் மூலமாக ஏற்படுத்தும் கட்டுப்பாடு; fetters of marriage as a check on way-ward sons. *பையன் திருந்த வேண்டும் என்றால் அவனுக்குக் கால்கட்டு போட வேண்டும்.*

[கால் + கட்டு.]

கால்கடுதாசி *kāl-kāḍudāśi,* பெ.(n.) திடீர் பதவி விலகல் கடிதம்; letter of resignation, especially one written huffily. *அதிகாரி திட்டியதால் கால்கடுதாசியை நீட்டிவிடக் கூடாது.*

[கால் + கடுதாசி.]

கால்கடுப்பு *kāl-kaḍuppu,* பெ.(n.) 1. கால்குடைச்சல்; boring pain in the leg. 2. காலின் அடிப்பாகம் கடுத்தல்; acute pain in the foot (சா.அக.).

[கால் + கடுப்பு.]

கால்கடுவன் *kāl-kaḍuvaṉ,* பெ.(n.) குழந்தைகட்கு முழங்காலின் கீழுள்ள கணைக்காலில் கருப்புப் புள்ளிகள் ஏற்பட்டு, குருக்களாகத் திரண்டு துன்புறுத்தும் படையைப் போன்ற ஒரு நோய்; a very rare disease of the shin in children, characterised by dark spots about the size of pin's head evidently vascular, developed in the dilated vessels of the shin.

[கால் + கடுவன்.]

இந்நோய் பெண்களுக்கும் வரும் (சா.அக.).

கால்கரப்பன் *kāl-karappaṉ,* பெ.(n.) முழங்காலுக்குக் கீழே காணும் கரப்பன்; an assemblage of papules surrounding each leg like a shin-guard (சா.அக.).

[கால் + கரப்பன்.]

கால்கரமசதி *kāl-kara-maśadi,* பெ.(n.) கைகால்களில் உண்டாகும் களைப்பு; exhaustion of the limbs (சா.அக.).

[கால் + Skt. கரம் + அசதி.]

கால்குடைச்சல் *kāl-kuḍaiccal,* பெ.(n.) 1. காலில் ஏற்படும் குத்தல் வலி; boring pain in the leg. 2. ஊதை (வாதம்) வலி; rheumatic pain in the leg (சா.அக.).

[கால் + குடைச்சல்.]

கால்கைகுறண்டல் *kālkai-kuṟaṇḍal,* பெ.(n.) கை கால் சுருட்டி இழுத்தல்; painful spas-modic contractions of the limbs; spasms of the leg and the arm - *Cramps* (சா.அக.).

[கால் + கை + குறண்டல்.]

கால்கைபோட்டுக்கிட-த்தல் *kālkai-pōṭṭu-k-kiḍa-,* 4 செ.கு.வி. (v.i.) கால் கை நீட்டியபடி மல்லாந்து கிடத்தல்; stretching the body and limbs carelessly in a horizontal po-sition; lying with the limbs stretched - *Sprawl* (சா.அக.).

[கால் + கை + போட்டு + கிட-.]

கால்கைமுடக்கு *kāl-kai-muḍakku,* பெ.(n.) கால் கை எழாமற் செய்யும் ஒரு காலை நோய்; a painful disease as rheumatism affecting the joints; atrophy of the limbs as from paralysis (சா.அக.).

[கால் + கை + முடக்கு.]

கால்கையோச்சல் *kālkai-y-ōccal,* பெ.(n.) வலிமை இன்மையால் கால் கை சோர்வடைதல்; exhaustion of the limbs through bodily weakness (சா.அக.).

[கால் + கை + ஓய்ச்சல்–ஓச்சல்.]

கால்கைவிட்டுபோ–தல் *kāl-kai-viṭṭu-pō-,* 8 செ.கு.வி. (v.i.) கால் கை சோர்வடைதல்; exhaustion of the limbs (சா.அக.).

[கால் + கை + விட்டு + போ–தல்.]

கால்கைவிழு–தல் *kāl-kai-viḻu,* 2 செ.கு.வி. (n.) பக்க வலிப்பி (பாரிச வாயுவி)னால் கால் கை சோர்வடைதல்; loss of sensation of the limbs through paralysis (சா.அக.).

[கால் + கை + விழு–.]

கால்சட்டை *kāl-šaṭṭai,* பெ.(n.) ஆண்கள் அணியக்கூடிய, இரு பகுதிகளாகப் பிரித்துத் தைத்த முழுங்கால் வரை உள்ள உடை; close fitting knee length shorts, Bermudas.

[கால் + சட்டை.]

கால்சீரகம் *kāl-šīragam,* பெ.(n.) கருஞ் சீரகம்; black cumin - *Nigella sativa* (சா.அக.).

[கால் + சீரகம். கால் = கருப்பு.]

கால்தட்டல் *kāl-taṭṭal,* பெ.(n.) முட்டிக்கால் தட்டல்; the condition in which the knees come together while the ankles are far apart knock knee - *Genu valgum* (சா.அக.).

[கால் + தட்டல்.]

கால்தடுக்கல் *kāl-taḍukkal,* தொ.பெ.(n.) கால் இடறுகை; tripping in walking or running, stumble.

[கால் + தடுக்கல்.]

கால்தாபரி *kāl-tābari,* பெ.(n.) தொடரிப்பூடு; small jujube tree - *Scutia indica* (சா.அக.).

[கால் + தாபரி.]

கால்துரத்தி *kāl-turatti,* பெ. (n.) ஆதொண்டை; thorny caper - *Capparis horrida alias C.zeylanica* (சா.அக.).

கால்தோற்றம் *kāl-toṟṟam,* பெ.(n.) பிள்ளைப் பேற்றின் போது குழந்தையின் கால் வெளிக் காணல்; version which causes the feet to present - *Podalic version* (சா.அக.).

[கால் + தோற்றம்.]

கால்நடுக்கம் *kāl-naḍukkam,* பெ.(n.) கிழத் தன்மையாலும், வலிமை இன்மையாலும் காலிற் காணும் நடுக்கம்; trembling of the leg due to old age or weakness (சா.அக.).

[கால் + நடுக்கம்.]

கால்நடுக்குவாதம் *kāl-naḍukku,* பெ.(n.) கால் கை எப்பொழுதும் உதறும்படிச் செய்து, நடக்க முடியாமல் தள்ளாடச் செய்யும் நரம்பைப் பற்றிய ஊதை (வாத) நோய்; a nervous disease marked by a continuous trembling of the limbs, rigidity of the muscles and difficulty in maintaining one's balance while walking; shaking palsy - *Paralysis agitans* (சா.அக.).

*[கால் + நடுக்கு + **Skt.** வாதம்.]*

கால்நடையாக *kāl-naḍaiyāga,* வி.அ.(adv.) கால்களால் நடந்து; on foot. *நாட்டுப்புற மக்கள் எவ்வளவு தொலைவானாலும் கால்நடையாகவே செல்வார்கள்.*

[கால் + நடை + ஆக.]

கால்நிறு-த்தல் *kāl-niṟu-*, 5 செ.குன்றா.வி.(v.i.) காற்றுறை உண்டாக்கும் உணவு வகைகளை நிறுத்தி பதவுணா (பத்தியம்) உண்ணல்; observance and regulation of diet by avoiding flatulent substances (சா.அக.).

[கால் + நிறு-த்தல்.]

கால்பாதசன்னிவாதம் *kāl-pāda-šanni-vādam,* பெ.(n.) முழங்காலின் கீழ் நெருப்பைப் போல் சூடுண்டாகி, குத்தலும், வலியும் ஏற்பட்டு நடக்க முடியாமல் செய்யும் ஒரு இழுப்பு (வாத) நோய்; a kind of rheumatism affecting the lower limb with inflammation and acute pain and rendering the patient unable to walk (சா.அக.).

*[கால் + பாதம் + **Skt.** சன்னிவாதம்.]*

கால்பானம் *kāl-pāṉam,* பெ.(n.) மருந்திற்குப் பயன்படுத்தும் பிசின்; resin or gum used in medicine - *Galbanum* (சா.அக.).

[கால் + பானம்.]

கால்பிடிப்பு *kāl-piḍippu,* பெ.(n.) இழுப்பு நோயால் கால் இழுத்துப் பிடிக்கை; stiffening or contraction of the muscles of the leg due to rheumatism or other nervous affections (சா.அக.).

[கால் + பிடிப்பு.]

கால்பிளவு *kāl-piḷavu,* பெ.(n.) குதிகால் வெடிப்பு; a crack or fissure in the heel (சா.அக.).

[கால் + பிளவு.]

இது சில வேளை நடக்க முடியாமற் செய்யும் நோய் (சா.அக.).

கால்பின்னல் *kāl-piṉṉal,* பெ.(n.) 1. வலிமை இன்மையாலோ அச்சத்தாலோ கால் முறுக்கிக் கொள்ளல்; becoming cross-legged through weakness, nervous debility or fear. 2. முட்டிக்கால் தட்டல்; to be knock-kneed (சா.அக.).

[கால் + பின்னல்.]

கால்புள்ளி *kāl-puḷḷi,* பெ.(n.) பொருள் புரியும்படி நிறுத்திப் படிக்க சொற்றொடரின் இடையில் அல்லது பல இலக்க எண்களில் எண்ணின் இடத்தை அறிய இடப்படும் குறி; comma.

[கால் + புள்ளி.]

கால்பேனம் *kāl-pēṉam,* பெ.(n.) **கால்பானம்** பார்க்க; see *kāl-pāṉam* (சா.அக.).

கால்மண்டலம் *kāl-maṇḍalam,* பெ.(n.) நாற்பது அல்லது நாற்பத்தி எட்டு நாளின் கால் பாகம் அதாவது பத்து அல்லது பன்னிரண்டு நாள்; a period of 10 or 12 days (சா.அக.).

[கால் + மண்டலம்.]

கால்மாட்டுவைத்தியன் *kālmāṭṭu-vaittiyaṉ,* பெ. (n.) போலி மருத்துவன்; a pretender to medical skill - *Quack* (சா.அக.).

*[கால்மாட்டு + **Skt.** வைத்தியன்.]*

கால்மாடுதலைமாடாக்கல் *kālmāḍu-talai-māḍākkal,* தொ.பெ. (vbn.) 1. படுக்கையில் கால் பக்கத்தைத் தலைப்பக்கமாக மாற்றல்; taking an inverted position while lying on the bed. 2. பொருட்கள் ஒழுங்கற்ற நிலையில் இருக்கை; disordered, disarrange (சா.அக.).

[கால் + மாடு + தலை + மாடு + ஆக்கல்.]

கால்மாடுதலைமாடு *kālmāḍu-talaimāḍu,* பெ. (n.) அடிமுடி மாற்றம்; upside down - *Topsy-turvy* (சா.அக.).

[கால் + மாடு + தலைமாடு.]

கால்முடக்குவாதம் *kāl-muḍakku-vādam,* பெ.(n.) காலை முடக்கி நொண்டியாக அல்லது படுத்தபடியாகக் கிடக்கச் செய்யும்

ஓர் ஊதை நோய்; a kind of rheumatism causing stiffening of the joints or prostration of the limbs thereby rendering the patient unable to get up from his bed (சா.அக.).

[கால் + முடக்கு + Skt. வாதம்.]

கால்முடங்குவாதம் *kāl-muḍaṅgu-vādam,* பெ.(n.) நரம்பை இழுத்து மேலே சுருட்டி வைப்பதனால் கால் குடைச்சல் கண்டு நடக்க முடியாமற் செய்யும் ஓர் ஊதை நோய்; a kind of nervous contraction of the legs with acute pain rendering the patient unable to walk (சா.அக.).

[கால் + முடங்கு + Skt. வாதம்.]

கால்முடம் *kāl-muḍam,* பெ.(n.) கால் நொண்டி; lameness - *Talipes* (சா.அக.).

[கால் + முடம்.]

கால்முளி *kāl-muḷi,* பெ.(n.) காற்பரடு; ankle (சா.அக.).

[கால் + முளி.]

கால்முறி-தல் *kāl-muṟi-,* 4 செ.கு.வி.(v.i.) கால் முறிவு; fracture of the leg (சா.அக.).

[கால் + முறி-.]

கால்மேசு *kāl-mēšu,* பெ.(n.) காலில் அணியும் உறைவகை; socks or stockings (செ.அக.).

[கால் + மேசு.]

கால்வலி *kāl-vali,* பெ.(n.) காலில் உண்டாகும் வலி; pain in the leg (சா.அக.).

[கால் + வலி.]

கால்வாங்கு-தல் *kāl-vāṅgu-,* செ.கு.வி. (v.i.) 1. இறத்தல்; to die. 2. காற்று வாங்கல்; enjoy to the breeze (சா.அக.).

[கால் + வாங்கு-தல்.]

கால்வாய்க்குப்போ-தல் *kālvāykku-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) மலங்கழித்தல்; easing, stooling (சா.அக.).

[கால்வாய்க்கு + போ-தல்.]

கால்விருத்தி *kāl-virutti,* பெ.(n.) பொரும்பிலி (ஒரு பயற்றஞ் செடி); a cereal plant (சா.அக.).

கால்வீக்கம் *kāl-vīkkam,* பெ.(n.) பொதுவாகச் சூட்டினால் ஏற்படும் வீக்கம்; swelling of the leg generally due to inflamation of wound or injury.

[கால் + வீக்கம்.]

வேறுவகைக் கரணியங்களாலும் காலில் வீக்கம் ஏற்படும். அவை :

1. வெள்ளை நோய் நீரால் காலில் உண்டாகும் நீங்காத வீக்கம்.

2. இழுப்பு நோயால் காலிற் காணும் வீக்கம்.

3. பாண்டு நோயினால் காலில் பித்தநீர் இறங்கிக் காணும் வீக்கம்.

4. பெண்கள் கருவுற்ற காலத்தில் காணும் வீக்கம்.

5. பெண்களுக்கு மாதவிடாய் ஒயும் காலத்தில் காணும் வீக்கம்.

6. பெண்களுக்கு மாதவிடாய் சரியாகக் காணாமல் தடைப்படுங் காலத்திற் காணும் வீக்கம்.

7. சொறி, கரப்பானால் காணும் வீக்கம்.

8. நச்சுக் காய்ச்சலினால் வயிற்றில் காய்ச்சல் கட்டி ஏற்படுவதினால் காணும் வீக்கம்.

9. வலிமையின்மை, சோகை, நச்சுக் காய்ச்சல் முதலிய கரணங்களை முன்னிட்டுக் காணும் வீக்கம் (சா.அக.).

காலக்கிரமநோய் *kālakkirama-nōy,* பெ. (n.) நாளடைவில் வரும் நோய்கள்; diseases occurring in course of time, age, etc. (சா.அக.).

[காலம் + கிரமம் + நோய்.]

காலகம் *kālagam,* பெ.(n.) மரவகை (மலை.); marking-nut tree - *Semecarpus anacardium* (செ.அக.).

காலகவி *kāla-kavi,* பெ.(n.) பிரகலாதனின் குமரன் விரோசநன் மகன்; son of virosana.

[கால + கவி.]

விளாமரமாக இருந்து கண்ணன், பலராமனால் இறந்தவன் (அபி.சிந்.).

காலகார்முகன் *kāla-kār-mugaṉ,* பெ.(n.) அரக்கன் சுமாலியின் மகன்; son of a giant Šumāli (அபி.சிந்.).

[கால + கார் + முகன்.]

காலகாலசோழன் *kāla-kāla-cōḻaṉ,* பெ.(n.) சுந்தரச்சோழன் மகன்; the son of Šundara-c-cōḻaṉ.

[காலகால + சோழன்.]

காலகாலன் *kāla-kālaṉ,* பெ.(n.) சிவன்; Šivā, as one who subdued yamā. *"கால காலனைக் கம்பனெம்மானை" (தேவா.1048, 1) (செ.அக.).*

[காலன் + காலன்.]

காலகேது *kāla-kēdu,* பெ.(n.) பாதாளத்தில் உள்ள அரக்கன்; giant who live in abyss hell.

[காலன் + கேது.]

காலகௌசிகன் *kāla-kaušigaṉ,* பெ.(n.) காசியில் இருந்த ஒரு மறையோன்; the Brahmin who lived in kāši.

இவன் விசுவாமித்திரனால் ஏவப்பட்டுச் சந்திரமதியை விலைக்கு வாங்கியவன். இவனுக்குக் காளகண்டன் என்ற பெயரும் உண்டு (அபி.சிந்.).

காலங்காட்டிலும் *kālaṅ-kāṭṭilum,* வி.எ. (adv.) விடியற்காலையில்; early in the morning (செ.அக.).

[காலம் + காட்டிலும்.]

காலங்கார்த்தல் *kālaṅkārttal,* பெ.(n.) விடியற்பொழுது; the break of day as the first appearance of light in the morning (சா.அக.).

[காலம் + கார்த்தல் (புலர்தல்).]

காலசங்கதி *kāla-šaṅgadi,* பெ.(n.) நடப்புச் செய்தி; current news, events of the day (செ.அக.).

[காலம் + Skt. சங்கதி.]

காலசங்கை *kāla-šaṅgai,* பெ. (n.) 1. மதிப்பிடப்பட்ட (உத்தேச) கால அளவு; approximate time, as guessed. 2. காலக் கணக்கு; reckoning of time. 3. குறித்த கால அளவு கடந்து போதல் (காலாவதி); specified period, time-limit (செ.அக.).

[காலம் + Skt. சங்கை.]

காலசாகம் *kālašāgam,* பெ. (n.) 1. கறிவேப்பிலை; curry leaf - *Murraya koenigii.* 2. துளசி; holy basil (சா.அக.).

காலசாலி *kālašāli,* பெ.(n.) கறுப்பரிசி; black rice (சா.அக.).

[கால்→ கால + சாலி. கால் = கருப்பு.]

காலசிக்குவம் *kālašikkuvam,* பெ.(n.) கறுப்பு நாக்கு; black tongue (சா.அக.).

[கால் + சிக்குவம். கால் = கருநிறம்.]

காலசிங்கி *kālašiṅgi,* பெ.(n.) தவளை நெய்யை மயிற் துத்தத்தில் தடவி அதனின்று இறக்கிய எண்ணெயுடன் கெந்தி, காரம், நாபி, சாரம் முதலிய சரக்குகளும் சேர்த்துக் குழப்பிய மருந்து; an ointment prepared by mixing sulphur, borax, aconite, sal ammoniac etc. with the medicated oil extracted by steeping blue vitriol in frog's ghee (சா.அக.).

[கால + சிங்கி.]

காலசித்தன் *kāla-šittaṉ,* பெ. (n.) சூர பதுமனின் அமைச்சன்; minister of Šūrapadmaṉ (அபி.சிந்.).

[கால + சித்தன்.]

காலசூத்திரம் *kāla-šūttiram,* பெ.(n.) ஒரு நரகம்; a hell. *"காலசூத்திர நரகிடை வீழ்த்தினார்" (குற்றா.தல.கவுற்சன.68) (செ.அக.).*

காலசெயமதம் *kālašeyamadam,* பெ.(n.) தயிர்; curd (சா.அக.).

காலசேயம் *kāla-šēyam,* பெ.(n.) மோர் (பிங்.); buttermilk (செ.அக.).

காலஞானம் *kāla-ñāṉam,* பெ. (n.) சிவபெருமான் மலைமகளுக்கு அருளிய தாகக் கதைகளில் கூறப்படும் மருத்துவ

முறைகளடங்கிய ஒரு நூல்; a treatise on medicine, said to have been preached by Šiva to Malai-magaḷ (சா.அக.).

[கால + ஞானம்.]

காலடிமண் *kāladi-man,* பெ.(n.) பாதத்தின் அடியினால் பதிந்த மண்; the mud impressed or trampled by human feet.

[காலடி + மண்.]

இது மந்திரவினைக்குப் பயன்படும் (சா.அக.).

காலத்துரத்தி *kāla-t-turatti,* பெ.(n.) ஆதொண்டை; thorny caper - *Capparis horrida alias C.Zeylanica* (சா.அக.).

[காலம் + துரத்தி.]

காலதத்துவம் *kāla-tattuvam,* பெ.(n.) தன் இன்பங்களை (போகம்) அளக்கும் காலம் என்னும் தூய உண்மை (சுத்தாசுத்த தத்துவம்) (சி.போ.பா.2, 2, பக்.144); Categeory of time, which determines the duration of soul's experiences, one of seven Šuttā-Šutta-tattuvam (செ.அக.).

காலதருமம் *kāla-tarumam,* பெ.(n.) காலவியல்பு; spirit of the age (செ.அக.).

[காலம் + Skt. தருமம்.]

காலதானம் *kāla-dānam,* பெ. (n.) இறப்பிலிருந்து மீளுமாறு (உய்யுமாறு) காலனுக்கு அன்புடன் செய்யும் கொடை (திவ்.நான்மு.52, வ்யா, அரும்.); gifts to propitiate yama to avert death (செ.அக.).

[Skt. kāla + dāna > த. காலதானம்.]

காலதிண்டுகம் *kāla-tiṇḍugam,* பெ.(n.) கருங்காலி; a black variety of ebony - *Diospyros ebenum* (சா.அக.).

[காலம் + திண்டுகம்.]

காலதேசவர்த்தமானம் *kāla-dēša-varttamāṉam,* பெ. (n.) கால இடங்களின் நிலைமை; time, place and circumstance, milieu, environment, surrounding circumstances (செ.அக.).

[காலம் + Skt. தேசம் + வர்த்தமானம்.]

காலதேவன் *kāla-dēvaṉ,* பெ.(n.) கூற்றுவன் (யமன்); god of death.

[காலம் + தேவன்.]

காலப்பிரசவம் *kāla-p-pirašavam,* பெ.(n.) 1. காலமுறைப்படி உண்டாகும் பிள்ளைப்பேறு; child-birth taking place after full time pregnancy, as opposed to *agāla-p-pirašavam.* 2. துன்பமான பிள்ளைப்பேறு; protracted or tedious labour (சா.அக.).

[காலம் + Skt. பிரசவம்.]

காலப்பிரமம் *kāla-p-piramam,* பெ. (n.) காலமாகிய பரம்பொருள்; time,as the Supreme Being (செ.அக.).

[காலம் + Skt. பிரமம்.]

காலப்போக்கில் *kāla-p-pōkkil,* வி.அ.(adv.) காலம் செல்லச் செல்ல; in the course of time. *சில நகரங்கள் காலப்போக்கில் புதையுண்டன. இந்தக் கோயிலைப் பற்றிப் பல கட்டுக்கதைகள் காலப்போக்கில் வளர்ந்து விட்டன.*

[காலம் + போக்கில்.]

காலபரிச்சேதம் *kāla-pari-c-cēdam,* பெ. (n.) 1. காலத்தால் ஒரு பொருளை அளவிடுகை; determination or ascertain-ment of anything from time. *"ஒரு காலத்துண் டின்றொருகாலத் தெனுங் காலபரிச்சேதம்" (வேதா.சூ.36).* 2. கால வரையறை; time-limitation (செ.அக.).

[காலம் + Skt. பரிச்சேதம்.]

காலபரிபாகம் *kāla-paribāgam,* பெ.(n.) காலத்தின் முதிர்ச்சி நிலை; fulness of time (செ.அக.).

[காலம் + Skt. பரிபாகம்.]

காலபலம் *kālapalam,* பெ.(n.) கருவுற்ற காலத்தையும், பிறந்த நேரத்தையும், பருவ காலத்தையும் முன்னிட்டு கோள்களின் நிலைப்படி ஒருவருக்கேற்படும் நன்மை தீமைகள்; one's fortune, health or otherwise as determined according to the disposition of the planets during the time of conception, or at the time of one's birth or at the approach of the different stages of life during one's life-time (சா.அக.).

[காலம் + பலம்.]

காலபுட்பம் *kālaputpam,* பெ.(n.) நன்னாரி; Indian sarsaparilla - *Hemidesmns indicus* (சா.அக.).

[காலம் + Skt. புட்பம்.]

காலபேதவிரேசனம் *kālapēdavirēšanam,* பெ. (n.) கோடை, மழை, பனி முதலிய காலங்களுக்குத் தக்கவாறு வயிற்றுப் போக்கிற்குக் கொடுக்கும் முறையான மருந்துகள்; purgatives prescribed upon due consideration to the weather conditions such as summer, rainy or dew season prevailing at the time (சா.அக.).

[காலம் + Skt. பேதவிரேசனம்.]

காலபேதி *kāla-pēdi,* பெ. (n.) 1. காலத்தை ஒட்டி உண்டாகும் வயிற்றுப்போக்கு; purgation or diarrhoea occuring to climatic condition. 2. உமட்டலும் வயிற்றுப்போக்கும்; Cholera (சா.அக.).

[காலம் + பேதி.]

காலபைரவரசம் *kāla-pairavarašam,* பெ. (n.) யமனும் கண்டு அஞ்சும்படியான மருந்து; an all healing drug at the efficacy of which even yama, the god of death is overawed (சா.அக.).

[காலம் + Skt. பைரவரசம்.]

காலபோசனம் *kāla-bōšanam,* பெ.(n.) அந்தந்த காலத்தில் தவறாமல் எடுத்துக் கொள்ளும் உணவு; timely meal (செ.அக.).

[காலம் + Skt. போசனம்.]

காலம்கடத்து-தல் *kālam-kadattu-,* 5 செ.கு.வி. (v.i.) வேண்டுமென்றே சுணக்கம் (தாமதம்) செய்தல்; delay; protract. *ஏன் தேர்வுக்குப் பணம் கட்டாமல் காலம் கடத்துகிறாய்?*

[காலம் + கடத்து-தல்.]

காலம்காலமாக *kālam-kālamāga,* வி.அ. (adv.) நீண்ட நெடுங்காலமாக; for ages, alons *காலம் காலமாகக் காவிரி ஓடிக் கொண்டு தான் இருக்கிறது.*

[காலம் + காலம் + ஆக.]

காலம்செல்-தல் *kālam-cel-,* 13 செ.கு.வி. (v.i.) இறப்பை மங்கல வழக்காகக் கூறும் முறை; euphemistically way of telling a death; pass away. *அவர் எந்த ஆண்டு காலம் சென்றார்?*

[காலம் + செல்-தல்.]

காலம்தள்ளு-தல் *kālam-tallu-,* 5 செ.கு.வி. (v.i.) ஏதேனும் ஒரு வசதிக் குறைவுடன் மகிழ்ச்சி இல்லாமல் வாழ்க்கை நடத்துதல்; lead a difficult life as a result of deprivation; get on. *வட இந்தியாவில் இருக்கும்வரை ஈரட்டி (ரொட்டியைச்) சாப்பிட்டே காலம் தள்ள வேண்டியதாயிற்று. இனிமேலும் உன்னோடு காலம் தள்ள முடியாது.*

[காலம் + தள்ளு-தல்.]

காலம்தாழ்த்து-தல் *kālam-tālttu-,* 5 செ.கு.வி. (v.i.) **காலம்கடத்து-தல்** பார்க்க; see *kālam-kadattu-.*

[காலம் + தாழ்த்து-தல்.]

காலம்நெருங்கல் *kālam-neruṅgal*, பெ.(n.) 1. சாவு ஏற்படுதல்; approach of death. 2. வாழ்நாள் முடிதல்; reaching the end of one's life time (சா.அக.).

[காலம் + நெருங்கல்.]

காலம்முடி–தல் *kālam-muḍi-*, 4 செ.கு.வி. (v.i.) வாணாள் (ஆயுள்) முடிதல்; completion of one's life-time (சா.அக.).

[காலம் + முடி–தல்.]

காலமரணம் *kāla-maraṇam*, பெ.(n.) 1. கால ஒழுங்கின்படி ஏற்படும் இயல்பான சாவு; natural death. 2. கொடிய சாவு; cruel death (சா.அக.).

[காலம் + மரணம்.]

காலமாய்விடல் *kālamāy-viḍal*, பெ.(n.) சாவு; dying; reaching the end of one's life time (சா.அக.).

[காலமாய் + விடல்.]

காலமிருத்து *kāla-miruttu*, பெ.(n.) குறித்த (விதித்த) காலத்தில் இறக்கை; death at the destined moment, dist. tr. akāla-mirutu (செ.அக.).

[காலம் + இருத்து.]

காலமிழ்தண்ணீர் *kālamiḻ-taṇṇīr*, பெ.(n.) 1. கணுக்கால் மறையும் அளவுள்ள தண்ணீர்; water sufficient to cover the ankle portions. 2. கணுக்கால் வரை உள்ள தண்ணீர்; water ankle-deep (சா.அக.).

மறுவ. முழங்கால்தண்ணீர்

[கால் + அமிழ் + தண்ணீர்.]

காலமீரம் *kālamīram*, பெ.(n.) பளிங்கு; crystal glass (சா.அக.).

காலமுட்டி *kālamuṭṭi*, பெ.(n.) ஒரு நோய்; an unknown disease (சா.அக.).

[கால + முட்டி.]

காலமுனி *kāla-muṉi*, பெ.(n.) ஒரு முனிவர்; a saint (அபி.சிந்.).

[காலம் + முனி.]

காலமூன்று *kālamūṉṟu*, பெ. (n.) 1. காலை, பகல், மாலை எனும் முக்காலம்; past, present and future. 2. இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனும் முப்பொழுது; morning, noon and evening. 3. வெயில், மழை, பனிக் காலங்கள்; the three seasons of the year as summer, rainy and winter. (சா.அக.).

[காலம் + மூன்று.]

காலமே *kālamē*, வி.எ.(adv.) விடியற் காலையில்; in the morning, early, bed-times (செ.அக.).

[காலை→காலமே.]

காலமேகம் *kāla-mēgam*, பெ. (n.) காளமேகம்; black cloud appearing at the end of a yaga. *"காலமேக மென்னவே யிடித்ததிர்ந்து" (திருவாலவா.36:19)* (செ.அக.).

[கால் = கருப்பு. கால் + மேகம்.]

காலமேகாட்டியும் *kālamē-kāṭṭiyum*, வி.எ. (adv.) அதிகாலையில்; very early in the morning dawn. (செ.அக.).

[காலை→காலமே + காட்டியும். (கொ.வ)]

காலமேசி *kālamēśi*, பெ.(n.) ஒரு கொடி; an unknown creeper (சா.அக.).

[காலம் + மேசி.]

காலமேசம் *kāla-mēśam*, பெ. (n.) சாயமூட்டும் வேர் (சாய வேர்); madder of Bengal; chay root - *Olden landia umbellata* (சா.அக.).

[காலம் + மேசம். (மூலம் – மூசம் – மேசம்)]

காலயந்திரம் *kāla-yandiram*, பெ. (n.) 1. காலத்தைக் குறிக்கும் இயந்திரம்; a machine or other instrument for measuring or showing the progress of time; clock or watch, time-piece.

2. காலக்குறியறி இயந்திரம்; an apparatus for registering atmospheric phenomena - *Meteorograph*. 3. காலச் சக்கரம்; cycle of time (சா.அக.).

[காலம் + யந்திரம்.]

காலராத்திரி *kāla-rāttiri,* பெ.(n.) 1. உலக (கற்ப) முடிவிலுள்ள நீண்ட இரவு; the long night that envelopes the whole world at its final destruction. 2. துன்பம் விளைக்கும் இரவு; night of distress, as seemingly long. 3. துர்க்கா சத்தியின் ஒரு வேறுபாடு (பேதம்); one of the manifestations of Durga (செ.அக.).

[காலம் + இராத்திரி.]

காலலவணம் *kāla-lavaṇam,* பெ.(n.) கறுப்பு உப்பு; black facitions and purgation salt (சா.அக.).

[கால் + இலவணம்.]

காலலோகம் *kāla-lōgam,* பெ.(n.) 1. இரும்பு; iron. 2. கருப்பு மாழை; any black metal (சா.அக.).

[கால் = கருப்பு. கால் + Skt. உலோகம்.]

காலவர்த்தமானம் *kāla-varttamāṉam,* பெ.(n.) நடப்புச் செய்தி; events of the time (செ.அக.).

[காலம் + Skt. வர்த்தமானம்.]

காலவரை *kāla-varai,* பெ.(n.) **காலவரையறை** பார்க்க; see *kāla-varaiyaṟai* (செ.அக.).

[காலம் + வரை.]

காலவன் *kālavaṉ,* பெ. (n.) 1. விசுவாமித்திரனின் சீடர்களில் ஒருவன்; student of Višuvāmitrā. 2. கேமதரிசியின் தந்தையின் அமைச்சன்; minister of Kematarisi's father. 3. ஒரு முனிவர்; a saint. 4. ஒரு பார்ப்பனச் சிறுவன்; brahmin boy (அபி.சிந்.).

காலவாதிமதம் *kālavādi-madam,* பெ.(n.) ஒரு வகை மதம்; a kind of religion.

[காலவாதி + மதம்.]

உலகில் உள்ள எல்லா உயிர்களும் காலத்தில் இறந்து மீண்டும் பிறந்துவரச் செய்தலானும், இத்தனை அகவை சென்றதென்று வாழ்நாளைக் (ஆண்டுகளைக்) கூறுதலானும், காலத்திற்கு மூப்பு, இளமை இல்லாமையானும், எல்லாம் தன்னால் அழியத் தான் அழியாதிருத்தலாலும் காலமே கடவுள் என்பர். இம்மதத்தவர் நோக்கில் முத்தி என்பது காலங்கடந்த கடவுளை அடைவது என்பதாகும் (அபி.சிந்.).

[காலம் + வாதி + மதம்.]

காலவேகன் *kāla-vēgaṉ,* பெ. (n.) சிவன் கூட்டத்தவரில் ஒருவன்; the person who one of the Siva's celestial hosts (அபி.சிந்.).

காலனி *kālaṉi,* பெ.(n.) ஒரு நகரத்தின் புதிய குடியிருப்புப் பகுதி; in a town cluster of houses forming a new settlement; colony. *வங்கி அதிகாரிகள் காலனி; பஞ்சாலைத் தொழிலாளர் காலனி.*

[E. colony - த. காலனி.]

காலனியாட்சி *kālaṉi-y-āṭci,* பெ.(n.) **காலனியாதிக்கம்** பார்க்க; see *kālaṉi-y-ādikkam.*

[காலனி + ஆட்சி.]

காலனியாதிக்கம் *kālaṉi-y-ādikkam,* பெ. (n.) ஒரு நாட்டைத்தன் ஆளுமைக்கு உட்படுத்திய வல்லரசு நாடு நடத்துகிற ஆட்சி; colonial rule. அடக்குமுறை ஆட்சி பார்க்க; see adakkumuṟai āṭci.

[காலனி + ஆதிக்கம்.]

காலனுசாரம் *kālaṉušāram,* பெ.(n.) மஞ்சள் நிறமான சந்தனம்; yellow sandal (சா.அக.).

[கால் + அனு + சாரம்.]

காலாக்கினிருத்திரன் *kālākkiṉi-ruttiraṉ,* பெ.(n.) அழிக்குந் தொழிலைச் செய்யும் சிவன்; Rudra, the god of destruction, one of the presiding deities in the lower regions (செ.அக.).

[காலன் + Skt. அக்கினி + உருத்திரன்.]

காலாகாலத்தில் *kālā-kālattil,* வி.எ.(adv.) 1. உரிய வேளையில்; at the proper time. *"காலாகாலத்தில் உண்ண வேண்டும்".* 2. சிற்சில வேளையில்; occasionally, not frequently. *"அது காலாகாலத்தில் கிடைக்கும்" (செ.அக.).*

[காலம் →காலா + காலத்தில்.]

காலாசுரம் *kālāśuram,* பெ.(n.) 1. ஒரு கொடிய வெப்ப நோய்; black fever. 2. நச்சுக் காய்ச்சல்; a chronic malarial fever - *Kala azar* (சா.அக.).

[கால + சுரம்.]

காலாஞ்சரம் *kālāñjaram,* பெ. (n.) தூய்மை யான நீர்த்துறை (தீர்த்தம்); sacred bathing-ghat (அபி.சிந்.).

மறுவ. படித்துறை

காலாட்படை *kālāṭ-paḍai,* பெ.(n.) தரைப்படை; infantry.

[கால் + ஆள் + படை.]

காலாண்டு *kālāṇḍu,* பெ.(n.) மூன்று மாதங்களுக்கு ஒரு முறை; quarter; quarterly. *ஒவ்வொரு காலாண்டிலும் தேர்வு நடக்கும்.*

[கால் + ஆண்டு.]

காலாதீதப்படல் *kālātīda-p-paḍal,* தொ.பெ.(vbl.n.) காலமுறை தவறுதல்; time-barred; barred by limitation of time; exceeding in time (சா.அக.).

[காலம் + அதீதம் + படல்.]

காலாமிந்தர் *kālā-mindar,* பெ.(n.) கரிக்கட்டை மரம்; black tree - *Diospyros hirsuta* (சா.அக.).

காலாயம் *kālāyam,* பெ.(n.) நீர்; water (சா.அக.).

[கால்வாய் + அம்]

காலிகவிப்புருதி *kāligavippurudi,* பெ.(n.) நாள்பட்ட புண்கட்டி (இங்.வை.298); chronic abscess (செ.அக.).

[காலம் → காலிகம் + விப்புருதி.]

காலிசெய்-தல் *kāli-cey-,* 1 செ.கு.வி.(v.i.) 1. குடியிருக்கும் வீடு, அறை முதலியவற்றை விட்டு வெளியேறுகை; இருக்கும் இடத்தை அல்லது இருக்கையை விட்டு நீங்கிப் போதல்; vacate house, room, etc. clear off; clear out. *வாடகை கொடுக்கவில்லை என்று வீட்டைக் காலி செய்யச் சொன்னார். பேசிக்கொண்டே நிற்காதே, இடத்தைக் காலி செய்.* 2. பானை, குவளை முதலியவற்றில் உள்ள பொருள்களை இல்லாமல் செய்தல், இல்லாமல் ஆக்குதல்; empty a container etc., of its contents. *கலயத்தில் இருந்த கள் முழுவதையும் காலி செய்துவிட்டான்.* 3. ஒன்றைத் தீர்த்தல்; செலவழித்தல்; spend; finish. *ஒரே நாளில் பணத்தையெல்லாம் காலி செய்துவிட்டான்.*

[காலி + செய்-தல்.]

காலிதம் *kālidam,* பெ.(n.) படிகாரம்; alum (சா.அக.).

காலியா-தல் *kāli-y-ā-,* 6 செ.கு.வி.(v.i.) வீடு, பதவி முதலியன ஒருவரும் இன்றி ஒழிந்திருக்கை; to become vacant, as a situation, a house (செ.அக.).

[U. Khāli > த. காலி.]

காலிலிப்பிண்டம் *kālili-p-piṇḍam,* பெ.(n.) கால் அல்லது பாதம் இல்லாமலும் உறுப்புகள் கேடானதுமான கருப்பிண்டம்; a monster foetus without the lower limbs or feet *Apeduous fetus; Apus* (சா.அக.).

[கால் + இலி + பிண்டம்.]

காலிறங்கு-தல் *kālirangu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. வாயு இறங்குதல்; descent of wind causing inflammation as in scrotum. 2. யானைக்கால் உண்டாதல்; development of elephantiasis of the leg. 3. காலில் இருந்து கெட்ட நீர் இறங்குதல்; accumulation of morbid fluid in the tissues of the leg; edema of the leg (சா.அக.).

[கால் + இறங்கு-தல்.]

காலிறுதி *kālirudi*, பெ.(n.) விளையாட்டுப் போட்டியில் அரை இறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற விளையாடும் ஆட்டம்; quarter final.

[கால் + இறுதி.]

காலியகம் *kāliyagam*, பெ.(n.) மரமஞ்சள்; tree turmeric - *Coscinium fenestratum* (சா.அக.).

காலுதறுவாதம் *kāludaru-vādam*, பெ.(n.) **காலூன்றுவாதம்** பார்க்க; see *kālūnru-vādam* (சா.அக.).

[கால் + உதறு + வாதம்]

காலுறை *kālurai*, பெ.(n.) பாதத்திலிருந்து முழங்காலுக்குச் சற்றுக் கீழ்வரை இறுக்க மாக அணியப்படும், நூலால் பின்னப்பட்ட இரட்டை உறை; pair of socks; stockings.

[கால் + உறை.]

காலூறல் *kālūral*, பெ.(n.) 1. வெள்ளை நோயினால் உள்ளங் காலில் ஏற்படும் தினவு; itching of the sole from venereal causes. 2. பயணச் செலவை (பிரயாணம்) முன்னிட்டு உள்ளங் காலில் ஏற்படும் அரிப்பு; an itching causally felt in the sole as a sign of impending journey (சா.அக.).

[கால் + ஊறல்.]

காலூறு-தல் *kālūru-*, செ.கு.வி. (v.i.) 1. பயணக் குறியாகக் காலில் தினவுண்டாதல்; to feel an itching sensation in feet, as foreboding an impending journey. 2. ஓடியாடப் பிள்ளைகள் விருப்பப்படல்; to be impatient, restless to walk, run or move about, as a child (செ.அக.).

மறுவ. கால்மரப்பு

[கால் + ஊறு-தல்.]

காலூன்றல் *kālūnral*, தொ.பெ.(vbl.n.) காலைப் பதிய வைத்தல்; setting one's foot firmly on the ground (சா.அக.).

[கால் + ஊன்றல்.]

காலெரிச்சல் *kālericcal*, பெ.(n.) **காலெரிவு** பார்க்க; see *kālerivu* (சா.அக.).

[கால் + எரிச்சல்.]

காலெரிவு *kālerivu*, பெ.(n.) காய்ச்சலாலும், பித்த மிகுதியாலும் ஏற்படும் பாத எரிச்சல்; burning sensation of the sole arising from biliousness or excessive secretion of bile or due to excessive fever (சா.அக.).

[கால் + எரிவு.]

காலெலும்பு *kālelumbu*, பெ.(n.) தொடையில் இருந்து பாதம் வரை உள்ள பல எலும்புகள்; the bones in each of the limbs from the thigh to the foot.

[கால் + எலும்பு.]

பல எலும்புகளாவன:– 1. சரவெலும்பு; the outer and lesser bone of the leg - *Fibula*. 2. தொடை எலும்பு; thigh-bone - *Femur*. 3. நளகம்; shin-bone - *Tibia*. 4. பாதஎலும்பு; bones of the feet. 5. முழந்தாட் சில்; knee-cap - *Patella* (சா.அக.).

காலேயநாளம் *kālēya-nāḷam*, பெ.(n.) ஈரல் இருக்கும் நாடி; the vein in the liver - *Hepaticvein* (சா.அக.).

[காலேய + நாளம்.]

காலைக்கலவி *kālai-k-kalavi,* பெ.(n.) காலை நேரத்தில் செய்யும் புணர்ச்சி; sexual intercourse indulged early in the morning (சா.அக.).

[காலை + கலவி.]

காலைக்கறி *kālai-k-kaṟi,* பெ.(n.) காலையில் கொள்ளும் உணவுக் கறி வகைகள்; vegetables prescribed to be taken as diet in the mornings as distinguished from irā-k-kaṟi (சா.அக.).

[காலை + கறி.]

காலைக்குடியன் *kālai-k-kuḍiyaṉ,* பெ.(n.) விடியற்காலையில் வெறும் வயிற்றில் கள், சாராயம் இவைகளைக் குடிப்பவன்; one who addicted to drink toddy, liquor etc. early in the morning in empty stomach (சா.அக.).

[காலை + குடியன்.]

காலைக்கோட்டிவிகாரம் *kālai-k-kōṭṭi-vigāram,* பெ. (n.) நரம்பு மண்டிலம் ஆறனுள் ஒன்று (ஆறாதாரத்தில் ஒன்று); one of the six nerve-centres in the human body.

இது அறிவிற்கு எட்டாத இடம். இது வயிற்றுக்கு மேலுள்ள நெஞ்சகத்தில் முக்கோண வடிவாய் 12 இதழ்களுடையனவாய்த் தோன்றும் (சா.அக.).

காலைப்பிடி-த்தல் *kālai-p-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) உதவியை எப்படியும் பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் மனதை இளகச் செய்யும் அளவுக்குக் கெஞ்சுதல்; மிகவும் பணிந்து வேண்டுதல்; go down on one's knees for favour; cringe. *உதவி வேண்டுமானால் காலைப் பிடிக்கவும் தயாராக இருப்பான்.*

[காலை + பிடி-த்தல்.]

காலைப்புசிப்பு *kālai-p-puśippu,* பெ.(n.) 1. காலை உணவு; morning food; break fast. 2. காலையிற் கொள்ளும் பதவுணா; morning diet taken by patients (சா.அக.).

[காலை + புசிப்பு.]

காலைப்போசனம் *kālai-p-pōśaṉam,* பெ. (n.) **காலைப்புசிப்பு** பார்க்க; see *kālai-p-puśippu* (சா.அக.).

[காலை + போசனம்.]

காலைமூத்திரம் *kālai-mūttiram,* பெ.(n.) உணவினால் வேறுபடாமல், தூங்கி எழுந்தவுடன் வெளிப்படும் சிறுநீர்; urine passed after a night's rest and so not influenced by food or drink - *Urinasanguinis* (சா.அக.).

[காலை + மூத்திரம்.]

காலைவாரு-தல் *kālai-vāru-,* 5 செ.கு.வி. (v.i.) தனக்குச் சார்பா (சாதகமா)க இருக்கும் என்று நினைத்திருக்கையில் ஏமாற்றும் முறையில் அமைந்து விடுதல்; கை விடுதல்; let down; pull the rug from under one's feet. *பல இலக்கம் செலவில் தொடங்கிய தொழில் அவரைக் காலை வாரி விட்டது.*

[காலை + வாரு-தல்.]

காலொட்டல் *kāloṭṭal,* பெ.(n.) 1. பொய்க்கால்; false leg. 2. பொய்க்கால் சேர்த்தல்; attaching a false leg. 3. கால் சுடுதல்; burning of the feet (சா.அக.).

[கால் + ஒட்டல்.]

காலோசிதம் *kālōśidam,* பெ.(n.) காலத்திற்கு ஏற்றது; that which is suited to time as clothing, food etc. (சா.அக.).

[கால் + ஒசிதம்.]

காலோட்டு-தல் *kālōṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) மூச்சு வரும்படி செய்தல்; inducing artificial respiration (சா.அக.).

[கால் + ஒட்டு-தல்.]

காலோட்டுவாதம் *kālōṭṭu-vādam*, பெ.(n.) மூச்சு திணரும்படி செய்யும் இழுப்பு நோய்; rheumatism marked by difficulty of respiration (சா.அக.).

[கால் + ஒட்டு + ***Skt.*** *வாதம்.]*

காலோடுகழி-தல் *kālōḍu-kaḻi-*, 4 செ.கு.வி. (v.i.) அடக்க முடியாமல் காலில் படும்படி நின்றபடியே மலங்கழித்தல்; purging even before one has time to squat being urged wtih troublesome pertina city (சா.அக.).

[காலோடு + கழி-தல்.]

காலோத்திரம் *kālōttiram*, பெ.(n.) உலோத்திர மரப் பட்டை; lodhra bark (சா.அக.).

காவடியெடு-த்தல் *kāvaḍi-y-eḍu-*, 4 செ.கு.வி. (v.i.) உயர் நிலையில் உள்ள ஒருவரைப் பார்ப்பதற்காகப் பலமுறை போக நேரிடுதல்; make repeated calls at someons's place. *அமைச்சரைப் பார்க்க எத்தனை முறை காவடியெடுக்க வேண்டியிருக்கிறது.*

[காவடி + எடு-த்தல்.]

காவல்துறை *kāval-tuṟai*, பெ.(n.) சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்காக அரசு ஏற்படுத்தியுள்ள அமைப்பு; the police department.

[காவல் + துறை.]

காவல்தெய்வம் *kāval-teyvam*, பெ.(n.) எல்லைப்புறத்திலிருந்து ஊரைக் காத்து வரும் தெய்வம்; deity guarding the village.

[காவல் + தெய்வம்.]

காவல்நிலையம் *kāval-nilaiyam*, பெ.(n.) சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக ஒரு ஊரில் அல்லது நகரத்தின் பல பிரிவுகளில் இருக்கும் காவலர்கள் பணிபுரியும் அலுவலகம்; police station.

[காவல் + நிலையம்.]

காவலர் *kāvalar*, பெ.(n.) 1. சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்தும் அரசுப் பணியாளர்; policeman. 2. காவலாளி; security guard. *வனத்துறையில் காவலர் வேலைக்கு ஆள் எடுக்கிறார்கள்.*

[காவல் →காவலர்.]

காவலில்வை-த்தல் *kāvalil-vai-*, 4 செ.கு.வி. (v.i.) குற்றம் சாட்டப்பட்டவரை உசாவுதற் (விசாரணைக்)கு முன் சிறையில் வைத்தல்; keep under detention; keep in gool. *குற்றம் சாட்டப்பட்டவரைப் பதினைந்து நாள் காவலில் வைக்க அறமன்றத் தலைவர் ஆணையிட்டார்.*

[காவலில் + வை-த்தல்.]

காவளை *kāvaḷai*, பெ.(n.) 1. பேய்த்தும்பை; devil leuces - *Leucas linifolia*. 2. தைவேளை; five-leaved cleome - *Cleome pentaphylla* alias *Galaga maxima*. 3. பூண்டின் இறுதிப் பெயர்; plant's second term. 4. **காவளைச் சுக்கான்** பார்க்க; see *kāvaḷai-c-cukkāṉ* (சா.அக.).

[காவாளை – காவளை.]

காவளைச்சுக்கான் *kāvaḷai-c-cukkāṉ*, பெ.(n.) கருஞ்சுக்கான்; black lime stone (சா.அக.).

[காவளை + சுக்கான்.]

காவற்கட்டு *kāvar-kattu,* பெ.(n.) 1. காவல் செய்வதற்குரிய கட்டுப்பாடு; custom regulating village-watch. 2. காவலாளர்க்கு ஊதியமாகப் பணத்திற்குப் பதிலாகக் கதிரைக்கட்டாகக் கொடுக்கும் முற்றூட்டு (மானியம்); bundle of paddy sheaves given to watchmen as dues (செ.அக.).

[காவல் + கட்டு.]

காவற்கட்டை *kāvar-kattai,* பெ. (n.) 1. மகவு ஈன்ற பெண்டிர்க்குக் காவலாக எரிக்கப்படும் விறகுக் கட்டை; a log of wood kept burning to ward off the female demon korri from a woman in child birth. 2. காவலுக்காகக் குடிசையின் பக்கத்து வைத்து எரிக்கும் விறகு; clump of wood kept burning throughout the night near a patrol-hut (செ.அக.).

[காவல் + கட்டை.]

காவற்கடவுள் *kāvar-kadavul,* பெ.(n.) திருமால்; Visṇu, as preserver of the world (செ.அக.).

[காவல் + கடவுள்.]

காவற்கணிகை *kāvar-kanigai,* பெ.(n.) பழங்காலத்தில் இருந்த ஆடற்குலப் பெண் (களத்தாடுங் கூத்தி) (சிலப்.5:50); a class of dancing-girls (செ.அக.).

[காவற்–கணிகை.]

காவற்கப்பல் *kāvar-kappal,* பெ.(n.) காவல் வேலை செய்யுங் கப்பல்; guard-ship, reconnoitering vessel (செ.அக.).

[காவல் + கப்பல்.]

காவற்கலி *kāvar-kali,* பெ.(n.) வாழை (மலை.); plantain (செ.அக.).

காவற்காடு *kāvar-kādu,* பெ. (n.) 1. பழங்காலத்தில் கோட்டையைச் சுற்றிலும் பாதுகாப்பின் பொருட்டு வளர்க்கப்படும் காடு (தொல்.பொருள்.65, உரை); jungle or forest serving as defence. 2.அரசாங்கத்தினரால் பாதுகாக்கப்படுங் காடு; reserved forest (செ.அக.).

[காவல் + காடு.]

காவற்குலிகம் *kāvar-kuligam,* பெ.(n.) 1. திப்பிலி; long-pepper - *Piper longum.* 2. நாவல்மரம்; jaumoon tree - *Eugenia jambolana* (சா.அக.).

[காவல் + குலிகம்.]

காவற்கூடம் *kāvar-kūdam,* பெ. (n.) சிறைச்சாலை; prison house (செ.அக.).

[காவல் + கூடம்.]

காவற்கூடு *kāvar-kūdu,* பெ.(n.) காவலாளர் தங்கும் இடம்; sentry box (செ.அக.).

[காவல் + கூடு.]

காவற்சாலை *kāvar-šālai,* பெ. (n.) **காவற்கூடம்** பார்க்க; see *kāvar-kūdam.* *"வலிதிற் காவற் சாலையிலாக்கினார்கள்" (திருவாத.பு.திருப்பெருந்.119) (செ.அக.).*

[காவல் + சாலை]

காவற்சோலை *kāvar-šōlai,* பெ.(n.) அரசர் முதலியோர் விளையாடுவதற்குரிய பூஞ் சோலை (சிலப்.14:127, உரை); royal park or grove, as guarded (செ.அக.).

[காவல் + சோலை.]

காவற்படை *kāvar-padai,* பெ. (n.) மெய் காவல் படை (யாழ்.அக.); body-guard.

[காவல் + படை.]

காவற்பிரிவு *kāvar-pirivu,* பெ.(n.) தலைவன் நாடு காவற்பொருட்டுத் தலைவியைப் பிரியும் பிரிவு (திருக்கோ.312, தலைப்பு); major theme which describes the husband's parting from his wife to defend his country (செ.அக.).

[காவல் + பிரிவு.]

காவற்புரி *kāvar-puri,* பெ.(n.) 1. வயலில் பயிர்களுக்குக் காவலாக வைக்கோலால் செய்து வைக்கப்படும் பாவை; scare-crow made of twisted or plaited straw. 2. அறுவடைக்குப் பின், நெற்குவியலின் மேல் பேய், பூதம் போன்றவவை அணுகாமல் தடுக்க இடும் வைக்கோற் பழுதை; straw rope thrown over a heap of grain in a field to protect it from demons (செ.அக.).

மறுவ. சோளக்காட்டுப் பொம்மை

[காவல் + புரி.]

காவற்பெண் *kāvarpen,* பெ.(n.) வளர்ப்புத் தாய் அல்லது செவிலி; nurse (சா.அக.).

[காவல் + பெண்.]

காவற்பெண்டு *kāvar-pendu,* பெ.(n.) 1. கடைக்கழகக்காலத் தலைவியைச் சிறுவயது முதல் வளர்க்கும் மாற்றாந்தாய் (செவிலித் தாய்) (சிலப்.29, காவற்பெண்டு சொல்.); nurse. 2. கழகக் காலத்தில் வாழ்ந்த பெண்பாற் புலவருள் ஒருவர் (புறநா.86); an ancient poetess, author of a poem in puranānūru (செ.அக.).

[காவல் + பெண்டு.]

காவற்பேறு *kāvar-pēru,* பெ.(n.) ஊர்க் காவலுக்காகக் கொடுக்கும் வரி (M.E.R. 262 of 1925); cess collected for paying the village-watchmen (செ.அக.).

[காவல் + பேறு.]

காவற்றண்டனை *kāvarrandanai,* பெ.(n.) சிறையிலிடுந் தண்டனை; sentence of imprisonment (செ.அக.).

[காவல் + தண்டனை.]

காவற்றலம் *kāvarralam,* பெ.(n.) சிறைச்சாலை; prison, gaol (செ.அக.).

[காவல் + தலம்.]

காவற்றெய்வதம் *kāvarreyvadam,* பெ.(n.) காக்குந் தெய்வம்; tutelary deity. *"காவற்றெய்வதங் கண்டுவந் தெய்தி" (மணிமே.25:159) (செ.அக.).*

[காவல் + தெய்வதம்.]

காவன்முல்லைப்பூதனார் *kāvan-mullai-p-pūdanār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்களில் ஒருவர்; the poet who belonged to the ancient saṅgam period.

[காவல் + முல்லை + பூதன் + ஆர்.]

இவரது இயற்பெயர் பூதன். காவன்முல்லை, புறத்திணைக்குட்பட்ட ஒரு துறை. அத்துறையைப் பாடினமையால் காவன்முல்லைப் பூதனார் என்று அழைக்கப்பட்டார்.

காவனை *kāvanai,* பெ.(n.) காட்டு மல்லிகை; wild jasmine - *Jasminum angustifolium* (சா.அக.).

காவாங்கரை *kāvāṅgarai,* பெ.(n.) வாய்க்காற்கரை; bank of a channel (செ.அக.).

[கால்+வாய் + கரை.]

காவாடுபுல் *kāvādu-pul,* பெ.(n.) ஒரு வகைப்புல்; a kind of unknown grass (சா.அக.).

[கவடு – காவாடு + புல்.]

காவாய் *kāvāy,* பெ.(n.) ஒருவகைப் புல்; a kind of grass (செ.அக.).

[கவை – காவாய்.]

காவாளி *kāvāḷi,* பெ.(n.) **காவாளை** (மலை.) பார்க்க; see *kāvāḷai* (செ.அக.).

காவிகா *kāvigā,* பெ.(n.) கருப்புத்தினை; black millet or Italian millet - *Panicum indicum* (சா.அக.).

காவிடோல் *kāvi-dōl,* பெ.(n.) **காவிப் பருவான்** பார்க்க; see *kāvi-p-paruvān* (செ.அக.).

காவிப்பருவான் *kāvi-p-paruvāṉ,* பெ.(n.) கப்பலின் தலைப் பாய்மரம்; topsail-yard (செ.அக.).

[காவி+பருவான்.]

காவிப்பல் *kāvi-p-pal,* பெ.(n.) 1. காவி நிறம் அடைந்த பற்கள்; red soiled teeth. 2. ஊத்தை படிந்த பல்; filthy teeth (சா.அக.).

[காவி + பல்.]

காவிமாலை *kāvi-mālai,* பெ.(n.) கலவியை விரும்பிய தலைவன் தலைவிக்கு அனுப்பும் மாலை (யாழ்.அக.); garland sent by a lover to his beloved, soliciting her favour (செ.அக.).

[காவி + மாலை.]

காவியகுணம் *kāviyaguṇam,* பெ.(n.) செய்யுட் குணம் (தண்டி.); merits of poetic composition.

செய்யுட் குணங்களாவன: செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி (செ.அக.).

காவியா *kāviyā,* பெ.(n.) காவியாக்கட்டை பார்க்க; see *kāviyā-k-kaṭṭai* (செ.அக.).

காவியாக்கட்டை *kāviyā-k-kaṭṭai,* பெ.(n.) நங்கூரக் கட்டை; wooden beam of an anchor (செ.அக.).

[காவி→காவியா + கட்டை.]



காவிரிக்கரைகண்டசோழன் *kāviri-k-karai-kaṇḍa-cōḻaṉ,* பெ.(n.) காவிரி ஆற்றுக்குக் கரை கட்டிய சோழன்; a king who built the dam river *kāviri.*

இம்மன்னன் தன் சிற்றரசர்களுக்குக் காவிரிக்கரையைப் பகுத்தளித்து கரை கட்டும்படி பணித்தான். அதில் பிரதாபருத்திரன் என்னும் மூன்று கண்களை உடையவன் மட்டும் தன் பங்கைக் கட்டாது இருந்தான். அதைக் கண்ட சோழன் அவன் உருவத்தைப் படத்தில் கண்டு சிவனைப் போல் இவனுக்கும் மூன்று கண்களா என ஒரு கண்ணைக் குத்த, அவனின் கண் மறைந்தது. பிரதாபருத்திரனும் தன் பங்கைக் கட்டி முடித்தான் (அபி.சிந்.).

[காவிரி – கரை + கண்ட + சோழன்]

காவிரிப்பூம்பட்டினத்துக்கண்ணன் *kāviri-p-pūm-paṭṭiṉattu-k-kaṇṇaṉ,* பெ.(n.) கடைக் கழகம் மருவிய புலவன்; the poet who belonged to last ancient Šaṅgam (அபி.சிந்.).

[காவிரி + பூம்பட்டினத்து + கண்ணன்.]

காவிரிப்பூம்பட்டினத்துக்கந்தாத்தனார் *kāviri-p-pūm-paṭṭiṉattu-k-kandāttaṉār,* பெ.(n.) கடைக் கழகம் மருவிய புலவர்களில் ஒருவர்; one of the poet who belonged to the last ancient Šaṅgam (அபி.சிந்.).

காவிரிப்பூம்பட்டினத்துச்செங்கண்ணனார் *kāviri-p-pūm-paṭṭiṉattu-c-ceṅkaṇṇaṉār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; the poet who belonged to the ancient Šaṅgam period (அபி.சிந்.).

காவிரிப்பூம்பட்டணத்துச்சேந்தன்கண்ணனார் *kāvir-p-pūm-paṭṭaṉattu-c-cēndaṉ-kaṇṇaṉār,* பெ.(n.) கடைக்கழகம் மருவிய புலவர்களில் ஒருவர்; one of the poet who belonged to the ancient Šaṅgam period.

இவரது ஊர் சோழ நாட்டுக் காவிரிப் பூம்பட்டினம். கண்ணன் பெயருடையார் வேறிருத்தலின் இவர் சேந்தன் கண்ணன் எனப்பட்டனர் போலும் (அபி.சிந்.).

[காவிரி + பூம்பட்டினத்து + செம்மை + கண்ணனார்.]

காவிகம் *kāvigam,* பெ.(n.) சேங்கொட்டை; dhoby's nut - *Semecarpus anacordium* (சா.அக.).

காவியகம் *kāviyagam,* பெ.(n.) மரமஞ்சள்; tree-turmeric - *Coscinium fenestratum* (சா.அக.).

[காவீ + அகம்.]

காவு *kāvu,* பெ.(n.) 1. ஒரு மந்திர மை; a black magic paint; colllyrium. 2. பீதரோகணி; Himalayan plant used for diseases of the eye (சா.அக.).

[கரு – கா – காவு.]

காவுகொடு–த்தல் *kāvu-kodu-,* 4 செ.கு.வி. (v.i.) காளி முதலிய தெய்வங்களுக்கு உயிரைக் காணிக்கையாகக் கொடுத்தல்; offer animal, human sacrifice. *காளிக்கு ஆடு வெட்டிக் காவு கொடுத்தார்கள். எத்தனையோ உயிர்கள் இந்தப் போராட்டத்தில் காவு கொடுக்கப்பட்டிருக்கும்!.*

[காவு + கொடு–த்தல்.]

காவுகொள்–தல் *kāvu-kol-,* 4 செ.கு.வி. (v.i.) உயிரைக் காணிக்கையாக ஏற்றல்; accept or take animal, human sacrifice. *குழந்தையின் உயிருக்காகத் தாயின் உயிரை தெய்வம் காவு கேட்பதா?*

[காவு + கொள்–தல்.]

காவூமி *kāvūmi,* பெ.(n.) **காவு** பார்க்க; see *kāvu* (சா.அக.).

[கா + ஊமி.]

காவெட்டு *kāvettu,* பெ.(n.) பழுக்கத் தொடங்கியிருக்கும் காய்; the state before becoming fruit; unripe. *வாழைப்பழம் காவெட்டாகப் பார்த்து வாங்கி வா.*

[காய்+வாட்டு.]

மறுவ. செங்காய்

காவேளை *kāvelai,* பெ.(n.) 1. தைவேளை; five-leaved cleome, cleome pentaphylla alias Galaga maxima. 2. பூண்டின் இறுதிப் பெயர்; plant's second term (சா.அக.).

[கா + வேளை.]

காழ்கொள்ளு–தல் *kāl-kollu-,* 16 செ.கு.வி. (v.i.) 1. முதிர்ச்சி அடைதல்; maturing. 2. வயிரம் பாய்தல்; formation of core inside a tree (சா.அக.).

[காழ் + கொள்ளல்.]

காழியன்[1] *kāliyan,* பெ.(n.) வண்ணான்; washerman, dhoby. *"காழியர் கவ்வைப் பரப்பின் வெவ்வுவர்ப் பொழிய" (அகநா.89, 7) (செ.அக.).*

[காழ் – காழியன்.]

காழியன்[2] *kāliyan,* பெ.(n.) 1. பிட்டு விற்கும் வாணிகன் (மணிமே.28, 32); dealer in the rice preparation pittu. 2. உப்பு வாணிகன் (சூடா.); salt vendor.

[காழ் – காழியன்.]

காழூன்றுகடிகை *kālūnru-kadigai,* பெ.(n.) 1. குத்துக்கோல்; military machine fitted with spears. *"கானப்படமுங் காழூன்று கடிகையும்" (சிலப்.14, 173).* 2. கூடாரம் (சிலப்.14, 173, அரும்.); tent (செ.அக.).

[காழ் + ஊன்று + கடிகை.]

காளகண்டகி *kāla-kandagi,* பெ.(n.) நீலிப்பூடு; dog-bite shrub; dyers indigo - *Indigofera tinctoria alias I.emarginate* (சா.அக.).

[காளம் + கண்டகி.]

காளகண்டசுரம் *kāḷakaṇḍa-šuram*, பெ.(n.) 1. கழுத்தைக் கருமையாகச் செய்யும் ஒரு காய்ச்சல்; a fever marked by dark colouration of the neck. 2. மண்ணீரல் வீங்கியதால், வரும் காய்ச்சல்; fever marked by enlargement of the spleen (சா.அக.).

[காளம் + கண்டம் + சுரம்.]

காளகர்ணிமுத்திரை *kāḷa-karṇi-muttirai*, பெ.(n.) நாட்டிய முத்திரை வகை (சைவ.வி.19); a hand-pose in worship (செ.அக.).

காளக்கடவுள் *kāḷa-k-kaḍavuḷ*, பெ.(n.) சிவன்; God of Šiva (சி.பெய.).

[காளம் + கடவுள்.]

காளங்கன்று *kāḷaṅ-kaṉṟu*, பெ.(n.) காளைக் கன்று; bull-calf, very young steer (செ.அக.).

[காளை + கன்று.]

காளச்சீலை *kāḷa-c-cīlai*, பெ.(n.) விடூரியம் (வைடூரியம்); a variety of chalcedony, cat's eye (சா.அக.).

[காளம் + சீலை.]

காளசீகம் *kāḷašīgam*, பெ.(n.) மரவகை; strychnine tree- *Strychnos nux-vomica* (சா.அக.).

காளபதம் *kāḷa-padam*, பெ.(n.) புறாவகை (திவா.); blue rock-pigeon (செ.அக.).

[காளம் + பதம்.]

காளபிருட்டம் *kāḷa-piruṭṭam*, பெ.(n.) கன்னன் (கர்னன்) வில்; bow of karṉaṉ(அபி.சிந்.).

காளமேகநாராயணசிந்தூரம் *kāḷa-mēga-nārāyaṇa-šindūram*, பெ.(n.) ஒருவகைச் செந்தூரம்; a dark reddish metallic oxide (சா.அக.).

[காளமேகம் + Skt. நாராயணசிந்தூரம்.]

காளமேடிகை *kāḷa-mēḍigai*, பெ.(n.) 1. மஞ்சிட்டை; manjeet. 2. கருஞ்சிவதை; a kind of Indian jalap (செ.அக.).

காளவனம்[1] *kāḷa-vaṉam*, பெ.(n.) சுடுகாடு (சூடா.); burning-ground (செ.அக.).

[காளம் + வனம்.]

காளவனம்[2] *kāḷa-vaṉam*, பெ.(n.) 1. உஞ்சை நகரின் புறத்தே உள்ள காடு; the forest in out of city. 2. உதயணன் மேல் மிக்க அன்புடைய இலாமயன் என்பவன் இருந்த காடு; a forest (அபி.சிந்.).

காளவாசல் *kāḷa-vāšal*, பெ.(n.) சுண்ணாம்புக் காளவாய்; lime kiln (சா.அக.).

[காள + வாசல்.]

காளன்[1] *kāḷaṉ*, பெ.(n.) குண்டலகேசி காப்பியத்தில் வரும் பத்தரை என்பவளின் கணவனான காளன்; husband of Pattarai in Kuṇḍalakēši epic.

காளன்[2] *kāḷaṉ*, பெ.(n.) 1. வீரபத்திரரின் பெயர்களுள் ஒன்று; one of the name to Vīrapatrā. 2. சிவன் அணிந்திருந்த பாம்புகளில் ஒன்று; Siva's snake which he were as a ornament.

காளவுலை *kāḷa-v-ulai*, பெ.(n.) மாழைகளை உருக்கும் உலைக்களம்; சரவுலை; a fire-place where double bellows are used; a contrivance for a vehement fire for purposes of melting, Furnace (சா.அக.).

காளாகிகம் *kāḷāgigam*, பெ.(n.) திருவாத்தி; holy mountain ebony - *Bauhima tomentosa* (சா.அக.).

காளாஞ்சகம் *kāḷāñjagam*, பெ.(n.) எண்பது வகை ஊதை (வாதம்) நோய்களுள் ஒன்று; one of the eighty kinds of rheumatism.

[காளா + அஞ்சகம்.]

இந்நோய் கை கால் குடைச்சல் கண்டு நடக்க முடியாமல் கரடு கட்டி முடமாக்கி, உடம்பு வெளுத்து மயக்கத்தை உண்டாக்கும் (சா.அக.).

காளாம்பகி *kāḷāmbagi,* பெ.(n.) பறவைப் பாம்பு (நாமதீப.); a winged serpent (செ.அக.).

காளாத்திரி *kāḷāttiri,* பெ.(n.) பாம்பின் கீழ்வரிசை நச்சுப் பற்களில் ஒன்று; the second of the four fangs in the lower row of the teeth in a cobra (சா.அக.).

[காளா + திரி.]

காளாராத்திரி *kāḷā-rāttiri,* பெ. (n.) **காளாத்திரி** பார்க்க; see *kāḷāttiri.*

காளாமுகி *kāḷāmugi,* பெ.(n.) கொடுமையான அச்சத்தை ஊட்டும் முகம்; a form of monster-face (சா.அக.).

[காளா + முகி]

காளிக்காரம் *kāḷi-k-kāram,* பெ.(n.) ஒரு நச்சுக் காரம்; a poisonous caustic (சா.அக.).

[காளி + காரம்.]

காளிங்கமர்த்தனன் *kāḷiṅga-marttaṉaṉ,* பெ.(n.) காலிங்கனென்னும் பாம்பின் மீது பாதங்களை வைத்து ஆடித்துகைத்த கண்ணபிரான்; Krišṇa as dancing on the hood of the serpent Kāḷiyaṉ (செ.அக.).

[காளிங்கன் + மர்த்தனன்.]

காளிங்கர் *kāḷiṅgar,* பெ.(n.) திருக்குறளுக்கு உரை எழுதிய ஆசிரியர்களில் ஒருவர்; Kāliṅgar commentary on Thiru-k-kuṟal.

காளிதேவர் *kāḷi-tēvar,* பெ.(n.) வீர சிவனிய அடியவர்; devotee of Šivā.

[காளி + தேவர்.]

இவரிடம் சில மறையோர்கள் வந்து தாம் பிறப்பால் உயர்ந்தோர். மறை ஓத எமக்கே அதிகாரம் உண்டென்றனர். இதைக் கேட்ட இவர் தம்மிடம் இருந்த நாயை மறை ஓதுவிக்க மறையோர் வெட்கிச் சென்றனர் (அபி.சிந்.).

காளிந்தம்[1] *kāḷindam,* பெ.(n.) ஒரு நறுமணப் பண்டம் (திவா.); cardamom (செ.அக.).

காளிந்தம்[2] *kāḷindam,* பெ.(n.) பாம்பு (அக.நி.); snake (செ.அக.).

காளிந்தாகிதம் *kāḷindāgidam,* பெ.(n.) தில்லை மரம்; tiger's milk spurge - *Excoecaria agallocha* (சா.அக.).

காளிந்திமர்த்தனன் *kāḷindi-marttaṉaṉ,* பெ.(n.) தனது கலப்பைக் கருவியால் யமுனையின் ஆணவத்தை அடக்கிய பலராமன்; Balarāmā, as having tormented the river Jumna by turning her course with his plough (செ.அக.).

[காளிந்தி + அமர்த்தனன்.]

காளிம்பன் *kāḷimbaṉ,* பெ.(n.) தொண்டை நாட்டில் திருவேங்கடத்துக்கு அருகில் இருந்த ஒரு பெருந்தகை (பிரபு.); a patron who lived near Tiru-vēṅgaḍam (அபி.சிந்.).

காளியண்ணப்புலவர் *kāḷi-y-aṇṇa-p-pulavar,* பெ. (n.) திருச்செங்கோடெனும் சிவதலத்திற்கு அருகில் உள்ள மண்டகப்பாளி என்னும் ஊரில் இருந்தவரும் திருப்பூந்துறை புராணம் பாடியவருமான புலவர்; a poet author Tiruppūnduṟaipuraṇam (அபி.சிந்.).

[காளி + அண்ணன் + புலவர்.]

இவர் குலத்தால் கருணீகர். திருச்செங்கோட்டுச் சிற்றம்பலக் கவிராயரின் மாணவர்.

காளிரம் *kāḷiram,* பெ.(n.) மணித்தக்காளி; fox-grape - *Solanum nigrum* (சா.அக.).

காளிராத்திரி *kāḷi-rāttiri,* பெ.(n.) **காளா ராத்திரி** பார்க்க; see *kāḷā-rāttiri* (சா.அக.).

காளினி *kāḷiṉi,* பெ.(n.) **காளினியம்** பார்க்க; see *kāḷiṉiyam* (செ.அக.).

காளினியம் *kāḷiṉiyam,* பெ.(n.) கத்தரிச் செடிவகை (மலை.) (பதார்த்த.); brinjal, egg-plant - *Solanum melongena* (செ.அக.).

காற்கருணை *kāṟ-karuṇai,* பெ.(n.) கருணைக் கிழங்கு; elephant yam - *Typhonium orixense* (சா.அக.).

[காரல் + கருணை.]

காற்கவசம் *kāṟ-kavaśam,* பெ.(n.) மிதியடி, செருப்பு (பதார்த்த.1457, தலைப்பு); sandals (செ.அக.).

[கால் + கவசம்.]

காற்கவசமிடு-தல் *kāṟ-kavaśam-iḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. காலுக்கு மேற்சோடு போடல்; wearing stockings as a protection against cold. 2. செருப்புப் போடுதல்; wearing shoes (சா.அக.).

[கால் + கவசம் + இடு-தல்.]

காற்காய்ப்பு *kāṟ-kāyppu,* பெ.(n.) உள்ளங் கால் அல்லது பாதத்தின் வேறு இடங்களில் தோல் உராய்தலினால் ஏற்படும் காய்த் தடிப்பு; callousness of the skin of the sole or the skin of other part of the foot (சா.அக.).

[கால் + காய்ப்பு.]

காற்குளசு *kāṟ-kuḷāśu,* பெ.(n.) 1. பாதத்தின் உள்ளே அசையும் எலும்புகளின் கூட்டம்; the inward juncture of the moveable bones in the feet. 2. கணைக்காற் பொருத்து; the in-step proper with its 7 bones - *Tarsus* (சா.அக.).

[கால் + குளசு.]

காற்குளசெலும்பு *kāṟ-kuḷaśelumbu,* பெ.(n.) பாதத்தின் உட்பக்கமுள்ள அசையும் எலும்புகள் அதாவது புறங்காலெலும்பு; bones of the in-step; the middle of the foot or part between the toes and the ankle - *Meta tarsus* (சா.அக.).

[கால் + குளசு + எலும்பு.]

காற்கோடகி *kāṟ-kōḍagi,* பெ. (n.) கக்கரிக்காய்; cucumber (சா.அக.).

[காற் + கோடகி.]

காற்கோடல் *kāṟ-kōḍal,* பெ.(n.) படிகக்கல் அல்லது கடல் வண்ணக் கல்; beryl - *Aquamarina.*

[கால் + கோடல்.]

பச்சையாக இருக்கும் இக்கல் பாம்புக் கடியால் ஏற்பட்ட நஞ்சினைத் தீர்க்கும். இது வண்ணத்திலும், குணத்திலும், அமைப்பிலும் பைம்மணி (மரகதம்)யை ஒத்ததாய் இருந்தாலும் அதன் அளவிற்கு வண்ணமாய் இராது (சா.அக.).

காற்சப்பைநழுகு-தல் *kāṟ-cappai-naḻugu-,* 5 செ.கு.வி.(v.i.) காற்சப்பை எலும்பு இடத்தை விட்டுப் பெயர்தல்; dislocation of the hip-bone (சா.அக.).

[கால் + சப்பை + நழுகு-தல்.]

காற்சிகம் *kāṟśigam,* பெ.(n.) நாயுருவி; Indian burr - *Achyranthes aspera* (சா.அக.).

காற்சிராய் *kāṟ-śirāy,* பெ.(n.) காற்சட்டை; trousers.

[கால் + சிராய்.]

காற்சிலந்தி *kāṟ-śilandi,* பெ.(n.) காலில் வரும் சிலந்திப் புண்; ulceration of the leg (சா.அக.).

[கால் + சிலந்தி.]

காற்சிப்பு *kāṟ-śippu,* பெ.(n.) இடுப்புச் சந்தெலும்பு; hip bone (செ.அக.).

[கால் + சிப்பு.]

காற்பாசம் *kāṟpāśam,* பெ.(n.) பருத்தி; Indian cotton plant (செ.அக.).

காற்புற்று *kāṟ-puṟṟu,* பெ.(n.) பாதம் வீங்கிப் பிறகு வெடித்துப் புரையுண்டாக்கும் ஒரு புற்று நோய்; a peculiar swelling of the foot in which the tubercles beneath the skin burst and leave sinuses (சா.அக.).

[கால் + புற்று.]

காற்றட்டி *kāṟṟaṭṭi,* பெ.(n.) முட்டிக்கால் தட்டி; a knock-kneed person (சா.அக.).

[கால் + தட்டி.]

காற்றறிவிக்குங்கருவி *kāṟṟaṟivikkum-karuvi,* பெ. (n.) காற்று அடிக்கின்ற திசையை அறிவிக்கும் கருவி; an instrument.

[காற்று + அறிவிக்கும் + கருவி.]

காற்றாட *kāṟṟāḍa,* வி.அ. (adv.) காற்றுப்படும் படி; காற்றை நுகரும்படி; for an airing. *கடற்கரைப் பக்கம் காற்றாடப் போய் வரமுடியவில்லை (உ.வ.). மொட்டை மாடியில் காற்றாடப் படுத்துக் கிடந்தேன் (உ.வ.).*

[காற்று + ஆட.]

காற்றாடப்போடு-தல் *kāṟṟāḍa-p-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) நிழலில் உலர்த்தல்; drying in the shade by exposing to the breeze (சா.அக.).

[காற்று + ஆட + போடு-,]

காற்றாடமூலை *kāṟṟāḍa-mūlai,* பெ.(n.) காற்று படாத ஒதுக்கிடம்; an ill-ventilated secluded place (சா.அக.).

[காற்று + ஆடா + மூலை.]

காற்றாடி *kāṟṟāḍi,* பெ.(n.) 1. ஒரு சட்டத்தின் மீது துணி அல்லது காகிதம் ஒட்டப்பட்டு வால் போன்ற நீளமான பகுதி சேர்க்கப்பட்டு நூலின் மூலமாகக் காற்றில் பறக்க விடப்படும் ஒரு விளையாட்டுப் பொருள்; பட்டம்; kite. 2. நறுக்கிய இரு ஓலைத் துண்டுகளை ஒன்றன் மீது ஒன்றாக வைத்து அதன் நடுப்பகுதியில் முள் போன்றவற்றால் குத்தி ஒரு குச்சியுடன் இணைத்துக் காற்றில் சுழலவிடும் சிறுவர் விளையாட்டுப் பொருள்; a kind of pinwheel. 3. மின் விசிறி; electric fan.

[காற்று + ஆடி.]

காற்றாலை *kāṟṟālai,* பெ.(n.) காற்றின் இயக்கத்தைக் கொண்டு மின்சாரம் உருவாக்கம் செய்யவோ, இயந்திரங்கள் இயக்கவோ பயன்படும் அமைப்பு; windmill.

[காற்று + ஆலை.]



காற்றிமிர் *kāṟṟimir,* பெ.(n.) 1. காலின் திமிர்; numbness of the leg. 2. மரத்துப் போன காலடி; numbness of the feet (சா.அக.).

[கால் + திமிர்.]

காற்றிரு-த்தல் *kāṟṟiru-,* 3 செ.கு.வி.(v.i.) காலின் எலும்பு நழுகலை அல்லது நரம்புப் பிசகைச் சரி செய்தல்; setting right the dislocated bone or the sprain (சா.அக.).

[கால் + திருத்து.]

காற்றுகறுப்பு *kāṟṟu-kaṟuppu,* பெ.(n.) பேய், பிசாசு முதலியவை; evil spirits. *ஏதோ காற்றுகறுப்பு அடித்து விட்டதாக வேப்பிலை அடித்து மந்திரித்தார்கள்.*

[காற்று + கறுப்பு.]

காற்றுச்சிகிச்சை *kāṟṟu-c-cigiccai,* பெ.(n.) காற்றைக் கொண்டு நோய்களைச் சரி செய்தல்; the therapeutic employment of air - *Air-cure* (சா.அக.).

[காற்று + சிகிச்சை.]

காற்றுச்சேட்டை *kāṟṟu-c-cēṭṭai,* பெ.(n.) பேய் பிசாசுகளினால் ஏற்படும் தீங்கு; mischief of evil spirits (சா.அக.).

[காற்று + சேட்டை.]

காற்றுப்புகா *kāṟṟu-p-pugā,* பெ.எ.(adj.) காற்றுட் புகாத; impermeable to air; air-tight (சா.அக.).

[காற்று + புகா.]

காற்றுப்புகாபுட்டி *kāṟṟu-p-pugā-puṭṭi,* பெ. (n.) காற்று நுழையாதபடி தடையிட்ட குப்பி; air-tight corked bottle (சா.அக.).

[காற்று + புகா + புட்டி.]

காற்றுப்புசி-த்தல் *kāṟṟu-p-puśi-,* 4 செ.கு.வி. (v.i.) காற்றை உணவாக உட்கொள்ளுதல்; living on air; eat to air. *இதை ஒகி (யோகி)கள் செய்வார்கள்* (சா.அக.).

[காற்று + புசி-,]

காற்றுவாக்கில் *kāṟṟuvākkil,* வி.அ.(adv.) நேரடியாகக் கேள்விப்படாமல் பிறர் சொல்லி அறிதல்; செவி வழிச் செய்தியாக அறிதல்; by word of mouth hearsay. *அவனுக்கு வேலை போய் விட்டது என்பதை காற்றுவாக்கில் கேள்விப் பட்டேன் (உ.வ.).*

[காற்று + வாக்கில்.]

காற்றுவாக்கு *kāṟṟu-vākku,* பெ.(n.) 1. காற்றடிக்கும் திசை; direction of the wind. *"காற்றுவாக்கிலே நின்று" (சீவக.1568, உரை).* 2. காற்றுத் தோன்றும் பக்கம்; leeward, used when a current of offensive effluvia is conveyed by the wind, as from a passing fisherwoman. 3. அசட்டை; neglect of duty. 4. தற்செயல்; mere chance (செ.அக.).

[காற்று + வாக்கு.]

காற்றுவாங்கி *kāṟṟuvāṅgi,* பெ.(n.) காற்றை வெளிப்படுத்தும் இயந்திரம்; a machine of pumping the air out - *Air-pump* (சா.அக.).

[காற்று + வாங்கி.]

காற்றுள்ள *kāṟṟuḷḷa,* பெ.எ.(adj.) காற்றடங்கிய; air (சா.அக.).

[காற்று + உள்ள.]

காறற்கருணை *kāṟaṟ-karuṇai,* பெ.(n.) கருணைக் கிழங்கு; elephant yam with a rancid taste - *Typhonium orixense* (சா.அக.).

[காறல் + கருணை.]

காறற்குறட்டை *kāṟaṟ-kuṟaṭṭai,* பெ.(n.) சவரிக் கொடி; bitter-ground; round snake gourd - *Trichosanthes palmate.*

[காறல் + குறட்டை.]

இதன் இலைகள் அரும்புள்ளன. பூக்கள் பெரிது, வெண்மை நிறமும் நாற்றமும் உள்ளவை. சிகப்பாக உருண்டை வடிவில் அரத்தியின் (ஆப்பிள்) பருமனில் இருக்கும். உலர்ந்தது; கிச்சிலிப்பழம் நிறமுடையது. இதனுள் சதைப்பற்று ஆடும்; கொடி கசக்காது. இதன் வேருக்கு நஞ்சுத் தன்மை உண்டு. இது ஆ நோய்களுக்குப் பயனுள்ளது (சா.அக.).

காறன்தைலம் *kāṟaṉ-tailam,* பெ.(n.) ஆளி விதை எண்ணெய்யும், சுண்ணாம்பு நீரும் சேர்ந்த எண்ணெய்; a liniment composed of linseed oil and lime-water - *Carron-oil* (சா.அக.).

[காறல் + தைலம்.]

காறாவெண்ணெய் *kāṟā-veṇṇey,* பெ.(n.) கருமையான முலைக்காம்புடைய ஆவின் வெண்ணெய்; butter from the milk of black-nippled cow (சா.அக.).

[கார் + ஆ + வெண்ணெய். காரான்–காறான் (கொ.வ.)]

காறித்துப்பு-தல் *kāṟi-t-tuppu-,* 5 செ.கு.வி. (v.i.) வெறுப்பை வெளிப்படுத்தும் வகையில்

வாயில் உள்ள எச்சிலைத் துப்புதல்; spit out of rancour. *அவனெல்லாம் ஒரு மனிதனா? என்று கூறிவிட்டுக் காறித் துப்பினார்.*

[காறி + துப்பு-தல்.]

காறுபாறாயிரு-த்தல் *kāṟu-pāṟāy-iru-,* 2 செ.கு.வி. (v.i.) விழிப்பாயிருத்தல்; to keep a strict eye, as upon a person (செ.அக.).

[காறு + பாறா + இருத்தல்.]

காறுபாறுபடி-த்தல் *kāṟu-pāṟu-paḍi-,* 4 செ.கு.வி. (v.i.) ஒரு செயலைச் செய்வதற்குரிய ஆளுமைப் பண்பைப் பழகுதல்; to learn how to manage business (செ.அக.).

[காறு - பாறு + படி-,.]

கான்புலி *kāṉ-puli,* பெ.(n.) காட்டுப்பூனை (பிங்.); wild cat (செ.அக.).

[கான் + பூனை]

கான்மிகம் *kāṉmigam,* பெ.(n.) **கான்மியம்** பார்க்க; see *kāṉmiyam* (செ.அக.).

கான்மியம் *kāṉmiyam,* பெ.(n.) மும்மலத்துள் ஒன்றாய் ஏதிலியாய் (அநாதை) உள்ள கன்மலம் (சிசி.2, 39, ஞானப்.); (Śaivā) one of the three eternal obstructive principles which creates bondage for the soul as a result of good and evil deeds (செ.அக.).

[கருமம்- கன்மம் - கான்மியம்]

கான்மிரம் *kāṉmiram,* பெ.(n.) **காசுமீரம்** பார்க்க; see *kāsumīram.* *"தணிகான்மி நாட்டில்" (திருவிளை.கல்லாணை.7) (செ.அக.).*

[கான்மி - கான்மிரம்]

கானக்கல் *kāṉa-k-kal,* பெ.(n.) **கானகக்கல்** (சங்.அக.) பார்க்க; see *kāṉaga-k-kal* (செ.அக.).

[கானகம் + கல்.]

கானக்கூபரம் *kāṉa-k-kūbaram,* பெ.(n.) பச்சைக்கல் வகை (யாழ்.அக.); a variety of green stone (செ.அக.).

[கான + கூபரம்]

கானக்குதிரைமேல்தோல் *kāṉa-k-kudirai-mēl-tōl,* பெ.(n.) மாம்பட்டை; the bark of a mango tree (சா.அக.).

[கானம் + குதிரை + மேல் + தோல்.]

கானக்குதிரைவிதை *kāṉa-k-kudirai-vidai,* பெ.(n.) கடம்பமர விதை; the seed of cadamba tree (சா.அக.).

[கானம் + குதிரை + விதை.]

கானகக்கூபரம் *kāṉaga-k-kūbaram,* பெ. (n.) நாகப் பச்சை; a kind of emerald; a peculiar green stone forming one of the 120 kinds of natural substances.

[கானகம் + கூபரம்.]

கானகக்கோழி *kāṉaga-k-kōḻi,* பெ.(n.) காட்டுக்கோழி; jungle fowl - *Gallus sonneraii* (சா.அக.).

[கானகம் + கோழி.]



கானககீதம் *kāṉaga-gītam,* பெ.(n.) கருவண்டு (யாழ்.அக.); black beetle (செ.அக.).

[கானகம் + கீதம்.]

கானகச்சத்துரு *kāṉaga-c-catturu,* பெ.(n.) வெள்ளீய மணல்; tin-ore (சா.அக.).

[கானகம் + சத்துரு.]

கானகச்சாரி *kāṉaga-c-cāri,* பெ.(n.) கோங்கு; golden silk cotten - *Cochlospermum gossypium* (சா.அக.).

கானகச்சூதம் *kāṉaga-c-cūdam,* பெ.(n.) 1. மாமரம்; the mango-tree - *Mangifera indica.* 2. புளிய மரம்; the tamarind tree - *Tamarindus indica.* 3. புளிப்பு; sourness (சா.அக.).

கானகத்தில்சிந்துமுட்டாணம் *kāṉagattil-cindu-muṭṭāṇam,* பெ.(n.) பன்றி முள்; porcupine's spine found scattered in the forest (சா.அக.).

[கானகத்தில் + சிந்து + முள் + தாணம்.]

கானகத்தீதம் *kāṉaga-t-tīdam,* பெ.(n.) 1. கருவண்டு; black beetle. 2. காட்டின் குளிர்ச்சி; chillness in the forest (சா.அக.).

[கானகம் + தீதம்.]

கானகத்துக்கதிபதி *kāṉagattu-k-katibadi,* பெ.(n.) 1. தூதுவளை; three-lobed night-shade - *Solanum trilobatum.* 2. அரிமா; lion (சா.அக.).

[கானகம் + அத்து + அதிபதி.]

கானகப்புல் *kāṉaga-p-pul,* பெ.(n.) காமாட்சிப்புல்; காவட்டம்புல்; citronella - *Andropogon citratis* (சா.அக.).

[கானகம் + புல்.]

கானகமருக்கொழுந்து *kāṉaga-maruk koḻundu,* பெ.(n.) மணமில்லாத காட்டு மருக்கொழுந்து; forest maid's love without fragrance; southern wood (சா.அக.).

[கானகம் + மருக்கொழுந்து.]

கானகவாட்சி *kāṉaga-v-āṭci,* பெ.(n.) ஒரு வகைப் பெருமல்லிகை; tuscan jasmine; double-flowered jasmine - *Jasminum sambuc* (சா.அக.).

[கானகம் + வாட்சி.]

கானகன் *kāṉagaṉ,* பெ.(n.) கழுதை; ass (சா.அக.).

கானசரம் *kāṉaśaram,* பெ.(n.) புல்வகை; kaus, a large and coarse grass - *Saccharum sontaneum* (செ.அக.).

[கான் + சரம்.]

கானப்பத்திரம் *kāṉa-p-pattiram,* பெ.(n.) வில்வம்; Indian bael - *Aegle marmelos* (சா.அக.).

கானப்பேரெயில்கடந்தஉக்கிரப்பெருவழுதி *kāṉa-p-pēreyil-kaḍanda-ukkira-p-peruvaḻuti,* பெ.(n.) பாண்டிய மன்னன்; Pāṇḍia king.

[கானம் + பெரு + எயில் + கடந்த (உக்கரம்) உக்கிரம் + பெருவழுதி.]

கடைக்கழக மிருத்திய பாண்டியர்களுள் ஒருவன். இவன் முன்பாகத் திருக்குறள் அரங்கேற்றப்பட்டது. அகநானூறு தொகுப்பித்தோன் இவனே. இவனைப் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி என்றும் கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என்றும் கூறுவர் (அபி.சிந்.).

கானமயில் *kāṉa-ma-y-il,* பெ.(n.) காட்டு மயில்; wild pea-cock (சா.அக.).

[கானம் + மயில்.]

கானமல்லி *kāṉa-malli,* பெ.(n.) 1. சிறு மல்லிகை; narrow leaved jasmine - *Jasminum triflorum.* 2. காட்டு மல்லிகை; wild jasmine - *Jasminum angustifolium alias J.acuriculatum* (சா.அக.).

[கானகம் + மல்லி.]

கானமவ்வல் *kāṉa-mavval,* பெ.(n.) **கானமல்லி** பார்க்க; see *kāṉa-malli* (சா.அக.).

[கானம் + மவ்வல்.]

கானமழை *kāṉa-maḻai,* பெ.(n.) தேன்; honey (சா.அக.).

[கான + மழை.]

கானமுல்லை *kāṉa-mullai,* பெ. (n.) **கானமல்லி** பார்க்க; see *kāṉa-malli* (சா.அக.).

[கானம் + முல்லை.]

கானயம் *kāṉa-y-am,* பெ.(n.) காட்டு வெக்காலி மரம்; partidge pea tree - *Anacolosa densiflora* (சா.அக.).

கானரசம் *kāṉa-rašam,* பெ.(n.) இசைச் சுவை; sweet charm of music (செ.அக.).

*[கானம் + **Skt.** இரசம்.]*

கானல்நீர் *kāṉal-nīr,* பெ.(n.) வெப்பப் பகுதிகளில் அனல் காற்றால் நீரோடை ஒன்று அருகில் ஓடுவது போல இருக்கும் மாயத் தோற்றம்; பொய்த் தோற்றம்; sight resembling presence of water in a desert; mirage. *திட்டங்கள் நிறைவேறி னால் வறுமை ஒழிப்பு வெறும் கானல்நீர் ஆகாது.*

[கானல் + நீர்.]

கானல்பலா *kāṉal-palā,* பெ.(n.) காட்டுப் பலா; jungle jack - *Artocarpus hirsuta* (சா.அக.).

[கானல் + பலா. கானல் = காடு.]

கானல்பால் *kāṉal-pāl,* பெ.(n.) 1. எருக்கம் பால்; milky juice drawn from madar plant. 2. கள்ளிப்பால்; milky juice of euphorbia genus. 3. கூகைநீறு; flour of Indian arrow-root - *Curcuma anguostifolia.* 4. காட்டு எருமையின் பால்; milk of wild buffalo (சா.அக.).

கானல்மா *kāṉal-mā,* பெ.(n.) **காட்டு மாம்பழம்** பார்க்க; see *kāṭṭu-māmbaḻam* (சா.அக.).

[கானல் + மா.]

கானல்மிருகம்[1] *kāṉal-mirugam,* பெ.(n.) 1. காட்டுப் பன்றி; wild boar. 2. மான்; deer (சா.அக.).

*[கானல் + **Skt.** மிருகம்.]*

கானல்மிருகம்[2] *kāṉal-mirugam,* பெ.(n.) கொக்கு மந்தாரை; taper pointed mountain ebony - *Bautinia acuminata.*

*[கானல் + **Skt.** மிருகம்.]*

கானல்முருங்கை *kāṉal-muruṅgai,* பெ.(n.) 1. காட்டு முருங்கை; wild Indian horse radish - *Moringa concanensis.* 2. புனல் முருங்கை; oval-leaved Indigo - *Indigofera trita.* 3. ஆடாதோடை; Malabar winter cherry or Malabar nut shrub - *Adhatoda vesica alias A.pubescens.* 4. மாவிலங்கை; forest small lingam tree - *Crataeva religiosa.* 5. பூனை முருங்கை; jungle moringa - *Ormocarpum sennoides.* 6. பவளப்பூலா; wild moringa or coral berry tree - *Bryonia rhamnoides.* 7. கசப்பு முருங்கை; bitter moringa (சா.அக.).

[கானல் + முருங்கை.]

கானல்வாகியம் *kāṉal-vāgiyam,* பெ.(n.) சீரகம்; cumin seed - *Cuminum cyminum* (சா.அக.).

கானலக்கினி *kāṉal-akkiṉi,* பெ.(n.) 1. சித்தர்கள் உண்ணும் மூலிகைகளுள் ஒன்றான சிவப்புச் சதுரக் கள்ளி; red square-spurge - *Euphorbia antiquorum.* It is one of the drugs generally taken by Siddhars. 2. காட்டுத்தீ; wild-fire. 3. மருந்து செய்வதற்காக இரண்டு விரற் கனமுள்ள 4 அல்லது 5 விறகால் எரிக்கும் நெருப்பு; a big fire used for preparing medicines and got up with 4 or 5 pieces of fuel, each of 2 fingers width - *Conflagration* (சா.அக.).

[கானல் + அக்கினி]

கானலாகினி *kāṉalāgiṉi,* பெ.(n.) **கானலக்கினி** பார்க்க; see *kāṉal-akkiṉi* (சா.அக.).

கானலாவனி *kāṉalāvaṉi,* பெ.(n.) 1. சங்கங் குப்பி; a small-leaved glory tree - *Cleodendron inerme.* 2. சங்கஞ் செடி; four - spined monetia - *Azima tetracantha* (சா.அக.).

[கானல் + அவனி.]

கானவல்லை *kāṉa-vallai,* பெ.(n.) 1. குரங்கு; monkey. 2. **கானல்முருங்கை** பார்க்க; see *kāṉal-muruṅgai* (சா.அக.).

[கான + வல்லை.]

கானவிந்து *kāṉa-vindu,* பெ.(n.) மானசோத்ர மலையில் உள்ள கூகை; owl which lived māṉašōtra hill.

கானற்கன்னி *kāṉaṟ-kaṉṉi,* பெ.(n.) ஒருவகைக் கொடி (இருப்பவல்); a kind of creeper - *Indian cudweed, Gnaphalium indicum* (சா.அக.).

[கானல் + கன்னி.]

கானற்சலம் *kāṉaṟ-šalam,* பெ.(n.) **கானனீர்** பார்க்க; see *kāṉaṉīr* (செ.அக.).

[கானல் + சலம்.]

கானற்பால் *kāṉaṟ-pāl,* பெ.(n.) **கானல்பால்** பார்க்க; see *kāṉal-pāl* (சா.அக.).

[கானல் + பால்.]

கானற்பீலிதம் *kāṉaṟ-pīlidam,* பெ.(n.) தும்பை; leucas flower (சா.அக.).

[கானல் + பீலிதம்.]

கானனுசேதி *kāṉaṉu-šēdi,* பெ.(n.) நவ்வல் அதாவது நாவல்; jaumoon or black plum - *Eugenia jambolina* (சா.அக.).

[கான் + அனுசோதி]

கானான்வாழை *kāṉāṉ-vāḻai,* பெ.(n.) நீர் வாழை; traveller's palm - *Ravenala madagascariensis* (சா.அக.).

[கானான் + வாழை.]

கானான்வேளை *kāṉāṉ-vēḷai,* பெ.(n.) தைவேளை; a black variety of velai or five leved cleome - *Gynand* (சா.அக.).

[கானான் + வேளை.]

கானிற்குன்று *kāṉiṟ-kuṉṟu,* பெ.(n.) வைக்கிராந்த நஞ்சு; a mineral poison (சா.அக.).

[கானில் + குன்று.]

கானீனன் *kāṉīṉaṉ,* பெ.(n.)1. திருமணமாகாத பெண் (கன்னி) பெற்ற மகன் (திவா.); son of an unmarried woman, as Vyāsa, one of 12puttiraṉ. 2. கன்னன் (பிங்.); Karṇā, son of Šūrya by Kunti, born during her maidenhood (செ.அக.).

[Skt. kānīna> த. கானீனன்.]

கிங்கிசாலம் *kiṅgišālam,* பெ.(n.) வேல மரம்; bobool tree - *Acacia indica* (சா.அக.).

[கிங்கி + சாலம்.]

கிங்கிரா *kiṅgirā,* பெ.(n.) நந்தியா வட்டம்; common wax -flower - *Tabernae montana coronaria alias Marium coronarium* (சா.அக.).

[கிங்கி + கிங்கிரா]

கிச்சிலிக்கசாயம் *kiccili-k-kašāyam,* பெ.(n.) **கிச்சிலிக்குடிநீர்** பார்க்க; see *kiccili-k-kuḍi-nīr.*

[கிச்சிலி + Skt. கசாயம்.]

கிச்சிலிக்காடி *kiccili-k-kāḍi,* பெ.(n.) 1. கிச்சிலிப் புளிப்பு; fermented orange juice. 2. புளி நாரத்தைச் சாற்றைப் புளிக்க வைத்த காடி; acetic acid from bitter orange by the acetous fermentation (சா.அக.).

[கிச்சிலி + காடி.]

கிச்சிலிக்குடிநீர் *kiccili-k-kuḍi-nīr,* பெ.(n.) நாரத்தைத் தோலினின்று வடித்த குடிநீர்;

tincture of orange peel - *Tinctura auranti* (சா.அக.).

[கிச்சிலி + குடி + நீர்.]

கிச்சிலிச்சாறாயம் *kiccili-c-cārāyam,* பெ.(n.) கிச்சிலி மது; orange wine (சா.அக.).

[கிச்சிலி + சாறாயம்.]

கிச்சிலித்தோல் *kiccili-t-tōl,* பெ.(n.) கிச்சிலிப் பழத்தின் தோல்; orange peel (சா.அக.).

[கிச்சிலி + தோல்.]

கிச்சிலித்தோலெண்ணெய் *kiccili-t-tōlenney,* பெ.(n.) கிச்சிலித் தோலினின்று வடிக்கும் எண்ணெய்; oil from the rind of orange - *Zest* (சா.அக.).

[கிச்சிலி + தோல் + எண்ணெய்.]

கிச்சிலிப்பழம் *kiccili-p-palam,* பெ.(n.) கொழுஞ்சிப் பழம்; orange fruit - *Citrus aurantium* (சா.அக.).

[கிச்சிலி + பழம்.]

கிச்சிலிப்பாகு *kiccili-p-pāgu,* பெ.(n.) சர்க்கரைப் பாகில் இட்ட புளிப்பும் கசப்புமுள்ள கிச்சிலி எலுமிச்சை முதலிய ஊறுகாய்; preserves made from bitter and acid fruits such as orange, lemon etc. - *Marmalade* (சா.அக.).

[கிச்சிலி + பாகு.]

கிச்சிலிப்பாணி *kiccili-p-pāni,* பெ.(n.) கிச்சிலிச் சாற்றுடன் சர்க்கரை இட்டுப் பயன்படுத்தும் குடிநீர்; orange sweet drink; a solution of orange-juice and sugar (சா.அக.).

[கிச்சிலி + பாணி.]

கிச்சிலிப்பாணிதம் *kiccili-p-pānidam,* பெ.(n.) **கிச்சிலிப்பாணி** பார்க்க; see *kiccili-p-pāni*(சா.அக.).

கிச்சிலிப்புல் *kiccili-p-pul,* பெ.(n.) ஒரு நறுமணப் புல்; orange grass - *Andropogonnardus* (சா.அக.).

[கிச்சிலி + புல்.]

கிச்சிலிப்பூக்குடிநீர் *kiccili-p-pūkkudi-nīr,* பெ.(n.) கிச்சிலிப்பூத் தீ நீரில் சர்க்கரை இட்டு பாகாகக் காய்ச்சிப் பயன்படுத்தும் குடிநீர்; syrup of orange flower - *Syrupus aurantifloris* (சா.அக.).

[கிச்சிலி + பூ + குடி + நீர்.]

கிச்சிலிப்பூத்தண்ணீர் *kiccili-p-pūttannīr,* பெ.(n.) கிச்சிலிப் பூவை ஊறவைத்து எடுத்த நறுமண நீர்; a fragrant liquid obtained by soaking orange flowers in water (சா.அக.).

[கிச்சிலி + பூ + தண்ணீர்.]

கிச்சிலிப்பூத்தீநீர் *kiccili-p-pūttinīr,* பெ.(n.) கிச்சிலிப் பூச்சாற்றில் இருந்து வாலையிறக்கிய நீர்; water distilled from the juice of orange flowers.

[கிச்சிலி + பூ + தீ + நீர்.]

இது மாதவிலக்கு, நரம்புவலி, இழுப்பு இவற்றைக் குணமாக்கும் (சா.அக.).

கிச்சிலிப்பூப்பாணிதம் *kiccili-p-pūp pānidam,* பெ.(n.) **கிச்சிலிப்பூக்குடிநீர்** பார்க்க; see *kiccili-p-pūkkudinīr* (சா.அக.).

[கிச்சிலி + பூ + பாணிதம்.]

கிச்சிலிரசம் *kiccili-rasam,* பெ.(n.) **கிச்சிலிச்சாறு** பார்க்க; see *kiccili-c-cāru.*

[கிச்சிலி + Skt. ரசம்.]

கிச்சிலிச்சாறு *kiccili-c-cāru,* பெ.(n.) கிச்சிலிப் பழத்தைப் பிழிந்த சாறு; orange-juice (சா.அக.).

[கிச்சிலி + சாறு.]

கிச்சிலிவாழை *kiccili-vālai,* பெ.(n.) வாழை மரவகை (ரசதாளி); a species of plantain (சா.அக.).

[கிச்சிலி + வாழை.]

கிச்சிலிவூறுகாய் *kiccili-v-ūrugāy,* பெ. (n.) கிச்சிலிக்காய் அல்லது கிச்சிலிப் பழத் தோலை கறிக்கூட்டுடன் சேர்த்து எண்ணெயில் ஊறப்போட்ட ஊறுகாய்; a seasoned pickled of orange raw fruit or rind of orange ripe fruit prepared by mixing it with condiments and keeping it soaked in gingelly oil (சா.அக.).

[கிச்சிலி + ஊறுகாய்.]

கிச்சிலிவேர் *kiccili-vēr,* பெ.(n.) 1. சீமைக் கிச்சிலிக் கிழங்கு; orange root or camphor zedoary - *Hedychium spicatum.* 2. கருப்பூரக் கிச்சிலிக் கிழங்கு; orange root or camphor root - *Curcuma zedoaria* (சா.அக.).

[கிச்சிலி + வேர்.]

கிச்சுக்கிச்சுக்காட்டு-தல் *kiccu-k-kiccu-k-kāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) ஒருவருடைய அக்குள், விலாப்புறம் முதலிய இடங்களில் கையால் வருடிச் சிரிப்பு வரும்படிக் கூச்சம் உண்டாக்குதல்; tickle so as to make one laugh.

[கிச்சு + கிச்சு + காட்டு-தல்.]

கிசுகிசு[1]-த்தல் *kišu-kišu-,* 4 செ.கு.வி.(v.i.) பிறர் கேட்காதவாறு ஒருவருடைய காதில் மெதுவாக ஒன்றைச் சொல்லுதல்; கமுக்கமாகப் (இரகசியம்) பேசுதல்; something into the ears tell a secret in whispering voice.

[கிசு + கிசு-த்தல்.]

கிசுகிசு[2] *kišu-kišu,* பெ.(n.) **கிசுகிசுப்பு, 1** பார்க்க; see *kišu-kišuppu,1.*

கிசுகிசுப்பு *kišu-kišuppu,* பெ. (n.) 1. ஒருவருடைய சொந்த வாழ்க்கையைப் பற்றி மறைவாகப் பேசிக் கொள்ளும் பேச்சு; juicy talk about a person's private life. *புது நடிகையைப் பற்றிப் பல கிசுகிசுப்புகள் வரத் தொடங்கி விட்டன.* 2. பிறர் கேட்காதபடியான மெல்லிய ஓசை; whisper; soft voice. *கிசுகிசுப்பான குரலில் கேட்டாள்*

[கிசு + கிசுப்பு.]

கிசோரம் *kišōram,* பெ.(n.) ஒரு செடி; an unknown plant (சா.அக.).

கிட்டல் *kiṭṭal,* பெ.(n.) நெருங்குகை, பல் கிட்டுகை; close setting of the teeth (சா.அக.).

[கிட்டு - கிட்டல்]

கிட்டிபோடு-தல் *kiṭṭi-pōḍu-,* 8 செ.கு.வி. (v.i.) 1. கிட்டியில் மாட்டுகை; நெருக்குப் பிடித்தல்; put in a clasp so as to prevent moving. 2. மற்றவர் தனக்குத் தர வேண்டிய வாடகை, வட்டி முதலியவற்றைத் திருப்பித் தருமாறு விடாது நெருக்குதல்; urge in a forcible manner; put the squeeze on. *ஆளைக் கிட்டி போட்டுக் கொடுத்த கடனை வாங்கிவிட்டார்.*

[கிட்டி + போடு-தல்.]

கிட்டிலம் *kiṭṭilam,* பெ.(n.) செவ்வாம்பல்; அரக்காம்பல்; red variety water-lily (சா.அக.).

கிட்டினவுறவு *kiṭṭiṉa-v-uṟavu,* பெ.(n.) நெருங்கிய உறவினர்; near relation, close relationship (செ.அக.).

[கிட்டு→கிட்டின + உறவு.]

கிட்டுமானம் *kiṭṭu-māṉam,* பெ.(n.) அருகாமை; nearness, proximity, vicinity (செ.அக.).

[கிட்டு + மானம்.]

கிட்டே *kiṭṭē,* வி.அ.(adv.) 1. அருகில்; பக்கத்தில்; near, closer. *கிட்டே வந்து மெதுவாகப் பேசு (உ.வ.). ஊர்வலம் மிகவும் கிட்டே வந்துவிட்டது (உ.வ.).* 2. வயது, நேரம் போன்றவை குறிப்பிட்ட எண்ணிக்கையை

ஒட்டி வருதல் அல்லது நெருங்குதல்; of time, age around; about.

[கிட்டு→கிட்ட→கிட்டே.]

கிடக்கை *kiḍakkai,* பெ.(n.) 1. படுத்தபடி கிடக்கை; recumbent posture. 2. கட்டில்; cot; couch. 3. நிலம்; earth. 4. இடம்; place (சா.அக.).

[கிட - கிடக்கை.]

கிடகு *kiḍagu,* பெ.(n.) இருபத்து நான்கு விரலளவு கொண்ட முழம் (சர்வா.சிற்.27); cubit of 24 finger breaths (செ.அக.).

[கிட - கிடகு.]

கிடங்கல்காவிதிகீரங்கண்ணனார் *kiḍaṅgal-kāviti-kīraṅ-kaṇṇaṉār,* பெ.(n.) ஒரு புலவர்; a poet.

[கிடங்கில் + காவிதி +கீரன் + கண்ணன் + ஆர்.]

இவரது இயற்பெயர் கண்ணனார். கீரன் என்பது தந்தையின் பெயர். காவிதி இவர் பெற்ற பட்டம். (அபி.சிந்.).

கிடங்கன்பெருமாள்முதலியார் *kiḍaṅgaṉ-perumāḷ-mudaliyār,* பெ.(n.) ஒரு தமிழ்ப் புலவர் (அபி.சிந்.); a Tamil poet.

[கிடங்கன் + பெருமாள் + முதலியார்.]

ஒருமுறை அரசன் இவரை அறம் வளர்ப்பவர் யாவர் எனக் கேட்க இவர் வேளாளரே என்றார். அரசர்கள் இல்லையா எனக் கேட்டதற்கு இவர் பதில் சொல்லாமலிருக்க அரசன் இவரைக் கொலை செய்தான். பின் ஒருமுறை இவ்வரசனது மகனைப் பகைவர் துரத்திவர அவன் கிடங்கன் பெருமாளின் வீட்டில் அடைக்கலம் புகுந்தான். கிடங்கன் பெருமாளின் மகன் தன் மகனை இளவரசன் எனக் காட்டி அரசகுமாரனைக் காத்தான். தந்தையைக் கொன்றதையும் கருதாமல் தன் மகனைக் காத்ததை எண்ணி வேளாளரே அறம் வளர்ப்பவர் எனக் கூறி மன்னன் சிறப்பு செய்தான் (அபி.சிந்.).

கிடங்கில்காவிதிபெருங்கொற்றனார் *kiḍaṅgil-kāviti-peruṅ-koṟṟaṉār,* பெ.(n.) கழகக் காலப்புலவர்; a poet in Śaṅgam age.

[கிடங்கில் + காவிதி + பெரும் + கொற்றனார்.]

நற்றிணை 364–ஆம் பாடலைப் பாடியவர். கொற்றன் எனப் பலர் இருத்தலின் அவர்களில் இருந்து தனித்துத் தெரிய பெருங்கொற்றனார் எனப்பட்டார். இவர் முல்லைத் திணையைப் பாடுவதில் வல்லவர் (அபி.சிந்.).

கிடங்கிற்குலபதிநக்கண்ணனார் *kiḍaṅgiṟ-kulapati-nakkaṇṇaṉār,* பெ.(n.) கழகம் (சங்கம்) மருவிய காலப் புலவர்; the poet who belonged to last ancient Śaṅgam.

[கிடங்கில் + குலபதி + நக்கண்ணனார்.]

இவர் பெயர் கண்ணனாராக இருக்கலாம். மற்றைய அடைமொழிகள் இவரது ஊரைக் குறிப்பதாக இருக்கலாம். இவர் குறுந்தொகை 252–ஆம் பாடலைப் பாடியவர் (அபி.சிந்.).

கிடந்து *kiḍandu,* வி.அ.(adv.) குறிப்பிட்ட நிலையில் சிக்கி; மாட்டிக் கொண்டு; விடுபட முடியாமல்; having got caught in a specified state with no way out. *வறுமையில் கிடந்து உழல்கிறோம் (உ.வ.). மகனைக் காணோம் என்று நான் கிடந்து தவிக்கிறேன் (உ.வ.).*

[கிட - கிடந்து.]

கிடந்துருளு-தல் *kiḍanduruḷu-,* 16 செ.கு.வி. (v.i.) படுக்கையில் படுத்து உருளுதல்; rolling in bed; restlessness in bed (சா.அக.).

[கிடந்து + உருளு-தல்.]

கிடப்பில்இரு-த்தல் *kiḍappil-iru-,* 3 செ.கு.வி. (v.i.) திட்டம், தீர்மானம் போன்றவற்றை செயற்படுத்தாமல் காலம் செல்ல விட்டிருத்தல்; நிறுத்தியிருத்தல்; allow a plan, etc., to be in cold storage. *'இந்தத் திட்டம் மூன்று ஆண்டுகளாகக் கிடப்பில் இருந்து வருகிறது'.*

[கிடப்பில் + இரு-த்தல்.]

கிடப்பில்போடு-தல் *kidappil-pōdu-*, 20 செ.கு.வி.(v.i.) திட்டம், தீர்மானம் போன்றவற்றைச் செயற்படுத்தாமல் காலம் செல்ல விடுதல், விட்டு வைத்தல், நிறுத்தி வைத்தல்; put a plan, etc., in cold storage; put on ice. *ஆறுகளை இணைப்பது பற்றிய முடிவு நெடு நாட்களாகவே கிடப்பில் போடப்பட்டுள்ளது.*

[கிடப்பில் + போடு-தல்.]

கிடாம்பிநயினார் *kidāmpi-nayinār*, பெ.(n.) மணவாள மாமுனிக்கு ஆசிரியர்; teacher of *maṇavāḷa-mā-muṇi* (அபி.சிந்.).

[கிடாம்பி + நயினார்.]

கிடாரங்காய் *kidāraṅ-kāy*, பெ.(n.) கடாரங்காய்; citron (சா.அக.).

[கிடாரம் + காய்.]

கிடாரமுக்கி *kidāramukki*, பெ.(n.) ஒரு மூலி; an unknown plant (சா.அக.).

[கிடாரம் + அமுக்கி.]

கிடிபகுட்டம் *kidiba-kuttam*, பெ.(n.) பன்றித் தோல் போல் கனத்துக் காணும் ஒரு வகைக் குட்ட நோய்; a kind of leprosy characterised by the thickening of the skin like hog's skin, which is often the first manifestation of the diseases.

[கிடிப + குட்டம்.]

இதனால் உடம்பு பச்சை நிறம் அடைந்து, நமைச்சல் உண்டாகி, சதை வழுவுண்டு, கொப்புளங்கள் எழும்பி ஊன் வடிந்து நாற்றம் வரும் (சா.அக.).

கிடுக்கிப்பிடி *kidikki-p-pidi*, பெ.(n.) விடுபட முடியாதபடி கையாலோ, காலாலோ பிடித்துக் கொள்கிற அல்லது பின்னிக் கொள்கிற ஒரு பிடி; vice-like grip; wrenching hold. *அவனுடைய கிடுக்கிப் பிடியில் இருந்து யாரும் திமிர முடியாது.*

[கிடுக்கி + பிடி.]

கிடுகிடு *kidu-kidu*, பெ.அ.(adj.) தலைச் சுற்றல் ஏற்படக் கூடிய அளவுக்கு ஆழமுடைய; deep, enogh to cause dizziness. *கிடுகிடு பள்ளம் கிடுகிடு பாதாளம்.*

[கிடு + கிடு.]

கிடுகிடுவென்று *kidu-kidu-v-enṟu*, வி.அ.(adv.) 1. ஒரு செயலைச் செய்கையில் தடங்கல் எதுவும் இல்லாமல்; in doing quickly; quickly. *நேரமாகிறது, கிடு கிடுவென்று புறப்படு! (உ.வ.). கிடுகிடு வென்று வேகமாக நடந்தான் (உ.வ.). தேர்வுக்குப் போவதற்கு முன் ஒரு முறை பாடத்தைக் கிடுகிடுவென்று பார்த்துக் கொள்! (உ.வ.).* 2. மிக விரைவாக; indicating price rapidly. *நெல் விலை கிடுகிடுவென்று இறங்கிவிட்டது.*

[கிடுகிடு + என்று.]

கிடைதலை *kidai-talai*, பெ.(n.) சாகும் காலம் (யாழ்.அக.); moment of death.

[கிடை + தலை.]

கிடைபொருந்தாமை *kidai-porundāmai*, பெ.(n.) படுக்கையிற் பொருந்தாமை; restlessness in bed as of sick persons (சா.அக.).

[கிடை + பொருந்தாமை.]

கிண்கிண்ணிருமல் *kiṇkiṇṇirumal*, பெ.(n.) கிண்ணென்று ஓசையெழுப்பும் இருமல்; cough with a metallic sound (சா.அக.).

[கிண்கிண் + இருமல்.]

கிண்ணிக்கருப்பூரம் *kiṇṇi-k-karuppūram*, பெ.(n.) கருப்பூரத்தைக் கிண்ணி வடிவில் ஊற்றுகை; refind camphor cast in a mould of cup - *Cup-camphor.*

[கிண்ணி + கருப்பூரம். கிண்ணி = சிறு வட்டில்.]

கிண்ணிக்கால் *kiṇṇi-k-kāl*, பெ.(n.) நாயின் மாறுபட்ட கால்; a deformed leg of a dog (சா.அக.).

[கிண்ணி + கால்.]

கிண்ணித்தைலம் *kinni-t-tailam,* பெ.(n.) கிண்ணியின் உட்பக்கம் பதங்கம் ஏறும்படி செய்த எண்ணெய்; medicated oil which is prepared by process of sublimation in which the vapour is made to condense again as a deposit on the inner side of a cup or receiver (சா.அக.).

*[கிண்ணி + **Skt.** தைலம்.]*

கிணற்றுச்சத்தம் *kiṉaṟṟu-c-cattam,* பெ.(n.) **கிணற்றொலி** பார்க்க; see *kiṉaṟṟoli* (சா.அக.).

*[கிணற்று + **Skt.** சத்தம்.]*

கிணற்றொலி *kiṉaṟṟoli,* பெ.(n.) மெலிவான ஓசை; weak or dull sound (சா.அக.).

[கிணற்று + ஒலி.]

கிணீலெனல் *kiṉil-eṉal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; signifying ringing, tinkling, clinking sound (செ.அக.).

[கிணில் + எனல்.]

கிணுகினி *kiṉu-kiṉi,* பெ.(n.) உயிர்க் (கிருமிக்) கொல்லி; a remedy which expels worms from animal bodies - *Vermifuge* (சா.அக.).

[கிணு + கினி.]

கிணுகிணுப்பு *kiṉu-kiṉuppu,* பெ.(n.) காதில் எழும் ஒரு வகை ஒலி; a peculiar tinkling sound of the ear - *Tinnitus aurium* (சா.அக.).

[கிணு + கிணுப்பு.]

கிராய்த்தல் *kirāy,* 11 செ.கு.வி.(v.i.) சுவர் முதலியவற்றைத் தேய்த்துத் துலக்குதல்; to make level and smooth by rubbing, polishing (செ.அக.).

[சிராய் – கிராய்.]

கிராய் *kirāy,* பெ.(n.) 1. புற்காடு; turf. 2. கருஞ்சேற்று நிலம்; a kind of soil in agricultural track, black and marshy (செ.அக.).

[கிறு – கிறாய் – கிராய்.]

கிராயடி–த்தல் *kirāy-aḍi-,* 4 செ.கு.வி.(v.i.) புற்பற்றை போடுதல்; to turf (செ.அக.).

[கிராய் + அடித்தல்.]

கிராயது *kirāyadu,* பெ.(n.) செடிவகை; chiretta - *Swertia chirata* (செ.அக.).

கிருதம்[3] *kirudam,* பெ.(n.) மரவகை; red Indian laburnum - *Cassia marginata* (செ.அக.).

[குருதி (மாம்) – கிருதம்.]

கிருதிமாசம் *kirudi-māšam,* பெ.(n.) ஆனைத்திப்பிலி கொடிவகை; elephant-pepper climber - *Scindapsus officinalis* (சா.அக.).

[கிருதி + மாசம்.]

கிருமநிசத்தினி *kiruma-nišattiṉi,* பெ.(n.) திப்பிலி; long-pepper - *Piper longum* (சா.அக.).

[கிரும + நிசத்தினி.]

கிருந்தி *kirundi,* பெ.(n.) கஞ்சாங்கோரைச் செடி; a kind of plant - *Ocimum album.*

[கிரந்தி – கிருந்தி.]

இது 1–2 அடி உயரமிருக்கும். வீட்டுப் புறக்கடைகளிலும் குப்பைகளிலும் இது முளைத்திருக்கும். இதன் சாற்றைப் பிழிந்து குழந்தைகளுக்கு வரும் செரியாமை, காய்ச்சல், இருமல் இவைகளுக்குக் கொடுப்பார்கள். இது குடல்களுக்கும் இரைப்பைக்கும் வலுவைக் கொடுத்து செரிக்கும் தன்மையைக் கூட்டும் (சா.அக.).

கிருமியரி *kirumiyari,* பெ.(n.) வாயு விளங்கத்தி (கொடிவகையி)ன் அரிசி போன்ற மணி; wind - berry pepper-corn (செ.அக.).

*[**Skt.** krmi + hari > த.கிருமியரி.]*

கிருதவேதனா *kiruda-vēdaṉā,* பெ.(n.) பேய்ப்பீர்க்கு; wild bitter gourd (சா.அக.).

[கிருத + வேதனா.]

கிருதமாலிகை *kiruda-māligai,* பெ.(n.) கொன்றை; cassia - *Cassia fistula* (சா.அக.).

[கிருத + மாலிகை.]

கிருதமண்டாது *kiruda-m-aṇḍātu,* பெ.(n.) சிறு புள்ளடி; unifoliate trefoil - *Hedysarum gangeticum* (சா.அக.).

[கிருத + மண்டாது.]

கிருதாளி *kirudāḷi,* பெ.(n.) தாளிப்பனை; talipot tree - *Corypha umbraculifera* (சா.அக.).

[கிரு + தாளி.]

கில்லிதாண்டு *killi-tāṇḍu,* பெ.(n.) கிட்டிப்புள்; tip-cat.

[கில்லி + தாண்டு.]

கிலுங்காகிதம் *kiluṅgāgidam,* பெ.(n.) நாங்கில் மரம்; Ceylon iron-wood - *Mesua ferrea* (சா.அக.).

கிழக்கி *kiḻakki,* பெ.(n.) ஒன்றரை அடி நீளமுள்ள கடல் மீன் வகை (பதார்த்த.941); whiting sea-fish - Olive-green, attaining 1 ft. in length - *Sillago sihama* (செ.அக.).

[கீழக்கி – கிழக்கி.]



கிழக்கோட்டான் *kiḻa-k-kōṭṭāṉ,* பெ.(n.) வீட்டில் நடக்கும் எல்லாச் செயல்களையும் கவனித்துக் கொண்டிருக்கும் வயதானவரை இகழ்ச்சியாகக் கூறுகை; said contemptuously old hag; old geezer. *அந்தக் கிழக்கோட்டான் தான் எப்போதும் பேசிக் கொண்டு வாசலிலேயே உட்கார்ந்திருக்கும்.*

[கிழம் + கோட்டான்.]

கிழங்குக்கொடி *kiḻaṅgu-k-koḍi,* பெ.(n.) 1. வள்ளிக் கொடி; creeper of sweet-potato. 2. பிரண்டைக் கொடி; a adamantine creeper (சா.அக.).

[கிழங்கு + கொடி.]

கிழங்குப்பிரண்டை *kiḻaṅgu-p-piraṇḍai,* பெ.(n.) மணிப்பிரண்டை; bulbous root creeper - *Cissus bifida* (சா.அக.).

[கிழங்கு + பிரண்டை.]

கிழங்குமணி *kiḻaṅgu-maṇi,* பெ.(n.) **கிழங்குப்பிரண்டை** பார்க்க; see *kiḻaṅgu-p-piraṇḍai* (சா.அக.).

கிழடுதட்டு–தல் *kiḻaḍu-taṭṭu,* 5 செ.கு.வி. (v.i.) வெளிப்படையாகத் தெரியும் வகையில் முதுமைத் தோற்றம் ஏற்படுதல்; age in a visible way. *பழைய நடிகர் தற்போது கிழடுதட்டிப் போய் பார்க்கவே அருவருப்பாக இருக்கிறார்.*

[கிழடு + தட்டு–தல்.]

கிழத்து *kiḻattu,* பெ.(n.) ஒரு வகை மீன்; a kind of fish (சா.அக.).

[கீழ்த்து – கிழத்து.]

கிழமரம் *kiḻa-maram,* பெ.(n.) 1. முதிர்ந்த மரம்; old tree. 2. நாட்சென்ற மரம்; long-standing tree (சா.அக.).

[கிழம் + மரம்.]

கிழார்க்கீரனெயிற்றியார் *kiḻār-k-kīraṉe-y-iṟṟiyār,* பெ.(n.) கடைக் கழகம் மருவிய காலப் புலவர்; the poet who belonged to the last Šaṅgam age (அபி.சிந்.).

[கிழார் + கீரன் + எயிற்றியார்.]

கிழிகடை *kili-kadai,* பெ.(n.) மிக இளப்பம் (யாழ்.அக.); extreme lowness, as of a person or thing (செ.அக.).

[கிழி + கடை.]

கிழிசல் *kilišal,* பெ.(n.) 1. கிழிவு; tear, rent in cloth. 2. கிழிந்தது; that which is torn, tattered garment (செ.அக.).

[கிழி – கிழிசல்.]

கிழியஞ்சட்டி *kili-y-an-catti,* பெ. (n.) மண்ணால் செய்த அகல்; earthen bowl (செ.அக.).

மறுவ. கார்த்திகை சட்டி

[கிழியல் + சட்டி.]

கிள்ளவடு *killavadu,* பெ.(n.) கரண்டகம் (இலங்.); small metal box for keeping quicklime.

[கிள்ள + வடு.]

கிளபுறம் *kila-puram,* பெ.(n.) காற்றுப் படாத பக்கம்; leeward (செ.அக.).

கிள்ளாக்கை *killākkai,* பெ.(n.) உண்டியற் சீட்டு (யாழ்.அக.); bill of exchange, hundi (செ.அக.).

[கிள் – கிள்ளாக்கை.]

கிள்ளிமங்கலம்கிழார் *killi-mangalam-kilār,* பெ. (n.) கடைச் சங்கம் மருவிய புலவர்; the poet who belonged to the last šangam (அபி.சிந்.).

[கிள்ளி + மங்கலம் + கிழார்.]

கிள்ளியெறி–தல் *killi-y-eri-,* 3 செ.கு.வி. (v.i.) எண்ணம், நினைவு போன்றவற்றை நீக்குதல்; nip off one's thoughts, memories, etc. *கடந்தகால நிகழ்ச்சிகள் அனைத்தையும் கிள்ளியெறிந்துவிட முயன்றான்.*

[கிள்ளி + எறி–தல்.]

கிள்ளிவளவன் *killi-valavan,* பெ.(n.) புகாரை ஆண்ட சோழ மன்னர்களில் ஒருவர்; one of the Cōlā king who ruled Pugār. *இவன் கரிகாற்சோழனின் மகனாக இருக்கலாம் (அபி.சிந்.).*

[கிள்ளி + வளவன்.]

கிளட்டன் *kilattan,* பெ.(n.) ஒரு வகைக் கீரிப்பிள்ளை இனம்; common Indian mungoose - *Indian ichneumon. இது தான் பிடிக்கும் உயிர்களை விழுங்கும் தன்மையது (அபி.சிந்.).*

[கிள – கிளத்தன்.]

கிளா *kilā,* பெ.(n.) 1. களா வகை; a low spreading spiny evergreen shrub - *Carissa spinarum. "தீம்புளிக் களாவொடு துடரி முனையின்".* 2. மரவகை; large bengal current - *Carissa carandas.* 3. களா வகை; small lance-crenate-acute-leaved whortle berry - *Vaccinium nilgherrense.* 4. செடிவகை; whortle berry - *Vaccinium* (செ.அக.).

[களா – கிளா.]

கிளாச்சி *kilācci,* பெ.(n.) புல்வகை; a kind of grass (செ.அக.).

கிளாசுக்காரன் *kilāšukkāran,* பெ.(n.) 1. கப்பல் வேலையாள்; lascar. 2. மூட்டைகளைத் தைத்து ஒழுங்கு படுத்துபவன்; one who attends to packing of things by stitching, etc. (செ.அக.).

[U.khatāši> த.கிளாசுக்காரன்.]

கிளிச்சிறைப்பொன் *kiliccirai-p-pon,* பெ. (n.) கிளியின் சிறகைப் போன்ற வண்ணமுடைய மாற்றுயர்ந்த பொன்; one of the four varieties of refined gold resembling the colour of a parrot's wing (சா.அக.).

[கிளி + சிறை + பொன்.]

கிளிசமாரீகம் *kiḷiša-mārīgam,* பெ.(n.) மாம்பழ வகை; a kind of mango - *Mangifera indica* (சா.அக.).

கிளிஞ்சல் *kiḷiñjal,* பெ.(n.) இரு சம ஓடுகளால் மூடப்பட்டிருக்கிற உடல் அமைப்பை உடைய கடலில் வாழும் உயிரினம். அந்த உயிரினத்தின் ஓடு; oyster or its shell. *கிளிஞ்சலைச் சிலர் உண்கிறார்கள் (உ.வ.). கடற்கரையில் கிளிஞ்சல் பொறுக்கலாம் (உ.வ.).*

[கிழி – கிளி – கிளிஞ்சல்.]



கிளிஞ்சல்சுண்ணாம்பு *kiḷiñjal-cuṇṇāmbu,* பெ.(n.) கிளிஞ்சலை நீற்றியெடுக்கும் சுண்ணாம்பு; shell lime.

[கிளிஞ்சல் + சுண்ணாம்பு.]

கிளிமூக்குமாங்காய் *kiḷimūkku-māṅgāy,* பெ. (n.) ஒரு மாமரம்; a mango tree.

[கிளி + மூக்கு + மாங்காய்.]

இதில் கிளி மூக்கைப் போன்ற காய் அரிதாகக் காய்க்கும். இலை அரசிலை போல் இருக்கும். பூப்பூத்த பத்தாம் நாள் காய் காய்க்கும். இப்பழத்தை உண்டு வேகமாக ஓடலாம். சித்தர்கள் உடல் இளமைக்காக வெகுநாள் காத்திருந்து இதை உண்பார்கள் (சா.அக.).

கிளிமூக்குமீன் *kiḷimūkku-mīṉ,* பெ.(n.) கிளி மூக்கைப் போல் வளைந்த மீன்; parrot-fish - *Dourada* (சா.அக.).

[கிளி + மூக்கு + மீன்.]



கிளிவன்னம் *kiḷi-vaṉṉam,* பெ.(n.) செடி வகை; a kind of plant (செ.அக.).

கிளிவாய்க்கால் *kiḷi-vāykkāl,* பெ. (n.) அணையில் தேங்கும் அதிக நீரைப் பிரித்து மீண்டும் ஆற்றில் போக்குவதற்காக அமைந்த வாய்க்கால்; surplus channel above the head sluice (செ.அக.).

[கிளி + வாய்க்கால்.]

கிளிவிருத்தம் *kiḷi-viruttam,* பெ.(n.) திரு ஞானசம்பந்தர் காலத்தில் வழங்கி வந்த புத்த நூல்; Buddis't book (அபி.சிந்.).

[கிளி + விருத்தம்.]

கிளிவெட்டுப்பாக்கு *kiḷi-veṭṭu-p-pākku,* பெ. (n.) பாக்கு வகை (யாழ்.அக.); a kind of are canut (செ.அக.).

[கிளி + வெட்டு + பாக்கு.]

கிளிசோசியம் *kiḷi-šōšiyam,* பெ. (n.) பரப்பி வைக்கப்பட்டிருக்கும் சீட்டுகளில் ஒன்றைக் கிளியை விட்டு எடுக்கச் செய்து ஒருவருக்குச் சொல்லப்படுகிற கணியம்; a kind of fortune-telling where trained parrots pick out cards containing readings regarding the fortunes of individuals.

[கிளி + Skt. சோசியம்.]

கிளுகிளுப்பு *kiḷu-kiḷuppu,* பெ.(n.) ஆண், பெண் இடையே ஏற்படும் சிலிர்ப்பான உணர்வு; sexual excitement. *அவளுடைய அசைவே அவனுள் கிளுகிளுப்பை ஏற்படுத்தியது.*

[கிளு – கிளுப்பு.]

கிளைநதிகள் *kiḷai-nadigaḷ,* பெ.(n.) **கிளையாறுகள்** பார்க்க; see *kiḷai-y-āṟugaḷ.*

[கிளை + நதிகள்.]

கிளையாறுகள் *kiḷai-y-āṟugaḷ,* பெ.(n.) பெரிய ஆற்றில் இருந்து பிரியும் சிற்றாறுகள்; tributary rivers (அபி.சிந்.).

[கிளை + ஆறுகள்.]

கிளைமொழி *kiḷai-moḻi,* பெ.(n.) இலக்கண அமைப்பு, சொற்கள், உச்சரிப்பு ஆகிய வற்றால் பொது மொழியிலிருந்து அல்லது தரப்படுத்தப்பட்ட மொழியிலிருந்து சில மாறுபாடுகளுடன் ஒரு வட்டாரத்தில் அல்லது ஒரு பிரிவினரால் பேசப்படும் மொழி வகை; dialect.

[கிளை + மொழி.]

கிளைவாய்க்கால் *kiḷai-vāykkāl,* பெ.(n.) தாய் வாய்க்காலில் இருந்து பிரியும் சிறு வாய்க்கால்; channel branching from the main channel (செ.அக.).

[கிளை + வாய்க்கால்.]

கிறக்கம் *kiṟakkam,* பெ.(n.) மிகுந்த தூக்கம், குடிபோதை முதலியவற்றால் கண்கள் உள்ளிழுத்துக் கொள்ளும் மயக்க நிலை; stupor; drowsiness; languor. *தூக்கக் கிறக்கம்.*

கிறக்கு-தல் *kiṟakku-,* 5 செ.கு.வி.(v.i.) ஒருவரைத் தூக்கம், காமம் முதலியன நிலைதடுமாறச் செய்தல், மயக்குதல்; induce languor, stupor, etc., *தூக்கம் கிறக்குகிறது.*

கிறங்கு-தல் *kiṟaṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. ஒருவர் தூக்கம், குடிபோதை முதலிய வற்றால் நிலை தடுமாறுதல்; மயங்குதல்; be in languor, stupor, etc., *போதைப் பொருள்கள் நரம்பைத் தூண்டிக் கிறங்க வைக்கும். கேட்பவரைக் கிறங்க வைக்கும் கணீரென்ற குரல்.* 2. சோர்வடைதல்; get jaded. *வெயிலில் நடந்து வந்ததால் குழந்தை கிறங்கி போய்விட்டா.*

கிறீச்சனம் *kiṟiccaṉam,* பெ.(n.) நோய் வகை (யாழ்.அக.); a disease (செ.அக.).

கிறுதாசிகம் *kiṟu-tāśigam,* பெ.(n.) நீர் முள்ளி; water thistle - *Barleria longifolia* (சா.அக.).

கிறுதுவேதன் *kiṟudu-vēdaṉ,* பெ.(n.) கொடிவகை; சமையலுக்குப் பயன்படும் காய் காய்க்கும் கொடிவகை (திவா.); sponge gourd, strainer-vine - *Luffa acutangula* (செ.அக.).

கின்னரப்பறவை *kiṉṉara-p-paṟavai,* பெ.(n.) இனிய இசைபாடும் பறவை; a bird singing with a sweet voice - *Canary bird* (சா.அக.).

கின்னரப்பிரமையர் *kiṉṉara-p-piramaiyar,* பெ.(n.) ஒரு சிவனடியார்; a pious of Śivā.

கின்னரமிதுனம் *kiṉṉara-miduṉam,* பெ.(n.) 1. ஆண், பெண்ணாக இணைந்து இரட்டையாகக் காணப்படும் கின்னரப் பறவைகள் (சீவக.657, உரை); a species of bird that goes in pairs. 2. வானுலகில் வாழும் ஒரு வகைக் கடவுளரி (தேவர்களி)ன் ஆண், பெண்ணினை; celestial choristers that go in pairs. *"கின்னர மிதுனங்களுந் தந்தங் கின்னரந் தொடுகிலோ மென்றனரே" (திவ்.பெரியாழ்.3, 6, 5) (செ.அக.).*

[Skt. kiṉṉara + மிதுனம்.]

கின்னரிக்கன்னி *kiṉṉari-k-kaṉṉi,* பெ.(n.) ஆளி விதை; linseed (சா.அக.).

கின்னரிச்சுரை *kiṉṉari-c-curai,* பெ.(n.) உருண்டையான சுரைக்காய்; lute-gourd or calabash climber - *Lagenaric vulgaris.*

[கின்னரி + சுரை.]

இதன் ஒடு கின்னரி, வீணை முதலிய தந்தியாலான இசைக்கருவிகளுக்குப் பயன்படும் (சா.அக.).

கின்னாரப்பெட்டி *kinnāra-p-petti,* பெ.(n.) ஆர்மோனியம் முதலிய வாத்தியப் பெட்டி; musical instrument, as harmonium, piano (செ.அக.).

[Skt. kinnāra + பெட்டி.]



கீசம் *kīšam,* பெ.(n.) 1. குரங்கு; monkey. 2. குருவி; chirping bird. 3. நிருவாணம்; nakedness (சா.அக.).

[கீச்சு – கீசம்.]

கீடகம் *kīḍagam,* பெ.(n.) 1. புழு; worm. 2. பூச்சி; insect (சா.அக.).

[கீள் – கீடகம்.]

கீடரி *kīḍari,* பெ.(n.) கந்தகம்; sulphur (சா.அக.).

கீத்துருணி *kītturuṇi,* பெ.(n.) கேந்திப்பூ; a flower (சா.அக.).

[கீத்து + உருணி.]

கீதவம் *kītavam,* பெ.(n.) சுற்றிலும் முள்ளாலான காய் காய்க்கக் கூடிய செடிவகை (திவா.); thorn-apple - *Datura* (செ.அக.).

[கீள் + (தோவை) தவம்.]

கீரம் *kīram,* பெ.(n.) விளக்கு (அக.நி.); lamp (செ.அக.).

[கீள் – கீரம்.]

கீரைக்காய் *kīrai-k-kāy,* பெ.(n.) முள்வெள்ளரி (சூடா.); kakri-melon - *Cucumis melo-utilissimus* (செ.அக.).

[கீரை + காய்.]

கீரைக்கும்மட்டி *kīrai-k-kummaṭṭi,* பெ.(n.) குமட்டிக் கீரை; a variety of greens - *Celosia nodiflora* (சா.அக.).

[கீரை + கும்மட்டி.]

கீல் *kīl,* பெ.(n.) கருமை நிறங் கொண்ட பூசுங் கீலெண்ணெய்; pitch, tar - *pix liquida* (செ.அக.).

[U.qir > த. கீல். M. kīl > த. கீல்.]

கீல்பூசு–தல் *kīl-pūšu-,* 4 செ.கு.வி.(v.i.) கீலெண்ணெய் பூசுதல்; to tar (செ.அக.).

[கீல் + பூசு–,]

கீல்வத்தி *kīl-vatti,* பெ.(n.) கீலெண்ணெய் பூசப்பட்ட திரி; tarred wick (செ.அக.).

[கீல் + வத்தி.]

கீல்வாயு *kīl-vāyu,* பெ.(n.) உடற்சந்துகளில் உண்டாகும் ஊதை நோய்; rhematism, as in the joints (செ.அக.).

[கீல் + வாயு.]

கீழ்கண்ட *kīḻ-kaṇḍa,* பெ.அ.(adj.) **கீழ்காணும்** பார்க்க; see *kīḻ-kāṇum*

[கீழ் + கண்ட.].

கீழ்க்காணும் *kīḻ-k-kāṇum,* பெ.அ.(adj.) கீழே கொடுக்கப்பட்டுள்ள; அடியில் குறிப்பிடப்பட்ட; the following. *'அந்த வேலைக்கு விண்ணப்பம் வேண்டுபவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு எழுதவும்'*

[கீழ் + காணும்.]

கீழ்க்கண்பார்வை *kīḻ-k-kaṇ-pārvai,* பெ.(n.) கீழ்ப்பார்வை; down look; a squint or awry look; looking askance (சா.அக.).

[கீழ் + கண் + பார்வை.]

கீழ்ச்சாதி *kīḻ-c-cādi,* பெ.(n.) இழி குலம் (நன்.226, உரை); low caste (செ.அக.).

கீழ்த்தாடையெலும்பு *kīḻ-t-tāḍai-y-elumbu,* பெ.(n.) 1. கீழ் வரிசைப் பற்கள் நிறைந்த கீழ்வாய் எலும்பு; the lower jaw in which the lower teeth are fixed. 2. வில் போல் வளைந்த மோவாய்க்கட்டை எலும்பு; bone of the chin bent like arrow (சா.அக.).

[கீழ் + தாடை + எலும்பு.]

கீழ்ப்பக்கம் *kīḻ-p-pakkam,* பெ.(n.) 1. கீழாக உள்ள பாகம்; the lower part. 2. உள் பாகம்; the under or inner side of a thing. 3. அடிப்பாகம்; the bottom portion; the under surface (சா.அக.).

[கீழ் + பாகம்.]

கீழ்ப்பல் *kīḻ-p-pal,* பெ.(n.) கீழ் வரிசைப் பல்; the lower set of teeth (சா.அக.).

[கீழ் + பல்.]

கீழ்வணை *kīḻ-vaṇai,* பெ.(n.) சிற்றூர் ஆளுவத்தின் கீழ் குமுகாயப் பணி செய்யும் தொழிலாளர்கள்; service of a village department of labour. *"இந்த குணமே நகை புரத்து ஏறின வியாபாரிகளும், வெள்ளாளரும், சங்கரப்பாடியரும், பட்டனவரும் உள்ளிட்ட குடிகளும், தச்சர், கொல்லர், தட்டார், கோவியர் உள்ளிட்ட கீழ் வணைகளும்" (தெ.கல்.தொ.4, கல்.233).*

[கீழவு + அணை.]

கீழ்மூக்கன் *kīḻ-mūkkaṉ,* பெ.(n.) கற்றாழை; aloe genus (சா.அக.).

[கீழ் + மூக்கன்.]

கீழ்வயிற்றுபாகம் *kīḻ-vayiṟṟu-pāgam,* பெ.(n.) 1. வயிற்றின் அடிப்பாகம்; the lower abdomen - *Abdominal region.* 2. அடி வயிறு; the lower part of the belly - *Abdomen* (சா.அக.).

[கீழ் + வயிற்று + பாகம்.]

கீழங்கவெலும்பு *kīḻaṅga-v-elumbu,* பெ.(n.) உடம்பின் கீழ்ப் பகுதி உறுப்புகளின் எலும்புகள்; bones of the organs in the lower region of the body (சா.அக.).

[கீழ் + அங்க + எலும்பு.]

கீழாடை *kīḻ-āḍai,* பெ. (n.) கூத்து முதலிய வற்றில் ஆண்கள் இடுப்புக்குக் கீழ் அணியும் ஆடை; outer garments worn below the hip by male folk artistes.

[கீழ் + ஆடை.]

கீழே[1] *kīḻē,* வி.எ.(adv.) தரையில், நிலத்தில்; below; on the ground or floor. *மாடியிலிருந்து பார்த்தால் கீழே செல்பவர் சிறு புள்ளிகளாகத் தெரிவர்.*

கீழே[2] *kīḻē,* இ.சொ. (part.) அடியில்; பின்பக்கத்தில்; below; under. *கருவிழி இமைக்குக் கீழ் செருகிற்று. தலையணையின் கீழ் பணம் வைத்திருக்கிறேன் .*

[கீழ் + கீழே.]

கீழரைக்கால் *kīḻarai-k-kāl,* பெ.(n.) ஒரு பின்னவெண் 1/2560; a fraction (செ.அக.).

[கீழ் + அரை + கால்.]

கீழை *kīḻai,* பெ.அ.(adj.) கிழக்கத்திய; eastern; oriental. *கீழை நாடுகள். கீழை மொழிகள்.*

[கீழ் + கீழை.]

கீழையகத்தாழ்வான் *kīḻai-y-agattāḻvāṉ,* பெ.(n.) நாதமுனிகளிடம் பனுவலை இசை யுடன் கேட்ட மாலியர்; a vaiṇavā sage (அபி.சிந்.).

கீழையூர்சடகோபாதாசர் *kīḻai-y-ūr-šaḍagōpātāšar,* பெ.(n.) அரிசமய தீபம் என்னும் நூலின் ஆசிரியர்; author of arišamaya-tīpam (அபி.சிந்.).

[கீழையூர் + சடகோபா + தாசர்.]

கீழுறுப்பு *kīḻ-uṟuppu,* பெ.(n.) 1. உடம்பின் கீழ்ப் பகுதியில் உள்ள உறுப்பு; the organs of the lower region of the body. 2. ஆண் அல்லது பெண் குறி; the genital of the male or female. 3. மல வாயில்; the anus (சா.அக.).

[கீழ் + உறுப்பு.]

கீற்கட்டி *kīr̤-katti*, பெ.(n.) கீலெண்ணெய்யுடன் கலக்கும், மரத்திலிருந்து வடிந்து உறைந்த பால் (பிசின்); pitch (செ.அக.).

[கீல் + கட்டி.]

கீற்பாய் *kīr̤-pāy*, பெ.(n.) கீலெண்ணெய் பூசின துணி; tarpaulin, tarred canvas (செ.அக.).

[கீல் + பாய்.]

கீனு *kīṉu*, பெ.(n.) சீமை காண்டாமிருக அரத்தம்; kino (சா.அக.).

குக்கம் *kukkam*, பெ.(n.) இந்திரகோபம்; தம்பலப்பூச்சி; cochineal insect - *Coccus cacti* (சா.அக.).

குக்கிடமண்டபம் *kukkiḍa-maṇḍapam*, பெ.(n.) காசியில் உள்ள முத்தி மண்டபம்; mutti-maṇḍapam in kāśi (அபி.சிந்.).

[குக்கிட + மண்டபம்.]

குக்கலாதி *kukkalāti*, பெ.(n.) வாலுளுவை; spindle tree - *Celastrus paniculata* (சா.அக.).

[குக்கல் + ஆதி.]

குக்கிலி *kukkili*, பெ.(n.) செம்போத்து (யாழ்.அக.); crow pheasant (செ.அக.).

[குக்கில் – குக்கிலி.]

குக்கில்புகை *kukkil-pugai*, பெ.(n.) குங்கிலியப் புகை; fumes or incense of Indian dammer (சா.அக.).

[குக்கில் + புகை.]

குக்கிற்சூரணம் *kukkir̤-śūraṇam*, பெ.(n.) தூளாக உள்ள ஒருவகை மருந்து; a kind of medicinal powder prepared by stuffing a fowl with dammer-resin, calcinating and pulverising it (செ.அக.).

[குக்கில் + சூரணம்.]

குக்குடத்தவரை *kukkuḍa-t-tavarai*, பெ.(n.) கோழியவரை; west Indian sea-side bean - *Canavelia obtusifolia* (சா.அக.).

[குக்குடத்து + அவரை.]

குகம் *kugam*, பெ.(n.) 1. மலைக்குகை; cave, cavern. *"மலைக்குகரத்து" (அரிசமய. பக்திசார.37).* 2. சுரங்கம்; cavity, hollow, subterranean passage. *"குகர நீணெறி" (பாரத.வேத்.2) (செ.அக.).*

[Skt. guha > த. குகம்.]

குகன்வேர் *kukaṉ-v-ēr*, பெ.(n.) வேல மரத்து வேர்; root of acacia tree (சா.அக.).

[குகன் + வேர்.]

குகாவிருட்சம் *kugā-viruṭcam*, பெ.(n.) மலை மா; hill balsam - *Balsmodendron caudatum* (சா.அக.).

[குகா + Skt. விருட்சம்.]

குகுதன் *kugudaṉ*, பெ.(n.) பத்து (தச) வகை நாடியுளொன்று; a principal tubular vessel of the human body, one of taša-nāḍi (செ.அக.).

[குங்கு – குகு – குகுதன்.]

குகுலா[1] *kugulā*, பெ.(n.) ஒருவகைப் பூண்டு (மலை.); christmas rose, herb - *Helleforus niger*.

[குகு – குகுலா.]

குகுலா[2] *kugulā*, பெ.(n.) தேனீ; honey bee (செ.அக.).

[குங்குல் – குகுலா.]

குகைநமச்சிவாயமூர்த்திகள் *kugai-namaccivāya-mūrttigaḷ*, பெ.(n.) திருவண்ணாமலையில் ஒரு குகையில் உள்ளொடுக்கி (நிட்டை)யில் இருந்த சித்தர்; Šiddhar (அபி.சிந்.).

[குகை + நமச்சிவாயம் + மூர்த்தி.]

குகைமறைஞானசம்பந்தநாயனார் *kugai-maṟai-ñāṉa-śambanda-ṉāyaṉār*, பெ.(n.) சிதம்பரத்தில் இருந்த சிவ ஆசாரியர்; the Šaiva teacher in Chidambaram. *இவர் தமிழில் அருணகிரிபுராணம் பாடியுள்ளார் (அபி.சிந்.).*

குகைமேனாதத்தீ *kugai-mēṉāda-t-tī,* பெ. (n.) தங்கத்தை (சுவர்ண பேதி) இளக்கச் செய்யும் நீர்மம் (மூ.அ.); a drug which dissolves gold (செ.அக.).

[குகை + மேல் + ஆதவதீ.]

குகைவீசம் *kugai-v-īšam,* பெ.(n.) கல்நார்; asbestos (சா.அக.).

[குகை + வீசம்.]

குங்கியாஇசுதிங்கி *kuṅgiyā-išutiṅgi,* பெ. (n.) கப்பற் சதுரப்பாய்களின் கீழ் மூலைகளை மேலிழுப்பதற்குக் கட்டியிருக்குங் கயிறு; (M.Navi.86); clew lines (செ.அக.).

குங்கிலியக்கலையர் *kuṅgiliya-k-kalaiyar,* பெ. (n.) சிவனடியார் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர் (பெரியபு.); name of a canonized Šivā saint, one of 63 Nayanmars (செ.அக.).

[குங்கிலியம் + கலையர்.]

குங்கிலியன் *kuṅgiliyaṉ,* பெ.(n.) கள்ளரினத்தார்க்கு வழங்கப்படும் பட்டம்; tittle of kaḷḷar's (அபி.சிந்.).

குங்குமக்கோவை *kuṅguma-k-kōvai,* பெ.(n.) செங்கோவை; red bitter melon - *Coccinea indica* (சா.அக.).

[குங்கும + கோவை.]

குங்குமப்பயறு *kuṅguma-p-payaṟu,* பெ.(n.) பாசிப்பயறு இனத்தைச் சேர்ந்த ஒருவகை சிகப்புப் பயறு; a red variety of the species of green-gram (சா.அக.).

[குங்கும +பயறு.]

குங்குமபாண்டியன் *kuṅguma-pāṇḍiyaṉ,* பெ.(n.) மதுரையை ஆண்ட வாகுவலய பாண்டியனின் மகன்; son of vāguvalaya-pāṇḍiyaṉ (அபி.சிந்.).

[குங்கும + பாண்டியன்.]

குங்குமவண்ணக்கல் *kuṅguma-vaṇṇa-k-kal,* பெ.(n.) மஞ்சள் கல்; yellow stone; saffron stone (சா.அக.).

[குங்குமம் + வண்ணம் + கல்.]

குச்சகம் *kuccagam,* பெ.(n.) 1. சடை யொட்டிப் புல்; a kind of grass. 2. பற்பாடகம்; fever plant (சா.அக.).

[குச்சு - குச்சகம்.]

குச்சகர் *kuccagar,* பெ.(n.) கடகம் என்னும் பட்டணத்திலிருந்த முனிவர்; a saint who lived in kaṭagā city.

குச்சம் *kuccam,* பெ.(n.) பொருக்கு; flake (செ.அக.).

[கொச்சு - குச்சு.]

குச்சகாதிதம் *kucca-kātidam,* பெ.(n.) சத்தி சாரணை; spreading hogweed - *Boerhaevia repens* (சா.அக.).

குச்சதந்திகம் *kucca-tandigam,* பெ.(n.) வாழை; plantain tree - *Musa sapientum* (சா.அக.).

குச்சபலம் *kucca-palam,* பெ. (n.) 1. தேத்தான்; water-clearing nut - *Strichnos potatorum.* 2. கணுப்பாலை; Indian mimusops - *Mimusops hexandra.* 3. கொடி முந்திரி; the vine. 4. முள்ளி; Indian night shade - *Solanum indicum.* 5. கண்டங்கத்திரி; yellow-berried night shade - *Solanum jacquini* (சா.அக.).

[குச்சம் + பலம்.]

குச்சபுட்பம் *kucca-puṭpam,* பெ.(n.) ஏழிலைப் பாலை; seven - leafed milk plant - *Alstonia scholaris* (சா.அக.).



குச்சலிர் *kuccalir,* பெ.(n.) ஒருவகை மரம்; கல்லவி; honey-sweet tree - *Meliosma simplicifolia* (சா.அக.).

குச்சவகந்தம் *kuccavakandam,* பெ.(n.) ஒரு தின் கிழங்கு; an esculent root (சா.அக.).

[குச்சவம் + கந்தம்.]

குச்சா *kuccā,* பெ.(n.) மயில் சிகைப்பூடு; peacock's crest plant - *Actiniopteris dichotoma* (சா.அக.).

[குச்சம் – குச்சா.]

குச்சாகரம் *kuccāgaram,* பெ.(n.) செந்துவரை; red dholl (சா.அக.).

குச்சிக்கரும்பு *kucci-k-karumbu,* பெ.(n.) தட்டைக் கரும்பு, கரும்பின் நுனிப்பகுதி; the top portion of a sugar-cane without juice (சா.அக.).

[குச்சி + கரும்பு.]

குச்சிடுக்கி *kuccidukki,* பெ.(n.) சங்கு திருகி; cork-screw (சா.அக.).

[குச்சி + இடுக்கி.]

குச்சிப்பட்டை *kucci-p-pattai,* பெ.(n.) குச்சில் அமைத்த ஒருவகைக் குஞ்சம்; a stick composed of bristles and used for cleaning and brushing (சா.அக.).

[குச்சி + பட்டை.]

குச்சிமஞ்சள் *kucci-mañjal,* பெ.(n.) மர மஞ்சள்; tree-turmeric - *Coscinium fenestratum* (சா.அக.).

[குச்சி + மஞ்சள்.]

குச்சிமூலிகம் *kucci-mūligam,* பெ.(n.) ஒரு வகை மூலிகைப் புல்; a kind of club grass - *Scirpus kysoor* (சா.அக.).

[குச்சி + மூலிகம்.]

குச்சிராகிதம் *kucci-rāgidam,* பெ.(n.) சந்திரகாந்திச் செடி; moon plant (சா.அக.).

குச்சுபிடித்துக்கட்டல் *kuccu-pidittu-k-kattal,* தொ.பெ.(vbl.n.) மடித்த துணியில் கட்டுதல்; tying in a folded cloth (சா.அக.).

[குச்சு + பிடித்து + கட்டல்.]

குச்சுவாசம் *kuccuvāšam,* பெ.(n.) மேல் மூச்சு; dyspnoea (சா.அக.).

குச்சோ *kuccō,* பெ.(n.) புங்க மரம்; Indian beech - *Dalbergia arborea* (சா.அக.).

குசக்கிரம் *kušakkiram,* பெ.(n.) நாணலின் (தருப்பை) நுனி; the top portion of a sacrificial grass (சா.அக.).

குசடதச்சன் *kušada-taccan,* பெ.(n.) எட்டி; nux vomica (சா.அக.).

[குசடன் + தச்சன்.]

குசடம் *kušadam,* பெ. (n.) வெட்பாலை அரிசி; tellicherry bark - *Hollarbhna antidysentericum alias Nerium antidysentericum* (சா.அக.).

[குடசம் + குசடம்.]

குசத்துவசன் *kušattu-vašan,* பெ.(n.) 1. சீதையின் தந்தையான சனகனின் தம்பி; brother of Janagan. 2. வேதவதியின் தந்தை; father of vēdavadi.

குசத்தின்பாதி *kušattin-pādi,* பெ.(n.) 1. சிறு புள்ளடி; unifoliate trefoil, Hedysarum gangeticum. 2. பற்பாடகம்; sparrow leg; fever plant - *Mollugo cerviana* (சா.அக.).

[குசம் + அத்து + இன் + பாதி.]

குசப்புத்தி *kuša-p-putti,* பெ.(n.) மடமை, அறிவின்மை; stupidity, dullness, as a term of contempt (செ.அக.).

குசப்புல் *kuša-p-pul,* பெ.(n.) நாணல் (தருப்பைப்)புல்; sacrificial grass.

இந்தப் புல்லைப் பூசனையில் இருக்கையாகப் பயன்படுத்துவது உண்டு (சா.அக.).

குசபுட்பம் *kuša-putpam,* பெ.(n.) இறப்பை உண்டாக்கும் நச்சுக் கிழங்கு; a poisonous root causing death (சா.அக.).

[குசம் + புட்பம்.]

குசமரம் *kuša-maram,* பெ.(n.) **குசப்புல்** பார்க்க; see *kuša-p-pul* (சா.அக.).

குசமுகம் *kuša-mugam,* பெ.(n.) முலைக் காம்பு; nipple (சா.அக.).

[குயம் – குசம் + முகம்.]

குசர் *kušar,* பெ.(n.) (பிசிர்) தேவையற்றது; anything extra obtained from shop keeper as a bargain (செ.அக.).

குசலவதி *kušalavati,* பெ.(n.) கங்கை யாற்றங்கரையில் உள்ளதும் கோசலத்தில் உள்ளதுமான ஒரு பட்டணம்; a city in Kōšalam (அபி.சிந்.).

[குசலம் + பதி.]

குசவர் *kušavar,* பெ.(n.) 1. மண்ணால் ஏனங்கள் செய்து சூளை போட்டுப் பிழைப்பவர்; potter. 2. **குயவர்** பார்க்க; see *kuyavar.*

[குய் (சுடுதல்) – குயவர் – குசவர்.]

குசேலர் *kušēlar,* பெ.(n.) கண்ணனுடன் படித்த பார்ப்பன நண்பர்; friend of kaṇṇaṉ.

இவர் வறுமையுற்றிருந்த போது இவர் மனைவியார், கண்ணனிடம் சென்று நிலைமையைக் கூறிப் பொருள் பெற்று வருமாறு கூறினர். இவரும் அவலில் தின்பண்டம் செய்து கொண்டு கண்ணனைக் காணச் சென்றார். கண்ணனும் இவரிடம் நலம் பாராட்டி அவர் கொண்டு வந்த அவலில் ஒரு பிடி உண்டார். மற்றொரு பிடி எடுக்கையில் கண்ணனின் மனைவி அவரைத் தடுக்கவே, கண்ணனும் உண்ணாது குசேலருக்கும் ஒன்றும் கொடுக்காமல் அனுப்பி வைத்தார். வருத்தத்துடன் வீடு வந்த குசேலர் அங்கிருந்த பெருஞ்செல்வத்தைக் கண்டு வியந்து மகிழ்ந்தார் (அபி.சிந்.).

குஞ்சகம் *kuñjagam,* பெ.(n.) குன்றிமணி; the berry of abrus precatorius (சா.அக.).

[குஞ்சம் – குஞ்சகம்.]

குஞ்சகாரம் *kuñja-kāram,* பெ.(n.) புளி நரளைக் கிழங்கு; for-grape - *Cissus carnosa* (சா.அக.).

[குஞ்ச + காரம்.]

குஞ்சணம் *kuñjaṇam,* பெ.(n.) சிவதை; Indian jalap - *Ipomaea turpethum* (சா.அக.).

குஞ்சப்புல் *kuñja-p-pul,* பெ.(n.) காட்டுக் கேழ்வரகு; cluster grass; wild raggy - *Eleusine indica.*

[குஞ்சம்+ புல்.]

(இதன் அடித்தண்டு நேராக இருக்கும். தவசம் உண்பதற்குப் பயன்படாது) (சா.அக.).

குஞ்சரக்கோடு *kuñjara-k-kōḍu,* பெ.(n.) யானைக் கொம்பு; elephant's tusk (சா.அக.).

[குஞ்சரம் + கோடு.]

குஞ்சரகரணம் *kuñjara-karaṇam,* பெ.(n.) கரசை என்னுங் காலக்கரணம்; karašai, a division of time. *'குஞ்சரகரண மென்னார்' (பறாளை.பள்ளு.24) (செ.அக.).*

[குஞ்சரம் + கரணம்.]

குஞ்சரசுரபி *kuñjara-šurabi,* பெ.(n.) செவ்வந்தி; chamomile - *Chrysanthemum Caronarium* (சா.அக.).

குஞ்சரபிப்பிலி *kuñjara-pippili,* பெ.(n.) யானைத் திப்பிலி; elephant - pepper (சா.அக.).

குஞ்சரபுட்பி *kuñjara-puṭpi,* பெ.(n.) கருங்கொடி; common delight of the woods - *Hiptage madablota* (சா.அக.).

குஞ்சரமேற்புல்லுருவி *kuñjara-mēṟ-pulluruvi,* பெ.(n.) அத்திமேற் புல்லுருவி; a parasite grown on the fig tree (சா.அக.).

[குஞ்சரம் + மேல் + புல்லுருவி.]

குஞ்சரத்தானம் *kuñjara-t-tāṉam,* பெ.(n.) யானைகளைப் பழக்கும் திறந்த வெளி (யானைச்செண்டு வெளி); open space for training elephants. *'குஞ்சரத்தானத்து நின்றோர் குறுகி' (பெருங்.வத்தவ.4,48) (செ.அக.).*

[குஞ்சரம் + தானம்.]

குஞ்சரன் *kuñjaraṉ*, பெ.(n.) 1. அனுமான் என்னும் குரங்கின் பாட்டனும், அஞ்சனா தேவியின் தந்தையுமான ஒரு வானரன்; a monkey grandfather of Haṉumāṉ. 2. காசிப முனிவர், கத்துருவின் குமரன்; son of saint Kāšipāand katru (அபி.சிந்.).

குஞ்சராகிதம் *kuñjarāgidam*, பெ.(n.) சங்கங் குப்பி; smooth volkamerica - *Cleodendron inerme* (சா.அக.).

குஞ்சலகக்கம் *kuñjalakkam*, பெ.(n.) தாமரைத் தாது; pollen of lotus (சா.அக.).

[குஞ்சலம் + கக்கம்.]

குஞ்சலம் *kuñjalam*, பெ.(n.) பெரும்பாலும் பெண்கள் சடையில் இணைத்துத் தொங்கவிடும் கயிற்றில் இணைக்கப்பட்ட நூல் கொத்து அல்லது துணிப்பந்து போன்ற ஒப்பனைப் பொருள்; tassel mostly tied to the end of a woman's plaited leeuy.

மறுவ. குஞ்சம்.

குஞ்சா *kuñjā*, பெ.(n.) குன்றிமணி; crab's eye (சா.அக.).

மறுவ. குறுகுஞ்சி.

[குஞ்சு – குஞ்சா.]

குஞ்சிக்காய் *kuñjikkāy*, பெ.(n.) சீரகம்; cumin seed - *Cuminum cyminus* (சா.அக.).

[குஞ்சி + காய்.]

குஞ்சிகம் *kuñjigam*, பெ.(n.) 1. குருந்த மரம்; Indian wild lime - *Atlantia monophylla*. 2. குன்றி; crab's eye - *Abrus precatorius* (சா.அக.).

[குஞ்சி – குஞ்சிகம்.]

குஞ்சி-த்தல் *kuñji-*, 4 செ.கு.வி.(v.i.) ஒற்றைக் காலில் நிற்றல்; standing on one foot or tip-toe (சா.அக.).

குஞ்சிதம் *kuñjidam*, பெ.(n.) 1. செண்பகம்; champauk - *Michelia Champaca*. 2. வளைந்தது; that which is curved or crooked. 3. ஒற்றைக் காலில் நிற்கை; standing on one foot. 4. வளைவு; crooked or contracted. 5. வழி தெரியாது நாளத்தைஅறுக்கை; an unskinful way of opening the vein (சா.அக.).

[கொஞ்சி – குஞ்சிதம்.]

குஞ்சிதாமியம் *kuñji-tāmiyam*, பெ.(n.) சங்கஞ் செடி; four-spined monetia - *Monetia tetracantha* (சா.அக.).

குஞ்சிப்பூ *kuñji-p-pū*, பெ.(n.) குங்குமப்பூ; English saffron flower - *Crocus sativus* (சா.அக.).

[குஞ்சி + பூ.]

குஞ்சிப்பூரம் *kuñji-p-pūram*, பெ.(n.) ஆமணத்தி (கோரோசனை); bezoar especially the concretion found in a cow (சா.அக.).

குஞ்சுகுழந்தை *kuñju-kuḻandai*, பெ.(n.) கைக்குழந்தை; பெரிய குழந்தை; baby and child (சா.அக.).

[குஞ்சு + குழந்தை.]

குஞ்சுகுழுமன் *kuñju-kuḻumaṉ*, பெ.(n.) பலவகை அகவையில் உள்ள குழந்தைகளின் கூட்டம்; a number of children of different ages (சா.அக.).

[குஞ்சு + குழுமன்.]

குஞ்சுகுளுவான் *kuñju-kuḷuvāṉ*, பெ.(n.) வெவ்வேறு அகவையில் உள்ள குழந்தைகள்; a group of children of different ages; a gathering of kids. *கல்யாண மண்டபம் குஞ்சு குளுவான்களின் சத்தத்தால் அதிர்ந்தது.*

[குஞ்சு + குளுவான்.]

குஞ்சுங்குழுமானும் *kuñjuṅ-kuḻumāṉum*, பெ.(n.) 1. பூச்சித் திரள்; swarm of insects. 2. பல அகவையிலுள்ள குழந்தைகளின் கூட்டம்; a group of children of different ages. *"குஞ்சுங் குழுமானுமாக வீடு கலகலவென்றிருக்கின்றது" (செ.அக.).*

[குஞ்சு + குழுமான் + உம்.]

குஞ்சுங்குழுவும் *kuñjuṅ-kuḻuvum*, பெ.(n.) **குஞ்சுங்குழுமானும்** பார்க்க; see *kuñjuṅ-kuḻumāṉum* (செ.அக.).

குட்கரம் *kuṭkaram*, பெ.(n.) வேலிப்பருத்தி; hedge-cotton - *Daemia extensa* (சா.அக.).

[குட்கரம் = வெண்மை.]



குட்சுரகாண்டம் *kutšura-kāṇḍam,* பெ.(n.) வெள்ளைக் கரும்பு; white-coloured sugar-cane (சா.அக.).

குட்டகண்டு *kuṭṭa-kaṇḍu,* பெ.(n.) பேயத்தி; devil fig - *Ficus hispida* (சா.அக.).

குட்டகந்தம் *kuṭṭa-kandam,* பெ.(n.) கொம்புப்பாகல்; palgal bitter gourd - *Trichosanthes dioeca* (சா.அக.).

குட்டகந்தி *kuṭṭa-kanti,* பெ. (n.) வெள்ளி லோத்திரப் பட்டை; the fragrant bark of wood-apple tree - *Feronia elephantum; Lodhra bark* (சா.அக.).

[குட்டம் + கந்தி.]

குட்டக்கனிபலா *kuṭṭa-k-kaṇi-palā,* பெ. (n.) 1. கருப்புத் தக்காளிச் செடி; a black tomatto plant. 2. மிளகுத் தக்காளி; mad apple - *Solanum melongena* (சா.அக.).

[குட்டம் + கனி + பலா.]

குட்டக்கினம் *kuṭṭakkiṇam,* பெ.(n.) 1. குட்டத்தைத் தீர்க்கும் பூடு; plant curing leprosy. 2. குட்டத்தைத் தீர்க்கும் மருந்து; a remedy for leprosy. 3. பேயத்தி; wild fig - *Ficus oppositifolia*. 4. காட்டுச்சீரகம்; wild cumin - *Vernonia anthelmintica* (சா.அக.).

குட்டக்கினி *kuṭṭakkiṇi,* பெ.(n.) 1. கருங்காலி; black sundra tree - *Acacia catechu typica alias Diospyros melanoxylon*. 2. தான்றிக்காய்; belleric myrobalan (சா.அக.).

குட்டங்கொள்ளு-தல் *kuṭṭaṅ-koḷḷu-,* 16 செ.கு.வி.(v.i.) குட்ட நோயால் தாக்கப்படல்; to be attacked with leprosy (சா.அக.).

[குட்டம் + கொள்ளு-தல்.]

குட்டசூதனம் *kuṭṭa-šūdaṇam,* பெ.(n.) 1. குட்டம் தெளிதல்; subduing leprosy. 2. கொன்றை மரம்; cassia tree - *Cathartocarpus fistula* (சா.அக.).

குட்டணம் *kuṭṭaṇam,* பெ.(n.) கருஞ்சீரகம்; black cumin - *Nigella sativa* (சா.அக.).

குட்டத்தக்காளி *kuṭṭa-t-takkāḷi,* பெ.(n.) சிறு தக்காளி; black-berried solanum - *Solanum nigrum* (சா.அக.).

[குட்டம் + தக்காளி.]

குட்டநாசனம் *kuṭṭa-nāšaṇam,* பெ.(n.) கடுகு வகை (பிங்.); white mustard.

குட்டநாசனி *kuṭṭa-nāšaṇi,* பெ.(n.) 1. கருப்பு அகரம் என்னும் மருந்துவகை; a kind of drug. 2. வெள்ளைக் கிலுகிலுப்பை; white flowered crotolaria - *Cratolaria verrucosa*. 3. தகரை; ring worm plant - *Cassia tora*. 4. காட்டுச் சீரகம்; wild cumin - *Vernonia authlmintica*. 5. குட்டத்தை அழிக்கும் மருந்து; any medicine curing leprosy (சா.அக.).

[குட்டம் + நாசனி.]

குட்டநோய்கடியகாரா *kuṭṭa-nōy-kaḍiya-kārā,* பெ. (n.) குட்ட நோயைத் தீர்க்கும் கருப்பரிசி; a kind of black rice said to cure leprosy (சா.அக.).

[குட்டநோய் + கடியகாரா.]

குட்டப்பாண்டுநாசனி *kuṭṭa-p-pāṇḍu-nāšaṇi,* பெ.(n.) கருமருது; இரும்பிலி; black satinwood - *Maba buxifolia* (சா.அக.).

[குட்டை + பாண்டு + நாசனி.]

குட்டம்போக்கி *kuṭṭam-pōkki,* பெ.(n.) 1. வெண்கடுகு; white mustard. 2. குட்டத்தைப் போக்கும் மருந்து; that which cures leprosy. 3. பாற்சோற்றி; caoutchouc plant - *Euphorbia cattimandu*. 4. சுரபுன்னை; soora poon - *Ochrocarpus longifolius* (சா.அக.).

[குட்டம் + போக்கி.]

குட்டமிடு-தல் *kuṭṭam-iḍu-,* 20 செ.கு.வி. (v.i.) பள்ளந் தோண்டுதல்; to dig out. *"குட்டமிட்டிடந்தான் காணும்" (ஈடு, 10, 6, 4).*

[குட்டம் + இடு-தல்.]

குட்டல் *kuttal,* தொ.பெ.(vbl.n.) தலையிற் குட்டல்; cuffing on the head (சா.அக.).

[குட்டு – குட்டல்.]

குட்டவிசர்த்தி *kutta-višartti,* பெ.(n.) வெட்டிவேர்; khus khus root - *Andropogon aromaticus* (சா.அக.).

குட்டவிரணம்போக்கி *kutta-viranam-pōkki,* பெ.(n.) சேங்கொட்டை; marking nut - *Semecarpus anacardium* (சா.அக.).

குட்டாம் *kuttām,* பெ.(n.) பெருங்காயம்; asafoetida (சா.அக.).

குட்டாரி *kuttāri,* பெ.(n.) கந்தகம்; sulphur (சா.அக.).

[குட்டு – குட்டாரி.]

குட்டிக்கழுதை *kutti-k-kaludai,* பெ.(n.) கழுதைக் குட்டி; the young of an ass (சா.அக.).

[குட்டி + கழுதை.]

குட்டிக்கானாங்கெளிறு *kutti-k-kānān-keliru,* பெ.(n.) கெளிற்று மீன் குஞ்சு; the young of a cat-fish (சா.அக.).

[குட்டி + கானாம் + களிறு.]

குட்டிகம் *kuttigam,* பெ.(n.) ஓரிலைத் தாமரை; single leaf lotus.

குட்டிகாதக்காளி *kuttigā-takkāli,* பெ.(n.) **குட்டித்தக்காளி** பார்க்க; see *kutti-t-takkāli* (சா.அக.).

[குட்டிக்காய் + தக்காளி]

குட்டிச்சாத்தி *kutti-c-cātti,* பெ.(n.) ஒரு பெண் தெய்வம்; a female spirt (சா.அக.).

குட்டித்தேவி *kutti-t-tēvi,* பெ.(n.) விளாமரம்; wood apple tree (சா.அக.).

[குட்டி + தேவி]

குட்டிநரை *kutti-narai,* பெ.(n.) இளமையில் ஏற்படும் நரை; premature gray hair (சா.அக.).

குட்டிப்பனை *kutti-p-panai,* பெ. (n.) பனையைச் சுற்றிலும் முளைக்கும் சிறு பனை; small stunted palmyra young ones growing at the bottom of a main tree (சா.அக.).

[குட்டி + பனை.]

குட்டிப்பாடித்தி *kutti-p-pāditti,* பெ.(n.) சிற்றரத்தை; lesser galangal - *Alpinia galanga* (சா.அக.).

[குட்டி + பாடித்தி.]

குட்டிப்பிலா *kutti-p-pilā,* பெ.(n.) 1. குட்டிப் பலா; small jack tree - *Artocarpus integrifolius.* 2. பேய் முன்னை; charcoal tree - *Sponia wight.* 3. பிராய் மரம்; paper tree - *Streblus asper.* 4. குற்றிப் பலா; stunted jack - *Epicarpurus orientalis* (சா.அக.).

[குட்டி + பலா.]

குட்டிப்பை *kutti-p-pai,* பெ.(n.) விலங்கின் வயிற்றில் குட்டியின் மேல் மூடிக் கொண்டு இருக்கும் பிண்டப் பை; foetal membranes in animals filled with liquor amni which dilates the mouth of the womb (சா.அக.).

[குட்டி + பை.]

குட்டியச்சம் *kutti-y-accam,* பெ.(n.) இளம் அகத்திச் செடி; young sesbane plant - *Sesbania grandiflora* (சா.அக.).

குட்டியழிவு *kutti-y-alivu,* பெ. (n.) கருவிற்கு ஏற்படும் கேடு; abortion (சா.அக.).

[குட்டி + அழிவு.]

குட்டிமரம் *kutti-maram,* பெ.(n.) சணல்; Indian hemp - *Crotolaria juncea* (சா.அக.).

குட்டிவாசுகி *kutti-vāsugi,* பெ.(n.) சப்பாத்துக் கள்ளி; prickly pear - *Opuntia monocantha* (சா.அக.).

குட்டிவிலாங்கு *kutti-vilāṅgu,* பெ. (n.) கடலில் பொரிக்கப்பட்டு முட்டையினின்று வெளிவந்தவுடன் ஆறுகளுக்கு வந்து சேரும் ஒரு வகை விலாங்கு மீன்; a kind of river-fish or Eel fish - *Elve.*

[குட்டி + விலாங்கு.]

இது பாம்பைப் போல் நீளமாகவும், பழுப்பு நிறமாகவும் உள்ளது. உணவுக்குப் பயன்படுவது (சா.அக.).

குட்டிவிளாதிதம் *kutti-viḷādidam,* பெ.(n.) சருகு மஞ்சள்; dried turmeric (சா.அக.).

குட்டுவன்கண்ணன் *kuttuvaṉ-kaṇṇaṉ,* பெ. (n.) கடைக்கழகக் காலத்துப் புலவர்களில் ஒருவர்; one of the poets who belonged to the last Šaṅgam.

[குட்டுவன் + கண்ணன்.]

இவர் பெயர் கண்ணனாக இருக்கலாம். இவர் சேரர் குடியினராதலின் குட்டுவன் கண்ணன் எனப்பட்டார் (அபி.சிந்.).

குட்டுவன்கீரனார் *kuttuvaṉ-kīraṉār,* பெ.(n.) ஆய் என்னும் வள்ளலைப் பாடிய புலவர்; the poet who celebrated to āy (அபி.சிந்.).

[குட்டுவன் + கீரன் + ஆர்.]

குட்டுவன்சேரல் *kuttuvaṉ-šēral,* பெ.(n.) சேர மன்னன்; cērā king.

[குட்டுவன் + சேரல்.]

குட்டைக்கால் *kuttai-k-kāl,* பெ. (n.) 1. குள்ளமான கால்; short leg. 2. உறுப்புக் கேடான கால்; deformed leg (சா.அக.).

[குட்டை + கால்.]

குட்டைக்கை *kuttai-k-kai,* பெ. (n.) 1. குறைந்த கை; short arm. 2. உறுப்புக் கேடான கை; deformed arm (சா.அக.).

[குட்டை+ கை.]

குட்டைச்சுருட்டை *kuttai-c-curuttai,* பெ.(n.) ஒருவகைப் பாம்பு; a kind of coiled snake - *Oligodon subgriseus* (சா.அக.).



குட்டையிடுக்கி *kuttai-y-iḍukki,* பெ.(n.) 1. சிற்றரத்தை; lesser galangal - *Alpinia galanga.* 2. கோட்டம் (கோஷ்டம்); Arabian costus - *Costus speciosus.* 3. பயிரின் களை; corn weed. 4. கற்றாழை; aloe genus (சா.அக.).

[குட்டை + இடுக்கி.]

குட்டையைக்குழப்பு-தல் *kuttaiyai-k-kuḻappu-,* 5 செ.கு.வி.(v.i.) தெளிவு ஏற்படுத்துவதற்குப் பதிலாகக் குளறுபடி செய்தல்; add to the confusion; muddle up. *ஏற்கனவே இங்கே எல்லாம் குழப்பமாக இருக்கிறது, மேலும் குட்டையைக் குழப்பாதே*

[குட்டையை + குழப்பு-தல்.]

குடக்கோஇளஞ்சேரலிரும்பொறை *kuḍa-k-kō-iḷañcēralirumporai,* பெ. (n.) பெருங் குன்றூர்க்கிழாரால் பாடப்பெற்ற சேர மன்னன்; a Cēraking.

[குடக்கோ + இளம் + சேரம் + இரும்பொறை.]

குடகபாலை *kuḍaga-pālai,* பெ.(n.) 1. வெட்பாலை; conessi or tellicherry bark - *Nerium nti-dysentericum.* 2. கொடிப் பாலை; cotton milk plant - *Dregea volubilis;* twining swallow-wort -

Asclepias volubilis. 3. ஊசிப்பாலை; needle-leaved swallow-wort - *Oxystelma esculentum* (சா.அக.).

[குடகம் + பாலை.]

குடகுகிச்சிலி *kuḍagu-kiccili,* பெ.(n.) குடகு நாட்டில் விளையும் கிச்சிலி; coorge orange - *Citrus aurantium nobilis* (சா.அக.).

[குடகு + கிச்சிலி.]

குடகுவெட்பாலை *kuḍagu-v-eṭpālai,* பெ.(n.) தலைச்சேரியில் விளையும் வெட்பாலை; tellicherry bark (சா.அக.).

[குடகு + வெட்பாலை.]

குடச்சைலம் *kuḍa-c-cailam,* பெ.(n.) மலைப்புரசு; hill palaus - *Butea frondosa* (சா.அக.).

குடசோ *kuḍašō,* பெ.(n.) குடசபாலை பார்க்க; see *kuḍaša-pālai* (சா.அக.).

குடநாசனி *kuḍa-nāšaṉi,* பெ.(n.) வெண்கடுகு; white mustard - *Brassica alba alias Sinapis alba* (சா.அக.).

குடபலை *kuḍabalai,* பெ.(n.) 1. மணித் தக்காளி; black-berried nigrum. 2. கடம்பு மரவகை; oak - *Carcua arborea*. 3. இலந்தை; jujube. 4. களர்வா; tooth-brush tree - *Salvadora persica* (சா.அக.).

குடபுலவியனார் *kuḍa-pulavi-y-aṉār,* பெ.(n.) பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடிய தமிழ்ப் புலவர்; Tamil poet, who celebrated *Pāṇḍiyaṉ-neḍuñjeḻiyaṉ* (அபி.சிந்.).

[குட + புலவியன் + ஆர்.]

குடம் *kuḍam,* பெ.(n.) 1. கொச்சி நாடு; kocci nāḍu. 2. கண்ணன் குடங் கொண்டாடிய கூத்து; pot dancing who performed by kaṇṇaṉ.

மறுவ. கரகாட்டம்

கண்ணனின் பேரனான அநிருத்தனை பாணாசுரன் சிறையிட்டான். அப்பொழுது பாணாசுரனின் பட்டணத்தில் கண்ணன் மாழை யாலும், மண்ணாலும் செய்த குடம் கொண்டு கூத்தாடினான் (அபி.சிந்.).

குடமது *kuḍa-madu,* பெ.(n.) 1. குடத்தில் வைத்த கள்; toddy secured in pots. 2. குடத்தில் புளிக்க வைத்த கள் அல்லது சாராயம்; toddy, arrack or anyother liquor fermented in a water-pot (சா.அக.).

[குடம் + மது.]

குடமுழுக்கு *kuḍa-muḻukku,* பெ.(n.) புதிதாகக் கட்டிமுடிக்கப்பட்ட கோவில், புதுப்பிக்கப்பட்ட கோவில் இவைகளின் கோபுரக் கலசத்துக்கும், மூலவருக்கும் செய்யும் நீராட்டு விழா; pouring the sanctified water over the temple structure at the time of installation.

[குடம் + முழுக்கு.]

குடராசன் *kuḍa-rāšaṉ,* பெ.(n.) ஒரு வகைப் பூரான்; a kind of centipede (சா.அக.).

குடல்காய்-தல் *kuḍal-kāy-,* 1 செ.கு.வி.(v.i.) பட்டினியாய் இருத்தல்; starving (சா.அக.).

[குடல் + காய்-தல்.]

குடல்கொழு-த்தல் *kuḍal-koḻu-,* 4 செ.கு.வி. (v.i.) குடலில் கொழுப்பு பற்றுதல்; bowels growing fat (சா.அக.).

[குடல் + கொழு-த்தல்.]

குடல்பற்று *kuḍal-paṟṟu,* பெ.(n.) குடல் தொடர்பு connection, with the bowels (சா.அக.).

குடல்பிடுங்கு-தல் *kuḍal-piḍuṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) குடலைக் களைதல்; disembowelling (சா.அக.).

[குடல் + பிடுங்கு-தல்.]

குடல்மடிப்பு *kuḍal-maḍippu,* பெ.(n.) வயிற்றுக்குள் இருக்கும் குடலின் மடிப்புகள்; intestinal folds (சா.அக.).

[குடல் + மடிப்பு.]

குடல்வாங்கு-தல் *kuḍal-vāṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. குடலைப் பிடுங்கி வெளியெடுத்தல்; removing the entrails from the body - *Exenterate.* 2. குடல் தட்டுதல்; tapping the bowels by massage. 3. குடல் பிடுங்கல்; removing the entrails or the viscera; eviscerating (சா.அக.).

[குடல் + வாங்கு-தல்.]

குடல்வாயு *kuḍal-vāyu,* பெ.(n.) 1. குடலிறக்கம்; rupture, scrotal hernia. 2. விரை ஊதை (விரைவாதம்); inflammation of the testis - *Orchitis.*

குடலற்ற *kuḍalaṟṟa,* பெ.எ.(adj.) உள்ளே சதைப் பற்றில்லாத; pithless (சா.அக.).

[குடல் + அற்ற.]

குடலிசிவு *kuḍališivu,* பெ.(n.) குடலை இழுத்துப் பிடிப்பது போல் உண்டாகும் வலி; cramps or the spasm of the bowels (சா.அக.).

[குடல் + இசிவு.]

குடலியக்கம் *kuḍali-y-akkam,* பெ.(n.) குடல் அசைவு; குடல் புழுக்கள் போல் நெளியும் தன்மை; the worm like movement of the intestines for carrying the contents from one section of the colon to the other - *Intestinal peristalsis* (சா.அக.).

[குடல் + இயக்கம்.]

குடலுக்குரிய *kuḍalukkuriya,* பெ.எ.(adj.) குடல் தொடர்பான; relating to bowels (சா.அக.).

[குடலுக்கு + உரிய.]

குடலுப்பிசம் *kuḍaluppišam,* பெ.(n.) 1. குடல் பருத்துக் காணல்; enlargement of the bowels. 2. வயிற்றுப்புசம்; distension of the abdomen (சா.அக.).

[குடல் + உப்பிசம்.]

குடலுள்வாங்கு-தல் *kuḍaluḷ-vāṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) குடலின் ஒரு பகுதி மற்றொரு பகுதியில் அடங்கல்; the invagination of a portion of the intestines into the adjacent part - *Intussusception* (சா.அக.).

[குடல் + உள் + வாங்கு-தல்.]

குடலுறுப்பு *kuḍaluṟuppu,* பெ.(n.) வயிற்றுள் இருக்கும் குடலைச் சார்ந்த உறுப்புகள்; abdominal viscera or entrails (சா.அக.).

[குடல் + உறுப்பு.]

குடலெடுத்துவிடல் *kuḍaleḍuttu-viḍal,* தொ.பெ.(vbl.n.) 1. குடலைப் பிடுங்கி வெளியே எடுத்தல்; pulling and drawing out the entrails or viscera - *Embowelling.* 2. குடல் தட்டுதல்; tapping the bowels by massage (சா.அக.).

[குடல் + எடுத்து + விடல்.]

குடலேற்றம் *kuḍalēṟṟam,* பெ.(n.) 1. குழந்தைகளுக்குக் குடல் பிசகி இடத்தை விட்டு மாறுவதால் ஏற்படும் நோய்; spasm or derangement of the intestines especially in children. 2. வயிற்றிரைச்சல்; the gurgling noise of the belly (சா.அக.).

[குடல் + ஏற்றம்.]

குடலைப்பற்றியநோய் *kuḍalai-p-paṟṟiya-nōy,* பெ.(n.) 1. பொதுவாகக் குடலுக்கு ஏற்படும் நோய்கள்; disease in general of the intestines. 2. வயிற்றுவலி; intestinal colic (சா.அக.).

மறுவ. குடல்நோய்

[குடலை + பற்றிய + நோய்.]

குடலைப்பற்று-தல் *kuḍalai-p-paṟṟu-,* 5 செ.கு.வி.(v.i.) குடலைத் தாக்குதல்; affecting or attacking the bowels (சா.அக.).

[குடலை + பற்று-தல்.]

குடலைப்புரட்டு-தல் *kuḍalai-p-puraṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) கக்கும்படிக் குடலைப் புரட்டுதல்; affection of the bowels as to feel a vomiting sensation (சா.அக.).

[குடலை + புரட்டு-தல்.]

குடலைமுறுக்கு-தல் *kuḍalai-muṟukku-,* 5 செ.கு.வி.(v.i.) குடலைப் புரட்டுதல்; a twisting sensation of the bowels from various causes so as to feel nauseous (சா.அக.).

[குடலை + முறுக்கு-தல்.]

குடலைமூடியசவ்வு *kuḍalai-mūḍiya-šavvu,* பெ.(n.) குடற்சவ்வு; a membrane enveloping the intestines (சா.அக.).

[குடலை + மூடிய + சவ்வு]

குடலோடல் *kuḍalōḍal,* பெ.(n.) வயிற்றுப் போக்கு; having a loose motion of the bowels (சா.அக.).

[குடல் + ஓடல்.]

குடவயம் *kuḍavayam,* பெ.(n.) பெருந் தக்காளி; edible winter cherry - *Pysalis peruviana* (சா.அக.).

குடவரைக்கோயில் *kuḍavarai-k-kōyil,* பெ.(n.) மலைச் சரிவை அல்லது பாறையைக் குடைந்து சிற்பங்கள் செதுக்கிய மண்டபம் போன்ற அமைப்பு; rock-cut temple

[குடவரை + கோயில்.]



குடவன்பருவதம் *kuḍavaṉ-paruvadam.* பெ.(n.) பித்தளை மலை; mountain containing brass (சா.அக.).

[குடன் + Skt. பருவதம்]

குடவாயில்நல்லாதனார் *kuḍavāyil-nallādaṉār.* பெ.(n.) பெருஞ்சாத்தனைப் பாடிய தமிழ்ப் புலவர்; the Tamil poet who celebrated peruñjāttaṉ (அபி.சிந்.).

[குடவாயில் + நல் + ஆதன்.]

குடற்கொழுப்பு *kuḍaṟ-koḻuppu.* பெ.(n.) வயிற்றைக் குடத்தைப் போல் பருக்கச் செய்யும் குடலின் மேற் சவ்வில் காணப்படும் அதிகக் கொழுப்பு; excess of fat of the omentum which gives rotundity to the abdomen (சா.அக.).

[குடல் + கொழுப்பு]

குடற்கோளாறு *kuḍaṟ-kōḷāṟu,* பெ.(n.) குடலுக்கு ஏற்படும் பலவகைக் குற்றங்கள்: intestinal disorders arising form various causes (சா.அக.).

[குடல் + கோளாறு.]

குடற்சல்லி *kuḍaṟ-calli,* பெ.(n.) குடல் துளை(துவாரம்); holes or perforation occurring in the intestines (சா.அக.).

[குடல் + சல்லி.]

குடற்சுண்ணம் *kuḍaṟ-šuṇṇam,* பெ.(n.) நஞ்சுக் கொடியினின்று செய்யும் ஒரு வகைச் சுண்ண மருந்து; an alkaline compound prepared or extracted from the naval-cord of children (சா.அக.).

[குடல் + சுண்ணம்.]

குடற்சுருள் *kuḍaṟ-curuḷ,* பெ.(n.) குடல் மடிப்பு; intestinal fold (சா.அக.).

[குடல் + சுருள்.]

குடற்புண் *kuḍaṟ-puṇ,* பெ.(n.) 1. பல காரணியங்களினால் குடலில் ஏற்படும் புண்; ulceration of the bowels due to various

causes, as tuberculosis, typhoid, syphilis etc., 2. சிறுகுடலுக்கு ஏற்படும் புண்; duodenal ulcer (சா.அக.).

[குடல் + புண்.]

குடற்புளிப்பு *kuḍaṟ-puḷippu,* பெ.(n.) வயிற்றுப் புளிப்பு; acidity of the stomach (சா.அக.).

[குடல் + புளிப்பு.]

குடற்பெருக்கு *kuḍaṟ-perukku,* பெ.(n.) 1. குடலில் அதிகமாகக் கொழுப்பு பிடிப்பதால் குடல் பருத்தல்; enlargement of the intestines due to undue formation of fat. 2. குடலில் காற்று தங்குவதால் உப்பிக் காணுதல்; distension of bowels with gas or air in the testines - *Flatulence* (சா.அக.).

[குடல் + பெருக்கு.]

குடற்றிமிர் *kuḍaṟṟimir,* பெ.(n.) 1. குடல் இயக்கம் வலிமை இழக்கை; மலக்கட்டு; constipation. 2. குடல் உணர்ச்சியற்று இருக்கை; numbness or inactivity of the bowels - *Torpor intestinum* (சா.அக.).

[குடல் + திமிர்.]

குடற்றொடர் *kuḍaṟṟoḍar,* பெ.(n.) குடலின் தொடர்ச்சி; that portion of the alimentary canal either above or below the region of the intestines (சா.அக.).

[குடல் + தொடர்.]

குடாசுரன் *kuḍāšuraṉ,* பெ.(n.) ஒரு அரக்கன்; a giant.

[குட + அசுரன்.]

குடாநாடு *kuḍā-nāḍu,* பெ.(n.) மூன்று பக்கமும் நீர் சூழ்ந்த நிலம் (தீப கற்பம்) (இலங்.); peninsula. *'யாழ்ப்பாணக் குடாநாடு'.*

மறுவ. தீவக்குறை (தீபகற்பம்)

[குடவு – குடா + நாடு.]

குடிகெடுத்தவுவர்க்காரம் *kuḍi-keḍutta-v-uvarkkāram,* பெ. (n.) கல்லுப்பு; sea-salt (சா.அக.).

குடிசன்னாகம் *kuḍi-šāṉṉāgam,* பெ.(n.) கரிசலாங்கண்ணி; bee plant or eclipse plant - *Eclipta alba alias E.prostata alias verbesina alba* (சா.அக.).



குடிசைத்தொழில் *kuḍišai-t-toḻil,* பெ.(n.) மின்சாரத்தின் தேவையும், இயந்திரங்களின் உதவியும் இல்லாமல் வீட்டில் இருப்பவர்கள் உதவியுடன் வீட்டிலேயே செய்யப்படும் சிறு தொழில்; cottage industry

[குடிசை + தொழில்.]

குடித்தனக்காரர் *kuḍittaṉakkārar,* பெ.(n.) வீட்டில் வாடகைக்குக் குடியிருப்பவர்; tenant.

குடித்தொகை *kuḍi-t-togai,* பெ.(n.) மக்கள் தொகை (இலங்.); population

[குடி + தொகை.]

குடிதாங்கிமுதலியார் *kuḍi-tāṅgi-mudaliyār,* பெ. (n.) ஒரு வள்ளல்; a patron. (அபி.சிந்.)

[குடி + தாங்கி + முதலியார்.]

குடித்தைலம் *kuḍi-t-tailam,* பெ.(n.) 1. உள்ளுக்குக் குடிக்கக் கொடுக்கும் எண்ணெய்; a medicated oil taken or adoministered internally. 2. ஆமணக்கு எண்ணெய்; caster oil (சா.அக.).

[குடி + Skt. தைலம்.]

குடிநீர்த்திரவியம் *kuḍinīr-t-tiraviyam,* பெ.(n.) காய்ச்சிய மருந்துக் குடிநீர் (கஷாயச் சரக்குகள்) (பைஷஜ.); ingredients of a tincture (செ.அக.).

*[குடிநீர் + **Skt.** திரவியம்.]*

குடிபெயர்–தல் *kuḍi-peyar-,* 4 செ.கு.வி. (v.i.) ஓர் இடத்தை விட்டு வேறோர் இடத்துக்கு வாழச் செல்லுதல்; migrate. *நிலத்தை இழந்த உழவர்கள் நகர்ப்புறத்திற்குக் குடிபெயர்ந்து வருகிறார்கள்.*

[குடி + பெயர்–தல்.]

குடிமகன் *kuḍi-magaṉ,* பெ.(n.) முடி திருத்தாளன்; barber (அபி.சிந்.).

குடிமம் *kuḍimam,* பெ.(n.) துத்தம்; blue vitriol (சா.அக.).

குடிமிக்குயவன் *kuḍimi-k-kuyavaṉ,* பெ.(n.) நான்முகனின் தலைமுடியில் பிறந்தவன்; the person who born in nāṉmugā's hair (அபி.சிந்.).

குடிமிராசி *kuḍi-mirāši,* பெ.(n.) தலைமுறை, தலைமுறையாக வரும் நிலவுரிமை; right or privilege of a hereditary occupant (செ.அக.).

குடிமுழுகு–தல் *kuḍi-muḻugu-,* 5 செ.கு.வி. (v.i.) கேடு விளைதல்; அழிவு ஏற்படுதல்; be lost; be desperate. *ஒரு வேளை சாப்பிடாவிட்டால் குடிமுழுகி விடாது!*

[குடி + முழுகு–தல்.]

குடிமைப்பொருள் *kuḍimai-p-poruḷ,* பெ.(n.) அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அரிசி, எண்ணெய் போன்ற பொருள்கள்; civil supplies. *குடிமைப் பொருள் வாணிபக் கழகம்*

[குடிமை + பொருள்.]

குடியமர்த்து–தல் *kuḍi-y-amarttu-,* 5 செ.கு.வி. (v.i.) புதியதாக ஓர் இடத்தில் தங்கி வாழச் செய்தல்; குடியேற்றுதல்; settle in a place or country. *புயலால் வீடு இழந்தவர்கள் ஏதிலியர் முகாமில் இப்போது குடியமர்த்தப் பட்டுள்ளனர்.*

[குடி + அமர்த்து–தல்.]

குடியரசுத்தலைவர் *kuḍi-y-arašu-t-talaivar,* பெ.(n.) குடியரசு அரசியல் அமைப்பில் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளும் தலைவர் அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுவ (நிருவாக)த் தலைவர்; President of a republic.

[குடியரசு + தலைவர்.]

குடியுரிமை *kuḍi-y-urimai,* பெ.(n.) 1. ஒரு நாட்டில் தங்குவதற்கான அரசு தரும் உரிமை (அங்கீகாரம்); citizenship. *சில நாடுகளில் பிறந்து சில ஆண்டுகள் வாழ்ந்திருந்தாலே குடியுரிமை கிடைத்து விடுகிறது.* 2. ஒரு நாட்டுக் குடிமகனுக்கு உள்ள உரிமை; rights of a citizen. *மக்களின் குடியுரிமையை மதிக்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு.* 3. ஒரு வீட்டில் குடியிருப்பதற்கான தகுதி; rights of tenancy. *வாடகை வீட்டுக்கு முன்பணம் செலுத்திய நாளிலிருந்தே ஒருவர் அந்த வீட்டுக்குக் குடியுரிமை பெறுவார்.*

[குடி + உரிமை.]

குடியெழுப்பு–தல் *kuḍi-y-eḻuppu-,* 5 செ.கு.வி. (v.i.) மக்களை, வாழும் இடத்தை விட்டு வேறு இடத்துக்குப் போகச் செய்தல்; evacuate. *காவலர்களால் மக்கள் ஊரைவிட்டு குடியெழுப்பப்பட்டனர்.*

[குடி + எழுப்பு–தல்.]

குடிராகதி *kuḍirā-kati,* பெ.(n.) கோழியவரை; cock-bean - *Canavaiia obtusifolia* (சா.அக.).

குடிலகண்டகம் *kuḍila-kaṇḍagam,* பெ.(n.) கருங்காலி மரம்; black sundra tree -

Acacia catechu typica alias Diospyras melanoxylon.

மறுவ. உடுக்கை மரம்

இம்மரம் 20–30 அடி உயரம் இருக்கும். கிளைகள் முள்ளுள்ளவை. இதன் இலைகள் சுணையாயும் பால் ஒதனை மரத்தின் பாலைப் போன்றும் இருக்கும். இம்மரம் சிலசமயம் முள் இல்லாமலும் இருக்கும். சிறிய மஞ்சள் நிறமுள்ள பூ உடைய இம்மரத்தில் இருந்து பிசின் எடுக்கலாம் (சா.அக.).

குடிலகாவிதம் *kuḍila-kāvidam,* பெ.(n.) சடைக்குறண்டி; a thorny shrub - *Lepidagathis scariosa* (சா.அக.).

குடிலி *kuḍili,* பெ.(n.) 1. செம்பல்லிப்பூடு; an unknown lizard plant used by the Siddhars for rejuvenation. 2. நீலஞ்சோதி; another unknown plant used by the Siddhars for rejuvenation (சா.அக.).

[குடில் – குடிலி.]

குடீரம் *kuḍīram,* பெ.(n.) 1. குடிசை; hut, cottage. 2. இலை வேய்ந்த குடில் (பர்ணசாலை); hermitage (செ.அக.).



குடுகு *kuḍugu,* பெ.(n.) 1. தேங்காய் முதலியவற்றாலான குடுவை; coconut or other hard shell used as a vessel. 2. கரகம் (கமண்டலம்); earthen or wooden pitcher of an ascetic. 3. இடக்கை யென்னும் தோற்கருவி (சிலப்.3, 27, உரை); a hand drum. 4. வீணையின் உறுப்பு; belly of a lute (செ.அக.).

[குடு – குடுகு.]

குடுகுடுவென்று *kuḍu-kuḍu-venṟu,* வி.அ.(adv.) குறுகிய எட்டு வைத்து வேகமாக உருண்டு வருவது போல; with short quick steps as if rolling down. *கலியாண வீட்டில் அவர் குடுகுடுவென்று ஓடி ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.*

[குடுகுடு + என்று.]

குடுகுடுகிழம் *kuḍu-kuḍu-kiḻam,* பெ.(n.) நடப்பதற்கே தட்டுத்தடுமாற வேண்டிய தள்ளாத நிலையில் இருக்கும் ஆள்; tottering old man or woman. *ஏதத்தை (விபத்தை) வேடிக்கை பார்க்கப் பொடியனி லிருந்து குடுகுடுகிழம் வரை எல்லோரும் வந்துவிட்டார்கள்.*

[குடுகுடு + கிழம்.]

குடும்பஅட்டை *kuḍumba-aṭṭai,* பெ.(n.) உணவுப் பொருள்கள், மண்ணெண்ணெய் முதலியவற்றை முறையான விலைக்குப் பெற அரசால் குடும்பத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் வழங்கப்படும், உறுப்பினர்களின் எண்ணிக்கை, வருமானம் முதலியவை பதிவு செய்யப்பட்ட பங்கீட்டு அட்டை; ration card

[குடும்பம் + அட்டை.]

குடும்பக்கட்டுப்பாடு *kuḍumba-k-kaṭṭuppāḍu,* பெ.(n.) கருத்தடை, அறுவை மருத்துவம் முதலியவற்றின் மூலம் குழந்தைகளைக் குறைவாகப் பெற்றுக் கொள்ளும் குடும்பத் திட்டம்; planned family; family planning

[குடும்பம் + கட்டுப்பாடு.]

குடும்பத்தியாச்சியம் *kuḍumbattiy-ācciyam,* பெ.(n.) இல்லற வாழ்வை முற்றும் துறந்து வாழும் துறவு வாழ்க்கை; renunciation of family ties, as an ascetic (செ.அக.).

குடும்பப்பிரதிட்டை *kuḍumba-p-piradiṭṭai,* பெ.(n.) நிலையழிந்த குடும்பத்தை நிலை நிறுத்தல்; maintaining or stabilising a family by rescuing it from distress (செ.அக.).

*[குடும்பம் + **Skt.** பிரதிட்டை.]*

குடுவிதிப்பாளம் *kuḍuvidi-p-pāḷam,* பெ.(n.) இலுப்பை மரம்; south Indian mahua - *Bassia longifolia* (சா.அக.).

குடேசி *kuḍēši,* பெ.(n.) கற்றாழை; Indian aloe - *Allooe officinalis* (சா.அக.).

குடேரசம் *kuḍērašam,* பெ.(n.) வெண் துளசி; white basil (சா.அக.).

குடைக்காவலன் *kuḍai-k-kāvalaṉ,* பெ.(n.) 1. சிற்றரத்தை; lesser galangal - *Alpinia galanga.* 2. சேனைக் கிழங்கு; elephant-foot yam - *Amorphophallus campanulatus* (சா.அக.).

[குடை + காவலன்.]

குடைச்சி *kuḍaicci,* பெ.(n.) சிறுகீரை; pig-greens - *Amaranthus campestris* (சா.அக.).

[குடை – குடைச்சி.]

குடைச்சிணுங்கி *kuḍai-c-ciṇuṅgi,* பெ.(n.) கொடிச் சிணுங்கி; a sensitive creeper of the mimosa genus (சா.அக.).

குடைசாய்–தல் *kuḍai-šāy-,* 1 செ.கு.வி.(v.i.) மாட்டு வண்டி போன்ற வண்டிகள் ஒரு பக்கமாகவோ, தலைகீழாகவோ விழுதல்; of bullock cart, vehicles overturn. *காளைகள் மிரண்டதால் வண்டிக் குடை சாய்ந்து உருண்டது. சீராகப் போய்க் கொண்டிருந்த வாழ்க்கை குடை சாய்ந்து விட்டது*

[குடை + சாய்–தல்.]

குடைச்சொருகி *kuḍai-c-corugi,* பெ.(n.) செந்நாவி; red aconite (சா.அக.).

[குடை+ சொருகி.]

குடைப்பாலி *kuḍai-p-pāli,* பெ.(n.) மடையன் சாம்பிராணி; false copaiba - *Hardwickia pinnata* (சா.அக.).

குடைப்பறவை *kuḍai-p-paṟavai,* பெ.(n.) காக்கை போன்ற உருவம் கொண்ட பறவை; the bird which look like a crow.

[குடை + பறவை.]

இது தென்அமெரிக்காவில் அமேசான் ஆற்றங்கரையில் உள்ளது. இதன் தலைமீது வளர்ந்துள்ள கொண்டையிறகு குடை போன்று விரிக்கக்கூடியதாய் இருக்கிறது. இதன் கழுத்தில் அலைதாடி போன்று இறகுகள் அடுக்கி வைக்கப்பட்டது போல் வளர்ந்திருக்கும். பூச்சி, புழுக்களைத் தின்று உயிர் வாழ்கிறது (அபி.சிந்.).

குடைமரம் *kuḍai-maram,* பெ.(n.) வேலமரம்; குடைவேல்; umbrella thorn-babool - *Acacia planifrous alias A.Latronum* (சா.அக.).

குடைமல்லிகை *kuḍai-malligai,* பெ.(n.) 1. செண்டு மல்லிகை; Arabian jasmine - *Jasminum sambac.* 2. கூடல் மல்லிகை; shining trifoliata jasmine - *Jasminum calophyllum* (சா.அக.).

[குடை + மல்லிகை.]

குடையிப்பி *kuḍai-y-ippi,* பெ.(n.) கடலில் பாறைகளைத் துளைக்கும் சிப்பி; a genus of marine mollusc which pierces rocks, woods etc. - *Pholas* (சா.அக.).

[குடை + இப்பி.]

குடையின்பருவதம் *kuḍaiyiṉ-paruvadam,* பெ.(n.) பித்தளை; brass (சா.அக.).

குடையூதை *kuḍai-y-ūdai,* பெ.(n.) குடைச்சலை உண்டாக்கும் வளி வகை; neuralgic pain (சா.அக.).

[குடை + ஊதை.]

குடைராட்டினம் *kuḍai-rāṭṭiṉam,* பெ.(n.) பொருட்காட்சி, திருவிழா நடக்கும் இடங்களில் பெரிய குடை போன்ற அமைப்பின் கீழ்த்தொங்கவிடப்பட்ட பல வடிவ இருக்கைகளில் சிறுவர் ஏறிச் சுற்றி வரும் விளையாட்டுக் கருவி; meerrry-go-round.

[குடை + ராட்டினம்.]

குடைவாய்வு *kuḍai-vāyvu,* பெ.(n.) **குடையூதை** பார்க்க; see *kuḍai-y-ūdai* (சா.அக.).

குடைவிருத்தி *kuḍai-virutti,* பெ.(n.) திருவிழாக் காலங்களில் இறைவனுக்குக் குடைபிடிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மானியம்; grant of land for holding the ornamental umbrella over the village deity during festivals (செ.அக.).

[குடை + Skt. விருத்தி.]

குடோச்சம் *kuḍōccam,* பெ.(n.) கஞ்சாங்கோரை; white-basil - *Ocimum album.*

குடோரமுட்சி *kuḍōra-muṭci,* பெ.(n.) வெள்ளைக் கழற்கொடி; a white variety of kaḻaṟ-koḍi (சா.அக.).

குடோரிமண் *kuḍōri-maṇ,* பெ.(n.) தூய்மையான மண்; pure alkaline earth (சா.அக.).

[குடோரி + மண்.]

குண்டச்சம்பா *kuṇḍa-c-cambā,* பெ.(n.) உருண்டைச் சம்பா நெல்; a species of round paddy (சா.அக.).

[குண்டு + சம்பா.]

குண்டசன் *kuṇḍaśaṉ,* பெ.(n.) திருதராட்டிரன் குமரன்; son of Tirudarāṭṭiraṉ (அபி.சிந்.).

குண்டபேதி *kuṇḍa-pēti,* பெ.(n.) திரிதராட்டிரன் குமரன்; son of Tiridarāṭṭiraṉ (அபி.சிந்.).

[குண்டம் + பேதி.]

குண்டர் *kuṇḍar,* பெ.(n.) 1. பொதுச் சொத்துக்களுக்குக் கேடு விளைவித்தல்; ஆட்களை அடித்துப் பயமுறுத்துதல்; கலவரம் செய்கை போன்ற மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் செயல்களைச் செய்யும் ஆள்; hooligan; in India 'goonda'. *குண்டர் தடுப்புக் காவல் சட்டம்.*

குண்டலம்பாலை *kuṇḍalam-pālai,* பெ.(n.) ஒரு (கற்ப) மூலிகை; a rejuvenating drug.

[குண்டம் + பாலை.]

இது 23 பெரிய மூலிகைகளில் ஒன்று (சா.அக.).

குண்டலபோகி *kuṇḍala-pōgi,* பெ.(n.) துரியோதனன் தம்பி; brother of Duri-y-ōtaṉaṉ (அபி.சிந்.).

குண்டலபோசன் *kuṇḍala-pōšaṉ,* பெ.(n.) **குண்டலபோகி** பார்க்க; see *kuṇḍala-pōgi* (அபி.சிந்.).

குண்டலரதன் *kuṇḍala-rataṉ,* பெ.(n.) துரியோதனன் தம்பி; brother of Duri-y-ōdaṉaṉ (அபி.சிந்.).

குண்டலிகா *kuṇḍalikā,* பெ.(n.) சம்பங்கோரை; a kind of sedge-grass (சா.அக.).

[குண்டலிகம் – குண்டலிகா.]

குண்டலிங்கம் *kuṇḍaliṅgam,* பெ.(n.) மலாக்கா நறும்புகைத்தி; malacca benzoin - *Styrax benzoin* (சா.அக.).

குண்டலித்தாய் *kuṇḍali-t-tāy,* பெ.(n.) 1. சத்தி; the universal. 2. துர்க்கை; the goddess Durga (சா.அக.).

[குண்டலி + தாய்.]

குண்டலியா *kuṇḍaliyā,* பெ.(n.) சீந்தில்; moon creeper - *Menispermum Cordi; Folium* (சா.அக.).

[குண்டலி + ஆள்.]

குண்டற்கச்சி *kuṇḍaṟ-kacci,* பெ.(n.) தென்னை வகைகளுள் ஒன்று (பதார்த்த.71); a kind of coconut (செ.அக.).

குண்டன் *kuṇḍaṉ,* பெ.(n.) 1. காசிப முனிவர் மனைவி கத்துருவின் குமரன்; son of katru and saint kāšipā. 2. திருதராட்டிரன் மகன்; son of Tirudarāṭṭiraṉ. 3. ஒரு சிவ கணத்தவன்; a celestial host of Šivā (அபி.சிந்.).

[குண்டு + அன்.]

குண்டாதி *kuṇḍāti,* பெ.(n.) பீ நாறிச் சங்கு; smooth volkameria - *Cleodendron inerme* (சா.அக.).

குண்டானி *kuṇḍāṉi,* பெ.(n.) கொம்மட்டிக் கொடி; mortar-flower bindweed - *Ipomaca bracteata* (சா.அக.).

[குண்டலி – குண்டானி.]

குண்டில் *kuṇḍil,* பெ.(n.) முதுகு; backside, the region of the spine.

குண்டினபுரம் *kuṇḍiṉa-puram,* பெ.(n.) விதர்ப்ப நாட்டுத் தலைநகரம் ; an ancient capital of Vidarpā (அபி.சிந்.).

[குண்டினம் + புரம்.]

குண்டுக்கட்டாக *kuṇḍu-k-kaṭṭāga,* வி.அ. (adv.) கழுத்தையும், காலையும் ஒன்று சேர்த்துப் பந்து போல் சுருட்டி; bundling someone up. *அவனைக் குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள்.*

[குண்டு + கட்டாக.]

குண்டுகட்பாலியாதனார் *kuṇḍukaṭ-pāli-y-ātaṉār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a Šaṅgam poet.

[குண்டுகண் + பாலி + ஆதனார்.]

இவர் இயற்பெயர் ஆதன். ஊர் பாலி. ஆழ்ந்த கண் உடையவராதலால் குண்டுகணென்று அடைமொழி கொடுக்கப்பட்டார் போலும். இவர் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடிப் பரிசில் பெற்றவர். இவர் பாடியதாக புறநானூற்றில் (387) ஒரு பாடலும், நற்றிணையில் (220) ஒரு பாடலும் காணப்படுகின்றன (அபி.சிந்.).

குண்டுக்கழுதை *kuṇḍu-k-kaḻudai,* பெ.(n.) ஆண் கழுதை; he-ass (சா.அக.).

குண்டுக்காயம் *kuṇḍu-k-kāyam,* பெ.(n.) வெடி குண்டு பட்டதனால் உண்டான புண்; gun-shot wound (சா.அக.).

[குண்டு + காயம்.]

குண்டுச்சட்டி *kuṇḍu-c-caṭṭi,* பெ.(n.) உருண்டை வடிவச் சட்டி வகை (பாத்திரம்); a small round bottomed vessel. *குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டுவது போல!*

[குண்டு + சட்டி.]

குண்டுப்பூக்கொன்றை *kuṇḍu-p-pū-k-koṉṟai,* பெ.(n.) கொன்றை வகை; sulphur flowered senna - *Cassia glauca* (செ.அக.).

[குண்டு + பூ + கொன்றை.]

குண்டும்குழியும் *kuṇḍum-kuḻiyum,* பெ.(n.) சிறு பள்ளங்கள்; potholes. *சாலை குண்டும் குழியுமாக இருக்கிறது. குண்டும் குழியுமான பாதை.*

[குண்டும் + குழியும்.]

குண்டுமல்லி *kuṇḍu-malli,* பெ.(n.) அதிக இதழ்களைக் கொண்ட, பெரிய அளவுடைய மல்லிகை வகை; arabian jasmine.

[குண்டு + மல்லி.]

குண்டுமாணிக்கம் *kuṇḍu-māṇikkam,* பெ.(n.) தூம்புர வாலி; safflower - *Carthamus tinctorius* (சா.அக.).

[குண்டு + மாணிக்கம்.]

குண்டுமிளகாய் *kuṇḍu-miḷāgāy,* பெ.(n.) குட மிளகாய்; bell-pepper - *Capsicum grosum* (சா.அக.).

[குண்டு + மிளகாய்.]

குண்டுரோசனை *kuṇḍu-rōšaṉai,* பெ.(n.) நறுமணமும், உருண்டை வடிவுமுள்ள ஒருவகை மருந்துக் கிழங்கு (மலை.); an odoriferous root growing in circular masses (செ.அக.).

குண்டூர்க்கூற்றம் *kuṇḍūr-k-kūṟṟam,* பெ. (n.) சேரநாட்டின் ஒரு பகுதி; one of the parts of Šēra-nāḍu (அபி.சிந்.).

[குண்டூர் + கூற்றம்.]

குண்டெறிதல் *kuṇḍeṟidal,* தொ.பெ.(vbl.n.) மாழையிலான குண்டை எறியும் விளையாட்டுப் போட்டி; shotput.

[குண்டு + எறிதல்.]

குண்டேந்தி *kuṇḍēnti,* பெ.(n.) மலைதாங்கி; wound plant - *Šida carpinifolia* (சா.அக.).

[குண்டு + ஏந்தி.]

குண்டோசனை *kuṇḍōšaṉai,* பெ.(n.) **குண்டுரோசனை** பார்க்க; see *kuṇḍu-rōšaṉai* (செ.அக.).

குண்டோதினி *kuṇḍōdiṉi,* பெ.(n.) நிறைந்த மடியுள்ள மாடு; a cow with a full udder (சா.அக.).

குண்ணம் *kuṉṉam,* பெ.(n.) பெருமருது; Indian birth wort - *Aristolochia indica* (சா.அக.).

[குண் – குண்ணம்.]

குண்ணிச்செடிச்சி *kuṉṉi-c-ceḍicci,* பெ.(n.) தொழு கண்ணி; a medicinal plant - *Hedysarum gyrans* (சா.அக.).

[குண்ணி + செடிச்சி.]

குண்டைத்தூக்கிப்போடு-தல் *kuṇḍai-t-tūkki-p-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) அதிர்ச்சி தரும் செய்தியைக் கூறுதல்; disclose a shocking news; drop a bombshell. *வேலையை விட்டு விட்டேன் என்று ஒரு குண்டைத்தூக்கிப் போட்டான்.*

[குண்டை + தூக்கி + போடு–தல்.]

குண்ணுவர் *kuṉṉuvar,* பெ.(n.) தாராபுரம், காங்கேயம், பழனிமலை முதலிய இடங்களில் பயிரிடும் குடிமக்கள்; the peasents who cultivate in Tārāpuram, Kāṅgēyam, Palaṉi-malai.

[குண் – குண்ணுவா.]

இவர்கள் தங்களை வேளாளர் என்பர். கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள குண்ணூரி லிருந்து வந்ததால் இப்பெயர் பெற்றனர். பெரிய குண்ணுவர், சிறிய குண்ணுவர் என இருவகை உண்டு (அபி.சிந்.).

குணக்கம் *kuṇakkam,* பெ.(n.) குருந்த மரம்; a species of wild lime - *Atlantia racemosa* (சா.அக.).

குணக்காரி *kuṇakkāri,* பெ.(n.) குன்றிமணி; jeweller's bead (சா.அக.).

குணக்குமணல் *kuṇakku-maṇal,* பெ.(n.) வெள்ளி மணல்; silver ore (சா.அக.).

[குணக்கு + மணல்.]

குண்டகன் *kuṇḍagaṉ,* பெ.(n.) சிவ கணத்தவரில் ஒருவர்; one of the celestial host of Šivā (அபி.சிந்.).

[குண்டு – குண்டகன்.]

குண்டக்கிரியா *kuṇḍa-k-kiriyā,* பெ.(n.) இசைப்பண்ணில் ஒரு வகை (பரத.இராக.56); a specific melody-type (செ.அக.).

குணச்சித்திரம் *kuṇa-c-cittiram,* பெ.(n.) 1. கதை, நாடகம் முதலியவற்றின் மாந்தர்; portrayal of a character in a story, etc. *இந்தச் சிறுகதையில் வரும் குணச்சித்திரங்களை வாழ்க்கையில் சந்தித்த உணர்வு ஏற்படுகிறது.* 2. கதை மாந்தர்க்கு உரியதாகக் காட்டப்படும் குண விளக்கம்; characterization. *கதை மாந்தர்களின் குணச்சித்திரம் சிறப்பாக அமைந்திருக்கிறது.*

[குணம் + சித்திரம்.]

குணசலி *kuṇaśali,* பெ.(n.) வல்லாரை; Indian penny-wort - *Hydrocotyle asiatica* (சா.அக.).



குணசாலினி *kuṇa-śāliṉi,* பெ.(n.) தனபதி என்னும் வணிகரின் மனைவி; wife of merchant Taṉapadi (அபி.சிந்.).

குணசுபாவம் *kuṇa-śubāvam,* பெ.(n.) இயல்பான குணம்; natural disposition (சா.அக.).

[குணம் + Skt. சுபாவம்.]

குணத்தி *kuṇatti,* பெ.(n.) 1. வல்லாரை; Indian penny wort - *Hydrocotyle asiatica.* 2. சிவகரந்தை; fever toolsy - *Sphoeranthus amaranthoides* (சா.அக.).

[குணம் – குணத்தி.]

குணத்தித்தரு *kuṇatti-t-taru,* பெ.(n.) வேலிப்பருத்தி; hedge-twiner (சா.அக.).

குணந்துல்லியம் *kuṇantulliyam,* பெ.(n.) வெண்பாதிரிப்பூ; white coloured fragrant trumpet flower - *Stereospermum chelonoides* (சா.அக.).

[குணம் + துல்லியம்.]

குணநலன் *kuṇa-nalaṉ,* பெ.(n.) ஒருவரின் நல்ல இயல்பு; of a person positive qualities. *வியக்கத்தக்க குணநலன்கள் கொண்டவர்.*

[குணம் + நலன்.]

குணநிவர்த்தி *kuṇa-nivartti,* பெ.(n.) நாரத்தை; bitter orange - *Citrus aurantium* (சா.அக.).

குணபரன் *kuṇa-paraṉ,* பெ.(n.) பல்லவர்களில் ஒருவன்; a king who belonged to Pallavās.

சோழ நாட்டை ஆண்டு திருச்சிராப்பள்ளி மலை மேல் உள்ள சிவன் கோவிலைப் புதுப்பித்தவன். இவனுக்குப் புருடோத்தமன், சத்துருமல்லன், சத்திய சந்தன் எனவும் பெயர் உண்டு (அபி.சிந்.).

குணமாயிரு–த்தல் *kuṇamā-y-iru-,* 3 செ.கு.வி. (v.t.) நலமாய் இருத்தல்; being in sound health; to be well - conditioned (சா.அக.).

[குணமாய் + இரு–த்தல்.]

குணமாலை *kuṇa-mālai,* பெ.(n.) சீவக சிந்தாமணி நாயகன் சீவகனின் மனைவியரில் ஒருத்தி; one of the wive's of Šīvagaṉ in Šīvaga-Šintāmaṇi (அபி.சிந்.).

குணரஞ்சிதம் *kuṇa-rañjidam,* பெ.(n.) மனோரஞ்சிதம்; cupid's plant - *Artabotrys odoratissimus* (சா.அக.).

குணருத்திரர் *kuṇa-ruttirar,* பெ.(n.) குணதத்துவ நிலையராய் வெட்டவெளியில், அழிக்குந் தொழிலைச் செய்யும் சிவன் (உருத்திரர்) (சதாசிவ.77); the Lord of relative destruction who functions in the region of Kuṇa-tattuva (செ.அக.).

[குணம் + Skt. உருத்திரர்.]

குணலாகிதம் *kuṇa-lāgidam,* பெ.(n.) சம்பங்கிப் பூ; Champauk - *Michelia Champaka* (சா.அக.).

குணவியது *kuṇaviyadu,* பெ.(n.) மேன்மையானது; that which is superior. *"குணவியது ஒன்று உட்பட நிறை" (தெ.இ.க. II, 431) (செ.அக.).*

குணனைவில்லாக்கினோன் *kuṇaṉai-villākkiṉōṉ,* பெ.(n.) துரிசு; blue vitriol - *Copper sulpphate* (சா.அக.).

குணாதிசயம் *kuṇādišayam,* பெ.(n.) **குணாம்சம்** பார்க்க; see *kuṇāmšam.*

[குணம் + அதிசயம்.]

குணாதீதம் *kuṇādīdam,* பெ.(n.) ஒழுக்கங் கடந்தது; that which is absolute above all attributes, as referring to god (செ.அக.).

*[குணம் + **Skt.** அதீதம்.]*

குணாநிதிபாண்டியன் *kuṇā-nidi-pāṇḍiyaṉ,* பெ. (n.) ஒரு பாண்டிய மன்னன்; a Paṇḍiyā king.

மறுவ. சுந்தரபாண்டியன்

குணாம்சம் *kuṇāmšam,* பெ.(n.) 1. குணச் சிறப்பு; predominant characteristics. *அவருடைய இந்தக் குணாதிசயத்தை எல்லோரும் அறிந்திருப்பார்கள். தாத்தாவினுடைய குணாதிசயங்களை யாரால் மாற்ற முடியும்?* 2. ஒன்றிற்கே உரித்தான பண்பு; characteristic feature. *வெளிநாட்டு வங்கி என்பதற்கான எல்லா குணாதிசயங்களும் இருந்தன.*

*[குணம் + **Skt.** அம்சம்.]*

குணாலங்கிருதன் *kuṇālaṅgirudaṉ,* பெ.(n.) நற்குணங்களைத் தன்னிடத்தே கொண்டவன்; one adorned with good qualities (செ.அக.).

குணிகார்க்கியர் *kuṇi-kārkkiyar,* பெ.(n.) கார்க்கிய குலத்தில் தோன்றியவர்; one who came from Kārkkiya line age (அபி.சிந்.).

குத்தகைதார் *kuttagaidār,* பெ.(n.) நிலக்குத்தகை (கவுல்) வாங்குபவன்; contractor, leasee (செ.அக.).

குத்தகைதாரர் *kuttagaitārar,* பெ.(n.) குத்தகைக்கு எடுப்பவர்; leasee.

[குத்தகை + தாரர்.]

குத்தன் *kuttaṉ,* பெ.(n.) எமனிடம் உள்ள கணக்கனான சித்திரகுத்தன்; accountant of Lord yamā (அபி.சிந்.).

குத்திட்டு *kuttiṭṭu,* வி.எ. (adv.) 1. உட்காரும் போது குத்துக்காலிட்டு; squat while sitting. *கணப்புக்கு அருகில் குத்திட்டு உட்காந்து கொண்டான்.* 2. நெட்டுக்குத்தாக வளையாமல் நீட்டிக் கொண்டு; erect; straight. *தாடி முள்முள்ளாகக் குத்திட்டு நின்றது.*

[குத்து + இடு.]

குத்திடு-தல் *kuttiḍu-,* செ.கு.வி. (v.i.) பார்வை, கவனம் முதலியன ஒருவரின் மேல், ஒன்றில் நிலைத்தல்; வெறித்தல்; attention etc., get fixed on. *உயிர் பிரியும் நேரத்தில் கண் குத்திட்டது. கவனம் பாட்டின் மேல் குத்திட்டு நிலைத்தது.*

[குத்து + இடு-தல்.]

குத்துக்கோல் *kuttu-k-kōl,* பெ.(n.) தாக்கும் ஆயுதமாகப் பயன்படுத்தும் கூர்மையான முனை உடைய கம்பு; pointed pole used as a weapon. *கையில் குத்துக்கோல், அரிவாள் ஆயுதங்களுடன் பத்து பேர் புறப்பட்டார்கள்.*

[குத்து + கோல்.]

குத்துமதிப்பு *kuttu-madippu,* பெ.(n.) முறையாகக் கணக்கிடாத மதிப்பீடு; தோராயம்; rough estimate; approximate value. *அறுபது கலம் நெல் என்று எப்படிச் சொல்கிறாய்? எல்லாம் ஒரு குத்து மதிப்புதான். குத்துமதிப்பாகச் சொன்னால் இந்த வீடு முப்பதாயிரம் பெறும்.*

[குத்து + மதிப்பு.]

குத்துயரம் *kuttuyaram,* பெ. (n.) முக்கோணத்தில் அடிப்பக்கத்தையும் மேல் முனையையும் இணைக்கும் செங்குத்துக் கோடு; attitude in a triangle.

[குத்து + உயரம்.]

குதப்பு-தல் *kudappu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. உள்ளாக மெல்லாமலே வாயை அசைத்தல்; eating with the lips close - *Mumble.* 2. மெல்லுதல்; masticating. 3. உதப்புதல்; chewing food to increase the saliva and prepare for swallowing and digestion; stuffing the mouth with food (சா.அக.).

[குது - குதப்பு.]

குதப்பியவுணவு *kudappiya-v-uṇavu*, பெ. (n.) விழுங்குவதற்கு முன் உள்ள மென் உணவு; the food after mastication and just before deglutition - *Alimentary bolus* (சா.அக.).

[குதப்பிய + உணவு.]

குதம்பேய்ச்சித்தர் *kudam-pēy-c-cittar*, பெ. ள(n.) பதினெண் சித்தர்களில் ஒருவர்; one of eighteen Šiddās.

[குதம்பை + பேய்+சித்தர்.]

குதமகாயம் *kudama-kāyam*, பெ.(n.) வெங்காயம்; onion (சா.அக.).

குதனம் *kudaṉam*, பெ.(n.) 1. அசட்டை; negligence, carelessness, slovenliness. 2. துப்புரவின்மை; filthiness. 3. திறமையின்மை; want of dexterity; clumsiness, awkwardness (செ.அக.).

[குது - குதனம்.]

குதனாசனம் *kudaṉāšaṉam*, பெ.(n.) பெருங்காயம்; asafoetida - *Ferula asafoetida* (சா.அக.).

குதிகள்ளம் *kudi-kaḷḷam*, பெ.(n.) குதிப்பிளவை; boil or abscess on the heel (செ.அக.).

[குதி + கள்ளம்.]

குதிகால் *kudi-kāl*, பெ.(n.) 1. உள்ளங்காலின் பின்பக்கம்; the hind most part of the foot. 2. காற்குதி; heel of the foot (சா.அக.).

[குதி + கால்.]

குதிகால்வலி *kudi-kāl-vali*, பெ.(n.) 1. குதிகால் நோவு; pain in the heel - *Talalgia.* 2. குதிகாலை அழுந்த வைக்கும் போது தோன்றும் வலி; pain caused by pressure on the heel - *Painful heel* (சா.அக.).

[குதிகால் + வலி.]

குதிகால்வாதம் *kutikāl-vādam*, பெ.(n.) 1. குதிகால் ஊன்றுவதற்கு முடியாமல் இருக்கும் ஒரு நரம்பு தொடர்பான ஒரு நோய்; a disease of the heel rendering one unable to rest on the heel owing to excessive neuralgic pain - *Pododynia.* 2. முன்னங்காலில் நின்று பிறகு குதிகாலை ஊன்ற முடியாமல் வலி கொள்ளும் நரம்பு நோய்; pain experienced in raising the toes and suddenly bringing the heels to this ground - *Heel jar* (சா.அக.).

[குதி + கால் + வாதம்.]

குதிகால்வெடிப்பு *kutikāl-veḍippu*, பெ.(n.) குதிகாலில் ஏற்படும் பித்தம் அல்லது பனியினாற் காணும் வெடிப்பு; crack or fissure of th heel arising from the bilious condition of the system or frost-bite (சா.அக.).

[குதிகால் + வெடிப்பு.]

குதிகாலெலும்பு *kuti-kāl-elumbu*, பெ.(n.) குதிகால் உள்ளாக இருக்கும் எலும்பு; heel bone - *Calcaneum; Oscalcis* (சா.அக.).

[குதிகால் + எலும்பு.]

குதிங்கால்வெட்டி *kutiṅgāl-veṭṭi*, பெ.(n.) ஏமாற்றுக்காரன்; cheet, deceiver (செ.அக.).

[குதிகால் + வெட்டி.]

குதிபோடு-தல் *kudi-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) மகிழ்ச்சியைக் காட்டும் வகையில் துள்ளிக் குதித்தல்; jumb about; frolic.

உன்னையும் கூட்டிக்கொண்டு போகிறேன் என்றதும் குழந்தை குதி போட்டது. அவள் இருக்கும் இடத்தில் குறும்பும் கும்மாளமும் குதிபோடும்.

[குதி + போடு-தல்.]

குதியைப்பாதி *kudiyai-p-pādi,* பெ.(n.) வெட்டி வேர்; khus khus root - *Andropogon muricatus* (சா.அக.).

குதிரைகொல்லி *kutirai-kolli,* பெ.(n.)
1. ஒருவகைப் புன்செய்ப் பயிர்; poor man's horse-tail millet - *Panicum verticillatum.*
2. கொடி வகை; purple wreath - *Petracea volubilis* (செ.அக.).

மறுவ. குதிரைவாலி

[குதிரை + கொல்லி.]

குதிரைகொடுத்தல் *kudirai-koḍuttal,* பெ.(n.) சிறுவர் விளையாட்டில் வென்றோரைத் தோற்றார் முதுகிற் சுமக்கை (யாழ்.அக.); the penalty of the defeated person carrying the victor on his back, in children's play (செ.அக.).

[குதிரை + கொடுத்தல்.]

குதிரைசத்தி *kutirai-šatti,* பெ.(n.) ஓர் இயந்திரத்தின் இயங்கும் ஆற்றலை அளவிடப் பயன்படுத்தும் அலகு; a measurement used to estimate the power, called one horsepower, two horse power and so on (க்ரியா.).

[குதிரை + சத்தி.]

குதிரைசதை *kutirai-šadai,* பெ.(n.) ஆடு சதை;தொங்கும் சதை; calf muscle.

[குதிரை + சதை.]

குதிரைச்சாரி *kutirai-c-cāri,* பெ.(n.) குதிரையின் சுற்றியோடும் கதி; circuitous course of a horse (செ.அக.).

குதிரைத்தறியனார் *kudirai-t-taṟiyaṉār,* பெ.(n.) ஒரு கடைக்கழகப்புலவர்; a poet, belonged to sangam era.

[குதிரை + தறியனார்.]

இவர் பாலைத் திணையைப் பாராட்டிப் பாடியுள்ளார்.

குதிரைத்திறன் *kudirai-t-tiṟaṉ,* பெ.(n.) **குதிரைசத்தி** பார்க்க; see *kutirai-šatti.*

[குதிரை + திறன்]

குதிரைநிலை *kutirai-nilai,* பெ.(n.) குதிரைகளைக் கட்டி வைக்கும் இடம் (இலாயம்) (சினேந்.174); place where horses are kept, stable (செ.அக.).

மறுவ. குதிரைக்கொட்டில்

[குதிரை + நிலை.]

குதிரைப்பயிரி *kudirai-p-payiri,* பெ.(n.) பூடு (சாரணை) வகை; dog milk-grass - *Trianthema crystallina* (செ.அக.).

[குதிரை + பயிரி.]

குதிரைப்பற்பாடாணம் *kudirai-p-paṟ-pāšāṇam,* பெ.(n.) பிறவி நஞ்சு வகை (மூ.அ.); a mineral poison, one of 32 (செ.அக.).

குதிரைப்பால் *kutirai-p-pāl,* பெ.(n.) குதிரையின் பால்; horse's milk.

[குதிரை + பால்.]

இது உடம்பிற்கு வலிமையை உண்டாக்கும். எளிதில் செரிக்கக் கூடியது. உடம்பிற்கு வெப்பமானது. சுவைக்கத் துவர்ப்பாய் இருக்கும் (சா.அக.).

குதிரைப்பிடுக்கு *kutirai-p-piḍukku,* பெ.(n.) குதிரைப் பிடுக்கன் என்னும் செடி; horse almond - *Sterculia foetida.*

[குதிரை + பிடுக்கு.]

இதன் காய்கள் நீள நீளமாய்த் தொங்குவதால் பார்வைக்கு அழகாக இருக்கும். ஆகவே இது தோட்டம், அரண்மனை, சோலைகளில் வைத்து வளர்க்கப்படும். இம்மரத்தின் இலை வலிமையையும், வியர்வையையும் உண்டாக்கும். இதன் விதைகள் கறுப்பாயும், நீளமாயும் இருக்கும்.

இதன் பூ கெட்ட நாற்றம் வீசுமாதலால் இதற்குப் 'பீநாறி' என்று ஒரு பெயரும் உண்டு. இதற்குச் சிறுநீரை வடிக்கும் குணமும் உண்டு. ஆகவே சிறுநீர் தொடர்பான நோய்களுக்குப் பெரிதும் பயன்படும் (சா.அக.).

குதிரைப்பீசன் *kutirai-p-pīšaṉ,* பெ.(n.) 1. உயரமாய் வளர்ந்த மரம்; any tree rising to great height; any tall majestic tree. 2. ஒரு முள் மரம்; camel tree; camel thistle - *Echinops echinatus* (சா.அக.).

[குதிரை + பீசன்.]

குதிரைமலை *kutirai-malai,* பெ.(n.) தென் கன்னடத்தில் உள்ள குதிரை மூக்கு மலை; hill in south-kaṉṉaḍā (அபி.சிந்.).

குதிரையோடு-தல் *kutirai-y-ōḍu-,* 5 செ.கு.வி.(v.i.) ஒருவர் தனக்குப் பகரமாக மற்றொருவரைத் தேர்வு எழுத வைத்து ஆள் மாறாட்டம் செய்தல் (இலங்.); write an examination by praxy. *அவன் குதிரையோடித்தான் தேர்வில் வெற்றி யடைந்தான்.*

[குதிரை + ஓடு-தல்.]

குதிரைவாவிகம் *kudirai-vāvigam,* பெ.(n.) கோரைப்புல்; koray grass (சா.அக.).

[குதிரை + வாவிகம்.]

குதிரைவாற்புல் *kudirai-vāṟ-pul,* பெ.(n.) குதிரைவாலிப்புல்; ஒட்டுப்புல்; horse tail grass, panicum brizoides (சா.அக.).

[குதிரை + வாற் + புல்.]

குதுகுலிப்பு *kudukulippu,* பெ.(n.) 1. மிகு மகிழ்ச்சி; ecstasy; rapture. 2. மயிர்ச் சிலிர்ப்பு; hair standing on ends - *Horripillation* (சா.அக.).

[குது + குலிப்பு.]

குத்தல்குடைச்சல் *kuttal-kuḍaiccal,* பெ. (n.) 1. காற்றினால் ஏற்படும் நரம்பு வலி; piercing and boring pain in the course of the nerves due to aggravated condition of air. 2. மூட்டு வலி; pain experienced in rheumatism (சா.அக.).

[குத்தல் + குடைச்சல்.]

குத்தாலகம் *kuttālagam,* பெ.(n.) 1. பருத்தி; cotton - *Gossypium herbaceum.* 2. காட்டாத்தி; திருவாத்திச் செடி; holy mountain ebony - *Bauhinia tomentosa.* 3. கடுகு ரோகிணி; black hellebore - *Helleborus niger* (சா.அக.).

குத்தாலிகம் *kuttāligam,* பெ.(n.) குடமிளகாய்; bell pepper - *Capsicum grosum* (சா.அக.).

குத்திக்குத்தியிருமுதல் *kutti-k-kutti-y-irumudal,* தொ.பெ.(vbl.n.) புகைந்து இருமுகை; caughing often due to irritation (சா.அக.).

[குத்திக்குத்தி + இருமுதல்.]

குத்து-தல் *kuttu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. துளித் துளியாய் விடுதல்; pouring in drops as into the ear or eye. 2. எண்ணெய்க் குத்தல்; letting oil in drops. 3. கத்தியால் குத்தல்; stabbing with a knife. 4. நுழைத்தல்; the act of thrusting. 5. கையாற் குத்தல்; giving a blow with the fist. 6. துளை செய்தல்; pricking; boring as ear. 7. இடித்தல்; pounding as of rice. 8. அலகு குத்தல்; hook swinging. 9. பறித்தல்; plucking (சா.அக.).

குத்துக்காரன்சம்மட்டி *kuttukkāraṉ-šammaṭṭi,* பெ.(n.) செடிவகை; a herbaceous plant (சா.அக.).

[குத்துக்காரன் + சம்மட்டி.]

குத்துச்சீந்தில் *kuttu-c-cīntil,* பெ.(n.) சீந்திற் செடி; a species of moon-creeper (சா.அக.).

[குத்து + சீந்தில்.]

குத்துச்செடிகண்டங்கத்திரி *kuttu-c-cedi-kandan-kattiri,* பெ.(n.) குத்தாக முளைக்கும் பாப்பார முள்ளிச் செடி; Brahminmully growing in clusters - *Solanum indicum* (சா.அக.).

[குத்துச்செடி + கண்டங்கத்திரி.]

குத்துசாதம் *kuttu-šadam,* பெ.(n.) 1. பிடி சோறு; a grasp-ful of boiled rice. 2. கையினால் எடுக்கும் அளவு கொண்ட சோறு; handful of boiled rice (சா.அக.).

[குத்து + சாதம்.]

குத்துநாம்பழம் *kuttunām-palam,* பெ.(n.) பேரீச்சம் பழம்; wild date fruit - *Phoenix acaulis* (சா.அக.).

[குத்துநாம் + பழம்.]

குத்துப்பாகல் *kuttu-p-pāgal,* பெ.(n.) நிலப்பாகல்; ground pagal - *Momordica humilis* (சா.அக.).

[குத்து + பாகல்.]

குத்துப்பிடாரி *kuttu-p-pidāri,* பெ.(n.) வனதேவிச் செடி; an unknown plant (சா.அக.).

[குத்து + பிடாரி.]

குத்துவல்லாரை *kuttu-vallārai,* பெ.(n.) மலை வல்லாரை; a species of Indian penny wort - *Hydrocotyle asiatica* (சா.அக.).

[குத்து + வல்லாரை.]

குந்தரம் *kundaram,* பெ.(n.) ஒரு புல்; a kind of grass (சா.அக.).

குந்தலிக்கம் *kundalikkam,* பெ.(n.) வெள்ளைப்போள மரத்தின் பிசின் (யாழ்.அக.); myrrh-resin - *Gummi resina myrrha* (செ.அக.).

குந்தலிங்கம் *kundalingam,* பெ.(n.) மரவகை; benzoin tree - *Styrax benzoin* (செ.அக.).

குந்தவிளக்கம் *kunda-vilakkam,* பெ.(n.) வெள்ளைப் போளம்; white myrrh or women's bole - *Balsomdendra myrrh* (சா.அக.).

[குந்தம் + விளக்கம்.]

குந்தலிகம் *kundaligam,* பெ.(n.) முண்டினி மரம்; an unknown tree said to possess occult virtues (சா.அக.).

குந்தளை *kundalai,* பெ.(n.) ஒரு தெய்வ மங்கை; a deity women.

குந்தா *kundā,* பெ.(n.) 1. துமுக்கியின் அடி; stock of a gun. 2. கப்பலின் பின்பக்கம்; stern of a vessel (செ.அக.).

[குந்தல் (மரம்) – குந்தா.]

குந்திகறையான் *kundi-karaiyān,* பெ.(n.) பச்சோந்தி; green-lizard - *Chameleon* (சா.அக.).



குந்திபுதல்வன் *kundi-pudalvan,* பெ.(n.) பாண்டவர்களுள் மூத்தவனான தருமன் (குந்தியின் புதல்வன்) (சூடா.); son of kundi, daruma (செ.அக.).

[குந்தி + புதல்வன்.]

குந்திபுரி *kundi-puri,* பெ.(n.) தற்போதுள்ள குவாலியர் நகரம்; recent kuwāliyar city (அபி.சிந்.).

[குந்தில் – குந்திலி + புரி.]

குந்திபோசன் *kundi-pōšan,* பெ.(n.) இடைய (யாதவ)மன்னன்; yātavā king.

பாரதப் போரில் முதல் நாளில் அசுவத்தாமனுடன் போர் புரிந்தான். இவனே குந்தியை வளர்த்தவன் (அபி.சிந்.).

குந்திரிகம் *kundirigam,* பெ.(n.) 1. பெரிய மரவகை; salai tree - *Indian olibanum - Boswellia serrata typica.* 2. மர வகைகளுள் ஒன்று; konkani resin - *Boswellia serrataglabra* (செ.அக.).

குந்தேசிகம் *kundēšigam,* பெ.(n.) கோபுரக் கள்ளி; a kind of spurge tree; tower spurge (சா.அக.).

குநகம் *kunagam,* பெ.(n.) நகத்திற் காணும் நோய்; a disease of the nails (சா.அக.).

குப்பஅஞ்சனா *kuppa-añjanā,* பெ.(n.) நெற்பொலியின் மதிப்பு; estimate of the produce of a field after the crop is gathered in, but before it is measure (செ.அக.).

[குப்பல் + அஞ்சனா.]

குப்புற *kuppura,* வி.அ.(adv.) முகம், வயிற்றுப் பகுதி, மார்பு ஆகியவை தரையைப் பார்த்தபடி; கவிழ்ந்து; பெட்டி, கூடை முதலியவை தலைகீழாக; of a person face downwards; on one's belly; of objects upside down. *குப்புற படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். பழக்கூடை குப்புறச் சரிந்து கிடந்தது*

[குப்பு + உறு.]

குப்புறத்தள்ளு-தல் *kuppura-t-tallu-,* 5 செ.கு.வி.(v.i.) முகம் கீழ் நோக்கித் தள்ளுதல்; throwing down upon the face (சா.அக.).

[குப்புற + தள்ளு.]

குப்பென்று *kuppenru,* வி.அ.(adv.) (குறிப்பிட்ட) அந்த நேரத்தில் அதிகமாக; sweat breaking out; gushingly in a flush. *தன் மேல் திருட்டுக் குற்றம் சாட்டப் பட்டதைக் கேட்டு அவனுக்குக் குப்பென்று வியர்த்தது. வெட்கத்தால் முகம் குப்பென்று சிவந்தது.* 2. ஒரேடியாகத் திரண்டு வருவது போல்; of smell, smoke in a sudden whiff. *சாக்கடையிலிருந்து நாற்றம் குப்பென்று அடித்தது. சமையல்கட்டிலிருந்து ஏதோ தாளிக்கும் மணம் குப்பென்று மூக்கைத் துளைத்தது.*

[குப்பு + என்று.]

குபேரகம் *kubēragam,* பெ.(n.) சின்னிமரம்; Indian shrubby copper leaf.

குபையம் *kupaiyam,* பெ.(n.) சிறுபுள்ளடி; a species of ticktrefoil.

குப்பைக்கூடை *kuppai-k-kūdai,* பெ.(n.) குப்பை போடுவதற்கான கூடை வடிவப் பொருள்; waste paper basket; dustbin

[குப்பை + கூடை.]

குப்பைக்கூளம் *kuppai-k-kūlam,* பெ.(n.) தேவையற்றவை, செத்தை முதலியன; sweepings, rubbish (செ.அக.).

குப்பைக்கோழியார் *kuppai-k-kōliyār,* பெ.(n.) ஒரு புலவர்; a poet, lived in the Šaṅgam age.

[குப்பை + கோழி + ஆர்.]

இவர் தாம் பாடிய குறுந்தொகையில் குப்பைக் கோழியின் தனிப்போரினைத் தலைவி நோய்க்கு உவமித்த சிறப்பால் இப்பெயர் பெற்றார் எனக் கருதுவர். இவர் பெண்பாலராக இருக்கலாம் (அபி.சிந்.).

குப்பைகொட்டு-தல் *kuppai-kottu-,* 5 செ.கு.வி.(v.i.) சொல்பவர் நோக்கிலும், கேலியாகவும் பயனற்ற வேலையில் பங்கு பெறுதல்; பயனற்ற ஒரே வேலையைச் செய்தல்; jocularly take part in an unproductive work; do the same suseless job again and again. *நீயும் அந்த*

அலுவலகத்தில் தான் குப்பை கொட்டினாய் இவ்வளவு நாள் கதை எழுதிக் குப்பைக் கொட்டியது போதும்!

[குப்பை + கொட்டு-தல்.]

குப்பைத்தொட்டி *kuppai-t-toṭṭi,* பெ.(n.) 1. குப்பை போடுவதற்காக வீட்டுக்கு வெளியே அல்லது தெருவில் வைத்திருக்கும் கற்காரையால் (சிமெண்ட்) செய்த தொட்டி போன்ற அமைப்பு; dustbin; garbase can. 2. குப்பைக் கூடை; waste paper basket

[குப்பை + தொட்டி.]

குப்பைமேனி *kuppai-mēṉi,* பெ.(n.) இலை தண்டோடு சேரும் இடத்தில் சிறுசிறு காய்கள் காய்க்கும் ஒரு வகைச் செடி; Indian acalypha.

[குப்பை + மேனி.]



குப்பைமேனிக்கீரை *kuppai-mēṉi-k-kīrai,* பெ.(n.) குப்பையில் வளரும் ஒரு வகைக் கீரை; rubbish plant - *Acalypha indica* (சா.அக.).

[குப்பை + மேனி + கீரை.]

குப்பையணை-தல் *kuppai-y-aṇai-,* செ.கு.வி.(v.i.) குப்பையைச் சேர்த்தல்; resorting to a dung-hill gather the clutters (சா.அக.).

[குப்பை + அணை-.]

குபக்கினம் *kupakkiṉam,* பெ.(n.) தகரை; ring worm plant - *Cassia tora* (சா.அக.).

குபசுபா *kupa-šubā,* பெ.(n.) எட்டி; nux-vomica - *Strychnos nux-vomica* (சா.அக.).

[குப + சுபா.]

குபம் *kupam,* பெ.(n.) 1. கோட்டம்; Arabian coatus - *Costus speciosus.* 2. தழும்பு; scar; cicatrix (சா.அக.).

குபயம் *kupayam,* பெ.(n.) சிறுபுள்ளடி; unifoliate tick-trefoil - *Desmonium latifolium* (சா.அக.).

குபலம்[1] *kubalam,* பெ.(n.) வலிமை இன்மை; weakness (செ.அக.).

குபலம்[2] *kubalam,* பெ.(n.) இழப்பு; loss, detriment (செ.அக.).

[Skt. ku-phala > த.குபலம்.]

குபீர் *kubīr,* பெ.அ.(adj.) பீறிட்டு வரும்; எதிர்பாராத; a fit of ; burst of; sudden. *குபீர்ச் சிரிப்பு குபீர்ப் பாய்ச்சல்.*

குபீரிடு-தல் *kupīriḍu-,* 20 செ.கு.வி.(v.i.) அரத்தம் வேகமாகப் பாய்தல்; flowing forcible or gushing out in streams; spurting as of blood (சா.அக.).

[குபீர் + இடு-தல்.]

குபேரகம் *kubēragam,* பெ.(n.) ஒரு வகைச் செடி (மூ.அ.); Indian shrubby copper leaf - *Acalypha fruticosa* (செ.அக.).

குபேரசம்பத்து *kubēra-sambattu,* பெ.(n.) செல்வத்தின் அரசனான குபேரனுக்குரியது போன்ற பெருஞ்செல்வம்; immense wealth, as that of kubēra (செ.அக.).

[குபேரன் + சம்பத்து.]

குபேரம் *kubēram,* பெ.(n.) கோட்டம்; Arabian costus - *Costus speciosus alias C.arabicus* (சா.அக.).

குபேராட்சி *kubērāṭci,* பெ.(n.) 1. கொடிப் புன்கு; hog-creeper - *Derris scandens.* 2. பாதிரி; trumpet flower tree - *Bignonia Chelonoides* (சா.அக.).

குபீரென்று *kubīrenṟu,* வி.அ.(adv.) திடீரென்று; like a flash or shot; suddenly. *தூங்கிக் கொண்டிருந்தவன் யாரோ தொட்டவுடன் குபீரென்று எழுந்து உட்கார்ந்தான்; குபீரென்று கண்களில் நீர் ததும்பியது*

[குபீர் + என்று.]

குபுகுபுவென்று *kubu-kubu-v-enṟu,* பெ.(n.) திடீரென்று பெருக்கெடுத்தாற் போல்; வேகமாகவும், மிகுதியாகவும், தொடர்ச்சியாகவும்; of water etc., gushing out; of smoke vigorously puffing out. *தோண்டிய இடத்தில் குபுகுபுவென்று தண்ணீர் பெருகியது. அடுப்பிலிருந்து புகை குபுகுபுவென்று வந்தது.*

குபையம் *kubaiyam,* பெ.(n.) செடிவகை (பதார்த்த.366); scabrous ovate uniifoliate tick-trefoil - *Desmodium latifolium* (செ.அக.).

கும்பகர்ணன் *kumba-karṇaṉ,* பெ.(n.) அதிக நேரம் ஆழ்ந்து தூங்குபவன்; one who sleeps soundly for long hours. *அவன் சரியான கும்பகர்ணன், இடி இடித்தாலும் கேட்காது*

மறுவ.குடக்கோ

கும்பகம் *kumbagam,* பெ.(n.) கற்றாழை; aloes. 2. தொட்டிப்பாடாணம்; a prepared arsenic.

[கும்பு - கும்பகம்.]

கும்பக்கிருதம் *kumpa-k-kirutam,* பெ.(n.) நூற்றி பத்து ஆண்டு சென்ற நெய்; clarified butter 110 years old (சா.அக.).

[கும்பம் (பானை) + Skt. கிருதம்.]

கும்பகம்[1] *kumbagam,* பெ.(n.) பூரித்த காற்றை உள்ளே நிறுத்தும் இருக்கை (பிராணாயாம) வகை; retention, holding in of breath, suspension of breath, a part of pirāṇāyāṉam. *"ஆறுதல் கும்பகம்" (திருமந்.568) (செ.அக.).*

[கும்பு - கும்பகம்.]

[Skt. kumbhaka > த. கும்பகம்.]

கும்பகம்[2] *kumbagam,* பெ.(n.) 1. கற்றாழை; aloe genus. 2. சாலாங்க பாடாணம்; a kind of native arsenic. 3. தொட்டி பாடாணம்; another kind of native arsenic. 4. பாதிரிப்பூ; trumpet flower - *Bignonia suovalens.* 5. மருதம்; box myrtle - *Myrica sapida.* 6. இரப்பையைப் பற்றிய ஒரு கண்ணோய்; a disease of the eye lids (சா.அக.).

கும்பகலசம் *kumba-kalaśam,* பெ.(n.) சடங்கு நாட்களில், நூல் சுற்றி மந்திரத்தால் தூய்மை செய்து தவசக் குவியலின் மீது வைக்கும் மந்திரக் குடம்; pot of water used on ceremonial occasions, usually wound round with thread, placed on a heap of grain and purified by mantras (செ.அக.).

[கும்பம் + கலசம்.]

கும்பகவிம்பம் *kumbagavimbam,* பெ.(n.) தொட்டிப் பாடாணம் (யாழ்.அக.); a prepared arsenic (செ.அக.).

கும்பகாம்போதி *kumba-kāmbōdi,* பெ.(n.) பண் வகைகளுள் ஒன்று; a musical mode (செ.அக.).

[கும்பம் + Skt. காம்போதி.]

கும்பகாரன் *kumba-kāraṉ,* பெ.(n.) மட்பாண்டங்கள் செய்வோன் (குயவன்) (திவா.); potter (செ.அக.).

கும்பகோணம் *kumbakōṇam,* பெ.(n.) பழங்காலத்தில் திருக்குடந்தை என வழங்கப்பட்டு, தற்போது தமிழகத்தின் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஓர் ஊர்; kumbakonam, a place of pilgrimage in Thanjavur district in Tamilnadu (செ.அக.).

மறுவ. குடவாயில்

கும்பங்கொட்டு-தல் *kumbaṅ-goṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. துர்க்கைக்கு வேண்டுதல் செலுத்துகை; to perform a ceremoney to Durgāon recovery from small-pox or in fulfilment of a vow. 2. பெருந்தீனி கொடுத்தல்; to feed a glutton (செ.அக.).

[கும்பம் + கொட்டு-தல்.]

கும்பச்சுரை *kumba-c-curai,* பெ.(n.) கொடியில் காய்க்கும் சுரைக்காய் வகைகளுள் ஒன்று; a round gourd (செ.அக.).

[கும்பம் + சுரை.]

கும்பசம்பவன் *kumba-šambavaṉ,* பெ.(n.) 1. அகத்தியன் என்னும் துறவி (குடத்தினின்று பிறந்தவன்); Agattyan, one who ancient priest in the country. *"கும்பசம்பவனுக்குபதேச நிகழ்த்தினானால்" (குற்றா.தல.புராணவா.19).* 2. துரோணன்; Drōṇa (செ.அக.).

[கும்பம் + சம்பவன்.]

கும்பசலம் *kumba-šalam,* பெ.(n.) மந்திரித்த குடத்து (கலச) நீர்; water in the sacred pot, sprinkled on people or sipped by them, believed to possess mystic virtues (செ.அக.).

[கும்பம் + சலம்.]

கும்பசன் *kumbašaṉ,* பெ.(n.) **கும்பசம்பவன்** பார்க்க (பிங்.); see *kumba-šambavaṉ* (செ.அக.).

கும்பஞ்சரி-தல் *kumbañ-cari-,* 3 செ.கு.வி. (v.i.) **கும்பஞ்சாய்** பார்க்க; see *kumbañjāy* (செ.அக.).

[கும்பம் + சரி-தல்.]

கும்பஞ்சாய்-தல் *kumbañ-cāy-,* செ.கு.வி. (v.i.) இறப்பின் போது தலை சாய்ந்து விழுதல்; to droop, as the head just at the point of death (செ.அக.).

[கும்பம் + சாய்-தல்.]

கும்பஞ்சான் *kumbañcāṉ,* பெ.(n.) கொடி வகை; Indian jalap - *Ipomaea turpethum* (செ.அக.).

கும்பஞ்செய்-தல் *kumbañ-cey,* 1 செ.கு.வி.(v.i.) 1. இறந்தோரைப் புதைக்கும் இடத்தின் மேல் மண்ணைக் குவித்து வைக்கை; to make a mound over a grave. 2. பிணத்தைப் புதைத்தல்; to inter the dead, especially such as have died of cholera (செ.அக.).

[கும்பம் + செய்-.]

கும்பதட்சிணை *kumba-daṭcciṇai,* பெ.(n.) மந்திர குடத்தில் இடும் காசு; coin put into the sacred pot of water (செ.அக.).

[கும்பம் + Skt. தட்சிணை.]

கும்பதீபம் *kumba-dībam,* பெ.(n.) குடவடிவான வழிபாட்டு விளக்கு (பரத. ஒழிபி.42); pot shaped temple lamp used in worship (செ.அக.).

*[கும்பம் + **Skt.** தீபம்.]*

கும்பந்தம் *kumpandam,* பெ.(n.) வெண் கருங்காலி; whitist black wood - *Dyospyros oocarpa* (சா.அக.).

கும்பநிறுத்து-தல் *kumba-niṟuttu-,* 5 செ.கு.வி.(v.i.) மந்திரக்குடம் நிறுவுகை; to set up, with mantras, a pot of water, on ceremonial occasions (செ.அக.).

[கும்பம் + நிறுத்து-தல்.]

கும்பாண்டன் *kumpāṇḍaṉ,* பெ.(n.) **1.** பாணாசுரன் அமைச்சர்களில் ஒருவன்; minister of pāṇāsuraṉ. 2. யசோதையின் தம்பி; brother of yaśōdai.

கும்பப்பிளவை *kumba-p-piḷavai,* பெ.(n.) மேல் முதுகில் தோன்றும் பிளவை; carbuncle on the upper part of the back (செ.அக.).

[கும்பம் + பிளவை.]

கும்பம்போடு-தல் *kumbam-pōḍu-,* செ.கு.வி.(v.i.) **கும்பங்கொட்டு** பார்க்க; see *kumbaṅ-koṭṭu* (செ.அக.).

[கும்பம் + போடு-.]

கும்பமுனி *kumba-muṉi,* பெ.(n.) அகத்திய முனிவர்; sage agaśtiyā, as pitcher-born. *"கும்பமுனி கும்பிடுந் தம்பிரானே" (திருப்பு.57) (செ.அக.).*

[கும்பம் + முனி.]

கும்பமெடு-த்தல் *kumbameḍu-,* 4 செ.கு.வி.(v.i.) சிற்றூர் தேவதைக்காக நீர்ப் பூங்குடம் (கரகம்) எடுக்கை; to carry in procession sacred water pot for a village deity (செ.அக.).

[கும்பம் + எடு-த்தல்.]

கும்பயோனி *kumba-yōṉi,* பெ.(n.) **கும்பசம்பவன்** பார்க்க; see *kumba-śambavaṉ. "கும்பயோனி திருவருள் கூர்ந்து" (உபதேசகா.விபூதி.145) (செ.அக.).*

*[கும்பம் + **Skt.** யோனி.]*

கும்பவத்திரம் *kumba-vattiram,* பெ.(n.) மந்திரக் குடத்திற்குக் கட்டும் புதிய ஆடை; the new cloth tied round the sacred pot of water (செ.அக.).

*[கும்பம் + வத்திரம். **Skt.**வஸ்த்திரம் > த. வத்திரம்.]*

கும்பவிம்பம் *kumba-vimbam,* பெ.(n.) தொட்டி பாடாணம்; a kind of prepared arsenic (சா.அக.).

[கும்பம் + விம்பம்.]

கும்பளம் *kumbaḷam,* பெ.(n.) 1. சாம்பற் பூசணி; ash pumpkin - *Cucurbita indica.* 2. இலைப்பாசி; species of duckweed - *Lemna obeordata.* 3. குமிழ்; kandahar tree. 4. நீர்வெட்டி; shining melon feather foil - *Glochidion zeylanicum* (சா.அக.).

[கும்பம் + கும்பளம்.]

கும்பளமோசு *kumbaḷa-mōśu,* பெ.(n.) ஒரு வகைக் கருவாடு; tunny fish cut and dried, brought from the maldives (செ.அக.).

கும்பளிக்காய் *kumbaḷi-k-kāy,* பெ.(n.) தீவக்குறையில் (தீபகற்பத்தில்) விளையும் பருத்த தேங்காய்; a round big cocoanut imported to india from the islands of Maldives and Nicobars (சா.அக.).

[கும்பளி + காய்.]

கும்பத்தாபனம் *kumba-t-tābaṉam,* பெ.(n.) மந்திரக் குடம் நிறுவுகை; setting up a pot of water for worship (செ.அக.).

*[கும்பம் + **Skt.** தாபனம்.]*

கும்பாபிடேகம் *kumbābiḍēgam,* பெ.(n.) கோவில்களில் நிலைகோள் (பிரதிஷ்டை)

செய்வதற்கும், துப்புரவு (சுத்தி) செய்வதற்கும் உரிய நடப்பு; ceremony of consecration or purification in a temple (செ.அக.).

மறுவ. குடமுழுக்கு

[கும்பம் + Skt.அபிஷேகம்.]

கும்பாலத்தி *kumbālatti,* பெ.(n.) இறைவனுக்கு முன் எடுக்கும் குட விளக்கு; light placed on a pot used in temple worship. *"கும்பாலத்திக்குத் திரி பரிமாறி" (கோயிலொ.66) (செ.அக.).*

[கும்பம் + ஆலத்தி.]

கும்பிட்டுக்கட்டு-தல் *kumbiṭṭu-k-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) தழுவிக் கொள்ளுதல் (யாழ்.அக.); to enfold in a close embrace (செ.அக.).

[கும்பு + இடு- + கட்டு-தல்.]

கும்பிடுசிப்பி *kumbiḍu-šippi,* பெ.(n.) ஒரு வகைக் கடற் சிப்பி; a well known bi-valve shell fish or mollusc living in the sea.

[கும்பிடு + சிப்பி.]

கும்பிநசம் *kumbi-našam,* பெ.(n.) பாம்பு (பிங்.); snake (செ.அக.).

கும்பினி *kumbiṉi,* பெ.(n.) **கும்பினியார்** பார்க்க; see *kumbiṉiyār* (செ.அக.).

[E.Company > த. கும்பினி.]

கும்பீடு *kumbīḍu,* பெ.(n.) மதிப்புரவின் (மரியாதை செலுத்தும்) பொருட்டு கைகுவித்து வணங்குதல்; to join hands in worship; to make obeisance with the hands joined and raised (செ.அக.).

கும்போதரன் *kumbōdaraṉ,* பெ.(n.) சிவகணத்தவன்; celestial host of Šivā (அபி.சிந்.).

கும்போவச்சம் *kumbō-vaccam,* பெ.(n.) குடசபாலை பார்க்க; see *kuḍaša-pālai* (சா.அக.).

கும்மிடிசட்டிவேளாளர் *kummiḍi-šaṭṭi-vēḷāḷar,* பெ.(n.) வேளாளரின் இறப்பின் போது நெருப்புச் சட்டி கொண்டு உடன் செல்வோர்; people of vellalar who carries the fire pot, and accompany with the corpse in the funeral procession.

குமட்டல் *kumaṭṭal,* பெ.(n.) வாந்தியெடுக்கும் உணர்வாக வயிற்றைப் புரட்டல்; nausea; retching. *சாப்பாட்டைப் பார்த்தாலே குமட்டுகிறது. குமட்டலை ஏற்படுத்தும் நாற்றம்.*

[குமட்டு + அல்.]

குமதி[1] *kumadi,* பெ.(n.) அறிவு கெட்டவன், அறிவில்லாதவன்; a perverse intellect, evil-minded person. *"குமதியாயினும்... பேர்சுமதியென்பரால்" (சேதுபு.கலிசம்பு.18) (செ.அக.).*

குமதி[2] *kumadi,* பெ.(n.) இந்திரனால் கொல்லப்பட்ட ஓர் அரக்கி; a giant, who was killed by Indira (அபி.சிந்.).

குமர்ப்பிள்ளை *kumar-p-piḷḷai,* பெ.(n.) குமரி; virgin (சா.அக.).

குமரகம் *kumaragam,* பெ.(n.) மாவிலங்கை வகை; a species of garlic-pear - *Crataeva religiosa-nurvala* (செ.அக.).

குமரகுருதாசசுவாமிகள் *kumara-kurutāša-šwamigaḷ,* பெ.(n.) யாழ்ப்பாணத்தைச் சார்ந்த ஒரு துறவி; a hermit who belonged to yāḻppāṇam.

இவரைப் பாம்பன் சுவாமிகள் என்பர். சிவனியத்தில் வல்லவர். நாலாயிரப் பிரபந்த விசாரம், சைவசமய சரபம் எனும் நூல் இயற்றியவர் (அபி.சிந்.).

குமரன்மாலிகம் *kumaraṉ-māligam,* பெ.(n.) பிராய் முட்டி; rose-coloured sticky mallow - *Pavonia zeylanica* (சா.அக.).

குமரனுடமனைவிமூலம் *kumaranuda-manaivi-mūlam,* பெ.(n.) வள்ளிக் கிழங்கு; sweet potato creeper - *Ipomaea batatus* (சா.அக.).

குமரனோசிகம் *kumaranōšigam,* பெ.(n.) பிள்ளை மருது; flowering murdah - *Terminalia paniculata* (சா.அக.).

குமரிக்காவிகம் *kumari-k-kāvikam,* பெ.(n.) சிவப்புக் கற்றாழை; red aloe (சா.அக.).

[குமரி + காவிகம்.]

குமரிருட்டு *kumariruttu,* பெ.(n.) வைகறைக்கு முன் தோன்றும் இருள்; darkness before dawn (செ.அக.).

மறுவ. விடியல்

[குமரி + இருட்டு.]

குமராகு-தல் *kumarāgu-,* 5 செ.கு.வி.(v.i.) பெண் பருவமடைதல்; of girls come of age; attain puberty. *மகள் குமராகி விட்டாள்.*

மறுவ. சமைதல்

[குமர் + ஆகு-தல்.]

குமாரசரசுவதி *kumāra-šarašuvati,* பெ.(n.) ஒரு புலவர்; a poet (சா.அக.).

இவர் விசயநகரத்து அரசர் கிருட்டிணதேவராயர் காலத்தவராக இருக்கலாம். அவரைப் புகழ்ந்து இப்புலவர் பாடியுள்ளார் (அபி.சிந்.).

குமாரதாரிகை *kumāra-tārigai,* பெ.(n.) திருவேங்கடத்தில் உள்ள தூய நீர்த்துறை (தீர்த்தம்); sacred bath-ghate in tiruvēngadam(அபி.சிந்.).

குமாரதேவர் *kumāra-tēvar,* பெ.(n.) கன்னட நாட்டு மன்னன்; king who ruled kannadanādu.

[குமார + தேவர்.]

குமாரபிரமசாரி *kumāra-piramašāri,* பெ.(n.) குமரக் கடவுள் சினத்துடன் தங்கிய கிரவுஞ்ச(கிரி) மலை; kiravuñjagiri mountain, which God Kumaranstayed with anger.

குமாரவனம் *kumāra-vanam,* பெ.(n.) மலைமகளுக்கென்று உள்ள காடு; the district forest of Malai-magal.

குமரு *kumaru,* பெ.(n.) இளம்பெண்; குமரி; unmarried young girl. *குமருகளாகச் சேர்ந்து கிணற்றில் தண்ணீர் எடுக்கச் செல்கிறார்கள்*

[குமரி – குமரு.]

குமார்க்கம் *kumārkkam,* பெ.(n.) தீ நெறி; wrong course, evil ways (செ.அக.).

குமாரபோசனம் *kumāra-bōšanam,* பெ.(n.) பூணூல் அணிவிக்கும் சடங்கில் காயத்திரி நல்லுரை (உபதேசம்) செய்வதற்கு முன் அச்சடங்கு பெறும் மாணவனுக்கு, உடனொத்த சில மணமாகாதவர் (பிரம்மசாரி)களோடு அளிக்கும் உணவு; feast given to a Brahman boy along with some bachelors just before his initiation to Brahmanhood (செ.அக.).

குமாரராசா *kumāra-rāšā,* பெ.(n.) கோமகன், இளவரசன், அரசகுமாரன் (இராசபுத்திரன்); prince (செ.அக.).

குமாரவர்க்கம் *kumāra-varkkam,* பெ.(n.) குலம்; lineage, progeny (செ.அக.).

குமிட்டிக்காளான் *kumitti-k-kālān,* பெ.(n.) மரக்காளான்; mushrooms growing on trees (சா.அக.).

[குமிட்டி + காளான்.]

குமிட்டிக்கீரை *kumitti-k-kirai,* பெ.(n.) ஒரு வகைக் கறிக்கீரை; a kind of vegetable green - *Celosia nodiflora* (சா.அக.).

[குமிட்டி + கீரை.]

குமிதிகம் *kumidigam,* பெ.(n.) மரவகை; teak - *Tectona grandis* (செ.அக.).

குமிழிஞாலார்நப்பசலையார் *kumiḻi-ñāḻār-nappaśalaiyār,* பெ.(n.) கடைச் சங்கப் பெண்பால் புலவர்; a poetess who belonged to the last saṅgam era.

[குமிழி + ஞாழல் + ஆர் + நட்பசலை + ஆர்.]

குமிழியிடு-தல் *kumiḻi-y-iḍu-,* 18 செ.கு.வி. (v.i.) 1. நீரில் குமிழி தோன்றுதல்; bubble. *பாறைகளுக்கு இடையில் நீர் குமிழியிட்டுச் சுழன்று கொண்டிருந்தது.* 2. ஒருவரிடத்தில் மகிழ்ச்சி, உற்சாகம் முதலியன பெருகுதல்; happiness, enthusiasm, etc., bubble up. *எனக்கும் சொற்களில் குமிழியிட்டது.*

[குமிழ் + இடு-தல்.]

குமுசியார் *kumuśiyār,* பெ.(n.) பிரெஞ்சு ஆட்சியின் காவல்துறைத் தலைவர்; french commissioner of police (செ.அக.).

குமுதசகாயன் *kumuda-śagāyan,* பெ.(n.) **குமுதநாதன்** பார்க்க (பிங்.); see *kumuda-nādan* (செ.அக.).

குமுதநாதன் *kumuda-nādan,* பெ.(n.) அல்லிப் பூவுக்குத் தலைவனாகக் கருதப்படும் நிலவு; moon, Lord of the water-lily. *"காமக்கருத்தாக் குமுதநாதன் கங்குல் வரக்கண்டும்" (தனிப்பா.i, 334, 40) (செ.அக.).*

[குமுதம் + நாதன்.]

குமுதப்பிரியா *kumuda-p-piriya,* பெ.(n.) பண் வகைகளுள் ஒன்று; a musical mode (செ.அக.).

[குமுதம் + பிரியா.]

குமுதபாந்தவம் *kumuda-pāndavam,* பெ.(n.) கற்பூரம்; camphor (சா.அக.).

குமுதர் *kumudar,* பெ.(n.) மதுர கவியாழ் வாராகப் பிறந்தவர் (அவதரித்தவர்); one who incarnation to Madurakavi (அபி.சிந்.).

குமுதவதி *kumudavati,* பெ.(n.) 1. விமரிசன் எனும் வேட்டுவ அரசனின் மனைவி; wife of a hunter's king vimariśaṉ. 2. இராம பிரானின் மகனான குசனை மணந்த நாக கன்னிகை; wife of a Rāma's son kuśaṉ. 3. விந்தியமலையில் தோன்றி ஓடும் ஆறு; a river, origin from vindiya-malai.

குமுதவல்லி *kumuda-valli,* பெ.(n.) திருமங்கையாழ்வாரின் மனைவி; wife of Tirumaṅgai-y-āḻvār (அபி.சிந்.).

குமுணன் *kumuṇaṉ,* பெ.(n.) குமணன் என்னும் மன்னன்; king kumaṇaṉ.

தொண்டை நாட்டைச் சேர்ந்த இம்மன்னன் பெரிய கொடையாளி. இவன் தன் தம்பி அமணனுக்கு நாட்டை ஆளக் கொடுத்து விட்டு காட்டில் வேடுவனைப் போல் வாழ்ந்து வந்தான். அப்பொழுது ஒப்பில்லாமணி எனும் புலவர் குமணனைப் பாடிப் பரிசில் பெறச் சென்று அவனில்லாமையால் வருந்தினார். இவன் தம்பி தன் தமயனின் தலை கொணர்வோர்க்கு ஆயிரம்பொன் தருவதாக அறிவித்திருந்தான். இப்புலவர் காட்டில் குமணனைக் கண்டு தன் நிலை கூற, குமணனும் தன் தலையைத் தரமுன் வந்தான். புலவர் தடுத்து அமணனிடம் பேசி மீண்டும் அரச பதவியைக் குமணனுக்கே அளித்தார் (அபி.சிந்.).

குமுறவெடி-த்தல் *kumuṟa-veḍi-,* 4 செ.கு.வி.(v.i.) அதிரும்படி இடித்தல்; pounding forcibly in a mortar (சா.அக.).

குமைச்சல் *kumaiccal,* பெ.(n.) மனப் புழுக்கம்; of emotions state of being pent-up.

[குமை - குமைச்சல்]

குமைந்துபோ-தல் *kumaindu-pō,* 8 செ.கு.வி.(v.i.) 1. புழுக்கமாய் இருத்தல்; to be close as the air; sultry. 2. குழையும்படி வேகுதல்; being over; boiled as to become slimy. 3. சோர்வடைதல்; getting fainted (சா.அக.).

[குமைந்து + போ-தல்.]

குய்யபீசம் *kuyya-pišam,* பெ.(n.) கற்பூரப் புல்; lemon grass - *Andropogon schoenanthes* (சா.அக.).

குயபீசகம் *kuyapišagam,* பெ.(n.) எட்டிமரம்; nux-vomica tree (சா.அக.).

குய்யோமுறையோவென்று *kuyyō-muraiyō-v-enru,* வி.எ.(adv.) தன்னளவில் அந்நயம் (அநியாயம்) என்று நினைப்பதை அல்லது ஏதத்தை (ஆபத்தை) அறிந்து உரத்த குரலில் முறையிடுதல்; complaining loudly about what one thinks is unjust; aising alarm in danger. *உள்ளதைச் சொல்கிறாயா இல்லையா? என்று கேட்டுக் கம்பை ஓங்கியதும் பையன் குய்யோ முறையோவென்று கத்தத்தொடங்கி விட்டான்.*

[குய்யோ + முறையோ + என்று.]

குயிலாலுவம் *kuyi-l-āluvam,* பெ.(n.) இமயமலைக்கு அருகில் உள்ள சிவத்தலம்; sacred place near by Himālāyā (அபி.சிந்.).

[குயில் +ஆலுவம்.]

குயவன்கைவழித்தமண் *kuyavan-kai-valitta-man,* பெ.(n.) மிகவும் மெல்லிய களிமண்; a very fine clay sticking to the hand of a potter at work (சா.அக.).

[குயவன் + கை + வழித்த + மண்.]

குயவன்வீட்டுமண் *kuyavan-vittu-man,* பெ.(n.) குயவன் களிமண்; potter's clay (சா.அக.).

[குயவன் + வீட்டு + மண்.]

குயில்மூக்கெலும்பு *kuyil-mūkkelumbu,* பெ.(n.) முதுகின் அடிப் பகுதி எலும்பு; coxcyx bone, which is situated in the lower extremity of the back bone. it is so called from its resemblance to koel's back (சா.அக.).

[குயில் + மூக்கு + எலும்பு.]

குயிலின் மூக்கைப் போன்றுள்ளதால் இப்பெயர் பெற்றது.

குயிலெனமரம் *kuyilena-maram,* பெ.(n.) கடம்ப மரம்; common cadamba tree.

[குயில் + என + மரம்.]

இம்மரம் நிழலுக்காகப் பயிரிடப்படும். இதன் பட்டையைக் காய்ச்சலுக்கும், வலிமைக்கும் பயன்படுத்துவதுண்டு. சீனத்தில் இதைக் குளிர்க் காய்ச்சல், காற்றுப் பிடிப்பு, குண்டிக்காய் வலி முதலிய நோய்களுக்குப் பயன்படுத்துவார்கள் (சா.அக.).

குயிற்கண்டிகை *kuyir-kandigai,* பெ.(n.) பாற்குறண்டி; milk corandy - *Lepidagathis pungens* (சா.அக.).

குரக்கு *kurakku,* பெ.எ.(adj.) 1. குரங்கு; monkey. 2. குரங்கினுடைய; of or belonging to a monkey (சா.அக.).

குரக்குகை *kurakkugai,* பெ.(n.) குரக்கு நோய் (வாதம்) பிடித்த கை; arms affected by cramps due to weakness, cold, etc. *"குரக்குக் கைகொடு கூழ் துழாவி" (ஈடு, 9, 2, 4) (செ.அக.).*

குரக்குபிடி-த்தல் *kurakku-pidi-,* 4 செ.கு.வி.(v.i.) கை, கால் முதலியவற்றில் எதிர்பாராமல் குத்தி இழுப்பது போன்ற தசை வலி உண்டாகுதல்; suffer muscle pull or sprain; suffer cramps. *காலில் குரக்கு பிடித்து விட்டது.*

[குரக்கு + பிடி-த்தல்.]

குரக்குமுகம் *kurakku-mugam,* பெ.(n.) குரங்கு முகம்; monkey-face (சா.அக.).

[குரக்கு + முகம்.]

குரகச்சின்னம் *kuraga-c-cinnam,* பெ.(n.) திலக மரம்; country cinnamon - *Cinnamomum iners* (சா.அக.).

குரங்கிரத்தம் *kurangirattam,* பெ.(n.) 1. குரங்கினுடைய அரத்தம்; monkey's blood. 2. பூவந்தி மரம்; soapnut tree - *Sapindus emarginata* (சா.அக.).

[குரங்கு + அரத்தம் - குரக்கரத்தம் → குரக்கிரத்தம்.]

குரங்குகடியன் *kurangu-kadiyan,* பெ.(n.) குரங்கு அல்லது அணிலால் முனையில் தீண்டப்பட்டுப் பழுதுற்ற தேங்காய்; a coconut injured at the top, as by a monkey or squirrel (செ.அக.).

[குரங்கு + கடியன்.]

குரங்குகா *kurangukā,* பெ.(n.) முசுமுசுக்கை இலை; leaf of bristle - *Mukia scabrella alias Bryonia scabra* (சா.அக.).

[குரங்கு + உகா.]

குரங்குகை *kurangu-kai,* பெ.(n.) மெலிந்த கை; the wasting of the muscles of the hand - *Ape-hand* (சா.அக.).

[குரங்கு + கை.]

குரங்குடாப்பு *kurangu-ṭāppu,* பெ.(n.) கதவு, பலகணி மேல் மழை, வெயில்களைத் தடுக்க அமைக்கும் மறைப்பு; projection over a window or door for protection from sun and rain (செ.அக.).

[குரங்கு + E. Top. டாப்பு.]

குரங்குமஞ்சணாத்தி *kurangu-mañjanātti,* பெ.(n.) ஒரு வகை நுணா; a kind of dyeing mulberry (சா.அக.).

[குரங்கு + மஞ்சணாத்தி.]



குரங்குமஞ்சள்விதை *kurangu-mañjal-vidai,* பெ.(n.) சாப்பிர விதை; butter seed; monkey turmeric tree-seed.

[குரங்கு + மஞ்சள் + விதை.]

இதில் இருந்து சாயம் இறக்கப்படும். இவ்விதை வெள்ளை நோய்க்குச் சிறந்த மருந்து. காய்ச்சலுக்கும் மருந்தாகக் கொடுக்கலாம் (சா.அக.).

குரங்குமார்க்கம் *kurangu-mārkkam,* பெ.(n.) குதிரை நடையுள் ஒன்றான வானரகதி; a particular pace of the horse. *"கூறரு மல்லமார்க்கமயின்மார்க்கங் குரங்குமார்க்கம்" (திருவாலவா.28, 58) (செ.அக.).*

[குரங்கு + மார்க்கம்.]

குரங்குமுசு *kurangu-mušu,* பெ.(n.) முசுமுசுக்கை; leaf of bristle bryony - *Mukia scabrella alias* (சா.அக.).

[குரங்கு + முசு.]

குரண்டநாசினி *kuranda-nāšini,* பெ.(n.) பருத்திச் செடி; country cotton plant - *Gossypium herbaceum* (சா.அக.).

குரந்திகம் *kurandigam,* பெ.(n.) செந்நாயுருவி; red Indian burr - *Achyranthes aspera* (சா.அக.).

குரநாசம் *kura-nāšam,* பெ.(n.) வெங்காயம்; onion (சா.அக.).

குரபகம் *kurabagam,* பெ.(n.) சிகப்பு வாடா மல்லிகை; red amaranth (சா.அக.).

குரபம் *kurabam,* பெ.(n.) 1. எள்; seasamum. 2. ஒரு பூடு; a kind of barleria (சா.அக.).

குரம்பு *kurambu,* பெ.(n.) 1. நீரைத் தேக்கி வைக்கும் அணைக்கட்டு; artificial bank, dam, causeway, bund. 2. ஆற்றிலிருந்து பாசனக் கால்வாய்களுக்கு நீரைத் திருப்பும் அணை; dam of sand, brushwood, loose stones, etc., running out from the banks of a river diagonally for a distance upstream, to turn the water into an irrigation channel. 3. வரப்பு; ridge in a rice field or garden. *"மாநீர்க் குரம்பெலாம் செம்பொன்" (கம்பரா.நாட்டுப்.2).* 4. எல்லை; boundary, limit. *"குரம்பெழுந்து குற்றங் கொண்டேறார்" (நாலடி.153) (செ.அக.).*

[குரை – குரம்பு.]

குரமேனிகம் *kura-mēṉigam,* பெ.(n.) கோழிக்காற் பூடு; fowl's leg plant (சா.அக.).

குரல்காட்டு–தல் *kural-kāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. அழைத்தற் பொருட்டுக் குறிப்பொலி காட்டுதல்; to call a person by hemming and hawking. 2. பறவையொலித்தல்; to crow, as a cock; to screech, as an owl. 3. பெருஞ்சத்தமிடுதல்; to cry aloud, whoop, roar, bellow. 4. பதில் தரும் முறையில் குரல் எழுப்புதல்; கூப்பிடுதல்; respond to a call; call. *சீக்கிரம் வந்து விடுகிறேன் என்று குரல் கொடுத்துக் கொண்டே ஓடினார். நீங்கள் ஒரு குரல் கொடுத்தால் போதும்மூ நான் வந்து விடுகிறேன்.* 5. எதிர்த்துக் கருத்து தெரிவித்தல்; raise one's voice against something; voice one's protest. *அந்நயத் (நியாயத்)தை எதிர்த்துக் குரல் கொடுக்க ஒரு சிலரே முன்வருவார்கள்.* 6. திரைப்படத்தில் தம் சொந்தக் குரலில் பேசாத நடிகர்களுக்குப் பிறர் தம் குரல் தந்து பேசுதல்; in films dub in voice. *பலருக்கும் இவரே குரல் கொடுக்கிறார்.*

[குரல் + கொடு–த்தல்.]

குரல்வளம் *kural-vaḷam,* பெ.(n.) பலவகை ஏற்ற இறக்கங்களை எளிதாகவும், இனிமையாகவும் காட்டக்கூடிய குரலின் செழுமை; range of voice; voice culture. *அவருடைய குரல்வளம் வியக்கத்தக்கது.*

[குரல் + வளம்.]

குரல்வாக்கு *kural-vākku,* பெ.(n.) மன்றத்தில் எதிராடல் (விவாதம்) முடிந்ததும் தீர்மானிக்கப்பட வேண்டியதை ஆதரித்து அல்லது எதிர்த்து உறுப்பினர்கள் வாய்மொழியாகத் தெரிவிக்கும் வாக்கு; voting by saying `yes' or `no'; voice vote.

[குரல் + வாக்கு.]

குரல்வளைத்தாபனம் *kuralvaḷai-t-tābaṉam,* பெ.(n.) குரல் வளையி (கண்டத்தி)ல் உண்டாகும் ஒரு வகை நோய் (இங்.வை.231); laryngitis (செ.அக.).

*[குரள்வளை + **Skt.**தாபனம்.]*

குரலெழுப்பு–தல் *kural-eḻuppu-,* 5 செ.கு.வி. (v.i.) எதிர்த்துக் கருத்துத் தெரிவித்தல்; raise one's voice against something; voice one's protest. *அநீதியை எதிர்த்துக் குரல் கொடுக்க ஒரு சிலரே முன்வந்தார்கள்.*

[குரல் + எழுப்பு–தல்.]

குரலோசை *kural-ōšai,* பெ.(n.) குரலின் ஓசை; vocal sound; voice (சா.அக.).

[குரல் + ஓசை.]

குரவரம் *kuravaram,* பெ.(n.) நச்சறுப்பான் கொடி; Indian ipecacuanha - *Tylophora asthmatica* (செ.அக.).

குரவளை *kuravaḷai*, பெ.(n.) 1. ஓசை பிறப்பதற்காக மூச்சுக் குழலின் மேல் அந்தத்தோடு தொடங்கி, கழுத்தின் முன் மேற்பகுதியில் மூச்சுக் குழலுக்கும், அடி நாவுக்கும் இடையில் புடைத்திருக்கும் குழாய் பெட்டியைப் போன்ற உறுப்பு; a short tubular box, opening above idnto the pharynx and below into the top of the trachea, with vocal chords for production of sound - *Larynx*. 2. மிடறு; trachea (சா.அக.).

மறுவ. குரல்வளை

[குரல் + வளை.]

குரவிக்கோணிகம் *kuravi-k-kōṇigam*, பெ.(n.) புளித்தகரை; a sour ringworm plant - *Cassia tora* (சா.அக.).

[குரவி + கோணிகம்.]

குராசானி *kurāšāṉi*, பெ.(n.) **குராசானியோமம்** பார்க்க (மூ.அ.); see *kurāšāṉi-yōgam* (செ.அக.).

குராசானியோமப்பத்திரி *kurāšāṉi-y-ōma-p-pattiri*, பெ.(n.) குராசானி இலை; the leaf of the khorassan omum plant (சா.அக.).

குராசானியோமம் *kurāšāṉi-y-ōmam*, பெ.(n.) குராசானி என்னும் ஒமமுண்டாகும் ஒருவகைப் பூடு; black henbane - *Hyoscyamus niger* (செ.அக.).

குராமசனம் *kurāmašaṉam*, பெ.(n.) நில வேம்பு; ground neem - *Justicia Paniculata* (சா.அக.).

குரிச்சி *kuricci*, பெ.(n.) நாற்காலி; chair (செ.அக.).

குரிசு *kurišu*, பெ.(n.) **குருசு** பார்க்க; see *kurušu* (செ.அக.).

குருகன்வெட்டு *kurugaṉ-veṭṭu*, பெ.(n.) பழைய காசு வகை (பணவிடு.135); an ancient coin (செ.அக.).

குருக்கினாதம் *kurukkiṉādam*, பெ.(n.) சங்கிலை; four-spined monetia - *Azima tetracantha* (சா.அக.).

குங்குமபாடாணம் *kuṅguma-pāḍāṇam*, பெ.(n.) பிறவி நஞ்சு வகை (மூ.அ.); a prepared arsenic, one of 32 (செ.அக.).

[குங்குமம் + பாடாணம்.]

குசத்தலி *kušattali*, பெ.(n.) இரேவதன் என்னும் ஞாயிறு (சூரிய) குல மன்னன் ஆண்ட நாடு; the city where ruled by king *Irevātaṉ* (செ.அக.).

குசேசியம் *kušēšiyam*, பெ.(n.) செந்தும்பை; red leucas flower (சா.அக.).

குஞ்சிகாரர் *kuñjikārar*, பெ.(n.) சேலம் மாவட்டத்திலுள்ள வேளாண் குடியினர் (உழுது பயிரிடும் இனத்தவர்); the peasants in Šēlam district (அபி.சிந்.).

குட்டவ்வை *kuṭṭavvai*, பெ.(n.) ஒரு பெண் சிவப்பற்றாளர்; a Siva Diety.

குடக்கா *kuḍakkā*, பெ.(n.) கோபுரப்பூடு; tower plant (சா.அக.).

குடலண்டவிருத்தி *kuḍalaṇḍa-virutti*, பெ.(n.) **குடல்வாயு** பார்க்க (பைஷஜ); see *kuḍal-vāyu* (செ.அக.).

குடவாடிகம் *kuḍavāḍigam*, பெ.(n.) சடாமாஞ்சில்; valerian root - *Valeriana jatamansi* (சா.அக.).

[குட + வாடிகம்.]

குடாக்கு *kuḍākku*, பெ.(n.) 1. புகைப்பதற்குப் பயன்படும் குழாய்; hookah. 2. புகையிலை, பாகு, பழம், சந்தனம் இவற்றைச் சேர்த்துத் திரட்டிய குழாய் மருந்து; ball made of tobacco, treacle, plantain and sandal, used in a hookah (செ.அக.).



[Mhr. guḍākū > த. குடாக்கு. U.gurākū > த.குடாக்கு.]

குடீசகம் *kuḍīšagam,* பெ.(n.) நான்கு வகையான துறவுகளுள் மிக எளிதானதும், தன் புதல்வர் அல்லது சுற்றத்தாரால் உண்டி முதலியன பெற்று இலை வேய்ந்த குடிலில் வசித்தற்குரியதுமான துறவு (சன்னியாசம்); a kind of asceticism, the lowest of four orders of Šaṉṉiyāšam, which permits the ascetic to get his meals through his sons or relations, though living separately in a hermitage. *"பட்டதுயர் கெடுங் குடீசகம்" (கைவல்.சந்தே.158) (செ.அக.).*

[Skt.kuṭīcaka > த.குடீசகம்.]

குடீசகன் *kuḍīšagaṉ,* பெ.(n.) நான்கு வகையானத் துறவிகளுள் கடைசியானவனாய்த் தன் புதல்வர் அல்லது சுற்றத்தாரால் உண்டி முதலியன பெற்று இலை வேய்ந்த குடிலில் வசிக்குந் துறவி; an ascetic who lives in a hermitage and is fed by his sons or relations, the lowest of four kinds of Šaṉṉiyāši (செ.அக.).

குண்டாலரோகம் *kuṇḍāla-rōgam,* பெ.(n.) தலையிலுண்டாகும் செவ்வாப்புக் கட்டி (பைஷஜ.); tumour in the head (செ.அக.).

[குண்டு→குண்டாலம் + Skt. ரோகம்.]

குதாதோசம் *kudā-tōšam,* பெ.(n.) சித்தா மல்லி; short-tubed arabian jasmine - *Jasminum sambuc* (சா.அக.).

குதானத்திகம் *kudāṉattigam,* பெ.(n.) சம்பங்கி; champauk - *Michelia Champaca* (சா.அக.).

குநர்ச்சகம் *kunarccakam,* பெ.(n.) சிறு காஞ்சொறி; small leaved climbing nettle-mercury - *Tragia involucrata* (சா.அக.).

குபையாதீதம் *kupai-y-ātītam,* பெ.(n.) கோரைப்புல்; sedge grass (சா.அக.).

குபோதகம் *kupōtagam,* பெ.(n.) மஞ்சள் செவ்வந்தி; chinese flower or Indian Chamomile - *Chrysanthenum Coronarium* (சா.அக.).

குபோதகி *kupōtagi,* பெ.(n.) பசலை; Malabar night shade - *Baselia Cordifolia* (சா.அக.).

கும்பளா *kumbaḷā,* பெ.(n.) மீன் வகை; black rock-cod, silvery-grey, attaining 30 in. in length - *Sparus berda* (செ.அக.).



கும்பளிமௌலி *kumbaḷi-mauli,* பெ.(n.) மலைச் சூலி; a kind of cedar tree - *Cedrela toona* (சா.அக.).

குமுதகி *kumutagi,* பெ.(n.) வெள்ளாம்பல்; white Indian water lily - *Nymphaea Pubescens* (சா.அக.).

[குமுதம் – குமுதகி.]

குர்ணாப்பட்டை *kurṇā-p-paṭṭai,* பெ.(n.) ஒளியுள்ள ஒரு வகை மெல்லிய வண்ணத்தகடு (விறலிவிடு.530); foliated tinsel (செ.அக.).

[குருணை + பட்டை.]

குருக்கேத்திரம் *kurukkēttiram,* பெ.(n.) 1. **குருசேத்திரம்** பார்க்க; see *kuru sēttiram. "குளியீருளங் குருக்கேத்திரம் கோதாவிரி குமரி" (தேவா.1154, 6).* 2. காற்று மண்டலத்திலுள்ள குய்யதராட்டகபுவனத்தில் ஒன்று (சி.போ.பா.2, 3); a world in the aerial regions, one of *kuyyaḍa-rāṭṭaga-buvaṉam* (செ.அக.).

குருகந்தகம் *kuru-kandagam,* பெ.(n.) மயில்; pea-cock, *Pavo cristatus* (சா.அக.).

குருகுதி *kuru-kuti,* பெ.(n.) பசு முருங்கை; tender drum-stick or moring (சா.அக.).

குருகுலக்கல்வி *kurukula-k-kalvi,* பெ.(n.) குருவின் இல்லத்தைக் கல்விக்கூடமாகவும், வாழ்விடமாகவும் கொண்டு பெறும் கல்வி; formerly learning by living with the teacher. *இன்றும் சில இடங்களில் குருகுலக் கல்வி முறை வழக்கத்தில் இருக்கிறது*

[குருகுலம் + கல்வி.]

குருங்கடியாள் *kuruṅgaḍiyāḷ,* பெ.(n.) தாளகம்; orpiment (சா.அக.).

குருச்சிகம் *kuruccigam,* பெ.(n.) உறைக்குற்றிய பால்; coagulated milk (சா.அக.).

குருசந்திரயோகம் *kuru-šandira-yōgam,* பெ.(n.) வியாழனும், நிலவும் (சந்திரனும்) ஓர் ஒரையில் (இராசியிற்) கூடுவது (சங்.அக.); conjunction of jupiter and moon (செ.அக.).

[குரு + சந்திரயோகம்.]

குருசம்பாவனை *kuru-šambāvaṉai,* பெ.(n.) ஆசிரியருக்கு மாணவர்கள் செய்யும் மரியாதை; honour or present offered to the preceptor (செ.அக.).

[குரு + சம்பாவனை.]

குருசாங்கலம் *kuru-šāṅgalam,* பெ.(n.) பாஞ்சால நாட்டிற்குத் தெற்கில் உள்ள நாடு; the city in South *Pāñjālā.*

குருசேடம் *kuru-šēḍam,* பெ.(n.) ஆசிரியர் குடித்த பின் கலத்தில் எஞ்சிய தேவுணா (பிரசாதம்); leavings of a guru's food (செ.அக.).

குருசேத்திரம் *kuru-šēttiram,* பெ.(n.) பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கு மிடையே போர் நடந்த தில்லி நகரின் அருகிலுள்ள நிலம்; a plain near Delhi, scene of the great battle between the Kauravāš and Pāṇḍavāšmentioned in the Mahābārada (செ.அக.).

[குரு + சேத்திரம்.]

குருஞ்சேபகம் *kuruñ-cēbagam,* பெ.(n.) மலை எருக்கு; mountain madar plant (சா.அக.).

குருட்டடியாக *kuruṭṭaḍiyāga,* வி.எ.(adv.) **குருட்டாம்போக்காக** பார்க்க; see *kuruṭṭām-bōkkāga.*

குருட்டடியாய் *kuruṭṭaḍiyāy,* வி.அ.(adv.) தற்செயலாய்; by chance (சா.அக.).

[குருட்டு + அடியாய்.]

குருட்டாம்போக்காக *kuruṭṭām-pōkkāga,* வி.அ.(adv.) **குருட்டாம்போக்கான** பார்க்க; see *kuruṭṭāmpōkkāṉa. "குருட்டாம் போக்காகச் சொன்ன பதில் சரியாக இருந்தது"*

குருட்டாம்போக்கான *kuruṭṭām-pōkkāṉa,* பெ.அ.(adj.) முன் எண்ணம் (யோசனை) இல்லாமல், முன் எண்ணம் இல்லாத; blindly, blind. *குருட்டாம் போக்கான முடிவு.*

[குருட்டாம் + போக்கான.]

குருட்டாம்போக்கில் *kuruṭṭām-pōkkil,* பெ.(n.) **குருட்டாம்போக்கான** பார்க்க; see *kuruṭṭām-pōkkāṉa. 'குருட்டாம்போக்கில் நான் எடுத்த சீட்டுக்குப் பரிசு விழுந்தது'*

குருட்டாம்போக்கு *kuruṭṭām-pōkku,* வி.அ./ பெ.அ. (adv./adj.) **குருட்டாம் போக்கான** பார்க்க; see *kuruṭṭāmpōkkāṉa.*

குருட்டுவாக்கில் *kuruṭṭu-vākkil,* து.வி. (adv.) தற்செயலாய்; by chance (செ.அக.).

[குருட்டு + வாக்கில்.]

குருடுபற்று-தல் *kuruḍu-paṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) எண்ணெய் இல்லாமல் விளக்குத் திரி கருகி ஒளி குறைகை (இலங்.); of lamps become dim due to the burning of the wick for want of oil. *விளக்கு குருடு பற்றி மங்கியது.*

[குருடு + பற்று-தல்.]

குருத்துஞாயிறு *kuruttu-ñāyiṟu,* பெ.(n.) குருத்தோலைகளுடன் இயேசுவின் புகழ் பாடிக் கொண்டாடப்படும் திருவிழா; ஈஸ்டர் திருவிழாவுக்கு முந்திய ஞாயிற்றுக் கிழமை; palm sunday

மறுவ. குருத்தோலைஞாயிறு

[குருத்து + ஞாயிறு.]

குருத்துரோகம் *kuru-t-turōgam,* பெ.(n.) ஆசிரியனுக்கு இரண்டகம் செய்கை; treachery towards one's Guru (செ.அக.).

[குரு + Skt. துரோகம்.]

குருத்தெலும்பு *kuruttelumbu,* பெ.(n.) காதுமடல், மூக்கின் முன்பகுதி முதலிய வற்றில் இருப்பது போன்று, மடங்கக் கூடிய மென்மையான எலும்பு; cartilage. *ஒவ்வொரு மூட்டிலும் குருத்தெலும்பு இருக்கும்*

[குருத்து + எலும்பு.]

குருதிநீர் *kuruti-nīr,* பெ.(n.) அரத்த நீர்; blood-plasma - *Liquro sanguinia* (சா.அக.).

[குருதி + நீர்.]

குருநாடு *kuru-nāḍu,* பெ.(n.) அத்தினாபுரத்தில் அடங்கிய ஒரு நாடு; a city in Attinā-puram.

குருபத்திரகம் *kuru-pattiragam,* பெ.(n.) வெள்ளீயம்; tin (சா.அக.).

[குரு + பத்திரகம்.]

குருபதாருசம் *kurupatārušam,* பெ.(n.) செவ்விறகு; red wood used as fuel in calcination of metals (சா.அக.).

குருபற்பமாங்குங்குணத்தி *kuru-paṟpamākkuṅ-kuṇatti,* பெ.(n.) வெள்ளை நீர் முள்ளி; white flowered water thistle plant - *Hygrophila spinosa* (சா.அக.).

குருபூசை *kuru-pūšai,* பெ.(n.) குருவம் (தீட்சை) தந்த குருவிற்கு அவர் முத்தி அடைந்த நாளில் மாணாக்கர்களால் நடத்தப் படும் பூசனை; worship offered by the disciples to their Guru, who initiated them into a religious order, on his death anniversary (

[குரு + பூசை.]

குரும்பாலை *kuumpālai,* பெ.(n.) நிலப்பனை; ground palm - *Curculigo Orchioides* (சா.அக.).

குரும்பைகுத்து-தல் *kurumbai-kuttu-,* 5 செ.கு.வி.(v.i.) தென்னங் குரும்பையைப் பறித்தல்; to pluck young coconuts (செ.அக.).

[குரும்பை + குத்து-தல்.]

குருமடம் *kuru-maḍam,* பெ.(n.) குரு ஆவதற்கு உரிய பயிற்சி பெறும் இடம்; seminary.

[குரு + மடம்.]

குருமபட்டி *kuruma-paṭṭi,* பெ.(n.) 1. காதின் உள்ளே சேரும் அழுக்கு; a thick viscous substance secrated by the glands of the ear, Ear-wax. 2. தென்னை, பனை இவைகளின் இளங்காய்; immature fruit of coconut palmyra etc. 3. இளநீர்; tender coconut with only water inside. 4. பெருங்குரும்பை; 5. புற்றாஞ்சோறு; the comb of white ant's nest. 6. சொரி குரும்பை அல்லது மிளகு சம்பா; a kind of chamba paddy (சா.அக.).

குருமலியம் *kuru-maliyam,* பெ.(n.) அசோக மரம்; wing leaved Asoka tree - *Saraca Indica alias Jonesia asoka* (சா.அக.).

குருமாணவன் *kuru-māṇavan,* பெ.(n.) குரு ஆவதற்குரிய பயிற்சி பெறுபவன்; seminarian.

[குரு + மாணவன்.]

குருமார் *kurumār,* பெ.(n.) சீக்கிய மதத்தின் முதன்மைக் குரு அல்லது தலைவர்; head priest or leader of Sikh religious institutions.

[குரு + மார்.]

குருமுகம் *kuru-mugam,* பெ.(n.) 1. அம்மை வார்த்த முகம்; pox-pitted face. 2. குருக்கள் எழும்பிய முகம்; face full of pimples. 3. சிறிய முகம்; small face (சா.அக.).

[குரு + முகம்.]

குருமுறை *kuru-muṟai,* பெ.(n.) 1. சவர்க்காரம்; soap. 2. கோடாசொரி (வைப்புப் பாடாண வகை); a prepared arsenic (செ.அக.).

[குரு + முறை.]

குருமேசினம் *kuru-mēśiṉam,* பெ.(n.) இதிரக் கிழங்கு, காட்டுக் கருணைக் கிழங்கு; the wild yam root - *Dracontium Polyphillum alias Arun lyratum* (சா.அக.).

குருராட்சம் *kuru-rāṭcam,* பெ.(n.) ஆந்தை; owl (சா.அக.).

குருலிங்கசங்கமம் *kuru-liṅga-śaṅgamam,* பெ.(n.) ஆசாரியனும், சிவமும் திருக் கூட்டமும்; aggregate of the spiritual guru, Šiva's emblem and the devotees of Šiva (செ.அக.).

குருவானவர் *kuruvāṉavar,* பெ.(n.) ஆயர் தரும் பணிகளை நிறைவேற்ற நியமிக்கப் பட்டவர்; priest (க்ரியா.).

[குரு + ஆனவர்.]

குருவிக்காதி *kuru-v-ikkāti,* பெ.(n.) பச்சைக் கருப்பூரம்; crude camphor (சா.அக.).

[குருவி + காதி.]

குருவித்தலைப்பைத்தியக்காரன் *kuruvi-t-talai-p-paittiyakkāraṉ,* பெ.(n.) மூடன்; idiot, weak-headed or hare-brained person (செ.அக.).

குருவித்தாலா *kuruvi-t-tālā,* பெ.(n.) மொச்சை; Indian bean - *Dolichosguens* (சா.அக.).

[குருவி + தலை.]

குருவிருட்சம் *kuru-viruṭcam,* பெ.(n.) 1. அரச மரம்; peepul tree. 2. மணமுள்ள மரம்; any fragrant tree (சா.அக.).

குருவிருந்ததுறை *kuruvirunda-tuṟai,* பெ.(n.) மதுரைக்கு அருகில் உள்ள ஊர்; the town near by Madurai. *குருவித் துறையென இக்காலத்தில் வழங்கப்படுகிறது (அபி.சிந்.).*

குருவிவாலான் *kuruvi-vālāṉ,* பெ.(n.) பெருநெல் வகை; a large kind of bearded paddy (செ.அக.).

மறுவ. குதிரை வாலி, குதிரை வாலான்.

குருவைநம்பி *kuruvai-nambi,* பெ.(n.) ஒரு குயவர்; a potter.

குருடகம் *kurūḍagam,* பெ.(n.) 1. கல்லுப் பனை, மலைப்பனை, தொட்டிப்பனை; palmyra growing on hills; hill palmyra - *Borassus flabellifer.* 2. ஆண்பனை; male palmyra - *Borrasus flabelliformis* (சா.அக.).

குரூப்புகை *kurūppugai,* பெ.(n.) நறுமணப் புகை; a very fragrant smoke (சா.அக.).

குருபதேசம் *kurūbadēšam,* பெ.(n.) மாணாக்கனுக்கு ஆசிரியர் கூறும் அறிவுரை; religious instructions to a disciple by his guru (செ.அக.).

[குரு →குரூ + Skt. உபதேசம்.]

குரூரமாவு *kurūra-māvu,* பெ.(n.) கொல்ல மாவு; penni-nerved cinnamon - *Machilus macrantha* (சா.அக.).

[குரூர + மாவு.]

குரைக்கல் *kurai-k-kal,* பெ.(n.) இதளை; Indian wild olive - *Olea dioica* (சா.அக.).

குரோட்டுபலம் *kurōṭṭu-palam,* பெ.(n.) 1. நாட்டு வாதுமை; Indian almond - *Terminalia catappa.* 2. அக்ரோட்டு மரம்; walnut tree - *Juglams regia alias Jovis glans* (சா.அக.).

குரோதபரணி *kurōta-paraṇi,* பெ.(n.) கண்டங் கத்திரி; prickly night shade - *Solanum jacquini* (சா.அக.).

குரோதவல்லம் *kurōta-vallam,* பெ.(n.) ஒரு கோரை; a variety of cyperus (சா.அக.).

குல்மமூலம் *kulma-mūlam,* பெ.(n.) 1. இஞ்சி; ginger, zingiber offinale. 2. குன்மத்தினால் எழுந்த மூலம்; piles as a result of dyspeptic trouble (சா.அக.).

குல்மால்பண்ணு-தல் *kulmāl-paṇṇu-,* செ.கு.வி.(v.i.) 1. புரட்டு செய்தல்; to cheat. 2. குழப்பஞ் செய்தல்; to create a hubbub (செ.அக.).

[கோல்மால்பண்ணு-தல் → குல்மால் பண்ணு-தல்.]

குல்லகி *kullagi,* பெ.(n.) பூலாச்செடி; black money shrub - *Phyllanthus multiflorus* (சா.அக.).

குல்லரிச்சோறு *kullari-c-cōṟu,* பெ.(n.) கற்றாழைச் சோறு; aloe pulp (சா.அக.).

[குல்லரி + சோறு.]

குல்லையம் *kullaiyam,* பெ.(n.) கருங்குவளை; black water lily; blue lotus or blue nelumbo - *Monochoria vaginalis alias Ponteb deria vaginalis* (சா.அக.).

[குல்லை + அம்.]

குல்லோசிதம் *kullōšitam,* பெ.(n.) பூனைக்காஞ்சொறி; cowhage - *Tragia cannabina* (சா.அக.).

குலச்சங்கு *kula-c-caṅgu,* பெ.(n.) முட்சங்கு; a speicies of conch with thorn, like lotus (சா.அக.).

[குல் - குல்ல -குல+ சங்கு.]



குலச்சுமார் *kulaccumār,* பெ.(n.) **குலச்சுமால்** பார்க்க; see *kulaccumāl* (செ.அக.).

[குலம் + Skt. சுமார்.]

குலச்சுமால் *kula-c-cumāl,* பெ.(n.) களத்திற் விற்குந் தவசம்; grain sold on the threshing floor (செ.அக.).

*[குலம் + **Skt.** சுமால்.]*

குலசிரேட்டன் *kula-širēṭṭaṉ,* பெ.(n.) குடியிற் பிறந்தவருள் புகழ் மிக்கவன்; illustrious son of a family (செ.அக.).

*[குல;ம + **Skt.** சிரேட்டன்.]*

குலசேகரபாண்டியன் *kulašēgara-pāṇḍiyaṉ,* பெ.(n.) 1. மதுரையை ஆட்சிச் செய்த பாண்டியருள் ஒருவன்; a Paṇḍiya king who ruled Madurai. 2. பால்வண்ண நாதர் என்னும் மற்றோர் பெயருடைய பாண்டியன்; another name of Pāl-vaṇṇam. 3. மணவூராண்ட பாண்டியன்; a king who ruled Maṇa-v-ūr. 4. வங்கிய குலசேகர பாண்டியன் குமரன்; son of Vaṅgiya-kulacēgara-pāṇḍiyaṉ.

[குலசேகரன் + பாண்டியன்.]

குலசேகரவரதுங்கராமபாண்டியன் *kulašēgara-varatuṅga-pāṇḍiyaṉ,* பெ.(n.) வாயு சம்மிதையைத் தமிழில் செய்த பாண்டியன்; author of Vāyu-šammidai (அபி.சிந்.).

குலசுவேதகன் *kula-šuvēdagaṉ,* பெ.(n.) குறட்டைப்பழம்; pulp of the bitter snake-gourd, a powerful purgative (செ.அக.).

குலஞ்சம் *kulañjam,* பெ.(n.) அரத்தை; galangal - *Alpinia galanga* (சா.அக.).

குலடன் *kulaḍaṉ,* பெ.(n.) தத்தெடுத்து வளர்க்கும் மகன்; adopted son (செ.அக.).

குலதீவிதிராட்சை *kula-tivi-tirāṭcai,* பெ.(n.) நல்ல இனமான உயர்ந்த கொடி முந்திரி; vine of superior quality (சா.அக.).

குலதேவதை *kula-dēvadai,* பெ.(n.) ஒரு குலத்தார் தலைமுறை, தலைமுறையாக வழிபட்டு வருங் கடவுள்; family deity. *"நினையாந் தொழத்தக்க குல தேவதையாய் வழிபட்டு" (சிவப்.பிரபந்.பின்.சிற்றிற்.6) (செ.அக.).*

[குலம் + தேவதை.]

குலநாசகம் *kula-nāšagam,* பெ.(n.) ஒட்டகம்; camel (சா.அக.).

குலப்பசிமாது *kulappaši-mādu,* பெ.(n.) சீந்திற் கொடி; moon-creeper - *Meniapermum cordifolium* (சா.அக.).



குலபதிநாயனார் *kulapati-nāyaṉār,* பெ.(n.) கடைச்சங்கப் புலவருள் ஒருவர் (திருவள்ளுவ மாலை); a Šaṅgam poet.

குலபருவதம் *kula-paruvadam,* பெ.(n.) எண் வகை மலைகள்; chief mountain-ranges in jambudvipa, eight in number.

*[குலம் + **Skt.**பருவதம்.]*

அவை : இமயம், மந்தரம், கைலாசம், விந்தியம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் (பிங்.) (செ.அக.).

குலபாகலகம் *kula-pālagam,* பெ.(n.) சூரத்து நிலாவாரை; tinnelvelly senna - *Cassia angustifolia* (சா.அக.).

குலபுத்திரன் *kula-puttiraṉ,* பெ.(n.) மாசி பத்திரி; Indian absinth - *Artemesia indica alias A.vulgaris* (சா.அக.).

குலபூடணபாண்டியன் *kulapūḍa-pāṇḍiyaṉ,* பெ.(n.) பாண்டிய மன்னர்களுள் ஒருவன்; a Pāṇḍiyā king.

குலமர்ச்சம் *kula-marccam,* பெ.(n.) வெள்ளுள்ளி; garlic (சா.அக.).

குலவஞ்சனாதி *kula-vañjaṉāti,* பெ.(n.) வெட்டி வேர்; khus khus root (சா.அக.).

குலவிருத்தியை *kula-viruttiyai,* பெ.(n.) மருத்துவச்சி (யாழ்.அக.); midwife (செ.அக.).

*[குலம் + **Skt.**விருத்தியை.]*

குலவுக்கரசி *kulavu-k-karaśi,* பெ.(n.) சூழ்ப்பிராய்; demon tree - *Streblus asper* (சா.அக.).

குலவுரி *kulavuri,* பெ.(n.) 1. சந்தன மரம்; sandal wood tree - *Santalum albus.* 2. செஞ்சந்தனம் (பிங்.); red sandal - *Pterocarpus santalinus* (செ.அக.).

[குலம் + உரி.]

குலத்தன் *kulattaṉ,* பெ.(n.) நற்குலத்தோன்; man of good family or birth (செ.அக.).

*[குலம் + **Skt.** அத்தன்.]*

குலாசலம் *kulāśalam,* பெ.(n.) **குலபருவதம்** பார்க்க; see *kula-paruvadam* (செ.அக.).

*[குலம் + **Skt.**அசலம் → குலசலம் → குலாசலம்.]*

குலாசாரம் *kulā-śāram,* பெ.(n.) குலவொழுக்கம்; established or time-honoured custom or usage of a family or caste (செ.அக.).

*[குலம் + **Skt.** அசாரம் – குலசாரம் → குலாசாரம்.]*

குலாசாரியன் *kulāśāriyaṉ,* பெ.(n.) குல ஆசாரியன் (குரு); family preceptor or priest (செ.அக.).

[குலம் + ஆசாரியன் – குலாசாரியன்.]

குலாட்டு *kulāṭṭu,* பெ.(n.) 1. மகிழ்ச்சி; joy. 2. உற்சாகம்; enthusiasm (செ.அக.).

[குலவு + ஆட்டு.]

குலாதனி *kulādaṉi,* பெ.(n.) ஒருவகைப் பூண்டு (மலை.); christmas rose, herb - *Helleforus niger* (செ.அக.).

குலாதிக்கன் *kulādikkaṉ,* பெ.(n.) குலத்தின் முதன்மையானவன்; cheif man of the family (செ.அக.).

[குலம் + ஆதிக்கன் – குலதிக்கன் → குலாதிக்கன்.]

குலிகா *kulikā,* பெ.(n.) பூசணிக் கொடி (பறங்கிக்காய்); pumpkin creeper (சா.அக.).

குலிகாயம் *kuli-kāyam,* பெ.(n.) நீர் வாழ் உயிரி; an aquatic animal (சா.அக.).

குலிசத்துருமம் *kuliśa-t-turumam,* பெ.(n.) ஒரு வகைக் கள்ளி; a kind of opuntia tree (சா.அக.).

[குலிசம் + துருமம்.]

குலிலேசம் *kuli-lēśam,* பெ.(n.) கருங்கொள்; black gram - *Rynchosia genus* (சா.அக.).

குலிங்கன் *kuliṅgaṉ,* பெ.(n.) துரியோதனனின் அமைச்சன்; minister of turi-y-ōtaṉaṉ (அபி.சிந்.).

குலீனன் *kulīṉaṉ,* பெ.(n.) உயர் குலத்தில் பிறந்தவன் (திவா.); man of noble birth (செ.அக.).

குலுக்கல்[1] *kulukkal,* பெ.(n.) 1. வண்டி மேடு பள்ளத்தில் ஏறி இறங்குவதால் அல்லது ஏதேனும் தடையால் தூக்கிப் போடுகை, ஆட்டம்; of vehicles jolt, jerking. *மாட்டு வண்டியில் உட்கார முடியாத அளவுக்குக் குலுக்கல்! பேருந்து ஒரு குலுக்கலுடன் நின்றது.* 2. அருவருப்பான உடல் அசைவு;

flirtatious body gesture. *அவளுடைய குலுக்கலும் தளுக்கு நடையும்.*

[குலுங்கல் – குலுக்கல்.]

குலுக்கல்² *kulukkal,* பெ.(n.) எண்கள் அச்சடிக்கப்பட்ட சீட்டுகளை விற்றுச் சிலவற்றைப் பரிசுக்கு உரியதாகத் தேர்ந்தெடுக்கை; draw of lottery tickets. *ஒவ்வொர வெள்ளிக்கிழமையும் குலுக்கல் நடைபெறும்.*

[குலுங்கல் – குலுக்கல்.]

குலேசபாண்டியன் *kulēśa-pāṇḍiyaṉ,* பெ.(n.) ஒரு பாண்டிய மன்னன்; a Pāṇḍiyā king.

குலேநீலோபர் *kulē-nīlōpar,* பெ.(n.) வெண் தாமரைப் பூ; white lotus flower - *Nelumbium speciosum* (சா.அக.).

குலை-த்தல் *kulai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. நாய் கடித்ததால் வெறி ஏறி நாய் போல் குரைத்தல்; barking like a dog as in hydrophobia. 2. குழறிப் பேசல்; talking in a confused manner (சா.அக.).

[குரைத்தல் – குலைத்தல். (பே.வ.)]

குலைக்கீசம் *kulai-k-kīśam,* பெ.(n.) ஆட்டுலா மரவகை; a kind of tree (சா.அக.).

குலைவயிறு *kulai-vayiṟu,* பெ.(n.) ஈரலடி; the bottom portion of the liver adjoining the stomach (சா.அக.).

[குலை + வயிறு.]

குலோத்துங்கபாண்டியன் *kulōttuṅga-pāṇḍiyaṉ,* பெ.(n.) ஒரு பாண்டிய மன்னன்; a Pāṇḍiyā king (அபி.சிந்.).

[குலம் + அத்து + துங்கன் + பாண்டியன்.]

குலோத்துங்கன்¹ *kulōttuṅgaṉ,* பெ.(n.) இராசேந்திரச் சோழனின் பெயரன்; grandson of Rājēṉdira-c-cōḻaṉ.

[குலம் + அத்து + துங்கன்]

இவன் தாய் வழியில் சோழன். தந்தை வழியில் சாளுக்கியன். அநபாயன், அபயன், கரிகாலன், ஜயதரன் எனும் பெயர்களும் இவனுக்குண்டு. பெரியபுராணம், தண்டியலங்காரம், கலிங்கத்துப் பரணி, முதலிய சிற்றிலக்கியங்களில் இவனைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. அம்மங்கை என்னும் பெண்ணும், குந்தவை என்னும் தமக்கையும் இருந்தனர். தனது தளபதி கருணாகரத் தொண்டைமானின் உதவியுடன் கலிங்க நாட்டை வென்றான். திரிபுவன சக்கரவர்த்தி, சுங்கம் தவிர்த்த சோழன், பேரம்பலம் பொன் வேய்ந்த சோழன் முதலிய பட்டங்கள் உடையவன். ஒட்டக்கூத்தரிடம் கல்வி பயின்ற இவன் சிறந்த சிவபத்தன். பாடல் இயற்றுவதில் வல்லவன். திருநீற்றுச் சோழன் எனும் இவன் பெயரில் தென்னாட்டில் ஓர் ஊர் உள்ளது (அபி.சிந்.).

குலோமிசை *kulōmiśai,* பெ.(n.) மருந்திற்குப் பயன்படும் பொருட்களைத் தரும் செடிவகை; sweet flag - *Acorus Calamus* (செ.அக.).

குவசிமரம் *kuvaśi-maram,* பெ.(n.) ஒரு ஐரோப்பிய நாட்டு மரம்; jamaica quassia - *Qussia excelsa* (சா.அக.).

குவசிவேம்பு *kuvaśi-vēmbu,* பெ.(n.) இமய மலையில் உள்ள ஒரு வகை வேம்பு; a kind of Himalayan quassia - *Brucea quassioides* (சா.அக.).

குவட்டிலுற்பவித்தகூர்மை *kuvaṭṭiluṟ-pavitta-kūrmai,* பெ.(n.) தொட்டி பாடாணம்; a mineral poison probably red arsenic (சா.அக.).

குவலயம்¹ *kuvalayam,* பெ.(n.) உலகம்; the earth, world. *"குவலயமிசைக் குப்புற்று" (கந்தபு.தாரக.51) (செ.அக.).*

குவலயம்² *kuvalayam,* பெ.(n.) 1. வெள்ளாம்பல் (திவா.); white Indian water lily - *Nymphaea lotus alba.* 2. நீலோற்பலம், குவளை வகை; blue nelumbo - *Pontederia monochoria vaginalis.* *"குவலயத் திருமலர்" (சூடா.).* 3. கொடி வகைகளில் ஒன்றான

செங்குவளை; purple Indian water-lily - *Nymphacu odorata* (செ.அக.).

[குவளம் – குவலயம்.]

குவலயாநந்தம் *kuvalayā-nandam,* பெ.(n.) ஒப்பனை கலை பற்றிய இலக்கணம்; a rhetorical grammer.

[குவளையன் + நந்தம்.]

குவானாகோ *kuvāṉākō,* பெ.(n.) கடம்பை இனத்தைச் சேர்ந்த விலங்கு; a animal which belonged to kaḍambai lineage.

இது கூட்டமாக வாழும். நான்கு அடி உயரம் கொண்ட இது அமெரிக்காவில் உள்ளது. இவை தங்களில் ஏதாவதொன்று இறந்தால் ஒன்று கூடும் என்பர் (அபி.சிந்.).

குவிகம் *kuvigam,* பெ.(n.) இலுப்பை மரம்; South Indian mahua - *Bassia longifolia* (சா.அக.).

குவிஞ்சு *kuviñju,* பெ.(n.) சீமை மாதுளை; the fruit of a tree allied to the pear and apple - *Qince* (சா.அக.).

குவிப்பு *kuvippu,* பெ.(n.) சேர்ந்து ஒன்றாகிக் காணும் நிலை; piling up. *எல்லைப் பகுதியில் படைக் குவிப்பு. ஆறுகளால் அடித்து வரப்பட்ட வண்டல் மண் குவிப்பே இந்தச் சிறு தீவு*

[குவி – குவிப்பு.]

குவிமுனை *kuvi-muṉai,* பெ.(n.) **குவிமையம்** பார்க்க; see *kuvimaiyam*.

குவிமையம் *kuvi-maiyam,* பெ.(n.) ஒளிக் கதிர்கள் ஊடகத்தின் வழியாகச் சென்று மறுபுறத்தில் அல்லது எதிர்ப்புறத்தில் ஒரு சிறு புள்ளியாகக் குவியும் இடம்; principal focus; focal point.

[குவி + மையம்.]

குவைனா *kuvaiṉā,* பெ.(n.) கொய்னா; quinine (சா.அக.).

குழகுழப்பு *kuḻa-kuḻappu,* பெ.(n.) பிசு பிசுப்போடு குழைவாக இருக்கும் தன்மை; sticky and slimy nature. *விரலில் பசையின் குழகுழப்பு, குழகுழப்பான நீர்மம்.*

[குழ + குழப்பு.]

குழந்தைக்காரி *kuḻandaikkāri,* பெ.(n.) தாய்ப்பால் கொடுக்கும் கைக்குழந்தை உடையவள்; a mother who has a nursing baby. *குழந்தைக்காரி பட்டினி கிடக்கக் கூடாது.*

மறுவ. கைப்பிள்ளைக்காரி, பச்சை உடம்புக்காரி.

குழந்தைமுதலியார் *kuḻandai-mudaliyār,* பெ.(n.) திருக்குற்றாலத்தில் வாழ்ந்த தமிழ்க்கவி; Tamil poet who lived in *Tiru-k-kuṟṟālam.*

[குழந்தை + முதலி + ஆர்.]

இவர் வீரராகவர் பிள்ளைத் தமிழை இயற்றியவர் (அபி.சிந்.).

குழம்பாய்ப்போ–தல் *kuḻambāy-p-pō-,* 8 செ.கு.வி.(v.i.) மலம் இளகி நீராய்க் கழிதல்; semf-solid or watery fecal discharge (சா.அக.).

மறுவ. வயிறோட்டம்

[குழம்பாய் + போ–தல்.]

குழம்புபதம் *kuḻambu-padam,* பெ.(n.) மருந்தெண்ணெய்ப் பதங்களுள் ஒன்று; a

stage in the preparation of medicinal oil, one of marundenney-p-patam (செ.அக.).

குழம்புப்பாகு *kulambu-p-pāgu,* பெ.(n.) தடித்த பாகு; thick syrup (சா.அக.).

[குழம்பு + பாகு.]

குழல்புட்டு *kulal-puttu,* பெ.(n.) **குழாய்ப் புட்டு** பார்க்க; see *kulay-p-puttu* (க்ரியா.).

குழல்விளக்கு *kulal-vilakku,* பெ.(n.) உட்புறம் ஒளிரும் வேதியற் பொருள் பூசப்பட்ட நீண்ட குழாய் அமைப்புடைய வெண்ணிற ஒளி தரும் மின் விளக்கு; neon (tube) light. *பெரும்பாலான வீடுகளில் குழல் விளக்குகளையே வைத்திருக்கிறார்கள்.*

[குழல் + விளக்கு.]

குழற்றத்தனார் *kularrattanār,* பெ.(n.) கடைக்கழகக் காலப் புவர்களில் ஒருவர்; the poet who belonged to the last Šangam.

[குழல் + தத்தனார்.]

இவர் பெயர் தத்தன். குழல் என்பது புல்லாங் குழலைக் குறிக்குஞ் சொல்லாக இருத்தல் கூடும். தலைவன் தலைவியுடன் இல்லறம் புரிதலைச் செவிலியின் கூற்றில் இவர் அமைத்திருப்பது படித்து இன்புறற் பாலது.

"கானங் கோழிக் கவர்குரற் சேவல்
ஒண்பொறி யெருத்திற் றண்சிதர் உறைப்பப்
புதனீர் வாரும் பூநாறு புறவிற்
சீறூரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செலினும்
சேந்துவரல் அறியாது செம்மல் தேரே"
(குறுந்.242).

குழலூசி *kulalūši,* பெ.(n.) பீச்சாங் குழலின் முனையூசி (கால்.வி.66); injecting needle at the end of a syringe (செ.அக.).

[குழல் + ஊசி.]

குழவல்லம் *kula-vallam,* பெ.(n.) முருங்கை; drumstick-tree - *Moringa pterogospermum* (சா.அக.).

[குழை + வல்லம்.]

குழாய்த்தண்ணீர் *kulāy-t-tannir,* பெ.(n.) குழாயினின்று வரும் குடித் தண்ணீர்; drinking water (சா.அக.).

[குழாய் + தண்ணீர்.]

குழாய்ப்புட்டு *kulāy-p-puttu,* பெ.(n.) குழாய் போன்ற நீண்ட கழுத்துடைய ஏனத்தில் அரிசி மாவை அடைத்து ஆவியில் வேகவைத்துச் செய்யும் புட்டு; dish prepared by filling a long-tube like structure with rice flour and steaming it

[குழாய் + புட்டு.]

குழிகை *kuligai,* பெ.(n.) உள்ளங்கை; palm of the hand (சா.அக.).

[குழி + கை.]

குழித்தறி *kuli-t-tari,* பெ.(n.) குழியில் கால்மிதிகளைக் கொண்ட தறி; loom having treadles in a pit.

[குழி + தறி.]

குழிப்பறங்கி *kuli-p-parangi,* பெ.(n.) கோடைப்பூசணி; a species of pumpkin cultivated in summer (சா.அக.).

[குழி + பறங்கி.]

குழியாடி *kuli-y-ādi,* பெ.(n.) உட்புறம் குழிவான அரைக்கோள வடிவத்தில் எதிரொளிக்கும் பரப்பைக் கொண்ட ஆடி; concave mirror or lens

[குழி + ஆடி.]

குழியுரல் *kuli-y-ural,* பெ.(n.) உரல் வகை; a kind of mortar (செ.அக.).

[குழி + உரல்.]



குழுகூலி *kuḻu-kūli,* பெ.(n.) களவு போனதை மீட்டுக் கொடுப்பதற்காகப் பொருட்குரியவர் கொடுக்கும் பொருளில் இடைநின்று அக்காரியத்துக்கு உதவிய சிற்றூர் காவற் காரனுக்குரிய பங்கு; share of money paid to the village watchman for acting as intermediary and restoring the stolen property to the owner (செ.அக.).

மறுவ. துப்புக்கூலி

[குழு + கூலி.]

குழுதி *kuḻudi,* பெ.(n.) கிரகப் பூச்சி; a kind of insect (சா.அக.).

குழுமம் *kuḻumam,* பெ.(n.) 1. ஒரு நோக் கத்தைக் குறிப்பிட்டு அதை நிறைவேற்றச் சில அமைப்புகள் ஒன்று சேர்ந்து தனி நெறிமுறைகளை அமைத்து உருவாக்கம் ஓர் அமைப்பு; corporation. 2. ஒருவரே முடிவுகளை மேற்கொள்ளாமல் தொடர்புடைய வர்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து கலந்தாய்ந்து முடிவுகளை மேற்கொள்ள அமைக்கப்படும் குழு; council. 3. குறிப்பிட்ட நோக்கத்துக்காக அமைக்கப்படும் ஒரே துறையைச் சேர்ந்தவர் களின் குழு; a body of professionals, etc.

குழைக்காடு *kuḻai-k-kāḍu,* பெ.(n.) 1. நாட்டுப்புறம்; country, as distinct from city. 2. காட்டுப்புறம்; jungle, as distinct from cultivated tract (செ.அக.).

[குழை + காடு.]

குழைசாந்து *kuḻai-šāndu,* பெ.(n.) கட்டடம் பூசுதற்கு உதவும் கலவைச் சாந்து; softened mortar, as used in rough plastering (செ.அக.).

[குழை + சாந்து.]

குள்ளக்குறுக்கம் *kuḷḷa-k-kuṟukkam,* பெ.(n.) மிகவும் குட்டை; verys short in stature (சா.அக.).

[குள்ளம் + குறுக்கம்.]

குளக்கரையில்வசித்தசத்தி *kuḷakkarayil-vašitta-šatti,* பெ.(n.) சத்தி சாரணை; spreading hogweed - *Boerhavia repens* (சா.அக.).

குளக்கோடன் *kuḷa-k-kōṭṭaṉ,* பெ.(n.) ஒரு மன்னன்; a king. இவன் திருக்கோணை மலையில் பல திருப்பணிகள் செய்தான். இவன் குமாரன் குளங்கோட்டன் (அபி.சிந்.).

[குளம் + கோடு + அன்.]

குளகச்செய்யுள் *kuḷaga-c-ceyyuḷ,* பெ.(n.) பல பாட்டாய் ஒரு வினை கொண்டு முடிவது (தண்டி.3); combination of three or more stanzas having a single finite verb, dist. fr. muṭṭakam.

[குளகம் + செய்யுள்]

குளங்கந்தம் *kuḷaṅ-kandam,* பெ.(n.) நஞ்சுப் பாலை; a kind of milky plant (சா.அக.).

[குளம் + கந்தம்.]

குளத்துநண்டு *kuḷattu-naṇḍu,* பெ.(n.) குளத்தில் வாழும் நண்டு; pond-crab - *Potamon* (சா.அக.).

[குளத்து + நண்டு.]



குளத்தட்டி *kuḷa-t-taṭṭi,* பெ.(n.) மீன் பிடிக்க இடும் சிற்றணை; small dam across a channel, with a row of split bamboos in it, put up in fishing (செ.அக.).

[குளம் + தட்டி.]

குளத்துப்பாசி *kuḷattu-p-pāśi,* பெ.(n.) குளத்தில் படரும் பாசி; moss or weed in tank water (சா.அக.).

[குளத்து + பாசி.]

குளத்துப்புட்பம் *kuḷattu-p-puṭpam,* பெ.(n.) குளத்தில் வளரும் தாமரை, அல்லி முதலியன; lotus, nymphae etc., growing in tanks (சா.அக.).

[குளத்து + புட்பம்.]

குளப்பாய்வு *kuḷa-p-pāyvu,* பெ.(n.) ஏரிப்பாசனம் (பணவிடு.24); tank irrigation (செ.அக.).

[குளம் + பாய்வு.]

குளம்பனார் *kuḷambaṉār,* பெ.(n.) கழகக்காலப் புலவர்; Śaṅgampoet.

குளம்பு என்னும் ஊரினராதலின் குளம்பனார் எனப்பட்டார். இது ஊர் பற்றி வந்த பெயர். இவர் குறிஞ்சித்திணை குறித்துப் பாடியுள்ளார். நற்றிணையில் 288ஆம் பாடல் இவருடையதே (அபி.சிந்.)

"அருவி யார்க்கும் அணங்குடை
நெடுங்கோட்டு
ஞாங்கர் இளவெயில் உணீஇய ஓங்குசினைப்
பீலி மஞ்ஞை பெடையோ டாடுங்
குன்ற நாடன் பிரிவிற் சென்று
நன்னுதல் பரந்த பசலைகண்டு அன்னை
செம்முது பெண்டிரொடு நெல்முன் நிறீஇக்
கட்டிற் கேட்கும் ஆயின் வெற்பில்
ஏனற் செந்தினைப் பாலார் கொழுங்குரல்
குறுகிளி கடிகஞ் சென்றும்இந்
நெடுவேள் அணங்கிற் றெனுங்கொல்
அதுவே" (நற்.288).

குளம்பாதாயனார் *kuḷam-pātāyaṉār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a Śaṅgampoet.

[குளம் + பாதாயன்+ஆர்.]

புறநானூறு 253ம் பாடலைப் பாடியவர். இவர் பாடிய புறப்பாடலில் வளையல் களைந்த மகளிர் கைகளுக்குப் பட்டை நீங்கிய மூங்கிலை உவமையாகக் கூறியுள்ளார். இவர் குளம்பாதயானார் என்றும் குறிக்கப்படுகிறார்.

"என்றிறத் தவலங் கொள்ளல் இனியே
வல்வார் கண்ணி இளையர் திளைப்ப
நகாஅலென வந்த மாறே யெழாநெற்
பைங்கழை பொதிகளைந் தன்ன விளர்ப்பின்
வளையில் வறுங்கை ஓச்சிக்
கிளையு ளொய்வலோ கூறுநின் னுரையே"
(புறநா.253).

குளப்பாலையிலை *kuḷappālai-y-ilai,* பெ.(n.) கசப்பு வெட்பாலை இலை; leaves of bitter oleander - *Holarrhena anti-dysenterica* (சா.அக.).

[குளப்பாலை + இலை.]

குளப்பாலைவிதை *kuḷappālai-vitai,* பெ.(n.) கசப்பு வெட்பாலை விதை; seeds of bitter oleander (சா.அக.).

[குளப்பாலை + விதை.]

குளவன் *kuḷavaṉ,* பெ.(n.) முருகக் கடவுள்; God Murugaṉ. *"குளவன் வீற்றிருந்த வளர்புகழ்க் குன்றமும்" (வீரவனப்பு. திருநாட்.23). (செ.அக.).*

[குழவன் – குளவன்.]

குளவாம்பல் *kuḷa-v-āmbal,* பெ.(n.) குளத்தில் முளைக்கும் ஆம்பல்; white Indian water-lily found in tanks - *Nymphaea lotus* (சா.அக.).

[குளம் + ஆம்பல்.]

குளவார் *kuḷavār,* பெ.(n.) குடியானவர்களோடு தனித்தனியாகச் செய்து கொள்ளும் நிலவரித் (தீர்வை) திட்டம்; settlement made with ryots individually (செ.அக.).

குளாஞ்சி *kuḷāñji,* பெ.(n.) மரவகை (யாழ்.அக.); a kind of tree (செ.அக.).

குளிக்காமலிரு-த்தல் *kuḷikkāmaliru-,* 2 செ.கு.வி.(v.i.) கருவுறுதல்; கருப்பம் தரித்தல்; be in the family way. *உன் மகள் குளிக்காமலிருக்கிறாளா? எத்தனை மாதம்?.*

மறுவ. முழுகாமலிருத்தல்

[குளிக்காமல் + இரு-த்தல்.]

குளிகாசித்தி *kuḷigā-šitti,* பெ.(n.) குளிகை (இரச மாத்திரை) முதலியவற்றால் பெறக் கூடியதாகக் கருதும் வானத்தில் பறக்கும் மன ஆற்றல்; the power of flying through the air at an enormous speed believed to be acquired by means of mercurial or other pills (செ.அக.).

[குளிகை + சித்தி.]

குளிகோமணம் *kuḷi-kōmaṇam,* பெ.(n.) நீர்ச்சீலை (லங்கோடு); a kind of loin-cloth (செ.அக.).

[குளி + கோமணம். கோவணம் → கோமணம்.]

குளிசதோசம் *kuḷiša-dōšam,* பெ.(n.) கருப்பமாதலை வேண்டும் பெண்கள் நீருட் குளித்தெடுத்த சங்கினைக் கட்டிக் கொள்ளும் பொழுது எதிர்ப்பட்ட குழந்தைகளுக்கு வரும் ஒரு நோய் (சீவரட்.221); a child's ailment believed to be the result of encountering a woman when an amulet is fastened on her for favouring pregnancy (செ.அக.).

[குள்→குளி→குளிசம் + Skt. தோசம்.]

குளிசை *kuḷišai,* பெ.(n.) மாத்திரை (இலங்.); tablet, pill. *ஒரு குளிசை விழுங்கு, தலைவலி உடனே குணமாகும்.*

[குள் - குளிசை.]

குளிதேவதாரி *kuḷi-tēvatāri,* பெ.(n.) சுனை உள்ள தேவதாரி மரம்; a kind of bristly deodar - *Erythroxylon genus* (சா.அக.).

குளிதோசம் *kuḷi-dōšam,* பெ.(n.) மாதவிலக்கான பெண் குளித்த பின் வெறும் வயிற்றோடு பார்த்தலால் குழந்தைக்கு உண்டாவதாகக் கருதப்படும் தீட்டு (தோசம்) (பாலவா.117, தலைப்பு); malignant influence on an infant of being looked at by a woman wtih an empty stomach on her bath after menstruation (செ.அக.).

[குள்→ குளி + Skt.தோசம்.]

குளிந்தம் *kuḷindam,* பெ.(n.) சரசுவதி ஆற்றங்கரையில் உள்ள நாடு; a city on the bank of river Šarašvati (அபி.சிந்.).

குளிந்தன் *kuḷindaṉ,* பெ.(n.) ஒரு மன்னன்; a king (அபி.சிந்.).

குளியல்அறை *kuḷiyal-aṟai,* பெ.(n.) குளிப்பதற்குப் பயன்படுத்தும் அறை; room for taking bath (க்ரியா.).

[குளியல் + அறை.]

குளிர்கிறாகம் *kuḷir-kiṟāgam,* பெ.(n.) திலக மரம்; peacock flower fence - *Adenanthera pavonia* (சா.அக.).

குளிர்கொள்ளு-தல் *kuḷir-koḷḷu-,* 16 செ.கு.வி.(v.i.) 1. குளிர்ச்சி அடைதல்; becoming chill. 2. குளிரால் வருந்தல்; suffering from cold (சா.அக.).

[குளிர் + கொள்ளு-தல்.]

குளிர்சாதனம் *kuḷir-šādaṉam,* பெ.(n.) வீடு, பேருந்து முதலியவற்றின் உட் பகுதியைக்

குளிர்ச்சியாக இருக்கச் செய்வதற்கு உரிய கருவி; air-conditioner.

[குளிர் + Skt.சாதனம்.]

குளிர்சாதனவசதி *kuḷir-šādaṉa-vašati,* பெ.(n.) வீடு, பேருந்து முதலியவற்றின் உட்பகுதியைக் குளிர்ச்சியாக இருக்கச் செய்யும் கருவி பொருத்தப்பட்ட ஏற்பாடு; facility of air-conditioning. *தணுப்பு ஏந்து உடைய பெட்டிகள் கோடைக் காலத்தில் இரயிலில் இணைக்கப்படும்.*

[குளிர் + Skt.சாதனம் + Skt. வசதி.]

குளிர்பதனப்பெட்டி *kuḷir-padaṉa-p-peṭṭi,* பெ.(n.) மிகக் குறைந்த வெப்ப நிலையில் உணவு, காய்கறிகளை வைத்துப் பாதுகாக்க உதவும் பெட்டி போன்ற கருவி; refrigerator; deep freeze; freezer.

[குளிர் + பதனம் + பெட்டி.]

குளிர்ந்தபரிமளம் *kuḷirnda-parimaḷam,* பெ.(n.) 1. இனிய நறுமணம்; cool pleasant scent. 2. சீதாங்கபாடாணம் என்னும் பிறவிப் பாடாண வகை; animal poison (செ.அக.).

[குளிர்ந்த + பரிமளம்.]

குளிர்பானம் *kuḷir-bāṉam,* பெ.(n.) குளிர வைக்கப்பட்ட பருகம் (பானம்); cool drink(s); bottled soft drink kept in cold storage.

[குளிர் + பானம்.]

குளிர்ந்தபூமி *kuḷirnda-būmi,* பெ.(n.) குளிர்ச்சி மிகுந்த நாடு; cold country (செ.அக.).

[குளிர்ந்த + Skt. பூமி.]

குளிர்ந்துகொல்லி *kuḷirndu-kolli,* பெ.(n.) நயவஞ்சகன்; honey tongued villan, person with a fair exterior but a foul interior (செ.அக.).

[குளிர்ந்து + கொல்லி.]

குளிர்நீர் *kuḷir-nīr,* பெ.(n.) 1. குளிர்ந்த நீர்; chill water; cold water. 2. குளிர வைத்த நீர்; boiled and cooled water. 3. இள வெந்நீர்; luke warm water. 4. பனிக்கட்டி நீர்; பனி நீர்; ice water.

[குளிர் + நீர்.]

குளிர்ந்தகாற்று *kuḷirnda-kāṟṟu,* பெ.(n.) தண்ணென்று அடிக்கும் காற்று; cold blast chill breeze (சா.அக.).

[குளிர்ந்த + காற்று.]

குளிர்ந்தகொல்லி *kuḷirnda-kolli,* பெ.(n.) சிங்கி நஞ்சு; a kind of killing poison (சா.அக.).

குளிர்ந்தரத்தம் *kuḷirnda-rattam,* பெ.(n.) உறைந்த அரத்தம்; clotted blood (சா.அக.).

[குளிர்→குளிர்ந்த + அரத்தம்.]

குளிர்பொறுக்காமை *kuḷir-poṟukkāmai,* பெ.(n.) குளிர் தாங்காமை; extreme sensitiveness to cold; intolerance of cold (சா.அக.).

[குளிர் + பொறுக்காமை.]

குளிர்மாதி *kuḷir-māti,* பெ.(n.) கொத்தமல்லி; coriander (சா.அக.).

குளிர்மையான *kuḷirmaiyāṉa,* பெ.எ.(adj.) குளிர்ச்சியான; chilly (சா.அக.).

குளிரீகம் *kuḷirīgam,* பெ.(n.) பூவரசு; portia tree - *Thespesia pepulnae* (சா.அக.).

குளிரூட்டும்நிலையம் *kuḷirūṭṭum-nilaiyam,* பெ.(n.) பால், இறைச்சி முதலியவற்றைப் பக்குவப்படுத்தி குளிர்ச்சியடையச் செய்யும் நிலையம்; cold storage station where milk, meat, etc., are kept.

[குளிர் + ஊட்டும் + நிலையம்.]

குளுகுளுவென்று *kuḷu-kuḷu-v-eṉṟu*, வி.அ. (adv.) குளிர்ச்சியாக; pleasantly cool. *"காற்று குளுகுளுவென்று வீசுகிறது".*

[குளுகுளு + என்று.]

குளுத்திப்பூச்சி *kuḷutti-p-pūcci*, பெ.(n.) பிள்ளையார் எறும்பு (இலங்.); a kind of black ant with a painless sting.

[குளுத்தி + பூச்சி.]

குளுவான் *kuḷuvāṉ*, பெ.(n.) குஞ்சு என்பதோடு இணைந்து வரும் சொல்; a word which occurs in combination with kuñju.

குளுத்தி *kuḷutti*, பெ.(n.) 1. குளிர்ச்சி (சீதளம்); coolness, cold, coldness. 2. குளுமைப் படுத்தல் (சைத்தி யோபகாரம்) (சீவக.1810, உரை); the act of cooling, refreshing with cordials, fans, etc. 3. இனிமையானது; that which is sweet, gratifying or pleasing. 4. மரத்துப்போய் சில்லிடுகை; numbness, frigidity, as in death. *"உடலில் குளிர்ச்சி கண்டுவிட்டது" (செ.அக.).*

[குளிர்ச்சி→குளுத்தி.]

குளுத்திமருந்து *kuḷutti-marundu*, பெ.(n.) சூட்டைக் குளிர்விக்கச் செய்யும் மருந்து; cooling medicine (செ.அக.).

[குளுத்தி + மருந்து.]

குற்குலு *kuṟkulu*, பெ.(n.) ஒரு வகைப் பெரு மரம்; konkani resin - *Boswellia serrata glabra. "குற்குலுத்தாவ முற்றெழுந்தகுய்" (சேதுபு. கந்தமா.67) (செ.அக.).*

குற்சிதம் *kuṟšidam*, பெ.(n.) அருவருப்பானது (திவா.); that which is deformed, disgusting, loathing (செ.அக.).

குற்சை *kuṟšai*, பெ.(n.78) 1. அருவருப்பு; abhorrence, loathing, disgust. 2. ஒன்பது வகைச் சுவைகளுள் ஒன்றாகிய இளிவரலென்னும் அருவருப்புச் சுவை (திவா.); sentiment of disgust, one of nava-rašam (செ.அக.).

குற்றஉணர்வு *kuṟṟa-uṇarvu*, பெ.(n.) குற்றம் செய்ததை உணர்த்தும் மனநிலை; feeling of guilt. *குற்ற உணர்வு மனத்தில் முள்ளாகத் தைத்தது.*

[குற்றம் + உணர்வு.]

குற்றக்குறிப்பாணை *kuṟṟa-k-kuṟippāṇai*, பெ.(n.) ஒரு பணியாளர் செய்ததாகக் கூறப்படும் குற்றங்களைப் பட்டியலிட்டு அவர் தனது மறுப்பைத் தெரிவிக்க வாய்ப்பு அளிக்கும் நோக்கில் அலுவலகத்தால் அனுப்பப்படும் கடிதம்; charge memo.

[குற்றம் + குறிப்பாணை.]

குற்றப்பிரிவு *kuṟṟa-p-pirivu*, பெ.(n.) குற்றங்களைப் புலனாய்வு செய்வதற்கு என்று தனியாக அமைக்கப்பட்டிருக்கும் காவல் துறையின் பிரிவு; crime branch of the police force.

[குற்றம் + பிரிவு.]

குற்றம்சாட்டு-தல் *kuṟṟam-šāṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. குற்றமாகக் கருதும் செயல், சட்டம் புரிந்ததை (நடவடிக்கை எடுப்ப தற்காக) அறிவித்தல்; charge some one with an offence; accuse. *புகை வண்டியைக் கவிழ்க்க முயன்றதாகச் சிலர் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப் பட்டுள்ளனர்.* 2. வரைமுறைகளுக்குப் புறம்பாக நடந்து கொண்ட தவற்றை ஒருவர் மேல் போடுதல்; find fault with; blame something on some one. *நடந்த தவற்றுக்கு என்னைக் குற்றம் சாட்டுவது போலப் பேசினார்கள். நான் மிகவும் விட்டுக் கொடுத்து விட்டதாகக் குற்றம் சாட்டாதே!.*

[குற்றம் + சாட்டு-தல்.]

குற்றச்சாத்து *kuṟṟa-c-cāttu,* பெ.(n.) **குற்றப்பத்திரிகை** பார்க்க; see *kuṟṟa-p-pattirigai* (செ.அக.).

[குற்றம் + சாத்து.]

குற்றம்சுமத்து-தல் *kuṟṟam-šumattu-,* 5 செ.கு.வி. (v.i.) **குற்றம்சாட்டு-** பார்க்க; see *kuṟṟam-šāṭṭu.*

குற்றம்சொல்-தல் *kuṟṟam-šol-,* 13 செ.கு.வி. (v.i.) விரும்பத்தகாதது நடந்ததற்கு ஒருவரைப் பொறுப்பாக்குதல்; குறை கூறுதல்; blame some one. *நீயே சரி பார்த்து விட்டு பிறகு என்னைக் குற்றம் சொல்வது ஏன்?*

[குற்றம் + சொல்-தல்.]

குற்றப்பத்திரிகை *kuṟṟa-p-pattirigai,* பெ. (n.) முறை மன்றத்தில் ஒருவன் மீது குற்றத்தின் விளத்(விவரத்)தைக் காட்டிப் படிக்கப்படும் ஆவணம்; charge sheet (செ.அக.). *மேனாள் (முன்னாள்) அமைச்சர்கள் மீது சொத்து குவிப்பு வழக்கில் முறை மன்றத்தில் இன்று குற்றப்பத்திரிகை நகல் வழங்கப்பட்டது.*

[குற்றம் + பத்திரிகை.]

குற்றமற்றபற்பம் *kuṟṟamaṟṟa-paṟpam,* பெ. (n.) தூய்மையான துகள்; pure metallic oxide (சா.அக.)

[குற்றம் + அற்ற + பற்பம்.]

குற்றவியல் *kuṟṟaviyal,* பெ.(n.) குற்றங்களைப் பற்றிய அறிவியல் அடிப்படையிலான விளக்கம்; criminology.

[குற்றம் + இயல்.]

குற்றுயிராய்க்கிட-த்தல் *kuṟṟu-y-irāy-k-kiḍa-,* 3 செ.கு.வி. (v.i.) மிகவும் இக்கட்டான (ஆபத்தான) நிலையில் கிடத்தல்; lying half-dead or nearly dead, critical stage (சா.அக.).

[குற்றுயிராய் + கிட-த்தல்.]

குற்றுயிரும்குறையுயிருமாக *kuṟṟu-y-irum-kuṟai-y-uyirumāga,* வி.அ.(adv.) உடலை விட்டு உயிர் போகிற நிலை; of one grievously hurt trembling on the verge of death. *கத்தியால் வெட்டுப்பட்டவன் குற்றுயிரும் குறையுயிருமாகக் கிடக்கிறான்.*

[குற்றுயிரும் + குறை + உயிருமாக.]

குற்றுடைவாள் *kuṟṟuḍaivāḷ,* பெ.(n.) திருமேனிகளின் இடைப்பட்டிகையில் செருகி ஒப்பனை செய்வதற்குரியதாகப் பொன்னால் செய்யப்பெறும் உடைய வாள்; short scimitar. *"குற்றுடைவாள் ஆசும் கண்டமும் பொன்கட்டிற்று ஒன்று" (தெ.இ.கல்.தொ.22, கல்.46).*

[குறு (குற்று)+ உடைவாள்.]



குற்றுவேலம் *kuṟṟu-vēlam,* பெ.(n.) கருவேல்; black babool - *Acacia arabica* (சா.அக.).

[குற்று + வேலம்.]

குறக்கம் *kuṟakkam,* பெ.(n.) நாணல்; reed, bulrush - *Saccharum spontaneum* (சா.அக.).

[குறக்கு – குறக்கம்.]

குறகுளம் *kuṟa-kuḷam,* பெ.(n.) ஒருவகை மரம் (வெள்ளிலோத்திரம்); the iodh tree - *Symplocos racemosa* (சா.அக.).

[குறகுள் – அம்.]

குறங்கொன்றகம் *kuraṅ-konragam,* பெ.(n.) பெரு முத்தக் காசு, அதாவது பெருங்கோரைக் கிழங்கு; the root of a big variety of koray grass - *Cyperus rotundus* (சா.அக.).

[குறும் – கொன்றகம்.]

குறஞ்சனம் *kurañjanam,* பெ.(n.) வெண்காரம் என்னும் மருந்துச் சரக்கு வகை (மூ.அ.); borax.

[குறு + அஞ்சனம்.]

குறட்டைக்கிழங்கு *kuraṭṭai-k-kiḷaṅgu,* பெ. (n.) சவரிக் கிழங்கு; bulbous root of *kuraṭṭai* (சா.அக.).

[குறட்டை + கிழங்கு.]

குறட்டைப்பழம் *kuraṭṭai-p-paḷam,* பெ.(n.) சவரிப்பழம்; shavari fruit (சா.அக.).

[குறட்டை + பழம்.]

குறத்திசன்னி *kuratti-šanni,* பெ.(n.) 1. கறுப்புக் குண்டு மணி; a black bead of the plant of rhynchosia genus. 2. கறுப்புக் குன்றி மணி; crab's eye plant - *Abrus precatorius melanospermus* (சா.அக.).

[குறத்தி + சன்னி.]

குறல் *kural,* பெ.(n.) பாதிரி மரம்; trumpet flower tree - *Stercospermum chelonides* (சா.அக.).

[குறு – குறல்.]

குறவர்கள் *kuravargaḷ,* பெ.(n.) இந்தியா முழுவதும் வாழும் பரந்து செல் இனத்தவர்; a sect of gypsy caste who live in India.

[குறம் (குன்று) – குறவர் + கள்.]

குறவன்குடைந்தகாது *kuravan-kuḍaiṅda-kādu,* பெ.(n.) துளையிடப்பட்ட காது; lobe of the ear perforated with a punch (சா.அக.).

[குறவன் + குடைந்த + காது.]

குறாசம் *kurāšam,* பெ.(n.) பெருங்காயம்; asafoetida - *Ferula asafoetida* (சா.அக.).

[குறு – அசம்.]

குறிகக்காய்ச்சல் *kuriga-k-kāyccal,* தொ.பெ. (vbl.n.) 1. குழம்பாய்க் காய்ச்சுதல்; boiling anything into a thick consistence. 2. சுண்டக் காய்ச்சுதல்; boiling down a liquid as decoction (சா.அக.).

[குறு + காய்ச்சல்.]

குறிகநறுக்கல் *kuriga-narukkal,* தொ.பெ. (vbl.n.) சிறுசிறு துண்டுகளாய் (பொடியாய்) நறுக்குதல்; cut into small pieces (சா.அக.).

[குறுக + நறுக்கல்.]

குறிகவரிதல் *kuriga-v-aridal,* தொ.பெ. (vbl.n.) பொடியாய்க் கத்தி கொண்டு அரிதல்; cutting into very small or minute pieces (சா.அக.).

[குறு + அரிதல்.]

குறிகவிடித்தல் *kuriga-v-iḍittal,* தொ.பெ. (vbl.n.) தூளாகும்படிச் செய்தல்; reducing to fine powder; pulverising (சா.அக.).

[குறுக + இடித்தல்.]

குறிகன்னி *kuri-kanni,* பெ.(n.) சிறு துவரை; a small kind of dholl - *Dolichos genus* (சா.அக.).

[குறு – கன்னி.]

குறிகு *kurigu,* பெ.(n.) 1. குறிஞ்சா; clustered gaetnera - *Hiptage madablota.* 2. குறுக்கத்தி; glossy long leaved, fig - *Ficus tjakela.* 3. கல்ஆல்; stone banyan tree - *Ficus infextoria* (சா.அக.).

[குறுஞ்சி – குறுகு.]

குறிகொள்ளு-தல் *kuri-koḷḷu-,* 16 செ.கு.வி. (v.i.) 1. அடையாளத்தைப் பெற்றிருத்தல்; posessing symptoms as in diseases (சா.அக.).2. மனதில் இருத்துதல்; to have in mind, to take in the consideration.

[குறி + கொள்ளு-தல்.]

குறிசுடு-தல் *kuri-šudu-*, 20 செ.கு.வி.(v.i.) 1. குறி தவறாமல் துமுக்கியால் சுடுதல்; to shoot without missing the mark. 2. மாட்டுக்குச் சூடு வைத்தல்; to brand marks upon cattle (செ.அக.).

[குறி + சுடு-.]

சிற்றூர்களில் ஊர் மாடுகளை மந்தையாக ஓட்டிச் சென்று மேய விடுவதற்கு ஊர் பொது ஆள் ஒருவர் அமர்த்தப்படுவார். தத்தம் மாடுகளை இனங் காண்பதற்கு மாட்டின் மீது சூடு வைத்து அடை யாளப்படுத்துவர்.

குறிஞ்சிகா *kuriñjigā*, பெ. (n.) பூவந்திக் கொட்டை; soap-nut (சா.அக.).

மறுவ. பூந்திக்கொட்டை

குறிஞ்சிக்கருப்பொருள் *kuriñji-k-karu-p-poru!*, பெ. (n.) குறிஞ்சி நிலத்தின் தன்மையும் மலைபடு பொருள்களும்; nature and properties peculiar to a hilly tract and its soil (சா.அக.).

[குறிஞ்சி + கரு + பொருள்]

குறிஞ்சி நிலத்தின் கருப்பொருள்கள் :

தெய்வம் – முருகக் கடவுள்

உயர்ந்தோர் –பொருப்பன், குறவன், குறத்தி

தாழ்ந்தோர் – கானவர்

புள் – கிளி, மயில்

விலங்கு – அரிமா, புலி

ஊர் – சிறுகுடி

நீர் – அருவி, சுனை

பூ – காந்தள், வேங்கை

மரம் – சந்தனம், தேக்கு

உணவு – மூங்கிலரிசி, திணை

பறை – தொண்டகம்

யாழ் – குறிஞ்சியாழ்

பண் – குறிஞ்சி

தொழில் – வெறியாடல், திணைகாத்தல் கிழங்ககழ்தல்.

குறிஞ்சிக்கல்நார் *kuriñji-k-kal-nār*, பெ.(n.) மலையில் விளையும் கல்நார்; mountain fibrous asbestos - *Mountain flax* (சா.அக.).

[குறிஞ்சி + கல் + நார்.]

குறிஞ்சித்தேன் *kuriñji-t-tēn*, பெ.(n.) 12 ஆண்டுகளுக்கு ஒரு முறைப் பூக்கும் குறிஞ்சி மலரிலிருந்து தேனீக்கள் திரட்டும் மிகத் தித்திப்பான தேன் (காடுபடு தேறல்; sweet) wild or mountain honey (சா.அக.).

மறுவ. மலைத்தேன்

[குறிஞ்சி + தேன்.]

குறிஞ்சிநிலம் *kuriñji-nilam*, பெ.(n.) மலையும் மலை சார்ந்த நிலமும்; hilly tract (அபி.சிந்.).

[குறிஞ்சி + நிலம்.]

குறித்த *kuritta*, பெ.அ.(adj.) பற்றிய; concerning; regarding. *ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு குறித்த அறிவிப்பு இன்னும் சில நாட்களில் வெளியிடப்படும். சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கு இன்று துவங்குகிறது.*

[குறி – குறித்த.]

குறிதளர்ச்சி *kuri-ta!arcci*, பெ.(n.) ஆண் குறி எழுச்சியின்மை; inability to have an erection of the penis - *Impotentia erigendi* (சா.அக.).

[குறி + தளர்ச்சி.]

குறிப்பாக *kurippāga*, வி.அ.(adv.) முதன்மை யாக, சிறப்பாக; particularly; more specifically; especially. *நாட்டு மக்களின், குறிப்பாக கிராம மக்களின் உடல் நலத்தைக் கருத்தில் கொண்டு இத்திட்டம் துவங்கப் பட்டிருக்கிறது.*

[குறிப்பு + ஆக]

குறிப்பிட்ட *kurippitta*, பெ.அ.(adj.) 1. தேர்ந் தெடுத்த; selected; specified. *குறிப்பிட்ட*

சில துறைகளுக்கு மட்டுமே இந்தச் சட்டம் பொருந்தும். குறிப்பிட்ட ஆட்கள் மட்டுமே தலைவரைச் சந்திக்க அனுமதிக்கப் படுவார்கள். 2. முன்பே தீர்மானிக்கப்பட்ட நேரம், காலம் முதலியவை; of time, period appointed. *குறிப்பிட்ட நேரத்தில் தான் மருத்துவரை நீங்கள் பார்க்க முடியும். குறிப்பிட்ட தேதியில் விண்ணப்பம் வந்து சேர வேண்டும்.*

குறிப்பிடு-தல் *kurippidu-*, 20 செ.கு.வி.(v.i.) ஏதேனும் ஒரு காரணம் கருதிச் சுட்டிக் காட்டுதல்; make a specific mention of indicate. *தற்கால எழுத்தாளர்களில் யார் சிறந்தவர் என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்?* 2. தெரிவித்தல்; mention; point out. *நீங்கள் வெளியூர் செல்ல இருப்பதை ஏன் உங்கள் கடிதத்தில் குறிப்பிடவில்லை? தமிழ் வளர்ச்சிக்கு அனைவரும் பாடுபட வேண்டும் என்று அவர் தன் பேச்சின் போது குறிப்பிட்டார்*

[குறிப்பு + இடு-தல்.]

குறிப்புமொழிகள் *kurippu-moligal*, பெ.(n.) குறிப்பாகப் பொருளுரை நிற்கும் மொழிகள்; a word indicating a meaning by implication. *அவையாவன; ஒன்றொழி பொதுச் சொல், விகாரம், தகுதி, ஆகுபெயர், அன்மொழித் தொகை, முதற்குறிப்பு, தொகைக் குறிப்பு, வினைக் குறிப்பு, பிறவுமாம் (அபி.சிந்.).*

குறிப்பெடு-த்தல் *kuri-p-pedu-*, 4 செ.கு.வி. (v.i.) பேச்சு, பாடம், எதிராட்டு (விவாதம்) முதலியவற்றில் காணப்படும் முதன்மையான செய்திகளைச் சுருக்கமாக எழுதுதல்; take notes; take down; note down. *பத்திரிகை நிருபர் முதலமைச்சரின் பேச்சைக் குறிப் பெடுத்துக் கொண்டிருந்தார். கட்டுரைக் காகப் பல்வேறு புத்தகங்களைப் படித்துக் குறிப்பெடுத்திருக்கிறேன்.*

[குறிப்பு + எடு-த்தல்.]

குறியாகஇரு-த்தல் *kuriyāga-iru-*, 3 செ.கு.வி.(v.i.) மிகுந்த கருத்துடன் தீவிரமாக இருத்தல்; முனைப்பாக இருத்தல்; be intent on; be keen on. *பணம் சேர்த்து விட வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தான். முன்னேறுவதில் குறியாக இரு!*

[குறியாக + இரு-த்தல்.]

குறியிறையார் *kuri-y-iraiyār*, பெ.(n.) கடைக் கழக காலத்து வாழ்ந்த பெண்பாற் புலவர்; a poetess who belonged to the last Šangam. *இவர் தாம் பாடிய குறுந்தொகைப் பாடலில் 'குறியிறைப் புதல்வர்' எனக் கூறியிருத்தலால் இவருக்கு இப்பெயர் வந்தது (அபி.சிந்.).*

முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற
குறியிறைப் புதல்வரொடு மறுவந் தோடி
முன்னாள் இனிய தாகிப் பின்னால்
அவர்தினை மேய்தந் தாங்குப்
பகையா கின்றவர் நகைவிளை யாட்டே

(குறுந்.394).

குறியீட்டெண் *kuri-y-itten*, பெ.(n.) பொருள்களின் விலை, வாழ்க்கைத் தரம் முதலியவற்றைக் கடந்த கால நிலையோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்காகப் பயன்படுத்தப் படும் விழுக்காடு (சதவிகித) அடிப்படை யிலான எண்முறை; price index.

[குறியீடு + எண்.]

குறுக்கும்நெடுக்குமாக *kurukkum-nedukkumāga*, வி.அ.(adv.) ஒரே திசையில் இல்லாமல் மாறி மாறி; இங்குமங்குமாக; up and down; here and there. *அவர் கூடத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண் டிருந்தார்.*

[குறுக்கும் + நெடுக்குமாக.]

குறுகிய *kuṟugiya*, பெ.அ.(adj.) 1. பரப்பளவில் அல்லது காலத்தில் குறைந்த; narrow; short. *குறுகிய சாலை, குறுகிய சந்து, குறுகிய காலப்பயிர்.* 2. தனக்குத் தெரிந்ததை மட்டும் அளவுகோலாகக் கொண்ட; parochial; narrow. *குறுகிய நோக்கம், குறுகிய கண்ணோட்டம்*

குறுகுத்தாளி *kuṟuguttāḷi*, பெ.(n.) தாளி வகைகளுள் ஒன்று (மலை.); hairy leaved creamy white bindweed - *Ipomaea gemella* (செ.அக.).

[குறுகு + தாளி.]

குறுங்கால் *kuṟuṅgāl*, பெ.(n.) குள்ளங்கால்; short leg (சா.அக.).

[குறு + கால். குறுங்கால் = நீளங்குறைந்த கால்]

குறுங்கீரனார் *kuṟuṅgīraṉār*, பெ.(n.) கடைக் கழகப் புலவர்களில் ஒருவர்; one of the poets who belonged to the last Tamil academy.

உடலின் குறுமை பற்றி, குறுமுனி, குறுவழுதி என்பவற்றைப் போல இவர் பெற்றார் போலும். இவர் பாடியதாகக் குறுந்தொகை 382ஆம் பாடல் காணப்படுகிறது.

"தண்துளிக் கேற்ற பைங்கொடி முல்லை
முகைதலைத் திறந்த நாற்றம் புதல்மிசை
பூமலி தளவமொடு தேங்கமழ்பு கஞல
வம்புப் பெய்யுமால் மழையே வம்பன்று
காரிது பருவம் ஆயின்
வாரா ரோநம் காத லோரே" (குறுந்.382).

குறுங்குடிமருதனார் *kuṟuṅkuḍi-marutaṉār*, பெ. (n.) கடைக் கழகக் கால புலவர்; the poet who belonged to the last Šaṅgam age.

[குறுங்குடி + மருதனார்.]

இவரது இயற்பெயர் மருதனார். குறுங்குடியாகிய பாண்டிநாட்டு மாலிய (விஷ்ணு) தலம் இவருடைய ஊர். இவர் அகநானூற்றில் ஒரு பாடலும் (4), குறுந்தொகையில் ஒரு பாடலும் (344) பாடியுள்ளார். இவ்விருபாடலும் முல்லைத் திணையைப் பற்றியே பாடியுள்ளார். குறுந்தொகையில் இவர் பாடிய பாடலில் இருந்து "மாலை காலத்தில் வீடு திரும்பும் தாய்ப்பசுவின் வண்ணனை" படித்து மகிழத்தக்கது.

"நோற்றோர் மன்ற தோழி திண்ணெனத்
தூற்றுந் துவலைப் பனிக்கடுந் திங்கட்
புலம்பயிர் அருந்த அண்ணல் ஏற்றொடு
நிலந்தூங் கணல வீங்குமுலைச் செருத்தல்
பால்வார்பு குழவி உள்ளி நிரையிறந்
தூர்வயிற் பெயரும் புன்கண் மாலை
அரும்பெறற் பொருட்பிணிப் போகிப்
பிரிந்துறை காதலர் வரக்காண் போரே"
(குறுந்.344).

குறுங்கை *kuṟuṅgai*, பெ.(n.) 1. பூடுவகை; conehead, shrub - *Strobilanthes.* 2. குறிஞ்சிச் செடி வகை; square-branched conehead - *Strobilanthes Kunthianus* (செ.அக.).

குறுங்கோழியூர்க்கிழார் *kuṟuṅ-kōḻiyūr-kiḻār*, பெ.(n.) கழகக்காலத் தமிழ்ப் புலவர்; Tamil poet, lived in the Šaṅgam era.

[குறுங்கோழி + ஊர் + கிழார்.]

இவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைப் பாடியுள்ளார். இவர் ஊர் குறுங்கோழி. இவர் வேளாண் குடியினர். இவர் பாடியதாக புறநானூற்றில் மூன்று பாடல்கள் (17, 20, 22) காணப்படுகின்றன.

"இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிதுநிலைஇய காயமும், என்றாங்
கவையளந் தறியினு மளத்தற் கரியை
அறிவு மீரமும் பெருங்க ணோட்டமும்
சோறு படுக்குந் தீயொடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெற லறியார்நின் னிழல்வாழ் வோரே
திருவிலல்லது கொலைவில் லறியார்
நாஞ்சி லல்லது படையு மறியார்
திறனறி வயவரொடு தெவ்வர் தேயவப்

பிறர்மண் ணுண்ணுஞ் செம்மனின் னாட்டு

வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது

பகைவ ருணாஅ வருமண் ணினையே

அம்புதுஞ்சுங் கடியரணால்

அறந்துஞ்சுஞ் செங்கோலையே

புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்

விதுப்புற வறியா வேமக் காப்பினை

அனையை யாகன் மாறே

மன்னுயி ரெல்லா நின்னஞ் சும்மே" (புறநா.20).

ஆசிரியர் குறுங்கோழியூர்கிழார் இப் பாட்டின்கண் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் செங்கோலாட்சியின் செம்மையைப் புகழ்ந்து "செம்மலே, நீ அறம் துஞ்சும் செங்கோலையுடையை; அதனால் நின்னாட்டவர் புதுப்புள் வரினும் பழம்புள் போகினும் நடுக்கம் சிறிதும் இலராய் இன்பத்திலே திளைத் திருக்கும் செம்மைப்பண்பு கருதி நின்னுயிர்க்கு ஏதேனும் ஏதம் வருமோ வென எண்ணி அன்பால் அஞ்சியிருக்கின்றனர்காண்" எனப் பாடுகிறார்.

குறுந்தாளி *kuṟundāḷi,* பெ.(n.) சிறுதாளி; hairy-leaved creamy white bindweed - *Ipomaea oscura alias Convolvulus gemellus* (சா.அக.).

[குறும் + தாளி.]

குறுநாவல் *kuṟu-nāval,* பெ.(n.) பொதுவாக, அளவில் சிறுகதையை விடப் பெரியதும் புதினத்தைவிடச் சிறியதுமான இலக்கிய வகை; short novel.

[குறு + நாவல்.]

குறும்பா *kuṟumpā,* பெ.(n.) ஐந்து அடியில் நகைச்சுவைத் தன்மை கொண்ட செய்யுள் வடிவம் (இலங்.); humourous five line verse with a rhyme-scheme - *limerick.*

[குறு+ பா.]

குறும்பர் *kuṟumbār,* பெ.(n.) மலையாளத்தார்; Malayalees, People of Kerala (சா.அக.).

[குறும்பு (மலை) + ஆர்.]

குறும்பர்நாடு *kuṟumbār-nāḍu,* பெ.(n.) கேரளநாடு; மலையாள நாடு; the modern Malabar (சா.அக.).

[குறும்பர் + நாடு.]

குறும்புள் *kuṟum-puḷ,* பெ.(n.) காடை; quail (சா.அக.).

[குறு + புள்.]



குறுவழுதியார் *kuṟu-vaḻutiyār,* பெ.(n.) கடைச் சங்கம் மருவிய புலவர்; the poet who belonged to the last Śaṅgam (அபி.சிந்.).

[குறு + வழுதி.]

குறுவிசனம் *kuṟu-viśaṉam,* பெ.(n.) தேவையில்லாமல் மிகுதியாகக் கவலை கொள்ளுகை; gloomy state of mind, melancholy (செ.அக.).

[குறு + Skt. விசனம்.]

குறுவிசாரம் *kuṟu-viśāram,* பெ.(n.) **குறுவிசனம்** பார்க்க; see *kuṟu-viśaṉam* (செ.அக.).

[குறு + Skt. விசாரம்.]

குறுவியர்வை *kuṟu-viyarvai,* பெ.(n.) சிறு அளவாக உண்டாகும் வியர்வை; slight or moderate perspiration (சா.அக.).

[குறு + வியர்வை.]

குறுவிழி *kuṟu-viḻi,* பெ.(n.) அரைக் கண்; partially closed eyes (சா.அக.).

[குறு + விழி.]

குறுவைநோய் *kuṟuvai-nōy,* பெ.(n.) ஆடு, மாடுகளுக்கு உண்டாகும் தொண்டை நோய் அல்லது தொண்டை அடைப்பன்; malignant sore-throat in cattle (சா.அக.).

[குறுவை + நோய்.]

குறைக்கண்ணுறங்கு-தல் *kuṟai-k-kaṇṇuṟaṅgu-,* 9 செ.கு.வி. (v.i.) 1. கண் சொருகல்; sleeping lightly. 2. அரைக்கண் தூக்கம் கொள்ளல்; being half sleep; sleeping with eyes partially closed somnolescent (சா.அக.).

மறுவ. அரைத்தூக்கம்

[குறை + கண் + உறங்கு.]

குறைகூறு-தல் *kuṟai-kūṟu-,* 9 செ.கு.வி. (v.i.) குற்றம் சாட்டுதல்; குற்றம் சொல்லுதல்; find fault with; criticize; blame. *எல்லாவற்றுக்கும் ஏன் ஆசிரியர்களையே குறை கூற வேண்டும்? ஒருவர் மீதும் நான் குறை கூற விரும்பவில்லை.*

[குறை + கூறு-தல்.]

குறைந்த *kuṟainda,* பெ.அ.(adj.) அதிகம் இல்லாத, போதுமானதாக இல்லாத, சிறியளவு; not high; low; insufficient. *குறைந்த வாடகை. மேட்டூர் அணைக்கு குறைந்த அளவு நீர் வருகின்றது.*

குறைந்தஅளவு *kuṟainda-aḷavu,* பெ.(n.) மேலும் குறைக்க முடியாத அளவு; minimum. *குறைந்த அளவு ஆயிரம் பேர்களாவது கல்யாணத்திற்கு வருவார்கள்.*

குறைந்தபட்சம் *kuṟainda-paṭcam,* பெ.(n.) **குறைந்தஅளவு** பார்க்க; *see kuṟainda-aḷavu*

*[குறைந்த + **Skt.** பட்சம். த. அளவு.]*

குறைந்தது *kuṟaindadu,* பெ.(n.) குறைந்த அளவு; minimum. *இந்த வேலைக்குக் குறைந்தது நான்கு ஆண்டு பயிற்சி உள்ளவர் தேவை. குறைந்தது ஆறு மணி நேரமாவது தூங்க வேண்டும்.*

குறைப்பாடு *kuṟai-p-pāḍu,* பெ.(n.) குறைவு; defect; deficiency (சா.அக.).

[குறைபடு – குறைப்பாடு.]

குறைப்பிரசவம் *kuṟai-p-pirašavam,* பெ.(n.) தொடக்க மாதங்கள் கழிந்த பின் கருப் பையில் இருக்கும் கரு குழந்தையாக முழு வளர்ச்சியடைவதற்கு முன்பு வெளிப்படுகை, பத்து மாதத்தில் குழந்தை முழுவளர்ச்சி யடைவதற்கு முன்பே குறைவான மாதத்தில் கரு வெளியேறுகை; miscarriage after the initial months of pregnancy.

*[குறை + **Skt.** பிரசவம்.]*

குறைப்பிராணன் *kuṟai-p-pirāṇaṉ,* பெ.(n.) எப்பொழுதேனும் உயிர் பிரியும் என்றிருக்கும் நிலை (குற்றுயிர்); life almost extinct (செ.அக.).

மறுவ. தொண்டைக்கும் நெஞ்சுக்கும் இழுத்திக் கிடத்தல்.

*[குறை + **Skt.** பிராணன்.]*

குறைப்பு *kuṟaippu,* பெ.(n.) எண்ணிக்கையில் குறைகை; reduction. *படைக் குறைப்பு செய்யுமாறு வல்லரசுகளை உலக நாடுகள் கேட்டுக் கொண்டன.*

குறைவயது *kuṟai-vayadu,* பெ.(n.) குறுகிய வயது; short life as opposed to long life (சா.அக.).

[குறை + வயது.]

குறைவலி *kuṟai-vali,* பெ. (n.) 1. பிள்ளைப் பேற்றின் போது காணும் குறைந்த வலி; weak pain in labour. 2. நோயின் போது காணும் குறைந்த வலி; slight pain felt in diseases (சா.அக.).

[குறை + வலி.]

குறைவுபடு-தல் *kuraivu-padu-*, 20 செ.கு.வி. (v.i.) குறைவாக இருத்தல்; falling short, shortage (சா.அக.).

[குறைவு + படு-தல்.]

குன்றத்தூர் *kunrattūr*, பெ.(n.) பெரிய புராணம் இயற்றிய சேக்கிழார் பிறந்த ஊர்; birth place of Šēkkiḻār. *இவ்வூர் தொண்டை நாட்டிலுள்ளது (அபி.சிந்.).*

[குன்றம் + அத்து + ஊர்.]

குன்றத்தூர்முதலியார் *kunrattūr-mudaliyār*, பெ. (n.) சேக்கிழாரின் தந்தை; father of Šēkkiḻār (அபி.சிந்).

குன்றம்பூதனார் *kunram-pūdanār*, பெ.(n.) கடைக் கழக காலத்துப் புலவர்; the poet who belonged to the last Šaṅgam. *இவர் பரிபாடலில் பாண்டி நாட்டு முருகனின் தலமாகிய திருப்பரங்குன்றத்தை மிக வருணித்திருத்தலின் இவர்க்கு இப்பெயர் வந்திருக்கலாம் (அபி.சிந்.).*

[குன்றம் + பூதன் + ஆர்.]

குறோகணத்தி *kurō-kaṇatti*, பெ.(n.) 1. காக்கணம்; mussell-shell creeper - *Clitoria ternatea*. 2. கொடிக் காட்டான்; sky blue blind weed; smaller morning glory - *Ipomaea hederacea* (சா.அக.).

[குறு + உகணம் + அத்தி.]

குன்மசூலை *kunma-šūlai*, பெ. (n.) செரியாமையால் உண்டாகும் வயிற்று வலி முதலிய நோய் வகைகள் (இங்.வை.); chronic dyspepsia; glandular enlargement in the abdomen, as of the mesenteric gland, causing indigestion, colic and emaciation (செ.அக.).

[குன்மம் + சூலை.]

குன்மநித்திரிஞ்சம் *kunma-nittiriñjam*, பெ.(n.) இலைக்கள்ளி; மான் செவிக்கள்ளி; leafy tree, spurge - *Euphorbia nereifolia* (சா.அக.).



குன்மப்புரட்டு *kunma-p-purattu*, பெ.(n.) செரியாமையால் வாந்தியுண்டாகும் வயிற்று நோய் வகை; chronic dypepsia, acute pain attending the kunmam disease causing vomiting (செ.அக.).

[குன்மம் + புரட்டு.]

குன்மவல்லி *kunma-valli*, பெ.(n.) கொடிக்கள்ளி; moon-creeper - *Sarcostemma viminale* (சா.அக.).

[குன்ம + வல்லி.]

குன்மவலி *kunma-vali*, பெ.(n.) செரியாமை காரணமாக வயிற்றில் உண்டாகும் உளைச்சல்; colic pains or gripes consequent on chronic dyspepsia (செ.அக.).

[குன்மம் + வலி.]

குன்மவாயு *kunma-vāyu*, பெ. (n.) செரியாமையுடன் இணைந்து வரும் காற்று (வாயு) நோய்த் துன்பம்; flatulency connected with chronic dyspepsia (செ.அக.).

*[குன்மம் + **Skt.** வாயு.]*

குன்றத்தில்நயந்தசத்தி *kunrattil-nayanda-šatti*, பெ.(n.) தாலம்ப பாடாணம்; a kind of native arsenic (சா.அக.).

குன்றத்துச்சித்தி *kunrattu-c-citti*, பெ.(n.) தாலம்ப பாடாணம் என்னும் பிறவி நஞ்சு வகை; a mineral poison (செ.அக.).

குன்று-தல் *kuṉṟu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. மேனி குன்றல்; being diminished in lustre or beauty. 2. குறைதல்; decreasing or diminishing. 3. மெலிதல்; being reduced or emaciated. 4. மனம் வாடுதல்; being dispirited in mind. 5. வளர்ச்சியடையாமை; being stunted in growth. 6. துன்பத்தால் மெலிவுறல்; growing weak with pain, grief, anguish etc. (சா.அக.).

குன்றியனார் *kuṉṟiyaṉār,* பெ.(n.) ஒரு புலவர்; a poet, of sangam age whose pen name couldnot be comprehend by any.

[குன்றியன் + ஆர்.]

இவரது பெயர்க் காரணம் விளங்கவில்லை. குறுந்தொகையில் மேலைக் கடற்கரைத் தொண்டியைச் சிறப்பித்து பாடியமையால் இவர் சேர நாட்டவர் எனக் கொள்ளலாம். இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு (கசுஎ, உஙசா), குறுந்தொகையில் ஆறு, அகத்தில் இரண்டெனப் பத்துப் பாடல்கள் கிடைத்துள்ளன (அபி.சிந்.).

குன்றூர்க்கிழார்மகனார்கண்ணத்தனார் *kuṉṟūr-k-kiḻār-magaṉār-kaṇṇattaṉār,* பெ.(n.) ஒரு புலவர்; a poet of Śaṅgam age belonging to Vellala Community.

[குன்றூரர் + கிழார் + மகனார் + கண்ணத்தன் + ஆர்.]

இவர் நற்றிணை ஙஙஉ ஆம் பாட்டில் குறிஞ்சித் திணையைப் பாடியுள்ளார் (அபிசிந்.).

குனா *kuṉā,* பெ.(n.) குற்றம்; fault, crime (செ.அக.).

[U.gunāh > த. குனா.]

குனாசகம் *kuṉāśagam,* பெ.(n.) உடலில் பட்டால் தினவுண்டாகக் கூடிய இலையைக் கொண்ட ஒரு செடி வகை (மலை.); small climbing nettle, which cause itching in the body - *Tragia involucrata-Cannabina* (செ.அக.).

குனாசம் *kuṉāśam,* பெ.(n.) குன்றி என்னும் செடிவகை (மலை.); a plant called crab's eye - *Abrus precatorius* (சா.அக.).

குனிந்த *kuṉinda,* பெ.எ.(adj.) தலை முன் பக்கம் கவிழ்ந்த; with the head bent downward and forward (சா.அக.).

[குனி-குனிந்த]

குனிந்ததலை *kuṉinda-talai,* பெ.(n.) 1. கவிழ்ந்த தலை; bent head. 2. கீழ்ப் பார்வை; downward look. *'இந்தப் பெண் குனிந்த தலை நிமிராமல் நடந்து செல்லும் இயல்புடையவள்'.*

[குனிந்த + தலை.]

குனிந்தபார்வை *kuṉinda-pārvai,* பெ.(n.) கீழ்ப் பார்வை; downward look (சா.அக.).

[குனிந்த + பார்வை.]

குனிந்தமுதுகு *kuṉinda-mudugu,* பெ.(n.) கூன்; hunch-back (சா.அக.).

[குனிந்த + முதுகு.]

குனிப்பம் *kuṉippam,* பெ.(n.) ஆடல்; dance. *'கொம்பனைய மாதர் குனிப்பமிட' (சொக்க.உலா.73).*

[குனி + குனிப்பம்.]

குனிப்பு *kuṉippu,* பெ.(n.) செய்யுள் சந்த வகை; a peculiar rhythem in verse. *"அணியுடன்றபரி பரியுடன்றகரி கரியுடன்றகொடி" (செ.அக.).*

[குழிப்பு→குனிப்பு→குனிப்பு.]

குனு *kuṉu,* பெ.(n.) கடம்பை (கடமான்) போன்ற காட்டு விலங்கு; a wild animal which look like a kaḍampai.

[குன் – குனு]

இதன் கொம்புகள் நீண்டு வளைந்து மேலெழுந்திருக்கும். கழுத்தில் பிடரி மயிருண்டு. நான்கு அடி உயரம் கொண்டது. ஆப்பிரிக்கக் காடுகளில் அதிகம் காணப்படுகிறது (அபி.சிந்.).

குனைபுல்மேய்-தல் *kuṉai-pul-mēy-*, 2 செ.கு.வி. (v.i.) ஆழமாகக் கருத்தூன்றி படிக்காமல், மேலெழுந்தவாறு படித்தல்; to have a cursory or superficial study (செ.அக.).

மறுவ. நுனிப்புல் மேய்-தல்

[குனை + புல் + மேய்-தல்.]

குனைவண்டு *kuṉai-vaṇḍu*, பெ.(n.) பருத்தியில் விழும் பூச்சி வகை; a cotton pest (செ.அக.).

[குனை + வண்டு.]

கூக்குரலாய்செய்-தல் *kūkkuralāy-šey-*, 2 செ.கு.வி. (v.i.) வெளிப்படையாக அல்லது எல்லோரும் அறியும்படிச் செய்தல்; making no secret of one's doing (சா.அக.).

[கூக்குரலாய் + செய்-தல்.]

கூச்சீரிடம் *kūccīriḍam*, பெ.(n.) திருநாமப்பாலை; hill lotus, smilax macrophylla (சா.அக.).

[குச்ச + சீரிடம்.]

கூட்டணி *kūṭṭaṇi*, பெ.(n.) தனித்தனியான அணிகள் ஒரு திட்டத்தை அல்லது சில கொள்கைகளை மேற்கொண்டு இணைந்து செயற்பட வகுக்கப்பட்ட அமைப்பு; front of individual units or parties to work with a common programme. *ஊதிய உயர்வுக்கான ஆசிரியர் கூட்டணியின் வேலை நிறுத்தம் இன்னும் தொடர்கிறது. மூவேந்தர் கூட்டணி வைத்திருந்தனர் எனக் காரவேலனின் அத்திகும்பா கல்வெட்டு கூறுகிறது.*

[கூட்டு + அணி.]

கூட்டத்தொடர் *kūṭṭa-t-toḍar*, பெ.(n.) ஒரு நாட்டின் சட்டசபை, மக்களவை (பாராளுமன்றம்) முதலியவற்றில் குறிப்பிட்ட காலம் வரை உறுப்பினர்கள் நாள்தோறும் கூடும் கூட்டம்; session of parliment, etc. *நாடாளு மன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடர் தொடங்கியது.*

[கூட்டம் + தொடர்.]

கூட்டமைப்பு *kūṭṭamaippu*, பெ.(n.) ஒன்றுக்கு மேற்பட்ட கழகங்(சங்கங்)களின் இணைப்பு; association of more than one union, etc.; federation. *தொழிற்சங்கக் கூட்டமைப்பு இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொண்டது.*

[கூட்டு + அமைப்பு.]

கூட்டறிக்கை *kūṭṭaṟikkai*, பெ.(n.) நாடுகள் அல்லது அமைப்புகள் ஒன்றாகச் சேர்ந்து விடுக்கும் அறிக்கை; joint communique. *தீவிரவாதத்தை ஒடுக்க இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.*

[கூட்டு + அறிக்கை.]

கூட்டி *kūṭṭi*, பெ.(n.) 1. சேவல்; cock fowl. 2. புன்னை மொக்கு; the bud of common poon tree - *Calophyllum inophyllum*. 3. மருளி; an unknown plant. 4. கூட்டிக் கொடுப்போன்; bawd; pander (சா.அக.).

[கூட்டு – கூட்டி.]

கூட்டிக்கொண்டுசெல்-தல் *kūṭṭi-k-koṇḍu-šel-*, 3 செ.கு.வி. (v.i.) இருக்கிற இடத்திலிருந்து வேறு இடத்திற்கு அழைத்துக் கொண்டு செல்லுதல்; take along; bring along. *கடற்கரைக்குக் குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு சென்றேன்.*

[கூட்டி + கொண்டு + செல்-தல்.]

கூட்டியரை-த்தல் *kūṭṭi-y-arai-*, 4 செ.கு.வி. (v.i.) 1. மருந்துகள் சரியாகக் கலக்கும்படி அரைத்தல்; grinding medicine so that the ingredients are properly mixed up. 2. சேர்க்க வேண்டியதைச் சேர்த்து அரைத்தல்; grinding with the required or necessary ingredients (சா.அக.).

[கூட்டி + அரை-த்தல்.]

கூட்டுச்சேராக்கொள்கை *kūṭṭu-c-cērā-k-koḷgai,* பெ.(n.) வல்லரசு நாடுகளுடன் சேராமல் தனித்துச் செயற்படுவதைக் கடைபிடிக்கும் கொள்கை; principle of non-alignment.

[கூட்டு + சேரா + கொள்கை.]

கூட்டுச்சேராநாடு *kūṭṭu-c-cērā-nāḍu,* பெ.(n.) வல்லரசு நாடுகளுடன் சேராமல் நடுநிலைக் கொள்கை மேற்கொள்ளும் நாடு; non-aligned country.

மறுவ. அணிசேரா நாடு

[கூட்டு + சேரா + நாடு.]

கூட்டுச்சொல் *kūṭṭu-c-col,* பெ.(n.) தனிப் பொருளைத் தரும் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சொற்களின் கூட்டு; compound word.

[கூட்டு + சொல்.]

கூட்டிவாசி-த்தல் *kūṭṭi-vāśi-,* 4 செ.கு.வி. (v.i.) எழுத்துக் கூட்டிப் படித்தல்; to read letter by letter, to spell out words (செ.அக.).

M. ḻūṭṭivāyikka > த. கூட்டிவாசி

*[கூட்டி + **Skt.** வாசி-.]*

கூட்டிவிப்பனாதி *kūṭṭi-v-ippaṉāti,* பெ.(n.) மொச்சைக்காய்; country bean - *Dolichos* (சா.அக.).

கூட்டுப்பண்ணை *kūṭṭu-p-paṇṇai,* பெ.(n.) பலர் ஒன்று சேர்ந்து கூட்டுறவு முறையில் ஆளுவ (நிர்வாக)ம் செய்து மிகு ஊதிய (லாப)த்தைத் தக்கவாறு பிரித்துக் கொள்ள அமைத்த வேளாண்பண்ணை; co-operative farm. *நம் நாட்டிற்குத் தேவை கூட்டுப் பண்ணை வேளாண்மை.*

[கூட்டு + பண்ணை.]

கூட்டுப்பெருங்காயம் *kūṭṭu-p-peruṅgāyam,* பெ. (n.) பிற பொருள்களைக் கலந்து செய்த பெருங்காயம்; compound asafoetida manufactured for cooking purpose.

[கூட்டு + பெருங்காயம்.]

கூட்டுமார்பு *kūṭṭu-mārbu,* பெ.(n.) மேல் எழும்பிய மார்பு; a prominent medium ridge in the brest bone known as pigeon or chicken breast; keeled-breast - *Pectus carinatum* (சா.அக.).

[கூட்டு + மார்பு - கூட்டுமார்பு = கூடுபோல் அமைந்த மார்பு.]

கூட்டுமெழுகு *kūṭṭū-meḻugu,* பெ.(n.) பிசுபிசுப்பான பல பொருட்களைக் கூட்டிச் செய்த மெழுகு; a wax prepared by mixing several sticky, tenacious or resinous substances (சா.அக.).

[கூட்டு + மெழுகு.]

கூட்டுவணிகம் *kūṭṭu-vaṇigam,* பெ.(n.) பலர் கூடிச் செய்யும் வணிகம்; joint concern partnership in trade.

[கூட்டு + வணிகம்.]

கூட்டுவர்த்தகம் *kūṭṭu-varttagam,* பெ.(n.) **கூட்டுவியாபாரம்** பார்க்க; see *kūṭṭu-viyābāram* (செ.அக.).

*[கூட்டு + **Skt.** வர்த்தகம்.]*

கூட்டுவாணிகம் *kūṭṭu-vāṇigam,* பெ.(n.) **கூட்டுவணிகம்** பார்க்க; see *kūṭṭu-vaṇigam.*

[கூட்டு + வாணிகம்.]

கூட்டுவியாபாரம் *kūṭṭu-viyābāram,* பெ.(n.) **கூட்டுவணிகம்** பார்க்க; see *kūṭṭu-vaṇigam.*

*[கூட்டு + **Skt.** வியாபாரம்.]*

கூட்டுறவுச்சங்கம் *kūṭṭuṟavu-c-caṅgam,* பெ.(n.) பலர் ஒன்றிணைந்து உருவாக்கிய குழுமம்; co-operative society (செ.அக.).

*[கூட்டுறவு + **Skt.** சங்கம்.]*

கூடக்குறைய *kūḍa-k-kuṟaiya,* வி.அ.(adv.) 1. எடுத்துக் கொண்ட அளவிலிருந்து அல்லது எண்ணிக்கையிலிருந்து அதிகமாக வேறு படாமல் இருத்தல்; a little more or a little less; settle for more or less. 2. பேச்சில் சற்று எல்லை மீறுதல்; transgressing a little. *பெரியவர் கூடக் குறைய பேசிவிட்டாலும் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான்.*

கூடகண்மி *kūḍa-kaṇmi,* பெ. (n.) வெண்தகரை; white ringworm plant - *Cassia tora* (சா.அக.).

கூடகோபுரம் *kūḍa-kōpuram,* பெ.(n.) பல நிலைகளை உடைய கோபுரம்; temple tower with many tiers. *மாடமாளிகை கூடகோபுரம் எல்லாம் வரலாற்றுச் சின்னங்கள்.*

[கூட்டு + கோபுரம்.]

கூடசதுர்த்தம் *kūḍa-šadurttam,* பெ.(n.) செய்யுளின் நான்காம் அடியிலுள்ள எழுத்துகள் யாவும் ஏனைய மூன்றடிகளுள்ளும் மறைந்து நிற்குமாறு பாடப்பெறுஞ் சித்திரகவி (தண்டி.95); stanza of four lines in which the letters constituting the last line are all found among those of the first three lines (செ.அக.).

[கூடம் + Skt. சதுர்த்தம்.]

கூடசித்திரி *kūḍa-šittiri,* பெ.(n.) சதுரக்கள்ளி; square-spurge - *Euphorbia antiquorum alias E.quadrangularis* (சா.அக.).

[கூடம் + சித்திரி.]

கூடணை *kūḍaṇai,* பெ.(n.) மயில்தோகைக் கண்; eye of the pea-cock's feather (சா.அக.).

[கூடு + அணை.]

கூடப்பிறந்த *kūḍa-p-piṟanda,* பெ.அ.(adj.) 1. ஒரே பெற்றோருக்குப் பிறந்த; உடன்பிறந்த; born of the same parents; related by blood, siblings, consanquity. *இவர் உன் பெரியப்பா பையனா? இல்லை, என் உடன்பிறந்த சகோதரன். நான் உன்னை உடன்பிறந்த சகோதரனாகவே கருதுகிறேன்.* 2. பிறந்ததிலிருந்தே உள்ள; இயல்பாகவே அமைந்த; in born. *ஏழைக்கு உதவுவது என்பது அவருக்கு கூடப்பிறந்த குணம்.*

[கூட + பிறந்த.]

கூடபதம் *kūḍa-padam,* பெ.(n.) பாம்பு; snake (சா.அக.).

[கூட + பதம்.]



கூடபலம் *kūḍa-palam,* பெ.(n.) 1. இலந்தை; jujube tree - *Zizyphus jujuba.* 2. நீர் நிலை; water tank (சா.அக.).

[கூட + பலம்.]

கூடபுட்பம் *kūḍa-puṭpam,* பெ.(n.) 1. இலுப்பை; South Indian mahua - *Bassia longifolia.* 2. மகிழ மரம்; ape flower tree - *Mimusoo elengi* (சா.அக.).

[கூடம் + புட்பம்.]

கூடபுருசன் *kūḍa-purušaṉ,* பெ. (n.) 1. ஒற்றன்; spy. 2. கள்ள நாயகன்; clandestine lover (செ.அக.).

[கூடு – கூட + புருசன்.]

கூடமைதுனம் *kūḍa-maiduṉam,* பெ.(n.) காகம்; crow (சா.அக.).

கூடயந்திரம் *kūḍa-y-andiram,* பெ.(n.) 1. மறைவாக அமைத்த பொறி; secret trap. 2. வலை; net (செ.அக.).

கூடரணம் *kūḍaraṇam,* பெ.(n.) பொன், வெள்ளி, இரும்புகளால் செய்யப்பட்டனவும், சிவனால் எரிக்கப்பட்டனவும் விண்ணில் திரிந்தனவுமான மூன்று நகரங்கள்; the three aerial cities of gold, silver and iron burnt by Šivā. *"அழலுணச் சீறிய கூடரணம்" (பு.வெ.5, 1) (செ.அக.).*

*[கூடம் + **Skt.** அரணம்.]*

கூடல்சங்கமம் *kūḍal-šaṅgamam,* பெ.(n.) துங்கபத்திரை ஆறும் கிருட்டிணா ஆறும் கூடும் இடம், சாளுக்கிய நாட்டின் தென்பகுதி, விசயராசேந்திர சோழனும் சாளுக்கிய மன்னன் ஆகவ மல்லனும் போரிட்ட இடங்களுள் ஒன்று; confluence or junction of the Tuṅgabadrā and the Krisṇā. *"கூடல் சங்கமத்து ஆகவமல்லன் மகனாகிய விக்கலன் சிங்களன் என்றிவர் தம்மோடு எண்ணில் சாமந்தரைவென்று" (தெ.கல்.தொ.3, 1, பக்.33).*

*[கூடல் + **Skt.** சங்கமம்.]*

கூடலூர்ப்பல்கண்ணனார் *kūḍalūr-p-pal-kaṇṇaṇār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a Šaṅgam poet.

[கூடலூர் + பல்கண்ணனார்.]

இவர் நீர் நாட்டின் கனுள்ள கூடலூரினராக இருத்தல் வேண்டும். மருதத் திணையில் பாணனை மறுத்துக் கூறும் துறையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். நற்றிணை 200, 380 பாடல்களைப் பாடியுள்ளார் (அபி.சிந்.).

கண்ணி கட்டிய கதிர அன்னன்
ஒண்குரல் நொச்சித் தெரியல் சூடி
யாறுகிடந் தன்ன அகனெடுந் தெருவில்
சாறெனா நுவலும் முதுவாய்க் குயவ
இதுவும் ஆங்கண் நுவன்றிசின் மாதோ
ஆம்பல் அமன்ற தீம்பெரும் பழனத்துப்
பொய்கை ஊர்க்குப் போவோய் ஆகிக்
கைகவர் நரம்பிற் பனுவற் பாணன்
செய்த அல்லல் பல்குவ வையெயிற்று
ஐதகல் அல்குல் மகளிர் இவன்
பொய்பொதி கொடுஞ்சொல் ஓம்புமின் எனவே
(நற்.200).

கூடவர்த்தாகி *kūḍa-varttāgi,* பெ.(n.) பெருவழுதலை; a big variety of brinjal plant - *Solanum indicum* (சா.அக.).

[கூட + வர்த்தாகி.]

கூடவற்சை *kūḍa-v-aršai,* பெ.(n.) தவளை; frog (சா.அக.).

கூடவே *kūḍavē,* இ.சொ.(part.) மேலும்; அதனோடு; along with besides. *வறுமையை அகற்றுவதற்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும், கூடவே கல்விப் பெருக்கத்தையும் உண்டாக்க வேண்டும்.*

[கூட + வ் + ஏ.]

கூடற்கிழார் *kūḍar-kiḻār,* பெ.(n.) குன்றத்தூரில் இருந்த வேளாண் குலத்தவர்; a farmer who lived in kuṉṟattūr (அபி.சிந்.).

[கூடல் + கிழார்.]

கூடற்சங்கமம் *kūḍar-šaṅgamam,* பெ.(n.) துங்கபத்திரை ஆறு, கிருட்டிணா ஆற்றுடன் கூடும் இடம்; confluence or junction of the Tuṅgabatra and Kriṭṭiṇa. *"குந்தளரைக் கூடற்சங்கமத்து வென்றே" (கலிங்.புதுப்.193)*

*[கூடல் + **Skt.** சங்கமம்.]*

கூடா-தல் *kūḍā-,* 6 செ.கு.வி.(v.i.) 1. உயிர் நீங்கிய வெற்றுடம்பாதல்; becoming a life-less body. 2. இறத்தல்; dying (சா.அக.).

[கூடு + ஆதல்.]

கூடாகயம் *kūḍā-kayam,* பெ.(n.) வெண் மிளகாய்; white chilli - *Capsicum frutescesns* (சா.அக.).

[கூடு + ஆகயம்.]

கூடாது *kūḍātu,* கு.வி.எ.(adv.) 1. ஒரு செயலைச் செய்யத் தடை விதிக்கும் சொல்; a prohibitive; not allowed to do something; order one not to do something. *தேர்வு முடியும் வரை நீ விளையாடப் போகக் கூடாது. இந்த மாத்திரையைத் தொடர்ந்து சாப்பிடக் கூடாது.* 2. செய்த செயலைச் செய்திருக்க வேண்டியதில்லை என்பதைத் தெரிவிக்கும் சொல்; a form of disapproval; shout not do or have done. *நீ அம்மாவிடம் அப்படிச் சண்டை போட்டிருக்கக் கூடாது.*

[கூடு + ஆ +து.]

கூடிய *kūḍiya,* இடை.(part.) ஒன்றோடு இணைந்திருக்கிற; சேர்ந்த; having in addition; with. *கணவனோடு கூடிய மனைவி.*

[கூடு + இ + அ.]

கூடியவிரைவில் *kūḍiya-viraivil,* வி.அ. (adv.) மிகக் குறுகிய காலத்தில்; at the earliest, in the immediate future. *கூடிய விரைவில் தேர்தல் நடக்கும்.*

[கூடிய + விரைவில்.]

கூடிலி *kūḍili,* பெ.(n.) புலால் தின்போன் (பிங்.); flesh eater (செ.அக.).

[கூடு + இலி.]

கூடுபரிலை *kūḍubarilai,* பெ.(n.) ஒரு பிசின் மரம்; west India copal - *Hymenaea Courbaril* (சா.அக.).

[கூடு + பரி + இலை.]

கூடும் *kūḍum,* வி.மு.(adv.) கூற்றை ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு ஓரளவுக்காவது இருக்கிறது என்பதைத் தெரிவிக்கப் பயன்படுத்தும் ஒரு வினைமுற்று; a predicate form expressing the idea of likelihood or a possibility; may; might; could. *அவன் சொல்வது உண்மையாக இருக்கக் கூடும்.*

கூடுமானவரையில் *kūḍumāṉa-varaiyil,* வி.அ.(adv.) ஒன்றைச் செய்வதில் எந்த அளவு முடியுமோ அந்த அளவு; as far as possible; to the extent possible. *அவர் எனக்குக் கூடுமானவரை உதவி செய்தார். கூடுமானவரையில் எல்லோரோடும் ஒத்துப் போக வேண்டும்.*

[கூடும் + ஆன + வகையில்.]

கூடைச்சாதம் *kūḍai-c-cādam,* பெ.(n.) திருமண நடப்பில் மாப்பிள்ளை வீட்டார் தம் வீடு செல்லும்பொழுது அவர்களுக்குப் பெண் வீட்டார் அனுப்பும் சோறு முதலிய தின்பண்டம்; basketfuls of food and dainties presented by the bride's people to the bridegroom's party when the latter depart homeward (செ.அக.).

[கூடை + சாதம்.]

கூடைகட்டி *kūḍai-kaṭṭi,* பெ.(n.) வன்னியர் அல்லது பள்ளியின மக்களில் ஒரு வகையினர்; one the divisions of vanniyar or paḷḷi.

[கூடை + கட்டி]

கூடைதட்டிப்பறம்பு *kūḍai-taṭṭi-p-paṟambu,* பெ.(n.) மதுரையிலுள்ள ஓர் ஊர்; a town, in Madurai.

[கூடை + தட்டி + பறம்பு.]

இது திருப்பரங்குன்றத்திற்கு வடக்கே பூதங்கண்ட குளத்திற்குத் தென்கிழக்கே உள்ளது, கூடையும் தட்டிகளும் செய்த இடமாகலாம்.

கூடைநாற்காலி *kūḍai-nāṟkāli,* பெ.(n.) கூடை போன்ற அமைப்பில் செய்த ஒரு வகை நாற்காலி; chair with a basket-like seat.



[கூடை + நாற்காலி.] padam.

கூடைப்பந்து *kūḍai-p-pandu,* பெ.(n.) இரு அணியினராகப் பிரிந்து ஆடுகளத்தின் இரு புறமும் அமைக்கப்பட்டிருக்கும் கம்பத்தில் உள்ள கூடை போன்ற வளையத்தினுள் பந்தை போடும் விளையாட்டு; basket ball.

[கூடை + பந்து.]



கூண்டில்ஏற்று-தல் *kūṇḍil-ēṟṟu-,* 5 செ.கு.வி.(v.i.) உசாவ (விசார)ணைக்காக முறைமன்றத்தில் நிறுத்துதல்; put some one in the dock; bring one to the witness box for trial. *ஒழுங்காக வாடகைப் பாக்கியைத் தராவிட்டால் கூண்டில் ஏற்றிவிடுவேன்.*

[கூண்டில் + ஏற்று-தல்.]

கூண்டோடு *kūṇḍōḍu,* வி.அ. (adv.) இனம், உறவு அனைத்தோடும்; பூண்டோடு; in entirety; root and branch. *இனச் சண்டையில் கூண்டோடு அழிந்த குடும்பங்கள் உண்டு.*

[கூண்டு + ஒடு.]

கூத்தடி-த்தல் *kūttaḍi-,* 4 செ.கு.வி.(v.i.) விரும்பத்தகாத முறையில் ஆர்ப்பாட்டமாக நடந்து கொள்ளுதல்; create a noisy scene; behave in an unruly way. *குடித்துவிட்டு வந்து கூத்தடிக்கிறான்.*

[கூத்து + அடி-த்தல்.]

கூத்தன்குதம்பை *kūttaṉ-kudambai,* பெ. (n.) 1. காட்டுச் செவ்வந்தி; Indian wild chamomile - *Pyrethrumindicum.* 2. தேராத் தாழை; a kind ofscrew-pine. 3. மூக்குத்திக் கொடி; pointed or blunt leaved hogweed - *Boerhaavia rependa alias B. Verticillata* (சா.அக.).

[கூத்தன் + குதம்பை.]

கூத்தியாள் *kūttiyāḷ,* பெ.(n.) வைப்பாட்டி; derogatorily mistress; concubine. *காலம் முழுவதும் கூத்தியாள் வைத்திருந்தார்.*

[கூத்து + ஆள்.]

கூத்தனூரப்பன் *kūttaṉūrappaṉ,* பெ.(n.) கிருட்டிணதேவராயர் காலத்து இருந்த தமிழ்க்கவி; the poet who belonged to the kiruṭṭiṇa-tēvarāyā period (அபி.சிந்.).

[கூத்தனூர் + அப்பன்.]

கூதனம் *kūdaṉam,* பெ.(n.) இடக்கர்ச் சொல் (திவா.); indecent, obscene, terms (செ.அக.).

கூதேகம் *kūdēgam,* பெ.(n.) வேர்ப்பலா; trunk jack fruit - *Atrocarpus integrifolia* (சா.அக.).

கூந்தல்வர்த்தனம் *kūndal-varttaṉam,* பெ.(n.) கரிசாலை; eclipse plant - *Eclipta prostata* (சா.அக.).

[கூந்தல் + வர்த்தனம்.]

கூந்தல்வாலி *kūndal-vāli,* பெ. (n.) 1. குதிரைவாலிச் சம்பா; horse tail paddy.

2. குதிரைவாலிச் சாமை; horse tail millet - *Panicum verticillatum alias P.crusgalli.* 3. குதிரைவாலிப் புல்; horse tail grass - *Panicum brizoides.* 4. குதிரை வாலைப் போன்ற பூடு வகை; equisetacae family of plants - *Horse-tails* (சா.அக.).

[கூந்தல் + வாலி. வால்→வாலி.]

கூந்தல்வீரிகம் *kūndal-vīrigam,* பெ.(n.) **கெண்டைக்காரி** பார்க்க; see *keṇḍai-k-kāri* (சா.அக.).

[கூந்தல் + வீரிகம்.]

கூந்தற்றைலம் *kūndaṟ-tailam,* பெ.(n.) தலை மயிரை வளர்க்கும் எண்ணெய்; hair oil - *Pomatum* (சா.அக.).

*[கூந்தல் + **Skt.** தைலம்.]*

கூப்பரம் *kūpparam,* பெ.(n.) முழங்கை; elbow (சா.அக.).

கூபக்கண்ணன் *kūba-k-kaṇṇaṉ,* பெ.(n.) மாவலிச் சக்கரவர்த்தியின் வழி வந்த வாணனின் நண்பன்; vāṇaṉa's friend who came from Māpāli-c-cakkaravatti's dynasty (அபி.சிந்.).

[கூபம் + கண்ணன்.]

கூம்பரிட்டம் *kūm-bariṭṭam,* பெ.(n.) 1. ஆமை ஓடு; the shell of a tortoise. 2. ஆமணக்கு; castor plant (சா.அக.).

கூம்பாதிரி *kūmbādiri,* பெ.(n.) 1. ஒரு வகைப் பாதிரிப் பூ மரம்; a kind of trumpet-flower. 2. பூவத்தி அல்லது கொழும்பு மரம்; Ceylon oak - *Sehleichera trijuga* (சா.அக.).

[கூம்பு + பாதிரி.]

கூமாகியம் *kūmāgiyam,* பெ.(n.) தேற்றாங்கொட்டை; water clearing nut - *Strychnos Potatorum* (சா.அக.).

கூர்கண் *kūr-kaṇ,* பெ.(n.) பார்வை கூர்மையாக உள்ள கண்; sharp eyes (சா.அக.).

[கூர் + கண்.]

கூர்சிட்டு *kūr-śiṭṭu,* பெ.(n.) **கூறுச்சிட்டு** பார்க்க; see kūṟu-ciṭṭu (செ.அக.).

கூர்ச்சை *kūrccai,* பெ.(n.) தருப்பைப் புல்; sacrifical grass (சா.அக.).

கூர்ச்சேகரம் *kūr-c-cēgaram,* பெ.(n.) தென்னை (பிங்.); coconut palm - *Cocos nucifera* (செ.அக.).

கூர்த்த *kūrtta,* பெ.அ.(adj.) **கூர்ந்த** பார்க்க; see *kūrnda. கூர்த்த மதி உடையவர்.*

[கூர் – கூர்த்த.]

கூர்ந்து *kūrndu,* வி.அ.(adv.) முழுக் கவனத்தையும் செலுத்தி உற்று; keenly; intently; with rapt attention. *நாட்டிற்கு எதிரான செயல்களை அரசு கூர்ந்து கவனித்து வருகிறது.*

[கூர் – கூர்ந்து]

கவனி, பார், நோக்கு, கேள் போன்ற வினைகளுடன் வரும் சொல்.

கூர்மக்கெருடமூலி *kūrma-k-keruḍa-mūli,* பெ.(n.) வெள்ளை நாயுருவி; a Indian burr - *Achyranthes aspera* (சா.அக.).

கூர்மசம்மாரமூர்த்தி *kūrma-śammāra-mūrtti,* பெ.(n.) சிவனின் திருவுரு; figure of Šiva.

[கூர்ம + சம்மாரம் + மூர்த்தி.]

ஆமை (கூர்மம்) தோற்றரவு (அவதாரம்) கொண்ட திருமாலின் பெருமிதம் அடக்கி, ஆமையுருவின் ஓட்டினைப் பெயர்த்து மார்பணியாகக் கொண்ட சிவனது திருவுரு (அபி.சிந்.).

கூர்மதாசர் *kūrma-tāšar,* பெ.(n.) ஒரு திருமால் பக்தர்; a devotee of Tirumal (அபி.சிந்.).

[கூர்மம் + தாசர்.]

கூர்மத்துவாதசி *kūrma-t-tuvādaši,* பெ.(n.) ஆனி மாதத்துத் துவாதசியில் கடைபிடிக்கும்

ஒரு நோன்பு; a fast on the 12th lunar day of the Tamil month Aṇi (செ.அக.).

[கூர்ம + Skt. துவாதசி.]

கூர்மபுராணம் *kūrma-purāṇam,* பெ.(n.) பதினெண் தொன்ம (புராண)ங்களுள், திருமால் ஆமைத் தோற்றம் கொண்ட பொழுது கூறிய தொன்மம் (புராணம்); a chief toṉma, narrated by tirumal, in his incarnation as tortoise, one of patiṉeṉ-toṉmam. 2. வடமொழியிலிருந்து அதிவீரராம பாண்டியன் செய்யுள் வடிவில் தமிழிலியற்றிய நூல்; a metrical translation of the above in Tamil by Adivirarāma Pāṇḍiyaṉ (செ.அக.).

[கூர்ம + Skt. புராணம்.]

கூர்மயோகம் *kūrma-yōgam,* பெ.(n.) ஒருவன் பிறக்குங் காலத்தில், அவனுக்கு உயர்ந்த நிலையைக் கொடுக்குமாறு கோள்கள் சேர்ந்திருக்கும் ஒரு ஓகம் (யோகம்) (சங்.அக.); a peculiar conjunction of planets at the time of one's birth indicative of great success in life (செ.அக.).

[கூர்ம + Skt. யோகம்.]

கூர்மன் *kūrmaṉ,* பெ.(n.) பத்து வகையான காற்றுகளுள் இமைத்தல், விழித்தல்களைச் செய்யும் காற்று (பிங்.); the vital air of the body which causes closing and opening of eyelids, one of ten type of airs (செ.அக.).

[கூர் – கூர்மன்.]

கூர்மாண்டர் *kūrmāṇḍar,* பெ.(n.) நிரய (நரக) உலகங்களுக்குத் தலைவர்; Lord of hells. *"பாரிடப் படையுடைக் கூர்மாண்டர்" (திருவிளை.திருமணப்.82).*

[கூர் + மாண்டர்.]

கூர்மாதனம் *kūrmādaṉam,* பெ.(n.) 1. கால் மடித்து உட்காருகை; squating on the floor with the legs crossed. 2. உள்ளொடுக்கத்தின்போது (அனுஷ்டானாதிகளுக்கு) பயன்படுத்துவதும், ஆமையின் வடிவமாக அமைந்ததுமான இருக்கை வகை; wooden seat in the form of a tortoise or with the figure of tortoise on it, used for meditation. *"வில்வாதியினாற் செய்க..... கூர்மாதனம்" (சைவச.பொது.57) (செ.அக.).*

[கூர்மம் + ஆதனம்.]

கூர்மாநந்தர் *kūrmā-nandar,* பெ.(n.) ஓக பயிற்சியுடையவன்; follower of the yoga system of philosophy; adept in yogic practices (அபி.சிந்.).

கூர்மமூர்த்தி *kūrma-mūrtti,* பெ.(n.) திருமாலின் தோற்றரவு (அவதாரம்); incarnation of Tirumāl (அபி.சிந்.).

[கூர்ம + மூர்த்தி.]

கூரத்தாண்டாள் *kūrattāṇḍāḷ,* பெ.(n.) கூரத்தாழ்வார் மனைவி; wife of Kurattāḻvār (அபி.சிந்.).

[கூரத்து + ஆண்டாள்.]

கூரத்தாழ்வார் *kūrattāḻvār,* பெ.(n.) ஆழ்வார்களில் ஒருவர்; one of the devotees of Tirumal.

[கூரத்து + ஆழ்வார்.]

மறுபெயர் : வச்ச சின்னமிச்ரர், நடையாடு பதஞ்சலி, யதீந்திர சரணன்.

இவர் சோழனால் கண்ணிழந்து திருவரங்கத்தில் இருந்து பெருமாளை வழிபட்டு உடையவர் கால் நீர் பெற்று திருநாட்டுக்கு எழுந்தருளினார் (அபி.சிந்.).

கூர்மையாளன் *kūrmai-y-āḷaṉ,* பெ.(n.) சவர்க்காரம்; soap (சா.அக.).

[கூர்மை + ஆளன்.]

கூரண்டம் *kūrandam,* பெ.(n.) 1. கூர்மையான முட்டை; oval shaped egg. 2. பருத்த பிடுக்கு; enlarged scrotum (சா.அக.).

[கூர் + அண்டம்.]

கூரன்புல் *kūran-pul,* பெ.(n.) வரகு; little millet (சா.அக.).

[கூரன் + புல்.]

கூராசாகிகம் *kūrā-šākigam,* பெ.(n.) தேயிலை; tea (சா.அக.).

கூராம்பாய்ச்சி *kūrām-pāycci,* பெ.(n.) மண் கொத்துவதற்குப் பயன்படுத்தும் மரக்கருவி; a kind of pointed wooden shovel for grubbing up the earth (செ.அக.).

[கூர் + ஆம் + பாய்ச்சி.]

கூரான் *kūrān,* பெ.(n.) ஒரு வகைப் பூடு; an unknown plant (சா.அக.).

[கூர் – கூரான்.]

கூரியசிரசு *kūriya-širašu,* பெ.(n.) 1. கூர்மையான தலை; cone head; tower head. 2. உள்ளங்கால், உள்ளங்கையின் மேற்பாகம்; the upper part of the palm of the hand and the sole of the feet (சா.அக.).

[கூரிய + **Skt.** *சிரசு.]*

கூரியசேகரம் *kūriya-sēgaram,* பெ.(n.) தென்னை; coconut tree (சா.அக.).

கூரைக்கணக்காயனார் *kūrai-k-kaṉakkāyaṉār,* பெ.(n.) கடைக்கழகம் மருவிய புலவர்; the poet who belonged to the last Šaṅgam (அபி.சிந்.).

கூலபிந்து *kūla-bindu,* பெ.(n.) மரவகை (சங்.அக.); strychnine-tree - *Strychnos nux-vomica* (செ.அக.).

கூலசிங்கி *kūla-šiṅgi,* பெ.(n.) சிறுவழுதலை; Indian night shade - *Solanum indicum* (சா.அக.).

[கூலி + சிங்கி.]

கூலிப்பட்டாளம் *kūli-p-paṭṭāḷam,* பெ.(n.) **கூலிப்படை** பார்க்க; see *kūli-p-paḍai.*

[கூலி + பட்டாளம்.]

கூலிப்படை *kūli-p-paḍai,* பெ.(n.) பணத்திற்காக அடிதடி, கொலை முதலியன செய்யுமோர் கூட்டத்தினர்; mercenary force.

[கூலி + படை.]

கூவகம் *kūvagam,* பெ.(n.) நேர் வாளம்; true croton oil plant - *Croton tigilium* (சா.அக.).

கூவதிரை *kūva-tirai,* பெ.(n.) கடுகுரோகிணி; black heelebore - *Helleborus niger* (சா.அக.).

[கூவ + திரை.]

கூவமூரிகம் *kūva-mūrigam,* பெ.(n.) நாங்கில்; a plant of mesuagenus (சா.அக.).

[கூவ + மூரிகம்.]

கூவலம் *kūvalam,* பெ.(n.) 1. பல நிறமுடைய ஆம்பற் பூ; Indian water-lily of varied colours. 2. துவரை; dholl - *Dolichos* (சா.அக.).

[கூவல் – கூவலம்.]

கூவத்துநாரணன் *kūvattu-nāraṇaṉ,* பெ.(n.) கூவத்தில் புலவர்க்கும், மற்றோர்க்கும் வாரி வாரி கொடுத்து வந்த பெருஞ் செல்வந்தன்; a wealthy person, who patronized the poets, and the poors near village of koovam.

[கூவத்து + நாரணன்.]

கூவழிஞ்சல் *kūvaḻiñjal,* பெ.(n.) கொடியழிஞ்சல்; alangium creeper as distinguished from its tree (சா.அக.).

[கூவ + அழிஞ்சில்.]

கூவளம் *kūvaḷam,* பெ.(n.) கருங்குவளை; blue nelambo (சா.அக.).

[குவளம் – கூவளம்.]

கூவனை *kūvaṉai,* பெ.(n.) நல்ல பாம்பு; cobra (சா.அக.).

கூவன்மைந்தன் *kūvaṉ-maindaṉ,* பெ.(n.) கடைக் கழகம் மருவிய புலவருள் ஒருவர்; the poet who belonged to the last Šaṅgam.

[கூவல் + மைந்தன்.]

இவர் பெயர் மைந்தன் என்றிருக்கக் கூடும். குறுந்தொகையில் இவர் பாடிய 'கூவற்குரலான்' எனும் வரியால் இப்பெயர் வந்தது எனக் கருதலாம் (அபி.சிந்.).

கூவா[1] *kūvā,* பெ.(n.) 1. **கூகை** பார்க்க; see *kūgai.* 2. ஆந்தை; owlet. 3. ஒரு வகைப் பருந்து; a species of kite. 4. கோட்டான்; a large owl - *Bubo bengalensis.*

[கூகை – கூவா (கொ.வ.).]

கூவா[2] *kūvā,* பெ.(n.) 1. கூவாமா; a farinaceous substance procured from the root of Indian arrow-root plant. 2. மாங்காய் இஞ்சி; mango ginger. 3. நிலச் சம்பங்கி; ground champauk. 4. கற்பூரக் கிச்சிலிக் கிழங்கு; long zedoary (சா.அக.).

[கூவம் + மா.]

கூவாக்கட்டு *kūvā-k-kaṭṭu,* பெ.(n.) அம்மைக் கட்டு, பொன்னுக்குவீங்கி (இலங்.); mumps (க்ரியா.).

[கூவா + கட்டு.]

கூவாச்சாவல் *kūvā-c-cāval,* பெ.(n.) இளஞ் சேவல்; young cock (சா.அக.).

[கூவா + சாவல்.]

கூவுசுணங்கன் *kūvu-cuṇaṅgaṉ,* பெ.(n.) நாய்க்குட்டி மரம்; an unknown tree (சா.அக.).

[கூவு + சுணங்கன்.]

கூழ்ப்பாண்டம் *kūḻ-p-pāṇḍam,* பெ.(n.) 1. சாம்பற் பூசணி; ash-coloured pumpkin or summer squash - *Cucurbita alba.* 2. பெருங்காயம்; asafoetida. 3. கூழ்ப் பானை; porridge pot; pap-pot (சா.அக.).

[கூழ் + பாண்டம்.]

கூழ்வற்றல் *kūḻ-vaṟṟal,* பெ.(n.) உப்பும், உறைப்பும் சேர்த்த அரிசி மாவுக் கூழைத் துணியில் சிறிது சிறிதாக ஊற்றி அல்லது அச்சால் பிழிந்து காயவைத்து எடுத்து வேண்டும் போது பொரித்துப் பயன்படுத்தும் துணை உணவு வகை; slightly salted and spiced rice flour paste distributed on a cloth in thick drops or squeezed through a press, left to dry and collected to be fried

[கூழ் + வற்றல்.]

கூழங்கைத்தம்பிரான் *kūḻaṅgai-t-tambirāṉ,* பெ. (n.) தொண்டை மண்டலத்துக் காஞ்சியில் இருந்த வேளாளர்; the peasent who live in Kāñji.

இவர் இலக்கிய, இலக்கணங்களில் வல்லவர். சில தனிப் பாடல்களும், சித்தி விநாயகர் இரட்டை மணிமாலையும் இயற்றியுள்ளார் (அபி.சிந்.).

கூழன்கல் *kūḻaṉ-kal,* பெ.(n.) வழவழப்பான சிறு கல்; pudding stone; loose pebbles especially those on the sea-shore; shingle (சா.அக.).

மறுவ. கூழாங்கல்

[கூழன் + கல்.]

கூழிக்கொற்றன் *kūḻi-k-koṟṟaṉ,* பெ.(n.) கடைக் கழகம் மருவிய புலவர்களில் ஒருவர்; one of the poets who belonged to the last Šaṅgam (அபி.சிந்..).

கூழைக்கும்பிடு *kūḻai-k-kumbiḍu,* பெ.(n.) காரியம் நிறைவேற்றுவதற்காக உடலை நெளித்துக்கொண்டு போடும் கும்பிடு;

bowing servilely. *கூழைக் கும்பிடு போட்டே வேலை வாங்கி விட்டான்.*

[கூழை + கும்பிடு.]

கூளிவாசமூலி *kūḷivāša-mūli,* பெ.(n.) கருமத்தை; black dhatura (சா.அக.).

[கூளிவாச(ம்) + மூலி.]



கூளைக்கல் *kūḷai-k-kal,* பெ.(n.) செங்கல்; brick (சா.அக.).

[கூளை + கல்.]

கூற்கேவு *kūṟ-kēvu,* பெ.(n.) கடுகு; mustard (சா.அக.).

[கூற் + கேவு.]

கூறம்[1] *kūṟam,* பெ.(n.) 1. பாகல்; balsam pear - *Momordica Charantia.* 2. நவாச்சாரம்; chloride of ammonia. 3. சுரை; bottle gourd - *Cucurbita lagenaria.* 4. கொடிப் பாலை; cotton milk plant - *Dregea volubilis;* twining swallow wort - *Asclepias volubilis.* 5. ஊசிப் பாலை; needle-leaved swallow wort - *Oxystelina esculentum.* 6. வெட்பாலை; conessi or tellicherry bark - *Nerium anti - dysentericum* (சா.அக.).

கூறம்[2] *kūṟam,* பெ.(n.) ஆமை; tortoise; turtle (சா.அக.).

[குறு - கூறம்.]

கூறல்[1] *kūṟal,* பெ.(n.) 1. நாகபாடாணம்; a kind of prepared arsenic. 2. இறகு; feather (சா.அக.).

[குறு - குறல் - கூறல்.]

கூறல்[2] *kūṟal,* பெ.(n.) ஆமை; tortoise; turtle (சா.அக.).

[குறு + கூறல்.]

கூறாகிவேம்பு *kūṟāgi-vēmbi,* பெ.(n.) நில வேம்பு; ground neem - *Justiela Paniculata* (சா.அக.).

[கூறாகி + வேம்பு.]

கூற்றங்குமரனார் *kūṟṟaṅ-kumaraṉār,* பெ.(n.) சங்கப் புலவர்களுள் ஒருவர்; a poet, belong to Šaṅgamage.

முகம்புகு கிளவி பாடியவரில் ஒருவர். நற்றிணை 244ஆம் பாடலில் குறிஞ்சித் திணையைப் பாடியுள்ளார் (அபி.சிந்.).

கூறுகம் *kūṟugam,* பெ.(n.) எள்; a kind of gingelly seed (சா.அக.).

கூறுச்சீட்டு *kūṟu-c-ciṭṭu,* பெ.(n.) பங்கு ஆவணம் (பாகப் பிரிவினைப் பத்திரம்); deed of partition (செ.அக.).

[கூறு + சீட்டு.]

கூனத்தை *kūṉattai,* பெ.(n.) ஏலம்; cardamon (சா.அக.).

கூனம் *kūṉam,* பெ.(n.) ஏலரிசி; seeds of cardamon (சா.அக.).

கூனயிக்குடையாள் *kūṉaiyi-k-kuḍaiyāḷ,* பெ.(n.) 1. இலைக்கள்ளி, கள்ளி வகை; five-tubercled spurge - *Euphorbia nerifolia.* 2. கானாங்கள்ளி; spiral five-tubercled spurge - *Euphorbia nivulia* (சா.அக.).

கூனலன்[1] *kūṉalaṉ,* பெ.(n.) 1. நத்தை; snail. 2. நாரை; carmorant, stork (சா.அக.).

கூனலன்[2] *kūṉalaṉ,* பெ.(n.) கூனில்லாதவன்; one free from crookedness (சா.அக.).

கூனலாயிரு-த்தல் *kūṉalāi-y-iru-,* 3 செ.கு.வி. (v.i.) முதுகு வளைந்து இருத்தல்; being crooked; being hunch, baeked (சா.அக.).

[கூனலாய் + இரு-த்தல்.]

கூனற்கிழவி *kūṉar-kiḻavi,* பெ.(n.) முதுகு வளைந்த கிளவி; an old woman with a crooked back (சா.அக.).

மறுவ. கூனி

[கூனல் + கிழவி.]

கூனிக்குறுகு-தல் *kūṉi-k-kuṟugu-,* 3 செ.கு.வி. (v.i.) முதுகு வளைந்து உடம்பு சிறுத்தல்; becoming hunched - backed and short in stature (சா.அக.).

[கூனி + குறுகு-தல்.]

கூனிக்கெண்டை *kūṉi-k-keṇḍai,* பெ.(n.) சிறு கெண்டை மீன்; small crap fish - *Cyprinus fimbriatus* (சா.அக.).

[கூனி + கெண்டை.]



கூனிதாரன் *kūṉidāraṉ,* பெ.(n.) கொலையாளி; killer, murderer (செ.அக.).

கூனிப்பார்-த்தல் *kūṉi-p-pār-,* 4 செ.கு.வி. (v.i.) குனிந்து பார்த்தல்; looking at a thing stooping (சா.அக.).

[கூனி + பார்-த்தல்.]

கூனிமிர்-த்தல் *kūṉimir-,* 3 செ.கு.வி.(v.i.) முதுகின் வளைவை நிமிர்த்தல்; to correct the hunch on the back (சா.அக.).

[கூன் + நிமிர்-த்தல்.]

கெக்கரீசம் *kekkarīšam,* பெ.(n.) செங்கழுநீர் (சித்.அக.); red Indian water-lily (செ.அக.).

கெங்குபட்டர் *keṅgu-paṭṭar,* பெ.(n.) தருமன் காட்டில் கரந்துறைந்த போது வைத்துக் கொண்ட பெயர்; name which Taruman christened himself, when he dwelt in the forest (அபி.சிந்.).

கெசம் *kešam,* பெ.(n.) யானை; elephant. *"கெசதுரக முதலான சதுரங்கம்" (தாயு.சித்தர்.6) (செ.அக.).*

[Skt. gaja > த. கெசம்.]

கெசகன்னம் *keša-kaṉṉam,* பெ.(n.) 1. காதாட்டும் கல்வி (வித்தை); elephant's ear, term used to denote the art of moving or waving one's in imitation of the elephant. 2. பெரு முயற்சியால் ஆக வேண்டிய செயல்; a task involving stupendous effort, Herculeam task.

கெசகன்னிவாழை *keša-kaṉṉi-vāḻai,* பெ.(n.) மொந்தன் வாழை (சித்.அக.); abyssinian banana (செ.அக.).

கெசகோழகன் *keša-kōḻagaṉ,* பெ.(n.) ஒரு வானர வீரன்; monkey soldier (அபி.சிந்.).

கெசபூகம் *keša-pūgam,* பெ.(n.) துவரை (சித்.அக.); dholl (செ.அக.).

கெசமாமுட்டி *kešamā-muṭṭi,* பெ.(n.) மரவகை (மலை.); strychnine tree - *Strychnos nux-vomica* (செ.அக.).

கெசராசினி *keša-rāšiṉi,* பெ.(n.) பூலா (சித்.அக.); black-berried feather foil (செ.அக.).

கெசாசைநா *kešāšaiņā,* பெ.(n.) கரிசலாங்கண்ணி (பிங்.); a plant growing in wet places - *Eclipta alba* (செ.அக.).

கெசாசனை *kešāšaņai,* பெ.(n.) அரசு (யாழ்.அக.); pipal tree (செ.அக.).

கெட்டகேட்டுக்கு *keţţakēţţukku,* வி.அ. (adv.) இகழ்ச்சியாக இருக்கும் மோசமான நிலை; a term used derisively to contrast what one desires with what one deserves. *இந்த ஊர் கெட்டகேட்டுக்கு விளையாட்டு அரங்கம் வேறா?.*

கெட்டான் *keţţāņ,* வி.மு.(adv.) சிறந்த எடுத்துக்காட்டையும் மிஞ்சும் வகையில் ஒன்று இருப்பதாகக் கூறும்போது சிறந்த எடுத்துக்காட்டே தன்மையில் குன்றிவிட்டது என்பதைத் தெரிவிக்கப் பயன்படுத்துவது; when the thing compared excels the best example it is used to indicate that the original is devalued; go one better than the best; outdo. *உன் திருடன் ஒப்பனை (வேஷம்) நன்றாக உள்ளது. உண்மைத் திருடன் கெட்டான்!.*

[கெடு + ஆன்.]

கெட்டியாக *keţţiyāga,* வி.அ.(adv.) நழுவி வந்து விடாதபடி; இறுக்கி; உறுதியாக; tightly; firmly. *முடிச்சைக் கெட்டியாகப் போடு. குழந்தை பயந்துபோய் என் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது.*

கெட்டுவிடு-தல் *keţţu-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) கிளை விடுதல்; to sent out branches; to ramify, branch out (செ.அக.).

[கெட்டு + விடு-தல்.]

கெடி *keḍi,* பெ.(n.) பயணத்தின் போது எருது, குதிரைகளை மாற்றும் இடம்; a location in a journey, where the horses or bulls of carriages are changed (செ.அக.).

கெடுதோசி *keḍu-tōši,* பெ.(n.) தீவினையோன் (படுபாவி); heinous sinner, a term of reproach. *'மாண்டா ருயிரளிக்கு மாமருந்தை வேரோடு கீண்டெறி வாரிந்தக் கெடுதோசிக ளென்பார்' (இரக்ஷ.சரி.322) (செ.அக.).*

கெண்டகாரணி *keņḍa-kāraņi,* பெ.(n.) 1. சீவகமூலி; moon-creeper *Menispermum Cordifolium.* 2. சிவதை; turpeth root - *Lpomasea turpethum* (சா.அக.).

கெண்டபேரண்டபட்சி *keņḍa-pēraņḍa-paţci,* பெ.(n.) இருதலைப் பறவை; a monstrous and mythical two headed bird represented as holding an elephant or a serpent in its beak and in its claws (சா.அக.).

[கண்டம் → கெண்டம் + பேரண்டம் + Skt. பட்சி.]

கெண்டைக்காரி *keņḍai-k-kāri,* பெ.(n.) உரோம வேங்கை; East Indian Kino alias Indian dragon's blood - *Pterocarpus marsupium* (சா.அக.).

கெணை *keņai,* பெ.(n.) 1. கரும்பு; sugarcane - *Saccharum officinarum.* 2. கணநோய்; a kind of a trophy in children due to rickets or tabes mesenterica. 3. திப்பிலிக் கட்டை; the root of long-pepper, piper longum. 4. திரண்ட வடிவு; cylinderical shape. 5. கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்; a disease attacking cattle (சா.அக.).

[கணு + கெணை.]

கெத்தமார் *kettamār,* பெ.(n.) புளிப்புத் தன்மை கொண்ட மிகப் பெரிய காய்களை யுடைய மாவகை; a mango tree that bears very big fruits sour in taste (செ.அக.).

[கெத்து + மார்.]

கெந்தகக்கோலி *kendaga-k-kōli,* பெ.(n.) தூம்பிரவாலி; an unknown plant (சா.அக.).

கெந்தககற்பம் *kendaga-kaṟpam,* பெ.(n.) வில்வம்; bael tree - *Crataeva religiosa* (சா.அக.).

[கந்தக + கற்பம்.]

கெந்தகத்தைத்தைலமாக்கி *kendagattai-t-tailamākki,* பெ.(n.) 1. காட்டுக்கருணை; a species of forest elephant-yam referred to in the siddhars science. 2. இரும்பிலி; box leaved satin ebony - *Maba buxifolia.* 3. ஒட்டொட்டி; a kind of grass with prickly seeds which stick to the clothes - *Desmochacta attopurpurea.* 4. சங்கங் குப்பி; smooth volkameri - *Cleodendron inerme.* 5. பேய்க் கடலை; bitter bengal gram (சா.அக.).

[கந்தகத்தை – கெந்தகத்தை + Skt. தைலம் + ஆக்கி.]

கெந்தகநரணி *kendaga-naraṇi,* பெ.(n.) பேரரத்தை; greater galangal - *Alpinia galangal* (சா.அக.).

கெந்தகமாஞ்சில் *kendaga-māñjil,* பெ.(n.) **கெந்தகமாஞ்சிலி** பார்க்க; see *kendaga-māñjili* (சா.அக.).

கெந்தகமிஞ்சிதம் *kendaga-miñjidam,* பெ.(n.) நாகதாளிக் கள்ளி; many sined prickly pear - *Opuntia spinosissima* (சா.அக.).

கெந்தசாரஞ்சம் *kenda-šārañjam,* பெ.(n.) சந்தனம்; sandal (சா.அக.).

கெந்தபுட்பபத்திரி *kenda-puṭpa-pattiri,* பெ.(n.) துளசி; holy basil - *Ocimum sanctum* (சா.அக.).

கெந்தபொடி *kenda-poḍi,* பெ.(n.) குளியலுக்குப் பயன்படுத்தும் ஒருவகை நறுமணப் பொடி; aromatic powder used in bath. *"மடவா யுன்றனுக்குக் கெந்த பொடியேன்" (தனிப்பா.1, 88, 173) (செ.அக.).*

[கந்தம்→கெந்தம் + பொடி.]

கெந்தரசம் *kenda-rašam,* பெ.(n.) நறும் பிசின்; fragrant resin (சா.அக.).

[கெந்தம் + Skt. ரசம்.]

கெந்தரத்தியாதி *kendarattiyāti,* பெ.(n.) சிவப்புச் செவ்வந்தி அல்லது சிவப்புச் சாமந்தி; red chamomile - *Chrysanthemum indicum* (சா.அக.).

கெந்தனம் *kendaṉam,* பெ.(n.) ஒரு வகைப் பூடு (மலை.); coromandal gendarussa - *Justicia procumbens* (செ.அக.).

[கந்து – கந்தனம் – கெந்தனம்.]

கெந்தனாகுலியம் *kendaṉā-kuliyam,* பெ.(n.) கருப்பு மிளகுச் செடியின் வேர் (செவ்வியம்); root of black pepper plant - *Piper nigrum* (சா.அக.).

[கந்தனம் + குலியம்.]

கெந்தனோபிதம் *kendaṉōbidam,* பெ.(n.) பரம்பை; Indian mesquit or Arjuna's penance tree - *Prosopis spicigera* (சா.அக.).

கெந்தாளியாட்சி *kendāḷi-y-āṭci,* பெ.(n.) பாலிருள் செடி; a kind of plant (சா.அக.).

கெந்தாளிரோகம் *kendāḷi-rōgam,* பெ.(n.) செரியாமையால் ஏற்படக்கூடிய வயிற்று வலி முதலிய வயிறு குறித்த நோய் (குன்ம நோய்); gastritis (செ.அக.).

[குந்து + கெந்து கெந்தாளி + Skt. ரோகம்.]

கெந்திகபாளை *kendiga-pāḷai,* பெ.(n.) ஆடுதின்னாப் பாளை (சித்.அக.); worm killer (செ.அக.).

கெந்தியதைசுத்தியாக்கி *kendi-yadai-šutti-y-ākki,* பெ.(n.) ஆற்று முள்ளங்கி; சுவற்று முள்ளங்கி; wild country radish, wall radish - *Blumea aurita* (சா.அக.).

கெந்திரதூதிசம் *kendira-tūdišam,* பெ.(n.) பெரு வழுதலை; brinjal of a larger species - *Solanum indicum* (சா.அக.).

கெந்திவிருட்சம் *kendi-viruṭcam,* பெ.(n.) முன்னை; sbinous fire brand teak - *Premna integrifolia* (சா.அக.).

[கந்தி + விருட்சம்.]

கெந்திவிருட்சோகம் *kendi-viruṭcōgam,* பெ.(n.) முன்னை மரப்பொது (சங்.அக.); fire brand teak - *Premna* (செ.அக.).

கெபூரமயம் *kepūra-mayam,* பெ.(n.) கொடி மாதுளை; lemon citron - *Limonimedica* (சா.அக.).

கெராசி *kerāši,* பெ.(n.) பூலா; a tall plant of the phyllanthus genus (சா.அக.).

கெருடக்காந்தகம் *keruḍa-k-kāndagam,* பெ.(n.) செம்பருந்து; red kite - *Haliastur indus* (சா.அக.).

[கருட + காந்தகம்.]

கெருடக்கிழங்கு *keruḍa-k-kiḻaṅgu,* பெ.(n.) கொல்லன் கோவைக் கிழங்கு; ஆகாச கருடன் கிழங்கு; demon root; sky - root - *Corallocarpus epigea* (சா.அக.).

[கருடன் + கிழங்கு.]

கெருடவாகனப்பூடு *keruḍa-vāgaṉa-p-pūḍu,* பெ. (n.) கோபுரந் தாங்கி பூடு; coromandel chiretta - *Andrographis echioides* (சா.அக.).

கெருடாபதி *keruḍā-pati,* பெ.(n.) விஷ்ணு காந்தி; Vishnu basil; Vishnu plant - *Evolvulus alsinoides* (சா.அக.).

[கலுழன் → கருடன் → கெருடன் + பதி.]

கெலிபிடி-த்தல் *keli-piḍi-,* 4 செ.கு.வி.(v.i.) பயம் உண்டாதல்; getting afraid or shocked (சா.அக.).

[கிலி – கெலி + பிடி.]

மறுவ. கிலிபிடித்தல்.

கெவுதவாரனி *kevuda-vāraṉi,* பெ.(n.) வெள்ளைக் காக்காணம்; white mussell shell creeper, *Clitorea ternatea* (சா.அக.).

[கவுத + வாரனி.]

கெவுதும்பா *kevu-tumbā,* பெ.(n.) 1. பூ கவிழ்ந்துள்ள ஒரு வகைத் தும்பைச் செடி; stooping toombay flower, *Leucas Procumbens alias Nepata Indica.* 2. மலைத் தும்பை; hill toombay, *Phlomis biflora* (சா.அக.).

[கவிழ் + தும்பை.]

கெவுராசிகம் *kevurāšigam,* பெ.(n.) 1. துளசி; holy basil, *Ocimum sanctum.* 2. கடுகு; mustard (சா.அக.).

[காவு + ராசிகம்.]

கெவுனகம் *kevuṉagam,* பெ.(n.) கணங்கன் மரம்; an unknown tree supposed to possess high virtues (சா.அக.).

கெளிற்றுமீன் *keḷiṟṟu-mīṉ,* பெ.(n.) கெளிறு; a kind of tumy or cat fish (சா.அக.).

[கெளிறு + மீன்.]

சிற்றூர்களில் ஏரி, குளம், குட்டை, கண்மாய் போன்ற நீர்நிலைகளில் இவ்வகை கெளிற்று மீன்கள் காணப்படுகிறது.



கெளிற்றுமுள்ளி *keḷiṟṟu-muḷḷi,* பெ.(n.) கெளிற்று மீனைப் பிடித்தற்குரிய தூண்டில்; tackle used in catching *keḷiṟṟu-mīṉ* (செ.அக.).

கேக்குவிரை *kēkku-virai,* பெ.(n.) சீமைச் சோம்பு செடிவகை; caraway (செ.அக.).

கேக்கைசி *kēkkaiśi,* பெ.(n.) தாழை; screwpine tree, *Pandanus odoratissimus* (சா.அக.).

கேசநாகுலி *kēśanāguli,* பெ.(n.) 1. இருசுவர் சற்பாட்சி எனும் மூலிகை; a plant said to be used in complaints arising from germs. 2. ஒரு வகை நாணற் புல்; a kind of plant (சா.அக.).

[கேசம் + நாகுலி.]

கேசரமாகயம் *kēśara-māgayam,* பெ.(n.) மகிழ மரம்; ape-flower tree, *Mimusops elengi* (சா.அக.).

கேசராசம் *kēśa-rāśam,* பெ.(n.) 1. கடார நாரத்தை; bigarada orange or seville orange, *Citrus aurantium.* 2. பொற்றலை; Ceylon verbesina. 3. கையாந்தகரை; eclipse plant, *Eclypta Prostrata* (சா.அக.).

[கேசம் + ராசம்.]

கேசராமிலம் *kēśa-rāmilam,* பெ.(n.) புளி மாதுளை; sour pomegranate, *Punica granatum* (சா.அக.).

[கேசரம் + அமிலம்.]

கேசருகாசம் *kēśaru-kāśam,* பெ.(n.) சிறுநீலி; a small species of indigo plant, *Indigofera tinctoria* (சா.அக.).

கேசரோமம் *kēśa-rōmam,* பெ.(n.) பூனைக் காலி; velvet bean, Mucana pruriens (சா.அக.).

[கேசம் + ரோமம்.]

கேசவரிட்டம் *kēśa-variṭṭam,* பெ.(n.) பூவா மரம்; a tree bearing no flowers (சா.அக.).

கேசாகம் *kēśāgam,* பெ.(n.) மகிழம்பூ; ape-flower; West Indian medlar, *Mimusps elengi* (சா.அக.).

கேசாம்பு *kēśāmbu,* பெ.(n.) வெட்டி வேர்; khus khus root, *Andropogon aromatcus* (சா.அக.).

கேசாரங்கம் *kēśārangam,* பெ.(n.) செவ்வந்தி; Indian Chamcmile, *Authemis nobilis* (சா.அக.).

கேசாரிசம் *kēśāriśam,* பெ.(n.) ஒரு வகை நாரத்தை; bitter orange, *Citrus aurantium* (சா.அக.).

கேட்டித்தடி *kēṭṭi-t-taḍi,* பெ.(n.) தாற்றுக் கோல்; staff or rod for driving oxen, ox-goad (செ.அக.).

[கிட்டி + தடி.]

கேடாய்-த்தல் *kēḍāy-,* 4 செ.கு.வி.(v.i.) பங்கு பிரித்தல்; to separate, effect a partition, divide (செ.அக.).

[கின் - கீள் - கீடாய் - கேடாய்]

கேட்பாரில்லாமல் *kēṭpārillāmal,* வி.அ. (adv.) **கேட்பாரற்று** பார்க்க; see *kēṭpāraṟṟu.* தெருவில் கேட்பார் இல்லாமல் ஒரு பை கிடந்தது.

[கேட்பார் + இல்லாமல்.]

கேட்பாரற்று *kēṭpāraṟṟu,* வி.அ.(adv.) கவனிப்பதற்கோ கண்காணிப்பதற்கோ உரிமை கொண்டாடுவதற்கோ யாரும் இல்லாத நிலை; without anyone to care for or claim or oversee. *கேட்பாரற்று ஊர் சுற்றித் திரிகிறாயே.*

[கேட்பார் + அற்று.]

கேடயம் *kēḍayam,* பெ.(n.) பெற்ற வெற்றி, புரிந்த அருவினை (சாதனை) முதலிய செய்தி

பொறித்த தட்டு வடிவ ஒப்பனைப் பரிசு; a memento in the form of a shield awarded to a winner or one who has done something meritorious. *போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குக் கேடயம் வழங்கப்பட்டது.*

[கிருகு - கிடயம் - கேடயம்.]

கேடிலியப்பப்பிள்ளை *kēḍiliyappa-p-piḷḷai*, பெ.(n.) தாயுமானவரின் தந்தை; father of *tāyumāṉavar* (அபி.சிந்.).

[கேடு + இலி + அப்பன் + பிள்ளை.]

கேத்திரம் *kēttiram*, பெ.(n.) 1. நற்பேறு பெற்ற இடம்; sacred place, shrine, any place of pilgrimage. *"ஞானமிக்களிக்குங் கேத்திரத்தின்" (திருவானைக். மூர்த்.4).* 2. விளைநிலம்; land, field (செ.அக.).

[கேந்திரம் -கேத்திரம்.]

கேத்து *kēttu*, பெ.(n.) வயல்; field (செ.அக.).

[செய் (வயல்) = செய்தது - கேத்து.]

கேத்துவாரி *kēttu-vāri*, பெ.(n.) புன்செய் விளைவில் குடியானவனும், அரசும் அவரவர்க்குரிய பகுதியைப் பிரித்துக் கொள்ளும் முன் கோயில்களுக்குக் கொடுக்கும் பாகம்; portion taken as temple-revenue from the gross produce of dry lands, before a division of the yield is effected between the ryot and Government (செ.அக.).

[கேத்து+ வாரி.]

கேதம்விசாரி-த்தல் *kēdam-višāri-*, செ.கு.வி.(v.i.) நடந்த துயரத்தைக் குறித்து வினவுகை; to condole with mourners (செ.அக.).

மறுவ. துக்கம் விசாரித்தல்

[ஏதம்→ கேதம் + Skt. விசாரி-த்தல்.]

கேதுபுட்பம் *kēṭ-puṭpam*, பெ.(n.) சாவை உண்டாக்கும் ஒரு நச்சுக் கிழங்கு; a poisonous root causing death (சா.அக.).

கேதுவசம் *kēdu-vašam*, பெ.(n.) இழுப்பு நோய்களைக் கட்டுப்படுத்தி, உடற்சூட்டைத் தணிக்கும் ஒரு வகைக் கொடி; a creeper found everywhere which is useful for urinary diseases and rheumatism, It is used as a Laxative and audorific.

[கேது + வசம்.]

இதில் மூன்று வகை உண்டு. அவை:
1. சிறுகட்டுக் கொடி (Coagulating variety);
2. பெருங்கட்டுக் கொடி (Broom Creeper);
3. கருங்கட்டுக்கொடி (Cocculus Villosus).

கேந்தகம் *kēndagam*, பெ.(n.) ஒரு வகைப் பூடு (மலை.); coromandel gendarussa (செ.அக.).

கேந்துவாலிகம் *kēndu-valigam*, பெ.(n.) புகையிலை; tobacco (சா.அக.).

கேமசரி *kēmašari*, பெ.(n.) சீவகன் மனைவியருள் ஒருத்தி; one of his wifes of Šīvakāṉ (அபி.சிந்.).

கேமாசிகம் *kēmāšigam*, பெ.(n.) பிரப்பங் கிழங்கு; water-rattan root, *Calamus rotang* (சா.அக.).

கேலிவிருட்சம் *kēli-viruṭcam*, பெ.(n.) கடம்பு; kadambu tree, *Eugenia racemosa* (சா.அக.).

கேவலசுழுத்தி *kēvala-šuluttí,* பெ.(n.) முத்தி (கேவல) நிலைக்குச் செல்லும் பொழுதும் அதன் கணின்று மீளும் பொழுதும் ஆதன் நிற்கும் நிலைகளுள் ஒன்றாகிய பொறிகள் செயலற்று உறங்கும் (சுழுத்தி) நிலை; the Šuluttí condition of the embodied soul on its way to, and from kēvalakkiḍai (செ.அக.).

[கேவலை + சுழுத்தி.]

கேவலசைதந்யம் *kēvala-šaidanyam,* பெ.(n.) ஆதன் அறிவு வடிவமாக உள்ள நிலை; condition of soul when it becomes one with the supreme knowledge. *"கேவல சைதந்யமாகிய ஆத்மாவினிடம்" (சித்.சிகா.197, 2, உரை) (செ.அக.).*

[கேவலம் + Skt. சைதந்யம்.]

கேவு-தல் *kēvu-,* செ.கு.வி.(v.i.) 1. மூச்சுத் திணறல்; breathing with difficulty as in whooping cough. 2. செருமி அழுவுதல்; crying, as a child seeking breath. 3. மூச்சு திக்குமுக்காடல்; gasping for breath or go groaning as a dying person (சா.அக.).

[ஏவு + கேவு.]

கேழ்த்த *kēltta,* பெ.எ.(adj.) 1. நிறங் கொண்ட; bright hued. *"கேழ்த்த வடித்தாமரை" (திவ்.இயற்.3, 96).* 2. மிகுந்த; abundant. *"கேழ்த்த சீரான்" (திவ்.திருவாய்.3, 1, 7) (செ.அக.).*

[கேழ் – கேழ்த்த.]

கேழ்வு *kēlvu,* பெ.(n.) தோணிக் கூலி; freight (செ.அக.).

[கேழ் – கேழ்வு.]

கேள்விக்குறி *kēlvi-k-kuri,* பெ.(n.) 1. கேள்வித் தொடர் (வாக்கியம்) என்பதை உணர்த்த இடப்படும் கொக்கி வடிவக் குறி, கேள்வியை உள்ளடக்கிய முகக் குறி (பாவனை); in punctuation question mark gesture expressive of the desire to know the cause or possible reasons for something. *கூடி நின்ற கூட்டத்தைப் பார்த்து விட்டு ஒரு கேள்விக்குறியோடு என்னை நோக்கினார்.* 2. மனத்தில் தொக்கி நிற்கும் கேள்வி அல்லது ஐயம் (சந்தேகம்); question in one's mind; question mark over something. *இந்தத் திட்டம் குறித்த காலத்திற்குள் முடிவடையுமா என்பது கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது*

[கேள்வி + குறி.]

கேள்விஞானம் *kēlvi-ñānam,* பெ.(n.) ஒரு துறையில் முறையாகப் பயிற்சி பெறாமல், கேட்பதால் பெறும் அறிவு; knowledge gained through observation and hearing (க்ரியா.).

[கேள்வி + Skt. ஞானம். ஞானம் = த. அறிவு.]

கேள்விநரம்பு *kēlvi-narambu,* பெ.(n.) காது கேட்பதற்குக் காரணமான நரம்பு; nerve responsible for hearing (சா.அக.).

[கேள்வி + நரம்பு.]

கேள்விமேற்கொடி *kēlvi-mēr-kodi,* பெ.(n.) கருங்குன்றி மணி; crab's-eye plant - *Abrus precatorius melanospermus* (சா.அக.).

கேள்வு[1] *kēlvu,* பெ.(n.) மூச்சத் திணறுகை; to breathe heavily; to gasp for breath, as a dying person.

[கேள் – கேள்வு.]

கேள்வு[2] *kēlvu,* பெ.(n.) 1. கடுகு வகை (பிங்.); white mustard. 2. தோணி முதலியவற்றில் ஏற்றுதற்குரிய கூலி; charge for transporting goods by sea; freight (செ.அக.).

தெ., ம., து., கேவு.

கேளவிபந்தம் *kēlavi-pandam,* பெ.(n.) கடலாத்தி; falcate trumpet flower, *Dolichandrone faicata* (சா.அக.).

[கேளவி + பந்தம்.]

கேளாஒலி *kēḷā-oli,* பெ.(n.) காதினால் உணர முடியாததும் புதுக் கருவிகளால் பதிவு செய்யக் கூடியதுமான ஒலி; ultrasound.

[கேள்→கேளா + ஒலி.]

கேளிருள்ரத்தினம் *kēḷiruḷ-rattiṉam,* பெ.(n.) மாணிக்கம்; a kind of superior ruby (சா.அக.).

[கேள் + இருள் + Skt.ரத்தினம்.]

கேளிவிலாசம் *kēḷi-vilāšam,* பெ.(n.) வேடிக்கையான காலப்போக்கு; pastime, amusement (செ.அக.).

[கேலி→கேளி + Skt. விலாசம்.]

கேற்று *kēṟṟu,* பெ.(n.) சிறு நங்கூரம்; light anchor used in warping (செ.அக.).

[சிறு – சிற்று – கேற்று.]

கேனங்கொண்டவன் *kēṉaṅ-koṇḍavaṉ,* பெ. (n.) கிறுக்கன்; a lunatic (சா.அக.).

மறுவ. கோட்டி.

[கேனம் + கொண்டவன்.]

கைக்கட்டிக்கொண்டு *kaikkaṭṭi-k-koṇḍu,* வி.அ.(adv.) தடுக்கவோ, எதிர்க்கவோ செய்யாமல் சும்மா இருத்தல்; பேசாமல்; doing nothing at the time when one could intervene. *கலவரம் நடந்த போது காவலர்கள் கைகட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தார்களா? அவன் என்னை அடித்த போது நீ கைகட்டிக் கொண்டுதானே இருந்தாய்?.*

[கை + கட்டி + கொண்டு.]

கைக்கட்டு[1] *kai-k-kaṭṭu,* பெ. (n.) 1. கைகளைக் கட்டிக் கொள்கை; folding the hands. 2. கைகளில் அடிபட்டாலோ, முறிவு ஏற்பட்டாலோ மருத்துவரால் கட்டப்படும் கட்டு; bandage.

[Ma. Kaiketṭu > த. கைக்கட்டு]

[கை + கட்டு ம. கைகெட்டு > த. கைக்கட்டு.]

கைக்கட்டு[2] *kai-k-kaṭṭu,* பெ.(n.) மகளிர் கையில் அணியும் அணி வகை; ornament for the arm or waist of a women (செ.அக.).

[Tu. Kaikaṭṭu > த. கைக்கட்டு]

[கை + கட்டு.]

கைக்கடிகாரம் *kai-k-kaḍigāram,* பெ.(n.) மணிக்கட்டில் கட்டிக் கொள்ளும் பொழுது (நேரம்) காட்டும் கருவி; wrist watch.

[கை + கடிகாரம்.]

கைக்குள்போடு-தல் *kaikkuḷ-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) தன் விருப்பப்படி நடந்து கொள்வதற்காக, கண்காணிக்கும் அதிகாரம் உடைய நபரையோ அமைப்பையோ தன் வயப்படுத்துதல்; have someone in one's pocket. *மேலதிகாரியைக் கைக்குள் போட்டுக் கொண்டு தன் விருப்பப்படி ஆடுகிறான். தன் பணத்தால் ஊரையே கைக்குள் போட்டுக் கொண்டான்*

[கைக்குள் + போடு-தல்.]

கைக்குறிநூல் *kai-k-kuṟi-nūl,* பெ.(n.) கைவரை பார்க்கும் நூல்; palmistry; chiromancy (சா.அக.).

[கை + குறி + நூல்.]

கைக்கோடாலி *kai-k-kōḍāli,* பெ.(n.) சிறு கோடாலி; hatchet (செ.அக.).

[கை + கோடாலி.]



கைகட்டி *kaikaṭṭi,* வி.அ.(adv.) மிகவும் பணிந்து போகை; most humbly; cap in hand. *மன்னர் சிலர் ஆங்கிலேயர்களுக்குக் கைகட்டி வேலை செய்தனர்*

[கை + கட்டி.]

கைகட்டிக்கிட-த்தல் *kaikaṭṭi-k-kiḍa-,* 3 செ.கு.வி. (v.i.) நோயாளியின் இரண்டு கைகளையும் கட்டி படுக்கையிற் சேர்த்தல்; letting the patient lie on a cot witt the hands tied together or sometimes to a cot (சா.அக.).

[கை + கட்டி + கிட-.]

கைகட்டிக்கொள்ளு-தல் *kai-kaṭṭi-k-koḷḷu-,* 16 செ.கு.வி.(v.i.) 1. கைகளைக் குறுக்கே கட்டிக் கொள்ளல்; joining the arms across, a sign of respect (சா.அக.).

[கைகட்டி + கொள்ளு-தல்]

கைகட்டு-தல் *kai-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. இரண்டு கைகளைக் குறுக்காக மடித்தல்; putting or folding the hands across. 2. முறிந்த கைக்குக் கட்டுப் போடல்; bandaging the fractured hand or arm. 3. நோயாளியின் இரண்டு கைகளையும் சேர்த்துக் கட்டல்; tying the hands together (சா.அக.).

[கை + கட்டு-தல்.]

கைகண்டகலை *kai-kaṇḍa-kalai,* பெ.(n.) தாழ்ந்த மாழைகளைப் பொன்னாக்கும் முயற்சி; alchemy (சா.அக.).

மறுவ. பொன்னாக்கல்

[கைகண்ட + கலை.]

கைகண்டவித்தை *kai-kaṇḍa-vittai,* பெ.(n.) **கைகண்டகலை** பார்க்க; see *kai-kaṇḍa-kalai* (சா.அக.).

[கைகண்ட + Skt. வித்தை.]

கைகலப்பு *kaikalappu,* பெ.(n.) கையால் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளும் சண்டை; hand-to-hand fight; scuffle. *கூட்டத்தில் கைகலப்பு ஏற்பட்டது.*

[கை + கலப்பு.]

கைகாட்டு-தல் *kai-kāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நோயைக் கண்டறிய வேண்டி நாடி பார்ப்பதற்காகக் கையைக் காட்டல்; stretching out the arm for the pulse to be felt. 2. சாடை காட்டுதல்; making gestures as in love. 3. கைவரையைப் பார்த்து கணியம் சொல்லும்படி கையைக் காட்டல்; showing the hand for revealing one's events in life in accordance with palmistry. 4. போகும் திசையை குறித்தல்; to pointout the direction (சா.அக.).

[கை + கட்டு-தல்.]

கைகால்லுதறிநட-த்தல் *kaikāl-l-udaṟi-naḍa-,* 3 செ.கு.வி.(v.i.) கை கால் தடங்கல் இல்லாமல் அசைத்து நடத்தல்; walking by moving the hands and legs freely (சா.அக.).

[கைகால் + உதறிநட-த்தல்.]

கைகால்வாதம் *kai-kāl-vādam,* பெ.(n.) கை, காலுக்கு ஏற்படும் ஊதை வலி; rheumatism of the limbs (சா.அக.).

[கைகால் + Skt. வாதம்.]

கைகாலசை-த்தல் *kai-kāl-aśai-,* 4 செ.கு.வி.(v.i.) கை கால் ஆட்டல்; moving the limbs (சா.அக.).

[கைகால் + அசை-த்தல்.]

கைகாலுதைத்துக்கொள்ளு-தல் *kai-kāl-l-udaittu-k-koḷḷu-,* 16 செ.கு.வி.(v.i.) வலிப்பு நோயால் கையையும், காலையும் உதைத்துக் கொள்ளுதல்; moving the hands and feet alternatively or in quick succession due to tonic or clonic convulsions as in epi-lepsy (சா.அக.).

[கைகால் + உதைத்து + கொள்ளு-தல்.]

கைகொட்டிச்சிரி-த்தல் *kaikotti-c-ciri-*, 4 செ.கு.வி. (v.i.) இகழ்ச்சியை வெளிப் படுத்துதல்; laugh at; mock at; deride. *ஊரே கைகொட்டிச் சிரிக்கும் அளவுக்கு நடந்து கொண்டாய்*

[கை + கொட்டி + சிரி-த்தல்.]

கைகோத்துக்கொண்டு *kai-kōttu-k-kondu*, வி.எ.(adv.) வேறுபாடு இல்லாமல் இணைந்து; hand in hand; hand in glove. *கடத்தல்காரர்கள் கள்ளச் சந்தைக் காரர்களுடன் கைகோத்துக் கொண்டு ஆதாயம் தேடுகிறார்கள்.*

[கை + கோத்து + கொண்டு.]

கைச்சந்திராய் *kaiccan-tirāy*, பெ.(n.) கசப்புத் தன்மையுடைய செடி வகை; a species of bitter edible plant; Indian chick weed, *Moilugo Parviflora* (சா.அக.).

கைச்சிகம் *kaiccikam*, பெ.(n.) பாக்கு மரம்; areca-nut palm (சா.அக.).

கைச்சிபம் *kai-c-cibam*, பெ.(n.) சிறு கட்டுக்கொடி; a creeper capable of binding water (சா.அக.).

[கைச்சி + அம்-.]

கைச்சிமிட்டி *kai-c-cimitti*, பெ.(n.) ஏமாற்றுக் கலை; sleight of hand trick (சா.அக.).

[கை + சிமிட்டி.]

கைசரம் *kai-šaram*, பெ.(n.) மகிழம் பூ; ape face flower, *Mimusops elengi* (சா.அக.).

கைசாடைகாட்டு-தல் *kai-šādai-kāttu-*, 5 செ.கு.வி.(v.i.) சைகை காட்டல்; moving the hand expressive of thought or feeling, as patients do with the cure in attendance (சா.அக.).

[கை + சாடை + காட்டு-தல்.]

கைசிகிச்சை *kai-šigiccai*, பெ.(n.) கை பாகமாகச் செய்யும் மருத்துவம்; நாட்டு மருத்துவம்; by experience; palliative treatment (சா.அக.).

[கை + Skt. சிகிச்சை.]

கைசுழற்று-தல் *kai-šularru-*, 5 செ.கு.வி. (v.i.) கையை மாற்றி மாற்றிச் சுற்றுதல்; whirling the hand alternatively in quick succession as in exercises for exciting circulation of blood (சா.அக.).

[கை + சுழற்று-தல்.]

கைசூம்பு[1]-தல் *kai-šūmbu-*, 5 செ.கு.வி.(v.i.) குழந்தைகள் வாயில் விரலை வைத்து சூம்புதல்; sip, suck, mumble, masticate.

[கை + சூம்பு-தல்.]

கைசூம்பு[2]-தல் *kai-šūmbudal*, பெ.(n.) கை சிறுத்தல்; diminution in the size of the hand.

[கை + சூம்புதல்.]

கைசைகை *kai-šaigai*, பெ.(n.) கைசாடை; gestures of the hand (சா.அக.).

[கை + சைகை.]

கைடவன் *kaidavan*, பெ.(n.) திருமாலால் கொல்லப்பட்ட ஓர் அரக்கன்; an asura slain by Viṣṇu. *"மதுகைடவரும் வயிறுருகி மாண்டார்" (திவ்.இயற்.3, 66) (செ.அக.).*

கைடிகம் *kaidigam*, பெ.(n.) 1. மலை எலுமிச்சை; hill lime, *Atlantic monophylla*. 2. கசப்பு நாரத்தை; mountain lime, *Citrus medicalimonum* (சா.அக.).

கைடிகா *kaidikā*, பெ.(n.) புட்டரிசி; a kind of kangoon rice (சா.அக.).

கைத்தறி *kaittari*, பெ.(n.) கையால் இயக்கப்படும் தறி; handloom. *கைத்தறி ஆடைகள். கைத்தறி நெசவாளர்கள்.*



[கை + தறி.]

கைத்தாங்கலாக *kai-t-tāṅgalāga,* வி.அ. (adv.) நடக்க முடியாத நிலையில் இருப்பவரைக் கீழே விழாத வகையில் உதவி செய்யும் பொருட்டு (ஆதரவாக)த் தாங்கிப் பிடித்தல்; throwing the hand around a person in a supporting manner. *மயங்கி விழுந்தவரைக் கைத்தாங்கலாக அழைத்துப் போய் வண்டியில் ஏற்றினார்கள்*

[கை + தாங்கலாக.]

கைத்திருத்தம் *kai-t-tiruttam,* பெ.(n.) கையால் செய்வதில் நேர்த்தியான ஒழுங்கு; deftness in doing something with the hand. *தையல் வேலையானாலும் சமையல் வேலையானாலும் பாட்டியின் கைத்திருத்தம் யாருக்கும் வராது*

[கை + திருத்தம்.]

கைத்தேக்கு *kai-t-tēkku,* பெ.(n.) சிறு தேக்கு; five creeper, *Cleodendron serratum alias C.Javanicum* (சா.அக.).

[கை + தேக்கு.]

கைதட்டல் *kai-taṭṭal,* பெ.(n.) வியப்பு, வெறுப்பு, நகைப்பு முதலியவற்றின் குறியாகக் கைதட்டுகை; to clap or strike hands together in token of defiance, triumph, derision, admiration, etc..

[கை + தட்டல்.]

கைதரியம் *kai-tariyam,* பெ.(n.) 1. வேம்பு; margosa tree, *Melia bukayan.* 2. ஒரு பூடு; a plant, *Myrica sapida* (சா.அக.).

கைதாகு-தல் *kaidāgu-,* 6 செ.கு.வி.(v.i.) குற்றம் புரிந்ததாகக் கருதப்படுவர் காவலரால் பிடிக்கப்படுதல்; get arrested, get imprisoned. *சுதந்திரப் போராட்டக் காலத்தில் எங்கள் ஊரில் பலர் கைதானார்கள்*

[கைது + ஆகு-தல்.]

கைதாரம் *kai-tāram,* பெ.(n.) செந்நெல்; red paddy (சா.அக.).

கைதேர்ந்த *kai-tērnda,* பெ.அ.(adj.) கலையில், தொழிலில் திறமையான; adept in craft, a profession etc. *சமையற்கலையில் கைதேர்ந்த ஐந்து பேரால் இந்த விண்மீன் உணவகம் நடத்தப்படுகிறது. படகு ஓட்டுவதில் கை தேர்ந்தவன்.*

[கை + தேர்ந்த.]

கைந்தபழம் *kainda-paḻam,* பெ.(n.) சோற்றுக் கற்றாழையின் பால்; the juice of aloe-pulp (சா.அக.).

[கைந்தை + பழம்]

கைந்துப்போ-தல் *kaindu-p-pō-,* 8 செ.கு.வி. (v.i.) களிம்பேறல்; forming verdigris (சா.அக.).

[கைந்து + போ-தல்.]

கைந்நீரு *kai-n-nīru,* பெ.(n.) மரகதம்; emerald (சா.அக.).

[கை + நீரு.]

கைநிறைய[1] *kai-niṟaiya,* வி.அ.(adv.) கை கொண்டளவு; handful (சா.அக.).

[கை + நிறைய.]

கைநிறைய[2] *kai-niṟaiya,* வி.அ.(adv.) தேவைக்கும் அதிகமான; of income, remuneration substantially; more than enough. *கைநிறையச் சம்பளம் வாங்கும் மாப்பிள்ளை. கை நிறையச் சம்பாதிக்கும்போது*

உனக்கு என்ன குறை?

[கை + நிறைய.]

கைநீள்—தல் *kai-nīḷ-,* செ.கு.வி. (v.i.) கட்டுப்பாட்டை மீறி தேவை இல்லாமல் கையால் அடித்தல்; behave intemperately where restraint is needed. *பேச்சு நடந்து கொண்டிருந்த போதே அவன் கைநீண்டு விட்டது.*

[கை + நீள்—தல்.]

கைநொடி—த்தல் *kai-noḍi-,* 4 செ.கு.வி.(v.i.) செல்வ நிலைமை கெடுகை; to be reduced in circumstances, reduced to poverty. *"செட்டியார் கைநொடித்துப் போனார்" (செ.அக.).*

[கை + நொடி—த்தல்.]

கைப்பக்குவம் *kai-p-pakkuvam,* பெ.(n.) உணவு, மருந்து முதலியவற்றைப் பதமாக்கும் திறமை; hand skill of a person, to estimate the compounding of ingredients in correct form in cooking and in medicine with good aroma.

[கை + பக்குவம்.]

கைப்பந்து[1] *kai-p-pandu,* பெ.(n.) நடுவில் வலை கட்டிப் பந்தை ஓர் அணியினர் கையால் அடிக்க அதை எதிர் அணியினர் திரும்பிச் செல்லுமாறு அடித்து விளையாடும் தொய்வையால் (ரப்பர்) செய்த விளையாட்டுக் கருவி; valley-ball

[கை + பந்து.]



கைப்பந்து[2] *kai-p-pandu,* பெ.(n.) ஐந்து வகைக் கசப்புச் சுவை; five kinds of bitter.

[கைப்பு + ஐந்து.]

அவையாவன : 1. கருநொச்சி; black notchy, *Gendarussa vulgaris.* 2. வேம்பு; neem tree, *Melia azadirachta.* 3. கண்டங்கத்திரி; prickly brinjal, *Solanum xanthocarpum.* 4. சீந்தில்; moon creeperr, *Tinosora coodifoolia.* 5. பேய்ப் புடல்; wild snake gourd, *Trichosanthes cucumerina* (சா.அக.).

கைப்பரீட்சை *kai-p-pariṭcai,* பெ.(n.) நாடி பார்க்கை; feeling or examining the pulse (சா.அக.).

[கை + Skt. பரீட்சை.]

கைப்பாவை *kai-p-pāvai,* பெ.(n.) பாவைக் கூடத்தில் இருப்பது போல் பிறர் இயக்க இயங்கும் நிலை; puppet figuratively. *தீவிரவாதிகள் பிற நாடுகளின் கைப்பாவையாக ஆகிவிடக் கூடாது. எத்தனைக் காலம் இந்த நாடு கொடுங்கோலரின் (சர்வாதிகாரி) கைப்பாவையாக இருக்கும்.*

[கை + பாவை.]

கைபிடித்துத்தூக்குதல் *kai-piḍittu-t-tūkku-,* 5 செ.கு.வி. (v.i.) ஒருவர் கையைப் பிடித்து எழும்பச் செய்தல்; lifting one by the hand (சா.அக.).

[கை + பிடித்து + தூக்கு—தல்.]

கைப்பிடித்துப்பார்—த்தல் *kai-p-piḍittu-p-pār-,* 4 செ.கு.வி.(v.i.) 1. நாடி நடையை அறிதல்; feeling the pulse of a patient. 2. உள்ளங் கையின் கைவரையைச் சோதித்தல்; reading the lines of the palm; telling fortunes by examining the palm of the hand. 3. திறமையைச் சோதித்தல்; trying one's ability (சா.அக.).

[கை + பிடித்து + பார்-.]

கைப்பிழைபாடு *kai-p-piḻaipāḍu,* பெ.(n.)

1. கைத்தவறான குற்றம், கவனக் குறைவால் நிகழ்ந்த குற்றச் செய்கை; accidental mistake, slip of the pen.

"நாட்டார் வேட்டைக்குப் போன இடத்திலே பள்ளி உழுக்கை நாடாழ்வான் பச்சைப் பள்ளியைக் கைப்பிழை பாடேயெய்ய" (தெ.கல்.தொ.XVII கல்.200). "சம்புரத்திற்கும் பள்ளிசெல்வன் இவ் வூரிருக்கும் பள்ளி வேணாட்டரையனை கைப்பிழையாலெய்து செத்தமையில் கைப்பிழை புகுந்தது இதுக்கு தூணாண்டார் கோயிலிலே அரை விளக்கு வைக்கச் சொல்ல" (தெ.கல்.தொ.7, கல்.68) (கல்.அகர.).

கைப்பிரதி *kai-p-pirati,* பெ.(n.) 1. ஓலைச் சாவடியில் உள்ளதைப் பார்த்து தாளில் எழுதி வைத்த படி (நகல்); handwritten copy of a palm leaf manuscript. 2. கையெழுத்துப் படி (பிரதி); hand written manuscript.

[கை + பிரதி.]

கைப்பொம்மை *kai-p-pommai,* பெ.(n.) **கைப்பாவை** பார்க்க; see *kai-p-pāvai*

கைபோட்டிழு-த்தல் *kai-pōṭṭiḻu-,* 4 செ.கு.வி.(v.i.) கையை உள்ளே விட்டு இழுத்து வெளிப்படுத்துதல்; pulling out by inserting one's hand as a child from the womb (சா.அக.).

[கை +போட்டு + இழு-த்தல்.]

கைப்பரசன் *kai-p-parasaṉ,* பெ.(n.) மிக்கக் கசப்புள்ள நில வேம்பு; ground neem or king of bitter, *Justicia Paniculata* (சா.அக.).

[கைப்பு + அரசன்.]

கைபிசகாக *kai-piśagāga,* வி.அ.(adv.) தவறுதலாக; absentmindedly, inadvertenly. *எழுதுகோலைக் கைபிசகாக எங்கோ வைத்துவிட்டேன் (க்ரியா.).*

மறுவ. கவனக்குறைவாக

[கை + பிசகாக.]

கைபிடித்திழு-த்தல் *kai-piḍittiḻu-,* 4 செ.கு.வி. (v.i.) வலியப் புணர்தல்; seducing or ravishing a woman (சா.அக.).

[கை + பிடித்து + இழு-த்தல்.]

கைபிடிபத்திரம் *kai-piḍi-pattiram,* பெ.(n.) 1. நெருங்கிய நட்பு; intimate friendship, close friendship, mutual confidence. 2. கமுக்கமான (அந்தரங்கமா)ன ஆள்; confidential servant; secret agent (செ.அக.).

[கை + பிடி + Skt. பத்திரம்.]

கைமீறு-தல் *kai-mīṟu-,* 5 செ.கு.வி.(v.i.) காரணியம், சிக்கல் முதலியவை கட்டுப் பாட்டுக்கு உட்படாத அல்லது சமாளிக்க முடியாத நிலையை அடைதல்; problems that exceed beyond a limit to solve. *வீட்டுச் சிக்கல் கைமீறிப் போய் விடுமோ என்று பயப்படுகிறேன்*

[கை + மீறு-தல்.]

கைமுழுத்தம் *kai-muḻuttam,* பெ. (n.) கடையில் முதல் விற்பனை (பேணி) (இலங்.); first sale of the day for cash payment as soon as the shop opens. *கடைக்காரர் இன்றைக்கு நீங்கள் தான் கைமுழுத்தம் என்றார்*

[கை + முளுத்தம்.]

கைமுறி-த்தல் *kai-muṟi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கையை ஒடித்தல்; breaking or causing fracture of the arm. 2. நெட்டி முறித்தல்; wringing the hands. 3. வருத்தத்தால் கையைப் பிசைந்து கொள்ளல்; manifesting grief by convulsive clasping of the hands (சா.அக.).

[கை + முறி-த்தல்.]

கைமுறி-தல் *kai-muri-*, 3 செ.கு.வி.(v.i.) கை தற்செயலாய் ஒடிதல்; fracture of arm or hand occuring accident ally (சா.அக.).

[கை + முறி-தல்.]

கையங்கண்ணனார் *kaiyaṅ-kaṇṇaṉār*, பெ.(n.) கடைக் கழகம் மருவிய புலவர்; the poet who belonged to the last Šaṅgam (அபி.சிந்.).

[கை + அம் + கண்ணன் + ஆர்.]

கையனார் *kaiyaṉār*, பெ.(n.) யாப்பிலக்கண ஆசிரியர்களில் ஒருவர்; a Tamil scholar who wrote a treatise on prosody.

[கையன் + ஆர்.]

இவர் யாப்பிலக்கண நூலாசிரியர். அமுதசாகரர் செய்த காண்டிகையுரையில் இவர் செய்த யாப்பியற் சூத்திரம் ஆங்காங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது (அபி.சிந்.).

கையாலாகத்தனம் *kaiyā-l-āgāttaṉam*, பெ.(n.) எதிர்த்துச் செயற்பட முடியாத வலிமை குறைவான நிலை; இயலாமை; impotence. *தன்னைத் திட்டினவனைப் திட்டாமல் இருந்த தன் கையாலாகாத் தனத்தை நினைத்துக் குமைந்தான்*

[கையால் + ஆகாத்தனம்.]

கையாலாகாத *kaiyālāgāda*, பெ.அ.(adj.) தேவையான வகையில் செயல்பட இயலாத; impotent; helpless. *எதிர்க்காமல் அடங்கிப் போவதால் என்னைக் கையாலாகாத ஆள் என்று நினைத்து விட்டான்.*

[கையால் + ஆகாத.]

கையாற்பிசை-தல் *kai-y-āṟ-pišai-*, 3 செ.கு.வி.(v.i.) 1. கையினால் சதை அழுந்த அமுக்கி விடல்; shampooing; massaging. 2. மாவு முதலியவற்றைக் கையால் பிசைதல்; to mingle; mix with the hand.

[கையால் + பிசை-தல்.]

கையில்பிடித்துக்கொடு-த்தல் *kaiyil-piḍittu-k-koḍu-*, 4 செ.கு.வி. (v.i.) பெண்ணை ஒருவருக்குத் திருமணம் செய்து கொடுத்தல்; give a girl in marriage to some one; marry off a girl. *தங்கையை யாராவது ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்த பின்பு தான் நான் எனது திருமணத்தைப் பற்றி சிந்திக்க முடியும்*

மறுவ. மணம் முடித்துக் கொடுத்தல்.

[கையில் + பிடித்து + கொடு-த்தல்.]

கையிலாதம் *kaiyilādam*, பெ.(n.) எண் வகை மலைகளுள் ஒன்றும், சிவன் வாழும் இடமுமான மலை (அஷ்டப். திருவரங்கத்தந். 23); mount kailas, the abode of Šiva, one of asṭa-kula-parvatam (செ.அக.).

கையும்களவுமாக *kaiyum-kaḷavumāga*, வி.அ.(adv.) குற்றம் அல்லது தவறு செய்யும் அதே நேரத்தில்; red-handed. *தேங்காய் திருடியவன் கையும் களவுமாக மாட்டிக் கொண்டான்.*

[கையும் + களவுமாக.]

கையும்மெய்யுமாக *kaiyim-meyyumāga*, வி.அ.(adv.) **கையும்களவுமாக** பார்க்க; see *kaiyum-kaḷavumāga*.

[கையும் + மெய்யுமாக.]

கையுள் *kaiyuḷ*, பெ.(n.) 1. கையின் உட் பக்கம்; inner side of arm or hand. 2 உள்ளங்கை; the palm (சா.அக.).

[கை + உள்.]

கையெழுத்தாகு-தல் *kaiyeḻuttāgu-*, 7 செ.கு.வி.(v.i.) ஒப்பந்தம் முதலியவை ஒப்பளிக்கப்பட்டதற்கு அடையாளமாக அவற்றில் கையெழுத்திடப்படுதல்; of deeds, agreement get signed or executed. *ஒப்பந்தம் கையெழுத்தாகி நாற்பத்தெட்டு மணி நேரத்தில் போர் நிறுத்தப்பட்டது.*

[கை + எழுத்து + ஆகு-தல்.]

கையெழுத்துஇயக்கம் *kai-y-eḷuttu-eyakkam,* பெ.(n.) கோரிக்கை அல்லது வேண்டுகோள் போன்றவற்றுக்காக ஆதரவாளர் பலரிடமிருந்தும் கையெழுத்து வாங்கும் இயக்கம்; a campaign canvassing for subscription to a petition, etc.

[கை + எழுத்து + இயக்கம்.]

கையெறிகுண்டு *kai-y-eṟi-kuṇḍu,* பெ.(n.) கையால் வீசி வெடிக்கச் செய்யும் குண்டு; hand grenade

[கை + எறி + குண்டு.]

கையைப்பிசை-தல் *kai-y-ai-p-piśai-,* 2 செ.கு.வி.(v.i.) 1. இக்கட்டான சூழலில் செய்வதறியாது கலங்குதல் அல்லது திகைத்தல்; be in a fix; be in a quandary. *மகளின் திருமணத்திற்குப் பணம் கிடைக்காமல் கையைப் பிசைந்து கொண்டிருந்தார்.* 2. தயக்கம், குழப்பம் முதலியவற்றைக் காட்டும் குறிப்பாகக் கையை நெரித்தல்; wring one's hands as an indication of helplessness, confusion, etc. *கையைப் பிசைந்து கொண்டிருந்தால் எப்படிக் காரியம் நடக்குமா?*

[கையை + பிசை-தல்.]

கையைவிட்டு *kaiyai-viṭṭu,* வி.அ.(adv.) தேவை (அவசியம்) இல்லையென்றாலும் விரைவை (அவசரத்தை) முன்னிட்டு; though not necessary from one's own pocket.

[கையை + விட்டு.]

கைரதம் *kairadam,* பெ.(n.) 1. ஒரு பாம்பு; a serpent. 2. ஒரு வகைச் சந்தன மரம்; a kind of sandalwood. 3. ஒரு வகைப் பூடு; a plant, *Agathotes Chirayata* (சா.அக.).

[கைரம் – கைரதம்.]

கைரம் *kairam,* பெ.(n.) காத்திகைக் கிழங்கு; November flower, *Methonica superba* (சா.அக.).

[கய் – கை – கைரம்.]

மறுவ. கலப்பைக் கிழங்கு

கைரலம் *kairalam,* பெ.(n.) **கைரவி** பார்க்க; see *kairavi* (சா.அக.).

கைரலி *kairali,* பெ.(n.) வாயு விளங்கம்; wind-berry climber, *Embelia ribes* (சா.அக.).

கைரவம் *kairavam,* பெ.(n.) அல்லி மலர் (திவா.); Indian water-lily, *Nymphaea lotus* (செ.அக.).

கைரவாலி *kaira-vāli,* பெ.(n.) புளிச்சைக் கீரை; sour greens, *Hibiscus Cannabinus* (சா.அக.).

[கைரம் + வாலி.]

கைரவாவிகம் *kaira-vāvigam,* பெ.(n.) புளிச்சைக்கீரை (சித்.அக.); flax (செ.அக.).

கைரவி *kairavi,* பெ.(n.) 1. வெந்தயம்; fenugreek, *Trigonella fenugraceum.* 2. சந்திரகாந்திப் பூ; moon-flower (சா.அக.).

கைராட்டினம் *kai-rāṭṭiṉam,* பெ.(n.) **கைராட்டை** பார்க்க; see *kai-rāṭṭai* (க்ரியா.).

கைராட்டை *kai-rāṭṭai,* பெ.(n.) கையால் சுற்றி இயக்கி நூல் நூற்கும் கருவி; a hand-operated spinning wheel

[கை + ராட்டை.]



கைராத்தாசாமி *kai-rāttā-šāmi,* பெ.(n.) 1. பிச்சைக்காரன்; begger. 2. ஒன்றுக்கும் உதவாதவன்; a good for nothing person (செ.அக.).

மறுவ: கையாலாகாதவன்

கைராத்தினாம் *kai-rāttinām,* பெ.(n.) அறக்கொடை; charitable endowment (செ.அக.).

[கை + ராத்தினாம்.]

கைராதம் *kai-rādam,* பெ.(n.) நில வேம்பு; ground neem, *Justica paniculata* (சா.அக.).

கைரிகம்[1] *kairigam,* பெ.(n.) பொன்னூமத்தை (சித்.அக.); purple stramony (செ.அக.).

கைரிகம்[2] *kairigam,* பெ.(n.) 1. காவி வண்ணம் ஊட்டப்பட்ட கல் (பிங்.); red ochre. 2. பொன் (சது.); gold (செ.அக.).

கைரியம் *kairiyam,* பெ.(n.) 1. நரி; jackal. 2. பொன்; gold. 3. கல்மதம்; bitumen (சா.அக.).

கைரோகம் *kairōgam,* பெ.(n.) கையில் ஏற்படும் நோய்கள்; diseases of the hands (சா.அக.).

[கை + Skt. ரோகம்.]

கைலாசசட்டைநாதர் *kailāša-šaṭṭai-nādar,* பெ.(n.) தமிழில் மருத்துவநூல் சிலவற்றை இயற்றிய சட்டைமுனி என்னும் சித்தர்; Šiddar author of some medical treatises in Tamil (சா.அக.).

[கைலாசம் + சட்டை + நாதர்.]

கைலேஞ்சி *kailēñji,* பெ.(n.) கைக்குட்டை (இலங்.); handkerchief

கைவசப்படுத்து-தல் *kaivaša-p-paḍuttu-,* 5 செ.கு.வி. (v.i.) தன் பிடிக்குக் கீழ் கொணடு வருதல்; தன் வயப்படுத்துதல்; take control of; seize. *வீட்டை அடுத்த புறம்போக்கு நிலத்தைக் கைவசப்படுத்திக் கொண்டார்.*

[கை + வசம் + படுத்து-தல். வயம்->வசம்.]

கைவிசேடம் *kai-višēḍam,* பெ.(n.) 1. கை படுவதனால் உண்டாவதாகக் கருதும் நன்மை; luckiness associated with one's hand. *"மருத்துவர்க்கோ சயங் கைவிசேடந் தன்னிலே" (அறப்.சத.33).* 2. பரிசு; present (செ.அக.).

[கை + Skt. விசேடம்.]

கைவிட்டுப்போ-தல் *kaviṭṭu-p-pō-,* 8 செ.கு.வி.(v.i.) தன் வயமாக வேண்டியது நீங்குதல், தப்பிப் போதல், நழுவுதல்; slip out of one's hands. *அந்த வேலை கைவிட்டுப் போய்விட்டது. இந்த வாய்ப்பும் கைவிட்டுப் போகாமல் இருக்க வேண்டும்.*

[கை + விட்டு + போ-தல்.]

கைவிடு-தல் *kai-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) தன்னிடம் ஒன்றை எதிர்பார்ப்பவரை ஏமாற்றம் அடையச் செய்தல்; விட்டு நீங்குதல்; let some one down; desert; forsake. *உங்களைத்தான் நம்பியிருக்கிறேன். என்னைக் கைவிட்டு விடாதீர்கள். இந்த முறையும் மழை நம்மைக் கைவிட்டு விடுமோ?.*

[கை + விடு-தல்.]

கைவியர்வை *kai-viyarvai,* பெ.(n.) கையில் அடிக்கடி உண்டாகும் வியர்வை; frequent perspiration of the hands (சா.அக.).

[கை + வியர்வை.]

கைவியளம் *kai-viyaḷam,* பெ.(n.) கைவிசேடம் பார்க்க; see *kai-višēḍam* (செ.அக.).

கைவிளங்கம் *kai-viḷaṅgam,* பெ.(n.) வாய் விளங்கம்; wild berry, *Embelia ribes* (சா.அக.).

[கை + விளங்கம்.]

கைவித்தாரம் *kai-vittāram,* பெ.(n.) ஒப்பனை; decoration (செ.அக.).

[கை + Skt. வித்தாரம்.]

கைவீசிநட-த்தல் *kai-viši-naḍa-,* 3 செ.கு.வி.(v.i.) கைகளை தாராளமாய் ஆட்டி நடத்தல்; swimming the arms freely while walking (சா.அக.).

[கை + வீசி + நட-த்தல்.]

கைவைத்தியம் *kai-vaittiyam,* பெ.(n.) சிறு நோய்த் துன்பங்கள் நீங்க மருத்துவர் உதவி இல்லாமல் வீட்டிலேயே செய்து கொள்ளும் மரபுவழி வந்த மருத்துவ முறை; home remedy.

மறுவ. கைமருத்துவம்

[கை + Skt. வைத்தியம். வைத்தியம் = மருத்துவம்.]

கொக்கரக்கோ *kokkarakkō,* பெ.(n.) 1. சேவல் எழுப்பும் உரத்த சத்தம்; cock-a-doodle-doo. 2. முருகக் கடவுள்; Murugan.

[கொக்கர் + கோ ஒலிக்குறிப்பு.]

கொக்கறை *kokkaṟai,* பெ.(n.) பனை, தெங்கு முதலியவற்றின் வற்றியுலர்ந்த இளமடல்; dried integument of the palmyra flower (செ.அக.).

[குங்கு - குக்கு - கொக்கு - கொக்கறை.]

கொக்கிதேவர் *kokki-tēvar,* பெ.(n.) சிவனிய (வீரசைவ) அடியவர்களில் ஒருவர்; a devotee of Lingayat sect of saivaism.

[கொக்கி + தேவர்.]

இவர் நந்தவனம் வைத்திருந்தார். அல்லமர் இவரிடம் வந்து நந்தவனத்தின் ஒருபுறம் தோண்டக் கட்டளையிட்டு அதில் ஒரு மனநோன்பி(யோகி) இருப்ப காட்டினார். அவரிடம் இவர் குருவம் (தீட்சை) பெற்றார் (அபி.சிந்.).

கொக்கிறகுப்பூ *kokkiṟagu-p-pū,* பெ.(n.) வெள்ளை மந்தாரை; shrub by white mountain ebony; crane's feather, *Bauhinia acuminata* (சா.அக.).

[கொக்கு + இறகு + பூ.]

கொக்கும்பதரி *kokkum-patari,* பெ.(n.) இலந்தை மரம்; a small thorny tree known as the common jujube, *Zizyphus jujuba* (சா.அக.).

கொக்குமரம் *kokku-maram,* பெ.(n.) மாமரம்; mango tree (சா.அக.).

[கொக்கு + மரம்.]

கொக்குமாநிறம் *kokku-mā-niṟam,* பெ.(n.) சிலைமான் கல்; a kind of stone, *Agate* (சா.அக.).

[கொக்கு + மா + நிறம்.]

கொங்கணதூபம் *koṅgaṇa-tūbam,* பெ.(n.) வெள்ளைக் குங்கிலியம்; white dammer; cocony resin (சா.அக.).

கொங்கணிவர்மன் *koṅgaṇi-varmaṉ,* பெ.(n.) கொங்கு நாட்டவரை வெற்றி கொண்டு அந்நாட்டிற்குக் கொங்கு நாடெனப் பெயரிட்டவன்; oen who has christened the name Koṅgu, after conquering it.

[கொங்கணி + வருமன்.]

கொங்காணியர் *koṅgāṇiyar,* பெ.(n.) கொண்காணத்தில் இருந்து வந்து குடியேறியவர்கள்; the migrated people who came from koṅgāṇam.

[கொண்கானம் - கொங்காணம் + இயர்.]

இவர்களில் பார்ப்பனர்கள் கடை வைத்து பிழைப்பர். கொங்காணி கடைமக்கள் (சூத்திரர்) குடுமிக்காரர் எனப்படுவர் (அபி.சிந்.).

கொங்காரகி *koṅgāragi,* பெ.(n.) பிடங்கு நாறி; fire-brand teak, *Premna tomentosa* (சா.அக.).

கொங்காரமம் *koṅgāramam,* பெ.(n.) குங்கும மரம்; a tree called arnoto, *Bixa orellana* (சா.அக.).

[கொங்கு + ஆரமம்.]

கொங்காரமாசு *kongāra-māśu,* பெ.(n.) பிண்ணாக்குக் கீரை; lew's malilow, *Corchorus capuslous alias C.Clitorus* (சா.அக.).

கொங்குவேளிர் *kongu-vēḷir,* பெ.(n.) சிற்றரசர்களில் ஒருவரான கொங்குநாட்டு வேளாளன்; one of the petty king in Kongu-vēḷḷār.

[கொங்கு + வேளிர்.]

பெருங் கொடையாளியாகிய இவரது ஊர் கொங்கு நாட்டு விசயமங்கலம். அடியார்க்கு நல்லார் இவரது கொங்கு வேண்மாக்கதையைப் பாராட்டி யுள்ளார். பேராசிரியரும் இவரது நூலை எடுத் தாண்டுள்ளாராதலின் இவர் காலத்தால் முற்பட்ட வராவார். இவர் சமண சமயத்தவராக இருக்கலாம் (அபி.சிந்.).

கொங்கைக்கட்டி *kongai-k-kaṭṭi,* பெ.(n.) முலைக் கட்டி; mammary abscess (சா.அக.).

[கொங்கை + கட்டி.]

கொச்சிக்கால் *kocci-k-kāl,* பெ.(n.) யானைக் கால்; elephantiasis of the leg cochin leg (சா.அக.).

[கொச்சி + கால்.]

கொச்சிலச்சி *koccilacci,* பெ.(n.) ஒரு வகைச் சிற்றிலைப் புல்; ring worm killer, *Xyris indica.*

[கொச்சி + இலைச்சி]

இது ஒரு அடி உயரமும் மஞ்சள் நிறப் பூவும் உடையது. மலையாளத்தில் இது ஒரு சிறந்த மூலிகையென்று கருதுவார்கள். இதன் சாற்றைக் காடியில் கலந்து சிரங்கு, மேகப்படை முதலியவை களுக்குத் தடவலாம். இலையையும் வேரையும் எண்ணெயிலிட்டுக் காய்ச்சி குட்டத்திற்குத் தடவலாம் (சா.அக.).

கொச்சைப்படுத்து-தல் *koccai-p-paḍuttu-,* 5 செ.கு.வி.(v.i.) இழிவுபடுத்துதல்; vulgaize. *தமிழை என்றும் கொச்சைப்படுத்திப் பேச வேண்டாம்.*

[கொச்சை + படுத்து-தல்.]

கொச்சைவார்த்தை *koccai-vārttai,* பெ.(n.) திரிவுற்றுத் தெளிவில்லாத சொற்கள்; vulgar words (சா.அக.).

[கொச்சை + Skt. வார்த்தை.]

கொச்சைவீச்சம் *koccai-vīccam,* பெ.(n.) 1. ஆட்டுப் பால் நாற்றம்; smell of sheep's milk. 2. பால் முதலியவற்றின் முடை நாற்றம்; stink smell of milk, mother's milk, etc (செ.அக.).

[கொச்சை + வீச்சம்.]

கொசுவத்தி *kośu-vatti,* பெ.(n.) பற்ற வைத்தால் புகை எழுப்பிக் கொசுக்களை விரட்டும் வேதியியல் சுருள்; mosquito coil made of chemicals that produces smoke to keep off mosquitoes.

[கொசு + வத்தி. பத்தி→வத்தி.]

கொஞ்சிநட-த்தல் *koñji-naḍa-,* 3 செ.கு.வி. (v.i.) களிப்புடன் நடத்தல்; walking at easy pace (சா.அக.).

[கொஞ்சி + நட-த்தல்.]

கொஞ்சிப்பேசல் *koñji-p-pēśal,* பெ.(n.) குழந்தையைப் போல் பேசுகை; talking like a child; prattling; talking from lust as woman (சா.அக.).

[கொஞ்சி + பேசல்.]

கொஞ்சிவஞ்சி *konji-vañji,* பெ.(n.) கும்பாதிரி பெரிய மரவகை; lac tree, *Schleichera trijuga* (செ.அக.).

[கொழுஞ்சி + வஞ்சி]

கொட்டணைக்காய் *koṭṭaṇai-k-kāi,* பெ.(n.) உப்பெடுக்கும் ஒரு கடற்கரைப் பூடு; a sea-shore plant of the species of cranberry from which salt is extracted (சா.அக.).

[கொட்டணை + காய்.]

கொட்டம்பலவனார் *kottambalavanār,* பெ.(n.) ஒரு புலவர்; a poet, of the Sangam age (சா.அக.).

[கொட்டு + அம்பலவன் + ஆர்]

கொட்டரி *kottari,* பெ.(n.) வாணாசுரனின் தாய்; mother of Pānašuran.

[குட்டாளி – கொட்டரி]

கண்ணனுடன் வாணாசுரன் போர் செய்த பொழுது, வாணாசுரன் இறக்கும் பொழுதில் ஆடை களைந்து மத்தியில் இருந்து போரைத் தடுத்தாள் (அபி.சிந்.).

கொட்டாங்கச்சித்தைலம் *kottān-kacci-t-tailam,* பெ.(n.) தேங்காய் ஓட்டை எரிப்பதனால் அதில் இருந்து எடுக்கும் கருஞ்சிவப்பு நிறமான எண்ணெய்; a black or brown paint obtained by burning the cocoanut shell (சா.அக.).

[கொட்டாம் + கச்சி + தைலம்.]

கொட்டாம்பிளி *kottāmbili,* பெ.(n.) உளி மேல் அடிக்கும் ஆய்தம்; beatet, wooden mallet (செ.அக.). கொட்டாப்புளி பார்க்க; see *kuttappuli*

[கொட்டு – கொட்டாப்பு + உளி.]

கொட்டாவிகொள்ளு-தல் *kottāvi-kollu-,* 16 செ.கு.வி.(v.i.) **கொட்டாவி விடு-தல்** பார்க்க; see *kottāni-vidu-* (சா.அக.).

[கோட்டு + ஆவி + கொள்.]

கொட்டாவிவிடு-தல் *kottāvi-vidu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. வாயால் நெட்டுயிர்த்தல்; the act of yawning, *Oscecto.* 2. களைத்தல்; being exhausted or wearied. 3. இறத்தல்; dying (சா.அக.).

[கோட்டாவி + விடு–தல்.]

கொட்டான்கரந்தை *kottān-karandai,* பெ.(n.) நாறு கரந்தை; Indian globe thistle, *Sphoeranthus indicus* (சா.அக.).

[கொட்டாணி (கொட்டை) + கரந்தை.]

கொட்டான்சிலை *kottān-šilai,* பெ.(n.) வாகை மரம்; common sirissa, *Albizzia lebbek* (சா.அக.).

[கொட்டான் (கொட்டை) + சிலை.]

கொட்டு-தல் *kottu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. கொடுக்கினால் கொட்டுதல்; stinging as by a scorpion. 2. வார்த்தல்; pouring as water or any liquid. 3. பல்லி பலுக்குதல்; chirping as of a lizard. 4. பல் கொட்டுதல்; falling or dropping as of tooth (சா.அக.).

[கொடு – கொட்டு.]

கொட்டுக்கொட்டென்று *kottu-k-kottenru,* வி.எ.(adv.) சிறிதும் கண்ணயராமல்; தூக்கத்தின் அறிகுறி சிறுதும் இல்லாமல்; wide awake. *இரவு முழுக்கக் கொட்டுக் கொட்டென்று விழித்துக் கதை படித்துக் கொண்டிருந்தான்.* 2. ஒரே இடத்தில் ஒரு வேலையும் செய்யாமல் சலிப்புடன் இருத்தல்; remaining unoccupied suggestive of boredom. *வீட்டில் எவ்வளவு நேரம் நான் கொட்டுக் கொட்டென்று உட்கார்ந்திருப்பது?*

[கொட்டு + கொட்டு + என்று.]

கொட்டுச்சிறுக்கி *kottu-c-cirukki,* பெ.(n.) பிள்ளை பெறா மலடி; a barren woman (சா.அக.).

கொட்டுமரம் *kottu-maram,* பெ.(n.) ஆடையை வண்ணக் கலவையி(சாயத்தி)ல் தோய்த்து அடிக்குங் கட்டை; dyer's block for beating cloth and fixing colours (செ.அக.).

[கொட்டு + மரம்.]

கொட்டுவாய்க்கடுப்பு *kottu-vāy-k-aduppu,* பெ. (n.) நச்சு உயிரிகள் கடித்த இடத்தில் ஏற்படும் கடுநோய் அல்லது எரிவு; intense

irritation or burning pain at the spot bitten by poisonous insects or reptiles (சா.அக.).

[கொட்டு + வாய் + கடுப்பு.]

கொட்டைகட்டு-தல் *koṭṭai-kaṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. இலுப்பைக்காய் வைத்துச் சூதாடுதல்; to gamble with mahua seeds. 2. நாய்ப்புலி என்னும் ஒரு வகை ஆட்டத்தில் புலியைக் கட்டுகை; to checkmate the tiger in the game of nāy-p-puli (செ.அக.).

[கொட்டை + கட்டு-தல்.]

கொட்டைப்பாமிரம் *koṭṭai-p-pāmiram,* பெ.(n.) கொட்டைக் கரந்தை; Indian globe thistle, *Sphoeranthus indicus* (சா.அக.).

[கொட்டை + பாமிரம்.]

கொட்டையவரை *koṭṭai-y-avarai,* பெ.(n.) கொட்டை முத்தின அவரை; a species of bean with matured seed or in which the seed portion alone is edible (சா.அக.).

[கொட்டை + அவரை.]

கொட்டையாகாசி *koṭṭai-y-āgāśi,* பெ.(n.) ஒரு வகைப் பூடு; round-leaved moonseed, *Cocculus macrocarpus* (சா.அக.).

[கொட்டை + (ஆகாயம்) ஆகாசி.]

கொட்டையாசாசி *koṭṭai-y-āśāśi,* பெ.(n.) ஒரு வகைக் கொடி; a kind of creeper; glaucous-backed round leaved moonseed, *Cocculus macrocarpus* (செ.அக.).

[கொட்டை + ஆகு + ஆசி.]

கொடசபாலை *koḍasa-pālai,* பெ.(n.) 1. வெட்பாலை; conessi or tellicherry bark, *Nerium anti-dysentericum.* 2. கொடிப் பாலை; cotton milk plant, *Dregea volubilis;* twining swallor wort, *Asclepias volubilis.* 3. ஊசிப்பாலை; needle-leaved swallow-wort, *Oxystelma esculentum* (சா.அக.).

[குடசம் + பாலை.]

கொடசாலம் *koḍa-śālam,* பெ.(n.) வெந்தோன்றி; November flower plant, *Gloriosa superba* (சா.அக.).

[குடசம் + ஆலம்.]

கொடரி *koḍari,* பெ.(n.) எழுத்தாணிப்பூடு (சித்.அக.); style plant (செ.அக.).

[குடு - குடரி - கொடரி.]

கொடாலகம் *koḍālagam,* பெ.(n.) வெண்காந்தள் செடிவகை (மலை.); white species of Malabar glory lily, *Gloriosa superba* (செ.அக.).

[குடு + ஆலகம்.]

கொடி[1] *koḍi,* பெ.(n.) கருப்பையிலிருக்கும் குழந்தைக்கு உணவு சென்றடையும் கொப்பூழ்க் கொடி; umbilical cord .

மறுவ. நஞ்சுக்கொடி

[கொடு (வளைவு) - கொடி.]

கொடி[2] *koḍi,* பெ.(n.) 1. ஒரு நாட்டின், ஒரு குழுவின் சின்னம் பதித்துக் கம்பத்தில் பறக்க வசதியாக வெட்டிய துணி; சட்டை முதலியவற்றில் குத்திக் கொள்ள வசதியாக வெட்டப்பட்ட சிறு துண்டுத்தாள்; flag; standard. 2. நிறங்களின் வழியாக ஒன்றைத் தெரிவிப்பதற்கு அளவாக வெட்டிய துணி; flag to signify something through its colour. *பச்சைக் கொடி. வெள்ளைக் கொடி*

[கொடு - கொடி.]

கொடிக்கடமை *koḍi-k-kaḍamai,* பெ.(n.) வரி வகை (தெ.கல்.தொ.330); a tax (செ.அக.).

[கொடி + கடமை.]

கொடிக்காய்வகை *koḍi-k-kāy-vagai,* பெ.(n.) கொடியில் காய்க்கும் காய் வகைகள்; creeper vegetables.

அவையாவன : 1. கலியாணப் பூசிணிக் காய்; ash pumpkin, *Cucurbita pepo*. 2. பறங்கிக் காய்; sweet gourd, *Cucurbitea maxima*. 3. கும்மட்டிக்காய்; bitter apple; *Citrullus colocynthis*. 4. சுரைக்காய்; bottle gourd, *Lagenaria vulgaris*. 5. வெள்ளரிக்காய்; cucumber, *Cucumis satives*.6. கொட்டை யவரைக்காய்; China bean, *Dolichor genus*. 7. மொச்சைக்காய்; country bean; *Lablab*. 8. பீர்க்கங்காய்; luffa gourd, *Luffa acutangula*. 9. புடலங்காய்; snake, *Mochosanthes anguina*. 10. பாகற்காய்; balsam gourd, *Momordica charantia*. 11. அதளக்காய்; sour gourd, *Cucurbita genus*. 12. தூதுளங்காய்; prickly shoonday, *Solanum trilobatum*. 13. கொடி வழுதுணைக்காய்; Indian night, shade, *Solanum indicum*. 14. பயற்றங்காய்; kidney bean. 15. கோவைக்காய்; Indian caper, *Cephalendra india*. 16. மிளகுக்காய்; green pepper fruit, *Piper nigrum* (சா.அக.).

[கொடி + காய் + வகை.]

கொடுக்கி *kodukki*, பெ.(n.) 1. கதவை யடைக்க இடும் இரும்புப் பட்டை; hooked bar for fastening doors. 2. அணிகலனின் பூட்டு; clasp of an ornament. 3. தேட் கொடுக்கியெனும் சிறு செடிவகை (யாழ்.அக.); turnsole, *Heliotropium indicum*. 4. செடி வகை; tiger's claw, *Martynia diandra* (செ.அக.).

[கொடு – கொடுக்கி.]

கொடுக்குமதி *kodukku-madi*, பெ.(n.) கொடுக்க வேண்டியது; debt, what is due (செ.அக.).

[கொடு – கொடுக்கு + மதி.]

கொடிக்கொற்றான் *kodi-k-korrān*, பெ.(n.) 1. முடக்கொத்தான்; palsy curer, *Cardiospermum hadlicacabum*. 2. கொத்தான்; green thread creeper, *Cassytha filiformis* (சா.அக.).

[கொடி + கொற்றான்.]

கொடிகட்டிப்பற–த்தல் *kodikatti-p-para-*, 3 செ.கு.வி.(v.i.) மிகுந்த செல்வாக்கோடு இருத்தல்; live in great prosperity; flourish. *இந்தக் குடும்பம் அந்த காலத்தில் கொடிகட்டிப் பறந்தது.*

[கொடி + கட்டி + பற–த்தல்.]

கொடிஞாழன்மாணிபூதனார் *kodi-ñālan-māni-pūtanār*, பெ.(n.) கடைக் கழகத்துப் புலவருள் ஒருவர்; a poet who belongs to the last Tamil academy (அபி.சிந்.).

[கொடி + ஞாழன் + மாணி + பூதன் + ஆர்.]

கொடிதிருப்பு–தல் *kodi-tiruppu-*, 5 செ.கு.வி.(v.i.) பெண் கொண்ட குடும்பத்தில் பெண் கொடுத்தல்; to give a girl in marriage to a member of a family from which a girl has been taken in marriage (செ.அக.).

[கொடி + திருப்பு–தல்.]

கொடிநடு *kodi-nadu*, பெ.(n.) தண்டுவடத்தின் நடுவே ஓடுவதாகச் சொல்லப்பட்ட ஒரு காணாப் பாதை; a subtle passage supposed to be running in the centre of the spinal cord (சா.அக.).

[கொடி + நடு.]

கொடிநவ்வல் *kodi-navval*, பெ.(n.) படர் நாவல்; a species of jaumoon creeper, *Jambolana* (சா.அக.).

[கொடி + நவ்வல்.]

கொடிநாக்கி *kodi-nākki*, பெ.(n.) படர்நெல்லி; a rare plant (சா.அக.).

[கொடி + நாக்கி.]

கொடிப்பால் *kodi-p-pāl*, பெ.(n.) 1. சிறு பெண்ணின் முலைப்பால்; the breast milk of a girl or young woman. 2. கொடியின் பால்; the milky juice of creeper. 3. கொடி ஆட்டின் பால்; goat's milk (சா.அக.).

[கொடி + பால்.]

கொடிப்பூண்டு *kodi-p-pūṇḍu,* பெ.(n.) கொடி; any creeping plant; creeper (சா.அக.).

[கொடி + பூண்டு.]

கொடிபடருதல் *kodi-padarudal,* தொ.பெ. (vbl.n.) கொடி சூழ்தல்; spreading of creeper (சா.அக.).

[கொடி + படரு-தல்.]

கொடிமங்கலத்துவாதுளிநற்சேந்தனார் *kodi-maṅgalattuvāduḷi-naṟšēndaṉār,* பெ.(n.) கடைக் கழகம் மருவிய புலவர்; the poet who belonged to the last Šaṅgam era (அபி.சிந்.).

[கொடிமங்கலம் + அத்து + வாதுளி + நல் + சேந்தன் + ஆர்]

இவர் ஊர் கொடிமங்கலமாக இருக்க வேண்டும்.

கொடிமாகிதம் *kodi-māgidam,* பெ. (n.) நெருஞ்சில்; caltropes, *Tribulus terrestrisa* (சா.அக.).

[கொடி + மாகிதம்.]

கொடிமுகாக்கினி *kodi-mugākkiṉi,* பெ.(n.) நெல்லி; gooseberry tree, *Phyllanthus emblica* (சா.அக.).

[கொடி + முகம் + அக்கினி.]

கொடிமுடிபர்வதம் *kodi-mudi-parvadam,* பெ.(n.) வெள்ளி மலை; mountain containing silver ore (சா.அக.).

[கொடிமுடி + Skt. பர்வதம்.]

கொடிமுறுக்கம் *kodi-muṟukkam,* பெ.(n.) கொடிப் பலாசம்; a species of palaus climber, *Butea superba* (சா.அக.).

[கொடி + முறுக்கம்.]

கொடிய *kodiya,* பெ.அ.(adj.) 1. உயிருக்கு ஊறு விளைவிக்கக் கூடிய; likely to cause danger to life; cruel. *இந்தக் காட்டில் சிங்கம், புலி போன்ற கொடிய மிருகங்கள் இருக்கின்றன. கொடிய கொலையாளிகள் இருவர் கைது செய்யப்பட்டனர்.* 2. பொறுத்துக் கொள்ள முடியாத அளவுக்கு வருந்துகை; கடுமையான; மிகுந்த; causing unbearable strain; terrible; severe. *கொடிய குளிர்காற்று வீசியது. கொடிய வற்கடகம் (பஞ்சம்) தலைவிரித்தாடியது.*

[கொடு - கொடிய.]

கொடியநற்குணி *kodiya-naṟkuṇi,* பெ.(n.) கருநொச்சி; black notchy, *Vitex trifolia* (சா.அக.).

[கொடிய + நல் + குணி.]

கொடியவிடகாரி *kodiya-vidakāri,* பெ.(n.) சீந்தில்; moon creeper, *Menispermum cordifolium* (சா.அக.).

[கொடிய + விடத்தாரி.]

கொடியவிடத்தி *kodiya-v-idatti,* பெ.(n.) மருதாணி; fragrant naildye, *Lawsonia alba alias Lawsonia spinosa* (சா.அக.).

[கொடிய + விடத்தி.]

கொடியவிடம் *kodiya-vidam,* பெ.(n.) 1. சீதங்க பாடாணம்; a mineral poison. 2. பொல்லாத நஞ்சு; virulent poison (சா.அக.).

[கொடிய + விடம்.]

கொடியிலைவகை *kodi-y-ilai-vagai,* பெ.(n.) பல வகையான செடிகளின் இலை; a variety of creeper leaves.

1. தூதுளையிலை; leaf of three- lobed night shade, *Solanum trilobatum.* 2. பறங்கியிலை; leaf of sweet gourd, *Cucurbita maxima.* 3. சுறையிலை; leaf of bottle-gourd, *Lagenaria vulgaris.* 4. பேய்ச்சுரையிலை; leaf of wild bottle-ground, *Pepo lagenarius.* 5.பாகவிலை; leaf of country bean creeper, *Dolichos albus.* 6. அவரையிலை; leaf of country bean creeper,

Dolichos albus. 7. காராமணியிலை; leaf of crow gram, *Vigna catiang.* 8. கொடிக் குறிஞ்சாயிலை; leaf of small Indian ipecacuanna, *Gymnema sylvestre.* 9. கறிப்பாலையிலை; leaf of edible paulay, *Mimusops Kanki.* 10. ஊசிப்பாலையிலை; leaf of needle paulay, *Periploca esculentum.* 11. கோவையிலை; leaf of India coccinia, *Cephandra indica.* 12. முசுமுசுக்கையிலை; leaf of rough bryony, *Mukia scabrella.* 13. கோழியவரையிலை; leaf of fowl's bean, *Canavalia cusiformis.* 14. முயற்காதிலை; rabbit's ear leaf. 15. கழற்சியிலை; leaf of bonduc nut creeper, *Caesalpinia bonducella.* 16. வெண்கழற்சியிலை; leaf of white bonduc creeper, *Guilandia bonducella.*17. வரிக் கும்மட்டியிலை; leaf of striped colocynth gourd, *Cucumis colocynthis.*18. சிறுபூனைக் காயிலை; leaf of whitish passion flower, *Passiflora foetida.* 19. வேலிப் பருத்தியிலை; hedge cotton leaf, *Daemia extensa.* 20. துராயிலை; leaf of king of herbs, *Fumaria parviflora.* 21. செந்துராயிலை; red variety of tura-y-ilai. 22. நச்சுமூங்கியிலை; poison bamboo leaf, *Asiatic poison bulb, Crinum asaticum.* 23. சதாப்பிலை; leaf of Indian rue, *Ruta graveolens.* 24. கடற்பாலையிலை; leaf of ocean dryer, *Convolvuls nervosus.* 25. நொச்சியிலை; leaf of five leaved chaste tree, *Vitex negundo.* 26. தழுதாழையிலை; wind killer, *Cleodendron Phlomoides* (சா.அக.).

[கொடி + இலை + வகை.]

கொடியீச்சன் *kodi-y-iccan,* பெ.(n.) சீமை ஈச்சன்; common Indian fern, *Cycas circinalis* (சா.அக.).

[கொடி + ஈச்சன்.]

கொடியூர்கிழார்மகனார்நெய்தற்றத்தனார் *kodiyūr-kilār-maganār-neytarrattanār,* பெ. (n.) கடைக்கழகப் புலவரில் ஒருவர்; one of the poet who belonged to the last Šangam.

[கொடியூர் + கிழார் + மகனார் + நெய்தல் + தத்தன் + ஆர்.]

இவர் இயற்பெயர் தத்தர். நெய்தல் நிலத்தைச் சார்ந்தவர். தந்தையின் பெயர் கொடியூர்க்கிழார். இவர் வேளாளர் (அபி.சிந்.). அகநானூறு 243ம் பாடலைப் பாடியுள்ளார்.

கொடிவிருட்சம் *kodi-virutcam,* பெ.(n.) கொடிக்கள்ளி; creeping milk hedge or moon creeper, *Sacrastemmal brevistigma alias Asclepias acids* (சா.அக.).

[கொடி + Skt. விருட்சம்.]



கொடிவேர்வகை *kodi-v-ēr-vagai,* பெ.(n.) முக்கியமான கொடியின் வேர்; important roots of creeper's.

[கொடி + வேர் + வகை.]

1. நாகமல்லி வேர்; snake jasmine root, *Rhinacanthus communis.* 2. காட்டு மல்லிகை வேர்; wild jasmine root, *Jasminum angustifolium.* 3. சிறுகுறிஞ்சா வேர்; small Indian ipecacuanha root, *Gymnema sylvestre.* 4. பேய்ச்சுரை வேர்; wild bottle gourd root. 5. முசுமுசுக்கை வேர்; bristly bryony root, *Mukia scabrella.* 6. வெண்காக்கட்டான் வேர்; black or blue mussell - shell creeper root, *Clitorea ternatea.* 7. கருங்காக்கட்டான் வேர்; black or blue mussell - shell creeper root, *Clitorea ternatea.* 8. கொடிவேலி வேர்; hedge-creeper root, *Plumbago zeylanica.* 9. பெருமருந்து வேர்; Indian birth wort-root, *Aristolochia indica.* 10. பெருங்காஞ்சொறி வேர்; climbing nettle root, *Tragia involucrate.* 11. சிறுகாஞ்சொறிவேர்; small climbing nettle root, *Tragia involucrata.* 12. கருங்காஞ்சொறி வேர்; black climbing nettle root, *Tragia involucrata.* 13. பச்சைத் திப்பிலி வேர்;

green long pepper plant root, *Piper longum.* 14. இன்புறா வேர் அல்லது சாய வேர்; chay root or dye root, *Piper longum.* 15. நன்னாரி வேர்; Indian sarsaparilla root, *Hemidesmus indicus.* 16. கொஞ்சி வேர்; opal orange tree root, *Glycosmis pentaphylla.* 17. குன்றி வேர்; jeweller's head root, *Abrus precatorius.* 18. நுணா வேர்; ach root, *Morinda citrifolia.* 19. கொழும்பு வேர்; columbo root, *Jateorrhiza columba.* 20. கீரி புரண்டான் வேர்; Indian snake root, *Ophiorrhiza mungos* (சா.அக.).

கொடுப்பனவு *koḍuppaṉavu,* பெ.(n.) கொடுக்க வேண்டிய தொகை (இலங்.); amount to be paid to some one. *அவருக்குக் கொடுப்பனவு எவ்வளவு என்று பார்த்துச் சொல்.*

மறுவ. நிலுவை (பாக்கி)

[கொடு – கொடுப்பன + உ.]

கொடுப்பினை *koḍuppiṉai,* பெ.(n.) கொடுத்து வைத்தது; ஆகூழ், நற்பேறு (அதிர்ஷ்டம்); destiny. *எங்களுக்குப் பிள்ளை இல்லை. எங்களுடைய கொடுப்பினை அவ்வளவுதான்.*

[கொடு →கொடுப்பினை.]

கொடும் *koḍum,* பெ.அ.(adj.) கொடிய; கடுமையான; terrible. *கொடும் பாலைவனம்; கொடு நோய்.*

[கொடு + ம்.]

கொடுவாட்கத்தி *koḍu-vāṭ-katti,* பெ.(n.) அறுக்க பயன்படுத்தும் ஒரு வளைந்த கத்தி; a curved knife used in surgery (சா.அக.).

[கொடுவாள் + கத்தி.]

கொடுவிடத்தி *koḍu-viḍatti,* பெ.(n.) மருதாணி; prickly lawsonia, *Lawsonia spinosa* (சா.அக.).

[கொடு + விடத்தி.]

கொடுவிடம் *koḍu-viḍam,* பெ. (n.) 1. கொல்லுந் தன்மை கொண்ட நஞ்சு; fatal poison, venom. 2. வெள்ளைப் பாடாணம்; a mineral poison (செ.அக.).

[கொடு + Skt. விடம்.]

கொடையெலும்பு *koḍai-y-elumbu,* பெ.(n.) குடையெலும்பு அதாவது உள் வளைந்த எலும்பு; bone with an inward curvature; incurved bone (சா.அக.).

[கொடை + எலும்பு.]

கொண்கானாங்கிழான் *koṇkāṉāṉ-kiḻāṉ,* பெ.(n.) கொண்கான நாட்டு மன்னன்; king of koṇkāṉā-nāḍu. *மோசிகீரனாரால் பாடப்பட்ட கடைக் கழக மன்னன் (அபி.சிந்.).*

[கொண்கானம் + கிழான்.]

கொண்டக்காரன் *koṇḍa-k-kāraṉ,* பெ.(n.) மீன் பிடிக்கும் வலைஞரில் ஒரு வகுப்பினன் (யாழ்.அக.); a sub-caste of fishermen community (செ.அக.).

[கொண்டை + காரன்.]

கொண்டங்கட்டிப்பாய்ச்சு-தல் *koṇḍaṅkaṭṭi-p-pāyccu-,* 5 செ.கு.வி. (v.i.) அணை கட்டி மேட்டு நிலத்தில் நீர் பாய்ச்சுதல்; to irrigate a field on a high level by damming a river or channel and forming a small reservoir (செ.அக.).

[குண்டம்-கொண்டம் + கட்டி + பாய்ச்சு-தல்.]

கொண்டச்சாணி *koṇḍa-c-cāṇi,* பெ.(n.) படுவங்கீரை (யாழ்.அக.); a kind of herb (செ.அக.).

[கொண்டை + சாணி.]

கொண்டல்மேகம் *koṇḍal-mēgam,* பெ.(n.) கொண்டற் சிலை; a species of black stone.

[கொண்டல் + மேகம்.]

இதனால் கற்பூரம் செம்பாகும் (சா.அக.).

கொண்டித்தொழு *koṇḍi-t-toḻu,* பெ.(n.) பட்டிமாட்டை அடைக்குந் தொழுவம்; cattle-pound (செ.அக.).

[கொண்டி + தொழு.]

கொண்டிரு-த்தல் *kondiru-,* 5 செ.கு.வி. (v.i.) தோற்றம், நடத்தை முதலியவற்றில் ஒருவரைப் போலிருத்தல் ஒத்திருத்தல்; look like; take after. *குழந்தை யாரைக் கொண்டிருக்கிறது? அப்பாவையா? அம்மாவையா?* (இ.வ.).

[கொண்டு + இரு-த்தல்.]

கொண்டுகட்டுவியாபாரம் *kondukattu-viyābāram,* பெ.(n.) பொருட்களின் விலை குறைவான போது கொஞ்சம் கொஞ்சமாக வாங்கி விலையேறின காலத்தில் விற்கை; trading a articles bought cheap in retail and stored up awaiting a favourable market (செ.அக.).

[கொண்டு + கட்டு + Skt. வியாபாரம்.]

கொண்டுகூட்டுப்பொருள்கோள் *kondu-kūttu-p-porulkōl,* பெ.(n.) செய்யுளில் பலவடியிலும் தொடுக்கப்பட்டச் சொற்களைப் பொருளுக்குத் தக்கபடி கூட்டிப் பொருள் கொள்ளல்; mode of constructing a stanza in which words are appropriatly transposed to arrive at the proper meaning, one of eight. *கோப்பு மொழிகளை ஏற்புழியிசைப்பது கொண்டு கூட்டே (நன்.418).*

[கொண்டு + கூட்டு + பொருள்கோள்.]

கொண்டுசெல்(லு)-தல் *kondu-šel-,* 13 செ.கு.வி.(v.i.) ஆளுமை செய்தல் (நிர்வகித்தல்); to be able to manage. *எனக்கு இனிமேற் கொண்டு செல்லாது (செ.அக.).*

[கொண்டு + செல்(லு)-தல்.]

கொண்டுவா-தல் *kondu-vā-,* 18 செ.கு.வி. (v.i.) 1. ஒருவரை அழைத்து வருதல்; ஒன்றை எடுத்து வருதல்; வரவழைத்தல்; bring some one or something. *நோயாளியை முன்னரே என்னிடம் கொண்டு வந்திருக்கலாம் என்றார் மருத்துவர். நான சொன்ன புத்தகங்களைக் கொண்டு வந்தாயா?* 2. சிக்கல், தீர்மானம் முதலியவற்றை முன்வைத்தல்; சட்டத்தை ஏற்படுத்துதல்; bringing a problem to one's attention; move motion; enact law. *சின்னச் சின்னச் சிக்கல்களையெல்லாம் என்னிடம் கொண்டு வராதீர்கள் என்று கூறிவிட்டார் அதிகாரி. எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றுப் போயிற்று. மதுவிலக்குச் சட்டம் கொண்டு வரக் கோரிப் பெண்கள் மன்றம் ஆர்ப்பாட்டம் நடத்தியது.*

[கொண்டு + வா-தல்.]

கொண்டுவிடு-தல் *kondu-vidu-,* 20 செ.கு.வி. (v.i.) ஒருவரை ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்லுதல்; ஒருவரை இட்டுச் சென்று ஒன்றில் விடுதல்; take some one to a place; lead some one into something. *கீழே விழுந்து கிடந்தவரை அவரது வீட்டில் கொண்டு போய் விட ஏற்பாடு செய்தோம். ஆராயாமல் எடுக்கும் முடிவு உன்னைச் சிக்கலில் மாட்டி விடும்.*

[கொண்டு + விடு-தல்.]

கொண்டைஊசி *kondai-ūši,* பெ.(n.) பெண்கள் போட்டிருக்கும் கொண்டை அல்லது பின்னல் அவிழாதபடி செருகும் இரு பகுதியாக வளைக்கப்பட்ட மெல்லிய கம்பி; u-shaped hairpin to keep the hair-do intact.

[கொண்டை + ஊசி.]

கொண்டைக்கடலை *kondai-k-kadalai,* பெ.(n.) வறுத்தோ, அவித்தோ பயன்படுத்தும் உருண்டை வடிவத்தில் இருக்கும் பழுப்பு நிறப் பருப்பு; cluster-seed, bengal gram; chick-pea.

[கொண்டை + கடலை.]

கொண்டைகட்டி *kondai-katti,* பெ.(n.) திருமணத்தின் போது தலைமயிரைக் கொண்டையாக முடிக்கும் வேளாள வகையினர்; a sub-sect of vēlālās who dress their hair in large coil on the head during marriage (செ.அக.).

[கொண்டை + கட்டி.]

இவர்கள் குடுமிக்குப் பதிலாக சிகையைக் கொண்டைபோல் கட்டியிருந்தால் இப்பெயர் பெற்றனர். குறும்பரசனிடம் இருந்த பழக்கத்தால் கொண்டை பெற்றிருந்தனர் என்பர். முடிதிருத்தாமல் தங்கள் சிகையைத் தொடாது கொண்டை கட்டிக் கொண்டிருந்தவராதலின் இப்பெயர் பெற்றனர் என்பர் (அபி.சிந்.).

கொண்டைகிருட்டி *kondai-krutti,* பெ.(n.) கொண்டலாத்தி (யாழ்.அக.); hoopoe, a crested bird (சா.அக.).

[கொண்டை + கிருட்டி.]

கொண்டைச்சாணிக்கிழங்கு *kondai-c-cāni-k-kilangu,* பெ.(n.) நஞ்சறுப்பான் கிழங்கு; a creeper used an antidote for poison, Asclepias prolifera (சா.அக.).

[கொண்டை + சாணி + கிழங்கு.]

கொண்டைச்சி *kondaicci,* பெ.(n.) 1. கொண்டையை அசைக்கும் ஓர் குருவி; mountain bulbul with crust erected at will-Ixos monticolons alias pycnonotus haemorhous. 2. சிவப்புக் கொண்டலாத்தி; red-whiskered bulbul, Otocompsa jocosa. 3. கொண்டைக் குருவி; crested bird-Lxos caper. 4. பெருங் கொண்டலாத்தி அல்லது புழுக்கொத்தி; a large kind of crested bird; houp-upupa epops (சா.அக.).

[கொண்டை + ஆச்சி.]

கொண்டைச்சீனிக்கிழங்கு *kondai-c-cini-k-kilangu,* பெ.(n.) 1. நஞ்சறுப்பான்; a creeper used as an antidote for poison, *Asclepias prolifera.* 2. நாய்ப்பாலை; Indian ipecacuanha, *Asclepias asthmatica.* 3. கழுதைப் பாலை; common Indian ipeca cuanha, *Tylophora asthmatica* (சா.அக.).

[கொண்டை + சீனி + கிழங்கு.]

கொண்டைச்சுத்தியல் *kondai-c-cuttiyal,* பெ.(n.) தட்டார் கருவிகளுள் ஒன்று; goldsmith's or brazier's hammer (செ.அக.).

[கொண்டை + சுத்தியல்.]

கொண்டைதிருகி *kondai-tirugi,* பெ.(n.) கதவுக்குடுமி செருகும் துளை; hole in the sill into which the corner-pin of a door is fitted (செ.அக.).

[கொண்டை + திருகி.]

கொண்டையிற்கைபோடு-தல் *kondaiyir-kai-pōdu-,* 20 செ.கு.வி.(v.i.) பெண்ணின் மயிர் பிடித்து இழுத்து அவமதித்தல்; outraging a woman by handling the lock or tuft of hair on her head; pulling a woman by her hair (சா.அக.).

[கொண்டையில் + கை + போடு-தல்.]

கொண்டலாத்திக்குருவி *kondalātti-k-kuruvi,* பெ. (n.) மீன்குத்திப் பறவையினத்தைச் சேர்ந்த ஒரு பறவை; a bird, which main pray is fish.



[கொண்டை + ஆலாத்தி + குருவி.]

இதன் தலையில் அழகிய கொண்டை ஒன்று உண்டு. அந்தக் கொண்டையை அது களிப் படைந்திருக்கையில் விரித்தும், குவித்தும் விளையாடும். இது செம்மை கலந்த மஞ்சள் நிறமுள்ளது. இதன் தோகையிலும், இறக்கையிலும் வெண்மையான வரிகளுமுடையது. மரங்களிலும், நிலத்திலும் பூச்சிப் புழுக்களைத் தோண்டியுண்ணுமாறு இதன் மூக்கு நீண்டிருக்கும். இது கோடை காலத்தில் நீண்ட தூரம் பயணம் செய்து மழைக் காலத்தில் திரும்பும் தன்மையது (அபி.சிந்.).

கொண்டோசனக்கிழங்கு *koṇḍōšaṉa-k-kiḻaṅgu,* பெ.(n.) திப்பிலி மூலம்; root of long pepper.

[கொண்டோசனம் + கிழங்கு.]

இது மணமாகவும் சிவப்பாகவும் இருக்கும் (சாஅக.).

கொண்ணை *koṇṇai,* பெ.(n.) கொன்றை; common cassia Indian laburnam, Cassia fistula alias c.rhombifolia

[கொன்றை – கொண்னை – கொண்ணை (கொ.வ.).]

வகைகள்: 1. இராகத்துக் கொன்றை; red Indian laburnam, *Cassia margiuata.* 2. ஈசன்தாரக் கொன்றை; gold flower tree. 3. எருமைக் கொன்றை; sumatra senna, *Cassia siamea* 4. கருங்கொன்றை; sumatra senna, *Cassia siamea* 5. காக்கொன்றை; black senna. 6. காட்டுக்கொன்றை; wild kondray; venezula soap bark tree, *Pithecolobium bigeminum.* 7. குண்டு பூக் கொன்றை; globe-flowered cassia, *Cassia glauca* 8. குளோப்பூக் கொன்றை; globe-flowered cassia, *Cassia glauca.* 9. சரக்கொன்றை; common cassia. 10. சிவப்புக் கொன்றை; red Indian laburnam, *Cassia margiuata* 11. சிறுகொன்றை செடிக்கொன்றை; cassia plant, *Cassia arborescens.* 12. சிறு மயிற் கொன்றை; false peacock flower, *Caesalpinia pulcherrima* 13. சீமைக் கொன்றை; red Indian laburnam, *Cassia margiuata* 14. சூரத்துக் கொன்றை; surat cassia, *Cassia surattensis.* 15. செம்மயிற் கொன்றை; red pea-cock flower, *Poinciana regia.* 16. செழு மலர்க் கொன்றை; large flower cassia, *Cassia florida.* 17. சொறிக் கொன்றை; rough cassia. 18. நரிக் கொன்றை; red Indian laburnam, *Cassia margiuata.* 19. நொச்சிக் கொன்றை; mottled ebony, *Diospyros Kanjilali.* 20. பிரம்புக் கொன்றை; cassia plant, *Cassia arborescesns.* 21. புலி நகக் கொன்றை; cassia with re-curved prickles, *Caesalpinia ligulata.* 22. புளினைக் காய் கொன்றை; prickly brasiletto climber, *Wagtea spicata.* 23. (1) பெருங் கொன்றை; the same as cara-k-konrai. (2) இயல்வாகை; unarmed brasiletto, *Peltophorum ferugineum.* 24. பெருமயிர்க் கொன்றை; royal peacock flowers, poincian regia. 25. பொன்மாற் கொன்றை; yellow pea-cock flower, *Caesalpinia pulcherrima.* 26. மஞ்சட் கொன்றை; yellow kondray, *Cassia sulpeurea alias Senna sumutrana.* 27. மந்தாரக் கொன்றை; dull-flower cassia, *Cassia.* 28. மாம்பழக் கொன்றை; mango cassia. 29. மயிற் கொன்றை; peacock laburnam, *Caesalpinia pulcherrima alias Poinciana regia.* 30. மல்லங் கொன்றை; shingle tree, *Acrocarpus fraxinifolius.* 31. மலைக் கொன்றை; deccany senna, *Cassia montana.* 32. முட் கொன்றை; prickly cassia, *Caesalpinia scandens.* 33. வரிக்கொன்றை; stripped-kondray, *Cassia emarginata.* 34. வெண்மயிற் கொன்றை; creamy pea-cock flower, *Poinciana elata* (சா.அக.).

கொணர்–தல் *koṇar-,* 13 செ.கு.வி. (v.i.) கொண்டு வருதல்; bring. சான்றிதழ்களைக் கொணரும்படி தலைமையாசிரியர் மாணவனிடம் கூறினார். வெளி மாநிலத் திலிருந்து சென்னை நகருக்கு குடிநீர் கொணரும் திட்டம் நிறைவேறியது.

[கொள் – கொணர்.]

கொணிசல் *koṇišal,* பெ.(n.) கோணல்; bend, curve (செ.அக.).

[கொணிசல் – பேச்சுவழக்கு.]

கொத்தப்பியர் *kottappiyar,* பெ.(n.) இந்தியாவை ஆட்சிபுரிந்த பழம்பெரும் அரசக் குடும்பத்தினர்; the dynasty who ruled India (அபி.சிந்.).

கொத்தமல்லிச்செடி *kottamalli-c-cēḍi,* பெ.(n.) மணத்திற்காக குழம்பில் சேர்த்துக் கொள்ளப்படும் கொத்த மல்லி செடி; coriander, *Coriandrum sativum* (சா.அக.).

[கொத்தமல்லி + செடி.]

கொத்தமல்லித்தூள் *kotta-malli-t-tūḷ,* பெ.(n.) கறிக்குப் போடுவதற்காக இடித்த கொத்தமல்லித்தூள்; powder of dried coriander seeds used in curries and confectionaries (சா.அக.).

[கொத்த + மல்லி + தூள்.]

கொத்தமல்லிவசூரி *kottamalli-vaśūri,* பெ.(n.) கொப்புளிப்பான் என்னும் அம்மை வகை; chicken - pox or measles (செ.அக.).

[கொத்தமல்லி + Skt. வசூரி.]

கொத்தவால் *kottavāl,* பெ.(n.) நகரங்கள், சிற்றூர்கள் முதலியவற்றின் காவல் தலைவன்; chief police officer for a city or town, superintendent of markets (செ.அக.).

[கோட்டை + வாள்.]

கொத்தவரங்காய் *kottavarangāy,* பெ.(n.) சற்று நீளமாகவும், தட்டையாகவும், வெளிர்ப்பச்சை நிறமாகவும் இருக்கும் காய்கறி; cluster beans. *கொத்தவரங்காய் வற்றல். கொத்தவரங்காய் போல் இருக்கிறான்*

[கொத்து + அவரங்காய். அவரைக்காய் → அவரங்காய்.]

கொத்தவாற்சேவகன் *kottavāṟ-śēvagaṉ,* பெ. (n.) கொத்தவாலெனுங் காவற் தலைவனின் கீழ் வேலை பார்க்கும் காவலாள்; police constable under a kottavāl (செ.அக.).

[கோட்டை + ஆள் + சேவகன்.]

கொத்தான்கொடி *kottāṉ-koḍi,* பெ.(n.) ஆகாசவல்லிக் கொடி; air plant or air-creeper; leafless creeper or thread creeper, *Cassytha filiformis* (சா.அக.).

[கொத்தான் + கொடி.]

கொத்திப்போடல் *kotti-p-pōḍal,* தொ.பெ. (vbl.n.) பறவைகள் அலகுகளால் கொத்துதல்; picking up with the beak (சா.அக.).

[கொத்தி + போடல்.]

கொத்து-தல் *kottu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. பாம்பு கடித்தல்; biting as by a snake. 2. கறி கொந்துதல்; chopping as of meat. 3. பறவை மூக்கினால் மோதல்; striking with the beak as by birds. 4. இரை கொத்தி எடுத்தல்; picking up grains as by birds (சா.அக.).

[கொல் – கொத்து.]

கொத்துக்கூலி *kottu-k-kūli,* பெ. (n.) 1. வேளாண் தொழில்களின் பொருட்டுக் கொடுக்குங் கூலி; wage for the various forms of agricultural work. 2. கொத்தர்க்குக் கொடுக்குங் கூலி; wage for masonry work (செ.அக.).

மறுவ. கொத்தனார்கூலி

[கொத்து + கூலி.]

கொத்துக்கோரை *kottu-k-kōrai,* பெ.(n.) கோரை வகைகளுள் ஒன்று; wet-land sedge, *Cyperus compressus* (செ.அக.).

[கொத்து + கோரை.]

கொத்துமலி *kottu-mali,* பெ.(n.) ஒரு வகைச் செடி (திவா.); coriander, *Coriandrum sativum* (செ.அக.).

[கொத்து + மலி.]

கொதி-த்தல் *koti-,* 4 செ.கு.வி.(v.i.) 1. காய்ச்சல் காய்தல்; to be suffering from fever; being attacked wtih fever. 2. வெப்பங் கொள்ளல்; getting heated in the system. 3. தண்ணீர் முதலியன

காய்ந்து பொங்குதல்; over-flowing of water etc. by its being boiled. 4. வயிறு வழுக்குதல் அல்லது வழுவுதல்; fluxing or flowing from the bowls as in dysentery or diarrhoea. 5. மிகச் சினத்தல்; growing extremely angry. 6. மகவை இழத்தலினால் தாய்க்கு வயிற்றில் ஏற்படும் குழப்பம்; a peculiar stirring sensation felt or experienced by the mother in the stomach on the loss of her child. 7. நீர் ஆவியாகக் கிளம்பல்; turning of a liquid into a gaseous state (சா.அக.).

[குய் – கொய் – கொதி.]

கொதித்தைலம் *kodi-t-tailam*, பெ.(n.) முத்துக்கொட்டை முதலியவற்றை இடித்து நீரிற் கொதிக்க வைத்து இறக்கும் எண்ணெய் (பைஷஜ.3); medicinal oil prepared by boiling pounded castor-beans, etc., in water (செ.அக.).

*[கொதி + **Skt.** தைலம்.]*

கொதிப்பெடு–த்தல் *kodippedu-*, 4 செ.கு.வி.(v.i.) 1. உடம்பு சூடாதல்; getting heated in constitution. 2. சினத்தால் வெப்புக் கொள்ளல்; getting hot or violent through anger (சா.அக.).

[கொதிப்பு + எடு–த்தல்.]

கொதுக்கொதுக்கென்றுபோ–தல் *kotu-k-kotu-k-kenru-pō-*, 8 செ.கு.வி. (v.i.) செரியாமையினால் அடிக்கடி சிறு அளவாக மலங் கழிதல்; going to stool often in small quantities or having looseness of bowels, due to indigestion (சா.அக.).

[கொது + கொது + என்று + போ–தல்.]

கொந்தராத்து *kondarāttu*, பெ.(n.) ஒப்பந்தம் (இலங்.); contract. *ஊரையே கொந்தராத்து எடுத்தது போல் பேசுகிறார்.* (கொ.வ.)

[E. contract - த. கொந்தராத்து]

கொந்தறிவாள் *kondarivāl*, பெ.(n.) சதையிற் குத்தி அறுக்கும் கத்தி; a surgical knife or instrument with a handle used for puncturing before cutting through the skin (சா.அக.).

[கொந்து + அரிவாள்.]

கொந்தினஇறைச்சி *kondina-v-iraicci*, பெ.(n.) நன்கு பொடிப்பொடி துண்டாக வெட்டின இறைச்சி; meat chopped into minute pieces, *Mince-meat; Hash* (சா.அக.).

மறுவ. கொத்துக்கறி

[கொந்தின + இறைச்சி.]

கொப்பரகேசரிவன்மர் *koppara-kēšari-vanmar*, பெ.(n.) ஒரு சோழ மன்னன்; a Cōlaking.

மறுவ. பராந்தகன், வீரநாராயணன்.

[கோ + பரகேசரி + வருமன்.]

இவர் மதுரை, ஈழம் முதலிய நாடுகளை வென்றார். ஆதித்தச் சோழரின் மகன். இவரின் மனைவி கேரள நாட்டு மன்னனின் மகள் கோக்கிழார் என்பவள். இவருக்கு இராசாதித்தன் கண்டராதித்தன், அரிஞ்சயன் என மூன்று பிள்ளைகள் இருந்தனர் (அபி.சிந்.).

கொப்பறா *kopparā*, பெ.(n.) நீர் வற்றி உலர்ந்த தேங்காய்; dried coconut-kernel, copra (செ.அக.).

[கப்பு –கொப்பு+அறை–அறா(கொ.வ.)]

கொப்புளத்தாள் *koppuḷattāḷ,* பெ.(n.) சதையைக் கொப்புளிக்கச் செய்யும் மருந்தூட்டிய தாள்; blistering papper (சா.அக.).

[கொப்புளம் + தாள்.]

கொப்புளிக்குமருந்து *koppuḷikku-marundu,* பெ. (n.) 1. உடம்பில் கொப்புளத்தை உண்டாக்கும் மருந்து; blistering agent or drug,*sicant.* 2. வாய் கொப்பளிப்பதற்காகப் பயன்படுத்தும் மருந்து நீர்; medicated gargles; a preparation for rinsing the throat with (சா.அக.).

[கொப்புளிக்கும் + மருந்து.]

கொப்பென *koppeṉa,* வி.எ. (adv.) 1. பொட்டென; quickly. 2. திடீரென; suddenly (சா.அக.).

[கொப்பு + என.]

கொம்பசைப்பசுவின்பால் *kombašai-p-pašuviṉ-pāl,* பெ. (n.) அசைகின்ற கொம்பையுடைய ஆவினது பால்; milk of the cow having losse horns (சா.அக.).

[கொம்பு + அசை + Skt. பசுவின் + பால்.]

கொம்பால்கிழி-த்தல் *kombāl-kiḻi-,* 4 செ.கு.வி. (v.i.) விலங்குகள் கொம்பினால் முட்டி சதையைக் கிழித்தல்; tearing the skin by goring with horns as by bull etc. (சா.அக.).

[கொம்பல் + கிழி-தல்.]

கொம்பில்கலைமான் *kombil-kalai-māṉ,* பெ.(n.) கொம்பு விழுந்த கலைமான்; pollard (சா.அக.).

[கொம்பு + இல் + கலை + மான்.]

கொம்புகொண்டபறவை *kombu-koṇḍa-paṟavai,* பெ.(n.) பிரேசில், கயானா முதலிய இடங்களில் வாழும் பறவை; a bird where living in Brēziland kayāṉā.

[கொம்பு + கொண்ட + பறவை.]

மாலைப் போன்று காணப்படும் இதன் கழுத்தில் சிறகுகளில்லை. முனை வளைந்த நீண்ட அலகு கொண்ட இவற்றின் சிறகுகள் பொன்னிற முடையவை. ஆண் பறவைகளுக்கு மட்டும் நெற்றியில் கொம்பு முளைத்திருக்கும். சதுப்பு நிலங்களில் வசிக்கும். இலை பூச்சி, தவசங்களை உணவாகக் கொள்ளும். கோடை காலத்தில் புதர்களில் மெத்தென்ற சரகு சேர்த்து ஆண்டிற் கொரு முறை முட்டையிட்டு அடை காத்து குஞ்சு பொரிக்கும் (அபி.சிந்.).

கொம்புசீவு-தல் *kombu-šivu-,* 5 செ.கு.வி. (v.i.) ஒருவரைச் சண்டை போடுமாறு தூண்டிவிடுதல், சண்டை மூட்டுதல்; incite some one to fight. *கொம்பு சீவும் வேலையை அவனிடம் வைத்துக் கொள்ளாதே.*

[கொம்பு + சீவு-தல்.]

கொம்புள்ளதேரை *kombuḷḷa-tērai,* பெ.(n.) ஒரு வகை தேரை; a toad with horns, found in South America.

[கொம்பு + உள்ள + தேரை.]

இது ஆறு அங்குல நீளமும் பெரிய வாயும், கண்ணிற்கு நேராகப் பெரிய கொம்பு போன்ற உறுப்பும் உடையது. தவளையைப் பிடித்துத் தின்னும். இது தென் அமெரிக்காவில் காணப் படுகிறது (அபி.சிந்.).

கொம்புள்ளபறவை *kombuḷḷa-paṟavai,* பெ.(n.) ஒரு வகைப் பறவை; a kind of bird.

[கொம்பு + உள்ள + பறவை.]

இது பெரிய வாத்து போன்ற உருவமுடையது. தலையில் கொம்பு போன்ற உறுப்பு கொண்டது. கறுப்பும், வெண்மையும் கலந்த இறகுகளை உடைய இப்பறவை தென் அமெரிக்காவில் உள்ளது (அபி.சிந்.).

கொம்புள்ளமூக்குப்பறவை *kombuḷḷa-mūkku-p-paṟavai,* பெ.(n.) ஒரு வகைப் பறவை; a kind of a bird.

[கொம்பு + உள்ள + மூக்கு + பறவை.]

இது சென்னை மாவட்டத்தைச் சார்ந்த மேற்குத் தொடர்ச்சிமலைக் காடுகளில் உள்ளது.

பெரிய இறக்கைகளைக் கொண்ட இவற்றின் மூக்கு 10 அங்குல நீளமுடையது. இந்த மூக்கில் மூக்கைப் போன்ற ஓர் உறுப்பு மேல் நோக்கி வளர்ந் திருக்கிறது. சிவந்த நிறமுடைய இவ்வினத்தில் ஒற்றைக் கொம்புடையதும், இரட்டைக் கொம்புடையதும் உண்டு. இதன் கால் நகங்கள் வளைந்தவை. இது உரக்கக் கத்தும் ஒலி 1 மைல் தூரம் கேட்கும். மரப்பொந்தில் கூடு கட்டி அடை காக்கும். பெட்டை அடை காக்கும் கூட்டை மண்ணால் அடைத்து துளை செய்து அதன் வழி இரை கொடுக்கும் (அபி.சிந்.).

கொம்புள்ளவிரியன்பாம்பு *kombuḷḷa-viriyaṉ-pāmbu,* பெ.(n.) ஒரு வகைப் பாம்பு; a kind of a snake.

[கொம்பு + உள்ள + விரியன் + பாம்பு.]

இது வட அமெரிக்காவில் மணலுள்ள இடங்களில் வாழும். தன் உடல் முழுதும் மணலில் மறைத்து, கண்களை வெளியில் காட்டிக் கொண்டிருக்கும். அதிக நச்சுத் தன்மை கொண்ட இது 30 அங்குல நீளம் உடையது (அபி.சிந்.).

கொம்புளகரம் *kombu-ḷagaram,* பெ.(n.) தமிழ் மொழியில் 'ள' என்னும் எழுத்து; பொது ளகரம் (இலங்.); the letter 'ள' in Tamil as distinguished from Širappuḷagaram.

மறுவ. புள்ளிக்கால் ளகரம்; கொம்புளவு

[கொம்பு + ளகரம்.]

கொம்புளவு *kombuḷavu,* பெ.(n.) கொம்பை முதலிற் கொண்ட எழுத்தாகிய ளகரம்; the letter 'ள' as beginning with the symbol (செ.அக.).

[கொம்பு + உளவு.]

கொம்மட்டிமரிகம் *kommaṭṭi-marigam,* பெ.(n.) நில வேம்பு; ground neem, *Celastrus Paniculata alias Justicia peniculata* (சா.அக.).

[கொம்மட்டி + மரிகம்.]

கொம்மட்டிவிதை *kommaṭṭi-vidai,* பெ.(n.) கொம்மட்டிக்காய் விதை; seeds of water-melon (சா.அக.).

[கொம்மட்டி + விதை.]

கொமட்டிவிதை *komaṭṭi-vidai,* பெ.(n.) சுக்கங்காய் விதை; seeds of bryonia callosa (சா.அக.).

[கொமட்டி + விதை.]

கொய்யின்கீரை *ko-y-yiṉ-kīrai,* பெ.(n.) அறுகீரை; அறைக் கீரை; a kind of vegetable greens (சா.அக.).

[கொய்யின் + கீரை.]

கொய்னா *koyṉā,* பெ.(n.) 1. சுரப்பட்டை மரம்; red cinchona bark, a tree, *Cinchona succirubra.* 2. காய்ச்சல் மருந்து; quinine, product of cinchona alkaloids (செ.அக.).

கொரட்சி *koraṭci,* பெ.(n.) ஒரு வகை மூலிகைச் செடி; an unknown drug said to be remedy for asthma (சா.அக.).

கொரநாடு *koranāḍu,* பெ.(n.) கூறைநாடு, மயிலாடு துறைக்கருகில் சேலைகள் மிகுதியாக நெய்யப்படும் ஓர் ஊர்; a village, near Mayiladuturai noted for the manufacture of sarees (செ.அக.).

[கூறை + நாடு.]

கொராசானி *korāšāṉi,* பெ.(n.) குராசானி யோமம்; khorassan ajwaun; common henbane, *Hyoscyamus niger* (சா.அக.).

கொரிக்கம் *korikkam,* பெ.(n.) எழுத்தாணி போன்ற பூவுள்ள ஒருவகைப் பூண்டு (மலை.); style plant, having a style-like flower, *Launcea pinnatifida* (செ.அக.).

[கோரு – கோருக்கம்.]

கொரிகாமரம் *korigā-maram,* பெ.(n.) கொறுக்காப்புளி (சித்.அக.); manilla tamarind (செ.அக.).

[கொரிகா + மரம்.]

கொல்[1] *kol*, பெ.(n.) 1. வருத்தம்; trouble. 2. கொலைத் தொழில்; the act of murder (சா.அக.).

[குல் – கொல்.]

கொல்[2] *kol*, பெ.(n.) மாழை (உலோகம்); metal (சா.அக.).

கொல்லன்கம்மாலை *kollaṉ-kammālai*, பெ.(n.) கொல்லன் உலைக்கூடம்; blacksmith's workshop, smithy (செ.அக.).

[கொல்லன் + கம்மாலை. கம்மாலை = பித்தளை வேலை செய்யும் இடம்.]

கொல்லன்கோவிகம் *kollaṉ-kōvigam*, பெ.(n.) பின் துடரிப் பூடு; sand binder (சா.அக.).

[கொல்லன் + கோவிகம்.]

கொல்லன்பாகல் *kollaṉ-pāgal*, பெ.(n.) ஒரு வகைப் பாகல்; a kind of bitter gourd (சா.அக.).

கொல்லனழிசி *kollaṉaḻici*, பெ.(n.) கடைக்கழகப் புலவர்களில் ஒருவர்; a poet who belong to the last Tamil Šaṅgam.

[கொல்லன் + அழிசி.]

சோழர் குடியினரான அழிசியினின்று வேறுபடுத்த இவரது இனப் பெயருடைய இவரது பெயருக்கு முன் இட்டனர் (அபி.சிந்.).

கொல்லாவிரதம் *kollā-viradam*, பெ.(n.) உயிர்களைக் கொல்லாமையாகிய நோன்பு; vow of abstaining from killing. *"கொல்லாவிரதங் குவலயமெல்லா மோங்க" (தாயு.பராபர.54) (செ.அக.).*

[கொல்லா + Skt. விரதம்.]

கொல்லாவிரதியர் *kollā-viradiyar*, பெ.(n.) 1. கொல்லாமையை நோன்பாக உடையவர்; those who have vowed to abstain from killing. *"கொல்லாவிரதியர் நேர்நின்ற முக்கட் குருமணியே" (தாயு.பாயப்புலி.22).* 2. சைனர்; Jains (செ.அக.).

[கொல்லா + Skt. விரதியர்.]

கொல்லென்று *kolleṉṟu*, வி.அ.(adv.) உடனடியாகவும், உரக்கவும் சிரித்தல்; bursting tears, laughter, etc. *கோமாளி வந்ததும் சிறுவர்கள் கொல்லென்று சிரித்தார்கள்.*

கொல்லைநிலம் *kollai-nilam*, பெ.(n.) புதரடைந்து கிடக்கும் மேட்டுநிலம்; இதனை நஞ்சையாகவும் திருத்துவர்; sod, which can be reformed for cultivation. *"கொல்லை நிலங்கொண்டு திருத்தியது" (திருவொற்றியூர் கல்வெட்டு) "கொல்லைத் துறை காடு வெட்டி கட்டைப் பறித்து மேடும் பள்ளமும் திருத்தி நீர் நிலமாக" (தெ.கல்., தொ.7, கல்.97) (கல்.அக.).*

கொல்லைப்புறம் *kollai-p-puṟam*, பெ.(n.) வீட்டுக்குப் பின்னால் உள்ள இடம்; புறங்கடை; backyard of a house.

மறுவ. பொறவாசல், புறக்கடை, புழக்கடை, கடைவாசல்.

[கொல்லை + புறம்.]

கொல்லைப்புறவழி *kollai-p-puṟa-vaḻi*, பெ.(n.) நேர்மையற்ற முறை; unfair means; back door. *நேர்மையான அரசியல் நடத்துபவர்க்கு கொல்லைப்புற வழி எதற்கு?.*

[கொல்லை + புறம் + வழி.]

கொலுகொலு-த்தல் *kolu-kolu-*, 4 செ.கு.வி.(v.i.) 1. கலகலக்க; to become loose, disjointed, rickety, deranged in parts. 2. மட்கிப் போகை; to moulder, crumble into dust, as a dead body. 3. உரையாடலி (வாதத்தி)ல் தோற்கை; to be defeated or discomfited in argument. 4. ஓயாமல் வாய் பேசுகை; to chatter incessantly (செ.அக.).

[கொலு + கொலு-த்தல்.]

கொலுகொலுப்பு *kolu-koluppu,* பெ.(n.) 1. ஆடம்பரம்; affectation, osteritation, vanity. 2. ஓயாமல் வாய் பேசுகை வாயாடுகை; incessant chattering. 3. கலகலத்துப் பேசுகை; becoming loose or rickety (செ.அக.).

[கொலு + கொலுப்பு.]

கொலுசெழுத்து *kolu-šeluttu,* பெ.(n.) கூட்டெழுத்து; running hand (செ.அக.).

[கொலுசு + எழுத்து.]

எழுத்துக்களை ஒன்றோடொன்று பிணைத்து எழுதும் முறை.

கொலுவிரு-த்தல் *kolu-viru-,* 3 செ.கு.வி. (v.i.) கொலு மண்டபத்தில் அரசர் அரியணையில் அமர்ந்திருத்தல்; presence of a king in his royal court in a sitting state (சா.அக.).

[கொலு + இரு-த்தல்.]

கொலைப்பசி *kolai-p-paši,* பெ.(n.) கடுமையான பசி; state of being famished. *காலையிலிருந்து சாப்பிடவில்லை, கொலைப் பசி எடுக்கிறது.*

[கொலை + பசி.]

கொலைப்பட்டினி *kolai-p-pattini,* பெ.(n.) எதையும் சாப்பிடாமல் மிகுந்த பசியுடன் இருக்கின்ற நிலை; utter starvation; extreme hunger. *நான்கு நாட்களாக நான் கொலைப் பட்டினி.*

[கொலை + பட்டினி.]

கொலைவிழு-தல் *kolai-vilu-,* 2 செ.கு.வி. (v.i.) கொலை நடத்தல்; result in murder. *நீ மறுபடியும் தகராறு செய்தால் இங்கு ஒரு கொலை விழும் என்று அச்சுறுத்தினார்.*

[கொலை + விழு-தல்.]

கொவ்வைப்பழம் *kovvai-p-palam,* பெ.(n.) கோவைப் பழம்; red fruits of a common creeper found on the hedges.

[கொவ்வை + பழம்.]

கொழிஞ்சினி *koliñjini,* பெ.(n.) நாய் வேளை; dog mustard plant, *Cleome viscosa* (சா.அக.).

மறுவ. இதை நாய்க்கடுகு என்றும் அழைப்பர்.

கொழிப்பாயாசம் *koli-p-pāyāšam,* பெ.(n.) செந்தொட்டி; scorpion leaf, *Tragia involucrata* (சா.அக.).

கொழு-த்தல் *kolu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. உடம்பு தெளிந்து பருத்தல்; becomming fattened. 2. குழம்பாய் இருத்தல்; being of thick consistency. 3. மதத்தல்; becoming sexually excited (சா.அக.).

[கொள் – கொழு.]

கொழுக்கு *kolukku,* பெ.(n.) கைப்பிடி உள்ள கோப்பை (இலங்.); cup to drink coffee or tea. *கொழுக்கு நிறைய தேனீர் கொடுத்தார்கள்.*

கொழுகொழென்று *kolu-kolenru,* வி.அ. (adv.) மிகுந்த சதைப்பற்றுடன்; chubby. *குழந்தை கொழுகொழுவென்று இருக்கிறது.*

[கொழு + கொழு + என்று]

கொழுச்சி *kolucci,* பெ.(n.) 1. நாய்வேளை; dog mustard, *Cleome viscosa.* 2. கொழுஞ்சிச் செடி; zanzibar indigo, *Tephrosia Purpurea alias T.galegioides* (சா.அக.).

கொழுத்த *kolutta,* பெ.அ.(adj.) வருமானம் முதலியவற்றில் மிகுந்த; பெருத்த; huge; big. *கொழுத்த ஊதியம், கொழுத்த வேட்டை.*

[கொழு – கொழுத்த.]

கொழுத்தாடை *koluttādai,* பெ.(n.) கரும்பின் நுனிப் பகுதி; head of a sugarcan stalk (செ.அக.).

[கொழுந்து + ஆடை.]

கொழுந்தனார் *kolundanār,* பெ.(n.) பொதுவாகக் கணவனின் உடன்பிறந்தான்; குறிப்பாகக் கணவனின் உடன் பிறந்தாருள் இளையவர்; generally husband's brother, especially husband's younger brother.

[கொழுந்தன் + ஆர்.]

கொழுப்புள்ள *koluppulla,* பெ.எ.(adj.) செழுமையான; corpulent (சா.அக.).

[கொழுப்பு + உள்ள.]

கொழுப்பெடு-த்தல் *kolu-p-pedu-,* 4 செ.கு.வி.(v.i.) உடம்பின் கொழுப்பை நீக்கல்; removing the fat from body (சா.அக.).

[கொழுப்பு + எடு-த்தல்.]

கொழுப்பேறு-தல் *koluppēru-,* 5 செ.கு.வி. (v.i.) 1. உடம்பில் கொழுப்பு உண்டாதல்; becoming corpulent or growing excesively fat. 2. திமிர் கொள்ளல்; exhibiting the power of procreation. 3. மதர்த்தல்; becoming sexually excited. 4. உடம்பில் கொழுப்பு அதிகமாதல்; increase of bodily fat (சா.அக.).

[கொழுப்பு + ஏறு-தல்.]

கொழும்புநாதல் *kolumbu-nādal,* பெ.(n.) வெண்ணாவல்; whie jaumon, *Eugenia zeylanica* (சா.அக.).

[கொழும்பு + நாவல்.]

கொழும்புமரம் *kolumbu-maram,* பெ.(n.) பூ மரம்; Ceylon oak, hill trumpet flower or flowering fig, *Schlelchera trijuga alias S.Pubescens.*

மறுவ. கூம்பாதிரி, கொஞ்சி அல்லது பூவத்தி (சா.அக.).

[கொழும்பு + மரம்.]

கொழுவு-தல் *koluvu-,* 5 செ.கு.வி.(v.i.) மாட்டுதல்; தொங்கவிடுதல் (இலங்.); hang something on something. *பையைத் தோளில் கொழுவிக் கொண்டு புறப்பட்டான்*

[கொழு→கொழுவு→கொழுவு-தல்.]

கொள்கலன் *kolkalan,* பெ.(n.) சேமித்து வைக்கப் பயன்படுத்தும் ஏனம்; மாழையினால் செய்த தொட்டி; container for storing.

கொள்ளைநோயாற்கிட-த்தல் *kollai-nōyār-kida-,* 3 செ.கு.வி. (v.i.) வயிற்றுப் போக்கு, ஒவ்வாமை, அம்மை, காய்ச்சல் முதலிய நோயால் தாக்கப்பட்டு வருந்தல்; being attacked and afflicted with a pestilential disease as by cholera, small pox, influenza etc. (சா.அக.).

[கொள்ளை + நோயால் + கிட-த்தல்.]

கொள்முதல்நிலை *kolmudal-vilai,* பெ.(n.) பொருளை விற்பனை செய்வதற்காக வாங்கும்போது அதற்குக் கொடுக்கப்படும் விலை; வாங்கிய விலை; procurement price.

[கொள் + முதல் + விலை.]

கொள்வரி *kol-vari,* பெ.(n.) நெல்லாய வகை (தெ.கல்.தொ.4:195); a tax in kind (செ.அக.).

[கொள் + வரி.]

கொள்ளம்பக்கனார் *kollam-pakkanār,* பெ.(n.) கழகக் காலப் புலவர்; a poet, who belongs to the Śaṅgam age.

[கொள்ளம்பாக்கன் + ஆர்.]

கொள்ளம் என்பது ஒரு ஊர். நற்றினை 147ஆம் பாடலில் பாக்கம் குறிஞ்சித் திணையைப் பாடியுள்ளார் (அபி.சிந்.).

கொள்ளாதநோய்கொள்ளல் *kollāda-nōy-kollal,* 16 செ.கு.வி.(v.i.) 1. குணப்படுத்த முடியாத நோயால் பாதிக்கப்படல்; being seized with an incurable disease. 2. குட்டங் கொள்ளல்; being attacked wtih leprosy (சா.அக.).

[கொள்ளாத + நோய் + கொள்ளு-தல்.]

கொள்ளிச்சட்டி *kolli-c-catti,* பெ.(n.)

இறந்தவரின் உடலிற்குத் தீ வைக்க எடுத்துச் செல்லும் கங்கு அல்லது எரியும் சுள்ளி வைத்த மண்சட்டி; pot containing live coal or burning sticks carried to the cremation ground for lighting the funeral pyre.

மறுவ. தீச்சட்டி

[கொள்ளி + சட்டி.]

கொள்ளிப்பூடு *kolli-p-pūdu,* பெ.(n.) புனுகு; civet (சா.அக.).

கொள்ளிபோடு-தல் *kolli-pōdu-,* 20 செ.கு.வி.(v.i.) இறந்தவரின் உடலிற்குத் தீ மூட்டுதல்; light a funeral pyre. *தாய்க்குத் தலைமகன் தான் கொள்ளி போட வேண்டும் (பே.வ.).*

[கொள்ளி + போடு-தல்.]

கொள்ளுபானிதம் *kollu-pānidam,* பெ.(n.) சூரிய காந்தி; sun flower, *Helianthus indicus* (சா.அக.).

[கொள்ளு + பானிதம்.]



கொள்பொன்றி *kolponri,* பெ.(n.) தெய்வத் திருமேனிக்குக் காதணியாகச் சாத்தும் பொன் அணிகலன்; golden ear ornament worn for the metal idols. *"திருக்காதில் சாத்தும் கொள் பொற்றிநூல்" (தெ.கல்.தொ.5, கல்.644).*

[கொள் + பொன்றி.]

கொள்ளுச் செடியில் பூக்கும் பூப் போன்ற வடிவில் செய்யப் பெறும் காதணிப் பொறுப்பு.

கொளகொளென்று *kola-kolenru,* பெ.அ. (adj.) கெட்டித் தன்மை குறைந்து நெகிழ்ந்த நிலை; of fruits too soft or nearly rotten. *வெயிலில் பழங்கள் கொளகொள வென்று ஆகிவிட்டன.*

[கொள + கொள + என்று.]

கொளிஞ்சி *koliñji,* பெ.(n.) கொழுஞ்சிச் செடி; zanzibar indigo, *Tephrosia Purpurea alias T.galegioides* (சா.அக.).

கொளுக்கட்டைத்தேக்கு *kolukkattai-t-tēkku,* பெ. (n.) போதக நாறி மரம்; firebrand teak, *Premna tomentosa* (சா.அக.).

[கொளுக்கட்டை + தேக்கு.]

கொளுங்குவி *kolunguvi,* பெ.(n.) 1. வேலிப் பருத்தி; hedge cotton, *Dacmia extensa.* 2. பன்றி மொத்தை; pig root, *Trapa bisipinosa* (சா.அக.).

கொளுஞ்சிநாரத்தை *koluñji-nārattai,* பெ.(n.) கொழிஞ்சி நாரத்தை அதாவது தித்திப்பு நாரத்தை; sweet bigarade orange, *Citrus aurantium bigaradia* (சா.அக.).

[கொளுஞ்சி + நாரத்தை.]

கொளுத்துவெயில் *koluttu-veyil,* பெ.(n.) தீப் பற்றும் வெயில்; burning or scorching sun (சா.அக.).

[கொளுத்து + வெயில்.]

கொற்றங்கொற்றனார் *korran-korranār,* பெ. (n.) கழகக் காலப் புலவர்; a Šaṅgam poet.

[கொற்றன் + கொற்றன் + ஆர்.]

வேளாண் மரபினர் நற்றிணை 54-வது பாடலைப் பாடியுள்ளார் (அபி.சிந்.).

கொற்றனார் *korranār,* பெ.(n.) கழகக்

காலப் புலவர்; a poet who belongs to the Śaṅgamage.

[கொல் (புதுமை, சிறப்பு) – கொற்றன்.]

பெரும்பூதனார் என்பவரின் மகனான இவர் வணிகர் குலத்தவர். நற்றிணை 30–ம் பாடலும், குறுந்தொகையில் ஒன்றும், அகத்தில் ஒன்றும் என மூன்று பாடல்கள் இவர் பாடியவைகளாகக் கிடைத்துள்ளன (அபி.சிந்.).

கொறகர் *koṟagar,* பெ.(n.) தாழ்ந்த வகுப்பினர்; the lower caste people, base people.

[குறவர் – கொறகர்.]

இவர்கள் தென்கன்னடத்தில் வாழ்பவர்கள். காடுகளில் குடிசைகளில் வாழும் இவர்கள் கூடை, முறம் முதலியன கட்டிப் பிழைக்கின்றனர். இவர்களில் சிலர் உழவர்களுக்கு அடிமை செய்து வாழ்வர் (அபி.சிந்.).

கொறட்டை *koṟaṭṭai,* பெ.(n.) ஒரு செடி; a plant.

[குறட்டை – கொறட்டை.]

கொறடா *koṟaḍā,* பெ.(n.) குதிரைச் சவுக்கு; horsewhip, whip, scourge (செ.அக.).

Port. Corda, **I.** Koraḍā, **K.** Koraḍē, **M.**Koraṭā, **Tu.** Korḍe> **த.** கொறடா.

கொறி *koṟi,* பெ.(n.) 1. ஆடு; Sheep. 2. செம்மறியாடு; a short woolly sheep with twisted horns (சா.அக.).

[குறி – கொறி.]

கொறுக்கைச்சி *koṟukkaicci,* பெ.(n.) ஒரு வகைப் புல்; a kind of grass.

[குறுக்கத்தி + கொறன்கச்சி.]

கொறுக்கைத்தாரி *koṟukkai-t-tāri,* பெ.(n.) செங்கத்தாரி; false peacock foot tree, *Nicbuhria linearis* (சா.அக.)

[கொறுக்கை + தாரி.]

கொன்றைக்கொழுந்து *koṉṟai-k-koḻundu,* பெ.(n.) கடையில் விற்கும் கொன்னைத் தளிர்; cassia buds sold in the bazaar (சா.அக.).

[கொன்றை + கொழுந்து.]

கொன்றையிலை *koṉṟai-y-ilai,* பெ.(n.) கொன்றை மரத்தின் இலை; cassia flowers.

[கொன்றை + இலை.]

இதை கீரையாகச் சமைத்து சாப்பிடுவது உண்டு. இலையை அரைத்து வண்டு கடிக்குப் பூசலாம் (சா.அக.).

கொன்றைவேய்ந்தன் *koṉṟai-vēyndaṉ,* பெ.(n.) ஔவையார் இயற்றிய 'கொன்றை வேய்ந்த' என்று தொடங்கும் ஒரு நீதி நூல்; a short moral code in Tamil by Avvaiyar, commencing with Koṉṟaivēynda (செ.அக.).

[கொன்றை + வேந்தன்.]

கொன்றைவேர்ப்பட்டை *koṉṟai-vēr-p-paṭṭai,* பெ.(n.) கொன்றை வேரில் மேல் பட்டை; root bark of cassia (சா.அக.).

[கொன்றை + வேர் + பட்டை.]

கோக்கம் *kōkkam,* பெ.(n.) நெல்லி; Indian gooseberry, *Phyllanthus emblica* (சா.அக.).

கோகநகம் *kōga-nagam,* பெ.(n.) 1. செந்தாமரை; red lotus. 2. செவ்வாம்பல்; red Indian water-lily. 3. செந்தும்பை; a red variety of leucas (சா.அக.).

கோகபந்தகம் *kōga-pandagam,* பெ.(n.) சூரிய காந்தி; sun-flower (சா.அக.).

கோகம்பளன் *kōkambaḷaṉ,* பெ.(n.) நரி வயிற்றில் பிறந்த ஒரு முனிவன்; a saint who born in jackal's stomach (அபி.சிந்.).

கோகருணை *kō-karuṇai,* பெ.(n.) 1. பெருங் குரும்பை; the unripe fruit of palmyra. 2. எருக்கு; bow-string hemp, *Calotropis gigantea* (சா.அக.).

கோகிலபட்சம் *kōkila-paṭcam*, பெ.(n.) 1. கொம்மட்டி மாதுளை; melon lime, citrus medica-medica. 2. கொடி மாதுளை அல்லது துரிஞ்சி; lemon citron, *Citrus medica*. 3. நீர்முள்ளி; water thistle, *Hygrophila spinosa* (சா.அக.).

[கோகில + பட்சம்.]

கோகிலாட்சம் *kōgilāṭcam*, பெ.(n.) 1. நீர்முள்ளி பூடு வகை; white long-flowered nail dye, *Hygrophila spinosa*. 2. மரவகை (சிலப்ப.16, 25, உரை); citron, a tree, *Citrus medicamedica* (செ.அக.).

கோகிலாமட்சம் *kōkilā-maṭcam*, பெ.(n.) வெள்ளை நீர் முள்ளி; white flowered water thistle, *Hygrophila spinosa* (சா.அக.).

கோகிலோற்சவம் *kōgiilōṟcavam*, பெ.(n.) மாமரம் (மலை.) (குயிலுக்கு மகிழ்ச்சியை விளைப்பது); mango tree (lit., that which causes festivity to the koels (செ.அக.).

கோகினி *kōkiṉi*, பெ.(n.) வெட்பாலை; bitter oleander, *wrightia anti-dysenterica* (சா.அக.).

கோகுலம்பால் *kōkulam-pāl*, பெ.(n.) ஆவின் பால்; cow's milk (சா.அக.).

[கோகுலம் + பால்.]

கோகுலாட்டமி *kōgulāṣṭami*, பெ.(n.) கண்ணன் தோன்றிய ஆவணி மாதத்து எட்டாம் (கிருஷ்ணாஷ்டமி) நாள்; birthday of Šrikrṣṇā (செ.அக.).

கோகோ *kō-kō*, பெ.(n.) கோகோ விதை மரம்; chocolate tree, *Theobroma cacao*.

[கோ + கோ.]

இவ்விதை அண்ட வடிவாயும், கறுப்பாயும், தோல் உள்ளதாயும் இருக்கும். இது தேயிலை அல்லது குளம்பி (காப்பி)க் கொட்டையைப் போல் குணத்தை உடையது (சா.அக.).

கோங்கன் *kōṅgaṉ*, பெ.(n.) ஒரு மன்னன்; a king.

இவன் கோயம்புத்தூர் கருரை ஆண்டவன். இச்சேரனும், கோங்கனும் சேரன் குமரர்கள். தங்கள் நாட்டை இரு வகையாகப் பிரித்துக் கொண்டனர் (அபி.சிந்.).

கோங்குவேளாளர் *kōṅgu-vēḷāḷar*, பெ.(n.) வேளாளர்கள்; a kind of peasent's, whose origin is Koṅgu.

இவர்கள் கோங்கு நாட்டிலிருந்து வந்து தென்னாட்டில் பரவியவர்கள். வேளாளர் என்று சொல்லப்பட்டாலும் வேளாண் தன்மை சிறிதும் இல்லாதவர்கள். இவர்களது பழக்க வழக்கங்கள் பெரிதும் மாறுபட்டவை. கணவனுக்கு வயது வருமளவும், மணப்பெண் மாமனுடன் இருப்பது போன்ற சமூகத்திற்கு எதிரான நடைமுறைகள் இவர்களிடம் உண்டு (அபி.சிந்.).

கோச்சிங்கப்பல்லவன் *kōcciṅga-p-pallavaṉ*, பெ.(n.) சுந்தரர் காலத்தில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னன்; a Pallava king who is the contemporary of Sundarar a canonized Siva devotee (அபி.சிந்.).

கோச்செங்கட்சோழநாயனார் *kōcceṅgaṭcōḻanāyaṉār*, பெ. (n.) அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான சோழகுல அரசன் (பெரியபு.); the Chola king and canonized Šaiva saint, one of 63 (செ.அக.).

[கோ + செங்கண் + சோழ + நாயனார்.]

கோச்செங்கணான் *kōcceṅgaṇāṉ*, பெ.(n.) **கோச்செங்கட்சோழநாயனார்** பார்க்க; see *kōcceṅgaṭcōḻa-nāyaṉār*. *"செம்பியன் கோச்செங்கணான் சேர்ந்த கோயில்" (திவ்.பெரியதி.6, 6, 1) (செ.அக.).*

[கோ + செங்கண் + ஆன்.]

கோச்செங்குட்டுவன் *kōc-ceṅguṭṭuvaṉ*, பெ.(n.) ஒரு சேர மன்னன்; a cērāking.

இவனைப் பரணர் பாடி உம்பற்

காட்டுவாரியையும், அவன் மகன் குட்டுவன் சேரலையும் பாடிப் பரிசில் பெற்றார் (அபி.சிந்.).

கோச்சேரமான்யானைக்கட்சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை *kōc-cēramāṉ-yāṉaikkaṭ-cēy-māndarañ-cēralirumpoṟai,* பெ. (n.) ஒரு சேர மன்னன்; a cēra king.

[கோ + சேரமான் + யானை + கண் + சேய் + மாந்தரன் + சேரல் + இரும்பொறை.]

கொல்லி மலைக்குத் தலைவன். சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியுடன் போர் செய்தவன். கூடலூர்கிழாரால் பாடப்பெற்றவன். ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தான் (அபி.சிந்.).

கோசஞ்சாரபூமி *kōsañjārabūmi,* பெ.(n.) ஆவினங்களின் மேய்ச்சலுக்கென விடப்பட்ட நிலம்; land allotted for pasturage of cows, land left for granzing (செ.அக.).

[கோ + Skt. சஞ்சாரபூமி.]

கோசனை *kōsaṉai,* பெ.(n.) பேரொலி (பிங்.); roar, loud noise, tumult (செ.அக.).

கோசமம் *kōsamam,* பெ.(n.) சமையலுக்குகந்த காய் காய்க்கும் பீர்க்கு எனும் கொடி வகை (மலை.); sponge gourd, strainer-vine, *Luffa acutangula* (செ.அக.).

கோசமாகிகம் *kōsa-mākigam,* பெ.(n.) காடு (வன) மிரட்டி; forest fright ener, a kind of unknown creeper (சா.அக.).

[கோச + மாகிகம்.]

கோசர்ப்பம் *kō-sarppam,* பெ.(n.) பீர்க்கு; sponge gourd; luffa, *Cucumber acutangularis* (சா.அக.).

[கோ + சர்ப்பம்.]

கோசரங்கம் *kōsaraṅgam,* பெ.(n.) நாணல்; reed (சா.அக.).

கோசரதசித்தா *kōsarada-sittā,* பெ.(n.) தேவதாளி; a kind of luffa, *Luffa eschinata* (சா.அக.).

கோசலத்தரசன் *kōsalattarasaṉ,* பெ.(n.) ஒரு மன்னன்; a king.

[கோசலம் + அத்து + அரசன்.]

இவனது இயற்பெயர் தெரியவில்லை. பாஞ்சால மன்னன் இவன் மீது படையெடுத்து வந்து இவனை வென்றான். இவனின் மகள் வாசவதத்தையையும், பிற ஆயத்தாரையும் தன் மனைவிகளுக்குப் பணிப்பெண்ணாக்கினான். உதயணன் என்பவன் பாஞ்சாலத்தின் மேல் படையெடுத்து வென்று வாசவதத்தையை மணந்து, மற்றவர்களைத் தன் மனைவிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தான் (அபி.சிந்.).

கோசலவளநாடு *kōsala-vaḷa-nāḍu,* பெ. (n.) ஒரு நாடு; a city.

இந்நாடு செல்வத்திலும், புகழிலும் சிறந்தது. இந்நாட்டிலுள்ளவர்கள் நடுவுநிலைமையிலும், பாத்திரமறிந்து கொடுத்தலினும் சிறந்தவர். இந்நாட்டு சித்திர வேலைக்காரர்கள் மிகவும் புகழ் பெற்றவர்கள் (அபி.சிந்.).

கோசவதம் *kōsa-vatam,* பெ.(n.) ஒரு பூடு; a plant, *Cucumis utilissimus* (சா.அக.).

[கோச + வதம்.]

கோசவம் *kōsavam,* பெ.(n.) கோமேதம்; a precious stone, Onyx (சா.அக.).

கோசன் *kōsaṉ,* பெ.(n.) சீர்பந்த பாடாணம் எனும் பிறவி நஞ்சு வகை; a mineral poison (செ.அக.).

கோசன் *kōsaṉ,* பெ.(n.) ஞாயிறு குலத்து மன்னன்; king of sun dynasty.

இவன் விரல்களில் புழுச் சொரிந்து கொண்டு இருந்தது. ஒருநாள் அயோத்திக்கு அருகில் உள்ள ஞாயிறு நீர்த்துறையில் நீராடி புழு நீங்கித் தூய்மையடைந்தான் (அபி.சிந்.).

கோசாலை *kōsālai,* பெ.(n.) இறைவன் வழிபாட்டிற்குரிய பால் பெறுதற்குரிய கோயில்களில் வளர்க்கப் பெறும் ஆக்களுக் கமைந்த கொட்டி. இதனைச் சுரபிச் சாலை, ஆ(பசு) மடம் என்று கூறுவர்; cow stall maintained for the supply of milk to a temple.

[கோ + சாலை.]

"திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியார் கோவிலுக்கும் பால் அமுது செய்தருளும், பாற் போனகப் பாலுக்கும் குலோத்துங்க சோழன் திருக்கோசாலை பிடையற்கு விட்ட பசு நானூற் றொருபதினால்" (தெ.கல்.தொ.8, கல்54)

கோசாதி *kōšāti*, பெ.(n.) சுக்கு; dry ginger (சா.அக.).

கோசி *kōši*, பெ.(n.) விலாமிச்சை வேர்; the root of a fragrant grass (சா.அக.).

கோசிகுவா *kōši-kuvā*, பெ.(n.) கறி முன்னை; curry nelli, *Premna esculenta* (சா.அக.).

[கோசி + குவா.]

கோசிலேவா-தல் (கோசிலேவருதல்) *kō-šilēvā-*, 18 செ.கு.வி.(v.i.) காற்றின் போக்கிலே செல்லும்படி கப்பற்சுக்கானைத் திருப்புதல்; to manage the rudder so as to sail close to the wind (செ.அக.).

கோசினி *kōšiṇi*, பெ.(n.) மாமரம்; mango tree (சா.அக.).

கோசுக்கீரை *kōšu-k-kīrai*, பெ.(n.) செடிவகை (முட்டைக்கோசு); cabbage, *Brassica oleracea capitata* (செ.அக.).



கோசுமலி *kōšumali*, பெ.(n.) ஒருவகைப் பச்சடி; a relish made of pulse and other ingredients (செ.அக.).

கோசுமாசு *kōšu-māšu*, பெ.(n.) ஏமாற்று; juggling, deception, hoax (செ.அக.).

[U.ghōlmāl> த. கோசுமாசு.]

கோட்கூச்சவ்வை *kōṭ-kūccavvai*, பெ.(n.) ஒரு சிவபக்தை; a devotee of Siva.

இவளின் தந்தை சிவதேவசரணர். கோவில் திருப்பணி பொருட்டு வெளியூர் செல்ல நேரிட்டதால் இறைவனுக்குப் பால் உணவு அளிக்கும் பணி இவருக்கு வந்தது. இவரது பத்தியை மெச்சி இறைவன் உணவை உண்டு அருளினார். ஊர் திரும்பிய தந்தை மகள் வெறும் கலத்துடன் வருவது கண்டு சந்தேகிக்க, ஔவை இறைவனை உண்ண வேண்டினாள். தாமதமாவது கண்டு தந்தை ஔவையே குற்றம் செய்தாலென அடிக்க வர சிவன் ஔவையை மார்பில் அணைத்தார். இதனால் சிவனுக்குக் கொப்பிலிங்கமெனப் பெயர் உண்டாயிற்று (அபி.சிந்.).

கோட்டச்சோதி *kōṭṭa-c-cōti*, பெ.(n.) ஒளி மரம் (சோதி விருட்சம்); a tree luminous in the dark, found in thick forest (சா.அக.).

கோட்டம்பலத்துத்துஞ்சியசேரமான் *kōṭṭambalattu-t-tuñjiya-cēramāṉ*, பெ.(n.) கடைக் கழகப் புலவர்; the poet who belonged to the last Šangam age (அபி.சிந்.).

கோட்டியூர்நல்லந்தையார் *kōṭṭiyūr-nallandaiyār*, பெ. (n.) கடைக் கழகக்காலப் புலவர்; a poet, belonged to last Šangam era.

[கோட்டியூர் + நல் + அந்தை + ஆர்.]

இவர் நற்றிணை 211-ஆம் பாடலில் நெய்தற் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார் (அபி.சிந்.).

கோட்டுப்புட்பம் *kōṭṭu-puṭpam*, பெ.(n.) கல் தாமரை; dry lotus generally found grow in the crevices of rocks and mountains (சா.அக.).

[கோட்டு + Skt. புட்பம்.]

கோட்டுவாத்தியம் *kōṭṭu-vāttiyam,* பெ.(n.) தந்தியுள்ள இசைக் கருவி; a kind of stringed musical instrument (செ.அக.).



கோட்டைவிடு-தல் *kōṭṭai-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) ஏமாந்து தவறவிடுதல்; miss or lose something in a silly way. *பணத்தை இப்படிக் கோட்டைவிட்டு விட்டு வந்து நிற்கிறாயே?*

[கோட்டை + விடு-தல்.]

கோட்புலியார் *kōṭ-puliyār,* பெ.(n.) ஒரு சிவனடியார்; a devotee of Śivā.

[கோள் + புலி + ஆர்.]

சிங்கடிவனப்பகை என்னும் தன் இரண்டு பெண்களைச் சுந்தரருக்கு அடிமையாகக் கொடுத்தவர். இவர் கோட்புலி நாயனரினும் வேறுபட்டவர். ஏனெனில் இவரது வரலாற்றில் சுந்தரரைக் குறித்துச் சொல்லப்படவில்லை (அபி.சிந்.).

கோடகாசுரன் *kōḍagāšuran,* பெ.(n.) ஒரு அரக்கன்; a giant. *தேவரை வருத்திக் கொண்டிருந்த இவனை சிவன் சூலத்தால் கொன்றார் (அபி.சிந்.).*

கோடர் *kōḍar,* பெ.(n.) இருளர்; Irular community who are the inhabitants of hill.

[கோடு (மலை) + அர்.]

தோடர்களும் இவர்கள் வகுப்பைச் சார்ந்தவர்களே. தற்பொழுது நீலகிரி மலையில் வாழும் இவர்கள் முதலில் மைசூருக்கடுத்த கொல்லி மலையில் வாழ்ந்தனர். ஆவினை (பசுவை)க் கொலை செய்பவர்களாதலால் இப்பெயர் வந்ததென்பர். கோடகிரி, தொடநாடு முதலிய இடங்களிலுள்ள குடிசைகளில் வாழ்கின்றனர். தமிழும், கன்னடமும் கலந்து பேசும் இவர்கள் அழுகிய இறைச்சியாயினும் உண்பர் (அபி.சிந்.).

கோடற்கிழங்கு *kōḍaṟ-kiḻaṅgu,* பெ.(n.) வெண் காந்தற் கிழங்கு; a bulbous root grown in the summer season (சா.அக.).

[கோடல் + கிழங்கு.]

கோடாகிழங்கு *kōḍā-kiḻaṅgu,* பெ.(n.) கோரைக் கிழங்கு; fragrant tuber of *Cyperus rotundus* (செ.அக.).

கோடாசலக்குளிகை *kōḍāšala-k-kuḷigai,* பெ.(n.) வயிற்றுப் போக்கைக் கட்டும் மருந்து (பதார்த்த.1215); a medicinal pill for arresting diarrhoea (செ.அக.).

கோடாசாலை *kōḍā-šālai,* பெ.(n.) 1. கற்பூர வல்லி; country borage, *Coleus aromaticus alias C.amboynicus.* 2. ஒரு பூடு; a very small plant, *Juatica procumbens.* 3. ஒரு மூலி; a drug, *Rungia repens.* 4. ஆவாரை; tanner's senna, *Cassia auriculata.* 5. சதைக்கரண்டி; a plant that corrodes the skin (சா.அக.).

கோடி *kōḍi,* பெ.(n.) இறந்தவரின் உடல் மேல் இடும் அல்லது கைம்பெண்ணிற்குத் தரும் துணி; cloth spread over the dead body or given to the widow (க்ரியா.). *பெண்ணிற்கு பிறந்த வீட்டுக் கோடி போட வேண்டும்.*

[கோடு - கோடி.]

கோடிக்காட்டு-தல் *kōḍi-k-kāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) வலியுறுத்திச் சுட்டிக் காட்டுதல்; underline, underscore. *இந்த*

உடன்படிக்கையை எங்கள் கட்சி ஏற்கவில்லை என்பதைக் கோடிட்டுக் காட்டினோம்.

[கோடு + இட்டு + காட்டு-தல்.]

கோடிகாசியன் *kōḍi-kāšiyaṉ,* பெ.(n.) ஒரு அரச குமரன்; a prince. *பாண்டவர்கள் காட்டில் வாழ்ந்த போது தனித்திருந்த பாஞ்சாலியைக் கண்டு ஆசை கொண்டவன் (அபி.சிந்.).*

கோடிஞ்சிகா *kōḍiñjigā,* பெ.(n.) கோழிப் பூண்டு; cock's comb, *Celosia cristata* (சா.அக.).

கோடிமங்கலத்துவாதுளிநற்சேந்தனார் *kōḍi-maṅgalattu-vātuḷi-naṟcēndaṉār,* பெ.(n.) கடைக்கழகப் புலவர்களில் ஒருவர்; the poet who belonged to the last Šaṅgamera.

[கோடிமங்கலம்+ துவாதுளி + நல்+ சேந்தன்.]

இவர் ஒரு பார்ப்பனர். கோடிமங்கலம் எனும் ஊரைச் சேர்ந்த இவரது பெயர் நற்சேந்தனார் (அபி.சிந்.). அகநானூறு 179, 232 ஆகிய பாடல்களைப் பாடியுள்ளார்.

கோடீசுவரன் *kōḍīsuvaraṉ,* பெ.(n.) சொத்தின் மதிப்பு கோடிக் கணக்கில் உள்ளன. மிகப் பெரும் பணக்காரன்; one who is fabulously rich billionaire.

[கோடி + ஈசுவரன்.]

கோடீசுவரி *kōḍīsuvari,* பெ.(n.) கோடீசுவரன் என்பதன் பெண்பால்; feminine of Koḍīšuvaraṉ.

[கோடி + ஈசுவரி.]

கோடு[1] *kōḍu,* பெ.(n.) ஒரு பரப்பில் ஒற்றை அளவில் நீளவாக்கில் இருக்கும் பதிவு; line; stripe. *தரையில் குச்சியால் கோடு கிழித்து விளையாட ஆரம்பித்தார்கள். கோடுபோட்ட சட்டை, அணிலின் முதுகில் மூன்று கோடுகள் இருக்கும்.* 2. தோலில் ஏற்படும் சுருக்கம்; wrinkle. *நெற்றியில் கோடு உள்ளது.*

[கொடு – கோடு.]

கோடைவாசத்தலம் *kōḍai-vāšattalam,* பெ.(n.) கோடை காலத்திலும் குளிர்ச்சியைத் தரும்படியான சூழலைக் கொண்டதாக அமைந்திருக்கும் இடம்; summer resort mostly a hill station.

[கோடை + வாசத்தலம்.]

பெரும்பாலும் மலைப்பகுதியில் அமைந்திருக்கும் இடம்.

கோடைவாசனி *kōḍai-vāšaṉi,* பெ.(n.) சிறு செருப்படை; a kind of plants.

அறுவடை செய்த வயலிலும், குளக் கரையிலும் படரும் பூண்டு. இதனால் சொறி, சிரங்கு, படை முதலிய நோய்கள் போகும் (சா.அக.).

கோண்டகாமியம் *kōṇḍa-kāmiyam,* பெ.(n.) மதி மயக்கிப் பூடு; a plant supposed to cause perplexity of mind when trampled upon (சா.அக.).

கோணக்கழுத்து *kōṇa-k-kaḻuttu,* பெ.(n.) 1. பிறவியில் அல்லது வலிப்பினால் வளைந்த கழுத்து; distorted neck either congenital or acquired from fits. 2. சாய்ந்த கழுத்து; wry neck (சா.அக.).

[கோணல் + கழுத்து.]

கோணத்திசை *kōṇa-t-tišai,* பெ.(n.) இரண்டு திசைகளுக்கு இடைப்பட்ட திசை; the point of the compass between the perpendicular directions.

[கோணம் + திசை.]

கோணதிசை *kōṇadišai,* பெ.(n.) மூலைத் திசை; intermediate directions between the cardinal points (செ.அக.).

கோணம் *kōṇam,* பெ.(n.) இரு கோடுகள் அல்லது இரு பரப்புகள் ஒன்றையொன்று சந்திக்கும் இடத்தில் உள்ள இடைவெளியின் கோண அளவு; angle. இந்தக் கட்டடத்தில் எத்தனைக் கோணங்கள் உள்ளன.

கோணல்குணங்கல் *kōṇal-kuṇaṅgal,* பெ.(n.) 1. வளைவு (பிங்.); wryness, obliquity, deflection. 2. கூன் (திவா.); hump, deformity. 3. மாறுபாடு (சூடா.); crookedness, as of mind. 4. மன வுளைச்சல்; uneasiness of mind (செ.அக.).

கோணாசுவன் *kōṇā-šuvaṉ,* பெ.(n.) யமன்; God of death (சா.அக.).

கோணாதித்தியன் *kōṇātittiyaṉ,* பெ.(n.) கதிரவன்; sun (அபி.சிந்.).

கோத்திரகம் *kōttiragam,* பெ.(n.) 1. தொட்டி பாடாணம்; a prepared arsenic. 2. கொடி முந்திரிகை; common grape. 3. நெட்டிப் புல்; sola pith grass, *Aeschynomens aspera.* 4. சிறு வரகு; kora millet; *paspalum scrobiculatum.* 5. மறு பிறப்புக்குக் காரணமான கருமம்; karma determining re-birth. 6. மலை; hill, mountain (சா.அக.).

[கோணம் + திரகம்.]

கோத்திரலாகிகம் *kōttira-lākigam,* பெ.(n.) முசுட்டை; clove-scented creeper, *Rivea hypocrateriformis* (சா.அக.).

கோத்திரவம் *kō-t-tiravam,* பெ.(n.) ஒருவகைத் தவசம் (தானியம்); common millet, *Paspalum scrobiculatum* (செ.அக.).

[கோ + திரவம்.]

கோத்திரவிருட்சம் *kōttira-viruṭcam,* பெ.(n.) முண்டக மரம்; an unknown tree (சா.அக.).

கோத்து *kōttu,* பெ.(n.) படைத்துறை தங்குமிடம்; cantonment (செ.அக.).

கோதகி *kōtagi,* பெ.(n.) ஒரு ஆறு; a river (அபி.சிந்.).

கோதன்னம் *kōdaṉṉam,* பெ.(n.) ஆவின் கன்று (பிங்.); calf (செ.அக.).

கோதுமைமால்ட் *kōtumai-mālt,* பெ.(n.) கோதுமையைத் தண்ணீரில் ஊறப் போட்டு முளைக்கும்படி வைத்து பிறகு எடுத்துலர்த்திய தவசம்; wheat-steeped in water till it germinates and then dried (சா.அக.).

மறுவ. முளைக்கோதுமை

[கோதுமை + மால்ட். E. மால்ட் > த. குழ்.]

கோதுமைமாவு *kōdumai-māvu,* பெ.(n.) கோதுமையை அரைத்த மாவு; flour obtained by grinding wheat in mills (சா.அக.).

[கோதுமை + மாவு.]

கோதைமலை *kōtai-malai,* பெ.(n.) சேரன் மலை; a hill of the cēra king.

[கோதை + மலை.]

கோப்பி *kōppi,* பெ.(n.) 1. திருமாலை வழிபடக் கூடிய ஒருசாரார் நெற்றியிலணிவதும், வெண்மை கலந்த மஞ்சள் நிறமுள்ளதுமாகிய ஒருவகைத் திருமண்; yellowish earth used by certain devotees of visnu for upright sectarian marks. 2. திருமால் பக்தர்களுள் ஒரு வகையினர் கோபி சந்தனத்தால் அணியும் நெற்றிக்குறி; single solid mark with Kōpi-šandaṉam worn by certain devotees of Tirumāl (செ.அக.).

கோபங்கொண்டார் *kōbaṅ-koṇḍār,* பெ.(n.) 1 உயரமாய் வளர்ந்த மரம்; any tree rising to a great height; any tall majestic tree. 2. ஒரு முள் மரம்; camel tree; camel thistle, *Echinops echinatus.*

கோபத்திரம் *kōpattiram,* பெ.(n.) தாமரை நூல் (மூ.அ.); fibre obtained from lotus stalk (செ.அக.).

கோபத்திரை *kōpattirai,* பெ.(n.) வாகை; sirissa, *Albizzia lebbek* (சா.அக.).

கோபால் *kō-pāl,* பெ.(n.) ஆவின் பால்; cow's milk (சா.அக.).

[கோ (மாடு) + பால்.]

கோபாலகிருட்டிணதாசன் *kōpāla-kiruṭṭiṇa-tāšaṉ,* பெ.(n.) ஒரு புலவன்; a poet.

இடையரான இவர் எம்பிரான் சதகம் பாடியுள்ளார் (அபி.சிந்.).

கோபாலதாபினி *kōbaladābiṉi,* பெ.(n.) **கோபாலதாபனம்** பார்க்க; see *kōbāladābaṉam* (செ.அக.).

கோபாலதானம் *kōbālatābaṉam,* பெ. (n.) நூற்றியெட்டு துணை நூல்க(உபநிடதங்க) ளுள் ஒன்று; an upanišād one of 108 (செ.அக.).

கோபிகாகிதம் *kōbi-kāgitam,* பெ.(n.) புன்னை; common poon or alexandiran laured, *Calophyllum inophyllum* (சா.அக.).

கோபிதாகம் *kōbi-tāgam,* பெ.(n.) தில்லை மரம்; tiger's milk spurge, *Excoecaria agallocha* (சா.அக.).

கோபிநாதன் *kōbi-nādaṉ,* பெ.(n.) கண்ணன் (இடைச்சியர் நாயகன்); Kanna, as the Lord of herdwomen (செ.அக.).

[கோபி + நாதன்.]

கோபிநாமம் *kōbi-nāmam,* பெ.(n.) திருமால் பக்தர்களில் ஒரு வகையினர், வெண்மை கலந்த மஞ்சள் நிறமுள்ள திருமண்ணால் அணியும் நெற்றிக் குறி; yellowish earth used by certain devotees of Tirumal for upright sectarian marks (செ.அக.).

கோபிபாலைவனம் *kōpi-pālaivaṉam,* பெ.(n.) மத்திய ஆசியாவில் உள்ள பெரிய பாலைவனம்; big desert in central.

இதன் நடுவில் சாமு என்னும் மணல்வெளி உண்டு. இதை மணற்கடல் என்பர். இதன் நீளம் 1200 மைல், அகலம் 50 மைல் (அபி.சிந்.).

கோபுத்தம் *kō-puttam,* பெ.(n.) சமுத்திராப் பழம்; white Indian oak, *Barringtonia racemosa* (சா.அக.).

கோபுரப்பூண்டு *kōpura-p-pūṇḍu,* பெ.(n.) அடுக்குப் பூடு; a kind of plant (சா.அக.).

[கோபுரம் + பூண்டு.]

கோமரிமோதம் *kōmari-mōdam,* பெ.(n.) ஓமம்; Omum plant, *Carum copticum or Sison ammi* (சா.அக.).

கோமாட்சிகம் *kō-māṭciam,* பெ.(n.) மாட்டு ஈ; gad fly; cattle fly, *Musca domestica* (சா.அக.).

[கோ + மாட்சிகம்.]

கோமாமிசப்பட்சணி *kō-māmiša-p-paṭcaṉi,* பெ.(n.) மாட்டின் இறைச்சியைத் தின்போன்; one who eats beef (சா.அக.).

[கோ + மாமிச + பட்சணி.]

கோமியம் *kōmiyam,* பெ.(n.) ஒன்பது (நவ.) வகை மணிகளுள் ஒன்று (சங்.அக.); sardonyx from the Himalayas and the Hindus, one of nava-maṇi (செ.அக.).

கோமியவண்ணம் *kōmiya-vaṉṉam,* பெ.(n.) ஆவின் சிறுநீரை நிறத்தை ஒத்த கல் அதாவது கோமேதகம்; one of the gems resembling the colour of cow's urine, *Cinnamon stone* (சா.அக.).

[கோமியம் + வண்ணம்.]

கோமுகாசனம் *kōmugāšaṉam,* பெ.(n.) கணுக்கால்களை இடுப்புச் சந்தில் சேர்க்கும் இருக்கை (ஆசன) வகை (ஆவின் முகம் போன்ற இருக்கை); a yogic posture which consists in crossing the ankles and placing them on the hip joints (செ.அக.).

கோயில்கொள்(ளு)-தல் *kōyil-koḷḷu-,* 16 செ.கு.வி.(v.i.) வாழும் இடமாகக் கொள்ளுதல்; to take up abode in, inhabit. *"திருக்கடித் தானத்தைக் கோயில் கொண்டான்" (திவ். திருவாய்.8, 6, 5). (செ.அக.).*

[கோயில் + கொள்.]

கோயில்பட்சி *kō-y-il-paṭci,* பெ.(n.) 1. புறா; pigeon. 2. மயில்; pea-cock (சா.அக.).



[கோயில் + Skt. பட்சி.]

கோயில்பெருச்சாளி *kōyil-peruccāḷi,* பெ. (n.) பிறர் சொத்தை உடனிருந்து சிறிது சிறிதாகக் கவர்பவர்; an insider who is a swindler. *அவன் பொதுத்தொண்டு என்ற போர்வையில் திரியும் கோயில் பெருச்சாளி.*

[கோயில் + பெருச்சாளி.]

கோயிற்பிரதிட்டை *kōyiṟ-piradiṭṭai,* பெ.(n.) 1. கோயில்களில் நிலைகோள் (பிரதிஷ்டை) மற்றும் தூய்மை (சுத்தி) செய்வதற்கும் உரிய நடப்பு குடமுழுக்கு; consecration of a temple causing the deity to take up its abode in the idol. 2. கிறித்தவக் கோயிலின் நிறுவனம் (தாபனம்); establishment of a church (செ.அக.).

[கோயில் + Skt. பிரதிட்டை.]

கோர்த்த *kōrtta,* பெ.அ.(adj.) மூளையைச் சேர்ந்த; pertaining to the large part of the brain, cerebral (சா.அக.).

கோரக்கர்மரம் *kōrakkar-maram,* பெ.(n.) ஆனைப் புளிய மரம்; பப்பரப் புளிய மரம், பூரி மரம், பப்பாரப் புளி, பெருக்க மரம்; elephant tamarind tree (சா.அக.).

கோரங்காமிகம் *kōraṅ-kāmigam,* பெ.(n.) நெல்லி; Indian gooseberry, *Phyllanthus emblica* (சா.அக.).

கோரத்தூடம் *kōra-t-tūḍam,* பெ.(n.) வரகு; Indian millet, *Panicum milianceum* (சா.அக.).

கோரல் *kōral,* பெ.(n.) ஆட்டிற்கும், மானிற்கும் ஒப்பான விலங்கு; an animal, similar to goat and deer.

[குறள் – குரல் – கோரல்.]

இது ஆட்டைப் போல் குறுகிய கொம்பை உடையது. இரண்டடி உயரமுள்ள இவை இமய மலையில் வாழ்கின்றன. (அபி.சிந்.).

கோராகும்பார் *kōrā-kumpār,* பெ.(n.) திருமால் அடியவர்; devotee of Lord Vishnu.

தோடாகியென்னும் ஊரில் மனைவி, குழந்தையுடன் வாழ்ந்து வந்தார். இடைவிடாது பெருமாளை எண்ணிக் கொண்டிருக்கும் இவர் ஓர் நாள் அறியாது தன் குழந்தையை மண்ணில் மிதித்துக் கொன்றார். இதனால் நடந்த சண்டையில் மனைவி தன்னைத் தீண்ட வேண்டா மென்றாள். மக்கட்பேறுக்காகத் தன் தங்கையை மணம் செய்து வைக்க அவளையும் இவர் தீண்டவில்லை. ஒரு நாள் இவர் அறியாது இரு மனைவியரும் அருகில் துயில, தூக்கத்தில் மனைவியர் மேல்பட்ட கரங்களை வெட்டி எறிந்தார். பின் பண்டரிக்குச் சென்று இறந்த குழந்தை யையும், கைகளையும் திரும்பப் பெற்று, பெருமாளின் ஆணையால் மனைவியருடன் களிப்புற்றிருந்தார் (அபி.சிந்.).

கோராசுரன்[1] *kōrāśuraṉ,* பெ.(n.) ஒரு அரக்கன்; a giant.

கொக்கு வடிவம் கொண்டு பிள்ளையாரை விழுங்க வந்து, அவரால் இறந்தவன் (அபி.சிந்.).

கோராசுரன்[2] *kōrāśuraṉ,* பெ. (n.) 1. சிவபெருமானால் கொல்லப்பட்ட அசுரன்; an asuran killed by Lord Śiva who was torturing Devas. 2. தேவர்களுக்குத் துன்பம் செய்து சிவனால் கொல்லப்பட்டவன்; (அபி.சிந்.).

கோராள் *kōrāḷ,* பெ.(n.) தேவ இனத்தவன்; belonging to celestial abode (அபி.சிந்.).

கோரான் *kōrāṉ*, பெ.(n.) சுளுந்து மரவகை; torch tree, *Ixora Parviflora* (செ.அக.).

கோரைப்படாத *kōrai-p-paḍāta*, பெ.எ. (adj.) மயிர் முளையாத; of hair not grown as on head; without hair generally said of the head of the fetus (சா.அக.).

[கோரை + படாத.]

கோரைப்பல் *kōrai-p-pal*, பெ.(n.) கடித்துத் துண்டாக்குவதற்கு ஏதுவாக மேல் தாடையிலும், கீழ் தாடையிலும் உள்ள கூரிய முனையை உடைய பல்; canine tooth

[கோரை + பல்.]

கோரைப்பாசி *kōrai-p-pāśi*, பெ.(n.) பாசி வகை; a species of moss, *Sida humilis* (செ.அக.).

கோரோசனம் *kōrōśaṉam*, பெ.(n.) ஆவின் வயிற்றிலிருந்து எடுக்கப்படும் மஞ்சள் நிறமுள்ள நறுமணப் பொருள் (பதார்த்த. 1085); bezoar taken from the stomach of cows (செ.அக.).

மறுவ. ஆன்மணத்தி

கோலக்கிருதம்[1] *kōla-k-kirudam*, பெ.(n.) நில வேம்பு; ground neem, *Justicia Paniculata* (சா.அக.).

கோலகசினி *kōla-kaśiṉi*, பெ.(n.) ஆனைத் திப்பிலி; elephant pepper, *Scindapsis officinalis*.

கோலகசேபிகம் *kōla-kaśēbigam*, பெ.(n.) மாசிப் பச்சை; green black oak (சா.அக.).

கோலமூலம் *kōla-mūlam*, பெ.(n.) திப்பிலி வேர்; root of long pepper, *Piper longum* (சா.அக.).

கோலாகலம் *kōlā-kalam*, பெ. (n.) 1. சேதி நாட்டு மலை; hill in cēdi-nāḍu. 2. மத்திய இந்தியாவில் பண்டில்கண்டிலிருந்து மால்வாவைப் பிரிக்கும் மலை; a hill separating in Mālvā from Pandelkandi (அபி.சிந்.).

கோலாசுரன் *kōlāśuraṉ*, பெ.(n.) மலை மகளால் கொல்லப்பட்ட ஒரு அரக்கன்; a giant who killed by Malai-magaḷ the goddess of mountain (அபி.சிந்.).

கோலாவதிதம் *kōlā-vatidam*, பெ.(n.) கீழ்க்காய் நெல்லி; Indian Phyllanthus; niruri, *Phyllanthus niruri* (சா.அக.).

கோலிகப்பறையன் *kōliga-p-paṟaiyaṉ*, பெ. (n.) முரட்டுத் துணி நெய்யும் தொழிலாளர் குலத்தினன்; a division of the Pariah caste who weave coarse cloths (செ.அக.).

கோலிம் *kōlim*, பெ.(n.) கட்டுக் கொடி; a kind of creeper (சா.அக.).

கோலியப்பறை *kōliya-p-paṟai*, பெ.(n.) **கோலிகப்பறையன்** பார்க்க; see *kōliga-p-paṟaiyaṉ* (செ.அக.).

கோவத்தன் *kōvattaṉ*, பெ.(n.) கடைக் கழகப் புலவர்களில் ஒருவர்; one of the Šaṅgam poet (அபி.சிந்.).

இவர் குறுந்தொகையில் 46, 194 ஆகிய எண்ணுள்ள பாடல்களைப் பாடியவர்.

கோவரக்கி *kōvarakki*, பெ.(n.) வெண்வாகை; doon sirrissa tree, *Albezzia procera* (சா.அக.).

[கோ + அரக்கி.]

கோவரங்கப்பதுமராகம் *kōvaraṅga-p-padumarāgam*, பெ.(n.) பதுமபண் வகை (யாழ்.அக.); a kind of Padumarāgam (செ.அக.).

கோவரம் *kōvaram*, பெ.(n.) 1. சந்தனம்; sandalwood, *Santanum album*. 2. சின்ன முத்து; small pustules or measles (சா.அக.).

கோவரிதகி *kō-varitagi,* பெ.(n.) 1. வில்வம்; bael tree, Aegle marmelos. 2. பீர்க்கு; gourd plant, *Luffa foetida* (சா.அக.).

கோவனார் *kōvaṉār,* பெ.(n.) கடைக்கழகப் புலவர்; Śaṅgam poet (அபி.சிந்.).

[கோவன் + ஆர்.]

கோவா *kōvā,* பெ.(n.) ஒட்டு மாம்பழ வகை; a grafted mango (செ.அக.).

கோவாக்கிழங்கு *kōvā-k-kiḻaṅgu,* பெ.(n.) கோவா நாட்டு உருளைக் கிழங்கு; Goa potato or Goa yam (சா.அக.).

[கோவா + கிழங்கு.]

கோவாதேவதாரு *kōvā-tēvadāru,* பெ.(n.) கோவா நாட்டில் விளையும் தேவதாரு மரம்; Goa cedar tree; Goa cypress, *Cypresaus glauca* (சா.அக.).

[கோவா + தேவதாரு.]

கோவாவவரை *kōvā-v-avarai,* பெ.(n.) கோவா பீன்சு அல்லது முறுக்கவரை; square or goa bean, *Psophocarpus teragonolobus* (சா.அக.).

மறுவ. முருங்கை பீன்ஸ்

[கோவா + அவரை.]

கோவிசயநிருபதுங்கவர்மன் *kō-viśaya-nirupatuṅga-varmaṉ,* பெ. (n.) காஞ்சி புரத்தை ஆட்சி புரிந்த பல்லவர்களில் ஒருவன்; one of the Pallavā king who ruled Kāñji-puram (அபி.சிந்.).

கோவிசு *kōviśu,* பெ.(n.) முட்டைக்கோசு; cabbage, *Brassica aleracea capitata* (செ.அக.).

கோவிசுகீரை *kōviśu-kīrai,* பெ.(n.) கோசு முட்டை; cabbage-domestic colewort, *Brassica oleracea* (சா.அக.).

[கோவிசு + கீரை.]

கோவிந்தை *kōvindai,* பெ. (n.) சீவக சிந்தாமணி பதுமுகன் மனைவி; wife of Padumugā in Śivaga-Śindāmaṇi (அபி.சிந்.).

கோவிரதம் *kōviradam,* பெ.(n.) விடத்தேர்; mint, Mentha crispa (சா.அக.).

கோவிருடபம் *kōviruṭabam,* பெ.(n.) எருது; bull (சா.அக.).

கோவிலார் *kōvilār,* பெ.(n.) கோவில் வேலை செய்வோர்; one who serve's temple.

[கோவில் + ஆர்.]

இவர்கள் பூணூல் அணிந்து தாங்கள் அமைத்த கோவிலில் தாங்களே பூசகராக இருப்பார்கள். கோவில் அடியார் எனவும் கூறப்படுவர். பெண்கள் கோவில் அம்மாமார் எனப்படுவர் (அபி.சிந்.).

கோவென்று *kōveṉṟu,* வி.எ. (adv.) வாய்விட்டுப் பலத்த சத்தத்துடன் அழுதல் முதலியன; bevailing. *கணவன் இறந்த செய்தியைக் கேட்டதும் கோவென்று அழுதாள்.*

[கோ + என்று.]

கோவையவரை *kōvai-y-avarai,* பெ.(n.) முறுக்குப் பீன்சு; goa bean (சா.அக.).

மறுவ. முருங்கை பீன்சு

[கோவை + அவரை.]

கோழிக்கறி *kōḻi-k-kaṟi,* பெ.(n.) கோழி இறைச்சி; fowl curry (சா.அக.).

[கோழி + கறி.]

கோழிக்காலவரை *kōḻi-k-kāl-avarai,* பெ.(n.) ஒரு வகை அவரை; a kind of bean so called from its resemblance to fowl's foot (சா.அக.).

[கோழிக்கால் + அவரை.]

கோழிக்குடி *kōḻi-k-kuḍi,* பெ.(n.) நெட்டி விலங்கு; Indian mast tree, *Polyathia longifolla* (சா.அக.).

[கோழி + குடி.]

கோழிக்கூட்டுப்பழம் *kōḻi-k-kūṭṭu-p-paḻam,* பெ. (n.) வாழைப் பழ வகை; a species of plantain, as from calicut (செ.அக.).

[கோழி + கூட்டு + பழம்.]

கோழிச்சூடு *kōḻi-c-cūḍu,* பெ.(n.) கரு நெல்லி; black-berried featherfoil, *Phyllanthus reticulatus* (சா.அக.).

[கோழி + சூடு.]

கோழித்தூக்கம் *kōḻi-t-tūkkam,* பெ.(n.) குறைந்த நேரமே தூங்கும் தூக்கம்; sleep for a very short time; nap, snooze catnap (க்ரியா.).

[கோழி + தூக்கம்.]

கோழிப்பித்து *kōḻi-p-pittu,* பெ.(n.) கோழியின் பித்தப் பை; the gall bladder of a fowl (சா.அக.).

[கோழி + பித்து.]

கோழிப்பிராணன் *kōḻi-p-pirāṇaṉ,* பெ.(n.) வலிமையற்றவ–ன்–ள்–து (கோழி போன்று உயிர் வன்மையற்ற உயிரி); weakling, as a cock (செ.அக.).

கோழிப்புரை *kōḻi-p-purai,* பெ.(n.) கோழிகளை அடைத்து வைக்கும் கூண்டு; enclosure for domestic fowls, esp. chicken; pen

மறுவ. கோழிமடம்

[கோழி + புரை.]

கோழிமுட்டைக்கரண்டி *kōḻi-muṭṭai-k-karaṇḍi,* பெ.(n.) கோழி முட்டை பதியும் அளவு குழியாகச் செய்த கரண்டி; a spoon made hollow so as to hold an egg in it, Egg-spoon (சா.அக.).

[கோழி + முட்டை + கரண்டி.]

கோழிமுட்டைக்கரு *kōḻi-muṭṭai-k-karu,* பெ.(n.) கோழி முட்டையின் வெள்ளை அல்லது மஞ்சள் கரு; the white or the yellow part of the fowl's egg (சா.அக.).

[கோழி + முட்டை + கரு.]

கோழிமுட்டையகப்பை *kōḻi-muṭṭai-y-agappai,* பெ.(n.) கோழி முட்டை பதியும் படிக்குப் பள்ளமாகச் செய்த ஓர் அகப்பை; a ladele so shaped as to hild an egg in it (சா.அக.).

[கோழி + முட்டை + அகப்பை.]

கோழியண்டம் *kōḻi-y-aṇḍam,* பெ.(n.) கோழி முட்டை; fowl's egg (சா.அக.).

[கோழி + அண்டம்.]

கோழியிரத்தமரப்பொடி *kōḻi-y-iratta-mara-p-poḍi,* பெ.(n.) செம்மரத் தூள்; red saw-dust of red wood (சா.அக.).

[கோழி + அரத்தம் + மரம் + பொடி.]

கோழியுறக்கம் *kōḻi-y-uṟakkam,* பெ.(n.) கோழியைப் போல் அடிக்கடி உறக்கம் கொண்டெழும் தூக்கம்; light sleep enabling one to wake up frequently like a cock even on slight disturbances (சா.அக.).

[கோழி + உறக்கம்.]

கோழியெச்சம் *kōḻi-y-eccam,* பெ.(n.) கோழிப்பீ; fowl's dudng (சா.அக.).

[கோழி + எச்சம்.]

கோழியென்றமூலி *kōḻi-y-eṉṟa-mūli,* பெ.(n.) 1. வாளவரை; sword bean, *Canavalia ensiformis.* 2. பெருங்கோழி யவரை; West Indian sea-side bean, *Canavalia obtusifolia* (சா.அக.).

கோழிரசம் *kōḻi-rašam,* பெ.(n.) கோழி வெஞ்சாறு; fowl's soup; cock or hen soup (சா.அக.).

கோழிவெண்காரம் *kōḻi-veṇ-kāram,* பெ.(n.) கோழியின் வெண்ணிறமான பீ; fowl's dung of a white colour (சா.அக.).

[கோழி + வெண் + காரம்.]

கோழைக்கட்டுவிழு–தல் *kōḻai-k-kaṭṭu-viḻu-,* 2 செ.கு.வி.(v.i.) நெஞ்சில் கட்டிய கபம் வெளிப்படுதல்; discharge of phlegm ocllected in the chest (சா.அக.).

[கோழை + கட்டு + விழு–தல்.]

கோழைக்குத்து *kōḻai-k-kuttu,* பெ.(n.) கோழையால் ஏற்படும் குத்தல் நோய்; acute pain due to accumulation of phlegm in the chest (சா.அக.).

[கோழை + குத்து.]

கோழைகாசம் *kōḻai-kāšam,* பெ.(n.) ஈளை; humid asthma (சா.அக.).

[கோழை + Skt. காசம்.]

கோழைகோழையாய்விழு-தல் *kōḻai-kōḻaiyā-y-viḻu-,* செ.கு.வி. (v.i.) மார்பினின்று கபம் வெளிவரல்; issuing of thick phlegm in lumps (சா.அக.).

[கோழை + கோழையாய் + விழு-தல்.]

கோழைநீர் *kōḻai-nīr,* பெ.(n.) கப நீர்; sputum (சா.அக.).

[கோழை + நீர்.]

கோழைநெஞ்சு *kōḻai-neñju,* பெ.(n.) 1. கோழை கட்டிய நெஞ்சு; phlegm in the chest; chest accumulated with phlegm. 2. வலிமையற்ற மனம்; timid mind chicked hearted. 3. இளகிய மனம்; sympathetic mind (சா.அக.).

[கோழை + நெஞ்சு.]

கோழைநோய் *kōḻai-nōy,* பெ.(n.) 1. கோழையால் ஏற்படும் நோய்கள்; phlegmatic diseases. 2. ஈளை; asthma (சா.அக.).

[கோழை + நோய்.]

கோழைமொழிமூர்க்கன் *kōḻai-moḻi-mūrkkaṉ,* பெ.(n.) தவளை; frog (சா.அக.).

[கோழை + மொழி + மூர்க்கன்.]

கோழையகற்றுதல் *kōḻai-y-agaṟṟudal,* தொ.பெ.(vbl.n.) கோழையைப் போக்கல்; dephlegmating; removing phlegm (சா.அக.).

[கோழை + அகற்று-தல்.]

கோழையடைப்பு *kōḻai-y-aḍaippu,* பெ.(n.) நெஞ்சுக் கோழை திரண்டு மூச்சு விடக் கூடாதபடித் தொண்டையை அடைத்தல்; obstruction of respiration due to collections of mucus and phlegm in the passage of throat (சா.அக.).

[கோழை + அடைப்பு.]

கோழையிளக்கி *kōḻai-y-iḷakki,* பெ.(n.) நெஞ்சில் தங்கி நிற்கும் கோழையை இளக்கும் மருந்து; any drug or medicine rendering the phlegm loose and watery (சா.அக.).

[கோழை + இளக்கி.]

மலமிளக்கி என்ற மருந்துப் பொருளைப் போன்று கோழையை இளக்குவதால் இப்பெயர் பெற்றென போலும்.

கோள்திவசம் *kōḷ-tivašam,* பெ.(n.) ஒன்பது நாள்; nine days (சா.அக.).

கோள்பிராது *kōḷ-pirādu,* பெ.(n.) குறளை கூறுகை; tale bearing (செ.அக.).

மறுவ. கோட்சொல்லுகை

கோள்மூட்டு-தல் *kōḷ-mūṭṭu-,* செ.கு.வி. (v.i.) ஒருவரைப் பற்றித் தவறாக மற்றவரிடம் கூறுதல்; இருவரிடைய மனத்தாங்கல் ஏற்படும்படிச் செய்தல்; tell tale against some one. *நீ என்னைப் பற்றி அவனிடம் கோள் மூட்டினாய்?.*

[கோள் + மூட்டு-தல்.]

கோளகசிரிடம் *kōḷaga-ciriḍam,* பெ.(n.) மாசி பத்திரி; Indian worm-wood, *Artemesia vulgaris* (சா.அக.).

கோளகாயம் *kōḷa-kāyam,* பெ.(n.) எழுத்தாணியைப் போல் பூக்களை உடைய ஒரு வகைச் செடி; style plant, *Launea pinnatifida alias Lactuca sarmentosa alias Microhynchus sarmentosus alias Prenanthes sarmentosa* (சா.அக.).

கோளசாத்திரம் *kōḷa-šāttiram,* பெ.(n.) உடம்பில் உள்ள கோளங்களைப் பற்றிய நூல்; a treatise on the glandular swelling on any part of the body (சா.அக.).

[கோளம் + சாத்திரம்.]

கோளத்திற்குரிய *kōḷattiṟkuriya,* பெ.எ. (adj.) கோளத் தொடர்புடைய; relating to a gland, *Adenic* (சா.அக.).

[கோளத்திற்கு + உரிய.]

கோளத்தைப்போன்ற *kōḷattai-p-pōṉṟa,* பெ.அ.(adj.) கோள வடிவமுள்ள; of the shape of a gland; gland like, *Adeniform* (சா.அக.).

கோளரங்கம் *kōḷaraṅgam,* பெ.(n.)

கோள்கள், விண்மீன்கள் முதலியன எவ்வாறு வானில் அமைந்துள்ளன என்பதை விளக்கும் வகையில் உருவாக்கப்பட்ட காட்சியகம்; planetarium.

[கோள் + அரங்கம்.]

கோளவீக்கம் *kōḷa-vīkkam,* பெ.(n.) கோளத்திற்குக் காணும் வீக்கம்; glandular swelling or enlargement of the gland (சா.அக.).

[கோளம் + வீக்கம்]

கோளாங்கட்டி *kōḷān-kaṭṭi,* பெ.(n.) ஒரு வகை மண் கட்டி; a mineral compound of silicate found in a lump (சா.அக.).

[கோளாம் + கட்டி.]

கோளிகம் *kōḷigam,* பெ.(n.) 1. திப்பிலி; long pepper. 2. அத்திமரம்; fig tree (சா.அக.).

கோளிப்பாசம் *kōḷi-p-pāśam,* பெ.(n.) பெருங் குறிஞ்சா; scammony swallow wort, *Secamone emetica* (சா.அக.).

[கோளி + பாசம்.]

கோளியால் *kōḷi-y-āl,* பெ.(n.) ஒரு வகை ஆல்; large-leaved yellow fig, *Ficus callosa* (சா.அக.).

[கோளி + ஆல்.]

கோளியூர்கிழார்மகனார்செழியனார் *kōḷiyūr-maganār-ceḻiyaṉār,* பெ.(n.) புலவர்; a poet who belongs to Śaṅgam era.

இவர் வேளாண் குடியினர். நற்றிணை 383ஆம் பாடலைப் பாடியுள்ளார் (அபி.சிந்.).

கோற்பூச்சி *kōṟ-pūcci,* பெ.(n.) உடம்பினுள்ளே வாழும் அங்கக்கோற் பூச்சி; a round worm found inside the body (சா.அக.).

[கோல் + பூச்சி.]

கோறடம் *kōṟaḍam,* பெ.(n.) எட்டி மரம்; drug bane; Indian oison tree, *Strychnos nuxvomica.*

[கோறு – கோறடம்.]

இது சம உயரம் உள்ளது. இலைகள் மென்மையாயும், பளபளப்பாயும் இருக்கும். 3 முதல் 5 நரம்புகள் மத்தியில் ஓடும். பூக்கள் சிறியவை, வெளிர் பச்சை. திருவனந்தபுரம், கொரநாடு முதலிய இடங்களில் வளரும். காடுகளில் அதிகம் காணப்படும். அடிமரம் குட்டையாகவும், சிறிது வளைந்தும் இருக்கும். கிளைகளில் பட்டை சாம்பல் நிறமாயும், கட்டை கசப்பாயும் இருக்கும் (சா.அக.).



கோறித்தல் *kōṟi-t-tal,* பெ.(n.) நில வேம்பு; ground neem tree, *Andrographis paniculata* (சா.அக.).

கோறைப்படு-த்தல் *kōṟai-p-paḍu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. வழுவுண்ணல்; sustaining an abrasion or scratch. 2. குழி உண்டாதல்; becoming hollow; forming a cavity (சா.அக.).

[கோறை + படு-த்தல்.]

கோனாட்டுஎறிச்சலூர்மாடலன்மதுரைக் குமரனார் *kōṉāṭṭu-eṟiccilūr-māḍalaṉ-madurai-k-kumaraṉār,* பெ.(n.) கடைக் கழகப் புலவர்; a poet of sangam age.

சேரமன் குட்டுவன்கோதை முதலியோரைப் பாடியுள்ளார் (அபி.சிந்.).

கோனார் *kōṉār,* பெ.(n.) இடையரில் ஒரு வகையர்; sect of people in herdimen community.

மறுவ. கோவலர்.

[கோ- கோன் + ஆர்.]

கோனி *kōṉi,* பெ.(n.) பூவாது காய்க்கும் மரம்; a tree bearing fruit without showing flowers (சா.அக.).

[கோலி – கோனி.]

கோனியக்கனி *kōṉiya-k-kaṉi,* பெ.(n.) கோனிப் பூண்டின் பழம்; hemlock fruit (சா.அக.).

[கோனி + அம் + கனி.]

கோனிற்கொடி *kōṉiṟ-koḍi,* பெ.(n.) கொடிப்புன்கு; hog - creeper, *Derris scandens* (சா.அக.).

[கோனில் + கொடி.]

கோனைவேல் *kōṉai-vēl,* பெ.(n.) ஒரு வகை வேல்; crooked acacia (சா.அக.).

[கோனை + வேல்.]

கோட்டம் *kōṭṭam,* பெ.(n.) 1. ஒரு வகை நறுமணச் செடி; costus shrub, *Saussurea lappa.* 2. ஒரு வகைச் செடி; arabian costum, *Costus speciosus.* 3. நறுமணப் பொருளின் ஒரு வகை; putchock (செ.அக.).

கௌச்சிகர் *kauccigar,* பெ.(n.) ஒரு முனிவர்; a saint.

இவர் திருமாலை எண்ணி தவம் செய்தார். விருத்தை என்பவளை மணந்து மிருகண்டுவைப் பெற்றனர் (அபி.சிந்.).

கௌசல்யன் *kauśalyaṉ,* பெ.(n.) தட்சிண கோசலத்தின் மன்னன்; king of *taṭciṇa-kōśalam* (அபி.சிந்.).

கௌசலன் *kauśalaṉ,* பெ.(n.) மன்னன் அம்சத்துவசன் குமரன்; son of a king amśattuvaśavaṉ.

இவன் கன்னிகாரக்காட்டிற்கு வேட்டைக்குச் சென்று அங்கு ஒரு பொன்மானைக் கண்டு பின்தொடர, அம்மான் மறைந்தது. அவ்விடம் சிறப்பான இடமென்று எண்ணிச் சிவபூசனை செய்தான் (அபி.சிந்.).

கௌசலை *kauśalai,* பெ.(n.) 1. யயாதியின் மகனான பூருவின் மனைவி; wife of Pūru. 2. வீமராசன் மகள்; daughter of Vīma-rāśaṉ. 3. மன்னன் மீளியின் மனைவி; wife of a king miḷi (அபி.சிந்.).

கௌசிகதாரி *kauśigatāri,* பெ.(n.) குங்கிலியம்; Indian dammer, *Shorea robusta* (சா.அக.).

[கௌசிக + தாரி.]

கௌசிகை *kauśigai,* பெ.(n.) விசுவாமித்திரரின் தமக்கை; sister of Viśuvāmitirar.

கௌசிபல் *kauśi-pal,* பெ.(n.) தென்னை மரம்; coconut tree (சா.அக.).

[கௌசி + பல்.]

கௌஞ்சிகன் *kauñjigaṉ,* பெ.(n.) பொன் வினைஞன் (யாழ்.அக.); goldsmith (செ.அக.).

கௌடதம் *kauḍatam,* பெ. (n.) 1. வெள்ளுள்ளி; garlic. 2. வெட்பாலை; tellicherry bark, *Nerium antidysentericum* (சா.அக.).

கௌதமநாடி *kautama-nāḍi,* பெ. (n.) கௌதமரால் தமிழில் செய்யப்பட்ட ஒரு கணிய நூல்; a work an astrology written by sage *kowtama* (சா.அக.).

[கௌதம + நாடி.]

கௌரியச்சம் *kauri-y-accam,* பெ.(n.) ஒரு பூடு; an unknown plant (சா.அக.).

[கௌரி + அச்சம்.]

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

ஒன்பதாம் மடலம் - இரண்டாம் பாகம்
[இணைப்பு மடலம்]

(ச - வெள)

A Comprehensive Etymological Dictionary
of the Tamil Language
[Supplementary Volume]
Volume IX - Part-II

முனைவர் இரா. மதிவாணன்
மதிப்புறு இயக்குநர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட
இயக்கக வெளியீடு
தமிழ்நாடு அரசு
2010

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

ஒன்பதாம் மடலம் – இரண்டாம் பாகம்
[இணைப்பு மடலம்]

(ச–வெள)

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language
[Supplementary Volume]
Volume IX - Part-II

முனைவர் இரா. மதிவாணன்
மதிப்புறு இயக்குநர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட
இயக்கக வெளியீடு
தமிழ்நாடு அரசு
2010

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 30.

முதற் பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு 2041 ஆடவை (ஆனி) (June 2010)

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. IX, Part-II

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு
© Government of Tamilnadu

விலை : உருபா 400/-

Price : Rs. 400/-

குறியீட்டெண் : Colon No.P.J1-J, 314"K.M4

வெளியிட்டோர் :

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்,
அண்ணாநகர், சென்னை 600 040.

Published by :

Directorate of Tamil Etymological Dictionary Project,
C- 48, Ist Floor, T.N.H.B.,
IInd Avenue, Anna Nagar,
Chennai - 40.

அச்சீடு :

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை–600 113.

Printed at :

International Institute of Tamil Studies,
Tharamani, Chennai - 113

நூல் கிடைக்குமிடங்கள் :

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்,
அண்ணாநகர், சென்னை–600 040.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை–600 113.

Copies available at :

Directorate of Tamil Etymological Dictionary Project,
C- 48, Ist Floor, T.N.H.B.,
IInd Avenue, Anna Nagar,
Chennai - 40.

International Institute of Tamil Studies,
Tharamani, Chennai - 113

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

கலைஞர் மு.கருணாநிதி



செம்மொழிச் செம்மல் கலைஞர் பெருந்தகையே
செம்மாந்த செந்தமிழர் பாவாணர் நுண்ணோக்கில்
சீர்கொள் அகரமுதலி வெளியிட்டுப்
பேர்கொண்டீர் வாழ்க நெடிது!

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 26.5.2010

வாழ்த்துரை

செந்தமிழ் மொழியின் வேர்ச்சொல் வித்தகர் மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் அவர்களை இயக்குநராகக் கொண்டு, 1974ஆம் ஆண்டில், அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் உருவாக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியை 12 மடலங்களில் 31 தொகுதிகளாகக் கலைக்களஞ்சிய அமைப்பில் விரிவாக உருவாக்கி வெளியிடத் திட்டமிட்டது. அதன்படி, இதுவரை, 11 மடலங்களில் 28 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த நூல் தொகுதிகளில் விடுபட்ட சொற்கள் தொகுக்கப்பட்டு, ஒன்பதாம் மடலத்தின் இணைப்பாக இரண்டு பாகங்கள் 29, 30 ஆகிய இரு தொகுதிகளாக உருவாக்கப்பட்டுள்ளன. இந்த இரு நூல்களும் கோவை மாநகரில் நடைபெறும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் வெளியிடப்படுவது மிகுந்த பாராட்டுக்குரியது.

இதனைத் தொடர்ந்து, 12வது மடலமாக, அதாவது, 31ஆம் தொகுதியாகச் 'சொற்பிறப்பு நெறிமுறைகள்' என்னும் பெயரில் இறுதித் தொகுதி விரைவில் வெளியிடப்படவுள்ளது.

கழக அரசு அமையும் காலங்களில் மட்டுமே கனிவோடு கவனம் செலுத்தப்பட்டு, கடந்த 36 ஆண்டுகளாக நடைபெற்று வரும் செந்தமிழ்ச் சொற்பிறப்புப் பேரகரமுதலி திட்டத்தின் நூல்கள் அனைத்தும் அன்னைத் தமிழின் அரிய அணிகலனாகவும், ஆராய்ச்சியாளர்களுக்கு ஏற்றதோர் கருவூலமாகவும் திகழும் என உறுதியாக நம்புகிறேன். இப்பணியில் ஈடுபட்ட தமிழறிஞர் பெருமக்கள் அனைவரையும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

(மு.கருணாநிதி)

மொழிஞாயிறு

ஞா.தேவநேயப்பாவாணர்



ஞால முதன்மொழி எந்தமிழே என்றென்று
சால நிறுவிய பாவாணச் செம்மலே
நின்று நிலவும் சொற்பிறப்பு காட்டியதால்
பொன்றாது நின்றதும் பேர்!

க. முத்துசாமி, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

தமிழ் வளர்ச்சி,அறநிலையங்கள் (ம)
செய்தித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

நாள்: 02–06–2010

அணிந்துரை

"நன்று தமிழ் வளர்க ! – தமிழ்
நாட்டினில் எங்கணும் பல்குக! பல்குக!
என்றும் தமிழ் வளர்க! – கலை
யாவும் தமிழ்மொழியால் விளைந்தோங்குக"

என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியதைப்போன்று எல்லாக் கலைகளும் செம்மொழித் தமிழில் சிறப்புற வளர்ந்தோங்கும் காலம் தமிழ்நாட்டில் வந்தாயிற்று. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சீரிய முயற்சியினால் 'தமிழ்' இன்று செம்மாந்த நிலையை அடைந்திருக்கின்றது.

நம் செம்மொழித் தமிழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வண்ணம் தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படையான பணிகளில் அகரமுதலி உருவாக்குவதும் தலைசிறந்த தமிழ்ப்பணியாகப் போற்றப்படுகிறது. தனித்தமிழ் காத்த மொழிநூலறிஞர் ஞா. தேவநேயப் பாவாணரின் சொற்பிறப்பு ஆராய்ச்சி அவரது 'ஞாலமுதன்மொழிக் கொள்கை' என்னும் அடிப்படையில் அமைந்தது. இக்கொள்கைக்கு அண்மைக் காலத்தில் உலக மொழியியல் அறிஞர்களிடையில் ஊக்கம் தருவோர் எண்ணிக்கை விரைவாகப் பெருகி வருகிறது. அத்தகு பெருமைக்குரிய பாவாணர் செய்த அரிய ஆராய்ச்சியின் அடிப்படையில்தான் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பெற்று, அவர்கள் வழி நடத்தியவண்ணம் அகரமுதலியின் பன்மடலங்களாகப் பாவாணர் கருதியவண்ணமே வெளிவந்துள்ளன. அத்தகைய தொடர்முயற்சியில் இவ்வியக்ககத்தின் வாயிலாக வெளிவந்த அகரமுதலித் தொகுதிகளில் விடுபட்டவையெல்லாம் தொகுக்கப்பெற்று இப்போது இரண்டு தொகுதிகள் கொண்ட இணைப்பு மடலமாக வெளிவந்துள்ளது. அவற்றை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் தம் பொற்கரங்களால் வெளியிட இருக்கின்றார்கள் என்பது நமக்குப் பெருமகிழ்ச்சியளிக்கின்றது. என்றென்றும் பீடு பெற பாடாற்றித் தமிழுக்குச் செம்மொழி அரியணை தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊட்டிய ஊக்கம் அகரமுதலி 30 தொகுதிகளாக மலர்ந்துள்ளது.

இணைப்பு மடலங்களுக்குப் பின்னர் வெளிவரவேண்டிய சொற்பிறப்பு நெறிமுறை மடலத்தையும் விரைந்து முடித்து வெளியிடும் பணி நடைபெற்று வருகிறது. இத்தகைய சீரிய முயற்சியில் ஈடுபட்டுள்ள செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மதிப்புறு இயக்குநரையும் மற்றும் பதிப்பாசிரியர்கள், சிறப்புநிலைத் தொகுப்பாளர்கள், அனைத்துப் பணியாளர்களையும் சிறப்பாகப் பாராட்டுகிறேன்.

(க. முத்துசாமி)

பதிப்புரை

செம்மொழித் தமிழின் சீரார்ந்த முன்மைக்கும் தொன்மைக்கும் அடிப்படைக் கருவி நூலாக இருப்பது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி. உலகில் இதுவரை வெளிவந்துள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிகள் அனைத்தினும் மேம்பட்டதாகத் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி விளங்க வேண்டும் எனப் பேராசான் மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் கனவு கண்டார். அதனை அரசின் திட்டமாக்கிப் பாவாணருக்கென்றே தனித்த ஓர் இயக்ககத்தை உருவாக்கிய **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் முத்தமிழ்க் கலைஞர்** அவர்கள் பாவாணரின் நெட்ட நெடுங்கனவை நீடு நிலைத்த நனவாக்கியதை அகரமுதலி தொகுப்புப் பணி நிறைவுற்று வெளிவந்துள்ள 30 தொகுதிகளில் இன்று காண்கிறோம். இறுதித் தொகுதியான சொற்பிறப்பு நெறிமுறைகள் 31 ஆம் தொகுதியாக விரைவில் வெளிவரவுள்ளது.

உலக மொழிகளில் ஆங்கிலம், பிரஞ்சு, செருமானியம், உருசியம், சீனம், இலத்தீனம், சமற்கிருதம் ஆகியவற்றில் சொற்பிறப்பு அகரமுதலிகள் வெளிவந்துள்ளன. இந்திய மொழிகளில் தெலுங்கு, நேப்பாள மொழிகளில் வெளிவந்தவை சிறப்பாக அமையவில்லை. குடும்ப மொழிகளுக்காக வெளிவந்த பரோஎமனோவரின் Dravidian Etymological Dictionary (DED). அல்தாய்க்கு மொழிகளுக்காக வெளிவந்த Etymological Dictionary of Altaic languages (EDAL). பின்லாந்து பேராசிரியர் அன்னு பனு அகோலா வெளியிட்ட SUDURALJAN (சுமேரியன் திரவிடம் ஊரல் மொழிகள் சப்பானியம் ஆண்டியன் இன்கா மொழி) அகரமுதலி ஆகியவை ஒப்பீட்டு அகரமுதலிகளாக (Comparative Dictionary) உள்ளன. இவற்றில் சொற்பிறப்பின் மூலத்தைத் தேடும் முயற்சி முழுமையாக எடுக்கப்படவில்லை.

12000 பக்கங்களில் இரண்டு இலக்கம் சொற்களை உள்ளடக்கி அனைத்துச் சொல்லாட்சிகளுக்கும் வேர்மூலமும் இனச்சொல்வகைப்பாடும் காட்டும் முயற்சியில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி வீறார்ந்த வெற்றி நடை பயின்றுள்ளது. பல்வேறு காரணங்களால் அகரமுதலிப் பணி தொடர்ந்த இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகியது. திட்டமிட்ட கால வரம்புக்குள் நிறைவுறுத்த இயலாமல் வேறுவழியின்றி காலநீட்டிப்பை எதிர்கொள்ள நேர்ந்தது வருந்தத்தக்கதாயிற்று. நெடுங்காலமாகப் புலமை நலம் பொதுளிய திறப்பாடு மிகுந்த இயக்குநர் பணியிடம் நிரப்பப்படவில்லை. அரசு செயலாளரே கூடுதல்

பொறுப்பு இயக்குநராக நீடிக்க நேர்ந்ததாலும் புலமை சான்ற இயக்குநரின் ஒரு சீரான மேற்பார்ப்பு இல்லாத நிலையிலும் அகரமுதலிச் சொற்பதிவுகளிலும் சீரான பதிப்புப் பணியிலும் குறைபாடுகள் காணப்படுகின்றன என்பது உண்மையே. இக்குறைபாடுகளைக் களைந்து ஆக்சுபோர்டு ஆங்கில அகரமுதலி போல் பன்னிரு பெருந்தொகுதிகளில் திருந்திய பதிப்பு Revised edition of (TED) Tamil Etymological Dictionary வெளியிட அரசுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

"வினைச் சொற்களின் பெருக்கம் செம்மொழிச் சிறப்பை நிலைநாட்டும். அத்தகைய வினைச்சொல் பெருவளத்தை தமிழில் நான் காண்கிறேன்" என அருள்மிகு வினோபா அடிகள் குறிப்பிட்டார். அது உலக மொழிகளில் வேர்வீழ்த்து ஐரோப்பிய மொழிகளில் விழுதூன்றியதைக் கால்டுவெல் பெருமகனாரும் யாழ்ப்பாணத்து நல்லூர் ஞானப்பிரகாச அடிகளாரும் வலியுறுத்தினர். பாவாணர் அதனை மெய்ப்பித்துக் காட்டினார். அகரமுதலியில் செம்மொழித் தமிழின் வேர்வளம் விளக்கப்பட்டுள்ளது.

திராவிடமொழிகளிலும் ஏனைய உலகமொழிகளிலும் இனச்சொல் காட்டியிருப்பது, படவிளக்கம் தந்திருப்பது, இன்றியமையாத சொற்களுக்கு விரிவான விளக்கம் தந்திருப்பது, பிற அகரமுதலிகளில் காணப்படும் பிழைபாடுகளைச் சுட்டிக்காட்டித் திருத்தியிருப்பது, புதிய கலைச் சொற்களைப் படைத்திருப்பது, வடமொழிச் சொல்லாட்சிகளுக்கு நிகரான தமிழ்ச் சொற்கள் தந்திருப்பது, தமிழில் புகுந்துள்ள வேற்று மொழிச் சொற்களைத் தனியாகப் பிரித்து முத்தொகுதி அயற்சொல் மடலமாக வெளியிட்டிருப்பது, ஏட்டில் பயிலாத நாட்டுப்புறத்துத் தமிழ்ச் சொல்லாட்சிகளைத் தேடித் தொகுத்திருப்பது இன்றியமையாத இலக்கணக் குறிப்புகள் தந்திருப்பது ஆகியவை இந்த அகரமுதலியின் சிறப்புக் கூறுகள் எனலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாகப் பாவாணர் எண்ணிய வண்ணம் இதுவரை வெளிவந்துள்ள உலகச் சொற்பிறப்பு அகரமுதலிகளில் காணப்படாத சிறப்புக்கூறுகள் பெருமளவில் இந்த அகரமுதலித் தொகுப்புகளில் இடம் பெற்றிருப்பது இத்திட்டப் பணியின் தனிச்சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. இப்பணியில் எங்களை ஈடுபடுத்திய **மாண்புமிகு முதலமைச்சருக்கும்,** தமிழ் வளர்ச்சி அரசு செயலாளருக்கும் என்றும் பொன்றா நன்றியுடையோம். இப்பணியில் அயராது உழைத்த திட்டப்பணி தமிழறிஞர்கள் அனைவருக்கும் நன்றி உரியது.

இரா. மதிவாணன்
மதிப்புறு இயக்குநர்

பதிப்புக்குழு

முனைவர் **இரா. மதிவாணன்**, மதிப்புறு இயக்குநர்

தலைவர்–பதிப்புக்குழு

முனைவர் **மு.கண்ணன்**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

முனைவர் **ச. செந்திலாண்டவன்**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

முனைவர் **இரா.கு.ஆல்துரை**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

திரு.**கா. இளமுருகு**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

திரு.**ச.கி. கணேசன்**, சிறப்பு நிலை ஓவியர் – முதனிலை

திரு. **மா. பூங்குன்றன்**, பதிப்பாசிரியர்

திரு.**க.கணேசன்**, பதிப்பாசிரியர்

திரு.**சு.வீரவேலு**, பதிப்பாசிரியர்

திருவாட்டி.**வே.உமாராணி**, உதவிப் பதிப்பாசிரியர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

ஒன்பதாம் மடலம் – இரண்டாம் பாகம்

[இணைப்பு மடலம்]

(ச—வெள)

ச

சங்கிலி முடிச்சு *cangilimudiccu,* பெ. (n.) முடிச்சு வகை; kind of knot.

[சங்கிலி + முடிச்சு]

சங்குக் கிடங்கு *cangukkidangu,* பெ. (n.) சங்குகளைப் பதப்படுத்திப் பாதுகாக்கும் அறை; chank godown.

[சங்கு+கிடங்கு]

சட்டம்பி *cattambi,* பெ. (n.) திண்ணைப் பள்ளிக் கூடத்து மாணவர் தலைவன், சட்டாம் பிள்ளை; school pupil leader.

[சட்டாம்பிள்ளை – சட்டம்பி]

சடக்ககடம் *cadakkagadam,* பெ. (n.) பெருந்தீனிகொள் பருவயிறு ; a stomach with a sensation of over appetite. "சடக்க கடத்துக் கிரை தேடி பலவுயிர் தம்மைக் கொன்று" (பட்டினத். திருவேசம்பி 33).

[சடம்(சடக்க)+(குடம்) கடம்]

சடத்தாங்கல் cada-t-tāngal, பெ. (n.) வேலூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Vellore.

[ஒருகா சடையன் + தாங்கல்(ஏரி)]

சடுத்த மருத்துவம் *caduttamaruttuvam,* பெ. (n.) உடனடி மருத்துவம், emergency treatment.

[சடுத்தம்+மருத்துவம்]

சடுதி *cadudi,* பெ. (n.) போட்டி; competition. என்னோடு சடுதி போடாதே. (மீனவ.)

Mar. jaduti.

[சடைவு – சடுவு – சடுதி]

சடுதை *cadudai,* பெ. (n.) தொல்லை, நச்சரிப்பு (சிரமம்); disturbance, nuisance

[சாடு – சடு – சடுதை]

சடையாலி *cadaiyāli,* பெ. (n.) சாலிவகை நெல்லினம்; a variety of paddy.

[சடை+ஆலி]

சண்டைச் சச்சரவு *candai-c-caccaravu,* பெ. (n.) ஒருவரையொருவர் திட்டிக்கொள்ளுதல் அல்லது காரசாரமாகப் பேசிக் கொள்ளுகை; quarrel. இந்தத் தெரு எப்பொழுது பார்த்தாலும் சண்டைச் சச்சரவு மிக்கதாகவே இருக்கும்.

[சண்டை+சச்சரவு]

சண்டை – பூசல்; சச்சரவு – கலகம். முதலெழுத்து ஒன்றிவந்த மரபிணை மொழி.

சத்தம் *cattam,* பெ. (n.) வண்டிக்கூலி; wage for transportation சாத்தம்பார்க்க; see *cāttam,*

[சாத்து–சாத்தம்–சத்தம்]

சதுரப்பொற்காசு *cadura-p-porkāsu,* பெ. (n.) சதுர வடிமையிலான மதுரைப்பாண்டியர் காசு; a coin of Pandiyan king.

[சதுரம்+பொன்+காசு]



சதை வாவல் *cadai-vāval,* பெ. (n.) ஒரு வகை மீன்; round bat fish.

[சதை+வாவல்]

சந்தனக்கல் *candana-k-kal,* பெ.(n.) கத்தியைத் தீட்ட உதவும் சாணைக்கல், grindstone.

[சந்தனம்+கல்]

சப்பட்டைக்குருவி, *cappattai-k-kuruvi,* பெ. (n.) வானம்பாடி பறவை இனம்; black lark.

[சப்பட்டை+குருவி]

சமக்கூடை *cama-k-kūdai,* பெ. (n.) பனை ஒலைக்குடை; umbrella made of palm leaves.

[சமம்+கூடை]

சம்பங்கி நல்லூர் *cambanginallūr,* பெ. (n.) வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூர்க்கு அருகில் உள்ள ஓர் ஊர்; a village in north Arcot, near Vellore.

[சம்பங்கி+நல்லூர் (கல்வெட்டு)]

சம்பா *cambā,* பெ. (n.) விசய கண்ட கோபாலனுடைய 22 ஆம் ஆட்சியாண்டில், கி.பி.1272ஆம் ஆண்டில் – திருவோத்தூர் கோயிலில் இருந்த தேவரடியாள் உண்ணா முலையின் மகள்; name of dancer, daughter of Unnamulai at Thiruvottūr temple.

[சம்பு–சம்பா]

சம்புரிப்பட்டு *camburi-p-pattu,* பெ. (n.) நெசவுப்பாவில் ஊடிழையாக வரும் பட்டு; interlacing thread in silk weaving.

[சம்பு++உரி+பட்டு]

சம்புவராயநல்லூர் *cambuvarāyanallūr,* பெ. (n.) வேலூர் மாவட்டத்தில் திருவலத்திற்கு அருகில் உள்ள ஓர் ஊர் ; a village in Vellore near the Thiruvalam.

[சம்புவராயன்+நல்லூர்]

சம்புவராய நாச்சி *cambuvarāyanācci,* பெ. (n.) கோயிலுக்குத் தானம் புரிந்த திருவோத்தூரில் வாழ்ந்த தேவரடியார் செய்யாண்டையான 'சம்புவராய நாச்சி'; a dancer.

[சம்புவராயன்+நாச்சி]

சம்பைக்கடை *cambai-k-kadai,* பெ. (n.) கருவாட்டுக்கடை ; dryfish shop.

[சம்பை+கடை]

சமத்தூர் *cama-t-tūr,* பெ. (n.) கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Coimbatore.

[சமம்(போர்) அத்து+ஊர்]

சரடு விடுதல் *caraduvidu,* செ.கு.வி. (v.i.) பொய் சொல்லுதல்; to tell lies அவன் சரடு விடுவதில் கெட்டிக்காரன். (இ.வ)

[சரடு+விடு-]

சரடு எத்தனை நீளத்துக்கும் விடலாம். அதைப் போன்று தன் கற்பனைத் திறமைக்கு ஏற்ப எத்தனைப் பொய்களும் சொல்லலாம் என்பது குறிப்பாகப் புலப்படும் பொருள்.

சரணளி–த்தல் *caranali-,* செ.குன்றாவி (v.t.) அடைக்கலம் அளித்தல்; to give refuge இராமன் விபீடணக்குச் சரணளித்தான்.

[சரண்+அளித்தல்]

சரதவெக்கை, *carada-vekkai,* பெ. (n.) மாட்டிற்கு வரும் ஒருவித நோய்; a disease affecting cow.

[சரதம்+வெக்கை]

சரளி ஆடு *caraliādu,* பெ. (n.) உடலில் வெண்ணிறம் படர்ந்த ஆடு; a goat of white column on the body.

[சரளி + ஆடு]

சரந்தாங்கி *cara-n-tāngi,* பெ. (n.) பாண்டிய நாட்டில் உள்ள ஓர் ஊர்; a village in Pāndiyanādu.

[சரம்+தாங்கி]

சருவக்கண்ணாடி *caruva-k-kaṇṇāḍi,* பெ. (n.) மழையால் பதிக்கப்பட்ட கண்ணாடி. mirror damaged by rain.

[சருவம் + கண்ணாடி]

சல்லடம் *callaḍam,* பெ. (n.) நீர்ச்சீலை (கோவணம்); loincloth.

[சல்லை–சல்லடம்]

சல்லாயம் *callāyam,* பெ. (n.) இடையூறு disturbance

[சள்ளை – சல்லாயம்]

சவந்தின்னிச்சீவி *cavan-tiṇṇi-c-cīvi,* பெ. (n.) பறவைகள் தங்குமிடம், birds perching place.

[சவம்+தின்னி+சீவி]

சவாரிக்கட்டு *cavāri-k-kaṭṭu,* பெ. (n.) கற்கட்டு வகை; type of setting stones in a wall.

[சவரி–சவாரி+கட்டு]

சளித்த பதனீர் *caḷitta-p-padanīr,* பெ. (n.) பதனழிந்த பதனீர்; rotten tender palmyrah juice.

[பதன்+அழிந்த+பதனீர்]

சற்றேறக்குறைய *caṟṟēṟa-k-kuṟaiya,* பெ.அ. (adj.) நேரத்தில், எண்ணிக்கையில் ஏறக் குறைய; approximate of time, amount. அவன் வீட்டுக்கு வரும் போது சற்றேக்குறைய 12 மணி இருக்கும்.

[சற்று+ஏறக்குறைய]

சன்னாநல்லூர் *caṇṇā-nallūr,* பெ. (n.) திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூரிலிருந்து 16 கல் மாத்திரியிலுள்ள ஓர் ஊர்; a village, 16 k.m. away from Thiruvarur.

[சன்னம்+நல்லூர்]

சாகாக்கலை *cāgā-k-kalai,* பெ. (n.) சாதலின்றி நெடிது வாழ்ந்திருக்கும் கலை; boon of immortality "சாகாக் கலைநிலை தழைத்ததில் வெறியெனும் ஆகாயத்தொளிர் அருட்பெருஞ் சோதி" (அருட்பா. 4615, 51).

[சாவாக்கலை – சாகாக்கலை]

சாண்டு *cāṇḍu,* பெ. (n.) நோனிக் குருதி; menstrual fluid.

[சான்+சாண்டு]

சாணக்கு *cāṇakku,* பெ. (n.) மட்பாண்டத்தின் மேல் மூடி; lid of the pot.

[சாள்–சாளக்கு–சாளக்கு]

சாத்தம் *cāttam,* பெ. (n.) வண்டிக்கூலி; charge levied for carrying goods from place to place by cart.

[சாத்து–சாத்தம்]

சாத்து வாணிகர் தம் வண்டிச் சாத்துகளில் வாங்கிய கட்டணம் சாத்து – சாத்தம் எனப்பட்டது. இது வண்டிச் சத்தம் எனத் திரிந்தது.

சாத்தனூர் *cāttaṉūr,* பெ. (n.) திருநள்ளாற் றுக்கு வடகிழக்கே 8 கல் தொலைவில் உள்ள ஊர்; a village 8 km from Thirunaḷḷār.

[சாத்தன்+ஊர்]

சாதுவன் *cāduvaṉ,* பெ. (n.) 1. நல்லவன்: goodman சாதுவராய் போது மின்க ளென்றான் *[திவ். இயக் 68]* 2. ஐம்புலன் அடக்கிய துறவி; a monk தத்துவன் சாதுவன் (சிலம் : 10.182)

[சால் – சாது+வ் + அன்]

சாரணி *carani,* பெ. (n.) துளைக்கரண்டி, கண்கரண்டி ; perforated laddle.

[சுரை – சரை – சாரணி]



சால்கெண்டை *cāl-keṇḍai*, பெ. (n.) கெண்டை மீன் வகையுள் ஒன்று; dorsalis.

[சால்+கெண்டை]



சாலியமங்கலம் *cāliya-maṅgalam*, பெ. (n.) தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Thanjavur.

[சாலி–சாலியம்+மங்கலம்]

சாலினி *cāliṉi*, பெ. (n.) 1. தேவராட்டி; foretelling women with divine power. முழங்குவாய் சாலினி (சிலம். 12–7)

[சால் – சாலி – சாலினி]

சாலோட்டு–தல் cālōṭṭu - செ.கு.வி. (v.i) நிலத்தை உழுதல்; to plough land. நேற்று வரை இரண்டு சால் ஓட்டி ஆயிற்று. (உ.வ.)

[சால்+ஓட்டு]

சாவுக்குருவி, *cavu-k-kurivi*; பெ(n) ஒரு வகை குருவி இனம்; Indian night jar.

[சா–சாவு+குருவி]

சாவிகை *cāvigai*, பெ. (n.) இனிப்பு சேர்த்து உண்ணும் இடியாப்ப வகை; a vapour cooked rice pudding.

சாற்றுப்பாட்டு *cāṟṟu-p-pāṭṭu*-, பெ. (n.) விழாச் செய்தியைப் பறைசாற்றிச் சொல்வதற்கான பாட்டு; a song sung while declaring day of festival by drumming

[சாற்று+பாட்டு]

காணிக்காரரிடை இப்பாடல் வழக்கில் உள்ளது.

சாற்றுரை cāṟṟurai, பெ. (n.) அறிவித்தல், declaration.

[சாற்று+உரை]

சான்றாளி *cāṉṟāli*, பெ. (n.) சான்று கூறுபவன் a witness. சான்றாளன் பார்க்க; see cāṉṟāḷan.

[சான்று + [ஆள்] + ஆளி].

சான்றொப்பம் *cāṉṟoppam*, பெ. (n.) சான்றிதழ், ஆவணம் முதலியவற்றில் கொடுக்கப்பட்டுள்ள விளத்தம் உண்மையானது அல்லது அவற்றின் நேர்ப்படி உண்மையானது என்று இடப்படும் கையெழுத்து; attest a copy, certify. விண்ணப்பத்தில் சான்றொப்பம் வாங்கிவா.

[சான்று+ஒப்பம்]

சிக்கல் *cikkal*, பெ. (n.) நாகப்பட்டினம் வட்டத்தில் 15 கல் மாத்திரி அளவு உள்ள ஓர் ஊர்; a village 15 km from Nagappattinam.

[சிக்கு–சிக்கல்]

சிகட்டி *cigaṭṭi*, பெ. (n.) இருள்; darkness.

தெலு. சீகட்டி

[சீகு–சிகட்டி]

சிகிர் *cigir*, பெ. (n.) துளிர்; sprout.

கன். சிகுரு

[துளிர்–துகுர்–சிகுர்]

சிகுவை *ciguvai*, பெ. (n.)உண்ணாக்கு நரம்பு; a nerve in uvula.

[சிகுல்–சிகு–சிகுவை]

சிஞ்சல் *ciñjal*, பெ. (n.) நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Nagapaṭṭinam.

[செஞ்சு–செஞ்சல்–சிஞ்சல்]

சிஞ்சிரி *ciñjiri*, பெ. (n.) கஞ்சிரா எனும் தோற்கருவி; a percussion instrument.

[சிஞ்+சிரி (ஒலிக்குறிப்பு)]



சித்தர்காடு *cittar-kāḍu,* பெ. (n.) மயிலாடு துறைக்கு 6 அயிரிமாத்திரி தொலைவில் உள்ள ஓர் ஊர்;a village 6 k.m from Mayiladuthurai.

[சித்தர்+காடு]

சித்தமலம் *cittamalam,* பெ. (n.) அறியாமை; ignorance 'சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட அத்தன்' (திருவா.)

[சித்தம்+மலம்]

சித்திரை திருநாள் *cittirai - tirunāḷ,* பெ. (n.) திருவிதாங்கூரை ஆண்ட கடைசிமன்னன்; name of a last king Tiruvidangur.

[சித்திரை+திரு+நாள்]

சிதரல் *cidaral,* பெ. (n.) பாண்டியர் காலத்தில் சமணரின் பல்கலைக் கழகமாகவும், சமணப் பள்ளியாகவும் இருந்த குன்று; a hillock cave centre of Jain monks.

[சிதர் – சிதரல்].

சிந்தாதிரிப்பேட்டை *cindadiri-p-pēṭṭai,* பெ. (n.) சென்னையில் உள்ள ஓர் ஊர்; an area in Chennai city.

த.சிந்தாதிரிப் பேட்டை E. Saint Andrew's pet).

சிந்தாமணி cindāmaṇi, பெ. (n.) தென்னார்க் காடு மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர் name of the village in South Arcot.

[சிந்தா+மணி (ஒளி குன்றாதமணி)].

சிப்பி *cippi,* பெ. (n.) உண்கலமாகிய மண்தட்டு; a flat earthen pottery used for eating purposes.

[சிறு – சிறுப்பி – சிப்பி]

சிப்பியுயிரி, *sippiuyiri,* பெ. (n.) கடலில் வாழும் மீன் வகைகளுள் ஒன்று; shell fish.

[சிப்பி+உயிரி].

சிரகு *siragu,* பெ. (n.) புடவை தலைப்பு; lore-saree.

க. செரகு; **பட.** செரங்கு

[சிறகு–சிரகு].

சிராயம்பட்டு *cirāyam-paṭṭu*, பெ. (n.) காஞ்சி புரம் மாவட்டத்தில் செய்யாற்றிலிருந்து ஆரணி செல்லும் சாலையில் அமைந்துள்ள ஓர் ஊர்; a village in Kanchipuram, way to Ceyyaru Arani sālai.

[சிராயம்+பட்டு].

சிம்பு *cimbu,* பெ. (n.) கைத்தறியில் புனிக்குப் பயன்படும் மெல்லிய கொம்பு; an implement in handloom weaving.

[சிள் – சிம் – சிம்பு]

சிமுக்கு *cimukku,* பெ. (n.)சிறுகுச்சி, சிறுவளார்; splint.

[சீள்–சிமுக்கு]

சில்லாக்கோல் *cillā-k-kōl,* பெ. (n.) எலி பாம்பு போன்றவற்றைக் கொல்ல கூரான கொம்பு பொருத்தப்பட்ட மூங்கில் கழி; spiked stick.

[சில்லா+கோல்]

சில்லான் *cillāṉ,* பெ. (n.) தெருக்கூத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவி வகை; a music instrument.

[சில்லை–சில்லான்]

சில்லியாடு cilli-y-āḍu, பெ. (n.) அளவிற்சிறிய காதுள்ள செம்மறியாடு; a kind of brown sheep

[சில்லை + ஆடு]

சிலும்பு *cilumbu,* பெ. (n.) துரு, மாழை (உலோக)க்கறை; rust.

[சிலு–சிலும்பு]

சிலுப்பை *ciluppai,* பெ. (n.) கைத்தறிக் கருவி; a device containing few kunjams in handloom weaving.

[சிலு – சிலும்பை].

சிலையோடு–தல் *cilaiy-y-ōḍu,* செ.கு.வி. (v.i.) மலைகளில் எதிரொலிக்கும் ஓசை; to echo sound in mountain.

[சிலை+ஒடு].

சிவபுரம் *civapuram*, பெ. (n.) வேலூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Vellore.

[சிவம்+புரம்].

சிவமதம் *civa-madam*, பெ. (n.) சிவனை முழு முதல் கடவுளாகக் கொண்ட சமயம், saivism.

[சிவன் + மதம்]

சிவமாக்கு-தல் *civam-ākku-*, செ.குன்றாவி. (v.t.) மெய்யுணர்வு பெறச் செய்தல்; to make immortable. "சித்தமல மறுவித்துச் சிவ மாக்கி யெனையாண்ட அத்தனெனக் கருளியவா றார்பெறுவார்" (திருவாச.).

[சிவம் + ஆக்கு]

சிவனிரவு *civaṉ-irau*, பெ. (n.) கும்ப *[மாசி]* மாதத்தில் வெள்ளுவாவின் 14ஆம் நாளன்று உள்ள இரவு *[பெரும்]* மா சிவனிரவு (மகாசிவ ராத்திரி); forteenth night of kumba (māci) month from full moon.

[சிவன்+இரவு]

சிற்றலை *ciṟṟalai*, பெ. (n.) அலைகாலப்பருவம்; half tide.

[சிறு+அலை]

சிற்றினவாழ் *ciṟṟinavāḻ*, பெ. (n.) பாபநாசம் வட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Papanāsam.

[சித்தன்+வாழ்+ஊர்]

இவ்வூர் இப்போது 'சித்தன்வாலூர்' என்று அழைக்கப்படுகிறது.

சிற்றியாற்றூர் *ciṟṟiyāṟṟūr*, பெ. (n.) செய்யாறு வட்டத்தில் பில்லாந்தாங்கல் அருகே அமைந் துள்ள ஊர்; a village in Seyyaru, near the Pillanthangal.

[சிறு+ஆற்று+ஊர்]

சிற்றுரை *ciṟṟurai*, பெ. (n.) சிறிய அளவில் தெரிவிக்கும் கருத்து; a short statement or comment.

[சிறு + உரை]

சிற்றெழுத்தர் *ciṟeḻuttar*, பெ. (n.) கையேட்டுக் கணக்கர்; personal attendant.

[சிறு+எழுத்தர்]

சிற்றேவலர் *ciṟṟēvalar*, பெ. (n.) அலுவல் உதவியாளர்; attender.

[சிறு + ஏவலர்]

சிறகு *ciṟagu*, பெ. (n.) தாலியில் சேர்க்கப் பட்டிருக்கும் சிறுபொன் தகடு; ornamental piece in tali.

[சிறு>சிறுகு-சிறகு]

சிறஞர் *ciṟañar*, பெ. (n.) நாகப்பட்டின மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். a village in Nagappaṭṭiṉam.

[(ஒருகா.சிறை (ஏரி)+அதர் (வழி)]

சிறாமீன் *ciṟāmīṉ*, பெ. (n.) சிறிய மீன், வகைகளுள் ஒன்று; tope.

[சிறுமை→சிறு→சிறா+மீன்]

சிறுகருந்தும்பி *ciṟukaruntumbi*, பெ. (n.) பூச்சியினத்தில் ஒன்று; an insect.

[சிறு+கரு+தும்பி]

சிறுகால் *ciṟukāl*, பெ. (n.) 1. சிறிய நீரோடை; brook. 2. விடியற்காலம்: dawn சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்தோம்.

[சிறு+கால்].

சிறுத்தொண்ட நல்லூர் *ciṟu-t-toṇḍanallūr*, பெ. (n.) திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந் துள்ள ஓர் ஊர்; a village in Thriunelveli.

[சிறுத்தொண்டன்+நல்லூர்]

சிறுநோக்கம் *ciṟunōkkam*, பெ. (n.) அருகிய நோக்கம் ; rare look. "கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில் செம்பாகம் அன்று பெரிது" (குறள். 1092).

[சிறு+நோக்கம்]

சிறுபுலமீன்கொத்தி, *cirupulamīn-kotti,* பெ. (n.) நீர்நிலைகளில் வசிக்கும் பறவை; a water bird.

[சிறு+புலம்+மீன்+கொத்தி].



சிறுமூர் *cirumūr,* பெ. (n.) வேலூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Vellore.

[சிறு+ஆமூர்].

சின்னத்திரை *cinna-t-tirai,* பெ. (n.) தொலைக் காட்சி, கம்பி வடத்தொலைக்காட்சி, television, cable television.

[சிறிய > சின்ன+திரை].

சின்னலபுரம் *cinnalapuram,* பெ. (n.) வேலூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Vellore.

[சின்ன+ஆலம்+புரம்].

சினுக்குவலி *cinukku-vali,* பெ. (n.) தலைமுடியைக் கோதவும் சிக்கு எடுக்கவும் பயன்படுத்தும் குச்சி போன்ற பெரிய ஊசி; hair pin like tool used by women for trimming the hair.

[சினுக்கு+வலி]

சினுப்பு-தல் *cinuppu,* செ.குன்றாவி. (v.t.) தயிர் போன்றவற்றைக் கடைதல்; to churn curd.

[சிலுப்பு–சினுப்பு]

சினை *cinai,* பெ. (n.) கருத்தரிப்பு; conceivement.

[சில்–சின்–சினை].

சிக்காய் *cīāk-kay,* பெ. (n.) பழுக்காத பனங்காய் unripened palmyrah fruit.

[சிக்கல்+காய்].

சீகனேந்தல் *cīganēndal,* பெ. (n.) அருப்புக் கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[சீங்கன்+ஏந்தல் (ஏரி)].

சீகுபத்தி *cīkupatti,* பெ. (n.) அருப்புக்கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர், a village in Aruppukkottai Taluk.

[ஒருகா. சீங்கன்+பட்டி].

சீங்காய் *cīngāy,* பெ. (n.)பழுக்காத பனங்காய்; unripened palmyrah fruit.

[சிக்கல்+காய்]

சீச மங்களம் *cīsamangalam,* பெ. (n.)வேலூர் மாவட்டத்தில் ஆரணிக்கு அருகில் உள்ள ஓர் ஊர்; a village in Vellore, near the Arani.

[சீயன்+மங்கலம்].

சீட்டஞ்சேரி *cīttañjēri,* பெ. (n.) காஞ்சிபுரம் வட்டத்தில் சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[சீட்டன்+சேரி].

சீடைபாய்ச்சல் *cīḍai-pāyccal,* பெ. (n.) களை படர்ந்த காடுகளில் நீர் பாய்ச்சுதல்; watering the dry land.

[சீடை+பாய்ச்சி].

சீத்தலை *cīttalai,* பெ. (n.) 1. ஓர் ஊரின் பெயர்; a place name. 2. வன்மையான நிலப்பகுதி : a hard soiled land.

[சீத்தம்(வன்மை, திறமை); சீத்தம்+ தலை].

சீதவெக்கை *cīda-vekkai,* பெ. (n.) மாட்டிற்கு வரும் ஒரு வித நோய்; a disese affecting cows.

சீதேவி *cīdēvi,* பெ. (n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukoyilur Taluk.

[திரு>சீ+தேவி].

சீதைப்பாண்டி *cīdai-p-pāndi,* பெ. (n.) பல்லாங் குழியின் வகை; an indoor game of pallāṅkuli.

[சீதை+பாண்டி].

சீப்பான் *cippān,* பெ.(n.) களையெடுக்கும் களைக் கொட்டு; hoe.

[சீத்தல்–சீப்பான்].



சீபம் *cipam,* பெ.(n.) ஒசூர் வட்டத்தில் சிற்றூர்; a village in Hosur Taluk.

சீமாட்டுக்கல் *cimāttu-k-kal,* பெ.(n.) சுமை யடைக்கல்; platform erected on the roadside to rest burden.

சீமைமாடு *cimai-mādu,* பெ.(n.) வெளிநாட்டு மாட்டு வகை; non native breed of cow

[சீமை+மாடு].

சீயமுத்தரையன் *ciyamuttaraiyan,* பெ.(n.) இரண்டாம் இராசராசனுடைய 4ஆம் ஆட்சியாண்டில், வாழ்ந்தவன் (கி.பி.1167ஆம் ஆண்டு திருவோத்தூர் கல்வெட்டு); a man who lived during the fourth ruling year of the king Rasarasan II.

[சீயன்+முத்தரையன்]

சீயாப்பாடி *ciyāppādi,* பெ.(n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[சீயான்+பாடி].

சீர் உருளை *cir-urulai,* பெ.(n.) இரு பக்கங் களிலும் இருக்கும் வண்டிச் சக்கரம்; cart wheel.

[சீர்+உருளை].

சீர்க்கடை *cir-k-kadai,* பெ.(n.) கொங்கு வேளாளர் இனத்தில் நிகழும் வேளாண் தொடர்புடைய சடங்கு; an agricultural ritual of Kongu Vēllalar community.

[சீர்+கடை].

சீர் கயிறு *cirkayiru,* பெ.(n.) கொரங்காட்டியையும் அச்சையும் சேர்க்கும் கயிறு; a connecting rope.

[சேர் > சீர்+கயிறு]

சீர்க்காரர் *cikkārar,* பெ.(n.)அருமைக்காரைச் சுட்டும் வேறு பெயர்; another name of Arumaikkāran.

[சீர்+காரர்].

சீர்தண்ணீர் *cir-tannir,* பெ.(n.) கொங்கு திருமணச் சடங்குகளில் ஒன்று; ritual in marriage of Kongu Vēllalar community.

[சீர்+தண்ணீர்].

சீர்தாங்கி *cir-tāngi,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādānai Taluk.

[சீர்+தாங்கல் (ஏரி)].

சீர்மரபினர் *cirmarabinar,* பெ.(n.) பரங்கியர் களால் வகைப்படுத்தப்பட்டதொரு பட்டியலி லிருந்து பின்னர் நீக்கப்பட்டு மிகவும் பின்தங்கிய இனத்தவராக இனங்காணப் பட்டோர்; communities once listed by the (British) and later transferred to the list of most backward communities.

[சீர்+மரபினர்].

சீரப்பள்ளி *cirappalli,* பெ.(n.) இராசிபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Rāsipuram Taluk.

[சீரான்+பள்ளி].

சீரம்பாம்பு *ciram-pāmbu,* பெ.(n.) விலாங்கு மீன் வகை; long finned eel

[சீரம்+பாம்பு].



சீரமம் *ciramam,* பெ.(n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[ஒருகா.சீராமன் – சீராமம்].

சீராடிச் சட்டம் *ciradiccattam,*பெ.(n.) தறி சீராக இயங்கும் சட்டம்; wooden frame in handloom.

[சீர்+ஆடி+சட்டம்].

சீருடை *cirudai,* பெ.(n.) நிறுவனப்பணியாளர் ஒரு குழுவினர், மாணவர் ஆகியோர் உடுத்தும் ஒரே வகையான உடை; uniform

மறுவ. ஒப்பாடை

[சீர்+உடை].

சீருடையாள் *cirudaiyāl,* பெ.(n.) திருநள்ளாற்று சிவன் கோயில் கல்வெட்டில் காணப்படும் பெண்ணின் பெயர்; name of a woman.

[சீர்+உடையாள்].

சீரெழுத்தாளர் *cireluttālar,* பெ.(n.) மெய்யுணர் வூட்டும் ஆசான்; a great sage or teacher who enlightens his disciples. "ஒரெழுத் தொருபொரு ளுணரர்க் கூறிய சீரெழுத் தாளர்" (திருமந்.514)

[சீர்+எழுத்து+ஆளர்].

சிலப்பந்தல் *cilappandal,* பெ.(n.) திருவண்ணா மலை வட்டத்தில் உள்ள சிற்றூர்; a village in Thiruvannamalai Taluk.

[சிலம்+பந்தல்].

சீலை *cilai,* பெ.(n.) கைத்தறி நெசவில் பாவுக்கு நூலை முரடாக்க உதவும் பணி; a method of making the thread rough in handloom weaving.

சீவணி *civani,* பெ.(n.) ஒரு நெய்தற்பண்; a musical note.

[தீவரம்–சீவணி].

சீவரம் *civaram,* பெ.(n.) அரக்கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arakkōnam Taluk.

[சீ+வரம்].

சீவலப்பேரி *civalappēri,* பெ.(n.) நெல்லை மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Tirunelvēli District.

[சீவலப்பன்+ஏரி].

சீவலாத்தி *civalātti,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர் ; a village in Tiruvādānai Taluk.

[சீவலன்+ஆத்தி].

சீவளி *civali,* பெ.(n.) மரத்தைச் சீவப் பயன்படுத்தும் கருவி; carpenter's tool.

[சீவு+உளி].

சீவாடி *civādi,* பெ.(n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in MaduranthagamTaluk.

[சிவன்+பாடி].

சீவாளி *civāli,* பெ.(n.) நாதசுரம் என்னும் ஒலகத்தில் பொருத்தப்பெறும் தக்கை, மட்டை முதலியவற்றால் செய்யப்பட்ட சிறு துண்டு; reed in certain windpipe instruments.

[தூ–தி–சி+வாளி].

நீண்ட குழல் வடிவிலான இசைக்கருவி. இதில் சீவாளி பொருத்தியே வாசிக்கவியலும்.

சீனந்தல் *cina-n-dal,* பெ.(n.) போளூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Pōlur Taluk.

[ஒருகா. சின்னன்–ஏந்தல் (ஏரி)].

சீனாங்குடி, *cinānguḍi,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள; a village in Tiruvadani Taluk.

[சின்னன்+குடி].

சீனாகாலா *cinākāla,* பெ.(n.) ஒரு வகைச் சிறு கடல் மீன்; Indian salomon row hall thread fins.

[சின்னன்+கலா].

சீனிக்கற்கண்டு *cīnikkaṟkaṇḍu,* பெ.(n.) ஒரு வகைக் கற்கண்டு; crystal sugar with rough edges.

[சீனி+கற்கண்டு].

சுக்கான் *cukkāṉ,* பெ.(n.) கப்பலை நடத்தும் கருவி; rudder.

[சுக்கு-சுக்கான்].

சுக்கான்பிடி *cukkāṉpiḍi,* பெ.(n.) தலைமைப் பதவி; helm of office.

[சக்கான்+பிடி].

சுக்குட்டிச் செடி *cukkuṭṭicceḍi,* பெ.(n.) மணத்தக்காளிச் செடி; a plant.

[சுக்குட்டி+செடி].

சுசீந்திரம் *cusīndiram,* பெ.(n.) இராசிபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Rasipuram Taluk.

சுங்கர் *cuṅgar,* பெ.(n.) கி.மு.176 முதல் மகத நாடாண்ட மரபினர்; a ruling class in Magada.

[சுங்கம்-சுங்கர்].

மோரியரின் படைத்தலைவனாக இருந்த புசியமித்திரனால் உண்டாக்கப்பட்ட அரசமரபு.

சுங்கான் *cuṅgāṉ,* பெ.(n.) அழகற்ற பங்கரை தோற்றமுடையவன்; a person of ugly appearance (மீனவ.)

மறுவ : பங்கடை, பங்கரை

[சோங்கு-சுங்கு-சுங்கான்].

சுச்சி *cucci,* பெ.(n.) பெரிய சக்கரத்தைச் சுற்றும் கருவி; a device used to rotate the big wheel.

[சுழற்றி-சுழத்தி-சுத்தி-சுச்சி].

சுட்டநாக்கன் *cuṭṭanākkaṉ,* பெ.(n.) கோள் சொல்பவன்; tale bearer. அவன் சுட்டநாக்கன் (மீனவ.)

[சுடு-சுட்ட+நாக்கன்].

சுட்டாமுட்டி *cuṭṭā-muṭṭi,* பெ.(n.) ஒரு வகையான இசைக்கலை வழக்குச் சொல்; a term used in music.

[சுட்டாத+முட்டி)].

சுட்டாவன்விளை *cūṭṭāvaṉviḷai,* பெ.(n.) அகத்தீச்சுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[சுட்டவான்+விளை, (மிளை-விளை)].

சுட்டொலி *cuṭṭoli,* பெ.(n.) சுட்டிக்காட்டும் ஒலி; deitic sound.

[சுட்டு+ஒலி].

சுடர்முடி *cuḍarmuḍi,* பெ.(n.) சிற்ப நூல்கள் கூறும் மகுட முடிவகை; a feature in sculpture.

[சுடர்+முடி].

சுடுகண் *cuḍukaṇ,* பெ.(n.) பவழ வகை மீன் ; pennat coral fish.

[சுடு+கண்].

சுண்டபற்றிவிளை *cuṇḍapaṟṟiviḷai,* பெ.(n.) அகத்தீச்சுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[சுண்டன்+பற்று+விளை].

சுண்டன் *cuṇḍaṉ,* பெ.(n.) சுண்டைக்காய்; vegetable cuṇḍai-k-kāy, Indian current tomato.

மறுவ. சுண்டை

[சுண்டை(சுண்டைக்காய்)-சுண்டன்].

சுண்டாச்சட்டி *cuṇḍāc-caṭṭi,* பெ.(n.) மீதமிருக்கும் குழம்பை ஊற்றி அடுப்பில் சுண்ட வைக்கும் மண்சட்டி; a pot used to reboil the juicy like juice called kuḻambu.

[சுண்டான்+சட்டி].

சுண்டித் தள்ளுதல் *cuṇḍi-t-taḷḷudal,* பெ.(n.) சுண்டுவிரலால் தள்ளுதல்; moving the ball with little finger.

[சுண்டி+தள்ளுதல்].

சுண்டு *cundu,* பெ.(n.) உதடு; lips

[சுள்–சுண்டு].

சுண்டு கயிறு *cundu kayiru,* பெ.(n.) பொம்மலாட்ட பொம்மைகளில் இணைக்கப் படும் கயிறு; a interwinned slender rope in puppetry

[சுண்டு+கயிறு].

சுண்டுகாரம் *cundukāram,* பெ.(n.) குழந்தை பிறந்ததும் தாய்க்குச் சுக்கு, மிளகு போன்ற வற்றை அரைத்துக் கொடுக்கும் காரவகை; curry paste given to the mother of just born baby.

[சுண்டு+காரம்].

சுண்டுகால் *cundu-kāl,* பெ.(n.) நரம்புப் பிடிப்பால் காலை இழுத்து நடத்தல்; limping back because of convulsion.

[சுண்டு+கால்].

சுண்டுமுத்து *cundu-muttu,* பெ.(n.) விளையாடும் கருவியாகப் பயன்படுத்தும் புளியங்கொட்டை; tamarind seed used as dice.

[சுண்டு+முத்து].

சுண்டுரணி *cundurani,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvādanai Taluk.

[சுண்டு+ஊருணி].

சுண்ணாம்புக்குறி *cunnāmbu-k-kuri,* பெ.(n.) குழி பறிக்கும்போது இடும் சுண்ணாம்புக்குறி; laying lime mark on the working spot

[சுண்ணாம்பு+குறி].

சுண்ணாம்புத் தட்டி *cunnambu-t-tatti,* பெ.(n.) பதநீர்ப்பானைக்குச் சுண்ணாம்பு தடவ உதவும் மட்டை; a brush used to apply lime to the pot.

[சுண்ணாம்பு + தட்டி].

சுணக்கக்கட்டணம் *cunakka-k-kattānam,* பெ.(n.) காலக் கழிவுக்கான கட்டணம்; late fee.

[சுணக்கம்+கட்டணம்].

சுத்தம் *cuttam* பெ.(n.) சிற்ப முத்திரை வகையினுள் ஒன்று; a feature in sculpture.

[தூய்–துய்–சுய்–சுத்தம்].

சுத்துக்குழி *cuttu-k-kuli,* பெ.(n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[சுற்று+குழி].

சுத்துப்பொலி *cuttu-p-poli,* பெ.(n.) நெற்குவியலின் சுற்றுப்பகுதி; surrounding place of paddy heap.

[சுற்று+பொலி]

சுத்துமுடிச்சு *cuttu-mudiccu* பெ (n) சுற்று முடிச்சு பார்க்க; see curru mudiccu.

[சுற்று+முடிச்சு]

சுதுப்பணங்கரை *cudupanangarai* பெ.(n.) அழகு (அலங்கார) மீன் வகை; silver bellies.

[சுதுப்பணி+காரை].

சுந்தனுடைப்பு *cundanudaippu* பெ.(n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[சுந்தன்+உடைப்பு].

சுந்து *cundu,* பெ.(n.) குச்சிகளில் துணி சுற்றிப் பற்ற வைத்த தீப்பந்தம்; fire stick, torch.

[சுளுந்து–சுந்து (கொ.வ.)].

சும்புகா *cumpugā* பெ.(n.)கூரான பற்களைக் கொண்ட கொடுக்கு மீன்; pale edged sting ray.

[சூம்பு–சும்புகா].

சும்மாட்டுக் கட்டை *cummāttukkattai* பெ.(n.) ஆயக்காலில் மோட்டு வலையைத் தாங்கும் கட்டை; wooden role used by fishermen

[சும்மாடு+கட்டை].

சுமைதாங்கி *cumai-tāṅgi,* பெ.(n.) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Walaja Taluk.

[சுமை+தாங்கி].

சுருக்கணாம்காரை *curukkaṇām kārai,* பெ.(n.) அழகு (அலங்கார) மீன் வகை; silver bellies.

[சுருக்கணம்+காரை].

சுருக்காங்கண்ணி *curukkāṉ-kaṇṇi,* பெ.(n.) முடிச்சுவகை; a kind of knot

[சுருக்கம்+கண்ணி].

சுருக்காமுடி *curuk-k-āmuḍi,* பெ.(n.) இலகுவாக அவிழ்க்கும்படி போடும் முடிச்சு; a knot easily unfastened

[சுருக்காத+முடி].

சுருட்டுத் தட்டி *curuṭṭu-t-taṭṭi,* பெ.(n.) மெல்லிய தப்பையால் பின்னப்படும் தட்டி; bamboo splint - side screen.

[சுருட்டு+தட்டி].

சுருட்டைக் கொம்பு *curuṭṭai-k-komabu,* பெ.(n.) மாட்டின் கொம்புவகை; a horm shape of cow.

[சுருட்டை+கொம்பு]

சுருத்து *curuttu,* பெ.(n.) சீற்றம்; anger

[சுரு–சுருத்து].

சுருவால் *curuvāl,* பெ.(n.) கரகாட்டத்தில் (மதுரை) ஆண்கள் அணியும் அரைக்கால் சட்டை; half jacket - worn by karagam folk lorists.

[சுரு+வால்].

சுருள்வீச்சு *curuḷ-viccu,* பெ.(n.) வீரத்தை வெளிப்படுத்தும் நாட்டுப்புறக்கலை; a martial play.

[சுருள்+வீச்சு].

சுவடிப்பு *cuvaḍippu,* பெ.(n.) மத்தளத்தை முழக்கும் முறைப்பாடு; method of playing 'mattalam'.

[சுவடு+வடிப்பு].

சுவதாசிகள் *cuvatāsigaḷ,* பெ.(n.) குடமுழுக்கு போன்ற நிகழ்ச்சிகளில் பரதம் ஆடுபவர்கள்; temple dancers.

[சுவயம்+தாசிகள்].

சுவாத்தன் *cuvāttaṉ,* பெ.(n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[ஒருகா. சிவத்தன்–சுவாத்தன்].

சுவாலை மகுடம் *cuvālaimaguḍam,* பெ.(n.) சிற்பங்களில் வடிவமைக்கப்படும் ஒரு மகுடம்; crown design seen in statues.

[சுவாலை+மகுடம்].

சுழல் வேகமானி *cuḻalvēgamāṉi,* பெ.(n.) கடலில் ஏற்படும் சுழற்சி கண்டறியும் அளவை கருவி; lyroscope.

[சுழல்+வேகம்+மானி].

சுழலரை *cuḻalarai,* பெ.(n.) ஒரு வகையான ஆடல் இயக்கம்; a dance movement.

[சுழல்+அரை (இடுப்பு)].

சுள்ளணி *cuḷḷaṇi,* பெ.(n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர், a village in Arantangi Taluk.

[ஒருகா. சூளாமணி–சுள்ளணி]

சுள்ளற *cuḷḷaṟa,* பெ.எ. (adj.) முழுமையாக, மிச்சமில்லாமல்; paying fully without keeping balance. இவன் சுள்ளறக் கொடுத்து விட்டான் (மீனவ.)

[சுள்+அற]

சுள்ளு *cuḷḷu,* பெ.(n.) பொய்; lie

க. சுள்ளு

[சுல்–சுள்–சுள்ளு]

சுள்ளெறும்பு *cuḷḷeṟumbu,* பெ.(n.) திண்டுக்கல் வட்டத்திலுள்ள சிற்றூர், a village in Dindigul Taluk.

[சுள்(சிறு)+எறும்பு]

சுளியன் *culiyan*, பெ.(n.) சேட்டை செய்பவன் (நெ.வ.வ.சொ.); trouble some person.

[சுள்–சுளி+அன்]

சுளுந்து சுற்றல் *culundu curral*, பெ.(n.) நுனியில் தீயைப் பற்றவைத்து விளையாடல்; fireball play.

[சுளுந்து + சுற்றல்]

சுற்றலடைவு *cularraladaivu*, பெ.(n.) சுழன்றாடும் அடைவு வகைகள்; a fast twisting movement in dance.

[சுற்றல்+அடைவு]

சுற்றறிக்கை *currarikkai*, பெ.(n.) அலுவலகம் போன்ற இடங்களில் செய்திகளைத் தொடர்புள்ளவர்களுக்குத் தெரிவிக்கக் கொடுக்கும் அறிக்கை; circular

[சுற்று+அறிக்கை]

சுற்றுக்கோல் *cürrukkōl*, பெ.(n.) அள்ளுதறியில் பாவைச் சுற்றி இழுத்துக் கட்டியிருக்கும் கோல்; a stick used in handloom.

[சுற்று+கோல்]

சுற்றுப்பாண்டி *curru-p-pāndi*, பெ.(n.) – பல்லாங்குழி ஆட்டவகையில் ஒன்று; a type of pallāṅkuli.

[சுற்று+பாண்டி]

சுற்றுமுடிச்சு *currumudiccu*, பெ.(n.) முடிச்சு வகை; a kind a knot.

[சுற்று+முடிச்சு]

சுறாவிழுந்தூர் *curāvilundūr*, பெ.(n). சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர், a Village in chidambaram Taluk.

[ஒருகா. சிறை(ஏரி) + விழுந்த ஊர்]

சூச்சம் *cūccam*, பெ.(n.) எந்திரம் விசை; machine power.

[சூழ் – சூச்சம்]

சூச்சனி *cūccani*, பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர், a village in Tiruvādānai Taluk.

[சூழ்–சூச்சனி]

சூசி *cūci*, பெ.(n.) பரதத்தில் பின்பற்றப்படும் ஒரு வகையான ஒற்றை முத்திரை நிலை; single hand pose in dance.

[சூழ்–சூழ்சி–சூசி]

சூட்டாங் காய் *cūttāṅkāy*, பெ.(n.) தேய்த்தால் விரைவில் சூடு உண்டாகும் காய்; a nut which get hot easily when it is rubbed.

[சூடு+ஆம்+காய்]

சூட்டிப்பு *cūttippu*, பெ.(n.), சுறுசுறுப்பு; active

[சூடு–சூட்டிப்பு]

சூடாமணி *cūdā - mani*, பெ.(n.), சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர், a village in Sivaganga Taluk.

[சூளாமணி – சூடாமணி]

சூடை *cūdai*, பெ.(n.), ஒரு வகைச்சிறு கடல் மீன்; fire spot.

[சூடு–சூடை]

சூடோன் *cūdōn*, பெ.(n.), சோளப்பயிர் வகையிலொன்று ; a type of maize.

[சூடன்–சூடோன்]

சூத்திரகாட்டேரி *cūttirakātteri* பெ.(n.) வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wandewash Taluk.

[சூத்திரம்+காட்டேரி. (காளி) காட்டாளி–காட்டேரி]

சூதானம் *cūdānam*, பெ.(n.) பாதுகாப்பு; safe

[சூழ்து–சூதானம்]

சூது தாயம் *cūdu-tāyam*, பெ.(n.), ஆறு சோழிகளைக் குலுக்கிப் போட்டு விளையாடும் ஆட்டம்; a play with six cowries.

[சூது+தாயம்]

சூந்து *cūndu* பெ.(n.) நளி ஒளி (கார்த்திகை சோதி) திரு விழாவின் போது வளையத்தில் தீப்பந்தம் சுருட்டி சுற்றுதல்; a fire ball play.

<u>பட.</u> சூன்சு

[சுளுந்து – சூந்து]

சூப்பாங் கட்டை *cūppāṅkaṭṭai,* பெ.(n.), குழந்தை விரலைச் சூப்பிக் கொண்டிருக்க உருவாக்கப் பட்ட கட்டை; a small stick designed for the child to suck instead of finger.

[சூப்பம்+கட்டை]

சூர நாற்றம் *cūranāṟṟam,* பெ.(n.) முடை வீச்சம் (துர் நாற்றம்); a fowl smell.

[சூரல்+நாற்றம்]

சூரம்புளி *cūrampuḷi,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர், a village in Tiruvādānai Taluk

[சூரல்–சூரம்+புளி]

சூரன்பாடு *cūraṉpāḍu,* பெ.(n.) சூரனைக் கொல்லும் காட்சிகள் கலைநயத்துடன் நடித்தல்; enacting the play of killing the demon Cūraṉ.

[சூரன்+பாடு]

சூரிகை *cūrigai,* பெ.(n.) சிற்பங்களில் காணப்பெறும் ஒரு போர்க்கருவி; a weapon shown in the sculpture.

[சூர்–சூரிகை]

சூசியப்பலகை *cūsiya-p-palagai,* பெ.(n.) பூ வேலைப்பாடுடைய பலகை; flower designed plank.

[சூசி+ஆம்+பலகை]

சூரியமூலை *cūriyamūlai,* பெ.(n.) குடமூக்கு (கும்பகோணம்) வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kumbakonam Taluk.

[சூரியன்+மூலை]

சூரை *cūrai,* பெ.(n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurandagam Taluk

[சூர்+சூரை(செடி)]

சூவிளையாட்டு *cūviḷaiyāṭṭu,* பெ.(n.) சிறுவர் விளையாட்டு; a children's game. உட்கார்ந்திருப்பவரின் பின்னால் நின்று கொண்டு 'சூ' என்று சொல்லும் விளையாட்டு.

[சூ+விளையாட்டு]

சூல் கதிர் *cūlkadir,* பெ.(n.), கறுத்து நிற்கும் நெற்கதிர்; a ripened corn of paddy.

[சூல்+கதிர்]

சூலக்கல் *cūlakkal,* பெ.(n.), பொள்ளாச்சி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Pollachi Taluk.

[சூலம்+கல்]

சூலாடு குத்துதல் *cūlāḍukuttudal,* பெ.(n.), நாட்டுப்புறச்சடங்குகளில் ஒன்று; a ritual in village.

[சூலாடு+குத்துதல்]

சூழ்–தல் *cūl-,* செ.குன்றாவி. (v.t) கண்ணால் பார்த்தல், நோக்குதல், to see with the eyes.

தெ. சூடு. (சூப்பு – பார்வை)

(சூழ் – கருதுதல், நினைத்தல் பொருட்பாட்டுப் புடை பெயர்ச்சியால் பார்த்தல் பொருள் பெற்றது).

சூழ்கிளை *cūlkiḷai,* பெ.(n.) சுற்றம்; relatives. "சூழ்கிளையும் சொற் பொருளும் சோர்வு ஆகும்" (ஜீவ : 46).

[சூழ்+கிளை]

சூழியல் *cūḻiyal,* பெ.(n.) விளவங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vilavancode Taluk.

[சூழ்+இயல்]

சூன்றிடு –தல் *cūṉṟiḍu,* செ.கு.வி. (v.i) பனங்காயின் உள்ளீட்டுக் குழியிலுள்ள நுங்கினைக் குடைந்தெடுத்தல்; to take the inner pulp of the tender palm fruit 'நுங்கு சூன்றிட்ட கண்' (நாலடி.44)

[சூல்–சூன்றிடு]

செக்காலை *cekkāli,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādānai Taluk.

[செக்கு+ஆலை]

செகுடி *cegudi,* பெ.(n.) திருவாடானை வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in TiruvādāniTaluk.

[சே(மரம்)+குடி]

செங்கட்டம் *cenkattam,* பெ.(n.) சதுரங்க விளையாட்டு, chess game.

[செம்+கட்டம்]

செங்கப்படை *cengappadai,* பெ.(n.) திருமங் கலம் வட்டத்திலுள்ள சிற்றூர், a village in Tirumangalam Taluk.

[செங்கம்+படை]

செங்கணாத்தி *cenganātti,* பெ.(n.) அறந் தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[செங்கண்+ஆத்தி]

செங்கல்நத்தம் *cengalnattam,* பெ.(n.) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wallajah Taluk.

[செம்+கல்+நத்தம்]

செங்கண் *cengan,* பெ.(n.) அரத்தக் கண், blood shot eye

[செம்+கண்]

செங்கனி *cengani,* பெ.(n.) ஒருவகை மீன், rock cod.

[செம்+கனி]

செங்காடு *cengādu,* பெ.(n.) செய்யாறு வட்டத்தில் மழையூர் சாலையில் கோவிலூர்க்கு அருகே உள்ள ஓர் ஊர்; a village in Ceyyāru on the way to Malaiyur sālai near the Kōvilūr.

[செம்+காடு]

செங்குஞ்சி *cenkuñji,* பெ.(n.) செம்மயிர்; red hair 'விரி செங்குஞ்சிப் பண்பிலா அரக்கன்'

[செம்+குஞ்சி]

செங்குடி *cengudi,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādānai Taluk.

[செம்+குடி]

செங்குளி *cenguli,* பெ.(n.) நீண்டகத்தி போன்ற மீன்; snapper.

[செம்+குளி]

செங்கோ *cengō,* பெ.(n.) கடல் கொண்ட குமரிநாட்டுத் தமிழ் வேந்தன், Tamil king of submerged Kumari land. செங்கோவே ஒளிச்செம்மல் (செங்கோன் தரைச்செலவு)

[செம்+கோ]

செங்கோட்டியாழ் *cenkōttiyāl,* பெ.(n.) கின்னரி; fiddle.

[செம்கோடு+யாழ்]



செங்கோணி அத்திமல்லன் *cenkōni attimallan,* பெ.(n.) வீர ராசேந்திரன் இரண்டாம் ஆட்சியாண்டில் கி.பி. 1180 ஆம் ஆண்டு திருவோத்தூர் கோயிலுக்கு 30 ஆநிரைகளை (பசுக்களை) வழங்கியவன்; a name of donar of 30 cows to Tiruvōttūr temple.

[செங்கோணி+அத்தி+மல்லன்]

செங்கோணி அம்மையப்பன் *cengōni ammaiyappan,* பெ.(n.) திருவோத்தூர் கோயிலுக்கு கொடை வழங்கியவன்; a name of donar to tiruvōttur temple.

[செங்கோணி+அம்மை+அப்பன்]

செங்கோன் தரைச்செலவு *cenkōntarai-c-celavu,* பெ.(n.) மறைந்துபோன தமிழ் நூல்; an ancient Tamil treatise now extinct.

[செங்கோன்+தரை+செலவு].

செங்கோன், கடல் கொண்ட பெருவள நாட்டில் ஒளியர் குடியில் தோன்றிய மன்னன். செங்கோ என்ற அழைக்கப்பட்டவன்.

செஞ்சிட்டு *cencittu,* பெ.(n.) ஒரு வகைப் பறவை இனம்; miniver.

[செம்+சிட்டு].

செஞ்சில்லை *ceñjillai,* பெ.(n.) ஒரு வகைப் பறவை இனம்; red mina.

[செம்+சில்லை].

செஞ்சோளம் *ceñjōlam,* பெ.(n.) சோளவகை; a kind of maize.

[செம் + சோளம்]

செண்பகராயநல்லூர் *cenbagarāyanallūr,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Tanjāvur.

[செண்பக+அரையன்+நல்லூர்].

செண்டிப்பு *cendippu,* பெ.(n.) குதித்துப் பின்வாங்குதலைக் குறிக்கும் உடலியக்கம்; jump - retreat method in kalari martial fight.

[செண்டு–செண்டிப்பு].

செடல் குத்துதல் *cedal-kuttu,* பெ. (n.) வேண்டுதல் நிறைவேறியபின் பின்பற்றப்படும் நாட்டுப்புறச் சடங்கு; a ritual in temple festival

[செடல்+குத்து].

செடி *cedi,* பெ.(n.) தோண்டிக்கரகத்தைக் காகிதப்பூச்சரங்களால் அழகு செய்வது; decorating the karagam pot with paper flowers.

[சுவடி–சோடி–செடி].

செடி நாற்றம், *cedi-nārram,* பெ.(n.) பெண்கள் தீட்டு வந்த நாளில் வீசும் நாற்றம்; fowl smell of menstruation.

[சோடு–சொடி–செடி].

செண்டத்தூர், *cendattūr,* பெ.(n.) அரக் கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arkonam Taluk.

[செண்டை+அத்து+ஊர்].

செண்டாக்கல் *cendākkal,* பெ.(n.) எல்லைக் கோட்டில் வைக்கப்படும் கல்; border stone.

[செண்டை+கல்].

செத்தமூரல் *cettamūral,* பெ.(n.) ஒரு வகை மீன்; gat fish.

[சா–செத்த+மூரல்].

செதலப்பதி *cedalappadi,* பெ.(n.) புதுக் கோட்டை மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Pudukottai district.

[சிதலை+பதி].

செதால் *cedāl,* பெ.(n.) சிதார்கள்; broken pieces of splint.

[சிதை–சிதார்–செதால்].

செதுவாலை *ceduvālai,* பெ.(n.) வேலூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Vellore Taluk.

[ஒருகா. சிதல்+வாலை].

செந்தமிழ் *centamil,* பெ.(n.) செம்மையுற்ற தமிழ்; refined Tamil.

[செம்+தமிழ்].

செந்தலை *centalai,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Thanjāvur.

[செல்+தலை (இடம்)].

செந்தவிடு *cendavidu,* பெ.(n.) சிவப்பு நெல் பச்சரிசித் தவிடு; brain of red paddy.

[செம்+தவிடு].

செந்தாமரைக் கண்ணன் *centāmaraik kannan,* பெ.(n.) மூன்றாம் இராசராசனுடைய ஆட்சியின் போது (1235) திருவோத்தூர் கோயிலுக்கு 2 விளக்குகள் வைக்கக் கொடை அளித்தவன்; name of a donar to Tiruvōttur temple.

[செம்+தாமரை+கண்ணன்].

செந்திட்டு *cen-tittu,* பெ.(n.) சேலம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk.

[செம்+திட்டு].

செந்தூக்கு *cendūkku,* பெ.(n.) அகவ லோசை தழுவிய சந்தம்; agaval variety of tune in prosody.

[செம்+தூக்கு].

செந்நவரை *cennavarai,* பெ.(n.) வெள்ளாட்டு மீன் வகை, golden randed goat fish.

[செம்+நவரை].

செந்நெல் முதுகுடியினர் *cennelmudu kuḍiyiṉar,* பெ.(n.) மள்ளரின மக்களுக்கு வழங்கும் வேளாண் அடையாளப் பெயர்; a name of Mallar community people.

[செந்நெல்+முது+குடியினர்].

செந்நெல் *cennel,* பெ.(n.) ஒருவகை மீன்; glassy perchlet.

[செம்+நெல்].

செப்பறை *cepparai,* பெ.(n.) சீவலப்பேரியில் உள்ள ஓர் ஊர்; name of the village near Seevalapperi in Thirunelveli (dists)

[செப்பு+அறை].

செப்பாயி *ceppāyi,* பெ.(n.) சிக்கனம் பின்பற்றும் பெண்; a spend thrifty women.

[செம்+பாயி].

(செப்பம் + ஆயி – செப்பாயி, செப்பமாகக் குடித்தனம் செய்யும் பெண்)

செபத்தையபுரம் *cepattaiyapuram,* பெ.(n.) தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர் name of the village in Thuththukudi.

[செபம்+அத்து+ஐயன்+புரம்].

செம்மொழி *cemmoḻi,* பெ.(n.) உயர்தனிச் செவ்வியல் மொழி; classical language. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தமிழுக்குச் செம்மொழித் தகுதிபெற்றுத் தந்தார். (உ.வ.)

[செம் + மொழி]

செம்படாம் *sembaḍām,* பெ.(n.) சிவந்த கம்பளம்; red carpet "கம்பளம் சிம்புளி செம்படாம் ஆகும்" (நிக.தி. 7 : 282)

[செம்+படாம்]

செம்பரணி *cemparaṇi,* பெ.(n.) திருமங்கலம் வட்டத்திலுள்ள சிற்றூர். a village in Tirumangalam Taluk.

[செம்+பரணி]

செம்பரம்பன்னி *cembarampaṉṉi,* பெ.(n.) ஒரு வகை மீன்; rock cod.

[ஒருகா. செம்பரம்+(பன்றி) பன்னி]

செம்பட்டைத்தில்லான் *cempaṭṭai ttillāṉ,* பெ.(n.) தூக்கணாங்குருவி வகை; a kind of swallow.

[செம்பட்டை+தில்லான்]



செம்பியமங்கலம் *cembiya maṅgalam,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Thanjavur.

[செம்பியன்+மங்கலம்]

செம்பியன் *cembiyaṉ,* பெ.(n.) 1. சோழன்; Chola king. 2. சோழர் குடி மரபுகளுள் ஒன்று; one of the Chola dynasties.

[செம்+செம்பியன்]

செம்பியன் மாதேவி *cembiyaṉ mādevi,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்; a village in Thanjavur district செம்பியன் மாதேவி சதுர்வேதி மங்கலம். செம்பின் மாதேவி (கல்.).

[செம்பியன்+மாதேவி]

செம்பியனேந்தல் *cembiyaṉēndal,* பெ.(n.) மதுரை மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Madurai.

[செம்பியன்+ஏந்தல்(ஏரி)]

செம்பில் *cembil,* பெ.(n.) ஒரு வகை மரம்; a tree.

[செம் -செம்பு - செம்பில்]

செம்பிலிச்சை *cempiliccai,* பெ.(n.) ஒரு வகை மீன்; snapper.

[செம்-செம்பிலி-செம்பிலிச்சை]

செம்புலம் *cempulam,* பெ.(n.) 1. செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Chengalpattu. 2. செம்மண் நிலம்; red soil land

[செம்+புலம்]

செம்புழை *cempuḻai,* பெ.(n.) குலாத்தி பறவையின் வகையுள் ஒன்று; a variety of kulatti bird

[செம்+புழை]

செம்பூட்சேய் *cempūṭcēy,* பெ.(n.) தொல்காப் பியரின் ஒருசாலை மாணாக்கர்; a classmate of the great Tamil grammarian Tolkappiyar.

[செம்+பூண்+சேய்].

செம்பூத்தன் கூட்டம் *cempūttaṉkūṭṭam,* பெ.(n.) கொங்கு வேளாளரின் அடையாளக் குடிப் பெயர்களுள் ஒன்று; name of a clan among Kongu Vellalars.

[செம்போத்து+அன்+கூட்டம்]

செம்பூர் *cembūr,* பெ.(n.) வந்தவாசி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Vandavasi Taluk.

[செம்பு+ஊர்]

செம்பூவம் *sempūvam,* பெ.(n.)செம்பழுப்பு நிறம் கொண்ட காகம் போன்ற பறவை; a brown coloured bird, resembling crow.

மறுவ . செம்போத்து.

[செம்+பூவம்]

செம்மங்குடி *cemmaṅguḍi,* பெ.(n.) கும்ப கோணத்திற்கு அண்மையில் உள்ள ஓர் ஊர்; a village in Kumbakōnam.

[செம்மண்+குடி]

செம்மடுவு *cemmaḍuvu,* பெ.(n.) சேலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk.

[செம்+(மடு) மடுவு]

செமத்தியாக *cemattiyāga,* வி.எ. (adv.), நன்றாக, முழுமையாக; fully, completely, இவன் தப்பாகப் பேசியதால், ஆசிரியரிடம் செமத்தி யாக வாங்கிக் கட்டிக் கொண்டான்.

[சுமை - சுமத்தி - செமத்தி - செமத்தியாக (கொ.வ.)]

செமை *cemai,* பெ.(n.) 1. சுமை, load 2. கட்டு; bundle

[சுமை-செமை (கொ.வ)]

செய்திப்பறை *ceydipparai,* பெ.(n.) செய்தி பரவலுக்காக (பரிமாற்றத்திற்காக)ப் பயன்படுத் தப்பட்ட பறை; a drum used to convey message.

[செய்தி+பறை]

செய்தி முகவர் *ceydimugavar,* பெ.(n.) செய்தித்தாள் போன்ற ஊடகத்தார் தம் ஊடகங்களில் வெளியிடுவதற்கான செய்தி களையும் நிகழ்ச்சிகளையும் திரட்டும் பணியியில் ஈடுபடுத்தும் பணியாளர்; news agent, press reporter.

[செய்தி + முகவர்].

செய்யலேரி *ceyyalēri,* பெ.(n.) திருவண்ணா மலை வட்டத்திலுள்ள சிற்றூர், a village in Thiruvannamalai Taluk.

[செய்யல் (சிவப்பு)+ஏரி]

செய்யாண்டையான சம்புவராய நாச்சி *ceiyāṇḍaiyāna Sambuvarāya nācci,* பெ.(n.) விசயகண்ட கோபாலனுடைய திருவோத்தூர் கல்வெட்டொன்றில் குறிக்கப்படும் சம்புவ ராயர் மரபில் வந்த தேவரடியார் மகள்; a name of a dancer in temple.

[செய்யாண்டை+ஆன+சம்புவராயன்+ ஆட்சி]

செய்யாத்து வென்றான் *ceyyāttuvenṟāṉ,* பெ.(n.) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wallajah Taluk.

[செய்யாறு - செய்யாற்று+வென்றான்]

செய்யாற்றை வென்றான் *ceyyāṟṟaiveṉṟāṉ,* பெ.(n.) செய்யாறு வட்டத்தில் அனுக்காவூர் அருகில் உள்ள ஓர் ஊர்; a village in Seyyāṟu near the Anukkavur.

[செய்யாறு+ஐ+வென்றான்]

செய்யூர் *ceyyūr,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்தில் மதுராந்தகம் அருகே உள்ள ஓர் ஊர்; a village in Kanchipuram, near the Mathuranthagam.

[செய்+ஊர்]

செயற்பாட்டியல் *ceyaṟpāṭṭiyal,* பெ.(n.) நாட்டுப் புறவியல் ஆய்வின் ஒரு கோட்பாடு; a tenet in folklore study.

[செயல்+பாடு+இயல்]

செயற்கை இரை *cayaṟkaiirai,* பெ.(n.) மீன்களுக்குப் போடப்படும் உணவு; artificial food for fish.

[செயற்கை+இரை]

செயற்கை முத்து *cayaṟkaimuttu,* பெ.(n.) கடலில் உள்ள முத்தைப் போன்று உருவாக்கப் படும் ஒரு வகை முத்து, artificial pearl.

[செயற்கை+முத்து]

செரகு *ceragu,* பெ.(n.) பாத்தி கட்டி நீர் பாய்ச்சும் முறை; an irrigation method.

[சிறகு-செரகு]

செரிகளியன் *cerikaḷiyaṉ,* பெ.(n.) ஒரு வகை கடல் மீன், sea fish.

[செரி+களியன்]

செரிமானி *cerimāṉi,* பெ.(n.) செரிமான ஆற்றலை வளர்க்கும் மருந்து; a medicine that induces the action of digestion.

[செரி+மானி]

செரியாநோய் *ceriyānōy,* பெ.(n.)செரியாமை; disease caused by indigestion.

[செரியாத+நோய்]

செரக்கனூர் *cerukkanūr,* பெ.(n.) திருத்தணி வட்டத்திலுள்ள சிற்றூர், a village in Tiruthani Taluk.

[செருக்கன்+ஊர் (செருக்கு-கரும்பு)]

செருகுமுடி *cerugu-muḍi,* பெ.(n.) நெல் கொட்டி வைக்கும் பெரிய தாழியின் கீழுள்ள பக்க வாயை மூடுவதற்கு ஏதுவாகச் செருகிப் பொருத்தப்பட்டுள்ள சதுரமான மூடி; square sliding type of lid fixed to the barrel at the bottom.

[செருகு+மூடி]

செருகுடி, *ceruguḍi,* பெ.(n.) நாகப்பட்டினம் வட்டத்திலுள்ள சிற்றூர். a village in Nagapattinam Taluk.

[செரு(வயல்)+குடி]

செருவங்கி *ceruvaṅgi,* பெ.(n.) குடியேற்றம் (குடியாத்தம்) வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Gudiyattam Taluk.

[செரு+வங்கி]

செருப்பறை *ceruppaṟai,* பெ.(n.) 1. போரின்போது பாடப்படும் பாடல்; song sung at the battle field. 2. போரின் போது முழக்கப்படும் பறை; drums played at the battle field. செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி (புறம்.)

[செரு+பறை]

செல்பூராணி *celpūrāṇi,* பெ.(n.) ஒரு வகை மீன், a kind of fish.

[செல்+(பூரான்) பூராணி]

செல்லபிராட்டி *cellapiraṭṭi,* பெ.(n.) செஞ்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Cenji Taluk.

[செள்ளை+பெருமாட்டி-பிராட்டி]

செல்லுப்பூச்சி *cellu-p-pūcci,* பெ.(n.) துளை யிடும் பூச்சி; borer insect.

[செல்+பூச்சி]

செல்லூர்[1] *cellūr,* பெ.(n.) துளு நாட்டில் கடற்கரைக்கு அருகில் இருந்த ஊர்; one of the small village in Thulunadu situated near seashore.

[செல்(மழை மேகம்)+ஊர்]

செல்லூர்[2] *cellūr,* பெ.(n.) திருநள்ளாற்றி லிருந்து மேற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ள ஓர் ஊர்; a village, 3 k.m west of Thirunallar.

[செல்(மழை, மேகம்)+ஊர்]

செல்லூர் கிழான் *cellūrkilān,* பெ.(n.) செல்லூரில் வாழ்ந்த நிலக்கிழார்; name of a landlord in cellur village.

[செல்லூர்+கிழான்]

செல்வழி மங்கலம் *celvalimangalam,* பெ.(n.) திருபெரும்புதூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruperumbudur Taluk.

[செல்வழி(சாலை, பாதை)+மங்கலம்]

செல்வாண்டான் *celvāṇḍān,* பெ.(n.) திருநள் ளாற்று சிவன் கோயில் கல்வெட்டில் உள்ள பெயர்; name found in inscription of Thirunallāru temple. "தென்மலியுடையான் தேவன் செல்வாண்டான் (கல்)"

[செல்வு (அழகு, உயர்வு) + ஆண்டான்]

செலம்பை *celambai,* பெ.(n.) கரூர் வட்டத்திலுள்ள சிற்றூர், a village in Karur Taluk.

[சிலம்பு–சிலம்பை]

செலவடை *celavaḍai,* பெ.(n.) ஓமலூர் வட்டத் திலுள்ள சிற்றூர், a village in Omalur Taluk.

[செலவு+அடை]

செலவு *celavu,* பெ.(n.) ஆளத்தியிலேயே நிரம்பப் பாடுதல்; musical note of fuller length.

[செல்–செலவு]

செலுப்பு *celuppu,* பெ.(n.) சேலையின் மேல் முந்தியில் காணப்படும் பூ வேலைப்பாடு; flower designs in saree.

[செலவு–செலுப்பு]

செவ்வத்தி *cevvatti,* பெ.(n.) தேமல், அரிப்பு, பல்வலி முதலியவற்றிற்கு மருந்தாகப் பயன் படும் மரம்; a tree of medicinal use.

[செவ்+அத்தி]

செவ்வாய்க்குற்றி *cevvāykkuṟṟi,* பெ.(n.) கொம்பு விளையாட்டுக்காகக் கொண்டு வரப்படும் ஒரு மரக்குற்றி; a wooden piece used in kombu play.

[செவ்+வாய்+குற்றி]

செவ்வாய்ப்பேட்டை *cevvāppēṭṭai,* பெ.(n.) சேலம் நகரில் உள்ள ஓர் ஊர்; a village in Salem.

[செவ்வாய் (கிழமை)+பேட்டை]

செவ்வாலி *cevvāli,* பெ.(n.) கெண்டை மீன்வகையுள் ஒன்று; carnatic carp.

[செம்–செவ்+வாலி]

செவ்வாளி *cevvāḷi,* பெ.(n.) ஒரு வகைக் குருவி இனம்; a variety of swallow.

[செவ்+வாளி(அம்பு)]

செவ்விசை *cevvisai,* பெ.(n.) நாட்டுப்புற இசையில் இருந்து வளர்ந்த ஓர் இசைவகை; a musical note developed from folksong.

[செவ்+இசை]

செவிக் கோனை *cevikkōṉai,* பெ.(n.) திருவோத்தூர் கோயிலுக்குப் படையல் (சாதம்) வழங்கியவன் பெயர்; name of a person who made food offering in Tiruvottur temple.

[ஒருகா. செவ்வி+கோனன்]

செவிடன்காடு *ceviḍan-kāḍu,* பெ.(n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; name of a village in Arantāngi Taluk.

[செவிடன்+காடு]

செவி–த்தல் *cevi-,* செ.கு.வி. (v.i) 1. செவிக் கொள்ளுதல்; to hear. 2. பாடங்கேட்டல்; to listen lesson. "குவித்து மனத்தைக் குவிந் துள்ளே ஓங்கிப் செவித்தும் பெறுவது எவன்" (ஔவைக்குறள். 284)

[செவ்வு–செவி]

செவியுணவு *cevi-y-uṇavu,* பெ.(n.) செவியுணவாகிய கேள்வி; listening; (wisdom - food). 'செவியுணவின் கேள்வி உடையார்' (குறள். 413)

[செவி + உணவு]

செவிலிமேடு *cevilimēḍu,* பெ.(n.) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Chengalpattu.

[ஒருகா. செவ்வல்+மேடு]

செவுள்இதழ் cevuḷidaḻ, பெ.(n.) மீனின் காதுப்பகுதி; gill rake.

[செவி+உள்+இதழ்]

செவுள் இழை *cevuḷiḻai,* பெ.(n.) மீனின் காதுப் பகுதியில் ஒளிரும் இழை; gill filament.

[செவி+உள்+இழை]

செழுங்கிரியம் *ceḻuṅkiriyam,* பெ.(n.) புருவநடு; space between the eyebrows. "செண்டு வெளியிற் செழுங்கிரியத்திடை கொண்டுகுதிரை குசைசெறுத் தாரே" (திருமந்.601)

[செழும்+கிரியம்]

செளுகை *ceḷugai,* பெ.(n.) திருவாடானை வட்டத்துச் சிற்றூர்; a village in Tiruvādāṉai Taluk.

[செழுவை–செளுகை]

செளுவத்தி ceḷuvatti,பெ.(n.) திருவாடாணை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādāṉai Taluk.

[செழுவை+அத்தி]

செறுங்கடம்பூர் *ceṟuṅkaḍambūr,* பெ.(n.) மயிலாடுதுறைக்கு 16 கி.மீ. தொலைவில் உள்ள ஓர் ஊர்; a village 16km from Mayiladuturai.

[செறு (வயல்)+கடம்பு+ஊர்)]

செனை *ceṉai,* பெ.(n.) உழும்போது கலப்பையின் கொழுவில் சிக்கிக் கொள்ளும் செடி, கொடி, மண் போன்றவை; vegetation and earth clot that sticks to the plough.

[சில்–சினு–செனை]

சென்னகரை *ceṉṉakarai,* பெ.(n.) வெள்ளாட்டு மீன்; goat fish

[ஒருகா. சின்ன+நவிரை]

சென்னகிரி *ceṉṉaikiri,* பெ.(n.) சேலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk.

[சென்னன்+கிரி]

சென்னாகூனி *ceṉṉākūṉi,* பெ.(n.) கடலில் இருக்கும் மீன் வகைகளுள் ஒன்று; a variety of seafish.

[சின்ன + (குன்னி) கூனி]

சென்னலேரி *ceṉṉalēri,* பெ.(n.) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wallajah Taluk.

[ஒருகா. சேய்நலன்+ஏரி]

சேக்கனூர் *cēkkanūr,* பெ.(n.) வேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vellore Taluk.

[சேக்கன்+ஊர்]

சேகண்டி *cēgaṇḍi,* பெ.(n.) கோல் கொண்டு அடிக்கும் வட்டமணி; bell. "எறி மணி சேகண்டி" (நி.க.பி : 6:161)

[(கை) –செய்+கண்டி]



சேகண்யம் *cēgaṇyam,* பெ.(n.) பொன்னேரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ponneri Taluk.

[செய்(வயல்) + காணி+அம்]

சேகணம் *cēgaṇam,* பெ.(n.) ஒரு வகையான இசைக்கருவி a kind of musical instrument.

[சேகண்டி+சேகணம்]

சேகல் *cēgal,* பெ.(n.) நன்னிலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Nannilam Taluk.

[ஒருகா. செவல்+செகல்+சேகல்]

சேங்காலிபுரம் *cēṅgālipuram,* பெ.(n.), தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Thanjavur.

[ஒருகா. சேங்காலி (சேங்கன்று+புரம்)]

சேடுகட்டை *cēḍukaṭṭai,* பெ.(n.) சேலையில் அகலத்தை ஒரே சீராக வைக்க உதவும் ஊசி முள்; a needle like tool used in loom.

[சேடு+கட்டை]

சேண்பாக்கம் *cēṇpākkam,* பெ.(n.) வட ஆர்க்காடு மாவட்டத்தில் பாலாற்றுக்கு அருகில் உள்ள ஓர் ஊர்; a village in north Arcot, near the Palāṟu river.

[சேண்+பாக்கம்]

சேணியன் *cēṇiyan,* பெ.(n.) செக்கான்; oil monger.

[ஒருகா. செய்+நன்]

சேத்துப்பட்டு *cēttuppaṭṭu,* பெ.(n.) சென்னையில் உள்ள ஓர் ஊர்; a place in Chennai city.

[சேற்று+பட்டு]

சேத்தியார் தோப்பு *cēttiyārtōppu,* பெ.(n.) புவனகிரியிலிருந்து 10 மீ தொலைவில் உள்ள ஓர் ஊர்; a village 10 k.m from Puvanagiri.

[ஒருகா. சாத்து – சாத்தியர் (வணிகர்) – சாத்தியார்+ தோப்பு]

சேதாம்பல் *cēdāmabal,* பெ.(n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[செய்யது(சிவப்பு)–சேது+ஆம்பல்]

சேதிராய நல்லூர் *cedirāyanallūr,* பெ.(n.) தென்னார்க்காடு மாவட்டத்தில் அமைந்துள்ள ஓர் ஊர்; a village in South Arcot.

[சேதி+அரையன்+நல்லூர்]

சேந்தநதி *cēndanadi,* பெ.(n.) அருப்புக்கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[சிவந்த–சேந்த+நதி]

சேந்தமங்கலம் *cēndamaṅgalam,* பெ.(n.), (மதுரை) பாண்டிய நாட்டில் உள்ள ஓர் ஊர்; a village in Pandiyanādu (Madurai).

[சேந்தன்+மங்கலம்]

சேந்து-தல் *cēndu-,* செ.குன்றாவி (v.t.) நீர் இறைத்தல்; to draw water, அவள் தண்ணீர் சேந்துகிறாள் (கொங்.வ.)

[சேண்+து – சேந்து]

சேப்பாடு *cēppāḍu,* பெ.(n.) சிவந்த (செவலை) நிறமுடைய செம்மறியாடு; a sheep of brown colour.

[சிவப்பு – சேப்பு+ஆடு]

சேமங்கரி *cēmaṅgari,* பெ.(n.) தோன்றியங்கள் (ஆகமங்கள்) கூறுகின்ற காளி சிற்பத்தின் வேறோர் வடிவம்; a different variety of the shape of the sculpture goddess Kāli.

[ஒருகா. சிம்மம்+காளி]

சேமங்குதிரை *cēmaṅ-kudirai,* பெ.(n.) அய்யனார் தெய்வம் அமர்ந்து இருக்கும் குதிரைச்சிலை; a figure of Ayyanar's horse.

[ஒருகா. சாமன் சேமன்+குதிரை]

சேமன்திருக்கை *cēmaṉtirukkai,* பெ.(n.) திருக்கை மீன் வகையுள் ஒன்று; whipsting ray.

[சாமன்–சேமன்+திருக்கை]



சேய்ஞ்ஞலூர் *cēyññalūr,* பெ.(n.) கும்பகோணம் வட்டத்தில் 'திருவாய்ப்பாடி' என்று அழைக்கப் படும் ஊர் ; a village in Kumbakonam Taluk.

[சேயன்+நல்லூர்]

சேயான் *cēyāṉ,* பெ.(n.) ஒட்டன், பாட்டனுக்குப் பாட்டன்; great - great - grandfather. "பாட்டனுக்கு மேல் பூட்டன், பூட்டனுக்கு மேல் ஒட்டன், ஒட்டனுக்கு மேல் உறவில்லை" (பழ.)

[சே(ய்மை) + ஆன்]

சேர்க்கலூர் *cērkkalūr,* பெ.(n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakurichi Taluk.

[செறு+கால்+ஊர்]

சேர்ப்பன் *cērppaṉ,* பெ.(n.) நெய்தல் நிலத் தலைவன்; chieftain of seashore track சேரே திரட்சி (தொல். சொல் 363).

தெ. சேர்க (மக்கள் குழு. தொகுதி)

[சேர்–சேர்ப்பன்]

சேர்ப்பெழுத்துப்பா *cērppeḻuttuppā,* பெ.(n.) ஒரு பொருள் பயப்பதோர் சொற்கூறி அச் சொல்லொடு, ஒரே எழுத்தாகக் கூட்ட வகை; verse composed with a play on words, by adding or deleting letter to words which give different meaning as in kam, nagam, kanagam, kokanagam, or kā, kāvi, kāviri.

[சேர்ப்பு+எழுத்துப்பா]

எ–டு. கம், நகம், கனகம், கோகனகம் அல்லது கா–காவி–காவிரி.

சேர்பேடு *sērpēḍu,* பெ.(n.) பொன்னேரி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Ponnēri Taluk.

[ஒருகா.செரு+பேடு]

சேர்வை *cērvai,* பெ.(n.) எட்டுகட்டு வெற்றிலை; eight fold bundles of betel.

[சேர் – சேர்வை].

சேரக்காற்று *cērakkāṟṟu,* பெ.(n.) கீழ்க்காற்று; easterly wind

[சேரல் (சேரன் தீவுஇலங்கை) + காற்று]

சேரடி மூலை *cēraḍimūlai,* பெ.(n.)ஆத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Attur Taluk.

[சேரடி+மூலை]

சேரமாதேவி *cēramādēvi,* பெ.(n.) திருநெல் வேலி மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Thirunelveli.

[சேரமான்+தேவி]

சேரமான் இளங்குட்டுவன் cēramāṉ ilaṅkuṭṭuvaṉ, பெ.(n.) சேரனின் சங்ககால இயற்பெயர்; name of a person of Cera clan.

[சேரமான்+இளங்குட்டுவன்]

சேரமான் எந்தை *cēramān endai,* பெ.(n.) சங்ககால சேரமரபினன்; a person of Cera clan in during sangam age.

[சேரமான்+எந்தை]

சேரமான் மாரிவெண்கோ *cēramāṉ mārivenkō,* பெ.(n.) சேரமன்னன்; a Cera king.

[சேரமான்+மாரிவெண்கோ]

சேராங்கொட்டை *cērāṅkoṭṭai,* பெ.(n.) மருந்துக்குப் பயன்படும் மரம்; a tree of medical use.

[சேரான்+கொட்டை]

சேராமாறி *cērāmāṟi,* பெ.(n.) யாரோடும் ஒட்டாதவன்; a seclude person

[சேரான்+மாறி]

சேராமுட்டு *cērāmuṭṭu,* பெ.(n.) செய்யாறு வட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Ceyyāṟu

[சேரான்+முட்டு]

சேரிகோன் *cērikōṉ,* பெ.(n.) மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் கி.பி.1314ஆம் ஆண்டில் திருவாய்ப்பாடி நாட்டவர் அவையில் இருந்த ஓர் உறுப்பினன்; a member in the assembly of Tiravaypadi.

[சேரி+கோன்]

சேரிமொழி இலக்கியம் *cērimoḻiilakkiyam,* பெ.(n.) உரையாடலும், பொதுமக்களின் மொழியும் இசையும் கலந்த இலக்கிய வகை; layman literature.

[சேரி+மொழி+இலக்கியம்]

சேல்கெண்டை *cēlkendai,* பெ.(n.) கெண்டை மீன் வகையுள் ஒன்று, white sardine.

[சேல்+கெண்டை]

சேலவாயல் *cēlavāyal,* பெ.(n.) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Chengalpattu.

[ஒருகா. செலவு+வாயில்]

சேவாட்டம் *cēvāttam,* பெ.(n.) ஒரு வகையான ஒயில் ஆட்டம்; a folk dance.

[சேவை+ஆட்டம்]

சேவூர் *cēvūr,* பெ.(n.) அவினாசி வட்டத்தில் அமைந்துள்ள ஓர் ஊர்; a village in Avinasi.

[சேவு+(காளை)+ஊர்]

சேவூர் *cēvūr,* பெ.(n.) வேலூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Vellore.

[சேவு(எருது)+ஊர்]

சேற்றுக்கால் செல்வர்கள் *cērrukkāl. selvargal* பெ.(n.) மள்ளர் இன மக்களைக் குறிக்கும் பெயர்; a term referring to Mallar community.

[சேறு+கால]

சேற்றுமடு *cērrumadu,* பெ.(n.) களிமண் கலவை; puddle.

[சேறு+மடு]

சேறு-தல் *cēru,* செ.கு.வி.(v.i.)புடைத்தல்; to winnow.

மறுவ. தென்னு, மாற்றுதல் புடைத்தல் கொழித்தல்.

க. கேறு; தெ. செறுகு; ம. சேறுமுறம்

[செறு-சேறு]

சேறுவை-த்தல் *cēruvai-,* செ.கு.வி. (v.t), நாற்று நடுவதற்குப் பதமாகச் சேறு அமையும் வகையில் உழுது வைத்தல்; to plough softly so as to enable implant sapling.

[சேறு+வை]

சேறு *cēru,* பெ.(n.) தவசங்களைக் கொட்டி வைக்கப்பயன்படும் தாழி; a barrel like utensil to store food grains.

[செறு-(செறி)>சேறு]

சேனமீன், *cēnamīn,* பெ.(n.) விலாங்கு மீன் வகையுள் ஒன்று; giant moray eel.

[சேனை+சேன+மீன]



சேனல் *cēnal,* பெ.(n.) வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vandavāsi Taluk.

[ஒருகா. செந்நெல்-சேனல்]

சைவசேகரப் பண்டிதன் *caivasēgarap pandidan,* பெ.(n.) திருவோத்தூர் கல்வெட்டில் திருவுண்ணாழிகை அவையில் ஓர் உறுப் பினராக குறிப்பிடப்பட்டவன். இவரது காலம் கி.பி.16ஆம் நூற்றாண்டு; a member of Tiruvannaligai avai as per Tiruvottur inscription in 16th Century AD.

[சைவ+சேகரன்+பாண்டியன்]

சைவாதி ராசய்யபட்டன் caivadi rāsaiyya pattan, பெ.(n.) இளமுலை நாச்சி அம்மன் கோயில் கல்வெட்டில் தேவரடியாருக்கு நிலம் வழங்கிய போது கையெழுத்து இட்டவர்களில் ஒருவன். இவனது காலம் 16-17ஆம் நூற்றாண்டு; name of a person mentioned in temple inscription.

[சைவாதி+ராசய்யர்+பட்டன்]

சொக்கட்டான் *cokkattān,* பெ.(n.) பல்லாங்குழி ஆட்டத்தின் பெயர். (வடஆ-வ); a name of pallankuli.

[சொக்கு-சொக்கட்டார்]

சொக்கம் *cokkam,* பெ.(n.) பாடலின்றி, வெறும் முழக்குதலுக்கு மட்டும் ஆடும் ஆடல்; dance

without song.

[சொக்கு–சொக்கம்]

சொக்கானை *cokkāṉai,* பெ.(n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madukulattūr Taluk.

[சொக்கு (மயக்கம், மதம்) + யானை]

சொட்டவாளை *coṭṭavāḷai,* பெ.(n.) வாளைமீன் வகையுள் ஒன்று; thread, gin bream.

[சொட்டை+வாளை]



சொட்டிக்கட்டை *coṭṭi-k-kaṭṭai,* பெ.(n.) வில்லுப் பாட்டில் குடத்தின் கழுத்துப் பகுதிக்குக் கீழே தட்டி, ஒலியெழுப்ப உதவும் மரத்துண்டு; a wooden piece used as a tool in folk lore.

[சொட்டு–சொட்டி+கட்டை]

சொடுக்கு வாதம் *coḍukkuvādam,* பெ.(n.) மாடுகளின் காலைச் சொடுக்கி இழுக்கும் ஊதை (வாதம்); a disease of cows.

[சொடுக்கு+வாதம்]

சொடுக்கு coḍukku, பெ.(n.) கரண்டி; a laddle.

[சொடு–சொடுக்கு]

சொர்னாழி *corṉāḻi,* பெ.(n.) பறையிசைக் கூட்டியத்தில் இடம்பெறும் ஊதுகுழல்; a wind pipe of played in drum play.

[சுரை+நாடு]

சொரண்டி *coraṇḍi,* பெ.(n.)களை எடுக்கும் கருவி; a weed removing implement.

[சுர–சுரண்டி–சொரண்டி]

சொரத்தூர் *corattūr,* பெ.(n.) கடலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Cudalore Taluk.

[சுரம்+அத்து+ஊர்]

சொரையூர் *coraiyūr,* பெ.(n.) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wallajah Taluk.

[சுரம்–சுரை+ஊர்]

சொதப்பு–தல் *coda-p-pu-,* செ.குன்றாவி (v.t.)
1. குழப்பு, குழப்பமடையச் செய்தல்; to confuse
2. சேறாக்குதல்; to make mire.

[சொது–சொதப்பு]

சொல்லாடல் *collāḍal,* பெ.(n.) 1) பேசுதல் : speaking சொல்லாடாள் சொல்லாடாள் நின்றாள் (சிலம்). 2) சொல்விளையாட்டு; word game of children. 3) எதிராடல் ; speaking against of. சொல்லாடாதே என்றால் நீ கேட்க மாட்டாய் போலிருக்கிறது.

[சொல்+ஆடல்].

சொல்லாய்வு *col-l-āyvu,* பெ.(n.) சொல்லின் வேர், தோற்றம், வளர்ச்சி மாற்றம்பற்றிய ஆய்வு; study on the origin and history of words and etymology.

[சொல் + ஆய்வு].

சொல்லாராய்ச்சி *collārāycci,* பெ.(n.) சொல், சொற்பொருள் ஆகியவற்றின் தோற்றம், வரலாறு ஆகியன பற்றிய ஆய்வு; study on words.

[சொல்+ஆராய்ச்சி]

சொல்லியல்நூல் *col-l-iyalnūl,* பெ.(n.) சொல்லின் தன்மை, வகைப்பாடு முதலிய வற்றை கூறும் நூல்; work on etymology.

[சொல்+இயல்+நூல்]

சொழங்குணம், *coḻankuṇam,* பெ.(n.) செஞ்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Senji taluk.

[சோழன்+குண்டம்]

சொளமாடு-தல் *cola-mādu,* செ.கு.வி. (v.i.) ஒரு குறிப்பிட்ட பகுதியிலேயே சுற்றிச் சுற்றி வருதல்; to wander around a particular place.

[சுலவு+ஆடுதல்]

சொற்குன்றல் *corkunral,* பெ.(n.) சொற்குற்றம் பார்க்க, see sor kurram "சொற்குன்ற லின்றித் தொழுமின்" (திருமந் 279)

[சொல்+குற்றம்]

சொற்போர் *corpōr,* பெ.(n.) எதிராடல், தருக்கம்; logic

[சொல்+போர் (மற்றவர் பேச்சுக்கு மறுப்பு தரும் திறன்)]

சொற்றிறம் *corriram,* பெ.(n.) சொல்வன்மை; eloquence command on language.

[சொல் + திறம்]

சொன்னலம் *connalam,* பெ.(n.) சொல்லின் பயன்; good effect of good words. முளைநலமே விளைநலத்தைத் தெரிவித்தல் போல், மக் களின் சொன்னலமே அவர் செயல் நலத் தையும் தெரிவிக்கும். (குறள்.959, தமிழ் மரபுரை).

[சொல்+நலம்]

சோக்காடி, *cōkkādi,* பெ.(n.) கிருட்டிணகிரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Krishnagiri Taluk.

[சொக்கன்+பாடி]

சோகண்டி, *cōgandi,* பெ.(n.) செங்கற்பட்டு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chengalpet Taluk.

[சேகண்டி-சோகண்டி]

சோகத்தூர், *cōgattūr,* பெ.(n.)வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vandavāsi Taluk.

[சொகுத்தன்+ஊர்]

சோகினி *cōgini,* பெ.(n.) நள்ளிரவு முதல் அதிகாலை வரை பாடத்தக்க பண்; a music note sung at night.

[சொக்கு-சொக்கினி-சோகினி]

சோடியாட்டம் *cōdi-yāttam,* பெ.(n.) பல்லாங்குழியில் இருவர் ஆடும் ஆட்ட வகை; a doubles play of pallankuli game.

[சுவடி+சோடி]

சோடு *cōdu,* பெ.(n.) வாயகன்ற பெரிய ஏனம்; big vessel.

[தோடு-சோடு]

சோடேந்தல் *cōdendal,* பெ.(n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulathur Taluk.

[சோழன்(சோமன்)+ஏந்தல் (ஏரி)]

சோணா *cōnā,* பெ.(n.) விடாப்பெரு மழை; incecent rain. "சோணா மேகம் பொழிவது போல்" (வி.பா:45:135)

பட. சோனெ

[சோணை-சோணா]

சோத்தாங்கை *cōttāngai,* பெ.(n.) உண்ணும் கை (வலது கை); right hand.

[சோற்று+ஆம்+கை]

சோத்துப்பட்டை *cōttu-p-pattai,* பெ.(n.) மூங்கிலின் உட்பகுதிச் சோறு; inner pulp of bamboo.

[சோறு+பட்டை]

சோபானை *cōbānai,* பெ.(n.) வெற்றுக் குழியாகத் தோன்றும் நிலை; appearance of an empty pit.

[குப்பல்-சோபானை]

சோம்பன், *cōmban,* பெ.(n.) வண்டின் ஒரு வகை; a beetle.

[சோம்பு-சோம்பின்]

சோமாசி, *cōmāsi,* பெ.(n.) பரமக்குடி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Paramagudi Taluk.

[சோ(எயில், கோட்டை) + மாசி]

சோமாசு பாடி *cōmasupādi,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Kanchipuram.

[சோ(கோட்டை)+மாசி+பாடி]

சோயிசி *cōyisi,* பெ.(n.) இராமநாதபுரம் பரமக்குடி வட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Ramanathapuram (Dist.) Paramakudi (Taluk).

[சோமாசி - சோயிசி]

சோலணி, *cōlaṇi,* பெ.(n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantāngi Taluk.

[சோலை+அணி]

சோழ மாருதி நல்லூர் *cōḻa mārud inallūr,* பெ.(n.) மன்னார்குடி வட்டத்தில் அமைந்துள்ள ஓர் ஊர்; a village in Mannarkudi.

[சோழன்+மருதன்+நல்லூர்]

சோழவர்தான் *cōḻavandāṉ,* பெ.(n.)மதுரை மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Madurai.

[ஒருகா. சோழன்+வென்றான்]

சோழகங்கம் *cōḻagaṅgam,* பெ.(n.) இராசேந்திர சோழன் கட்டிய பொன்னேரி நீர்நிலை; a large write reservation made by the great Chola emperor Rajendra Chola.

[சோழன்+கங்கம் (நீர்நிலை)]

சோழகம் *cōḻagam,* பெ.(n.) தென்காற்று : southern wind.

[சோழம்+சோழகம்]

பாய்மரக்கப்பலை முதலில் கண்டுபிடித்த சோழன் வளிதொழில் ஆண்டவன் என்பதால் தென்காற்று சோழகம் எனப்பட்டது.

சோழிக்காசு *cōḻi-k-kāsu,* பெ.(n.) பண்ட மாற்றுக் காலத்தில் காசாக ஆளப்பட்ட சோழிகள்; cowries used as currency in Africa and Asia.

[சோழி+காசு]

நான்கு சோழி ஒரு விடுகாசு, 320 விடுகாசு ஒரு உருபாய் என்பது பழைய கணக்கீட்டு முறை.

சோளக்குழி *cōḷa-k-kuḻi,* பெ.(n.) சோளம் போட்டு வைக்க பயன்படும் நிலக்குழி; underground store room for storing food grains.

[சோளம்+குழி]

சோற்றுப் பாக்கம் *cōttuppākkam,* பெ.(n.) காஞ்சிபுரம் மாவட்டத்தில் வந்தவாசியிலிருந்து செங்கற்பட்டுக்குச் செல்லும் சாலையில் உள்ள ஊர்; a village in Kanchipuram, on the way to Wanthavasi Chengalpattu salai.

[சோற்று+பாக்கம்]

சோற்றுப்பானை *cōṟṟuppāṉai,* பெ.(n.) சமையல் செய்வது போல் சிறுமியர் நடித்து விளையாடுதல்; a play of young girls as if they are cooking with pot.

[சோற்று+பானை]

சோனாங்கெளுத்தி *cōṉaṅkeḷutti,* பெ.(n.) கெளுத்தி மீன் வகையுள் ஒன்று; long whiskerred cat fish

[சோனை+ஆம்+கெளுத்தி]



சௌகர் *coukar,* பெ.(n.) ஒரு வகை மீன் இனம்; a kind of fish.

[செவுக்கர்–சௌகர்]

சௌசின் *coucin,* பெ.(n.) இந்தியக் காடுகளில் காணப்படும் நான்கு கொம்புகள் கொண்ட உயிரினம்; a four horned wild animal.

[சதுரம் (நான்கு) – சௌரம்]

சௌசு *causu,* பெ.(n.) ஓடப்பாட்டில் முதலில் பாடப்படுவது; beginning song of the boatmen folk songs.

[சோ (ஒலிக் குறிப்பு) – சௌசு]

ஞெள்ளன் *ñeḷḷaṉ,* பெ.(n.) பழங்கால இயற் பெயர்; a proper name. ஞெள்ளா வா (இலக். உரை).

ம. நெளியுக (நிமிர்தல்), நெளிச்சு நடக்குக.

[ஞெள்ளுதல் – நிமிர்தல். ஞெள்ளன் – நிமிர்ந்தவன் நெடியவன் – உயரமானவன் – யாருக்கும் பணியாதவன்).]

த

தக்கட்டி *takkaṭṭi,* பெ.(n.) ஒசூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Hosur Taluk.

[தேக்கு>(தக்கு+அட்டி]

தக்கடிக்காரன் *takkaḍi-k-kāraṉ,* பெ.(n.) ஏமாற்றுக்காரன்; a man of guile, treachery.

[தக்கடி+காரன்]

தக்கடிவித்தை *takkaḍi-vittai,* பெ.(n.) செப்படி வித்தை; deceitful tricks.

[தக்கடி+வித்தை]

தக்கடை *takkaḍai,* பெ.(n.) கைத்தறி நெசவில் நாடாவைச் செலுத்த உதவும் தோற் கருவி; a leather implement used in handloom weaving.

[தக்கு – தக்கடை]



தக்கம் *takkam,* பெ.(n.) பல்லாங்குழியின் வெற்றுக்குழியின் பெயர்; empty pit in pallāṅkuḻi, an indoor game.

[தக்கு – தக்கா]

தக்கனாதி *takkāṉādi,* பெ.(n.) குறிஞ்சியின் முப்பத்திரண்டு பண்களில் ஒன்று; one of the 32 melody types of 'kuriñji'.

[தெற்கு–தக்கு –தக்கன் +ஆதி]

தக்குத்தகான *takkuttakāṉa,* பெ.அ. (adj.) கண்மூடித்தனமான, வகைதொகையற்ற; indiscriminate.

[தக்கு+தகா+அன்]

தக்குத் தொண்டை *takku-t-toṇḍai,* பெ.(n.) தாழ்ந்த குரல்; low voice.'தக்கிலே பாடுகிறார்' (உ.வ.).

[தாழ்+கு, தக்கு+தொண்டை. தக்கு = தாழ்வு]

தக்கேசி *takkēśi,* பெ.(n.) பழம்பெரும் பண்; a ancient melody type.

[தக்கம் + தக்கேசி]

தக்கை *takkai,* பெ.(n.) பிரிகளை இணைக்கும் கருவி; an implement used in weavers loom.

[தகுகை–தககை]

தகடி *takaḍi* பெ.(n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[தகர்–தகரி – தகடி – (தகர் – ஆட்டுக்கடா)]

தகடை *tagaḍai* பெ.(n.) வண்டிச் சக்கரம்; wheel of a cart.

[தகள்–தக்கு–தகடை]



தகரி *tagari,* பெ.(n.) தொடரிக் கோவை போன் றமைந்த சக்கரத்தைக் கொண்டு இயங்கவல்ல பெரும் படைக்கலன்; an armoured, enclosed, armed vehicle moving on caterpillar wheels, tank.

[தகர் > தகரி - பெரும் தடைகளையும் தகர்க்கவல்லது]



தகுணி *taguṇi,* பெ.(n.) தகுணிச்சம் எனும் இசைக்கருவி; an musical instrument used to tenor in music.

[தகுச்சம் - தகுணி]

தகுள்–தல் *tagu!-,* 16 செ.கு.வி.(v.t.) 1. சிக்கிக்கொள்ளுதல், அகப்பட்டுக் கொள் ளுதல்; to stick. 2. கோத்தல்; to string. 3. பொருத்துதல்; to fit.

[தகு>தகுள்]

தகையணங்கு *tagaiyaṇaṅgu,* பெ.(n.) கள்ளப் புணர்ச்சி கொண்ட பெண்; woman who had illicit intercourse. (சா.அக.).

[தகை+அணங்கு]

தங்கடம் சொல்–(லு)–தல் *taṅgaḍamšol-,* 8 செ.குன்றாவி. (v.t.) நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றான குறி சொல்லல்; to fortune tell by a priest possessed by a deity.

[தங்கடம்+சொல்–,]

தங்கப்பிரமி *taṅga-p-pirami,* பெ.(n.) பொன் னாக்கம் (வாதவித்தை); alchemy (சா.அக.).

[தங்கம்+பிரமி]

தங்கரேக்கு *taṅga-rēkku,* பெ.(n.) உயர்ந்த பொன்னினால் அடித்த மெல்லிய தகடு; thin foils or sheets of refined gold. (சா.அக.).

[தங்க(ம்)+ரேக்கு]

தங்குவேட்டை *taṅgu-vēṭṭai,* பெ.(n.) மாசிக் களரிக் கொண்டாட்டத்தின் ஒரு கூறு; a part of 'māsikaḷari' celebration.

[தங்கு+வேட்டை]

தங்குவேட்டை வை–த்தல் *taṅguvēṭṭai-vai-,* 4 செ.கு.வி.(v.i.) வேட்டை பிடிப்பதற்காக வலை கட்டுதல்; to place trap in hunting.

[தங்கு+வேட்டை+வை–]

தச்சாம்பாடி *taccām-pāḍi,* பெ.(n.) போளூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Polūr Taluk.

[தச்சன் + பாடி]

தச்சு *taccu,* பெ.(n.) கொம்பு முறி விளையாட்டில் பயன்படுத்தப்படும் கொம்பின் வளைவுப் பகுதி; the curved part of the kombu.

[தைத்தல் (குத்துதல்) – தச்சு]

தச்சுக்கழித்தல் சடங்கு *taccu-k-kaḻittal-saḍaṅgu,* பெ.(n.) வள்ளம், தோணி கட்டுமரம் முதலானவற்றிற்கு நிகழ்த்தப்படும் ஒரு சடங்கு; a ceremony after the completion of carpentary work of 'catamaran' etc.

[தச்சுக்கழித்தல்+சடங்கு]

தச்சூர் *taccūr,* பெ.(n.) முதுகுன்றம் வட்டத்தி லுள்ள சிற்றூர்; a village in Vridhachalam Taluk.

[தச்சு + ஊர்]

தசவிளக்கு *daša-viḷakku,* பெ.(n.) ஓமலூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Omalur Taluk.

தசைச்சுரப்பு *tašai-c-curappu,* பெ.(n.) புடைப் புக்கட்டி; a useless out growing of flesh as a tumour. (சா.அக.).

[தசை+சுரப்பு]

தஞ்சாவூர்க் கட்டம் *tañjāvur-k-kaṭṭam,* பெ.(n.) தாய விளையாட்டில் ஒரு வகை; a dice play.

[தஞ்சாவூர்+கட்டம்]

தஞ்சை வட்டாரத்து மக்கள் விரும்பி ஆடும் ஆட்டம்.



தஞ்சாவூர்பாணி *tanjavūr-pāṇi,* பெ.(n.) பரதத்தில் கையாளப்படும் ஒரு நடன முறை; a kind of dramatic entertainment with Bharatha natyā.

[தஞ்சாவூர்+பாணி]

தஞ்சை நால்வர் *tañjai-nālvar,* பெ.(n.) இக் காலப் பரதநாட்டிய வடிவத்தை வரையறுத் தவர்கள்; the exponents (four) who prescribed the modern Baratha nāṭṭiyam.

[தஞ்சை+நால்வர்]

(சின்னையா, பொன்னையா, வடிவேலு, சிவானந்தம்)

தட்டடி[1] *taṭṭaḍi,* பெ.(n.) உழவின் நில அளவு; a land measurement "ஒரு தட்டடிக்குச் சோளம் விதை" (உ.வ.).

[தட்டு+அடி]

தட்டடி[2] *taṭṭaḍi,* பெ.(n.) நாற்றங்காலின் சிறுசிறு பகுதி; a small part of a bed on which paddy corn is seen.

[தட்டு+அடி]

தட்டடைவு *taṭṭaḍaivu,* பெ.(n.) பாதத்தின் முழுப்படத்தையும், குதிங்காலையும் தரையில் சப்பென்று தட்டும் அடைவு; a kind of dance movement.

[தட்டு+அடைவு]

தட்டலங்காபுட்டலங்கா *taṭṭalaṅgā-puṭṭal aṅgā,* பெ.(n.) குழந்தை விளையாட்டு வகை; a child play. (த.நா.வி.).

[தட்டலம்+காய்+புட்டலம்+காய்]

தட்டளி *taṭṭaḷi,* பெ.(n.) தோலாற் செய்யப்பட்ட இசைக்கருவி; a musical instrument made by leather.

[தட்டு+அளி]

தட்டாங்கல் *taṭṭāṅkal,* பெ.(n.) ஐந்து அல்லது ஏழு கற்களைக்கொண்டு விளையாடும் ஒரு வகை விளையாட்டு; forfeit game which consists in throwing five or seven stones up in to the air and catching them in various ways.

மறுவ: கல்லாங்காய்

[தட்டு(தட்டுதல்)+ஆம்+கல்]

ஐந்தாங்கல் (ஐந்து கற்களைக் கொண்டு விளை யாடுவது), ஏழாங்காய் (ஏழு கற்களைக் கொண்டு விளையாடுவது).

தட்டாங்காய் *taṭṭāṅgāi,* பெ.(n.) தட்டைப் பயற்றுக் காய்; an unripe fruit of thattai-p-payaru.

[தட்டை+அம்+காய்]

தட்டாத்திமூலை *taṭṭatti-mūlai,* பெ.(n.) நன்னிலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Nannilam Taluk. (சா.அக.).

[தட்டாத்தி+மூலை]

தட்டியாங் கொட்டு-தல் *taṭṭiyāṅkoṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) கும்மியாடுதல்; to play the 'kummi' dance.

[தட்டி+ஆம்+கொட்டு-,]

தட்டியோடு-தல் *tattiyōḍu-,* செ.கு.வி.(v.i.) தொடுபவன் வட்டத்திலுள்ளவரின் முதுகைத் தொட்டுவிட்டுச் செல்லுதல்; a run after touching the back of a pperson who is seated in circle with others. a kind of play.

[தட்டி+ஓடு-,]

தட்டு[1] *taṭṭu,* பெ.(n.) ஒரு வகையான ஒயிலாட்டம்; a type of oyilāṭṭam.

[தாட்டு>தட்டு]

தட்டு[2] *taṭṭu,* பெ.(n.) புட்டியின் மூடி; bottle lid. (ம.வ.சொ.).

[தள் – தடு – தட்டு]

தட்டு[3] *taṭṭu,* பெ. (n.) கால்நடைகளின் பிறப் புறுப்பு; genital part of animals. "எருமை மாட்டுத் தட்டு இறங்கி விட்டது ; நாளைக்குக் கன்று ஈன்று விடும்" (உ.வ.).

[துள்+து–துட்டு–தட்டு]

தட்டுக்குழி *taṭṭu-k-kuḻi,* பெ.(n.) கால்நடை களின் பிறப்புறுப்பு; genital part of animals.

[தட்டு + குழி]

தட்டுக்கோடு *taṭṭu-k-kōḍu,* பெ.(n.) கிளித் தட்டு ஆட்டத்தில் முதலில் உள்ள தட்டு. (த.நா.வி.). ; a kind of play which is first in kilittaṭṭu.

[தட்டு+கோடு]

தட்டுச்சக்கை *taṭṭu-c-cakkai,* பெ.(n.) வாசற் காலுக்கு மேல் சுவரில் தட்டுப் பலகை கீழே விழாமல் தாங்குவதற்காக அடியில் பொருத் தப்படும் சட்டம். (ம.வ.சொ.); supporting property.

[தட்டு+சக்கை]

தட்டுச்சுழி *taṭṭu-c-cuḻi,* பெ.(n.) வாங்கிய வனுக்கு நட்டம் உண்டாக்குவதாகக் கருதப் படும் மாட்டின் இடுப்புப் பகுதியில் இருக்கும் சுழி; an inauspicious mark.

[தட்டு+சுழி]

தட்டுத்தாள் *taṭṭut-tāḷ,* பெ.(n.) ஆடல் இயக்கங் களில் ஒன்று; a dance movement.

[தட்டு+தாள்]

தட்டுப்பலகை *taṭṭu-p-palagai,* பெ.(n.) தடுப்பு அறைகள் உருவாக்கப் பயன்படும் பலகை; wooden screen. (ம.வ.சொ.).

மறுவ. மறைப்புத் தடுக்கு

[தட்டு+பலகை]

தட்டுமுட்டுகள் *taṭṭu-muṭṭugaḷ,* பெ.(n.) 1. அன்றாடப் புழக்கத்துக்குப் பயன்படும் வீட்டுப் பொருள்கள்; household articles. 'வெள்ளம் வீட்டில் புகுந்து தட்டுமுட்டுச் சாமான்களை அடித்துச் சென்றுவிட்டது'. 2. பயன்படுத்தப்படாத பொருள்கள்; odds and ends. 'தட்டுமுட்டுச் சாமான்களைப் போட்டு வைக்க வீட்டில் இடம் இல்லை'.

[தட்டுமுட்டு+கள்]

தட்டுவாட்டம் *taṭṭu-vāṭṭam,* பெ.(n.) துலை யின் நிலை; a state of a balance 'தராசின் தட்டுவாட்டம் சரியாய் இருப்பதை உறுதி செய்துகொள்'(இ.வ.).

[தட்டு+வாட்டம்]

தட்டை *taṭṭai,* பெ.(n.) பழம்பெரும் இசைக்கருவி; a good old musical instrument.

[தட்டு – தட்டை]

தட்டைப்படகு *taṭṭai-paḍagu,* பெ.(n.) படகின் ஒரு பகுதிக்குப் பொருத்தும் மாழையால் (உலோகத்தால்) ஆன ஓர் உருளைப் பொதி யுறை (கவசம்); pontoon.

[தட்டை+படகு]

தட்டோட்டம் *taṭṭōṭṭam,* பெ.(n.) எடையை நிறுப்பதற்கு முன் துலையைச் சரி செய்கை; correcting the balance before measuring.

[தட்டு + ஓட்டம்]

தடக்காற்று *taḍa-k-kāṟṟu,* பெ.(n.) வணிகக் காற்று; trade wind.

[தடம்+காற்று]

தடங்கம் *taḍaṅgam,* பெ.(n.) தருமபுரி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Dharmapuri Taluk.

[தடாகம் – தடங்கம்]

தடங்கனி *tadangani*, பெ.(n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[தடாகம் – தடங்கம் + அணி]

தடவரல் *tadavaral*, பெ.(n.) ஒரு விளையாட்டு; a play.

[தடவு – தடவரல்]

தடவி எடு–த்தல் *tadaviedu-*, செ.குன்றாவி. (v.t.) பல்லாங்குழியாட்டத்தில் குழி துடைத்து வெற்றிக்காய்கள் எடுத்தல்; to take dice completely from a hole in pallāṅkuḻi.

[தடவி+எடு–,]

தடவும் பாண்டி *tadavum-pāṇḍi*, பெ.(n.) பல்லாங்குழி ஆட்ட வகை; a game in pallāṅkuḻi

[தடவும்+பாண்டி]

தடாபோடுதல் *tadāpōdu-*, 9 செ.குன்றாவி. (v.t.) கோரா நூலைத் தடாக் கருவியின் மூலம் சுற்றுதல்; spinning the thread.

[தடு – தடா+போடு]

தடி *tadi*, பெ.(n.) பனைமரச் செங்கோல்; an upright small pole made of palmyra tree.

[தடு – தடி]

நாடார்களிடையே ஆசிரியனின் கைக்கோல், தடி எனப்பட்டது.

தடித்த *taditta*, பெ.எ. (adj.) சற்றுப் பருத்த; கனமான; thick; heavy. 'தடித்த அட்டை'.

[தடி > தடித்த]

தடி தூக்கு *tadi-tūkku*, பெ.(n.) பல்லாங்குழியைச் சற்றுத் தூக்கி வைக்கும் தண்டனை முறை; a kind of punishment.

[தடி+தூக்கு]

தடிப்புரோகம் *tadippurōgam*, பெ.(n.) இமைத் துடிப்பு, இளிச்சற் கண், முடமயிர் என மூன்று வகைப்பட்ட கண்ணோய்; an eye disease, which is of three kinds characterised by swelling of the lids. (சா.அக.).

[தடிப்பு+ரோகம்]

தடிவாய்க்கூறு *tadi-vāi-k-kūṟu*, பெ.(n.) வெட்டறுவாளின் வாய்க்கூறு; a big sickle's mouth.

[தடி+வாய்+கூறு]

தடைக்கருவி *tadaikaruvi*, பெ.(n.) தடுத்து நிறுத்தும் கருவி; stopper.

[தடை+கருவி]

தடைச்சிவலை *tadai-c-civalai*, பெ.(n.) பெரிய மீன்களைப் பிடிப்பதற்காகத் தடித்த நூலால் பின்னப்பட்ட வலை; a kind of fishing net.

[தடி– தடைச்சி+வலை]



தண்டகவாதம் *taṇḍagavādam*, பெ.(n.) உடலுறுப்புகளையும் செயலறச் செய்து உடம்பைத் தண்டத்தைப் போல் வீழ்த்தி, நீட்டல், முடக்கல், அசைத்தல் முதலியவையில்லாமல் பிணத்தைப் போல் கிடக்கச் செய்யும் ஒரு வகை ஊதை (வாத) நோய்; a kind of rhematism characterised by great prostration in which the body is rendered like a log of wood, unable to stretch of fold the limbs and pass motion or urine, the whole body assumes a thorough rigidity as the stiffness appearing after death. (சா.அக.).

[தண்டு– தண்டகம்+வாதம்]

தண்டரை *taṇḍarai*, பெ.(n.) 1. ஒசூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Hosur Taluk. (ம.வ.சொ.86). 2. திருவண்ணா மலை வட்டத்

தில் உள்ள ஒரு சிற்றூர்; a village in Thiuvannamalai Taluk.

[தண்டலை–தண்டரை]

தண்டவாளம் *tandavāḷam,* பெ.(n.) இராட்டினத்தில் துரப்பணக் காலையும் குத்துக் காலையும் இணைக்கும் கீழ்க்கட்டை; connecting wooden piece.

[தண்டு+வாளம்]



தண்டையாட்டு *tandai-y-āṭṭu,* பெ.(n.) நூற்றியெட்டு ஆடலியக்கங்களில் ஒன்று; one among the hundred and eight movements in dance.

[தண்டை+ஆட்டு (ஆடல்)]

தண்டுக்கிரந்தி *tandu-k-kirandi,* பெ.(n.) பொத்திக் கரப்பான் (சங்.அக.); an eruption that spreads all over the body of a child.

[தண்டு+கிரந்தி (புண்)]

தண்டோல் *tandōl,* பெ.(n.) ஒரு வகையான இசைக்கருவி; a musical instrument.

[தண்+தோல்]

தண்ணிக்கயிறு *tanni-k-kayiru,* பெ.(n.) ஆறு புரிகளைக் கொண்டு பின்னிய கயிறு; the rope which consists of six strands.

[தண்ணீர்+கயிறு (கிணற்றில் நீரிறைக்கப் பயன்படும் கயிறு)]

தண்ணீர்க்கொம்பு *tannīr-k-kombu,* பெ.(n.) கொம்பு முறி விளையாட்டில் பயன்படுத்தப்படும் கழிவகையினுள் ஒன்று; a pole used in kombumuri game.

[தண்ணீர்+கொம்பு]

தணக்குமரம் *tanakku-maram,* பெ.(n.) யாழ் செய்யப் பயன்படுத்தும் மரம்; a tree, used for making 'yāḻ'.

[தணக்கு+மரம்]

தத்தமஞ்சி *tattamañji,* பெ.(n.) பொன்னேரி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Ponneri Taluk.

[தத்தன்+அமஞ்சி]

தத்தணி *tattani,* பெ.(n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Arantangi Taluk.

[தத்து+அணி]

தத்தளகம் *tattaḷagam,* பெ.(n.) அப்பர் தேவாரத்தில் இடம் பெற்ற இசைக்கருவி; a musical instrument, mentioned in Appar tevaram.

[தத்+தளகம்– ஒலிக் குறிப்பால் பெற்ற பெயர்]

தத்தனூர் *tattanūr,* பெ.(n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[தத்தன்+ஊர்]

பெரியபுராணத்தில் மெய்ப்பொருள் நாயனாரின் மெய்க்காப்பாளராக இருந்தவன் தத்தன். அவனுக்கு இறையிலி ஊராக அளித்த ஊர் இன்றளவும் வழக்கில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

தத்திங்காங் கொட்டு–தல், *tattingāṅkoṭṭu* 5 செ.கு.வி.(v.i.) கும்மியடித்தல்; to play the kummi dance.

[தத்திங்காம்+கொட்டு–,]

தப்பல் *tappal,* பெ.(n.) 1. செடி கொடி மரங்களில் பறிக்கப்படாமல் விட்டுப்போன காய்கள்; seeds or fruits not properly collected. 2. தவறான முறையிலமைந்த உடலுறவில் பிறந்த குழந்தை அல்லது அக்குழந்தை பிறப்புக்குக் காரணமானவன்; illegitimate -

child. அது தப்பல் குழந்தை, தப்பலுக்குப் பிறந்த பிள்ளை இது (உ.வ)

[தப்பு –தப்பல்]

தப்பட்டை *tappaṭṭai,* பெ.(n.) பறை வகை; a kind of drum.

[தப்பு>தப்பட்டை]



தப்பாட்டம் *tappāṭṭam,* பெ.(n.) 'தப்பு' என்னும் பறையை அடித்து ஆடும் ஆட்டம்; a dance to the 'tappu' (tomtom) drum beating.

[தப்பு+ஆட்டம். ஆடு–ஆட்டம்]

தப்புகுத்திருக்கை *tappuguttirukkai,* பெ.(n.) வண்ணத்துப் பூச்சி போன்ற மீன்; butterfly ray.

[தப்பு+குத்திருக்கை]



தப்புவிளி *tappuviḷi,* பெ.(n.) தொலைபேசியில் பேசுவோர் தப்பான எண்ணில் அழைக்கும் தொலை விளி; wrong call.

[தப்பு+விளி]

தளரி *taḷari,* பெ.(n.) ஒரு வகைச் சிறு கடல் மீன்; long finned fish.

[தளர்–தளரி]



தப்பை *tappai,* பெ.(n.) ஐந்தாங்கல் ஆட்டத்தில் பாடப்படும் பாட்டின் இறுதி குறிக்கும் சொல்; a last word of a stanza for the game aindāṅkal.

[தப்பு –தப்பை]

தம்பட்டம் *tambattam,* பெ.(n.) தப்பட்டை பார்க்க; see tappaṭṭai.

தம்பட்டன்காரை *tambaṭṭaṉ-kārai,* பெ.(n.) ஒரு வகை மீன்; a kind of fish.

[தம்பட்டன்+காரை]

தம்பான் *tambāṉ,* பெ.(n.) ஒரு வகை மீன்; a kind of fish rock cod.

[தம்பு+ஆன்]



தம்பிட்டு *tampiṭṭu*, பெ.(n.) விளக்குமாவு, மாவிளக்கு; sweetened rice pudding shaped in such a way to be used as thread fixed lamp.

க. தம்பிட்டு

[தீம்+பிட்டு> தம்பிட்டு]



தம்பிடி *tambiḍi*, பெ.(n.) விடு காசு பார்க்க; see viḍukāsu.

[செம்பு+இடி – செம்பிடி – தெம்பிடி –தம்பிடி]

தமராக்கி *tamarākki*, பெ.(n.) சிவகங்கை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[தமர்+ஆக்கி]

தமிழ்ச்சாகித்தியம் *tamiḻ-c-cāgittiyam*, பெ.(n.) பைரவி, தோடி, பிலகிரி முதலான பண் (இராகங்)களில் அமைந்த வண்ணங்களுக்கு ஆபிரகாம் பண்டிதர் இயற்றியது; some melodious tunes which are compiled by Abraham Pandidar.

[தமிழ்+சாகித்தியம்]

தமிழிசையில் சாமகானம் *tamiḻisaiyil sāmagāṉam*, பெ.(n.) ஒரு இசை நூல்; a musical treatise.

[தமிழ்+இசையில்+சாமம்+கானம்]

தமிழியக்கக் கும்மி *tamiḻiyakkakkummi*, பெ.(n.) தமிழியக்கத்தின் செயற்பாடுகளைக் கூறும் கும்மி; the kummi dance which depicts 'Tamiḻiyakkam'.

[தமிழ்+இயக்கம்+கும்மி]

தமிழியக்கம் *tamiḻ-iyakkam*, பெ.(n.) 1. தமிழ்ப் பண்பாட்டுத் தனித்தன்மையை நிலைநாட்ட விழையுந் தமிழர்களின் அமைப்பு; a social movement which strives for the cultural uniqueness of Tamilians. 2. பாவேந்தர் பாரதிதாசன் தமிழுணர்வு பற்றி இயற்றிய நூல்; a treatise of 'Bharathi dasan'.

[தமிழ்+இயக்கம்]

தமுக்குச் சட்டி *tamukku-c-caṭṭi*, பெ.(n.) மேளம் செய்யப் பயன்படும் சட்டி; broad mouthed mud pot used as tamukku.

[தமுக்கு+சட்டி]



தமுறு *tamuṟu*, பெ.(n.) இறப்பு நிகழ்வில் இசைக்கப்படும் ஓர் இசைக்கருவி; a musical instrument played in funeral.

[தமர்–தமுர்–தமுறு]

தயிர்த்தாழி *tayir-t-tāḻi*, பெ.(n.) தயிர் கடையும் தாழி; a vessel in which curdled milk is put and churned. (சா.அக.).

[தயிர்+தாழி]



தயிர்தோய்த்தல் *tayir-tōyttal,* பெ.(n.) பால் உறையிடல்; thickening or coagulating milk, curdling milk. (சா.அக.).

தயிர்நீர்ப்பு *tayirnīrppu,* பெ.(n.) தயிரின் மேல் நிற்கும் தெளிந்த நீர்; water found along with thick portion of the curd, the watery portion of the milk separated from the curd. (சா.அக.).

[தயிர்+நீர்ப்பு]

தயிர்பாளையம் *tayirpāḷaiyam,* பெ.(n.) ஈரோடு வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Erode Taluk.

[தயிர்+பாளையம்]

தயிர்மீதுதேட்டை *tayirmīdutēṭṭai,* பெ.(n.) பார்க்க தயிர்நீர்ப்பு; see *tayirnīrppu.*(சா.அக.).

[தயிர்+மீது+தேட்டை]

தயிருறை–,தல் *tayirurai-,* செ.கு.வி (v.i.) தயிர் இறுகுதல்; to thicken of milk into curd or cream. (சா.அக.).

[தயிர்+உறைதல்]

தரங்குத்து–தல் *tarankuttu-,* செ.கு.வி.(v.i.) ஒரு வகையான நாட்டுப் புறச்சடங்கு செய்தல்; to perform a folk ceremony.

[தரம்+குத்து]

தரங்கெட்ட *tarankeṭṭa,* பெ.அ. (adj.) தகுதி இல்லாத; mean, low in worth or excellence. 'அவன் தரங்கெட்டவனாக இருக்கிறான்'.

[தரம்+கெட்ட. கெடு–கெட்ட]

தரவை *taravai,* பெ.(n.) இராமநாதபுரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Ramanathapuram Taluk.

[தரை–தரவை(தரிசு)]

தராசனம் *tarāsaṉam,* பெ.(n.) தேர்ச் சிற்பத்தில் நெஞ்சாங்குலைக்கு மேலுள்ள பகுதி; a middle loft sculptures in temple car.

[தேர்(தரா)+ஆசனம்]

தரி–த்தல் *tari-,* செ.குன்றாவி. (v.t.) உடைத்தல், பிளத்தல்; to split, break as of firewood. விறகு தரித்தான் (இ.வ.)

[தறித்தல்–தரித்தல்]

தரிசல் *tarisal,* பெ. (n.) அரூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arur Taluk.

[தரை–தராய்–தரிசு–தரிசல்]

தரிசு உழவு *tarisutuḻauv,* பெ.(n.) நீர்ப் பாய்ச்சி உழும் முதல் உழவு; first ploughing after watering the field.

மறுவ. தரிசு கீறுதல்

[தரிசு+உழவு]

தருகு–தல் *tarugu-,* 5 செ.கு.வி. (v.i.) தளிர்த்தல்; to shoot forth, sprout. "செடி தருகிரிச் சின்னா காய்த்து விடும்" (பேவ.).

[தளிர்–தளிர்கு–தருகு]

தருப்பு *taruppu,* பெ. (n.) சிற்பங்களின் காதணி வகை; a ear ornament found in sculpture.

[துரு–தரு–தருப்பு]

தருதளை *tarutaḷai,* பெ. (n.) சிவகங்கை வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[தரை+தளை]

தருவை *taruvai,* பெ. (n.) துணி வெளுப்பதற்கான உவர்மண் விளையுமிடம்; fuller's earth imprignated place.

[தரை>தருவை]

தலைப்படு–தல் *talai-p-paḍu-,* செ.கு.வி.(v.i.) 1. முன்னேறுதல்; to get advancement to come up in life. 2. மேம்பாடு பெறுதல்; to become excellence. "தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே".

[தலை(உயர்வு)+படு]

தலைப்பாடு *talai-p-pāḍu,* பெ. (n.) முதன்மை, மிக மிகக் கட்டாயம் ; top priority, very very urgent. 'தலைப்பாடாகச் சொன்னேன் அவன் கேட்கவில்லை' (கொ.வ.)

*[தலை+பாடு]

தலைவுமுடி-தல் *talaivumuḍi-,* செ.குன்றாவி. (v.t.) பாய் நெசவு செய்த பின்னர் அதன் ஓரங்களைச் சீவி மடித்துக் கட்டுதல்; to fold and stitch the edge of mat after plaiting.

[தலவு+முடி – தலை > தலவு (கொ.வ.)]

தலைஉறுமி *talaiurumi,* பெ. (n.) சேவை யாட்டத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவி; a musical instrument used in `sevaiyāttam'.

மறுவ. கிணைகொட்டு

[தலை+உறுமி]

தலைக்கெண்டை *talaikkenḍai,* பெ.(n.) கெண்டை மீன் வகையுள் ஒன்று; a kind of car fish.

[தலை+கெண்டை].



தலைக்குப் பதமிடல் *talaikku-p-padamiḍal,* பெ. (n.) 1. தலைக்கு எண்ணெயிடல்; anointing the head. 2. எண்ணெய் தேய்த்து முழுகல்; having an oil bath. (சா.அக.).

[தலை+கு+பதம்+இடல்]

தலைக்குலுக்கம் *talai-k-kulukkam,* பெ. (n.) 1. கிறுகிறுப்பு; giddiness. 2. முதுமையில் காணும் தலை அசைவு; shaking of head in old persons as a result of advanced age. 3. ஒரு வகை வளி (வாயு); tremer of the head due to vayu. (சா.அக.).

[தலை+குலுக்கம்]

தலைகிறுகிறு-த்தல் *talai-kirukiru-,* செ.கு.வி. (v.i.) தலை சுற்றுதல்; பார்க்க; see talai-curru-.

[தலை+கிறு+கிறு]

தலைகிறுகிறுப்பு *talai-kirukiruppu,* பெ. (n.) 1. தலை மயக்கம்; reeling of the head, giddy sensation. 2. தலை நடுக்கம்; dizziness of the brain. 3. நோயினால் உண்டாகும் தலை மயக்கம்; giddiness arising from ill health or some disorder of the system. (சா.அக.).

[தலை+கிறு+கிறுப்பு]

தலைச்சுமை தொடர் ஓட்டம், *talaiccumai-toḍar ōṭṭam,* பெ.(n.) மரக்கட்டை (அ) புத்தகத்தை தலையில் வைத்து ஆடும் விளையாட்டு; head balancing relay.

[தலை+சுமை+தொடர்+ஓட்டம்]

தலைச்சேரி *talaiccēri,* பெ.(n.) கேரள மாநிலத்தில் வளர்க்கப்படும் ஆட்டினம்; goats of Tellichery.

[தலை + சேரி]



தலைச்சோலை *talaiccōlai,* பெ.(n.) சேலம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Salem Taluk.

[தலை(முதல்) + சோலை(காடு)]

தலை சாய்தல் *talai-cāydal,* பெ.(n.) முற்றிய நெற்கதிர் வளைந்து தொங்குதல்; bowing down of the riped rice-corn.

[தலை+சாய்]

தலைசுற்று–தல் *talai-cuṟṟu-,* செ.கு.வி. (v.i.) (தன் உணர்வை இழக்கச் செய்யும் வகையில்) சுற்றியுள்ள பொருள்கள் சுழல்வதைப் போன்ற மயக்க உணர்வு ஏற்படுதல்; to feel giddy; reel. 'முதல் முறையாகப் புகையிலை போட்டேன், தலைசுற்றிக் கீழே விழுந்து விட்டேன்', 'நீ சொல்லும் கணக்கைக் கேட்டால் எனக்குத் தலைசுற்றுகிறது'. (உ.வ.)

[தலை + சுற்று]

தலைதாவு–தல் *talai-tāvu-,* 2 செ.கு.வி. (v.i.) நெருக்கமாக உள்ள மரங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்குத் தாவுதல்; to jump from a tree to another in a closely grown trees.

[தலை+தாவு–]

தலைதீபாவளி *talai-tīpāvaḷi,* பெ. (n.) திருமணம் செய்து கொண்ட பின் கொண் டாடும் முதல் விளக்கணி நாள் விழா; the first deepavali festival (celebrated by the newly married). 'தலை தீபாவளி கொண்டாட மாமனார் வீட்டுக்கு வந்திருந்தான்'.(உ.வ.)

[தலை +தீபாவளி]

தலைநாயர் *talaināyar,* பெ. (n.) மயிலாடுதுறை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mayiladuthurai Taluk.

மறுவ. தலைஞாயிறு

[தலை+(ஞாயிறு)–நாயர் (கொ.வ.)]

தலைநிம்பம் *talainimbam,* பெ. (n.) சிவனார் வேம்பு (மலை); wiry indigo.

[தலை+நிம்பம்]

தலைப்பத்து *talai-p-pattu,* பெ. (n.) 1. தலைக் குப் போடும் மருந்துப் பற்று; an application of ointment or other paste applied to the head. 2. பனை ஓலை; palmyra leaf (சா.அக.).

[தலை+பற்று > பத்து]

தலைப்பாடகம் *talāi-p-pāḍagam,* பெ.(n.) விளைநிலப்பகுதி; fertile land. "தண்ணீர் பட்டி ஒருமாவரையும் தலைப்பாடகம் அரை மாவும்". (தெ.சா.7:2:எ:47)

[தலை+பாடகம்]

தலைப்பிடிக்கி *talai-p-piḍikki,* பெ. (n.) கூட்டி வைப்போன்; one who procures for another as a means of gratifying his passions. (சா.அக.).

[தலை(ஆள்)+பிடிக்கி]

தலைப்புரட்டியெறும்பு *talai-p-puraṭṭi-yeṟumbu,* பெ. (n.) ஒரு வகைக் கறுப்பு எறும்பு; a black ant with a large shaking head. (சா.அக.).

[தலை+புரட்டி+எறும்பு]



தலைபுரட்டல்[1] *talai-puraṭṭal,* பெ. (n.) தலையை அடிக்கடி உருட்டும் ஒரு சாக்குறி; rolling the head very often. (சா.அக.).

[தலை+புரட்டல்]

தலைபுரட்டல்[2] *talai-puraṭṭal,* பெ. (n.) பொடுதலை என்னும் மூலிகை; creeping vervain. (சா.அக.).

[தலை+புரட்டல்]



தலைமடக்கு *talai-madakku,* பெ. (n.) உழும் போது ஏர் சென்று திரும்பும் இடம்; the place where the furrow turns in plough.

[தலை+மடக்கு. மட > மடக்கு]

தலைமைதாங்கு-தல் *talamai-tāngu-,* செ.கு.வி. (v.i.) (நிகழ்ச்சி, போராட்டம் போன்றவற்றை அல்லது ஓர் அமைப்பை) வழி நடத்தும் பொறுப்பு ஏற்றல்; to head or lead (a demonstration, etc.,); preside over. 'இது வரை இரு முறை கட்சிக்குத் தலைமை தாங்கியிருக்கிறார்'. 'நடக்கப் போகும் திரைப்பட வெள்ளி விழாவுக்கு அமைச்சர் தலைமை தாங்குவார்'.

[தலைமை+தாங்கு]

தலையசை-த்தல் *talai-y-šai-,* செ.கு.வி. (v.i.) ஒரு செயலை ஏற்றுக் கொள்வதாக இசைவு தெரிவித்தல்; to shake ones head as a mark of acceptance.

மறுவ: தலையாட்டுதல், சரி சொல்லல்

[தலை+அசை-,]

தலையில் கட்டு-தல் *talaiyil-kaṭṭu-,* செ.குன்றாவி. (v.t.) (தனக்கு விருப்பம் இல்லாத வேலையை மற்றொருவர்) செய்யும் படியாக வைத்தல், (தேவையற்ற பொறுப்பையோ குறைபாடு உடைய பொருளையோ) ஏற்கச் செய்தல்; to saddle (one) with a responsibility, etc., 'நுகர்வோர் அங்காடிக்குப் போகும் வேலையை யார் தலையில் கட்டலாம் என்று யோசிக்கிறாயா?', 'நீ சற்று அசந்தால் கடைக்காரர் அழுகல் தக்காளியை உன் தலையில் கட்டி விடுவார்'.

[தலை+இல்+கட்டு]

தலையை உருட்டு-தல் *talaiyai-uruṭṭu-,* செ.கு.வி. (v.i.) ஒருவனைப் பற்றிய பேச்சைப் பரப்புதல்; to backbite. 'இதுலே என் தலையை உருட்டாதே!'.

மறுவ: புறம்பேசு-தல்

[தலையை+ உருட்டு]

தவ்வித்திரும்பு-தல் *tavvittirumbu,* செ.கு.வி. (v.i.) ஒயிலாட்டத்தில் இரு கால்களையும் தூக்கித் திரும்புதல்; to jump and turn with lifting two legs in 'oyilāṭṭam'. (60:68).

[தவ்வி+திரும்பு. தாவு - தவ்வு]

தவங்கினி *tavangiṇi,* பெ.(n.) வலு குறைந்தவன்; strengthless person.

[தவ்வல்-தவங்கு-தவங்கிலி] .

தவசுக்கூடை *tavasu-k-kūdai,* பெ. (n.) தவசங்களை எடுத்துச் செல்லப் பயன்படும் கூடை; basket used for carrying grains.

மறுவ: கடகாப்பெட்டி, நார்ப்பெட்டி

[தவசம்+கூடை - தவசக்கூடை- தவசுக்கூடை]



தவண்டை *tavaṇḍai,* பெ. (n.) விண்ணென ஒலிக்கும் தோலாற் செய்யப்பட்ட இசைக் கருவி; a musical instrument.

[தவண்டு-தவண்டை]

தவத்தில் நிற்றல் *tavattil-niṟṟal,* பெ. (n.) இடைவிடாது தவம் செய்தல்; being constant in doing penance. (சா.அக.).

[தவம்+அத்து+இல்+நிற்றல்]

தவத்துமுருங்கை *tavattu-muruṅgai,* பெ. (n.) புண்ணாக்குப் பூண்டு; Tranquebar gendarussa. (சா.அக.).

[தவம்+அத்து+முருங்கை]

தவத்துப்பொலவு *tavattuvappolavu,* பெ. (n.) மலையாளப் பூடு; Malabar croton. (சா.அக.).

[தவத்து+புலவு-பொலவு]

தவதலம் *tavatalam,* பெ. (n.) வெள்ளி லோத் திரம்; the bark of lodra tree. (சா.அக.).

[தவ-தலம்]

தவபோதசாதி *tavapōda-šādi,* பெ. (n.) ஆண் சாதி, நான்கு வகைகளில் ஒன்று; one of the four classes of men divided according to lust. (சா.அக.).

[தவ+போத+சாதி]

தவர் *tavar,* பெ. (n.) தெருக்கூத்தில் அணியப் பெறும் விறைப்பான பாவாடை; tight dress worn in street.

[தவல்-தவர்]

தவர்தாம்பட்டு *tavartampaṭṭu,* பெ.(n.) தில்லை (சிதம்பரம்) வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[தமர்-தவர்-தவர்த்தாம்+பட்டு]

தவலு *tavalu,* பெ. (n.) இருளர் பயன்படுத்தும் ஓர் இசைக்கருவி; a musical instrument of Iruḷar.

[பதலை-தவிலை+தவல்-தவலு]

தவளைவாய்க்கச்சம் *tavaḷaivāykkaccam,* பெ. (n.) தவளையின் வாய் போன்ற தோற்ற முடைய கச்ச வகை; kaccam like the frogs mouth.

[தவளை+வாய்+கச்சம்]

தவளை விளையாட்டு *tavaḷaiviḷaiyāṭṭu,* பெ.(n.) தாவித்தாவி நகர்வது. (த.நா.வி.); jumping and moving.

[தவ்வு-தவளை+விளையாட்டு]

தவணி *tavaṉi,* பெ.(n.) வந்தவாசி வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Wandawashi Taluk.

[தாவணி-தவணி(கொ.வ.)]

தவுக்கம் *tavukkam,* பெ.(n.) தடங்கல், இடைஞ் சல்; hindrance.

[தவல்-தவு-தவுக்கம்]

தழவரை *taḻavarai,* பெ.(n.) அறந்தாங்கி வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Arantangi Taluk.

[தாழை+வரை]

தழுக்கு *taḻukku,* பெ. (n.) இரண்டு கைகளும் சேர்த்து அள்ளும் அளவு; measure of taking up in the hollow of two hands. மாட்டுக்கு ஒரு தழுக்கு கூளம் போடு. (பே.வ.).

[தழைக்கு+தழுக்கு]

தழுதாழை *taḻutāḻai,* பெ.(n.) வந்தவாசி வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Wandawasi Taluk.

[தாழ்+தாழை-தாழ்தாழை-தழுதாழை]

தழுதாளி *taḻy-tāḻi,* பெ. (n.) திண்டிவனம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[தழுதாழை-தழுதானி-தழுதாளி]

தள்ளாதகாலம் *taḷḷāda-kālam,* பெ. (n.) நடக்கவும் முடியாத முதுமைக் காலம்; old age; infirmity. 'தள்ளாத வயதிலும் அவர் உழைக்க வேண்டியிருந்தது'.

[தள்ளாத+காலம்]

தள்ளாத வயது *tallāda-vayadu,* பெ. (n.) பார்க்க தள்ளாத காலம்; see tallāta-kālam.

[தள்ளாத+வயது]

தள்ளி *talli,* பெ.(n.) சிறு ஒட்டினை எறிந்து தள்ளித்தள்ளி விளையாடுதல். (த.நா.வி.); push and play with a round pot-sherd.

[தள்–தள்ளி]

தள்ளுபாண்டி *tallupāndi,* பெ.(n.) கலியாணப் பாண்டி விளையாட்டுக்கு வழங்கும் வேறு பெயர்; a kind of pāndi in South Arcot District.

தளர்த்து–தல் *talarttu-,* செ.கு.வி. (v.i.) 1. (பிடி, முடிச்சு போன்றவற்றை) இறுக்கம் இழக்கச் செய்தல்; நெகிழச் செய்தல்; to loosen one's grip,ease. 'புழுக்கம் தாங்காமல் பொத் தானை அவிழ்த்துச் சட்டையைத் தளர்த்திக் கொண்டார்', (உ.வ.) தன் வேடிக்கையான பேச்சின் மூலம் சூழ் நிலையின் இறுக்கத்தைத் தளர்த்த முயன்றார். 2. (சட்டம், விதிமுறை முதலியவற்றை அவற்றின்) கடுமையான நடைமுறையிலிருந்து விலக்குதல்; தீவிரத் தைக் குறைத்தல்; to relax (the curfew); lift (the sanction); make flexible. 'ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டது', 'புதிய அரசு மது விலக்கைத் தளர்த்துமா? என்று செய்தியாளர் கேள்வி கேட்டார்.(உ.வ.)

[தளர்+தளர்த்து–,]

தளரி *talari,* பெ.(n.) ஒரு வகைச் சிறுகடல் மீன்; long finned fish.

[தளர்–தளரி]



தளவாய்பட்டடா *dalavāypattadā,* பெ.(n.) திருத்தணி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruthani Taluk.

[தளவாய்+பட்டடை]

தளி *talai,* பெ.(n.) உடுமலைப்பேட்டை வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Udumalpet Taluk.

[தள்>தளி(நீர்நிலை)]

தளிக்கோட்டை *talikkōttai,* பெ.(n.) அறந் தாங்கி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Arantangi Taluk.

[தளி+கோட்டை]

தளிகை *taligai,* பெ.(n.) நாமக்கல் வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Namakkal Taluk.

[தளி(நீர்நிலை)+கை]

தறிக்குத்துக்கால் *tarikuttukkāl,* பெ.(n.) தறியை எல்லா அளவிலும் தாங்கி நிற்கும் இரு கால்கள்; two suport pillars of loom.

[தறி+குத்து+கால்]

தறிக்கூடம் *tari-k-kūdam,* பெ.(n.) தறி அமைக் கப்பட்டிருக்கும் இடம்; place of loom.

[தட்டு+சக்கை].

தறித்தண்டவாளம் *tari-t-tandavālam,* பெ.(n.) அச்சுமரத்தின் கீழ்ப்பகுதியில் நாடா சென்று வரும் பகுதி ; a device in loom.

[தறி+தண்ட+வாளம்]

தறு–தல் *taru-,* செ. கு.வி.(v.t.) சுற்றி வளைத் துக் கட்டுதல், இறுக உடுத்தல் ; to fasten as cloth around the waist. "தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்" (குறள்).

[தல்–தறு]

தன்மானியர் *tanmāniyar,* பெ.(n.) நற்குடி மற்றும் கல்வியொழுக்கங்களால் மேம்பட்டுத் தன்மானங்காப்பவர் (குறள்.963,உரை) ; a person of honour, magnanimity.

[தன்+மானி+ஆர்]

தன்மை மிகுத்துரை *tanmai-miguttura*i, பெ. (n.) ஒரு பொருளின் இயல்பை மிகுத்துக் கூறுகை (மிகைப்படுத்திக் கூறுதல்); exaggeration of the nature of an object. "தொகையே தொடர்ச்சி தன்மை மிகுத்துரை" (மணிமே.30,192).

[தன்மை+மிகுத்து+உரை]

தன்விருப்பம் *tan-viruppam*, பெ. (n.) எழு விழைவு, தன்னியல்பு விருப்பம்; willfulness.

[தன்+விருப்பம்]

தன்வேதனை *tanvēdanai*, பெ. (n.) தன் வருத்தம்; one's own troubles, self affliction. (சா.அக.).

[தன்+வேதனை]

தன்னன் *tannan*, பெ.(n.) 1. மகன்; son. 2. ஆண்பால் இயற்பெயர் ; a proper name (masc.).

[தல்–தன்–தன்னு–தன்னன்]

இச்சொல் தனையன் எனத் திரிந்தது.

தன்னாள் சலசலப்பு அடவு *tannāḷsala salappuaḍavu*, பெ. (n.) ஒயில் கும்மியில் இடம் பெறும் ஓர் அடவு; a kind of tāḷā in dance.

[தன்+ஆள்+சலசலப்பு+அடவு]

தன்னிகரில்லா(த) *tannigarillā(ta)*, பெ.எ. (adj.) ஈடு இணை இல்லாத, தனக்குச் சமமாக (யாரும், எதுவும்) இல்லாத; matchless; peerless. 'தன்னிகரில்லாத தலைவர்'. (உ.வ.)

[தன்னிகர்+இல்லா]

தன்னிலைவிளக்கம் *tannilai-viḷakkam*, பெ. (n.) (பொ.வ.) சிக்கல், நேராடல் காரணமாகத் தொடர்புடைய ஒருவர் தான் எடுத்த நிலை, செயற்பாடுகள் குறித்து விரிவாக அளிக்கும் விளக்கம்; a statement made by one explaining (and justifying) his action.

[தன்+நிலை+விளக்கம்]

தன்னு-தல் *tannu*, செ.கு.வி.(v.i.) பிறத்தல், தோன்றுதல்; to give birth, to appear.

[துல்–தல்–தன்–தன்னு]

தன்னுட்கேந்திரம் *tannuṭ-kēndiram*, பெ. (n.) திருமணி (கோமேதகம்); cinnamon stone. (சா.அக.).

[தன்+உள்+கேந்திரம்]

தன்னைவியந்துதருக்கல் *tannai-viyandu tarukkal*, பெ. (n.) தன்னையே நினைத்துச் செருக்குக் கொள்ளல்; indulging one self in expansive delusing or delusion of grandeur, self conceitedness. (சா.அக.).

[தன்+ஐ+வியந்து+தருக்கல்]

தனதேர் *tanadēr*, பெ. (n.) சொந்த ஏர்; own plough.

[தனது+ஏர்]

தனிக்கண்கள் *tanikkangal*, பெ.(n.) வலையிலுள்ள ஒரு கண்; flymesh.

[தனி+கண்+கள்]

தனிக்காய் ஆட்டம் *tani-kkāyāṭṭam*, பெ.(n.) குழிக்கு ஒரு காய் வீதம் போட்டாடுதல். (திருச்சி– வழ.); one in each pit placing - an indoor game.

[தனி+காய்+ஆட்டம்]

தனிமகனார் *tanimaganār*, பெ.(n.) கடைக் கழகப் புலவர்; a poet of sangam age.

[தனி+மகன்+ஆர்]

தனியல் *taniyal*, பெ.(n.) திண்டிவனம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[தனி+வயல்]

தனியறை *taniyarai*, பெ.(n.) ஒதுக்கப்பட்ட அறை; cabinet.

[தனி+அறை]

தா ஆயி *tāayi*, பெ.(n.) பெரியம்மாள், தாயின் தமக்கை; mother's elder sister.

பஞ். தாயி

[தா(பெரிய,மூத்த)+ஆயி]

தாக்குருத்து நெல் *tākkuruttu-nel*, பெ.(n.) அடித்தாளிலிருந்து பயிராகும் நெல்; the paddy which grown from the reaped stalk.

மறுவ: தாளடிப் பயிர்

[தாள்+குருத்து+நெல்]

தாங்கடை *tāṅgaḍai,* பெ.(n.) முழத்தை விட நீளமானது; a little bit more than the cubit measure.

[தா(நீட்சி)+கடை]

தாங்கல் *tāṅgal,* பெ.(n.) வாலாசா வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Wallajah Taluk.

[தாங்கு – தாங்கல் (ஏரி)

தாங்கா பாங்கா *tāṅgā-pāṅgā,* பெ.(n.) மத்தள வகையினுள் ஒன்று; a kind of two side drum.

[தாங்கு+பாங்கு]



தாங்கி *tāṅgi,* பெ.(n.) காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[தாங்கல் > தாங்கி (ஏரி)]

தாச்சு வலை *tāccu valai,* பெ.(n.) ஆழ்கடலில் ஆழமாகத் தாழ்த்திக் கீழிறக்கி மீன்பிடிக்க உதவும் வலை; a fishing net.

[தாழ்த்து–தாச்சு+வலை]

தாசரி தப்பட்டை *tāšari-tappaṭṭai,* பெ.(n.) ஒரு வகையான இசைக்கருவி; an ancient musical instrument.

[தாதர் > தாசரி+தப்பட்டை]

தாசா *tāšā,* பெ.(n.) புலியாட்டத்தில் பயன்படுத்தப்படும் ஓர் இசைக்கருவி; a musical instrument which is used in 'puliyāṭṭam'.

[தாசு–தாசா]

தாசாசட்டி *tāšā šaṭṭi,* பெ.(n.) தஞ்சைப் பகுதிகளில் புலியாட்டத்திற்கு இசைக்கப்படும் இசைக்கருவி; a musical instrument. which is used for *'puliyāṭṭam'* in Tanjore District.

[தாசு–தாசா+சட்டி]

தாசேரி *tāšēri,* பெ.(n.) கம்பளத்தார் சேவையாட்டத்தில் இடம் பெறும் கோமாளியின் பெயர்; name of buffoon.

[தாசரி–தாசேரி (கொ.வ.)]

தாட்டியம் *tāṭṭiyam,* பெ.(n.) 1. திறமை; cleverness, skill. 2. வலிமை; strength.

[தடி–தட்டு–தாட்டு – தாட்டியம்]

தாட்டு *tāṭṭu,* பெ.(n.) சோர்வு, அலுப்பு; weariness, tiredness. எனக்கு உடம்பு தாட்டாக இருப்பதால் வேலைக்கு வர இயலாது. (உ.வ.).

[தா–தாட்டு]

தாடரசூர் *tāḍaršūr,* பெ.(n.) பொன்னேரி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Ponneri Taluk.

[ஒருகா. தாட்டு+அரசு+ஊர்]

தாடான் *tāḍāṉ,* பெ.(n.) சிவகங்கை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[தாடு – தாடான்]

தாடி *tāḍi,* பெ.(n.) சிற்பச் சிறப்பை உணர்த்த இசைத்தூண்களின் உச்சியில் அமைக்கப்படும் சிற்பக்கூறு; a design on musical pillar.

[தாழ்–தாழி–தாடி]

தாடிக்கொப்பு *tāḍi-k-koppu,* பெ.(n.) மரத்தின் கிளை, அடிக்கிளை; the lower branch of the tree.

[தாடி + கொப்பு. கொம்பு > கொப்பு]

தாடிக்கொம்பு *tāḍi-k-kombu,* பெ.(n.) தேனி மாவட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Theni District.

[தாடி + கொம்பு]

தாடூர் *tāḍūr,* பெ.(n.) திருத்தணி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruttaṇi Taluk.

[தாலம்–தாடு+ஊர்]

தாடைச்சன்னி *tāḍai-c-caṉṉi,* பெ.(n.) நரம்புகளைத் தாக்கும் நோய்; lock-jaw.

[தாடை+சன்னி]

தாண்டவச் சிற்பம் *tāṇḍava-c-ciṟpam,* பெ.(n.) சிற்ப வகையினுள் ஒன்று; a kind of sculpture.

[தாண்டவம் + சிற்பம்]

தாணிக்காய் *tāṇikkāy,* பெ.(n.) சிற்பங்களை உருவாக்குவதற்கு மூலப் பொருளான கண்ட சருக்கரைக் கலவையைச் செய்ய உதவும் ஒரு வகைக் காய்; a unriped fruit of tānri tree.

[தான்றி–தாணி+காய்]

தாதத்தப்பு *tātattappu,* பெ.(n.) தாதரினத்தவர் சேவைப்பலகை எனும் இசைக்கருவியைச் சுட்ட வழங்கும் சொல்; name of the musical instrument šēvai-p-palagai which is used by Tādar.

மறுவ. சேமக்கலம்

[தாதர்+தப்பு]

தாதரா *tādarā,* பெ.(n.) ஒரு வகைக் களைச் செடி; a weed.

[ததை–தாதர்]

தாதராட்டம் *tādarāṭṭam,* பெ.(n.) தாதன் குடியினர் ஆடுகின்ற ஆட்டம்; a dance by Tādar community.

[தாதர்+ஆட்டம்]

தாதவல்லி *tātavalli,* பெ.(n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[தாதன்+பள்ளி]

தாந்தோணி *tāntōṇi,* பெ.(n.) உடுமலைப் பேட்டை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Udumalpet Taluk.

[தான்+தோன்றி]

தாப்புலிப்பா *tāppuli--p-pā,* பெ.(n.) மறைந்து போன யாப்பு வகை; an extinct poetical meter in prosody.

[தாவு–தா+புள்+பா]

தாம்பணிக் கயிறு *tāmbaṇi-k-kayiṟu,* பெ.(n.) மாடுகளை வரிசையாகப் பிணைக்கும் கயிறு: tether, halter.

[தாம்பு+அணி+கயிறு]

தாம்பல் *tāmbal,* பெ.(n.) கரூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Karur Taluk.

[தாம்பு–தாம்பல்]

தாம்புக்கண்ணி *tāmbu-k-kaṇṇi,* பெ.(n.) போரடிக்கும் களத்திலுள்ள மாடுகளின் பிணைக் கயிறு; rope to tie cattle, tether. பார்க்க; **தாம்பணிக்கயிறு.**

[தாம்பு + கண்ணி]

தாமணிச்சுழி *tāmaṇi-c-cuḻi,* பெ.(n.) மாட்டின் முதுகு தண்டில் காணப்படும் சுழி; a sign like formation on the back bone side of cow.

[தனி+அறை]

தாமணிப் பிணை *tāmaṇippiṇai,* பெ.(n.) தாம்புக் கயிறு; long line of rope with halters attached for fastening cattle.

[தாமணி+பிணை]

தாமரைக் கும்பீட்டுக்கை *tāmarai-k-kumbiṭṭu-k-kai,* பெ.(n.) பிணையல் வகையினுள் ஒன்று (Nātya.); a gesture with both hands.

[தாமரை+கும்பீட்டு+கை]

தாமரைக்கோலம் *tāmarai-k-kōlam,* பெ.(n.) பச்சைக்கோலத்தின் ஒரு வகை; a kind of decorative design drawn on floor, etc.

[தாமரை+கோலம்]

தாமரைக் கோழி *tāmaraikkoḷi,* பெ.(n.) ஒரு வகைப் பறவை; a kind of bird.

[தாமரை+கோழி]



தாமல் *tāmal,* பெ.(n.) திருக்கோயிலூர் வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[தாமன்–தாமல், தாமன்பெயரில் அமைந்த ஊர்.]

தாமேனேரி *tāmanēri,* பெ.(n.) திருத்தணி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruttani Taluk.

[தாமன்+ஏரி]

தாய்க்குழி *tāy-k-kuḷi,* பெ.(n.) சேர்ப்புக் குழி; a pit for saving food grains.

[தாய்+குழி]

தாய்ச்சி *tāycci,* பெ.(n.) கண்ணாமூச்சி விளையாட்டில் தலைமைப் பொறுப்பேற்று நடத்துபவர்; the leader of the children's game of hide-and-seek.

[தாய் > தாய்ச்சி]

தாயாரடி–த்தல் *tāyār-aḍi,* 4 செ.குன்றாவி. (v.t.) இறப்பு நிகழ்ந்த வீட்டின் முன் பெண்கள் வட்டமாகச் சூழ்ந்து நின்று பாடியவாறு மார்பில் அடித்துக்கொள்ளுதல்; to beat on breast with hands and weep over the death, to lament.

மறுவ: மாரடித்தல்

[தாயார் +அடித்தல்–தாய் போல் அழுதல்]

தார்[1] *tār,* பெ.(n.) வயலில் பல குண்டல்கள் சேர்ந்தது ஒரு தார்; a portion in rice field.

[தாலி–தார்]

தார்[2] *tār,* பெ.(n.) கைத்தறி நெசவில் நாடாவினுள் செலுத்தி துணி நெய்யப் பயன்படும் கருவி; a device in hand loom weaving.

[தால்–தார்]

தார்[3] *tār,* பெ.(n.) விளை நிலத்தின் அளவு; a portion of land. கீழ்த்தாரில் சோளம் விதைக் கலாம்

[தால்–தார்]

தார்க்கத்தளை *tarkattalai,* பெ.(n.) ஒரு வகை மீன் ; silver jew fish.

[தார்+கத்தளை]



தார்க்குற்றி *tārkkuṟṟi,* பெ.(n.) நெய்வதற்கு உருண்டை நூல் சுற்றிய சிறு நாணல், கொறுக்கை போன்றவற்றின் குற்றி; bobbin.

மறுவ: தார்க்குச்சி



[தார் (நீட்சி) + குற்றி]

தார்ப்பாச்சி *tār-p-pācci,* பெ.(n.) உழவர்கள் வேலை செய்யும்போது வேட்டியைச் சுருக்கிக் கட்டும் வகை; a mode of wearing cloth round the loins in the fashion of a divided skirt. (நெ.வ.வெ.சொ.).

[தார்ப்பாய்ச்சி > தார்ப்பாச்சி]

தாராபாறை *tārāpāṟai,* பெ.(n.) ஒரு வகை கடல் மீன் ; horse mackerel.

[தார் (நீட்சி) – தாரா+பாறை]



தாராளிகம் *tārāḷigam,* பெ.(n.) மிகுதியாகத் தரும் பாங்கு; liberalism.

[தார்+ஆளம்+இகம்]

தாராளிகர் *tārāḷigar,* பெ.(n.) கொடையாளர்; donator, liberals.

[தாராளம்+இகர்]

தாரை *tārai,* பெ.(n.) பண்டைய இசைக் கருவியினுள் ஒன்று ; a musical instrument.

[தா–தாரை]

தால்சட்டி *tāl-catti,* பெ.(n.) கோரைக்குச் சாயம் ஏத்தும் சட்டி ; the pot used for spreading dye to sedges.

[தால்+சட்டி, சால் > தால் (பெரிய சட்டி)]

தாலியறுப்பு விழா *tāliyaṟuppu-viḻā,* பெ.(n.) திருமண வரம் வேண்டிக் கூத்தாண்டவருக்காக திருநங்கைகளால் (அலிகளால்) நிகழ்த்தப்பெறும் விழா; a function conducted by transgenders.

[தாலி+அறுப்பு+விழா]

தாவணி *tāvaṇi,* பெ.(n.) நாராயணி எனும் இசை வகையின் ஒரு பிரிவு; a music.

[தா+அணி]

தாவு^{1}–தல்; *tāvu-,* 5 செ.குன்றாவி (v.t.) ஆடு புலி ஆட்டத்தில் ஒரு புள்ளியிலிருந்து காயில்லாத அடுத்த புள்ளிக்குத் தாவுதல்; to jump to a empty square in the game played with pieces representing sheep and tiger.

[தவ்வு–தாவு]

தாவு^{2}–தல் *tāvu-,* செ.குன்றாவி (v.t.) வைக்கோல்போர், சோளத்தட்டை முதலியவற்றை இரு கையிலும் சேர்த்து அள்ளுதல்; to gather, straw of paddy, dried stalk of great millet etc., by using both of one's hands. (வ.வ.சொ.).

மறுவ. குடங்கை, கொடங்கை

[தவ்வு–தாவு]

தாவேந்தன் *tāvēndaṉ,* பெ.(n.) மன்னர் மன்னன், கோவேந்தன் (சக்கரவர்த்தி) ; emperor.

[தா(பெரிய)+வேந்தன்]

தாழ்புடைப்புச் சிற்பம் *tāḻpuḍai-p-pu-c-ciṟpam,* பெ.(n.) புடைப்பு வகைச் சிற்பத்தில் தாழ்ந்திருக்கும் சிற்பம்; a sculpture.

[தாழ்+புடைப்பு+சிற்பம்]

தாழ்மாடம் *tāḻmāḍam,* பெ.(n.) கதவிலிருக்கும் தாழ்ப்பாள் சுவரில் பொருந்தும் பகுதி; the place of a wall where the latch of door dashes while opening.

[தாள்–தாழ்+மாடம்]

தாழ்வுணா *tāḻvuṇa,* பெ.(n.) எளிய உணவு; humble food.

[தாழ்+(உணவு)உணா]

தாழகம் *tāḻagam,* பெ.(n.) சிற்பங்கள் செய்வதற்கு உருவாக்கப்படும் ஒன்பான்கற்களின் (நவபாசாணத்தின்) மூலப்பொருள்; ore of nine type of gems which are useful in sculpturing.

[தாழ்–தாழகம்]

தாழன்காலா *tāḻaṉkālā,* பெ.(n.) குச்சுப் போன்ற மீன் ; Indian tassel fish.

[தாழன்+காலா]



தாள்குணி *tāḷguṇi,* பெ.(n.) கோபிசெட்டி பாளையம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Gopichettipalayam Taluk.

[தாழ்+குழி]

தாள் நுடக்கம் *tāḷnuḍakkam,* பெ.(n.) ஆடல் இயக்கங்களில் ஒன்று; a pose in dance.

[தாள்–நுடக்கம்]

தாளடிப் பயிர் *tāḷaḍi-p-payir,* பெ.(n.) குறுவை அறுவடைக்குப் பின்பு பயிரடியை மடக்கி உழுது, சேற்றில் அழுத்தி, மறுபடியும் நடப்படும் நெற்பயிர்; repeat crop in the same field.

[தாள்+அடி+பயிர்]

தாளவகையோத்து *tāḷavagai-y-ōttu,* பெ.(n.) பழம்பெரும் இசை நூல்; an ancient treatise on Tamil music.

[தாளம்+வகை+ஒத்து]

தாளவேடு *tāḷavēḍu,* பெ.(n.) திருத்தணி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruttani Taluk.

[ஒருகா. தாவளம்+பேடு]

தாளி *tāḷi,* பெ.(n.) நெய்தல் நிலப்பண் பதினாறில் ஒன்று; a musical note.

[தாள்–தாளி]

தாளிகை *tāḷigai,* பெ.(n.)செய்தித்தாள் ; newspaper.

[தாள்–தாளிகை]

தாற்றுக்கோல் *tāṟṟu-k-kōl,* பெ.(n.) ஏர் உழும் போது மாடுகளை விரட்டப் பயன்படுத்தும் கோல் ; a small stick held by the farmers while ploughing to drive the cattle.

மறுவ. உழக்கோல், உழவுக்கோல்

[தாறு–தாற்று+கோல்]



தானம்பாடு–தல் *tāṉampāḍu-,* செ.குன்றாவி (v.t.) ஆளத்தியின் ஒரு பகுதி; a feature in musical note.

[தானம்+பாடு]

தானம் *tāṉam,* பெ.(n.) ஏழிசைகளின் தொகுப்பான "மண்டிலம்" என்பதைக் குறிக்கும் பெயர்; an alternative name for mandilam in music.

[தாவு–தானம்]

தானி *tāṉi,* பெ.(n.) மூன்று சக்கர உந்து ; auto.

[தான்+தானி (தானே இயங்குகை)]



திக்குமுக்காடிப்போ–தல் *tikkumukkāḍi-pō-,* செ.கு.வி. (v.i.) திணறித் திண்டாடுதல்; to be choked, shifted, smothered, strangled, unable to respire.

[திக்கு+முக்கு+ஆடி+போ]

திகனாரை *tigaṉārai,* பெ.(n.) கோபிசெட்டிப் பாளையம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Gopichettipalayam Taluk.

[திக்கன்+அறை]

திங்கள்சந்தை *tiṅgaḷsandai,* பெ.(n.) கல்குளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kalkulam Taluk.

[திங்கள்+சந்தை (mondaymarket)]

திசைச்சொல் *tisai-c-col,* பெ.(n.) குறிப்பிட்ட வட்டாரங்களில் மட்டும் வழங்குவனவும் இது வரை கேட்டிராதனவுமாகிய தமிழ்ச் சொல் லாட்சிகள்; different usages in dialects.

[திசை+சொல்]

திட்டிவாசல் *tiṭṭi-vašal,* பெ.(n.) கோடியம்மன் திருவிழாவில், பச்சைக்காளி, பவளக்காளி அம்மன்கள் சந்திக்குமிடம் ; meeting place of village deities.

[திட்டி+வாசல்]

திட்டுச் சட்டி *tiṭṭu-c-caṭṭi,* பெ.(n.) உயரம் குறைவுள்ள சட்டி ; a mud pot which has less height.

[திட்டு+சட்டி, தட்டு >தட்டி >சட்டி]

திடல் *tiḍal,* பெ.(n.) புன்செய்ப் பகுதி; dry land.

[திட்டு–திடல்]

திடியன் *tiḍian,* பெ.(n.) திருமங்கலம் வட்டத்தி லுள்ள ஒரு சிற்றூர்; a village in Tirumangalam Taluk.

[திட்டு–திடு–திடியன்]

திடும் *tiḍum,* பெ.(n.) சிற்றூர் இசைக் கருவி யினுள் ஒன்று; a village musical instrument.

[திடு–திடும் (ஒலிக்குறிப்பு)]

திடுமல் *tiḍumal,* பெ.(n.) நாமக்கல் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Namakkal Taluk.

[திட்டு–திடு–திடுமல்]

திடுமுட்டி *tiḍumuṭṭi,* பெ.(n.) தொடையில் இடுக்கி வைத்து முழக்கும் இசைக்கருவி; a kind of musical instrument.

[திள்–திடு–திடுமுட்டி]

திண்டு[1] *tiṇḍu,* பெ.(n.) சிறிய திண்ணை ; a raised platform.

[திண்+து–திண்டு]



திண்டு[2] *thindu,* பெ.(n.) தெருக்கூத்தில் பங்கேற்கும் ஆடவர் அணியும் அணி வகை; a kind of costume, worn by male artistes in the village street drama.

[திண்+திண்டு]

திண்ணைத்தூங்கி *tinnaittūngi,* பெ.(n.) சோம்பேறி; sluggard, idler.

[திண்ணை+தூங்கி. தூங்கு > தூங்கி]

திணறித் திண்டாடு-தல் *tinari-t-tindādu-,* செ.கு.வி. (v.i.) திக்குமுக்காடிப்போதல் பார்க்க; see tikku mukkādipō-,

[திணறி+திண்டாடு-,]

திணை *tinai,* பெ.(n.) இடம், பருவம் எனும் நோக்கில் ஐவகை நிலப்பாங்கில் வாழும் மக்களின் வாழ்வியல் கூறுபாடு; climate geographical and environmental life zonal divisions with people and their culture as found in ancient Tamil literature, habitat habits.

[திண்-திணை]

திணைக்களம் *tinai-k-kalam,* பெ.(n.) துறை; department.

[திணை+களம்]

தியன் *tidiyan,* பெ.(n.) ஒரு சிற்றரசனின் பெயர்; name of a chieftain.

[ததை-திதி-திதியன்]

திப்பி *tippi,* பெ.(n.) மாவு இடிக்கும்போது இடிபடாமல் இருக்கும் கெட்டியான மாவு; course flour not pounded properly.

[தப்பி-திப்பி]

திப்பினி *tippini,* பெ.(n.) கோலி இனத்தவர் ஆடும் நாட்டுப்புற நடனம்; a kind of folk dance performed by Kōli tribes.

[திப்பு-திப்பினி]

திம்மலை *timmalai,* பெ.(n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkuricci Taluk.

[திண்+மலை]

திம்மூர் *timmūr,* பெ.(n.) செங்கற்பட்டு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chenglepet Taluk.

[திம்மன்+ஊர்]

திமிங்கலச் சுறா *timingala-c-cūrā,* பெ.(n.) சுறா மீன் வகை; whale shark.

[திமிங்கிலம்+சுறா]



திமிரி கொம்பு *timirikombu,* பெ.(n.) அளவில் சிறிய கொம்பு; small size horn.

[திமிரி+கொம்பு]

திமிலை *timilai,* பெ.(n.) ஒரு வகையான தோற் கருவி; a kind of instrument. (1:25).

[திமில்-திமிலை]

திமிலைத்தண்ணி *timilaittanni,* பெ.(n.) விறைத்துப் போன திருக்கை மீன் வகை; numb fish.

[திமிலை+தண்ணி]

தியாகனூர் *tyāganūr,* பெ.(n.) ஆத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Attur Taluk.

[தியகன்+ஊர்]

தியாகை *tiyāgai,* பெ.(n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakurichi Taluk.

[தியகு–தியாகை]

திரக்கோல் *tirakkōl,* பெ.(n.) வந்தவாசி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Wandiwash Taluk.

[ஒருகா. தரை+கால்]

திரகை *tiragai,* பெ.(n.) மண்சட்டி வைப்பதற்காகத் திரவைக் கொடியால் பின்னப்பட்ட புரிமணை; coir or reaper ring.

[திரக்கு–திரகை]



திரள் *tiral,* பெ.(n.) முடுகிச் செல்லும் விரைந்த நடையையுடைய தாளக்காலம்; fast step.

[துர–திர–திரள்]

திராசி *tirāši,* பெ.(n.) கடலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Cuddalore Taluk.

[துறு+தி–துறுத்தி–திராசி (கொ.க)]

திராடம் *tirādam,* பெ.(n.) பாலையாழில் தோன்றும் ஒரு வகையான பண் ; a musical note.

[துராடம்–திராடம்]

திராவிடம் *tirāvidam,* பெ.(n.) கோயில் கூடக (விமான) அமைப்பில் காணப்பெறும் ஒரு தமிழர் கலைக்கூறு; a Dravidian type of temple construction.

[தமிழம்–தமிளம்–திரமிளம்–திராவிடம்]

திரிக்குத்து *tiri-k-kuttu,* பெ.(n.) சுருட்டி வைக்கப்பட்டிருக்கும் திரியில் நடுப்பகுதியினைக் காட்டுவதற்காகக் கம்பியினால் குத்திக்காட்டப்பெறும் சூது விளையாட்டு ; a method of pointing the mid point in a coil by the gamblers in gambling.

[திரி+குத்து]

திரிநர் *tirinar,* பெ.(n.) அலைபவர் ; rovers.

[திரி–திரிநர்]

திரிவாக்கக் கொள்கை *tirivākkakkolgai,* பெ.(n.) உயிரினங்களின் படி முறை வளர்ச்சிக் கோட்பாடு; evolution theory.

[திரிவு+ஆக்கம்+கொள்கை]

திருக்குக்கோணபீடம் *tirukku-kōṇapīdam,* பெ.(n.) சிற்பங்களை அமைப்பதற்கான பீட வகையினுள் ஒன்று; sculpture stand.

[திருக்கு+கோணம்+பீடம்]

திருக்குக்கோணம் *tirukku-k-kōṇam,* பெ.(n.) ஏழிசையின் பகுப்புகளில் ஒரு வகை; a type in musical note.

மறுவ. திரிகோணம்

[திருக்கு+கோணம்]

திருக்குப்பதாகை *tirukkuppadāgai,* பெ.(n.) பரதத்தில் வெளிப்படுத்தப்படும் ஒற்றை முத்திரை நிலைகளில் ஒன்று ; a dance pose.

மறுவ. திரிபதாகை.

[திருக்கு+பதாகை]

திரியாலம் *tiriyālam,* பெ.(n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruppattur Taluk.

[திரு+ஆலம்(ஆலமரம்)]

திருக்குச்செம்பு *tirukkuccembu,* பெ.(n.) திருகு மூடிச் செம்பு; a jug with screw lid.



[திருக்கு+செம்பு]

திருக்குறுக்கை யானைக்கும்மி *tirukkuru kai-yāṉai-k-kummi-,* பெ.(n.) யானையைப் பற்றிய கும்மிப்பாடல்; a kummi song on elephant.

[திரு+குறுக்கை+யானை+கும்மி]

திருக்கை *tirukkai,* பெ.(n.) ஒரு வகை மீன்; spotted eagle ray.

[திருக்கு–திருக்கை]



திருக்கை ஒட்டி *tiru-k-kai ōṭṭi,* பெ.(n.) குயவர் மண்பாண்டம்செய்யும் சக்கரம் ; a wheel for making mud-pots. "இக்கோயிலிற் திருக்கை ஒட்டி திருமுன் ஒதுகையும்"...

[திருக்கை+ஒட்டி]

திருகினி *tirukiṉi,* பெ.(n.) கொலுசு கழன்று விடாமல் இணைக்கும் ஆணி; a pin in anklet.

[திருகாணி >திருகினி(கொ.வ.)]

திருகினிச்சொம்பு *tirugiṉi-c-combu,* பெ.(n.) திருகி மூடும்படி மேல் மூடி அமைந்த சொம்பு; screw lid - cembu.

[திருகுணி – திருகினி + செம்பு]

திருகுகள்ளி *tirugukaḷḷi,* பெ.(n.) பரமக்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Paramakkudi Taluk.

[திருகு+கள்ளி(செடி)]

திருகை *tirugai,* பெ.(n.) பழங்காலத்தில் கேழ் வரகு போன்றவற்றை மாவாக அரைக்கப் பயன் பட்ட கல்லினாலான கருவி; slabs of grinding stone.

[திருகு–திருகை]



திருச்சாந்து *tiru-c-cāndu,* பெ.(n.) அணி வகை; a kind of ornament. "திருப்பலிவட்டம் திருச்சாந்து திருமேய்பூச்சு திருவிளக்கு..." (கல்.)

[திரு+சாந்து]

திருச்சிரை *tiruccirai,* பெ.(n.) கும்பகோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kumbakonam Taluk.

மறுவ. திருச்சேறை

[திரு+சீரை]

திருச்சின்னம் *tiru-c-ciṉṉam,* பெ.(n.) பண் டைய ஊதுகருவி; a wind pipe.



[திரு+சின்னம்]

திருட்டுக்கும்மி *tiruttu-k-kummi,* பெ.(n.) ஒரு வகையான கும்மிப்பாடல்; a kummi play.

[திருட்டு+கும்மி]

திருத்தங்கல் *tiruttaṅgal,* பெ.(n.) சாத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sattur Taluk.

[திரு+(தாங்கல்) தங்கல்(ஏரி)]

திருத்தாளச்சதி *tiruttāḷā-c-cati,* பெ.(n.) சந்த வகையினுள் ஒன்று; a type of melody song.

[திரு+தாளம்+சதி]

திருநடனம் *tirunaḍaṉam,* பெ.(n.) இறை வனை மட்டும் நினைத்து ஆடும் ஆட்டம்; dance especially meant for god.

[திரு+நடனம்]

திருநிலை *tirunilai,* பெ.(n.) பொன்னேரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ponneri Taluk.

[திரு+நிலை (கோயிலின் பெயர்)]

திருப்பணி மாலை *tiru-p-paṇimālai,* பெ.(n.) சிற்பக் கலைச் சிறப்புக் கூறுகளை விளக்கு கின்ற நூல்; a treatise on sculpture.

[திருப்பணி+மாலை]

திருப்பாட்டடைவு *tiru-p-pāṭṭaḍaivu,* பெ.(n.) தேவாரப்பண்ணிற்கு ஆடும் நடனம்; dance for Thevaram song. (35:117).

[திரு+பாட்டு+அடைவு]

திருப்புளி *tiru-p-puḷi,* பெ.(n.) திருகாணியை முறுக்குவதற்குப் பயன்படும் கருவி; screw driver

[திருப்பு+உளி]

திருப்பூட்டு *tiru-p-pūṭṭu,* பெ.(n.) தாலி கட்டு தல்; tying marriage knot-tali.

[திரு+பூட்டு]

திருப்பூமண்டபம் *tiru-p-pūmaṇḍabam,* பெ.(n.) கோயிலில் மாலைதொடுக்கும் இடம் ; a place where flowers are string to make garland for temple. "நாள் ஒன்றுக்கு குறுணர நாநாளியாக வந்த திருப்பள்ளித் தாமம் திருப்பூ மண்டபத்து முதலாக அளக் கவும்" (கல்.).

[திரு+பூ+மண்டபம்]

திரும்பாப்பயணம் *tirumbā-p-payaṇam,* பெ.(n.) சாவு, இறப்பு ; death.

[திரும்பா(த)+பயணம்]

திருமந்திர ஓலை *tirumandira ōlai,* பெ.(n.) செப்பேட்டில் ஆணை எழுதும் அதிகாரி; a scribe appointed by the king. ஓலை நாயகம் சரிபார்க்கும் அதிகாரி. திருவாயிக் கேள்வி – அரசன் ஆணையைக் கேட்டுச் சொல்பவன்.

[திருமந்திரம்+ஓலை]

திருமருகல் *tirumarugal,* பெ.(n.) நன்னிலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Nannilam Taluk.

[திரு+மருகல்]

திருமருங்கன் *tirumarungan,* பெ.(n.) பழம் பெரும் சிற்பக் கலைஞர்; name of a sculpter.

[திரு+மருங்கன்]

திருலோக்கி *tirulōkki,* பெ.(n.) கும்பகோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kumbakonam Taluk.

[திரி+லோகி–திரிலோகி, மூவுலக அம்மை]

திருவண்பரிசாரம் *tirvanparišāram,* பெ.(n.) திருமால் சிற்பத்தின் நிலைகளில் ஒன்று; a posture of Tirumal.

[திரு+மண்+பரிசாரம்]

திருவதி *tiruvadi,* பெ.(n.) கடலூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Cuddalore Taluk.

மறுவ. திருவதிகை

[திரு+(அதிகை) அதி–வதி(திருவதிகை)]

திருவரங்கி *tiruvarangi,* பெ.(n.) பரமக்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Paramakkudi Taluk.

[திரு+(அரங்கம்) அரங்கி]

திருவாக்கி *tiruvākki,* பெ.(n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[திரு+(பாக்கம்) வாக்கம்– வாக்கி]

திருவாசி *tiruvāsi,* பெ.(n.) இறையின் உருவங்களிற் சிற்பியர் வடிவமைக்கும் மேல் சுற்று வளைவு; ornamental meter ring - sculptural feature. (5:70).

[திரு+வாசி]

திருவாணி *tiruvāni,* பெ.(n.) திருகுக் குச்சி; screw.

[திருகு+ஆணி]

திருவாராதனை *tiruvārādanai,* பெ.(n.) கடவுள் பூசை; ritual worship of God. "இக் கிடக்கை நில முன்றும் திருவாராதனை செய்யும் யோகியார்க்கு..." (கல்).

[திரு+ஆராதனை]

திருவிழா *tiruviḷā,* பெ.(n.) நாட்டுப்புற மரபுப் பாங்குகளை உள்ளடக்கிய கொண்டாட்டம்; a traditional public function.

[திரு+விழா]

திருவுண்ணாழிகை *tiruvunnāḷigai,* பெ.(n.) கருவறை; sanctum sanctoreum.

[திரு+உண்+நாழிகை]

திருவை *tiruvai,* பெ.(n.) பானை செய்யப் பயன்படும் மண்பாண்டச் சக்கரக் கருவி; potter's wheel. (ம.வ.சொ.).

[திருகு+வை]

திருள் *tiruḷ,* பெ.(n.) மட்பாண்டம் செய்ய உதவும் குயவன் சக்கரம்; potter's wheel.

[திரு–திருகு–திருள்]

தில்லானா *tillānā,* பெ.(n.) மிகக் கடினமான நாட்டிய உறுப்பு. (14:47); a difficult type of dance.

[தில்–தில்லானா]

தில்லைவிடங்கன் *tillaiviḍangan,* பெ.(n.) இசைச்சான்றோரில் ஒருவர்; a songster.

[தில்லை+விடங்கன்]

திலாப்பியா *tilāppiyā,* பெ.(n.) ஒரு வகை மீன்; tilapia.

[துலா–துலாப்பு–துலாப்பியா]

திவவு *tivavu,* பெ.(n.) யாழின் உறுப்புக்களில் ஒன்று; a part of the harp-yāḷ.

[திவ–திவவு]

திற்பரப்பு *tirparappu,* பெ.(n.) கல்குளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kalkulam Taluk.

[தில்(லை)+பரப்பு (தில்லை–மரப்பெயர்)]

திறம் *tiram,* பெ.(n.) ஏழு நரம்புகளிலிருந்து குறைந்த நரம்புகள் கொண்ட இசை நிலை. a harp of lesser number of strings than the number seven.

[திறு–திறம்]

திறவைக்கொடி *tiravai-k-koḍi,* பெ.(n.) பிரம்பு, கொடி போன்றவற்றால் பின்னப்பட்ட புரிமணை; a ring stand made of reaper or reed.

[திறவை+கொடி]

திறன் எழுப்பிரி *tiraneḷuppiri,* பெ.(n.) 1/2 அடி முதல் 1 அடி வரை மரம் இழைத்தலுக்குப் பயன்படும் கருவி; *an implement in carpentry.*

[திறன்+எழு+பிரி]

திறனறி ஆட்டம் *tiraṉ-aṟi- āṭṭam,* பெ.(n.) சடுகுடு ஆட்டத்தில் பிடித்தவரையெல்லாம் தன் வலிமையினால் விலக்கிவிட்டுத் தம் கட்சிக்குத் திரும்புதல்; *a talent in the game caḍukuḍu.*

[திறன்+அறி+ஆட்டம்]

தின்றிப்போத்து *tiṉṟi-p-pōttu,* பெ.(n.) 1. பெருந்தீனிக்காரன்; one who eats excessively. 2. தின்றுகொழுத்தவன் ; a big bellied fat person.

தெ. *தின்டிபோத்து*

[தின்று+போத்து]

தினவாட்டு *tiṉavāṭṭu,* பெ.(n.) திமிர்; arrogance.

மறுவ: தெனாவட்டு

[தினவு+ஆட்டு]

தீக்கணம் *tī-k-kaṇam,* பெ.(n.) செய்யுளில் முதற்சீராக அமைக்கத் தகாததும், நிரை நேர் நேர் என வருவதுமாகிய தீய செய்யுட் கணம்; (Pros.) metrical foot of nirai-nēr-nēr, considered inauspicious at the commencement of a poem.

[தீ + கணம்]

தீக்கோழி விளையாட்டு *tikkōḻi viḷaiyāṭṭu,* பெ.(n.) தொடுபவன் வரும்போது காத்துக் கொள்ள வலது காலை மடக்கி வலது கையை முழங்காலுக்குள் நுழைத்தபடி மூக்கைப் பிடித்துக் கொள்ளும் விளையாட்டு; *ostrich tag (or) nosetag.*

மறுவ: மூக்கைப்பிடித்தால் தொடாதே

[தீ+கோழி+விளையாட்டு]

தீச்சட்டி *tī-c-caṭṭi,* பெ.(n.) கோயில் திருவிழா முதலியவற்றில் எடுக்கும் நெருப்புச்சட்டி; fire-pot carried as in temple-procession.

[தீ + சட்டி]

தீச்சட்டி விளையாட்டு *ticcaṭṭiviḷaiyāṭṭu,* பெ.(n.) கரகத்திற்குப் மாறாக, தலையில் தீச் சட்டியை வைத்தாடும் ஆட்டம்;fire pot play.

[தீ+சட்டி+விளையாட்டு]

தீச்சூடு *tī-c-cūḍu,* பெ.(n.) நோய் நீக்கத் தீயி னாற் சுடல்; actual cauterization (as an ulcer) by means of heated wire or rod thermocautery.

[தீ+சூடு]

தீஞ்சோறு *tiñjōṟu,* பெ.(n.) சட்டியின் அடியில் கருகிய சோறு; charred rice in the pot.

மறுவ. அடிபிடித்த சோறு

[தீ(ய்)+சோறு]

தீட்டாலம் *tiṭṭālam,* பெ.(n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurantakam Taluk.

[தீற்று+ஆலம்]

தீட்டுக்கட்டை *tiṭṭu-k-kaṭṭai,* பெ.(n.) உளி போன்ற தச்சுக் கருவி; an implement in carpentry.



[திட்டு+கட்டை]

திட்டுக்கழிவு *tittu-k-kalivu,* பெ.(n.) உடல் தூய்மையின் பொருட்டானதொரு குற்ற நீக்கம்; expiation for bodily impurity such as that caused by the death of relative.

[திட்டு + கழிவு]

திட்டுச்சோறு *tittu-c-cōru,* பெ.(n.) இழவு வீட்டிலும் பூப்பு நன்னீராட்டு விழாவிலும் பரிமாறப்படும் சோறு; meal offered at the house where a death occured and puberty function.

[திட்டு+சோறு]

தீத்தட்டிக்கல் *ti-t-tatti-k-kal,* பெ.(n.) நெருப்புக் கல்; flint used in olden days to strike fire.

மறுவ. சிக்கிமுக்கிக்கல்

[தீ+தட்டி+கல்]

தீத்திறம் *ti-t-tiram,* பெ.(n.) 1. நெருப்பின் வல்லமை; the power of fire. 2. செரிமான ஆற்றல்; the power of digestion, metabolic rate.

[தீ + திறம்]

தீத்துப்பட்டை *tit-tuppattai,* பெ.(n.) பட்டுச் சேலையைச் சுருக்கமின்றித் தேய்க்கப் பயன் படும் பட்டை ; a bark used while ironing silk saree .

[தீற்று>தீத்து+பட்டை]

தீப்பந்தம் சுற்று—தல் *ti-p-pandamcurru-,* 5 செ.கு.வி. (v.i.) சிறு கம்பினை வட்டமாக வளைத்து துணிகளைச் சுற்றி எண்ணெய் ஏற்றிப் பற்ற வைத்து விளையாடுதல்; to play with a fire pole.

[தீ+பந்தம்+சுற்றுதல்]

தீப்பாய்—தல் *ti-p-pāy-,* செ.கு.வி.(v.i.) கணவன் எரியூட்டப்பட்ட தீயில் மனைவி விழுந்து உயிர் துறத்தல்; to die with the deceased *husband by plunging into the pyre.*

[தீ+பாய்]

தீப்பாய்வு *ti-p-paivu,* பெ.(n.) 1. தீப்புகுதல்; entering fire, as on dead. 2. உடன்கட்டை யேறுகை; sati.

[தீ > பாய்வு (அக்கினிப்பிரவேசம்)]

தீபங்குடி *tipankudi,* பெ.(n.) நன்னிலம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Nannilam Taluk.

[தீ–தீவம்–தீபம்+குடி]

தீபமூட்டி *tipamūtti,* பெ.(n.) இந்தளக் கட்டை யின் மற்றோர் பெயர் ; name of the wood indaḷam.

[தூபம்+ஊட்டி]

தீயெறி சோறு *tiēricōru,* பெ.(n.) படையல் இடும் சோறு ; rice oblation.

[தீ+எறி+சோறு]

தீர்த்தக்காவடி *tirtta-k-kāvadi,* பெ.(n.) அழல் நாண்மீன் (அக்கினி நட்சத்திர) விழாவில் முருகனுக்கு ஊர் மக்கள் எடுக்கும் காவடி; kāvadi festival for god Murugan.

[தீர்த்தம்+காவடி]

தீர்த்தக்குடமெடு—,த்தல் *tirtta-k-kudamedu-,* 4 செ.கு.வி. (v.i.) பங்குனி உத்திர விழாவின் ஒரு கூறாக நீர்க்குடத்தை ஏந்துதல் (63:44); to hold water pot in panguni uttira procession.

[தீர்த்தம்+குடம்+எடுத்தல்]

தீவளூர் *tīvaḷūr,* பெ.(n.) திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vriddhachalam Taluk.

[ஒருகா. திருவள்ளூர்]

தீவனூர் *tīvaṉūr,* பெ.(n.) புளியங்காடு (திண்டிவனம்) வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[தீவன்+ஊர்]

துக்கிலிப்பூண்டு *tukkili-p-pūṇḍu,* பெ.(n.) மிகச் சிறிய பூண்டு; a small shrub. (கொ.வ.வ.சொ.).

[துக்குணி–துக்கிலி+பூண்டு]

துகங்கால் *tugaṅkāl,* பெ.(n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[துக்கன்+கால்]

துங்கம் *tuṅgam,* பெ.(n.) சிற்ப முத்திரையினுள் ஒன்று; a feature in sculpture.

[துங்கு+அம்]

துடி *tuḍi,* பெ.(n.) தாளத்தின் உறுப்புகளில் ஒன்று; a kind of tāḷam.

[துடு–துடி]

துடியலூர் *tuḍialūr,* பெ.(n.) கோயமுத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Coimbatore Taluk.

[துடி–துடியல்+ஊர்]

துடுக்கு *tuḍukku,* பெ.(n.) உடுக்கும் துடி எனும் இசைக் கருவியும் சேர்ந்து இசைக்கும் ஒலிப்பு; music produced both from uḍukku and tuḍi.

[துடு–துடுக்கு]

துடுப்பதி *tuḍuppadi,* பெ.(n.) ஈரோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Erode Taluk.

[துடு+பதி]

துடுப்பு அழுகல் *tuḍuppuaḻukal,* பெ.(n.) மீன்களுக்கு வரும் ஒரு வகை நோய்; finrot.

[துடுப்பு+அழுகல்]

துடுப்புக்கீரை *tuḍuppu-k-kīrai,* பெ.(n.) காட்டில் முளைக்கும் கீரை வகை; a kind of greens. (நெ.வ.வ.சொ.).

[துடுப்பு+கீரை]

துடுப்புநாரை *tuḍuppunārai,* பெ.(n.) நாரை வகையுள் ஒன்று; spoon bill.

[துடுப்பு+நாரை]



துடுப்புவாயன் *tuḍuppuvāyaṉ,* பெ.(n.) ஒரு வகை பறவை இனம்; spoon bill.

[துடுப்பு+வாயன்]

துடும்பு *tuḍumbu,* பெ.(n.) ஓர் இசைக்கருவி; a musical instrument.

[துடும் (ஒலிக்குறிப்பு) – துடும்பு]

துடுமை *tuḍumai,* பெ.(n.) தோலால் செய்யப்பட்ட பண்டைய இசைக்கருவி; an ancient musical instrument.

[துடும்பு–துடுமை]

துடைக்குழி *tuḍai-k-kuḻi,* பெ.(n.) தோற்ற வெற்றுக்குழி. (சென். வழக்கு).; a empty pit in indoor game plank.

[துடை(துடைத்த)+குழி]

துடைப்பச்சுழி *tuḍaippaccuḻi,* பெ.(n.) மாட்டின் வால் பகுதியில் இருக்கும் சுழி, தீமை பயக்கும் சுழி; a mark denoting bad omen on cow.

மறுவ. தீச்சுழி

[துடைப்பம்+சுழி]

துண்டம் *tuṇḍam,* பெ.(n.) எலும்பில்லாத பகுதி; fillet.

[துண்டு+அம்]

துண்டு பிடி-த்தல் *tuṇḍu-piḍi-,* 4 செ.கு.வி. (v.i.) ஒயிலாட்டம் ஆடுவோர் கையில் துண்டு ஏந்துதல் ; to hold hand kerchief in oyilaṭṭam folk dance.

[துண்டு+பிடி]

துண்டு மல்லிகைக் கதைப்பாடல் *tuṇḍu-malligai-k-kadaippāḍal,* பெ.(n.) கோவைப் பகுதி இருளர்களின் கதைப்பாடல்; a dialogue song of the Irulas of Coimbatore.

[துண்டு+மல்லிகை+கதை+பாடல்]

துண்டுமானியம் *tuṇḍumaniyam,* பெ.(n.) ஓமலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Omalur Taluk.

[துண்டு+மானியம்]

துன்னை *tuṉṉai,* பெ.(n.) ஆண்குறி ; male organ.

பட. துன்ணெ

[துன்-துன்னு-துன்னை]

துணிசிரமேடு *tuṇisiramēḍu,* பெ.(n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[துணி+சீர்+மேடு]

துணைப்பச்சை *tuṇai-p-pāccai,* பெ.(n.) பூப்பெய்திய பெண்ணுக்குத் துணையாக இருக்கும் பெண்ணுக்குப் பச்சை குத்திவிடும் முறை; tatooing the girl friend of the matured girl.

[துணை+பச்சை]

துத்தம் *tuttam,* பெ.(n.) எடுப்புக் குரலொலியாக வரும் ஏழிசையினுள் ஒன்று; a musical note.

[தூ-தூத்தம்-துத்தம்]

துத்திக்காடு *tuttikāḍu,* பெ.(n.) வேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in VelloreTaluk.

[துத்தி(செடி)+காடு]

துத்தாரி *tuttāri,* பெ.(n.) ஊதும் இசைக்கருவி கருவி; a wind musical instrument.

[துத்(ஒலிக்குறிப்பு)துத்தாரி]

துத்திக்குளம் *tuttikkulam,* பெ.(n.) நாமக்கல் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Namakkal Taluk.

[து(த்தி+குளம்]

துதியணி *tudiyaṇi,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[துதி+அணி]

துந்துபி *tuṇḍubi,* பெ.(n.) உறுமியின் வேறு பெயர்; musical instrument tundubi.

[தும்+துமி]

துப்பகூளி *tuppakuḷi,* பெ.(n.) கழுகு போன்ற கதிர்; eagle ray.

[துப்பம்+கூளி]

தும்பிப்பாடி *tumbi-p-pāḍi* பெ.(n.) ஓமலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in ōmalur Taluk.

[தும்பி(யானை)+பாடி]

தும்பிட்டிக்காய் *tumbiṭṭi-k-kai,* பெ.(n.) கசப்புச் சுவையுடைய காட்டுக் காய் வகை; a bitter unriped fruit.

[தும்மட்டி+காய்]

தும்பித்துள்ளல் *tumbi-t-tuḷḷal,* பெ.(n.) காணிப் பழங்குடியினர் ஆடும் ஆடல்; a folk dance of Kāṇi community.

[தும்பி+துள்ளல்]

தும்பித் தேர்வு *tumbi-t-tērvu,* பெ.(n.) தும்பித் துள்ளலில் துள்ளுவதற்காகத் தேர்ந்தெடுக்கப் படும் ஆண் அல்லது பெண்; selected male or female for the play tumbi-t-tuḷḷal.

[தும்பி+தேர்வு]

தும்பிலி *tumbili,* பெ.(n.) பல்லி போன்ற மீன் ; lizard fish.

[தும்பு–தும்பிலி]

தும்பு[1] *tumbu,* பெ.(n.) மாடுகளைக் கட்டப் பயன்படும் கழுத்துக் கயிறு ; a small rope tied around the neck of cattle.

[துள்–துண்டு–தும்பு]

தும்புத்துளை *tumputtuḷai,* பெ.(n.) நுகத் தடியில் தும்பு மாட்டும் துளை;hole in the yoke.

[தூம்பு–தும்பு+துளை]



தும்பூர் *tumbūr,* பெ.(n.) போளூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Polur Taluk.

[தூம்பு+ஊர்]

தும்பேரி *tumbēri,* பெ.(n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruppattur Taluk.

[தூம்பு+ஏரி]

துரட்டு *turaṭṭu,* பெ.(n.) மூங்கில் குச்சியில் காய்களைப் பறிக்க கட்டியிருக்கும் கொக்கி; a hook fixed at the end of a bamboo pole.

மறுவ. தொரட்டி

[துர+துரட்டு]



துரப்பமை ஆணி *turappamaiāṇi,* பெ.(n.) யாழின் உறுப்பு; a part of harp.

[துரப்பு+அமை+ஆணி]

துரவை *turavai,* பெ.(n.) விழுப்புரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Villupuram Taluk.

[துரவு(கிணறு)–துரவை]

துரிஞ்சல் *turiñjal,* பெ.(n.) சிறிய வகை வௌவால் இனங்களில் ஒன்று ; a kind of bat which is in small size.

[துரிஞ்சி (மரம்) – துரிஞ்சில்]

துரிஞ்சில் *turiñjil,* பெ.(n.) காற்று அடுப்பு வகை; air oven.

துருங்கூர் *turuṅgūr,* பெ.(n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakurichi Taluk.

[துரிஞ்சல்–துருங்கு+ஊர்]

துருஞ்சாபுரம் *turuñjāpuram,* பெ.(n.) திருவண்ணாமலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvannamalai Taluk.

[துரிஞ்சை+புரம்]

துருத்தி[1] *turutti,* பெ.(n.) பொம்மலாட்டத்தில் பயன்படுத்தப்பட்ட ஓர் இசைக்கருவி; a music accompaniment in puppet show.

[துரு–துருத்தி]

துருத்தி[2] *turutti,* பெ.(n.) காற்று அடிக்கும் கருவி; a wind blower.

[துரு–துருத்தி]

துரும்பன் *turumban,* பெ.(n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[துரு(செம்மறி)–துரும்பன்]

துருவை *turuvai,* பெ.(n.) விழுப்புரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Villupuram Taluk.

[துரு–துருவை]

துல்லிகை *tulligai,* பெ.(n.) வழக்கற்றுப்போன ஓர் இசைக்கருவி; a musical instrument not extant.

[துல்–துல்லிகை]

துவரடிமனை *tuvaraḍimaṉai,* பெ.(n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantāngi Taluk.

[துவரை+அடி+மனை]

துவரிமான் *tuvarimāṉ,* பெ.(n.) மதுரை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurai Taluk.

[துவரை(செந்நிறம்)+மான்]

துவார் *tuvār,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadānai Taluk.

[துவல்(செம்மண்)–துவார்]

துவைமுக வடிவம் *tuvaimugavaḍivam,* பெ.(n.) இரண்டு திருமுகங்களைக் கொண்ட வடமொழி சிற்பம் ; a statue with two faces.

[துவை+முக+வடிவம்]

துவைக்கடை *tuvai-k-kaḍai,* பெ.(n.) யாழின் ஓர் உறுப்பு ; a part of harp-yāḷ

[துவை+கடை]

துள்ளல் அடைவு *tuḷḷal-āḍaivu,* பெ.(n.) அரைமண்டியில் இருந்து குதிகால் இரண்டும் தொடையில் படும்படித் துள்ளியாடுதல்; a dance feature.

[துள்ளல்+அடைவு]

துள்ளல் *tuḷḷal,* பெ.(n.) காணிப்பழங்குடியினர் ஆடல் ; a folk dance performed by peole of Kāni community.

[துள்ளு+அல்]

துளசிலம்மா கதைப்பாடல் *tuḷacilammā-kadaippāḍal,* பெ.(n.) கோவைப் பகுதி இருளர்களிடம் புழக்கத்தில் உள்ள ஒரு கதைப்பாடல்; a dialogue combined song of the Irulas of Coimbatore.

[துளசில்+அம்மை+கதை+பாடல்]

துளைச் சிறுதாரை *tuḷai-c-ciṟutārai,* பெ.(n.) ஒரு வகையான இசைக்கருவி; a musical instrument.

[துளை+சிறு+தாரை]

துளைமேழி *tuḷaimēḻi,* பெ.(n.) கைப்பிடியில் துளையிட்டிருக்கும் மேழி ; wodden hand hold of plough with hole.

[துளை+மேழி]

துஞ்சம் *tuñjam,* பெ.(n.) செங்கற்பட்டு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chengelpet Taluk.

[துஞ்சை– துரிஞ்சல்–துரிஞ்சை+துஞ்சம்]

துள்ளுகெண்டை *tuḷḷukkeṇḍai,* பெ.(n.) கெண்டை மீன் ; thread brean.

[துள்ளு+கெண்டை]



துளைக்கும் புழு *tulaikkumpulu,* பெ.(n.) துளை இடும் பூச்சி ; boring worm.

[துளைக்கும்+புழு]

துன்னற்காரர் *tunnarkārar,* பெ.(n.) ஆடைகளைத் தைப்பவர்; tailor.

[துன்னல்+காரார]

துன்னுதல் *tunnu-,* செ.குன்றாவி. (v.t.)
1. நிலத்தை உழுதல்; to till the land.
2. தின்னுதல் ; to eat.

தெ. துன்னு

[துன்(உட்செலுத்து)–துன்னு]

தூக்காய் *tūkkāy,* பெ.(n.) பல்லாங்குழி யாட்டத்தில் தோற்று நிரப்பப்படாத வெற்றுக் குழியில் அடுத்தவர் மறந்து தவறுதலாகப் போடும் காய். (திருச்சி); empty pit in pāllankuli game filled by some one by mistake.

[தூக்கு+காய்]

தூக்குக் குண்டு *tūkkukkundu,* பெ.(n.) தூக்குக் கட்டையில் மட்டம் பார்க்கும் குண்டு ; a weight verifier.

[தூக்கு+குண்டு]



தூக்குக் கூடை *tūkku-k-kūdai,* பெ.(n.) காய்களை எலி கடிக்காமல் கயிற்றில் தொங்க வைக்கும் கூடை; a hang-basket to save the input from the damage of rats.

[தூக்கு+கடை]

தூக்குப்போகி *tūkku-p-pōgi,* பெ.(n.) கையில் பிடிக்கும் வளையம் உடைய ஏனம்; a vessel with ring.

[தூக்கு+போகி]

தூங்கல் ஓரியார் *tūngal ōriyār,* பெ.(n.) கடைகழகப் புலவர்; a poet of Sangam age.

[தூங்கல் (மலை)+ஓரியார்]

தூங்காவி *tūngāvi,* பெ.(n.) உடுமலைப்பேட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Udumalpet Taluk.

[தூங்கு(நீளம்,ஆழம்)+ஆவி(குளம்)]

தூங்குணி பிடி–த்தல் *tūngunipidi-,* 4 செ.கு.வி. (v.i.) முக்குவர் இனத்தில் குழந்தைகள் நோய் பிடித்தாற் போல் இருத்தல்; to appear of Mukkuva children as if affected by disease.

[தூங்குணி+பிடி]

தூக்கி *tūkki,* பெ.(n.) நொண்டி விளையாட்டில் சொல்லப்படும் சொல் ; a word used in limping play by the children.

[தூக்கு–தூக்கி]

தூங்கலார் *tūngalār,* பெ.(n.) தழும்பனைப் பாடிய புலவரின்பெயர்; name of sangam poet.

[தூங்கல் (மலை)+ஆர்]

தூங்கெயில் *tūngeyil,* பெ.(n.) தொடிதோள் செம்பியனால் வெல்லப்பட்ட உயரம் மிகுந்த நெடுங்கோட்டை ; very high fort conquered by the Chola king Toditōl cembiyan.

[தூங்கு(உயரம்)+எயில்(கோட்டை)]

தூண்டிலார்கழகம் *tūndilārkalagam,* பெ.(n.) தூண்டில் போடுவோருக்கான கழகம்; angler's club.

[தூண்டில்+ஆர்+கழகம்]

தூண்டில்முள் *tūndilmul,* பெ.(n.) மீன் பிடிக்கும் தூண்டிலில் உள்ள கொக்கி ; hook.

[தூண்டில்+முள்]

தூத்துக்கூடை *tūttukkūḍai,* பெ.(n.) எள் போன்றவற்றில் உள்ள குப்பையைத் தூற்று வதற்குப் பயன்படும் கூடை; winnowing basket.

[தூற்று+கூடை - தூற்றுக்கூடை - தூத்துக் கூடை (கொ.வ)]

தூதை *tūdai,* பெ.(n.) சிவகங்கை வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[துதை-தூதை]

தூபமூட்டி *tūbamūṭṭi,* பெ.(n.) இந்தளக் கட்டையின் மற்றோர் பெயர் ; other name of the wood indalam.

[தூபம்+ஊட்டி]

தூம்பா *tūmbā,* பெ.(n.) கழிவு நீர்க் கால்வாய், சாக்கடை ; drainage.

[தூம்பு-தூம்பா மண்ணால் செய்த வடி குழாய்]

தூம்பி *tūmbi,* பெ.(n.) செங்குத்தாக மேலே எழும்பி இறங்க வல்ல திருகு வானூர்தி ; helicopter.

[தூம்பு - தூம்பி]

தூம்பு *tūmbu,* பெ.(n.) மூங்கிலாற் செய்யப்பட்ட குழற்கருவி; a kind of musical instrument.

[தூ-தூம்பு]

தூமன் *tūmaṉ,* பெ.(n.) கொடியவன் ; evil person.

[தீ-தீயன்-தீமன்-தூமன் (கொ.வ.)]

தூய தைவதம் *tūyataivadam,* பெ.(n.) மென் பண் (சுர) வகை; a melody type.

[தூய+தைவதம்]

தூய பட்டு *tūya paṭṭu,* பெ.(n.) கலப்படம் இல்லாத பட்டுநூலால் நெய்த பட்டாடை ; pure silk.

[தூ-தூய+பட்டு]

தூய பட்டாடை உடுத்தால் வியர்க்காது. கோடையில் தணுப்பும் குளிர் காலத்தில் வெதுப்பும் தரும். தூய பட்டுத் துணியை எரித்தால் புகை நாற்றம் தந்து கரிந்த மண்டியாகும், வெண்சாம்பல் ஆகாது என்பர்.

தூர் எடு-த்தல் *tūr eḍu-,* பெ.(n.) தூய்மைப் படுத்தல்; to desilt.

[தூர்+எடு]

தூர்வை *tūrvai,* பெ.(n.) பல்லாங்குழியில் தோற்று நிரப்பப்படாத வெற்றுக் குழிக்குப் புதுக் கோட்டையில் வழங்கும் பெயர்; empty pit in pallankuḷi indoor game of Pudukottai.

[தூர்-தூர்வை]

தூரியம் *tūriyam,* பெ.(n.) ஓர் இசைக்கருவி; a kind of musical instrument.

[தூர்-தூரியம்]

தூரிகை *tūrigai,* பெ.(n.) தூரிகையைப் பற்றிக் கூறும் சிற்ப நூல்; a treatise which deals with making tūrikai.

[தூரிகை > Skt. தூரிகா]

தூரிகை *tūrigai,* பெ.(n.) தூசு துடைக்கும் கருவி; brush.

[தூர்-தூரிகை]

தூரி வலை *tūrivalai,* பெ.(n.) மீன் பிடிக்கும் வலையுள் ஒன்று ; trawl net.

[தூர்-தூரி]

தூவக்கால் *tūvakkāl,* பெ.(n.) சாம்பிராணி காட்டப் பயன்படும் கருவி ; perfume stand.

[தூவம்+கால்]

தூவல் *tūval,* பெ.(n.) எழுதுமை கோல் ; ink pen.

[தூவி-தூவல்]

பண்டைக் காலத்தில் இறகுக் கட்டை எழுது கோலாகப் பயன்பட்டதால் 'தூவல்' எனப் பெயர் பெற்றது.



தூவாச்சி *tūvācci,* பெ.(n.) விளையாட்டினை இடையில் நிறுத்த சொல்லப்படும் சொல்; a word uttered to stop the game.

[தூவு+(ஆற்று)ஆத்து-ஆச்சி]

தூவிடு-தல் *tūviḍu-,* செ.கு.வி.(v.i..) சிறுவர் சண்டை முடிவில் இனி ஒருவரோடொருவர் பேசுவதில்லை என்பதைக்குறிப்பிடக் குறிப் பாகச் சொல்லும் சொல் ; a term used to denote unwillingness to speak with each other at the end of a quarrel among children. அவன் என்னோடு தூ(டு) விட்டு விட்டான் (உ.வ.)

மறுவ. காய் விடுதல்.

[தூ+விடு- இது 'டு' விடுதல் எனத் திரிந்தது]

தெக்கத்தி நையாண்டி இசை *tekkatti, naiyāṇḍiisai* பெ.(n.) நையாண்டியிசையின் ஒரு கூறு; a type of naiyandi music concert.

[தெற்கு+அத்தி+நையாண்டி+இசை]

தெக்கத்தித்தெம்மாங்கு *tekkatti-t-temmāṅgu,* பெ.(n.) தென்பாண்டிச் சீமையில் பாடப்பெறும் தெம்மாங்கு வகை; a folklore of southern tip of Tamilnadu.

[தெற்கு+அத்தி+தெம்மாங்கு]

தெகை *tegai,* பெ.(n.) உறுதி, இறுதி நிலை; a final settlement of bargain. "மாடு விலை தெகைஞ்சாச்சு" (பே.வ.).

[திகை-தெகை]

தெங்காஞ்சி *teṅgāñji,* பெ.(n.) திடுமெனத் தோன்றல், எதிர்பாரா காட்சி ; sudden and unexpected appearance .அவன் தெங் காஞ்சியாக வந்தான் (வடார்க்)

[தீம்-தேம்-தெம்+(காட்சி)-காஞ்சி (கொ.வ.)]

தெங்கால் *teṅgāl,* பெ.(n.) வாலாசா வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Walajah Taluk.

[தென்+கால்]

தெங்கு திட்டு *teṅgu-tiṭṭu,* பெ.(n.) கருநாடகத் தெருக்கூத்தின் ஒரு வகைப் பாணி; a kind of street dance of Karnātaka.

[தெங்கு+திட்டு]

தெத்தி *tetti,* பெ.(n.) நாகபட்டினம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Nagapattinam Taluk.

[தெற்றி(திட்டு)-தெத்தி]

தெப்பக்கட்டை *teppa-k-kaṭṭai,* பெ.(n.) மிதக்கப் பயன்படுத்தும் கட்டை; floating block of timber.

மறுவ: மிதப்புக்கட்டை

[தெப்பம்+கட்டை]

தெப்பக்குளம் *teppakkuḷam,* பெ.(n.) ஒரு வகையான பச்சைக்கோலம்; a kind of green 'kolam'.

[தெப்பம்+குளம்]

தெப்பெடுத்தல் *teppeḍu-,* தொ.பெ. (vbl.n.) 'தத்தெடுத்தல்' என்பதனைக் குறிக்கும் கதைப்பாடல் சொல்; a word used in folklore.

[தெப்பு+எடுத்தல்]

தெம்மாங்கு *temmāṅgu,* பெ.(n.) நாட்டுப்புறப் பாடல் வகைகளுள் ஒன்று; a kind of folklore.

[தெம்+பாங்கு]

தெம்மாடி *temmāḍi,* பெ.(n.) கோழை, அறிவில் லாதவன்; coward. (நெ.வ.வ. சொ.).

[தன்பாடு-தம்பாடு-தெம்மாடு-தெம்மாடி]

தெய்யார் *teyyār,* பெ.(n.) வந்தவாசி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Wandiwash Taluk.

[தெய்+ஊர்-தெய்யூர்-தெய்யார்]

தெய்வத்தை வருத்து-தல் *teyvattaivaruttu-,* செ.கு.வி. (v.i.) வில்லுப்பாட்டின் தொடக் கத்தில், தெய்வத்தை அழைத்தல்; to invoke

deities in folklore villuppāṭṭufor open as a opening song.

[தெய்வம்+அத்து+ஐ+வருத்து]

தெய்வப் பிறவி *teyva-p-piṟavi,* பெ.(n.) வில்லுப்பாட்டில் ஆண், பெண் தெய்வங்களின் வரலாற்றைச் சொல்லும் முறை; a method in villuppāttu to narrate the history of male andfemale deities.

[தெய்வம்+பிறவி]

தெய்வமுறுதல் *teyvamuṟu-,* தொ.பெ. (vbl.n.) வில்லுப்பாட்டின் ஒரு கூறு; a part of villu-p-pāṭṭuinfolklore.

[தெய்வம்+உறுதல்]

தெய்வமேறி ஆடல் *teyvamēṟiāḍal,* பெ.(n.) தன்னுள் தெய்வமேறிய நிலையில் ஒருவன் ஆடுகின்ற ஆடல் ; dancing of a person possessed by a diety.

[தெய்வம்+ஏறி+ஆடல்]

தெய்விகம் *teivigam,* பெ.(n.) சிற்பங்களை அமைப்பதில் உள்ள அளவு முறை; a measurement in making a sculpture.

[தெய்வம்-தெய்வீகம்]

தெய்வேந்திரி *teyvēndri,* பெ.(n.) திருவில்லிப் புத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Srivilliputtur Taluk.

[தெய்வம்+(ஏந்தல்) ஏந்திலி-ஏந்திரி (கொ.வ.)]

தெரங்கண்ணி *teraṅgaṇṇi,* பெ.(n.) தூண்டில் முள்ளில் வைக்கப்படும் இறை; bait.

[திரள்+கண்ணி]

தெரட்டை *teraṭṭai,* பெ.(n.) வௌவால் மீன் ; bat fish.

[தெரள்-தெரட்டை]

தெரணை *teraṇai,* பெ.(n.) அறுந்து போன இழை; cut off thread.

[தெரள்-தெரணை]

தெரவல் *teraval,* பெ.(n.) திறவுகோல் (சாவி); key (நெ.வ.சொ.).

[திறவல்-தெரவல், (கொ.வ.)]



தெரிகுச்சி *terikucci,* பெ.(n.) விழுது கயிற்றை இழுத்துக் கட்டும் குச்சி ; a stick used to unite the rope.(ம.வ.தொ.89).

[தெரி+குச்சி]

தெரிநிலை *tērinilai,* பெ.(n.) ஒற்றை முத்திரை நிலையின் ஒரு பிரிவு ; a dance pose.

[தெரி+நிலை]

தெருட்டல் *teruṭṭal,* பெ.(n.) இசைக்கரணத் தின் ஒரு வகை; a type in musical performance.

[தெருள்-தெருட்டு+அல்]

தெல்லுக்காய் *tellu-k-kāy,* பெ.(n.) தெல்லுக் காய் கொண்டு ஒளிந்து விளையாடுதல்; a hide and seek game.

[தெல்லு-காய்]

தெலக்கம்வை-த்தல் *telakkamvai-,* செ.கு.வி. (v.i.) மரம் அறுக்கும் வாளின் பல் வரிசையில் ஒன்றின் கூர்மை இடசாய்வாகவும் அடுத்த பல்லின் கூர்மை வலசாய்வாகவும் வைக்கப் படும் விலக்கம்; shaping the filing system in a saw.

[தெலக்கம்-வை]

தெலக்கு-தல் *telakku-,* செ.குன்றாவி. (v.t.) வழியில் நிற்கும் ஒருவரை ஒதுக்குதல்; to make way by clearing the tresspassers on the road.

[தில-தெல-தெலக்கம்]

தெலக்கம் *telakkam,* பெ.(n.) விலக்கம்; removal, giving space in between.

[திலக்கு-தெலக்கம்]

தெலகு-தல் *telagu,* செ.கு.வி. (v.i.) விலகுதல்; move, get away.

[துலகு-திலகு]

தெள்ளாரி *teḷḷāri,* பெ.(n.) பெண்களைப் பகடி செய்து கொண்டு ஊர் சுற்றும் இளைஞன். (கொ.வ.வ.சொ.). ; an youngster who goes on teasing girls toitering casanova.

[தெள்ளல்+ஆரி]

தெள்ளுப்பூச்சி *teḷḷuppūchi,* பெ.(n.) வண்டின் ஒரு வகை; a kind of bee.

[தெள்ளு+பூச்சி]

தெள்ளூர் *thellur,* பெ.(n.) வேலூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Vellore Taluk.

[தெள்+ஊர்]

தெளி *teḷi,* பெ.(n.) விழுப்புரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Villupuram Taluk.

[தளி-தெளி]

தெளிந்த வலை *teḷintavalai,* பெ.(n.) அகல மான கண்கள் உள்ள வலை; a net with large holes.

[தெளி-தெளிந்த+வலை]

தெளுவு *teḷuvu,* பெ.(n.) பதநீர்; tender palm juice.

[தெள்-தெளுவு]

தெற்கத்தி மெட்டு *teṟkattimeṭṭu,* பெ.(n.) தென்னாட்டுத் தெருக்கூத்தில் காணப்படும் மெட்டு வகை; a rythm in street drama.

[தெற்கு+அத்தி+மெட்டு]

தெற்குகூடலி *theṟkukūḍali,* பெ.(n.) பரமக்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Paramakkuḍi Taluk.

[தெற்கு+கூடல்+இ]

தெற்றி *teṟṟi,* பெ.(n.) மகளிர் விளையாட்டு (புறம்-53); a game of young women.

[தெற்று+இ]

தெறிப்பு *teṟippu,* பெ.(n.) மரம், பலகை போன்ற வற்றில் பிளவு; crevice in a wooden plank or rafter.

[தெறி-தெறிப்பு]

தென்பாங்கு *teṉpāṅgu,* பெ.(n.) தென் பகுதியில் வாழும் மக்கள் பெரும்பாலும் பாடுகின்ற பாடல் வகை; a southern type of melodious folk song.

மறுவ. தெம்மாங்கு

[தென்+பாங்கு]

தென்முனைக் கண்டம் *teṉmuṉai-k-kaṇḍam,* பெ.(n.) நிலவுருண்டையின் தென் முனைப் பகுதி; Antartica.

[தென்+முனை+கண்டம்]

தென்னந்தடுக்கு *teṉṉa-n-taḍukku,* பெ.(n.) தென்னை ஓலையால் பின்னப்பட்ட கீற்று; a side screen made of coconut leaves.

[தென்னை+தடுக்கு]

தென்னை மரத்து விளையாட்டு *tenai-marattuviḷayāṭṭu,* பெ.(n.) காலில் குழந்தை யினை வைத்து ஆடும் விளையாட்டு; a play sitting the child on the fore-leg.

[தென்னை+மரத்து+விளையாட்டு]

தென்னங்குளி *teṉṉanguḷi,* பெ.(n.) ஒரு வகை மீன்; a kind of fish.

[தென்னம்+(குள்ளி)குளி]

தெனாவட்டு *teṉāvaṭṭu,* பெ.(n.) தினவாட்டு பார்க்க; see tiṉavāṭṭu.

[தினவாட்டு - தெனாவட்டு]

தேக்கநிலை *tēkkanilai,* பெ.(n.) தேங்கிய நீர்; stagnant water.

[தேக்கம்+நிலை]

தேக்கித் தள்ளு-தல் *tēkki-t-taḷḷu-,* 6 செ.குன்றாவி.(v.t.) குண்டினைக் கையை அல்லது காலினை மடக்கிக்கொண்டு தள்ளுதல்; to push away a ball with the knee or elbow.

[தேக்கி+தள்ளு-]

தேக்கு-தல் *tēkku-,* 6 செ.கு.வி.(v.i.) நகர்தல்; to move with a little pause.

[துக்கு-தெக்கு-தேக்கு]

தேங்காத்தொட்டி *teṅkā-t-toṭṭi,* பெ.(n.) தேங்காய் மூடி; one part of the coconut-shell.

[தேங்காய்+தொட்டி]

தேங்காய் உடைத்தல் *tēnkāy uḍaittal,* தொ.பெ. (vbl.n.) கரகாட்டக் கலைஞர் நிகழ்த்தும் ஒரு திறம்சார் விளையாட்டு; a skillful play of the folklorists in karagam play.

[தேங்காய்+உடைத்தல்]

தேங்காய்நார்புல் *tēngāinārpul,* பெ.(n.) புல் வகை; a kind of grass.

[தேங்காய்+நார்+புல்]

தேங்காய்ப்போர் *tēṅkāy-p-pōr,* பெ.(n.) இரண்டு தேங்காய்களை உருட்டி ஒன்றுட னொன்று மோத விடுதல்; making coconuts to dash with each other with force.

[தேங்காய்+போர்]

தேடாக்கி *tēḍākki,* பெ.(n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[தோடு-தேடு+ஆக்கி]

தேய்புரிபழங்கயிற்றனார் *tēypuri-paḻaṅ kayiṟṟaṉār,* பெ.(n.) கடைக்கழகப் புலவர்; a poet of sangam age.

தேர்ச் சிற்பாசாரிகள் *tēr-c-ciṟpāsārikaḷ,* பெ.(n.) கம்மாளர் இனத்திலுள்ள ஒரு பிரிவினர்; a sub caste of Kammālar.

[தேர்+சிற்பம்+ஆசாரிகள்]

தேர்நூல் *tērnūl,* பெ.(n.) தேர் செய்யும் முறை களைக் கூறும் நூல்; a treatise on chariot making. நீளியல் நெடுந்தேர் (அகம்.234) நூலமை சிறப்பின் வாமான் திண்தேர். (அகம்.400)

[தேர்+நூல்]

தேர்வகச்சீட்டு *tērvagacciṭṭu,* பெ.(n.) தேர்வு எழுதும் மாணவர்க்கு வழங்கும் புகவுச்சீட்டு; hall ticket.

மறுவ. நுழைவுச்சீட்டு

[தேர்வு+அகம்+சீட்டு]

தேர்ப்புரை *tērppurai,* பெ.(n.) கொம்பு முறி விளையாட்டில் இரு சாராரும் உருவாக்கு கின்ற தேர்களை வைக்கும் கூடம் ; a common place station to place temple cars of two groups.

[தேர்+புரை]

தேர்பாவுக் குச்சி *tērpāvu-k-kucci,* பெ.(n.) நூல் இழைத்தலின் பயன்படுத்தப்படும் கருவி; a device in weaving.

[தேர்+பாவு+குச்சி]

தேர்போகி *tēr-pōgi,* பெ.(n.) இராமநாதபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ramanathapuram Taluk.

[தேர்+போகி]

தேர்வளி *tērvaḷi,* பெ.(n.) பொன்னேரி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Ponneri Taluk.

[தேர்+வழி]

தேர்வாய் *tērvāy,* பெ.(n.) பொன்னேரி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Ponneri Taluk.

[தேர்+வாய்]

தேரம் *tēram,* பெ.(n.) நேரம்; time. (நெ.வ. வ.சொ.).

[நேரம்-தேரம்(கொ.வ.)]

தேரிக்காட்டான் *tēri-k-kāṭṭāṉ,* பெ.(n.) பாலைவனப் பகுதியில் வாழ்பவன் ; one who dwells in desert like place.

[தேரி+காடு+ஆன்]

தேரிவிளை *tērviḷai,* பெ.(n.) அகத்தீசுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[தேரி+விளை(மிளை)]

தேவகோட்ட தோரணங்கள் *tēvakōṭṭa-tōraṇaṅgaḷ,* பெ.(n.) சோழர் காலக் கோயில்களில் சிற்பங்கள் உள்ள இடம்; a place where the Chola period sculptures are preserved.

[தேவர்+கோட்டம்+தோரணங்கள்]

தேவதாசிகள் *tēvadāsigaḷ,* பெ.(n.) கோயில் தெய்வத்தின் முன் பரதம் ஆடுபவர்; dancing women in temples.

மறுவ. தேவரடியார்

[தேவ+தாசிகள்]

தேவதாரு[1] *tēvatāru,* பெ.(n.) மரத்தாலான சிற்பங்கள் செய்யப் பயன்படும் மர வகை; wood variety used to make chariots.

[துவை+தாரு]

தேவதாரு[2] *tēvatāru,* பெ.(n.) மருந்துக்குப் பயன்படும் மரம் ; a tree of medical use.

[தேவை+தாரு]

தேவ துந்துமி *tēvadundumi,* பெ.(n.) தேவராட்டத்தில் இடம் பெறும் "உறுமி" எனும் இசைக் கருவி; urumi, a musical instrument.

[தேவன்+துந்துமி]



தேவரடியார் *tēvaraḍiyār,* பெ.(n.) கோயில்களில் பரதம் ஆடும் பெண்கள்; temple dancers.

[தேவர்+அடியார்]

தேவராட்டம் *tēvarāṭṭam,* பெ.(n.) கம்பளத்து நாயக்கர் ஆடும் ஆட்டம்; a folk dance.

[தேவர்+ஆட்டம்]

தேவராட்டி *tēvarāṭṭi,* பெ.(n.) குரவைக் கூத்தாடும் பெண்டிர்; dancer of kuravai dance.

[தேவர்+ஆட்டி]

தேவராளன் *tēvarāḷaṉ,* பெ.(n.) குரவைக் கூத்தாடும் ஆடவர்; male dancer *of kuravai.* (6:120).

[தேவர்+ஆளன்]

தேவாசனம் *tēvācānam,* பெ.(n.) தேர்ச் சிற்பத்திற்கு முறையாகப் பூசை புரிவோர்க் குரிய பங்கு; a traditional share for the priests who perform ritual to a temple car sculptures.

[தேவர்+அசனம்]

தேவானந்தல் *tēvanandal,* பெ.(n.) திருவண்ணாமலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvannamalai Taluk.

[தேவன்+ஏந்தல்]

தேளி[1] *teḷi,* பெ.(n.) அருப்புக்கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[தெள்–தெள்ளி–தேளி]

தேளி[2] *tēḷi,* பெ.(n.) ஒரு வகை மீன்; a kind of fish.

[தேள்–தேளி]

தேற்றான்கொட்டை *tēṟṟāṉkōṭṭai,* பெ.(n.) உடல் நோய்களுக்கு மருந்தாகப் பயன்படும் மரம்; a tree of medical use.

[தேற்று–தேற்றான்+கொட்டை]

தேன்மெழுகு முறை *tēṉmeḻugumuṟai,* பெ.(n.) செப்புப் படிமங்கள் செய்யும் முறை

களில் ஒன்று; a method of making bronze statues.

[தேன்+மெழுகு+முறை]

தை நோம்பி *tainōmbi,* பெ.(n.) பொங்கல் பண்டிகை. (கொ.வ.வ.சொ.).

[தை+நோன்பு–நோம்பி (கொ.வ.)]



தையல் குருவி *taiyalkuruvi,* பெ.(n.) ஒரு வகை குருவி இனம்; a kind of sparrow.

[தையல்+குருவி]

தைலக்காப்பு *taila-k-kāppu,* பெ.(n.) கரு வறையில் அமைந்துள்ள சுதைச் சிற்பங் களுக்குச் செய்யப்படும் காப்பு; embalming ointment for the conservation of wooden or concrete statues.

[தைலம்+காப்பு]

தைவரல் *taivaral,* பெ.(n.) பண்ணின் சுரங்களை ஆறுசுருதியுடன் அழகுறப் பாடுதல்; singing perfectly.

[தை+வா]

தைவரல் எழால் *taivaralelāl,* பெ.(n.) ஒரு இசை வகைக்குரிய எழால் ; a musical note.

[தைவரல்+எழால்]

தொக்கம் *tokkam,* பெ.(n.) பல்லாங்குழியில் தேவையான கற்களைப் பெறாவிடின் துரும் பினை எடுத்துப்போடுதல்; a playing method in palankuli game.

[தொக்கு–தொக்கம்]

தொக்கடவு *tokkaḍaivu,* பெ.(n.) அடவு முறை களில் ஒன்று; a stepping method in dance.

[தொக்கு+அடைவு]

தொக்கு *tōkku,* பெ.(n.) 1. காரணம், சாக்கு ; excuse, pretex. 2. இளக்காரம் ; laxity state. நான் என்றால் எல்லாருக்கும் தொக்காப் போச்சு.(பே.வ.)

[தொள்கு–தொக்கு]

தொங்கல் *toṅgal,* பெ.(n.) பாடலில் அமையும் தனிச்சீர், சொற்சீர் போன்றவற்றைக் குறிக்குஞ் சொல்; metric gradation in prosody.

[தொங்கு+கல்]

தொங்கல் *toṅgal,* பெ.(n.) அடிமுந்தி; border.

[தொங்கு–தொங்கல்]

தொங்கலில் விடு–தல் *toṅgalil-viḍu-,* 8 செ.கு.வி. (v.i.) 1. ஏமாற்றத்தில் விடுதல்; to deceive. 2. இணைந்திருந்து இடையிலேயே விட்டுவிடுதல்; to omit in the middle.

[தொங்கலில்+விழு]

தொங்கன் *toṅkaṉ,* பெ.(n.) தொங்கவிடும் கொக்கி; hanger.

[தொங்கு–தொங்கன்]

தொங்குக் கம்பி *toṅgu-k-kambi,* பெ.(n.) பேட்டு அட்டையில் அடியில் உள்ள ஒரு சாண் கம்பி ; a string in loom.

[தொங்கு+கம்பி]

தொங்குமதி *toṅgumadi,* பெ.(n.) திருவா டானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[தூங்கு+மடி]

தொட்டுத் தொட்டாட்டம் *toṭṭu-t-toṭṭāṭṭam,* பெ.(n.) தொடுபவன் தான் தொட்ட பாகத்தைப் பிடித்துக்கொண்டு ஓடுதல்; a sport.

[தொட்டு+தொட்டு+ஆட்டம்]

தொட்டாணி *toṭṭāṇi,* பெ.(n.) ஈரோடு வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Erode Taluk.

[தோடு+அணி]

தொட்டில் பாடல் *toṭṭil-pāḍal,* பெ.(n.) தாலாட்டுப் பாடலில் ஒரு பிரிவு; variety of lullaby.

[தொட்டில்+பாடல்]

தொட்டிய நாயக்கர் *toṭṭiyanāyakkar,* பெ.(n.) இராமநாதபுரம், திண்டுக்கல் மாவட்டங்களில் வாழும் கம்பளத்து நாயக்கரைச் சுட்டும் பெயர்; a community name in Ramnad Tindukkal districts.

[தொட்டியம்+நாயக்கர்]

தொட்டு விளையாட்டு *toṭṭuviḷaiyāṭṭu,* பெ.(n.) பட்டவரை (தோற்றவரை) பாடல் மூலம் தேர்ந்தெடுப்பது; pointing the defeat through song.

[தொட்டு+விளையாட்டு]

தொட்டு *toṭṭu,* பெ.(n.) காய்கறிகளின் மேற் புறத்தில் காம்பை ஒட்டியுள்ள பகுதி; a stalk portion of vegetable. (கொ.வ.வ.சொ.).

மறுவ. தோடு

[தோடு–தொட்டு]

தொடக்கு–தல் *toḍakku-,* 3 செ.கு.வி.(v.t.) இயந்திரம் போன்றவற்றை முதலில் இயக்கச் செய்தல் ; to start machine or engine.

[தொடு–தொடக்கு]

தொடக்கு *todakku,* பெ.(n.) இயந்திரம் போன்றவற்றில் தொடக்க இயக்கம் ; starting as of an engine. இந்தப் பேருந்து தொடக்கு ஆகவில்லை.

[தொடு–தொடக்கு]

தொடந்தனூர் *toḍandaṉūr,* பெ.(n.) விழுப்புரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Villupuram Taluk.

[தொடந்தன்+ஊர்]

தொடர் உறு சுற்றுகையாட்டம் *todar urucurruga:yāṭṭam,* பெ.(n.) பாடலுக்கு ஆடி முடித்த பின், மாற்றத்திற்காக ஆடும் ஆட்டம் ; dance for a change after advance for a song. (35:244).

[தொடர்+உறு+சுற்றுகை+ஆட்டம்]

தொடர் தாவு–தல் *todartāvu-,* 3 செ.கு.வி. (v.i.) விளையாட்டில் குனிந்தவரைத் தொடர்ந்து தாவுதல்; to climb on the bending person in play. (த.நா.வி.).

[தொடர்+தாவு]

தொடருறு சுற்றுகை *todaruṟu-cuṟṟgai,* பெ.(n.) நடனத்திற்குரிய வினைகளில் ஒன்று; one of the action in dance.

[தொடர்+உறு+சுற்றுகை]

தொடலைவயல் *toḍalaivayal,* பெ.(n.) அறந் தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[தொடலை+வயல்]

தொடிதோட் செம்பியன் *toḍitōṭcembiyam,* பெ.(n.) சோழ அரசனின் பெயர்; name of a Chola king.

[தொடி+தோள்+செம்பியன்]

தொடுக்கை *toḍukkai,* பெ.(n.) வைக்கோல் வைக்கும் தடுப்புப் பகுதி; a stopper in straw heap.

[தொடு–தொடுக்கை]

தொடுப்பு *toḍuppu,* பெ.(n.) கள்ள உறவு; illicit contact liaison. (கொ.வ.வ.சொ.).

[தொடு–தொடுப்பு]

தொடு பந்து *toḍupandu,* பெ.(n.) வட்டக் கோட்டின் மீது நின்றிருப்பவர்கள் பந்தினை மாறி மாறிப் போட்டு விளையாடும்போது தொடுபவன் பந்தைப் பிடிக்க முயலுதல்; ball tag.

[தொடு+பந்து]

தொடூர் *toḍūr,* பெ.(n.) காஞ்சிபுரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[தொடு+ஊர்]

தொடையல் *toḍaiyal,* பெ.(n.) யாழின் ஒரு உறுப்பு; a part of harp.

[தொடு–தொடையல்]

தொண்டகப்பறை *toṇḍaga-p-paṟai,* பெ.(n.) பழம் பெரும் பறை வகை; a drum belong to ancient period.

[தொண்டகம்+பறை]

தொண்டகம் *toṇḍakam,* பெ.(n.) ஒரு வகை யான பறை; a drum.

[தொண்டு(துளை)+அகம்]

தொண்டன் *toṇḍaṉ,* பெ.(n.) ஒரு வகை சிறு கடல் மீன் ; rainbow sardine.

[தொண்டு+அன்]

தொண்டான் *toṇḍāṉ,* பெ.(n.) வயலுக்கு நீர் இறைக்கப் பயன்படும் தோலால் ஆகிய சால்; a leather bag like basket used for the irrigation purpose.

[தொண்டு–தொண்டி(துளை, பள்ளம்)–தொண்டான்]

தொண்டான் தொடுபிடித் தொண்டான் *toṇḍāṉ-toḍupiḍi-t-toṇḍāṉ,* பெ.(n.) நெல்லிக் காய் விளையாட்டின் வேறு பெயர் (மதுரை வட்டாரம்) ; a kind of playing.

[தொண்டான்+தொடுபிடி+தொண்டான்]

தொண்டிக்கட்டை *toṇḍi-k-kaṭṭai,* பெ.(n.) மாடு களுக்குக் கழுத்தில் தொங்கவிடும் கட்டிக் கட்டை; small wooden block which is tied in the neck of cattles. (ம.வ.சொ.).

[தொண்டி+கட்டை]



தொண்டி *toṇḍi,* பெ.(n.) திருவாடானை வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tiruvādanai Taluk.

[தொள்–தொண்டி]

தொண்டுப்பட்டி *toṇḍu-p-paṭṭi,* பெ.(n.) சிறு (பள்ளமான பகுதி) பொருள்கள் வைக்கும் குடிசை போன்ற அமைப்பு. (கொ.வ.வ.சொ.93); a hut for stock little things.

[தொள்–தொண்டு+பட்டி]

தொண்டுமுட்டி *toṇḍumuṭṭi,* பெ.(n.) எருமையோ, மாந்தனோ தப்பி ஓடாதிருக்க முன்னங்கால் களுக்கிடையே கட்டப்படும் முட்டி. (கொ.வ.வ.சொ.); a wooden piece tied between fasten the knees with rope to prevent them from escaping.

[தொண்டு+முட்டி]

தொண்டூர் *toṇḍūr,* பெ.(n.) செஞ்சி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Senji Taluk.

[தொண்டி+ஊர்–தொண்டூர்]

தொத்தளவு *tottaḷavu,* பெ.(n.) பாவில் ஒட்டு நீக்குவதற்கும் தெளிவு எளிதில் உண்டாக்கவும் பயன்படுத்தும் கோல்கள்; a pole used by the weavers to remove the tangle in the lengthwise thread in a loom.

[தெழி–தொழித்து–தொத்து+அளவு]

தொப்பிச் சம்பா *toppi-c-cambā,* பெ.(n.) நெல் வகை. (வ.வ.வே.க.); a kind of paddy.

[தொப்பி+சம்பா]

தொப்பித் தலைகுயில் *toppittalai kuyil,* பெ.(n.) ஒரு வகை பறவை ; black cap.

[தொப்பி+தலை+குயில்]

தொப்பி மத்தளம் *toppi mattaḷam,* பெ.(n.) கேரளக்கோயிலில் இசைக்கப்படும் இசைக் கருவி; an instrument which is used in temples of Kēralā state.

[தொப்பி+மத்தளம்]

தொப்புள் கட்டை *toppuḷ kaṭṭai,* பெ.(n.) படமரத்தை இருபுறமும், சமமாகத் தாங்கிக் கொண்டிருக்கும் கருவி; a wooden supporter.

[தொப்புள்+கட்டை]

தொப்பைக் கூத்தாடி *toppai-k-kūttāḍi,* பெ.(n.) கம்பளத்தார் சேவையாட்டத்தில், பங்கு பெறும் நகைச்சுவை கலைஞர். (4:26).

[தொப்பை+கூத்தாடி]

தொம்பு வெறு *tombu veṟu,* பெ.(n.) பொரப் பாவிலும், பட்டுப் பாவிலும் விசை முன் கீழ் நோக்கி அழுத்திப் பிடித்து நெசவு அழுத்தமாயிருக்கப் பயன்படுத்தும் அமைப்பு முறை; a device in loom.

[தொம்பு+வெறு]

தொம்பை[1] *tombai,* பெ.(n.) தேவையற்ற பொருள்களை வைக்க மூங்கிலால் பின்னப்பட்ட பெரிய கூடை; dust bin which is made from bamboo.

[தூம்பு - தொம்பை]

தொம்பை[2] *tombai,* பெ.(n.) தவசங்களைக் கொட்டி வைக்கும் இடம்; a container of the grain. (ம.வ.தொ.).

[தூம்பு–தொம்பு–தொம்பை]

தொய்யகம் *toyyagam,* பெ.(n.) அம்மன் சிற்பத்திலுள்ள தலையணி; a head ornament in sculpture.

[தை+தொய்+அகம்]

தொய்வம் *toyvam,* பெ.(n.) தேய்வை; rubber.

[தொய்–தொய்வம்]

தொய்வுறல் *thoiuṟal,* பெ.(n.) பின்வாங்கல், தளர்தல்; sagging

[தொய்வு+உறல்]

தொயில்கீரை *toyil kīrai,* பெ.(n.) காட்டில் முளைக்கும் கீரை வகை; an edible green which is grown in forest. (நெ.வ.வ.சொ.192).

மறுவ. தொய்யாக்கரை

[தொய்யில்–தொயில்+கீரை]

தொரக்குழி *torakkuḻi,* பெ.(n.) சிதம்பரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[துவர+குழி]

தொரட்டி *thoraṭṭi,* பெ.(n.) அரிவாள் மீன் ; sickle fish.

[துரட்டி–தொட்டி]

தொரலை *toralai,* பெ.(n.) காய் கறிகளின் மேலிருக்கும் தோல் ; a peal of the vegetable. (கொ.வ.வ.சொ.).

[துரலை–தொரலைமணி+பிணை]

தொரவி *toravi,* பெ.(n.) விழுப்புரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Villupuram Taluk.

[துரவை–தொரவை–தொரவி]

தொல்கணியாதன் *tolkaṇiyādaṉ,* பெ.(n.) சுழியத்தைக் கண்டுபிடித்த பழந்தமிழ்க் கணித வல்லுநர் ; an ancient mathematical genius who invented zero for arithmatical and astronomical calculations.

[தொல்+கணி+ஆதன்]

தொல் பெருங்குன்றூர் கிழார் *tolperuṅ kuṉṟur kiḻār,* பெ.(n.) கடைக்கழகம் பெரு மகன் பெயர்; name of a land owner of sangam age.

[தொல்+பெரும்+குன்றூர்+கிழார்]

தொலாகுழி *tolākuḻi,* பெ.(n.) ஏற்றம் இறைக் கத் தோண்டும் குழி. (வ.வ.வே.க.29); a pit digged for lift irrigation.

[துலை+குழி]

தொலிம்பு *tolimbu,* பெ.(n.) நிலக்கடலைப் போன்றவற்றின் மேல் உள்ள தோல் கூடு; the outer shell like ground nut.

[தோல்–தொலி–தொலிம்பு]

தொலை *tolai*, பெ.(n.) ஏற்றம் உள்ள கிணற்றுப் பகுதி; provided with well sweep. (கொ.வ. வ.சொ.94).

[துலை–தொலை]

தொழிற்கை *tolirkai*, பெ.(n.) நடனத்தில் மெய் குறிப்பிற்காகப் பிடிக்கப்படும் கைகள்; a hand pose in dance.

[தொழில்+கை]

தொலைக்கடல் *tolai-k-kadal*, பெ.(n.) தொலை விடத்தில் இருக்கும் கடலோரம்; offshore.

[தொலை+கடல்]

தொலைவரி *tolaivari*, பெ.(n.) கம்பி வழியும், கம்பியில்லா வழியும் அனுப்பப்படும் செய்தி; telegram.

[தொலை+வரி]

தொழில் அதிபர் *toliladibar*, பெ.(n.) தொழில் நடத்துபவர், தொழிலதிபர்; entrepreneur, tycoon.

[தொழில்+அதிபர்]

தொழுகைப்பாய் *tolugai-p-pāy*, பெ.(n.) முகமதியர்கள் தொழுகைக்குப் பயன்படுத்தும் பாய்; a mat which is used for Mohammadan worship in mosque, prayer mat.

[தொழுகை+பாய்]

தொழுகைப்பூச்சி *tolukaipūcci*, பெ.(n.) வண்டின் ஒரு வகை; a beetle, praying mantis insect that hold its fore legs like hands folded in prayer.

[தொழுகை+பூச்சி]

தொழுதெடுப்பு *toludeduppu*, பெ.(n.) போர்க் கலைப் பயிற்றும் களரிப் பயிற்றுக்கு இளை ஞரைத் தெரிந்தெடுக்கும் முறைகளில் முதலா வது; a method of selecting youngsters for martial fight.

[தொழுது+எடுப்பு]

தொழுநையாறு *tolunaiyāru*, பெ.(n.) யமுனை ஆறு; river Jamuna.

ம.தொழிக்க(அடி,தாக்கு)–கூட்டு,சேர்.

[தொழு–தொழுநை+யாறு]

தொள்ளவாய் *tollavāy-*, பெ.(n.) பெரிய வாய்; big mouth.

[தொள்–தொள்ளை+வாய்]

தொள்ளாளி *tollāli*, பெ.(n.) சிற்றூர்ப் புறங் களில் வண்ணக்கோலமிட்டுப் பேயை விரட்டு பவர்; driving out the goast by drawing a 'kolam'

தொழிலாளி என்பதன் மறு வழக்கு.

தொளவேடு *tolavēdu*, பெ.(n.) திருவள்ளூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvallur Taluk.

[துளவு+பேடு]

தொளிச்சல் *toliccal*, பெ.(n.) கல்குளம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Kalkulam Taluk.

[தொளி–தொளிச்சல்]

தொற்றிளை *torrilai*, பெ.(n.) கைத்தறி நெசவுப் பாவில் உடன் சேர்ந்த வேண்டாத நூலிழை; unwanted thread included by mistake in the process by weaving.

[தொற்று+இழை]

தொறக்கோல் *tora-k-kōl*, பெ.(n.) திறவுக் கோல் பார்க்க; see tiravu-kōl.

[திறவுக்கோல்–தொறக்கோல் (கொ.வ.)]

தொன்மைக்கூத்து *tonmai-k-kūttu*, பெ.(n.) குறும்பர் இனத்தவர் ஆடுகின்ற கூத்து; kūttu, whichis adorned by kurumbar.

[தொன்மை+கூத்து]

தொனத்து–தல் *tonattu-*, 15 செ.கு.வி.(v.i.) தொடர்ந்து பேசிக் கொண்டிருத்தல், பயனில் சொல் (வீண் பேச்சு) பேசுதல்; blabbering indulging in useless talk.

[துனை–துனைத்தல்–தொனத்து]

தோக்கியம் *tōkkiyam,* பெ.(n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruppattur Taluk.

[தூக்கு-தோக்கு-தோக்கியம்]

தோகாரை *tōkārai,* பெ.(n.) ஒரு வகை மீன்; Indian thread finned thevally.

[தூவாலை-தூகாரை-தோகாரை]

தோகை *tōgai,* பெ.(n.) ஒரு வகை மீன் ; band fish.

[தொகு-தோகை]

தோசி *tōci,* பெ.(n.) நாட்டுப்புறக் கதைப் பாடல்களில், மலட்டுத்தன்மை உடைய பெண்டிரைக் குறிக்குஞ் சொல்; word referring to a barren woman in folklore.

[துச்சம்-தோக்கம்-தோச்சி-தோசி]

தோட்டாளம் *tōṭṭāḷam,* பெ.(n.) வேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vellore Taluk.

[தோடு+ஆளம்]

தோட்டுகாரிக் கதைப்பாடல் *tōṭṭukāri-k-kadaippāḍal,* பெ.(n.) வாய்மொழி இலக்கியத்தின் ஒரு வகை; a folk ballad.

[தோடு+காரி+கதை]

தோண்டி *tōṇḍi,* பெ.(n.) மண், மாழையால் செய்த குடம் ; a pot designed by clay, or metal. (கொ.வ.வ.சொ.95).

[தோண்டு+இ)]



தோணி *tōṇi,* பெ.(n.) துடுப்புகளால் இயக்கப் படும் சிறு படகு ; canoe.

[துளை-தொளை-தோணி]



தோணித்துறை *tōṇi-t-tuṟai,* பெ.(n.) ஆற்றைக் கடக்கும் படகு இருக்கும் இடம் ; ferry.

[தோணி+துறை]

தோத்தாங்குழி *tōttāṅguḻi,* பெ.(n.) தோற்ற வெற்றுக்குழி; empty square in a play board.

[தோற்ற+ஆம்+குழி]

தோத்தாணி தோல்பிடுங்கி *tōttāṇi-tōlpiḍuṅgi,* பெ.(n.) தோற்றவர் பெயர் (குமரி); a failure person.

[தோற்றவன்+தோல்பிடுங்கி]

தோது *tōdu,* பெ.(n.) செப்பம், பொருத்தம்; proper. (கொ.வ.வ.சொ.).

[துத்து-தோது]

தோப்பாமீன் *tōppāmīṉ,* பெ.(n.) ஒரு வகை மீன் ; one kind of fish.

[தோப்பை+மீன்]

தோம்பு நூல் *tōmbu-nūl,* பெ.(n.) ஊடையும், பாவும் ஒரே நிறமுடைய சாரம் (லுங்கி); chequerred cloth of men.

[தோம்பு+நூல்]

தோரம் *tōram,* பெ.(n.) ஒரு வகையான இரட்டைக் கை முத்திரை; double hand pose in dance.

[துரம் - தோரம்]

தோரி *tōri,* பெ.(n.) ஆட்டிடையரின் தலைவன்; head of the sheperds.

[துரு–துரி–தோரி, துரு–செம்மறியாடு]

தோல் கன்றுக்குட்டி *tōlkanru-k-kutti,* பெ.(n.) இறந்த கன்றுக்குட்டியிலிருந்து தோலை உரித்தெடுத்து வைக்கோல் திணித்து செய்யப்பட்ட கன்றுக்குட்டி பொம்மை; duplicate calf made by using its skin after death.

[தோல்+கன்று+குட்டி]

தோல்பாரை *tōlpārai,* பெ.(n.) தோலால் மூடப்பட்ட ஒரு மேலங்கி ; leather jacket.

[தோல்+பாரை]

தோல் முட்டை *tōlmuttai,* பெ.(n.) சுண்ணாம்பு பற்றாக் குறைவினால் மேல் ஓடு இல்லாமல் கோழி வைக்கும் முட்டை ; the egg without white shell by deficiency of calcium. (கொ.வ.வ.சொ.).

[தோல்+முட்டை]

தோலன் *tōlan,* பெ.(n.) ஒரு வகைமீன்; a kind of fish.

[தோல்–தோலன்]

தோவாளம் *tōvālam,* பெ.(n.) கிணற்றுக் கைப்பிடிச் சுவர்; support wall around the well.

[தூ+வாளம்]

தோள் *tōl,* பெ.(n.) கருவறை சிற்பத்தின் ஓர் உறுப்பு; a feature in sculpture.

தோள்கத்தளை *tōlkattalai,* பெ.(n.) ஒரு வகை மீன்; leather spined jew fish.

தோற்கூத்து ஓவியங்கள் *tōr-kūttu-ōviyangal,* பெ.(n.) ஒரு வகையான கைவினைக் கவின் கலை; leather puppet art.

[தோல்+கூத்து+ஓவியங்கள்]

தோற்பாவைக் கூத்து *tōr-pāvai-k-kūttu,* பெ.(n.) தோலால் செய்யப்பட்ட பாவைகளைத் திரைக்குப் பின்னிருந்து ஆட்டியசைத்து கதைகளைச் சொல்லும் கலை; puppet show.

[தோல்+பாவை+கூற்று]

தோற்றான் *tōrrān,* பெ.(n.) சில விளையாட்டுகளில் இறுதியில் யாரேனும் தோற்க நேர்ந்தால், அவருக்காக இறுதியில் தொடரும் ஆட்டத்தின் பெயர். (எ.கா.) பல்லாங்குழி, உருட்டான், அச்சுப்பூட்டு; continuing game for a defeated person.

[தோல்–தோற்றான்]

தோனி *tōni,* பெ.(n.) இரு கூரைகளுக்கிடையில் நீர் ஓடுமாறு தகட்டால் ஆன அமைப்பு; rain water drainer.

[தோணி–தோனி]

தோனை *tōnai,* பெ.(n.) பாவு நூல் சுற்றும் கருவி; a device in loom.

[தூல்–தூனை–தோனை]



தோனைக்கம்பி *tōnai-k-kambi,* பெ.(n.) சேலை நுனியை முடியும் சன்னமான கம்பி (ம.வ.சொ.); thin wire used to make knot at border of a saree.

[நுனை–துனை–தோனை+கம்பி]

தோனைக்குச்சி *tōnai-k-kucci,* பெ.(n.) தோனையைத் திருகுவதற்குப் பயன்படும் குச்சி; a stick used as a screw driver.

[தோனை+குச்சி]

ந

நக்கண்ணையார் *nakkaṇṇaiyār,* பெ.(n.) பெருங்கோழி நாய்கன் மகளாகிய புலமைப் பெருமாட்டி; poetess of sangam age and daughter of Perunkōḻi nāygan.

[நல்+(கண்)கண்ணை+ஆர்]

நக்கம்பாடி *nakkampāḍi,* பெ.(n.) மயிலாடு துறையிலிருந்து 10 அயிரமாத்திரி (கி.மீ.) தொலைவில் உள்ள ஓர் ஊர்; name of a village 10 k.m. from Mayiladudurai.

[நக்கன்+பாடி]

நகர்ப்படுகை *nagar-p-paḍugai,* பெ.(n.) மன்னார்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mannarkudi Taluk.

[நகர்+படுகை]

நகரம் *nagaram,* பெ.(n.) வேலூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; name of the village in Vellore.

[நகர்+அம்]

நகவெதும்பல் *nagavēdumbal,* பெ.(n.) இளஞ் சூடு; gentle heat, luke warmness.

[நகம்+வெதும்பல்]

நகார் *nagār,* பெ.(n.) பண்டைய நாட்டுப்புற இசைக்கருவியினுள் ஒன்று; an ancient musical instrument.

நகையாண்டி *nagaiyāṇḍi,* பெ.(n.) நகைச் சுவையூட்டுபவன்; jester.

[நகை+ஆண்டி: நகைச்சுவையை ஆள்பவன்]

நங்கவள்ளி *naṅgavaḷḷi,* பெ.(n.) ஓமலூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Omalur Taluk.

[நங்கன்+வள்ளி(பள்ளி)]

நங்குடி *naṅkuḍi,* பெ.(n.) சிதம்பரம் வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[நன்+குடி]

நங்கூரமிடு-தல் *naṅgūramiḍu-,* 18 செ. குன்றாவி. (v.i.) மரக்கலம் (அ) கப்பல் நகராமல் ஓரிடத்தில் நிற்பதற்காக நீருக்குள் நங் கூரத்தை இறக்குதல்; to cast anchor.

[நங்கூரம்+இடு-,]

நச்சீடு *naccīḍu,* பெ.(n.) தொந்தரவு; trouble, hindrance.

மறுவ. நச்சரவு

[நச்சு+ஈடு]

நச்சுத்தீனி *naccu-t-tīṉi,* பெ.(n.) அடிக்கடி தின்னும் தின்பண்டம். (கொ.வ.வ.சொ.95); snacks taken frequently.

மறுவ. நொறுக்குத்தீனி, மேல்தீனி

[நை-நச்சு+தீனி]

நச்சுழி *nacculi,* பெ.(n.) நற்சுழி பார்க்க; see narculi.

[(நல்) > நற்சுழி > நச்சுழி]

நச்செலி *nacceli,* பெ.(n.) மூஞ்சூறு; a musk-rat. (நெ.வ.வ.சொ.194).

[நச்சு+எலி]

நச்செள்ளையார் *naccellaiyār,* பெ.(n.) காக்கைப் பாடினியார் நற்செள்ளையார் எனப் பெயர் பெற்ற கடைக்கழகக் காலப் பெண்பாற் புலவர்; a sangam poetess known as a 'kākkai pāḍiṉi naccellaiyar'.

[நல்+செள்ளை+ஆர்]

நசியனூர் *naśiyanūr,* பெ.(n.) ஈரோடு வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Erode Taluk.

[நசையன்–நசியன்+உரைஊர்]

நசும்பு *naśumbu,* பெ.(n.) மீன் வகைகளுள் மிகச் சிறிய வகை; a kind of tiny fish.

[அசும்பு–நசும்பு]

நட்டந்தி *naṭṭandi,* பெ.(n.) சிவகங்கை வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[நடு+அந்தி]

நட்டபாடை *naṭṭapāḍai,* பெ.(n.) பகற்பொழுதில் இசைக்கப்படும் பண் வகை; a kind of melody tune sung in the day time.

[நண்–நட்டு+(பாடு)பாடை]

நட்டம் *naṭṭam,* பெ.(n.) பாடல் இன்றித் தாளத்திற்கு மட்டும் ஆடும் ஆட்டம்; dance without song.

[நள்–நளி–நடி–நட்டம்]

நட்டுக்கால் *naṭṭu-k-kāl,* பெ.(n.) நடுவில் உள்ள கால்வாய்; channel in the middle part.

[நடு+கால்–நட்டுக்கால்]

நட்டுவதாளம் *naṭṭuvatāḷam,* பெ.(n.) நட்டுவனார் கையால் ஒலிக்கச் செய்கின்ற தாள வகை; cymbal.

[நட்டுவம்+தாளம்]

நட்டுவாய்க்குடி *naṭṭuvāyikkuḍi,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tanjavoor district.

[நடு–நட்டு+வாய்+குடி]

நட்புக்கை *naṭpu-k-kai,* பெ.(n.) ஒரு வகையான இரட்டைக்கை; a kind of dance posture. (35:201).

[நட்பு+கை]



நட்பு *naṭpu,* பெ.(n.) ஏழிசைத் தொகுதியில் நான்காம் இசை; fourth sound of the seven sounds of the diatonic scale.

[நள்>நட்பு]

நடக்கதவு *naḍa-k-kaḍavu,* பெ.(n.) எதிரெதிராக அமைந்த வீடுகளுக்குப் பொதுவாக அமைந்து இருக்கும் வழி; a common path of the two opposite side houses.

[(நடை+கடவு)–நடைக்கதவு–நடக்கதவு (கொ.வ) – கடவு–பாதை]

நடந்தை *naḍandai,* பெ.(n.) நாமக்கல் வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Namakkal Taluk.

[நாள்+அந்தி–நாடந்தி–நடந்தை]

நடவாவி விழா *naḍavāvi-viḻa,* பெ.(n.) காஞ்சி புரத்தில் மேழ வெள்ளுவா (சித்திரைப் பௌர்ணமி)யன்று நடைபெறும் விழா; a festival in Kanchipuram, on the full moon day of the month Chittirai.

[நடை+வாவு+விழா]

நடம் *naḍam,* பெ.(n.) நாட்டியம்; another name for dance.

[நள்–நடு–நட்டம்–நடம்(இடைக்குறை)]

நடராசர் சடை *nadarāšarsadai,* பெ.(n.) சிற்ப வல்லுநர் செதுக்கும் மகுடம்; engraving as hair in Nataraja sculpture by sculpter.

[நடராசர்+சடை]

நடவாள் *nadavāļ,* பெ.(n.) நடவுத்தொழில் செய்வோர்; workers for transplanting in the paddy field.

[நடவு+(பயிரிடுதல்)ஆள்–நடவாள்]



நடவுப் பள்ளத்தி *nadavu-p-pallatti,* பெ.(n.) நடவு நடும் பள்ளரினப் பெண்கள்; women engaged in transplanting.

[நடவு+பள்ளத்தி]

நடனபாணி *nadana-pāni,* பெ.(n.) பரதம் ஆடும் முறைகளில் ஒன்று;one of dancing methods, a way of dancing Bharatam.

[நடனம்+பாணி]

நடுக்காத்தான் *nadukkāttān,* பெ.(n.) இயற்பெயர்; a proper noun.

[ஒருகா. நாடு+காத்தான்]

நடுகட்டி மணிவலை *nadukatti mani valai,* பெ.(n.) நடுத்தரமான மணி வலை; a medium size net.

[நடு+கட்டி+மணி+வலை]

நடுப்பட்டம் *nadu-p-pattam,* பெ.(n.) கன்னி (புரட்டாசி) மாத 10 முதல் 20 வரையிலான வேளாண் பட்டம்; in between season, from 10th to 20th Purattāsi.

[நடு+பட்டம்]

நடுத்தி *nadutti,* பெ.(n.) நடன அரங்கத்தில் நடுவேயுள்ள பகுதி; central part of the dance dias.

[நடு–நடுத்தி]

நடையன் *nadaiyan,* பெ.(n.) 1. கழுதை; donkey. 2. செருப்பு, மிதியடி; shoe.

[நடை+அன்]

நடையாட்டி *nadaiyātti,* பெ.(n.) கோயில் வழிபாட்டிற்கு நீர் எடுக்கப்படும் குளம்; a pond used for temple purpose. மேதகு நடையாட்டி குளத்தில் சால நீர் கோளுக்கும்....

[நடை+(அட்டி)ஆட்டி. நடை–படிக்கட்டு]

நடைவாசல் *nadai-vāšal,* பெ.(n.) முன்வாசல்; gateway, portal, entrance.

[நடை+வாசல், வாயில் > வாசல்]

நண்டன் *nandan,* பெ.(n.) வளர்ச்சி குன்றியவன்; one who is of undergrowth.

[நள்–நண்டு+அன்]

நண்டுக்கை *nandu-k-kai,* பெ.(n.) ஆடற் கலையின் ஒரு வகையான இரட்டைக்கை; gesture with both the hands.

[நண்டு+கை]



நண்டுகாச்சி *nandukācci,* பெ.(n.) அருப்புக் கோட்டை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[ஒருகா. நண்டு+ (கயம்–கயத்தி–காய்ச்சி]

நத்தபுரக்கி *nattapurakki,* பெ.(n.) மானாமதுரை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[நத்தம்+(புறத்தி)-புறக்கு-புரக்கி(கொ.வ.)]

நத்தமலை *nattamalai,* பெ.(n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[நத்தம்+மலை]

நந்தர் *nandar,* பெ.(n.) கி.மு.472 முதல் கி.மு.372 வரை மகத நாடாண்ட அரச மரபினர்; Nanda kings who ruled Magada from 472 B.C to 372 B.C.

[நந்து>நந்தர்]

நத்து *nattu,* பெ.(n.) 1. ஓரிசைக்குழல்; a kind of flute.(1:138). 2. ஏக்கம் கொள்ளுதல்; disappointed aspiring, yearning.

[நன்-நத்து]

நந்திகுண்டு *nandikundu,* பெ.(n.) அருப்புக் கோட்டை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[நந்தி+குண்டு]

நந்திபுரம்[1] *nantipuram,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள ஓர் ஊர்; name of the village in Tanjavur near by Kumbakonam.

[நந்தி+புரம்]

இவ்வூர் நந்திவருமன் காலத்தில் புகழ்பெற்று இருந்தது. தற்போது இவ்வூர் 'நாதன் கோயில்' என்று வழங்கப்படுகிறது.

நந்திபுரம்[2] *nantipuram,* பெ.(n.) செஞ்சி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Senji Taluk.

[நந்தி+புரம்]

நந்திமார் *nandimār,* பெ.(n.) கடலோர உவர்க்கரம்பு நிலத்தில் (தரிசில்) புதராக வளர்ந்திருக்கும் குத்துச் செடிகள்; sea-side shrubs.

[நந்து-நந்தி+(வளார்)-மளார் - மார்]

நந்துணி *nanduni,* பெ.(n.) கேரளத்தின் பண்டைய இசைக்கருவி; an ancient musical instrument in Kerala.

[நந்து-நந்துணி]

நப்பசலையார் *nappasalaiyār,* பெ.(n.) கடைக் கழகப் பெண்பாற் புலவர்; a poetess of sangam period.

[நல்+பசலை]

நப்பாலத்தனார் *nappālattanār,* பெ.(n.) கடைக்கழகக் காலப் புலவர்; a poet of sangam period.

நம்பிகுட்டுவன் *nambikuttuvan,* பெ.(n.) கடைக்கழகக் காலத்திய குறுநிலத் தலைவன்; Chieftain of sangam period.

நப்பூதனார் *nappūdanār,* பெ.(n.) கடைக் கழகப் புலவர்; a poet of sangam period.

[நல்+பூதன்+ஆர்]

நப்பி *nappi,* பெ.(n.) யாருக்கும் ஒன்றும் கொடாதவன் (கஞ்சன்); miser.

[நை-நைப்பி]

நம்பிகோன் *nambikkōn,* பெ.(n.) மாறவருமன் சுந்தரபாண்டியன் ஆட்சியின்போது (கி.பி.1314) திருவாய்ப்பாடி அவையில் இருந்தவன்; member of the royal assembly of the king Māravarman Sundara Pandiyan (1314 AD).

[நம்பி+கோன்]

நம்புதளை *nambudalai,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[ஒருகா. நாம்பு+உதளை]

நமதோடு *namatōdu,* பெ.(n.) வந்தவாசி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Wandawashi Taluk.

[நமை+தோடு]

நயக்கேடு *naya-k-kēdu,* பெ.(n.) அட்டூழியம்; atrocity.

[நயன்+கேடு]

நரங்கியான் *narańgiyāṉ,* பெ.(n.) சிவகங்கை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[ஒருகா. நரங்கு+அன்–நரங்கியன்–நரங்கியான்]

நரதாரு *naradāru,* பெ.(n.) மரத்தாலான சிற்பங் களைச் செய்ய உதவும் மர வகைகள்; a kind of trees which are used for making wooden sculpture. (5:21).

[நரல்+தாரு]

நரம்பு *narambu,* பெ.(n.) யாழின் ஓர் உறுப்பு; a part of lute.

[நுல்–நுரும்பு–நரம்பு]

நரமாகாணி *naramāgāṇi,* பெ.(n.) திண்டி வனம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[நரையன்+மாகாணி]

நரயன்விளை *narayaṉviḷai,* பெ.(n.) அகத்தீசு வரம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[நாரையன்+விளை–நரையன்–நரயன் (கொ.வ.)]

நரிக்கல்லு *nari-k-kalu,* பெ.(n.) ஒரு வகைக் கல்; stone useful in making the gypsum.

[நரி+கல்]

நரியனேரி *nariyaṉeri,* பெ.(n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Thiruppattur Taluk.

[நரியன்+ஏரி]

நரிவால் *nari-vāl,* பெ.(n.) மாட்டு வால் வகையில் ஒன்று; name of a tail type of the cow.

[நரி+வால்]

நரிவெரூஉத் தலையார் *nariverūut talaiyār,* பெ.(n.) நரிவெரூஉத்தலை என்னும் ஊரில் வாழ்ந்த புலவர்; a poet who lived in the village Nariveruu-t-talai.

[நரி+வெரூஉ+தலை]

கொங்கு நாட்டுப்பகுதியில் நரிவெருவிப் பாளையம் என்னும் ஊர் இருத்தல் ஒப்பு நோக்கத் தக்கது.

நரிவெருவிப்பாளையம் *nariveruvippāḷayam,* பெ.(n.) கொங்கு நாட்டில் உள்ள ஒரு ஊர்; name of the village in Kongunāḍu.

மறுவ. நரிப்பாளையம்

[நரி+வெருவி+பாளையம்]

நரையூர் *naraiyur,* பெ.(n.) திருவண்ணாமலை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Thiruvannamalai Taluk.

[நாரை+ஊர்]

நல்முக்கல் *nalmukkal,* பெ.(n.) திண்டிவனம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[நல்+முக்கல்(பிளவுபட்ட பாறை]

நல்லதரை *nallatarai,* பெ.(n.) அருப்புக் கோட்டை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[நல்ல+தலை]

நல்லந்துவன் *nallanduvaṉ,* பெ.(n.) கடைக் கழகக் காலத்திய புலவர்; a poet of sangam period.

[நல்+அந்துவன்]

நல் எனும் அடைமொழிப் பெற்ற புலவர்கள்: நல்வெள்ளியர், நல்வேட்டனார், நல்லாவூர்கிழார், நல்வழுதி, நல்லச்சுதன், நத்தத்தனார், நல்லெழினி, நல்லழிசி, நல்லாதன், நல்லிறையார்.

நல்லம்பர் *nallambar,* பெ.(n.) திருநள்ளாற் றுக்கு வடமேற்கே 14 அயிரமாத்திரி (கி.மீ.) தொலைவில் உள்ள ஒரு ஊர்; name of the village 14 k.m. from Thirunallar.

[நல்+(ஆம்பல்)–அம்பல்–அம்பர்(கொ.வ.)]

இக்காலத்தில் இவ்வூர் நல்லாம்பல் என்னும் பெயருடன் உள்ளது.

நல்லாடை *nallāḍai,* பெ.(n.) மயிலாடுதுறை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Mailadudurai Taluk.

[நல்+(ஓடை)–ஆடை(கொ.வ.)]

நல்லாலம் *nallalam,* பெ.(n.) அரக்கோணம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Arkkonam Taluk.

[நல்+ஆலம்]

நல்லாற்றூர் *nallarrūr,* பெ.(n.) திருநள்ளாற்றுக்கு வடக்கே 10 அயிரமாத்திரி (கி.மி.) தொலைவில் உள்ள ஒரு சிற்றூர்; name of the village 10 k.m. from north Thirunallār.

[நல்+ஆற்றூர்]

நல்லூர்க்கா நாடு *nallurkkā nādu,* பெ.(n.) பொள்ளாச்சி வட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிற்றூர்; name of the village in Pollachi.

[நல்+ஊர்க்கால்+நாடு. ஊர்க்கால்–ஊர் அருகில் உள்ள ஓடை]

நவ்வத்தாவு *navvattāvu,* பெ.(n.) சிவகங்கை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[நவ்வி+தரவு]

நவ்வுங்குளி *navvunguli,* பெ.(n.) சிவகங்கை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[நவ்வி+குளம்]

நவக்காடு *navakkādu,* பெ.(n.) ஈரோடு வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Erode Taluk.

[நா(வல்+காடு)]

நவக்காணி *nava-k-kāni,* பெ.(n.) பழனி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Palani Taluk.

[நாவல்+காணி]

நவம்பட்டு *navampattu,* பெ.(n.) திருவண்ணாமலை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Thiruvannamalai Taluk.

[நாவல்+பற்று]

நவரைப்பட்டம் *navarai-p-pattam,* பெ.(n.) சுறவ (தை) மாத நவரை நெல் பயிரிடும் பருவம்; paddy cultivation period during thai month.

[நவரை+பாட்டம்]

நவகண்டி *navakandi,* பெ.(n.) சிற்பங்களில் காணலாகும் ஒரு வகையான காதணி; ear rings which are adorned in sculptures.

[நாவல்+கண்டி]

நவலை *navalai,* பெ.(n.) கரூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Karur Taluk.

[நாவல்–நவலை]

நவனாரி *navanāri,* பெ.(n.) தாராபுரம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Dharapuram Taluk.

[ஒருகா. நாவல்–நவல்+ஏரி–நாவலேரி – நவனாரி (கொ.வ.)]

நவனி *navani,* பெ.(n.) நாமக்கல் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Namakkal Taluk.

[ஒருகா. நாவல்–நவல்–நவனி]

நவிர் *navir,* பெ.(n.) மருத நிலத்திற்குரிய பண் வகை; a tune for marudām agricultural tract.

[நவில்–நவிர். நவிலல்–சொல்லுதல், செப்புதல். ஒருகா. செப்பலோசை தழுவிய பாடல் ஆகலாம்.]

நள்ளி அண்ணன் பாளையம் *nalliannnan pālaiyam,* பெ.(n.) கோபிச் செட்டிப் பாளையத்திற்கு அருகில் உள்ள ஒரு சிற்றூர்; name of the village near Gopichettipalayam.

[நள்ளி+அண்ணன்+பாளையம்]

நள்ளி[1] *nalli,* பெ.(n.) 1. நாணல்; weed. 2. மென்மை; softness. 3. அழகு; beauty. 4. ஒளி; light.

[நள்+நள்ளி]

நள்ளி[2] *nalli,* பெ.(n.) கடையேழு வள்ளல்களில் தோட்டி மலையின் தலைவன்; a beneficient chieftain who ruled over the area of Thōttimalai. 'வல்வில் இளையர் பெருமகன் நள்ளி'. (புறம்–150).

[நள்–(நட்பு,அன்பு)நள்ளி]

நள்ளியம் பாளையம் *nalliyam palayam,* பெ.(n.) ஈரோடு மாவட்டத்தில் மேற்கில் உள்ள ஒரு சிற்றூர்; name of the village in west Erode.

[நள்ளியன்+பாளையம்]

நள்ளியூர் *nalliyūr,* பெ.(n.) கோவை மாவட்டத்தில் உள்ள பழைய ஊர்; name of a oldest village in Coimbatore.

[நள்ளி+ஊர்]

நற்கனி *narkani,* பெ.(n.) பரமக்குடி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Paramagudi Taluk.

[நல்+(காணி)–கனி (கொ.வ.)]

நற்சுழி *narculi,* பெ.(n.) மாட்டு முதுகிலுள்ள ஒரு வகை நல்ல சுழி; circular or curved mark on the back of a cow indicating good luck.

[நல்+சுழி > நற்சுழி]

நற்சேந்தனார் *narcēndanār,* பெ.(n.) கடைக்கழகப் புலவர்; a poet of sangam period.

நற்பழங்காசு *narpalankāsu,* பெ.(n.) அளவு குறையாத காசு; a coin of correct value. "கைக்கொண்ட நற்பழங்காசு ஒன்று இப் பழங்கள்..." (தெ.சா.7:5:எ:395).

[நல்+பழம்+காசு]

நறவு *naravu,* பெ.(n.) இது துளு நாட்டில் (கருநாடகம்) கடற்கரையில் இருந்த துறைமுகப் பட்டினம்; name of village in Tulunadu near the sea shore.

[நறு–நறவு]

நன்னன் *nannan,* பெ.(n.) கடைக்கழகக் குறுநில மன்னன்; a chieftain of Sangam period.

[நல்–நன்+அன்]

நன்னாகனார் *nannāganār,* பெ.(n.) கடைக்கழகப் புலவர்; a name of sangam period.

[நல்+நாகன்+ஆர்]

நன்னாரம் *nannāram,* பெ.(n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[ஒருகா. நன்னன்–பாரம்]

நன்னான கொட்டுதல் *nannā-kottu-,* செ.கு.வி. (v.i.) கும்மி கொட்டுதல்; to perform gummi dance.

[நன்னானம்+கொட்டுதல்–நன்னானம்–தாளக் கட்டின் குறிப்போசை]

நன்னி *nanni,* பெ.(n.) 1. உண்மை; truth. 2. அன்பு; love, affection.

க. நன்னி; பட. நன்னி (நன்றி)

[நல்–நன்–நன்னி]

நன்னூல் எடு–த்தல் *nannūl edu-,* செ.கு.வி.(v.i.) ஏதேனும் ஒன்றைக் குறித்து நுட்பமாக ஆராய்தல், கூர்மையாகச் சிந்தித்தல்; to think and discover minute details as it refering written documents or works of reference. அவன் எதற்கும் நன்னூல் எடுப்பான் (மீனவ.).

[நல்–நூல்+எடு]

நன்றா மலை *nandrāmalai,* பெ.(n.) கொங்கு நாட்டில் உள்ள ஒரு நெடுங்குன்று; name of a village in Coimbatore. நன்றா எனும் குன்றேறி தன் கண்ணிற்கண்டன வெல்லாம் காட்டிக் கொடுத்தான் அக்கோ (பதிற்.)

மறுவ. நணாமலை

[நன்று–நன்றா+மலை]

நாக்குடி *nākkudi,* பெ.(n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Arandangi Taluk.

[நல்+குடி–நற்குடி–நாக்குடி(கொ.வ.)]

நாக்கினால் தள்ளு–தல் *nākkināl-tallu-,* செ.குன்றாவி. (v.t.) கோலிக்குண்டு விளையாட்டில் தோற்றவர் குண்டினை நாக்கினால் தள்ளுதல்; to push with tongue. a children's game. (த.நா.வி.).

[நாக்கு+இன்+ஆல்+தள்ளு]

நாகக்குடி *nāgakkuḍi*, பெ.(n.) கும்பகோணம் (குடமூக்கு) வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Kumbakonam Taluk.

[நாகம்+குடி]

நாகத்துவனி *nāgattuvaṉi*, பெ.(n.) இசைக் கலை வழக்குச் சொற்களில் ஒன்று; a word in music terms.

[நாகம்+துவனி]

நாகம் *nāgam*, பெ.(n.) பண் (இராக) வகையினுள் ஒன்று; a kind of tune.

[நா-நாகம்]

நாகமங்கலம் *nagamangalam*, பெ.(n.) திருநள்ளாற்றுக்கு வடமேற்கே 14 அயிர மாத்திரி (கி.மீ.) தொலைவிலுள்ள ஒரு சிற்றூர்; name of a village 18 k.m. from Thirunallar.

[நாகன்+மங்கலம்]

நாகமரை *nāgamarai*, பெ.(n.) தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Dharmapuri district.

[நாகன்+துறை-நாகந்துறை-நாகமரை (கொ.வ.)]

நாகர் *nāgar*, பெ.(n.) கழுத்தில் அணியப்படும் நீண்ட சங்கிலியொத்த அணிகலன்; an ornament which is like a chain worn on neck. (65:74).

[நகு+நாகர்]

நாகரம் *nāgaram*, பெ.(n.) கோயில் விமான அமைப்பின் ஒரு பகுதி; a temple tower structure.

[நகர்-நாகரம்]



நாகவயல் *nāgavayal*, பெ.(n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[நாகன்+வயல்]

நாகனி *nāgaṉi*, பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruvādānai Taluk.

[நாவல்+கனி-நாவல்கனி-நாகனி (கொ.வ.)]

நாகாச்சி[1] *nākācci*, பெ.(n.) 1. அருப்புக் கோட்டை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Aruppukkottai Taluk. 2. பரமக்குடி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Paramagudi Taluk.

[நாகன்+குறிஞ்சி-குறிச்சி-காச்சி (கொ.வ.)]

நாகாடி *nāgāḍi*, பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[நாகன்+பாடி-நாகன்பாடி-நாகாடி (கொ.வ.)]

நாகிமரா *nāgimarā*, பெ.(n.) இருளர் இன மக்களின் இசைக்கருவிகளிலொன்று; a musical instrument of the Irula tribe.

நாகு *nāgu*, பெ.(n.) எருமையின் பெண் கன்று; female buffalo cub.

[நாள்-நாள்கு-நாகு]

நாகு என்பதை நாவு என வட ஆற்காடு பகுதியில் வழங்குவது கொச்சை வழக்கு.

நாகுணி *nāguṇi*, பெ.(n.) கிளியாற்றூர்க்குத் தெற்கில் உள்ள ஒரு சிற்றூர்; name of the village in South Kiliyāṟṟūr.

[ஒருகா. நாகன்+ஊருணி]

(இரண்டாம் இராதிராசன் 11ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டில் நாகுணி என இடம் பெற்றுள்ளது.)

நாங்கு *nāṅgu*, பெ.(n.) வயலில் நடவுக்குப் பின் மண்புழுக்கள் ஏற்படுத்தும் சிறு துளை; small holes made by earth worms in the paddy

field after plantation.

[நள்–நாள்–நாங்கு(உட்டுளை)]

நாச்சி *nācci,* பெ.(n.) கோயில் விளக்கெரிக்க கறவை மாடு தந்த சோழர்காலத்துப் பெண்; name of a woman who donated cows to use the ghee for lighting lamp in temple.

[நாயன்–நாயத்தி–நாச்சி]

மூன்றாம் இராசராசன் காலத்தில் (கி.பி.1231) அத்தி என்ற ஊரில் வாழ்ந்த பரிக்கிரகத்து நிலைப் பெண்டுகளில் வம்புழுத்தாள் மகள் நாச்சி விளக்கெரிக்க வேண்டி கறவை மாடுகளை வழங்கியுள்ளாள்.

நாச்சியார் கோயில் *nācciyārkōyil,* பெ.(n.) திருவாரூர் மாவட்டத்திலுள்ளல் பூந்தோட்டம் கும்பகோணம் வழிச் சாலையில் உள்ள ஒரு சிற்றூர்; name of the village in Thiruvarur district on the way to Poonthottam Kumbakkam salai.

[நாச்சி+ஆர்+கோயில்]

நாசுவன்விளை *nāśuvanviḷai,* பெ.(n.) அகத்தீசுவரம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[நாவு–நாவுவன்–நாசுவன்+விளை]

நாசுவன் *nāśuvan,* பெ.(n.) முடி ஒப்பனையர்; barber.

மறுவ. குடிமகன்

[நாவு–நாயு–நாசு–நாசுவன்]

நாஞ்சிவயல் *nāñjivayal,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruvādānai Taluk.

[நாஞ்சில்+வயல்]

நாஞ்சில் வள்ளுவன் *nānjil valluvan,* பெ.(n.) கடைக்கழகக் காலத்திய குறுநில மன்னன்; a chieftarin of sangam period.

[நாஞ்சில்+வள்ளுவன்]

நாட்டம் *nāttam,* பெ.(n.) ஒரு வகையான நெய்தற் பண்; a kind of tune which is concerned with coastal region, Maritime melody, melody belongs to litteral region.

[நடு–நாட்டம்]

நாட்டடைவு *nāttadaivu,* பெ.(n.) பரத நாட்டியத்தில் இடம் பெறும் ஓர் அடைவு வகை; a stepping type in dance.

[நாட்டு+அடவு]

நாட்டன் *nāttan,* பெ.(n.) 1. நாட்டகத்து வாழ்வோன்; native man of an area. 2. நாட்டகப் பகுதியின் ஆள்குடித் தலைவன்; an administrative officer of an area in a land.

[நாடு>நாட்டன்]

நாட்டாவளி *nāttāvali,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruvādāai Taluk.

[நாட்டு+ஆவளி]

நாட்டியக்கோலம் *nāttiya-k-kōlam,* பெ.(n.) சிற்ப வடிவிலான இறை வடிவம்; a pose of the god in sculpture.

[நாட்டியம்+கோலம்]

நாட்டுக்கூத்து *nātttu-k-kūttu,* பெ.(n.) நாட்டுப்புறக் கூத்து வகை; a kind of folk dance.

[நாட்டு+கூத்து]

நாட்டுப்புற கும்மி *nāttu-p-pura-kummi,* பெ.(n.) கும்மியாட்டத்தின் ஒரு வகை; girls dance accompanied by clapping.

[நாட்டு+புறம்+கும்மி]

நாட்டுப்புற மக்கள் *nāṭṭuppuṟa-makkaḷ,* பெ.(n.) சிற்றூர்களில் வாழும் மக்கள்; people living in rural areas.

[நாட்டு+புற(ம்)+மக்கள்]

நாட்டுப்புற வழக்கு *naṭṭuppuṟa vaḻakku,* பெ.(n.) ஊர்ப்புறத்து வழக்கு; usage of countryside.

[நாட்டு+புறம்+வழக்கு]

நாட்டை *nāṭṭai,* பெ.(n.) பாடலிசையரங்கு தொடங்குங்கால் பாடப்படும் பண்; improvised introduction to a melody meant to notify to the audience the nature of the raga and get into its swing.

[நாள்–நாட்டு+ஐ]

நாடக மடந்தையர் *nāḍaga-madandaiyar,* பெ.(n.) கூத்தில் பங்கேற்கும் மகளிர்; dancing girls.

[நாடகம்+மடந்தையர்]

நாடன் *nāḍan,* பெ.(n.) 1. குறுநிலத் தலைவன்; a chieftain head of a land track. 2. மண்ணின் மைந்தன்; son of the soil.

[நாடு+அன்= நாடன். காடன் என்பதின் எதிர்ச்சொல்]

ஒ.நோ: குறும்பொறை நாடன்

நாடா ஆணி *nāḍā-āṇi,* பெ.(n.) நாடாவின் நடுப்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் கம்பி; a string which runs in the middle of tape.

[நாடா+ஆணி]

நாடா *nāḍā,* பெ.(n.) கைத்தறியில் குறுக்காகச் சென்று வரும் கருவி; to and fro moving device in handloom weaving.

[நள்–நாள்–நாளா–நாடா]

நாடாந்தல் *nāḍāṉdal,* பெ.(n.) விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர்; name of the village in Viluppuram.

[நாடு+ஏந்தல்(ஏரி)–நாடேந்தல்–நாடாந்தல்]

நாடா எகிறு-தல் *nāḍā-egiṟu-,* செ.கு.வி. (v.i.) நாடா பாவினிடையே தாண்டிச் செல்லல்; tape which passes through the warp.

[நாடா+எகிர்]

நாடாழ்வா நாடு *nadāḻvāṉāḍu,* பெ.(n.) நாடாழ்வான் பெயரிலமைந்த நாடு; an area named of the nāḍaḻvāṉ.

[நாடு+ஆழ்வான்+நாடு]

11ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் அகளங்க நாடாழ்வான் கொல்லி மலையை வென்றான் எனும் குறிப்பு உள்ளது.

நாடா[1] *nāḍā,* பெ.(n.) தறியில் வாட்டு போடு வதற்குரிய கருவி; a weavers device.

[நள்–நாளா–நாடா]

நாடா[2] *nāḍā,* பெ.(n.) பாவு நூலில் இடையே ஊடு நூலாகச் செல்லும் நாடா; yarn which intervene through a warp.

[நடு–நாடு–நாடா]

நாடு தலையாரிக்கம் *naḍutalāiyārikkam,* பெ.(n.) நாடு காவல் புரிவோர் செலுத்தும் வரி; watch-man's dues.

[நாடு+தலையாரி–தலையாரிக்கா]

நாணக்குடி *nāṇakkuḍi,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[நாணன்+குடி–நாணன்குடி–நாணக்குடி]

நாணல்பந்தி *nāṇalpandi,* பெ.(n.) அருப்புக் கோட்டை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[நாணல்+பந்தி(வரிசை)]

நாணாக்குடி *nāṇākkuḍi,* பெ.(n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Arantangi Taluk.

[நாணன்+குடி–நாணன்குடி–நாணாக்குடி (கொ.வ.)]

நாத்திக்கலி *nātti-k-kali,* பெ.(n.) அடிப்பகுதி தடிப்பு இல்லாத பிஞ்சு மூங்கில்; a tender bamboo tree, which has not broad base.

[நாற்று-நாத்து+கலி-நாத்துக்கலி-நாத்திக்கலி]

நாதந்தி *nādandi,* பெ.(n.) இலாவணிப் பாடலில் பயன்படுத்தப்படுகின்ற மெட்டு வகை; a melody which is used in songs which are sung in debating an issue on several subjects.

[நாதந்த-நாதந்தி-வண்ணச் சுழிப்புத் தாளக் குறிப்பொலி]

நாதி *nādi,* பெ.(n.) பற்றுக்கோடு, காப்பாற்றும் உறவு; protector. 'எனக்கு நாதி யாரும் இல்லை' (பே.வ.).

[நள்-நல்-நற்று-நத்து-நாதி]

நாபளூர் *nābaḷūr,* பெ.(n.) திருத்தணி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruthani Taluk.

[நாவலூர்-நாபளூர் (கொ.வ.)]

நாமக்கல் *nāmakkal,* பெ.(n.) நில அளவைக்காக அரசினரால் நடப்படும் குறியீட்டுடன் கூடிய கல்; boundary stone of Revenue department.

[நாமம்+கல்]

நாயகவாடி *nāyagavāḍi,* பெ.(n.) அறுவடைப் பயிரைப் பாதுகாக்கும் காவல்காரன்; one who guards the crops.

மறுவ. பந்தற்காரன்

[நாயக+(ஆளி-வாளி)-வாடி]

நாயகனி இசை *nāyagaṉi-isai,* பெ.(n.) கரகத்தின் துணை நிலை ஆட்டமான பாம்பு நடனத்திற்கு இசைக்கப்படும் இசை; a wind instrument used in snake dance of folklore.

[நாயனக்காரன்+இசை]

நாயர் *nāyar,* பெ.(n.) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர்; name of the village in Chengalpet.

[ஞாயில்-நாயிர்-நாயர்]

கோட்டையை உணர்த்தும் 'ஞாயில்' என்பது காலப்போக்கில் 'நாயர்' என்று மருவி இருக்கலாம்.

நாயனேந்தல் *nāyaṉēndal,* பெ.(n.) அருப்புக்கோட்டை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[நாயன்+ஏந்தல்(ஏரி)]

நாவீறு *nāvīṟu,* பெ.(n.) சொல்லாடும் திறமை, பேச்சு வன்மை; talent in debate and conversation; gift of the gab.

[நா(நாக்கு)+வீறு]

நாவீறுடையபுரம் *nāvīṟudiyapuram,* பெ.(n.) நெல்லை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிற்றூர்; name of the village in Nellai.

[நா+வீறு+உடையர்+புரம்]

'நாவீறுடையார் என்னும் புலவரின் பெயரால் நாவீறு' என அமைந்த ஊர்.

நார்க்கடவான் *nār-k-kaḍavāṉ,* பெ.(n.) பனை நாரால் செய்த பெட்டி; basket woven by palmyra dried leaf.

மறுவ. ஓலைப்பெட்டி

[நார்+(கடகம்)கடவன்-நார்க் கடவன்]

நார்த்தவாடா *nārttavāḍa,* பெ.(n.) திருத்தணி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruttani Taluk.

[நாரத்தை+பாடி-நாரத்தைப்பாடி-நாரத்தைவாடி-நார்த்தவாடா]

நார்ப்பெட்டி *nār-p-peṭṭi,* பெ.(n.) பனை நார்க்கடகம்; tray made of palmyra-stems.

[நார்+பெட்டி]

நார்கத்தை *nār-kattai,* பெ.(n.) மட்டையிலிருந்து பிரித்த நார்க்கட்டு; bundle of fibre taken from palmyra.

[நார்+கத்தை]

நார்சீப்பு *nārcippu,* பெ.(n.) கற்றாழையைக் காய வைத்து சீவப் பயன்படும் கருவி; a device used to obtain fibre from kaṟṟāḻai-aloe.

[நார்+சீப்பு]

நார்முடிச்சேரல் *nārmuḍic-c-cēral,* பெ.(n.) களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் என்னும் சேர மன்னன்; name of a Cera king known as Kalankāy kanninārmudi-c-ceral.

[நார்(தலைமயிர்)+முடி+சேரல்]

பதிற்றுப்பத்தில் பாடப்பட்டுள்ள இம்மன்னன் நாரால் ஆகிய முடி புனைந்தவன் எனக் கூறுகின்றன ஆயின் மலையாள மொழியில் தலைமயிரைத் தலை நார் என்பதால் அப்பொருள் பொருந்தவில்லை. மரவுரியைக் கன்னட மொழியில் நார்மடி என்பர். நார்மடி என்பது பாடவேறு பாடாயின் மரவுரி உடுத்திய மன்னன் என்றும் பொருள் கொள்ள வாய்ப்புள்ளது. பொன் அணிகலன் அணியாமல் களங்கால் கண்ணி சூடியதாலுற்ற மேற்கொண்ட மன்னனாக அறியப்படுகிறான்.

நார்முடிச்சேலை *nārmuḍiccēlai,* பெ.(n.) நாரால் செய்த துணி. மரவுரி; cloth woven by the fibre of the tree bark formerly worn by our ascetics.

க. நார்மடி– நாரால் செய்த துணி – மரவுரி

நாரட்டை *nārattai,* பெ.(n.) சிவகங்கை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[நார்+அட்டு–நாரட்டு–நாரட்டை]

நாரைக்கிணறு *nāraikkiṇaṟu,* பெ.(n.)
1. இராசிபுரம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Rasipuram Taluk.
2. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர்; a village in Tirunelveli District.

[நாரை+கிணறு]

நாலடித்தாளம் *nāladi-t-tāḷam,* பெ.(n.) பறை .முழக்கத்தில் ஆளப்படும் தாளக்கட்டு; time measure variation in beating in percussion instruments.

[நாலடி+தாளம்]

நாலடித் தெம்மாங்கு *nāladi-t-temmāṅgu,* பெ.(n.) நான்கடிகளைக் கொண்ட தெம்மாங்கு வகை; a type of folk melody which has four lines usually sung by a lover addressing his beloved.

[நாலடி+தெம்மாங்கு]

நாலன் அலகு *nālaṉ-alagu,* பெ.(n.) ஒரு தட்டும் மூன்று எண்ணிக்கையும் உடையது; beat variation in musical time measure.

[நால்+அன்+அலகு]

நாலு வீடு கட்டு–தல் *nālu-vīḍu-kaṭṭu,* செ.கு.வி. (v.i.) சந்தத்திற்கு ஏற்ப ஆடும் கும்மியாட்டம்; dancing, accompanied with the clapping of hands for the same metre.

[நாலு+வீடு+கட்டு]

நாலறுவை மணிகள் *nālaṟuvai-maṇigaḷ,* பெ.(n.) கூட்டல் அடையாளம் போன்ற திறப்பினையுடைய மணிகள்; a bead variety.

[நால+அறுவ+மணி]

நாவடம் *nāvaḍam,* பெ.(n.) பெண்களின் அணிகலன்; an ornament of women. நாவடத்துக்காரியிடம் நாயத்தைச் சொன்னால் நாவடத்தைப் பார்ப்பாளா நாயத்தைக் கேட்பாளா (கொ.வ.).

[நாண்+வடம்–நாவடம்]

நாழிகைவழி *nāḻigai vaḻi,* பெ.(n.) ஒரு நாழிகையில் (24 நிமிடம்) நடக்கும் தொலைவு, ஒரு கட்டை (1 மைல்); a distance of one mile - distance in a nāḻigai (24 minutes) (யாழ்ப்.).

[நாழிகை+வழி]

நாழிவயல் *naḻivayal,* பெ.(n.) சிவகங்கை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[நாழி+வயல்]

நாளத்தி *nāḷatti,* பெ.(n.) இசைக்கலையில் இறக்கப் பண்ணோசை (அவரோகணம்); a singing complete descent of the gamut.

[நாள்+நாளத்தி]

நாற்பண் *nāṟpaṇ,* பெ.(n.) குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் எனும் நாற்பெரும் பண்கள்; four major melodies of Tamil music.

[நால்(நான்கு)+பண்]

பண்கள்: குறிஞ்சி - படுமலைப் பாலை- முல்லை - செம்பாலை, தீம்பாலை (அரிகாம்போதி, மோகனம்- சாதாரி, மருதம் - கோடிப்பாலை, நெய்தல் - விளரிப்பாலை.

நாற்பாலைப்பண் *nāṟpālaippaṇ,* பெ.(n.) முல்லைக்குரிய செம்பாலை, குறிஞ்சிக்குரிய படுமலைப்பாலை, மருதத்துக்குரிய கோடிப் பாலை நெய்தலுக் குரிய விளரிப் பாலை எனும் நான்கு நிறைப் பண்களாகிய பாலை பண்கள்; melodies which belongs to hill tract, forest tract, agricultural tract and maritime tract, and desert tract.

[நால்+பாலை+பண்]

நாற்றுப்பருவம் *nāṟṟu-p-paruvam,* பெ.(n.) சோளக்கதிர் விளையாட்டின் பெயர்; a children's play.

[நாற்று+பருவம்]

நாற்று மாலை *nāṟṟu-mālai,* பெ.(n.) நாற்று முடிகளைக் கட்டி வாய்க்காலில் இழுத்தல்; pulling the bundle of saplings.

[நாற்று+மாலை]

நாறி நலங்குலை-தல் *nāṟinalaṅkulai-,* செ.கு.வி.(v.i.) கெடுமனத்தனாய் வன் கொடுமை பலி செய்து உறவினராலும் ஊரின ராலும் இகழப்படுதல்; to be abused and condemned for one's misdeeds. அவன் ஏன் இப்படி நாறி நலங்குலைகிறான்.

[நாறு–நாறி+நலம்+குலை]

நான்கு மூலைக்கல் *nāṇgu-mūlaikkal,* பெ.(n.) நான்கு மூலையில் உள்ளவர்களும் ஒவ்வொரு கல்லாக எடுத்து விளையாடும் ஆட்டம்; a children's game.

[நான்கு+மூலை+கல்]

நிகழ்ச்சி வளைவர் *nigaḻccivaḷaivar,* பெ.(n.) தொலைக்காட்சி, வானொலி, காணொலிகளில் நாட்டு நடப்புகள், விழாக்கள், கலை நிகழ்ச்சி கள் புறத்தீடு செய்வதற்காக நிகழ்ச்சிகளை நேரிற் சென்று காணொலியில் அல்லது கேட்பொலியில் பதிவு செய்யும் தொழில்நுட்பப் பணியாளர்; technicians for video coverage or audio coverage.

[நிகழ்ச்சி+வளைவர்]

நிகழ்த்துநர் *nigaḻttunar,* பெ.(n.) பொம்ம லாட்டம், காளியாட்டம் முதலான நாட்டுப்புறக் கலைகளை நடத்துபவர்; organiser of puppet show.

[நிகழ்த்து+நர்]

நிசாகம் *niśāgam,* பெ.(n.) ஒரு வகையான வீர முழவு; a percussion instrument.

[நிசாளம்–நிசாகம்]

நிசாளம் *niśāḷam,* பெ.(n.) பழம்பெரும் தோற் கருவியினுள் ஒரு வகை; an ancient percussion instrument.

[நிசை+நிசாளம்]

நிடதம் *niḍadam,* பெ.(n.) ஓர் இரட்டைக்கை முத்திரை நிலை; a hand pose in dance.

[நீடு–நிடுதம்–நிடதம்]

நிண்ணையூர் *niṇṇaiyūr,* பெ.(n.) கள்ளக் குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakurichi Taluk.

[திண்ணன்–நிண்ணன்+ஊர்]

நிந்தைத்துதி *nintai-t-tudi,* பெ.(n.) பழிப்பதைப் போல் புகழ்ந்து பாடுதல்; apparent praise or censure suggesting the opposite.

[நிந்(தை+துதி)]

நிமந்தம் *nimandam,* பெ.(n.) கோயில் நிருவா கத்திற்கான திட்டம்; a committee to supervise to temple administration. "ஆள்வார்க்கு நித்தல் நிமந்தம் சந்நியாதிபம் செல்லக்கடவதாக...." (தெ.சா. 8:4:எ:456).

[நிவந்தம் – நிமந்தம்]

நிமித்தம் காக்கும் நாயகன் *nimittam kākkum nāyagaṉ,* பெ.(n.) நிமித்தம் சொல்பவன்; foreteller of omens.

[நிமித்தம்+காக்கும்+நாயகன்]

விக்கிரம சோழன் 7ஆம் ஆட்சி ஆண்டில் கி.பி.1125ஆம் ஆண்டு அரியாலூர் ஊர்ச்சபையில் நிமித்தம் காக்கும் நாயகன் இருந்துள்ளான்.

நியமக்குறைப்பு *niyama-k-kuṟaippu,* பெ.(n.) பெரிய எண் படிப்படியாக குறைந்து வருதல்; decreasing in total.

[நெய்(நெய்தல்)-சேர்த்தல்-நெயமம்-நியமம்+குறைப்பு]

நிரமதி *niramadi,* பெ.(n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Kallakurichi Taluk.

[நிரல்+மதி]

நிரவல் *niraval,* பெ.(n.) காட்டாளத்தி பண் வகையினுள் ஒன்று; a tune type.

[நிரவு-நிரவல்]

நிருத்தம் *niruttam,* பெ.(n.) தாளங்களின் வேறுபாடுகளைக் கொண்டு கை, கால், முகம் இவற்றின் நிலைகளோடு கூடிய அடவுகள் கொண்ட ஆடல் வகை; gesture of hands, face and movement of limbs to express emotion, ideas through dance according to the variation of beating of time.

மறுவ. நிறுத்தம்

[நில்-நிறுத்து+அம்-நிறுத்தம்-நிருத்தம் (கொ.வ.)]

அடவுகளுக்கும், தாளத்துக்கும், பண்ணிசைக்கும் ஏற்ப மெய்ப்பாடுகளைக் கால ஒழுங்குக்கு ஏற்ப நிறுத்திக் காட்டுதலால் நிறுத்தம் எனப் பெயர் பெற்றது. இது வடமொழியில் நிருத்தம் எனத் திரிந்தது.

நிலக்கிடைக்கோடு *nila-k-kiḍai-k-kōḍu,* பெ.(n.) உலகப்படத்தில் நிலநடுக்கோட்டின் இருபாலும் உள்ள கிடை வரை; terrestrial latitude; imagenary horizontal line drawn on earth called as lattitudes.

மறுவ. கிடைவேரைக்கோடு

[நிலம்+கிடை+கோடு]

நில விலை ஆவணம் *nila vilai āvaṇam,* பெ.(n.) ஒரு நிலத்திற்கு மாற்றாக வேறோர் நிலம் வழுங்குவதைக் குறிக்கும் ஆவணம்; document which shows the land transfer mutually.

[நிலம்+விலை+ஆவணம்]

நிலந்தரு திருவின் பாண்டியன் *nilantaru-tiruviṉpāṇḍiyaṉ,* பெ.(n.) தொல்காப்பியத்தை அரங்கேற்றிய பாண்டிய மன்னன்; Pandiya king in whose presence ancient Tamil grammer Tōlkappiyam approval of the learned assembly.

நிலாப்பூச்சி *nilā-p-pūcci,* பெ.(n.) நிலா வெளிச்சத்தின் நிழலைக் கொண்டு தோற்றவனைத் தேர்ந்தெடுக்கும் விளையாட்டு வகை; a children's game.

[நிலா+பூச்சி]

நிலைகுலையான் *nilaikulaiyāṉ,* பெ.(n.) ஆண்பாற் பெயர்; name of a person.

[நிலை+குலையா(தவ)ன்]

நாஞ்சில் நாட்டில் 1645இல் நாகராசர் கோயில் விளக்கெரிக்க இவனிடமிருந்து பணம் 600 பெறப்பட்டது.

நிலை *nilai,* பெ.(n.) ஒயிலாட்டத்தின் தொடக்கத்தில், ஆட்டக்காரர் நிற்கும் முறை; standing pose in the folk dance oyilaṭṭam.

[நில்-நிலை]

நிலைமரம் *nilaimaram,* பெ.(n.) வாயில் நிலையான பக்க நெடுங்கால், கரிகால்; side wodden rafters of door frame.

[நிலை+மரம்]

நிலையூர் *nilaiyūr,* பெ.(n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Kallakurichi Taluk.

[நிலை+ஊர்]

நிற ஆளத்தி *nira-āladdi,* பெ.(n.) நெட்டெழுத்துகள் அடிப்படையில் எழும் இசை; song composed with long vowels.

[நிறம்+ஆளத்தி]

நிறாமணி *nirāmaṇi,* பெ.(n.) திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Vriudhachalam Taluk.

[நிறம்+மணி]

நிறைப்பு சுவடிப்பு *niraippu-cuvaḍippu,* பெ.(n.) பாடலில் ஒலி வடிவம் முதலில் சிறுத்தும், செல்லச்செல்ல பெருத்தும் அமைதல்; tone variation in singing songs.

[நிறைப்பு+சுவடிப்பு]

நிறை *nirai,* பெ.(n.) ஆளத்தி பாடப்படும் ஒரு முறை; raising tone system in music.

[நிறு-நிறை]

நிறைநிலை *nirai-nilai,* பெ.(n.) சிற்ப வடிவைத் தேவிகமாக மாற்றும் நிலை; elevating the statue to divinity.

[நிறை+நிலை]

நின்னாங்கூலி *ninnāṅkūli,* பெ.(n.) வேலை செய்யாமல் வெறுமனே நின்று கொண்டு கூலி பெறுதல்; getting wages without doing any work.

[நின்றான்+கூலி. நின்றான்-நின்னான் (கொ.வ.)]

நீங்கெழுத்துப்பா *niṅgeluttu-p-pā,* பெ.(n.) ஒரு பொருள் பயப்பதோர் சொற்கூறி, அச் சொல்லில், ஒரோரெழுத்தாக நீக்க, வேறுவேறு பொருள் பயக்கும் சித்திரப்பா; verse composed with a play on words, a word by gradual elimination becoming different word with different meaning as in Kanakāri, nakāri, kāri or pālāvi,pālā, pā.

[நீங்கு+எழுத்து+பா]

நீசத்தனம் *nīsattanam,* பெ.(n.) திட்டும் சொல்; an abusing word.

[நீசம்+தனம்]

நீட்டம் *nīṭṭam,* பெ.(n.) நீளம்; length.

மறுவ. நீளம், நீட்டு

[நீள்-நீட்டு-நீட்டம்]

நீளத்தை நீட்டு அல்லது நீட்டம் என்பது வடதமிழ்நாட்டு வழக்காறு.

நீட்டு *nīṭṭu,* பெ.(n.) நீளம்; length.

மறுவ. நீட்டம்

[நீள்+து-நீட்டு-நீளம்]

நீட்டு என்னும் பிறவினைச் சொல் முதனிலைத் தொழிற்பெயராகி நீளத்தைக் குறித்தது.

நீடாமங்கலம் *nīḍāmaṅgalam,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர்; name of the village in Thanjavur.

[நீராட்டு+மங்கலம்]

நீடாமங்கலம் என்ற பெயர் 'நீராட்டுமங்கலம்' என்பதன் திரிபு. கரிகாற் சோழன் போர் முடித்து வெற்றி தந்த தன் வாளுக்கு 'நீராட்டுமங்கலம்' இங்கே செய்ததால் இவ்வூர் அப்பெயர் பெற்றது. நாளடைவில் 'நீடாமங்கலம்' எனப்பட்டது.

தஞ்சையை ஆண்ட மன்னன் பிரதாபசிங் தன் மனைவியருள் ஒருத்தியான யமுனாம்பாளுக்காக இவ்வூரில் அரண்மனையும், பிற வசதிகளும் செய்து கொடுத்துள்ளான். இவ்வூரில் இவ்வம்மையாரின் பெயரில் சத்திரமும், கோயிலும் அமைக்கப்பட்டதால் யமுனாம்பாள்புரம் எனும் பெயரும் பெற்றது.

நீண்ட குழல் *nīṇḍa-kūlal,* பெ.(n.) ஒயிலாட்டத்தில் இசைக்கப்பெறும் ஒரு வகை இசைக்கருவி; a musical instrument, used in 'oyilāṭṭam'.

[நீண்ட+குழல்]

நீண்ட வளை கொம்பு *nīṇḍa-vaḷaikōmbu,* பெ.(n.) திருந்தா ஊது கருவி; a musical instrument.

[நீண்ட+வளை+கொம்பு]



நீத்தடி *nīttaḍi,* பெ.(n.) நீச்சல். (கொ.வ.வ. சொ.98); swimming.

[நீந்தல்+அடி–நீத்தலடி–நீத்தடி (கொ.வ.)]

நீர்க்குண்டம் *nīrkkuṇḍam,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[நீர்+குண்டம்(குட்டை)]

நீர் திரட்டுதல் *nīr-tiraṭṭudal,* பெ.(n.) தீமிதி விழாவுக்கு முன் பூசாரி பாடல் பாடியவாறே, தீக் குண்டத்திற்குச் சென்று திரும்புதல்; a ritual walking acrose a fire - pit by singing hymn.

[நீர்+திரட்டுதல்]

நீர்பாய்ச்சி *nīrpāycci,* பெ.(n.) விளைச்சல் நிலங்களுக்கு நீர்பாய்ச்சும் பணியாளன்; servant employed for irrigation work.

மறுவ. நீர்கட்டி

[நீர்+பாய்ச்சி]

நீர்மாலை *nīrmālai,* பெ.(n.) இறந்தவர்க்கு மகன் செய்யும் சடங்கு; a death ritual done by the decease son.

[நீர்+மாலை]

நீர்மை *nīrmai,* பெ.(n.) பண்ணின் இசை வகை; a musical note.

[நீர்–நீர்மை–புறநீர்மை (பூண்டளம்)]

நீர்வண்ணம் *nīr-vaṇṇam,* பெ.(n.) வண்ணக் குழம்பின் ஒரு வகை; coloured water.

[நீர்+வண்ணம்]

நீரலைக்கிண்ணி *nīralai-k-kiṇṇi,* பெ.(n.) நீர் நிரப்பிய கிண்ணங்களைத் தட்டி இன்னிசை எழுப்பும் இசைக்கருவி (சலதரங்கம்); water glass musical instrument.

[நீர்+அலை+கிண்ணி]

நீராடி *nīrāḍi,* பெ.(n.) செங்கற்பட்டு வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Chenglepet Taluk.

[நீராட்டு–நீராட்டி–நீராடி]

நீராணிக்கர் *nīrāṇi-k-kar* பெ.(n.) வயலுக்கு நீர் பாய்ச்சும் தொழில் உரிமையாளர்; one who manages the village irrigation.

[நீர்+(ஆளுநர்) ஆணிக்காரர்–ஆணிக்கர்]

நீரேந்தல் *nīr-ēndal,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruvadāṇai Taluk.

[நீர்+ஏந்தல்(ஏரி)]

நீலகந்தி *nīlakandi,* பெ.(n.) கொற்றவைச் சிற்பத்தின் வேறு வடிவம்; a different posture of 'korrawai' Durga.

[நீல+கந்தி]

நீலோற்பலம் *nīlōrpalam,* பெ.(n.) திருத்தணி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruttani Taluk.

[நீல+உற்பலம்]

நீள் கம்பு *nīlkambu,* பெ.(n.) இரண்டு முழம் முதல் மூன்று முழம் வரை அளவுள்ள கம்பு; a millet variety.

[நீள்+கம்பு]

நுகல்தடி *nugaltaḍi,* பெ.(n.) உழவுப் பணி களுக்கு மாடுகளை ஏர், வண்டி, கவலை இறைப்பு ஆகியவற்றில் இணைக்க உதவும் மரத்தடி; a wooden pole used to tie two cow or bulls enabling the operations of ploughing, well irrigation, cart driving etc.

மறுவ. நுகத்தடி

[நுகு(புகு)-நுகல்+தடி]



நுகும்பல் *nugumbal,* பெ.(n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Madurantagam Taluk.

[நுகும்பு+நுகும்பல்]

நுங்கு மட்டை *nuṅgu-maṭṭai,* பெ.(n.) வண்டி யுருட்டி விளையாட்டில் கருவிப் பொருள், (பனங்காய் மட்டை); play wheel from the palmyrah nut shell.

[நுங்கு+மட்டை]

நுடங்குகை *nuḍaṅgugai* பெ.(n.) ஓர் ஆட லியக்கம்; a dance movement.

[நுடங்கு-நுடங்குகை]

நுண்கலைச்செல்வர் *nuṉ-kalaicelvar,* பெ.(n.) இசைச் சான்றோரைச் சுட்டுஞ் சொல்; experts in music, a word which denotes the stalwarts in music.

[நுண்+கலை+செல்வர்]

நுமுட்டு-தல் *numuṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) கம்பு மற்றும் சோளக்கதிர்களிலுள்ள தவச மணி களை அதனின்றும் பிரித்தெடுத்தல்; to separate the grains such as kambu and cōlam.

[நுமுள்-நுமுட்டு]

நுவம் *nuvam* பெ.(n.) நெசவு நெட்டுப்பாரில் இணைந்திருப்பது; a device in handloom.

[நூவு-நுவம்]

நுளையர் *nuḷaiyar,* பெ.(n.) கடல்வாழ் உயிர் களை வேட்டையாடும் குடியினர்; marine track people killed in fishing operation.

[நுளை>நுளையர்]

நுனிப்பாசி *nuṉi-p-pāśi* , பெ.(n.) குடுகுடுப் பையில் ஓசையெழுப்ப பயன்படும் நுனிப்பகுதி; the end bud in the percussion instrument - kudukuduppai.

[நுனி+பாசி]

நூபுரம் *nūpuram,* பெ.(n.) கிண்கிணி எனும் காலணி; a kind of ankle. "நாகச்சிரம் செய் நூபுரமும் வண்டும் சிலம்பொடு சிலம்பி ஆர்ப்ப" (பால:22:22).

[நூவுரம் – நூபுரம்]

நூம்பல் *nūmbal,* பெ.(n.) சைதாப்பேட்டை, வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Saidapet Taluk.

[நாம்பு-நாம்பல்>நூம்பல்]

நூரோலை *nūrōlai,* பெ.(n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Kallakurichi Taluk.

[நூரை+உலை]

நூல் *nūl,* பெ.(n.) மரத்தை அறுக்க அளவு எடுக்கப் பயன்படும் அளவு முறை; measuring method for finding the thickness of wooden planks.

[நுல்-நூல்]

நூல்-தல் *nūl-,* செ.கு.வி.(v.i.) இழுத்தல்; to pull.

க. நூல்

[நூ-நூல்(இழுத்தல்)]

நூல்கயிறு *nūlkayiru,* பெ.(n.) நூலால் திரித்த கயிறு; tender rope made of thread.

[நூல்+கயிறு]

நூல்பாய் *nūl-pāi,* பெ.(n.) நூலால் பின்னிய பாய்; mat made of threads.

[நூல்+பாய்]

நூள் *nūḷ,* பெ.(n.) பொய்; lie, falsehood.

க. நூள்

[நுள்-(துளை,உள்ளீடு இன்மை)-நூள். ஒ.நோ.நூழை-உள்வாயில்-நொள்ளை(குழி)]

நூற்றுவர்கன்னர் *nūṟṟuvarkaṉṉar,* பெ.(n.) சாதவாகனர் என்னும் குடியினரின் தமிழ்ப் பெயர்; Tamil name of Satavahan class of Andra royal family.

[நூறு>நூற்றுவர்+கன்னர்]

நொதி *nodi,* பெ.(n.) அருவருக்கத்தக்க சேறு; mud. "நொதி அருவருத்த சேறு" (நிக.க.5:28).

[நொது-நொதி]

நெக்கணாமலை *nekkaṇāmalai,* பெ.(n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Thiruppattur Taluk.

[நெக்கணன்+மலை]

நெக்குண்டி *nekkuṇḍi,* பெ.(n.) தருமபுரி வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Dharmapuri Taluk.

[நெல்+குன்றம்-நெற்குன்றம்-நெக்குண்டி]

நெக்குந்தி *nekkundi,* பெ.(n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Thiruppattur Taluk.

[நெல்+குன்றம்-நெக்குந்தி]

நெகிழிக்குழல் *negiḻi-k-kūḻal,* பெ.(n.) பண்டைய இசைக்கருவி; an ancient musical instrument.

[நெகிழி+குழல்]

நெசல்[1] *nešal,* பெ.(n.) அரக்கோணம் வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Arakonam Taluk.

[நெய்தல்-நெசல்]

நெசல்[2] *nešal,* பெ.(n.) திண்டிவனம் வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[நெய்தல்-நெசல்]

நெசவுத் திண்ணை *nešavu-t-tiṇṇai,* பெ.(n.) நெசவு நெய்பவர் அமர்ந்து இருக்கும் மேடை; peal where the weavers sit while wearing.

[நெசவு+திண்ணை]

நெஞ்சுவில்லை *neñjuvillai,* பெ.(n.) சேவை யாட்டக் கலைஞர்களின் ஒப்பனைப் பொருள்; a makeup object which is used in 'sēvaiyattam'.

[நெஞ்சு+வில்லை]

நெட்டிமையார் *neṭṭimaiyar,* பெ.(n.) கடைக் கழகப் பெண்பாற் புலவர்; poetess of sangam period.

க. நெட்டம் மிளகு, மூங்கில். நெட்டி - அழகு, செம்மை

[நெட்டு-நெட்டிமை(செம்மை)+ஆர்]

நெட்டி வேலை *neṭṭivēlai,* பெ.(n.) ஒரு வகையான கைவினைக் கலை ; a decoration art.

[நெட்டி+வேலை]

நெட்டுக்குச்சி *neṭṭu-k-kucci,* பெ.(n.) கட்டிலில் நெட்டு வாக்கில் இரண்டு கால்களை இணைக்கும் கட்டை; lengthy wooden raft connecting two legs of the cot.

[நெட்டு+குச்சி]

நெட்டுச் சட்டம் *neṭṭu-c-caṭṭam,* பெ.(n.) கதவுகளில் தட்டுப் பலகையினை இணைக்கும் சட்டம்; wooden planks connecting pieces in a door.

[நெட்டு+சட்டம்]

நெட்டுப் பலகை *neṭṭu-p-palagai,* பெ.(n.) பேழை (அலமாரி)யின் ஓரத்தில் உள்ள பலகை; vertical wooden piece in an almyrah.

[நெட்டு+பலகை]

நெட்டுப் பார் *neṭṭu-p-pār,* பெ.(n.) வண்டியின் நடுவில் இருக்கும் மரப்பார்; central core wooden long in a cart.

[நெட்டு+பார்]

நெடம்பரம் *neḍambaram,* பெ.(n.) திருத்தணி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruttani Taluk.

[நெடு+அம்பலம்]

நெடியம் *neḍiyam,* பெ.(n.) திருத்தணி வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruttani Taluk.

[நெடு-நெடியம்]

நெடியோன் *neḍiyōṉ,* பெ.(n.) பாண்டிய மன்னர் மரபில் முதல் மன்னன்; the first king in Pandya dynasty. நிலந்தந்த பேருதவி பொலந்தார் மார்பின் நெடியோன் (மதுரைக்.).

[நெடு+நெடியோன்]

நெடுக்குச் சால் *neḍukku-c-cāl,* பெ.(n.) நீள வாக்கில் செய்யும் உழவு. (வ.வ.வே.க.31); tilling the land length wise.

மறுவ. நெடுஞ்சால்

[நெடுக்கு+சால்]

நெடுங்கிள்ளி *neḍuṅkiḷḷi,* பெ.(n.) கடைக்கழகக் காலத்திய சோழ மன்னன்; name of Chola king.

நெடுந்தாரை *neḍu-n-tārai,* பெ.(n.) பண்டைய இசைக் கருவியினுள் ஒன்று; an ancient musical instrument.

[நெடும்+தாரை]

நெடுந்தோண்டி *neḍuntōṇḍi,* பெ.(n.) திண்டி வனம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[நெடும்+தோண்டி(பன்மை)]

நெடும்பல்லியத்தனார் *neḍumpalliyattaṉār,* பெ.(n.) கடைக்கழகக் காலத்திய புலவர்; name of a sangam period.

[நெடும்+பல்+இயம்+அத்து+அன்+ஆர்]

நெடும்புலம் *neḍumbulam,* பெ.(n.) திருத் துறைப் பூண்டி வட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிற்றூர்; name of the village in Thiruthuraippundi Taluk.

[நெடும்+புலம்]

நெடும்புலி *neḍumpuli,* பெ.(n.) அரக்கோணம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Arakonam Taluk.

[நெடும்+புலி]

நெடுமாயக் கள்வன் *neḍumāyakaḷvan* பெ.(n.) திருமால்; Kannan, the god. "கண்டிலம் இவன் நெடுமாயக் கள்வனால்" (யுத்.31:174).

[நெடு+மாயன்+கள்வன்]

நெய்விழா *neyviḻa,* பெ.(n.) மங்கலமாக இடும் நெய் முழுக்கு; considered auspicious anointment. "நிரம்பின உலகு எலாம் உவகை நெய் விழா".

[நெய்+விழா]

நெடுவங்கியம் *neḍuvaṅgiyam,* பெ.(n.) ஏழு துளைகள் கொண்ட குழல் வகை; flute which has seven holes.



[நெடு+வங்கியம்]

நெடுவரை *neḍuvarai,* பெ.(n.) இலண்டனிலுள்ள கிரீன்விச்சுக்கு ஊடாகச் செல்லும் வட-தென் துருவ நிரை கோட்டிலிருந்து மேற்கில் அல்லது கிழக்கில் நிரலாக உலக வரைபடத்தில் இடப்படும் நெடுங்கோடு; longitude. imaginary vertical lines drawn goes through greenwich from North to South.

[நெடு+வரை]

நெடுவாய்க் கலப்பை *neḍuvāi-k-kalappai,* பெ.(n.) கலப்பையின் உழும் பகுதி; long plough share.

[நெடு+வாய்+கலப்பை]



நெடோடை *neḍōḍai,* பெ.(n.) அருப்புக் கோட்டை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[நெடு+ஓடை]

நெத்திக்கட்டுதடி *netti-k-kaṭṭutaḍi,* பெ.(n.) தடி விளையாட்டில் தன்னுடைய உயரத்திற்கு வைத்திருக்கும் கெட்டியான மூங்கில் கழி; a bamboo pole used in martial fight. (கொ.வ.வ.சொ.99).

[நெற்றி+கட்டு+தடி]

நெப்பியல் *neppiyal,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[நெப்பு+இயல்]

நெம்பை *nembai,* பெ.(n.) வீட்டினுள் வாசலின் மேற் பகுதியில் உள்ள சிறிய அறை; a small room above the entrance of a house.

[நும்பு-நெம்பை]

நெமிலி *nemili,* பெ.(n.) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர்; name of the village in Chenglepet Taluk.

[மயில்-மிஞில்-மிஞிலி-ஞமிலி-நெமிலி]

நெய்க்குப்பை *neykkuppai,* பெ.(n.) கும்பகோணம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Kumbakonam Taluk.

[நெய்+குப்பை]

நெய்க்கோணம் *ney-k-kōnam,* பெ.(n.) புதுக் கோட்டையிலிருந்து 20 அயிர மாத்திரி (கி.மீ.) தொலைவிலுள்ள சிற்றூர்; name of a village 20 k.m. from Pudukottai.

[நெல்(நெய்)+(குன்றம்-குணம்) கோணம் (கொ.வ.)]

இவ்வூர் 'நெல்குன்றம்' எனக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

நெய்குப்பி *neykuppi,* பெ.(n.) திண்டிவனம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[நெல்(நெய்)+குப்பம்(குப்பி)]

நெய்தல்தத்தனார் *neidaltattaṉār,* பெ.(n.) கடைக்கழகப் புலவர்; poet of sangam period.

[நெய்தல்+தத்தன்+ஆர்]

நெய்வண்ணம் *ney-vannam,* பெ.(n.) வண்ணக் குழம்பின் ஒரு வகை; a kind of colour mix.

[நெய்+வண்ணம்]

நெய்வனை *neyvanai,* பெ.(n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[நெல்(நெய்)+மனை–வனை]

நெய்வாசல் *neyvāsal,* பெ.(n.) சிதம்பரம் வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[நெல்(நெய்)+வாசல்]

நெய்வாய்க்குடி *nayvāi-k-kudi,* பெ.(n.) மயிலாடுதுறை வட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர்; name of village in Mayiladuturai.

[நெல்(நெய்)+வாய்+குடி]

தற்போது இவ்வூர் நல்லத்துக்குடி என்னும் பெயருடன் உள்ளது.

நெல்வாய்க்குடி *nelvāi-k-kudi,* பெ.(n.) நாகை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள ஒரு சிற்றூர்; name of the village in nagai near the Mayiladuturai.

[நெல்+வாய்+குடி]

நெய்விளக்கு *neyviḷaku,* பெ.(n.) நெய்யால் எரியும் விளக்கு; a lamp which is lighted in ghee.

[நெய்+விளக்கு]

நெரசல் *nerasal,* பெ.(n.) ஓலையால் மறைத்துக் கட்டப்படும் தட்டி; a screen like seperation made with dried leaves of palmyra or coconut tree leaves.

[நிரவு–நெரசல்]

நெரிகம் *nerigam,* பெ.(n.) ஒசூர் வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Hosur Taluk.

[நரி–நரியகம்–நெரிகம்]

நெருப்புக்கொட்டை *neru-p-pukkoṭṭai,* பெ.(n.) முள் முருங்கை விதை; seed of mulmurungai.

[நெருப்பு+கொட்டை]

இவ்விதையைத் தரையில் தேய்த்து உடம்பில் வைத்தால் சுடும் தன்மையாதலால் இப்பெயர் பெற்றது எனலாம்.

நெருப்பெரிச்சல் *neruppericcal,* பெ.(n.) பல்லடம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Palladam Taluk.

[நெருப்பு+எரிச்சல்]

நெருப்பு நடனம் *neruppunadanam,* பெ.(n.) மாலி வகுப்பைச் சார்ந்த பெண்டிர் ஆடும் நடனம்; a kind of dance performed by Māli group ladies. (4:14).

[நெருப்பு+நடனம்]

நெல்நடவுப் பாடல் *nelnadavu-p-pādal,* பெ.(n.) மள்ளர் இனத்தவரின் வேளாண்மைத் தொடர்பான பாடல்; a song sung by Maḷḷar.

[நெல்+நடவு+பாடல்]

நெல் பட்டரை *nel-paṭṭari,* பெ.(n.) நெல் குவியல்; heap of paddy.

[நெல்+பட்டரை]

நெல்லி *nelli,* பெ.(n.) மதுராந்தகம் வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Madurantakam Taluk.

[நெல்லி–நெல்லிமரத்தூர்]

நெல்லின் தோற்றக் கதை *nellin-tōrra-k-kadai,* பெ.(n.) மள்ளர் குடியின் தோற்றத்தைக் கூறும் கதை; a story which says the origin of the Maḷḷar community.

[நெல்லின்+தோற்றம்+கதை]

நெல்வாய் *nelvāy,* பெ.(n.) 1. வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர்க்கு அருகில் உள்ள ஒரு சிற்றூர்; name of the village in north Arcot near Vellore. 2. அரக்கோணம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Arkonam Taluk.

[நெல்+வாய்]

நெற்குப்பை *nerkuppai,* பெ.(n.) திருநள் ளாற்றுக்கு மேற்கே 32 அயிரமாத்திரி (கி.மீ.) தொலைவில் உள்ள ஒரு சிற்றூர்; name of the village 32 k.m. from Thirunallar.

[நெல்+(குப்பம்)குப்பை]

நெறியறஞ்செய்வார் *neri-y-arañceyvār,* பெ.(n.) அசோகன் காலத்தில் புத்தமதம் பரப்புவதற்காக அமர்த்தப்பட்ட தர்மமகா மாத்திரர் என்னும் துறவிகள்; Dharma maha mātras of Asokan period.

[நெறி+அறம்+செய்வார்]

களப்பிரர் காலக் கல்வெட்டில் இடம் பெற்ற இச்சொல்லாட்சி வேற்று மொழிச்சொற்களை உடனுக்குடன் தமிழாக்கிக் கொண்ட வழக்கத்தைக் காட்டுகிறது.

நென்மலி *nenmali,* பெ.(n.) மன்னார் குடி வட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர்; name of the village in Mannarkudi.

[நெல்+மலி]

இவ்வூர் தற்போது நெம்மேலி என்னும் பெயருடன் உள்ளது.

நென்மேனி *nenmēni,* பெ.(n.) சாத்தூர் வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Sattur Taluk.

[நெல்+மேனி]

நேசனூர் *nēšanūr,* பெ.(n.) திருத்தணி வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Tiruttani Taluk.

[நேயன்+ஊர்]

நேமத்தான் பட்டி *nēmattānpatti,* பெ.(n.) புதுக்கோட்டை மாவட்டத்தில் காரைக்குடி வட்டத்தில் அமைந்துள்ளது; name of the village from Pudukkottai (dist.).

[நியமத்தான்(நேமத்தான்)+பட்டி]

நேமூர் *nemūr,* பெ.(n.) விழுப்புரம் வட்டத் திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Villupuram Taluk.

[நியமம்(நேமம்)+ஊர்]

நேரலகிரி *nēralagiri,* பெ.(n.) கிருட்டிணகிரி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Krishnagiri Taluk.

[நேரல்(நாவல்மரம்)+கிரி]

நையாண்டி *naiyāndi,* பெ.(n.) நகையாட்டு வகையிலமைந்த நாட்டுப்புறக்கலை நிகழ்ச்சி; a folklore of comedy type, farce.

[நைதல்-பிறரை எள்ளற் பொருளாக்கிச் சிரித்தல். நை -நையாடு - நையாளு- நையாண்டி]

நைவார் *naivār,* பெ.(n.) மனம் கனிபவர்; mellower. "நின்று நைவார் இடன் களையாய் நெடுங் களம் மேவியவனே".

[நைபவர்+நைவார்]

நைவினை *naivinai,* பெ.(n.) நலிவு தரும் செயல்; humiliating actions. "நைவினை நணுகேல்" (ஔ.).

[நை+வினை]

நைனாக்குடி *nianākkudi,* பெ.(n.) ஆசாரி எனும் கம்மியக்குடியினர் வாழும் பகுதி; a settlement of artisens.

[நாயன்-நைனா+குடி]

நேம்பு-தல் *nēmbu-,* செ.கு.வி.(v.i.) புடைத்தல்; to winnow.

[நாம்பு-நேம்பு]

நேரான் *nērān,* பெ.(n.) சோழ மன்னன் செங்கணானை எதிர்த்தவன்; one who opposed the Chola king Senganān.

[நேர்+ஆ+அன்]

நொச்சிக்குச்சி *nocci-k-kucci,* பெ.(n.) ஆணித் தட்டுப் பின்னப் பயன்படும் வளார்; a plant twine which is used to make chase of 'ānittattu'.

[நொச்சி+குச்சி]

நொச்சி நியமங்கிழார் *nocciniyamangiār,* பெ.(n.) கடைக்கழகப் புலவர்; name of a sangam poet.

[நொச்சி+நியமம்+கிழார்]

இவர் காஞ்சித் திணையைப் பாடியுள்ளார். பூந்துறைக்கு அருகில் உள்ள நொச்சியூரை சேர்ந்தவர்.

நொச்சியம் *nocciyam,* பெ.(n.) கருவூர்க்குக் கிழக்கில் உள்ள ஒரு சிற்றூர்; name of the village in east Karuvur.

[நொச்சி+ஆம்]

நொச்சியூர் *nocciyūr,* பெ.(n.) பூந்துறை நாட்டுச் சிற்றோடைக்கு மேற்கில் உள்ள ஒரு சிற்றூர்; name of the village on the western side of pūndurai cirrōḍai.

[நொச்சி+ஊர்]

இப்பொழுது நொச்சிப் பாளையம் என்று வழங்கப்படுகிறது.

நொசி குறங்கு *noši-kuṟaṅgu,* பெ.(n.) ஒரு வகையான ஆடலியக்கம்; a kind of dance movement.

[நொசி+குறங்கு(தொடை)]

நொட்டுக்கை *noṭṭu-k-kai,* பெ.(n.) இடை விடாமல் எதையாவது செய்து கொண்டே இருப்பவர்; one who is working continuously.

[நொடு–நொட்டுக்கை]

நொட்டு-தல் *noṭṭu,* செ.குன்றாவி (v.t.) 1. செய்து முடித்தல்; to finish a work. 2. நெடுங்காலக் கடனை அடைத்தல்; to repay a loan of long due. எவனாலும் முடியவில்லை இவன் நொட்டுவானா (கொங்கு.பழ.).

[நொள்>நொடு>நொட்டு]

நொண்டிக்கருப்பு *nondi-k-karuppu,* பெ.(n.) சிற்றூர்க் காவல் தெய்வம்; a village deity.

[நொண்டி+கருப்பு]

நொண்டு சில்லி *nondu-cilli,* பெ.(n.) நம்பர் நொண்டி; வட்டமான அரங்கில் எண்களைக் குறித்துச் சில்லினை எறிந்து சிறுவர் ஆடும் நொண்டி விளையாட்டு; the game of hopping with folded legs.

[நொண்டு+சில்லி]

நொணலாமணிவலை *nonalāmaṇivalai,* பெ.(n.) கொழ கொழப்பான மணி வலை; a party net.

[நொணல்–நொணலா+மணி+வலை]

நொரண்டு-தல் *noraṇḍu-,* செ.கு.வி.(v.i.) குறும்பு செய்தல்; to behave; mischeviously playing pranks on others. (நெல்லை.வ.).

மறுவ. சுழித்தனம், குறும்பு.

[நுரண்டு–நொரண்டு]

நொறுநாட்டியம் *noṟunāṭṭiyam,* பெ.(n.) குற்றம் குறை; fault, accusation.

[நொறு+(நொட்டு)–நொட்டியம்–நாட்டியம்]

நோக்குரு *nōkkuru,* பெ.(n.) 1. பார்வைக்காகத் தரப்படும் ஒரு பொருளின் மிகைப் பொருள்; sample of a thing or article. 2. ஒரு பொருளை முற்றிலும் ஒத்திருக்கும் செயற்கை வடிவம்; a model.

மறுவ. மாதிரி

[நோக்கு+உரு]

நோம்பி அழைப்பு *nōmbi aḻaippu,* பெ.(n.) திருவிழாவிற்கு உறவுக்காரர்களை அழைத்தல்; to invite the relatives for village festival.

[நோன்பு–நோம்பி+அழைப்பு]

நௌலி *nauli,* பெ.(n.) தாராபுரம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்; a village in Dharapuram Taluk.

[நெமிலி–நௌலி]

ப

பக்கச்சட்டம் *pakka-c-caṭṭam,* பெ.(n.) குறுக்குச்சட்டம் இரண்டையும் இணைக்கும் பக்கச்சட்டம்; a side wooden plank connecting the other two.

[பக்கம்+சட்டம்]

பக்கப்பிளாச்சு *pakka-p-piḷāccu,* பெ.(n.) கட்டை வண்டியில் ஓட்டுபவர் அமர்வதற்காகப் பொருத்தப்படும் சட்டம்; wooden piece fixed in a cart to enable the cart driver to sit.

[பக்கம்+பிளாச்சு]



பக்கி *pakki,* பெ.(n.) இருளர் குடியினரின் நீண்ட கதைப்பாடல்; a narrative song of the Irula tribes.

[ஒருகா. பறவை – பறக்கி –பக்கி]

பகஞ்சான் *pagañjāṉ,* பெ.(n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[ஒருகா. பாகன்+சால்]

பகடப்பாடி *pagaḍappāḍi,* பெ.(n.) ஆத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Attur Taluk.

[பகடை+பாடி]

பகடை *pagaḍai,* பெ.(n.) செருமான் இனத்தைச் சேர்ந்தவன் (நெல்லை); a man belonging to cobbler community.

பகண்டை *pagaṇḍai,* பெ.(n.) விழுப்புரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vilupuram Taluk.

[பகன்றை+பகண்டை]

பகல்வேடக்கலை *pagal-vēḍa-k-kalai,* பெ.(n.) விழுப்புரம், திண்டிவனம் பகுதியைச் சார்ந்த குல்லுக்கவர இன மக்கள் நிகழ்த்தும் நாட்டுப் புறக்கலை; folk dance of Kullukkavara people.

[பகல்+வேடம்+கலை]

பகை *pagai,* பெ.(n.) ஏழிசைத் தொகுதியில் மூன்று மற்றும் ஆறாம் நரம்பு குறிக்கின்ற சொல். a word referring to 3rd and 6th string in harp.

[பகு–பகை]

பகையணி *pagaiyaṇi,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[பகை+அணி]

பங்கலத்தான் *paṅgalattāṉ,* பெ.(n.) வேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vellore Taluk.

[பங்கலம்+அத்து+ஆன்]

பங்காரம் *paṅgāram,* பெ.(n.) கள்ளக்குறிஞ்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkuricci Taluk.

[பங்கு+ஆரம்]

பச்சைக்கரகம் *paccai-k-karagam,* பெ.(n.) அம்மன் வழிபாட்டில் எடுக்கும் கரக வகை; temple ritual.

[பச்சை+கரகம்]

பச்சைத்தாலி *paccai-t-tāli,* பெ.(n.) திருமணப் புதிய தாலி; the tali as it is on the marriage day.

[பச்சை+தாலி]



பச்சைக்கோலம் *paccai-k-kōlam,* பெ.(n.) நாட்டுப்புறக் கைவினைக் கலை; fineart feature in rural handicrafts.

[பச்சை+கோலம்]

பசலிக்குட்டை *pasalikkuṭṭai,* பெ.(n.) திருப் பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruppattur Taluk.

[பாசி–பாசல்–பசலி+குட்டை]

பசார் *pasār,* பெ.(n.) திண்டிவனம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[பசளை–பசர்–பசார்]

பசியார் *pasiyār,* பெ.(n.) திண்டிவனம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[பாசி+ஆர்]

பசுப்பாண்டி *pasu-p-pāṇḍi,* பெ.(n.) பல்லாங் குழியின் வகை; a kind of 'pallankuli' game.

[பசு + பாண்டி]

பசுவபட்டி *pasuvapaṭṭi,* பெ.(n.) ஈரோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Erode Taluk.

[பசுவன்+பட்டி]

பஞ்சக்கும்மி *pañja-k-kummi,* பெ.(n.) வறகடத்தின்(பஞ்சத்தின்) கொடுமையைப் பாடும் கும்மி; a kummi play narrating the woes of famine.

[பஞ்சம்+கும்மி]

பஞ்சபாரதியம் *pañjapāradiyam* பெ.(n.) பண்டைய இசை நூல்; a treatise on music, not extant.

[பஞ்சம் (ஐந்து) +பாரதியம்]

பஞ்சமாரி *pañjamāri,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[புன்செய்+வாரி]

பஞ்சா *pañja,* பெ.(n.) புலியாட்டம் ஆடுபவர் வைத்திருக்கும் கருவி; musical instrument.

[புஞ்சு+பஞ்சா]

பஞ்சாடரி *pañjāḍari* பெ.(n.) சிற்பங்கள் நிறுவப் பெறும் மேடை; gallery with sculptures.

[பஞ்ச(ம்) + ஆடரி]

பஞ்சாத்தி *pañjātti,* பெ.(n.) விழுப்புரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Vilupuram Taluk.

[பஞ்சு+அத்தி]

பஞ்சாதி *pañjādi,* பெ.(n.) சிவகங்கை வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[பஞ்சு+(அத்தி)ஆதி]

பஞ்சாரம் *pañjāram,* பெ.(n.) மூங்கில் கீற்றால் பின்னப்பட்ட கோழிக்கூடு; a basket for hen.

[பஞ்சாரம் – பஞ்சாரம்]

பஞ்செட்டி *pañjeṭṭi,* பெ.(n.) பொன்னேரி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Ponneri Taluk.

[பஞ்சு+அட்டி]

பட்டடை *paṭṭaḍai,* பெ.(n.) இசைக்கரண வகை களில் ஒன்று; a musical variety.

[பாட்டு–பட்டடை]

பட்டடையரம் *pattai-y-aram,* பெ.(n.) வரிவரி யாகக் கோடு போன்ற அமைப்பைக் கொண்டு இரும்பை மட்டமாகத் தேய்த்து அராவுவதற்குப் பயன்படும் அரம்; a file.

[பட்டடை+அரம்]

பட்டணக்கரை *pattana-k-karai,* பெ.(n.) நகரம், பட்டணம்; town; city.

[பட்டினக்கரை–பட்டணக்கரை]

பட்டம் *pattam,* பெ.(n.) கதவுகளைத் தாங்கி நிற்கும் குந்து; the base part of the door.

[படு–பட்டம்]

பட்டரையாள் *pattaraiyāl,* பெ.(n.) ஒத்த அகவையு(வயது)டைய ஆள் (நெல்லை); person in equal age.

[படு–பட்டடை+ஆள்]

பட்டாளி முத்து *pattāli-muttu,* பெ.(n.) காக்கா முத்து; a pearl of low variety, inferior quality of pearl.

[பட்டாளி+முத்து]

பட்டிநாய் *patti-nāy,* பெ.(n.) ஆடுகள் அடைக் கும் பட்டிக்குக் காவலுக்கு இருக்கும் நாய் watch dog.

[பட்டி+நாய்]

பட்டிமாடு *patti-mādu,* பெ.(n.) பட்டியில் அடைக்கப்படும் மாடு; farm cattle.

[பட்டி+மாடு]

பட்டுநோன்பு *pattu-nōnbu,* பெ.(n) மாட்டுப் பொங்கல் திருநாள்; the second day of pongal festival.

[பட்டு+நோன்பு]

பட்டுத்தாளம் *pattu-t-tālam,* பெ.(n.) பறை மேளத்தின் துணையால் இசைக்கப் பெறும் பொது நிகழ்வுக்கான தாளவிசை; general music.

பட்டுத்துறை *pattutturai,* பெ.(n.) ஆத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Attur Taluk.

[பட்டி–பட்டு+துறை]

பட்டுப்பட்டை *pattu-p-pattai,* பெ.(n.) பட்டுநூல் சிட்டையில் இருந்து நூலைச் சுற்றப் பயன்படும் பட்டையான தார்க்குச்சி; bobbin.

[பட்டு+பட்டை]

பட்டுளி *pattuli,* பெ.(n.) மர உளி; wooden chisel.

[படு+உளி]

பட்டையுளி *pattai-yuli,* பெ.(n.) மரம் செதுக்கப் பயன்படுத்தும் அகன்ற பட்டை வடிவ உளி; broad chisel.

[பட்டை+உளி]

பட்டைக்காம்பு *pattai-k-kāmbu,* பெ.(n.) குறத்தியர் அணியும் காப்பு போன்ற வெள்ளி வளையம்; an anklet of kuruatti women.

[பட்டை+காம்பு]

பட்டைச்சோறு *pattai-c-cōru,* பெ.(n.) ஊக்க மற்று இருக்கும் முக்குவர் இனக் குழந் தையைக் குணப்படுத்துவதற்காகச் செய்யப் படும் சோறு; a medical food preparation for healthless children of Mukkuvar caste.

[பட்டை+சோறு]

பட்டைத்தாழ்ப்பாள் *pattai-t-tālppāl,* பெ.(n.) கதவின் உட்புறத்தில் பொருத்தப்படும் பட்டை யான அமைப்புடைய தாழ்ப்பாள்; *a kind of padlock.*

[பட்டை+தாழ்ப்பாள்]

படகு ஓட்டம் *padaku-ōttam,* பெ. (n.) தங்களுக்கு இடையே போட்டியின் போது நீண்ட மூங்கில் கழிகளை ஊன்றிப் படகு ஓட்டுதல். boat centipede race.

[படகு+ஓட்டம்]

படப்பம் *padappam,* பெ. (n.) காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[படப்பை-படப்பம்]

படப்பை *padappai,* பெ. (n.) காஞ்சிபுரம் வட்டத் திலுள்ள ஓர் ஊர்; a village in Kanchipuram Taluk.

[பாடம் -படம்-படப்பை]

படமஞ்சி *padamañji,* பெ. (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[படை+மஞ்சி]

படமரக்காடி *pada-mara-k-kādi,* பெ. (n) நெசவுக் கருவியான படமரத்திலுள்ள சிறிய நீண்ட பள்ளம்; middle furrow in the wooden component in loom.

[படமரம்+காடி]

படமரக்குச்சி *pada-mara-k-kucci,* பெ. (n.) படமரத்தைச் சுழற்றுவதற்குரிய சிறிய கொம்பு; *a stick in loom.*

[படை+மரம்+குச்சி]

படமரத்து மெட்டுக் கம்பி *pada-marattu-mettu-k-kambi,* பெ. (n.) படமரத்தைச் சுழற்றுவதற்குரிய கம்பி; a stick used to rotate.

[படமரம்+அத்து+மெட்டு+கம்பி]

படமரத்துளை *pada-mara-t-tulai,* பெ. (n.) படமரக்குச்சி செருகப்படும் துளை; a hole in the boat to pole.

[படை+மரம்+துளை]

படலிகை *padaligai,* பெ. (n) தோலாற் செய்யப் பட்ட இசைக்கருவி; a percussion muscial instrument.

[படலி-படலிகை]

படவம்[1] *padavam,* பெ. (n.) பண்டைய இசைக்கருவி; an ancient musical instrument.

மறுவ. படகம்

[படகம்-படவம்]

படவம்[2] *padavam,* பெ. (n.) புகைப்படக் கருவி; camera;

[படம்-படவம்]



படவீடு *padaivēdu,* பெ. (n.) திருச்செங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruchengode Taluk.

[படை+வீடு]

படிமுறைக் குறைப்பு *padi-murai-k-kuraippu,* பெ. (n.) நியமக்குறைப்பின் வேறு பெயர்; deficiency of formalities.

[படி+முறை+குறைப்பு]

படுக்கைகள் *padukkaigal,* பெ. (n.) மகாபாரதத் தெருக்கூத்தில், இறுதி நாளன்று வடிவமைக் கப்படும் மேடையின் பெயர்; a raised platform - a stage setting in folklore.

[படுகை-படுக்கைகள்]

படுகளம் *padukaḷam,* பெ. (n.) பொன்னர் சங்கர் விழாவின் ஒரு கூறு; a feature of Ponnar Sankar function.

[படு+களம்]

படுதலம் *padutaḷam,* பெ. (n.) திருத்தணி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruttani Taluk.

[படு (தலை) – தலம்]

பண்டராப்பள்ளி *paṇḍarāppaḷḷi,* பெ. (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[பண்டாரம்+பள்ளி]

பண்டாரம் *paṇḍāram,* பெ. (n.) சிற்றூர்த் தெய்வங்களுக்குப் பூசை செய்பவர்; priest of a village deity.

[பண்டம்–பண்டாரம்]

பண்டுகிராமம் *paṇḍu-kirāmam,* பெ. (n.) சிற்றூர்கள் வழங்கும் வரி; a tax levied from the village.

[பண்டு (விளைச்சல்) + கிராமம்]

பண்டூழியம் *paṇḍūḻiyam,* பெ. (n.) பண்ட ஏன(பாத்திர)ங்கள்; vessal and other things.

[பண்டம்+ஊழியம்]

பண்ணல் *paṇṇal,* பெ. (n.) பாடப்புகுந்த பண்ணிற்கு, இணை, கிளை, பகை, நட்பான நரம்புகள் பெயருந்தன்மை மாத்திரையறிந்து இசைத்தல்; careful recitating of song considering the time measure.

[பண்ணு–பண்ணல்]

பண்ணாட்டு *paṇṇāṭṭu,* பெ. (n.) வேளாண்மை எனும் பண்ணையத்தை மேற்பார்வை செய்யும் மேலாண்மை அதிகாரம்; farm management.

[பண்ணை–பண்ணாட்டு]

பண்ணாடி *paṇṇāḍi,* பெ. (n.) 1. முதலாளி, land lord, owner, 2. கணவன்; husband.

[பண்ணை+ (ஆளி) ஆடி]

பண்ணாளத்தி *paṇṇāḷatti,* பெ. (n.) ஆளத்தி வகைகளில் ஒரு பிரிவு; a musical tune.

[பண்+ஆளத்தி]

பண்ணிக்கட்டு *paṇṇi-k-kaṭṭu,* பெ. (n.) ஒரு வகை ஆடைக் கட்டு. a kind of dressing.

[பண்ணு+கட்டு]

பண்ணிக்குண்டு *paṇṇikkuṇḍu,* பெ. (n.) திருமங்கலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirumangalam Taluk.

[பண்ணை – பண்ணி + குண்டு]

பண்ணியான் *paṇṇiyāṉ,* பெ. (n.) திருமங்கலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirumangalam Taluk.

[பண்ணியம்+ஆன்]

பண்ணுப்பெயர்த்தல் *paṇṇu-p-peyarttal,* பெ. (n.) தமிழிசையின் ஒரு கூறு; a feature in Tamil music.

[பண்–பண்ணு+பெயர்த்தல்]

பண்ணை *paṇṇai,* பெ. (n.) அச்சில் பிணைத்த நூல், மூங்கிலால் ஆன பண்ணையில் சிறு துளைகள் வழியாக வந்து குறுக்கே போகும் ஊடை நூலை அடித்து நெருக்கமாக்க செய்யும் பண்ணை; a part in the handloom.

[பண்–பண்ணை]

பணக்கல் *panakkal,* பெ. (n.) பட்டறையில் இருக்கும் பட்டடைக் கல்; anvil

[பணை+கல்]

பணம் பெத்த பச்சை *panam-petta-paccai,* பெ (n) நாட்டுப்புறங்களில் பச்சைக் குத்தலுக்கு வழங்கும் பெயர்; marking on the skin.

[படம்–பணம்+பெத்த+பச்சை]

பணிக்கத்தாவு *panikkattāvu,* பெ. (n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[பணிக்கன்+தாவு]

பணிதிவயல் *panidivayal,* பெ. (n.) பரமக்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Paramakudi Taluk.

[பணத்தி+வயல்]

பணியாரக்கல் *paniyārakkal,* பெ. (n.) பணியாரம் சுடும் கல்; *pan.* (நெல்லை)

[பணியாரம்+கல்]

பத்தகரை *patta-karai,* பெ. (n.) சேலைகள் வேட்டிகள் அறுத்தலுக்குரிய இடம்; point of seperating the viewed woven length.

[பற்று–பற்ற+கரை]

பத்தநிதி *patta-nidi,* பெ. (n.) சிற்ப வகையினுள் மங்கலச் சின்ன சிற்பம்; an auspicious sculpture.

[பற்று–பற்ற+நிதி]

பத்தவாட்டு *patta-vāṭṭu,* பெ. (n.) ஓசை இல்லாமல் நெய்யும் வாட்டு; a noiseless weaving method.

[பற்று+வாட்டு]

பத்தாங்கல் *pattāṅkal,* பெ. (n.) தட்டங்கல் ஆட்டத்தின் வகை; a kind of Tattankal play.

[பற்று+பத்து+ஆம்+கல்]

பத்தி *patti,* பெ. (n.) வில்லுப்பாட்டில் பயன் படுத்தப்படும் கமுகுப் பாளையினாற் செய்யப் பட்ட ஒரு மட்டை; arecanut sheath.

[பற்றை–பத்தி]

பத்தியம் பாடல் *pattiyam-pāḍal,* பெ. (n.) நாட்டுப்புறப் பாடலின் ஒரு பிரிவு; a variety of folk song.

[பத்தியம்+பாடல்]

பத்திரி *pattiri,* பெ. (n.) அம்மை நோய்க்குத் தடவிட வேப்பிலையும் ஆமணக்கு விதையும் கலந்து அரைக்கப்பட்ட சாந்து; a pasty medicine prepared by the Siddha doctors.

[பத்தல்–பத்திரி]

பதநீர்க்கலயம் *pada-nīr-k-kalayam,* பெ. (n.) தென்னை மரத்தில் பதநீரெடுக்கக் கட்டப்படும் கலயம், ஊறல் முட்டி; small earthen pot to hold juice.

[பதம்+நீர்+கலயம்]

பதவல் *padaval,* பெ. (n.) காடுகளுக்குள் தேவையில்லாமல் வளர்ந்து கிடக்கும் செடி கொடிகள்; unwanted growth of vegetation.

[பதவு–பதவல்]

பதனக்குடி *padanakkuḍi,* பெ. (n.) திருவா டானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[பதனம்+குடி]

பதினாறு தட்டு அடைவு *padi-n-āṟu-taṭṭu-adaivu,* பெ. (n.) கும்மியாட்டத்தில் பின்பற்றப் படும் அடவு; steps in kummi play.

[பதினாறு+தட்டு+அடவு]

பதிலை *padilai,* பெ. (n.) ஒரு வகையான இசைக் கருவி; a kind of musical instrument.

[பதலை–பதிலை]

பந்தணை நல்லூர் பாணி *pandanainallūr pāṇi,* பெ. (n.) பரதத்தில் பின்பற்றப்படும் ஊர்ப்பாங்கு நடைமுறைகளில் ஒன்று; a variety in South Indian dance.

[பந்தணைநல்லூர்+பாணி]

பந்தம் *pandam,* பெ. (n.) கையளவுள்ள நெற் கதிர்க் கட்டு; a paddy shealth.

[பாந்து–பாந்தம்–பந்தம்]

பந்தாடு *pandāḍu,* பெ. (n.) திண்டிவனம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[பனம்+தோடு]

பந்தாடை *pandāḍai,* பெ. (n.) வில்லுப்பாட்டில் இடம் பெறும் குடத்தை வைக்க உதவும் வைக்கோலில் திரிக்கப்பட்ட பிரிமணை; ring stand for keeping the pot in bowsong.

[பாந்து+அடை]

பம்மதுகுளம் *pammadukuḷam,* பெ. (n) சைதாப்பேட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Saidapet Taluk.

[முகமது-மம்மது-பம்மது+குளம்]

பம்மு-தல் *pam-mu,* செ.கு.வி. (v.i.) பதுங்குதல்; to hide.

[பம்-பம்மு]

பய்யமிழிப்பான் *payyam-iḻippāṉ,* பெ. (n) பழம்பெரும் சிற்பியரில் ஒருவர்; name of a sculptor.

[பய்யம்+இழிப்பான்]

பயம் *payam,* பெ. (n.) இரட்டைக் கை முத்திரை நிலைகளில் ஒன்று; a double hand pose in dance.

[பய்-பய-பயம்]

பயித்தாம்பாடி *payittāmpāḍi,* பெ. (n.) கடலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Cuddalore Taluk.

[பயிற்றம்பாடி > பயித்தம்பாடி]

பரங்கணி *paraṅkaṇi,* பெ. (n.) விழுப்புரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vilupuram Taluk.

[பாரம்+கணி]

பரடாபட்டு *paraḍāpaṭṭu,* பெ. (n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

பரசி *parasi,* பெ. (n.) மேலாக அறுத்து எடுத்த பகுதி; *slice of the upper portion.*

[பரள் - பரசு - பரசி]

பரசு *pa,* பெ. (n.) சாங்கம் வடிவச் சிற்பத்தின் ஒரு கூறு; a feature in sculpture.

[பரள் - பரய்- பரசு]

பரணப்பலகை *paraṇa-p-palagai,* பெ. (n.) வீட்டின் நிலையின் மேல் உள்ள பலகை; the wooden bar place on a door - frame.

[பரணம்+பலகை]

பரதராமி *paradarāmi,* பெ. (n.) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Walajah Taluk.

[பாரதம்+ராமி]

பரதூர் *paradūr,* பெ. (n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[பாரம்+பாரந்தூர்-பரதூர்]

பரவிளாகம் *paraviḷāgam,* பெ. (n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[புர+வளாகம்]

பரந்தூர் *parandūr,* பெ. (n.) காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[பாரம் - பாரந்தூர் - பரந்தூர்]

பரப்புவிளை *parappuviḷai,* பெ. (n.) அகத்தீச்சுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agaththeechwaram Taluk.

[பரம்பு - பரப்பு - விளை (மிளை)]

பரமத்தி *paramatti,* பெ. (n.) நாமக்கல் வட்டத்திலுள்ள ஊர்; a village in Namakkal Taluk.

[பெரு-பர+மத்தி]

பரல் ஆடும் குழி *paral-āḍum-kuḻi,* பெ. (n.) முத்து அல்லது மாணிக்கம் வைத்து ஆடும் பல்லாங்குழி விளையாட்டு; an indoor game, a type of 'pallankuli'.

[பரல்+ஆடும்+குழி]

பரலி *parali,* பெ. (n.) நிலக்கோட்டை வட்டத் திலுள்ள ஊர்; a village in Nilakottai Taluk.

[பரல் (சிறுகல்) – பரலி]

பரளச்சி *paraḷacci,* பெ. (n.) அருப்புக் கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[பரல+அத்தம்–பரலத்தம்–பரலச்சி]

பரளி *paraḷi,* பெ. (n.) நாமக்கல் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Namakkal Taluk.

[பரல்–பரலி–பரளி]

பரான் *parāṉ,* பெ. (n.) பரத நாட்டியத்தின் அடைவு சதிகளுடன் ஒப்புமையுடைய 'கதக்கு' நடனத்தின் இன்றைய அமைப்பு; a similar steps of Bharatha Natiya modernised as Kathak dance.

[பொருவு–பொருவன்–பரான்]

பரிகம் *parigam,* பெ. (n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkuricci Taluk.

[பரியம் (ஏற்றம்) – பரிசம்–பரிகம்]

பரித்தினி *parittiṉi,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[பரியம்+அத்தினி]

பரிமளமதம் *parimaḷa-madam,* பெ. (n.) சிற்பக்கலையின் நடைமுறைகளில் ஒன்று; a feature in sculpture.

[பரிமளம்+மதம்]

பரியம் *pariyam,* பெ. (n.) ஏற்றத்தில் நீரிறைக்கும் முறை; irrigation method with piccotah.

[பரி–பரியம்]

பருக்கல் *parukkal,* பெ. (n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurantakam Taluk.

[புரை+கல்]

பருப்பஞ்சோற்று விருந்து *paruppañj-cōṟṟu virundu,* பெ. (n.) கொங்கு வேளாளரிடையில் மணமகன் வீட்டார்க்கு, மணமகள் வீட்டார் கொடுக்கும் விருந்து; a feast given to the bridegroom family.

[பருப்பு+அம்+சோறு+விருந்து]

பருப்பாமுட்டி *paruppā-muṭṭi,* பெ. (n.) பருப்புக் கடையும் மத்து. (கொங்கு); clubbed stick for churning.

[பருப்பு+அமுட்டி]

பருப்பு கடை *paruppukaḍai,* பெ. (n.) குழந்தை விளையாட்டு; *a baby play.*

[பருப்பு+கடை]

பருப்புச்சட்டி *paruppu-c-caṭṭi,* பெ. (n.) பட்டவரைக் (தோற்றவரை) கிண்டல் செய்யும் பெயர்; *a term use to ridicule the person who lost the game.*

[பருப்பு+சட்டி]

பருமடம் *parumaḍam,* பெ. (n.) கோரா, பட்டு, நூலிழைகளைச் சுற்ற உதவும் கருவி; an instrument used in loom.

[பரு+மடம்]



பருவத்தி *paruvatti,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[பெரு+அத்தி]

பருவாச்சி *paruvācci,* பெ. (n.) பவானி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Bhavani Taluk.

[பெரு+ஆத்தி]

பல்பாகி *palpāgi,* பெ. (n.) ஓமலூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Omalur Taluk.

[பால+பாகி (மம்)]

பல்லவகை *pallava-kai,* பெ. (n.) 1. ஒரு வகையான கை முத்திரை; an hand pose. 2. இறை வடிவங்களுக்காக அமைக்கப்பெறும் கைகளின் இலக்கணம்; the description for making hand of a deity in sculpture.

[பல்லவம்+கை]

பல்லாக்குத்தாளம் *pallākku-t-tāḷam,* பெ. (n.) பொது நிகழ்வுகளுக்கான பறை இசை; a drum beat.

[பல்லக்கு+தாளம்]

பல்லாங்குழி மணை *pallānkuḷi-maṇai,* பெ. (n.) பல்லாங்குழிப் பலகை; wooden board for the game pallankuli.

[பல்–பல்லாம்–குழி+மணை]

பலகல் *palakal,* பெ. (n.) தட்டாங்கல் ஆட்டத்தின் வகை; a kind of tattankal play.

[பல+கல்]

பலகறை *palagaṟai,* பெ. (n.) சோழி; cowrie. (செங்கை)

[பலகு+அறை]

பலவரசன் *palavarasan,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[பலவு+அரசன்]

பலவரணை *palavaraṇai,* பெ. (n.) பல்லாங்குழி மணை; wooden board for the indoor game pallankuli.

[பலகறை+மணை]

பலவரிக்கூத்து *palavari-k-kūttu,* பெ. (n.) சிற்றூர் மக்களின் பாடல் வகை; folk dance variety.

[பல+வரி+கூத்து]

பலவாய்கிண்டன் *palavāykiṇḍan,* பெ. (n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[பலவாய்+கிண்டன்]

பலவேட ஆட்டம் *palavēḍa-āṭṭam,* பெ. (n.) கம்பள இனத்தாரில், ஆண்கள் ஆடும் நடனம்; a folk dance of kambala people.

[பலவேடம் + ஆட்டம்]

பவ்வீக்குழி *pavvī-k-kuḷi,* பெ. (n.) பல்லாங் குழியில் துரும்புள்ள குழியின் பெயர்; a dip in pallankuli plank.

[பவ்வீ–குழி]

பவளக்கொடி *pavaḷa-k-koḍi,* பெ. (n.) கரகாட் டத்தின் அமைப்பு முறைகளில் ஒன்று; a feature of karagattam.

[பவளம்+கொடி]

பவுடு *pavuḍu,* பெ. (n.) முகத்தின் கீழ்ப்பகுதி; low chin of the face. (கொங்கு)

[அவல்–பவல்–பவுடு]

படசுழற்று குச்சு *paḍa-cuḻaṟṟu-kuccu,* பெ. (n.) நெசவாளி படமரத்தை எதிர்பக்க மாகச் சுழற்றி முட்டும் குச்சி; a stick used for anti rotation in weaving.

[படம்+சுழற்று+குச்சு]

பழம் காய்ச்சு–தல் *paḻam-kāyccu-,* செ.கு.வி. (v.i.) விளையாட்டில் தோற்றவருக்கு தண்டனை வழங்குதல்; to punish the defeated in game. (எ.கா.). குதிரைச் சில்லி, குண்டு, தெல்லுக்காய்.

[பழம்+காய்த்து]

பழம் கருகு *paḻam-karugu-,* பெ. (n.) கிட்டிப்புள் விளையாட்டில் கம்பினைப் பிடித்து விட்டால் வழங்கும் பெயர்; a term used in kittipul game.

[பழம்+கருகு]

பழிநீலம் *pali-nilam,* பெ. (n.) செய்யாத குற்றத்தைச் செய்ததாகப் பழி போடுவது; false accusation. (நெல்லை).

[பழி+ (நீளம்) நீலம்]

பழவேரி *palavēri,* பெ. (n.) காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[பழைய+ஏரி]

பவுஞ்சூர் *pavuñjūr,* பெ. (n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Maduranagam Taluk.

[பவுஞ்சன்+ஊர்]

பவளக்கண்ணி *pavalakkanni,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[பவளம்+கண்ணி]

பவித்திரம் *pavittram,* பெ. (n.) நாமக்கல் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Namakkal Taluk.

[பவித்திரை–பவித்திரம்]

பழங்களி *palan-kali,* பெ. (n.) காணிப் பழங்குடியினரின் விளையாட்டுப் பாடல்கள்; a joyful folk song of Kani people.

[பழம்+களி]

பழந்தக்கராகம் *palantakka-rāgam,* பெ. (n.) பண்வகையினுள் ஒன்று; a musical note.

[பழம்+தக்கம்+ராகம்]

பழந்தாமரை *palantāmarai,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[பழைய+தாமரை]

பழவலம் *palavalam,* பெ. (n.) செஞ்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Senji Taluk.

[பழைய+வல்லம்]

பழம்பத்து *palam-pattu,* பெ. (n.) பத்து முறை இலக்கினை அடித்தவர்; a talented player.

[பழம்+பத்து]

பழமேறியவர் *palam-ēriyavar,* பெ. (n.) குரங்கு விளையாட்டில் சுற்றி வருபவர்; one who comes round in kurangu play.

[பழம்+ஏறியவர்]

பழையனூர் நீலிக்கதை *palaiyanūr-nīli-kkadai,* பெ. (n.) இசக்கியம்மன் கோவில் விழாக்களில் வில்லுப்பாட்டாகப் பாடப்படும் சிற்றூர்க்கதை; a folk song.

[பழையனூர்+நீலி+கதை]

பள்ளிப்படை *pallippadai,* பெ. (n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[பள்ளி+படை]

பள்ளுச் சட்டம் *pallu-ccattam,* பெ. (n.) தறியின் மேல் பகுதியில் அமைந்துள்ள மரம்; an upper frame in handloom.

[பள்ளு+சட்டம்]

பள்ளு சீவு–தல் *pallu-civu,* செ.கு.வி. (v.i) பாய் நெசவு செய்த பின்னர் அதன் ஓரங்களைச் சீவி மடித்துக் கட்டுதல்; a final finishing work in mat making.

[பள்ளு+சீவுதல்]

பளூகல் *palūkal,* பெ. (n.) விளவங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vilavancode Taluk.

[பள்ளு+கல்]

பற்சக்கரம் *parcakkaram,* பெ. (n) படமரத்தைச் சுற்றுவதற்கு ஏற்ற வகையில் படமரத்தின் ஓரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பற்களைக் கொண்ட சக்கரம்; a wheel in handloom.

[பல்+சக்கரம்]

பறைக்கூத்து *parai-k-kūttu,* பெ. (n) இலங்கையில் தப்பாட்டத்திற்கு வழங்கப்பெறும் பெயர்; a name used to 'tappattam' in Ceylon.

[பறை+கூத்து]

பற்றுக்கரை *parru-k-karai,* பெ. (n.) வேட்டி சேலை அறுத்தற்குரிய குறிகரை; mark denoting the point to cut.

[பற்று+கரை]

பற்றுக்கோல் *parru-k-kōl,* பெ. (n) ஏற்றத்தில் நீர் இறைக்க உதவும் நீண்ட மூங்கில் கழி; long pole used in piccotah.

[பற்று+கோல்]



பறைமேளம் *parai-mēlam,* பெ. (n) குச்சியாலும் கையாலும் முழக்கப்படும் இசைக் கருவி; drum beaten with hand and stick.

[பறை+மேளம்(பறைதல்–அடித்தல்)]

பன்னிமடை *pannimadai,* பெ. (n.) கோய முத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Coimbatore Taluk.

[வன்னி+மடை]

பன்னாங்குழி *pannāṅkuli,* பெ. (n.) ஒரு விளையாட்டு; an indoor game.

[பல்லாங்குழி–பன்னாங்குழி (கொ.வ.)]

பன்னாடி *pannadi,* பெ. (n.) தலைவன் chieftain **பண்ணாடி பார்க்க** *see pannādi.*

[பள்ளாடி–பன்னாடி]

பனங்காடை *panaṅkādai,* பெ. (n.) ஒரு வகைக் குருவி; a kind of 'kadai' bird.

[பனை+அம்+காடை]



பனைக்கல் *panai-k-kal,* பெ. (n.) உலையில் காய்ந்த இரும்பை வைத்து அடிப்பதற்குப் பயன்படும் இரும்பாலான பட்டடை; anvil **பணைக்கல் பார்க்க;** *see panai-k-kul.*

[பணை–பனை+கல்]

பன்னையம் *pannaiyam,* பெ. (n) விடையாற்றிச் சடங்கில், காளி வேடம் பூண்டவர்க்குத் தரப்படும் உணவு வகைகள்; edibe varieties given to priest of 'kāḷi' temple.

[பல்+நயம்]

பன்னீர்செம்பு *pannīr-cembu,* பெ. (n.) ஒரு வகையான பச்சைக்கோலம்; a floral design in green colour.

[பன்னீர்+செம்பு]

பனைமரக்கும்மி *panai-mara-k-kummi,* பெ. (n.) கும்மி வகையினுள் ஒன்று; a kind of kummi play.

[பனைமரம்+கும்மி]

பற்றோவியம் *parrōviyam,* பெ. (n.) சுவரோவிய வகைகளில் ஒன்று; a kind of mural painting.

[பற்று+ஓவியம்]

பற்றுவண்ணம் *parru-vannam,* பெ. (n.) ஒரு வகையான வண்ணக்குழம்பு; a paint of particular colour.

[பற்று+வண்ணம்]

பனைமடல் *panaimadal,* பெ. (n.) ஆத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Attur Taluk.

[பனை+மடல்]

பறக்கை *parakkai,* பெ. (n.) அகத்தீச்சுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in AgatheechwaramTaluk.

[பறம்பு+பறக்கை]

பன்னிப்படி *pannippadi,* பெ. (n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkurichchi Taluk.

[வன்னிப்பட்டி–பன்னிப்படி]

பாகசாலை *pāgasālai,* பெ. (n.) திருத்தணி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruttani Taluk.

[பாகம் (சமையல்)+சாலை]

பாகம் *pagam,* பெ. (n.) தோலாற் செய்யப்பட்ட ஓர் இசைக்கருவி; a musical instrument.

[பாகு–பாகம்]

பாகாடி *pāgādi,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[பாகாளம் – பாகாடி]

பாச்சல்[1] *pāccal,* பெ. (n.) 1. திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thirup patturTaluk. 2. நாமக்கல் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Namakkal Taluk.

[பாய்ச்சல் – பாச்சல்]

பாசம் *pāsam,* பெ. (n.) சிற்பங்களில் உள்ள ஒரு பொதுப்பாங்கு; a feature in sculpture.

[பாசு–பாசம்]

பாசாந்தி *pāsāndi,* பெ. (n.) கிருட்டிணகிரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Krishnagiri Taluk.

[பாயச்சல்–பாசல்+அந்தி]

பாஞ்சரை *pāñjarai,* பெ. (n.) வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vandivasi Taluk.

[பைஞ்சாய்+தரை]

பாஞ்சார் *pāñjār,* பெ. (n.) அருப்புக்கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arupukkottai Taluk.

[பைஞ்சாய்>பாஞ்சார்]

பாட்டன் *pāttan,* பெ. (n.) பழுங்காகளி ஆட்டத்தில் நடுவில் நிற்பவன்; a person standing in middle of the folk play.

[பாட்டு–பாட்டன்]

பாட்டம் *pāttam,* பெ. (n.) மூக்கினை அடக்கி விளையாடும் ஆட்டத்தில் பாடல் பாடுவோர் மூச்சுவிட்டுத் தோற்றுப் போவதைக் குறிக்கும் சொல்; a word to mean defeat in the game.

[படு–பாடு–பாட்டம்]

பாடகம் *pādagam,* பெ. (n.) போளூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Polur Taluk.

[பாடம் (வயல்) – பாடகம்]

பாண்ட ஓவியம் *pānda ōviyam,* பெ. (n.) கலயங்களில் வரையும் கைவினைக் கலைகளில் ஒன்று; pottery design.

[பாண்டம்+ஓவியம்]



பாண்டனி *pāndani,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[பாண்டம்+அணி]

பாண்டங்குழி *pāndankuli,* பெ. (n.) பழங் காலத்தில் கூலங்களைச் சேர்த்து வைக்க நிலத்தில் வெட்டப்பட்டு கல்லால் மூடப்

பட்டிருக்கும் குழி; underground storage cell to preserve food grains.

[பாண்டம்+குழி]

பாண்டில் *pāṇḍil,* பெ. (n.) பண்டைய இசைக்கருவி; a musical instrument.

[பாண்டு–பாண்டில்]

பாதமானம் *pādamāṉam,* பெ. (n.) படிமங் களின் உயரத்தினை அமைக்கும்போது கையாளப் படும் மரபு; a measure to decide the height of statue.

[பாதம்+மானம்]

பாம்படம் *pāmpaḍam,* பெ. (n.) துளைக்காதில் அணியப்படும் பொன் அணிகலன்; a gold pendant worn by women in the ablong ear lobe. (நெல்லை)

[பாவு–பாம்+படம்]



பாந்து *pāndu,* பெ. (n.) வீட்டுக் கூரைக்கும் சுவருக்கும் இடையில் இருக்கும் சந்து பொந்துகள்; open space in between the top of the wall and the ceiling roof. (கொங்கு)

[பள்–பாள்–பாந்து]

பாப்பா நொண்டி *pāppānoṇḍi,* பெ. (n) குழந்தையின் நடையினைப்போல் குதித்து குதித்து நடக்கும் நொண்டி விளையாட்டு; a limping game like the child walk.

[பாப்பா+நொண்டி]

பாப்பாத்தி மூலை *pāppāttimūlai,* பெ. (n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkurichchi Taluk.

[பாப்பான்+அத்தி+மூலை]

பாப்பினி *pāppiṉi,* பெ. (n.) தாராபுரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Dharapuram Taluk.

[பார்ப்பான்–பாப்பினி]

பாம்பு தொடர் ஓட்டம் *pāmbutoḍarōṭṭam,* பெ. (n.) நிலைக்கட்டைகளை வரிசையாக நிறுத்தி அவற்றினைச் சுற்றிச்சுற்றி வருதல்; snake relay race.

[பாம்பு+தொடர்ஓட்டம்]

பாமணி *pāmaṇi,* பெ. (n.) மன்னார்குடி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Mannargudi Taluk.

[பம்மல்+அணி]

பாமூலை *pā-mūlai,* பெ. (n) வளி மூலை; north western direction.

[பாய் (காற்று பாய்கின்ற) – பா+மூலை]

பாய் சரடு *pāi-carḍu,* பெ. (n.) கற்றாழை நாரைச் சரடு சரடாகப் பாய் பின்ன நூலாக் குதல்; aloe fibre used for making rope.

[பாய்+சரடு]

பாய்ச்சக்கால் *paicca-k-kāl,* பெ. (n) புணி பிரித்துக் கொடுப்பதற்கு மிதி பலகையை மிதித்தல்; an operation in loom.

[பாய்ச்சல்+கால்]

பாய்த்தூக்கு *pāittūkku,* பெ. (n.) தலையணை, பாய் போன்றவற்றை வைப்பதற்கு உத்தரப் பலகையில் பொருத்தப்படும் சட்டங்களான தட்டி; barrack.

[பாய்+தூக்கு]

பாய்தலடைவு *pāydal-aḍaivu,* பெ. (n) அரைமண்டியிலிருந்து பக்கங்களிலும் முன்னு மாகவும் பாய்ந்தாடுவது; a speedy dance

movement.

[பாய்தல்+அடைவு]

பாயா *pāya,* பெ. (n.) உடுக்கையின் உறுப்புகளிற் ஒன்று; a part of 'udukkai' musical instrument.

[பாய்+ஆ]

பாரணை *pāraṇai,* பெ. (n) ஆளத்தி வகையினுள் ஒன்று; a feature of ālatti-a muscial note.

[பார்+அணை]

பாரம் இறக்குதல் *pāramirakkudal,* பெ. (n.) முக்குவர் இனத்தாரிடமுள்ள ஒரு சடங்கு; a ceremony of Mukkuvar.

[பாரம்+இறக்குதல்]

பாராவயல் *paṟāvayal,* பெ. (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[பார்+வயல்]

பாரி கொம்பு *pārikombu,* பெ. (n.) அளவில் பெரிய கொம்பு; big horn used as muscial instrument.

[பாரித்தல்–பாரி+கொம்பு]

பாரி வேட்டை *pāri-vēṭṭai,* பெ. (n.) கொட்டு முழக்கத்துடன் இரவில் வேட்டைக்குச் செல்லுதல்; going for hunting at night with drumming pomp.

[பாரி+வேட்டை]

பாரேரி *pārēri,* பெ. (n.) செங்கற்பட்டு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chengalpat Taluk.

[பார்+ஏரி]

பால்குழி *pāl-kuḻi,* பெ. (n.) தீக்குழிக்கு அருகில் அமைக்கப்பெறும் நீர்க்குழி; a water pool near the fire pit.

[பால்+குழி]

பால்பூடு *pāl-pūḍu,* பெ (n) இலையைக் கிள்ளினால் பால் வடியும் இலை; a milky leafed plant. (கொங்கு)

[பால்+பூடு]

பால்வாதங்கரை *pālvādaṅkarai,* பெ. (n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[பால்+வாதன்+கரை]

பாலகுருக்கி *pālakurukki,* பெ. (n.) கிருட்டிண கிரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Krishnagiri Taluk.

[பாலை+குறிச்சி]

பாலதோபி *palatōbi,* பெ. (n) குறவர்கள் நடனம் ஆடுகையில், தலையில் அணிகின்ற அணி (தொப்பி); a head dress used in Kuravar dance.

[பாலை+தொப்பி–பாலதோபி]

பாலமதி *pālamadi,* பெ. (n.) வேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vellore Taluk.

[பால்+மத்தி]

பாலனந்தல் *pālaṉandal,* பெ. (n.) திருவண்ணாமலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvannamali Taluk.

[பாலன்+நந்தல்]

பாலி *pāli,* பெ. (n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thirukkoyilur Taluk.

[பாழி–பாலி]

பாலிகைக்கும்மி *pāligai-k-kummi,* பெ (n) முளைப்பாரிக்கும்மி விழாவின் வேறு பெயர்; a play, kummi. (14:157).

[பாலினை+கும்மி]

பாலூத்து *pālūttu,* பெ. (n.) பெரியகுளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Periyakulam Taluk.

[பால்+ஊற்று]

பாலை *pālai,* பெ. (n.) இணை, கிளை தொடர்பால் பிறக்கும் இசைக்குறிப்பு; section of musical note.

[பகல்–பால்–பாலை]

பாவக்கல் *pāvakkal,* பெ. (n.) கிருட்டிணகிரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Krishnagiri Taluk.

[பாவு+கல்]

பாவந்தூர் *pāvandūr,* பெ. (n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkurichi Taluk.

[பாவு–பாவல்+அந்தூர்]

பாவம் *pāvam,* பெ. (n.) பாயின் அளவு; measure of mat.

[பா–பாவம்]

பாவாசி *pāvāsi,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvadanai Taluk.

பாவாலி *pāvāli,* பெ. (n.) சாத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sattur Taluk.

[பாவு–வழி]

பாவு[1] *pāvu* பெ. (n) 90 அடி, 12 அடி, 24 அடி என உள்ள பாவு நூல் அமைப்பு; thread pattern of particular length of 90, 12, 24 ft.

[பம்மல்+அணி]

பாவு[2] *pāvu,* பெ. (n.) கலப்பையிலுள்ள மேழியின் கைப் பிடி; handle of the plough. (நெல்லை)

[பால்–பாவு]

பாவு அறு–த்தல் *pavu-aru-*செ.குன்றாவி. (v.t.) நெய்யப்பட்ட துணியைப் பாவினின்று அறுத்தெடுத்தல்; to seperate the cloth from the loom.

[பாவு+அறுத்தல்]

பாவு கம்பி *pāvu-kambi,* பெ. (n.) சேலை முந்தானையைப் பாவில் இழுத்துப் பிடிக்கும் கம்பி; a string used in loom.

[பாவு+கம்பி]

பாவு போடு–தல் *pāvu-pōḍu,* செ.குன்றாவி (v.t) தெரு ஓரங்களில் கடப்பாறை அல்லது மூங்கிலால் ஆன நீண்ட பாவு அமைப்பு உண்டாக்குதல்; to prepare in handloom weaving.

[பாவு+போடு]

பாவையாட்டி *pāvai-y-āṭṭi,* பெ. (n) பாவைகளை ஆட்டியபடி கதையை நடத்திச் செல்பவர்; story teller using the puppets.

[பாவை+ஆட்டி]

பாழி *pāḻi,* பெ. (n.) பாறையில் நீர் தேங்கி நிற்கும் பெரிய குழி; a large water pool in a rocky surface. (கொங்கு)

[பாள்–பாழி]

பாறப்பட்டி *pārappaṭṭi,* பெ. (n.) சேலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk.

[பாறை+பட்டி]

பாறை ஒதுக்கு *pārai-odukku,* பெ. (n.) சிறுமலை (திண்டுக்கல்) பகுதியில் ஓவியம் அதிகம் காணப்படும் பகுதியைக் குறிக்கும் பெயர்; a rock art area near sirumalai.

[பாறை+ஒதுக்கு]

பாறை உறைவிட ஓவியங்கள் *pārai-urai-viḍa-ōviyaṅgal,* பெ. (n.) பாறைகளாலான உறைவிடங்களில் காணப்பெறுகின்ற ஓவியங்கள்; rock art in rock shelters.

[பாறை+உறைவிட+ஓவியங்கள்]



பாறைச் செதுக்கு *pāṟai-c-cedukku,* பெ. (n.) பழங்காலத்திய ஓவியம் வரையும் முறை; ancient rock art.

[பாறை+செதுக்கு]

பானை உடை-த்தல் *pānai-udai,* செ.குன்றாவி. (v.t.) கண்ணினைத் துணியால் கட்டிக் கொண்டு கையிலுள்ள கம்பினால் பானையினைக் குறிப்பாக அடித்து உடைத்தல்; to strike the pot blind folded.

மறுவ. உறியடித்தல்

[பானை+உடைத்தல்]

பானை ஓவியம் *pānai-ōviyam,* பெ. (n.) கைவினைக் கலைகளில் பானையில் ஓவியம் வரைதல்; art designs on pottery.

[பானை+ஓவியம்]

பானைத்தாளம் *pānai-t-tālam,* பெ. (n) ஒயிலாட்டத்தில் பயன்படுத்தப்படும் ஓர் இசைக் கருவி; a musical drum in 'oyilattam'.

[பானை+தாளம்]

பாளை *pāḷai,* பெ. (n.) சிற்பியின் கற்பனை வளத்தில் அமைந்த சிற்பங்களைக் குறிக்குஞ் சொல்; sculpture of sculptors imagination.

[பாள்–பாளை]

பிக்கிலி *pikkili,* பெ. (n.) தருமபுரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Dharmapuri Taluk.

[பெருங்கல்–பெக்கல்–பிக்கிலி]

பிச்சன்வயல் *piccanvayal,* பெ. (n) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[பிச்சன்+வயல்]

பிச்சாளி *piccāḷi,* பெ. (n.) கோரையைக் குத்தி இழுப்பதற்குப் பயன்படும் ஒரு துளை கொண்ட குச்சி; one holed pole.

[பிய்த்தல்–பிச்சாளி]

பிச்சுவாக்கத்தி *piccuvā-k-katti,* பெ (n) உறைக்குள் வைத்திருக்கும் ஆயுதம்; scimitar (கொங்கு).

[பொத்துகாய்–பிச்சுவா+கத்தி]



பிச்சுவாங்கு *piccu-vāṅgu,* பெ (n) நல்ல முறையில் செய்தல் (கொங்கு); performing perfectly.

பிச்சை *piccai,* பெ. (n) பாவைக் கூத்து கலைஞர்கள் வழிபடுகின்ற சிறு தெய்வம்; a deity worshipped by the folklorists.

[பேய்ச்சி–பிச்சை]

பிசாகம் *piśāgam,* பெ. (n.) ஒற்றை முத்திரை நிலை வகைகளில் ஒன்று; a dance pose.

[பிசை–பிசாகம்]

பிசிண்டி *piśindi,* பெ (n) அருப்புக்கோட்டை வட்டத்தில் உள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[பிசிர்+(ஊற்று)பிசி–பிசிண்டி]

பிஞ்சி *piñji,* பெ. (n.) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Walajah Taluk.

[புன்செய்–புஞ்சி–பிஞ்சி]

பிடாகம் *piḍāgam,* பெ. (n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[பிடாகை–பிடாகம்]

பிடி *piḍi,* பெ. (n.) சிற்பக்கலையோடு தொடர்புடைய கலைச்சொல்; a term used in sculpture.

[பிடு-பிடி]

பிடிமண் *piḍi-maṇ,* பெ. (n.) நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு மரபினுள் ஒன்று; a rural custom of workship.

[பிடி+மண்]

பிடிமண் கோவில்கள் *piḍimaṇ-kōvil-kaḷ,* பெ. (n.) பழைய வழிபாட்டிடங்களில் இருந்து, ஒரு பிடி மண் எடுத்துப்போய் கட்டப்படும் கோவில்கள்; a handful of earth taken from the site of old temple and placed before the construction of a new temple.

[பிடி+மண்+கோயில்]

பிடிமானம் *piḍi-māṉam,* பெ. (n.) ஆதாரம், சொத்து; a hold; a document. (நெல்லை).

[பிடி+மான்]

பிண்டி[1] *piṇḍi,* பெ. (n.) ஒரு வகையான ஒற்றை முத்திரை நிலை; a hand pose in dance.

[பிண்டு-பிண்டி]

பிண்டி[2] *piṇḍi,* பெ. (n.) குழலின் வடிவத்தைக் குறிக்கும் சொல்; a shape of flute.

[பிண்டு-பிண்டி]

பிண்டிதாங்கல் *piṇḍitāṅgal,* பெ. (n.) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Walajah Taluk.

[பூண்டி+தாங்கல்]

பிண்டியிலக்கணம் *piṇḍi-ilakkaṇam,* பெ. (n.) வங்கியம் எனும் குழலுக்குரிய இலக்கணம்; structure of a flute.

[பிண்டி+இலக்கணம்]

பிணக்கானம் *piṇa-k-kāṉam,* பெ. (n.) ஒப்பாரி பாடலைக் குறிக்குஞ்சொல்; a song of lamentation.

[பிணம் +கானம்]

பிணைக்கை *piṇaikkai,* பெ. (n.) இரண்டு கை களைச் சேர்த்து அவிநயம் செய்வது; double hand pose in dance.

[பிணை+கை]



பிணையல் *piṇaiyal,* பெ. (n.) இரட்டைக் கையினைச் சுட்டும் வேறு பெயர்; double hand pose.

[பிணை+அல்]

பித்தர் நடம் *pittar-naḍam,* பெ. (n.) ஒரு வகையான ஆடல் இயக்கம்; a type of dance.

[பித்தர்+நடம்]

பித்தளைச்சரிகை *pittaḷai-c-carigai,* பெ. (n.) பித்தளையால் ஆன ஒள்ளிழை ; a glittering lining made up of metal.

[பித்தளை+சரிகை]

பித்தளைப் பண்ணை *pittaḷai-p-paṇṇai,* பெ. (n) அச்சில் பிணைத்த நூல் மூங்கிலால் ஆன பண்ணையில் சிறு துளைகள் வழியாக வரும் குறுக்கே போகும் ஊடை நூலை அடித்து நெருக்கமாக்கச் செய்யும் பண்ணை; a device in handloom.

[பித்தளை+பண்ணை]

பிப்பு *pippu,* பெ. (n.) உடலில் அரிப்பு ஏற்படுத்தும் தோல் நோய்; itching. (கொங்கு)

[பிய்ப்பு > பிப்பு]

பியந்தைக் காந்தாரம் *piyandai-k-kāndāram,* பெ. (n.) பகற்பொழுதுக்குரிய ஒரு பண் வகை; a day time melody song.

[பியந்தை+காந்தாரம்]

பிரந்தனி *pirandaṉi,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[பெருந்தனி–பிரந்தனி]

பிரமலைக்கள்ளர் *piramalai-k-kaḷḷar,* பெ. (n.) "பச்சைக் கோலம்" எனும் கைவினைக் கலையின் உரிமையாளர்; people who are skilled in fine art 'pachai kolam'.

[பெருமான்–பிரான்மலை+கள்ளர்]

பிரமனூர் *piramaṉūr,* பெ. (n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[பெருமன்–பிரமன்+ஊர்]

பிரலைகள் *piralai,* பெ. (n.) மகாநாசிகள் சிற்பத்தின் வேறு பெயர்; a different name of maganasi sculpture.

[பரல்–பரலை–பிரலைகள்]

பிரளகட்டை *piraḷa-k-kaṭṭai,* பெ (n) ஏற்றக் காலில் உள்ள சிறு கட்டை; a part of piccotah.

[புரள்+கட்டை]

பிரளகழி *piraḷa-kaḻi,* பெ. (n.) புரள்கட்டை பார்க்க; see pural kattai.

[புரள்+கழி]

பிராக்குடி *pirākkuḍi,* பெ. (n.) மதுரை வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Madurai Taluk.

[பெயரா–பேரா+குடி–பிராக்குடி]

பிராந்தகம் *pirāndagam,* பெ. (n.) நாமக்கல் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Namakkal Taluk.

[பராந்தகன் – பிராந்தகன் – பிராந்தகம்]

பிராந்தன் *pirāndaṉ,* பெ. (n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[பிராந்தகர் – பிராந்தன்]

பிரிக்குச்சி *piri-k-kucci,* பெ. (n.) மோட்டு வளையையும் பக்க வளையையும் கொண்டு இறுக்கும் குச்சி; a stick used by fisherman.

[பிரி+குச்சி]

பிரிதல் *piridal,* பெ. (n.) கொம்பு விளையாட்டில் நிகழ்த்தப்பெறும் ஒரு பிரிவு; a type of 'kombu' play.

[பிரி–பிரிதல்]

பிரிதி *piridi,* பெ. (n.) திருச்செங்கோடு வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tiruchengode Taluk.

[பரிதி–பிரிதி]

பிரிப்பாண்டி *piri-p-pāṇḍi,* பெ. (n.) இயல்பான பல்லாங்குழி ஆட்டம்; an indoor game.

[பிரிப்பு+பாண்டி]

பிருதூர் *pirudūr,* பெ. (n.) வந்தவாசி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Wandiwasi Taluk.

[பிருது+ஊர்]

பில்பருத்தி *pilparutti,* பெ. (n.) அரூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Arūr Taluk.

[புல்+பருத்தம்]

பில்லக்கட்டை *pilla-k-kaṭṭai,* பெ. (n.) சுவரில் துளையிட்டு அடிக்கும் கட்டை; a wooden piece driven in a wall.

[வில்லை+கட்டை]

பில்லத்தி *pillatti,* பெ. (n.) சிவகங்கை வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[வில்வம்+அத்தி]

பில்லவாரி *pillavāri*, பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[வல்லம்+வாரி]

பில்லி *pilli*, பெ. (n.) கொம்புமுறி விளையாட்டில் பயன்படுத்தப்படும் குறுந்தடி; a short pole used in kombu muri game. (6:111).

[புல்லி–பில்லி]

பில்லிந்தடி *pillindadi*, பெ. (n.) சிறு குச்சியை வைத்து விளையாடும் விளையாட்டு; a children game. (கொங்கு)

[புல்லி–பில்லி+தடி]

பிலாத்து *pilāttu*, பெ. (n.) திண்டுக்கல் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Dindugal Taluk.

[புல்லாற்றூர் – புல்லாத்து– பிலாத்து]

பிலாவிளை *pilāviḷai*, பெ. (n.) அகத்தீச்சுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agestheeswaram Taluk.

[பலா+விளை]

பிலிகுத்தி *pilikutti*, பெ. (n.) திருப்பத்தூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[புலி+குத்தி]

பிலிச்சி *pilicci*, பெ. (n.) கோயமுத்தூர் மா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Coimbatore Taluk.

[புலி–புலித்தி]

பிள்ளைக்குழு *piḷḷai-k-kuḻu*, பெ. (n.) பல்லாங் குழியில் ஐந்து கற்களுக்கும் குறைவாகப் பூட்டிய குழியின் பெயர்; name of a dip hole in the pallankuli board.

[பிள்ளை+குழு]

பிள்ளைப்பாண்டி *piḷḷai-p-pāṇḍi*, பெ. (n.) ஒரு வகைப் பாண்டியாட்டம் (குமரி); a type of pandi play.

[பிள்ளை+பாண்டி]

பிளந்த இடம் *piḷanda-iḍam*, பெ. (n.) தாய விளையாட்டில் துவையும் மலையிலிருந்து ஐந்து கட்டங்கள் தள்ளி இன்னொரு மலையிருக்கும் இடம்; the term used in a rural chess game.

[பிளந்த+இடம்]

பிளார் *piḷār*, பெ. (n.) திருப்பத்தூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[பிள்ளை+ஊர்]

பிறந்த கதை *piṟanda-kadai*, பெ. (n.) கதை யாடலின் ஒரு வகை; a story type.

[பிறந்த+கதை]

பிறழ்ச்சி இராகம் *piṟaḻcci-irāgam*, பெ. (n.) நேர்வரிசையிற் செல்லாமல், புரண்டு செல்லும் பண்; a side tracking musical note.

[பிற–பிறழ்ச்சி+இராகம்]

பின்குத்து *piṉkuttu*, பெ. (n) குத்து என்ற இயக்கத் தொகுதியின் ஒரு வகை; a term used in wrestling.

[பின்+குத்து]

பின்சன்னம் *piṉsaṉṉam*, பெ. (n.) தேர் சக்கரத்திற்குப் போடும் நீண்ட சன்னக் கட்டை; a hand piece of wooden log used in temple car festival.

[பின்+சன்னம்]

பின்னப்பூ போடு–தல் *piṉṉa-p-pu-pōḍu-*, செ.கு.வி. (v.i.) இறந்தவர்களின் மகள் வயிற்றுப் சீர் பேரனால் நடத்துதல்; to perform a death ceremony by daughters son. (கொங்கு)

[பின்னை–பூ+போடு]

பின்னல் கோலாட்டம் *piṉṉal-kōlāṭṭam*, பெ. (n.) கோலாட்ட வகைகளில் ஒன்று; a type in 'kolattam' play.

[பின்னல்+கோலாட்டம்]

பின்னிறக்கம் *pin-n-irakkam,* பெ. (n.) ஒயி லாட்டத்தில், மூன்று குதிகள் பின்னோக்கி அமைவதைக் கொண்ட ஓர் இயக்கத் தொகுதி; backward movement in 'oyilattam' play.

[பின்–இறக்கம்]

பின்னோக்குத் தொடர் ஓட்டம் *pinnōkkut-todar-ōttam,* பெ (n) பின்னோக்கி ஓடுதல்; backward running relay.

[பின்+நோக்கு+தொடர்+ஓட்டம்]

பின்பாட்டு *pin-pāttu,* பெ. (n.) சிற்றூர் கலை களில் இசைக்கருவியாளர், பின்பாட்டுக் குழுவினர் பாடும் பாட்டு; play back in folk lore.

[பின்+பாட்டு]

பினாயூர் *pinayūr,* பெ. (n.) காஞ்சீபுரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[பிணை–பனா+ஊர்]

பீத்தக்கூடை *pitta-k-kūdai,* பெ. (n.) பயன் படுத்த முடியாத கூடை; wornout basket. (கொங்கு)

[பீத்தல்+கூடை]

பீத்தத்துணி *pitta-t-tuni,* பெ. (n.) நைந்துபோன துணி; worn out cloth. (கொங்கு).

[பிய்த்தல்–பீத்தல்+துணி]

பீத்தை *pittai,* பெ. (n.) கெட்டுப்போன பொருள்; waste material. (கொங்கு).

[பிய்த்து–பீத்தை]

பீத்தைக்குழி *pittai-k-kuli,* பெ. (n.) காய் நிரப்ப இயலாத வெற்றுக்குழி; empty pit in 'pallankuli' board.

மறுவ. பொய்த்தல் – பொத்தல்

[பீத்தை+குழி]

பீக்காடு *pi-k-kādu,* பெ (n) மலம் கழிக்கக்கூடிய இடம்; a place of open lavatory. (நெல்லை)

[பீ+காடு]

பீளமேடு *pilamēdu,* பெ. (n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkurichi Taluk.

[பூளை–பீளை+மேடு]

பீர்க்கடவு *pirkkadavu,* பெ. (n.) கோபிப் பாளையம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Gopipalayam Taluk.

[பீர்க்கன்+கடவு]

புத்தளி *puttali,* பெ (n) காஞ்சீபுரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Kanchepuram Taluk.

[புது+தளி]

புல்லேரி *pullēri,* பெ. (n.) செங்கற்பட்டு வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Chengalpet Taluk.

[புல்+ஏரி]

புனவாசல் *punavāsal,* பெ. (n.) மன்னார்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mannargudi Taluk.

[புன்னை+(வயல்)வாசல்]

புக்கிரி *pukkiri,* பெ (n) கோரையை இரண்டாகக் கிழிக்கும் கருவி; a cleaver.

[பிய்த்தல்–பிக்கல்–புக்கிரி]

புகடி *pugadi,* பெ. (n.) சிற்ப நூல்கள் கூறும் ஒரு காதணி; an ear ornament of women.

[புகு–புகடி]

புகல்பண் *pugal-pan,* பெ. (n.) பண் வகையினுள் ஒன்று; a melody type.

[புகல்+பண்]

புங்கத்துறை *pungatturai,* பெ. (n.) தாராபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Dharapuram Taluk.

[புங்கன்+துறை]

புங்கமடுவு *pungamaduvu,* பெ. (n.) சேலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk.

[புங்கன்+மடுவு]

புங்கவாடி *puṅgavāḍi,* பெ (n) ஆத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Attur Taluk.

[புங்கன்+வாடி]

புட்டா *puṭṭā* , பெ. (n.) சேலையில் உள்ள புள்ளிகள்; dots in saree design. (கொங்கு)

[பொட்டு–புட்டா]

புடகம் *puḍagam,* பெ. (n.) காளிகாபுராணத்தில் கூறப்பெறும் ஒரு சிறப்ப முத்திரை; a pose in dance.

[புட்டகம்–புடகம்]

புடவைக்காரர் *puḍavai-k-kārar,* பெ. (n.) அருமைக்காரர்க்கு வழங்கும் மற்றொரு பெயர்; a name for Arumai-karan.

[புடைவை+காரர்]

புடைப்புச்சிற்பம் *puḍaippu-c-ciṟpam,* பெ. (n.) பாறையில் பதித்ததுபோல் ஒரு பக்கத் தோற்றத்தை மட்டும் காட்டும் சிற்பம்; embossed sculptured.

[புடைப்பு+சிற்பம்]

புதையல் *pudaiyal,* பெ. (n.) 1. ஓர் ஆட்ட வகை. type of a game (நெ.வ.). 2. இயல்பான பாண்டி விளையாட்டு; a 'pandy' game (தஞ்சை)

[புதை–புதையல்]

வெற்றிக்காய் ஒரு குழியில் நிறைய கிடைத்தால் புதையல் கிடைத்தது என்பது வழக்கம்;

புத்தளம் *puttaḷam,* பெ. (n.) அகத்தீச்சுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[புற்று+தளம்]

புத்துருத்தி *putturutti,* பெ. (n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[புற்று+துருத்தி]

புதுப்பை *puduppai,* பெ. (n.) தாராபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Dharapuram Taluk.

[புது+பாயல்]

புதையல் வேட்டை *pudaiyal-vēṭṭai,* பெ (n) புதையல் இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்தல்; treasure hunt.

[புதையல்+வேட்டை]

புமுகம் *pumugam,* பெ. (n.) புல்லாங்குழலில் இசைப்பவரின் வாயருகே இருக்கும் துளை; air hold at the end of flute.

[புகு+முகம்]

புயகீர்த்தி *puya-kīrtti,* பெ. (n.) தெருக் கூத்தாடும் ஆண்கள் அணியும் அணிகலன்; an ornament used by street dramatists.

[புய்யம்+கீர்த்தி]

புரையெடு–த்தல் *puraiedu-,* 4 செ.குன்றாவி (v.t.) பாவிலுள்ள குறைகளை நீக்குதல், ஒட்டியிருக்கும் இழைகளை நீக்குதல்; to remove the defects in loom.

[புரை+எடுத்தல்]

புரைஇழை *purai-iḻai,* பெ. (n.) மாறி மாறி இருக்கும் இழை; alternate thread.

[புரை+இழை]

புரகால் *puragal,* பெ. (n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Maduran-tagam Taluk.

[புறம்+கால்]

புரங்கணி *puraṅgaṇi,* பெ. (n.) கடலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Cuddalore Taluk.

[புறம்–புறங்கு+அணி]

புரண்டை *puraṇḍai,* பெ. (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[பிரண்டை–புரண்டை]

புரட்டு *puraṭṭu,* பெ. (n.) கேரளாவின் நாட்டுப்புற நடன நாடகம்; a folk dance of Kerala.

[புரள்–பாட்டு]

புரலாட்டு *puralāṭṭu,* பெ. (n.) பாவில் சில இழைகளை விட்டு நாடா ஊடுருவிச் செல்லும் பகுதி; the intermediate unwoven part in weaving.

[புரள்+ஆட்டு]

புரவி எடுப்பு *puravi-eḍuppu,* பெ. (n.) ஐயனார் கோயிலில் நிகழும் விழாச் சடங்கு; a ceremony in Ayyanar temple.

[புரவி (குதிரை)+எடுப்பு]

புரவியாட்டம் *puravi-y-āṭṭam,* பெ. (n.) பொய்க்கால் குதிரையாட்டம்; a folk dance of dummy horse.

[புரவி+ஆட்டம்]

புரளல் *puraḷal,* பெ. (n.) படுத்துப் புரளுவதைப் போல, நின்று கொண்டே புரளும் உடலியக்கம்; a rotating body movement in dance that too in standing pose.

[புரள்+அல்]

புரிநரம்பு *purinarambu,* பெ. (n.) யாழிலுள்ள நரம்பு; a string in harp.

[புரி+நரம்பு]

புருடு *puruḍu,* பெ. (n.) 1. புடைத்துத் தனியே வெளியில் தெரியும் கட்டி. a protrubed eruption 2. மாவு போன்ற அல்லது குழைவு உணவுப் பொருள்களில் கட்டிப்படும் திரள்; a ball like objects in food stuff.

[புரு–புருடு]

புல்லந்தை *pullandai,* பெ. (n.) இராமநாதபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ramanathapuram Taluk.

[புல்லன்+அந்தை]

புல்லமடை *pullamaḍai,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[புல்–புல்லம்+மடை]

புல்லாங்குழல் *pullāṅ-kuḻal* பெ. (n.) ஒன்றேகால் அடியில் ஏழு துளைகளைக் கொண்டிருக்கும் மூங்கிலால் ஆன இசைக் கருவி; flute.

[புல்+அம்+குழல்]

புல்லுதம் *pulludam,* பெ. (n.) பன்னிரண்டு எண்ணிக்கை கொண்டது தாளக் குறியீடு; a time measure of steps.

[புல்லு–புல்லுதம்]

புல்லுமாரி *pullumāri,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[புல்–புல்லு+மாரி]

புலம்பல் *pulambal,* பெ. (n.) ஒப்பாரி; lamenting song of death.

[புலம்பு+அல்]

புலிக்கொரடு *pulikkoraḍu,* பெ. (n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurandagam Taluk.

[புலி+கரடு]

புலிதம் *pulidam,* பெ. (n.) தாளத்தின் உறுப்புகளில் ஒரு வகை. **புல்லுதம் பார்க்க;** see pulludam.

[புல்லுதம்+புலிதம்]

புலியூரான் *puliyūran,* பெ. (n.) அருப்புக் கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[புலி+ஊரான்]

புலிவலம் *pulivalam,* பெ. (n.) அரக்கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arakkonam Taluk.

[புலி+வல்லம்]

புலிவந்தி *pulivandi,* பெ. (n.) செஞ்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Senji Taluk.

[புலி+(வந்து) வந்தி]

புலிவாநந்தல் *pulivānandal,* பெ. (n.) போளூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Polur Taluk.

[புலி+வாய்+நந்தல்]

புலிவாய் *pulivāy,* பெ. (n.) வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wandavasi Taluk.

[புலி+வாய்]

புலிவேடம் *puli-vēḍam,* பெ. (n.) விழாக் காலங்களில் புலி வேடம் அணிந்து விளையாடும் ஆட்டம்; tiger dance.

[புலி+வேடம்]

புலையூர் *pulaiyūr,* பெ. (n) திண்டிவனம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[பூளை – புலை+ஊர்]

புழங்கும் பொருள் *pulaṅgum-poruḷ,* பெ. (n.) வீட்டுப் பொருள்களைக் குறிக்கும் பயன்பாட்டுச் சொல்; a word used to denote household materials.

[புழங்கும்+பொருள்கள்]

புழுதண்ணி *pulu-taṇṇi,* பெ. (n.) நீச்சத் தண்ணீர் (கொங்கு); rice water, usually kept overnight.

[புளி – புழு+தண்ணீர்]

புழுதிக்காடு *puludi-k-kāḍu,* பெ (n) வேளாண்மை செய்யாமல் இருக்கும் நிலம்; uncultivated waste land.

[புகுதி+காடு]

புழுதியுழவு *puludi-y-uḷavu,* பெ. (n.) நீர் பாய்ச்சாது செய்யும் உழவு; dry land cultivation.

[புழுதி+உழவு]

புழை *pulai,* பெ. (n.) வங்கியத்தில் உள்ள துளை; hole in the flute.

[புலி–புள்–புழை]

புள்ளத் தடுக்கு *puḷḷa-t-taḍukku,* பெ. (n.) சிறிய அளவிலான குழந்தைகள் பாய்; children's mat.

[பிள்ளை+தடுக்கு]

புள்ளி *puḷḷi,* பெ. (n.) கட்ட விளையாட்டில் காய்களை வைப்பதற்குள்ள இடம்; a place for keeping play materials.

[புல்+புள்+புள்ளி]

புளிக்கல் *puḷikkal,* பெ. (n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[புள்ளி+கல்]

புள்ளிக்காரன் *puḷḷi-k-kāran,* பெ. (n.) ஆண் குறியைக் குறிக்கும் மறைமுகமான குழூஉக் குறிச்சொல்; a secret term used among a group of people.

மறுவ. புள்ளிராசா

[புள்ளி+காரன்]

புளிக்கோல் *puḷi-k-kōl* பெ (n) இழைகளைப் பிரித்துவிடவும் இழைகள் அறுந்தால் கண்டு பிடிக்கவும் உதவும் கோல். seperating stick.

[புள்ளி – புளி+கோல்]

புளிச்சக்கரம் *puḷi-c-cakkaram,* பெ. (n.) வடியை மேலும் கீழும் இறக்கப் பயன்படும் சக்கரம்; a wheel in handloom.

[புளிச்+சக்கரம்]

புளிச்சாறு *puḷi-c-cāṟu,* பெ. (n.) புளிக்குழம்பு; gravy like juice.

[புளி+சாறு]

புளியங்கடை *puḷiyaṅkaḍai,* பெ. (n.) சேலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk.

[புளி+அன்+கடை]

புளியமுத்து *puḷiya-muttu* பெ. (n.) பல்லாங்குழி ஆடும் கருவிகளில் ஒன்றான புளியங் கொட்டை; tamarind seed used in 'pallankuli' play.

[புளியன்+முத்து]

புளுச்சான் *puluccān*, பெ. (n.) நெல் வகை; a variety of paddy. (கொங்கு).

[புள்–புளுச்சான்]

புளிச்சைநார் *puliccai-nār* பெ (n) கயிறு செய்யப் பயன்படும் நார்; a fibre from puliccai plant.

[புளிச்சை+நார்]

புற்றுமண் *purrumaṉ* பெ. (n.) செப்புப் படிமங்கள் செய்ய உதவும் கருவி – கரு; mould, crucible used to make icons.

[புற்று+மண்]

புறநீர்மை *pura-nīrmai*, பெ. (n.) 1. பகற் பொழுதுக்குரிய பண் வகைகளிற் ஒன்று; a day time melody song. 2. விடியற்காலத்தில் பாடும் பள்ளியெழுச்சிப்பாடல்; melody song sung at dawn.

மறுவ. பூபாளம், துயிலெடைநிலை, திருப்பள்ளி எழுச்சி

[புறம்+நீர்மை]

புறாக்கை *purākkai*, பெ. (n.) இரண்டு கை களையும் புறா வடிவில் இணைப்பது; a dance pose of hands.

[புறா+கை]



புன்னமை *puṉṉamai*, பெ. (n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurandagam Taluk.

[புன்னை+மொய்]

புன்னை *puṉṉai*, பெ. (n.) வந்தவாசி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in vandiwasi Taluk.

[புன்கு–புன்னை]

புன்னையடி *puṉṉayaḍi*, பெ. (n.) அகத்தீச் சுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[புன்னை+அடி]

புனல் வைத்த கொம்பு *punal vaittakombu*, பெ. (n.) பண்டைய இசைக்கருவியினுள் ஒன்று; an ancient musical instrument. (12:2).

[புனல்+வைத்த+கொம்பு]

புனவாசல் *puṉavāsal*, பெ. (n.) ஆத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Attur Taluk.

[புனம்+வாசல்]

புனுகுச் சட்டப்பூச்சு *puṉuguccaṭṭappūccu*, பெ. (n.) சுதைச் சிற்பங்களுக்குச் செய்யப்படுகின்ற பூச்சு முறை; type of painting.

[புனுகு+சட்டம்+பூச்சு]

புனுச்சல் *puṉuccal*, பெ. (n.) மாடுகளுக்கு வரும் கோமாரி நோய்; a disease of cattle.

[புன்–புனுச்சல்]

பூக்கட்டிப் போட்டுப் பார்த்தல் *pūkaṭṭipōṭṭu-pārttal*, பெ. (n.) கொங்கு வேளாளரின் திருமணச் சடங்கு; marriage ceremony of Kongu Vellalar.

[பூ+கட்டி+போட்டு+பார்]

பூக்குதிரை *pūkkudirai*, பெ. (n.) பூவின் பெயரினைச் சொல்லியும் குதிரை போல் குனிந்தும் விளையாடும் விளையாட்டு வகை; a childrens game. (த.நா.வி.).

[பூ+குதிரை]

பூக்குழி *pūk-kuḻi*, பெ. (n.) 1. இறைப்பற்றின் பொருட்டு நீண்ட நேரம் அடக்கமாக இருக்கும் குழி; pit used self buried to fulfill a vow. 2. தீக்குழி; a fire pit.

[பூ+குழி]

பூக்குழி இறங்கு-தல் *pūkkuḷi-iṟaṅgu-,* செ.கு.வி. (v.t.) தீக்குழியில் இறங்கி நடத்தல்; to walk on a fire pit.

[பூ+குழி+இறங்கு]

பூக்கூடை *pūk-kūḍai,* பெ. (n.) ஒன்றரையடி அகலத்தில் அடியிலும், மூன்றடி நீளத்தில் மேலே விரிந்தும் செய்யப்பட்டு பூப்பறிக்க உதவும் கூடை; flower basket.

[பூ+கூடை]

பூங்கரகம் *pūṉ-karagam,* பெ. (n.) கரக வகையினுள் ஒன்று; a folk dance of karagam.

[பூ+கரகம்]

பூங்குணம் *pūṅguṇam,* பெ. (n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurandagam Taluk.

[பூ+குன்றம்]

பூங்கோடு *pūṅkōḍu,* பெ. (n.) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Walajah Taluk.

[பூ+கோடு (ஏரி)]

பூச்சட்டி *pū-c-caṭṭi,* பெ. (n.) தோட்டங்களில் தொங்க விடப்படும் சட்டி; flower pot.

[பூ+சட்டி]

பூச்சிக்கூடு *pūcci-k-kūḍu,* பெ. (n.) பல்லாங் குழி ஆடப் பயன்படுத்தும் சோழி வகை; cowrie used for playing 'pallankuli'.

[பூச்சி+கூடு]

பூச்சி முறை *pūcci-muṟai,* பெ. (n.) விளையாட்டில் தோற்றவரை அறியும் வகை; method of determining the loser.

[பூச்சி+முறை]

நிலாக்காலத்து விளையாட்டில் கலந்து கொள்பவர் அனைவரும் வரிசையாக நிற்க, தலைவன் உருட்டிவிட்ட கல் வரிசையில் உள்ளவர்களில் தோற்றவன் நிழலில் வந்து நின்றால் பட்டவரா (தோற்றவரா)கக் கருதப்படுவார்.

பூச்சியம்மன் கதை *pūcci-y-ammaṉ-kadai,* பெ. (n.) வில்லுப்பாடல் வகைகளில் ஒன்று; name of a bowsong.

[பூச்சி+அம்மன்+கதை]

பூச்சிவிளாகம் *pūcciviḷāgam,* பெ (n) அகத்தீச்சுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[பூச்சி+வளாகம்]

பூச்சிவிளையாட்டு *pūccviḷayāṭṭu,* பெ.(n.) தோற்றவர் நிலவொளியில் நிற்க மற்றவர் நிலவொளிபடாத இருண்ட பகுதியில் நிற்கும் நிலாக்காலத்து விளையாட்டு; children's game.

[பூச்சி+விளையாட்டு]

பூச்சொரி-தல் *pūc-cori-*செ.குன்றாவி (v.t.) பூத்தூவுதல்; to throw flowers lightly.

[பூ+சொரி]

பூசிவாக்கம் *pūśi-vākkam,* பெ. (n.) காஞ்சீபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[பூச்சை+வாக்கம்]

பூசைத்தாளம் *pūsai-t-tāḷam,* பெ. (n.) பறை வாசிப்பின் வகையினுள் ஒன்று; a type of drum beat.

[பூசை+தாளம்]

பூஞ்சுத்தி *pūñjutti,* பெ. (n.) மேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Melur Taluk.

[பூ+சுற்று]

பூட்டன் *pūṭṭaṉ,* பெ. (n.) மாட்டுக்குப் பூட்டும் தும்பு; halter, tethering rope.

[பூட்டு+அன்]

பூட்டி *pūṭṭi,* பெ (n) நெல்லுக்காயினை அடுக்குதல்; a type of game.

[பூ>பூட்டி]

பூட்டு-தல்[1] *pūṭṭu*, செ.குன்றாவி. (v.t.) அடுக்கு முறையில் அடுக்குதல்; to set one above another.

[பூண்-பூட்டு]

பூட்டு-தல்[2] *pūṭṭu*, செ.குன்றாவி (v.t.) பல்லாங்குழியில் மீண்டும் காய்களை நிரப்புதல்; to fill the pit in pallankuli game.

[பூண்-பூட்டு]

பூட்டுத்தலைக்கட்டை *pūṭṭu-t-talaikkaṭṭai*, பெ. (n.) மீதமுள்ள பட்டு இழையைச் சுற்றி எடுக்கப் பயன்படுத்தப்படும் குறுக்குச் சட்டங்களைக் கொண்ட குறுக்குவாக்கில் சுற்றும் இராட்டின வகை; a handloom wheel used in weaving.

[பூட்டு+தலை+கட்டை]

பூட்டு *pūṭṭu*, பெ. (n.) 5 வாழை இலை கொண்ட கட்டு; a bundle of five plantain leaves.

[பூண்+பூட்டு]

பூட்டை *pūṭṭai*, பெ. (n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkurichi Taluk.

[பூள்-பூளை-பூட்டை]

பூணாரி *pūṇāri*, பெ. (n.) மதுரை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurai Taluk.

[பூணன்+ஏரி]

பூண் அடி-த்தல் *pūṇaḍi-*, செ.குன்றாவி (v.t.) உலக்கையின் இரு பக்கங்களிலும் பூண் போடுதல்; to fix the brim ring of pestle.

[பூண்+அடி]

பூத்தொட்டி *pūttoṭṭi*, பெ. (n.) பூச்செடிகளை வளர்க்க உதவும் மண் தொட்டி; flower pot.

[பூ+தொட்டி]

பூத நடனம் *pūda-naḍaṇam*, பெ. (n.) பூதம் போன்ற முகமூடிகளை அணிந்து ஆடும் ஆட்டம்; devil dance of youngsters.

[பூதம்+நடனம்]

பூதப்பார் *pūda-p-pār*, பெ. (n.) சிற்ப நூல் நெறிப்படி தேரின் அடிப்பாகத்தில் சுமையைத் தாங்கக்கூடிய குறுக்குக் கட்டை; a strong wooden bar fixed at the bottom of the temple car.

[பூதம் (பெரியது)+பார்]

பூதம்பாடி *pūdampāḍi*, பெ. (n.) கடலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Cuddalore Taluk.

[பூதன்+பாடி]

பூந்தாண்டை *pūntāṇḍai*, பெ. (n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[பூ+தண்டலை]

பூப்படல் *pū-p-pāḍal*, பெ. (n.) பாடல் வழியாக நடைபெறும் விளையாட்டு; a play by songs.

[பூ+பாடல்]

பூம்பிடாகை *pūmpiḍāgai*, பெ. (n.) அருப்புக் கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[பூ+படாகை]

பூம்பூ புளியம்பூ *pūmpū-puḷiyampū*, பெ. (n.) சிறுவர் விளையாட்டு; a children's game.

[பூம்+பூ+புளியம்பூ].

பாடலில் இடம் பெறும் சொல்லால் பெற்ற பெயர்.

பூமலக்குண்டு *pūmalakkuṇḍu*, பெ. (n.) பெரியகுளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Periyakulam Taluk.

[பூமாலை+குண்டம் (குண்டு)]

பூமாடு *pūmāḍu*, பெ. (n.) பண்டைய இசைக் கருவியினுள் ஒன்று; musical instrument.

[பூ+மாடு]

பூமாடு வாத்தியம் *pūmāḍu-vāttiyam*, பெ (n) இசைக்கருவி வகையினுள் ஒன்று; a musical instrument. **(1:167).**

[பூ+மாடு+வாத்தியம்]

பூரத்தான்குடி *pūrattāṉkuḍi,* பெ. (n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[பூரம்+அத்து+ஆன்+குடி]

பூரம் *pūram,* பெ. (n.) செய்நஞ்சு (நவபாடாணம்) செய்ய உதவும் மூலப் பொருள்களில் ஒன்று; a ingredient to prepare 'nava pasana'.

பூராஞ்சுளி *pūrāñ-cuḷi,* பெ. (n.) மாட்டின் முதுகில் உள்ள சுழி; a omen sign on the back of the cow.

[பூரான்+சுழி]

பூலங் கொண்டாள் அம்மன் கதை *pūlaṅ koṇḍāḷ ammaṉkadai,* பெ. (n.) ஒரு வகையான கதைப்பாடல்; a folk song.

[பூலம்+கொண்டாள்+அம்மன்+கதை]

பூலாங்கால் *pūlāṅkāl,* பெ. (n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[பூலான்+கால்]

பூலாங்குச்சி *pūlāṅ-kucci,* பெ. (n.) தட்டு பின்னப் பயன்படும் குச்சி; sticks useful to make basket.

[பூலாம்+குச்சி]

பூலவாக்கு *pūla-vākku,* பெ. (n.) ஒருவருக்குத் தெரியாத பிறரின் கமுக்கச் (ரகசியம்) செய்திகள் (கொங்கு); utmost secrets.

[பூலம்+வாக்கு]

பூவங்காபறம்பு *pūvaṅgāparambu,* பெ. (n.) கல்குளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kalkulam Taluk.

[பூம்+காய்+பறம்பு]

பூவந்தி *pūvandi,* பெ. (n.) 1. இராமநாதபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ramanathapuram Taluk. 2. சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[பூ+அந்தி]

பூவாமி *pūvāmi,* பெ. (n.) பொன்னேரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ponneri Taluk.

[பூ+(வாவி)வாமி]

பூவாலை *pūvālai,* பெ. (n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[பூவல்–பூவாலை]

பூவிழந்தூர் *pūviḻandūr,* பெ. (n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[பூவிழு+அந்தூர்]

பூவோடு *pūvōḍu,* பெ. (n.) கோயில் திருவிழாவில் எடுக்கும் தீச்சட்டி; fire pot.

[பூ+ஓடு]

பூனாச்சி *pūnācci,* பெ. (n.) பவானி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Bavani Taluk.

[பூ+நொச்சி]

பூனையான்குண்டு *pūnaiyāṉkuṇḍu,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[பூனையான்+குண்டு]

பூனையும் எலியும் *pūnaiyum eliyum,* பெ.(n.) பூனை எலியை விரட்டுவது போன்ற விளையாட்டு; a children's game.

[பூனை+உம்+எலி+உம்]

பெடாகம் *pedāgam,* பெ. (n.) விழுப்புரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vilupuram Taluk.

[படாகை-படாகம்]

பெண்கல்விக்கும்மிப்பாட்டு *pen-kalvi-kummippāttu,* பெ. (n.) பெண் கல்வியின் சிறப்புகளை இயம்பும் கும்மிப்பாடல்; a kummi play pressing the need for women's education.

[பெண்+கல்வி+கும்மி+பாட்டு]

பெத்தூர் *pettūr,* பெ. (n.) திருப்பத்தூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Thiruppattur Taluk.

[புத்தூர்-பெத்தூர்]

பெரண்டவயல் *perandavayal,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[பிரண்டை+வயல்]

பெரப்பஞ்சோலை *perappañjōlai,* பெ. (n.) இராசிபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Rasipuram Taluk.

[பிரம்பு-பிரப்பம்+சோலை]

பெரப்படி *perappadi,* பெ. (n.) கும்பகோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kumbakonam Taluk.

[புறம்பு+அடி]

பெரம்பை *perambai,* பெ. (n.) விழுப்புரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vilupuram Taluk.

[புறம்பு-புறம்பை]

பெரியகரம் *periyagaram,* பெ. (n.) போளூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Polur Taluk.

[பெரிய+அகரம்]

பெரியகளந்தை *periakalandai,* பெ. (n.) பொள்ளாச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Pollachi Taluk.

[பெரிய+களந்தை]

பெரியநெகமம் *periyanegamam,* பெ. (n.) பொள்ளாச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Pollachi Taluk.

[பெரிய+(நியமம்)நிகமம்]

பெரியபோது *periyapōdu,* பெ. (n.) பொள்ளாச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Pollachi Taluk.

[பெரிய+போது]

பெருங்கால்மேடு *perungālmēdu,* பெ. (n.) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Walajah Taluk.

[பெரும்+கால்+மேடு]

பெருந்துரவு *perunturavu,* பெ. (n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurandagam Taluk.

[பெரும்+துரவு]

பெருமாண்டி *perumāndi,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[பெரும்+ஆண்டி]

பெருமாள்மாடு வாத்தியம் *perumālmādu-vāttiyam,* பெ. (n.) சேவையாட்டத்திற்குத் துணை செய்யும் தேவதுந்துமியின் வேறு பெயர்; name of a music instrument.

[பெருமாள்+மாடு+வாத்தியம்]

பெருமாள் வாய்ச்சியம் *perumāl vāycciyam,* பெ. (n.) ஒரு பக்கம் அடித்தும் மறுபக்கம் தடவியும் இசைக்கப்படும் ஓர் இசைக்கருவி; a musical instrument.

[பெருமாள்+வாச்சியம்]

பெருமுகை *perumugai,* பெ. (n.) வேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vellore Taluk.

[பெரு+முகை(முக்கல்-முக்கு-முகை]

பெருமுருக்கு *perumuruku,* பெ. (n.) பாயின் ஓரம் கட்டும் முருக்கு; a tight knit on the sides of mat.

[பெரும் + முருக்கு]

பெருமூங்கில் *perumūṅgil,* பெ. (n.) முற்றிய மூங்கில்; a fully grown bamboo.

[பெரு+மூங்கில்]

பெலாந்துரை *pelāndurai,* பெ. (n.) விருத்தாசலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vriddhachalam Taluk.

[பூலான்+துறை]

பெலப்பாடி *pelappāḍi,* பெ. (n.) சேலம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk.

[பூலாம்+பாடி]

பெள்ளாதி *pellādi,* பெ. (n.) அவினாசி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Avanashi Taluk.

[வல்லாளி–பெல்லாளி–பெள்ளாதி]

பொடிக்குச்சி *poḍi-k-kucci,* பெ. (n.) புலி யாட்டக்காரரின் மூன்று அல்லது நான்கடி நீளமுடைய மெல்லிய மூங்கில் கம்பு; a shin bamboo stick of the tiger dancer.

[பொடி+குச்சி]

பேகடை *pēgaḍai,* பெ. (n.) ஒரு வகையான பண்; a musical note.

[பியகடை–பேகடை]

பேட்டிவயல் *pēṭṭivayal,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[பேடு–பேட்டி+வயல்]

பேடி *pēḍi,* பெ. (n.) சிற்றூர் ஆண்கள். மணிக்கட்டில் அணியும் ஒரு நகை; an ornament worned by men on wrist.

[பிடி–பேடி]

பேந்தா *pēndā,* பெ. (n.) குண்டு ஆட்ட செவ்வக வடிவ அரங்கின் பெயர்; name of the stadium.

[பறந்தலை–பரந்தா–பேந்தா]

பேய்க்கரும்பு *pēy-k-karumbu,* பெ. (n.) வேருடன் கூடிய கரும்பு; a full length sugarcane with root.

[பேய்+கரும்பு]

பேய்ப்படை *pey-p-paḍai,* பெ. (n.) வில்லுப் பாட்டில் இறப்புப் பற்றிய கதைப்பாடல்களுக்கு பாடுபவர்; a singer of elegies.

[பேய்+படை]

பேய்ப்பந்து *pey-p-pandu,* பெ. (n.) எறிபந்தின் வேறொரு பெயர்; a devil ball in games.

[பேய்+பந்து]

பேய்மாரல் *pēymāral,* பெ. (n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[பேய்+மரல்]

பேரலி *pērali,* பெ. (n.) விளவங்கோடு வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Vilavancode Taluk.

[பெரு+அல்லி–பேரல்லி–பேரலி]

பேராங்குல மானம் *pērāṅgula-māṉam,* பெ. (n.) படிமங்களின் உயரமைப்பில் பின்பற்றப் படும் மரபு; a measurement in sculpture.

[பெரு+அங்குல+மானம்]

பேரயன் துள்ளல் *pērayaṉ-tuḷḷal,* பெ. (n.) ஒரு வகையான காணிப்பழங்குடியினரின் ஆடல்; a dance of Kani tribes.

[பெரு+ஆயன்+துள்ளல்]

பேரால் *pērāl,* பெ. (n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkurichi Taluk.

[பெரு–பேர்+ஆல்]

பேரிகை *pērigai,* பெ. (n.) ஒசூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Hosur Taluk.

[ஒருகா. பெருமுகை–பேரிகை]

பேரிசை *pērisai,* பெ. (n.) ஒரு வகையான இசைநூல்; an ancient treatise on Tamil music.

[பெரு+இசை]

பேறங்கியம் *pērangiyam,* பெ. (n.) விருத் தாசலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vriddhachalam Taluk.

[பெரு+அங்கியம்]

பைக்கட்டு *pai-k-kaṭṭu,* பெ. (n.) புத்தகப்பை; a bag for books.

[பை+கட்டு]



பைங்கிணறு *paiṅkiṇaṟu,* பெ. (n.) அரக்கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arakonam Taluk.

[பசும்+கிணறு]

பைவலசா *paivalasā,* பெ. (n.) திருத்தணி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruttani Taluk.

[பை+வலசு]

பொங்கக்கட்டி *poṅga-k-kaṭṭi,* பெ. (n.) மண் குழைத்துச் செய்யப்படும் மண் கட்டி; a damp earth clot.

[புங்கு+பொங்கு+கட்டி]

பொக்கனி *pokkaṉi,* பெ. (n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[முக்கல்(பாறைப்பிளவு)–பொக்கல்–பொக்கனி]

பொங்கற்சட்டி *poṅgaṟ-caṭṭi,* பெ. (n.) பொங்கல் வைக்கும் மண் சட்டி; new pot.

[பொங்கல்+சட்டி]

பொங்கு *poṅgu,* பெ. (n.) பறவைகளின் இறகு; feather of bird.

[புய–புங்கு–பொங்கு]

பொசுக்கனி *posukkaṉi,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[புசல்+காணி]

பொட்டிப் பலகை *poṭṭi-p-palagai,* பெ. (n.) தறியில் இரு புறமும் தக்கட்டையைத் தாங்கி இருக்கும் கருவி; an instrument in handloom.

[பொட்டி+பலகை]

பொட்டிப்பணம் *poṭṭippaṇam,* பெ. (n.) திரு மணத்திற்குப் பின் பெண்களுக்குச் சீர் வரிசையாகப் கொடுக்கும் பணம்; a gift given to bride after marriage.

[பொட்டி+பணம்]

பொட்டியம் *poṭṭiyam,* பெ. (n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkurichi Taluk.

[பேடு–பேட்டு–பெட்டியம்–பொட்டியம்]

பொடவூர் *poḍavūr,* பெ. (n.) காஞ்சீபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[பிடவு–பிடவூர்]

பொடிகழியாட்டம் *poḍikaḻi-y-āṭṭam,* பெ. (n.) எட்டு முதல் பதினாறு ஆண்கள் சிறிய கம்புகளைப் பயன்படுத்தி ஆடுகின்ற ஆட்டம்; a game of youngsters.

[பொடி+கழி+ஆட்டம்]

பொத்தவிளை *pottaviḷai,* பெ. (n.) அகத்தீச் சுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[பொத்து+விளை]

பொதிகை *podigai,* பெ (n) இசைத்தூண்களின் உச்சியில் செதுக்கப்படும் சிற்ப வகை; a

design on the top of the musical stone pillar.

[போதிகை–பொதிகை]

பொதும்பு *podumbu,* பெ. (n.) மதுரை வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Madurai Taluk.

[பொது–பொதும்பு]

பொய்யாங்குழி *poyyāṉ-kuḻi,* பெ. (n.) தோற்று நிரப்பப்படாமலிருக்கும் வெறுங்குழி; an empty pit in pallankuli game.

[பொய்யன்+குழி]

பொற்றுச் சட்டம் *poṟṟu-c-caṭṭam,* பெ. (n.) பாவினைச் சுற்றி வைக்க உதவும் மரக்கட்டை; a part in handloom.

[பொற்று+சட்டம்]

பொம்மிடி *pommiḍi,* பெ. (n.) தருமபுரி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Dharmapuri Taluk.

[பொன்+முடி]

பொய்க்குதிரையாட்டம் *poy-k-kudirai-y-āṭṭam,* பெ. (n.) கட்டையின்றி, வெறுங்காலால் பொய்க்குதிரைக் கூட்டைச் சுமந்தாடும் ஆட்டம்; a folk dance.

[பொய்+குதிரை+ஆட்டம்]

பொய்யரசூர் *poyyarasūr,* பெ. (n.) திருக் கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[பொய்கை+அரசூர்]

பொரசப்பட்டு *porasappaṭṭu,* பெ. (n.) கள்ளக் குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakurichi Taluk.

[புரசன்+பற்று]

பொரிக்கல் *porikkal,* பெ. (n.) திருவண்ணா மலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvannamalai Taluk.

[புரை>பொரி+கல்]

பொரிப்பாண்டி *pori-p-pāṇḍi,* பெ. (n.) பொது வான பாண்டி விளையாட்டில் இன்னொரு பெயர் (குமரி மாவட்டம்); a name of 'pandi' play.

[பொரி+பாண்டி]

பொருப்பம் *poruppam,* பெ. (n.) கள்ளக் குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkurichi Taluk.

[பொருப்பு+அம்]

பொருள் நுவற்சிக் கற்பனை *poruḷ-nuvaṟcci-k-kaṟpaṉai,* பெ. (n.) முற்காலச் சிற்பியர்களின் கலைத்திறமையை அறிய உதவும் கற்பனை வகை; a talent of the ancient sculptors.

[பொருள்+நுவற்சி+கற்பனை]

பொருளைத்தொடு *poruḷai-t-toḍu,* பெ. (n.) தொடுபவர்களை அருகிலுள்ள மரத்தைத் தொட்டு வரும்படி விளையாடல்; object tag.

[பொருள்+ஐ+தொடு]

பொலி *poli,* பெ. (n.) இரண்டு நிலத்திற்கு இடையில் உள்ள வரப்பு; a ridge in land.

[பொலி–பொலி]

பொளிக்கால் *poḷikkāl,* பெ. (n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[பொலி+கால்]

பொற்குணம் *poṟkuṇam,* பெ (n) திரு வண்ணாமலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvannamalai Taluk.

பொற்பந்தல் *poṟpandal,* பெ. (n.) காஞ்சீபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[பொன்+பந்தல்]

பொறே *poṟē,* பெ. (n.) இருளர் இனத்தின் இசைக்கருவிகளுள் ஒன்று; a musical instrument.

[புரை+பொறெ]

பொன்பத்தி *poṉpatti,* பெ. (n.) செஞ்சி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Senji Taluk.

[பொன்+பற்றி]

பொன்மதி *poṉmadi,* பெ. (n.) திருத்தணி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruttani Taluk.

[பொன்+மதி]

பொன்பேத்தி *poṉpētti,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[பொன்+பற்றி]

பொன்மார் *poṉmar,* பெ. (n.) செங்கற்பட்டு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chenglepet Taluk.

[பொன்+மார்]

பொன்னத்தி *poṉṉatti,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[பொன்+அத்தி]

பொன்னலி *poṉṉali,* பெ. (n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[பொன்+ஆலி]

போட்டுப் பாண்டி *pōṭṭu-p-pāṇḍi,* பெ. (n.) ஒரு பாண்டி ஆட்ட வகை (மதுரை); a children's play.

[போட்டு+பாண்டி]

போண்டி *pōṇḍi,* பெ. (n.) தோற்றவர்; defeated person.

[போ–போண்டி]

போதக்காடு *pōdakkāḍu,* பெ. (n.) அரூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Harur Taluk.

[புதர்+காடு]

போதலை *pōḍalai,* பெ. (n.) மேல் முந்தி; upper part of the cloth or saree.

[பூ+தலை]

போதிகை *pōdigai,* பெ. (n.) பல்லவர்காலச் சிற்பப் பாணியிலமைந்த சிற்ப வடிவம்; a feature in sculpture.

[போது+போதிகள்+கள்]

போந்தை *pōndai,* பெ. (n.) செஞ்சி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Senji Taluk.

[போந்து–போந்தை (பனை)]

போர்த் தேங்காய் அடி–த்தல் *por-t-tēngāy-aḍi-,* செ.கு.வி. (v.t.) கொம்பு முறி விளையாட் டுக்கு முன் நிகழ்த்தப்பெறும் சிற்றூர் விளையாட்டு;

[போர்+தேங்காய்+அடி]

போர்வை *pōrvai,* பெ. (n.) யாழின் உறுப் புகளில் ஒன்று; a part of the harp.

[போர்–போர்வை]

பௌளி *pouḷi,* பெ. (n.) ஒரு வகையான பண்; a melody type.

[புவானி–பௌணி–பௌளி]

ம

மக்கள்நாச்சி *makkaḷnācci,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[மக்கள்+நாச்சி]

மக்களவை *makkaḷavai,* பெ. (n.) நாடாளு மன்றம்; parliament, loksaba.

மறுவ. நாடாளுமன்றம்

[மக்கள்+அவை]

மக்களவைத் தலைவர் *makkaḷavai-t-talaivar,* பெ. (n.) நாடாளுமன்ற உறுப்பினர்களால் தலைமைப் பொறுப்புக்குத் தெரிவு செய்யப் படுபவர்; speaker of the parliament.

[மக்களவை+தலைவர்]

மக்களாட்சி *makkaḷ-āṭci,* பெ. (n.) வாக் களிக்கும் உரிமை பெற்ற மக்களால் தெரிந் தெடுக்கப் பெறும் உறுப்பினர்கள் பங்கேற்று நடத்தும் ஆட்சி முறை; democracy.

[மக்கள்+ஆட்சி]

மக்காணி *makkāṇi,* பெ. (n.) மக்காச் சோளம். (கொ.வ.); maize, Indian corn, zea mays.



மக்கிரி *makkiri,* பெ. (n.) உழவு வேலைகளுக்குப் பயன்படும் கூடை; basket. (கொ.வ.).

[முக்கு–முக்குரி–மக்கிரி (கொ.வ.)]

மகணம் *magaṇam,* பெ. (n.) இசை உருக்களில் ஒன்று; a musical note.

[மகுன்–மகணம்]

மகதியாழ் *magadiyāḻ,* பெ. (n.) புத்தர் காலத்து யாழ் வகையினுள் ஒன்று; a harp.

[மகதம்+யாழ்]



மகர்நோன்பு *magar-nōṉbu,* பெ. (n.) ஒன்பான் இரவின் (நவராத்திரி) பண்டிகையின் போது குழந்தைகள் பல புனைவுகள் புனைந்து நடித்தல்; a children's dance.

[மகார்–மகர்+நோன்பு]

மகர்நோன்பு சாவடி *magarnōnbu-cāvaḍi,* பெ. (n.) குழந்தைகள் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக, தஞ்சையிலுள்ள சாவடி; a theatre for children's dance of Tanjavur.

[மகார் > மகர்+நோன்பு+சாவடி]

மகரம் *magaram,* பெ. (n.) ஒரு வகையான இரட்டைக்கை முத்திரை; an hand pose.

[மகரம் (மீன்) – மகரம்]

மகரமுகம் *magara-mugam,* பெ. (n.) நாட்டியத்தில் பின்பற்றப்படும் ஒரு வகையான முத்திரை நிலை; an handpose in dance.

[மகரம்+முகம்]

மகரி *magari,* பெ. (n.) சிற்பத்தின் காதணி களில் ஒன்று; a ear ornament in sculpture.

[மகரம் - மகரி]

மகரூர் *magarūr,* பெ. (n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkurichi Taluk.

[மகர்+ஊர்]

மகாக்கு *magākku,* பெ. (n.) குரங்குகளில் ஒரு வகை; a kind of monkey.

[மங்கன்–மங்கு–மகாக்கு]

மகாநாசிகள் *magānāsigaḷ,* பெ. (n.) கோபுரங்களில் அமைக்கப்பெறும் ஒரு வகையான சிற்பம்; a sculpture in the tower of temple.

[மா–மகா+நாசிகள்]

மகாம்புய பீடம் *magāmbuya pīḍam,* பெ. (n.) சிற்பங்களைத் தாங்கும் பீடம்; a stand structure of the sculptures.

[மா–மகா+அம்புயம்+பீடம்]

மகான்யம் *magāṉyam,* பெ. (n.) திருப்பெரும் புதூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sriperumbudur Taluk.

[ஒருகா. மாகாணம் – மாகான்யம்]

மகிண்டி *magiṇḍi,* பெ. (n.) முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[மகிழ்–மகிழ்ந்தி–மகிண்டி]

மகிழ்வட்ட ஓட்டம் *magiḷvaṭṭa-ōṭṭam,* பெ. (n.) வட்டத்தில் உள்ளும் வெளிப்புறத்தும் உள்ளவர்கள் இணை சேர்ந்து விளையாடல்; merry go round.

[மகிழ்+வட்டம்+ஓட்டம்]

மகுட ஆட்டம் *maguḍa-āṭṭam,* பெ. (n.) கணியான் கூத்தின் வேறு பெயர்; a name for 'kaniyān āṭṭam'.

[மகுடம்+ஆட்டம்]

மகுடம் *maguḍam,* பெ. (n.) கணியான் கூத்தில் இசைக்கப்பெறும் தப்பு போன்ற ஓர் இசைக்கருவி; a musical instrument in *'kaniyān kūttu'.*

[மகிழ்–மகிழம் – மகுடம்]

மங்கண்டம் *maṅgaṇḍam,* பெ. (n.) ஆழமான பகுதியில் பாறை இல்லாமல் மணல் உள்ள பகுதி; sandy bed of a water reservoir or river. (கொ.வ.).

[மணல்–கண்டம்]

மங்கல நீராட்டு விழா *maṅgalanīrāṭṭu-viḷā,* பெ. (n.) பூப்பெய்தவளுக்குச் செய்யும் சடங்கு; purificatory ceremony for the girl who has attained puberty.

[மக்கல நீராட்டு+விழா]

மங்கலரேவு *mangalarēvu,* பெ. (n.) திருமங்கலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirumangalam Taluk.

[மங்கல+இறவு]

மங்கள கைசி *maṅgaḷakaisi,* பெ. (n.) பண் வகைகளிற் ஒன்று; a musical note.

[மங்களம்–கைசி]

மங்கள தேசிகம் *maṅgalatēsigam,* பெ. (n.) ஒரு வகையான பண்; a musical note.

[மங்களம்+தேசிகம்]

மங்கை நல்லூர் *maṅgai-nallūr,* பெ. (n.) மயிலாடுதுறையிலிருந்து 8 கல்மாத்திரி தொலைவில் உள்ள ஒரு ஊர்; name of a village 8 k.m. from Mayiladuturai.

[மங்கை+நல்லூர்]

மச்சக்கெண்டை *macca-k-keṇḍai,* பெ. (n.) கரும்புள்ளியுள்ள கெண்டை மீன் வகையுள் ஒன்று; a kind of fish.

[மச்சம்+கெண்டை]

மச்சூர் *maccur,* பெ. (n.) திருவாடானை வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[மாச்சு+ஊர்]

மசகு *mašagu,* பெ. (n.) மாட்டு வண்டியின் கொடைக் கட்டைக்கு இடும் கரிநெய்; grease.

[மை–மயகு–மசகு]

மசயன் *mašayan,* பெ. (n.) தெளிவில்லாதவன்; a dull headed person.

[மசை+அன்]

மசநாய் *mašanāy,* பெ. (n.) வெறி பிடித்த நாய்; rogue dog. (கொ.வ.).

[மிசை>மச+நாய்]

மசனப்பாறை *mašana-p-pārai,* பெ. (n.) உறுதியில்லாமல் நொறுங்கும் தன்மை கொண்ட பாறை; breakable stone.

[மசி–மசினம்+பாறை]

மசாலைமீன் *masālaimīn,* பெ. (n.) மீன் வகையுளுள் ஒன்று; a kind of fish.

[மசாலை+மீன்]

மஞ்சபத்தூர் *mañjapattūr,* பெ. (n.) திரு வண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர்; name of the village in Tiruvannamalai.

[மஞ்சம்+பற்று+ஊர்]

மஞ்ச விளையாட்டு *mañjaviḷaiyāṭṭu,* பெ. (n.) தீமிதி விழாவிற்கு மறுநாள், திருமண முறை யுடையவர்கள் ஒருவர் மீது ஒருவர் மஞ்சள் நீரை ஊற்றி விளையாடும் விளையாட்டு; spraying play of coloured water among teen agers on the next day of fire pit festival.

[மஞ்சள்(நீர்)+விளையாட்டு]

மஞ்சள்சுறா *mañjal-sūrā,* பெ. (n.) சுறாமீன் வகையுள் ஒன்று; yellow dog fish.

[மஞ்சள்+சுறா]

மஞ்சள்பாரை *mañjalpārai,* பெ. (n.) ஒரு வகை மீன்; a kind of fish.

[மஞ்சள்+பாரை]

மஞ்சள் நீர் *manja-nir,* பெ. (n.) பச்சைக் கோலத்தின் வகைகளிற் ஒன்று; a floral decoration.

[மஞ்சள்+நீர்]

மஞ்சனி *mañjani,* பெ. (n.) ஆத்தூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Attur Taluk.

[மஞ்சள்–மஞ்சளி–மஞ்சனி]

மஞ்சாடி[1] *mañjāḍi,* பெ. (n.) சிவப்பான உருண்டை விதை; a round shaped seed red in colour .

[மஞ்சி–மஞ்சாடி]

மஞ்சாடி[2] *mañjāḍi,* பெ. (n.) இரண்டு குன்றி மணிகள் கொண்ட பொன் எடை; a gold weights equal to two crab eyes. "முக்கழஞ்செ மூன்று மஞ்சாடியுங் குன்றியும் பொன்" (தெ.சா.8:2:எ.529). .

[மஞ்சு+ஆடி]

மஞ்சி *mañji,* பெ. (n.) யாழ் நரம்பிற்குத் தகாத ஒன்று; unappropriate string in harp.

[மாஞ்சி–மஞ்சி]

மஞ்சிக் கோரை *mañji-k-kōrai,* பெ. (n.) கோரைக் களை வகை; reed. (வே.க.36).

[மஞ்சி+கோரை]

மஞ்சிகள் *mañjigal,* பெ. (n.) வில் யாழிலுள்ள நரம்புகளைச் சுட்டும் பெயர்; name of strings in bow harp.

[மஞ்சி+கள்]

மஞ்சு[1] *mañju,* பெ. (n.) தேங்காய் மட்டையிலி ருந்து நார் எடுத்த பின் வரும் துகள்; the dust particles from coconut shell coir.

[மய்–மஞ்சு]

மஞ்சு[2] *mañju,* பெ. (n.) வயலில் அமைக்கப்படும் பாத்தித் திட்டு; raised row of earth in the field.

[முஞ்சு–மஞ்சு]

மஞ்சுவிரட்டு *mañjuviraṭṭu,* பெ. (n.) எருதுபிடி விளையாட்டு; காளையை அடக்கும் திறப்பாடு; capturing a bull at large as a proof of bravery.

மறுவ. சல்லிக்கட்டு, ஏறுதழுவுதல், ஏறுகோள், ஏறுகோடல்

[மைந்து(வலிமை)–மஞ்சு+விரட்டு]

மட்டகீச்சான் *maṭṭa-kiccān,* பெ. (n.) ஒரு வகை மீன்; squeaking porch.

[மட்டம்+கீச்சான்]

மட்டப்பாரை *maṭṭa-p-pārai,* பெ. (n.) மலபார் கடற்கரையில் இருக்கும் மீன் வகை; Malabar trevally.

[மட்டம்+பாரை]

மட்டி *maṭṭi,* பெ. (n.) கள் மிடாவின் அடியில் தேங்கியிருக்கும் கழிவு; sediment in toddy pot.

[மள்–மடு–மட்டி]

மட்டிகை *maṭṭigai,* பெ. (n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[மட்டு–மட்டிகை]

மட்டுக்கட்டு–தல் *maṭṭu-k-kaṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) வேலையைக் குறைத்துக் கொள்ளுதல்; to decrease the range of work. இப்பொழு தெல்லாம் அவன் தன் வேலையை மட்டுக்கட்டிக் கொண்டான். (மீனவ.).

[மட்டு+கட்டு]

மட்டுப்படு–தல் *maṭṭu-p-paḍu-,* 17 செ.குன்றாவி. (v.t.) துப்புத் தெரிதல்; to spy and find out.

[மட்டு+படு]

மட்டை[1] *maṭṭai,* பெ. (n.) தலைகீழாகச் சுற்றும் பம்பரம் (த.நா.வி.); inverse top.

[மொட்டு–மட்டு–மட்டை]

மட்டை[2] *maṭṭai,* பெ. (n.) செய்யாறு வட்டத்தில் ஒரு ஊர்; name of the village in Seyyāru taluk.

[மட்டு–மட்டை]

மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டில் வரும் மட்டை செய்யாறிலிருந்து சேத்துப்பட்டு செல்லும் சாலையில் உள்ளது.

மட்டை[3] *maṭṭai,* பெ. (n.) இழவுச் சடங்கில் வாசிக்கப்பெறும் இசைக்கருவி; a funeral music instrument.

[மட்டு–மட்டை]

மடக்கு[1] *maḍakku,* பெ. (n.) அரைத்தட்டுப் போன்று இருக்கும் சட்டி; earthen flat pot.

[மட–மடக்கு]

மடக்கு[2] *maḍakku,* பெ. (n.) ஒயிலாட்டத்தில் வலக்காலால் மட்டும் செய்யப்படும் ஓர் உடல் இயக்கம்; right leg movement in folk dance 'oyilāṭṭam'.

[மட–மடக்கு]

மடக்கு[3] *maḍakku,* பெ. (n.) விளக்கெரிக்க உதவும் அகன்ற அகல்; earthen vessel used as lamp plate.

[மடு–மடக்கு (பள்ளமானது)]

மடக்குத் தட்டி *maḍakku-t-taṭṭi,* பெ. (n.) இரண்டாக மடக்கிய தட்டி; folded bamboo mat.

[மடக்கு+தட்டி]

மடக்குப்பாய் *maḍakku-p-pāy,* பெ. (n.) நெட்டுவாக்கில் மடக்கும் பாய்; mat to be folded length wise.

[மடக்கு+பாய்]

மடச்சாம்பிராணி *mada-c-cāmbirāṇi,* பெ. (n.) அடிமுட்டாள் (திட்டும் சொல்); fool. (கொ.வ.வ.சொ.119).

[மட்டம்–மட+சாம்பிராணி]

மடச்சீலி *mada-c-cīli,* பெ. (n.) கிச்சிலி மீன் வகை; squeaking perch.

[மட+சீலி]

மடப்புறம் *madappuṟam,* பெ. (n.) மடத்துக்கு விடப்பெற்ற இறையிலி நிலம்; free land donated for monastery. "நிலம் நாலுமாவும் இம்மடத்துக்கு மடப்புறமாக ஆயம் பாடி தூவல்...".

[மடம்+புறம்]

மடல் *madal,* பெ. (n.) சாயம் ஏற்றிய கோரை களை மடல் மடலாக எடுத்து வைத்த அடுக்கு; layers of coloured fiber.

[மடு–மடல்]

மடல்உளி *madāluḷi,* பெ. (n.) மரத்தில் பூ வேலைப்பாடு செய்வதற்குப் பயன்படுத்தப் படும் வளைந்த கூர்மையான நுனிப்பகுதி கொண்ட உளி வகை; a kind of chisel.

[மடல்+உளி]

மடாவிளக்கு *madāviḷakku,* பெ. (n.) கோயில் களில் பெரிய திரி போட்டு எரியும் விளக்கு; a large temple lamp.

[மருடா–மடா+விளக்கு]



மடி[1] *madi,* பெ. (n.) எட்டு முழ வேட்டிகள் இரண்டு கொண்டது; twin dhoties.

[மடு–மடி]

மடி[2] *madi,* பெ. (n.) மீன்பிடி வலை வகை; a kind of fishing net.

[மடு–மடி]

மடிக்கணினி *madi-k-kaṇiṇi,* பெ. (n.) மடியில் வைத்து இயக்கும் கணினி; lap top.

[மடி+கணினி]

மடிக்கெட்டி *madi-k-kētti,* பெ. (n.) முக்குவர் இனத்தில் மீன்பிடி வலையைச் செய்பவர்; net makers.

[மடி+கட்டி–மடிக்கட்டி–மடிக்கெட்டி (கொ.வ.)]

மடிக்கோல் சிம்பு *madi-k-kōl-simbu,* பெ. (n.) சற்று உருளை வடிவில் தட்டையாகவும் மெல்லிய தாகவும் உள்ள மூங்கில் பத்தை; bamboo pieces.

[மடி+கோல்+சிம்பு]

மடிகோல் *madikōl,* பெ. (n.) நெய்யப்பட்ட ஆடைகளை மடிப்பதற்குரிய கோல்; a kind of weavers implement.

[மடி+கோல்]

மடிச்சல் *madiccal,* பெ. (n.) விளவங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vilavancode Taluk.

[மடி–மடிச்சல். மடி – வயல்]

மடிசார் *madisār,* பெ. (n.) நடக்கும்போது கால் தடுக்காமலிருப்பதற்காக வேட்டி அல்லது புடவையைக் கால் சுற்றி மேல் வளைத்து உடுக்கும் முறை; way of tucking cloth or saree around the waist allowing legs for free movement of walking. மாமி மடிசார் உடுத்திருக்கிறாள் (இ.வ.).

[மடிதறு–மடிதற்று–மடிசற்று–மடிசார்]

மடித்துக்கட்டுதல் *madittukkattudal,* பெ. (n.) பாய் நெசவு செய்த பின்னர் அதன் ஓரங்களைச் சீவி மடித்துக் கட்டுவது; giving final finishing to mats.

[மடித்து+கட்டு]

மடிப்புசால் *madippušāl,* பெ. (n.) உழுத நிலத்தை மீண்டும் உழுதல்; ploughing a land already ploughed.

[மடி–மடிப்பு+சால்]

மடிமைகண்டிகை *madimai-kandigai,* பெ. (n.) பொன்னேரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ponneri Taluk.

[மடி–மடிமை+கண்டிகை]

மடிவாளம் *madivāļam,* பெ. (n.) ஒசூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Hosur Taluk.

[மடி(வயல்)+வாளம்]

மடு[1] *madu,* பெ. (n.) புலி வேடமிடுபவர் கையில் வைத்து இருக்கும் கருவி; a small weapon held by the tiger dancers.

[மடூ–மடு]

மடு[2] *madu,* பெ. (n.) தற்காப்புக் கலைகளில் ஒன்று; an art of self protection.

[மல்–மண்–மடு]

மடு சுற்றுதல் *madu-surrudal,* பெ. (n.) புலி யாட்டத்தின் ஒரு கூறு; an action in the play of tiger dance.

[மடு+சுற்றுதல்]

மடுப்பு *maduppu,* பெ. (n.) பாவை நெய்வதற்கு நீட்டி வைத்திருத்தல்; extending the weaving material.

[மடு–மடுப்பு]

மடைக்கருப்பு *madai-karuppu,* பெ. (n.) நாட் டுப்புறங்களில் நீர்நிலைகளைக் காக்கும் சிறு தெய்வம்; a village deity near water tanks.

மறுவ: மடையாண்டி

[மடை+கருப்பு]

மடைக்கலம் *madai-k-kalam,* பெ. (n.) கொங்கு திருமணத்தில் சமையலுக்குக் காணிக்கை அளித்தல்; amount given to the cooks in marriage. (கொ.வ.வ.சொ.120).

[மடை+கலம்]

மண்ணார்முழவு *mannār-mulavu,* பெ. (n.) முழவு வகையினுள் ஒன்று; a kind of musical instrument.

மறுவ: மண்முழவு

[மண்+ஆர்+முழவு]

மண்உளுவை *man-uluvai,* பெ. (n.) ஒரு வகை உளுவை மீன்; a kind of fish.

[மண்+உளுவை]



மண்குதிர் *man-kudir,* பெ. (n.) 1. நெல்லைச் சேர்த்துவைக்கும் மண்ணாலான குதிர்; grains storing pot. 2. தவசங்களைச் சேமித்து வைக்க வைக்கோல் கொண்டு செய்யப்பட்ட குதிர்; storage device made of paddy stalk -rope. (வ.வ.வே.க.36).

[மண்+குதிர்]

மண்கூடை *man-kūdai,* பெ. (n.) வெட்டிய மண்ணை எடுக்கும் கூடை; basket used for carrying earth.

[மண்+கூடை]

மண்டலிப்பு *mandalippu,* பெ. (n.) ஓர் இசைக் கலைச்சொல்; a musical term.

[மண்டலம் – மண்டலிப்பு]

மண்டி சறுக்கலடைவு *mandi-šarukkal-adaivu*, பெ. (n.) நடனத்தில் இடம் பெறும் ஓர் அடைவு வகை; a step variety in dance.

[மண்டி+சறுக்கல்+அடைவு]

மண்டி சுற்றலடைவு *mandicurraladaivu*, பெ. (n.) முழு மண்டியில் சுழன்று ஆடுவது; a surrounding movement in dance.

[மண்டி+சுற்றல்+அடைவு]

மண்டியடைவு *mandiyadaivu*, பெ. (n.) நடன (பரத)த்தில், பொதுவாக முழு மண்டியில் அமர்ந்து முழங்கால்கள் தரையில் படும்படி மாற்றி மாற்றியாடுதல், எழுந்து நின்றாடுதல்; a dance movement.

[மண்டி+அடைவு]

மண்டீகர் *mandigar*, பெ. (n.) தமிழகத்தில், பாவைக்கூத்துக் கலைக்கு உரியவராகச் சொல்லப்படுகின்ற ஒரு பிரிவினர்; experts of puppet show.

[மண்டு+ஈகர்]

மண்டைக்காடு *mandaikkādu*, பெ. (n.) கல்குளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kalkulam Taluk.

[மண்டு–மண்டை+காடு. அடர்ந்த காடு]

மண்டைப்பாணன் *mandai-p-pāṇan*, பெ. (n.) பாணர் பிரிவினரில் ஒரு வகை; a class of Pāṇar community.

[மண்டை+பாணர்]

மண்ணரை *maṇṇarai*, பெ. (n.) பல்லடம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Palladam Taluk.

[மண்+அடை–மண்ணடை – மண்ணரை]

மண்வீடு *maṇvīdu*, பெ. (n.) மண்ணால் அமைக்கப்பட்ட வீடு; a mud walled house. (கொ.வ.வ.சொ.120).

[மண்+வீடு]

மண்ணின் மைந்தர் *maṇṇin-maindar*, பெ. (n.) ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு உரியவர்களாகக் கருதப்படுபவர்கள்; sons of the soil.

[மண்+இன்+மைந்தர்]

மண்திருவை *maṇtiruvai*, பெ. (n.) பானை செய்யப் பயன்படும் கருவி; an implement used in pottery.

[மண்+திருவை]

மண்தூங்கி *maṇtūngi*, பெ. (n.) தவளை; frog.

[மண்+தூங்கி–மண்ணுக்குள் தூங்குவது (தவளை)] மண்தூங்கி எனும் சொல் வடமொழியில் மண்டூகம் எனத்திரிந்தது.



மண்மேளம் *maṇmēḷam*, பெ. (n.) அண்ணன் மார்சுவாமி திருவிழாவில் இசைக்கப்பெறும் ஓர் இசைக்கருவி; a musical instrument.

[மண்+மேளம்]

மணக்கடவு *manakkaḍavu,* பெ. (n.) பொள்ளாச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Pollachi Taluk.

[மண்+கடவு]

மணச்சாரி பங்கு *mana-c-cāri-pangu,* பெ. (n.) மணற்பாங்கான வயல்; a sandy field. (வ.வ.வே.க.36).

[மணல்+சாரி+பங்கு]

மணச்சை *manaccai,* பெ. (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[மணத்தி–மணச்சை]

மணப்பாக்கம் *mana-p-pākkam,* பெ. (n.) வேலூர் மாவட்டத்தில் செய்யார் ஆரணி வழித்தடத்தில் உள்ள ஒரு ஊர்; a village in Vellore district.

[மணம்+பாக்கம்]

மணலூர்பேட்டை *manalūr-pēttai,* பெ. (n.) விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர்; a village in Vilupuram district.

[மணல்+ஊர்+பேட்டை]

திருவண்ணாமலையிலிருந்து செஞ்சி செல்லும் வழித்தடத்தில் உள்ளது.

மணவாளக்கோன் *manavāla-k-kōn,* பெ. (n.) மூன்றாம் இராசராசன் 15ஆம் ஆட்சியாண்டில் வம்புபழுத்தாள் மகள் நாச்சி வைத்த விளக்கிற்காக ஆ(பசு)க்களைப் பெற்றுக் கொண்டு நெய் வழங்கிய இடையன் கீரந்தை திருவாய் குலம் மணவாளன்; an herdsman who got cows and offered ghee to a particular lamp for its glow.

மணவூர் *manavūr,* பெ. (n.) திருத்தணி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruttani Taluk.

[மணவை+ஊர்]

மணற்கிளரி *manarkiḷari,* பெ. (n.) ஒரு வகைப் பறவை; a kind of bird.

[மணல்+கிளறி]

மணற்குடி *manarkudi,* பெ. (n.) நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர்; a village in Nagappattinam District.

[மணல்+குடி]

மணிக்கொல்லை *mani-k-kollai,* பெ. (n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[மணி+கொல்லை]

மணிக்கோடு *mani-k-kōḍu,* பெ. (n.) கடலில் மூழ்கிய குமரிக்கோட்டு மணிமேலை; a peak of the mountain 'Mani' in submerged land of the Tamils. (செங்கோன் தரைச்செலவு).

[மணி+கோடு]

மணித்தாளம் *mani-t-tāḷam,* பெ. (n.) ஒரு தாள விசைக் கருவி; a musical instrument.

[மணி+தாளம்]

மணியங்கயிறு *maniyaṅkayiru,* பெ. (n.) பாய் ஓரம் கட்டப் பயன்படும் நார்; fibre tied at the end of the mat.

[மணி+அம்+கயிறு]

மணியஞ்சி *maniañji,* பெ. (n.) நிலக்கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Nilakottai Taluk.

[ஒருகா. மணி+இலஞ்சி–மணியிலஞ்சி–மணியஞ்சி]

மணியன் கூட்டம் *manyan-kūttam,* பெ. (n.) கொங்கு வேளாளரின் குடிப் பெயர்; a clan name among Kongu Vellalar.

[மணியன் + கூட்டம்]

மணியாரச் சிலை *manyāra-c-cilai,* பெ. (n.) பானைகளில் வடிவம் பொறிக்கும் கலை; art of making decorative designs on the pottery.

[மணி+ஆரம்+சிலை]

மணிவிளக்கு *mani-viḷakku,* பெ. (n.) சிறிய விளக்கு வகை; a small lamp.

[மணி+விளக்கு]

மணிவிளான் *maṇiviḷāṉ,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[மணி+(விளை)விளான்]

மணைவாள் *maṉaivāḷ,* பெ. (n.) அரிவாள் மணை; knife or blade fixed wooden plank used to slice vegetables.

[மணை+வாள்]

மத்தகோகிலம் *mattakōkilam,* பெ. (n.) போற்றிப் பாடலில் பாடப்படுகின்ற ஓர் இசைப்பாட்டு; a song of chorus in religious prayer.

[மத்தம்+கோகிலம்]

மத்தரி *mattari,* பெ. (n.) மத்தளம்; percussion instrument.

[மத்தளம்-மத்திரி(கொ.வ.)]

மத்தாளிக்கொக்கு *mattāḷi-k-kokku,* பெ. (n.) கொக்கு வகையுள் ஒன்று; grey pelicon.

[மத்தாளி+கொக்கு]

மத்திம அடைவு *mattima-aḍaivu,* பெ. (n.) அடைவு வகைகளில் ஒன்று; a kind of stepping in dance.

[மத்திம+அடைவு]

மத்துக்கயிறு *mattu-k-kayiṟu,* பெ. (n.) தயிர் கடையும் மத்தில் இருக்கும் கயிறு; churning rope. (கொ.வ.வ.சொ.120).

[மத்து+கயிறு]

மதங்க சூளாமணி[1] *madaṅga-sūḷāmaṇi,* பெ. (n.) ஒரு தமிழ் நூல்; a treatise in Tamil.

[மதங்கம்+சூளாமணி]

மதங்க சூளாமணி[2] *madaṅga-sūḷāmaṇi,* பெ. (n.) நடிப்புக் கலையில் சிறந்தோரைச் சுட்டுஞ்சொல்; a term denoting talented actor.

[மதங்க+சூளாமணி]

மதர்வாடி *madarvāḍi* பெ. (n.) பொன்னேரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ponneri Taluk.

[மதில்-மதர்+வாடி]

மதவலி *madavali* பெ. (n.) வளமான உடல் வலிமை கொண்ட மல்லன், மற்போர் மறவன் (சான்றோர்); a fully trained wrestler.

மதிப்பெண் *madippeṇ* பெ. (n.) எழுத்துத் தேர்வு, போட்டி போன்றவற்றில் திறமை செயற்பாடு போன்றவற்றை மதிப்பீடு செய்து அளிக்கப்படும், தர அளவுக்கான குறியீடு; mark in an examination.

[மதிப்பு+எண்]

மதிப்பெண் சான்றிதழ் *madippeṇ-cāṉṟidaḻ* பெ. (n.) தேர்வில் பெற்ற மதிப்பெண் குறிக்கப்பட்ட சான்றுத்தாள்; mark certificate.

[மதிப்பு+எண்+சான்றிதழ்]

மதிப்பெண் பட்டியல் *madippeṇ-paṭṭiyal* பெ. (n.) மதிப்பெண்ணைக் குறிப்பிடும் பட்டியல்; mark list.

[மதிப்பு+எண்+பட்டியல்]

மதிலொட்டி *madiloṭṭi* பெ. (n.) மதிலோரம் ஒருவர் மற்றொருவர் மேலேறிப் உட்கார்ந்தும் விளையாடும் ஆட்டம்; a pyramic play.

[மதில்+ஒட்டி]

மதுராந்தகம் *madurāndagam.* பெ. (n.) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Chengalpattu.

[மதுராந்தகன்-மதுராந்தகம்]

மதுரையைக் கைப்பற்றிய பராந்தகனுக்கு மதுராந்தகன் என்ற பட்டப் பெயர் உண்டு. இவனுடைய பெயரால் இவ்வூர் அமைக்கப்பட்டது.

மதூர் *madūr.* பெ. (n.) காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[ஒருகா. மதூர்-மேதூர்-மதூர்]

மந்த முழவு *manda-mulavu,* பெ. (n.) முழவு வகையினுள் ஒன்று; a musical instrument.

[மந்தம்+முழவு]

மந்தாங்கிப் பலகை *mandāngi-p-palagai,* பெ. (n.) நிலைகளின் மேல் வைக்கும் பலகை; upper door frame.

[மனை+தாங்கி+பலகை]



மந்திக்குஞ்சு *mandi-k-kuñju,* பெ. (n.) மந்தி உட்காரும் நிலையில் கால்களுக்கிடையே தலையைத் தாழ்த்திய நிலையில் உட்கார்ந்து ஆடும் விளையாட்டு; a monkeys play.

[மந்தி+குந்து]

மந்திரக்கட்டு *mandira-k-kattu,* பெ. (n.) மந்திரத்தால் உறுப்புகள் செயலாற்றாமல் செய்தல்; making one disabled by black magic.

[மந்திரம்+கட்டு]

மந்திரக்கன்னிமார் *mandira-k-kannimār,* பெ. (n.) மந்திரம் செய்யும் கன்னிமார்கள்; virgins capable of doing black magic.

[மந்திரம்+கன்னிமார்]

மந்திரப்பாட்டு *mandira-p-pāttu,* பெ. (n.) இருவேறு வில்லுப் பாட்டுக் குழுவினரை ஒரே நேரத்தில் பாடச் செய்யும் போட்டிப் பாட்டு; retarting competetive folk song.

[மந்திரம்+பாட்டு]

மந்திர விளையாட்டு *mandira-vilaiyāttu,* பெ. (n.) மோடி விளையாட்டு; a play of magic.

[மந்திரம்+விளையாட்டு]

மந்தைப்பணம் *mandai-p-panam,* பெ. (n.) கால்நடை மேய்ச்சலுக்குக் கொடுக்கும் வரி; tax collected for cattle grazing. "அதிகாரிக்கு குடுக்கும் முதல் மந்தைப்பணம் வாசற்பணம்"....

[மந்தை+பணம்]

மப்பூட்டாந்தழை *mappūttān-talai,* பெ. (n.) உடம்பில் பட்டால் அரிப்பு ஏற்படுத்தும் பூடு; a plant that makes irritation. (கொ.வ.வ. சொ.120).

[மப்பு+ஊட்டாம்+தழை]

மப்பேடு *mappēdu,* பெ. (n.) திருவள்ளூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in *Tiruvallūr* Taluk.

[மா+பேடு]

மம்மட்டி வெட்டு நையாண்டி *mammatti-vettu naiyāndi,* பெ. (n.) கரகாட்ட நாதசுரக் கலைஞர், நாதசுரத்தை விண்ணை மண்ணை நோக்கியவாறு மேலும் கீழுமாகத் தூக்கி வாசிக்கும் நையாண்டி மேளம்; folk music naiyāndi.

[மண்வெட்டி–மம்மட்டி (கொ.வ.) + வெட்டு+ நையாண்டி]

மண்வெட்டிக் கொண்டு ஓங்கியோங்கி வெட்டு வதையும், தூக்குவதையும் ஒத்து இருக்கும் காரணத்தால் பெற்ற பெயர்.

மம்மானி *mammāni,* பெ. (n.) அளவுக்கு அதிகம்; excessively (கொ.வ.வ.சொ.121).

[மா+மானம்– மம்மானம் – மம்மானி]

மயமதம் *mayamadam,* பெ. (n.) சிற்பக் கலையில் கையாளப்படும் ஓர் ஒழுங்கு முறை; a method followed in sculpture.

[மயன்+மதம்]

மயானக் கொள்ளை *mayāna-k-koḷḷai* பெ. (n.) நாட்டுப்புறத் திருவிழாக்களில் ஒன்று; a festival of village deity.

[மயானம்+கொள்ளை]

மயிந்தரபாடி *mayindarapāḍi* பெ. (n.) அரக் கோணம் வட்டத்தில் உள்ள ஒரு ஊர்; a village in Arakkonam taluk.

[மயேந்திரன்(மகேந்திரன்)+பாடி]

மயிர்க்கயிறு *mayir-k-kayiṟu,* பெ. (n.) முடியால் செய்யப்படும் கயிறு; a rope made of hair. (கொ.வ.வ.சொ.121).

[மயிர்+கயிறு]

மயிர்க்குஞ்சிப்பு *mayir-k-kuñjippu,* பெ. (n.) தூரிகைக்குரிய ஓர் உறுப்பு; a part of brush.

[மயிர்+குஞ்சிப்பு]

மயிர்க்கோதி *mayirkkōdi,* பெ. (n.) கூந்தலில் விழும் முடிச்சுகளைக் கோதி எடுக்கப் பெண்கள் பயன்படுத்தும் சிறிய கம்பி; knot removing pin. (கொ.வ.வ.சொ.121).



மறுவ. சிணுக்கு வாங்கி

[மயிர்+கோதி]

மயிர்வாங்கு-தல் *mayirvāṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தலைமுடி மழித்தல்; to shave the head.

மறுவ. முடி எடுத்தல்

[மயிர்+வாங்கு]

மயில்புட்டி *mayil-puṭṭi* பெ. (n.) குறவர் பின்னும் கூடை வகைகளுள் ஒன்று; a type of basket plaited by the Kuravas.

[மயில்+புட்டி]

மயில்மீன் *mayil-mīṉ* பெ. (n.) இந்தியக் கடலோரத்தில் இருக்கும் மீன் வகை; Indian sail fish.

[மயில்+மீன்]

மர அகல் *mara-agal* பெ. (n.) கோயில்களில் பெரிய திரிகொண்டு எரிய வைக்க உதவும் மரத்தாலான விளக்கு; a temple lamp made of wood.

[மரம்+அகல்]

மர ஆணி *mara-āṇi,* பெ. (n.) கதவு, சட்டம் போன்றவை கோர்வையுடன் கழன்று வராமலிருக்க இரும்பு ஆணிக்குப் மாற்றாகப் பயன் படுத்தப்படும் மூங்கில், தேக்கு மரங்களாலான ஆணி போன்ற மரத்துண்டு; wooden nail.

[மரம்+ஆணி]

மர உருளை *mara-uruḷai* பெ. (n.) நெல் குத்த உதவும் மரத்தால் ஆன உருளை; a morter made of wood.



மறுவ. மரவுரல்

[மர+உருளை]

மரக்கடையாணி *mara-k-kaḍaiyāṇi,* பெ. (n.) தேரின் அச்சில் போடும் கடையாணி; temple car axle pin.

[மரம்+கடை+ஆணி]

மரக்கரண்டி *mara-k-karandi,* பெ. (n.) கோயில் திருவிழாக்களில் எண்ணெய் ஊற்றப் பயன்படும் கரண்டி; wooden laddle.

[மரம்+கரண்டி]

மரக்கால் *mara-k-kāl,* பெ. (n.) கைத்தறி நெசவில் நூலைச் சுற்ற உதவும் கருவி; an implement in handloom weaving.

மறுவ. புட்டி, பெருட்டம்

[மரம்+கால்]



மரக்குதிர் *mara-k-kudir,* பெ. (n.) மரத்தால் செய்யப்பட்ட குதிர்; a wooden granary.

[மரம்+குதிர்]

மரக்குரங்கு[1] *mara-k-kurangu,* பெ. (n.) காக்காக் குஞ்சு விளையாட்டு; name of a play.

[மரம்+குரங்கு]

மரக்குரங்கு[2] *mara-k-kurangu,* பெ. (n.) சிறுவர்கள் மரத்தின் மீது ஏறித் தொட்டு விளையாடும் விளையாட்டு; a children's play. (கொ.வ.வ.சொ.121).

[மரம்+குரங்கு]

மரக்கொண்டி *mara-k-kondi,* பெ. (n.) கதவுகளின் உட்புறம் சுவரின் ஒட்டையில் சொருகும் குச்சி; a wooden piece.

[மரம்+கொண்டி]

மரங்கொத்தி *marankotti,* பெ. (n.) தொட வருபவர் தொடாமல் தப்பிக்கப் பிறிதொரு பொருளினைத் தொடும் விளையாட்டுக்கூறு; a trick in children's play marankotti.

[மரம்+கொத்தி]

மரச்சல்லடை *mara-c-calladai,* பெ. (n.) நெல் போன்ற தவச வகைகளில் மண், கல் பிரித் தெடுக்கப் பயன்படும் சல்லடை; a winnow made of wood.

[மரம்+சல்லடை]



மரத்தட்டு *mara-t-tattu,* பெ. (n.) பயறு வகைகளை வேக வைத்தவுடன் கொட்டி ஆற வைப்ப தற்கு உதவும் தட்டு; a plate made of wood.

[மரம்+தட்டு]

மரத்தலையன் *mara-t-talaiyan,* பெ. (n.) காடை வகையுள் ஒன்று; a kind of bird.

மரத்தாரா *mara-t-tārā,* பெ. (n.) பறவை வகையுள் ஒன்று; whistling leal.

[மரம்+தாரா]

மரப்பண்ணை *mara-p-pannai,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[மரம்+பண்ணை]

மரப்பாசிசீப்பு *marappāši-sippu,* பெ. (n.) ஒரு வகை மீன்; a kind of fish.

[மரம்+பாசி+சீப்பு]

மரப்பாரை *marappārai,* பெ. (n.) திருச்செங் கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruchengodu Taluk.

[மரல்+பாறை(பாரை)]

மரப்பூட்டு *mara-p-pūṭṭu,* பெ. (n.) கதவுகளில் உள்புறம் உள்ள பூட்டு; inner lock.

[மரம்+பூட்டு]

மரபுரிமையர் *maraburimaiyar,* பெ. (n.) கால் வழியினர், கொடிவழியினர்; heir, lineage.

[மரபு+உரிமையர்]

மரமடக்கி *maramaḍakki,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[ஒருகா. மரை+மடக்கி]

மரமேறி *maramēṟi,* பெ. (n.) தென்னை, பனை மரங்களில் ஏறி கள் இறக்கும் தொழிலாளர்; toddy tappers. (கொ.வ.வ.சொ.121).

[மரம்+ஏறி]

மரவனேரி *maravaṉēri,* பெ. (n.) சேலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk.

[மறவன்+ஏரி]

மரிக்கை *marikkai,* பெ. (n.) குட்டி போடாத வெள்ளாடு; a young goat.

[மறி–மறிக்கை–மரிக்கை. மோத்தை = கடா]

மரிச்சிலம்பு *mariccilambu,* பெ. (n.) பழனி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Palani Taluk.

[ஒருகா. மாரி+சிலம்பு]

மருகல் *marukal,* பெ. (n.) திருநள்ளாற்றுக்குத் தென்மேற்கே 35 கல் தொலைவில் உள்ள ஒரு ஊர்; a village from 35 k.m. in Thirunallar.

மருகோவில் *marukōvil,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[மருது+கோவில்>மருகோவில்]

மருத்துவமனை *marruttuvamaṉai,* பெ. (n.) மருத்துவம் செய்யும் இடம்; hospital.

மறுவ. மருத்துவச் சாலை

[மருத்துவம்+மனை]

மருதாடு *marudāḍu,* பெ. (n.) கடலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Cuddalore Taluk.

[மருதம்+நாடு]

மருதாந்தை *marudāndai,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[மருதன்+அந்தை]

மருதூர் *marudūr,* பெ. (n.) திருநள்ளாற்றுக்கு வடக்கே 24 கல் தொலைவில் உள்ள ஒரு ஊர்; a village in 24 k.m. from north Tirunallar.

[மருது(மரம்)+ஊர்]

இக்காலத்தில் இவ்வூர் மருத்தூர் என்னும் பெயருடன் அழைக்கப்படுகிறது.

மருதேரி *marudēri,* பெ. (n.) செங்கற்பட்டு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chenglepet Taluk.

[மருது+ஏரி]

மருவபூமி *maruvabūmi,* பெ. (n.) இராசத் தானத்தின் பழைய பெயர்; old name of Rajastan. (lit. arid land)

[மரு(மணல்)–மருவம்+பூமி]

குவலயமாலா நூலாசிரியர் (கி.பி.778) உத்தியோதனசூரி மருவநாட்டார் அப்பா துப்பா எனுஞ் சொற்களைப் பேசுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

மருள் *maruḷ,* பெ. (n.) ஒரு வகையான திறப்பண்; a secondery note.

[மரு–மருள்]

மல்லங்குளி *mallaṅkuḷi,* பெ. (n.) கோபிச் செட்டிப்பாளையம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Gopichettipalayam Taluk.

[மல்லன்+குழி]

மல்லஞ்சி *mallañji,* பெ. (n.) கம்பளத்தார் சேவை யாட்டத்தில் துணை ஆட்டக்காரர்கள் பாவாடை மேல் அணியும் ஆடை வகை; a dress worn by folk dancers.

[ஒருகா. மெல்+அஞ்சி – மெல்லஞ்சி – மல்லஞ்சி]

மல்லன் *mallan*, பெ. (n.) தெய்வங்களில் ஒன்று; a village deity.

[மல்-மல்லன்]

மல்லாண்டை *mallāṇḍai*, பெ. (n.) கரூர் மாவட்ட மக்களின் வழிபாட்டு முறை; a ceremony of in Karur district.

[மல்+ஆண்டை]

மல்லாரி *mallāri*, பெ. (n.) "காளி புறப்பாடு" நேரத்தில் இசைக்கப்படும் இசைக்கருவி; a musical instrument.

[மல்+ஆரி]

மல்லிகுந்தம் *mallikundam*, பெ. (n.) ஓமலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Omalur Taluk.

[மல்லி+குன்றம்–மல்லிகுன்றம்–மல்லி–குந்தம்]

மல்லியகரை *malliyagarai*, பெ. (n.) ஆத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Attur Taluk.

[மல்லிகை+கரை]

மல்லியம் *malliyam*, பெ. (n.) மயிலாடுதுறை யிலிருந்து 12 கல் தொலைவில் உள்ள ஒரு ஊர்; a village in 12 k.m. from Mayiladuturai.

[மல்லி–மல்லியம்]

மல்லு *mallu*, பெ. (n.) சிறுநீர்; urine. (கொ.வ.வ.சொ.122).

[மோள்–மொள்ளு–மல்லு]

மலகண்டை[1] *malakaṇḍai*, பெ. (n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurantakam Taluk.

[மலை+(கண்டி) கண்டை–மலைகண்டை–மலகண்டை]

மலகண்டை[2] *malakaṇḍai*, பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர்; a village in Thanjavur District.

[மலை+(கண்டி)கண்டை]

மலகரி *malagari*, பெ. (n.) குறிஞ்சியின் பண் வகையினுள் ஒன்று; a musical note.

[மலை–மலகரி]

மலங்கம்பு *malaṅkambu*, பெ. (n.) மலையில் விளையும் கம்பு; a millet. (கொ.வ.வ.சொ.122).

[மலை+கம்பு]

மலடாக்கம் *malaḍākkam*, பெ. (n.) குழந்தைப் பேற்றைத் தவிர்க்கச் செய்யும் வழிமுறை; sterilization.

[மலடு+ஆக்கம்]

மலயன்விளை *malayanviḷai*, பெ. (n.) அகத்தீசுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[மலையன்+விளை]

மலரி *malari*, பெ. (n.) திருவாடானை வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[மல்லாளி– மல்லாரி – மலரி]

மலரிடுகை *malariḍugai*, பெ. (n.) ஒரு வகை யான ஆடலியக்கம்; a dance posture.

[மலர்+இடுகை]

மலை *malai*, பெ. (n.) தாய விளையாட்டில் வெட்டுதல் நிகழாதவாறு பாதுகாப்புத் தருவது குறித்த சொல்; a term in *tāya viḷaiyāṭṭu* to mean 'check'.

[மல்–மலை]

மலைதாங்கி *malaitāṅgi*, பெ. (n.) சேலம் மாவட் டத்தில் உள்ள ஒரு ஊர்; a village in Salem.

[மலை+தாங்கல்(ஏரி)–தாங்கி]

மலையரையன் *malai-y-araiyan*, பெ. (n.) காணிக்காரன் எனும் பழங்குடிகளின் பெயர்; a name of *kani-k-kāran*, sub-group.

[மலை+அரையன்]

மலையன் சடையன் *malayansaḍayan*, பெ. (n.) கல்வெட்டில் இடம் பெற்றவன் பெயர்; a name mentioned in inscription.

[மலையன்+சடையன்]

செய்யாற்றில் வாழ்ந்தவன். 'அனுக்காவூர் கிழவன் மலையன் சடையன்' என்று அழைக்கப் பட்டவன்.

மழகொங்கு *malakongu*, பெ. (n.) கொங்கு நாட்டின் ஒரு பிரிவு; a division of Kongu country.

[மழவர்+கொங்கு]

மழலைச்சொல் *malalai-c-col*, பெ. (n.) குழந்தைகளின் திருத்தமுறாத இனிய பேச்சு; prattle, baby's, babbles.

[மழலை+சொல்]

[முள் > மள் > மள்ளன்= இளைஞன், வீரன், மள்> மழ= இளமை, குழவி. மழ > மழலை (மு.தா.48)]

மழலையர் பள்ளி *malalaiyar-palli*, பெ. (n.) இளஞ்சிறார் பயிலும் பள்ளி; nursery school.

[மழலையர்+பள்ளி]

மழலையாடு *malalai-y-ādu*, பெ. (n.) கொஞ்சு; lisp, prattle. 'வாய் குவிந்து மழலையாடு' (சு.வி.பக்.73).

[மழலை+ஆடு]

மழவராயனேந்தல் *malavarāyanendal*, பெ. (n.) சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர்; a village in Sivagangai district.

[மழவன்+அரையன்+ஏந்தல்]

இவ்வூர் மழவராயன் என்னும் சிற்றரசன் பெயரால் ஏற்பட்டது.

மழைக்கடவுள் *malai-k-kadavul*, பெ. (n.) திருமால்; Tirumāl.

[மழை+கடவுள்]

மழுங்கனுகர் *malunganugar*, பெ. (n.) மானமில்லாத வர்கள்; people who have no self respect. (கொ.வ.வ.சொ.122).

[மழுங்கல்+அனுகர்]

மழவங்கரணை *malavankaranai*, பெ. (n.) வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wandiwash Taluk.

[மழவன்+காரணை]

மழைக்கஞ்சி *malaikañji*, பெ. (n.) மழை வேண்டிப் பெண்கள் கூடி வைக்கும் கஞ்சிப் படையல்; a women's ceremony for rain by offering gruel. (கொ.வ.வ.சொ.122).

[மழை+கஞ்சி]

மழைக்காவியம் *malai-k-kāviyam*, பெ. (n.) பழம்பெரும் நாட்டுப்புறக் கலை; a folklore.

[மழை+காவியம்]

மழைக்கோடன் பாடல் *malai-k-kōdan-pādal*, பெ. (n.) காணிப் பழங்குடியினரின் பாடல் வகை; a song of the Kāni tribes.

[மழை+கோடல்+பாடல்]

மழைநெல் *malai-nel*, பெ. (n.) குன்றும் மலையும் சார்ந்த பகுதிகளில் மழையை மட்டும் நம்பி விளைவிக்கப்படும் மூன்று மாத புன்செய் நெல் வகை; dry land paddy.

க. மழநெல்லு

[மழை+நெல்]

மழையின் மக்கள் *malaiyin-makkal*, பெ. (n.) மள்ளரின மக்கள்; a name of Mallars.

[மழை+இன்+மக்கள்]

மவிலகம் *mavilagam*, பெ. (n.) கல்குளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kalkulam Taluk.

[மயில் (மவில்)+அகம்]

மவுத்தாங்கரை *mauvttānkarai*, பெ. (n.) இசுலாம் மதத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்யும் இடம்; a burial ground of Mohammadan people. (கொ.வ.வ.சொ.122).

[மாவுத்தன்+கரை–மாவுத்தன்கரை–மவுத்தங் கரை]

மற்போர் *mar-pōr*, பெ. (n.) மல்லாடல் வகை களுளொன்று; a type of wrestling.

[மல்+போர்]

மற்போர்க்கை *mar-pōr-k-kai*, பெ. (n.) ஒரு வகையான இரட்டைக்கை; a dance pose. (35:201).

[மல்+போர்+கை]

மறம் அடக்கி *maram-adakki,* பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர்; a village in Tanjavur District.

[மறம்+அடக்கி]

கொடுமை விளைவித்த ஒரு கூட்டத்தாரின் கொட்டத்தை ஒடுக்கிய மற்றொரு வீரனை 'மறம் அடக்கி' என்று பாராட்டியிருக்கலாம்.

மறிஞ்சிப்பாரை *mariñji-p-pārai,* பெ. (n.) குதிரை போன்ற ஒரு வகை மீன்; horse mackesal.

மறியல் *mariyal,* பெ. (n.) சிறைச்சாலை; jail; prison. (யாழ்ப்.).

[மறி-மறியல்]

மறுப்பின்மைச் சான்றிதழ் *maruppinmai-c-cānridāl,* பெ. (n.) தடையில்லாச் சான்றிதழ்; no objection certificate.

[மறுப்பு+இன்மை+சான்றிதழ்]

மறுவாழ்வு *maruvālvu,* பெ. (n.) இயல்பான வாழ்க்கையை இழந்தோர்க்குத் திரும்ப அமைத்துத்தரப்படும் வாழ்க்கை; rehabilit ation; resettlement. வெள்ளப்பெருக்கால் வீடிழந்தவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க அரசு நடவடிக்கை எடுத்தது. (உ.வ.).

[மறு+வாழ்வு]

மறைப்பு *maraippu,* பெ. (n.) மாடுகள் பிறர் கண்ணில் படாமல் இருக்க கட்டும் தடுப்பு; a temporary fence. (கொ.வ.வ.சொ.122).

[மறை-மறைப்பு]

மறைவலை *marai-valai,* பெ. (n.) மீன்களை மறைத்துப் பிடிக்கின்ற வலை; a net used to catch fish stealthily.

மறுவ. மறுவலை

[மறை+வலை]

மறைமதி *marai-madi,* பெ. (n.) காருவா (அமாவாசை); new moon.

[மறை+மதி]

மறுசரடு *maru-šāradu,* பெ. (n.) தாலி கட்டிய மறு நாள் பிள்ளையார் கோயிலில் பெண்களுக்கு இரண்டாவது சரடாகத் தாலி கட்டுதல்; a re-knot of *tali* on the second day of marriage. (கொ.வ.வ.சொ.122).

[மறு+சரடு]

மறுமுழுச்சி *marumulucci,* பெ. (n.) மணமக்களுக்கு, மாப்பிள்ளை வீட்டில் தரும் விருந்து; feast given to the couple at bridegroom's house.

[மறு+முழுத்தம்-மறுமுழுத்தம்-மறுமுழுத்தி-மறுமுழுச்சி (கொ.வ.]

மன்[1] *man,* பெ. (n.) 1. தலைவன்; chief. மன்னுயிர் நீத்த வேலின் (பு.வெ.4.23). 2. கணவன்; husband. "மன்னொடுங் கூடி..... வானகம் பெற்றனள்" (சிலப். 25:50).

[முல்-முன்-மன்]

மன்[2] *man,* இடை (int). உறுதிப் பொருள் தரும் இடைச்சொல்; an expletive.

[முன் > மன் (வே.க.4:34)]

மன்பதையாட்சி *manbadai-y-ātci,* பெ. (n.) கும்பலாட்சி, கும்பலாதிக்கம்; melocracy ochlocracy.

[மன்பதை+ஆட்சி]

மன்றாட்டுப்பட்டி *manrattu-p-patti,* பெ. (n.) ஆடு, மாடு கூட்டம்; herd of cattles. (தெ.சா.8:6:எ:74). "இவ்வெரிக்கு எரிப்பட்டி மன்றாட்டுப்பட்டியுமாக ஐந்நூறு குழி...".

[மன்றாடு+பட்டி]

மன்னன் சோழன் *manan cōlan,* பெ. (n.) புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஒரு ஊர்; a village in Pudukottai (dist.).

[மன்னன்+சோழன்]

மன்னணை *mannanai,* பெ. (n.) பாதுகாத்தல், ஆதரவு; support.

க. மன்னனெ; தெ. மன்னிஞ்கட

[மன்+அணை-மன்னணை (மன்னுதல்-நிலைபெறுத்தல்]

மன்னியர் *mannıyar*, பெ. (n.) மதிக்கத்தக்க பெரியோர்; honourable persons. "பல மன்னியர் மண்டலிகர்" (உத்தரரா. திருவோலக். 11).

க. மானியர்

[மன்-மன்னியர்]

மன்னைக்கிளவி *mannai-k-kiļavi*, பெ. (n.) சினச்சொல்; angry words.

[மன்னை+கிளவி]

மனகதி *manakadi*, பெ. (n.) திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vriddhachalam Taluk.

[ஒருகா. மணம்+கதிர்]

மனத்தறிவு *manattarivu*, பெ. (n.) அன்பு; love, affection. "மயிர்முனையிற் பாதி மனத்தறிவுண்டேல் அயிர்ப்புண்டங் காதி நிலை" (ஔவைக்குறள். 158).

[மனம்+அத்து+அறிவு]

மனத்தாள் *manattāļ*, பெ. (n.) ஓமலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Omalur Taluk.

[மனவு(உடும்பு)+தாள்]

மனத்திருக்கை *mana-t-tirukkai*, பெ. (n.) கூரிய பற்களைக் கொண்ட திருக்கை மீன் வகை; pale edged sting ray.

[மனவு+திருக்கை]

மனநலக் காப்பகம் *mananala-k-kāppagam*, பெ. (n.) மனநோய் மருத்துவமனை; mental health hospital

[மனம்+நலம்+காப்பகம்]

மனநலம் *mana-nalam*, பெ. (n.) மனநன்மை; goodness of mind. "மனநலம் மன்னுயிர்க் காக்கம்". (குறள்:457).

[மனம்+நலம்]

மனநிறைவு *mananiraivu*, பெ. (n.) மனத்தளவில் கொள்ளும் பொந்திகை; mental satisfaction.

[மனம்+நிறைவு]

மனநிறைவளி-த்தல் *mananiraiv-aļi-*, 4 செ.கு. வி. (v.t.) மனத்திற்குப் பொந்திகை அளித்தல்; to get mental satisfaction.

[மனநிறைவு+அளி-]

மனநோயாளி *mana-nōyāļi*, பெ. (n.) மனநலங் குன்றியவன், உணர்வு, எண்ணம் ஆகியவற்றின் சமநிலை குன்றியவன்; insane man.

[மனம்+நோயாளி]

மனப்பக்குவம் *mana-p-pakkuvam*, பெ. (n.) மனத்தளவில் பெறும் முதிர்நிலை; mental advancement.

[மனம்+பக்குவம்]

மனமருட்சி *mana-maruţci*, பெ. (n.) மனத்தில் கற்பனை செய்து மருளும் நிலை; hallucination.

[மனம்+மருட்சி]

மனமை *manamai*, பெ. (n.) செங்கற்பட்டு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chenglepet Taluk.

[மனவு-மனமை]

மனவழுத்தம் *mana-v-aļuttam*, பெ. (n.) மிகைப்படியான வேலைச்சுமை, நெருக்குதல் போன்றவற்றால் மனத்தில் ஏற்படும் சோர்வு; mental stress. "மக்களிடையே மனவழுத்தங் களும் அச்சமும் மேலோங்கி நிற்கின்றன".

மறுவ. மனச்சோர்வு

[மனம்+அழுத்தம்]

மனவுளைச்சல் *mana-v-uļaiccal*, பெ. (n.) மனக்குழப்பம்; tension.

[மனம்+உளைச்சல்]

மனிதத் தடை தாண்டி ஓடல் *manida-t-tadaitāņdiōdal*, பெ. (n.) உட்கார்ந்தும், கால்களை நீட்டியும் இருப்பவர்களைத் தாண்டி ஓடுதல்; human hurdle relay.

[மனிதன்+தடை+தாண்டி+ஓடல்]

மனை *manai,* பெ. (n.) உடம்பு; body. "நாட்ட மிரண்டும் நடுமுக்கில் வைத்திடில்... மனைக்கு மழிவில்லை". (திருமந்.).

[மன்-மனை]

மனைத்தெய்வம் *manai-t-teyvam,* பெ. (n.) மனையுறைத் தெய்வங்கள்; house hold gods.

மறுவ. இல்லுறை தெய்வம்

[மனை+தெய்வம்]

மனைப்பலகை *manai-p-palagai,* பெ. (n.) தறியின்கீழ் வடும்புத் தண்டுடன் பொருத்தும் பலகை; wooden plank in handloom.

[மனை+பலகை]

மனைவிற்பனைமுகமை *manaivirpanai mugamai,* பெ. (n.) மனைகள் விற்கும் இடம்; real estate.

[மனை+விற்பனை+முகமை]

மாக்கடுங்கோன் *mākkaḍuṅkōn,* பெ. (n.) இறைப்பற்று மிகுந்த மன்னன்; pious king, king who indulges in spirituality. (பா.செ.ப.) "களைகட்ட மற்றிரண்டோண் மாக்கடுங் கோன் மான பேர்த்தளிய கோன்...".

[மா+கடுங்கோன்]

மாக்கல் *mā-k-kal,* பெ. (n.) சிற்பம் செய்யப் பயன்படுகின்ற ஒரு வகைக் கல்; a steatite stone variety.

[மாவு+கல்]

மாக்கான்[1] *mākkān,* பெ. (n.) பெருந்தவளை; a big frog.



மறுவ. மொக்கான்

[மா-மாக்கு-மாக்கான்]

மாக்கான்[2] *mākkān,* பெ. (n.) பேதை; fool. (கொ.வ.வ.சொ.122).

[மாக்கள்-மாக்கன்]

மாகர் *māgar,* பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத் திலுள்ள உள்ள ஓர் ஊர்; a village in Thanjavur District.

[மா(கறள்)+கர்]

தற்போது இவ்வூர் மாகரல் என்று மருவியுள்ளது.

மாகறல் *māgaṟal,* பெ. (n.) காஞ்சிபுரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[மா+(கறள்)கறல்]

மாங்கடை *māṅkaḍai,* பெ. (n.) அரூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Harur Taluk.

[மா(மாமரம்)+கடை]

மாங்குடி *māṅguḍi,* பெ. (n.) திருநள்ளாற்றுக்கு வடமேற்கே 32 கல் தொலைவில் கொல்லுமாங் குடி என்னும் பெயருடன் உள்ளது; a village 32 k.m. from Thirunallar.

[மா(இன்)+குடி]

மாங்குப்பை *māṅkuppai,* பெ. (n.) ஓமலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Omalur Taluk.

[மா(மாமரம்)+குப்பம்-குப்பை(சிற்றூர்]

மாங்குழி *māṅkuḻi,* பெ. (n.) கல்குளம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Kalkulam Taluk.

[மா+அம்+குழி]

மாசல் *māšal,* பெ. (n.) மங்கலாகத் தெரியும் பார்வை; dim light vision.

[மாசு-மாசல்]

மாசாகை *maśāgai,* பெ. (n.) மரத்தின் முதன் மையான கிளை; prime branch of a tree. (தெ.கோ.சா.3:2).

[மா+சாகை]

மாசிக்கிளரி *māśi-k-kiḷari,* பெ. (n.) முன்னோர் களுக்கும், ஊர்த் தெய்வங் களுக்கும் செய்யும் வழிபாடு; a ceremony of worshipping ancesters and deities.

[ஒருகா. மா+அரிசி+கிளறி]

மாஞ்சுமாஞ்சு *māñjūmāñju,* பெ. (n.) ஓய் வில்லாத உழைப்பின் கடுமை; hard working without rest.

[ஒருகா. பாய்ந்து–பாய்ந்து–பாஞ்சுபாஞ்சு–மாஞ்சுமாஞ்சு]

மாட்டுக்கயிறு *māṭṭu-k-kayiṟu,* பெ. (n.) மாடு களுக்கு பூட்டும் கயிறு; a rope for cattle.

[மாடு+கயிறு]

மாட்டுத்தாழி *maṭṭu-t-tāḻi,* பெ. (n.) மாடுகள் தண்ணீர் குடிக்கும் தொட்டி; a tub of water for cattle. (கொ.வ.வ.சொ.123).

[மாடு+தாழி]

மாடக்கல் *māḍakkal,* பெ. (n.) ஓசூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Hosur Taluk.

[மாடம்(அடுக்கு)+கல்]

மாடக்கோயில் *māḍakkōyil,* பெ. (n.) கோயில் வகைகளில் ஒன்று; a variety in temple construction.

[மாடம்+கோயில்]

மாடகம் *māḍagam,* பெ. (n.) யாழின் உறுப்புகளில் ஒன்று; a part of harp.

[மாடு–மாடகம்]

மாடபத்திரம் *māḍapattiram,* பெ. (n.) மடத் தின் ஆளுவ (நிருவாக)ப் பொறுப்பு; one who maintains the monastery. (தெ.சா.8:26: எ:440). "பல்லவதரையன் எழுத்து இப்படிக்கு மாடபத்திரம் திருமலையுடையான் எழுத்து...".

[மாடம்+பத்தியம்]

மாடி *māḍi,* பெ. (n.) புலி வேடமிடுபவர் (வேலூர் பகுதிகளில்) கையில் வைத்திருக்கும் கருவி; tiger dancers article.

[மடு+மாடி]

மாடுவிரட்டு *māḍuviraṭṭu,* பெ. (n.) தீமிதி விழாவில் நடைபெறும் மாடுவிரட்டு; a festival observance.

[மாடு+விரட்டு]

மாணிக்க வாணியன் *maṇikkavāṇiyaṉ,* பெ. (n.) முதல் இராசேந்திரன் காலத்தில் திரு வோத்தூரில் விளக்கு வைக்க ஏற்பாடு செய்த வணிகன்; name of a merchant.

[மாணிக்கம்+வாணியன்]

முதல் இராசேந்திரன் காலத்தில் தஞ்சாவூரைச் சேர்ந்த ஓர் ஊரிலிருந்து திருவோத்தூருக்கு வந்தவன். (இவன் காலம் கி.பி.1012–1044ஆம் ஆண்டு).

மாணிய ஆடூர் *māṇiya āḍūr,* பெ. (n.) சிதம் பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[மானியம்+ஆடு+ஊர்]

மாத்தம்மா *māttammā,* பெ. (n.) நாட்டுப்புறக் கதைகளில் சொல்லப்படும் பெண் தெய்வம்; a female deity in folklore.

[மாத்து+அம்மா]

மாத்தி *mātti,* பெ. (n.) கும்பகோணம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Kumbakonam Taluk.

[மத்தி–மாத்தி]

மாத்து-தல் *māttu-*, 4 செ.குன்றாவி. (v.t.) அடித்தல்; to beat. அவனை நன்றாக மாத்தினான். (இ.வ.).

[மாறு-மாற்று-மாத்து]

மாதவிலக்கு *mādavilakku*, பெ. (n.) மகளிர் மாதப்பூப்பு; mensus.

[மாதம்+விலக்கு]

மாதாரிகள் *mādārigaḷ*, பெ. (n.) கம்பளத்து நாயக்கர்களுக்குச் சேவைப் பலகையைச் செய்து கொடுக்கும் தொழிலாளர்; a division of workers who make drums.

[மாதர்-மாதாரி]

மாதாரி *mādāri*, பெ. (n.) மாதாரை எனும் பெரும் மத்தளம்; a percussion instrument.

[மாது-மாதாரி]

மாதானம் *mādāṉam*, பெ. (n.) சீர்காழி வட்டத்தில் சீர்காழி பழையார் வழிச் சாலையில் அமைந்துள்ள ஒரு ஊர்; a village in Sirkazhi on the way to Sirkazhi Pazhayar road.

[மா+தானம்]

மாதிரிமங்கலம் *mādirimaṅgalam*, பெ. (n.) நன்னிலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Nannilam Taluk.

[மாதாரி+மங்கலம்]

மாதுமாது *mādumādu*, பெ. (n.) மணலைக் குவித்து பதினான்கு குழிகளில் எதிலாவது சிறு கல்லினை ஒளித்து வைக்கும் விளை யாட்டு; a children's game in which they repeat the word 'mādumādu'. (த.நா.வி.).

[மாதுமாது-(ஒலிக்குறிப்பு)]

மாதுளங்கனி *mādulaṅkaṉi*, பெ. (n.) இலகு லீசர் சிற்பத்தின் ஒரு சிறப்புக் குறியீடு; a term used in sculpture.

[மாதுளம்+கனி]

மாதேவப்பட்டினம் *mādēva-p-paṭṭiṉam*, பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர்; a village in Thanjavur district.

[மா+தேவன்+பட்டினம்]

இவ்வூரின் முந்தைய பெயர் 'மகாதேவப் பட்டினம்.

மாந்தச்சங்கிலி *mānda-c-caṅgili*, பெ. (n.) கருத்தொன்றை வெளிப்படுத்தும் வகையிலோ -எதிர்ப்பைக் காட்டும் வகையிலோ திரண்டு வந்து சாலையோரத்தில் ஒருவரோடொருவர் கை கோர்த்து நிற்றல்; people forming a chain by joining hands to demonstrate their support or protest.

[மாந்தன்+சங்கிலி]



மாந்தநேயம் *māndanēyam*, பெ. (n.) மாந்தன் மாந்தனை மதித்துச் செலுத்தும் அன்பு; love for one another; humanism.

[மாந்தன்+நேயம்]

மாந்தநேயன் *māndanēyaṉ*, பெ. (n.) (மனிதாபிமானி) மற்றவரிடம் பரிவு கலந்த அன்பு செலுத்துபவர்; humanitarian.

[மாந்தன்+நேயன்]

மாந்தப்பரிவு *mānda-p-parivu*, பெ. (n.) ஒருவர் மற்றொருவர் மீது காட்டும் பரிவு கலந்த உணர்வு (மனிதாபிமானம்); humanitarianism.

[மாந்தன்+பரிவு]

மாந்தவளத்துறை *mānda-vaḷatturai*, பெ. (n.) நடுவணரசின் கல்வித்துறை; human resource department (Education department).

[மாந்தர்+வளம்+துறை]

மாந்தவளம் *mānda-valam,* பெ. (n.) மாந்தனின் ஆற்றலாகிய வளம்; human resource.

[மாந்தர்+வளம்]

மாந்தொட்டு பச்சை *mantottu-paccai,* பெ. (n.) 1. காணிக்கை; offering. 2. நன்கொடை; donation. "புஷ்பராகம் ஒன்று மாந்தொட்டு பச்சை தொண்ணூற் றொண்று" (தெ.சா.7:4: எ.53).

[மாந்தொட்டு+பச்சை]

மாந்தை *māndai,* பெ. (n.) கொங்கு நாட்டின் தலைநகரமாக விளங்கிய கோவை மாவட்டத்தில் உள்ள ஊர்; a village in Kovai, head quarters in Kongu nadu.

[மா+அந்தை]

இது சேரர்க்கு உரிய தலைநகரமாக விளங்கியது. இமயவர்மன் நெடுஞ்சேரலாதன் மாந்தைப் பட்டினத்தில் பொன் முதலான பெருஞ் செல்வத்தைப் புதைத்து வைத்திருந்தான் என்று மாமூலனார் கூறுகின்றார்.

மாநாடு *mānāḍu,* பெ. (n.) வணிகர் கூட்டம்; traders gatherings, trader's meeting. (தெ.கோ.சா.3:2).

[மா+நாடு]

மாப்பிள்ளை பத்தியம் *mā-p-pillai-pattiyam,* பெ. (n.) ஒரு வகையான நாட்டுப் பாடல்; a variety of a folk song.

[மாப்பிள்ளை+பத்தியம்]

மாப்பு *māppu,* பெ. (n.) மன்னிப்பு; forgiving, excuse. இந்த ஒரு பிழைக்கு மாப்பு செய்ய வேண்டும். (இ.வ.).

[மன்னிப்பு – மாப்பு (கொ.வ.)]

மாபட்டைவளை *māpattai-valai,* பெ. (n.) அணி கலன்; jewels, ornament. "மஞ்சாடியு மிரண்டு மாபட்டைவளை ஆறினால்..." (தெ.சா. 7:2: எ.891).

[மா+பட்டை+வளை]

மாம்பாக்கம் *mām-bākkam,* பெ. (n.) ஆரணி வட்டத்தில் உள்ள ஒரு ஊர்; a village in Arani.

[மா+பாக்கம் = மாம்பாக்கம்]

அழகு அல்லது பெரிய என்ற பொருளில் இவ்வூர் அழைக்கப்பட்டிருக்கலாம்.

மாமன்நீர் *māmannir,* பெ. (n.) பருவமடைந்த பெண்ணுக்குப் பத்து நாள் தாய்மாமன் தலைக்குத் தண்ணீர் ஊற்றும் சடங்கு; a ritual done by maternal uncle.

[மாமன்+நீர்]

மாமியார் வீடு *māmiyārvīḍu,* பெ. (n.) சிறைச்சாலை; jail.

[மாமி+ஆர்+வீடு]

மாமுண்டி *māmuṇḍi,* பெ. (n.) திருச்செங் கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruchengodu Taluk.

[மா+முண்டி]

மாயலேரி *māyalēri,* பெ. (n.) 1. அருப்புக் கோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk. 2. சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[மாயல்(வறண்டுபோதல்)+ஏரி]

மாயாளி *māyāli,* பெ. (n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[மாயல்+ஆளி]

மார்பொட்டி *mārbotti,* பெ. (n.) அடையாளக் குறியுடைய முத்திரைப் பொறி; badge.

[மார்பு+ஒட்டி]

மாரங்கியூர் *mārangiyūr,* பெ. (n.) திருக் கோவிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[மாரன்+அங்கன்+ஊர்]

மாரந்தை *mārandai,* பெ. (n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[மாறன்+அந்தை]

மாரனி *māraṉi,* பெ. (n.) திருப்பத்தூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[மரல் – மாரல்–மாரலி–மாரனி]

மாராத்தளி *mārāttaḷi,* பெ. (n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[மால்–மாரல்+தளி]

மாரிமுத்தாப்பிள்ளை *mārimuttā-p-piḷḷai,* பெ. (n.) இசைப்பாக்களில் புகழாப் புகழ்ச்சி வழிபாடு (கீர்த்தனைகளில் நிந்தைத் துதி) அமைத்துப் பாடுவதைப் பெருவழக்காகக் கொண்டு வந்த இசைப்பண் மேதை; an exponent in Tamil music.

[மாரிமுத்து+பிள்ளை]

மாரிமூலை *māri-mūlai,* பெ. (n.) வடகிழக்கு மூலை; north east side.

[மாரி+மூலை]

மாரியான்பாரை *māriyāṉ-pārai,* பெ. (n.) ஒரு வகை மீன்; horse malkerel.

[மாரியான்+பாரை]

மால் *māl,* பெ. (n.) நிலக்கடலைப் பயிரில் பூவிட்ட பின் நிலத்தில் இறங்கும் விழுது; side root buds penetrating the earth after the groundnut plant flowered.

[மா–மால்]

மாலக் கயிறு *māla-k-kaiṟu,* பெ. (n.) உறுதியான நீண்ட கயிறு; strong rope. (வ.வ.தொ.க.36).

[மால்+அ+கயிறு]

மாவத்திருப்பு *māvattiruppu,* பெ. (n.) கும்ப கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kumbakonam Taluk.

[மா+அத்தி+இருப்பு]

மாவடை[1] *māvaḍai,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[மா(விலங்கு)+அடை]

மாவடை[2] *māvaḍai,* பெ. (n.) குதிரை கட்டு மிடம்; horse stable.

[மா+அடை]

மாவுக்கறி *māvu-k-kaṟi,* பெ. (n.) மாவு போல இருக்கும் இறைச்சி; delicate flesh. (கொ.வ. வ.சொ.123).

[மாவு+கறி]

மாவுச்சட்டி *māvu-c-caṭṭi,* பெ. (n.) கல்கலந்து செய்யப்பட்ட ஏனம்; a vessel.

[மாவு+சட்டி]

மாவுலாசி *māvulaśi,* பெ. (n.) ஒரு வகை மீன்; sea fish.

[மா+உலாசி]

மாவேந்தன் *māvēndaṉ,* பெ. (n.) முத்தமிழ் நாட்டு அல்லது தமிழகத் தலைவன்; emperor.

[மா+வேந்தன்]

மாளிகைமேடு *maligai-mēḍu,* பெ. (n.) கடலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Cuddalore Taluk.

[மாளிகை+மேடு]

மாற்றமாடு–தல் *māṟṟam-āḍu,* செ.குன்றா.வி. (v.t.) சொல்லாடுதல், உரையாடுதல்; to speak.

தெ. மாற்றாடு – மாட்டாடு; க. மாத்தாடு

[மாற்றம்+ஆடு]

மாற்றம்–சொல்; ஆடு என்பது ஒரு துணை வினை.

மாற்றுச் சான்றிதழ் *māṟṟu-c-cāṉṟidaḻ,* பெ. (n.) ஒரு கல்வி நிறுவனத்திலிருந்து மற்றோர் கல்வி நிறுவனத்திற்குச் செல்லும்போது முதல் நிறுவனத்தார் கொடுக்கும் சான்றிதழ்; transfer certificate.

[மாற்று+சான்றிதழ்]

மாற்றுத் திறன் *māṟṟu-t-tiraṉ,* பெ. (n.) உறுப்புக்குறைவு உள்ளவரிடம் காணப்படும் திறமை; talent seen in physicaly handicaped.

[மாற்று+திறன்]

மாற்றுத் திறனாளர் *māṟṟu-t-tiṟaṉāḷar*, பெ. (n.) ஊனமுற்றோர்; physically handicaped, disabled persons, physically challenged.

மறுவ. மாற்றுத்திறனாளி

[மாற்று+திறனாளர்]

மாறனேரி *māṟaṉēri*, பெ. (n.) பாண்டிய நாட்டில் உள்ள ஊர்; a village in Pandiya nadu.

[மாறன்+ஏரி]

இவ்வூர் முற்காலத்தில் மாறமங்கலம் என்னும் பெயர் பெற்றிருந்தது. அங்கிருந்த ஏரியின் சிறப்பால் மாறனேரியாயிற்று என்பர்.

மாறாயம் *māṟāyam*, பெ. (n.) பெண் பூப் படைந்த செய்தியைத் தாய்மாமனுக்குத் தூதாகச் சென்று சொல்வது; informing maternal uncle about the attainment of puberty. (கொ.வ.வ.சொ.123).

[மாறு+ஆயம்]

மாறோக்கம் *māṟōkkam*, பெ. (n.) 1. நப்பசலையாரின் ஊர்; name of the hamlet where the sangam poetess Nappasalaiyar lived. 2. வெள்ளோக்கத்தார் எனும் உழுவித் துண்ணும் வேளாளர்க்கும் வேறான உழு துண்ணும் குடிமக்கள் வாழும் ஊர்; name of a hamlet where the tillers of the land - agriculturists live.

[மாறு+(ஒக்கல்)ஒக்கம்]

மான்கொம்பு *māṉkombu*, பெ. (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[மான்+(கோம்பை)கொம்பு]

மான்மியக்கும்மி *māṉmiya-k-kummi*, பெ. (n.) கும்மிப்பாடல் வகைகளில் ஒன்று; a type of kummi play.

[மான்மியம்+கும்மி]

மானகிரி *māṉagiri*, பெ. (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[மால்(தொடர்ச்சி)–மால்–மான+கிரி]

மானங்குல மானம் *māṉaṅgula-māṉam*, பெ. (n.) படிமங்களின் உயரத்தினை முடிவு செய்வதில், பின்பற்றப் படும் மரபு; a measuring method in sculpturing.

[மான்+அங்குலம்+மானம்]

மானதி *māṉadi*, பெ. (n.) திருச்செங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruchengodu Taluk.

[மான்+அத்தி]

மானாபரணநல்லூர் *māṉapāraṇa nallūr*, பெ. (n.) அம்பாசமுத்திர வட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Ambasamuthiram (Thirunelveli).

[மானம்+ஆபரணன்+நல்லூர்]

மானாமதி *māṉāmadi*, பெ. (n.) செங்கற்பட்டு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chenglepet Taluk.

[மான்+அம்+மத்தி]

மிட்னமல்லி *miṭṉamalli*, பெ. (n.) சைதாப் பேட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Saidapet Taluk.

[மேட்டு+இன்+மல்லி]

மித்திராவயல் *mittirāvayal*, பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[முத்தரையர்+வயல்]

மிதப்புக்கட்டை *midappu-k-kaṭṭai*, பெ. (n.) மீன் பிடி தூண்டிற் கயிற்றிலிணைந்த சிறு கட்டைத் துண்டு; a small log connected to fish hook.



மிதிமனை *midimaṉai*, பெ. (n.) கைத்தறி நெசவில் புனி விழ உதவும் கருவி; an implement in handloom weaving.



[மிதி+மனை]

மிதிவிழுதல் *midivilu-,* பெ. (n.) ஒயிலாட்டத்தில், கால்களின் இயக்கம்; movement of steps in oyilāṭṭam.

[மிதி+விழுதல்]

மிதுக்க வற்றல் *midu-k-kavaṟṟal,* பெ. (n.) திருநெல்வேலி மாவட்ட திருமண விருந்துகளில் பரிமாறப்படும் உணவுப் பண்டம்; a side dish in marriage feast in Thirunelveli district.

[மிதுக்கம்+வற்றல்]

மிளகுச் சம்பா *milagu-c-cambā,* பெ. (n.) நெல் வகை; a kind of paddy. (வ.வ.வே.க.37).

[மிளகு+சம்பா]

மின்னல் *minnal,* பெ. (n.) அரக்கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arakkonam Taluk.

[ஒருகா. மின்னல் தாக்கிய இடம்]

மின்னாம்பள்ளி *minnāmpalli,* பெ. (n.) சேலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk.

[மின்னல்+பள்ளி]

மின்னாம்பூச்சி *ma,* பெ. (n.) மின்மினிப்பூச்சி; glow warm.

[மின்னும்+பூச்சி]

மின்னாமொழி *minnāmoli,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[மின்னம்+மொழி]

மீசநல்லூர் *mīśanāllur,* பெ. (n.) வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wandiwash Taluk.

[மீசல்+நல்லூர்]

மீட்டடைவு *miṭṭaḍaiuv,* பெ. (n.) நாட்டிய அடைவு வகை; stepping in dance.

[மீட்டு+அடைவு]

அரைமண்டியில் வலது காலை அதன் இடத்திலேயே தட்டி, வலப்புறமாகத் தோள்களுக்கு இடைப்பட்ட தொலைவு வரை அகற்றித்தட்டி, பின்பு இடது காலை அகற்றித் தட்டி வைத்த வலது காலின் பின்னால் குத்தி வைத்த பின்னர் வலது காலையகற்றி வைத்த இடத்திலேயே தட்டுதலும், இதே போன்று இடக்காலால் செய்தலும் இவ்வடைவு ஆகும்.

மீட்டாண்ட நாச்சியார் *miṭṭāṇḍa-nācciyār,* பெ. (n.) 1257ஆம் ஆண்டு திருவண்ணாமலை கோயிலுக்குப் பாண்டங்கள் வாங்க 110 பொன் வழங்கிய இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனின் மனைவி; Meettanda nachiyar wife of Koperunsingan (1257) gave 110 gold coins for purchasing articles for the temple.

[மீட்டு+ஆண்ட+நாச்சி+ஆர்]

மீதிகுடி *mīdikuḍi,* பெ. (n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[மீதி+குடி]

மீயாளுங்கணம் *miyāḷuṅkaṇam,* பெ. (n.) மேலதிகாரம் செய்யும் குழு; a committee which has the controlling power. (தெ.கோ.சா.3:2).

[மீ+ஆளும்+கணம்]

மீராளூர் *mirāḷur,* பெ. (n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[மீரான்+ஊர்]

மீனவணம் *mīṉavaṇam,* பெ. (n.) நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Nagappattinam.

[மீன்+ஆவணம்(தெரு)]

மீன்சினை *mīṉsiṉai,* பெ. (n.) மீன் முட்டை; fish roe.

[மீன்+சினை]

மீனக்கை *mīṉa-k-kai,* பெ. (n.) நாட்டிய நளி நயக்கை; a dance pose.

[மீனம்+கை]

மீனக்கொடுதி *mīṉa-k-koḍudi,* பெ. (n.) மீன (பங்குனி) மாதத்தில் காட்டை அழிக்கும் முன் தெய்வத்திற்குப் படைக்கும் கொடைவிழா; a function of making offerings to the deity before setting fire to the forest for new cultivation during the month of Panguni (March-April).

[மீனம்+கொடுதி]

மீனச்சல் *mīṉa-c-cal,* பெ. (n.) விளவங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vilavancode Taluk.

[ஒருகா. நத்தம் – நத்தல் – நச்சல் – அச்சல் மீன்+அச்சல்]

மீனம்பர் *mīṉambar,* பெ. (n.) மீன் வயிற்றி லிருந்து பெறப்படும் அம்பர் எனும் ஒரு வகை மணப்பொருள்; ambergris.

மறுவ. ஓர்க்கோவை, ஒக்கோவை

[மீன்+அம்பர்]

மீனாடு *mīṉāḍu,* பெ. (n.) சிந்துவெளிப் பகுதிக்கு வழங்கிய பழைய பெயர்; Indus valley area known as meennāḍu (fish land). மீனாடு (விபுலானந்தர் – யாழ்நூல்).

[மீன்+நாடு]

மீனாவளல் *mīṉāvaḷal,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[மீன்+(வளவு)வளவல்–வளல்]

மீனெறிவேல் *mēṉerivēl,* பெ. (n.) நீண்ட ஈட்டி; lance.

[மீன்+எறி+வேல்]

முக்கட்டக்காய் *mukkaṭṭa-k-kāy,* பெ. (n.) மூன்று விதைளையுடைய நிலக்கடலைக் காய்; a ground nut having three nuts in a shell.

[மூன்று+கட்டம்+காய்]



முக்கரையான மும்முடிச் சோழபுரம் *mukkaraiyāṉa-mummuḍiccōḻapuram,* பெ. (n.) மன்னார்குடி வட்டத்தில் அமைந் துள்ள ஓர் ஊர்; a village in Mannarkudi Taluk.

முக்காணி *mukkāṇi,* பெ. (n.) ஏற்றக்கொம்பில் சாலோடு இணைக்கும் கருவி; a connective device in piccotah pole.

[மூன்று+(கால்) காலி – காணி]

முக்காணி முடிச்சு *mukkāṇi muḍiccu,* பெ. (n.) முடிச்சு வகை; a kind of knot.

[முக்காணி+முடிச்சு]

முக்காணியூர் *mukkāṇiyūr,* பெ. (n.) மூவேந் தர்களின் பொதுப்பிறப்பிடமாகக் கருதப்படும் ஊர்; mukkani-y-ūr considered to be the common birth place of Chera, Chola, Pandya dynasties of Tamil royal decendency.

[மூ(ன்று)+காணி+ஊர்]

முக்காத்துட்டு *mukka-tuṭṭu,* பெ. (n.) பழைய காலத்து மூன்று காசு; three paisa in a rupee of 192 paisa value.

[முக்கால்+துட்டு]

நூறு காசுகள் கொண்ட புதிய உருவா அறிமுக மாவதற்கு முன்பு ஆங்கில ஆட்சிக் காலத்து உருவா (12 விடு காசு - 1 அணா, 16 அணா - 1 ரூபாய்) 192 விடுகாசு மதிப்பாதலால் 4 விடுகாசு ஒரு துட்டு எனும் பெயர் பெற்றது. துட்டு என்பது ஒரு அணாவில் மூன்றில் ஒரு பங்கு மதிப்புடையது. முக்கால் துட்டின் மதிப்பு 3 விடுகாசு.

முக்குடை *mukkuḍai*, பெ. (n.) சமணத்தின் பிரிவாகிய சாங்கியரின் உருவ வழிபாட்டுத் திருமேனியின் தலைமேல் குடை மேல் குடையாக மூன்று குடைகள் அமைந்திருக்கும் பாங்கு; three umbrellas designed one above another, an Thirthangaras of Tamil - Sankya faith.

[மூன்று+குடை]

முக்குரும்பி *mukkurumbi*, பெ. (n.) போளூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Polur Taluk.

[மூன்று+குறும்பி]

முக்குளிப்பான் *mukkuḷi-p-pāṉ*, பெ. (n.) வாத்து போல் உடலமைப்புக் கொண்ட பறவை யினம்; a bird.

[மூழ்கி+குளிப்பான்]

முக்கோல் அந்தணர் *mukkōl andaṇar*, பெ. (n.) முக்கோல், மனை, நீர்க்கடிகை ஆகிய மூன்றும் ஏந்தி தோன்றிய (ஆகம) வழியில் தவம் செய்யும் தமிழ் முனிவன்; ancient Tamil saint of TINAI social order with trudant plank and water in small jar, contrary to Aryan vedic andanan. "உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்... அந்தணிர்" (கலி.).

[முக்கோல்+அந்தணன்]

முக்கோணத்தட்டு *mu-k-kōṇa-t-taṭṭu*, பெ. (n.) வடிதட்டாக பயன்படுத்தப்படும் ஏன வகை; a triangular plate.

[மூன்று+கோணம்+தட்டு]

முகதலை *mugatalai*, பெ. (n.) கைமாற்றுக் கடன்; hand loan.

முகத்தாளி *mugattāḷi*, பெ. (n.) தலைமைத்திற முடையோன், முதன்மையானவன்; leader, authority.

[முகத்து+ஆளி]

முகப்போலி நடனங்கள் *muga-p-pōli naḍaṉaṅgaḷ*, பெ. (n.) விலங்குகளைப் போன்று உருவம் புனைந்து ஆடும் ஆட்டங்கள்; a dance of wearing animal faces.

[முகம்+போலி+நடனம்]

முகிழ்த்தகம் *mugiḻttagam*, பெ. (n.) திருவா டானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[ஒருகா. தடாகம் - தகம் - முகிழ்+தகம்]

முகுள் விளக்கு *muguḷ-viḷakku*, பெ. (n.) சிறிய விளக்கு வகை; a lamp variety.

[முகிழ்-முகுள்+விளக்கு]

முகையூர் *mugaiyūr*, பெ. (n.) சிதம்பரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[முழை-முகை+ஊர்]

முச்சுரப் பிறழ்ச்சிப் பண் *muccura-p-piraḷccippaṇ*, பெ. (n.) பிறழ்ச்சிப் பண்ணின் ஒரு வகை; a musical note.

[மு(மூன்று)+சுரம்+பிறழ்ச்சி+பண்]

முசரியம் *musariyam*, பெ. (n.) நன்னிலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Nannilam Taluk.

[முசிறி-முசரியம்]

முசடு *muśaḍu*, பெ. (n.) ஒரு வகை மீன்; brown tripel tail.

[முசு-முசல்; முசு-முசடு]

முசலாடி *muśalāḍi*, பெ. (n.) ஒரு வகை மீன்; brown tripel tail.

[முசல்+ஆடி]

முசிரி *musiri*, பெ. (n.) திருச்செங்கோடு வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tiruchengodu Taluk.

[முசிறி-முசிரி (கொ.வ.)]

முசுடு *musudu,* பெ. (n.) ஒன்றும் தெரியாத அப்பாவி, கள்ளம் கவடற்றவன்; a dull person. (கொ.வ.வ.சொ.124).

[முசு+முசுடு]

முசுவு *mušuvu,* பெ. (n.) ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரே மூச்சில் செய்யும் பணி முடுக்கம்; quickness in performance.

[மூசு–முசு–முசுவு]

முட்டக்குத்தி *mutta-k-kutti,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[முட்டம்+குத்தி]

முட்டம் *muttam,* பெ. (n.) பெரிய வீடு, வளமனை, அரண்மனை; a big house, bangalow, palace. என் முட்டம் புகாதே (இ.வ.).

[முகடு–முகட்டம்–முட்டம்]

முட்டல் *muttal,* பெ. (n.) ஆத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Attur Taluk.

[முட்டம்–முட்டல்]

முட்டி[1] *mutti,* பெ. (n.) நாட்டியத்தில் முத்திரை நிலை; a hand pose in dance.

[முட்டு–முட்டி]

முட்டி[2] *mutti,* பெ. (n.) பெரிய மரக்கட்டை; a log of wood. (கொ.வ.வ.சொ.124).

[முடு–முட்டு–முட்டி]

முட்டியம் *muttiyam,* பெ. (n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkurichi Taluk.

[முட்டம்–முட்டியம்]

முட்டு–தல் *muttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. கலப்பை பொருத்துதல்; to fix the plough. 2. தொடுதல்; to touch.

[முள்–முடு–முட்டு]

முட்டுக்கோல் *muttu-k-kōl,* பெ. (n.) வண்டியின் பின்பக்கச் சுமையை (பாரத்தை)த் தாங்க கீழ்ப் பகுதியில் வைத்திருக்கும் கட்டை; a drop in cart. (கொ.வ.வ.சொ.124).

[முட்டு+கோல்]



முட்டுவழி *muttuvali,* பெ. (n.) வேளாண் தொழிலுக்குச் செலவிடப்படும் தொகை; agriculture expenses. (கொ.வ.வ.சொ.124).

[மூட்டு(செலவுகளைப் பகுத்துப் பொருத்தும்)+வழி]

முடச்சூர் *mudaccūr,* பெ. (n.) கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர்; a village in Coimbatore.

[முடச்சு+ஊர்]

இவ்வூரை வீரராசேந்திர சோழன் ஆண்டு வந்தான் எனக் கல்வெட்டு கூறுகிறது.

முடப்புளி *mudappuli,* பெ. (n.) திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vriddhachalam Taluk.

[முடம்(வளைவு)+புளி]

முடவேலி *mudavēli,* பெ. (n.) பரமக்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Paramakkudi Taluk.

[முடம்+வேலி]

முடிகண்டம் *mudikandam,* பெ. (n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[முடி+(கொண்டான்)கண்டம்]

முடித்தலை *mudi-t-talai,* பெ. (n.) கொங்கு நாட்டில் உள்ள ஒரு ஊர்; a village in Kongu nadu

[முடி+தலை]

இவ்வூர் தற்போது 'கொடுமுடி' என்று அழைக் கப்படுகிறது.

முடித்தானை *mudittāṉai,* பெ. (n.) திருவா டானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[முடி+தானை]

முடிறு *mudiṟu,* பெ. (n.) ஒரு வகை மீன்; gizzard shad.

[முடி-முடிறு]

முடிவு *mudivu,* பெ. (n.) ஆளத்தியில் பாடப்படும் பகுப்பு முறை; a song variation.

[முடி-முடிவு]

முடுக்கூரணி *mudukkūraṇi,* பெ. (n.) சிவ கங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[முடுக்கு+ஊருணி]

முடுகியல் நடை *mudugiyal-nadai,* பெ. (n.) தொங்கலைப் பாடுதற்கு உரிய நடை; a metre in prosody.

[முடுக்கு+இயல்+நடை]

முடுதுரை *muduturai,* பெ. (n.) 1. சேலம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk. 2. அவினாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Avanashi Taluk.

[முடு(முதலை)+(துறை)துரை]

முடையூர் *mudaiyūr,* பெ. (n.) செங்கற்பட்டு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chenglepet Taluk.

[முடை(பாய்முடைதல், கூடைமுடைதல்)+ஊர்]

முண்டக்கண் *muṇḍa-k-kaṇ,* பெ. (n.) கூட்ட மாக இருக்கும் ஒரு வகை மீன்; seven banded cardinal fish.

[முண்டு-முண்ட+கண்]

முண்டக்கண்கத்தளை *muṇḍa-k-kaṇka ttalai,* பெ. (n.) ஒரு வகை மீன்; black banded jew fish.

[முண்டக்கண்+கத்தளை]



முண்டச்சேடு *muṇḍaccēḍu,* பெ. (n.) சேலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk.

[முண்டல்+சேடு]

முண்டம் *muṇḍam,* பெ. (n.) சிற்பியர் வடி வமைக்கும் மார்பணி; an ornament in sculpture.

[முண்டு-அம்]

முண்டன்சுறா *muṇḍaṉ-cūṟā,* பெ. (n.) சுறா மீன் வகையுள் ஒன்று; gangetic shark.

[முண்டன்+சுறா]

முணுக்கன் *muṇu-k-kaṉ,* பெ. (n.) அமைதியாக இருப்பவன்; a calm person. (கொ.வ.வ. சொ.125).

[முணு-முணுக்கன்]

முத்தரச நல்லூர் *muttaraśa-nallūr,* பெ. (n.) திருச்சி மாவட்டத்திலுள்ள ஒரு ஊர்; a village in Tiruchi.

[மூன்று > மூ+தரையர்+நல்லூர்]

முத்தரையர் என்னும் பெயர் வாய்ந்த பண்டைக் குலம் ஒன்று பழந்தமிழ் நூல்களிலே பேசப்படு கின்றது. அவர்கள் சிறந்த படைவீரராக விளங் கினர்.

முத்தரசபுரம் *muttarašapuram*, பெ. (n.) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரு ஊர்; a village in Thanjavur.

[முத்தரையன்-முத்தரசன்+புரம்]

சத்ரு பயங்கர முத்தரையன், பெரும் பிருகு முத்தரையன் முதலியோரின் வீரச் செயல்களை வரலாறு குறிக்கின்றது.

முத்தரசன் *muttarašan*, பெ. (n.) இராம நாதபுர மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர்; a village in Ramanathapuram.

[முத்தரையன்-முத்தரசன்]

முத்தாப்பு செய்-தல் *muttā-p-pucey-*, 1 செ.குன்றாவி. (v.t.) சிறப்பு செய்தல்; to honour.

[முத்தாய்ப்பு+செய்தல்]

முத்திரை *muttirai*, பெ. (n.) பெருவங்கிய (நாகசுர)த்தின் உறுப்புகளில் ஒன்று; a part of nadasvaram.

[முத்து-முத்திரை]

முத்துவரிசை *muttuvarisai*, பெ. (n.) 2,4 வடி களின் வழி செல்லும் பாவு வரிசை; a handloom feature.

[முத்து+வரிசை]

முத்துக்கெண்டை *muttu-k-kendai*, பெ. (n.) கெண்டை மீன் வகையுள் ஒன்று; long ray.

[முத்து+கெண்டை]

முத்துவளம் *muttuvaḷam*, பெ. (n.) கடலில் காணலாகும் முத்துக்களின் அடர் தொகுதி; pearl as seen in sea.

[முத்து+வளம்]

முதல் *mudal*, பெ. (n.) பண் ஒரு பாடலொடு பொருத்தப்படுங்கால் பெறும் பெயர்; a term to denote tune setting in a song.

[முது-முதல்]

முதல் ஒட்டு ஆளத்தி *mudaloṭṭuāḷatti*, பெ. (n.) ஆளத்தி வகையினுள் ஒன்று; a musical term.

[முதல்+ஒட்டு+ஆளத்தி]

முதல் நடை *mudal-naḍai*, பெ. (n.) தாளக் காலத்தின் நடைகளில் ஒன்று; a time measure.

[முதல்+நடை]

முதலிவயல் *mudali-vayal*, பெ. (n.) திருவா டானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[முதலி+வயல்]

முதனை *mudaṉai*, பெ. (n.) விருத்தாசலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vriddhachalam Taluk.

[முதன்-முதனை]

முதுகன்றிருமல் *mudukaṉṟirumal*, பெ. (n.) ஒரு வகை நுண் உயிரி; louse (or) husk.

[முதுகன்+திருமல்]

முதுகு *mudugu*, பெ. (n.) கொம்பு விளையாட்டில் இடம் பெறும் கழியின் தலைப்புப் பகுதி; top of pole.

[முது+முதுகு]

முதுகுக்கு முதுகு *mudu-k-ku-mudugu*, பெ. (n.) இணையை விட்டு விட்டு வேறு ஒருவனைப் பிடித்து முதுகுக்கு முதுகு தொடும் விளை யாட்டு; back to back tag.

[முதுகு+கு+முதுகு]

முதுவளர்குடி *muduvaḷarkuḍi*, பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[முது+வளர்+குடி]

முதுவன்திடல் *muduvaṉtiḍal*, பெ. (n.) சிவ கங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivagangai Taluk.

[முதுவன்+திடல்]

முந்தாநாள் *mundā-nāḷ*, பெ. (n.) நேற்றைக்கு முன் நாள்; day before yesterday.

[முந்தை+நாள்- முந்தைநாள் - முந்தையாம் நாள் - முந்தாநாள்]

முந்தி[1] *mundi,* பெ. (n.) முந்தானை; free part of the saree.

[முன்-முந்து-முந்தி]

முந்திப்பலகை *mundi-p-palagai,* பெ. (n.) பட்டுச் சேலையில் முந்தானைபோடப் பயன் படுத்தும் அரை அடி அகலம் 6 அடி நீளம் கொண்ட தேக்குப் பலகை; a wooden plank used in silk saree weaving.

[முந்தி+பலகை]

முப்பதுவெட்டி *muppadu-vetti,* பெ. (n.) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wallajah Taluk.

[ஒருகா. முப்பதுபட்டி-முப்பதுவட்டி-முப்பது+ வெட்டி]

முப்புரி *mu-p-puri,* பெ. (n.) திண்டிவனம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[மூன்று+புரி]

மும்முடிச்சோழகன் *mu-m-mudi-c-cōlagan,* பெ. (n.) கடலூர் மாவட்டத்திலுள்ள ஒரு ஊர்; a village in South Arcot.

[மும்முடி+சோழன்]

இவ்வூர் இராசராசனின் விருது பெயரால் ஏற்பட்ட ஊராகும்.

மும்முனி *mummuni,* பெ. (n.) வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wandiwash Taluk.

[மு(மூன்று)+முனி]

முரடன் சுறா *muradan-šurā,* பெ. (n.) சுறா மீன் வகையுள் ஒன்று; gangetic shark.

[முரடன்+சுறா]

முரட்டுமஞ்சி *murattu-mañji,* பெ. (n.) யாழின் ஒலி நயத்தில் பகையாகக் கருதப்படுவது; anti - feature in harp.

[முரடு+மஞ்சி]

முராமணி *murāmani,* பெ. (n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[முரல்+மணி]

முருக்கம் *murukkam,* பெ. (n.) திண்டிவனம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[முருக்கு+அம்]

முருக்கேரி *murukkēri,* பெ. (n.) 1. வேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vellore Taluk. 2. திண்டிவனம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[முருக்கன்+ஏரி]

முருகாப்பாடி *murugāppādi,* பெ. (n.) போளூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Polur Taluk.

[முருகன்+பாடி]

முருகினிவயல் *muruginivayal,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[முருகு+அணி+வயல்]

முருங்கை *murungai,* பெ. (n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurantakam Taluk.

[முருங்கு-முருங்கை]

முருதகன்முடி *murudaganmudi,* பெ. (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[முருதகன்+முடி]

முல்லனம் *mullanam,* பெ. (n.) வேலூர் மாவட்டத்தில் வேலூர் கோட்டைக்கு அருகில் உள்ள ஓர் ஊர்; a village near fort in Vellore.

[முள்+வனம்]

முல்லைத் தீம்பாணி *mullai-t-timbāni,* பெ. (n.) இன்றைய மோகன இராகத்தின் பண்டைய பெயர்; ancient Tamil name of 'mōgana rāga' in music.

[முல்லை+தீம்+பாணி]

முழிங்கள் திரப்பட்டு *mulingal-tirappattu,* பெ. (n.) திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Tiruvalur.

[முழிங்கள்+திரம்+பற்று]

முழுக்கைத்தட்டு *mulu-k-kai-t-tattu,* பெ. (n.) கும்மியாட்டத்தில் கைகளைத் தட்டும் முறை; clapping in kummi dance.

[முழு+கை+தட்டு]

முழுவி *muluvi,* பெ. (n.) சேலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk.

[முழுவல்–முழுவி]

முழையூர் *mulaiyūr,* பெ. (n.) காரைக்கால் வட்டத்தில் உள்ள ஒரு ஊர்; a village in Karaikkal.

[முழை(குகை)+ஊர்]

இது குறும்பர் நாட்டு ஊர்களில் ஒன்றாகும். இதனைத் தலைமையிடமாகக் கொண்ட நாடு 'முழையூர்நாடு' என்னும் பெயருடன் திகழ்கின்றது.

முழையூர் நாட்டுக்கோன் *mulaiyūrnāttu-k-kōn,* பெ. (n.) திருநள்ளாற்றுச் சிவன் கோயிலில் "சோலை இடர் தீர்த்தான் முழையூர் நாட்டுக் கோன்" என்று குறிக்கப்பட்டவன்; a person mentioned in temple inscription.

[முழையூர்+நாட்டு+கோன்]

முள்ளக்காரா *mulla-k-kārā,* பெ. (n.) ஒரு வகைச்சிறு கடல் மீன்; a kind of sea fish small in size.

[முள்ளு+காரா]

முள்ளஞ்சாயல் *mullañcāyal,* பெ. (n.) அலையில் மிதக்கும் தென்னை ஓலை நிழல் பகுதி; shadow caused by coconut tree branches laid on the surface of the sea enabling the fisherman to catch vavval variety of fish.

[முள்ளம்+சாயல்(நிழல்)]

முள்ளரம் *mullaram,* பெ. (n.) இரும்பிலுள்ள மேடு, பள்ளங்களைத் தேய்த்துச் சரி செய்ய உதவும் இரண்டு பக்கங்களிலும் முள் அமைப்பில் இருக்கும் அர வகை; spiked file on both side.

[முள்+அரம்]

முள்ளன்றம் *mullanram,* பெ. (n.) அரக்கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arakonam Taluk.

[ஒருகா. முள்+மன்றம்]

முள்ளார்மீன் *mullārmīn,* பெ. (n.) ஒரு வகைச் சிறு கடல் மீன்; a kind of sea fish.

[முள்+ஆர்+மீன்]

முள்ளாவலை *mullāvalai,* பெ. (n.) கடலடித் தரையில் உள்ள மீன்களைப் பிடிப்பதற்காகக் கனமான எடைக்கல் அல்லது சுடு மண் உருளை கட்டப்பட்ட வலை; a type of fishing net.

[முள்ளுதல் - (முகந்து அள்ளுதல்) முள்–முள்ளான்+வலை]

முள்ளி *mulli,* பெ. (n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurantakam Taluk.

[முள்–முள்ளி]

முள்ளிக்குடி *mulli-k-kudi,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[முள்–முள்ளி+குடி]

முள்ளிப்பாளையம் *mulli-p-pālaiyam,* பெ. (n.) வேலூர்க்கு அருகில் உள்ள ஒரு ஊர்; a village near the Vellore.

[முள்ளி+பாளையம்]

அடர்ந்த முள்ளிச் செடிகள் எங்கும் நிறைந்த பகுதியில் உண்டான ஊர். "முள்ளிப்பாளையம்" காரணப் பெயர்.

முள்ளுக்காரை *mullu-k-kārai,* பெ. (n.) காரை மீன் வகையுள் ஒன்று; silver bellies.

[முள்ளு+காரை]

முள்ளுக்குத்தி *mullu-k-kutti,* பெ. (n.) நெய்யப்பட்ட சேலையை அகலவாக்கில் தொய்வின்றி இழுத்துப் பிடிக்கப் பயன்படுத்தப்படும்

முள் சட்டம்; a frame to hold tightly in handloom.

[முள்-முள்ளு+குத்தி]

முள்ளுபிளாச்சி *mu!!upi!ācci*, பெ. (n.) முள்ளம்பன்றி மீன் வகை; porcupine fish.

[முள்ளு+பிளாச்சி]

முள்ளுமுனை *mu!!umuṉai*, பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[முள்ளு+முனை]

முள்ளுவாடி *mu!!uvāḍi*, பெ. (n.) வேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vellore Taluk.

[முள்-முள்ளு+வாடி]

முள்ளூறி *mu!!ūṟi*, பெ. (n.) ஒரு வகை மீன்; marked fik fish.

[முள்+ஊறி]

முளை *mu!ai*, பெ. (n.) மாடுகளைக் கட்ட நிலத்தில் ஊன்றும் தடித்த மரக்குச்சி; a short pole fixed to tie the cattle in one place.

மறுவ. முளைக்குச்சி

[முள்-முளை]

முளை ஒதுங்கல் *mu!aiodungal*, பெ. (n.) விதை நெல்லை ஐந்து நாள் காய வைத்து எடுத்து வைத்தல்; preserving the choice paddy for seeding purpose.

[முளை (முளை நெல்)+ ஒதுங்கல்]

முளைக்குச்சி *mu!ai-k-kucci*, பெ. (n.) கால் நடைகளைக் கயிற்றில் கட்டுவதற்காக நிலத்தில் நடப்படும் சிறிய மரக்கம்பு; a short pole fixed to tie the cattle in one place.

[முளை+குச்சி]

முளைநீர் *mu!ai-nīr*, பெ. (n.) விதை நெல் முளைத்தவுடன் பாய்ச்சும் நீர்; watering the paddy field as soon as the seed sprouts.

மறுவ. எடுப்பு நீர், கங்களவு

முற்றதிகாரி *muṟṟadikārī*, பெ. (n.) விருப்பமாக ஆட்சி செய்பவன்; ruler of autocracy.

[முற்று+அதிகாரி]

முறிவாடு *muṟivāḍu*, பெ. (n.) நஞ்சை (விடத்தை) முறிக்கும் மருந்து; anti poison medicine. (கொ.வ.வ.சொ.126).

[முறி+(பாடு)வாடு]

முறுக்கு *muṟukku*, பெ. (n.) சிற்பியர் வடிவமைக்கும் ஒரு கையணி; an ornament in sculpture.

[முறு-முறுக்கு]

முறுக்குத்தட்டம் *muṟukku-t-taṭṭam*, பெ. (n.) முறுக்கு பிழியும் கருவி; a device to make a snack *muṟukku*.

[முறுக்கு+தட்டம்]



முறுக்குப்பட்டு *murukku-p-paṭṭu*, பெ. (n.) இரண்டு இழைகள் சேர்த்து முறுக்கிய இழையாலான பட்டு; double thread silk.

[முறுக்கு+பட்டு]

முறுக்கேறிய மஞ்சி *muṟukkēṟiya-mañji*, பெ. (n.) யாழுக்குரிய நரம்பினை மீட்டுவதில் செய்யத் தகாதது; the don't of playing harp.

[முறுக்கு+ஏறிய+மஞ்சி]

முறை *muṟai*, பெ. (n.) ஆளத்தி பாடப்படும் முறைகளில் ஒன்று; a method of singing ā!atti.

[முறு-முறை]

முறைநீர் *muṟainīr*, பெ. (n.) வளரும் நெற்பயிருக்கு நாள் முறை வைத்து பாய்ச்சும் நீர்;

watering the paddy field on fixed time duration.

[முறை+நீர்]

முறைப்பாடு *murai-p-pāḍu,* பெ. (n.) செய் வினைச் செய்தலைக் குறிக்கும் நாட்டுப்புறச் சொல்; a term denoting causing mythical evil.

[முறை+பாடு]

முன்கட்டி *muṉ-kaṭṭi,* பெ. (n.) முறத்தில் முன் புறம் உள்ள இரண்டு மூலைகளைக் கட்டுகை; finishing two ends in winnow making.

[முன்+கட்டி]

முன்குச்சி *muṉkucci,* பெ. (n.) முறத்தின் முன்பக்கம் குச்சி வைத்துக் கட்டுவது; fire part fixing stick in the fore front of the winnow.

[முன்+குச்சி]

முன்கைத்தொடரி *muṉkai-t-toḍari,* பெ. (n.) கைச்சங்கிலி; hands cuff.

[முன்+கை+தொடரி]

முன்தண்டு *muṉtaṇḍu,* பெ. (n.) வடும்புத் தண்டில் இருந்து நூல்களை முன்தண்டுக்குக் கொண்டு வந்து இணைக்கும் மரம்; ; a device in handloom.

[முன்+தண்டு]

முன்னேறும் சிலைகள் *muṉ-ṉ-ēṟumśilaigaḷ,* பெ. (n.) தொடுபவர் ஒன்று முதல் பத்து வரை எண்ணுவதற்குள் சிலையாக நிற்கும் விளையாட்டு; a children's game.

[முன்னேறும்+சிலை+கள்]

முனியந்தல் *muṉiyandal,* பெ. (n.) திரு வண்ணாமலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvannamalai Taluk.

[முனி+ஏந்தல்(ஏரி)]

முனிவாழை *muṉivāḻai,* பெ. (n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkurichi Taluk.

[முன்னி+வாழை]

முனிவேடம் *muṉi-vēḍam,* பெ. (n.) பூத நடனம்; a bhuta dance.

[முனி+வேடம்]

முனையதரையனான கண்டிய தேவன் *muṉaiyataraiyaṉāṉa kaṇḍiyatēvaṉ,* பெ. (n.) வீரபாண்டியன் 10வது ஆட்சி ஆண்டில் சந்தி ஏற்படுத்தி இதற்காகச் செலவுக்குத் தவசி பெரும் பாக்கத்தில் வரி நீக்கி நிலங்களைத் தானமாக வழங்கிய குறுநில மன்னன்; a chieftain.

[முனையதரையன்+ஆன+கண்டியன்+தேவன்]

மூக்கணாங்கயிறு *mūkkaṇāṅkayiṟu,* பெ. (n.) மாட்டு மூக்கில் குத்திக் கட்டப்படும் கயிறு; a rope tied through the nose of the cattle.

[மூக்கு+அணம்+கயிறு]



மூக்குத்தள்ளு *mūkku-t-taḷḷu,* பெ. (n.) கோலிக்குண்டு விளையாட்டில் தோற்றவர் குண்டினைத் தள்ளும் வகை; a children's game.

[மூக்கு+தள்ளு]

மூக்குடி *mūkkuḍi,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[மூத்த+குடி-மூக்குடி]

மூக்குமட்டை *mūkku-maṭṭai,* பெ. (n.) பனை மரத்தின் நுனி மட்டை; tip of palmyra leaf-stalk.

[மூக்கு+மட்டை]

மூகளூர் *mūgaḷūr,* பெ. (n.) ஒசூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Hosur Taluk.

[மூன்று+கல்+ஊர்-முக்கல்லூர்-மூகலூர்-மூகளூர் (கொ.வ.)]

மூங்கில் கலவா *mūṅgil-kalavā*, பெ. (n.) ஒரு வகை மீன்; yellow rock cod.

[மூங்கில்+கலவாய்]



மூங்கில் கூடை *mūṅgil-kūḍai*, பெ. (n.) மூங்கிலால் பின்னப்பட்ட கூடை; a bamboo basket.

[மூங்கில்+கூடை]

மூஞ்சூர்பட்டு *mūñjurpaṭṭu*, பெ. (n.) வேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vellore Taluk.

[மூஞ்சூர்+(பற்று)பட்டு]

மூட்டுக்குட்டி *mūṭṭu-k-kuṭṭi*, பெ. (n.) பெண் ஆட்டுக்குட்டி; young of she-goat. "மூடும் நாகும் யாடல பெறா" (தொல்.மரபி.).

[மூடு+குட்டி]

மூட்டி *mūṭṭi*, பெ. (n.) ஆண்கள் உடுத்தும் சாரம்; lungi.

மறுவ. வரியன்

[மூட்டு–மூட்டி]

மூடுகுழி *mūḍu-kuḻi*, பெ. (n.) பல்லாங்குழியில் தோற்று நிரப்பப்படாத வெறுங்குழி; pit not filled in an indoor game. (தெ.ஆ.வ.).

[மூடு+குழி]

மூடூர் *mūḍūr*, பெ. (n.) வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wandiwash Taluk.

[முடுவல்–மூடு+ஊர்]

மூணாங்குழி *mūṇāṅguḻi*, பெ. (n.) இறப்புச் சடங்கின்போது, பால் தெளிக்கும் இடம்: a place to conduct the third day death rite.

த.வ. மூன்றாம்குழி

[மூன்றாம்+குழி–மூன்றாங்குழி–மூணாங்குழி (கொ.வ.)]

மூணாம்சேத்தி *muṇamsētti*, பெ. (n.) மன்னார்குடி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Mannargudi Taluk.

[மூன்றாம்+செய்–செய்த்தி–சேத்தி]

மூணுகட்டை *mūṇukaṭṭai*, பெ. (n.) ஒன்று முதல் ஆறு வரையிலான எண்கள் எழுதப்பெற்ற அட்டையும், மூன்று கட்டைகளும் பயன்படுத்தி ஆடப்படும் சூது விளையாட்டு; a dice play.

[மூன்று+கட்டை]

மூத்தாருண்ணி *mūttāruṇṇi*, பெ. (n.) கல்குளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kalkulam Taluk.

[மூத்த+ஊருணி]

மூத்தை *mūttai*, பெ. (n.) முதியவன்; old man. மூத்தையால் நடக்க முடியவில்லை (மீனவ.).

[மூத்தல்–மூத்தை]

மூர்தினிவயல் *mūrdiṇivayal*, பெ. (n.) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[மூலை+தண்ணீர்+வயல்]

மூலக்காடு *mūla-k-kāḍu*, பெ. (n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkurichi Taluk.

[மூலை+காடு]

மூலக்குச்சி *mūla-k-kucci*, பெ. (n.) வடும்புத் தண்டையும் முன் தண்டையும் இழுத்துக் கட்டும் குச்சிகள்; an handloom device.

[மூலை+குச்சி]

மூலக்குறிச்சி *mula-k-kuṛicci*, பெ. (n.) மதுரை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurai Taluk.

[மூலை+குறிச்சி]

மூலம்பேடு அந்தணன் *mūlampēḍu andaṉaṉ,* பெ. (n.) உப்பு வணிகராயிருந்து கல்வி, ஒகம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்று முக்கோல் அந்தணராகிய சான்றோர்; the name found in a burial urn, refers to a agamic Tamil saint though originally he was a salt merchant. Anthanan in TINAI social organisation was a status name of non-Aryan Tamil society.

[மூலம்பேடு+அந்தணன்]

மூலைமடக்கி *mūlai-maḍakki,* பெ. (n.) முறத்தில் மூலையை மடக்கிப் பின்னுவது; folder knit of corners.

[மூலை+மடக்கி]

மூலவயல் *mūlaivayal,* பெ. (n.) **1.** திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk. **2.** அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[மூலை+வயல்]

மூலனூர் *mūlaṉūr,* பெ. (n.) தாராபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Dharapuram Taluk.

[மூலன்+ஊர்]

மூலைக்கோடு *mūlai-k-kōḍu,* பெ. (n.) கட்ட விளையாட்டில் நான்கு மூலைகளை இணைக்கும் கோடு; line connecting four corners.

[மூலை+கோடு].

மூவர்கண்மாய் *mūvarkaṇmāy,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[மூவர்+கண்மாய்]

மூவேந்தர் உடன்படிக்கை *mūvēndar uḍaṉpaḍikkai,* பெ. (n.) மூவேந்தர் கூட்டணி பார்க்க; see *mūvēndarkūṭṭaṇi.*

[மூன்று+வேந்தர்+உடன்படிக்கை]

மூவேந்தர் கூட்டணி *mūvēndar-kūṭṭaṇi,* பெ. (n.) வடநாட்டுப் படையெடுப்பை முறியடிக்கத் தமிழ் மூவேந்தர்களும் ஒன்றுகூடி தமக்குள் செய்துகொண்ட உடன்படிக்கை; federation of the three Tamil kings made an accepted agreement in view of safeguarding against the invasion or attack of north Indian armies and plunderers. (காரவேலன் கல்வெட்டு).

[மூ(மூன்று)+வேந்தர்+கூட்டணி]

மூன்றன் அலகு *mūṉṟaṉ-alagu,* பெ. (n.) ஒரு தட்டும் இரண்டு எண்ணிக்கையும் கொண்ட தாளக்குறியீடு; a time measure of steps.

[மூன்று+அன்+அலகு 'அன்'–சாரியை]

மூன்றாக மறைதல் *mūṉṟaga maṟaidal,* பெ. (n.) விரட்டுபவன் ஓடுகின்றவனைத் துரத்தியும், ஓடுபவன் தப்பிக்க ஓர் இணையரின் (சோடியின்) பின்னால் மறைந்து நின்றும் விளையாடல்; a children's play.

[மூன்று+ஆக+மறைதல்]

மூன்றாங்கல் *mūṉṟāṅkal,* பெ. (n.) தட்டாங்கல் ஆட்டத்தின் வகை; a children's play.

[மூன்று+ஆம்+கல்]

மூன்றுகளை *mūṉṟukaḷai,* பெ. (n.) ஒரெண்ணிக்கைக்குள் பன்னிரு குறில்கள் அடைந்து ஒலிக்கும் நேரம்; a metre in prosody.

[மூன்று+களை]

மூன்று கால் ஓட்டம் *mūṉṟukāl-ōṭṭam,* பெ. (n.) ஓர் அணி இணைகளில் ஒரு பக்கமுள்ள கால்களை ஒரு துண்டுக் கயிற்றால் கட்டிக் கொண்டு ஓடுதல்; three legged relay).

[மூன்று+கால்+ஓட்டம்]

மெட்டடைவு *mettadaivu,* பெ. (n.) அரை மண்டியில் காலின் மெட்டி அணிகின்ற பகுதியை நிலத்தினின்று எடுக்காமல் குதி காலை மட்டும் உயர்த்தித் தட்டுவது; a step in dance.

[மெட்டு+அடைவு]

மெட்டராத்தி *mettarātti,* பெ. (n.) உடுமலைப் பேட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in udumalpet Taluk.

[மேட்டு+அரத்தி]

மெய் இழி-தல் *meyili-,* செ.கு.வி. (v.i.) கருக்கலைதல்; to be abort. அந்த அம்மை யார்க்கு மெய் இழிந்தது. (உ.வ.)

மறுவ. உடம்பு இறங்குதல்

[மெய்+இழி]

மெய்ந்நிலை *mey-n-nilai,* பெ. (n.) பரதநாட்டி யத்தில் பயன்படுத்தப்படும் ஒரு முத்திரை நிலை; a pose in dance.

[மெய்+நிலை]

மெலிவு *melivu,* பெ. (n.) ஆளத்தி பாடுவதற் கேற்ற பகுப்பு; a melody stage.

[மெல்-மெலிவு]

மெலைமுறி *mēlaimuri,* பெ. (n.) பாண்டிய நாட்டுச் சிற்றூர்; a village in Pandya territory. "வல்லனாடு மெலைமுறி திருச்சடை முடி என்கிற கிராமம்..." (தெ.சா.7:4:எ.489).

[மேலை-மெலை+முறி]

மென்னிப்பிடிச்சுழி *menni-p-pidiccuḷi,* பெ. (n.) மாட்டின் கழுத்தின் கீழ்ப்பக்கத்தில் இருக்கும் தீமை பயக்கும் சுழி; a bad mark on cow.

[மென்னி+பிடி+சுழி]

மெனிசி *menisi,* பெ. (n.) அரூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Harur Taluk.

[மிளகு-மிளகி-மெனிசி]

மேக்களூர் *mēkkaḷūr,* பெ. (n.) திருவண்ணா மலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvannamalai Taluk.

தெ. மேக்கலு

[மேழகம்-(செம்மறி ஆடு) மேக்கள்+ஊர்]

மேகம் *mēgam,* பெ. (n.) தோற் பாவைக் கூத்தில் பயன்படுத்தப்படும் திரைச்சீலை; a screen in puppet show.

[மேகு-மேகம்]

மேகாத்து *mēkāttu,* பெ. (n.) மேற்கு திசை யிலிருந்து வீசும் காற்று; westerly wind.

[மேல்+காற்று]

மேச்சல்காடு *mēccal-kāḍu,* பெ. (n.) ஆடு, மாடு, மேயும் இடம்; grazing ground.

[மேய்ச்சல்+காடு > மேச்சக்காடு. கொ.வ.]

மேட்டாங்காடு *mētta-ṅ-kāḍu,* பெ. (n.) புன்செய் நிலம், வானவாரி உழவு நிலம்; dry land.

[மேடு+ஆம்+காடு]

மேடைத்தறி *mēḍai-t-tari,* பெ. (n.) தரை யில்ருந்து 11/2 அடி உயரத்தில் அமைக்கப்பட்ட நெய்யும் வசதியுடைய தறி வகை; handloom on a raised stage.

[மேடை+தறி]

மேம்போக்கு *mēmpōkku,* பெ. (n.) எதிலும் இடர்ப்படாமல் மேலோட்டமாகச் செய்தல்; soft pedalling nature.

[மேல்+போக்கு]

மேல் கொங்கு *mēlkōngu,* பெ. (n.) கொங்கு நாட்டின் மேற்பகுதி; western part of Kongu country.

மறுவ. மீகொங்கு

[மேல்+கொங்கு]

மேல் கோப்பு *mēlkōppu,* பெ. (n.) வீட்டின் மேல் உள்ள பகுதிகள்; upper part of wall in a house.

[மேல்+கோப்பு]

மேல்தறி *mēltari,* பெ. (n.) நிலத்தில் குழி இல்லாமல் அமைக்கப்பட்டிருக்கும் தறி; handloom set above the ground level.

[மேல்+தறி]

மேல்நர்மா *mēlnarma,* பெ. (n.) அரக்கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arakonam Taluk.

[ஒருகா. மேல்+நன்மா–மேல்நன்மா–மேல் நர்மா (கொ.வ.)]

மேல்நிலையாக்கம் *mēlnilaiyākkam,* பெ. (n.) ஒன்றை மேம்படுத்துதல்; upgradation, further development.

[மேன்+நிலை+ஆக்கம்]

மேல் பளுவு *mēlpaluvu,* பெ. (n.) ஏணியின் மேல் பகுதியில் மொத்தமான பளுவைப் போட்டு ஏணிக் குச்சிகளை இணைப்பது; connecting the steps in a ladder putting weight above.

[மேல்+பளுவு]

மேலபூடி *mēlapūḍi,* பெ. (n.) திருத்தணி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruthani Taluk.

[மேலை+பூண்டி(ஏரி)]

மேலழகினானூர் *mēlālaginānūr,* பெ. (n.) நெல்லை மாவட்டத்தில் தென்காசி வட்டத்தில் அமைந்துள்ள ஓர் ஊர்; a village in Thenkasi (Taluk) Nellai (dt.).

[மேல்+அழகினான்+ஊர்]

மேலம்பி *mēlambi,* பெ. (n.) காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[மேல்+அம்பி]

மேலைத்தாங்கல் *mēlaittāṅgal,* பெ. (n.) வேலூர் மாவட்டத்தில் நெடுங்குணம் அருகில் உள்ள ஓர் ஊர்; a village in Vellore near the Nedumkunam.

[மேலை+தாங்கல்(ஏரி)]

'சுக்கிய வருடம்' எனத் தொடங்கும் பிற்காலக் கல்வெட்டில் இவ்வூர் இடம் பெற்றுள்ளது.

மேவண்டு *mēvaṇḍu,* பெ. (n.) வண்டின் ஒரு வகை; a kind of beetle.

[மை–மே+வண்டு]

மேவாணி *mēvāṇi,* பெ. (n.) கோபிச்செட்டி பாளையம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Gopichettipalayam Taluk.

[மேல்+வாணி]

மேளச்சட்டி *mēḷa-c-caṭṭi,* பெ. (n.) மேள இசைக்குப் பயன்படும் சட்டி; a pot used for music performance.

[மேளம்+சட்டி]

மேற்கட்டு கட்டுதல் *mēṟ-kaṭṭu-kaṭṭudal,* பெ. (n.) நாட்டுப்புறங்களில், வீடு கட்டும் நுட்பங்களில் ஒன்று; a device of house construction in village.

[மேல்+கட்டு+கட்டுதல்]

மேற்கண்டை *mēṟkaṇḍai,* பெ. (n.) செங்கற்பட்டு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chinglepet Taluk.

[மேல்+கண்டி–கண்டை–(கண்டி–நீர்நிலை)]

மேற்கணக்கு *mēṟkaṇakku,* பெ. (n.) ஐம்பது முதலா ஐந்நூறு ஈறாக ஐவகைப்பாவும் பொருள் தெரிமரபின் தொகுக்கப்படுவது; anthology of ancient poems.

[மேல்+கணக்கு]

மேற்செலவு *mēṟ-celavu,* பெ. (n.) சில்லறைச் செலவுகள்; extra expense.

மறுவ. கைச்செலவு

[மேல்+செலவு > மேச்செலவு]

மேற்பரப்பு *mēṟparappu,* பெ. (n.) ஓவியம் வரைவதற்கேற்ப சுவரைப் பதப்படுத்துதல்; softening the surface of the wall for drawing decorations.

[மேல்+பரப்பு]

மேற்றலை *mēṟṟalai,* பெ. (n.) பனைமரத்தின் உச்சி; top of palmyra.

[மேல்+தலை]

மேனலூர் *mēṉalūr,* பெ. (n.) அரக்கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arkonam Taluk.

[மேல்+நல்லூர்–மேல்நல்லூர்–மேனலூர் (கொ.வ.)]

மேனிலாப்பபடியான வீரராசேந்திரபுரம் *mēṉilāppaḍiyānā-virarāsēndirapuram,* பெ. (n.) திருவாரூர் மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; a village in Thiruvarur.

[மேல்+நிலை+பாடி+ஆன+வீரராசேந்திரபுரம்]

மைதகம் *maidagam,* பெ. (n.) விளவங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vilavancode Taluk.

[ஒருகா. மை+(தடாகம்) தகம் – மைதகம் (கரிய நீர்நிலை)]

மையக்குறுக்கு *maya-k-kuṟukku,* பெ. (n.) காலத(சன்னலின்)ரின் நடுவில் (மையத்தில்) இருப்பது; middle rib in window.

[மையம்+குறுக்கு]



மையூர்கிழான் *maiyūrkiḻan,* பெ. (n.) இளஞ் சேரல் இரும்பொறையின் அமைச்சராக இருந்த கற்றுத்துறை போகிய பெருமகனார்; a learned minister in the Royal assembly of the Cera king Ilaṉcēral Irumporai.

[மையூர்+கிழான். மை–எருமை. மையூர்–மைசூர்]

இவர் அந்வஞ்செள்ளையின் தந்தையும் பெருஞ் சேரல் இரும் பொறையின் மாமனாரும் இளஞ்சேரல் இரும்பொறையின் தாய்வழிப் பாட்டனாரும் ஆவார்.

மைலார்வாடா *mailārwāḍa,* பெ. (n.) திருத் தணி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruthani Taluk.

[மயில்+ஆல்+வாடி–மயிலார்வாடி–மைலார் வாடா (கொ.வ.)]

மைலி *maili,* பெ. (n.) அருப்புக்கோட்டை வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Aruppukkottai Taluk.

[மயில்–மைலி]

மைலை *mailai,* பெ. (n.) செங்கற்பட்டு வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Chinglepet Taluk.

[மயில்–மைலை]

மைவயல் *maivayal,* பெ. (n.) அறந்தாங்கி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[மொய்–மை+வயல்]

மொக்குரி *mokkuri,* பெ. (n.) தண்ணீரில் மூழ்கி எழுதல்; diving deep and coming up in water.

[முக்குளி–மொக்குரி (கொ.வ.).]

மொக்கையடி *mokkaiyaḍi,* பெ. (n.) உள் அடி; a fluid hit.

[மொக்கை+அடி]

மொகுட்டோடு *moguṭṭōḍu,* பெ. (n.) வீட்டின் மேலே முகட்டுப் பகுதியில் போடும் ஓடு; roof tile.

[முகட்டு+ஓடு > மொகுட்டோடு (கொ.வ.)]



மொகுடு *moguḍu,* பெ. (n.) வீட்டின் மேலே உள்ள கூம்பு வடிவ பகுதி; conical shape of the inner roof. (கொ.வ.வ.சொ.129).

[முகடு > மொகுடு (கொ.வ.)]

மொட்டச்சி *mottaccai,* பெ. (n.) ஒரு வகை மீன்; silver sides.

[மொட்டை–மொட்டச்சி]

மொட்டப்பாறை *mōtta-p-pārai,* பெ. (n.) மொர மொரப்பான சிறிய பாறை; a rough rock surface.

[மொட்டை+பாறை]

மொட்டனூக்கு *mottanūkku,* பெ. (n.) பெரிய குளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Periyakulam Taluk.

[மொட்டன்+நூக்கு]

மொட்டாக்கோலா *mottā-k-kōla,* பெ. (n.) கோலா மீன் வகை; half beak.

[மொட்டை+கோலா]

மொட்டிக்கோலா *mottikkōla,* பெ. (n.) கெண்டை மீன் வகையுள் ஒன்று; silver sides.

[முட்டி–மொட்டி+கோலா]

மொட்டை *mottai,* பெ. (n.) பல்லாங்குழியில் தோற்றவர் பெயர்; a term to denote the loser in a game.

[மொழு–மொடு–மொட்டை]

மொடவண்டி *modavandi,* பெ. (n.) ஈரோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Erode Taluk.

[முட+ஆண்டி–முடவாண்டி–மொடவண்டி (கொ.வ.)]

மொடா *modā,* பெ. (n.) தவசம் (தானியம்) போட்டு வைக்கவும் நீர் ஊற்றி வைக்க உதவும் மட்பாண்டம்; earthen pot.

மறுவ. மிடா

[மிடா–மொடா]

மொடை *modai,* பெ. (n.) 1. தட்டுப்பாடு; scarcity 2. ஒட்டாரம் (பிடிவாதம்); adamant.

1. [முடை–மொடை (கொ.வ)] 2. [மொடு–மொடை]

மொதகெண்டை *modakendai,* பெ. (n.) கெண்டை மீன் வகையுள் ஒன்று; rainbow sardine.

[முதை+கெண்டை]

மொதை *modai,* பெ. (n.) பாளை நெல்லும் வைக்கோலும் கலந்த கலவை; left out grains of paddy and paddy stalk particles.

[மீதம்–மொது+மொதை]

மொந்தகலயம் *mondakalayam,* பெ. (n.) நீர் பருகுவதற்குப் பயன்படும் செம்பு போன்ற மண் கலயம்; small earthern pot used for drinking water.

[மொந்தை+கலயம்]

மொந்தை *mondai,* பெ. (n.) தோலிலான பண்டைய ஒருமுகப்பறை; a percussion music instrument.

[மொள்–மொந்தை]

மொந்தையன் திருவிழா *mondaiyan-tiruvilā,* பெ. (n.) திருஆலவாய் நல்லூரில் (மதுரை) ஆடி மாதத்தில் நடைபெறும் விழா; a festival celebrated during August at Madurai.

[மொந்தையன்+திருவிழா]

மொய்பட்டி *moypatti,* பெ. (n.) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kallakkurichi Taluk.

[மை–மொய்+பட்டி(கொ.வ.) மை–குறும்பை ஆடு]

மொரங்கம் *morangam,* பெ. (n.) திருச்செங் கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruchengodu Taluk.

[முருங்கை – முருங்கம் – மொரங்கம் (கொ.வ.)]

மொரசன் *morasan,* பெ. (n.) முரடன்; a rogue.

[முரடன்–மொரசன்(கொ.வ.)]

மொரான் *morān,* பெ. (n.) கெண்டை மீன் வகையுள் ஒன்று; ox-eyed herring.

[மூரன்–மொரான்]

மொழங்கு *molangu,* பெ. (n.) தவச (தானிய)க் கட்டையில் இருக்கும் சிறு துகள்கள்; small particles in corn.

[முரம்பு–முரங்கு–மொளங்கு–மொழங்கு (கொ.வ.)]

மொழுகு–தல் *molugu-,* 5 செ.குன்றாவி. (v.t.) முறம் கட்டிய பின் மெழுகுதல்; to smear with cow dung.

[மெழுகு–மொழுகுதல்(கொ.வ.)]

மொளசி *moḷasi,* பெ. (n.) திருச்செங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruchengode Taluk.

[முளவு(முயல்)–முளசி–மொளசி]

மொளப்பாரி *moḷa-p-pāri,* பெ. (n.) திருவிழாக் களில் முளைப்பாலிகை வளர்க்கும் சட்டி; a pot.

[முளை+பாலிகை) பாலி–பாரி]

மொளப்பாலிகை *moḷa-p-pāligai,* பெ. (n.) திருவிழாக்களில் எடுத்துச் செல்லும் முளைப் பாலிகை; plate of sprouted greens during festival days.

[முளைப்பாலிகை > மொளப்பாலிகை (பே.வ.)]

மொளி *moḷi,* பெ. (n.) கால் தாண்டி ஆட்டத்தில் காலின் மூட்டுப் பகுதியைப் பிடித்து குனிந் திடுதல்; bowing down in children's play.

[முழி–முளி–மொளி]

மொன்னானி *monnāni,* பெ. (n.) திருவா டானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[ஒருகா. பொன்னானி–மொன்னானி]

மொன்னியோலை *monni-y-ōlai,* பெ. (n.) விரியாத பனையோலை; unspread palm leaf.

[மொன்னி+ஓலை]

மோக்குக் கயிறு *mōkku-k-kayiru,* பெ. (n.) பாவு உருளை சுற்றும் கயிறு; device in handloom.

[மோக்கு+கயிறு]

மோகூர் *mōgūr,* பெ. (n.) மதுரை மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; a village in Madurai district.

[மூதூர்–மோகூர்]

மோட்டை *mōṭṭai,* பெ. (n.) வரப்பில் உள்ள துளை; a small hole found in ridge of a field.

[மோடு–மோட்டை]

மோசட்டை *mōsaṭṭai,* பெ. (n.) விருத்தாசலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vriddhachalam Taluk.

[ஒருகா. மோசு+பட்டி–மோசுபட்டி–மோசட்டி–மோசட்டை (கொ.வ.) மோசு= தோல்தொழில்]

மோசி *mōsi,* பெ. (n.) 1. தோல் உரித்தல்; peeling skin. 2. முடிகளைதல்; shaving the head.

[மூசு–மோசு–மோசி]

மோசு–தல்[1] *mōsu-,* 5 செ.குன்றாவி. (v.t.) தலையில் சுமத்தல்; to carry on head.

தெ. மோசு

[முய்–மொய்–மோசு]

மோசு–தல்[2] *mōsu-,* 5 செ.குன்றாவி. (v.t.) களைதல், நீக்குதல்; to remove.

[மூசு–மொசு]

மோசுகுடி *mōsukuḍi,* பெ. (n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[மோசு+குடி–மோசுகுடி. மோசு–தோல்தொழில்]

மோட்டு வளை *mōṭṭuvaḷai,* பெ. (n.) எலி வலை; rat holes at the roof of thatched houses.

[முகடு–முகட்டு+மோட்டு+வளை]

மோடி விளையாட்டு *mōḍi-viḷaiyāṭṭu,* பெ. (n.) மதுரை வட்டார விழாக்காலத்து விளையாட்டு களில் ஒன்று; a regional festival play in Madurai area.

[மோடி+விளையாட்டு]

மதுரை வட்டாரத்தில் தேவாங்குச் செட்டியார், கோயில் பூசாரிகள் பங்கு பெறும் விளையாட்டு.

மோதுகுட்டை *mōdukuṭṭai,* பெ. (n.) திருப் பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[ஒருகா. முது–மோது+குட்டை]

மோரியர் *mōriyar,* பெ. (n.) கி.மு.372 முதல் கி.மு. 175 வரை மகதத்தை ஆண்ட அரச மரபினர்; Mouria king who ruled Magada from 372 to 176 B.B. வம்ப மோரியர்.

[மவுரியர் – மோரியர்]

மோரு விளையாட்டு *mōru-viḷaiyāṭṭu,* பெ. (n.) சிறுமியர் நடித்தாடும் விளையாட்டு; a dramatic play of young girls.

[மோர்–மோரு+விளையாட்டு]

மோழி *mōḻi,* பெ. (n.) அழுக்குத் துணிகளின் மூட்டை; a bundle of dirty clothes.

[மூழை–மோழி]

மோளக்குச்சி *mōḷa-k-kucci,* பெ. (n.) தாளம் எழுப்ப உதவும் கோல். stick used for drumming.

[மேளம்–மோளம்+குச்சி]

ய

யந்திரி *yandiri,* பெ. (n.) தோலாற் செய்யப்பட்ட இசைக்கருவி; musical instrument made of leather. (1:132).

[இய–இயந்திரி–யந்திரி]

யாப்பு *yāppu,* பெ. (n.) யாழின் ஓர் உறுப்பு; component of an stringed instrument called lute. (13:83).

[யா–யாப்பு]

யாமளேந்திரர் *yāmalēndirar,* பெ. (n.) இந்திரகாளியம் நூலின் ஆசிரியர்; author of Indrakāliyam.

யாமை *yāmai,* பெ. (n.) பிங்கல நிகண்டு கூறுகின்ற நெய்தலின் பண் வகை; melody type belongs to maritime (Pingala nigandu).

[யா–யாமை]

யாழ *yāḻa,* பெ.(n.) இடை, அசை நிலை; an expletive.

[எல்–எலுவன்–ஏல–ஏழ–யாழ]

மறுவ. தரிக கீறுதல்

யாழ்ப்பதம் *yāḻ-p-padam,* பெ. (n.) நெய்தலுக்குரிய பதினாறு பண்களில் ஒன்று; one of 16 melody type of maritime music.

[யாழ்+பதம்]

யாழ்முரி *yāḻmuri,* பெ. (n.) சம்பந்தர் பாடிய பண் வகை; melody sung by a conconized siva saint Sambandar.

[யாழ்+முரி]

யாழ *yāḻa,* இடை. (inter.) அசை நிலை; an expletive.

[எல்–எலுவன–ஏல – ஏழ – யாழ]

யாளி வளைவு *yāḷivaḷaivu,* பெ. (n.) மண்டப வாயிற்படிகளின் அருகில் அமைக்கப்படும் யாளி உருவம்; a mythical animal carved in front of the threshold of a mandapam.



[யாளி+வளைவு]

யானைத்தவிசு *yāṉai-t-tavisu,* பெ.(n.) யானை மீது அமைக்கப்படும் இருக்கை (சௌளடோல்); howdah.

[யானை+தவிசு]

மறுவ. அம்பாரி

யானை நூல் *yāṉainūl,* பெ.(n.) அறுபத்து நான்கு கலையுள் யானையிலக்கணம் அறியுங் கலை (கசபரீட்சை); science relating to the points of the elephant, one of arupattu-nālu-kalai.

[யானை+நூல்]

யானைப்பசி *yāṉai-p-pasi,* பெ.(n.) அளவிறந்த பசி; extreme hunger, hyerorexia.

மறுவ. பெரும்பசி

[யானை+பசி]

யானைப்பெருஞ்செல்வம் *yaṉai-p-peruñ celvam,* பெ.(n.) பெருஞ்செல்வம் (கசேந்திரை சுவரியம்); great affluence, opulence.

[யானை+பெரும்+செல்வம்]

யோக வடிவம் *yōgavaḍivam,* பெ. (n.) இறை சிற்பத்தின் வடிவ நிலைகளில் ஒன்று; sculpture form of god.

[ஒகம்–யோகம்+வடிவம்]

வ

வக்கற்றவன் *vakkarravan,* பெ. (n.) பிழைக்கும் வாய்ப்பு இழந்தவன்; useless fellow.

[வகை-வக்கு+அற்றவன்]

வக்கா[1] *vakka,* பெ. (n.) புல்லாங்குழலின் ஓசையில் குரலெடுத்து அகவும் பறவை வகை; a kind of bird which produces the notes equal to that of a flute.

[வங்கு-வங்கா-வக்கா]

வக்கா[2] *vakkā,* பெ. (n.) ஒரு வகை ஓணான்; a kind of Chameleon.

[வகை-வக்கு+அற்றவன்]

வக்கிரித்திட்டம் *vakkirit-tiṭṭam,* பெ. (n.) ஆளத்தியினைப் பதினாறு வகையாகப் பிரித்துப் பாடும் முறை; a method of dividing as 16 kinds while improvising introduction to a melody.

[வக்கரி+திட்டம்]

வகு-தல் *vagu-,* செ.கு.வி. (v.i.) பிளந்து போதல், உடைந்துபோதல்; to get split, divide, to break. அது இரண்டாக வகுந்து போய்விட்டதும்" (உ.வ.).

[பிள்-விள்-விகு-வகு]

வங்கடவலை *vaṅgaḍa-valai,* பெ. (n.) மீன் பிடிவலை வகைகளுளொன்று; a kind of fishing net.

வங்கி *vaṅgi,* பெ. (n.) சிறிய கத்தி; small knife.



வங்கால் ஆடு *vaṅgālāḍu,* பெ. (n.) கால்கள் வெள்ளை நிறத்திலமைந்த ஆடு; a goat with legs in white colour.

[வெண்கால்-வங்கால்+ஆடு (கொ.வ.)]

வசி *vaśi,* பெ. (n.) தட்டு; plate.

[வைத்தி-வத்தி-வச்சி-வசி]

வசித்துவம் *vasittuvam,* பெ. (n.) ஒன்பான் சித்திகளின் சிறப்பக்காட்சி வடிவினில் ஒன்று; a type of sculpture.

[வதி-வசி-வசித்துவ]

வஞ்சி *vañji,* பெ. (n.) மருத நிலத்தின் திறப்பண் வகை; melody type belonging to agricultural tract.

[வள்+சி-வஞ்சி]

வட்ட குத்தாட்டு திரும்பல் அடவு *vaṭṭakut taṭṭu tirumbal aḍavu,* பெ. (n.) ஒயில் கும்மியாட்ட வல்லுநர்கள் கையாளும் அடவு முறை; a stepping method in kummi dance.

[வட்டம்+குத்தாட்டு+திரும்பல்+அடவு]

வட்டச் சடங்குகள் *vaṭṭaiccadaṅgugal,* பெ. (n.) பிறப்பு, திருமணம், இறப்புத் தொடர்பான சடங்குகள்; rites performed during birth marriage *and death.*

[வட்டம்+சடங்கு]

வட்டப்பாலை *vaṭṭappālai,* பெ. (n.) முழுமையான வட்டத்தில் பன்னிரண்டு கோணஞ் செய்து, அதில் ஏழு கோணத்தைக் கொண்டு உறழ்படுவது; a musical method.

[வட்டம்+பாலை]

வட்டம் *vaṭṭam,* பெ. (n.) ஏழிசையின் பகுப்புகளில் ஈறாக வைத்து எண்ணத்தக்கது; the last in the seven notes of the diatonic scale. (t20).

[வள்-வட்டு-வட்டம்]

வட்ட வாசிகை *vattavāšigai,* பெ. (n.) சிவனின் திருவுருவில் இடம் பெறும் ஒரு வகையான சிற்ப வேலைப்பாடு; a kind of ornament carved in siva's sculpture.

[வட்டம்+வாசிகை]

வட்டவாய்த் தொண்டகம் *vattavay-t-tondagam,* பெ. (n.) தொண்டகத்தின் ஒரு வகை; a kind of tondagam.

[வட்டம்+வாய்+தொண்டகம்]

வட்டார வழக்கு *vattāravalagu,* பெ. (n.) தாய் மொழியிலிருந்து கிளைக்கும் சேய்மொழி தனி மொழியாக உருவாவதற்கு முன்பு வட்டாரக் கிளை மொழியாக அரும்பும் நிலையில் எய்தும் சொற்றிரிபு பொருள் திரிபுகள் கொண்ட பேச்சுமொழித் திரிபுகள்; rural dialect usages.

[வட்டாரம்+வழக்கு]

வட்டிகைச் செய்தி *vattigai-c-ceydi,* பெ. (n.) ஓவியத்தைக் குறிக்குஞ் சொல்; a word that denotes art.

[வட்டிகை+செய்தி]

வட்டை *vattai,* பெ. (n.) 1. வண்டிச் சக்கரத்தின் சுற்றுவட்ட மரச்சட்டப் பிணைப்புகளில் உள்ள துண்டுப் பிணைப்பு; outer wooden arc in a cart wheel. 2. எந்திர இயங்கிகளின் சக்கரத்தில் தேய்வை (ரப்பர்) வெளி உருட்டு; tyre of the wheel.

[வள்–வட்டு–வட்டை]



வடக்கத்திப்பாணி *vadakkattippāni,* பெ. (n.) தெருக்கூத்தின் ஒரு வகை; a northern style of dance performed in street drama.

[வடக்கு+அத்து+இ+பாணி]

வடக்கத்திமுடிச்சு *vadakkatti-mudiccu,* பெ. (n.) முடிச்சு வகை; a kind of knot.

வடக்காலூர் *vadakkālūr,* பெ. (n.) வடக்குத் திசையில் உள்ள ஊர்; a town or village on the northern side. அவன் வடக்காலூரி லிருந்து வந்தான் (வடார்க்.வ.).

[வடக்கு+ஆல்+ஊர் – வடக்காலூர்.)

'ஆல்' மூன்றன் உருபு ஏழின் *உருபுப் பொருளில் வந்த உருபு மயக்கம்.*

வடகளவழி *vadakalavali,* பெ. (n.) பாண்டியர் நாடு; Pandiyar territory "பராந்தக ஸ்ரீ வீரநாரணைகளால் வடகளவழி நாட்டின் கட்டிசைச் சுடர் மங்கலம் (பா.செ.ப.).

[வடக்கு+களம்+வழி]

வடசொல் *vadašol,* பெ. (n.) 1. சமற்கிருதச் சொல்; Sanskrit word. 2. வடநாட்டில் வழங்கிய பாகத (பிராகிருத) பாலிமொழிச் சொல்; Prakrit and Pali words of north India.

[வடக்கு+சொல்–வடசொல்]

வடதமிழ் *vadatamil,* பெ. (n.) பாலி தவிர்த்த பல்வகைப் பிராகிருதங்கள் பாகதம் என்னும் பெயரில் வடநாட்டில் பேசப்பட்ட திரிபுற்ற தமிழ்; colloquial Tamil spoken in north India in the name of different Prakrit languages. வடதமிழ்.

[வடக்கு+தமிழ்]

துருக்கரின் கலப்புற்ற அபப்பிரஞ்சம், வடபுல வணிகரின் பைசாசி, அடிமைத்தொழிலாளரின் சூரசேனி. இழிந்தோரின் மாகதி, பொதுமக்கள் பேச்சுமொழியான பிராகிருதம் ஆகிய ஐந்தும் வடதமிழ் எனப்பட்டன.

வடிகாது *vadikādu,* பெ. (n.) துளை பெரிதாக் கப்பட்ட கீழ்க்காது; round holed earlobe.

மறுவ: துளைக்காது, தொள்ளைக்காது

[வடி+காது]

காது வளர்த்து தண்டட்டி அணிந்து கொள்வது தமிழரின் தொன்முது வழக்கம். புத்தர், மகாவீரர் மட்டுமன்றி எகுபதியரும் துளைக்காது கொண்ட வராக இருந்தனர்.



வடி—த்தல் *vadi-,* செ.கு.வி. (v.i.) இரும்புக் கருவிகளைக் கூர்படுத்துதல்; to make the weapons sharp by filing. கத்தியை வடித்துக்கொடு (இ.வ.).

[வள்—வளி—வடி]

வடிதட்டு *vaditattu,* பெ. (n.) கஞ்சி வடிக்கப் பயன்படும் தட்டு; perforated plate use to strain the gruel from the cooked rice.

மறுவ: சிப்புல்தட்டு

[வடி+தட்டு]

வடிமாறு *vadi-maru,* பெ. (n.) பிரம்பு வகையால் பின்னப்பட்ட வடிதட்டு; plaited ratten screen, used as a strainer in cooking rice.

[வடி+மாறு]

வடிவமாதிரிகள் *vadivamadirikal,* பெ. (n.) கை வினைஞன் செய்யப்புகும் கலைப் பொருள் களுக்கான நோக்குரு (முன் மாதிரி); sample of a handicraft by an artisan.

மறுவ. வடிவ நோக்குரு

[வடிவம்+மாதிரி]

வடுகர் *vadugar, பெ.*(n.) கலிங்கர்; the people of *kalinga* (Orissa).

[உடியர்—வடியர்—வடுவர்—வடுகர்.]

வடுகர் என்போர் கலிங்கர்.வடுகர் என்னும் சொல் தெலுங்கரைக் குறிப்பதாக இதுவரை கருதப் பட்டு வந்தது. தெலுங்கு அறிஞர்களும் சங்க இலக் கியங்களில் வடுகர் பெயர் இடம்பெற்றிருப்பதால் தெலுங்கு மிகவும் தொன்மையான மொழி எனவும் தவறாகப் பேசத் தொடங்கிவிட்டனர். ஆனால் இச் சொல் கலிங்க நாட்டாரைக் குறித்த சொல் என்பது கண்டறியப்பட்டுள்ளது. கலிங்கத்துப் பரணியில் செயங்கொண்டார்.

“மழலைத்தரு மொழியில் சில வடுகும் சில தமிழும் குழறித்தரு கருநாடியர் குறுகிக் கடைதிறமின் எனப் பாடியுள்ளார். இதில் வடுகு என்பது நாள டைவில் தெலுங்கைக் குறித்த சொல்லாக ஆளப்பட் டுள்ளது. கலிங்கப் போர் நடந்த குலோத்துங்க சோழன் காலத்தில் தெலுங்கு கன்னடம் ஒரியா ஆகிய மூன்று மொழிகளும் பேச்சு மொழிகளாக வளர்ந் திருந்தன. இருப்பினும் தெலுங்கர் எக்காலத்திலும் தம்மை வடுகர் என அடையாளப்படுத்திக் கொள்ள வில்லை.*

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கடைக்கழக இலக்கியக் காலத்தில் தெலுங்கு போன்ற மொழிகள் தோன்றவில்லை. ஆந்திர சாதவாகன மன்னரின் பேச்சு மொழி பிராகிருத மாக இருந்தது. ஒரிசா எனப்படும் கலிங்கரின் பாலியும் பேசப்பட்ட நிலப்பகுதிகளே “மொழி பெயர்த்தேயம்” எனப் பண்டைத் தமிழிலக்கியங்களில் குறிக்கப்பட்டன. ஆந்திர கருநாடகப் பகுதிகள் அக்காலத்தில் கொடுந் தமிழ் நாடுகளாக இருந்தன.

ஒரிசா எனும் கலிங்கத்திலிருந்து ஆந்திரத்தில் குடியேறிய வடுகர் கல்லுடைக்கும் தொழிலினர். இவர்கள் பேசும் தெலுங்கு நீட்டி முழுக்கும் அடித் தொண்டைப் பேரொலி கொண்டதாக இருப்பதை இன்றும் காணலாம். இவர்களின் முன்னோர் பேசிய கலிங்கத்துப் பாலி மொழியும் இத்தகையதே. அதனால் இவர்கள் “கல்லா நீள்மொழி கதநாய் வடுகர் எனப்பட்டனர்.” வ –ப. (ba)ஆவது பாலி மொழியி இயல்பு. வான் எனும் தமிழ்ச் சொல்லைப் பாவி (bavi) எனத் திரித்துப் பேசியவர்களும் இவர்களே.

புல்லி என்னும் குறுநில மன்னன் ஆட்சி புரிந்த வேங்கடமலைக்கு வடக்கேயிருந்த ஆந்திரப் பகுதியில் கோதாவரி வரை தமிழ் பேசப்பட்டது.

மேற்கு கோதாவரிப் பகுதியிலும் கலிங்கப்பகுதியிலும பிராகிருத பாலி மொழிகள் பேசப்பட்டன. வேங்கட மலை வெகுதொலைவில் மொழி பெயர் தேயங்கள் இருந்தன என்னும் குறிப்பை அகநானூற்றில் மாமூலனார் வெளிப்படுத்தியிருக்கிறார். வேங்கட மலைக்கு அப்பால் பல்லான் கோவலர், ஆடுமாடு களை மேய்ப்பவராகவும், நல்லவர்களாகவும் இருந் திருக்கின்றனர்.

"...................................மாதிரம் வெம்ப
வருவழி வம்பலர் பேணிக் கோவலர்
மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி
செவியடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்
புல்லி நன்னாட்டு உம்பர்ச் செல்லருஞ்
சுரம் இறந்து ஏகினும் நீடலர்" (அகம்.311)

என்னும் வரிகளில் மாமூலனார் குறிப்பிடுகிறார். மூங்கில் குழாய்களில் கொணர்ந்த கூழை வழிப் போக்கர்க்குத் தந்து களைப்பைப் போக்கிய செய்தியும் கூறப்படுகிறது.

புல்லியின் வேங்கடக் குன்றத்துக்கு வெகு தொலைவுக்கு அப்பால் கலிங்க நாட்டுக்குச் செல்லும் போது வழிப்பறிக் கள்வராகிய வடுகர் இருந்தனர்.

"...............................புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்று நிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந் தார்க்கும்
மொழி பெயர் தேஎம் இறந்தனர் ஆயினும்"
(அகம்.295)

என மாமூலனார் குறிப்பிட்டுள்ளார்.

கங்கை வரை பண்டங்களை ஏற்றிச் செல்லும் சாத்து வணிகர் கூட்டத்தோடு, அல்லது படைத் துணை மறவரோடு வடதிசை நோக்கிச் சென்ற தலைவனைக் குறித்துத் தலைவி வருந்தும் பாலைப் பாடல்களில் மிக நீண்ட தொலைவு பறக்கும் கழுகு போல் நெடுந்தொலைவு கடந்த செய்தி கூறப்படு கிறது. பல மலைகளைக் கடந்த பின்னரே வேற்று மொழி பேசும் நிலப்பகுதி இருந்தது எனவும் மொழி பெயர் தேயங்களாகிய அப்பகுதிகள் இருந்தன எனவும் மொழி பெயர் தேயங்களாகிய அப்பகுதிகள் மூவேந்தர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன என்றும் கூறப்பட்டுள்ளது.

"கண்உமிழ் கழுகின் கானம் நீந்தி
....
தமிழ் கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை இறந்தே"
(அகம்.31)

வடபுலத்திலும் மூவேந்தரின் அரசிளங் குமரர்கள் ஆட்சி புரிந்ததைப் பாரத இராமாயணங் களும் குறிப்பிடுகின்றன. கி.மு. ஏழாம் நூற்றாண்டு வரை வடநாட்டில் தமிழ் மன்னர்களின் ஆட்சி நில வியதை உதயணன் பெருங்கதையாலும் அறியலாம்.

வடபுலத்தில் கி.மு. நான்காம் நூற்றாண்டு அளவில் ஆட்சி புரிந்த மோரியர் தென்னாட்டின் மீது படையெடுத்தனர். அப்போது கலிங்க நாட்டிலிருந்த விற்போர் மறவர்களாகிய வடுகரைத் துணைக்கு அழைத்து வந்தனர் என்பதை மாமூலனார்

"முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு"
(புறம்.281)

எனத் தெளிவுறப் பாடியுள்ளார். மோரியர் பாடலிபுத்திரத்தில் இருந்து புறப்பட்டு கலிங்கத்தில் வடுகர் துணை பெற்றனர். ஆந்திரத்து சாதவாகனர் எப்பொழுதும் தமிழர்க்கு நண்பர்களாகவும் உறவினர் களாகவும் இருந்தனர். எக்காலத்திலும் சாதவாக னர்கள் தமிழரைப் பகைத்ததில்லை. எனவே வடுகர் என்னும் சொல் ஆந்திரரைக் குறிக்கவில்லை. வடுகரைக் 'கல்லா நீள் மொழிக் கதநாய் வடுகர்' எனக் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் ஆறலைக் கள்வ ராக விந்திய மலைச்சாரல் பகுதிகளில் வாழ்ந்த வர்கள். வடுகர்களைக் குறித்து தாயங்கண்ணனார், சேந்தங் கொற்றனார், இளம் கௌசிகனார் ஆகிய புலவர்களும் பாடியுள்ளனர்.

தெலுங்கர் தம்மை ஆந்திரர் எனக் குறிப்ப தன்றி வடுகர் என எக்காலத்திலும் கூறியதில்லை. தெலுங்கு அகராதிகளிலும் வடுகர் என்னும் சொல் தெலுங்கரைக் குறிக்கவில்லை. கலிங்க நாட்டைத் தமிழில் "ஒட்டரநாடு" என்பர்.

கலிங்கர் தம் மொழியை "ஒடியா" மொழி என்கிறார்கள். இச்சொல் ஆந்திர நாட்டில் வட்டெ (vadde) என வழங்கும். கிணறு வெட்டுதல், கல்லுடைத்துக் கட்டடம் கட்டுதல் ஆகிய பணிகளுக்கு இவர்கள் ஆந்திர நிலத்தில் குடியேற்றப்பட்டனர். இவர்கள் மொழியும் தெலுங்காக மாறியது.

கலிங்கத்துக் கல்லுடைக்கும் தொழிலாளர் சிறந்த வில்லாளிகளாக இருந்த ஆறலைக் கள்வரின் வழி வந்தவர்கள் என்பதால் வடிகாடு என்னும் சொல் நாளடைவில் மிகுந்த துணிச்சல் உள்ள போர் மறவனைக் குறித்த சொல்லாயிற்று.

வடிகாடு என்னும் சொல் 'வடுகுடு' எனத் தெலுங்கில் திரிபுற்றது. வடிகண்டு – வலிமை சான்ற இளைஞன், வடுக்கு – முறுக்கு, வடிகலத்தன்மை

வட்டெகாடு = ஒரியா மொழி பேசுபவன். வட்டெமு –ஒரியா மொழி.

கன்னடத்திலும் வட்டெ (vadde) எனும் சொல் கல்லுடைக்கும் தொழிலாளியைக் குறித்தது.

கலிங்கத்து மொழியில் ஒடியா என்றே இம்மக்கள் அறியப்பட்டனர்.

தமிழில் ஒட்டர் என இக்காலத்தில் வழங்கினும் பழங்காலத்தில் கலிங்கர் 'உடியர்' என்றே அறியப் பட்டனர். அதனால் கடைக் கழகக் காலத்தில் இவர் களுக்கு உடியர் –வடியர்–வடுவர்–வடுகர்– எனத் தமிழ்ப் பெயரிட்டனர்.

உடை–உடி எனும்சொற்கள் உடைத் தலையும், தாக்குதலையும் குறிக்கும். உளிதல் என்னும் சொல்லும் வெட்டுதலைக் குறிக்கும், உளி–உடி–வடி எனத் திரியும். வடித்தல் – கல்லைச் செதுக்கி வடிவமைத்தல் எனப் பொருள்தரும்.

கடிப்பு என்பது ஒரு காதணி. இது கடுக்கன் எனத் திரிந்ததைப் போன்று வடிகன் – வடுகன் எனத் திரிபுற்றது.

வடக்கிலிருந்து வந்தவன் வடுகன் என்பதும் பொருந்தாது. வடக்கு – வடுக்கு எனத் திரியாது. குடக்கு–குடுக்கு எனத் திரியவில்லை. சொற்களின் ஒலிப்புத் திரிபுகள் குறிப்பிட்ட ஒழுங்கைப் பின்பற்று கின்றன. ஒரு சொல் எப்படியெல்லாம் திரியும் எப்படி யெல்லாம் திரியாது என்னும் சொற்பிறப்பு நெறி முறைகளை ஊன்றிக் கவனித்தால் சொல்திரிபு களும் பொருள் திரிபுகளும் திசைமாறிப் போகாமல் உண்மை யான பொருளை உணர்த்தும்.

மெல் – மெழு – மெழுகு என மென்மைப் பொருளில் திரிந்தது போன்று வல்–வழு –வழுதி எனும் சொல் வன்மை வாய்ந்த பாண்டிய மன்னர்க்குப் பெயராயிற்று. வல்–வழு–வடு என்னும் சொல் போர்மறவனுக்கும் இளைஞனுக்கும் பெயராகி வடமொழியில் வட (vata) என்றும் ஒரியாவின் மூலமொழியாகிய பாலியில் உடி–வடி என்றும் திரிந்தது.

வடுகு *vaḍugu*, பெ. (n.) மருத நிலத்தின் திறப் பண்; melody type belonging to agricultural tract.

[வடு–வடுகு]

வண்டிச்சத்தம் *vaṇḍi-c-cattam*, பெ. (n.) வண்டிக் கூலி; wage for the load to be carried by cart.

[வண்டி+(சாத்தம்)சத்தம்]

சாத்து வாணிகர் பெறும் கட்டணம்.

வண்டிப் பந்தயம் *vaṇḍi-p-pandayam*, பெ. (n.) ஒன்பான் இரா (நவராத்திரி பூசை யெடுப்பு) நாளில் வீரவுணர்வின் அடிப்படையாக நிகழும் விளையாட்டு; cart race.

[வண்டி+பந்தயம்]

வண்ணக்கம்மர் *vaṇṇakkammar*, பெ. (n.) வண்ண ஓவியங்களைத் தீட்டுபவர்; one who does painting work.

[வண்ணம்+கம்மர்]

வண்ணக் கோடாங்கி ஆட்டம் *vaṇṇak kōḍāṅgiāṭṭam*, பெ. (n.) இருவர் அல்லது மூவர் வழிபாட்டுப் பாடல்களைப் பாடி ஆடு கின்ற ஆட்டம்; dance performed by two or three while singing hymns.

[வண்ணம்+கோடாங்கி+ஆட்டம்]

வண்ணத்தியல் *vaṇṇattiyal*, பெ. (n.) எண் வகைச் சந்தங்களைக் கூறுகின்ற நூல்; a treatise which says the eight kinds of rhythemic movement of verse.

[வண்ணம்+அத்து+இயல்]

வணர் *vaṇar*, பெ. (n.) யாழின் ஓர் உறுப்பு; a componant of a lute.

[வள்–வண்–வணர்]

வத்தினி *vattiṇi*, பெ. (n.) சிற்ப முத்திரைகளுள் ஒன்று; hand pose of a sculpture.

[வத்து–வத்தினி]

வதிகால் *vadikāl*, பெ. (n.) சேற்று நீரோடை; stream running on clay bed.

[வதி(சேறு)+கால்]

வதிவாய்க்கால்கள் *vadivāikkālkaļ*, பெ. (n.) நிலங்களுக்கு நீர் செல்லும் கால்வாய்கள்; head channel which takes water to field.

[வதி+வாய்+கால்]

வந்தேறி *vandēŗi*, பெ. (n.) அயலிடத்திலிருந்து வந்து குடியேறியவன்; immigrant.

[வந்து+ஏறி]

வம்புறு மரபு *vamburumarabu*, பெ. (n.) பாலைப்பண்ணின் இடமுறைத் திரிபு; a melody type.

[வம்புறு+மரபு]

வயவு-தல் *vayavu-*, செ.குன்றாவி. (v.t.) விரும்புதல், ஆசைப்படுதல்; to like, to desire, to aspire.

க. பயசு

[வய-வயவு] வயா - வேட்கை, ஆசை.

வயவுறி *vauavuŗi*, பெ. (n.) கருவுற்றவள், கருவத்தி; pregnant woman. வயவுறு மகளிர் வேட்டுணின் அல்லது பகைவர் நண்ணார் நின் அரு மண்ணினையே. (புறம்.).

க. பசுறி

[வயவு(விருப்பம்)-வயவுறி]

கருவுற்ற காலத்தில் விரும்பும் உணவு வகைகளை உண்ண ஆசைப்படுபவள்.

வயித்தியக்கும்மி *vayittiyakkummi*, பெ. (n.) மருத்துவ முறைகளைப் பகர்கின்ற கும்மிப் பாடல்; a dance performed by clapping hands and describing medical treatment.

[வயித்தியம்+கும்மி]

வயிர் *vayir*, பெ. (n.) ஒரு வகையான இசைக் கருவி; a kind of musical instrument.

பட. புகிரி

[வை-வய்-வயிர்]

வயிரியர் *vayiriyar*, பெ. (n.) ஊதுகொம்பு ஊதுபவர்; trumpeters.

[வயிர்(ஊதுகொம்பு)+இயர்]

வயிறுகளை *vayiŗukaļai*, பெ. (n.) குடல் துப்புர வுக்காக நாட்டு மருத்துவர் தரும் வயிற்றுப் போக்கு இளகியம் (பேதி மருந்து); a Tamil medicinal fluid substance 'ilagiyum' given by native Siddha doctors for cleansing the bowels.

[வயிறு+களை] எழுவாய்த் தொடராதலின் குற்றுகரம் இரட்டாதாயிற்று.

வர்ணம் *varŋam*, பெ. (n.) பரதநாட்டியத்தில், உச்சகட்டமாகவும், முடிவாகவும் அமைவது; musical notes in a tune which ends the Bharatha natyam and also take it to the high level.

[வண்ணம்-வர்ணம்]

வரப்போ-தல் *varappō-*, செ.கு.வி. (v.i.) போய் வருதல்; to come back, a term used in Srilanka with a literal meaning of saying good bye.

[வா+போ]

போய் வருகிறேன் என்பதை வரப்போகிறேன் என்பது ஈழநாட்டுத் தமிழ் வழக்கு.

வரம்பிலி *varambili*, பெ. (n.) கடவுள்; god as immeasurable.

[வரம்பு+இலி]

வரதஅத்தம் *varada attam*, பெ. (n.) இறை வடிவ சிற்பங்களில் அமைக்கப்பெறும் ஒரு வகையான கைப்பாங்கு; hand sculptured in god's idol.

[வரத+அத்தம்]

வரதகரம் *varadakaram*, பெ. (n.) இறைவன் கை இலக்கணங்களில் ஒன்று; formula followed while sculpturing hand in god's idol.

[வரதன்+கரம்]

வரவழைப்புப் பாட்டு *varavaļaippu-p-pāţţu*, பெ. (n.) தெய்வங்களை வரவழைத்து, அருள் பெறுவதற்காகப் பாடப்படுகின்ற பாடல்; a song sung for inviting deities.

மறுவ. வர்ணிப்புப்பாடல்

[வர+அழைப்பு+பாட்டு]

வராடி *varāḍi*, பெ. (n.) அராகங்களில் ஒன்று; a musical note.

[வராளி–வராடி]

வரி *vari*, பெ. (n.) ஓர் இசை நூல்; a treatise on music.

[வள்–வர்–வரி]

வரிசை *varišai*, பெ. (n.) 1. மணந்துகொள்ள இடந் தரும் உறவு முறை; relationship in families to allow youngsters to marry. அத்தை மகள் இவனுக்கு வரிசை ஆகிறாள் (உ.வ.). 2. மணப்பெண்ணுக்கு அளிக்கப்படும் சீர் வரிசை; gifts offered to the bride in marriage.

[வரித்தல்–மணத்தல். வரைவு = திருமணம். வரி–வரிசை]

வரிச்சோறு *vari-c-cōṟu*, பெ. (n.) மாடசாமி கோவில் கொடைவிழாவில் அளிக்கப் பெறும் சோறு; rice meal given during Madasamy charity festival.

[வரி+சோறு]

வரித்தணிக்கை *varittaṇikkai*, பெ. (n.) வருவாய்த்துறையினர் வட்டந்தோறும் நடத்தும் வரித்தணிக்கைக் கூட்டம் (சமாபந்தி); Jama Bandi.

[வரி+தணிக்கை]

வருத்தாடு *varuttāḍu*, பெ. (n.) வெளியூர் ஆடு; goats from other places. (கொ.வ.).

[வரத்து(விற்பனைக்கு வந்த)+ஆடு–வரத்தாடு –வருத்தாடு (கொ.வ.)]

வருத்தித்தல் *varuttuttal*, பெ. (n.) துகிரிகையால் படிப்படியாக வண்ணஞ்சேர்க்கும் முறை; adding colour little by little by brush.

[வருத்து–வருத்தித்தல்]

வரை *varai*, பெ. (n.) விதை; seed.

வருவு–தல் *varuv-*, செ.குன்றாவி (v.t.) தச்சர் பலகையில் குறியிடுவதற்குக் கீறுதல்; to scribe on wooden plank by carpenter.

வரையறை *varaiyaṟai*, பெ. (n.) ஆளத்தி பாடப்படும் முறை; way to improvise while introducing melody.

[வரை+அறை]

வல்லத்துப் பட்டாரிகை *vallattup-paṭṭārigai*, பெ. (n.) கௌரியம்மனுக்கு வழங்கும் வேறு பெயர்; a alternant for Amman's name.

[வல்லம்+அத்து+பட்டாரிகை]

வலம்பாடிகள் *valambāḍigaḷ*, பெ. (n.) வில்லுப் பாட்டு பாடும் ஒரு குழுவினர்; group of singers who sing with a accompaniment of a vil.

[வலம்(வலப்பக்கம்)+பாடிகள்]

வலம்பு *valambu*, பெ. (n.) செக்கின் உறுப்புகளில் ஒன்று; a part of oil - press.

[வல–வலம்பு]

வலமுறை *valamuṟai*, பெ. (n.) வட்டப்பாலையில் ஏழு பாலைகள் பிறக்கின்ற முறைகளில் ஒரு வகை; a type *of diatonic notes.*

[வலம்+முறை]

வலவு *valavu*, பெ. (n.) கைத்தறி நெசவில் பாவு தோய்வதற்குப் பயன்படுத்தப்படும் வழவழப்பான மூங்கிற்கழி; an implement in handloom weaving.

[வல்–வல–வலவு]

வலிய கூரக்கு *valiyakūrakku*, பெ. (n.) மன்னான் இனத்தலைவரின் வீடு; house of Mannān chieftain.

[வலிய+கூரை]

வலிவு *valivu*, பெ. (n.) **வரைமுறை பார்க்க;** see varaimuṟai.

[வலி–வலிவு]

வலிவு மண்டிலம் *valivumaṇḍilam*, பெ. (n.) மண்டில வகைகளில் ஒன்று; one of mandilam variety.

[வலிவு+மண்டிலம்]

வழக்கறுப்பு *valakkaruppu,* பெ. (n.) மண விலக்கு (விவாகரத்து) என்பதற்கு மாற்றாக, பச்சைமலை மலையாளிகள் பயன்படுத்தும் சொல்; a word used by Paccaimalai Malaiyāli, which meansdivorce.

மறுவ. மணமுறிவு

[வழக்கு+அறுப்பு]

வழக்காற்றுப்பாடல் *valakkārruppādal,* பெ. (n.) ஒப்பாரி, தாலாட்டு எனும் வாய்மொழி இலக்கியங்களைச் சுட்டும் பெயர்; an oral literature which denotes a song of lamentation of a deceased person and a lullaby sung by a women who rock the craddles.

[வழக்கு+ஆறு+பாடல்]

வழக்கிற-த்தல் *valakkira-,* செ.கு.வி. (v.i.) நாட்டார் வழக்காறுகள் வழக்கத்தில் இருந்து படிப்படியாக மறைதல்; nāttār usage of customs not extant.

[வழக்கு+இறத்தல்]

வழிசுட்டுதல் *valicuttudal,* தெ.பெ. (vbl.n.) பள்ளரின் இறப்புச் சடங்கு; funeral rites of pallar caste.

[வழி+சுட்டுதல்]

வழிநடைச்சிந்து *valinadaiccindu,* பெ. (n.) சிந்து இசையின் ஒரு பிரிவு; a division in sindu melody.

[வழி+நடை+சிந்து]

வழிமரபு *valimarabu,* பெ. (n.) கால்வழி (பரம்பரை); dynasty.

[வழி+மரபு]

வழியுரிமை *valiyurimai,* பெ. (n.) பிறங்கடை, வாரிசு; next successor.

[வழி+உரிமை]

வழிவிடுதல் *valividu,* பெ. (n.) 1. பள்ளர் இன இறப்புச் சடங்குகளில் ஒன்று; a funeral rites of Pallar caste. 2. **வழிசுட்டுதல் பார்க்க;** see *valicuttutal.*

[வழி+விடுதல்]

வள்ளல்கள் *vallalgal,* பெ. (n.) பழந்தமிழ்க் கொடையாளிகள்; benevalent doners among ancient Tamil.

[வள்ளல்+கள். 'கள்' பலர் பாலீறு]

பழந்தமிழகத்தில் முதலெழு வள்ளல்கள், இடையெழு வள்ளல்கள், கடையெழு வள்ளல்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

1. முதல் ஏழு வள்ளல்கள்: 1. செம்பியன் 2. காரி (சகாரி) 3. விராடன் 4. கடலன் (சகரன்) 5. துந்து மாறன் (துந்துமாரி) 6. நள்ளன் (நளன்) 7. மீனன்.

2. இடையெழு வள்ளல்கள்: 1. அக்குரன் 2. அந்தன் (சந்தன்) 3. சேந்தன் 4. இளங்குமரன் (சிசுபாலன்) 5. சந்திரன். 6. கன்னன் (கர்ணன்) 7. மருப்பொசித்த மாறன் (தருதிவக்கின்).

3. கடையெழு வள்ளல்கள்: 1. பாரி 2. ஓரி 3. நள்ளி 4. மலையன் (காரி) 5. ஆய் 6. எழினி 7. பேகன்.

வள்ளுவர் *valluvar,* பெ. (n.) பிறப்புச் சடங்கினை நடத்தும் நாட்டுப்புறப் பெரியவர்; a village head who conducts birth ceremony. 2. கணியம் கூறுபவரில் ஒரு பிரிவினர்; as astrologer.

[வள்+வள்ளுவர்]

வள்ளைப்பாட்டு *vallaippāttu,* பெ. (n.) பெண்டிர் பாடும் பாடல் வகை; song sung by women.

[வள்ளை+பாட்டு]

வளஞ்சியத்தார் *valanjiyattār,* பெ. (n.) ஈழத்து வணிகர்; merchants of Srilanka.

[வளஞ்சியம்–வளஞ்சியத்தார்]

அஞ்சுவண்ணத்தார்– முகமதிய வணிகர். நான்கு வருணப்பிரிவில் அடங்காதவர்.

வளமை *valamai,* பெ. (n.) நாட்டுப்புற வழக்காறுகளில் பிள்ளைப் பேற்றினைக் குறிக்குஞ் சொல்; a word which denotes child birth in country side.

[வளம்–வளமை]

வளர்த்தல் *vaḷarttal,* தொ.பெ. (vbl.n.) துகிலிகையால் படிப்படியாக வண்ணஞ் சேர்க்கும் முறை; adding hue little by little by brush.

[வளர்-வளர்த்தல்]

வளிநோய் *vaḷi-nōy,* பெ. (n.) வளிக்கோளாறினால் உண்டாகும் நோய்; defects arising from gastric disorder.

[வளி+நோய்]

வளைமடி-த்தல் *vaḷaimaḍi-,* செ.குன்றாவி. (v.t.) நெற்குவியல் மேலும் சரியாமல் பக்கத்திலும் சுற்றிலும் முறுக்கியசைக்கும் வைக்கோல் வளையம் வைத்தல்; to place twisted hay stack arround paddy heap.

[வளை+மடி]

வளைமுகம் *vaḷaimugam,* பெ. (n.) புல்லாங்குழலின் தொடக்கத்தில் உள்ள முனை; starting point of a flute.

[வளை+முகம்]

வளையல் சிந்து *vaḷaiyalśindu,* பெ. (n.) கரகத்தின் துணைநிலை ஆட்டமான காவடியாட்டத்திற்கு இசைக்கப்பெறும் இசை; melody played to assist when a dance with decorated pole of wood with 'Karagam' art is performed.

[வளையல்+சிந்து]

வறுவூசி *vaṟuūsi,* பெ. (n.) சட்டங்களின் ஒரங்களை அளவாக பள்ளமிட அளவுபடுத்தி கோடிடும் ஊசி; a needle to make scrach the frame levely.

[வறுவு-ஊசி]

வன்கணவர் *vaṉkaṇavar,* பெ. (n.) கன்னெஞ்சர்; hard hearted person. "தாமுடைமை வைத்திழக்கும் வன் கணவர்" (குறள். 228).

வன்கொடுமை *vankodumai,* பெ. (n.) மிகக் கடுமையான வன்முறை, பயங்கரவாதம்; violence.

வன்முறை *vanmurai,* பெ. (n.) வல்லந்தமான கொடுமை, தீவிரவாதம்; terrorism.

வன்னி *vaṉṉi,* பெ. (n.) கரகாட்டத்தை முதலில் ஆடிய இனத்தினர்; a class of people who first performed in folk dance karakaṭṭam.

[வல்-வன்-வன்னி]

வனப்பூ *vana-p-pū,* பெ. (n.) காளான்; mushroom.

க. அனபெ, ஆத். wanabe

வனப்பேச்சி *vaṉappēcci,* பெ. (n.) நாட்டுப்புறங்களில், நீர்நிலைகளைக் காக்கும் சிறு தெய்வம்; a deity which guards water sources.

[வனம்+(பேய்ச்சி)பேச்சி]

வாக்குமாலை *vākkumalai,* பெ. (n.) தெருக்கூத்தில் பங்கு பெறும் ஆடவர் அணிகின்ற ஓர் அணிகலன்; ornament worn by male while performing street dance.

[வாக்கு+மாலை]

வாகுமாலை *vāgumālai,* பெ. (n.) சிற்பங்களில், இரு தோள்களிலிருந்து மார்பு வரை இடம் பெறும் ஓர் ஆரம்; garland like chain carved in the sculpture.

[வாகு+மாலை]

வாகுவலயம் *vāguvalayam,* பெ. (n.) **வாகு மாலை பார்க்க**; see *vāgumālai.*

[வாகு+(வளையம்)வலயம்]

வாங்களை வெட்டு-தல் *vāṅkaḷaiveṭṭu,* செ.குன்றாவி. (v.t.) வயல் வரப்பில் வளர்ந்து வயலிலும் பரவத் தொடங்கும் புல் பூண்டு கொடிகளை வெட்டி நீக்குதல்; to remove the vegetation growth on the ridge of the paddy field.

[வாவும்(தாவிப்படரும்)-வாம்+களை+வெட்டு]

வாங்கறுவாள் *vāṅgaṟuvāḷ,* பெ. (n.) நீளமான கழியில் கட்டப்பட்டிருக்கும் அறுவாள்; a

scimitar, a big cutting knife with long wooden pole.



வாங்கா vāṅgā, பெ. (n.) துளையுள்ள இசைக் கருவி; a perforated musical instrument.

[வங்கு–வாங்கா]

வாட்டி *vāṭṭi,* பெ. (n.) சிறு பெண் குழந்தை; a small baby.

வாடிவாசல் *vāḍivāšal,* பெ. (n.) சல்லிக்கட்டு காளைகள் இருக்குமிடம்; place where bull - bailing take place.

[வாடி+வாசல்]

வாங்கியா *vāṅgiyā,* பெ. (n.) கடலில் ஆளை உள்ளிழுக்கும் பெரிய பள்ளம்; a deep mire in the sea bed.

[வாங்கு(உள்வாங்குதல்)–வாங்கியாரம்]

வாடிவீடு *vāḍivīḍu,* பெ. (n.) ஓய்வு இல்லம்; rest house (யாழ்ப்.).

[பாடி–வாடி+வீடு]

வாடூன் *vāḍūṉ,* பெ. (n.) உலர்த்தப்பட்ட புலால் துண்டுகள், உப்புக்கண்டம்; dry flesh.

க. பாரு ஆத். வர்ரு

வாடை *vāḍai,* பெ. (n.) வேட்டுவர் குடியிருப்பு; hamlet of hunters.

[வேட்டுவர்–வேடுவர்–வேடு–வாடு–வாடை]

ஒ.நோ: நத்தம்– பார்ப்பனர் அல்லாதார் ஊர். பேட்டை –சந்தை ஊர். பறந்தலை– பாலை நிலம்.

வாண்டகன்று *vāṇḍakaṉṟu,* பெ. (n.) குட்டி போடாத செம்மறி ஆடு; a barren sheep.

[வறண்ட–வாண்ட+கன்று]

வாணவராயன் *vāṇavarāyaṉ,* பெ. (n.) கொங்கு வேளாளரைச் சுட்டும் சிறப்பு பெயர்; specific name that denotes Kongu Vēlālar.

[வாணன்+அரையன்]

வாதம் *vādam,* பெ. (n.) யாழ் கூறும் ஒரு வகை குற்றம்; a kind of defect in the lute.

[வாது–வாதம்]

வாய்க்குருவி *vāy-k-kuruvi,* பெ. (n.) சீழ்க்கை; whistle.

[வாய்+குருவி]

வாய்க்கூடு *vāi-k-kuḍu,* பெ. (n.) தவசப் பயிர் களை மேயாமல் இருக்க மாடுகளுக்குப்போடும் கூடு; a small basket worn on cattle's mouth.



வாய்ச்சி *vāycci,* பெ. (n.) மரத்தைச் செதுக்க உதவும் கருவி; an implement of the carpenter.

[வாய்–வாச்சி–வாசி –வாய்ச்சி(கொ.வ.)]



வாய்ச்செய்கையொலி *vāycceygai-y-oli,* பெ. (n.) ஒன்றைக் கூற வேண்டி வாயினாற் செய்யும் சைகைகளுடன் கூடிய ஒலி; gesticulatory sound.

[வாய்ச்செய்கை+ஒலி]

வாய்பிள-த்தல் *vāypila-,* செ.கு.வி. (v.i.) இறத்தல்; to die. அவன் வாய் பிளந்தான். (இ.வ.).

[வாய்+பிள]

வாய்மைக்குடி *vāymai-k-kudi,* பெ. (n.) உயர்குடி பார்க்க; see uyarkudi. "நகையீகை யின்சொ லிகழாமை நான்கும் வகையென்ப வாய்மைக் குடிக்கு" (குறள். 953).

மறுவ: உயர்குடி, உயர்குலம், மேற்குடி

[வாய்மை+குடி]

வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாடு *vāymoli vāypāttukkōtpādu,* பெ. (n.) நாட்டுப்புறவியலை ஆய்வு செய்வதற்கான அடிப் படைக் கோட்பாடு; the methodology to explore folklore.

[வாய்மொழி+வாய்பாடு+கோட்பாடு]

வாயல்முறுவல் *vāyalmuruval,* பெ. (n.) பொய்யான புன்னகை; illusionary smile. வாயல் முறுவற்கு உள்ளகம் வருந்த (சிலம்பு.).

[வாய்+அல்+முறுவல்]

வாயாறுகை *vāyārugai,* பெ. (n.) நாவறட்சி, நீர்வேட்கை; thirst.

க. பாயாரிகே

வாரணன் *vāranan,* பெ. (n.) தமிழரின் கடல் தெய்வம்; God of ocean of the Tamils.

மறுவ: உப்பளவண்ணன், சிங்-உழல்வன்

[வாரணம்-வாரணன்]

முத்துக்குடை ஊர்வலத்தில் இரு கையுடைய வராக சந்தனமரச் சிற்ப தெய்வமாகிய நெய்தல் நில வாரணன் நாளடைவில் திருமாலாகவும், பௌத்தரால் உழல்வனாகவும் மாற்றப்பட்டுள்ளான் என்பர் (மயூரசந்தேசம்.பக்.151).

வார்தல் *vārtal,* பெ. (n.) இசைக்கரணத்தில் ஒன்று; a performance in music.

[வார்-வார்தல்]

வார நடை *vāranadai,* பெ. (n.) ஒரு வகையான தாளக்கால நடை; a time measure.

[வாரம்+நடை]

வாரநிலம் *vāranilam,* பெ. (n.) பாடலைப் பாடும் முறை; a method of singing.

[வாரம்+நிலம்]

வாரம்[1] *vāram,* பெ. (n.) தெய்வப் பாடலைக் குறிக்குஞ்சொல்; word denoting hymn.

[வார்-வாரம்]

வாரம்[2] *varam,* பெ. (n.) ஆயாதி மரபுப் பிரிவுகளில் ஒன்று; one among Ayāti tradition.

[வார்-வாரம்]

வாரம்[3] *vāram,* பெ. (n.) ஏழுநாள் கொண்ட கால அளவு; a week of seven days.

[வரை-வாரை-வாரம்]

வாரம்[4] *vāram,* பெ. (n.) நிலவுரிமையாளரும் நிலம் உழுதவரும் விளைச்சலில் பங்கு பெறும் அளவு; share of produce in the land to be divided between the tiller and the land owner.

[வரு-வாரு-வாரம்]

ஒவ்வொருவருக்கும் வரும் விளைச்சல் பங்கு. மேட்டு நிலமாயின் 2:3 எனவும் நன்செய் நிலமாயின் 1:1 எனவும் சில ஊர்களில் பிரித்துக் கொள்ளும் ஒப்பந்தம்.

வாரித்துறை *vārittural,* பெ. (n.) கடல் அல்லது கப்பல் தொடர்பான துறை; maritime.

[வாரி+துறை]

வாரியல் *vāriyal,* பெ. (n.) துடைப்பம்; broom stick.

வாலமஞ்சாடி *vālamañjādi,* பெ. (n.) வரி; tax. வால்மஞ்சாடி கண்மாலை நாவின்" (தெ.சா.12:1 எ.221).

வாவுடுகள் *vāvudugal,* பெ. (n.) தமிழகத்தில் பாவைக் கூத்து கலைக்கு உரியவராகக்

கூறப்படுகின்ற ஒரு பிரிவினர்; a team of people who dance the "dance of Lakshmi" traditionally in Tamilnāḍu.

[வரவிடு–வாவு+கள்]

வாழ்வுரிமை *vāḻ-v-urimai,* பெ. (n.) வாழ்வதற் கான அடிப்படை மாந்தவுரிமை; fundamental right to live.

[வாழ்வு+உரிமை]

வாழியாதன் *vāḻiyādaṉ,* பெ. (n.) குறிப்பிட்ட பகுதியை ஆட்சிபுரியும் அதிகாரம் பெற்ற ஆதன்; Adan the chieftain who got power to rule a certain area. செல்வக்கடுங்கோ வாழியாதன் (பதிற்.).

ம. வாழி

[வாழி+ஆதன்]

வாள்வடக்கிரு–த்தல் *vāḷvaḍak-kiru,* செ.கு.வி. (v.i.) புறப்புண் நாணிய போர்மறவர் வாளை நட்டு வடக்கு நோக்கி உண்ணா நோன்பிருந்து உயிர்விடல்; to fast unto death by a wounded soldier on the back continuing setting the sword upside down on earth, out of shame facing north, since he was not successful in saving the mother earth of the south.

[வாள்+வடக்கு+இருத்தல்]

வாளா வலை *vāḷāvalai,* பெ. (n.) பல வகையில் கடலில் வளைத்துப் போட்டு மீன்பிடிக்க உதவும் வலை; a kind of fishing net.

[வளை–வாளா+வலை]

வான்மீகியார் *vāṉmīkiyar,* பெ. (n.) கடைக் கழகப் புலவர்; poet of sangam age.

[வான்மீகி+ஆர்]

வான்மீன் *vāṉ-mīṉ,* பெ. (n.) விண்மீன்; stars.

[வான்+மீன்]

விசிவு *visivu,* பெ. (n.) விளைந்த கதிர் நெல் போன்றவற்றை அறுவடைக்குப் பின் ஓராள் சுமக்கும் அளவுக்கு ஒருமார் அளவு கயிற்றால் இறுகக்கட்டும் சுமைக்கட்டு; a head load of reaped crop. களத்தில் பத்து விசிவு கட்டி வைத்தோம்.

க. பிசுவு

[விசை–விசி–விசிவு]



விசிறி அடவு *viśiri aḍavu,* பெ. (n.) கும்மியில் இடம் பெறும் ஓர் அடவு; ; a stepping method in Kummi play.

[விசிறி+அடவு]

விசுப்பலகை *viśuppalagai,* பெ. (n.) கூத் தரங்கில், தேராகக் கருதப்படும் பலகை; wooden log considered as car in dancing theatre.

[விசி–விசு+பலகை]

விட்ட குதிரையார் *viṭṭakudiraiyār,* பெ. (n.) கடைக்கழகப் புலவரின் புனை பெயர்; coined name of sangam poet.

விட்டவெளி *viṭṭa-veḷi,* பெ. (n.) மேய்ச்சலுக் கென்று ஒதுக்கப்பட்ட காலம்; leaving land to grass for cows.

[வெட்ட+வெளி–வெட்ட–விட்ட (பே.வ.)]

விடுப்பு *viḍuppu,* பெ. (n.) முழவால் இசைக் கப்படும் ஒரு திறன்; a method of playing music.

[விடு–விடுப்பு]

விடுகாசு *viḍukāsu,* பெ. (n.) ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தம்பிடி எனும் மதிப்புள்ள சிறுகாசு; a lowest value coin in a rupee during the English period in India.

மறுவ: தம்பிடி

[விடு+காசு]

4 விடுகாசு–1 துட்டு, 3 துட்டு– 1 அணா, 12 விடுகாசு – 1 அணா, 16 அணா – 1 ரூபாய், 192–விடுகாசு–1 ரூபாய்.

விடையாற்றி *vidaiyāṟṟi,* பெ. (n.) பச்சைக்காளி, பவளக்காளி அம்மன்கள் அருள் வழங்கிய பின் ஓய்வெடுத்தல்; respite of Paccaikkāḷi Pavaḷakkāli Amman's blessings to the devotees.

[விடை+ஆற்றி]

விடையூழியம் *vidai-y-ūḻiyam,* பெ. (n.) கிறித்துவ மதத்தில் ஒரு சிறப்புப் பணியின் பொருட்டு அமைக்கப்படும் குழு; mission.

[விடை+ஊழியம்]

விடையூழியர் *vidai-y-ūḻiyar,* பெ. (n.) ஒரு சிறப்புப் பணியை ஆற்றும் முகத்தான் அப் பணியில் ஈடுபடுபவர்; missionary.

[விடையூழியம்+அர்]

விண்ணந்தாயன் *viṇṇandāyaṉ,* பெ. (n.) கடைக்கழகப் புலவரின் பெயர்; name of a sangam poet.

[விண்+அம்+தாயன்]

விண்ணிழி விமானம் *viṇṇiḻivimāṉam,* பெ. (n.) திருவீழிமிழலையில் அமைக்கப்பட்ட விமானச் சிற்பம்; sculpture seen on temple at Tiruviḻi miḻalai.

[விண்+இழி+விமானம்]

விந்தியவாசி துர்க்கை *vindiyavāci-turkkai,* பெ. (n.) காளி (துர்க்கை) சிற்பத்தின் பிறிதோர் வடிவம்; another sculpture form of Durga.

[விந்தியம்+வாசி+துர்க்கை]

விபஞ்சி *vibañji,* பெ. (n.) குறிஞ்சிக்குரிய பண்ணாகப் பிங்கல நிகண்டு கூறுவது; melody type written pingalla nigandu peculiar to hilly tract.

விமலம் *vimalam,* பெ. (n.) 1. ஒரு சிற்ப முத்திரை; a sculpture pose. 2. சிற்பத்தில் இடம் பெறும் முத்திரைகளுள் ஒன்று; a sculptural hand-pose.

வியந்தை *viyandai,* பெ. (n.) ஒரு வகையான நெய்தற் பண்; a kind of melody type peculiar to maritime.

[வியம்–வியந்தை]

வியலூர் *viyalur,* பெ. (n.) சேரநாட்டின் வட பகுதி; northern part of Kerala.

மறுவ: வயநாடு

[வயல்+ஊர்]

வியாசர் கடகம் *viyāsar kaḍagam,* பெ. (n.) இசைத் தொடர்பான அரிய நூல்; a rare treatise pertain to music.

[வியாசர்+கடகம்]

வியாள உருவம் *viyāḷauruvam,* பெ. (n.) ஓவியங்களின் வளர்ச்சி நிலையைச் சுட்டுகின்ற உருவம்; shows the chronical stages of an art.

[வியாளம்+உருவம்]

வியாளம்[1] *viyaḷam,* பெ. (n.) ஓவியத்தில் அதிகளவில் இடம் பெறும் உருவ அமைப்பு; galore of structural figure drawn in art.

வியாளம்[2] *viyāḷam,* பெ. (n.) சிற்பத்தில் அதிக எண்ணிக்கையில் இடம் பெறுகின்ற உருவம்; sculptural structure which take place abundantly in sculpture.

விரலேறு *viralēṟu,* பெ. (n.) தோலினாற் செய்யப்பட்ட பழங்கால இசைக்கருவி; an ancient musical instrument made of leather.

[விரல்+ஏறு]

விரலேறு பாகம் *viralēṟubāgam,* பெ. (n.) பழம் பெரும் இசைக்கருவி; an ancient musical instrument.

[விரல்+ஏறு+பாகம்]

விராசி *virāśi,* பெ. (n.) சேவற் போரில், போர் நீண்ட நேரம் நீடிக்கும்போது, அதனை முடிவுக்

குக் கொண்டுவர கையாளும் சொல்; a word used to end the long hasting cock fight.

[விறகு–விரவு–விராசி]

விராட் விசுவப் பிரம்மன் *virāṭvišuvap prammaṉ,* பெ. (n.) தேவசிற்பியான விசுவ கர்மாவின் வேறு பெயர்; name of visuvakarma considered as celestial sculpter.

விரிப்பு *virippu,* பெ. (n.) ஆலாபணம் என்பதற்கு இணையான வேறு பெயர்; a word used instead of "a-lapana" which means improvising a introduction to a melody which helps the singer himself to get into its swing.

மறுவ. ஆளத்தி

[விரி–விரிப்பு]

விரிகொம்பு *viri-kombu,* பெ. (n.) மாட்டுக் கொம்பு வகை; a kind of horn.

வில்லடி *villaḍi,* பெ. (n.) வில்லுப்பாட்டின் மற்றொரு பெயர்; another name for a folk performance sung with prose interludes to the accompaniment of a huge bow and other instruments.

[வில்+அடி]

வில்லடிச்சான்பாட்டு *villaḍiccāṉpāṭṭu,* பெ. (n.) **வில்லடி பார்க்க**; see villaḍi.

விலங்காண்டி *vilaṅgāṇḍi,* பெ. (n.) வன்செயல் ஈடுபாடுடையவன்; savagery.

[விலங்கு+ஆண்டி]

வில்லடிப்பாட்டு *villaḍi-p-pāṭṭu,* பெ. (n.)
1. வில்லுப்பாட்டுக்கும் வழங்கும் வேறு பெயர்; another name for a folk performance.
2. **வில்லடி பார்க்க**; see villaḍi.

[வில்லடி+பாட்டு]

வில்வண்டி *vilvaṇḍi,* பெ. (n.) குதிரை பூட்டிய வண்டி; cart pulled by horse.

[வில்+வண்டி]



விலாசம் மெட்டு *vilasammēṭṭu,* பெ. (n.) தெருக்கூத்தில் இடம் பெறும் ஒரு வகையான மெட்டு; a melody type take part in street dance.

[விலாசம்+மெட்டு]

விலாடன் *viḷādaṉ,* பெ. (n.) குற்றவாளியிடம் கைப்பற்றிய நிலம்; land embezzed from the culprit. "நீலபாடி எல்லை இன்னும் விலாடன் குற்றெத்தத் தெல்லை" (பா.செ.ப.).

விலைமாதர் கும்மி *vilaimādar kummi,* பெ. (n.) பரத்தையர் வாழ்வியல் தொடர்பான கும்மி; a dance performed by clapping hands which says the life of whores.

[விலை+மாதர்+கும்மி]

விழித்திரு–த்தல் *viḻittiru-,* செ.குன்றாவி. (v.t.) (புறநாட்டம் மற்றும் உறக்கமின்றி) அகநாட்ட முற்றிருத்தல்; to be insomnia caused by love affair. "வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு" (திருமந்.564).

[விழித்து+இரு]

விழிப்புணர்வு *viḻippuṇarvu,* பெ. (n.) ஒன்றைப் பற்றி தெளிவாக அறிந்துகொள்கிற அல்லது

உணர்ந்து கொள்கிற நிலை; awareness. சுற்றுச்சூழலைக் காப்பதற்கு மக்களிடம் விழிப்புணர்வு தேவை (உ.வ.).

[விழிப்பு+உணர்வு]

விளம்ப நையாண்டி இசை *vilampa nyandi išai,* பெ. (n.) கரகாட்டத்தில், இடம் பெறும் பல்வகை விளையாட்டுக்களுக்கேற்ப, அமைதி யான தாள நடையில் இசைக்கப் பெறும் இசை வகை; a melody type played in a calm wars according to the rhythm in an arobatic folk dance called "karakam".

[விளம்பல்+நையாண்டி+இசை]

விளரிப்பாலை *vilarippālai,* பெ. (n.) இறை வனின் அருள் பெற இராவணன் பாடிய பண்; a melody type sung by the king Ravana to get god's grace.

[விளரி+பாலை]

விளியொலி *vili-y-oli,* பெ. (n.) பிறரை விளிக்கும் ஒலி; vocative sound.

[விளி+ஒலி]

விளை *vilai,* பெ. (n.) ஊர்ப்பெயரீறு; place name suffix. "அவன் பிறந்த ஊர் திசையன் விளை (நெல்.வ.).

[மிளை–விளை (காவற்காடு, முட்காட்டு அரண்]

மலையாள மொழிச் சார்பால் மிளை எனும் சொல் விளை எனத்திரிந்தது. **ஒ.நோ.** மீண்டும்–வீண்டும், மிளைப்பகுதி பழைய கோட்டை சார்ந்த காடாகும்.

விளையாட்டு எழால் *vilaiyāttu elāl,* பெ. (n.) எழு வகை இசை எழால்களைப் பலவாறு கலந்தும் உறழ்ந்தும் அமைப்பது; make a music by combining and changing the seven heptatonic.

[விளையாட்டு+எழால்]

விற்பனவு *virpanavu,* பெ. (n.) விற்பனை; sales (யாழ்ப்.).

[விற்பனை–விற்பனவு]

வினைகெடு–தல் *vinaikedu,* செ.கு.வி. (v.i.) செய்யும் கடமையில் தவறுதல், செய்யும் பணியை இடையில் விட்டு விட்டு வேறு பணி செய்தல்; to divert to other works failing in regular duty.

[வினை+கெடு]

மெனக்கெடுதல் என்பது விலக்கத் தகுந்த கடுங்கொச்சை சொல்.

வினைவலர் *vinaivalar,* பெ. (n.) வயற்களத் தொழிலாளி, தோட்டத் தொழிலாளி முதலான அடித்தள மக்களைக் குறிக்கும் பெயர்; a name which denotes the base people, who works in fields and garden. (64:101).

வீக்கன்[1] *vikkan,* பெ. (n.) குறவர் நடனத்தில் இடம் பெறும் ஓர் இசைக்கருவி; a musical instrument played in "Kurava" dance. (9:55).

[வீக்கு–வீக்கன்]

வீக்கன்[2] *vikkan,* பெ. (n.) கேரள இசைக்கருவி; musical instrument of Kerala.

[வீக்கு+அன்]

வீச்சுமணி வலை *viccumani valai,* பெ. (n.) வேகமாக வீசிப்பிடிக்க உதவும் வலை.

[வீசு–வீச்சு+வலை]

வீச்சு மத்தளிகை *viccumattāligai,* பெ. (n.) ஆடல் இயக்கங்களில் ஒன்று; one among many dancing movement.

வீசுகோல் *visu-kōl,* பெ. (n.) வில்லிசைக் கருவியை மீட்டப் பயன்படும் கோல்;

[வீசு+கோல்]

வீடு கட்டுதல் *vidukattutal,* பெ. (n.) சிலம் பாட்டத்தின் காலடி வைப்பு முறைகளில் ஒன்று; a way of holding the foot, while brandshing, quarter staff. (14:152).

[வீடு+கட்டு]

வீடு சேர்-த்தல் *viduśer-,* செ.குன்றாவி. (v.t.) பழந்தமிழர் வழக்கப்படி மணமக்களை வீட்டினுள் விடும் தலைநாள் கூட்டம்; to let married couples inside for first night, a ceremony of ancient Tamils.

[வீடு+சேர்]

வீணன் *viṇaṉ,* பெ. (n.) இருளர் இனத்தில் வாலிபரைச் சுட்டும் சொல்; word which indicates a youth in Erular caste. (63:59).

வீணி *viṇi,* பெ. (n.) இருளர் இனத்தில் இளம் பெண்களைக் குறிக்கும் சொல்; word which denote a young woman in Erular caste.

வீதிச்சடங்கு *vidiccaḍangu,* பெ. (n.) இறந்தவர்க்கு வீதியில் நடத்தும் பிணச்சடங்கு; death rites performed in the street.

[வீதி+சடங்கு]

இருளர் சொல்லாட்சி.

வீரத்திருவிழா *virattiruviḻā,* பெ. (n.) பெரம்பலூர் மாவட்ட தேவேந்திர குலவேளாள இனத்தவர் நடத்தும் முயல் வேட்டை; a rabbit hunt, conducted by Devantrakula Velālar caste in Perambalur.

வீரபத்திரசாமியாட்டம் *virapattirasāmi yāṭṭam,* பெ. (n.) வீரபத்ர சாமியைத் தாங்கும் பலகையைக் குறும்பரின ஆண்கள் தூக்கியவாறு ஆடும் ஆட்டம்; a dance by Kurumbar caste male, by carrying wooden log that carries Virapatra swamy.

வீரபத்திரசாமி வாள் ஆட்டம் *virapattira sāmy vālāṭṭam,* பெ. (n.) நாட்டுப்புற ஆட்டங்களில் ஒன்று; a rural dance.

வீரம் *viram,* பெ. (n.) ஒன்பான் நஞ்சு செய்யப் பயன்படுகின்ற மூலப்பொருட்களில் ஒன்று; primary element used in preparing nine kinds of poison.

வீரமுரசம் *vira-murašam,* பெ. (n.) மயிர்க் கண் முரசம்; a kind of drum.

[வீர+முரசம்]

வீராளிப்பட்டு *virāli-p-paṭṭu,* பெ. (n.) குறுநில மன்னர் உடுக்கும் பட்டுத்துணி வகை; a silk cloth specially used for the chieftains of Tamilnadu. வீராளிப்பட்டும் வயிர மோதிரமும் (உ.வ.).

[வீராளி+பட்டு]

வீழ்ந்தாடல் *viḻndāḍal,* பெ. (n.) மரக்காலாடலுக்குரிய வேறு பெயராக அடியார்க்கு நல்லார் கூறுவது; another name told by Adiyarkku nallar for a dance on stilts.

வெகு *vegu,* பெ.எ. (adj.) மிகுதியான; excessive.

[மிகு-விகு-வெகு]

வெகுமானம் *vegumāṉam,* பெ. (n.) நன் மதிப்புக் கருதி தரப்படும் பரிசு; a gift or prize given as a recognition of talent or good well.

[மிகு-விகு-வெகு+மானம்]

வெச்சாப்பு *veccāppu,* பெ. (n.) இளஞ்சூடு; warmness.

வெஞ்சனம் *veñjanam,* பெ. (n.) வஞ்சிர மீனின் பக்கத்து சொதுவல்; a part of vanjiram fish.

வெட்டுப்பட்ட வாதைகள் *veṭṭuppaṭṭa vādaigal,* பெ. (n.) வில்லுப்பாட்டில், இறப்புப் பற்றிய கதையாடல்களுக்கு உரியவர்; lyrist who writes the songs of the deceased in villuppattu comprise a bow along with other instrument.

வெட்டெழுத்து *veṭṭeḻuttu,* பெ. (n.) கல்வெட்டு எழுத்து; inscription.

[வெட்டு+எழுத்து]

வெண்துறைப்பாட்டு *vendurai-p-pāttu,* பெ. (n.) கூத்து வகைகளுக்கு உரிய பாட்டு; a song composed for dance varieties.

[வெண்துறை+பாட்டு]

வெம்பரப்பு *vemparappu,* பெ. (n.) புறம்போக்கு நிலம், தரிசு; barren land.

ஏணைக்கோணை–முரண்பாடு

வெல்விளி *velvili,* பெ. (n.) அறை கூவுதல், நெடுமொழி கூறல்; throwing challenge.

ம. வெல்லு விளி

[வெல்+விளி]

உறுதியாக வெல்வேன் என விளித்துச் சூளுரைத்தல்.

வெள்காடு *veḷkāḍu,* பெ. (n.) 1. இடுகாடு; burial ground. 2. சுடுகாடு; cremation ground.

க. பெள்காடு; தெ. வல்லகாடு

மறுவ. ஈமக்காடு

[வெள்+காடு]

வெள்–வெறுமை, பயன்பாடின்மை. இடுகாடு வேறெந்த நல்ல பயன்பாட்டுக்கும் உதவாத நிலமாதலின் வெள்காடு (பயனற்றது) எனப் பெயர் பெற்றது.

வெள்ளாப்பு *veḷḷāppu,* பெ. (n.) வெண்ணுரையுடன் கூடிய அலைவாய்க்கரையொட்டி வரும் கடலலை; sea wave with white foam touching sea-shore.

வெள்ளாயன் *veḷḷāyan,* பெ. (n.) ஆட்டிடையன்; goat keeper.

வெள்ளாவலை *veḷḷāvalai,* பெ. (n.) வெள்ளத்தின் ஓட்டத்திற்குரிய திசையறிந்து இழுக்கும் வலை; a fishing net.

[வெள்ளம் – வெள்ளா+வலை]

வெள்ளிடைமன்றம் *veḷḷiḍaimaṉṟam,* பெ. பூம்புகாரில் இருந்த பகுதி; a place in Pumpugar.

[வெள்ளிடை+மன்றம்]

வெள்ளிய நூல் *veḷḷiyanūl,* பெ. (n.) ஓவியம் வரைவதற்குரிய கருவி; a device use to draft paintings.

வெள்ளோக்கத்தார் *veḷḷōkkattār,* பெ. (n.) உழுவித்துண்ணும் வேளாளர்; a sect of Vellala farmers who manages the farm without tilling or working on farm or land.

வெளிக்கிடு *veḷikkiḍu-,* செ.கு.வி. (v.i.) புறப்படுதல், வெளியில் செல்லுதல்; to go out, start. (யாழ்ப்.).

[வெளி+கு+இடு]

ஏழன் பொருளில் நான்கன் உருபு வந்த உருபு மயக்கம்.

வெளிக்கொட்டு *veḷikkoṭṭu,* பெ. (n.) வட்ட ஆட்டத்தில் இடம் பெறும் கொட்டு வகை; a kind of beat, while playing dice.

[வெளி+கொட்டு]

வெளிச்சப்பாடு *veḷicca-p-pāḍu,* பெ. (n.) மருளாடுவோர் தெய்வமேறிய பின் சொல்லும் வாக்கு; utterings of a village temple priest after being occupied by the spirit or deity.

மறுவ. அருள்வாக்கு

[வெளிச்சம்+பாடு. வெளிச்சப்பாடு–வெளிப்படுத்தல்]

வெளிப்பிடம் *veḷippiḍam,* பெ. (n.) வலை வீசுவதற்கு உதவும் வகையில் கல், பாறை போன்றவையில்லாத அடிக்கடல் பகுதி; plain sea bed without stones or rocks.

[வெளி–வெளிப்பு+இடம்]

வெளிவட்ட நகர்தல் அடவு *veḷivaṭṭa nakardalaḍavu,* பெ. (n.) கும்மியில் இடம் பெறும் ஓர் அடவு; physical movement while clapping hands and dance.

வேக வடிவம் *vēkavaḍivam,* பெ. (n.) இறையின் சிற்ப வடிவ நிலை; sculptural form of god.

வேசரம் *vēšaram,* பெ. (n.) கோயில் விமான அமைப்பின் ஒரு கூறு; a component of a temple turret.

வேட்கோவர் *vēṭkōvar,* பெ. (n.) மட்பாண்டங் களைச் செய்யும் தொழிலாளி; earthern pot - maker.

[வேள்+கோவர்]

வேட்டைக்கும்மி *vēṭṭaikkummi,* பெ. (n.) கும்மி வகையினுள் ஒன்று; one among a dance which is performed by clapping hands to time and singing.

[வேட்டை+கும்மி]

வேட்டை நடனம் *veṭṭainaḍaṉam,* பெ. (n.) நாட்டுப்புற நடனக் கலைகளில் ஒரு வகை; one among rustic dance.

மறுவ. விலங்குப் போலிகள்

வேண்டு-தல் *vēṇḍu-,* செ.குன்றாவி. (v.t.) வாங்குதல்; to buy, purchase. (யாழ்ப்.).

[வேண்டு-வேண்டிப்பெறுதல், வாங்குதல்]

வேதாள ஆட்டம் *vēdāḷa āṭṭam,* பெ. (n.) மரத்தாற் செய்யப்பட்ட வேதாளத்தின் கோர முகமூடியை அணிந்து ஆடும் ஆட்டம்; rocking dance of a demon performed by wearing the gruesome mask of a demon.

[வேதாளம்+ஆட்டம்]

வேயாங்பூர்வா *vēyāṅpūrvā,* பெ. (n.) பொம்ம லாட்ட வகைகளில் ஒன்று; a kind of puppet show.

வேலன்மார் *velaṉmār,* பெ. (n.) காணிப் பழங் குடியினரைச் சுட்டும் வேறு பெயர்; a name denote Kāṇi aborign.

வேள்வி அந்தணம் *vēḷviandaṇam,* பெ. (n.) உயிர்க்கொலை, வேள்வி செய்து ஆரியவேதம் ஓதும் பார்ப்பனன்; chanting priest of vedic faith with through fires.

வேளக்களி *vēḷakkaḷi,* பெ. (n.) கேரளத்தில் ஆடப்படும் நாட்டுப்புற நடனம்; country side dance of Kerala.

வேளாவளி[1] *vēḷāvaḷi,* பெ. (n.) பழம்பெரும் பண் களில் ஒன்று; an ancient melody.

வேளாவளி[2] *vēḷāvaḷi,* பெ. (n.) நெய்தல் நிலத் திற்குரிய பண்; a melody type peculiar to marytime.

வேறுகாணல் *vēṟukāṇal,* தொ.பெ. (vbl.n.) வெற்றி பெறக் காணுதல்; seeing some one coming victorious. கள்ளராற்புலியை வேறு காணிய... உரைத்தனள். (சீவக.741). கள்ளா வா புலியைத் குத்து (பழ.).

[வேறல்–வேறு(வெற்றி)+காணல்]

பகைவர்களைத் தமக்குள் மோதச் செய்து தான் தப்பித்துக்கொள்ளும் உத்தியைக் குறித்த சொல் லாட்சி. கள்ளனிடமிருந்தும் புலியிடமிருந்தும் தப்பிக்க வழிப்போக்கன் உரைத்த சூழ்ச்சி மொழி.

வைந்தனை ஆடல் *vaindaṉaiāḍal,* பெ. (n.) ஆண்கள் ஆடுகின்ற ஒரு வகையான கோலாட்டம்; a group dance by gents in which generally women move around striking short coloured sticks to the rhythm of a song.

மறுவ. வளந்தனையாட்டம்

[வளைந்து+அணை+ஆடல்]

வூதி *vūdi,* பெ. (n.) நிழற்கூத்தைக் கண்டுபிடித்த தாக கூறப்படும் சீனப் பேரரசன்; a chinese emperor who discovered a play by making the shadow of the doll to fall on the screen - called "shadow play".

பிற்சேர்க்கை

அ

அக்காணி *akkāṇi*, பெ.(n.) பதநீர்; sweet toddy drawn in a pot lined with lime to prevent fermentation.

[அக்காரம்+நீர்–அக்காரநீர்–அக்காணீர்–அக்காணி (கொ.வ.)]

அகத்தியம் *agattiyam*, பெ.(n.) மிகத் தேவை (அடிப்படை)யானது (அத்தியாவசியம்); that which is indispensable, essential.

மறுவ. கட்டாயம்

[அகம்+அகத்து–அகத்தியம்]

அகப்பத்து *agappattu*, பெ.(n.) ஊரையொட்டியுள்ள வயல்; paddy field adjacent to village.

[அகம்+பற்று–அகப்பற்று–அகப்பத்து (கொ.வ.)]

அகலக்கரை *ahalakkarai*, பெ.(n.) ஆடையின் அகன்ற பகட்டுக்கரை (இ.வ.) (டப்பாக்கரை); thick border of the cloth.

[அகலம்+கரை]

அகனெடுங்கலம் *agaṉeḍuṅkalam*, பெ.(n.) ஒருவகைப் பெரும் ஏனம் (அண்டா); large vessel, cauldron.

[அகல்+நெடு> நெடும்+கலம்]

அங்கையுள்நெல்லி *aṅkaiyuḷnelli*, பெ.(n.) உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெளிவானது; (கரதலாமலகம்); a fruit of the myrobalan placed on the palm of the hand, fig; perception at once easy and quite clear.

[அங்கை+உள்+நெல்லி]

அடாவடி பேசு–தல் *aḍāvaḍipēšu-*, 1செ.கு.வி. (v.i.) பெரும் பொய் பேசுதல்; to utter a big lie.

[அடாவடி+பேசுதல்]

அடைப்பி *aḍaippi*, பெ.(n.) 1. எண்ணெய், அரிசி முதலியவை வைத்துக்கொள்ள உதவும் பெரிய அடைப்புச் சிமிழ்(டின்); a large container made of tin. 2. மெல்லிய மாழை முதலிய வற்றால் பலவகை அளவில் செய்யப்படும் மூடிபோட்ட கொள்கலம்; container (made of metal like tin or plastic) tin (of various sizes). 3. சிமிழ்; small box for keeping jewels, scent, etc, casket.

[அடைப்பு–அடைப்பி]

அண்டப்புளுகன் *aṇḍa-p-puḷugaṉ*, பெ.(n.) பெரும் பொய்யன், கசப்புளுகன்; big liar.

[அண்டம்+புளுகன்]

அணிசெய் ஆடையன் *aṇišeyāḍaiyaṉ*, பெ.(n.) புனைவான உடை உடுப்பவன் (சிங்காரக்காரன்); fop gaily dressed person.

[அணி+செய்+ஆடையன்]

அணியக்கால் *aṇiyakkāl*, பெ.(n.) கப்பலின் முன்னணியத்திலிருந்து வெளியே புறப்படும் உத்திரம் (M. Navl.81). (சப்தஜா); bowsprul.

[அணிய(ம்)+கால்]

அணியம் *aṇiyam*, பெ.(n.) செயலாக்க முனைப்பு; completely prepared for action.

த.வ. செயல்முனைப்பு

[அணி–அணியம்]

அணிவரிசை *aṇivarišai*, பெ.(n.) பிறர் மணங் கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்பட்ட பொருள்களின் பெருந்தொகுதி; array.

[அணி+வரிசை]

அதிகார ஏவலர் *adikāraēvalar,* பெ.(n.) வெள்ளிவில்லை அணிந்த தொண்டர்; தலைமை உதவியாளர் (தபேதார்); head peon of a district or divisional office as wearing a silver badge.

[அதிகார+ஏவலர்]

அதிராகு—தல் *adirāgu-,* செ.கு.வி. (v.i.) பருவ முற்ற கடாரி இணைசேரக் காளையைத் தேடுதல்; urge for matting aroused in cow. கடாரி அதிராகியுள்ளது (கொங்.வ.).

[அதிர்+ஆதல்]

அமர்வு அடக்கம் *amarvuaḍakkam,* பெ.(n.) இறந்த துறவி முதலியோரை அமரவைத்துப் புதைத்தல் (சமாதியில் வைத்தல்); burrying in a sullug posture, as the remains of an ascetic. 2. கேடு செய்தல்; crushing out utterly.

[அமர்வு+அடக்கம்]

அமைதிக்கொடி *amaiḍikkoḍi,* பெ.(n.) அமைதியைத் தெரிவிக்குங்கொடி (சமாதானக் கொடி); flag of truce.

[அமைதி+கொடி]

அயற்காரண அணி *ayaṟkāraṇa aṇi,* பெ.(n.) ஒருவன் முயலும் தொழிலின் பயன் அத் தொழிலாற் கைகூடாது வேறொன்றாற் கைகூடுவதாகக் கூறும் அணி (தண்டி 71) (சமாகிதம்); figure of speech in which an effect is described as proceeding from something other than its natural cause.

[அயல்+காரணம்+அணி]

அரச இரண்டகம் *arašairaṇḍagam,* பெ.(n.) அரச இரண்டகம் (வின்.); high treason.

[அரச+இரண்டகம்]

அரசிதழ் *arašidaḻ,* பெ.(n.) அரசு செய்தித் திரட்டுத்தாள் (கெசட்டு); gazette.

[அரசு+இதழ்]

அரசூழியம் *arašuūḻiyam,* பெ.(n.) ஊதிய மின்றி அரசுக்குச் செய்யும் வேலை (சர்க்கா ரூழியம்); work done for government without remuneration.

[அரசு+ஊழியம்]

அரவவேள்வி *aravavēḷvi,* பெ.(n.) பாம்புகள் சாகும்படிச் செய்யும் வேள்வி (சர்ப்பயாகம்); sacreficial rite for the destruction of serpents.

[அரவம்+வேள்வி]

அரிஓகநிலை *ariōganilai,* பெ.(n.) கணைக் கால்கள் பிட்டத்தைத் தொடவும், விரிந்த கை விரல்கள் தொடையில் படவும், வாய் மலர்ந்தும், பார்வை, மூக்கு நுனியை நோக்கியும் இருக்கும் ஓக வகை (கேசரியாசனம்); a yogic posture.

[அரி+ஓக(ம்)+நிலை]

அரிமாஏறு *arimāēṟu,* பெ.(n.) சிங்கக்குட்டி (சிங்க மடங்கல்); young of lion.

[அரிமா+ஏறு]

அரிமாநோக்கு *arimānōkku,* பெ.(n.) அரிமாவைப் போல் கழுத்தைத் திருப்பி முன்னும் பின்னும் பார்த்துச் செல்லும் நோக்கு; (சிங்க நோக்கு); looking over the shoulder with neck turned as a lion.

[அரிமா+நோக்கு]

அரிமுக அரக்கன் *arimuga arakkaṉ,* பெ.(n.) முருகக் கடவுளால் அழிக்கப்பெற்ற, அரிமா முகங் கொண்ட ஓர் அரசன்; lion faced Asura slain by Lord Murugan.

[அரி+முக+அரக்கன்]

அரிமுக ஓடம் *arimugaōḍam,* பெ.(n.) அரிமா உருவை முகப்பிற் கொண்ட தோணி (சிங்க முக ஓடம்); a boat with lion shaped prow.

[அரி+முக+ஓடம்]



அருங்கலைச்செல்வி *arunkalai-c-celvi,* பெ.(n.) கலைமகள் (சகலகலாவல்லி); Kalaimakal, as the goddess of all learning.

[அருமை+கலை+செல்வி]

அருங்கலை *arunkalai,* பெ.(n.) 1. காதாட்டுங்கலை; elephants ear, term used to denote the art of moving or waving on ears in imitation of the elephant. 2. பெரு முயற்சியால் ஆக வேண்டிய செயல் (கச கர்ணம்); a task involving stupenduous effort.

[அருமை+கலை]

அருணோக்கம் *arunōkkam,* பெ.(n.) கடைக் கண் பார்வை (கடாட்சவீட்சணம்); side glance.

[அருள்+நோக்கம்]

அருளறம் *arularam,* பெ.(n.) உயிர்களின் பொருட்டுச் செய்யும் அறச்செயல்;meritorious deeds performed in favour of living beings.

[அருள்+அறம்]

அருளுருவன் *aruluruvan,* பெ.(n.) அருளுக்கு நிலைக்களமானவன் (கருணாமூர்த்தி); god as embodiment of kindness.

[அருள்+உருவன்]

அலைக்கொம்பு *alai-k-kombu,* பெ.(n.) மாட்டுக்கொம்பு வகை; a kind of cow's horn.

[அலை+கொம்பு]

அறுபான்நிறை *arunnirai,* பெ.(n.) அறுபதாம் அகவை நிறைவு; attainment of one's sixtieth birth day.

[ஆறு+பத்து)பான்+நிறை]

அறுவைப்பண்டுவம் *aruvai-p-panduvam,* பெ.(n.) கத்தி கொண்டறுக்கும் பண்டுவம் (சத்திரக்கருமம்); surgical operation.

[அறுவை+பண்டுவம்.]

அனைத்து ஊடாட்டம் *anaittuūdāttam,* பெ.(n.) எல்லாவற்றிலும் ஊடுருவியிருக்கை; all pervasiveness, immanen.

[அனைத்து+ஊடாட்டம்.]

அனைத்துக்கரிசுநீக்கச்சடங்கு *anaittukkarišu nikkaccadanku,* பெ.(n.) கரிசு நீங்க செய்யும் நடப்புக் காரியம் (சர்வப்பிராயச் சித்தம்). Ceremoney for the expiation of all sins performmed generally at the time of death.

[அனைத்து+கரிசு+நீக்க+சடங்கு.]

அனைத்துரிமைவிற்பனை *anaitturimai virpanai,* பெ.(n.)எல்லா உரிமைகளையும் விலைக்குக் கொடுத்துவிடுகை (சத்தக் கிரயம்); absolute sale.

[அனைத்து+உரிமை+விற்பனை.]

அனைத்தூடி *anaittūdi,* பெ.(n.) எங்கும் நிறைந் தவன்; god on omnipresent.

[அனைத்து+ஊடி]

அனைத்து நோய் நீக்கி *anaittunōynikki,* பெ.(n.) அனைத்துநோய்களையும் குணப்படுத்த வல்லது; cure all panacea.

[அனைத்து+நோய்+நீக்கி.]

ஆக்குநர் *ākkunar,* பெ.(n.)திரைப்படம்,நாடகம், போன்றவற்றை உருவாக்குவதில் ஆளுவ (நிருவாக)ப் பொறுப்புடன் பொருட்செலவையும் ஏற்பவர்(தயாரிப்பாளர்); producer (of a film or layer).

[ஆக்கு→ஆக்குநர்.]

ஆகட்டை *ākattai,* பெ.(n.) ஒரு வகை குறுங்கண் பறவை; a bird with small eyes.

[ஆகு-ஆகட்டை]

ஆசான் நுகர்வு *āšānnugarvu,* பெ.(n.)(சமய) ஆசிரியன் நுகரும் பங்குரிமை; endowment enjoyed by spiritual teacher.

[ஆசான்+நுகர்வு.]

ஆட்டுத்தொட்டி *āttuttotti,* பெ.(n.)கால்நடை களை புலாலுக்காக அறுக்கும் இடம் (சூளை); slaughter house.

[ஆடு+தொட்டி]

ஆ

ஆடிக்கூடு *ādikkūdu, பெ.*(n.)(காற்றினால் சுடர் அணையாமல் இருக்க)மண்ணெண்ணெய் விளக்கில் பொருத்தும் கண்ணாடிக் கூடு (சிம்னி); chimney.

[ஆடி + கூடு]



ஆண்டுவரிக்கணிப்பு *ānduvari-k-kaṇippu, பெ.*(n.) அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிப் பணத்தைத் தண்டும் ஆண்டிறுதி வருவாய் கணிப்பு;annual settlement of revenue.

[ஆண்டு+வரி+கணிப்பு]

ஆப்புக்கட்டை *āppuk-kaṭṭai, பெ.*(n.) நீள்சதுர வடிவிலிருக்கும் சிறு மரத்துண்டு (டப்புப் பலகை); piece of wood, quadrant in shape, which is used in the log.

[ஆப்பு+கட்டை]

ஆமையிருக்கை *āmaiirukkai, பெ.*(n.)(சமய) ஆமை வடிவமைந்த ஒக இருக்கை; a raised wooden board shaped like a tortoise used as a seat while meditating.

[ஆமை+இருக்கை]

ஆமையோட்டுப்பொடி *āmaiyōṭṭuppoḍi, பெ.*(n.) ஆமையோட்டுச் சாம்பல் (கி.வ.); calcinated medicinal powder of tortoise shell.

[ஆமை+ஓட்டு+பொடி]

ஆயிரம்காலி *āyira-k-kāli, பெ.*(n.)நூறு கால் களையுடைய ஓர் உயிரினம்;any creature or insect with 100 legs.2.பூரான்; cantepede.

[ஆயிரம்+காலி]



ஆயிரம்குவளை *āyiramkuvaḷai, பெ.*(n.)ஆயிரங் கோடி (சுக்கிர.நீதி.106); thousand crores.

[ஆயிரம்+குவளை]

ஆயிரம்பிறைநாளணி *āyiramiṟai nāḷaṇi, பெ.*(n.)எண்பது அகவைக்கு மேற்பட வாழ்ந்து ஆயிரம் பிறைகண்டவர்க்குச் செய்யுஞ் சடங்கு; ceremony performed when a man is past 80 year and has seen 1000 crescent moon.

[ஆயிரம்+பிறை+நாளணி]

ஆயிரம்பெயர் *ayirampeyar, பெ.*(n.)கடவுளின் ஓராயிரம் திருப்பெயர்கூறும் நூல் (சகசர நாமம்);sacred book containing thousand names of a deity.

[ஆயிரம்+பெயர்]

ஆய்வுக்குழாய் *āyavu-k-kuḻāy, பெ.*(n.)மருந்தை ஆய்வு செய்ய பயன்படுத்தும் ஒரு பக்கம் மூடப்பட்ட குழாய் (சோதனைக்குழாய்); a test tube for testing medicines or some chemicals.

[ஆய்வு+குழாய்]

ஆரியம் *āriyam, பெ.*(n.) கேழ்வரகு; ragi millet.

[அரு(சிறியது)–ஆரு–ஆரியம்]

ஆவணவேலை *āvanavēlai,* பெ. (n.) ஆவணமெழுதும் வேலை; profession of writing documents.

[ஆவணம்+வேலை]

ஆள்மயக்கி *ālmayakki,* பெ. (n.) உலகத்தையே மயங்க வைக்கும் சித்தர்களிடம் இருக்கும் ஒரு வகை மருந்துக்குளிகை; a magic pill to seduce people possessed by siddhas.

[ஆள் +மயக்கி]

ஆள்நிலம் *ālnilam,* பெ. (n.) அடிக்கடி ஒருவர் கையிலிருந்து மற்றொருவர் கைக்கு மாறி துய்த்தாளப்படும் ஊர் நிலங்கள்; tenure in which village or lands of a community are held individually under periodical distribution.

[ஆள்+நிலம்]

ஆறணியன் *āraṇiyan,* பெ. (n.) கங்கையை முடிமேலணிந்த சிவன்; Sivan, who holds the Ganges on his head.

[ஆறு+அணியன்]

ஆறாம்கேடு *ārāmkēḍu,* பெ. (n.) குழந்தை பிறந்த ஆறாம் நாளிலேனும், ஆறாம் மாதத்திலேனும், ஆறாம் ஆண்டலேனும் குழந்தை அல்லது தாயை வருத்துவதாகக் கூறப்படும் ஒரு தீக்கோள்;an evil planet supposed to cause distress an infant or its monther on the 6th day, 6th month or 6th year of its birth.

[ஆறாம்+கேடு]

ஆறுநிலை *ārunilai,* பெ. (n.) உடலில் உண்டாகும் இருத்தல்,தோன்றுதல், உருத்திரித்தல், வளர் தல், சுருங்குதல், அழிதல்; six stages of the physical body.

[ஆறு+நிலை]

ஆறெழுத்து மந்திரம் *āreluttu mandiram,* பெ. (n.) குமரக் கடவுளுக்குரிய ஆறெழுத்து களாகிய (சடக்கரம்) மந்திரம்(இலக்.அக.);the mantra of six letters sacred to god kumaran.

[ஆறு+எழுத்துமந்திரம்]

இ

இசைப்பெட்டி *isai-p-peṭṭi,* பெ. (n.) காற்றை உட்செலுத்தி மேற்புறக் கட்டைகளை விரலால் அழுத்தி இசைக்கும்பெட்டி வடிவிலுள்ள இசைக்கருவி (ஆர்மோனியம்); harmonium.

மறுவ.பாட்டுப் பெட்டி.

[இசை(ஒலி, ஓசை)+பெட்டி]

இஞ்சி இளகியம் *iñji iḷagiyam,* பெ. (n.) இஞ்சி சேர்த்த இளகியவகை; electuary with ginger as its chief ingredient.

[இஞ்சி+இளகியம்]

இட்டேறு-தல் *iṭṭēru-,* செ.கு.வி. (v.i.) 1. உற்ற நேரத்தில் வருதல்; to come in time. 2. ஒரு வகையாக நிறைவேற்றுதல்; to give perfection to a work.

[இட்டு+ஏறு-,]

இடிகுழல்இரும்புந்து *iḍikūḷal irumbundu,* பெ. (n.) சக்கரங்களின் மேல் சுற்றி வரும் இரும்புப் பட்டை பொருத்தப்பட்டதும் நீண்ட குழாயை உடையதுமான படைத்துறை வண்டி; tanks.



[இடி+குழல்–இரும்புந்து]

இடும்பு *idūmbu,* பெ.(n.) எண்குணக்கேடு; எட்டு வகை தீய குணங்களுள் ஒன்று இறுமாப்பு; pride.

[இடு–இடும்பு]

இடைமறி--த்தல் *idaimari,* செ.குன்றாவி. (v.t.) குறுக்கிட்டுத் தடுத்தல், இடம் விட்டு இடம் செல்லும் ஒருவரை அல்லது ஒன்றை அல்லது ஒரு செய்தியை தடுத்து நிறுத்துதல்; to intercept.

[இடை+மறி–,]

இடைமறிப்பு *idaimarippu,* பெ.(n.) இடம் விட்டு இடம் செல்லும் ஒருவரை அல்லது ஒன்றை அல்லது தகவல் போன்றவற்றைத் தடுத்து நிறுத்துகை; interception. கடத்தல்காரர்களுக்கிடையே நடந்த தொலைபேசி உரையாடலைக் காவல்துறையினர் இடைமறிப்பு செய்து அவர்களைக் கைது செய்துவிட்டனர்.

[இடை+மறிப்பு. மறி > மறிப்பு]

இடையம்புளி *idayampuli,* பெ.(n.) இடையர் வைத்த குழம்பு; curry broth prepared by cowherd.

[இடையம்+புளி]

இதளியம் *idaliyam,* பெ.(n.)பாதரசம்; mercury.

[இதள்– இதளியம்]

இயல்பூக்கம் *iyalbūkkam,* பெ.(n.) ஒருவர் அல்லது ஒரு விலங்கு சிந்திக்காமல் அல்லது பயிற்சி பெறாமல் குறிப்பிட்ட முறையில் நடந்துகொள்ளத் தூண்டும் இயற்கையான உந்துணர்வு; instinct.

[இயல்பு+ஊக்கம். ஊக்கு > ஊக்கம்]

இயல்வளி *iayalvali,* பெ.(n.) (கற்பு காலத்தே தலைவியைப் பிரிந்து கல்வி, பணி நிமித்தம் பிரிந்து செல்லும் தலைவன் மனம் தளருமாறு வீசும்) கடுமையான வாடைக்காற்று;north chill wind blowing strongly, to divert hero's mind, who separates her for job reason.

[இயல்+வளி]

இயற்கணிதம் *iyarkanidam,* பெ.(n.) குறிக் கணக்கியல்; algebra.

[இயல்+கணிதம்]

இயற்கை முத்து *iyarkaimuttu,* பெ.(n.) கடலில் கிடைக்கும் ஒரு வகை இயற்கை அணிகலப் பொருள்;genuine pearl.

[இயற்கை+முத்து]

இயற்கைவளம் *iyarkaivalam,* பெ.(n.) ஒரு குறிப்பிட்ட சூழலில் இயல்பாக இடம் பெற்றிருக்கும் வளம்; natural resources.

[இயற்கை+வளம்]

இயற்பியல் *iyar-p-piyal,* பெ.(n.) ஒலி,ஒளி, வெப்பம், மின்சாரம், காற்றழுத்தம் போன்ற இயற்கையாற்றல்களின் இயல்புகளைக் குறித்த அறிவியல்; physics.

[இயற்பு+இயல்]

இரட்டைக் குழந்தை *irattai-k-ulandai,* பெ.(n) ஒரு மகப்பேற்றில் பிறந்த இரு குழந்தைகள்; twins.

[இரட்டை+குழந்தை]

இரண்டகன் *irandagan,* பெ.(n.)நம்பிக்கைக் கேடன்;betrayer, treacherous person.

[இரண்டு+அகம்→அகன்]

இராச நிகண்டு *irāšanigandu,* பெ.(n.) வட மொழியில் எழுதப்பட்டதொரு நிகண்டு நூல்

(அபிதான சூடாமணி);a lexiography written in sanskrit language.

இருவாய்சால் *iruvāy-cāl,* பெ.(n.) தவசம் கொட்டி வைப்பதற்காக இரு பக்கமும் வாயுள்ளதாக நீளுருளை வடிவில் செய்யப்பட்ட மட்பாண்ட குவிதாழி; a barrel like storage earthen ware to store food grain.

[இரு+வாய்+சால் (பெரியதாழி)]

இருவெதிர் *iruvēdir,*பெ.(n.)பெரு மூங்கில் (30 ஆண்டுக்கொரு முறை பூக்கும்) முந்தூழ் (நற்றிணை 116);large bamboo.

[இரு+வெதிர்]

இலக்கணப்பால் *ilakkaṇappāl,*பெ.(n.) இலக்கணத்தில் காட்டும் பால்பிரிவு; grammatical gender.

[இலக்கணம்+பால்]

தமிழில் ஐம்பால் (ஆண்பால், பெண்பால், பலர் பால்,ஒன்றன்பால்,பலவின்பால்) இருக்கின்றன. இதில் பால் (ஆண்,பெண், அஃறிணை), எண் (ஒருமை, பன்மை) ஆகிய இரண்டும் இணைந்துள்ளன.

[இலக்கணம் + பால்]

இலக்கணப்போலி *ilakkaṉ-p-pōli,*பெ.(n.)தனிச் சொல்லின் எழுத்துகளும் ஒரு கூட்டுச் சொல்லின் உறுப்புகள் அல்லது உறுப்புச் சொற்களும் முன் பின்னாக முறைமாறி வருவது; metathesis.

[இலக்கணம் +போலி]

எ.டு. தனிச்சொல் :அலரி–அரளி; கொப்புளம் – பொக்குளம், சதை–தசை,ஞிமிறு–மிஞிறு, சிவிறி–சிவிறி.

கூட்டுச் சொல்: இல்வாய்–வாயில்; இல்முன் முன்றில், கதுவாலி–கவுதாரி;தானைமுன்–முன்றானை.

இலக்கியப்பேருரை *ilakkiya-p-pērurai,* பெ.(n.) இலக்கியம் தொடர்பாக ஆற்றும் நீண்ட உரை; literary discourse.

[இலக்கியம்+பேருரை]

இலக்கியவழக்கு *ilakkiyavaḻakku,*பெ.(n) இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள மொழி வழக்கு; literary dialect.

மறுவ.புலனெறிவழக்கம்.

[இலக்கிய(ம்)+வழக்கு]

இழைத்தல் மொழி *iḻaittalmoḻi,*பெ.(n.) செயற்கை மொழி; artificial language.

[இழைத்தல் +மொழி]

இவர்–தல் *ivar-,* செ.கு.வி.(v.t.)ஊர்திகளில் ஏறிச் செல்லுதல்; to rider drive.

[உவ–இவ–இவர்]

இவரி *ivari,*பெ.(n.)வண்டி முதலியவற்றில் செல லுகை (சவாரி);ride , drive.

[இவர்–இவரி]

இழுவை *izhuvai,* பெ.(n.)நிலைப்பேழை, மிசை(மேசை)யிலுள்ள இழுப்பறை; drawer..

[இழு–இழுவை]

இழையப்பம் *iḻaiyappam,*பெ.(n.)சிற்றுண்டிவகை (இடியப்பம்); steamed rice-cake.

[இழை+அப்பம்]

இளங்கமுகு *iḷaṅkamugu,*பெ.(n.)முற்றாத பாக்கு; tender areca.

க. எளெகறங்கு.

[இளம்+கமுகு]

இளங்குழந்தை *iḷaṅkuḻandai,*பெ.(n.) பச்சிளங் குழந்தை;tender infant.

க. எளெகூசு.

[இளம்+குழந்தை]

இளந்தளிர் *iḷantaḷir,*பெ.(n.) இளமையான தளிர்; tender young foliage.

க. எளெதளிர்.

[இளம்+தளிர்]

இளந்தென்னை *iḷantennai,*பெ.(n.) இளைய தென்னை மரம்; young coconut tree.

க. எளெதெங்கு.

[இளம்+தென்னை]

இளந்தோல் *ilantōl*,பெ.(n.)மென்மையான தோல்; tender, soft skin or hide.

க. எளெதொகல்.

[இளம்+தோல்]

இளமேனி *ila-mēṉi*,பெ.(n.) இளைய பருவத்தார்;the body of a young man.2.குழந்தை ஈன்ற பெண்ணின் உடம்பு;the delicate body of a woman immediately after child birth. 3. குழந்தை உடம்பு;a child's body.

மறுவ.பச்சையுடம்பு.

[இளம்+மேனி]

இளமைத் தனம் *iḷamaittaṉam*, பெ.(n.)இளமை; youth,tenderness.

க. எளெதன.

[இளமை+தனம்]

இறங்கு துறை *iṟaṅgutuṟai*,பெ.(n.) துறைமுகத்தில் கப்பல் சரக்கு இறக்குமிடம்;jetty.

[இறங்கு+துறை]

இறங்குபூரான்சுழி *iṟaṅgupūrāṉcuḻi*,பெ.(n.) மாட்டின் மயிர்ச்சுழி, முதுகின் நடுவில் இருக்கும் சுழி; a small round pit at the back side of the bullock.

[இறங்கு+பூரான்+சுழி]

இறப்பிலி *iṟappili*,பெ.(n.)இறப்பில்லாதவன், இறைவன்; God.

[இறப்பு+இலி]

இறாஞ்சு வலை *iṟāñjuvalai*,பெ.(n.);நீர் நிலைகளில் வேகமாக இழுத்தற்குரிய வலை; a fishing net.

[இறாஞ்சுதல்–இழுத்தல். இறாஞ்சு+வலை]

இறாமணி வலை *irāmaṇivalai*,பெ.(n.) கீழே மணிகள் கட்டப்பட்டு இறாமீன் பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட வலை; tie up balls at the bottom of fishing net used to catch shrimps.

[இறால்+மணி+வலை]

இறுதிச்சடங்கு *irudi-c-caḍaṅgu*,பெ.(n.) இறந்தவர்க்கு இறுதியாகச் செய்யும் சடங்கு; funeral rites.

மறுவ.இறுதிக்கடன்

[இறுதி+சடங்கு]

இறைப்பு கட்டு–தல் *iṟaippukattu-*, செ.குன்றாவி.(v.t.)கிணற்றிலிருந்து வயலுக்கு நீர் இறைத்தல்; to irrigate.

[இறைப்பு+கட்டு–,]

இறையருள் *iṟaiyaruḷ*,பெ.(n.)இறைவன் மாந்தனிடம் காட்டும் பேரன்பு; God's grace. நேற்று நடந்த நேர்ச்சியில் இறையருளால் இவர் உயிர் தப்பினார்.(உ.வ.)

[இறை+அருள்]

இறையறிவு *iṟai-y-aṟivu*,பெ.(n.)இறைவனைப் பற்றிய அறிவு;knowledge of the Supreme Being.

[இறை+அறிவு]

இறையூர் *iṟaiyūr*,பெ.(n.)விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; name of a village in vilupuram.

[இறை+ஊர்]

இன்கூழ் *iṉ-kūḻ*,பெ.(n.)இனிப்பு வகைகளுளொன்று (அல்வா.);a kind sweet.

[இன்+கூழ்]

இன்மிதவை *iṉmiḍavai*,பெ.(n.)இனிப்பு பணியார வகை (இ.வ.);a kind of confectionary.

[இன்+மிதவை]

இனக்கலவரம் *iṉakkalavaram*,பெ.(n.) இனம் அல்லது குழு அடிப்படையில் தோன்றும் பெருங் கலகம்; riot based on caste or class disputes.

[இனம்+கலவரம்]

இனச்சிதைவு *ina-c-cidaivu*, பெ.(n.) ஒரு குழுவினரின் சீர்குலைவு; disintegration among a clan or community.

[இனம்+சிதைவு]

இனச்சொல் *ina-c-col*, பெ.(n.) ஒரே மூலத்தி னின்று தோன்றியதும் இனமொழிகளில் காணப்படுவதுமான சொல்; cognate word.

[இனம்+சொல்]

இனமொழி *inamoli*, பெ.(n.) ஒரே குடும்பத்தைச் சார்ந்த மொழி; cognate language.

[இனம்(ம்)+மொழி]

ஈ

ஈக்குச்சி *ikkucci*, பெ.(n.) துடைப்பங்குச்சி; rib of a palm leaf.

[ஈர்–பிளத்தல், கிழித்தல். ஈர்+குச்சி–ஈக்குச்சி]

ஈகியர் *igiyar*, பெ.(n.) ஈகி பார்க்க; see *igi*.

[ஈர்–பிளத்தல், கிழித்தல். ஈர்+குச்சி–ஈக்குச்சி]

ஈகி *igi*, பெ.(n.) 1. கொடையாளி; liberal donor. 2. பிறர் பொருட்டு தன்னலம் துறப்போன்; one who sacrifices his self interest.

[ஈ→ஈதல் ஈ→ஈகை ஈகை→ஈகி]

ஈச்சம்பழம் *iccampalam*, பெ.(n.) காட்டீந்தின் பழம்; date palm. "காய்த்த பலாவின் கனி யுண்ண மாட்டாமல் ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே" (திருமந். 244)

[ஈச்சம்+பழம்]

ஈச்சை *iccai*, பெ.(n.) கழிவுப் பொருள்களிலும் தின் பண்டங்களிலும் மொய்க்கும்; பறக்கும் பூச்சி யான ஈ; house fly.

[ஈ–ஈச்சை]

ஈச்சைக்கீரை *iccai-k-kirai*, பெ.(n.) மென்மையான காரமும் நறுமணமும் கொண்ட உண்ணத்தக்க மருத்துவ குணங்கொண்ட புதினாக் கீரை; a kind of mint.

[ஈயெச்ச→ ஈச்ச+கீரை]

இதை உணவில் கலந்து உண்கையில் ஈயெச்ச மிட்ட உணவாக இருந்தாலும் அதன் நச்சைப் போக்க வல்லது.

ஈட்டுலக்கை *ittu-ulakkai*, பெ.(n.) ஒரே நேரத்தில் இரண்டு உலக்கை கொண்டு இரண்டுபேர் மாற்றி மாற்றி குத்துதல்; pounding grains with two pestles by two persons.

[ஈடு→ ஈட்டு+உலக்கை]

ஈடுகாய் *idu-kāy*, பெ.(n.) கோயிலில் உடைக்கப் பெறும் சிதறு தேங்காய்; a coconut breaking in temples.

[ஈடு+காய்]

ஈமு *imu*, பெ.(n.) கழுகின் ஒரு இனம்; a variety of egle.



ஈரங்கி *ērrangi*, பெ.(n.) காதணி; ear ornament.

ஈரட்டு விற்பனை *īrattu virpanai,* பெ.(n.) விற்பனை (அ) திருப்புதல்; sales or return.

[ஈர்–ஈரட்டு+விற்பனை]

ஈரல் ஊதை *īralūdai,* பெ.(n.) மண்ணீரலைப் பற்றிய ஊதை நோய்; a disease of the spleen.

[ஈரல்+ஊதை]

ஈரிதழ்ச் சிப்பி *īrittal-c-cippi,* பெ.(n.) ஓராண்டு ஆணாகவும் ஓராண்டு பெண்ணாகவும் இருக்கும் கடல் வாழ் உயிரினம்; sea living things i.e. male becomes female for one year and the same female becomes male for one year as husband and wife.

[ஈரிதழ்+சிப்பி]

ஈனியற்படுக்கை *īniyarpadukkai,* பெ.(n.) மனைவி பிள்ளை பெற்றவுடன் கணவனும் அவளைப்போல் நோவுற்றதாக நடித்துப் படுத்துக் கொண்டு தனக்கு மகப்பேற்று மருத்துவம் பார்க்கச் சொல்வது; couvade.

[ஈன்+இயல்+படுக்கை]

"குறத்தி பிள்ளை பெற குறவன் காயந் தின்றானாம்" என்னும் பழமொழி ஈனியற் படுக்கை வினை குமரி நாட்டில் இருந்ததைக் குறிப்பாக உணர்த்துகின்றது.(த.வ.1.30).

உ

உடுத்தை *uduttai,* பெ.(n.) அணில்; squirral.

[உடு–உடுத்தை]

உடுதல் *ududal,* பெ.(n.) 1. இல்லாத ஒன்றை இருப்பது போல் கூறுதல்; to fabricate what is not real or nature. 2. அறைகூவல் விடுதல்; to challenge.

[உடு–உடுதல்]

உயிர்ப்புணரொலி *uyirppunaroli,* பெ.(n.) இரண்டு உயிர் ஒலிகளை ஒருங்கிணைத்து ஒரே உயிர் ஒலியாகப் பலுக்கும் ஈருயிர் ஒலி; diphthong.

[உயிர்+புணர்+ஒலி]

உரி–தல் *uri-,* செ.கு.வி.(v.i.) 1. எரிதல்; be-burning. 2. வெப்பமுறுதல்; heat. 3. நோவு உண்டாதல்; ache-pain.

உருட்டு *uruttu,* பெ.(n.) கால் விரலில் அணியும் வெள்ளி மோதிரம்; a silver ring worn on long finger of the leg. "கலியாணத்தில் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் உருட்டு அணிவித்தார்கள் (கொங்.வ.).

மறுவ. மிஞ்சு

[உருள்–உருட்டு]

ஆண்களுக்கு தட்டை வடிவிலும் பெண்களுக்கு முறுக்கிய வடிவிலும் உருட்டு அணிவிப்பது வழக்கம்.

உருப்பாங்கட்டி *uruppān-katti,* பெ.(n.) மண்புழுக்கள் உருவாக்கும் மண்கட்டி; the clod where the earthworm originates.

[உருப்பு+ஆம்+கட்டி]

உள்நாட்டுக் கலகம் *ulnāttu-k-kalagam,* பெ.(n.) ஒரே நாட்டில் வாழும் மக்கள் குழுக்களிடையே நிகழும் போர்; civil war.

[உள்+நாட்டு+கலம்]

ஊ

ஊணானெறும்பு *ūṉāṉerumbu,* பெ.(n.) உருவில் பெரிய ஆனால் கடிக்காத கருப்பு நிறமுள்ள எறும்பு; a kind of black which do not bite.

[ஊணாணான்+எறும்பு]

ஊத்தாம்பானை *ūttāmpāṉai,* பெ.(n.) வளைக்குள் புகையைச் செலுத்தி எலியைப் பிடிக்க ஏதுவாக வடிவமைக்கப்பட்ட பானை; a pot used to trap rat by inserting smoke inside its hole.

[ஊத்தாம்+பானை]

ஏ

ஏறுவால் *ēru-vāl,* பெ.(n.) குட்டையான வாலுடைய மாடு; short tailed cow.

[ஏறு+வால்]

ஐ

ஐந்திரம் *aindiram,* பெ.(n.) மூன்றாம் தமிழ்க் கழகத் தொடக்கத்தில் ஐந்திரனாரால் இயற்றப்பட்ட தமிழ் இலக்கிய நூல்; ancient Tamil grammar prior to Tolkapiyar written by Aindiranar during 3rd Tamil Academic age.

அகநானூறு புறநானூறு போன்ற கடைக்கழக இலக்கியங்கள் கிடைத்ததன் பயனாக 2000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழைக் கண்டோம். தொல்காப்பிய இலக்கணம் கிடைத்ததன் பயனாக 3000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழைக் கண்டோம். சிந்துவெளி எழுத்துச் சான்றுகளை முழுமையாக நான் படித்தறிந்ததன் விளைவாக 5000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் கண்டறியப் பட்டுள்ளது.

கி.மு.6000 கால அளவில் இரண்டாம் தமிழ்க் கழகம் நிறுவிய பாண்டியன் வெண்தேர்ச்செழியன் காலத்தில் பழைய உருவெழுத்திலிருந்து உருவாக்கப் பட்ட அசையெழுத்துகளே சிந்துவெளி நாகரிகக் காலத்து எழுத்துகளாயின. இக்காலத்தில் தோன்றிய பெருநாரை, பெருங்குருகு என்னும் தமிழிலக்கண நூல்கள் கிடைக்கவில்லை. இக்காலத்தில் தமிழில் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் கலந்த அசை யெழுத்து உருவாகிவிட்டது. எனவே, சிந்துவெளி நாகரிகக் காலத்து எழுத்துகளை இடைக்கழகத் தமிழ் எழுத்து என்று சொல்ல வேண்டும்.

கடைக்கழகம் கி.மு.1850 அளவில் தோன்றியதாக இறையனார் களவியல் கூறுகிறது. மூன்றாம் தமிழ்ச்சங்கம் எனும் கடைக்கழகம் நிறுவிய பாண்டியன் முட்டத்துத் திருமாறன் காலத்தில் கி.மு. 1850இல் ஐந்திரனார் இயற்றிய ஐந்திரம் அரங்கேறியது எனக் கொள்வதில் தவறில்லை. கற்றறிந்த புலவர் குழுவினரால் **பிராமி** எழுத்து கண்டுபிடிக்கப் பட்டிருக்க வேண்டும் எனப் பூலர் எனும் அறிஞர் கூறியிருக்கிறார்.

ஐந்திரனார் சிந்துளெி எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைத்து 12 உயிரும் 18 மெய்யும் கொண்ட முப்பது அடிப்படை எழுத்துகளாக்கி **முதலெழுத்து** எனப்பெயரிட்டார். இதனைப் பிற் காலத்தில் வடமொழியாளர் **பிராமி** எழுத்து எனப் பெயர் மாற்றிக் கொண்டனர். பிராமி என்பதற்கு முதலில் இருந்த எழுத்து என்று பொருள். இந்த உண்மையை அறியாதோர் அசோகன் பிராமியிலிருந்து தமிழ் எழுத்து தோன்றியதாகத் தவறான கருத்தை வெளியிட்டு வருகின்றனர்.

ஐந்திரனார் வடிவமைத்த தமிழ் எழுத்தே பிராமி எனும் பெயரில் இந்திய மொழிகள் அனைத்திலும் பொது எழுத்தாயிற்று. வடதமிழ் என்னும் பிராகிருத மொழி ஐந்திரனார் வகுத்த 30 எழுத்துகளை மட்டும் பயன்படுத்தியது. சமற்கிருத எழுத்தொலிப்புகளைச் சேர்த்துக் கொள்ளவில்லை.

ஆனால் பாலிமொழி சமற்கிருத மொழிக்கே உரிய 11 எழுத்துகளைச் சேர்த்துக்கொண்டு 41 எழுத்துகளாக்கிக் கொண்டது. பாணினி மேலும் 10 எழுத்துகளைச் சேர்த்து சமற்கிருதத்துக்கு 51 எழுத்துகளாக்கிக் கொண்ட காலத்திலும் பிராமி எனும் தமிழ் எழுத்து வடிவங்களே இந்திய மொழிகள்

அனைத்துக்கும் பொது எழுத்து வடிவங்களாக இருந்தன.

ஐந்திரனார் ஐந்திர இலக்கண நூலில் வகுத்த பிராமி என்னும் முதலெழுத்து கி.மு.1850 முதல் கி.பி.250 வரை புழக்கத்தில் இருந்தது. மூவேந்தர் ஆட்சி வீழ்ந்த பின் தமிழ் எழுத்துகளின் வரிவடிவங்கள் மாறிவிட்டன.

புத்தர் தமிழ் கற்றவர் என்றும், ஐந்திரம் தமிழிலக்கண நூல் என்றும் சீனமொழி பெயர்ப்பு நூலாகிய இலலிதவிசுத்தாரம் (புத்தரின் வாழ்க்கை வரலாறு) கூறுகிறது.

வடஇந்தியாவில் பேசப்பட்ட தமிழ் கி.மு.1500 அளவில் பிராகிருதமாகத் திரிந்தது. இதனை வடதமிழ் என்றனர். இதே கால அளவில் வாழ்ந்தவராகிய சமணசமயத்தின் முதல் தீர்த்தங்கரர் தன் மகளிர் இருவருக்கும் பிராமி எழுத்து கற்பித்ததாகக் கூறப்படுகிறது. சிந்துவெளி எழுத்துக்கு அடுத்ததாகத் தோன்றிய பிராமி எழுத்து கி.மு.1500க்கு முற்பட்டது என்பது உறுதியாகிறது. சிந்துவெளி நாகரிகம் கி.மு.1900 அளவில் மறைந்தது. அதன் பிறகு பிராமி எழுத்து உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். சிந்துவெளி எழுத்துகளை 12 உயிரெழுத்துகளாகவும், 18 மெய்யெழுத்துகளாகவும் சுருக்கி முதலெழுத்து முப்பது என மூன்றாம் தமிழ்க் கழகப் புலவர்கள் வரையறுத்திருக்க வேண்டும் என்னும் கருத்து வலுப்பெற்று வருகிறது.

தொல்காப்பியர் என்ப, என்மனார் எனக் குறிப்பிடுவதால் தமிழ் எழுத்துகளை முப்பதாக வரையறுத்த காலம் தொல்காப்பியருக்கு முந்தையது. மூன்றாம் தமிழ்க்கழகம் நிறுவிய பாண்டியன் முட்டத்து திருமாறன் வேண்டுகோளுக்கு ஏற்ப மூன்றாம் தமிழ்க் கழகத்தில் ஐந்திர இலக்கணத்தை ஐந்திரனார் அரங்கேற்றியிருக்க வேண்டும்.

இது நாளடைவில் வட இந்தியாவில் தோன்றிய பிராகிருதம், பாலி, திபேத்தியம் ஆகிய மொழிகளுக்கு மூல இலக்கணமாக விளங்கியது. பிராகிருத **காதந்திரம்** ஐந்திரம் தழுவிய நூல் எனக் கூறப்படுகிறது. பாலிமொழியின் இலக்கண நூலாகிய **கச்சாயணமும்** ஐந்திரம் தழுவியது எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. திபேத்திய மொழியின் இலக்கண நூலாகிய **சன்–கு–பா.** எனும் இலக்கணம் ஐந்திரம் தழுவியது. காலத்தால் மிகவும் பிற்பட்டதாகிய கேசிராசனின் பழங்கன்னட இலக்கண நூலாகிய **சப்தமணி தருப்பணம்** ஐந்திரத்தின் வழிவந்த பிராகிருத மொழியிலக்கணமாகிய காதாந்திர நூலைப் பின்பற்றியதாகக் கூறப்பட்டுள்ளது.

திரு.இரா.கு.பாலசுப்பிரமணியம் மஞ்சரி (நவம்பர் 2008) மாத இதழில் ஐந்திரம் எனும் தலைப்பில் எழுதிய விரிவான கட்டுரையில் ஐந்திர இலக்கணத்தின் தாக்கம் தமிழ், கன்னடம், பாலி, பிராகிருதம், திபேத்தியம் மட்டுமன்றி சிங்களம், பர்மா, சயாம், கம்போடியா ஆகிய தென்கிழக்கிய நாடுகளிலும் ஊடாடியுள்ளது எனக் குறிப்பிட்டிருக்கிறார். சமற்கிருதத்தில் ஐந்திரம் என்னும் இலக்கண நூல் இருந்ததே இல்லை. பாணினி தனக்கு முந்தைய இலக்கண நூல்களாகக் குறித்தவற்றுள் ஐந்திரம் என்னும் பெயர்கொண்ட சமற்கிருத நூல் எதுவும் இல்லை.

கி.பி.1608ஆம் ஆண்டில் லாமாதாராநாதர், **"ஐந்திர இலக்கணம் மிகவும் தொன்மையானது. அது தமிழ்நாட்டில் வழங்கியது. அது ஆரியருடையது அன்று"** எனக் குறிப்பிட்டுள்ளார். கலாப இலக்கணம் எழுதிய சப்தவருமனும் ஐந்திரம் தமிழிலக்கண நூல் எனக் கூறியுள்ளார். நாளந்தா பல்கலைக்கழகத்தில் பயின்ற சீனப் பயணியாகிய **ஒளய்லி எனத்சோங்** என்பவர் ஐந்திர இலக்கண நூலைத் தென்னாட்டவர் ஒருவர் 2000 நூற்பாக்களில் சுருக்கியதாகவும் அதுவே வடநாட்டிலும் கற்பிக்கப்படுகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சொற்கள் அனைத்தும் இடுகுறிப்பெயர்கள் என்பது ஆரியக் கோட்பாடு. தமிழில் இடுகுறிப்பெயர் என்பதே இல்லை. எல்லாச் சொற்களும் காரணப் பெயர்களே என்பது கண்டுபிடித்த இடைக்கழகத் தமிழ் (தென்பிராமி) எழுத்தைப் பிராமி என்று சொல்லாமல் தமிழ் எழுத்து என்றே சொல்ல வேண்டும் என்று இந்தியத் தொல்லெழுத்து துணைத் தலைமை ஆய்வாளர் பி.ஆர்.சீனிவாசன் தெரிவித்துள்ளார். ஒரு புதிய எழுத்து முறை உருவாவதற்கு உரிய நெடுங்கால இலக்கியப் பின்னணி தமிழுக்கு மட்டும் அமைந்திருக்கிறது. வேறெந்த வடநாட்டு மொழிக்கும் இந்த நெடிய பின்னணி இல்லை.

ஐந்திரனாரால் இயற்றப்பட்ட ஐந்திரம் எனும் இடைக்கழகத் தமிழிலக்கண நூல் தொல்காப்பியத்துக்கு 1000 ஆண்டுகள் முந்தையது என்பதைப் பின்வரும் காரணங்களாலும் கண்டறியலாம்.

ஐந்திரம் காலக்கணிப்பு:

ஐந்திரம் என்பது தொல்காப்பியத்துக்கு முன்பு நிலவிய தமிழிலக்கண நூல். தொல்காப்பியர்

அதனை நிறைவாகக் கற்றவர் என்பதால் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என அக்காலத்தில் பெரிதும் பாராட்டப்பட்டார்.

இந்தியா முழுவதிலும் தமிழ் ஒன்றே பேச்சு மொழியாகவும், இலக்கிய மொழியாகவும் வேரூன்றி யிருந்த காலத்தில் தோன்றிய ஐந்திரத் தமிழிலக்கணம் நாளடைவில் (வடதமிழ்) பிராகிருதமாகவும், கிழக் கிந்திய தமிழ் பாலிமொழியாகவும், இமய மலையடி வாரத்துத்துத் தமிழ் திபெத்திய மொழியாகவும், விந்திய மலைக்குத் தெற்கிலிருந்த தமிழ் பஞ்சதிர விடமாகவும் (ஐந்து தமிழினமொழிகள்) வட்டாரக் கிளைமொழிப் பிரிவுகளாக அரும்பத் தொடங்கிய காலம் வரை ஐந்திர இலக்கணத்தின் தாக்கம் இந்திய மொழிகளில் வேரோடியிருந்தது.

ஐந்திரம் என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் பனை மரம் என்னும் பொருள் அக்காலத்தில் இருந்தது. ஐந்தரன் என்பதைப் பனையன் எனப்பொருள் கொண்டனர். இச்சொல்லை வலிந்தும் நலிந்தும் இந்திரன் என்னும் வடசொல்லோடும் அதனோடு தொடர்புற்ற விண்ணுலகப் பெருந்தலைவன் என்னும் பொருளில் சமண பௌத்த நூல்களும் எடுத்தாளத் தொடங்கின. விண்ணவர் விழுநூல் என அவர்களால் கூறப்பட்ட சமயநூல்கள் இலக்கண நூல்கள் அல்ல.

ஐந்திரன்:

ஐந்திரன் இயற்றிய தமிழிலக்கணம் ஐந்திரம் எனப்பட்டது. ஆரியரின் வரவுக்குப் பின்னரே அகத் தியரைத் தமிழிலக்கணம் செய்த தமிழ் முனிவராகக் கருதும் தொன்மக்கதை தோன்றியது.

தொல்காப்பியரும் பாலிபிராகிருத இலக்கண வல்லுநரும் தமக்கு முதல்நூல் ஐந்திரம் என்றே குறிப் பிடுகின்றனர்.

அகத்தியர் பெயரை இந்தியத் தொன்மொழி களில் இலக்கணம் எழுதிய புலமையாளராகத் தமிழ் நாட்டிலன்றி வேறெவரும் குறிப்பிடவில்லை. ஆத லால் அகத்தியர் தமிழிலக்கணம் இயற்றினார் என்பதைப் புராணங்கள் என்னும் தொன்மக் கதை களில் மட்டும் காண முடிகிறது.

அகத்தியரின் நூற்பாக்களாகக் காட்டப்படுவன வற்றின் மொழிநடை மிகமிகக் காலத்தால் பிற்பட்ட வனவாக இருத்தலால் அகத்தியர் வரலாறு கட்டுக் கதை என்பது உறுதிப்படுகிறது.

ஐந்திரம் 25,000 நூற்பாக்களைக் கொண்ட பெரு நூலாக இருந்தது என்றும் அதனைக் கற்பது மிகவும் கடுமையானது என்றும் கூறப்படுகிறது. இராமாயணத்தில் அனுமன் ஐந்திரம் கற்றவன் என்று வால்மீகி குறிப்பிட்டுள்ளார். சாரிபுத்தரும் ஐந்திரம் கற்றவர். இதிலிருந்தே இதன் தொன்மை புலப் படுகிறது.

தொல்காப்பியர் ஐந்திரத்தை முழுமையாகப் பின்பற்றியவர். "எல்லாச் சொல்லும் பொருள் குறித் தனவே" என்பதைத் தொல்காப்பியர், ஐந்திரனாரிட மிருந்து எடுத்தாண்டிருக்க வேண்டும். ஏனெனில், இக்கருத்து ஐந்திரத்தில் இருப்பதாக அதன்வழி வந்த பிராகிருத இலக்கண நூலாகிய காதந்திரம் கூறுகிறது. காதந்திரத்தில் "அர்த்த பதம் இதி ஐந்தராணாம்" (சொல் என்பது பொருள் உள்ளது – அதாவது பொருட்காரணம் கொண்டது – இவ்வாறு ஐந்திரம் கூறுகிறது).

மேற்கண்ட ஐந்திர நூற்பாவின் கருத்து தொல்காப்பியத்திலும் வடதமிழாகிய பிராகிருதத்திலும் இடம் பெற்றிருப்பது ஒன்றே ஐந்திரம் தமிழிலக்கணம் என்பதையும் அது இந்திய மொழிகள் அனைத் துக்கும் தாயாகவும் தலைமை கொண்டதாகவும் விளங்கியது என்பதையும் காட்டுகிறது.

வடமொழி நூல்களான தைத்திரியம், சாந் தோக்கிய உபநிடதங்கள், பிராதி சாக்கியம் போன்ற வற்றிலும் ஐந்திரநூலின் பெயர் எடுத்தாளப்பட் டுள்ளது. பாணினியத்துக்கு முதன்மை கொடுத்த காலத்தில் ஐந்திரம் மறைந்தது எனக் கூறப்படுகிறது. எனவே, இடைக்கழகம் நிறுவப்பட்ட கி.மு.1850 ஆண்டே ஐந்திர இலக்கணம் அரங்கேறிய ஆண் டாகச் சொல்லலாம்.

ஐந்திரம் அரங்கேறிய ஆண்டு கி.மு.1850:

தமிழில் ஐந்திர இலக்கணம் எழுதப்பட்ட காலம் கி.மு.19ஆம் நூற்றாண்டு என்பதற்கான சான்றுகள் பல கிடைத்துள்ளன. கி.மு.19ஆம் நூற்றாண்டில் சிந்துவெளி நாகரிகம் இயற்கைச் சீற்றங்களால் அழிந்தது. அதன் பின்னர் கொற்கைப் பாண்டிய னுக்கு அடங்கிய சிற்றரசர்களாகவே வடபுலத்துத் தமிழ் வேந்தர்கள் ஆட்சி புரிந்தனர் என்று நற்குடி வேளாளர் வரலாறு (1920) எனும் செய்யுள்நூல் கூறு கிறது.

கபாடபுரம் கடல் கொண்ட பிறகு பாண்டியன் முட்டத்துத் திருமாறன் மணலூரில் கி.மு.1850ஆம் ஆண்டு மூன்றாம் தமிழ்க் கழகம் நிறுவினான் எனும் செய்தியை இறையனார் களவியல் வாயிலாக அறிய முடிகிறது.

தமிழ்க்கழகம் கூடும் முதல் நாளில் சிறந்த நூல்கள் அரங்கேற்றப்படுவது வழக்கம். இந்த அடிப்படையில் ஐந்திரனாரின் ஐந்திரம் கி.மு.1850ஆம் ஆண்டு குமரியின் தெற்கே இருந்த மணலூரில் அரங் கேற்றப்பட்டது எனக் கருதலாம்.

இதற்குப் பின்புலச் சான்றாக குச்சர மாநி லத்துத் லோத்தலில் கிடைத்த சிந்துவெளி முத்திரை அமைந்துள்ளது. பிராமி எனப்படும் மூன்றாம் தமிழ்க் கழகத் தமிழ் எழுத்தைச் சிந்துவெளி எழுத்திலிருந்து மாற்றியமைத்தவர் ஐந்திரனார்.

ஐந்திரனார் குறிப்பிட்ட 12 உயிரெழுத்துகளும் 18 மெய்யெழுத்துகளும் சிந்துவெளித் தமிழ் முத்தி ரைகளிலும் காணப்படுகின்றன. லோத்தல் (L.88) முத்திரையில் உள்ள ஐந்து எழுத்துகளில் நான்கு சிந்துவெளி எழுத்துகளாகவும் ஒன்று மட்டும் ஐந்திர னார் உருவாக்கிய பிராமி எனும் கடைக்கழகத் தமிழ் எழுத்தாகவும் உள்ளது. இது சிந்துவெளி நாகரிகம் மறைந்த பின் புதிய எழுத்து உருவாகிய இரு வகைக் கலப்பு எழுத்து முத்திரையாக உள்ளது.

இதே போன்று வேலூர் மாவட்டத்துச் சின்னப் பாலத்திலுள்ள பாறை ஓவியத்தில் காவு ஆத்தி என எழுதப்பட்டுள்ள எழுத்துகளில் ஐந்து எழுத்துகள் சிந்துவெளி எழுத்தாகவும் இறுதியில் உள்ள எழுத்து மட்டும் ஐந்திரனார் உருவாக்கிய தமிழ் (பிராமி) எழுத் தாகவும் உள்ளது.

இத்தகைய கலப்பு எழுத்து முத்திரை ஒன்று கூட அரப்பா, மொகஞ்சதாரோ பகுதிகளில் கிடைக்க வில்லை. இதிலிருந்து சிந்துவெளி நாகரிகம் மறைந்த உடனே தமிழ் (பிராமி) எழுத்து கண்டுபிடிக் கப்பட்டது என்பது உறுதியாகிறது. 'தொ' என்பதை பலுக்கும்(உச்சரிக்கும்)போது மெய்யெழுத்தை முன்னாகவும் உயிரெழுத்தைப் பின்னாகவும் உச்சரிக்க வேண்டும் என்பதை "மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே" எனும் நூற்பாவில் தொல்காப்பியர் குறிப் பிட்டுள்ளார்.

எழுதும்போதும் மெய் முன்னாகவும் உயிர் பின்னாவும் தனித்தனியாக எழுதும் அசையெழுத்து இயல்பை இடைக்கழகக் காலத்தில் பெருநாரை இலக்கணம் புலப்படுத்தியது என்பதை லோத்தல் முத்திரையில் இடம்பெற்ற த்ஓ (.......) 'தொ' எழுத்து காட்டுகிறது. ஐந்திரனார் இவற்றை ஒரே எழுத்தாக மாற்றினார். த்இ என எழுதப்படுவதைத் தி (........) என ஐந்திரனார் மாற்றியதைச் சின்னப்பாலம் பாறை ஓவிய எழுத்து காட்டுகிறது. ஆரியர் சிந்துவெளியில் புகுந்த காலத்தில் தமிழர் ஓலைச் சுவடிகள் வைத் திருந்ததை இருக்குவேதம் குறிப்பிடுகிறது.

கி.மு.1800–1600 காலங்களில் படிப்படியாக ஈரானிய ஆரியர் சிந்துவெளியில் குடியேறத் தொடங் கினர். கி.மு.1600–1300 வரை அவர்கள் அங்குள்ள தமிழர்களோடு கலந்து அமைதியாக வாழ்ந்த நாக ரிகச் சான்றுகள் கிடைத்துள்ளன. இக்காலத்திய பானை ஓடுகளை ஆராய்ந்த தொல்பொருளாய்வு வல்லுநர்கள் இக்கருத்தை வெளியிட்டுள்ளனர். இவர்கள், அசுரர் நல்லவர் எனவும் சுரர் தீயவர் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இக்காலத்தில் தமிழ்மொழி முற்றிலும் மாறி விட்டது. கி.மு.1300–கி.மு.1100 கால அளவில் இருக்கு வேத கால ஆரியர் சிந்துவெளிப் பகுதியில் புகுந்தனர் என்பதால் ஐந்திரம் அரங்கேறிய ஆண்டு 1850 என வரையறுப்பதில் ஐயப்பாடு தோன்ற வாய்ப் பில்லை.

இருக்கு வேத ஆரியர் காலத்தில் தமிழிலக்கணம் வட நாட்டில் தோன்றியிருக்க முடியாது.

மேலும் சில சான்றுகள்:

சிந்துவெளி நாகரிகக் காலத் தமிழ் எழுத்து களில், மெய்யெழுத்துக்குப் புள்ளியிடும் வழக்கம் இல்லை.

அக்காலத்தில் இசைத்தமிழின் தேவைக்காக அசையெழுத்துகளைப் பெருநாரை இலக்கணம் வகுத்துத் தந்துள்ளது எனும் உண்மை சிந்துவெளி முத்திரை எழுத்துகளாலும் தமிழ்நாட்டுப் பாறை ஓவிய எழுத்துகளாலும் உறுதிப்பட்டுள்ளது.

அசையெழுத்தில் நேரசை நிரையசைகள் உள்ளன. 'த்த' என்பதும் நேரசை; 'த' என்பதும் நேரசை. ஆதலால் இரண்டுக்கும் ஒரே எழுத்து வடிவம் கொள்வது அக்காலத்தில் தவறாகக் கருதப் படவில்லை. ஆனால் ஐந்திரனார் இந்தக் குழப் பத்தைத் தீர்ப்பதற்காக மெய்யெழுத்துக்குப் புள்ளி யிடும் வழக்கத்தைப் புதிதாகப் புகுத்தினார். இது விந்திய மலை வரை பரவியதற்கான சான்று சாத வாகன மன்னர்களின் தமிழ் பிராமி எழுத்திலும் கிடைத்துள்ளது. இதில் வசிட்டி எனும் மன்னன் பெயரில் (கி.மு.100)ட் புள்ளி பெற்றுள்ளது.

'மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' எனத் தொல்காப்பியரும் ஐந்திரனார் வகுத்துத் தந்த புதிய இலக்கண நெறியை வழிமொழிந்துள்ளார்.

சிந்துவெளி அசையெழுத்தில் உயிர் நெட் டெழுத்து இரண்டு குறில் எழுத்துகளாக அஅ(ஆ),

இஇ(ஈ) என எழுதப்பட்டது. இந்த முறையையும் மாற்றி உயிர் நெடில்கள் ஒரே எழுத்தாக ஆ,ஈ என எழுதும் முறையை ஐந்திரனார் உருவாக்கித் தந்தார்.

ஐகார ஔகாரங்களுக்கு மட்டும் குறில் எழுத்து இல்லாததால் அவற்றின் குறில் வடிவத்தை நெடிலாக்க முடியவில்லை. அந்த இரண்டு எழுத்துகள் ஐந்திரனார்க்கு முந்தைய பெருநாரை இலக்கணப்படி அஇ(ஐ), அஉ(ஔ) என முன்பே எழுதப்பட்ட வடிவில் அப்படியே புதிய தமிழ் (பிராமி) வடிவத்திலும் ஏற்றுக் கொண்டார். இதனை ஏற்றுக்கொண்டு "அகர இகரம் ஐகாரமாகும்" எனவும், "அகர உகரம் ஔகாரமாகும்" எனவும் குறிப்பிட்டார்.

பெருநாரை, ஐந்திரம், தொல்காப்பியம் ஆகிய மூன்றிலும் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் பொது எழுத்திலக்கணம் இது என்பது கூர்ந்து நோக்குவோர்க்கு வியப்பும் பெருமிதமும் மேலிடச் செய்யும். இதனை விளங்கிக் கொள்ளாத நச்சினார்க் கினியர் போன்ற உரையாசிரியர்கள் இந்தத் தொல் காப்பிய நூற்பா ஐகார ஔகாரத்தின் போலியைக் காட்டியது எனப் பிதற்றியுள்ளனர்.

பல்லவர் காலத்தில்தான் இன்றைய ஐ, ஔ எனும் தனி நெடில்கள் தோன்றின.

ஐந்திரனார் உருவாக்கிய கடைக்கழகக் காலத் தொடக்கத்தில் தனியெழுத்துகளாகிய தமிழ் (பிராமி) எழுத்துகள் சிந்துவெளி இடைக்கழகக் காலத்திய அசையெழுத்துகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சிந்து வெளி நாகரிகம் மறைவுற்ற உடனே அதாவது கடைக் கழகம் நிறுவப்பட்ட கி.மு.1850ஆம் ஆண்டிலேயே ஐந்திரம் தோன்றியிருக்க வேண்டும் எனக் கருத இடம் தருகிறது.

ஏனெனில், சிரீதத்துவ நிதி எனும் வைணவ நூலில் இந்தியாவில் தொன்முது காலத்தில் நிலவிய னவாகக் கூறப்பட்ட ஒன்பது இலக்கண நூல்களில் ஐந்திரத்தின் பெயர் முதலாவதாகவும், பிராகிருத இலக்கண நூலாகிய சாகடாயணத்தின் பெயர் இறுதியாகவும் இடம் பெற்றிருப்பதும் கி.மு.1850இல் ஐந்திர இலக்கணம் தோன்றியிருக்கலாம் எனக் கருதத் துணை புரிகிறது.

ஒ

ஒட்டுப் பலகை *oṭṭup-palagai, பெ.*(n.)மெலிதான மரப்பாளங்கள் பலவற்றை ஒட்டி உருவாக்கப் படும் பலகை;plywood.

[ஒட்டு+பலகை]

ஒடுக்கான் *oḍukkāṉ, பெ.*(n.)ஓணான்; common lizard.

மறுவ. ஓடக்கான், ஓணான்

[ஒடு-ஒடுக்கான்]

ஒப்பேற்று-தல் *oppēṟṟu-*,செ.குன்றாவி.(v.t.) இக்கட்டான ஒரு சூழ்நிலையில் தன்னிடம் இருப்பதை வைத்துக் கொண்டு சரிக்கட்டுதல்; to do with what is available in difficult circumstances."குறைந்த வருவாயைக் கொண்டு தான் ஒப்பேற்ற வேண்டியிருக் கிறது". (இ.வ). 2. தேறச் செய்தல்; to salvage. குறைந்த நீரைக் கொண்டு இப்பயிரை ஒப்பேற்ற வேண்டியிருக்கிறது.(உ.வ).3. நிறை வேற்றுதல்;to fulfill. (யாழ்ப்.)

[ஒப்பு+ஏற்று-,]

ஒப்பேறு-தல் *oppēṟu*, பெ. (n.) ஒன்றுமே இல்லை அல்லது மிகவும் தாழ்நிலை என்னும் நிலையில் இல்லாமல் தேறுதல்; to be salvaged, to be retrieved.இவன் ஒப்பேறுவான் என்னும் நம்பிக்கை எனக்கு இல்லை.(உ.வ).

[ஒப்பு+ ஏறு-,]

ஒயிலாட்டம் *oyilāṭṭam*, பெ.(n.) திருவிழாக்காலத்தில் கையிலுள்ள சிறு துணிகளை அசைத்துக்

கொண்டு குனிந்தும் நிமிர்ந்தும் பாடிக் கொண்டு வட்டமாக ஆடும் ஒருவகைக் கூத்து; dancing of persons on a circle to the accompaniment of a song, bending to the ground and waving little towels or hand kerchiefs.

[ஒயில்+ஆட்டம்]

ஓணி *ōṇi*, பெ. (n.) கால்நடைகள் செல்லும் சிறிய பாதை; a narrow path for the cattle. "மாடு ஓணியில் போகிறது" (கொங்.வ.).

[ஓரணி–ஓணி]

க

கங்கிளவு *kaṅgiḷavu*, பெ.(n.) நாற்று நட்ட பிறகு பாயும் முதல் நீர்; first irrigation water after transplantation of seedlings.

கச்சடா *kaccaḍā*, பெ. (n.) எண்ணெய்க் கச்சல்; setimend.

கச்சணம் *kaccaṇam*, பெ.(n.) நீர்ச்சீலை; man's loin cloth.

[கட்டு > கச்சு > கச்சணம்]

கச்சம் *kaccam*, பெ.(n.) சலங்கை மணி; string of small metal bell.

கச்சா *kaccā*, பெ.(n.) மீனைப் பிடித்து வைக்கப் பயன்படும் நூல் கூடை; fishes storage in cotton thread basket.

[கச்சு–கச்சா]

கச்சிதம் *kaccidam*, பெ. (n.) நேர்த்தி; excellence.

[கச்சு–கச்சிதம்]

கச்சைத்துணி *kacca-t-tūṇi*, பெ. (n.) சலவை செய்யாத புது வெண்ணிறத் துணி; unwashed new white cloth.

[கச்சை+துணி]

கட்டக்காலன் *katta-k-kalan*, பெ. (n.) பன்றி; pig.

[கட்டை+காலன்]



கட்டுமானப் பொறியியல் *kattumāṉa-p-poṟiyiyal,* பெ.(n.) சாலை, பாலம் முதலிய வற்றை வடிவமைத்தல், உருவாக்குதல், செப்பனிடுதல் ஆகியன பற்றிய அறிவுத்துறை; civil engineering.

[கட்டுமானம்+பொறியியல்]

கட்டுவறைசேலை *kattuvarai-cēlai,* பெ. (n.) பருத்திச் சேலை; cotton sarees. *"உறிக்கு பட்டு சேலை 100 கட்டுவறை சேலை"* (TDI, v 99)

[கட்டு+அறை+சேலை]

கட்டைத்தலம் *kattai-t-talam,* பெ. (n.) சுடுகாடு; grave yard.

[கட்டை+தலம்]

கட்டைப்பனை *kattai-p-paṉai,* பெ. (n.) முதிராத பனை, இளம் பனை; a young palmyra - palm.

[கட்டை+பனை]

கட்டைமுழவு *kattaimuḻavu,* பெ.(n.) கட்டை மத்தளம்; a musical drum made of a block of wood (J.).

[கட்டை+முழவு]

தோல்போர்த்த பறை அல்லது மத்தளம் தோன்றுவதற்கு முன்பு, திண்ணமான மரக்கட்டை முழவை இருபுறமும் கட்டையால் அடித்து ஒலி எழுப்பும் மர இசைக்கருவி. யாழ்ப்பாணத்தில் புழக்கத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

கடகம் *kaḍagam,* பெ. (n.) பனை நாரில் செய்யப் பட்ட பெட்டி; a box made up of palmyra fibre.

[குடம்–குடகம்–கடகம்]

கடஞ்சாணி *kaḍañcāṇi,* பெ. (n.) பாசனக் கால் வாயில் கடைசியில் உள்ள நிலப்பகுதி, கடை மடை; a last sluice of the land of a tank opp *talaimadai.*

[கடை+அஞ்சாணி]

கடம்பங்குடி *kaḍambaṅkūḍi,* பெ. (n) பாண்டிய நாட்டுச் சிற்றூர்; a village in Pandya territory *"கள்ளக்குடி எல்லைக்கும் வடக்கு மன்னிய சீர்ம்மேலெல்லை கடம்பங்குடி எல்லை."*

[கடம்பன் + குடி]

கடம்பல் *kaḍambal,* பெ. (n.) குமிழ்; gudgeon. *"கூம்பல், கடம்பல், குமிழ் எனக் கூறுவர்"* (நி.க.தி. 4:39)

[கடம்பு+அல்]

கடயல் *kaḍayal,* பெ. (n.) விளவங்கோடு வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Vilavancodu Taluk.

[கடை–கடையல்–கடயல்]

கடலலை *kaḍalalai,* பெ. (n.) ஒற்றைக்கை முத்தி ரையில் கொடிமூலம் உரைக்கப்படும் முத்திரை; an hand posture.

[கடல்+அலை]

கடலி *kaḍali,* பெ. (n.) செஞ்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Senji Taluk.

[கடல்–கடலி]

கடலிடம் *kaḍal-iḍam,* பெ. (n.) உலகம்; world. *"கஜபதி கடலிடங் காவலன்"* (SII, vii, 863).

[கடல்+இடம்]

கடலைமுத்து *kaḍalai-muttu,* பெ. (n.) நிலக் கடலை விதை; groundnut.

[கடலை+முத்து]



கடவரை *kaḍavarai,* பெ. (n.) யானை; elephant. *"கடவரை மேகமுழக்குஞ் சிராமலை கண்ட"* (SII, iv, 167).

[கடம்+வரை]

கடவு *kaḍavu,* பெ.(n.) 1. பாதை; path. 2. வாயில்; entrance. கடவு பெரிதாக இருக்க வேண்டும். (கொங்.வ.).

[கட–கடவு]

கடற்கரைக்கோயில் *kaḍarkarai-k-kōil,* பெ.(n.) மாமல்லபுரத்தில் உள்ள பல்லவர் காலத்துக் கற்கோயில் ; sea-shore temple at Mahabalipuram built by Pallava king.

[கடல்+கரை+கோயில்]

கடற்கரை *kaḍarkarai,* பெ.(n.) கடற்புறம், கடலலைகள் நிலத்தைத் தழுவிச் செல்லும் மணல் நிறைந்த பகுதி ; beach; sea-shore .

மறுவ. அலைவாய், கடற்புறம்

[கடல்+கரை]

கடற்கழி *kaḍarkaḷi,* பெ.(n.) கடலினுள் உட்செல்லும் குறுகிய வழி; firth.

[கடல்+கழி]

கடற் கழுகு *kaḍarkaḷugu,* பெ.(n.) கடலில் வாழும் ஒரு உயிரி ; erne.

[கடல்+கழுகு]

கடற்கன்னி *kaḍarkaṉṉi,* பெ.(n.) பெண்ணின் முகமும் உடலும் இடையின்கீழ் மீனைப் போலுள்ள உருவம் ; mermaid.

[கடல்+கன்னி]



கடற்காணி *kaḍar-kāṇi,* பெ. (n.) கடல் பகுதி உரிமை; privilege of sea part. *"எங்கள் கடற் காணியான தேவர் உடையார் திருமறைக் காடுடையார்"* (SII, xvii, 545).

[கடல்+காணி]

கடற்குதிரை *kaḍarkudirai,* பெ.(n.) குழல் போன்ற அமைப்புடைய மீன் வகை ; pipe fish.

[கடல்+குதிரை]

கடற்பன்றி *kaḍarpaṉṟi,* பெ.(n.) ஒரு வகை பெரிய மீன்; dolphin like fish.

[கடல்+பன்றி]



கடற்றானை *kaḍarrāṉai,* பெ. (n.) கடல் போன்ற பெரிய படை; navel force, battle ship. *"வில்வேலிக் கடற்றானையை"* (EI, xvii, 16).

[கடல்+தானை]

கடனீர் *kaḍaṉir,* பெ. (n.) கடலின் நீர்; sea-water. *"கல்லென வொல்லென கடனீர் மாகங் கொண்டெறிவர்"* (ET, xiii, 10).

[கடல்+நீர்]

கடிச்சுரும்பு *kaḍi-c-curumbu,* பெ. (n.) தேன் வண்டு; honey-bee. *"தேனொடு கடிச் சுரும்பு அரற்றும் தே மலர்க்கான்"* **(சீவ. 7 : 293).**

[கடி+சுரும்பு]

கடுவா *kaḍuvā,* பெ. (n.) புலி; tiger.

[கடு+வாய்]

கடுவாயர் *kaḍuvāyar,* பெ. (n.) அருகர்; சமணர்; Jains. "கடு வாயர் தமை நீக்கி என்னை ஆட்கொள் கண்ணுதலோன்" (நாவு. 6:71:7).

[கடு+வாய்+அர்]

கடுவு *kaḍuvu,* பெ. (n.) பாம்பு; snake. *"படிநர் சொல் எனக் கடுவு நஞ்சு இறைப்ப"* (கல்.17:16)

[கடு–கடுவு]

கடூர் *kaḍūr,* பெ. (n.) திண்டிவனம் வட்டத்தி லுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[கடு+ஊர்]

கடைப்பாடு *kaḍai-p-pādu,* பெ. (n.) நிலங்கள்; lands. *"இரண்டு கடைப்பாட்டாலும் கொல் லையும் குளமும் விளைநிலமும் உள்பட வந்த நிலம்"* (SII, viii, 716).

[கடை+பாடு]

கடைப்பியோலை *kaḍai-p-pi-yōlai,* பெ. (n.) அர சனின் இறுதி ஆணை கொண்ட ஓலை; palm leaf containing the ultimate order of the king. *"இது கடைப்பி ஓலை காற் கண்டெழுதிக் கொடுத்தேன்"* (AVWM 1, P 67-69).

[கடைப்பு+ஓலை]

கடைஅட்டிகை *kaḍai-aṭṭigai,* பெ. (n.) ஒருவகை நகை; a kind of jewel. *"திருவாபரணங்கள் பெயர் விபறம் உபுதாரம் 1க்கு முகப்பு 5 சிறு அட்டிகை 4 கடை அட்டிகை"* (TDI, iii, 61).

[கடை+அட்டிகை]

கடைஈடு *kaḍai-īdu,* பெ. (n.) இறுதி உத்தரவு; final order. *"மண்டல முதலிகள் நுளம்பா தராயர் கடை ஈடுபடி கூறு செய்கிற அணுக்க விழுப்பரையர்"* (IPS, 126)

[கடை+ஈடு]

கடாஅ *kaḍā-ā,* பெ.எ. (adj.) ஐயுறாத; doubtless. *"கடாஅ உருவொடு கண் அஞ்சாது" (குறள்.59:9)*

[கடாவு (வினவு)–கடா]

கடாரம் கொண்டான் *kaḍāramkoṇḍān,* பெ.(n.) திருவாரூர் மாவட்டத்தில் திருவா ரூர்க்கு அருகில் உள்ள ஓர் ஊர்; name of the village near Thiruvarur.

[கடாரம்+கொண்டான்]

இராசேந்திர சோழனின் வெற்றிப் பெயர்.

கடிசை *kaḍisai,* பெ.(n.) பணம் செலவு செய்யாத இவறன்(கருமி); miser. "அவன் ஒரு கடிசை" (மீனவ.).

[கடு–கடுசை–கடிசை]

கடிதல் *kaḍidal,* பெ.(n.) ஓட்டுதல் ; driving. "தினை கிளி கடிதலின் பகலும் ஒல்லும்" (குறு:217:1).

[கடி–கடிதல்]

கடிய நெடுவேட்டுவன் *kaḍiyaneḍu vēṭṭuvan,* பெ.(n.) கடியம் தலைநகரிலிருந்து கோடை மலையை ஆண்டு வந்த கொடை யாளனாகிய சிற்றரசன் ; a bonevalent chieftain who ruled the mountain region of the Kōdaimalai from his capital Kaḍiyam.

[கடிய+நெடு+வேட்டுவன்]

கடுங்களை *kaḍu-ṅ-kaḷai,* பெ.(n.) வயல்களில் பறிக்கப்படும் களை; weed. "கடைசியர்கள் கடுங்களையில் பிழைத்து" (பெரிய: 872).

[கடும்+களை]

கடுசு *kaḍusū,* பெ.(n.) உயரம் ; height.

[கடு–கடுசு]

கடுதா எறும்பு *kaḍuda-eṟumbu,* பெ.(n.) மரப் பொந்துகளில் இருப்பதும் கடித்தால் தடித்து வலியைக் கொடுக்கக் கூடியதுமான கருப்புநிற பெரிய எறும்பு; black colour big size ant living in trees. painful swelling if it bites.

[கடுத்தம்+எறும்பு]

கடிபட்டவர் தன் சிறுநீரில் மண்ணைக் குழைத்து கடிப்பட்ட இடத்தில் தடவினால் வலி குறையும் என்பர்.

கடும்பு *kaḍumbu,* பெ.(n.) ஈற்றாவின் ஈன்றணி மைப்பாற்கட்டி ; beestings.

மறுவ. சீம்பால், திரட்டுப்பால்

[கடு-கடும்பு]

கடுவாய்க்கரைப்புத்தூர் *kaḍuvāikkaraiputūr,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; name of the village in Thanjavur.

[கருவாய்+கரை+புத்தூர்]

தற்போது ஆண்டங்கோயில் என அழைக்கப் படுகிறது.

கடுவினை *kaḍuvinai,* பெ.(n.) மிகக் கடுமை யான அருஞ்செயல்(சாகசம்); a rare deed.

[கடு+வினை]

கடைக்கந்தாயம் *kadi-k-kandāyam,* பெ.(n.) செயல்கள் முடியப் போகும் நேரம் ; final stage of completion.

[கடை+கந்தாயம்]

கடைமடக்கு *kadaimadakku,* பெ.(n.) ஈற்றடி சொல் அல்லது தொடர் அடுத்த அடியிலும் தொடர்வது; repetition of word or phrase in prosody.

[கடை+மடக்கு]

கண்சோடு *kaṇ-šōḍu,* பெ. (n.) ஒரு வகை அணி கலன் ". a kind of ornament. (IPS,126)

[கண்+சோடு]

கண்டக் கறை *kaṇḍa-k-kaṟai,* பெ.(n.) மிடற் றில் உள்ளவிடம்; poison in neck. "கண் நுதலும் கண்டக் கறையும் கரந்தருளி" (சை.சா:5:1).

[கண்டம்+கறை]

கண்டம் *kaṇḍam,* பெ.(n.) ஆவினங்களில் முன் னங்கால் பகுதியில் காணப்படும் சதைத் திரட்சி ; a protruded portion on the foreleg of Cow.

[கண்டு-கண்டம்]

கண்டராச்சிபுரம் *kaṇḍarāccipuram,* பெ.(n.) தென்னார்க்காடுத் திருக்கோவிலூர் வட்டத் தில் அமைந்துள்ள ஓர் ஊர் ; name of the village in Thirukovilur.

[கண்டராதித்தன்+புரம்]

கண்டாங்கி *kaṇḍāṅgi,* பெ.(n.) நெசவில் பயன் படும் பெரிய தார்க்குச்சி ; a tool in loom.

[கண்டு-கண்டாங்கி]

கண்டியூர் *kaṇḍiyūr,* பெ.(n.) தஞ்சையிலிருந்து திருவையாறு செல்லும் வழியில் 10 கல் தொலை வில் உள்ள ஓர் ஊர் ; name of the village 10k.m. from Thanjavur to Thiruvaiyaru road.

[கண்டி (குளம்)-கண்டியூர்]

கண்டிரம் *kandiram,* பெ.(n.) கோவை மாவட் டத்தில் உள்ள ஓர் ஊர் ; name of a village from Coimbatore.

[கண்டி (நீர்நிலை) - கண்டிரம்]

'கண்டீரக்கோ' இவ்வூரினர் எனக் கருதப் படுகிறது.

கண்டன் வீர கேசரி *kaṇḍanvirakēsari,* பெ.(n.) முதலாம் இராசராசன் காலத்தில் கி.பி.1006 ஆம் ஆண்டு திருவோத்தூரில் வாழ்ந்தவன்; name of a person who lived during the period of the chola king Rajaraja-I.

[கண்டன்+வீரன்+கேசரி]

கண்ணகனார் *kaṇṇaganār,* பெ.(n.) கடைக் கழகக் காலத்திய புலவர்; a Tamil poet of sangam period.

[கண்ணகன்+ஆர்]

கண்ணகனூர் *kaṇṇaganūr,* பெ.(n.) கருவூ ருக்கு அருகில் உள்ள கண்ணகனாரின் ஊர் ; a village or town near Karuvur, where the sangam poet Kannagan lived.

[கண்ணகன்+ஊர்]

கண்ண மங்கலம் *kaṇṇamangaḷam,* பெ.(n.) வட ஆர்க்காடு மாவட்டம் ஆரணிஅருகில் உள்ள ஓர் ஊர் ; name of the village in North Arcot near Arani.

[கண்ணன்+மங்கலம்]

கண்ணாடி இலை *kaṇṇāḍi-yilai,* பெ.(n.) வாழை மரத்தில் குலை தள்ளுவதற்கு முன் இறுதியாக வரும் சிறு இலை ; small leaf appearing before flowering plantain tree.

[கண்ணாடி+இலை]

கண்ணுள் வினை *kaṇṇuḷviṉai,* பெ.(n.) ஓவியம்; drawing and painting.

[கண்+உள்+வினை]

கணவன் துறை *kaṇavanturai,* பெ.(n.) செங் கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஊர் ; name of the village in Chengalpattu.

[ஒருகா. கானவன்+துறை]

கணிசம் *kaṇisam,* பெ.(n.) நேரம், வேளை; proper time. நல்ல கணிசம் காணில் மீன்பிடிக்கப் போகலாம் (மீனவ.)

[கணி–கணியம்–கணிசம்]

கணியம்பாடி *kaṇiyampāḍi,* பெ.(n.) வட ஆர்க் காடு மாவட்டம் வேலூருக்கு அருகில் உள்ள ஓர் ஊர் ; name of the village in North Arcot near Vellore.

[கணியன்+பாடி]

கணி *kaṇi,* பெ.(n.) வலை; net.

க<u>ன்.</u> **கெணி**

[கண்ணு–கணி]

கணை முறித்தான் *kaṇaimurittāṉ,* பெ.(n.) மதுரை மாவட்டத்தில் உள்ள ஊர் ; name of the village in Madurai.

[கணை+முறித்தான்]

ஒரு வீரன் மாற்றார் விடுத்த அம்புகளைத் தன் நெடுங்கரத்தால் பிடித்து முறித்த செயல் கண்டு வியந்த படைத் தலைவன் அவ்வீரனுக்குக் கணை முறித்தான் என்ற பட்டம் அளித்ததாகக் கூறுவர்.

கத்தகாம்பு *kattakāmbu,* பெ.(n.) அதிக துவர்ப் புடையதும் நசுக்கினால் மாவாகப் போகக் கூடியதுமான வயிற்றுக் கடுப்பு நீக்கவல்ல நாட்டு மருந்து வகையான காம்பு வகை; a stick used as medicine for stomach pain.

[கற்றை+காம்பு]

கத்தரிவெயில் *kattariveyil,* பெ.(n.) முது வேனிற்காலத்தின் மிகுந்த வெப்பமான காலம்; hottest days; dog days.

[கத்தரி+வெயில்]

கதக்கு *kada-k-ku,* பெ.(n.) கிண்டிக் கிளறுதல்; kindling.

[கலக்கு–கதக்கு]

கதண்டு *kadaṇḍu,* பெ.(n.) கடித்தால் உடலில் தடிப்பையும் எரிச்சலையும் தரக்கூடிய நீர்ப்பூச்சி வகை ; a beetle.

[க–கதண்டு]

கதம்பத்தொடரியம் *kadamba-t-toḍariyam,* பெ.(n.) கலவைத் தொடரியம் பார்க்க ; see kalavai-t-toḍariyam.

[கதம்ப(ம்)+தொடரியம்]

கதிர்க்குடி *kadir-k-kuḍi,* பெ.(n.) அரச குலத் தொன்று ; agni race of kings.

[கதிர்+குடி]

கதிரவக்குடி *katira-va-k-kuḍi,* பெ.(n.) சூரிய மரபு அரச குலத்துளொன்று ; agni race of kings as descended from agni.

[கதிரவன்+குடி]

கதிராமங்கலம் *kadirāmangaḷam,* பெ.(n.) திருவிடைமருதூர் வட்டத்தில் உள்ள ஊர் ; name of the village in Thiruvidai Maruthur.

[கதிரன்+மங்கலம்]

கதுப்பிலி *kaduppili,* பெ.(n.) வறட்டி நெருப்பில் சூடேற்றிய கம்பியால் நோய்த்தடுப்புச் சூடு வைத்தல் ; brandishing with hot iron wire as a method to cure disease.

[கதுப்பல்–கதுப்புல்–கதுப்பிலி(கொ.வ.)]

கதுவு–தல் *kaduvu-,* செ.குன்றாவி.(v.t.) உண் ணுதல்; to eat.

<u>க.</u> **கெதுக்கு**

[கது–கதுவு]

இச்சொல் வடஇந்திய மொழிகளில் கதுவு– காவு–கா எனத் திரிந்தது.

கதைசொல்லிகள் *kadaicolligal,* பெ.(n.) சேர நாட்டுத் தொழின் முறையாகக் கதை சொல்வோர்; professional story tellers of the ancient-chera country (Kerala State).

[கதை+சொல்லி+கள்]

சிறுவர்க்கும் பெரியோர்க்கும் நகைச்சுவை பொழுது போக்காகவும் அறநெறி நற்பண்பு புகட்டவும் கற்பனையாகக் குறுங்கதைகளும், நெடுங்கதைகளும் சொல்வது பண்டைய வழக்கம்.

கந்தபுரம் *kandapuram,* பெ.(n.) கொங்கு நாட்டில் உள்ள ஊர் ; name of the village in Kongunadu.

[கந்தன்+புரம்]

கந்தழி வாழ்த்து *kandalivalttu,* பெ.(n.) அரசன் பகைவர் மதிலை அழித்த திறனை திருமால் வாணனுடைய திறலோடு ஒப்பிட்டு வாழ்த்துதல்; blessing the talent of the king who captured and destroyed the fort of the enemy.

[கந்து+கழி+வாழ்த்து]

கந்து எடு-த்தல் *kandueḍu-,* செ.கு.வி.(v.i.) 1. தொடைகளைத் தட்டி சண்டைக்கு அழைத்தல்; challenge one to come for fight by clapping one's thigh as in difiance. 2. அதிகமாக உண்ணுதல்; being gluttunous.

[கந்து+எடு]

கப்பல் தீர்வை *kappaltirvai,* பெ.(n.) கப்பலை நங்கூரம் பாய்ச்சி நிறுத்துவதற்காகப் பெறப் படும் வரி; anchorage tax.

[கப்பல்+தீர்வை]

கப்பலம் *kappalam,* பெ.(n.) வரி; tax.

[கப்பல்-கப்பலம்]

கப்பலின் கொடி *kappalinkoḍi,* பெ.(n.) கப்பலின் பலுவைத் தூக்கும் இயந்திரம்; Jalk.

[கப்பல்+இன்+கொடி]

கப்பலேறுதல் *kappalērutal,* பெ.(n.) கப்பல் பயணம்; travel by ship.

[கப்பல்+ஏறுதல்]

கப்பை *kappai,* பெ.(n.) தவளை; frog.

தெ. க. கபெ

[கப்பு-கப்பை]

கம்பி எண்ணு-தல் *kambiennu-,* செ.கு.வி. (v.i.) சிறைப்படுதல் ; to be imprisoned.

[கம்பி+எண்ணு]

கம்பேட்டை *kampēṭṭai,* பெ.(n.) வேலூர் மாவட்டத்தில் உள்ள ஊர் ; name of the village in Vellore.

[கம்மம்+பேட்டை]

கம்மியர் *kammiyar,* பெ.(n.) இயந்திர வல்லுநர்; mechanics.

[கம்மு-கம்மியர்]

கரக்கோல் *kara-k-kōl,* பெ.(n.) பாவுக்கு பசை போடும் போது பாவு நூலின் நுனிப்பகுதிகளை மாட்டி விடுவதற்காகப் பயன்படுத்தும் ஓர் நீளமுள்ள கைக்கோல்; an implement used in handloom weaving.

[கரம்(கை)+கோல்]

கரகாட்டம் *karagāṭṭam,* பெ.(n.) பூங்குடமெடுத்து ஆடும் ஆட்டம் ; a dance with keeping decorated water-pot on head.

[கரகம்+ஆட்டம்]

கரசங்கால் *karasangāl,* பெ.(n.) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஊர்; name of the village in Chengalpattu.

[கரிசை+கால்]

கரம்பு *karambu*, பெ.(n.) வேளாண்மை செய்யப் படாத நிலம்(தரிசு); land lying waste. " தரிசு கிடந்த தரையை ;(ஈடு,2,7,9)

[கல்>கர்>கர>கரம்பு]

கரவீரம் *karavīram*, பெ.(n.) தஞ்சை மாவட் டத்தில் உள்ள ஊர்; name of the village in Thanjavur.

தற்போது கரையபுரம் என்று வழங்கப்பட்டு வருகிறது. 'கரம் வீரம்' என்பது பொன்னிறப் பூக் களைத் தருகின்ற ஒரு மரத்தின் பெயர். பொன்னலரி என்றும் அதனைக் குறிப்பதுண்டு.

கரிக்கண்ணு *kari-k-kaṇṇu*, பெ.(n.) கண் ணேறு ; evil eye.

[கரி+கண்ணு]

கரிக்குருமான் *karikkurumāṉ*, பெ.(n.) கரிக்குருவி; a bird of utter black.

[கரி+குருமான்]

கரிக்கை *karikkai*, பெ.(n.) கருக்கம்புல், அருகம்புல்; Harialli grass.

[கரு–கருக்கை–கரிக்கை]

கரிச்சான் *kariccāṉ*, பெ.(n.) குருவியின் ஒரு வகை ; a kind of bird.

[கரி–கரிச்சான்]



கரிமணல் *karimaṇal*, பெ.(n.) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஊர் ; name of the village in Chengalpattu.

[கரு–கரி+மணல்]

கரியாப்பட்டினம் *kariyāppaṭṭinam*, பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊர் ; name of the village in Thanjavur.

[கரிகாலன்+பட்டினம்]

கருங்கை ஒள்வாட் பெரும் பெயர் வழுதி *karunkaiolvāt perumpeyarvaḷudi*, பெ.(n.) பாண்டிய மன்னன் பெயர் ; name of a Pandya king.

[கருங்கை(பெரிய கை) + ஒள்வாள் + பெரும் பெயர்+வழுதி]

கருஞ்சேடை *karuncēḍai*, பெ.(n.) காய்ந்த நிலத்தில் நீர் பாய்ச்சி உழுதல்; ploughing the dry land after watering.

[கருஞ்+சேடை]

கருத்துக் கணிப்பு *karuttu-k-kaṇippu*, பெ.(n.) ஒரு செயல் நடைபெறுவதற்கு முன்பே மக்க ளிடம் கருத்துக் கேட்டு அதனடிப் படையில் முடிவு கூறுதல்; survey of public opinion.

[கருத்து+கணிப்பு]

கருநந்தடக்கன் *karunandaḍakkaṉ*, பெ.(n.) ஆய்மரபு அரசருள் ஒருவன் ; a king of āy dynasty.

[கரு+நந்தன்+அடக்கன்]

கருநாகச் சுழி *karunāgacculi*, பெ.(n.) மாட்டின் கழுத்தின் இருக்கும் சுழி; தீமை பயக்கும் சுழி; curl of the hair in cattle.

[கரு+நாகம்+சுழி]

கருப்பவோட்டம் *karuppavōṭṭam*, பெ.(n.) சிலை (மார்கழி) மாதத்தில் மேகக்கூட்டங்கள் வானத்தில் சுழன்று கொண்டிருக்கும் நிலை; cloud sky.

[கருப்பம்+ஓட்டம்]

கருப்புக் கோட்டை *karuppukkōṭṭai*, பெ.(n.) சுசீந்திரத்திற்கு அருகில் உள்ள ஓர் ஊர் ; name of the village in Susinthiram.

[கரும்+பழு(ஆலமரம்)–கருப்பு+கோட்டை]

இச்சிற்றூரின் பழம் பெயர் 'கரும்பழு' கரும்பழு= (கருமை+பழு = ஆலமரம்) கரும்பழு= பருத்த ஆல மரங் கள் உள்ள ஊர்.

கரும்பித்தவன் *karumbittavan,* பெ.(n.) குடி வெறியில் தொடர்ந்து பேசிக் கொண்டிருப் பவன்; blabbering of a drunkard.

[கரும்+பித்து+அவன்]

கரும்புள்ளிமீன்கொத்தி *karumpullimin kotti,* பெ.(n.) கொக்கு இனத்தை போல் உள்ள பறவை; piod kingfisher.

[கரும்+புள்ளி+மீன்+கொத்தி]



கருமச்சுற்றம் *karuma-c-curram,* பெ.(n.) செயற்குழு; executive committee.

[கருமம்+சுற்றம்]

கருவி *karuvi,* பெ.(n.) நாகை மாவட்டம் மயிலாடு துறை பூம்புகார் சாலையில் அமைந் துள்ள ஓர் ஊர் ; name of the village in Nagai way to Mayiladuturai, Poompukar road.

[கரு(மேடு)–கருவி]

கருவு *karuvu,* பெ.(n.) மனத்திற்குள் உள்ள கடும் பகை உணர்வு; internal enmity.

[கறுவு–கருவு]

கரைநெல் *karai-nel,* பெ.(n.) மலைச் சரிவுகளில் விளையும் நெல் ; paddy, cultivated on hill slopes.

[கரை+நெல்]

கரையாஞ்சாவடி *karaiyānsāvadi,* பெ.(n.) திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; name of the village in Thiruvallur.

[கரையன்+சாவடி]

கல்செக்கு *kalcekku,* பெ.(n.) கல்லில் செதுக் கப்பட்ட செக்கு; oil press made of stone.

[கல்+செக்கு]

கிருட்டிணகிரி மாவட்டம் வேப்பனபள்ளி பூதிமுட்டில் ஊர்க் கோவிலில் கல்லினால் ஆன செக்கும், தேர்ச்சக்கரமும் உள்ளன.



கல்புதூர் *kalpudūr,* பெ.(n.) வேலூர் மாவட் டத்தில் காட்டுப்பாடிக்கு அருகில் உள்ள ஓர் ஊர்; name of the village in Vellore near Katpadi.

[கல்+ஆல்+புதூர்]

'கல்புதூர்' என்று மாறிவிட்டது.

கல்நீர்ப்படுதல் *kalnīr-p-padu-,* செ.கு.வி.(v.i.) வீரச்சாவு எய்திய வீரனுக்காக நடுகல்லுக் காகத் தேர்ந்த கல்லைத் தூய நீரால் நீராட் டுதல்; to select and consecrate the hero stone.

[கல்+நீர்+படு]

கல்லக்காய் *kal-lāk-kāi,* பெ.(n.) வேர்க்கடலை; ground nut.

[கடலை–கல்லை+காய்]

கல்லுடம்பு *kalludambu,* பெ.(n.) ஆயிரக்கணக் கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து பாறைப் படிவமாக மாறியுள்ள விலங்கு, தாவரம் போன்றவை; fossil.

[கல்+உடம்பு]

கலவடை *kala-v-adai,* பெ.(n.) உடைந்த பானை யின் உடையாத உறுதியான வாய்ப்பகுதி; mouth portion of the broken earthen pot.

[கலம்+அடை]

இப் பகுதியைக் கவிழ்த்துப் போட்டு பிற பானைகளுக்குத் தூங்கு மணையாகப் பயன் படுத்துவர்.

கலவைத் தொடரியம் *kalavai-t-todariyam,* பெ.(n.) ஒன்றுக்கு மேற்பட்ட தனித் தொடரியம் சேர்ந்து வருவது ; compound sentence.

[கலவை+தொடரியம்]

கலிநாள் *kalināl,* பெ.(n.) கலியாண்டினை ஆண்டாகக் கணக்கிடாமல் நாளாகக் கணக் கிடும் முறை ; counting the kali year by number of days. கலியுகத்து நாள் பதினாறு நூறாயிரத்து நாற்பத்தொன்பதாயிரத்து முப்பத்து நான்கு (16,49,034) (ஆய் மன்னன் கல்வெட்டு–கேரளம்)

[கலி+நாள்]

கலைப்பொருள் *kalaiporul,* பெ.(n.) ஒருவரால் உருவாக்கப்பட்ட அல்லது படைக்கப்பட்ட பொருள்; artefact.

[கலை+பொருள்]

கவலைக்கால் *kavalai-k-kāl,* பெ.(n.) கவலை இறைப்பில் கிணற்றுப் புறமாக சாய்ந்தாற் போன்று அமைந்த இரு மரக்கால்கள்; supporting rafters of waterlift device.

[கவலை+கால்]



கவலைப்பாடி *kavalai-p-pādi,* பெ.(n.) கவலை யேற்றத்தில் மாடுகள் முன்பின்னாக சென்று வருவதற்கான சாய்சரிவுப் பாதை; slanting path for the cattle in waterlift device.

[கவலை+பாடி]

கவலை வலை *kavalaivalai,* பெ.(n.) கவலை மீன் பிடிப்பதற்கு என வடிவமைக்கப்பட்ட வலை; a fisherman net.

[கவலை+வலை]

கவுந்தப்பாடி *kavundappadi,* பெ.(n.) கொங்கு நாட்டில் உள்ள ஊர். பெருந்துறைக்கு 2 கல் தொலைவில் உள்ளது ; name of the village in Kongu nadu.

[கவுண்டன்+பாடி]

கவுளி கக்கு *kavuli-kakku-,* பெ. (n.) பல்லி விழுந்ததால் விடமாகிப் போன தென்னை, பனை இவற்றின் கள்; toddy which is poisioned by the spliting venom of the lizard.

[கவுளி+கக்கு]

கவையன் புத்தூர் *kavaiyan puttūr,* பெ.(n.) கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; name of the village in Coimbatore.

[கா+ஐயன்+புத்தூர்]

கழகம் *kalagam,* பெ.(n.) 1. கற்றோர் கூட்டம்; assembly of learned men கண்ணுதற் பெருங் கழகமோடமர்ந்து (திருவினை.) 2. சூதாடுமிடம்; place of gambling கழகத்துக் காலை புகின் (குறள்.937)

ம. கழகம் (கோயில், கோயில் தொண்டு); து. கல (பறையர் கூடுமிடம்)

[குல் > குழு > கழ > கழகு > கழகம்]

குல் – குல – குலவு , குலவுதல் = கூடுதல்.

குல – குல – கல – கலவி.

கல – கலவை. கலப்பு – கலம்பு – கலம்பம் – கதம்பம்.

கலம்பு – கலம்பகம்

கல – கலங்கு – கலக்கு — கலக்கம்

கல – கலகம், கலாம், கலாபம், கலாபனை.

இருவர் அல்லது இரு கட்சியார் கலந்தே பொருவதால், கலத்தற் கருத்திற் போர்க்கருத்துத் தோன்றிற்று, கைக்கலத்தல் என்னும் வழக்கையும், பொரு, சமர் என்னும் சொற்களின் வேர்ப் பொருளையும் நோக்குக.

மேற்காட்டிய சொற்றிரிவுப் பட்டியினின்று, கலத்தற்சொற்கு, இருபாற் கூட்டம், கலப்பு, கலக்கம், கலகம் என்னும் நாற்பொருள்கள் தோன்றியுள்ளமை காண்க. நீரும் மண்ணும் போல பல பொருள்கள் அல்லது கருத்துகள் கலப்பதே கலக்கம்.

குல் – குள் – கள். கள்ளுதல் = கூடுதல் , பொருந்துதல், ஒத்தல்.

கள் – களம் = ஏர்க்களமும் போர்க்களமும் போலப் பலர் கூடுமிடம்.

களம் – களன் = அவைக்களம்

களன்–கழனி = ஏர்க்களம் உள்ள வயல்.

களம் – களர் = அவை

களர் – களரி = அவை, கல்வி நாடகம் மல் வில் பயிலும் அரங்கு, வாக்குமன்றம், தொழில் செய்யும் இடம்.

கள்ள = போல.

"கள்ள மதிப்ப வெல்ல வீழ" (தொல்.1235)

குள் – குழு –குழம்பு – குழப்பம்.

குழவி = திரண்ட அரை கல்.

கூடுதற் கருத்தில் திரட்சிக் கருத்துத் தோன்றும்,

"சேரே திரட்சி" (தொல்.846)

என்று தொல்காப்பியம் கூறுதல் காண்க.

குழு – குழூஉ.

குழு – குழாம்.

குழு – குழும்பு.

குழு –குழுமு – குழுவு, குழுமு – குழுமல், குழுமம்,

குழுவு – குழுவல், குழுமுதல் = கூடுதல், குழுவுதல் = கூடுதல், திரளுதல்

குழுமு – கழுமு– கழுமல் = மயக்கம், நிறைவு, மிகுதி.

குழு – கெழு–கெழுமு–கெழுவு.

கெழுமுதல் = பொருந்துதல், கெழுவுதல் = பொருந்துதல், மயங்குதல்.

கெழுவு = நட்பு, 'கெழுவ' ஓர் உவமவுருபு

கெழு – கெழி = நட்பு

குழு – குழை = திரண்ட காதணி.

குழு– (குழகு) – கழகு – கழகம் = ஓலக்கம் (Durbar), புலவரவை, கலை பயிலிடம்,படைக்கலம், மல் பயிலிடம், சூதாடுமிடம்.

குள் – (கூள்) – கூடு.

கழகம் என்னும் சொல், கூடுதல் என்னும் பொருள்கொண்ட குழு என்னும் வேரடியாகப் பிறந்திருத்தலால், பொதுவாகக் கூட்டம் என்றே பொருள்படுவதாகும். அது, முதற்கண், சிறந்த கூட்டமாகிய புலவரவைக்குப் பெயரால் வழங்கிற்று.

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ
டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா
மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும்
படுமோ".

என்னும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணச் செய்யுளில், 'கழகம்' புலவரவையைக் குறித்தது. சங்கம் என்னும் வட சொற்கு நேர் தென்சொல் கழகம் என்பதே.

பழம் பாண்டி நாட்டு முத்தமிழ்க் கழகங்களும் தமக்கு முந்திய தமிழிலக்கியத்தை ஆராய்ந்து வந்ததினால், கற்றோர் பயிலும் இடத்தைக் குறித்த கழகம் என்னும் சொல், நாடைவில் கற்போர் பயிலும் இடத்தையும் குறிக்கத் தலைப்பட்டது. "அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரையென்ப", "அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப", " அவர் சங்கமிருந்து தமிழா ராய்ந்தது உத்தர மதுரையென்ப", என்று இறைய னாரகப் பொருளுரை முறையே முத்தமிழ்க் கழகங் களையும் பற்றிக் கூறுதல் காண்க. இதனால், இளைஞர் கல்வி பயிலுமிடத்தை,

"கந்தனை யனையவர் கலைதெரி கழகம்"
(கம்பரா. நாட்டுப்.48)

என்றார் கம்பர்.

இனி, ஈண்டைக் கழகம் என்னும் சொல், விற்கலை மற்கலை முதலிய போர்த்துறை பயிலும் இடம் எனவும் பொருளுரைப்பர். அதுவே கம்பர் கருத் தாயின் போர்க்கலையையும் கல்வித் துறைகளுள்

ஒன்றாக அடக்கிக்கொள்க. திவாகரம், படைக்கலம், மற்போர் முதலியன பயிலும் இடத்தையும் கழகம் எனக் குறிக்கும்.

ஏர்க்களத்திலும் அவைக்களத்திலும்போல் போர்க்களத்திலும் மக்கள் கூடுவதால், களம் என்னும் சொல் அம் மூன்றிடத்தையும் குறித்ததென முன்னர்க் கண்டோம். சூதாடுதற்கும் மக்கள் கூடுவதாலும், சூதும் ஒருவகைப் போர் என்பதைச் சூது பொருதல் என்னும் வழக்கினாலும், சூது போர்ச் சருக்கம் என்னும் வில்லிபாரதச் சருக்கப் பெயராலும், உத்தி யாலும், அறியலாம். வேத்தவையிலுள்ளா ரெல்லாம் ஒவ்வொரு துறையில் தேர்ச்சி பெற்றிருப்பராதலின், ஓலக்கமும் புலவரவையின் அடங்கும். ஆகவே, புலவரவை, கல்வி பயிலிடம், சூதாடுமிடம் ஆகிய மூவேறு பொருளைக் கழகம் என்னும் சொல் குறிக்கும் என்பது தெளிவாம். "பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்

கழகத்துக் காலை புகின்". (937)

என்னுங் குறளில், சூதாடுமிடத்தையும்,

"கழகத் தியலுங் கவற்றி னிலையும்"

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைத் தொடரில், சூதாட்டையும், கழகம் என்னும் சொல் குறித்தது.

இங்ஙனங் குறிப்பினும் இது அருகிய வழக்கே, இவற்றை உலக வழக்கிலும், நாட்டாண்மைக் கழகம், செந்தமிழ்க் கழகம், சைவ சித்தாந்தநூற்பதிப்புக் கழகம், மாணவர் கழகம், எனக் கழகம் என்னும் சொல் சூதாடுகளமல்லாத பிற களரிகளையே குறித்தல் காண்க.

குழு என்னும் வேரினின்றே குழாம், குழுமம் முதலிய பல்வேறு தொகுதிப் பெயர்கள் தோன்றியிருப் பினும், அவையாவும் பருப்பொருளிலன்றி நுண் பொருளில் ஒத்தனவல்ல.

குழு = சிறுகூட்டம் (committee).

குழூஉ = மறைபொருட் குறியீடு வழங்கும் தொழிற்குலம் அல்லது வகுப்பு.

குழாம் = குழுவினும் சற்றுப் பெரிய கூட்டம் (party).

கோஷ்டி என்னும் வடசொற்கு நேரான தென்சொல் குழாம்.

பஜனைக் கோஷ்டி என்பதைத் திருப்பாட்டுக் குழாம் எனலாம்.

குழுமல், குழுவல் = குழாத்தினும் பெரிய கூட்டம் (gathering).

குழுமம் = வணிகர் சங்கமும் தொழிலாளிகள் சங்கமும் போன்ற கூட்டம் (guild)

குழும்பு = யானை நிரை, தோழமைக் கூட்டம் (herd, company).

"களிற்றுக் குழும்பின்" (மதுரைக்.24)

கழகம் = சங்கம் (society, association).

ஆகவே, குழு, குழூஉ, குழாம் குழுமம் என்பன முறையே ஒன்றினொன்று பெரிய தொகுதிகளாம். கழகம் என்பது உயர்திணைக்கேயுரியதாய்ப் பெரும் பாலும் கல்விபற்றியதும் நிலையானதும் குழுமத் திற்குச் சமமானதுமான கூட்டத்தையே குறிக்கும். இதனாலேயே, பண்டைத் தமிழ்ச் சங்கத்தைக் கழகம் என்றார் பரஞ்சோதி முனிவர். தலைக்கழகப் புலவர் ஐந்நூற்று நாற்பத்தொன் பதின்மர்; இடைக்கழகப் புலவர் ஐம்பத்தொன்பதின்மர்; கடைக்கழகப் புலவர் நாற்பத்தொன்பதின்மர். ஆகவே, கழகம் என்பது சிறு குழுவைக் குறிப்பதன்று.

இனி சூதாடு கருவிக்குக் கழங்கு, கழங்கம் எனப் பெயரிருப்பதால், கழங்கம் அல்லது கழங்ககம் என்னுஞ் சொல் கழகம் எனத் தொக்குச் சூதாடு மிடத்தைக் குறித்ததோவென ஐயுறவும் இடமுண்டு. ஆயினும், ஆய்ந்து நோக்குவார்க்கு, மேற்காட்டிய வரலாறே உண்மையானதென்பது புலனாம்.

இதுகாறுங் கூறியவற்றால், கழகம் என்பது குழு என்னும் வேரடியாய்ப் பிறந்ததென்றும், கூட்டம் அல்லது கூடுமிடம் என்பதையே அடிப்படைப் பொரு ளாகக் கொண்டதென்றும், முதற்கண் கற்றோ ரவையை அல்லது கற்போர் கூட்டத்தைக் குறித்தே பின்னர்ச் சூதாடுமிடத்தைக் குறித்ததென்றும், சங்கம் என்னும் வடசொற் பொருளில் தொன்று தொட்டு வழங்கிய தூய பழந்தமிழ்ச் சொல்லென்றும், பண்டையிலக்கியம் முற்றும் இறந்துபட்ட இக் காலத்தில் திருக்குறளைக் கொண்டு சொற்பொருள் வரிசையைக் காணமுடியாதென்றும், சொல்லாராய்ச் சியின் துணையினாலேயே அதைத் துணிதல் கூடுமென்றும், தெற்றெனத் தெரிந்துகொள்க.

(பண்.கட்.91)

கழிவு மீன் *kaḻivaumīṉ*, பெ.(n.) உதவாத மீன்கள்; trash fish.

[கழிவு+மீன்]

கழிவாலாடி *kaḻivālāḍi*, பெ.(n.) தாழ்வான நிலப் பகுதி; low lying place.

[கழி+வாலாடி]

கழுவாய் நாள் *kaluvāynāl,* பெ.(n.) வெள்ளுவா காருவா நாள்களுக்கு ஒன்று விட்ட முதல் நாள், பிரதோசம் எனப்பட்ட கழுவாய் நாள்; a day before full moon and new moon is said to prodōsam in sanskrit and kāluvaynāl in Tamil.

[கழுவு–கழுவாய்+நாள்]

கழாரம்பன் *kalāramban,* பெ.(n.) தொல்காப்பியரொடு உடன் பயின்ற மாணவர்களாகக் கருதப்படுவோருள் ஒருவன்; name of one of the classmates of Tolkappiyar.

[கழார்(ஆற்றுக்கழிமுகம்)+அம்பன்–வில்லாளன்)]

கழிக்கூடை *kali-k-kūdai,* பெ.(n.) காட்டுக் கொடிகளால் பின்னி, கோழி கவிழ்க்கவும், கூளம் அள்ளவும் பயன்படுத்தப்படும் பெரிய கூடை; a big multi purpose basket.

[கழி+கூடை]

கழிப்படல் *kali-p-padal,* பெ.(n.) மூங்கில் சிம்பு அல்லது மெல்லிய காட்டுக் குச்சிகளைக் கொண்டுப் பின்னப்படும் படல் போன்ற தட்டி; a side screen.

[கழி+படல்]

கழுவாய் வழிபாடு *kaluvai-valipādu,* பெ.(n.) குற்றங்கள் கழிய வழிபடும் நாள் (பிர தோசம்); a day of prayer for expiation from sin.

[கழுவாய்+வழிபாடு]

கழுவுள் *kaluvul,* பெ.(n.) ஆண்பாற் பெயர்; name of a person. கழுவுள் தலைமடங்க.

[கழு(வலிமை, காவல்)+உள், கழுவுள்–மறவன், காவலன்]

களிக்கோல் *kali-k-kōl,* பெ.(n.) களி கிண்ட உதவும் கோல்; a stick used to kuindle boiled ragi preparation.

[களி+கோல்]

களிம்புளியான் *kalimpuliyān,* பெ.(n.) ஒரு வகைக் கற்றாழை; a kind of aloe.

[களியம்+புளியன்]

கற்றறி–தல் *karrari-,* செ.கு.வி.(v.t.) அறநூல்களையும் அரசியல் நூல்களையும் கற்று வேண்டுவன விலக்குவன அறிதல்; to be educated by extraordinary learning.

[கற்று+அறி]

கற்றுச்சொல்லி *karru-c-colli,* பெ.(n.) தானாக விளங்கிக் கொள்ளாமல் மற்றவர் சொன்னதை அப்படியே திரும்பச் சொல்பவன்; a dull person who repeats what others said.

மறுவ. கிளிப்பிள்ளை

[கற்று+சொல்லி. கற்றல் என்பது இங்குக் காதால் கேட்டு அறிந்ததை உணர்த்தியது]

கன்றுத் தாய்மாடு *kanru-tāy-mādu,* பெ.(n.) கன்றுக்குப் பால் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் உள்ள மாடு; milking cow.

[கன்று+தாய்மாடு]

ஒ.நோ. பிள்ளைத்தாய்ச்சி.



கனகதம் *kanagadam,* பெ.(n.) ஒட்டகம்; camel. கனகதம்....ஒட்டகம்(நிக.பி.8:182)

[கன+கதம்]

கனியனூர் *kaniyanūr,* பெ.(n.) வேலூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்; name of the village in Vellore.

[கனியன்+ஊர்]

காசு *kasu,* பெ.(n.) ஒரு பணம் என்பதின் 64இல் ஒரு பங்காகிய சிறு நாணயம்; a small coin 1/64th in value of a panam.

[காய்ச்சு–காசு]

காட்சியாள் *katci-y-āl*, பெ.(n.) வழக்கு நேர் கேட்கும் போது நேரிற் கண்டவராக நிகழ்ந்தது கூற முன் வருபவர்(சாட்சி); witness.

மறுவ. சான்றாளர், கரி, நேர்காட்சி, காட்சி.
[காண்-காட்சி+ஆள்]

காட்சி எனும் தமிழ்ச்சொல், வடமொழியில் சாட்சி எனத் திரிந்தது.

காட்டாட்சி *kāttātci*,பெ.(n.)அறநெறி தவறிச் செய்யும் அரசாட்சி;unjust rule, tyranny.

[காட்டு+ஆட்சி]

காட்டாளி *kāttāli*, பெ.(n.) கடற்கரை மரம் சோலைகளை அடையாளமாகக் கொண்டு கடலில் மீன்பிடிக்கும் இடங்களைக் கண் டறியும் திறமை வாய்ந்த மீனவன்;fisherman efficient in identifying the fishing areas by calculating the distance by sighting the sea shore vegetation.

[காடு+ஆளி]

காண்புநேரம் *kānpunēram*, பெ.(n.) காண் பதற்கு நேரம் ஒதுக்குகை; an appointment.

காண்பேழை *kānpēlai;* பெ.(n.) காட்சிப் பொருள் களை வைக்கும் கண்ணாடிக் காட்சிப் பெட்டி; show case.

[காண்+பேழை]

காணிக்கடன் *kāni-k-kadan*,பெ.(n.) நிலவரி; land tax.இறையிலி நீங்கு நிலம் முக்காலாலே இரண்டு மாகாணி அரைக்காணி முந்திரிகை கீழ்க்காலே நான்குமா அரைக்காணி முந்தி ரிகை கீழ் நான்கு மாவினால் இறை கட்டின காணிக்கடன்.

[1/5–2000 எனும் கீழ் வாய் இலக்க எண்]
இறை கட்டின காணிக்கடன் -கல்வெட்டு
[காணி+கடன்]

காதடை-த்தல் *kādadai-*, செ.கு.வி. (v.i.) 1. உரத்த ஒலி, கூச்சல் போன்றவற்றால் கேட்க இயலாதவாறு செய்தல்; to deafen. 2. நெடும் பசியால் காது பஞ்சடைத்துப் போதல்; extreme hunger.

[காது+அடை-,]

காதில்பூசுற்று-தல் *kādil pū surru-*, செ.கு.வி. (v.i.) ஏமாற்று வேலை;cheating.

[காதில்+பூ+சுற்று]

காதுவளையம், *kāduvalaiyam*, பெ.(n.) 1. ஏற்றச் சாலின் காதுவளையம்; a ring in the ladder for pulling water from well. 2. காதணி வளையம்; round ear ring.

[காது+வளையம்]



காப்பரிசி *kāparisi*, பெ.(n.) கோயிலில் அடிய வர்களுக்கு வழங்கும் இனிப்பு கலந்த பச்சரிசி; raw rice with jaggery offered to the devotees at the temple.

[காப்பு+அரிசி]

காப்புறுதியளி-த்தல் *kāppurudiyali-*, செ.கு.வி. (v.i.) ஒரு விளைபொருள் அல்லது கண்டுபிடிப்பை பயன்படுத்துவதற்கான தனி உரிமை கொடுத்தல்; to bestow patent right.

[காப்பு+உறுதி+அளி-த்தல்]

காய்க்கொட்டை *kāy-k-kottai*,பெ.(n.) காய் நிலை யிலேயே பறித்துக் காய வைக்கப்பட்ட கொட்டை; dried nut almost in a unriped stage.

[காய்+கொட்டை]

கார்குட்டி *kārkutti*, பெ.(n.) சிறிய செம்மறிக்கடா; a small he-goat.

[கார்+குட்டி]

காரவேலன் கல்வெட்டு *kāravēlankalveṭṭu,* பெ.(ந.) தமிழ் மூவேந்தர்கள் உடன்படிக் கையைக் குறிப்பிட்டுக் காட்டும் அத்திகும்பர் கல்வெட்டு; Hattikumba inscription which depicts an agreement among the three Tamil kings.

[காரவேலன்+கல்வெட்டு]

தமிழகத்தின் மீது வடநாட்டார் படையெடுப் புகள் நடந்தன. இந்தியாவுக்கு ஒருகாலத்தில் தமி ழகம் என்று பெயரிருந்தது. ஆரியர் புகுந்தபின் வட நாட்டுத் தமிழ் பிராகிருதம் என்னும் வட தமிழாயிற்று. அப்பொழுது விந்தியமலை வரை தமிழ் நாடாக இருந்தது. அதன்பின்னர் வடவேங்கடமாகத் தமிழக எல்லை சுருங்கியது.

வடநாட்டுப் படையெடுப்பாளர்களை ஒன்று சேர்ந்து எதிர்ப்பதற்காக மூவேந்தர்களும் 12 வேளிர் குறுநில மன்னரும் ஒருங்கிணைந்து கூட்டிணைவு உடன்படிக்கை செய்து கொண்டிருந்தனர். இந்த ஒப்பந்தம் நெடுங்காலம் நிலவியதைக் கலிங்க நாட்டு அத்திகும்பா (யானைக்குன்று) வில் காரவேலன் என்னும் மன்னன் பொறித்த கல்வெட்டு கூறுகிறது. கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் காரவேலனின் 11 ஆம் ஆட்சியாண்டில் இந்த உடன்படிக்கை முறிந்து போயிற்று என அக்கல்வெட்டு கூறுகிறது.

அந்த அத்திகும்பா கல்வெட்டு சனவரி 2004இல் வெளிவந்த IJDL பன்னாட்டுத் திரவிட மொழி யியல் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. காரவேலன் அவனுடைய 12ஆம் ஆட்சியாண்டில் பாண்டியனின் தலைநகரைக் கொள்ளையடித்துப் பொன்னும் பொருளும் எடுத்துச் சென்றான் என்னும் செய்தி நம்கடைக்கழக இலக்கியங்களில் கூறப்பட வில்லை. பாண்டிய நாட்டில் 160 ஆண்டுகள் கடைக் கழகக் காலத்தில் மன்னராட்சி இல்லாமல் போய்விட்டது என 1920இல் வெளிவந்த நற்குடி வேளாளர் வரலாறு என்னும் செய்யுள் நூல் கூறுகிறது.

அந்த உடன்படிக்கை 1300 ஆண்டுகள் நீடித்தது என்கின்றனர். காரவேலனின் அத்திகும்பா கல் வெட்டை 1928இல் படித்த ஆர்.டி.பானர்சியும் செய சுவாலும் அத்துணை நீண்ட நெடுங்காலம் ஒரு உடன் படிக்கை நீடித்தது என்பதை எவரும் நம்பமுடியாது எனக் கருதினர். எனவே, ஏதோ ஒரு வகையில் படித்து அந்த உடன்படிக்கை பதின்மூன்றும் நூறும் சேர்ந்த 113 ஆண்டுகள் நிலவியதாக உரை விளக்கம் தந்தனர். அதனையே கல்வெட்டாசிரி யர்கள் மேற் கோள்காட்டி வருகின்றனர். காரவேலன் கல்வெட்டின் ஒரு பகுதி:

ஜனபத பாவனம்ச
தெரச வச சதகம்
பிமன்தி தமிரதக சங்காதம்

(அத்திகும்பா கல்வெட்டு வரி 10–11)

என்னும் தொடரில் தமிர தக சங்காதம் பிமன்தி என்பது தமிழ் நாட்டுக் கூட்டணி உடைக்கப்பட்டது எனப் பொருள்படுகிறது. தமிரதக என்பதற்கு தமிர தேச எனவும் பாட வேறுபாடு உள்ளது. வடநாட்டு மக்களின் அமைதியான வாழ்வுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக என்னும் பொருளில் ஜனபத பாவனம்ச என்னும் முதல்வரி எழுதப்பட்டுள்ளது. அடுத்த வரியில் தெரச என்பது 13ஐக் குறிக்கும். அடுத்துள்ள வச என்னும் சொல் பெருகிய எனப் பொருள்படும். சதகம் என்னும் சொல் நூறு கொண் டது என்றும் நூற்றாண்டு– (century) என்றும் இருபொருள் தரும். நூறு கொண்டது என்னும் பொருள் இங்குப் பொருந்தவில்லை. நூறு கொண் டது என்று ஒன்றை முடிவு கட்டிய பிறகு அதன்மீது பதின்மூன்றைச் சேர்க்க முடியாது. ஒரு சதகம் என்பதற்கு நூற்றாண்டு என்னும் பொருளே இங்குப் பொருத்தமாக அமைந்துள்ளது.

113 ஆண்டைக் குறிப்பதாக இருந்தால் தெரசசதம் என்று குறிப்பிட்டாலே போதுமானது. நூற்றாண்டு எனப்பொருள்படும் சதகம் என்னும் சொல்லை ஆளவேண்டியதில்லை. 13 நூற்றாண் டுகள் என்பதைக் குறிக்கவே தெரசவச சதகம் என்னும் தொடராட்சி பயன்படுத்தபட்டது.

இந்தக் கல்வெட்டு பிராகிருத மொழியில் எழுதப் பட்டுள்ளது. பிராகிருதம் வடதமிழ் எனப்பட்டது. இதில் வடமொழிக்குரிய எண்முறை பின்பற்றப்பட் டுள்ளதா அல்லது தமிழுக்குரிய எண்முறை பின்பற்றப் பட்டுள்ளதா என்பதைத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும்.

தமிழ் எண்முறை

எண்களை எழுத்தால் எழுதிக் காட்டுதல் எண் களால் எழுதிக் காட்டுதல் என்னும் முறையை உலக மொழிகள் அனைத்தும் பின்பற்றுகின்றன. தமிழில் எண்ணாக எழுதினாலும் எழுத்தில் எழுதிக் காட்டி னாலும் எண்களின் மதிப்பை இடமிருந்து வலமாகவே

குறிப்பிடுவது வழக்கம். ஆயிரத்து மூன்று 1003 எனத் தமிழில் குறிப்பதைக் காண்க.

வடமொழி எண்முறை

வடஇந்திய மொழிகளிலும் சமற்கிருதத்திலும் நூறுவரை எண்ணும் போது வல இடமாகவும் நூற்றுக்கு மேல் இட வலமாகவும் எண்ணின் இட மதிப்புகள் ஆளப்படுகின்றன.

அ. சமற்கிருதம் – சதுர்தசி 14 (நான்கும் பத்தும்) = பதினான்கு

இந்தி –தேரஹ் 13 (மூன்றும் பத்தும்) = பதின்மூன்று

ஆ. சமற்கிருதம் (இத்தீஸ் 31 (ஒன்றும் முப்பதும்) = முப்பத்தொன்று

துவி சகஸ்ர2000 (இரண்டு ஆயிரம்) ஈராயிரம்

இந்தி – தோஹஜார் 2000 (இரண்டு ஆயிரம்) ஈராயிரம்

இ.ஆங்கிலத்தில் 11 முதல் 20 வரை வல இடமாகவும், இருபதுக்கு மேல் இடவலமாகவும் (Twenty one) அமைந்துள்ளன. பொனீசியவணிகர்கள் தமிழ் எண்முறைகளை உலகம் முழுவதும் பரப்பியதன் விளைவு இது எனலாம். சமற்கிருதம் நூற்றுக்கு மேற்பட்ட அனைத்து எண்களையும் தமிழ் முறைப்படி ஆள்கிறது.

ஆரியர் ஈரான் நாட்டு வழியாக வந்ததால் வலமிருந்து இடமாக நூறுவரை எண்களைக் குறிக்கும் வழக்கத்தை உடன் கொண்டு வந்து வட இந்திய மொழிகளில் புகுத்தினர். அவர்கள் இந்தியாவில் வணிகத் தொழிலில் மேம்பட்ட திராவிடர்களோடு கொண்ட ஊடாட்டத்தால் தமிழிலுள்ளது போன்றே இடவலமாக எண்களைக் குறிப்பிடும் வழக்கத்தை மேற்கொண்டனர். இதனால் இன்றளவும் சமற்கிருதத்தில் எண்களைக் குறிப்பிடுவதில் குழப்பம் நிலவுகிறது. இதனைச் சமற்கிருத ஆங்கில அகராதியில் மோனியர் வில்லியம்சு சுட்டிக் காட்டுகிறார்.

dvi satam (த்விசதம்) என்னும் சமற்கிருதச் சொல் 100+2=102 என்றும் 100X2=200 என்றும் இரு வகையாக ஆளப்படுவதை அவர் எடுத்துக் காட்டியுள்ளார். ஆனால் சப்தசதி என்பது 700ஐக் குறிக்கிறது. இது 107ஐ ஏன் குறிக்கவில்லை? இதிலிருந்தே சமற்கிருதம் பேசப்படாத மொழி என்பது உறுதியாகிறது.

இந்நிலையில் காரவேலனின் பிராகிருதக் கல்வெட்டில் எந்தமுறை பின்பற்றப்படடுள்ளது? நூறு ஆயிரம் போன்ற பெரிய எண்களோடு அவற்றினும் குறைந்த எண்களை எழுத்தால் எழுதிக் காட்டும் போது 1009 என்பதை ஒன்பது சேர்ந்த ஆயிரம் அதாவது

"தொண்டு(9) தலையிட்ட ஆயிரம்" எனக் குறிப்பிடுவது கடைக்கழகக் காலத்திலும் வழக்கமாக இருந்திருக்கிறது. கோடியைக் கோடியால் பெருக்குவதாயின் அடுக்கிய கோடி என்பர்.

காரவேலன் கல்வெட்டில் பதின்மூன்று சேர்ந்த நூறு என்று சொல்லாமல் நூற்றாண்டு எனச் சொல்லப்பட்டுள்ளது. அதனால் 13 நூற்றாண்டுகள் (1300 ஆண்டுகள்) எனப் பொருள் கொள்ள இடந்தந்துள்ளது. இது வடதமிழாகிய பிராகிருதத்தில் பின்பற்றப்பட்ட தமிழ் மரபு எண்முறை.

பிராகிருத எண்கள் வல இடமாக எழுதப்பட்ட எண் முறை என்று ஐராவதம் மகாதேவன் (ஆவணம்–சூலை 2004) குறிப்பிட்டிருக்கிறார். அழகன் குளம் பானையோட்டில் 408 என்பது (8+100x4=408) எனக் குறிக்கப்பட்டுள்ளது என்கிறார். இதை நான் 804 எனக் கருதுகிறேன். இது எழுத்தால் எப்படி எழுதப்பட்டது என்பதற்கு அவர் சான்று தரவில்லை. அவர் படித்த முறை (4X100)+8. நான் படித்த முறை (8X100)+4 என்ப தாகும். இந்த வலஇட முறைப்படி காரவேலன் கல்வெட்டைப் படித்துப் பார்த்தாலும் நூற்றாண்டு 13(100X13 = 300) என்றே பொருள்படுகிறது. சதகம் என்பது நூற்றாண்டு என்றே படிக்கமுடியும். இச்சொல் நூறு எனச் சமற்கிருதத்தில் பொருள் படாது. பிராகிருதத்திலும் இவ்வாறே உள்ளது. இதனை ஆர்.டி.பானர்சி செயசுவால் போன்றவர்கள் பதின்மூன்றும் நூறும் 13+100=113 எனப் படித்தது எப்படிப் பொருந்தும்.

நூற்றாண்டு எனப்படும் சதகம் என்னும் சொல்லைக் காரவேலனின் கல்வெட்டு குறிப்பிடுவதால் மூவேந்தர் கூட்டணி ஆரியர்கள் கி.மு.15ஆம் நூற்றாண்டில் பஞ்சாபில் புகுந்தபோது உருவாகியிருக்கிறது என அறியமுடிகிறது. இந்தக் காலவரம்பில் வடமேற்கு இந்தியாவில் ஆரியர் புகுந்தனர் என்றும் அவர்களை அடக்குவதற்கு வடநாட்டிலுள்ள தமிழ் வேந்தர்களுக்குத் தென்னாட்டுப் பாண்டியன் தக்க உதவியளித்து ஆணையிட்டான் என்றும் நன்குடி வேளாளர் வரலாறு (1920) எனும் நூல் குறிப்பிடுகிறது. இருக்கு வேதமும், ஆரியர் யமுனைக் கரை பகுதிக்கு வந்தபோது நார்மாறன், பல்பூதன் எனும் பாண்டியக் கிளை மரபினர் அமைதியாக வாழத்

தொடங்கிய ஆரியர்க்குக் கொடையளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

கி.மு.9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தொல்காப்பியரும்,

போந்தை வேம்பே ஆரென வரூஉம்

மாபெரும் தானையர்

என மூவேந்தர்களிடை நிலவிய ஒற்றுமையைக் குறிப்பாகப் புலப்படுத்திக் காட்டியிருக்கிறார். மூவேந்தர் கூட்டணி தொடங்கியதாகக் கருதப்படும் கி.மு.15ஆம் நூற்றாண்டளவில் இந்தியாவின் தலை நகரம் கொற்கையாக இருந்தது. இந்தியாவிலிருந்த 600 குறுநில மன்னர் கொற்கைப் பாண்டியனுக்குத் திறை செலுத்தினர் எனச் சாத்தன் குளம் இராகவன் கோநகர் கொற்கை எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். கி.மு.1000 ஆண்டளவில் வடநாட்டிலிருந்த விராத்திய பிராமணப் பிரிவினர் (வேளாளப் பார்ப்பனர் – வேள்வி செய்யக்கூடாது எனத் தடைவிதிக்கப்பட்ட கலப்பினப் பார்ப்பனர்) சிலர் கொற்கை மாநகரில் காணப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

பாரத இராமாயணங்களில் மூவேந்தர் கூறப்படுகின்றனர். சிந்துவெளி முத்திரைகளிலும் பாண்டியன் பெயரும் சேரமன்னர் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. லோத்தல் துறைமுகத்தில் கிடைத்த சிந்து வெளி முத்திரையில் பாண்டியன் அண்டன் எனும் சொல் உள்ளது. கபிலர் 49 தலைமுறைகளாகத் துவாரகையை இருங்கோவேள் பாண்டியக் கிளை மரபினர் ஆட்சி புரிந்ததைப் புற நானூற்றில் குறிப்பிடுகிறார்.

கி.மு.7ஆம் நூற்றாண்டு வரை விந்தியத்துக்கு வடக்கில் கோசாம்பியைத் தலைநகராகக் கொண்டு உதயணன் என்னும் தமிழ் மன்னன் ஆட்சி புரிந்திருக்கிறான். கொற்கைப் பாண்டியனுக்கு அனைத்து மன்னரும் கட்டுப்பட்டு அவன் சொற்படி நடந்திருக்கின்றனர்.

காரவேலன் கல்வெட்டின்படி மூவேந்தர் உடன் படிக்கை நீடித்த காலம் 1300 (பதின்மூன்று நூற்றாண்டுகள், என்பதை வலியுறுத்தி Journal of South India Historical view(2003) பக்.96–100) கட்டுரை வெளிவந்தது. கணையாழி (பிப்.2005) இதழில் 'அந்த 1300 ஆண்டுகள்' எனும் தலைப்பில் ம. கந்தசாமி எழுதிய கட்டுரையிலும் இது வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தக் காலத்தை கி.மு.1465–கி.மு. 165 என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூவேந்தரும் 12 குறுநில மன்னரும் சேர்ந்த இக் கூட்டணியில் அந்துவன் என்னும் சேர இளவரசன் அந்த உடன்படிக்கையை மீறிக் கொங்கு நாட்டுக் கருவூரைக் கவர்ந்து கொண்டான் என்றும் அவனைத் தூண்டிவிட்டுக் கூட்டு உடன்படிக்கையை மீறச் செய்தவன் காரவேலனே என்றும் இவர் குறிப்பிட்டுள்ளார். மூவேந்தரின் ஒற்றுமையால் கலிங்க நாட்டு அமைதிக்குத் தீங்கு நேரும் என அஞ்சியே காரவேலன் தமிழர் ஒற்றுமையைக் குலைத்தான் எனக் கூறப்படுகிறது.

காரவேலன் மதுரையைக் கொள்ளையடித்துச் சென்ற மறு ஆண்டில் கலிங்க நாட்டில் கொண்டாடப் பட்ட சமண தீர்த்தங்கரர்சிலை நாட்டும் விழாவுக்குப் பாண்டியனைச் சிறப்பு விருந்தாளியாக அழைத்திருக்கிறான். இதிலிருந்த பாண்டியர்களின் பங்காளிப் பூசலில் ஒரு பக்கம் சார்ந்து மற்றவனை அழிக்கக் காரவேலன் துணை புரிந்திருக்கிறான் எனத் தெரிகிறது.

கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் (கி.மு.180–கி.மு.165) மதுரையைக் கொள்ளையடிக்க வந்த காரவேலன் சோழநாட்டைக் கடந்து சென்றிருக்க வேண்டும். சோழரைத் தாக்கிய செய்தி எதுவும் அத்திகும்பா கல்வெட்டில் இல்லை. சோழநாட்டில் கி.மு.200 அளவில் சென்னியர் மரபு முடிவுற்றது. அதன்பின்னர் கி.மு.160 அளவில் கிள்ளி மரபு ஆட்சிக்கு வந்துள்ளது. இந்த இடைவெளிக் காலத்தில் காரவேலன் தென்னாடு நோக்கி வந்திருக்க வேண்டும்.

சேரநாட்டில் புறப்புண் நாணி வடக்கிருந்த பெருஞ்சேரலாதனுக்குப் பிறகு வலிமை வாய்ந்த சேர மன்னர் காணப்படவில்லை. பாண்டிய நாட்டில் கடலன் வழுதிக்குப் பின்னர் (கி.மு.200 – கி.மு.180) முடியரசு ஒடுங்கியது. அவனுக்குப் பின் வந்த மருங்கை வழுதி (கி.மு.180–கி.மு.160) என்பவனே பங்காளிப் பூசலில் துணைபுரிய கலிங்க நாட்டுக் காரவேலனை வரவழைத்த பாண்டியனாக இருத்தல் வேண்டும். கடைக் கழக மூவேந்தர்களின் ஆட்சிக் காலங்கள் கடைக்கழக நூல்களின் காலமும் கருத்தும் (2006) என்னும் நூலிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

தமிழ் வேந்தர்கள் காலமெல்லாம் தமக்குள் போரிட்டுக் கொண்டிருந்தார்கள் என்னும் கருத்துக்கு எதிராக ஒற்றுமையாக இருந்தார்கள் என்பது வரலாற்றுச் சிறப்புடையதாகும். ஆரியப் படைகளை

ஒன்று கூடி எதிர்க்க ஓரணியில் திரண்டனர் என்பதும் அந்த உடன்படிக்கை 1300 ஆண்டுகள் நீடித்தது என்பதும் நம்பக் கூடியது என்பதும் மேலும் சில சான்றுகளால் உறுதிப்படும். பாண்டியனை

வடதிசை கங்கை இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன்

என்று சிலம்பு பாடுகிறது.

இமயம் வரை தமிழர் வட எல்லை விரிந்திருந்தது என்பதை உறுதிப்படுத்துவதற்குத் தம் உரிமையை நிலை நாட்டவும் மூவேந்தரும் அடிக்கடி இமயத்தில் தம் இலக்கினை பொறிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். பாண்டியன் இமயத்தில்கயல் மீன் இலக்கினை பொறித்தபோது ஏனைய சேர சோழர்க் குரிய வில்லும் புலியும் சேர்த்தே பொறித்திருக்கிறான்.

கயலெழுதிய இமய நெற்றியில்
அயலெழுதிய புலியும் வில்லும்

எனும் செய்யுள் வரிகளே இதற்குத் தக்க சான்றாகும்.

யானைக் கட்சேய் மாந்தரன் சேரல் இரும்பொறையின் முன்னோனுக்கு இந்தியாவிலிருந்த அனைத்து மன்னரும் அடிபணிந்து வழிமொழிந்து ஒழுகினர்.

தென்குமரி வடபெருங்கால்
குணகுட கடலா எல்லை
குன்றுமலை காடு நாடு
ஒன்றுபட்டு வழிமொழிய
கொடிது கடிந்து, கோல் திருத்தி
படுவது உண்டு பகல் ஆற்றி
இனிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல! (புறம் 17:1–8)

எனக் குறுங்கோழியூர் கிழார் பாடியுள்ளார்.

பதிற்றுப்பத்தில் நின்னாட்சி இமயத்துக்கு அப்பாலும் பரவவேண்டும் எனப் புலவர் தன் விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி பல துறைமுகங்களைக் கொண்டிருந்ததால் இவனைப் பல்சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்றனர். இவன் இமயத்தை வட எல்லையாகக் கொண்டவன் என்பதை

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனஅது உருகெழு குமரியின் தெற்கும்
(புறம்–6)

எனக் காரிக்கிழார் பாடியுள்ளார்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்,
வடபுல இமயத்து வாங்குவில் பொறித்த
எழுவுறழ் திணிதோள் இயல்தேர்க் குட்டுவன்
எனப் பாராட்டப்பட்டான்.
(சிறுபாண்.48–49)

தமிழ்வேந்தர்களின் இமயப் படையெடுப்பு என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்ட மு. இராகவையங்கார், சிக்கிம் மாநிலத்திலிருந்து திபேத்துக்குச் செல்லும் வழியிலுள்ள சூம்பிப் பள்ளத்தாக்கை ஒட்டிய சோழமலைத் தொடர், சோழன் கணவாய் (chola pass) என அழைக்கப்படும் பகுதிகளே கரிகாற் சோழனும் தமிழ் மன்னரும் கைப்பற்றி இமயத்தில் இலச்சினை பொறிக்கச் சென்ற வழி எனக் கூறியுள்ளார். சோழன் கணவாய் Reader's Digest உலகப் படத்தில் (பக்.77) காட்டப்பட்டுள்ளது.

மேற்கண்ட சான்றுகள் ஆரியர் அலறத்தாக்கிய மூவேந்தர்களின் தொடர்ந்த வடநாட்டுப் படையெடுப்புகளைப் புலப்படுத்துகின்றன. ஆரிய திராவிடர் போராட்டம் என்பது சிந்துவெளி நாகரிகம் முடிந்து இருநூற்றாண்டுகளுக்குப் பின்னர் கி.மு.1600 முதலே தொடங்கிவிட்டது. அதில் தென்னாட்டு மன்னர் கி.மு.1500 முதல் மிகுதியாகப் பங்கேற்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கிறது. தேவாசுரப் போராட்டங்கள் எனப் புராணங்கள் இவற்றைக் குறிப்பிடுகின்றன. ஆதிச்சநல்லூர் பானை ஓட்டு எழுத்து கி.மு.1500 எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இந்த வரலாற்றுப் பின்னணியைப் புரிந்து கொள்ள காளிதாசனின் குலமுன்னோனாகிய இரகு வடநாட்டிலிருந்த ஒரு பாண்டியனை அடக்கித் திறை செலுத்தச் செய்தான் எனக் கூறப்பட்டுள்ளது. எனவே 1300 ஆண்டு மூவேந்தர் உடன்படிக்கை என்பது நம்பத்தக்கதாகவே உள்ளது.

<u>கருவி நூல்கள்</u>

1. *JDL(Jul. 2004) திருவனந்தபுரம்*
2. *Shashi Kant 1971; The Hathigumpa inscription of Kharavela and Bhabru Edict of Asoka, New Delhi*
3. *Journal of South India, Historical view 2003.*
4. *ம. கந்தசாமி. அந்த 1300 ஆண்டுகள், கணையாழி, பிப்பிரவரி 2005.*
5. *ஐ. மகாதேவன் – அழகன்குளம் பானைஓட்டில் எண்கள் – ஆவணம், சூலை – 2004.*
6. *சாத்தன்குளம் அ. இராகவன்.1971. கோநகர் கொற்கை.*
7. *ஆறுமுக நயினார் பிள்ளை.1920. நன்குடிவேளாளர் வரலாறு, மதுரை*

8. காளிதாசன், இரகுவம்சம்.

9. Banerji, R.D. 1930, History of Orissa.

10. இரா. மதிவாணண் (2006) கடைக்கழக நூல்களின் காலமும் கருத்தும், திலகம் பதிப்பகம், 17 இபி1கே.கே. பொன்னுரங்கம் சாலை, ஓம் சக்திநகர் வளசர வாக்கம், சென்னை-87.

காராம்பசு *kārāmpasu,* பெ.(n.) மடியும் காம்பும் கருநிறம் கொண்ட மாடு;cow of black coloured udder.

மறுவ. காரா, காரான். காராவு.

[கரு-கார்+ஆம்+பசு]

காராவின் பால் சீரியது. மிதித்தபுல்லை மேயாததும் கழுத்து அலை நீரைத்தொடும் ஆழம் வரை இறங்கித் தூய நீர் பருகுவதும் இதன் இயல்பு. இதன் வயிற்றில் ஆன்மணத்தி (கோரோசனை) உருவாகும்.

காரி *kāri,* பெ.(n.) உப்பங்கழி;back water. 2.காயல்;an arm of the sea.*3.அழகு;* beauty.

ம. க.காரி, தெ. கய்யி. மரா. கார, காடீ.

[கார் - காரி (கருமை நிறம்) கடல் நீர்நிலை]

காரை வீடு *kārai vīdu,* பெ.(n.) சுண்ணாம்புச் சாந்தினைக் கொண்டு பூசப்பட்ட சுவர் கொண்ட வீடு; mortar plastered house.

[காரை+வீடு]

கால்கட்டுபோடு-தல் *kālkaṭṭupōḍu-,* செ.குன்றாவி.(v.t.) 1. திருமணம் செய்தல்;to arrange marriage.அவனுக்கு ஒரு கால் கட்டு போடவேண்டும்.2.காலில் கட்டுபோடுதல்; to tie a bandage on leg.

[கால்+கட்டு+போடு]

கால்வெளி *kālveḷi,* பெ.(n.) அறிவு (ஞானம்)ப் பெருவெளி; universal zone of eternal enlightment. "மூலத்தில் தோன்றி முடிவில் இருநான்காகிக் கால்வெளியில் பன்னிரண் டாம் காண்". (ஔவைக்குறள்.41)

[கால்+வெளி]

காலமுறை ஊதியம் *kālamuṟai ūdiyam,* பெ.(n.) ஏரண முறைச் சம்பளம், நிலைப்புச் சம்பளம்; time scale of pay, permanant salary.

மறுவ. ஏறுபடிச்சம்பளம்.

[காலம்+முறை+ஊதியம்]

காலாடி *kālāḍi,* பெ.(n.) போக்கிரி, அடங்கா தவன்;a rogue.

[கால்+ஆடி= காலாடி - கண்டபடி திரிபவன்]

காலுந் தலையும் அறி-தல் *kālum talaiyumaṟi-,* செ. குன்றாவி.(v.t.)அனைத்தையும் அறியும் பாங்கு; method of knowing every thing.

[காலும்+தலை+அறி]

காவற்கூடம் *kāvaṟkūḍam,* பெ.(n) காத்து நிற்கும் அறை; watch house.

[காவல்+ கூடம்]

காவிடு-தல் *kāviḍu-,* செ.குன்றாவி. (v.t.) விலங்குகளைச் சிறு தெய்வங்களுக்குப் பலியிடுதல்;to kill the animals for demi-gods, for divine purpose.

மறுவ. ஊட்டு தருதல்.

[காவு (உணவு) +இடு]

காழ் *kāḻ,* பெ.(n.) பணம் என்பதின் எட்டில் ஒரு பங்கு மதிப்புடைய பழங்காலக்காசு; an ancient coin 1/8th value of panam otherwise known as cinnam. (கல்வெ.).

[காய்-காழ்]

கிட்டுபடி *kiṭṭupaḍi,* பெ.(n.)ஆதாயம் (லாபம்); profit.

தெ. கிட்டுபடி.

மறுவ ஆதாயம், ஆகு.

[*கிட்டு+படி-கிட்டுபடி.* முதலீட்டுக்குமேல் அதிகமாகக் கிட்டிய(கிடைத்த) தொகையான ஆதாயம் (லாபம்)]

இச்சொல்லே நாளடைவில் கட்டுபடி எனத் திரிந்து விட்டது.

கிடைவரை *kiḍai-varai,* பெ.(n.) உலகப் படத்தில் நிலநடுக்கோட்டின்இருபாலுமுள்ள வரை கற்பனைக் கோடு;latitude.

[கிடை+வரை]

கிண்ணாக்கு *kiṇṇākku,*பெ.(n.) வண்ணக் குழிப்புப் பாட்டில் (சந்தப்பாட்டு) உரையசை போன்று இன்னோசைக்காகச் சேர்க்கப்படும் குறிப்புச் சொல்;an empty morph added at the end of a stanza in songs of folklore. “பாடும் குயிலுக்கு – போடு கிண்ணாக்கு – பவள மணி மாலைகளாம் – போடு கிண்ணாக்கு.”

[கிண் – கிண்ணாக்கு (ஒலிக் குறிப்பு]

கிணைப் பறை *kiṇai-p-paṟai,* பெ.(n.) ஒருவகைத் தோற் கருவி (உறுமி); a kind of drum.

[கிணை+பறை]

பண்டைய நாளில் நெல்வயலில் உழும் போதும் அறுவடை செய்யும் போதும் கிணைப் பறை கொட்டப் பட்டது.



கிள்ளி *kiḷḷi,* பெ.(n.) சோழரின் குடிப்பெயர்; name of a clan among royal chola king dynasty.

[கிள்–முளைத்தல், தோன்றுதல் +இ – கிள்ளி (தோன்றல், பெரியோன்.)]

கிள்ளி நடு–தல் *kiḷḷinaḍu-,* செ. குன்றாவி.(v.t.) நாற்றை அளவு பார்த்துச் சிறுகப்பிரித்து நடுதல்;to transplant with a calculation.

[கிள்ளி+நடு]

கிளிக்கால் *kiḷi-k-kāl,* பெ.(n.) கிளிகால் போல் செதுக்கிய பீடத்தின் கால்; a mould resembling a parrot leg engraving.

[கிளி+கால்]

கிளிப்பிள்ளைப்பாடம் *kiḷippiḷḷai-p-pāḍam,* பெ.(n.) கிளிப்பிள்ளை போல சொன்னதையே சொல்லுவது; ready made speech out of compultion.

[கிளி+பிள்ளை+பாடம்]

கிளியாந்தட்டு *kiḷiyāntaṭṭu,* பெ.(n.) சிறுவர் விளையாட்டு;a children's game.

[கிள்ளி–கிளி+அம்+தட்டு]

கீச்சான் *kiccāṉ,*பெ.(n.)அடைப்புக் குரலில் பேசுபவன்; one speaks in shrill voice.

[கீச்சு–கீச்சான்]

கீர்சுப்பல் *kircuppal,*பெ.(n.)கைத்தறிநெசவில் பயன்படுதத்தும் சிறு கம்பி;a small string used in handloom weaving.

[கீள்–கீர்+சுப்பல் (சுப்பல்+காந்த சிறு குச்சி)]

கீரக்காய் *keerakkāy-* பெ.(n.) வெள்ளரிக்காய்; cucumber.

[கீர்–கீர+காய்]

கீரந்தை *kirandai,*பெ.(n.) ஒரு புலவர் பெயர்;name of a Tamil poet.

து. கீர் (பழமையான).

[கீழ்–கீர்(பழமை, தொன்மை)–கீரன்+அந்தை (ஐயன்)கீரந்தை]

குக்குலம் *kukkulam,* பெ.(n.) சிறு இனப் பிரிவு;tribe.

[குறு+குலம்]

குக்கை *kukkai,* பெ.(n.) மாடு விளைநிலத்தில் மேயாமலிருக்க வாய்க்குப்போடும் முச்சாணி; a rope - cover fixed on the mouth of the cow to prevent it from grasing in the fields of crop.

மறுவ. வாய்க்கூடு

[குக்கி–குக்கை]

குச்சிக்கால் *kucci-k-kāl,* பெ.(n.) தூலத்தின் மீது கூரையைத்தாங்குவதற்காக செங்குத் தாகப் பொருத்தப்பட்ட மரக்கால்; a supporting pole fixed on the wooden beam under the roof of thatched or tuked house.

மறுவ. குத்துக்கால்

[குத்து–குச்சு–குச்சி+கால்]

குஞ்சம் *kuñjam*,பெ.(n.)கைத்தறி நெசவில் பயன்படுத்தும் சிலுப்பையில் ஏழில் ஒரு பகுதி;one seventh of ciluppai, as used in handloom weaving.

[குள்–குஞ்சு–குஞ்சம்]

குட்டுவன் *kuṭṭuvaṉ*, பெ.(n.) சேர மன்னரின் குடிப்பெயர்; name of the clan among the kings of chera dynasty.

[கட்டு–குட்டம் (திரள், அவை)–குட்டு+அன்–குட்டுவன்]

குடங்கை *kuṇḍangai*,பெ.(n.) ஒரு கையளவு; handful of measure.

[குடம்+குடங்கை (வளைந்த கை)]

குடம்பு *kuḍambu-*, பெ.(n.) உடம்பு;body.

மறுவ. குடம்பை

[குடம்– குடம்பு]

குடம், குடம்பு கூட்டின் பெயர்கள். உடல் கூடு போற கருதப்பட்டது.

குடவாளி *kuḍavāḷi*, பெ.(n.) நீர் இறைக்க உதவும் மட்குடம்; a pot used to draw water from the well.

[குடம்+வாளி]

கடவாளி என்பது கொச்சை வழக்கு.

குடாப்பு *kuḍāppu*, பெ.(n.)1.மிகக்குறுகலான பகுதி; narrow place. 2.மா,வாழை போன்ற வற்றின் காய்களைப் பழுக்க வைக்கும் இடம்;a place enrising fruit. 3. ஆட்டுக் குட்டிகளை அடைத்து வைக்கும் பனை நாரினால் செய்த சிறு குடில்;a semiglobal weed on litar basket used to shelter the lambs.

[குடை–குடாப்பு]

குடி–த்தல் *kuḍi-*, செ.குன்றாவி.(v.t.) உண்ணு தல்;to eat. சோறு குடித்தாயா. (கொங்.வ.)

சிந்தி. குந்தன்.

[குள்–குடு–குடி]

குடித்தல்–கஞ்சி குடித்தல். நீரில் அல்லது மோரில் கரைத்துக் குடிக்கும் உணவு கஞ்சி வடிவில் இருத்தலின் குடித்தல் உண்ணுதல் பொருள் பெற்றது.

குடிமைப்பணி *kuḍimai-p-paṇi*, பெ.(n.) படைத்துறை நீங்கலாக அரசுப் பணியாளர்; civil service.

[குடிமை+பணி]

குடிப்பொருள் *kuḍi-p-poruḷ*, பெ.(n.) 1. ஒரு குடும்பத்தின் அல்லது கொடிவழியின் வரலாற்றுத் தொடர்பான பெருமை; honesty and dignity belonging to ancestry of clam or royal family. "குடிப்பொருள் அன்று நும் செய்கை" (புறம். 45). 2. நாட்டு நலன், பொது நலன்; public interest welfare of the society. "குடி செய்வல்" (குறள்).

[குடி+பொருள்]

குடியேறிகள் *kuḍi-y-ēṟigaḷ*,பெ.(n.) பிழைப் பிற்காக ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டில் குடியேறியவர்கள்;emigrant. தமிழர் குடியேறி களல்லர்; இந்தத் தமிழ் மண்ணின் மைந்தர்கள்.

[குடி+ஏறி+கள்]

குடிவாணர் *kuḍivāṇar*, பெ.(n.)குடிமக்கள்; citizen.

மறுவ. குடிமக்கள்.

[குடி+வா(வாழ்கா்)வாணர்]

குடுக்கு–தல் *kuḍukku-*,செ.குன்றாவி.(v.t.) 1.வலையிட்டுப் பிடித்தல்;to catch, throwing net.2.சுருக்குக் கயிறிட்டுப் பிடித்தல்; to catch by noose.3.குழியில் வீழ்த்திப் பிடித்தல்;to by making to fall in a pit. 4.குகை வாயிலை அடைத்துப் பிடித்தல்; to catch by closing the cave entrance.

[குடங்கு–குடுங்கு–குடுக்கு–தல்–குடுக்கு (வலை)]

குடும்புகட்டு–தல் *kudumbu-kaṭṭu-*, செ.குவி. (v.t.) தனிக் குச்சியாக இருக்கும் மரமுந்திரி போன்ற மரக் கன்றுகள் கிளைத்துத் தழைத்து அடர்த்தியாதல்; to grow thick as boughs.

[குடு–குடும்பு+கட்டு]

குடுமான் *kuḍumān*, பெ.(n.) தவசம் கொட்டி வைக்கும் சிறிய மட்பாண்டம்;small size storage earthen pot.

[குடுவை–குடுமான்]

குண்டக்குமண்டக்கு *kundakku mandakku*, பெ.(n.) தப்பு,தவறு,something wrong.எலே குண்டக்க மண்டக்க பேசாதே.(இ.வ.)

மறுவ. ஏறுமாறு, எக்கு தப்பு, தாறுமாறு.

[குண்டு–குழி,பள்ளம், இடைஞ்சல்.குண்டக்கு மண்டக்கு –எதுகை மரபிணைச்சொல்]

குணக்குரல் *kuṇakkural*,பெ.(n)கொன்னக்கோல் என்னும் தாளக்கட்டுக் குரலிசை, பண்ணின் அளவுகளைஅடிப்படையாகவைத்து பல் வகை யான அலகுகளை சித்தரித்து முழக்குவது; musical time measure through voice.

[கணி–குணி–குணக்கு+குரல்]

குணத்தீவு *kuṇattīvu*, பெ.(n.) கீழ்த்திசைத் தீவு;an eastern island.

[குணம் (கிழக்கு) + தீவு]

குத்தி *kuṭṭi-*, பெ.(n.) தொண்டை;throat.

மறுவ.குத்திகை.

க. குத்திகெ.

[குள்–குழி–குழித்தி–குத்தி]

குத்திரி *kuttiri-*, பெ.(n.) சிறிய கட்டுமரம்;small size catamaran.(மீனவ.).

[குள்–குட்டை–குத்து–குத்திரி]

குத்திருட்டு *kuttiruṭṭu*,பெ.(n.)அடர் இருட்டு;dense darkness.

மறுவ. கும்மிருட்டு.

[குழுமு–கும்மு–குத்து+இருட்டு]

குத்துளி *kuttuḷi*, பெ.(n.) களைவெட்டி, களை கொத்து; small hoe for weeding out grass.

[குத்து+உளி]

குதிரை *kudirai*, பெ.(n.) கைத்தறி நெசவில் பாவினைத் தாங்கிப்பிடிக்க உதவும் மூங்கில் கழி;a device in handloom weaving.

[குதிர்– குதிரை (குதிர் போன்றது)]

குந்து[1] *kundu*, பெ.(n.) கதவை அரிகாலுடன் இணைக்கும் இரும்புக்கருவி; iron accessary connecting door and the frame.

[குள்–குந்து]

குந்து[2] *kundu*, பெ.(n.) மாட்டுக்கு வரும் காய்ச்சல்; fever affecting cow.

[குள்–குந்து]

குப்பம் *kuppam*, பெ.(n.) முப்பது முடி நாற்றுக் கட்டு;paddy sapling of 30 number.

[குப்பு– குப்பம்]

குப்பி *kuppi*, பெ.(n.) எருதுகளின் கொம்பில் அணிவிக்கும் அணிகலன்; a metal flash worn cow's horn during the days of Pongal.

மறுவ. கொம்பளிசு

கும்பிடுசேவை *kumbiḍusēvai*,பெ.(n.)கோயிலில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்குதல்; to workship god by falling down flat on the ground.

[கும்பிடு+சேவை]



குமை நாற்றம் *kumai-nāṟṟam*, பெ.(n.) நீர் குறைவினால் சரியாக வேகாமலிருந்து தீய்ந்து போகும் பொங்கல் பானையிலிருந்து வீசும் புகை நாற்றம்; over boiled smell.

[குமை+நாற்றம்]

குரல் கொடு–த்தல் *kural-koḍu-*, செ.கு.வி.(v.t)
1. மறு மொழி தரும் முறையில் குரல் எழுப்புதல்;

கூப்பிடுதல்; respond to a call; call. 2. எதிர்த்து கருத்துத் தெரிவித்தல்; raise one's voice (one's protest).3.(திரைப் படத்தில்) சொந்த குரலில் பேசவியலாத நடிகர்களுக்குப் பிறர் தம்குரல் தந்து பேசுதல்; (in films) dupe in (voice).

[குரல்+கொடு]

குருவி பாய்-தல் *kuruvipāy-*,செ.கு.வி.(v.t.) பனைமரத்தின் பாளைக்கு ஏற்படும் நோய்;a fungus disease in *palmyra*.

[குருவி+பாய்]

குவளாளபுரம் *kuvaḷāḷapuram*,பெ.(n.) பண்டைக் கொங்கு நாட்டைச் சேர்ந்த ஓர் ஊர்; a village of ancient *kongu* country.

[குவளால(ம்)+புரம்]

குவளை *kuvaḷai*, பெ.(n.) கோடி எனும் பேரெண்ணைக் குறித்த பழந்தமிழ்ச்சொல்; ancient Tamil word which meant the number one crore. "ஆயிரம் குவளை" (சுக்கிரநீதி.106) "நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்" (பரிபா.2:13).

(குவளை - மலரின் பெயர் கோடி எனும் எண்ணுக்கு ஆயிற்று. குவளை என்பது பூவிதழின் அடுக்குக் கருதியதாதலின் இதனை பண்பாகு பெயர் எனலாம்).

குழந்தைச்செல்வம் *kuḷandai-c-celvam*, பெ.(n.)இறைவனால் கொடுக்கப்பட்டதாகக் கருதப்படும் மழலைச் செல்வங்களாகிய குழந்தைகள்; offspring, children.

[குழந்தை+செல்வம்]

குழந்தைப்பேறு *kuḷandai-p-pēṟu*, பெ.(n.)பிள்ளை பெறும்பெரும்பேறு; fortune of begetting child.

[குழந்தை+பேறு]

குழிவலை *kuḻivalai*,பெ.(n.)கச்சல் எனும் குறுக்குக் கட்டைகளால் இணைக்கப்பட்டு நடு நடுவே குழிகள் அமைத்துக் கட்டப்பட்ட வலை; dipnet connected by splinters.

மறுவ.கச்சா வலை.

[குழி+வலை.]

கழிச்சல்-கச்சல்(கட்டை). குறுக்குக் கட்டையிடப்பட்டதால் கச்சா வலை என்றும் கூறுவர்.

குழவி வளர்ப்பொலி *kuḻavivaḷarppoli*, பெ.(n.) குழந்தை வளர்ப்பில் இயல்பாக ஒலிக்கும் ஒலி; nursery sound.

[குழவி+வளர்ப்பு+ஒலி.]

குளக்கோடன் *kuḷa-k-kōḍan*, பெ.(n.) ஈழத்துத் திருக்கோணமலையில்கோயில் கட்டிய வனாகவும் ஈழம் தனித்தீவாகப் பிரிவதற்கு முன்பு வாழ்ந்தவனாகவும் கூறப்படும் தமிழ் மன்னன்; A Tamil king considered to have built a temple at Thirukonamalai in Srilanka and lived before the deluge which separated Srilanka from Tamilnadu. "முன்னே குளக்கோடன் மூட்டு திருப் பணியை" (கல்வெட்டு வெண்பா).

[குளம்+கோடன்]

இவன் காலம் கலியாண்டு 512 (கி.மு.2590) எனக் குடந்தை ந. சேதுராமன் குறிப்பிடுகின்றார். (1994).

குளுத்தி *kuḷutti*, பெ.(n.) வளர்ப்பு விலங்குகள் நீர் பருகுவதற்காக மண்ணால் செய்யப்பட்ட வாய்விரிந்த வட்டத்தாழி; round earthen pot - made for the cattle to drink water.

மறுவ. குழித்தி

[குழி-குழித்தி-குளுத்தி]

குற்றப் பத்திரிகை *kuṟṟa-p-pattirikai*, பெ.(n.) புலனாய்வு முடிந்தவுடன்முறை(நீதி)மன்ற உசாவல் தொடங்குவதற்காக காவல் நிலைய அதிகாரியால் அனுப்பி வைக்கப்பெறும் குற்றம் பற்றிய தகவல்களடங்கிய அறிக்கை; charge sheet; police report.

[குற்றம்+ பத்திரிகை]

குறட்டைப்பழம் *kuraṭṭai-p-paḻam*, பெ.(n.) வேலிகளில் படரும் கொடியில் பழுக்கும் சிவந்த

நிற உண்ண முடியாத பழ வகை; unedible creeper fruit.

[குறட்டை+பழம்]

குறிச்சி *kuricci,* பெ.(n.) சிறு குடியிருப்பு; a hamlet.

க. குறிகெ (சிற்றூர்) குறசி –சிறுமரக்காடு.

[குறு–குறிச்சி]

குறிப்பொலி *kuri-poli,* பெ.(n.) வழக்கப்படி சில கருத்துகளைப் பிறர்க்குத் தெரிவிக்கும் வகையில் அமைந்த குறிப்பு ஒலி; symbolic sound.

[குறிப்பு+ஒலி]

குறிமொந்தை *kurimondai,* பெ.(n.) நெற்குவியல் மீது அடையாளம் இடப் பயன் படுத்தும் சாணிப் பால் நிறைந்த துளை மொந்தை.(தஞ்.வ.); symbol marking earthen pot.

[குறி+மொந்தை]

குறியெழுத்து *kuri-y-eluttu,* பெ.(n.) ஓம்³ பார்க்க; see *ōm.* "கூடகமான குறியெ ழுத்தைத் தாமறியில் வீடக மாகும் விரைந்து" (ஔவைக் குறள்.136)

[குறி+எழுத்து]

குறுக்க விளக்கம் *kurukka vilakkam,* பெ.(n.) ஒரு செயல் அல்லது தொடரின் குறுக்க வடிவம், சுருக்கக் குறியீடு;abbreviation.

[குறுக்கு(ம்) +விளக்கம்]

குறும்பொறை *kurumporai,* பெ.(n.) முல்லை நிலத் தலைவன்; a chieftain of hilly forest area.குறும் பொறை நாடன்.

[குறும்+பொறை (கற்குன்று)]

கூட்டாளி *kūttāli,* பெ.(n.) செயலில் ஒருவருக்குத் துணையாக ஈடுபடுபவர்; associate; companion. 2. கூட்டுத்தொழிலை நடத்து பவருள் ஒருவர்; partner.

[கூட்டு+(ஆள்)→ஆளி]

கூட்டுத் தொடரியம் *kūttuttodariyam,* பெ.(n.) ஒன்றுக்கு மேற்பட்ட தொடரியம் (வாக்கியம்) கொண்ட கூட்டுத் தொடர்;compound sentence.

[கூட்டு + தொடரியம்]

கூவோ *kūvō,* பெ.(n.) தன்னைப் பின் தொடர அல்லது மாடு மேய்ப்போர் மாலையில் மாட்டுப் பட்டிக்குத் திரும்புவதற்காக மாடுகளைத் திரும்புமாறு செய்வதற்கு எழுப்பும் நீள் ஒலி; a long sound with the world *kūvō* to alert the cattle to return from grazing in the evening or instruct the cattle to follow him.

[கூ–கூவோ(ஒலிக்குறிப்பு)]

கூனிவலை *kūnivalai,* பெ.(n.)மிகச் சிறிய மீன் களைப் பிடிக்க உதவும் வலை;fish net catching small tiny fish.

[கூனி(மிகச்சிறிய மீன்)+வலை]

கெச்சங் கெட்டு *keccankettu,* வி.எ.(adv.) மானமில்லாமல், சூடு சொரணை கெட்டுப் போய்; bereft of dignity and honour.

[கெச்சம்+கெட்டு]

கெச்சம் *keccam,* பெ.(n.)1. சலங்கை;tiny bells attached to or used as ornaments.
2. வெட்கம்;shyness.

[குகல்–கெச்சு–கெச்சம்]

கெட்டிக் காப்பு *kettikkāppu,* பெ.(n.) பெண்கள் கால்களில் அணியும் அணிகலன் வகை.anklet.

[கட்டி+கெட்டி+காப்பு]



கெடாக்காரன் *kedākkāran,* பெ.(n.) எமன்; god of death.

[கடாக்காரன் → கெடாக்காரன்.பே.வ.]

கெடாவடி *kedāvadi,* பெ.(n.) பிணையடித்தலில் மாடுகள் சுற்றிவரும் வைக்கோல் பரப்பு; hey stock on the threshing floor.

மறுவ.பிணையடிப்புப் பகுதி.

[கடா+அடி → கெடா+அடி=கெடாவடி (பே.வ.)]

கெடுகட்டுவரிசை *kedukattuvarisai,* பெ.(n.) பரிசம் வைத்தல், திருமண உறுதி செய்தல்; fixing the marriage by offering gifts.

[கெடு+கட்டு+வரிசை]

கசவர் பழங்குடிகளின் சொல்லாட்சி.

கெடுத்தகேடு *keduttakēdu,* பெ.(n.) ஒரு முறை இழப்பு ஏற்பட்டும் மீண்டும் முயலுமாறு ஒருவரை அறிவுறுத்துகை;to induce a person to continue without minding the lost.

[கெடுத்த+கேடு]

கெடும்பு *kedumbu,* பெ.(n.) சாலி நெல்லின் அரிசி;a variety of rice.

[கெழு–கெடு–கெடும்பு]

கெண்டிக்கல் *kendikkal,* பெ.(n.) சில்லுச் செங்கல், உடைந்த செங்கல்;broken brick.

[கண்டி–கெண்டி+கல்]

கெண்டைக்கால் *kendai-k-kāl,* பெ.(n.) முழங்காலுக்கும் பாதத்துக்கும் இடையிலி லுள்ள பகுதி; the portion between knee and foot.

[கெண்டை+கால்]

கெந்துதல் *kendutal,* தொ.பெ.(vbl.n.) கிட்டிப்புள் விளையாட்டு வகை;a type of game.

[காந்து–கெந்து]

கெப்பம் *keppam,* பெ.(n.) நிறைவு, முழுமை; come to an end, completion.

தெ. தெப்பக.

[தளும்பு–தம்பு–தெம்பு–தெப்பம்–கெப்பம்]

கெப்புறு *keppuru,* பெ.(n.) குறும்பு, துடுக்குத் தனம்; mischief. உனக்குக் கெப்புறு அதிகம்.(மீனவ.)

[கைப்பு+ஊறு–கைப்புறு–கெப்புறு (கை ஊறுதல்)]

ஏதேனும் குறும்பு செய்வதற்காகக் கை தினவெடுக்கிறது என்பது குறிப்புமொழி.

கெம்புதல் *kempudal,* தொ.பெ.(vbl.n.) குதித்தல்; jumping.

[கிளர்–கிம்பு–கெம்பு]

கெர்ப்பம் *kerppam,* பெ.(n.) மரங்களில் நடுவில் காணப்படும் கடினமான சதைப்பகுதி, வைரம்; hard core in a bar.

[கருப்பம்–கெர்ப்பம்]

கெரட்டிப்பு *kerattippu-,* பெ.(n.) கோள் மறைப்புக் (கிரகணம்) காலங்களில் கருவுற்ற பெண்கள் பூவைக் கிள்ளுவதால் பிறக்கும் குழந்தைகள் உறுப்புக் குறைபாடாகப் பிறக்கும் என்னும் நம்பிக்கை; during eclipse period the pregnant ladies will be affected and give birth of physically handicapped child a belief.

[கிரக+அடிப்பு]

கெரட்டிக்கு–தல் *kerattikku-,* செ.குன்றாவி. (v.t.) கோள் மறைப்புக் (கிரகணம்) காலங்களில் கருவுற்ற பெண்கள் பூவைக் கிள்ளுவதால் பிறக்கும் குழந்தைகள் உறுப்புக் குறைபாடாகப் பிறக்கும் என நம்புதல்; to believe that during eclipse period the pregnant ladies will be affected and give birth of physically handicapped child.

[குறை–குறட்டி–கெரட்டிக்கு]

கெராளிகொள்ளு–தல் *kerālikollu-,* செ.கு.வி.(v.i.) மிரண்டோடுதல்; suddenly running with fear.

[கிறங்கு–கிறளி–கெராளி+கொள்]

கெறாவுதல் *kerāvu-*, தொ.பெ.(vbl.n.) புலம்புதல்; crying.

[கிறாறு–கிறாவு–கெறாவு (கொ.வ.)]

கேட்பார் பேச்சு *kētpārpēccu,* பெ.(n.) தீய எண்ணத்துடன் சொல்பவரின் பேச்சைக் கேட்கும் தன்மை; listening to enemy's speech.

[கேள்–கேட்பார்+பேச்சு]

கேடுபாடாக *kēdupādāka, வி.எ.*(adv.); உயிர் பிழைக்கும் உறுதிப்பாடு இன்மை; a patient's serious condition.

மறுவ. கடு நலிவு.

[கேடு+பாடு+ஆக]

கேழ்வரகு ஓடாப்பு *keḷvaragu oḍāppu, பெ.* (n.); நன்கு அரைக்கப்படாத கேழ்வரகு மாவு; half grinded ragi cereal flour.

[கேழ்வரகு+உடைப்பு]

கேழ்வரகு சுண்ணாம்பு *kēḷvaragu šuṇṇ āmbu, பெ.* (n.); கேழ்வரகு மணி நீங்கிய பின் கதிரின் சிறு துண்டுகள்; empty ear of ragi corn.

[கேழ்வரகு + சுண்ணாம்பு]

கேழ்வரகுபுல் *kēlvaragupul, பெ.* (n.) கேழ்வரகு போன்று விளையும் புல்வகை; a kind of grass.

[கேழ்வரகு +புல்]

கேழ்வி *kēḷvi, பெ.*(n.) வசைவு, திட்டு, abusing words, rebuke, scold.

[கேள்வி–கேழ்வி (கொ.வ.)]

கைக் கட்டை *kai-k-aṭṭai, பெ.*(n.) பணப்புழக்கம் முற்றிலும் இல்லாத நிலை; stage of no money for transaction.

[கை+கட்டை]

கைக் கதிர் *kaikkagdir, பெ.*(n.) கம்பு, கேழ்வரகு, சோளம் போன்றவற்றை அறுவடை செய்தவர்களுக்குக் கொடுக்கும் கூலிக் கதிர்; payment by ear of cereal to the harvester.

[கை+கதிர்]

கைக் கொண்டை *kaikkoṇḍai, பெ.*(n.) கை நிறைய கொடுத்தல்; handful of something.

[கை+கொண்டை]

கைச் சொளகு *kai-c-colagu,* சிறிய முறம்; small winnowing basket.

[கை+சுளகு]

கைத்தாம்புலம் *kaittāmbulam, பெ.*(n.) பெண் உறுதிக்காக இருவீட்டாரும் வெற்றிலை பாக்கு மாற்றிக் கொள்ளுதல்; agreement for marriage approved by exchange of betel.

[கை+தாம்புலம்]

கைப் பரப்பு *kai-p-parappu, பெ.*(n.) வேளாண் தொழிலில் ஒரு ஆள் வேலை செய்யும் நிலப் பரப்பு; a distance within the reach of two hands of a reaper.

[கை+பரப்பு]

கைநீளல் *kainīḷal, பெ.*(n.) கையால் அடித்தல்; beat with hand. 2. கையூட்டு பெறுதல்; receiving bribe.

[கை+நீளல்]

கைப் பாடை *kaipppāḍai, பெ.*(n.) அழகுபடுத்தாத பாடை; non decorated bier.

[கை+பாடை]

கைப்பு *kaippu, பெ.*(n.) ஈயமில்லா ஏனத்தில் வைக்கப்பட்ட உணவின் சுவை; taste of food kept in a lead uncoated vessel.

[கரிப்பு→கைப்பு]

கைப்புரட்டு *kaippuraṭṭu, பெ.*(n.) கையெழுத்துப் போடத் தெரியாதவர்; illiterate person.

மறுவ. கை நாட்டு

[கை+புரட்டு]

கைப்பொங்கல் *kaippongal,* வி.எ. (adv.) தனக்கான உணவைத் தானே சமைத்துக் கொள்ளல்; cook food for one self.

[கை+பொங்கல்]

கைதவம் *kaitavam, பெ.*(n.)ஓரிடத்தில் வளரும் பொருள் மற்றொரு இடத்துக்குப் பொருந்திய பெயரைப் புனைந்து வருவது;unusual name.

[கை+(தவல்)தவம்]

கைபதைக்க *kaipadaikka, வி.எ.*(adv.)வேளாண் பணிகளை விரைவாகச் செய்தல்; do the agricultural work speedily.

[கை+பதைக்க]

கைமேய்ச்சல் *kaimēyccal, பெ.*(n.)ஆடு மாடுகளைக் கையில் பிடித்துக் கொண்டு மேய விடுதல்; grazing the cattles by holding the ropes in the hand.

[கை+மேய்ச்சல்]

கையெடு-த்தல் *kai-y-eḍu-,* செ.கு.வி.(v.i.)கை கூப்பி வணங்குதல்; to show obeyance by folding palms together. அவரைக் கண்டதும் கையெடுக்கத் தோன்றும்.

மறுவ. வணங்குதல்

[கை+எடு]

கையெழுத்து மறைகிற நேரம் *kaiyeluttu-maraigiranēram, பெ.*(n.)மாலைப்பொழுது; evening time.

[கை+எழுத்து+மறைகிற+நேரம்]

கையேடு *kaiyēḍu, பெ.*(n.) ஒன்றைச் செய்யும் அல்லது இயக்கும் முறை குறித்து விளக்கும் நூல், செய் முறைக் குறிப்பு நூல்; manual. தேர்தல் கையேட்டில் உள்ளபடி தேர்தல் பணியாற்ற வேண்டும்.

[கை+ஏடு]

கைலாசம்காட்டுதல் *kailāśamkāṭṭudal, தொ.பெ.* (vbl.n.) தற்பெருமை பேசித் திரிதல்; blow one's own trumpet, self boasting.

[கைலாயம்+காட்டுதல்]

கைவணக்கம் *kaivaṇakkam, பெ.* (n.) தொடர்ந்து ஒரு பொருளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் கைபக்குவம்;skillfullness of hand movement.

மறுவ. கைப்பழக்கம்

[கை+வணக்கம்]

கொக்கரிக் கொம்பு *kokari-k-kombu, பெ.* (n.) ஒன்று நேராகவும் மற்றொன்று வளைந்தும் இருக்கும் மாட்டுக் கொம்பு வகை; horn variety of cow.

[கொக்கரை-கொம்பு]

கொக்கல் *kokkal, பெ.*(n.) இருமல்;cough.

[கக்கு-கொக்கு-கொக்கல்]

கொக்காரம் *kokkāram, பெ.*(n.) ஓர் இசைக் கருவி; a musical instrument.

[கொங்கு-கொக்கு-கொக்காரம்]

காணிக்காரர் இசைக்கருவி.

கொக்கான் *kokkāṉ, பெ.*(n.) நாற்று நடவில் இருவர் நடும் அளவு; work of two persons in transplantation.

[கொக்கு-கொக்கான்]

கொக்கான்அடி-த்தல் *kokkānaḍi, செ.கு.வி.*(v.i.) நடவு நடுபவர்களுக்கு நடவேண்டிய பகுதியைக் கால் தப்படியால் நடந்து அளவுகாட்டுதல்;to show the measurement of area to be transplanted in the paddy field.

[கொக்கான்+ அடி]

கொக்கிப்பல் *kokkipal, பெ.*(n.)மாடுகளுக்கு வளைந்து முளைத்திருக்கும் பற்கள்;bent growth of teeth in cows.

[கொக்கி+பல்]

கொங்கடுக்கு *koṅkaḍukku, பெ.*(n.) மாட்டு வண்டியில் பாரம் ஏற்றும் முறை;a method of loading the cart.

[கொங்கு+அடுக்கு]

கொங்காணி *koṅgāṇi, பெ.*(n.) சுவரில் சட்டையை மாட்டுவதற்குப் பொருத்தியிருக்கும் கொக்கி; coat hanger.

[கொங்கு-ஆணி]

கொங்காணி விழு-தல் *koṅgāṇi-viḻudal, தொ.பெ.*(vbl.n.) கிழிசல் துணியைத் தைப்ட தால் ஏற்படும் சுருக்கம்;shrink seen in stitching of torn cloths.

[கொங்கு+அணி+விழு]

கொங்கு புழுதி *kongupuludi, பெ.*(n.)நன்றாக உழுத புன்செய் நில மண்;soil in the land made fertile without any lumps by ploughing.

[கொங்கு+புழுதி]

கொங்கு *kongu, பெ.*(n.) புடவையின் தலைப்பு; fore part of the saree.

க.கொங்கு.

[குங்கு–கொங்கு]

கொங்கை அடி–த்தல் *kongāiadi-, செ.குன்றாவி.*(v.t.) கம்பங்கதிரின் உமியைத் துடைப்பத்தால் தள்ளி எடுத்தல்; to remove the husk with broom stick.

[கொங்கை+அடித்தல்]

கொசவேலை *košavēlai, பெ.*(n.) பயனற்ற வேலை; useless work.

[கயம்–கசம்(குப்பை)–கொச+வேலை]

கொசுறுதல் *košuru-, செ.குன்றாவி.*(v.t.) மிச்ச மின்றி இலை தழைகளை அரிவாளால் அரிந்து எடுத்தல்; to cut off the leaves.

[கொய்+உறு–கொயுறு–கொசுறு]

கொட்டடி *kottadi, பெ.*(n.)கும்மி;kummi, play of ladies.(மீனவ.)

[கொட்டு+அடி]

கொட்டம் *kottam, பெ.*(n.)மாட்டுத்தொழுவம்;cow pen.

[கொட்டகை–கொட்டம்]

கொட்டநுங்கு *kottanungu, பெ.*(n.)கல் நுங்கு; hard nut palmyra fruit.

[கொட்டை+நுங்கு]

கொட்டலாட்டம் *kottalā:tam, பெ.*(n.)அடிதடி; சண்டை;fight.

<u>தெ.</u> கொட்டலாட்ட. **<u>க.</u> கட்டலாட்ட.**

[கொட்டல்+ஆட்டம்]

கொட்ட வாழை *kottavālai, பெ.*(n.)கல்வாழை வகை; a type of kalvalai plant.

[கொட்டை+வாழை]

கொட்டாஞ்சி *kottāñji, பெ.*(n.)கொட்டாங்காச்சி (சிரட்டை)ப் போன்று கால் முட்டியில் இருக்கும் அசையக்கூடிய சில்லு எலும்பு; joint bone.

[கொட்டங்கச்சி–கொட்டாஞ்சி]

கொட்டாப்புளி *kottāppuli, பெ.*(n.)உளியை அடிக்கும் மரச்சுத்தியல்;wooden hammer.

[கொட்டு+ஆப்பு+உளி]



கொட்டாப்புளிக்குருவி *kottā-p-puli kuruvi, பெ.*(n.) கறையான் புற்றுகளைக் கொத்தி யுடைத்து அதில் உள்ள கறையான்களைக் கொத்தித்தின்னும் பறவை வகை;a kind of bird which pecks the ant- hill and eats the termite in nature.(கட.வ.).

[கொட்டாப்புளி+குருவி]

கொட்டாப் பெட்டி *kottā-p-petti, பெ.*(n.)பனை நாரினால் முடையப்பட்ட (பெட்டி) கூடை:a small basket.

[கொட்டாப்பு+பெட்டி]



கொட்டைத்தண்டு *kottai-t-tandu,* பெ.(n.) ஆமணக்குச்செடி; castor plant. பட்டிக் காட்டுத் தம்பிரானுக்குக் கொட்டைத் தண்டு கருட கம்பம்.

மறுவ. ஆமணக்கு

[கொட்டை+தண்டு]

கொட்டைமுடிச்சு *kottai-mudiccu,* பெ.(n.) முடிச்சு வகை; a kind of knot.

[கொட்டை+முடிச்சு]

கொடி ஆடு *kodi-ādu,* பெ.(n.) மானைப் போல் உயரமாகவும் வெள்ளை கருப்பு நிறத்திலும் இருக்கும் ஆட்டு வகை; a kind of goat.

[கொடி+ஆடு]

கொடி இண்டு *kodi-yindu,* பெ.(n.) மரங்களின் மீது படர்ந்து ஏறக்கூடிய முட் கொடி வகை; a thorny shrub.

மறுவ. இண்டங் கொடி.

[கொடி+இரண்டு]

கொடிக்கிழங்கு *kotti-k-kilañgu,* பெ.(n.) ஏரிக் கரைகளில் காணப்படும். உண்ணக்கூடிய கிழங்கு; a kind of edible root.

[கொடி+கிழங்கு]

கொடிமூக்கு *kōdi-mūkku,* பெ.(n.) மூக்கின் நுனி; tip of the nose. "சோதி நயனங் கொடி மூக்கி லேயுறச் சீர்திகடச் சிங்கா தனமணக்கச் செய்யுமே" (திருமந்.540).

[கொடி+மூக்கு]

கொடிக்காய் *kodi-k-kāy,* பெ.(n.) நிலக் கடலையில் ஒரு வகை; a kind of ground-nut.

[கொடி+காய்]

கொடித்தட்டு *kodi-t-tattu,* பெ.(n.) சாணி, மண், எரு போன்றபவற்றை அள்ளுவதற்கு முரட்டுக் காட்டுக் கொடிகளால் பின்னப்பட்ட குழிவுள்ள தட்டு; flat type of basket made of rough creeper used to take dung and soil.

[கொடி+தட்டு]

கொடிவேலி *kodi-vēli,* பெ.(n.) செங்கொடி வேலி; a plant.

[கொடி+வேலி]

கொடிவேலிப்பொடி *kodi-vēli-p-podi,* பெ.(n.) கொடி வேலியுடன் மற்ற சரக்குகளுஞ் சேர்ந்த ஒரு வகைச் சூரணம்; a medicinal compound in which the lead wort forms in chief ingredient.

[கொடி+வேலி+பொடி]

கொடியுளுந்து *kodi-y-ulundu,* பெ.(n.) கொடி யாகப் படர்ந்து கூடுதலாகப் பயன் கொடுக்கும் உளுந்து வகை; a creeper kind of black gram yielding more.

[கொடி+உளுந்து]

கொடுக்காய்ப்புளி *kodu-k-kāy-p-puli,* பெ.(n.) வித்தினைச் சரியாக வெண்பருப்புப் படலம் மூடாததும் அவரை போன்ற வித்திடைப் பள்ளம் கொண்டதும் வளைந்து கோணல் மாணலாகக் காணப்படுவதுமாகிய சீமைப் புளியங்காய் ; a kind of tamarind tree.

[கொடுக்கை+காய்ப்புளி]

கொடுக்கி *kodukki,* பெ.(n.) 1. பொருளை உயரத்தில் இருந்து இழுக்க உதவும் கருவி; hooked knife attached to the bamboo. 2. கொடுமைக்காரி; shrew.

[கொடு–கொடுக்க]

கொடுஞ்சாவு *koduñcāvu,* பெ.(n.) நேர்ச்சி முதலியவற்றால் ஏற்படும் இறப்பு; untimely or unnatural death.

[கொடு(மை)+சாவு]

கொடுங்கோல் *kodunkōl,* பெ.(n.) பயிர் அறுவடைக்குரிய வளைந்த கருக்கரிவாள்; sickle used for harvesting.

க. கொடுகோல், கடுகோல்.

[கொடு(வளைவு)+கோல்]

கொடுதி *kodudi,* பெ.(n.) வழிபடும் தெய்வத்திற்குத் தரும் காணிக்கைப் பொருள், காணிக்கைத் தரும் விழா; a ceremony of making offerings to the village deity.

மறுவ.கொடை, பருவம், நன்மை.

[கொடு–கொடுதி]

கொடும்பன் *kodumban,* பெ.(n.) கொடுமை செய்யும் இயல்பினன் (அழிம்பன்); villain wicked person.

கொடுமகப்பேறு *kodu-maga-p-pēṟu, பெ.*(n.)இயற்கை நிலைக்கு மாறுபட்ட மகப்பேறு;labour differing from its natural state by its difficulty, duration or danger involved, preternatural labour.

[கொடு+மகவு+பேறு]

கொடுவலை *koḍuvalai, பெ.*(n.)பிடித்துக் கொண்டு வந்த மீன்களைப் பாதுகாத்து வைக்கும் வலை; a type of net used to keep the catched fishes in the net.

[கொடு+வலை]

கொடுவா வலை *kōḍuvā valai, பெ.*(n.)கொடு வாய் மீன்கள் பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட வலை;a special net to catch koduva fish.

[கொடுவாய்– கொடுவா+வலை]

கொடைக்கல் *koḍaikkal, பெ.*(n.)ஒருவன் செய்த அறச்செயல்பொறிக்கப்பட்ட கல்வெட்டு(இ.வ.); memorial slab inscribed with the charitable deeds of a person.

[கொடை+கல்]

கொடையுள்ளம் *kodai uḷḷam, பெ.*(n.)அறம்புரியும் எண்ணம்; charitable or virtuous disposition.

[கொடை+உள்ளம்]

கொண்டகோடி *koṇḍakōḍi, பெ.*(n.)கோடி எனும் எண்ணை ஒன்றாகக் கொண்டு மிகப் பேரெண் களை எண்ணும் பழங்கால எண்ணு முறை; ancient Tamil mathematical method of counting multidigital numbers by taking one crore as a beginning number one.

[கொண்ட+கோடி]

கொண்டம் *konḍam, பெ.*(n.)கால்வாயின் குறுக்குத் தடுப்பு;middle check in the channel.

[கெழள்–கொண்டம்]

கொண்டன்மார் *koṇḍaṉmār, பெ.*(n.) எதிராளி களுடன் கைகோர்த்துச் செயல்படும் நம் பிக்கைக் கேடர்; a traitors.

[கொண்டான்+மார்]

இரு இடத்திலும் நம்பிக்கை கொண்டவர் போல் நடிப்பவர்.

கொண்டி *koṇḍi, பெ.*(n.)சிறைச்சாலை;prison, jail.அவனை கொண்டியில் அடைத்துவிட் டார்கள்.(இ.வ.)

[கொள்+கொண்டி]

கொண்டித்தாழ்ப்பாள் *koṇḍit-taḷppāl, பெ.*(n.) கதவுப் பலகையின் துளையில் சட்டத்திலுள்ள வளையம் நுழையுமாறு அமைக்கப்பட்டு அதில் கொக்கி போன்ற தாழ்ப்பாள் நுழையுமாறு அமைந்த கொக்கித் தாழ்ப்பாள்; hooked lever fixed on the door to shut by hook pattern.

[கொண்டி+தாழ்ப்பாள்]

கொண்டி மகளிர் *kondi-magalir, பெ.*(n.)பகை நாட்டில் சிறைப்பிடித்து வரப்பட்ட மகளிர்; captured women of defeated country.

[கொள்–கொண்டி–மகளிர்]

கொண்டிமுளை *koṇḍi-muḷai, பெ.*(n.)கதவு நிலைகளில் தொடர் வளையத்தால் மாட்டுமாறு பொருத்தப் பட்டிருக்கும் வளை அமைப்பு; iron chain fixed between door and frame to lock. கொண்டி முளையை இழுத்து மாட்டி பூட்டுபோடு.(இ.வ.)

[கொண்டி+முளை]

கொண்டுவலை *koṇḍuvalai, பெ.*(n.)இருபுறமும் கைப்பிடியுள்ள மீன்பிடி வலை; double hold net.

[கொண்டு+வலை. பிடித்த மீனொடு வலையை இழுத்து வருவதற்கானபிடியுள்ள வலை.]

கொண்டைக்கோடரி *kondai-k-kōdari,* பெ.(n.)அடிப்பகுதி கனத்திருக்கும் விறகு பிளக்குங் கோடரி; a heavy axe.

[கொண்டை+கோடரி]



கொண்டைக்காரி *kondai-k-kāri,* பெ.(n.) பணக் காரி; a wealthy woman. அவள் பெரிய கொண்டைக்காரி (மீனவ.).

மறுவ. தொப்பைக்காரி

[கொண்டை+காரி]

கொணட்டை *konattai,* பெ.(n.)குறும்பு; வம்பு; mischief.

[கொணக்கு-கொணட்டை.]

கொத்தான் *kottān,* பெ.(n.)நண்டு போல் மணலைத் துளைக்கும் வண்டு; a type of beetle like crab.

[கொத்து+ஆன்.]

கொத்துக்கட்டை *kottu-k-kattai,* பெ. (n.)மேலே வைத்து நறுக்கப் பயன்படுத்தும் மரக்கட்டை; a wooden piece used to chap anything on it.

[கொத்து+கட்டை.]

கொத்து *kottu,* பெ.(n.) நெசவு நெய்த புதிய துணி; new cloths of handloom. கொத்து வெளுக்கத் தந்திருக்கிறார்கள்.(இ.வ.)

[கொல்-(புதுமை)-கொத்து-புதியது]

கொத்துவான் *kottuvān,* பெ.(n.) களைவெட்டி; களைக்கொத்து(கொங்.வ.); hoe.

[கொத்து+வ்+ஆன்+கொத்துவான்]

கொதவளை *kodavalai,* பெ.(n.)குரல்வளை; throat.

[குரல்வளை→கொதவளை(கொ.வ.)]

கொந்தாளம் *kondāalam,* பெ.(n.)கடினமான மண்ணை வெட்டவுதவும் வேளாண் கருவி; a implement used to cut the hardened earth.

[கொந்து+கொத்தாளம்]

கொந்துகோல் *kondukōl,* பெ.(n.)அங்குசம்; elephant'sgoad. "கொந்துகோலும் வேதினமும்" (செ.செல்.56–2)]

[கொந்து+கோல்]

கொப்பணி *koppani,* பெ.(n.)மகளிர் மேல் காதில் அணியும் சிறிய அணிகலன்; a small ornament worn on the upper ear by women.

[கொப்பு+அணி]

கொப்பு *koppu,* பெ.(n.) மரக்கிளை(நெ.வ); a branch of a tree. 2. மகளிர் காதணி; ear ornament.

[குப்பு-கொப்பு]

கொப்பூழ்க்கொடியுறவு *kopūl-k-kodi-y-uravu,* பெ.(n.) தாய், தந்தை, மகன், மகள் போன்ற கொடி வழி வுறவு முறை ; dynastical relationship.

[தொப்புள் -கொப்புள்+கொடி+ உறவு]

கொம்பு நாற்று *kombunārru,* பெ.(n.) ஊற வைத்த விதைநெல்லை இரண்டாம் நாள் அல்லது மூன்றாம் நாள் நாற்றுவிடுதல்;laying seed paddy in the field for sprouting on the second or third day of soaking it in water.

[கொம்பு+நாற்று]

விதை நெல்லை இரண்டாம் நாள் நாற்று விடுவதை இரண்டாம் கொம்பு எனவும் மூன்றாம் நாள் நாற்று விடுவதை மூன்றாம் கொம்பு எனவும் கூறுவர்.

கொமடு *komadu, பெ.*(n.)கன்னம்; cheek.

[குவடு–குமடு–கொமடு(கொ.வ.)]

கொய்ப்பு *koyppu, பெ.*(n.)காய் கனிகளின் முதிர் பருவம்; ripening stage.

[கொய்+கொய்ப்பு]

கொருக்கல் *korukkal, பெ.*(n.) நொறுக்குத்தீனி; snacks.

தெ. **கொருக்கு.**

[கொறுக்கு–கொருக்கல்]

கொழப்பை *kolappai, பெ.*(n.)1. ஊது குழல்; wind blow pipe. 2 . உள்ளீடு அற்ற குழல்;hallow pipe.

[குள்–குழப்பை–கொழப்பை (கொ.வ.)]



கொள்ளிக் கொம்பு *kolli-k-kombu, பெ.*(n.) மாட்டுக் கொம்பு வகை; a variety of bull's horn.

[கொள்ளி+கொம்பு]

கொளிறு *koliru, பெ.*(n.) கலவையை அள்ளிப் போடவும் பூசவும் கொத்து வேலைக்காரர்கள் பயன்படுத்தும் பட்டையான கரண்டி; a flat spade to take morter.

[கொள்–கொளிறு]

கொளை *kolai, பெ.*(n.)அழுக்கு; dirty.

கன். கொளே.

[குல்→குள்→ குளை→ கொளை]

கொற்கை *korkai,* பெ.(n.) பாண்டியர்களின் கடற்றுறைத் தலைநகரம்; capital city and seaport of the pandiya kingdom.

றுவ.கொல்லூர், கொன்னூர், கொத்தூதர்.

[பகால்–புதிய. கொல்+கை–கொற்கை(புதூர்]

கி.பி. 1100–1200 அளவில் அதிகமான கடல் சீற்றங்களால் மணல் மேடிட்டு கொற்கை துறை முகமும், நகரும் மறைந்தன. பிறகு **காயல்** துறைமுக மாயிற்று.

கொன்னக்கோழி *konna-k-koli, பெ.*(n.)நோய் கண்ட பயிரின் கோழை; a foam like formation on crop.

[குன்னல்–கொன்னல்+(கோழை) கோழி]

கோக்கு மாக்கு *kōkkumākku, பெ.*(n.)தவறான செயல்; something wrong. அதில் ஏதோ கோக்கு மாக்கு நடந்திருக்கிறது.(நெல்.வ.)

மறுவ.தப்பு தவறு. தப்பு தண்டா.

[குடக்கு மடக்கு – கோக்கு மாக்கு (குடக்கு– கோணல் மடக்கு– கோணல்)]

கோங்கு இலவு *kōngu-ilavu, பெ.*(n.)நேராகவும் உயரமாகவும் வளரும் ஒரு வகைச் செடி; a type of plant growing straight and tall.

[கோங்கு–+இலவு]

கோசர் *kōsar, பெ.*(n.)1.கடைக்கழகக் காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர் மரபினர்; Chieftains of sangam period. வாய்மொழிக் கோசர் போல வன்கண் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே. 2. மலை வாழ் மக்கள் மரபினர்; a group of hill tribes.

[கோ–கோயர்– கோசர்]

கோசர் வாழ்ந்த நிலம் கோசலம் எனவும் கூறுவர்.

கோட்டுஅடி–த்தல் *kōttuadi-, பெ.*(n.) கதிரில் உள்ள நெல்லை அடித்துப் பிரித்தல்; threshing of paddy.

[கோட்டு+அடி]

கோட்டுவாய் *kōttuvāy, பெ.*(n.)உறங்கும் போது எச்சில் வழிந்து காய்ந்த வெண்கோட்டுக்

கறை; saliva stain due to dripping from mouth during sleeping time.

[கோடு+ வாய் (இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை யாதலின் ஒற்று இரட்டித்தது)]

கோட்டைக்கல் *kōttai-k-kal, பெ.*(n.)புதைகுழியின் மேல் வைக்கும் கல்; a memory stone erected on the burial pit.

[கோட்டை-கல்]

கசவர் பழங்குடிகளின் சொல்லாட்சி.

கோடல் *kōdal, பெ.*(n.)மருமகள்; daughter in law.

தெ. கோடாளு.

[கொளல் - கோடல் (பிறர் வீட்டிலிருந்து கொள்ளப்பட்ட பெண்).*]*

கோடா முடிச்சு *kōdā mudiccu, பெ.* (n.) இறுக்க மான கயிற்று முடிச்சு; very strong knot wigth a rope.

[கோடா (அசையாத, நெகிழாத)+ முடிச்சு.]

கோடன் *kōdaln பெ.*(n.)ஒருவகைக் களைச் செடி; a kind of weed.

[கோடு-கோடான்]

கோடி *kōdi, பெ.*(n.)1. நூறு நூறாயிரம் (இலட்சம்) கொண்ட பேரெண்; one crore. 2. பத்து நெய்தல் (பத்து இலட்சம்) கொண்ட பேரெண்; one crore consisting 10 million.

பாலி. கோடி Skt. kōṭi E. Crore Hin. carode.

[குவளை-குவடி-கோடி]

தமிழிலிருந்து கி.மு.800 அளவில் திரிந்த திரிபு. பாலி மொழி வாயிலாக ஏனைய மொழிகளில் ஊடாட்டம் பெற்றது.

கோடிக்காய் *kōdi-k-kāy, பெ.*(n.)மரத்தில் முதன் முதலில் காய்த்த காய்;the first fruit of the tree. கோடிக்காய் காய்த்திருக்கிறது.(இ.வ.).

ம. கோடிக்காய்.

[கோடி (புதிய)+ காய்.]

கோடை *kōdai, பெ.*(n.)விலங்குகளுக்கு கொம்பு முளைக்கும் பருவம்; horn growing stage among animals. 2. இளமைப் பருவம்;teen age. அவனை நான் கோடையில் பார்த்த நினைவு இருக்கிறது.(கொங்.வ.).

[கோடு(கொம்பு)-கோடை]

கோடைப்பட்டம் *kōdai-p-pattam, பெ.*(n.)மேழ (சித்திரை) மாதப் பயிரிடும் பருவம்; seeding season during summer month, April.

[கோடை+பட்டம்]

கோணமானி *kōnamāni,* பெ.(n.) கோணங் களை அளக்கப் பயன்படுத்தும் கருவி; an instrument for measuring angles, especially to check your position at sea or to look at stars, quadrant.

[கோண(ம்)+மானி]

கோது *kōdu,* பெ.(n.) 1. கரும்புச் சக்கை; pressed wasste of sugarcane. 2. இடி யாப்பம் (சந்திக்கனி); boiled rice noodle. 3. மென்சக்கை கொண்ட கோதுமைத் தினை; wheat.

[கோல்-கோலு-கோது]

கோயர் *kōyar, பெ.*(n.) 1.மலை நிலைத் தலைவர்; head of hill tribe.2. அரசக் கிளை மரபினர்; a branch of a royal family.

மறுவ.கோசர், கோமன்,கோமர்.

ம.கோயர்– கோய்கள் (அரசர்).

[கோ+அர்-கோசர்-கோயர்.]

கோராலி *kōrāli,* பெ.(n.) குதிரைவாலி எனும் புன்செய் தவசம்; a millet. "ஐம்பது மூட்டை கோராலி விளைந்தது (கொங்.வ.).

[குதிரைவாலி-கோராலி]

கோரு-தல் *kōru-, செ.குன்றாவி.* (v.t.) காதால் கேள்; to hear. நீ கோர்தியா (நீ கேட்கிறாயா.) (முகவை.வ.)

[கேள் - கேர்-கோர் -கோரு.(தொ.வ.]

கோலப்பெட்டி *kōla-p-petti,பெ.*(n.)மான், கிளி, போன்ற உருவங்கள் பின்னப்பட்ட பனை யோலைப் பெட்டி; inscribed deer, parrot like figures on box made of palmyra tree's leaves.

[கோலம்+(அழகு,ஓவியம்)+பெட்டி]

கோவல் *kōval,பெ.*(n.)மாட்டுமந்தை; a cow pen.

[கோ–கோவு(மாடு)+அல்–கோவல். கோவல்– மாட்டுமந்தை]

கோவலன் *kōvalan,பெ.*(n.)மாட்டுமந்தைகளை யுடைய செல்வன்; a wealthy person who has a number cowpen.

[கோ–கோவு–கோவல்+அன். கோவல்(மாட்டு மந்தை).]

கோவலன் எனும் தமிழ்ச் சொல்லும் கோவாள் (கோ+பால–மாடுவளர்ப்பவன், மேய்க்கும் பணி யாளர்) என்னும் வடதமிழ்ச் சொல்லும் வேறானவை.

கோவலூர் *kōvalūr,பெ.*(n.)மலையமான் திருமுடிக்காரியின் தலைநகர்; the capital city of Tamil king malayaman *Tirumuḍikāri.* கோவலூரர் நூறி.(புறம்).

[கோவல்+(மாட்டுமந்தை)+ஊர்.]

கோவலை *kōvalai,பெ.*(n.)நீளத்திலும் அகலத்திலும் பெரிய வலை; a net big in size.

[கோ–(பெரிய)+வலை.]

கோவன் *kōvan, பெ.*(n.)1. மலை வாழ்நன்; one who dwells on one hilltop.2. அரச குடும்பத்தைச் சார்ந்தவன்;one who belongs to royal family. 3. ஓர் இயற்பெயர்; a proper name. 4.மாட்டுக் காரன்; owner of cows.

மறுவ.கோமான்.

[கோ+அன்– கோவன்.]

கோவேறு கழுதை *kōvēṟu kaḻudai, பெ.*(n.) சுமேரிய நாட்டு கலப்பினக் கழுதை; a cross breed donkey of Sumeria.

[கோ(அரசன்)+ஏறு+கழுதை.]

கழுதைக்கும் குதிரைக்கும் பிறந்த கலப்பினக் கழுதை. குதிரை வலிமையும் கழுதையின் பொறு மையும் கொண்டது. கருவுறாது. குட்டி போடாது. ஆண் கழுதைக்கும் பெண் குதிரைக்கும் பிறந்தது. mule என்றும் ஆண் குதிரைக்கும் பெண் கழு தைக்கும் பிறந்தது. Hinny எனவும் அழைக்கப்படும்.



கோள்குத்தி *kōḷkutti, பெ.*(n.) புறங்கூறி கலகம் விளைப்பவன்; one who creates mischief by slanderous reports, a tale bearer.

மறுவ.கோள்மூட்டி, கோள்காரன்.

[கோள்+குத்தி.]

கோள்குத்து–தல் *kōḷkuttu-, செ.கு.வி.* (v.i.) 1. புறந் தூற்றுதல்; to tell tales.2. கோட்டை களில் இருவருக்குள் கலகம் விளைவித்தல்;to create mischief by slanderous reports.

[கோள்+குத்து–,]

கோள்பற்று *kōlpaṟṟu,* பெ.(n.) நிலவு, கதிரவன் ஆகியவற்றுக்கு நேர்க்கோட்டு நிழலடியாகிய மறைப்பு (கிரகணம்); Eclipse of sun and moon.

[கோள்+பற்று]

இராகு கேது எனும் நிழல் கோள்கள் நிலவையும் கதிரவனையும் கவ்வுவதாகக் கருதப்பட்ட நிழல் மறைப்பு கிரகணம் எனப்பட்டது.

கோளுறுவினைப்பயன் *kōḷuṟu vinaippayan , பெ.*(n.)கோளைப் பொறுத்த ஊழ்வினைப் பயன்(த.சா.); the fate of man as depending on the position of planets (சா.அக.).

[கோள்+உறு+வினை+பயன்]

ச

சக்கப்பற்று *cakkaparru* பெ.(n.) கல்குளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kalkulam Taluk.

[சக்கை+பற்று]

சக்கரப்பிள்ளை *cakkara-p-pillai,* பெ.(n.) அச்சுக்கும் கொரங்காட்டிக்கும் நடுவில் உள்ள சக்கரம்;a wheel in loom.

[சக்கரம்+பிள்ளை]

சக்கரக்கையன் *cakkara-k-kaiyan,* பெ. (n.) திருமால்; God Tirumal "சக்கரக் கையன் தடங்கண்ணால் மலர விழித்து" (பெரி. 1:4:4)

[சக்கர(ம்)+கையன்]

சக்கந்தி *cakkandi,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[சக்கை+கந்தி]

சக்கரம் *cakkaram,* பெ.(n.) தட்டாங்கல் ஆட்டத்தில் ஐந்து கற்கள் சேர்ந்தது; five stones in *tattāngal play.*

சக்கு *cakku,* பெ.(n.) தோலாற் கைவினைப் பொருள்கள் செய்யப்பயன்படும் ஒரு கருவி; an implement used to make leather artefact.

[சக்கை–சக்கு]

சக்குடி *cakkudi,* பெ.(n.) மதுரை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurai Taluk.

[செக்கு+சக்கு+குடி]

சகடக்கை *cagadakkai,* பெ. (n.) ஒரு வகையான இரட்டைக்கை;double hand pose in dance.

[சகடம்+கை]

சகடை[1] *cagadai,* பெ.(n.) வண்டி போன்ற பீடம்; a seat designed as wheel.

[கசடு+கசட்டை]

சகடை[2] *cagadai,* பெ. (n.) மந்தமான போக்கு சுறுசுறுப்பின்மை; dullness stupidity.

[சகடு–சகடை]

சகாட்டுத் தறி *cagāttu-t-tari,* பெ. (n.) சேலை முழுவதும் பட்டுச் சரிகையால் நெய்ய உதவும் பெரிய தறி வகை; a big loom.

[சகாட்டு+ தறி]

சகாடுப்பெட்டி *cagādu-p-petti,* பெ.(n.) தறியின் மேல் பாகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கருவி;an implement used in loom.

[சகாடு+பெட்டி]

சகுடு *cagudu,* பெ. (n.) ஆழ்துளைக் கிணற்றில் நீரோட்டத்தின் மேல் படிவாகப் படிந்திருக்கும் நொய் மணல்; fine sand layer before water level in borewell.

[சகுள்–சகுடு]

சங்ககிரி *cankagiri,* பெ. (n.) திருச்செங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruchengode Taluk.

[சங்கரன்+Skt. கிரி]

சங்கடை *cangadai,* பெ.(n.) குழந்தைகளுக்குப் பால் ஊட்டும் கிண்ணம்; a vessel for supplying liquid food to an infant.

[சங்கு+அடை]



சங்கநிதி *canga-nidi,* பெ. (n.) சோழர்காலக் கோயில்களில் காணப்படும் புடைப்புச் சிற்பம்; embossing sculpture of a hoḷa period temples.

[சங்கம்+நிதி]

சங்கிலித் தொடுகை *cangili-t-tōḍugai,* பெ. (n.) கைகளைக் கோர்த்து விளையாடல்; a play of children.

[சங்கிலி+தொடுகை]

சங்கிலி முளை *cangili-muḷai,* பெ. (n.) மூக்கணைப் பாரினைச் சங்கிலியோடு இணைக்கும் இரும்புக் கருவி; an implement in loom.

[சங்கிலி+முளை]

சங்கைசங்கையாக *cangai-cangai-y-āga,* வி.எ. (adv.) இழிவாக; fowl usage of words. சங்கை சங்கையாகத் திட்டினான்;

[சங்கை+சங்கை+ஆக]

சச்சை *caccai,* பெ. (n.) சந்தனம்; sandal *"குங்குமச் சச்சை கமழும் தடந்தோளும்"*(ஒட் t:350)

[சுள் > சள் > சள்சை > சச்சை]

சஞ்சரிகம் *cañjarigam,* பெ. (n.) வண்டு; bee "சஞ்சரிக நறுமலர்த்தார்த் தனஞ்சயன்" (வி.பா.7:36)

[சல் > சல்சு > சஞ்சு = பறவை மூக்கு சஞ்சு > சஞ்சரி = கூரிய கொடுக்கினையுடைய வண்டு]

சடங்கு *caḍangu,*பெ. (n.) வில்லுப்பாட்டு மரபில் காணப்பெறும் ஒருநிகழ்வு;a feature.

சட்டமாடு *caṭṭamāḍu,*பெ. (n.)இரண்டு மூன்று நிறங்கள் கலந்திருக்கும் மாடு;a cow of mixed colour appearance.

[சட்டம் +மாடு]

சட்டத்தறி *caṭṭa-t-tari,* பெ. (n.) தரைக்கு மேலே உயரத்தில் இயங்கக் கூடிய தறி வகை;a loom fixed above the ground level.

[சட்டம்+தறி]

சட்டிமேளம் *caṭṭimēlam,* பெ. (n.) தப்பாட்டத்தில் பயன்படுத்தப்படும் இசைக் கருவி; a musical instrument.

[சட்டி+மேளம்]

சட்டு *caṭṭu,* பெ. (n.) கிணறு வெட்டும்போது நீர் இருப்பதை உறுதி செய்யும் மண்; the soil which indicates watering in digging well.

[செட்டு–சட்டு]

சட்டைத்தாள் *šaṭṭai-t-tāḷ,* பெ. (n.) தெருக் கூத்தில் பங்கேற்கும் ஆடவர் அணியும் அணி கலன்; a male ornament in terukkūttu.

[சட்டை+தாள்]

சடஞ்சு *šadañju,* பெ. (n.) சோர்வு, களைப்பு; weariness, longuor.

[சடைவு–சடஞ்சு]

சடஞ்சுபோ–தல் *šadanjū-pō-,* பெ. (n.) களைப் படைதல்; tiredness.

[சடைந்து–சடஞ்சு+போ–,]

சடவு *caḍavu,* பெ. (n.) சலிப்பு; weariness, longuor. (கொ.வ.வ.சொ. 69.).

[சடைவு–சடவு]

சடயிவிளை *caḍayiviḷai,* பெ.(n.) கல்குளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kalkulam Taluk.

[சடையன்+விளை]

சடைகட்டி *caḍaikaṭṭi,* பெ.(n.) திருக் கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[சடை+கட்டி]

சடையநோடை *caḍaiyanōḍai,* பெ.(n.) திருவண்ணாமலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvannamalai Taluk.

[சடையன்+ஓடை]

சண்டி *caṇḍi,* பெ.(n.) சல்லிக்கட்டு எனும் வீர விளையாட்டில் மாட்டின் கொம்பில் சுற்றப் பட்டிருக்கும் துணி; the cloth tied around the horn of the bull in salli-k-kattu.

[செண்டு–சண்டி]

சண்டிசாட்சி *candisāṭci,* பெ.(n.) செஞ்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Senji Taluk.

[சண்டியன்+சாட்சி]

சண்டைக்கும்மி *šaṇḍai-k-kummi,* பெ.(n.) ஆடவர்களால் ஆடப்பெறும் கும்மியாட்டம்; dance with lapping of hands to time and singing by men.

[சண்டை+கும்மி]

சண்டைசத்தம் *caṇṇdai-šattam,* பெ. (n.) வாய்ப்பூசல்; rashness in speech.

[சள் > சண்டு > சண்டை = சச்சரவு வ.வ.பக். 136.]

சணவேலி *canavēli,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvadanai Taluk.

[சணல்+வேலி]

சத்தக்கட்டை *catta-k-kaṭṭai,* பெ. (n.) தப்பாட்டத்தில் பயன்படுத்தப்படும் இசைக் கருவி; a musical instrument.

[சத்தம்+கட்டை]

சத்தக்குழல் *catta-k-kūḻal,* பெ. (n.) ஒரு நாட்டுப் புறக் காற்றிசைக்கருவி; a flute.

[சத்தம்+குழல்]

சத்தரை *cattarai,* பெ.(n.) திருவள்ளூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvallur Taluk.

[சித்தர்+வரை]

சதமுகை *cadamugai,* பெ.(n.) கோபிசெட்டி பாளையம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Gopichettipalayam Taluk.

[சதல்+முகை]

சதுப்பேரி *caduppēri,* பெ. (n.) போளூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in polur Taluk.

[சதுப்பு+ஏரி]

சதுர்ப்புயம் *cadur-p-puyam,* பெ. (n.) சிற்பங்களின் உறுப்புகளில் ஒன்று; feature in sculpture.

[சதுர்+புயம்]

சதுரச்சில்லி *cadura-c-cilli,* பெ. (n.) சதுரமான அரங்கு அமைத்து ஆடும் சில்லியாட்டம்; a game with small disc-like broken piece of stone where square lines are drawn.

[சதுரம் + சில்லி + சில் – சில்லி = துண்டு]

சதுரமடங்கன் *caduramaḍangan,* பெ. (n.) மேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Melur Taluk.

[சதுரம்+அடங்கன்]

சந்தயடி *candayaḍi,* பெ. (n.) அகத்தீசுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[சந்தை+அடி]

சந்திரம் *candiram,* பெ. (n.) ஒரு இசைக்கருவி; a musical instrument.

[சந்து–சந்திரம்]

சந்துக்கறி *candu-k-kaṟi,* பெ. (n.) தொடைக் கறி; thigh flesh.

[அந்து > சந்து=தொடைப் பொருத்து வ.வ.69.]

சந்துமலை *candumalai,* பெ. (n.) சேலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Salem Taluk.

[சந்து+மலை]

சப்படைக்கல் *cappattai-k-kal,* பெ. (n.) பட்டை வடிவிலான கல்; stone plank.

[சப்பட்டை + கல் + சப்பை – சப்பட்டை]

சப்பல் *cappal,* பெ. (n.) நீர் செல்லும் பாதையில் அடைத்துள்ள குப்பை; block due to wastage in a water course.

[தப்பல்–சப்பல்]

சப்பை *cappai,* பெ. (n.) தோற்றோரைக் குறிக் கும் சொல்; word in contempt used for defeeted person in a game.

[சாய்ப்பு–சப்பை]

சப்பைக்கட்டு *cappai-k-kaṭṭu,* பெ. (n.) உறுதி யில்லாத முடிச்சு; uncertain knot.

[சப்பை+கட்டு]

சபரிப்பட்டு *cabari-p-paṭṭu,* பெ. (n.) முறுக்கு இழையுள்ள பட்டு; twisted thread of silk.

[செம்புரி+பட்டு]

சம்பக்குடி *cambakkuḍi,* பெ. (n.) மதுரை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurai Taluk.

[சம்பை+குடி]

சம்பங்கரை *campankarai,* பெ. (n.) அகத் தீசுவரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Agastheeswaram Taluk.

[சம்பை+கரை]

சம்பானி *cambāni,* பெ. (n.) குதிரை வீரர்; cavalry "இழம் அழிக்கை காரியம் ஆக சம்பானி வெயைமைத்த குதிரை மனித்தர்" (SII, vii, 778).

[சம்பு–சம்பானி]

சம்புடம் *cambuḍam,* பெ. (n.) ஒருவகை யான சிற்ப முத்திரை; a feature in sculpture.

[சம்பு–சம்புடம்]

சம்பை[1] *cambai,* பெ.(n.) திருவாடானை வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Thiruvadanai Taluk.

[செண்பை–சம்பை]

சம்பை[2] *cambai,* பெ.(n.) இராமநாதபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ramanathapuram Taluk.

[செண்பை–சம்பை]

சம்மந்தனூர் *cammandanūr,* பெ.(n.) திரு வண்ணாமலை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvannamalai Taluk.

சம்முள் *sammūl,* பெ.(n.) நெய்த ஆடையின் ஓரப்பகுதி; rear border of woven cloth.

[சம்ம+முள்]

சமஞ்சிதன் *camañjidan,* பெ. (n.) கணக் கன்; accountant "இப்பொழுது கழிகில் இரட்டி தண்டம் படுவது சமஞ்சி தனிச் செலவு கண்டு செலுத்துவிது" (TAS, ii,p 173-207).

[சமை–சமஞ்சிதன்]

சமநகம் *cama-nagam,* பெ. (n.) கால்கள் இரண்டையும் இணைத்துச் சமநிலையில் நேராக நின்று கைகள் இரண்டையும் பக்கங் களில் தொங்கவிட்ட வண்ணம் நிற்பது; a yogic pose.

[சமன்+அகம்]

சமன்கை *camankai,* பெ. (n.) மத்தளம் முழக்குவதின் வகை; a mode of playing mathalam.

[சமன்+கை]

சமன்மண்டிலம் *šaman-manḍilam,* பெ. (n.) மண்டில வகைகளில் ஒன்று; a pose in dance.

[சமன்+மண்டிலம்]

சமுக்கம் *camukkam,* பெ. (n.) சதுரம்; square.

[சமம்–சமுக்கம்]

சயஞ்ஞை *cayaññai,* பெ. (n.) கையெழுத்து; hand writing "ராஜ ராஜக் கங்கை நாடாள் வானும் சயஞ்ஞை யாதன்மைக்கும் இப்படிக்கு இவை" (SII, xvii, 541).

[கை–செய்–சயஞ்ஞை]

சரஓலை *cara-ōlai,* பெ. (n.) கிழிந்து தொங்கும் ஓலை; torn leaf.

[சரம்+ஓலை]

சரணன் *caranan,* பெ. (n.) சிவகங்கை வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[சரவணம்–சரணன்]

சரடு *caraḍu,* பெ.(n.) பெண்கள் கழுத்தில் அணியும் பொன் தொடரி, உறுதியான பொன் சங்கிலி; a gold chain like ornament worn by women.

மறுவ. தோடு, தொங்கட்டான்

[சரள்–சரடு]

சரபவடிவம் *carabavadivam,* பெ. (n.) சிவனின் சிற்ப வடிவம்; a pose in Siva in sculpture.

[சரபம்+வடிவம்]

சரல் *caral,* பெ. (n.) அகத்தீசுவரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Agasthees-waram Taluk.

[சாரல்–சரல்]

சரளிவரிசை *carali-vārisai,* பெ. (n.) பிடில் இசையின் ஒருகூறு; a mode of fiddle music.

[சரளி+வரிசை]

சரிகைப்புட்டா *carigai-p-pūttā,* பெ.(n.) சரிகை யாலான புட்டா; a putta made by sarigai.

[சரிகை+பட்டம்]

சரிகைநாடா *carigai-nādā,* பெ.(n.) சரிகையை மட்டும் பயன்படுத்தப்பெறும் நாடா; cloth tape of sarigai.

[சரிகை+நாடா]

சரிகையுருளை *carigai-yurulai,* பெ.(n.) விளிம் பின் சரிகையைச் சுற்றுவதற்குப் பயன்படும் உருளை; an implement in loom.

[சரிகை+உருளை]

சரிப்பாண்டி *cari-p-pāndi,* பெ.(n.) பல்லாங் குழியின் ஒரு வகை; a type of pallankuli game.

[சரி+பாண்டி]

சரிவண்டு *carivandu,* பெ.(n.) சிற்பநூல்கள் இயம்புகின்ற ஒரு கையணி; a hand ornament in sculpture.

[சரி+வண்டு (வளையல்)]

சருகணி *carugani,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[சருகு+அணி]

சல்லிக்காடு *calli-k-kādu,* பெ. (n.) சிறுசிறு கற்கள் நிறைந்த காடு; an area of small pebbles.

[சில்லி–சல்லி+காடு]

சல்லி *calli,* பெ. (n.) சல்லிகை, கூத்தில் பயன் படுத்தப்படும் இசைக்கருவி; a musical instrument used calligai dance.

[சல்–சல்லி]

சல்லிகை *callikai,* பெ. (n.) சல்லென்ற ஓசையை எழுப்பும் இசைக்கருவி; a musical instru-ment.

மறுவ. சல்லி

[சல்–சல்லிகை]

சலங்கைப்பூரான் *calangai-p-pūran,* பெ. (n.) செம்மஞ்சள் நிறத்தில் இடையிடை கருமை நிறம் கொண்ட பெரிய வகை பூரான்; கடித்தால் சிலருக்கு மாரடைப்பு ஏற்படும்; yellowish red and balck intermediate large in size. Bitting this make clothing the blood to human.

[சலங்கை+பூரான்]

சலமூலை *cala-mūlai* பெ. (n.) வடகிழக்குப் பகுதி; north east.

[சலம்+மூலை]

சலரி *calari,* பெ. (n.) அருணகிரிநாதர் குறிப் பிடுகின்ற ஓர் இசைக்கருவி; a musical instrument mentioned by Arunagiri nādar.

[சல்லரி–சலரி]

சலவாதி[1] *calavādi,* பெ.(n.) திண்டிவனம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tindivanam Taluk.

[செலவு+ஆளி–செலவாளி–சலவாதி (கொ.வ.)]

குறிப்பிட்ட குடியினத்தார் வேற்றூரிலுள்ள உறவினர்க்குச் செய்தி சொல்லியனுப்புவதற்காக மரபுவழி அமர்த்தப்பட்ட அப்பொழுதைக்கான பயணப் பணியாளர். அப்பணியாளர் பெயரில் அமைந்த ஊர்.

சலவாதி[2] *calavādi,* பெ.(n.) காலைக்கடன் கழித்தல்; to answer the call of nature.

[சலம்+ஆதி]

சலா *calā,* பெ. (n.) பழங்காலத்திற்கு முன் நீர்க் கடவுளாகக் கருதப்பட்ட நாட்டுப்புறத் தெய்வம்; an ancient folk deity which represents water.

[ஒருகா. சாலி–சாலா]

சலுச்சுப்போடு–தல் *calu-c-cupōḍū-,* செ. குன்றாவி. (v.t.) புடைத்துப்போடு–தல்; to winnow.

[சலுச்சுப்+போடு–,]

சலையனூர் *calayanūr,* பெ.(n.) திருப்பெரும் பூதூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sriperumbudur Taluk.

[சிலையன்–சலையன்+ஊர்]

சவண்டு *cavaṇḍu,* பெ. (n.) 1. வாடுதல்; dryness. 2. நைந்து போதல்; to be crushed.

[சவள்–சவண்டு]

சவடை *calvaḍai,* பெ. (n.) புளிய முத்துகளில் பெரிய முத்து (அஞ்சுப்பூட்டு) விளையாட்டு; a big tamarind seed play.

[சவடு–சவடை]

சவம் *cavam,* பெ.(n.) சிற்பியர் வடிவமைக்கும் தோள் அணிகளில் ஒன்று; a feature in sculpture.

[சாவம்–சவம்]

சவலபட்டி *cavalapaṭṭi,* பெ.(n.) பெரியகுளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Periyakulam Taluk.

[செவலை–சவல+பட்டி]

சவளம் *cavaḷam,* பெ. (n.) ஈட்டி; spear, lance.

[சாவளம்–சவளம்]

சவறு *cavaṟu,* பெ. (n.) குற்றம்; blemish, fault. *"சவறது ஆதலைத் தேற்றுவன்"* (நீல. 5:116)

[சவடு >சவறு]

சவுக்குவீச்சு *cavukku-viccu,* பெ.(n.) ஒரு வகையான நாட்டுப்புறக் கலை; folk dance.

[சவுக்கு+வீச்சு]

சவைக்கடமை *cavaikaḍamai,* பெ. (n.) சிற்றூர் அவை வரி; tax for the managing committee of village assembly. *"ஒன்றுக்குப் பத்தாகக் குடுப்பது சவைக்கடமை கடலார் பக்கல் மூன்று..."*

[அவை–சபை–சவை+கடமை]

சள்ளவாய் *caḷḷavāi,* பெ. (n.) தூங்கும் போது ஓரத்தில் நீர் வடியும் வாய்; saliva stains.

[சொள்ளு+வாய்]

சள்ளைக்குச்சி *caḷḷai-k-kucci,* பெ. (n.) கொக்கி கட்டிய தழை ஒடிக்கப்பயன்படும் நீண்ட குச்சி; a hook stick.

[சள்ளை+குச்சி]

சளம்ப *caḷamba,* வி.எ. (adv.) நிறைய, ததும்ப; complete, consummate. *"புண்ணுக்குச் சளம்ப எண்ணெய் போடு"*

[சலும்பு–சலும்ப–சளம்ப]

சளுக்கை *caḷukkai,* பெ.(n.) வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wandiwash Taluk.

[செழுகை–சலுக்கை]

சறுக்கடைவு *šarukkaadiv,* பெ. (n.) காலின் முன்பகுதியைச் சரிந்து தேய்த்துச் செல்லுதல்; a step in dancing.

[சறுக்கு–அடைவு]

சறுக்கலடைவு *caṟukkalaḍaivu,* பெ. (n.) பரதநாட்டியத்தில் மூன்று முறையில் கடைப் பிடிக்கப்படும் அடைவு வகை (14:245); a step in dancing.

[சறுக்கல்+அடைவு]

சறுவாணி *caṟuvāṇi,* பெ. (n.) பிராமணர்க்குக் கொடுக்கும் ஒரு வகைக் கொடை; inam given to Bramins. *"கோவிலில் அம்பலம் கண்டு தோறும் கெட்டி மேவிப்பானும் அம்பலத்தில் சறுவாணிக்கும்"* (TAS. vi.35)

[சிறுவாணி–சறுவாணி]

சன்னக்கட்டை *caṇṇāk-kaṭṭai,* பெ.(n.) தேர் செல்லும் பொழுது நிறுத்தப் பயன்படும் கட்டை;

block used as break to temple cart, block used as break.

மறுவ. முட்டுக்கட்டை

[சன்னம்+கட்டை]

சன்னக்கோரை *cannā-k-korai,* பெ.(n.) அளவில் பெரிதாக உள்ள கோரை; a weed of bigger size.

[சன்னம்+கோரை]

சன்னதிவயல் *cannādivayal,* பெ.(n.) அறந் தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[சன்னிதி+வயல்]

சன்னமுறுக்கு *canna-murukku,* பெ.(n.) கற் றாழை நாரைப் பாய்பின்ன முறுக்குதல்; twisting the fibre of aleo.

[சன்னம்+முறுக்கு]

சன்னவனம் *cannāvanam,* பெ.(n.) திருப் பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[சன்ன(ம்)+வனம்]

சாக்கியப்பள்ளி *cākkiya-p-palli,* பெ. (n.) புத்தர் கோயில்; temple of Buddha. *"குழலூர்ச் சாக்கியப் பள்ளி எல்லைக் கரையே கிழக்கு"* (TAS. 1958-59.P.84)

[சாக்கியன்+பள்ளி]

சாக்கைவயல் *cākkaivayal,* பெ.(n.) திருப் பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruppattur Taluk.

[சாக்கையன்+வயல்]

சாங்கம் *cāngam,* பெ.(n.) இறைவடிவச் சிற்பங் களின் உறுப்புகளிற் ஒன்று; a feature in sculpture.

[சாரங்கம்–சாங்கம்]

சாங்கியம்[1] *cāngiyam,* பெ.(n.) திருக்கோயி லூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[சாங்கு–சாங்கியம்]

சாங்கியம்[2] *cāngiyam,* பெ.(n.) தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர்கள் சடங்குகளைக் குறிக்கப் பயன்படுத்துகின்ற சொல்; a term used to mean ritual.

[சழங்கு–சாங்கு–சாங்கியம்]

சாட்டியக்குடி *cāttiyakkudi,* பெ.(n.) அறந் தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[சாட்டியம்+குடி]

சாட்டையடிசடங்கு *cāttai-yadi-cadangu,* பெ. (n.) தீ மிதித்து வந்தோர் மண்டியிட்டுத் தலைக்கு மேல் கைகூப்பி நிற்க ஒருவர் சாட்டையால் கையில் ஓர் அடியடித்தல்; a ritual in temple festival.

[சாட்டை+அடி]

சாடவம் *cādavam,* பெ.(n.) ஒரு வகையான பண்; a musical note.

[சாடு–சாடவம்]

சாடிக்காரகண்டன் *cādikkārakandan,* பெ. (n.) பகைவரை ஒழிப்பவன்; one who destroys his foes. (சே.ம.செ.ப. 101).

[சாடிக்காரன்+கண்டன்]

சாணக்கு *śānakku,* பெ.(n.) அரைத்தட்டுப் போன்ற மண் சட்டி;a plate like pot.

[சாளக்கு–சாணக்கு]

சாணித்தட்டு *śāni-t-tattu,* பெ. (n.) மாட்டுச் சாணத்தை அள்ளப் பயன்படும் தட்டு; a basket used to take cow dug.

[சாணி+தட்டு]

சாணிப்பூரான் *cāni-p-pūran,* பெ. (n.) இளங்கருப்பு நிறத்துடன் எருக்குவியலிலும் சாணத்தின் கீழ் இருக்கும் பூரான்; certiped gray in colour mostly seen under the low - during.

[சாணி+பூரான்]

சாணூர் *cāṇūr,* பெ. (n.) பல்லவர் நாட்டுச் சிற்றூர்; a village in pallava territory. (புல். செ. 74.). *"காளத கோத்திரத்து ஆவத்தம்பச் சூத்திரத்து சாணூர் வத்தவன் கூள சர்மன்"*

[சாண் + ஊர்]

சாத்தங்குடி *cāttaṅkuḍi,* பெ. (n.) பல்லவர் நாட்டுச் சிற்றூர்; a village in pallava territory. (புல். செ. 74.). *"காசியப கோத்திரத்து சாத்தங்குடி கிழான் பங்கொன்று"*

[சாத்தன் + குடி]

சாத்தமை *cāttamai,* பெ.(n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurantakam Taluk.

[சாத்து+ஆண்மை]

சாத்தனி[1] *cāṭṭani,* பெ.(n.) பரமக்குடி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Paramakkudi Taluk.

[சாத்து+அணி]

சாத்தனி[2] *cāṭṭani,* பெ.(n.) சிவகங்கை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ssivaganga Taluk.

[சாத்து+அணி]

சாதம் *šāḍam,* பெ. (n.) வேகவைத்த அரிசி; cooked rice.

[சோறு → சோது → சாது → சாதம்]

ப்ரஸாத என்னும் முன்னொட்டுப் பெற்ற சொல் லன்றி ஸாத என்னும் தனிச்சொல் வடமொழி வழக்கி லில்லை. ஸாத மேலை யாரியமொழி யொன்றிலு மில்லாத வட நாட்டுச் சொல். தமிழில் மட்டும் சாதம் என சோறு குறித்து வழங்கி வருகின்றது.

சாதாப்பட்டு *šāḍā-p-paṭṭu,* பெ.(n.) நான்கு (அ) ஐந்து குறுக்கிழைகள் கொண்ட பட்டு; a type of silk.

[சாதா+பட்டு]

சாதாமுந்தானை *šāḍā-munḍāṇṇai,* பெ.(n.) வடிவம் இல்லாத முந்தானை; ordinary fore saree.

[சாதா+முந்தானை]

சாதியடி *cāḍiyaḍi,* பெ. (n.) 1/2 அங்குலம் கொண்ட ஒரு நீட்டலளவு; a kind of measurment.

[சாதி+அடி]

சாப்டூர் *cāptūr,* பெ.(n.) திருமங்கலம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tirumangalam Taluk.

[ஒருகா. சாப்பாட்டு+ஊர்]

சாபர்த்தி *cābārtti,* பெ.(n.) கிருட்டிணகிரி வட்டத் திலுள்ள வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Krishnagiri Taluk.

சாம்பல்கலன் *sāmbalkalaṇ,* பெ.(n.) சுருட்டு போன்றவற்றின் சாம்பலைத் தட்டும் சிறுவட்டில்; ashtray.

[சாம்பல்+கலன்]

சாமக்கோடங்கி *cāma-k-kōḍāṇgi,* பெ.(n.) நடு இரவில் வந்து குறி சொல்பவர்; midnight fore - teller.

[யாமம்–சாமம்+கோடங்கி]

சாமகானம் *cāmakānam,* பெ.(n.) பாடல் வகைகளிற் ஒன்று; a type of musical tune.

[சாமம்+கானம்]

தமிழ்ப்பண்களில், பாடப்பெறும் வேதப்பாடல்.

சாமந்தவாடா *cāmaṇthavāḍā,* பெ.(n.) திருத்தணி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruttani Taluk.

[சாமந்தன்+பாடி]

சாமான்வண்டி *cāmāmvaṇḍi,* பெ.(n.) முன்னவனின் இடுப்பினைக் கை கோர்த்துப் பிடித்துக் கொண்டு விளையாடல் (தொடர் வண்டி போல்); a children's play.

[சாமான்+வண்டி]

சாமிகொண்டாடிகள் *cāmi-kōṇḍāḍigaḷ,* பெ. (n.) கொடைவிழாவில் சாமியாடுவோரைக் குறிக்கும் சொல்; possessed priests of a temple.

[சாமி+கொண்டு+ஆடிகள்]

சாய்ப்புத்தாளம் *cāyppu-t-tāḷam,* பெ. (n.) பரதத்தில் பயன்படுத்தப்படும் தாள வகைகளிற் ஒன்று; a time measure.

[சாய்ப்பு+தாளம்]

சாய்தட்டுத்தாள் *cāytaṭṭu-t-tāḷ,* பெ. (n.) ஒரு வகையான ஆடல் இயக்கம்; a dance movement.

[சாய்+தட்டு+தாள்]

சாய்திண்ணை *cāy-tiṇṇai,* பெ. (n.) சாய்ந்து கொள்ள வசதியான ஒருபுறம் திட்டு வைத்துக் கட்டப்படும் திண்ணை; back seat pial.

[சாய்+திண்ணை]

சாயப்பானை *cāya-p-pāṉai,* பெ. (n.) கோரையின் சாயம் ஏற்றும் பானை; a pot for paint.

[சாயம்+பானை]

சாயவேட்டி *cāya-vēṭṭi,* பெ. (n.) சாய மேற்றிய ஆடை; colour added cloth.

[சாயம்+வேட்டி]

சார்புக்கை *cārbu-k-kai,* பெ. (n.) நடனமாடு கையில் உடலுறுப்புகள் நிகழ்த்தும் வினை; dance movement.

[சார்பு+கை]

சார்மேடை *cār-mēḍai,* பெ. (n.) வீட்டுக்கு முன் உள்ள திண்ணையில் சாய்ந்து உட்கார்ந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்ட சாய்வு வடிவத்திண்டு; seat provided-like masonry work against the wall on a pial, intended to learn on.

[சார்+மேடை]

சார்வாய் *šārvai,* பெ.(n.) ஆத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Attur Taluk.

[சாரல்+வாய்]

சாரக்கயிறு *šāra-k-kayiṟu,* பெ. (n.) சாரங் கட்டும் கயிறு; rope.

[சாரம்+கயிறு]

சாரங்கெட்டவன் *cāraṉkēṭṭavaṉ,* பெ. (n.) 1. பெண் நோக்கம் இல்லாதவன்; impotant geroon. 2. பயன் இல்லாதவன்; useless person.

[சாரம்+கெட்டவன்]

சால்சாப்பு *cāl-šappu,* பெ. (n.) சமாளித்தல், சரி செய்தல்; to adjust by tactics.

[சால்+சாப்பு]

சால்நடவு *cāl-naḍavu,* பெ. (n.) விதையை கையிலெடுத்து ஏருக்குப் பின் விதைத்தல்; planting method.

[சால்+நடவு]

சால்பானை *cālpānai,* பெ. (n.) பெரிய தண்ணீர் பானை; water pot.

[சால்+பானை]

சாலக்கயிறு *šāl-k-kayiru,* பெ. (n.) ஏற்றச் சாலுக்குப் போடும் கயிறு; rope.

[சால்+கயிறு]

சாலச்சகோணம் *cāla-c-cakōnam,* பெ.(n.) விளவங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vilavancode Taluk.

[சாலத்தன்+கோணம்]

சாலாணி *cālāni,* பெ. (n.) நீர் நிறைத்து வைக்கும் பானையைத் தாங்கி நிற்கும் மரத்தாலான தாங்கி; wooden ring stand.

[சால்+ஆணி]

சாலி *cāli,* பெ. (n.) இசையில் நிறைவை உடையது எனப் பொருள் தருவது; a term used in music referring to satisfaction.

[சால்-சாலி]

சாலிவாரம் *cālivāram,* பெ. (n.) ஒசூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Hosur Taluk.

[சாலி(நெல்)+வாரம்]

சாலிறைப்போன் *cāliṟai-p-pōṉ,* பெ. (n.) ஏற்றத்தின் கீழே சாலைக் கவிழ்ப்போன்; a worker in piccotah irrigation.

[சால்+இறைப்போன்]

சாலூர் *cālūr,* பெ.(n.) செங்கற்பட்டு வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Chingleput Taluk.

[சாலி+ஊர்]

சாவளம் *cāvaḷam,* பெ. (n.) அறையிலிருந்து தண்ணீர் வெளியேறுமாறு சுவரின் கீழ்ப் பகுதியில் அமைக்கப்படும் துளை; the hole to outlet the water from the room.

[துவளம்-தவளம்-சாவளம்]

சாவிநெல் *cāvi-nel,* பெ. (n.) கருக்காய் நெல்; perish paddy. *"கல், பதர், செத்தல், சாவி நெல் நீக்கி"* (CHEN,xix,P. 206-208.)

[சாவு-சாவி+நெல்]

சாவுக்கழிச்சல் *cāvu-k-kaḻiccal,* பெ. (n.) இறப்புக்கு முன்னால் நோய்வாய்ப் பட்ட வர்க்கு ஏற்படும் மலக்கழிச்சல்; loose motion to the patient before the time of death. *"இறப்புக்கு முன் உடல் தளர்தலில் குடல் முழுவதும் உள்ள மலம் வெளியேறி விடும்"*

[சாவு+கழிச்சல்]

சாவுக்குருவி *cāvu-k-kuruvi,* பெ. (n.) தீச்செயல்கள் நிகழுதற்கு அறிகுறியான ஓசை உடையதென்று கருதப்படும் ஆந்தை வகை; screech - owl a species of Atheno whose cry is believed to portend death.



[சாவு+குருவி]

சாவுப்பாட்டு *šāvu-p-pāṭṭu,* பெ.(n.) ஒப்பாரி பாடலின் மற்றொரு பெயர்;a name of lamentation song.

[சாவு+பாட்டு]

சாளி *cāḷi,* பெ. (n.) திருப்பத்தூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tiruppathur Taluk.

[சாளை-சாளி]

சானமாவு *cānamāvu,* பெ. (n.) ஒசூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Hosur Taluk.

[சானன்+(மா)மாவு]

சிக்கபாவிலி *cikkapāvili,* பெ. (n.) தருமபுரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Dharmapuri Taluk.

[சின்ன-சிக்க+(வாவில்+இ)பாவிலி]

சிக்காடு *cikkāu,* பெ.(n.) திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirukkoyilur Taluk.

[சீங்கை+காடு]

சிக்கி *cikki,* பெ.(n.) குழந்தைகள் விளையாட்டு; a childrens game.

[சிக்கு-சிக்கி]

சிங்கங்குன்றப்போழன் *ciṅkaṅk-kuṉṟap-pōḻaṉ,* பெ. (n.) பாண்டிய நாட்டுச் சபையாரில் ஒருவர்; a person in the assembly of

pandya kingdom. *"ஓமாயனாடு கிழவ னாயின சிங்குன்றப் போழன் எழுத்து"*

[சிங்கம் + குன்றம் + போழன்]

சிங்கவரம் *cingavaram,* பெ.(n.) செஞ்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Senji Taluk.

[சிங்கன்+புரம்]

சிங்கனி *cingani,* பெ.(n.) சிவகங்கை வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Sivaganga Taluk.

[சிங்கை+அணி]

சிங்காரக்கும்மி *cingāra-k-kumi,* பெ.(n.) அண்ணாமலைக் கவிராயர் இயற்றிய கும்மிப் பாடல்; a kummi play written by Annamalai-k-kavirāyar.

[சிங்காரம்+கும்மி]

சிங்கில்பாடி *cingil-pāḍi,* பெ.(n.) திருப்பெரும் புதூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Sriperumbudur Taluk.

[சீங்கை–சிங்கில்பாடி]

சிங்கி *cingi,* பெ.(n.) கச்சேரியில் தட்டும் ஒரே வகை இசைக்கருவி; a musical instrument.

[சிங்–சிங்கி]

சிஞ்சுவாடி *cinjuvāḍi,* பெ.(n.) பொள்ளாச்சி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Pollachi Taluk.

[செஞ்சு–சிஞ்சு+வாடி]

சிட்டவட்டி *citta-vāṭṭi,* பெ. (n.) வாரம் தோறும் வட்டி பெறுவது; interest levied weekly.

[சிட்டம்+வட்டி]

சிட்டிகை *cittigai,* பெ. (n.) சிறிய திரிபோட்டு எரியும் விளக்கு; a lamp of small fire.

[சிட்டி–சிட்டிகை]

சிட்டிலிங்கி *cittilingi,* பெ.(n.) கரூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Harur Taluk.

[சிற்றிலிங்கம் (மரம்) – சிட்டிலிங்கி]

சிட்டுலொட்டி *cittulotti,* பெ.(n.) திருமங்கலம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tirumangalam Taluk.

[சிற்றிலி+ஒட்டி]

சிண்டுமுடி–தல் *cindumuḍidal,* பெ.(n.) பாய் நெசவு செய்த பின்னர் அதன் ஓரங்களைச் சீவி மடித்துக் கட்டுவது; folding and tying knot of the mat. 2. வேண்டாத இருவரைப் பற்றி புறங்கூறி சண்டையிட்டுக் கொள்ளும்படி செய்தல்; to set persons by ears.

[சிண்டு+முடி]

சித்தமல்லி *cittamalli,* பெ.(n.) மாயூரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Mayuram Taluk.

[சிறு–சிற்று+மல்லி]

சித்தரேவு *citta-rēvu,* பெ.(n.) திண்டுக்கல் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Dindigul Taluk.

[சித்தர்+துறவு]

சித்தாரம் *cittāram,* பெ. (n.) அழகு; grace, beauty. *"சின்னச் சித்தாரம் போலக் குழந்தை"*

[சித்திரம்–சித்தாரம்]

சித்தாவனம் *cittāvanam,* பெ.(n.) அறந் தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[சித்தர்+வனம்]

சித்திரப்புதவு *cittira-p-pudavu,* பெ. (n.) சித்தி ரங்களையுடைய வாயில்; a decirated door.

[சித்திரம்+புதவு]

சித்தூர்மட்டம் *cittūr-maṭṭam,* பெ. (n.) தேரின் அடிப்பாகத்தை அடுத்துள்ள பகுதிகள்; lower parts of the temple car.

[சிற்று+ஊர்மட்டம்]

சித்தோடு *cittōdu,* பெ.(n.) ஈரோடு வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Erode Taluk.

[சிறு+(தோடு)ஓடை]

சிதண்டி *cidandi*, பெ.(n.) மதுராந்தகம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Madurantakam Taluk.

[சிதள்+அண்டி]

சிதம்பு *cidambu*, பெ. (n.) இழிவான செயல்; baseness. *"சிதம்புகள் செய்தாருண்டால்"* (IPS. 176)

[சிதை > சிதைவு > சிதம்பு]

சிதறால் *cida-ṟāl*, பெ.(n.) விளவங்கோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vilavancode Taluk.

[சிதறல்–சிதறால்]

சிந்தாணி *cindāṇi*, பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvadanai Taluk.

[சிந்தாமணி–சிந்தாணி]

சிப்பல் *cippal*, பெ.(n.) கஞ்சி வடிக்க உதவும் மூங்கில் தட்டு; a bamboo plate used as a strainer.

மறுவ. தட்டுக்கூடை, வடிதட்டு

[சிலுப்பு–சிப்பு–சிப்பல்]

சிப்பிக்கோடாலி *cippi-k-kōdāli*, பெ. (n.) இலை தழைகளை வெட்ட உதவும் கருவி; hook knife pole.

[சிப்பி+கோடாலி]

சிம்பு *cimbu*, பெ. (n.) பனங்கட்டையின் நரம்புத் தொகுதி; fibre of palmyral.

[சில்–சிம்பு]

சிமிறுகை *cimiṟugai*, பெ. (n.) மத்தளத்தை முடிக்கும் செயற்பாடுகளில் ஒன்று; ending phase of beating mattalam.

[சிமிறு+கை]

சியாலம் *ciyālam*, பெ.(n.) வந்தவாசி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Wandiwash Taluk.

[சேய்+ஆலம்]

சிரங்காடு *ciraṇkādu*, பெ.(n.) திண்டுக்கல் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Dindigul Taluk.

[சேரம்+காடு]

சிரப்பாறை *cirappāṟai*, பெ.(n.) பெரியகுளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Periyakulam Taluk.

[சிரா+பாறை]

சிருக்கு *cirukku*, பெ.(n.) சிற்பக் கலையில் இறையின் தொழிற் கருவியாகச் சுட்டப் பெறுவது; a feature in sculpture.

[சிறு–சிருக்கு]

சிருகுமி *cirukumi*, பெ.(n.) திருத்தணி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruttani Taluk.

[சிறு+குமிழ்]

சிருணமல்லி *cirunamalli* பெ.(n.) அரக்கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arkonam Taluk.

[சிருணம்+மல்லி]

சிருணை *cirunai*, பெ.(n.) திருவள்ளூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Tiruvallur Taluk.

[சிருணம்–சிருணை]

சிருணியம் *ciruniyam*, பெ.(n.) பொன்னேரி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Ponneri Taluk.

[சிருணம்–சிருணியம்]

சிருவம் *ciruvam*, பெ.(n.) சிற்பங்களில் காணப் பெறும் தொழிற்கருவி; a feature in sculpture.

[கடு–கடும்பு]

சில்லான் *cillāṉ*, பெ. (n.) தெருக்கூத்தில் பயன் படுத்தப்படும் ஓர் இசைக் கருவி; a little musical instrument as thalā used in street play.

[சில்–சில்லான்]

சில்லான்தட்டு–தல் *cillantattu-*, செ.கு.வி. (v.t.) ஒருவரின் கருத்துக்கு ஒத்துப் போய்ப் பேசுதல்; co-operate to one another.

[சில்லான்+தட்டு]

சில்லி *cilli,* பெ.(n.) ஒடு அல்லது கல்லை வட்டம், சதுரம் வடிவங்களில் அமைத்து விளையாடு தல்; a children's play.

[சில்–சில்லி]

சில்லாக்கு, தெல்லாக்கு, எத்துமாங் கொட்டை, பாண்டி, ஒண்ணான் இரண்டான், வட்டு என்றும் அழைக்கப்படுகிறது.

சில்லியம்புள்ளி *cilliyam-pulli,* பெ.(n.) பெரிய குளம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Periyakulam Taluk.

[சில்லியன்+பள்ளி]

சிலட்டூர் *cilattūr,* பெ.(n.) அறந்தாங்கி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[சில்+ஊற்றூர்]

சிலம்பு *cilambu,* பெ.(n.) பரத நாட்டியத்தைக் குறிக்கும் பெயர்; name of Bharata natya.

சிலாத்தணி *cilattani,* பெ.(n.) அறந்தாங்கி வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Arantangi Taluk.

[சிலாத்து+அணி]

சிலாவடிவம் *cilā-vadivam,* பெ.(n.) முருகனின் சிற்ப வடிவங்களுள் ஒன்று; a feature in sculpture.

[சிலை+வடிவம்]

சிலுப்புத்தண்ணீர் *cilūppu-t-tānnīr,* பெ.(n.) வயலில் தண்ணீர் பாய்ச்சுதல்; sprinkle irrigation.

மறுவ. எடுப்புத்தண்ணி

[சிலுப்பு+தண்ணீர்]

சிலுப்பி *ciluppi,* பெ. (n.) முதுகுளத்தூர் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Mudukulattur Taluk.

[சிலம்பு–சிலுப்பி]

சிலுவாய் *ciluvāi,* பெ. (n.) வாயின் ஓரம்; edge of mouth.

[கீள்–சீள்–சிலுவாய்]

சிவ்வாடா *civvāḍā,* பெ.(n.) திருத்தணி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tiruttani Taluk.

[செவ்வன்+பாடி]

சிவக்கம் *civakkam,* பெ.(n.) சிதம்பரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Chidambaram Taluk.

[செவக்கல்–சிவக்கம்]

சிவகிரி *civagiri,* பெ.(n.) ஈரோடு வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Erode Taluk.

[சிவன்+கிரி]

சிவபுராணி *civa-purāni,* பெ.(n.) கும்ப கோணம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kombakkonam Taluk.

[சிவன்+புராணி]

சிவனம் *ciyānam,* பெ.(n.) வந்தவாசி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Wandiwash Taluk.

[சிவண்ண–சிவனம்]

சிவிகைப்புறம் *civigai-p-puram,* பெ. (n.) கோயில் பல்லக்குச் செலவுக்கு விடப்பட்ட நிலம்; free land for the expense of temple palanquin. (தெ.கோ.சா. 3:2).

[சிவிகை + புறம்]

சிவிலாதி *civilādi,* பெ.(n.) பரமக்குடி வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Paramagudi Taluk.

[செவலை+ஆதி]

சிமிழி *cimili,* பெ.(n.) நன்னிலம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Nannilam Taluk.

[குமிழ்–சிமிழ்–சிமிழி]

சியெட்டி *ciyetti,* பெ. (n.) காஞ்சிபுரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[தீ–சீ+எட்டி]

சிற்றுடுக்கை *cirrudukkai,* பெ.(n.) உடுக்கை வகையினுள் ஒன்று; musical instrument.

[சிறு+உடுக்கை]



சிற்றுளம் *cirrulam,* பெ. (n.) குறுகிய மனம்; stunted mind. *"சிற்றுள மிலேச்சர் பொல்லா நற்கதி நவையை நூக்கி"* (நரி. 33).

[சிறு+உள்ளம்]

சிறுகளஞ்சி *cirukkalanji,* பெ. (n.) ஈரோடு வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Erode Taluk.

[சிறு+காளஞ்சி]

சிறுகளம்பூர் *cirukalambur,* பெ. (n.) வேலூர் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Vellore Taluk.

[சிறு+களம்பூர்]

சிறுகிணர் *cirukinār,* பெ. (n.) தாராபுரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Tharapuram Taluk.

[சிறு+கிணறு]

சிறுபாகல் *cirupāgal,* பெ. (n.) காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[சிறு+(வாயில்)பாகல்]

சிறுவத்தி *ciruvatti,* பெ.(n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvādānai Taluk.

[சிறு+அத்தி]

சிறுவளி *ciruvali,* பெ. (n.) திருவாடானை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Thiruvadanai Taluk.

[சிறு+வெளி]

சிறுவாடு *ciruvādu,* பெ. (n.) கணவனுக்குத் தெரியாமல் மனைவி சேர்க்கும் பணம்; small savings of wife.

[சிறு+(படு–பாடு)வாடு]

சிறுவிடாகம் *ciruvidāgam,* பெ. (n.) வாலாசா வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in wallajah Taluk.

[சிறு+விடாகம்]

சிறுவீடு *ciru-vidu,* பெ. (n.) அப்பா அம்மா விளையாட்டு, சோறாக்கி விளையாடுதல் பொண்ணு மாப்பிள்ளை விளையாட்டு என்று அழைக்கப்படும் பெற்றோர் தம் வாழ்க்கை யினைக் கவனித்தறிந்து ஆடும் விளையாட்டு; a children's play.

[சிறு+வீடு]

சிறுவை *ciruvai,* பெ. (n.) விழுப்புரம் வட்டத் திலுள்ள சிற்றூர்; a village in Villupuram Taluk.

[சிறு+வயல்]

சிறுவாய்உளி *ciru-vāy-uli,* பெ. (n.) துளை போடுவதற்குப் பயன்படும் அரை அங்குல அகலமுள்ள உளி; a small chisel.

[சிறு+வாய்+உளி]

சிறுவிளையாட்டு *ciru-vilaiyāttu,* பெ. (n.) கடற்கரையில் நண்டுகள் அடிக்கடி மறை தலைக் காண்பது; a children's play. *"செப்பேர் ஈரளை அலவற் பார்க்கும் சிறு விளையாடல்".*

[சிறு+விளையாட்டு]

சிறுவேடல் *ciruvēdal,* பெ. (n.) காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Kanchipuram Taluk.

[சிறு+ஏடல்]

சிறை *cirai,* பெ. (n.) தோற்று நிரப்பப்படாத வெற்றுக் குழிக்குப் பெயர்; an empty pot.

[செறு–சிறை]

சின்னப்பிள்ளையாண்டான் *cinna-p-pillai yāṇḍāṉ,* பெ. (n.) அரண்மனை ஊழியன்; palace employee. (தெ.கோ.சா. 3:2).

[சின்னப்பிள்ளை + ஆண்டான்]

சின்னம் *ciṉṉam,* பெ. (n.) நாட்டுப்புற இசைக் கருவியினுள் ஒன்று; a musical instrument.

[சன்னம்+சின்னம்]

சின்னத்தாரை *ciṉṉa-t-tārai,* பெ. (n.) ஒருவகையான இசைக்கருவி; a musical instrument.

[சின்ன+தாரை]

சின்னதாளம் *ciṉṉatāḷam,* பெ. (n.) குறத்தி யாட்டத்தில் இடம்பெறும் இசைக் கருவி; a musical instrument.

[சின்ன+தாளம்]

சின்னிலுட்டை *ciṉṉiluṭṭai,* பெ. (n.) திண் டுக்கல் வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in Dindigul Taluk.

[சின்ன–(இலுப்பை)இலுட்டை]

சின்னுக்கோழி *ciṉṉu-k-kōḻi,* பெ. (n.) சிறிய புள்ளிகளை உடைய கோழி; a hen.

[சின்னு+கோழி]

சினாம்பு *ciṉāmbu,* பெ. (n.) மீனின் செதிற் பகுதி (நெ.வ.வ.சொ.155.); fin.

[சிதாம்பு–சினாம்பு]

சினுக்கு *ciṉu-k-kū,* பெ. (n.) இழைகள் தாறு மாறாக இருத்தல் (நெ.தொ.க.); improper thread line.

[சினு–சினுக்கு]

மகளிர் தம் கூந்தலிற் சிக்குக் களைதற்குப் பயன்கொள்ளும் இரும்பொன் *ஊசி.*

சீக்குச்சி பெ. (n.) துடைப்பக் குச்சி; broom stick.

[சீ+குச்சி]

சீதம் *cīdam,* பெ. (n.) குளிர்ச்சி; coolness. *"சொற்படு சீதத்தொடு சுவை உடைத்தாய்"* (மணிமே. 27 : 121.)

[சீது–சீதம்]

சீந்தலான் *cīndalāṉ,* பெ.(n.) உயரத்தில் நெடுந்தொலைவு விரைந்து பறக்கும் குறுங்கண் பறவை; a bird flying to long distance.

[சீந்தல்+ஆன்]

சீமாறு *cīmaṟu,* பெ. (n.) துடைப்பம்; broom stick.

[சீ+மாறு]

சீர்மானம் *cīrmāṉam,* பெ. (n.) ஓர் இயங்கியின் எந்திரம் உள்ளிட்ட அனைத்து உறுப்புகளும் நன்கு செயற்படுதற்கு ஏற்ற வகையில் அனைத்துப் பகுதிகளையும் (நீராட்டு, நெய்யாட்டு உட்பட) செப்பம் செய்து ஒழுங்குபடுத்துதல்; servicing a vehicle examinating of a vehicle or machine followed by any work that is necessary to keep it operating well.

சீர்மானம் செய்தல் *cīrmanamcē-,* செ.கு.வி. (v.i.) **சீர்மானம் பார்க்க;** see cirmānam stick.

[சீ+மாறு]

சீருத்திரர் *cīruttirar,* பெ. (n.) 1. சிவனடியார்; devotee of Śiva. 2. ஆளுவ (நிர்வாக)க்குழு; executive or managing committee. (தெ.கோ.சா. 3:2).

[சீரு + உத்திரர்]

சுண்டான் *cuṇḍāṉ,* பெ. (n.) எலி வகைகளி லொன்று; a kind of rat.

[சுண்டு–சுண்டான்]

சுணை *cuṉai,* பெ. (n.) கத்தரிக்காயில் விழும் நோய்; a disease affecting brinjal.

[சுள்–சுணை]

சுமாலி *cumāli,* பெ. (n.) கள்; toddy. *"பாலி சுமாலி... கள் பெயர் என அறைவர்"* (நி.க.தி. 6:113)

[சுமல்–சுமாலி]

சுருக்க *curukka,* வி.எ. (adv.) விரைவாக; fast. *"வெளியில் போனால் சுருக்க வந்திடு"* (பே.வ.).

[சுரு–சுருக்க]

சுருதிமான் *curūdimān,* பெ. (n.) குமுகாயத்தை ஆளுவ (நிருவாக)ம் செய்வோர்; one who supervise the society.

[சுருதி + மான்]

சுருள்கத்தி *curul katti,* பெ. (n.) அகலம் குறைந்த நீண்ட இரும்புத் தகடுகள் பொருத்திய கைப்பிடியுள்ள போர்க்கருவி; whirling blade weapon. சுருள்கத்தியைச் சுழற்றினால் அதில் பொருத்தப்பட்ட தகடுகள் பல கோணங்களில் சுழன்று எதிரிலிருப்பவரைத் தாக்கும்.

[சுருள்+கத்தி]

சுருளமுது *curuḷamudu,* பெ. (n.) தாம்பூலம், betel nut. (தெ.கோ.சா. 3:2)

[சுருள் + அமுது]

சுவாங்கி *cuvāṅgi,* பெ. (n.) கத்தூரி மஞ்சள்; musk termaric. *"சுவாங்கி கத்தூரி மஞ்சள்"* (நி.க.பி.9:355)

[சுவங்கு–சுவாங்கி]

சுழிபார்–த்தல் *cuḻipār-,* செ.கு.வி. (v.t.) மாடுகள் வாங்கும் போது அதன் மயிர்ச் சுழியைப் பார்த்து வாங்குதல்; to look at the marks on cattle.

[சுழி+பார்]

சுளுந்துரை *culundurai,* பெ.(n.) எரியும் தீப்பந்தக்காலின் முன் பட்டிமன்றவாதத்துக்கு பாட்டும் உரையுமாக அறை கூவல் விடுத்தல்; challenging remarks of song and prose inviting the opponents to participate in a open debate sitting under the light of the fire pole erected.

[சுளுந்து+உரை]

சுற்றுவாரி *cūṟṟu-vāri,* பெ. (n.) கல்லூரி; college. *"கல்வி சுற்றுவாரி கல்லூரி ஆகும்"* (நி.க.பி.4:223)

[சுற்று+வாரி]

சுனைப்பு *cuṉaippu,* பெ. (n.) சுறுசுறுப்பு; smartness. *"சுனைப்பு இல்லாத பையன்"* (பே.வ.)

[சுனை–சுனைப்பு]

சூளைதிரை *cūḷaitirai,* பெ. (n.) பரத்தையர் செலுத்தும் வரி; tax for whores.

[சூளை + திரை]

சூறைக்காய் விடுதல் *cūṟai-k-kāyviḍudal,* பெ. (n.) ஊர்வலத்தின் போது நிலக்கடலை, முந்திரிக்கொட்டை முதலியவற்றை வாரி இறைத்தல்; to throw edibles during processed. 2. சிற்றூர்த் தெய்வங்களுக்கு நேர்த்திக்கடன் பொருட்டு சிதறு தேங்காய் உடைத்தல்; to break coconut on a vow to village deity.

[சூறை+காய்+விடு–]

செக்கர்மேகக்குறி *cekkar-mēga-k-kuṟi,* பெ. (n.) மழை பெய்வதற்கான அறிகுறி; Indication of rain falling.

[செக்கர்+மேகம்+குறி]

செங்கீரி *ceṅgiri,* பெ. (n.) சிவப்புக் கீரிப்பிள்ளை; red or brown mungoose-herpestus fuscus. (சா.அக.)

[செம்+கீரி]

செங்குடி *cšeṅkuḍi,* பெ. (n.) பாண்டிய நாட்டுச் சிற்றூர்; a village in pandya territory. *"படைக்கமலவனச் செங்குடிக் கௌசிகன் பராந்தகன்"*

[செங்கம் + குடி]

செங்குளம்பு *cenkulambu*, பெ. (n.) மாட்டின் உடம்பும் குளம்பும் ஒரே நிறமுடையனவாக இருத்தல்; same colour for ox and its hoof.

[செம்+குளம்பு]

செட்டளூர் *cettalūr*, பெ. (n.) பல்லவர் நாட்டுச் சிற்றூர்; a village in Pallava territory. (தண்.செ.164) *"வாதுல கோத்திரத்து ஆலத் தம்ப சூத்திரத்து செட்டளூர் சுயசருபவ செந்த்திரு வேதிபட்டச் சோமாசி பங்கொன்று"*

[செட்டி+ஆளூர்]

செட்டுகந்தாடை *cettukandādai*, பெ. (n.) கோயில் விளை நிலம்; temple fertile land. (தண்.செ.150) *"வாதுல கோத்திரத்து ஆலத் தம்ப சூத்திரத்து காரம்பிச் செட்டுகந்தாடை வாசுதேவச் சதுர்வேதி பங்கொன்று"*

[செட்டு + கந்தாடை]

செது *cedu*, பெ. (n.) குற்றம்; blemish fault *"செது மதி மிகு சமணரும்"*.

[சீத்தை–செது]

செந்தடி *centadi*, பெ. (n.) சிவந்த இறைச்சி; redish flesh *"செந்தடிக் குருதிப் பைந் நிணக் கொழுங்குடர்"* (பெருங். 52:9)

[செம்+தடி]

செந்தரை *cendarai*, பெ. (n.) பாலை, நிலம்; desert. *"செந்தரைக் குருதிப் பைந் நிணக் கொழுங்குடர்"* (பெருங். 52:9)

[செம்+தரை]

செந்துவரை *cenduvarai*, பெ. (n.) துவரை; red gram. (சா.அக.)

[செம்+துவரை]

செந்நிலத்தாமரை *cen-nila-t-tāmarai*, பெ. (n.) ஒரு வகை முளரி (ரோசா); a variety of rose. (சா.அக.)

[செம்+நிலம்+தாமரை]

செப்பட்டை *ceppattai*, பெ.(n.) 1. தோள்பட்டை; upper arm. 2. கன்னம்; cheek.

[சேர்+பட்டை–சேர்ப்பட்டை–செப்பட்டை]

செப்புக்குளிசம் *ceppu-k-kulisam*, பெ. (n.) செப்புத் தகட்டில் மந்திரவெழுத்து பதித்துத் திரட்டிய தகடு; an amuletmade of rolled copper plate on which is inscribed magic lines and letters and worn as a remedy against evil or mischief. (சா.அக.)

[செம்பு+குளிசம்]

செப்புச்சிமிழ் *ceppu-c-cimil*, பெ. (n.) செம்பி னாற் செய்த சிறிய பெட்டி; small box made of copper. (சா.அக.)

[செம்பு+சிமிழ்]

செம்படவர்கருவிகள் *cembadavarkaruvigal*, பெ. (n.) மீனவர்கள் மீன்பிடிக்க பயன்படுத்தும் கருவிகள்; fishermen's tools.

[செம்படவர்+கருவிகள்]

செம்பரிதி *cem-paridi*, பெ. (n.) சூரியன்; sun. *"செம்பரிதி கடல் அளித்த செக்கர் ஒளி"* (பெரிய. 3695).

[செம்+பரிதி]

செம்பல் *cembal*, பெ. (n.) அரத்தம்; blood. (சா.அக.).

[செம்–செம்பல்]

செம்பழம் *cembalam*, பெ. (n.) 1. பழுக்கும் நிலையிலுள்ள காய்; fruit almost riped. 2. எலுமிச்சை பழம்; lime fruit. (சா.அக.).

[செம்–பழம்]

செம்பிலியாடு *cembili-y-ādu*, பெ. (n.) செம் மறியாடு; a brown sheep. (சா.அக.).

[செம்பல்–செம்பிலி+ஆடு]



செம்புக்கலம் *cembu-k-kalam*, பெ. (n.) செம்புப் பாத்திரம்; copper eating dish. (சா.அக.).

[செம்பு+கலம்]

செம்புக்கலுவம் *cembu-k-kaluvam*, பெ. (n.) கல்லம்மி; grinding stone. (சா.அக.).

[செம்பு+கலுவம்]



செம்புவட்டகை *cembu-vaṭṭagai*, பெ. (n.) செம்பினாற் செய்த சிறு கிண்ணம்; small copper basin. (சா.அக.).

[செம்பு+வட்டகை]

செம்பூமி *cembūmi*, பெ. (n.) செம்மண்; red earth, soil. (சா.அக.).

[செம்+பூமி]

செம்போத்து *cempottu*, பெ.(n.) இறக்கை மட்டும் காவி நிறமுள்ள பறவை; a bird has brown wings.

[செம்+போத்து]

செம்போத்துமாடு *cembōttu-māḍu*, பெ. (n.) கருமையுஞ் சிவப்புங் கலந்த மாடு; the ox coloured mingled in black and red.

[செம்+பூத்து+மாடு]

செம்மட்டைமயிர் *cemmaṭṭai-mayir*, பெ. (n.) கபில நிறமான மயிர்; hair brown in colour. (சா.அக.).

[செம்பட்டை+மயிர்]

செம்மண்குறி *cemmaṇ-kuṟi*, பெ. (n.) பாவில் செம்மண்ணால் குறிக்கப்பட்ட அடையாளம்; a symbol marked in loom by red soil.

[செம்மண்+குறி]

செம்மணல் *cemmaṇal*, பெ. (n.) சிவப்பு மணல்; red sand.

[செம்+மணல்]

செம்மரு-தல் *cemmaru-*, செ.கு.வி. (v.i.) களிப்படைதல்; to enjoy. *"மதுவுண்டு செம் மருந்தண் சுரும்பு சுழல்"* (பெரியபு. ஆனாய. 20).

[செம்முறு–செம்மறு–செம்மரு]

செம்மலர் *cemmalar*, பெ. (n.) 1. சிவந்த மலர்; reddish flower. 2. நெற்றி மாலை; fore head garland. *"அம்மலரடியுங்கையு மணி கிளர்பவ ளவாயுஞ்–செம்மலர் நுதலுநாவும்"* (சிந்தா. இலக்கணை. 69).

[செம்+மலர்]

செம்மறிக்கடா *cemmaṟi-k-kaḍā*, பெ. (n.) செம்மறியாட்டின் ஆண்; its horn is angular and turned down words. (சா. அக.).

[செம்+மறி+கடா]



செம்மறிக்குட்டி *cemmaṟi-k-kuṭṭi*, பெ. (n.) செம்மறியாட்டுக்குட்டி; lamb. (சா. அக.).

[செம்+மறி+குட்டி]

செம்மறிச்சாணி *cemmaṟi-c-cāṇi*, பெ. (n.) செம்மறியாட்டுப் புழுக்கை; excrete (dung) of

the red sheep is very useful as manure. (சா. அக.).

[செம்மறி+சாணி]

செம்மறியாட்டிறைச்சி *cemmari-y-āṭṭiṟaicci*, பெ. (n.) உணவாகப் பயன்படும் ஆட்டின் இறைச்சி; a sort of eczema. (சா.அக.).

[செம்மறி+ஆடு+இறைச்சி]

செம்மாந்து *cemmāndu*, வி.எ. (adv.) பெரு மிதமாக; a sit an exalted manner. அடி யார்கள் இறைவன் மேல் அசையா நம்பிக்கை வைத்து செம்மாந்து திரிந்தனர்.

[செம்மா–செம்மாந்து]

செம்மார் *cemmār*, பெ. (n.) திருநெல்வேலி வட்டத்திலுள்ள ஓர் இனத்தினர்; a tribe living in Tirunelveli Dt.

[செருமான்–செருமார்–செம்மார்]

செம்முகம் *cemmugam*, பெ. (n.) குரங்கு; monkey so called for its red face. (சா.அக.).

[செம்–முகம்]

செமத்தியாக *cemattiyāga*, வி.அ. (adv.) கடு மையாக; severely. *"கீழே விழுந்து செமத்தி யான அடி"*.

[சுமத்தி–செமத்தி+ஆக]

செய்திகொன்றோர் *ceydi-konṟōr*, பெ. (n.) நன்றியில்லாதவர்; ungreateful persons. *"ஒருவன் – செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென"* (புறநா. 34).

[செய்தி+கொன்றோர்]

செய்து *ceydu*, வி.எ. (adv.) இறந்தகாலத் தெரி நிலை வினையெச்ச வாய்பாட்டி னொன்று; grammatical classification. *"செய்துசெய்பு செய்யாச் செய்யூச் செய்தென"* (நன். 343.)

[செய்–செய்து]

செய்யது *ceyyadu*, பெ. (n.) சிவப்புப் போர்வை; red colour carpet. *"செய்யது போர்த்தான் போல்"* (கள. 32.)

[செம்–செய்–செய்யது]

செய்யர் *ceyyar*, பெ. (n.) நேர்மையுள்ளவர்; honest person.

[செம்–செய்–செய்யர்]

செய்யால் *ceyyāl*, பெ. (n.) அழிந்து போன காடு; destroyed forest. *'நம்ம புஞ்சை தவிர நாலு பக்கமும் செய்யலு'*.

[சாய்–சய்யல்–செய்யால்]

செய்யொளி *cey-y-oḷi*, பெ. (n.) 1. வைடூரியம்; cat eye. 2. உண்டாக்கிய வெளிச்சம்; a light contrived by art or skill as electric light, gas light etc. (சா. அக.).

[செம்–செய்+ஒளி]

செயற்படுத்து–தல் *ceyal-paḍuttu-*, செ.கு.வி. (v.i.) நடைமுறைப்படுத்துதல்; enforce, implement. பள்ளி மாணவர்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டம் இந்த ஆண்டு முதல் செயற்படுத்தப்படும்.

[செயல்+படுத்து]

செயற்பாடு *ceyal-pāḍu*, பெ. (n.) செயற்படு கின்ற முறை; style of functioning. நிருவா கத்தின் செயற்பாட்டைக் கண்டித்துப் பேசினார்.

[செயல்+பாடு]

செயற்கைப்பல் *ceyaṟkai-p-pal*, பெ. (n.) செய் யப்பட்ட பல்; artificial tooth. 2. பொய்ப் பல்; false tooth (சா. அக.).

[செயற்கை+பல்]

செயற்கையுயிர்ப்பு *ceyaṟkai-y-uyirppu*, பெ. (n.) செயற்கை மூச்சு; artificial respiration. opp. to iyaṟkai-y-uyirppu. (சா. அக.).

[செயற்கை+உயிர்ப்பு]

செரங்கை *ceraṅgai*, பெ. (n.) சிரங்கை; handful. செரங்கை (கொ.வ.) (சா. அக.).

[சிறங்கை–செரங்கை (கொ.வ.)]

செரளியாடு *ceraḷi-y-āḍu*, பெ. (n.) உடல் வெண்மையும் மேற்புறம் சிவப்பு அல்லது வேறு

நிறங்கொண்ட ஆடு; a goat having its body white and top is red or some other colours.

[சரளி–செரளி+ஆடு]

செரிகுடல் *ceri-kuḍal,* பெ. (n.) உண்டவற்றை செரி மானமாக்கும் சிறுகுடல்; that part of small intestine in which the greater part of the food is digested and turned into chyme. (சா. அக.).

[செரி+குடல்]

செரிப்பு *cerippu,* பெ. (n.) செரிமானம்; digestion. (சா. அக.).

[செரி–செரிப்பு]

செருக்கல் *cerukkal,* பெ. (n.) 1. அலங் கரிந்தல்; to decorate. 2. மிக மகிழ்ச, bliss. "ஈசல சேவடி நிழலிற்றங்கள் கிளை யுடன் செருக்கி வாழ்வார்" (அருணாசலபு. தீர்த்த. 32.).

[செருக்கு–செருக்கல்]

செருக்கு *cerukku,* பெ. (n.) 1. அகந்தை; self conceited. "*மீளிமொய்ம்பின் மிகுவலி செருக்கி*" (பொருந. 140). 2. மயங்கி; confused. "உரவுச்சின முன்பாலுடல் சினஞ் செருக்கி" (குறிஞ்சி. 159).

[செரு–செருக்கு]

செருக்கிய *cerukkiya,* பெ.எ. (adj.) மயங்கிய (சிந்தா.); to be infatuated.

[செருக்கு–செருக்கிய]

செருப்படை *ceruppaḍai,* பெ. (n.) சிறந்த வீரர் களைக் கொண்ட படை; army of tried solidiers.

[செரு–படை]

செருப்பள்ளி *ceruppaḷḷi,* பெ. (n.) பல்லவர் நாட்டுச் சிற்றூர்; a village in pallava territory. "காசியப கோத்திரத்து ஆலத்தம்ப சூத்திரத்து செருப்பள்ளி நாராயணச் சடங்கவி பங்கொன்று" (தண். செ. 52.)

[செரு + பள்ளி]

செல்லடை-த்தல் *cellaḍai-.* செ.கு.வி (v.i.) கடனை தீர்த்தல்; to repay debit.

[செல்+அடை–]

செல்லூர் *cellūr,* பெ. (n.) மதிச்சயம் என்னும் ஊருக்கு மேற்கும், மதுரைக்கு வடக்குமுள்ள ஊர்; the village situated by west ward of madiccayam and north word of Madurai.

[செல்+ஊர்]

செல்வப்பேச்சு *celva-p-pēccu,* பெ. (n.) மழலைப் பேச்சு; drattling speech as child. (சா. அக.).

[செல்வம்+பேச்சு]

செல்வு *celvu,* பெ.எ (adj.) 1. அழகு; beauty. 2. காலம்; time. 3. பருவம்; season. 4. நிலைமை; state. 5. மொக்கு; bud. 6. மணம்; smell. 7. **செல்வரளி** பார்க்க; see šev-v-araḷi. 8. **செம்புகுடத்தி** பார்க்க; see šembu-kuḍatti.

[செல்–செலவு]

செலவிடல் *celaviḍal,* பெ. (n.) எறிதல் (பிங்கல. 2162); throw.

[செல்ல–செல+(வரு)விடல்]

செவ்வழல் *cev-v-aḻal,* பெ. (n.) விளக்கு; lamp. "*செந்தீச் செவ்வழல் தொடங்க*" (கலி.).

[செம்–செவ்+அழல்]

செவ்வாய்ப்புண் *cevvāy-p-puṇ,* பெ. (n.) வாய் வேக்காளம்; sore through inflam-mation of the mouth. (சா. அக.).

[செவ்+வாய்+புண்]

செவ்விரத்தம் *cev-v-irattam,* பெ. (n.) தூய் மையான அரத்தம்; pure aerated red blood. (சா. அக.).

[செவ்–இரத்தம்]

செவ்வுள்பட்டை *cevvuḷ-paṭṭai,* பெ. (n.) சிவப்பும் வெண்மையும் கலந்த நிறமுடைய மாடு; red and white mingled Ox.

[செவ்+வெள்+பட்டை]

செவிக்குறும்பி *cevi-k-kūṟumbi,* பெ. (n.) காதழுக்கு; ear wax.

[செவி+குறும்பி]

செவிச்சளி *cevi-c-caḷi,* பெ. (n.) காதினின்று வடியும் சளி நீர்; mucous discharge from the ear. (சா.அக.)

[செவி+சளி]

செவித்தாரை *cevi-t-tārai,* பெ. (n.) காதின் வழி; auditory passage of the ear. (சா.அக.)

[செவி+தாரை]

செவித்துவாரம் *cevi-t-tuvāram,* பெ. (n.) 1. செவியின் துளை; cavity of the ear. 2. காதின் வெளி அல்லது உட்துளை; the external and or internal opening of the ear. 3. நடுக்காது; middle ear. (சா.அக.)

[செவி+துவாரம்]

செவிப்புலன் ஒடுங்கல் *cevi-p-pulaṉoḍuṅgal,* பெ. (n.) 1. காதடைத்தல்; deaf. 2. காதால் அறியும் ஓசை அற்றுப் போகை; loss of sense of hearing. 3. ஒகத்தில் ஐம்புலன் ஒடுங்குங் காலத்து வெளி சத்தம் கேளாதிருக்கை; that stage in the yoga practice when the external sound reaching the ears is not perceived owing to the conquering of the five sense. (சா.அக.)

[செவி+புலன்+ஒடுங்கல்]

செள்ளை *ceḷḷai,* பெ. (n.) 1. உடன் பிறந்தவள்; sister. 2. பெண்களுக்கு வழங்கப்பட்ட செல்லப்பெயர்; pet name of female.

தெ. செள்ள

[செள்–செள்ளை]

செற்றார் *ceṟṟār,* பெ. (n.) கொலை செய் வோர்; murderer. *"வேளும்பட விழியாற் செற்றார்க்கு"* (கந்தரல. 58.)

[செறு–செற்றார்]

செறித்து *ceṟittu,* வி.எ. (adv.) அடக்கி; restrain. *"செய்பவல்வன் மையிற் செறித்தி யான் கடவலின்"* (குறிஞ்சிப். 12.)

[செறி–செறித்து]

சென்னியெரி *ceṉṉi-y-eri,* பெ. (n.) தலையி லுண்டாகும் எரிச்சல்; burning sensation in the heat. (சா. அக.)

[சென்னி+எரி]

சென்னிவருத்தி *ceṉṉi-varutti,* பெ. (n.) தலையோடு; skull. (சா. அக.)

[சென்னி+வருத்தி]

சென்னிவலி *ceṉṉi-vali,* பெ. (n.) தலைவலி; head ache. (சா. அக.)

[சென்னி+வலி]

சென்னிவலை *ceṉṉi-valai,* பெ. (n.) 1. தலை மண்டையோடு; the skull. 2. மூளை; division of the brain behind the cerebrum. (சா. அக.)

[சென்னி+வலை]

சேடக்குடும்பி *cēḍa-k-kuḍumbi,* பெ. (n.) கோவில் வழிபாடாற்றுவோன்; temple - priest, as belonging to a family of devotees. *"சேடக்குடும்பியின் சிறுமகள்"* (சிலப். 30, 52.)

[சேடம்+குடும்பி]

சேடசுரம் *cēḍa-curam,* பெ. (n.) கோழைக் காய்ச்சல்; phlegnatic. (யாழ். அக.)

[சேடம்+சுரம்]

சேடசேடிபாவம் *cēḍa-šēḍi-pāvam,* பெ. (n.) 1. ஆண்டானடிமைத் திறம்; the relation of master and servant. *"முதல்வனுக்குச் சேட சேடிபாவத்தால் ஆகற்பால தாகிய அடிமையாம் என்க"* (சி.போ.பா. 9,3 பக். 201. சுவாமி. பதிப்.) 2. அறநெறி தவறாதிருக்குந் தன்மை; the relation of disposer and disposable.

[சேடன்+சேடி+பாவம்]

சேடர் *cēḍar*, பெ. (n.) 1. அடிமைக்காரர்; slaves. 2. அறிவுடையோர், பெரியோர்; intelligent persons. *"வென்றி வேளருளாற் பெற்ற-சேடரின் மிக்க செய்மைத் திண்ணன்"* (பெரியபு. கண்ணப்ப. 29). 3. ஏவல் செய்வோர்; attendant, servant. 4. நெய்வாரினொரு சரார்; one of the group of weavers.

[சேடு-சேடர்]

சேரலார் *cēralār*, பெ. (n.) பகைவர்; enemy. *"தற்சேரலாரைத் திறைகவர்ந்துற்றன்"*.

[சேர்+அல்+ஆர்]

சேறடி *cēṟaḍi* பெ. (n.) ஏரி மதகின் அடிப் பகுதி யில் தண்ணீர் வெளியேறும் சாளரம், திறந் தால் சேறு சகதி வெளியேறும்படி அமைந்த அமைப்பு; opening in near sluice.

[சேறு+அடி]

சொக்கிடல் *cokkiḍal*, பெ. (n.) நோட்ட மிடுகை; watching. *"சொக்கிட்ட ரமனை புக்கு"* (பட்டினத்துப்பிள்ளை).

[சொக்கு+இடு]

சொடுக்குப்போடு-தல் *coḍukku-p-pōḍu-*, செ.குவி. (v.i.) விரல் ஒட்டி ஓசை எழுப்புதல்; to make a noise by eroisting two fingers suddenly.

[சொடுக்கு + போடு (சொடுக்கு – ஒலிக் குறிப்பு)]

சொத்தைக்காய் *cottai-k-kāy*, பெ. (n.) புழுப்பாய்ந்த காய்; warm eaten fruit. (சா. அக.)

[சொத்தை+காய்]

சொத்தைப்பாக்கு *cottai-p-pākku*, பெ. (n.) 1. புழு அரித்த பாக்கு; worm eaten arecanut. 2. **சொள்ளைப் பாக்கு** பார்க்க; see coḷḷai-p-pākku. (சா. அக.)

[சொத்தை+பாக்கு]

சொரிகுட்டம் *cori-kuṭṭam*, பெ. (n.) 1. அரத்தம் வடியும் குட்டம்; leprosy attended with bleeding from sores.

[சொரி+குட்டம்]

சொல்மறதி *col-maṟadi*, பெ. (n.) பேசத் தொடங்கும் போது வார்த்தைகளை மறத்தல்; forget fulness of words when attempting to speak. (சா. அக.)

[சொல்+மறதி]

சொல்மாறாட்டம் *col-māṟāṭṭam*, பெ. (n.) 1. வாய் குளறல்; blabbering. 2. தடுமாறிப் பேசுகை; incoherent talk. (சா. அக.)

[சொல்+மாறாட்டம்]

சொள்ளைப்பாக்கு *coḷḷai-p-pākku*, பெ. (n.) சொத்தைப்பாக்கு; worm eaten arecanut. (சா. அக.)

[சொள்ளை+பாக்கு]

சொளகு *coḷagu*, பெ.(n.) மூங்கில் கணுவில் வெட்டிச் செய்த சிறிய முகத்தல் அளவுக் கருவி; a small cubic measure made of bamboo.

[சுளகு-சொளகு]

சொற்கருவி *coṟ-karuvi*, பெ. (n.) பேசுவ தற்கு ஆதாரமாயுள்ள உறுப்புகள்; organs facilitating speech as lips tongue, teeth etc. (சா. அக.)

[சொல்+கருவி]

சொறண்டல் *coṟaṇḍal*, பெ. (n.) தேய்க்கை; scraping (சா. அக.)

[சுரண்டல்-சொறண்டல்]

சொறிகுட்டம் *corikuṭṭam*, பெ. (n.) காயம் உண்டாகாமலே உடம்பு முழுவதும் எரிச்ச லுண்டாக்கும் ஒரு வகைக் குட்டம்; a kind of leprosy with diffuse papillary eruption with out ulceration on the entire surface of the body marked by intense itching and burning sensation. (சா. அக.)

[சொறி+குட்டம்]

சொறிகுரு *coṟi-kuru*, பெ. (n.) தவிடுபோல் உதிரும் பொடுகு; brawney scales scruf. (சா. அக.)

[சொறி+குரு]

சொறுமாட்டு *coru-māttu,* பெ. (n.) நிலுவை; balance. *"பொன்கொண்டு எப்பேர்ப்பட்ட இறையுஞ் சொறு மாட்டுங் காட்டப்பெறாதோமாக"* (தெ. கல். தொ. 7. கல். 420.).

[சொறு+மாட்டு]

சொன்முரணணி *con-muranani,* பெ. (n.) ஒன்றற்கொன்று முரணிய சொற்றொடராய் வருவது; controversy sentence. *"அவரே கிழவனாகிப்பின் காளையாய் கிஞ்சுகச் செவ்வாய்க் குழவியாய் விளையாடிய கொள்கையைப் பகர்வாம்"* (திருவிளை. விருத்தம்.)

[சொல்+முரண்+அணி]

சோணை *cōnai,* பெ. (n.) சோழ நாட்டுப்பெண்; a woman belonging to chola country. "நாயகி நற்சோணை. சோழன். (ஆ.பா.) – சோணை. (பெ.பா).

சோணைக்கட்டு *cōnai-k-kattu,* பெ. (n.) கழிக்கப்பட்ட கரும்பின் சோணைகளைச் சேர்த்துக் கட்டிய கட்டு; a kind of knot especially tied around sugarcane leaves.

[சோனை+கட்டு]

சோணைகழி-த்தல் *cōnai-kali-,* செ.கு.வி. (v.i.) கரும்பின் உலர்ந்த தழைகளை நீக்குகை; to remove the dry leaves from sugarcane.

[சோணை+கழி]

சோணையறு-த்தல் *cōnai-yaru-,* செ.கு.வி. (v.i.) கேழ்வரகுப் பயிரில் தாள் நீளமாதலைக் குறைக்க அறுத்தல்; to cut the ragi leaves to control the crop growth.

[சோணை+அறு]

த

தகுதி *takuti,* பெ. (n.) 1. ஏற்றத்தாழ்வு (தராதரம்); distinction of rank, place class or other particulars. "தராதரற்தெரிந்து" (திருவிளை. திருமண.94). 2. நிலைப்பாடு; status, position.

[தகு-தகுதி]

தட்டுக்கூடை *tattu-k-kūdai,* பெ.(n.) கஞ்சி வடிக்க உதவும் மூங்கில் தட்டு; strainer made of bamboo.

மறுவ. சிப்பல்

[தட்டு+கூடை]

தடவை *tadavai,* பெ. (n.) முறை; time, occasion, turn. "இரண்டு தடவை வந்து போனான்".

[தரம்-தடம்-தடவை]

தண் குடிப்பு *tankudippu,* பெ. (n.) காய்ச் சாமலே ஓர் இரவு முழுவதும் குளிர்ந்த நீரிலூறப் போட்டு காலையில் இறுத்து எடுக்கும் குளிர்ச்சியான மருந்து (சீதகசாயம்); a cold infusion prepared by soaking. one part of drugs or drugs in bix parts of cold water for one night in the morning it is filtered and administered cold water infusion.

[தண்+குடிப்பு]

தண்டேந்தி *tandēnti,* பெ. (n.) தண்டு எனும் படைக்கலனை ஏந்தியவன் (வின்.); club.

மறுவ. தண்டாயுதபாணி

[தண்டு+ஏந்தி]

தண்மேகம் *tanmēkam,* பெ. (n.) நீரழிவு நோய் வகை (சீதமேகரோகம்); a kind of diabetes.

[*தண்+மேகம்*]

தண்ணன்னீர் *tannannir,* பெ. (n.) குளிர்ந்த நல்ல தண்ணீர் (சுத்தசலம்); pure cold water, as used for drinking purpose.

[*தண்+நன்+நீர்*]

தண்ணீர்க்காய் *tannir-k-kāy,* பெ.(n.) கோசக்காய், கரும் பூசணி (தர்ப்பூசணி); water melan.

[*தண்ணீர்+காய்*]

தணுப்பு இசிவு *tanuppuiśivu,* பெ. (n.) குளிர்ச்சியால் ஏற்படும் இசிவு நோய் (சீதகாத் திரம்); apoplexy due to extreme cold in the body.

[*தணுப்பு+இசிவு*]

தணுப்புமலடு *tanuppumaladu,* பெ. (n.) பெண்களுக்கு உண்டாகும் அறுவகை மலட்டு நோய்களுள் ஒன்று (சீதமலடு); one of the six varties of sterility in woman caused by extreme chillness of the body.

[*தணுப்பு+மலடு*]

தந்தையிலி *tantaiyili,* பெ. (n.) தந்தையில் லாதவன் (சேமண்டன்); one who has lost his father. "தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடி" (திருவா.).

[*தந்தை+(இல்லி)இலி*]

தப்பல் *tappal,* பெ. (n.) 1. பன்னிரண்டு வகை மகன்களுள் கணவன் வீட்டிலில்லாத காலத் தில் இன்னான் னென்றறியப்படாத ஒருவ னுக்கு ஒருத்தியிடம் தோன்றிய மகன் (கூடசன்); son born secretly of a woman when her husband absent, the real father being unknown one of twelve pulluran. 2. தவறானவன்; wrong person. "அவன் ஒரு தகப்பனுக்கு பிறந்தவன் இல்லை" (பே.வ.).

[*தப்பு–தப்பல்*]

தப்பளம் *tappalam,* பெ.(n.) கோணி ஊசி; needle of sack.

[*தைப்பு–தப்பளம்*]

தப்பிமறைதல் *tappimarai-,* செ.கு.வி. (v.i.) தந்திரமாய் மறைதல் (டிமிக்கி கொடுத்தல்); absconds, give one the slip.

[*தப்பி+மறைதல்*]

தப்பை *tappai,* பெ.(n.) மூங்கிற்பிளாச்சு; bamboo reed.

[*தப்பு–தப்பை*]

தமருகம் *tamarukam,* பெ. (n.) உடுக்கை என்னும் சிறுபறை (மடருகம்); a tabous or small drum shaped like an hour glass.

[*தமர்–தமருகம்*]



தமிழாகரர் *tamilākarar,* பெ. (n.) மருத்துவ நூல் செய்த ஒரு சித்தர் (டமரகர்); siddhar who is the author of a medical book.

[*தமிழ்+ஆகரர்*]

தரவல் *taraval,* பெ. (n.) ஒரு நிகழ்வு அல்லது ஒரு பொருள் குறித்த உண்மைச் செய்தி அல்லது அறியப்படும் செய்தி (தகவல்); facts or knowledge provided or learned information.

மறுவ. தகவல்

[*தரு–தரவல்*]

தலைக்காண்பு *talaik-kānpu,* பெ. (n.) பேறு காலத்தின் போது குழந்தையின் தலை வெளித் தோன்றுகை (சிரோதயம்); presentation of head in child birth.

[*தலை+காண்பு*]

தலைமையேவலன் *talaimaiyēvalan,* பெ. (n.) தலைமை ஏவலன் (தபேதார்); head peon.

[*தலைமை+ஏவலன்*]

தலைவெட்டு *talaivettu,* பெ. (n.) தலையை வெட்டுகை (சிரச்சேதம்); decapitation.

[தலை+வெட்டு]

தழற்கரி *talarkari,* பெ. (n.) நெருப்புக்கனல்; heat of burning.

த.வ. கனலி

[தழல்+கரி]

தற்கருமம் *tarkarumam,* பெ. (n.) சொந்த வேலை (சுவார்ச்சிதம்); one's own interest.

[தன்+கருமம்]

தற்பக்கக்கொள்கை *tarpakkakkolkai,* பெ. (n.) சொற்போரில் தன் கொள்கை (சுபட்சம்); one's own side in a debate, views or doctrines of one's own sect or party. 2. சிவஞான சித்தியாரில் சிவசமயத்திற்குரிய கொள்கையை உணர்த்தும் பகுதி; the portion of siva-ñana sittiyar that enunciated the principles of the saivam section.

[தன்+பக்க+கொள்கை]

தற்பட்டறிவு *tarpattarivu,* பெ. (n.) தன் நுகர்ச்சியால் உண்டாகும் அறிவு (சுவானுபூதிகம்); knowledge acquired through one's own experience.

[தன்+பட்ட+அறிவு]

தற்பீற்றல் *tarpirral,* பெ. (n.) வெளிப்பகட்டு (டம்பம்); being showy or vain, empty boast.

மறுவ. பகட்டுப் பேச்சு, பீற்றல்

[தன்+பீற்றல்]

தன்பாங்கு *tanpāngu,* பெ. (n.) யாரையும் சாராத நிலை (சுயேச்சை); independant. அவர் சென்ற தேர்தலில் தன்பாங்காக நின்று வெற்றி பெற்றார். தன்பாங்கு வேட்பாளரையும் கூட மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர். (உ.வ.).

[தன்+பாங்கு]

தன்மான இயக்கம் *tanmānaiyakkam,* பெ. (n.) தன்மானத்துடனும், பகுத்தறிவுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்ற கொள்கை யுடைய குழுகாய இயக்கம் (சுயமரியாதை இயக்கம்); a social movement based on one's faith in the dignity and reasoning power of the individual, self respect movement. தந்தை பெரியார் தன்மான இயக்கத்தை நடத்தி வெற்றி கண்டார்.

[தன்+மானம்+இயக்கம்]

தன்முனைப்பு *tanmunaippu,* பெ. (n.) இறுமாப்பு; conceit, feeling of elation.

[தன்+முனைப்பு]

தன்விருப்பு *tanviruppu,* பெ. (n.) தன்னுடைய முடிவு; one's inclination free will. 2. தன்பாங்கு எந்தக் கட்சியையும் சாராத நிலை (சுயேச்சை); independant candidate.

மறுவ. தன்னிச்சை, தன்பாங்கு

[தன்+விருப்பு]

தன்விழைவு மணம் *tanvilaivumanam,* பெ. (n.) தன்னை விரும்பி வந்த அரசர் கூட்டத்தில் தனக்குரிய கணவனைத் தலைவி தானே தெரிந்து மணந்து கொள்ளுகை (சுயம்வரம்); selection of husband by a princess herself at a public assembly of suitors.

மறுவ. விழைவு மணம், தன்தெரிவு

[தன்+விழைவு+வரவு]

தன்னறிவு *tannarivu,* பெ. (n.) தன்னுடைய அறிவு (சுயபுத்தி); one's own unaided sense. 2. மயக்கமற்ற அறிவு; solriety, cleanness of mind.

[தன்+அறிவு]

தன்னன் *tannan,* பெ. (n.) 1. மகன்; son. 2. ஆண்பாற் பெயர்; name of a person.

[தன்(தோன்றுதல், பிறத்தல்)+அன்]

தன்னவன் *tannan,* பெ. (n.) 1. தன்னைச் சார்ந்தவன்; one belongs to a group. 2. ஆண்பால் இயற்பெயர்; name of a person.

[தன்+அவன்]

தன்னாட்டான் *tannattān,* பெ. (n.) தனது நாட்டிற் பிறந்து வளர்ந்தவன் (சுதேசி); native son of the soil.

த.வ. மண்ணின் மைந்தன், தன்னவன்

[தன்+நாட்டான்]

தன்னாட்டுப் பண்டம் *tannāttuppandam,* பெ. (n.) தன் நாட்டிற் செய்த பொருள்

(சுதேசியம்); native goods.

மறுவ. உள்நாட்டுப் பண்டம்

[தன்+நாட்டு+பண்டம்]

தன்னிட்டம் *tanniṭṭam,* பெ. (n.) தானே தேடிய பொருள் (சுவார்ச்சிதம்); self acquisition.

[தன்+இட்டம்]

தன்னுரிமை அதிகாரம் *tannurimai adigāram,* பெ. (n.) தானே உரிமையோடு செயற்படுவதற்கு உரிய அதிகாரம் (சுயாதிகாரம்); autonomy.

[தன்+உரிமை+அதிகாரம்]

தன்னொறுப்பு *tannoṟuppu,* பெ. (n.) தவப் பாங்கு, புலனடக்கம்; self-denial, ascetecism.

த.வ. தன்னொறுப்பு

[தன்+ஒறுப்பு]

தாத்துமுள் *tāttumuḷ,* பெ.(n.) வண்டி அல்லது ஏர் ஒட்டுவோர் மாட்டை விரட்டுவதற்காக கையில் வைத்திருக்கும் முட்கோல்; a pin fixed stick used by the cart driver or ploughing farmer to drive the animal.

[துரத்து–தூத்து–தாத்து+முள்]

தாமரைக்கைகூப்பு *tamarai-k-kaikūppu,* பெ. (n.) வணங்குதற்கு அடையாளமாக தாமரை மொட்டு போல கைகளைக் குவிக்கை (கமல வருத்தனை); a gesture with both hand signifying obeysance consisting in folding one's hands so as to resemble a lotus bud.

[தாமரை+கை+கூப்பு]



தாள்தோய் தடக்கையன் *taḷ-tōy-taḍak kaiyan,* பெ. (n.) முழங்காலளவு நீண்ட கையுடைய பெருந்தோற்றமுடையோன் (ஆசானுவாகு); one whose arms reach his knees, indicating majesty of stature.

[தாள்+தோய்+தடம்+கை+அன்]

தாளுருவா *tāḷuruvā,* பெ. (n.) அமெரிக்கா, சிங்கப்பூர் முதலிய நாடுகளில் வழங்கும் காசு வகை (டாலர்); dollar, a coin in the currency of the U.S.A. straits settlements etc.,

[தாள்+உருவா]

தான்தோன்றி *tāntonṟi,* பெ. (n.) தானாக உண்டானது (சுயம்பு); self existant being anything considered to be uncreated. 2. இறைவன்; God. 3. நான்முகன்; Brahma. 4. அருகன்; Arhat. 5. இயற்கை; pecularity, nature. 5. மெய்நிலை; genuineness. 7. மடையன்; idiot.

[தான்+தோன்றி]

திக்கிலி *tikkili,* பெ. (n.) திக்கற்றவன்; one without resources of friends.

மறுவ. போக்கிலி

[திக்கு+இலி]

திங்கள் மண்டிலம் *tingaḷmanḍilam,* பெ. (n.) நிலவினது வட்டம் (சந்திர மண்டலம்); orb or disc of the moon.

[திங்கள்+மண்டிலம்]

திங்கள் மரபு *tiṅgaḷmarabu,* பெ. (n.) அரச குலம் மூன்றனுள் திங்களை குல முதல்வனாகக் கொண்ட பாண்டிய மரபு (சந்திரகுலம்); lunar race, as of king descended from the moon one of three irāša-kulam.

[திங்கள்+மரபு]

திரிந்தமைவு *tirindamaivu,* பெ.(n.) உயிரினங் களின் படிமுறை வளர்ச்சி; evolution.

மறுவ. கூர்தலறம், படிமலர்ச்சி, திரிபாக்கம்

[திரி > திரிந்த+அமைவு]

திரு *tiru*,பெ.(n.)1. மேன்மை, மதிப்பு;honour, respect.2. உயர்வு, செல்வம்;wealth.

எ.டு. திருக்குறள், திருநாவுக்கரசர்

[இ–இரை–திரை–திரு(திரட்சி, செல்வம்)]

திரு என்னும் சொல் தென் செல்லா, வட செல்லா? எனும் எதிராடல் நிகழ்ந்தபோது (1942) பாவாணர் தந்த விளக்கம்.

தமிழில் தற்பவமாக அதாவது வட சொல் திரிபாக அல்லது சிதைவாக ஒரு சாரரால் கருதப் படும் சொற்களில் திரு என்பதும் ஒன்று.

"நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து" என்று தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்திலும்.

"திருவுடைத் திருமனையது தோன்று கமழ் புகை" (379).

"விட்டோரைவிடாஅள் திருவே" (358)

"திருவில்லலல்லது கொலைவில் லறியார்" (20) என்று புறநானூற்றிலும்,

"திருச்செற்றுத் தீயுழி யுய்த்து விடும்" (188)

"சேருந் திறனறிந் தாங்கே திரு" (179)

"திருநுதல் நல்லவர் நாணுப் பிற" (1011)

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையார்"(1072) என்று திருக்குறளிலும்.

"இருநிலங் கடந்த திருமறு மார்பின்" (29) என்று பெரும்பாணாற்றுப்படையிலும்.

திருநுதல்7 (241) திருத்தக்கீர் (11:11), திருஞெமிர கலம் (28:157)திருமொழி (10:12) திருமகள் (51:21) திருமால்(17) என்று சிலப்பதிகாரத்திலும், இங்ஙனமே பிற நூல்களிலும் திரு என்னும் சொல் பல்வேறு பொருள்களில் வழங்கப்பட்டுள்ளது.

உலக வழக்கில் திருக்கலியாணம், திருக்கார்த் திகை,திருக்குறள், திருக்கூத்து, திருநாள், திருநீறு, திருப்பணி,, திருப்பதி, திருப்பதிகம், திருப்பாற்கடல், திருப்புகழ், திருமகள், திருமால், திருமங்கலம், திருமங் கலியம், திருமணம், திருமலை, திருமால், திருமுகம், திருமுடி, திருமுறை, திருமுன், திருமேனி, திருவடி, திருவரங்கம், திருவருள் திருவள்ளுவர், திருவாக்கு, திருவாசிகை, திருவாடுதண்டு, திருவாய்மலர்தல், திருவிழா, திருவிளக்கு, திருவிளையாடல், திருவுளம், திருவேங்கடம், திருவோடு முதலிய நூற்றுக்கணக் கான சொற்கள் தொன்று தொட்டு வழங்கி வரு கின்றன.

தெய்வப் பெயர், அடியார் பெயர், தெய்வத்தின் அல்லது தெய்வத் தொடர்புள்ள சினைப் பெயர், ஆடையணிப் பெயர், உணவுப் பெயர், வினைப் பெயர், இடப்பெயர், நூற்பெயர், முதலியன தம் தூய்மையைக் குறித்தற்குத் திரு என்னும் அடைபெறுவது தொன்று தொட்ட வழக்காகும்.

<u>எ.டு.</u>

தெய்வப் பெயர்	திருமுருகன்
அடியார்பெயர்	திருக்கண்ணப்பர். திருமழிசையாழ்வார்.
சினைப் பெயர்	திருச்செவி, திருக்கண்மலர்.
ஆடையணிப்பெயர்	திருப்பரிவட்டம். திருமலை திருக்கைக்காறை.
உணவுப் பெயர்	திருக்கன்னலமுது, திருப்படிமாற்று.
வினைப்பெயர்	திருப்பள்ளியெழுச்சி, திருவுலாவரல், திருக்காட்சி, திருக்கை வழக்கம்.
இடப்பெயர்	திருக்கற்றளி, திருமுற்றம், திருப்பரங்குன்றம்.
நூற்பெயர்	திருமொழி, திருநெடுந்தாண்டகம் திருக்கடைக்காப்பு.
பொருட் பெயர்	திருவலகு, திருப்படிக்கம், திருமுட்டு.
குணப் பெயர்	திருக்குறிப்பு, திருக்கோலம்.
வாத்தியப் பெயர்	திருச்சின்னம், திருத்தாளம்.

அரசர் தெய்வத் தன்மையுள்ளவராகக் கருதப் பட்டதினால், அவர் தொடர்புள்ள சொற்களும் திரு என்னும் அடைபெற்றன.

<u>எ.டு.</u> திருவாய் கேள்வி, திருமந்திரவோலை, திருமாடம், திருக்கணக்கு, திருமுகக்காணம், திருவாணை, திருமுப்பு, திருவாண்டெழுத்திடுதல், திருநல்லியாண்டு, திருக்கைச் சிறப்பு.

அடியார்கள் தெய்வத்தன்மையுள்ளவராதலின், அவர்களோடு தொடர்புற்றவற்றின் பெயர்களும் திரு என்ற அடைபெறும்.

<u>எ.டு.</u> திருக்குகை, திருக்கூட்டம், திருக்கோவை, திருமடம், திருத்தொண்டர், திருநாள், திருநட்சத்திரம், திருவேடம்.

திருமகள், திருமகன், முதலியபெயர்களில் திரு என்னும் அடைமொழி பிரிக்க முடியாதவாறு பிணைந் துள்ளது.

திரு என்னுஞ் சொல்மேற்கூறியவாறு அடைமொழியாய் மட்டுமின்றி தனிச் செல்லாகவும் வந்து முறையே செல்வம், சிறப்பு, அழகு, ஒளி, செழிப்பு, பேறு (பாக்கியம்) தெய்வத் தன்மை, தூய்மை, நன்மை, நல்வினை, கணியன் (சோதிடன்) மங்கலம், மங்கிலியம், ஒருவகைத் தலையணி, மார்பில் தோன்றும் வீற்றுத் தெய்வம் முதலிய பொருள்களைத் தரும்.

இவற்றுள் செல்வம் என்னும் பொருளே முதல் தோன்றியதும் பிறவற்றுக்கெல்லாம் அடிப்படையுமாகும்.

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்." (குறள்.750)

"இல்லானை இல்லாளும் வேண்டாள் மற்றீன் றெடுத்த தாய்வேண்டாள் செல்லா தவன்வாயிற் சொல்" என்பவற்றால் சிறப்பும்.

"அன்னமொடுங்கினால் ஐந்து மொடுங்கும்" என்றும் எளிய இனத்தாரைக் காரொக்கல் (கரிய சுற்றதார்) என்றும் "தரித்திரம் மிக்க வனப்பினை யொடுக்கிச் சரீரத்தை யுலர்த்தாவாட்டும்" என்றும் கூறுவதால் அழகும் ஒளியும்;

"திருவுடை மன்னரைக்காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்" என்பதால் தூய்மையும் செல்வத்தாலுண்டாதல் காண்க. இங்ஙணமே பிறவும்

திரு என்னும் சொல் முதலராவது பொருட் பெயராய்ப் பின்பு பண்புப் பெயராயும் வழங்கி வருகின்றது. இச்சொல்லினின்று திருமை (சுந்த. முதலாட். 35) திருவம் (சிலப்.12) முதலிய பண்புப் பெயர்களும் திருவன் (திவ்.இயற் 2.84) திருவாளன் (திவ். பெரியதி.5.5.1) திருவாட்டி (திருக்கோ.294 உரை) முதலிய உயர்திணைப் பெயர்களும் தோன்றியுள்ளன.

திருவன் }	= 1. செல்வன், பெருமகன்;
திருவாளன் }	= 2 திருமால்.
திருவாட்டி	= 1. செல்வி, பெருமகள், 2. திருமகள்.3.தேவி.

திரு என்னும் சொல்லின் வேர்:

உயிரெழுத்துகளில் ஈகாரம் அல்லது இகரம் அண்மைச் சுட்டும் கீழ்மைச் சுட்டும் பின்மைச் சுட்டுமாகும்.

அண்மைச் சுட்டை இவண், இது , இங்கு, இவள், முதலியசொற்களாலும்,கீழ்மைச் சுட்டை இகம், இகு, இழி, இளி, இறங்கு முதலிய சொற்களாலும் பின்மைச் சுட்டை இடை, இடறு, இணங்கு,இழு, இரை, இறை முதலிய சொற்களாலும் அறியலாம்.(இதன் விரிவை எனது சுட்டு விளக்கம் என்னும் சுவடியிற் கண்டுகொள்க.)

இரை என்னுஞ் சொல்லுக்கு ஒலித்தல், சீறுதல், மூச்சுவாங்குதல், வீங்குதல் முதலிய வினைப்பொருள்களும், ஒலி, அஃறிணை யுயிரிகளின் உணவு, நாகப்பூச்சி முதலிய பெயர்ப் பொருள்களும் உள்ளன. இவற்றுள் மூச்சுவாங்குதல், வீங்குதல், உணவு, நாகப்பூச்சி என்னும் பொருள்கள், இழுத்தல், என்னுங் கருத்தை அடிப்படையாகக் கொண்டன.

மூச்சிழுத்தலுக்கும் மூச்சிழுக்கும் ஈளை (காச) நோய்க்கும் இரைப்பு என்றும் இழுப்புள்ள மாந்த நோக்கு இரப்பு மாந்தம் என்றும் இழுப்பை யுண்டாக்கும் எலிக்கு இரைப்பெலி என்றும் பெயர்.

இகரச் சுட்டப் பிறப்பினாலும் ரகர ழகரப் போலியாலும் இழுப்பு பொருளாலும்இரை என்னுஞ் சொற்கு இனமானதாகும். இரை என்னுஞ் சொல் முதலில் தகரமெய் பெற்றுத் திரை என்றாகும். திரைத்தல், இழுத்தல், வேட்டியைமேல்இழுத்துக் கட்டு தலைத் திரைத்துக் கட்டுதல் என்பது தென்னாட்டு வழக்கு ஆடையை இழுத்திழுத்து வைத்தாற் போன்ற அலைக்கும், தோற்சுருங்கற்கும் ஒருபுறமாகவும் கீழாகவும் இழுக்கப்படுகின்ற படுதாவுக்கும் திரையென்னும் பெயரிருத்தலை நோக்குக.

இரை–திரை ஒ,நோ, ஏண்–சேண்.

ஆடையாவது நீராவது திரையும் போது, திரைந்தவிடத்தில் திரட்சியுண்டாவதால் திரைதலுக்குத் திரளுதல் என்னும் பொருளும் உண்டாயிற்று. பால் திரளுதலைத் திரைதலென்று கூறுவதை நோக்குக. திரள் என்னுஞ் சொல்லும் திரை என்பதினின்று திரிந்ததே. அலையானது ஓரிடத்திலில்லாமல் இடை விடாது அலைந்து கொண்டிருப்பதால் அலைதல் வினை அலையைக் குறிக்கும் திரை என்னும் சொல்லின் திரிபான திரள் என்னுஞ் சொல்லாற் குறிக்கப்பட்டது.

திரு என்னுஞ் சொல் மேற்கூறிய திரை, திரள், திரி என்னும் மூன்று சொற்கும் சொல்லாலும் பொருளாலும் இனமாகும். திரை போல் ஓரிடத்திலில்லாமல் என்றும் அலைந்து கொண்டிருப்பது என்னும் பொருளிலாவது, மக்களால்திரட்டப்படுவது என்னும் பொருளிலாவது, செல்வத்திற்குத் திரு என்னும் பெயர்

தோன்றியிருக்கலாம்.

"ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வம்"

"அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வஞ்"

"சகடக்கால்போலவரும்"

என்று கூறியதனாலும், செல்வம் என்னும் பெயருக்குச் செல்வது என்பது பொருளாதாலாலும் செல்வம் நிலையற்றது என்றும், ஆக்கப்படுவதால் ஆக்கம் என்றும் தேடப்படுவதால்தேட்டு என்றும் செறிந்திருப்பதால் வெறுக்கையென்றும் பெயர் பெற்றிருப்பதினால் செல்வம் திரட்டப்படுவது என்றும், இரு கருத்துகள் நம் முன்னோர்க்குத் தோன்றியிருந்தமை புலனாம். இவ்விரண்டி லொன்று திரு என்னுஞ் சொல் தோன்றுவதற்குக் காரணமா யிருந்திருக்கலாம். திரை என்னும் சொல்லே செல்வத்தைக் குறியாமல் அதன் திரிபான திரு என்னுஞ் சொல் குறிப்பதேன் எனின் சொல்லின் பொருள் மாறும்போது சொல்லும் மாற வேண்டும் என்னும் சொல்லின் பொருள் சொல்லாக்கப் பொது விதிபற்றியென்க. அல்லாக்கால் பல பொருள்கள் உடன் மயங்கிக் கருத்துணர்வு தடைப்படுமென்க.

திரை என்பதிலிருந்து திரு என்பது தோன்றி யிருத்தல் திருப்பாற் கடலிலிருந்து திருமகள் தோன்றி னாள் என்னுங் கதையை நினைவுறுத்தும் திரை–கடல் திரு – திருமகள்.

"திரைகட லோடியும் திரவியந் தேடு"

"நீர்போயும் – ஒன்றிரண்டாம் வாணிகம் இல்."

என்பவற்றால் பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவற்றாலும், பண்டைய காலத் திலும் நீர் வாணிகத்தாலேயே பெரும் பொருளீட்டப் பட்டமை அறியப்படும். கடல் போய்வந்த செல் வத்தைக் கடல் தந்ததென்று கூறுதல் பொருத்த மானதே. மேலும் செல்வத்தின் சிறந்தவகையான முத்தே பெரும்பாலும் கடலிலிருந்தெடுக்கப்படுவது. இதனாலும் செல்வம் கடலில் பிறந்ததாகக் கூறலாம். செல்வத்தின் உருவகமே அல்லது ஆட்படையே (personification) திருமகளாதலின், அவள் திருமாலின் இருப்பிடமாகக் கூறப்படும் திருப்பாற்கடலி னின்று தோன்றினதாகக் கூறப்பட்டாள் என்க. (வடமொழியிலுள்ள திரவியம் என்னும் சொல் திரவம் என்பதி னின்றே தோன்றியது போரும்).

ஆகவே, திரு என்னுஞ் சொல் தனிமொழி யாகவும் அடைமொழியாகவும் முதலாவது செல்வப் பொருளிலும் பின்பு அதன் வழிப்பட்ட பல பொருள் களிலும் தொன்று தொட்டு வழங்கிவரும் தனித் தமிழ்ச் சொல்லாதல் பெறப்படும். இலத்தீன், கிரேக்க, செருமானியம் முதலிய மேலையாரிய மொழிகளிலும் இச்சொல்லிலாமையால், இது வட சொல்லன்று என் பதும் வெளியாம். ஆரியர் நாவலந்தேயத்திற்கு (இந்தியாவிற்கு) வந்த பின் வட மொழியிற் கலந்து போன நூற்றுக் கணக்கான திரவிட அல்லது தென் சொற்களில் திரு என்பது ஒன்றாகும்.

திரு என்னும் தென்சொல் வடமொழியில் ஸ்ரீ என்றாகிப் பின்பு சீ எனத் தமிழிற் சிதைந்து வழங்கு கின்றதென்க. இப்போது தமிழ் நாட்டில் கள்ளிக் கோட்டையெனும் மேலக்கரைத் துறை நகராகிய கோழிக்கோட்டிலிருந்து இங்கிலாந் திற்கு ஏற்றுமதி யான துணி ஆங்கிலத்தில் கலிக்கோ (Calico) என்றும் பின்பு அதன் வழியாய்த் தமிழில் கலிக்கா என்றும் வங்காளத்தில் காளிக்கோட்டம் என்னும் நகர் பெயர் ஆங்கிலத்தில் கல்குற்றா என்றும் பின்பு அதன்வழியாத் தமிழில் கல்கத்தா என்றும் வழங்குவதை நோக்குக. கள்–காளம்–காளி. கள்–கருப்பு. கோடிய மதில் கோட்டம் கோடுதல்= கோணுதல் அல்லது வளைதல்.

கோழிக்கோடு →Calico→கலிக்கா

காளிக்கோட்டம்→Calcutta→கல்கத்தா

திரு என்பது ஸ்ரீ என்று திரியவே, திருமான் என்பதை ஸ்ரீமான், சீமான் என்றும் திருவாட்டி என்பதை ஸ்ரீமாட்டி, சீமாட்டி என்றும் சொல்லவும் எழுதவும் தலைப்பட்டனர்.

திருமான் என்பது திருமகன் என்பதின். மரூஉ.

<u>ஒ.நோ.</u> பெருமகன் – பெருமான். பெருமானுக்கு பெண்பால் பெருமாட்டியாதல்போல திருமானுக்குப் பெண்பால் திருமாட்டியாகும். ஸ்ரீ என்பது திரு என்பதன் திரிபே யாதலால் ஸ்ரீ அல்லது சீ என்னும் அடைமொழி பின்பவரும் தனித் தமிழில் எழுதப்படும்.

வடமொழிவடிவம்	தென்மொழிவடிவம்
ஸ்ரீ	திரு
மகாராஜ ராஜ ராஜ ஸ்ரீ }	மா அரசு, அரசத்திரு
ம– – – ஸ்ரீ }	பேர் அரசு, அரசத்திரு
ஸ்ரீலஸ்ரீ	திருவத்திரு,
	திருப்பெருந்திரு
சீகாழி	திருக்காழி
சீகாளத்தி	திருக்காளத்தி

திருநாவுக்கரசு, திருமங்கையாழ்வார் முதலிய பெயர்களில் வரும் திரு என்னும்அடை ஆங்கிலத்தில் அடியார் பெயர் முன் சேர்க்கப்படும் St. (Saint) என்பதற்குச் சமமாய்த்தூய்மை குறிப்பதாயிருப்பதால் அடியாரல்லா பிற மக்களைக் குறிக்கும் போது திருவாளர் திருவாட்டியார் என்ற அடைகளையே முறையே ஆண் பாற்கும் பெண்பாற்கும் வழங்குவது தக்கதாகும். திருவாளன்மார் திருவாட்டிமார் என்பன பலர்பால் அடைகள்.

சீகாழியைச் சீர்காழியென்று வழங்குவது சரியாய்த் தோன்றவில்லை. சிறு தனம் என்பது ஸ்ரீ தனம் எனத் தவறாய் வழங்குகிறது. இதுகாறுங் கூறியவற்றால் திரு என்பது தென்சொல்லே யென்றும் அதன் திரிபே ஸ்ரீ யென்றும் தெரிந்து கொள்க.

-Thew Putturian, Vol.VIII. Feb.1942.

திருத்தலச்செலவு *tiru-t-talac-celavu,* பெ. (n.) 1. போற்றத்தக்கதும் தொழத்தக்கதுமான இடங்களுக்குத் தூய்மையோடு விரும்பிச் சென்று வரும் பயணம்; pilgrimage to holy places. 2. மகமதியர் 'மெக்கா' என்னும் திருத்தலத் திற்குச் செல்லும் செலவு (கச்சி); pilgrimage to Mecca.

[திரு+தலம்+செலவு]

திருமணி *tirumaṇi,* பெ. (n.) கோமேதகம்; cinnamon stone.

[திரு+மணி]

திருமால்திருமண் *tirumāltirumaṇ,* பெ. (n.) மாலியர் சிலர் நெற்றியிலிடும் மஞ்சளான திருமண் (கோபி சந்தனம்); yellowish earth used by certain vishnu devotees.

[திருமால்+திருமண்]

திருமுழுக்காட்டு-தல் *tirumuḻukkāṭṭu-,* செ. குன்றாவி. (v.t.) திருமுழுக்கு செய்தல் (அபிடேகித்தல்); to bathe, to anoint.

[திருமுழுக்கு+ஆட்டு-]

திருவடிக்கூலி *tiruvaḍikkūli,* பெ. (n.) திருவடி தாங்குவோர்க்குக் கொடுக்குங் கூலி (சீபாதக் கூலி); wages of vehicle learn in temple.

[திரு+அடி+கூலி]

திருவளர்செல்வி *tiruvaḷarśelvi,* பெ. (n.) சிறு பெண்களின் அல்லது மணமான பெண்களின் பெயர்க்கு முன் வழங்கும் மங்கலச் சொல் (சௌபாக்கிய வதி); a tittle applied to a girl or woman whose husband is alive.

[திரு+வளர்+செல்வி]

திருவிளக்கு *tiruviḷākku,* பெ. (n.) கோயிலிலேற்றும் விளக்குகள்; row of lights set up in temples.

[திரு+விளக்கு]



தில் *til,* பெ. (n.) இடை; (part). ஒலிக்குறிப்பு இடைச்சொல்; one mopoic-particle used in poetry. செல்லாமோதில் சில்வளை விறலி.

[தில்–ஒலிக்குறிப்புச்சொல்]

தில்லி *tilli,* பெ. (n.) ஒரு வகை நாட்டுப்புற நடனம்; a dance variety in folklore. தில்லி ஆடினர் (கொ.வ.).

[தில்லாலே–தில்லி]

தில்லாலே *tillāle,* பெ. (n.) இடைச்.; (part.) நாட்டுப்புறப்பாடல்களில் இன்னோசைக்காக ஈற்றில் சேர்க்கப்படும் அசைமொழி; an empty morph added at the end of a stanza in songs of folklore. வண்டிக்காரா வண்டிக் காரா மணி தில்லாலே, வடக்கே போற வண்டிக்காரா மணி தில்லாலே.

[தில்–(ஒலிக்குளிப்பு)– தில்லாலே]

திறமறவன் *tiṟamaṟavaṉ,* பெ. (n.) குறிக் கோளில் மாறாத பெருவீரன்; ideal hero or warrior.

[திறம்+மறவன்]

தீக்கடவுள் *tikkaḍavuḷ*, பெ. (n.) நெருப்புத் தெய்வம் (அக்கினி பகவான்); the God of fire.

[தீ+கடவுள்]

தீக்குறி *thekkuri*, பெ. (n.) தீய நிமித்தம்; sign of future bad event.

த.வ. தீத்திறம்

[தீமை+குறி>தீக்குறி]

தீட்டாளி *tiṭṭāḷi*, பெ. (n.) மாத விலக்கான பெண் (சூதகப்பெண்); a woman in menses or periods.

[தீட்டு+ஆளி]

தீட்டு இசிவு *tiṭṭuiśivu*, பெ. (n.) மாதவிடாய்க் காலங்களில் உண்டாகும் ஒரு வகை இழுப்பு நோய் (சூதகசன்னி); a kind of hysteria, a disease of woman during the period of mensturation.

[தீட்டு+இசிவு]

தீட்டுப்பலகை *tēṭṭu-p-palagai*, பெ. (n.) உளி போன்றவற்றைத் தீட்டுவதற்குப் பயன்படும் பலகை; plank used to sharpen chisel, koire etc.,

[தீட்டு+பலகை]

தீட்டுமலடு *tiṭṭumalaḍu*, பெ. (n.) அறுவகை மலட்டில் ஒன்று (சூதகமலடு); barrenness due to menstrual disorder one of six maladu.

[தீட்டு+மலடு]

தீயனூர் *tiyanūr*, பெ. (n.) சிவகெங்கை மாவட்டம் மானாமதுரை வட்டத்திலுள்ள சிற்றூர்; a village in siva gangai district.

[தீயன்+ஊர். தீயன் (இனியன்) இயற்பெயர்]

தீர்ப்புமுறி *tirppumuri*, பெ. (n.) வழக்கைத் தீர்த்தெழுதுஞ் சீட்டு (நாஞ்.) (கண்டபத்திரம்); award in a dispute.

[தீர்ப்பு+முறி]

துடும்பு *tuḍumbu*, பெ.(n.) பறை; kettle like drums. "கோயிலில் நோம்பு சாற்றிய தைத்துடும்பு அடித்துத் தெரிவித்தனர்".

[துடும்-துடும்பு]

துண்டுகவ்வணம் *tuṇḍukavvaṇam*, பெ. (n.) அரைக்கவ்வல் பார்க்க; see araikkavval.

[துண்டு+கவ்வணம்]

துணிவினை *tiṇivinai*, பெ. (n.) வழக்கத்திற்குக் கூடுதலான வகையில் செய்யும் துணிச்சலான அருஞ்செயல்; adventure.

[துணி+வினை]

துணைப்பாய் *tuṇaippāi*, பெ. (n.) பறுவான்களில் விரிக்கப்படும் சதுரப் பாய்களின் வெளிப் புறத்துப் போடப்படும் துணைப்பாய் (டகதூர்); studding sail.

[துணை+பாய்]

துணைபுரி-தல் *tuṇaipuri-*, செ.கு.வி. (v.i.) உதவுதல்; to help, assist.

[துணை+புரி-,]

துமுக்கி *tumukki*, பெ. (n.) சுடுவதற்குப் பயன் படுத்தும் ஒரு படைக்கலக்கருவி (துப்பாக்கி); gun.

[துமுக்கு-துமுக்கி]



துலா *tulā*, பெ. (n.) கிணற்றிலிருந்து நீர் இறைக் கும் ஏற்றக்கலம்; piccotah.

[துலை-துலா]

துவர்கருக்கி *tuvarkarukki*, பெ. (n.) மிக்கத் துவர்ப்பான கருக்கு நீர் (கசாயம்); a decoction extremely astringent.

[துவர்+கருக்கி]

துள்ளல்நடை *tullalnadai,* பெ. (n.) குழந்தை களின் துள்ளு நடை (சிங்காரப் பாய்ச்சல்); frisky movement as of children.

[துள்ளல்+நடை]

துளைக்கயிறு *tulai-k-kayiru,* பெ. (n.) பலகை ஒட்டைகளின் வழியாய்ச் செல்லுங் கயிறு (டப்புக்கயிறு); rope passing through the holes at the extremities of a log. (M.Navi.).

[துளை+கயிறு]

தூலம் *tūlam,* பெ.(n.) கூரை அல்லது ஓட்டு வீட்டில் மேற்கூரையைத் தாங்குவதற்காக எதிர் சுவர் இரண்டின் மீதும் படியுமாறு வைக்கப்பட்ட உறுதியான நெடுமரம்; a lengthy wooden log placed on the top of the opposite walls so as to support the weight of the roof of that thatched or tiled house.

[தூ–தூல்–தூலம்]

தூ விடுதல் *tūvidu-,* தொ.பெ. (vbbn.) சேர்ந் திருக்கும் சுட்டு விரலையும், நடு விரலையும் பிரித்துக் காட்டி நட்பின்மைக் குறிப்பு தெரிவித்தல் (டூ விடுதல்); an exclamation, declaring breach of friendship, indicated by disjoining the ring formed of the fore and middle fingers.

[தூ+விடுதல்]

தூயமெய்மம் *tūyameymam,* பெ. (n.) மூவகை மெய்ப்பொருட்களுள் ஒன்று (சுத்ததத்துவம்); pure catagories, one of three tattuvam, compressing seva tattuvam, salletat-tuvam sadākkiya-tattuvamcle-tatuvam. cutta-vittiya-tattuvam.

[தூய+மெய்மம்]

தூயபடி *tūyapadi,* பெ. (n.) பிழையின்றி எழுதப் பட்டபடி (சுத்தப்பிரதி); fair copy. 2. ஆய்வு செய்யப்பட்ட நூல்; revised and corrected copy of a book.

[தூய+படி]

தெப்பம் *teppam,* பெ. (n.) உப்பளத்தில் நீர் இறைக்கப்படும் முதல் பாத்தி; first salt - pan.

[தெப்பு–தெப்பம்]

தென்முக நம்பி *tenmuganambi,* பெ. (n.) தென்புறமாக அமர்ந்து நால்வர்க்கும் அருளிய சிவன் திருவுருவம் (தட்சிணாமூர்த்தி); a Siva's posture.

[தென்+முகம்+நம்பி]

தென்னங்கிடுகு *tennaṅkidugu,* பெ. (n.) தென்னங்கீற்றால் ஆன தட்டி; coconut palm leaf screen.

தேக்கை *tēkkai,* பெ.(n.) தேகை எனும் இராசாளிப் பறவை; royal falcon.

மறுவ. தேகை, டேகை, வல்லூறு

[தாக்கு–தாக்கை–தேக்கை]

தேயப்பகுதி *tēyappagudi,* பெ. (n.) நாட்டின் ஒரு பகுதி (சுபா); district of province, especially of the moghul empire.

[தேயம்+பகுதி]

தேன்முளரி *tēnmulari,* பெ. (n.) சருக்கரை அல்லது தேன் கலந்து பக்குவப்படுத்திய முளரி (ரோசா)ப்பூ இதழ் (குல்கந்து); a confection of rose prepared in sugar or honey candied rose.

[தேன்+முளரி]

தொங்கல் விழு–தல்[1] *toṅgalvilu,* செ.குன் றாவி. (v.t.) பற்றாக்குறை காணுதல்; to deficit.

[தொங்கல்+விழு–,]

தொங்கல் விழு–தல்[2] *tōṅgalvilu-,* செ.கு.வி. (v.i.) பணம் முதலியன குறைதல் (டொங்கு விழுதல்); to decrease, dwindle, to be short as money.

மறுவ. குறைபடல்

[தொங்கல்+விழு–]

தொங்கலில்விடு–தல் *tongalilvidu-,* செ.கு.வி. (v.i.) இடர்ப்படுமாறு விட்டுவிடுதல், உதவி செய்யாமல் விட்டுவிடுதல்; to leave aperson in distress without helping.

[தொங்கல்+இல்+விடு]

தொங்குக்கட்டில் *toṅgukkattil,* பெ. (n.) நோயாளிகளை எடுத்துப் போகப் பயன்படும் ஒரு நீண்ட மூங்கிலின் நடுவில் தொங்கும்

கட்டிலை உடைய ஒரு கருவி (டுலி); a swinging lifter for carrying sick persons, a cot, or frams suspended by the four corners from a bamboo pole.

[தொங்கு+கட்டில்]

தொங்குமஞ்சம் *tōṅgumāñjam,* பெ. (n.) தூக்கிச்செல்லும் மஞ்சம் (டோலி); lifter, dooly, a kind of sedan.

[தொங்கு+மஞ்சம்]



தொச்சம் *toccam,* பெ. (n.) நிலுவை (கசர்பா பத்து) (வின்.); undisturbed balance. இன்னும் எங்களுக்குக் கொடுக்க வேண்டிய தொச்சம் இருக்கிறது (இ.வ.).

[தொள்–தொச்சம்]

தொடரியம் *toḍariyam,* பெ. (n.) கூற்று, வினா போன்றவற்றை வெளிப்படுத்த வினைச் சொல்லை உள்ளடக்கிய முற்றுத்தொடர்; sentence.

[தொடர்+இயம்]

தொண்ணை *toṇṇai,* பெ.(n.) இனிப்பில்லாத கரும்பின் நுனிப்பகுதி, கோதாளை; tip portion of the sugarcane.

[தொள்–தொண்–தொண்ணை]

தொப்பைக்காரி *toppai-k-kāri,* பெ.(n.) பணக்காரி; rich woman. "கப்பல்காரன் பெண்டாட்டி தொக்காரி, கப்பல் கவிழ்ந்து போனால் பிச்சைக்காரி (பழ.).

[தொப்பை+காரி]

தொம்பை *tombai,* பெ.(n.) சீழ் முடியொடு மூங்கிற் பிளாச்சினால் செய்த தவசம் கொட்டி வைக்கும் மட்பாண்டத் தாழி போன்ற மூங்கில் கலன்; a barrel like storage oval shaped basket utensil to save food grains with small opening at the bottom.

மறுவ. குதிர், இருவாய்சால்

[அம்பு–தூம்பை–தொம்பை]

தொல்காப்பியர் காலம் *tolkāppiyar kāḷam,* பெ. (n.) **தொல்காப்பியர் வெள்ளணி** பார்க்க; see *tolkāppiyar veḷḷaṇi.*

[தெப்பு–தெப்பம்]

தொல்காப்பியர் வெள்ளணி *tolkāppiyar veḷḷaṇi,* பெ.(n.) தொல்காப்பியர் பிறந்த நாள் விழா; Birthday celebration of Tolkappiya the great, தொல்காப்பியர் வெள்ளணி விழா கொண்டாடுவது மிகவும் இன்றியமையாதது.

[தொல்காப்பியர்+வெள்ளணி]

தமிழின் செம்மொழித் தகவுக்கு ஆணிவேராக இருப்பது தொல்காப்பியம். இதனை இயற்றிய தொல் காப்பியர் பிறந்த நாள் ஒவ்வோராண்டும் மேழ வெள்ளுவா (சித்திரை பௌர்ணமி) அன்று கொண் டாடுவது தகும் என நூற்றுக்கும் மேற்பட்ட தமிழறி ஞர்கள் கூடிய காரைக்குடிக் கருத்தரங்கில் 2009 ஆம் ஆண்டு திசம்பர் திங்களில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது. அந்தக் கருத்தரங்கில் தொல்காப்பியர் பிறந்த ஆண்டு கி.மு.711 என வெளியிடப்பட்ட கருத்து மறு ஆய்வுக்கு உரியதாக இருக்கிறது. தொல்காப் பியரின் பிறந்த ஆண்டை கி.மு.864 எனக் கணிப்பதே பொருந்தும் என்பதற்கான காரணங்கள் இங்கே தரப்படுகின்றன.

1. 23.4.2010 நாளிட்ட Frontline இதழில் ஆர். கிருட்டிணகுமார் எழுதிய முசிறிப்பட்டின அகழ்வா ராய்ச்சிக் கட்டுரையில் கி.மு.1000 முதல் எகுபது நாட்டு பெரனிகே துறைமுகத்துக்குச் சேர நாட்டு வணிகக் கப்பல்கள் சென்று வந்ததைக் குறிப்பிட் டிருக்கிறார். இதே காலத்தைச் சார்ந்த சாலமன் கப்பல்கள் தமிழகத் துறைமுகங்களுக்கு வந்ததை விவிலியம் பழைய ஏற்பாடு குறிப்பிடுகிறது. இத்தகைய சூழல்களைக் கருதித் தொல்காப்பியர்

காலம் கி.மு.1000 ஆகலாம் எனத் தனிநாயகம் அடிகளாரும் கருத்து வெளியிட்டிருக்கிறார். ஆர்.சிமசும்தார், தன் நூலில் கலிங்கத்தைக் கி.மு.1000 அளவில் ஒரு பாண்டியன் ஆண்டான் என்றும் அவன் வடபர்மா பரோமர் பகுதியையும் வென்றான் என்றும் கூறியிருப்பது கருதத்தக்கது. ஆதலால் தொல்காப்பியர் காலத்தை கி.மு.711 எனப் பின்னோக்கிக் கணிக்க வேண்டியதில்லை.

2. 1920ஆம் ஆண்டில் மதுரை மனோன்மணி விலாச அச்சகத்தில் த. ஆறுமுகநயினார் பிள்ளை இயற்றிய நற்குடிவேளாளர் வரலாறு எனும் 1035 செய்யுள் கொண்ட நூல் வெளியிடப்பட்டது. இதில் கோட்டை வேளாளர் மரபு வழிப்பட்ட இருங்கோவேள் பாண்டிய மரபினரின் 201 தலைமுறை வரலாறு கூறப்பட்டுள்ளது. இந்நூல் அறிஞர்களின் பார்வைக்கு வரவில்லை.

இதில் கி.மு.901 (கலியாண்டு 2200)இல் ஏற்பட்ட கடல்கோளால் குசராத்து மாநில துவரை (துவாரகை) மாநகரும் தென்தமிழக மணலூர்ப் பகுதியும் கடலில் மூழ்கியதாக அறியமுடிகிறது. கடல்கோளால் நாடிழந்த மக்களுக்கு நிலம் தந்த பேருதவி பொலந்தார் மார்பின் நெடியோனாகிய நிலந்தருதிருவின் பாண்டியன் தொல்காப்பியத்தை அரங்கேற்றியவனாகக் கூறப்படுகிறான். ஆதலின் தொல்காப்பியத்தின் மேல் வரம்பு கி.மு.901 என்பது உறுதிப்படுகிறது.

கொற்கைக்குக் குடிபெயர்ந்த பாண்டியர் மரபில் கி.மு.834இல் கூழைப் பாண்டியன் முடி சூட்டிக் கொண்டதால் இதற்கு முன்பே தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்ட காலத்தின் கீர் வரம்பு கி.மு.834 ஆண்டுக்கு முற்பட்டது எனத் தெளிவாகிறது.

3. பெரும்பாலான நூற்பாக்களில் என்ப, என்மனார் எனக் குறிப்பிடும் தொல்காப்பியர்

" வடசோற் கிளவி வடஎழுத் தொரீஇ

எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

எனும் நூற்பாவில் தன்னுடைய புதிய கருத்தை வெளியிடுகிறார். ஐந்திர இலக்கணக் காலத்தில் இல்லாத வடசொற்கள் தொல்காப்பியர் காலத்தில் தமிழில் புகத்தொடங்கியதால் இடப்பட்ட புதிய இலக்கணக் கட்டுப்பாடு இது.

ஆரியர்கள் கி.மு.1600 முதல் 1300 வரை பஞ்சாபிலும், கி.மு.1300 முதல் 1000 வரை சாசுவதி (குமரிக்கன்னி) ஆற்றுச் சமவெளியிலும் கி.மு.1100 முதல் கி.மு.900 வரை கங்கைப் பகுதியிலும் கி.மு.900 முதல் 800 வரை கலிங்கத்திலும் குடியேறினர். கி.மு. 800க்குப் பிறகு விந்திய மலைக்குத் தெற்கே குடியேறத் தொடங்கினர். மேற்கண்ட இடங்களில் அந்தந்த காலவரம்பில் ஆரியர் பயன்படுத்திய சாம்பல் நிறப்பானை ஓடுகள் அகழாய்வில் கிடைத்துள்ளன எனத் தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

கலிங்கத்தில் ஆரியர் குடியேறிய கி.மு.900 – கி.மு.800 கால அளவில் வடசொற்கள் உள்ளது உள்ளபடியே கலந்து பாலிமொழி உருவாகியது. அதற்கு கி.மு.800 அளவில் திருத்தியமைத்த 41 எழுத்துகள் பாலிமொழியின் எழுத்துகளாயின. பிராகிருத மொழி தமிழைப் போல் வடமொழி எழுத்துகளை நீக்கிவிட்டது. எனவே, வடசொற் கலப்பு நேரடியாகத் தமிழைத் தாக்கிய கி.மு.900 – கி.மு.800 கால வரம்பே தொல்காப்பியர் வாழ்ந்த காலமாகும்.

4. ஆரியர் வருமுன் இந்தியா முழுவதும் தமிழ் பேசப்பட்டது என்று அண்ணல் அம்பேத்கரும் குறிப்பிட்டிருக்கிறார். தொல்காப்பியச் சொற்களில் சில, சிந்தி மொழியில் <u>உம்–உந்து</u> என்றும் **<u>சிவணுதல்</u>** என்பது குசராத்தி மொழியில் **<u>ஜோவுண்</u>** என்றும் 10இலட்சம் எனும் எண்ணைக் குறித்த **<u>நெய்தல்</u>** என்பது ஒரியா (கலிங்கம்) மொழியில் **<u>நியுத</u>** என்றும் இன்றும் வழங்கி வருகின்றன. தொல்காப்பியர் காலத்தில் கோடி எனும் எண்ணுப்பெயர் இல்லை. குவளை என்னும் சொல்லே கோடியைக் குறித்தது. கோடி எனும் சொல் முதன் முதலாகப் பாலிமொழியில் தான் தோன்றியது. இதன் காலம் கி.மு.800 என்பதால் தொல்காப்பியர் கி.மு.800க்கு முன்பு வாழ்ந்தவர் எனத் தெரிகிறது. குவளை எனும் தமிழ்ச்சொல் பாலிமொழியில் குவளை–குவடி–கோடி எனத் திரிந்து விட்டது. குவளை என்னும் சொல்லுக்குக் கோடி எனும் எண்ணுப் பொருள் இருந்ததை "ஆயிரம் குவளை" என சுக்கிர நீதி (106) குறிப்பிடுகிறது.

கோடி எனும் எண்ணுப் பெயர் தொல்காப்பியர் காலத்திலும் இருந்திருந்தால்,

"ஐ அம் பல் லென வருஉம் இறுதி" எனும் நூற்பாவில் கோடி என்பதன் இகர ஈறும் அகப்படுத்தி,

'இஐஅம் பல்லென வருஉம் இறுதி' என மாற்றி எழுதியிருப்பார். ஆதலின் தொல்காப்பியர் குவளை எனும் எண்ணுப்பெயர் கோடி எனத் திரிவதற்கு முன்பு கி.மு.9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் எனத் தெரிகிறது.

5. கி.மு.901இல் கடல்கோள் நிகழ்ந்த பிறகு நிலத்தரு திருவின் பாண்டியன் தமிழ்ச்சங்கம் நிறுவிய செய்தி,

தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல
(மதுரைக் காஞ்சி)

என மாங்குடி மருதனார் பாடிய பாடல் வரிகளாலும் அறியப்படுகிறது.

6. கடல் கோளுக்குப் பிறகு மக்கள் குடியமர்ந்து வாழத் தொடங்கிய பின் முந்நூல் கண்டு கல்வியும், கலையும் வளர்க்கவும் தமிழ்ச் சங்கம் நிறுவவும் ஒரு தலைமுறை அதாவது 37 ஆண்டுகள் ஆகியிருக்கும். இந்நிலையில் அதங்கோட்டாசானிடம் தொல்காப் பியர் மாணவராகச் சேர்ந்தார் எனக் கணக்கிட்டால் (901-37) தொல்காப்பியர் கி.மு.864 ஆண்டு பிறந்தவராக இருக்க வேண்டும். 864 எனும் எண் ஒன்பதால் வகுபடும் எண்ணாகவும் ஒன்பதின் பெருக்கல் மடங்காகவும் தனித்தனியாக கூட்டினால் ஒன்பது வருவதாகவும் இருப்பதைக் காணலாம்.

(குறிப்பு: ஒருவன் தன் பேரக்குழந்தையைக் காணும் தலைமுறை வரம்பு 37 ஆண்டுகள் எனப்படு கிறது. மூன்று தமிழ்ச் சங்கங்களின் காலம் முறையே 4400, 3700, 1850 என்பன 37 எனும் தலைமுறை எண்ணால் மிச்சமின்றி வகுபடுவதாக இருக்கிறது என அறிஞர் ஏ.கே. இராமானுசம் குறிப்பிட்டிருப்பது இங்குக் கருதத்தக்கது.)

7. கி.மு. 800 கால அளவில் ஆரியர் விந்திய மலையைக் கடந்து தென்னிந்தியாவில் குடியேறி யதன் அடையாளமாகத் தென்னிந்தியாவில் ஆரியர் களின் சாம்பல் நிறப்பானை ஓடுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதால் சமற்கிருதக் கலப்புச் சொற்களைக் கி.மு.எட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு வடசொல் என்று சொல்லியிருக்க முடியாது. எட்டாம் நூற்றாண் டுக்கு முன்பு தான் வடசொல் என்று சொல்லியிருக்க முடியும். எனவே தொல்காப்பியர் கி.மு.711இல் வாழ்ந்தவராகக் கருத இயலவில்லை.

8. ஐந்திரனார் காலத்தில் ய,வ எனும் உடம்படு மெய்கள் பயன்படுத்தப்படவில்லை. ஈழத்துத் தமிழைப் போல் வரஇல்லை, கேட்க இல்லை எனச் சொற்கள் பிரிந்தே இசைத்தன. தனிச் சொல்லிலும் நாய் எனும் சொல் நாஇ என எழுதப்பட்டதைத் தொல்காப்பியர் சுட்டிக் காட்டுகிறார். இந்த இலக்கண அமைப்பு இந்தியா முழுவதும் தமிழ் பேசப்பட்ட காலத்திலிருந்து தொடர்ந்து வருவதால் இன்றும் வட இந்திய மொழிகள் அனைத்திலும் ஆய்-ஆயி(தாய்) எனும் தமிழ்ச்சொல் யகர உடம்படுமெய் பெறாமல் **ஆஇ** என்றே எழுதப்படுகின்றது.

ஐ எனும் நெட்டெழுத்து பல்லவர் காலத்தில் தான் இந்த வடிவம் பெற்றது. இதற்கு முன் அஇ என்றே இரு குறில் எழுத்துகளின் கூட்டாக எழுதப்பட்டது. 'அகர இகரம் ஐகாரம்' ஆகும் எனும் தொல்காப்பியர் நூற்பாவை நன்கு விளங்கிக் கொள்ளாத நச்சினார்க்கினியர் 'ஐ' வடிவமே பழையது என்றும் அஇ என எழுதுவது ஐகார எழுத்தின் போலி என்றும் கருதி உரையெழுதி விட்டார். சிந்துவெளி முத்திரைகளிலும் ஐகாரம் அஇ எனும் இருகுறில் கூட்டாகவே எழுதப்பட்டுள்ளது. இன்றைய இந்தி மொழியிலும் சென்னை எனும் பெயர் சென்னஇ என எழுதப்பட்டிருப்பதைச் சென்னைத் தொடர்வண்டி நடுவணத்தில் காணலாம்.

இத்தென்மரபு கி.மு.800 அளவில் அசோகன் பிராமி எனும் பாலி மொழி எழுத்தில் காணப்பட வில்லை. ஆனால், முற்றிலும் தமிழ் எழுத்தைப் பின்பற்றிய பிராகிருதத்திலும் அதன் வழி வந்த வடஇந்திய எழுத்துகளிலும் நின்று நிலைத்துள்ளது. ஆதலால் தொல்காப்பியர் காலம் கி.மு.800க்கு முற்பட்டதாகும்.

9.மூவேந்தர் ஆட்சி கி.மு.ஆறு ஏழாம் நூற்றாண்டுகளில் முற்றிலும் நிலைகுலைந்தது என நற்குடி வேளாளர் வரலாறு எனும் நூலின் 350ஆம் செய்யுள் கூறுகிறது. கி.மு.எட்டாம் நூற்றாண்டி லிருந்தே மூவேந்தர் ஆட்சிக்கு இடையூறுகள் தோன்றியிருக்க வேண்டும்.

"போந்தை வேம்பே ஆரென வருஉம்
மாபெருந் தானையர்" எனவும்
"வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு"

எனவும் மூவேந்தர் ஆட்சி ஒற்றுமை மிக்கதாய் புகழேணியின் உச்சியில் இருந்த காலத்தை கி.மு.711 ஆம் ஆண்டு என்னும் வரையறை காட்டவே காட்டாது.

இந்நிலைகளைக் கூர்ந்து நோக்கினால் தொல் காப்பியர் பிறந்த ஆண்டு கி.மு.864 எனவும் கி.மு.835 இல் தொல்காப்பியம் அரங்கேறியது என்பதே பொருந்தும் எனவும் உறுதிப்படுத்த முடிகிறது.

தொலைவரி *tolaivari*, பெ. (n.) மின்கம்பி வழியனுப்பும் செய்தி; telegram(தந்தி).

[தொலை+வரி]

தொலைவரி கொடு-த்தல் *tolaivarikodu-,* செ.கு.வி. (v.i.) ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு விரைவாகக் கம்பி வழியாகச் செய்தி அனுப்புதல் (தந்தி); to send a telegram, wire. 'மும்பை போய்ச் சேர்ந்ததும் உடனே தொலைவரி கொடு'.

தொழும்பன் *tōḻumbaṉ,* பெ. (n.) கழைக் கூத்தன் (கொ.வ.) (டொம்பர்); a man of wandering tribe, singers and rope dancers.

மறுவ. தொம்பன்

[தொழு–தொழும்பு–அன்]



தொளி[1] *toḷi,* பெ. (n.) உழவு செய்வதற்காக நீர்கட்டப்பெற்ற வயல் (சேடை நிலம்); field filled with water to prepare it for sowing.

மறுவ. நீர்கட்டல்

[துலி(மிதித்தல்)–துளி–தொளி]

தொளி[2] *toḷi,* பெ. (n.) கசடு தங்கும் முதல் பாத்தி; first section of the field where the sediment stagnates.

[துளி–தொளி]

தொள்ளை விழுதல் *tōllaivilu-,* செ.கு.வி. (v.i.) பெருச்சாளி முதலியவற்றாற் கட்டடத் தரையில் விழும் குழிவு (டொக்கை); depression or hollow in the saved floor, caused by bandicoot etc.,

[தொள்ளை+விழு–]

தொன்மரவன் *toṉmaravaṉ,* பெ. (n.) பண்டைய பழக்கவழக்கங்களைப் பின்பற்றுபவன் (சம்பிரதாயத்தன்); one who respects customs or traditions, a traditionist. 2. திறமைசாலி; skillfull person.

[தொன்மை+(மரபன்)மரவன்]

தொன்மறை நெறிகள் *tōṉmaṟaineṟigaḷ,* பெ. (n.) அறநூலிற் கூறிய நெறிகள் (சுமார்த்தம்); percepts or rules laid down in ancient works.

[தொல்+மறை+நெறிகள்]

தோழமைநெறி *tōḻamaineṟi,* பெ. (n.) ஒக நெறி (சகமார்க்க); yogā as the path leading to cāruppiyam.

[தோழமை+நெறி]

தோள்விந்தி *tōḷvindi,* பெ.(n.) பெண்கள் மேற்கையில் அணியும் தொடி போன்ற வெள்ளி நகை; a silver bracelet worn by women on the upper arm.

[தோள்+விந்தி. ஒருகா. வெள்ளி >தெ. வெண்டி > த. விந்தி]

தோளணி *tōḷaṇi,* பெ. (n.) வில்லையோடு கூடிய தொண்டனின் தோட்கச்சை (கொ.வ.) (டவாலி); peon's belt on which a badge is worn.

[தோள்+அணி]



தோற்றமறைவுக்கணக்கு *tōṟṟamaṟaivu-k-kaṇakku,* பெ. (n.) மக்களின் பிறப்பிறப்புப் பதிவு (சனனமரணக் கணக்கு); birth death register.

[தோற்றம்+மறைவு+கணக்கு]

ந

நச்சுவளி *naccuvaḷi,* பெ. (n.) நச்சுப்புகை; poisonous gas.

த.வ. நச்சுப்புகை

[நச்சு+புகை]

நஞ்சோடை *nanjōḍai,* பெ. (n.) உப்பை வாறிய பின் நீர் வெளியேறும் இடம்; outlet.

[நஞ்சு+ஓடை]

நடுக்கக்கனவு *nadukka-k-kaṉavu,* பெ. (n.) அச்சத்தால் ஏற்படும் நடுக்கம், நடுநடுங்க வைப்பது (சிம்ம சொப்பனம்); nightmare, devil incarnate.

[நடுக்க+கனவு]

நடுத்தரம் *naḍuttaram,* பெ. (n.) மட்டம் (சுமார்); moderate.

[நடு+தரம்]

நடுநெற்றி *naḍuneṟṟi,* பெ. (n.) ஆதனின் இடமாகக் கருதும் புருவ இடைப்பகுதி (சாக்கிர தானம்); center between the eye brow where the soul dwels in the waking state.

[நடு+நெற்றி]

நடைமொழி *nadaimoḻi* பெ. (n.) ஒரு நாட்டின் ஒரு பகுதியில் பேசப்படும் கிளை மொழியின் வடிவம்; dialect.

மறுவ. கிளைமொழி

[நடை+மொழி]

நடைவரப்பு *nadai-varappu,* பெ. (n.) வயல் களில் நடப்பதற்காகப் போடப்படும் வரப்பு; walkable broad parement between paddy field.

[நடை+வரப்பு]

நண்டு தறிக்கை *nanḍutaṟikkai,* பெ.(n.) நட்டுவாக்காளி என்னும் தேள் போன்ற நச்சுயிரி; a poisonous insect like scorpion.

[நண்டு+தறிக்கை]

நண்ணிலக்கோடு *naṇṇila-k-kōḍu,* பெ. (n.) வட, தென்முனைகளிலிருந்து சமதொலைவு களில் அமையுமாறு உலகவுருண்டையைச் சுற்றி வரையப்படும் உருவலிப்பு (கற்பனை)க்கோடு; equator.

மறுவ. நிலநடுக்கோடு

[நண்ணிலம்+கோடு]

நமட்டை *namaṭṭai,* பெ.(n.) உதடு; lip. பல்லில்லா தவன் நமட்டையைக் கடிச்சானாம் (பழ.).

மறுவ. நமுட்டு

[நா+பட்டை]

நயஏய்ப்பு *nayaēyppu,* பெ. (n.) இனிய சொற் களைக் கூறி ஏமாற்றுதல் (டராய்த்தல்); to deceivs, befool a person by honored words.

[நயம்+ஏய்ப்பு]

நல்லி *nalli,* பெ. (n.) 1. உடல்நலமுள்ளவன் (சுகி); healthy person. 2. செல்வன்; prosperous wealthy person. 3. கருநிறமுள்ளவன்; black person.

[நல்–நல்லி]

நல்லுருவம் *nalluruvam,* பெ. (n.) அழகு (சொரு பம்); beauty.

[நல்ல+உருவம்]

நல்வாழ்த்து *nal-vāḻttu,* பெ. (n.) சீரும் சிறப்பும் பெறுமாறு வாழ்த்துதல் (ஆசீர்வாதம்); blessing, good wishes, the invoking of happiness.

[நல்+வாழ்த்து]

நலஞ்சேர்த்தி *nalañcērtti,* பெ. (n.) தீமைகளை விலக்குவதற்காக அல்லது அமைதிப்படுத்த செய்யும் நடப்புக்காரியம் (சாந்திகம்);

propetiatory rite for averting or removing evil. 2. திருநீற்றுக்காகச் சாணியை ஆவின் பின்னிருந்து ஏற்றுக்கொள்ளுஞ் செயல்; obtaining dung from the cow while being evacuated for the preparation of sacred ashes.

[நலம்+சேர்த்தி]

நலப்பேறு *nalappēṟu,* பெ. (n.) வருத்தமில்லா பிள்ளைப்பேறு (சுகப்பிரசவம்); easy and safe accore chement, safe, child birth after the full period of gestation.

[நலம்+பேறு]

நலம் நுகர்தல் *nalamnugar-,* 2 செ.குன்றாவி. (v.t.) மகிழ்ச்சியாக இருத்தல்; to live hapily.

[நலம்+நுகர்-]

நலவாழ்வன் *nalavāḻvaṉ,* பெ. (n.) நலமுடன் வாழ்பவன்; happy or healthy person.

[நல+வாழ்வன்]

நலவாழிடம் *nalavāḻiḍam,* பெ. (n.) நல வாழ் வின் பொருட்டுச் சென்று வாழும் இடம்; sanatorium.

[நல+வாழ்+இடம்]

நலிவு *nalivu,* பெ. (n.) நலக்குறை(வு); want of comfort, unhealthiness.

[நலி–நலிவு]

நழுவல் *naḻuval,* பெ. (n.) கண்ணில் படாமல், ஏமாற்றி நழுவிவிடும் செயல்; giving the slip, playing truant.

[நழுவு+அல்]

நளிநயக்கை *naḷinaya-k-kai,* பெ. (n.) கையது கொண்டு காட்டும் மெய்ப்பாடு; gesture by hand.

[நளிநயம்+கை]

நற்காப்புப்பொருள் *naṟkāppu-p-poruḷ,* பெ. (n.) நன்கு காப்பாற்றப்பட்ட பொருள்; that which is well protected.

[நல்ல+காப்பு+பொருள்]

நற்கோள் *naṟkōḷ,* பெ. (n.) வளர்பிறைத் திங்கள், குரு அறிவன், வெள்ளி ஆகிய நற்கோள்; auspicious planets, as waxing Moon, Mercury, Jupitar, Venus.

[நல்ல+கோள்]

நற்கோள்நிலை *naṟkōḷnilai,* பெ. (n.) ஒருவன் பிறக்குங் காலத்து அவனுக்கு உயர்ந்த நிலையைக் கொடுக்குமாறு கோள்கள் நிலை சேர்ந்த ஒரு நல்லூழ், கூர்ம யோகம் (சங்.அக.); a peculiar conjunction of planets at the time of one's birth indicative of great success in life.

[நல்ல+கோள்+நிலை]

நற்புதல்வன் *naṟpudalvaṉ,* பெ. (n.) நற் செய்கையுள்ள மகன்; good virtuous, dutiful son.

[நல்ல+புதல்வன்]

நன்மங்கலத்தள் *naṉmaṅgalattaḷ,* பெ. (n.) கணவனுயிருடனிருக்க மங்கலநாண் அணிந் திருப்பவள்; married woman under coverture, as wearing the used, lock, opposite to amangal.

த.வ. வாழ்வரசி

[நல்ல+மங்கலத்தள்]

நன்மைதீமைகள் *naṉmaitīmaigaḷ,* பெ. (n.) நலந்தீங்குகள்; pros and cons, as of a case; convience and inconvience, good and bad conse-quences.

[நன்மை+தீமைகள்]

நனிசுவை *naṉisuvai,* பெ. (n.) சுவை (சுவாரசியம்); relish, taste. 2. மனத்தை ஈர்த்து விறுவிறுப்பை ஏற்படுத்தும் தன்மை, ஈடுபாடு; absorbing interest, relish fascination.

[நனி+சுவை]

நாணயநோட்டகன் *nāṇayanōṭṭagaṉ,* பெ. (n.) காசு ஆய்வாளன்; shroff, teller employed by banks and commercial firms. 2. கருவூல வேலைக்காரன்; treasury

assistant. 3. காசுக்கடைக்காரன்; banker, dealer in precious metals.

[நாணயம்+நோட்டகன்]

நாதாங்கி *nā-tāngi*, பெ. (n.) கதவைச் சார்த்தப் பயன்படுத்தும் அமைப்புக்கருவி; bolt.

[நா+தாங்கி]

நாமக்குழி *nāma-k-kuḻi*, பெ.(n.) முன் கழுத்தின் அடியில் உள்ள தொண்டைக்குழி; a dip like portion at the lower throat.

[நாமம்+குழி]

நாவாய்கன் *nāvāykaṉ*, பெ. (n.) மீகாமன் பார்க்க; see mikāmaṉ.

[நாவாய்+அன்–நாவாயன்–நாவாய்கன்]

நாவாயிகம் *nāvāyikam*, பெ. (n.) மரக் கலத்தொடர்பானது; shipping.

[நாவாய்+இகம்]

நிலஅளவை *nilaaḷavai*, பெ. (n.) நிலங்களை அளந்து பதிவு செய்கை (சர்வே); survey.

[நிலம்+அளவை]

நிலாக்கல் *nilākkal*, பெ. (n.) நிலவினொளியில் நீர்கால்வதாகிய கல் வகை; moon stone, a crystal soil to emit water when exposed to moon light, as moon beloved.

[நிலா+கல்]

நிலாக்காட்சி *nilā-k-kāṭci*, பெ. (n.) குழந்தை களுக்கு முதன்முதற்காட்டும் நடப்பு காரியம் (சந்திரதரிசனம்); ceremony of showing the moon to a child for the first time in an auspecious evening. 2. வளர்பிறையில் முதன்முதல் நிலவு கட்புலனாதல்; sighting of the moon in the sky for the first time after new moon.

[நிலவு+காட்சி]

நிலாவுதயம் *nilāvuḍayam*, பெ. (n.) 1. நிலாத் தோற்றம்; moon rise. 2. குளிர்ச்சி தரும் மாத்திரை; a cooling pill.

[நிலா+உதயம்]

நிலுவைத் தொகை *niluvai-t-togai*, பெ.(n.) **நிலுவைப் பணம்** பார்க்க; see *niluvai-p-paṇam.*

[நிலுவை+தொகை]

நிலுவைப் பணம் *niluvai-p-paṇam*, பெ.(n.) ஒருவருக்கு உரிமையுடைய முன்னரே செலுத் தப்பட்டிருக்க வேண்டிய பணம்; arrears.

[நிலுவை+பணம்]

நிறைஒளிமறை *niṟavoḷimaṟai*, பெ. (n.) வான் கோள்களின் முழு மறைப்பு; total eclipse.

[நிறை+ஒளிமறை]

நிறைப்பண்[1] *niṟaippaṇ*, பெ. (n.) ஆறு சுரமுள்ள பண் (சிலப்.13.106 வரை); secondary melody type, hexalonic.

[நிறை+பண்]

நிறைபண்[2] *niṟaipaṇ*, பெ. (n.) எல்லா இசை, ஒலிக்குறிப்புகளும் அமைந்த பண்; primary melody type as containing all the notes of the gamut.

[நிறை+பண்]

நிறைமதி *nirai-madi*, பெ. (n.) வெள்ளுவா; full moon.

[நிறை+மதி]

நீடுவாழி *niḍuvāḻi*, பெ. (n.) நீண்ட வாழ்நாளு டையவன்; long lived person as living hundred years.

[நீடு+வாழி]

நீர் நோன்பு *nirnōṉbu*, பெ. (n.) மூன்று நாள் வரை நீர் மட்டும் பருகிப் பட்டினியிருக்கும் ஒரு

நோன்பு (யாழ்.அக); a fast for three days, drinking only water.

[நீர்+நோன்பு]

நீர்வாழி *nīrvāḻi*, பெ. (n.) நீரில் வாழும் உயிர்; aquatic.

[நீர்+வாழி]

நுண்ணுடல் *nuṉṉuḍal*, பெ. (n.) உயிர் ஐந்து, மனம் ஒன்று, பொறிகளைந்து செயல் உறுப்புகள் ஐந்து ஆகிய இவற்றால் ஆனதும், உயிர் வீடுபேற்று நிலை வரை அதனோடிருப்பது மாகிய உடல்; subtle body made of five piranan, manam, five ñaṉēndiriyam and fivekarumendriyam, accompanyingfivetill hisfinalemanclpation.

[நுண்மை+உடல்]

நுண்ணுயிரிக் காய்ச்சல் *nuṉṉuyirikāyccal*, பெ. (n.) நுண்ணுயிரிகளால் உண்டாகும் காய்ச்சல் வகை (மு.அ.) (கிருமிச்சுரம்); fever caused by worms.

[நுண்ணுயிர்+காய்ச்சல்]

நுண்ணுயிரிசொறி *nunnuyiricoṟi*, பெ. (n.) நுண்ணுயிர்களால் உண்டாகும் சொறி நோய் வகை (மு.அ.); itching caused by worms.

[நுண்ணுயிரி+சொறி]

நுண்மநிலை *nuṉmanilai*, பெ. (n.) நுண்துகளான உடலில் உயிர் நிற்கும் நிலை; state of jīvan or individual soul in subtle body.

[நுண்ம+நிலை]

நூல்மா *nūlmā*, பெ. (n.) கோதுமை முதலிய தவசங்களால் திரித்திரியாகச் செய்யப்படும் உணவுப்பொருள்; vermicelli.

மறுவ. நூல்மாவு

[நூல்+(மாவு)மா]

நூற்பாநிலை *nūṟpanilai*, பெ. (n.) ஆற்றொழுக்கு, அரிமா நோக்கு, தவளைப் பாய்ச்சல், பருந்தின் வீழ்வு என நால்வகைப் பட்டதாய் நூற்பாக்கள் ஒன்றோடொன்று பொருளால் தொடர்ந்து நிற்கும் நிலை; position of sutras in a treatise as the guiding principle of interpretation four in number.

[நூற்பா+நிலை]

நூற்பாவை *nūṟpāvai*, பெ. (n.) கயிற்றால் ஆட்டப்படும் பாவை; puppet moved by strings or other contrivances.

[நூல்+பாவை]

நெட்டு *neṭṭu*, பெ. (n.) செருக்கு, திமிர்; arrogance. "அவனுக்கு நெட்டு அடங்கவில்லை" (உ.வ.).

நெடுஞ்சாண்கிடக்கை *neḍuncāṇkiḍakkai*, பெ. (n.) உடலின் எட்டு இடங்கள் தரையில் படும்படியாக பெரியார்கள் முன் விழுகை (சாட்டங்கமாக); prostration by touching ground with the eight limbs - two hands, two knees, two shoulders, chest and forehead.

[நெடும்+சாண்+கிடக்கை]



நெடுமாடம் *nedumadam*, பெ.(n.) நெடுங்கூட அங்காடி; emporium.

நெய்தல்நிலப்பா *neytalnilappā*, பெ. (n.) தன்னைப் பிரிந்திருக்கும் தலைவனைக் குறித்துத் தலைவி கடற்கரையிலிருந்து புலம்புவதாகக் கூறப்படும் சிற்றிலக்கிய வகை; poem in which a maiden laments on the seashore for her lovers separation.

[நெய்தல்+நில+பா]

நெய்ப்புழு *ney-p-pulu,* பெ. (n.) நெய்யில் உண்டாகும் புழு; a worm found in pulugred ghee.

[நெய்+புழு]

நெய்மம் *neiymam,* பெ. (n.) 1. வடித்த மருந்தெண்ணெய் (சூடா.); ointment, medicated oil, balm. 2. எண்ணெய்; oil.

[நெய் > நெய்மம்]

நெல்லிக்காய் குண்டு *nelli-k-kāykuṇḍu,* பெ.(n.) நெல்லிக்காய் போன்று பொன்மணி கோர்த்த கழுத்தணி; a gold ornament worn by women.

[நெல்லி+காய்+குண்டு]

நெற்றாக *neṟṟāka,* வி.எ. (adj.) குறிப்பிட்ட காலத்தில் சிறிதும் தவறாமல், மிகச் சரியாக; right on the spot.

மறுவ. முற்றாக

[நெற்று+ஆக]

நெறி-த்தல் *neri-,* செ.குன்றாவி. (n.) சோளம், கேழ்வரகு முதலியவற்றை மாவாக்குதல்; grinding cerials. சோளம் நெறித்துக்கொடு (உ.வ.).

[நுறு-நெறு-நெறி]

நேட்டு *niṭṭu,* பெ.(n.) உறுதி, உறுதிப்பாடு; confirmation, firmness.

நேந்திரம் *nēndiram,* பெ.(n.) கண்பார்வை; eye sight. "அவருக்கு நேந்திரம் குறைந்து விட்டது" (கொங்.வ.).

[நோள்(நோடு)- நோந்திரம் - நேந்திரம்]

நேந்திரம் எனும் தமிழ்ச்சொல் வடமொழியில் நேத்திரம் எனத்திரிந்தது.

நேர்காட்சி *nērkāṭci,* பெ. (n.) ஒரு நிகழ்ச்சியை நேரில் பார்த்தவர் அல்லது நன்கு அறிந்தவர்; eye witness. அந்தக் கொலையை நேரில் பார்த்தவர் என்பதால் இவரை முதல் நேர்காட்சியாக அழைத்தனர். (இ.வ.).

[நேர்+காட்சி]

நேர்கூற்று *nērkūṟṟu,* பெ. (n.) ஒருவர் கூறிய சரி நேர்வான சொற்கள்; direct speach.

மறுவ. தற்கூற்று

[நேர்+கூற்று. கூறு > கூற்று]

நேர்ச்சி *nērcci,* பெ. (n.) தற்செயல்; accident.

[நேர்-நேர்ச்சி]

நேரல்கூற்று *nēralkūṟṟu,* பெ. (n.) கூறப்பட்ட சொற்களை அவ்வாறே பயன்படுத்தாமல் அவற்றை மற்றவர் எடுத்துரைக்கும் வகை; indirect speech.

மறுவ. அயற்கூற்று

[நேர்+அல்+கூற்று]

நேரலை *nēralai,* பெ. (n.) நேரடி ஒலிபரப்பு, ஒளி பரப்பு; direct broadcasting or direct telecasting. உலகத்தமிழ்ச்செம்மொழி மாநாட்டு நிகழ்ச்சிகளை நேரலையில் எல்லாத் தொலைக்காட்சிகளும் ஒளிபரப்பின.

[நேர்+அலை]

நொடிப்பிசைப்பெட்டி *noḍippiśaippeṭṭi,* பெ. (n.) இசைக்கருவி வகை (இக்வ.); harmonium.

[நொடிப்பு+இசை+பெட்டி]



நோக்குரு *nōkkuru,* பெ. (n.) மூலப்பொருளுக்கு எடுத்துக்காட்டான பொருள் (மாதிரி); model, sample.

[நோக்கு+உரு]

நோட்டகன் *nōṭṭagaṉ,* பெ. (n.) ஆய்வு செய் பவன் (சோதனைக்காரன்); one who examines.

[நோடு-நோட்டம்-நோட்டகன்]

ப

பக்கரிஎலும்பு *pakkarielumbu, பெ.*(n.) விலா எலும்பு; rib.

மறுவ. பக்க எலும்பு

[பக்கம்–பக்கல்–பக்கலி–பக்கரி+எலும்பு]

பக்குடுக்கை நன்கணியார் *pakkudu-k-kai nankaniyar, பெ.*(n.)கடைக்கழகக் காலப் புலவர்;a poet of sangam age.

[பக்கு+உடுக்கை+நல்+கணியார்]

பகைநீர் *pagainir, பெ.*(n.)விதை முளைத்த மூன்றாம் நாள் பாய்ச்சும் நீர்;watering the field on the third day of the transplantation of paddy sapling.

[பகை+நீர்]

பங்கடை *pangaḍai, பெ.*(n.)அழகில்லாத அரு வருப்பான தோற்றம்; ugly aapearance. அந்தப்பங்கடை இங்கு ஏன் வந்தாள்? (இ.வ.)

மறுவ.பங்கரை.

[போங்கு– பங்கு --பங்கடை]

பங்கம் *pangam, பெ.*(n.)நாணம்;வெட்கம்; shyness.

[பின்கு–பங்கு–பங்கம்]

பங்கீட்டுஅட்டை *pangiṭṭuaṭṭai, பெ.* (n.) உணவுப் பொருள்கள் பெறுவதற்கான அடையாள அட்டை;Ration card; family card.

[பங்கீடு+அட்டை]

பச்சை போடுதல் *paccaipōdu-*, செ.குன்றாவி. (v.t.)நடவு முடித்த பிறகு சிறிதாக நாற்றைக் கட்டி நடுவில் போடுதல்(வடார்க்.);to lay a few saplings in the middle of the field after finishing the work of transplantation.

[பச்சை+போடு]

பட்டி *paṭṭi,* பெ. (n.)பட்டிக்குக் காவல் இருக்கும் நாய்;watch dog for the cattle at pen.

ம. பட்டி

[பட்டி–ஆட்டுப்பட்டி]

இடவாகுபெயர் போல் பொருட்பாட்டுத்தாவலால் பட்டிக்குக் காவல் இருக்கும் நாயைக் குறிக்கும் சொல்லாயிற்று. பட்டிக்குக் காவலிருக்கும் நாயைப் பட்டி என்பது போல வேட்டைக்குத் துணையாகும் நாயை வேட்டை என்பது வழக்கம்.

பட்டின சுட்டான் *paṭṭina cuṭṭāṉ,*பெ. (n.)மீனவர் தீயில் சுட்டுத் தின்னும் மீன்வகை; a kind of fish fire baked and eaten by fishermen.

[பட்டின+சுட்டான்]

பட்டுப் பாதை *pattu-p-pādai,*பெ. (n.)இமய மலையின் பின்புறம் சீன நாட்டிலிருந்து ஆப்கனித்தானம் வழியாகத் துருக்கி வரை சென்ற 11,200 அயிரை மாத்திரை (கி.மீ.) வணிகப்பாதை; silk route of the Chinese from China to Turkey.

[பட்டு+பாதை]

பட்டை *paṭṭai,*பெ. (n.)பெண்ணாடு; she-goat or sheep.

க. பட்டெ.

[பெட்டை–பட்டை]

பட்டைக்கயிறு *paṭṭa-k-kayiṟu,*பெ. (n.)பயிர் நடவு நேராக இருப்பதற்காக ஒரு குறிப்பிட்ட பட்டை அளவு பிடித்துக் காட்டும் கயிறு;rope used gto line marking in the field.

[பட்டை+கயிறு]

பட்டக் கயிறு என்பது கொச்சை வழக்கு.

படரிலந்தை *paḍarilandai,*பெ. (n.)நிலத்தில் ஆழ வேரூன்றிப் படரும் இலந்தைச் செடி;a kind of lant.



[படர்+இலந்தை]

படியாள் *padi-y-āl*, பெ. (n.) நில உரிமையாளரின் வீட்டில் தவசம் மட்டும் கூலியாகப் பெற்றுக் கொண்டு வேலை செய்யும் பணியாள்; a worker in the house of a land owner getting food grains as salary.

[படி+ஆள்(படி -நாட்படி) (நாள்தோறும் உணவுக்கான தவசம்)]

படைமரம் *padaimaram*, பெ. (n.) நெய்த துணியைத் தறியில் சுருட்டி வைக்க உதவும் கருவி; a device to hold the cloth woven in handloom weaving.

[படை+மரம்]

பண் *pan*, பெ. (n.) ஏழு சுரங்கள் நிரம்பிய முறை யானஇசையடைவு (சம்பூரணராகம்); seven musical node. பண் (7 சுரம்), பண்ணியம் (6 சுரம்), திறம் (5 சுரம்), திறத்திறம் (4 சுரம்); musical note. ஏழு சுரங்கள் நிரம்பிய முறையானஇசையடைவு (சம்பூரணராகம்). "பண் என்னாம் பாடற்கியை பின்றேல்" (குறள்)

[பள்–பண்]

பண்டாரங்கனார் *pāṇḍaranganār*, பெ. (n.) கடைக் கழகப் புலவர்; a poet of sangam age.

க. பண்டாரா (வெள்ளாடைத்துறவி.)

[பாண்டு+அரங்கன்+ஆர்]

பாண்டுரங்கம் (மஞ்சள்கலந்த வெண்ணிற முடையவை)

பத்திரம் *pattiram*, பெ. (n.) பனையோலை; palmyrah leaf.

[பதவு–பதம் (புல்,சீரை, இலை) –பத்தம் – பத்திரம்]

Skt. பத்திரா. **த.** பத்திரம்.

பதக்கு *padaikku*, பெ. (v.) ஒரு மரக்கால் அல்லது 3 பட்டணம் படி கொண்ட முகத்தளவு; a measurment of quantity equal to one markkal. இரு குறுணி ஒரு பதக்கு.

மறுவ. மரக்கால், வள்ளம்

[பொதுக்கு – பதக்கு]

பதடி வைகலார் *paddi vaigalār*, பெ. (n.) கடைக் கழகக் காலப் புலவர்; a poet of sangam period.

[பதடி+வைகல்+ஆர்]

பதிவு *padivu*, பெ. (n.) ஒழுங்கு; நன்னடத்தை; regularity, good habit.

[பதி–பதிவு]

பதுமம் *padumam*, பெ. (n.) கோடான கோடி எனும் பேரெண்; hundred trillion.

[பதுமம் (தாமரை)–பேரெண் குறித்த ஆகுபெயர்]

பதுமனார் *padumanār*, பெ. (v.) கடைக் கழகக் காலப்புலவர்; poet of sangam period.

[பதுமம் – பதுமன்+ஆர்]

பந்தக்காரன் *pandakkāran*, பெ. (n.) அறுவடைக் காலத்தில் இரவில் கையில் தீவட்டியுடன் காவல் காக்கும் பணியாளன்; a night watchman at the time of harvesting.

[பந்தம் (தீப்பந்தம்)+காரன்–பந்தக்காரன்]

பயிரா–தல் *payirā-*, செ.கு.வி. (v.i.) விலங்குகள் கருவுறுதல்; to be pregnant, as of an animal.

பயின்றவலை *payinravai*, பெ. (n.) சிறிய கண்கள் கொண்ட வலை; a net of small holes.

[பயில்தல் (நெருங்குதல்)பயில்வலை– பயின்ற +வலை]

பரங்கொற்றனார் *parankorranār*,பெ.(n.)
1கடைக்கழகக் காலப்புலவர்; poet of sangam period

[பரம்+கொற்றன்+ ஆர்]

பரம்புப் பலகை *parambu-p-palagai* ,பெ.(n.) நாற்றுநடுவதற்று முன்பு வயலில் சேற்றை மட்டப்படுத்தும் பலகை;a leveling plank.

[பரம்பு+பலகை]



பரமை *paramai*,பெ.(v.)1. பெண் ஆட்டுக்குட்டி; she-goat.2.விலங்கினத்தில் பெண்;female in animals.அந்தப்பரமைக்குட்டியை விற்று விட்டான்.

[புருவை–பரவை–பரமை]

பரவை *paravai*,பெ.(v.)மீன்குஞ்சு;young one of fish.

பரியக்கட்டு *pariya-k-kattu*,பெ.(v.) பரிசம் போடுதல், திருமணம் உறுதிப்படுத்துதல் (நிச்சயதார்த்தம்); ceremony of fixing the marriage date.

மறுவ. உறுதிப்படுத்தல், பாக்கு வெற்றிலை மாற்றுதல், நாள் அளத்தல், பருப்பஞ்சோறு பரிசம் போடுதல்.

[பரிசு– பரிசம்+போடு]

திருமணம் உறுதிபடுத்தியதற்கு அடையாளமாக மணப்பெண்ணுக்குப் பரிசுப் பொருள்களையும் ஆடை அணிகலன்களையும் தருதல்.

பரியம்பாடு–தல் *pariyampādu*,செ.கு.வி.(v.t.) ஏற்றம் இறைப்பவர்கள் பாடும் ஏற்றப்பாட்டின் ஒருவகை;variety of piccotah song in the rural areas.

[பரியம்+பாடு]

ஏற்றம் இறைப்போர் 30 சால் இறைப்பதை ஒரு பரியம் என்பர். 30 சால் இறைக்கும் வரைஉள்ள காலத்தில் பாடும் வரிகளின் எண்ணிக்கை கொண்ட பாடல் ஒரு பரியம்.

பரூஉத்துணியல் *parūu tuniyal*, பெ.(v.) தடிப்பான துணி வகை; a big cotton piece.

[பரு–பரூஉ+துணி+அல்]

பல்யானைச் செல்கெழு குட்டுவன் *palyānaicel kelukuttuvan*,பெ.(v.)சேரமன்னன்;a chera king.

[பல்+யானை+செல்+கெழு+குட்டுவன்]

பல் = பெரிய. பல்யானை = உயரமான பெரிய யானை. செல் = மேகம். பல்யானைச்செல் = பெரிய யானைக் கூட்ட மேகங்கள் (உருவகம்). கெழு = பொருந்திய. குட்டுவன் = சேரன். யானைக் கூட்டங் களாகிய மேகக் கூட்டங்கள் கொண்ட சேரன் என்பது பொருள்.

பலாசனை *palāsanai*, பெ.(n.) பரவல், அங்கொன் றும் இங்கொன்றுமாக; sparce. "பயிர்களை பலாசனையாக நடு" (இ.வ.).

மறுவ. பரவடா, பருதாடா.

[பல்–பலாசு–பலாசனை]

பழங்கலம் *palankalam*,பெ.(n.)முன்னோர் பாதுகாத்து வழங்கிய பழைய மட்பாண்டம்; earthen potteries used and given by the ancesstors.

மறுவ. பழம்பானை

[பழம்(பழைய)+கலம்]

பழம் வி–டுதல் *palam vidu-*, செ.கு.வி.(v.t.) 1. மரம் காய்த்துப் பழுத்தல்; yielding fruits as tree.2. சிறுவர் விளையாட்டில் சிறு சண்டை நடந்த பிறகு ஒற்றுமையுண்டான பின் கூறும் சொல்;word denoting compromise in play children.

[பழும்+விடு]

காய்விடு என்பதற்கு எதிரான சொல்லாட்சி.

பழு *palu*,பெ.(n.)ஆலமரம்;banyan tree.சிறு பழுவூர் ஆலந்துறை.

[பல்(பெரிய)–பழு]

பழையன் *palayan*,பெ.(n.) தொன்முது குடியினன்; a man of very long ancestry.2 பாண்டியன் மரபின் கிளைக் குடியினன்;a clan of pandya dynasty.

ம. பழையன், பழுவன், பழே.

[பள்–பழு–பழை–பழையன்]

பறம்பு *parambu*,பெ.(n.)மேட்டு நிலம்; high ground.2.குன்று;hill.

ம. பறம்பு (மேட்டு நிலம்) பற (உயரம்).

[பறு–பறம்]

பறைவகைகள் *paraivagaigal*, பெ.(n.) குறிஞ்சிக் குரிய ஏறுகோட்பறை, மருதத்துக்குரிய பொருநர் கிணைப்பறை, நெய்தலுக்குரிய மீன் கோட்பறை, பாலைக் குய விசியுறு கடுங்கண், தண்ணுமை;drum varieties of different landscape.

[பறை+வகைகள்]

பன்னாடு தந்த மாறன் வழுதி *pannādutanda māranvaludi*,பெ.(n.)நற்றிணை தொகுப் பித்தபாண்டிய மன்னன்;pandiya king who compiled the tamil literature *narrinyai*

[பல்+நாடு+ தந்த (வென்ற)+மாறன்+ வழுதி]

பல்நாடு என்பது ஆந்திர மாநிலப்பகுதி.

பனாட்டு *panāttu*,பெ.(n.)பனைப்பாகினால் செய்த இனிப்பு; a chocklate made from palmyra juice. பனாட்டு (தொல்.சொல்.உரை).

[பனை+அட்டு]

பாகம் *pāgam*,பெ.(n.)ஆறடி ஆழம் அல்லது நீளத்தைக் குறிக்கும் நீட்டல் அளவு;a linear measure of six feet length or depth.

மறுவ. மார்.

[பாகு –பாகம்]

பாகுடி *pākudi* ,பெ.(n.) 1. சேரநாட்டு உம்பாற் காட்டு மலைகளின் இடையிலிருந்த குறு நாட்டுப் பகுதி;a region in ancient Kerala mountain. 2. **அகப்பாகுடி பார்க்க**; see agappakudi.

மறுவ.அகப்பாகுடி.

க. பாகுடி

[அகப்பாகுடி(மதில்சூழ்ந்த குடியிருப்பு)– பாகுடி]

பாட்டன் *pāttan*,பெ.(v.)பாய் மரக் கலனை கரை சேர்ப்பதற்கு உதவும் காற்று.favourable wind which enables fishermen to reach seashore. பாட்டன் வந்துவிட்டான். பாயைவிரி (மீனவ.)

[பாட்டன் – பாசமுள்ள உறவுக்காரனின் பெயர் தனக்குச் சார்பாக உதவும் காற்றுக்கு ஆயிற்று. (உறவு குறித்த ஆகுபெயர்]

பாண்டியன் *pāndiyan*,பெ.(n.) 1. பாண்டிய மன்னன்; Pandiyan king. 2.பாண்டிய மரபைச் சேர்ந்தவன்;one who belongs to the Pandiya dynasty.

தெ. பண்டு (விளைதல்) பண்ட்ட (தவசம்).

[பண் – பண்டு(விளைதல்)– பாண்டி (எருது, வண்டி)– (வேளாண்மை)+அன்]

வேளாண் தொழிலை முதன்முதல் உண்டாக் கியவன் என்பதால் பெற்ற பெயர் எருது, வண்டி, விளை பொருள்கள் என்பவை காலத்தால் பிற்பட்ட பொருட்பாட்டுத் திரிபுகள்.

பாண்டியதாசன் *pāndiyadāsan*,பெ.(n.) பாண்டியதாசன் எனப்பெயரிட்டுக் கொண்டு கிரேக்க நாடாண்ட ஏதென்சு மன்னர் இரு வரின் பெயர். two kings of Athens termed as pandiyadasan. Caldwell - History of Tinnevelli p.119)

[பாண்டியன் + தாசன்]

கி.மு. 1400 அளவில் அத்தீனிய அரசுகள் கொற்கைப் பாண்டியனுக்கு நன்றிசெலுத்தும் பாங்கில் பண்டாசு (pandas) எனப்பெயர் ஒட்டிக் கொண்டனர் எனப்படுகிறது.

பாதீடு *pādīdu*,பெ.(v.)அரசின்வரவு செலவுத் திட்டம்; budget.

[பகுத்து+இடு–பகுத்திடு –பாதீடு]

பாம்புரி *pāmburi*,பெ.(n.)மதிலடி ஆளோடி, ஓர் ஆள்புகுந்துசெல்லும் உள்ளகத் துளை வாயில்;a manhole in a rampart. "பன்மலர்க் கிடங்குசூழ் பசும்பொற் பாம்புரி. (சீவக.1250).

[பாம்பு+ஊரி]

பாய்ச்சு வலை *pāyccu valai*,பெ.(n.)கடலில் தள்ளி மிகப் பரவலாக விரித்து மீன் பிடிக்கும் வலை;an extensive big net.

[பாய் –பாய்ச்சு +வலை]

பாரி *pāri*,பெ.(n.)கடையெழு வள்ளல்களுள் ஒருவனும் பறம்பு மலையின் தலைவனும் ஆகிய குறுநில மன்னன்; a beneficient king of prambu hill.

மறுவ.பாரி வள்ளல்

மு.பார் (வாழ்தல்) – பாரி (வாழ்விப்பவன்)

[பார்–பாரி]

[பால். பாலித்தல் – பாரித்தல் (வளர்த்தல்) பால்– பா – பாரி (காப்பவன்) பாரிக்கும் நோய் (குறள்) பாரிடம்– வழுமிடம் –பார்(வாழுவிடம்)]

பால் *pāl*,பெ.(n.) இரண்டு;two.

[பகு+பகல் (பிளத்தல்) – பால்]

பால்காப்பியனார் *palkappiyanār*,பெ.(v.) கடைக் கழகப் புலவர்;poet of sangam period.

[பல்+காப்பியன்]

பால்கூலிப் புடவை *pākūli pudavai*,பெ.(n.) மாமியாருக்கு மருமகன் தரும் புடவை;saree presented by the bridge groom to mother-in-law.

[பால்+கூலி+புடவை]

கசவர் பழங்குடிகளின்சொல்லாட்சி.

பாலைகௌதமனார் *pālai-k-kaudamanār*, பெ.(v.)கடைக்கழகப் புலவர்; a poet of sangam age.

[பாலை+கௌதமன்+ஆர்]

பாவாணர் *pāvānar*,பெ.(n.) 1. பாப்புனையும் பாவலர்; poet. 2. மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர்;Prof. Pavanar well known etymologist.

[பா+வாணர்]



பாவைக்கொட்டிலார் *pāvai-k-koṭṭilār*, பெ.(n.)கடைக்கழகப் புலவர்; a poet of sangam age.

[பாவை+கொட்டில்+ஆர்]

பாற்கடல் *pāṟkadal*,பெ.(n.)மீனவர்கள் மீன் பிடிக்கும் கடைசி கடல் எல்லை;the maximum distance for fishing operations by the fishermen.

[பால்+கடல்]

தெளிந்த கடல். பால் போல் தெரிவதால் பாற்கடல் எனப்பட்டது. கரையிலிருந்து 50 முதல் 80 கல் தொலைவில் தெளிந்த கடலில் வேடன் சுறா போன்றனவும் மீனவர் வணங்கும் தெய்வத்தன்மை மீன்களும் உள்ளன என்பர்.

பிசி *pisi*,பெ.(n.)புதிர்; riddle."பிசியும் நொடியும் பிறர்வாய் கேட்டு"(மணிமே.2.2.62). 2.பொய்;lie. 3.சோறு; boiled rice.

க. பிசிகு (கிழித்தல்)

[பிய்– பிசி]

பிசிர் *pisir*,பெ.(n.)1. நீர்த்துளி;water drop. 2. நீருற்று;fountain.வான் பிசிர்க் கருவியுள் (ஐங்குறு.401). 3. ஒரூரின் பெயர்;name of a village in Kanyakumari district.

[பில் (பிள்) பிய் – பிசி– பிசிர்(நீருற்று உள்ள ஊர்)]

பிசிராந்தையார் *pisirāndayār*, பெ.(n.) கடைக்கழகப் புலவர்; a poet of sangam age.

[பிசிர்+ஆந்தை+ஆர்.பிசிர்– குமரிமாவட்டத்துச் சிற்றூர்]

பிஞ்சு எழுத்து *pinju eḻuttu*, பெ.(n.) உகர உயிரெழுத்து ;the vowel 'U' in Tamil.

[பிஞ்சு (சிறியது) + எழுத்து]பிஞ்செழுத்து (கொடிக்கவி).

பிட்டங்கொற்றன் *piṭṭaṅkoṟṟaṉ*, பெ.(n.) கடைக்கழகக் குறுநிலத் தலைவன்;a chieftain of sangam age.

[பிட்டன்+கொத்தன்]

பிடவூர் *piḍavūr*, பெ.(n.) ஓர் ஊரின் பெயர்; name of a village.

[பிடவு (பிடவ,(மலர்) +ஊர்]

பிடிச்சேணி *piḍiccēṇi*, பெ.(n.) ஏற்றத்தில் ஏறும் போது ஊன்றிச் செல்ல உதவும் மூங்கிற்கழி; a bamboo pole used by the piccotah driver while ascending and descending the piccotah.

[பிடி – பிடித்து +ஏணி-இதனை புளிச் சேணி என்பது கொச்சை]

பிடிசூழ் *piḍicūḻ*, செ.கு.வி.(v.t) பிடிசூழ்தல் பெண்யானையின் மீதேறி நிலத்தின் நான்கு எல்லைகளைக் காட்டுதல்;to show the boundary of land mounting on elephant.

[பிடி –சூழ்]

பிண்டன் *piṇḍaṉ*, பெ.(n.)1. ஆண்பாற்பெயர்; name of a person.2.குழுத்தலைவன்; chief of a group.

க. பிண்டு (கூட்டம்) மந்தை, தொகுதி, பிண்டா (யானைக் கூட்டம்).

[இரண்டு – பிண்டு(குழுத்தொகுதி) –பிண்டன்)]

பிண்டு–தல் *pindu-*, செ.குன்றாவி.(v.t.) பிழிதல்; to squeeze. 2.பிசைதல்; to knead.

தெ. பிண்டு.

[பிள்–பிண்டு]

பிராமணன் *pirāmaṇaṉ*, பெ.(n.) 1. மந்திரம் ஒதும் முனிவன்; the sage who recite sacred formula of invocation. 2. படித்த முனிவர்; learned sage. 3. அந்தணன்; the gracious one. 4. ஆரியரிடையில் பிறப்பால் உயர்ந்தவன் எனப்பட்டோன்; Brāhmin.

பிராமணன் என்னும் சொல் சமற்கிருதத்திலும் பாலி மொழியிலும் வெவ்வேறு பொருள்களில் ஆளப்பட்டிருப்பது பரவலாகப் பலர்க்கும் தெரியாத செய்தியாகும்.

இந்தியா முழுவதும் தமிழ் பேசப்பட்ட சிந்துவெளி நாகரிகக் கால இறுதி முதல் வடநாட்டில் அரசாண்ட தமிழ் மன்னன் உதயணன் (கி.மு.700) வரை தமிழாகவே இருந்த வடநாட்டு மொழிகள் முற்றிலும் வடதமிழ் என்னும் பிராகிருதமாகவும் பாலி மொழியாகவும் திரிந்துவிட்டன.

புத்தர் கற்ற மொழிகளில் தமிழும் ஒன்று என்பதால் புத்தர் காலத்திலும் தமிழை வட இந்தியர் கற்றனர் என்பதை அறியலாம். ஆரிய அரசன் பிருகதத்தனுக்காகக் கபிலர் குறிஞ்சிப்பாட்டு எழுதினார்.

இந்தப் பின்னணியை விளங்கிக் கொண்டால் வட இந்திய மொழிகளில் ஊடாடிய தமிழ்ச் சொற் களை எளிதில் கண்டறியலாம். பரம் எனும் சொல் உயர்வு, மேலான வீட்டுலகம், மெய்ப்பொருளாகிய இறையுணர்வு, மெய்யுணர்வு எனப் பொருள்படுகிறது.

சிவனைப் பரன், பரம்பொருள் என்பர். இச்சொல் வடமொழியில் பரமம்–பிரம்மம் எனத் திரிந்தது. மெய்ப்பொருள் உணர்ந்த தவமுனிவனை பிரம்மண எனப் பாலி மொழியில் குறிப்பிட்டனர்.

புலால் தவிர்த்து, கொல்லாமை இன்னா செய் யாமை அறங்களை மேற்கொண்டு, எலும்புந்தோலு மான தோற்றத்துடன் கடுந்தவம் செய்யும் முனிவனை மட்டும் குறித்த சொல்லாக பிரம்மண – பிராம்மண சொல் பெருவழக்கூன்றி இருந்தது.

ஆரியர் இந்தியாவில் குடியேறிய பின் கி.மு.1000அளவில் கங்கைக் கரையிலும் மகதநாட்டிலும் குடியேறி உயிர்க்கொலை வேள்விகள் செய்யத் தொடங்கினர். வேத மந்திரங்களை உரத்துச் சொல்லுதல் எனும் பொருள் கொண்ட புருஹ் (பேசு, பாடு, போற்று) எனும் சொல்லிலிருந்து பிரஹ்– பிராஹ்மண (உரத்துப் போற்றிப்பாடுபவன்) எனும் சமற்கிருதச் சொல் தோன்றியது.

பாலி மொழியிலுள்ள பிராமண எனும் சொல்லும் சமற்கிருதத்திலுள்ள அதே ஒலிப்புள்ள சொல்லும் சமயத்துறையில் உயர்ந்தோரைக் குறிக்கும் சொற்களாக மாறி மதிக்கத்தக்க பெரியவர் எனும் பொதுப் பொருள் பெற்றதால் சொல்லின் உட்பொருளாய்வில் யாரும் ஈடுபடவில்லை. புத்தமதம் இந்தியாவில் மறைந்து போனதால் தவம் செய்யும் துறவியைக் குறித்த பிராமண என்னும் பாலிச்சொல் வழக்கழிந்து போய்விட்டது.

புத்தபெருமான் தன்னுடைய தம்மபதத்தில் 26ஆம் அதிகாரத்திற்குப் பிராமணவருக்கம் (பிராஹ்மணவக்கோ) எனப்பெயரிட்டு பிராமணன் யார் என்பதைப் பாடல்களில் தெளிவாக்கியிருக்கிறார். இறுதிப் பாடலில் பிராமணன் என்பவன் புத்த முனிவன் என்பதைக் குறிக்க முனி என்னும் சொல்லையே பிராமணன் என்பதற்குப் பொருளாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

எல்லா உயிர்களிடமும் அருளறம் பூண்டவனும் உயிர்க்கொலை தவிர்த்தவனுமாகிய அந்தணனைப் பிராமணன் என்பது பாலி மொழியில் வேரூன்றிய வழக்காம்.

இந்தியப் பார்ப்பனர் அனைவரும் தம்மைப் பிராமணர் என அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். இந்தியாவில் ஒவ்வொரு சாதிக்கும் ஒரே குறிப்பிட்ட பெயர் சாதிப் பெயராக நிலவுகிறது. ஆனால் பார்ப்பனர் மட்டும் ஒவ்வொரு மொழியிலும் அந்தந்தப் பகுதி தாய்மொழியில் உயர்குடியினரைக் குறிக்கும் உயர்வான பெயர்களைத் தெரிந்தெடுத்துத் தமக்குக் கூடுதல் சாதிப்பெயர்களாகச் சூட்டிக் கொள்கின்றனர்.

வடநாட்டில் சாத்திரி, சர்மா, ஆசார்யா போலவும் தென்னாட்டில், ஐயர், ஐயங்கார், அந்தணன் போலவும் சாதிப் பெயர் சூட்டிக் கொண்டனர்.

நெல்லையில் பிள்ளை (பெரியவாச்சான் பிள்ளை) எனவும் ஈழத்தில் முதலியார் எனவும் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டனர். ஆனால் இந்திய அளவில் தம்மைப் பிராமணன் எனும் பொதுப் பெயரால் அழைத்துக் கொள்கின்றனர்.

உள்நாட்டு மொழியில் வெவ்வேறு சாதிப் பெயர்களும் இந்திய அளவில் ஒரே பொதுப் பெயரும் பார்ப்பனருக்கு வழங்கி வருவது ஏன் என்று எவரும் வினாத்தொடுக்கவில்லை.

எந்த ஊருக்குச் சென்றாலும் அங்குள்ள உயர்குடியினரைப் போன்றே தாமும் உயர்ந்த பிரிவினர் எனக் காட்டுவதற்காகச் செய்யப்பட்ட சூழ்ச்சியாகவே இது அமைந்துள்ளது.

உயிர்க்கொலை யாகம் செய்வது ஆரியப் பண்பாடு. ஞானம் எனும் உயர்ந்த மெய்யுணர்வு பெறுவதற்காகத் தவம் என்னும் ஓகம் செய்வது திராவிடப் பண்பாடு. இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரானவை.

தவம் செய்தவனை இராமன் கொலை செய்தது இராமாயணத்தில் கூறப்படுகிறது. தவம் செய்யும் முனிவரைக் கொல்வது தீவினை (பாவம்) எனக் கருதப்பட்டது.

பிராமணனைக் கொல்வது பிரம்மஹத்தி (முனிவனைக் கொல்வது) எனும் கொடுஞ்செயலாகக் கருதப்பட்டது. ஓகம் செய்யும் பிராமணனாகிய (அந்தணன்) முனிவனைக் குறித்த சொல்லை உயிர்க் கொலை யாகம் செய்யும் பார்ப்பனப் பிராமணனைக் குறித்த சொல்லாக்கித் தந்திரத்தால் பார்ப்பனனைக் கொல்வது கடுங்குற்றம் (பாவம்) எனத் தலைகீழாகச் சொல்லின் பொருளை மாற்றிவிட்டனர்.

புத்தரின் தம்மபதத்தில் பிராமணன் எனும் சொல் தவம் செய்யும் திராவிட முனிவனைக் குறித்த உண்மை புலப்படுத்தப்பட்டிருக்கிறது.

பிரமன் என்னும் சொல் பிராகிருத மொழியில் ஆதிநாதரைக் குறித்த சொல்லாக வழங்கியுள்ளது. பிரம்மஞானி – ஆத்மஞானியைக் குறிக்கிறது. பிரம்ம வித்தை என்பது பரம்பொருளாகிய இறையியல்பை அறிவதைக் குறிக்கிறது.

பாலிமொழியில் பிராமணன் என்னும் சொல் அந்தணன், தவம் செய்து பெற்ற மெய்யுணர்வால் முகத்திலும் அகத்திலும் ஒளிபெற்று ஒளிர்பவன், உயிர்க்கொலை தீவினையிலிருந்து விடுபட்டவன் என்பதை "Bhaahita paapothi Brahmano" எனப் புத்தர் குறிப்பிடுகிறார்.

மனம் மொழி மெய்களால் பிறர்க்குத் தீங்கு செய்யாத அந்தணனே பிராமணன். ஆரியர்கள் வேள்வித்தீயை உயர்வாக மதிப்பதுபோல் திராவிட முனிவர்களாகிய பிராமணரை உயர்வாக மதிக்க வேண்டும்.

சடை வளர்ப்பதாலும் கோத்திரத்தாலும் பார்ப்பனக் குடிப்பிறப்பாலும் பிராமணன் ஆகமுடியாது. அதாவது பார்ப்பனப் பெண் வயிற்றில் பிறந்ததால் ஒருவன் பிராமணன் ஆகமுடியாது.

திராவிட முனிவனாகிய பிராமணன் (அந்தணன்) இல்லறத்தாரொடும், துறவறத்தாரொடும்

சேராமல் தனித்திருந்து தவம் செய்யும் அருளாளன். எவன் பிற உயிர்களைக் கொல்வதில்லையோ கொல் விப்பதில்லையோ அவனே திராவிட அந்தணனாகிய பிராமணன் என்பதைப் பின்வருமாறு புத்தர் கூறுகிறார்.

யோ நஹந்தி ந காதேதி

தமஹம் ப்ரூமி பராமணம் (தம்மபதம் 405)

தொல்காப்பியம் அருளாளராகிய முனிவரை அந்தணன் எனவும் அறிவன் எனவும் குறிப்பிடு கிறது. அறிவன் என்னும் தமிழ்ச்சொல் பாலி பிரா கிருத மொழிகளில் அர்ஹதன் (அருகன்) அர் ஹந்தன் எனத் திரிந்துள்ளது. மெய்யறிவு பெற்று வீடுபேற்றுத் தகுதி பெற்றவனே பரம்பொருள் உணர்ந்த (பரமணன்) பிராமணன் என்னும் திராவிட முனிவன் (அந்தணன்) எனப் புத்தர் வரையறைப்படுத் தியிருக்கிறார்.

மெய்ப்பொருள் (பரமஞானம்) அறிவு பெற்ற வனை வடநாட்டார் ப்ரம்மஞ்ஞதா என அழைத்தனர். இச்சொல்லின் தமிழ் வடிவமான அந்தணன் என் பதைத் திருவள்ளுவரும், முனைவன், அறிவன் என்ப வற்றைத் தொல்காப்பியரும் முனிவன், முனிசாமி என்பவற்றைப் பொதுமக்களும் ஆண்டு வந்துள்ளனர்.

பிரித்தி *piritti,* பெ.(n.) அன்னாசிப் பழம்; pine apple.

[பிரி- பிரித்தி]

பிறிதா(கு)-தல் *piridagu-,* செ.கு.வி.(v.t.) வேறா குதல்; changing.

[பிறிது+ஆகு]

பீலி *pili,* பெ.(v.) 1. மயில் தோகை; peacock's feathers 2. மலை; mountain. 3. பசுங்குருத்து; sprout. 4. கால்விரலணி; ring.

[பீல்-பீலி]

பீலிவளை *pilivalai,* பெ.(n.) பெண்ணின் பெயர்; name of a woman.

[பீலி+வளை]

புட்டுக்கூடை *puttu-k-kūdai,* பெ.(n.) மூங்கிலால் செய்யப்பட்ட சிறிய கூடை; a little basket made of bamboo.

[பிள்-பிட்டு-புட்டு+கூடை]

புண்ணிய குமரன் *punniyakumaran,* பெ.(n.) காவிரிக்குக்கரை கட்டிய சோழன் கரிகாலன் வழிவந்ததெலுங்குச் சோழ மன்னன்; a Tamil king in Andhra Pradesh who claimed as a decendent of the great Sangam age Chola King Karikalan.

[புண்ணியன் + குமரன்]

புத்தரி நன்மை *puttari nanmai,* பெ.(n.) புதிய நெல்லறுவடைத் திருநாள்; new harvest festival.

குட. புத்தரி நம்மெ.

[புது+அரி (நெல்லரிதாள்) + (விழா)]

புத்தேளிர் *puttōlir,* பெ.(n.) (பொன்னிறம் கொண்ட) தேவர்; gods (of golden colour).

தமிழிலக்கியங்களில் புத்தேள், புத்தேளிர் என்னுஞ் சொல்லாட்சிகள் பயின்றுள்ளன. தொல் காப்பியர் இச்சொல்லைக் கையாளவில்லை. மொழி ஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் வேர்ச் சொல்லாய் வின் வழி 'புது+எல்' என இச்சொல்லைப் பிரித்து புதிய அல்லது மேலான ஒளி வடிவமான தெய்வம் எனப் பொருள்கொண்டார். கல்-கள்; கொல்-கொள்; ஒல்-ஒள்; வெல்-வெள் போன்றவை அவர் காட்டும் அடிப்படை வேர்ச் சொல் மூலவடிவில் ஒன்றுபோல் காட்டப்படினும் பொருட்பாட்டு விரிவில் முற்றிலும் வெவ்வேறான கோணத்தில் பிரிந்துவிடுகின்றன.

ஓர் அடிப்படைச்சொல் பத்து வெவ்வேறு பொருட்பாடுகளில் பிரியும் பாங்கு கொண்டிருந்தாலும் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட சொல்லாட்சி எந்த எல்லைப் பகுதிக்குள் எந்தப் பொருளில் புடைபெயர்ந் திருக்கிறது என்பதை உறுதி செய்த பின்னரே அச்சொற் பொருளைத் தெளிவாக வரையறுக்க முடியும். வழக்கூன்றாத சொற்பொருள்களை நாமாக இட்டுக்கட்டி வலிந்துரைக்க முடியாது.

'புத்தேள்' என்னும் சொல் பாவாணர் கருத்தின் வண்ணம் கூட்டுச்சொல் என்பதில் ஐயமில்லை. இச் சொல் தமிழிலக்கியங்களிலும் இந்திய மொழிகளிலும் ஆளப்பட்டுள்ள பொருட்பாட்டு நிலைகளைக் கூர்ந்து நோக்கினால் கூட்டுச் சொல் நிலையிலிருந்து தனிச் சொல் பொருளே நாளடைவில் நிலைபேறு பெற் றதைக் காண முடிகிறது.

புலத்தலிற் புத்தேள் நாடுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து (குறள். 1323).

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற (குறள். 213).

எனத் திருவள்ளுவரும்,

மாந்தரஞ் சேரல் ஓம்பிய நாடே
புத்தேள் உலகத் தற்றெனக் கேட்டு
இனிது கண்டிசின் (புறம்.22).

எனக் குறுங்கோழியூர் கிழாரும் புத்தேள் என்னும் சொல்லைத் 'தெய்வம்' எனும் பொருளில் ஆண்டுள் ளனர்.

புலத்தகை புத்தேளில் புக்கான் (கலி.82).

ஏனும் கலித்தொகை பாடல்வரியில் இச்சொல் புதியவன் எனப் பொருள்படுகிறது. பாவாணர் சுட்டும் ஒளி வடிவமான தெய்வம் என்னும் பொருள் இங்குப் பொருந்தவில்லை.

திருவிளையாடற் புராணத்தில்,

புத்தேள் வண்டும் (தருமி.32)

என்னும் வரியில் புத்தேள் என்னும் சொல்லுக்குப் 'புதுமை' என உரையாசிரியர்கள் பொருள் கொண் டுள்ளனர். இதற்குப் 'பொன் வண்டு' எனப் பொருள் கொள்ள வேண்டும் என்கின்றனர். அப்படியாயின் இச்சொல்லுக்குப் 'பொன்' என்னும் பொருளும் இருப்பது தெரிகிறது.

புத்தேளிர் என்னும் சொல் தேவர்கள் என்னும் பொருளில்,

பெற்றாற் பெறிந் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு
புத்தேளிர் வாழு முலகு (குறள். 58)

புத்தேளிர் கோட்டம் வலஞ்செய்து (கலி.82)

என ஆளப்பட்டுள்ளது. தேவர்கள் 'பொன்னுலகத் தவர்கள்' என்பதும் தேவருலகம் பொன்னுலகம் என்பதும் சமய நூல்களில் காணப்படும் பொதுவான கருத்து.

பொன்னிறப் பூ, காய், பழம் கொண்ட மரஞ்செடி கொடிகள் சிலவற்றுக்கும் பழந்தமிழ் மருத்துவர் முதலியோர் குழூஉக் குறிப் பெயராகப் புத்தேள் என்னும் சொல்லை ஆண்டுள்ளனர். கதிரை வேற் பிள்ளையின் தமிழ்ச்சொல் அகராதி புத்தேள் என்னும் சொல்லுக்குக் 'காஞ்சிரை' எட்டி (எட்டிப்பழம்) என்னும் பொருள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

புத்தளம் (புத்தேள்) என்னும் சொல் புத்தளி – புத்தழி எனக் கன்னடத்திலும், புத்தளி–புத்தடி எனத் தெலுங்கிலும் திரிந்து பொன்னைக் குறிக்கும் சொல் லாயிற்று. நாளடைவில் சமற்கிருதம் உள்ளிட்ட இந்திய மொழிகள் அனைத்திலும் பொன்னால் செய்த தெய்வப் படிமத்தை அல்லது பொற்சிலை (பொற் பாவை)யைக் குறித்த சொல்லாட்சியாகிவிட்டது.

வடபுல மொழிகளில் இன்றும் புதலி– புத்தளி என்பவை (பொம்மை)யைக் குறித்த சொல்லாக வழங்கி வருகிறது. புதுமையும் பழமையும் வடிவழகைக் குறித்த சொற்கள். புத்தளி – நிறம் பொலிவைக் குறித்த சொல்.

புத்தேள் என்னும் பொன்னைக் குறித்த சொல் வடமொழியில் 'பீதம்' எனத் திரிந்தது. பீதாம்பரம் என்பது வடமொழியில் திருமால் அணியும் பொன்னா டையைக் குறித்தது.

ஒரு மருங்கு பொன் போன்று காட்சியளிக்கும் பித்தளையும் வடமொழியில் பீதம் என்னும் சொல்லி லிருந்தே தோன்றியுள்ளது.

மஞ்சள் நிறத்தைக் குறிக்க வடபுல மொழிகள் அனைத்திலும் 'பீத்தல, பித்தல, பீலா' என்னும் சொற்களே பயன்பட்டு வருகின்றன.

இந்திய மொழிகள் அனைத்திலும் பொன்னிறம் அல்லது 'மஞ்சள் நிறத்'தைக் குறிக்க இச்சொல் பெருமளவில் பயன்பட்டிருப்பது உறுதியாகிறது. வடமொழிகளுக்கு இது இயற்கைச் சொல்லாயிற்று.

வணிகர் வழி இந்தியா முழுவதும் பரவிய தமிழ்ச் சொல்லாகிய 'புத்தேள்' என்பது புதுமஞ்சளைக் குறிக் கப் பழந்தமிழர் வழங்கிய சொல்.

மேனி அழகுக்குப் புதுமஞ்சளும் உடல் நலத் துக்கு புதிய இஞ்சியும் சிறந்தவை எனத் தமிழர் கண்ட றிந்தனர்.

இஞ்சி சுக்காகச் சுருங்கும் தன்மை நோக்கி அதனை அல்–அல்லம் என்றனர். அல்லம் என்னும் சொல் தெலுங்கிலும் வழங்கி வருகிறது.

மென்மையும் பசுமையான பொலிவும் நோக்கி மஞ்சளை அள்–அள்ளம் என்றனர். அள்–அளகு–அழகு எனத் திரிந்த சொல்லாட்சிகளைக் காணலாம். மொய்–திரட்சி, மொய்–மைந்து–மைஞ்சு–மஞ்சு+ அள்–மஞ்சள் என வளர்ந்த சொல் வளர்ச்சியும் புலனாகிறது. அள்–அள்ளு (அள்ளுக்கொண்டை) எனும் சொல் திரட்சியைக் குறித்தது. திரண்ட மஞ்சள் கிழங்கு 'அள்' எனப்பட்டது. அள்–மஞ்சள். இது வடமொழியில் 'அல' எனத் திரிந்தது.

மஞ்சள் பூசி அழகு கொள்வது அலங்கரித்தல் – அலங்காரம் எனப்பட்டது.

இச்சொல் ஆரியர் தென்னாட்டில் குடியேறிய பின்னரே வடமொழியில் புகுந்துள்ளது. புதிய மஞ்சள் புது+அள்–புத்தள்–புத்தேள் எனத் திரிபுற்றுள்ளது. பசு மஞ்சளாகிய புது மஞ்சளின் மின்னும் பொலிவு பொன்னுக்கு ஆகு பெயராயிற்று.

சங்க அகராதியில் அளமம் என்னும் சொல் லுக்குப் 'பொன்' எனப் பொருள் தரப்பட்டுள்ளது. அளகை–குபேரனின் பொன் நகரமாகிய அளகாபுரி. வடமொழியில் அல என்னும் சொல் பொன்னி றத்தைக் குறிக்கிறது. வணிகர் வழி 'அளம்' (மஞ்சள்) எனும் சொல் உலகம் முழுவதும் பரவியது.

அளம் வடமொழியில் aurum (பொன்) எனவும் aurora(பொன்னிறமான விடியல் தெய்வம்) திரிந்து உள்ளது. அர்தரிக் என்னும் வடசொல் பாலி பிராகிருத மொழிகளில் அரி–அரிசன – அர்சன என்றெல்லாம் திரிந்துள்ளது.

புது மஞ்சளைக் குறித்த புத்தளம் – புத்தள் – புத்தேள் எனத் திரிந்துவிட்டது. பொன்னிறம் கொண்ட தேவர்கள் புத்தேளிர் எனப்பட்டனர். புத்தேள் உலகம் பொன்னுலகம் ஆயிற்று.

உருவ வழிபாட்டுக்குரிய தெய்வம் படிமங்கள் வடமொழியில் புத்தள–புத்தலக எனவும், தெய்வ வழிபாடு புத்தள பூசை எனவும் வழங்கி வருதலைக் காணலாம்.

தெய்வ வடிவத்தைக் குறித்த படிமம் என்னும் தமிழ்ச் சொல் படிமத்தோன் எனத் தேவோராளனையும், படிமத்தான் எனக் கடவுளையும் படிமம் எனத் தவக் கோலத்தையும் குறித்த சொல்லாகப் பொருளால் புடை பெயர்ந்தது போலப் புதுமஞ்சளைக் குறித்த புது+அள்–புத்தள்–புத்தேள் எனுஞ்சொல் பொன்–பொன்னிறம்–பொன்னிறத் தெய்வம் – பொன்னால் செய்த சிலை – தெய்வ உருவங்கள் – தெய்வத்தாய் எனப் பலவாறு தொடர்புடைய பொருள்களில் புடை பெயர்ந்துள்ளது.

புத்தளம் எனும் மஞ்சள் வணிகப் பொருளா தலின் வணிகர் வழி பன்மடித் திரிவுகளைப் பல்வேறு மொழிகளில் பெற்றது.

ஏற்கனவே மஞ்சள் எனும் சொல் தமிழ் மக் களின் அன்றாட வழக்கிலுள்ள அடிப்படைச் சொல் லாகி விட்டதால் 'புத்தேள்' வணிகரின் குழூஉக்குறி சொல்லாகவும், பண்டைத் தமிழிலக்கியங்களிலும் ஆங்காங்கு இடம் பெற்ற அருகிய சொல்லாகவும் ஆளப்பட்டுள்ளது.

தென்புலத்தாருள் தவ ஒழுக்கத்தில் சிறந்த மெய்யுணர்வாளர் பிறவியற்ற வீட்டுலகம் பெறுவர் எனும் கருத்து தமிழ் மக்களிடம் இருந்திருக்கிறது. வானோர்க்கு உணர்ந்த உலகம் எனவும் வாராச்சேட் புலம் படர்ந்தோர் (புத்தேளிர்) எனவும் ஆட்சி பெற்றுள்ள சொற்களால் இதனை அறியலாம்.

பழந்தமிழருள் கருநிறத்தவர் செந்நிறத்தவர் பொன்னிறத்தவர் எனும் மூவகைப் பிரிவினரும் இருந்திருக்கின்றனர். கரியன், மாயவன், பொன்னன் (இரணியன்), பொன்னி, செங்கோன், செம்பியன், சேந்தன் என்னும் சொல்லாட்சிகளே தக்க சான்றா கின்றன. எனவே, புத்தேள் தமிழ்த் தெய்வங்களைக் குறித்த சொல்லாகவே உருப்பெற்றுள்ளது. பொன் னுலகம் செல்வோர் எந்நிறத்தவராகவும் இருக்கலாம்.

புதைபானை *pudaipānai*, பெ.(n.) வீட்டின் உள்ளறை மூலைச் சுவரில் உள்ளாகப் பதியப்பட்ட வாய் குறுகிய மட்கலம்; a narrow mouthed earthen pot set in the corner wall of the inner chamber of the house inolden days.(வடார்க்.வ).

[புதை +பானை]

புரடை *puradai*, பெ.(n.) புன்செய் நிலம்; dry land.

[புரை –புரடை]

புரவி நூல் *puravi nūl*, பெ.(n.) குதிரைகளைப் பற்றி கூறும் நூல்; a treatise on horses. "நூல்நெறி நுணங்கிய கால்நவில் புரவி" (அகம்.314)

[புரம்–உயரம். புரவி–உயரமான குதிரை]

புரிந்துணர்வு *pūrintunarvu*, பெ.(n.) ஒரு குறிப்பிட்ட பிரிவில் அல்லது துறையில் இரண்டு நிறுவனம் போன்றவற்றிற்கு இடையே செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம்; memorandam of understanding.

புல்லங்காடனார் *pullankādanār*, பெ(n.) கடைக்கழகப் புலவர்; poet of sangam age.

[புல் –புல்லம் (மலர்) + காடு + அன் + ஆர்]

மாறோக்கத்து முள்ளிநாட்டு நல்லூர் காவிதி யார் மகனாராகிய புல்லங்காடனார் கைந்நிலை பாடல் இயற்றியவர்.

புல்லாற்றூர் எயிற்றியனார் *pullarrūr eyirriyanār*, பெ.(n.) கடைக் கழகப் புலவர்; poet of sangam age.

[புல்லாறு+எயிற்றியன்+ஆர்]

எய்–எயினன்(வேடன்)–எயிற்றியன்.

புல்லி *pulli*,பெ.(v.) வேங்கடமலைத் தலைவன்; Chieftain of Venkata hills.

[(புல் (இளமை)–புல்லி (இளைஞன்)]

புல்லை *pullai*,பெ.(n.)1.மான்;deer. 2.கலைமான்;antilope.

க. புல்லை (மான்). புலிந்தன் (வேடன்)

புலத்துறை *pula-t-turai*,பெ.(v.)அறிவுத் துறை;faculties of academic branches. புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார் (ஐங்குறு.)

[புலம் +துறை]

புலத்தோர் *pulattōr*,பெ.(v.)1. மூதறிவினர்;elite persons.2.முனிவர்; sages.

[புலம் +அத்து + (ஆர்) ஓர்]

புலைகுளி *pulai kuli*,பெ.(n.)இறந்தவரை அடக்கம் செய்துவிட்டுத் திரும்பும்போது குளிக்கும் குளியல்; bath taken after the burial is over..

[புலை+குளி]

புளியிலைப்பொடி *puliyilai-p-podi*,பெ.(n.) மிகச் சிறு மீன்வகை; a variety of very small fish.

[புளி+இலை+பொடி]

புனி *puni*,பெ.(n.) கைத்தறி நெசவில் நாடா செல்லும் வழி;a loop in handloom weaving.

[புல்– புன்– புனி]

பூங்கணுத்திரையார் *pūngānuttiraiyār*, பெ.(n.) பெண்பாற் புலவர் பெயர்; name of a poetess of sangam age.

ம.உத்திரம் (உள்ளுரம், துணிச்சல்) க.உத்தி (உயரம்) து. உத்திரை – ஊக்கமும் திறனும் கொண்டபெண்.

[பூங்கண் + உத்திரை +ஆடு]

பூஞ்சி ஆடு *pūnji ādu*,பெ.(n.)மயிலை நிறமுள்ள ஆடு;a goat or sheep of brown colour.

[புல்லை – பூவன்– பூஞ்சி +ஆடு]

பூண்டரம் *pūndaram*,பெ.(v.)உடல் வெளுத்துக் காணப்படும் சோகை நோய்;anemic dropsy.

[பாண்டு (வெண்மை) – பாண்டரம் – பூண்டரம்]

பூதன் சேர்ந்தன் *pūdan cēndan*,பெ.(n.) கடைக் கழகக் காலத்திய இயற்பெயர்;a proper name during the Sangam period.

[(பூ–பூது– புதன் பூது = பெருமை, துணிவு, ஆற்றல்.) பூதன் + சேந்தன்]

பூரிக்கோ *pūrikkō*,பெ.(n.)குறுந்தொகை தொகுப்பித்த குறுநில மன்னன்; a chieftain who compiled ancient Tamil Kuruntogai.

[பூரி (நிறைவு, சால்வு)+ கோ]

பூர் – வெள்ளம், பூரம் – பொன். க. பூரம்பு – ஊற்று நீர். பூரித்தல்– நிறைதல்.

பூலாபிடி–த்தல் *pūlapidi*,செ.கு.வி.(v.t.)தூண்டில் கயிற்றுக்கு வலுவேற்ற மரப்பட்டைச் சாறு பூசிப் பக்குவப்படுத்தல்;a method of restrengthening the rope.

[பூலா +பிடி]

பூழியர் கோன் *pūliyar kōn*,பெ.(n.)பாண்டிய மன்னன்; Pandiya king.

[பூழி – ஒரு சிறு நாட்டின் பெயர் + அர் +கோன்]

பெட்டிப் பலகை *petti-p-palagai*,பெ.(n.)கைத்தறி நெசவில் நாடா தங்கும் பலகை;an implement in handloom weaving.

[பெட்டி +பலகை]

பெண்டைபிடி–த்தல் *pendaipidi-*, செ.கு.வி. (v.i.) வீட்டில் கூரை அமைக்கும்போது மூங்கிலை இணைத்துக் கயிற்றால் கட்டிச் செல்லுதல்; to tie the bamboos in series while constructing a thatched roof of the house.

[இண்டு–பிண்டு–பெண்டை+பிடி]

பெண்ணளி *pennali*,பெ.(n.)திருமணம்; marriage.

தெ. பெண்லி

[பெண் +அளி]

பெண்ணைப் பெற்றோர் மணமகனுக்கு அளிப்பதால் பெற்ற பெயர்.

பெண் வெற்றிலை *pen verrilai*, பெ.(n.) வெற்றிலைவகை; a kind of betel.

[பெண் + வெற்றிலை]

குறிஞ்சிப் பாட்டு - மலர்கள்

.... வள்இதழ்
ஒண் செங்காந்தள், ஆம்பல், அனிச்சம்,
தண்கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி,
செங்கோடுவேரி, தேமா, மணிச்சிகை,
உரிதுநாறு அவிழ்தொத்து உந்தூழ், கூவிளம்,
எரிபுரை எறுழம், சுள்ளி, கூவிரம்,
வடவனம், வாகை, வான்பூங் குடசம்,
எருவை, செருவிளை, மணிப்பூங் கருவிளை,
பயினி, வானி, பல்இணர்க் குரவம்,
பசும்பிடி, வகுளம், பல்இணர்க் காயா,
விரிமலர் ஆவிரை, வேரல், சூரல்,
குரீஇப் பூளை, குறுநறுங் கண்ணி,
குருகிலை, மருதம், விரிபூங் கோங்கம்,
போங்கம், திலகம், தேங்கமழ் பாதிரி,
செருந்தி, அதிரல், பெருந்தண் சண்பகம்,
கரந்தை, குளவி, கடிகமழ் கலிமா,
தில்லை, பாலை, கல்இவர் முல்லை,
குல்லை, பிடவம், சிறுமாரோடம்,
வாழை, வள்ளி, நீள்நறு நெய்தல்,
தாழை, தளவம், முள்தாள் தாமரை,
ஞாழல், மௌவல், நறுந்தண் கொகுடி,
சேடல், செம்மல், சிறு செங்குரலி,
கோடல், கைதை, கொங்குமுதிர் நறு வழை,
காஞ்சி, மணிக்குலைக் கள்கமழ் நெய்தல்,
பாங்கர், மராஅம், பல்பூந் தணக்கம்,
ஈங்கை, இலவம், தூங்குஇணர்க் கொன்றை,
அடும்பு, அமர் ஆத்தி, நெடுங்கொடி அவரை,
பகன்றை, பலாசம், பல்பூம் பிண்டி,
வஞ்சி, பித்திகம், சிந்துவாரம்,
தும்பை, துழாஅய், சுடர்பூந் தோன்றி,
நந்தி, நறவம், நறும் புன்னாகம்,
பாரம், பீரம், பைங் குருக்கத்தி,
ஆரம், காழ்வை, கடிஇரும் புன்னை,
நரந்தம், நாகம், நள்ளிருள்நாறி,
மாஇருங் குருந்தும், வேங்கையும், பிறவும்,
அரக்குவிரித் தன்ன பருஏர்அம் புழகு.... அடி. (61–96)


1. செங்காந்தள்


2. ஆம்பல்

3. அனிச்சம்

4. குவளை

5. குறிஞ்சி

6. வெட்சி

7. செங்கோடுவேரி

8. தேமா

9. மணிச்சிகை (செம்மணி)



10. உந்தூழ் (பெருமூங்கில்)

11. கூவிளம் (வில்வம்)

12. எறுழம்

13. சுள்ளி

14. கூவிரம்



15. வடவனம்

16. வாகை



17. குடசம் (வெட்பாலை)

18. எருவை (கோரை)

19. செருவிளை (காக்கணம், சங்கு)

20. கருவிளை

21. பயினி



22. வானி (ஓமம்)



23. குரவம்

24. பசும்பிடி (இளமுகிழ்)

25. வகுளம் (மகிழம்)

26. காயா

27 ஆவிரை

28. வேரல் (சிறுமூங்கில்)

29. சூரல்

30. பூளை

31. கண்ணி (குன்றிமணி)


32. குருகிலை (முருக்கிலை)

33. மருதம்

34. கோங்கம்


35 .போங்கம்

36. திலகம்

37. பாதிரி

38. செருந்தி

39. அதிரல் (புனலி)

40. சண்பகம்

41. கரந்தை

42. குளவி (காட்டுமல்லிகை)

43. கலிமா

44. தில்லை

45. பாலை

46. முல்லை

47. குல்லை

48. பிடவம்

49. மாரோடம்



50. வாழை

51. வள்ளி

52. நெய்தல்

53. தாழை (தென்னம்பாளை)

54. தளவம்

55. தாமரை

56. ஞாழல்

57. மௌவல்

58. கொகுடி



59. சேடல் (பவளமல்லிகை)

60. செம்மல்

61. செங்குரலி



62. கோடல்

63. கைதை (தாழை)

64. வழை (சுரபுன்னை)

65. காஞ்சி

66. நெய்தல்

67. பாங்கர்

68. மரா (கடம்பு)

69. தணக்கம் (நுணா)

70. ஈங்கை

71. இலவம்

72. கொன்றை

73. அடும்பு

74. ஆத்தி

75. அவரை

76. பகன்றை


77. பலாசம்

78. பிண்டி

79. வஞ்சி

80. பித்திகம்

81. சிந்துவாரம் (நொச்சி)

82. தும்பை

83. துழாய் (துளசி)

84. தோன்றி

85. நந்தி (நந்தியாவட்டம்)

86. நறவம்

87. புன்னாகம்

88. பாரம் (பருத்தி)

89. பீரம் (பீர்க்கு)

90. குருக்கத்தி

91. ஆரம் (சந்தனம்)

92. காழ்வை (அகில்)

93. புன்னை

94. நரந்தம் (நாரத்தம்)

95. நாகம்

96. நள்ளிருள்நாறி (இருவாட்சி)



97. குருந்து (காட்டெலுமிச்சை)

98. வேங்கை

99. புழகு (மலை எருக்கு)

ஆத்தி மலரும் மாலையும்



வேம்பின் மலரும் மாலையும்

பனம் பூவும் மாலையும்

பெண் வெற்றிலையின் பின்புற நரம்புகள் தெரியாது எனவும் ஆண் வெற்றிலையின் நரம்புகள் தெரியும் எனவும் கூறுவர்.

பெரந்தை *perandai,* பெ.(n.)பெரியப்பா, தந்தையின் அண்ணன்;father's elder brother.

கொலா.பெரந்தை.

[பெரு +அந்தை (தந்தை) – பெரந்தை]

பெரியஎழுத்து *periya eḷuttu,* பெ.(n.)அகர உயிரெழுத்து; the first vowel 'a' in Tamil.

[பெரிய + எழுத்து]

பெரியகோயில் *periyakōyil,* பெ.(n.) தஞ்சாவூரில் சோழப்பேரரசன் இராசராசனால் பத்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பெரிய சிவன் கோயில்; a big siva temple constructed at Thanjavur by Chola Emperor Rajaraja-1.during 10th century A.D.

மறுவ. பிருகதீசுவரர் கோயில்

[பெரிய + கோயில்]

பெரிய சேர்வை *periyacērvai,* பெ.(n.)பெரிய கட்டு மரங்கள்;big and large catamaran. (மீனவ)

[பெரிய+ சேர்வை (சேர்த்துக் கட்டிய கட்டுமரம்]

பெருக்கை *perukkai,* பெ.(n.)துடைப்பம்;broom.

மறுவ.வாரியல், விளக்குமாறு, துடைப்பம், துடைப்பக் கட்டை.

க.பொரக்கெ. தெ.பொரக்க

[பெருக்கு – பெருக்கை]



பெருங்கதவனார் *perunkadavanār,* பெ.(n.)கடைக் கழகப் புலவர்; poet of sangam age.

[பெரும்+கதவன்+ஆர்]

பெருங்காமணிவலை *peringā manivali,* பெ.(n.) வலையின் அடிப்பகுதியில் பெரிய மணிகள் கட்டப்பட்ட வலை.bells fixed net.

[பெரும்+காய்+மணி+வலை]

பெருஞ்சித்திரனார் *peruncittiranār,* பெ.(n.) 1. கடைக்கழகப் புலவர்; poet of sangam age. 2.தனித்தமிழ் வளர்த்த பாவலரேறு பெருஞ் சித்திரனார்;a savant and puritan of chaste Tamil movement of 20th Century.

[பெரும்+சித்திரன்+ஆர்]



பெருவழிக்கல் *peruvaḷi-k-kal,* பெ.(n.) பழந்தமிழ் நாட்டில் வணிகப் போக்குவரத்துக்காக அமைக்கப்பட்ட நெடுஞ்சாலையில் ஒரு காதத் தொலைவுக்கு (5 மைல்) ஒன்றாக நடப்பட்ட தொலைவு எண் குறித்த கல்; mile stone (for fivemiles) erected on the high way of ancient Tamil land. "அதியமான் பெருவழி நாவல் தாவளத்துக்கு 29 காதம்" (கல்).

[பெரு+வழி+கல்]

பெருவளநாடு *peruvaḷanāḍu,* பெ.(n.)கடல்கொண்ட குமரிநாட்டு நிலப்பகுதி; an area in the submerged kumari land.

[பெரு + வள +நாடு]

பேகன் *pēgan*,பெ.(n.) கடையெழு வள்ளல்களுள் ஒருவர்; one of the beneficient Tamil king.

[பெரு - பே - பேகு-பேகன்(பெருமைக் குரியவன்)]

பேகுல் *pēgul*, பெ.(n.) பெருங்குடல்; large intestine.

தெ. பேகுல்

[பெரு-பே-பேகு-பேகுல்]

பேசா எழுத்து *pēsā eḻuttu*,பெ.(n.) மந்திர ஒலியாகிய 'ஓம்' எனும் ஒசை; sacred Tamil syllable OM'.

[பேசாத-பேசா +எழுத்து]

எழுத்து எழுந்து புறத்து இசைக்காமல் அ+உ+ம் எனப் பெரிய எழுத்தும் பிஞ்செழுத்தும் மகர மெய்யும் கூட்டி உள்ளிருந்து எழும் மெல்லிய ஓசை யாதலின் மந்திர எழுத்து எனப்பட்டது. இதன் வடிவம் சிந்து வெளி தமிழிலும் தமிழகப் பாறை ஓவியங் களிலும் எனக் காணப்படுகிறது.

பேடு *pēdu*, பெ.(n.) 1. காடு வெட்டி உண்டாக்கிய விளை நிலம்; deferested agricultural land. 2. உழப்படாத கரம்பு நிலம்; land left uncultivated. 3. சிற்றூர்; small village. "மப்பேடு, அன்னம்பேடு, கோயம்பேடு, கல்பேடு.

மறுவ. போடு, வோடு

[போடு-பேடு]

பேந்தாவலை *pēndāvalai*,பெ.(n.)மிகப் பெரிய மீனைப்பிடிப்பதற்காகப் பின்னப்பட்ட பெரிய வலை; a big net..

[பெரிய - பெந்து -பேந்து - பேந்தா + வலை]

பேய்ச்சி *pēycci*,பெ.(n.)பேய்பிடித்தவள்; a woman haunted by spirit.

[பேய் +பேய்ச்சி]

பேய்மகள் *pēymagaḷ*,பெ.(n.)வடிவில் பெருத்த பெண்; a woman of large size.

[பெரு-பே-பேய்+மகள்]

பேராற்றுநெடுந்துறையன்; *pērāṟṟu neḍunturaiyaṉ*,பெ.(n.)கடல் கொண்ட குமரி நாட்டுத் தமிழ்ப் புலவர்; a Tamil poet of submerged Kumari land.

[பேரு +ஆறு+நெடும்+துறை+ அன்]

பேரிசாத்தனார் *pēricāttaṉār*,பெ.(n)கடைக்கழகப் புலவர்; poet of sangam age.

[பேரி + சாத்தன் + ஆர்]

பேரைப் பழம் *pēraipaḻam*,பெ.(n.)கொய்யாப் பழம்; guava.(வடார்க்.)

[பிரை - பேரை + பழம்]

பேழ்-தல் *pēḻ*,செ.கு.வி.(v.i.)பேசுதல், சொல்லுதல்; to speak, to say.

க. பேழ் (பேசு)

[பேழ்தல் = பிளத்தல், வாய் திறத்தல் - பேசுதல்]

பேள்-தல் *pēḷ-*,செ.கு.வி.(v.i.)மலம் கழித்தல்; to excrete.

[பிள் -பேள்]

பையுள்திறம் *paiyūḷ tiṟam*, பெ. (n.) பாலைப் பண்ணின் உட்பிரிவாகிய திறப் பண்களில் ஒன்று; a melody series of *pālai* tune.

[பையுள்(வருத்தம்)+திறம்]

பாணர் பாலைப்பண்ணில் பையுள்திறம் பாடி னால் செல்வக் கடுங்கோழிவாழியாதன் மிக விரும்பிக் கேட்பான். கனவோ என மருளும் வண்ணம் கொடை யளிப்பான் எனப் பதிற்றுப்பத்து கூறுகிறது.

பொகுட்டெழினி *poguṭṭeḻiṉi*,பெ.(n.)தகடூர் மன்னன் அதியமானின் மகன்; son of Adiyamāṉn.

[பொகுட்டு + எழினி]

பொங்கலை *poṅgalai*, பெ.(n.) கருக்கொண்ட பெண் ஏழாம் மாதத்தில் ஏழு பானைகளில் பொங்கலிட்டு வழிபடும் இல்லத்து நன்னி கழ்ச்சி; a function of cooking rice in seven pots to workship the God on the seventh month of pregnancy.

[பொங்கல் – பொங்கலை]

பண்டைத் தமிழ்ப் பண்பாட்டு வழிவந்த வளைகாப்பு (சீமந்தம்) நிகழ்ச்சி.

பொண்டுகன் *poṇḍugaṉ*,பெ.(n.)பெண் தன்மை வாய்ந்தவன், பேடி;other gender .(வடார்க்)

மறுவ. திருநங்கை

[பெண்டு– பொண்டு – பொண்டுகன்(கொ.வ.)]

பொத்தியார் *pottiyār*,பெ.(n.)கடைக்கழகப் புலவர் பெயர்; a poet of sangam age.

[புது–பொது–பொத்து (இளங்கதிர், இளமை,அழகு)– பொத்தி+ ஆர்]

பொந்து *pondu*,பெ.(n.)கைத்தறி நெசவில் பல சிலுப்பைகள் சேர்ந்தது; a group of ciluppai in handloom.

[பொல்– பொந்து]

பொலிகிடாய் *polikiḍāy*,பெ.(n.)இனம் பெருக்குவதற்காக வளர்க்கப்படும் ஆண் ஆடு;he-goat specially meant for breeding purpose.

[பொலி + கிடாய்]



பொலி தூற்று–தல் *pollitūṟṟu-*, செ.குன்றாவி. (v.t.) நெல்லுடன் கலந்துள்ள பதரைத்தூற்றி நீக்குதல்; to remove the unwanted in the heap of paddy with the help of blowing wind.

[பொலி (நெற்குவியல்) +தூற்றுதல்]

பொலுப்பு *poluppu-*, பெ.(n.) பயிராதல் அல்லது சினையாவதற்கு விலங்குகளிடம் தோன்றும் பாலுணர்ச்சி வெளிப்பாடு, அதிரகும் உணர்ச்சி; sexual desire or urge in animmals. "மாடு பொலுப்பு ஆகிவிட்டது" (கொங்.வ.).

[பொல்–பொலி–பொலிப்பு–பொலுப்பு]

பொழை *poḻai*, பெ.(n.)1.ஆறு; river.2. அருவி; stream.

ம .புழ.

[புள்–புழை–பொழை]

பொறை மரம் *poṟaimaram*,பெ.(n.)காவடி;load carrying balance pole.

[பொறை + மரம்]

பொன் *poṉ*, பெ.(n.) பத்து பணத்தின் மதிப்பு கொண்ட பழங்கால நாணயம்; coin of the value of ten panam.

பொன்னகழ்–தல் *poṉṉagaḻ-*,செ.குன்றாவி. (v.t.) பொன்னை நிலத்தடியிலிருந்தும் ஆற்றோரத்தி லிருந்தும் தோண்டி எடுத்தல்;to dig goldfrom the river bed. நீர்திகழ் சிலம்பின் நன்பொன் அகழ்வோன். (அகம்.282).

[பொன் + அகழ்]

போக்கற்றான் *pōkkaṟṟāṉ*, பெ.(n.) வாழ வழி தெரியாத ஏமாளி; easily deceivable humble person who knows no means of livelihood.

[போக்கு + (அற்றவன்) அற்றான்]

போக்கற்றவனைப் போக்கட்டான் எனத் திரித்து வழங்குவது கடுங் கொச்சை, விலக்கத்தக்கது.

போடு *pōḍu*, பெ.(n.) 1. காடுவெட்டி உண் டாக்கிய விளை நிலம்; deforested agriculture land. 2. உழப்படாத கரம்பு நிலம்; land left uncultivated.

மறுவ. பேடு, வேடு.

<u>தெ.</u> போடு

[போடு–வெட்டு, தாக்கு, போடு–மரம் வெட்டிய வெறு (நிலம்)]

போடூர் *pōḍūr*, பெ.(n.)தருமபுரி மாவட்டத்தில் உள்ள சிற்றூர்; a village in Dharmapuri Dt.

ம

மக்கள்பாட்டு *makkaḷpāṭṭu,* பெ.(n.) இந்துத் தானி குரலில் (தொனி)யில் அமைந்த ஒரு வகை இசைப்பாட்டு (டப்பா பாட்டு) ; Tamil song attuned to Hindustan style of music.

[மக்கள்+பாட்டு]

மகவேற்பு *magavēṟpu,* பெ.(n.) ஒருவர் மற்றொ ருவருடைய குழந்தையைச் சட்டப்படி தன்னு டைய குழந்தையாக ஏற்றுக் கொள்ளுதல் (சுவீகாரம்); adoption of a child.

[மகவு+ஏற்பு]

மங்கல மும்மி *maṅgalamummi,* பெ.(n.) விடை(வைசாக) மாத வளர்பிறை மூன்றாம் பக்கலாகிய நன்னாள்(அட்சய திருதியை); third tithi of the bright fortnight of vaisāgam, as securing merit to all deeds of virtue performed on that day .

[மங்கலம்+மும்மி]

மஞ்சிபோ–தல் *manjipō-,* செ.கு.வி. (v.i.) தொடர்ந்து இடித்தலால் நன்கு பொடியாகச் செய்தல்; to make nice powder to pounding continuously.

[நைந்து–மைந்து–மஞ்சி+போ–,]

மடங்கல் *maḍaṅgal,* பெ.(n.) 1. ஐந்தாம் தமிழ் மாதம் (ஆவணி); the fifth Tamil month-August-September. 2. 22 ஆவது விண் மீனாகிய பறவை(அவிட்டம்) ; 22nd viṉmīṉ.

[மடங்கு–மடங்கல்(அரிமா)]

மடிப்புப்பிடி–த்தல் *maḍippupiḍi-,* செ.கு.வி. (v.i.) சட்டை முதலியவற்றில் மடிப்பு வைத்துத் தைத்தல் (டக்குப் பிடித்தல்); to tuck or sew folds in a garment.

[மடிப்பு+பிடித்தல்]

மண்டிகோல் *maṇḍikōl-,* பெ. (n.) களி கிண்டும் போது மட்பாண்ட ஏனத்துக்குப் பிடிப்பாக வைக்கும் கவைக்கோல்; a cleft pole used while grindling boiled ragi preparation.

[மண்டி+கோல்–மண்டியிட்டு களிக்கிண்ட உதவும் கவைக்கோல்]

மண்ணிப்பழம் *maṇṇippaḻam,* பெ.(n.) மண் வண்ணத் தோலும், வெளிர் பழுப்பு நிறச் சதைப் பகுதியுமுடைய சிறுபழம் (சப்போட்டா); sapota plum.

மறுவ. சீமை கிலுப்பை

[மண்ணி+பழம்]

மண்தூங்கி *maṇtūṅgi,* பெ.(n.) தவளை; frog.

[மண்+தூங்கி]

மண்ணுக்குள் உறங்குவது என்னும் பொருளில் மண்தூங்கி எனப்பெயர் பெற்றது. இச்சொல்லைக் கடன் பெற்ற வடமொழியாளர் மண்டூக எனத் திரித்துத் தவளையைக் குறிக்கும் சொல்லாக்கிக் கொண்டனர்.

[த. மண்தூங்கி > Skt. mandūngi]

மணஉறவாடல் *maṇauṟavāḍal,* பெ.(n.) மக்கள் திருமணத்தால் தொடர்புடைய பெற் றோர் உறவு கொள்ளுதல் (சம்பந்தங் கலத்தல்); contracting relation-ship, as parents by marriage by their children.

[மணம்+உறவாடல்]

மணக்கீரை *maṇa-k-kīrai,* பெ.(n.) கீரை வகை (புதினா) ; mint.

[மணம்+கீரை]

மணமண் *maṇamaṇ,* பெ.(n.) மணமுள்ள மண் (கஞ்சோறபவம்) ; a fragrant earth.

[மணம்+மண்]

மணமுறிவு *maṇamuṟivu,* பெ.(n.) மணவிலக்கு பார்க்க ; see maṇavilakku.

[மண(ம்)+முறிவு]

மணவிலக்கு *maṇavilakku,* பெ.(n.) ஒரு திரு மணத்தின் சட்டப்படியான முறிவு ; divorce.

மறுவ. மணமுறிவு, தீர்வை,
கழித்துக்கட்டல்

[மண(ம்)+விலக்கு]

மணிஒடுக்கான் *maniodukkān,* பெ.(n.) உடும்பு; a genus of large lizard.

[மணி+ஒடுக்கான்]

மந்திரவளியோகம் *mantiravaliyōgam,* பெ.(n.) மந்திரத்தோடு செய்யப்படும் வளிநிலை (சகர்ப்பபிராணாயாமம்); restraint of breath practised with the use of mantras.

[மந்திரம்+வளி+ஓகம்]

மயிர்ச்சுழி *mayir-c-culi,* பெ.(n.) (நன்மை, தீமை) ஆகூழ், போகூழ் போன்றவற்றைக் குறிக்கப் பயன்படுத்தும் மாந்தர் மற்றும் பிறவற்றின் உடற்கூறுகளில் காணப்படும் வளையமிட்டிருக்கும் மயிர்த் தொகுதி (உரோமச் சுழி); a spiral growth of hair found at a particular spot on the surface of the body of both the human and animal kingdoms and by examining it good or evil, fortune or misfortune is bound to be predicted.

[மயிர்+சுழி]

மரிக்கை *marikkai,* பெ.(n.) பருவம் எய்தாத இளம் ஆட்டுக்குட்டி; young one of goat or sheep.

மறுவ. பிருவை.

[முல்-மல்-மரிக்கை. பெண் ஆட்டுக்குட்டி]

மருத்துவக் கல்வி *maruttuva-k-kalvi,* பெ.(n.) மருத்துவத் துறைக் கல்வி ; medical education.

[மருத்துவம்+கல்வி]

மருளாடு-தல் *marulādu-,* செ.கு.வி.(v.i.) தெய்வமேறிக் குறி சொல்லுதல்(சாமியாடுதல்); to dance under the inspiration of a demon or deity and oracular responses.

[மருள்+ஆடு]

மரைக்காடு *marai-k-kādu,* பெ.(n.) தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர்; a village name in Tanjure district. "மானினத்துளொன்றான 'மரை' மிக்கிருந்ததோர் அடவிப்பகுதி" – (வேதாரண்யம்);

மழுங்கன் *malungan,* பெ.(n.) எதையும் பொருட்படுத்தாத பேதை; fool. "ரோசக்காரனுக்குக் கடன் கொடு; மழுங்கனுக்குப் பெண்ணைக் கொடு.

[மழு-மழுங்கன்]

மழைகள் *malaigal,* பெ.(n.) பல்வேறு பெயர் கொண்ட மழைகள்; rains with different names.

[மழை+கள்]

27 நாண்மீன்களின் பெயரிலமைந்த மழைகள். இக்காலத்தில் உழவர்களால் மகமழை, ஆயில்யமழை, ரோகிணிமழை, உப்பை மழை, அத்தை மழை, சித்த மழை, சாந்தி மழை, சாஉருட்பு மழை, உத்தர மழை என அழைக்கப்படினும் பழைய பெயர்கள் வேறானவை.

மறத்தண்டு *marattandu,* பெ.(n.) தண்டாயுதம் (கதாயுதம்) ; club, mace.

[மறம்+தண்டு]



மறுப்பு-தல் *maruppu-,* செ.குன்றாவி. (v.t.) காட்டில் மேயவிட்ட கால்நடைகளை மாலையில் வீடு திரும்புவதற்காக மேய்ப்பாளன் எழுப்பும் ஒலியைக் குறிக்கும் வினைச்சொல்; a vert denoting the signal sound made by the cow herd to remind the cattle to tur.

மனத்தெளிவு *manattelivu,* பெ.(n.) மனம் வசப் பட்டிருக்கை (கொ.வ.) (சித்தசுவாதீனம்); control over one's mind.

[மனம்+தெளிவு]

மனவமைதி *manavamaidi,* பெ.(n.) மன அமைதி (சித்த சமாதானம்) ; peace of mind, tranquility.

[மன+அமைதி]

மாக்குச்சி *mākkucci,* பெ.(n.) கல்லேட்டில் எழுதப் பயன்படும் குச்சி வடிவக் கல் (சிலேட்டுக் குச்சி); pencil like stone to write with on a slate.

[மா+குச்சி]

மாட்டல் *māttal,* பெ.(n.) மகளிர் காதிலணியும் தோடு முதல் தலைமுடி வரை இணைத்து அணியும் பொன் அணிகலன்; an women ornament.

[மாட்டு-மாட்டல்]

மாந்தனூல் *māndanūl,* பெ.(n.) மாந்தனது தோற்றம், வளர்ச்சி, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் பற்றி ஆராயும் அறிவுத்துறை; anthropology.

[மாந்தன்+நூல்]

மாலாழி *mālāli,* பெ.(n.) ஆயிரம் முனை களுடைய திருமாலின் சக்கரப்படை (சகத் திரதாரம்); discuss of Vishnu as thousand pointed.

[மால்+ஆழி]

மாலை நிலை *mālainilai,* பெ.(n.) உடன்கட்டை ஏறுகை (சககமனம்) ; self immolation of a Hindu widow on her husband's funeral pyre.

[மாலை+நிலை]

மாழைக்கோல் *mālai-k-kōl,* பெ.(n.) அறு வைக்கு பயன்படும் வெள்ளி அல்லது செம்பி னாற் செய்த ஊசி(சோதனைக் கோல்); surgeon's needle or instrument made of silver or copper.

[மாழை+கோல்]

மாற்றுப் பெயர் *mārru-p-peyar,* பெ.(n.) ஒரு பெயர்ச் சொல்லுக்கு அல்லது ஒரு பெயர்த் தொடருக்கு மாற்றாகப் பயன்படுத்தும் சொல்; pronoun.

மறுவ. பகரப்பெயர்

[மாறு-மாற்று+பெயர்]

மிகுநலம் *migunalam,* பெ.(n.) மிகு பேறு(சௌ பாக்கியம்); good fortune, hale and healthy.

[மிகு+நலம்]

மிகு வெளிச்சம் *mikuveliccam,* பெ.(n.) பேரொளி; brilliancy.

[மிகு+வெளிச்சம்]

மிறைகோல் *miraikōl,* பெ.(n.) களத்தில் கதிர் அல்லது வைக்கோலை ஈரங்காய்வதற்காக புரட்டிவிட உதவும் வளைந்த கம்பி பொருத்தப் பட்ட கோல்; an implement used by the agriculturists on the threshold.

மறுவ. மெரகோல்.

[மிடை-மிறை+கோல்]

மின்னுந்து *minnundu,* பெ.(n.) மின்சார வண்டி (டிராம் வண்டி); electric train.

[மின்+உந்து]



மினுக்கி *minukki,* பெ.(n.) ஒப்பனை ஆர்வ முடையவள் (சிங்காரி); gaily dressed women. "மேட்டு நிலத்தை உழுதவனும் கெட்டான், மேனாமினுக்கியைக் கட்டிக் கொண்டவனும் கெட்டான்" (பழ.).

மினுப்பி *minuppi,* பெ.(n.) குங்கிலியத்தையும், கற்பூரத்தையும் ஒன்றாகக் கூட்டி பொடியாக்கி குழைத்துச் செய்யும் மின்னு நெய் செய்யும் வகை ; spirit varnish prepared by mixing hot alcohol with 6 parts of piney dammer and one part of camphor.

[மின்–மினுப்பி]

மீகாமன் *mīkāman,* பெ.(n.) கப்பற்றலைவன் (கப்பித்தான்) ; captain of a ship.

[மீகு–மீகாமன்]

மூக்குளியர் *mukkuliyar,* பெ.(n.) கடலில் மூழ்கி (முங்கி)க் குளித்து முத்து, சிப்பி ஆகியவற்றை எடுப்பவர்கள்; pearl collecting divers.

மறுவ. குளியாளி

[முங்கு+குளியர்]

முடிவு நிலை *muḍivunilai,* பெ.(n.) கருத்துகள், கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் வரும் முடிவு; theoretical stage.

[முடிவு+நிலை]

முதன்மை ஏவலர் *mutanmaiyēvalar,* பெ.(n.) தலைமை ஏவலாளர் (தபேதார்); head peon,

[முதன்மை+ஏவலர்]

முது சொத்து ஏம வாழ்வு *mutusottuēma vāḻvu,* பெ.(n.) மூதாதையர் சொத்தால் வாழும் நல்வாழ்க்கை (சுகவாச சீவனம்) ; comfortable livelihood.

[முது+சொத்து+ஏம+வாழ்வு]

முழுமேனியழகன் *mulumēniyalgan,* பெ.(n.) எல்லா உடலுறுப்புகளும் அழகாய் அமைந் தவன் (சர்வாங்கசுந்தரன்) ; one perfect in every limb, embodiment of beauty.

[முழு+மேனி+அழகன்]

முழுவழிக்கை *muluvalikkai,* பெ.(n.) உடல் முழுவதும் மயிர் மழிக்கை (சர்வாங்க சவரம்); shaving the whole body.

[முழு+மழிக்கை]

முழுவின்பம் *muluvinbam,* பெ.(n.) முழு மகிழ்ச்சி (சொரூபானந்தம்) ; perfect bliss.

[முழு+இன்பம்]

முள்ளந்தண்டு *mullantaṇḍu,* பெ.(n.) முதுகுத் தண்டிலிருக்கும் 33 முள் எலும்புகள் (கசேரூபம்) ; the thirty three vertebrae. 2. முதுகெலும்பு; back bone.

[முள்+தண்டு]

முள்ளந்தண்டு நீர்க்கோவை *mullantaṇḍu nīr-k-kōvai,* பெ.(n.) முள்ளந்தண்டில் இறங்கி நிற்கும் ஊதை நீர் (கசேரு நீர்க்கோவை); a collection of morbid fluid in the vertebral column -Hydrorochis.

[முள்ளந்தண்டு+நீர்+கோவை]

முளரிப் பூ *mularippū,* பெ.(n.) இளஞ்சிவப்பு நிற இனிய மணமுள்ள அழகு ரோசா மலர்; thomy shrub bearing beautiful and sweet-smelling flowers.

[முளரி+பூ]

முளைப்பு *mulaippu,* பெ.(n.) பல் முளைக்கை (தசனோற்பவம்) ; dentition, teething.

[முளை–முளைப்பு]

முற்கோள் *murkōl,* பெ.(n.) ஒரு பொருள் பற்றிய உண்மை நிலையை ஏற்காமல் தானே கொண்டிருக்கும் தவறான அல்லது பொருந் தாத கருத்து; prejudice.

[முன்+கோள்]

முற்றதிகார ஆவணம் *murradigāra āvaṇam,* பெ.(n.) எல்லாவற்றுக்குமாகக் கொடுக்கும் அதிகார ஆவணம் (சர்வமுக்தி யார் நாமா); a general power of attorney.

[முற்று+அதிகார+ஆவணம்]

முற்றதிகாரம் *murratikāram,* பெ.(n.) தனி மாந்தன் அல்லது ஓர் அமைப்பு எல்லா அதிகா ரங்களையும் வைத்துக் கொண்டு அடக்கி ஆளும் முறை (சர்வாதிகாரம்); dictator ship.

[முற்று+அதிகாரம்]

முற்றெரிவு *murrerivu,* பெ.(n.) முழுமையும் எரிக்கை (சர்வங்க தகனம்) ; burning the whole.

[முற்று+எரிவு]

முன்வரைவு *munvaraivu,* பெ.(n.) எழுத்து முதலியவற்றின் மாற்றத்திற்கும் திருத்தத் திற்கும் மேம்பாட்டுக்கும் உரியதுமான வரைவு, இறுதி வடிவம் பெறாத முன் வரைவு; draft. சட்ட முன் வரைவு.

[முன்+வரைவு]

முறைமன்றம் *murai-manram,* பெ.(n.) நீதி மன்றம் (அதாலத்து); court of justice.

முன்விழிப்பு *munvilippu,* பெ.(n.) விழிப்பு (சாக்கிரதை); wakefulness, vigilence.

[முன்+விழிப்பு]

மூட்டைவிடு-தல் *mūttaividu-,* செ.கு.வி. (v.i.) பொய் புளுகுதல்; to gossip.

[மூட்டை+விடு-,]

மூடாடி விளக்கு *mūdādivilakku,* பெ.(n.) கண்ணாடிக் கூடு பொருத்திய மண்ணெண் ணெய் விளக்கு(சிமினி விளக்கு); kerosene lamp with a chimney.

[மூடு+ஆடி+விளக்கு]

மூடுமுகப்பிறப்பு *mūdumugappirappu,* பெ.(n.) முகத்தில் சவ்வு மூடிப்பிறக்கை (குல்லா யிட்டுப் பிறத்தல்); birth of child with a piece of the amneolic membrane, occassionally covering its face like a veil being born with a caul.

[மூடு+முகம்+பிறப்பு]

மூரி *mūri,* பெ.(n.) பொலி காளை, எருது; stud bull.

[மூல்-மூர்-மூரி]

மூவிடப்பெயர் *mūvida-p-peyar,* பெ.(n.) தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களை உணர்த்தும் பகரப்பெயர்; personel pronoun.

[மூவிடம்+பெயர்]

மூவேந்தர் *mūvēndar,* பெ.(n.) பழந்தமிழ கத்தை ஆட்சி புரிந்த மூன்று தமிழ் வேந்தர் மரபினர்; three royal class of the Tamils who ruled over Tamilnadu.

[மூன்று+வேந்தர்]

பண்டைத்தமிழ் மன்னர்க்குப் பல பெயர்கள் வழங்கினும் அவற்றுட் **பாண்டியன், சோழன், சேரன்** என்பவை மிக முதுமையும், முதன்மையும் பற்றியவாகும். பாண்டியன், சோழன், சேரன் என்பதே கால முறையாயினும் இசைவுபற்றிச் சேரன், சோழன், பாண்டியன் எனத் தலைமாற்றிக் கூறப்படும்.

தமிழரசர் கொடி வழிகள் ஆரிய வருகைக்கு முன்னமே தமிழ் நாட்டிலிருந்தும், அவற்றின் பெயர்கட்கு வடமொழி மூலங்காட்டினார் கால்டுவெல் கண்காணியார். மேனாட்டறிஞர் எத்துணையோ ஆராய்ச்சி வன்மையும், நடுவுநிலைமையும் உடைய ரேனும், இந்திய மொழிகளெல்லாம் வடமொழி வழியின வென்னுமோர் தவற்றெண்ணம் அவர் மன திற் குடி கொண்ட மையின், அவராராய்ச்சி சிற்சில விடத்துப் பயன்பட்டிலது. சேர சோழ பாண்டியர் தமிழ் மன்னராயிருப்பவும் அவர்க்குப் பெயர் வடமொழியி னின்று வந்தன வென்பது எங்ஙனம் பொருந்தும்? ஆரிய மரபினராயிருந் திருப்பினன்றோ அவர்க்கு ஆரியப் பெயர் வழங்கியிருக்கும்? சேர சோழ பாண்டியப் பெயர்கள் சேர சோழ பாண்டிய ரென்று அசோகர் கல்வெட்டிலிருக்கின்றனவென்பது ஆரிய வழிக்கு ஆதாரமாகுமா? ழகரம் தெலுங்கிலும், வட மொழியிலும் டகரமாய்த் திரியும்.

<u>எ-டு :</u>	தெலுங்கு	வடமொழி
	கோழி-கோடி	நாழி-நாடி
	கிழங்கு-கெட்டா	பீழை-பீட

நாளம் = மூங்கில். நாளி-மூங்கிலாற் செய்யப் பட்டபடி. இக்காலத்தும் மூங்கிற் படிகளைச் சிற்றூர் களிலும், சிறு கடைகளிலும் காணலாம். நாளி – நாழி. சீகாளி – சீகாழி.

சோழன் என்பது சோடன் என்பதன் திரி பென்றும், நாழி என்பது நாடி என்பதன் திரிபென்றும்,

தமிழர் என்பது திராவிடர் என்பதன் திரிபென்றும், பாண்டியன் என்பது பாண்டுவினின்றும் திரிந்த தென்றும் கூறுவர் கால்டுவெல் கண்காணியார்.

மெய்யெழுத்துகள் ரகரத்தோடு சேர்ந்து மொழி முதல் நிற்பது வடமொழியிற் பெரும்பான்மை. அதன் படி த என்பது த்ர என்றாகும். மகரத்திற்கு வகரம் போலியாகும்.

<u>எ-டு :</u> குமி–குவி, மிஞ்சு–விஞ்சு.

ழ வடமொழியில் ட ஆகும். இங்ஙனம் தமிழ் என்னும் சொல் வட மொழியில் த்ரவிட என்றாகும். தமிழகம் என்னும் சொல் கிறித்துவுக்குப் பன்னூ றாண்டிற்கு முன்னரே மேலை நாடுகளில் Damurica - Lemurica - Lemuria என்று பலவாறு திரிந்து வழங்கி யிருப்பவும், அதற்குப் பின் இந்தியாவிற்கு வந்த ஆரிய வாய்ச்சொல்லின் திரிபென்பது சற்றும் பொருந்தாது.

தமிழ் மன்னர் பெயர் வடமொழிப் பழங் காவியங் களாகிய பாரத இராமாயணங்களிற் கூறப்பட்டுள. உதியன் என்னும் ஓர் சேரநாட்டரசன் பாரதப் படை கட்குச் சோறு வழங்கியமைபற்றிப் பெருஞ்சோற்று தியஞ்சேரலாதன் என்று பழந்தமிழ் நூல்களிற் பாராட் டப்படுகின்றான். வான்மீகி இராமாயணத்திற் றமிழ் மன்னரைப் பற்றிய குறிப்பு, பிற்காலத்தில் இடைச் செருகலென்று சிலர் புறக்கணிக்கலாம். இராமர் தெற்கே வந்து அகத்தியரைக் கண்டதை எவரும் மறுக்கார். அகத்தியருண்மையானே பாண்டியனுண் மையும் அறியப்படும். பாரதத்திற்கு முன்னமே பாண் டியனுண்மை இராமாயணத்தால் விளங்காவிடினும், கிறித்துவுக்கு முன்னைய மேனாட்டுப் பூமி சாத்திரி கள் குறித்துள்ள தமிழகப் படங்களானும், பிரித் தானியப் பொருட்காட்சிச் சாலைத் தலைவர், Dr.ஹால் என்பவர் பாபிலோனியக் குடைபொருள்கள் பற்றிக் கூறியுள்ள ஆராய்ச்சியுரையானும் விளங்குவ தாகும்.

பாண்டு, பாண்டியன் என்னும் பெயரொப்புமை பற்றியும், பாண்டுவின் மகனாகிய அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை வந்தபோது பாண்டியன் மகளை மணந் தான் என்னும் கதைபற்றியும், மகாவம்சம் என்னும் இலங்கைச் சரித்திர நூலில் பாண்டியன் என்பதை, பாண்டு என்பதினின்றும் திரிந்த பாண்டிவன் என்னும் தத்திதாந்தத் திரிபென்று கூறுவது மொட்டைத் தலைக்கும், முழங்காற்கும் முடிபோட்ட தொக்கு மன்றோ?

பாண்டியன், சோழன்,சேரன் என்னும் பெயர்கள் வடமொழியாயின், வடமொழியில் அவற்றிற்குப் பொருளிருத்தல் வேண்டும். பாண்டியப் பெயர்க்குக் கூறும் வடமொழிப் பொருள் சரித்திர வாயிலாய் மறுக் கப்பட்டது. சோழசேரப் பெயர்கட்குப் பொருந்தப் புளுகும் பொருளும் வடமொழியிலில்லை. இனி, இத் தமிழ் மன்னர் பெயர்கள் தமிழ் சொற்களாயின் அவற்றிற்குப் பொருள் என்னை யெனிற் கூறுதும்:

1. பாண்டியன் – பாண்டியன் = பாண்டி + அன்

பாண்டி என்பது வட்டமென்னும் பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது. பாண்டி,ஒரு விளையாட்டு. ஓட்டை, வட்டமாக நறுக்கி நிலத்தில் அரங்கு கீறி எறிந்து விளையாடுவது. வட்டமாக நறுக்கப்பட்ட ஓடு வட்டு எனப்படும். வட்டு என்பது கருவியாகுபெயராய் அதைக் கொண்டு ஆடும் விளையாட்டையும் உணர்த்தும்.

'கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்' (நற்.3)

வட்டு என்பதன் பரியாயப் பெயராகவே பாண்டி யென்பது தென்னாட்டில் வழங்குகின்றது.

தொடடி, புட்டி, விட்டி என்பன தொட்டில், புட்டில், விட்டில் என்று நின்றாற்போல, பாண்டி என்பதும் பாண்டில் என நிற்கும்.

பாண்டில் = வட்டம். பாண்டில் என்பது வட்டம் என்னும் மூலப் பொருள்பற்றியே பல பொருள்களை யுணர்த்தும்.

பாண்டில் = 1. அகல், வட்டமாயிருப்பது.

2. காளை, வட்டமாய் அல்லது உருண்டிருப்பது.

3. கைத்தாளம், வட்டமாயிருப்பது.

4. நாடு

ஒரு நாட்டை அல்லது நாட்டுப் பகுதியை வட்டம், வட்டகை, வட்டாரம் என்று சொல்வது வழக்கு. மண்டலம் என்பது வட்டத்தின் பரியாயப் பெயரே. இங்கிலீஷிலும் 'circle' என்று நாட்டுப் பகுதியைக் கூறுவர்.

5. சக்கரம், வட்டமாயிருப்பது.

6. பண்டி (வண்டி)

(கொல்லாப் பண்டி எனச் சிலப்பதிகார உரை)

பண்டி யென்பத வண்டியென்பதன் திரிபு. ப–வ, போலி. வண்டி–வள் பகுதி, தி விகுதி. வள் + தி =வண்டி, வளைந்திருப்பது. வண்டியென்பது முதலில் சக்கரத்தையும் பின்பு உறுப்பாகுபெயராய்ச் சகடத்தையும் குறிக்கும்.

பண்டி என்பதே பாண்டி, பாண்டில் எனத் திரியும்.

"பாண்டில் எடுத்தபஃ றாமரை கீழும் பழனங் களே" எனும் திருக்கோவையடியில் பாண்டில் என்பது கிண்ணம் என்னும் பொருளில் தாமரைக் குவமையாய் வந்துள்ளது. கிண்ணம் வட்டமா யிருப்பது.

வட்டம் என்னும் சொல் உருட்சியையும், திரட்சி யையும் குறிக்கும். ஓர் உருண்டையின் பரப்புத் தூரத் தில் வட்டமாகவே தோன்றும்.

பாண்டியன் குதிரைக்குக் கனவட்டம் என்று பெயர். ஓர் இளைஞனை இளவட்டம் என்பர் தென் னாட்டார். வட்டம் என்பதைப் போலவே அதன் பரியாயப் பெயராகிய பாண்டில் என்பதும் உருட்சியும், திரட்சியுமாகிய பொருள்களை யுணர்த்தும்.

பாண்டில், உருட்சியான ஒரு காளையை யுணர்த்துவது போல உருட்சியான ஒரு வீரனையும் உணர்த்தும். காளை என்னும் பெயர் உவமையாகு பெயராய் வீரனைக் குறிப்பது செய்யுளிற் பெரு வழக்கு. தென்னாட்டார் காளை என்னும் பெயரைத் தம் சிறார்க்கிடுவது இன்றும் வழக்கம். இப்போ துள்ள சிவகிரி ஜமீன்தார் அவர்களின் பெயர் செந் தட்டிக் காளைப் பாண்டியன் என்பது. ஆகவே **பாண்டி யென்பதற்கு "வீரன்" என்பதே பொருளாம்.** அஃது அன் விகுதி பெற்றுப் பாண்டியன் என நிற்கும். பாண்டியன் வீரத்தைச் சங்க நூல்களானும், "பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதே யம்மானே" என்னும் புகழெந்தியார் கூற்றானு முணர்க.

இனி, பாண்டியனுக்குரிய மறுபெயர்களாவன:

செழியன் = செழிய நாட்டை யுடையவன்.

தென்னவன் = தென்னாட்டரசன்.

வழுதி = புலவரால் வழுத்தப்படுகின்றவன்.

மாறன் = பகைவரொடு மாறுகொண்டவன்.

மீனவன் = மீனக்கொடி யுடையவன்.

கைதானவன் = தன் கையை வெட்டினவன் (பொற்கைப் பாண்டியன். அவனுக்குப் பின்னால் ஏற்பட்ட பெயர்.)

பஞ்சவன் = ஐந்து சிற்றரசரை ஆண்டவன். (கல்வெட்டுகளையும், சரித்திரத்தையுங் காண்க.) முல்லை, குறிஞ்சி முதலிய ஐந்திணை நிலங்களை யுடையவன் என்று பொருள் கூறல் பொருந்தாது.

கௌரியன் = கௌரியின் வழித்தோன்றல்.

கௌரி தடாதகைப் பிராட்டியாரான பார்வதி.

சின்னமும், அங்கமும் பற்றிய தொடர்மொழிப் பெயர்கள் இங்குக் கூறப்பட்டில.

2. சோழன் : சோளம் – சோழம் – சோழம் + அன் = சோழன்.

சோழம் என்பது மக்காச் சோழம்; கள்ளர் வெட்டிச் சோளம் என்றும் கூறப்படும்.

மக்காச்சோளம் சோழநாட்டிலேயே சிறப்பாய் விளைகின்றது. பாண்டிநாட்டிற் பயிரிடப்படுவதே யில்லை. கொங்குநாட்டிலும், பிற சேர நாட்டுப் பகுதி களிலும் விளைந்தாலும், சிற்றுண்டியாய்த் தின்னத் தக்க அவ்வளவு சிற்றளவாகவே விளைகின்றது. சோழநாட்டிற் கள்ளருக்குச் சிறந்த வுணவாகின்றது. கள்ளர் அதை மிகுதியாகப் பயிரிடுகின்றனர். அதனாலேயே கள்ளர்வெட்டிச் சோளம் எனப் பெயர் பெற்றது. கள்ளர் என்னும் வகுப்பார் சோழநாட்டி லன்றிப் பிற நாட்டிவில்லை. இதனாலும் சோளம் சோழநாட்டிற்கே சிறப்பென்பது பெறப்படும்.

தாவரப் பொருள்களால் இடங்கள் பெயர் பெறுவது சாதாரணம்.

எ–டு : பொழில் = (சோலை) உலகம். உலக முழுதும் முன்காலத்தில்ஒரே சோலைபோல் தோன்றிற்று.

நாவலந் தீவு = நாவன் மரம் மிகுந்த பரதகண்டம்.

நெல்வேலி, திருநெல்வேலி, நென்மேனி, நெல்லூர் முதலியன நெல் விளையும் இடங்கள்.

புளியம்பட்டி, புளியங்குடி, அத்திகுளம், வேப்பங் குளம், பனையூர், பனையடிப்பட்டி முதலியன மரங்க ளாற் பெற்ற பெயர்கள்.

எருக்கலங்குடி செடியாற் பெற்ற பெயர். இங்ஙனமே பிறவும்.

சோளம் விளையும்நாடு தானியாகுபெயராகச் சோளம் எனப்பட்டது. சோளம் சோழம் எனத் திரியும்.

ள–ழ. cf. தோள் + அன் = தோளன் = தோழன். தோள்போல் உதவுபவன் அல்லது தோளிற் கை போடுபவன்.

சீகாளி – சீகாழி. யாளி –யாழ், நாளி–நாழி, தேளி–தேழி, தேள்போற் கொட்டுவது.

சோழநாட்டையுடையவன் சோழன்.

இனி, சோழனுக்குரிய மறுபெயர்களாவன :

சென்னி = தலைவன், சென்னி = தலை.

கிள்ளி = பகைவர் தலையைக் கிள்ளுபவன்.

அபயன் = பயத்தை நீக்குபவன், அடைக்கலந் தருபவன்.

வளவன் = வளநாட்டையுடையவன்.

செம்பியன் = சிபியின் வழித்தோன்றல்.

சின்னமும், அங்கமும் பற்றிய தொடர்மொழிப் பெயர்கள் இங்குக் கூறப்பட்டில.

3. சேரன் : சாரல் – சேரல் –சேரன்.

தமிழ் வேந்தர் மூவருள்ளும் சேரனே மலை நாட்டையுடையவன். சாரல் என்பது மலையின் அடிவாரத்தையும், மலைநாட்டையும் குறிக்கும். பின்பு இடவாகுபெயராய் அம் மலைநாட்டை ஆள்பவனைக் குறித்தது.

சாரல் என்பது சேரல் என்று திரியும். உ.க. சார் – சேர்.

சேரல் என்பது சேரன் என்று திரியும்.

ல–ன போலி. cf. மறன் – மறல், மறலி –எமன். திறன் – திறல்.

சேரல் என்பதே சேரன் பழம்பெயராகும்.

எ.டு: குடக்கோச் சேரல், மாந்தரஞ் சேரல்.

சேரல் + அன் = சேரலன் – கேரளன்.

ச–க, போலி. cf. சீர்த்தி – கீர்த்தி, சுலவு – குலவு.

ல–ள, போலி cf. இறலி – இறளி, கசலி – கசளி.

சேரன், கேரளன் என்பவை பிந்திய வடிவங் களாகும். அவற்றுள்ளும் மிகப் பிந்தியது கேரளன் என்பத பண்டைத் தமிழ் நூல்களிலெல்லாம் சேரல் என்பதே பெருவழக்காய் வரும். பிற்காலத்துப் புராணங்களிலெல்லாம் கேரளன் என்பது பெருவழக் காய் வரும்.

சேரன் என்னும் பெயரொடு மான் என்னும் பெயர் சேர்த்துச் சேரமான் என்று வழங்குவது முண்டு. மான் என்பத மகன் என்பதன் திரிபு. பெருமகன் – பெருமான், மருமகன் – மருமான்.

இனிச் சேரனுக்குரிய பிற பெயர்களாவன :

வில்லவன் – வில்லையுடையவன்.

கொங்கன் – கொங்குநாட்டை யுடையவன்.

குடக்கோ – குடநாட்டரசன். குடம் – மேற்கு.

குட்டுவன் – குடநாட்டரசன். குடம்– குட்டம்.

குடகன் – குடநாட்டரசன்.

கோதை – (வில்லுக்காக) முன்கைத் தோற்கட்டுடையவன்.

உதியன் – உயர்ந்தவன். உயர்ந்த மலைநாடன்.

வானவன் – வானத்தையளாவும் மலைநாடன்.

வானவரம்பன்– வானத்தையளாவும் மலைநாடன்.

மலையமான் – மலைநாட்டரசன்.

சேய் – மலைத் தெய்வமாகிய முருகன் போன்றவன்.

சின்னமும், அங்கமும் பற்றியதொடர்மொழிப் பெயர்கள் கூறாது விடப்பட்டன.

இதுகாறுங் கூறியவற்றால் தமிழரும், தமிழர சரும் ஆரிய வருகைக்கு முன்பே, தமிழ்நாட்டி லிருந்தவர்களென்றும், அவர்கள் தமிழ்நாட்டின் பழங்குடிகளேயென்றும், அவை வடமொழியிற் பலவாறு திரியுமென்றும், தமிழரசருள் பாண்டியன் காலத்தால் முற்பட்டவன் என்றும், சோழன் இடைப் பட்டவன் என்றும், சேரன் கடைப்பட்டவன் என்றும் தெரிந்து கொள்க.

பாண்டியன் முற்பட்டவன் என்பது தமிழ்நாடன் என்னும் பெயரினாலும், சங்க வரலாற்றாலும், சரித்திரத்தினாலும்,

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி"

(சிலப்.11: 19–22)

என்னும் சிலப்பதிகார வரிகளாலும், முழுகின தமிழகமுண்மையிலும், மேனாட்டுக் குறிப்புகளாலும் அறியப்படும். முழுகின தமிழகம் பாண்டி நாட்டுப் பகுதியாகும். அதுவே மக்கள் முதன்முதற் றோன்றி யவிடம்.

மக்கள் பெருகி வடக்கே வரவே சோழநாடு தோன்றிற்று. தென்றிசையினின்றே மக்கள் ஆதியில் வடக்கே சென்று உலகமுழுதும் பரவின தாகச் வரலாறு கூறும். பல்வகைக் கலைகளும் இதற்குச் சான்று பகரும்.

சோழநாட்டின்பின் சேரநாடு தோன்றிற்று. சேரநாடு முதலாவது குடமலைக்குக் கீழ்ப்பட்ட கொங்குநாட் டளவாயிருந்து பின்பு மேல் கரையும் சென்று தாவிற்று.

தமிழ்மொழி பாண்டிநாட்டின் செந்தமிழாயிருந் ததும், வடக்கே சோழ நாட்டிற் சற்றுத் திரிந்ததும், அதை அடுத்து அதன் மேற்கே மிகத் திரிந்து கொடுந் தமிழானதும்.

கிறித்துவுக்கு முற்பட்ட காலத்தில் பாண்டியன் தமிழ்நாட்டில் தலைமை வகித்ததும், பின்பு சோழன் தலைமை வகித்ததும், பின்பு சேரன் செங்குட்டுவன் தலைமை வகித்ததும், பாண்டிய சோழ சேர முன்மை இடைமை பின்மைகளை யுணர்த்துவனவாகும்.

சங்ககாலத்தோடு தனித் தமிழரசு தலைத் தாழ்த்ததனால் அதற்குப் பிற்பட்ட சிற்றிடைச் சிறு போதைத் தமிழரசுக் கிளர்ச்சிகள் இங்குக் கொள் ளப்பட்டில.

மேனாட்டுப் பழையவரலாற்று நூல்களில் தமிழரசரைப் பற்றிய குறிப்புகளிலெல்லாம் பாண்டியன் பெயரே குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழநாடு வடக்கே வரவர விரிந்திருத்தலால் மக்கள் மேற்கே சென்று குடியேறினர் என்க.

சேரநாட்டுத் தமிழ் தன் பெருந்திரிபினாலேயே வடமொழித் துணைகொண்டு மலையாளம் எனத் தனிமொழியாய்ப் பிரிந்தது.

ஆதலால் பாண்டியன் பெயர் மிகப் பழைமையான தென்க.

–"செந்தமிழ்ச் செல்வி" கன்னி 1934

மெதுவுகால் *meduvukāl*, பெ.(n.) வளர்ப்பு விலங்குகளின் கால் பாதம் நடத்தற்கு இயலாத வாறு மென்மையாகிவிட்ட நிலை; the state of emaciation of thin skin at the bottom of the foot of the domestic animals. "மாட்டுக்கு மெதுவுகால் ஏற்பட்டதால் மேய்ச் சலுக்கு கொண்டு செல்ல முடியவில்லை" (உ.வ.).

[மெல்–மெது–மெதுவு+கால்]

மெய்காப்புறை *meykāppurai*, பெ.(n.) காப் புறை, கவசம்(கங்கடம்) ; armous.

[மெய்+காப்பு+உறை]

மெய்ம்மப் பட்டறிவு *meymma-p-pattarivu*, பெ.(n.) மெய்மைகளின் குணங்களை ஆன்மா காணும் ஓர் பட்டறிவு நிலை(தத்துவரூபம்); a spiritual experience of the soul in which it is cognizant of the operations of the 36 tatvas.

மெய்யறிவின்பம் *meyyarivinbam*, பெ.(n.) உளதாயிருத்தல் மெய்யறிவு இன்பம் என்னும் முக்குணம் 2ன் நிரம்பிய பரம்பொருள் (சச்சிதானந்தம்); the supreme spirit, as having the threefold attributes of existence, knowledge and bliss.

[மெய்+அறிவு+இன்பம்]

மெய்யுணர்வு அளவை *meyyunarvualavai* பெ.(n.) மெய்யுணர்வு விளக்கத்திற்காக மறை முதலியவற்றைக் கொண்டு அறியும் ஓர் அளவை (சத்தப்பிரமாணம்) ; verbal authority, revelation or scripture, as a means of acquiring correct knowledge.

[மெய்+உணர்வு+அளவை]

மேம்பட்ட அழகு *mēmpatta alagu*, பெ.(n.) ஒளிவிடுதல் (சோபித்தல்) ; to be beautiful, to be splendid, lustrious.

[மேம்பட்ட+அழகு]

மேற்காணகர் *mērkānagar*, பெ.(n.) முறை மன்றம், ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகம் ஆகியவற்றிலுள்ள ஆளுவ பணியாளர்க்குத் தலைவரான அதிகாரி (சிரத்தார்); head officer of a court of justice or collectors office, head accountant of a Taluk, who has the general superintendance of the establishment.

[மேல்+காணகம்]

மேனி இலக்கணம் *mēniilakkanam*, பெ.(n.) ஆண் பெண் இருவருக்கும் வேண்டிய அங்க அமைப்பு (சாமுத்திரிகா லட்சணம்); physical features of a beautiful woman or handsome man, physeognomy.

[மேனி+இலக்கணம்]

மோட்டு மரி *mōttupari*, பெ.(n.) விலா எலும்பு ஊனமுற்ற மாடு; a cow with a damaged rib.

[முடு–மோடு–மோட்டு+பரி]

வ

வங்கன் *vaṅgaṉ,* பெ.(n.) நாவாய்கன் பார்க்க; see nāvāygaṉ.

[வங்கம்–வங்கன்]

வட்டாட்சியர் *vaṭṭāṭciyar,* பெ.(n.) மாவட்ட ஆட்சியருக்குக் கீழ் வட்டத்தில் அரசிறை தண்டும் அதிகாரி (தாசில்தார்) ; (tahsildar) a revenue officer in charge of a taluk under the district Collector.

[வட்டம்+ஆட்சியர்]

வண்ணவான்வெடி *vaṇṇavāṉveḍi,* பெ.(n.) சீன வெடி (கொ.வ.) (டப்பாசு); a kind of fire-crackers.

[வண்ண+வான்+வெடி]

வருவாய் மதிப்பீடு *varuvāimadippīḍu,* பெ.(n.) வட்டாரம் அல்லது பண்ணையிலிருந்து கிடைக்கக் கூடிய தண்டலின் குத்து மதிப்பு (டவுல்); estimate valuation, estimate of the amount of revenue which a district or estate may be expected to yield.

[வருவாய்+மதிப்பு+ஈடு]

வரையாடு *varaiyāḍu,* பெ.(n.) மலையாடு; mountain sheep.

த.வ. செம்மறியாடு

[வரை+ஆடு]

வரைவோலை *varaivōlai,* பெ.(n.) ஒருவருக்குப் பணம் வழங்குமாறு வைப்பகத்திற்குத் தரப்படும் எழுத்து வடிவிலான ஆணை; demand draft.

[வரைவு+ஓலை]

வல்லமை *vallamai,* பெ.(n.) திறனாற்றல் (சாதுரியம்); cleverness.

[வல்–வல்லமை]

வல்லே *vallē,* பெ.(n.) மிக நன்று என்னும் குறிப்பு (சபாசு); expr. meaning excellence well done.

வலக்காரம் *valakkāram,* பெ.(n.) அடாவடித் தனம், கரவடம் (சாணக்கியம்); art stratagem.

மறுவ. நுண்சூழ்ச்சித் திறம்

[வலம்–வலக்காரம்]

வழக்கீடு *vaḻakkīḍu,* பெ.(n.) வழக்கு தொடுத் தல் (தகாதா) ; law suit.

[வழக்கு+ஈடு]

வழும்புக் காய்ச்சல் *vaḻumpu-k-kāiccal,* பெ.(n.) வயிற்றளைச்சலில் காணும் காய்ச்சல் (சீதக் கட்டு சுரம்); fever in dysentery.

[வழும்பு+காய்ச்சல்]

வழும்பு வலி *vaḻumbuvali,* பெ.(n.) வழும்புவலி (சீதக்கடுப்பு) ; pain in the anus and lower abdomen due to dysentery.

[வழும்பு+வலி]

வளிநீர் *vaḷi-nīr,* பெ.(n.) இரைப்பை நீர்; gastric juice.

[வழி+நீர்]

வளி நோய் *vaḷinoy,* பெ.(n.) ஒரு வகை வாத(வளி) நோய் ; a kind of gastric disease.

த.வ. அழல் வளி

[வளி+நோய்]

வறட்டுஅடை *varaṭṭuaḍai,* பெ.(n.) எண்ணெய் தடவாமல் நெருப்பில் வாட்டி எடுக்கப்படும் அடை போன்ற உணவு (சுக்கா ரொட்டி); a kind of aḍai roasted without using oil.

[வறட்டு+அடை]

வாய்வெருவல் *vāyveruval,* பெ.(n.) மறதியாக அல்லது அறியாமையின் வெளிப்பாடாகச் சொல்லக்கூடாதவற்றையும் சொல்லிவிடுதல்; to reveal what not to be spoken or exposed as a result of ignorance or

forgetfulness. "வாய்வெருவலாக எல்லாவற் றையும் சொல்லிவிட்டார்" (உ.வ.).

[வாய்+வெருவல்]

வாயால்கெடல் *vāyalkedal,* தொ.பெ.(vbl.n.) சொல்லக்கூடாததைச் சொல்லித் துன்பத் திற்குள்ளாதல்; inviting trouble by loose talk. 2. தவளை கத்துதலின் வாயிலாகத் தன் இருப்பிடத்தை பகை உயிரிகளுக்குத் தெரி வித்து உயிரிழத்தல்; forg denoting its location to enemies by croaking. "நுணலும் தன் வாயாற் கெடும் (பழ.).

[வழி+நீர்]

தவளையைத் தின்ன நினைக்கும் வெளவால் தவளை கத்தும் வரை காத்திருக்கும். தவளை இனச்சேர்க்கையின்போது கத்துவது வழக்கம். உண்ணக்கூடாத நச்சுத் தவளையின் ஓசையையும் நல்ல தவளையின் ஓசையையும் வேறுபடுத்தி நுனித்தறிந்த பின் நல்ல தவளையை மட்டும் வெளவால் தின்னும். இதனால் மணலுள் முழுகி மறைந்து கிடக்கும் நுணலும் தன் வாயால் கெடும் என்ற பழமொழி தோன்றியது. மழைக்காலத்தில் கூட்டமாக சேர்ந்து கத்துவது இதனினும் வேறான நிகழ்வு.

வான்செலல் அறிவர் *vānselalarivar,* பெ.(n.) வான்வழியே நினைத்தவிடம் செல்ல வல்ல சித்தர் (கமன சித்தர்); siddhar reputed to have the super natural power of freely traversing through space.

[வான்+செலல்+அறிவர்]

வான் செலவாற்றல் *vānselavārral,* பெ.(n.) வான்வழி நினைத்தவிடம் செல்லும் ஆற்றல் (வின்)(கமன சித்தி) ; supernatural power of freely traversing through space.

[வான்+செலவு+ஆற்றல்]

வானுலா *vānulā,* பெ.(n.) வானத்தில் உலா வுகை (ககன சாரிகை); aerial travel.

[வான்+உலா]

வானுலாவி *vānulāvi,* பெ.(n.) வானத்தில் சுற்றித் திரிபவன்–ள் (ககன சாரி) ; one who travels through the air, aeronaut.

[வான்+உலாவி]

வானூர்திப் பணிப்பெண்கள் *vānūrdi-p-panippengal,* பெ.(n.) வானூர்தியில் பயணி களுக்குப் பணிவிடை செய்யும் பெண்கள்; air hostess.

வானூர்தி முனையம் *vānūrdimunaiyam,* பெ.(n.) பல்வேறு நாட்டைச் சேர்ந்த வானூர்திகள் வந்து போகுமிடம்; an airport.

விடா வினை நோய் *vidāvinai nōy,* பெ.(n.) யாதொரு காரணமுமில்லாமலே ஏற்பட்டு ஊழ்வினை தன்னைவிட்டகல அதுவும் கூடவே உடம்பை விட்டகலும் ஊழ்வினை நோய்(கர்ம நோய்); disease coming on without any apparent cause and dissappeang with the extinction of karma.

[விடா+வினைநோய்]

விண்ணாணம் *vinnānam,* பெ.(n.) 1. விரி வுரை, விளக்கம் ; a narration, detailed commentary. 2. வேண்டாத விளக்கம்; unnecessary explanation. அவன் விண்ணாணம் பேசுகிறான் (இ.வ.)

[விள்–விண்–விண்ணாணம்]

விந்திகை *vindigai,* பெ.(n.) வெண்கலக்குடம்; metal pot made of bronze.

க. பிந்திதெ.

[வள்–விள்–விந்து–விந்திகை]

வியர்வையுண்டாக்கி *viyarvaiyundākki,* பெ.(n.) வியர்வை பிறப்பிக்கும் மருந்து (சுவேதகாரி); diaphoietics.

[வியர்வை+உண்டாக்கி]

விரி சிறைக்கை *viriširai-k-kai,* பெ.(n.) பறவை தன் சிறகுகளை சமப்படுத்துவது போல் இரு கைகளையும் இருபுறத்தும் விரித்துக் காட்டும் நாட்டிய வகை(டோளக்கை) ; a pose which consists in extending the hands on both sides in imitation of a bird balancing itself on its wings.

[வில்+சிறை+கை]

விருப்பாவணம் *viruppāvaṇam,* பெ.(n.) இறப்பிற்குப் பின் நடைமுறைப்படுத்தக் கோரி எழுதும் விருப்பாவணம் (உயில்): bill, legal declaration of a person's intensions, totake effect after his death.

[விருப்பு+ஆவணம்]

விலாடன் *vilāḍaṉ,* பெ.(n.) குற்றவாளியிடம் கைப்பற்றிய நிலம்; land embezzled from the culprit. "நீலபாடி எல்லை இன்னும் விலாடன் குகற்றெத்தத் தெல்லை...." (பா.செ.ப.).

[வில்+ஆடன்]

விழாப்பறை *viḻāppaṟai,* பெ.(n.) விழாக்களில் காளை மாட்டின் முதுகிலேற்றி வைத்து அடிக்கும் கொட்டு (டமாயி) ; keltle drums mounted on an ox and beaten, as in processions.

மறுவ. ஏற்றுப்பறை

[விழா+பறை]

விழிப்புநிலை *viḻippunilai,* பெ.(n.) ஆதன் புருவ நடுவில் நின்று கோட்பாடுகளுடன் கூடி நுகர்ச்சியில் மெத்தென நிற்கும் நிலை (சாக்கிரம்); waking state in which the soul is in the forehead with all its faculties active.

[விழிப்பு+நிலை]

விழிப்புவளி *viḻippuvaḷi,* பெ.(n.) பத்து உடல் வழிகளும், இமைத்தல், விழித்தல்களைச் செய்யும் காற்று (கூர்மன்); the vital air of the body which causes closing and opening of eyelids one of taša-vayu.

[விழிப்பு+வளி]

விழிப்பேந்துகள் *viḻip-pēntu-gaḷ,* பெ.(n.) பொறிகள், புலன்கள், தன் மாத்திரைகள் உயிர்வளி ஆதன் எனும் விழிப்புணர்வுக்கு உரிய கருவிகள் (சாக்கிரக் கருவி); agent or elements operating in the state of waking, as organs of action, of sense and of mind, vital airs and soul.

[விழி+பேந்துகள்]

விழைந்தேற்றல் *viḻaindēṟṟal,* செ.குன்றாவி (v.t.) ஒப்புதல் வழங்குதல்(சுவீகரித்தல்); to agree, accept. 2. உட்கொள்ளுதல் ; to take in, imbibe. 3. ஈவுப் பிள்ளையாக ஏற்றுக் கொள்ளல்; adopt. 4. தனக்குரியதாக்குதல்; make one's own adopt an idea scheme etc.,

[விழைந்து+ஏற்றல்]

விழைவு மடல் *viḻaivu maḍal,* பெ.(n.) நிலம் முதலிய பெறற் பொருட்டு அரசாங்கத்தார்க் குச்செய்து கொள்ளும் வேண்டுகோள் (தர்க்காத்து); tender representation of petition, as for an assignment of land, for the cultivation of land, for forming only branch of the revenue, application as for an appointment.

[விழைவு+மடல்]

விற்கையன் *viṟkaiyaṉ,* பெ.(n.) வில்லைக் கை யிலுடைய திருமால் (சாரங்கபாணி); Tirumal as holding sarangam in his hand.

[வில்+கையன்]

வினையகல் வியப்பு *viṉaiyakalviyappu,* பெ.(n.) அருக சமயத்தார் கூறும் வியப்பு மூன்றனுள் வினை நீங்குகையாகிய வியப்பு (சீவக.28,3;உரை); pre-eminence arising from annihilation of all karma, one of three aticayam.

[வினை+அகல்+வியப்பு]

வீகாய் *vīkāy,* பெ.(n.) திறவுகோல், சாவி; key.

க. பீகாய்

[வீழ்+கை–வீழ்கை+வீகாய் (திரிபு)]

வீண்பகட்டன் *vīṇpagaṭṭaṉ,* பெ.(n.) இடம்பன் (டாம்பிகன்); fop, ostentatious person.

[வீண்+பகட்டன்]

வீறார்ந்த குரல் *virārndakural*, பெ.(n.) பொரு ளார்ந்த செய்யுள் (வின்) (கம்பீரவாக்கு); superior style of writing, pregnant with meaning. 2. எடுப்பான குரல்; manly authoritative majestic voice, grave intonation.

[வீறார்ந்த+குரல்]

வெட்டுக்கறிக்காரன் *vettu-k-kari-k-kāran*, பெ.(n.) வெட்டுக் கறியாளன் பார்க்க; see vettu-k-kariyālan.

[வெட்டு+கறி+காரன்]

வெட்டுக் கறியாளன் *vettukkariyālan*, பெ.(n.) ஆடு மாடுகளை வெட்டி இறைச்சியை விற்பவன், கசாப்புக்காரன்; butcher.

[வெட்டு+கறியாளன்]

வெட்டுக்கிடங்கு *vettukkidanku*, பெ.(n.) ஆடு மாடுகள் அடிக்குமிடம் (கசாப்புக் கிடங்கு); slaughter-house.

[வெட்டு+கிடங்கு]

வெடியுப்பு *vediyuppu*, பெ.(n.) ஒரு வகை பொட் டாசியம் உப்பு ; a kind of potassium salt.

த.வ.அழலுப்பு

[வெடி+ உப்பு]

வெண்டுறைப்பாட்டு *vendurai-p-pāttu*, பெ.(n.) கூத்து வகைகளுக்கு உரிய பாட்டு; a song composed for dance varieties.

வெவ்வை *vevvai*, பெ.(n.) உயர்ந்த முடிப் போர்வை (சால்வை); fine shawl.

[வெம்–வெவ்–வெவ்வை]

வெள்ளக்கால் *vellakkāl*, பெ.(n.) மழைநீர் செல்லும் கால்வாய்; canal of rainflow.

[வெள்ளம்+கால்]

வெள்ளணி நாள் *vellaninā!*, பெ.(n.) பிறந்த நாள் பெருவிழா (சயந்தி); birthday celebration.

[வெள்+அணி+நாள்]

வெள்ளாடைச் சமணர் *velladaiccamanar*, பெ.(n.) வெள்ளாடை அணிந்த சமண முனிவர் (சுவேதாம்பரர்); Jaina medicants clad in white robe tigambaram.

[வெண்மை+ஆடை+சமணர்]

வெள்ளி நோட்டம் *vellinōttam*, பெ.(n.) வெள்ளிக்கு (சுக்கிரன்) உரிய இருபதாண்டு ஆட்சிக் காலம் (சுக்கிரதசை); the period 20 years in which venus excercise its influence. 2. நல்லகாலம்; period of great prosperity.

[வெள்ளி+நோட்டம்]

வெள்ளிமறை *vellimarai*, பெ.(n.) இரவில் வெள்ளி மீன் கண்களுக்குப் புலப்படாத காலம் (சுக்கிரன்பாடு); the time of the year when sukra is invisible at nights.

[வெள்ளி+மறை]

வெற்றிகொண்ட சோழன் *verrikondacōlan*, பெ.(n.) முதலாம் இராச இராசன் சிறப்புப் பெயர் (சயங்கொண்ட சோழன்); surname of the chola king Raja Raja.

[வெற்றி+கொண்ட+சோழன்]

வெற்றிமுரசு *verrimurašu*, பெ.(n.) வெற்றியை அறிவிக்க அடிக்கப்படும் முரசு (சயபேரிகை); drum of victory.

மறுவ. வெற்றிபேரிகை

[வெற்றி+முரசு]

வெறுஞ்சோறு *veruñcōru*, பெ.(n.) வெறும் சோறு (சுத்தானம்) ; cooked rice.

[வெறும்+சோறு]

வேகமானி *vēgamāni*, பெ.(n.) கப்பல் வேகத்தை அளக்குங் கருவி(டப்பு) ; log an instrument for ascertaining the speed of a ship.

[வேகம்+மானி]

வேளாண்கோ *vēlankō*, பெ.(n.) தலைமைக் குடியானவன்(வின்); head ryot, hereditary cultivator.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

பத்தாம் மடலம் - முதற்பாகம்

[அயற்சொல் மடலம்]

(அ-ஔ)

Vol. X - Part I

[Loan words]

முனைவர் இரா. மதிவாணன்
மதிப்புறு இயக்குநர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித்திட்ட இயக்கக வெளியீடு
தமிழ்நாடு அரசு
2009

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

பத்தாம் மடலம் – முதற்பாகம்

[அயற்சொல் மடலம்]

(அ–ஔ)

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

Vol. X - Part I

[Loan words]

முனைவர் இரா. மதிவாணன்

மதிப்புறு இயக்குநர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்கக வெளியீடு

தமிழ்நாடு அரசு

2009

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 26.

முதற் பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு 2040 மடங்கல் (ஆவணி) (September 2009)

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. X, Part-I

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு
© Government of Tamilnadu

விலை : உருபா 400/–
Price : Rs. 400/-

குறியீட்டெண் : Colon No.P.J1-J, 314"K.M4

வெளியிட்டோர் :

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக் வளாகம்,
அண்ணாநகர், சென்னை–600 040.

Published by :

Directorate of Tamil Etymological Dictionary Project,
C- 48, Ist Floor, T.N.H.B.,
IInd Avenue, Anna Nagar,
Chennai - 40.

அச்சீடு :

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை–600 113.

Printed at :

International Institute of Tamil Studies,
Tharamani, Chennai - 113

நூல் கிடைக்குமிடங்கள் :

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்,
அண்ணாநகர், சென்னை–600 040.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை–600 113.

Copies available at :

Directorate of Tamil Etymological Dictionary Project,
C- 48, Ist Floor, T.N.H.B.,
IInd Avenue, Anna Nagar,
Chennai - 40.

International Institute of Tamil Studies,
Tharamani, Chennai - 113



பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா வெளியீடு

15.09.2009

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 16.7.2009

அணிந்துரை

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களை இயக்குநராகக் கொண்டு 1974 இல் அமைக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் 12 மடலங்களில், 31 தொகுதிகளாகச் "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி" வெளியிடத் திட்டமிட்டது. திட்டமிட்டவாறே, இதுவரை 10 மடலங்களில் 'அ' முதல் 'ஔ' வரை உயிரெழுத்துகளில் 3 தொகுதிகள், 'க' முதல் 'வெள' வரை உயிர்மெய் எழுத்துகளில் 21 தொகுதிகள், தமிழ் அகரமுதலி வரலாறு 1 தொகுதி என மொத்தம் 25 தொகுதிகளை வெளியிட்டுள்ளது. அவற்றைத் தொடர்ந்து தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொற்கள் தொடர்பாக "அயற்சொல் மடலம்" 10–வது மடலமாக 3 தொகுதிகள் வெளியிடத் திட்டமிடப்பட்டு, அதில் முதற்கட்டமாக இரண்டு தொகுதிகள் தற்போது வெளியிடப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து மற்ற இரு தொகுதிகளுடன் 12–வது இறுதி மடலமும் மிக விரைவில் வெளியாகி இவ்வரும் பணி நிறைவு பெறவிருக்கிறது.

இந்திய மொழிகளில் இதுவரை வெளிவந்துள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிகளில் இதுவே மிகவும் விரிவானதும், செறிவானதும் ஆகும். அனைத்துச் சொற்களுக்கும் எழுத்துப் பெயர்ப்புடன், இலக்கணக் குறிப்பு, தமிழ் மற்றும் ஆங்கிலப் பொருள்கள், காலந்தோறும் மாறிவந்துள்ள பொருள்கள், திராவிட மொழிகளில் சென்றுள்ள ஒலி வடிவங்கள், பழமொழிகள், பல்வேறு சொல் வழக்குகள் ஆகியவற்றுடன் தேவைப்படும் இடங்களில் பட விளக்கங்களும் இப்பேரகரமுதலியில் இடம் பெற்றுள்ளன.

அனைவர்க்கும் பயன்படும் பொதுவகை அகரமுதலியாகவும், மொழியியல் மற்றும் திராவிட மொழிகள் ஆராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன் தரும் ஒரு சிறந்த கருவி நூலாகவும் உருவாகியுள்ள இந்தச் "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி" நூல் தொகுதிகளின் துணையோடு தமிழ் மொழியைப் பேணிக்காத்திட தமிழார்வலர்கள் முனைந்திடல் வேண்டும்.

இந்த அரும்பெரும் தமிழ் மொழிக் கருவூலத்தை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுத் தமிழ் மொழிக்கு அணிசேர்த்துள்ள அறிஞர் பெருமக்கள், பணியாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த பாராட்டுகளும் நல்வாழ்த்துகளும் உரித்தாகுக.

(மு.கருணாநிதி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
"முத்தமிழறிஞர்"

கலைஞர் மு. கருணாநிதி

செம்மொழிச் செம்மல் கலைஞர் பெருந்தகையே
செம்மாந்த செந்தமிழர் பாவாணர் நுண்ணோக்கில்
சீர்கொள் அகர முதலி வெளியிட்டுப்
பேர்கொண்டீர் வாழ்க நெடிது!

மொழிஞாயிறு

ஞா. தேவநேயப்பாவாணர்

ஞால முதன்மொழி எந்தமிழே என்றென்று
சால நிறுவிய பாவாணச் செம்மலே
நின்று நிலவும் சொற்பிறப்பு காட்டியதால்
பொன்றாது நின்றதும் பேர்!

அணிந்துரை

க. முத்துசாமி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் (ம) செய்தித் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பிறந்த நாடும் பேசும் மொழியும் நாட்டு மக்களுக்கு இரு கண்கள். தமிழ்த்தாய் உலக மொழிகளுக்குத் தாய்

"தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும் – இவள்
என்று பிறந்தவள் என்றறி யாத
இயல்பினளாம் எங்கள் தாய்" என, பாரதி சிறப்பித்துப் பாடினார்.

செந்தமிழிலக்கியங்களைக் கொண்டதால் உயர்தனிச் செம்மொழி என்னும் தகுதிப்பாட்டுடன் தமிழ் செம்மாந்து நிற்கிறது. தமிழின் தனித்தன்மையை வேர்ச்சொல் ஆராய்ச்சி வாயிலாக நிறுவிக்காட்டியவர் இத்திட்டத்தின் முதல் இயக்குநர் 'மொழிஞாயிறு' ஞா. தேவநேயப் பாவாணர். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலித் திட்ட இயக்ககத்தை உருவாக்கித் தந்தார்கள்.

மூவாயிரம் ஆண்டுகளாக இலக்கணக் கட்டமைப்புடன் திகழும் தமிழ் பிறமொழி உதவியின்றி தனித்தியங்கும் தகுதிபெற்றது.

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தின் தாய்மொழி பண்டு"

என்று பாவேந்தர் பாரதிதாசன் அழகாகக் குறிப்பிட்டார்.

அயலவர் தொடர்புகளால் பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தன. இக்கலப்பு கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக ஏற்பட்டதால் தமிழில் புகுந்த கலப்பினை ஆராய்ந்து பிரித்தெடுத்து 'அயற்சொல் மடலம்' எனும் வகைப்பாட்டில் கொடுத்திருப்பதனை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். மேலும், அந்த அயற்சொற்களுள் பொதுமக்கள் வழக்கிலும் புகுந்த சொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் காட்டி அயற்சொற்களை நீக்கித் தூய தமிழ்ச்சொற்களை வழங்குவதற்கு வழிவகை காட்டப்பட்டுள்ளது. இம்முயற்சி பிறசொல் கலவாமல் தமிழைப் பயன்படுத்துவோர்க்குப் பெரிதும் பயன்படும்.

வானுயர்ந்த பொதியமலையில் தோன்றி மன்னுபுகழ் மூவேந்தர் மடியில் தவழ்ந்து பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய் விளங்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு இப்பேரகரமுதலி பெருந்துணைபுரியும். இவ்வகையில் புத்தம்புதிய துறைகளில் தேவைப்படும் சூழல்களில் மரபார்ந்த சொற்களைப் படைத்து, தமிழை எதிர்காலத்தேவைகட்குத் தகுதிப்படுத்துவது நம் கடமை. அதற்கும் இத்துறைப் பணியாளர்கள் உதவுவார்களென நம்புகிறேன்.

இவ்வகரமுதலிப் பணியில் அரசின் திட்டங்களை நிறைவுறுத்த நாளும் கருத்தூன்றிப் பணியாற்றும் தமிழறிஞர் அனைவர்க்கும் என் நல் வாழ்த்துகள்.

(க. முத்துசாமி)

பதிப்புக்குழு

முனைவர் **இரா. மதிவாணன்**, மதிப்புறு இயக்குநர்
தலைவர்–பதிப்புக்குழு

திரு. **முத்து.பிச்சை**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்
முனைவர் **மு.கண்ணன்**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்
முனைவர் **பா.வெற்றிச்செல்வன்**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்
முனைவர் **ச. செந்திலாண்டவன்**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்
முனைவர் **இரா.கு.ஆல்துரை**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்
திரு.**கா. இளமுருகு**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்
திரு.**ச.கி. கணேசன்**, சிறப்பு நிலை ஓவியர் – முதனிலை

திரு. **மா. பூங்குன்றன்**, பதிப்பாசிரியர்
திரு.**க.கணேசன்**, பதிப்பாசிரியர்
திரு.**சு.வீரவேலு**, பதிப்பாசிரியர்
திருவாட்டி.**வே.உமாராணி**, உதவிப் பதிப்பாசிரியர்

பதிப்புரை

வளர்ந்து வரும் உலகில் மலர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் மொழியும் வளர வேண்டும். மொழிவளம் என்பது சொல்வளம். சொல்வளச் செழுமையைப் போற்றுவதும் பெருக்குவதும் அகரமுதலித் தொகுப்பின் தலையாயப் பணி. அதிலும் வேர்ச்சொல் மூலம் காட்டிச் சொற்பிறப்பு விளக்குவது உலக மொழியாராய்ச்சியாளர்க்கும் மாந்தநூலார்க்கும் அடிப்படை ஆய்வுச் சான்றுகளாக அமையும்.

அகராதியைப் பாவாணர் அகரமுதலி என்றார். ஆதி என்பது வடதமிழ் என்னும் பிராகிருதச் சொல்லாதலின் அதனைவிடுத்து அகரமுதலி எனும் சொற்படைத்தார். முத்தமிழ் அறிஞராகவும் செம்மொழிச் செம்மலாகவும் விளங்கும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய இந்த அகரமுதலித் திட்ட இயக்ககம் இறுதி மடலங்களை வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளது. பிறமொழிகளிலிருந்து சொற்களைக் கடன் பெறுவது உலக மொழிகள் அனைத்திலும் காணப்படும் பொதுவியல்பு. கடன்பெற்ற பிறமொழிச் சொற்களைப் பெரும்பாலான மொழிகளால் விலக்கிக் கொள்ள முடிவதில்லை. பிறமொழிச் சொற்களை முற்றாக நீக்கித் தன்சொற்களைப் படைத்துக் கொள்ளும் திறன் வாய்ந்தது தமிழ்மொழி. இந்தச் சிறப்பினைப் புலப்படுத்தும் பாங்கில் அயற்சொற்களை மட்டும் அயற்சொல் மடலம் எனத் தனியாகத் தொகுத்து வெளியிடப்படுகிறது.

இம்மடலம் மூன்று பாகங்களாக வெளியிடப்படுகிறது. இத்தொகுப்புப் பணிக்கு வேண்டிய உதவிகளைத் தக்காங்கு வழங்கிய தமிழக அரசுக்கும் தமிழ் வளர்ச்சித் துறையைத் தன் பொறுப்பில் பேணும் **தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** அவர்களுக்கும் தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறையின் அரசுச் செயலாளர் **உயர்திரு. க.முத்துசாமி, இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதனை நன்கு வெளியிட உதவிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தாருக்கும், இப்பணிக்கு அயராது உழைத்த அகரமுதலித் திட்டப் பணியாளர் அனைவர்க்கும், நெஞ்சார்ந்த நன்றியுடையோம்.

மதிப்புறு இயக்குநர்

ஆய்வு முன்னுரை

அயற்சொல் மடலம்

மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் தலைமையில் **மாண்புமிகு தமிழக முதல்வர் செம்மொழிச் செம்மல் முத்தமிழ்க் காவலர் கலைஞர்** அவர்களால் உருவாக்கப்பட்ட அகரமுதலித் திட்ட இயக்ககம் இதுவரை 25 பாகங்களை வெளியிட்டுள்ளது. இப்போது 26ஆம் பாகமாக அயற்சொற் மடலத்தின் முதற்பாகம் வெளியிடுவதில் அகரமுதலித் திட்ட இயக்ககம் பெருமை கொள்கிறது.

தமிழக அரசின் தளரா உதவியால் வளரும் பயிராகச் செழித்து வண்டமிழுக்கு வளம் சேர்த்துச் செம்மொழி எனும் தகவுபெற்ற தமிழுக்கு அணிகலன்களாக அகரமுதலி வெளியீடுகள் அமைந்துள்ளன எனில் அது மிகையாகாது.

ஆங்கிலம் தமிழோடு முந்நூறு ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டுள்ளது. ஆனால், சமற்கிருதம் தமிழோடு மூவாயிரம் ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டிருந்ததால் ஆங்கிலத்தைவிட அரபியம், பாரசீகம் போன்ற செமித்திய மொழிகளைவிட, சமற்கிருதச் சொல்லாட்சிகள் மிகுதியாகத் தமிழில் புகுந்துள்ளன.

தமிழ் மலையாம் மறைமலையடிகள், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் போன்ற பெருமக்கள் சமற்கிருதம் உள்ளிட்ட அனைத்து அயற்சொற்களையும் அறவே களைந்து என்றுமுள இனித்தமுடைய தனித்தமிழை மீட்டெடுத்தனர். அவர்கள் மீட்டெடுத்த முயற்சியை வெளிப்படுத்துவதாக அமைந்ததே அயற்சொல் மடலம்.

சொல்வளம்

“தமிழைப்போலச் சொல்வளமுள்ள மொழி உலகத்தில் வேறொன்றுமில்லை..... தமிழ் பழைமையான மொழியாயும், சென்ற மூவாயிரம் ஆண்டுகளாகத் தளர்ச்சியடைந்து வருவதாயும், வழங்கும் நிலம் வரவரக்குறுகி வருவதாயும், குறுகிய தன்னாட்டிலும் பெருகிய பகையுள்ளதாயும், தன் மக்களாலும் தள்ளப்படுவதாயும் இக்கால நூல்கள் எழுதப்படாததாயும், அரசியன் மொழியல்லாததாயும், எத்துணையோ கலைகளும் நூல்களும் சொற்களும் இறந்துபட்டும் வழக்கற்றுமுள்ளதாயும், இது போதுள்ளனவும் வழக்கற்று வருவதாயும் உள்ளது”[1].

உலகிலுள்ள எம்மொழியிலும் அயற்சொல் கலவாத நிலை இல்லை என்றும் அயற்சொற்களை வழங்குவதனால் மொழி வளர்ச்சியடையும் என்றும் சிலர் கூறுகின்றனர். இதற்கு வரையிகந்து அயற்சொற்களைக் கடன்பெற்ற ஆங்கில மொழியை எடுத்துக்காட்டுவர். ஒரு மொழியில் குறிப்பிட்ட பொருளையோ கருத்தையோ தெரிவிக்க சொல் இல்லாத நிலையில் அதற்குரிய சொல்லாக்கம் உருப்பெறா நிலையில் அயற்சொல்லைக் கடன் வாங்குதல் ஒருவகை. ஆயின், வழக்கிலுள்ள சொற்களைக் கையாளாமல் அவற்றிற்கு இணையான பிறமொழிச் சொற்களைக் கையாள்வது எவ்வகையில் மொழி வளர்ச்சிக்கு உதவும்? உவகை, களிப்பு, மகிழ்ச்சி என இனிமையான சொற்களிருக்க அவற்றிற்கு மாற்றாக ஆனந்தம், சந்தோஷம், குஷி, ஜாலி என அயற்சொற்களைப் பயன்படுத்துவது எங்ஙனம் தமிழ் வளத்தைப் பெருக்கும்? இவ்வகையில் பெரும் எண்ணிக்கையிலான அயற்சொற்கள், குறிப்பாகச் சமற்கிருதச் சொற்கள் ஒரு பொருட் பன்மொழிகளாகவே தமிழில் இடம்பெற்றுள்ளன. எ–டு: சொல்–வார்த்தை, நீர்–ஜலம், துப்புரவு–சுத்தம், விலங்கு–பிராணி, கூலம்–தானியம், விண்மீன்–நட்சத்திரம், சாறு–ரசம், கையூட்டு–லஞ்சம், அகவை–வயது, அறம்–தருமம், இரப்போன்–பிச்சைக்காரன், இழப்பு–நஷ்டம், நலம்–சௌகரியம்.

வழக்கற்றசொல்

வழக்கில் இடம்பெறாத பழைய சொல் எளிதாய்ப் பொருள் உணர்த்துவது இல்லை. ஆகையால் அதற்கு ஈடான பிறமொழிச் சொல்லைப் பயன்படுத்துவது எளிதாய் அமையும் என்று குறிப்பிடுவாரும் உளர். வழக்கற்ற சொல் எளிதில் பொருளுணர்த்தாமைக்குரிய கரணியம் அச்சொல்லின் குற்றமன்று. அதனைப் பயன்படுத்தாததொன்றே அது எளிதில் பொருளுணர்த்தா நிலைக்குக் கொண்டு செல்லும். இதனை “நீண்ட காலமாக உறவாடாத மக்கள் அயலாராகத் தோன்றுவது போன்றே நீண்ட காலமாக வழங்காத சொற்களும் அருஞ் சொல்லாய்த் தோன்றுகின்றன” என்று எடுத்துக்காட்டி விளக்கினார் பாவாணர்.

1. பாவாணர், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், தமிழ்மண் பதிப்பகம், 2000 (முதற்பதிப்பு 1949), பக்.72.

இந்திய மொழிகளில் பிறசொல் கலவாமல் எழுதவும் பேசவும் வல்ல ஒரே மொழி தமிழ்மொழி. இதனை நிலை நாட்டும் உயரிய நோக்கத்தை மொழிஞாயிறு பாவாணர் தம் வாணாட் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இலக்கியம், இலக்கணம், வரலாறு, உலகியல், அறிவியல், கணிதம், கணியம் போன்ற துறைகளில் முழுமையாகத் தமிழாக்கம் செய்யப்படாத சமற்கிருதச் சொற்களின் நிலைப்பு நீடித்தது. குறிப்பாகத் தமிழ் மருத்துவ நூல்கள், ஓரிலக்கம் பாடல்களுக்கு மேற்பட்டவை, சமற்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டபோது மூலத் தமிழ்ச் சொற்கள் உருவறிய முடியாமல் மறைந்து போயின. மருந்துகளின் பெயர்களும் மூலம் இழந்தன. அவற்றையும் மீட்டெடுக்க முயன்ற முயற்சியில் ஓரளவு துப்பு துலங்கியிருக்கிறது. அகரமுதலி திருந்திய மடலங்கள் வெளிவரும்போது சமற்கிருதமாக உருமாறிய தமிழ்ச் சொற்கள் முழுமையாக மீட்டெடுக்கப்படும். அதற்கான இடைக்கால ஏற்பாடாக முற்றிலும் தமிழாக்கப்படாத மருத்துவச் சொற்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

சொற்கடன்

"திராவிட மூலத்தினின்று முளைத்த சொற்கள் சமற்கிருதத்தில் இடம்பெற்றுள்ளன என்பதைப் பல்லாண்டுகளுக்கு முன்பே ஏற்றுக்கொண்டேன்.... ஆங்கில மொழியில், பிரித்தானியச் சொற்கள் எந்த அளவு கலந்துள்ளனவோ அந்த அளவு திரவிடச் சொற்கள் சமற்கிருதத்தில் கலந்துள்ளன. ஆனால் இவ்வுண்மை நெடுங்காலமாக உணரப்படவில்லை. எங்கேனும் ஒரு சொல் சமற்கிருத மொழியிலும் தமிழ் மொழியிலும் இருந்தால் அதை உடனே சமற்கிருத மூலத்தினின்று உருவானது என்று கருதிவிடுகின்றனர். பெரும் எண்ணிக்கையிலான சமற்கிருதச் சொற்கள் திரவிடமொழிகளில் வழக்கிலுள்ளன. இத்தகைய சொற்களைத் தமிழ், தெலுங்கு அகரமுதலித் தொகுப்பாளர்கள், சமற்கிருதச் சொற்களாகக் கருதி இயற் சொற்களான தம்மொழிச் சொற்களினின்று பிரித்து வழங்கி வந்திருக்கின்றனர். சில இடங்களில் தமிழ் சமற்கிருதத்தினின்று கடன் பெற்றதா, சமற்கிருதம் தமிழினின்று கடன் பெற்றதா என்னும் ஐயம் நிலவுகிறது. தமிழ்வாணர்களைப் போல் சமற்கிருதவாணர்கள் எப்போதும் பிரித்துக் காட்டவில்லை. யாரேனும் ஓர் ஆசிரியர் தாம் வாழும் உள்ளூர் அல்லது வட்டார மொழிச் சொற்களைப் பயன்படுத்திவிட்டால் (யாப்பமைதிக்காகவும் அல்லது வேறு கரணியங்களுக்காகவும் சமற்கிருதம் பேச்சு மொழி என்ற தகுதியை இழந்தபின் அவ்வாறானவை அருகிய வழக்காக இருப்பது இயல்பு), அவற்றைத் தவறாது சமற்கிருதச் சொற்கள் என்று குறிப்பிட்டு விடுகின்றனர்"[1]

மொழிக் கடன்பெறுவது தேவை கருதிப் பெறுவது பெருமை கருதிப் பெறுவது என இருவகைப்படும். தமிழில் கடன் கொள்ளப்பட்ட வடசொற்களுள் பெரும்பான்மையானவை பெருமை கருதிப் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தமிழ் அகரமுதலிகள் பெரும் எண்ணிக்கையிலான சொற்களை வட சொற்கள் எனக் காட்டியுள்ளன. அவற்றுள் பெரும்பான்மையானவை மக்கள் வழக்கில் இடம்பெறாதன. இலக்கியங்களில் இடம்பெற்ற வடசொற்களல்லாமல் வழக்கில் உள்ளனவாகப் பல வடசொற்களை அகரமுதலிகள் காட்டுகின்றன. அவற்றுள்ளும் பல பெரும்பான்மையோரால் கேள்விப்படாத சொற்கள். இவை போன்றனவல்லாமல் சென்ற நூற்றாண்டில் விளைந்த தமிழுணர்வின் கரணியமாகத் தமிழில் கலந்த வடசொற்கள் பல வழக்கு வீழ்ந்து வருகின்றன. எ–டு: அபேட்சகர்–வேட்பாளர்.

---

1 I have long felt persuaded that some words of Dravidian origin has found their way into Sanskrit vocabularies.... There is probably almost large a proportion of Dravidian words in Sanskrit, as of British words in English; but this probability has generally remained unnoticed: and wherever any word was found to be the common property of the Sanskrit and any of the Dravidian tongues, it was at once assumed to be a Sanskrit derivatives. Doubtless, the number of Sanskrit derivatives, properly so called, which have been introduced into the Dravidian Languages, is very great; but those words are almost always recognised and admitted to be derivatives by Tamil and Telugu lexicographers, and carefully distinguished from national or native Dravidian words. In a few cases, as might be expected, but in a few cases only, some doubt exists whether a particular word was borrowed by the Sanskrit from the Tamil, or by the Tamil from the Sanskrit. Sanskrit lexicographers and grammarians were not always so discrimate as their Dravidian brethern: and if any writer had happened to make use of a local or provincial word, that is, a word belonging to the vernacular of the district in which he resided (and it was natural that such words showed occasionally be used, for variety of metre or some other cause, especially after Sanskrit has caused to be a spoken tongue) every such word, provided only it were found written in Sanskrit charactors, was forthwith set down with vocabularies as Sanskrit. - **Caldwell, Robert**, A Camparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, AES 1987, (First Published 1913) P.566.

"தமிழ்ச்சொல் வட பாடைக்கட் செல்லாமையாலும் வடசொல் எல்லாத் தேயத்திற்கும் பொதுவாகலானும், இவை வட சொல்லாக ஈண்டு வழங்கப்பட்டன வெனல் வேண்டும்" (சேனாவரையர்) என்றாற் போன்று தமிழன்றி வடமொழி ஒரு போதும் கடன்பெறாது என்னும் பிழைக் கருத்து, பன்னூறு ஆண்டுகளாக நிலவி வந்துள்ளதன் விளைவாகப் பல தூய தென் சொற்கள் வடசொற்களாகக் கொள்ளப்பட்டு வந்துள்ளன.

தமிழில் திசைச்சொல் அயற்சொல் வேறுபாடுகள்

வேற்று மொழித் தாக்கமில்லாத தாய்மொழியிலுள்ள மரபார்ந்த சொற்கள் இயற்சொற்கள் எனப்படும். இவற்றை மரபிலக்கணத்தார் பெயர் வினை இடை உரி என நால்வகைப்படுத்துவர்.

பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலுமுள்ள இயற்சொற்கள் பண்டுதொட்டே செய்யுள் வழக்கில் ஒரு பொருள் குறித்த பல சொல்லாகவும் பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவும் திரிபுற்றவற்றைத் தனியாகப் பிரித்துத் திரிசொல் என்றும் நெடிய வரலாற்றுக் காலத்தில் மக்கள் வழக்கில் வட்டார வழக்காகத் திரிபுற்றனவற்றைத் திசைச்சொல் என்றும் வகைப்படுத்தினர். இவையல்லாமல் பிற குடும்ப மொழிச் சொற்களும் தாய்மொழியில் கலப்பதுண்டு. அவ்வகையில் தமிழ்நாட்டுக்கு முப்புறமும் கடல் எல்லையாக இருத்தலின் வடதிசை வாயிலாக மட்டும் பிற குடும்ப மொழிச் சொற்கள் தமிழில் புக வாய்ப்புண்டாதலின் தொல்காப்பியர் தமிழில் புகத்தக்க பிற குடும்ப மொழிச் சொற்களுக்கு வடசொல் எனப் பொதுவாகப் பெயரிட்டார். இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் எனச் சொற்களை நால்வகைப்படுத்தினார்.

இக்காலத்தில் பிறமொழிச் சொற்கள் நிலவழியாகவும் கடல் வழியாகவும் எல்லாத் திசைகளிலிருந்தும் வருதலால் வடசொல் என்பதைத் தவிர்த்து அயற்சொல் என வகைப்படுத்த வேண்டியுள்ளதால் வடமொழியுள்ளிட்ட பிற மொழிக் கடன் சொற்கள் அடங்கிய இத்தொகுதிக்கு அயற்சொல் மடலம் எனப் பெயரிட நேர்ந்தது.

தமிழின (திரவிட) மொழிகள் தமிழின் கிளை மொழிகளாகக் கிளைத்து வளர்ந்தவை. அச்சொற்கள் தமிழுக்குத் திசைச் சொற்களாக இருத்தலின் அவை தமிழ்ச் சொற்களாகவே கருதப்பட்டுத் தமிழ்ச் சொல் வளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழில் வழக்கிறந்து திராவிடமொழி வழக்கில் உள்ளதைத் தமிழ்ச்சொல்லென்று கொள்வதற்கு எவ்வகைத் தயக்கமும் இல்லை.

வடதமிழ் எனும் பிராகிருதத்தில் வழங்கிய தமிழ்ச்சொற்களுள் பல ஒருசார் பிறழ்ந்த ஒலிப்புடையனவாயினும் பிறமொழி எழுத்தாலன்றித் தமிழ் எழுத்தால் எழுதிக் காட்டத்தக்கனவும் திசைச் சொல்லாகவே ஏற்று தமிழ்ச் சொல் வளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழிலிருந்து பிராகிருதத்தின் வாயிலாக வடமொழிக்குச் சென்று மீண்டும் பிராகிருதத்தின் வாயிலாகத் தமிழுக்கு வந்த சொற்களும், தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்று வடமொழி ஒலிப்பை ஏற்றுக்கொண்ட தமிழ்ச் சொற்களும் அயற்சொற்களாகவே கருதப்பட்டு அயற்சொன் மடலத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

பிராகிருதம் ஒரு காலத்தில் தமிழின் கிளைமொழியாக வடநாட்டில் பேசப்பட்டது. இதனை வடதமிழ் என்றனர். அக்காலத்திய சொல்லாட்சிகளில் தமிழ்மரபிலிருந்து திரிந்தனவற்றை மட்டும் திசைச்சொல்லாக ஏற்றுள்ளோம். பிராகிருதத்திலிருந்து பிறந்த வடநாட்டு மொழிகளில் சமற்கிருதக் கலப்பு மிகுந்த பிறகு உருமாறிய வடபுல மொழிச் சொற்களில் பன்மடிபுத் திரிபுற்ற வடதமிழ்ச் சொற்கள் அயற்சொற்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் எனும் மூன்று நிலைகளில் ஊடாடும் சொற்கள் மட்டும் தமிழ்ச் சொற்கள். திசைச் சொல் வரம்பைக் கடந்தன அனைத்தும் உலகப் பிறமொழிச் சொல் வகை சார்ந்த அயற்சொற்கள். இவை வேற்றுக்குடும்ப மொழிச் சொற்கள். இயற்சொல் திரிசொல் திசைச்சொல் எனும் மூவகையும் தமிழுக்குத் தன் குடும்ப மொழிச் சொற்கள். வேற்றுக்குடும்ப அயற்சொற்களுக்குத் தேவை கருதி தமிழில் கலைச் சொல் படைத்துக் கொள்வது கடன் சொற்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும். இவ்வகைக் கலைச் சொற்களும் அகரமுதலியில் இடம்பெற்றுள்ளன.

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று

அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே" (தொல்.சொல்.397) என்று நான்கு வகைச் சொற்களைப் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

"தொல்காப்பியர் காலத்தில் தமிழ்ச் சொற்கள் இலக்கண முறையிற் போன்றே சொற்பிறப்பியல் முறையில் நான்காக வகுக்கப்பட்டன. முதலாவது தன்சொல் அயற்சொல் என்கிற முறையில் தென்சொல் வடசொல் என்ற பாகுபாடும், பின்பு தன் சொற்குள் செந்தமிழ் கொடுந்தமிழ் என்கிற முறையில் நாட்டுச் சொல் திசைச் சொல் என்ற பாகுபாடும், பின்பு நாட்டுச் சொற்கள் இயல்பும் திரிபும் பற்றி இயற்சொல் திரிசொல் என்ற பாகுபாடும் தோன்ற இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என நான்கமைந்தன.

தெலுங்கு கன்னடம் முதலிய திராவிட மொழிகள் முற்காலத்தில் கொடுந்தமிழா யிருந்தமையின், அவற்றின் சொற்கள் திசைச்சொற்கள் எனப்பட்டன. இன்று அம்மொழிகள் ஆரியக் கலப்பால் வேற்றுமொழியாய் வழங்குகின்றமையான், வேற்றுமொழிச் சொற்களையெல்லாம் திசைச் சொல்லெனக் கூறுவது தவறாம். முற்காலத்தில் திசைச் சொல்லாகக் காட்டப்பட்ட கொடுந்தமிழ்ச் சொற்களே இன்றுந் திசைச் சொல்லாகும்.

வடமொழி யொன்றே முற்காலத்து வழங்கிய அயன்மொழி. அதனால், அதன் சொல் அம்மொழிப் பெயராலேயே வடசொல் லெனப்பட்டது. அதுபோல் இதுபோது தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களும் ஆங்கிலச் சொல் போர்த்துக்கீசியச் சொல் என அவ்வம் மொழிப் பெயராலேயே அழைக்கப்படல் வேண்டும்"[1].

எழுத்துக்கடன்

பொதுவாகப் பெயர்ச்சொற்களையே ஒரு மொழி கடனாகப் பெறும். இதை "வடசொல்லுள்ளும் பெயரல்லது செய்யுட் குரியவாய் வாரா" (சேனாவரையர்) என்று உரையாசிரியர் காலத்திலேயே குறிப்பிட்டுள்ளது கவனிக்கத் தக்கது.

ஒருமொழி பிறமொழிகளிலிருந்து சொற்களைக் கடன்பெறலாம். ஆனால் பிறமொழிக்குரிய எழுத்துகள் அல்லது எழுத்தொலிப்புகளைக் கடன்பெற்ற மொழிகள் வேற்று மொழிகளாகத் திரிந்து விடுகின்றன. உலகில் மொழிகள் பலவாகப் பெருகுவதும் சிறுபான்மை மொழிகள் மறைவதும் பிறமொழி எழுத்தொலிப்புகளைக் கடன் வாங்கியபின் சின்னஞ்சிறு கிளைமொழிகளாகவும், வட்டார வழக்கு மொழிகளாகவும் தேய்ந்து போவதால்தான் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

தமிழ் உலகமுதல் செம்மொழி எனும் தகுதியுடன் இலக்கிய இலக்கண வளம் கொண்டது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளைக் கடந்தும் செம்மை இழவாத நிலை தன் எழுத்தொலிப்புகளைப் பிறமொழி எழுத்தொலிப்புத் தாக்குதல்களிலிருந்து காத்துக் கொண்டதால்தான் என்பதை மொழியாராய்ச்சி அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். இந்நிலைப்பாட்டை வலியுறுத்துவதற்கென்றே தொல்காப்பியம் வடதிசையிலிருந்து வரும் கடன் சொற்களைத் தமிழ் உள்வாங்கிக் கொண்டாலும் அவற்றைப் பிறமொழி எழுத்தொலிப்பு நீக்கி முற்றிலும் தமிழ் எழுத்தொலிப்புகளிலேயே எழுதவேண்டும் என்கிறது

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ

எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே" (தொல்.சொல்.401)

தமிழில் பிறமொழி எழுத்துகள் புகலாகாது என்பதற்காகத் தமிழ் எழுத்துக் காப்புப் போராளிகள் பழந்தமிழர் வரலாறு நெடுக வாழ்ந்துள்ளனர் எனத் தெரிகிறது.

வடமொழியில் தற்சமம்–தற்பவம் என்பன இலக்கண மரபு இகந்தவை

ஒரு மொழியில் தன்சொல் என்றும் கடனாகப் பெறப்பட்ட அயற்சொல் என்றும் இரண்டு வகைப்பாடே காணப்படும். இரண்டு மொழிகளுக்கும் பொதுவான சொல் என்று எதுவும் எக்காலத்திலும் இருந்ததில்லை. சொற்பிறப்பு ஆராய்ச்சி இந்த உண்மையை வெளிப்படுத்திக் காட்டிவிடும்.

1. பாவாணர், தொல்காப்பியம் சொல்லிலக்கணம், சேனாவரையருரை, கழகம், நூற்பா அடிக்குறிப்பு.

ஆதலின் வடமொழிக்கும் பிற இந்திய மொழிகளுக்கும் பொதுவான சொல் எனப் பொருள்படும் தற்சமம் என்னும் இலக்கண வகைப்பாடு மொழியியல் மற்றும் மரபிலக்கண நோக்கில் முற்றிலும் பொருளற்ற வறுஞ்சொல்லாகும். அதிலிருந்து பிறந்தது என வட மொழியாளர் கணிக்கும் தற்பவம் என்பதும் சொற்பிறப்பு மூலம் சரியாகக் கணிக்கப்பட்டது என்று சொல்ல முடியாது. இத்தகைய வகைப்பாடுகளை வடமொழிக்கென்றே இலக்கண நூல்கள் ஏற்படுத்தின. அவை இந்திய மொழிகளுக்குத் தேவையில்லை. தொல்காப்பியர் இத்தகைய இலக்கண வகைப்பாட்டைக் குறிப்பிடவில்லை. பிராகிருத பாலிமொழிகளில் பயிற்சி மிக்க உரையாசிரியர்கள் தேவையில்லாமல் நன்னூல் இலக்கணத்தில் இவற்றைப் புகுத்தினர்.

தற்சமம் என்பதற்கு நன்னூல் (146, உரை) உரையாசிரியர், "ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகி விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழிச்சொல்" என விளக்கம் தந்துள்ளார். சொல்லின் வரலாறு என்பது பொருளின் வரலாறு. அது எழுத்தின் வரலாறு ஆகாது என்பது அவருக்குப் புலப்படவில்லை. கமலம், குங்குமம் என்பன நட்டாசியாவில் ஆரியரால் கண்டறியப் பட்டவை அல்ல. எனவே இவை சமற்கிருதம் எனும் வடமொழிக்கு உரியனவல்ல என அவரால் கணித்தறிய இயலவில்லை. இவை திரவிட மொழிக்குரிய சொற்கள். வடமொழி கடன் கொண்டதால் சில அடிப்படைத் திரிபுற்று அதே வடிவில் இந்திய மொழிகளிலும் வழக்கூன்றியுள்ளன.

மணி என்பதைத் தற்சமம் என உரையாசிரியர் குறித்தனர். ஆனால் மொழிஞாயிறு பாவாணர் அதன் வேர்ச்சொல்லை ஆராய்ந்து நால்வகை வேரடிப் பொருள்களில் அது விரிந்திருப்பதைப் பின்வருமாறு விளக்கிக் காட்டி மணி என்பது முற்றிலும் தமிழ் என்று நிறுவியிருக்கிறார்.

1. மணி = சிறியது	எ–டு: மணிக்காடை, மணிக்குடல்
2. மணி = வட்டமானது	எ–டு: மணியோசை, நாழிமணி
உருண்டது, குண்டு	எ–டு: மணிவலை, குன்றிமணி
உருண்டு திரண்டது	எ–டு: நென்மணி, மணிச்சம்பா
3. மணி = கரியது	எ–டு: மணிமிடற்றோன்
நீலமானது	எ–டு: மணிவண்ணன், மணிமலர்
4. மணி= ஒளிபெறக் கழுவியது	எ–டு: மணிமாலை
அழகானது	எ–டு: மணிவாசல்

தற்பவம் என்பதற்கு நன்னூல் உரையாசிரியர் "ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்தாலும், பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாலும் முடிந்திருக்கிற ஆரிய மொழிகளாகத் திரிதல் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் போது பெறும் பெயர்" (நன்.146, உரை) எனக் குறித்திருக்கிறார்.

எ.டு புட்பம் எனும் சொல் தற்பவம் எனப்படுகிறது. தமிழ் பூ எனும் சொல் வட மொழியில் pushpa எனப்படும். இது மீண்டும் தமிழில் வந்து வழங்கும்போது புட்பம் எனத் திரிபடைகிறது.

தமிழிலிருந்து பூ–புஷ்பம் எனத் திரிந்ததை வடமொழி இலக்கண ஆசிரியர்கள் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டது ஏன் என்று எவரும் வினாத் தொடுக்கவில்லை. வடமொழி பிறமொழிகளிடமிருந்து கடன்பெற்ற சொற்களை வெளியில் தெரியாமல் மறைத்துத் தன் சொற்களாகக் காட்டிக் கொள்வதற்குச் செய்த முயற்சியே தற்பவம் என்னும் செயற்கையான இலக்கண வகைப்பாடாக மாறியிருக்கிறது. ஒருசொல் எம்மொழிக்கு உரியது எனச் சரியாகக் கணிக்கும் சொற்பிறப்பு நெறிமுறை (Principles of Etymology) ஆரியர்க்கும் குறிப்பாக பாணினி உள்ளிட்ட வடமொழியாளர்க்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இதனால் தோன்றிய தற்சமம் தற்பவம் என்னும்

வகைப்பாடுகள் பொய்யானவை. இலக்கண மரபுகளுக்கு மாறானவை. இவற்றைத் தமிழிலக்கண நூல்களில் ஆள வேண்டியதில்லை.

இருமொழிகளுக்கும் பொதுவான சொல் என்றோ இருமொழி எழுத்துகளுக்கும் பொதுவான ஒலிப்பு என்றோ வகைப்படுத்துவது முறையன்று. அத்தகு சொற்கள் முறையாக எம்மொழிக்குரிய சொல் என்பதைச் சொற்பிறப்பு வாயிலாக அயற்சொன் மடலம் நிறுவிக் காட்டவல்லது.

மேலும் அயற்சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொல் தருதல், பொருள்வரையறை, மரபார்ந்த விளக்கம் தருதல், பிற அகரமுதலித் தவறுகள் திருத்துதல் ஆகியனவும் இடம்பெறும்.

வடமொழிச் சொற்களும் பிறமொழிச் சொற்களுமாக அயன்மொழிச் சொற்கள் தமிழில் புகும்போது எத்தகைய எழுத்துத் திரிபு பெறும் என்பதைத் தமிழிலக்கணச் சான்றோர் வகைப்படுத்தியுள்ளனர். அவற்றை 19ஆம் நூற்றாண்டில் மணிப்பவள நடைதோன்றும் வரை தமிழ்ப் புலவர்கள் மட்டுமன்றி கிறித்தவ முகமதியப் புலவர்களும் பின்பற்றியுள்ளனர். உரைநடையிலும் செய்யுளிலும் அயன்மொழிச் சொற்கள் தமிழாக்கப்படும் பாங்கு கீழே தரப்பட்டுள்ளன.

பிறமொழிச் சொற்கள் தமிழில் திரியும் பாங்குகள்

1. வடசொற்களின் இடையில் உள்ள '**த்**', '**ஸ்**', '**ல்**' என்பன தமிழ் வடிவம் பெறும் போது **றகர** மெய்யாகத் திரியும்.

   உத்சவம் – உற்சவம்

   பஸ்பம் – பற்பம்

   கல்பம் – கற்பம்

2. '**டகர**' முதல் பிறமொழிச் சொற்கள் '**தகர**' முதலாகிய தமிழ்ச் சொற்களாகத் திரியும்.

   டமருகம் – தமருகம்

   டொப்பி – தொப்பி

3. '**டகர**' முதல் '**இகர**' முன்னெழுத்து பெறும்.

   டம்பம் – இடம்பம்

4. **ஆகார** ஈற்றுப் பெயர் **ஐகார** ஈறாகும்.

   பிக்ஷா – பிச்சை

   தீக்ஷா – தீட்சை

5. **ர, ல** முன்னெழுத்துச் சொல்லுக்கு முன் '**இ**'கர துணைமுன்னெழுத்து சேரும்.

   ராமன் – இராமன்

   லாபம் – இலாபம்

6. '**ஷ**' – டகரமாகத் திரியும் (இடையில்)

   விபீஷணன் – விபீடணன்

   புஷ்பம் – புட்பம்

7. **ஸ, ஷ** மொழி முதலில் சகரமாகத் திரியும்.

   ஸரஸ்வதி – சரசுவதி

   ஷங்கர் – சங்கர்

8. **க்ஷ**– மொழி முதலில் '**ச**'வாகத் திரியும்.

சேஷமம் – சேமம்

9. **க்ர, ப்ர** எனத் தொடங்கும் வடசொற்கள் முன்னெழுத்தோடு இகர உயிர்த்துணை பெறும்.

ப்ரகதி – பிருகதி

க்ரந்தம் – கிரந்தம்

10. வல்லின மெய்யீறுகள் **உகரத்** துணையீறு பெறும்.

தத் – தத்து

சத் – சத்து

11. '**ஜ**' – **சகர**மாகும்.

ஜோதி – சோதி

பங்கஜம் – பங்கசம்

சரோஜா– சரோசா

12. **ஸ்வ** எனும் கூட்டெழுத்து **சு, சி, சொ** எனவாகும்.

ஸ்வாமி – சுவாமி

ஸ்நேகம் – சினேகம்

ஸ்வதேசி – சுதேசி

ஸ்வர்க்கம் – சொர்க்கம்

ஈஸ்வர் – ஈசுரன்

13. **ஸ்த**– **த்த** ஆகும் (தனிக்குறில் சார்ந்தவை).

புஸ்தகம் – புத்தகம்

14. **ஸ்** முன் ககரம் வருமாயின் '**ஸ்**' **றகர** மெய்யெழுத்தாகும்.

பாஸ்கரன் – பாற்கரன்

15. **ஹ** வரிசையிலுள்ள மொழிமுதலான வடமொழிச் சொற்கள் மெய்கெட்டு அத்துடன் பொருந்திய உயிரெழுத்து மட்டும் ஒலிக்கும்.

ஹிமாலாயா – இமாலயம்

ஹோமம் – ஓமம்

ஹேது – ஏது

16. வடசொற்களில் இடையில் வரும் '**ஹ**' எழுத்து **ககர**மாகத் திரியும். **ரகர லகர**த்தில் தொடங்குவதாயின் **இகர உகர** முன் எழுத்துகளைப் பெறும்.

ரோஹிணி – உரோகிணி

17. '**க்ஷ**' மொழி முதலில் **க, ச** எனத் திரியும்.

க்ஷணம் – சணம், கணம்

க்ஷேமம் – சேமம்

18. **‘க்ஷ’** மொழி இடையிலும் ஈற்றிலும் **க்க–ட்ச–ச்ச** எனத் திரியும்

லக்ஷ்மி – இலக்குமி

தீக்ஷ – தீட்சை, தீக்கை

பக்ஷணம் – பட்சணம்

அக்ஷரம் – அச்சரம், அக்கரம்

19. **‘க்த’, ‘ப்த’** என வரும் கூட்டெழுத்துகள் உடனிலை மெய் மயக்கங்களாகும்.

சக்தி – சத்தி

சப்தம் – சத்தம்

20. ‘ப’ (ba) – மொழி முதல் – ‘ப’ (pa) மொழி முதலாக ஒலிக்கும்.

பாவன – பாவனை

21. சொல்லிடையில் வரும் **‘ப’ – ‘வ’** ஆகும்.

பாபம் – பாவம்

22. **ந–ன** ஆகும்.

ஜநகன் – *சனகன்*

23. **யகர** முதலெழுத்துகள் ஒலித் துணை முன் உயிர் பெறும் அல்லது யகரமெய் கெடும்.

யந்திரம் – இயந்திரம் (எந்திரம்)

யக்ஷன் – இயக்கன்

யூகி – ஊகி

யூகம் – ஊகம்

யோகம் – ஓகம்

24. குறில் கீழ் ஒற்றாகும் **ரகர** மெய்யெழுத்து **இகர** அல்லது **உகரத்** துணையெழுத்து பெற்று உயிர் மெய்யாகும்.

தர்மம் – தருமம்

துர்யோதனன் – துரியோதனன்

25. **‘ர்ண’, ‘ர்ந’** என்ற கூட்டெழுத்து தமிழில் **‘ன்’** மெல்லின மெய் இரட்டிப்பாகும்.

கர்ணன் – கன்னன்

துர்நிமித்தம் – துன்னிமித்தம்

26. **ஈகார** ஈற்றுப் பெயர் **இகர** ஈறாகக் குறுகும்.

நதீ – நதி

27. **ண்ய, க்வ, த்ம, வ்ய, ம்ச** என்பவை மெய் இரட்டித்து முன்னெழுத்தோடு உயிர் எழுத்து இணைந்து ஒலிக்கும்.

பக்வம் – பக்குவம்

புண்யம் – புண்ணியம்

பத்மம் – பதுமம்

காவ்ய – காவியம்

வம்ச – வமிசம்

28. உப எனும் வடமொழி முன்னொட்டு தமிழ்ச் சொல்லாகும் போது **பகரம்** வகரமாகி உயிர் முதலாகவோ, வகரம் பெற்ற உயிர்மெய் முதலாகவோ மாறும்.

உபாத்தியாயன் – உவாத்தியாயன் – வாத்தியான்

29. வடசொல்லிடையில் **க்ன** எனும் கூட்டெழுத்தில் ககரம் இரட்டிக்கும்.

அக்னி – அக்கினி

30. வடசொல்லினிடையில் வரும் '**ஸ்வ**' எனும் கூட்டெழுத்து **சு** அல்லது **ச்சு** எனத் திரியும்.

அஸ்வனி – அசுவினி

அஸ்வினித்தேவர் – அச்சுவினித்தேவர்

வடசொல், தமிழ்ச்சொல்

பொதுவாகப் பிறமொழி எழுத்தொலிப்பு அல்லது பிற மொழிக்கே உரிய எழுத்துள்ள சொல்லை அயற்சொல் என்று எளிதில் கண்டுபிடித்து விடலாம். இருமொழிகளுக்கும் பொதுவான எழுத்துகளால் எழுதத்தக்க சொல் ஒலிப்பிலும் பொருளிலும் ஒத்திருந்தால் எம்மொழியிலிருந்து எம்மொழிக்குச் சென்றது எனக் கண்டுபிடித்தல் ஒரு புதிராகவே இருந்தது. கமலம் என்ற சொல் சமற்கிருதம் தமிழ் இரண்டிலும் ஒன்று போல் ஒலிக்கும் பொருள் கொண்டுள்ளது. இரு மொழியாளரும் தம்சொல் என உரிமை கொண்டாடும் சூழலுக்கு இது இடந்தருகிறது.

1) இத்தகு சூழல்களில் சொற்பிறப்பு ஆராய்ச்சி ஒன்றே குறிப்பிட்ட சொல் எந்த மொழியில் இயல்பாகத் தோன்றியது என்பதையும் வேறெந்த மொழிகளில் கடன் சொல்லாக ஊடாடியது என்பதையும் அறிய உதவும்.

2) கடன் கொண்ட மொழி தான் பெற்ற சொல்லின் பாங்கைத் தன் மொழிப் பாங்குக்கு ஏற்ற சொற்கட்டமைப்பாக மாற்றிக் கொள்ளும். சொற் கட்டமைப்பு மாற்றத்தைக் கண்டறிவதன் வாயிலாக அச்சொல் எம்மொழியிலிருந்து எம்மொழிக்குச் சென்றது எனக் கண்டறிய முடியும்.

   தமிழ். மாலை > **சமற்.** மாலா.

   ஐகார ஈற்றுத் தமிழ்ச் சொற்களைச் சமற்கிருதம் 'ஆ'கார ஈறாக மாற்றிக் கொள்வதாலும் பூவிட்டுப் பூசை செய்யும் வழக்கம் திரவிடருடையது என்பதாலும் மாலை என்னும் தமிழ்ச் சொல் மாலா என்னும் வடிவில் சமற்கிருதத்தில் கடன் கொள்ளப்பட்டிருப்பது தெளிவாகிறது.

3) தமிழ் வேரடியும் சமற்கிருத ஈறும் கொண்ட சொல் பிராகிருதப் பேச்சு மொழியில் இடம்பெற்று மீண்டும் தமிழுக்கு வரின் அது வேரளவில் தென் சொல்லாயினும் அந்த வடிவம் வடநாட்டில் திரிபுற்றதால் தமிழுக்குத் தன்சொல்லன்று என்றாலும் பிராகிருதம் வடதமிழ் எனப்பட்டதால் திசைச்சொல்லாகத் தமிழில் வழங்கத்தக்கதாயிற்று. ஆதி எனும் சொல் இதற்குத் தக்க சான்றாகும்.

வடசொல் தென்சொல் வேறுபாடுகள் - கண்டறியும் முறை

பழைய உரையாசிரியர்களும் மொழியியல் நுட்பங்களை அறியாதவர்களும் வடமொழி தவமொழியாதலின் அதன்கண் பிறமொழிச் சொல் புகாததெனவும் வடமொழிச்சொற்கள் பிறமொழிக்குப் பொதுவாகலின் எம்மொழிக்கும் வடமொழிச்சொல் செல்லும் எனவும் தவறான கருத்து கொண்டிருந்தனர்.

இங்கிலாந்து நாட்டு வடமொழிப் பேராசிரியரும் திராவிட மொழியியல் வல்லுநருமாகிய பேராசிரியர் பரோ அவர்களும், கன்னட ஆங்கில அகரமுதலி தொகுத்த பேராசிரியர் கிட்டலும், ஒரு சொல் வட மொழிக்கே உரிய சொல்லா அல்லது வடமொழி பிற மொழிகளிடம் பெற்ற கடன் சொல்லா என்பதைக் கண்டறியும் வழிமுறைகளைத் தெளிவாக்கினர். அதன் விளைவாக வடமொழியில் கடன் கொள்ளப்பட்ட

சொற்களையும் இருக்கு வேதத்தில் உள்ள பழந்திரவிடம் எனும் தமிழ்ச் சொற்களையும் பட்டியலிட்டுக் காட்டினர். மொழிஞாயிறு பாவாணர் மேலும் பன்னூற்றுக்கணக்கான தமிழ்ச்சொற்கள் வடமொழியில் கடன் கொள்ளப்பட்டிருப்பதைத் தம் ஆய்வுநூல்களில் வெளிப்படுத்தினார். அவருடைய வடமொழி வரலாறு இதற்குத் தக்க சான்றாகும்.

பேராசிரியர் பரோ குறிப்பிட்ட அடிப்படை வேறுபாட்டுக் காரணங்கள் அனைவரும் நினைவிற் கொள்ளத்தக்கன.

1. ஒருசொல் சமற்கிருதம் எனும் வடமொழிக்கே உரியதாயின் அச்சொல் அதன் இனமொழிகளாகிய செருமானியம், கிரேக்கம், இலத்தீனம் போன்ற மேலையாரிய மொழிகளில் இனச்சொல்லாகக் காணப்பட வேண்டும். இல்லையாயின் அது கடன் சொல்லாகக் கருதப்படும்.
2. ஒரு சொல்லின் வேர்ச்சொல்லும் அதன் எண்ணிறந்த தாய்மொழிச் சொல்லாட்சிகளும் அச்சொல் எம்மொழிக்குரியது எனக்காட்டும். வேர்ச்சொல் இல்லாது பரந்துபட்ட சொல்வளர் நிலைகளும் இல்லாமல் ஓரிரு இடங்களில் மட்டும் பயின்றிருந்தால் அது கடன் சொல்லாகக் கருதப்படும்.
3. அம்மண்ணுக்கே உரிய நிலைத்திணை இயங்குதிணைப் பொருள்களும், உயிரிபயிரிகளின் பெயர்களும் பண்பாட்டுக் குமுகாய வரலாற்றுப் பின்னணிச் சொற்களும் எந்தத்தாய் மொழிக்குரிய சொல் இது என்பதைக் காட்டிவிடும்.

எ–டு. முத்து, பவளம் போன்ற கடல்படுபொருள்கள் நட்டாசியாவிலிருந்து வந்த ஆரியர்க்குத் தெரியாதவை. எனவே இவற்றை வடமொழி முக்தா, ப்ரவள என உருமாற்றிக் கடன் கொண்டுள்ளது.

பேராசிரியர் பரோ ஐநூற்றுக்கும் மேற்பட்ட சொற்களையும் கிட்டல் நானூற்றுக்கும் மேற்பட்ட சொற்களையும் குறிப்பிட்டு இவை திரவிட மொழிகளிலிருந்து சமற்கிருதத்துக்குச் சென்றுள்ளன என எடுத்துக் காட்டினர். மொழிஞாயிறு பாவாணர் வடமொழியில் 40% சொற்கள் தமிழிலிருந்து கடன் கொள்ளப்பட்டுள்ளன என எடுத்துக்காட்டினார்.

வேதமொழி பேச்சு மொழியாக இருந்தது. ஈரானிய ஆரியர் கி.மு.16ஆம் நூற்றாண்டிலும் இருக்குவேத ஆரியர் கி.மு. 13ஆம் நூற்றாண்டிலும் வடமேற்கு இந்தியாவில் திரவிட மக்களோடு கலந்தனர். கி.மு.19ஆம் நூற்றாண்டில் இயற்கைச் சீற்றத்தால் அழிந்துபோன சிந்துவெளி தமிழர் நாகரிகக் காலத்துக்கும் ஆரியர்க்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை. இருக்குவேதப் பாடல்கள் வேள்விக்குப் பயன்பட்ட கி.மு.1200 முதல் கி.மு. 800 கால வரம்பில் வடமொழி மந்திரமொழியாக மட்டும் பயன்பட்டு பேச்சுவழக்கு இழந்ததால் உள்நாட்டுத் திரிபு மொழிகளாகிய பிராகிருத பாலி மொழிகளை ஆரியர் தம் பேச்சு மொழிகளாக்கிக் கொண்டனர். கி.மு.800க்குப்பின் வடபுலச் சமண பவுத்த நெறிகளால் தாக்குண்டு தென்னாட்டில் குடிபுகுந்த ஆரியக் கூட்டத்தினர் பல்வேறு புலத்துறைத் தமிழ் நூல்களை வடமொழியில் மொழி பெயர்த்ததால் பல்லாயிரக் கணக்கான தமிழ்ச் சொற்களை வடமொழியில் உருமாற்றிச் சேர்த்துக் கொண்டனர். அவற்றைத் தெளிவாக்குவதற்கு இந்த அயற்சொன் மடலம் தனியாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

பேசப்படாத மொழியில் கடன் சொற்களே மிகுதி

"சமற்கிருதம் எப்பொழுதும் நாட்டின் எப்பகுதியிலும், அது வடநாடாக இருக்கட்டும் அல்லது தென்னாடாக இருக்கட்டும் ஒரு காலத்திலும் பேச்சு மொழியாக இருந்தது இல்லை"[1].

---

1. Sanskrit, though it was improbable that it ever was the vernacular language of any district or country, whether in the north or in the south. - **Caldwell, Robert**, A Comparative Grammar of the Dravidian or South Indian Family of languages, AES 1987 (First Published 1913), int. P.2.

பேசப்படாமல் வெறும் எழுத்து வடிவில் மட்டும் இருக்கும் மொழியில் வேற்று மொழியிலிருந்து மொழிபெயர்ப்பு வாயிலாகப் பல்லாயிரம் சொற்கள் புக வாய்ப்பு ஏற்படுகிறது. பேசப்படும் மொழியில் தேவை கருதி மக்கள் தாமாகவே புதுச் சொல் படைத்துக் கொள்கின்றனர். இது இயற்கை மொழியின் இயல்பு. கடன்சொற்களால் மட்டும் வாழும் மொழியைக் கலவை மொழியென்றும் செயற்கை மொழியென்றும் கூறுவர். சமற்கிருதம் எனும் மிகு கலவை செயற்கை மொழி பன்மடித் திரிபுச் சொற்களைத் தன் சொற்களாகக் காட்டிக் கொண்டாலும் மொழியகழ்வாராய்ச்சியாளர்கள் (Language Archaelogists) அவற்றை எளிதில் கண்டறிகின்றனர்.

பேசப்படாத வடமொழிச் சொற்களாகக் காட்டப்பட்டவற்றுள் தமிழில் மக்களின் அன்றாட வழக்கில் புகுந்துள்ள சொற்களின் எண்ணிக்கை 1500 எனலாம். அதிலும் மருத்துவம், வானநூல், கணியம், சமயம், இசை, நாட்டியம், சிற்பம் போன்றவற்றில் புகுத்தப்பட்டவை மிகுதி. இக்காலத்தில் ஆங்கிலச் சொல்லாட்சிகள் அன்றாட வழக்கத்தில் சற்றொப்ப 2000 புகுந்துள்ளன எனலாம். இவையனைத்தையும் களைந்து தமிழை அதனியல்பில் வளர்க்கும் தாளாண்மையின் வெளிப்பாடாக அயற்சொல் மடலம் தொகுக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்த நிலையில் திரிபுக்குத் திரிபாகப் பன்மடித் திரிபுற்ற சொற்களில் தமிழிலிருந்து திரிந்தன எவை? சமற்கிருதத்திலிருந்து திரிந்தன எவை? இது தமிழ்ச்சொல் இது சமற்கிருதச்சொல் என்று மிக நுட்பமாக வரையறுக்கும் எல்லைக்கோடு எது? எத்தகைய சொற்பிறப்பு நெறிமுறைகள் இவற்றை வரையறுக்கின்றன என்னும் வினாக்களுக்கு விடைகளாகச் சொற்பிறப்பு நெறிமுறைகள் எழுதுவதற்கு முன்பே பாவாணர் இயற்கையெய்திவிட்டார். அவரோடு ஆறாண்டுகளாக நீங்கா நிழலாய் இருந்த எனக்கு அவர் கற்பித்த நெறிமுறைகளே மேற்கண்ட வினாக்களுக்கு விடையளித்துள்ளன. அடுத்து வெளிவரும் தமிழ்ச் சொற்பிறப்பு நெறிமுறை மடலத்தில் அவை விரிவாக இடம் பெறும்.

1994இல் நான் ஒய்வுபெற்ற பின்னர் 14 ஆண்டுகளாக இயக்குநர் அமர்த்தப்படாத நிலையில் அரசு செயலாளர்களாக இருந்த இ.ஆ.ப., அதிகாரிகள் பொறுப்பு இயக்குநர்களாக இருந்த காலத்தில் தக்க மேற்பார்வைக்குரிய தமிழறிஞர்கள் இல்லாததால் வடசொல் எது தமிழ்ச் சொல் எது எனும் வரையறை முறையாகப் பின்பற்றப்படாத குறைகள் சில காணப்படுகின்றன. அவை திருந்திய பதிப்பில் சீராக்கப்படவுள்ளன. அயற்சொல் மடல வெளியீடு அயற்சொற்களை அறவே நீக்கி முற்றிலும் செந்தமிழ்ச் சொற்களை ஆள்வதற்குத் தக்க கருவி நூலாக அமையும்.

சொற்பயன்பாடு

“மக்கள் வரவரக் கலைநாகரிக வளர்ச்சியடைந்து வருவதால், அன்றன்று தோன்றும் புதுப் புதுக் கருத்துகட்கெல்லாம் உடனுடன் சொற்கள் அமையப் பெறல் வேண்டும். ஆங்கிலத்தில் அது நடைபெற்று வருகின்றது. ஆனால் தமிழிலோ அஃதில்லை. அதோடு இருந்த சொற்களும் பல இறந்துவிட்டன. உலக வழக்கிறந்த சொற்கள் செய்யுள் அல்லது நூல் வழக்கிலும், நூல் வழக்கிறந்த சொற்கள் அகரமுதலியிலும் இடம்பெறுவதுண்டு. தமிழில் ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பு அகரமுதலியும், இவ்விருபதாம் நூற்றாண்டிற்கு முன்பு விரிவான அகரமுதலியும் இருந்ததில்லை. ஆதலால் இதற்குமுன் வழக்கிழந்த சொற்களெல்லாம் மீளா இருளில் மூழ்கிவிட்டன. அவைபோக எஞ்சியவற்றுள்ளும் பல வழக்கிழந்துள்ளன. அவை வழக்கற்றமைக்குக் காரணம் அவற்றை வழங்காமையே”[1]. ஆகையால் இங்கு அயற்சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இது தமிழின் வளமையை எடுத்துக்காட்டுவதோடு வழக்கிழந்த சொற்களை மீட்டுருவாக்கம் செய்வதற்கும் பெருந்துணை புரியும் என்பதில் ஐயம் இல்லை.

---

1. பாவாணர், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், தமிழ் மண் பதிப்பகம், 2000 (முதற்பதிப்பு 1949), பக்.73.

அக்கம் *akkam*, பெ.(n.) உலகப் படத்தில் நிலநடுக்கோட்டின் இருபாலும் உள்ள கிடைவரை (வின்.); terrestrial latitude.

த.வ. நிலகிடைக்கோடு

[Skt. akṣa>த. அக்கம்.]

longitude நெடுவரை எனவும் latitude கிடைவரை எனவும் கூறப்படும்.

அக்கமம் *akkamam*, பெ.(n.) பொறுமை யின்மை, (சிந்தா. நி. 31); impatience.

[Skt. a-kṣamā>த. அக்கமம்.]

அக்கரகாலம் *akkara-kālam*, பெ.(n.) தாள அளவை; chief unit of time.

[அக்கர(ம்) + காலம்.]

[Skt. a-kṣara > த. அக்கர(ம்).]

அக்கரச்சுதகம் *akkara-c-cudagam*, பெ.(n.) ஒருபொருள் பயப்பதோர் சொற்கூறி, அச்சொல்லில், ஒரோ ரெழுத்தாக நீக்க, வேறுவேறு பொருள் பயக்கும் சித்திரப்பா (தண்டி. 95; யாப். வி. ஒழிபி. 1, உரை.); verse composed with a play on words, a word by gradual elimination becoming different words with different meaning, as in *kanakāri, nakāri, kāri,* or *pālāvi, pālā, pā.*

த.வ. நீங்கெழுத்துப்பா

[அக்கரம் + சுதகம்.]

[Skt. a-kṣara - cyutaka > த. அக்கரச்சுதகம்.]

அக்கரதாரணை *akkara-tāraṇai*, பெ.(n.) தொண்பது (ஒன்பது) வகைச் சிவயோகங்களில் (தாரணையுள்) ஒன்று (யாப். வி. 96, பக். 516); one of *navatāraṇai*, practised by Šaiva Yōgis.

[அக்கர(ம்) + தாரணை.]

[Skt. akṣara + dhāraṇā > த. அக்கரதாரணை.]

அக்கரதீபம் *akkara-dībam*, பெ.(n.) வட மொழியிலுள்ள ஐம்பத்தோ ரெழுத்துகளைக் குறிக்குமுகத்தான் கோயிலிலேற்றப் பெறும் ஐம்பத்தொரு விளக்கு; row of 51 lights set up in temples, as representing the 51 letters of the Skt. alphabet. முப்பது விளக்கு ஏற்றுவது தமிழ் மரபு. 30 lights representing Tamil tradition.

த.வ. எழுத்து விளக்கு.

[Skt. a-kṣara > த. அக்கரம்.]

[தீ → தீவம் > Skt. dīpa > த. தீபம்.]

அக்கரம்[1] *akkaram*, பெ.(n.) 1. எழுத்து (சிவதரு. கோபுர. 219); letter of the alphabet writing symbol. 2. கற்றல் (திவா.); learning. *"அக்கரம் பிறர்கட் பொறாதவன்" (திருவாலவா. 18,12.).*

த.வ. எழுத்து.

[Skt. a-kṣara>த. அக்கரம்.]

அக்கரம்[2] *akkaram*, பெ.(n.) 1. வானம்; sky. 2. வீடுபேறு (நாநார்த்த); salvation. 3. அறம் (நாநார்த்த.); virtue. 4. கடுமையானது; that which is strong or virulent. *"அக்கர விடத்திற் பாவ நிரையினால்" (மேருமந். 793.).*

த.வ. மேற்கட்டு.

[Skt. akṣara>த. அக்கரம்.]

அக்கரவர்த்தனம் *akkara-varttaṉam*, பெ.(n.) ஒருபொருள் பயப்பதோர் சொற்கூறி அச்சொல்லோடு, ஒரோ ரெழுத்தாகக் கூட்ட வேறுவேறு பொருள் பயக்கும் சித்திரப் பா (பி.வி. 26, உரை.); verse composed with a play on words, a word by gradual addition becoming different words with different meaning, as in *kam, nagam, kanagam, kōkanagam,* or *kā, kāvi, kāviri.*

த.வ. சேர்ப்பெழுத்துப்பா

[Skt. a-kṣara+vardhana> த. அக்கரவர்த்தனம்.]

அக்கரவர்த்தி *akkara-vartti*, பெ.(n.) **அக்கரவர்த்தனம்** பார்க்க; see akkara-varttaṉam.

த.வ. சேர்ப்பெழுத்துப்பா

[Skt. a-kṣara+vṛddhi>த. அக்கரவர்த்தி.]

அக்கரவிந்து *akkara-vindu*, பெ.(n.) நால்வகைச் சொற்களுள், ஒன்றாயதும், உந்தி யினின்று முகிழ்த்து, நெஞ்சகத்தைச் சென்றடைவதுமான, இசைவடிவிலமைந்த ஒலி வடிவெழுத்து (அஷ்டப்பிரக. இரத்தின. 40.); sound from the navel, one of four kinds of *vākku.*

[அக்கர(ம்) + விந்து.]

*[**Skt.** akṣara>த. அக்கர(ம்).]*

அக்கரவிலக்கணம் *akkara-v-ilakkaṇam*, பெ.(n.) அறுபத்து நன்கு கலைகளுள் ஒன்றாகிய எழுத்திலக்கணம்; orthography, one of sixty four arts.

[அக்கரம் + இலக்கணம்.]

*[**Skt.** a-kṣara > த. அக்கரம்.]*

இலக்கு > இலக்கணம் > **Skt.** *lakṣaṇa.*

அக்கரன் *akkaraṉ*, பெ.(n.) கடவுள் (சங். அக.); God, as the indestructible one.

*[**Skt.** a-kṣara>த. அக்கரன்.]*

அக்கரா *akkarā*, பெ.(n.) அக்கரகாரமென்னும் மருந்து வேர்; pellitory root.

*[**U.** akarkarhā>த. அக்கரா.]*

அக்கராலத்தி *akkarālatti*, பெ.(n.) வடமொழியிலுள்ள 51 எழுத்துக்களைக் குறிக்கும் கோயில் தீவவகை (குற்றா. கல. சிவபூசை. 48.); row of 51 lights set up in temples as representing the 51 letters of the Skt. alphabet.

[அக்கர(ம்) + ஆலத்தி.]

*[**Skt.** a-kṣara>அக்கர(ம்).]*

*[ஆலா→ஆலாத்து →ஆலாத்தி >***Skt.** *āratti]*

அக்கரோட்டு *akkarōṭṭu*, பெ.(n.) மரவகை; English walnut.

*[**U.** akhrōṭ>த. அக்கரோட்டு.]*

அக்கல் *akkal*, பெ.(n.) 1. அறிவு; wisdom, sensibility. 2. செய்தி (சென்னை); news.

*[**Ar.** aql>த. அக்கல்.]*

அக்காத்தி *akkātti*, பெ.(n) திக்கற்றவன்; one without resources or friends. *அவன் அக்காத்தியாய்த் திரிகிறான் (இ.வ.).*

த.வ. திக்கிலி, போக்கிலி.

*[**Skt.** a-gati>த. அக்காத்தி.]*

அக்கிசசூர் *akki-ša-šūr*, பெ.(n.) கண்ணோய் வகையு ளொன்று; disease of the eye.

*[**Skt.** akṣhi+sa-sur>த. அக்கிசசூர்.]*

அக்கியானம் *akkiyāṉam*, பெ.(n.) **அஞ்ஞானம்** பார்க்க; see *aññāṉam.*

*[**Skt.** agñānam>த. அக்கியானம்.]*

அக்கியானி *akkiyāṉi*, பெ.(n.) 1. அறிவிலி; person without spiritual knowledge. 2. புறச்சமயத்தான்; heathen.

த.வ. அஞ்ஞானி.

*[**Skt.** a-jñānin>த. அக்கியானி.]*

அக்கிரகண்ணியன் *akkira-kaṇṇiyaṉ*, பெ.(n.) முதல்வனாக மதிக்கப்படுபவன்; one who is considered foremost, highest in rank. *"மகா வீரர்க்கெல்லாம் அக்கிர கண்ணியன்" (சி.சி. பாயி. சிவாக்.).*

[அக்கிர(ன்) + கண்ணியன்.]

*[**Skt.** agra > த. அக்கிர(ன்).]*

கண் → கண்ணியம் → கண்ணியன் >**Skt.** *gaṇya.*

அக்கிரகத்தம் *akkira-kattam*, பெ.(n.) 1. கை நுனி; the extremity of the arm. 2. வலக்கை; the right hand (சா. அக.).

*[**Skt.** agra+hasta>த. அக்கிரகத்தம்.]*

அக்கிரகாரப்பிரதிட்டை *akkirakāra-p-piradiṭṭai*, பெ.(n.) பார்ப்பனக் குடிகளை வீடுகட்டிக் குடியேற்றுகை; establishment of a number of Brahmin families in a village, one of *šapda-šandāṉam.*

*[**Skt.** agra-hāra+prati-ṣtha> த.அக்கிரகாரப் பிரதிட்டை.]*

அக்கிரகாரம் *akkirakāram*, பெ. (n.) 1. பார்ப்பனர் வாழும் குடியிருப்பு; the area in a village or town where Brahmin traditionally live. 2. முற்காலத்தில் பார்ப்பனர்க்குக் கொடுக்கப்பட்ட இறையிலியூர் (M.M.); village formerly allotted to *Brāhmins* at a favourable assessment or rent free.

த.வ. பார்ப்பனச்சேரி.

[Skt. agra-hāra>த. அக்கிரகாரம்.]

அக்கிரகாரவாடை *akkirakāra-vāḍai*, பெ.(n.) பெரும்பாலும் பார்ப்பனரும் சிறுபான்மை பிற இனத்தவரும் பயன்கொள்ளும் பொருட்டு, இறையிலியாக விடப்பட்ட ஊரகப்பகுதி (W.G.); part of a village exempt from revenue, usually owned by Brahmins but sometimes by other classes.

[அக்கிரகார(ம்) + வாடை.]

[Skt. agra-hāra>த. அக்கிரகார(ம்).]

அக்கிரகோடி *akkira-kōḍi*, பெ.(n.) நண்பகல் வரி(ரேகை)க்கும் உச்சிக்கோட்டுக்கும் இடையே யுள்ள சக்கரவாளத்தின் பகுதி (பாண்டி.); (Astron.) azimuth.

[அக்கிர(ம்) + கோடி.]

[Skt. agra>த.அக்கிர(ம்).]

கோடு → கோடி.

அக்கிரச்சா *akkira-c-cā*, பெ.(n.) கோள், விண்மீன் முதலியன நேர்கிழக்கிற்கு வடபுறமாவது தென்புறமாவது விலகி யுதிக்கும் போது அவ்விடத்துக்கும் நேர் கிழக்கிற்கும் இடையிலுள்ள வட்டப் பகுதியின் குறுக்களவு வகை (வின்.); (Astron.) sine of the amplitude.

[Skt. agra+jyā>த.அக்கிரச்சா.]

அக்கிரசங்கை[1] *akkira-šaṅgai*, பெ.(n.) தகுதி முதன்மைபற்றி ஒருவற்கு நடத்தும் மதிப்புரவு; honours paid to the first in rank.

[Skt. agra+šaṅkhyā > த. அக்கிரசங்கை.]

அக்கிரசங்கை[2] *akkira-šaṅgai*, பெ.(n.) 1. கணைக்காலின் முன் பாகம்; the anterior border of the leg from the ankle to the knee, shin. 2. முன்தொடை; the front portion of thigh (சா. அக.).

[Skt. agra+saṅga > த. அக்கிரசங்கை.]

அக்கிரசந்தானி *akkira-šandāṉi*, பெ.(n.) வாழ்பவர்களுடைய நன்மை தீமைகளெழுதப் படுவதாகக் கூறப்படும் கூற்றுவனுடைய குறிப்பேடு; register of good and bad actions of all beings, maintained by Yama.

[Skt. agra+saṃdhāni> த.அக்கிரசந்தானி.]

அக்கிரசம்பாவனை *akkira-šambāvaṉai*, பெ.(n.) முதல் பரிசில்; priority of attention, because of rank, priority in presentation of gifts, as a mark of honour.

[Skt. agra + saṃbhāvanā > த.அக்கிர சம்பாவனை.]

அக்கிரசருமம் *akkira-šarumam*, பெ.(n.) 1. நுனித்தோல்; the foreskin. 2. ஆண் குறியின் நுனித்தோல்; the foreskin of the penis, prepuce (சா.அக.).

[Skt. agra+carman > த. அக்கிரசருமம்.]

அக்கிரசன் *akkirašaṉ*, பெ.(n.) உடன்பிறப்புகளுள் மூத்தவன்; elder brother, first-born.

த.வ. தமையன்.

[Skt. agra-ja> த. அக்கிரசன்.]

அக்கிரசன்மன் *akkira-šaṉmaṉ*, பெ.(n.) 1. தமையன்; elder brother. 2. பார்ப்பான்; Brahmin.

[Skt. agra-ja> த. அக்கிரசன்மன்.]

அக்கிரசா *akkirašā*, பெ.(n.) **அக்கிரச்சா** (வின்.) பார்க்க; see *akkiraccā*.

[Skt. agra+jyā>த. அக்கிரசா.]

அக்கிரசாலை *akkira-šālai*, பெ.(n.) பார்ப்பனர்க்கு உணவளிக்குமிடம் (Insc.); feeding-house for *Brāhmins*.

[அக்கிர(ம்) + சாலை.]

[Skt. agra > த. அக்கிரம்.]

சால் → சாலை.

அக்கிரசாலைப்புறம் *akkira-šālai-p-puṟam*, பெ.(n.) பார்ப்பனர்க்கு உணவளிக்கும் பொருட்டு வேந்தனால் விடப்பெறும் இறையிலி நிலம் (Insc.); endowment land to provide a feeding-house for *Brāhmins.*

[அக்கிர(ம்) + சாலைப்புறம்.]

[Skt. agra > த. அக்கிர(ம்).]

தமிழர் வரலாற்றில் இடைக்காலத்தில் தோன்றிய வழக்கம்.

அக்கிரசூதகம் *akkira-šūdagam*, பெ.(n.) மங்கையின் முதற்பூப்பு; the first menstruation (சா. அக.).

[Skt. agra+sūtaka > த. அக்கிரசூதகம்.]

அக்கிரணி *akkiraṇi*, பெ.(n.) முதல்வன் (சம். அக); leader, foremost person.

[Skt. agra-ṇī > த. அக்கிரணி.]

அக்கிரணிவாசி *akkiraṇivāši*, பெ.(n.) அமுக்கிரா; horse-root or Indian - winter - cherry - *Physalis somni fera alias withania somnifera* (சா.அக.).

அக்கிரதாம்பூலம் *akkira-tāmbūlam*, பெ.(n.) மதிப்புரவின் பொருட்டு முதற்கண் கொடுக்கும் தாம்பூலம்; priority in presentation of *pānsupāri.*

[அக்கிர(ம்) + தாம்பூலம்.]

[Skt. agra > த. அக்கிர(ம்).]

தம்பலம் → தாம்பூலம்>**Skt.** tāmbūla.

அக்கிரபாசம் *akkira-pāšam*, பெ.(n.) 1. முன் பக்கம்; the fore part of anything. 2. நுனி; the extreme point of anything. 3. உடம்பின் முன் உறுப்பு அதாவது கை, கால்; one of the extremities of an animal body, namely the arm or the leg, especially the latter (சா. அக.).

[அக்கிர(ம்) + பாசம்.]

அக்கிரபூசை *akkira-pūšai*, பெ.(n.) முதன் மதிப்புரவு; first act of reverence.

[அக்கிர(ம்) + பூசை.]

[Skt. agra > த. அக்கிர(ம்).]

பூசு → பூசை>**Skt.** *pūjā*

அக்கிரம்[1] *akkiram*, பெ.(n.) திருப்படையல்; sacred meal, food-offering. *"போழுங் குமர னமைச்ச அக்கிரம்" (T.A.S. iii, 166.)*

[Skt. agra>த. அக்கிரம்.]

அக்கிரம்[2] *akkiram*, பெ.(n.) 1. நுனி; tip. *"தருப்பை கைக்கொண்டக்கிரங் கிழக்கதாக" (இரகு. கடி. 79.).* 2. உச்சி; the upper part of anything especially the head in an animal. 3. மேற்பாகம்; the front side of anything. 4. சிறப்பு முதன்மை; that which is foremost, first. 5. கோள் கீழ் மேல்வீதி அகறல் (வின்.); (Astron.) amplitude of a celestial object. 6. இரந்து பெற்ற நாலு கவள வுணவு (பிச்சை) (கூர்மபு. நித்திய கன். 17); four handful of food given as alms.

[த.அகரம் (முதன்மை) > Skt. agra > த.அக்கிரம்.]

அக்கிரமச்சா *akkirama-c-cā*, பெ.(n.) **அக்கிரச்சா** (வின்) பார்க்க; see *akkiraccā.*

[Skt. agrima+jyā>த. அக்கிரமச்சா.]

அக்கிரமச்சியை *akkirama-c-ciyai*, பெ.(n.) **அக்கிரச்சா** (வின்.); பார்க்க; see *akkiraccā.*

[Skt. agrimā+jyā>த. அக்கிரமச்சியை.]

அக்கிரமசூதகம் *akkirama-šūdagam*, பெ.(n.) 1. முறைமைக்கு எதிராகக் காணும் மாதவிலக்கு; menstruation which does not recur at proper intervals, irregular menstruation. 2. **அகாலசூதகம்** பார்க்க; see *agāla-šūdagam* (சா.அக.).

[Skt. ā+krama+sūdaka>த. அக்கிரம சூதகம்.]

அக்கிரமண்டபம் *akkira-maṇḍabam,* பெ.(n.) கோயிலின் முகமண்டபம்; front hall of a temple. *"திருவக்கிர மண்டபமும் செய்தான்" (புதுக்.கல். 634).*

[அக்கிர + மண்டபம்.]

[Skt. agra> த. அக்கிர(ம்).]

மண்டகம்>மண்டவம்>மண்டபம்>Skt. maṇḍapa.



அக்கிரமதேவியார் *akkira-madēviyār,* பெ.(n.) அரசமா தேவி (M.E.R. 165 of 1925); the chief queen.

[அக்கிரம் + தேவியார்.]

[Skt. agra > த. அக்கிரம.]

அக்கிரமப்பிரசவம் *akkirama-p-pirašavam,* பெ.(n.) இயற்கை நிலைக்கு வேறுபட்ட மகப்பேறு; labour differing from its natural state by its difficulty, duration or danger involved, preternatural labor (சா.அக.).

த.வ. கொடுமகப்பேறு.

[Skt. a-krama+pra-šava > த. அக்கிரமப் பிரசவம்.]

அக்கிரமப்பிரேதவடக்கம் *akkirama-p-pirēda-v-aḍakkam,* பெ.(n.) பாம்பு முதலிய நச்சுயிரிகளால் கடியுண்டு சிலநேரங்களில் உயிரடங்கிப் பிணத்தைப்போல் கிடக்கும் நோயாளியை இறந்து விட்டதாகக் கருதி புதைக்கை; a wrong or mistaken burial of a living patient in the cataleptic state induced by snake. bite or sting of poisonous insects, on the authoritative pronouncement of the doctor in attendance (சா. அக.).

[அக்கிரமம் + பிரேதம் + அடக்கம்.]

[Skt. a-krama+pirēda>த. அக்கிரமப் பிரேதம்.]

அடங்கு → அடக்கு → அடக்கம்.

பிணத்தை 90 நாழிகை வரைக்கும் புதைக்கக் கூடாதென்று சத்தியாரூடம், சித்தாரூடம், நாகாரூடம் முதலிய சில தமிழ் நூல்கள் கூறுகின்றன.

அக்கிரமப்புணர்ச்சி *akkirama-p-puṇarcci,* பெ.(n.) முரணாக, மாதவிலக்கான பெண், மகப்பேறுற்றவள், நோயாளி அல்லது மருந்துணவிலிருக்கும் பெண் ஆகிய இவர்களுடன் கூடும் முறைகேடான கூட்டம்; (in medicine) irregular sexual intercourse with a woman during her menstrual period or pregnancy or during her illness or dietetic treatment, contrary to all rules of hygiene. 2. அற நூல்களிற் கூறப்பட்டவற்றிற்கு எதிராகக் கைம்பெண், பொதுமகள், பிறன்மனை, தாயார், உடன் பிறந்தாள், மூத்தவள், குரு மனைவி முதலானவர்களைத் திருட்டுத் தனமாய் கூடும் முறை கேடான புணர்ச்சி; (in moral philosophy) illicit intercourse or in other words clandestine sexual connection with a widow, a virgin, a prostitute or other women, with whom sexual intercourse is prohibited because of their relationship such as mother, sister, elderly woman, guru's wife and so on, against all principles of morality and the established rules and customs of society. 3. பிறன்மனை, பருவமடையாப் பெண், இசையா பெண் ஆகியோரை வலியப் புணர்தல்; (in law) illegal intercourse i.e., copulation with a married woman amounting to adultery under section 497 I.P.C. or with a woman

forcibly against her will and without her consent or with a girl under 12 years of age amounting to rape under section 375 I.P.C. or with a woman who is dead or unconscious (சா. அக.).

[அக்கிரம(ம்) + புணர்ச்சி.]

*[**Skt.** a-krama > த. அக்கிரம(ம்).]*

புல் → புள் → புண் → புணர் → புணர்ச்சி. 'சி' தொழிற்பெயரீறு.

அக்கிரமப்பேச்சு *akkirama-p-pēccu*, பெ.(n.) கேடு விளைக்குஞ் சொல் (R.) improper, evil speech, calumny.

[அக்கிரம(ம்) + பேச்சு.]

*[**Skt.** a-krama > த. அக்கிரம(ம்).]*

அக்கிரமம்[1] *akkiramam*, பெ. (n.) 1. ஒழுங்கின்மை; irregularity; (in medicine) not occurring successively or at proper time. 2. முறைமையல்லாதது; non-conformity to rule. 3. நேர்மையின்மை, injustice. 4. கொடுமை; cruelty.

த.வ. அன்முறை, அல்நயம்.

*[**Skt.** a-krama>த. அக்கிரமம்.]*

அக்கிரமம்[2] *akkiramam*, பெ.(n) 1. அட்டூழியம்; unjust or unfair act; atrocity. *'குடிசைகளுக்குத் தீ வைத்தது அக்கிரமம் இல்லையா?' (இ.வ.).* 2. தொல்லை; mischief, nuisance. *'நாய்களின் அக்கிரமம் பொறுக்க முடியவில்லை' (இ.வ.)* (கிரியா.).

த.வ. நயக்கேடு.

*[**Skt.** a-krama>த. அக்கிரமம்.]*

அக்கிரமமலம் *akkirama-malam*, பெ.(n.) காலந்தவறி மலங்கழித்தல்; passing stools at irregular intervals-defecation (சா.அக.).

[அக்கிரம(ம்) + மலம்.]

*[**Skt.** a-krama > த. அக்கிரம(ம்).]*

அக்கிரமாமிசம் *akkira-māmišam*, பெ.(n.) நெஞ்சகம் (அரத்தாசயம்); the primary organ of the blood's motion an animal, namely the heart. 2. நெஞ்சாங்குலையின் தசைப்பற்று; the muscles of the heart (சா.அக.).

*[**Skt.** agra+māmsa>த. அக்கிரமாமிசம்.]*

அக்கிரமி[1]**-த்தல்** *akkirami*, 4 செ.கு.வி (v.i.) தீங்கு செய்தல் (பஞ்ச. திருமுக. 81); to do wrong or mischief.

*[**Skt.** a-krama>த. அக்கிரமி-,]*

அக்கிரமி[2] *akkirami*, பெ.(n) அறமுறை பிழைத்தோன் (நீதி); one who is unjust.

த.வ. அறக்கேடன்.

*[**Skt.** a-kramin>த. அக்கிரமி.]*

அக்கிரரோகம் *akkira-rōgam*, பெ.(n) இயல்பாகக் கண் சிவந்து மாறும்; மலரவிழிக்க வொட்டாது, கண்ணீர் ஒழுகி, இமை தடித்துக் கடைக்கண்ணில் அறுப்பது போல வலியையும் கூச்சத்தையு முண்டாக்கிப் பீளைதள்ளுமொரு கண்ணோய்; an inflammation of the superficial tissues of the eye, especially of the conjunctive, which will soon disappear. It is marked by an acute pain on the ocrnea of the eye, a catarrhal or muco-purulent secretion and swelling of the eyelids, Conjuctivitis (சா. அக.).

த.வ. கண்ணோய்.

*[**Skt.** a-kra+rōga > த. அக்கிரரோகம்.]*

அக்கிரவம் *akkiravam*, பெ.(n) தான்றிக்காய்; the fruit of the tree, *Belleric myrobalan - Terminalia belerica* (சா. அக.).

*[**Skt.** agrava> த. அக்கிரவம்.]*

அக்கிரன் *akkiraṉ*, பெ.(n) உடன்பிறப்புகளுள் மூத்தவன் (வின்.); elder brother.

த.வ. தமையன்.

*[**Skt.** agra>த. அக்கிரன்.]*

அக்கிரா *akkirā*, பெ.(n) **அக்கிராரம்** (பொதி. நி.) பார்க்க; see *akkirāram.*

த.வ. பார்ப்பனச்சேரி.

*[**Skt.** a-grā>த. அக்கிரா.]*

அக்கிராகியச்சரக்கு *akkirāgiya-c-carakku*, பெ.(n) மருத்துவத்தில் ஏற்றுக்கொள்ளப் படாத மருந்துப்பண்டம்; in medicine non official drug, a drug not recognised by the pharmacopocia (சா.அக.).

[அக்கிராகியம் + சரக்கு.]

*[**Skt.** a-grāhya > த. அக்கிராகியம்.]*

சர் → சரகு → சரக்கு.

அக்கிராகியம் *a-k-kirāgiyam*, பெ.(n) 1. ஏற்றுக் கொள்ளத்தகாதது; that which is inadmissible. 2. புலனாகாதது; that which cannot be perceived. *“அக்கிராகியமான தேஜோரூபமாம்” (சி.சி. பாயி. சிவாக்.).*

*[**Skt.** a-grāhya>த. அக்கிராகியம்.]*

அக்கிராசன் *akkirāšan*, பெ.(n) எலும்புருக்கி நோயுண்டாக்குவதாகக் கருதப்படுங் கோள் (தஞ். சரசு. iii, 172); (Astrol.) a planet believed to cause consumption.

அக்கிராசனம் *akkirāšanam*, பெ.(n) அவைத் தலைமை; seat of honour, the chair at a meeting.

*[**Skt.** agra+āsana>த. அக்கிராசனம்.]*

அக்கிராசனர் *akkirāšanar*, பெ.(n) அவைத் தலைவர்; chairman, president.

*[**Skt.** agra+āšana > த. அக்கிராசனர்.]*

அக்கிராசனாதிபதி *akkirāšanādipadi*, பெ.(n) அவைத்தலைவர்; chairman, president.

*[**Skt.** agra+āsana+adipadi>த. அக்கிராசனாதிபதி.]*

அக்கிராசியம் *akkirāšiyam*, பெ. (n) **அக்கிராகியம்** பார்க்க; see *akkirāgiyam* (சா. அக.).

*[**Skt.** a-grāhya>த. அக்கிராசியம்.]*

அக்கிராத்தம் *akkirāttam*, பெ.(n.) 1. கை நுனி; extremities of the hand. 2. வலக்கை; the right hand (சா. அக.).

*[**Skt.** agra+hastam>த. அக்கிராத்தம்.]*

அக்கிராரம் *akkirāram*, பெ. (n.) பார்ப்பனர் வாழும் பகுதி அல்லது வீதி; *Brāhmin* street. *“அக்கிராரச் சேஷியுமோ வப்படிவே” (தனிப்பா.).*

த.வ. பார்ப்பனச்சேரி.

*[**Skt.** agra-hāra>த. அக்கிராரம்.]*

அக்கிரியம் *akkiriyam*, பெ.(n.) முதலி லுண்டானது அல்லது பிறந்தது; the first born (சா. அக.).

த.வ. தலைச்சன், முதற்பிள்ளை.

*[**Skt.** agriya > த. அக்கிரியம்.]*

அக்கிரியன் *akkiriyan*, பெ.(n.) தமையன் (வின்.); elder brother.

*[**Skt.** agriya>த. அக்கிரியன்.]*

அக்கிரு *akkiru*, பெ.(n.) விரல் (வின்.); finger.

*[**Skt.** agru>த. அக்கிரு.]*

அக்கிருகம் *akkirugam*, பெ. (n.) மாஞ்சரோகணி; a rare plant used by Siddhars for strengthening the body, a drug unidentified? (சா. அக.).

அக்கிரேசரன் *akkirē-šaran*, பெ.(n) தலைவன்; leader.

*[**Skt.** agra-āsana>agrē-sara>த. அக்கிரேசரன்.]*

அக்கிரோனம் *akkirōnam*, பெ.(n.) **அக்கிரகோடி** (பாண்டி.) பார்க்க; see *akkira kōḍi*

அக்கினி *akkini*, பெ.(n.) 1. தீ; fire. 2. தீக்கடவுள் (பிங்.); Agni, the god of fire, regent of the south east, one of *aṣṭa-tikku-p-pālakar*, q.v.s. 3. வேள்வித் தீ; sacrificial fire. 4. உணவைச் செரிமானம் செய்யும் வயிற்றுத் தீ; digestive fire. 5. முளரிப் (ரோசா) பூவுள்ள கொடிவகை; rosy-flowered lead wort.

6. பகல் 15 முழுத்தத்துள் பதினொராவதும் இரவு 15 முழுத்தத்துள் ஏழாவதும் (விதான. குணா. 73, உரை); (Astrol.) the 11th of 15 divisions of day and the 7th of those of night. 7. வெடியுப்பு (மூ.அ.); saltpetre. 8. ஒருவகை உப்பு; ammonium chloride. 9. செடிவகை (மலை); tribulus plant.

உள் > உண் > உண. உணத்தல் = காய்தல். உண > உணங்கு > உணங்குதல் = காய்தல். உண் > உண்ணம் > **Skt.** usṇa. உள் > அள் > (அழு)>அழல்>அழன்>அழனம் = தீ (பிங்.), வெம்மை (பிங்.).அழன்>அழனி> **Skt.**agni >த.அக்னி> L.ignis.

அக்கினிஇரசம் *akkiṉi-i-rašam,* பெ.(n.) இதளியம், கந்தகம், கடுக்காய் முதலான சரக்குகளைப் பொடித்து கருவேலங்கருக்குக் கியாழத்தினாலரைத்து ஈளை நோயகல உட்கொள்ளுமொருவகை மாத்திரை (அநு.வை); a kind of pill used in *āsthma* which is containing mercury, sulphur and gall-nut as its chief ingredients (சா. அக.).

*[**Skt.** agni+rasa.]*

அக்கினிக்கட்டு *akkiṉi-k-kaṭṭu,* பெ.(n.) தீ அடக்கல்; art of suspending the action of fire by magic. *"காடுகட் டக்கினிக்கட்டு காட்டித் தருவேன்" (குற்றா. குற. 116.1.).*

[அக்கினி + கட்டு.]

*[**Skt.** agni > த. அக்கினி.]*

கள் → கடு → கட்டு.

அக்கினிக்கண் *akkiṉi-k-kaṇ,* பெ.(n.) அரத்தக் கண்; blood-shot eye (சா. அக.).

த.வ. செங்கண்.

[அக்கினி + கண்.]

*[**Skt.** agni > த. அக்கினி.]*

கள் (கருமை) → கண்.

அக்கினிக்கண்ணன் *akkiṉi-k-kaṇṇaṉ,* பெ.(n.) 1. கொடியவன்; cruel man. 2. நெருப்பைக் கண்ணாக வுடையவன், தீங்கு பயக்குங் கண்ணுடையவன் (இ.வ.); man of evil eye Lit., a fire - eyed man.

[அக்கினி + கண்ணன்.]

*[**Skt.** agni > த. அக்கினி.]*

கள் → கண் → கண்ணன்.

அக்கினிக்கணம் *akkiṉi-k-kaṇam,* பெ.(n.) தீப்பொறி; spark (சா. அக.)

[அக்கினி + கணம்.]

*[**Skt.** agni > த. அக்கினி.]*

கள் → கண் → கணம்> **Skt.** gaṇa.

அக்கினிக்கப்பம் *akkiṉi-k-kappam,* பெ.(n.) கடல் நுரை (வை. மூ.); cuttle-bone.

[அக்கினி + கப்பம்.]

*[**Skt.** agni> த. அக்கினி.]*

அக்கினிக்கப்பரை *akkiṉi-k-kapparai,* பெ.(n.) கோயில் திருவிழா முதலியவற்றில் எடுக்கும் நெருப்புச்சட்டி (இ.வ.); fire-pot as in temple-procession.

த.வ. தீச்சட்டி.

[அக்கினி + கப்பரை.]

*[**Skt.** agni > த. அக்கினி.]*

கொப்பரை → கப்பரை.

அக்கினிக்கரப்பான் *akkiṉi-k-karappāṉ,* பெ.(n.) நோய்வகை (வின்.); severe type of herpes.

[அக்கினி + கரப்பான்.]

[Skt. agni > த. அக்கினி.]

அக்கினிக்கல் *akkiṉi-k-kal,* பெ.(n.) சக்கிமுக்கிக்கல் (R); flint, pyrites.

த.வ. அழற்கல்.

[அக்கினி + கல்.]

[Skt. agni > த. அக்கினி.]

குல் → கல்.

அக்கினிக்கள்ளி *akkiṉi-k-kaḷḷi,* பெ.(n.) கொப்புளங்களை எழுப்பும் ஒரு வகைக் கள்ளி; a kind of spurge the juice of which on coming in contact with the body, causes blistens, *Euphorbia (genus)* (சா. அக.).

[அக்கினி + கள்ளி.]

[Skt. agni > த. அக்கினி.]

கள் → கள்ளி.

அக்கினிக்காட்டம் *akkiṉi-k-kāṭṭam,* பெ.(n.) 1. அகருக்கட்டை பார்க்க; see *agaru-k-kaṭṭai.* 2. அகில் பார்க்க; see *agil* (சா.அக.).

[Skt. agni+kāṣtha → த. அக்கினிக்காட்டம்.]

த. கட்டை > Skt. kāstā.

அக்கினிக்காரியம் *akkiṉi-k-kāriyam,* பெ.(n.) எரியோம்பல் முதலியன; religious rites performed in the consecrated fire.

[அக்கினி + காரியம்.]

[Skt. agni > த. அக்கினி.]

அக்கினிக்காற்று *akkiṉi-k-kāṟṟu,* பெ.(n.) வெப்பக்காற்று; a fierce hot wind (சா. அக.).

[அக்கினி + காற்று.]

[Skt. agni > த. அக்கினி.]

அக்கினிக்குண்டம் *akkiṉi-k-kuṇḍam,* பெ.(n.) வேள்வி வளர்க்குங் குழி; enclosed pit for consecrated fire.

[அக்கினி + குண்டம்.]

[Skt. agni > த. அக்கினி.]



அக்கினிக்குமரம் *akkiṉi-k-kumaram,* பெ. (n.) முன்பேற்ற உணவுசெரியாமை மற்றும் நீர்கோத்தல் முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் ஒரு வகைக் கூட்டு மருந்து; a medicinal compound used for curing indigestion, cold etc., stomachic stimulant (சா.அக.).

[அக்கினி + குமரம்.]

[Skt. agni > த. அக்கினி.]

அக்கினிக்குமாரரசம் *akkiṉi-k-kumāra-rasam,* பெ.(n.) இதளியம் (இரசம்) கந்தகம், முதலிய சரக்குகளைச் சேர்த்து, செரியாமை மற்றும் கழிச்சல் முதலான நோய்களுக்குக் கொடுக்கும் ஒரு மருந்து (அநு. வை.); a medicinal preparation consisting of mercury, sulphur, pepper etc. as its chief ingredients, given for indigestion, diarrhoea, etc., stomachic tonic (சா.அக.).

த. நெருப்பிளஞ்சாறு.

அக்கினிக்குளிகை *akkiṉi-k-kuḷigai,* பெ.(n.) சுரம், சன்னி முதலிய நோய்களுக்குத் தட்சிணாமூர்த்தி திருமந்திரம் 1500இல் சொல்லிய முறைப்படி செய்த ஒரு மாத்திரை; a pill prepared as per process laid down in the work of *Dakshinamurthy*

Thirumandiram (1500); prescribed for delirium, fever etc. (சா.அக.).

த.வ. தீக்குளிகை.

[அக்கினி + குளிகை.]

*[**Skt.** agni > த. அக்கினி.]*

அக்கினிக்கூர்மை *akkiṉi-k-kūrmai,* பெ.(n.) 1. கடல் நுரை; decayed cuttle fish bone, *Os sepiac.* 2. சவட்டுப்பு; a kind of salt extracted from the fuller's earth or dhoby's earth (சா.அக.).

த.வ.சூட்டுக்கூர்ப்பு.

[அக்கினி + கூர்மை.]

*[**Skt.** agni > த. அக்கினி.]*

அக்கினிக்கூறு *akkiṉi-k-kūṟu,* பெ.(n.) 1. உடம்பிலுள்ள சூட்டின் தன்மை; the nature or effect of heat in the system. 2. நெருப்பின் பாகம்; section of the fire. 3. உடம்பில் சூடுண்டாகும் பகுதிகள்; different centres in the body producing heat, Thermogenic centres (சா.அக.).

[அக்கினி + கூறு.]

*[**Skt.** agni > த. அக்கினி.]*

அக்கினிக்கேது *akkiṉi-k-kēdu,* பெ.(n.) புகை; smoke (சா.அக.).

*[**Skt.** agnikēdu > த. அக்கினிக்கேது.]*

அக்கினிக்கொடி *akkiṉi-k-koḍi,* பெ.(n.) சிறுதேக்கு; fire creeper, *Cleodendron serrata* (சா.அக.).

அக்கினிக்கோடைச்சோளம் *akkiṉi-k-kōḍai-c-cōḷam,* பெ.(n.) சோளவகை (விவசா. 3); a kind of maize.

த.வ. செஞ்சோளம்.

[அக்கினி + கோடைச்சோளம்.]

*[**Skt.** agni > த. அக்கினி.]*



அக்கினிகட்டல் *akkiṉi-kaṭṭal,* பெ.(n.) 1. நெருப்பை மூலிகையாலாவது மந்திர ஆற்றலிலாவது சுட்டெரிக்கா திருக்கச் செய்தல்; stopping the power of fire by medicinal plants or by witch crafts. 2. மூத்திரத்தைக் கட்டல்; suppression of urine (சா.அக.).

த.வ. தீக்கட்டு.

[அக்கினி + கட்டல்.]

*[**Skt.** agni > த. அக்கினி.]*

அக்கினிகண்டம் *akkiṉi-kaṇḍam,* பெ.(n.) 1. வயிற்றுத்தீ; abdominal or gastric fire. 2. உடம்பினுள் பாலகம் (மூலாதாரம்), அட்டக (சுவாதிட்டான) மென்னுமிரு அடிப்படைகளுக் கிடையேயிருக்குமொரு பகுதி; that portion of the pelvic region between the pelvic and hypogastric plexuses, representing the seat of fire. 3. கொங்கணர் கடைக் காண்டத்தில் சொல்லியுள்ள நாற்பத்து முக்கோணச் சக்கரத்தினொரு பகுதி; that portion demonstrating the philosophical conceptions of fire in a diagram called நாற்பது முக்கோணம், consisting of 40 magic triangles, a mysterious diagram described in the secret science of *'kadaikkāṇḍam'.*

த.வ. அழற்கண்டம்.

[அக்கினி + கண்டம்.]

*[**Skt.** agni > த. அக்கினி.]*

அக்கினிகணம் *akkiṉi-kaṇam*, பெ.(n.) செய்யுள் முதற்சீராக அமைக்கத் தகாததும் நிரைநேர்நிரை என வருவதுமாகிய தீய செய்யுட்கணம்; (pros.) metrical foot of *nirai-nēr-nirai*, considered inauspicious at the commencement of a poem.

த.வ. தீக்கணம்.

[அக்கினி + கணம்.]

[Skt. agni > த. அக்கினி.]

அக்கினிகபம் *akkiṉi-kabam*, பெ.(n.) 1. கடல் நுரை; a decayed cuttle fish bone sepia octopedia, alias ossepiac. 2. ஞாயிறு (சூரிய) காந்தம்; a glass which collects the rays of the sun into a focus, producing intense heat and it times producing even fire-burning glass (சா.அக.).

[Skt. agni+kabha> த. அக்கினிகபம்.]

அக்கினிகம் *akkiṉigam*, பெ. (n.) 1. **அக்கினிமுகம்** பார்க்க; see *akkiṉi-mugam*. 2. ஒரு பாம்பு; a kind of serpent. 3. இந்திர கோபப் பூச்சி; a scarlet insect lady fly-*Mutella occidentalis* (சா.அக.).

த.வ. அழலிகம்.

[Skt. agnigam>த. அக்கினிகம்.]

அக்கினிகம்பி *akkiṉi-kambi*, பெ.(n.) ஒரு வகை வெடியுப்பு; a kind of saltpetre .

[அக்கினி + கம்பி.]

[Skt. agni > த. அக்கினி.]

அக்கினிகர்ப்பம்[1] *akkiṉi-karppam*, பெ.(n.) 1. தீப்பொறி; spark of fire. 2. புதுமைக் குணங்களுடைய பளிங்குக்கல் வகை; a crystal with fabulous qualities (சா.அக.).

[Skt. agni+garbha > த. அக்கினிகர்ப்பம்.]

அக்கினிகர்ப்பம்[2] *akkiṉi-karppam,* பெ.(n.) 1. நெருப்பைத் தன்னிடமாகக் கொண்டது; pregnant with fire. 2. ஞாயிறு (சூரிய) காந்தம்; a gem said to contain and give out sun's heat, the sunstone. 3. கடல்நுரை; a frothy substance engendered by the submarine fire. 4. நீர்மேல் நெருப்பு; a fire plant, *Ammania vesicatoria* (சா.அக.).

[Skt. agni+garbha > த. அக்கினிகர்ப்பம்.]

அக்கினிகரப்பன் *akkiṉi-karappaṉ*, பெ. (n.) 1. நமைச்சலையும் எரிச்சலையுமுண்டாக்கும் அக்கியைப் போன்ற ஒரு வகைக் கரப்பான்; a skin disease of the type of herpes attended with itching and burning, *Herpes desquamans alias Tinea inbricata*. 2. நமைச்சலையும், எரிச்சலையுமுண்டாக்கும் ஒரு வகைச் கரப்பான் நோய்; red spots consisting of small papulae and terminating in a browish itchy scab; a kind of eczema marked by itching and burning, *Eczema papulosum* (சா.அக.).

த.வ. அழல்கரப்பான்.

[அக்கினி + கரப்பன்.]

[Skt. agni > த. அக்கினி.]

அக்கினிகரப்பான் *akkiṉi-karappāṉ*, பெ. (n.) **அக்கினிகரப்பன்** பார்க்க; see *akkiṉi-karappaṉ* (சா.அக.).

[அக்கினி + கரப்பான்.]

[Skt. agni> த. அக்கினி.]

அக்கினிகருப்பை *akkiṉi-karuppai*, பெ.(n.) சாமைப் பயிர்; a kind of millet, Panicum (சா.அக.).

த.வ. அழல்கருப்பை.

[அக்கினி + கரு + பை.]

சாமைச் சோறு உடலில் வெப்பம் மிகுவிக்கும் எனும் அடிப்படையில் உண்டான பெயர்.

[Skt. agni > த. அக்கினி.]



அக்கினிகருமம் *akkiṉi-karumam*, பெ.(n.) 1. தீயினாற் சுடல்; actual cauterization (as an ulcer) by means of heated wire or rod thermocautery. 2. மருந்தின் உதவியால் உடம்பிற்குச் சூடு எழுப்பும் ஆற்றல்; thermogenetic potency (சா.அக.).

த.வ. தீச்சூடு.

[அக்கினி + கருமம்.]

[Skt. agni> த. அக்கினி.]

அக்கினிகல்பம் *akkiṉi-kalpam*, பெ.(n.) நெருப்பு அல்லது வெப்பத்தன்மை வாய்ந்தது; that which has the nature of fire or heat as the case may be (சா.அக.).

[அக்கினி + கல்பம்.]

[Skt. agni> த. அக்கினி.]

அக்கினிகலை[1] *akkiṉi-kalai*, பெ.(n.) மூக்கின் வழியாக வரும் உயிர்ப்பு (வின்.); breath coming from the nostrils, in *śara-śattiram*.

த.வ. அழல்உயிர்ப்பு.

[அக்கினி + கலை.]

[Skt. agni > த. அக்கினி.]

அக்கினிகலை[2] *akkiṉi-kalai*, பெ.(n) 1. உயிர்ப்பு; மூச்சு; respiration. 2. வல கலை; the vital air passing through the right nostril. It has for its quality heat. 3. இடைகலை, வலகலை; currents of prana coming through the nostrils or more properly, the two channels called nāḍis for the currents of prana working respectively in the left half of the body, (the left sympathetic) and the right half of the body (the right sympathetics). 4. உயிர்ப்பின்பகுதி, உயிர்ப்பினை உள்வாங்கல் அல்லது வெளிவிடல்; a part of respiration referring either to inhalation or exhalation. 5. நெருப்பு அல்லது வெப்பத்தைப் பற்றிக் கூறும் நூல்; the science heat, *Thermology* (சா.அக.).

[அக்கினி + கலை.]

[Skt. agni> த. அக்கினி.]

அக்கினிகாரியம் *akkiṉi-kāriyam*, பெ.(n.) 1. சமையல் முதலிய வீட்டு வேலை; cooking and other domestic work. 2. சூடு போடல்; (in medicine) the application of a cautery or caustic (சா.அக.).

[அக்கினி + காரியம்.]

[Skt. agni> த. அக்கினி.]

அக்கினிகீடம் *akkiṉi-kīḍam*, பெ.(n.) 1. கடித்தால் கடி வாயிலில் அரத்தங் கம்மி, இலுப்பைப் பூ, பேரீச்சங்காய் முதலியன போல் கொப்புளங்களை எழுப்பி எரிச்சலை உண்டாக்கும் ஒருவகை நச்சுயிரினம்; a class of venomous creature causing swelling in the bitten part, which becomes livid ant gives raise to boils of varied sizes. It consists of 24 kinds. 2. ஒரு வகைப் உயிரினத்தின் நஞ்சு; the poison of a particular kind of creatures. 3. **அக்கினிபாதச்சிலந்தி** பார்க்க; see *akkiṉi-pāda-c-cilandi* (சா.அக.).

த.வ. அழலூட்டி.

[அக்கினி + கீடம்.]

[Skt. agni > த. அக்கினி.]

அக்கினிகுணப்பாடு *akkiṉi-kuṇa-p-pāḍu,* பெ.(n.) நெருப்பு அல்லது வேறு வகை வெப்பத்தினாலுடம்பிலுள்ள நோயைக் குணப்படுத்தல்; treatment of diseases in the system by the application of heat, *Thermotherapy* (சா.அக.).

த.வ. அழல்குணப்பாடு.

[அக்கினி + குணப்பாடு.]

[Skt. agni>த. அக்கினி.]

அக்கினிகுணம் *akkiṉi-kuṇam,* பெ.(n.) உடம்பிலுள்ள சூட்டை எழுப்புங் குணம்; the quality of producing heat, *Thermogenic* property (சா.அக.).

த.வ. அழற்குணம்.

[அக்கினி + குணம்.]

[Skt. agni>த. அக்கினி.]

அக்கினிகுமாரம் *akkiṉi-kumāram,* பெ.(n.) ஒரு கூட்டுமருந்து (பதார்த்த. 1211); a compound medicine.

த.வ. அழற்குமரம்.

[அக்கினி + குமாரம்.]

[Skt. agni > த. அக்கினி.]

அக்கினிகுமாரன்[1] *akkiṉi-kumāraṉ,* பெ.(n.) முருகக் கடவுள்; kandaṉ, as offspring of Agni.

த.வ. அழற்குமரன்.

[அக்கினி + குமாரன்.]

[Skt. agni > த. அக்கினி.]

த. குமரன் > Skt. ku-māra.

அக்கினிகுமாரன்[2] *akkiṉi-kumāraṉ,* பெ.(n.) உடம்பு குளிர்வடையுங் காலத்துச் சூடுண்டாகும்படிச் செய்யக் கொடுக்கும் ஒருவகை மாத்திரை; a kind of medicinal pill which produces a quickly diffused and transient increase of vital energy and heat in the bodily system, a diffusible or a general stimulant (சா.அக.).

த.வ. அழற்குமரன்.

[அக்கினி + குமாரன்.]

[Skt. agni > த. அக்கினி.]

அக்கினிகுமாரி *akkiṉi-kūmāri,* பெ.(n.) அகத்தியர் 1500இல் சொல்லியபடி பதினெண் குட்டம், பெருவயிறு, விப்புருதி முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் ஒரு வகைக் குளிகை; a medicinal pill used in curing the eighteen kinds of leprosy, abdominal dropsy (ascites), abscess etc, as prescribed in Agastiyar's work (1500) (சா.அக.).

த.வ. அழற்குளிகை.

[அக்கினி + குமாரி.]

[Skt. agni > த. அக்கினி.]

அக்கினிகுலம் *akkiṉi-kulam,* பெ.(n.) அரச குலத்தொன்று; agni race of kings, as descended from Agni, one of three *irāśa-kulam,* q.v.

த.வ. கதிர்க்குடி, கதிரவக்குடி.

[அக்கினி + குலம்.]

[Skt. agni > த. அக்கினி.]

அக்கினிகெற்பம் *akkiṉi-kēṟpam,* பெ.(n.) **அக்கினிக்கூர்மை** பார்க்க; see *akkiṉi-k-kūrmai* (சா.அக.).

அக்கினிகை *akkiṉigai,* பெ.(n.) **அக்கினிக் கூர்மை** பார்க்க; see *akkiṉi-k-kūrmai* (சா.அக.).

அக்கினிகொழுந்து *akkiṉi-koḻundu,* பெ.(n.) தீ நாக்கு; the little flame of a fire (சா.அக.).

[அக்கினி + கொழுந்து.]

[Skt. agni >த. அக்கினி.]

அக்கினிகோணம் *akkiṉi-kōṇam,* பெ.(n.) தென் கீழ் மூலை; the SE. quarter, as under the guardianship of Agni.

த.வ. அழல்மூலை.

[அக்கினி + கோணம்.]

*[**Skt.** agni>த. அக்கினி.]*

*[த. கோண்>கோணம் (மூலை) > **Skt.** kōṇa.]*

அக்கினிகோத்திரம் *akkiṉi-kōttiram,* பெ.(n.) பார்ப்பனர்க்கு மட்டுமுரிய தீவழிபாடு, நாடொறுங் காலையிற் செய்யும் தீவேள்வி (திருக்காளத். பு. 26, 6.); sacrifice to Agni and certain other dieties performed daily, morning and evening at a particular time.

*[**Skt.** agni +hōtra> த.அக்கினிகோத்திரம்.]*

அக்கினிகோத்திரி *akkiṉi-kōttiri,* பெ.(n.) தீ வேள்வி செய்வோன்; one who habitually performs *agni-hōtra.*

*[**Skt.** agni+hōtrin> த. அக்கினி கோத்திரி.]*

அக்கினிகோதகம் *akkiṉi-kōdagam,* பெ. (n.) பெண்கள் தீட்டுக்காலத்தில் நாளும் மேற்கொள்ளும் குளியல்; the daily bath during the menstrual period or period or uncleanliness (சா.அக.).

அக்கினிகோபம் *akkiṉi-kōbam,* பெ.(n.) பித்தம்; bile, one of the three humours in the body (சா.அக.).

அக்கினிகோமுச்சிரவல்லி *akkiṉi-kōmuc ciravalli,* பெ.(n.) கொடிவேலி; a plant, white-flowered leadwort, *Plumbago zeylanica* (சா.அக.).

அக்கினிச்சட்டி *akkiṉi-c-caṭṭi,* பெ.(n.) 1. கோயில் திருவிழாக்களில் எடுக்கும் நெருப்புச் சட்டி (இ.வ.); fire-pot, as in temple-procession, etc. 2. சவத்தை எரியூட்டுதற் பொருட்டு எடுத்துச் செல்லும் நெருப்புச் சட்டி (இ.வ.); fire-pot carried in front of the bier for cremating the corpse.

த.வ. தீச்சட்டி.

[அக்கினி + சட்டி.]

*[**Skt.** agni > த.அக்கினி.]*

அக்கினிச்சலம் *akkiṉi-c-calam,* பெ.(n.) 1. குப்பைமேனி; a plant a vermifuge, *Acalypha indica.* 2. **அக்கினிசிகம், 2** பார்க்க; see *akkiṉi-šigam.* 3. நெருப்பும் தண்ணீரும்; fire and water (சா.அக.).

[அக்கினி + சலம்.]

*[**Skt.** agni>த.அக்கினி.]*

*சலசல→சலம்>**Skt.** jala.*



அக்கினிச்சிலம்[1] *akkiṉiccilam,* பெ.(n.) செங்காந்தள் (L); red species of Malabar glory lily.

அக்கினிச்சிலம்[2] *akkini-c-cilam,* பெ.(n.) **அக்கினிசிகம்** பார்க்க; see *akkini-šigam* (சா.அக.).

அக்கினிச்சிவம் *akkini-c-civam,* பெ.(n.) குப்பை மேனி; a rubbish plant, *Acalypha indica,* is used as an antidote to poisonous bites.

[Skt. agni+šikhā> த. அக்கினிச்சிவம்.]

அக்கினிச்சுவத்தர் *akkini-c-cuvattar,* பெ.(n.) தேவ மூதாதையருள் ஒரு பிரிவினர்; manes of gods who, when living on earth, maintained the sacred domestic fires, but did not perform the agnistoma or other sacrifices. *"அக்கினிச் சுவத்தரெனும் தேவர் பிதிர்க்களும்" (கூர்மபு. பிருகு. 13).*

[Skt. agni-svātta> த. அக்கினிசுவத்தர்.]

அக்கினிச்சுவாசம் *akkini-c-cuvāšam,* பெ.(n.) தீப்போற்சுடும் உயிர்ப்பு (தக்கயாகப் 476, உரை); fiery breath.

த.வ. அழல்உயிர்ப்பு.

[Skt. agni + švāša> த. அக்கினிச்சுவாசம்.]

அக்கினிச்சுவாலை *akkini-c-cuvālai,* பெ.(n.) 1. தீ நாக்கு; flame of fire. 2. பெருந்தீ; large fire - conflagration. 3. சிவன்; the god Šivan. 4. சிரிஞ்சிப் பூ; a plant with red flowers used by dyers, *Grislea tomentosaa* (சா.அக.).

த.வ. தீக்கொழுந்து.

[Skt. agni+ jvālā> த. அக்கினிச்சுவாலை.]

அக்கினிச்சூரணம் *akkini-c-cūranam,* பெ.(n.) கொடிவேலியுடன் மற்ற சரக்குகளுஞ் சேர்ந்த ஒரு வகைச் சூரணம்; a medicinal compound in which the lead-wort forms in chief ingredient (சா. அக.).

த.வ. கொடிவேலிப்பொடி.

[Skt. agni+cūrṇa> த. அக்கினிச்சூரணம்.]

அக்கினிச்சூனுவிரசம் *akkini-c-cūnu-virašam,* பெ. (n.) பலகறைப் பற்பம், சங்கு பற்பம், கெந்தி, இதளியம் (இரசம்,) ஆகியவற்றை வேப்பம்பட்டைச் சாற்றிலரைத்து சுரம், குன்மம் முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் ஓர் ஆயுள்வேத மருந்து (அநு.வை.); an ayurvedic medicinal compound consisting of sulphur, mercury and certain other calcined mineral powders impregnated with calcium oxides as ingredients, and given for comsumption, fever, dyspepsia etc. (சா.அக.).

த.வ. வேதிமருந்து.

அக்கினிச்செடி *akkini-c-cedi,* பெ.(n.) செங்கொடி வேலி; a fire plant, rosy-flowered lead- wort, *Plumbago rosea* (சா. அக.).

த.வ. கொடிவேலி.

[அக்கினி + செடி.]

[Skt. agni> த.அக்கினி.]

அக்கினிச்சேர்வை *akkini-c-cērvai,* பெ.(n.) 1. புண்ணாக்கக் கூடிய ஒரு சீலை மருந்து; a plaster used to raise blisters on the skin-vesicating or cantharides plaster. 2. காரச் சீலை; blister plaster (சா.அக.).

த.வ. காரச்சீலை.

[அக்கினி + சேர்வை.]

[Skt. agni> த.அக்கினி.]

அக்கினிசக்தி *akkini-šakti,* பெ. (n.) 1. செரிமான ஆற்றல்; the power of digestion. 2. நெருப்பின் வல்லமை; the power of fire (சா.அக.).

த.வ. அழலாற்றல், தீத்திறம்.

[Skt. agni + šakti> த.அக்கினிசக்தி.]

அக்கினிசஞ்சீவிகுமாரன் *akkini-šañjīvi-kumāran,* பெ.(n.) பதினெட்டு வகை இசிவு (சன்னி)க்கும் தேனில் அல்லது இஞ்சிச் சாற்றில் இழைத்துக் கொடுக்கும் போகர் முறைப்படிச் செய்த ஒரு மாத்திரை; a pill prepared

according to the process of Bogar and macerated in honey or juice of ginger before use, is prescribed for 18 kinds of delirium and apoplexy (சா.அக.).

த.வ. இசிவு குளிகை.

[இசிவு குளிகைக்கு இடப்பட்ட வடமொழிப் பெயர்.]

அக்கினிசம்பவம் *akkiṉi-šambavam*, பெ. (n.) 1. நெருப்பின் தோற்றம்; production from fire. 2. காட்டுக் குங்குமப்பூ; safflower, *Carthamus tinctorius*. 3. நெருப்பினால் ஏற்பட்ட நிகழ்ச்சி; that which happened from the action of fire or is resulting from fire (சா.அக.).

த.வ. அழல்நிகழ்ச்சி.

[Skt. agni + sam - bhava > த. அக்கினி சம்பவம்.]

அக்கினிசமதீபனம் *akkiṉi-šamadibaṉam*, பெ.(n.) 1. செரிமான ஆற்றலைத் தூண்டுதல்; simulation of digestion. 2. செரிமான ஆற்றலை ஒழுங்குபடுத்துதல்; regulation of digestion. 3. சமாக்கினி; moderate appetite (சா.அக.).

த.வ. அழல்சமன்மை.

[Skt. agni + šamati-bhana> த. அக்கினி சமதீபனம்.]

அக்கினிசர்ப்பம் *akkiṉi-šarppam*, பெ.(n.) கொள்ளிவாய்ப் பேய்; a metenor that appears in the night and flirts about over marshy grounds, The ignis - Fataus, is known by several names sch as "will o" the wisp, jack-o-lantorn, Fire-drake, Foolish-Fire, Corpse candle etc. (சா. அக.).

[Skt. agni+sarpa> த. அக்கினிசர்ப்பம்.]

அக்கினிசன்மன் *akkiṉi-šaṉmaṉ*, பெ.(n.) முருகக்கடவுள் (வின்.); Kandaṉ, as born of the god of fire.

த.வ. அனற்பிறவன்.

அக்கினிசாட்சி *akkiṉi-šaṭci*, பெ.(n.) திருமணச் சடங்கில் தீ வளர்த்து அதனை முன்னிலைப்படுத்துதல்; in the presence of sacred fire.

த.வ. அழற்சான்று.

அக்கினிசாதகம் *akkiṉi-šādagam*, பெ. (n.) செரியாமை; முன் உண்டது அறாமை; indigestion or want of digestion (சா.அக.).

த.வ. செரியாநோய்.

அக்கினிசாரம் *akkiṉi-šāram*, பெ.(n.) 1. கண் மருந்து; medicines for the eyes, collyrium. 2. கடல்நுரை; a frothy substance floating on the sea (சா.அக.).

[அக்கினி+சாரம்.]

[Skt. agni> த. அக்கினி.]

அக்கினிசாலம் *akkiṉi-šālam*, பெ.(n.) 1. கடல் நுரை; decayed cuttle fish bone, *Os sepiae*. 2. நெருப்பைக் கொண்டு செய்யும் ஒரு தந்திரம் அல்லது கண்கட்டு வித்தை; a trick or magic performance with the agency of fire. 3. ஒரு பூண்டு, அதாவது நீர்மேல் நெருப்பு; a plant, (unidentified) (சா.அக.).

த.வ. மாயக்கலை.



அக்கினிசிகம் *akkiṉi-šigam,* பெ.(n.) 1. வெந்தோன்றி; fire flame, flame from flower. 2. கார்த்திகைக் கிழங்கு; the root of November - flower plant, *Gloriosa superba.* 3. மஞ்சள்; saffron, *Crocus indicus.* 4. சீந்தில்; moon creeper, *Menispermum cordifolium* (சா.அக.).

அக்கினிசிகை *akkiṉi-šigai,* பெ.(n.) 1. குங்குமப் பூ; a safflower plain, *European saffron - crocus sativus.* 2. கார்த்திகைக் கிழங்கு; methonia superba alias *Gloriosa superba* (சா.அக.).

[Skt. agni-sikā>த. அக்கினிசிகை.]

அக்கினிசித்தன் *akkiṉišittaṉ,* பெ.(n.) தீ வழிக் குடி (S.I.I. ii, 528); a Brahmin who regularly performs *agni-hōtra.*

[Skt. agni-cit> த. அக்கினிசித்தன்.]

அக்கினிசித்து *akkiṉišittu,* பெ. (n.) **அக்கினி சித்தன்** (S.i.i.ii, 519) பார்க்க; see *akkiṉišittaṉ.*

[Skt. agni-cit>த.அக்கினி சித்து.]

அக்கினிசிலாசம் *akkiṉi-šilāšam,* பெ.(n.) 1. மலைமேல் விளையும் கொடிவேலி; leadwort growing on the top of hills or mountains. 2. கருங்கொடி வேலி, நீலக் கொடி வேலி; a plant cape lead wort or blue-flowered, leadwort, *Plumbago capensis* (சா.அக.).

அக்கினிசிலேட்டுமம் *akkiṉi-šilēṭṭumam,* பெ.(n.) இருமல், கோழை, உடம்பெரிச்சல், கால் கை அழற்சி, நீர்வேட்கை, உண்டபின் பசி முதலிய குணங்களைக் காட்டும் ஒருவகைக் கோழைக்கட்டு நோய்; a phlegmtic disease characterised by cough; bronchial secretion, thrist, burning sensation of the limbs; hunger after food etc., a kind of consumption (சா.அக.).

த.வ. அழற்கோழைநோய்.

[Skt. agni+ślēsman>த.அக்கினிசிலேட்டுமம்.]

அக்கினிசிலை *akkiṉi-šilai,* பெ.(n.) நெருப்புக்கல்; flint used in older days to strike fire (சா. அக.).

த.வ. தீத்தட்டிக்கல்.

[Skt. agni+ šilā> த.அக்கினிசிலை.]

அக்கினிசிவாகம் *akkiṉi-šivāgam,* பெ.(n.) **அக்கினிசிலாசம்** பார்க்க; see *akkiṉi-šilāšam* (சா.அக.).

அக்கினிசேகரம் *akkiṉi-šēgaram,* பெ.(n.) 1. மஞ்சள்; turmeric, *Crocus indicus.* 2. குங்குமம்; a fragrant tree, *Crocus sativus.* 3. குங்குமத்தூள்; a kind of red powder worn by Indian ladies on their for head. 4. குசும்பா மரம்; a tree the seeds of which are used by dyers, *Carthamus tinctorious* (சா.அக.).

த.வ. அழலம்.

அக்கினிசேவகன் *akkiṉi-šēvagaṉ,* பெ.(n.) 1. கருநாபி; a black variety of poisonous plant, a contium ferox. 2. கருநாபிக் கிழங்கு; the poisonous root of plant; black aconite root (சா.அக.).

த.வ. அழற்சேவை.

அக்கினிட்டி *akkiṉiṭṭi,* பெ.(n.) நெருப்பிடுகலம் (பிங்.); fire-pan, censer.

த.வ. அழற்சட்டி.

[Skt. agnisṭhikā> த.அக்கினிட்டி.]

அக்கினிட்டோமம் *akkiṉiṭṭōmam,* பெ.(n.) வேள்வி வகை; variety of *jyōtisṭōma* which is the main type of the *sōma* sacrifice. *"அக்கினிட் டோம மாற்றிய பயன்களை யடைவர்" (மச்சபு. தடாக. 26.).*

[Skt. agnisṭōma> த. அக்கினிட்டோமம்.]

அக்கினித்தம்பம் *akkiṉi-t-tambam,* பெ.(n.) 1.அக்கினிக்கட்டு நெருப்பு, முதலானவற்றைச் சுடாதிருக்கச் செய்யும் மாயக்கலை (வித்தை); suspending the action of fire - a kind of magic. 2. நெருப்புத் தூண்; pillar of fire.

3.அறுபத்து நான்கு கலை மற்றும் அறிவியல்களிலொன்று; one of the 64 Indian arts and sciences (சா.அக.).

த.வ. அழற்கம்பம்.

[அக்கினி + தம்பம்.]

*[**Skt.** agni> த.அக்கினி.]*

அக்கினித்தம்பன் *akkiniittamban*, பெ.(n.) சிவபெருமான் (வின்.); *Śivan*, in the form of a column of fire.

த.வ. அழற்கம்பன்.

[அக்கினி + தம்பன்.]

*[**Skt.** agni> த. அக்கினி.]*

அக்கினித்தம்பனம் *akkini-t-tambanam*, பெ.(n.) **அக்கினித்தம்பம்,1** பார்க்க; see *akkini-t-tambam1* (சா.அக.).

[அக்கினி + தம்பனம்.]

*[**Skt.** agni > த. அக்கினி.]*

அக்கினித்தாழி *akkini-t-tāli*, பெ.(n.) வேள்வித் தீ வைக்கும் பானை (இ.வ.); earthen pot which holds the sacred domestic fire.

த.வ. தீச்சட்டி.

[அக்கினி + தாழி.]

*[**Skt.** agni> த. அக்கினி.]*

அக்கினித்திட்டம் *akkini-t-tittam*, பெ.(n.) **அக்கினிவரை** பார்க்க; see *akkini-varai* (சா.அக.).

அக்கினித்திரயம் *akkinittirayam*, பெ.(n.) மூன்று வேள்வித் தீக்கள் (வின்.); the three sacrificial fires.

த.வ. முத்தீ.

*[**Skt.** agni+ traya>த. அக்கினித்திரயம்.]*

அக்கினித்திராவகம்[1] *akkini-t-tirāvagam*, பெ.(n.) பட்ட இடம் அல்லது பொருள்களை எரித்துவிடும் தன்மையுள்ள நீர்மமாகிய எரிநீர்மம்; acids which corrode or burn the parts of which they are applied.

த.வ. எரிநீரம்.

*[**Skt.** agni+drāvaka> த.அக்கினித்திராவகம்.]*

அக்கினித்திராவகம்[2] *akkini-t-tirāvagam*, பெ.(n.) செடிவகை (வை.மூ.); a plant.

த.வ. அழற்செடி.

*[**Skt.** agni+drāvaka>த.அக்கினித்திராவகம்.]*

அக்கினித்துண்டவடுகம் *akkini-t-tunda vadugam*, பெ.(n.) செரிமானமின்மைக் (அக்கினி மாந்தத்திற்)குக் கொடுக்கும் ஒரு வகை ஆயுள்வேத மாத்திரை (அநுவை); a medicinal pill given in ayurveda for dyspepsia (சா.அக.).

த.வ. அழல்வடகம்.

அக்கினிதம் *akkinidam*, பெ. (n.) 1.செரியாமையைப் போக்கும், ஒரு மருந்து; a medicine which removes indigestion, *Stomatic*. 2. உடம்பில் வெப்பத்தைக் கொடுக்கும் பொருள்; that which lends heat to the system (சா.அக.).

அக்கினிதமம் *akkinidamam*, பெ.(n.) கண்டங்கத்திரி; a narcotic, plant, *Jacquins nightshade - solanum jacquini* (சா.அக.).

*[**Skt.** agni+tamam>த. அக்கினிதமம்.]*



அக்கினிதிசை *akkiṉi-diśai*, பெ.(n.) தென் கிழக்கு; the S.E. quarter, as under the guardianship of Agni.

த.வ. அழல்திசை.

[அக்கினி + திசை]

[Skt. agni> த. அக்கினி]

அக்கினிதிவ்வியம் *akkiṉi-divviyam*, பெ.(n.) தீத்திற ஆய்வு; ordeal by fire.

[Skt. agni+divya> த.அக்கினிதிவ்வியம்.]

அக்கினிதீபதி *akkiṉi-dīpadi*, பெ.(n.) அருந்தியது அறாமையானேற்படும் வயிற்றிரைச்சல்; rumbling noise in the stomach from indigestion (சா.அக.).

அக்கினிதீபனம் *akkiṉi-dībaṉam*, பெ.(n.) 1. செரிமான ஆற்றலை வளர்க்கும் மருந்து; a medicine that excites the action of digestion and strengthens the functional activity of the stomach, stomachic. 2. செரிமான ஆற்றலைப் பெருக்குகை; increase of the power of digestion (சா.அக.).

த.வ. செரிமானி.

[Skt. agni+dībaṉa>த. அக்கினிதீபனம்.]

அக்கினிதேவன் *akkiṉi-dēvaṉ*, பெ.(n.) நெருப்பு (தீ)க் கடவுள்; Agni, the god of fire.

த.வ. அழலோன்.

[அக்கினி +தேவன்.]

[Skt. agni>த. அக்கினி.]

அக்கினிதோசம் *akkiṉi-dōṣam*, பெ.(n.) வளிக் கோளாறினால் உண்டாகும் நோய்; defects arising from gastric disorders (சா.அக.).

த.வ. வளிநோய்.

[Skt. agni + dōśa>த. அக்கினிதோசம்.]

அக்கினிநட்சத்திரம் *akkiṉi-naṭśattiram*, பெ.(n.) 1. ஒரு விண்மீன்; the third nakṣatra. 2. மூன்றாம் கால் (பாதம்) முதல் உரோகிணி முதற் கால் (பாதம்) வரை சூரியன் நிற்கும் காலம்; (Astron.) hot period during *cittirai-vaikāśi* when the sun passes through the third quarier of *puraṉikārttikai* and the first quarter of *urōkiṉi*, calculated at the rate of two and a quarter *nakṣatras* for a solar month, dog-days.

த.வ. அழல்மீன்.

[Skt. agni+nakṣatra>த.அக்கினி நட்சத்திரம்.]

அக்கினிநாள் *akkiṉi-nāḷ*, பெ.(n.) **அக்கினி நட்சத்திரம்** (சோதிட. சிந். 55.) பார்க்க; see *akkiṉi-naṭśattiram.*

த.வ. கோடைக்காலம்.

[அக்கினி + நாள்.]

[Skt. agni>த. அக்கினி.]

அக்கினிநீர்[1] *akkiṉi-nīr*, பெ.(n.) எரிநீர் (திராவகம்) வகை (பாண்டி.); nitric acid.

த.வ. எரிநீரம்.

[அக்கினி + நீர்.]

[Skt. agni> த.அக்கினி.]

அக்கினிநீர்[2] *akkiṉi-nīr*, பெ.(n.) 1. வளி (பாசக) நீர்; gastric fluid. 2. சிறுநீர்; urine (சா.அக.).

[அக்கினி + நீர்.]

[Skt. agni> த.அக்கினி.]

அக்கினிப்பாகு *akkiṉi-p-pāgu*, பெ.(n.) **அக்கினிக்கேது** பார்க்க; see *akkiṉi-k-kēdu* (சா.அக.).

அக்கினிப்பிரவேசம் *akkiṉi-p-piravēśam*, பெ. (n.) 1. தீப்புகுதல்; entering fire, as an ordeal. 2. உடன்கட்டை யேறுகை (R.); sati, suttee.

த.வ. தீப்பாய்வு.

[Skt.agni+pra-vēśa>த.அக்கினிப் பிரவேசம்.]

அக்கினிப்பிரளயம் *akkiṉi-p-piraḷayam*, பெ.(n.) தீயினாலுண்டாம் உலகழிவு (வின்.); destruction of the world by fire.

த.வ. அழல்அழிவு.

[Skt.agni+pra-laya>த. அக்கினிப்பிரளயம்.]

அக்கினிப்பிராமணன் *akkiṉi-p-pirāmaṇaṉ*, பெ.(n.) சவத்தை எரியூட்டு சடங்கு நடத்துவிக்கும் பார்ப்பான் (Cm); Brahmin who conducts the funeral rites when a dead body is cremated.

த.வ. ஈமப்பார்ப்பான்.

[Skt. agni+ brāhmaṇa>த. அக்கினிப் பிரமாணன்.]

அக்கினிப்பிரீதிசெய்தல் *akkiṉi-p-piridi-šeydal*, பெ.(n.) 1. புடமிடல்; calcination. 2. நெருப்புக்கு இரையாதல்; giving anything an as offering to fire, as for example, the burning of the dead (சா.அக.).

த.வ. அழலூட்டல்.

[அக்கினிபிரீதி + செய்தல்.]

[Skt. agni+priti> த.அக்கினிபீரீதி.]

அக்கினிப்பிலவு *akkiṉi-p-pilavu*, பெ.(n.) காட்டுப் பலா, பேய்ப் பலா; a tree-jungle jack, wild jack, *Atro hirsuta* (சா.அக.).

த.வ. அழல்பலா.

[Skt. agni>த. அக்கினி.]

அக்கினிப்பிழம்பு *akkiṉi-p-piḷambu*, பெ.(n.) **அக்கினிச்சுவாலை,** 1 பார்க்க; see *akkiṉi-c-cuvālai* (சா. அக.).

த.வ. அழற்பிழம்பு, தீக்கொழுந்து.

[அக்கினி + பிழம்பு.]

[Skt. agni> த.அக்கினி.]

அக்கினிப்பிளப்பு *akkiṉi-p-piḷappu*, பெ.(n.) எரிமலை (வின்.); volcano.

[அக்கினி + பிளப்பு.]

[Skt. agni > அக்கினி.]

அக்கினிப்பிளாசுத்திரி *akkiṉi-p-piḷāšuttiri*, பெ.(n.) **அக்கினிச்சேர்வை** பார்க்க; see *akkiṉi-c-cērvai* (சா.அக.).

[Skt. agni + E. Plaster>த. அக்கினி பிளாசுத்திரி.]

அக்கினிப்புடைப்பு *akkiṉiṣ-p-puḍaippu*, பெ.(n.) நெருப்புக் கொப்புளம்; a collection of watery fluid benath the superficial layer of the skin-blister (சா.அக.).

த.வ. அழற்கொப்புளம்.

[அக்கினி + புடைப்பு.]

[Skt. agni > அக்கினி.]

அக்கினிப்பொறி *akkiṉi-p-pōri*, பெ.(n.) துமுக்கி (துப்பாக்கி); gun.

[அக்கினி + பொறி.]

[Skt. agni > அக்கினி.]



அக்கினிப்போக்கு *akkiṉi-p-pōkku*, பெ.(n.) 1. உடம்பினுள் வெப்பம் பரவியிருக்கும் நிலைமை; the distribution of heat in the system. 2. உடம்பிலுள்ள வெப்பம், வயிற்றோட்டம் (பேதி), சிறுநீர் முதலியவற்றால் கழிதல் அல்லது உடம்பை விட்டகலல்; the dissipation of bodily heat by means of radiation, discharge of excretions etc., *Thermolysis* (சா.அக.).

த.வ. அழற்போக்கு.

[அக்கினி + போக்கு.]

[Skt. agni> த.அக்கினி.]

அக்கினிபகவான் *akkiṉi-pagavāṉ*, பெ.(n.) தீக்கடவுள் (தக்கயாகப்.103, உரை); agni, the god of fire.

த.வ. அழற்கடவுள், தீக்கடவுள்.

[அக்கினி + பகவான்.]

*[**Skt.** agni> த.அக்கினி.]*

*த. பகவன் > **Skt.** bhaga-van.*

அக்கினிபஞ்சகம் *akkiṉi-pañjagam*, பெ.(n.) பஞ்சகத் தொன்று (சோதிட. சிந். 213); (Astrol.) an inauspicious period of time, as portending danger of fire to any function commenced during such period, one of *pañjagam*, q.v. (சா. க.).

த.வ. அழல்ஐந்தகம்.

*[**Skt.** agni+panjaka>த.அக்கினிப்பஞ்சகம்.]*

அக்கினிபம் *akkiṉibam*, பெ.(n.) நெருப்பைப் போல் ஒளிர்வது, பொன்; gold (சா.அக.).

*[**Skt.** agnibha > த. அக்கினிபம்.]*

அக்கினிபயம் *akkiṉi-bayam*, பெ. (n.) நெருப்பைக் காணநேர்ந்தவிடத்துண்டாம் அச்சம்,; morbid dread of fire or heat, *Thermophobia* (சா. அக.).

த.வ. அழலச்சம்.

அக்கினிபரீட்சை *akkiṉi-parīṭcai*, பெ. (n.) தீயைக் கொண்டு மேற்கொள்ளும் ஆய்வு (சங். அக.); ordeal by fire, an acid test 2. கடினமான பணியை மேற்கொள்ள முற்படுகை; to take risk jop.

த.வ. அழல்தேர்வு.

*[**Skt.** agni+parīkṣā> த. அக்கினிபரீட்சை.]*

அக்கினிபல்லி *akkiṉi-palli*, பெ.(n.) இருளில் ஒளிரும் ஒரு கொடி; fire-brand creeper; a creeper shining in dark, *Cardiospermum halicacabum* (சா.அக.).

த.வ. ஒளிர்கொடி.

*[**Skt.** agni+palli> த. அக்கினிபல்லி.]*

அக்கினிபாதச்சிலந்தி *akkiṉi-pāda-c-cilandi*, பெ.(n.) நச்சுத்தன்மையுள்ள ஒருவகைச் சிலந்திப் பூச்சி; a kind of spider possessing in its leg a powerful poisonous principles which causes blisters, when coming in contact with the body, a kind of blistering spider (சா. அக.)



த.வ.அழற்சிலந்தி.

அக்கினிபித்தசுரம் *akkiṉi-pitta-šuram*, பெ. (n.) ஆறு நாள் முதல் பத்துநாள் வரை உணவுகொள் வேட்கையின்மை, வாய்குமட்டல், வாய்க்கசப்பு, எரிச்சல், கைகாலுளைவு முதலிய குணங்களைக் காட்டும், ஒருவகை பித்தக் காய்ச்சல்; a fever characterised by loss of appetite with thirst for a duration of 6 to 10 days, nausea, bitterness of taste, burning sensation, pain in the limbs etc., a kind of gastro - bilious fever (சா. அக.).

த.வ. அழற்காய்ச்சல்.

[அக்கினி + பித்தம் + சுரம்.]

*[**Skt.** agni> த.அக்கினி.]*

அக்கினிபிரவேசம்[1] *akkiṉi-piravēšam*, பெ.(n.) ஒருவன் தன் தூய்மை, நேர்மை முதலியவற்றை, வெளிப்படுத்த மேற்கொள்ளும் கடும் நடவடிக்கை அல்லது செய்கை; a trial or an ordeal to which one subjects oneself to prove one's innocence.

த.வ. அழவேறல்.

[Skt.agni+pravēša>த.அக்கினிபிரவேசம்.]

அக்கினிபீசம் *akkiṉi-pīšam*, பெ.(n.) 1. பொன்; gold. 2. காட்டுச் சீரகம்; a seed (digestive) wild cumin, *Veronia anthelmintica* (சா.அக.).

த.வ. அழல்வித்து.

அக்கினிபுமான் *akkiṉipumān*, பெ.(n.) ஊரகப் பெண்தெய்வத்தின் முன்பு, தீச்சட்டியோடு ஆடுதற்காக விடப்பட்ட இறையிலிநிலம் (R.T.); *iṉām* granted for the service of dancing with a fire-pot before the village goddess.

த.வ. அழல் இறையிலி.

[Skt.agni+ pumān> த. அக்கினிபுமான்.]

அக்கினிபுராணம் *akkiṉi-purāṇam*, பெ.(n.) பதினெண்தொன்ம(புராண)த் தொன்று; a chief *purāṇam.*

[Skt.agni+purāṇa>த.அக்கினிபுராணம்.]

அக்கினிபூ *akkiṉi-pū*, பெ.(n.) முருகக் கடவுள் (மச்சபு. குமார. 115); *Kandaṉ*, as born of fire.

த.வ. அழல்தோன்றல்.

[அக்கினி + பூ.]

[Skt. agni>த.அக்கினி.]

அக்கினிமச்சம் *akkiṉi-maccam*, பெ.(n.) இறால்; fire-fish; prawn so called because it contains phosphorous, *Astacus* (சா.அக.).



அக்கினிமண்டலம்[1] *akkiṉi-maṇḍalam*, பெ.(n.) 1. ஏழுமண்டலங்களுள் தீக்குரிய இடம் (சது.); the region of fire, one of *šapta-maṇḍalam*. 2. அடி வயிறு (வை. மூ.); lower abdomen.

த.வ. அழல்மண்டலம்.

[அக்கினி + மண்டலம்.]

[Skt.agni> த.அக்கினி.]

அக்கினிமண்டலம்[2] *akkiṉi-maṇḍalam*, பெ.(n.) ஓர் ஓகவிடம் (ஜீவோற்பத். 30); fire-centre situate between water and earth in the region of *mūlādāram* of great in significance in *yōga* practice.

த.வ. அழல்மண்டலம்.

அக்கினிமணி *akkiṉi-maṇi*, பெ.(n.) ஞாயிறு (சூரிய) காந்தக் கல்; a kind of flint said to emit fire when exposed to the sun, burning glass, sun-stone (சா.அக.).

த.வ. அழற்கல்.

[அக்கினி + மணி.]

[Skt.agni> த. அக்கினி.]

அக்கினிமதனம் *akkiṉi-madaṉam*, பெ.(n.) காமத்தீ; the fire of sexual love; heat of passion (சா.அக.).

த.வ. அழலெ.

அக்கினிமந்தசுரம் *akkiṉi-mandašuram*, பெ.(n.) ஏழு அல்லது பத்து நாள் வரை பசி, நீர் மற்றும் உணவுகொள் வேட்கையின்மை, வலிமைக்குறைவு, எரிச்சல், கழிமாசுக்கட்டு, தலைவலி, வாய்குமட்டல், ஏப்பம், வாந்தி, விக்கல், கை, கால் வலி முதலிய குணங்களைக் காட்டும் ஒருவகை காய்ச்சல்; a fever marked by absence of hunger and thirst for duration of 7 to 10 days. weakness, burning sensation, constipation, headache, tastelessness, belching, vomiting, hiccough, pain in the limbs etc.,

sometimes it brings about several complications such as, typhoid, diarrhoea etc. in the later stages as an after effect (சா.அக.).

த.வ. அழற்காய்ச்சல்.

[அக்கினி + மந்தசுரம்.]

[Skt. agni>த.அக்கினி.]

அக்கினிமந்தம் *akkiṉi-mandam,* பெ.(n.) 1. உடல் வெப்பம் மிகுந்து வயிறு பொருமிக் கொண்டிருக்க, மேலும் உண்பதாலும், மிகுதியாய்க் கொதிக்கும் நீரை உட்கொள்வதாலும் உண்டாகும் செரியாமை நோய்; impaired or imperfect digestion arising from excessive heat in the system or from some errors in the diet, or by drinking water excessively - not-indigestion. It is also said to be due to catarrh of the mucous coat of the stomach and to the presence of abnormal ferments arising from gastric disorders, *Dyspepsia*. 2. முன்னை அல்லது பசு முன்னை; spinous fire-brand teak or Indian headache tree, *Premna integrifolia*. 3. உடம்பின் தீயளவு குறைவு; gastric insufficiency. 4. பசிவேட்கை யின்மை; loss of appetite, *Anorexia* (சா.அக.).

த.வ. செரியாநோய்.

[அக்கினி + மந்தம்.]

[Skt. agni> த.அக்கினி.]

அக்கினிமந்தமூலயோகம் *akkiṉi-manda-mūlayōgam,* பெ. (n.) கோழை (சீத) பித்தத்திற்குக் கொடுக்குமோர் ஆயுள்வேத மருந்து (அநு.வை.); a medicinal compound in ayurveda given for diseases of the digestive organs (சா.அக.).

த.வ. அழல்தணிப்பான்.

அக்கினிமந்தவாயு *akkiṉi-manda-vāyu,* பெ.(n.) செரியாமையினால் வயிற்றிலும், குடலிலும் வளி தங்குவதனாலேற்படும் ஓர் ஊதை நோய்; a condition marked by the presence of gases in the alimentary canal. It arises mainly from the fermontation of the contents of the stomach and the intestines, *Flatulent Dyspepsia* (சா.அக.).

த.வ. அழல்ஊதை.

[அக்கினி + மந்தம் + வாயு.]

[Skt. agni>த. அக்கினி.]

அக்கினிமாடன்[1] *akkiṉi-māḍaṉ,* பெ. (n.) நெருப்பினிடத்தில் விருப்பத்தை உண்டாக்கும் ஓர் இசிவு நோய்; devilish nature creating a morbid desire or mania for fire. (in females), a kind of hysteria (சா.அக.).

த.வ. அழலிசிவு.

[அக்கினி + மாடன்.]

[Skt. agni>த. அக்கினி.]

அக்கினிமாடன்[2] *akkiṉi-māḍaṉ,* பெ. (n.) ஊரகச் சிறு தெய்வம். (மதி. களஞ். ii, 9); a village deity.

த.வ. அழல்மாடன்.

[அக்கினி + மாடன்.]

[Skt. agni> த.அக்கினி.]

அக்கினிமாதா *akkiṉimādā,* பெ. (n.) கொடிவேலி; a plant white-flowered leadwort, *Plumbago zeylanica* (சா.அக.).

த.வ. அழல்தாய்.

அக்கினிமாந்தம் *akkiṉi-māndam,* பெ.(n.) செரியாமை நோய் (வின்.); indigestion. *"அக்கினி மாந்தம் கைகால் யெரிவுழலை" (தைலவ.தைல.58).*

த.வ. அழல்மாந்தம்.

[அக்கினி + மாந்தம்.]

[Skt. agni> த. அக்கினி.]

அக்கினிமாந்தியம் *akkiṉi-māndiyam*, பெ.(n.) வயிறு கோளாறடைவதினால் நீருஞ் சோறுங் கொள்ள வல்லமையற்று மாந்தம் ஏற்பட்டு அதனால் புளியேப்பம், வயிற்றுப்புசம், கழிமாசு வெளியேறாதிருத்தல் முதலிய தீக்குணங்களை யுண்டாக்கித் துன்புறுத்தும் ஒரு வகைச் செரியாமை நோய். a derangement of the stomach, resulting in the disorder of its functions as tympanites, sour belching, constipation etc, due to insufficient quantity or impaired quality of the gastric juice or to the deficient action of the gastric muscles, *Atonic dyspepsia* (சா.அக.)

த.வ. அழல்மாந்தம்.

[அக்கினி + மாந்தம்.]

[Skt. agni>த. அக்கினி.]

[மந்தம் → மாந்தம் → மாந்தியம்.]

அக்கினிமானி *akkiṉi-māṉi*, பெ.(n.) வெப்பத்தின் ஏற்ற இறக்க வேறுபாடுகளை அளந்தறியுங் கருவி; an instrument for recording heat variation, thermograph; (thermometer) (சா. அக.).

த.வ. அழல்மானி.

[அக்கினி + மானி.]

[Skt. agni> அக்கினி.]

அக்கினிமுகச்சிலந்தி *akkiṉi-muga-c-cilandi*, பெ.(n.) அக்கினி பாதச் சிலந்தியைப் போன்ற ஒரு வகைச் சிலந்தி; a kind of blistering spider of the species of *akkiṉi-c-cilandi*; the only difference is that his insect contains the poisonous principle in its face instead of in the legs, mandibles are furnished with a curved claw perforated at the extremily, like a poison fang, a gland furnishes a certain colourless poisonous fluid which is injected into the object wounded by the claw, a species of spider (சா.அக.).

த.வ. அழல்முகச்சிலந்தி.

[அக்கினி+முகம்+சிலந்தி.]

[Skt. agni>த. அக்கினி.]

அக்கினிமுகம் *akkiṉi-mugam*, பெ. (n.) 1. சேங்கொட்டை; the nut of the fire-face tree causing blisters on the skin; marking nut-semicarpus anacardium. 2. சித்திரமூலம்; a plant, the bark of which invariable acts as a vesicatory; leadwort-plumbgao zeylanica. 3. கார்த்திகைக் கிழங்கு; the root of a plant, which also possesses similar blistering properties, *Gloriosa superba* (சா.அக.).

த.வ. அழல்முகம்.

[அக்கினி + முகம்.]

[Skt. agni> த. அக்கினி.]

அக்கினிமுகலவணம் *akkiṉimuga-lavaṇam*, பெ.(n.) சித்திரமூலம், சிவதைவேர், இந்துப்பு முதலானவற்றைப் புடமிட்டுச் செரிமான ஆற்றலுக்குக் கொடுக்கும் ஒரு மருந்து (அநு.வை.); a compound of salt extracted from blister root and burbith root, and used for promoting digestion (சா.அக.).

த.வ. அழல்முகவுப்பு.

[அக்கினி + முகம் + லவணம்.]

[Skt. agni>த. அக்கினி. Skt. lavaṇa> த. லவணம்.]

அக்கினிமுகி *akkiṉi-mugi*, பெ. (n.) சேங்கொட்டை; marking nut (சா.அக.).

த.வ. அழல்முகத்தி.

அக்கினிமூலம் *akkiṉi-mūlam*, பெ. (n.) 1. **அக்கினிமுகம்,** 1 பார்க்க; see *akkiṉi-mugam*. 2. பெருங்குடலின் கீழ்ப் பகுதியில் தங்கியிரா னின்ற சூடு அல்லது வெப்பம்

அதாவது வயிற்றுத்தீ (மூலாக்கினி); (In physiology) the animal heat lying stored up or lodged in the descending colon; the thermogenic heat of the large intestines. 3. பரியன் (அபான) வளியின்னிமித்தமாய், உடம்பின் சூட்டை உட் கொண்டிருக்கும் பாலகம் (மூலாதாரம்); (in-psychology) the sacral plexus supposed to be one of the thermogenic centres in the hunna system; heat through the action of apana (one of the 10 vital airs in the system) (சா.அக.).

த.வ. அழல்மூலம்.

[அக்கினி + மூலம்.]

*[**Skt.** agni>த. அக்கினி.]*

அக்கினிமூலவாயு *akkiṉi-mūlavāyu*, பெ.(n.) ஒலிப்புடன் கழிந்து, கிறுகிறுத்த வயிறு வலித்துளையும் போது மலத்தில் அரத்தம் கலந்து விழுந்து, வலங் குன்றி, முகம் வேறுபட வெளுத்துக் காணும் ஓர் ஊதை நோய்; a disease characterised by frequent evacuation of stools mixed with blood, causing colic pains, giddiness, progressive failure of strength etc. It is marked by pinched feature and anaemia, *Dysenteric diarrhoea* (சா.அக.).

த.வ. அழல்மூலஊதை.

[அக்கினி + மூலவாயு.]

*[**Skt.** agni>த. அக்கினி; **Skt.** vāyu> த.வாயு.]*

அக்கினிமூலி *akkiṉi-mūli*, பெ. (n.) 1. கற்றாழை; a plant fommon Indian aloe - *Aloe typica*. 2. **அக்கினி,** 1 பார்க்க; see *akkiṉi* (சா.அக.).

த.வ. அழல்மூலி.

[அக்கினி + மூலி.]

*[**Skt.** agni>த. அக்கினி.]*



அக்கினிமூலை *akkiṉi-mūlai*, பெ.(n.) தென்கீழ்த் திசை; the SE quarter, as under the guardianship of Agni. *"அக்கினி மூலை திங்கள்" (மச்சபு. சாந்தி. 8).*

த.வ. அழல்மூலை.

[அக்கினி + மூலை.]

*[**Skt.** agni>த. அக்கினி.]*

அக்கினியன் *akkiṉiyaṉ*, பெ.(n.) செவ்வாய்; mars. *"பவுமனக் கினியன்" (சாதகசிந். 6.).*

த.வ. அழலன்.

*[**Skt.** agnīya>த.அக்கினியன்.]*

அக்கினியாசயம் *akkiṉi-yāšam*, பெ.(n.) 1. பித்தப் பை; the pear shaped reservoir for the bile on the under surface of the liver, gall bladder. 2. செரிமான நீருக்கு உறைவிடம்; the seat of gastric juice i.e., stomach. 3. சிறுநீர்ப் பை; the membraneous sac which serves as a reservoir for the urine-bladder (சா.அக.).

அக்கினியாசயம் *akkiṉi-y-āyasayam*, பெ. (n.) 1. சற்றொப்ப 12 விரற்கடை நீளமிருக்கும் இரைக்குடலோடு சேர்ந்திருக்கும் சிறிய குடலின் முதற்பகுதி; the first part of the small intestines beginning at the pylorous, it is about 12 finger's breadth long-

duodenum. 2. உடம்பின் உறைவிடமான பித்தப்பை (பித்தாசயம்); the per-shaped membrancous sac in the right lobe of the liver, consistuting the reservoir for the bile-Galls (bladder), thermogenic centre in the system (சா.அக.).

அக்கினியாடன் *akkini-y-āḍaṉ,* பெ.(n.) எட்டி மரம்; strychnine tree, *Strychnos nuxvomica* (சா.அக.).

த.வ. அழலாடன்.



அக்கினியாத்திரம் *akkiniyāttiram,* பெ.(n.) தீயைக்கக்கிக் கொண்டு செல்லும் அம்பு (வின்.); arrow emitting fire.

த.வ. அழலம்பு.

[அக்கினி + அத்திரம்.]

[Skt. agni+astra>த. அக்கினியாத்திரம்.]

அக்கினியாதானம் *akkini-y-ādāṉam,* பெ.(n.) அங்கியாதானம் பார்க்க; see *aṅgi-y-ādāṉam.*

[அக்கினி + ஆதனம்.]

[Skt. agni+a-dhāna>த. அக்கினியாதானம்.]

அக்கினியாராதனைக்காரன் *akkini-y-ārādaṉai-k-kāraṉ,* பெ.(n.) தீக்கடவுளை வணங்கும் பாரசீகன் (பாண்டி.); parsee, as workshipping fire.

த.வ. அழல்போற்றியன்.

[அக்கினி + ஆராதனை+காரன்.]

[Skt. agni+ā-rādhana>த. அக்கினியாராதனை.]

அக்கினியாள்வோன் *akkini-y-āḷvōṉ,* பெ.(n.) உடல் வெப்பத்தை ஒரொழுங்கிற்குட் படுத்துவதற்கென மூளையிலமைந்த ஒரு பொருள்; an eminence of gray substance in the brain for controlling the bodily heat, *Tuber cinereum* (சா.அக.).

த.வ. அழல்ஆள்வோன்.

[அக்கினி+ஆள்வோன்.]

[Skt. agni>த. அக்கினி.]

அக்கினியாளுமுறை *akkini-y-āḷu-murai,* பெ.(n.) உடம்பினிலுள்ள சூட்டைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தல்; regulating or controlling the bodily temperature, *Thermotactic* (சா.அக.).

த.வ. அழலாளுமுறை.

[அக்கினி+ஆளும்+முறை.]

[Skt. agni>அக்கினி.]

அக்கினியிணக்கம் *akkini-y-iṇakkam,* பெ. (n.) உடம்பினில் தோன்றும் தீயளவு, சம நிலையடைதல்; the normal adjustment of the bodily temperature, *Thermotaxis* (சா.அக.).

த.வ. அழலிணக்கம்.

[அக்கினி + இணக்கம்.]

[Skt. agni>த. அக்கினி.]

அக்கினியுப்பு *akkini-y-uppu,* பெ. (n.) 1. வெடியுப்பு; a kind of salt, nitre-potassium nitrate. 2. ஆறாங் காய்ச்சலுப்பு; a native preparation of potassium nitrate - nitras potassae. 3. பூநீரினின்று காய்ச்சி யெடுக்கும் ஐந்தாங்காய்ச்சலுப்பு; a kind of salt boiled and filtered five times in the course of its extraction from the fuller's earth. 4. தலையோட்டி னின்று உருவான ஓர் உப்பு; an euphemistric term used for denoting a kind of salt extracted from the skull of the

foetus. *"அண்டமதான அக்கினியுப்பை கண்டறியார்கள் காசினிமூடர் பிண்ட மதனிற் பிறந்தது காணார் சண்டனைச் சேர்வர் சாஸ்திரம் பார்த்தே" (சட். சூத்.)* (சா.அக.).

த.வ. அழலுப்பு.

[அக்கினி + உப்பு.]

*[**Skt.** agni>த. அக்கினி.]*

அக்கினியுபாதை *akkiṉi-y-ubādai*, பெ.(n.) தீயால் நேருங் கேடு (இ.வ.); injury or damage by fire (சா.அக.).

த.வ. அழற்கேடு.

*[**Skt.** agni+bādhā>த. அக்கினியுபாதை.]*

அக்கினியோகம் *akkiṉi-y-ōgam*, பெ. (n.) நன்றல்லா காலம் (சூடா. உள். 32.); inauspicious conjuction of the tithi with the day of the week, viz., the 6th on Mon., the 7th on Tues., the 8th on Wed., the 9th on Thurs, the 10th on Fri. the 11th on Sat, the 12th on Sun.

த.வ. அழற்காலம்.

*[**Skt.** agni+ yōga>த.அக்கினியோகம்.]*

அக்கினியோத்திரம் *akkiṉiyōttiram*, பெ.(n.) காலை மற்றும் மாலை வேளைகளில், தீ முதலிய தெய்வங்களைக் குறித்துச் செய்யும் வேள்விச்சிறப்பு (தக்கயாகப், 112, உரை.); sacrifice to Agni and certain other deities, performed every morning and evening.

த.வ. அழல்வழிபாடு.

*[**Skt.** agni-hōtra>த. அக்கினியோத்திரம்.]*

அக்கினிர்மமந்தினி *akkiṉirma-mandiṉi*, பெ.(n.) தழுதாழை; a medicinal shrub, wind-killer, Cleodendron phlomoides (சா.அக.).

அக்கினிரசம் *akkiṉi-rašam*, பெ. (n.) 1. இந்திரகோபப் பூச்சி; a red coloured insect known as lady fly; *Mutella occidentalis*, a classified natural drugs described in the Tamil medicinal science on account of its great usefulness in medicines. 2. பொன்; gold. 3. தீத்திறம்; virulence of fire. 4. பாசக நீர்; gastric fluid (சா.அக.).

த.வ. அழற்பூச்சி.

*[**Skt.** agni+rasa>த. அக்கினிரசம்.]*

அக்கினிரணம் *akkiṉi-raṉam*, பெ. (n.) தீப்புண்; any injury caused by fire or dry-heat burns (சா.அக.).

த.வ. அழற்புண்.

*[**Skt.** agni+v-raṉa>த. அக்கினிரணம்.]*

அக்கினிரோகணி *akkiṉi-rōgaṉi*, பெ. (n.) 1. அக்குள் கட்டி; a suppurative axillary gland; a hard inflammatory swelling in the arm-pit. 2. சுரத்தினாலடிபட்டு உடம்பு இளைத்தவர்களுக்கு அக்குளில் கட்டி யுண்டாகி நெருப்பைப் போல் எரிச்சலையும், சதை வெடிப்பு, மயக்கம், முதலியவற்றை விளைவிப்பது மல்லாமல் சில சமயம் ஏழு நாளுக்குள் சாக்காட்டையுண்டு-பண்ணுமொரு நோய்; a very fatal contagious epidemic disease characterised by fever, pain, swelling of the axillary lymphatic gland; delirium and coms, in majority of cases, it may end in death, *Bubonic plague* (சா.அக.).

த.வ. அழல்நோய்.

*[**Skt.** agni+rōga>த. அக்கினிரோகணி.]*

அக்கினிரோகம் *akkiṉi-rōgam*, பெ.(n.) 1. ஒரு வகைக் கண்ணோய்; a kind of eye-disease. 2. பித்தநோய்; bilious disease (சா.அக.).

த.வ. அழலி.

*[**Skt.** agni+ rōga> த. அக்கினிரோகம்.]*

அக்கினிலிங்கம் *akkiṉi-liṅgam*, பெ.(n.) ஐந்து குறி (இலிங்கங்)களுள் நெருப்பு வடிவிலான திருவண்ணாமலையில் உள்ள சிவக்குறி (சிவலிங்கம்); *liṅgam* of fire.

த.வ. அழல்தாணு.

*[**Skt.** agni+liṅga>த. அக்கினிலிங்கம்.]*

அக்கினிவகை *akkiṉi-vagai,* பெ.(n.) மருந்தெரிக்கும் திட்டம் அல்லது எரிப்புத் திட்டம்; exactness or accuracy in determining the quantity of heat required for burning for purposes of preparing medicines (சா.அக.).

த.வ. அழல்வகை.

[அக்கினி + வகை.]

[Skt. agni> த. அக்கினி.]

வகு→வகை.

அக்கினிவர்ணசிலந்திக்கடி *akkiṉi-varṇa-cilandi-k-kaḍi,* பெ.(n.) கடிவாயில் எரிச்சலையும், சுரம், மயிர்க்கூச்சம், உடம்பெரிவு, குருக்கள் ஆகிய குணங்களையு முண்டாக்கும் ஒரு வகைச் சிவப்புச் சிலந்திக்கடி; a bite of the red species of spider marked by a reddish base and burning sensation, at the affected part, followed by fever, horripilation, and eurptions or pustules, in the body (சா.அக.).

த.வ. அழல்நிறச்சிலந்திக்கடி.

அக்கினிவர்த்தனம் *akkiṉi-varttaṉam,* பெ.(n.) 1. வயிற்றுத்தீ (உதராக்கினி)யை மிகுதிப்படுத்தும் மருந்து; a stimulant increasing the digestive power or exicting the functional activity of the stomach, stomachic. 2. ஓமம்; Bishop's weed, *Carum copticum* (சா.அக.).

த.வ. பசித்தூண்டி.

[Skt. agni+vardhana>த. அக்கினிவர்த்தனம்.]

அக்கினிவாகம் *akkiṉi-vāgam,* பெ. (n.) 1. புகை; smoke. 2. ஆடு; sheep (சா.அக.).

அக்கினிவாகனம் *akkiṉi-vāgaṉam,* பெ.(n.) 1. வெள்ளாடு; goat. 2. ஆட்டுக்கடா; he-goat (சா.அக.).

த.வ. அழலூர்தி.

அக்கினிவாகு *akkiṉi-vāgu,* பெ.(n.) **அக்கினிவாகம்** பார்க்க; see *akkiṉi-vāgam* (சா.அக.).

அக்கினிவாதம் *akkiṉi-vādam,* பெ.(n.) செரிமான நீரால் ஏற்பட்ட (வாத) வளிநோய்; a kind of gastric disease, *Gastralgia* (சா. அக.).

த.வ. அழல்வளி.

[Skt. agni + vāta> த. அக்கினிவாதம்.]

அக்கினிவிகாரம் *akkiṉi-vigāram,* பெ.(n.) 1. உண்ட உணவுகளை வயிற்றுனுள் பக்குவம் செய்வதற்கேற்ற செரிமான நீர் கோளாறடைவதனால் உண்டாகும் நோய்; a disease caused by gastric disorders, *Gastricism.* 2. செரித்தற்கான தீயளவு வேறுபாடுகள்; the change in the digestive faculty. 3. பித்தக்கோளாறு; bilious disorders (சா.அக.).

த.வ. அழல்திரிபு.

[Skt. agni+vikāra>த. அக்கினிவிகாரம்.]

அக்கினிவிசர்ப்பி *akkiṉi-viśarppi,* பெ.(n.) சுரம், வயிற்றாலெடுத்தல் (பேதி), நீர் மற்றும் பசிவேட்கை, அயர்வு, கக்கல், மயக்கம், உறக்கக்கேடு, உடம்பில் சில இடங்களில் நெருப்புக் கொப்புளங்களைப் போன்ற கொப்புள எரிச்சல் கண்டு அவ்விடங் கறுத்தல், மற்றவிடங்களில் நீலம் அல்லது செந்நிறமுண்டாதல் முதலியவற்றை உண்டாக்குமொருவகை படரும் தன்மையுடைய தோல்நோய்; an acute specific, febrile disease with inflammation of the skin, accompanied by an eruption of a flery acrid humour in some part of the body, and a peculiar blue colour in other parts, the symptoms are-purging, thirst, swooning, vomiting and the characteristic rash with a well defined margin upon the skin. It is of a spreading nature, *St. Anthony's fire, Erysipelas* (சா.அக.).

த.வ. அழல்படர்த்தி.

[Skt. agni+visarpi>த.அக்கினிவிசர்ப்பி.]

அக்கினிவிடபாகம் *akkiṉi-viḍabāgam*, பெ.(n.) உடம்பில் நஞ்சு ஊடுருவி, அரத்தம் முறித்து, அதனால் வளிமுதலா எண்ணிய இரண்டு மிகுத்து, வயிறளைதல், கக்கல், கோழை, அயர்வு, வாய்நீரொழுக்கு, வீக்கம், புரட்டல், உடம்பு மெலிதல், இருமல், பக்க நோய் முதலியவற்றை உண்டாக்கும் உடம்பின் நிலைமை; a condition of the body in which the quality of the blood is altered by the reason of the presence in it of a poison collected in the system. It is marked by the following symptoms - increase of humours in the system, with rumbling noise in the stomach, vomiting, salivation, swelling, restlessness, emciation, cough, pain on the sides and so on. It usually terminates in death - a kind of *Toxemia* (Blood Poisoning) (சா.அக.).

த.வ. அழல்நஞ்சம்.

[அக்கினி + விடம் + பாகம்.]

[Skt. agni + viṣa>த.அக்கினிவிடம்.]

பகு → பாகம்.

அக்கினிவிடம் *akkiṉi-viḍam*, பெ.(n.) அதிக வெப்பத்தினால் குருதியோட்டத்திலோ உடம்பிலுள்ள வேறு உறுப்புக்களினாலோ ஏற்படும் நஞ்சு; any toxic substance formed in the blood or any other living organism in the body by heat, *Thermotoxin* (சா.அக.).

த.வ. அழல்நஞ்சு.

[Skt. agni + viṣa> த. அக்கினிவிடம்.]

அக்கினிவியாபகம் *akkiṉi-viyābagam*, பெ. (n.) வெப்பம் பரவுகை; diffusing of heat, *Thermodiffusion* (சா.அக.).

[Skt.agni+vyābaga>த.அக்கினி வியாபகம்.]

அக்கினிவிரணம் *akkiṉi-viraṇam*, பெ.(n.) 1. தீப்புண்; an injury on the body caused by fire-burns. 2. சூடிட்ட புண்; cauterised wound (சா.அக.).

[Skt. agni + vraṇa>த.அக்கினிவிரணம்.]

அக்கினிவிருத்தி *akkiṉi-virutti*, பெ.(n.) 1. வயிற்றுத் தீயளவு மிகுகை; increase in the digestive power improved digestion. 2. பசி மற்றும் வயிற்று ஆற்றலை யுண்டாக்கும் மருந்து; a medicine that excites the action of and strengthens the stomach, *stomachic* (சா.அக.).

[Skt. agni+vṛtti>த. அக்கினிவிருத்தி.]

அக்கினிவெள்ளை *akkiṉi-veḷḷai*, பெ.(n.) கேழ்வரகு வகை (விவசா. 3); a species of rāgi.

அக்கினிவேசசம்மிதை *akkiṉivēśa-śammidai*, பெ.(n.) சரக சம்மிதையென்னும் ஓர் ஆயுள் வேத நூல்; an ayurvedic science named *'charaka samhita'* (சா.அக.).

அக்கினிவேசர் *akkiṉi-vēšar*, பெ. (n.) சரக சம்மிதை என்னும் ஆயுள் வேத நூலையியற்றிய முனிவர் (ஓர் இருடி). இவர் ஆத்திரேய முனிவரின் மாணாக்கர் அறுவருள் ஒருவர். ஆத்திரேயர், உலகத்தாருக்குதவும்படி ஆயுள் வேத நூலை இயற்றவேண்டிக் கயிலையில் நடந்த மருத்துவக்கழகத்தில், அதிக முயற்சி எடுத்து உழைத்தவர். ஆத்திரேயர் வாக்கின்படி அவரது மாணாக்கர்களறுவரும் தனித்தனியாக மருத்துவ நூல்கள் எழுத, அவற்றுள், அக்கினி வேசர் எழுதியது மிகவும் பொருத்த முள்ளதாகவும் பட்டறிவை யொட்டினதாகவுமிருக்கக் கருதி, முனிவர்களால் அதைச் சிறந்ததாக எடுக்கப்பட்டது. சரகசம்மிதை என்பது அக்கினிவேசரால் எழுதப்பட்டுப் பின்னர் சரகரால் வடமொழியில் திருத்தப்பட்டுள்ள நூல். இது சற்றொப்ப கி.மு. 1000 வருடத்திற்கு

முந்தியிருக்கலாமெனெ ஊகிக்கப்படும்; a rishi (saint) who compiled an ayurvedic science now called charaka samhita. He is one of the six pupils of Atreya who took prominent part in the sanitary commission held in the Himalaya mountains for purposes of introducing ayurveda into this world. It is said that each of the five pupils wrote a treatise on medicine and the sages selected that of Agnivesa as the most practical.

This was subsequently modified by charaka, under whose name it became known and his book is undoubtedly the most ancient and continues to be the most celebrated medical work in the possession of the modern Hindus. It is in Sanskrit and it is not definitely known at what period of the world's history it was written. It is roughly calculated to be at about 1000 B.C. (Em. Med. men.) (சா.அக.).

அக்கினிவேதனை *akkiṉi-vēdaṉai*, பெ. (n.) அக்கினியுபாதை பார்க்க; see *akkiṉi-y-ubādai* (சா.அக.).

அக்கினிவேந்திரம் *akkiṉi-vēndiram*, பெ.(n.) 1. கல்லுருவி; drawing out stone, as from the bladder; gravel plant, *Ammannia baccifera*. 2. இலவங்கம்; clove tree, Caryophyllus aromaticus. 3. நீர் மேல் நெருப்பு என்னும் ஒரு பூண்டு; fire on water or water-fire, a kind of plant, blistering, *Ammannia-Ammannia vesicatoria* (சா.அக.).

அக்கீகத்து *akkīkattu*, பெ.(n.) 1. வழக்கை எடுத்துரைக்கை (P.T.L.); statement of a case. 2. உண்மை; truth, fact.

[U. haqīqat>த. அக்கீகத்து.]

அக்கீம் *akkīm*, பெ.(n.) மகமதிய மருத்துவன்; Muhammadan doctor.

[U. hakīm>த. அக்கீம்.]

அக்கு *akku*, பெ.(n) உரிமை; claim, right.

[U. hagg>த. அக்கு.]

அக்குசு *akkuśu*, பெ.(n.) 1. அக்கறை; interest, Concern. *"அவன் அக்குசோடு வேலை செய்கிறான்" (பே.வ.).* 2. விரைவு; quick. *அக்குசா வேலை முடிக்க வேண்டுமாம்.*

[U. akhass>த. அக்குசு.]

அக்குசை *akkuśai*, பெ.(n.) துறவு பூண்டு வேள்வி புரியும் சமணக் கைம்பெண்; jaina widow - ascetic. *"நூல்கள் வாங்கும் அக்குசைகள்" (திருவிளை. சமணரைக். 17.).*

[Skt. a kuśā>த. அக்குசை.]

அக்குப்பீளை *akku-p-pīḷai*, பெ.(n.) கண் பீளை; muco-purulent discharge from the eyes (சா.அக.).

[அக்கு+ பீளை.]

[Skt. akra>த.அக்கு.]

அக்குரன் *akkuraṉ*, பெ.(n.) இடையேழு வள்ளல்களுளொருவன் (பிங்.); name of a liberal chief, one of sevan *iḍai-vaḷḷai*, q.v.

[Skt. a-krūra>த. அக்குரன்.]

அக்குரு *akkuru*, பெ.(n.) 1. விரல்; finger. 2. அகில் பார்க்க; see *agil.*

அக்குரூரன் *akkurūraṉ*, பெ.(n.) யாதவர் தலைவருள் ஒருவன் (பாகவத.); name of a *yādava*, a devotee and uncle of *Kṛṣṇa*.

[Skt. a-krūra>த. அக்குரூரன்.]

அக்குரோசம் *akku-rōśam*, பெ.(n.) கருஞ் சீந்தில்; a black variety of. சீந்தில்; moon creeper, *Menispermum cordifolium alias Tinosphora Cordifolia* (சா.அக.).

அக்குரோணி *akkurōṇi*, பெ.(n.) பெரும்படை வகை; army consisting of 21,870 chariots, 21,870 elephants, 65,610 horses, and 109,350 foot soldiers, according to Skt. authorities, Tamil *nigaṇḍus* giving differently.

[**Skt.** *akṣauhiṇi>த. அக்குரோணி.*]

அக்குரோதம் *akkurōdam*, பெ.(n.) காமப்பூ; a flower which excites venery, Cupid's plant, *Pergularia minor alias p.tomentosa* (சா.அக.).

அக்கோடகம் *akkōḍagam*, பெ.(n.) கடுக்காய்; Indian gall nut or ink nut, *Terminalia chebula* (சா.அக.).

அக்கோடிகம் *akkōḍigam*, பெ.(n.) கருஞ்சூரை; a black variety of the shrub, Jujubi-*zizyphus oenoplia* (சா.அக.).

அக்கோணி *akkōṇi*, பெ.(n.) பெரும்படை வகை; vast army. *"எழுப தக்கோணி புடமுள செங்களம்" (திருவகுப்பு, சித்து. 43).*

[**Skt.** *akṣauhiṇi>த.அக்கோணி.*]

அக்கோரம் *akkōram*, பெ.(n.) ஊசிக் காந்தம்; the magnetic oxide or iron which attracts needls; load stone, *Feri Oxidum*, a combination of the protoxide and peroxide of iron (சா.அக.).

அகங்கரம் *agaṅgaram*, பெ.(n.) தன்முனைப்பு (ஞானவா. வைராக். 85); self-love, egotism.

[**Skt.** *ahaṃ-kāra>த.அகங்காரம்.*]

அகங்காரக்கிரந்தி *agaṅgāra-k-kirandi*, பெ.(n.) மெய்ப்பொருள்களைத் தானென்றுகொள்ளும் செருக்குப் பிணைப்பு; (Advaidam) 'ego-bond', the enslaved state, of the soul in which it confuses the tattvas with itself.

[**Skt.** *ahaṃ-kāra+kiranti>த. அகங்காரக் கிரந்தி.*]

அகங்காரசைதன்னியவாதி *agaṅgāra-SaidaVVịya-vAdị*, பெ. (n.) உயிர்வளி முதலியவையே ஆதனெனக்கருதும் கொள்கையாளர் (சி.சி. 2, 73, மறைஞர்); one who holds that the vital airs connecting with *prāṇa* which are the effects of *ahaṃ-kāra* are the soul.

[**Skt.** *ahaṃ-kāra+caitanya+vādin-> த. அகங்காரசைதன்னியவாதி.*]

அகங்காரத்திரயம் *agaṅgāra-t-tirayam*, பெ.(n.) புறநிலைக் கருவிவகை (சிவப். கட்.) *(தைசதவகங்காரம், வைகரியகங்காரம், பூதாதியகங்காரம் முதலியன மூவகை அகங்காரங்கள்)*; (Śaiva). three kinds of *ahaṃ-kāra*, viz., *aiśatavakaṅkāram, vaikariyakaṅkāram, pūtātiyakaṅkāram*, one of 11 divisions of *puṟa-nilai-k-karuvi* q.v.

[**Skt.** *ahaṃ-kāra+traya>த. அகங்காரத் திரயம்.*]

அகங்காரிக்கிரகம் *agaṅgāri-k-kiragam*, பெ.(n.) பிறந்த ஐந்தாம் நாளில், குழந்தைக்குத் தீங்கு விளைவிப்பதாய்க் கருதப்பெறும் நாண்மீன்; a disease ascribed to the baneful influences of malignant stars, it attacks a newborn baby on the fifth day.

[**Skt.** *aham- kārin + graha>த.அகங்காரக் கிரகம்.*]

அகசாரசக்தி *aga-šāra-šakti*, பெ. (n.) ஒரு பொருளின் சுற்றெல்லையிலுள்ள பகுதி அப்பொருளின் நடுவத்தை நோக்கி நெருங்கும் ஆற்றல் (இ.வ.); centripetal force.

*[**Skt.** ahaṃ+šāra+šakti>த.அகசார சக்தி.]*

*[த. சத்தி > **Skt.** šakti]*

அகசிப்பிசின் *agaši-p-pisiṉ*, பெ.(n.) ஒருவகைப் பிசின்; a kind of gum (சா.அக.).

அகசியகாரன் *agašiyakāraṉ*, பெ.(n.) நகைச்சுவையூட்டுபவன்; jester.

த.வ. நகையாண்டி, கோணங்கி, கோமாளி, பகடி.

[அகசிய+காரன்.]

*[**Skt.** hāsya>அகசிய(ம்).]*

அகசியம் *agašiyam*, பெ.(n.) 1. பகடிக் கூத்து (நல். பாரத. இராச. 17.); mimicry, farce. 2. ஏளனம்; ridicule, derision.

*[**Skt.** hāsya>த. அகசியம்.]*

அகசு *agašu*, பெ.(n.) 1. பகல் (சூடா. உள். 65); day time. 2. இராப்பகல் கொண்டதொரு நாள்; day including night.

*[**Skt.** ahan>த. அகசு.]*

அகசேபம் *agašēbam*, பெ.(n.) கட்டுக்கொடி; a creeper, bind weed, *Pedalium murex* (சா.அக.).



அகசேருகம் *agašērugam*, பெ. (n.) முள்ளந்தண்டின்மை; the congenital absence of the spinal column, *invertebrata* (சா.அக.).

அகசை *agašai*, பெ.(n.) 1. சிறுகல்லூரிச் செடி; a small variety of plant, *Densiflora*. 2. மரத்திற்பிறந்தது; born of the tree or tree-born. 3. மலையிற் பிறந்தது; grown or originated in a mountain, pertaining to a mountain (சா.அக.).



அகடம் *agaḍam*, பெ.(n.) 1. நேர்மைக்கேடு, நெறிமுறையின்மை; injustice. 2. சூழ்ச்சி; trick.

*[**Skt.** a-ghaṭana> த. அகடம்.]*

அகடவிகடம் *agaḍa-vigaḍam*, பெ.(n.) 1. பகடி; fun, humour. 2. குறும்பு; prank, mischief. 3. நுண்ணறுத்தி; acute intellect.

*[**Skt.** agata+vikaṭa >த. அகடவிகடம்.]*

அகடன் *agaḍaṉ*, பெ.(n.) மோசக்காரன், ஏமாற்றுக்காரன் (வின்.); treacherous person.

*[**Skt.** a-ghaṭana> த.அகடன்.]*

அகடனம் *agaḍaṉam*, பெ.(n.) 1. செய்யக் கூடாதது; that which cannot be done, impossibility. 2. குறும்பு; mischief.

*[**Skt.** a-ghaṭana>த. அகடனம்.]*

அகடிதகடனாசாமர்த்தியம் *agaḍita-kaṭaṉā-šāmarttiyam*, பெ.(n.) கூடாததைக் கூட்டுவிக்கும் வன்மை (வேதா.சூ.56, உரை); ability to effect the impossible.

அகடியம் *agaḍiyam*, பெ.(n.) முறையின்மை (வின்.); that which is injustice.

[Skt. aghaṭita>த. அகடியம்.]

அகணிதன் *agaṇidaṉ*, பெ.(n.) கடவுள்; god, as immeasurable. *"தேவ முதல்வ வேதமி லகணித" (பெருந்தொ. 193.).*

த.வ. வரம்பிலி.

[Skt. agaṇita>த. அகணிதன்.]

அகத்மாத்து *agatmāttu*, வி.எ.(adv.) தற்செயலாய்; causelessly by chance, unexpectedly. *"அவனை அகஸ்மாத்தாய்ச் சந்தித்தேன்" (இ.வ.).*

• *[Skt.a-kasmāt> த.அகத்மாத்து.]*

அகத்துமாத்தாக *agattumāttāga*, வி.அ. (adv.) முன்னேற்பாடு இல்லாமல், தற்செயலாக; accidentally, by chance, unexpectedly. *"தெருவில் அகத்துமாத்தாக நண்பரைச் சந்தித்தேன்".*

[அகத்துமாத்து+ஆக.]

[Skt. akaṣmāt > த. அகத்துமாத்து.]

அகத்தியா *agattiyā*, பெ.(n.) 1. அளந்தறியக் கூடா ஆழம்; unfathomable abyss. 2. கடல்; ocean.

அகத்திருத்துவம் *a-gattiruttuvam*, பெ.(n.) செயலின்றி நிற்குங் கடவுட்டன்மை (வேதா. சூ. 47.); divine attribute of not being agent.

[Skt. a-kartṛtuva>த. அகத்திருத்துவம்.]

அகதங்காரன் *agadaṅkāraṉ*, பெ.(n.) 1. நலத்தைக் கொடுப்போன்; one who restores health, a health-restorer. 2. மருத்துவன்; a physician.

[அகத(ம்) + காரன்.]

[Skt. agada>த. அகத(ம்).]

[காரன் > Skt. kāra.]

அகததந்திரம் *agada-tandiram*, பெ. (n.) நிலைத்திணை, (தாவரம்) விலங்கு முதலானவற்றின் நஞ்சினால், மாந்தர்க்கு ஏற்படும் நோய்களையும் அவற்றைக்களையும் முறைகளையும் விளக்கிக்கூறும் நூல்; a tantric science which treats of antidotes against vegetable, mineral and animal poisons toxicology.

த.வ. நஞ்சறுப்புநூல்.

[Skt. agada+tantra> த. அகததந்திரம்.]

அகதம் *agadam*, பெ.(n.) 1. நோயின்மை; freedom from disease. 2. மருந்து; a medicine, drug (especially) antidote. 3. நஞ்சு நீக்கு மருந்து; antipoisonous remedy.

[Skt. agada>த. அகதம்.]

அகதவேதம் *agada-vēdam*, பெ. (n.) 1. மருத்துவ நூல்; medical science. 2. நச்சு முறிவைப் பற்றிக் கூறுமோர் ஆயுள் வேத நூல்; an ayurvedic science dealing with several antidotes for poison.

[Skt. agada+vēda>த. அகதவேதம்.]

அகதன் *agadaṉ*, பெ.(n.) நிறைநலமுடையான்; one who is free from disease, a healthy man.

த.வ. நலவான்.

[Skt. agadya>த. அகதன்.]

அகதி¹ *agadi*, பெ.(n.) வீடுபேற்று நிலை; the path of salvation. *"அடைந்தனை அகதியை" (மேருமஞ். 173).*

[Skt. a-gati>த. அகதி.]

அகதி² *agadi*, பெ.(n.) மரவகை (மலை) (வின்); babul.

[Skt. agati>த. அகதி.]

அகதி³ *agadi*, பெ.(n.) இயற்கைப் பேரிடர், அரசியல் நெருக்கடி இன்ன பிறவற்றின் பொருட்டு தம் சொந்த நாட்டிலிருந்து பிற

நாட்டிற் குடிபெயர்வோர்; one without resources friends, destitute person.

த.வ. வழியிலி, ஏதிலி.

*[**Skt.** a-gati>த. அகதி.]*

அகதி[4] *agadi*, பெ.(n.) 1. பெண்ணோடு இணைந்து வாழாமை-சேராமை; not cohabiting with a woman. 2. நலிந்தோன், வலிமையற்றவன்; a weak man.

*[**Skt.** a-gada>த. அகதி.]*

அகதிசேத்திரத்தார் *agadi-šēttirattār*, பெ.(n.) மேலுகத்தில் வாழ்பவர்களில் பெரியவர் (தக்கயாகப். 352, உரை.); celestials higher than those of the svarga.

*[**Skt.** a-gati+kṣētra>த.அகதிசேத்திரத்தார்.]*

அகதேசு *agadēšu*, பெ.(n.) நோய்நொடியில் லாதவன்; one who is free from diseases.

*[**Skt.** agada>த. அகதேசு.]*

அகபார் *agabār*, பெ.(n.) செய்தி (P.T.L.); news.

*[**U.** akhbār>த. அகபார்.]*

அகபாலம் *agabālam*, பெ.(n.) தலையில்லாத அழகற்ற தோற்றம்; a monster with partial or complete absence of cranjum-*Acranium*.

அகம்பம் *agambam*, பெ.(n.) ஒரு செய் நஞ்சு (கற்பரிபாடாணம்) (வை. மூ.); a mineral poison.

அகம்பனம் *agambaṉam*, பெ.(n.) மூச்சுத் திணறுதல்; suspension of the vital function when the lungs are deprived of air, suffocation.

அகம்பிரமம் *agam-piramam*, பெ.(n.) 1. செருக்கு; self-importance. 2. திமிர்; pride.

*[**Skt.** ahaṃ+bhirama>த. அகம்பிரமம்.]*

அகம்பிரமவாதி *agam-pirama-vādi*, பெ.(n.) தானே கடவுளென (பிரமமென்று) வழக்கிடுபவன் (வாதிப்பவன்); one who holds that self is Brahman, Advaitin.

*[**Skt.** aham + pirama + vādin> த. அகம்பிரமவாதி.]*

அகம்மகியாகமனம் *agammagiyākamaṉam*, பெ.(n.) 1. விலைமகளை விரும்பிச் சேர்தல்; cohabiting with a public woman or a prostitute. 2. பிறன் மனையாளைப் புணர்தல்; illicit intercourse with a married woman (சா.அக.).

*[**Skt.** a-gamya+gamana>த. அகம்மகியா கமனம்.]*

அகம்மியகை *agammiyagai*, பெ. (n.) 1. கண்டவனோடு கூடிக்கலந்தவள்; a married woman who has had illicit intercourse, an adulteress. 2. விலை மகள்; unmarried female guilty of fornication (சா.அக.).

*[**Skt.** a-gamya>த. அகம்மியகை.]*

அகம்மியம் *agammiyam*, பெ.(n.) 1. அணுகக் கூடாதது; the unapproachable, that which is not fit to be approached. 2. அறியக் கூடாதது; the inconceivable, incomprehensible. *"பிரத்தியக்ஷாதி பிரமாண சதுட்டயங்களிலும் அகம்மிய மாதலாலே" (சி.சி. அளவை 1, சிவாக்.).* 3. ஒரு பேரெண் (பிங்.); the thousand quintillions.

*[**Skt.** a-gamya>த. அகம்மியம்.]*

அகம்மியா *agammiyā*, பெ.(n.) விலைமகள்; a prostitute, a harlot.

*[**Skt.** a-gamyagā>த. அகம்மியா.]*

அகம்மியாகமனம் *agammiyā-kamaṉam*, பெ.(n.) தகுதியற்றவளோடு புணர்கை; intercourse with a woman who is not fit to be approached. *"அகம்மியாக மணஞ்செய்து பிராயச்சித்தஞ் செய்து சுத்தரானாரையும்" (கல்.).*

[அகம்மியா + கமனம்.]

*[**Skt.** a - gamyā>த. அகம்மியா.]*

கம் → கமனம்.

அகம்மியாகமனன் *agammiyāgamaṉaṉ*, பெ. (n.) 1. கெடுமதியன் (தூர்த்தன்); he who commits lewd acts, a fornicator. 2. பிறனில் விழைவோன்; an adulterer.

[Skt. a - gamyā → த. அகம்மியா.]

கம் → கமனம் → கமனன்.

அகம்மியை[1] *agammiyai*, பெ.(n.) பொதுமகள் (வின்.); harlot.

[Skt. a-gamyā>த. அகம்மியை.]

அகம்மியை[2] *agammiyai*, பெ.(n.) **அகம்மியா** பார்க்க; see *agammiyā*.

அகமம் *agamam*, பெ.(n.) மரம் (உரி.நி.); tree.

[Skt. agama>த. அகமம்.]

அகமருடணபாதாளயோகம் *agama-ruḍaṇa-pādāḷa-yōgam*, பெ. (n.) ஒக விருக்கை வகையு ளொன்று; a *yōga*. *"மானெசதடாகத்தில் அகமருஷணபாதாள யோகம் பண்ணின துர்வாசர்" (தக்கயாகப் 552, உரை.).*

[Skt. aghamarṣaṇa + pātāla + yōgā> த. அகமருடணபாதாளயோகம்.]

அகமருடணம் *agamaruḍaṇam*, பெ.(n.) 1. மறை மந்திரத்தின் வகை; name of particular vedic hymn, as sin-effacing. 2. அகமருடண மந்திரம் கூறிச் செய்யும் நீராடல்; ablution holding the right hand containing water up to the nose while repeating the above vedic hymn.

[Skt. aghamarṣaṇa>த. அகமருடணம்.]

அகமன் *agamaṉ*, பெ. (n.) 1. ஒருவகை விலையுயர்ந்த கல்; a kind of precious stone. 2. இடி; thounder boll. 3. முகில்; cloud. 4. இரும்பு; iron (சா.அக.).

[Skt. a-gama>த. அகமன்.]

அகமனம் *agamaṉam*, பெ.(n.) பெண்ணின்பம் பெறாதவன்; abstinence from sexual intercourses (சா.அக.).

[Skt. a-gamana>த. அகமனம்.]

அகமனி *agamaṉi*, பெ.(n.) 1. திருமணமாகாதவன்; a confirmed bachelor, a celibate. 2. வான்வழிச் செல்லும் ஆற்றலில்லாதவன்; one who is incapable of travelling in the aerial regions as opposed to *gamaṉi* (சா.அக.).

[Skt. a-gamana>த. அகமனி.]

அகமார்க்கம் *aga-mārkkam*, பெ. (n.) 1. அருமையிற்பாடல் (பிங்.); a high style of singing, difficult to attain. 2. முக்குணம் பற்றிவரும் மெய்க்கூத்து (சிலப். 3, 12, உரை); exposition, by gesture and dancing, of three *guṇas*, viz. sattva, rajas, tamas.

[Skt. agha + mārga>த. அகமார்க்கம்.]

அகமாலிகம் *aga-māligam*, பெ. (n.) கருங்குமிழ் மரம் (சித். அக.); black coom teak.

அகமிந்திரம் *agamindiram*, பெ. (n.) (Jaina.) **அகமிந்திரலோகம்** பார்க்க; see *agamindira-lōgam*, *"அருகன துருவ மில்லா ரகமிந்திரத்துட் டோன்றார்"* (மேருமந். 75.).

[Skt. ahaṃ-indra>த. அகமிந்திரம்.]

[வேந்தன் → இந்தன் → இந்தர் → இந்திரன் > Skt. indra.]

அகமிந்திரலோகம் *agam-indira-lōgam*, பெ.(n.) வானுலுகத்தி லொன்று (திருக்கலம். 6, உரை.); (Jaina.) a celestial region.

[Skt. ahaṃ+indra+lōka>த. அகமிந்திர லோகம்.]

[உலவு → உலகு>Skt. lōka>த. லோகம்.]

அகர்க்கணனம் *agar-k-kaṇaṉam*, பெ. (n.) கலியூழி தொடங்கிக் குறித்த காலம் வரை கணித்தெடுத்த, மொத்த எண்; (Astron.) total number of days calculated from the beginning of the kali-y-uga until a certain period.

[அகர் + கணனம்.]

[Skt. ahar>த. அக(ர்).]

கண்→கணம்→கணனம்.

அகர்ணகம் *agarṇagam*, பெ.(n.) **அகர்ணம்** பார்க்க; see *agarṇam* (சா.அக.).

அகர்ணம் *agarṇam*, பெ.(n.) 1. காதின்மை; lack of ears, absence of ears. 2. காது கேளாமை; thickness of hearing, defect in the power of hearing. 3. செவிடு; lack or loss complete or partial of the sense of hearing.

[Skt. aghar>த. அகர்ணம்.]

அகர்த்தவியம் *a-garttaviyam*, பெ. (n.) செய்யத்தகாதது; that which ought not to be done. *"கர்த்தவிய வகர்த்தவிய விடய மாயினவால்"* (சூத. எக்கி. பூ. 10, 20).

[Skt. a-kartavya>த. அகர்த்தவியம்.]

அகர்த்தா *a-karttā*, பெ.(n.) செயற்பாடற்றவன்; one who is not agent. *"பிரஹ்மவித் தானவன் கர்மத்தில் அகர்த்தா என்னும் புத்தியால்"* (விசாரசா.).

[Skt. a-kartā>த. அகர்த்தா.]

அகர்த்திருவாதம் *a-garttiru-vādam*, பெ.(n.) படைத்தவன் இல்லை என்னும் தருக்கம் (சி.சி. பர. சௌத்.–1, உரை.); system of thought which denies the existence of a creator.

[Skt. a-kartr+vāda>த. அகர்த்திருவாதம்.]

அகர்நாதன் *agarnādaṉ*, பெ.(n.) பகலவன்; ruler of the day i.e., the sun.

[Skt. a-kar-nātha>த.அகர்நாதன்.]

அகர்மகர்த்தரிப்பிரயோகம் *agarmagarttari-p-pirayōgam*, பெ.(n.) செயப்படு பொருள் குன்றிய வினை (வின்.); (gram.) intransitive use of a verb.

[Skt. a - karma - kartari + prayōga> த. அகர்மகர்த்திரிப்பிரயோகம்.]

அகர்முகம் *agarmugam*, பெ. (n.) வைகறை; early dawn. *"அகர் முகமப் பாடுநர்க்கு"*. (தைலவ. பாயி. 53.).

[அகர்+முகம்.]

[Skt. ahan> த. அகர்.]

அகரக்களங்கு *agara-k-kaḷaṅgu*, பெ.(n.) தூய்மையற்ற இதளியம்; an impure oxide of mercury (சா.அக.).

[அகர(ம்)+களங்கு.]

[Skt. agar> த.அகரம்.]

அகரகாயம் *agarakāyam*, பெ. (n.) உடம்பின் முன் பக்கம்; the fore or front part of the body (சா.அக.).

[Skt. agara+kāya>த. அகரகாயம்.]

அகரத்திரவம் *agarattiravam*, பெ. (n.) பால், தயிர் ஆகியவற்றின் ஏடு; the thin upper part of standing milk or curd (சா.அக.).

அகரநீர் *agara-nīr*, பெ.(n.) முத்துச்சிப்பியின் நடுவிலிருக்கும் நீர்; the water deposited in the centre of a pearl (சா.அக.).

[அகர(ம்) + நீர்]

[Skt. agara>த. அகர(ம்).]

அகரபரணி *agaraparaṇi*, பெ. (n.) பூனைக்காலி; a plant, cow-hage or cat-bean (சா.அக.).

அகரபாதம் *agarabādam*, பெ.(n.) பாதத்தின் முற்பகுதி; the fore part of the foot (சா.அக.).

[அகர(ம்) + பாதம்.]

[Skt. ahara>த. அகர(ம்).]

பதி → பதம் → பாதம்.

அகரராசசம் *agara-rāšašam*, பெ.(n.) சிவதை; a herb, Indian rhubarb (சா.அக.).

அகரி *agari*, பெ.(n) ஒருவகைப் புல்; a kind of grass (சா.அக.).

அகரிடணம் *agariḍaṇam a*, பெ.(n.) 1. வெறுப்பு; dislike, 2. வருத்தம்; sorrow.

[Skt. a-harṣaṇa>த.அகரிடணம்.]

அகருதம் *agarudam*, பெ.(n.) வீற்றிருக்கை (சிந்தா. நி. 13.); sitting in state.

[Skt. agaru>த. அகருதம்.]

அகருமகம் *agarumagam*, பெ.(n.) செயப்படு பொருள் குன்றிய வினை (வீரசோ. தாது. 2. உரை.); intransitive verb.

[Skt. a-kar-maka>த. அகருமகம்.]

அகல்லியமாமிசம் *agalliya-māmišam*, பெ.(n.) சமைக்கப்படாத இறைச்சி, பச்சூன் (சி.சி. பர. சௌத். 29, வேலப்); meat not dressed.

[Skt. a-kalya+māmisa>த. அகல்லியமாமிசம்.]

அகலசத்து *agalašattu*, பெ.(n.) மலைச்சத்து, சிலாத்து ஒரு துணைத் தாதுப் பொருள்; fossil-exudation stonelack supposed to issue from stones of mountains is hot weather (சா.அக.).

[Skt. agal-šat>த. அகலசத்து.]

அகலமுனி *agalamuṉi*, பெ.(n.) ஆடுதின்னாப் பாளை; a plant which even the goat will not eat (சா.அக.).



அகலாதரை *agalādarai*, பெ. (n.) ஆடாதோடை; a plant winter cherry (சா. அக.).

அகலிகை *agaligai*, பெ. (n.) கவுதமன் மனைவி; Ahalya, wife of Gaudama, one of *pañša-kaṉṉiyar*, q.v. *"அகலிமெய்க் கேள்வன்"* (நல். *பாரத கிருட்டிணார்ச்சுன. 99).*

[Skt. agalyā>த. அகலிகை.]

அகலியை *agaliyai*, பெ.(n.) **அகலிகை** பார்க்க; see *agaligai*

[Skt. ahalyā>த.அகலியை.]

அகவஞ்சம் *agavañjam*, பெ.(n.) வெள்ளி; silver (சா.அக.).

அகவாசிகம் *agavāšigam*, பெ. (n.) கருங்குறிஞ்சா; a black variety of *kuriñja*, a plant (சா.அக.).

அகவாலிசுரோதம் *agavāli-šurōdam*, பெ. (n.) வால் நீண்ட குரங்கு; a long-tailed monkey (சா.அக.).

அகவான் *agavāṉ*, பெ.(n.) முதலாளிக்கு நிகராகச் செயல்படுபவன்; a agency. *"நேரிருந்து சீமையகவா னிகழ்த்த"* (பஞ்ச. *திருமு. 2164.).*

[H. agawānī>த. அகவான்.]

அகற்பப்பிராணாயாமம் *agaṟpa-p-pirāṇāyāmam*, பெ. (n.) மந்திரச் சடங்குகளின்றி உயிர்ப்பினை ஒழுங்கு படுத்தும் ஓகவகை; restraint of breath practised without the use of mantras or meditation.

[Skt. a - kalpa + pirāṇāyama > த. அகற்பப்பிராணாயாமம்.]

அகற்பவிபூதி *a-kaṟpa-vibūdi*, பெ. (n.) இயற்கையிலுண்டான திருநீறு (சைவச. பொது. 186, உரை.); sacred ashes found in nature.

[Skt. a-kalpa+vibhūdi>த. அகற்பவிபூதி.]

[புழுதி→பூதி> Skt. vi-bhūdi.]

அகற்பன் *a-kaṟpaṉ*, பெ.(n.) ஒப்பில்லாதவன்; one who is incomparable. *"கற்பவர்க ணற்புலனில் நிற்புறு மகற்பா"* (சேதுபு. சருவதீ. *27.).*

த.வ. ஒப்பிலி.

[Skt. a-kalpa>த. அகற்பன்.]

அகற்பிதமரணம் *agaṟpida-maraṇam*, பெ.(n.) முதிரா இறப்பு; death occuring before the prescribed time, unnature death.

[அகற்பித(ம்)+மரணம்.]

[Skt. a-kalpita>த. அகற்பிதம்.]

அகன்மகம் *agaṉ-magam*, பெ.(n.) செயப்படு பொருள் குன்றிய வினை (பி.வி. 35, உரை.); intransitive verb.

[Skt. a-karmaka>த. அகன்மகம்.]

அகன்னம் *agaṉṉam*, பெ.(n.) செவிடு; deafness (சா.அக.).

அகன்னியகனி *agaṉṉi-y-agaṉi*, வி.அ. (adv.) நாடொறும்; daily, from day to day.

[Skt. ahani+ahani>த. அகன்னியகனி.]

அகன்னியசனி *agaṉṉiyašaṉi*, பெ.(n.) நாளுக்கு நாள்; from day to day (சா.அக.).

அகத்தியநட்சத்திரம் *agattiya-naṭšattiram*, பெ.(n.) அகத்திய விண்மீன்; the star canopus.

அகாடி *agāḍi*, பெ.(n.) 1. முன்; front. 2. குதிரை முன்னங்காற் கயிறு(வின்.); rope used for tying a horse's fore-feet.

[U. agāri>த. அகாடி.]

அகாடிபிச்சாடியில்லாதவன் *agāḍi-piccāḍi-y-illādavaṉ*, பெ.(n.) கட்டுக்கடங்காதவன் (இ.வ.); person free from all resonsibility, as a horse bound neither before nor behind.

[அகாடிபிச்சாடி + இல்லாதவன்.]

[U.agāri+pichwāre>த.அகாடிபிச்சாடி.]

அகாண்டகுசுமம் *agāṇḍa-kušumam*, பெ. (n.) பருவந் தவறிப் பூக்கை; blossoming out of season (சா.அக.).

[அகாண்டம் + குசுமம்.]

[Skt. a-gānta>த.அகாண்ட(ம்).]

அகாண்டசாதம் *agāṇḍa-šādam*, பெ.(n.) குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே பிறந்தது; premature birth (சா.அக.).

[Skt. a-gānta+jāta>த.அகாண்டசாதம்.]

அகாண்டசூலை *agāṇḍa-šūlai*, பெ.(n.) குத்தல் வலி; acute pain (சா.அக.).

[அகாண்டம் + சூலை.]

[Skt. a-gāṇṭa>த. அகாண்டம்.]

[த.சூலை>Skt. sūla.]

அகாண்டபாதசாதம் *agāṇḍa-pādašādam*, பெ.(n.) பிறந்தவுடன் இறத்தல்; dying soon after birth (சா.அக.).

[Skt. akāṇḍa+pāta+jāta>த. அகாண்ட பாதசாதம்.]

அகாண்டபாதம் *agāṇḍa-pādam*, பெ.(n.) இயற்கைக்கு மாறான நிகழ்ச்சி; unnatural or untimely occurence (சா.அக.).

[Skt. akāṇḍa+pāta>த. அகாண்டபாதம்.]

அகாண்டம் *agāṇḍam*, பெ.(n.) 1. இசையாக் காலம்; out of season before the natural time. 2. முண்டமில்லாதது; that without a trunk (சா.அக.).

[Skt. akāṇḍa>த. அகாண்டம்.]

அகாத்தியம்[1] *agāttiyam*, பெ.(n.) 1. பொல்லாங்கு; wickedness. 2. ஏய்ப்பு வஞ்சகம்; deceit.

[Skt. aghātya>த. அகாத்தியம்.]

அகாத்தியம்[2] *agāttiyam*, பெ.(n.) கடித்துண்ணத் தகாதது; that which is not fit for chewing (சா.அக.).

அகாதசுரம் *agāda-šuram*, பெ. (n.) அளவிறந்த காய்ச்சல்; a condition marked by excessively high temperature or aggravated febrile symptoms, hyperpyretia (சா.அக.).

[அகாதம் + சுரம்.]

[Skt. a-gadha>த. அகாத(ம்).]

அகாதநோய் *agāda-nōy*, பெ.(n.) கடுமையான நோய்; a virulent disease (சா.அக.).

[அகாத(ம்) + நோய்.]

[Skt. a-gādha>த. அகாதம்.]

அகாதப்படுஞ்சமயம் *agāda-p-paduñ-šamayam*, பெ.(n.) துன்பக்காலம் (வின்); times of adversity.

[அகாதம் + படுஞ்சமயம்.]

[Skt. a-gādha>த. அகாத(ம்).]

அகாதப்புளிப்பு *agāda-p-pulippu*, பெ. (n.) கூடுதற் புளிப்பு; excess of acidity, *hyperacidity* (சா.அக.).

[அகாதம் + புளிப்பு.]

[Skt. a-gadha>த. அகாதம்.]

அகாதபசி *agāda-paśi*, பெ. (n.) அளவிறந்த பசி; extreme hunger, *hyperorexia* (சா.அக.).

த.வ. யானைப்பசி.

[அகாதம் + பசி.]

[Skt. a-gādha>த. அகாத(ம்).]

அகாதபித்தம் *agāda-pittam*, பெ. (n.) கொடிய பித்தம்; excessive secretion of bile, *hypercholia* (சா.அக.).

[அகாதம் + பித்தம்.]

[Skt. a-gādha>த. அகாத(ம்).]

பித்து → பித்தம்.

அகாதம்[1] *agādam*, பெ.(n.) 1. மிக்க ஆழம் (அஷ்டப். அழகரந். 15.); great depth. 2. நீந்துபுனல் (பிங்.); water of swimming depth. 3. மிகுதி; excess.

[Skt. a-gādha>த. அகாதம்.]

அகாதம்[2] *agādam*, பெ.(n.) தேவகணத்தால் வெட்டப்பட்ட குளம் (நாநார்த்த); tank formed by divine agency.

[Skt. a-gādha>த. அகாதம்.]

அகாதவலி *agāda-vali*, பெ.(n.) 1. தாங்க வொண்ணா மிகு வலி; excessive sensibility to pain, *hyperadigesia*. 2. ஆழ்ந்த வலி; deep seated pain (சா.அக.).

[அகாத(ம்) + வலி.]

[Skt. a-gādha>த. அகாத(ம்).]

அகாதவியர்வை *agāda-viyarvai*, பெ. (n.) விட்டொழியா வியர்வை; excessive sweating, *Hyperphidrosis* (சா.அக.).

[அகாத(ம்) + வியர்வை.]

[Skt. a-gādha>த. அகாத(ம்).]

வியர்→ வியர்வை.

அகாதவுதிரம் *agāda-v-udiram*, பெ. (n.) 1. மிகுதியான குருதி; vast quantity of blood, *Polyemia*. 2. அளவிறந்த குருதி; superabundance of blood, *Plethora* (சா.அக.).

[Skt. a-gādha+ udhira>த. அகாதவுதிரம்.]

அகாதவொழுக்கு *agāda-v-olukku*, பெ.(n.) அளவிறந்த அரத்தப்போக்கு; excessive evacuation as in bleeding or purging, *hypercenosis* (சா.அக.).

[அகாதம் + ஒழுக்கு.]

[Skt. a-gādha>த. அகாத(ம்).]

ஒழு→ஒழுகு→ஒழுக்கு.

அகாதன் *agādan*, பெ. (n.) வஞ்சகன் (யாழ்.அக.); deceit full man.

த.வ. கேடன்.

[Skt. a-gādha>த. அகாதன்.]

அகாதிகள் *agādigal*, பெ.(n.) முத்திப்பேறு, முத்திச் செயல்; (Jaina.) unobstuctive karmas helpful in emancipation, four in number. *"தீர்ப்ப தகாதிகள்" (திருநூற். 88.).*

[Skt. a-ghātin>த. அகாதிகள்.]

அகாதிதகம் *agādidagam*, பெ.(n.) 1. கடித்துத் தின்னக் கூடாதது; that which can only be swallowed and not masticated. 2. **அகாத்தியம்[2]** பார்க்க; see *agāttiyam[2]*.

அகாமவினை *agāmavinai*, பெ.(n.) விரும்பாமலே செய்யும் தொழில்; unintentional action. *"கிருகபதி யகாம வினையினுக்குப் பரிகாரம் பகர்ந்திடுவர்" (சிவதரு.பரிகார–2).*

அகாரணம்[1] *agāranam*, பெ.(n.) நேர்ச்சி (தற்செயல்) (வின்.); accident.

[Skt. a-kārana>த. அகாரணம்.]

அகாரணம்[2] *a-gāranam*, பெ. (n.) காரணமின்மை; absence of cause. *"அகாரணத் தெதிர்த்தீர்" (காஞ்சிப்பு. தக்கீச.12.).*

[Skt. a-kārana>த. அகாரணம்.]

அகாரணமாக *agāraṇam-āga*, கு.வி.எ.(adv.) கரணியமின்றி; without proper reason. *அகாரணமாகச் சந்தேகப்பட்டுக் காரியத்தை கெடுத்துவிடாதே (இ.வ.).*

[அகாரணம் + ஆக.]

*[**Skt.** a-kārana> த. அகாரணம்]*

அகாரணன் *a-gāraṇaṉ*, பெ.(n.) கடவுள்; god, as uncaused.

*[**Skt.** a-kāraṇa>த. அகாரணன்.]*

அகாரம் *agāram*, பெ.(n.) வீடு(பிங்.); house.

*[**Skt.** agāra>த. அகாரம்.]*

அகாரி *agāri*, பெ.(n.) கடவுள்(வின்); god.

*[**Skt.** a-kārin>த. அகாரி.]*

அகாரியம் *a-gāriyam*, பெ.(n.) தகாத செய்கை; improper act, unworthy deed, criminal or sinful action. *"நாவகாரியஞ் சொல்லிலாதவர்" (திவ். பெரியாழ், 4, 4,1.).*

த.வ. தீச்செயல்.

*[**Skt.** a-kārya>த. அகாரியம்.]*

அகாருண்யம் *agāruṇyam*, பெ. (n.) அருளின்மை (மேருமந்.97, உரை.); mercilessness.

த.வ. இரக்கமின்மை.

*[**Skt.** a-kāruṇya>த. அகாருண்யம்.]*

அகி[1] *agi*, பெ.(n.) பாம்பு; snake. *"கடி யகிப்பிணி தீர்ந்ததன்பின்" (சேதுபு. இராமனருச்.30.).*

*[**Skt.** ahi>த. அகி.]*

அகி[2] *agi*, பெ.(n.) 1. ஈயம்; lead plumbum. 2. ஒருவகை மரம்; a kind of tree. 3. கதிரவன்; the sun (சா.அக.).

அகிகண்டம் *agi-kaṇḍam*, பெ. (n.) மயிர்மாணிக்கம்; wild fenugreeks-sider rhombifolia (சா.அக.).



அகிகாந்தம் *agi-gāndam*, பெ.(n.) 1. காற்று; wind, air. 2. ஞாயிறு (சூரிய)காந்தம்; sun *stone-Jasper* (சா.அக.).

அகிகை *agigai*, பெ.(n.) 1. இலவமரம்; silk-cotton tree, *Bombax Malabricum*. 2. பட்டுப்பருத்தி (இலவம் பஞ்சு); silk-cotton, *Bombax pentan drum* (சா.அக.).



அகிகோசம் *agi-kōšam*, பெ.(n.) பாம்புச் சட்டை; the slough or cast-off skin of a snake (சா.அக.).

[அகி+கோசம்.]

*[**Skt.** ahi>த. அகி.]*

[கோயம்→ கோசம்.]

அகிச்சத்திரம் *agi-c-cattiram*, பெ.(n.) 1. ஒருவகை நஞ்சு; a kind of vegetable poison. 2. ஒருவகை பூடு; a plant, *Odina pennata* (சா.அக.).

அகிஞ்சனன் *agiñjaṉaṉ*, பெ.(n.) ஆதரவு இல்லாதோன்; destitute-person.

த.வ. ஏதிலி.

[Skt. a-kiñcana>த. அகிஞ்சனன்.]

அகிஞ்சிரம் *agiñjiram*, பெ.(n.) 1. செங்கத்திரி; caper shrupcapparis sepiaris alias cactas opimtia. 2. கருக்குவாளி; the plant *Momordica Cochin-chinesis* (சா.அக.).

அகிஞ்சை *agiñjai*, பெ.(n.) 1. கொல்லாமை; abstinence from killing. 2. துன்பமின்மை; harmlessness (சா.அக.)

[Skt. a-hiṃsā>த. அகிஞ்சை.]

அகிதம்[1] *agidam*, பெ.(n.) 1. உணவு; food. 2. நன்மை இல்லாதது; that which is not conformable to a standard of taste. 3. தீமை; evil. *"அகித மொருவர்க்கு மெண்ணிலாதோர்" (திருவேங்.சத. 87.).* 4. (இதம்) இன்மை; unpleasantness.

[Skt. a-hita>த. அகிதம்.]

அகிதம்[2] *agidam*, பெ.(n.) 1. பகை; hostility. 2. உரிமையின்மை; absence of right or claim.

[Skt. a-hita>த. அகிதம்.]

அகிதம்[3] *agidam*, பெ.(n.) 1. தகாதது (தாயு.எங்கு நிறை.1); that which is unfit, unsuitable. 2. இடையூறு; obstruction. *"இந்தத் தன்மத்துக்கு அகிதம் பண்ணினவன்" (S.II.ii, 499.).*

[Skt. a-hita > த. அகிதம்.]

அகிதலம் *agi-talam*, பெ. (n.) கீழுலகம்; serpant world in the nither regions. *"அகிதல வரவினது" (இரகு. யாகப். 79.).*

[அகி + தலம்.]

[Skt. ahi>த. அகி.]

தளம்→தலம்.

அகிதன் *agidaṉ*, பெ.(n.) பகைவன் (யாழ்.அக.); foe, enemy.

[Skt. a-hita>த. அகிதன்.]

அகிதுண்டிகன் *agituṇḍigaṉ*, பெ. (n.) பாம்பாட்டி; a snake charmer; a snake exhibitior (சா.அக.).



அகிநிர்வலயோனி *agi-nirvala-yōṉi*, பெ. (n.) **அகிகோசம்** பார்க்க; see *agi-kōšam* (சா. அக.).

அகிபதி *agi-padi*, பெ. (n.) 1. ஆதிசேடன்; *ādišēsaṉ*. *"அகிபதியாயிர தலையா லரிதாகப் பொறுக்கின்ற" (பெருந்தொ.392).* 2. பெரும்பாம்பு, பாம்புக்கரசன்; a big snakes, a king of snakes.

[Skt. ahi + pati>த.அகிபதி.]

அகிபுக்கு *agi-bukku*, பெ.(n.) 1. கீரி; a mungoase, *Herpestes Mungo*. 2. மயில்; the pea-cock-pavocristatus. 3. (கருடன்) கலுழன்; the Brahminy kite, *Haliastur indicus*.



அகிபுசம் *agi-pušam*, பெ.(n.) 1. கலுழன்; the Brahminy kite, *Haliastar indicus*. 2. மயில்; the peacock, *Pavo-Cristatus*. 3. கந்த நாகுலி; the inchneumon plant, *Vanda roxburghi* (சா.அக.).

அகிபுட்பம் *agi-puṭpam*, பெ.(n.) நாகேசுரப்பூடு; a plant, ceylon ironwood, *Mesaca roxburghi* (சா.அக.).

அகிபூதனம் *agi-būdaṉam*, பெ. (n.) குழந்தைகட்கு எருவாயிலண்டை சேரும் கழிமாசு மற்றும் சிறுநீர் முதலானவற்றை, அடிக்கடி தூய்மைப் படுத்தாமையால், அவ்விடத்தில் தினவுடன் குருக்கள் கண்டு பின்னர் பாம்பைப் போல் சட்டை கழற்றித் துன்புறுத்துமொரு தோல் நோய்; itch-like eruptions appeating about the anus in children and resulting in sloughing, owing to the deposit of urine, perspiration, faeces etc. consequent on the neglect in cleansing that part (சா.அக.).

அகிபேனம் *agi-bēṉam*, பெ. (n.) 1. பாம்பின் நஞ்சு; saliva of the snake; the snake poison. 2. கசகசாச் செடியின் பால்; opium, *Papaver Somniferam* (சா.அக.).

அகிம்சை *agimšai* பெ.(n.) தீங்கு செய்வதிலிருந்தும் வன்முறையில் ஈடுபடுவதிலிருந்தும் நீங்கிய நிலை; non-violence.

*[**Skt.** a-himsā>த. அகிம்சை.]*

அகிமாறல் *agimāṟal*, பெ.(n.) வெள்வேல் (பச்.மு.); panicled babool.

அகிர்ப்புத்தினி *agir-p-puttiṉi*, பெ.(n.) இரவு 15 முழுத்தத்தில் மூன்றாவது (விதான குணா. 73, உரை); (Astrol.) the third of 15 divisions of night.

*[**Skt.** ahir-budhnya>த. அகிர்ப்புத்தினி.]*

அகிரிபு *agiribu*, பெ. (n.) **அகிபுக்கு** பார்க்க; see *agibukku* (சா.அக.).

அகிருத்தியம் *agiruttiyam*, பெ. (n.) தவறான செய்கை; illegal action as rape, adultery etc. (சா.அக.).

*[**Skt.** a-hṛtya>த. அகிருத்தியம்.]*

அகிருத்திரமவிடம் *agiruttiramaviḍam*, பெ. (n.) மரம், புல், பூண்டு முதலான நிலத்திணைப் பொருள்களினாலும், நஞ்சு முதலிய தாதுக்களினாலும், தேள், பாம்பு, சிலந்தி முதலிய நச்சுயிர்களின் சேர்க்கைனாலும் ஏற்படும் கொடிய நோய்; diseases arising indirectly from the vegetables, mineral and animal poisons, is opposed to. கிருத்திரமவிடம் - poisons imported into the system directly by mixing it with other substances (சா.அக.).

அகிரை *agirai*, பெ. (n.) 1. குரலடைப்பு; obstruction to the place of production of the voice. 2. குரலின்மை; voicelessness due to some perpheral lesion aphonia (சா.அக.).

*[**Skt.** a-hir>த. அகிரை.]*

அகில *agila*, கு.பெ.அ.(adj.) நாடு அல்லது உலகுதழுவிய; all. *அகில இந்தியத் தொழிளாளர் சங்கம் (இக்.வ.). அகில இந்திய வானொலி; அகில உலகப் புகழ் (இ.வ.).*

*[**Skt.** a-kila> த. அகில.]*

அகிலகலாவல்லி *agila-kalā-valli*, பெ. (n.) கலைமகள் (தக்கயாகப். 220); *Kalaimagaḷ.*

[அகிலகலா+வல்லி.]

*[**Skt.** akhila+kalā>த. அகிலகலா.]*

கலை > **Skt.** kalā.

அகிலசரீரம் *agila-šarīram*, பெ. (n.) 1. உடம்பின் முழுபாகம்; the body as a whole. 2. எல்லாச் சிற்றுயிர்களின் உடம்பு; bodies of all creatures in general (சா.அக.).

[Skt. a-kila+šarīra>த. அகிலசரீரம்.]

அகிலதம் *agiladam*, பெ. (n.) வெற்றிலைக் கொடி; the betel plant or creeper (சா.அக.).

அகிலப்பிரகாசன் *agila-p-piragā-šan*, பெ. (n.) எங்கும் விளங்கும் புகழுடையவன்; one whose fame is world-wide. *"அகிலப்பிரகாசன் திம்மையவப்பையன்" (பெருந்தொ. 1251.)*

[Skt. akhila + pra - kāša>த. அகிலப் பிரகாசன்.]

அகிலம்[1] *agilam*, பெ.(n.) 1. எல்லாம், முழுவதும் (திவா.); all; the whole 2. உலகு; earthy; 3. உலகம் முழுதும்; universe or entire world. *"அகிலத்துள்ளதோர் கணங்களும்" (கந்தபு. பார்ப்.9) அகிலம் அறிந்த செய்தி (இக்.வ.) அவர் புகழ் அகிலம் எங்கும் பரவிற்று(இ.வ.).*

[Skt. a-khila>த. அகிலம்.]

அகிலம்[2] *agilam*, பெ.(n.) 1. நிலம்; earth. *"எந்தைதன் னேவலா லகிலந் துறந்தவாறென" (இரகு. சிதைவ. 72).* 2. நீர் (பிங்.); water.

[Skt. a-khila>த. அகிலம்.]

அகிலமேதகி *agila-mēdagi*, பெ.(n.) சிறுகாஞ்சொறி (சித்.அக); small climbing nettle.

அகிலரூபன் *agila-rūban*, பெ.(n.) கடவுள்; god, as assuming all forms.

[Skt. akhila+rūpan>த. அகிலரூபன்.]

அகிலாண்டகோடி *agilāṇḍa-kōḍi*, பெ.(n.) எண்ணிறந்த உலகங்கள்; innumerable worlds. *"அகிலாண்ட கோடியெல்லாம்" (தாயு. திருவருள்விலா.).*

[அகிலாண்டம் +கோடி]

[Skt. akhila + aṇḍa>த. அகிலாண்டம்.]

அகிலாண்டநாயகி *agilāṇḍa-nāyagi*, பெ. (n.) மலைமகள் (தக்கயாகப். 613); Malaimagaḷ.

[அகிலாண்டம் + நாயகி]

[Skt. akhila + aṇḍa>த. அகிலாண்டம்.]

அகிலாண்டம் *agilāṇḍam*, பெ. (n.) அனைத்துலகம் (வின்.); the whole universe.

[Skt. akhil-āṇḍa>த. அகிலாண்டம்.]

அகிலோலிகம் *agilō-ligam*, பெ.(n.) **அகிலதம்** பார்க்க; see *agiladam* (சா. அக.).

அகிவிடபாகம் *agivida-bāgam*, பெ.(n.) 1. பாம்பின் நஞ்சிறக்கல்; neutralising the poison of snake. 2. கந்தநாகுலி; the chneumon plant, *Vandaro-burghil* (சா.அக.).

அகிவைரி *agivairi*, பெ. (n.) 1. பாம்பின் பகைவன் (சத்துரு), மயில்; a peacock Pavo-cristatus. 2. கருடன்; the Brahmini kite, *halidstur inducus* (சா.அக.).

[Skt. ahi+vairin>த. அகிவைரி.]

அகீம் *agīm*, பெ.(n.) அரபு, பாரசீக மருத்துவ நூல்களில் தேர்ச்சியடைந்த உனானி மருத்துவன்; a physician who is well acquainted with Persian and Arabic system of medicines (சா.அக.).

[U. ahaq>த. அகீம்.]

அகுசலவேதனை *agušala-vēdanai*, பெ.(n.) வருத்த (துக்க)வுணர்ச்சி; experience of sorrow.

[Skt. a-kušala + vēdanā>த. அகுசல வேதனை.]

அகுசுமாதிதம் *agušu-mādidam*, பெ. (n.) சிவப்புக் குண்டுமிளகாய்; a variety of red chilly (சா. அக.).

அகுசுலாபு *agušulābu*, பெ. (n.) அதிவிடயம்; a medicinal root used in dysentery. Indian atees, *Aconitam Heterophyllum* (சா.அக.).

அகுசுளாபு *agusulābu*, பெ.(n.) 1. அதிவிடை (சங்.அக); atis. 2. **அகுசுலாபு** பார்க்க; see *agušulābu.*

அகுடகந்தம் *aguḍa-kandam*, பெ.(n.) பெருங்காயம்; asafoetida, *Ferula asfoeida* (சா.அக.).

அகுடாரிசம் *aguḍārišam*, பெ. (n.) கருங்குங்கிலியம்; black dammer, *canarium strictum* (சா.அக.).

[Skt. agaru > த. அகுடாரிசம்.]

அகுதார் *agudār*, பெ. (n.) உரிமையாளி; holder of a right. one in whom any property, perquisite or privilege is vested.

[U. haq-dār>த. அகுதார்.]

அகுதி *agudi*, பெ. (n.) ஏதிலி; destitute, helpless person *"அகுதியிவ டலையின்விதி, யானாலும் விலகரிது" (திருப்பு. 142.).*

த.வ. திக்கற்றவன்.

[Skt. a-gati>த. அகுதி.]

அகுப்பியகம் *aguppiyagam*, பெ. (n.) **அகுப்பியம்** பார்க்க; see *aguppiyam*(சா.அக.).

அகுப்பியம் *aguppiyam*, பெ.(n.) பொன் அல்லது வெள்ளி; not a base metal but gold or silver (சா.அக.).

அகுயலம் *aguyalam*, பெ. (n.) தீமையாயுள்ளது; that which is bad or inauspicious. *"குயலாகுயலம்மெனக் கூறும் வினை" (நீலகேசி, 490).*

[Skt. a-kušala>த. அகுயலம்.]

அகுர் *agur*, பெ.(n.) **அகுரா** பார்க்க; see *agurā* (சா.அக.).

[Skt. a-hir>த. அகுர்.]

அகுரம் *aguram*, பெ. (n.) வயிற்றுத் தீ; fire in the stomach, *Gastric fire* (சா.அக.).

[Skt. a-hir>த. அகுரம்.]

அகுரா *agurā*, பெ.(n.) மோதிரக்கண்ணி; a rambling shrub 10-15 ft. (சா.அக.).

[Skt. a-hir>த. அகுரா.]

அகுள் *agu!*, பெ.(n.) அலைதாடி (களகம்பள)த்தோல்; the excrescense of a goat's neck (சா.அக.).

அகுளிநாதன் *aguḷi-nādaṉ*, பெ. (n.) ஒன்பான் (நவநாத) சித்தருளொருவர்; one of the nine original Siddhars (சா.அக.).

அகூடகந்தகம் *agūḍa-kandagam*, பெ. (n.) பெருங்காயம் (வை.மூ); asafoetida, *Ferula Asafoetida* (சா.அக.).

அகூடகந்தம் *agūḍa-kandam*, பெ. (n.) **அகூடகந்தகம்** பார்க்க; *agūḍa-kandagam* (சா. அக.).

அகூபாரம் *agū-bāram*, பெ.(n.) 1. கடல் ஆமை; sea-turtle, *Che!onia*. 2. கடல்; sea. 3. கல் மலை; rock; hill (சா.அக.).



அகூபாரன் *agū-bāraṉ*, பெ.(n.) **அகூபாரம்** பார்க்க; see *agūbāram* (சா.அக.).

அகேசம் *agēšam*, பெ.(n.) 1. மொட்டை; shaven head. 2. வழுக்கை; baldness, *Alopecia*. 3. மயிரின்மை, மயிர்க்குறைவு; absence or lack of hair-atrichia (சா.அக.).

[Skt. a-kēša > த. அகேசம்.]

அகேசன் *agēśaṉ,* பெ.(n.) 1. மயிரில்லாதவன்; one who has lost the hair on the scalp, a bald headed man. 2. மொட்டையன்; one with clean shaven head (சா.அக.).

[Skt. a-kēśa> த. அகேசன்.]

அகோசரம் *agōśaram,* பெ. (n.) புலனுக்கெட்டாதது (வின்.); that which cannot be comprehended by the senses.

[Skt. a-gōcara>த. அகோசரம்.]

அகோசரிமுத்திரை *agōśari-muttirai,* பெ. (n.) செவித்துளையிரண்டினையும் பஞ்சால் அடைத்துக் கொண்டு, தலையை இருதோள்களிலும் சாய்த்துச் செவியில் உண்டாகும் ஓசையைக் கேட்டுக் கொண்டிருக்கும் ஒகவிருக்கை வேறுபாடு (யோகஞானா. 34.); (*yōga*) a *yōgic* posture in which a person stuffs both his ear-holes with cotton and inclines his head alternately towards each shoulder, listening to the sound in his ears.

[அகோசரி + முத்திரை.]

[Skt. a-gōsarin>த. அகோசரி.]

அகோத்திரம் *agōttiram,* பெ. (n.) நற்குலமின்மை (வின்); want of good ancestry.

[Skt. a-gōtra>த. அகோத்திரம்.]

அகோதாரை *agōtārai,* பெ. (n.) மிகப்பொழிகை (வின்); pouring in torrents, as rain.

த.வ. பெரும்பெய்கை.

அகோபிலம் *agōpilam,* பெ.(n.) சிங்கவேள் குன்றம் என்னுந் திருப்பதி; name of a *Vaiṣṇava* shrine in *Karnūl.* *"சொலகோபில நரசிங்கம்" (திருச்செந். பு. 18, 43.).*

[Skt. ahō-bila>த. அகோபிலம்.]

அகோரக்காய்ச்சல் *agōra-k-kāyccal,* பெ. (n.) கடுமையான காய்ச்சல்; a high fever, *Hyperpyrexia* (சா.அக.).

[அகோரம் + காய்ச்சல்.]

[Skt. a-ghōra>த. அகோரம்.]

அகோரசிவாசாரியர் *agōra-śivācāriyar,* பெ.(n.) சிவ (சைவ)பத்ததி இயற்றியவருள் ஒருவர்; name of a spiritual preceptor author of a *Śaiva* book of ritual.

[Skt. a-ghōra + śivācārya>த. அகோர சிவாசாரியர்.]

அகோரப்பசி *agōra-p-paśi,* பெ. (n.) 1. கொடிய பசி; avoracious hunger. 2. அடங்காப் பசி; a gluttonous appetitie, *Adephagia* (சா.அக.).

த.வ. பெரும்பசி, யானைப்பசி.

[அகோரம் + பசி.]

[Skt. a-ghōra>த. அகோரம்.]

அகோரப்பல்லதகி *agōra-p-palladagi,* பெ. (n.) 1. சங்கிலை; the leaf of a plant. *Monetia barlerioides.* 2. பீச்சங்கிலை; smooth volkameria, *Cleodendron inerme* (சா.அக.).

அகோரம்[1] *agōram,* பெ. (n.) 1. கொடுமை (திருநெல்.பு.சுவேத.88); fierceness, formidableness. (திருநெல்.பு.88). 2. சிவன் முகத்தொன்று (சிவதரு. பரிகார. 89); face of *Śivaṉ* which is turned southward, one of five *Śivaṉ-mugam,* q.v. 3. சிவமந்திரம் (சைவச. பொது. 324.); a *Śaiva* mantra.

த.வ. கொடுந்தோற்றம்.

[Skt. a-ghōra >த. அகோரம்.]

அகோரம்[2] *agōram,* பெ.(n.) 1. அறிவு (சி.சி. 1, 59); wisdom. 2. வெப்பம் (யாழ் அக); heat.

[Skt. a-ghōra>த. அகோரம்.]

அகோரமயமாதி *akōra-mayamādi,* பெ. (n.) உடம்பினுள் வெப்பத்திற்குக் காரணமான இடம், உச்சகம்; the seat of heat in that portion of the body situated in the forebain, thermogenic centre (in the carpus striatum) (சா.அக.).

அகோரவிரம் *agōraviram*, பெ. (n.) அல்கிடம், ஆறிதழி (சுவாதிட்டானம்); one of the six psychic centres of the body that is sitnated in the genital region.

அகோரவுபாதி *agōra-v-ubādi*, பெ. (n.) மிகவும் கொடிய வலி; excessive pain, *Hyperalgia* (சா.அக.).

*[**Skt.** a-ghōra-ubādhā>த. அகோரவுபாதி.]*

அகோரவெரிச்சல் *agōra-v-ericcal*, பெ. (n.) தாங்கொணா எரிச்சல்; unberable burning sensation in the body (சா.அக.).

[அகோர+எரிச்சல்.]

*[**Skt.** a-ghōra>த. அகோரம்.]*

எரி→ எரிச்சல்.

அகோரன் *agōraṉ*, பெ. (n.) சிவன் (சூத. எக்கி.பூ.33.2); *Šivaṉ*, as formidable.

*[**Skt.** a-ghōra>த. அகோரன்.]*

அகோராத்திரம் *agōrā-t-tiram*, பெ. (n.) பகலிரவு; day and night.

*[**Skt.** ahō-rātra>த. அகோராத்திரம்.]*

அகோரை *agōrai*, பெ. (n.) வெப்பநாள்; a sultry day (சா.அக.).

த.வ. முதுவேனில.

*[**Skt.** a-ghōra>த. அகோரை.]*

அகௌரவம்[1] *agauravam*, பெ. (n.) இகழ்ச்சி, மதிப்புக்குறைவு; disrespect, irreverence. *'கூத்துப் பார்க்க வந்தவர்கள் தூங்குவதைக் கூத்தர்கள் கௌரவமாக நினைப்பதில்லை (சா. அக.).*

த.வ. மதிப்புக்கேடு.

*[**Skt.** a-gaurava>த. அகௌரவம்.]*

அகௌரவம்[2] *a-gauravam*, பெ. (n.) வணக்கமின்மை; degradution, dishonour. *"அங்கேபோய் அவன் அகௌரவமடைந்தான்"*

*[**Skt.** a-gaurava> த. அகௌரவம்.]*

அங்கக்களரி *aṅga-k-kaḷari*, பெ. (n.) கோயிலில் காணிக்கை யளித்தோர்க்குச் செய்யும் மதிப்புரவு (இ.வ.); honours to liberal donors, in a temple.

[அங்கம் + களரி.]

*[**Skt.** aṅga>த. அங்கம்.]*

அங்கக்கறிப்பு *aṅga-k-kaṟippu*, பெ. (n.) 1. உடம்பின் அமைப்பு; (in physiology) the general design and structure of the body. 2. உடலுறுப்பினால் காட்டும் சைகை; any action of the body or limbs intended to express in idea or feeling such as, nodding the head to express assent or dissent etc., 3. ஆண் அல்லது பெண் காட்டும் காதல் வெளிப்பாடு காமக்குறிப்பு (in erotic science) the desire expressed or indicated by gestures of a male or a female through love or passion.4. பிணியுற்றார்தம் உடம்பிற் காணும் அடையாளங்கள்; (in medicine) severed symptoms found in the body of a patient (சா.அக.).

[அங்கம் + கறிப்பு.]

*[**Skt.** aṅga>த. அங்கம்.]*

கறி → கறிப்பு.

அங்கக்காரன் *aṅga-k-kāraṉ*, பெ. (n.) 1. மெய்க்காவலன் (திவ். நாய்ச்சி. 9, உரை); body-guard. 2.அழகுபடுத்திக் கொள்வோன்; dandy,top.3.முகமூடிக்காரன்,பொய்த் தோற்றங்காட்டுவோன்; masquerader.

[அங்க (ம்)+காரன்.]

*[**Skt.** aṅga>த. அங்கம்.]*

அங்கக்கிரகம் *aṅga-k-kiragam*, பெ. (n.) உடல் வலுவின்மையால் கெண்டைக்கால், கைகளில் தானாகவே காணும் நரப்பிசிவு; a spasmodic and painful contraction of the muscles of the calf and the arm observed in weak or debilitated persons or in those of neurotic tendency-cramps (சா.அக.).

அங்கக்கிரியை *aṅga-k-kiriyai,* பெ. (n.) மெய்யாற் செய்யும் கூத்துத் தொழில் (சிலப். 3, 12. உரை.); (*nāṭya*) gesticulation in dancing.

[Skt. aṅga + kriyā>த. அங்கக்கிரியை.]

அங்கக்குறி *aṅga-k-kuṟi,* பெ.(n.) 1. உடம்பின் குணம்; bodily symptom. 2.உடம்பின் அடையாளம்; descriptive marks on the body. 3. ஆண் அல்லது பெண்குறி; genital of a male or a female (சா.அக.).

[அங்கம் + குறி]

[Skt. aṅga>த. அங்கம்.]

அங்கக்குறிப்புநூல் *aṅga-k-kuṟippunūl,* பெ.(n.) உடலமைப்பைப் பற்றியும், உடலுறுப்புகளின் குறிப்புகளைப் பற்றியும், சொல்லும் நூல்; science dealing in the general designs of the body and its organs, as learned by dissection, *Anatomy* (சா.அக.).

[அங்கம் + குறிப்பு+ நூல்.]

[Skt. aṅga>த. அங்கம்.]

அங்கக்கூறு *aṅga-k-kūṟu,* பெ. (n.) 1. உடம்பின் இயல்பு வேறுபாடு முதலியவை; peculiarity of the constigution or temperament Idiosyncrasy. 2. உடற் பகுதிகள்; different parts of the body. 3. உடம்பின் தன்மை; nature of the body (சா.அக.).

[அங்கம் + கூறு.]

[Skt. aṅga>த. அங்கம்.]

அங்கக்கோற்பூச்சி *aṅga-k-kōṟpūcci,* பெ. (n.) உடம்பினுள்ளிருக்கும் கோற்புழு; a round worm found inside the body (சா.அக.).

[அங்க(ம்)+கோல்+பூச்சி.]

[Skt. aṅga>த. அங்கம்.]

அங்ககணிதம் *aṅgak-kaṇidam,* பெ. (n.) எண்கணிதம்; arithmetic.

[அங்கம் + கணிதம்.]

[Skt. aṅga>த. அங்கம்.]

அங்ககம் *aṅgagam,* பெ. (n.) 1. உடலுறுப்பு; organ of the body. 2. உடலுறுப்புகளின் உட்பகுதி; the interior part of an organ (சா.அக.).

[அங்கம் + அகம்.]

[Skt. aṅga>த. அங்கம்.]

அங்ககசாயம் *aṅga-kaśāyam,* பெ. (n.) 1. வித்தமிழ்து, விந்து; the essence of the body referring to the semen virile. 2. சிறுநீர்; urine (சா.அக.).

அங்ககாரம் *aṅga-kāram,* பெ. (n.) நாட்டிய வகை (திருவினை. கான்மா.9.); a mode of dancing.

[அங்க(ம்) + காரம்.]

[Skt. aṅga>த.அங்கம்.]

அங்ககீனம் *aṅga-kīṉam,* பெ. (n.) 1. உறுப்புக் குறை; defect or want of an organ. 2. உறுப்புக்கேடு; deformity of an organ.

[Skt. aṅga+hīna>த. அங்ககீனம்.]

அங்ககீனன் *aṅga-kīṉaṉ,* பெ. (n) உடம்பினில் ஊனமுற்றவன்; one who is wanting in the perfection of bodily organs or having organic deformity (சா.அக.).

[Skt. aṅga+hīna>த. அங்ககீனன்.]

அங்கச்சோர்வு *anga-c-cōrvu,* பெ. (n.) ஆண்குறித் தளர்ச்சி; want of erectile power in the penis impotency (சா.அக.).

[அங்க(ம்) + சோர்வு.]

*[**Skt.** anga>த. அங்கம்.]*

அங்கசங்கம்[1] *anga-šangam,* பெ. (n.) மெய்யுறு புணர்ச்சி (சித்தா. நி. 35.); sexual intercourse.

[அங்க(ம்) + சங்கம்.]

*[**Skt.** anga>த. அங்கம்.]*

*சங்கம் > **Skt.** sanga.*

அங்கசங்கம்[2] *anga-šangam,* பெ. (n.) ஆரவாரப் பகட்டு; ostentation, foppery. *"அவன் அங்கசங்கமாயுள்ளவன்" (இ.வ.).*

*[**Skt.** anga>த. அங்கம்.]*

அங்கசபிசாகம் *angaša-pišāgam,* பெ. (n.) கருநாயுருவி; black variety of the plant, Indian burr, *Achyrantnes aspera* (சா.அக.).

அங்கசம் *angašam,* பெ.(n.) 1. குருதி; blood. 2. நோய்; disease, sickness. 3. மயிர்; hair 4. காமம்; sexual enjoyment. 5. சங்குச் செய்ந் நஞ்சு; an acid prepared from a kind of impure arsenic called 'sangupāshanam' used in Indian medicine. 6. ஆயுள்வேதப்படிப் பல மூலிகைகளின் உப்பெடுத்தும் செய்யும், ஒரு நீர்மம்; according to ayurveda, an acid prepared from different kinds of salts obtained by incinerating the roots of several plants. 8. குடிமயக்கம்; intoxication (சா.அக.).

*[**Skt.** anga-ja >த. அங்கசம்.]*

அங்கசலனம் *anga-šalanam,* பெ.(n.) 1. உடல் நடுக்கம்; an inroluntary trembling of the body through cold, fear or desease. 2. உடல் அதிர்வாட்டம்; alternate contraction and relaxaction of the muscles of the body, *Tremor* (சா.அக.).

[அங்கம் + சலனம்.]

*[**Skt.** anga>த. அங்கம்.]*

அங்கசலனவாதம் *anga-šalana-vādam,* பெ.(n.) ஊதைநோய் தோற்றும் உணவுப் பண்டங்களை உண்பதால், வளிமிகுந்து நாடி நரம்புகளைத் தாக்குவதனால், அது உடம்பு முழுவதும் பரவிக் கை கால்களில், நடுக்கத்தை உண்டாக்கும், ஒரு வகை வளி (வாத) நோய்; a kind of paralysis, progressive in its course by the aggravated condition of *vāyu* arising from consumption of food containing excess of starchy substances, It effects the whole nervous system and is marked by a characteristic tremor of the limbs and the head and is also know as paralysis agitans, shaking palsy or parkinson's disease, and is most common in males over 40 years of age (சா.அக.).

[அங்க+சலன(ம்)+வாதம்.]

*[**Skt.** anga+vāta>த. அங்கவாதம்.]*

அங்கசன்[1] *angašan,* பெ. (n.) காமவேள் (பிங்.); *Kāman* as born in the mind.

*[**Skt.** anga-ja>த. அங்கசன்.]*

அங்கசன்[2] *angašan,* பெ. (n.) மகன் (நாநார்த்த); son.

*[**Skt.** anga-ja >த. அங்கசன்.]*

அங்கசாதனம்[1] *anga-šādanam,* பெ. (n.) உடற்பயிற்சி; bodily exercise (சா.அக.).

*[**Skt.** anga+sādhana>த. அங்கசாதனம்.]*

அங்கசாதனம்[2] *anga-šādanam,* பெ.(n.) உடலுறுப்புகளால் காட்டும் அடையாளம்; bodily sign, mark.

த.வ. உடற்குறி.

*[**Skt.** anga+šādhana>த. அங்கசாதனம்.]*

அங்கசாதனம்பிடி-த்தல் *anga-šādanam-pidi-,* 4. செ.கு.வி.(v.i.) துப்பறிதல்; to find out anything by signs or circumstances, fixing suspicion upon one.

த.வ. உளவறிதல்.

[அங்கசாதனம் + பிடி–த்தல்.]

*[**Skt.** aṅka+šādhaṉa>த. அங்கசாதனம்.]*

அங்கசாலை *aṉga-šālai*, பெ.(n.) வேளாண் குடிகள் செலுத்தும் வரிவகை (I.M.P.Cg. 1095.); a tax paid by cultivators.

[அங்கம் + சாலை.]

*[**Skt.** aṅga>த. அங்கம்.]*

அங்கசாலைக்காரன் *aṅga-šālai-k-kāraṉ*, பெ.(n.) ஊர் நலப்பணியாளன்; village servant who, by order of the headman, assembles the villagers and procures things wanted.

[அங்க(ம்)+சாலைக்காரன்.]

*[**Skt.** aṅka>த. அங்கம்.]*

அங்கசுத்தம் *aṅgašuttam*, பெ. (n.) அணிவகை; (s.i.i. viii, 39); an ornament.

அங்கசுபாதி *aṅgašupādi*, பெ.(n.) சிறுபுள்ளடி; a medicinal plant hedysaram (சா.அக.).



அங்கசூதம் *aṅgašūdam*, பெ. (n.) கொன்றை (சித். அக.); Indian labarnum.

அங்கசேட்டை *aṅga-šēṭṭai*, பெ.(n.) 1. கால் கைகளாற் குறும்பியற்றல்; doing mischief with the limbs. 2. கை கால்களை வறிதே யாட்டுகை; antic gestures. *"அங்கசேஷ்டை புரியாமல்" (திருவேங். சத. 63.).*

த.வ. புலக்குறும்பு

*[**Skt.** aṅga+ cēṣṭā> த. அங்கசேட்டை.]*

அங்கசேதம் *aṅgašēdam*, பெ.(n.) 1. உடம்பினுறுப்புகளைத் தறித்தல் அல்லது அழித்தல்; excision or mutilation of a member of part of the body, amputation. 2. உறுப்புக்குறைவு; absence or defect of any part of organ. 3. உறுப்பழிவு; loss by mutilation etc. of an organ or a part these of (சா.அக.).

[அங்க(ம்) + சேதம்.]

*[**Skt.** aṅga>த. அங்கம்.]*

அங்கசேதனம் *aṅga-šēdaṉam*, பெ. (n.) உடம்பினுறுப்பை அறுத்தகற்றுகை; the removal of limb or part of the body by using knife, ligature, or any other means, amputation (சா.அக.).

[அங்கம் + சேதனம்.]

*[**Skt.** aṅga+chēdana>த. அங்கசேதனம்.]*

அங்கசேதனவித்தை *aṅga-šēdaṉa-vittai*, பெ.(n.) உடற்கூற்று நூல் (புதுவை); anatomy.

[அங்கம் + சேதனம் + வித்தை.]

*[**Skt.** aṅga+cētana>த. அங்கசேதனம்.]*

*[த. வித்தை>**Skt.** vidyā.]*

அங்கசேவை *aṅga-šēvai*, பெ. (n.) குருவின் திருவடி தொழுகை (விவேகசிந்.26); personal service to a preceptor, as washing his feet, etc.

த.வ. பாதத்தொழுகை.

*[**Skt.** aṅga+ šēvā>த. அங்கசேவை.]*

அங்கசோதனை *aṅga-šōdaṉai*, பெ. (n.) உடம்பை ஆராய்கை; examination of the body (சா.அக.).

*[**Skt.** aṅga+šōdhana>த.அங்கசோதனை.]*

அங்கணப்பிரியம் *aṅgaṇa-p-piriyam*, பெ.(n.) 1. பெண்ணிற்குகந்தது; dear to woman; 2. அசோகு; asoka tree, *saraca indica* (சா. அக.).

*[**Skt.** aṅgaṇa+priya>த.அங்கணப்பிரியம்.]*

அங்கணபாடாணம் *aṅgaṇa-pāḍāṇam*, பெ.(n.) ஒருவகைச் செய்ந்நஞ்சு; a mineral poison, a kind of a arsenic in its natural state (சா.அக.).

அங்கணம் *aṅgaṇam*, பெ.(n.) 1. கடுக்காய் மரம்; common myrobalan tree, Indian myrobalan, *Terminalia chebala*. 2. பத்து முழஅளவு; 10 cubit's measure. 3. உப்பு (இலவணம்); any salt, but generally common salt. 4. பொரிகாரம்; an artifical or manufactured salt borax, a mineral chemically called sodium biborate. ($Na^2 B_4O_7$) (சா.அக.).

அங்கணன் *aṅgaṇaṉ*, பெ.(n.) **அங்கண பாடாணம்** பார்க்க; see *aṅgaṇa-pāḍāṇam* (சா.அக.).

அங்கத்தளர்ச்சி *aṅga-t-taḷarcci*, பெ.(n.) 1. விம்மி நிமிர்வுறுந் தன்மையின்மை ; want of erectile power. 2. உடல் நலக்குறைவு; bodity relaxation owing to advance age infirmity (சா.அக.).

[அங்கம் + தளர்ச்சி.]

*[**Skt.** aṅga>த.அங்கம்.]*

அங்கத்தினர் *aṅgattiṉar*, பெ.(n.) உறுப்பினர்; member.

[அங்கம்+அத்து+இனர்.]

*[**Skt.** aṅga>த. அங்கம்.]*

அங்கத்தீ *aṅga-t-tī*, பெ. (n.) 1. வயிற்றுத்தீ; fire in the stomach-gastric or digestive fire. 2. உடம்பிற் பரவிநிற்கும் சூடு; the heat felt through out the system, animal heat. 3. உடம்பினில் பல இடங்களில் தோற்றுஞ் சூடு; the therogenic heat at the different centres of the body. 4. காம இன்பத்தால் உடம்பினில் ஏற்படும் சூடு, காமச் சூடு; heat arising in the body from excess of passion or love (சா.அக.).

த.வ. மேனிச்சூடு, காங்கை.

[அங்கம் + தீ.]

*[**Skt.** aṅga>த. அங்கம்.]*

அங்கத்துவம் *aṅgattuvam*, பெ. (n.) உறுப்பினர் தகுதி; member ship. *அவர் தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு வராததால் தம் அங்கத்தவத்தை இழந்தார்.*

த.வ. உறுப்பாண்மை.

*[**Skt.** aṅga>த. அங்கத்துவம்.]*

அங்கதந்திரம் *aṅga-tandiram*, பெ. (n.) மந்திரவினை அல்லது செய்வினை பற்றியநூல்; a tantric science treating of magical diagrams, marks of figures (சா. அக.).

த.வ. செய்வினை நூல்.

அங்கதன் *aṅgadaṉ*, பெ.(n.) வாலியின் மகன் (கம்பரா. அங்கதன்றூ. **9**); name of the son of *Vāli*.

*[**Skt.** aṅgada>த. அங்கதன்.]*

அங்கதாரி *aṅga-dāri*, பெ.(n.) 1. ஆதன் (சீவன்); soul. 2. எலும்பு; bone. 3. உடம்பு; body (சா.அக.).

*[**Skt.** aṅga+dārin>த. அங்கதாரி.]*

அங்கதாளம் *aṅga-tāḷam*, பெ.(n.) தாளவகை (பரத. தாள 4 உரை); (Mus.) variety of time-measure.

[அங்கம் + தாளம்.]

*[**Skt.** aṅga>த. அங்கம்.]*

அங்கதி *aṅgadi*, பெ.(n.) 1. வளி; wind. 2. நெருப்பு; fire. 3. நோய்; disease (சா.அக.).

*[**Skt.** aṅga>த. அங்கதி.]*

அங்கதேவதை *aṅga-dēvadai*, பெ. (n.) சிறுதெய்வம்; attendent deity of a superior god. *"அங்கதேவதைக்கு இருநாழி உரி அரி" (T.A.S. ii, 173.).*

[அங்கம் + தேவதை.]

*[**Skt.** aṅga>த. அங்கம்.]*

அங்கந்திறத்தல் *angan-tirattal*, தொ.பெ. (vbl.n.) வாயால் வயிற்றாலெடுக்கை (வாந்தி பேதி), நாட்பட்ட கழிச்சல் முதலிய நோய்களின் நிமித்தம் எருவாய் திறந்து போதல்; gaping of the anus owing to the relaxed condition of the sphinctre muscles. It is sometimes noticed in choloera, chronic diarrhoea or dysentary (சா.அக.).

த.வ. எருவாய்திறப்பு.

[அங்கம் + திற-.]

[Skt. anga>த. அங்கம்.]

அங்கநதி *anga-nadi*, பெ. (n.) 1. மூளையின் நீர்; the cerebro spinal fluid. 2. சிறுநீர்; urine discharged from the body (சா.அக.).

அங்கநியாசம் *anga-niyāšam*, பெ. (n.) மறைமொழியோடு உறுப்புகளைத் தொடுகை (திருக்காளத். 4, 5, 39.); touching some parts of the body with the fingers pronouncing the appropriate mantras.

த.வ. மெய்தீண்டல்.

[Skt. anga + nyāsa>த. அங்கநியாசம்.]

அங்கநூல் *anga-nūl*, பெ. (n.) 1. மறைநூல்; sciences auxiliary to the vedas. *"சோதிடாதிமற்றங்கநூல்" (தாயு. சிதம்பர. 10)* 2. சமண தோன்றிய (சைனாகம) வேறுபாடுகளு ளொன்று; a class of jaina scriptures. *"அங்கநூலாதி யாவும்" (யசோதர. 1, 51).*

த.வ. அடிப்படைநூல்.

[அங்க(ம்)+ நூல்.]

[Skt. anga>த. அங்கம்.]

அங்கபடியெலும்பு *anga-padiyelumbu*, பெ. (n.) குதிரை சேணத்து அங்கவடியைப் போலவிருக்கும் காதெலும்பு; the stirrup-shaped bone of the middle ear articulating with the incus. It is one of the chains of small bones found in the tympanic cavity-stapes (சா.அக.).

த.வ. செவிஎன்பு.

அங்கப்பதக்கணம் *anga-p-padakkanam*, பெ.(n.) **அங்கப்பிரதட்சிணம்** (திருவாலவா. 34.13) பார்க்க; *anga-p-piratatcinam.*

த.வ. மெய்யுறுசுற்று, உருள்தண்டம்.

[Skt. anga+pra-dakṣiṇa > த. அங்கப் பதக்கணம்.]

அங்கப்பயிற்சி *anga-p-payirci*, பெ. (n.) **அங்கசாதனம்** பார்க்க; see *anga-šādanam.*

[அங்க(ம்) + பயிற்சி.]

[Skt. anga>த.அங்க(ம்).]

அங்கப்பழுது *anga-p-paludu*, பெ. (n.) 1. உறுப்புக்குறைபாடு; defect in an organ of the body. 2. உறுப்புக்கேடு; malformation or deformity in an organ (சா.அக.).

த.வ. உறுப்புக்குறை.

[அங்க(ம்) + பழுது.]

[Skt. anga > த. அங்கம்.]

அங்கப்பானை *anga-p-pānai*, பெ. (n.) எரியூட்டப்பட்ட சாம்பல், எலும்பு முதலியவடங்கிய பானை; an earthen vessel containing the bones and ashes of the dead (சா.அக.).

த.வ. ஈமத்தாழி, ஈமப்பானை.

[அங்க(ம்) + பானை.]

[Skt. anga>த. அங்கம்.]

அங்கப்பிச்சு *anga-p-piccu*, பெ. (n.) உடம்பிலிருக்கும் பித்து; bile in the system (சா.அக.).

[அங்கம் + பிச்சு.]

[Skt. anga>த. அங்கம்.]

பித்து→பிச்சு.

அங்கப்பிரதக்கணம் *anga-p-piratakkanam*, பெ.(n.) **அங்கப்பிரதட்சிணம்** (சீகாழிக் தலவி. 14.) பார்க்க; see *anga-p-piratatcinam.*

[Skt. anga+ pradakṣiṇa>த. அங்கப் பிரதக்கணம்.]

அங்கப்பிரதட்சணம் *anga-p-pira-tatcanam*, பெ.(n.) கோயில் திருச்சுற்றினை உடலாற் புரண்டு வலம்வருகை; rolling the body to the right, to and around a sacred place, generally in fulfilment of a vow.

த.வ. உருள்தண்டம், மெய்யுறு சுற்று.

[Skt. anga+pradaksina > த. அங்கப்பிரதட்சணம்.]



அங்கப்பிரளி *anga-p-pirali*, பெ.(n.) தன் உடம்பைச் சுருட்டிக் கொள்ளும் தன்மையுள்ள மரவட்டை; a creature capable of twisting its body into a round fold; millepees-*Hydenocarpus inebrains* (சா.அக.).

[அங்கம் + பிரளி.]

[Skt. anga> த. அங்கம்.]

புரள் → பிரள் → பிரளி.



அங்கப்பிராயச்சித்தம் *anga-p-pirāya-c-cittam*, பெ.(n.) உடல் தூய்மையின் பொருட்டானதொரு குற்றநீக்கம், தீட்டுக் கழிப்பு (வின்.); expiation for bodily impurity, such as that caused by the death of a relative.

த.வ. தீட்டுக்கழிவு.

[Skt. anga+prāya-c-citta> த. அங்கப் பிராயச்சித்தம்.]

அங்கப்புண் *anga-p-pun*, பெ. (n.) 1. உடலுறுப்புகளில் ஏற்படும் புண்; sore or wound developed in an organ. 2. ஆண்குறிப் புண்; sore or ulcer on the penis. 3. உடலிற்காணும் புண்; itches, sore or other wound on the body (சா.அக.).

த.வ. மேனிப்புன்.

[அங்க(ம்)+புண்.]

[Skt. anga> த. அங்கம்.]

அங்கபங்கம்[1] *angapangam*, பெ.(n.) பெருமை (இ.வ.); pomp, pride.

அங்கபங்கம்[2] *angapangam*, பெ.(n.) 1. உடற் குற்றம்; defect in the organ of a body. 2. உடலுறுப்புக் குறைபாடு; mutilation or deformity of an organ. 3. முடக்கு நோயாலே உடற்சோர்வு; poss of motion in a living part or member-paralysis (சா.அக.).

த.வ. மெய்யுறவு.

[Skt. anga+bhanga > த. அங்கபங்கம்.]

அங்கபங்கமழி-த்தல் *angapangam-ali-*, 4 செ.குன்றாவி.(v.t.) வருத்துதல் (வின்); to vex, irritate, torment.

த.வ. மெய்வருத்துதல்.

[அங்கபங்க(ம்)+அழி-.]

[Skt. anga-banga> த. அங்கபங்கம்.]

அங்கபாலி *angapāli*, பெ.(n.) 1. மருத்துவச்சி; midwife; nurse. 2. ஒரு பூடு; a plant. (சா.அக.).

த.வ. மருத்துவச்செவிலி.

அங்கபூவம் *aṅgapūvam*, பெ. (n.) அங்காகம பூர்வாகமங்கள்;(jaina) *aṅgagama* and *purvāgama*. 'அங்கபூவமாதிநூரலோதி' (மேருமந். 124).

[Skt. *aṅga* + *pūrva* > த. அங்கபூவம்.]

அங்கம்¹ *aṅgam*, பெ.(n.) 1. உடலுறுப்பு; a part of the body. 2. அரையின் மேலுள்ள உடம்பின் பகுதி; the portion of the main body without the limbs-trunk. 3. எலும்புக் கூடு; the solid frame-work of mere bones-skeleton. 4. உடம்பு; body. 5. மேனியழகு; well-formed human shape-symmetry. 6. மருத்துவ நூல்; medicial science. 7. உயிர்; the soul. 8. கோளக செய்நஞ்சு (பாடாணம்); one of the 32 kinds of mineral poison.9. மனம்; mind. 10. பத்து; the numeral ten. 11. மூளை; brain (சா.அக.).

[Skt. *aṅga*>த.அங்கம்.]

அங்க எனும் வடமொழிச்சொல் வளைதல் பொருள்படும் 'அன்ச்' எனும் வேரிலிருந்து பிறந்ததாக மோனியர் வில்லியம்சு வலிந்துரைக்கிறார். வடநாட்டில் வழங்கிய பல்வேறு பாகத (பிராகிருத) மொழிகளில் வயிற்றைக் குறித்த அங்க எனும் சொல்லே வடமொழியில் கடன் சொல்லாயிற்று எனத் தெரிகிறது. அஃகு–அக்கு–அங்கு எனச் சுருங்குதல் பொருளில் வழங்கிய தமிழ்ச் சொல். பாகதம் எனும் வடதமிழில் அங்கு–அங் எனத் திரிந்தது.

அங்கம்² *aṅgam*, பெ. (n) 1. ஒரு முழுமையின் அல்லது அமைப்பின் பகுதி; part of a whole or an organization. *'படைத்துறை அரசின் ஓர் அங்கம்'.* 2. (நாடகத்தில்) ஒரு பெரும் பிரிவு; act (of a play). *'செய்தியைக் கேட்டதும் அங்கமெல்லாம் பதறியது'.*

[Skt. *aṅga*>த.அங்கம்.]

அங்கமணிதிரவியம் *aṅgamaṇi-tiraviyam*, பெ.(n) மணமகன் பரிசம் (S.I.I.VI. 152.); dowry.

[அங்க+மணி+திரவியம்.]

[Skt. *aṅga* > த.அங்க(ம்);Skt. *dravya*> த.திரவியம்.]

அங்கமர்த்தன் *aṅga-marttaṉ*, பெ. (n.) உடம்பை அழுத்தித் தேய்ப்பவன்; a servant who shampooes his master's body - shampooer (சா.அக.).

அங்கமருடம் *aṅga-maruḍam*, பெ. (n.) 1. உடலுறுப்பில் ஏற்படும் வலி; pain in the limbs. 2. உடம்பு வலி; pain in the body. 3. ஊதை நோய்; pain in the joints (சா.அக.).

த.வ. மெய்வருத்தம்.

அங்கமாலை *aṅga-mālai*, பெ.(n.) சிற்றிலக்கிய வகை (இலக். வி. 835.); members of bones worn by *Śivaṉ*.

[அங்கம் + மாலை.]

[Skt. *aṅga*>த.அங்கம்.]

அங்கயோகம்¹ *aṅga-y-ōgam*, பெ.(n.) 1. எண்ணுறுப்பு யோகம் (R); yōga which consists of eight forms of discipline. 2. எலும்பு மாலை (தேவா.295, 7); necklace of bones worn by *Śivaṉ*.

[Skt. *aṅga*+*yōga*>த. அங்கயோகம்.]

அங்கயோகம்² *aṅga-yōgom*, பெ. (n.) ஒகநிலை வகை (சங்.அக.); (Astrol.) situation of the planet jupiter in one of four position *udayam, kēndiram, mūlattirikoṇam,* or *uccam*.



அங்கர் *aṅgar*, பெ.(n.) அங்கநாட்டார்; *aṅga-dēsa,* the country about Benares. *"அங்கர் மாகத ராரியர்" (திருவிளை. திருமண. 74).*

*[**Skt.** aṅga >த. அங்கர்.]*

அங்கர்கோமான் *aṅgar-kōmāṉ*, பெ.(n.) அங்கநாட்டை ஆட்சிசெய்த கண்ணன்; (சூடா;); *Karṇaṉ*, as king of *aṅga-dēśam.*

[அங்கர்+கோமான்.]

*[**Skt.** aṅga > அங்கர்.]*

அங்கர்யாரி *aṅgar-yāri*, பெ.(n.) நங்கூரந் தூக்கியெடுக்கும் கப்பிக் கயிறு (கடலியல்); cat tackle for drawing up an anchor.

த.வ. நங்கூரத்தாரம்.

[E. anchor>த.அங்கர்.]

அங்கரக்கன் *aṅgarakkaṉ*, பெ. (n.) மெய்க்காவலன்; body-guard. *"அங்கரக்கர் சதகோடி யமைந்தோர்" (கம்பரா. இராவணன்றானை காண். 10).*

த.வ. மெய்க்காப்பாளன், மெய்ம்மறை.

*[**Skt.** aṅga +raksa>த.அங்கரக்கன்.]*

*[த.அரக்கன்> **Skt.** raksa.]*

அங்கரக்கா *aṅgarakkā*, பெ.(n.) நீண்ட சட்டை; long coat worn by men, tunic.

[U. angarkhā >த. அங்கரக்கா.]

அங்கரங்கம் *aṅgaraṅgam*, பெ.(n.) உலகின்பம்; wordly pleasure (சா.அக.).

அங்கரங்கவைபவம் *aṅgaraṅga-vaibavam*, பெ.(n.) எல்லா நுகர்ச்சிகளும்; all kinds of enjoyment. *"ஸ்வாமிக்கு அங்கரங்க வைபவத்துக்கு விடுவித்த கிராமம் (S.i.i.71.).*

அங்கரங்கவைபோகம் *aṅgaraṅga-vaibōgam*, பெ.(n.) **அங்கரங்கவைபவம்** பார்க்க; see *aṅgaraṅga-vaibavam.*

அங்கரட்சிணி *aṅga-raṭciṇi*, பெ.(n) மெய்யுறை (போர்க்கவசம்); coat of mail

*[**Skt.** aṅga + rakṣiṇi>த.அங்கரட்சிணி.]*

அங்கராகம் *aṅga-rāgam*, பெ.(n.) உடம்பிற் பூசப்பெறும் நறுமணப் பொருள்; cosmetic. *"அங்கராக மணியார மார்ப" (பாரத. மணி 109).*

*[**Skt.** aṅga + rāga>த.அங்கராகம்.]*

அங்கராகி *aṅgarāgi*, பெ. (n.) புறத்தே காண்குறும் மேனி மயிர்; hair on the body (சா.அக.).

*[**Skt.** aṅga+rāga>த.அங்கராகி.]*

அங்கருகம் *aṅgarugam*, பெ.(n.) மயிர் (சங்.அக); hair.

*[**Skt.** aṅga+ruha>த.அங்கருகம்.]*

அங்கரூகம் *aṅgarūgam*, பெ.(n.) **அங்கருகம்** (சிந்தா.நி. 35) பார்க்க; see *aṅgarugam.*

*[**Skt.** aṅga+rūhā>த.அங்கரூகம்.]*

அங்கரூபகம் *aṅga-rūbagam*, பெ.(n.) மயிர்; hair (சா.அக.).

அங்கலட்சணநூல் *aṅgalaṭcaṇa-nūl*, பெ.(n.) உடலுறுப்புகளின், அமைப்பு அழகு முதலானவற்றைப் பற்றிக் கூறும் உடற்கூற்றிலக்கண நூல்; that branch of science describing the structural beauty, symmetrical disposition of organs and due proportion of the several parts of the body to each other (சா.அக.).

[அங்கம்+லட்சணம் +நூல்.]

*[**Skt.** aṅga+lakṣaṇa>த.அங்கலட்சணம்.]*

*இலக்கு→இலக்கணம் > **Skt.** lakṣaṇa.*

அங்கலாகாசம் *aṅgalākāśam*, பெ.(n.) மனநல மருத்துவர்கள் பயன்படுத்தும் மந்திரக் கோல்; a magic rod or want used by conjurors occultists, seers and other psychologists to effect a cure in diseases or to attain success in any of their attempts (சா.அக.).

அங்கலிங்கம் *aṅgaliṅgam*, பெ.(n.) வீரசைவர் தங்கள் உடலில் அணிந்து கொள்ளும் இலங்கக் குறி, இலங்கம்; *liṅgām* worn by *liṅgāyates* on their person.

[Skt. aṅga+liṅga>த. அங்கலிங்கம்.]

அங்கவத்திரம்[1] *aṅga-vattiram*, பெ. (n.) மேலாடை (இ.வ.); upper cloth.

[Skt. aṅga + vastra>த.அங்கவத்திரம்.]

அங்கவத்திரம்[2] *aṅgavattiram*, பெ.(n.) அடுக்கடுக்கான மடிப்புக்களுடன் ஆண்கள் தோளில் போட்டுக் கொள்ளும் நீண்ட துண்டு; a long pleated piece of ornamental cloth on the shoulder.

[Skt. aṅga + vastra> த.அங்கவத்திரம்.]



அங்கவயிச்சியர் *aṅga-vayicciyar*, பெ. (n.) ஆயுள்வேத மருத்துவன் (s.i.i.v, 164); ayurvedic physician.

[Skt. anga+vaidya> த. அங்கவயிச்சியர்.]

அங்கவாதம் *aṅga-vādam*, பெ. (n.) 1. உடலுறுப்பிற் காணும் ஊதை (வாத) நோய்; rheumatism or other nervous affection of the limbs or organs of the body. 2. உடம்மை அடுத்த ஊதை (வாதம்); a constitutional affection of the nerves of the whole body. 3. எலும்பிற்காணும் ஓர் ஊதை (வாத) நோய்; neuralgia of the bone, *osteoneuralgia* (சா.அக.).

த.வ. கைகால்முடக்கு.

[Skt. aṅga + vāta>த. அங்கவாதம்.]

அங்கவாவகம் *aṅgavāvagam*, பெ.(n.) உடம்பைப் பிடித்தல் அல்லது தேய்த்தல்; shampooing or rubbing the body (சா.அக.).

அங்கவிகிர்தம் *aṅgavigirdam*, பெ.(n.) 1. உறுப்பு (அங்க)க் குறைவு; defect in an organ. 2. உடம்பின் வேறுபாடு; structural changes of the body or its parts (சா.அக.).

த.வ. உறுப்புமுடம்.

[Skt. aṅga+ vi-kṛta>த. அங்கவிகிர்தம்.]

அங்கவிகுருதி *aṅgavikurudi*, பெ. (n.) 1. உடல்நோய்; disease of the body. 2. உடலுறுப்புகளின் நோய்; disease of an organ in the body. 3. உடம்பின் மாறுபாடு; change of apperance in the body, as in collapse, fainting, apoplexy etc., (சா.அக.).

[Skt. aṅga + vikṛti>த. அங்கவிகுருதி.]

அங்கவித்திகை *aṅgavittigai*, பெ. (n.) கணிதம் (சிந்தா. நி. 37); a kind of maths.

[Skt. aṅka+vidyā>த. அங்கவித்திகை.]

அங்கவியல்பு *aṅgaviyalbu*, பெ. (n.) **அங்க விலக்கணம்** பார்க்க; see *aṅga-v-ilakkaṇam* (சா.அக.).

[அங்கம்+இயல்பு.]

[Skt. aṅga>த. அங்கம்.]

அங்கவிலக்கணம் *aṅga-v-ilakkaṇam*, பெ. (n.) உடம்பின் தன்மை (குணங்கள் அல்லது இயல்புகள்); the natural disposition or other distinguishing characteristic features of the body or its parts (சா.அக.).

த.வ. உடற்கூற்றிலக்கணம்.

[அங்க(ம்) + இலக்கணம்.]

[Skt. aṅga>த. அங்கம்.]

அங்கவீனன் *aṅga-v-īṉaṉ*, பெ. (n.) உறுப்புக்குறைந்தவன் (வின்.); one who has bodily defects "physically handicapped".

த.வ. உடற்குறை.

[Skt. aṅga + hīna> த. அங்கவீனன்.]

அங்கவீனம் *aṅga-vīṉam,* பெ.(n.) உறுப்புக் குறைவு, maimediness.

[Skt. aṅga + hīna>த. அங்கவீனம்.]

அங்கன் *aṅgaṉ,* பெ.(n.) புதல்வன் (திவ். இயற். 3,65.); son.

[Skt. aṅga >த. அங்கன்.]

அங்கனை *aṅgaṉai,* பெ.(n.) பெண் (திவா.); woman.

[Skt. aṅganā >த. அங்கனை.]

அங்கனைப்பால் *aṅgaṉai-p-pāl,* பெ.(n.) முலைப் பால்; woman's breast milk (சா.அக.).

த.வ. முலையமுது.

[அங்கனை + பால்.]

[Skt. aṅganā>த. அங்கனை.]

அங்காகமம்[1] *aṅgāgamam,* பெ.(n.) சமணத் தோன்றியங்களுள் ஒன்று (சிலப். 10, 187, உரை.); one of the classes of jaina scriptures.

[Skt. aṅga+āgama >த. அங்காகமம்.]

அங்காகமம்[2] *aṅgāgamam,* பெ.(n.) 1. காமம் தொடர்பான உடற்கூற்றியல் நூல்; a scientific treatise on sex and sexual enjoyments. 2. கொக்கோகம்; a book *kokkōgam.*

[Skt. aṅga+ āgama > த. அங்காகமம்.]

அங்காகருடணநாசசாரி *aṅga-karuḍaṇa-nāśa-śāri,* பெ.(n.) இசிவு நோய்க்குரிய மருந்து; an agent allaying or relieving convulisons or spasmodic pains, as nareotics, nitrites etc., (சா.அக.).

அங்காகருடணம் *aṅgā-karuḍaṇam,* பெ. (n.) 1. உடம்பின் தசை இழுத்தல்; contraction of a limb. 2. இழுப்பு; contracture of a limb, as in paralysis. 3. வலிப்பு; convulsion (சா.அக.).

த.வ. உடலிழுப்பு.

[Skt. aṅga+ā-karṣaṇa>த.அங்காகருடணம்.]

அங்காகருடணவாதம் *aṅgā-karuḍaṇa-vādam,* பெ. (n.) நாக்குப் போன்ற உறுப்புகளை உள்ளுக்கிழுக்கும், முடக்கு ஊதை (வாத) நோய்; a kind of paralysis in which organs like the tongue etc., are drawn in (சா.அக.).

த.வ. முடக்குவளி.

[Skt. aṅga + ā-karṣaṇa+vāta > த. அங்காகருடணவாதம்.]

அங்காங்கம் *aṅgāṅgam,* பெ.(n.) 1. நான்மறை உறுப்பு நூல் (உபாங்கம்); anxilliary or secondary organs (சா.அக.).

[Skt. aṅgāṅga>த. அங்காங்கம்.]

அங்காங்கிபாவம் *aṅgāṅgi-pāvam,* பெ.(n.) உடல் உறுப்புகளின் உறவு; relation of the subsidiary or accessory and principal. *"அருவினி லுருவந் தோன்றி யங்காங்கி பாவமாகி" (சி. சி. 1, 27.).*

[Skt. aṅgāṅgi-bhāva>த. அங்காங்கிபாவம்.]

அங்காதிபாதசாத்திரி *aṅgādi-pāda-śāttiri,* பெ. (n.) உடற்கூற்று ஆராய்ச்சியாளர்; one who is versed in the doctrine and principle of anatomy; one who has studies the structure of the body by dissection, anatomist (சா.அக.).

அங்காமி *aṅgāmi,* கு.பெ.எ. (adj) நிரந்தரமல்லாத; temporary. *"அங்காமி குமஸ்தா" (C.G.).*

[U. hangāmi >த. அங்காமி.]

அங்காமிப்பட்டா *aṅgāmi-p-paṭṭā,* பெ. (n.); நில ஆவண (பட்டா) வகைகளுள் ஒன்று, temporary or limited title-deed.

[U. hangāmi-paṭṭā>த. அங்காமிப்பட்டா]

அங்காரகதோடம் *aṅgāraga+tōḍam*, பெ.(n.) கணிய நூலில் செவ்வாயினால் ஏற்படுவதாகக் கூறப்படும் குற்றம் (astrol.) malefic influence of mars.

த.வ. செவ்வாய்க்குறை.

[Skt. aṅgāraka+dōsa>த.அங்காரகதோடம்.]

அங்காரகம்[1] *aṅgāragam*, பெ. (n.) தீ (அக.நி.); fire.

அங்காரகம்[2] *aṅgāragam*, பெ.(n.) உடலிற் பூசும் நறுமணக்குழம்பு (அக.நி.); scented unguent.

த.வ. மணக்கலவை.

[Skt. aṅgarāga > த. அங்காரகம்.]

அங்காரகம்[3] *aṅgāragam*, பெ.(n.) 1. கரி (வின்.); charcoal. 2. தழற்கரி (சங்.அக.); heated charcoal.

[Skt. aṅgāraka > த. அங்காரகம்.]

அங்காரகம்[4] *aṅgāragam*, பெ.(n.) பிருங்கராசம் என்னும் ஒரு படர்கொடி; a spreading creeper; white or yellow amaranthes, *Verbesina caledulacealias eclipta prostata* (சா.அக.).

த.வ. கையாந்தகரை

[Skt. aṅgāra-ka > த. அங்காரகம்.]

அங்காரகமணி *aṅgāraga-maṇi*, பெ. (n.) 1. பவளம்; coral, 2. மணி (இரத்தினம்); ruby (சா.அக.).

அங்காரகவல்லி *aṅgāragavalli*, பெ. (n.) சிறுதேக்கு (பச். மு.); bushy fire brand teak.

[அங்காரகம் + வல்லி.]

[Skt. aṅgāra-ka>த.அங்காரக(ம்).]

அங்காரகன் *aṅgāragaṉ*, பெ.(n.) 1. நெருப்பு (திவா.); fire. 2. செவ்வாய் (திவா); the planet mars. 3. செந்நீர் முத்து (சிலப்.14, 195.); pearl with a pink lustre.

[Skt. aṅgāraka>த.அங்காரகன்.]

அங்காரசய்யாப்பிரமணம் *aṅgāra-śayyā-p-piramaṇam*, பெ. (n.) தீப்பிழம்புக்குமேல் சுழலும் நிரயச் சிறப்பு; hell where in one revolves on a bed of fire. *"அங்காரசய்யாப்பிரமண மாநிரயம்" (சேதுபு. துராசார. 37.)*

[Skt. aṅgāra + śayyā + bhramaṇa> த.அங்காரசய்யாப்பிரமணம்.]

அங்காரதாளிகை *aṅgāra-tāḷigai*, பெ. (n.) 1. சூட்டடுப்பு; an earthen ware portable heating apparatus for baking, used in an Indian household. 2. நெருப்புச் சட்டி, கணப்புச் சட்டி; fire-pot (சா.அக.).



அங்காரபரிபாசிதம் *aṅgāra-pari-pāśidam*, பெ.(n.) பொரித்த கறி; fried curry (சா.அக.).

அங்காரம்[1] *aṅgāram*, பெ.(n.) 1. நெருப்பு; fire. 2. தழற்கரி; live charcoal.

[Skt. aṅgāra >த. அங்காரம்.]

அங்காரம்[2] *aṅgāram*, பெ.(n.) மாத்துவர் நெற்றியி லணியுங் கரிக்கோடு; sectarian charcoal mark placed on the forehead by *Mādhva brāhmans*. *"ஆங்கதனிடையங் காரமுந் தீட்டி" (பிரபோத. 11, 17.).*

[Skt. aṅgāra >த. அங்காரம்.]

அங்காரமஞ்சரி *aṅgāra-mañjari*, பெ. (n.) கழற்சி; a plant, *Caesalpinia bonduceell* (சா.அக.).

அங்காரவல்லன் *aṅgāravallaṉ*, பெ. (n.) **அங்காரவல்லி** பார்க்க; see *aṅgāravalli.*

[அங்காரம் + வல்லன்.]

*[**Skt.** aṅgāra>த.அங்காரம்.]*

அங்காரவல்லி¹ *aṅgāra-valli*, பெ. (n.) 1. பூடுவகை; gushy firebrand leak. 2. பெருங்குறிஞ்சா; green wax flower.

[அங்காரம்+வல்லி.]

*[**Skt.**aṅgāra>த. அங்காரம்.]*

அங்காரவல்லி² *aṅgāra-valli*, பெ. (n.) 1. சிறுதேக்கு; blue flowered saw-leaved glory tree, *Cleodendron sphoenanthes.* 2. பெருங்குமிழ்; a plant Galedupa arborea. 3. கஞ்சா; gunjah-cannabis sativa (சா.அக.).

அங்காரவாயு *aṅgāra-vāyu*, பெ.(n.) நச்சுவளி; noxious suffocating gas like that in wells, pits, mines etc. chokedamp (சா. அக.).

*[**Skt.**aṅgāra+vāyu>த. அங்காரவாயு.]*

அங்காரவாரிதி *aṅgāra-vāridi*, பெ. (n.) கையாந்தகரை; a medicinal plant known as white amaranthus, *Eclipta prostata* (சா.அக.).



அங்காரன் *aṅgāraṉ*, பெ.(n.) செவ்வாய் (அறப். சத. 50) the planet mars.

*[**Skt.** aṅgāra>த. அங்காரன்.]*

அங்காரி *aṅgāri*, பெ.(n.) **அங்காரதாளிகை,** 2 பார்க்க; see *aṅgāratāḷigai* (சா.அக.).

*[**Skt.** aṅgāra > த. அங்காரி.]*

அங்காரிகம் *aṅgārigam*, பெ. (n.) 1. கரும்புத் தண்டு; the stalk of the sugar-cane. 2. பலாசு; the bud of கிஞ்சுகம், *Butea frondosa* (சா.அக.).

அங்காரிகை *aṅgārigai*, பெ.(n.) 1. கரும்புத் தடி; stalk of the sugar-cane. 2. முருக்கம் பூங்கொத்து; bunch of *murukku* flowers.

*[**Skt.** aṅgārikā>த. அங்காரிகை.]*

அங்காரிதம் *aṅgāridam*, பெ.(n.) 1. ஒரு கொடி; a creeper. 2. பலாசு; the early blossom of கிஞ்சுகம், *Butea frondosa* (சா.அக.).

அங்கானுகூல *aṅgāṉukūla*, கு.பெ.எ.(adj.) உடம்பிற்குத் தகுதியாக; agreeable to the body (சா.அக.).

அங்கானுலேபனம் *aṅgāṉu-lēbaṉam*, பெ. (n.) உடம்பிற் பூசுதல்; anointing the body (சா.அக.).

அங்கி¹ *aṅgi*, பெ.(n.) 1. (விட்டங்களைத் தாங்கும் தாய்நிலை உத்திரம் போலும்) முதன்மையான உடம்புச் சட்டம்; principal. *"கூறும் மங்கியல தங்கமிலை" (வேதாரணி. மாகாசமச். 7).* 2. நீள் குப்பாயம்; long jacket. *"அங்கியினை யங்குமெ யணிந்தவருமானார்" (இரகு. தேனு. 28.).* 3. பாதிரியார் அணியும் நீள் வெள்ளுடை; cassock.

*[**Skt.**aṅgin >த. அங்கி.]*

அங்கி² *aṅgi*, பெ. (n.) 1. நெருப்பு (பிங்.); fire. 2. தீக்கடவுள் (கந்தபு. பாயிர. 53); Agni. 3. பெருந்தீ; digestive faculty, gastric fire. *"உடற்காதார மடலங்கி மாந்தல்" (தைலவ. பாயி. 1.).* 4. ஆரல் (கார்த்திகை) மீன் (பரிபா.11,7.); the third nakṣatra. 5. கதிரவன்; sun. *"பனிப்பகை யங்கியைப் பழிப்பர்" (திருக்காளத். 4. 30, 14.).*

*[**Skt.**agni >த. அங்கி.]*

அங்கி³ *aṅgi*, பெ. (n.) 1. சாதி லிங்கம் (வை. மூ.); vermilion. 2. கைம்மீன் என்னும் (அத்தம்) 13ஆம் விண்மீன் (R); 13th *naṣatram.*

[Skt. agni > த. அங்கி.]

அங்கிக்கரு *aṅgi-k-karu*, பெ.(n.) சாதிலிங்கம்; a beautiful red colouring matter artificially prepared from sulphur and mercury vermilion (சா.அக.).

த.வ. அழற்கரு.

அங்கிசக்குரு *aṅgiśa-k-kuru*, பெ. (n.) இதளியம் (இரசம்) முதலிய தாதுக்களைக் கட்டுவதற்காகக் கொங்கணவன் பொன்னாக்க நூலிற் சொல்லிய முறைப்படி செய்யும், ஒருவகைக் குரு மருந்து; a medicine with an active principle parepared as per method prescribed in the alchemical science of *Koṅgaṇavar* for consolidating mercury and other minerals (சா.அக.).

த.வ. இதளியக்குரு.

அங்கிசகம் *aṅgiśagam*, பெ.(n.) தன்னொறுப்பு; kind of asceticism.

த.வ. புலனடக்கம்.

[Skt. hamsaka> த. அங்கிசகம்.]

அங்கிசபாதி *aṅgIśapādi*, பெ. (n.) **அங்குசவாதி** (பரி.அக.) பார்க்க; see *aṅguśavādi.*

அங்கிசம்¹ *aṅgiśam*, பெ. (n.) எகினப் (அன்னப்) புள்; swan. *"பிரமாவினுடைய இராச அங்கிசமும்" (தக்கயாகப் 151.).*

த.வ. எகினம்.

[Skt. hamsa > த. அங்கிசம்.]

அங்கிசம்² *aṅgiśam*, பெ. (n.) கூறு; part, portion. *"மாதவப்பட்ட னங்சிச வவதாரமாகி" (ஞானவா. முடிவு.).*

த.வ. பங்கு.

[Skt. aṃśa> த. அங்கிசம்.]

அங்கிசம்³ *aṅgiśam*, பெ. (n.) 1. தோள்; shoulder. 2. வாழை; plantain tree. 3. பங்கு; division (சா.அக.).

த.வ. கிளைப்பு.

அங்கிசயன் *aṅgiśayaṉ*, பெ.(n.) யாக வகை; name of a sacrifice.

த.வ. அழலாவுதி.

[Skt. agni-caya > த.அங்கிசயன்.]

அங்கிசு *aṅgiśu*, பெ. (n.) 1. கதிரவன்; the sun. 2. ஞாயிற்றுக் கதிர் (சூரியக் கிரகணம்); the sun's rays (சா.அக.).

த.வ. அழல்.

[Skt. agni>த.அங்கிசு.]

அங்கிசபாதி *aṅgiśapādi*, பெ.(n.) **அங்குசவாதி** (யாழ்.அக.) பார்க்க; see *aṅguśavādi.*

[Skt. hamsa + pādika > த. அங்கிசபாதி.]

அங்கிசுமாலி *aṅgiśumāli*, பெ.(n.) பன்னிரு (துவாதச) கதிரவ இனத்தவருள் ஒருவன் (பிங்.); a deity representing the sun, one of the *tuvādaśādittar*, q.v.

த.வ. அழல்தேவு.

[Skt. amśu-mālin > த. அங்கிசுமாலி.]

அங்கிட்டோமம்¹ *aṅgiṭṭōmam*, பெ. (n.) தீயால் செய்யப்படும் வேள்வி வகை; variety of the *jyōtiṣṭōma*. *"அங்கிட்டோமங் கோமேத மிராச சூயம்" (உத்தரரா. திக்கு. 117).*

த.வ. அழலோமம்.

[Skt. agni-ṣṭōma > த. அங்கிட்டோமம்.]

அங்கிட்டோமம்² *aṅgiṭṭōmam*, பெ. (n.) திருமணி (கோமேதகம்); cinnamon stone, *Onyx* (சா.அக.).

த.வ. அழற்கல்.

[Skt. agni-ṣṭōma> த.அங்கிட்டோமம்.]

அங்கிடபாதி *aṅgiḍa-pādi*, பெ. (n.) **அங்கிசபாதி** பார்க்க; see *aṅgiśapādi* (சா.அக.).

த.வ. அங்குசவாதி

[Skt. haṃsa-pādikā > த.அங்கிடபாதி.]

அங்கிடம்¹ *aṅgiḍam*, பெ. (n.) 1. சீதாங்க வைப்பு நஞ்சு; a kind of mineral poison 2. சாரத்தைக் கட்டுமோர் மருந்து; a chemical capable of consolidating muriate of ammonia sold in the abzaar.

த.வ. அழல்நஞ்சு.

[Skt. haṃsa > த. அங்கிடம்.]

அங்கிடம்² *aṅgiḍa*, பெ. (n.) 1. வாழை; plantain tree. 2. தசை (மாங்கிசம்); flesh

அங்கித்தம்பனை *aṅgi-t-tambaṉai*, பெ. (n.) நெருப்புச் சுடாமலிருக்கச் செய்யவல்லதொரு கலை (திருவாலவா. 38, 23.); art of suspending the action of fire by magic.

த.வ. அழல்தடை.

[அங்கி + தம்பனை.]

[Skt. agni> த. அங்கி.]

அங்கித்தேவன் *aṅgi-t-tēvaṉ*, பெ. (n.) தீக்கடவுள்; the god to fire. *"அங்கித் தேவனருளென"* (பெருங். உஞ்சைக் 43, 151).

த.வ. அழற்கடவுள்.

[அங்கி + தேவன்.]

[Skt. agni > த. அங்கி.]

அங்கிதம்¹ *aṅgidam*, பெ. (n.) பாட்டுடைத் தலைவனைக் குறிக்கும் பெயர்; the name given, in a poem, to a person who is the hero. "ஓர் அங்கிதம் வைத்துப் பாடுகிறது" (R).

த.வ. உள்ளாளன்.

[Skt. aṅkita > த. அங்கிதம்.]

அங்கிதம்² *aṅgidam*, பெ. (n.) 1. அடையாளம்; sign. *"அங்கிதம் பிறவுமே லறைய நின்றவே"* (கந்தபு. இந்திரபுரி 37.). 2. தழும்பு; scar. *"இவன் செருவிற் கொண்ட வங்கிதத்து"* (இரகு. யாகப். 103.).

த.வ. அடையாளம்.

[Skt. aṅkita > த. அங்கிதம்.]

அங்கிதாரணம் *aṅgitāraṇam*, பெ. (n.) தீயின் திறம் நினைத்து அமைத்தல்; concentrating on the principle of fire, as operating in the body (சா.அக.).

த.வ. அழற்கோவை.

[அங்கி + தாரணம்.]

[Skt. agni> த. அங்கி.]

அங்கிதிசை *aṅgi-tiśai*, பெ. (n.) தென்கிழக்கு (திவா.); the S.E quarter, as under the guardianship of Agni.

த.வ. அழல்திசை.

[அங்கி + திசை.]

[Skt. agni > அங்கி.]

அங்கிநாள் *aṅgi-nāḷ*, பெ. (n.) 1. ஆரல் (கார்த்திகை) (பிங்.); the third *nakṣatra*. 2. கைம்மீன் (அத்தம்) (சூடா.); the thirteenth *nakṣatra*.

த.வ. ஆரல்.

[அங்கி + நாள்.]

[Skt. agni> த. அங்கி.]

அங்கிபூட்டு-தல் *aṅgi-pūṭṭu*, 5 செ.கு.வி. (v.i.) சீலைமண் செய்தல்; to coat a long piece of cloth with clay or red sand and to cover or tie it round the edges of the mouth, as of a bottle etc., to make them air-tight. To lute this is a method adopted by the alchemists, and vaidyans for calcination of metals (சா.அக.).

த.வ. மண்ணீடுசெய்தல்.

அங்கிமாந்தம் *aṅgimāndam*, பெ. (n.) நோய்வகை (கடம்ப. 4, இல்லா. 94.); a kind of disease.

த.வ. அழல்மாந்தம்.

[அங்கி + மாந்தம்.]

[Skt. agni>த. அங்கி.]

அங்கியங்கடவுள் *aṅgi-aṅ-kaḍavuḷ*, பெ. (n.) தீக்கடவுள்; Agni. *"அங்கியங் கடவுள் அறிகரி யாக" (தொல். பொருள். 142, உரை.).*

[அங்கியம் + கடவுள்.]

[Skt. agni>த. அங்கி.]

அங்கியாதானம் *aṅgi-y-ādāṉam*, பெ. (n.) வேள்விக்காகத் தீயைச் சேர்க்கும் தொழில் (திருக்காளத். 4, 29, 33); initiatory ceremony of placing the sacred fire on the altar and consecrating it.

த.வ. அழற்கொடை.

[அங்கி + ஆதனம்.]

[Skt. agni > த. அங்கி.]

அங்கிரகம் *aṅgiragam*, பெ. (n.) உடம்பினோய்; disease of the body, bodily ailment (சா. அக.).

த.வ. மெய்ப்பிணி.

[Skt. aṅga+graha>த. அங்கிரகம்.]

அங்கிரசு *aṅgirašu*, பெ. (n.) **அங்கிரன்** (மச்சபு.இருடிமான்.57) பார்க்க; see *aṅgiraṉ*.

[Skt. aṅgirasu > த. அங்கிரசு.]

அங்கிரம் *aṅgiram*, பெ. (n.) பதினெண் துணைத் தொன்மத்துளொன்று; a secondary *purāṇa*, one of 18 *uba-purāṇam*

[Skt. aṅgiras > த. அங்கிரம்.]

அங்கிரன் *aṅgiraṉ*, பெ. (n.) ஒரு முனிவன் (விண்.); name of a sage.

[Skt. aṅgiras > த. அங்கிரன்.]

அங்கிரா *aṅgirā*, பெ. (n.) ஒரு முனிவன் (காஞ்சிப்பு. சத்ததா 2); name of a sage.

[Skt. aṅgirās > த. அங்கிரா.]

அங்கிரி[1] *aṅgiri*, பெ. (n.) மரவேர் (நாநார்த்த.); root, as of tree.

[Skt. aṅghri > த. அங்கிரி.]

அங்கிரி[2] *aṅgiri*, பெ. (n.) மாட்டு நோய்வகை (பெரியமாட். 102); a cattle - disease.

[Skt. aṅgiri > த. அங்கிரி.]

அங்கிரி[3] *aṅgiri*, பெ.(n.) பாதம், தாள் (பிங்.); foot.

[Skt. aṅghri > த. அங்கிரி.]

அங்கிரிநாமகம் *aṅgiri-nāmagam*, பெ. (n.) மரமூலம்; root of a tree (சா.அக.).

த.வ. மரவேர்.

[Skt. aṅghri+nāmakā>த.அங்கிரிநாமகம்.]

அங்கிரிப்பலா *aṅgiri-p-palā*, பெ. (n.) சிற்றா மல்லி, பற்களையொத்தும் சிறியனவுமான மல்லிவகை; short tubed Arabian jasmine, *Jasminum sambac* (typica) (சா.அக.).

த.வ. மூக்குமல்லி.

அங்கிரிபம் *aṅgiribam*, பெ. (n.) மரம்; tree (சா.அக.).

[Skt. aṅghri-pa > த. அங்கிரிபம்.]

அங்கிரிபாணி *aṅgiri-pāṇi*, பெ. (n.) (வழக்கமாய்) விரல் சூப்பும் குழந்தை; a child who habitually sucks the thumb, thumb sucker (சா.அக.)

த.வ. கைசூப்பி, விரல்சூப்பி.

அங்கிரிபானம் *aṅgiri-bāṉam*, பெ.(n.) விரல் சப்புதல்; sucking the finger or the toes as done by infants (சா.அக.).

த.வ. விரற்சூப்பல்.

அங்கிரிவல்லி *aṅgiri-valli*, பெ.(n.) மூவிலை; a plant-liedysarum, Lagopodioides, c.f. அங்கிசபாதி (சா.அக.).

த.வ. இலைவள்ளி.

[அங்கிரி + வல்லி.]

*[**Skt.** aṅgira>த.அங்கிரி.]*

அங்கினிண்டான் *aṅgiṉiṇḍāṉ*, பெ. (n.) கருஞ் செம்பை; bastard sensitive plant-*sesbania aegyptiaca* alias, *S. Aculeata* (சா.அக.).

அங்கீகரணம் aṅgīgaraṇam, பெ. (n.) உடன் படுகை, உடன்படிக்கை; assenting, accepting.

த.வ. உடன்பாடு.

*[**Skt.** aṅgīkaraṇa >த. அங்கீகரணம்.]*

அங்கீகரி–த்தல் *aṅgīgari-*, 4. செ.குன்றாவி. (v.t) ஏற்றுக்கொள்ளுதல்; to accept, receive, approve. *"சித்தம்வைத் திடவுமங் கீகரித் திடுமகா தேவதேவா" (அறப். சத. 100.).*

த.வ. ஏற்பளித்தல்.

*[**Skt.** aṅgī-kaı >த. அங்கீகரி–.]*

அங்கீகாரம் *aṅgīgāram*, பெ. (n.) 1. உடன்பாடு; acceptance, approval. 2. வரவேற்பு; hospitality. *"அங்கீகார மனைத்துஞ் செய்தான்" (ஞானவா. சிகித். 81.).*

த.வ. ஏற்பு.

*[**Skt.** aṅgī-kāra >த. அங்கீகாரம்.]*

அங்கீகிருதம் *aṅgīgirudam*, பெ. (n.) ஏற்றுக் கொள்ளப்பட்டது (சங். அக.); that which is agreed to, accepted.

*[**Skt.** aṅgī-kṛta >த. அங்கீகிருதம்.]*

அங்கு *aṅgu*, பெ. (n.) உடலுறுப்பு; limb of the body (சா.அக.).

*[**Skt.** aṅga >த. அங்கு.]*

அங்குசபிசாரி *aṅguša-pišāri*, பெ.(n.) பேரீச்சம் பழம்; fruit of the date palm, *Phoenix dactylifera* (சா.அக.).

அங்குசம் *aṅgušam*, பெ. (n.) தையற்காரரின் விரற்கூடு (இராட்.); thimble.

*[**Skt.** angusthān >த. அங்குசம்.]*

அங்குசரோசனம் *aṅguša-rōsaṉam*, பெ. (n.) கூவை நீறு (இராட்.); flour of East Indian arrowroot.

*[**Skt.** aṅkuša+rōcana> த.அங்குசரோசனம்.]*

அங்குசவாதி *aṅguša-vādi*, பெ. (n.) சிறுபுள்ளடி; (பச். மூ.); scabrous ovate unifoliate tick-trefoil.

*[**Skt.** hamsa + pādikā> த.அங்குசவாதி.]*

அங்குசன் *aṅgusaṉ*, பெ. (n.) வைப்பு நஞ்சு (வை.மூ); *aṅguša.pāṣāṇam.* a mineral poison.

*[**Skt.** aṅkuša >த. அங்குசன்.]*

அங்குட்டப்பருமன் *aṅguṭṭa-p-parumaṉ*, பெ. (n.) பெருவிரல் கனம்; as thick as the thumb (சா.அக.).

[அங்குட்டம் + பருமன்]

*[**Skt.** aṅgusha>த. அங்குட்டம்.]*

அங்குட்டப்பிரமாணம் *aṅguṭṭa-p-piramāṇam*, பெ. (n.) **அங்குட்டமாத்திரம்** பார்க்க; see *aṅguṭṭa-māttiram* (சா.அக.).

*[**Skt.** aṅgustha+pra-māṇa>த. அங்குட்டப் பிரமாணம்.]*

அங்குட்டம்[1] *aṅguṭṭam*, பெ.(n.) 1. பெருவிரல்; thumb, great toe. *"தாளங்குட்டத்தைத் திகழிரதத்தினூன்றி" (வரத. பாகவத. பற்கு 20).* 2. பெருவிர லளவு; measure of a thumb. *"அங்குட்டமென்னு மளவிற்றா முருவுவாய்ந்த" (பாகவத. சூரியமண் 20).*

[Skt. angustha > த. அங்குட்டம்.]

அங்குட்டம்^{2} *anguttam,* பெ. (n.) பாண்டு (வை.மு.); a condition to the biliary passages, general dropsy (சா.அக.).

[Skt. angustha > த. அங்குட்டம்.]

அங்குட்டமாத்திரம் *angutta-māttiram,* பெ. (n.) பெருவிரலளவு; as big as the thumb (சா.அக.).

அங்குட்டமுதல்ரோமம்வரை *anguttamudal-rōmam-varai,* பெ. (n.) கால் பெருவிரல் முதல் தலைமயிர் வரை; from the big toe to the head i.e., from toe to top, figuratively the whole body (சா.அக.).

த.வ. அடிமுதல் முடிவரை.

அங்குட்டரூபி *angutta-rūbi,* பெ. (n.) 1. பெருவிரலளவினன்; a person of very small size, Liliputian. 2. அகத்தியர்; the sage Agastyar (சா.அக.).

[Skt. angustha+ rūpin> த. அங்குட்டரூபி.]

அங்குட்டவாதம் *angutta-vādam,* பெ. (n.) பெருவிரல் வளி; neurosis of the thumb or the great toe, similar to cramp (சா.அக.).

[Skt. angustha+vāta>த. அங்குட்டவாதம்.]

அங்குடம் *angudam,* பெ. (n.) திறவுகோல் (யாழ். அக.); key.

[Skt. ankuta > த. அங்குடம்.]



அங்குடாகினி *angudāgini,* பெ. (n.) கருங் கடுகுரோகினி; black hellibore, *Helliborus nigher alias picrorriza kurroa* (சா.அக.).

[Skt. anguta > த. அங்குடாகினி.]

அங்குணம்^{1} *angunam,* பெ. (n.) வெங்காரம் (R.); borax.

[Skt. tankana > த. அங்குணம்.]

அங்குணம்^{2} *angunam,* பெ. (n.) கோதுமை; wheat, *Triticum vulgara alias T. sativum* (சா.அக.).

[Skt. tankana > த. அங்குணம்.]

அங்குத்தான்^{1} *anguttān,* பெ. (n.) துன்னர் விரலில் அணியுங்கூடு; thimble.

அங்குத்தான்^{2} *anguttān,* பெ.(n.) பெருந்தாரா; a wild goose (சா.அக.).

அங்குயாசக்காய் *anguyāśakkāy,* பெ. (n.) பலகறை; cowry (சா.அக.).

அங்குரகம் *anguragam,* பெ. (n.) கூடு (சிந்தா. நி. 39); nest.

[Skt. ankura-ka > த. அங்குரகம்.]

அங்குரப்பிராணி *angura-p-pirāni,* பெ. (n.) முளை சீவி; a generic name for micro-organism whether animal or vegetable-microbe (சா.அக.).

[Skt. ankura + prānin>த.அங்குரப்பிராணி.]

அங்குரம்^{1} *anguram,* பெ.(n.) நீர் (நாநார்த்த.); water.

[Skt. ankura > த. அங்குரம்.]

அங்குரம்^{2} *anguram,* பெ. (n.) 1. வாழை; plantain tree, *Musa parasidiaca.* 2. பூண்டின் முளை; the shoot of plant. 3. முளை; sprout from a seed. *"அங்குரம் போல் வளர்ந்தருளி" (பெரியபு. திருஞா. 53.);* 4. குருதி; blood. 5. மயிர்; hair.

[Skt. ankura > த. அங்குரம்.]

அங்குரார்ப்பணம் *angurārppanam,* பெ. (n.) பாலிகை தெளிக்கை (நெடுநல். 75. உரை); ceremony preliminary to a marriage or other auspicious ceremony in which certain seeds are placed in vessels for sprouting.

த.வ. முளைப்பாலிகை, முளைக்கட்டு.

[Skt. aṅkura+arpaṇa> த. அங்குரார்ப்பணம்.]

அங்குரி[1]–த்தல் *aṅguri-*, 4. செ.கு.வி. (v.i) 1. முளைத்தல்; to sprout. *"வித்துட்டங்கியே யங்குரித்து" (திருவாத. பு. மந்தி 7.).* 2. தோற்றுவித்தல்; to originate, to be born. *"குருவுமக் குலத்திலங் குரித்தான்" (பாரத. குருகு. 31.).* 3. வெளிப்படுதல்; to reveal oneself, appear. *"ஆண்டு மன்றல் பெற்றங்குரித்தார்" (பாரத. திரெளபதிமா. 98.).*

த.வ. முளைப்பு.

[Skt. aṅkura > த. அங்குரி–.]

அங்குரி[2] *aṅguri*, பெ. (n.) 1. கைவிரல்; finger. 2. கால் விரல்; toe.

[Skt. aṅguri > த. அங்குரி.]

அங்குரி[3] *aṅguri*, பெ.(n.) தளிர்த்தல்; sprouting (சா.அக.).

[Skt. aṅkuri > த. அங்குரி.]

அங்குரிதம் *aṅguridam*, பெ.(n.) முளைத்தது; that which has sprouted forth (சா.அக.).

[Skt. aṅkurita> த. அங்குரிதம்.]

அங்குலதோரணம் *aṅgula-tōraṇam*, பெ. (n.) சிவனியர்கள் நெற்றியிலணியும் திருநீற்றுக் கோடு (C.m.); marks of sacred ashes worn by *śaivites* on their foreheads in three horizontal lines.

[Skt. aṅgula-toraṇa> த. அங்குலதோரணம்.]

அங்குலப்பரிட்சை *aṅgula-p-pariṭcai*, பெ.(n.) பெண்களின் பிறப்புறுப்பிற் கைவிரலை யிட்டுக் கருப்பையைத் தூக்கியும் இறக்கியும் பார்த்துக் குழந்தை உண்டாயிருப்பதை அறிந்து, கருப்பத்தை உறுதி செய்யும் ஒரு கைமுறை; a method of diagnosing pregnancy from the 4th to the 8th month by pushing up the uterus with the finger inserted into the vagina so as to cause the embryo to rise and fall again like a heavy body in water, impinging on the tip of the finger in the rebound, in a characteristic way, *Internal Ballottement* (சா.அக.).

த.வ. விரல்தேறல்.

[Skt. aṅgula+parīkṣā > த. அங்குலப் பரீட்சை.]

அங்குலம்[1] *aṅgulam*, பெ. (n.) அணிவிரல், சுண்டு விரலுக்கு முன்னுள்ள விரல் (அக. நி.); ring finger.

த.வ. மோதிரவிரல்

[Skt. aṅgula > த. அங்குலம்.]

அங்குலம் என்னும் சொல் கணையாழி (மோதிரம்) அணியும் சிறப்பு நோக்கி அணிவிரல் என்னும் பொருளில் தமிழில் மட்டுமே உள்ளது. வடமொழியில் இல்லை.



அங்குலம்[2] *aṅgulam*, பெ. (n.) 1. கைவிரல்; finger. *"கமலங்க ணிகரு மங்குலத் திருக்கை"* (மருதூ 48.); 2. கை அல்லது காலின் பெருவிரல்; thumb or great toe. 3. ஒருவிர லகலம்; inch, a measure of length, as a finger's breadth. *"அங்குலத்தளவை யாமே"; (கந்தபு. அண்ட. 5).*

த.வ. விரலம், விரற்கிடை.

[Skt. aṅgula > த. அங்குலம்.]

அங்குலராசி *aṅgula-rāśi*, பெ.(n.) பூநாகம் போன்ற ஒரு வகைச் சிறிய பாம்பு; a species of small snakes about an inch in length, as pūnāgam (சா.அக.).

[Skt. aṅgula+rāji>த. அங்குலராசி.]



அங்குலி[1] *aṅguli*, பெ.(n) 1. விரல் (திவா.); finger or toe. *"அங்குலி யெண்களி னமைத்து" (பெரியபு. ஆனாய. 13.).* 2. கணையாழி; finger-ring, toe-ring. *"மேல்விரல் தனக்கு மங்குலி பொருத்தி" (நல். பாரத. திரௌ. 30.).*

[Skt. aṅguli > த. அங்குலி.]

அங்குலி[2] *aṅguli*, பெ.(n.) 1. ஆதனின் இருப்பிடமாகக் கருதப்பெறும் புருவ நடுவம்; the space between the eye-brow considered as the seat of soul. *"அங்குலி கூடி யகப்புறம்" (திருமந். 1191.)*

[Skt. aṅguli > த. அங்குலி.]

அங்குலி[3] *aṅguli*, பெ. (n.) 1. யானைத் துதிக்கையின் நுனி; the tip of an elephants trunk. *"அக்கிரி குலங்கள்விடு மங்குலியி னுண்டி வலை" (கலிங் 285).* 2. ஐவிரலி (பரி. அக.); aivirali, a creeper bearing red fruits.

[Skt. aṅguli > த. அங்குலி.]

அங்குலிகம் *aṅguligam*, பெ. (n.) கணையாழி; finger-ring. *"அங்குலிக மொன்றுபுன லாழ்தரு கிணற்றில் விழ" (பாரத. வாரணா. 51).*

த.வ. மோதிரம்.

[Skt. aṅgulika > த. அங்குலிகம்.]

அங்குலிசத்திரம் *aṅguli-śattiram*, பெ. (n.) தொண்டையில் அறுவை மருத்துவம் செய்தவற்காக விரலில் மாட்டிக்கொண்டு பயன்படுத்தும் ஒரு வகைக் கத்தி; a surgical knife used in an operation of the throat; a scraping instrument held in the hand-scarper (சா.அக.).

த.வ. விரற்கத்தி.

[Skt. aṅguli+śastra>த.அங்குலிசத்திரம்.]



அங்குலிசந்தேசம் *aṅguli-śandēśam*, பெ. (n.) விரல் நொடித்தல்; making a sharp noise by striking the ball of the thumb, snaing the thumb (சா.அக.).

[Skt. aṅguli+san-dēśa> த. அங்குலிசந்தேசம்]

அங்குலித்திரம் *aṅgulittiram*, பெ. (n.) கைவிரலுறை (சிந்தா. நி. 39); thimble.

[Skt. aṅguli-tra > த. அங்குலித்திரம்.]

அங்குலித்திராணம் *aṅguli-t-tirāṇam*, பெ. (n.) **அங்குலித்திரம்** (யாழ். அக) பார்க்க; see *aṅgulittiram*.

[Skt. aṅguli+tirāṇa>த. அங்குலிதிராணம்.]

அங்குலித்திராணிகம் *aṅguli-t-tirāṇigam*, பெ.(n.) இசிவு (சன்னி) முதலிய நாய்களினால் தாக்குண்டு பல் கிட்டியிருக்கும் போது நோயாளிகளின் வாயைத் திறக்க முயலுகையில் அவர்கள் தம் பற்களால் விரல்கடிபடாமல் இருப்பதற்காகப் பயன்படுத்தும் ஒரு வகைக் கருவி; a surgical instrument akin to pincers for keeping a part or for holding anything difficult to be held by the hand forceps; a surgical instrument of holding the mouth open-mouth gag (சா.அக.).

த.வ. கிட்டுக்கோல்.

[Skt. aṅguli+tirāṇa>த. அங்குலி திராணிகம்.]

அங்குலிதோரணம் *aṅguli-tōraṇam*, பெ. (n.) தோரணம் போல் நெற்றியிலணியும் சந்தனச் சாந்து; a decorative mark on the forehead drawn with sandal paste or other materials.

த.வ. தோரணச்சாந்து.

[அங்குலி + தோரணம்.]

[Skt. aṅguli + tōraṇa > த. அங்குலி தோரணம்.]

அங்குலிப்பருவன் *aṅguli-p-paruvaṉ*, பெ. (n.) விரற்கணு; finger joint (சா.அக.).

[Skt. aṅguli-paruva>த. அங்குலிப்பருவன்.]

அங்குலிபிராசனம் *aṅguli-pirāšaṉam*, பெ.(n.) விரல்களினால் அள்ளியெடுத்து உண்ணுகை; eating with the fingers (சா.அக.).

த.வ. விரலூட்டு.

[Skt. aṅguli + prāšana > த. அங்குலி பிராசனம்.]

அங்குலிமுகம் *aṅguli-mugam*, பெ. (n.) விரல் நுனி; tip of the finger (சா.அக.).

[அங்குலி + முகம்.]

[Skt. aṅguli> த. அங்குலி.]

அங்குலிமுத்திரை *aṅguli-muttirai*, பெ. (n.) முத்திரை மோதிரம் (யாழ். அக); signet ring.

[அங்குலி+முத்திரை.]

[Skt. aṅguli > த. அங்குலி.]

அங்குலியம் *aṅguliyam*, பெ. (n.) கணையாழி (யாழ். அக); finger ring.

[Skt. aṅgulīya > த. அங்குலியம்.]

அங்கோலதைலம் *aṅgōla-tailam*, பெ. (n.) கண்கட்டுக்கலைக்குரிய நெய்மம் (சம். அக.); oil extracted from *aṅgōla* seeds for magical purposes (சா.அக.).

[Skt. aṅkōla+taila>த.அங்கோலதைலம்.]

அங்கோலம் *aṅgōlam*, பெ. (n.) 1. அழிஞ்சில் (மலை.); sage-leaved alanguim. 2. மரவகை (L); thin sage leaved Indian linden.

[Skt. aṅkōla>த. அங்கோலம்.]

அங்கோலவைரவன் *aṅgōla-vairavaṉ*, பெ. (n.) அழிஞ்சில் (மலை.); sage-leaved alangium.

[Skt. aṅkōla + bhairava>த. அங்கோல வைரவன்]

அங்கோலை *aṅgōlai*, பெ. (n.) அழிஞ்சிற் பட்டை; bark. *"அத்தமதியுதய மங்கோலை" (இராசவைத். 270).*

[Skt. aṅkōla > த. அங்கோலை.]

அச்சணம் *accaṇam*, கு.வி.எ. (adv.) உடனே (இராட்.); immediately.

[Skt. a+kshaṇa.]

அச்சகாரம் *accagāram*, பெ. (n.) முன்பணம் (இ.வ.); earnest money advance payment.

த.வ. அச்சாரம்.

[Skt. satyaṅkāra >த. அச்சகாரம்.]

அச்சதந்தெளி–த்தல் *accadanteḷi*, 4 செ.கு.வி. (v.i.) அருகும் அரிசியும் இடல் (இ.வ.); to spirinkle a mixture of rice and cynodon grass, as on a newly married couple.

[அச்சதம் + தெளி-.]

[Skt. akṣata>த. அட்சதை.]

அச்சபல்லம் *acca-pallam*, பெ. (n.) கரடி (சிந்தா.நி. 50.); bear.

[Skt. accha-bhalla>த. அச்சபல்லம்.]

அச்சம்[1] *accam*, பெ. (n.) வைப்புநஞ்சு (சங்.அக.); a mineral poison.

அச்சம்[2] *accam*, பெ. (n.) அன்னை (பொதி. நி. 19, பி-ம்); mother.

[த. அச்சி >Pkt. ajja >த. அச்சம்.]

அச்சம்[3] *accam*, பெ. (n.) 1. தெளிவு (ஈடு. 1, 1, 11).; clearness. 2. பளிங்கு (யாழ். அக.); crystal. 3. கரடி (யாழ். அக.); bear.

[Skt. accha >த. அச்சம்.]

அச்சயன் *accayan*, பெ. (n.) அழிவில்லாதவன் கடவுள்; god, as the imperishable one.

த.வ. நீடுவாழி.

[Skt. akṣaya >த. அச்சயன்.]

அச்சரசு *accarašu*, பெ. (n.) துறக்கவுலகிலி ருப்பதாகக் கருதப்படும் தேவமகள்; celestial nymph, courtesan of svargam.

த.வ. அரமகள்.

[Pkt. accharasa>Skt. apsaras>த. அச்சரசு.]

அச்சரம் *accaram*, பெ. (n.) எழுத்து (இ.வ.); letter.

த.வ. எழுத்து.

[Skt. akṣara >த. அச்சரம்.]

அச்சா *accā*, பெ.(n.) இடை (int.); மிகநன்று (இ.வ.); well done, very good.

த.வ. நன்று.

[U. acchā > Skt. accha>த. அச்சா.]

அச்சாரம் *accāram*, பெ. (n.) முன்பணம் (இ.வ.); earnest money, advance given to ratify a bargain. *'அச்சாரம் கொடுத்தால்தான், வீட்டை வேறுயாருக்கும் விடமாட்டார்கள்' (இவ).*

த.வ. முன்காசு.

[Skt. satyaṅkāra >த. அச்சாரம்.]

அச்சாவாகன் *accāvāgan*, பெ. (n.) வேள்வியில் தலைமைப் பூசகருக்கு உறுதுணை புரிபவன்; priest, officiating at some sacrifices as a co-adjutor of *hōtr*. 2. மூடன் (இ.வ.); stupid dunce.

த.வ. உழையாளன்.

[Skt. acchā-vāka >த. அச்சாவாகன்.]

அச்சாறு *accāṟu*, பெ. (n.) ஊறுகாய் (பர.வ.); pickles.

த.வ. உப்பின்காய்.

[U. accār > த. அச்சாறு.]

அச்சானம் *accāṉam*, பெ. (n.) அறிவில்லாத் தன்மை (ஞானா. பாயி. 6, 26.); spiritual ignorance.

த.வ. அறியாமை.

[Skt. a-jñāna >த. அச்சானம்.]

அச்சானியம் *accāṉiyam*, பெ. (n.) 1. தீக்குறி முதலியவற்றால் நேரும் மனவேறுபாடு; unhappiness, painful state of mind, as from a bad omen. *அங்கேபோக மனசுக்கு அச்சானியமாயிருக்கிறது (இ.வ.).* 2. மங்கல மின்மை; inauspiciousness. *ஏன் அச்சானியமாய்ப் பேசுகிறாய்? (இ.வ.).*

த.வ. தீத்திறம்.

[Skt. a-jñāna >த. அச்சானியம்.]

அச்சினி *acciṉi*, பெ. (n.) எட்டாம் மாதம் (சித். அக); eighth month.

த.வ. எட்டாம்திங்கள்.

[Skt. aṣṭa >த. அச்சினி.]

அச்சுதந்தெளி-த்தல் *accudanteḷi-*, 4 செ.கு.வி. (v.i.) **அச்சதம்தெளித்தல்** பார்க்க; see *accadam-teḷi*. *"மங்கல வச்சுதந் தெளித்து... வாழ்த்தினர்" (சீவக. 2411).*

[அச்சுதம்+தெளி-.]

[Skt. a-kṣata>த. அச்சுதம்.]

அச்சுதம்[1] *accudam*, பெ. (n.) அருகும் அரிசியும் கூடியது; mixture of rice and cynodon grass, used in benediction or workship. *"வாழிய ரூழியென்னா அச்சுதங் கொண்டு" (சீவக. 2494).*

[Skt. a-kṣata >த. அச்சுதம்.]

அச்சுதம்[2] *accudam*, பெ. (n.) அழிவில்லாதது; the imperishable. *"அச்சுத மனந்தஞ் சாந்தம்" (ஞானவா. சிகித். 148).*

[Skt. a-cyuta >த். அச்சுதம்.]

அச்சுதம்[3] *accudam*, பெ. (n.) இந்திரர்களில் ஒருவனுக்குரிய உலகம் (தக்கயாகப். 265.); the world of an Indran.

த.வ. அமருலகம்.

[Skt. a-cyuta >த. அச்சுதம்.]

அச்சுதன் *accudan*, பெ.(n.) 1. எஞ்ஞான்றும் அழிவில்லாதவன்; the imperishable one. *"அச்சுதனாஞ் சிவன்" (கந்தபு அவைபுகு. 8.).* 2. திருமால் (திவா.); *Thirumāl (Viṣnu).* 3. முருகன் (பொதி. நி.); Lord Murugan. 4. அருகன்; Arhat. *"அச்சுத னடிதொழுது".*

த.வ. அழிவிலி.

[Skt. a-cyuta >த. அச்சுதன்.]

அச்சுதன்முன்னோன் *accudan-munnōn*, பெ. (n.) பலபத்திரன் (பிங்.); *Balabhdran*, elder brother of *Krisnan*.

[அச்சுதன்+முன்னோன்.]

[Skt. a-cyuta>த. அச்சுதன்.]

அச்சுதை *accudai*, பெ. (n.) மலைமகள் (கூர்மபு. திருக்கல் 23.); Malaimagal, as the imperishable one.

[Skt. a-cyutā >த. அச்சுதை.]

அச்சுரம் *accuram*, பெ.(n.) 1. நெருஞ்சி (மூ.அ.); tribulus plant. 2. முருங்கை (வின்.); horse-radish tree.

[Skt. ikṣura >த. அச்சுரம்.]



அச்சுவசாத்திரம் *accuva-šāttiram*, பெ. (n.) குதிரையியல்பு கூறும் நூல்; hippology.

[Skt. ašva + šāstra>த. அச்சுவசாத்திரம்.]

அச்சுவத்தம் *accuvattam*, பெ. (n.) அரசமரம் (பிங்.); pipal.

[Skt. ašvattha >த. அச்சுவத்தம்.]

அச்சுவத்தாமன் *accuvattāman*, பெ. (n.) **அசுவத்தாமா** பார்க்க; see *ašuvattāmā.*

[Skt. ašvatthāman >த. அசுவத்தாமன்.]

அச்சுவத்தாமா *accuvattāmā*, பெ.(n.) அச்சுவத்தாமன் (பாரத. பதினைந். 27.); *accuvattāman*, son of *Drōnar.*

[Skt. ašvatthāman >த. அச்சுவத்தாமா.]

அச்சுவதரம் *accuvadaram*, பெ. (n.) 1. கோவேறு கழுதை (நாநார்த்த.); mule. 2. பாம்பு வகையு ளொன்று; a kind of snake.

[Skt. ašva-tara >த. அச்சுவதரம்.]

அச்சுவதி *accuvadi*, பெ.(n.) முதல் விண்மீனான இரலை (அசுவதி); the first nakṣatra asuvadi, alias iralai. *"மறுவில் அச்சுவதி யாதி யிரேவதி யீறா மாதர்" (நல். பாரத. பதினெட்.23).*

[Skt. ašvinī >த. அச்சுவதி.]

அச்சுவம்[1] *accuvam*, பெ.(n.) குதிரை; horse. *"இந்த அச்சுவம் கூர்ச்சரம்" (திருவிளை. நரிபரி. 105).*

[Skt. ašva > த. அச்சுவம்.]

அச்சுவம்[2] *accuvam*, பெ.(n.) அக்கரகாரம் (எரிச்சலூட்டும் வேர் செடிவகை) (பொதி.நி.); pellitory root.

[Skt. ašva-gandhā > த. அச்சுவம்.]

அச்சுவமுகாதனம் *accuvamugādaṉam*, பெ.(n.) கால்மடித்து இரண்டு முழங்காலிலும் முழங்கைகளை யூன்றி இரண்டு உள்ளங் கைகளையும் கன்னத்தில் வைத்திருக்கும் ஓகவிருக்கை வகை (தத்துவப் 108, உரை.); a *yōgic* pose in which the person sits cross-legged, places his elbows on his knees and rests his cheeks on the palm of his hands.

[அச்சுவம் + முகம் + ஆதனம்.]

*[Skt. ašva > த. அச்சுவம். **Skt.** ā-sana > த. ஆதனம்.]*



அச்சுவமேதம் *accuvamēdam*, பெ.(n.) குதிரை ஈதல் (அசுவமேதம்) (உத்தரரா.); horse sacrifice.

த.வ. குதிரைவேள்வி.

[Skt. ašva+mēdha > த. அச்சுவமேதம்.]

அச்சுவன் *accuvaṉ*, பெ. (n.) குதிரை யினத்தைச்சார்ந்த ஆடவன் (கல்லா. 5, மயிலேறு.); man of horse-like nature, one of three *āḍavar-šādi*.s

த.வ. பரியன்.

[Skt. ašva > த. அச்சுவன்.]

அச்சுவாதீதம் *accuvādīdam*, பெ. (n.) செவ்வலரி வகை (சித்.அக.); a kind of red oleander.

[Skt. ašvamāra > த. அச்சுவாதீதம்.]

அச்சுவினி *accuviṉi*, பெ.(n.) இரலை விண் மீன் (அசுவினி) (திவா.); name of the first nakṣatra, part of Aries.

[Skt. ašvini > த. அச்சுவினி.]

அச்சுவினிகள் *accuviṉigaḷ*, பெ. (n.) அச்சுவினி தேவர் (பிங் 86.); twin *vēdic* gods who are physicians of heaven.

[அச்சுவினி+கள்.]

[Skt. ašvin > த. அச்சுவினி.]

அச்சுவினிதேவர் *accuviṉi-dēvar*, பெ. (n.) தேவமருத்துவர் (பிங்.); twin *vēdic* Gods who are physician's of heaven.

[அச்சுவினி+தேவர்.]

[Skt. ašvini > த. அச்சுவினி.]

அச்சுவினிமதலையர் *accuviṉi-madalaiyar*, பெ. (n.) நகுலசகதேவர் (பிங்.); Nagula and *Sagādēvar*, the fourth and fifth of the *Pāṇḍavār*.

[அச்சுவினி + மதலையர்.]

[Skt. ašviṉi > அச்சுவினி.]

அச்சுனிகள் *accuṉigaḷ*, பெ. (n.) அச்சுவினி தேவர்; twin *vēdic* gods. *"அச்சுனிகள் தீர்த்தம்" (வேதாரணி தீர்த்த. 27.).*

[Skt. ašvin > த. அச்சுனிகள்.]

அச்சை *accai*, பெ.(n.) வேதத் தொடரியம் (வாக்கியம்); *vēdic hymn*. *"முப்பத்திரண்டு அச்சையும் ஐஞ்சு வாரமுமோதி" (T.A.S. i, 8).*

[Skt. ṛca > த. அச்சை.]

அசக்கியம்[1] *ašakkiyam*, பெ.(n.) செய்ய வியலாதது; that which is impossible or impracticable. *"தியானம் புரிதற் கசக்கிய மாதலினால்" (சூத. எக்கிய. பூ. 9, 3.).*

த.வ. அருவினை.

*[**Skt.** a-sakya>த. அசக்கியம்.]*

அசக்கியம்[2] *ašakkiyam*, பெ.(n.) நாகமணல் (வை. மூ.); sand containing lead.

*[**Skt.** a-saṅkhya >த. அசக்கியம்.]*

அசக்கியன் *ašakkiyan̠*, பெ.(n.) இயலாதவன் (R.); unskilled or unfit person.

*[**Skt.** a-šakya >த. அசக்கியன்.]*

அசக்கீரம் *aša-k-kīram*, பெ.(n.) ஆட்டுப்பால் (பரி. அக.); goat's milk.

*[**Skt.** aja + kṣīra>த. அசக்கீரம்.]*

அசகசாந்தரம் *aša-gašāndaram*, பெ. (n.) பெரும் வேறுபாடு; wide disparity, as between a goat and an elephant.

த.வ. ஆட்டானைவேறுபாடு.

*[**Skt.** aja+gaja+antara>த.அசகசாந்தரம்.]*

அசகண்டம் *ašakaṇḍam*, பெ. (n.) தைவேளை (சித். அக.); a species of cleome.

*[**Skt.** ajakaṇta >த. அசகண்டம்.]*

அசகண்டா *ašagaṇḍā*, பெ.(n.) **அசகண்டம்** பார்க்க; see *asakaṇḍam.*

அசகணாகம் *ašagaṇāgam*, பெ.(n.) கருந் துவரை (சித். அக.); a kind of dholl.

அசகந்தம் *ašagandam*, பெ.(n.) மொச்சி நாற்றம்; goat's smell.

த.வ. ஆட்டுமுடை.

*[அச(ம்)+கந்தம்.] [**Skt.** aja>த.அச(ம்).]*

அசகந்திகம் *ašagandigam*, பெ.(n.) எலுமிச்சந் துளசி; lemon basil, *Ocinum Gratissimum* (சா.அக.).

*[**Skt.** aja kandikā >த. அசகந்திகம்.]*

அசகம் *ašagam*, பெ.(n.) **1.** வரையாடு (சிந்தா. நி 46.); mountain sheep. **2.** வெள்ளுள்ளி; garlic. **3.** **அகத்தி** பார்க்க; see agatti. **4.** உடம்பு பருத்து எங்கும் கரணைக் கிழங்கு முளைகளைப் போல் கொப்புளங் களையும், புண்களையும், உண்டாக்கும் எட்டுவகை அம்மையுளொன்று; one of the eight kinds of small-pox in which pustules develop to the size of yam-root shoots and spread all over the body. **5.** கண்மணியில் சிவப்பாகச் தசை வளர்ந்து பிதுங்கி, சீழ் வடியும் ஒரு கண்ணோய்; a disease of the pupil of the eye in which small reddish tumours are found protruding through the transparant cornea and discharging pus (சா.அக.).

*[**Skt.** aja>த. அசகம்.]*

அசகர்ணகம் *ašakarṇagam*, பெ. (n.) குங்கிலியம்; Indian dammer, *Shorea robusta* (சா.அக.).

*[**Skt.** aša-karṇaka >த. அசகர்ணகம்.]*

அசகர்ணம் *ašakarṇam*, பெ.(n.) மருதமரம்; goast's ear tree, *Terminalia alata alias T. tomentosa* (சா.அக.).

*[**Skt.** aja-karṇa >த. அசகர்ணம்.]*

அசகரம் *ašagram*, பெ.(n.) மலைப்பாம்பு (தேசிகப். 18, 1); boa-constrictor.

*[**Skt.** aja-gara >த. அசகரம்.]*



அசகல்லி *aśakalli*, பெ. (n.) குழந்தைகட்கு வரும் நோய்வகை (பதார்த்த. 1155); a disease of children.

[Skt. ajagalla > த. அசகல்லி.]

அசகல்லிகாரோகம் *aśakallikā-rōgam*, பெ. (n.) **அசகல்லி** (பதார்த்த 1155, உரை.) பார்க்க; see *aśagalli.*

[Skt. ajagallikā+rōga>த. அசகல்லிகா ரோகம்.]

அசகவம் *aśagavam*, பெ. (n.) சிவபெருமானுடைய வில் (சிந்தா. நி. 46); the bow of *Śivan*.

[Skt. ajagava > த. அசகவம்.]

அசகா *aśagā*, இடை.(part.) குருதியைக் கொண்டு கருவிழியில் பளபளப்பான புண் கொப்புளத்தையுண்டாக்கி, அதைச் சுற்றிலும் சிறுசிறு கொப்புளங்களை எழுப்பி, அதனால் அக்கண்ணில் அதிக வலியையும் அரத்தம் போல் சிவந்த நீர் ஒழுக்கையும் உண்டாக்கும் ஒரு கண்ணோய்; painful reddish growth resembling the hard excreta of a goat, found shooting forth from beneath the surface of the cornea with small vesicles around it. It is attended with excessive pain the reddish slimy secretion, *Vesicular keratitis* (சா.அக.).

[Skt. ajakā>த. அசகா.]

அசகாமிகம் *aśagā-migam*, பெ.(n.) கரு மொச்சை (சித். அக.); a kind of black bean.

[Skt. aja-kāmikā > த. அசகாமிகம்.]

அசகாயசூரன் *aśagāya-śūran*, பெ.(n.) துணை வேண்டாப் பெருவீரன்; hero able to accomplish great things without assistance.

த.வ. தனியாண்மை வீரன், மையான் மறவன்.

[அசகாயன் + சூரன்.]

[Skt. a-sahāya>த. அசகாய(ன்).]

அசகாயம் *aśagāyam*, பெ.(n.) சிறு (சொற்ப) புண்; simple injury (சா.அக.).

[Skt. aśa+Mhr. ghaya>த. அசகாயம்.]

அசகாரிதம் *aśagāridam*, பெ. (n.) முயல்; a hare (சா.அக.).

[Skt. aśa-garida > த. அசகாரிதம்.]

அசகாவம் *aśakāvam*, பெ.(n.) 1. ஒரு நச்சுயிரி; a venomous vermin. 2. அட்டை, தேள் முதலியன; centipedes, scorpion, etc., (சா.அக.).

[Skt. asa+kāvam.]

அசகியம் *aśagiyam*, பெ.(n.) 1. தாங்க முடியாதது; that which is unbearable. 2. அருவருப்பு; loathing.

[Skt. a-sahya > த. அசகியம்.]

அசகியாபீடம் *aśakiyā-pīḍam*, பெ.(n.) தாங்கவொண்ணா வலியுண்டாக்குகை; causing an unbearble pain (சா.அக.).

அசகும்பி *aśakumbi*, பெ. (n.) ஒரு வகை நீர்ப் பூடு; an aquatic plant, *Pistia stratiotes* (சா.அக.).

[Skt. aśa+>த. அசகும்பி.]

அசகை *aśagai*, பெ. (n.) பருத்தும், தடித்தும் கொப்புளங்களை எழுப்பி புண் உண்டாக்கி மூட்டுகளிலும் முகத்திலும் வீக்கமும், நீர் வேட்கையும், பிசுபிசுப்புள்ள சீழ் முதலியனவும் உண்டாக்கும் ஒரு வகை அம்மை நோய்; a kind of small pox; marked by large and well-defined pustules in the body and swelling on the face and the joints. It is followed by thirst and discharge of sticky pus (சா.அக.).

த.வ. அசர் அம்மை.

[Skt. aśaga > த. அசகை.]

அசங்கதம்[1] *a-šaṅgadam,* பெ.(n.) 1. ஒழுங்கின்மை; irregularity. 2. இகழ்ச்சி; contempt, disrespect.

த.வ. நேரன்மை.

[Skt. a-šaṅgata > த.அசங்கதம்.]

அசங்கதம்[2] *a-šaṅgadam,* பெ.(n.) 1. பொருத்தமில்லாதது; that which is inconsistent. 2. பொய் (வின்.); falsehood.

த.வ. நேரிலி.

[Skt. a - saṅgata>த. அசங்கதம்.]

அசங்கதம்[3] *a-šaṅgadam,* பெ. (n.) படை வகுப்பு (குறள், 767, உரை.); incompact, open array of an army.

[Skt. a - samhata>த. அசங்கதம்.]

அசங்கதி *a-šaṅgadi,* பெ.(n.) 1. பொருத்தமின்மை; inconsistency. 2. தொடர்பின்மையணி (மாறனலங். 203); figure of speech in which cause and effect are represented as not co-existent.

த.வ. நிகரன்மை.

[Skt. a-šaṅgata > த.அசங்கதி.]

அசங்கதியாடு-தல் *ašaṅgadi-y-āḍu-,* 5 செ.குன்றாவி.(v.t.) பகடிசெய்தல்; to ridicule, treat with contempt. *"அந்த மாமுனி யுரைத்ததை யசங்கதி யாடி" (செவ்வந்திப்பு. உறையூரழித். 60).*

த.வ. வகடி.

[அசங்கதி+ஆடு-.]

[Skt. a-šaṅgati>த.அசங்கதி.]

அசங்கம்[1] *a-šaṅgam,* பெ. (n.) பற்றின்மை; non-attachment, freedom from worldly ties. *"அயற்சங்க மறல் அசங்கமாகும்" (ஞானவா. உற். 47.).*

த.வ. பற்றறவு

[Skt. a-šaṅga > த. அசங்கம்.]

அசங்கம்[2] *a-šaṅgam,* பெ. (n.) **அசங்கமம்** (வின்.) பார்க்க; see *ašaṅgamam.*

[Skt. a-saṅga> த.அசங்கம்.]

அசங்கமம் *ašaṅgamam,* பெ. (n.) 1. ஒற்றுமையின்மை; disunion, opposition. 2. கோள்கள் கதிரவனுக்கு எதிர்நிற்கை; (astron.) opposition of the sun and planets.

த.வ. ஒன்றாமை.

[Skt. a-šaṅgama > த.அசங்கமம்.]

அசங்கற்பமாசம் *a-šaṅgaṟpa-māšam,* பெ.(n.) கதிரவன் ஓர் ஓரையில் இருந்து அடுத்த ஓரைக்குச் செல்லும் முதல் மற்றும் முடிவுகளில், காருவா வர, நிகழும் மாதம் (விதான. குணா. 81, உரை); (Astrol.) month in which the new moon appears at the beginning or end of the sun's passage from one sign of the zodiac to another.

த.வ. கூடாமாதம்.

[அசங்கற்பம் + மாசம்.]

[Skt.a-šaṅkalpa >த. அசங்கற்பம்.]

மாதம் → மாசம்.

அசங்கன் *ašaṅgaṉ,* பெ.(n.) பற்றற்றவன்; one who is free from attachment. *"இந்த வான்மா வென்றுவே யசங்கனாவன்" (விவேகசூடா. 114.).*

த.வ. பற்றிலி.

[Skt. šaṅga > த.அசங்கன்.]

அசங்கிதம் *ašaṅgidam,* பெ.(n.) தூய்மையின்மை; uncleanliness. *"காக்கை யெச்சமாதிகளில் யாவருக்கும் அசங்கித புத்தி யெப்படித் தோற்றுமோ" (வேதாந்தசாரம், பக். 6.).*

த.வ. தூவாமை.

[Skt. ā-šahyatā > த. அசங்கிதம்.]

ஞஅசங்கியம்[1] *a-šaṅgiyam,* பெ.(n.) எண்ணிக்கை யிலடங்காதது; that which is innumerable, unnumbered.

த.வ. எண்ணிலி.

[Skt. a-šaṅkhya > த. அசங்கியம்.]

அசங்கியம்[2] *a-šaṅgiyam,* பெ.(n.) 1. அருவருப்பு (இ.வ.); uncleanliness. 2. ஒழுக்கமின்மை, துப்புரவின்மை; uncleanliness.

த.வ. குப்படை.

[Skt. a-sahya > த.அசங்கியம்.]

அசங்கியாதம் *ašaṅgiyādam,* பெ.(n.) எண்ணிக்கையற்றது (மேருமந். 6, உரை.); that which is innumerable, countlessness.

த.வ. எண்ணிலி.

[Skt. šaṅkhyāta > த.அசங்கியாதம்.]

அசங்கியேயம் *a-šaṅgiyēyam,* கு.பெ.எ. (adj.) எண்ணிறந்தது; that which is innumerable. '*அசங்கியேய கிரந்தம்*'.

த.வ. எண்ணிலி.

[Skt. a-saṅkhyēya > த.அசங்கியேயம்.]

அசங்கை[1] *ašaṅgai,* பெ.(n.) அச்சமின்மை; fearlessness, security. "*அசங்கையனை*" *(தேவா. 683. 9.).*

த.வ. அஞ்சாமை.

[Skt. a-šaṅkā > த.அசங்கை.]

அசங்கை[2] *ašaṅgai,* பெ.(n) மதிப்பின்மை (யாழ்ப்); dishonour.

த.வ. மதியாமை.

[Skt. a-šaṅkhyā > த.அசங்கை.]

அசங்கையன் *ašaṅgaiyaṉ,* பெ.(n.) ஐயமில்லாதவன்; one who has no doubts. "*அசங்கையனை யமரர்கடஞ் சங்கையெல்லாங் கீண்டானை*" *(தேவா. 683, 9).*

த.வ. தெள்ளியன்.

[அசங்கை+அன்.]

[Skt. a-šaṅkā > த. அசங்கை.]

அசசரம் *ašašaram,* பெ. (n.) 1. நெருஞ்சி; cow's thorn. 2. முருங்கை; horse radish tree.

த.வ. நீரப்பயிரி.

[Skt. ikṣura> த. அசசரம்.]

அசசிரிங்கி *ašaširiṅgi,* பெ. (n) 1. ஒதியமரம்; Indian ash tree, *odina wodier.* 2. நரிக்காந்தள்; goat's horn mangrove, *Aegiceras majus.* 2. ஆடுதின்னாப் பாளை; worm-killer, *Aristolochia bracteata* (சா. அக.)

த.வ. நீரவேரி.

[Skt. aša+ širiṅgi > த. அசசிரிங்கி.]

அசசீரம் *aša-šīram,* பெ.(n.) ஆட்டுப்பால்; sheep's milk (சா.அக.).

[Skt. aja + šīra> த. அசசீரம்.]

அசசுரம் *aša-šuram,* பெ. (n.) 1. நெருஞ்சில்; a thorny shrub, *Tribulus terrestris.* 2. முருங்கை; drumstick tree, *Hyperanthera moringa alias Moringa Pterygosperma* (சா.அக.).

அசசெந்தா *ašašendā,* பெ.(n.) நுண்ணுயிர்க் கொல்லி; germ-killer, an agent that destroys germs-germicide.

[Skt. aja+ šendā> த. அசசெந்தா.]

அசஞ்சத்தி *ašañjatti,* பெ. (n.) பற்றின்மை (ஞானவா.உற். 47, உரை.); non-attachment, indifference to worldly things.

[Skt. a-šam-šakti > த. அசஞ்சத்தி.]

அசஞ்சலம் *a-šañjalam,* பெ. (n.) மனந் தளராமை; steadiness, imperturbability.

த.வ. நடுங்கா உள்ளம்.

[Skt. a-cancala > த.அசஞ்சலம்.]

அசஞ்சலன் *a-šañjalaṉ*, பெ. (n.) மனந்தளராதவன் (ஞானா. 48, 15.); one who is steady, unmoved.

த.வ. அஞ்சாநெஞ்சன்.

[Skt. a-cancala > த.அசஞ்சலன்.]

அசட்டி *ašaṭṭi*, பெ.(n.) **அசமதாகம்** பார்க்க; see *ašama-dāgam* (சா.அக.).

அசட்டை *a-šaṭṭai*, பெ.(n.) 1. புறக்கணிப்பு; contempt, *"அசட்டையற் றொழுகி மையலாக்குவன்"* (நல். பாரத. துட்டியந்த. 29.); 2. நினைவோட்டமின்மை; inattention, heedlessness, indifference. *'காரியத்தில் அசட்டையா யிருந்துவிட்டான்'.*

த.வ. கடைகணிப்பு.

[Skt. a-šraddhā > த. அசட்டை.]

அசடம் *a-šaḍam*, பெ. (n.) இயங்கக் கூடியது; non-inert, conscious being. *"அசட மநாமயம்"* *(கைவல்ய. சந்தே. 137).*

த.வ. இயலி.

[Skt. a-jaḍa > த. அசடம்.]

அசடுவா *ašaḍuvā*, பெ.(n.) பால்; milk (சா.அக.).

அசத்தன் *a-šattaṉ*, பெ.(n.) வலுவற்றவன், ஆற்றலில்லாதவன்; weak, incompetent person. *"புகலரு மசத்தர் தம்பாற் பொருந்திய வலகை யேபோல்"* *(சிவப்பிர. உண்மை, 26.).*

த.வ. நோஞ்சான்.

[Skt. a-šakta > த. அசத்தன்.]

அசத்தி[1] *ašatti*, பெ.(n.) வலுவின்மை; inability, powerlessness. *"கிலேசத்தா லசத்தி யாற் றுயரம்"* (சூத. *எக்கிய. பூ. 17, 15).*

[Skt. a-šakti > த. அசத்தி.]

அசத்தி[2] *ašatti*, பெ.(n.) துறத்தல்; detachment from worldly feelings or passions (சா.அக.).

[Skt. a-šadyaḥ > த. அசத்தி.]

அசத்தியநிருவாணம் *ašattiya-niruvāṇam*, பெ.(n.) **அசத்தியோநிர்வாண தீட்சை** (சித். பிர.) பார்க்க; see *ašattiyo-nirvāṇa-tiṭcai.*

[Skt. a-sadya + nirvāna> த. அசத்திய நிருவாணம்.]

அசத்தியம் *a-šattiyam*, பெ.(n.) பொய்; untruth, falsehood. *"அசத்திய மறியீர்"* *(உபதேசகா. சிவத்துரோ. 128.).*

த.வ. கள்ளு.

[Skt. a-satya> த. அசத்தியம்.]

அசத்தியோநிர்வாணதீட்சை *ašattiyō-nirvāṇa-tiṭcai*, பெ.(n.) நிருவாண நோன்பு வகை (சி.சி. 8, 4 சிவஞா.); (*šaivam.*) kind of *nirvāṇatiḍšai*, which helps the disciple to obtain liberation at the end of his life.

[Skt. a - sadya + nirvāṇa + ḍiksā> த. அசத்தியோநிர்வாணதீட்சை.]

அசத்து[1] *ašattu*, பெ.(n.) **அசத்தி** பார்க்க; see *ašatti* (சா.அக.).

[Skt. a-sat > த. அசத்து.]

அசத்து[2] *a-šattu*, பெ.(n.) 1. இல்லாதது (திருக்காளத். பு. 5, 44.); that which is non-existent. 2. பொய்ந்நெறி; false course. *"அசத்தினிற் செல்கிலாச் சதுமுகத்தவற்கு"* *(கம்பரா. இராவணன் வதை. 117.).* 3. நிலையில்லாதது (திருக்காளத். பு 32, 40.); that which is unstable. 4. மாயை (சூத. சிவ. 8, 10.); Illusion. 5. தீயோன் (இ.வ.); wicked person.

த.வ. பொய்ப்பொருள்.

[Skt. a-sat > த. அசத்து.]

அசத்துரு *ašatturu*, பெ.(n.) நண்பன் (வின்.); friend.

த.வ. பகையிலி.

[Skt. a-šatru > த. அசத்துரு.]

அசத்துவம்[1] *ašattuvam*, பெ. (n.) ஆற்றலற்றது; characterised by astenia or loss of strength, Asthenic (சா.அக.).

[Skt. a-satva > த. அசத்துவம்.]

அசத்துவம்² *asattuvam*, பெ.(n.) ஏலாமை; deficiency or loss of vital or muscular power, *adynamia* (சா.அக.).

*[**Skt.** a-sat-va>த.அசத்துவம்.]*

அசத்யகதனம் *asatya-kadanam*, பெ. (n.) பொய்பேசுகை; uttering lies. *"அசத்யகதனமும் சுகதனுக்குண்டு" (நீலகேசி, 1, உரை.).*

*[**Skt.** a-satya+kadana>த. அசத்யகதனம்.]*

அசதபன்னி *asada-panni*, பெ.(n.) **அசனபன்னி** பார்க்க; see *asana-panni* (சா. அக.).

அசதி¹ *asadi*, பெ.(n.) 1. இழித்துரை, நக்கல் பேச்சு; scoffing. *2. நட்புடன் கூடிய நகைச்சுவை;* banter, pleasantry.

த.வ. நகையாட்டு.

*[**Skt.** hasiti> த. அசதி.]*

அசதி² *asadi*, பெ.(n.) காணாவொலி (அசரீரி); voice from heaven, utterance of an invisible speaker. *"உரைத்த தந்தரத்தே யோரசதி யாங்கு" (பாரத வெண். 268.).*

த.வ. சேணொலி.

*[**Skt.** asaririn >த.அசதி.]*

அசதி³ *asadi*, பெ.(n.) கற்பில்லாதவள் (சூடா.); unchaste woman.

*[**Skt.** a-sati>த.அசதி.]*

அசதிக்கிளவி *asadi-k-kilavi*, பெ.(n.) எள்ளனப் பேச்சு; derisive speech. *"அசதிக் கிளவி நயவர மிழற்றி" (பெருங். இலாவாண. 17, 191).*

த.வ. நகைமொழி.

[அசதி + கிளவி.]

*[**Skt.** hasitid>த. அசதி.]*

கிள்→கிள→கிளவி.

அசதியாடு-தல்¹ *asadi-y-adu*, 5 செ.குன்றாவி. (v.t.) எள்ளனம் செய்தல்; to ridicule, laugh at. *"ஒறுக்கப்படுவா ரிவரென்றங் கசதியாடி" (சீவக. 1871.).*

த.வ. நகையாடுதல்.

[அசதி + ஆடு-.]

*[**Skt.** hasiti >த.அசதி.]*

அசதியாடு-தல்² *asadi-y-adu-*, 5 செ.கு.வி. (v.i.) நகைச்சுவைச்சொல் (வார்த்தை) கூறுதல்; to indulge in banter, pleasantry. *"அமிர்தனாரோடு.... வானோ ரசதியா டிடங்கள்" (சூளா. சீய. 192.).*

த.வ. நகையாடுதல்.

*[**Skt.** hasiti>த. அசதி.]*

அசதீபம் *asatibam*, பெ.(n.) கோயிலிலுள்ள வழிபாட்டு விளக்கு வகை (பரத. ஒழிபி. 41, உரை.); a kind of light used in temple worship.

[அச(ம்) + தீபம்]

*[**Skt.** aja>த. அசம்.]*

*த.தீவம்>**Skt.** dipa>த. தீபம்.*

அசந்ததி *asandadi*, பெ.(n.) வழித் தோன்றலில்லாமை; the state or condition remaining issueless (சா.அக.).

த.வ. பூண்டறுகை.

*[**Skt.** a-santati> த. அசந்ததி.]*

அசந்தர்ப்பம்¹ *asandarppam*, பெ. (n.) 1. இயலாக் காலம்; unsuitable time. *'அவன் வர அசந்தர்ப்பமா யிருக்கிறது'.* 2. வாய்ப்(வசதி)யின்மை; inconvenience. *'அசந்தர்ப்பத்தால் கடன் கொடுக்கக் கூடவில்லை'.* 3. பொருத்தமின்மை; irrelevancy. *'அசந்தர்ப்பமாகப் பேசாதே' (கொ.வ.).*

த.வ. அல்லாக்காலம்.

*[**Skt.** a-san-darbha > த. அசந்தர்ப்பம்.]*

அசந்தர்ப்பம்² *asandarppam*, பெ.(n.) இழவு; death. *'வீட்டில் ஒரு அசந்தர்ப்பம் நடந்துவிட்டது' (இ.வ.).*

*[**Skt.** a-sandarbha > த. அசந்தர்ப்பம்.]*

அசந்தாகம் *aśandāgam*, பெ.(n.) உப்பு; common salt (சா.அக.).

அசந்தானம் *aśandānam*, பெ.(n.) **அசந்ததி** பார்க்க; see *aśandadi* (சா.அக.).

[Skt. a-śan-tāna > த. அசந்தானம்.]

அசந்தீண்டாப்பாலை *aśandīṇḍā-p-pālai*, பெ.(n.) ஆடுதின்னாப் பாளை; a plant which even goat will not touch owing to its extreme bifferness, *Aristolochia bracteata* (சா.அக.).

த.வ. ஆடுதீண்டாப்பாளை.

[அசம் + தீண்டாப்பாலை.]

[Skt. aja> அசம்.]

அசந்துட்டி *a-śantuṭṭi*, பெ. (n.) பொந்திகை யின்மை; discontent, dissatisfaction.

த.வ. மனக்குறை.

[Skt. a-śan-tuṣṭi > த. அசந்துட்டி.]

அசநாமகம் *aśanāmagam*, பெ. (n.) ஒரு வகைத் தாது; a kind of mineral (சா.அக.).

அசநீர் *aśanīr*, பெ.(n.) ஆட்டு மூத்திரம்; goat's urine (சா.அக.).

த.வ. ஆட்டு உச்சை.

[அச(ம்) + நீர்]

[Skt. aja>த. அசம்.]

அசநீர்வாயு *aśanīr-vāyu*, பெ. (n.) நோய் வகையுளொன்று; a kind of disease (சா.அக.).

அசநோற்பவவிக்கல் *aśanōrbava-vikkal*, பெ.(n.) உணவுக் குற்றங்களினால் வயிற்றில் வளி மிகுத்து அதனால் தொண்டைக் கம்மல், சிணுக்கிருமல், முதலியவற்றை உண்டாக்கும் ஐந்து வகை விக்கல்களுள் ஒரு விக்கல்; a kind of hiccough due to the neurotic condition of the stomach arising from dietary defects or indigestion. It is marked by sore throat, feeble voice and a sligh cough. It is one of the five kinds of hiccough described in the Indian medical science, *Singultus gastricus nervosus* (சா.அக.).

அசப்பியம் *aśappiyam*, பெ.(n.) அவைக்குப் பொருந்தாச் சொல் ; indecent language or expression, as unfit for an assembly.

[Skt. a-śabhya >த. அசப்பியம்.]

அசப்பியன் *aśappiyan*, பெ.(n.) கணவாய் மீன்; cuttle-fish (சா.அக.).



அசப்பிரியை *aśa-p-piriyai*, பெ.(n.) ஆடு விருப்பமாகத் தின்னும் இலந்தை; that plant which is dear to a goat jujube *(சா.அக.).*

[Skt. aja +priya> த. அசப்பிரியை.]

அசபம்¹ *aśabam*, பெ.(n.) வேள்வி மந்திரம் (வின்.); the hamsa mantra, known as *ajapā*.

[Skt. a-japā > த. அசபம்.]

அசபம்² *aśabam*, பெ.(n.) 1. இயல்பாகப் பலுக்கும் முனிவர்கள் மாயையில் ஒன்றுவதற்காக (லயப்படுவதற்காக) 'அவன் தான் நான்' எனப் பொருள்படும் அம்ச அல்லது சோகம் என்னும் மந்திரம்; a particular mantram, Hamsam which is but 'soham' (He is I) described in one of the 108 kinds of upani shads, uttered by yogis without effort during inhalation for identifying him with the self. 2. குண்டலிலுள்ள ஓர் ஆற்றல் (சக்தி) ; a cosmic power said to be lying dormant and coiled up in the kundalini situated in Mooladar. (மூலாதாரம்)

"குண்டலி"யதனிற் கூடிய அசபை (விநாயகர் அகவல்), the base of the spine in the region of the sacral plexus. It is described in the Tantric science of the Dravedians. It is roused by Siddhars by special forms of meditation and other practices for purposes of spiritual awakening and it is by this power, the acquire wonderful psychic powers, spiritual visions and finally the highest spiritual illumination (சா.அக.).

த.வ. ஒன்றல்மந்திரம்.

[Skt. a-japā > த. அசபம்.]

அசபா *ašabā*, பெ.(n.) மறைமொழி வகை (தாயு. தேசோ. 6.) the hamsa mantra, known as asapā

[Skt. a-japā > த. அசபா.]

அசபை *ašabai*, பெ.(n.) **அசபம்**[1] பார்க்க; see *ašabam* (சா.அக.).

[Skt. a-japā > த. அசபை.]

அசபையடிமூலி *ašabai-y-aḍimūli*, பெ.(n.) பூண்டு வகையுளொன்று; a kind of plant (சா.அக.).

அசம்[1] *ašam*, பெ.(n.) **அசமடம்** (T.C.M. ii, 2, 429) பார்க்க; see *ašamaḍam*.

[Skt. aja > த. அசம்.]

அசம்[2] *ašam*, பெ.(n.) 1. ஆடு; sheep. 2. வெள்ளாடு; goat (சா.அக.).

[Skt. aja > த. அசம்.]

அசம்பந்தம் *a-šampandam*, பெ. (n.) தொடர்பின்மை; unconnectedness, irrelevancy.

[Skt. a-sambandha > த. அசம்பந்தம்.]

அசம்பவம்[1] *ašambavam*, பெ.(n) 1. பாழ் (சூன்யம்) (சித். அக.); nothingness. 2. பிறவாமை (வின்.); non-existence. 3. பொய் (தருக்கசங். நீலகன் 15.); false-hood.

த.வ. நிகழாநிகழ்வு.

[Skt. a-sambhava > த. அசம்பவம்.]

அசம்பவம்[2] *a-šambavam*, பெ.(n.) 1. நேரக் கூடாமை; impossibility, improbability. 2. ஒவ்வாமை; inconsistency. 3. கூறும் இலக்கணம், இலக்கிய மொன்றிலும் இல்லையாகும் குற்றம் (தருக்கசங்.); fault of total inapplicability of a definition, one of three *tōṣam*.

த.வ. நேராநிகழ்வு.

[Skt. a-sam-bhava > த. அசம்பவம்.]

அசம்பவாலங்காரம் *a-šambavālaṅgāram*, பெ.(n.) கூடாமையணி (அணியி. 36.); figure of speech in which the impossible is imagined.

[Skt. a-sam-bhava + alaṅ-kāra > த. அசம்பவாலங்காரம்.]

அசம்பாதை *ašambādai*, பெ.(n.) படை செல்லும் வழி (சிந்தா. நி. 55.); the route of an army.

த.வ. படைச்சாலை.

[அசம் + பாதை]

[Persn. asam > த. அசம்.]

அசம்பாவிதம் *a-šampāvidam*, பெ. (n.) 1. நேரக்கூடாதது; that which cannot happen. 2. பொருத்தமில்லாதது; that which is inconsistent.

த.வ. நினையா நிகழ்வு.

[Skt. a-sam-bhāvita > த. அசம்பாவிதம்.]

அசம்பாவிதோபமை *ašambāvidōbamai*, பெ.(n.) கூடாவுவமை (தண்டி. 30, உரை.); (rhet) simile in which a non-existent quality is taken as the basis of comparison.

த.வ. கூடா வுவமை.

[Skt. a-sam-bhāvita + upa-mā > த. அசம்பாவிதம்.]

அசம்பிரஞ்ஞாதசமாதி *a-šampiraññāda-šamādi*, பெ.(n.) தான்வேறு கடவுள் வேறென்ற, வேறுபாட்டுணர்வற்ற ஒகநிலை

(சி.சி. 10, 4, ஞானப்); (*yōga*) highest state of concentration, in which the soul loses all consciousness of its being different from the universal soul.

த.வ. இரண்டற்ற ஒகம்.

[Skt. a-sam - prajñāta + samādhi > த. அசம்பிரஞ்ஞாதசமாதி]

அசம்பிரேட்சியகாரித்துவம் *a-šampirētciya-kārittuvam*, பெ.(n.) ஆராயாது செயல் (பஞ்சதந்.); action without forethought.

த.வ. ஓராவினை.

[Skt. a-sam - prēksya + kāritva > த. அசம்பிரேட்சியகாரித்துவம்]

அசம்பிரேட்சியம் *ašampirēṭciyam*, பெ. (n.) முன்விழிப்பின்மை (சிந்தா. நி. 59.); lack of forethought.

[Skt. a-samprēksya> த. அசம்பிரேட்சியம்.]

அசம்போகம் *ašambōgam*, பெ.(n.) 1. சேர்க்கைக்குத் தகுதியற்றது; unsuited for intercourse; one with whom intercourse in forbidden. 2. இன்பமின்மை; absence of sexual intercourse or union. 3. பட்டறிவின்மை; having no experience. (சா.அக.).

த.வ. கூட்டின்மை.

[Skt. a-sam-bhōga>த. அசம்போகம்.]

அசம்மதம் *a-šammadam*, பெ. (n) உடன்பாடின்மை; dissent.

த.வ. ஒப்பாமை.

[Skt. a-sam-mata> த. அசம்மதம்.]

அசம்மதி *a-šammadi*, பெ.(n.) **அசம்மதம்** பார்க்க; see *a-šammadam*.

[Skt. a-sammati> த. அசம்மதி.]

அசமசமன் *ašama-šaman*, பெ.(n.) ஒப்பில்லாதாருக்கு ஒப்பானவன்; person comparable only to peerless men. *"அரிகேசரி அசமசமன் ஸ்ரீமாறவர்மன்" (பெருந்தொ.889).*

த.வ. நேரிலிநேரன்.

அசமஞ்சசம் *ašamañjašam*, பெ.(n.) பொருத்தமில்லாதது; that which is inconsistent, improper.

[Skt. a-samañjasa> த. அசமஞ்சசம்.]

அசமஞ்சன் *ašamañjan*, பெ.(n.) 1. சகரன் மகன் (பாகவத, 9, 6, 16); name of the cruel son of Sagara. 2. தீயோன்; ill-behaved person, wicked man.

[Skt. a-samañja> த. அசமஞ்சன்.]

அசமடம்[1] *ašamaḍam*, பெ.(n.) ஓமம் (பரி. அக); bishop's weed.

[Skt. aja-mōdā >த. அசமடம்.]

அசமடம்[2] *ašamaḍam*, பெ.(n.) **அசமதாகம்** பார்க்க; see *ašamadāgam* (சா.அக.).

[Skt. aja-mōdā >த. அசமடம்.]

அசமதாகம் *ašamatāgam*, பெ.(n.) 1. செடிவகை; bishop's-weed, herbaceous plant. 2. ஓமம் (மலை.); omum.

[Skt. ajamōdi-gā >த. அசமதாகம்.]

அசமதாகவிதை *ašama-tāga-vidai*, பெ.(n.) ஓமம் போன்ற ஒரு விதை; a seed, nearly the sarrie as omum; *Ajmud-Apium graveloans*. It is an aromatic and medicinal seed (சா.அக.).

[அசமதாக(ம்) + விதை.]

[Skt. ajamōdika>த. அசமதாக(ம்).]

அசமதாகவோமம் *ašama-dāga-vōmam*, பெ. (n.) **அசமதாகவிதை** பார்க்க; see *ašama-tāga-viḍai* (சா.அக.).

[அசமதாகம் + ஓமம்.]

[Skt. ajamōdika>த. அசமதாக(ம்).]

அசமந்தம்[1] *a-šamandam*, பெ. (n.) மந்தம்; sloth, indolence.

த.வ. நீர்மந்தம்.

[Skt. aja+manda>த. அசமந்தம்.]

அசமந்தம்² *ašamandam*, பெ. (n.) 1. மலையத்தி; downy climbing cluster fig, *Ficus macro carpa*. 2. மடிமைக்குணம்; lethargy (சா.அக.).

அசமந்திபம் *ašamandibam*, பெ. (n.) மலையத்தி நீண்ட கொடிவகை (மலை.); downy climbing cluster fig.

[Skt. aš-manta > த. அசமந்திபம்.]

அசமநாகி *ašama-nāgi*, பெ.(n.) குரோசாணி, ஓமம்; khorasan omum, *Henbane - Hyoscyamus niger* (சா.அக.).

[Skt. ajamōnāka > த. அசமநாகி.]

அசமநீர் *ašama-nīr*, பெ. (n.) வெள்ளாட்டுச் சிறுநீர்; goat's urine (சா.அக.).

த.வ. ஆட்டு உச்சை.

[அசம + நீர்.]

[Skt. aja > த. அசம.]

அசமம் *ašamam*, பெ.(n.) 1. ஓமம்; bishop's weed. 2. நீர்முள்ளி; water thorn.

[Skt. ajamō > த. அசமம்.]

அசமருதம் *ašamarudam*, பெ. (n.) மரவகை (மலை.); country fig.

அசமாருதம் *ašamārudam*, பெ. (n.) **அசமந்திபம்** பார்க்க; see *ašamandibam* (சா.அக.).

அசமுகி *aša-mugi*, பெ.(n.) சூரபதுமன் தங்கை (சந்தபு.); name of the sister of *Šūra-padma*, as goat-faced.

[Skt. aja-mukhi > த. அசமுகி. த. முகம் > Skt. mukha > mukhi]

அசமுசாரி *ašamušāri*, பெ.(n.) கழிமாசுக் கட்டி; a state of the bowels in which the evacuation are free and regular without difficulty (சா.அக.).

அசமேலிகம் *ašamēligam*, பெ.(n.) கருப்பு அம்மான் பச்சரிசி; a black species of an annual plant, *Euphorbia hyphorbia hypericifolia alias E. Indica* (சா.அக.).

அசமோடிகம் *aša-mōḍigam*, பெ.(n.) பல பூண்டுகளைக் குறிக்கும் பெயர்; a common name for several plants such as, carroway, ajwan, parsley etc., (சா.அக.).

அசமோதகம் *ašamōdagam*, பெ.(n.) 1. ஓமம்; dill seed-sison ammi-carum copticum. 2. **அசமதாகம்** பார்க்க; see *ašama-tāgam* (சா.அக.).

[Skt. ajamōdika > த. அசமோதகம்.]

அசமோதம் *ašamōdam*, பெ.(n.) **அசமோதகம்** பார்க்க; see *aša-mōdagam* (சா.அக.).

[Skt. ajamōda > த. அசமோதம்.]

அசமோதாகம் *aša-mōdāgam*, பெ.(n.) கருப்பு அருகம்புல்; a black bent grass-cynodon dactylon (சா.அக.).

த.வ. காரருகு.

அசமோதை *ašamōdai*, பெ.(n.) 1. ஓமம்; bishop's weed. 2. இலவம் பிசின்; gum of silk cotton.

[Skt. aja-mōdā > த. அசமோதை.]

அசயம் *ašayam*, பெ.(n.) 1. கோரைப்புல்; a grass of the *Cyperusgenus-Cyperuspertenuis*. 2. ஈசுரப்புல்; a kind of grass sacred to šivaṉ (சா.அக.).

த.வ. நீரங்கோரை.

அசரணம் *ašaraṇam*, பெ.(n.) புகலின்மை (ஜீவஸம். Ms.); absence of protection or refuge.

[Skt. a-šaraṇa > த. அசரணம்.]

அசரணயோனி *ašaraṇa-yōṉi*, பெ.(n.) கலவித்தொழில் முடிப்பதற்கு முன்னதாகவே பெண்களுக்கு நாதநீரை வெளிப்படுத்தும் ஒரு வகைக் கருப்பை நோய்; a raginal disease in which larger quantity or ova is secreted before the completion of sexual act (சா.அக.).

[Skt. aṣaraṇa + yōni > த. அசரணயோனி.]

அசரணன் *ašaranan*, பெ.(n.) புகலற்றவன்; he who has no refuge.

த.வ. போக்கிலி.

[Skt. a-šarana > த. அசரணன்.]

அசரணை *ašaranai*, பெ.(n.) புகலற்றவள்; she who has no refuge. *"அசரணையாய்ப் புறந்திண்ணையிற் கிடந்து" (நீலகேசி, 246, உரை.).*

த.வ. போக்கிலி.

[Skt. a-šaranā > த. அசரணை.]

அசரம் *a-šaram*, பெ.(n.) நிலத்திணை; motionless things. *"அசர சர பேதமான" (தாயு. சின். 4.).*

[Skt. a-cara > த. அசரம்.]

அசராதி *ašarādi*, பெ.(n.) கொன்றை (சித். அக.); Indian laburnum.

[Skt. rāja-taru > த. அசராதி.]

அசராது *ašarādu*, பெ.(n.) கொன்றை; cassia tree; *Indian laburnum-cassia indica* (சா.அக.).

[Skt. rāja-taru > த. அசராது.]

அசரீரன் *ašariran*, பெ.(n.) மன்மதன் (சிந்தா. நி. 55.); *Kāman*, the god of love.

த.வ. உருவிலி.

[Skt. a-šarira > த. அசரீரன்.]

அசரீரி[1] *ašariri*, பெ.(n.) பரம்பொருள், மேலானவன் (சித்தபரமேஷ்டி); (jaina.) *sitta-paramēṣṭi* the perfected one. *"அருக னசரீரி யாசிரியன்" (திருக்கலம். 41.).*

த.வ. பரன்.

[Skt. a-šaririn > த. அசரீரி.]

அசரீரி[2] *ašariri*, பெ.(n.) 1. உடலில்லாதது (சி.சி. 1, 38, ஞானப்); incorporeal being. 2. மேலிருந்து வரும் ஒலி; voice from heaven, utterance of an invisible speaker. *"என்றது வானினிடத் தசரீரி" (பாரத. புட்ப. 79.).*

த.வ. மெய்யிலி, உருவிலி, உடம்பிலி.

[Skt. a-šaririn > த. அசரீரி]

அசல் *ašal*, பெ.(n.) 1. நிலம்; the earth. 2. மேன்மையானது; superior. 3. இயற்கை; natural. 4. முதல் படி, மூலப்படி; the original (சா.அக.).

[U. aṣl > த. அசல்.]

அசல்குறிப்பு *ašal-kurippu*, பெ.(n.) நாடோறும் எழுதும் குறிப்பு; day-book.

த.வ. அன்றாடு குறிப்பு.

[அசல் + குறிப்பு]

[U. aṣl > த. அசல்.]

அசல்சமா *ašal-šamā*, பெ.(n.) நிலக்குத்தகை யாளரிடமிருந்து திறை செலுத்துவதற்காக அரசால் வழங்கப்பட்ட மூல ஆவணம் (R.F.); original rent or revenue charged upon lands without any extra cess, also the amount taken as the basis of a revenue settlement.

த.வ. திறையாவணம்.

[U. aṣl + jamā > த. அசல்சமா.]

அசல்சாதி *ašal-šādi*, பெ.(n.) மூலி, கஞ்சாங் கோரை; a kind of wild white basil-ocimum alba (சா.அக.).

[U. aṣl + jāti > த. அசல்சாதி.]

அசல்பேரீசு *ašal-pērišu*, பெ.(n.) ஆதி நிலவரித் திட்டம் (R.F.); standard or original assessment of the land revenue without any extra cess.

த.வ. மூலவரியீடு.

[U. aṣl + pērij > த. அசல்பேரீசு.]

அசல்வியாச்சியம் *ašal-viyācciyam*, பெ.(n.) முறையான வழக்கு; original suit.

த.வ. மூலவழக்கு.

[U. aṣl + vyāja > த. அசல்வியாச்சியம்.]

அசலகால் *ašala-kāl*, பெ.(n.) தென்றல் காற்று (சிந்தா. நி.); south breeze.

த.வ. தென்கால்.

[அசல(ம்) + கால்.]

[Skt. a-cala > த. அசல(ம்).]

அசலசலம் *ašala-šalam*, பெ.(n.) சிவ விலங்கவேறுபாடு; *linga* that is both immovable and movable as permanently fixed in an alter for initiation, or daily taken out for private workship. *"மண்டலமுங் காணி னசலசலம்" (சைவச. பொது. 123.).*

த.வ. நிலை இயங்கு திருமேனி.

[Skt. a-sala+cala >த. அசலசலம்.]

அசலசலலிங்கம் *ašala-šala-lingam*, பெ.(n.) ஒரு வகை இலங்கம் (சைவச. பொது. 123, உரை.); (*šaivam*) a kind of *lingam*.

த.வ. பனியிலங்கம்.

[Skt. a-cala +cala+ linga>த. அசலசல லிங்கம்.]

அசலம்¹ *ašalam*, பெ.(n.) 1. ஒரு வகை நஞ்சு (கற்பாடாணம்) (வை. மூ.); a mineral poison. 2. ஆப்பு (நாநார்த்த.); wedge used in splitting wood, peg, stake.

[Skt. a-šala >த. அசலம்.]

அசலம்² *ašalam*, பெ.(n.) 1. அசையாதது; that which is fixed. *"அசித்தா யசலமாகி" (சிவப்பிர. பொது.10).* 2. மலை (திவா.); mountain. 3. சிவலிங்க வேறுபாடு (பேதம்); immovable *linga*, as the temple *gōpura*. *"கோபுரமாதி யசலம்" (சைவச. பொது. 132.).*

[Skt. a-šala >த. அசலம்.]

அசலம்³ *ašalam*, பெ.(n.) 1. நிலம்; the earth. 2. இரும்பு; iron (சா.அக.).

[Skt. a-šala >த. அசலம்.]

அசலம்பனம் *ašalam-banam*, பெ.(n.) நீலாஞ்சனம்; antimony. (சா. அக.)

அசலலிங்கம் *ašala-lingam*, பெ.(n.) வழிபாட்டுக்குரிய கோபுர முதலியன (சைவச. பொது. 122.); (*šaivam.*) immovable symbols of worship, such as the *gōpura* of a temple.

த.வ. கண்டுதொழுதேவிகம்.

[Skt. a-cala+ linga>த. அசலலிங்கம்.]

அசலவுற்பத்தி *ašala-v-urpatti*, பெ.(n.) கற்பரி செய்நஞ்சு (பாடாணம்); poison found underneath rocks (சா.அக.).

[Skt. a-cala+ utt.patti>த. அசலவுற்பத்தி.]

அசலன் *ašalan*, பெ. (n.) 1. அசைவிலாதவன்; one who is motionless. *"இந்த ஆன்மா அசரீரியுமா யசலனுமாய்" (சி. சி. 8, 6, மறைஞா).* 2. கடவுள்; god, as motionless. 3. அருகக் கடவுள் (திவா.); Arhat.

த.வ. அசைவிலி.

[Skt. a-cala >த. அசலன்.]

அசலாமாங்கம் *ašalā-māngam*, பெ.(n.) வெட்டிவேர்; root of kusa grass-*Andropogon aromaticus alias A-muricatum* (சா.அக.).

அசலை *ašalai*, பெ.(n.) 1. நிலம்; earth. *"அசலை மங்கை"* (கந்தபு. இரணியன்யு. 56.); 2. மலைமகள் (கூர்மபு. திருக்கல் 20.); *Pārvati*.

[Skt. a-šala >த. அசலை.]

அசலோமன் *ašalōman*, பெ.(n.) பூனையவரை; cowhage, *Carpopogon pruriens* (சா.அக.).

அசலோமி *ašalōmi*, பெ.(n.) பொற்றலைக் கையாந்தகரை; a medicinal plant with yellow flower, mary-gold *Verbesina-verbesina calendulacea* (சா.அக.).

அசவாகனன் *aša-vāganan*, பெ.(n.) நெருப்புக் கடவுள்; *Agni*, as riding a goat.

த.வ. ஆட்டு ஊர்தியன்.

[Skt. aja+ vāhana >த. அசவாகனன்.]

அசவாகிகம் *ašavāgigam*, பெ.(n.) கருப்பு கசகசா; black poppy seeds (சா.அக.).

அசவை¹ *ašavai*, பெ.(n.) மறைமொழி வகை (வின்.); *hamsamantra*.

[Skt. a-japā >த. அசவை.]

அசவை² *ašavai*, பெ.(n.) 1. முள்வேங்கை; spinous kino tree-Bredelia refusa; *B. Hamiltoniana*. 2. பெருவிரலடி; the root of the thumb (சா.அக.).

அசற்காரியம் *a-šar-kāriyam*, பெ.(n.) முறையற்ற செய்கை; bad or improper deed.

த.வ. அன்முறைவிளைவு.

[அச(ற்) + காரியம்.]

*[**Skt.** a-sat >த. அசல்.]*

அசற்காரியவாதம் *ašarkāriyavātam*, பெ.(n.) உருவாக்கலுக்குமுன், இல்லாமலே தொழில் தோன்றுமென்னுங் கொள்கை (சித். மர, கண். 11); creationistic doctrine of causation according to which the effect does not exist before its production.

த.வ. காரணமில் வினைக் கொள்கை.

[அசத்+காரியம்+வாதம்.]

*[**Skt.** a-sat +த. அசத்(து) + **Skt.** vāda > த.வாதம்.]*

அசற்சரக்கு *ašar-šarakku*, பெ.(n.) 1. இயற்கை மருந்து; natural drug as distinguished from artificial compound. 2. உயர்ந்த; a superior kind of drug unadulterated (சா.அக.).

த.வ. மூலச்சரக்கு.

[அசல் + சரக்கு]

*[**U.** asl>த. அசல்.]*

அசற்சீட்டு *ašar-šiṭṭu*, பெ.(n.) மூல ஆவணம்; original bond.

த.வ. மூலச்சீட்டு.

[அசல் + சீட்டு]

*[**Skt.** a-sal>த. அசல்.]*

அசற்சூத்திரர் *ašar-šūttirar*, பெ.(n.) ஊன் உணவு தவிராதிருக்கும் சமய நெறி நில்லா வேளாளர் (சூத்திரர்) (சி. போ. பா. சிறப்புப், புது.); *šūdras* who do not abstain from animal food and are not religious.

*[**Skt.** a+sar+šudra>த. அசற்சூத்திரர்.]*

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நாற்பாற் தொழின்முறைப் பாகுபாட்டைத் தீய முறையிற் பயன்படுத்திக்கொண்டு பிராமணர் சத்திரியர் வைசியர் சூத்தரர் என்னும் நால்வருணப் பிறவி வகுப்புகளாக வகுத்து அவை முறையே ஒன்றினொன்று தாழ்ந்தவையென்றும் தாம் பிராமணரும் ஏனையர் ஏனை மூவகுப்பாருமாவர் என்றும், இப்பாகுபாடு இறைவன் படைப்பே என்றும், கூறிவிட்டனர் ஆரியப் பூசகர் (த.ம.பக்.60).

அசற்பாத்திரம் *a-šar-pāttiram*, பெ.(n.) தானம்பெறத் தகுதியற்றவன்; unworthy recipient.

*[**Skt.** a-sat+pātra >த. அசற்பாத்திரம்.]*

அசற்பிரதி *ašar-piradi*, பெ.(n.) 1. முதற்படி; the original. 2. உண்மை படி (வின்.); fair copy.

த.வ. மூலப்படி.

*[**U.** asl + **Skt.** prati> த. அசற்பிரதி.]*

அசன்¹ *ašan*, பெ.(n.) 1. திருமால் (நாநார்த்த.); *visnu*. 2. சிவபெருமான் (நாநார்த்த); *Šivan*. 3. மன்மதன் (நாநார்த்த); the god of love. 4. இரகு மன்னர் மன்னனின் மகன்; a son of Raghu. 5. உந்தன் வளிக்கு(உதானவாயுவுக்கு)ரிய கடவுள் (வேதாந்தசாரம், பக். 43.); the god who actuates the *utāṉaṉ*.

*[**Skt.** aja>த. அசன்.]*

அசன்² *ašan*, பெ.(n.) எடுத்துக்காட்டுப் போலிகளுளொன்று; (Log.) fallacy of illustrating the invariable concomitants between the middle term and the major term with a non-existent thing. *"சன்னு மசன்னு மென்றிரு வகையாம்" (மணிமே, 29, 362).*

*[**Skt.** a-sat>த. அசன்.]*

அசன்³ *ašan*, பெ.(n.) 1. பிறப்பிலி (வின்.); being without birth, as the deity. 2. தசரதன் தந்தை (வின்.); name of the father of D*ašaratha*. 3. **அயன்** (வின்.) பார்க்க; see *āyan*.

*[**Skt.** a-ja>த. அசன்.]*

அசன்னியம் *ašaṉṉiyam*, பெ.(n.) நிமித்தம் (சகுனம்) (சிந்தா. நி. 56.); omen.

[Skt. a-jan-ya > த. அசன்னியம்.]

அசனங்கொள்ளல் *ašaṉaṅkoḷḷal*, பெ.(n.) சோறுண்ணுகை; eating boiled rice i.e. taking food (சா.அக.).

த.வ. அயினிகொள்ளல்.

[அசனம் + கொள்ளல்.]

[Skt. ašaṉa>த. அசனம்.]

அசனசாலை *ašaṉašālai*, பெ.(n.) உணவு விடுதி (pond.); eating house.

த.வ. அயினிச்சாலை.

[அசன(ம்) + சாலை.]

[Skt. ašaṉa>த. அசன(ம்).]

அசனப்பல் *ašaṉa-p-pal*, பெ.(n.) பாற்பல்; milk-tooth (சா.அக.).

[அசன(ம்) + பல்.]

[Skt. ašaṉa>த. அசன(ம்).]

அசனப்பிரியம் *ašaṉa-p-piriyam*, பெ.(n.) உணவின் மேலுள்ள ஆர்வவேட்கை; desire for food (சா.அக.).

த.வ. அயனிவேட்கை.

[Skt. ašaṉa+priya>த. அசனப்பிரியம்]

அசனப்பிரியன் *ašaṉa-p-piriyaṉ*, பெ.(n.) மிகுதியாக உண்பவன்; an epicurian (சா.அக.).

த.வ. பேருண்டியன்.

[Skt. ašaṉa+priya>த. அசனப்பிரியன்.]

அசனப்பெருக்கம் *ašaṉ-p-perukkam*, பெ.(n.) வயிற்றுத்தீ மிகுதியால் அளவிறந்து உண்ணுகை; indulging the appetite to excess as a result of great hunger (hyperorexial) (சா.அக.).

த.வ. அயினிப்பெருக்கம்.

[அசனம் + பெருக்கம்.]

[Skt. ašaṉa>த.அசன(ம்).]

அசனபர்ணி *ašaṉa-parṇi*, பெ.(n.) ஒருவகைப் பூடு; a plant, *Marsilea quadrifolia* (சா.அக.).

அசனபன்னி[1] *ašaṉa-paṉṉi*, பெ.(n.) சிற்றகத்தி (மலை); comman sesban.

அசனபன்னி[2] *ašaṉa-paṉṉi*, பெ.(n.) 1. சோறு; boiled rice. 2. வெள்ளுள்ளி; white onion, *Alluim sepra.* 3. வேங்கை; kino tree, *Terminalia tomentosa alias pterocarpus marsupium* (சா.அக.).

த.வ. அயினியுளி.

அசனபாணிகம் *ašaṉa-pāṇigam*, பெ.(n.) கருப்புக் கொடி; black bottle-flower, *Webera corymbosa (nigrum)* (சா.அக.).

அசனம்[1] *ašaṉam*, பெ.(n.) 1. உணவு; food. *"கொடுப்பி னசனங் கொடுக்க" (நான்மணி. 81.).* 2. சோறு (சூடா.) boild rice. 3. பசி (பிங்.); hunger. 4. கொழுப்பு (பிங்.); fat.

த.வ. அயினி.

[Skt. ašana>த. அசனம்.]

அசனம்[2] *ašaṉam*, பெ.(n.) நீண்ட மரவகை (பிங்.); Indian kino-tree.

[Skt. ašana>த. அசனம்.]

அசனம்[3] *ašaṉam*, பெ. (n.) 1. வேங்கை மரம்; east Indian kino, *Terminalia tomentosa alias - pterocarpus marsupium.* 2. உண்ணல்; eating.

[Skt. ā-saṉa>த. அசனம்.]

அசனம்பண்ணல் *ašaṉam-paṇṇal*, தொ.பெ. (vbl.n.) 1. உண்ணுதல்; eating food. 2. சோறு சமைத்தல்; cooking food, preparing meals (சா.அக.).

த.வ. அயினிசெய்தல்.

[அசனம் + பண்ணல்.]

[Skt. a-šaṉa> த.அசனம்.]

அசனமருந்தல் *ašaṉamarundal*, தொ.பெ. (vbl.n.) சோறுண்டல்; taking food (சா.அக.).

த.வ. அயினிஅருந்தல்.

[அசனம் + அருந்தல்.]

[**Skt.** *a-šana>த.அசனம்.*]

அசனமாற்றல் *ašaṉa-māṟṟal,* தொ.பெ. (vbl.n.) ஏற்கும் உணவை மாற்றுதல்; changing the food or diet (சா.அக.).

த.வ. அயினிமாற்றல்.

[அசனம் + மாற்றல்.]

[**Skt.** *a-šaṉa>த.அசனம்.*]

அசனவேதி *ašaṉa-vēdi,* பெ.(n.) 1. செடிவகை (இராச வைத். 37.); cumin. 2. செரிக்கச் செய்யும் பொருள் (இராசவைத். 52); digestive.

[**Skt.** *ašaṉa-bhēdin>த. அசனவேதி.*]

அசனாசயம் *ašaṉāšayam,* பெ.(n.) இரைப்பை (வின்.); stomach.

[**Skt.** *ašana+ā-šaya>த.அசனாசயம்.*]



அசனாத்(து) *ašaṉāttu* பெ. (n.) கட்டளை (P.T.L.); order, warrant.

[**Ar.** *asṉād>த. அசனாத்(து).*]

அசனாமிர்த தைலம் *ašaṉāmirda-tailam,* பெ.(n.) வேங்கைப்பட்டை, சீந்தில் முதலியவற்றினின்றும் வடிக்கும் ஒருவகை நெய்மம் (தைலவ. தைல. 47.); unguent made of the bark of pterocarpus marsupium, *Tinospora cadifolia* and other herbs.

[**Skt.** *asana + amṛta + taila>த.அசனாமிர்த தைலம்.*]

அசனி *ašaṉi,* பெ.(n.) 1. இடி; thunderbolt. *"பெருவிறலசனி" (ஞானா. 19.);* 2. வானவர் கோன்படை. (பிங்.); weapon of Indra. 3. நறும்புகை (சாம்பிராணி)யிலை (இராசவைத்.); frankincense leaf.

[**Skt.** *ašaṉi>த. அசனி.*]

அசனிபாதம் *ašaṉi-pādam,* பெ.(n.) இடியின் வீழ்ச்சி (சி.சி. 11, 7. சிவாக்); stroke of lightning.

[அசனி + பாதம்.]

[**Skt.** *ašani>த.அசனி.*]

அசனியேறு *ašaṉi-y-ēṟu,* பெ.(n.) இடியேறு; thunderbolt. *"அசனியேறென வுரப்பி" (கூர்மபு. அந்தகா. 61.).*

[அசனி + ஏறு.]

[**Skt.** *ā-šani>த.அசனி.*]

அசனுகம் *ašaṉugam,* பெ. (n.) கருவழிகை; abortion (சா.அக.).

அசனுதம் *ašaṉudam,* பெ. (n.) கருவழிக்கும் மருந்து; a medicine that could bring about abortion, abortive drugs (சா.அக.).

த.வ. கருக்கொல்லி.

அசனேற்பவவிக்கல் *ašaṉēṟpava-vikkal,* பெ. (n) **அசநோற்பவிக்கல்** பார்க்க; see *ašanōṟpa-vikkal* (சா.அக.).

அசனோமந்தாரை *ašaṉō-mandārai,* பெ. (n.) கருப்பு மந்தாரை; a black variety of flowering shrub, மந்தாரை, *Bauhmia variegata* (சா.அக.).

அசாக்கிரதை *a-šākkiradai,* பெ. (n.) விழிப்பின்மை; inattentiveness, heedlessness, carelessness.

த.வ. மந்தநிலை, கவனக்குறை.

[**Skt.** *a-jāgrattā> த. அசாக்கிரதை]*

அசாகசம் *ašāgašam,* பெ.(n.) அமைதி (யாழ். அக.); gentleness.

[**Skt.** *a-sāhasa>த. அசாகசம்.*]

அசாகளத்தனம் *ašā-gaḷa-t-taṉam*, பெ. (n.) ஆட்டின் கழுத்திற் றொங்குந் தசை; nipple or fleshy protuberance hanging down from the neck of goats. *"அசாகளத்தனம் போல அதிக சங்கியை கொள்வது ஏற்றிற்கு" (சிவசமவா. 39.).*

[Skt. aja+gala+štana> த. அசாகளத்தனம்.]

அசாகை *ašāgai*, பெ. (n.) கிளைபிறிதின்மை; without branches (சா.அக.).

த.வ. கிளையிலி.

அசாசருமம் *ašā-šarumam*, பெ.(n.) ஆட்டுத் தோல்; sheep's skin (சா.அக.).

அசாசி *ašāši*, பெ.(n.) 1. சீரக வகை; black cumin. 2. படர் கொடிவகை; gulancha.

[Skt. ajājī>த. அசாசி.]

அசாசீவி *ašā-šīvi*, பெ. (n.) மூட்டுப் பொருத்து, எலும்பு முறிவு, மருத்துவம், அட்டை விடல் முதலியவற்றைச் செய்யும் பழங்காலத் தமிழினத்தாராகிய ஆட்டுவணிகர், a class of men called 'āṭṭuvaṉgar' who could attend to dislocated joints and fractured bones in olden days amongst the Tamilians. They also used to apply leeches in the way that we do at present (சா. அக.).

த.வ. ஆடுவாழி.

[Skt. a-jā+jīva>த. அசாசீவி.]

அசாடம் *ašāḍam*, பெ.(n.) தாளிசபத்திரி; plant-facourtia cataphracta (சா.அக.).

[Skt. ašāṭa>த. அசாடம்.]

அசாத்தியஅதிசாரம் *ašāttiya-adišāram*, பெ.(n.) பலவகை நாற்றத்துடன் கழிச்சல் கண்டு சுரமும், மயக்கமு முண்டாக்கி நினைவு தடுமாறச் செய்யும் நோய்; a severe type of chronic diarrhoea characterised by fever, giddiness, loss of consciousness, fetid fecal discharge, etc. It may generally end in death, acute Inflammatory Diarrhoea (சா.அக.).

த.வ. கடுங்கழிச்சல்.

[Skt. a-šathyā+atisāra> த. அசாத்திய அதிசாரம்.]

அசாத்தியவெலிவிடம் *ašāttiya-v-elviḍam*, பெ.(n.) உயிர்ப் பொடுக்கம், வீக்கம், வேற்றுருவம், சுரம், அரத்தங்கக்கல் (வாந்தி)யாகிய குணங்களை உண்டாக்கும் ஒருவகை எலிக்கடி; an incurable rat-bite characterised by faintness, swelling, change of features, fever, vomiting of blood and other symptoms (சா.அக.).

த.வ. கடுஎலிநஞ்சு.

[அசாத்திய + எலி + விடம்.]

[Skt. asādya>த.அசாத்திய.Skt. viṣa> த.விடம்.]

அசாத்தியகட்டி *ašāttiya-kaṭṭi*, பெ.(n.) சீழ் கட்டுண்டு சதையாக மாறும் ஆறாத கட்டி; a chronic abscess in which the pus is absorbed and converted into a flesh-like mass-cold abscess. It is of comparatively slow development with little inflammation (சா.அக.).

த.வ. கட்டுண்கட்டி, கட்டாங்கட்டி.

[அசாத்திய(ம்) + கட்டி.]

[Skt. a-šadhyā> த. அசாத்தியம்.]

அசாத்தியகண்டமாலை *ašāttiya-kaṇḍa-mālai*, பெ. (n.) அருகின் வேரைப் போல் கழுத்தைச் சுற்றிலும் முதலில் கிளைத்து எழும்புவதும், பிறகு அழுந்துவதுமாயுள்ள ஒரு தீராத நோய்; a disease showing itself by crops of glandular tumours round the neck, which suppurate and heal up every time at the onset (சா.அக.).

த.வ. கடுங்கண்டமாலை.

[அசாத்தியம் + கண்டமாலை.]

[Skt. a-sādhya> த. அசாத்தியம்.]

அசாத்தியகபாலநோய் *asāttiya-kabāla-nōy,* பெ.(n.) தலையில் காணும், ஒரு தீராத நோய்; a disease of the scalp.

த.வ. கடுமண்டைநோய்.

[அசாத்திய(ம்) + கபாலநோய்.]

*[**Skt.** a-šādhya>த.அசாத்திய(ம்)]*

கன்னப்புலம் → கப்பாளம்→ கபாலம் = மண்டை, தலை.

அசாத்தியகருப்பம் *asāttiya-karuppam,* பெ.(n.) பெண்களின் அடிவயிற்றில் சிக்கிச் கொண்டு வெளிப்படா நிலையில், வயிற்றைக் கீறி எடுக்க நேரிடும் கருப்பம்; pregnancy in which the delivery is obstructed in the natural passages by transverse presentation and the child is removed by operation as in contracted pelvis (சா.அக.).

த.வ. கடுங்கருப்பம்.

[அசாத்தியம் + கருப்பம்.]

*[**Skt.** a-šādhya>த.அசாத்தியம்.]*

குரு→கரு → கருப்பம்.

அசாத்தியகழலை *asāttiya-kalalai,* பெ. (n.) 1. உடம்பில் பதிய ஆழ்ந்தும் பக்கங்களில் துளிர்த்தும் உடம்பு முழுவதும் பரவி அடிக்கடி கிளைக்கும் தன்மை வாய்ந்து, கடைசியாக ஆவியையும் பற்றும் ஒரு வகைத் தீராத கழலை; tumours which tend infiltrate the tissues, and produce secondary growth in the adjacent glands. They are disseminated through out the body, affect the general health, tend to recur after removal and eventually destroy life-malignant tumors. 2. அரத்தக் கழலை முதலியனவற்றிலும், எலும்புப் பொருந்துகளின் பள்ளங்களிலும் பருத்துத் தோன்றும் தீராத தசைக் கட்டிகள்,; incurable tumours appearing in the regions of circulation in the cavity of an artery or in any vulnerable joint of the body, such as those formed in cases of ancurism, hematoma etc. malignant tumor (சா.அக.).

த.வ. கடுங்கழலை.

[அசாத்திய(ம்) + த. கழலை.]

*[**Skt.** a-šādhya >அசாத்திய(ம்).]*

கழல்→கழலை = கழற்சிக்காய் போன்ற கட்டி.

அசாத்தியகழிச்சல் *asāttiya-kaliccal,* பெ.(n.) உலாவும் காலத்தினும், கோடையிலும், கக்கல், கழிச்சல் (வாந்தி பேதி), அல்லது வயிற்றளைச்சல் (சீதபேதி) கண்டு மலத்துடன் குருதி கலந்து வந்த காலத்தும், எலும்புருக்கி நோய் முதலிய கொடிய நோய்களின் ஈறாக மாறா கழிச்சல் கண்ட காலத்தும் ஏற்படும் தீராத கழிச்சல்கள்; any acute dysentry or diarrhoea occuring with serious mucous or bloody stools in some circumstances.

த.வ. கடுங்கழிச்சல், பெருவாயிநோய்.

[அசாத்தியம் + கழிச்சல்.]

*[**Skt.** šādhya>த.அசாத்தியம்.]*

அசாத்தியகாசம் *asāttiya-kāšam,* பெ.(n.) இருமல் மிகுந்தும், மேல்மூச்சு, நீர்வேட்கை, கழிச்சல் முதலிய குணங்களுடன் கூடியதும், சிறுவர்களைத் தாக்கிக் கண்டத்திலுள்ள சுரியக (விசுத்திக்) கோளத்தை வீங்கச் செய்து, அதனால் நெஞ்சடைப்பு உண்டாக்கி எதிர்பாராது திடீரென உயிரிழக்கச் செய்யும் ஈளைநோய்; spasmodic asthma marked by severe paroxysms, hard breathing, thirst, purging etc., thymic asthma occuring usually in children or adults characterised by obstruction to respiration due to enlargement of the thymus, with a tendency to end in sudden death. It is therefore considered incurable (சா.அக.).

த.வ. கடுஈளை.

[அசாத்தியம் + காசம்]

*[**Skt.** a-šādhya> த. அசாத்திய(ம்).]*

கால்→ கார்→ காய்→ காசம்.

அசாத்தியகுட்டம் *asāttiya-kuṭṭam*, பெ. (n.) உடம்பிலுள்ள தசை, நாடி, நரம்பு முதலியவற்றில் பூச்சிகள் ஏற்பட்டு அதனால் உடம்பில் திமிர், புண், சதையழுகல், விரற்குறைவு முதலிய துன்பங்களை உண்டாக்கி மற்றும் வேற்றுக் குரல், உருமாற்றம் முதலிய வேறுபாடுகளையும் காட்டும் ஒரு வகைக் குட்ட நோய்; a chronic form of leprosy arising from a constitutions disorder due to a specific mircobe (bacillus leprate) in the skin and nerve. It is marked by anesthesia, deep ulceration, and gangrene. The lesion is also followed by affection of the larynx and change of appearance in the body (சா. அக.).

த.வ. கடுங்குட்டம்.

[அசாத்தியம் + குட்டம்.]

[Skt. a-šādhya> த. அசாத்திய(ம்).]

அசாத்தியகுணம் *asāttiya-kuṇam*, பெ.(n.) நோய்கள் தீராது இறப்பிற்கேதுவாக்கும் தன்மையைக் குறிக்கும் நிலைமை; a condition in which disease exhibit symptoms impossible for treatment, but pointing to death (சா.அக.).

த.வ. கடுங்குணம்.

[அசாத்தியம் + குணம்]

[Skt. a-šādhya> த. அசாத்திய(ம்).]

அசாத்தியகுறி *asāttiya-kuṟi*, பெ.(n.) தீர்க்க வொண்ணா நோய்களின் அடையாளம் அல்லது இலக்கணம் symptom or symptoms which are clear indications that the disease cannot be cured, but ill prove fatal ultimately (சா. அக.).

த.வ. கடுங்குறி.

[அசாத்தியம் + குறி.]

[Skt. a-šādhya> த. அசாத்திய(ம்).]

அசாத்தியசன்னி *asāttiya-šaṉṉi*, பெ. (n.) உடம்பினின்று அரத்தம் மூளை, முள்ளந்தண்டைத் தாக்குவதால் உளவேறுபாடு உண்டாகி நாடித்துடிப்பு மேல்மூச்சு உண்டாகும் ஒருவகை இசிவு (சன்னி); apoplexy arising from the some causes in considered incurable and its invariably fatal.

த.வ. கடும் இசிவு.

[Skt. a-šādhya + san-ni> த. அசாத்திய சன்னி.]

அசாத்தியசிலேட்டுமம் *asāttiya-silēṭṭumam*, பெ. (n.) பித்தம் அல்லது வளி மிகுதலால் நீடித்து இடர் செய்யக்கூடிய கோழைக் கட்டு நோய்; a chronic phlegmatic disease due to the physiological activities of the body resulting from the combination of the two humours bile and gas in the system. The disease in considered incurable (சா. அக.).

த.வ. கடுங்கோழைக்கட்டு.

[Skt. a-šādhya+slēṣman>த. அசாத்திய சிலேட்டுமம்.]

அசாத்தியசுவாசம் *asāttiya-šuvāšam*, பெ.(n.) காய்ச்சல், கக்கல் (வாந்தி), நீர்வேட்கை, கழிச்சல் வீக்கம் இவற்றுடன் காணுவதாகிய நாட்பட்ட ஈளை, நெஞ்சகக் கோழைக்கட்டு; chronic asthma and bronchitis attended with fever, vomiting, thirst, purging and swelling. These are considered incurable (சா.அக.).

த.வ. கடுஈளை.

[Skt. a. šādhya + švāsa>த.அசாத்திய சுவாசம்.]

அசாத்தியசோகை *asāttiya-šōgai*, பெ.(n.) உடம்பு முழுவதும் குருதி குறைந்து பரவிய வீக்கம் நெடு நாளாகியும் வாடாமற் போன காலத்தும், வயிறு, எரு (மல)வாய், அல்குல், ஆண்குறி ஆகிய இவ்விடங்களில் வீக்கங்

கண்டு அத்துடன் காய்ச்சல், மேல் மூச்சு, கழிச்சல் முதலிய தீயகுணங்கள் கண்டபோதும், எலும்பிலுள்ளிருக்கும் மச்ச சத்துவை நோயானது தாக்கின பொழுதும், குருதி யூறுகை, குருதி ஊட்டம் குறைவடைந்த காலத்தும் ஏற்பட்ட தீராத குருதிக்கேடு; anemia which is reckoned as incurable and at times proves fatal.

த.வ. கடுஞ்சோகை.

[அசாத்தியம் + சோகை.]

[Skt. a-šādhya>த.அசாத்திய(ம்).]

சோர்பு→ சோகு→ சோகை.

அசாத்தியசோபை *ašāttiya-šōbai*, பெ. (n.) **அசாத்தியசோகை** பார்க்க; see *ašāttiya-šōgai* (சா.அக.).

[Skt. a- šādhya +šōbhā > த.அசாத்திய சோபை.]

அசாத்தியதாகம் *ašāttiya-dāgam*, பெ. (n.) நோயினால் தாக்கப்பட்டு அறிவழிந்த காலத்திலும், நாக்கு வெளிப்பட நீண்டு விட்ட காலத்திலும், தொண்டைக்குள் நீர் இறங்காத காலத்திலும், இறக்குந் தறுவாயிலும் காணும் தீராத நீர்வேட்கை; unquenchable or morbid thirst (polydypsia) in a patient exhibiting the some symptoms.

த.வ. கடுந்தாகம்.

[அசாத்திய(ம்) + தாகம்.]

[Skt. a-šādhya>த. அசாத்திய(ம்).]

அசாத்தியநரை *ašāttiya-narai*, பெ. (n.) அகவை முதிர்வால் ஏற்பட்ட நரை; permanent greyness of hair due to old age (சா.அக.).

த.வ. கடுநரை.

[அசாத்திய(ம்) + நரை.]

[Skt. a-šādhya>த. அசாத்திய(ம்).]

அசாத்தியநாடி *ašāttiya-nāḍi*, பெ.(n.) நாடி நடையைத் தன்மாத்திரைக்குக் கொண்டுவர முடியாத காலத்திலும், நாடி நடையில் விரைவு மேன்மேலும் அதிகரித்துச் சாவிற்கு ஏதுவாகும் காலத்திலும் ஏற்பட்ட நாடியோட்டம்; pulse which is incapable of being restored to its normal condition or the abnormal increase in the pulse rate indicating the approach of death (சா.அக.).

த.வ. கடுநாடி.

[அசாத்திய(ம்) +நாடி.]

[Skt. a-šādhya>த. அசாத்திய(ம்).]

அசாத்தியபல்நோய் *ašāttiya-pal-nōy*, பெ.(n.) பல் வேரடியிற் புண்ணுண்டாகும் போது, சீழ் வடிந்து புரையோடின காலத்திலும் சொத்தை விழுந்த பொழுதும் உண்டாகும் பல் நோய்கள்; severe tooth ache, accompanied by inflammation of the tough fibrous membrane surrounding the teeth (dental periosteam), attended with discharge of pus, due to necrosis of the alveoil or rotten condition of the gum and cariess of the tooth (சா.அக.).

த.வ. கடுபல்நோய்.

[அசாத்திய(ம்)+பல்நோய்.]

[Skt. a-šādhya>த.அசாத்திய(ம்).]

அசாத்தியபித்தம் *ašāttiya-pittam*, பெ. (n.) 1. அளவிறந்த பித்தம்; excessive secretion of bile in the system. 2. கள்ளுண்டவனைப் போல் உணர்ச்சியற்று வாய் வறண்டு நீர்வேட்கை முதலிய குணங்களை உண்டாக்கும் ஒருவகைப் பித்த நோய்; a bilious disease followed by insensibility similar to the condition of adrunker person and marked by parched tongue and intense thirst. 3. ஊதையும் (வாதமும்) கோழையும் கூடிய ஒரு பித்த நோய்; a chronic biliousness due to the concerted action of the three dhoshas (humours) in the system (சா.அக.).

த.வ. கடும்பித்தம்.

[அசாத்திய(ம்) + பித்தம்.]

*[**Skt.** a-sādya>த. அசாத்திய(ம்).]*

அசாத்தியபிரமேகக்கட்டி *aśāttiya-iramēga-k-kaṭṭi,* பெ. (n.) நெஞ்சு, எருவாய் (குதம்), தலை, தோள், முதுகு ஆகிய இவ்விடங்களிலாவது, உடம்பில் வேறு மறையுப்பு மூட்டுகளிலாவது எழும்பி, நோயாளியைப் பாயும் படுக்கையுமாய்க் கிடத்தும் தீராத வெட்டைநோய் எழுப்பிய கட்டி; gummatus tumour appearing about the region of the heart, anus, head, shoulder, back or any of the vital joints of the body attended with supervening symptoms producing extreme prostration in a patient (சா.அக.).

த.வ. கடுமேகக்கட்டி.

[அசாத்திய(ம்) + பிரமேக(ம்)+கட்டி.]

*[**Skt.** a-śādhya>த. அசாத்தியம்; **Skt.** pra-mēha>பிரமேகம்.]*

அசாத்தியபிரமேகம் *aśāttiya-piramēgam,* பெ.(n.) நோய் கொண்ட பெண்களைப் புணர்வதினால் ஏற்பட்ட வெள்ளை நெடு நாட்களாகக் குணப்படாமல், ஊதைபித்த வெட்டைநோய், தந்தி வெட்டைநோய், சிறுநீர் கல்லடைப்பு ஆகிய நோய்களாக மாறிப் பண்டுவஞ் செய்து குணப்படுத்தவியலா தோல்நோய்; gonorrhoea which is said to be chronic when it is being negleated for a long time without adequate treatment, and when it developes in its last stage into gonorrhoeal rheumatism gleet, stricture of urinal passage arising from neglected gleet and stone in the bladder, moreover in bad cases, the disease may spread from the bladder to the kidneys or in a woman it may reach the womb and its appendages (சா.அக.).

த.வ. கடுமேகம்.

*[**Skt.** a-śādhya+ pra-mēha>த.அசாத்திய பிரமேகம்.]*

அசாத்தியபீலிகம் *aśāttiya-piligam,* பெ.(n.) 1. மண்ணீரலுக்கு ஊதையினால் ஏற்படும் நரம்பு வலி; a radiating neuralgic pain resulting from the morbid condition of the spleen, splenalgia. 2. வீங்கிப் பருத்துக் காணும் மண்ணீரல் நெடு நாளாகியும் பண்டுவத்துக்கு இணங்காமல் அதனால் கூடுதற் கழிச்சல் உண்டாக்கும் ஒரு தீராத நோய்; a chronic form of the enlargement of spleen marked by anaemia and emaciation due to its being long unattended to. At the last stage, diarrhoea or dysentery becomes permanent and the person sinks (சா.அக.).

த.வ. கடு ஈரல்நோய்.

*[**Skt.** a-śādhya+piligā>த.அசாத்திய பீலிகம்.]*

அசாத்தியம்¹ *aśāttiyam,* பெ. (n.) 1. நிலை நிறுத்த முடியாதது (சி.சி. அளவை 1, சிவாக்); that which is impracticable, impossible of accomplishment. 2. அசாத்தியரோகம் பார்க்க; see *aśattiya-rōgam.*

த.வ. செயற்கரிது, செயற்கருமை.

*[**Skt.** a-sādhya>த.அசாத்தியம்.]*

அசாத்தியம்² *aśāttiyam,* பெ. (n.) மிகுதி; something, in excess. '*அவனுக்கு அசாத்திய நம்பிக்கை*'.

த.வ. மிகை.

*[**Skt.** a-śādhya>த. அசாத்தியம்.]*

அசாத்தியம்³ *aśāttiyam,* பெ. (n.) 1. முடியாமை; impossibility. 2. குணமாகாமை; that state or condition in which no cure or remedy from medical skill is possible. 3. இயலாமை; impracticability (சா.அக.).

த.வ. ஆகாமை.

*[**Skt.** a-śādhya>த.அசாத்தியம்.]*

அசாத்தியமசூரிகை *asāttiya-masūrigai*, பெ. (n.) அம்மை நோயில் கொப்புளங்கள் ஏற்பட்டு, அக்கொப்புளங்களில் குருதி போய் கலந்து கருகி முகத்தில் குழி விழுந்து, குணமுறாவெனக் கருதப்படும் நோய்; a severe form of variola or small-pox.

த.வ. நலமுறாக்குழியம்மை.

அசாத்தியமூடகர்ப்பம் *asāttiya-mūḍa karppam*, பெ.(n.) வலுக்குறைவு, சோர்வு இன்னபிறவற்றின் நிமித்தம் வாயுவானது கருப்பத்தை நிலை தடுமாறச் செய்து, கருப்பை, வயிறு இவற்றில் குத்தல் உண்டாக்கி கருவுற்றார்தம் கழுத்து நிற்காமலும் கைகால் குளிர்ந்தும், அறிவழிந்தும் போகச் செய்வதுடன், கருவுற்றவளை இறக்கச் செய்யும் கருப்பம்; a condition or pregnancy brought about by the child in the uterus taking an unnatural course or position due to pressure through weakness, languor etc., It is marked by share pain in the genital and the abdomen, chillness of the extremetics, loss of senses, and lack of formness in the neck. It finally ends in the death of both the mother and the child (சா.அக.).

த.வ. கடுமூடக்கருப்பம்.

[அசாத்திய(ம்) + மூட + கருப்பம்.]

[Skt. a-sādhya>த. அசாத்திய(ம்).]

அசாத்தியமேகம் *asāttiya-mēgam*, பெ. (n.) தீர்க்க முடியாத வெள்ளை நோய்களுள் ஒன்று; incurable urinery diseases.

த.வ. கடுவெட்டை.

[Skt. a-sādhya+mēha>த.அசாத்தியமேகம்.]

அசாத்தியரோகம் *asāttiya-rōgam*, பெ.(n.) சூதமுனி நாடி 30-ன் வாக்கியப்படி கூறியுள்ள நோய்கள்; a diseases mentioned *sutamūni* 30.

த.வ. கடும்பிணி.

[Skt. a-sādhya+rōga>த.அசாத்தியரோகம்.]

அசாத்தியவதிசாரம் *asāttiya-vadi-sāram*, பெ.(n.) மலவாய்ப் புண்பட்டாலும், அங்கந்திறந்தாலும், வயிறு பெருப்பதாலும், சில்லிட்டாலும் அல்லது வேறு எவ்வகையான தீயகுறிகளைக் காட்டினாலும் அது தீராது என்று கருதப்படும் ஒருவகை செரியாமைக் கழிச்சல்; incurable diarrhoea accompanied by ulcerational-the anus, gaping of the anus, distended abdomen and chillness of the extremitics (சா.அக.).

த.வ. செரியாக்கழிச்சல்.

அசாத்தியவாதரோகம் *asāttiya-vāda-rōgam,* பெ.(n.) அதிக நடுக்கம், வீக்கம், தாங்கமுடியாத வலி, உடம்பு முழுவதும் திமிர் ஆகிய குணங்களுடன் உடம்பு மெலிவு, வாட்டம் முதலிய குறிகளையுங்காட்டும் ஓர் ஊதை (வாத)நோய்; a form of chronic rheumatism attended with characteristic tremor of the musches, swelling, unbearable pain, numbness, and progeressive muscular atrophy (சா.அக.).

த.வ. கடுவூதை.

[Skt. a-sādhya+vāta+rōga>த. அசாத்திய வாதரோகம்.]

அசாத்தியவாந்தி *asāttiya-vāndi*, பெ.(n.) இருமல், இரைப்பு, முக்குற்றம் முதலிய குணங்களோடு கழிமலமாகவும், குருதி அல்லது சீழாகவும், கழிமாசு மூத்திரங்கள் தீநாற்றத்துடனும் உண்டாகும் தீராத வாயாலெடுக்கை; incurable vomiting attended with cough, hard breathing, deranged condition of the three humours in the system etc., and marked by the presence of fecal matter, blood or fetid stomach contents (சா.அக.).

த.வ. கடுங்கக்கல்.

[Skt.a-sādhya+vāndi>த. அசாத்தியவாந்தி.]

அசாத்தியவிடக்கடி *aśāttiya-viḍa-k-kaḍi*, பெ.(n.) நச்சுயிரிகள் தீண்டலினால் ஏற்படும் நோய்கள்; bites of poisoning creatures diseases.

த.வ. கடுநஞ்சுக்கடி.

[அசாத்திய(ம்) + விடம் + கடி]

[Skt. a-sādhya - viṣa > த.அசாத்தியவிடம்.]

அசாத்தியவிடக்குறி *aśāttiya-viḍak-kuṟi*, பெ.(n.) உடம்பில் எவ்வகையினாலாவது, உட்கொண்ட நஞ்சு, மருந்துகளால் தீராது சாவிற்கேதுவாக்கும் குறிகள்; fatal symtoms of poisons exhibited in the system of a patient at the time when no antidotes administered.

த.வ. கடுநஞ்சுக்குறி.

[அசாத்திய(ம்)+ விடம்+குறி.]

[Skt. a-sādhya-viṣa > த.அசாத்தியவிடம்.]

அசாத்தியவித்திரதிக்கட்டி *aśāttiya-vittiradi-k-kaṭṭi*, பெ. (n.) 1. வயிற்றின் உட்புறத்தில் கட்டி யுண்டாகி உடைந்து மிக்க துன்பம் உண்டாக்கி, வாயால், சீழ், குருதி முதலியவற்றை விழச் செய்யும் ஒரு வகைக் கட்டி; an incurable abscess developed inside the abdomen the contents of which (pus and blood) find their way out through the mouth.

த.வ. கடுவயிற்றகக்கட்டி.

[அசாத்தியவிரத்திரதி+கட்டி.]

[Skt. a-sādhya+vidradhi > த.அசாத்திய வித்திரதி.]

அசாத்தியவிரணம் *aśāttiya-viraṇam*, பெ.(n.) ஆறாத புண்கள் (இராண); incurable ulcer.

த.வ. கடும்புண்.

[Skt. a-sādhya + vraṇa > த.அசாத்திய விரணம்.]

அசாத்தியவீக்கம் *aśāttiya-vīkkam*, பெ.(n.) நீர்வேட்கை, மெலிவு, காய்ச்சல், கக்கல், விக்கல், வயிற்றோட்டம் ஆகியவற்றோடு கூடி நச்சு தொடர்பாகச் சாவும் ஏற்படும் வடியாத வீக்கம்; irreducible swelling arising from the effects of poison and poisonous bites and characterised by the following symptoms - dyspnoea, thirst, weakness, fever, vomiting, hiccough, dysentery etc. It is extremely hard to cure and may every soon prove fatal (சா.அக.).

த.வ. கடுவீக்கம்.

[அசாத்தியம் + வீக்கம்.]

[Skt. a-sādhya > அசாத்தியம்.]

அசாத்திரமுயற்சி *aśāttira-muyaṟci*, பெ.(n.) நூன் முறையின்றி வழக்கிலுள்ள சமயச் சடங்கு (வின்.);religious ceremonies in vogue though not sanctioned by sastras, dist. fr *śāttiramuyaṟci*.

த.வ. வாடிக்கை முயற்சி.

[அசாத்திர(ம்)+ முயற்சி.]

[Skt. a-śāstra > த.அசாத்திரம்.]

அசாத்திரியம் *aśāttiriyam*, பெ.(n.) கலை நூல்கட்கு எதிரிடையானது; that which is contrary to the *sāstra*.

த.வ. நூல்நெறி இகப்பு.

[Skt. a-śāstra > த.அசாத்திரியம்.]

அசாத்மியபோசனம் *aśātmiya-bōśaṉam*, பெ.(n.) இடம், காலம், இயல்பு உணர்ச்சி, பழக்கம் முதலியவற்றிற்கு மாறுபாடான உணவு; food unsuitable to one's constitution when considered with other circumstances, such as place, climate, natural temperment habit idiosyncracy etc.

த.வ. மாறுபடு உண்டி.

[Skt. a-śādhmibhōjana > த. அசாத்மிய போசனம்.]

அசாத்மியம் *aśātmiyam*, பெ.(n.) புதுவதாய் வழக்கமில்லாததை வழக்கப்படுத்திக் கொள்ளுவதனால் உடம்புக்கு ஒத்துக்

கொள்ளாத் தன்மை; unsuitability to the constituion brought about by acquired habit; disagreement to one's constitution due to adopting a thing contrary to one's habit (சா.அக.).

த.வ. அல்வழக்கு ஒவ்வாமை.

*[**Skt.** a-sādhmi>த. அசாத்மியம்.]*

அசாதம் *aśādam*, பெ.(n.) 1. பிறவாதது; that which is not born. 2. தூய்மையின்மை uncleanliness (சா.அக.).

த.வ. சீத்தை.

*[**Skt.** a-śādha>த. அசாதம்.]*

அசாதாரணம் *aśātāraṇam*, பெ.(n.) 1. சிறப்பானது (ஈடு.6, 1, 7); that which is not common, special thing, rarity. 2. காரண(ஏது)ப் போலிகளுளொன்று (மணிமே.29, 212); (Log.) fallacy of *hētu* being found neither in a place where *sādhya* exists not in a place where it does not exist.

த.வ. சீர்மை.

*[**Skt.** a-śādhārana>த. அசாதாரணம்.]*

அசாதி *aśādi*, பெ.(n.) செவ்வாய்க் கோள் (சங். அக.); mars, as rulling the astrol. house aries.

*[**Skt.** aja-pati>த. அசாதி.]*

அசாது *aśādu*, பெ.(n.) கற்பிழந்தவள்; an unchaste woman (சா.அக.).

*[**Skt.** a-śādhā>த. அசாது.]*

அசாந்தன் *a-śāndan*, பெ.(n.) அமைதி யில்லாதவன்; restless man, one without tranquillity.

த.வ. தெம்மாடி.

*[**Skt.** a-śānta>த. அசாந்தன்.]*

அசாந்திரி *aśāndiri*, பெ.(n.) நில சருக்கரைக் கிழங்கு; a pot herb. convolvulus argentens (சா.அக.).

அசாபாலகன் *aśā-bālagan*, பெ.(n.) **அசாசீவி** பார்க்க; see *aśā-śīvi* (சா.அக.).

அசாமி *aśāmi*, பெ.(n.) ஆள் (கொ.வ.); an individual.

த.வ. ஆள்.

*[**U.** aśāmi>த. அசாமி.]*

அசாயசூரன் *aśāya-śūran*, பெ.(n.) **அசகாய சூரன்** பார்க்க; see *a-śagāya-śūran*.

அசாரதை *aśāradai*, பெ.(n.) சாறுஇன்மை; that which is sapless (சா.அக.).

அசாரம்[1] *aśāram*, பெ.(n.) 1. ஆமணக்குச் செடி; castor oil plant, *Ricinus communis*. 2. வாழை; plantain tree, *Musa paradisiaca*. 3. சாறற்றது; that which is deprived of sap or juice. 4. சாறமின்மை அல்லது பயனின்மை; that which is without strength or value, which is unsubstantial (சா.அக.).

அசாரம்[2] *aśāram*, பெ.(n.) கொலுமண்டபம்; royal audience hall or royal court.

த.வ. திருவோலக்கம்.

*[**U.** hazar>த. அசாரம்.]*

அசாரவாசி *aśāra-vāśi*, பெ.(n.) அரசன் வாயில் காவலன்; watchman of the king's gate. *"ஒரு பூசல் உண்டென்று கூறிய அசாரவாசிக்கு" (சீவக. 430, உரை.).*

*[**U.** hazar+**Skt.** vāśi>த. அசாரவாசி.]*

அசாவேரி *aśāvēri*, பெ.(n.) இளவேனிற் கால பண்களுளொன்று (பாத. இராக. 77.); (Mus.) a specific melody-type adapted for spring time.

*[**Skt.** āsāvari>த. அசாவேரி.]*

அசாறூன் *aśārūn*, பெ.(n.) இது சிறுநீர்க் கல்லடைப்பு, குருதிசிக்கல், ஊதை, வெள்ளைப்படுதல், காமாலை, நீரடைப்பு, நரம்பிசிவு, கீல்வாதம், வீக்கம் முதலிய நோய்களுக்கு உதவுவதும் புகையிடத் தேள் ஓடிப்போவதுமான ஒரு சேணிய (யுனானி) மருந்து; a well known drug in unani

medicine. It is precribed in cases of stricture of urinary passages, stone in the bladder, scantry discharge (as in menstruation), rheumatism, dropsy, jaundice etc., a fumigation of this drug drives away scorpion (சா.அக.).

அசி[1]–த்தல் *aši-*, 4.செ.கு.வி.(v.i.) நகைத்தல்; to laugh. *"புள்ளெலா மசிப்ப போன்று" (சீவக. 659.)*

[Skt. has> த. அசி–.]

அசி[2]–த்தல் *aši-*, 4 செ.குன்றாவி.(v.t.) உண்ணுதல் (தேவா. 867, 3.); to eat, consume.

[Skt. aš>த. அசி–.]

அசி[3] *aši*, பெ.(n.) உயிர் (வின்.); soul.

[Skt. aši>த.அசி.]

அசி[4] *aši*, பெ.(n.) அம்பு (பொதி. நி.); arrow.

[Skt. ašita>த.அசி.]

அசி[5] *aši*, பெ.(n.) 1. வாள் (திவா.); sword, knife. 2. படைக்கலம் (சூடா.); weapon.

[Skt. aši>த. அசி.]

அசி[6] *aši*, பெ.(n.) ஏளனச் சிரிப்பு (சூடா.); derisive laughter.

[Skt. hasi>த.அசி.]

அசிகம் *ašigam*, பெ.(n.) கீழுதட்டுக்கும் மோவாய் கட்டைக்கும் இடையேயுள்ள பகுதி; that part of the face between the underlip and the chin (சா.அக.).

அசிகியம் *ašigiyam*, பெ.(n.) 1. தாங்கக் கூடாதது; that which is unbearable. 2. அருவருப்பு; loathing, disgust.

[Skt. šahya>த.அசிகியம்.]

அசிகை[1] *ašigai*, பெ.(n.) பொறாமை (கொ.வ.); envy, jealousy.

[Skt. asūyā>த.அசிகை.]

அசிகை[2] *ašigai*, பெ.(n.) நகைத்துப் பேசும் பேச்சு; mirthful conversation. *"கசகுசென்னவே சொல் லசிகை யென்னடி" (மதுரகவி. 4.)*

[Skt. hāsikā> த. அசிகை.]

அசிங்கம்[1] *ašingam*, பெ.(n.) அருவருப்பு (இ.வ.); digust.

த.வ. சீத்தை, தூத்தை.

[Skt. šahya>த.அசிங்கம்.]

அசிங்கம்[2] *ašingam*, பெ.(n.) தூய்மையின்மை துப்புரவின்மை; uncleanness, impurity, as unbearable. *"அசிங்கமான இடம்" (கொ.வ.).* 2. அழகின்மை; disorder, repulsiveness. *"அசிங்கமான வேலை" (கொ. வ.).*

த.வ. அருவருப்பு.

[Skt. a-sahya>த.அசிங்கம்.]

அசிங்கம்[3] *ašingam*, பெ.(n.) 1. தரக்குறைவு, மட்டம்; obscenity. *'அவன் குறையைச் சுட்டிக் கட்டி அசிங்கமாகச் கேலி செய்தார்'.* 2. இழிநிலை தரத்தக்கது; unbecoming.

[Skt. sahya>த. அசிங்கம்.]

அசிங்நுவத்தன்மை *ašinnuva-t-tanmai*, பெ.(n.) தன் அலுவலில் பற்றில்லாமை (விசாரசந். 341.); non-attachment in respect of one's affairs.

[அசிங்நுவ(ம்) + தன்மை.]

[Skt. ia-sahya-tva> த. அசிங்நு(ம்).]

அசிசெறுகாத்துப்பு *aši-šerukāttuppu*, பெ.(n.) கரியுப்பு; black salt (சா.அக.).

அசித்தம் *ašittam*, பெ.(n.) காரண (ஏது)ப்போலிகளு ளொன்று (மணிமே. 29, 192.); fallacy of *hētu* being unsustainable.

[Skt. a-siddha>த. அசித்தம்.]

அசித்தி *ašitti*, பெ.(n.) கைகூடாமை; incompleteness, failure. *"தாவறு மசித்தி சித்தி தம்மி லலையாதே" (பிரபோத. 27, 80).*

த.வ. எய்தாமை.

[Skt. a-siddhi> த. அசித்தி.]

அசித்திரன் *ašittiraṉ*, பெ.(n.) கள்வன் (சிந்தா. நி. 57.); thief.

[Skt. ašitra>த. அசித்திரன்.]

அசித்து *a-šittu*, பெ.(n.) அறிவில் பொருள் (சடம்); that which is non-intelligent, matter. *"சித்த சித்தொ டீசனென்று செப்புகின்ற மூவகைத் தத்துவத்தின்" (பாரத. பதினைந். 1.).*

த.வ. அறிவில் பொருள்.

[Skt. a-šit>த. அசித்து.]

அசிதகருணி *ašida-karuṇi*, பெ.(n.) கருப்பு வழுதலை; black brinjal plant-solanum melongenum (சா.அக.).

அசிதத்துருமம் *ašidatturumam*, பெ.(n.) மலைப்பச்சை; Mysore gamboge; painter's gamboge-xanthochymus pictorius (சா. அக.).

அசிதம்[1] *ašidam*, பெ.(n.) 1. சிரிப்பது; that which laughs. 2. அலர்வது; that which blossoms.

[Skt. hasita>த. அசிதம்.]

அசிதம்[2] *ašidam*, பெ.(n.) கருமை; blackness. *"அசித வெங்கட-குண்டு" (இரகு. குச. 83.).*

[Skt. a-sita> த. அசிதம்.]

அசிதம்[3] *ašidam*, பெ.(n.) சிவதோன்றியத்து ளொன்று; an ancient *šaiva* scripture in Sanskrit, one of 28 *šivāgamam*, q.v.

அசிதம்[4] *ašidam*, பெ.(n.) 1. நச்சு விலங்கு; a poisonous animal. 2. கரும்பாம்பு; a black snake. 3. நீலிப்பூடு; indigo plant, *Indigofera tinctoria* (சா.அக.).

அசிதமயப்பூ *ašidamaya-p-pū*, பெ.(n.) பூநீர்; an efflorcent salt obtained from the soil of fuller's earth (சா.அக.).

அசிதர் *ašidar*, பெ.(n.) தீர்த்தங்கரருள் ஒருவர் (திருக்கலம. காப்பு, உரை.); name of a jaina Arhat, one of 24 *Tirttaṅgarar*, q.v.

[Skt. ajita>த. அசிதர்.]

அசிதவெலி *ašida-v-eli*, பெ.(n.) நச்சுத் தன்மையுள்ள ஒருவகைக் கருப்பு எலி; a kind of black poisonous rat.

த.வ. காரெலி.

அசிதன்[1] *ašidaṉ*, பெ.(n.) 1. வெல்லற்கரியோன்; he who is unconquerable. 2. திருமால்; *Viṣṇu*.

[Skt. a-jita>த. அசிதன்.]

அசிதன்[2] *ašidaṉ*, பெ.(n.) 1. காரி(சனி)க் கடவுள்; 2. நீலநிறத்தோன்; blue cololured god *(Viṣṇu)*.

அசிதாசுமம் *ašidā-šumam*, பெ.(n.) இந்திர நீலமணி; a precious stone of the corundum class and of various shades of blue sapphire (சா.அக.).

த.வ. நீலக்கல்.

அசிதாம்புருகம் *ašidāmburugam*, பெ.(n.) நீலோற்பலம் (மலை.); blue water lily.

[Skt. asita+ambu+ruha>த.அசிதாம் புருகம்.]

அசிதாரு *aši-tāru*, பெ.(n.) நிரயச் சிறப்பு (சிவதரு. சுவர்க்க. 115); hell in which sword-like trees from instruments of torture.

[Skt. asi+tāru>த. அசிதாரு]

அசிதாலவனம் *aši-tāla-vaṉam*, பெ.(n.) நிரயச் சிறப்பு (சிவதரு சுவர்க்க. 145); hell in which sword-like palmyra palms instruments of torture.

[Skt. asi>த. அசி.]

அசிதேசுமம் *ašidē-šumam*, பெ. (n.) வெள்ளைக்கல் (புட்பராகம்); a white precious stone-lapis lazali (சா.அக.).

அசிதை[1] *ašidai*, பெ.(n.) 1. பராசக்தி மாற்றுரு (சைவச. பொது. 74, உரை.); *(šaiva)* a form of *parā-šakti*, one of four. 2. நீலிச் செடி (ட); Indian indigo.

[Skt. ašitā>த. அசிதை.]

அசிதை[2] *ašidai*, பெ.(n.) அவுரி; indigo plant, *Indigofera tinctoria* (சா.அக.).

[Skt. āsita>த. அசிதை.]

அசிதோகம் *aši-dōgaom*, பெ.(n.) **கற்பலா** பார்க்க; see *karpalā*.

[Skt. ašitōkada>த. அசிதோகதம்.]

அசிதோற்பலம் *ašidōr̤-palam*, பெ.(n.) 1. நீலத்தாமரை; blue lotus, *Monochria vaginalis*. 2. நீலமணி; sapphire. 3. கருங் குவளை (நீலோற்பலம்); blue-waterlily, *Nymphaca stellata* (சா.அக.).

அசிந்தம் *ašindam*, பெ.(n.) ஒரு பேரெண் (யாழ். அக.); a thousand quadrilions.

[Skt. a-cintya>த. அசிந்தம்.]

அசிந்திதன் *ašindidan̠*, பெ.(n.) மனத்துக் கெட்டாதவன், கருதற்கரியவன், தனிச் சிறப்பினன் (சி. போ. சிற். 12, 3, 1); one who is inconceivable or incomprehensible.

த.வ. எண்ணற்கரியான்.

[Skt. a-cintita>த. அசிந்திதன்.]

அசிந்தியம் *ašindiyam*, பெ.(n.) 1. நினைவிற் கெட்டாதது; that which is inconceivable. 2. ஒரு பேரெண் (வின்.); the number 1000 quadrillions.

த.வ. நினைவிகப்பு.

[Skt. a-cintya>த. அசிந்தியம்.]

அசிப்பு *ašippu*, பெ.(n.) ஏளனச் சிரிப்பு; derisive laughter. *"அசிப்பிலனாசி" (பெருங். மகத. 14, 225.).*

[அசி + பு.]

[Skt. asi>அசி.]

அசிபகாந்தம் *ašiba-kāndam*, பெ.(n.) 23 மா மூலிகைகளுளொன்றான கருப்பு விழுதி; dark vizhudhi - one of the 23 rare drugs of high potency (மா.identified)

அசிபத்திரகம் *ašipattiragam*, பெ.(n.) கரும்பு (மலை.); sugar-cane.

[Skt. asi+patraka>த. அசிபத்திரகம்.]

அசிபத்திரம் *ašipattiram*, பெ.(n.) கத்தியைப்போன்று இலைகளையுடைய மரங்கள் வளர்ந்திருக்கும் நிரயச் சிறப்பு; hell where trees have leaves as sharp as swords. *"அசிபத்திரியெனும்.... நரகிடை" (குற்றா. தல. கவுற்சன. 67).*

[Skt. aši+patra> த. அசிபத்திரம்.]

அசிபத்திரவனம் *ašipattira-van̠am*, பெ.(n.) 1. **அசிபத்திரம்** (சேதுபு. தனுக். 3.); பார்க்க; see *ašipattram*. 2. நிரையம்; hell.

[Skt. asi-patra +van̠a>த. அசிபத்திரவனம்.]

அசிபத்திரி *aši-pattiri*, பெ.(n.) 1. **அசிபத்திரம்** பார்க்க; see *aši-pattiram*. 2. கத்தியைப் போன்ற இலைகள்; sword shaped leaves (சா.அக.).

[Skt. aši+patra>த. அசிபத்திரி.]

அசிபதம் *ašipadam*, பெ.(n.) ஒகநிலைக்குரிய தத்துவமசி என்னும் தொடரியத்தில் அசி என்னுஞ் சொல்; the word *aši* in the sentence, *tat-tvam-aši*. *"தத்துவ–பதார்த்தங்க ளிரண்டுக்கும் அசிபதத்தினால் ஐக்கியக்கூடும்"* (சா.அக.).

[Skt. asi+pada>த. அசிபதம்.]

அசிமேதம் *aši-mēdam*, பெ.(n.) ஒரு வகை நாற்றப் பூடு; a stinking plant, fetid mimosa (சா. அக.).

[Skt. asi+ mēta> த. அசிமேதம்.]

அசிர்க்கசிராவகம் *aširkka-širāvagam*, பெ.(n.) குருதியொழுக்கு; bleeding, letting blood (சா.அக.).

[Skt. ašira-šravaga>த.அசிர்க்கசிராவகம்.]

அசிர்க்கதரம் *aširkka-daram*, பெ.(n.) மாதவிலக்குப் பெருக்கு; excessive menstruation, *Menorrhagia* (சா.அக.).

த.வ. பெரும்பாடு.

[Skt. ašira - tara > த. அசிர்க்கதரம்.]

அசிர்க்கபாதம் *aširkka-pādam*, பெ. (n.) 1. குருதி வீழ்ச்சி; the flew of blood. 2. குருதித் துளி; a drop of blood. 3. குருதி யொழுக்கு; oxing of blood from a wound (சா.அக.).

[அசிர்க்க + பாதம்.]

[Skt. ašira>த.அசிர்.]

அசிர்க்கபானம் *aširkka-pāṉam*, பெ.(n.) அரத்தம் குடிக்கை; drinking of blood (சா.அக.).

[Skt. ašira-pānā> த. அசிர்க்கபானம்.]

அசிர்க்கரநோய் *aširkkara-nōy*, பெ.(n.) 1. குருதி தொடர்பான நோய்; any disease arising from altered condition of blood in the system. 2. குருதிப் பெருக்கை யுண்டாக்கும் பெரும்பாடு, மூக்குத்துளை வழி ஏற்படும் குருதியொழுக்கு முதலிய நோய்கள்; disease resulting in hemorrage such as menorrhagias Epistaxis, hemoptysis etc. (சா.அக.).

த.வ. குருதிநோய்.

[அசிர்க்கர(ம்) + நோய்.]

[Skt. aširakara > த. அசிர்க்கர]

அசிர்க்கரம் *ašir-k-karam*, பெ. (n.) 1. குருதியுண்டாதல்; forming of blood. 2. பக்குவப்படாத நிலைமையிலுள்ள நிணநீர்; lymph-chyle before its conversion into blood (சா.அக.).

[Skt. ašira-kara>த. அசிர்க்கரம்.]

அசிர்க்கவகம் *ašir-k-ka-vagam*, பெ.(n.) குருதிக்குழாய்; blood vessel (சா.அக.).

[Skt. ašir+vaha>த.அசிர்க்கவகம்.]

அசிர்க்கின்மிசிரம் *aširkkiṉ-miširam*, பெ. (n.) குருதிக் கலப்பு; mixing with the blood (சா.அக.).

[Skt. ašir+mišra>த.அசிர்க்கின்மிசிரம்.]

அசிர்க்கின்முகம் *aširkkiṉ-mugam*, பெ.(n.) குருதி முகம்; bloody face (சா.அக.).

[Skt. aširmugā > த. அசிர்க்கின்முகம்.]

அசிர்க்கு *aširkku*, பெ.(n.) குருதி; blood (சா.அக.).

[Skt. ašir>த. அசிர்க்கு.]

அசிரத்தை *aširattai*, பெ.(n.) கவனிப்பின்மை; inattention indifference.

[Skt. šraddhā>த. அசிரத்தை.]

அசிரநானம் *ašira-nāṉam*, பெ. (n.) கழுத்து வரையில் குளிக்கை; a bath upto the neck without immersing or wetting the head (சா.அக.).

[Skt. aši+snāna>த.அசிரநானம்.]

அசிரபத்திரகம் *ašira-pattiragam*, பெ.(n.) கத்தூரி வெண்டை; mustk mallow plant, *Abelmoschus esculentes* (சா.அக.).

[Skt. ašira+bhadra>த. அசிரபத்திரகம்.]

அசிரபித்தம் *ašira-pittam*, பெ.(n.) **அரத்த பித்தம்** பார்க்க; see aratta-pittam (சா.அக.).

[அசிரம் + பித்தம்.]

[Skt. ašira>த. அசிரம்.]

அசிரம்[1] *aširam*, பெ.(n.) 1. காற்று; wind. 2. புலனுறுப்புக்கள்; object of senses. 3. தவளை; frong. 4. முற்றம்; court-yard. 5. உடம்பு; body.

[Skt. ajira>த. அசிரம்.]

அசிரம்[2] *aširam*, பெ.(n.) தீ; fire.

[Skt. ašira>த. அசிரம்.]

அசிரம்[3] *aširam*, பெ.(n.) 1. வெட்டிவேர்; a fragrant root; khus root, *Andropogon muricatus*. 2. வெள்ளை; whiteness. 3. தலைமயிர்; hair of the head (சா.அக.).

[Skt. ajira>த. அசிரம்.]

அசிரமாத்திரிகம் *ašira-māttirigam*, பெ.(n.) உணவுப் பால், உடலில் உணவிலிருந்து ஊறும் கொழுப்புக் கலந்த வெள்ளை நிணநீர் (அன்ன ரசம்) chyle (சா.அக.).

த.வ. நிணநீர்.

[Skt. ajira+mātrā> த.அசிரமாத்திரிகம்.]

அசிரவணம் *ašira-vaṉam*, பெ.(n.) 1. செவிடு; deafness. 2. காதின்மை; state of condition

of being deprived of ear. 3. காது கேளாமை; thickness of hearing (சா.அக.).

[Skt. a-śravaṇa > த.அசிரவணம்.]

அசிரன் *aśiraṉ*, பெ.(n.) 1. தீ; agni. 2. கதிரவன்; sun. 3. கவந்தன்; Kabandha, a demon.

[Skt. aśira > த. அசிரன்.]

அசிராற்சகம் *aśirar̲-śagam*, பெ.(n.) வெண்துளசி; white basil (சா.அக.).

[Skt. aśira + śaga > த.அசிராற்சகம்.]

அசிரி *aśiri*, பெ.(n.) அருவருப்பானவன் (இவ).; dirty fellow.

[Skt. a-śiri > த.அசிரி.]

அசிருத்திரரோகம் *aśiruttararōgam*, பெ. (n.) **அசிர்க்கரநோய்** பார்க்க; see *aśirukkara-nōy* (சா.அக.).

[Skt. asi + rudhra + rōga > த.அசிருத்திர ரோகம்.]

அசிருபாதம் *aśiru-pādam*, பெ. (n.) 1. கண்ணீர்ப் பெருக்கு; habitual or persistent overflow of tears due to over secretion or impleded outflow of excretion, *Epiphora* c.f. *Lachrymation*. 2. குருதிப் பெருக்கு; the flow of blood from wounded or ruptured vessels, *Hemorrhage* (சா.அக.).

[Skt. asira-pāthas > த. அசிருபாதம்.]

அசிவம் *aśivam*, பெ.(n.) நோயுண்டாக்கும் ஒரு வகைப் பேய்; the name of demon causing deseases (சா.அக.).

[Skt. aśi > த. அசிவம்.]

அசினப்பத்திரிகை *aśina-p-pattirigai*, பெ.(n.) வாவல் (யாழ். அக.); bat.

த.வ. வவ்வால்.

[Skt. ajina+patrikā > த.அசினப்பத்திரிகை.]

அசினபத்திரி *aśiṉa-pattiri*, பெ.(n.) **அசினப் பத்திரிகை** பார்க்க; see *aśina-p-pattirigai*.

[Skt. aśi + patra > த. அசினபத்திரி.]

அசினபத்திரை *aśiṉa-pattirai*, பெ.(n.) **அசினப்பத்திரிகை** பார்க்க; see *aśiṉa-p-pattirigai*.

[Skt. asi+patra > த.அசினபத்திரை.]

அசினம்[1] *aśiṉam*, பெ.(n.) விலங்குகளின் தோல்; hairy skin of an animal, esp. black buckskin, used as a seat or covering and for other purposes. *"நன்னூ லுடன்பூ ணசினத்தை" (பாரத. நச்சுப். 17.).*

[Skt. ajina > த. அசினம்.]

அசினம்[2] *aśiṉam*, பெ.(n.) மான்தோல்; the skin of deer (சா.அக.).

[Skt. ajina > த.அசினம்.]

அசினயோனி *aśiṉa-yōṉi*, பெ.(n.) மான்; deer (சா.அக.).

[Skt. ajina + yōni > த. அசினயோனி.]



அசீட *aśiḍa*, கு.பெ.எ.(adj.) 1. மூளையற்ற; absence of brain. 2. மூளையில்லாத; brainless (சா.அக.).

[Skt. aśita > த. அசீட.]

அசீடம் *aśiḍam*, பெ. (n.) தலையற்றது; (in teratology) absence of the head-acephalia (சா.அக.).

த.வ. முண்டம்.

[Skt. aśiṭa > த. அசீடம்.]

அசிடவ *aśiḍava,* கு.பெ.எ. (adv.) மூளையற்றதின் தொடர்பானது; pertaining to a anercephalu, *Anercephaloid* (சா.அக.).

அசிடவத்தி *aśiḍa-vatti,* பெ.(n.) ஈரல் முதலிய உறுப்புகளிலிருக்கும் ஒரு வகையான தலையில்லா நாக்குப் பூச்சி; a headless worm found in the liver and other organs; the bladder worm, *Acepholocyst* (சா.அக.).

அசிடன் *aśiḍaṉ,* பெ.(n.) மூளையில்லாத தோர் கொடு விலங்கு; a species of monster without even a trace of the brain or a rudimentary representation of it- *Anecephalus* (சா.அக.).

[Skt. a-śiṭa> த. அசிடன்.]

அசிடி *aśiḍi,* பெ.(n.) தலையற்றது; headless, *Acephalus* (சா.அக.).

த.வ. முண்டம்.

[Skt. aiṭi> த. அசிடி.]

அசிதகரன் *aśidagaraṉ,* பெ.(n.) கதிரவன்; the sun (சா.அக.).

[Skt. aśitagara>த. அசிதகரன்.]

அசிதம் *aśidam,* பெ.(n.) வெப்பம்; intense heat of the sun or of the body (சா.அக.).

[Skt. aśita>த. அசிதம்.]

அசிதளம் *aśitaḷam,* பெ.(n.) கருப்பூரம்; camphor. *"துல்லிய மசிதளம் பூலாங் கிழங்கசை" (தைலவ. தைல. 6.).*

[Skt. a-śitaḷa>த. அசிதளம்.]

அசிதனு *aśidaṉu,* பெ.(n.) சூட்டுடம்பு; heat body (சா.அக.).

[Skt. aśita>த. அசிதனு.]

அசிதி[1] *aśidi,* பெ.(n.) எண்பது; eighty. *"அதற்கு நீள மசிதியு மைந்துமால்" (சிவதரு. கோபுர 86.).*

[Skt. aśiti>த. அசிதி.]

அசிதி[2] *aśidi,* பெ.(n.) ஆடவை, கன்னி, சிலை, மீன(ம்) மாதங்களின் பிறப்பு (சைவச. பொது. 15.); beginning of the 3rd, 6th, 9th and 12th solar months, considered sacred.

[Skt. ṣaḍ-aśiti> த. அசிதி.]

அசிர் *aśir,* பெ.(n.) அணியம் (ஆயத்தம்) (யாழ். அக.); readiness.

[U. hāzir>த. அசிர்.]

அசிர்த்தி *aśirtti,* பெ.(n.) செரியாமை; indigestion. *"அக்கினி தேவற் கசிர்த்தியென்று" (ஒழிவி. கிரியைக். 3.).*

[Skt. a-jirti>த. அசிர்த்தி.]

அசிரகம் *aśiragam,* பெ.(n.) மகப்பேற்றின் பின் தாய்ப்பால் இன்மை; failure or insufficiency of the mother's milk after childbirth, *Agalactia alias Agalaxia.* 2. பால் மறுத்தல்; accuston to do without the mother's milk; causing an infant to cease from taking food by sucking, but to take it in the oridinary way, weaning (சா.அக.).

த.வ. பாற்கேடு.

[Skt. ajiraka>த. அசிரகம்.]

அசிரணக்காய்ச்சல் *aśiraṇa-k-kāyccal,* பெ.(n.) முன் உண்ட உணவு அறாமையால் வயிறு மிகப் பொருமிக்கழிந்து, புளியேப்பம், கொட்டாவி, விக்கல் ஆகிய குணங்களைக் காட்டும் ஒரு வகைக் காய்ச்சல்; a fever arising from indigestion or other gastric disturbances. It is characterised by rumbling noise in the stomach, purging, sour belch, yawning, hiccough etc., gastric fever (சா.அக.).

த.வ. செரியாக் காய்ச்சல்.

[அசிரண(ம்)+காய்ச்சல்.]

[Skt. ajirṇa> த. அசிரணம்.]

அசிரணக்கிராணி *aśiraṇa-k-kirāṇi,* பெ. (n.) 1. மகப்பெற்றார்தம் குடல் கோளாறினால் உண்ட உணவு செரியாமல் ஏற்படும் வயிற்றுப் போக்கு; chronic diarrhoea in women after-delivery due to the functional

derangement of the bowels. 2. குழந்தைகளுக்கு முறைப்படி தாய்ப் பாலூட்டத் தவறினாலும், மிகுத்தூட்டினாலும், பால் குற்றத்தினாலும் அல்லது முன்னை கழிமாசுக்கட்டாலும், ஏற்படும் கழிச்சல்; a chronic diarrhoea in infants caused by improper feeding, over feeding, deleterious property of the milk or by accumulation in the bowels of hard faecal matter (சா.அக.).

த.வ. செரியாக்கழிச்சல்.

[Skt. ajīṛṇa + grahaṇi>த. அசீரணக்கிராணி.]

அசீரணசுரம் *aśīraṇa-šuram,* பெ.(n.) **அசீரணக்காய்ச்சல்** பார்க்க; see *aśīraṇa-k-kāyccal*(சா.அக.).

[அசீரண(ம்) + சுரம்.]

[Skt. ajīṛṇa>த.அசீரணம்.]

அசீரணசூலை *aśīraṇa-šūlai,* பெ.(n.) உணவு செரியாமையினாலும் கழிமாசு(மல)க் கட்டினாலும் அடிவயிற்றில் உண்டாகும் ஒரு குத்தல் நோய்; an acute abdominal pain due to indigestion and accumulation of faeces in the intestines, *stercoral colic* (சா.அக.).

த.வ. செரியாச்சூலை.

[அசீரண(ம்) + சூலை.]

[Skt. ajīṛṇa>அசீரணம்.]

அசீரணநாடி *aśīraṇa-nāḍi,* பெ.(n.) முன் உண்ட உணவு செரியாமையைக் காண்பிக்கும் நாடி; a pulse indicating the digestive disorders (சா.அக.).

த.வ. செரியாநாடி.

[அசீரண(ம்) + நாடி.]

[Skt. ajīṛṇa>அசீரணம்.]

அசீரணபித்தம் *aśīraṇa-pittam,* பெ.(n.) பித்தம் அதிகமானதால் கழிமாசு கட்டியாகி, தலைவலி, செரியாமை, வயிற்றிரைச்சல், வாய்நீர் ஊறல் முதலிய குணங்களைக் காட்டும் ஒரு பித்த நோய்; excessive secretion of bile marked by constipation, headache, indigestion, rumbling noise in the stomach, hyper salivation and other gastric disturbance (சா.அக.).

த.வ. செரியாப்பித்தம்.

[அசீரண(ம்) + பித்தம்.]

[Skt. ajīṛṇa>த.அசீரணம்.]

பித்து → பித்தம்.

அசீரணபேதி *a-śīraṇa-pēdi,* பெ. (n.) கழிச்சல்; diarrhoea from indigestion undigested discharges.

[Skt. ajīṛṇa + bhēdin>த. அசீரண(ம்)பேதி.]

அசீரணம் *a-śīraṇam,* பெ.(n.) 1. செரியாமை; indigestion. 2. அழிவுபடாதது; that which is unimpaired. *"அசீரணமாஞ் சித்துருவால்" (ஞானவா. சிகித். 13.).*

த.வ. அறாயாமை.

[Skt. ajīṛṇa > த.அசீரணம்.]

அசீரணரோகம் *aśīraṇa-rōgam,* பெ.(n.) பொதுவாக உணவின் குற்றத்தினாலும், மிதமிஞ்சி உண்பதாலும் செரிமான உறுப்புகளின் தொழில் வேறுபாடு அடைந்து உண்ட உணவு செரியாமல், வயிற்றில் புளிப்பு அதிகமாக ஏற்பட்டு, அதனால் வாய்ப்புண் பொங்கல் (அட்சரம்), வளி (வாயு) பரிதல், ஏப்பம், புளியேப்பம், நெஞ்செரிச்சல் கழிமாசுக்கட்டு, எதிர்க் களித்தல் (மலபந்தம்), முதலிய குணங்களும், சில சமயம் மயக்கம், உணவின் மீது வெறுப்பு (அரோசிகம்), முதலியவுங்காணும் நோய்; indigestion in one or other of its numerous forms, occuring as a result of disorders of the digestive organs, due to the fermentation of the food taken. It is marked by sore in the mouth, flatulence, belching, eructation of gas smelling like rotten eggs, heartburn, slight eructation after meals, constipation etc, and accompanied at times, by giddiness and nausea. This is generally caused by errors in diet, as when

some irritating, over rich or high material is taken, *Dyspepsia* (சா.அக.).

த.வ. செரியாநோய்.

[Skt. ajirṇa + rōga>த.அசீரணரோகம்.]

அசீரணவாயு *a-śirana-vāyu*, பெ.(n.) செரியாமையால் உண்டாகும் ஊதைநோய்; flatulence from indigestion.

த.வ. செரியாஊதை.

[Skt. ajirṇa+vāyu>த.அசீரணவாயு.]

அசீரணவெரிச்சல் *aśirana-v-ericcal*, பெ.(n.) உண்ட உணவு செரியாமல் வயிற்றில் புளித்து அதனால் உண்டாகும் நெஞ்செரிவு; a burning sensation felt at the pit of the stomach. It is due to the fermentation of the contents of the stomach, heart burn cardialgia (சா.அக.).

த.வ. நெஞ்செரிச்சல்.

[அசீரண(ம்) + எரிச்சல்.]

[Skt. ajirṇa>த.அசீரணம்.]

எல் > எரி > எரிச்சல்.

அசிரியம் *aśiriyam*, பெ.(n.) அழியாதது; that which is indestructible. *"அக்கிராகிய மசீரியம்" (சூத. எக்கிய. பிரம. 10, 13).*

[Skt. a-jirya>த. அசீரியம்.]

அசிவம்[1] *aśivam*, பெ.(n.) ஒன்பதுவகை சொற்பொருள்களுளொன்று (சீவக. 2814, உரை.); (Jaina.) things inanimate, opp. to *śivam*, one of nava *patārttam*, q.v.

[Skt. a-jiva>த. அசீவம்.]

அசிவம்[2] *aśivam*, பெ.(n.) 1. இறப்பு; death. 2. பாழ் (சூனியம்); nothingness; the condition or state of being nothing. 3. நாக்கற்றது; that which is tongueless (as in frog) (சா.அக.).

த.வ. பாழ்வு.

[Skt. ajiva>த. அசீவம்.]

அசீவன் *aśivan*, பெ.(n.) உயிரிலி (சடம்); that which is lifeless; a non-existent thing (சா.அக.).

[Skt. ajiva> த. அசீவன்.]

அசீவனி *aśivani*, பெ.(n.) 1. பாழ்த்தன்மை; the quality or state of being nothing-Nihitity.

[Skt. ajivan > அசீவனி.]

அசு *aśu*, பெ.(n.) 1. உயிர்வளி (சிந்தா. நி. 57); the vital breath or airs of the body. 2. தென்புலக் காற்று (சீவன்); the life of the spiritual world. 3. உடலை விட்டுப் பிரிந்த ஆதன்; the departed soul. 4. உயிர் (பிராணன்); animal life. 5. வருத்தம்; grief. 6. மூச்சு; respiration (சா.அக.).

த.வ. மூச்சுக்காற்று.

[Skt. aśu>த. அசு.]

அசுக்காட்டு-தல் *aśu-k-kāṭṭu-*, 5 செ.குன்றாவி. (v.t.) பகடிசெய்தல் (திவ் திருப்பா. 28, வ்யா.); to ridicule, mock.

த.வ. நகுவித்தல்.

[அசு+காட்டு-.]

[Skt. has>த. அசு.]

அசுகதாபம் *aśuga-tābam*, பெ. (n.) மூச்சுக் குழாயில் ஏற்படும் அழற்சி நோய்; inflammation of the mucous membrane of the bronchial tubes, *Bronchitis* (சா.அக.).

அசுகந்தம் *aśukandam*, பெ.(n.) தீ நாற்றம்; bad smell (சா.அக.).

[அசு + கந்தம்.]

[Skt. aśu> த. அசு.]

காந்து→கந்து→கந்தம்.

அசுகம்[1] *aśugam*, பெ.(n.) 1. காற்று; air. 2. வருத்தம்; grief. 3. மூச்சுக் குழற் பகுதி; one of the two tubes of the wind pipe, *Bronchus*. 4. குரல்வளை; wind-pipe.

[Skt. a-śukha>த. அசுகம்.]

அசுகம்² *a-šugam*, பெ.(n.) நலக்குறை; illness.

த.வ. நலக்கேடு.

[Skt. a-šukha>த. அசுகம்.]

அசுகரம் *ašugdaram*, பெ.(n.) **அசுகதாபம்** பார்க்க; see *ašugatābam* (சா.அக.).

அசுகுசு-த்தல் *ašukušu-*, 4 செ.கு.வி. (v.i.) 1. அருவருத்தல் (வின்.); to feel disgust. 2. ஐயுறுகை; to suspect.

அசுகை¹ *ašugai*, பெ.(n.) அருவருப்பு (தெய்வச் விறலி. 504); loathing, disgust.

த.வ. சீற்றம், மிகு வெறுப்பு.

[Skt. šahya>த. அசுகை.]

அசுகை² *ašugai*, பெ.(n.) 1. **அசூயை** பார்க்க; see *ašūyai*. 2. ஐயம் (வின்.); conjectural circumstance.

[Skt. šahya> த. அசுகை.]

அசுசி *ašusi*, பெ.(n.) துப்புரவின்மை; impurity, uncleanness. *"தேறா ரசுசியென் றகல்வார்"* (நல். பாரத உமாமகே. 58.).

த.வ. குப்படை.

[Skt. a-šuci> த. அசுசி.]

அசுடகம் *ašuḍagam*, பெ.(n.) 1. உலராதது; that which is undried. 2. பசுமை; greeness; that state of being cold and damp, rawness (சா.அக.).

[Skt. ašu>த. அசுடகம்.]

அசுடவங்கம் *ašuḍa-vaṅgam*, பெ.(n.) மாசற்ற கருமம்; lead not subjected to industrial or preparatory process, i.e., crude in character-plumbago or black lead (சா.அக.).

அசுண்டவாயு *ašuṇḍa-vāyu*, பெ.(n.) எல்லா உயிர்களுக்கும் உணவின் மீது வேட்கை பிறப்பிப்பதும் அரக்கர், விண்ணவர், சித்தர்கள் ஆகிய இவர்களும், பறவைகளும், விண்ணில் உலாவுவதற்கு ஆதாரமாயுள்ளதும் பூமிக்கு மேல் 650 கல்லுக்கு அப்பால் இருப்பதுமான காற்று; a thin, subtle matter, much finer and rarer than air, occupying the heavenly space. It is an etheric medium of extreme tenuity and elasticity universally diffused in space above the earth at an altitude of 50 × 13 or 650 miles.

It is said to be the medium of transmission of vital force to super physical beings like the Rakshashas, Gandarvas, Siddhars, etc., travelling in the etheric regions and also to birds flying far high in the serial regions (சா.அக.).

த.வ. மீமிசைவளி.

[Skt. ašunta+ vāyu>த. அசுண்டவாயு.]

அசுணம் *ašuṇam*, பெ.(n.) வெள்ளைப் பூண்டு; garlic, *Allium Sativum* (சா.அக.).

[Skt. lašuna>த. அசுணம்.]



அசுணன் *ašuṇaṉ*, பெ.(n.) உள்ளிவகை (மலை.); garlic.

[Skt. lašuna>த. அசுணன்.]

அசுத்த *ašutta*, பெ.எ.(adj.) தூய்மையற்ற; impure (சா.அக.).

[Skt. a-šuddha>த. அசுத்த.]

அசுத்ததத்துவம் *a-šutta-tattuvam*, பெ.(n.) மெய்ப் பொருள் (தத்துவ) வகை (சிவப். கட்); (Šaiva.) impure categories, one of three classes of tattuvam, q.v., comprising 4

antak-karaṇam. 5. *ñānēntiriyam,*5 *karu-mentiriyam,*5 *taṉmāttirai,*5 *pūdam.*

த.வ. ஆதன்கோட்பாடு.

[**Skt.** *a-śuddha*>த. *அசுத்தம்.*]

அசுத்தப்பிரபஞ்சம் *a-śutta-p-pirapañjam,* பெ.(n.) கலை மெய்ப்பொருள் முதல் புடவி மெய்ப்பொருள் (பிருதிவிதத்துவம்) ஈறாகிய மெய்ப் பொருள் (தத்துவம்); (*Śaiva.*) impure universe envolved out of *a-cutta-māyai* and comrising the 30 categories from *kalā-tattuvam pirutivi-tattuvam.*

த.வ. மெய்ப்பொருள் பேரண்டம்.

[**Skt.** *a-śuddha+pra-pañca*> த.*அசுத்தப் பிரபஞ்சம்.*]

அசுத்தபற்பம் *aśutta-paṟpam,* பெ.(n.) நோய்களைக் கண்டிப்பதற்குப் மாற்றாகக் குட்டம், வெள்ளை (பாண்டு), கோழை, ஊதை (வாதம்) முதலிய பல நோய்களைப் புதிதாக உண்டாக்கி உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் தூய்மைமுறைப்படி, செய்பாகம், கைபாகம், புடபாகம் முதலியவற்றை, முறைப்படி கொள்ளாமல் செய்யும் நீற்றுமானப் பொருள்; impure calcined compounds prepared without consistency in the observance of rules and practice laid-down in the Tamil medical science for cleansing, compounding, grinding and calcining medicines, especially metals and chemicals. Such imperfect, defective and crude preparations, instead of curing disease as intended, may in their train bring on new complaints and complications endangering life, like leprosy, general dropsy, consumption, rheumatism etc., (சா.அக.).

த.வ. கூடாப்பொடி.

[**Skt.** *aśuddha+ bhasman*>த.*அசுத்தபற்பம்.*]

அசுத்தப்புவனம் *aśutta-puvaṉam,* பெ.(n.) ஆதன் மெய்ப்பொருள் (ஆன்ம தத்துவம்); operation of the soul in relation to the constitutent principles in nature including elements, bodily and mental organs, faculties matter etc. (சா.அக.).

[**Skt.** *aśuddha+bhuvana*>த.*அசுத்த புவனம்.*]

அசுத்தம்[1] *aśuttam,* பெ.(n.) 1. தூய்மையின்மை; impurity, foulness. 2. தீட்டு (திவா.); ceremonial impurity, incorrectness. 3.திருத்தமின்மை; inaccuracy,incorrectness. 4. கழிமாசு (மலம்); excrement. *"சூகரங்க ளசுத்த மேவி யளைந்து" (சி.சி.பர.லோகா.மறு. 28.).*

த.வ. குப்படை.

[**Skt.** *a-śuddha*> த. *அசுத்தம்.*]

அசுத்தம்[2] *aśuttam,* பெ.(n.) பரத்தைமை (வேசி மார்க்கம்); prostitution (சா.அக.).

[**Skt.** *a-śuddha*>த. *அசுத்தம்.*]

அசுத்தமாயை *a-śutta-māyai,* பெ. (n.) தூய்மையில்லா வுலகத்திற்கு முதற் காரணமான மாயை (சி.சி. 1, 19 மறைஞா.); (*Śaivam*) impure *māyā,* the material cause of *a-śutta-p-pirapañcam,* dist. fr. *śutta māyai,* as tending to yield pain as well as pleasure.

த.வ. புரைமாயை.

[*அசுத்த(ம்) + மாயை.*]

[**Skt.** *a-śuddha*>த.*அசுத்தம்.*]

மன்→மய்→மாய் →மாயை (வேக.462).

அசுத்தவாயு *aśutta-vāyu,* பெ. (n.) தூய்மைக் கேடான காற்று; impure or contaminated air (சா.அக.).

த.வ. புரைவளி.

[**Skt.** *a-śuddha+vāyu*>த.*அசுத்தவாயு.*]

அசுத்தன் *asuttan*, பெ.(n.) உடல் (அ.) மனமாசுடையோன்; person impure in body or mind.

[Skt. a-śuddhan > த. அசுத்தன்.]

அசுத்தாத்துவா *asuttāttuvā*, பெ.(n.) **அசுத்த தத்துவம்** (ஞானா. கட்) பார்க்க; see *asutta tattuvam*.

[Skt. a-śuddh + attuvān > த. அசுத்தாத்துவா.]

அசுத்தாவி *asuttāvi*, பெ.(n.) 1. தூய்மை யில்லாத ஆவி; impure gas. 2. தூய்மை யில்லாத ஆன்மா, அதாவது பேய் (கிறித்); impure soul i.e., unclean or evil spirit, demon.

[அசுத்தம் + ஆவி.]

[Skt. aśuddha > த. அசுத்த(ம்).]

ஆவு → ஆவி.

அசுத்தி *asutti*, பெ.(n.) தூய்மையின்மை; impurity, uncleanness.

[Skt. aśuddhi > த. அசுத்தி.]

அசுத்தை *asuttai*, பெ.(n.) ஒழுக்கமற்றவள்; unchaste woman. *"அசுத்தை யென்றே யறிந்துவைத் தவளை நீத்தோம்"; (உத்தரரா. சீதை 56).*

[Skt. aśuddhā > த. அசுத்தை.]

அசுதாரணன் *asutāraṇan*, பெ.(n.) சிவபெருமான் (சிந்தா. நி. 54); *Śivan*.

[Skt. asu + dhāraṇa > த. அசுதாரணன்.]

அசுதை *asudai*, பெ.(n.) நஞ்சு (சிந்தா. நி. 50); poison.

[Skt. a-sudhā > த. அசுதை.]

அசுபக்கிரகம் *a-śuba-k-giragam*, பெ.(n.) தீக்கோள்; malevolent planet. *"சுபா சுபக் கிரகம்" (விதான. மரபி. 2, உரை).*

[Skt. a-śubha + graha > த. அசுபக்கிரகம்.]

அசுபக்கிரியை *asuba-k-kiriyai*, பெ.(n.) இறந்தோர்க்குச் செய்யும் சடங்கு; nauspicious rites or ceremonies, as for the dead. *"ஈன்றோர்க் கன்றிப் பல் லசுபக் கிரியை செயல்" (திருவானைக். கோச்செங். 59.).*

த.வ. ஈம நடப்பு.

[Skt. a-śubha + kriyā > த. அசுபக்கிரியை.]

அசுபங்கம் *asubangam*, பெ.(n.) 1. உயிர்கட் கேற்படும் பேரிடர்; danger to life. 2. அச்சந் தரும் உயிர்; fear for life (சா.அக.).

த.வ. உயிரிடர்.

[Skt. a-subhanga > த. அசுபங்கம்.]

அசுபதி *asubati*, பெ.(n.) பொன் (வை.மு); gold.

அசுபபாவனை *asubabāvaṇai*, பெ.(n.) உடலின் கழிவு, நிலையின்மை முதலியவற்றைக் கருதும் உடலியல்புகள் (மணிமே. பக். 388, கீழ்க்குறிப்பு); (Buddh.) contemplation of the disgusting nature of the body and of its impermanence.

[Skt. aśubha + bhāvanā > த. அசுப பாவனை.]

அசுபம்[1] *asubam*, பெ.(n.) அமுக்கிரா (பச். மூ); Indian winter cherry.

அசுபம்[2] *asupam*, பெ.(n.) 1. தீவினை; sin. 2. தீமை; evil.

த.வ. பாழ்வினை, அன்மங்கலம்.

[Skt. a-śubha > த. அசுபம்.]

அசுபாவக்குறி *asubāva-k-kuri* பெ.(n.) 1. இயல்புக்கு மாறான அடையாளம்; unnatural symptom. 2. இறப்புக்குறி; symptom of death, not found ordinarily in man (சா. அக.).

த.வ. அல்குறி.

[அசுபாவ(ம்) + குறி.]

[Skt. a-svabhava > த. அசுபாவ(ம்).]

குழி → குறி.

அசுபாவக்கபம் *aśubāva-kabam,* பெ. (n.) 1. குருதியாக மாறுவதற்குப் பக்குவப்படாமல் இருக்கும் கோழை; the phlegm which incapable of developing itself into blood. 2. இயற்கையாக உடம்பினுள் அமையப் பெற்ற கோழைக்கும் அதிகமாகவுள்ள கோழை; phelgm in excess of that naturally existing in the system (சா.அக.).

த.வ. அல்கோழை.

[Skt. a-śvabhava+ kapha>த. அசுபாவக் கபம்.]

அசுபாவக்காமம் *aśubāva-k-kāmam,* பெ.(n.) 1. இயல்புக்கு மாறாக ஏற்படும் விருப்பம் அல்லது காமம்; unnatural desire or lust. 2. முறைகேடான செயல்களைச் செய்யத் தூண்டும் வேட்கை (காமச்சேட்டை); sexual perversions (சா.அக.).

த.வ. பெருந்திணைக்காமம்.

[அசுபாவ(ம்) + காமம்.]

[Skt. a-śvabhava>த. அசுபாவ(ம்).]

கமம் = நிறைவு, மகிழ்வு, விருப்பம். கமம் > காமம்.

அசுபாவக்குணம் *aśubāva-k-kuṇam,* பெ.(n.) 1. இயல்புக்கு மாறாகவேற்படும் தன்மை; unnatural quality. 2. பித்து; insanity (சா.அக.).

த.வ. அல்குணம்.

[அசுபாவ(ம்) + குணம்.]

[Skt. a-śvabhava>த. அசுபாவ(ம்).]

கொள் (கொண்)→கொணம்→ குணம்.

அசுபாவச்செய்கை *aśubāva-c-ceygai,* பெ.(n.) 1. இயற்கைக்கு மாறாகச் செய்யும் செயல்கள்; perverted acts. 2. முரணிய இன்பக் களியாட்டங்கள்; (in erotic science) unnatural sexual embraces and postures in coitus, popularly known as sexual perversion. 3. இசிவு (சன்னி), மனக்கோட்டம், பித்து, முதலிய நோய்களால் அறிவிழந்து செய்யும் செய்கை; unnatural symptoms found in persons suffering from apoplexy, delirium, insanity, etc.,

த.வ. அல்செய்கை.

[அசுபாவம் + செய்கை.]

[Skt. a-śvabhava>த. அசுபாவம்.]

செய்→செய்கை.

அசுபாவதவிரத்தம் *aśubāvada-v-irattam,* பெ.(n.) 1. இயல்புத் தன்மையற்ற குருதி; blood deprived of its natural quality. 2. கெட்ட குருதி; impure blood.

த.வ. அல்குருதி.

[அசுபாவத(ம்) + அரத்தம்.]

[Skt. a-śvabhavata>த. அசுபாவத(ம்).]

அசுபாவப்பிரமேகம் *aśubāva-p-piramēgam,* பெ.(n.) தாய்தந்தையரின் உடற் கூறுபாட்டின் முரண்பாட்டாலும், மாறுபாடான பண்டங்களை உண்பதாலும், மருத்துவம் செய்யத் தவறியதாலும் முறைகேடான மருத்துவத்தாலும், உண்டாகும் சிறுநீர் நோய்கள்; urinary diseases due to other than natural causes, i.e. generally arise from contagion or congenital causes, but in the following instances they may be acquired by external causes viz. difference in the nature of the constitutions of the parent, errors in diet, neglect to take prompt remedial measures, defective treatment giving rise to complications, especially in gonorrhoea.

[Skt. a-śubhava+pra-mēha>த. அசுபாவப் பிரமேகம்.]

அசுபாவப்புணர்ச்சி *aśubāva-p-puṇarcci,* பெ. (n.) 1. இயல்புக்கு மாறாக ஆணுடனாவது பெண்ணுடனாவது கொள்ளும் எருவாய்ப்புணர்ச்சி; coitus against the order of nature with any man or woman gratifying the sexual appetite by unusual and unnatural methods. 2. கீழ்வகை விலங்குகளுடன் செய்யும் புணர்ச்சி; unnatural connection of a man or woman with the lower order of animals. 3. பெண்களின் ஓரினப்புணர்ச்சி; coitus between woman and women.

த.வ. அல்புணர்ச்சி.

[அசுபாவ(ம்)+புணர்ச்சி.]

[Skt. a-śubhava> த. அசுபாவ(ம்).]

புணர்→புணர்ச்சி.

அசுபாவம் *aśubāvam,* பெ. (n.) இயல்பல்லா நிலை; lack of own condition or state of being.

த.வ. அல்லியல்பு.

[Skt. a-śva-bhava> த. அசுபாவ(ம்).]

அசுமக்கதலி *aśuma-k-kadali,* பெ.(n.) 1. கல்வாழை; stone plantain, *Musasuperba.* 2. மலைவாழை; rock plantain, *Canma indica* (சா.அக.).

[அசும(ம்) + கதலி.]

[Skt. aśman>த. அசுமம்.]

[குதல்→(கதல்)→கதலி = சிறியது.]



அசுமகேது *aśuma-kēdu,* பெ.(n.) மலையில் விளையும் ஒரு நச்சுப்பூண்டு; a poisonous plant found on hill tops (சா.அக.).

[அசும(ம்) + கேது.]

[Skt. aśman>த. அசும(ம்).]

சே→சேது→கேது=சிவப்புவடிவான நச்சுப் பூண்டு.

அசுமசத்து *aśuma-śattu,* பெ.(n.) கல்சத்து, கல்மதம்; a gelatinous substance, secreted from rocks in summer, bitumen (சா.அக.).

த.வ. சிலாசத்து.

[அசும(ம்) + சத்து.]

[Skt. aśman>த. அசுமம்.]

சள் > (சண்) > சத்து.

அசுமசம் *aśumaśam,* பெ.(n.) 1. **அசுமசத்து** பார்க்க; see *aśumaśattu.* 2. கல்லிற் பிறந்தது; rock-born. 3. இரும்பு; iron (சா. அக.).

[Skt. aśman>த. அசுமசம்.]

அசுமசாரம் *aśuma-śāram,* பெ.(n.) 1. **அசுமசத்து** பார்க்க; see *aśuma-sattu.* 2. கல்லில் உருவாகும் எண்ணெய் முதலிய பொருள்கள்; a generic name for native hydrocarbons more or less oxgenated such as, rock-oil, petroleum etc., bitumen. 3. இரும்பின் சாரம், நீலக்கல்; iron shappire. (சா. அக.)

[அசும(ம்) + த. சாரம்.]

[Skt. aśman>த. அசும(ம்).]

சாறு → சாறம் → சாரம்.

அசுமத்தம் *aśumattam,* பெ.(n.) ஆதன் மெய்ப்பொருள்; that portion of the spirit connected with the attributes of existence; the principle of vitality. (சா. அக.)

அசுமந்தகம் *aśumandagam,* பெ.(n.) 1. நாணற் புல்; thatch grass. 2. தருப்பைப் புல்; sacrifical grass.

[Skt. aśmanda > த. அசுமந்தகம்.]

அசுமந்தம்[1] *aśumandam,* பெ.(n.) இறப்பு; death.

[Skt. aśu+anta > த. அசுமந்தம்.]

அசுமந்தம்[2] *aśumandam,* பெ.(n.) அடுப்பு; oven (சா. அக.).

[Skt. aśmanta > த. அசுமந்தம்.]

அசுமபித்தம் *aśuma-pittam,* பெ.(n.) சிறுநீர்ப் பையில் உண்டாகும் கற்களைக் கரைக்குந் தன்மையுள்ளதொரு பூண்டு; a plant capable of dissolving the stone in the bladder *coleus sentellarioides* (சா.அக.).

[அசும(ம்) + பித்தம்.]

[Skt. aśma>த. அசும(ம்).]

பித்து→ பித்தம்.

அசுமபுட்பம் *aśuma-puṭpam,* பெ.(n.) நறும்புகை (சாம்பிராணி); benzoin (சா.அக.).

அசுமம் *aśumam,* பெ.(n.) 1. தீத்தட்டிக்கல், சக்கிமுக்கிக்கல்; a siliceous concretion usually transparent, flint. 2. கல்; stone. 3. இரும்பு; iron. 4. முகில்; cloud (சா.அக.).

[Skt. aśman > த. அசுமம்.]

அசுமரவரம் *aśumaravaram,* பெ. (n.) 1. வெண்மருது; white murdah, pentiptera arjuna alias *terminaliarjuna.* 2. கல்லடைப்புக்குக் கொடுக்கும் ஒரு மருந்து; a medicine having the property of breaking up stone in the bladder, lithontripte (சா.அக.).



அசுமரி *aśumari,* பெ.(n.) கல்லடைப்பு (Med.); calculus.

[Skt. aśmarī > த. அசுமரி.]

அசுமரிக்கினம் *aśumarikkiṉam,* பெ.(n.) மாவிலிங்கம்; roundberried liṅgam tree, *crataevaroxburghi,* used as lithontriptic i.e., an agent that dissolves stone (சா.அக.).

[Skt. aśmarighna> த. அசுமரிக்கினம்.]

அசுமரிரோகம் *aśumari-rōgam,* பெ.(n.) நீரடைப்பு அல்லது கல்லடைப்பு நோய், சிறுநீரில் கற்கள் உருவாகித் திரண்டு தீர்த்தாரை. ஊத்தாம்பிள்ளை, குண்டிக்காய் முதலிய உறுப்புக்களை அடைக்கும் சிறுநீர் நோய்; a urinary disease.

[Skt. aśmarī + rōga> த. அசுமரிரோகம்]

அசுமலோட்டிரநியாயம் *aśumalōṭṭira niyāyam,* பெ.(n.) ஒன்றோடு ஒன்றைச் சீர்தூக்கி, அவற்றின் சிறுமை பெருமை கற்பிக்கும் நெறி; maxim of the stone and clod used to denote relative superiority and inferiority as clod is hard compared with cotton but soft compared with stone.

த.வ. சீர்நோக்குமுறை.

[Skt. aśman + lōsta + nyāya>த. அசுமலோட்டிரநியாயம்.]

அசுமன் *aśumaṉ,* பெ.(n.) 1. அருமணியு ளொன்று; a kind of precious stone. 3. இடி; thunder bolt. 3. முகில்; cloud. 4. இரும்பு; iron. (சா. அக.)

[Skt. aśman > த. அசுமன்.]

அசுமாத்தம் *aśumāttam,* பெ.(n.) சந்தடி; noise. *'வீட்டில் ஆள் இருப்பதற்கான அசுமாத்தமே இல்லை'.*

த.வ. ஆள்அரவம்.

அசுமாரோபணம் *aśumārōbaṇam,* பெ.(n.) அம்மி மிதிக்கை (சீவக. 2464, உரை.); ceremony of the bridegroom's placing the bride's right foot on the grinding stone.

த.வ. கல்மிதி.

[Skt. aśman + ārōpaṇa> த. அசுமாரோபணம்.]

அசுமானகிரி *aśumāṉakiri,* பெ.(n.) மேற்கட்டி; canopy, tester.

[U. āsmāngirī > த. அசுமானகிரி.]

அசுமோத்தம் *aśumōttam,* பெ.(n.) 1. **அசுமசத்து** பார்க்க; see *aśuma-śattu.* 2. கல்லினின்று உண்டானது; made of stone (சா.அக.).

அசுயை *aśuyai,* பெ.(n.) **அசூயை** பார்க்க; see *aśūyai.*

[Skt. asūyā > த. அசுயை.]

அசுரசம் *aśuraśam,* பெ.(n.) ஒரு பூடு; a plant, *basilicum* (சா. அக.).

[Skt. asurasa > த. அசுரசம்.]

அசுரபி *aśurabi,* பெ.(n.) முடைநாற்றம்; a bad smell or odour (சா.அக.).

[Skt. asurabhi > த. அசுரபி.]

அசுராவம் *aśurāvam,* பெ.(n.) வெண்கலம்; bell-metal (சா.அக.).

அசுருத்திரரோகம் *aśuruttira-rōgam,* பெ.(n.) **அசிருத்தரரோகம்** பார்க்க; see *aśiruttara-rōgam* (சா.அக.).

த.வ. பெரும்பாடு.

[Skt. aśurudhra + rōga> த. அசுருத்திரரோகம்.]

அசுருநாலி *aśuru-nāḷi,* பெ.(n.) கண்ணீர்த் தாரையிற் காணும் ஒரு புண்; a sinuous ulcer opening in the passage of tears in the eye, *fistula lacrimalis* (சா.அக.).

[Skt. aśrunāḷī > த. அசுருநாலி.]

அசுருநேத்திரம் *aśuru-nēttiram,* பெ.(n.) நீர்வடியும் கண்; eye with tears (சா.அக.).

த.வ. நீர்க்கண்.

[Skt. aśuru + nētra > த. அசுருநேத்திரம்.]

அசுருமயம் *aśuru-mayam,* பெ.(n.) கண்ணீர்ப் பெருக்கு; fullness of tears (சா.அக.).

[Skt. aśru + maya > த. அசுருமயம்.]

அசுருவதனம் *aśuru-vadaṉam,* பெ.(n.) அழுமூஞ்சி; tear-face (சா.அக.).

[Skt. aśuru + vadana> த. அசுருவதனம்.]

அசுருவென்பு *aśuru-v-eṉbu,* பெ.(n.) கண் குழியில் பதிந்திருக்கும் மென்மையான சிறியதோர் எலும்பு; a very small soft bone resembling the finger-nail, situated at the anterior and upper part of the orbit, Lachrymal bone (சா.அக.).

த.வ. பிசிர் எலும்பு.

[அசுரு+என்பு.]

[Skt. aśru > த. அசுரு.]

[எல்→என்→என்பு.]

அசுவக்கிழங்கு *aśuva-k-kiḻaṅgu,* பெ.(n.) அமுக்கிராங் கிழங்கு; horse root, *withania somnifera* alias *physalis flexuosa* (சா. அக.).

[அசுவம் + கிழங்கு.]

[Skt. aśva> த. அசுவம்.]

கீழ் → கிழக்கு → கிழங்கு.

அசுவக்கினம் *aśuva-k-kiṉam,* பெ.(n.) அலரி; horse bane or horse killer; Indian oleander, nerium odorum (சா.அக.).

[Skt. aśvaghna>த. அசுவக்கினம்.]

அசுவக்குரம் *aśuva-k-kuram,* பெ.(n.) 1. வெள்ளைக் காக்கணம்; white-flowered mussel-shell creeper, *clitorea ternatea albiffora.* 2. குதிரைக்குளம்படி; horse's hoof plant. 3. ஒரு நறுமணப் பொருள் (மீனம்பர்); a perfume (apparently ambergris which is a concretion of the indigestible portion of the cuttle-fish) (சா.அக.).

[அசுவம்+குரம்.]

[Skt. aśva>த. அசுவம்.]

குல்→குர→ குரம்→ **Skt.** *khura.*

அசுவகதி *aśuva-gadi*, பெ.(n.) 1. குதிரை நடை; speed of horse. 2. குதிரை நடைவகைகள்; paces of horse.

த.வ. குதிரைநடை

[அசுவ(ம்) + கதி.]

[Skt. aśva>த. அசுவம்.]

கது→கதி>Skt. gati

அசுவகந்தாதி *aśuva-gandādi*, பெ.(n.) அமுக்கிராங் கிழங்குடன் மற்ற கடைச் சரக்குகளையும் கொண்டு செய்யப் பெறும் ஒரு எண்ணெய் (தைலம்); a medicated oil prepared with the horse-root as a chief ingredient and some other bazaar drugs (சா. அக.).

[அசுவகந்தம் + ஆதி.]

[Skt. aśvagandha> த. அசுவகந்தம்.]

அகுதி>ஆதி > Skt. ādi

அசுவகந்தாதிச்சூரணம் *aśuva-gandādi-c-cūraṇam*, பெ.(n.) அமுக்கிராங் கிழங்கை முதன்மையாகக் கொண்டு, பிற கடைச் சரக்குகளையும் உடன் சேர்த்துச் செய்யப் பெறும் பொடி (சூரணம்); powder of horse-root mixed with the powder of some other minor bazaar drugs (சா.அக.).

[அசுவகந்தம் + ஆதி+சூரணம்.]

[Skt. cūrṇa> த. சூரணம்.]

அசுவகந்தி *aśuvagandi*, பெ.(n.) அமுக்கிரா (மலை.); Indian winter cherry, species of withania.

[Skt. aśva-gandhā > த. அசுவகந்தி.]

அசுவகந்திச்சூரணம் *aśuva-gandi-c-cūraṇam*, பெ.(n.) அமுக்கிராக் கிழங்குடன், திரிகடுகு, ஏலம், கிராம்பு, சிறுநாவற்பூ முதலியவற்றைக் கலந்து பொடி செய்து சருக்கரை சேர்த்து, வீக்கம், காய்ச்சல், வாயிலெடுத்தல், இருமல், மந்தப் பசி முதலிய நோய்களுக்குப் பயன்படுத்தும் மருந்துக் கூட்டு; a mixture of the powdered drugs such as horse-root, dry ginger, pepper, long-pepper, caradamon, clove, cassia buds, and sugar, prescribed for swelling in the body, fever, vomiting, cough, dull appetite etc.

த.வ. அமுக்கிராப்பொடி.

அசுவகந்தித்தைலம் *aśuva-gandi-t-tailam*, பெ.(n.) அமுக்கிராங் கிழங்குடன் சில கடைச் சரக்குகளையும் சேர்த்து நல்லெண்ணெயில் காய்ச்சி வடித்துத் தலைமுழுகப் பயன்படுத்தும் ஒரு நெய்மம்; a medicated oil prepared by boiling horse-root and some other bazaar durgs in gingelly oil and then filtered, used for anointing (சா.அக.).

[அசுவகந்தி+தைலம்.]

[Skt. aśva-gandha+tila> த. அசுகந்தித்தைலம்.]

அசுவகந்தை *aśuva-gandai*, பெ.(n.) **அசுவகந்தி** பார்க்க; see *aśuva-gandi* (சா.அக.).

[Skt. aśva - gandhā>த.அசுவகந்தை.]

அசுவக்கர்ணகம் *aśuva-k-karṇagam*, பெ.(n.) **அசுவகர்ணம்** பார்க்க; see *aśuva-karṇam* (சா.அக.).

[அசுவ(ம்)+கர்ணகம்.]

[Skt. aśva> த. அசுவம்.]

[கன்→கன்னம் > Skt. karṇa>த.கர்ணகம்]

அசுவக்கர்ணம் *aśuva-k-karṇam*, பெ.(n.) 1. குதிரைக் காது; a medicinal plant, the leaves of which resemble the ears of a horse, horse ear three-Indian-dammer, *Shorea robusta* alias *vatica robusta*. 2. குதிரைக் காதைப் போன்ற எலும்பு முறிவு; particular fracture of the bone (resembling the ear of a horse) (சா.அக.).

த.வ. குங்கிலிய மரம், குதிரைச்செவி பூடு.

[அசுவ(ம்) + கர்ணம்.]

கன்→ கன்னம்> *Skt. karṇa.*

அசுவக்கிரந்தம் *aśuva-k-kirandam,* பெ.(n.) **அசுவசாத்திரம்** பார்க்க; see *aśuva-śāttiram* (சா.அக.).

அசுவக்கெந்தி *aśuva-k-gendi,* பெ.(n.) **அசுவகந்தி** பார்க்க; see *aśuva-kandi* (சா.அக.).

அசுவச்சட்டிரம் *aśuva-c-caṭṭiram,* பெ.(n.) நெருஞ்சில்; a thorny shurb, small caltrope-tribulus terrestris (சா.அக.).

[Skt. aśva-danshṭra > த. அசுவசட்டிரம்.]

அசுவசாகுடம் *aśuva-śāguḍam,* பெ.(n.) ஒரு வகைப் பூடு; an unknown plant (சா.அக.).

அசுவசாத்திரம் *aśuva-śāttiram,* பெ.(n.) குதிரையியல்பு கூறும் நூல்; hippology.

த.வ. குதிரைநூல், பரிநூல்.

[Skt. aśva + śāstra>த. அசுவசாத்திரம்]

அசுவசிகிச்சை *aśuva-śigiccai,* பெ.(n.) குதிரை மருத்துவம்; the art of science of healing or treating the disease of horses. (சா. அக.)

[Skt. aśva + cikitsā>த. அசுவசிகிச்சை.]

அசுவத்தம் *aśuvattam,* பெ.(n.) 1. அரசமரம் (மூ.அ.); holy tree-ficus religiosa. 2. அத்தி மரம்; fig tree, *ficus racemosa* alias *f. glomerata.*

[Skt. aśvattha > த. அசுவத்தம்.]

அசுவத்தமேதம் *aśuvatta-mēdam,* பெ.(n.) வெள்ளால், மகப்பேறு வழங்கி; willow fig tree, *Ficus benjamina* (சா.அக.).

[Skt. aśvat+habheda > த. அசுவத்தமேதம்.]

அசுவத்தவிருட்சம் *aśuvatta-viruṭcam,* பெ.(n.) **அசுவத்தம்** பார்க்க; see *aśuvattam.* (சா. அக.)

[Skt. aśvattha + vṛkṣa>த. அசுவத்த விருட்சம்.]

அசுவத்தவிவாகம் *aśuvatta-vivāgam,* பெ.(n.)பிள்ளையில்லாதவன் பிள்ளைப் பேறடையும் பொருட்டு, அரசமரத்தை நட்டு மகனாகக் கருதி வளர்த்துப்பின் அவ்வரச மரத்திற்கு வேம்பை மனைவியாக்கிப் புரியும் திருமணச் சடங்கு (கொ.வ.); rites of marriage performed with a pipal tree as bridegeroom and a margosa as bride, the pipal having been planted by a sonless person with a view to begetting a son and having been reared by him as his first son.

த.வ. வேம்பரசு மணம், அரசமரத்திருமணம்

[Skt.aśvattha+vivāha>த.அசுவத்த விவாகம்.]

அசுவத்தாதி *aśuvattādi,* பெ.(n.) கருவழுதலை; a black species of brinjal, *solanum melangena* (சா.அக.).

அசுவத்தை *aśuvattai,* பெ.(n.) 1. நெட்டிலிங்க மரம்; Indian mast tree, *Polyathia longifolia.* 2. நெடுநாரை; Wynad coffee cherry mutmeg, *Polyathia coffecoides.* 3. பூப்பருத்தி; flowering cotton, *Thespesia populneoides.*

[Skt. aśvattha > த. அசுவத்தை.]

அசுவதட்டிரம் *aśuvataṭṭiram,* பெ.(n.) நெருஞ்சில் (மலை.); tribulus plant.

[Skt. aśva-damṣṭra > த. அசுவதட்டிரம்.]

அசுவதரம் *aśuvadaram,* பெ.(n.) கோவேறு கழுதை; the male off spring of a he-ass and a mare or a horse and a she-ass; the male of a mule (சா.அக.).

[Skt. aśvatara > த. அசுவதரம்.]



அசுவதரி *aśuvadari,* பெ.(n.) பெண்கோவேறு கழுதை; the female offspring of a mule (சா. அக.).

[Skt. aśvatarī > த. அசுவதரி.]

அசுவதாட்டியா—தல் *aśuvadātti-y-ā-,* 5, செ.கு.வி. (v.i.) பேச்சு முதலியவற்றில் தங்குதடையிலவாதல்; to be fluent in speaking. *"அவன் அசுவதாட்டியாய்ப் பேசுகிறான்"* (வின்.).

[அசுவம்+தாட்டி+ஆ–.]

[Skt. dardhya>த. தாட்டி.]

அசுவதி *aśuvadi,* பெ.(n.) இரலை (அசுவதி) என்னும் விண்மீன் (தணிகை. திருநகர. 31.); the first *naksatram.*

[Skt. aśvinī > த. அசுவதி.]

அசுவதீபம் *aśuvadībam,* பெ.(n.) கோயில் வழிபாட்டு விளக்கு வகை (பரத. ஒழிபி. 42.); a kind of temple light, used in workship.

[அசுவம்+தீபம்.]
[Skt. aśva>த. அசுவம்.]
தீ→ தீவம்> **Skt.** dīpa> த. தீபம்.



அசுவந்தம்[1] *aśuvandam,* பெ.(n.) இறப்பு (யாழ் அக.); death.

[Skt. aśu+anta> த. அசுவந்தம்.]

அசுவந்தம்[2] *aśuvandam,* பெ.(n.) 1. வயல்; field. 2. அடுப்பு; oven.

[Skt. aśmanta > த. அசுவந்தம்.]

அசுவநோய்நூல் *aśuvanōy-nūl,* பெ.(n.) குதிரை நோய்களைப் பற்றி விளக்கும் நூல்; a treatise in disease of horse, *hippopathology* (சா.அக.).

த.வ. பரிநோய்நூல்.

[அசுவ(ம்) + நோய்நூல்.]

[Skt. aśva> த. அசுவ(ம்).]

அசுவபதி *aśuvapadi,* பெ.(n.) விசயநகர அரசர்கள் கொண்டபட்டப்பெயர்களுளொன்று (I.M.p. Md. 81.); a title of Vijayanagar kings.

[Skt.aśva+pati>த. அசுவ + பதி.]

அசுவபரி *aśuva-pari,* பெ.(ே.) ஒரு பூச்செடி (வின்.); oleander, as horse-killer.

[Skt. aśva-māra > த. அசுவபரி.]

அசுவபரீட்சை *aśuva-parītcai,* பெ.(n.) குதிரை யிலக்கணமறியும் கலை; scientific study of the horse, hippology.

[Skt. aśva + parīkṣā>த. அசுவபரீட்சை.]

அசுவபலம் *aśuva-palam,* பெ.(n.) 1. அமுக்கிராங் கிழங்கு; horse root, *Withania somnifera.* 2. ஒருவகைக் கறி; a kind of curry-*Trigonella foenum graecum* (சா.அக.).

[அசுவ+பலம்.]

[Skt. aśva > த. அசுவம்.]

பழு→பழம்> **Skt.** *phala>* த. *பலம்.*

அசுவபலை *aśuvapalai,* பெ.(n.) நாரி, செந்நிற இலையுடைய செடி; a plant known as *"nārī"* with red leaves (சா.அக.).

அசுவபுச்சகம் *aśuva-puccagam,* பெ.(n.) ஒரு பூடு; a plant, *Glucine debilis* (சா.அக.).

[Skt. aśvapucchaka > த. அசுவபுச்சகம்.]

அசுவம்[1] *aśuvam,* பெ.(n.) தூய்மையற்றது; that which is unclean. *"அவைதா நிலையாதுயரா மசுவம்" (நீலகேசி, 493.).*

[Skt. a-śubha > த. அசுவம்.]

அசுவம்² *aśuvam,* பெ.(n.) 1. குதிரை; horse. 2. குதிரைப்பல் நஞ்சு (பாடாணம்) (மூ.அ.); a mineral poison.

அசுவமியம் *aśuvamiyam,* பெ.(n.) ஒரு வகை நஞ்சு (வை. மூ.); a mineral poison.

அசுவமேதப்பிரதக்கணம் *aśuva-mēda-p-piradakkaṇam,* பெ.(n.) திருவிடைமருதூரில் வெளிச்சுற்றை வலம்வருகை (கோபாலகிருஷ். 8.); circumambulation of the outer court-yard of the temple at *Tiruviḍai-marudūr.*

[Skt. aśva-medha+pradakṣiṇa>த. அசுவ மேதப்பிரதக்கணம்.]

அசுவமேதம் *aśuvamēdam,* பெ.(n.) ஒரு வேள்வி; horse sacrifice.

த.வ. குதிரைவேள்வி.

[Skt. aśva + mēdha>த. அசுவமேதம்.]

அசுவமேதயாகம் *aśuvamēdayāgam,* பெ.(n.) பேரரசர் தம் அரசாணையைப் பிறரும் ஏற்கும் முறையில் பட்டத்துக் குதிரையை அண்டை நாடுகளுக்கு அனுப்பி, அதனைப் பிடிக்க வந்தோரை வென்று, அதனைக் கொண்டுவந்து, காவு கொடுத்துச் செய்யும் வேள்வி; a ceremonial sacrifice of the invincible horse brought back after being sent to other kingdoms by the emperor who by means of this asserted his sovereign power.

த.வ. பரிவேள்வி.

[Skt. aśva + mēdha+yāga>த.அசுவமேத யாகம்.]

அசுவர்த்தோ *aśuvar-t-tō,* பெ.(n.) அரசமரம்; holy peepul tree, *ficus religiosa* (சா.அக.).

அசுவரலி *aśuvarali,* பெ.(n.) **அசுவலரி** பார்க்க; see *aśuvalari* (சா.அக.).

அசுவரோகம் *aśuva-rōgam,* பெ.(n.) குதிரை நோய்; a horse disease (சா.அக.).

[Skt. aśva + rōga > த. அசுவரோகம்.]

அசுவலரி *aśuvalari,* பெ.(n.) குதிரையைக் கொல்வது, அலரிச் செடி; horse-killer, *Nerium odorum alias N.rubrum* (சா.அக.).

[அசுவ+அலரி.]

[Skt. aśva > த. அசுவம்.]

[அலர்→அலரி.]

அசுவவலக்கால் *aśuvavalakkāl,* பெ.(n.) வாலுளுவை; spindle tree, *celastrus paniculata* alias *vernonia Anthelmintica* (சா.அக.).

அசுவவாதம் *aśuva-vādam,* பெ.(n.) குதிரைக் குட்டியின் பாய்ச்சல் போல் உடம்பு முழுவதும் குலுங்கும்படிச் செய்வதும், அண்டத்தை வீங்கச் செய்வதும், விதைப்பையிலும், அடிவயிற்றிலும் மிகையாக வலி யுண்டாக்குவதுமான ஓர் ஊதை (வாத) நோய்; a nervous disease a functional disorder of the nervous system marked by a trembling skin to the gambol of a foal, of the entire body, swelling of the scrotum and unbearable pain in the genital and the abdomen (சா.அக.).

[Skt. āśva+vāta > த. அசுவவாதம்.]

அசுவவாரம் *aśuva-vāram,* பெ.(n.) **அசுவவாலம்** பார்க்க; see *aśuva-vālam* (சா.அக.).

[Skt. aśva + vāra>த. அசுவவாரம்.]

அசுவவாரியர் *aśuva-vāriyar,* பெ.(n.) குதிரை செலுத்துவோர் (சிலப். 5, 54, உரை.); riders on horseback, horsemen.

த.வ. குதிரை வீரர்.

[அசுவ(ம்) + வாரியர்.]

[Skt. aśva>த. அசுவ(ம்).]

வாரி→வாரியர்→ வாரி > **Skt.** vara.

அசுவவாலம் *aśuva-vālam,* பெ.(n.) பேய்க் கரும்பு; wild sugar-cane-*saccharam spontaneum* (சா.அக.).

[அசுவ + வாலம்.]

[Skt. aśva> த. அசுவம்.]

வால்→வாலம் > **Skt.** vāla.

அசுவவைத்தியம் *aśuva-vaittiyam,* பெ.(n.) **அசுவசிகிச்சை** பார்க்க; see *aśuva-śigiccai* (சா.அக.).

த.வ. பரிமருத்துவம்.

[Skt. aśva+ vaidya> த. அசுவவைத்தியம்.]

அசுவன் *aśuvaṉ,* பெ.(n.) **அசமதாகம்** பார்க்க; see *aśama-tāgam* (சா.அக.).

[Skt. aśva > த. அசுவன்.]

அசுவனியம் *aśuvaṉiyam,* பெ.(n.) **அசுவநோய் நூல்** பார்க்க; see *aśuvanōy-nūl* (சா.அக.).

த.வ. குதிரைநோய்நூல்.

அசுவாசம் *aśuvāsam,* பெ.(n.) 1. மூச்சின்மை; partial or complete suspension of breath. 2. மூச்சுவிட முடியாமை; difficult or forced respiration, *Apnoca.*

[Skt. a-śvāsa > த. அசுவாசம்.]

அசுவாதிகன் *aśuvādigaṉ,* பெ.(n.) குதிரை மருத்துவன்; one skilled in the treatment of horses (சா.அக.).

[Skt. aśva > த. அசுவம்.]

அசுவாதிசூரணம் *aśuvādiśūraṇam,* பெ.(n.) **அசுவகந்தாதிச்சூரணம்** பார்க்க; see *aśuva-kandādi-c-cūraṇam* (சா.அக.).

[Skt. aśva + śūrṇa> த. அசுவாதிசூரணம்.]

அசுவாபரி *aśuvā-pari,* பெ.(n.) **அசுவபரி** பார்க்க; see *aśuva-pari* (சா.அக.).

அசுவாபாணிதம் *aśuvā-pāṇidam,* பெ.(n.) கரு(ப்பு) மருதோன்றி; a black variety of henna plant, *barlerea cristata* (சா.அக.).

அசுவாமணக்கு *aśuvāmaṇakku,* பெ.(n.) சிறுபீளை; wolly caper, *Illecebrum lanatum* alias *Achuranthes lanata*, formerly garland of this plant was worn by soldiers when storm of fort (சா.அக.).

அசுவாரசியம் *aśuvārasiyam,* பெ.(n.) 1. இனிமையற்றது; that which is disagreeable. 2. ஈடுபாடு இல்லாமை; lack of interest or enthusiasm. *'அவன் சொல்வதை அசுவாரசியமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்' (உ.வ.).*

த.வ. ஏற்பின்மை.

[Skt. a-svārasya > த. அசுவாரசியம்.]

அசுவாரி *aśuvāri,* பெ.(n.) எருமை; a buffalo, especially the female (சா.அக.).



அசுவினி *aśuviṉi,* பெ.(n.) இரலை விண்மீன்; the first *naksatra.*

[Skt. aśvinī > த. அசுவினி.]

அசுவினிகுமாரரசம் *aśuviṉi-kumāra-rasam,* பெ.(n.) ஆயுள்வேத முறைப்படி அணியம் செய்து, தோல்தொடர்பிலான நோய்கட்குக் கொடுக்கப்படும், ஒரு வகை மாத்திரை; a kind of pill prepared according to the principles of ayurveda and prescribed for venereal complaints (சா.அக.).

[Skt. aśvini-kumāra-rasa> த. அசுவினி குமாரரசம்.]

அசுவினிதேவர் *aśuviṉidēvar,* பெ.(n.) வானவர் மருத்துவர்; twin *vēdic* gods who are physicians of heaven, as twin horsemen.

[அசுவினி + தேவர்]

[Skt. *a-švin > த. அசுவினி.]*

தேய்வு→தேவு→தேவன் >**Skt.** *dēva*

அசுவேதம் *ašuvēdam,* பெ.(n.) வியர்வை யின்மை; suppressed perspiration (சா.அக.).

அசுனம் *ašunam,* பெ.(n.) வெள்ளுள்ளி (பரி.அக.); garlic.

த.வ. பூண்டு.

[Skt. *lašuna>த. அசுனம்.]*

அசுனி *ašuni,* பெ.(n.) அனிச்சை மரம்; tree, white-flowered justice wort, *Rhinacanthus communis* (சா.அக.).

அசூசம் *ašūšam,* பெ.(n.) 1. மாதவிலக்கு; menstruation. 2. மாசு; uncleanliness in general (சா.அக.).

த.வ. கொளை, கொணக்கு.

[Skt. *ašusa>த. அசூசம்.]*

அசூசி *ašūši,* பெ.(n.) **அசூசம்** பார்க்க; see *ašūšam* (சா.அக.).

த.வ. தூய்மைக்கேடு, மாசு.

[Skt. *a-šuci>த. அசூசி.]*

அசூசை *ašūšai,* பெ.(n.) பொறாமை (இ.வ.); envy.

[Skt. *asūyā > த. அசூசை.]*

அசூதி[1] *ašūdi,* பெ.(n.) மலடி (வின்.); sterile woman.

[Skt. *a-sūti > த. அசூதி.]*

அசூதி[2] *ašūdi,* பெ.(n.) 1. பெறாமை; non-production. 2. அம்மை; small pox, *Variola* (சா.அக.).

[Skt. *a-sūti>த. அசூதி.]*

அசூதிகம் *ašūdigam,* பெ.(n.) மலடு; barreness (as in a woman) (சா.அக.).

[Skt. *a-sūtikā>த. அசூதிகம்.]*

அசூதிசரதி *ašūdišaradi,* பெ.(n.) மலடி; a woman who grows old without having brought forth a child; a barren woman (சா. அக.).

[Skt. *a-sūti-carati>த. அசூதிசரதி.]*

அசூயாபரன் *ašūyābaran,* பெ.(n.) பொறாமை கொண்டவன்; envious man, jealous person.

[Skt. *asūyā+para>த. அசூயாபரன்.]*

அசூயை *ašūyai,* பெ.(n.) பொறாமை (மச்சபு. மன்வந்தர 22); envy, intolerance, jealousy.

த.வ. அழுக்காறு.

[Skt. *asūya>த. அசூயை.]*

அசூர் *ašūr,* பெ.(n.) உடனிருக்கை (சமூகம்) (P.T.L.); presence, as of a person in authority.

த.வ. குமுகம்.

[U. *huzūr>த. அசூர்.]*

அசூர்வாசலட்டவணை *ašūrvāšalaṭṭa-vaṇai,* பெ.(n.) அரண்மனைக் கணக்கு; palace accounts. *"அசூர் வாசலட்டவணையிற் பிரவேசச் செலவெழுதி" (சரவண. பணவிடு. 146.).*

அசூரி *ašūri,* பெ.(n.) பெரிய அம்மைநோய்; small-pox.

[Skt. *masūri > த. அசூரி.]*

அசேசம் *a-šēšam,* பெ.(n.) எல்லாம்; all, everything, as without consciousness. *"அசேஷகோத்திரத்து அசேஷசூத்திரத்தில்" (S.I.I.i, 84.).*

[Skt. *a-šeṣa > த. அசேசம்.]*

அசேதனம் *a-šēdanam,* பெ.(n.) அறிவில்லாதது (சித். சிகா. 21, 2); that which is insensible, without consiciousness.

த.வ. அறிவிலி.

[Skt. *a-cētana > த. அசேதனம்.]*

அசேதனி *ašēdani,* பெ.(n.) மயக்கத்தை விளைவிக்கும் பொருள்; a substance that produces loss of sense or insensibility, *Anesthetic* (சா.அக.).

[Skt.*a-cētana>த. அசேதனி.]*

அசேவகவாதம் *aśēvagavādam,* பெ.(n.) உடலிலுண்டாம் ஊதைப்பிடிப்பு நோய்வகை (R.); a kind of ventrosity in the body.

[Skt.a-sēvaka+vāta>த. அசேவகவாதம்.]

அசைகை *aśaigai,* பெ.(n.) பொறாமை (வின்.); envy.

[Skt. aśūyā > த. அசைகை.]

அசைதன்னியம் *aśaidanniyam,* பெ.(n.) 1. அறியாமை; ignorance. 2. அறிவுக்குருடு; blindness owing to want of wisdom. 3. மெய்ப்பொருளறிவின்மை; absense or want of philosophical knowledge or wisdom (சா.அக.).

[Skt. a-caitanya > த. அசைதன்னியம்.]

அசைவம் *aśaivam,* பெ.(n.) இறைச்சி, மீன் முதலியவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளும் முறை; (in food) meat and fish, the practice of eating meat and fish. *'திருமணத்திற்குப் பின் அசைவ உணவேற்கப் பழகிக் கொண்டான்' (உ.வ.).*

த.வ. புலவுண்டி, புலவுணா, புலவூண், புல்லுணவம், புலவுணவம்.

[Skt. a-śaiva > த. அசைவம்]

சிவ→சிவம் > **Skt.** śaiva.

அசோகம்[1] *aśōgam,* பெ.(n.) 1. இதளியம் (பாதரசம்); mercury. 2. திமிசுமரம்; east Indian kino.

[Skt. aśōkā > த. அசோகம்.]

அசோகம்[2] *asōgam,* பெ.(n.) கவலையின்மை (தஞ்சைவா. 11.); freedom from sorrow.

[Skt. aśōkā > த. அசோகம்.]

அசோகம்[3] *aśōgam,* பெ.(n.) 1. அகத்தி; Agastya's plant, *Sesbania grandiflora* alias *coronila Grandiflora.* 2. மருதமரம்; Aryuna tree; winged myrobalan, *Terminalla alata* alias *Tomentosa.*

[Skt. aśōka > த. அசோகம்.]

அசோகரோகினி *aśōga-rōgini,* பெ.(n.) கடுகுரோகினி; bear's foot; black *Hellibore Helleborus niger* alias *picrorrhiza kurroa.* *'நேபாளத்தில் விளையும் மருந்துப்பூடு'* (சா.அக.).

அசோகவனம் *aśōga-vanam,* பெ.(n.) இராவணனுடைய பூந்தோட்டம் (இராமநா. சுந். 6.); *Rāvaṇa's* pleasure garden.

[அசோக(ம்)+வனம்.]

[Skt. aśōka>த. அசோகம்.]

அசோகவனிகை *aśōga-vanigai,* பெ.(n.) 1. **அசோகவனம்** பார்க்க; see *aśōga-vanam.* 2. அசோகமரச்சோலை; a grove of a asoka tree.

[அசோக(ம்)+வனிகை.]

[Skt. aśōka>த. அசோகம்.]

வனம் > **Skt.** vana > vanikā> த. வனிகை.

அசோகவாசவாடை *aśōga-vāśa-vāḍai,* பெ.(n.) புனுகு; a perfume from the anal glands of the civer cats-civet (சா.அக.).

அசோகன் *aśōgan,* பெ.(n.) 1. அருகன்; Arhat, to whom the *aśōka* tree is sacred. 2. மோரிய வரசருளொருவன்; name of the Maurya emperor who issued the edicts anjoining the principles and practice of buddhism 272-231 B.C.

அசோகாட்டமி *aśōkāṭṭami,* பெ.(n.) ஒரு நோன்புநாள்; eighth tithi of the bright fortnight of caittiram, as the day for drinking an infusion of three *aśōka* buds with a view to drive away sorrow.

[Skt. aśōka+aṣṭami>த. அசோகாட்டமி.]

அசோகாதிதம் *aśōgādidam,* பெ.(n.) சிவதுளசி; a kind of basil sacred to *Śivan* (சா.அக.).

அசோகி *aśōgi,* பெ.(n.) சீவக மூலி; a kind of plant; Indian Coecinea cephalandra indica (சா.அக.).

அசோகு[1] *asōgu,* பெ.(n.) நலம் (பொதி. நி.); health, ease.

[Skt. a-sōka > த. அசோகு.]

அசோகு[2] *asōgu,* பெ.(n.) மரவகை; Indian mast-tree.

த.வ. செயாலமரம்.

[Skt. asōka > த. அசோகு.]

அசோகை *asōgai,* பெ.(n.) சவுரிப்பூண்டு; a crooper bearing red fruits (சா.அக.).

அசோடகத்தி *asōḍagatti,* பெ.(n.) செவ்வகத்தி; a red species of agathi tree, *coronila coccinea* (சா.அக.).

அசோதை *asōdai,* பெ.(n.) கண்ணபெருமானை வளர்த்த தாய் (திவ். பெரியாழ். 1, 2, 1.); *Kṛṣṇa's* foster mother.

[Skt. yasōdā > த. அசோதை.]

அசோரிதம் *asōridam,* பெ.(n.) வால்மிளகு; tail pepper, *Cubeb* (சா.அக.).

அசோலம் *asōlam,* பெ.(n.) தேற்றாமரம்; water-clearing nut tree, *Strychnos Potatoram* (சா.அக.).

அசோனம் *asōṉam,* பெ.(n.) **அசோணம்** பார்க்க; see *asōṇam* (சா.அக.).

அசௌக்கியம் *a-saukkiyam,* பெ.(n.) நலக்குறை; illness, sickness.

த.வ. நலிவு, நலக்கேடு.

[Skt. a-saukhya > த. அசௌக்கியம்.]

அசௌகரியம்[1] *a-saugariyam,* பெ.(n.) 1. வாய்ப் பில்லாமை; lack of opportunity. 2. நலமின்மை (இ.வ.); want of comfort, unhealthiness.

த.வ. நலிவு.

[Skt. a-saukhya > த. அசௌக்கியம்.]

அசௌகரியம்[2] *asaugariyam,* பெ.(n.) தொல்லை; disadvantage. *'வீட்டுக்கு மூத்த பிள்ளையாக இருப்பதில், சௌகரியங்களும் உண்டு, அசௌகரியங்களும் உண்டு'.*

த.வ. நலி, ஏந்தின்மை.

[Skt. a-saukarya > த. அசௌகரியம்.]

அஞ்சநம் *añjanam,* பெ.(n.) **அஞ்சனம்** பார்க்க; see *añjaṉam* (சா.அக.).

[Skt. añjana > த.அஞ்சநம்.]

அஞ்சபாடாணம் *añjapāḍāṇam,* பெ.(n.) பிறவிநஞ்சு வகை (பரி. அக.); a mineral poison.

[Skt.añjana+pāṣāṇa>த.அஞ்சபாடாணம்.]

அஞ்சபாதம்[1] *añsapādam,* பெ.(n.) 1. (அன்னம்) புள்ளின் அடி; foot of the swan. 2. புள்ளடிக் குறி; caret mark.

[அஞ்ச(ம்)+பாதம்.]

[Skt. haṃsa > த. அஞ்ச(ம்).]

*படி>பதி-பதிவு. பதி >பதம்>பாதம்>**Skt.**pāda.*

அஞ்சபாதம்[2] *añjapādam,* பெ.(n.) சாதிலிங்கம்; bisulphate or red sulphate of mercury or cinnabar-vermilion (சா.அக.).

அஞ்சம்[1] *añjam,* பெ.(n.) 1. வெள்ளையெருது; white bull. 2. உயிர்வளி; *pirāṇaṉ,* one of the vital airs of the body.

[Skt. haṃsa > த. அஞ்சம்.]

அஞ்சம்[2] *añjam,* பெ.(n.) 1. துறவறம் நான்கனுள் ஒன்று; kind of asceticism. *"குடீசகம் பகூதக மஞ்சம்" (சூத. ஞான. 2.);* 2. மறைமொழி வகை; haṃsa mantra. *"காயத்திரியதனி னதிக மஞ்சமா மந்திரம்" (காஞ்சிப்பு. திருவேக. 28.).*

[Skt. haṃśa > த. அஞ்சம்.]

அஞ்சம்[3] *añjam,* பெ.(n.) உரிமைப் பங்கு; share, portion.

[Skt. aṃśa > த. அஞ்சம்.]

அஞ்சம்[4] *añjam,* பெ.(n.) 1. அன்னப்பறவை; bird capable of separating water from milk. 2. **அசபை** பார்க்க; see *asabai* (சா.அக.).

[Skt. haṃsa > த. அஞ்சம்.]

அஞ்சலோமசம் *añja-lōmasam,* பெ.(n.) அன்னபேதி; green vitriol, iron sulphate (சா. அக.).

அஞ்சன்[1] *añjaṉ,* பெ.(n.) 1. காமன் (மன்மதன்); *Kāmaṉ.* 2. திருமால்; *Viṣṇu.* 3. பொறாமை யில்லாதவன்; one who is not envious. 4. தலைவன்; person of eminence. 5. வள்ளன்மையுடைய அரசன்; munificent king. 6. பரம்பொருள்; the supreme being.

[Skt. haṃsa > த. அஞ்சன்.]

அஞ்சன்[2] *añjaṉ,* பெ.(n.) 1. நால்வகைத் துறவியர்களுள் கடுமையான நோன்பு மேற்கொண்டு, தூயவிடங்களில் வாழும் ஒருவகைத் துறவி ; a kind of ascetic. *"சீரஞ்சன் கமண்டலம்"* (சூத. ஞான. 6, 7). 2. நான்முகன் (சூத. எக்கிய உத். பிரம. 2, 15); *Brahmāṉ* 3. பன்னிரு ஆதித்தவரில் ஒருவர் (கூர்மபு. ஆதவர்சிறப். 2.); a deity representing the sun, one of the *tuvādaśāittar,* q.v.

[Skt. haṃsa > த. அஞ்சன்.]

அஞ்சனக்கல்[1] *añjaṉa-k-kal,* பெ.(n.) கருநிமிளை (மூ.அ.); sulphuret of antimony, black bismuth, used as a collyrium, as a combustible in fire works.

த.வ. நீலாஞ்சனக்கல்.

[அஞ்சனம் + கல்.]

[Skt. añjana > த. அஞ்சனம்.]

[குல் > கல்.]

அஞ்சனக்கல்செந்தூரம் *añjaṉa-k-kal-šendūram,* பெ.(n.) 1. தோல்நோய், வெள்ளைநோய், கீல்வாயு முதலியவற்றிற்குப் பயன்படுத்தப்படுவதும் கிச்சிலிப் பழ நிறமும், களிம்பு சுவையுமுடைய ஒருவகைச் சிவப்பு மருந்துப் பொடி; the sulphide of antimony with a small but indefinite amount of the oxide; sulphuretted antimony, *Antimonium sulphurettum,* an astrigent, used in skin diseases, syphilitic affections, rheumatism etc. 2. துரிசுச் செந்தூரம்; calcined red-oxide of blue vitriol prepared as per method laid down in Tamil medical science (சா.அக.).

[அஞ்சனம் + கல் + செந்தூரம்.]

[Skt. añjana> த. அஞ்சன(ம்).]

குல் > கல். சிந்தூரம் > செந்தூரம்.

அஞ்சனக்கல்பற்பம் *añjaṉa-k-kal-parpam,* பெ.(n.) பலவகை வெள்ளை நோய்கள், காய்ச்சல், இருமல், தோல்நோய் முதலிய வற்றிற்குக் கொடுக்கும் வெண்மையாகவும், சுவையற்றதாகவும் இருக்கும் பொடி (பற்பம்); calcined antimony prepared according to Tamil medical science and prescribed for the 20 kinds of venereal complaints such as fever, consumption, skin diseases and so on. white in colour and heavy, readily melts in fire and disappears as a gas, *Antimony oxidum* (சா.அக.).

[அஞ்சனம் + கல் + பற்பம்.]

[Skt. añjana>த. அஞ்சனம்.]

[Skt. bharman>த. பற்பம்.]

அஞ்சனக்கலிக்கம் *añjaṉa-k-kalikkam,* பெ.(n.) 1. கண்ணிலிடும் மருந்து; a medicine of chronic headache. 2. கண்ணுக்கிடும் மை; colliyrium. 3. மந்திரப் பொருளைக் காட்டும் மந்திர மை (வின்); magic black pigment rubbed on the eyes or palms of who wishes to discover anything lost.

[அஞ்சனம் + கலிக்கம்.]

[Skt. añjana>த. அஞ்சனம்.]

கல்→கலி → கலிக்கம்.

அஞ்சனக்காரன் *añjaṉa-k-kāraṉ,* பெ.(n.) 1. மந்திர மையிடுவோன்; conjurer, sorcerer who uses the magic black pigment. *"அஞ்சனக் காரன் முதுகில் வஞ்சனைக் காரன் ஏறினான்".* 2. கண்ணுக்குக் கலிக்கமிட்டு நோய்களைக் குணப்படுத்து வோன்; one who cures diseases by applying collyrium to the eyes (சா.அக.).

[அஞ்சனம்+காரன்.]

[Skt. añjana>த. அஞ்சனம்.]

கரு>காரன் = வினைமுதல் ஆண்பாற் பெயரீறு.

அஞ்சனக்கோல் *añjaṉa-k-kōl,* பெ.(n.) கண்ணுக்கு மைதீட்டுங் கோல்; pencil to paint the eyelashes with collyrium. *"அஞ்சனக் கோலி னாற்றா நாகம்" (சீவக. 1994.).*

[அஞ்சனம் + கோல்.]

[Skt. añjana> த. அஞ்சனம்.]

குல் > (கொல்) > கோல்.

அஞ்சனகுமாரி *añjaṉa-kumāri,* பெ.(n.) சிமிட்டி; bitter apple, *cucumis colocynthis* (சா. அக.).

அஞ்சனகேசி *añjaṉa-kēśi,* பெ.(n.) ஒரு ஏறண (தருக்க) நூல் (யாப். வி.பக். 540.); a treatise on logic.

[Skt. añjana+kēša>த. அஞ்சனகேசி.]

அஞ்சனச்சலாகை *añjaṉa-c-calāgai,* பெ.(n.) கூர் மழுங்கியதாகவும், இரு முனைகளுடைய தாகவும், எட்டு அங்குல நீளமுள்ளதாகவும் இருக்கும். மருந்துக்குத் தக்கபடி, வெவ்வேறு மாழைகளைக் கொண்டு செய்யப்படும் கண்ணில் மருந்து தீட்டப் பயன்படுத்தும் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, சிலை முதலியவற்றால் செய்த, ஒரு நீளமான தடித்த கம்பியைப் போன்ற கருவி; an instrument like a probe used by native doctors for applying eye-salve. It is made of gold, silver, iron or stone, according to the kind of medicines, to be used. It is a thing rod of about eight inches and blunt at the extremities (சா. அக.).

[அஞ்சனம் +சலாகை.]

[Skt. añjana>த. அஞ்சனம்.]

சல் → சலம் → சலாகை.

அஞ்சனத்தார் *añjaṉattār,* பெ.(n.) விளைச்சலை மதிப்பிடுவோன் (R.T.); estimator or appraiser of produce.

[U. ancenādar>த. அஞ்சனத்தார்.]

அஞ்சனத்திரவியம் *añjaṉa-t-tiraviyam,* பெ.(n.) ஐங்கோல நெய்மம்; a medicated ointment with magical or magnetic vitrues, prepared from the plant alinjil; *Sage - leaved Indian Linden-grewia excelsa Agnivesha* (சா.அக.).

த.வ. ஐங்கோலம்.

அஞ்சனநாமிகாவர்த்தமம் *añjaṉanāmikā-varttamam,* பெ.(n.) இமைகளின் நடு விலாவது முனைகளிலாவது குருதியைக் கக்கும், சிவந்த கட்டிகளை எழுப்பி, நமைச்சலையும், வலியையும் உண்டாக்கும் ஒரு வகைக் கண்ணோய்; an eye disease marked by the growth of small tumours in the centre or at the edges of the eyelid, causing inflammation and pain, *Bichparo adenoma* (சா.அக.).

த.வ. கருங்கண்கட்டி.

அஞ்சனநிதானம் *añjaṉa-nidāṉam,* பெ.(n.) கண்ணுக்கிடும் மையை பற்றி ஓர் ஆயுள் வேத நூல்; a treatise on ophthalmology compiled (சா.அக.).

த.வ. மைநூல்.

[Skt. añjana+nidāna> த.அஞ்சனநிதானம்.]

அஞ்சனப்படம் *añjaṉa-p-paḍam,* பெ.(n.) கரியால் ஓவியம் வரையப்பட்ட படத்துணி (பஞ்சதசப்பிர. 2.); cloth on which a figure is drawn with charcoal.

த.வ. கரி ஓவியத் துணி.

[அஞ்சனம் + படம்.]

[Skt. añjana > த. அஞ்சனம்.]

பட்டம் > படம்.



அஞ்சனப்பாடாணம் *añjaṉa-p-pāḍāṇam,* பெ.(n.) 1. தமிழ் மருத்துவத்தில் சொல்லியுள்ள முப்பத்திரண்டு நஞ்சுள் ஒன்று, பொற்றொட்டி நஞ்சு உருவாக்குங் கால், அடியில் நிற்கும் கசடு, மருத்துவத்திற்கு உதவுவது (போகம் 7000); according to the Tamil medical science, one of the thirty two kinds of poisons; one of the mineral poisons found as a sediment at the bottom in the preparation of another poison in a gold vessel. 2. நீலாஞ்சன நஞ்சு; poisonous compound of sulphate of antimony. 3. கல்லீயம்; a kind of hard lead, pewter (சா.அக.).

த.வ. கடுங்கசடு நஞ்சு.

[Skt.añjana+pāṣāṇa>த.அஞ்சனபாடாணம்.]

அஞ்சனம்[1] *añjaṉam,* பெ.(n.) 1. **அஞ்சனகேசி** (யாப். வி. பக். 540) பார்க்க; see *añjaṉa-kēśi.* 2. அவுரி (வை. மூ); indigo. 3. சலவைக்கல் (R); marble.

[Skt. añjana > த. அஞ்சனம்.]

அஞ்சனம்[2] *añjaṉam,* பெ.(n.) 1. மேற்பூச்சு மருந்து; a semi-solid ointment consisting of fatty substances mixed with an active principle or drug-unguentum. 2. மறைபொருளைக் காட்டும் மை; a magic black paint used for finding out concealed or hidden treasures or things. 3. மை மாயக்கலை; magic art using unguents. 4. கருவைக் கொண்டு செய்யப்பெறும் மை; unguent prepared from embryo. 5. கருமாக்கல்; a darkish blue-colured stone, sulphuret of antimony. 6. நீலத் தோற்றமுள்ள மலை; blue mountain, as the Nilgiris. 7. இருள்; darkness. 8. சண்பகம்; champak, *Michelia champaca.* 9. இமைகளில் எரிச்சல், குத்தல், வலி இவற்றுடன் கூடிய, சிறிய, மென்மையான செந்நிறக் கட்டியை எழுப்பும் ஒருவகைக் கண்ணோய்; a small, soft, copper-coloured pustule appearing on the eye-lid and attended with burning and pricking sensation and a slight pain; a sebaceous cyst of an eyelid, *Blepharo atheroma.*

த.வ. கரும் மை.

[Skt. añjana > த. அஞ்சனம்.]

அஞ்சனமாலி *añjaṉa-māli,* பெ.(n.) மந்திரக்கலை செய்வோர் பயன் கொள்வதற்குரிய கருநாய்; a black dog from its eyes unguents are prepared and used in sorcery (சா. அக.).

அஞ்சனமிடல் *añjaṉamiḍal,* தொ. பெ.(Vbl.n.) 1. கண்ணிற்கு மையெழுதுகை; painting black pigment on eye-lids (by women). 2. கலிக்கமிடுகை; applying a pungent eye-salve (சா.அக.).

[அஞ்சனம் + இடல்.]

[Skt. añjana> த. அஞ்சனம்.]

இடு->இடல்.

அஞ்சனலா *añjaṉalā,* பெ.(n.) 1. கருங்காக் கணம்; mussel-shell creeper. 2. கருங்குவளை (நீலோற்பலம்); blue water lilly.

[Skt. añjana>த. அஞ்சனலா.]

அஞ்சனவண்ணம் *añjaṉa-vaṇṇam,* பெ.(n.) மை வண்ணம்; black colour like that of a unguent (சா.அக.).

[அஞ்சன(ம்) + வண்ணம்.]

***[Skt.** añjana > த. அஞ்சனம்.]*

வள்→வன்→வண்ணம்.

அஞ்சனவண்ணன் *añjana-vaṇṇaṉ,* பெ.(n.) திருமால் (சிலப் 6, 47); *Tirumāl,* (*Viṣṇu*) as dark-complexioned.

[அஞ்சன(ம்) + வண்ணன்.]

***[Skt.** añjana>த. அஞ்சன(ம்).]*

வண்→வண்ணம்→வண்ணன்.

அஞ்சனவர்ணம் *añjana-varṇam,* பெ.(n.) **அஞ்சனவண்ணம்** பார்க்க; see *añjana-vaṇṇam* (சா.அக.).

[அஞ்சன(ம்) + வர்ணம்.]
***[Skt.** añjana> த. அஞ்சனம்.]*
*வண்→வண்ணம்→**Skt.** varṇa.*

அஞ்சனவர்த்தி *añjana-vartti,* பெ.(n.) கண்ணோய்களில் கண்ணுக்கு இழைத்து இடப்பெறும் ஒரு மருந்துக் குளிகை; a medicinal pill used in eye-diseases as an external application (சா.அக.).

***[Skt.** añjana + vṛdh>த. அஞ்சனவர்த்தி.]*

அஞ்சனவித்தை *añjana-vittai,* பெ.(n.) மையிட்டுப் பார்த்து நிலத்துள் மறைந்து கிடக்கும் பொருள்களைக் கண்டறியும் கலை; the art of discovering hidden treasure or other substances under the ground with the help of magic pigment (சா.அக.).

***[Skt.** añjana + vdhya>த.அஞ்சனவித்தை.]*

அஞ்சனவுருவன் *añjana-v-uruvaṉ,* பெ.(n.) திருமால்; *Viṣṇu.* *"அஞ்சனவுருவின் றந்து நிறுத்தாங்கு" (புறநா. 174.).*

[அஞ்சன(ம்) + உருவன்.]
***[Skt.** añjana>த. அஞ்சனம்.]*
உரு → உருவு → உருவம் → உருவன்.

அஞ்சனவெற்பு *añjana-veṟpu,* பெ.(n.) திருவேங்கடமலை (திவ். திருவாய். 8, 2, 8.); the Tirupati hills.

[அஞ்சன(ம்) + வெற்பு.]

***[Skt.** añjana>த. அஞ்சன(ம்).]*

அஞ்சனா[1] *añjaṉā,* பெ.(n.) பயிர் விளைநிலத்தி லுள்ள மதிப்பு (செங்கை); estimate or appraisement of the probable amount and value of the crops standing on a field.

[U. ancenā > த. அஞ்சனா.]

அஞ்சனா[2] *añjaṉā,* பெ.(n.) 1. மூக்கத்தாரி என்னும் ஒரு கடைச்சரக்கு; formerly a bazaar drug (now-unidentified). 2. ஒரு வகைப் பல்லி; a domestic lizard. 3. ஒரு பாம்பு; a fabulous serpent. 4. மை; a black pigment or collyrium applied externally to the eye-brows or the eye-lids. 5. ஒரு மரம்; a tree. 6. மை தீட்டல்; the act of applying ointment or pigment. 7. இறும்பூது காட்டும் மை; a magic ointment (சா.அக.).

***[Skt.** añjana> த. அஞ்சனா.]*

அஞ்சனாட்சி *añjaṉāṭci,* பெ.(n.) மைதீட்டிய கண்ணுடையாள்; woman having her eyelashes painted with collyrium.

த.வ. மை விழியாள்.

***[Skt.** añjana + akṣi> த. அஞ்சனாட்சி.]*

அஞ்சனாதார் *añj-aṉā-tār,* பெ.(n.) விளை பயிரை மதிப்பிடுபவன் (C.G.); estimator, appraiser.

த.வ. விலையீட்டாளர்.

[U. ancenādār > த. அஞ்சனாதார்.]

அஞ்சனாதி *añjaṉādi,* பெ.(n.) வெள்ளை நாயுருவி; a white species of Indian burr, *Achyranthes aspera* (alba) (சா.அக.).

அஞ்சனாதிகை *añjaṉādigai,* பெ.(n.) ஒரு வகைப் பல்லி; a kind of lizard (சா.அக.).

அஞ்சனாதேவி *añjaṉādēvi,* பெ.(n.) நிலத்தின் அடியில் புதைந்துள்ள பொருள்களுக்குத் தலைவியான அரசி; goddess of treasures hidden underground (சா.அக.).

[அஞ்சனா + தேவி.]

அஞ்சனாமிகை *añjanā-migai,* பெ.(n.) கண்ணிமைகளின் வீக்கம்; swelling of eyelids stye (சா.அக.).

[அஞ்சனா + மிகை.]

மிகு→ மிகை வீக்கம்.

அஞ்சனாலா *añjaṉālā,* பெ.(n.) 1. கருங் குவளை; a blue water-lilly pontederia alias *Nymphoca stellata.* 2. கருங்காக்கணம்; blue flowered mussel-shell creeper, *Clitoria ternatec* (typical).

அஞ்சனாவதி *añjaṉāvadi,* பெ.(n.) வடகீழ்த் திசைப் பெண்யானை (வின்.); name of the female elephant of the north-east, mate of cuppiradigam.

[Skt. añjanāvatī > த. அஞ்சனாவதி.]

அஞ்சனி *añjaṉi,* பெ.(n.) 1. நாணற் புல்; a sweet grass, *Saccharum spontaneum.* 2. காயா அல்லது காசா; iron wood tree, *Memecylon edule.* 3. கருங்குவளை; blue-water lilly, *Pontederia* alias *Nymphoca stellata.* 4. வறட்சுண்டி; a bitter plant-Aristolochia bracteata (சா.அக.).

அஞ்சனிகா *añjaṉikā,* பெ.(n.) 1. ஒரு வகைக் கரும் பல்லி; a kind of black lizard. 2. ஒரு வகை நீலச் சுண்டெலி; a small blue mouse (சா.அக.).

அஞ்சனை *añjaṉai,* பெ.(n.) 1. அனுமானுடைய தாய் (கம்பரா. நட்புக். 28.); name of the mother of *Haṉumāṉ.* 2. வடதிசைப் பெண் யானை (வின்.); name of the female elephant of the north, mate of *šārvapaumam.*

[Skt. añjanā > த. அஞ்சனை.]

அஞ்சனைசாபிதா *añjaṉai-šābidā* பெ.(n.) புள்ளிக்கணக்கு (C.G.); list or account of an estimate of the probable out-turn of standing crops.

[U. ancenā+jāpitā>த. அஞ்சனைசாபிதா.]

அஞ்சி–த்தல் *añji-,* 4. செ.குன்றாவி.(v.t.) தலை வணங்குதல்; to reverence, worship. *"அஞ்சித்தல் சொற்ற பூசனை யடைவுமாம்" (காஞ்சிப்பு. திருவே. 36.).*

[Skt. añc > த. அஞ்சி–,]

அஞ்சிதபத்திரி *añjida-pattiri,* பெ.(n.) வளைந்த இலைகளுள்ள ஒருவகைத் தாமரை; a lotus with curved leaves (சா.அக.).

அஞ்சிதபதம் *añjidapadam,* பெ.(n.) குதிங்காலை யூன்றிப் பாதத்தை மேனோக்கி வைத்து நிற்கை (பரத. பாவ. 83.); (*Nāṭya*) standing with the heels resting on the ground and the toes raised up.

[அஞ்சித+ பதம்.]

[Skt. ancita>த. அஞ்சிதம்.]

*பதி→பதம் >**Skt.** pāda.*

அஞ்சிதமுகம் *añjidamugam,* பெ.(n.) வருத்த மாற்றாது இருதோண் மேற் றலைசாய்க்கை (வின்.); (*Nāṭya*) reclining one's head on the shoulders from extreme pain, one of 14. muga-v-abinayam, q.v.

[அஞ்சிதம் + முகம்.]

[Skt. añjita > த. அஞ்சித(ம்).]

*[முகம் >**Skt.** mukha.]*

அஞ்சீரகம் *añjīragam,* பெ.(n.) 1. அத்தி; fig tree, *Ficus raccmosa.* 2. அத்திப் பழம்; fig fruit (சா. அக.).

அஞ்சீரம் *añjīram,* பெ.(n.) **அஞ்சீரகம்** பார்க்க; see *añjīragam* (சா.அக.).

அஞ்சுகம்[1] *añjugam,* பெ.(n.) மெல்லாடை; fine cloth.

[Skt. amśuka > த. அஞ்சுகம்.]

அஞ்சுகம்[2] *añjugam,* பெ.(n.) ஈயக்கல் (சிலாவங்கம்); a stone containing lead or lead ore; hardened lead ore (சா.அக.).

அஞ்சுமாலி *añjumāli,* பெ.(n.) கதிரவன்; the sun (சா.அக.).

அஞ்சுமான் *añjumāṉ,* பெ.(n.) 1. பன்னிரு இனத்தவருளொருவன் (திவா.); a deity representing the sun, one of twelve member. 2. சிவ தோன்றியங்களுளொன்று; an ancient *Śaivam* scripture in Sanskrit, one of 28 *Śivāgamam*, q.v. 3. கதிரவக் குல இளவரசன் (கூர்மபு. சூரிய. 43.); name of the prince of the solar race.

[Skt. amšumān > த. அஞ்சுமான்.]

அஞ்சுமித்திரம் *añju-mittiram,* பெ.(n.) **பஞ்சமித்திரம்** பார்க்க; see *pañja-mittiram* (சா.அக.).

அஞ்சுமுத்திரைத்தகடு *añju-muttirai-t-tagaḍu,* பெ.(n.) செப்புத்தாது செய்வதற்காகப் பழங்காலத்தில் பயன்படுத்தி வந்ததோர் உயர்ந்த செப்புத்தகடு; a kind of pure, thin copper plate used formerly for obtaining calcined copper known as copper aksir (சா.அக.).

அஞ்சுவர்ணத்தான் *añju-varṇattāṉ,* பெ.(n.) நாகமணல்; lead-ore (சா.அக.).

அஞ்சுவர்ணநிறத்தோன் *añju-varṇa-niṟattōṉ,* பெ.(n.) **அஞ்சுவர்ணத்தான்** பார்க்க; see *añju-varṇattāṉ* (சா.அக.).

அஞ்சுளோநேமி *añjuḷōnēmi,* பெ.(n.) திமிசு அல்லது வேங்கை மரம்; Malabar kino, *pterocarpus marsupium*, alias *Terminalia Tomentosa* (சா.அக.).

அஞ்ஞத்துவம் *aññattuvam,* பெ.(n.) அறியாமை (சிந்தா.நி.66.); spiritual ignorance.

[Skt. ajñatva > த. அஞ்ஞத்துவம்.]

அஞ்ஞவதைப்பரணி *aññavadai-p-paraṇi,* பெ.(n.) மறைமுடிவுப் பொருளாகத் தத்துவராயர் பாடிய பரணி நூல் (தக்கையாகப் பக். 153); a *paraṇi* poem on *vēdānda* philosophy, by *Tattuvarāyar.*

[Skt. a-jña+ vadhabharaṇi>த. அஞ்ஞவதை பரணி.]

அஞ்ஞன் *aññaṉ,* பெ.(n.) அறிவில்லாதவன் (பிரபோத. 38, 1); ignorant person.

[Skt. a-jña > த. அஞ்ஞன்.]

அஞ்ஞாதசுகிருதம் *aññāda-šugirudam,* பெ.(n.) தன்னை அறியாமல் வந்த நல்வினை (ஸ்ரீ வசன. 381, வ்யா.); merit unconsciously aptained.

[Skt. a-jñāta+ su-krta>த. அஞ்ஞாத சுகிருதம்.]

அஞ்ஞாதம் *aññādam,* பெ.(n.) அறியப்படாதது; that which is not known (சா.அக.).

[Skt. a-jñāta > த. அஞ்ஞாதம்.]

அஞ்ஞானத்தம்பம் *aññāṉa-t-tambam,* பெ.(n.) குரல் நொந்து வாயினால் மூச்சுவிட்டு, நாவறண்டு, நெஞ்சுலருமோர் வகைத் தொண்டை நோய்; a disease marked by the affection of the throat, breathing through the mouth, dryness of the tongue and throat and depression of the chest (சா.அக.).

த.வ. தொண்டைகடுப்பன்.

[Skt.a-jñata+tamba>த.அஞ்ஞானத் தம்பம்.]

அஞ்ஞானப்பாறை *aññāṉa-p-pāṟai,* பெ.(n.) கருங்கல் பாறை; black granite rock (சா.அக.).

[அஞ்ஞான+பாறை.]

[Skt. a-jñāna > த. அஞ்ஞானம்.]

அஞ்ஞானம் *aññāṉam,* பெ.(n.) 1. அறியாமை; ignorance, spiritual ignorance. 2. கிறித்துவத்திற்குப் புறச்சமயம் (கிறித்.); non-christian religion, paganism.

[Skt. a-jñāna > த. அஞ்ஞானம்.]

அஞ்ஞானாசிரவம் *aññāṉāširavam,* பெ.(n.) அறிவின்மை (மேருமந். 98, உரை.); spiritual ignorance.

[Skt. a-jñāna+šrava>த. அஞ்ஞானசிரவம்.]

அஞ்ஞானி *aññāṉi,* பெ.(n.) 1. அறிவிலான்; person without spiritual knowledge.

"ஆங்கார வஞ்ஞானிகளா மானிடரும்" (பிரபுலிங். விமலை. 29.). 2. புறச்சமயி (கிறித்.); non-christian, pagan.

[Skt. a-jñānin > த. அஞ்ஞானி.]

அஞ்ஞை *aññai,* பெ.(n.) 1. அறிவிலான்; ignorant person. 2. கிடாய்; he-goat, male of the sheep.

[Skt. a-jña > த. அஞ்ஞை.]

அஞன் *aňaṉ,* பெ.(n.) அறிவிலான் (திவா.); ignorant person.

[Skt. a-jña > த. அஞன்.]

அட்சக்கோடு *aṭcakkōḍu,* பெ.(n.) அட்சரேகை பார்க்க; see *aṭca-rēgai.*

[அட்ச+கோடு.]

[Skt. akṣa>த. அட்சம்.]

அட்சகன்னம் *aṭca-kaṉṉam,* பெ.(n.) நிலவுருண்டை கணிதவகை (வின்.); (Astron.) argument of latitude.

[Skt. akṣa-karṇa > த. அட்சகன்னம்.]

அட்சச்சூலை *aṭca-c-cūlai,* பெ.(n.) வெப்ப நோய் வகை (R); a kind of rheumatism.

[அட்ச+சூலை.]

[Skt. akṣa> த. அட்ச(ம்).]

சூல்→சூலை > Skt. śūlā.

அட்சத்தி *aṭcatti,* பெ.(n.) திப்பிலி; long pepper, *Pipe longum* (சா.அக.).

அட்சதரோகம் *aṭcada-rōgam,* பெ.(n.) உகிர் சுற்றுண்டாகி உகரின் வேரைக் கெடுத்து, அந்த உகிர் விழுவதற்கு முன்னமே மறுஉகிரை முளைக்கச் செய்யும் ஒரு நோய்; an inflammation of the bulbous ends of the fingers affecting the root of the nail, fresh nail crops up before the original one is shed, whitlow (சா.அக.).

த.வ. உகிர்சுற்றுநோய்.

[Skt. aksata+ rōga>த. அட்சதரோகம்.]

அட்சதீபம் *aṭca-dībam,* பெ.(n.) முருங்கை (பரி. அக.); horse-radish tree.

அட்சதூரம் *aṭca-tūram,* பெ.(n.) உலகின் சம கோட்டிலிருந்து வடக்கே அல்லது தெற்கேயுள்ள இடைவெளியின் அளவு (M. Navi. 57.); latitute.

த.வ. கிடைவரை அளவு.

[Skt. akṣadūra> த. அட்சதூரம்.]

அட்சதை *aṭcaḍai,* பெ.(n.) 1. மஞ்சள் கலந்த மங்கல அரிசி; unbroken grains of rice mixed with turmeric or saffron used in benediction or workship. "மாமல ரட்சதை யறுகதிற் சொரிந்து" (பிரபோத. 11, 42); 2. அரிசி (இ.வ.); rice.

த.வ. பொலியரிசி, அறுகு அரிசி.

[Skt. a-kṣata > த. அட்சதை.]

அட்சதைப்பொட்டு *aṭcadai-p-poṭṭu,* பெ.(n.) நெற்றியிலிடும் பொட்டுவகை; turmeric paste, blackened with charcoal powder and lime, used for marks on the forehead.

[அட்சதை + பொட்டு.]

[Skt. a-kṣata>அட்சதை.]

அட்சதைபோட்டுக்கொள்(ளு)–தல் *aṭcadai poṭṭu-k-kol(lu),* 16 செ.கு.வி.(v.i.) வலிய தொரு வினையை மேற்கொள்ளுதல் (இ.வ.); to voluntarily undertake to perform an act.

[அட்சதை + போட்டுக்கொள்(ளு)–.]

[Skt. a-kaṣta> த. அட்சதை.]

அட்சதைவை–த்தல் *aṭcadai-vai-,* 4 செ.கு.வி. (v.i.) நற்செயல் அழைத்தற் குறியாக மங்கல அரிசி கொடுத்தல்; to distribute unbroken rice mixed with turmeric or saffron as an invitation to auspicious ceremonies.

த.வ. பொலியரிசிவை.
[அட்சதை + வை–.]
[Skt. a-kṣata > த. அட்சதை.]

அட்சபாதன்[1] *aṭca-pādaṉ*, பெ.(n.) கவுதம முனி; Gaudama, founder of the *nyāya* phil, as having an eye in his right foot.

[அட்சு(ம்) + பாதன்.]
*[**Skt.** akṣa > த. அட்ச.]*
*பதி → பதம் → பாதம் → பாதன் >**Skt.** pādiṉ.*

அட்சபாதன்[2] *aṭca-pādaṉ*, பெ.(n.) நாயப் பொருளைப் (நியாய சாத்திரம்) பின்பற்றி நடப்பவன் (வின்.); follower of *Nyāya* philosophy propounded by *Akṣapādā*.

த.வ. அறவாணன்.
[அட்சு(ம்) + பாதன்.]
*[**Skt.** akṣa > த. அட்ச.]*
*பாதம் → பாதன் >**Skt.** pādiṉ.*

அட்சம்[1] *aṭšam*, பெ.(n.) 1. கண்; eye. 2. நிலக்கோடு; terrestrial latitude.

*[**Skt.** akṣa > த. அட்சம்.]*

அட்சம்[2] *aṭcam*, பெ.(n.) 1. **அட்சமணி** பார்க்க; see *aṭcamaṇi*. 2. வெங்காயம்; onion. 3. தான்றி; devil's abode, *Terminalia bellerica*. 4. பூண்டின் பெயர்களில் விதையைக் குறிக்கக் இறுதி மொழியாக வரும் சொல் (எ–டு:) உத்திராட்சம், கோகிலாட்சம்; in the name of plants, a termination showing the seed, as in *Eleocarpus*, and *Coix barbata* (சா.அக.).

*[**Skt.** akṣa > த. அட்சம்.]*

அட்சமணி *aṭcamaṇi*, பெ.(n.) அக்கமணி; bead sacred to *Śivaṉ*, *Eleocarpus ganitus* (சா.அக.).

த.வ. கள்மணி, முள்மணி.
[அட்சம் + மணி.]
*[**Skt.** akṣa > அட்சம்.]*
மண் → மணி.

அட்சமாலிகை *aṭca māligai*, பெ.(n.) நூற்றெட்டுபநிடதங்களுளொன்று; name of an *upaniṣad*.

*[**Skt.** akṣamālikā > த. அட்சமாலிகை.]*

அட்சமாலை *aṭšamālai*, பெ.(n.) வழிபாட்டு மாலை; rosary.

த.வ. அக்கமாலை.
[அட்ச + மாலை.]
*[**Skt.** akṣa>த. அட்சம்.]*
*மால்→ மாலை >**Skt.** mālā.*

அட்சய *aṭcaya*, பெ.(n.) வட மொழியாளரின் அறுபானாண்டுள் ஓர் ஆண்டு; name of the last year in the jupiter cycle of sixty years as followed by sanskri lovers.

*[**Skt.** akṣaya > த. அட்சய.]*

அட்சயதிருதியை *aṭcaya-tiru-diyai*, பெ.(n.) விடை (வைசாக) மாத வளர்பிறை மூன்றாம் பக்கலாகிய நன்னாள்; third tithi of the bright fornight of *vaišāgam*, as securing merit to all deeds of virtue performed on that day.

த.வ. மங்கலமும்மி.

*[**Skt.**a-kṣaya+ tṛtiyā>த.அட்சயதிருதியை.]*

அட்சயதூணி *aṭcayatūṇi*, பெ.(n.) அருச்சுனனுடைய அம்புக்கூடு (வின்.); the quiver of Arjuna, as inexhaustible.

த.வ. அழிவில் தூணி.
[அட்சய(ம்) + தூணி.]
*[**Skt.** a-kṣaya> த. அட்சய(ம்).]*



அட்சயபாத்திரம் *aṭcaya-pāttiram,* பெ.(n.) 1. தெய்வத்தன்மையால் உணவு குறையாத கலம் (வின்.); divine vessel of inexhaustible food given to the *Pāṇdavas* by the sun. 2. இரந்துண் கலம்; vessel carried in begging, usu. by *Bhāgavatas.*

த.வ. குறையாக்கலம், உலவாக்கலம், அமுதசுரபி.

[Skt. a-kṣayapātra > த. அட்சயபாத்திரம்.]



அட்சயம்[1] *aṭcayam,* பெ.(n.) 1. கேடின்மை (சிந்தா. நி. 87.); undecaying. 2. குறைவு படாதது (இ.வ.); that which is inexhaustible.

த.வ. அல்காமை.

[Skt. a-kṣaya > த. அட்சயம்.]

அட்சயம்[2] *aṭcayam,* பெ.(n.) கல்லுப்பு; common salt dug out from the bed at the bottom of the sea (சா.அக.).

த.வ. கடலடி உப்பு.

அட்சயரசம் *aṭcayarasam,* பெ.(n.) கொங்கணவர் வாதகாவியம் 3000–இல் சொல்லியுள்ள பத்து வகை இதளியக் குளிகைகளுள் ஒன்று. இது சாரணைக் குதவும், இதைப் பதினொரு தடவை விடுவித்தாக்கால் எண் பெரும் பேறடையலாம். முழுமை நிலைக்குச் சென்று நிலைக்கலாம், திரும்பலாம். இதன் பெருமை அடியிற் கண்ட செய்யுளினால் விளங்கும்; one of the ten kinds of mercurial pills described in kunganavar's work on Alchemy. It can be animated as per process laid down there in and if this is down eleven times, one can succeed in the performance of eight kinds of miracles vide (அஷ்டசித்தி) this pill will also enable him to absorb him self into the absolute and return to his original state at pleasure, as explained in the above stanza. *"ஓடலாம் அட்சய மாம் ரசத்தைக் கேளு உத்தமனே பதினொறுக்கால் விடுவித்தாக்கல் ஆடலாம் அஷ்டமா சித்தியெட்டும் அணிமாவும் கரிமாவும் வகிமாவோடு தேடலாம் மகிமாவும் பிராத்தியோடு சேர்ந்தயெட்டு மாடலாம் செப்பக்கேளு நீடலாம் பூரணத்திற் சென்று புக்கி நிலைக்கலாம் திரும்பலாம் நீங்கள் கேளே"* (சா.அக.).

த.வ. அழியாச்சாறு.

[Skt. aksaya + raša >த. அட்சயரசம்.]

அட்சயவடம் *aṭcaya-vaḍam,* பெ.(n.) தொன்மைக் காலத்தில் கயையிலிருந்த அழகியதோர் ஆலமரம்; undecaying banyan the name of a very ancient sacred tree that was in Gaya (சா.அக.).

[அட்சய(ம்) + வடம்.]

[Skt. a-kṣaya>த. அட்சயம்.]

வட்டம்>வடம் > **Skt.** *vaṭa.*

அட்சயன் *aṭcayaṉ,* பெ.(n.) கடவுள்; god, as exempt from decay.

[Skt. a-kṣaya > த. அட்சயன்.]

அட்சரகணிதம் *aṭcarakaṇidam,* பெ.(n.) குறிக் (பீச)கணிதம் (வின்.); (Math.) algebra.

த.வ. குறிக்கணக்கியல், இயற்கணிதம்.

[அட்சரம் + கணிதம்.]

[Skt. akṣara>த. அட்சரம் .]

கண் > கணி > கணிதம் > **Skt.** gaṇita.

அட்சரகாலம் *aṭcarakālam,* பெ.(n.) ஒரு தாளவளவை; (mus.) chief unit of time, measured by the time-length of a short syllable.

த.வ. மாத்திரைக்காலம்.

[அட்சர(ம்) + காலம்.]

*[**Skt.** a-kṣara> த. அட்சரம்.]*

*கால்→காலம் > **Skt.** kāla.*

அட்சரசமுத்திபலம் *aṭcaraša-mutti-palam,* பெ.(n.) விளா; wood apple, *Feronia elephantum* (சா.அக.).

அட்சரசீவிகன் *aṭcara-šīvigaṉ,* பெ.(n.) எழுத்தாளன் (யாழ். அக.); scribe, writer.

த.வ. சொல்லோவுழவன்.

*[**Skt.** akṣara-jīvika > த. அட்சரசீவிகன்.]*

அட்சரசுத்தி *aṭcarašutti,* பெ.(n.) 1. பலுக்கல் (ஒலிப்பு) திருத்தம்; correct utterance, accurate pronunciation. 2. கையெழுத்துத் திருத்தம் (வின்.); correct chirography.

த.வ. திருத்தப்பாடு, திருத்தப்பலுக்கல்.

*[**Skt.** akṣara + šuddhi > த. அட்சரசுத்தி.]*

அட்சரத்தாபனம் *aṭcara-t-tābaṉam,* பெ.(n.) சுருள் தகட்டில் மந்திர எழுத்துகளைப் பொறிக்கை (வின்.); inscribing letters of mantras in mystical diagrams for amulets.

த.வ. எழுத்தேற்றம்.

*[**Skt.** a-kṣara+sthāpana > த.அட்சரத் தாபனம்.]*

அட்சரத்துடையோன் *aṭcarattuḍaiyōṉ,* பெ.(n.) ஈ; fly (சா.அக.).

அட்சரதீபம் *aṭcara-dībam,* பெ.(n.) கோயிலிலேற்றும் ஐம்பத்தொரு திருவிளக்கு; row of 51 lights set up in temples, as representing the 51 letters of the Skt. alphabet.

த.வ. ஐம்பானோர் விளக்கு.

[அட்சர + தீபம்.]

*[**Skt.** a-kṣara > த. அட்சரம்.]*

*தீ→ தீவம்>**Skt.** dīpa> த. தீபம்.*

வடமொழியாளர் தம் மொழிப் பெருமையை நிலைநாட்டுதற்காகக் கோயில் வழிபாட்டில் புதிதாகப் புகுத்தப்பட்ட ஆரியர் வழக்கம். முப்பான் விளக்கேற்றல் தமிழ் மரபு.

அட்சரதேவி *aṭsara-dēvi,* பெ.(n.) கலைமகள்; goddess of letters. *"அட்சர தேவி கோவின் விதிப்படி" (திருப்பு. 1126).*

த.வ. சொன்மடந்தை.

[அட்சர(ம்) + தேவி.]

*[**Skt.** a-kṣara> த. அட்சரம்.]*

*தேவன்→தேவி > **Skt.** dēvi.*

அட்சரதோசம் *aṭcara-dōšam,* பெ.(n.) எழுத்துப் பிழை (கொ.வ.); error of spelling.

த.வ. எழுத்துவழு.

*[**Skt.** a-kṣara + dōṣa > த. அட்சரதோசம்.]*

அட்சரப்புல் *aṭcara-p-pul,* பெ.(n.) பீனசப்புல்; a kind of grass, *Panicum Dactylon* (சா.அக.).

த.வ. சளிப்புல்.

அட்சரபோளம் *aṭcara-pōḷam,* பெ.(n.) கரும் பிசின் (போளம்); black myrrh, a black substance extracted from aloes and dried up (சா.அக.).

த.வ. கள்ளிப்பிசின்.

அட்சரம் *aṭcaram,* பெ.(n.) 1. எழுத்து; letter of the alphabet, writing-symbol. 2. பண் வகைகளிளொன்று (பரத. இராக. 27.): one of the characteristic of melody-types. 3. நா வெடிப்பு நோய் (பைஷஜ.); cracked tongue. 4. குழந்தை நோய் வகை (பாலவா. 912); a general name for several diseases of children.

*[**Skt.** a-kṣara > த. அட்சரம்.]*

அட்சரமாந்தசுரம் *aṭcara-mānda-šuram,* பெ.(n.) **அக்கரக்காய்ச்சல்** பார்க்க; see *akkara-k-kāyccal.* (சா. அக.)

[அட்சர(ம்) + மாந்தம் + சுரம்.]

[Skt. akṣara + த. அட்சர(ம்).]

மந்தம் → மாந்தம்.

சுள் > சுர் > சுரம்.

அட்சரமாந்தம் *aṭcara-māndam,* பெ.(n.) **அக்கரப்படுவன்** பார்க்க; see *akkara-p-paḍuvaṉ* (சா.அக.).

[Skt. akṣara>த. அட்சரம்.]

மந்தம் → மாந்தம்.

அட்சரமுகன் *aṭcara-mugaṉ,* பெ.(n.) மாணாக்கன் (சிந்தா. நி. 96.); student, disciple.

[அட்சர(ம்) + முகன்.]

[Skt. akṣara> த. அட்சரம்.]

முகம் > முகன்.

அட்சரரேகை *aṭcara-rēgai,* பெ.(n.) மண்டையின் பின்புறத்தில் குறுக்காக வோடுமோர் எலும்புப் பொருத்து; a suture running across the skull on its back portion, Lamboid suture (சா.அக.).

த.வ. குறுக்கைப்பொட்டு.

[Skt. akṣara+rekhā>த. அட்சரரேகை.]

அட்சரவகுப்பு *aṭcara-vaguppu,* பெ.(n.) வாயி லுண்டாகும் கொப்புள வகைகள்; different varieties of stomatitis (சா.அக.).

[அட்சர+வகுப்பு.]

[Skt. akṣara> த. அட்சரம்.]

வகு→வகுப்பு.

அட்சரவிருட்சத்தி *aṭcara-viruṭšatti,* பெ.(n.) பலா; jack tree, *Artocarpus integrifolia* (சா.அக.).

அட்சராப்பியாசம் *aṭcarā-p-piyāšam,* பெ.(n.) முதன் முதலாகப் பள்ளியில் சேரும் குழந்தைக்கு எழுத்தறிவிக்கும் முறைமை (சடங்கு); ceremony connected with a child's beginning to learn the alphabet.

த.வ. ஏடுதூக்கல், ஏடுமங்கலம்.

[Skt. a-kṣara+ abhyāsa>த. அட்சராப் பியாசம்.]

அட்சராரத்தி *aṭcarāratti,* பெ.(n.) வடமொழி எழுத்துகளின் எண் அளவாக 51 விளக்குகளை அடுக்கடுக்காகக் கொண்ட விளக்குத்தட்டுவகை (தமிழ்விடு. 236, கீழ்க்குறிப்பு); metallic tray containing 51 lights arranged in tiers and waved in front of the deities, the number of lights representing the number of letters in the Sanskrit alphabet.

த.வ. ஐம்பானோர் ஆரத்தி.

[Skt. akṣara+āratti > த. அட்சராரத்தி.]

அட்சரேகை *aṭcarēgai,* பெ.(n.) நிலநடுக் கோட்டுக்கு வடக்கில் அல்லது தெற்கில் தொலைவைக் கணக்கிடும் முறையில் நிலவுருண்டையைச் சுற்றிக் கிழக்கிலிருந்து மேற்கில் செல்வதாக அமைத்துக் கொண்ட சுற்றுக் கோடு; line of latitute.

த.வ. கிடைவரை.

[Skt. akṣa + rekhā>த. அட்சரேகை.]

அட்சாம்சம் *aṭcāmšam,* பெ.(n.) நிலக் கோட்டின் கோணப் பகுதி; degree of terrestrial latitude.

த.வ. நிலக்கோணம்.

[Skt. akṣa + aṃśa> த. அட்சாம்சம்.]

அட்சாரம் *aṭcāram,* பெ.(n.) காரமின்மை; absence of alkali (சா.அக.).

அட்சி[1] *aṭci,* பெ.(n.) 1. கண் (வின்.); eye. 2. நூற்றெட்டுபநிடதப் பகுதிகளிளொன்று; name of an *upaniṣad.*

[Skt. akṣi > த. அட்சி.]

அட்சி[2] *aṭci,* பெ.(n.) புறவுறுப்புகளை ஆய்வு செய்யும் கண்ணாடி; an instrument for examining certain openings in the body, *Speculum* (சா.அக.).

அட்சிகம் *aṭcigam,* பெ.(n.) ஒரு மரம்; dalbergia tree (சா.அக.).

அட்சிகோபம் *atcikōbam,* பெ.(n.) கண்சிவப்பு; inflammation of the eye (சா.அக.).

அட்சிகோளம் *atcikōlam,* பெ.(n.) கண்விழி; eye - ball (சா. அக.)

[அட்சி + கோளம்.]

[Skt. aksi>த. அட்சி.]

கொள் > கோள் > கோளம்.

அட்சிணி *atcini,* பெ.(n.) எண்வகை இன்பங்களுளொன்றாகிய தற்காலத்தில் துய்க்கும் சிறப்புரிமை(C.G.); privileges actually enjoyed in an estate, one of *asta-pōkam.*

த.வ. எட்டிலோர் துய்ப்பு.

[Skt. aksini > த. அட்சிணி.]

அட்சிதர்ப்பணம் *atci-dar-p-panam,* பெ.(n.) கண்ணில் துளித் துளியாயிடும் மருந்து; a fluid medicine to be dropped into the eye, eye drops (சா.அக.).

த.வ. சொட்டுமருந்து.

[Skt.aksi + tarppana > த. அட்சிதர்ப்பணம்.]

அட்சிதாரை *atcidārai,* பெ.(n.) கருவிழி; pupil of the eye (சா.அக.).

அட்சிபடலம் *atci-padalam,* பெ.(n.) கண்ணின் தோல்; coat of the eye (சா.அக.).

த.வ. இரப்பை.

[அட்சி + படலம்.]

[Skt. aksi> த. அட்சி.]

படல் → படலம் = கண்படலம்.

அட்சிபந்தம் *atci-pandam,* பெ.(n.) 1. கண்ணோயில் கட்டும் கட்டு; bandage for the eyes in eye-diseases. 2. கண்கட்டு வித்தை; a kind of illusion in magic. 3. கண்ணைக் கட்டல்; binding the eyes (சா.அக.).

த.வ. கண்கட்டு, கண்ணாங்கட்டு.

[அட்சி + பந்தம்.]

[Skt. aksi>த. அட்சி.]

பற்று → பத்து → பந்து → பந்தம்> **Skt.** bandha.

அட்சிபாகத்தியம் *atci-pāgattiyam,* பெ.(n.) கருவிழியில் வெண்ணிறச் சதை படர்ந்து மூடிக் கொள்வதுடன், குத்தலும், வலியும் கொண்டு கண்சிவந்து கருவிழியில் காணும் ஒருவகைக் கண்ணோய்; the appearance of a whitish milky film over the black of the eye slowly but completely shrouding it with its mass and attended with acute pain (சா.அக.).

அட்சிபாகம் *atci-pāgam,* பெ.(n.) 1. வீக்கத்துடனும் அல்லது வீக்கமில்லாமலும் காணப்படும் கண் இரப்பையின் அழற்சி; an inflammation of the eye-lid with or without any local swelling. 2. கண்ணோய்; ordinary inflammation of the eyes ophthalmia (சா.அக.).

த.வ. இரப்பையழற்சி.

[அட்சி + பாகம்.]

[Skt. aksi>த. அட்சி.]

பகு →பாகம்.

அட்சிபாகாத்தியரோகம் *atci-pāgāttiya-rōgam,* பெ.(n.) கண்கள் வீங்குதல், கலங்கல், நீர்க்கம்மல், பீளைவடிதல், கருவிழி வெள்விழி சிவத்தல், எரிச்சல், அடிக்கடி வலியுறல் ஆகிய குணங்களையுண்டாக்கிப் பார்வையைக் கெடுக்குமோர் கண்ணோய்; a disease which destroys the eye-sight in the end, characterised by inflammation, swelling, burning, sensation, mucopurulent discharge and frequent pain (சா.அக.).

த.வ. கண் நலிநோய்.

அட்சிபுருவம் *atcipuruvam,* பெ.(n.) கண் புருவம்; eye-brow (சா.அக.).

[அட்சி + புருவம்.]

[Skt. aksi> த. அட்சி.]

புரு → புருவம் = கண்மேலுள்ள மயிர் வளைவு.

அட்சிலோமன் *atcilōman*, பெ.(n.) கண்மயிர்; eye-lash (சா.அக.).

அட்சிபம் *atcibam*, பெ.(n.) 1. மாமரத்தில் ஒரு வகை; a species of mango tree. 2. முருங்கை; drumstick tree, *Moringa pterygosperma* (சா.அக.).

அட்டகசம் *attakašam*, பெ.(n.) ஆடாதோடை; Malabar nut trees, *Justicewort-Adhatoda vasica*, a medicinal shrub commonly found in all hedges in S. India (சா.அக.).



அட்டகணம்[1] *attakanam*, பெ.(n.) நிலக்கணம், நீர்க்கணம், சந்திரகணம், இந்திரகணம் அல்லது இயமான கணம், சூரியகணம், தீக்கணம், வாயுகணம், வெளி (ஆகாச)க் கணம் என எண்வகையுடையனவும் நல்லவுந் தீயவுமாய் வருவனவுமானவும் நூன்முதற் சீர்கள் (வின்.); (pros.) the eight kinds of feet with which a poem viz. *nila-k-kanam, nīr-k-kanam, cantira-kanam, intira-kanam, or iyamāna-kanam, sūriya-kanam, tī-k-kanam, vāyu-kanam, ākāsa-kanam.*

த.வ. எண்கணம்.

[அட்டம் + கணம்.]

*[**Skt.** astan> த. அட்டம்.]*

*களம் > கணம் > **Skt.** gana.*

அட்டகணம்[2] *attakanam*, பெ.(n.) சூலிகணம், முக்குக் கணம் (மூலக்கணம்), ஆமக்கணம், தேரைக்கணம், மாகணம், சுழிக்கணம், கழிகணம், வறட்கணம் என வரும் எண்வகைக் கணங்கள்; a disease in children similar to tabes with progressive wasting of the body or a part of it and It consists of eight kinds, as enumerated above (சா.அக.).

த.வ. எண்கணம்.

[அட்டம் + கணம்.]

*களம் > கணம் > **Skt.** gana.*

அட்டகணிதம் *atta-kanidam*, பெ.(n.) எண் கணிதச் செயல் முறைகள்; eight mathematical processes, viz. *"சங்கலிதம், விபகலிதம், குணனம், பாகாரம், வர்க்கம், வர்க்கமூலம், கணம், கனமூலம்" (பிங்.), "குணகாரம், பரியச்சம், பாற்கரம், மூலம், மானதம், கன்மம், சலிதி, தருதம்" (சூடா.).*

த.வ. எண்கணிதம்.

[அட்டம் + கணிதம்.]

*[**Skt.** astan> த. அட்டம்.]*

கண் > கணி> கணிதம்.

அட்டகந்தம் *atta-kandam*, பெ.(n.) எண்வகை நறுமணப் பொருள்கள்; eight kinds of perfumes viz; 1. சந்தனம்; sandal. 2. அகரு; agallochum. 3. மான்மணத்தி (கத்தூரி); musk. 4. பச்சைக் கருப்பூரம்; crude camphor. 5. பச்சிலை; acheon leaf. 6. குங்குமப்பூ; European saffron. 7. விலாமிச்சை; kus kus. 8. கோட்டம் (கோஷ்டம்); costus (சா.அக.).

த.வ. எண்கணம்.

[அட்டம் + கந்தம்.]

*[**Skt.** astan>த. அட்டம்.]*

காந்து > கந்து > கந்தம் > **Skt.** gandha.

அட்டகம்[1] *attagam*, பெ.(n.) மறைநூலில் அடங்கிய ஒருசார் மந்திரத்தொகுதி; a collection of mantras in the vēda. *"வருக்க முழுதும் வந்தவட் டகமும்" (கலிங். 170).*

த.வ. எட்டகம்.

*[**Skt.** astaka > த. அட்டகம்.]*

அட்டகம்² *attagam,* பெ.(n.) எட்டன் தொகுதி; group of eight. *"உருவமெலாம் பூத வுபாதாய சுத்தாட்டக வுருவ மென்னின்"* *(சி.சி. பர. சௌத். மறு. 17).*

[Skt. astaka > த. அட்டகம்.]

அட்டகராசி *attaga-rāśi,* பெ.(n.) சிறுசிமிட்டி; an unidentified plant (சா.அக.).

அட்டகருமக்கரு *atta-karuma-k-karu,* பெ.(n.) மாய (வித்தை) கூட்டுப் பொருள்கள்; ingredients for magical preparations employed in the *atta-karumam,* q.v., as plants, roots, skins, bones, flesh.

[அட்ட + கருமம் + கரு.]

[Skt. astan> த. அட்டம்.]

கரு→கருமம் > **Skt.** *karman*

அட்டகருமசித்தி *atta-karuma-šitti,* பெ.(n.) எண் வகை தொழில்களினாலடையும் பேறு (சித்தி); an accomplished success derived from the practice of the eight kinds of magic; success in witchery (சா.அக.).

[அட்ட+கருமம்+சித்தி.]

[Skt. asta > த. அட்டம். Skt. šiddhi> த. சித்தி.]

குரு>கரு>கருமம் > **Skt.**karman

அட்டகருமப்பலகை *atta-karuma-p-palagai,* பெ.(n.) எண் வகை தொழிலுக்கும் பயன் படுத்தும் வெவ்வேறு மரங்களால் செய்த உட்காரும் மணைகள்; eight sitting planks made of different kinds of wood and used while chanting mantrams in the performance of the eight kinds of magic. They are respectively used according to ten prescribed rules of mantric science (சா.அக.).

[அட்டம் + கருமம் + பலகை.]

[Skt. astan>த. அட்டம்.]

கரு→கருமம் > **Skt.** *karman*

அட்டகருமம் *atta-karumam,* பெ.(n.) எண்வகை மாயக்கலைகள் (வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம், ஆகர்ஷணம், வித்துவேஷணம், பேதனம், மாரணம்); the eight magic arts.

[அட்டம் + கருமம்.]

[Skt. astan > த. அட்டம்.]

குல்→குரு→ கரு> **Skt.** *karman*

அட்டகவுடலம் *atta-kavudalam,* பெ.(n.) **அட்டகம்²** பார்க்க; see *attagam²*.

அட்டகாசம்¹ *attakāšam,* பெ.(n.) 1. பெருநகை; loud laughter. *"அனலுமிழ் கண்களு மட்டகாசமும்" (பிரபோத. 18, 74.).* 2. ஆர்ப்பாட்டம்; pomp, parade, ostentation.

த.வ. வெற்றாட்டம், கொட்டம் அடித்தல், நகையாட்டம்.

[Skt. atta-hāsa > த. அட்டகாசம்.]

அட்டகாசம்² *attakāšam,* பெ.(n.) 1. கொடுஞ்சொல்; atrocity. *'கொள்ளைக் காரர்களின் அட்டகாசம் பொறுக்க முடியவில்லை'.* 2. ஆர்ப்பாட்டம்; uproar. *'குழந்தை அழுது அட்டகாசம் செய்து விட்டது'.* 3. விளம்பரப்படுத்திக் கொள்ளும் முறை; ostentatious display. *'முகத்தில் மூக்குத்தி, காதில் வைரக்கம்மல் என்று அட்டகாசத்துடன் காணப்பட்டாள்'.* 4. மிகச்சிறப்பு; superb, excellence. *'என்ன அட்டகாசமாக ஆடினாள் தெரியுமா?'.*

த.வ. கொட்டம் கொடும்பாடு.

[Skt. atta-hāsa > த. அட்டகாசம்.]

அட்டகிராம் *atta-kirām,* பெ.(n.) எருமையூரில் (மைசூர்) இருக்கும் அசுகாவிலிருந்து வரும் ஒருவகை வெள்ளைச் சருக்கரை; a granulated white sugar exported from Aska in Mysore (சா.அக.).

அட்டகிரி *atta-kiri,* பெ.(n.) **அத்தகிரி** (பிங்.) பார்க்க; see *atta-kiri.*

[Skt. astan + giri > த. அட்டகிரி]

அட்டகீடம் *atta-kidam,* பெ.(n.) ஓணான், தவளை, அடவி ஈ, வீட்டுப்பல்லி, காட்டுக் கொசு, குளவி, மலைக் கட்டெறும்பு, சிலந்திப் பூச்சி ஆகிய எட்டுவகை நச்சுயிரிகள்; the eight kinds of poisonous creatures viz., blood sucker, frog, jungle-fly, house-lizard, malarial mosquito, wasp, stick ant and the spider (சா.அக.).

[அட்ட(ம்) + கீடம்.]

*[**Skt.** astan>த. அட்டம்.]*

கீள் > கீழ் > கீழம் > கீடம் > **Skt.** kita.



அட்டகுட்டம் *atta-kuttam,* பெ.(n.) எட்டு வகையான குட்ட நோய்; the eight kinds of leprosy.

த.வ. எண்குட்டம்.

[அட்ட(ம்) + குட்டம்.]

*[**Skt.** asta > த. அட்டம்.]*

குட்டு→குட்டம் > ***Skt.** kusta.*

அட்டகுணம் *atta-kunam,* பெ.(n.) கடவுளின் எண்குணம்; the eight atributes of god.

த.வ. எண்குணம்.

[அட்ட(ம்) + குணம்.]

*[**Skt.** astan>த. அட்ட(ம்).]*

குள் → குணம் > **Skt.** guna.

அட்டகுலசெல்வம் *attakula-selvam,* பெ.(n.) **அட்டசித்தி** பார்க்க; see *atta-sitti* (சா.அக.).

[அட்ட(ம்) + குலதெய்வம்.]

*[**Skt.** astan>த. அட்ட(ம்).]*

குல்→குலம்> **Skt.** kula. செல்→செல்வம்.

அட்டகுவடு *atta-kuvadu,* பெ.(n.) திராமலை; a mountain containing a mineral called thara (copper and spelter) (சா.அக.).

அட்டகுறி *atta-kuri,* பெ.(n.) நோயாளிகட்கு மருத்துவம் செய்வதற்கு முன் மருத்துவர்கள் கண்டறிய வேண்டிய எண்வகை அடையாளங்கள்; eight different kinds of tests to be applied or attended to by a physician before arriving at a correct diagnosis (சா.அக.).

த.வ. எண்குறி.

[அட்ட(ம்) + குறி.]

*[**Skt.** astan> த. அட்ட(ம்).]*

குல்→குறு→குறி.

அட்டகுன்மம் *atta-kunmam,* பெ.(n.) செரியாமையினாலெழுந்த எட்டு வகை குணங்களுடைய குன்ம நோய்கள். அவையாவன; 1. எரி, 2. உமட்டல் செய்தல், 3. இசிவு (சன்னி), 4. சிலேத்துமம், 5. சூலை 6. பித்தம் 7. வலி 8. ஊதை (வாதம்); the eight kinds of indigestion. or dyspepsia characterised by (1) burning sensation (2) vomiting (3) fever followed by delirium (4) phlegm (5) biliousness (6) piercing pain as in colic etc. (7) convulsion and (8) rheumatism or other nervous affections (சா.அக.).

த.வ. எண்குத்தல்வலி.

[அட்டம் + குன்மம்.]

*[**Skt.** astan> த. அட்டம்.]*

குல் (குத்தல், வலி) > குன்மம் > **Skt.** gulma.

அட்டகுன்மலேகியம் *atta-kunma-legiyam,* பெ.(n.) வயிற்றுநோய், வயிற்றுப்பிசம், செரியாமை முதலிய எட்டுவகை நோய்கள் தீருவதற்காக, அகத்தியர் வைத்திய காவியம் 1500–இல் சொல்லியுள்ளபடி உருவாக்கும்

ஒருவகை இளகியம்; an electuary prepared as per process laid down in Agastya's work (1500) on medicine. It is prescribed for eight kinds of dyspepsia such as, colic, tympanities, indigestion etc. (சா.அக.).

த.வ. குத்தல்வலி இளகியம்.

[அட்டம் + குன்மம் + இலேகியம்.]

[Skt. aṣṭan> த. அட்ட, Skt. lēhya> லேகியம்.]

அட்டகை[1] *aṭṭagai,* பெ.(n.) (அட்டமி) எண்மி (யாழ். அக.); the eight tithi.

[Skt. aṣṭakā > த. அட்டகை.]

அட்டகை[2] *aṭṭagai,* பெ.(n.) 1. ஒரு வேள்வி (திவா.); a sacrifice. 2. இறந்த நாட்கடன் வகை (கூர்ம உத்தரகா. அழற்க. 3.); *srāddha* or worship of the manes on the eighth tithi after the full moon in the 9th, 10th, and 11th solar months.

[Skt. aṣṭakā > த. அட்டகை.]

அட்டகோணம்[1] *aṭṭakōṇam,* பெ.(n.) 1. எட்டு மூலையை யுடைய உருவம்; octagon. 2. எட்டு மூலை; the eight points of the compass.

த.வ. எண்கோணம்.

[அட்டம் + கோணம்.]

[Skt. aṣṭan>த. அட்ட(ம்).]

கோண் → கோணம் > **Skt.** kōṇa.

அட்டகோணம்[2] *aṭṭa-kōṇam,* பெ.(n.) 1. மூச்சை உள்ளிழுத்தல் (பூரகம்); yogi's method of scientific inhalation. 2. எண்கோணமுள்ள மறைமொழிச் சக்கரம்; an octagonal diagram used in magic (சா.அக.).

[அட்டம் + கோணம்.]

[Skt. aṣṭan> த. அட்டம்.]

கோண் → கோணம்.

அட்டசருமக்கரு *aṭṭa-šaruma-k-karu,* பெ.(n.) எட்டு வகை செய்வினைகளில் பயன்படுத்தும் கருமருந்து; a black magical paint used for attaining success in the practice and performance of the eight kinds of black magic consisting of roots, plants, bones, skin etc., as ingredients (சா.அக.).

[அட்டசருமம் + கரு.]

[Skt. aṣṭan+carman> த. அட்டசருமம்.]

கள்→ கரு.

அட்டசாந்திநெய் *aṭṭa-šāndi-ney,* பெ.(n.) அகத்தியர் வைத்தியகாவியம் **1500**இல் சொல்லப் பட்டுள்ள எலும்புருக்கி, பெரும்பாடு, முதலிய எட்டுவகை நோய்களுக்குக் கொடுக்கும் மருந்து நெய்; a medical ghee in cow's ghee prescribed for eight diseases viz. tuberclosis of the bone, consumption menorhagia etc. as contemplated in Agastyar's work (1500) on medicines (சா.அக.).

த.வ. எண்நோய் நெய்மம்.

அட்டசாரநிகண்டு *aṭṭašāra-nigaṇḍu,* பெ.(n.) தேரையர் செய்த, ஒரு தமிழ் மருத்துவ நூல்; a medical treatise compiled in Tamil by Tērayar (சா.அக.)

அட்டசித்தி *aṭṭa-šitti,* பெ.(n.) ஒக வழியைக் கடைப்பிடித்த சித்தர்கள் அடையும் எட்டுவகைப் பேறுகள் (பலன்கள்); the eight kinds of siddhis or super human powers attained by Siddhars eddicted to yoga practice.

த.வ. எண்பேறு.

[அட்ட(ம்) + சித்தி.]

[Skt. aṣṭn>த. அட்ட(ம்).]

செ → செத்து → சித்து → சித்தி> **Skt.**siddha.

அட்டசித்துக்குளிகை *aṭṭa-šittu-k-kuḷigai,* பெ.(n.) எண் பெரும் பேறு (அட்டமா சித்தி)களை அடைவதற்கு மூலமாகச் சித்தர்கள் பயன்படுத்தும் சாரணை தீர்க்கப்பட்ட ஒரு இதளிய (இரச)க் குளிகை;

a kind of mercurial pill sufficiently animated and used by Siddhars with a view to help them in exercising the eight super human powers attained by them (சா.அக.).

த.வ. எண்பேற்றுக்குளிகை.

[அட்டம் + சித்து + குளிகை.]

[Skt. aṣṭan>த. அட்ட(ம்).]

செ → செத்து → சித்து > **Skt.** siddhi

குளம்→ குளிகை > **Skt.** gulikā.

அட்டசுபம் *aṭṭa-šubam,* பெ.(n.) எண்வகை மங்கலப் பொருள் (யாழ். அக.); the eight auspicious objects.

த.வ. எண்மங்கலம்.

[Skt. aṣṭan + šubha → த. அட்டசுபம்.]

அட்டசூரணம் *aṭṭa-šūraṇam,* பெ. (n.) எல்லாவகை வளிநோய்களுக்கும் கொடுக்கப்படும் 1. திரிகடுகு, 2. பருத்தி விதை, 3. கழற்சிப் பருப்பு, 4. பெருங்காயம், 5. வளையலுப்பு, 6. இந்துப்பு, 7. கல்லுப்பு, 8. கருவேம்பு ஆகிய எண்வகைச் சரக்குகள் சேர்ந்த மருந்துப்பொடி; a powdered mixture consisting of eight drugs viz. 1. traid (of dry ginger pepper and long pepper). 2. cotton seed. 3. bondue sead. 4. asafoetida. 5. glass gall (felvitriol) 6. rock salt. 7. seasalt 8. black neem, a good remedy for all kinds of rheumatic affections and other disorders of vayu, if given onixed in proper mediams such as honey, ghee etc., as prescribed (சா.அக.).

த.வ. எண்பொடி.

[Skt. aṣṭan+cūrṇa> த. அட்டசூரணம்.]

அட்டசூலை *aṭṭa-šūlai,* பெ.(n.) 1. எட்டுவகை சூலைநோய்; eight kinds of diseases characterised by piercing or darting pain. 2. எரு (மல) வாயில் கடுத்துச் சிறுநீர் துளித்துளியாய் விழும் ஒரு சூலைநோய்; a servere darting pain in the rectam attended with the passing of urine in drops (சா.அக.).

த.வ. எண்சூலை.

[அட்ட(ம்) + சூலை.]

[Skt. aṣṭan>த. அட்ட(ம்).]

சூல் > சூலை >**Skt.** sūlā.

அட்டதந்திரவாதம் *aṭṭa-tandira-vādam,* பெ. (n.) உணர்ச்சியற்று, வாய் நீர் கசந்து, பற்கிட்டி, மூச்சற்றுப் பிணத்தைப் போற்கிடக்கச் செய்யும் ஓர் ஊதை (வாத) வளி நோய்; a nervous affection marked by loss of consciousness, bitter taste, lock jaw, breathlessness, and prostration, *Asthenia* (சா.அக.).

அட்டதளம் *aṭṭa-taḷam,* பெ.(n.) எட்டு இதழ்களையுடைய தாமரைப் பூ; a lotus flower with eight petals (சா.அக.).

த.வ. எட்டிதழ்.

[அட்டம் + தளம்.]

[Skt. aṣṭan>த. அட்டம்]

தள் → தளம் > **Skt.** *tala.*

அட்டதற்கம் *aṭṭa-daṟgam,* பெ.(n.) இலவங்கப்பூ; the flower of the clove tree, *Carophyllum aromaticus* (சா.அக.).

அட்டதா *aṭṭadā,* பெ.(n.) 1. எட்டுப்பிரிவு; eight sections or divisions. 2. எண்மடங்கு; eight times (சா.அக.).

[Skt. aṣṭan>த. அட்டதா.]

அட்டதாதிகம் *aṭṭa-tādigam,* பெ.(n.) சிறுகொன்றை; small leaved cassiatree, *Cassia fistvea* (சா.அக.).

அட்டதாது *aṭṭa-tādu,* பெ.(n.) வெள்ளி, பொன், செம்பு, இரும்பு, வெண்கலம், தராவங்கம், வெள்ளடம் (துத்தநாகம்) ஆகிய எண்வகை மாழை (உலோகம்)கள்; the eight kinds of minerals such as gold, silver, copper, iron, bellmetal, the dark metal (of copper and spelter), lead or tin and zinc (சா.அக.).

த.வ. எண்மாழை.

[அட்டம் + தாது.]

[Skt. aṣṭan>த. அட்ட(ம்).]

அட்டதாய் *aṭṭatāy,* பெ.(n.) சரமூலம், கொடிவேலி, எருக்கு, நெருஞ்சில், மாவிலங்கு, முதலிய தாயைப் போன்ற எண்வகை மூலிகைகள்; the eight kinds of mother drugs such as laburnam, lead wort, mudar, calrop, garlic pear, etc. (சா.அக.).

[அட்டம் + தாய்.]

[Skt. aṣṭan>த. அட்டம்.]

தம் + ஆய் > தாய்.

அட்டதானப்பரிட்சை *aṭṭadāṉa-p-paritcai,* பெ.(n.) மருத்துவர்கள், நோயாளிகளின் நோய் நாடிப் பார்க்கும் போது நாடி, முகம், மலம், சிறுநீர் (அமுரி), கண், நாக்கு, உடம்பு, குரல் (தொனி), முதலியவற்றைக் கவனித்து தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகள்; the examination of a patient in the following eight points with a view to correct diagnosis namely pulse, facial expression, stool, urine, eyes, tongue, the body in general and the voice, objective signs (சா.அக.).

த.வ. எட்டிடத்தெரி.

[அட்டம்+தானம்+பரிட்சை.]

[Skt. aṣṭan > த. அட்ட(ம்), Skt. parikṣit> த. பரிட்சை.]

தா→தானம் > **Skt.** *tāna.*

அட்டதானம் *aṭṭadāṉam,* பெ. (n.) உடம்பிலுள்ள எட்டு இடங்கள்; the eight situations in the body, viz, pulse, face, faces, urine, eye, tongue, body and voice (சா. அக.).

த.வ. எட்டிடம்.

[அட்ட(ம்) + தானம்.]

[Skt. aṣṭan > த. அட்டம்]

தா→தானம் > **Skt.** *tāna.*

அட்டதிக்கயம் *aṭṭa-tikkayam,* பெ.(n.) எண்திசைகளில் காவல் புரியும் யானைகள்; elephants guarding the eight points of the compass.

த.வ. எண்திசையானை.

[அட்டம் + திக்கு + கயம்.]

[Skt. aṣṭan> த. அட்டம்.]

கய>கயம் > **Skt.** *gaja.*



அட்டதிக்கு *aṭṭa-tikku,* பெ.(n.) எண்திசை; the eight points of the compass.

த.வ. எண்டிசை.

[அட்டம் + திக்கு.]

[Skt. aṣṭan> த. அட்டம்.]

அட்டதிக்குப்பாலகர் *aṭṭa-tikku-p-pālagar,* பெ.(n.) எட்டுத் திசைகளைக் காப்பதாக வடநூலார் கருதும் இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், வடகீழ் திசையோன் (ஈசானன்) முதலானோர்; regents of the eight points of the compass, as world.

த.வ. எண்திசைக்காவலர்.

[அட்ட + திக்கு + பாலகர்.]

[Skt. aṣṭan > த. அட்ட(ம்). Skt. pālaka > த. பாலகர்.]

அட்டநவகண்டம் *aṭṭanava-kaṇḍam*, பெ.(n.) பழு வெலும்பு; rib-bone (சா.அக.).

அட்டநாகபந்தம் *aṭṭa-nāga-pandam*, பெ.(n.) சித்திரபா வகை; metrical composition which is fitted into a diagram representing eight snakes.

[அட்டம் + நாகம் + பந்தம்.]

[Skt. aṣṭan > த. அட்டம்.]

நகர்→நாகம் > Skt. nāga.

அட்டபதபத்திரம் *aṭṭapada-paṭṭiram*, பெ.(n.) பொற்கூடு; gold leaf (சா.அக.).

அட்டபந்தம் *aṭṭa-pandam*, பெ.(n.) கடவுள் சிலைகள் அசைவற்றிருக்கும்படி அடியிடத்துச் சாத்தப்படும், ஒரு வகைக் கலவைச்சாந்து; a kind of prepared cement. used to fix the stone idol firmly at its base.

[அட்ட + பந்தம்.]

[Skt. aṣṭan > த. அட்டம்.]

பற்று→பத்து→ பந்து→பந்தம் > Skt. bandha.

அட்டபந்தனம் *aṭṭa-pandaṉam*, பெ.(n.) தீங்குவராமல் தடுப்பதற்குத் திக்குத் தேவதைகளை மந்திரத்தால் எண் திசைகளிலும் நிறுத்துகை (சிந்தா. நி. 75.); posting by incantations the regents of the eight cardinal points round a place to ward of evil.

த.வ. எண்கட்டு.

[அட்டம் + பந்தனம்.]

[Skt. aṣṭan > த. அட்டம்.]

பந்தம் > Skt. bandha→bandhana.

அட்டபரிசம் *aṭṭa-parišam*, பெ.(n.) **அட்டமெய்ப் பரிசம்** பார்க்க; see *aṭṭa-mey-p-parišam. தட்டல், பற்றல், தடவல், தீண்டல், குத்தல், வெட்டல், கட்டல், ஊன்றல் (பிங்.).*

த.வ. எண்வகைமெய்யுணர்வு.

[Skt. aṣṭan + sparišа > த. அட்டபரிசம்.]

அட்டபாதம் *aṭṭa-pādam*, பெ.(n.) 1. எட்டுக்கால் பூச்சி; any eight legged insect. 2. சிலந்திப்பூச்சி; the spider (சா.அக.).

த.வ. எண்காலி.

[Skt. aṣṭan > த. அட்டம்]

பதி→பதம்→பாதம் > Skt. pāda.



அட்டபாலகர் *aṭṭa-pālagar*, பெ.(n.) **அட்டதிக்குப்பாலகர்** பார்க்க; see *aṭṭa-tikku-p-p-pālagar. "அட்டபாலகரும் வசுக்களும்" (நல் பாரத. குமாரச். 103.).*

[Skt. aṣṭan + pālaka > த. அட்டபாலகர்.]

அட்டபிரமி *aṭṭa-pirami*, பெ.(n.) பெரும் பிரமி; a large species of பிரமி, a plant, *Gratiola monieri* (சா.அக.).

அட்டபுகைச்சொல் *aṭṭa-pugai-c-col*, பெ.(n.) ஆமணத்தி; a concretion found in the stomach and the intestines of some animals such as cow etc., bezoar (சா.அக.).

அட்டபுட்பம் *attaputpam,* பெ.(n.) 1. எண்வகை மலர்கள்; eight kinds of flowers used in daily worship. *"புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை" (புட்ப. 20).* 2. எண்வகை அறங்கள்; eight virtues necessary for mental worship. *"கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு" (ஆசாரிய).*

த.வ. எண்மலர்.

[Skt. astan + puspa>த. அட்டபுட்பம்.]

அட்டம்[1] *attam,* பெ.(n.) வழிபாட்டு வகை(R); a kind of obeisance.

[Skt. astan > த. அட்டம்.]

அட்டம்[2] *attam,* பெ.(n.) எட்டு; eight (சா.அக.).

[த. எட்டு>Skt. astan > த. அட்டம்.]

அட்டம்விதை *attam-vidai,* பெ.(n.) வாதுமைப் பருப்பு; almond kernels (சா.அக.).

அட்டமக்குறி *attama-k-kuri,* பெ.(n.) நோயாளிகளிடம் கவனிக்க வேண்டிய எட்டுவகைக் குறிகள்; the eight symptoms to be studied in a patient before treatment examination of 1. hand (pulse), 2. the two eyes, 3. facial expression, 4. condition of teeth, 5. condition and colour of the tongue, 6. faeces, 7. urine, 8. the body as a whole.

த.வ. எண்குறி.

[அட்டமம் + குறி]

[Skt. astan>த. அட்டமம்.]

குல்→குறு→குறி.

அட்டமகசித்துக்குளிகை *attamagacittu-k-kuligai,* பெ.(n.) எட்டு முறை சாரணை தீர்ந்த ஈரப்பதமான இதளியக் குளிகை; a mercurial pill animated eight times and endowed with the power of taking one through the etheric region (சா.அக.).

[அட்டமக+சித்து+குளிகை.]

[Skt. astamaka>த. அட்டமக(ம்).]

செத்து→சித்து > Skt. cit.

குளம்→குளிகை>Skt. gulikā.

அட்டமகாரோகம் *attamagā-rōgam,* பெ.(n.) **அசாத்தியரோகம்** பார்க்க; see *asāttiya-rōgam* (சா.அக.).

[அட்ட+மகா+ரோகம்.]

[Skt. asta>த.அட்ட.]

[மா>Skt. mahā > த.மகா.]

அட்டமங்கலம் *atta-mankalam,* பெ.(n.) 1. எண்வகை மங்கலப் பொருள் (பிங்.); the eight auspicious objects. *"கவரி, நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, பதாகை, இணைக்கயல்"* 2. எட்டுறுப்பில் வெண்மை யுடைய குதிரை (திருவாலவா. 28, 68.) horse which has auspicious white marks on its chest, its four hoofs, tail, face and head. 3. சிற்றிலக்கிய வகை (இலக்.வி.843.); a benedictory poem of eight stanzas in *āsiriyaviruttam* metre.

த.வ. எண்மங்கலம்.

[அட்டம்+மங்கலம்.]

[Skt. astan>த. அட்டம்.]

[மங்கல்→மங்கலம்>Skt. mangala.]

அட்டமச்சனி *attama-c-cani,* பெ.(n.) நிலவு (சந்திர) நல்லோரைக்கு எட்டாமிடத்து நிற்குங் காரி (சனி); (Astrol) saturn in the eighth house from that of the *sandira-lakkinam,* in which its influence is deemed most malignant.

த.வ. எட்டாங்காரி.

[Skt. astama + sani> த. அட்டமச்சனி.]

அட்டமசுத்தி *attama-sutti,* பெ.(n.) கொண்ட நல்லோரைக்கு எட்டாமிடத்து, எந்தக் கோளுமில்லா திருக்கை (விதான. மைந்தர்வி. 13); (Astrol) eighth house from a specified lagna being unoccupied by any planet.

அட்டமம் *aṭṭamam,* பெ.(n.) எட்டாவது; eighth sign or place or position. *"ஒத்தவுதயத்துக் கட்டமத்தே நிற்கு மோரதிபன்" (விதான. குணா. 87.).*

[Skt. aṣṭama > த. அட்டமம்.]

அட்டமாசித்தி *aṭṭamā-šitti,* பெ.(n.) எண்பெரும்பேறு; the eight super natural powers altainable by yoga.

[அட்டம் + மா + சித்தி.]

[Skt. aṣṭan>த. அட்டம்.]

சித்து→சித்தி.

அட்டமாசித்திமூலி *aṭṭamā-šitti-mūli,* பெ.(n.) 1. அட்டகரும சித்தி, இழுத்தல், ஏவுதல் முதலிய எட்டுவகை மந்திரங்களை ஏற்குங்கால் பயன்படுத்தும் மூலிகைகள்; roots of plants possessing psychic virtues, used in the performance of the eight kinds of magic. 2. மயக்குவதற்காகப் பயன்படும் வடக்கே ஓடிய சங்கம் வேர்; the root of monetia branched out towards the north, used in magic to bring a woman. or an enemy to one's side. 3. எண்வகைப் பேறுகளைப் பெற வேண்டி பயன்படுத்தும் மந்திர ஆற்றல் வாய்ந்த மூலிகைகள்; psychic plants used in the attainment of the eight superhuman powers (சா.அக.).

த.வ. எண்பேற்றுமூலி.

[அட்டம் + மா + சித்தி + மூலி.]

[Skt. aṣṭan > த. அட்டம்.]

அட்டமாந்தம் *aṭṭa-māndam,* பெ.(n.) குழந்தைகளுக்குச் செரியாமையினால் உண்டாகும் எட்டுவகை மாந்த நோய்கள்; the eight kinds of children's diseases arising from indigestion. viz. 1. செரியாமாந்தம்; indigestion. 2. போர்மாந்தம்; visceral obstruction. 3. மலடிமாந்தம்; disgust of milk. 4. பெரு மாந்தம்; flux and cold. 5. வளி (வாத) மாந்தம்; inflation. 6. சுழிமாந்தம்; curling of eyes. 7. வலி மாந்தம்; convulsions or fits. 8. கணமாந்தம்; dysentery and fever (சா.அக.).

த.வ. எண்மாந்தம்.

[அட்டம் + மாந்தம்.]

[Skt. aṣṭan>த. அட்டம்.]

மந்தம்→மாந்தம் > Skt. *mānda.*

அட்டமி *aṭṭami,* பெ.(n.) எட்டாம் நாள் (திதி); the eighth tithi. *"அட்டமியு மேனை யுவாவும்" (ஆசாரக். 48.).*

த.வ. எண்மி.

[Skt. aṣṭami > த. அட்டமி.]

அட்டமிகை *aṭṭamigai,* பெ.(n.) அரைப்பலம்; a measure of weight = 1/2 palam. *"தவித்தனிக்கங் கட்டமிகை வெவ்வேறாக" (தைலவ. தைல. 54.).*

[Skt. aṣṭamikā > த. அட்டமிகை.]

அட்டமூர்த்தம் *aṭṭa-mūrttam,* பெ.(n.) சிவனின் எண்வகை வடிவம்; the eight forms of *Šivaṉ.* (பூமி, நீர், நெருப்பு, வளி, வானம், சூரியன், நிலா, இயமானன்) *"வருமட்ட மூர்த்தமாம் வாழ்வே" (கந்தர் கலி. 65.).*

த.வ. எண்மேனி.

[Skt. aṣṭan + mūrta> த. அட்டமூர்த்தம்.]

அட்டமூர்த்தி *aṭṭa-mūrtti,* பெ.(n.) சிவன் (தேவா. 53, 8.); *Šivaṉ* as having *aṭṭa-mūrttaṉ,* q.v.

[Skt. aṣṭan + mūrti>த. அட்டமூர்த்தி.]

அட்டமூலம் *aṭṭamūlam,* பெ.(n.) எட்டுவகை மூலிகைகள்; the name given for a group consisting of the following eight drugs, viz. 1. according of Tamil siddha medicine either group (a) or (b) (a) 1. கண்டு பாரங்கி; cleodendron serratum. 2. காஞ்சொறிவேர்; tragia involucrata (root of) 3. கோரைக் கிழங்கு; cyperus rotandus. 4. சித்திரமூலம்; plumbago rosea; alias p. zeylanica.

5. சுக்கு; dry ginger. 6. நன்னாரி; sarasaparilla. 7. செவ்வியம் (மிளகு); black pepperi 8. அரத்தை; galanga (சா.அக.).

த.வ. எண்மூலி.

[அட்டம் + மூலம்.]

[Skt. aṣṭan>த. அட்ட(ம்).]

அட்டமெய்ப்பரிசம் *aṭṭa-mey-p-parišam,* பெ.(n.) சிற்சில செயல்களினால் ஏற்படும் உடம்பின் எட்டு வகையான உணர்ச்சிகள்; the eight sensations of the body arising from eight different kinds of actions, such as:- 1. ஊன்றல்; pressing. 2. கட்டல்; binding. 3. குத்தல்; stabbing or pricking. 4. தடவல்; rubbing. 5. தட்டல்; cutting. 6. பற்றல்; seizing. 7. வெட்டல்; cutting. 8. தீண்டல்; touching (சா.அக.).

த.வ. எண்மெய்யுறல்.

[அட்டம் + மெய் + பரிசம்.]

[Skt. aṣṭan>த. அட்டம், Skt.spariša> த. பரிசம்.]

அட்டயோகம்[1] *aṭṭa-y-ōgam,* பெ.(n.) எண்வகை ஒக நிலை; *yōga-consisting* eight forms of disiclpline *"மெய்ஞ்ஞானந் தரு மட்டயோகத் தவமே" (கந்தர்கலி. 65.).*

த.வ. எண்ஓகம்.

[Skt. aṣṭan + yōga> த. அட்டயோகம்.]

அட்டயோகம்[2] *aṭṭa-yōgam,* பெ.(n.) அரப்பொடி; iron filings (சா.அக.).

அட்டலோகபற்பம் *aṭṭalōga-parpam,* பெ.(n.) எண்வகை மாழைகளின் கலப்பு; calcined compound of eight metals. *எண் வகை மாழைகளாவன: பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம், சங்கு, ஈயம், துத்தநாகம்.*

த.வ. எண்மாழைப் பொடிப்பு.

[Skt. aṣṭan + lōha + bhasman > த. அட்டலோகப்பற்பம்.]

அட்டலோகம் *aṭṭa-lōgam,* பெ.(n.) **அட்டதாது** பார்க்க; see *aṭṭa-tādu* (சா.அக.).

த.வ. எண்மாழை.

[Skt. aṣṭan + lōha> த. அட்டலோகம்.]

அட்டவசியம் *aṭṭa-vašiyam,* பெ.(n.) **அட்டமாசித்தி** பார்க்க; see *aṭṭamā-šitti* (சா.அக.).

த.வ. எண்வயம்.

[அட்டம் + வசியம்.]

[Skt. aṣṭan>த. அட்ட(ம்).]

வயின்→வயம்→வசம்→வசி→வசியம்.

அட்டவசுக்கள் *aṭṭa-vašukkaḷ,* பெ.(n.) அனலன் முதலான எண்வகைக் குழு தெய்வங்கள்; the eight vasus, a class of deities.

த.வ. எண்தேவர்.

[அட்டவசு + கள்.]

[Skt. aṣṭan + vasu>த.அட்டவசு.]

அட்டவத்தனாதி *aṭṭa-vattaṉādi,* பெ.(n.) கடுகு; mustard (சா.அக.).

அட்டவத்தி *aṭṭa-vatti,* பெ.(n.) நெருஞ்சி, யானைநெருஞ்சில்; a thorny plant; large caltrop pedalium murex (சா.அக.).

அட்டவர்க்கம் *aṭṭa-varkkam,* பெ.(n.) **அட்டவருக்கம்** பார்க்க; see *aṭṭa-varukkam* (சா.அக.).

[Skt. aṣṭan+varga> த. அட்டவர்க்கம்.]

அட்டவருக்கம் *aṭṭa-varukkam,* பெ.(n.) எண்வகை மருந்துச்சரக்கு; a group of eight drugs viz- 1. இந்துப்பு; rock-salt-*Sodil chloridam.* 2. ஓமம்; bishop's weed-*Sison Ammi.* 3. கருஞ்சீரகம்; black cumin-*Negella sativa.* 4. சீரகம்; cumin seed-*Cuminum cyminum.* 5. சுக்கு; dry gingerzingiber officinales. 6. திப்பிலி; long pepper-*Piper longum.* 7. பெருங்காயம்; asafoetida-*Feraula foetida.* 8. மிளகு; pepper piper Nigram (சா.அக.).

த.வ. எண்சரக்கு.

[Skt. aṣṭan + varga>த. அட்டவருக்கம்.]

அட்டவருக்கு *atta-a-varukku,* பெ.(n.) **அட்டவருக்கம்** பார்க்க; see *atta-varukkam* (சா.அக.).

[Skt. astan+varga>த. அட்டவருக்கு.]

அட்டவிகாரம் *atta-vigāram,* பெ.(n.) மாந்தர்க்குண்டான எண்வகைத் தீய குணங்கள்; the eight kinds of bad qualities in man viz.:- 1. காமம்; lust. 2. உட்பகை (குரோதம்); hatred. 3. பித்து; madness. 4. பொறாமை (மாற்சரியம்); envy. 5. இவறன்மை (உலோபம்); avarice. 6. பெரு வேட்கை (மோகம்); sensuality. 7. விரைவு; severity. 8. இடும்பு; pride (சா.அக.).

த.வ. எண்குணக்கேடு.

[Skt. astan +vi-kāra> த. அட்டவிகாரம்.]

அட்டவித்தியேசுவரர் *atta-vittiyēšu-varar,* பெ.(n.) அயனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திருமூர்த்தி, நீலகண்டர், சிகண்டி என எண்வகையராய் படைப்புத் தொழிலை இறைவனேவற்படி நடத்துவோர் (சி. சி. 8, 2); the eight agents who perform the *pañša-kiruttiyam* under the orders of *išvara*, viz., *anandar, sūkṣmar, šivōttamar, ēganēlliram, tirimurtti, nīlakaṇdar, šikaṇdi.*

த.வ. எண்கருமம்.

[Skt. astan + vidyēšvara> த. அட்டவித்தியேசுவரர்.]

அட்டவிதபரீட்சை *atta-vita-parīttcai,* பெ.(n.) நோயாளியின் உடல் தொடுவுணர்வு அல்லது முகம், குரல், கண், மலம், சிறுநீர், நாநாடியாகிய எட்டனையும் தீர ஆய்வு செய்து நோயை அறிகை; diagnosis of a disease, by examining the state of *udal sparišam* or mugam, kural, *kan,* malam, *mūttiram, nānādi,* of a patient.

த.வ. எண்வகை நோட்டம்.

[Skt. astan+ vidhā+parīksā>த.அட்டவிதபரீட்சை.]

அட்டவீரட்டம் *atta-vīrattam,* பெ.(n.) எட்டு வீரட்டாணப் பதிகள்; eight places celebrated as the scenes of ***Šiva's*** exploits. (கண்டியூர், கடவூர், அதிகை, வழுவூர், பறியலூர், கோவலூர், குறுக்கை. விற்குடி.).

[அட்ட(ம்) + வீரட்டம்.]

[Skt. astan>த. அட்ட(ம்).]

*வீரம்+தானம் >வீரட்டானம்>**Skt.** vira-sthāna.*

அட்டவூறு *atta-v-ūru,* பெ.(n.) சருச்சரை, சீர்மை, தண்மை, திண்மை, நொய்ம்மை, மென்மை, வன்மை, வெம்மை என எண்வகைப்பட்ட உணர்ச்சி (யாழ். அக.); the sensation to touch, of eight kinds, viz., *šaruccrai, širmai, taṇmai, tiṇai, noymmai, meṉmai, vaṉmai, vemmai.*

த.வ. எண்உணர்வு.

[அட்ட(ம்) + ஊறு.]

[Skt. astan>த. அட்டம்.]

உல் → உறு → ஊறு.

அட்டவெச்சம் *atta-v-eccam,* பெ.(n.) உடம்பிற் காணப்படும் எட்டுவகையான குறைபாடுகள்; the eight kinds of defects found in the body viz. குருடு, செவிடு, ஊமை, பேடு, இருகை, இருகால் முடம்; blindness, deafness, dumbness, impotency, lameness, lacking of two hands and two legs (சா.அக.).

த.வ. எண்குறை, எண் ஒச்சம்.

[அட்ட(ம்) + எச்சம்.]

[Skt. astan>த. அட்ட(ம்).]

எஞ்சு→எச்சு→எச்சம்.

அட்டவெற்றி *atta-verri,* பெ.(n.) வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை என வெற்றியைத் தரும் எட்டுவகைப் போர்கள் (யாழ். அக.); the eight kinds of fight leading to victory *vetci, karandai, vañji, kāñji, nocci, uliñai, tumbai, vāgai.*

த.வ. எண்வகைப் போர்.

[அட்ட(ம்) + வெற்றி.]

[Skt. astan > த. அட்டம்.]

வெல்→வெற்றி.

அட்டன் *aṭṭaṉ,* பெ.(n.) எண் வடிவமான சிவபெருமான் (தேவா. 855, 8.); *Śivaṉ,* as having *aṭṭa-mūrttam* q.v.

த.வ. எண்வடிவன்.

[Skt. aṣṭan > த. அட்டன்.]

அட்டனாதிப்பூடு *aṭṭaṉādi-p-pūḍu,* பெ.(n.) பெருந்தும்மட்டி; a large variety of bitter apple cucumis colocynthis (சா.அக.).

அட்டாங்கசங்கிரகம் *aṭṭāṅga-śaṅgiragam,* பெ.(n.) இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் 'வாக்படாச்சாரி' எழுதிய ஓர் ஆயுள் வேதநூல்; a work on medicine written about 2000 years ago by Vakbhatachary, an authority on ayurveda (சா.அக.).

[Skt. aṣṭāṅga+śaṅgraha>த.அட்டாங்க சங்கிரகம்.]

அட்டாங்கம் *aṭṭāṅgam,* பெ.(n.) உடம்பிலுள்ள எண் வகை உறுப்புகள்;– the eight members of the body. viz- தலை, ஒன்று; one head. கை, இரண்டு; two hands. கால், இரண்டு; two legs. செவி, இரண்டு; two ears. மார்பு அல்லது மெய், ஒன்று; chest or the trunk (சா.அக.).

த.வ. எண்ணுறுப்பு.

[Skt. aṣṭāṅga > த. அட்டாங்கம்.]

அட்டாங்கநமக்காரம் *aṭṭāṅka-namakkāram,* பெ.(n.) இருகால், இருகை, இருதோள், மார்பு, நெற்றி என்ற எட்டுஉறுப்புகள்; the eight limbs of the body, viz., feet, hands, shoulders, breast and forehead.

த.வ. எண்ணுறுப்பு தொழுகை.

[Skt. aṣṭāṅga + namaskāra>த. அட்டாங்க நமக்காரம்.]

அட்டாங்கயோகம் *aṭṭāṅga-yōgam,* பெ.(n.) மூச்சுக்கட்டுப்பாடு (பிராணயம்) இயமம், நெறி(நியமம்), இருக்கை (ஆசனம்), புலனடக்கம் (பிரத்தியாகாரம்), ஊழ்கம் (தியானம்), நினைவொருமை (தாரணை), அமைதி (சமாதி) ஆகிய எட்டு ஓகப் பயிற்சி நிலைகள்; the eight told yoga precises consisting of the restraint of the appeties, religious observances, position or porture of the body, breathing in a particular way, restraining the senses, silent meditation, fixing the mind on a member of the body, silen comtemplative worship.

த.வ. எண்வகை ஓகம்.

[அட்டாங்க + ஓகம்.]

[Skt. aṣṭāṅga > த.அட்டாங்கம்.]

ஓகம் > **Skt.** *yōga.*

அட்டாசிக்காய் *aṭṭāśi-k-kāy,* பெ.(n.) சிறு தும்மட்டிக்காய்; a small species of bryonia; bitter apple, *Cucumis colocynthus* (சா.அக.).

அட்டாட்சரவாசி *aṭṭāṭcara-vāśi,* பெ.(n.) 1. எட்டு வகை அக்கர நோய்களைக் (ரோகங்களைக்) குணப்படுத்துவது; that which cures the eight kinds of aphathac. 2. ஆடாதோடை; a small shrub; winter cherry, *adathoda vasica* (சா.அக.).

[Skt. aṣṭā-akṣara+ vāsin>த. அட்டாட்ச வாசி.]

அட்டாதசகணம் *aṭṭātaśa-gaṇam,* பெ.(n.) பதினெண் கணம்; the eighteen classes of celestial hosts.

[அட்டாதச + கணம்.]

[Skt. aṣṭādasan > த. அட்டாதசம்.]

குள்→கண→கணம் > **Skt.** *gaṇa.*

அட்டாதசகுணம் *aṭṭādaśa-kuṇam,* பெ.(n.) உடம்பிற்குரிய பதினெண் குணங்கள்; the eigteen qualities attributed to the human

system viz. 1. வியப்பு; surprise. 2. இன்பம்; pleasure. 3. உவகை; delight. 4. உறக்கம்; sleep. 5. துன்பம்; grief. 6. கையறவு; helplessess. 7. நரை; greyness. 8. நினைப்பு; thought. 9. நீர் வேட்டடல்; thirst. 10. நோய்; disease. 11. பசி; hunger. 12. அச்சம்; fear. 13. பிறப்பு; birth. 14. கொள்கை, நெளி; self conceit. 15. சாவு; death. 16. வியர்த்தல்; perspiration. 17. வெகுளி; anger. 18. வேண்டல்; desire or avarice (சா.அக.).

த.வ. பதினெண்குணம்.

[அட்டாதச + குணம்.]

***[Skt.** aṣṭādaśan > த. அட்டாதசம்.]*

கொள்→கொணம்→குணம் > **Skt.** *guṇa.*

அட்டாதசம் *aṭṭādaśam,* பெ.(n.) பதினெட்டு; eighten (சா.அக.).

***[Skt.** aṣṭādaśan > த. அட்டாதசம்.]*

அட்டாதசமூலம் *aṭṭādaśamūlam,* பெ.(n.) பதினெட்டு வகை மூலிகை; the eighteen kinds of medicinal plants viz. 1. எருக்கு; giant swallow wort *Calotropis gigantea.* 2. கண்டங்கத்திரி; yellow berried night shade, *Solanum zanthocarpam.* 3. கரந்தை; sweet basil, *Olimum Basilicum.* 4. கறிமுள்ளி; black thorny shrub *Solanum indicam.* 5. குமிழ்; a thorny shrub, *Gmelina arborea.* 6. கொடிவேலி; lead wort, *Plumbago-zeylanica.* 7. சங்கங்குப்பி; a shrub, *Valkameriainermis.* 8. சிற்றாமல்லி; small jasmina, *Jasminam fragrans.* 9. தழுதாழை; a plant, *cleodendron phlomoides.* 10. தூதுளை; a thorny plant, *Solanum trilobatam.* 11. நன்னாரி; Indian sarasaparilla *Hemidesmus indicas.* 12. நொச்சி; willo-leaves *Justicia vitex negando.* 13. பாதிரி; trumpet flower tree *Bignomia chelonoides.* 14. பேராமல்லி; large jasmine, *Jasminam undulatam.* 15. மாலிங்கம்; a tree, garlic pear, *Crataeve Roxbarghil.* 16. முருங்கை; dramstick tree, *Anoma moringa.* 17. வில்வம்; tree, *Crataeva marmelos* alias *Feronia pellucida.* 18. வேர்க்கொம்பு; dried ginger, *Zingiber officinale* (சா.அக.).

த.வ. பதினெண்மூலிகை.

[அட்டாதசம் + மூலம்.]

***[Skt.** aṣṭādaśan>த. அட்டாதசம்.]*

அட்டாதுட்டி *aṭṭā-duṭṭi,* பெ.(n.) அடாவடி; perversity, abusive language. *"அட்டாதுட்டிகள் பேசி"* ***(இராமநா. ஆரணி. 9.)*** (இவ.).

தெ. அட்டாதிட்டி.

த.வ. முறைகேடு, வக்கரிப்பு.

அட்டாதுட்டம் *aṭṭā-tuṭṭam,* பெ.(n.) **அட்டாதுட்டி** (வின்.) பார்க்க; see *aṭṭātuṭṭi.*

தெ. அட்டாதிட்டமு.

அட்டாபாதம் *aṭṭā-pādam,* பெ.(n.) 1. எட்டுக் கால் பூச்சி; eight legged insect. 2. சிலந்திப் பூச்சி; spider. 3. பொன்; gold. 4. சரபப் புள்; a fabulous eight legged bird supposed to have the faculty of attacking a lion (சா.அக.).

த.வ. எண்காலி.

[அட்டா + பாதம்.]

***[Skt.** aṣṭan>த. அட்டா.]*

பதி→பதம்→பாதம் > **Skt.** *pāda.*

அட்டாமுகம் *aṭṭāmugam,* பெ.(n.) 1. இகழ்ச்சி, கவலை, ஐயம் இவற்றாற் கோணிய முகம்; face turned aside in contempt, distraction or perplexity. 2. சுளித்தமுகம்; wry face.

த.வ. கோணல்முகம்.

[அட்டா + முகம்.]

***[Skt.** aṣṭa>த. அட்டா.]*

முகம் > **Skt.** *mukha.*

அட்டாவதானம் *aṭṭāvatāṉam,* பெ.(n.) ஒரே நேரத்தில் எண்வகை வினைகளில் நினைவு

செலுத்துகை; art of attending to eight matters at a time. *"அட்டாவதானமுந் தொல்காப்பியமு மகப்பொருளும்" (தனிப்பா. i, 223, 13.).*

த.வ. எண்நினைவாற்றல், கண்கவனகம்.

[Skt. aṣṭan+avadhāna>த. அட்டாவதானம்.]

அட்டாவதானி *aṭṭāvatāṉi,* பெ.(n.) ஒரே நேரத்தில் எட்டு வினைகளில் நினைவு செலுத்துபவர்; one skilled in the art of attending to eight matters at the time. *"அட்டாவதானி சொக்கன்" (தஞ்சைவா. உரைச்சிறப்.).*

த.வ. எண்கவனகர்.

[Skt. aṣṭan+avadhānin> த. அட்டாவதானி.]

அட்டி *aṭṭi,* பெ.(n.) அதிமதுரம்; wild liquorice-abrus precatorius (சா.அக.).

[Skt. yaṣṭi>த. அட்டி.]

அட்டிகதாகம் *aṭṭiga-dāgam,* பெ.(n.) **அதிமதுரம்** பார்க்க; see *adi-maduram.* (சா. அக.)

அட்டிகாலா *aṭṭi-kālā,* பெ.(n.) **அட்டிகதாகம்** பார்க்க; see *aṭṭiga-dāgam* (சா.அக.).

அட்டிதாமதம் *aṭṭi-tāmadam,* பெ.(n.) சிறுசீரகம்; cumin seed, *Cuminum cyminum* (சா.அக.).

அட்டிமதுசாரம் *aṭṭi-madu-šāram,* பெ.(n.) 1. அதிமதுரம்; liauorice a gulecrirrhiza glabra. 2. நாட்டு அதிமதுரம் அல்லது குன்றி வேர்; Indian liquorice root, *Abrus precatorius* (சா.அக.).

[Skt. yaṣṭi-madhukā > த. அட்டிமது.]

அட்டிமதுரம் *aṭṭi-maduram,* பெ.(n.) பூடுவகை (பு.வெ. 12, 8. உரை.); liquorice-plant.

த.வ. அதிமதுரம்.

[Skt. yaṣṭi-madhukā > த. அட்டிமதுரம்.]

அட்டிமதுரி *aṭṭi-maduri,* பெ.(n.) **அட்டிமதுசாரம்** பார்க்க; see *aṭṭi-madu-šāram* (சா.அக.).

[Skt. yaṣṭi+madhukā> த. அட்டிமதுரி.]

அட்டிமாமதி *aṭṭi-māmadi,* பெ.(n.) கரு நொச்சி; a black species of purification plant, *Justicia gendarussa* (சா.அக.).

அட்டியம் *aṭṭiyam,* பெ.(n.) **அதிமதுரம்** பார்க்க; see *adi-maduram* (சா.அக.).

[Skt. yaṣṭi>த. அட்டியம்.]

அட்டியோசம் *aṭṭi-yōšam,* பெ.(n.) அரப்பொடி; iron filings (சா.அக.).

அட்டிரபாணிதம் *aṭṭira-pāṇidam,* பெ.(n.) சிவப்புப் புளியம் பிரண்டை; a red species of sour wild vine, *Vitis setosa* (சா.அக.).

அட்டிரம் *aṭṭiram,* பெ.(n.) இலுப்பை; long leaved bassia, *Bassia longifolia* (சா.அக.).

அட்டிலம் *aṭṭilam,* பெ.(n.) வீக்கம்; swelling (சா.அக.).

[Skt. aṣṭā>த. அட்டிலம்.]

அட்டிலாரோகம் *aṭṭilā-rōgam,* பெ.(n.) **அட்டிலாவாதம்** பார்க்க; see *aṭṭila-vādam* (சா.அக.).

[Skt. aṣṭā + rōga>த. அட்டிலாரோகம்.]

அட்டிலாவாதம் *aṭṭilā-vādam,* பெ.(n.) தொப்புளின் கீழாகச் சிறுநீர்ப்பை, எருவாய்க்கிடையே காற்று தங்கி, அதிகரித்துச் சிறுகல்லைப் போல் சுமையாகவும், கெட்டியாகவுமுள்ள கட்டியை எழுப்பும் வளிநோய்; a disease in which the deranged and aggravated bodily vayu incarcerated or lodged in the region between the bladder and the anus, develops a thick lumpy tumour like a pebble, which is hard and non shifting in its character (சா.அக.).

த.வ. வளிநோய்க்கட்டி.

[Skt. aṣṭi + vāta> த. அட்டிலாவாதம்.]

அட்டீலிகம் *aṭṭīligam,* பெ.(n.) கல்; stone (சா.அக.).

அட்டீலிகாரோகம் *aṭṭīligā-rōgam,* பெ.(n.) ஆண்குறியில் புண்ணை (விரணத்தை)ப் பிறப்பித்து, அதில் குழி விழுந்து கல்லைப் போல்

கட்டியாக இருக்கும்படிச் செய்யும் ஒருவகைக் குய்யநோய்; a disease of the penis causing deep ulcers with hardened muscles all round it (சா.அக.).

த.வ. குய்யப்பிணி.

[Skt. asti + rōga>த. அட்டீலிகாரோகம்.]

அடஞ்சாதி-த்தல் *adan-šāti-,* 4 செ.கு.வி.(v.i.) வன்மங்கொள்ளுதல்; to maintain a stubborn, unyielding spirit of opposition.

[Skt. hatha+sad>த. அடஞ்சாதி-.]

அடத்தி *adatti,* பெ.(n.) 1. மொத்த வணிகம்; buying and selling in lots, wholesale. 2. வாசி (வின்.); premium for ready money. 3. தரகு (இ.வ.); commission or agency business.

[U. arhat > த. அடத்தி.]

அடத்திச்சீட்டு *adatti-c-cittu,* பெ.(n.) ஒரு செட்டியார் மற்றொரு செட்டிக்கு இவ்வளவு தொகைவரை கொடுக்கலா மென்று எழுதிக் கொடுக்குஞ் சீட்டு (இ.வ.); note given by one Chetti to another, showing the amount within which to draw upon him for funds in trading.

[அடத்தி + சீட்டு.]

[U. arhat > த. அடத்தி.]

அடதாளம் *ada-tālam,* பெ.(n.) தாளவகை (பரத. தாள. 23.); (Mus.) variety of time-measure.

[அட(ம்) +தாளம்.]

[Skt. ata>த. அடம்.]

தாள்→தாளம் > Skt. tāla.

அடந்தாளம் *adandālam,* பெ.(n.) தாளவகை (வின்.); (mus.) a time-measure

அடயோகம் *adayōgam,* பெ.(n.) ஒக வகை; kind of *yōga* involving several disciplinary exercises of a taxing nature. *"அடயோகத்தினால் வினை தொலைத்து" (திருக்காளத். பு. 18, 5.).*

[அட+ யோகம்.]

[Skt. hatha > த. அடம்.]

ஓகம் > Skt. yōga.

அடவாதி *adavādi,* பெ.(n.) 1. பிடிவாதக்காரன்; obstinate person. 2. தீராப்பகையுள்ளவன்; revengeful person.

[Skt. hatha-vādin > த. அடவாதி.]

அடாணா *adānā,* பெ.(n.) ஒரு பண்; (mus.) specific melody-type.

[U. adhānā > த. அடாணா.]

அடாத்தியம் *adāttiyam,* பெ.(n.) முறைகேடு (வின்.); impropriety, injustice.

[Skt. hathāt > த. அடாத்தியம்.]

அடாத்து *adāttu,* பெ.(n.) 1. வலக்காரம் (வின்); violence, force. 2. அவமதி (வின்.); insult, provocation. 3. வழியின்மை (இ.வ.); unjustifiableness.

[Skt. hathāt > த. அடாத்து.]

அடாலத்து *adālattu,* பெ.(n.) முறைமன்றம் (P.N.); court of justice.

த.வ. நயன்மன்றம்.

[U. adālat > த. அடாலத்து.]

அடாற்காரம் *adārkāram,* பெ.(n.) வலக்காரம்; that which is done by force, by violence. *"அடாற்காரத்தா லரிதாகப் பயிலுதலின்" (திருக்காளத். பு. 18, 10.).*

த.வ. வல்லந்தம்.

[Skt. hathātkāra > த. அடாற்காரம்.]

அடித்தி *aditti,* பெ.(n.) வணிக ஆணையாளர் (C.G.); mercantile correspondent or agent.

[U. arhat > த. அடித்தி.]

அடித்திவியாபாரம் *aditti-viyābāram,* பெ.(n.) மொத்த வணிகம் (C.G.); wholesale dealings.

[U. arhat+ Skt. vyāpāra> த. அடித்தி வியாபாரம்.]

அண்டக்கமர் *anda-k-kamar,* பெ.(n.) மண்டையோட்டின் பிளப்பு; fissure of the skull-cranial fissure (சா.அக.).

த.வ. மண்டைப்பிளப்பு.

[அண்டம் + கமர்.]

[Skt. anda> த. அண்ட.]

கவல் > கவர் > கமர்.

அண்டக்கல் *anda-k-kal,* பெ.(n.) 1. அண்டக்கல் எனப்படும் சிறு சுண்ணாம்புக் கற்கள்; (இது புரட்டாசி முதல், கார்த்திகைக்குள் உவர்நிலத்தில் இடுப்பளவு பள்ளம் தோண்டிப் பார்க்க, பூ நீறானது மாறிப் பல்லி அல்லது ஒணான் முட்டைகளைப் போலிருக்கும்) இதுவே an extensive group of secondary limestones compossed of rounded paricles like the eggs of reptiles-oolite. They are generally found 3 feet below the soil of fuller's earth between the months of September and November. 2. சிற்றண்டம், பேரண்டம், நடுவண்டம், ஆணைக்கல், காரசாரக்கல், நடுமையக் கல்லெனப் பல வகையாய் குறியீட்டில் சொல்லப்படும் மண்ணில் உண்டாகும் ஒரு நஞ்சுக்கல்,; a speices of limestone composed of globules clustered together and found underneath the calcareous soil. It is known by several technical names as mentioned above (சா.அக.).

[அண்ட(ம்) + கல்.]

[Skt. anda > த. அண்டம்.]

உல் > குல் > கல்.

அண்டக்கல்லுற்பத்தி *anda-k-kall-ur-patti,* பெ.(n.) சிறு சுண்ணாம்புக் கற்களின் பிறப்பு; the production of the secondary limestones in nature or by a natural process - of life formation (சா.அக.).

[அண்டம் + கல் +உற்பத்தி.]

[Skt. anda>த. அண்டம், Skt. ut-patti> த.உற்பத்தி.]

அண்டக்கழலை *anda-k-kalalai,* பெ.(n.) 1. விதைப்பகுதியில் வரும் ஒருவகைக் கழலைக் கட்டி; a tumour of the testicle-orchidoncus. 2. தலை மண்டையில் வரும் ஒரு கழலைக் கட்டி; a circumscribed edema of the scalp associated with inflammation of bone or marrow of the skull bones-puffy tumour. 3. பிடுக்கில் உண்டாகும், ஒரு வகைக் கொழுப்புக் கழலை; a sebaceous orgreasy cyst of the scrotum; atheroma of the scrotum scrotum-lapillosum; c.f, Liparocele (a fatty scrotal tumour) (சா.அக.).

த.வ. கழலைக்கட்டி.

[அண்டம் + கழலை.]

[Skt. anda > த. அண்ட(ம்).]

கழல்>கழலை.

அண்டகடம் *andakadam,* பெ.(n.) **அண்ட கடாகம்** (கந்தபு.அண்ட.18) பார்க்க; see *andakadāgam.*

[அண்டம் + கடம்.]

[Skt. anda > த. அண்டம்.]

கடு > கடம். கடு = கடுமையான ஓடு. அம்– பருமை (அகற்சி) குறித்த சொல்லாக்க ஈறு.

அண்டகடாகம் *andakadāgam,* பெ.(n.) உலக உருண்டையின் மேல் ஓடு (திருவிளை. தீர்த்த. 9.); imaginary shell which surrounds the universe.

த.வ. நிலமேலோடு, கோளகம்.

[அண்டம் + கடாகம்.]

[Skt. anda > த. அண்டம்.]

அண்டகபாலம் *anda-kabālam,* பெ.(n.) **அண்டகடாகம்** (தேவா. 246, 2.) பார்க்க; see *andakadāgam.*

[அண்ட(ம்) + கபாலம்.]

[Skt. anda >த. அண்டம்.]

கன்னப்புலம்→ கப்பளம்→ கப்பாளம் > Skt. kapālam.

அண்டகம் *aṇḍagam,* பெ.(n.) 1. கொட்டை; testicle. 2. சிறுமுட்டை; ovum. 3. குப்பைமேனி; rubbish plant, *Acalph Indica* (சா. அக.).

த.வ. விதைக்கொட்டை.

*[**Skt.** aṇḍa > த. அண்டகம்.]*

அண்டகமேனி *aṇḍaga-mēṉi,* பெ.(n.) **அண்டகம்** பார்க்க; see *aṇḍagam* (சா.அக.).

அண்டகலை *aṇḍakalai,* பெ.(n.) நிலவின் கலை; a current of prana or vital breath operating in the left nostril (சா.அக.).

த.வ. இடைகலை.

[அண்ட(ம்) + கலை.]

*[**Skt.** aṇḍa > த. அண்டம்.]*

கல் > கலை (வ.வ.110) இச்சொற்கு வடமொழியில் மூலமில்லை.

அண்டக்கற்பம் *aṇḍa-k-kaṟpam,* பெ.(n.) கல்லுப்பில் இருபது நாள் வைத்தெடுத்து, பின் அவித்த கருங்கோழி முட்டைகள்; the eggs of black fowls kept within a heap of rock-salt for 20 days and then taken out and boiled (சா.அக.).

[அண்ட(ம்) + கற்பம்.]

*[**Skt.** aṇḍa > த. அண்டம்.]*

கரு > கருப்பம். > ***Skt.*** *கற்பம்.*

அண்டக்குகை *aṇḍa-k-kugai,* பெ.(n.) மருந்தினைப் புகட்டிக் குகையைப் போல் பயன்படுத்திப் புடம் போட உதவும் கோழி முட்டையின் உட்கரு நீங்கிய ஓடு. ; the empty egg or shell of a black fowl used as crucible for preparing medicines (சா.அக.).

[அண்டம் + குகை.]

*[**Skt.** aṇḍa > த. அண்டம்.]*

குழி > குழை > குகை.

அண்டகூடம் *aṇḍa-kūḍam,* பெ.(n.) உலகக்கோளகை; globe of the universe. *"அண்ட கூடமுஞ் சாம்பராயொழியும்" (கம்பரா. அகலிகை. 14.).*

[அண்டம் + கூடம்.]

*[**Skt.** aṇḍa > த. அண்டம்.]*

கூடு > கூடம்.

அண்டக்கெவுனம் *aṇḍa-kevuṉam,* பெ.(n.) காட்டுப்பருத்தி; golden silk cotton, *Cochlospermum gossypium* (சா.அக.).

அண்டக்கேசரி *aṇḍa-k-kēśari,* பெ.(n.) சாம்பலுப்பு (சத்தியுப்பு); salt obtaine by burning beared grass.

அண்டகை[1] *aṇḍagai,* பெ.(n.) அப்பவருக்கம் (சூடா.); kind of cake.

தெ. அட்டுரிக.

அண்டகை[2] *aṇḍagai,* பெ.(n.) 1. விதைக் கொட்டை the bag containing the testicles -scretum. 2. பழம்; fruit. 3. பழத் தோல்; the outer skin of a fruit. 4. சினைப்பை; (In physiology) the female organ in which the ova or the reproductive germs or eggs, are formed and developed; ovary. (In Botany) a case enclosing the ovules or young seeds, to develop later on into pulpy fruit (சா.அக.).

*[**Skt.** aṇḍaka> த. அண்டகை.]*

அண்டக்கோசம்[1] *aṇḍa-k-kōśam,* பெ.(n.) 1. ஓடு (கந்தபு.அண்ட.); imaginary shell which surrounds the universe. 2. விதைப்பை(இங். வை.); scrotum.

[அண்டம் + கோசம்.]

கோறம் → கோசம் > ***Skt.*** *kōsa.*

அண்டக்கோசம்² *anda-k-kōšam,* பெ.(n.) 1. விதையின் உறை; the outer covering of the testicles. 2. முட்டைக்கருவின் மேல்தோல்; the sac or membraneous bag which contains the yolk of an egg. 3. அண்டத்தின் மேல்தோல், விதை மற்றும் அதைச்சேர்ந்த உறுப்புகளடங்கிய பை; the pouch which contains the testicles and their accessory organs-scrotum (சா.அக.).

[அண்டம் + கோசம்]

*[**Skt.** anda> த. அண்டம்.]*

*கோளம்→கோயம் →கோசம்>**Skt.** kōsa.*

அண்டக்கோசு *anda-k-kōšu,* பெ.(n.) முட்டைக் கோசு; a culinary vegetable which has the leave in dense round head-cabbage (சா. அக.).



அண்டக்கோளகை *anda-k-kōlagai,* பெ.(n.) உலகவுருண்டை (கந்தபு. அண்ட.65.); globe of the universe.

[அண்டம் + கோளகை.]

*[**Skt.** anda > த. அண்டம்.]*

*கோள் → கோளகம்→ கோளகை >**Skt.** gōlaka.*

அண்டக்கோளம் *anda-k-kōlam,* பெ.(n.) **அண்டகோளகை** (திருவிளை.நகர. 21.) பார்க்க; see *andakōlagai.*

[அண்டம் + கோளம்.]

*[**Skt.** anda > த. அண்டம்.]*

*கொள்→கோள்→கோளம் > **Skt.** gōla.*

அண்டச்சத்து *anda-c-cattu,* பெ.(n.) மண்டையோட்டினின்று உருவாக்கும் ஊட்டம்; essence prepared from the human skull (சா.அக.).

[அண்டம் + சத்து.]

*[**Skt.**anda> த. அண்டம்.]*

சள்→சண்→ சத்து.

அண்டச்சுண்ணம் *anda-c-cunnam,* பெ.(n.) 1. ஊதை (வாதம்), பித்தம், மருத்துவம், ஓகம் அறிவு (ஞானம்) முதலியவற்றிற்கு அடிப்படையான முப்பூச்சுண்ணம், அதாவது மூன்று வகையுப்புகளினாலான சுண்ண மருந்து; traid salt i.e., the union of three kinds of salts. This is considered highly useful in alchemy, medicine, yoga and gnana (spiritual wisdom) elixir vitae. 2. மருத்துவத்திற்குப் பயன்படுவதும், மண்டையோட்டினைப் பயன்படுத்தி உருவாக்கப்படுவதுமான சுண்ண மருந்து; a cakium compound prepared from the human skull. It is used in medicine (சா.அக.).

[அண்டம் + சுண்ணம்.]

*[**Skt.** anda > த. அண்டம்.]*

*சுள் > சுண் > சுண்ணம்>**Skt.** cūrna.*

அண்டச்சுவர் *anda-c-cuvar,* பெ.(n.) உலகவுருண்டையின் புறத்தோற்றம் (பிங்.); shell of the universe, as a wall.

*[**Skt.** anda> அண்டம்.]*

சுல் > சுவல் > சுவர்.

அண்டச்செந்தூரம் *anda-c-cendūram,* பெ.(n.) 1. கோழிமுட்டை ஓட்டைக் கொண்டு செய்யும் செந்தூரம்; a red powder prepared out of the shells of a fowl's egg. 2. அடை காத்த கோழிமுட்டையோட்டை மற்றச் சரக்குகளுடன் சேர்த்துச் செய்யும் சிவப்பு மருந்து; a red oxide prepared by the calcination of egg-shells mixed

with other drugs. 3. கோழிமுட்டைக் குடுக்கைக்குள் வைத்து உருவாக்கும் மருந்து; any red oxide obtained by calcining the drug in question enclosed in a fowl's egg shell. 4. மண்டையோட்டில் வைத்து உருவாக்கும் செந்தூரம்; a red medicinal powder obtained by the calcination of drugs hermetically scaled in the human skull (சா. அக.).

[அண்டம் + செந்தூரம்.]

[Skt. aṇḍa > த. அண்டம்.]

சிந்தூரம் > செந்தூரம்.

அண்டச்சோர்வு *aṇḍa-c-cōrvu,* பெ.(n.) விதைத்தளர்ச்சி; atony or laxness of the testiles, *Orchidatonia* (சா.அக.).

[அண்டம் + சோர்வு.]

[Skt. aṇḍa> த. அண்டம்.]

சோர் > சோர்வு.

அண்டசம்[1] *aṇḍašam,* பெ.(n.) முட்டையிற் பிறப்பன (சீ. சி. 2, 89); oviparous animals, one of four *uyir-t-tōṟṟam,* q.v.

[Skt. aṇḍa-ja > த. அண்டசம்]

அண்டசம்[2] *aṇḍašam,* பெ.(n.) 1. பறவை (அக. நி.); bird. 2. ஒந்தி; chameleon. 3. பாம்பு முதலியன; snake and other aquatics. 4. மீன் முதலான நீர்வாழ் உயிரிகள்; fish and other aquatics. 5. சங்கு (உரி.நி.); conch. 6. ஆமை (அக. நி.); tortoise.

[Skt. aṇḍa-ja > த. அண்டசம்.]

அண்டசராசரம் *aṇḍašarāšaram,* பெ.(n.) இயலுலகம் முழுமையும்; universe cosmos.

[Skt. aṇḍa +cara + a-cara>த. அண்ட சராசரம்.]

அண்டச்சவ்வு *aṇḍa-c-cavvu,* பெ.(n.) 1. மயிர் மண்டிய இறைச்சி; the scalp usually covered with hair, hairy scalp. 2. தலைக்கறி; the outer covering of the head scalp (சா.அக.).

[அண்டம் + சவ்வு.]

[Skt. aṇḍa > த. அண்டம்.]

சவ் > சவ்வு.

அண்டச்சவுக்காரம் *aṇḍa-c-cavukkāram,* பெ.(n.) காக்கை, வெண்கோழி, புறா, கழுகு ஆகியவற்றின் முட்டைகளில் வகைக்கு ஐந்தெடுத்து, அவற்றுடன் செயநீர், கல்லுப்பு, ஐந்து சுண்ணம் முதலியவற்றைச் சேர்த்து இடித்துச் சித்தர்கள் செய்யும், தாழ்ந்த வகை மாழைகளைப் பொன்னாக மாற்றும்;ஒரு குளிகை; a pill used in alchemy. It is prepared by siddhars by a peculiar process known to themselves. The following are the ingredients:-

1. one egg taken from each of the five birds, viz, crow, white fowl, pigeon and eagle.
2. the well known fluid called jayancer.
3. the five calcium compounds contemplated in the Tamil medicine.
4. the crystallised salt collected from the beds of precipitated salt found at the bottom of the sea (சா.அக.).

[அண்டம் + சவுக்காரம்.]

[Skt. aṇḍa > த. அண்டம்.]

உவர் → சவர் + காரம்.

அண்டச்சாரணை *aṇḍa-c-cāraṇai,* பெ.(n.) இதளியக் குளிகைக்குச் சாரணை தீர்ப்பதற்காகப் பயன்படுத்தும் முடியண்ட படருப்பு; a peculiar salt extracted from the human skull and used for animating mercurial pills (சா.அக.).

[அண்டம் + சாரணை.]

[Skt. aṇḍa > த. அண்டம்.]

அண்டசிதம் *aṇḍa-šidam,* பெ.(n.) முட்டையின் வெண்கருவைப் போல் உடம்பிலிருக்கும் ஒருவகை ஊட்டம்; a substance of definite chemical compositon resembling the

white of an egg, found in the body, *Albuminoid*; protein (சா.அக.).

[Skt. aṇḍa+sita> த. அண்டசிதம்.]

அண்டசிறுநீர் *aṇḍa-šiṟu-nīr,* பெ.(n.) சிறுநீர்ப் பையில் தங்கி நிற்கும் சிறுநீர்; the urine stored up in the bladder before it is discharged (சா.அக.).

[அண்டம் + சிறுநீர்.]

[Skt. aṇḍa > த. அண்டம்.]

சில்→சிறு + நீர்.

அண்டசு *aṇḍašu,* பெ.(n.) முட்டைவயிற் பிறப்பு; uviparous (சா.அக.).

[Skt. aṇḍaja > த. அண்டசு.]

அண்டசூலை *aṇḍa-šūlai,* பெ.(n.) வளி மிகுதியி (வாதத்தி)னால் விதையின் நரம்புகள் தாக்குண்டு குத்தல் மற்றும் வலியுண்டாக்கும், ஒரு வகைச் சூலைநோய்; a neuralgic pain of severe dearting and throbbing character experienced in the testicle, *Orcheoneuralgia* (சா.அக.).

[அண்டம் + சூலை.]

[Skt. aṇḍa>த. அண்டம்.]

சூல் > சூலை.

அண்டசெயநீர் *aṇḍa-šeya-nīr,* பெ.(n.) 1. கோழிமுட்டையில் இருந்து உருவாக்கும் ஒரு வகைச் செயநீர்; a peculair liquid prepared from the fowl's egg which is mixed up with the required ingredients and kept exposed in the night-dew. 2. தலைச்சன் பிள்ளைத் தலையைக் கொண்டு உருவாக்கும் ஒரு வகைச் செயநீர்; a liquid preparation obtained from the head of the first-born child after its death (சா. அக.).

[அண்டம் + செயநீர்.]

[Skt. aṇḍa > த. அண்டம்.]

செய் + நீர் → செயநீர்.

அண்டசை *aṇḍašai,* பெ.(n.) நறுமணப்பொருள் (கத்தூரி) (பரி. அக.); musk.

[Skt. aṇḍa-ja > த. அண்டசை.]

அண்டசோதி *aṇḍa-šōdi,* பெ.(n.) சோதி மரம்; a luminous tree said to be found on the top of hills, and is believed to contain phosphoroas (சா.அக.).

[Skt. aṇḍa + jyōtis > த. அண்டசோதி.]

அண்டத்தாங்கம் *aṇḍa-t-tāṅgam,* பெ.(n.) பெருங்குறிஞ்சா; a plant scammony swallow wort, *Secamore emetica* (சா.அக.).

அண்டத்தாசி *aṇḍa-t-tāši,* பெ.(n.) கண்டங்கத்திரி; prickly brinjal, *Solanum xanthocarpum* (சா.அக.).

அண்டத்தாபிதம் *aṇḍa-t-tābidam,* பெ.(n.) 1. விதையில் ஏற்படும் அழற்சி; inflammation of the testicles orchitis. 2. பிடுக்கின் விதைப் பையில் ஏற்படும் அழற்சி; inflammation of the scrotum-scrotitis (சா.அக.).

த.வ. விதைவீக்கம்.

[Skt. aṇḍa+tāpita > அண்டதாபிதம்.]

அண்டத்தைமயினமாக்கி *aṇḍattai-mayiṉa-mākki,* பெ.(n.) நாணற்புல், nanal grass, *Saccharam spontaneum* (சா.அக.).

அண்டத்தைலம் *aṇḍa-t-tailam,* பெ.(n.) கோழிமுட்டை எண்ணெய்; medicinal oil extracted from hen's eggs.

த.வ. முட்டை நெய்மம்.

[அண்டம் + தைலம்.]

[Skt. aṇḍa-taila > த. அண்டத்தைலம்.]

அண்டத்தோடு *aṇḍa-t-tōḍu,* பெ.(n.) 1. முட்டையோடு; the shell of an egg. 2. மண்டையோடு; the skull of an animal, particularly human skull (சா.அக.).

[அண்டத்து + ஓடு.]

[Skt. aṇḍa > த. அண்டம்.]

'அத்து' சாரியை.

அண்டத்தோல் *aṇḍa-t-tōl,* பெ.(n.) 1. முட்டையோடு; incorrectly but ususally referring to an egg-shell. 2. முட்டை யோட்டின் உட் பக்கத்துச் சவ்வு; the membraneous lining inside the shell of an egg, egg envelope. 3. மண்டையின் தோல்; the skin covering the head, scalo. 4. விதைப் பையின் மேல்தோல்; the skin of the scrotam. 5. முட்டையினுட் கருவின் சவ்வுப்பை; the membraneous bag which contains the yolk of an egg, yolk bag (சா.அக.).

[அண்டம் + தோல்.]

*[**Skt.** aṇḍa > த. அண்டம்.]*

அண்டநீர் *aṇḍa-nīr,* பெ.(n.) 1. முட்டையின் வெண்கருவினின்று உருவாக்கும் நீர்; a liquid prepared from the white of the egg. 2. நீராகச் செய்த வெண்கரு; liquified or dissolved white of the egg. 3. **அண்ட செயநீர்** பார்க்க; see *aṇḍa-šeya-nīr.* 4. பிடுக்கில் சேர்ந்த நீர்; the fluid collected in the scrotum, as in hydrocele. 5. நிலத்தினின்று வரும் ஊற்று நீர்; water flowing out from the earth, spring water, opposed to rain water from the sky (சா.அக.).

[அண்டம் + நீர்.]

*[**Skt.** aṇḍa>த. அண்டம்.]*

அண்டநோய் *aṇḍa-nōy,* பெ.(n.) 1. தலைவலி; head-ache. 2. விதைவலி; pain in the testicles, *Orchialgia*. 3. விரை யூதை(விதை வாதம்); hydrocele. 4. குடலண்டநோய்; hernia. 5. பொதுவாகப் பிடுக்கில் வரும் நோய்; any disease of the testicle or the scrotum (சா.அக.).

[அண்டம் + நோய்.]

*[**Skt.** aṇḍa>த. அண்டம்.]*

அண்டப்பரப்பு *aṇḍa-p-parappu,* பெ.(n.) உலகப்பரப்பு; expanse of the universe. "மாதிக்கொ டண்டப்பரப்பெலாம்" *(தாயு. மௌன.3.).*

[அண்டம் + பரப்பு.]

*[**Skt.** aṇḍa>த. அண்டம்.]*

அண்டப்பவுத்திரம் *aṇḍa-p-pavuttiram,* பெ.(n.) பிடுக்கில் உண்டாக்கும் ஓர் அரிதான குறிக்கட்டி நோய்; a chronic form of fistula in the scrotum, *Scrotal fistula* (சா.அக.).

*[**Skt.** aṇḍa+bhagam-dara>த. அண்டப் பவுத்திரம்.]*

அண்டப்பாத்திரம் *aṇḍa-p-pāttiram,* பெ.(n.) மண்டையோட்டினால் செய்த ஓர் ஏனம்; a vessel made out of the human skull for holding liquids and solid substances (சா.அக.).

*[**Skt.** aṇḍa+pātra>த. அண்டப்பாத்திரம்.]*

அண்டப்பித்தி *aṇḍa-p-pitti,* பெ.(n.) உலகக் கோளத்தின் மேலோடு; the vault of the heavens, as the shell of the universe imagined to be in the form of an egg.

த.வ. புடவிச்சுவர்.

*[**Skt.** aṇḍa+bhitti > த. அண்டப்பித்தி.]*

அண்டப்பிளவு *aṇḍa-p-piḷavu,* பெ.(n.) 1. மண்டையோட்டின் பிளப்பு அல்லது வெடிப்பு; a fissure of the skull-cranial fissure. 2. மூளைப்பகுதியின் இடையேயுள்ள இடைவெளி; the fissure separating the two hemi-spheres of the brain, intercerebral fissure of longitudinal fissure. 3. கருவில் ஏற்பட்ட முகத்தின் அருவெருப்பு; the two lowest facial fissures of the embryo, Mandibular fissures. 4. விதைப்பையின் விந்துத் தாரையுள் ஏற்படும் வெடிப்பு அல்லது குறிக்கட்டி; a fissure of fistuala opening into any of the seminal passages scrotal or spermatic fissure of fistura (சா.அக.).

[அண்டம் + பிளவு.]

*[**Skt.** aṇḍa>த. அண்டம்.]*

பிள் > பிள > பிளவு.

அண்டப்புத்து *anda-p-puttu,* பெ.(n.) **அண்டப்புற்று** பார்க்க; see *anda-p-purru.*

[அண்டம் + புற்று.]

[Skt. anda>த. அண்டம்.]

புல் > புற்று > புத்து.

அண்டப்புரட்டன் *anda-p-purattan,* பெ.(n.) பெரும்போக்கிலி; consummate rogue.

த.வ. அடாவடிக்காரன்.

[அண்டம் + புரட்டன்.]

[Skt. anda>த. அண்டம்.]

புரள் → புரட்டு → புரட்டன்.

அண்டப்புளுகன் *anda-p-pulugan,* பெ.(n.) பெரும் பொய்யன்; monstrous rogue.

[அண்டம் + புளுகன்.]

[Skt. anda>த. அண்டம்.]

புள்→புளுகு→புளுகன்.

அண்டப்புற்று *anda-p-purru,* பெ.(n.) பிடுக்கில் உண்டாகும் ஓர் (கிரந்திப் புற்றுநோய்ப் புண்); cancer of the scrotum (சா.அக.).

[அண்டம் + புற்று.]

[Skt. anda>த. அண்டம்.]

புல் > புற்று.

அண்டப்பூடு *anda-p-pūdu,* பெ.(n.) முயல்; rabbit (சா.அக.).

அண்டப்பூண்டு *anda-p-pūndu,* பெ.(n.) **அண்டப்பூடு** பார்க்க; see *anda-p-pūdu* (சா.அக.).

அண்டப்பேரொளி *anda-p-pēroli,* பெ.(n.) தலையின் மூளை; the superior portion of the brain, occupying the whole upper cavity of the skull cerebrum (சா. அக.).

[அண்டம் + பேரொளி.]

[Skt. anda>த. அண்டம்.]

பேர் + ஒளி > பேரொளி.

அண்டப்பை *anda-p-pai,* பெ.(n.) விதைத் தோல்; bag containing the testicles-scrotum (சா. அக.).

[அண்டம் + பை.]

[Skt. anda> த. அண்டம்.]

பொள் > பொய் (பய்) > பை.

அண்டப்பொகுட்டு *anda-p-poguttu,* பெ.(n.) **அண்டகூடம்** பார்க்க; see *anda-kūdam.* *"பூதலப் பரப்பி னண்டப் பொகுட்டினுட் புறத்துள்" (கம்பரா.பிணிவீட்டு.113).*

[அண்டம் + பொகுட்டு.]

[Skt. anda> த. அண்டம்.]

பொக்கு > பொகுட்டு.

அண்டபகிரண்டம் *anda-pagir-andam,* பெ.(n.) நிலவுருண்டையும் அதன் புறத்தவான உருண்டையும்; this world and the world beyond this sphere. *"அண்டபகி ரண்டமும் மாயா விகாரமே" (தாயு. பரிபூ. 4.).*

[Skt. anda + bahiranda >த.அண்ட பகிரண்டம்.]

அண்டபவுத்திரம் *andapavuttiram,* பெ.(n.) விதைப்பையைச் சார்ந்த நோய்; scrotal fistula.

[Skt. anda+bhagan-dara> த. அண்ட பவுத்திரம்.]

அண்டபற்பம் *andaparpam,* பெ.(n.) கோழி முட்டைக் கருவைக் கொண்டு செய்யும் மருந்து; calcination of medicinal drugs with eggs.

[Skt. anda + bhasman > த.அண்டபற்பம்.]

அண்டபித்தி *anda-pitti,* பெ.(n.) **அண்டப்பித்தி** பார்க்க; see *anda-p-pitti* *"ஒரு திருவடிகளே அண்டபித்திக்கு மவ்வருகேபோய்" (திவ். திருநெடுந். 5, வ்யா.).*

[அண்டம் + பித்தி.]

[Skt. anda> த. அண்டம்.]

அண்டபேதி *anda-bēdi,* பெ.(n.) மாழைகளைப் பிரிக்கும் தன்மையுடைய மண்டை யோட்டினின்று செய்த, ஒரு கார மருந்து; a strong and powerful alkaline substance

prepared from the human skull powdered and mixed with other ingredients (சா.அக.).

[Skt. anda+bhēdin>த. அண்டபேதி.]

அண்டபேரண்டபட்சி *aṇḍapēraṇḍapaṭci,* 1. இருதலையுடைய பெரும் பறவை (இ.வ.); a monster bird. 2. கழுகு (பாண்டி); eagle.

த.வ. கண்டபேரண்டப் பறவை.

[Skt. gaṇḍabhēruṇḍa+paksin > த. அண்டபேரண்டபட்சி.]

அண்டம்[1] *aṇḍam,* பெ.(n.) 1. முட்டை (திவா.); egg. 2. நிலம்; the earth. *"நீர்கொண்ட வண்டத்தும்" (அரிச். பு. பாயி. 3.).* 3. வானம் (திவா.); sky, visible heavens. 4. புடவி (அஷ்டாதச. தத்வத். 2, 34.); universe in the shape of an egg. 5. அண்ட விதை; testicle. *"அண்டத்திலூறு செய்வனவால்" (திருவிளை. பரிநரி. 17.).* 6. விதை; seed, nut. *"இல்லமுறு மண்டங்க ணூறுபலம்" (தைலவ. தைல. 33).*

[Skt. aṇḍa > த. அண்டம்.]

அண்டம்[2] *aṇḍam,* பெ.(n.) 1. புழுகு சட்டம் (சம்.அக.) (Ms.); sac of the civet cat. 2. மூளை (வை. மூ.); brain. 3. மண்டையோடு (யாழ். அக.); skull.

[Skt. aṇḍa > த. அண்டம்.]

அண்டம்[3] *aṇḍam,* பெ.(n.) 1. வழலை; a universal solvent consisting chiefly of calcium compounds extracted by a secret process of calcination known to Sidhhars, *Alcanest.* 2. மான்மணத்தி (கத்துரி)ப்பை; the musk bag. 3. மதம்; semen virile. 4. அண்டநோய்; diseases of the testicles, probably the two kinds of hernia (சா.அக.).

அண்டமயிமை *aṇḍa-mayimai,* பெ.(n.) **அண்டத்தைமயினமாக்கி** பார்க்க; see *aṇḍattai-mayiṇamākki* (சா.அக.).

அண்டமயினா *aṇḍa-mayiṇā,* பெ.(n.) **அண்டத்தைமயினமாக்கி** பார்க்க; see *aṇḍattai-mayiṇamākki* (சா.அக.).

அண்டமான் *aṇḍamāṉ,* பெ.(n.) ஒரு தீவு (H.J.); Andaman islands in the eastern part of the Bay of Bengal.

[Mal. agamitae > த. அண்டமான்.]

அண்டமுகடு[1] *aṇḍamugaḍu,* பெ.(n.) புடவி (அண்ட)கடாகத்தினுச்சி; top of the imaginary shell that surrounds the universe. *"அண்டமுகட்டுற நின்று சிரித்தனன்" (பாரத. கிருட். 202).*

[அண்டம் + முகடு.]

[Skt. aṇḍa>த. அண்டம்.]

அண்டமுகடு[2] *aṇḍa-mugaḍu,* பெ.(n.) மூதண்டம், நடு உச்சி; crown of the head. (சா. அக.)

[அண்டம் + முகடு.]

[Skt. aṇḍa>த. அண்டம்.]

அண்டமுடிமெழுகு *aṇḍa-muḍi-meḻugu,* பெ.(n.) மூன்று மாதம் நிரம்பிய தலைச்சன் கருப்பிண்டத்தின் தலை மண்டையோட்டை இடித்து, அதனின்று செய்யப்படும் ஒரு வகை மெழுகு; a wax like preparation obtained by reducing the head of the first foetus three months old, in a woman into a pulp as per process laid down in Siddhar's science (சா.அக.).

[அண்ட+மூடி+மெழுகு.]

[Skt. aṇḍa>த. அண்டம்.]

அண்டமுறுகல் *aṇḍamuṟugal,* பெ.(n.) மண்டையோட்டினின்று உருவாக்கும் தீ முறுகல் நஞ்சு; a poisonous substance extracted from bone ash by incineration of the skull-phosphorus (சா.அக.).

அண்டமேபிண்டம் *aṇḍamē-piṇḍam,* பெ.(n.) அண்டத்திலுள்ளதே பிண்டத்திலுள்ளது என்னும் கொள்கை; what exists in nature, exists eqully in a human being which is said to be a miniature of the world. The Hindu philosophic science recognise man

as the microcosm possessing all the parts corresponding to the macrocosm or the solar system. This is the doctrine of macrocosm and microcosm. It was also traced to the oldest sacred books of the chinese and accepted by them (சா.அக.).

[அண்டம் + ஏ + பிண்டம்]

[Skt. aṇḍa > த. அண்டம்]

பிள்→பிண்டம்.

'ஏ' தேற்றேகாரம்.

அண்டயம் *aṇḍayam,* பெ.(n.) உடம்பிலிலுள்ள வெண்கருவின் ஆற்றலாகிய வெண்கருவூட்ட (அண்ட சித)த்தின்ஒரினம்; a substance in the body resembling the white of an egg, *Albumin* (சா.அக.).

[Skt. aṇḍa> த. அண்டம்]

அண்டயெரு *aṇḍa-y-eru,* பெ.(n.) பண்டுவ முப்பு; an old name for a medicine curative of all congestions, *Alcahest* (சா.அக.).

அண்டயோனி *aṇḍa-yōṇi,* பெ.(n.) 1. கதிரவன், ஞாயிறு (பிங்.); sun, as giving life to the earth. 2. முட்டைவழிப் பிறப்பு (சங்.அக.); oviparous animal.

[Skt. anda + yōni > த. அண்டயோனி]

அண்டரசம் *aṇḍa-rasam,* பெ.(n.) 1. தூய்மையான இதளியம் (பாதரசம்); purified mercury. 2. மூளையின் ஆற்றல்; essence of the brain. 3. முட்டையின் கரு; the yolk of an egg (சா.அக.).

[Skt. aṇḍa+raša > த. அண்டரசம்]

அண்டரிசனம் *aṅḍarišaṇam,* பெ.(n.) விதையடிக்கை; emasculation or semicastration orchotomy (சா.அக.).

த.வ. காயடிக்கை.

[Skt.aṇḍa-karashaṇa> த. அண்டரிசனம்]

அண்டரோகம் *aṇḍa-rōgam,* பெ.(n.) **அண்ட நோய்** பார்க்க; see *aṇḍa-nōy* (சா.அக.).

[Skt. aṇḍa+ rōga > த. அண்டரோகம்]

அண்டவச்சில்சாய்த்தல் *aṇḍa-v-accil-šāyttal,* பெ.(n.) முட்டை வடிவ அச்சில் மாழைகளை உருக்கியெடுக்கை; casting a melted metal into an oval shaped mould (சா.அக.).

[அண்டம் + அச்சில் + சாய்-.]

[Skt. aṇḍa > த. அண்டம்]

அண்டவடிவு *aṇḍa-vaḍivu,* பெ.(n.)**அண்டவம்** பார்க்க; see *aṇḍavam* (சா.அக.).

[அண்டம் + வடிவு]

[Skt. aṇḍa > த. அண்டம்]

அண்டவம் *aṇḍavam,* பெ.(n.) முட்டை வடிவு; the shape of an egg-oviform (சா.அக.).

அண்டவர்த்தனம் *aṇḍa-varttaṇam,* பெ.(n.) **அண்டவிருத்தி** பார்க்க; see *aṇḍa-virutti* (சா.அக.).

[Skt. aṇḍa+varttana>த. அண்டவர்த்தனம்]

அண்டவலி *aṇḍa-vali,* பெ.(n.) பிடுக்கிற் பொதுவாகக் காணப்படும். வலிகள்: – 1. ஊதையினால் ஏற்படும் வலி. 2. வளியினால் விதையில் ஏற்படும் குத்தல். 3. சூலையினால் ஏற்படும் குத்தல்; pains of the scrotum in general resalting from any one or more of the morbid conditions of vāyu e.g:- 1. pain due to the deranged condition of vadham - *orchialgia* or *orchidargia.* 2. neuralgic pain due to nervous affection of the parts *orchinoearalgia.* 3. acute pricking pain due to deranged vadham, *orchiodynia* (சா.அக.).

[அண்டம் + வலி.]

[Skt. aṇḍa > த. அண்டம்]

அண்டவாசி *aṇḍa-vāsi,* பெ.(n.) முட்டையின் உள்தாரை; a duct or passage for the egg in animals from ovary, *Oviduct* (சா.அக.).

[Skt. aṇḍa+ vāsi > த. அண்டவாசி.]

அண்டவாணன் *anda-vāṇan*, பெ.(n.) தேவன்; god. *"அண்டவாணனடி யுள்குதலால்" (தேவா. 1114,11).*

[அண்டம் + வாணம்.]

[Skt. anda > த. அண்டம்.]

அண்டவாதசூலை *anda-vāda-šūlai*, பெ.(n.) பிடுக்கிலாவது விதையிலாவது நீர் கலந்ததோடல்லாமல் குத்தல், வலி ஆகியன உண்டாக்கும் சூலை; a neuralgic pain of a severe darting character attended with a collection of fluid in the scrotum (சா.அக.).

[அண்டம் + வாதம் + சூலை.]

[Skt. anda + vāta>த. அண்டவாத(ம்).]

சுல்→சூல்→சூலை.

அண்டவாதம் *anda-vādam*, பெ.(n.) 1. பிடுக்கில் நீர் இறங்கிப் பருத்துக் காணும் நோய்; a circumscribed collection of fluid in the scrotum, hydrocele or scrotal hydrocele. 2. விதை வீக்கம், விதையைச் சூழ்ந்துள்ள தோற்பைக்குள் நீரிறங்கிப் பருத்துக்காணும் ஒரு நோய்; hydrocele due to collection of fluid in the serous covering of the testis-funicular hydrocele. 3. விதைத் தசை ஊதை, பிடுக்கினுள் தசை தடித்து வளர்ந்து நீரும் சேர்ந்து பருத்துக் காணும் ஒரு பிடிப்பு; enlargement of the scrotum due to collection of fluid and morbid growth of the skin, Elephantiasis of the scrotum. 4. குடல்விதையூதை (வாதம்), வளி மிகுதியால் பிடுக்கில் குடலிறங்கி மரக்காற்போல் பருத்துக் காணும் ஒரு பிடிப்பு; swelling of the scrotum from the protrusion of a portion of the intestine through the abdominal opening and its consequent decent into it (scrotum) hemia (சா.அக.).

[Skt. anda + vāta > த-அண்டவாதம்.]

அண்டவாதரோகம் *anda-vāda-rōgam*, பெ.(n.) **அண்டவாதம்** பார்க்க; see *anda-vādam* (சா.அக.).

[Skt. anda + vāta + rōga > த. அண்டவாத ரோகம்]

அண்டவாயு *anda-vāyu*, பெ.(n.) 1. விதையூதை, வளி விதையோடு சேர்ந்து அழற்சியையும், வீக்கத்தையும் உண்டாக்கும் ஒரு வளி நோய்; an inflmmation and swelling of the testicles due to the deranged vayu affecting the part. 2. வளி (வாயு) குடலில் தங்கி நரம்பு வழியாய் விதையிலிறங்கி பொருமி நரம்பு புடைத்துக் காணும் ஒரு நோய்; a disease of the scrotum due to the accumulation of gas (vaya) in the intestines, which, in turn is imparted to the scrotum, marked by swelling and pain of the spermatic card and the testis. 3. விதை வீக்கம்; inflammation of the testicles followed by swelling (சா.அக.).

[Skt. anda+vāyu > த. அண்டவாயு.]

அண்டவாரு *anda-vāru*, பெ.(n.) மருந்தரைக்கும் கலுவம்; a granite bowl in which substance are pulverised, pounded or ground down to a paste with a pestle-mortar, this is specially used in preparing medicines (சா.அக.).



அண்டவித்தை *anda-vittai*, பெ.(n) பத்து வகைப் பறவைகளின் முட்டைகளை மெழுகாகச் செய்து வேதைக்கு பயன்படுத்தும் ஒரு முறை; an alchemical preparation by a secret process, from 10 kinds eggs of different birds ground down to a paste with other ingredients (சா.அக.).

[அண்டம் + வித்தை.]

[Skt. anda> த. அண்டம்.]

விழி→ வித்→ வித்தை .

அண்டவிர்த்துவாரம் *andavir-t-tuvāram,* பெ.(n.) 1. முட்டை வடிவத்தைப் போன்ற ஒட்டை; shield shapped opening, Foraman ovale. 2. கேடகம் என்ற ஆயுதத்தைப் போன்ற துளை; shield shapped opening-Foramen thyroideum (சா.அக.).

அண்டவிருத்தி *anda-virutti,* பெ.(n.) விரைநோய் வகை (தைலவ. தைல..97.); enlargement of the scrotum, due to hydrocele or elephantiasis.

[Skt. anda+vrddhi>த. அண்டவிருத்தி.]

அண்டவுப்பு *and-v-uppu,* பெ.(n.) மண்டை யோட்டிலிருந்து உருவாக்கப்படும் ஒரு வகை உப்பு; a salt prepared from the human skull (சா. அக.).

[அண்டம் + உப்பு.]

[Skt. anda > த. அண்டம்.]

அண்டவுருள் *anda-v-urul,* பெ.(n.) பூசணிக்காய்; pumpkin, *cucurbitmaxima* (சா. அக.).

[அண்டம் + உருள்.]

[Skt. anda > த. அண்டம்.]

உரு > உருள்.

அண்டவெண்கரு *anda-ven-karu,* பெ.(n.) முட்டையின் வெள்ளைக் கரு; the white of an egg, *Albumen* (சா.அக.).

[அண்டம் + வெண் + கரு.]

[Skt. anda> த. அண்டம்.]

குல் > குரு > கரு.

அண்டவெள்ளைரசம் *anda-vellai-rasam,* பெ.(n.) முட்டையின் வெண்கருவினின்று உருவாக்கப்பெறும் ஒரு வகை ஊட்டம் (சத்து) a liquid essence obtained by a special process from the white of an egg (சா.அக.).

[அண்டம் + வெள்ளை + ரசம்.]

[Skt. anda > த. அண்டம், Skt. rasa > த.ரசம்.]

அண்டவோடு *anda-v-ōdu,* பெ.(n.) 1. முட்டையோடு; the shell or outside covering of an egg, egg-shell. 2. மண்டையோடு; the bony case which forms the frame work of the head, skull (சா.அக.).

[அண்ட(ம்) + ஓடு.]

[Skt. anda > த. அண்ட(ம்).]

அண்டன் *andan,* பெ.(n.) கடவுள்; god, as lord of the universe. *"அண்டனாஞ் சேடனா மங்கு" (சி. போ. 9, 3, 1.).*

[Skt. anda > த. அண்டன்.]

அண்டா *andā,* பெ.(n.) ஒருவகைப் பெரும் ஏனம்; large vessel, cauldron. *"அண்டா குண்டாவை அடகு வைத்துப் படிக்கவைத்தேன்" (பே.வ.).*

த. அகனெடுங்கலம்.

[U. handā > த. அண்டா.]



அண்டாகாரகாசம் *aṇḍākāra-kāšam,* பெ.(n.) கண்ணிற்குள் முட்டை வடிவத்தைப் போல் உள்ள கண்ணாடி; the transparent lenticular organ behind the pupil - crystalline lens (சா.அக.).

அண்டாகாரகோளம் *aṇḍākāra-kōḷam,* பெ.(n.) முட்டையின் வடிவமான கோளம்; a gland of the shape of an egg-lenticular gland (சா.அக.).

[அண்டாகாரம் + கோளம்.]

[Skt. aṇḍākāra> த. அண்டாகாரம்.]

கொள்→கோள் →கோளம்.

அண்டாகாரம் *aṇḍā-kāram,* பெ.(n.) முட்டைவடிவம்; egg shape; oval shape-lentiform (சா. அக.).

[Skt. aṇḍākāra>த. அண்டாகாரம்.]

அண்டாசயம் *aṇḍāšayam,* பெ.(n.) 1. சினைப் பை; (in physiology) the female organ in which reproductive germs or eggs are formed and developed,ovary. 2. விதையின் பை; the pouch that contains the testicles and their accessory organs, scrotum. 3. அண்டங்களை அடக்கிக் கொண்டிருக்கும் பூம்பிஞ்சு; (in botony) the case enclosing ovules or young seeds and which ultimately becomes the fruitovary (சா.அக.).

அண்டாவர்த்தம் *aṇḍāvarttam,* பெ.(n.) குதிரைத்தண்டையடியில் இருக்கிற சுழி (அசுவசா. 148.); curl of hair at the ankle of a horse.

அண்டிகம் *aṇḍigam,* பெ.(n.) 1. கரிமா, அரிமா ஆகியவற்றிற்குக் காணும் காய்ச்சல்; fever in an elephant or a lion. 2. தீங்கு விளைவிக்கும் நீர் un whole some or bad water (சா.அக.).

அண்டிகா *aṇḍigā,* பெ.(n.) மட்பாண்டம்; an earthern vessel or pot (சா. அக.).

அண்டிமாண்டு *aṇḍimāṇḍu,* பெ.(n.) கடனுறுதியாவணம் (இ.வ.); promissory note, note of hand, as beginning with the words on demand.

[E. on demand > த. அண்டிமாண்டு.]

அண்டினி *aṇḍiṉi,* பெ.(n.) குடற்காய்ச்சலின் விளைவால், பெண்ணின் பிறப்புறுப்பில் புணர்ச்சிக் காலத்தே தென்படும் ஒருவகை நீளுருண்டைக் கட்டி; a disease of the vagina resulting from typhoid fever, marked by an oval tumour felt during sexual intercourse (சா.அக.).

அண்டைமஞ்சள் *aṇḍai-mañjaḷ,* பெ.(n.) முட்டையின் மஞ்சட் கரு; the yellow portion of the hen's egg as distinguished from the white-yolk (சா.அக.).

[அண்டை + மஞ்சள்.]

[Skt. aṇḍa>த. அண்டம்.]

மஞ்சல்→மஞ்சள்.

அண்டோட்டுவித்தை *aṇḍōṭṭu-vittai,* பெ.(n.) நாய், நரி, கழுதை முதலிய விலங்குகள் மற்றும் மனிதரின் மண்டை ஓடுகளைக் கொண்டு செய்யும் மந்திரக்கலை (குறளிவித்தை); sorcery or witch craft performed with the aid of the skull of a dog, fox, ass or human being (சா.அக.).

[அண்டம் + ஓடு + வித்தை.]

[Skt. aṇḍa > த. அண்டம்.]

அண்டோடு *aṇḍōḍu,* பெ.(n.) 1. மண்டை ஓடு; the skull in common. 2. மனிதரின் மண்டை ஓடு; human skull (சா.அக.).

[அண்டம் + ஓடு.]

[Skt. aṇḍa > த. அண்டம்.]

ஓட்டு→ஓடு → ஓடு.

அண்ணகன் *aṇṇagaṉ,* பெ.(n.) விதை யெடுக்கப்பட்டவன் (வின்.); eunuch.

த.வ. காயடிபட்டவன், பேடி.

[Skt. saṇḍaka > த. அண்ணகன்.]

அணா *aṇā,* பெ.(n.) 1. பணம்; money, the small coin termed fanam, whether of gold or of silver. 2. தட்டார்நிறை; gold smith's weight. i.e., மஞ்சிட்டி =1 அணா. 3. ஆறு குண்டுமணி

எடை; 6 grains. 4. வீசம்; 1/16; part (சா.அக.).

த.வ. ஆணைக்காசு.

[U. ānā>த. அணா.]

அணுக்காபிதம் *aṇu-k-kābidam,* பெ.(n.) செஞ்சந்தனம்; red sandal-pterocarpus santalinus (சா.அக.).

அணுபை *aṇubai,* பெ.(n.) மின்னல் (சிந்தா.நி 105); lightning.

[Skt. aṅu-bhā > த. அணுபை.]

அணுவதம் *aṇuvadam,* பெ.(n.) ஓர் அருக நோன்பு (அருங்கலம். 64:65); subordinate duties or vows of jaina laymen.

த.வ. அணுநோன்பு.

[Skt. aṇu + vrata>த. அணுவதம்.]

அணோக்கம் *aṇōkkam,* பெ.(n.) 1. மரப் பொது; tree in common. 2. மரம்; tree (சா.அக.).

அணோசுரோத்திரியம் *aṇōśurōttiriyam,* பெ.(n.) இறையிலி வகை (M.M.); inam village in which the interest of the inadar is so many annas out of each rupee of revenue, the rest going to government.

அத்தகடகம் *atta-kaḍagam,* பெ.(n.) கைவளை; bracelet. *"அத்தகடகம் தோள்வளை" (அரிச். பு. விவாக. 115).*

த.வ. கைக்கடகம்.

[அத்த(ம்) + கடகம்.]

[Skt. hasta>த.அத்த(ம்).]

அத்தகண்டாதனம் *atta-kaṇḍādaṇam,* பெ.(n.) ஒருகாலை மேல் நீட்டி, அவ்வாறு நீட்டிய காலை ஒரு கையைக்கொண்டு கட்டி, மற்றைக்கையை நிலத்தில் நீட்டியுமிருக்கும் காலை நிலத்தில் ஊன்றியும், மற்றொரு காலை நிலத்தில் நீட்டியுமிருக்கும் இருக்கை வகை (தத்துவப். 108, உரை.); (yoga) a yogic posture in which one leg is held in upright position by one hand, while the other leg is stretched on the ground, the whole body resting on the other hand.

[அத்தகண்டம் + ஆதனம்.]

[Skt. hasta > த. அத்தம்.]

அத்தகம் *attagam,* பெ.(n.) 1. ஆமணக்கு; castor oil plant ricinus communis. 2. கருஞ்சீரகம்; black cummin seed, *Niggella sativa* (சா.அக.).

அத்தகம்பவாதம் *atta-kamba-vādam,* பெ.(n.) கைகளை நீட்டவும், மடக்கவும் முடியாதபடிச் செய்யும் ஓர் ஊதை நோய்; a disease of the joints of the arms marked by degenerative changes involving the structure of the various articulations and resulting in rigidity and deformity, *Rheumatoid arthritis* (சா.அக.).

[அத்த(ம்) + கம்ப(ம்) + வாதம்.]

[Skt. hasta> த. அத்தம், Skt. vāta>வாதம்.]

அத்தகானி *atta-kāṇi,* பெ.(n.) பொருட்கேடு (தஞ். சரசு, 1, 307); lose of wealth.

த.வ. அத்தநாசம்.

[Skt. artha-hāni > த. அத்தகாணி.]

அத்தகிரி *atta-kiri,* பெ.(n.) கதிரவன் மறையும் மலை (சீவக. 18. உரை); western mountain.

[Skt. asta+giri> த. அத்தகிரி.]

அத்தகோளம் *atta-kōḷam,* பெ.(n.) 1. உடம்பில் நீர் பொசிகின்ற கருவியின் பாதி, வியர்வைக் கோளத்தின் பகுதி; one half of a sweat gland. 2. பாதிகோளம்; half the portion of any gland (சா.அக.).

[அத்த(ம்) + கோளம்.]

[Skt.ardha > த. அத்த(ம்).]

கொள்→கோள்→கோளம்.

அத்தசாமம் *atta śāmam,* பெ.(n.) நள்ளிரவு (வின்.); midnight.

த.வ. அர்த்தசாமம்.

[அத்த(ம்) + சாமம்.]

[Skt.ardha > த. அத்த(ம்).]

யாமம் > சாமம்.

அத்தநாசம் *attanāsam,* பெ.(n.) பொருட்கேடு (வின்.); loss of money, destruction of property.

[அத்த(ம்) + நாசம்.]

[Skt. artha+nāsa> த. அத்தநாசம்.]

அத்தநாரி *atta-nāri,* பெ.(n.) கட்டுக் கொங்கை; kidney plum tree, prussic-acid tree, *Pygeum wightianum* (சா.அக.).

அத்தநாரீசுரன் *attanārīśuran,* பெ.(n.) ஒரு பாதி பெண்வடிவான சிவன் (வின்.); a manifestation of *Śivan.*

த.வ. மாதொருபாகன், மங்கைபங்கன்.

[Skt.ardha+nārīśvara>த.அத்த நாரீசுரன்.]

அத்தநாள்[1] *atta-nāḷ,* பெ.(n.) ஒருபாதி நாள் (திவா.); half a day.

த.வ. அரைநாள்.

[அத்த(ம்) + நாள்.]

[Skt. ardha > த. அத்த.]

அத்தநாள்[2] *attanāḷ,* பெ.(n.) ஒரு விண்மீன் (கைம்மீன்); the 13th *viṇmīṉ.*

த.வ. கைம்மீன்.

[அத்த(ம்) +நாள்.]

[Skt. hasta> த. அத்தம்.]

அத்தப்பிரகரம் *atta-p-piragaram,* பெ.(n.) 4 1/4 நாழிகை கொண்டது; a period consisting of 4 1/4 naligai (1 naligai = 24 minutes) (சா.அக.).

[Skt. asta + prahara > த. அத்தப்பிரகரம்.]

அத்தப்பிரகரன் *atta-p-piragaraṉ,* பெ.(n.) ஒரு காணாக்கோள் (சங். அக); (Astrol.) planet subordinate of mercury.

[Skt. ardha-prahara > த. அத்தப்பிரகரன்.]

அத்தப்பிரபஞ்சம் *atta-p-pirabañjam,* பெ.(n.) அர்த்தப்பிரபஞ்சம் (சி. போ. பா. 2, 2, பக். 134, புது.) பார்க்க; see *arttappira-pañjam.*

[Skt.artha+pra-pañca>த.அத்தப் பிரபஞ்சம்.]

அத்தப்பொருந்தி *atta-p-porundi,* பெ.(n.) 1. இருபாதியை ஒன்று சேர்ப்பது; that which joins the two halves. 2. எலும்பு முறிவை ஒன்றாகச் சேர்க்கும் பூடு; a plant capable of curing the fracture of bones (சா.அக.).

[அத்தம்+பொருந்தி.]

[Skt. ardha > த. அத்தம்.]

பொரு→பொருந்து.

அத்தபாகம் *atta-bāgam,* பெ.(n.) செம்பாகம்; half a share, half a portion (சா.அக.).

த.வ. சரிபாதி.

[அத்தம்+பாகம்.]

[Skt. ardha > அத்தம்.]

பகு→பாகு→பாகம்.

அத்தம் *attam,* பெ.(n.) 1. மாலை நேரம்; evening. 2. அந்திப் பொழுது; twilight cock; shut. 3. பொழுது சாய்கை; sunset (சா.அக.).

[Skt. asta > த. அத்தம்.]

அத்தமம் *attamam,* பெ.(n.) **அத்தமயம்** (வின்) பார்க்க; see *attamayam.*

[Skt. astama > த. அத்தமம்.]

அத்தமயம் *attamayam,* பெ.(n.) படு ஞாயிறு; setting, as of the sun. *"அத்தமய வெற் படைந்தான் கதிராயிரத்தோன்" (கந்தபு. தெய்வ. 146).*

த.வ. சாயுங்காலம், எற்பாடு.

[Skt. astamaya > த. அத்தமயம்.]

அத்தமனம் *attamaṉam,* பெ.(n.) 1. கோள்கள் மறைகை; setting, as of the sun. *"அத்தமன முதய மில்லை" (ஞானவா. தாகூர. 7.).* 2. அழிவு; destruction. *"உதயாத்த மனமறிவுக் குளவாகாவே" (பிரபோத. 32, 18).*

[Skt. astamana > த. அத்தமனம்.]

அத்தமானம்[1] *atta-māṉam,* பெ.(n.) ஆமணக்கு (மூ.அ.); castor-plant.

[Skt. asta-māna> த. அத்தமானம்.]

அத்தமானம்2 *attamāṉam,* பெ.(n.) கதிரவன் மறையும் மேற்கு மலை; the western mountain behind which the sun is supposed to set. *"கதிரோன் றோன்று முதயத்தோ டத்தமானம்" (கம்பா. இரணி. 151).*

த.வ. குடகுமலை.

[Skt. asta-mana > த. அத்தமானம்.]

அத்தமி-த்தல் *a-t-tami-,* 4 செ.கு.வி.(v.i.) ஞாயிறு மறைதல்; to set, as the sun.

[Skt. asta > த.அத்தமி-.]

அத்தமேற்கால் *attamēṟ-kāl,* பெ.(n.) **அத்தமேற்காலாதனம்** பார்க்க; see *attamēṟkālādaṉam. "அத்த மேற்கா லேகபாத மேகவத்தம்" (தத்துவப். 108).*

[அத்தம் + மேல் + கால்.]

[Skt. hasta>த. அத்தம்.]

அத்தமேற்காலாதனம் *attamēṟkāl-ādaṉam,* பெ.(n.) கீழே கிடந்தவண்ணம் இரண்டுகாலும் சம்மணமாக மடித்து, அவ்வாறு மடித்த காலிரண்டுந் தலைக்கு மேலாக உயர்த்திக் கையாற்பிடித்துக் கொண்டு கிடக்கையாகிய இருக்கை வகை (தத்துவப். 108, உரை); (*yōga*) a *yōgic* posture in which a person lying on his back holds his folded legs upright with his hands.

[அத்தம் + மேல் + கால் + ஆதனம்.]

[Skt. hasta > த. அத்தம்.]

அத்தமம் *attamam,* பெ.(n.) கதிரவன் மறைவு; setting, as of the sun or moon.

த.வ. ஏற்பாடு.

[Skt. astama > த. அத்தமம்.]

அத்தயாமம் *atta-yāmam,* பெ.(n.) நாட் பொழுதில் பதினாறிலொரு பங்கு கொண்ட நேரம்; 1/16 of the period constituting a day (சா.அக.).

த.வ. அரையாமம்.

[அத்தம் + யாமம்.]

[Skt. asta > த. அத்தம்.]

சாமம் → யாமம்.

அத்தர் *attar,* பெ.(n.) முளரி (ரோஜா), மல்லிகை முதலிய மலரிதழ்களிலிருந்து எடுக்கப்படும் நறுமண நெய்; fragrant essence obtained from the petals of rose, jasmine, etc. and used as a perfume.

த.வ. பூச்சாறை.

[U. atriṭr > த. அத்தர்.]

அத்தராவாயு *attarā-vāyu,* பெ.(n.) புளிமம் தேங்கி, உடம்பின் வலுவைக் குறைக்குமோர் வளி; a find of indigestion characterised by over eructation and weakness (சா.அக.).

அத்தரேகை *atta-rēgai,* பெ.(n.) மருத்துவத் தொழிலுக்குத் தகுதியுடையவன் என்பதற்கு அறிகுறியாக, அவன் உள்ளங் கையில் அமைந்துள்ள வரிகள் (ரேகை); a peculiar link or curling mark in the palm of the hand as in indication that he will be proficient in medicine (சா.அக.).

த.வ. கைவரை.

[அத்தம் + ரேகை.]

[Skt. hasta > த. அத்தம்.]

வரி > வரிகை>ரேகை > ***Skt.*** *rēkhā.*

அத்தலைப்பொருந்தி *attalai-p-porundi,* பெ.(n.) **அத்தப்பொருந்தி** பார்க்க; see *atta-p-porundi* (சா.அக.).

அத்தவசனம் *atta-vašaṉam,* பெ.(n.) நினைத்த பொருளை விளக்குஞ் சொல்; word that exactly expresses one's meaning.

த.வ. பொருண்மொழி.

[Skt. artha + vacana > த. அத்தவசனம்.]

அத்தவாளம்[1] *atta-vāḷam,* பெ.(n.) 1. மேலாடை; upper garment. 2. முன்றானை (ஈடு, 9, 10, ப்ர.); outer end of a cloth. 3. காடு (வின்.); jungle.

த.வ. தோள்தானை.

[Skt. hasta + Mar. vāḷā > த. அத்தவாளம்.]

அத்தவாளம்[2] *atta-v-āḷam,* பெ.(n.) ஆயுள் வேதத்திற் சொல்லியுள்ள ஒரு வகை மாத்திரை; (In medicine) a kind of pill in ayurvedic science (சா.அக.).

அத்தாங்கம் *attāṅgam,* பெ.(n.) **அத்தாங்காதனம்** பார்க்க; see *attāṅgādaṉam.* "*கேசாங்கமு மத்தாங்கம்*" (*தத்துவப். 107.*).

[**Skt.** *hasta + aṅga>த. அத்தாங்கம்.*]

அத்தாங்காதனம் *attāṅgādaṉam,* பெ.(n.) கையிரண்டும் மடித்து நிலத்திலூன்றி உடல் மேற்பட நிற்கும் இருக்கை வகை (தத்துவப். 107, உரை); a yōgic posture in which a person stands on folded hands, keeping the body aloft.

த.வ. கைத்தாங்கல் ஒகநிலை.

[*அத்தாங்கம் + ஆதனம்.*]

[**Skt.** *hasta + aṅga>த. அத்தாங்கம்.*]

அத்தாணி[1] *attāṇi,* பெ.(n.) ஓலக்கமண்டபம்; hall of audience durbar hall, presence chamber. "*அண்டத் தமரர்கள் சூழ வத்தாணி யுள்ளங் கிருந்தாய்*" (*திவ். பெரியாழ். 2,7,9.*)

[**Pkt.***attāṇi*>**Skt.** *āsthāna > த. அத்தாணி.*]

அத்தாணி[2] *attāṇi,* பெ.(n.) 1. அண்மை; nearness. 2. கமுக்கம்; intimacy.

[**Pkt.** *attāṇi*>**Skt.***ā-sthana > த. அத்தாணி.*]

அத்தாணிச்சேவகம் *attāṇi-c-cēvagam,* பெ.(n.) அறமன்றப் பணிவிடை (திவ். திருப்பல். 8.); service of king or God.

[*அத்தாணி+சேவகம்.*]

[**Pkt.***attāṇi*>**Skt.** *āsthāna > த. அத்தாணி.*]

[*சே*[2] *+ அகம் > சேவகம்.*]

அத்தாணிமண்டபம் *attāṇi maṇḍabam,* பெ.(n.) ஓலக்க மண்டபம் (சி. போ. சிற். 5, 1, 1.); hall of audience, presence-chamber.

[*அத்தாணி + மண்டபம்.*]

[**Pkt.***attāṇi*>**Skt.** *āsthāna > த. அத்தாணி.*]

அத்தாந்தரம்[1] *attāndaram,* பெ.(n.) நிலையற்ற நிலை; helpless condition. "*அவனை அந்தாந்தரத்தில் விட்டுவிட்டான்*" (*இ.வ.*).

[**Skt.** *ardha + antara>த. அத்தாந்தரம்.*]

அத்தாந்தரம்[2] *attāndaram,* பெ.(n.) கைப்பணம் வரவுசெலவு செய்யுங்கணக்கன்; cashier. "*அம்பலஞ்செயத்தாந்தரம் என்றும்*" (*நெல்விடு. 317.*).

த.வ. பொருளாளர், காசாளர்.

[**Skt.** *hasta+antara> த. அத்தாந்தரம்.*]

அத்தாபத்தி *attāpatti,* பெ.(n.) **அத்தியாவத்தை** (நெல்லை) பார்க்க; see *attiyāvastai.*

[**Skt.** *atyāpat > த. அத்தாபத்தி.*]

அத்தாபம்[1] *attābam,* பெ.(n.) **அத்தாபத்தி** (இ.வ.) பார்க்க; see *attāpatti.*

[**Skt.** *atyāpat > த. அத்தாபம்.*]

அத்தாபம்[2] *attābam,* பெ.(n.) **அத்தியாவத்தை** பார்க்க; see *attiyāvattai.*

[**Skt.** *atyapat > த. அத்தாபம்.*]

அத்தானம் *attāṉam,* பெ.(n.) கோபுரவாயில்(R.); gateway under a turret or tower, as of a pagoda.

[**Skt.** *ā-sthāna > த. அத்தானம்.*]



அத்தி[1] *atti,* பெ.(n.) 1. பானை (பிங்.); elephant. 2. தெய்வானை (திருப்பு.); one of the two wives of Skanda. 3. ஓர் அரசன்

(பாரத.குருகுல.28);name of a prince of the lunar race, as the founder of Hastinapura.

[Skt. hastin > த. அத்தி.]

அத்தி[2] *atti,* பெ.(n.) எலும்பு (பிங்.); bone.

[Skt. asthi > த. அத்தி.]

அத்திக்கவிப்பு *atti-k-kavippu,* பெ.(n.) எலும்பின் மேல் கவிந்துள்ள சவ்வு; the tough fibrous membrane surrounding the bone periosteum (சா.அக.).

த.வ. என்புக்கவிப்பு.

[அத்தி+கவிப்பு.]

[Skt. asthi> த.அத்தி.]

கவி > கவிப்பு.

அத்திக்கழலை *atti-k-kalalai,* பெ.(n.) எலும்பைப் பற்றிய கழலைக் கட்டி; a bone tumour (சா.அக.).

த.வ. என்புக்கழலை.

[அத்தி + கழலை.]

[Skt. asthi>த. அத்தி.]

அத்திக்கிரந்தி *atti-k-kirandi,* பெ.(n.) எலும்புகள் நொறுங்குதலால் உண்டாகிப் பருத்துயர்வதும் அழுங்குவதுமாக இருக்கு மோர் புண்கட்டி; an ulcerous diseases due to the death of a bone arising from syphilitic causes syphilitic causes (சா.அக.).

த.வ. துருத்துக்கழலை.

[Skt. asthi+granthi>த. அத்திக்கிரந்தி.]

அத்திக்குட்டிமலம் *atti-k-kutti-malam,* பெ. (n.) 1. கண்டில் வெண்ணெய்; a drug unidentified. 2. யானைக் குட்டியின் சாணி; the faeces of an elephant's kid (சா.அக.).

அத்திக்கூடு *atti-k-kūdu,* பெ.(n.) எலும்புக் கூடு; a skeleton (சா.அக.).

த.வ. என்புக்கூடு.

[அத்தி + கூடு.]

[Skt. asthi > த. அத்தி.]

குல் → குள் → கூடு.



அத்திக்கொம்பு *atti-k-kombu,* பெ.(n.) யானைக் கொம்பு; elephant's tusk (சா.அக.).

த.வ. யானை மருப்பு.

[அத்தி + கொம்பு.]

[Skt. hastin>த. அத்தி.]

அத்திகங்கம் *atti-kangam,* பெ.(n.) பொழுதுவணங்கி (சூரிய காந்திப்பூ); sun flower, *Helianthus annuns* alias *Hindicus* (சா.அக.).

அத்திகபம் *atti-kabam,* பெ.(n.) 1. கணவாய் மீனெலும்பு; cuttle fish bone. 2. கடனுரை; sea-froth (சா.அக.).

அத்திகர்ணி *atti-karni,* பெ.(n.) சிற்றாமணக்கு; castor-plant. *"அத்திகர்ணியவிசு" (தைலவ. தைல. 113.).*

[Skt. hasti-karnā > த. அத்திகர்ணி.]

அத்திகரம் *atti-karam,* பெ.(n.) 1. பலகறை; cowry. 2. ஊனீர்; serum (சா.அக.).

அத்திகன்னி *atti-kanni,* பெ.(n.) வெருகஞ் செடிவகை (மலை.); ol, tuberous rooted herb, *Arum macrorwzon.*

[Skt. hasti-karna > த. அத்திகன்னி.]

அத்திகாயம்[1] *atti-kāyam,* பெ.(n.) ஐந்து அருக (சைன) மத மெய்ப்பொருள்கள் (தத்துவங்கள்); (Jaina.) ontological categories which are five in number.

[Skt. asti-kāya > த. அத்திகாயம்.]

அத்திகாயம்[2] *atti-kāyam,* பெ.(n.) 1. எலும்பிலேற்பட்ட புண் (காயம்); an injury to the bone or a wound from the affection of a bone. 2. எலும்பு முறிவு; fracture of a bone (சா.அக.).

[அத்தி + காயம்.]

*[**Skt.** asthi > **த.** அத்தி.]*

கள் → கய் → காய் → காயம்.

அத்திகிரிமான்மியம் *atti-kiri-māṉmiyam,* பெ.(n.) சிற்றிலக்கிய(பிரபந்த)ங்களுளொன்று; name of a poem on the *Viṣṇu*shrine at *Kāñjipuram* by *Vēdāntadēšika.*

*[**Skt.** hasti-giri + mahātmya > **த.** அத்திகிரி மான்மியம்.]*

அத்திகும்பம் *atti-kumbam,* பெ.(n.) எலும்புப் பானை; an urn for preserving the bones of the dead (சா.அக.).

த.வ. என்புத்தாழி.

[அத்தி + கும்பம்.]

*[**Skt.** asthi> **த.** அத்தி.]*

கும்பு > கும்பம் > **Skt.** *kumbha.*

அத்திகூடம் *atti-kūḍam,* பெ.(n.) யானைக்கூடம்; elephant stables. *"ஆயிடை யத்தி கூடத் தயலெழுந்து" (யசோதர. 2, 21.).*

த.வ. யானைத்தறி.

[அத்தி + கூடம்.]

*[**Skt.** hastin > **த.** அத்தி.]*

கூடு > கூடம்.

அத்திகேசரம் *atti-kēšaram,* பெ.(n.) சிவப்பு வல்லி; a red creeper (சா.அக.).

அத்திகோசத்தார் *atti-kōšattār,* பெ.(n.) ஒரு குழுவின் பெயர் (தொல். சொல். 167. உரை.); name of an ancient clan.

த.வ. யானைக்குழுவார்.

அத்திகோசம் *atti-kōšam,* பெ.(n.) யானை சுமத்தற்குரிய பொருள் படைத்த பெரு வணிகர் வகையார்; a kind of merchant, whose store of wealth is so large as to need an elephant to carry it. *"ஐம்பெருங்குழுவு மத்திகோசமும்" (பெருங். வத்தவ. 9, 5, அரும்.).*

த.வ. யானைவாணிகக்குடி.

*[**Skt.** hastin + kōšan>**த.** அத்திகோசம்.]*

அத்திகோபம் *atti-kōbam,* பெ.(n.) சிவந்து தோன்றும் கண்ணோய் வகை (வின்.); a disease of the eye.

[அத்தி + கோபம்.]

*[**Skt.** asthi > **த.** அத்தி.]*

குப்பள் = சிவப்பு. குப்பள் > குப்பு > கோப்பு > கோபம்.

அத்திகோவிகம் *atti-kovigam,* பெ.(n.) சிவப்பு, எலிச் செவிப் பூடு; a red species of rat's ear plant, *Evolvulus emarginatas* (சா.அக.).

அத்திசந்தி *atti-šandi,* பெ.(n.) எலும்பின் மூட்டு; the joint of bones (சா.அக.).

[அத்தி + சந்தி.]

*[**Skt.** asthi > **த.** அத்தி.]*

அந்து → சந்து → சந்தி.

அத்திசம் *attišam,* பெ.(n.) எலும்புக்குள் தோன்றுவது; that which is produced in the bone like its marrow (சா.அக.).

த.வ. என்பியம்.

*[**Skt.** asthi > **த.** அத்திசம்]*

அத்திசம்மாரகம் *atti-šammāragam,* பெ.(n.) நான்முகப் பிரண்டை; bone setter, *Vitis quadrangularis* (சா.அக.).



அத்திசா *attišā,* பெ.(n.) கொடி முந்திரிகை; common grapervine, *Vitis vinefera* (சா.அக.).

அத்திசாரபேதி *atti-šāra-bēdi,* பெ.(n.) எலும்பு, மூளை இவற்றின் சாரத்தை வெளிப்படுத்தி கழி மலத்தோடு கலந்து வருமோர் வகை வயிற்றுக் கழிச்சல்; a kind of dysentary marked by the discharge of marrow and other substance from the cavities of bones (சா.அக.).

[Skt. asthi+šarabēdi > த. அத்திசாரபேதி.]

அத்திசிங்குவை *atti-šinguvai,* பெ.(n.) பதின் நாடியுளொன்று (சிலப். 3, 26, உரை.); a principal tubular vessel of the human body, one of *taša-nāḍi,* q.v.

[Skt. hastijihvā > த. அத்திசிங்குவை.]

அத்திசிராவம் *atti-širāvam,* பெ.(n.) பெண்களுக்கு அல்குல் வழியாகவோ அல்லது கருப்பைக் குள்ளிருந்தோ பால்போல் வெண்ணிறமாயோ அல்லது சளி, சீழ் முதலியன போலவோ நீர்மமாக வெளிப்பட்டு, அல்குலிலும், முதுகிலும் வலியுண்டாக்கி அடிவயிறு கனத்து, நாளுக்கு நாள் உடம்பு மெலிந்து, கை காலோய்ந்து போகும்படிச் செய்யும் நோய்; a disease in women characterised by a whitish viscid discharge from the vagina or uterine cavity due to the congestion of the these parts, arises from weakness, perturbation of the mind abortion or premature labour, rude coitus etc. 2. எலும்புருக்கி நோய்; a tabes marked by a secretion of the marrow from the bony tissues with a darting pain ostcotabes. 3. இதள் (இரச) தாதுவின் கொதிப்பினால் குருதியின் இயற்கை நிறம் கெட்டு வெளிப்படுமோர் நோய்; a wasting disease arising from the discharge of blood, with its natural colour altered, owing to the overheated condition of the chyle in the system (சா.அக.).

[Skt. asthi+šrāva>த. அத்திசிராவம்.]

அத்திசூடு *atti-šūḍu,* பெ.(n.) 1. வெப்பம்; heat. 2. கதகதப்பு; feverishness.

அத்தித்திப்பிலி *atti-t-tippili,* பெ.(n.) கொடிவகை (மூ.அ.); elephant - pepper climber.

[அத்தி+திப்பிலி.]

[Skt. hasti > த. அத்தி.]

திப்பிலி > Skt. pippili

அத்தித்திவகம் *atti-t-tivagam,* பெ.(n.) எலும்பின் பாகத்தையடுத்த சவ்வு; the membrane investing the bones of animals, *Periosteum* (சா.அக.).

அத்திதந்தம்[1] *atti-tandam,* பெ.(n.) முள்ளங்கிச் செடிவகை; radish, as resembling elephant tusk. *"விடமரக் கனிமுருக் கத்தி தந்தம்" (தைலவ. தைல. 73.).*

[Skt. hastidanta > த. அத்திதந்தம்]

அத்திதந்தம்[2] *atti-tandam,* பெ.(n.) யானைத் தந்தம்; the tusk of the elephant ivory.

[Skt. hastindanta > த. அத்திதந்தம்.]

அத்திதாதுசுரம் *atti-tādu-šuram,* பெ.(n.) உடம்பை உருக்கச் செய்யும் எலும்பைப் பற்றிய வோர் வகைக் காய்ச்சல். a kind of fever resulting in the emaciation of the body the due to the affection of bones (சா.அக.).

[அத்தி+தாது+சுரம்.]

[Skt. asthi> த. அத்தி.]

உல் → சுல் → சுர் → சுரம்.

அத்திதேலம் *atti-tēlam,* பெ.(n.) ஆவியாய்ப் போகக் கூடிய நெய்மம்; a volatile oil, such as petrol, etc. (சா.அக.).

அத்திநகம் *atti-nagam,* பெ.(n.) நகர வாயிலின் படிச்சுருள் (சூடா.); raised mound protecting the approach to the gate of a fort or city, furnished with an inner staircase and loopholes for discharging arrows.

[Skt. hasti - nakha > த. அத்திநகம்.]

அத்திநகர் *attinagar,* பெ.(n.) அத்தினாபுரம்; *Hastinӓpuram* near modern Delhi. *"அத்திநகரெய்தினா னாங்கு" (பாரதவெண். 147.).*

[அத்தி + நகர்.]

***[Skt.** hastin>த. அத்தி.]*

நகு → நகர்.

அத்திநாடிவிரணம் *atti-nāḍi-viraṇam,* பெ.(n.) எலும்பின் வழியே பிறந்து அந்த எலும்பின் நரம்புகளுக்கு வலியுண்டாக்கும் ஒரு மென்மையான கட்டி; a cold abscess formed in the surrounding tissues of a bone and marked by a chronic inflmmation of the periosteum (சா.அக.).

அத்திநாத்திவாதம் *atti-nātti-vādam,* பெ.(n.) எலும்பை அழிக்கக்கூடியவோர் வளிநோய் (வாதம்); a disease marked by the molecular decay or death of a bone-osteonecrosis (சா.அக.).

அத்திநூல் *atti-nūl,* பெ.(n.) எலும்பினுடைய தன்மையையும், அதன் அமைப்பையும் பற்றிக் கூறும் நூல்; the science of the nature and structed of the bones, *Osteology* (சா.அக.).

[அத்தி+நூல்.]

***[Skt.** asthi > த. அத்தி.]*

அத்திநோய் *atti-nōy,* பெ.(n.) 1. எலும்பில் ஏற்படும் நோய்; disease of the bone. 2. எலும்பில் ஏற்படும் வலி; pain in a bone or in the bones-ostalgia (சா.அக.).

[அத்தி+நோய்.]

***[Skt.** asthi > த. அத்தி.]*

அத்திப்பிடிப்பு *atti-p-piḍippu,* பெ.(n.) 1. எலும்பிற்குக் காணும் அழற்சி; inflammation of the bones. 2. மூட்டு அல்லது எலும்புப் பொருத்துகளிற் காணும் பிடிப்பு; inflammation of the joints, *Osteoarthiritis.* 3. மூட்டுகளிலுள்ள குருத்தெலும்புகள் வன்மையடைவதனால் ஏற்படும் பிடிப்பு; arthritis marked by the growth of the cartilage at the edge of the joints, *Hypertrophic arthritis* (சா.அக.).

[அத்தி + பிடிப்பு.]

***[Skt.** asthi > த. அத்தி.]*

புள்→பிள்→பிண்→பிடி→பிடிப்பு.

அத்திப்புரசாதனி *atti-p-puraśādaṉi,* பெ.(n.) அவுரிப் பூடு; indigo plant, *Indigofera elephantum* (சா.அக.).

அத்திபங்கம் *atti-paṅgam,* பெ.(n.) 1. எலும்பின் முறிவு; the fracture of a bone. 2. எலும்பின் கோணல்; the curvature or bending of a bone-osteocampsia (சா.அக.).

***[Skt.** asthi + bhaṅga > த. அத்திபங்கம்.]*

அத்திபஞ்சரம் *attipañjaram,* பெ.(n.) எலும்புக்கூடு (சிந்தா. நி. 147.); skeleton.

***[Skt.** asthipañjara > த. அத்திபஞ்சரம்.]*

அத்திபந்தனம் *atti-pandaṉam,* பெ.(n.) எலும்புகளைக் ஒன்று கட்டுகின்ற நார்; a ligament or a ligamental fibre (சா.அக.).

[அத்தி+பந்தனம்.]

***[Skt.** asthi > த. அத்தி.]*

அத்திபேதம் *atti-pēdam,* பெ.(n.) எலும்பின் வேற்றுமை; the different varieties of bones. (சா. அக.)

***[Skt.** ashti + bhēda > த. அத்திபேதம்.]*

அத்திபேதி[1] *atti-bēdi,* பெ.(n.) யானையின் மலக்குடலைத் துப்புரவாக்கும் மருந்து (வின்.); purgative for elephants.

***[Skt.** hastibhedin > த. அத்திபேதி.]*

அத்திபேதி[2] *atti-bēdi,* பெ.(n.) எலும்பை நீராக்கும் மருந்து; a medicine capable of converting the bone into a liquid (சா.அக.).

***[Skt.** asthi+bhēdin > த. அத்திபேதி.]*

அத்திபைரவி *atti-bairavi,* பெ.(n.) சீமைவிளா; European wood apple, *Feronia elephantum* (சா.அக.).

அத்திமண்டுகி *atti-mandūgi,* பெ.(n.) முத்துச் சிப்பி; a molluse which yields pearls, pearl oyster (சா.அக.).



அத்திமுகத்தோன் *attimugattōṉ,* பெ.(n.) பிள்ளையார் (பிங்.); *Ganēša,* as elephant-faced.

த.வ. ஆனைமுகப் பெருமான்.

[அத்தி+முகத்தோன்.]

[Skt. hasti > த. அத்தி.]

முகம் > முகத்தோன்.

அத்திமேகம் *atti-mēgam,* பெ.(n.) யானையின் சிறுநீரை யொத்து ஒருவேளை தடைபடாமலும், ஒருவேளை தடைபட்டும், வெண்ணிறமாகவோ சிறிது நிறம் மாறியோ காணுமொரு அரிதான வெள்ளை நோய்; a chronic diabetes chracterised by the passing of a large-quantity of pale or light coloured urine with or without hindrance, in an unbroken stream like that passed by an elephant, *Diabetes in sipidus or D. mellitus* (சா.அக.).

[Skt. hastin + mēha > த. அத்திமேகம்.]

அத்தியக்கம் *attiyakkam,* பெ.(n.) காண்டலென்னுமளவை; perception as a mode of proof. *"ஆக்கைவிதம் பேதமென அத்தியக்க மறிவிக்கும் (சிவதரு. சிவஞான யோ. 19.).*

[Skt. adhyakṣa > த. அத்தியக்கம்.]

அத்தியக்கன் *attiyakkaṉ,* பெ.(n.) தலைவன்; master, lord, leader, director, superintendent. *"கணாத்தியக்கரை" (விநாயகபு. 80. 792).*

[Skt. adhyakṣa > த. அத்தியக்கன்.]

அத்தியக்கினி *attiyakkiṉi,* பெ.(n.) திருமண காலத்து நெருப்பெதிரே பெண்ணுக்குக் கொடுக்குஞ் சீர்வரிசைப்பொருள் (W.G.); gifts made to a woman before the sacred fire at her wedding, which become her separate property, a variety of *šīr.*

[Skt. adhyagni > த. அத்தியக்கினி.]

அத்தியசனம் *attiyašaṉam,* பெ.(n.) முதல் நாள் உண்டவுணவு செரிக்காமலே மறுநாள் கொள்ளு முணவு; food taken on the next day before the digestion of that taken on the previous day (சா.அக.).

அத்தியட்சன் *attiyaṭcan,* பெ.(n.) **அத்தியக்கன்** பார்க்க; see *attiyakkaṉ.*

த.வ. தலைவன்.

[Skt. adhyakṣa > த. அத்தியட்சன்.]

அத்தியந்தம்[1] *attiyandam,* எ.வி.(adv.) மிகவும்; much, excessively.

[Skt. atyanta > த. அத்தியந்தம்.]

அத்தியந்தம்[2] *attiyandam,* பெ.(n.) ஒரு பேரெண் (வின்.); ten thousand quadrillions.

[Skt. atyanta > த. அத்தியந்தம்.]

அத்தியந்தம்[3] *attiyandam,* வி.அ.(adv.) முழுதும்; அனைத்தும்; அறவே; to the last end, entirely. *"பாவங்களை அத்தியந்தம் போக்கடிக்கிறவர்களையும்" (வேதாந்தசா. 13).*

[Skt. atyanta > த. அத்தியந்தம்.]

அத்தியந்தாபாவம் *attiyandāpāvam,* பெ.(n.) முழுதுமின்மை (பிரபோத, 42, 4.); (Log.) absolute non-existence.

[Skt. atyantābhāva > த. அத்தியந்தாபாவம்.]

அத்தியயம் *attiyayam,* பெ.(n.) இறப்பு; death (சா. அக.).

அத்தியயனபட்டர் *attiyayaṉa-paṭṭar,* பெ.(n.) பூசகன்; temple priest.

[Skt. adhyayana+bhaṭṭa > த. அத்தியயன பட்டர்.]

அத்தியயனம் *attiyayaṉam,* பெ.(n.) ஓதல்; learning, studying, esp. the *vēda.* *"அத்தியயனத்தொடு வலமாத்திரிந்து" (நல். பாரத. தருமசா. 177.).*

த.வ. மறையோதல்.

[Skt. adhyayana > த. அத்தியயனம்.]

அத்தியயனவிருத்தி *attiyayaṉa-virutti,* பெ.(n.) கோயிலில் மறைநூலோதற்கு விடப்பட்ட இறையிலி நிலம் (M.E.R. 493-4 of 1926.); tax-free land endowed for the service of reciting the *vēdas* in temples.

த.வ. மறையோத்துப்புரப்புக்கொடை.

[Skt. adhyayana + vṛtti>த. அத்தியயன விருத்தி.]

அத்தியயனாங்கம் *attiyayaṉāṅgam,* பெ.(n.) **அத்தியயனவிருத்தி** (M.E.R. 197 of 1924.) பார்க்க; see *attiyayaṉa-virutti.*

[Skt. adhyayana + aṅga > த. அத்தியயனாங்கம்.]

அத்தியயனோற்சவம் *attiyayaṉōṟcavam,* பெ.(n.) திருமால் கோவிலின் விழா வகை (கோயிலொ. 8); festival in *Viṣṇu* temples during which are chanted the divya-prabandha and vedic hymns for ten nights before (*pagaṟpattu*), and ten days after (*irāppattu*) *vaiguṇḍa-ēgādaśi.*

த.வ. மறையோதல் விழா.

[Skt. adhyayana+ utsava>த. அத்தியயனோற்சவம்.]

அத்தியவசாயம் *attiyavaśāyam,* பெ.(n.) மனப்போக்கு; inclination, turn of mind.

[Skt. adhyava - sāya > த. அத்தியவசாயம்.]

அத்தியற்பம் *attiyaṟpam,* பெ.(n.) அளவிட்டிது; very little.

த.வ. மிச்சிறிது.

[Skt. atyalpa > த. அத்தியற்பம்.]

அத்தியற்புதம் *atti-y-aṟpudam,* பெ.(n.) பெரு வியப்பு; exceeding wonder.

[Skt. atyadbhuta > த. அதியற்புதம்.]

அத்தியாகாரம்[1] *attiyāgāram,* பெ.(n.) அவாய் நிலையால் வருவித்து முடிக்கை (பி.வி. 50, உரை.); (Gram.) supplying an ellipisis.

[Skt. adhyāhāra > த. அத்தியாகாரம்.]

அத்தியாகாரம்[2] *attiyāgāram,* பெ.(n.) அளவிறந்த உணவு; too much of food.

[Skt. adhyāhara > த. அத்தியாகாரம்.]

அத்தியாகாரம்[3] *attiyāgāram,* பெ.(n.) பெருஞ்சீரகம்; star-anise, *Illecium anisatum* (சா.அக.).

[Skt. adhyāhara > த. அத்தியாகாரம்.]

அத்தியாகாரி *attiyāgāri,* பெ.(n.) மிகு உணவு உண்போன், கழிபேரிரையான்; one who eats in excess, a glutton (சா.அக.).

அத்தியாகினம் *attiyāgiṉam,* பெ.(n.) கருஞ்சீரகம் (பரி. அக.); black cumin.

அத்தியாசம் *attiyāśam,* பெ.(n.) ஒன்றன் குணத்தை மற்றொன்றன் மேலேற்றுகை; erroneous superimposition, transference of an attribute from one thing to another which does not really possess it. *"உற்றவத்தியாச விலக்கணமாம் வேறொன்றி லொன் றுணர்தலாம்" (வேதா சூ. 90.).*

[Skt. adhyāsa > த. அத்தியாசம்.]

அத்தியாசவாதம் *attiyāśa-vādam,* பெ.(n.) முகத்தில் ஒரு பக்கமும், அதற்கு மாறாக உடம்பில் மற்றொரு பக்கமுமாகக் காணுமோர் முடக்குவளி(வாத) நோய்; a paralysis of the facial muscles of one side with paralysis of the limbs on the corresponding opposite side ot the body, *Aternate paralysis* (சா.அக.).

[Skt.adhyāsa+vāta > த. அத்தியாசவாதம்.]

அத்தியாத்துமசாத்திரம் *attiāttu-maśāttiram,* பெ.(n.) சாங்கியம், பாதஞ்சலம், வேதாந்தம் என மூவகைப்பட்ட ஆதன் அறிவியல் நூல் (விவேகசிந். 15.); the spiritual science, of three kinds, *śāṅgiyam, pādañjalam, vēdāndam.*

*[**Skt.** adhyātma+ śāstra > த. அத்துயாத்தும சாத்திரம்.]*

அத்தியாத்துமம் *attiyāttumam,* பெ.(n.) நூற்றெட்டுபநிடதங்களுளொன்று; name of an upanisad.

*[**Skt.** adhyātma > த. அத்தியாத்துமம்.]*

அத்தியாத்துமமதம் *attiyāttumamadam,* பெ.(n.) பாசுகரீயம் மாயாவாதம் சத்தப்பிரமவாதம் கிரீடாப்பிரம வாதம் என நால்வகைப்பட்டு உயிரின் வடிவத்தை விளக்கும் மதம் (விவேகசிந். 16.); the doctrine of the soul of four kind, *pāśkariyam, māyāvādam, śatta-p-pirama-vādam, kiriḍā-p-pirama-vātam.*

*[**Skt.** adhyātma > த. அத்தியாத்துமம்.]*

அத்தியாத்துமிகம் *attiyāttumigam,* பெ.(n.) **அத்தியான்மிகம்** பார்க்க; see *attiyāṉmigam.*

*[**Skt.** ādhyātmika > த. அத்தியாத்துமிகம்.]*

அத்தியாபகன் *attiyābagaṉ,* பெ.(n.) திருமறைப் பயிற்றுவிப்போன் (பிரபோத. 11, 5); teacher, instructor of the *Vēda.*

த.வ. மறையாசான்.

*[**Skt.** adhyāpaka > த. அத்தியாபகன்.]*

அத்தியாபனம் *attiyāpaṉam,* பெ.(n.) மறை நூல் பயிற்றுகை; teaching the *Vēda.*

த.வ. மறையோதல்.

*[**Skt.** adhyāpana > த. அத்தியாபனம்.]*

அத்தியாம்சரக்கு *attiyām-śarakku,* பெ.(n.) யானையைப் போல் எளிதில் கட்டுப்படாத சரக்கு; minerals that cannot be easily consolidated; substances that pass away into vapour or fumes before fire, like, sulphur, mercury, etc., (சா.அக.).

அத்தியாமிசம் *attiyāmiśam,* பெ.(n.) எலும்பின் மேலுண்டாகுங் கழலைக் கட்டி; a sarcoma situated closed to the outer surface of a bone, *paresteal sarcoma* (சா.அக.).

த.வ. என்புக்கழலை.

அத்தியாயம் *attiyāyam,* பெ.(n.) நூற்பிரிவு (பிங்.); chapter, division of a book.

த.வ. இயல்.

*[**Skt.** adhyāya > த. அத்தியாயம்.]*

அத்தியாயனம் *attiyāyaṉam,* பெ.(n.) மறைநூல் ஓதுகை (சிந்தா. நி. 121.); reciting the *Vēdas.*

த.வ. மறையோதல்.

*[**Skt.** adhyayana > த. அத்தியாயனம்.]*

அத்தியாரோபம் *attiyārōbam,* பெ.(n.) ஒன்றன் தன்மையை மற்றொன்றில் ஏற்றிக் கூறுகை (வேதா. சூ. 28.); erroneously attributing the properties of one thing to another.

த.வ. பிறிதேற்றம்.

*[**Skt.** adhyārōpa > த. அத்தியாரோபம்.]*

அத்தியாவசியம் *attiyāvaśiyam,* பெ.(n.) மிக தேவை (அடிப்படை)யானது; that which is indispensable or essential.

த.வ. அகத்தியம், கட்டாயம்.

*[**Skt.** atyāvaśya > த. அத்தியாவசியம்.]*

அத்தியாவத்தை *attiyāvattai,* பெ.(n.) நெருக்கடியான நிலை (இ.வ.); critical condition, as of a disease-stricken person.

*[**Skt.** atyāvasthā > த.அத்தியாவத்தை.]*

அத்தியாவாகனிகம் *attiyāvākaṉigam,* பெ.(n.) பெண் கணவன் வீட்டுக்குச் செல்லுங்காற் பெறுஞ் சீதனம் (W.G.); gifts made to a bride when she is conducted

to the bridegroom's house, which become her separate property, a variety of *Šīdaṇam*.

த.வ. தாய்மனைச்சீர்.

[Skt. adhyāvāhanika> த. அத்தியாவாகனிகம்]

அத்தியாவிரதவாதம் *attiyā-virada-vādam*, பெ.(n.) உடம்பில் எலும்பின் கூறுகளில் வீக்கம் அல்லது கழலைக் கட்டியைப் போல் காணுமோர் வளி (வாத) நோய்; an indurated swelling or tumour that forms upon bones from various causes, but chiefly-syphilis-syphilitic node (சா.அக.).

த.வ. என்பு ஊதை.

அத்தியாளி *atti-yāḷi*, பெ.(n.) யானையாளி (பெரும்பாண். 257–9 அடிக்குறிப்பு); a fabulous animal.

[அத்தி+யாளி.]

[Skt. hastin > த. அத்தி.]

அத்தியான்மிகம் *attiyāṇmigam*, பெ.(n.) 1. ஆதனுக்குரியது (வின்.); pertaining to the soul. 2. சைவ தோன்றியங்களுள் ஒரு பகுதி; (*Šaivam*) a section of *Šaivāgamas*. *"வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம்... என நூல்களை ஐவகைப்படுத்து" (சி.போ.பா. சிறப். 17.)*; 3. ஆதன் பிறரால் அடையுந் துன்பம் (சி.சி. 2, 39, சிவாக்.); (phil.) physical and mental afflictions caused to one's self by others.

த.வ. ஆதன்மம்.

[Skt. ādhyātmika > த. அத்தியான்மிகம்.]

அத்தியானந்தயோனி *attiyāṇanda-yōṇi*, பெ.(n.) பெண்களுக்கு அடிக்கடி முயக்கத்தில் மிகுதியாக இச்சையுண்டாக்குமொரு நோய்; a disease in women which knows no satisfaction in sexual pleasures; in sane sexual desire in the female, *Nymphomania* (சா.அக.).

த.வ. கடுங்காமம்.

அத்தியானம் *attiyāṇam*, பெ.(n.) மறைநூல் கற்கை; learning, studying, esp. the Vēda. *"அத்தியான மாமினையர் கத்துவதும்" (பிரபோத. 11, 4.).*

[Skt. adhyayana > த. அத்தியானம்.]

அத்தியிளக்கம் *atti-y-iḷakkam*, பெ.(n.) 1. எலும்பின் நுண்மங்கள் மெதுவடைதல்; softening of the bony tissue, ossifluence. 2. எலும்பு இளக்கமடைதல்; softening of the bones, *Ostcomalacia or mollities ossium* (சா.அக.).

[அத்தி+இளக்கம்.]

[Skt. asthi > த. அத்தி.]

அத்தியூர் *atti-y-ūr*, பெ.(n.) காஞ்சியில் திருமால் கோயில் கொண்டுள்ள தோரிடம் (யாப். வி. 93, பக். 351.); little Kanjeevaram which has a *Visṇu* shrine.

[அத்தி + ஊர்.]

[Skt. hastin> த. அத்தி.]

அத்திர *attira*, எ.வி.(adv.) ஆவியாய்ப் போகக் கூடியது; capable of passing off into vapour-volatile (சா.அக.).

அத்திரசத்திரம் *attira-šattiram*, பெ.(n.) கைவிடு படை, கைவிடாப் படைகள் (திருவானைக். திருவிழா. 11.); missiles and weapons.

[Skt. astra + šastra > த. அத்திரசத்திரம்.]

அத்திரசிகிச்சை *attira-šigiccai*, பெ.(n.) 1. அம்பைப் போல் உடம்பினுள் மருந்தைப் புகட்டுமொரு வகை மருத்துவ முறை; a method of treatment in which liquid medicine is introduced into the system by a needle, Injection. 2. கத்தியாலறுத்து மருத்துவம் செய்தல்; the operative branch of the medical practice (சா.அக.).

[Skt. astra + cikitsā>த. அத்திரசிகிச்சை.]

அத்திரத்துவம் *attirattuvam*, பெ.(n.) ஆவியாய்ப் போதல்; vapourising or

dissipating spontaneously into atmosphere, volatility (சா.அக.).

அத்திரதேவர் *attiradēva,* பெ.(n.) விழாக் காலங்களில் வீதி வலம் வரும் படைக்கல வடிவ திருமேனி (திருவானைக். திருவிழா. 11.); weapon-god taken round the streets during festivals.

[அத்திர(ம்) + தேவர்.]

[Skt. astra> த. அத்திர(ம்).]

அத்திரநீர் *attira-nīr,* பெ.(n.) கழுதையின் சிறுநீர்; ass's urine (சா.அக.).

அத்திரப்பால் *attira-p-pāl,* பெ.(n.) 1. கழுதைப் பால்; ass's milk. 2. குதிரைப் பால்; horse's milk (சா.அக.).

அத்திரப்பொருள் *attira-p-poruḷ,* பெ.(n.) ஆவியாக மாறிக் காற்றில் கலக்கக் கூடிய பொருள்கள்; bodies which are capable of passing off into vapour and mingling in the atmosphere-volatile substances like camphor, alchohol etc. (சா.அக.).

அத்திரபரீட்சை *attiraparīṭcai,* பெ.(n.) அறுபத்து நாலு கலையுள் ஒன்றாகிய வில்வித்தை; archery, one of *aṟupattunālu-kalai,* q.v.

[Skt. astra + parīksa> த.அத்திரபரீட்சை.]

அத்திரம்[1] *attiram,* பெ.(n.) வில் (நாநார்த்த); bow.

[Skt. astra > த. அத்திரம்.]

அத்திரயூகம் *attira-y-ūgam,* பெ.(n.) படை அணி வகுப்பு வகை (பாரத. பதினெட் 15.); arrow-shaped battle array.

த.வ. வில்லுருப்படை வகுப்பு.

[Skt. astra + vyūha>த. அத்திரயூகம்.]

அத்திரவக்கிதம் *attira-vakkidam,* பெ.(n.) முளரி (தாமரை)ப் பூவிதழ்; filaments of lotus.

அத்திராதாளி *attirā-tāḷi,* பெ.(n.) யானை; elephant (சா.அக.).

அத்திரி[1] *attiri,* பெ.(n.) 1. கதிரவன்; sun. 2. விண்; sky, firmament.

[Skt. adri > த. அத்திரி.]

அத்திரி[2] *attiri,* பெ.(n.) மலை; mountain (சா.அக.).

[Skt. adri > த. அத்திரி.]

அத்திரிகாரம் *attirikāram,* பெ.(n.) இரும்பு; iron (சா.அக.).

[Skt. adrigara > த. அத்திரிகாரம்.]

அத்திரிசாரம் *attirišāram,* பெ.(n.) இரும்பு (வை.மூ.); iron.

[Skt. adrišāra > த. அத்திரிசாரம்.]

அத்திரெட்சை *attireṭcai,* பெ.(n.) 1. உணர்ச்சி; passion. 2. ஆசை; desire (சா.அக.).

அத்திரெணம் *attireṇam,* பெ.(n.) **அத்தி விரணம்** பார்க்க; see *attiviraṇam* (சா.அக.).

அத்திவலி *atti-vali,* பெ.(n.) எலும்பிற் காணும் வலி; pain in the bone or bones, Ostalgia (சா.அக.).

[அத்தி + வலி.]

[Skt. asthi>த. அத்தி.]

அத்திவாரம் *attivāram,* பெ.(n.) அடிக் கட்டடச் சுவரின் அடிப்பாகம்; foundation. *"அத்திவார மிருத்தி" (அரிச். பு. இந்தி. 19.).*

த.வ. கடைக்கால், அடிவாணம்.

[U. ustuwār > த. அத்திவாரம்.]

அத்திவிரணம் *atti-viraṇam,* பெ.(n.) எலும்பில் உண்டாகும் புண்; a sore affecting the bones (சா.அக.).

[Skt. asthi + vrāṇa>த.அத்திவிரணம்.]

அத்திவிசாணிகா *atti-višāṇigā,* பெ.(n.) வாழை; plantain tree, *Musa paradisiaca* (சா.அக.).

அத்திவெட்டை *atti-veṭṭai,* பெ.(n.) ஒழுக்கக் கேட்டினால் எலும்பில் பாய்ந்த மேகச்சூடு; venereal heat affecting the bones in the system, *Osteotabes* (சா.அக.).

த.வ. அங்கவெட்டை.

[அத்தி+வெட்டை.]

*[**Skt.** asthi > த. அத்தி.]*

அத்திவேர் *atti-vēr,* பெ.(n.) 1. மயிர்க்கால்; root of the hair. 2. யானைமயிர்; elephant's hair (சா. அக.).

[அத்தி + வேர்.]

*[**Skt.** hastin>த. அத்தி.]*

அத்திராதாளி *attirā-tāḷi,* பெ.(n.) யானை; elephant (சா.அக.).

அத்தினபுரம் *attiṉapuram,* பெ.(n.) நூற்று வர்தம் தலைநகர் (சீவக. 2182, உரை); Hastinapura.

*[**Skt.** hastinapura > த. அத்தினபுரம்.]*

அத்தினாபுரி *attiṉāpuri,* பெ.(n.) அத்தினாபுரம் (பாரத. குருகுல. 29.); Hastinapuram.

*[**Skt.** hastinapurī > த. அத்தினாபுரி.]*

அத்தினி[1] *attiṉi,* பெ.(n.) 1. பிடி (பிங்.); female elephant. 2. பெண்வகை (கல்லா. 7, மயிலேறு கொக்கோ. 1, 15–18.); (Erot.) woman of elephant-like nature, one of three *magaḷir šādi* or one of four *peṇ.*

*[**Skt.** hastinī > த. அத்தினி.]*

அத்தினி[2] *attiṉi,* பெ.(n.) 1. காக்கை; crow. 2. விருப்பம் (இச்சை) கொண்ட பெண்; a woman highly lustful. 3. வழலை; fuller's earth. 4. மூன்று அல்லது நான்கு திங்கள் வளர்ச்சியுள்ள பிண்டக்கரு; human foetus three or four months old i.e., the fourth and the last class of foetus according to the classification contemplated in the Tamil medical science (சா.அக.).

அத்தினிமார்பிண்டத்தவலமுடி *attiṉi-mār-piṇḍa-t-tavala-muḍi,* பெ.(n.) நால்வகைச் சாதிகளிலொன்றாகிய அத்தினி சாதிப் பெண்ணின் முதற்பிண்டத்தின் மண்டையோடு; the skull of the first foetus of the one of the 4 classes of women called Athini (the lowest class) (சா.அக.).

அத்துச்சம் *attuccam,* பெ.(n.) கோள்களின் நல்லுச்சநிலை (சங். அக.); (Astrol.) highest position of a planet.

*[**Skt.** atyucca > த. அத்துச்சம்.]*

அத்துவசிரமம் *attuva-širamam,* பெ.(n.) வழிநடைக் களைப்பு; fatigue from travel (சா.அக.).

அத்துவசுத்தி *attuva-šutti,* பெ.(n.) தீக்கை காலத்தில் ஆறு வழிகளிலும் இறந்தகால வினைகளையெல்லாம் அழிக்கை (சைவச. ஆசாரி. 64.); (*Šaiva.*) purification of *attuvās*; annihilation, by the guru while initiating, of all the karmas which remain stored as *šañjidam* in the six *attuvās,* leading to the sundering of the bonds *māyai* and *āṇavam* and eventually to liberation.

*[**Skt.** adhvan+suddhi>த. அத்துவசுத்தி.]*

அத்துவசோதனை *attuva-šōdaṉai,* பெ.(n.) **அத்துவசுத்தி** பார்க்க; see *attuva-šutti.*

*[**Skt.** adhvan + šōdhana> த. அத்துவ சோதனை.]*

அத்துவநியாசம் *attuva-niyāšam,* பெ.(n.) அத்துவத் தூய்மை (சுத்தி); purification of *attuvā.*

*[**Skt.** adhvan +nyāsa>த. அத்துவநியாசம்.]*

அத்துவபோக்கியம் *attuva-bōkkiyam,* பெ.(n.) ஒருவகை மரம், மாம்புளிச்சை; a tree called travellers delight, *spondias mangifera* (சா.அக.).

அத்துவயதாரகம் *attuvaya-tāragam,* பெ.(n.) நூற்றெட்டு மறையின் அறிவுப் பகுதியி லொன்று; name of an upaniṣad.

*[**Skt.**A-dvaya-tāraka >த. அத்துவயதாரகம்.]*

அத்துவரியு *attuvariyu,* பெ.(n.) 1. வேள்வி செய்வாருள் ஒருவன்; chief *Yajur-vēdic* priest at a sacrifice. *"வன்றிறல் வசுக்க ளத்துவரியு" (மச்சபு. சந்திரோ. 12.).* 2. வினைத் தலைமை கொள்பவன் (வகிப்பவன்); active

leader, as an adhvaryu. *'அவன் அத்துவரியுவாய் நின்று பாடுபடுகிறான்'.*

[Skt. adhvaryu > த. அத்துவரியு.]

அத்துவவிலிங்கம் *attuva-v-iliṅgam,* பெ.(n.) மெய்ப்பொருள் வடிவான (லிங்கம்) குறி; *liṅga* comprising all the 36 tattvas from earth to *Šivaṉ.* *"மண்முதற் சிவமீறானவத்துவ விலிங்கம்" (திருவிளை. இந்திரன். 13.).* இலங்க வடிவுநிலையில் இறைவ னாற்றலைக் குறிக்கும் அடித்தளத்திற்கு ஆவுடையாள் என்றும் மேல்நிற்கும் இலங்கத்திற்கு ஆவுடையப்பன் என்றும் பெயர்.

[Skt.adhvan+liṅga>த. அத்துவவிலிங்கம்.]

அத்துவா *attuvā,* பெ.(n.) 1. வழி; way, road. 2. நெறி (சித்.); (*Šaiva.*) paths to liberation, as well as means of acquiring karma, for the soul, six in number, viz *mandirāttuvā, padāttuvā, varṇāttuvā, puvaṉātuvā, tattuvāttuvā, kalāttuvā,* each of which, in initiation, is shown to be absorbed by the next one, till the last is absorbed by the *tirōdāna-šakti,* and this in its turn by *Šivaṉ.* *"அத்துவா வெல்லா மடங்கச் சோதித் தபடி" (தாயு. எந்நாட். அன்பர். 1.).*

[Skt. attuvān > த. அத்துவா]

அத்துவாசுத்தி *attuvā-šutti,* பெ.(n.) **அத்துவசுத்தி** பார்க்க; see *attuva-šutti.* *"அத்துவா சுத்திபண்ணி" (சி.சி. 8, 6.).*

[Skt. adhvan > த. அத்துவாசுத்தி.]

அத்துவாசைவம் *attuvā-šaivam,* பெ.(n.) சிவனியம் (சைவம்) பதினாறனுள் ஒன்று; *Šaiva* sect which holds that an initiate should by introspection perceive the six *attuvās* and meditate on *Šivaṉ* who is beyond them, one of 16 saivam, q.v.

அத்துவாந்தம் *attuvāndam,* பெ.(n.) வைகறை மற்றும் மருண்மாலையொளி; twilight (சா.அக.).

அத்துவிதம் *attuvidam,* பெ.(n.) ஒருமை; இரண்டின்மை; non-duality. *"அத்துவித வத்துவை" (தாயு. பரசிவ. 3.).*

[Skt. a-dvaita > த. அத்துவிதம்.]

அத்துவிதவுண்மை *attuvida-v-uṇmai,* பெ.(n.) 1. இரண்டின்மை என்னும் கொள்கை; the doctrine of the existence of but one principle in the universe; the doctrine or principle of non-duality. 2. ஒரு தமிழ் (தத்துவ) மெய்ப் பொருள் நூல்; a treatise in Tamil on non-dulaity (சா.அக.).

[அத்துவிதம் + உண்மை]

[Skt. advaita> த. அத்துவிதம்.]

அத்துவேசம் *attuvēšam,* பெ.(n.) பகையின்மை; freedom from hatred or malevolence.

[Skt. a-dvēṣa > அத்துவேசம்.]

அத்துவைதம் *a-t-tuvaidam,* பெ.(n.) 1. இரண்டன்மை; non-duality. 2. ஒரு பொருண்மைக் கொள்கை; doctrine of non-duality, monism.

[Skt. a-dvaita > த. அத்துவைதம்.]

அத்துவைதி *a-t-tuvaidi,* பெ.(n.) இரு பொருளொருமைக் கோட்பாடுடையவன்; one who holds the doctrine of non-duality monist.

[Skt. a-dvaitin > த. அத்துவைதி.]

அத்தேயம் *a-t-tēyam,* பெ.(n.) திருடாமை (சூத. ஞான. 13, 7.); non-stealing, absence of frand.

த.வ. கள்ளாமை.

[Skt. a-stēya > த. அத்தேயம்.]

அத்தோரியாமம் *attōriyāmam,* பெ.(n.) (சோமயாகம்) வேள்வி வகை (திவா.); variety of the *iyotṣṭōma,* the main type of the soma sacrifice.

[Skt. aptōryāma > த. அத்தோரியாமம்]

அத்தொய்தம் *attoydam*, பெ.(n.) அத்துவிதம் பார்க்க (வேதாந்தசா.84); see *attuvidam*.

[Skt. a-dvaita > த. அத்தொய்தம்.]

அத்தொய்தன் *attoydan*, பெ.(n.) ஒப்பற்றவன்; one who is matchless, without a second. *"அத்தொய்தனா யிருக்கிற வுனக்குப் பயமென்ன?" (வேதாந்தசா. 85.).*

[Skt. a-dvaitin > த. அத்தொய்தன்.]

அத்யாபி *atyābi*, (வி.அ.).(adv.) இப்போதும்; even now, to this day, down to the present time. *"அத்யாபி அப்படியே நடந்து வருகிறது".*

[Skt. adyāpi > த. அத்யாபி.]

அத்விதீயம் *a-tvidiyam*, பெ.(n.) இணையற்றது; that which is matchless, peerless.

[Skt. a-dvitiya > த. அத்விதீயம்.]

அதக்காயம் *ada-k-kāyam*, பெ.(n.) தொடை, கால், பாதம், இவை அடங்கிய உடம்பின் பகுதி; that portion of the body below the hip comprising the thinghs, the leg and the feet, lower extremity (சா.அக.).

அதக்காயவெலும்பு *adakkāya-v-elumbu*, பெ.(n.) இடுப்பின் கீழேயுள்ள எலும்பு; bone of the lower extremity (சா.அக.).

அதகக்கொடி *adaga-k-kodi*, பெ.(n.) பெருமருந்துக் கொடி; a twining plant, Indian birthwort, *Aristolochia Indica* (சா.அக.).

அதககந்தி *adaga-kandi*, பெ.(n.) கந்தக வண்டல்; precipitated sulphur, *Lac - sulphur or Milk of sulphur* (சா.அக.).

அதகம்[1] *adagam*, பெ.(n.) 1. மருந்து; medicine, medicament. *"அதகங் கண்ட பையண ணாகம்"* (சீவக. 403.); 2. உயிர்தரு மருந்து (பிங்.); restorative that brings the dead to life. 3. கொடிவகை (மலை.); Indian birthwort. 4. சுக்கு (தைலவ.); dried ginger.

[Skt. agada > த. அதகம்.]

அதகம்[2] *adagam*, பெ.(n.) அடையல்; precipitate (சா.அக.).

அதகமனம் *adaga-manam*, பெ.(n.) வண்டலாகப் பிரிந்து தங்கல்; the process by which a substance is made to seperate from another or other substances in a solution and fall to the bottom - precipitation (சா.அக.).

அதகன்[1] *adagan*, பெ.(n.) வலிமையுள்ளவன்; strong powerful person. *"உறுதுயர் தீர்த்த வதகன்" (திவ். பெரியாழ். 2, 1, 9.).*

[Skt. hataka > த. அதகன்.]

அதகன்[2] *adagan*, பெ.(n.) 1. மருந்து கொடுப்பவன்; one who administers medicine. 2. மருத்துவன்; one who prescribes remedies for diseases or who is skilled in the art of healing, Physician (சா. அக.).

அதங்கம் *adaṅgam*, பெ.(n.) ஈயம் (மூ.அ.); lead, plumbum.

[Skt. taṅka > த. அதங்கம்.]

அதசம் *adaśam*, பெ.(n.) 1. காற்று; wind. 2. ஆதன்; soul (சா.அக.).

அதசயம் *adaśayam*, பெ.(n.) தரையில் உறங்குகை; sleeping on the ground (சா.அக.).

அதசி *adaśi*, பெ.(n.) சணல்; flax or hemp, *Crotolaria juncea* (சா.அக.).

அதசுப்தி *ada-śupti*, பெ.(n.) இடுப்பின் கீழ் உணர்ச்சியற்றுக் கால் விழுகை, முடக்கு ஊதை பக்கவலிப்பு; paralysis of the legs and the lower part of the body, *Paraplegia* (சா.அக.).

அதட்டம் *adaṭṭam*, பெ.(n.) 1. பாம்பின் கீழ்வாய்ப் பல் (சீவக. 1286.); lower fang of a serpent. 2. பாம்பினுயிர்ப்பு (சூடா.); breath of a snake.

[Skt. adhō-damṣṭra > த. அதட்டம்.]

அதப்பாதாளம் *ada-p-pādāḷam*, பெ.(n.) காணவொண்ணா ஆழம்; chasm, abyss.

[Skt. adhas + pātālam > த. அதப்பாதாளம்.]

அதப்பியம் *adappiyam,* பெ.(n.) அவையல் கிளவி (யாழ்ப்.); indecent language.

[Skt. a-sabhya > த. அதப்பியம்.]

அதப்பு *adappu,* பெ.(n.) மதிப்புறவு; reverence/ manner.

[U. adab > த. அதப்பு.]

அதபட்சம் *adapaṭcam,* பெ.(n.) சுக்கு; dried ginger (சா.அக.).

அதபவாதம் *adaba-vādam,* பெ.(n.) ஆயுள் வேதத்தில் சொல்லியுள்ள ஓர் ஊதை (வாத) நோய்; a rheumatic disease mentioned in the ayurvedic science (சா.அக.).

[Skt. adha+vāta > த. அதபவாதம்.]

அதபு *adabu,* பெ.(n.) 1. வணக்கம்; obedience. 2. மதிப்புறவு (மரியாதை); manners. *"அதபு கெட்டவன்".*

த.வ. மதிப்பு.

[Ar. adab > த. அதபு.]

அதமசரீரம் *adama-šarīram,* பெ.(n.) (கற்பக விருட்சம்) வளம் தரும் மரம் (சிந்தா. நி. 124.); kalpaka tree.

அதமதசம் *adamatašam,* பெ.(n.) வெங்காரம் (வை.மூ.); borax.

அதமதானம் *adama-dānam,* பெ.(n.) கைம்மாறு, அச்சம் முதலியவை கருதிய கொடை (வின்.); charity for selfish ends through fear, as the lowest kinds of benevolence.

[அதம(ம்) + தானம்.]

[Skt. adhama>த. அதம(ம்).]

அதமபட்சம் *adama-paṭcam,* (வி.அ.)(adv.) குறைந்தது; at least.

த.வ. கீழ்ப்பாடு.

[Skt. adhama + pakṣa > த. அதமபட்சம்]

அதமம் *adamam,* பெ.(n.) கீழ்நிலை; that which is lowest, worst.

[Skt. adhama > த. அதமம்.]

அதமர்ணன் *adamarṇaṉ,* பெ.(n.) கடன் வாங்குவோன் (சுக்கிரநீதி, 97.); one who takes loans; debtor.

[Skt. adha-marṇa > த. அதமர்ணன்.]

அதமவிம்சதி *adama-vimšadi,* பெ.(n.) அறுபது ஆண்டு (வருடங்)களுள் பிலவங்க முதல் அட்சய வரையுள்ள 20 ஆண்டுகள் (பெரியவரு.); the last twenty years from *pila-vaṅga* to *aṭcaya,* in the jupiter cycle.

[Skt. adha-ma-viṃšati > த. அதமவிம்சதி]

அதமன் *adamaṉ,* பெ.(n.) கடையன்; low, mean, vile person. *"கமுகு போல்வ ரதமர்"* (நீதிவெண். 91.).

த.வ. கீழ்மகன், கீழோன், இழிந்தோன்.

[Skt. adhama > த. அதமன்.]

அதமாதமன் *adamādamaṉ,* பெ.(n.) மிகக் கீழானவன்; vilest of the vile, most worthless fellow.

[Skt.adhama +adhama>த. அதமாதமன்.]

அதர்மம் *a-darmam,* பெ.(n.) **அதருமம்** பார்க்க; see *adarumam.*

த.வ. அறங்கடை, அல்லறம், அறக்கேடு.

[Skt. a-dharma > த. அதர்மம்.]

அதர்மாத்திகாயம் *adarmāttikāyam,* பெ.(n.) ஐந்து அருக (சமண) மத உட்பொருள்களு ளொன்று; (Jaina) that which without any movement on its part attracts and keeps passive the thing attracted, as the shadow of a tree first attracts a man walking along the road on a hot day and then keeps him quietly resting under it, one of *pañjastikāyam.*

[Skt. adharma + asti-kāya >த.அதர்மாத்தி காயம்]

அதர்வசிகை *adarva-šigai,* பெ.(n.) நூற்றெட்டுபநிடதங்களுளொன்று; name of an *upaniṣad.*

[Skt. atharvašikhā > த. அதர்வசிகை.]

அதர்வசிரசு *adarva-širašu,* பெ.(n.) நூற்றெட்டுபநிடதங்களுளொன்று (சி.சி. 8, 11, மறைஞா.); name of an *upaniṣad.*

[Skt. atharvaširas > த. அதிர்வசிரசு.]

அதர்வணம் *adarvaṇam,* பெ.(n.) நான்காம் மறை (திருவானைக். கோச்செங். 127.); name of the fourth *vēda.*

த.வ. **தீமறை.**

[Skt. atharva > த. அதர்வணம்.]

அதர்வம் *adarvam,* பெ.(n.) **அதர்வணம்** (காஞ்சிப்பு. வயிரவீ, 12.) பார்க்க; see *adarvaṇam.*

[Skt. atharvan > த. அதர்வம்.]

அதரகுட்டம் *adara-kuṭṭam,* பெ.(n.) இதழில் தோன்றும் புற்றுநோய்; cancer of the lip (சா.அக.).

த.வ. **இதழ்புற்று.**

[அதர+குட்டம்.]

[Skt. adhara > த. அதர(ம்).]

அதரணவித்தை *adaraṇa-vittai,* பெ.(n.) செய்வினை; black magic (சா.அக.).

அதரபானம் *adara-bāṉam,* பெ.(n.) மகளி ரிதழூறும் நீர் (சீவக. 190, உரை.); drinking the lips, kissing the lower lip.

[Skt. adhara > pāṉa > த. அதரபானம்.]

அதரம்[1] *adaram,* பெ.(n.) கீழ் (நாநார்த்த.); place or space below.

[Skt. adhara > த. அதரம்.]

அதரம்[2] *adaram,* பெ.(n.) அல்குல் (நிதம்பம்); the external part of the organs of generation of the female, vulva (சா.அக.).

த.வ. **குய்யம், கருவாய்.**

[Skt. adhara >த. அதரம்.]

அதரம்[3] *adaram,* பெ.(n.) 1. கீழுதடு (பிங்.); lower lip. 2. இதழ் (உதடு) (சூடா.); lip.

[Skt. adhara > த.அதரம்.]

அதரமதம் *adara-madam,* பெ.(n.) புலனுகர் ஈடுபாட்டி லிதழூறும் நீர்; a secretion from the lower lip of woman through lust (சா.அக.).

த.வ. **மகளிர் இதழூறும் நீர்.**

[Skt. adhara+amrta>த. அதரமதம்.]

அதரவாய்வு *adara-vāyvu,* பெ.(n.) வளித் தொல்லையால் வாய் மற்றும் இதழி (உதட்டி)ற் காணும் நோய்; a disease of the lip of the mouth or that of the genital of a female (சா.அக.).

[Skt. adhara + vāyu>த. அதரவாய்வு.]

அதராமிர்தம் *adarāmirdam,* பெ.(n.) **அதரமதம்** பார்க்க; see *adara-madam* (சா.அக.).

[அதர(ம்) + அமிர்தம்.]

[Skt. adhara >த. அதர(ம்).]

அமிழ்து > அமிர்து > **Skt.** *amrta.*

அதரிசனன் *adarišaṉaṉ,* பெ.(n.) 1. பார்க்க முடியாதவன்; one who is destitute of the sense of sight. 2. கண் பார்வையற்றவன்; a blindman (சா.அக.).

[Skt. adharšana>த. அதரிசனன்.]

அதரிசி *adariši,* பெ.(n.) **அதரிசனன்** பார்க்க; see *adarišaṉaṉ* (சா.அக.).

[Skt. adharšana>த. அதரிசி.]

அதருமம் *a-tarumam,* பெ.(n.) அறமல்லாதது; that which is unrighteous.

த.வ. **அறக்கேடு.**

[Skt. a-dharma > த. அதருமம்.]

அதலகுதலம் *adala-kudalam,* பெ.(n.) பெருங்குழப்பம் (இ.வ.); tumult, great confusion.

த.வ. **கலவரம்.**

[Skt. atala+ku-tala > த. அதலகுதலம்.]

அதலதலம் *adala-talam,* பெ.(n.) 1. காரீயம்; black lead; plumbago. 2. காரீய மணல்;

(literaly) the term denotes the mineral found in heaps under the earth-plumbum (சா.அக.).

அதலபாதாளம் *adala-bādāḷam,* பெ.(n.) அளவிட முடியாத ஆழம் அல்லது பள்ளம்; immeasurable depths, chasm. *'மலை மேலிருந்து அதல பாதாளத்தில் விழுவது போன்று ஒரு கனவு' (கிரியா.).*

த.வ. ஆழ்நிரயம்.

[Skt. atala + pātāḷa>த. அதலபாதாளம்.]

அதலம் *adalam,* பெ.(n.) கீழேழுலகத் தொன்று; name of a world under the earth, first of *kiḻēḻulagam,* q.v. *"அதல விதலமுத லந்தத் தலங்களென" (திருப்பு. 138).*

த.வ. கீழுலகு, நிரயம்.

[Skt. atala > த. அதலம்.]

அதலாயிலோகம் *adalāyi-lōgam,* பெ.(n.) 1. நிலவுலகின் கீழுண்டாகும் தாதுப் பொருள்; any ingredient or natural in organic substance in the earth's crust obtained by mining-mineral. 2. நிலத்திற்குள் விளையும் மாழை (உலோகம்); any metal dug out from the earth (சா.அக.).

[Skt. atala + lōha>த. அதலாயிலோகம்.]

அதவா *adavā,* இணைப்.(conj.) அல்லது; or, *"அதவா முரட்போர் தனக்கஞ்சுமோ" (பாரத. பதினேழா. 232).*

[Skt. athavā > த. அதவா.]

அதவாய்வு *adavāyvu,* பெ.(n.) சவுட்டு மண்; fuller's earth (சா.அக.).

அதவிடம்[1] *adaviḍam,* பெ.(n.) அதிவிடை (வின்.); atis.

[Skt. ati-viṣā > த. அதவிடம்.]

அதவிடம்[2] *adaviḍam,* பெ.(n.) அதவிடயம்; Indian atees, *Aconium heterophyllum* (சா.அக.).

அதவுபாசனம் *adavu-pāšaṉam,* பெ.(n.) புணர்ச்சி; sexual intercourse (சா.அக.).

அதவை *adavai,* பெ.(n.) கீழ்மகன் (இ.வ.); vile person.

[Skt. hata > த. அதவை.]

அதளக்காய் *adaḷa-k-kāy,* பெ.(n.) **அதளங்காய்** பார்க்க; see *adaḷaṅgāy* (சா.அக.).

அதளங்காய் *adaḷaṅ-gāy,* பெ.(n.) பீர்க்கங்காய்; acute-angled cucumber, *Cucumis actutangalus* (சா.அக.).

அதளமேலிச்சாரணை *adaḷa-mēli-c-cāraṇai,* பெ.(n.) சிவப்புச் சத்திச்சாரணை; a red variety of a plant, *Boerhaavia procumbens* alias *B.repens* (சா.அக.).

அதன்மம் *a-daṉmam,* பெ.(n.) அறமல்லாதது; that which is unrighteous. *"அருளினா லுரைத்த நூலின் வழிவரா ததன்மஞ் செய்யின்" (சி.சி., 2.33.).*

[Skt. a-adharma >த. அதன்மம்.]

அதன்மர் *a-daṉmar,* பெ.(n.) கீழ் மக்கள் (பிங்.); base, low persons.

[Skt. a-dharma > த. அதர்ம>அதன்மர்.]

'ர்' பலர்பால் ஈறு.

அதன்மாத்திகாயம் *adaṉmāttikāyam,* பெ.(n.) **அதர்மாத்திகாயம்** பார்க்க; see *adarmāttikāyam.*

அதன்மி *adaṉmi,* பெ.(n.) ஒழுக்கங்கெட்டவள்; fallen woman. *"அதன்மி யாரென வாங்கவன் வினவ" (பெருங். உஞ்சைக் 35, 69.).*

த.வ. அறக்கேடன்.

[Skt. a-dharmin > த. அதன்மி.]

அதனா *adaṉā,* பெ.அ.(adj.) தாழ்ந்த; mean, low. *'அதனா மனிதன்' (இ.வ.).*

[U. adnā > த. அதனா.]

அதத்தசஞ்சயம் *adatta-šañjayam,* பெ.(n.) உடம்பின் கீழ்ப் பகுதியில் தங்கியுள்ள சிறுநீர் மற்றும் கழிமாசு (மல மூத்திரம்); the faeces and the urine in the lower region of the trunk (சா.அக.).

அதாசலம் *adāšalam,* பெ.(n.) காட்டு மல்லிகை வகை (மலை.); wild jasmine.



அதாதிமந்தம் *adādi-mandam,* பெ.(n.) ஆயுள் வேதப்படிக் கண்ணைப் பற்றிய ஐந்து வகை மாந்த நோய்களுள் ஒன்று; one of the five kinds of ophthalmia according to ayurveda.

அதாதிமாந்தரோகம் *adādi-mānda-rōgam,* பெ.(n.) **அதாதிமந்தம்** பார்க்க; see *adādimandam* (சா.அக.).

[அதாதி+மாந்த(ம்)+ரோகம்]

*[**Skt.** ati> த. அதாதி, **Skt.** rōga> த. ரோகம்.]*

அதாதிரு *adātiru,* பெ.(n.) இவறன் மாலையன் (சிந்தா. நி. 137.); miser.

*[**Skt.** a-dātṟ > த. அதாதிரு.]*

அதாது *adādu,* பெ.(n.) 1. தாது வல்லாதது; that which is not a mineral. 2. வித்தமிழ்தின்மை; absence of semen (சா.அக.).

[அ + தாது.]

*[**Skt.** a>த. அ.]*

*தாது > **Skt.** dhātu.*

அதாரன் *adāraṉ,* பெ.(n.) மணமாகதவன், மாணி; one who is unmarried, an unmarried man, Bachelor. 2. மனைவி யிழந்தவன்; one who has lost his wife, a widower (சா.அக.).

த.வ. மாணி.

*[**Skt.** a-dāra >த. அதாரன்.]*

அதாலத்து *adālattu,* பெ.(n.) முறைமன்றம்; court of justice.

*[**U.** adālat > த. அதாலத்து.]*

அதாவரிசி *adā-v-arišī,* பெ.(n.) வெட்பாலை யரிசி; dysentery rosebay; bitter oleander, *Nerium antidysentericum* alias *Holarhena antidysentericum* (சா.அக.).

அதாவெட்டில் *adā-veṭṭil,* கு.வி.எ.(adv.) தற்செயலாய் (இ.வ.); unexpectedly, by chance.

அதாவெட்டுக்காரன் *adāveṭṭu-k-kāraṉ,* பெ.(n.) போலியாக நடிப்போன்; bogus personage, bogus tax-gatherer. *"ஆயக்காரன் ஐந்து பணங்கேட்பான் அதாவெட்டுக்காரன் ஐம்பது பணங்கேட்பான்"*

[அதாவெட்டு + காரன்.]

*[**U.** adāwat>த. அதாவெட்டு.]*

அதிக்கிரமம்[1] *adi-k-kiramam,* பெ.(n.) 1. மீறுகை; overstepping, going beyond, transgression. 2. முறைகேடு; iniquity. *"அன்ன தன்மைய னதிக்கிரமங்கள் கேட்டு" (உத்தரரா. வரையெடு. 2.).*

*[**Skt.** ati-krama > த. அதிக்கிரமம்.]*

அதிக்கிரமம்[2] *adi-k-kiramam,* பெ.(n.) கற்பழித்தல்; commiting excess of sin sexually (சா.அக.).

*[**Skt.** ati-krama>த. அதிக்கிரமம்.]*

அதிக்கிரமி-த்தல் *adi-k-kirami-,* 4 செ.குன்றாவி. (v.i.) 1. மேற்படுதல்; to exceed, as proper bounds. 2. மீறுதல்; to transgress.

*[**Skt.** ati-krama>த. அதிக்கிரமி-.]*

அதிக்கிராந்தம் *adikkirāndam,* பெ.(n.) கடந்தது (சி.சி. 7, ஞானப்.); that which transcends.

த.வ. வரம்பிகவு.

*[**Skt.** ati-krānta > த. அதிக்கிராந்தம்.]*

அதிககசுரசாந்தினி *adiga-śura-śāndini,* பெ.(n.) வல்லாரை; a bitter plant, *Hydrocotyle asiatica*, so called from its soothing effect in cases of excessive fever (சா.அக.).

[Skt. atiga > த. அதிகம்.]

அதிகண்டம்[1] *adi-kaṇḍam,* பெ.(n.) ஒகம் இருபத்தேழி லொன்று (விதான. பஞ்சாங்க 25); (Astrol.) a division of time, one of 27 yōgam, q.v.

[Skt. atigaṇḍa > த. அதிகண்டம்.]

அதிகண்டம்[2] *adi-kaṇḍam,* பெ.(n.) 1. இறக்கும் நேரத்தில் ஏற்படும் துன்பம்; pangs or agony of death. 2. பெரிய துண்டம்; a big piece. 3. பெரிய கழுத்து; a swollen neck-colloid goitre. 4. உயிருக்கு இடர் விளைவிக்கக் கூடிய எதிர்பாராத நிகழ்வு; an accident or other crisis endangering human life (சா.அக.).

அதிகதம் *adigadam,* பெ.(n.) 1. வளி (வாயு); air. 2. எட்டாதது; that which is beyond reach (சா.அக.).

[Skt. ati-gata>த. அதிகதம்.]

அதிகந்தம் *adi-kandam,* பெ.(n.) 1. நறுமணப் புல் வகை (மூ.அ.); fragrant species of grass. 2. மர வகை (மூ.அ.); champak. 3. கந்தகம் (மூ.அ.); sulphur.

[Skt. ati-gandha > த. அதிகந்தம்.]

அதிகர்ணம் *adikarṇam,* பெ.(n.) பொருள்; substance (சா.அக.).

அதிகரணத்தண்டம் *adikaraṇa-t-taṇḍam,* பெ.(n.) பழைய வரிவகை (S.I.I.ii, 353.); an ancient tax.

[அதிகரணம் + தண்டம்.]

[Skt. adhi-karaṇa>த. அதிகரணம்.]

அதிகரணத்தைலம் *adika-raṇa-t-tailam,* பெ.(n.) தலை முழுக்கெண்ணெய் (தைலம்); a medicated oil prepared as per process aid down in Agastyar vallathi 600 and used for oil bath in cases of obstinate fever. *அகத்திய வல்லாதி 600இல் சொல்லிய முறைப்படி, விடாத காய்ச்சலுக்காக வடித்தெடுத்த நெய்மமருந்து* (சா.அக.).

அதிகரணம் *adikaraṇam,* பெ.(n.) 1. அடிப்படை (சி.சி. 1, 65, சிவஞா.); substratum, support. 2. ஏழாம் வேற்றுமைப் பொருள் (பி.வி.9.); place, as the sense of the loc. 3. ஒரு செய்தியைக் குறித்த பகுதி (சி.போ. சிற். 1, அவ.); section of a work, treating of one subject.

[Skt. adhi-karaṇa > த. அதிகரணம்.]

அதிகரம் *adikaram,* பெ.(n.) காட்டு மல்லிகை; wild jasmine, *Jasminum angustifolium* (சா.அக.).

அதிகராவிகம் *adikarā-vigam,* பெ.(n.) செந்துளசி; a red variety of basil , *Ocimum* (genus) (சா.அக.).

அதிகாசம் *adikāśam,* பெ.(n.) பெருநகை (சிந்தா. நி. 120.); loud laughter.

த.வ. வெடிச்சிரிப்பு.

[Skt. ati+hāsya > த. அதிகாசம்.]

அதிகாயசித்தி *adikāya-śitti,* பெ.(n.) கரு மருது; a tree, black marudu; Negroe's olive, *Terminalia tementosa* alias *T.alata* (சா.அக.).

அதிகாயன் *adi-kāyaṉ,* பெ.(n.) 1. பருத்த உடம்புடையோன்; one having a gross or flesh body; a stout man. 2. உடம்பில் மிகுந்த

காயமுடையோன்; one with serious injuries. 3. உடம்பில் தழும்புடையோன்; one with numerous scars on the body (சா.அக.).

அதிகாரடாகை *adigāra-ḍāgai,* பெ.(n.) அதிகாரத்தால் உண்டாகும் செறுக்கு; pride of power. *"அதிகாராடாகையின்மே லார்த்து" (சரவண. பணவிடு. 109).*

[Skt.adikarā+U.tiga> த.அதிகாரடாகை.]

அதிகாரதத்துவம் *adigāra-tattuvam,* பெ.(n.) வினை மிகுந்து கல்வி குறைந்த சிவ மெய்ப்பொருள் (சி.சி. 1, 65, ஞானப்); (*Šaivam*) the function of god in which the principle of energy dominates that of wisdom.

அதிகாரநந்தி *adigāra-nandi,* பெ.(n.) சிவன் கோயில் திருவிழாக்களில் பயன்படுத்தும் ஊர்தி வகை; vehicle of *Šivan* with the face of a bull and body of man, used generally on the morning of the third day of festivel in some temples, as respresenting *Nandikēšvarar* who is the commandant of the city of *Šivan*. *"அதிகார நந்தி சேவை".*

அதிகாரபத்திரம் *adigāra-pattiram,* பெ.(n.) கொடுப்பிசைவு ஆவணம், அதிகார ஆவணம்; letter of authority, power of attorney.

அதிகாரவர்த்தனை *adigāra-varttanai,* பெ.(n.) வரித்தொகுதி (M.E.R. 428 of 1913); a collection of taxes.

அதிகாலங்காரம் *adikālaṅgāram,* பெ.(n.) பெருமையணி (அணியி. 41.); figure of speech in which the contained is described as greater than the container, or the container than the contained.

[Skt.adhika+alaṅkāra>j.mâfhy§fhu«.]

அதிகிருச்சிரம் *adi-kirucciram,* பெ.(n.) 12 நாள் கைக்கொள்ளும் ஒரு நோன்பு; an extraordinary fasting and penance lasting 12 days.

[Skt. atikṛcchra > த. அதிகிருச்சிரம்.]

அதிகேரம் *adi-kēram,* பெ.(n.) சீதா செங்கழுநீர்; a kind of water-lily, *Grewia rotundifolia* (சா.அக.).

அதிங்காலிகம் *adiṅkāligam,* பெ.(n.) செம்புளியம் பிரண்டை; a red variety of புளிப் பிரண்டை, hairy wildyine, *Vitis setosa* alias *cissus acida* (சா.அக.).

அதிச்சத்திரம் *adi-c-cattiram,* பெ.(n.) காளான் (மலை.); mushroom.

[Skt. atichatra > த. அதிச்சத்திரம்.]



அதிசங்கலிதம் *adi-šaṅgalidam,* பெ.(n.) ஒன்றுமுதலிய எண்களை இரட்டித்துப் பெருக்க வருந் தொடரெண் (வின்.); summation of a series in geometrical progression whose first term is one, and ratio two.

[Skt. ati + šaṅ-kalita > த. அதிசங்கலிதம்.]

அதிசங்கை *adi-šaṅgai,* பெ.(n.) வீண் ஐயம் (கோயிலொ. 29); needless suspicion.

[Skt. ati + šaṅkā>த. அதிசங்கை.]

அதிசத்திரம் *adi-šattiram,* பெ.(n.) 1. விண்மீன் சீரகம்; star anise, *Illecium ani satum.* 2. காளான்; mushroom. 3. மருதோன்றி; nail dye, *Barleria longifolia* (சா.அக.).

அதிசத்திரகம் *adi-šattiragam,* பெ.(n.) **அதிசத்திரம்** பார்க்க; see *adi-šattiram* (சா.அக.).

[Skt. atichatra>த. அதிசத்திரகம்.]

அதிசந்தானம் *adišandāṉam*, பெ.(n.) பொய் (சிந்தா. நி. 122.); falsehood.

[Skt. atisandhāna > த. அதிசந்தானம்.]

அதிசமாதியோகம் *adi-šamādiyōgam*, பெ.(n.) தன்னை மறந்து புரியும் மனவொடுக்கம் (யோகம்); a profound meditation in yoga practice in which the yogee is not only insensible to the surroundings but also forgets his own body (சா.அக.).

[அதிசமாதி+ஓகம்.]

[Skt. ati+ sāmādhi>த. அதிசமாதி.]

ஓகம் > Skt. yōga.

அதிசயக்குளிகை *adišaya-k-kuḷigai*, பெ.(n.) ஐந்து முறை சாரணைத் தீர்ந்த ஒரு இதளியக் குளிகை; a mercurial pill animated five times.

[அதிசயம் + குளிகை.]

[Skt. atišaya>த. அதிசயம்.]

குள் → குளி → குளிகை.

அதிசயச்சொல் *adišaya-c-col*, பெ.(n.) வியப்புச் சொல்; expression of wonder.

[அதிசயம் + சொல்.]

[Skt. atišaya> த. அதிசயம்.]

அதிசயபுட்பி *adišaya-puṭpi*, பெ.(n.) அத்தி; Indian fig-tree, *ficus glomerata*. It is so called from its flowers not visible to any. *இதன் பூ ஒருவர் கண்ணுக்கும் புலப்படாத காரணத்தை முன்னிட்டு இப்பெயர்* (சா.அக.).

[Skt. atišaya + puṣp> த. அதிசயபுட்பி.]

அதிசயம்[1] *adišayam*, பெ.(n.) 1. அருக (சைன) தலைமை இறைப்பண்புகள்; (Jaina.) pre-eminence, as an attribute of Arhat, of three kinds. *"சகசாதிசயம், கர்ம க்ஷயாதிசயம், தெய்வீகாதிசயம்"* (சீவக. 2813). 2. உயர்வு நவிற்சியணி (தண்டி 54.); hyperbole. 3. வியப்பு; astonishment, wonder. *"அடிகளிவ் வழிபோந்த வதிசய மறியேனே"* (தேவா. 938, 1.).

[Skt. atišaya > த. அதிசயம்.]

அதிசயம்[2] *adišayam*, பெ.(n.) 1. அதிநோய்; a severe type of disease. 2. கொடிய என்புருக்கி (சய) நோய்; an acute form of consumption. 3. மிகுநோய்; excessive secretion and discharge or urine, *polyuria* (சா.அக.).

அதிசயமாலை *adišaya-mālai*, பெ.(n.) பண்டார நூல்களிலொன்று; name of a Saiva *Siddhānda* treatise by *Ambalavāṇa-tēšigar*, one of *paṇḍāra-šāttiram*, q.v.

[அதிசயம் + மாலை.]

[Skt. atišaya> த. அதிசயம்.]

அதிசயமொழி *adišaya-mōḻi*, பெ.(n.) வியப்புச் சொல் (பிங்.); expression of wonder.

[அதிசயம் + மொழி.]

[Skt. atišaya>த. அதிசயம்.]

அதிசயவுவமை *adišaya-v-uvamai*, பெ.(n.) மிகையுவமை (வீரசோ. அலங். 14, உரை); (Rhet.) a smile which states that there is no difference between *uvamāṉam* and *uvamēyam* except in their loci.

[அதிசயம் + உவமை.]

[Skt. atišaya>த. அதிசயம்.]

அதிசயன் *adišayaṉ*, பெ.(n.) அருகன் (திவா.); Arhat, as superhuman.

[Skt. atišaya> த..அதிசயன்.]

அதிசயி-த்தல் *adišayi-*, 4 செ.கு.வி.(v.i.) வியப்படைதல்; to wonder, to be surprised. *"அலமந் தேங்கி யதிசயித்து"* (கந்தபு. திருமண. 31.).

[Skt. atišaya>த. அதிசயி-.]

அதிசயோக்தி *atišayōkti*, பெ.(n.) உயர்வு நவிற்சியணி (அணியி. 13.); hyperbole.

[Skt. atišayōkti > த. அதிசயோக்தி.]

அதிசரணம் *adi-šaranam,* பெ.(n.) **அதிசரண யோனி** பார்க்க; see *adi-šarana-yōni* (சா.அக.).

[**Skt.** *ati šarana>த. அதிசரணம்.*]

அதிசரணயோனி *adišarana-yōni,* பெ.(n.) மிகுதியாகக் கலவியில் ஈடுபடுவதால் பிறப்புறுப்பில் ஏற்படும் நோய்; a disease of the vagina.

[**Skt.***ati-šarana+yoni>த. அதிசரணயோனி.*]

அதிசரம் *adišaram,* பெ.(n.) நெட்டுயிர்ப்பு (வின்.); sigh.

[**Skt.** *ati-cara > த. அதிசரம்.*]

அதிசரி–த்தல் *adišari-,* 4. செ.கு.வி.(v.i.) கடந்து போதல்; to pass by, as a planet. *"கிரகங்க ளதிசரித்து வக்கிரிக்கிறது" (வின்.).*

[**Skt.** *ati-car > த. அதிசரி–.*]

அதிசருமகூச்சம் *adi-šaruma-kūccam,* பெ.(n.) **அதீதகூச்சம்** பார்க்க; see *adida-kūccam* (சா.அக.).

[*அதிசருமம் + கூச்சம்.*]

[**Skt.** *ati-carman>த. அதிசருமம்.*]

அதிசனசி *adi-šanaši,* பெ.(n.) 1. கொடிவேலி; Ceylon leadwort, *Plumbago zeylanica.* 2. அதிக நாற்றமுடையது; that which is excessively fetid or that which has a strong smell. 3. பெருங்காயம்; asafoetida. 4. பீநாறி; a fetid plant or tree, *Stereulia foetida* (சா.அக.).

அதிசாகரம் *adisāgaram,* பெ.(n.) ஒரு தமிழ்க் கணித நூல் (கணக்கதி. பாயி.); name of a Tamil mathematical work.

அதிசாதிகம் *adi-šādigam,* பெ.(n.) **அதிகராவிகம்** பார்க்க; see *adigarāvigam* (சா.அக.).

அதிசாமியை *adi-šāmiyai,* பெ.(n.) வெண் குன்றிச் செடி; white country liquorice, *Abrus precatorius* (alba-) (சா.அக.).

அதிசாரக்கடுப்பு *adi-šāra-k-kaduppu,* பெ.(n.) செரியாமற் கழிதலால் ஏற்படும் வயிற்று வலி; colic arising from diarrhoea due to indigestion, *Sabbural colic* (சா.அக.).

[*அதிசாரம் + கடுப்பு.*]

[**Skt.** *ati šāra>த. அதிசாரம்.*]

கடு → கடுப்பு.

அதிசாரக்கழிச்சல் *adi-šāra-k-kaliccal,* பெ.(n.) 1. இயல்பாய் ஏற்படும் கழிச்சல்; ordinary or simple diarrhoea. 2. செரியாமையினால் சோம்பல் உண்டாகி வாயாலெடுப்பு, கழிச்சல், வலுவின்மை, களைப்பு முதலிய குணங்களையுண்டாக்கும் ஒரு வகைக் கழிச்சல்; an acute diarrhoea marked by serious stools as in cholera and vomitting; attended with fatigue, weakness and sometimes collapse, *Choleraic diarrhoea.* 3. வயிற்றளைச்சல்; diarrhoea with mucous and bloody stool, *Dysenteric diarrhoea* (சா.அக.).

[*அதிசாரம் + கழிச்சல்.*]

[**Skt.** *ati-šāra> த. அதிசாரம்.*]

கழி→ கழிச்சல்.

அதிசாரக்காய்ச்சல் *adi-šāra-k-kāyccal,* பெ.(n.) செரியாமையினால் ஏற்படும் ஒரு காய்ச்சல்; fever caused by diarrhoea, *Febrilis diarrhoea* (சா.அக.).

[*அதிசாரம் + காய்ச்சல்.*]

[**Skt.** *ati-šāra>த. அதிசாரம்.*]

அதிசாரக்கினி *adi-šāra-k-kini,* பெ.(n.) அதிவிடயமெனும் ஒரு மருந்துச் சரக்கு; Indian atees, *Aconitum hoterophyllum* (சா.அக.).

அதிசாரங்கட்டி *adi-šārań-katti,* பெ.(n.) 1. செரியாமையினால் ஏற்படும் கழிச்சலைக் குணப்படுத்தும் சரக்கு; any drug capable of stopping or arresting diarrhoea from indigestion. 2. கற்கடக சிங்கி; galls of pistacia, *Rhus succedanea* (சா.அக.).

[அதிசாரம் + கட்டி.]

[Skt. ati-šāra> த. அதிசாரம்.]

அதிசாரசன்னி *adišāra-šanni,* பெ.(n.) நச்சுக் காய்ச்சல் வகை (இங். வை.); typhoid fever.

[Skt. atišāra + šanni> த. அதிசாரசன்னி.]

அதிசாரசன்னிபாதசுரம் *adi-šāra-šanni pāda-šuram,* பெ.(n.) வயிற்றோட்டக் கழிச்சலுடன் கூடிய காய்ச்சல்; typhoid fever accompanied by diarrhoea (சா.அக.).

[அதிசாரசன்னிபாதம்+சுரம்.]

[Skt. atišāra+šan-ni+pāda>த. அதிசார சன்னிபாதம்.]

சுள்→ சுர்→சுரம்.

அதிசாரசாந்தி *adi-šāra-šānti,* பெ.(n.) 1. வயிற்றுப் போக்கைக் குணப்படுத்தும் மருந்து; any remedy which controls the motion in dysentery. 2. காட்டாத்தி; jungle autti, *Woodfordia floribunda* (சா.அக.).

[அதிசார(ம்) + சாந்தி.]

[Skt. ati-šāra>த. அதிசாரம்.]

அதிசாரசிலேட்டுமம் *adi-šāra-šilēṭṭumam,* பெ.(n.) 1. செரியாமையினால் காய்ச்சல், வயிற்றிரைச்சல், விலாக்குத்து, நெஞ்சுவலி, நாவறட்சி, உடம்பெரிச்சல், இருமல், நீர்வேட்கை முதலிய குணங்களை உண்டாக்கும் ஒரு நோய்; a form of diarrhoea from indigestion due to the phlegmatic condition of the system. It is marked by rumbling noise in the bowels, darting pain in the sides and in the intercostal region, chest pain, parched tongue, burning sensation of the body, cough, thirst etc., 2. செரியாமையினால் குழந்தைகளுக்கு வயிற்றோட்டமும் சீதளமும் குளிர்ச்சியும் ஏற்பட்டு, அத்துடன் காய்ச்சலும் காணுமோர் கோழைக்கட்டு; diarrhoea from indigestion in children due to phlegmatic causes. It is followed by fever and watery stools containing thin, white mucous - watery or serous diarrhoea (சா.அக.).

[Skt. ati-šāra+šlēṣman>த. அதிசார சிலேட்டுமம்.]

அதிசாரசுரசமரசி *adi-šāra-šura-šamarași,* பெ.(n.) **அதிசாரக்கினி** பார்க்க; see *adi-šāra-k-kini* (சா.அக.).

அதிசாரசுரம் *adi-šāra-šuram,* பெ.(n.) **அதிசாரக்காய்ச்சல்** பார்க்க; see *adi-šāra-k-kāyccal* (சா.அக.).

[அதிசார + சுரம்.]

[Skt. ati-šāra > த. அதிசாரம்.]

சுல்→ சுர்→சுரம்.

அதிசாரஞ்சுருக்கி *adi-šārañ-šurukki,* பெ.(n.) 1. இலவம் பிசின்; the gum of the silk-cotton tree. 2. அதிசாரக் கழிச்சலை கண்டிக்கும் மருந்து; any drug capable of arresting diarrhoea (சா.அக.).

[அதிசாரம் + சுருக்கி.]

[Skt. ati-sāra> த. அதிசாரம்.]

அதிசாரணம் *atišāraṇam,* பெ.(n.) மாவிலங்க வகை (மூ.அ.); species of crataeva.

[Skt. atisāraṇa > த. அதிசாரணம்.]

அதிசாரத்திரவியம் *adi-šāra-t-tiraviyam,* பெ.(n.) வயிற்றுளைவிற்காகக் கொடுக்கும் கடைச்சரக்குகளின் தொகுப்பு; a group of elementary drugs pescribed for arresting or regulating diarrhoea, *Astringents* (சா.அக.).

[Skt. ati-šāra +dravya>த. அதிசாரத் திரவியம்.]

அதிசாரநாசனி *adi-šāra-nāšani,* பெ.(n.) 1. வெட்பூலா; white honey plant, *Flueggia.* 2. தீன்பூ; an unidentified drug (சா.அக.).

அதிசாரபந்தனி *adi-šāra-pandani,* பெ.(n.) மருவகம்; a plant known as maid's love, *Artemesia abrotanum* (சா.அக.).

அதிசாரபந்து *adi-šāra-pandu,* பெ.(n.) **அதிசாரங் கட்டி** பார்க்க; see *adi-šāraṅ-kaṭṭi* (சா.அக.).

அதிசாரபித்தம் *adi-šāra-pittam,* பெ.(n.) வயிற்றிலிரைச்சலுடன் ஏற்படும் கழிச்சல், வயிற்றுப்பசம், விலாவலி, ஈரலெரிச்சல், மயக்கம் முதலிய குணங்களை உண்டாக்கும் ஒரு நோய்; a form of diarrhoea arising from the deranged condition of bile in the system. It is marked by rumbling noise in the stomach, accompanied by purging, distension, of the abdomen, pain in the sides, burning sensation, giddiness and other abdominal disorders, *Gastrogenic diarrhoea* (சா.அக.).

[அந்தக(ம்) + பித்தம்.]

*[**Skt.** ati-šāra> த. அதிசாரம்.]*

பித்து→பித்தம் > ***Skt.*** *pitta.*

அதிசாரபேதி *atišāra-pēdi,* பெ.(n.) கழிச்சல் (பேதி) வகை; kind of diarrhoea.

*[**Skt.** ati-šāra+bhēdin >த. அதிசாரபேதி.]*

அதிசாரம்[1] *adi-šāram,* பெ.(n.) கோள்களின் வழக்கத்திற்கதிகமான நடை; accelerated motion of a planet from one sign to another.

*[**Skt.** ati-cāra > த. அதிசாரம்.]*

அதிசாரம்[2] *ati-šāram,* பெ.(n.) 1. கழிச்சல் வகை (திருக்காளத். 4. 17, 33.); kind of diarrhoea. 2. அதிமதுரம் (இராசவைத்.); liquorice. 3. மிகச் சிறியதொரு பின்னவெண் (நான். பால.); a very small fraction = 1/18,38,400.

*[**Skt.** ati-sāra > த. அதிசாரம்.]*

அதிசாரம்[3] *adi-šāram,* பெ.(n.) 1. சத்திசாரம்; வெடியுப்பு, எரியுப்பு (நவாச்சாரம்), சோற்றுப்பு, பூநீறு முதலியவற்றைக் கொண்டு செய்யும் ஒரு வகை உப்பு; a kind of salt prepared from a mixture of nitre, sal-ammoniac, common salt and pooneer (fuller's earth). 2. சவ்வீரம்; corrosive sublimate, *Hydrargyri perchloridum.* 3. அதிக ஊட்டம்; essence or extract. 4. மிக்க இனிப்பு; excessive sweetness. 5. கல்லுப்பு; rock - salt (மூ.அ.).

*[**Skt.** ati-sāra>த. அதிசாரம்.]*

அதிசாரம்போக்கி *adi-šāram-pōkki,* பெ.(n.) ஒதிய மரம்; Indian ash tree, *Odina wodier.* It is so called from its virtue of curing diarrhoea (சா.அக.).

[அதிசாரம் + போக்கி.]

*[**Skt.** ati-sāra>த. அதிசாரம்.]*

போக்கு > போக்கி.

அதிசாரமூரி *adi-šāra-mūri,* பெ.(n.) ஊணங் கொடி; a winding plant, *Convolvulus racimosus* (சா.அக.).

அதிசாரரோகம் *adi-šāra-rōgam,* பெ.(n.) செரியாமைக் கழிச்சல் அல்லது வயிற்றளைச்சல்; diarrhoea or dysentery (சா.அக.).

*[**Skt.** ati-šāra+rōga > த. அதிசாரரோகம்.]*

அதிசாரவக்கிரம் *adišāra-vakkiram,* பெ.(n.) கோள் முன்சென்று திரும்புகை (விதான. கோசா. 15, உரை); passage and retrogression of a planet.

*[**Skt.** ati-cāra+vakkira>த.அதிசாரவக்கிரம்.]*

அதிசாரவுபரசம் *adi-šāra-vubarašam,* பெ.(n.) 1. கருப்பத்தில் உண்டாகும் ஒரு வகை நீர்; a fluid of the uterus. 2. பனிக் குடத்து நீர்; a liquid that, forms in the anniotic sac in which the foetus lies-liquor amni (சா.அக.).

*[**Skt.** ati-sāra + upa-rasa> த. அதிசாரவுபரசம்.]*

அதிசிகுவை *adi-šiguvai,* பெ.(n.) அடி நாக்கின்கீழ் வீக்கத்தை உண்டாக்கிப் பிணிநீர்ப்பை அல்லது சிறுமுளைகள் போல் கொப்புளங்களை எழுப்பி, உண்ண முடியாது

வலி உண்டாக்கும் ஒரு நோய்; a disease of the under surface of the tongue of the under surface of the tongue accompanied by a cyst or swelling and pustules all over the parts and thereby causing inability to take food (சா.அக.).

[Skt. ati + jihvā>த. அதிசிகுவை.]

அதிசிரம் *adiširam,* பெ.(n.) தலைகீழாகப் பிடித்தல்; holding head downward or upside down (சா.அக.).

அதிசிவம் *adi-šivam,* பெ.(n.) நாக்கு அல்லது உண்ணாக்கில் உண்டாகும் ஒருவகை வீக்கம்; a peculiar swelling of the tongue or (uvala) (சா.அக.).

[Skt. ati + jihvā>த. அதிசிவம்.]

அதிசிவிகம் *adi-šivigam,* பெ.(n.) **அதிசிவம்** பார்க்க; see *adi-šivam* (சா.அக.).

[Skt. ati + jihvā>த. அதிசிவிகம்.]

அதிசீதம் *adi-šidam,* பெ.(n.) நிரயங்களுளொன்று (சிவதரு. சுவர். 112.); name of a hell of extreme cold.

[Skt. ati-šita > த. அதிசீதம்]

அதிசூக்குமதேகம் *adi-šūkkuma-dēgam,* பெ.(n.) பூதம், தன்மாத்திரை, அறிவுப் பொறி (ஞானேந்திரியம்), கருமப்பொறி (கன்மேந்திரியம்), உட்கருவி (அந்தக்கரணம்), குணம், மூலப்பகுதி, கலாதி என்பவற்றில் ஒவ்வொன்றும் கொண்ட நுண்ணுடல் (சி.போ.பா. 2, 3, பக். 194.); (*Šaivam*) subtle body, containing the *pūdam, tanmāttirai, ñānēndiriyam, kanmēndiriyam, anda-k-karanam, kuṇam, mūla-p-pagudi* and *kalādi.*

[Skt. ati+ sūkṣma + dēga> த. அதிசூக்கும தேகம்.]

அதிசூக்குமம் *adi-šūkkumam,* பெ.(n.) மிகுநுண்மம் (மிகுபுரியட்டகம்) (சி. போ. பா. 2, 3, பக். 194.); anything very subtle.

த.வ. மீநுண்டு.

[Skt. ati-šūkṣma > த. அதிசூக்குமம்.]

அதிசூக்குமை *adišūkkumai,* பெ.(n.) சிவசத்தி மாறுபாடுகளுளொன்று (சதாசிவ. 21, உரை.); (*Šaivam*) a form of *Šiva-Šakti.*

[Skt. ati-sūkṣmā > த. அதிசூக்குமை.]

அதிசோபனை *adišōbanai,* பெ.(n.) மலைமகள் (கூர்மபு. திருக்கலியாண. 22.); *Pārvati.*

[Skt. ati-šōbhanā > த.அதிசோபனை.]

அதிசௌரபம் *adi-šaurabam,* பெ.(n.) மாமரவகை (மலை.); sweet mango, as very fragrant.

[Skt. ati + saurabha>த.அதிசௌபரம்.]

அதிட்டக்காரன் *aditta-k-kāran,* பெ.(n.) நல்வாய்ப்புள்ள மனிதன், நற்பேறுடையோன்; fortunate man.

த.வ. பேற்றாளன்.

[அதிட்டம் + காரன்.]

[Skt. a-drsta > த.அதிட்டம்.]

அதிட்டகன்மம் *aditta-kanmam,* பெ.(n.) நன்மை தீமைகளைத் துய்க்கச் செய்யுஞ் செயல் (சிவப்பிர. 19. உரை. பக். 213.); the invisible karma which causes enjoyment and suffering.

[Skt. a-drsta + karman > த. அதிட்டகன்மம்]

அதிட்டச்செல்லி *aditta-c-celli,* பெ.(n.) வைப்பு நஞ்சு (வின்.); prepared arsenic.

அதிட்டச்சொல்லி *aditta-c-colli,* பெ.(n.) **அதிட்டச்செல்லி** (மூ.அ.) பார்க்க; see *atitta-c-celli.*

அதிட்டம் *adittam,* பெ.(n.) நற்பேறு; forture.

த.வ. ஆகூழ்.

[Skt. adrista >த. அதிட்டம்.]

அதிட்டவசம் *adittavašam,* பெ.(n) எதிர்பாராத வகையாக ஏற்பட்ட நன்மை; sheer luck (கிரியா.).

[அதிட்ட(ம்) + வசம்.]

[Skt. *a-dṛṣṭa>* **த.** *அதிட்ட(ம்).]*

வயம்→வசம்.

அதிட்டாத்திரு *adiṭṭāttiru,* பெ.(n.) தலைமை உடையவன்; ruler, chief, protector. *"ஈசனதிட்டத்திடுவாம்" (வேதா. சூ. 79.).*

[Skt. *adhi-ṣṭhāṭr >* **த.** *அதிட்டாத்திரு.]*

அதிட்டாதா *adiṭṭātā,* பெ.(n.) **அதிட்டாத்திரு** பார்க்க; see *adiṭṭāttiru.*

[Skt. *adhiṣṭhātā >* **த.** *அதிட்டாதா.]*

அதிட்டானம் *adiṭṭāṉam,* பெ.(n.) 1. நகர் (நாநார்த்த.); city. 2. இருக்கை (M.E.R. 343 of 1927-8); seat. 3. தேர்க்கால் (நாநார்த்த.); chariot-wheel. 4. கோயில் விமானத்தின் கீழுள்ள பகுதி (M.E.R 146 of 1928-9); the base of a temple *vimāṉam.* 5. புகழ் (நாநார்த்த.); fame. 6. ஆரவாரிக்கை (நாநார்த்த.); roaring, shouting. 7. நிலைக்களம்; place, abode.

த.வ. அடிவாணம்.

[Skt. *adhi-sṭhāna >* **த.** *அதிட்டானம்.]*

அதிட்டி-த்தல் *adiṭṭi-,* 4. செ.குன்றாவி.(v.t.) நிலைக்களமாகக் கொள்ளுதல் (சி.போ.சிற்.4, 1, பக்.86); to abide in, stand on.

[Skt. *adhi-sṭhā >* **த.** *அதிட்டி-.]*

அதிதலசிலேட்டுமம் *adi-dala-šileṭṭu-mum,* பெ.(n.) கோழைநோய்; a kind of phlegmatic disease (சா.அக.).

அதிதனு *aditaṉu,* பெ.(n.) பொன் (வின்.); gold.

அதிதாபகவாதம் *adi-tābaga-vādam,* பெ.(n.) உடம்பைத் தவிக்கச் செய்யும் ஓர் ஊதை (வாத) நோய்; a kind of nervous prostration arising from errors in diet and extending all over the body (சா.அக.).

[அதி + தாபகம் + வாதம்.]

[Skt. *ati >* **த.** *அதி.* **Skt.** *vāta>***த.** *வாதம்.]*

தபம் → தாபம் → தாபகம்.

அதிதி[1] *adidi,* பெ.(n.) 1. விருந்தினன் (சைவச. மாணாக். 27); one entitled to hospitality, guest. 2. இறந்தநாட் கடன் செய்தற்கு ஒவ்வாத நாள்; an unsuitable tithi, the first of two tithis in the same month, on which ceremonies that are regulated by the tithis cannot be performed. 3. இரவு 15 முழுத்தத்துள் பத்தாவது (விதான. குணா. 73, உரை.); the tenth of 15 divisions of night.

[Skt. *a-tithi >* **த.** *அதிதி.]*

அதிதி[2] *adidi,* பெ.(n.) கசியபர் மனைவி (கம்பரா. சடாயு கா. 29.); name of a daughter of *Dakṣa,* wife of *Kašyapa* and mother of all the gods.

[Skt. *aditi >* **த.** *அதிதி.]*

அதிதி[3] *adidi,* பெ.(n.) 1. நிலம்; earth. 3. மலை மகள்; *Pārvatī.*

[Skt. *aditi >* **த.** *அதிதி.]*

அதிதிநாள் *adidi-nāḷ,* பெ.(n.) கழை (புனர்பூசம்) (பிங்.); the seventh *nakṣatra,* as presided over by Adidi.

த.வ. ஏழாமுடு.

[அதிதி + நாள்.]

[Skt. *aditi>* **த.** *அதிதி.]*

அதிதிப்பம் *adidippam,* பெ.(n.) உணவவாவின்மை; loss of appetite, *Anorexia* (சா.அக.).

அதிதிபூசிதம் *adidi-pūšidam,* பெ.(n.) சத்தி சாரணை; a plant; spreading hogweed, *Boerhaavia procumbens* alias *B. diffusa* (சா.அக.).

அதிதிபூசை *adidi-pūšai,* பெ.(n.) விருந்தோம்பல்; hospitality to a guest. *"கமழ்சுவை யடிசிலா னதிதி பூசையும்" (காஞ்சிப்பு. திருநகர. 103.).*

[அதிதி + பூசை.]

[Skt. *atithi >* **த.** *அதிதி.]*

பூசு→பூசை.

அதிதீபம் *adi-dībam,* பெ.(n.) பேரரத்தை; greater galangal, *Alpinnia galanga* (major) (சா.அக.).

அதிதும்மற்பீனசம் *adi-tummar-pīnašam,* பெ.(n.) கபால வறட்சியினாலும் மூக்கெலும்பில் அடிபடுவதனாலும் காற்றுடன் மூக்கு, கண், வாய், செவி ஆகிய இடங்களை அடைப்பதனாலும் எந்நேரமும் தும்மலை உண்டாக்கும் மூக்கடைப்பு வகை (பீனசம்); a kind of nasal catarrh marked by constant sneezing, due to the dryness of the scalp, traumatic causes and obstruction in nasal passages and other openings due to the deranged condition of vayu, acute catarrhal Rhinitis (சா.அக.).

த.வ. மூக்கடை சிந்தல்.

[அதி+தும்மல்+பீனசம்.]

[Skt. ati>த. அதி. Skt. pīnasa> த. பீனசம்.]

தும்மு→தும்மல்.

அதிதூலரோகம் *adi-dūla-rōgam,* பெ.(n.) 1. ஆண்களுக்கு உடம்பைப் பருக்கச் செய்யும் ஒரு நோய்; (in male) an abnormal over growth of the body, *Ginantism*, said to be the result of a disease of the pituitary body. 2. பெண்களுக்கு மாதவிலக்கு, வளி செல்வாக்கு முதலிய கரணியங்களினால் உடம்பு பருத்துக் காணுவதல்லாமல் நெஞ்சு, தொடை, வயிறு, பிட்டம் முதலியன பருத்தும் அதனால் களைப்பு, இரைப்பு, மேல் மூச்சு முதலிய குணங்களையும் காட்டும் ஒரு நோய்; (in female) excessive or monstrous size and stature as a result of irregular menstruation, and good circumstances in life without exercise etc., it is marked by an abnormal growth in certain organs or parts of the body such as, the chest, abdomen, thighs, buttocks, etc. (சா.அக.).

த.வ. வீங்கல்நோய்.

[Skt. ati+sthula+rōga>த. அதிதூல ரோகம்.]

அதிதேசம் *adi-dēšam,* பெ.(n.) 1. ஒன்றற்குரியதை மற்றொன்றற்கு ஏற்றிக் கூறுகை; extending a rule to an analogous case. 2. ஒப்புமையானுணர்த்துகை; (Log.) explaining the meaning through analogy. *"அதிதேச வாக்கியம்" (தர்க்கபா. 29.).*

[Skt. atidēsa > த. அதிதேசம்.]

அதிதேசி-த்தல் *adidēši-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஒன்றற் குரியதை மற்றொன்றிற்கு ஏற்றிக் கூறுதல் (ஈடு, 10, 10, 6.); to extend to an analogous case.

[Skt. ati-dēša > த. அதிதேசி-,]

அதிதேவதை *adi-dēvadai,* பெ.(n.) குலதெய்வம்; presiding deity, as of a mantra.

[Skt. adhi>த. அதி.]

த. தேவி > **Skt.** *devata>த. தேவதை.*

அதிதோவயம் *adi-dōvayam,* பெ.(n.) முழுமையான எரிநீர்; a fluid that dissolves any substance or in which any solution is effected, universal solvent (சா.அக.).

அதிநிதி *adi-nidi,* பெ.(n.) எரியுப்பு (நவச்சாரம்); hydrochlorate of *ammonia-Sal ammoniac* (சா.அக.).

அதிநீசம் *adinīšam,* பெ.(n.) 1. ஐவகைப் புணர்ச்சியுளொன்று; (erot.) the sexual union of a man of the hare class with a woman of the elephant class, one of *aivagai-p-puṇarcci*, q.v. *"விழைவுற அதிநீச மென்ன" (கொக்கோ. 3, 7.).* 2. கோள்கள் தாழ்வான (பாகை) கோட்டிலிருக்கை (சோசிட.சிந்.); (Astron.) highly debilitated position of a planet in the house of its depression.

[Skt. ati-nīca > த. அதிநீசம்.]

அதிப்பிரசங்கம் *adi-p-pirašaṅgam,* பெ.(n.) வேண்டுவ பகராது மற்றொன்று விரிக்கை (தருக்கசங் பக். 249.); digression, introducing extraneous matter.

[Skt. ati+pra-saṅga> த. அதிப்பிரசங்கம்.]

அதிபதாதி *adibadādi,* பெ.(n.) செம்பசளை; a red species of Indian spinach, *Spinacha oleracea* (சா.அக.).

அதிபதி[1] *adibadi,* பெ.(n.) 1. அரசன் (பெரியபு. கண்ணப்ப. 7); ruler, king, sovereign. 2. தலைவன் (திவ். திருவாய் 6, 10, 3); lord, master, superior. 3. உரிமையுடையோன்; one who has the right. *'அரசன் என்பவன் ஒரு நாட்டின் அதிபதி'* (கிரியா.).

த.வ. தலைவன்.

[Skt. adhi+pati>த. அதிபதி.]

அதிபதி[2] *adibadi,* பெ.(n.) சண்பகமரம் (மூ.அ.); champak.

அதிபதிங்கி *adi-badiṅgi,* பெ.(n.) கொடிவேலி; a plant, leadwort, *plumbago zeylanic* (சா.அக.).

அதிபதிச் சங்கம் *adi-badi-c-caṅgam,* பெ.(n.) வாலுளுவை; climbing staff-plant, *Celastrus paniculata* alias *Vernonia anthelmintica* (சா.அக.).

அதிபதிச்சம் *adi-badiccam,* பெ.(n.) **அதிபதிச் சங்கம்** பார்க்க; see *adi-padi-c-caṅgam* (சா.அக.).

அதிபதிஞ்சி *adi-badiñji,* பெ.(n.) **அதிபதிங்கி** பார்க்க; see *adi-padiṅgi* (சா.அக.).

அதிபத்திரம் *adi-pattiram,* பெ.(n.) 1. தேக்கு மரம்; teak tree, *Teetona grandis.* 2. மயிர் மாணிக்கம்; morning mallow, *Sida acuta* (சா.அக.).

அதிபதிப்பொருத்தம் *adipadi-p-poruttam,* பெ.(n.) மணமக்கட் பொருத்தங்களுள் ஒன்று (வின்.); (Astrol.) a correspondence between the horoscopes of the prospective bride and bridegroom.

[Skt. adhi + pati>த. அதிபதி .]

அதிபம் *adibam,* பெ.(n.) மூளையின் சிறப்பு மிக்க உயர்ந்த கூறு; the superior portion of the brain, cerebrum (சா.அக.).

[Skt. adhipa >த. அதிபம்.]

அதிபர் *adibar,* பெ.(n.) 1. உரிமையாளர்; owner. *'தொழில் அதிபர்'*. 2. ஆட்சித்தலைவர்; one who heads a state. 3. தலைமை ஆசிரியர்; head of an educational institution. *'பாடசாலை அதிபர்'.* 4. ஒரு நாட்டின் தலைவர்; one who heads a country.

[Skt. adhi-pa > த. அதிபர்.]

அதிபன் *adibaṉ,* பெ.(n.) தலைவன் (பிங்.); lord.

[Skt. adhi-pa > த. அதிபன்.]

அதிபாதகம் *adi-pādagam,* பெ.(n.) பெரும் கரிசு (பாவம்) (தணிகைப்பு. அகத். 226.); henious sin.

[Skt. ati+pātaka > த. அதிபாதகம்.]

அதிபாதிதம் *adi-pādidam,* பெ.(n.) 1. முழுதும் ஒடிந்தது; that which is completely broken. 2. முழுவதும் முறிந்த எலும்பு; (in medicine) the complete fracture of a bone (சா.அக.).

அதிபாரகம் *adi-pāragam,* பெ.(n.) கோவேறு கழுதை; mule which is an offspring of an ass and a mare or a horse and a she-ass (சா.அக.).

அதிபுரசத்தான் *adi-puraśattāṉ,* பெ.(n.) அலரி; oleander rosebay, *Nerium odorum.*

அதிமாங்கிசம் *adi-māṅgiśam,* பெ.(n.) தசை வளர்ந்து துன்புறுத்தும் கண்ணோய்; a disease of the conjunctiva characterised by the thickening of the membrane, ptergium (சா.அக.).

அதிமாமிசக்கழலை *adi-māmiśa-k-kaḻalai,* பெ.(n.) தசை வளர்ச்சியுள்ள கழலைக் கட்டி; a tumour blended with sarcoma, *Hemangio sarcoma* (சா.அக.).

[அதிமாமிசம் + கழலை.]

[Skt. adhi+māṃsa>த. அதிமாமிசம்.]

அதிமாமிசகம் *adi-māmiśagam,* பெ.(n.) 1. ஈறு சுரந்து அதனால் ஏற்படும் பல்வலி; painful sensation in the gum of the teeth due to its abnormal growth. 2. உண்ணாக்கு

வளர்ந்து அதனாலுண்டாகும் அழற்சி; inflammation due to the elongation of the uvula, uvulitis (சா.அக.).

[Skt. adhi+māṃsa>த. அதிமாமிசகம்.]

அதிமாமிசசருமன் *adi-māmiša-šaruman,* பெ. (n.) வெள்விழிமேல் தசை வளர்ந்து உலர்ந்த அரத்த உண்டையைப் போல் கறுத்தும், பருத்தும் இருக்கும் ஒரு கண்ணோய்; a soft, thick, extended overgrowth of flesh resembling a dried clot of blood in colour, on the white of the eye (சா.அக.).

[Skt. adhi+māṃsa+carman>த. அதிமாமிச சருமன்.]

அதிமாமிசாசருமரோகம் *adi-māmišā-šaruma-rōgam,* பெ. (n.) 1. கண்ணின் வெள் விழியில் சதை வளர்ந்து காணப்படும் ஒரு நோய்; a fleshy growth in the white of the eye. 2. பிறவியில் ஏற்படும் சதை மடிப்பு; an anomaly of the eye in which a patch of the thickened conjunctive extends over a part of the cornea, *Epitarsus* or *congenital pterygium* (சா.அக.).

[Skt. adhi+māṃsa+carman+rōga> த. அதிமாமிசசருமரோகம்.]

அதிமார்க்கநூல் *adimārkka-nūl,* பெ. (n.) **அதிமார்க்கிகசாத்திரம்** (சித். பிர. பக். 14) பார்க்க; see *adimārkiga-šāttiram.*

[அதிமார்க்கம் + நூல்.]

[Skt. ati-mārga> த. அதிமார்க்கம்.]

அதிமார்க்கம் *adi-mārkkam,* பெ.(n.) 1. அகப் புறச் சமயம் (சித. பிர. 14); (Šaivam) religious sects not intimately related to *Šaivašiddhānta.* 2. சைவாகமப் பிரிவினுள் ஒன்று (சி.போ.பா.17.); a section of *Šaivāgamas.*

[Skt. ati + mārga>த. அதிமார்க்கம்.]

அதிமார்க்கிகசாத்திரம் *adi-mārkkiga-šāttiram,* பெ.(n.) பாசுபதம் 'காபாலிகம்' மாவிரதமென்னும் மதக் (மார்க்கங்) கோட்பாடுகளைக் கூறும் நூல்கள் (சாத்திரம்) (விவேகசிந். 17.); (Šaivam) the religious treatises which deal with *pāšubadam. kāpāligam* and *māviradam.*

[Skt. ati +mārgika + šāstra > த. அதிமார்க்கிகசாத்திரம்.]

அதிமானுடம் *adimānudam,* பெ.(n.) மாந்தனுடைய ஆற்றலுக்கு மேற்பட்டது; that which is superhuman.

[Skt. ati + mānuṣa > த. அதிமானுடம்.]

அதிமித்திரன் *adimittiran,* பெ.(n.) கணவன் (சிந்தா. நி. 132.); husband.

[Skt. ati + mitra>த. அதிமித்திரன்.]

அதிமிதம் *adi-midam,* பெ.(n.) ஈரமில்லாதது; that which is deprived of moisture (சா.அக.).

அதிமிருத்தியாதிமாத்திரை *adi-miruttiyādi-māttirai,* பெ.(n.) ஆன்மணத்தி (கோரோசனை) மாத்திரை (வின்.); medicinal pill made of bezoar.

[அதிமிருத்தி + ஆதி + மாத்திரை.]

[Skt.ati >mṛtya> ādi>த. அதிமிருத்தியாதி.]

அதிமேற்றிராசனம் *adi-mērrirāšanam,* பெ.(n.) அதிமேற்றிராணியரின் இருப்பிடம் (R.C.); archiepiscopal see or diocese.

[Skt. adi > அதி + Syr. metrān+Skt. ā-sana> த. அதிமேற்றிராசனம்.]

அதிமேசு *adimēsu,* பெ.(n.) அரசிறை சார்நிலைப் பணியாளரிட்ட புள்ளிமதிப்பு (இ.வ.); estimate of standing crop, made by a subordinate revenue officer.

த.வ. புள்ளிமதிப்பு.

[U. azmāish > த. அதிமேசு.]

அதிமோகம் *adi-mōgam,* பெ.(n.) 1. விருப்ப (இச்சை) யுறழ்ச்சி; excessive venereal impulse in the male-satyriasis. 2. ஒருதலைக் காமம்; abnormal increase of

the sexual impulse before it is reciprocated, sexual hyperesthesia (சா.அக.).

[Skt. ati + mōha> த. அதிமோகம்.]

அதிமோதம் *adi-mōdam,* பெ.(n.) மர மல்லிகை; jasmine tree, *Jasmine arboreum* (சா.அக.).

அதியசனம் *adi-y-aśanam,* பெ.(n.) 1. உண்ட உணவு செறியாமுன்னம் மீண்டு உணவு உட்கொள்ளுதல்; eating too soon after a meal before it is digested. 2. அளவு கடந்து உண்கை; immoderate eating (சா.அக.).

[Skt. ati + aśana>த. அதியசனம்.]

அதியண்டம் *adiyaṇḍam,* பெ.(n.) பூனைக்காலி; cowhage plant - carpopogon pruriens alias, *Flacourtia cataphracta* (சா.அக.).

அதியத்தம் *adiyattam,* பெ.(n.) எலும்பின் மேற் கூறு; the upper part of a bone (சா.அக.).

[Skt. ati + asthi>த. அதியத்தம்.]

அதியத்தி *adiyatti,* பெ.(n.) எலும்பின் மேல் எலும்பு வளர்தல்; a bone growing over another; a bony growth projecting outward from the surface of a bone, *Expostoses* (சா.அக.).

[Skt. ati + asthi>த. அதியத்தி.]

அதியமிலபரணி *adiyamila-baraṇi,* பெ.(n.) 1. புளியிலை; tamarind leaves, *Tamarindus indica*. 2. மாவிலை; mango, leaf, *Mangiferus indica*. 3. புளிச்சிறு கீரை; a medicinal plant having sour leaves; sour greens, *Oxalis corniculata* (சா.அக.).

அதியமிலம் *adiyamilam,* பெ.(n.) 1. புளிமா; sour mango tree, *Spondias mangifera*. 2. புளிநாரத்தை; a species of citron, *Citron aurantium* (சா.அக.).

[Skt. ati + amla>த. அதியமிலம்.]

அதியாச்சிரமம் *ati-y-ācciramam,* பெ.(n.) வாழ்க்கைநிலை நான்கும் கடந்த நிலை (சி.சி.8,32, சிவாக்); the order beyond the four *ācciramam*.

[Skt. ati + ā-śirama > த. அதியாச்சிரமம்.]

அதியாத்துமிகம் *adiyāttu-migam,* பெ.(n.) 1. உயிருக்குரியது; relating to the soul. 2. இறையாதன் (பரமாத்துமா); the supreme spirit (சா.அக.).

[Skt. ati + ātmika>த. அதியாத்துமிகம்.]

அதியாமம் *adiyāmam,* பெ.(n.) 1. அறுகம் புல்; couch grass, *Agrostis linearis*. 2. முயற்புல்; cynodon grass, *Cynodon dactylon* (சா.அக.).

அதியால் *adiyāl,* பெ.(n.) பெரியோருக்கிடுங் காணிக்கை; present or offering made to a superior, nuzzer.

[U. hadiya > த. அதியால்.]

அதியோகம் *adi-yōgam,* பெ.(n.) நற்கோள் நிலையுள் ஒன்று (விதான. காதக. 23, உரை.); (Astrol.) auspicious situation of one or more of the four benign planets in a horoscope.

[Skt. ati + yōga>த. அதியோகம்.]

அதியோமகம் *adiyōmagam,* பெ.(n.) சிவப்பு வாடா மல்லி; red globe ever lasting jasmine, *Gomphrena globosa* (சா.அக.).

அதியோனிப்பூப்பு *adi-yōṇi-p-pūppu,* பெ.(n.) பூப்பெய்தற்கு முன்னதாகவே பிறப்புறுப்புகள் விரைவாக வளர்ச்சியடைதல்; excessive activity of the genital glands, resulting in precocious puberty, genital over-development etc., Hyper genitalism (சா.அக.).

[அதியோனி + பூப்பு.]

[Skt. ati + yōni> த. அதியோனி.]

அதிட்டசன்மபோக்கியம் *adiṭṭa-śaṇma-pōkkiyam,* பெ.(n.) வானுலக (சுவர்க்க)த்திலேயாதல் நிரயத்திலேயாதல் மறு

பிறவியிலேயாதல் நிகழ்வுறும் வினை நுகர்வம் (சி.சி. 4, 40, சிவாக்.); enjoyment of the fruits of karma, either in heaven, hell or in succeeding birth.

[Skt. adrṣṭa + janma + pōkkiyam > த. அதிட்டசன்மபோக்கியம்.]

அதிர்வசிரசு *adirva-širašu,* பெ.(n.) நூற்றெட்டு மறையின் அறிவுப் பகுதிகளினொன்று (சி.சி. 8, 11, மறைஞா.); name of an *upanisad.*

[Skt. atharvaširas > த. அதிர்வசிரசு]

அதிரசம்[1] *adirašam,* பெ.(n.) 1. பலவகைப் பூண்டுகளின் பெயர்; the names of various plants. 2. இதளியம்; mercury. 3. ஒரு தித்திப்புக் குடிநீர்; a sweet drink like syrup mixed with water (சா.அக.).

[Skt. ati+rasa>த. அதிரசம்.]

அதிரசம்[2] *adirašam,* பெ.(n.) வெல்லப்பாகில் அரிசிமாவைக் கலந்து எண்ணெயில் சுட்டு உருவாக்கப்படும் ஒருவகை திண்பண்டம்; a kind of thick flat round cake made by frying a sweetened rice flour (கிரியா.).

த.வ. பணியாரம்.

[Skt. ati +rasa>த. அதிரசம்.]

அதிரதம் *adi-radam,* பெ.(n.) தேர்வகை நான்கனு ளொன்று (ஸ்ரீபத்ம. தென்றல் விடு. 67, குறிப்பு); a class of chariots, one of four iradam, q.v.

[Skt. ati-ratha > த. அதிரதம்.]

அதிரதன் *adi-radan,* பெ.(n.) தேரோட்டி (பாரத. அணிவ. 1.); warrior who fights from his car with warriors innumerable, one of four *tēr-virar,* q.v.

[Skt. ati-ratha > த. அதிரதன்.]

அதிராசன் *adi-rāšan,* பெ.(n.) பேரரசன் (insc.); emperor.

த.வ. மன்னர்மன்னன், கோவேந்தன்.

[அதி + ராசன்.]

[Skt. adhi>த. அதி.]

அரசு→அரசன்→ராசன்.

அதிராத்திரம் *adi-rāttiram,* பெ.(n.) திங்கள் வேள்வி வகைகளினொன்று (திருக்காளத். பு. 7, 43); variety of the *jyōtiṣṭōma,* the main type of the *sōma* sacrifice.

[Skt. ati-rātra > த. அதிராத்திரம்.]

அதிராத்திரியாசி *adirāttiri-yāši,* பெ.(n.) கற்றுவல்ல பார்ப்பானுக்குரியதோர் பட்டப் பெயர்; (s.i.i.v. 161.). a title of learned Brahmins.

[Skt. atirātra + yājin> த. அதிராத்திரியாசி.]

அதிரி *adiri,* பெ.(n.) கல்; stone (சா.அக.).

அதிரிகர்ணி *adirikarṇi,* பெ.(n.) காக்கணம்; a plant, crow's beak, *Clitorai ternatea* (சா.அக.).

அதிரிச்சியம் *adiricciyam,* பெ.(n.) பண்டங்களைப் பிறர் கண்ணிற் காணக்கூடாமல் மறைக்கும் கலை (வித்தை); art of making visible objects invisible. *'புசரிலா வதிரிச்சிய மஞ்சனம்' (திருவிளை. எல்லாம் 17).*

[Skt. adṛšya > த. அதிரிச்சியம்.]

அதிரிசம் *adirišam,* பெ.(n.) 1. குருடு; blindness. 2. காண்குறவியலாமை; incapability of seeing (சா.அக.).

அதிரிசயம் *adirišayam,* பெ.(n.) 1.காணக்கூடும் பொருளைக் காண்குறவியலாமற் செய்யும் ஒரு கலை (வித்தை) ; the art of rendering a visible thing invisible. 2. தன்னைப் பிறர் பார்க்காதபடி மறைத்துக் கொள்ளும் கலை (வித்தை), மறைப்பு மையைக் கொண்டு சித்தர் செய்யும் கலை; the art of making oneself invisible to others or making things invisible, performed art of Šiddhars with the help of a magic unguent prepared by them (சா.அக.).

த.வ. மைக்கட்டு, கண்கட்டுக்கலை.

அதிரிசன் *adirišan,* பெ.(n.) கண் பார்வை இல்லாதவன்; a blind man (சா.அக.).

அதிரிசாரம் *adiri-šāram,* பெ.(n.) 1. இரும்பு; iron. 2. கற்சத்து; essence of stone. 3. கல்மதம்; a fossil exuding from rocks, *Asphaltum* (சா.அக.).

[அதிரி + சாரம்.]

*[**Skt.** atiri> த. அதிரி.]*

சாறு→சாரம்.

அதிரிசியம் *adirišiyam,* பெ.(n.) **அதிரிசயம்** பார்க்க; see *adirišayam* (சா.அக.).

அதிரித்தம் *adirittam,* பெ.(n.) மிகையானது; that which is greater. *"ஆணவமல சாமர்த்தியத்தினைக் காட்டிலும் அதிரித்தம்"* (சிவசம. 43.).

*[**Skt.** ati-rikta > த. அதிரித்தம்.]*

அதிருக்கு *adirukku,* பெ.(n.) கண் பார்வை தெரியாமை; blindness (சா.அக.).

அதிருசன் *adirušan,* பெ.(n.) **அதிரிசன்** பார்க்க; see *adirišan* (சா.அக.).

அதிருசியம் *adirušiyam,* பெ.(n.) 1. காணக் கூடாதது (சித். மர. கண். 3); that which is invisible. 2. அறுபத்து நாலு கலையுள் தன்னைக் பிறர் காண்குறவொட்டாமல் மறைக்கும் கலை; art of making oneself invisible, one of *arupattunālu-kalai,* q.v.

த.வ. காண்பிலி.

*[**Skt.** a-drśya > த. அதிருசியம்.]*

அதிருட்டக்கட்டை *adirutta-k-kattai,* பெ.(n.) 1. நற்பேறின்மை (இ.வ.); lack of good fortune. 2. அதிட்டவீனன் (இ.வ.); one who suffers ill-fortune.

[அதிருட்ட(ம்) + கட்டை.]

*[**Skt.** a-drsta> த. அதிருட்டை.]*

கள்→கட்டை.

அதிருட்டசாலி *adrutta-šāli,* பெ.(n.) நற்பேறுடையான்; fortunate person.

[அதிருட்டம் + சாலி.]

*[**Skt.** a-drsta>த. அதிருட்ட(ம்).]*

சால்→சாலி.

அதிருட்டபரதந்திரத்துவம் *adirutta-para tandira-t-tuvam,* பெ.(n.) அறப்பயன் அறங்கடை வயத்தனாகை (விவேகசிந். 3); being subject to the results to *punniyam* and *pāvam.*

[அதிருட்டம்+பரம்+தந்திரம்+தத்தும்.]

*[**Skt.** a-drsta>த. அதிருட்டம். **Skt.** adhvan> த-அத்துவம்.]*

அதிருட்டபோக்கியம் *adirutta-pōkkiyam,* பெ.(n.) மறுபிறவியில் துறக்க நிரய (சொர்க்க நரக)ங்களில் நுகரும் நுகர்ச்சி (சி.சி. 2, 39, ஞானப்); effects of unseen actions, experienced of after-life.

*[**Skt.** a-drsta+ bhōgya> த. அதிருட்ட போக்கியம்.]*

அதிருட்டம் *adiruttam,* பெ.(n.) ஐம்பொறிகளால் காணப்படாதது; that which cannot be perceived by the senses. 2. பார்வைக்கு எட்டாதது; that which is beyond the reach of vision. 3. ஊழ்; destiny, luck. 4. நல்லூழ்; good luck. 5. குருவிடம் முழுமையாகப் படைக்கை (பரநியாசம்) (*Vaisn*) surrendering one's self and all to a guru (சா.அக.).

*[**Skt.** a-drsta>த. அதிருட்டம்.]*

அதிருப்தி *adirupti,* பெ.(n.) பொருந்திகையின்மை, நிறைவின்மை; dissatisfaction, displeasure. *'அதிருப்தியான பதில் கூறினார்'.*

த.வ. மனக்குறை.

*[**Skt.** a-trpti>த. அதிருப்தி.]*

அதிருப்பை *adiruppai,* பெ.(n.) பொற்றலைக் கையாந்தகரை; eclypta with yellow flowers; marygold verbesina, *Wedelia calendulacea* (சா.அக.).

அதிருட்டயத்தினம் *adiruṭṭayattiṉam,* பெ.(n.) பயன்தரும் முயற்சி; fruitful attempt. *"தேவர் செய்தருளின அதிர்ஷ்டயத்னமாய் இப்படிப் பலித்தது" (S.i.i. vi, 189.)*

*[**Skt.** a-dṛṣṭa+yatna>த.அதிருட்டயத்தினம்.]*

அதிருட்டானுகூலம் *adiruṭṭāṉukūlam,* பெ.(n.) நற்பேறு பயன்; luck. *"இவனுடைய அதிருஷ்டானுகூலம் எப்படியோ?" (தமிழறி. 24.).*

*[**Skt.** a-dṛṣṭa+anu-kūla> த.அதிருட்டானு கூலம்.]*

அதிரூதை *adirūdai,* பெ.(n.) 33 அகவை முதல் 50 அகவைக்குட்பட்டவள்; a woman of any age between 33-50 (சா.அக.).

*[**Skt.** ati +rūdai>த. அதிரூதை.]*

அதிரூபம் *adirūbam,* பெ.(n.) தான்றிக்காய்; belleric myrobalan, or devil's abode, *Terminalia belerica* (சா.அக.).



அதிரோகம்[1] *adirōgam,* பெ.(n.) கருக்குநீர் (வின்.); consumption.

*[**Skt.** ati-rōga > த. அதிரோகம்.]*

அதிரோகம்[2] *adirōgam,* பெ.(n.) 1. எலும்புருக்கி (சய ரோகம்); consumption. 2. ஈளை நோய்; asthma. 3. தொந்த நோய்; chronic disease (சா.அக.).

*[**Skt.** ati+rōga > த. அதிரோகம்.]*

அதிரோமம் *adirōmam,* பெ.(n.) உடம்பு முழுவதும் மயிர் முளைத்தல்; growth of hair all over the body, *Hypertrichosis universalis* (சா.அக.).

*[**Skt.** ati+rōma > த. அதிரோமம்.]*

அதிலவிதம் *adila-vidam,* பெ.(n.) வெள்ளிலோத்திரம்; bark of a silvery - white tree (lodram), *Simplocos racemosa*, a foreign plant (சா.அக.).

அதிலவோடகம் *adila-v-ōḍagam,* பெ.(n.) கேரளமண்ணிற் காணக்கூடும் ஒரு செடி; a plant found in Malabar, *Justicia bivalvis* (சா.அக.).



அதிலோகம் *adilōgam,* பெ.(n.) ஒரு மருந்துப் பண்டம் (இரச கருப்பூரம்) (வை.மூ.); sublimate of mercury.

அதிலோகமருஞ்சாகம் *adilōga-maruñjāgam,* பெ.(n.) இதளிய கருப்பூரம்; muriate of mercury (சா.அக.).

அதிவகா *adivagā,* பெ.(n.) ஒரு மருந்துச் சரக்கு; a bazaar drug called Indian atee, *Aconitum heterophyllum* (சா.அக.).

த.வ. அதிவசம், அதிவிடயம்.

அதிவசம்[1] *adivašam,* பெ.(n.) 1. அதிவிடை; atis. 2. வசம்பு; sweet flag.

*[**Skt.** ativiṣā > த. அதிவசம்.]*

அதிவசம்[2] *adivašam,* பெ.(n.) **அதிவிடயம்** பார்க்க; see *adividayam* (சா.அக.).

அதிவசம்பு *adivašambu,* பெ.(n.) **அதிவகா** பார்க்க; see *adivagā.*

அதிவசம்→அதிவசம்பு.

அதிவர்ணாச்சிரமி *adi-varṇāccirami,* பெ.(n.) குலக்கேடன்; one who is above castes and orders.

[அதி + வரணம் + ஆச்சிரமி.]

[Skt.ati>த.அதி. Skt. āšramin>ஆச்சிரமி.]

அதிவன்னாச்சிரமி *adi-vaṉṉāccirami,* பெ.(n.) **அதிவர்ணாச்சிரமி** (சூத. முக்தி. 5, 16.) பார்க்க; see *adivarṇāccirami.*

[அதி + வன்ன+ ஆச்சிரமி.]

[Skt.ati>த.அதி.Skt. āšramin>த.ஆச்சிரமி.]

அதிவாசம்[1] *adi-vāšam,* பெ.(n.) இறந்த நாட் சடங்குக்கு முதல்நாள் மேற்கொள்ளும் உண்ணா நோன்பு; fast on the day previous to that of the *šrāddha* ceremony.

[Skt. ati+vāša > த. அதிவாசம்.]

அதிவாசம்[2] *adi-vāšam,* பெ.(n.) திருமணத்துக்கு முன் நிகழ்வாக நிகழ்த்துஞ் சடங்குவகை (சீவக. 2363, உரை); a preparatory ceremony before marriage.

[Skt. adhi+vāsa > த. அதிவாசம்.]

அதிவாதநாடி *adivāda-nāḍi,* பெ.(n.) உடம்பில் வளி மிகுத்திருப்பதைக் குறிக்கும் நாடி நடை; pulsation indicating excess of hatulancy in the system.

[அதி + வாத(ம்) + நாடி.]

[Skt. ati + vāta>த. அதிவாதம்.]

நாழி→நாடி.

அதிவாதம்[1] *adi-vādam,* பெ.(n.) கடவுள் மங்கலஞ் செய்தற்குரிய சடங்கு (சிவதரு. சிவஞானதா. 71); preliminary consecratory ceremony for invoking the presence of god in an image.

[Skt. adhi+vāda > த. அதிவாதம்.]

அதிவாதம்[2] *adi-vādam,* பெ.(n.) புனைந்துரை; exaggeration, hyperbole.

[Skt. ati-vāda > த. அதிவாதம்.]

அதிவாலகன் *adivālagaṉ,* பெ.(n.) குழந்தை; infant.

அதிவாவிகம் *adivāvigam,* பெ.(n.) சிவப்பு மருதோன்றி; red-leaved fragrant nail dye, *Lawsonia spinosa* alias *Barteria cristata.*

அதிவிடாகிகம் *adi-viḍākigam,* பெ.(n.) செம்முளரி; red rose.

அதிவிடை[1] *adiviḍai,* பெ.(n.) ஒரு மருந்துச் செடி (தைலவ. தைல. 4); atis, s.sh., *Aconitum heterophyllum.*

[Skt. ati-višā > த. அதிவிடை.]

அதிவிடை[2] *adiviḍai,* பெ.(n.) **அதிவகா** பார்க்க; see *adivagā.*

[Skt. ati+višā > த. அதிவிடை.]

அதிவியாத்தி *adiviyātti,* பெ.(n.) **அதிவியாப்தி** (தருக்கசங்.) பார்க்க; see *adiviyāpti.*

[Skt. ati+vyāpti > த. அதிவியாத்தி.]

அதிவியாப்தி *adi-viyāpti,* பெ.(n.) இலக்கியமல்லாததன் கண்ணும், இலக்கணம் சொல்லுங் குற்றம்; (Log.) applicability of a definition to things not intended to be defined by it, one of three *tōṣam.*

[Skt. ati-vyāpti > த. அதிவியாப்தி.]

அதிவிருட்டி *adi-viruṭṭi,* பெ.(n.) மிகுபெயல்; excessive rain. *"கொள்ளை யதிவிருட்டி நீங்கும்" (குற்றா. தல. சிவபூசை. 46).*

[Skt. ati+vṛṣṭi > த. அதிவிருட்டி.]

அதிவிருத்தம் *adi-viruttam,* பெ.(n.) வரம்பு மீறுகை (நாநார்த்த.); transgression.

[Skt. ati-vṛtta > த. அதிவிருத்தம்.]

அதிவீரம் *adi-vīram,* பெ.(n.) பறங்கிப் பாடாணம்; a mineral poison.

அதிவேகதீபனம் *adi-vēga-dībaṉam,* பெ.(n.) யானைப் பசி; excessive hunger, *Bulimia.*

அதிறாப்பை *adiṟāppai,* பெ.(n.) பொடுதலை; a plant, *Verbena nodiflora.*

அதினாதிபூண்டு *adinādi-pūṇḍu,* பெ.(n.) கொடி வேலி; Ceylon lead-wort, *Plumbago zeylanica.*

அதீசாரம் *adī-šāram,* பெ.(n.) **அதிசாரம்** பார்க்க; see *adi-šāram.*

[Skt. ati-sāra > த. அதிசாரம்.]

அதீதப்பிரசவம் *adīda-p-pirašavam,* பெ.(n.) **அகாலப்பிரசவம்** பார்க்க; see *akāla-p-pirašavam.*

[Skt. atīta+pra-sava > த. அதீதப்பிரசவம்.]

அதீதம்[1] *adīdam,* பெ.(n.) 1. கடந்தது (சி.சி.1. 57); that which has gone, beyond, risen above. 2. **அதீதவெடுப்பு** (பரத. தாள. 43) பார்க்க; see *adīda-v-eḍuppu* (Mus.) variety of kiragam, q.v.

[Skt. atīta > த. அதீதம்.]

அதீதம்[3] *adīdam,* பெ.(n.) 1. பொன்; gold. 2. எட்டாதது; that which is beyond reach. 3. கொன்றை மரம்; cassia tree.

[Skt. atīta > த. அதீதம்.]

அதீதியம் *adīdiyam,* பெ.(n.) ஆசையின்மை (சிந்தா. நி. 143); absence of desire or attachment.

[Skt. atindriya > த. அதீதியம்.]

அதீதர் *adīdar,* பெ.(n.) அறிவர்; ascetics, sages, as having risen above the world.

த.வ. பெற்றியர், சித்தர்.
[Skt. atīta > த. அதீதர்]

அதீதவிடந்தீண்டி *adida-viḍan-tīṇḍi,* பெ.(n.) நாகப்பாம்பு; a very venomous reptile, cobra.

[அதீதவிடம் + தீண்டி.]

[Skt. atīta+viṣa>த. அதீதவிடம்.]



அதீதவெடுப்பு *adīta-v-eḍuppu,* பெ.(n.) குரல் முன்னும் தாளம் பின்னும் வரும் எடுப்பு வகை; (Mus.) variety of *eḍuppu,* q.v., in which the song begins before the principal beat of the time-measure.வடமொழி முன்னொட்டு வகை;

[அதீத(ம்) + எடுப்பு.]

[Skt. atīta>த. அதீத(ம்).]

அதீதன் *adīdaṉ,* பெ.(n.) 1. மண், பெண், பொன் என்னும் மூன்றும் கடந்தவன்; one who has surrendered all the three that is naturally attractive in this world i.e., world, women and wealth. 2. அன்பினின்றும் விடுவிக்கப்பட்டவன்; one who is released from the clutches of Maya.

[Skt. atita > த. அதீதன்.]

அதீதாவத்தை *adīdāvattai,* பெ.(n.) 1. மூலாதாரத்தில் ஆதன் தங்கி அறிவற்ற நிலை (அவிச்சை) மாத்திரையில் வயப்படும் ஆதனின் ஐந்தாம் நிலை (சி.போ.3. 6. சிற்.); the transcendent - fifth state of the soul.

[Skt. atīta+avasthā > த. அதீதாவத்தை.]

அதீந்திரியம் *adīndiriyam,* பெ.(n.) பொறியறிவிற்கெட்டாதது (மச்சபு. பிரமாண்ட. 17); that which is beyond the cognisance of the senses.

[Skt. ati+indriya > த. அதீந்திரியம்.]

அதீபனம் *adibanam,* பெ.(n.) பசிவேட்கை யின்மை (யாழ்ப்.); want of appetite, anorexia.

[Skt. a-dipana > த. அதீபனம்.]

அதீரம் *adiram,* பெ.(n.) ஊக்கமின்மை; want of courage.

[Skt. atita > த. அதீரம்.]

அதீனம்[1] *adinam,* பெ.(n.) வயம்; influence, control. *"சந்தமுறு பிராணவளி யதீன மேயாய்" (சூத. எக்கிய. பூ. 4, 4).*

[Skt. adhina > த. அதீனம்.]

அதீனம்[2] *adinam,* பெ.(n.) 1. உரிமை; right of possession. 2. சார்பு; dependence.

[Skt. adhina > த. அதீனம்.]

அதுட்டவிரணம் *adutta-v-iranam,* பெ.(n.) சீழ், அரத்தம், சிலை நீர் முதலியன வடிந்தாலும், மருத்துவத்துக்கு ஆறும் காயம்; an ulcer that could heal under treatment though attended with discharges of fluid, blood and pus.

அதும்பை *adumbai,* பெ.(n.) கவிழ்தும்பை; a flowering plant.

அதுலம் *adulam,* பெ.(n.) 1. ஒப்பற்றது; ஈடு இணை இல்லாதது; that which is unequalled. *"அசங்க மதுலம்" (கைவல்ய. சந்தே. 137).* 2. ஒரு பேரெண் (வின்.); a thousand quintillions.

[Skt. atula>த. அதுலம்.]

அதுலன் *adulan,* பெ.(n.) ஒப்பற்றவன்; one who is unequalled. *"வான்மிசை யதுலன்" (காஞ்சிப்பு. இரணிச. 5).*

த.வ. ஒப்பிலி.

[Skt. a-tula→த. அதுலன்.]

அதுலிதம் *adulidam,* பெ.(n.) அசைவின்மை (சிந்தா. நி. 120); state of being at rest.

[Skt. a-tulita > த. அதுலிதம்]

அதைரியம் *a-dairiyam,* பெ.(n.) மனவுறுதியில்லா தன்மை; want of fortitude, timidity, dispiritedness.

[Skt. a-dhairya>த. அதைரியம்.]

அதோகதி[1] *adō-gadi,* பெ.(n.) 1. தாழ்நிலை; low state, degraded condition. 2. நிரயம் (பிங்.); hell. 3. நிரய மேழனுளொன்று (பிங்.); a hell, one of *ēlu-naragam,* q.v.

த.வ. வீழ்நிலை, கீழ்அளறு.

[அதோ + கதி.]

[Skt. adhas> த. அதோ.]

அதோகதி[2] *adōgadi,* பெ.(n.) கையறுநிலை; utter helplessness, miserable plight. *'நீங்களும் போய்விட்டால் எந்நிலை அதோகதிதான்'.*

த.வ. அவலம்.

[அதோ + கதி.]

[Skt. adhas> த. அதோ.]

அதோகந்தம் *adōgandam,* பெ.(n.) நாயுருவி; a plant, *Achyranthes aspera.*



அதோங்கம் *adōngam,* பெ.(n.) இடுப்பிற்குக் கீழேயுள்ள பகுதி (தைலவ. தைல. 54, உரை); part of the body below the waist.

[Skt. adhas+anga>த. அதோங்கம்.]

அதோசததோடம் *adōsada-dōdam,* பெ.(n.) நீரிழிவு நோய் தொடர்பால் தொப்புளின் கீழ் காற்று அழுத்துவதனால் மலம் நழுகல், வாயுலர்தல் முதலிய குணங்களைக் காட்டும் ஐவகைக் குற்றங்களுள் ஒன்று; one of the five

affections of the body marked by evacuation of bowels, parched tongue etc, due to the deranged *vāyu* arising from the affection of urinary organs and extending to the abdominal region.

அதோசாணு *adō-šāṇu,* பெ.(n.) முழங்காலுக்குக் கீழுள்ள பகுதி; below the knee.

அதோசிவிகம் *adō-šivigam,* பெ.(n.) உண்ணாக்கு; the uvula.

[Skt. adhas+jivika>த. அதோசீவிகம்.]

அதோமுகம் *adō-mugam,* பெ.(n.) 1. கீழ்நோக்கிய முகம்; the face that looks downwards. *"ஐந்து முகத்தோ டதோமுகமும்" (கந்தர்கலி.78).* 2. தலை குனிந்து பார்க்கை (சது.); (Nāṭya) looking down with head bent, one of 14 *muga-v-abinayam*, q.v. 3. தலைகீழான நிலை; inverted position. *"அதோ முகமாகி......... கொம்பர் நாலு மொருவனை" (இரகு. சம்புக. 41).* 4. கடற் கழிமுகம் (பிங்.); mouth of a river, confluence of a river with sea. 5. கறி முன்னை; a plant, *Premnaesculenta.*

[அதோ+முகம்.]

த.வ. கீழ்முகம், கீழக்காந்தலை.

[Skt. adhas>த. அதோ.]

அதோதரம் *adōdaram,* பெ.(n.) அடி வயிறு, the abdominal region.

[அதோ + உதரம்.]

[Skt. adhas> த. அதோ.]

அதோதிதம் *adōdidam,* பெ.(n.) 1. சிவப்பு முள்ளுக்கீரை; red nail dye plant, *Amaranthus spinosus.* 2. செம்முள்ளி; common nail dye, *Barteria prionitis* alias *Bcristata.*

அதோதுவாரம் *adō-duvāram,* பெ.(n.) **அதோங்கம்** பார்க்க; see *adōngam.*

[Skt. adhas+ dvāra>த. அதோதுவாரம்.]

அதோநாபி *adō-nābi,* பெ.(n.) கொப்பூழின் கீழ்ப்பாகம்; that portion below the navel region.

[Skt. adhas + nābhi>த. அதோநாபி.]

அதோபக்தம் *adō-pakdam,* பெ.(n.) உணவு உண்டவுடனே எடுத்துக் கொள்ளும் மருந்து; a dose of medicine to be taken just after meals.

அதோபகாசம் *adōba-kāšam,* பெ.(n.) சேர்க்கை; sexual intercourse.

த.வ. புணர்ச்சி.

அதோபரம் *adōbaram,* பெ.(n.) மலம் கழியும் உறுப்பு; the anus.

த.வ. எருவாய்.

அதோபாகம் *adō-bāgam,* பெ.(n.) 1. அடிப்பக்கம்; bottom. 2. கீழ்ப்பாகம்; the lower portion, especially of the body. foot. *"பிரமாண்டத்ததோபாகம்" (சிவதரு. கோபுர. 30.).*

[அதோ + பாகம்.]

[Skt.adhas>த.அதோ. வகு→பகு→பாகம்.]

அதோபாதம் *adō-pādam,* பெ.(n.) 1. கீழ்ப்பாதம்; the lower portion of the foot. 2. கீழ்க்கால்; the lower portion of the leg. 3. சிறு மூளையினிரண்டு கூறுகளையும் இணைத்துக் கொண்டிருக்கும் நார்க்கட்டுக் களாலாகிய கால்கள் இரண்டிலொன்று; one of the fibrous bands by which the cerebellam is attached to the brain-Inferior crus.

[அதோ + பாதம்.]

[Skt. adhas > த. அதோ.]

பதி → பதம் → பாதம்.

அதோபாரதோசவரி *adōbāra-dōšavari,* பெ.(n.) உடம்பின் அடிப்பாகத்தைக் குணப்படுத்தல் அல்லது உறுதிப்படுத்துகை; curing or strengthening the lower part of the body.

அதோபிரகன்னாளம் *adō-pira-kaṇṇāḷam,* பெ.(n.) கீழ் உடம்பினின்று நெஞ்சாங் குலைக்குக் கொண்டு போகும் குருதிக்குழாய்;

a vein formed by the junction of the two common iliac veins. It empties into the right auricle of the heart, *Inferior Venacava.*

அதோமாயை *adō-māyai,* பெ.(n.) அசுத்த மாயை; inferior illusion, material maya.

[அதோ + மாயை.]

[Skt. adhas> த. அதோ.]

மள்→மய்→மாய்→மாயை.

அதோமார்க்கம் *adō-mārkkam,* பெ.(n.) 1. கீழ்நோக்கிய வழி; (in pathology) downward descending motion, as in hemorrhage, labour, etc. 2. கீழ் நெறியா (மார்க்கமா)கிய சடங்கு; *"தாழ்ந்தநெறி"* (சி.சி.251, சிவாக்.) (In religion) the last and inferior stage in meditation or religious worship. 3. நாயுருவி; a plant Indian burr, *Achyranthes aspera.*

த.வ. தாழ்நெறி.

[Skt. adhas+ mārga >த. அதோமார்க்கம்.]

அதோமுகக்கட்டி *adō-muga-k-katti,* பெ.(n.) வயிறு அல்லது இடுப்பு முதலிய கீழ்ப்பாகங்களிற் பெரிதாயும், கருப்பாயும், எழும்பி மிக்க வலியை யுண்டாக்கி, நிமிர வொட்டாமற் செய்வதும் பிசுபிசுப்பான நீர் வடிவதுமான ஒரு வகைக்கட்டி; a large blue-coloured abscess appearing on the abdomen or on the back or other parts of the lumber region and rendering the patient unable to stand or sit erect, is marked by a deep - seated pain and slimy discharge, *Lumbar or psosas abscess.*

த.வ. சுரக்கட்டி.

[அதோ + முகம் + கட்டி.]

[Skt. adhas>த.அதோ.]

அதோமுகசிரம் *adōmuga-śiram,* பெ.(n.) **அதோ முகம், 2** பார்க்க (பரத. பாவ. 76.); see *adō-mugam*[2].

[அதோ + முகம் + சிரம்.]

[Skt.adhas>த.அதோ. Skt. śiras> த.சிரம்.]

அதோமுகவாதம் *adōmuga-vādam,* பெ.(n.) உடம்பினில் கீழ் முகமாக நோக்கும் காற்று (வாதம்); a disease resulting in the descent of *vāyu* (air).

[அதோ + முகம் + வாதம்.]

[Skt. adhas>த.அதோ.Skt. vāta>த.வாதம்.]

அதோமுகி *adō-mugi,* பெ.(n.) கவிழ் பூந்தும்பை வகை (வின்); a low annual plant flourishing in dry localities of Trichodesma.

[அதோ + முகி.]

[Skt. adhō > த. அதோ. முகம்→முகி.]

அதோமுகியான் *adōmugiyān,* பெ.(n.) ஈற்றா; a cow in calf.

அதோமுரரத்தபித்தம் *adōmura-ratta-pittam,* பெ.(n.) உடம்பின் கீழ்ப் பகுதியில் சிறுநீர், மலம், மயிர் ஆகியவற்றின் துளைகள் வழியாக அரத்தப் போக்கை யுண்டாக்கும் ஒரு வகை நோய்; hemorrhage or discharge of blood through the natural openings in the lowest part of the body such as, the vagina, the urinary passage, the anus and the hair follicles.

த.வ. குருதிக்கொப்புளம்.

அதோயந்திரம் *adōyandiram,* பெ.(n.) கீழ்ப் பாகத்திலுள்ள உறுப்பமைவு; the lower part of an apparatus.

[Skt. adhas+yantra>த. அதோயந்திரம்.]

அதோரத்தபித்தம் *adōratta-pittam,* பெ.(n.) எரு(மல)வாய், பெண் பிறப்புறுப்புத்துளை அல்லது சிறுநீர்ப்பை இவற்றினின்று வெளிவரும் குருதியொழுக்கு; a discharge blood from the anus, bladder or the vagina.

[அதோ + ரத்த + பித்தம்.]

[Skt. adhas+rakta>த. அதோரத்தம்.]

அதோலம்பம்[1] *adōlambam,* பெ.(n.) உறக்கம்; sleep.

[Skt. adhas+lamba > த. அதோலம்பம்.]

அதோலம்பம்[2] *adōlambam,* பெ.(n.) செங்குத்தான நிலை (வின்.); perpendicularity.

[Skt. adhas+lamba > த. அதோலம்பம்.]

அதோலோகம் *adō-lōgam,* பெ.(n.) கீழுலகம்; lower world.

[அதோ + லோகம்.]

[Skt. adhas>த. அதோ.]

த.உலகம் >Skt. lōka >த.லோகம்.

அதோவசம் *adōvašam,* பெ.(n.) கருப்பை; the vulva, *Pandendum muliebre.*

அதோவதனம் *adō-vadanam,* பெ.(n.) **அதோமுகம்** பார்க்க; see *adō-mugam.*

[Skt. adhas+vadana>த. அதோவதனம்.]

அதோவாயு *adō-vāyu,* பெ.(n.) 1. பரியன்வளி; vital air-agent for expelling the contents of the stomach. 2. கீழ் நோக்கு(ம்) வளி (வாயு); the wind passing downwards.

[Skt. adhas+vāyu>த. அதோவாயு.]

அதோனியாமிகாசத்தி *adōni-yāmigā-šatti,* பெ.(n.) ஆன்மாக்களுக்குங் கீழாகவுள்ள இன்ப நுகர்ச்சியை விளைவிக்குமாணவ மலத்தின் ஆற்றல்; the power of āṇava (one of the 3 evil passions of the soul) driving one to enjoy the transient pleasures of this world which are considered low and inferior in the light of spiritual philosophy.

த.வ. கீழவா.

அந் *an,* பெ.(n.) அன் எதிர்மறை முன்னொட்டு; a prefix having the force of a negative meaning.

அந்தக்கண் *anda-k-kaṇ,* பெ.(n.) குழிவிழுந்த கண்; sunken eyes.

[அந்தம் + கண்.]

[Skt. anta >த. அந்தம்.]

அந்தக்கணம் *anda-k-kaṇam,* பெ.(n.) குழந்தைகளுக்கு மூளையில் கனல் ஏறி அதனால் உடல் வெதும்பி நாவுலர்ந்து, முகம் மஞ்சள் நிறமடைந்து காணுமொரு வகைக் கணைநோய்; a disease in children arising from the affection of the brain. It is marked by emaciation, dryness of the tongue, yellow face and other symptoms characteristic of *Tabea mesenterica.*

அந்தக்கரணசாட்சி *anda-k-karaṇa-šāṭci,* பெ.(n.) மனச்சான்று (சாட்சி) (வின்.); conscience.

[அந்த(ம்)+கரணம் + சாட்சி.]

[Skt. antaḥ> த. அந்த. Skt. šākṣin>த. சாட்சி.]

அந்தக்கரணம் *anda-k-karaṇam,* பெ.(n.) உட்கருவி (சி.போ.சிற். 4, 1); inner seat of thought, feeling and volition, consisting of four aspects. *மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.*

[அந்தம் + கரணம்.]

[Skt. antaḥ>த. அந்த. கரு → கரணம்.]

அந்தக்காரி *anda-k-kāri,* பெ.(n.) அழகி (வின்.); beautiful woman.

[அந்தம் + காரி.]

[Skt. anta> த. அந்த.]

அந்தக்கிருமி *anda-k-kirumi,* பெ.(n.) உடம்பில் நுண்ணுயிரிகளால் ஏற்படும் ஒரு வகை நோய்; a disease caused by worms in the body.

[Skt. anta+kṛmi> த. அந்தக்கிருமி.]

அந்தக்கெடு-த்தல் *andaṅ-keḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) உருக்குலைத்தல்; to injure the beauty of a person or a thing to deface or disfigure.

[அந்தம் + கெடு-.]

[Skt. anta> த. அந்தம். கள்→கடு→கெடு-.]

அந்தக்கேணி *anda-k-kēṇi,* பெ.(n.) மறைகிணறு; hidden well, covered well. *"அந்தக் கேணியு மெந்திரக் கிணறும்" (பெருங். உஞ்சைக். 33, 3).*

[அந்தம் + கேணி.]

[Skt. anta> த. அந்த. குள்→குணி→கேணி.]

அந்தகக்கல் *andaga-k-kal,* பெ.(n.) ஒரு தமிழ் மருந்துச் சேர்க்கை சரக்கு; one of the one hundred and twenty kinds of natural drugs and other substances described in the Tamil medical vocabulary.

அந்தகச்சாரம் *andaga-c-cāram,* பெ.(n.) சவட்டுப்பு; salt produced from earth impregnated with soda; salt extracted from fuller's earth (artificially).

[அந்தம் + சாரம்.]

[Skt. antaka>அந்தகம். காரம் →சாரம்.]

அந்தகசயன் *andagašayan,* பெ.(n.) சிவபெருமான் (வின்.); *Śivan.*

[Skt. antaka-jaya > த. அந்தகசயன்.]

அந்தகசன்னி *andaga-šanni,* பெ.(n.) 1. மூளைக்கு அதிர்ச்சியை யுண்டாக்கிக் கண்ணைக் குருடாக்கும் ஒரு வகை இசிவு; an apoplexy affecting the cerebral system and marked by loss of eyesight. 2.**அந்தக சன்னி பாதசுரம்** பார்க்க; see andaga-*šanni-pāda-šuram.* 3. நஞ்சினால் ஏற்படும் இசிவு; delirium due to arsenical poisoning.

[Skt. andhaka+san-ni > த. அந்தகசன்னி.]

அந்தகசன்னிபாதசுரம் *andaga-šanni-pāda-šuram,* பெ.(n.) நடுக்கமாய்க் காய்ச்சல் கண்டு, விக்கல், நீர்வேட்கை, சோர்வு, இரைப்பு, உப்பசம் முதலிய குணங்களையும் மற்றும் தலை நடுக்கம், மறதி, இசிவு முதலிய மூளையின் கோளாறுகளையும், இறப்பையு முண்டாக்குமொரு காய்ச்சல் நோய்; a fever characterised by high temperature hiccough, thirst, languor, hard breathing, swelling, etc, coupled with the shaking of the head, forgetfulness, confusion of mind, delirium and other cerebral manifestations. It is sometimes extremely fatal, *Typhus fever.*

[அந்தகம் + சன்னி+பாதம் + சுரம்.]

[Skt. andhaka+san-ni> த.அந்தகசன்னி.]

பதி→பதம். சுள்→சுர்→சுரம்.

அந்தகசன்னிபாதம் *andagašannipādam,* பெ.(n.) இசிவுநோய் (சன்னிபாத)வகை (சீவரட்.); one of 13 kinds of *šanni,* q.v.

[அந்தகம் + சன்னி + பாதம்.]

[Skt. andhaka+san-ni > த.அந்தகசன்னி.]

பதி→பாதம்.

அந்தகம் *andagam,* பெ.(n.) 1. **அந்தகசன்னி** பார்க்க; see *andaga-šanni.* 2. ஒரு வகை செய் (சாலாங்க) நஞ்சு; a kind of arsenic. 3. ஒரு வகை செய் (அவுபல) நஞ்சு; one of the 32 kinds of native arsenic. 4. குருடு; blindness.

[Skt. andhaka > த. அந்தகம்.]

அந்தகரணம் *andakaranam,* பெ.(n.) 1. குருடாக்கல்; causing blindness. 2. கண்ணைக் குருடாக்கும் நோய்; an ulcer causing loss of eye-sight.

[Skt. andhaka+vrana > த. அந்தகரணம்.]

அந்தகரூபி *andaga-rūbi,* பெ.(n.) 1. எலி; rat. 2. குருடன்; a blind person.

[Skt. andhaka+rūpin > த. அந்தகரூபி.]

அந்தகலை *andakalai,* பெ.(n.) நிலவின் (சந்திர) கலை; the vital air passing through the left nostril.

[அந்த + கலை.]

[Skt.anta>த.அந்த. குல்→கல்→கலை (பிரிவு).)]

அந்தகன்[1] *andagan,* பெ.(n.) 1. அழிப்போன்; destroyer. *"இராவணாந்தகனை" (திவ். பெரியதி. 2, 3, 7).* 2. கூற்றுவன் (திவா.); Yama, as causing death. 3. மரஞ் செடிகளில் ஒட்டி வளரும் பூடுவகை (மலை.); species of loranthus. 4. வழலை (சவர்க்காரம்) (மூ.அ.); soap.

[Skt. antaka > த. அந்தகன்.]

அந்தகன்[2] *andagan,* பெ.(n.) 1. குருடன் (தேவா. 859. 4); blind man. 2. ஓரசுரன் (திருவிளை. அருச். 16); name of an asura. 3. ஓர் அரசன் (பாகவத. 9, எதுமரபு. 29); name of a descendant of Yadu, and ancestor of *Krsna.*

[Skt. andhaka > த. அந்தகன்.]

அந்தகன்[3] *andagan,* பெ.(n.) 1. வெள்ளாடு; goat. 2. காய்ச்சு வழலை; a kind of salt obtained by repeated boiling. 3. காசிச்சாரம்; a mineral salt. 4. சீர்பந்த நஞ்சு; a kind of native arsenic. 5. காசு நஞ்சு; one of the 32 kinds of prepared arsenic. 6. திராய்; a mineral one consisting of copper and spelter.

அந்தகன்கணம் *andagan-kanam,* பெ.(n.) குழந்தை நோய் வகை (பாலவா. 511); a disease of children.

[அந்தகன் + கணம்.]

[Skt.antaka>த.அந்தகன்.]

குண்→கண்→கண→கணம்.

அந்தகன்பீடம் *andagan-pidam,* பெ.(n.) தராமலை (R); mountain where zinc is found.

[அந்தகன் + பீடம்.]

[Skt.antaka>த.அந்தகன்.]

புள்→பிள்→பீடு →பீடம்.

அந்தகசநியாயம் *anta-kasa-niyāyam,* பெ.(n.) ஒன்றை முற்ற ஆராயாது அதனொரு பாகத்தை மட்டும் கண்டு உறுதி செய்யும் நெறி; maxim of the blind men and the elephant, used to denote arriving at a wrong one-sided conclusion, as the blind men who, each feeling a different part of the elephant, formed erroneous opinions as to what the elephant was like.

த.வ. குருடன் கண்ட யானைநெறி.

[Skt. andha+gaja+nyāya>த.அந்தகசநியாயம்]

த. கயம் > Skt. gaja.

andagāśura-haranar, பெ.(n.) சிவ வேறுபாடு (பேதம்) இருபத்தைந்தனுளொன்று (காஞ்சிப்பு. சிவபுண். 24, தலைக்குறிப்பு); (śaivam) a manifestation of *Śivan.*

[Skt. andhakāsura+harana.]

அந்தகாரம்[1] *andakāram,* பெ.(n.) 1. இருள் (பிங்.); darkness, gloom. 2. அறியாமை, மனவிருள்; nescience, mental darkness. *"மும்மலம் போர்த்த வந்தகாரப் படலவிருள்" (மச்சபு. பாயி. 16).*

[Skt. andha-kāra > த. அந்தகாரம்.]

அந்தகாரம்[2] *andakāram,* பெ.(n.) நெல்லி; Indian gooseberry, *Phyllanthus emblica.*

[Skt. andha-kāra > த. அந்தகாரம்.]

அந்தகாரி *andakāri,* பெ.(n.) சிவன் (பிங்.); *Śivan,* as the foe of Andhakāsura or Yama.

[Skt. antaka+ari > த. அந்தகாரி.]

அந்தகாலம் *anda-kālam,* பெ.(n.) இறப்புறுங் காலம்; time of death. *"அந்தகால மடைவதன் முன்னம்" (திவ். பெரியாழ். 4, 5, 3).*

த.வ. இறுதிக்காலம்.

[அந்த(ம்) + காலம்.]

[Skt. anta>த. அந்த.]

அந்தகை *anda-gai,* பெ.(n.) அடிவயிற்றினில் வலப்பக்கமாகப் பெருங்குடலின் தொடக்கத்தி லுள்ள பை; the large blind pouch in which the largo intestine beging; a branch of an intestine with one end closed caecum.

அந்தகோலாங்கூலநியாயம் *andakō-lāngūla-niyāyam,* பெ.(n.) பிறிதை நம்பித் துன்பமடைதலைக் காட்டும் நெறி; maxim of the blind man and the cow's tail, used to denote being misled, as the blind man who came to grief through holding on to a cow's tail, under a misapprehension, trusting the advice of a stranger.

த.வ. ஆன்வால் அவசல நெறி.

[Skt. andha + gō + lāṅgūla + nyāya > த. அந்தகோலாங்கூலநியாயம்]

அந்தகூபம் *anda-kūbam*, பெ.(n.) **அந்தக்கேணி** (P.N.) பார்க்க; see *anda-k-kēṇi*,

[அந்த + கூபம்.]

[Skt. anta>த. அந்த. கூவல்->கூவம்-> கூபம்.]

அந்தச்சித்திரம் *anda-c-cittiram*, பெ.(n.) உட்கலகம் (சிவசமவா. 38); internal discord.

[Skt. antaš-chidra > த. அந்தச்சித்திரம்.]

அந்தச்சுண்ணம் *anda-c-cuṇṇam*, பெ.(n.) வழலைச் சுண்ணம், முப்புச் சுண்ணம்; (in alchemy) the highest essence prepared from a mixture of three salts in a small quantity. It is called 'The king of metals'.

[அந்த(ம்) + சுண்ணம்.]

[Skt. anta> த. அந்தம். சுள் -> சுண் -> சுண்ணம்.]

அந்தச்சோபம் *anda-c-cōbam*, பெ.(n.) புளிப்பு; sourness.

அந்தசடம் *andašaḍam*, பெ.(n.) 1. வயிறு; stomach. 2. அடிவயிறு; abdomen.

[Skt. anta+jaḍa> த. அந்தசடம்.]

அந்தசெயநீர் *anda-šeyanīr*, பெ.(n.) வழலையுப்பு செயநீர்; (in alchemy) a liquid used for preparing (muppu) known as the universal solvent with a peculiar property of transmuting metal into gold.

அந்தத்து[1] *andattu*, பெ.(n.) நிலைமை; rank, condition, standing. *"எத்தனையந்தத் தென்றியம்புவேன்" (தெய்வச். விறலி. 221).*

[Skt. antastu > த. அந்தத்து.]

அந்தத்து[2] *andattu*, பெ.(n.) 1. மேல்மாடி; storey of a building. 2. ஒழுங்கு; order, reqularity. *"இவற்றை அந்தஸ்தோடுவை" (R).*

[Skt. antar + stha >த. அந்தத்து.]

அந்தத்துவம் *andattuvam*, பெ.(n.) குருடு; blindness.

[Skt. andhatva > த. அந்தத்துவம்.]

அந்ததமசம் *anda-tamašam*, பெ.(n.) காரிருள் (சிந்தா. நி. 164); pitch darkness.

[Skt. andha-tamas > த. அந்ததமசம்.]

அந்ததரம் *andataram*, பெ.(n.) சிவனியக் கொண்முடிபு (சைவ சித்தாந்தம்) (சி.போ.12, 4, பக். 242); Šaiva siddhānda philosophy.

[Skt. anta-tara > த. அந்ததரம்.]

அந்ததரமிச்ரம் *andataramicram*, பெ.(n.) நிரயவகை (சி.போ.பா.2,3,பக்.204); a hell.

[Skt. andha-tara+mišra>த.அந்ததரமிச்ரம்.]

அந்தந்தலை *andantalai*, பெ.(n.) முடிவும் முதலும் (வின்.); end and beginning.

த.வ. அந்தாதி.

[அந்த(ம்) + தலை.]

[Skt. anta> த. அந்தம்.]

அந்தப்பங்குநியாயம் *anda-p-paṅgu-niyāyam*, பெ.(n.) குருடன் தோள்மேல் முடவன் அமர்ந்து வழிப்படுத்துவது போன்ற நெறி; maxim of the lame man and the blind man, used to illustrate mutual dependence for mutual advantage, as the lame man, mounted on the shoulders of the blind man, is able to direct him in the right way.

அந்தப்பர்வகம் *anda-p-parvagam*, பெ.(n.) அகக்கணு (வின்.); (Anat.) inner tuberosity.

[Skt. antar+parvan>த. அந்தப்பர்வகம்.]

அந்தப்பரம்பரை *anda-p-parambarai*, பெ.(n.) குருடரைக் குருடர் பின்பற்றும் நெறி; maxim of the blind leading the blind.

[Skt.andha+parampara>த.அந்தப்பரம்பரை.]

அந்தப்புரம் *anda-p-puram*, பெ.(n.) 1. அரசமாதேவியினிருக்கை (திவா.); queen's apartments in a royal palace. 2.மகளிருறைவிடம்; zenana.

த.வ. உவளகம்.

[அந்த(ம்) + புரம்]

[Skt. antar> த. அந்த.]

புர் → புரை = உயர்வு. புர் → புரம் = உயர்ந்தமனை.

அந்தப்பூதனா *anda-p-pūdanā,* பெ.(n.) கோள்களின் ஏவலினால் குழந்தைகளுக்கு நோயுண்டாக்குமொரு பெண் பேய்; a female demon bringing about disease in children under the influence of evil planets.

[Skt. anta> த. அந்த.]

பூது → பூதம் → பூதனா = பருத்த பெண் பூதம்.

அந்தபூதனாகிரகதோடம் *andapūdanā-kiraga-dōdam,* பெ.(n.) குழந்தைகளுக்குக் காய்ச்சலுண்டாக்கி அதனால் பாலுண்ணாது, வாயால்வயிற்றாலெடுத்தல், கழிச்சல், இருமல் அல்லது விக்கல், வீக்கம், குப்புறக் கிடத்தல் ஆகிய இக்குணங்களைக் காட்டுமொரு வகைக் கோட்குற்றம்; a morbific diathesis in children characterised by fever, aversion to milk, vomiting dysentery or diarrhoea, cough or hicough, swelling and an inclination lie always on the face.

த.வ. அகட்டுத்துகடம்.

அந்தப்போதிகை *anda-p-pōdigai,* பெ.(n.) யானையின் பின்னங்காற் சங்கிலி; chain fastening the hind-leg of an elephant.

[அந்தம் + போதிகை.]

[Skt. anda>த. அந்த.]



அந்தம்[1] *andam,* பெ.(n.) 1. ஈறு (நாநார்த்த.); (gram.) suffix. 2. உறுதி (நாநார்த்த.); certainly. 3. அழிவு (நாநார்த்த.); destruction. 4. உறுப்பு (நாநார்த்த.); limb. 5. அணியம் (நாநார்த்த.); nearness. 6. இயல்பு (நாநார்த்த.); nature.

[Skt. anta>த. அந்தம்.]

அந்தம்[2] *andam,* வி.அ.(adv.) வரைக்கும்; as far as, up to, till. *"சேவப்ப நாயக்கர் முதல் விசயராகவ நாயக்கரந்தம்" (தஞ். சரசு. i, 319).*

[Skt. anta> த. அந்தம்.]

அந்தம்[3] *andam,* பெ.(n.) கமுக்கம்; secrecy. *"அந்தக் கோட்டி" (பெருங். உஞ்சைக். 54, 91).*

[Skt. antas> த. அந்தம்.]

அந்தம்[4] *andam,* பெ.(n.) பச்சைக் கருப்பூரம் (வை.மூ.); refined camphor.

[Skt. anta> த. அந்தம்.]

அந்தம்[5] *andam,* பெ.(n.) இருட்டு (நாநார்த்த.); darkness.

[Skt. andha>த. அந்தம்.]

அந்தம்[6] *andam,* பெ.(n.) 1. முடிவு; termination, end, close. *"அந்தமில் சிறப்பின்" (தொல். பொ. 243).* 2. இறப்பு (திவ். பெரியாழ். 4,5,3); death.

[Skt. anta > த. அந்தம்.]

அந்தம்[7] *andam,* பெ.(n.) 1. உறுப்பு; an organ of the body. 2. எலும்பின் கடை; extermity of bone. 3. நஞ்சு; poison. 4. நீர்; water. 5. சோறு; food, boiled rice. 6. பிண்டம்; foetus. 7. தலைச்சன் குழந்தை மண்டையோட்டி லிருந்து செய்யப்படுமொரு வகை மண்டையோட்டு (அண்ட)ச் சுண்ணம்; a calcined compound prepared from the skull of the first-born child.

[Skt. anta > த. அந்தம்.]

அந்தமந்தம் *anda-mandam,* பெ.(n.) 1. உறுப்புக்கேடு; the malformation of an organ in the body-deformity. 2. செரியாமை; indigestion.

[அந்த(ம்) + மந்தம்.]

[**Skt.** *anta*> த. அந்த(ம்).]

அந்தமுள் *anda-muḷ,* பெ.(n.) குறிஞ்சா; a plant, common Indian Ipecacuanha, *Tylophora asthmatica.*

அந்தமூசிகம் *anda-mūšigam,* பெ.(n.) ஒரு வகைப் புல்; a kind of grass, *Lepeocericis serrata.*

[**Skt.** *anta+mūcika* > த. அந்தமூசிகம்.]

அந்தமூசை *anda-mūšai,* பெ.(n.) ஒரு பக்கம் துளைவிட்டு மூடிய ஒரு சிறிய குடுவை (மூசை); a small covered crucible with a hole in the side.

[அந்தம் + மூசை.]

[**Skt.** *anta*> த. அந்த.]

அந்தயெரு *anda-y-eru,* பெ.(n.) மருத்துவ உப்பு; a kind of salt prepared out of 3 kinds of salts called 'muppu' by a secret process known only to Siddhars, is used for curing all kinds of diseases and is primary used in Tamiḻ medicine.

அந்தர் *andar,* பெ.(n.) 112 எடை (இ.வ.); hundred weight = 112 lbs.

[**E.** *hundred* > த. அந்தர்.]

அந்தர்க்கதம் *andar-k-kadam,* பெ.(n.) உள்ளடங்கியது (சி.சி.1,21,சிவாக்.); that which is included, suppressed.

[**Skt.** *antargata* > த. அந்தர்க்கதம்.]

அந்தர்கதசுரம் *andarkada-šuram,* பெ.(n.) உட்காய்ச்சல்; internal fever.

[அந்தர்கதம்+சுரம்.]

[**Skt.** *antargata*> த. அந்தர்கத(ம்).சுல்→சுர் →சுரம்.]

அந்தர்குதவளையம் *andarkuda-vaḷaiyam,* பெ.(n.) எரு (மல) வாயிற்குள்ளிருக்கும் வளையம்; (in Anatomy) the inner ring of the spineter muscle in the anus.

[அந்தர்+குதம்+வளையம்.]

[**Skt.** *antar*>த. அந்தர்.]

குல்→குத்து→குத்தம்→குதம். வள்→வளை→ வளையம்.

அந்தர்சடரம் *andar-šaḍaram,* பெ.(n.) இரைக்குடல்; the stomach.

[அந்தர் + சடரம்.]

[**Skt.** *antar*> த. அந்தர்.]

சடம்→சடர்→சடரம்.

அந்தர்சரீரம் *andar-šarīram,* பெ.(n.) 1. ஆவிவுடல்; body interior, inner body, astral body. 2. உள்ளுறுப்பு (உள்ளிந்திரியம்); internal organ.

த.வ. ஆவிமேனி.

[**Skt.** *antar+šarīra*> த. அந்தர்சரீரம்.]

அந்தர்சீவி *andar-šīvi,* பெ.(n.) ஓர் உயிர் பிறிதோருயிரியைப் பற்றுகை; an animal - parasite living within the body of another animal, *Entozoon.*

த.வ. உயிரேற்றம்.

[**Skt.** *antar+jīvin*>த. அந்தர்சீவி.]

அந்தர்த்தகனம் *andar-t-tagaṉam,* பெ.(n.) மது நீர் வடிகை; distillation of spirit of liquor.

[**Skt.** *antar*>த. அந்தர்.]

தக → தகன் + அம்–தகனம்.

அந்தர்த்தானம்¹ *andarttāṉam,* பெ.(n.) மறைகை; disappearance, vanishing. *"அந்தர்த்தானமாய் சேர்ந்து போவார்" (மச்சபு. அசுர. 31).*

[**Skt.** *antardhāna*>த. அந்தர்த்தானம்.]

அந்தர்த்தானம்² *andar-t-tāṉam,* பெ.(n.) 1. மறைவிடம்; a concealed or covered place. 2. உள்ளிடம்; private part. 3. பெண் குறி; the genital of a female.

[**Skt.** *antar+stahāna*>த. அந்தர்த்தானம்.]

அந்தர்தர்பார் *andar-darbār,* பெ.(n.) முறைதவறி நடக்கும் அலுவலகம் (இ.வ.);

public office notoriously ill-conducted, maladministration.

[Skt. antara+U.darbār> த.அந்தர்தர்பார்.]

அந்தர்திருட்டி *andar-tirutti,* பெ.(n.) உண்முக நோக்கு; looking into one's own soul, Introspection.

த. உள்நோக்கு.

[Skt. antar+drsti → drtti> த. அந்தர்திருட்டி.]

அந்தர்ப்பவி-த்தல் *andar-p-pavi-,* 4 செ.கு.வி. (v.i.) உள்ளடங்கியிருத்தல்; to be contained, inherent. *"ஆன்மா பதிபதார்த்தத்தில் அந்தர்ப்பவிக்குமெனின்" (சிவசம. 39).*

த. உள்ளடங்குதல்.

[Skt. antar-bhāva > த. அந்தர்ப்பவி-.]

அந்தர்ப்பாகம் *andar-p-pāgam,* பெ.(n.) 1. உட்பாகம்; internal portion. 2. மறைவிடம்; private part. i.e.the genital portion.

[அந்தர் + பாகம்.]

[Skt. antar> த. அந்தர். பகு → பாகம்.]

அந்தர்ப்பூதம் *andarppūdam,* பெ.(n.) உள்ளடங்கினது; that which is included.

[அந்தர்+பூதம்.]

[Skt. antar-bhuta > த. அந்தர். பூது → பூதம்.]

அந்தர்மலக்கிருமி *andar-mala-k-kirumi,* பெ.(n.) உடம்பினுள்ளுண்டாகும் கோழை, குருதி, கழிமாசு (மலம்), சிறுநீர் ஆகியவற்றில் பிறக்கும் நாக்குப் பூச்சி; micro-organism found in the phlegm, blood, faces, urine etc.

[அந்தர் + மலம் + கிருமி.]

[Skt.antar>த. அந்தர்.Skt.krmi> த.கிருமி.]

அந்தர்மிருதம் *andar-mirudam,* பெ.(n.) பிண்டப் பிறப்பு; dead at the birth, still born.

[Skt. antar+mrta>த. அந்தர்மிருதம்.]

அந்தர்முகம் *andar-mugam,* பெ.(n.) 1. உண்ணோக்கு; looking inward. 2. ஒக நிலையிலொன்று; a posture in the yoga practice.

[அந்தர் + முகம்.]

[Skt. antar>த. அந்தர்.]

அந்தர்முகி *andar-mugi,* பெ.(n.) அடங்கிய மனமுடையவன், ஓர் ஓகி; one who has controlled his mind, and said of a yogi. 2. உண்ணோக்கமுடையவன்; one who is always engaged in looking inwards, a state in yoga.

த.வ. உள்நோக்கி.

[Skt. antar+mukhi>த. அந்தர்முகி.]

த. முகம்> Skt. mukhi.

அந்தர்முகியோனி *andar-mugi-yōni,* பெ.(n.) பெண்கள் வயிறு முட்ட உண்டபிறகு வன்புணர்ச்சி செய்வதனால் வளி மிகுத்து, உள்நோக்கிய முகமாகவெழும்பி குறியை விரிக்க முடியாதபடி வலியையும், பூவொதுங்குவதால், அங்குள்ள எலும்பு, நாடி, நரம்பு முதலியவற்றிற்கு வலியையு முண்டாக்கி அடிவயிற்றில் சூலையையு முண்டாக்குமொரு நோய்; a vaginal disease characterised by pain in every part of the genital, bone, muscles, nerves etc., inability to stretch the part and darting pain in the abdomen and in the lower region just above the pubis, is due to the deranged condition of vayu arising from violent or rude intercourse when the stomach is full after meals.

த.வ. உள்ளெரிச்சல்நோய்.

[Skt.antar+mukhi+yōni>த.அந்தர்முகியோனி]

த. முகம்> Skt. mukhi.

அந்தர்யாகம் *andar-yāgam,* பெ.(n.) **அந்தரியாகப்பூசை** பார்க்க; see *andariyāga-p-pūšai.*

[Skt. antar-yāga>த. அந்தர்யாகம்.]

அந்தர்யாமித்துவம் *andar-yāmittuvam,* பெ.(n.) திருமால் நிலையுளொன்று (அஷ்டாதச. தத்வத். 3, 42); manifestation of *Viṣṇu* as being immanent in the universe and governing it, one of five *tirumāl-nilai.*

[Skt. antar-yāmitvam>த. அந்தர்யாமித்துவம்.]

அந்தர்யோகம் *andar-yōgam,* பெ.(n.) சுழுத்தி நிலை; a state of deep thought or abstraction, reverie.

[Skt. antar +yōga>த. அந்தர்யோகம்.]

அந்தர்யோனி *andar-yōṉi,* பெ.(n.) பெண் குறியினுட்புறம்; the internal portion of the genital of a female.

த.வ. உள்நோனி.

[Skt. antar+yōni> த. அந்தர்யோனி.]

அந்தர்வதி *andar-vadi,* பெ.(n.) சூலுற்றவள் (கருப்பிணி); a pregnant woman.

த.வ. சூலி.

அந்தர்வமி *andar-vami,* பெ.(n.) 1. வளி (வாயு); flatulence. 2. செரியாமை; indigestion.

அந்தர்வாகினி *andar-vāgiṉi,* பெ.(n.) கீழாறு; stream within a stream.

அந்தர்வித்திரதி *andar-vittiradi,* பெ.(n.) பெண்களுக்குண்டாகும் மாதவிடாய் தடைபட்டு, அதனால் குருதி கோளாறடைந்து, கருப்பையிற் திரண்டு கறுத்த கொப்புளங்களாற் சூழப்பட்டு, அழற்சி, வலி, காய்ச்சல் ஆகியவற்றை உண்டாக்குமொரு தீட்டு (சூதக) நோய்; a menstrual disease in women arising from the altered condition of blood in the womb due to the supression of menstrual flow, is marked by fever, dark ulcers in the womb, inflammation and pain in the vagina, a kind of Amenorrhea.

[Skt. antar+vidradi>த. அந்தர்வித்திரதி.]

அந்தர்வேககரம் *andar-vēga-śuram,* பெ.(n.) எலும்பிற்குள்ளிருக்கும் கொழுப்புப் பொருளை (மச்ச) தாதுவைப் பற்றி ஏற்படும் ஒரு வகைக் காய்ச்சல்; a fever due to the affection of the marrow in the bone.

அந்தர்வேதி *andar-vēdi,* பெ.(n.) 1. வேள்விச் சாலையினுள்ளிடம் (காஞ்சிப்பு. அந்தரு. 22); inside of the sacrificial ground. 2. கங்கை யமுனைகட்கு நடுவிலுள்ள பகுதி; district between the Gaṅgā and Yamunā rivers. *"அவர்களை யந்தர்வேதிசென் றுடன்கொணர்வா யென்று" (கோயிற்பு. இரணிய. 107).*

[Skt. antar+vēdi> த. அந்தர்வேதி.]

அந்தரக்கோன் *andara-k-kōṉ,* பெ.(n.) புல்லூரி; a parasitic plant.

அந்தரகணம் *andara-kaṇam,* பெ.(n.) செய்யுட்கணத்தொன்று (திவா.); metrical foot to two nirai and one nēr (-), as karuviḷaṅgāy, considered inauspicious at the commencement of a poem.

[அந்தர(ம்) + கணம்.]

[Skt. antara>த. அந்தரம். கள்→ களம்→ கணம்.]

அந்தரகாந்தாரம் *andara-kāndāram,* பெ.(n.) பதினாறுவகைப் பண்களில் மூன்றாவது பண்; (Mus.) highest variety of the third note of the gamut, one of *śoḍaśa-śuram.*

[அந்தர(ம்) + காந்தாரம்.]

[Skt. antāra>த. அந்தரம்.]

அந்தரகாமி *andara-kāmi,* பெ.(n.) வான் வழியாய்ச் செல்வது; that which passes through the air.

த.வ. வானோடி.

[Skt. antara+kāmin>த. அந்தரகாமி.]

அந்தரகும்பகம் *andara-kumbagam,* பெ.(n.) மூச்சுக் காற்றைக் குடலினுள்ளேயே அடக்குதல்; the act of retaining the vital air in the intestines by suppression of breath.

த.வ. மூச்சடக்கம்.

[அந்தர + கும்பகம்.]

[Skt. antara>த. அந்தர(ம்).]

கும்பம் > கும்பகம் > **Skt.** *kumbha.*

அந்தரகெந்தன் *andara-kendaṉ,* பெ.(n.) இதளிய நஞ்சு (சூத பாஷாணம்); a kind of mercurial poison.

அந்தரங்கக்கரப்பான் *andaraṅga-k-karappāṉ,* பெ.(n.) ஆண்குறி (கோச) மலரின் தோலிற்கடியில் வட்டமாய்ச் சிவந்து எரிச்சலோடு காணும் தழும்பு; an intense itching on the innerside of the foreskin of the penis marked by crops of papules with inflammation and burning sensation, pruritus.

[அந்தரங்கம்+கரப்பான்.]

[Skt. antar + aṅga> த. அந்தரங்கம்.]

அந்தரங்கச்சொறி *andaraṅga-c-coṟi,* பெ.(n.) மேகச் சூட்டினால் ஆண், பெண் குறியிடங்களிற் பொறுக்க முடியாத நமைச்சலோடு சிறிய வியர்க்குருக்கள் போற்காணும் ஒரு வகைச் சொறிசிரங்கு; a chronic skin disease marked by the development of small pale papules and intense itching of the genitals in both the male and the female, is due to the venereal heat, *Prurigo.*

த.வ. பாலுறுப்புச்சொறி.

[அந்தரங்கம் + சொறி.]

[Skt. antar + aṅga>த. அந்தரங்கம்.]

சுல்→சுர்→சுறு→சொறி.

அந்தரங்கத்தானம் *andaraṅga-t-tāṉam,* பெ.(n.) 1. பெண்குறி; the private part of a female. 2. மறைவான இடம்; a secret place. 3. மனம்; mind.

[Skt. antar + aṅga + sthāna > த. அந்தரங்கத்தானம்.]

அந்தரங்கத்தியானி *andaraṅga-t-tiyāṉi,* பெ.(n.) ஆமை (வை.மு.); tortoise.

[Skt.antaraṅga+dhyānin>த.அந்தரங்கத்தியானி.]



அந்தரங்கபரிகரம் *andaraṅga-parigaram,* பெ.(n.) மந்தண மற்றும் உண்மைச் சுற்றம் (ஈடு. 10, 1, ப்ர. அரும்.); faithful retinue, loyal attendants.

த.வ. அணுக்கச்சுற்றம்.

[Skt. antar + aṅga + pari-hara > த. அந்தரங்கபரிகரம்.]

அந்தரங்கம் *andaraṅgam,* பெ.(n.) 1. மறை பொருள், கமுக்கம் (நல். பாரத. உமாம. 307); privacy, secrecy. 2. உள்ளம்; mind. *"அவனுக்கு அந்தரங்கத்தில் பாசமுண்டு".* 3. உட்கருத்து; inmost thought. 4. நெருங்கிய நட்பு; intimate friendship. *"இருவரும் அந்தரங்க முள்ளவர்கள்" (உ.வ.).*

த.வ. கமுக்கம்.

[Skt. antar+aṅga> த. அந்தரங்கம்.]

அந்தரங்கன் *andaraṅgaṉ,* பெ.(n.) உற்ற நண்பன்; intimate friend.

[Skt. antar+aṅga> த. அந்தரங்கன்.]

அந்தரச்சிந்து *andara-c-cindu,* பெ.(n.) ஒருவகை நஞ்சு (மூ.அ.); a mineral poison.

அந்தரசமி *andaraśami,* பெ.(n.) 1. செரியாமை; indigestion. 2. வளி மிகுதியான் வயிறு உப்புகை; inflation of the bowels due to wind, *Tympanites.*

[Skt. antarasam> த. அந்தரசமி.]

அந்தரசரிதர் *andara-šaridar,* பெ.(n.) வான்வழிச் செல்வோர் (பாரத. உலூக. 18); super human being moving in the air.

[Skt. antara+carita> த. அந்தரசரிதர்.]

அந்தரசாமி *andara-šāmi,* பெ.(n.) வான் வழியில் செல்வதிலேயே விருப்பமுடையோன்; he who has always a mania for passing or travelling in the serial regions.

அந்தரசாரி *andara-šāri,* பெ.(n.) வான் வலம் வருவோன் (மணிமே. 28, 69); superhuman being moving in the air.

த.வ. வான்வலசையன், வானுலவி.

[Skt. antara+šārin > த. அந்தரசாரி.]

அந்தரசைவம் *andara-šaivam,* பெ.(n.) ஒரு சிவனிய வகை (சைவபேதம்); Šaiva sect which holds that Šivan should be contemplated as immanent in the whole universe.

[Skt. antara+šaiva> த. அந்தரசைவம்.]

சிவன்→சிவனியம்.

சிவ > விசும் > **Skt.** *šaiva> த. சைவ.*

அந்தரஞ்சனம் *andar-añjanam,* பெ.(n.) கொடி மாதுளை; lemon citron - citrus (lemoni medica).

அந்தரட்சி *andaratci,* பெ.(n.) உடம்பின் துளை வழியாக விட்டு ஆய்வு செய்யும் கருவி; an instrument for the examination of a body cavity through its natural outlet, *Endoscope.*

அந்தரட்டிக்குருக்கள் *andaratti-k-kurukkal,* பெ.(n.) நீத்தார் நிகழ்வு (கருமாதி) செய்விக்குங் குருக்கள்; priests who help in funeral rites.

[அந்தரட்டி + குருக்கள்.]

[Skt. antya-isti>அந்தரஷ்டி →த. அந்தரட்டி.]

குல் → குரு → குருக்கள்.

அந்தரடி-த்தல் *andar-adi-,* 4 செ.குன்றாவி. (v.t.) தலைகீழாகப் பாய்தல்; to turn a somersault, tumble.

த.வ. குட்டிக் கரணம் போடுதல், குப்புறப் பாய்தல்.

[அந்தர் + அடி-.]

[Skt. antar> த. அந்தர்.]

அடு → அடி.

அந்தரத்தர்பார் *andara-t-darbār,* பெ.(n.) **அந்தர்தர்பார்** பார்க்க; see *andardarbār.*

[Skt. antara + **U.** *darbār> த. அந்தரத்தார்.]*

அந்தரத்தாமரை *andara-t-tāmarai,* பெ.(n.) குழித்தாமரை, குளிர்தாமரை (ஆகாசத் தாமரை) (பதார்த்த. 319); a weed, *Pistia stratiotes.*

[அந்தரம் + தாமரை.]

[Skt. antara>த. அந்தரம்.]

அந்தரத்தில்நில்(ற்)-த(ற)ல் *andarattil-nil-,* 14 செ.கு.வி.(v.i.) ஆதரவற்றிருத்தல் (இ.வ.); to be helpless.

[அந்தரம்+அத்து+இல்+நில்-.]

[Skt. antara>த. அந்தர(ம்).]

அத்து = சாரியை.

அந்தரத்தில்விடு-தல் *andarattil-vidu-,* 18 செ.குன்றாவி.(v.t.) ஏதிலியாக்குதல்; to leave helpless. *"என்னை அந்தரத்தில் விட்டான்" (இ.வ.).*

[அந்தரம்+அத்து+இல்+விடு-.]

[Skt. antara> த. அந்தரம்.]

அந்தரத்தேசரி *andara-t-tēšari,* பெ.(n.) சிறுபசலை; small Indian purslane, *Portulaca qudrifida.*

அந்தரதம் *andaradam,* பெ.(n.) குடற்புழு; a worm in the intestines.

[Skt. antarata> த. அந்தரதம்.]

அந்தரதாகம் *andara-tāgam,* பெ.(n.) 1. இறக்குந் தறுவாயில் ஏற்படும் நீர்வேட்கை; intense thirst in a dying person. 2. மேக வெட்டையின் தொடர்பினால் ஏற்பட்டு மிகுதியான நீர் வேட்கையை யுண்டாக்குமொரு நோய்; intense thirst arising from the parched condition of the tongue, etc. due to urinary disorders as diabetes etc.

[அந்தர(ம்) + தாகம்.]

*[**Skt.** antara > த. அந்தரம்.]*

தவி → தாவம் → தாகம்.

அந்தரதிசை *andara-tišai,* பெ.(n.) கோணத் திசை; intermediate point of the compass.

[அந்தர(ம்) + திசை.]

*[**Skt.** antara> த. அந்தரம்.]*

திக்கு → திகை → திசை.

அந்தரதுந்துபி *andara-dundubi,* பெ.(n.) தெய்வவாச்சியம்; drum of the gods. *"அந்தர துந்துபி முதலா மளவில் பெருகொலி" (பெரியபு. திருஞான. 98).*

*[**Skt.** andara+dundubi > த. அந்தரதுந்துபி]*

அந்தரதுந்துமி *andara-tundumi,* பெ.(n.) தேவமுரசு; the drum of the celestials. *"ஆர்ப்பன பல்லியமோ வந்தரதுந்து மியுமே" (தக்கயாகப். 112).*

*[**Skt.** antara+dundhubi>த. அந்தரம் + துந்துமி.]*

அந்தரநதி *andara-nadi,* பெ.(n.) வான் (ஆகாய) கங்கை (வரத. பாகவத. சுபத். 18); the celestial *Gangā.*

*[**Skt.** antara+nadī > த. அந்தரநதி.]*

அந்தரநாதன் *andara-nādaṉ,* பெ.(n.) இந்திரன் (கந்தபு. தெய்வ. 241); Indraṉ, as the lord to heaven.

*[**Skt.** antara+nātha> த. அந்தரநாதன்.]*

அந்தரப்படு-தல் *andara-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) பெருந்துன்ப முறுதல்; to be in great distress. *"இவள் நோக்காமையிறே அந்தரப்பட்டது" (ஈடு. 7, 1, ப்ர.).*

[அந்தர(ம்) + படு-.]

*[**Skt.** antara> த. அந்தரம்.]*

அந்தரப்பல்லியம் *andara-p-palliyam,* பெ.(n.) **அந்தரதுந்துமி** பார்க்க; see *andaratundumi.* *"அந்தரப்பல்லியங் கறங்க" (திருமுரு. 119).*

[அந்தர(ம்) + பல்லியம்.]

*[**Skt.** antara> த. அந்தரம்.]*

அந்தரப்பிசாசு *andara-p-pišāšu,* பெ.(n.) தகாச்சாவு அடைபவர் பெறும் பேயுருவம்; ghost of one who died through suicide or violence.

[அந்தர(ம்) + பிசாசு.]

*[**Skt.** antara> த. அந்தரம்.]*

பிள் → பியம் → பிசம் → பிசசு → பிசாசு.

அந்தரபட்பம் *andara-paṭpam,* பெ.(n.) பலாசு; tisso flower, *Butea frondosa.*

அந்தரபவனி *andarabavaṉi,* பெ.(n.) வான்வழிப் பயணம் (வின்.); motion through the air.

[அந்தர(ம்) + பவனி.]

*[**Skt.** antara> த. அந்தரம்.]*

அந்தரபுருடன் *andara-puruḍaṉ,* பெ.(n.) ஆன்மா; the soul.

த.வ. ஆதன்.

*[**Skt.** antara+puruṣa>த.அந்தரபுருடன்.]*

அந்தரம் *andaram,* பெ.(n.) 1. வெளி; open space. 2. உட்பகுதி; interior space. *"பந்த ரந்தரம் வேய்ந்து" (பதிற்றுப். 51).* 3. இருள் (பிங்.); darkness. 4. வானம்; sky, firmament. *"அந்தரம் பாரிடமில்லை" (திவ். திருப்பள்ளி.7).* 5. நடு; intermediate space. *"மற்றோ ரந்தர விசும்பில்" (சீவக. 836.).* 6. இடம்; place. *"அந்தரமி தல்லவென" (பாரத. ஒன்பதாம், 22).*

7. இடுப்பு; waist. *"அந்தர மேற்செம்பட் டோடு" (திவ். திருவாய். 7,6,6.).* 8. நடு(வு) நிலை; impartiality. *"அந்தரந் தீர்ந்துலகளிக்கு நீரினால் தந்தையுங் கொடியன்" (கம்பரா. மந்தரை. 60.).* 9. வானுலகம் (பிங்.); heaven. 10. வேறுபாடு; difference. *"அந்தரம் பார்க்கி னன்மை யவர்க்கிலை" (கம்பரா. மாரீச. 75.).* 11. கெடுவிளைவு; contrariety, unsoundness *"விரிகோவண நீத்தார் சொல்லும் அந்தர ஞான மெல்லாம்" (தேவா. 74, 10.).* 12. கோயில். (பிங்.); temple. 13. தீமை; evil. *"என்மனை வாழும் பெண்ணால் வந்த தந்தரம்" (கம்பரா. கைகேசி. 40).* 14. கூட்டம் (பிங்.); crowd.

[Skt. antara > த. அந்தரம்.]

அந்தரம்² *andaram,* பெ.(n.) முடிவு (பிங்.); close. end.

[Skt. antara > த. அந்தரம்.]

அந்தரம்³ *andaram,* பெ.(n.) 1. புறம்பு (நாநார்த்த.); outside, exterior. 2. எல்லை (நாநார்த்த.); limit, boundary. 3. அயலானது (நாநார்த்த); neighbourhood distinction. 4. தனிச்சிறப்பு (நாநார்த்த.); distinction. 5. **அந்தரான்மா** (நாநார்த்த.) பார்க்க; see *andarāṉmā.* 6. மறைவு (நாநார்த்த.); hiding, concealment. 7. துளை (நாநார்த்த.); hole. 8. குழி (நாநார்த்த); pit. 9. ஆடை (நாநார்த்த.); cloth. 10. இடைகழி (சம். அக. Ms.); passage next to the entrance of a house. 11. காலநீட்டிப்பு (நாநார்த்த.); interval. 12. அவசரம் (நாநார்த்த.); occasion, time. 13. இடையூறு; impediment. *"அந்தரம் புகுந்த துண்டென (கம்பரா. நிந்தனை. 4).* 14. மேகம் (பொதி. நி.) cloud. 15. அளவு (பொதி.நி.); standard measure, normal form.

[Skt. antara > த. அந்தரம்.]

அந்தரம்⁴ *andaram,* பெ.(n.) 1. விருப்பம்; desire. 2. புருவத்தினடு; space between the eye-brows. 3. தனிமை; loneliness. 4. மாறுபாடு; difference (சா.அக.).

[Skt. antara > த. அந்தரம்.]

அந்தரமத்திமபுத்தி *andara-mattima-putti,* பெ.(n.) கோள்களின் நித்தியகதியில் உண்மைக்கும் மத்திமத்துக்குமுள்ள வேறுபாடு; (Astron.) difference between the mean and the true daily motions of planets.

[அந்தரமத்திம + புத்தி.]

[Skt.antara+mattima>த. அந்தரமத்திம(ம்).]

அந்தரமாமூலி *andara-māmūli,* பெ.(n.) **அந்தரத்தாமரை** பார்க்க; see *andara-t-tāmarai* (சா.அக.).

[அந்தர(ம்)+மா+மூலி.]

[Skt. antara>த. அந்தர(ம்).]

அந்தரர் *andarar,* பெ.(n.) 1. தேவர்; celestials, as dwellers in heaven. *"அந்தரர்கோன் (திருவாச. 9, 3.).* 2. பதினெண்கணத்து ளொருவர்; a class of demigods, as being in the intermediate space, one of *padiṉeṉ-kaṇam,* q.v.

[Skt. antara > த. அந்தரர்.]

அந்தரவல்லி *antara-valli,* பெ.(n.) கொல்லங் கொவ்வை (மலை.); species of corallocarpus.

[Skt. antara-valli> த. அந்தரவல்லி.]

அந்தரவனசம் *andara-vaṉašam,* பெ.(n.) கொடிப்பாசிவகை (பச். மூ.); a kind of moss.

அந்தரவனம் *andara-vaṉam,* பெ.(n.) மக்களில்லாக் காடு (வின்.); uninhabited desert.

த.வ. அத்துவானம்.

[Skt. antara + vana > த. அந்தரவனம்.]

அந்தரவாசம்¹ *andara-vāšam,* பெ.(n.) கொட்டைப்பாசி; an epiphytic medicinal plant (சா.அக.).

[Skt. antara + vāsa > த. அந்தரவாசம்.]

அந்தரவாசம்² *andara-vāšam,* பெ.(n.) வான்வெளியில் இயங்குகை; moving in the aerial regions (சா.அக.).

[Skt. antara + vāsa > த. அந்தரவாசம்.]

அந்தரவாசி *andara-vāśi,* பெ.(n.) வானில் வலம்வருவோன்; a superhuman being moving in the aerial regions. (சா. அக.)

[Skt. antara + vāsin> த. அந்தரவாசி.]

அந்தரவாண்டு *andara-vāṇḍu,* பெ.(n.) குறித்த நாளெல்லைகட்கு இடைப்பட்ட காலம் (வின்.); the period of time between any two given dates (சா.அக.).

[அந்தர(ம்) + ஆண்டு.]

[Skt. antara > அந்தரம்.]

அந்தரவாயு *andara-vāyu,* பெ.(n.) 1. குடல் (வாயு) வளி; gas or air in the intestines; flatulence. 2. வளியினால் உண்டாகும் குடலிறக்கம்; the descent of the bowels from its normal position, as a result of the deranged conditions of vayu in the system, *Rupture*. 3. வான்வெளியில் உள்ள காற்று; atmospherie air. 4. இடுப்பிலேற்பட்ட (வாயு) வளிநோய்; hip-pain due to wind in the system (சா.அக.).

[Skt. antara + vāyu > த. அந்தரவாயு.]

அந்தரவாயுக்கிரகணி *andara-vayu-k-kiragaṇi,* பெ.(n.) குடலில் தங்கிய வளியினால் உண்டவுடன் வயிறிரைந்து கழிச்சலாகி நீர்வேட்கை, தளர்ச்சி, விலாவிசிவு, விக்கல் முதலிய குணங்களை உண்டாக்கும் நாட்பட்டு வயிற்றோட்டம்; a form of chronic diarrhoea characterised by rumbling noise in the stomach and purging, thirst, fatigue, spasmodic pain on the sides, hiccough etc. is due to gas or air in the intestines (Flatus) and occurs soon after meals, *Flatulent diarrhoea* (சா.அக.).

[Skt. antara + vāyu+kiragani> த. அந்தரவாயுக்கிரகணி.]

அந்தரவிகூசனம் *andara-vigūśaṇam,* பெ.(n.) வயிற்றிரைச்சல்; rumbling of the bowels (சா.அக.).

அந்தரவிட்டை *andara-viṭṭai,* பெ.(n.) குடலிலிறங்கி நிற்கும் கழிமாசு (மலம்); faecal matter in the intestines as opposed to வெளி தள்ளு மலம் discharged faces (சா. அக.)

[அந்தர(ம்) + விட்டை.]

[Skt. antara > த. அந்தரம்.]

அந்தரவித்திரதி *andara-vittiradi,* பெ.(n.) உடம்பினுள்ளுறுப்புகளிற் காணுங் கழலைக் கட்டி; a tumour like raised abscess in the interior organs of the body (சா.அக.).

[Skt. antara+vidradhi>த. அந்தரவித்திரதி.]

அந்தரவிதனம் *andara-vidaṉam,* பெ.(n.) ஒரு கண்ணோய்; an eye-disease (சா.அக.).

[Skt.antara+vyathana > த. அந்தரவிதனம்.]

அந்தரவிருத்தி *andara-virutti,* பெ.(n.) 1. குடல் பருத்தல்; enlargement of distension of the bowels. 2. குடல் தன்னிடத்தை விட்டு நழுவி அடிவயிற்றிற் குள்ளிறங்காமல் ஆண்குறிக்கு மேற் பருத்துக் தோற்றுகை; the displacement of bowels with protursion or swelling appearance above the penis when they have not passed quite through the inguinal canal, Imperfect hernia. 3. உடம்பின் உட்புறத்திலிருந்து பருமனாதல்; swelling remaining internally. 4. இடுப்புப்பருத்தல்; enlargement of the waist and buttocks. 5. வளியினால் பல நிலைகளில் வளர்ச்சியுற்று, சிறுகுடல் அழற்சியையும், விதைப்பையில் பெருக்கத்தையும் ஏற்படுத்தும் குடலண்ட வளர்ச்சிநோய்; a rupture caused by the muscles over the bowels, giving way and letting some portion of the intestines escape outwards beneath the skin, arises from the aggravated condition of vayu in the iliac region (சா.அக.).

[Skt. antara+ vṛddhi > த.அந்தரவிருத்தி.]

அந்தரவினியோகம் *antara-viniyōgam,* பெ.(n.) வரிவகை (S.I.I. i, 136.); a tax.

[Skt. antara+ viniyōga>த. அந்தரவினி யோகம்.]

அந்தரவீச்சு *andaraviccu,* பெ.(n.) பெரும்பொய் (இ.வ); outrageous lying.

[அந்தர(ம்) + வீச்சு.]

[Skt. antara> த. அந்தரம்.]

அந்தரவீச்சுக்காரன் *andaraviccu-k-kāraṉ,* பெ.(n.) ஏமாற்று(மோச)க்காரன் (வின்.); fraudulent man, cheat.

[அந்தர(ம்) + வீச்சுக்காரன்.]

[Skt. antara > த. அந்தரம்.]

அந்தரவுலகம் *andara-v-ulagam,* பெ.(n.) வானுலகம்; svarga. *"அந்தரவுலகத் தமரர்கோமான்" (பெருங். உஞ்சைக். 37, 96.).*

[அந்தரம் + உலகம்.]

[Skt. antara> த. அந்தரம்.]

உலம் > உலகம்.

அந்தரவேட்டணசவ்வு *andara-vēṭṭaṇa šavvu,* பெ.(n.) வயிற்றின் உட்பகுதியைச் சூழ்ந்துள்ள நீரடங்கிய இரட்டைச் சவ்வுப் பை; peritoneum (சா.அக.).

அந்தராஞ்சம் *andarāñjam,* பெ.(n.) தோளிற்கும் நெஞ்சிற்கும் இடையேயுள்ள கூறு; that part of the body between the shoulder and the breast (சா.அக.).

[Skt. antarānsa> த. அந்தராஞ்சம்.]

அந்தராத்மா *andar-ātmā,* பெ.(n.) 1. பரவாதன் (பரமான்மா); indwelling soul. 2. மனம் (இ.வ.); mind.

[Skt. antar + ātmā > த. அந்தராத்மா.]

அந்தராபத்தம் *andarā-pattam,* பெ.(n.) உணவிற்கிடையே கொள்ளுமருந்து; a medicine taken between two meals (சா.அக.).

அந்தராபதியை *andarā-padiyai,* பெ.(n.) கருவுற்றவள்; a pregnant woman (சா.அக.).

த.வ. சூலி.

அந்தராபவச்சத்துவம் *andarā-pava-c-cattuvam,* பெ.(n.) இறப்பிற்கும் மீள்பிறப்பிற்கும் இடைப்படு காலத்தில் ஆதனுக்கேற்படு நிலைமை; the soul in its existence between death and rebirth (சா. அக.).

[Skt. antarābhava-sattva > த. அந்தராபவச் சத்துவம்.]

அந்தராயப்பாட்டம் *andarāya-p-pāṭṭam,* பெ.(n.) பணமாகத் தண்டும் வரிவகை (I. M.P. Cg 1070.); certain taxes collected in cash.

[அந்தர் + ஆயம் + பாட்டம்.]

[Skt. antara> த.அந்தர்.]

ஆய் > ஆயம்; பாடு > பாட்டம்.

அந்தராயம் *andarāyam,* பெ.(n.) 1. இடையூறு (சூடா.); obstacle, impediment. 2. (Jaina.) எண் குற்றங்களுள் இடையூ றியற்றுவது; obstructive karma, one of *eṉ-kuṟṟam,* q.v. 3. உள்வரும்படி; (S.I.I.iii, 121) internal revenue as of a temple.

[அந்தர் + ஆயம்.]

[Skt. antara> த. அந்தர்.]

அந்தராயாமதனுத்தம்பவாதம் *andarā-yāma-taṉuttamba-vādam,* பெ.(n.) உடம்பினுள்ள வளி (வாயு) கடுமை (பிரகோப) மடைந்து, விரல்கள், புறங்கால்கள், வயிறு, மார்பு, இதயம், தொண்டை ஆகிய இவற்றை உடம்பிலுள்ள என்புக்கட்டுகள் உள்ளுக் கிழுக்க உடம்பு சுருங்கி முன்னம் குனிந்து உள்ளாக வளைந்து குறுகுவதனாலேற்படும் ஓர் ஊதைநோய்; a disease due to the accumulation of the extremely enraged *'vāyu'* (nerve force) in the regions of the fingers, insteps, abdomen, chest, heart

and throat and forcibly draws in the local ligaments, when the body becomes contracted and bends forward bringing about a curvature of the inner trunk (சா.அக.).

அந்தராளம் *andarāḷam,* பெ.(n.) 1. இடைப்பட்ட யிடம்; intermediate space. 2. திசைநாற் கோணம் (பிங்.); intermediate points of the compass. 3. **அந்தராளமண்டபம்** பார்க்க; see *andarāḷa-maṇḍabam.*

த.வ. இடைமண்டபம்.

[Skt. antarāla > த. அந்தராளம்.]

அந்தராளமண்டபம் *andarāḷa-maṇḍabam,* பெ.(n.) கருவறையை அடுத்த மண்டபம் (I.M.P.Tn. 270.); ante-chamber to the inner sanctuary of a South Indian temple.

த.வ. கருவறை மண்டபம், முகமண்டபம்.

[அந்தராள(ம்) + மண்டபம்.]

[Skt. antarāla> த. அந்தராள(ம்).]

அந்தராளன் *andarāḷaṉ,* பெ.(n.) உயர்குல தந்தைக்கும் இழிகுலத் தாய்க்கும் பிறந்தபிள்ளை (திவா.); son of an uppercaste (*anulōma*) father and lower caste mother.

[Skt. antarāla > த. அந்தராளன்.]

அந்தரான்மா *andarāṉmā,* பெ.(n.) 1. கடவுள் (விவேக. சூடா. 152.); god, as immanent. 2. நான்கு வாக்குக்களோடும் கூடி வலம்வரும் உயிர் (சி. போ. பா. 6, 2, பக். 317.); (*Śaivam.*) soul when it is associated with the four *vākku.*

[அந்தர் + ஆன்மா.]

[Skt. antar > த. அந்தர்.]

அந்தரி[1]-த்தல் *antari-,* 4 செ.கு.வி.(v.i.) 1. தனித்திருத்தல் (வின்.); to be forlorn, solitary, lonely. 2. உதவியற்றிருத்தல் (வின்.); to be friendless, helpless. 3. மாறுதல்; to differ, to be inconsistent. *"விதி யந்தரிக்க வொழுதி" (திருநூற். 62.).* 4. கழித்தலா லுண்டாகும் வேறுபாடு அறிதல் (வின்.); to find the difference between two quantities.

[Skt. antara> த. அந்தரி-.]

அந்தரி[2] *andari,* பெ.(n.) 1. மலைமகள் (பிங்.); Parvati. 2. கூளித்தலைவியாகிய கரிய பாலை நிலத் தெய்வம், காளி (பிங்.); *Durgā.*

[Skt. antara > த. அந்தரி.]

அந்தரிட்சம் *andaritcam,* பெ.(n.) 1. வானம்; atmosphere. 2. நற்பேறு; heaven. *"அந்தரிட்சஞ் செல . . . கனல் புகுங் கபிலக்கல்லது" (செந். பத். 4, 232.)*

[Skt. antari-kṣa > த. அந்தரிட்சம்.]

அந்தரிந்திரியம் *andar-indiriyam,* பெ.(n.) உட்கருவி (அந்தக்கரணம்) (பிரபோத. 39, 30.); inner seat of thought, feeling and volition.

[Skt. antar + indriya > த. அந்தரிந்திரியம்.]

அந்தரிப்பு *andarippu,* பெ.(n.) வழி (கதி)யின்மை (வின்.); helplessness.

[Skt. antar > த. அந்தர் > அந்தரிப்பு.]

அந்தரியாகப்பூசை *andar-iyāga-pūšai,* பெ.(n.) மானசபூசை; (*Śaivam.*) mental worship. *"அறைந்தவை மூர்த்திசேர்க்கி லந்தரி யாக பூசை" (ஞானபூசா. 14.).*

த.வ. மனப்பூசனை.

[அந்தரியாகம் + பூசை.]

[Skt. antar+ yāga> த.அந்தரியாகம்.]

அந்தரியாகம் *andariyāgam,* பெ.(n.) மனவழிபாடு (சி. சி. 9, 10.); mental worship, opp. to *pagiryāgam.*

[Skt. antar + yāga > த. அந்தரியாகம்.]

அந்தரியாமி *andariyāmi,* பெ.(n.) கடவுள் (வேதா. சூ. 41.); god, as being immanent in the universe and governing it.

[Skt. antar + yāmin > த. அந்தரியாமி.]

அந்தரிலம்பம் *andar-ilambam,* பெ.(n.) கூர்க்கோணங்கள் கொண்ட முக்கோணம் (வின்.); acute-angled triangle.

[*Skt. antas + lamba > த. அந்தரிலம்பம்.*]

அந்தரிலயம் *andar-ilayam,* பெ.(n.) உயிர்ப்படக்கம் (துரியா தீதம்) (சிந்தா. நி. 165.); (phil) the transcendent fifth state of the soul.

[*Skt. antas + laya > த. அந்தரிலயம்.*]

அந்தரீபம் *antarībam,* பெ.(n.) தீவம் (சிந்தா. நி. 162.); Island.

[*Skt. antarīpa > த. அந்தரீபம்.*]

அந்தரீயம் *andarīyam,* பெ.(n.) அரையிற் கட்டும் வேட்டி (*Brāh.*); waist cloth, dist. fr. *uttarīyam.*

[*Skt. antarīya > த. அந்தரீயம்.*]

அந்தருவேதி *andaruvēdi,* பெ.(n.) வேள்விச் சாலையினுள்ளிடம் (காஞ்சிப்பு. அந்தரு. 22.); inside of the sacrificial ground.

[*Skt. antar + vēdi > த. அந்தருவேதி.*]

அந்தரேணம் *andarēṇam,* பெ.(n.) நடுவிடம் ; இடைப்பட்டயிடம் (சிந்தா. நி. 164.); intermediate space.

[*Skt. antarēṇa > த. அந்தரேணம்.*]

அந்தவருணி *anda-varuṇi,* பெ.(n.) சிறு நெருஞ்சில்; a thorny shrubtribalus terrestris (சா.அக.).

அந்தன்¹ *andaṉ,* பெ.(n.) 1. கூற்றுவன் (தேவா. 978,5); Yama. 2. காரி (சனி) (திவா.); saturn.

[*Skt. anta > த. அந்தன்.*]

அந்தன்² *antaṉ,* பெ.(n.) 1. குருடன்; blind man. *"அந்தர் கரமுற்ற தடியன்றி யறிவார்" (திருவாத. பு. புத்தரை. 79.).* 2. அறிவிலான்; fool, ignorant man. *"கூடற்பெருமான் செந்தாள் விடுத்துறை யந்தர்கள்" (கல்லா. 7.).*

[*Skt. andha > த. அந்தன்.*]

அந்தாச் *andāc,* பெ.(n.) மதிப்பு (W.G.); estimate.

த.வ. மதிப்பீடு.

[*U. andāz > த. அந்தாச்.*]

அந்தாச்கட்டு-தல் *andāc-kaṭṭu-,* செ. குன்றாவி. (v.t.) மதிப்பிடுதல் (C.G.); to estimate.

[*அந்தாச் + கட்டு-.*]

[*U. andāz> த. அந்தாச்.*]

அந்தாச்பட்டி *andāc-paṭṭi,* பெ.(n.) அறுவடைக்குமுன் கணக்கிடப்பெறும் பயிரின் விலைமதிப்பு (R.T.); estimate of the value of a standing crop.

த.வ. மதிப்பீட்டுப்பட்டி, கண்டுமுதல்பட்டி.

[*U. andāz> த. அந்தாச்.*]

அந்தாசி *andaśi,* பெ.(n.) 1. நஞ்சற்ற பாம்பு; a non-poisonous snake. 2. ஒருவகை மீன்; a kind of fish.

அந்தாதி¹ *andādi,* பெ.(n.) 1. அந்தாதித்தொடை (காரிகை. உறுப். 17) பார்க்க; see *andādi-t-tōḍai.* 2. ஒரு சிற்றிலக்கியம்; poem in which the last letter, syllable or foot of the last line of one stanza is identical with the first letter, syllable or foot of the succeeding stanza, the sequence being kept on between the last and the first stanza of the poem as well. *"அந்தாதிமேலிட் டறிவித்தேன்" (திவ். இயற். நான். 1.).*

த.வ. ஈறுதொடங்கி, கடைமுதல்பா.

[*அந்தம் + ஆதி.*]

[*Skt. anta + ādi > த. அந்தாதி.*]

அந்தாதி²-த்தல் *andādi,* 4. செ. கு. வி. (v.i.) முடிவிலும் முதற்கண்ணும் வருதல்; to follow the rules of *andādi. "அடிமடக்கா யந்தாதித்து" (மாறனலங். 267, உரை.).*

[*அந்தம் + ஆதி.*]

[*Skt. anta > த. அந்தம்.*]

அந்தாதி³ *andādi,* பெ.(n.) 1. முதலும் முடிவும்; beginning and end. 2. தலைமுதல் அடிவரையுள்ள உறுப்பு; the limps from head to foot. *"உருக்கோதை மேனிக்கந்தாதியைத் தீட்டில் (குலோத். கோ. 131.).*

[*அந்தம் + ஆதி.*]

[Skt. anta > த. அந்தம்.]

அந்தாதித்தொடை *andādi-t-toḍai,* பெ.(n.) அடிதோறும் இறுதிக்கணின்ற சீரும் அசையும் எழுத்தும் மற்றையடிக்கு முதலாவதாக வரத் தொடுப்பது (இலக். வி. 725.); (pros.) concatenation in which the foot, syllable or letter at the end of a line of verse begins the next line.

[அந்தம் + ஆதி + தொடை.]

[Skt. anta > த. அந்தம்.]

அந்தாதியாக *andādi-y-āga,* வி.எ.(adv.) இடைவிடாமல்; without intermission. *"அநாதிகாலம் அந்தாதியாக ஸம்ஸரித்துப் போந்த வடியேனுக்கு" (ரஹஸ்ய. 1329.).*

[அந்தம் + ஆதி + ஆக.]

[Skt. anta > த. அந்தம்.]

அந்தாதியுவமை *andādi-y-uvamai,* பெ.(n.) இறுதிச் சொல்லையே மடக்கி ஆதியாகக் கொண்டு, உவமை பெறக் கூறும் அணி (மாறனலங். 10, உரை.); (rhet.) a figure of speech in which the last word of a line is repeated at the beginning of the next line and made the *uvamāṉam.*

[அந்தம் + ஆதி + உவமை.]

[Skt. anta > த. அந்தம்.]

உ > உவ் > உவ > உவமை.

அந்தாரப்பனை *andāra-p-paṉai,* பெ.(n.) தொட்டிப் பனை; a species of palmyra (சா.அக.).

அந்தாலசி *andālaśi,* பெ.(n.) முகம் விடாக் கட்டி; a boil or abscess which does not has point; a blind boil or abscess (சா.அக.).

அந்திகா *andigā,* பெ.(n.) **அந்திகை** பார்க்க; see *andigai.*

[Skt. andhaka > த. அந்திகா.]

அந்திகாசிரயம் *andigāśirayam,* பெ.(n.) நிலத்திணை (சிந்தா. நி. 162.); plants and other immoveable objects.

[Skt. antika + ā-śraya > த. அந்திகாசிரயம்.]

அந்திகிருதன் *andi-kirudaṉ,* பெ.(n.) குருடனாக்கப் பட்டவன்; one who is rendered blind (சா.அக.).

[Skt. andha + krta > த. அந்திகிருதன்.]

அந்திகை *andigai,* பெ.(n.) 1. கண்ணோய்; a disease of the eye. 2. குருடு; blindness (சா.அக.).

[Skt. andhaka > த.அந்திகை.]

அந்திபந்தி *andi-pandi,* பெ.(n.) கும்பகம்; suppression of breath (சா.அக.).

அந்திபூதம் *andi-būdam,* பெ.(n.) குருடாதல்; becoming blind (சா.அக.).

அந்திபூதன் *andi-būdaṉ,* பெ.(n.) குருடானவன்; one who has become blind (சா.அக.).

அந்திமக்கிரியை *andimakkiriyai,* பெ.(n.) இறந்தவர்க்குச் செய்யும் இறுதிச் சடங்கு; funeral rites.

[Skt. antima + kriya > த. அந்திமக்கிரியை.]

அந்திமக்காலம் *andima-k-kālam,* பெ.(n.) இறப்புவேளை (ஸ்ரீவசன. 1, 69.); last moments, close of life.

[அந்திமம் + காலம்.]

[Skt. antima > த. அந்திமம்.]

அந்திமதசை *andima-taśai,* பெ.(n.) **அந்திமக்காலம்** பார்க்க; see *andima-kālam.*

அந்திமம் *andimam,* பெ.(n.) (ஒருவருடைய வாணாளின்) இறுதிக்காலம்; (of one's life span) end, last phase.

[Skt. antima > த. அந்திமம்.]

அந்தியக்கிரியை *andiya-k-kiriyai,* பெ.(n.) இறந்தவர்க்குச் செய்யும் சடங்கு; funeral rites.

[Skt. antya + kriya > த. அந்தியக்கிரியை.]

அந்தியகமனம் *andiya-kamaṉam,* பெ.(n.) இறப்பு; dying, going to the end of life (சா.அக.).

அந்தியகாபிம் *andiya-kābim,* பெ.(n.) 1. முடிவு காலம்; the last period of life. 2. சாகுங்காலம்; the last moments preceeding death (சா.அக.).

அந்தியசன் *andiyaśaṉ,* பெ.(n.) புலையன்; man of the lowest caste. *"அந்தியசர் வண்ணார் முதலோர் மனை" (சைவச. பொது. 243.).*

[Skt. antya-ja > த. அந்தியசன்.]

அந்தியத்துகசுரம் *andiyattuga-śuram,* பெ.(n.) சாகுங் காலத்துக் காணுமொரு கொடுங் காய்ச்சல்; a severe type of fever that precedes death (சா.அக.).

அந்தியதீபம் *andiya-dībam,* பெ.(n.) கடைநிலைவிளக்கு என்னும் அணி; (rhet.) the figure of speech known as *kaḍainilai-viḷakku.*

[அந்திய + தீபம்.]

[Skt. antya> த. அந்தியம்.]

த. தீவம் >Skt. dīpa> த. தீபம்.

அந்தியபரணி *andiya-paraṇi,* பெ.(n.) ஒரு ஆயுள்வேத மூலிகை; a plant of the terminalia genus used in ayurveda (சா.அக.).

அந்தியம்[1] *andiyam,* பெ.(n.) 1. இறப்பு; death. 2. இறக்குங் காலம்; the last period preceding death, the moment of death. 3. ஒரு பூடு; a plant cyperus (genus) *Hexastachyus communis* (சா.அக.).

[Skt. antya > த. அந்தியம்.]

அந்தியம்[2] *andiyam,* பெ.(n.) ஒரு பேரெண் (பிங்); the number 1000 billions.

[Skt. antya > த. அந்தியம்.]

அந்தியமட்டும் *andiyamaṭṭum,* பெ.(n.) சாகும் வரை; till the time of death (சா.அக.).

[அந்திய + மட்டும்.]

[Skt. antya > த. அந்தியம்.]

அந்தியவோடாலிகாகிரகம் *andiya-vōḍāligā-giragam,* பெ.(n.) எட்டாம் நாளில் எட்டாம் மாதத்தில் அல்லது எட்டாம் ஆண்டில் தாயை அல்லது குழந்தையைத் தாக்குமொரு வகை கோளின் விளைவால் வரும் குற்றம்; a morbific diathesis in a child or the mother in the 8th year or the 8th month or the 8th day after delivery, is due to the influence of an evil planet called ' aryaka' (சா.அக.).

அந்தியேட்டி *antiyēṭṭi,* பெ.(n.) நீத்தார் நிகழ்வுகள்; lit. after-ceremonies applied to funeral rities obsequies.

[Skt. antya + iṣṭi > த. அந்தியேட்டி.]

அந்தியேட்டிக்குருக்கள் *andiyēṭṭi-k-kurukkaḷ,* பெ.(n.) நீத்தார் நிகழ்வு (கருமாதி) செய்விக்குங் குருக்கள்; priests who help in funeral rites.

[அந்தியேட்டி + குருக்கள்.]

[Skt. antya + iṣṭi > த. அந்தியேட்டி.]

குரு>குருக்கள். **அந்தரட்டிக்குருக்கள்** பார்க்க.

அந்திரக்கண்மணி *andira-k-kaṇmaṇi,* பெ.(n.) நீலமணி (மூ.அ.); sapphire.

[அந்திர + கண்மணி.]

[Skt. antara> த. அந்திர.]

அந்திரக்கொடிச்சி *antira-k-koḍicci,* பெ.(n.) கந்தகம் (மூ.அ.); sulphur.

அந்திரகாசம் *andira-kāśam,* பெ.(n.) வானத்தில் நிலவு உதிக்கும் போது, கண் புகைச்சல் நீங்கியும், மற்றக் காலத்தில் கண் சிவந்து பார்ப்பதற்கு அச்சமாயும், நாட்பட்டால் காரிருளையுங் கொடுக்கும் ஒரு வகைக் கண்ணோய்; a disease of the eye in which the vision is clear before moonlight but dart at other times, is a condition in which the patient sees better in an obscure light than in bright sun-light, *Hemeralopia* (சா.அக.).

[அந்திர + காசம்.]

*[**Skt.** antra > த. அந்திரம்>அந்திர.]*

கால் > கார் > காய் > காசம்.

அந்திரகிராணி *andira-kirāṇi,* பெ.(n.) குடற் கோளாறினால் ஏற்படும் நாட்படு செரியாமை (கிராணி)க் கழிச்சல்; a chronic diarrhoea due to intestinal disorders (சா.அக.).

*[**Skt.** antra + grahaṇi > த. அந்திரகிராணி.]*

அந்திரசுரம் *andira-šuram,* பெ.(n.) குடலில் வீக்கம் கண்டு அதனிமித்த முண்டாகுமொரு வகைக் கடுங்காய்ச்சல்; a severe type of fever characterised by morbid changes of peculiar intestinal lesions, *Typyoid* or *Enteric fever* (சா.அக.).

[அந்திர + சுரம்.]

*[**Skt.** antra > த. அந்திரம்.]*

சுல் > சுர் > சுரம்.

அந்திரட்டி *andiraṭṭi,* பெ.(n.) சாக்காடெய்தினா ரொருவர்தம் முப்பத்தொன்றாம் நாள் செய்யப்படும் சடங்கு; funeral rite performed on the thirty first day.

*[**Skt.** antya+ iṣṭi>த.அந்திரட்டி.]*

அந்திரட்டை *antiraṭṭai,* பெ.(n.) corr. of அந்தியேஷ்டி (இ.வ.).

*[**Skt.** antya + iṣṭi > த. அந்திரட்டை.]*

அந்திரதாபிதம் *andira-tābidam,* பெ.(n.) குடலின் அழற்சி; inflammation of the intestines, *Enteritis* (சா.அக.).

*[**Skt.** antra + sthapita> த.அந்திரதாபிதம்.]*

அந்திரபுரீதரம் *andira-purīdaram,* பெ.(n.) சிறு குடலுக்கும், பெருங்குடலுக்கும் காணுமொரு அழற்சி; inflammation of the small intestines and of the colon, *Entero-colitis* (சா.அக.).

அந்திரம் *andiram,* பெ.(n.) 1. குடல்; intestines; bowels. 2. இரைப்பை யொழிந்த மற்றக் குடல் முதலானவை; the bowels and the other abdominal viscera excepting the stomach. 3. சிறு குடல்; small intestines (சா.அக.).

*[**Skt.** antra > த. அந்திரம்.]*

அந்திரமயம் *andira-mayam,* பெ.(n.) குடலை உள்ளடக்கியது; consisting of entrails (சா.அக.).

*[**Skt.** antra + maya > த. அந்திரமயம்.]*

அந்திரமுட்டிவாயு *andira-muṭṭi-vāyu,* பெ.(n.) குடல் முட்டி வளி; an intestinal complaint due to the deranged condition of '*vāyu*' in the system (சா.அக.).

[அந்திர(ம்)+முட்டி+வாயு.]

*[**Skt.** antra> த.அந்திர. **Skt.** vāyu> த.வாயு.]*

அந்திரருகம் *andira-rugam,* பெ.(n.) குடல் இறக்கம் (வாதம்); a hernia containing a loop of the intestine, *Enterocele* (சா.அக.).

அந்திரலோகிதம் *andira-lōgidam,* பெ.(n.) சிறுபொடுதலை; a small creeper of the species of பொடுதலை, *Verbena nodiflora* (சா.அக.).



அந்திரவசனம் *andira-vašaṉam,* பெ.(n.) பச்சையான கொட்டைப்பாக்கு (மூ.அ.); raw areca-nut.

அந்திரவர்த்தமன் *andira-varttamaṉ,* பெ.(n.) குடல் வளர்ச்சி (விருத்தி); hernia commonly known as rupture (சா.அக.).

[**Skt.** *antra + vardhanā > த. அந்திர வர்த்தமன்.]*

அந்திரவாதம் *andira-vādam,* பெ.(n.) 1. பெருங்குடலில் பற்பல வளி (வாயுக்கள்) சேர்ந்து வயிறு பருத்து வலியுண்டாகி, உப்பல், சிறுநீர், கழிமாசு (மல மூத்திர)க் கட்டு, கக்கல் (வாந்தி), நெஞ்சுவலி முதலிய குணங்களை யுண்டாக்கும் நோய்; a disease of the colon marked by heaviness of bowels, pain, distension of the abdomen, retention of faces and urine, vomiting, chest pain etc., is due to the accumulation of gases in the intestines. 2. குடல் நரம்பிற் காணும் வலி; neuralgia of the intestine, *Enteralgin* (சா.அக.).

*[**Skt.** antra + vāta > த. அந்திரவாதம்.]*

அந்திரவாயு *andira-vāyu,* பெ.(n.) குடல் வளி (வாயு); the flatulent nature of the intestines, flatulency (சா.அக.).

*[**Skt.** antra + vāyu > த. அந்திரவாயு.]*

அந்திரவாயுசூலை *andira-vāyuśūlai,* பெ.(n.) குடலில் வளி (வாயி) சேருவதனால் ஏற்படும் குத்தல் நோய்; an acute abdominal pain due to the accumulation of gas, intestinal colic (சா.அக.).

[அந்திரவாயு + சூலை.]

*[**Skt.** antra + vāyu> த. அந்திரவாயு.]*

சுல் > சூல் > சூலை.

அந்திரவிரணம் *andira-viraṇam,* பெ.(n.) 1. சிறுகுடலிற் காணுமோர் புண் (விரண) நோய்; an inflammation of the duodenum, *Duodenitis.* 2. சிறுகுடற் புண்; ulcer of the duodenum, peptic ulcer. 3. குடற்புண்; ulceration of the intestines, *Entereicosis* (சா.அக.).

*[**Skt.** antra + vraṇa > த. அந்திரவிரணம்.]*

அந்திரவிருத்தி[1] *andira-virutti,* பெ.(n.) 1. குடல் கவுட்டியின் வழியால் பிடுக்கிற்குள் இறங்காமலே ஆண்குறித் தண்டிற்கு மேற்பாகமாகக் காணும் வீக்கம் அல்லது புடைப்பு; protrusion of the bowels with an appearance of swelling just above the penis, without descending through the groin into the scrotum; hernia which has not passed quite through the orifice, *Incomplete hernia.* 2. ஊதையினால் சிறுகுடல் வலுக்குறைந்து கவுட்டியின் வழியாய்க் கீழிறங்கிக் காற்றுப்பை போற் பருத்துக் காணும் நோய்; a disease in which a portion of the small intestines which is pressed down through the groin (inguinal canal) decends into the scrotum and becomes swollen like an inflated air bladder, *Inguinal hernia* (direct) (சா.அக.).

த.வ. அடிக்குடும்பி.

*[**Skt.** antra + vṛddhi > த. அந்திவிருத்தி.]*

அந்திரவிருத்தி[2] *andira-virutti,* பெ.(n.) **அந்திரவர்த்தமன்** பார்க்க; see *andira-varttamaṉ* (சா.அக.).

*[**Skt.** antra + vṛddhi > த. அந்திரவிருத்தி.]*

அந்திரன் *andiraṉ,* பெ.(n.) தேவன்; god. *"அந்திரனை யாளுரி லம்மான் யன்னை" (தேவா. 723, 4.).*

*[**Skt.** antara > த. அந்திரன்.]*

அந்திரி *andiri,* பெ.(n.) 1. மலைமகள்; *Pārvadi.* 2. கொற்றவை; *Kāḷi.*

*[**Skt.** antarī > த. அந்திரி.]*

அந்திரவிருட்சம் *andira-viruṭcam,* பெ.(n.) தில்லை மரம்; a tree, *mountain slender tiger's milk, Excoecaria crenulata* (சா.அக.).

*[**Skt.** antra+vṛkṣa > த. அந்திவிருட்சம்.]*

அந்திவீருகம் *andi-vīrugam,* பெ.(n.) சிறு முள்ளங்கி; wall radish, *Bluemea aurita* (சா.அக.).

அந்து *andu,* பெ.(n.) கணுக்கால் வளை (பாத கிண்கிணி) (நாநார்த்து.); anklet.

*[**Skt.** andu > த. அந்து.]*

அந்துகம் *andugam,* பெ.(n.) யானைத் தொடரி (R); chain for an elephant's leg.

[Skt. anduka > த. அந்துகம்.]

அந்துதிம் *andudim,* பெ.(n.) வாகை மரம்; a tree, *Acacia sirissa* (சா.அக.).

அந்துப்போதிகை *andu-p-pōdigai,* பெ.(n.) யானையின் பின்காற் தொடரி (சங்கிலி) கட்டுங் குறுந்தறி; stake for fastening the hind leg chain of an elephant. *"அடுகளி றந்துப் போதிகை பரிந்து" (சீவக. 1831.).*

[அந்து + போதிகை.]

[Skt. andu> த.அந்து.]

அந்துவாசம் *anduvāšam,* பெ.(n.) கொட்டைப் பாசி (வை.மு); a kind of moss.

அந்தூல்பல்லக்கு *andūl-pallakku,* பெ.(n.) பல்லக்கு வகை (தக்ஷிண. இந். சரித். 444); a kind of palanquin.

[அந்தூல் + பல்லக்கு.]

[Skt. āndōla > த. அந்தூல்.]

பல் > பல்லக்கு.

அந்தேசம் *andēšam,* பெ.(n.) வழி (கதி)யின்மை (யாழ்ப்.); extremity, great straits.

அந்தேசாதிகம் *andē-šādigam,* பெ.(n.) தேற்றா (விதை) மரம்; water clearing nut tree, *Strychnos potatorium* (சா.அக.).

அந்தேசாதிம் *andē-šādim,* பெ.(n.) **அந்தேசாதிகம்** பார்க்க; see *andē-šādigam* (சா.அக.).

அந்தேசாலம் *andēšālam,* பெ.(n.) தேற்றா மரம் (பச். மூ.); clearing nut tree.

அந்தேசோலிகம் *andē-šōligam,* பெ.(n.) சிறு எழுத்தாணிப் பூடு; a plant with flowers like a style or style plant, *Prenanthes sarmentosa* (சா.அக.).

அந்தோட்டம் *andōṭṭam,* பெ.(n.) 1. இதழி லுண்டாகும் புண்; a sore on the lip due to the disease, as in thrush, *Labiomycosis.* 2. இதழ் வெடிப்பு; a crack or fissure in the lip (சா.அக.).

அந்நகத்தி *annagatti,* பெ.(n.) வயிற்றுளைவு; a flux in which the stools consist chiefly of blood and mucus, accompanied with griping of the bowels, *Dysentery* (சா.அக.).

அந்நகோடகன் *anna-kōḍagaṉ,* பெ.(n.) கதிரவன்; the sun. (சா. அக.).

அந்நபேதி *anna-bēdi,* பெ.(n.) **அன்னபேதி** பார்க்க; see *aṉṉa-bēdi.*

[Skt. anna + bhēdin> த. அந்நபேதி.]

அந்நசலம் *anna-šalam,* பெ.(n.) **அன்னசலம்** பார்க்க; see *aṉṉa-salam.*

[அந்ந(ம்) + சலம்.]

[Skt. anna> த. அந்ந(ம்).]

அந்நியபுட்டம் *anniya-puṭṭam,* பெ.(n.) குயில்; a well known bird with a melodius voice, Indian cuckoo (சா.அக.).



அந்நியம் *anniyam,* பெ.(n.) 1. தனதல்லாதது, தனக்குரிமை இல்லாதது; that which is not one's own, that which is alien. *'அந்நிய நாடு'.* 2. ஒருவருக்குத் தொடர்பு இல்லாதது; that which has no relation. *'பெண் சொந்தமா, அந்நியமா?'.*

[Skt. a-nyā > த. அந்நியம்.]

அந்நியம் *anniyam,* பெ.(n.) **அந்நியபுட்டம்** பார்க்க; see *anniya-puttam* (சா.அக.).

அந்நியமாதல் *anniyamādal,* பெ.(n.) தொடர்பில்லா நிலை; alienation.

த.வ. அயலாதன்.

[அந்நியம் + ஆதல்.]

[Skt. a-nya > த. அந்நியம். ஆ>ஆதல்.]

அந்நியன் *anniyan,* பெ.(n.) 1. அறிமுகம் இல்லாதவன், வேற்றாள்; a stranger. *'அந்நியர்கள் முன்பாகவும் இந்த மாதிரி பேசுகிறாரே'.* 2. இனத்தாலோ, மதத்தாலோ, நாட்டாலோ வேறுபட்டவன்; one who is an alien, foreinger. *'கோயில் கருவறையின் உள்ளே அந்நியர் நுழைய அனுமதி இல்லை'.*

த.வ. அயலான்.

[Skt. anya > த. அந்நியன்.]

அந்நியாயகாரி *anniyāyakāri,* பெ.(n.) தீங்கிழைப்போன்; treacherous person, as sinner. *"அந்நியாய காரிகளாய்ப் போந்த இவர்கள்" (s.i.i.iv, 140.).*

[Skt. a-nyāya-kārin > த. அந்நியாயகாரி.]

அந்நியேத்துகவாதம் *anniyēttuga-vādam,* பெ.(n.) உணவின் குற்றத்தினாற் பிறந்து, தோள், முதுகு, கழுத்து, தலை, விலா ஆகிய இவ்விடங்களில் பரவிப் பித்தத்துடன் கூடி, ஒரு நாள் விட்டு மறுநாளில் துன்பத்தை உண்டாக்கிக் காய்ச்சல், வேட்கை முதலிய குணங்களையுமுண்டாக்கும் ஓர் ஊதை நோய்; a disease of the nervous system marked by perplexity, fever, swoon, thirst etc., is occurs every alternate day and is due to the deranged condition of *'vāyu'* which extends through the neck, the head or the ribs, arises from incompatible articles of diet (சா.அக.).

அந்நீர் *annīr,* பெ.(n.) 1. நாரி சுக்கிலம்; a fluid discharge from the vagina. 2. தேங்கிய நீர்; stagnant water or water spoiled from long keeping (சா.அக.).

அநக்கினி *anakkini,* பெ.(n.) வயிற்றுத்தீயின் செய்கையற்றவன்; one who is deprived in his system of the action of gastric fire, said to be the cause of hunger (சா.அக.).

அநகம் *anagam,* பெ.(n.) புல்லுருவி; a parasitic plant, *Loranthus* (genus) (சா.அக.).

அநங்கம் *anangam,* பெ.(n.) 1. மல்லிகை; jasmine, *Jasminum sambue.* 2. இருவாட்சி; a running flower plant, *Jasminum sambue.* 3. உடலின்மை; having no corporeal body. 4. உடலற்ற தன்மை; the quality or state of being incorporeal, *Incorporeality* (சா.அக.).

அநங்கலி *anangali,* பெ.(n.) எலும்புருக்கி நோய்க்கு மருந்தாகப் பயன்படும் சிறுதேட் கொடுக்கி; small leaved, *Tiaridium Indicum,* a cure for all affections of bones as necrosis etc. இதனால் தீராத எலும்புருக்கி நோயும், போகும் (சா.அக.).

அநங்கன் *anangan,* பெ.(n.) காமன்; the Indian Cupid (சா.அக.).

த.வ. உருவிலி.

அநதிரோகம் *anadi-rōgam,* பெ.(n.) நோயில்லாமை; not much affected by disease (சா.அக.).

[Skt. a-nadi + rōga > த. அநதிரோகம்.]

அநந்தஞானி *ananda-ñāni,* பெ.(n.) கதிரவன்; the sun (சா.அக.).

அநந்தம் *anandam,* பெ.(n.) 1. பிறவி நஞ்சு; one of the 32 kinds of native arsenic. 2. பொன்; gold. 3. வானம்; sky; either pervading all space. 4. கொடிப் பசலை; nail dye, *Barleria prionitis.* 5. நன்னாரி; Indian sarasaparilla, *Hemidesmus indicus* (சா.அக.).

அநந்தவாதம் *ananda-vādam,* பெ.(n.) முகமும், கழுத்தும் சோரும்படிச் செய்யும் நோய்; a form of paralysis affecting the muscles of the face, mouth and pharynx, *Bulbar paralysis* (சா.அக.).

அநந்தன் *anandaṉ,* பெ.(n.) 1. வெடியுப்பு; nitre-potassium nitrate (kNO_3). 2. பிறவிநஞ்சு; a kind of native arsenic (சா.அக.).

அநந்தை *anandai,* பெ.(n.) 1. அறுகு; sacred grass; harialli grass, *Agrostis linearis.* 2. கொத்தான் கொடி; leafless creeper, *Cassytha filiformis.* 3. நெல்லிமரம்; small leaved goose-berry, *Phyllanthus emblica* (சா.அக.).

அநநுபாடணம் *ananupāḍaṇam,* பெ.(n.) தோல்வித்தானத் தொன்று (செந். iii, 13.); a fault in argumentation.

[Skt. an-anubhāṣaṇa> த. அநநு பாடாணம்.]

அநபத்தியம் *anapattiyam,* பெ.(n.) கால்வழி மரபின்மை; incapacity to produce children or progeny-sterility (சா.அக.).

[Skt. a-na > த. அந.]

பற்று > பத்தி > பத்தியம்.

அநம் *anam,* பெ.(n.) சோறு; boiled rice (சா.அக.).

[Skt. a.na > த. அநம்.]

அநம்பு *anambu,* பெ.(n.) 1. சாதகப்புள்; lark. 2. நீரில்லாதது; that which is destitute of water or is waterless. 3. ஈரமில்லாதது; that which is deprived of moisture (சா.அக.).

[Skt. a-na>த. அநம்பு.]

அநயம் *anayam,* பெ.(n.) 1. தீவினை; evil karma. 2. இடர்; danger. 3. தீது; anything inauspicious. 4. சூது முதலியன; gambling.

[Skt. a-naya > த. அநயம்.]

அநரவன் *anaravaṉ,* பெ.(n.) 1. வெந்தோன்றி; plough root, *Gloriosa superba.* 2. நஞ்சு; poison. 3. செய்ந்நஞ்சு; a kind of prepared arsenic (சா.அக.).

அநல் *anal,* பெ.(n.) 1. கொடிவேலி; a plant, Ceylon lead, wort, *Plumbago zeylanica.* 2. பித்தம்; bile. 3. வயிற்றுத்தீனி; warmth of the stomach, gastric fire. 4. வன்னியிலை; the leaves of the vanni tree; Arjunas penance tree, *Prosopis spicigera* (சா.அக.).

அநல்வென்றி *anal-veṉṟi,* பெ.(n.) தங்கம்; refined gold (சா.அக.).

அநலபித்தம் *anala-pittam,* பெ.(n.) உண்ட உணவைச் செரிக்கச் செய்யும் பித்த நீர்; a fluid secreted in the stomach forming the principle agent in digestion, gastric juice (சா.அக.).

த.வ. இரைப்பை நீர், சேமிப்பு நீர்.

[அநல + பித்தம்.]

[Skt. ana> த. அநல.]

அநலாடுவேந்தன் *analāḍu-vēndaṉ,* பெ.(n.) கார்முகில் நஞ்சு; a kind of prepared dark arsenic (சா.அக.).

அநா *anā,* பெ.(n.) மூச்சு; breath, respiration (சா.அக.).

த.வ. உயிர்வளி.

அநாகதசுரம் *anāgada-šuram,* பெ.(n.) நெஞ்சகத்திலிருந்தெழும் காய்ச்சல்; a fever arising from disorders or diseases in the region of the heart (சா.அக.).

[அநாகத + சுரம்.]

[Skt. a-nā + gata> த. அநாகதம்.]

அநாகதம் *anāgadam,* பெ.(n.) 1. சொல்லப்படாதது; that which cannot be revealed or divulged. 2. அறியப்படாதது; that which cannot be ordinarily recognised. 3.வருங்காலம்;the future. 4. ஆறாதாரங்களி லொன்று; (in psychology) one of the six supports or mainstay of life (சா.அக.).

[Skt. a-nā + gata > அநாகதம்.]

அநாகாரம் *anākāram,* பெ.(n.) உணவின்மை; being deprived of food (சா.அக.).

[Skt. a-nā + ā-hāra> த. அநாகாரம்.]

அநாசிகன் *anāšigaṉ,* பெ.(n) மூக்கில்லாதவன்; one who is deprived or destitute of nose (சா.அக.).

[Skt. a-nāsika > த.அநாசிகன்.]

அநாதப்பள்ளிக்கூடம் *anāda-p-paḻḻi-k-kūḍam*, பெ. (n.) ஏதிலிகட்குரிய பள்ளிக்கூடம் (இக்.வ.); school for helpless orphanage for children.

[அநாத + பள்ளிக்கூடம்.]

[Skt. a-nātha> த. அநாதம்.]

கூடு > கூடம்.

அநாதப்பிரேதம் *anāda-p-pirēdam*, பெ.(n.) உரிமை கோரா உயிரற்ற மாந்த உடல்; unclaimed corpse.

[Skt. a-nātha + prēta>த. அநாதப்பிரேதம்.]

அநாதப்பிள்ளை *anāda-p-piḻḻai*, பெ.(n.) ஏதிலிப்பிள்ளை; orphan, as without guardians.

[அநாத(ம்) + பிள்ளை.]

[Skt. anātha> த. அநாதம்.]

அநாதர்விசிகம் *anādar-viśigam*, பெ.(n.) ஏதிலிகட்குரிய காப்பகம்; a place where children without parents or any one to take care of them and also infants, deserted, or left exposed are brought up-founding hospital (சா.அக.).

[Skt. anātha+visikha> த.அநாதர்விசிகம்.]

அநாதரட்சகர் *anāda-raṭśagar*, பெ.(n.) திக்க (கதிய)ற்றவர்களின் கடவுள்; saviour of the helpless, lord.

[Skt. a-nātha+rakṣka > த. அநாதரட்சகர்.]

அநாதன் *anādan*, பெ.(n.) 1. தனக்குமே லொரு தலைவனில்லாதவன்; one who has no superior, the deity. *"ஞாலம் விழுங்கும நாதனை" (திவ். இயற். திருவிருத். 79.).* 2. திக்கில்லாதவன்; one who has no protector, poor, helpless person. *"அநாதர்களா யுனையடையுமவர்" (சேதுபு. கவிசம்பு. 67.).*

[Skt. a-nātha > த. அநாதன்.]

அநாதி *a-nādi*, பெ.(n.) திக்கற்றவன், ஏதிலி; helpless person.

[Skt. a-jñāti > த. அநாதி.]

அநாதிபதி *anādi-padi*, பெ.(n.) உயிர்ப்படக்க நிலை (துரியாதீதம்); the highest state or soul completely free from corporeal entanglements (சா.அக.).

அநாதுரம் *anāduram*, பெ.(n.) நலக்குறை வின்மை; being free from disease (சா.அக.).

அநாதை[1] *anādai*, பெ.(n.) திக்கற்றவன் (வின்.); poor, helpless man.

த.வ. ஏதிலி, அற்றோன்.

[Skt. a-nātha > த. அநாதை.]

அநாதை[2] *anādai*, பெ.(n.) சிவன் மற்றும் சிவையின் வேறுபடுதோற்றம் (சதாசிவ. 22.); (*Śaivam*) a *Śiva-śakti*.

[Skt. a-nāthā > த. அநாதை.]

அநாதையாக *anādai-y-āga*, கு.வி.அ.(adv.) உரிமை கொண்டாடுவார் இல்லாமல்; uncared for.

[அநாதை+ஆக.]

[Skt. anātha > த. அநாதை.]

அநாமதேயம் *anāmadēyam*, பெ.(n.) 1. இன்னார் என இனம் கண்டுகொள்ளக் கூடிய பின்னணிச் செய்திகள் ஏதும் இல்லாத நிலை; anoymity, that which is without any identity. *'அநாமதேயக் கடிதம்.'* 2. பலராலும் அறியப்படாத நிலையில் இருப்பவர்; non-entity. *'அரசியலில் இன்று அவர் ஒரு அநாமதேயம்.' (இ.வ.).*

த.வ. மொங்கான்நிலை, மொட்டைநிலை.

[Skt. anāma > த. அநாமம்.]

திகை > திகைதல் = முடிதல். திகை = முடிவு, எல்லை. திகை > திசை > தேசம். ய→ச: போலி.

ஒ.நோ. தேசம்→தேயம். நேசம்→நேயம்.

அநாமதேயன் *anāmatēyaṉ,* பெ.(n.) புகழில்லாதவன், பலரால் அறியப்படாதவன் (அப்பிரசித்தன்); man unknown to fame, as nameless.

த.வ. மொட்டையன்.

[Skt. a-nāma>த. அநாமம். தேசன்→தேயன்.]

அநாமயம் *anāmayam,* பெ.(n.) நோயற்ற தன்மை; the state of being free from disease; healthy (சா.அக.).

[Skt. a-nāmaya > த. அநாமயம்.]

அநாமயன் *anāmayaṉ,* பெ.(n.) நோயில்லாதவன்; one who is free from disease (சா.அக.).

[Skt. a-nāmaya > த. அநாமயன்.]

அநாமிகை *anāmigai,* பெ.(n.) கணையாழி விரல்; ring-finger, as having no specific name. *"பெருவிரலை யநாமிகையோ டியையக் கூட்டி" (கூர்மபு. சுத்தாசம. 10.).*

[Skt. a-nāmikā > த. அநாமிகை.]



அநாயகம் *anāyagam,* பெ.(n.) அரசின்மை; want of a ruler, anarchy.

[Skt. nāyaka > த. அநாயகம்.]

அநாயம் *anāyam,* பெ.(n.) வீண் (தேவா. 859, 7.); uselessness.

[Skt. a-nyāya > த. அநாயம்.]

அநாயாசகவாதம் *anāyā-šaga-vādam,* பெ.(n.) குளிர்ச்சியினாலும், தீயமருந்துப் பண்டங்களை உண்பதனாலுமுண்டாகி, உடம்பில் எல்லா நரம்புகளிலும், அவ்வவ் வுறுப்புகளுக் கியற்கையாக வேற்பட்ட தொழில்களை இயக்கி குருதியோட்டம், சிறுநீர்கழிமாசு இவற்றைத் தாக்கி, அதனால் உடம்பு குத்தல், மறத்தல், கனத்தல் முதலிய குணங்களை உண்டாக்குமோர் ஊதை (வாத) நோய்; a kind of nervous affection characterised by shooting pain, numbness, heaviness etc., in the body, is due to the affection of the natural function of the respective organs, with reference to the circulatory system as well as to the interference to the derangement of 'vāyu' caused by errors in diet and climatic conditions such as, chillness etc. (சா.அக.).

[Skt. a-nāyācaka+vāta > த. அநாயாசக வாதம்.]

அநாயாசம் *anāyāšam,* பெ.(n.) மிக எளிதில்; இயற்கையாக; effortlessness. *'பாராட்டத் தகுந்த அநாயாசமான நடிப்பு' (இ.வ.).*

[Skt. anāyāca > த. அநாயாசம்.]

அநார்ச்சவம் *anārccavam,* பெ.(n.) நோய்; disease (சா.அக.).

அநாரியதித்தம் *anāriya-tittam,* பெ.(n.) நிலவேம்பு; ground neem, *French chirreta - Andrographis paniculata* alias *Justicia paniculata* (சா.அக.).

அநாரோக்கியம் *anārōkkiyam,* பெ.(n.) 1. நலமின்மை; not sound and vigorous in body-unhealthiness. 2. நோய்; disease (சா.அக.).

[Skt. anā + arōgya > த. அநாரோக்கியம்.]

அநாவசியம் *anāvašiyam,* பெ.(n.) தேவையற்றது; that which is unnecessary. *'இந்த நீண்ட விளக்கம் அநாவசியம்' (இ.வ.).*

[Skt. a.nāvašya > த. அநாவசியம்.]

அநாவத்துவம் *anā-v-attuvam,* பெ.(n.) உயிரோடிருத்தல்; the state of being endowed with breath or life (சா.அக.).

[Skt. anādhvan > த. அநாவத்துவம்.]

அநாவிருத்தி *anā-v-irutti,* பெ.(n.) மீளப் பிறவாமை; not to be born again, not to suffer, *metempsychosis* (சா.அக.).

[Skt. anā + vṛtti > த. அநாவிருத்தி.]

அநாவிலம் *anā-v-ilam,* பெ.(n.) களங்கமின்மை, தெளிவு; being free from sediment; clearness (சா.அக.).

அநான்மா *anāṉ-mā,* பெ.(n.) 1. உடம்பு; body. 2. உயிரற்ற உடல்; that which is not a soul i.e., material body and the material world (சா.அக.).

த.வ. பிணம்.

[Skt. a.nā + ātmā > த. அநான்மா.]

அநிச்சாபிராரத்தம் *aniccā-pirārattam,* பெ.(n.) ஊழ்வினை; an invincible necessity (சா.அக.).

த.வ. பழவினை.

[Skt. anicca +prā-rabdha > த.அநிச்சா பிராரத்தம்.]

அநிச்சை *aniccai,* பெ.(n.) 1. நாகமல்லிகை; snake jasmine, *Rhinacanthus communis.* 2. பேய்ச்சேம்பு; a bitter plant (சா.அக.).

அநிசம்[1] *aniśam,* வி.எ.(adv.) எப்பொழுதும்; always. *"அநிசம் பற்றின்றி நிற்கும்" (ஞானவா. புண்ணி. 11.).*

[Skt. aniśam > த. அநிசம்.]

அநிசம்[2] *aniśam,* பெ.(n.) 1. தூக்கமின்மை; sleeplessness. 2. அழியாமை (நித்தியம்); that which is eternal. 3. **அநித்தியம்** பார்க்க; see *anittiyam* (சா.அக.).

அநித்தம்[1] *anittam,* பெ.(n.) **அநித்தியம்** (சி.சி.பா. நிகண். 7) பார்க்க; see *anittiyam.*

த.வ. நிலையாமை.

[Skt. a-nithyā > அநித்தம்.]

அநித்தம்[2] *anittam,* பெ.(n.) சிவபெருமான், சிவையின் வேறுபடுதோற்றம் (சிவசக்தி பேதம்) (அக.நி.); (*Śaivam*) a *Śiva-sakti.*

[Skt. a-nityā > த. அநித்தம்.]

அநித்தியம் *anittiyam,* பெ.(n.) 1. நிலையாமை; instability. 2. நிலையற்றது; that which is transient, unstable. *"இந்த வநித்திய வாழ்வு வேண்டேன்" (காஞ்சிப்பு. திருநெறிக். 18).*

[Skt. a-nitya > த. அநித்தியம்.]

அநித்திரை *anittirai,* பெ.(n.) 1. உறக்கமின்மை; sleeplessness. 2. கோழை நிரம்பிய தொழிலினால், உடம்பிற்குண்டாகும் நிலைமை; sleeplessness due to the phlegmatic condition of the system, *Insomnia.*

[Skt. a-nidrā> த. அநித்திரை.]

அநிதம்[1] *anidam,* பெ.(n.) அளவுகடந்தது; that which is unrestricted, unlimited. *"அநித கோடி யணிமுடி மாலையும்" (பெரியபு. திருமலை. 5).*

[Skt. a-niyata > த. அநிதம்.]

அநிதம்[2] *anidam,* பெ.(n.) நிலையற்றது; that which is transient or unstable. *"அநிதவுடற் பூதமாக்கி" (திருமந். 1854).*

[Skt. a-nitya > த. அநிதம்.]

அநியதபோக்கியம் *aniyada-pōkkiyam,* பெ.(n.) முதலில் நல்லதாகக் கருதப்பட்டும் பின் தகாதென விலக்கப்பட்ட வினைப்பயன் (சி.சி.2,39, ஞானப்.); (*Śaivam*) effect of actions once considered lawful but subsequently considered sinful.

[Skt. a-niyata+bhōgya>த. அநியத போக்கியம்.]

அநிந்திரியம் *anindiriyam,* பெ.(n.) உறுப்பில்லாதது; that which has no animal organ (சா.அக.).

[Skt. a-nindriya>த. அநிந்திரியம்.]

அநிந்திரியவது *anindiriya-vatu,* பெ.(n.) சிற்றுயிரிகளின் அமைப்பில்லாத பொருள்; substance devoid of the structure of a living being (சா.அக.).

[Skt. a-nindriya+vastu> த. அநிந்திரியவது.]

அநிப்பிராயயம் *anippirāyayam,* பெ.(n.) புருவத்தையும், கண்ணோரங்களையுந் தாக்கி வலியையும் வீக்கத்தையுமுண்டாக்குமொரு கண்ணோய்; pain and swelling of the eyelids and outer corners of the eyes (சா.அக.).

அநிமாலினம் *ani-mālinam,* பெ.(n.) இறப்பு; death.

த.வ. சாவு.

அநிமிடன் *animidan,* பெ.(n.) இமையா திருப்பவன்; one who does not wink (சா.அக.).

[Skt. a+nimisa>த. அநிமிடன்.]

அநிமேசம் *animēšam,* பெ.(n.) 1. ஒரு வகை மீன்; a kind of fish. 2. பேய்; devil (சா.அக.).

அநியாயதண்டம் *aniyāya-tandam,* பெ.(n.) 1. முறைகேடான வரி (பாண்டி.); illegal tax. 2. வீண்செலவு (கொ.வ.); wasteful expenditure.

த.வ. முறையிலா வரி.

[அநியாய + தண்டம்]

[Skt. a-nyāya> த. அநியாயம்.]

தண்டு→ தண்டம்.

அநியாயம் *aniyāyam,* பெ.(n.) 1.நேர்மையற்றது, தவறான செயல், கொடுமை (தாயு. சுகவாரி, 12); injustice, wrong action. 2. வீண் (தாயு. சச்சி. 5); uselessness.

த.வ. முறைகேடு, அல்நயம், அன்னாயம்.

[Skt. a-nyāya > த. அநியாயம்.]

அநிர்தம் *anirdam,* பெ.(n.) மாயை; delusion, as of water in the mirage.

[Skt. a.nir > த. அநிர்தம்.]

அநிர்தேசியம் *anirtēšiyam,* பெ.(n.) இத்தன்மைத்தென்று கூறொண்ணாதது; that which is indescribable.

[Skt. a-nirdēšya > த. அநிர்தேசியம்.]

அநிர்வசனம் *anirvašanam,* பெ.(n.) மாயை (சி.சி.1, 27, சிவஞா.); *māyai.*

[Skt. a-nir-vacana > த. அநிர்வசனம்.]

அநிர்வசனீயக்கியாதி *anirvašaniya-k-kiyādi,* பெ.(n.) அறிவெனவும் அறிவற்றதெனவும் உறுதிசெய்யவியலாத தொன்றை யுணருந் திரிபுணர்வு; error consisting in the cognition of what is not determinable either as real or unreal.

[Skt.a-nir-vaana+khyāti > த. அநிர்வசனீயக்கியாதி.]

அநிர்வசனீயம் *anirvašaniyam,* பெ.(n.) 1. சரியாக (நிருபிக்க) மெய்ப்பிக்க முடியாதது; that which is indefinable. 2. மாயை; *māyā.*

[Skt. a-nirvacaniya > த.அநிர்வசனீயம்.]

அநிர்வாச்சியம் *anirvācciyam,* பெ.(n.) **அநிர்வசனீயம்** (வேதா. சூ. 58) பார்க்க; see *anirvašaniyam.*

[Skt. a-nirvācya > த. அநிர்வாச்சியம்.]

அநிருத்தம் *aniruttam,* பெ.(n.) மெய்ப்பிக்கப்படாதது (நிருபிக்கப்படாதது) (திருக்காளத். பு. 32, 40); that which is not defined.

த.வ. நிறுவாதது.

[Skt. anirukta> த. அநிருத்தம்.]

அநிருத்தன்[1] *aniruttan,* பெ.(n.) 1. திருமாலின் படைவகுப்புத் தலைவன் வகை (அஷ்டாதச. தத்வத். உ, 48); the *vyūha* manifestation of *Visnu* as preserver. 3. கண்ணபெருமான் பெயரன் (சிலப். 6, 54, உரை); name of the grandson of *Krisnan.*

[Skt. aniruddha > த. அநிருத்தன்.]

அநிருத்தன்[2] *aniruttaṉ*, பெ.(n.) 1. தடையற்றவன்; one who is irresistible. 2. அடங்காதவன்; one who is irrepressible. 3. ஒற்றன்; spy.

[Skt. a+ni-ruddha> த. அநிருத்தன்.]

அநிலசகன் *anilaśagaṉ*, பெ.(n.) நெருப்பு; fire.

[Skt. a-nilacaka > த. அநிலசகன்.]

அநிலசம் *anilaśam*, பெ.(n.) செம்முகக் குரங்கு; red faced monkey (சா.அக.).

[Skt. anilaca> த. அநிலசம்.]

அநிலச்சூலை *anila-c-cūlai*, பெ.(n.) ஊதையினாலேற்படும் சூலை; acute arthritis associated with gout, acute gouty arthritis (சா.அக.).

[அநில + சூலை.]

[Skt. a-nila> த. அநிலம்.]

சுல் → சூல் → சூலை.

அநிலம் *anilam*, பெ.(n.) 1. காற்று; wind. 2. பிறப்பு; birth. 3. ஊதை (வாத) நோய்; rheumatism (சா.அக.).

[Skt. a-nila > த. அநிலம்.]

அநிலன் *anilaṉ*, பெ.(n.) 1. காற்று (வாயு); air. 2. உயிர்வளி; oxygen (சா.அக.).

[Skt. a-nila > த. அநிலன்.]

அநிலாமயம் *anilāmayam*, பெ.(n.) ஊதை (வாத) நோய்; morbid affection of the deranged wind (vāyu) such as, flafulence, rheumatism etc.

[Skt. anila-maya > த.அநிலாமயம்.]

அநீகினி *anīkiṉi*, பெ.(n.) தாமரைப் பூ; lotus, *Nelumbium speciosum.*

அநீதம் *anīdam*, பெ.(n.) **அநீதி** பார்க்க; see *anīdi.*

[Skt. a-nīti > த.அநீதம்.]

அநீதி *anīdi*, பெ.(n.) கொடுமை; injustice.

[Skt. a-nīti > த.அநீதி.]

அநு *anu*, பெ.(n.) 1. கதுப்பு; jaw. 2. நோய்; disease. 2. சாவு; death. 4. முலைப்பால்; woman's breast milk. 5. இணை; like or equal to.

[Skt. hanu > த. அநு.]

அநுக்கம் *anukkam*, பெ.(n.) 1. பாம்பு; snake. 2. அச்சம்; fear. 3. சோம்பல்; lethargy. 4. துன்பம்; suffering.

அநுகன் *anugaṉ*, பெ.(n.) காம விருப்பம் (விச்சை) யுடையவன்; one who is inclined to lewdness, *awanton.*

த.வ. பெண் பித்தன்.

[Skt. anuka> த. அநுகன்.]

அநுகோதம் *anu-kōdam*, பெ.(n.) மூளையின் பின் பக்கத்தின் கீழ்ப் பிரிவாகிய சிறு மூளை; that portion of the brain which is posterior to and underlying the great cerebral mass, *Cerebellum.*

[Skt. anugōta > த. அநுகோதம்.]

அநுகோர்த்தம் *anu-kōrttam*, பெ.(n.) **அநுகோதம்** பார்க்க; see *anu-kōdam.*

[Skt. anugōta>த. அநுகோர்த்தம்.]

அநுசந்தானம்பண்ணல் *anu-śandāṉam-paṉṉal*, பெ.(n.) 1. இடைவிடாது நினைதல்; continuous thinking. 2. இடையீடில்லா வோகம்; continuous meditation or contemplation.

[அனுசந்தானம் + பண்ணல்.]

[Skt. anu-santāna > த.அநுசந்தானம்.]

பண் → பண்ணல்.

அநுசயம் *anuśayam*, பெ.(n.) 1. காலில் வரும் நோய்; a disease of the leg. 2. உடம்பில் மேற்பாகத்திற் காணுமொரு வகைக் கொப்புளம் அல்லது கட்டி; a boil or abscess in the upper part of the body. 3. தலையில் வரும் கட்டி; a boil or abscess on the head.

[Skt. anu-kṣaya> த. அநுசயம்.]

அநுசிரஞ்சவாதம் *anu-širañja-vādam,* பெ.(n.) தாடையின் பூட்டைத்தழுவி (யனுசரித்து) எந்நேரமும் வாயைத் திறந்தாவது மூடியாவதிருக்கச் செய்யுமொரு வகை ஊதை (வாத) நோய்; a kind of tetanic spasam of the jaw, which keeps the mouth always shut or open, thereby rendering the patient unable to chew things or to speak.

[Skt. anu-ciram-ja+vāta>த. அனுசிரஞ்ச வாதம்.]

அநுட்டணசீதம் *anuṭṭaṇa-šīdam,* பெ.(n.) வெயில்; குளிர்ச்சியற்றது; that which is neither hot or cold.

[Skt. anuṣṇa+šīta>த. அநுட்டணசீதம்.]

அநுட்டணம் *anuṭṭaṇam,* பெ.(n.) சூடின்மை; that which is devoid of heat.

[Skt. anuṣṇa > த. அநுட்டணம்.]

அநுட்டணாசீதம் *anuṭṭaṇā-šīdam,* பெ.(n.) **அநுட்டணசீதம்** பார்க்க; see *anuṭṭaṇa-šīdam.*

[Skt. anuṣṇā+sīta>த.அநுட்டணாசீதம்.]

அநுட்டினம் *anuṭṭiṇam,* பெ.(n.) கருங்குவளை (நீலோற் பலம்); blue lotus, *Nymphae craerulea.*

[Skt. anuṣṇa > த. அநுட்டினம்.]

அநுத்தம்பவாதம் *anu-t-tamba-vādam,* பெ.(n.) 1. இரு தாள்களையும் மரக்கச் செய்து இறுக்கி நாவையுள்ளுக்கிழுத்துத் துன்பத்தை விளைவிக்கு மோர் ஊதை (வாத) நோய்; a kind of spasm characterised by the affection of the jaws, and contraction or drawing in of the tongue, a kind of tetanus. 2. மோவாய்க் கட்டைப் பிடிப்பு; a spasm of the muscles of mastication commonly called lock-jaw. 3. இசிவால் (சன்னியால்) தாளிறுத்தல்; a tetanic condition of the muscles of the jaaw, *Trismusm.*

அநுத்தானம் *anu-t-tāṇam,* பெ.(n.) முகம் குப்புறவிருக்கும்படி கிடத்தல்; lying with the face downwards.

[Skt.anu+sthāna> த. அநுத்தானம்.]

அநுத்துருதம் *anu-t-turudam,* பெ.(n.) 1. ஒரு காலவளவு; a period of time. 2. ஒரு மாத்திரையின் காற்பங்கு; 1/4 of a moment.

அநுத்துவாகம் *anu-t-tuvāgam,* பெ.(n.) திருமணமேற்கா நோன்பு; unmarried state, celibacy.

அநுதரிசம் *anu-darišam,* பெ.(n.) 1. வேட்கை; thirst. 2. மதுவருந்தும் மட்கலம்; an earthern pot for drinking toddy.

[Skt. anu+darisa> த. அநுதரிசம்.]

அநுதரிசனம் *anu-darišaṇam,* பெ.(n.) 1. கள் குடித்தல்; drinking toddy. 2. கட்குடிக்கும் கலையம்; a mud pot used drinking toddy.

[Skt. anu+darišana> த. அநுதரிசனம்.]

அநுதாபசுரம் *anu-dāba-šuram,* பெ.(n.) ஒற்றுணர்ச்சியினாலுண்டாகும் சுரம்; sympathetic fever.

த.வ. பரிவிரக்கக் காய்ச்சல்.

[Skt. anu> த. அநு-]

அநுதாவனம் *anudāvaṇam,* பெ.(n.) தூய்மையாக்குகை; cleaning.

அநுதினம் *anudiṇam,* பெ.(n.) நாடொறும்; daily.

[Skt. anu+dina > த. அநுதினம்.]

அநுதேகம் *anu-dēgam,* பெ.(n.) நுண்ணுடல்; astral body.

[Skt. anu+dēha>த. அநுதேகம்.]

அநுபசயம் *anu-paśayam,* பெ.(n.) நோய் குணப்படாத நிலைமை; the state of being incurable, incurability.

[Skt. anu + caya>த. அநுபசயம்.]

அநுபந்தம் *anubandam,* பெ.(n.) 1. பிறந்த குழந்தை; new-born child. 2. ஒன்றோடொன் றிணைக்கப்பட்டது; that which is collaterally connected, concomiant, adjunct. 3. சேர்க்கப்பட்டது; appendage.

த.வ. இணைப்பு.

அநுபர்தை *anubardai,* பெ.(n.) நீர்வேட்கை (தாகம்); thirst. 2. விக்கல்; hiccough.

அநுபவம் *anubavam,* பெ.(n.) 1. கண்டறியுமறிவு; the knowledge gained by trial or repeated trials, observation and experience. 2. மணத்தாற்றோன்றும் அறிவு; practical wisdom experienced by the changes and trials of life.

த.வ. பட்டறிவு.

[Skt. anu-bhava > த. அநுபவம்.]

அநுபவாமிர்தம் *anubavāmirdam,* பெ.(n.) தமிழிற் செய்த வைராக்கிய சதகம்; a treatise on determination or will-power complied in Tamil.

[Skt.anubhava+a-mṛta>த.அநுபவாமிர்தம்.]

அநுபாகம் *anubāgam,* பெ.(n.) தாடையைச் சேர்ந்த பகுதி; (in anatomy) maxillary portion.

[அநு + பாகம்.]

[Skt. anu>த.அநு.]

அநுபானம் *anubāṉam,* பெ.(n.) மருந்தையுள்ளே செலுத்துதற்குதவியாகக் குடிக்கும் நீர் அல்லது குடிநீர்; water of other liquid taken as a basis for swallowing medicine without difficulty, vehicle. 2. உட்கொள்ளுவதற்காக வேண்டிய மருந்தைக் குழைத்து நாவால் நக்கிப் பயன்கொள்ளுதற்குரிய தேன் முதலிய பொருள்கள்; a thick syrupy medicament, like honey, ghee or other substances mixed with the intended medicine and taken in by licking, linctus.

த.வ. துணைப்பருகம்.

[Skt. anu+pāna > த. அநுபானம்.]

அநுபோகம் *anubōgam,* பெ.(n.) **அநுபவம்** பார்க்க; see *anubavam.*

த.வ. நுகர்ச்சி.

[Skt. anu+bhōga > த. அநுபோகம்.]

அநுமரணம் *anu-maraṇam,* பெ.(n.) உடன் கட்டையேறுகை; ascending the funeral pile or pyre with the deceased husband, sati.

த.வ. உடன்கட்டை.

[அநு+மரணம்.]

[Skt. anu > த. அநு.]

மடி →மரி+அணம்–மரணம் (வ.வ.54).

அநுமை *anumai,* பெ.(n.) கண்ணின் கீழிமை; that part immediately below the eye-lid.

அநுரசம் *anuraśam,* பெ.(n.) உண்ட பின்பு ஏற்படும் சுவை; a secondary flavour; a taste which succeeds eating and drinking after taste.

[Skt. anu+rasa > த. அநுரசம்.]

அநுராகபோகம் *anurāga-bōgam,* பெ.(n.) 1. சிற்றின்ப நுகற்சி; sexual enjoyment. 2. காம வேட்கை; sexual bliss.

[Skt.anu-rāga+bhōga>த.அநுராகபோகம்.]

அநுராகமூலி *anurāga-mūli,* பெ.(n.) காமவேட்கையுண்டாக்கும் மூலிகை; a drug exciting sexual desire, *Aphrodisiac.*

[அநுராக(ம்) + மூலி.]

[Skt. anu-rāga > த. அநுராக(ம்).]

அநுராகம் *anurāgam,* பெ.(n.) 1. சிற்றின்ப விருப்பம்; carnal appetite, lust. 2. ஆசை; lover attachment.

த.வ. விழைச்சு, காமவேட்கை.

[Skt. anu+rāga > த. அநுராகம்.]

அநுலேபகம் *anulēbagam,* பெ.(n.) 1. உடம்பிற் பூசும் சந்தன முதலிய நறுமணப் பொருள்கள்; perfumes like sandal paste etc, smeared over the body. 2. பூசும் நெய்மம்; any soft unctuous substance used for smearing particularly over the body or the diseased part, an unguent or ointment. 3. நெய்மம் முதலியவற்றைப் பூசுதல்; anoiting the body with unguents.

[Skt. anu-lēpaka > த. அநுலேபகம்.]

அநுலேபம் *anulēbam,* பெ.(n.) **அநுலேபகம்** பார்க்க; see *anulēbagam.*

[Skt. anu-lēpa > த. அநுலேபம்.]

அநுலேபனம் *anulēbaṉam,* பெ.(n.) 1. பூசுதல்; smearing or anoiting the body. 2. பூசும் பொருள்; oily or emmolient application.

[Skt. anu-lēpana > த. அநுலேபனம்.]

அநுலோபனம் *anulōbaṉam,* பெ.(n.) குடலுக்குள் ஏற்படும் இயற்கையான அசைவு; a peculiar motion of the intestines and other tubular organs in digestion-peristalsis.

[Skt. anu-lōpana> த. அநுலோபனம்.]

அநுலோமனம் *anulōmaṉam,* பெ.(n.) வளியை (வாயுவை)க் கண்டித்து வெளிப்படுத்தும் கழிச்சல் மருந்து; a pursative which helps to check or remove the doshas in the system especially *vāyu* (wind), by setting them free.

[Skt. anu-lōma > த. அநுலோமனம்.]

அநுவாசம் *anu-vāšam,* பெ.(n.) நறுமண மூட்டுகை; imparting smell.

[Skt. anu-vāša > த. அநுவாசம்.]

அநுவாசிதம் *anu-vāšidam,* பெ.(n.) 1. அணியமாக்கிச் செலுத்துதல்; that which is prepared and administered as in enema. 2. புகையிடுதல்; fumigating.

[Skt. anu-vāšita > த. அநுவாசிதம்.]

அநுவிருத்தம் *anu-viruttam,* பெ.(n.) முட்டை வடிவம்; shape like that of an egg-oval shape.

[Skt. anu-vṛtta > த. அநுவிருத்தம்.]

அநுவெல்லிதம் *anu-vellidam,* பெ.(n.) 1. கட்டுக்கட்டல்; bandaging or securing with bandages. 2. கால் கை கட்டு; the bandage applied to the extremities.

அநுற்பத்தி *anuṟpatti,* பெ.(n.) பிறவாமை; not being born again; absence of birth.

[Skt. anut-patti > த. அநுற்பத்தி.]

அநூகன் *anūgaṉ,* பெ.(n.) பிறப்பிலி; one who is free from re-birth.

[Skt. anūka > த. அநூகன்.]

அநூடன் *anūḍaṉ,* பெ.(n.) திருமணம் செய்யாதவன்; an unmarried person, celibate.

[Skt. anūta> த. அநூடன்.]

அநூர்த்துவாத்தி *anūrttu-vātti,* பெ.(n.) மேற்கதுப்பெலும்பு; superior maxillary bone.

அநூரு *anūru,* பெ.(n.) முடவன்; a lame person.

அநேகம் *anēgam,* பெ.(n.) பல; many. *'மாதத்தில் அநேக நாட்கள் கஞ்சிதான் உணவு' (உ.வ.).*

த.வ. மிகவு, மிகுதி.

[Skt. an-ēka > த. அநேகம்.]

அநேகமாக *anēgam-āga,* கு.வி.அ.(adj.) 1. பெரும்பாலும்; mostly, almost. *'அநேகமாக என்னைத் தவிர அனைவரும் உணவருந்தி விட்டனர்'.* 2. அறிந்த வளவில்; most probably. *'அநேகமாக இது வீண் முயற்சிதான்'.*

[அநேகம் + ஆக.]

[Skt. an-ēka>த. அநேக(ம்).]

அநேகாங்கம் *anēgāṅgam,* பெ.(n.) பலவுறுப்புகள்; several organs.

த.வ. பல்லுறுப்பு.

[Skt. an-ēka+aṅga > த. அநேகாங்கம்.]

அநேகாந்தம் *anēgāndam,* பெ.(n.) ஐயம்; that which is doubtful.

[Skt. an-ēkanta > த. அநேகாந்தம்.]

அநேடமூகம் *anēḍa-mūgam,* பெ.(n.) கேளாச் செவியும் ஊமையுமாந் தன்மை; loss of speech; deaf dumbness deafmutis.

[அநேட+மூகம்.]

[Skt. anēṭa> த.அநேட.]

அநேடமூகன் *anēḍa-mūgaṉ,* பெ.(n.) செவியிலூமன்; a person who is both deaf and dumb, deaf mute.

[அநேட + மூகன்.]

[Skt. an-ēṭa>த.அநேட(ம்).]

மூழ்→மூகு→மூகன்.

அநேதிரு *anētiru,* பெ.(n.) வெப்பம் அல்லது மின் ஆற்றல் எளிதில் ஊடுருவக்கூடாத பொருள்; a substance which does not transmit a force like that of hear or electricity.

[Skt. anēti > த. அநேதிரு.]

அநோக்கம் *anōkkam,* பெ.(n.) 1. மரம்; tree. 2. மரப்பொது; tree in common.

அப்காரி *apkāri,* பெ.(n.) 1. கள்,தேறல் முதலியவை இறக்கி விற்பனை செய்கை; abkari, manufacture or sale of spirituous liquors.

த.வ. கள்வணிகம், மதுவிற்பனை.

[U. ābkāri > த. அப்காரி.]

அப்சந்தீன் *apšandiṉ,* பெ.(n.) உனானி முறையில் வழங்கும் மூலிகை; a drug used in the unani medicine (சா.அக.).

[U. ab-šandiṉ > த. அப்சந்தீன்.]

அப்சரசு *apšarašu,* பெ.(n.) மேலுலகப் பெண்கள்; a class of celestial nymphs.

த.வ. அரமகளிர்.

[Skt. apseras > த. அப்சரசு.]

அப்சூத் *apšūt,* பெ.(n.) மிகுதி (P.T.L.); excess, increases.

[Persn. afzūd>த.அப்சூத்.]

அப்தபூர்த்தி *apta-pūrtti,* பெ.(n.) முதலாமாண்டு நிறைவு; first anniversary of the child's birth.

த.வ. முதல் வெள்ளணி.

[Skt. abda+pūrti>த.அப்தபூர்த்தி.]

அப்தம் *aptam,* பெ.(n.) ஆண்டு; year.

த.வ. ஆண்டு.

[Skt. abda > த. அப்தம்.]

அப்தா *aptā,* பெ.(n.) கிழமை (வாரம்); week. *அப்தாக் கணக்கு* (C.G.).

த.வ. கிழமை.

[U. hafta > த. அப்தா.]

அப்திபேனம் *abdi-bēṉam,* பெ.(n.) 1. கடல்நுரை; sea froth. 2. மீனெலும்பு; cuttle-fish bone (சா.அக.).

அப்திமண்டூசி *abdi-maṇḍūši,* பெ.(n.) முத்துச் சிப்பி; pearl-oyster (சா.அக.).



அப்திமூன் *abdi-mūṉ,* பெ.(n.) உனானி மருத்துவத்தில் வழங்கும் ஒரு வகைக் கடைச்சரக்கு; a bazaar drug used in the uṉāṉi system (சா.அக.).

[U. habdimūn > த. அப்திமூன்.]

அப்பச்சக்காணம் *appaccakkāṇam,* பெ.(n.) சினம், இவறன்மை (லோபம்) முதலிய குற்றங்கள் (மேருமந்.363); (Jaina.) faults like anger, miserliness, etc.

[Skt. apratyākhyāna > த. அப்பச்சக் காணம்.]

அப்பணை[1] *appaṇai,* பெ.(n.) 1. பிணை; security, bail. 2. பற்றுக்கோடு; prop., support.

த.வ. பற்றுறுதி.

[Skt. ājñāpanā > த. அப்பணை.]

அப்பணை[2] *appaṇai,* பெ.(n.) கட்டளை; command, mandate. *"ராஜாவும்... அப்பணையிட்டுவிட" (குருபரம்.ஆறா.160).*

[Skt. ajñāpana > த. அப்பணை.]

அப்பயத்துடராகம் *appayattuḍarāgam,* பெ.(n.) எட்டிமரம்; nux vomica tree, *Strychnos nux vomica* (சா.அக.).

அப்பரியந்தம் *appariyan-dam,* பெ.(n.) ஒதிய மரம்; Indian ash tree, *Odina wodier* (சா.அக.).

[Skt. ap-paryanta > த. அப்பரியந்தம்.]



அப்பாரிசம் *appāriśam,* பெ.(n.) அந்தப் பக்கம்; the other side (சா.அக.).

அப்பிகை *appigai,* பெ.(n.) ஏழாவதாகிய துலை (ஐப்பசி) மாதம் (தெ.இ.க.தொ.iii, 150); the seventh Tamil month.

[Skt. āśvayuja > த. அப்பிகை.]

அப்பிதம் *appidam,* பெ.(n.) முகில் (சிந்தா. நி.186); cloud.

[Skt. abda > த. அப்பிதம்.]

அப்பியங்கம் *appiyaṅgam,* பெ. (n.) 1. தலையிலும், உடம்பிலும் எண்ணெயைத் தேய்த்துக் கொண்டு இளஞ்சூடுள்ள தண்ணீரில் தலைமுழுகல்; anointing the head and the body with sesamum oil preparatory to bathing. 2. உடம்பிற்கு நறுமண மூட்டுகை; to perfume the body. 3. கண்ணுக்கு மை தீட்டுகை; painting the eye lids with collyrium (சா.அக.).

த.வ. திருமுழுக்கு, நெய்யாட்டு.

[Skt. abhyaṅga > த. அப்பியங்கம்.]

அப்பியங்கனம் *appiyaṅgaṉam,* பெ.(n.) எண்ணெய் (தேய்த்து)க் குளிக்கை; inunction, bathing with oil.

த.வ. முழுக்காட்டு.

[Skt. abhyañjana > த. அப்பியங்கனம்.]

அப்பியசி-த்தல் *appiyaśi-,* 4 செ.கு.வி.(v.i.) பழகுதல்; to practise.

[Skt. abhyas > த. அப்பியசி-.]

அப்பியசூயகன் *appiyaśūyagaṉ,* பெ.(n.) பொறாமைக்காரன் (சிந்தா.நி.181); jealous, envious person.

[Skt. abhyasūyaka > த. அப்பியசூயகன்.]

அப்பியஞ்சனம் *appiyañjaṉam,* பெ.(n.) 1. எண்ணெய்; oil. 2. எண்ணெய் பூசுகை; smearing the body with oil. 3. மை தீட்டல்; applying collyrium to the eye lids.

[Skt. abhyañjana > த. அப்பியஞ்சனம்.]

அப்பியந்தரபரிக்கிரகம் *appiyandara-parikkiragam,* பெ.(n.) மனத்தைப் பற்றி வரும் பகை (குரோதம்), மானம் முதலிய பதினான்கு குற்றங்கள் (மேருமந்.1207, உரை); (Jaina.) the fourteen mental defects, such as anger, pride, etc.

த.வ. ஈரேழ் மனமாசு.

[Skt. abhyantara+pari-k-kraha > த. அப்பியந்தரபரிக்கிரகம்.]

அப்பியந்தரம் *appiyandaram,* பெ.(n.) இடையூறு; obstacle, impediment.

[Skt. abhyantara > த. அப்பியந்தரம்.]

அப்பியம் *appiyam,* பெ.(n.) தேவர்க்கிடப்படும் திருப்படையல் (அறநெறி. 26); oblation to the gods.

[Skt. havya > த. அப்பியம்.]

அப்பியமதன் *appiyamadan,* பெ.(n.) நோயாளி; a sick person (சா.அக.).

அப்பியமிதம் *appiyamidam,* பெ.(n.) துன்பம் (சிந்தா.நி.187); distress.

[Skt. abhyamita > த. அப்பியமிதம்.]

அப்பியமேகம் *appiya-mēgam,* பெ.(n.) மூத்திரம், யானையின் மதசலத்தைப் போல் ஆறுமணிக்கு ஒருமுறை, ஒவ்வொரு வேளைக்கும் ஒருபடியளவாக இறங்குவதும், காய்ச்சினால் உவர்மண்ணைப் போலடியில் வண்டல் படிவதுமான சிறுநீர் நோய்; a disease characterised by excessive secretion of urine as much as even one measure for every six hours and it leaves a sediment when heated-diabetes insipidus (சா.அக.).

த.வ. உச்சைமேகம்.

[அப்பிய+மேகம்.]

[Skt. abhya > த. அப்பிய(ம்).]

அப்பியவகாரம் *appiyavagāram,* பெ.(n.) உண்கை (சிந்தா.நி.179); eating.

[Skt. abhyavahāra > த. அப்பியவகாரம்.]

அப்பியாகதன் *appiyāgadan,* பெ.(n.) நெருங்கிய பழக்கமுள்ள விருந்தினன்; familiar guest. *"அப்பியாகதரோடுத்தமவதிதிபூசை" (திருவானைக். கோச்செங்.160).*

த.வ. வாடிக்கை விருந்தாளி.

[Skt. abhyāgata > த. அப்பியாகதன்.]

அப்பியாகதி *appiyāgadi,* பெ.(n.) தெரிந்த விருந்தினன்; familiar guest. *"வரப்பட்ட அதிதி அப்பியாகதிகளுக்கு உண்டாகும் பசியைத் தணிப்பதற்கும்" (ஜீவப்பிரம்மைக்ய. பக்.554).*

[Skt. abhyāgata > த. அப்பியாகதி.]

அப்பியாசம் *appiyāšam,* பெ.(n.) 1. பழக்கம்; practice, exercise. *"கணக்குப் பொத்தகத்தின் கடைசியில் சில முக்கியமான அப்பியாசங்கள் இருந்தன".* 2. பாடப்பயிற்சி (இ.வ.); exercises based on rules. 3. இயல்; chapter.

த.வ. பயிற்சி.

[Skt. abhyāša > த. அப்பியாசம்.]

அப்பியாசயோகம் *appiyāša-yōgam,* பெ.(n.) ஊழ்கம்; meditation (சா.அக.).

த.வ. தவநிலை.

[Skt.abhyāsa+yōga>த.அப்பியாச யோகம்.]

அப்பியாசவைந்தியம் *appiyāša-vaindiyam,* பெ.(n.) தொடர் பழக்கத்தால் செய்யும் பண்டுவம்; the practices of a quack, quackery (சா.அக.).

த.வ. பக்குவமருத்துவம்.

[Skt. abhyāša+vaidya > த. அப்பியாச வைத்தியம்.]

அப்பியாசி[1]-த்தல் *appiyāši-,* 4 செ.குன்றாவி. (v.t.) பயிலுதல்; to practise. *"ஞானமாத்திரம் அப்பியாசித்தவனிடத்திலே" (பஞ்சதசப்.93).*

த.வ. பயிலல்.

[Skt. abhyāsa > த. அப்பியாசி-.]

அப்பியாசி² *appiyāši,* பெ.(n.) தொழில் பழகுநர் (வேதா.சூ.14); one who practises.

த.வ. வினைவலன், வினைவன்.

[Skt. abhyāsin > த. அப்பியாசி.]

அப்பியுதயம் *appiyudayam,* பெ.(n.) நன்னிகழ்வு; prosperity, welfare.

[Skt. abhyu-daya > த. அப்பியுதயம்.]

அப்பிரகஅரிதகி *appiraga-aridagi,* பெ.(n.) காக்கைப்பொன்பொடி (அப்பிரகபற்பம்), கடுக்காய்த் தோல் முதலியவைச் சேர்ந்த, ஓர் ஆயுள்வேத மருந்து; an ayurvedic medicine comprising calcined mica and gall-nut powder as chief ingradients (சா.அக.).

த.வ. காக்கைப்பொன் துகள்.

[Skt. abhraka+haritaki > த. அப்பிரக அரிதகி.]

அப்பிரகக்கிண்ணி *appiraga-k-kinni,* பெ.(n.) தகட்டுத்தாளை (அப்பிரகத்தை) உருகும்படிச் செய்து, மெழுகு கட்டி வார்த்தெடுக்கும் ஓர் ஏனம்; a basin made of melted mica cast into a mould (சா.அக.).

[அப்பிரகம்+கிண்ணி.]

[Skt. abhraka > த. அப்பிரகம்.]

அப்பிரகக்குகை *appiraga-k-kugai,* பெ.(n.) ஊதை(வாத)முறையில் பயன்படுத்துவதற்காக, காக்கைப்பொன் பொடியால் (அப்பிரக பற்பத்தினாற்) செய்த குகை; a crucible made of calcined mica for the purpose of using it in alchemy (சா.அக.).

[Skt. abhraka > த. அப்பிரகம்.]

அப்பிரககற்பம் *appiraga-karpam,* பெ.(n.) காக்கைப்பொன்னை (அப்பிரகத்தை)ச் செந்தூரம், பொடி (பற்பம்) முதலிய மருந்துகளாகச் செய்து பயன்படுத்தும் வகையை விளத்தமாய்க் குறிக்குமோர் ஆயுள் வேதநூல்; an ayurvedic treatise dealing with the method and use of several compounds of mica and their preparations in detail (சா.அக.).

[அப்பிர + கற்பம்.]

[Skt.abhraka>த.அப்பிரகம். கல்பம்→கற்பம்.]

அப்பிரகச்சத்து *appiraga-c-cattu,* பெ.(n.) காக்கைப் பொன்னிலிருந்து (அப்பிரகத்தினின்று) உருவாக்கப்பெறும் ஊட்டம் (சத்து); essence prepared from mica (சா.அக.).

[Skt. abhraka > த. அப்பிரகம்.]

அப்பிரகசிந்தூரம் *appiraga-šindūram,* பெ.(n.) காக்கைப் பொன்னா (அப்பிரகத்தா)லான மருந்துவகை (வின்.); red oxide of talc or mica.

த.வ. காக்கைப்பொன் செந்தூரம்.

[அப்பிரக(ம்) + சிந்தூரம்.]

[Skt.abhraka>த. அப்பிரகம். செந்தூரம்→ சிந்தூரம்.]

அப்பிரகசூதை *appiraga-šūdai,* பெ.(n.) மலடி; a barren woman (சா.அக.).

அப்பிரகசெந்தூரம் *appiragašendūram,* பெ.(n.) காக்கைப் பொன்னை (அப்பிரகத்தை) முறையாகத் தூய்மை செய்து, பிறகு அதைப் புடமிட்டெடுக்கும் ஒரு வகைச் செந்தூரம்; a red oxide of mica obtained after cleaning mica as per process laid down in the Tamil medical science for cleaning minerals and then subjecting it to calcination. It is a powder of brick-dust colour and a saline earthy taste, Chemically, it is a silicate of magnesia with iron in excess (சா.அக.).

[அப்பிரகம் + செந்தூரம்.]

[Skt. abhraka > த. அப்பிரகம்.]

அப்பிரகத்தகடு *appiraga-t-tagadu,* பெ.(n.) 1. காக்கைப் பொன் (அப்பிரகச்) செதில்; a loose, filmy mass of talc separated in layers, *Talc flakes.* 2. அப்பிரகத்தை உருக்கி அதனின்று உருவாக்குமொரு தகடு; plate obtained by melting mica (சா.அக.).

த.வ. காக்கைப்பொன் தகடு.

[அப்பிரக(ம்) + தகடு.]

*[**Skt.** abhraka > த. அப்பிரகம்.]*

அப்பிரகநவநீதம் *appiraga-navanīdam,* பெ.(n.)காக்கைப் பொன்னால் (அப்பிரகத்தாற்) செய்த களிம்பு (வின்.); mica made into an ointment.

த.வ. காக்கைப்பொன் களிம்பு.

*[**Skt.** abhraka+nava-nīta > த.அப்பிரக நவநீதம்.]*

அப்பிரகபற்பம் *appiraga-paṟpam,* பெ.(n.) காக்கைப் பொன்னை (அப்பிரகத்தை)ப் புடமிட்டு உருவாக்கி நீரிழிவு முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் மருந்து; an oxide of mica obtained by calcination as per process of India medical science. It is used for diabetes etc. (சா.அக.).

த.வ. காக்கைப்பொன் மருந்து.

*[**Skt.** abhraka+bhaspa > த. அப்பிரகபற்பம்.]*

அப்பிரகபாடாணம் *appiraga-pāḍāṇam,* பெ.(n.) பிறவிவைப்பு நஞ்சு வகை (மூ.அ.); a mineral poison.

த.வ. காக்கைப்பொன் நஞ்சு.

*[**Skt.**abhraka + pāsāṇam >த. அப்பிரக பாடாணம்.]*

அப்பிரகம் *appiragam,* பெ.(n.)தகட்டுத்தாள் (மைக்கா); mica, talc. *"அப்பிரக மென்றறைந்தால் அண்டம் மகோதரமும்..... போம்" (பதார்த்த.1126).*

த.வ. காக்கைப்பொன், ஒட்டுத்தாள்.

*[**Skt.** abhraka > த. அப்பிரகம்.]*

அப்பிரகமணல் *appiraga-maṇal,* பெ.(n.) 1. நிலத்தினின்று வெட்டி எடுக்கப்படும் அப்பிரகமும் மணலுங் கூடிய ஒரு மூலப்பொருள்; a mineral ore consisting of sand and talc, *Talc ore.* 2. கருமணல்; black sand mixed with mica (சா.அக.).

த.வ. காக்கைப்பொன் மணல்.

*[**Skt.** abhraka > த. அப்பிரகம்.]*

அப்பிரகாசம்[1] *a-p-pirakāšam,* பெ.(n.) விளக்கமின்மை; invisibility, indistinctness, darkness. *"ஒருகாலத்துப் பிரகாச மொருகாலத் தப்பிரகாசம்" (சூத.எக்கிய. பூ.47: 27).*

*[**Skt.**aprakāša > த. அப்பிரகாசம்.]*

அப்பிரகாசம்[2] *appirakāšam,* பெ.(n.) சடப்பொருள் (அசித்து); matter, as insentient. *"அவைதாம்... அப்பிரகாசமாய் நிற்றலான்" (சி.போ.4:1).*

*[**Skt.**a-prakāša>த. அப்பிரகாசம்.]*

அப்பிரகிருட்டம் *appirakiruṭṭam,* பெ.(n.) காக்கை (சிந்தா.நி.187); crow.

*[**Skt.** a-pra+kṛṣṭa > த. அப்பிரகிருட்டம்.]*

அப்பிரசம் *appirašam,* பெ.(n.) மலடு, குழந்தை பெற்றெடுக்க முடியாமை; barrenness (சா.அக.).

த.வ. மலட்டுத் தன்மை, கொட்டு.

அப்பிரசன் *appirašaṉ,* பெ.(n.) பிறங்கடை (வாரிசு) இல்லாதவன்; one who is without issue (சா.அக.).

அப்பிரசாதை *appirašādai,* பெ.(n.) மலடி (சிந்தா.நி.187); barren woman.

*[**Skt.** aprajātā > த. அப்பிரசாதை.]*

அப்பிரசித்தம் *a-p-pirašittam,* பெ.(n.) வெளிப்படையாகாதது; that which is unknown, unpublished.

த.வ. தெரியாதது.

*[**Skt.** a-prasiddha > த. அப்பிரசித்தம்.]*

அப்பிரசித்தவிசேடணம் *a-p-pirašitta-višēḍaṇam,* பெ.(n.) பக்கப் போலிகளு ளொன்று (மணிமே.29:151); (Log.) fallacy consisting in the major term being unacceptable to the opponent.

*[**Skt.**a-prasiddha + višēṣaṇa> த.அப்பிர சித்தவிசேடணம்.]*

அப்பிரசித்தவிசேடியம் *a-p-pirašitta-višēḍiyam,* பெ.(n.) பக்கப் போலிகளு ளொன்று (மணிமே.29, 152); (Log.) fallacy consisting in the minor term being unacceptable to the opponent.

[Skt. a-prasiddha+višēṣya>த. அப்பிர சித்தவிசேடியம்.]

அப்பிரசித்தவுபயம் *a-p-pirašitta-v-ubayam,* பெ.(n.) பக்கப் போலிகளுளொன்று (மணிமே.29, 152); (Log.) fallacy consisting in the major and minor terms being unacceptable to the opponent.

[Skt.a-prasiddha+upāya> த. அப்பிரசித்த வுபயம்.]

அப்பிரசித்தாசம்பந்தம் *a-p-pirašittā-šambandam,* பெ.(n.) பக்கப் போலிகளு ளொன்று (மணிமே.29, 153); (Log.) fallacy consisting in the syllogism seeking to establish no relation not already accepted by the opponent.

[Skt. a-prasiddhā+asambandha>த. அப்பிரசித்தாசம்பந்தம்.]

அப்பிரசை *appirašai,* பெ.(n.) மகப்பேறு அற்றவள்; a woman deprived of issue (சா.அக.).

[Skt. apirajā >த.அப்பிரசை.]

அப்பிரத்தியட்சம் *a-p-pirattiyaṭcam,* பெ.(n.) புலப்படாதது; that which is imperceptible, invisible.

[Skt. a-pratyakṣa > த. அப்பிரத்தியட்சம்.]

அப்பிரத்தியாக்கியானம் *appirattiyā-k-kiyāṉam,* பெ.(n.) **அப்பச்சக்காணம்** (மேருமந்.1378, உரை) பார்க்க; see *appaccakkāṉam.*

[Skt.aprathyākhyāna> த. அப்பிரத்தியாக் கியானம்.]

அப்பிரதக்கிணம் *a-p-piratakkiṉam,* பெ.(n.) **அப்பிரதட்சிணம்** பார்க்க; see *a-p-pirataṭciṉam.* *"நகரை யப்பிரதக்கிணமா யதினடந்து" (பிரபோத.12:12).*

த.வ. இடம்வரல்.

[Skt. a-pradakṣiṉa>த.அப்பிரதக்கிணம்.]

அப்பிரதட்சிணம் *a-p-pirataṭciṉam,* பெ.(n.) வலமிருந்து இடம் வருகை; circumambulation from right to left.

த.வ. எதிர்வலம், இடச்சுற்று, இடம்வரல்.

[Skt. a-pradakṣiṉa > த.அப்பிரதட்சிணம்.]

அப்பிரதானம் *a-p-piradāṉam,* பெ.(n.) முதன்மையல்லாதது; that which is non-essential, secondary.

[Skt. a-pradhāna > த. அப்பிரதானம்.]

அப்பிரதானி *appiradāṉi,* பெ.(n.) சிறியோன் (வின்.); insignificant person.

[Skt. a-prādhana > த. அப்பிரதானி.]

அப்பிரதிப்பழம் *appiradi-p-paḻam,* பெ.(n.) பேரீச்சைப் பழம் (பேரீந்து); date fruit of date tree, *Phoenix dactylifera* (சா.அக.).

அப்பிரதிபை *appiradibai,* பெ.(n.) தோல்வித் தானத் தொன்று (செந்.iii, 13); a fault in argumentation.

த.வ. எதிராடல் குற்றம்.

[Skt. a-pratibhā > த. அப்பிரதிபை.]

அப்பிரதீரூபகதை *appiradirūbakadai,* பெ.(n.) **அப்பிரதிபை** (செந்.iii, 16); பார்க்க; see *appiradibai*

[Skt. a-prati-rūpa- > த. அப்பிரதீரூபகதை.]

அப்பிரபஞ்சம் *appira-bañjam,* பெ.(n.) எலிப் பயறு; a wild grain wild horse-gram (சா.அக.).

[Skt. a-p-pira-pañja > த. அம்பிரபஞ்சம்.]

அப்பிரபுட்பம் *appirapuṭpam,* பெ.(n.) நீர் (சிந்தா.நி.169); water.

[Skt. abhra-puṣpa > த. அப்பிரபுட்பம்.]

அப்பிரபுத்தன் *appiraputtaṉ,* பெ.(n.) கூர்ந்துணர்வில்லாதவன் (திருக்களிற்றுப்.57, உரை); person without acute intellect.

த.வ. மழுங்கன்.

[Skt. a-prabuddha > த. அப்பிரபுத்தன்.]

அப்பிரம்[1] *appiram,* பெ.(n.) முகில் (பிங்.); cloud.

[Skt. abhra > த. அப்பிரம்.]

அப்பிரம்[2] *appiram,* பெ.(n.) 1. வானுலகம்; svarga. 2. வானம்; sky.

[Skt. abhra > த. அப்பிரம்.]

அப்பிரம்[3] *appiram,* பெ.(n.) 1. பொன்; gold. 2. காக்கைப் பொன் (அப்பிரகம்); mica; talc (சா.அக.).

[Skt. abhra > த. அப்பிரம்.]

அப்பிரமண்ணியம் *appiramaṇṇiyam,* பெ. (n.) உதவி வேண்டிக்கூறும் குறிப்புமொழி (கலிங்.455, புது.); an alarmist exclamation meaning a monstrous (lit. urbrāhmanical) deed is perpetrated used in calling for help.

[Skt.a-brahmaṇya>த. அப்பிரமண்ணியம்.]

அப்பிரமாணம் *a-p-piramāṇam,* பெ.(n.) 1. ஆணை (பிரமாணம்) யல்லாதது; that which is untrustworthy, not valid. 2. பொய் ஆணை (பொய்சத்தியம்); false oath. *"அவன் முறையாயத்தில் அப்பிரமாணம் பண்ணினான்".* 3. எல்லைக்குட் படாதது; that which is unlimited, illimitable.

[Skt. a-pramāna > த. அப்பிரமாணம்.]

அப்பிரமாணஐதிகம் *appiramāṇa-aidigam,* பெ.(n.) காணாத தொன்றை உளதென்றுரைக்கும் உலகவுரை (சி.சி. அளவை, 1, மறைஞா.); unattested tradition.

த.வ. இல்லதை உளதெனல்.

[Skt. a-pramāṇa+aitihya>த.அப்பிரமாண ஐதிகம்.]

அப்பிரமாணிக்கம்[1] *a-p-piramāṇikkam,* பெ.(n.) 1. சான்றற்றது; that which is without sufficient proof or authority. 2. கயமைத் தனம் (உ.வ.); dishonesty.

[Skt.a-prāmāṇika>த. அப்பிரமாணிக்கம்.]

அப்பிரமாணிக்கம்[2] *a-p-piramāṇikkam,* பெ.(n.) உறுதியாகக் கொள்ளத் தகாதது (வின்.); untrustworthiness, unreliability.

[Skt.a-prāmāṇika> த. அப்பிரமாணிக்கம்.]

அப்பிரமாணிக்கன் *appiramāṇikkaṉ,* பெ.(n.) பொய்யன் (வின்.); liar.

[Skt.a-prāmāṇika>த. அப்பிரமாணிக்கன்.]

அப்பிரமாதங்கம் *appiramādaṅgam,* பெ.(n.) இந்திரனது யானை (சிந்தா.நி.169); Indra's elephant.

[Skt.abhra-mātaṅga>த. அப்பிரமாதங்கம்.]

அப்பிரமு *appiramu,* பெ.(n.) **அப்பிரமை** (வின்.) பார்க்க; see *a-p-piramai.*

[Skt. Abhramu > த. அப்பிரமு.]

அப்பிரமேயம் *a-p-piramēyam,* பெ.(n.) 1. அளக்கமுடியாதது; that which is immeasurable. 2. ஒரு பேரெண் (வின்.); a hundred quintillions.

[Skt. a-prameya > த. அப்பிரமேயம்.]

அப்பிரமை *appiramai,* பெ.(n.) கீழ்த்திசைப் பெண்யானை (சது.); name of the female elephant of the East, mate of *airāvatam.*

[Skt. abhramu > த. அப்பிரமை.]

அப்பிரயோசனம் *a-p-pirayōšaṉam,* பெ.(n.) பயனின்மை; fruitlessness.

[Skt. a-prayōjaṉa > த. அப்பிரயோசனம்.]

அப்பிராகிருதசரீரம் *a-p-pirākiruda-šarīram,* பெ.(n.) தெய்வத் தன்மைமிக்க மேன்மையான உடல்; divine body, as not made of gross matter.

[Skt. a-prākṛta+šarīra>த. அப்பிராகிருத சரீரம்.]

அப்பிராகிருதம் *a-p-pirākirudam,* பெ.(n.) இயற்கைக்கு அப்பாற்பட்டது (பிரகிருதி சம்பந்தமற்றது) (அஷ்டாதச. தத்வத்.3:51); that which transcends nature.

த.வ. இயற்கை இகவு.

[Skt. a-prākṛta > த. அப்பிராகிருதம்.]

அப்பிராகிருதலோகம் *a-p-pirākiruda-lōgam,* பெ.(n.) வீடுபேறு (பரமபதம்) (குருபர.5); heaven.

[Skt. a-prākṛta+lōka > த. அப்பிராகிருத லோகம்.]

அப்பிராணம் *appirāṇam,* பெ.(n.) 1. ஆவி (உயிர்) அடங்குகை; absence of life. 2. சாவு; death (சா.அக.).

[Skt. a-prāṇa>த. அப்பிராணம்.]

அப்பிராணி *a-p-pirāṇi,* பெ.(n.) 1. பேதை (உ.வ.); harmless, undesigning person. 2. நலிந்தோன்; சத்தியில்லாதவன் (உ.வ.); feeble, weak person. *பாவம், அப்பிராணி, அவனை ஏன் அடிக்கிறீர்கள் (இக்.வ.).*

த.வ.அமைதியாளன், வலியிலான், தீதிலான், வலுவிலி.

[Skt. a-prāṇin > த. அப்பிராணி.]

அப்பிராத்தகாலம் *appirātta-kālam,* பெ.(n.) தோல்வித்தானத் தொன்று (செந்.iii, 13); a fault in argumentation.

[அப்பிராத்த(ம்) + காலம்.]

[Skt. a-prāpta> த. அப்பிராத்தம்.]

கால் (நீட்சி) →காலம்.

அப்பிராப்தி *a-p-pirāpti,* பெ.(n.) அடையாமை; non-attainment, non-acquisition.

த.வ. எய்தாமை.

[Skt. a-pirapti> த. அப்பிராப்தி.]

அப்பிராப்பியம் *a-p-pirāppiyam,* பெ.(n.) 1. அடைதற்கரியது; that which is difficult to obtain. *"அப்பிராப்பிய மென்றுரைக்கின்" (சூத.எக்கிய.பூ.38:15).* 2. அடையத்தகாதது; that which is not fit to obtain. *அப்பிராப்பியமான தேவதாந் தரங்கள்.*

த.வ. எய்தொணாதது.

[Skt. a-prāpya>த. அப்பிராப்பியம்.]

அப்பிராமணன் *a-p-pirāmaṇaṉ,* பெ.(n.) போலிப் பார்ப்பனன்; pseudo-Brāhman.

[Skt.a-brāhmaṇa>த. அப்பிராமணன்.]

அப்பிராமாணிக்கம் *a-p-pirāmāṇikkam,* பெ.(n.) உறுதியாகக் கொள்ளத்தகாதது (வின்.); untrust-worthiness, unreliability.

[Skt.a-prāmāṇika>த.அப்பிராமாணிக்கம்.]

அப்பிராமாணியம் *a-p-pirāmāṇiyam,* பெ.(n.) அதிகாரமின்மை, உறுதியாகாமை, நிலையின்மை (பிரமாணமாகாமை) (சி.சி.8:5, ஞானப்.); invalidity, unauthoritativeness.

[Skt.a-prāmāṇya>த.அப்பிராமாணியம்.]

அப்பிரியதரு *appiriya-taru,* பெ.(n.) 1. பயனில்லாத மரம்; contemptible tree; a tree not useful for any purpose. 2. ஒதியமரம்; Indian ash tree, *Odina wodier* (சா.அக.).

[Skt.a-priya+taru>த. அப்பிரியதரு.]

அப்பிரியம் *a-p-piriyam,* பெ.(n.) 1. வெறுப்பு; dislike, unfriendliness. 2. வெறுப்பான செயல்; disagreeable, offensive act. *"எனக் கப்பிரியத்தை யாற்றினையால்" (நல். பாரத.இந்திர.77).*

[Skt. a-priya > த. அப்பிரியம்.]

அப்பிரியா *appiriyā,* பெ.(n.) **அப்பிரியதரு** பார்க்க; see *appiriya-taru* (சா.அக.).

[Skt.a-priya> த. அப்பிரியா.]

அப்பிருகம் *appirugam,* பெ.(n.) **அப்பிரக பாடாணம்** பார்க்க; see *appiraga-pāḍāṇam* (சா.அக.).

[Skt.abhraka>த.அப்பிருகம்.]

அப்பிரேசம் *appirēšam,* பெ.(n.) **அப்பிரகம்** பார்க்க; see *appiragam* (சா.அக.).

[Skt. abhrasa > த. அப்பிரேசம்.]

அப்பீரகம் *appīragam,* பெ.(n.) நீண்ட மரவகை (மலை.); Indian hog-plum.

அப்பீரா *appirā,* பெ.(n.) சீமையத்தி; foreign fig tree; European edible fig, *Ficus carica* (சா.அக.).

அப்புக்காத்து *appukkāttu,* பெ.(n.) வழக்குரைஞர் (யாழ்ப்.); advocate, supreme-court pleader.

த.வ. வழக்கறிஞர்

[E. advocate> த. அப்புக்காத்து.]

அப்புசம் *appušam,* பெ.(n.) 1. சங்கு; chank. 2. தாமரை; lotus. 3. நீர்க்கடம்பு; water cadamba.

*[**Skt.** ab-ja > த. அப்புசம்.]*

அப்புசன் *appušaṉ,* பெ.(n.) 1. நிலவு; moon. 2. தன்வந்திரி; *Taṉvantiri,* the physician of the gods.

*[**Skt.** ab-ja > த. அப்புசன்.]*

அப்புலோகிதம் *appu-lōgidam,* பெ.(n.) சீமையிலந்தை; foreign jujube, *Zizyphus jujuba* (சா.அக.).

அப்போசுதலர்நடபடிகள் *appōsutalar-naḍa paḍigaḷ,* பெ.(n.) அப்போசுதலரின் கிறித்துவ சமயக் கோட்பாடுகள் குறித்து, பைபிளால் அறியப்படும் ஒரு நூல் (Chr.); name of a book in the Bible, viz., Acts of the Apostles.

[G. apostolos> த. அப்போசுதலர்.]

அப்போசுதலன் *appōsutalaṉ,* பெ.(n.) விவிலியத்தி(பைபிளி)ல் காணப்பெறும் கிறித்துவின் தலைமைச் சீடர் பன்னிருவருள் ஒருவர் (Chr.); Apostle.

[G. apostolos > த. அப்போசுதலன்.]

அப்ரகம் *apragam,* பெ.(n.) **அப்பிரகம்** பார்க்க; see *appiragam* (சா.அக.).

*[**Skt.** abhraka > த. அப்ரகம்.]*

அப்வாப் *apvāp,* பெ.(n.) நிலத்தீர்வையுடன் ஏற்படுஞ் சில்லறைத் தீர்வை (R.T.); miscellaneous head of taxation, in addition to the regular land assessment.

த.வ. சில்லறைவரி

[U. abwab > த. அப்வாப்.]

அப[1] *aba,* இடை.(part.) வடமொழி முன்னொட்டு வகை; a Skt. adverbial or adnominal preposition implying contrariety, inferiority or distance.

*[**Skt.** apa > த. அப.]*

அப[2] *aba,* இடை.(part.) 1. ஏதாவது ஒரு பொருளுக்கு ஏற்படும் இழப்பு அல்லது அழிக்கை; the privation of any object or its attribute. 2. உடம்பினெப்பகுதியிலாவது, உறுப்பு முதலிய அதைச்சார்ந்த இனத்திற்காவது இயல்பாக உண்டான தன்மையை அழித்தல்; (in pathology) privation of any organ or part of the body or depriving them of the nature of their attributes (சா.அக.).

*[**Skt.** apa > த.அப.]*

அபக்கியாதி *aba-k-kiyādi,* பெ.(n.) புகழின்மை; disrepute, disgrace, infamy.

*[**Skt.** apakhyāti > த. அபக்கியாதி.]*

அபக்குரோசம் *abakkurōšam,* பெ.(n.) இகழ்கை (சிந்தா. நி. 181); treating with contempt.

*[**Skt.** apākrōša > த. அபக்குரோசம்.]*

அபக்குவபுத்தி *abakkuva-putti,* பெ.(n.) பக்குவப்படாத அறிவு; immature understanding (சா.அக.).

[அபக்குவ(ம்) + புத்தி.]

*[**Skt.** a - pakva + த. அபக்குவ(ம்).]*

புல் > புலம் = பொருளொடு பொருந்தும் அறிவு. அறிவுறுப்பு, அறிவுநூல் (சு.வி. 36.). புலம் > புலன். புல் > புன் > (புந்தி) > புத்தி = அறிவு, நல்வழி, வழிவகை.

அபக்குவபோசனம் *abakkuva-bōšaṉam,* பெ.(n.) முறையாகச் சமைக்காத உணவா யுண்ணுகை; eating food improperly cooked (சா.அக.).

த.வ. ஏலா உணவு.

[Skt. a-pakva + bhōjana> த. அபக்குவ போசனம்.]

அபக்குவம் *a-bakkuvam,* பெ.(n.) முதிராமை; immaturity, unfitness.

[Skt. a-pakva > த. அபக்குவம்.]

அபக்குவம்[2] *a-bakkuvam,* பெ.(n.) 1. பழுக்காமை; unripeness. 2. செரியாமை; indigestion (சா.அக.).

[Skt. apakva > த. அபக்குவம்.]

அபக்குவன் *a-bakkuvan,* பெ.(n.) பக்குவமடையாதவன் (தாயு. நினைவொ. 8.); immature person, one not yet fit, esp. to be initiated.

[Skt. a-pakva > த. அபக்குவன்.]

அபக்குவி *abakkuvi,* பெ.(n.) **அபக்குவன்** பார்க்க; see *abakkuvan.*

[Skt. a-pakvin > த. அபக்குவி.]

அபகடம் *aba-kaḍam,* பெ.(n.) ஏய்ப்பு; guile, dissimulation. *"அபகட நினைவிகள்" (திருப்பு. 243).*

[Skt. ava-kaṭa > த. அபகடம்.]

அபகதவியாதியன் *abakada-viyādiyan,* பெ.(n.) நோய்வாய்ப்பட்டுப் பிறகு குணமடைந்தவன்; one who has recovered from an illness or a disease, convalescent.

த.வ. நோயகன்றோன்.

[Skt. apa-ghata+vyādhistha>த. அபகத வியாதியன்.]

அபகம் *abagam,* பெ.(n.) இறப்பு (சிந்தா. நி. 170); death.

[Skt. apa-ga > த. அபகம்.]

அபகமம் *aba-gamam,* பெ.(n.) இறப்பு; death (சா.அக.).

[Skt. apaga> த.அபகமம்.]

அபகரி-த்தல் *aba-gari-,* 4. செ. குன்றாவி.(v.t.) கவர்தல்; பிறருக்கு உரியதை நேர்மையற்ற முறையில் எடுத்துக் கொள்ளுதல்; to seize by violence, snatch away, plunder, abduct. *"எனையபகரிக்க வந்த சின்மயம்" (தாயு. ஆசை. 33.). வேறு ஒருவருக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வை இவர் அபகரித்து விட்டாராம் (இ.வ.).*

[Skt. apahar> த.அபகரி-.]

அபகனம் *aba-ganam,* பெ.(n.) உறுப்பு; organ (சா.அக.).

[Skt. apagana > த. அபகனம்.]

அபகாதம் *abagādam,* பெ.(n.) கொல்லுகை (சிந்தா. நி. 169.); killing.

[Skt. apa-ghāta > த. அபகாதம்.]

அபகாரம்[1] *abagāram,* பெ.(n.) தீமை; injury, wrong, mischief. *"அபகார மாற்றச் செயினும்" (நாலடி. 69.).*

[Skt. apa-kāra > த. அபகாரம்.]

அபகாரம்[2] *abagāram,* பெ.(n.) கவர்கை; stealing, snatching away. *சுவர்ணபகாரம்.*

[Skt. apa-hāra > த. அபகாரம்.]

அபகாரி *abakāri,* பெ.(n.) தீமை செய்வோன்; one who does evil to another, wrongdoer.

[Skt. apa-kārin > த. அபகாரி.]

அபகீர்த்தி *aba-kirtti,* பெ.(n.) புகழின்மை; disgrace, ill fame, disrepute.

த.வ. அவப்புகழ்.

[Skt. apa-kirti > த. அபகீர்த்தி.]

அபகுண்டனம் *abakuṇḍanam,* பெ.(n.) சுற்றுகை (சிந்தா. நி. 172.); circling, revolving.

[Skt. ava-kuṇṭhana > த. அபகுண்டனம்.]

அபகோலம் *aba-kōlam,* பெ.(n.) அழிஞ்சில்; sage-leaved alangium, *Alangium lamarckil* (சா.அக.).

அபங்கம் *abaṅgam,* பெ.(n.) 1. கோளகவைப்பு நஞ்சு (மூ.அ.); a mineral poison. 2. மராத்தியரது தெய்வப்பாடல்; *Marāthi* devotional song.

[Skt. a-bhaṅga > த. அபங்கம்.]

அபங்கன்¹ *abaṅgaṉ,* பெ.(n.) குறை வில்லாதவன்; one free from defect, perfect. *"கொல் யானை யபங்கா" (தமிழ்நா. 129.).*

[Skt. a-bhaṅga > த. அபங்கன்.]

அபங்கன்² *a-baṅgaṉ,* பெ.(n.) கடவுள் (ஞான 48.); god as undivided whole.

[Skt. a-bhaṅga > த. அபங்கன்.]

அபங்குரன் *abaṅguraṉ,* பெ.(n.) திண்ணியன்; one who is firm or unshakable. *"அபங்குர செங்கோ செங்கீரை" (குலோத் பிள்ளைத் 22).*

[Skt. a-bhaṅgura > த. அபங்குரன்.]

அபச்சாயை *abaccāyai,* பெ.(n.) 1. நிழலற்றது; shadowless being, as a deity or celestial being. 2. சாவுக்குறி; a sign of death. 3. நிழலை அளந்து நாழிகை கணிப்பதில் மாதத்திற்குரிய தள்ளுபடியளவு: deduction from the length of one's shadow, varying with the time of the year, made in calculating the hour of the day.

[Skt. apacchāyā > த. அபச்சாயை.]

அபச்சி *abacci,* பெ.(n.) அபசி பார்க்க; see *abaši* (சா.அக.).

அபச்சுமாரம் *abaccu-māram,* பெ.(n.) 1. கால்கை (காக்கை) வலிப்பு; epilepsy. 2. பித்து; lunacy (சா.அக.).

அபசகம் *abašagam,* பெ.(n.) சிற்றிலந்தை; small jujube tree, *Scutia indica.*

[Skt. apasaka > த. அபசகம்.]

அபசகுனம் *aba-šaguṉam,* பெ.(n.) தீய குறி ; bad omen.

த.வ. தீக்குறி.

[Skt. apa-ša-guṇa> த. அபசகுனம்.]

அபசங்கம் *abašaṅgam,* பெ.(n.) கால் (சிந்தா. நி. 174.); leg.

[Skt. apa-jaṅgha > த. அபசங்கம்.]

அபசஞ்சாரம் *aba-šañjāram,* பெ.(n.) தொந்தத்தை மாற்றல்; purifying the contagion, disinfection (சா.அக.).

[Skt. apa + sañ-cāra>த. அபசஞ்சாரம்.]

அபசஞ்சாரி *aba-šañjāri,* பெ.(n.) நோயின் தொந்தங்களை மாற்றும் பொருள்; a substance that changes the attributes of a disease (சா.அக.).

[Skt. apa + sañ-cāri > த. அபசஞ்சாரி.]

அபசப்தம் *aba-šapdam,* பெ.(n.) 1. வழூஉ மொழி; faulty expression. 2. தீ மொழி; inauspicious expression. 3. புகழின்மை; disrepute.

[Skt. apa-šabda > த. அபசப்தம்.]

அபசயம்¹ *aba-šayam,* பெ.(n.) கேடு (மச்சபு. திரிபுரவி. 2); destruction, ruin.

த.வ. அழிவு.

[Skt. apa+ jaya > த. அபசயம்.]

அபசயம்² *abašayam,* பெ.(n.) 1. பறிக்கை; taking by force. 2. தோல்வி; defeat.

[Skt. apa-jaya > த. அபசயம்.]

அபசரிதம் *aba-šaridam,* பெ.(n.) தீயொழுக்கம்; improper conduct, misbehaviour.

[Skt. apa-carita > த. அபசரிதம்.]

அபசவ்வியம்¹ *aba-šavviyam,* பெ.(n.) 1. இடப்பக்கம்; left side. *"நலத்த சவ்விய மேயப சவ்விய நாமம்" (வேதாரணி. பிரதக். 13).* 2. மாறுபாடு; contrariety, disorder, as moving from right to left.

[Skt. apa-savya > த. அபசவ்வியம்.]

அபசவ்வியம்² *abašavviyam,* பெ.(n.) 1. வலப்புறம்; right side. 2. எதிர்விளைவு; unfavourableness.

[*Skt. apa-savya* > *த. அபசவ்வியம்.*]

அபசற்பன் *abaśarpaṉ,* பெ.(n.) 1. தூதன்; messenger. 2. ஒற்றன்; spy.

[*Skt. apa-sarpa* > *த. அபசற்பன்.*]

அபசாரசக்தி *abaśāra-śakti,* பெ.(n.) மைய நோக்க ஆற்றல் (புதுமை); centrifugal force.

[*Skt. apa-cāra+śakti* > *த. அபசாரசக்தி.*]

அபசாரப்படு-தல் *apaśara-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) குற்றப்படுதல்; to be guilty of disregard, discourtesy, improper speech towards respectable people. *நான் இறைவனிடத்து அபசாரப்பட்டு விட்டேன்.*

[*அபசார(ம்) + படு-.*]

[*Skt. apa-śāra>த. அபசாரம்.*]

அபசாரம்[1] *aba-śāram,* பெ.(n.) மதிப்புக் குறைவான செயல் (மச்சபு. சந்திரோ. 17.); incivility, disrespectful conduct, irreverence.

[*Skt. apa-śāra* > *த. அபசாரம்.*]

அபசாரம்[2] *aba-śāram,* பெ.(n.) 1. இறப்பு; death. 2. முறையற்ற மருந்துகள் (அவ பத்தியம்); (in medicine) unwholesome or improper regimen.

[*Skt. apa-cāra* > *த. அபசாரம்.*]

அபசி *abaśi,* பெ.(n.) 1. அக்குள், ஆண்குறி, இடுப்பு ஆகியவிடங்களில் உண்டாகும் புற்றுநோய்; a cancer about the regions of the arm-pit root of the penis, and the waist. 2. கண்டமாலை, கடினமும், மினுமினுப்பும் கூட்டி, வலிய முடிச்சுகளைப் போன்ற கட்டிகளைத் தாடைப் புறத்திலும், தொண்டையிலும், கழுத்தைச் சுற்றியும், மாலையைப் போல் ஒன்றன்பின் ஒன்றாக எழுப்பும் ஒருவகைப் புண்; a string of a large crop of hard, glossy, painless, glandular knots gradually growing about the joints of the jaw-bones, the tendons of the neck and about the throat, *Scrofula* (சா.அக.).

த.வ. கண்டப்புற்று, கண்டமாலை.

[*Skt. apasi* > *த. அபசி.*]

அபசிஅம்பர் *abaśi-ambar,* பெ.(n.) கருப்பு நிறமான அம்பர், (வேறு இரண்டு வகைகளாவன; வெள்ளம்பர், கசகசா அம்பர்); black amber. (the other two kinds are: poppy seeds amber, and white amber) (சா.அக.).

அபசித்தாந்தம்[1] *abaśittāndam,* பெ.(n.) தவறான முடிவு; wrong conclusion. *"பன்னு மபசித்தாந்த மாகும்" (பிரபோத 43: 3).*

[*Skt. apa-śiddhānta* > *த. அபசித்தாந்தம்.*]

அபசித்தாந்தம்[2] *abaśittāndam,* பெ.(n.) தோல்வித்தானத் தொன்று (செந். iii, 13.); a fault in argumentation.

[*Skt. apa-śiddhānta* > *த. அபசிந்தாந்தம்.*]

அபசுமாரக்கிரகம் *abaśu-māra-k-kiragam,* பெ.(n.) குழந்தைகளைத் தாக்குமொருவகைக் கோட்குற்றம் (கிரக தோடம்). இது அறிவின்மை, மிக்கஅழுகை, வாயில்நுரை தள்ளல், உடம்பு நாற்றம், முதலிய குணங்களை உண்டாக்கும்; a morbific diathesis common in children, arising from the evil influence of planets. It is marked by senselessness, excessive weeping, frothy saliva from the mouth, fetid smell of the body etc. (சா.அக.).

த.வ. கோள் குற்றம்.

[*Skt.apa-sumāra+gṛha> த.அபசுமாரக் கிரகம்.*]

அபசுமாரகரோகம் *apaśumāraga-rōgam,* பெ.(n.) கால்கை (காக்கை) வலிப்பு (சு.வை.ர.611.); epilepsy.

[*Skt.apasmāra-ka+rōga> த.அபசுமாரக ரோகம்.*]

அபசுமாரம்[1] *apaśumāram,* பெ.(n.) 1. கால்கை (காக்கை) வலிப்பு; epilepsy, as marked by loss of memory. 2. வெறுக்கத்தக்கது; that which is repulsive, disgusting.

[**Skt.** *apasmāra> த.அபசுமாரம்.*]

அபசுமாரம்[2] *abašu-māram,* பெ.(n.) 1. உணர்ச்சியின் தெளிவு நீங்குதல்; loss of senses or sensual feelings. 2. உடம்பினுறுப்புக் கேற்படும் அழிவு; privation of any organ (சா.அக.).

[**Skt.** *apa-sumāra+grha> த.அபசுமாரக் கிரகம்.*]

அபசுமாரரோகம் *abašu-māra-rōgam,* பெ.(n.) பித்தம் மிகுதியாகி உடல் முழுவதும் பரவுவதால் நரம்பைப் பற்றிக்கொண்டு அறிவைக் கலக்கும் நோய்; a nervous affection arising from the deranged condition of bile in the system. It directly affects the mind (சா.அக.).

த.வ. பித்தமயக்கு.

[**Skt.** *apa-šumāra + rōga > த.அபசார ரோகம்.*]

அபசுமாராசூரன் *apasumārāšūran,* பெ.(n.) முயலகன் (தென். இந். க்ஷேத். பக். 252); an Asura over whose body *Nadarāja* dances.

[**Skt.** *apasumāra + šūra>த.அபசுமாரா சூரன்.*]

அபசுவாசம் *aba-šuvāšam,* பெ.(n.) ஐந்து வித வளி (வாயுக்)களில் ஒன்று; one of the five vital airs (சா.அக.).

[**Skt.** *apa+švāsa > த. அபசுவாசம்.*]

அபட்கை *abatkai,* பெ.(n.) பாம்பின் கீழ்வாய் நச்சுப்பல் (வின்.); lower fang of a snake.

[**Skt.** *apatkai > த. அபட்கை.*]

அபட்சியம் *abatciyam,* பெ.(n.) உண்ணத் தகாதது; that which is unfit for consumption or is unwholesome (சா.அக.).

[**Skt.** *abhaksya > த. அபட்சியம்.*]

அபடங்கி *abadangi,* பெ.(n.) பதுமினி சாதிப் பெண்; one of the four classes of women divided according to lust (சா.அக.).

அபத்தக்களஞ்சியம் *abatta-k-kalañjiyam,* பெ.(n.) குற்றச்சேமிப்புக் குவிப்பிடம்; storehouse of errors.

[*அபத்தம் + களஞ்சியம்.*]

[**Skt.** *a-baddha> த. அபத்தம்.*]

குள்>குளஞ்சி>களஞ்சி+அம்>களஞ்சியம். களஞ்சியம் = கொள்ளிடம், இருப்பிடம்.

அபத்தசந்தம் *abatta-šandam,* பெ.(n.) 1. உணவுகொள் வேட்கையின்மை; aversion of food. 2. பசியின்மை; want of appetite (சா.அக.).

[**Skt.** *a.baddha+santa > த. அபத்தசந்தம்*]

அபத்தம் *abattam,* பெ.(n.) 1. வழு; error. 2. பொய்; falsehood. 3. நிலையாமை; instability. *"குடும்பத் தபத்த முணர்கின்"* (ஞானவா. தாசு. 60.); 4. பேரிடர் (யாழ்ப்.); disaster calamity.

த.வ. பொய்ப்பழி.

[**Skt.** *a-baddha > த. அபத்தம்.*]

அபத்தம்பம் *abattambam,* பெ.(n.) மூச்சுக் குழாயின் பிரிவு; bronchial tubes or bronchia (சா.அக.).

[**Skt.** *abaddhamba > த. அபத்தம்பம்.*]

அபத்தம்பமர்மம் *abattamba-marmam,* பெ.(n.) மூச்சுக் குழற் கிளைகள் இரண்டும் கூடுமிடம்; the meeting of the bifurcated branches of the bronchialying on both sides of the breast (சா.அக.).

த.வ. மூச்சுக்குழல் வருமம்.

[**Skt.** *a-baddhamba+marman> த. அபத்தம்பமர்மம்.*]

த. மம்ருமம் > **Skt.** *marman*

அபத்தம்பினி *abattambini,* பெ.(n.) ஒரு பூடு; a plant (சா.அக.).

அபத்தமுகம் *abatta-mugam,* பெ.(n.) இழிசொல் வழங்குவோன்; foul-mouthed.

[*அபத்தம் + முகம்.*]

[**Skt.** *a.baddha>த. அபத்தம்.*]

அபத்திசந்தம் *abatti-šandam,* பெ.(n.) **அபத்த சந்தம்** பார்க்க; see *abatta-šandam* (சா.அக.).

[Skt. abaddha-šanda > த. அபத்திசந்தம்.]

அபத்தியசத்துரு *abattiya-šatturu,* பெ.(n.) நண்டு; crab (சா.அக.).



அபத்தியதை *abattiyadai,* பெ.(n.) மருத்துவச்சி; midwife (சா.அக.).

அபத்தியதோடம் *apattiyadōdam,* பெ.(n.) நோயுற்ற காலத்தில் உட்கொண்ட தகுதியற்ற உணவால் திரும்பிய நோய் (சீவரட். 30.); relapse caused by violation of dietary rules.

[Skt.apathya+dōṣa>த. அபத்தியதோடம்.]

அபத்தியபதம் *abattiya-padam,* பெ.(n.) பெண்குறி; female sexual organ (சா.அக.).

அபத்தியம்[1] *abattiyam,* பெ.(n.) முறையாக (பத்தியம்) மருந்துணாத் தவறு; deviation from prescribed diet, improper or unsuitable diet, in medical treatment. *"அபத்தியஞ் செய்திட றனக்கே கேடு" (வேதா. சூ. 175.).*

த.வ. பத்தியக்கேடு.

[Skt. apathya > த. அபத்தியம்.]

அபத்தியம்[2] *abattiyam,* பெ.(n.) 1. பிள்ளை (சிந்தா. நி. 168.); child. 2. மக்கட்பொது (நாநார்த்த.); human being.

[Skt. apatya > த. அபத்தியம்.]

அபத்திரவியம் *aba-t-tiraviyam,* பெ.(n.) 1. மாசு; want of cleanliness. 2. கலப்பு; admixture (சா.அக.).

அபதந்திரகம் *aba-tandiragam,* பெ.(n.) வளி மிகுதியால் (வாதாதிக்கத்தினால்) மூளை தாக்கப்பட்டு, அதனாலேற்படும் இசிவு முதலான வலி; convulsions as a result of the affection of brain due to the aggravated condition of 'vāyu' in the system, *Apoplectic convulsions* (சா.அக.).

த.வ. மூளை இசிவு.

அபதந்திரம் *aba-tandiram,* பெ.(n.) **அபதந்திரகம்** பார்க்க; see *abatandiragam* (சா.அக.).

அபதர்ப்பணம் *aba-darppaṇam,* பெ.(n.) 1. உண்ணா நோன்பு; fasting. 2. நோன்பு; low diet (சா.அக.).

[Skt. apa+tarppaṇa> த.அபதர்ப்பணம்.]

அபதரோகிணி *abada-rōgiṇi,* பெ.(n.) ஒரு புல்லுருவி; a parasitic plant, *Epidendron tesselloides* (சா.அக.).

அபதாங்கம் *aba-tāṅgam,* பெ.(n.) கருவைக் கரைப்பதாலும் அல்லது கரு தானாகவே அழிவதாலும் காயமடைவதனாலும், மற்றும் வேறு வகைக் காரணங்களினாலும் ஏற்பட்ட மிகுதி அரத்தவொழுக்கினால் உடம்பிலுண்டாகும் அதிர்ச்சி; a condition due to excessive hemorrhage following closely upon an abortion or miscarriage or one incidental to an external blow or injury-shock, is generally incurable (சா.அக.).

த.வ. கருவிழி நடுக்கம்.

அபதார்த்தம் *a-padārttam,* பெ.(n.) 1. உள்ளதல்லாதது; nonentity. 2. பயனற்றது; that which is useless.

[Skt. a-padārtha > த. அபதார்த்தம்.]

அபதானகம் *aba-tāṉagam,* பெ.(n.) 1. எல்லா வகை நோய்களிலும் காணும் இசிவு; a general paroxysm found in all disease. 2. வளியினால் நரம்புகள் தாக்கப்பட்டு அதனாலேற்படும் வலி அல்லது இசிவு; convulsion due to the affection of the nerves or nerve - centres of a functional or natural. 3. கால்கை (காக்கை) வலியாற் காணுமிசிவு; a sharp paroxysm due to epilepsy-fit (சா.அக.).

த.வ. நோய் இசிவு.

[Skt. apa-dāna> த. அபதானகம்.]

அபதானகவாதம் *aba-tāṉaga-vādam,* பெ.(n.) 1. உடம்பு சூடாகி வளி (வாயு) எல்லா நரம்புகளிலும் பரவுவதால், திடீரென எழுந்திருத்தல், உளறுதல், நடத்தல், நகைத்தல் முதலிய கெட்ட குணங்களைக் காட்டுமொரு நோய்; a neurotic disease of a functional origin extending to the nerve centres due to the aggravated condition of vayu in the system. It is marked by the sudden rising of the person from bed, incoherent speech and peculiar laughter, a kind of neurosis. 2.இசிவின்(வாதத்தின்) எழுச்சியினாலெழுந்து, நரம்புகளிற் பரவி எழுந்தெழுந்து விழுவதும், வலிப்புத் தவிர, மற்றபடி இயல்பாக ஏற்படும் கால்கை (காக்கை) வலிப்பு நோய்; a form of disease in which the patient falls to the ground at intervals and exhibits all symptoms of epilepsy except convulsions (சா.அக.).

த.வ. இயல்பலா இயக்க நோய்.

[Skt.apa-dāna+vāta>த.அபதானக வாதம்.]

அபதானம் *abadāṉam,* பெ.(n.) நற்பெருஞ் செயல்; great or noble dead. *"இதுவன்றோ அவனுடைய அபதான மிருக்கிறபடி"* (ஈடு. 2, 8, 8).

த.வ. அருங்செயல்.

[Skt. apa-dāna > த. அபதானம்.]

அபதேசம் *abadēšam,* பெ.(n.) 1. பெரும்புகழ்; fame. 2. நிமித்தம்; cause, motive. 3. தலைக் கீடு உரை (வியாஜம்); pretext. 4. குறி; mark, butt. 5. இடம்; place.

[Skt. apa-dēša > த. அபதேசம்.]

அபதேவதை *aba-dēvadai,* பெ.(n.) ஆரஞர் தெய்வம், தீய தெய்வம்; demon, goblin, evil spirit.

[Skt. apa-dēvatā > த. அபதேவதை.]

அபநயம் *abanayam,* பெ.(n.) 1. பிணி தீர்த்தல்; curing a disease. 2. இறப்பு; death (சா.அக.).

அபநாசி *abanāši,* பெ.(n.) மூக்கின்மை; lack of nose, congenital absence of a nose (சா.அக.).

[Skt. apa-nāšika> த. அபநாசி.]

அபநித்திரை *aba-nittirai,*பெ.(n.)உறக்கமின்மை; sleeplessness inability to sleep, insomnia (சா.அக.).

த.வ. உறக்கக்கேடு.

[Skt. apa-nidrā > த. அபநித்திரை.]

அபநிரியாணம் *abaniriyāṇam,* பெ.(n.) படையெழுச்சி (சிந்தா. நி. 182.); march of troops.

[Skt. apa-niryāṇa > த. அபநிரியாணம்.]

அபப்பிரசாதை *aba-p-pirašādai,* பெ.(n.) வயிற்றிற் கருவழித்தவள்; a female who has had a miscarriage; an aborted woman (சா.அக.).

அபபாத்திரிதன் *abapāttiridaṉ,* பெ.(n.) இனத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டவன் (பிரஷ்டன்) (Cm.); one who is excommunicated.

[Skt. apa-pātrita>த. அபபாத்திரிதன்.]

அபமட்டர் *aba-maṭṭar,* பெ.(n.) வட்டத் திருப்பி; velvet leaf, *Cissampelos pareira* (சா.அக.).

அபமம் *abamam,* பெ.(n.) வான்கோள நடுநேர் வரையிலிருந்து விண்மீனுக்குரிய கோணத் தொலைவு; (Astron.) declination.

த.வ. விலகல் கோணம்.

[*Skt. apama* > *த. அபமம்.*]

அபமரணம் *aba-maranam,* பெ.(n.) 1. **அகால மரணம்** பார்க்க; see *akālamaranam.* 2. இயற்கைக்கு மாறான இறப்பு; unnatural death (சா.அக.).

[*Skt. apa-marana*>*த. அபமரணம்.*]

அபமார்க்கம் *aba-mārkkam,* பெ.(n.) 1. நாயுருவிச் சமூலம்; the plant as a whole; Indian burr, *Achyranthes aspera.* 2. ஆதன் கடைத்தேறும் வழி; the path of emancipation (சா.அக.).

[*Skt. apā-mārga*> *த. அபமார்க்கம்.*]

அபமார்க்கி *abamārkki,* பெ.(n.) பூடுவகை (பதார்த்த. 395.); species of *Achyranthes.*

[*Skt. apā-mārga* > *த. அபமார்க்கி.*]

அபமானம் *abamānam,* பெ.(n.) மானக்கேடு (அபகீர்த்தி) சிந்தா. நி. 173.); dishonour, disgrace.

த.வ. மானக்கேடு.

[*அப + மானம்.*]

[*Skt. ava*> *த. அப.*]

அபமிருத்தியு[1] *aba-miruttiyu,* பெ.(n.) இயற்கைக்கு மாறான இறப்பு; untimely, accidental or unnatural death.

[*Skt. apa-mṛtyu* > *த. அபமிருத்தியு.*]

அபமிருத்தியு[2] *aba-miruttiyu,* பெ.(n.) 1. இடர்; agreat danger. 2. நோய்; illness (from which a person recovers) (சா.அக.).

அபமிருத்து *aba-miruttu,* பெ.(n.) **அபமிருத்தியு** பார்க்க; see *aba-miruttiyu* (சா.அக.).

[*Skt. apa-mṛtyu*> *த. அபமிருத்து.*]

அபயக்கல் *abayakkal,* பெ.(n.) எல்லைக்கல் (இ.வ.); boundary stone, as removing fear of encroachment.

[*அபயம் + கல்.*]

[*Skt. a-bhaya*>*த. அபயம்.*]

அபயகத்தம் *abaya-kattam,* பெ.(n.) 1. அடைக்கலக் கை; right hand of an idol or great person raised in token of dispelling fear and assuring protection. 2. கடவுளின் வலக்கை (அபய) முத்திரை பதிந்த சந்தன வில்லை; brittle cake of sandal containing the impression of the right hand of the idol and presented to worshippers in temples.

[*Skt. a-bhaya + hasta* >*த. அபயகத்தம்.*]

அபயகரம் *abayakaram,* பெ.(n.) **அபயாத்தம்** பார்க்க; see *abayāttam.* *"ஆசை யளிக்கு மபயகரம் பாரேனோ"* (*பட்டினத். 209*).

த.வ. அடைக்கலங்கை, உதவிக்கை.

[*Skt. a-bhaya*> *த. அபயம்.*]

அபயகுலசேகரன் *abayakulaśegaran,* பெ.(n.) திருமுறைகண்ட சோழன் (திருமுறைகண். 1.); a *Cōla-king.*

அபயங்கொடு-த்தல் *abayaṅ-kodu-,* 4 செ. குன்றாவி.(v.t.) அஞ்சலென் றருளுதல்; to dispel fear by raising the hand, give assurance of protection, give refuge.

த.வ. புகல்தரல்.

[*Skt. a-bhaya*> *த. அபயம்.*]

அபயதானம் *abayadānam,* பெ.(n.) அடைக்கலந் தருகை (கம்பரா. வீபீடண. 120); giving assurance of safety or protection.

[*அபயம் + தானம்.*]

[*Skt. a-bhaya* > *த. அபயம்.*]

அபயப்பிரதானம் *abaya-p-piradānam,* பெ.(n.) **அபயதானம்** (பிரபோத. 22, 5) பார்க்க; see *abayadānam.*

[*Skt. a-bhaya+pra-dāna*>*த. அபயப்பிரதானம்.*]

அபயம்[1] *abayam,* பெ.(n.) இலாமிச்சம் (நாநார்த்த); cuscus grass.

[*Skt. a-bhaya*>*த. அபயம்.*]

அபயம்[2] *abayam,* பெ.(n.) மிளகு (வை.மூ.); pepper.

அபயம்³ *abayam,* பெ.(n.) 1. அச்சமின்மை; fearlessness, intrepidity, safety, security. *"அபயமச்சம்" (பிரபோத. 27, 81.).* 2. அடைக்கலம்; refuge, protection. *"மன்னா வுனக் கபயம்" (நளவெ. கலிநீ. 3).* 3. அருள் (பிங்.); god's grace, as refuge.

[Skt. a-bhaya > த. அபயம்.]

அபயம்⁴ *abayam,* பெ.(n.) 1. செவ்வியம்; common or black pepper, *piper nigrum.* 2. ஒரு நறுமணப் புல்; a kind of scented grass (சா.அக.).

அபயமிடு-தல் *abayam-idu-,* 20 செ.கு.வி. (v.i.) அடைக்கலந்தரும்படி கூவுதல்; to call for succour, appeal for protection. *"அபயமிடு குரலறி யாயோ" (திருப்பு. 180.).*

[அபய(ம்) + இடு-.]

[Skt. a-bhaya> த. அபயம்.]

அபயமுத்திரை *abaya-muttirai,* பெ.(n.) தஞ்சமளித்தலைக் காட்டுங் கைக்குறி; pose of the right hand, as of an idol, raised as a sign of protection.

[அபயம் + முத்திரை.]

[Skt. abhaya> த. அபயம்.]

அபயர் *abayar,* பெ.(n.) வீரர் (உரி. நி.); warriors.

[Skt. abhaya> த. அபயர்.]

அபயவத்தம் *abayavattam,* பெ.(n.) இணைக்கை வகை (சிலப். 3, 18, உரை); (*Nāṭya.*) gesture with both hands in which they, in *šuga-tuṇḍam* pose, are placed loosely so as to face the breast.

[Skt. avahittha > த. அபயவத்தம்.]

அபயவரதக்கை *abaya-varada-k-kai,* பெ.(n.) மனக்கருத்தைக் குறிப்பாய் விளக்கும் கை மற்றும் மெய் செய்கை (அபிநயக்கை) வகை (பரத. பாவ. 55.); (*Nāṭya*) a pose of the hands, one indicative of protection, and the other, bestowal of boons.

[அபயவரதம் + கை.]

[Skt.a-bhaya + varada> த. அபயவரதம்.]

அபயவாக்கு *abaya-vākku,* பெ.(n.) அஞ்சலென்னும் அருட்சொல்; assurance of saftey, word of encouragement.

[அபயம் + வாக்கு.]

[Skt. abhaya> த. அபயம்.]

அபயன்¹ *abayaṉ,* பெ.(n.) 1. அருகன் (திவா.); Arhat, as without fear. 2. சோழ மன்னருள் ஒருவன்; *Cōḷa king. "செய்யகோ லபயன்" (பெரியபு. திருமலை. 12.).*

[Skt. a-bhaya > த. அபயன்.]

அபயன்² *abayaṉ,* பெ.(n.) **அபயன்கடுக்காய்** பார்க்க; see *abayaṉkaḍukkāy. "அபயனெனுங் கடுக்காய்" (பதார்த்த. 963).*

அபயன்³ *abayaṉ,* பெ.(n.) அச்சமில்லாதவன் (நாநார்த்த.); fearlessman.

[Skt. a-bhaya > த. அபயன்.]

அபயன்⁴ *abayaṉ,* பெ.(n.) உடம்பில் எலும்புகளைப் பற்றிய நோய்களைப் போக்கும் கருப்பு நிறமானதும் பொதிகை மலையில் விளைவதுமான கடுக்காய்; a species of black Indian myrobalan capable of curing disease affecting the bones in the system. Stanza goes to show that this drug is available in Podigai hills in the Tinnevelly District. *"அபயனெனுங் கடுக்கா யங்க நோ யெல்லாம் அபயமிட் டோட வடிக்கும் – அபையற் கதிக நிறங் கறுப்ப தாகும் விளை பூமி பொதிகை மலையாம் புகல்" (பதார்த்த. சிந்)* (சா.அக.).

[Skt. a-bhaya> த. அபயன்.]

அபயன்கடுக்காய் *abayaṉ kaḍu-k-kāy,* பெ.(n.) கடுக்காய் வகை; species of chebulic myrobalan.

[அபயன் + கடுக்காய்.]

[Skt. abhaya> த. அபயன்.]

அபயாத்தம் *abayāttam,* பெ.(n.) அச்சந்தீர வமைக்குங் கை (சிந்தா. நி. 174.); hand raised in token of dispelling fear and assuring protection.

த.வ. தஞ்சக்கை, அடைக்கலக்கை.

[Skt. a-bhaya+hasta> த. அபயாத்தம்.]

அபயாதிசல்கம் *abayādi-šalgam,* பெ.(n.) மூச்சு, விக்கல் ஆகியவற்றிற்குச் சுக்கும், கடுக்காயும் சேர்த்து செய்த ஒரு வகைப் பிசுபிசுப்பான மருந்து; a paste of dry ginger, and country gallnut prescribed for hard-breathing and hiccough (சா.அக.).

[Skt. a-bhayāti+calka>த.அபயாதி சல்கம்.]

அபயாரிட்டம் *abayāriṭṭam,* பெ.(n.) காய்ச்சல் கட்டி, செரியாமை, நெஞ்சுவலி, காமாலை, குடற்பூச்சி முதலிய நோய்களுக்குக் கொடுக்குமோர் ஆயுள்வேத மருந்து; an ayurvedic preparation given in cases of enlarged spleen, impaired digestion, chronic diarrhoea, heart-disease, jaundise, ascites, worms in the intestines etc. (சா.அக.).

[Skt. a-bhayā-riṣṭa> த. அபயாரிட்டம்.]

அபர்யாப்தகம் *aparyāptagam,* பெ.(n.) பற்றாக்குறை (மேருமந். 713, உரை.); insufficiency.

[Skt. a-paryāptaka > த. அபர்யாப்தகம்]

அபரக்காத்திரம் *abara-k-kāttiram,* பெ.(n.) 1. கால்; leg. 2. பின்கால்; hind leg (in qudrupeds) (சா.அக.).

அபரக்கிரியை *abara-k-kiriyai,* பெ.(n.) சவச்சடங்கு; obsequies. *"அபரக்கிரியை இன்றோடு முடிந்தது".*

த.வ. இறுதிக்கடன்.

[Skt. a-para+kriyā > த. அபரக்கிரியை.]

அபரகாத்திரம் *apara-kāttiram,* பெ.(n.) கால்; leg. *"வேழம்.... மருப்புத்திண்கை யபரகாத் திரங்க டம்மாற்.... கொன்றது" (சீவக. 806.).*

[Skt. a-vara+gātra > த. அபரகாத்திரம்.]

அபரங்கப்பருப்பு *abaranga-p-paruppu,* பெ.(n.) உளுந்து; black gram, *Phaseolus radiatus* (சா.அக.).

அபரசன் *abarašan,* பெ.(n.) தம்பி (சிந்தா. நி. 166.); younger brother.

[Skt. apara-ja > த. அபரசன்.]

அபரசூரியன் *abarasūriyan,* பெ.(n.) அறிவ நடைகளிற் சிறந்தோன்; person pre-eminent in wisdom and character, as a second sun.

[அபர(ம்) + சூரியன்.]

[Skt. a-para> த. அபரம்.]

அபரஞ்சி[1] *abarañji,* பெ.(n.) புடமிட்ட பொன்; refined gold. *"ஆயிரத் தெட்டு மாற்றி னபரஞ்சி" (மச்சபு. தாரகாசுரவ. 26.).*

அபரஞ்சி[2] *abarañji,* பெ.(n.) 1. தங்க ஒள்ளிழை; gold leaf used in setting precious stones. 2. கம்மாறு வெற்றிலை; a species of dark green and pungent thick betel leaf (சா.அக.).

அபரஞ்சித்தூள் *abarañji-t-tūl,* பெ.(n.) 1. தங்கப் பொடி; gold dust. 2. பொன்மணல்; gold ore (சா.அக.).

அபரஞானம் *abara-ñānam,* பெ.(n.) நூலறிவு (ஒழிவி. கிரியை. 11. உரை); that which is not divine wisdom, as knowledge of *šāstras.*

[Skt. a-para+Pkt. ñāna>த.அபரஞானம்.]

அபரத்துவம் *abarattuvam,* பெ.(n.) பின்மை (பிரபோத. 42. 2); being behind, coming after.

[Skt. a-paratva > த. அபரத்துவம்.]

அபரதரன் *abarataran,* பெ.(n.) வெடியுப்பு (வை. மூ.); saltpetre.

அபரதன் *abaradan,* பெ.(n.) வெடியுப்பு; nitre-potassium nitrate (சா.அக.).

அபரதி *abaradi*, பெ.(n.) தாமதிக்கை (சிந்தா. நி. 167.); delay.

[Skt. ava-rati > த. அபரதி.]

அபரநாதம் *abaranādam*, பெ.(n.) சிவக் கொண்முடிபுகளு ளொன்று(வின்.); a *Śivatattuvam*.

[Skt. apara+nātha>த. அபரநாதம்.]

அபரபக்கம் *abarapakkam*, பெ.(n.) தேய்பிறை (கிருஷ்ண பட்சம்); the dark or latter half of the lunar month.

த.வ. இருட்பக்கம்.

[Skt. apara> த. அபர(ம்).]

அபரபட்சம் *abarapaṭcam*, பெ.(n.) **அபரபக்கம்** பார்க்க; see *abarapakkam*.

[Skt. a-para+pakṣa > த. அபரபட்சம்.]

அபரபுத்தி *abaraputti*, பெ.(n.) பின்புத்தி (வின்.); indiscretion, afterthought.

அபரபோகம் *abara-bōgam*, பெ.(n.) இம்மை மறுமைகளில் துய்க்கத்தக்க இன்பங்கள் (சி.சி. 8, 18.); pleasures enjoyed in this world and the next.

[Skt. a-para+bhōga > த. அபரபோகம்.]

அபரம் *abaram*, பெ.(n.) 1. பின் (பிங்.); latter, being after in time or place. 2. முதுகு (பிங்.); back. 3. யானையின் பின்னங்கால் (திவா.); hind leg of an elephant. 4. பொய் (பிங்.); falsehood. 5. நிரயம் (பிங்.); hell. 6. காப்பு (பிங்.); coat of mail. 7. மேற்கு; west. "*அபர திசை*". 8. சவ (பிண)ச் சடங்கு; obsequies. 9. தோணியின் பின்பக்கம்; stern of a ship.

[Skt. a-para > த. அபரம்.]

அபரமார்க்கம் *abara-mārkkam*, பெ.(n.) வெண்ணாயுருவி; a white species of நாயுருவி. a plant, Indian burr, *Acchyrathes aspera* (சா.அக.).

அபரமுத்தி *abara-mutti*, பெ.(n.) 1. பதமுத்தி; inferior state of bliss, attainment of heavens of deities, opp to paramutti. 2. தூய மெய்ப்பொருள் (தத்துவங்)களிற் பெறும் வாழ்வு; (*Śaivam*) incomplete liberation which consists in enjoyment of bliss in any one of the *śutta-tattuvam*.

[Skt. a-para+mukti > த.அபரமுத்தி.]

அபரராத்திரம் *abara-rāttiram*, பெ.(n.) நள்ளிரவிற் கடுத்த சாமம்; small hours of the night.

[Skt. a-para-rātra > த. அபரராத்திரம்.]

அபரவங்கம் *abara-v-aṅgam*, பெ.(n.) உடம்பை வில்லைப் போல் பின்புறமாக வளைக்குமோர் ஊதை (வாத) நோய்; a tetanic condition of the muscles, especially of the back, whereby there is an arching backward of the trunk which thus rests upon head and heels-opisthrotonus (சா.அக.).

த.வ. வில்லூதை.

[Skt. a-para+aṅga> த. அபரவங்கம்.]

அபரவயசு *abara-vayaśu*, பெ.(n.) முதிரகவை; old age.

[Skt. a-para > த. அபரம்.]

அபரவலி *abara-vali*, பெ.(n.) முதுகு வலி; pain in the back-Notalgia (சா.அக.).

[அபரம் + வலி.]

[Skt. apara > த. அபரம்.]

அபரவாக்கியம் *abara-vākkiyam*, பெ.(n.) பூகோள கணிதத்தில் பிழை தீர்க்க ஏற்பட்ட எண்மான வகை (வின்.); (Astron.). a resulting equation or correction following a calculation.

[Skt. a-para+vākya > த.அபரவாக்கியம்.]

அபரவாகீசுவரர் *abara-vāgīśuvarar*, பெ.(n.) (சிவபேதம்) சிவன் சிவை வேறுபாடுகளுள் ஒன்று; a form of *Śivan*.

[Skt.a-para+vāgīśuvarar>த.அபரவாகீசுவரர்.]

அபரவாகீசுவரி *abara-vāgīśuvari*, பெ.(n.) வித்தமிழ்தின் ஆற்றல் (விந்துசக்தி)

(சி.போ.பா, 2, 4, பக். 233.); a form of divine energy.

[Skt. a-para+vāgišuvari>த. அபரவாகீசுவரி.]

அபரவிந்து *abara-vindu,* பெ.(n.) **அபரவாகீசுவரி** (சி.போ. 2, 4, பக். 223.) பார்க்க; see *abara-vāgišuvari.*

[அபர(ம்) + விந்து.]

[Skt. a-para> த. அபர(ம்).]

அபரா *abarā,* பெ.(n.) நஞ்சுக்கொடி; navel string, umbilical cord (சா.அக.).

அபராங்கம் *abarāṅgam,* பெ.(n.) முதுகுப்புறம்; the hinder part of the body, back. *"வேடனத னபராங்கம் பிளக்க வெய்தான்" (பாரத. அருச்சுனன் தவ. 90.).*

[Skt. a-para+aṅga > த. அபராங்கம்.]

அபராசி *abarāši,* பெ.(n.) விட்டுணுக்கிராந்தி (நாமதீப.); *viṭṭuṇukkirāndi,* a medicinal plant.

[Skt. aparāji > த. அபராசி.]

அபராசிதம் *abarāšidam,* பெ.(n.) விட்டுணுக் கிராந்தி; Vishnu plant, clitoria ternatia alias *Evolvulus, alsinoides* (சா.அக.).

[Skt. aparājita> த. அபராசிதம்.]

அபராசிதன்[1] *abarāšidaṉ,* பெ.(n.) 1. சிவன்; *Šivaṉ,* 2. திருமால்; *Viṣṇu.*

[Skt. aparājita > த. அபராசிதன்.]

அபராசிதன்[2] *abarāšidaṉ,* பெ.(n.) வெல்லப் படாதவன் (சங். அக.); he who is unconquered, invincible.

[Skt. a-parā-jita > த. அபராசிதன்.]

அபராசிதை *abarāšidai,* பெ.(n.) 1. கொற்றவை (துர்க்கை); *Durgā.* 2. விட்டுணுக்கிராந்தி; a medicinal plant.

[Skt. a-parājitā > த. அபராசிதை.]

அபராணம் *abarāṇam,* பெ.(n.) பிற்பகல்; afternoon, last watch of the day. *"அபராணப் போழ்தி னடகிடுவ ரேனும்" (நாலடி, 207.).*

[Skt. aparāhṇa > த. அபராணம்.]

அபராத்திரம் *abarāttiram,* பெ.(n.) கடையாமம்; the last part of the night (சா.அக.).

அபராதகாணிக்கை *abarāda-kāṇikkai,* பெ.(n.) செலுத்தற்குரிய நேர்த்திக் கடனைச் சரியாகச் சேர்ப்பிக்காத பிழைக்காகச் செலுத்தும் காணிக்கை (கொ.வ.); gift of god made in expiation of failure to present the original gift in due time as vowed.

த.வ. தப்புக் காணிக்கை.

[அபராத(ம்) + காணிக்கை.]

[Skt. apa-rādha> த.அபராதம்.]

அபராதம் *abarādam,* பெ.(n.) 1. குற்றம்; offence, transgression, fault, crime, sin. *"அடியனேன் முன்னஞ் செய்த வபராதம்" (திருவிளை. நான்மாடக் 25.).* 2. தண்டம்; fine, penalty.

த.வ. தப்பு, தப்புக் கட்டணம்.

[Skt. apa-rādha > த. அபராதம்.]

அபராதசாபணம் *abarāda-šābaṇam,* பெ.(n.) மன்னிப்புக் கோருகை (குருபரம். 115.); seeking forgiveness (சா.அக.).

[Skt. apa-rādha+ kṣāpaṇa>த. அபராதசா பணம்.]

அபராதி *abarādi,* பெ.(n.) தீங்கிழைத்தோன்; offender, guilty person. *"உறவினுக் கபராதியும்" (சிவதரு. பாவ. 68.).*

[Skt. apa-rādhin > த. அபராதி.]

அபராவதாரம் *abarāvadāram,* பெ.(n.) முன்னெடுத்த தோற்றரவின் மாறுபடு தோற்றரவு; new, different incarnation.

[Skt. apara+ava-tāra > த. அபராவதாரம்]

அபரான்னம் *abarāṉṉam,* பெ.(n.) 1. நண்பகலை யடுத்து வரும் ஆறு நாழிகைப் பொழுது; the period of the day which follows noon up to 2.24 p.m. (சா.அக.).

த.வ. உச்சிசாய்வு.

அபரிக்கிரகம் *abarikkiragam,* பெ.(n.) 1. பிறர்பால் ஏற்காமையாகிய நோன்பு; the vow of not receiving anything from another. 2. உரிமைச் சொத்துகளை நீக்கி விடுகை (மேருமந். பாயி XV); (Jaina.) renouncing property.

[Skt. a-parigraha > த. அபரிக்கிரகம்.]

அபரிச்சடம் *abari-c-cadam,* பெ.(n.) 1. கருப்பம் முழுவதுமாகுமுன் பிறத்தல்; not born fully developed. 2. குறை (அகால)ப் பிறப்பு; premature birth (சா.அக.).

அபரிச்சதம் *abari-c-cadam,* பெ.(n.) உடையின்மை; nakedness, nudity (சா.அக.).

அபரிச்சின்னம் *aparicciṉṉam,* பெ.(n.) அளவிட முடியாதது; that which is unlimited. *"எம்பெருமானது அபரிச்சின்னமான குணங்கள்".*

[Skt. a-paricchinna > த. அபரிச்சின்னம்.]

அபரிசகுட்டம் *abariša-kuṭṭam,* பெ.(n.) உடம்பு முழுவதும் வீங்கி வெடித்து அதினின்றும் கறுப்பு இரத்தம் வடிந்து, தொடக் கூடாத வலியை யுண்டாக்கும் ஒருவகைக் குட்டம்; a kind of leprosy analogons to syphilis, attended with swelling, ulceration and a discharged of venous blood. The prodromal symptoms are associated with hyperesthesia of skin (சா.அக.).

த.வ. வெடிப்புக்குட்டம்.

அபரிசரம் *abarišaram,* பெ.(n.) தொலைவு (தூரம்) (சிந்தா. நி. 173.); distance.

[Skt. a-parisara > த. அபரிசரம்.]

அபரிதை *abaridai,* பெ.(n.) முயக்க மறியாத பெண்; a woman who has had no carnal knowledge of man, a virgin or an unmarried woman (சா.அக.).

[Skt. aparita > த. அபரிதை.]

அபரிபூதம் *abari-būdam,* பெ.(n.) 1. முதிராதது; that which is not matured. 2. திமிங்கிலம்; whale (சா.அக.).

[Skt. a-pari-buta > த. அபரிபூதம்.]

அபரிமிதம் *aparimidam,* பெ.(n.) அளவின்மை (பிங்.); unlimitedness, immeasurable ness, immensity.

[Skt. aparimita > த. அபரிமிதம்.]

அபருடவாக்கியம் *aparuḍa-vākkiyam,* பெ.(n.) கொடுமையற்ற சொல் (தக்கயாகப். 664, உரை.); agreeable speech.

த.வ. இன்சொல்.

[Skt.a-paruṣa+vākya>த.அபருடவாக்கியம்.]

அபரூபம் *abarūbam,* பெ.(n.) அழகின்மை; gross deviation from, beauty; disfigurement; defornity (சா.அக.).

[Skt. apa+rūpa > த. அபரூபம்.]

*த-உருவம் > **Skt.** rūpa.*

அபரை *abarai,* பெ.(n) **அபரா** பார்க்க; see *abarā* (சா.அக.).

அபரோட்சஞானம் *abarōṭca-ñāṉam,* பெ.(n.) தெளிவான காட்சி அறிவு (பிரத்தியட்சஞானம்) (வேதா. சூ. 23, உரை.); direct cognition as arising from the senses or such other sources of perception.

த.வ. காட்சியறிவு.

*[Skt.a-parōkṣa+**Pkt.** ñāna>த. அபரோட்ச ஞானம்.]*

அபரோட்சம் *abarōṭšam,* பெ.(n.) அபரோட்ச ஞானம் (வேதா. சூ. 115.) பார்க்க; see *abarōṭca-ñāṉam.*

[Skt. aparōkṣa > த. அபரோட்சம்.]

அபல் முசுக்கு *abal-mušukku,* பெ.(n.) கத்தூரி வெண்டை; musk bendy, *Hibiscus abelmoschus* (சா.அக.).

அபல்லியம் *aballiyam,* பெ.(n.) நோய்; sickness (சா.அக.).

அபலந்துரு *abalanduru,* பெ.(n.) பயன்தரா மரம்; (Rd.); non-fruit bearing tree, as acrub, young trees.

[Skt. a-phala+dru > த. அபலந்துரு.]

அபலநாடி *abala-nāḍi,* பெ.(n.) குறை நாடி; feeble pulse, *Arachnoid pulse* (சா.அக.).

[அபலம் + நாடி.]

[Skt. a-phala>த. அபலம்.]

அபலம்[1] *abalam,* பெ.(n.) பயனின்மை; uselessness, barrenness. *"பலாபல மிவற்றில் விருப்பமற" (ஞானவா. விரத. 10).*

[Skt. a-phala > த. அபலம்.]

அபலம்[2] *abalam,* பெ.(n.) வலியின்மை; weakness, as want of strength.

[Skt. a-bala > த. அபலம்.]

அபலம்[3] *abalam,* பெ.(n.) 1. காய்ப்புமாறிய மரம் (R.T.); tree which is past fruit-bearing. 2. இழப்பு (நட்டம்) (பாண்டி); loss.

[Skt. a-phala > த. அபலம்.]

அபலம்[4] *abalam,* பெ.(n.) கொழு (நாநார்த்த); plough-share.

[Skt. apala > த. அபலம்.]

அபலம்[5] *abalam,* பெ.(n.) 1. மலடு; unfruitfulness, unproductiveness. 2. ஆற்றலரி; a plant, *Tamarix indica.* 3. சோற்றுக் கற்றாழை; aloe (Aloe perfoliate). 4. ஒரு பூடு; a plant, *Tapia crataeva* (சா.அக.).

அபலன் *abalan,* பெ.(n.) வலியற்றவன்; weak person.

[Skt. a-bala > த.அபலன்.]

அபலாடிகை *abalāḍigai,* பெ.(n.) தாகம் (சிந்தா. நி. 178.); thirst.

த.வ. நீர்வேட்கை.

[Skt. apalāṣikā > த. அபலாடிகை.]

அபலாபனம் *abalābanam,* பெ.(n.) மறைக்கை; concealing, hiding. *"இதனை அபலாபனம் செய்தல் யார்க்கும் ஒல்லாது" (சிவசம. 54.).*

[Skt. apalāpana > த. அபலாபனம்.]

அபலை *abalai,* பெ.(n.) ஏதும் செய்வதறியாப் பெண்; woman, as weak.

த.வ. அவலி, அவலை.

[Skt. a-balā > த. அபலை.]

அபவம் *abavam,* பெ.(n.) **அபலம்** பார்க்க; see *abalam.*

[Skt. apava > த. அபவம்]

அபவர்க்கம்[1] *aba-varkkam,* பெ.(n.) 1. வீடுபேறு (முத்தி); emancipation of the soul from bodily existence, final liberation. *"அபவர்க்கமு மற்றடையான்"* (ஞானா. 3, 10); 2. **அபவருக்கம்** பார்க்க; see *abavarukkam.*

[Skt. apavarga > த. அபவர்க்கம்.]

அபவர்க்கம்[2] *abavarkkam,* பெ.(n.) ஈகம் (நாநார்த்த.); bounty, gift.

[Skt. apa-varga > த. அபவர்க்கம்.]

அபவரம் *abavaram,* பெ.(n.) நோயுண்டாக்கும் பேய்; a demon causing illness (சா.அக.).

அபவருக்கம் *aba-v-arukkam,* பெ.(n.) பிறப்பறுகை; excemption from further transmigration (சா.அக.).

[Skt. apa + varga> த. அபவருக்கம்.]

அபவருத்தம் *abavaruttam,* பெ.(n.) அழிக்கை (சிந்தா. நி. 172.); destroying.

[Skt. apa-vṛtta > த. அபவருத்தம்.]

அபவனம் *aba-vanam,* பெ.(n.) 1. வளிவழங்கா விடம்; an ill-ventilated place. 2. பூந்தோட்டம்; flower-garden (சா.அக.).

[Skt. apa-vana > த. அபவனம்.]

அபவாக்கு *aba-vākku,* பெ.(n.) தீங்கு விளைக்குஞ் சொல் (சினேந். 454. உரை.); evil word.

த.வ. தீச்சொல்.

[அப + வாக்கு.]

[Skt. apa > த.அப.]

அபவாதசூத்திரம் *abavāda-sūttiram,* பெ.(n.) ஒரு நூற்பாவான் கொடு (விதி)க்கப் பட்டதற்கு முற்றும் மாறுபாடாகக் கொடு (விதி)க்கும், வேறு நூற்பா; a *sūtra* whose import is opposed to that of another *sūtra.*

த.வ. முரண்நூற்பா.

[Skt.apa+vāda+sūtra>த.அபவாத சூத்திரம்.]

அபவாதம் *aba-vādam,* பெ.(n.) 1. பழி; calumny, slander, reproach. "*உரையா தொழிதிமற் றொருவர்க் கபவாதம்*" (சேதுபு. கவிசம்பு. 61.); 2. புகழ்க்கேடு, அவகீர்த்தி; bad reputation.

[Skt. apa-vāda > த. அபவாதம்.]

அபவாரணம் *aba-v-āraṇam,* பெ.(n.) சாவு; death (சா.அக.).

அபவித்தன் *abavittaṉ,* பெ.(n.) பெற்றோரால் விடப்பட்டுப் பிறரால் ஏற்று(தத்து)க் கொள்ளப்பட்ட மகன்; son abandoned by his parents and adopted by a stranger, one of twelve *puttiraṉ,* q.v.

[Skt. apa-viddha > த. அபவித்தன்.]

அபவித்திரம் *abavittiram,* பெ.(n.) தூய்மையின்மை; uncleanliness (சா.அக.).

[Skt. apa+viddhra > த. அபவித்திரம்.]

அபவித்திரன் *abavittiraṉ,* பெ.(n.) தூய்மையில்லாதவன்; one who is not clean (சா.அக.).

[Skt. apa+viddhra > த. அபவித்திரன்.]

அபவிருத்தி *aba-virutti,* பெ.(n.) குறைவு (சிந்தா. நி. 172.); decrease.

[Skt. apa-vṛddhi > த. அபவிருத்தி.]

அபவேட்டிதம் *aba-vēṭṭidam,* பெ.(n.) குறிப்புணர்த்தும் உடலுறுப்பசைவியக்கம் (சீவக. 1257, உரை.); (*Nāṭya*) a gesture.

[Skt. apavēṣṭita > த. அபவேட்டிதம்.]

அபனாதி *abaṉādi,* பெ.(n.) நிலத்துளசி; basil (சா.அக.).

அபாக்கியம் *a-bākkiyam,* பெ.(n.) வாய்ப்புக் கேடு; wretchedness, misfortune.

த.வ. போகூழ்.

[Skt. a-bhāgya > த. அபாக்கியம்.]

அபாகசாகம் *abāgaśāgam,* பெ.(n.) இஞ்சி (பரி.அக.); ginger.

[Skt. apāka-śāka > த. அபாகசாகம்.]

அபாகம் *abāgam,* பெ.(n.) 1. முதிராமை; immaturity. 2. இயலாக் குணம்; முடியாமை; incapability of digesting food; the state of indigestion (சா.அக.).

[Skt. a-pāka> த. அபாகம்.]

அபாகிரோகம் *abāgi-rōgam,* பெ.(n.) உடம்பில் உலர்ந்த கொப்புளங்கலெழும்பி நீண்ட நாள் வரைக்கும் இறக்கங் கொள்ளாமல் துன்பத்தை விளைவிக்குமோர் அம்மை நோய்; an abortive form of variola in which the vesicles which spread over several parts of the body dry before reaching the pustular stage and given them a blackish appearance. It takes a long time for the falling off of the scabs or crusts and thus puts the patient to a great deal of suffering, *Variola vaccina strophica* (சா.அக.).

[Skt. a-pāka+rōga> த. அபாகிரோகம்.]

அபாங்கம்[1] *abāṅgam,* பெ.(n.) கடைக்கணிப்பு (சூடா.); looking from the outer corner of the eye, gracious attention.

[Skt. apaṅga > த. அபாங்கம்.]

அபாங்கம்[2] *abāṅgam,* பெ.(n.) நெற்றிக்குறி (நாநார்த்த.); sectarian mark on the forehead.

[Skt. apāṅga > த. அபாங்கம்.]

அபாங்கமர்மம் *abāṅga-marmam* பெ.(n.) மேல்வாய், கண், மூக்கு இவற்றின் நாடிகளுக்கு ஏற்படும் எட்டாத தொடர்பு; a pathologic formation of a passage between the arteries of the upper mouth, eyes and the nose, *Anastomosis of the infra-orbital artery* (சா.அக.).

த.வ. எட்டாவருமம்.

அபாசிரயம் *abāśirayam,* பெ.(n.) பந்தர் (சிந்தா.நி.183); pandal, pavilion.

த.வ. பந்தல்

[Skt. apāśraya > த. அபாசிரயம்.]

அபாசீனம் *abāśīṉam,* பெ.(n.) தெற்கு (சிந்தா.நி.183); south.

[Skt. apācīna>த. அபாசீனம்.]

அபாடம் *abāḍam,* பெ.(n.) தவறு; mistake. *"உலகபாட மனுவென வுலாவுவன" (தக்கயாகப். 27).*

த.வ. பிழை, வழு

[Skt. a-pātha>த. அபாடம்.]

அபாடவம் *abāḍavam,* பெ.(n.) 1. நோய்; disease. 2. அழகுக்கேடு; deviation from beauty, ugliness (சா.அக.).

அபாண்டம் *abāṇḍam,* பெ.(n.) இடுபழி (நிந்தை); deliberate evil report, slander. *"அபாண்டமாய் என்மேற் சொல்லாதே"* (இ.வ.).

த.வ. இடுவந்தி, அடாப்பழி

[Skt. abhaṇḍa>த. அபாண்டம்.]

அபாண்டவாத்திரம் *abāṇḍa-v-āttiram,* பெ.(n.) பாண்டவ குலத்தை அழிக்கப் பயன்படுத்திய அம்பு; missile thrown out with a view to exterminating the *Pāṇḍava* clan.

[Skt.apāṇḍa+astra>த.அபாண்ட வாத்திரம்.]

அஸ்திரம்→அத்திரம்.

அபாண்டவியம் *apāṇḍaviyam,* பெ.(n.) **அபாண்டவாத்திரம்** பார்க்க; see *apāṇḍa-v-āttiram.*

[Skt. a-pāṇḍavya>த. அபாண்டவியம்.]

அபாத்திரம் *a-pāttiram,* பெ.(n.) தானம் பெறத் தகுதியற்றவன்; unfit recipient, person unworthy to receive a gift. *"இரப்பான் றன்னை யபாத்திரமென் றுன்னி" (சைவச. பொது. 421).*

[Skt. a-pātra>த.அபாத்திரம்.]

அபாதரன் *abādaraṉ,* பெ.(n.) வெடியுப்பு; nitre-potassic nitrate (சா.அக.).

அபாதானம் *abādāṉam,* பெ.(n.) ஐந்தாம் வேற்றுமைப் பொருள் (தொல். சொல். குறிப்பு, பக். 115); (gram.) the sense of the ablative case.

[Skt. apā-dāna>த. அபாதனம்.]

அபாநம் *abānam,* பெ.(n.) 1. **அபானம்**[1] பார்க்க; see *abāṉam.* 2. **அபானம்**[2] பார்க்க; see *abāṉam.* 3. பாலகம் (மூலாதரம்); (in yoga philosophy) one of the six psychic centres of the human body i.e., the posteriors includings the hip-pelvic plexus. 4. கீழ்; down (சா.அக.).

[Skt. a-pānīya>த. அபாநம்.]

அபாபம் *abābam,* பெ.(n.) இறப்பு; death (சா.அக.).

[Skt. apāpa>த. அபாபம்.]

அபாம்பதி *abāmpadi,* பெ.(n.) கடல் (சேதுபு. சேதுயாத். 13); sea.

[Skt. apām-pati>த. அபாம்பதி.]

அபாமார்க்கசாரம் *abā-mārkka-šāram,* பெ.(n.) நாயுருவிச் சத்து அல்லது சாம்பல்; the essence or ashes obtained from the plant, Indian burr (சா.அக.).

[அபமார்க்க(ம்) + சாரம்.]

[Skt.apā-mārga >த.அபாமார்க்கம்.]

சாறு>சாறம்>சாரம்.

அபாமார்க்கம் *abāmārkkam,* பெ.(n.) பூடுவகை (மலை); species of Achyranthes.

[Skt. apāmārga>த. அபாமார்க்கம்.]

அபாமாருதமூலி *abā-māruda-mūli,* பெ.(n.) **அபரமார்க்கம்** பார்க்க; see *abara-mārkkam* (சா.அக.).

[அபாமாருத(ம்) + மூலி.]

[Skt. apā+māruta>த. அபாமாருதம்.]

அபாயக்கொடி *abāya-k-koḍi,* பெ.(n.) பேரிடர் குறிக்கும் கொடி; danger-signal, red flag.

த.வ. ஏதக்கொடி.

[அபாய(ம்) + கொடி.]

[Skt. apāya> த. அபாயம்.]

கொடு→கொடி→வளைந்து படரும் நிலைத் திணை வகை (வே.க.167).

அபாயகரம் *abāya-karam,* பெ.(n.) கடுந்தொல்லை (ஆபத்து) (கொ.வ.); dangerous condition.

[Skt. apāya+kara>த. அபாயகரம்.]

அபாயச்சங்கிலி *abāya-c-cangili,* பெ.(n.) மின் தொடர்வண்டியில் செல்லும் வழிப்போக்கர்களுக்கு ஏதமுறு நேரத்தில் வண்டியை உடன் நிறுத்திடுவதற்குரிய தொடரி; alaram chain (in trains).

த.வ. ஏதத்தொடரி.

[அபாய(ம்)+சங்கிலி.]

[Skt. apāya>த. அபாயம்.]

அங்கு→சங்கு=வளைந்தது. சங்கு→சங்கிலி.



அபாயச்சங்கு *abāya-c-cangu,* பெ.(n.) பேரிடர் ஏற்படுமாயின் அதனை அறிவிப்பதற்கான பெருக்கொலிக் கருவி; siren (for warning or to signify danger.). *தீப்பற்றத் தொடங்கியதும் அபாயச்சங்கு அலறியது.*

த.வ. ஏதச்சங்கு.

[அபாயம் + சங்கு.]

[Skt. apāya>த. அபாயம்.]

சருக்கு→சக்கு→சங்கு.

அபாயதந்திரம் *abāyatandiram,* பெ.(n.) ஏமாற்றுந் தந்திரம் (R.) ; artifice, trick.

[Skt. apāya>த. அபாயம்.]

அபாயம்[1] *abāyam,* பெ.(n.) பேரிடர், ஏதம் (ஆபத்து); calamity, danger, misfortune. *"அபாய மொருநாளு மில்லை" (நல்வழி, 15).*

த.வ. ஏதம், ஊறு, இடுக்கண்.

[Skt. apāya>த. அபாயம்.]

அபார்த்தகம் *abārttagam,* பெ.(n.) தோல்வித் தானத் தொன்று (செந்.111, 13); a fault in argumentation.

[Skt. apārthaka> த. அபார்த்தகம்.]

அபார்த்தம் *abārttam,* பெ.(n.) தவறான பொருள்; erroneous meaning.

[Skt. apārtha>த. அபார்த்தம்.]

அபாரசக்தி *abāra-šakti,* பெ.(n.) அளவிலாற்றல்; unlimited power.

த.வ. பேராற்றல்.

[Skt. a-pāra+šakti>த. அபாரசக்தி.]

அபாரணக்காலம் *abāraṇa-k-kālam,* பெ.(n.) உணவேற்கவொண்ணா வேளை; time not intended for taking food; untimely (சா.அக.).

[அபாரணம் + காலம்.]

[Skt. a-pāraṇā> த. அபாரணம்.]

அபாரணை *abāraṇai,* பெ.(n.) உண்ணாமை (சிந்தா.நி.185); fasting.

[Skt. a-pāraṇā> த. அபாரணை.]

அபாரம்[1] *abāram,* பெ.(n.) 1. நல்லை; முதல் தரமானது; exceptionally good, excellent or superb. 2. அளவற்றது; immense. *அவர் புதுமையில் பற்றுள்ளவராயினும் பழமையிலும் அபார நம்பிக்கை கொண்டவர்.*

த.வ. அருமை.

[Skt. a-pāra>த. அபாரம்.]

அபாரம்[2] *abāram,* பெ.(n.) சிறப்பானது, எல்லையற்றது (திவா.); that which is boundless, as not having an opposite shore.

[Skt. a-pāra>த. அபாரம்.]

அபாலங்கம் *abālangam,* பெ.(n.) கொன்றை; a plant, *Cassia fistual* (சா.அக.).

அபாவம்[1] *abāvam,* பெ.(n.) 1. இன்மை; unexistence, negation. *முன்னபாவம், அழிவுபாட்டபாவம், முழுதுமபாவம், ஒன்றினொன்ற பாவம் என (தருக்க.சங்.8)வும், என்றுமபாவம், இல்லத னபாவம், ஒன்றினொன்றபாவம், உள்ளத னபாவம், அழிவுபாட்ட பாவம் (சி.சி.அளவை. 1, மறைஞா.) எனவும் கூறுகிறது.* 2. ஓர் அளவை (சி.சி. அளவை. 1); non-congnition relied upon us proof of negation, one of six *pirmāṉam,* q.v.

*[**Skt.** a-bhāva>த. அபாவம்.]*

அபாவம்[2] *abāvam,* பெ.(n.) கேடு (நாநார்த்த.); ruin, destruction.

*[**Skt.** a-bhāva>த. அபாவம்.]*

அபாவம்[3] *abāvam,* பெ.(n.) கடுக்காய்; gall-nut, *Chebalic Myrobalan-Terminalia chebula* (சா.அக.).

அபாவயோகம் *abāva-yōgam,* பெ.(n.) கரணங்களுக் கெட்டாத இறையுள் மனமொன்று (மனோலயமா)வதற்காகச் செய்யும் ஐவகை ஓகத்திலொன்று; one of the five stages of yoga intended for bringing about the union of the mind with the divine spirit (சா.அக.).

[அபாவ(ம்) + ஓகம்.]

*[**Skt.** a-bhāva>த.அபாவம்.]*

*த. ஓகம் > **Skt.** yōga.*

அபானக்கடுப்பு *abāṉa-k-kaḍuppu,* பெ.(n.) எரு (மல)வாய்க் கடுப்பு; irritation of the rectum (சா.அக.).

[அபானம் + கடுப்பு.]

*[**Skt.** apāna>த. அபானம்.]*

கடு→கடுப்பு.

அபானக்காந்தல் *abāṉa-k-kāndal,* பெ.(n.) எருவாய் எரிச்சல்; burning sensation or inflammation of the anus or the rectum-*proctitis* (சா.அக.).

[அபானம் + காந்தல்.]

*[**Skt.** apāna>த. அபானம்.]*

காந்து>காந்தல் = எரிவு, சூடு, காந்துகை.

அபானசுத்தி *abāṉa-šutti,* பெ.(n.) எரு (குத)வாய் வழியே குடல் கழுவு மருத்துவம்; treatment by enema (சா.அக.).

*[**Skt.** apāna+šuddhi>த. அபானசுத்தி.]*

அபானத்தானலித்திரிதிக்கட்டி *abāṉa-t-tāṉa-littiridi-k-katti,* பெ.(n.) **அபானலித் திரிதி** பார்க்க; see *abāṉa-littiridi* (சா.அக.).

அபானத்துவாரம் *abāṉa-t-tuvāram,* பெ.(n.) எரு (மல)வாயில்; the opening through which the excrement is expelled, *anus* (சா.அக.).

த.வ. எருவாய்.

*[**Skt.** apāna+dvāra>த. அபானத்துவாரம்.]*

அபானப்பிரயோகநீர் *abāṉa-p-pirayōga-nīr,* பெ.(n.) கழிமாசு அறக் கழிதனிமித்தம் எருவாயிற் புகட்டும் நீர்; a liquid substance injected into the lower intestines, to cleanise the bowels, *clyster enema* (சா.அக.).

[அபானப்பிரயோக(ம்) + நீர்.]

*[**Skt.** apāna+pra-yōga> த.அபானப் பிரயோகம்.]*

நுல்→நெல்→நெள்→நெகு→நெகி (நெகிள்)→ நீள்→நீர் (வே.க.3:42).

அபானம்[1] *abāṉam,* பெ.(n.) கடுக்காய் மரம் (பச்.மூ.); chebulic myrobalan.

அபானம்[2] *abāṉam,* பெ.(n.) எரு (மல)வாய் (மச்சபு.தீர்க்கதம.32); anus.

*[**Skt.** apāna>த. அபானம்.]*

அபானமால் *abāṉamāl,* பெ.(n.) **அபானவாயு** பார்க்க; see *abāṉa-vāyu* (சா.அக.).

*[**Skt.** apāna+māl> த. அபானமால்.]*

அபானரோகம் *abāṉa-rōgam,* பெ.(n.) எரு(மல)வாயில் ஏற்படும் நோய்; disease of the rectum or the anus, in general (சா.அக.).

*[**Skt.** apāna+rōga>த. அபானரோகம்.]*

அபானலித்திரிதி *abāṉa-littiridi,* பெ.(n.) எருவாயிலிற் கடும் வலியுண்டாக்கும் கட்டி; an abscess of the anus causing intense pain-marginal abscess (சா.அக.).

த.வ. எருவாய்க்கட்டி.

அபானவிப்புருதி *abāṉa-vippurudi,* பெ.(n.) குதத்திலெழும்பு மொரு வகைச் சிலந்தி; an ulcer inside the recturm or atits extermity c.f. பவுத்திரம் (சா.அக.).

த.வ. எருவாய்க்கட்டி.

[Skt.apāna+vidradhi>த.அபானவிப்புருதி.]

அபானவாயு *abāṉa-vāyu,* பெ.(n.) பதின் வளியு ளொன்றாகியதும் கீழ்நோக்கிச் செல்லுவதுமான பரியன்வளி (வாயு); one of the ten vital airs, having a tendency to pass downwards (சா.அக.).

த.வ. பரியன் வளி.

[Skt. apāna+vāyu>த. அபானவாயு.]

அபானவாயுக்கடுப்பு *abāṉa-vayu-k-kaḍuppu,* பெ.(n.) சூட்டினாலும், எருவாயி லுண்டாகும் புண்ணாலும் ஏற்படும் எரிச்சல்; a burning sensation due to excess of heat and ulceration of the anus-rectitis or proctitis (சா.அக.).

த.வ. எருவாய் எரிச்சல்.

[அபானவாயு + கடுப்பு.]

[Skt. apānavāyu>த.அபானம் + வாயு.]

கடு→கடுப்பு:வலி, எரிச்சல், நோவு.

அபானவாயுக்கெரிச்சான் *abāṉa-vāyu-k-kericcāṉ,* பெ.(n.) புகையிலை; tobacco as an agent for driving out wind through the anus (சா.அக.).

[அபானவாயு + எரிச்சான்.]

[Skt. apānavāyu>த. அபானவாயு.]

எரி→எரிச்சன்.

அபானவிரிவு *abāṉa-virivu,* பெ.(n.) எரு(மல) வாய் விரிதல்; dilatation of the rectum or of the anus-proctectasia (சா.அக.).

த.வ. எருவாய்விரிவு.

அபானவிருத்தி *abāṉa-v-irutti,* பெ.(n.) குடலில் பரியன்வளி பரிதல்; a condition marked by the presence of excessive gas in the intestines, flatulence (சா.அக.).

த.வ. வளியேற்றம்.

[Skt. apāna+vṛtti> த.அபானவிருத்தி.]

அபானவேர் *abāṉa-vēr,* பெ.(n.) மூல முளை; an eversion of the rectal mucous membrance observed in cases of piles (சா.அக.).

[அபானம் + வேர்.]

[Skt. apāna>த. அபானம்.]

அபானன் *abāṉaṉ,* பெ.(n.) பரியன்வளி (பிங்); a vital air of the body, the downward *vāyu,* which expels wind, excrement, urine and semen, one of *tacca-vāyu.*

[Skt. apāna> த. அபானன்.]

அபானியம் *abāṉiyam,* பெ.(n.) குடிக்கத் தகாதது; that which is unfit to drink (சா.அக.).

அபானோத்காரம் *abāṉōtkāram,* பெ.(n.) **அபானவாயு** பார்க்க; see *abāṉa-vāyu* (சா.அக.).

அபி *abi,* இடை.(pref.) 1. அசைதல், போதல், கிட்டுதல் ஆகிய பொருள்களைத் தரும் வினைச் சொற்களோடு சேரும் ஒரு முன்னொட்டு; a prefix to verbs which expresses the notion of moving, going or approaching. 2. மேன்மை, மிகுதி ஆகிய பண்புகளைக் காட்டும் பெயர்ச்சொற்களோடு சேரும் முன்னொட்டு; an intensive prefix to nouns, which expresses superiority, intensity, inferiority etc. (சா.அக.).

[Skt. abhi>த. அபி.]

அபிக்கியை *abikkiyai,* பெ.(n.) 1. பெயர்; name, 2. புகழ்; fame, அழகு; beauty.

[Skt. abhi-khyā>த. அபிக்கியை.]

அபிகதம் *abigadam,* பெ.(n.) அணுக்கம் (சமீபம்) (சிந்தா. நி. 179); nearing.

[Skt. abhi+gata>த. அபிகதம்.]

அபிகரணம் *abi-karaṇam,* பெ.(n.) செவி பாகம்; the region of the ears (சா.அக.).

அபிகருடணம் *abi-karuḍaṇam,* பெ.(n.) தேய்த்தல்; rubbing, anointing (சா.அக.).

அபிகாசசேத்துமம் *abi-kāśa-śēttumam,* பெ.(n.) இருமல், இளைப்பு, ஈளை, முதலியவையுண்டாகி வயிறு மந்தித்து, உடம்பு வற்றி, உருவழிந்து, வலுவைக் குறைக்குமொரு நோய்; a phlegmatic disease attended with cough, fatigue, phlegm etc., with the symptoms or loss of appetite, emaciation, loss of strength denutrition, change of features etc. (சா.அக.).

த.வ. வலுவிழப்பு நோய்.

[Skt. abhi-hāsa-sēttum>த. அபிகாச சேத்துமம்.]

அபிகாதசம் *abikādaśam,* பெ.(n.) அடி அல்லது உடற் புண்ணால் ஏற்படும் அதிர்ச்சி; shock due to external injury or blow, *traumatic shock* (சா.அக.).

த.வ. புண்ணதிர்ச்சி.

[Skt. abhi+ghātaka>த. அபிகாதசம்.]

அபிகாதசுரம் *abikādaśuram,* பெ.(n.) கடும் உழைப்பின் நிமித்தம் உண்டாகும் காய்ச்சல் (ஜீவரட்); fever due to wounds, over-exertion, etc.

த.வ. அலுப்புக்காய்ச்சல்.

[அபிகாத(ம்) + சுரம்.]

[Skt. abhi-ghāta>த. அபிகாதம்.]

சுல்→சுர்→சுரம்.

அபிகாதசூலை *abikāda-śūlai,* பெ.(n.) கல் முதலியவற்றால் செவியில் அடியுண்ட காலத்தில் அதனுள் சீழ், அரத்தம் முதலியன சேர்ந்து, குத்தலை யுண்டாக்குமொரு வகைக் காது நோய்; a disease of the ear marked by darting pain arising from the collection of pus and blood inside. It is due to traumatic causes, *Otalgia or otitis* (சா.அக.).

த.வ. செவிக்குத்து.

[Skt. abhi-ghāta> த. அபிகாத(ம்).]

சுல்→சூல்→சூலை.

அபிகாதசோபை *abikāda-śōbai,* பெ.(n.) 1. இரசகந்த நஞ்சு, சேராங்கொட்டை முதலிய மருந்துகளினாலுடம்பி லுண்டாகுமொரு வகைச் சோகை நோய்; a form of anemia due to the action of certion poisons, such as mercury, sulphur, arsenic, markinmg nut etc.,toxic anemia. 2. ஆயுதப் புண்ணால் அரத்த வொழுக் கேற்பட்டு அதனால் உண்டாகும் சோகை; anemia due to the loss of blood from an injury or a wound, *Traumatic anemia* (சா.அக.).

த.வ. கடுஞ்சோகை.

[Skt. abhi-ghāta+śōbhā>த. அபிகாத சோபை.]

அபிகாதி *abigādi,* பெ.(n.) பகைவன் (சிந்தா. நி. 173.); enemy, foe.

[Skt. abhi-ghātin>த. அபிகாதி.]

அபிகாமின் *abikāmiṉ,* பெ.(n.) புணர்ச்சி; sexual intercourse, copulation (சா.அக.).

அபிகாயம் *abikāyam,* பெ.(n.) 1. ஒரு கொடிய ஈளை (காச) நோய்; asthma of a virulent type. 2. உள்ளழற்சி; internal inflammation, as of the lungs in consumprion (சா.அக.).

[Skt. abhi-kāya> த.அபிகாயம்.]

அபிகாரம்[1] *abikāram,* பெ.(n.) 1. கொள்ளை; robbery. 2. தாக்குகை; attack. 3. படையெழுச்சி; rising in arms.

[Skt. abhihāra> த. அபிகாரம்.]

அபிகாரம்[2] *abikāram,* பெ.(n.) 1. தூவல்; scattering over 2. தெளித்தல்; sprinkling (சா.அக.).

அபிகிதத்துவம் *abigitattuvam,* பெ.(n.) மேற்கோள் (சித்தா. நி. 173); authority.

[Skt. abhi-hita-tva>த. அபிகிதத்துவம்.]

அபிச்செடி *abi-c-cedi,* பெ.(n.) கசகசாச் செடி; poppy plany, *Papaver somniferum* (சா.அக.).

[அபினி + செடி.]

[U. afin > த. அபினி.]



அபிசங்கசுரம் *abiśaṅga-śuram,* பெ.(n.) மருந்து, நஞ்சு, சினம், அச்சம், வருத்தம், விருப்பம் (இச்சை) எனும் மேற்காண் கரணியந் தொடர்பில் ஏற்படும் காய்ச்சல்; a fever due to the excited condition of the body, arising from any of the following. seven causes viz-demomiac frenzy, virulent medicine, poison, anger, fear, distress and passion-Idiopathic fever (சா.அக.).

த.வ. பதைப்புக் காய்ச்சல்.

[அபிசாங்க(ம்) + சுரம்.]

[Skt. abhij-saṅga> த. அபிசங்க(ம்).]

அபிசந்தம் *abiśandam,* பெ.(n.) **அபிசியந்தம்** பார்க்க; *abiśiyandam* (சா.அக.).

அபிசந்தாபம் *abiśandābam,* பெ.(n.) போர் (சிந்தா. நி. 179); fight.

[Skt. abhi-santāpa>த. அபிசந்தாபம்.]

அபிசயந்திபோசனம் *abiśayandi-bōśanam,* பெ.(n.) உடம்பை பருக்கச்செய்யக் கூடிய தயிர் முதலிய உணவுப் பொருள்கள்; articles of food such as, curd etc. likely to inflate the system (சா.அக.).

த.வ. கொழுப்புணவு.

[Skt. abhi + jayantī+bhōjana>த. அபிசயந்திபோசனம்.]

அபிசர்ச்சனம் *abiśarccanam,* பெ.(n.) கொலை; murder (சா.அக.).

அபிசரன் *abiśaran,* பெ.(n.) நண்பன் (சிந்தா. நி. 167); friend.

[Skt. abhi-cara>த. அபிசரன்.]

அபிசனம் *abiśanam,* பெ.(n.) 1. பிறப்பிடம்; birth place. 2. குலம்; family. 3. குலவிருது; insignia of a family or dynasty. 4. அரசியற் சுற்றம்; attendants, retinue. 5. புகழ்; fame.

[Skt. abhi-jana>த. அபிசனம்.]

அபிசாங்கி *abiśāṅgi,* பெ.(n.) அத்தினி சாதிப் பெண்; last of the four classes the women divides according to lust (சா.அக.).

அபிசாதம் *abiśādam,* பெ.(n.) 1. துன்பம்; pain, suffering. 2. புண்படுகை; inflicting injury; 3. வெடிப்பு; பிளவு; fissure, crack. 4. வருத்தம்; torture, afflication. 5. அதிக உழைப்பு; strain (physical); exertion. 6. கருப்பைச் சுருக்கம்; uterine contraction. 7. பறவைக் காய்ச்சல்; fever in birds (சா.அக.).

அபிசாதவாதம் *abiśāda-vādam,* பெ.(n.) விரைந்த நடை, ஊர்திகளில் ஏறி விரைவிற் செல்லல், மற்போர் செய்தல், நெடுந்தூரம் செல்லல், அதிக உழைப்பு முதலிய செய்கைகளினால் உடம்பு தாங்க முடியாமல் நரம்புகளுக்குச் சோர்வு ஏற்பட்டு, வலி, களைப்பு, படுக்கையாய்க் கிடத்தல், இளைப்பு முதலிய குணங்களை யுண்டாக்கு மோர் ஊதை (வாத) நோய்; a functional disorder of the

nervous system not dependent on any discoverable lesion, but supposes to arise from excessively fast walking, riding, wrestling, long journey, and undrue exertion, etc. It invades the whole system and is marked by pain, exhaustion, prostration fatigue, etc. (சா.அக.).

த.வ. அலுப்பு ஊதை.

[Skt.abhi-jāta+vāta>த. அபிசாதவாதம்.]

அபிசாதன்[1] *abišādaṉ*, பெ.(n.) 1. தக்கோன்; worthy person. 2. அறிஞன் (நாநார்த்த); wiseman.

[Skt. abhi-jāta>த. அபிசாதன்.]

அபிசாதன்[2] *abišādaṉ*, பெ.(n.) உயர்குடிப் பிறந்தோன்; man of noble descent.

[Skt. abhi-jāta>த. அபிசாதன்.]

அபிசாபசுரம் *abišāba-šuram*, பெ.(n.) அறிவர் (சித்தர்), முனிவர் (யோகி) முதலிய பெரியோர்களின் சாவித்தலினால் ஏற்படும் காய்ச்சல்; fever from severe curse of siddhars; yogis and such other great man (சா.அக.).

த.வ. சவிப்புக்காய்ச்சல்.
[அபி + சாபம் + சுரம்.]
[Skt.abhi> த. அபி.]
சாவி→சாவம்→சாபம் (சவிப்பு). சுல்→சுர்→சுரம்.

அபிசாபனம் *abišābaṉam*, பெ.(n.) சாவிப்பு மொழி (சிந்தா. நி. 171); cursing.

த.வ. சவிப்பு.
[அபி+சாபனம்.]
[Skt. abhi> த.அபி.]
சாவம்→சாபம்→சாபனம்.

அபிசாரசுரம் *abišāra-šuram*, பெ.(n.) இறப்பு மந்திரங்களால் வேள்வி செய்து உண்டாக்குவதாகக் கருதப்படும் ஒருவகைக் காய்ச்சல் (சீவரட்); fever supposed to be caused by death invoking incantations at a sacrifice.

த.வ. உருவேற்றக் காய்ச்சல்.

[Skt. abhi-cāra>த. அபிசாரம்.]

சுல்→சுர்→சுரம்.

அபிசாரம்[1] *abišāram*, பெ.(n.) பிறர்க்குத் தீங்கு நாடி மறைமொழி செலுத்துகை; emloyment of mantras for a malevolent purpose, black art. *"மாமதுவா லபிசார மமைத்து" (பிரபோத. 18, 27).*

[Skt. abhi-cāra>த. அபிசாரம்.]

அபிசாரம்[2] *abišāram*, பெ.(n.) 1. இறப்பு; death. 2. ஏவலாற் செய்யுங் கொலை (மரணம்); black art for purpose of invoking death. 3. பாழ் (சூனியம்); magic practise to bring about insanity, disease etc; employment of spells for a malevolent purpose (சா.அக.).

[Skt. abhi-cāra>த. அபிசாரம்.]

அபிசாரமந்திரம் *abišāra-mandiram*, பெ.(n.) மனக்கோட்டம், ஆசை, வெறுப்பு, சாவு முதலியவையேற்படுத்தும் ஒருவனுக்குத் தீங்கிழைக்க வேண்டி வேள்வியினாலும் யந்திரம் அமைத்தலாலும் செய்து முடிக்கும் சாவிப்பு மந்திரம்; a magic for a malevolent purpose. It is practised with sacrifical fire or with spells and magic diagrams and is supposed to bring on or produce mental aberration, love, harted, paralysis, and death. 2. மோகன மந்திரம்; one of the eight kinds of magical enchantments by which super human powers are attained the power of bringing about libinous fascination by magic (சா.அக.).

[அபிசாரம் + மந்திரம்.]

[Skt. abhi-cāra>த. அபிசாரம்.]

அபிசாரி *abišāri*, பெ.(n.) 1. ஒழுக்கங் கெட்டவள்; unchaste woman. 2. விலை மகள்; courtezan.

த.வ. பொதுமகள், பரத்தை.

[Skt. abhišāri>த. அபிசாரி.]

அபிசாரிக்கை *abišāri-k-kai,* பெ.(n.) பிறருக்குக் கொலை, விருப்பம் (இச்சை), பித்து முதலிய தீங்குகளை விளைவிப்பதற்காக வேண்டிச் செய்யும், மந்திர சாதனை; the practice of black art with the aid of magical enchantments for purposes of bringing about death, lust, lunacy or other evil effects in a person (சா.அக.).

அபிசாரிகை *abišārigai,* பெ. (n.) **அபிசாரி** (வின்) பார்க்க; see *abišāri.*

[Skt. abhicāri-ka>த. அபிசாரிகை.]

அபிசிக்தர் *abišiktar,* பெ.(n.) சைவரில் குருக்கள் வகையார் (மீனாட்.சரித்.i, 27); persons belonging to a non Brahmin priestly caste who had been anointed as guru.

[Skt. abhisikta>த. அபிசிக்தர்.]

அபிசிக்தன் *abišiktan,* பெ.(n.) திருமுழுக்கு பெற்றவன்; one who is anointed, installed, enthroned.

[Skt. abhi-sikta>த. அபிசிக்தன்.]

அபிசித்து *abišittu,* பெ.(n.) கடைக்குள (உத்திராட)த்திற்பின் பதினைந்து நாழிகையும் முக்கோலி (திருவோண)த்தின் முன் நான்கு நாழிகையுஞ் சேர்ந்ததாகிய ஓர் ஒட்டு நாண்மீன் (குமாரசாமீ. நட்சத்திர. 8.); nakastra introduced in certain *siddhāntas,* consisting of the latter 15 *nāligais* of *uttirādam* and the earlior four *nāligais*of *thiruvōnam.* 2. பகல் முழுத்தத்துள் எட்டாவது (விதான. குணா. 73 உரை); (Astrol.) the eight of 15 divisions of day.

த.வ. ஒட்டுநாண்மீன்.

[Skt. abhi-jit>த. அபிசித்து.]

அபிசிந்தி *abišindi,* பெ.(n.) (Hind.) மாசிப்பத்திரி; a hidustani term for santonin wood, *Artemosia absinthium* (சா.அக.).

அபிசியந்தம் *abišiyandam,* பெ.(n.) ஒருவகைக் கண்ணோய்; ophthalmia due to the action of deransged vāyu and it is attended with pricking pain, horripilation of the eye lashes and irritation of the eyes, conjunctivitis (சா.அக.).

அபிசியந்தி *abišiyandi,* பெ.(n.) 1. உடம்பினில் உள்ள நாளங்களின் பிசுபிசுப்பையும், அதனால் கை கால் கனாதியையும் உண்டாக்குமோர் கோழை (சிலேட்டுமம்); anything that produces a sliminess in the channels and a consequent heaviness of the limbs. 2. நீர் கசியச் செய்தல்;causing defluxions or watery effusions (சா.அக.).

[Skt. abhi-jayanti>த. அபிசியந்தி.]

அபிசுதம் *abišudam,* பெ.(n.) கஞ்சி; rice-water (சா.அக.).

அபிசுரம் *abišuram,* பெ.(n.) ஏவலினால் உண்டாகுங் காய்ச்சல்; a fever caused by magic spells (சா.அக.).

த.வ. ஏவல் காய்ச்சல்.
[Skt. abhi> த. அபி.]
சுல்→சுர்→சுரம்.

அபிசோரா *abišōrā,* பெ.(n.) பொட்டிலுப்பினால் சில்லிட்ட குடிநீர்; water cooled by means of solution of salpetre (சா.அக.).

அபிசோலா *abišōlā,* பெ.(n.) சுவைச் சாற்றினால் குளிர்ந்த குடிநீர்; water cooled by syrup, a solution of sugar combined with other drugs (சா.அக.).

அபிஞ்ஞன் *abiññan,* பெ.(n.) அறிஞன்; learned man, person of understanding.

[Skt. abhi-jña>த. அபிஞ்ஞன்.]

அபிட்டம் *abiṭṭam,* பெ.(n.) இதளியம் (வின்); quicksilver.

[Skt. avintyaja>த. அபிட்டம்.]

அபிடங்கசுரம் *abiḍaṅgašuram,* பெ.(n.) நஞ்சு, சீற்றம், அச்சம், வருத்தம், காமம் முதலிய காரணங்களால் உண்டாகும் காய்ச்சல் (சீவரட்.31); fever due to poison, excessive anger, fear, grief or sexual indulgence.

[அபிடங்கம் + சுரம்.]

[Skt. abhisaṅga>த. அபிடங்க(ம்).]

அபிடங்கம் *abiḍaṅgam,* பெ.(n.) சாவம், தீமொழி (சிந்தா. நி. 181); curse.

[Skt. abhisaṅga>த. அபிடங்கம்.]

அபிடதம் *abiḍadam,* பெ.(n.) **அவுடதம்** பார்க்க; see *avuḍadam* (சா.அக.).

[Skt. abhista >த.அபிடதம்.]

அபிடவம் *abiḍavam,* பெ.(n.) **அபிசவம்** பார்க்க; see *abišavam* (சா.அக.).

அபிடியந்தம் *abiḍi-yandam,* பெ.(n.) கண்ணின் வலு (பல)க் குறைவு; weakness of the eye (சா.அக.).

அபிடேகக்காணி *abiḍēga-k-kāṇi,* பெ.(n.) வரிவகை (S.I.I.vii, 403); a tax.

[அபிடேகம் + காணி.]

[Skt. abhisēka>த.அபிடேக(ம்).]

அபிடேகக்கூட்டு *abiḍēga-k-kūṭṭu,* பெ.(n.) திருமஞ்சன மாட்டுதற்குரிய நறுமணக் கலவை (வின்.); macerated spices for anointing an idol.

[அபிடேகம் + கூட்டு.]

[Skt. abhisēka>த. அபிடேகம்.]

அபிடேகசுதர் *abiḍēgašudar,* பெ.(n.) **அபிசிக்தர்** பார்க்க; see *abišiktar.*

அபிடேகநாமம் *abiḍēga-nāmam,* பெ.(n.) அரசன், மடத்தலைவர் (மடாதிபதி) இவர்கள் பட்டம் பெறுங்காலத்துக்கு ஏற்கும் பெயர்; title assumed on entering office, as of a king.

[Skt.abhisēka+nāman> த. அபிடேக நாமம்.]

அபிடேகப்பால் *abiḍēga-p-pāl,* பெ.(n.) 1. பால், இதளியம் முதலியவற்றைக் கொண்டு கொங்கணவர் முறைப்படி உருவாக்கிய மருந்து; a mercurial preparation obtained by boiling milk and mercury, with other ingredients for purposes of rejuvenation and transmutation of metals by a mystic process, as described in Konganava's work on alchemy. 2. மதிய மிர்தம்; an ambrosial fluid supoosed to be oozing in drops from the opening behind the uvula during the advanced stage in yoga. It is said to promote longevity. *"மேலான அபிஷேகப்பாலை யுண்டால் விரைந்தேழு நாளையிலே காயசித்தி"* (கொங்.வாத. காவி.) (சா.அக.).

[Skt. abhisēka> த.அபிடேகம்.]

அபிடேகம்[1] *abiḍēgam,* பெ.(n.) 1. நீர், தேன், முதலானவற்றைக்கடவுளின் முழு திருமேனிபடும்படி நீராட்டுதல்; (திருமஞ்சனம்); bathing of an idol with water, oil, ghee, milk, honey and other substances. 2. பட்டஞ் சூட்டும் விழா; inauguration of a king by anointing, consecreation of a priest. *"மன்னனைப் பராசரன்றா னபிடேகம்... வழங்க"* (சேதுபு. மங்கல. 79.) 3. மணிமுடி (திருவாலவா. 11, 4); crown.

த.வ. முழுக்கு.

[Skt. abhi-sēka>த. அபிடேகம்.]

அபிடேகம்[2] *abiḍēgam,* பெ.(n.) தலையணி வகை (S.I.I. iii, 474); a head ornament.

[Skt. abhisēka>த. அபிடேகம்.]

அபிடேகமண்டபம் *abiḍēga-maṇḍabam,* பெ.(n.) திருமஞ்சனசாலை (I.M.P.cg. 331); hall for the ceremonial bath of an idol, in a temple.

[அபிடேகம் + மண்டபம்.]

[Skt. abhisēka >த.அபிடேகம்.]

அபிடேகி-த்தல் *abiḍēgi-,* 4 செ.குன்றாவி. (v.t.) திருமுழுக்கு செய்தல்; to bathe, to anoint. *"ஆசிலாப் பொன்னிநீரா லமனுக் கபிடேகித்தோர்"* (திருவாட்போக்கிப்பு. மாணிக்கமலைச் சிறப். 36).

த.வ. திருமுழுக்காட்டுதல்.

[Skt. abhi-sēka>த. அபிடேகி-.]

அபித்தியை *abittiyai,* பெ.(n.) விருப்பம் (இச்சை) (சிந்தா. நி. 181.); wish, desire.

[Skt. abhi-dhyā>த. அபித்தியை.]

அபிதம் *abidam,* பெ.(n.) காப்பு (இரட்சிகை) (சிந்தா. நி. 177); protection.

[Skt. abhidha>த. அபிதம்.]

அபிதர்மபிடகம் *abidarmabiḍagam,* பெ.(n.) புத்த அறிவு நூல் மூன்றனுள் ஒன்று; name of the third section of Buddhist writings, as a basket of metaphysics.

அபிதா *abidā,* பெ.(n.) இடுக்கணுற்றுழி முறையிட்டுக் கூறுஞ்சொல்; exclamation used in calling for help. *"கிரியெட்டும் அபிதா வபிதாவென" (திருப்பு. 1140).*

[Skt. avidhā>த. அபிதா.]

அபிதாபம் *abidābam,* பெ.(n.) அளவிறந்த வெப்பம்; extreme heat (சா.அக.).

[அபி + தாபம்.]

[Skt. abhi> த. அபி.]

தவி→தாவம்→தாபம். தகம்=சூடு, வெப்பம். தகம்→தாபம்=அளவிற்கதிகமான வெப்பம்.

அபிதார்த்தம் *abidārttam,* பெ.(n.) சொல்லுக்கு இயல்பான பொருள் (வேதா. சூ. 118).; primary signification of a word.

[Skt. abhi-dhā+artha>த. அபிதார்த்தம்.]

அபிதானகோசம் *abidāṉa-kōšam,* பெ.(n.) ஒரு வடமொழி யகரமுதலி; a Sanskrit medical dictionary (சா.அக.).

[Skt. abhi-dhāna+kōša>த. அபிதான கோசம்.]

அபிதானசிந்தாமணி *abidāṉa-šindāmaṇi,* பெ.(n.) 1. ஏமச் சந்திரன் என்பவரால் செய்த ஒரு வடமொழி யகராதி; a sanskrit dictionary of synomyms by Hemachandran. 2. சிங்காரவேலு முதலியாரால் தொகுக்கப் பெற்ற தமிழ்க் கலைக்களஞ்சியம்; an encyclopeadia compiled siṅgāravelu mudaliyar(சா.அக.).

[Skt. abhi-dhāna> த. அபிதானம்.]

சித்து+மணி–சித்தாமணி→ சிந்தாமணி. மண்ணுதல் = கழுவுதல். மண்→மண்ணி→மணி = கழுவப்பெற்ற ஒளிக்கல்.

அபிதானசூடாமணி *abidāṉa-šūḍamaṇi,* பெ.(n.) வடமொழியில் எழுதப்பட்டதொரு மருத்துவ நூல்; an excellant work on materia medica Compiled by Narahari of Kashmere. It is a glossary of medicinal substances with specifications of their virtues. It is also known as *RajaNigaṇḍu* for, it was composed under the patronage of the kind of Kasmere in 700 A.D. (சா.அக.).

த.வ. இராசநிகண்டு.

[Skt. abhi-dhāna>த.அபிதான(ம்).]

சூடா+மணி+சூடாமணி.

அபிதானம்[1] *abidāṉam,* பெ.(n.) பெயர் (பிங்); name, appellation.

[Skt. abhi-dhāna>த. அபிதானம்.]

அபிதானம்[2] *abidāṉam,* பெ.(n.) மறைவு (நாநார்த்தை); covering.

[Skt. aidhāna>த. அபிதானம்.]

அபிதானம்[3] *abidāṉam,* பெ.(n.) 1. **அபிதான கோசம்** பார்க்க; see *abidāṉa-kōšām.* 2. நிகண்டு; a vocabulary of synonyms, a dictionary. 3. சலாகை; a surgeon's probe (சா.அக.).

[Skt. abhi-dhāna>த. அபிதானம்.]

அபிதேயம் *abidēyam,* பெ.(n.) செஞ்சொற் பொருள் (தருக்கசங். 249); that which is denoted by *šeñ-jol.*

[Skt. abhi-dhēya>த. அபிதேயம்.]

அபிதை *abidai,* பெ.(n.) நாநலம் (பி.வி. 50, உரை); primary significative capacity of a word.

[Skt. abhi-dhā>த. அபிதை.]

அபிந்நியாசம் *abinniyāšam,* பெ.(n.) இசிவு (சன்னி) வகை (வின்); convulsions.

[Skt. abhi-nyāsa>த. அபிந்நியாசம்.]

அபிநந்தனர் *abinandaṉar,* பெ.(n.) தீர்த்தங்கரருள் ஒருவர் (திருக்கலம், காப்பு, உரை); name of a Jaina Arhat, one of 24 *tirttaṅgarar,* q.v.

[Skt. abhi-nandana>த. அபிநந்தனர்.]

அபிநயக்கை *abinaya-k-kai,* பெ.(n.) கைகாட்டு (அபிநயம்) மெய்ப்பாடு; gesture by hand.

[Skt. abhi-naya>த. அபிநயம்.]



அபிநயசிரம் *abinayaširam,* பெ.(n.) தலையாற் செய்யும் மெய்ப்பாடு; pose of the head.

[Skt. abhi-naya+širas>த. அபிநயசிரம்.]

அபிநயநூல் *abinaya-nūl,* பெ.(n.) காமக் கலைப் பற்றிய ஒரு நூல்; a treatise on gestures of lust or of passion (சா.அக.).

[Skt. abhi-naya>த. அபிநயம்.]

அபிநயம் *abinayam,* பெ.(n.) 1. ஆடற் கலையில், களம், கருத்து, காலம் முதலியவற்றை முகத்தாலும், உடல் உறுப்புகளாலும் உணர்ச்சியோடு வெளிப்படுத்துதல்; communication and interpretation of meaningful ideas and emotions through facial expressions and rhytmic gestures of hands. *"இருபத்து நான்கு ஒற்றைக்கை அபிநயங்களைக் காட்டி விளக்கினார்".* 2. மனக்கருத்தைக் குறிப்பால் விளக்கும் உடற்செய்கை; indication of sentiment or purpose by look or gesture, gesticulation, theatrical action. *"மகளிர்தங்க ளபிநயம்" (இரகு. தசரதன்சா. 30).*

த.வ. அவிநயம்.

[த.அவிநயம்>Skt.abhi-naya>த. அபிநயம்.]

அபிநயவிடுகதை *abinaya-vidu-kadai,* பெ.(n.) ஒரு சொல்லின் பல பிரிவுகளை, மெய்ப்பாட்டால் காட்டும் புதிர் (பாண்டி); acted charade.

[அபிநயம் + விடுகதை.]

[Skt.abhi-naya>த.அபிநயம்.]

அபிநயன் *abinayan,* பெ.(n.) கூத்தன் (சிந்தா. நி. 166); dancer.

த.வ.அவிநயன், ஆடவல்லான், கூத்தப் பெருமான்.

[த.அவிநயம்>Skt.abhi-naya>த.அபிநயன்.]

அபிநயி *abinayi,* பெ.(n.) ஆடற் கலையில் உடல் உறுப்புகளை அசைத்தல்; show in gestures and postures (the feelings, emotions, etc.) *"பக்திச் சுவையை அபிநயித்துக் காட்டினார்".*

த.வ.அவிநயி.

[Skt. abhi-naya>த. அபிநயி.]

அபிநயி-த்தல் *abinayi-,* 4 செ.குன்றாவி.(v.t.) நடித்தல்; to act, gesticulate.

த.வ.அவிநயி.

[Skt. abhi-naya>த. அபிநயி-.]

அபிநவம் *abinavam,* பெ.(n.) புதிது; that which is quite new, fresh, modern. *"ராகவ வபிநவ கவிநாதன்" (கம்பரா. தனி. 9).*

[Skt. abhi-nava>த. அபிநவம்.]

அபிநாகனம் *abināganam,* பெ.(n.) கண்கட்டு; bandage over the eyes (சா.அக.).

அபிநாகிதம் *abi-nāgidam,* பெ.(n.) தேற்றான் கொட்டை; water cleaning nut, *Strychnos potatorum* (சா.அக.).

அபிநாசசன்னி *abināša-šanni,* பெ.(n.) 1. **அபிநியாசசன்னி** பார்க்க; see *abi-niyāša-šanni.* 2. இசிவுநோய் (இராட்); a kind of *šanni.*

[Skt.abhi-nāsa+sanni>த.அபிநாசசன்னி.]

அபிநாசி *abināši,* பெ.(n.) **அபீனசம்** பார்க்க; see *abinašam* (சா.அக.).

அபிநிதமாது *abinida-mādu,* பெ.(n.) பதுமினி சாதிப் பெண்; the first of the four classes to lust, chastity etc. (சா.அக.).

அபிநியாசசன்னி *abiniyāša-šaṉṉi,* பெ.(n.) அளவிற்கதிகமாய்ச் சுரங்காய்ந்து, பசியின்மை, முக, உடம்பு வலி, மேல்மூச்சு, வலுக்குறைவு (பலவீனம்) ஐம்பொறிகளின் (பஞ்சேந்திரியத்) தன்மைக் குறைவு, மயங்கிய தூக்கம், அறிவின்மை முதலிய குணங்களைக் காட்டுமொரு வகை இசிவு (சன்னிபாத)ச் சுரம்; a kind of typhoid fever characterised by high temperature, loss of appetite, glossiness of face, pain all over the body, hard, breathing, weakness, depression of vital powers of the five sensory organs, sommolence, loss of consciousness etc. (சா.அக.).

[Skt. abhi+nyāsa+san-ni>த. அபிநியாச சன்னி.]

அபிநியாசசுரம் *abiniyāša-šuram,* பெ.(n.) உட்காங்கை, நிறம்குன்றல், பசிநீங்கல், முகப்பளபளப்பு, பேச்சின்மை, ஐம்பொறி (பஞ்சேந்திரிய)த் தன்மைக் குறைவு, மயங்கிய உறக்கம் (நித்திரை) மற்றும் இசிவு (சன்னிபாத) குணங்கள் முதலியவற்றுடன் கூடிய சுரம்; a fever accompanied by a slight or impereeptible rise of the bodily beat or a slightly sub normal temperature, dulness of completion, loss of appetite, glassiness of face, loss of voice, loss of vital powers of the sensory organs, somnolence or subcomatose state and other concomitant symptoms of typhus fever, ardent fever (சா.அக.).

த.வ.உட்காங்கைக் காய்ச்சல்.

[Skt.abhi+nyāša>த. அபிநியாசம்.]

அபிநியாசவாதம் *abiniyāša-vādam,* பெ.(n.) உயிர்வளி, பரியன்வளி, ஊதை, பித்தம், கோழை முதலியவற்றை அதிகரிக்கச் செய்வதனால், அதிக சுரங்காய்ந்து, காதடியில் வீக்கத்தை உண்டுபண்ணும் ஓர் ஊதை (வாத) நோய்; a rheumatism marked by high fever and swelling below the lobes of the ears (சா.அக.).

த.வ. காதடிவூதை.

[Skt. abhi+nyāsa+vāta>த. அபிநயாச வாதம்.]

அபிநிவேசம்[1] *abinivēšam,* பெ.(n.) விருப்பம் (விசாரசந். 335) ; desire.

[Skt. abhinivēša>த. அபிநிவேசம்.]

அபிநிவேசம்[2] *abinivēšam,* பெ.(n.) ஊக்க மிகுதி; zeal, earnestness. *“வருந்தபி நிவேச மவையைந்தும்” (கூர்மபு. விபூ. 19).*

[Skt. abhinivēša>த.அபிநிவேசம்.]

அபிநீலம் *abinīlam,* பெ.(n.) மிகக்கருப்பு; very black or dark (சா.அக.).

த.வ. கருநீலம், அட்டகருப்பு.

[Skt. abhi+nīla>த. அபிநீலம்.]

அபிப்பிராயபேதம்[1] *abippirāyabēdam,* பெ. (n.) மாறுபட்ட கருத்து ; difference of opinion (சா.அக.).

[Skt.abhi-prāya+bhēda> த.அபிப்பிராய பேதம்.]

அபிப்பிராயபேதம்[2] *abippirāya-bēdam,* பெ.(n.) மனவருத்தம்; hard feelings. *"ஒரு சிறிய பிரச்சினையினால் இருவருக்குள்ளும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டுவிட்டது" (இ.வ.).*

த.வ.கருத்துமுரண்.

[Skt. abhi-prāya+bhēda>த.அபிப்பிராய பேதம்.]

அபிப்பிராயம் *abippirāyam,* பெ.(n.)1. சொந்தக் கருத்து; personal opinion. 2. (ஒரு துறையில்) வல்லுநர் கொண்டிருக்கும் கருத்து, கலந்தாய்வு; professional opinion or advice. *“வழக்குரைஞரிடம் அபிப்ராயம் கேட்டு அதன்படி செய்யலாம்”* (இக்.வ.). 3. செயல்படுத்த திட்டமிட்டிருக்கும் எண்ணம்; intention. *"பைடீனை மேலே படிக்க வைக்கும் அபிப்பிராயம் இல்லை" (இக்.வ.).* 4. நோக்கம்; aim, intention.

த.வ. கருத்து.

[Skt. abhi-prāya>த. அபிப்பிராயம்.]

அபிபவம் *abibavam,* பெ.(n.) அவமானம்; disgrace.

[Skt. abhi-bhava>த. அபிபவம்.]

அபிபவி-த்தல் *abibavi,* 4 செ.குன்றாவி.(v.t.) அவமானப்படுத்துதல் (திவ்பெருமாள்தி. 2, 5, வ்யா. பக். 33); to disgrace.

[Skt. abi-bhava>த. அபிபவி-.]

அபிபிங்கலம் *abipingalam,* பெ.(n.) மிகச்சிவப்பு; very red or reddish brown (சா.அக.).

த.வ. செக்கச்சிவப்பு.

அபிபூதன் *abibūdan,* பெ.(n.) மறைக்கப் பட்டவன்; one who is concealed (சா.அக.).

[அபி + பூதன்.]

[Skt. abhi>த. அபி.]

அபிமதம்[1] *abimadam,* பெ.(n.) இணக்கம் (நாநார்த்த) ; agreeableness.

[Skt. abhi-mata>த. அபிமதம்.]

அபிமதம்[2] *abimadam,* பெ.(n.) விருப்பம்; desire, wish. *"அவர வர்க்குள வபிமத மறைந்திடு மென்ன" (நல். பாரத. பாண்டவர்துற. 6).*

[Skt. abhi-mata> த. அபிமதம்.]

அபிமந்தம் *abi-mandam,* பெ.(n.) கண்ணோய்; a disease of the eye (சா.அக.).

அபிமந்திரணம் *abi-mandiranam,* பெ.(n.) மந்திரித்தல்; treating by magical enchantments (சா.அக.).

அபிமந்திரம் *abimandiram,* பெ.(n.) ஓதுகை (சிந்தா. நி. 182); reciting mantras.

[அபி + மந்திரம்.]

[Skt. abhi>த. அபி.]

மன்+திரம்–மந்திரம்.

அபிமந்திரி-த்தல் *abi-mandiri-,* 4. செ. குன்றாவி. (v.t.) மறைமொழியால் அழிவை உண்டாக்குதல் (சீவக. 2411. உரை); to consecrate by uttering mantras.

[Skt. abhi>த. அபி.]

அபிமபுத்தி *abimaputti,* பெ.(n.) உருத்திருள் ஒருவர் (தக்க யாகப். 443, உரை); a Rudran.

அபிமன் *abiman,* பெ.(n.) அருச்சுனருக்குச் சுபத்திரையிடம் பிறந்த மகன் (பெருங். உஞ்சை, 56, 58, குறிப்பு); Arjuna's son by *Subhadrā.*

[Skt. abhi-manyu>த. அபிமன்.]

அபிமன்னியு *abimanniyu,* பெ.(n.) **அபிமன்னு** பார்க்க; see *abimannu.*

[Skt. abhimanyu>த. அபிமன்னியு.]

அபிமன்னு *abimannu,* பெ.(n.) அருச்சுனன் மகன் (நல்.பாரத. புத்திர. 117); name of the son of Arjuna by *Subhadrā.*

[Skt. abhimanyu>த. அபிமன்னு.]

அபிமானகளத்திரம் *abimāna-kalattiram,* பெ.(n.) வைப்பாட்டி; concubine used euphem.

த.வ. காமக்கிழத்தி.

[Skt. abhi-māna+kalatra>த. அபிமான களத்திரம்.]

அபிமானத்தி *abimānatti,* பெ.(n.) வைப்பாட்டி; concubine, used euphem.

[Skt. abhi-māna> த. அபிமானம்.]

அத்தி – பெண்பாலீறு.

அபிமானதுங்கன் *abimāna-tuṅgan,* பெ.(n.) அன்புமிக்கோன் ; one who has great affection, attachment. *"அணிகோட்டியர் கோனபிமான துங்கன் செல்வனை" (திவ். திருப்பல். 11).*

[Skt. abhi-māna+tuṅga>த. அபிமான துங்கன்.]

அபிமானபுத்திரன் *abimāna-puttiran,* பெ.(n.) வளர்ப்பு மகன்; on by affection, foster son, not recognized by law.

[Skt.abhi-māna>த.அபிமான(ம்).]

புது→புத்து→புத்திரன். புதியதாக குடும்பத்திற்கு வந்தவன்.

அபிமானம் *abimāṉam,* பெ.(n.) 1. தன்மதிப்பு (மச்சபு. பன்வந். 22); self-respect, sense of honour. 2. ஒன்றன் குணத்தை மற்றொன்றன் மேலேற்றுகை; erroneous identification as of the soul with the body *"செயிரி னாலுட னானெனு மபிமானம்" (சூத. சிவ. 12,38).* 3. பற்று; love, affection. 4. உள்ளக்களிப்பு (சூடா); joy, enthusiasm. *"உலக இலக்கியத்தில் அவர் கொண்டிருந்த அபிமானம் அளவிடமுடியாது"* 5. நன்மதிப்பு, உயர்வான உண்ணம். ; admiration. *"சிறந்த கதைகள் எழுதி மக்களின் அபிமானத்தைப் பெற்றவர்" (இக்.வ.).*

த.வ. தன்மதிப்பு, தன்மானம்.

[Skt. abhi-māna>த. அபிமானம்.]

அபிமானவிருத்தி *abimāṉa-virutti,* பெ.(n.) செருக்கு; egoism (சா.அக.).

[Skt.abhi-māna+vṛtti>த.அபிமான விருத்தி.]

அபிமானி[1]-த்தல் *abimāṉi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. மதித்தல்; to honour, esteem, respected. 2. ஆதரித்தல்; to take great care of support, love.

[Skt. abhi-māni>த. அபிமானி-.]

அபிமானி[2] *abimāṉi,* பெ.(n.) பற்றுடையோன்; one who has affection, attachment.

த.வ. ஆர்வலன்.

[Skt. abhi-mānin>த. அபிமானி.]

அபிமானிதம் *abimāṉidam,* பெ.(n.) புணர்ச்சி; copulation; sexual intercourse (சா.அக.).

[Skt.abhi-mānin>த.அபிமானிதம்.]

அபிமுகம் *abimugam,* பெ.(n.) 1. நேர்முகம்; face turned towards. *"வடக்கபிமுகம்" (நல். பாரத. கபிலை. 86).*

[அபி + முகம்.]

[Skt. abhi>த. அபி.]

அபிமுகன் *abimugaṉ,* பெ.(n.) நல்லவன்; person favourably disposed. *"ஐவருமபிமுகராக" (நல். பாரத. சத்தியபா. 4).*

[அபி + முகன்.]
[Skt. abhi>த. அபி.]

முகம் → முகன்.

அபியங்கம் *abiyaṅgam,* பெ.(n.) நெய்மம் (தயிலந்) தேய்த்தல்; rubbing over the body with oil - unction; anointing or applying an oil or ointment with friction, inunction (சா.அக.).

த.வ. எண்ணெய் முழுக்காட்டு.

[Skt. abhi+aṅga>த. அபியங்கம்.]

அபியந்தரம் *abiyandaram,* பெ.(n.) உள்; inside (சா.அக.).

[Skt. abhi+antara>த. அபியந்தரம்.]

அபியிதம் *abiyidam,* பெ.(n.) சொல்லுகை (சிந்தா. நி. 182); saying, speaking.

[Skt. abhi-hita>த. அபியிதம்.]

அபியுக்தன் *abiyuktaṉ,* பெ.(n.) அறிஞன் (திருக்கோ. நூன்முகம்); scholar of high standing.

[Skt. abhi-yukta>த. அபியுக்தன்.]

அபியோகபத்திரம் *abiyōgapattiram,* பெ.(n.) பிறராற் செய்யப்பட்ட துன்பத்தைக் கூறி முறையிடும் ஆவணம் (சுக்கிர நீதி. 95); petition, complaint in writing.

த.வ. முறையீட்டு ஆவணம்.

[Skt. abhi-yōga+patra>த. அபியோக பத்திரம்.]

அபியோகம் *abiyōgam,* பெ.(n.) தனக்குப் பிறர் செய்த தீங்கை அரசனிடம் முறையிடுகை (சுக்கிரநிதி. 262); complaint, representation to the king of the wrongs done to a person.

த.வ. முறையீடு.

[Skt. abhi-yōga>த. அபியோகம்.]

அபிரங்கி *abiraṅgi,* பெ.(n.) கருநெல்லி; black berried feather foil, *Phyllanthus reticulatus* (சா.அக.).

அபிராமஞ்சி *abirāmañji,* பெ.(n.) சடா மாஞ்சில்; a plant, *Valeriana jatamansi* (சா.அக.).

அபிராமம் *abirāmam,* பெ.(n.) அழகானது; that which is beautiful, lovely, pleasing, delightful. *"கொடுஞ்சமரிற் பட்ட வடுத் துளைத்த கல்லபிராமம்" (தனிப்பா. 1,92,7).*

[Skt. abhi-rāma>த. அபிராமம்.]

அபிராமன் *abirāmaṉ,* பெ.(n.) மனத்துக்கினியவன்; sweet charming person. *"அபிராம விங்கு வருக" (திருப்பு. 59).*

[Skt. abhi-rāma>த. அபிராமன்.]

அபிராமி[1] *abirāmi,* பெ.(n.) மலைமகள்; *Pārvadi,* as beautiful.

[Skt. abhi-rāmi>த. அபிராமி.]

அபிராமி[2] *abirāmi,* பெ.(n.) மூலி, சார்வளை; a plant, *Trianthema decandra* (சா.அக.).

அபிராமிபட்டர் *abirāmipaṭṭar,* பெ.(n.) அபிராமியந்தாதி யியற்றியவர்; name of a *Brāhman* devotee to *Tirukkaḍavūr* in the Tanjore district, author of the *abirāmi-y-andādi,* 18th c.

[Skt. abhi-rāmi+bhaṭṭa>த. அபிராமிபட்டர்.]

அபிராமியந்தாதி *abirāmi-y-andādi,* பெ.(n.) ஒரு நூல்; name of a popular devotional poem on the goddess *Abirāmi* of *Thirukkaḍavūr* by *Abirāmi-paṭṭar.*

[Skt. abhi-rāmi+anta+ādi>த. அபிராமி யந்தாதி.]

அபிருசி *abiruśi,* பெ.(n.) மிகுவிருப்பம்; great taste.

[Skt. abhi-ruci>த. அபிருசி.]

அபிருத்தம் *abiruttam,* பெ.(n.) மேக நோயினால் ஆண்குறியின் முன் தோலில் ஏற்படும் சுருக்கம்; the refraction of the prepuce behind the glans penis, paraphymosis (சா.அக.).

த.வ. முன்தோல் சுருக்கு.

அபிரேக்கு[1] *abirēkku,* பெ.(n.) மீன் (மதி. களஞ். ii, 18); fish.

அபிரேக்கு[2] *abirēkku,* பெ.(n.) **அப்பிரகம்** பார்க்க; see *appiragam* (சா.அக.).

அபிரேகம் *abirēgam,* பெ.(n.) **அப்பிரகம்** பார்க்க; see *appiragam* (சா.அக.).

[Skt. abhraka>த. அபிரேகம்.]

அபிலாசம் *abilāšam,* பெ.(n.) விருப்பம் (சிந்தா. நி. 187); desire, wish, longing.

[Skt. abhi-lāsa>த. அபிலாசம்.]

அபிலாசை *abilāšai,* பெ.(n.) விருப்பம்; desire; wish. *"அபிலாசையின்றி யாசாரியனைப் பிறிந்திருப்பா ரார்" (உபதேசரத். 64) காசிக்குப் போய் வரவேண்டும் என்ற பாட்டியின் அபிலாசை நிறைவேறியது. (இ.வ.).*

த.வ. அவா.

[Skt. abhi-lāsa>த. அபிலாசை.]

அபிலாபம் *abilābam,* பெ.(n.) பேச்சு (சிந்தா. நி. 169); talk, speech.

[Skt. abhi-lāpa>த. அபிலாபம்.]

அபிவாகதாரை *abivāga-tārai,* பெ.(n.) 1. நிணநீர்த் தாரை முடிவு; the termianl ducts of the lymphatic gland. 2. கோளத்தினின்று வெளிவரும் நிணநீர்த்தாரை; the efferent ressels of the lymphatic gland - vase efferentia *(Lymphatica).*

[Skt. abhi-vāja-dhāra>த. அபிவாகதாரை.]

அபிவாதனம் *abivādaṉam,* பெ.(n.) தன் குலம், பெயர் முதலியன கூறி பெரியோரைத் தொழுகை; respectful salutation which describes the name and lineage of the person who salutes. *"அபிவாதனத்தாற் பெரியோரை வணங்கல்" (கூர்மபு. வியாதர் கரும. 8).*

த.வ. தன்நவில் தொழுகை.

[Skt. abhi-vādana>த. அபிவாதனம்.]

அபிவியஞ்சகம் *abiviyañjagam,* பெ.(n.) 1. வெளிப்படுத்துகை; revealing, manifesting. *"அது வைகரிவாக்குக்கு அபிவியஞ் சகஸ்தானம்" (சி. சி. 2, 62, சிவாக்.).* 2. வெளிச்சம்; brightness.

[Skt. abhi-vyañjaka>த. அபிவியஞ்சகம்.]

அபிவியத்தி *abiviyatti,* பெ.(n.) வெளிப்படுகை; manifestation. *"நீர் கொண்ட சிவத்து வாபிவியத்திக்கு மீளப் பிறப்புண்டென்றவா றாயிற்று" (சிவசம. 35).*

[Skt. abhi-vyakti>த. அபிவியத்தி.]

அபிவியாதம் *abi-viyādam,* பெ. (n.) விழுங்குவதற்காக வாயைத் திறத்தல்; opening one's mouth for swallowing (சா.அக.).

[Skt. abhi-vyāta>த. அபிவியாதம்.]

அபிவிருத்தி *abivirutti,* பெ.(n.) 1. மேன்மேலும் பெருகுகை; growth, prosperity, continuous advancement. *"தங்குல மபிவிருத்தி யெய்தும்" (மச்சபு. சபிண்டீ. 29).* 2. தொழில், பொருளாதாரம், உருவாக்கம் முதலியவற்றில் வளர்ச்சி; development. தொழில் அபிவிருத்தி மிக்க நாடுகள். 3. முன்னேற்றம்; improvement (qualilalively). *ஆசிரியர்களின் திறமையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை.*

த.வ. வளர்ச்சி, முன்னேற்றம், மேம்பாடு.

[Skt. abhi-vrddi>த. அபிவிருத்தி.]

அபிற்சாந்து *abir-šāndu,* பெ.(n.) பூஞ்சாந்து; a tree bark sold in the bazzars (சா.அக.).

அபின் *abin,* பெ.(n.) கசகசாச் செடியின் பால்; opium, inspissated juice of papaver somniferum (சா.அக.).

த.வ. கஞ்சங்குல்லை, கசமத்தப்பிசின்.

[U. afim>த. அபின்.]

அபின்சாரம் *abin-šāram,* பெ.(n.) பலவகை அபினிச் சத்துக்களிலொன்று; one of the several alkalods of oium-ladanam (சா.அக.).

[அபின் + சாரம்.]

[U. afim>த. அபின்.]

சாறு→சாறம்→சாரம்.

அபின்னியாசம் *abinniyāšam,* பெ.(n.) இசிவு (சன்னி) வகை(R.); a kind of high fever attended with convulsion.

[Skt. abhinyāsa>த. அபின்னியாசம்.]

அபினி *abini,* பெ.(n.) 1. ஒருவகை (போதை) மதர்ப்புப் பொருள்; opium. 2. **அபின்** *பார்க்க;* see *abin.*

[U. afim > த.அபினி.]

அபினிச்சத்து *abini-c-cattu,* பெ.(n.) 1. அபினியி னின்று இறக்கும் சத்து; extract of opium-*morphine or cocaine.* 2. **அபின்சாரம்** பார்க்க; see *abin-šāram.*

[அபினி + சத்து.]

[U. afim>த.அபினி.]

அபினிச்சாராயம் *abini-c-cārāyam,* பெ.(n.) 1. கசகசாவினின்று எடுக்கப்படுவதும் பக்கிரிகளாலும், இன்னும் சிலரால் விழா (பண்டிகை)க் காலங்களில் உட்கொள்ளப்படுவதுமான பங்கி என்று சொல்லப்பட்ட ஒரு வகை மது; an intoxicating liquor which is formed by macerating or infusin the poppy heads in water and sweetening the smae with molasses. It is drunk by fakirs and by some others on festival occasions, bhang.2. அபினிச் சத்திலிருந்து வடிக்கும் ஒரு வகை மேனாட்டுச் சாராயம்; wine of opium, *Vinum opili* (சா.அக.).

[அபினி + சாராயம்.]

[U. afim> த.அபினி.]

அபினிச்செம்பு *abini-c-cembu,* பெ.(n.) அபினி, கந்தகம், துருசு முதலான சரக்குகளைக் கொண்டு போகர் நூலிற் சொல்லிய முறைப்படி மெழுகாக்கிச் செம்புருகையில் கிராசங் கொடுத்துத் தூய்மை (சுத்தி) செய்த களிம்பற்ற ஓர் உயர்தரமான செம்பு; a purified superior copper free from

verdigris, prepared, according to the process laid down in a Bogar's work, using opium, sulphur, blue stone etc., as chief ingredients (சா.அக.).

[அபினி + செம்பு.]

*[**U.** afim> த.அபினி.]*

செம்→செம்பு (வே.க.220).

அபினித்தைலம் *abiṉi-t-tailam,* பெ.(n.) மேற்பூச்சு மருந்தாக ஊதை (வாத) நோய், ஊதை (வாத)ப்பிடிப்பு முதலான வலியுள்ள நோய்களுக்குப் பயன்படும் அபினிச் சத்திலிருந்து உருவாக்கும் நெய்மம்; an oily liquid preparation from the extract of opium used as an external application in cases of rheumatism, gout and other painful affections (சா.அக.).

*[**U.** afim> த. அபினி.]*

அபினிப்பாகு *abiṉi-p-pāgu,* பெ.(n.) கசகசாத் தோல், சாராயம், சருக்கரை ஆகிய இவற்றை வெந்நீரில் கலக்கிக் கொதிக்க வைத்துப் பாகுபதமாய் இறக்கியவொரு மருந்துப் பாகு; the syrup of poppies-surupus papavaris. It is a syrup prepared from poppy capsules, rectified spirit and refined sugar by boiling them sufficiently until the mass is reduced to a concentrated solution of sugar (சா.அக.).

[அபினி + பாகு.]

*[**U.** afim> த. அபினி.]*

பகு→பாகு.

அபினியிளகியம் *abiṉi-y-iḷagiyam,* பெ.(n.) கபாட இளகியம்; மலத்தைக் கட்டக் குழந்தைகளுக்கு உருவாக்கிக் கொடுக்கும் ஒரு வகை இளகியம்; an electuary prepared with opium as a chief ingredient and given to children for arresting motions.

[அபினி + இளகியம்.]
*[**U.** afim>த. அபினி.]*
இளகு→இளகம்→இளகியம்.

அபினியுப்பு *abiṉi-y-uppu,* பெ.(n.) அபினியினின்று எடுக்கப்படும் உப்புச் சத்து; alkaloids obtained from opium some of them are hydrochlorate, sulphate, and acedate of opium (சா.அக.).

[அபினி + உப்பு.]

*[**U.** afim>த. அபினி.]*

உ→உப்பு = உயர்தல், படுதல், மேலெழும்பித் தோன்றுதல்.

அபினிரஞ்சம் *abiṉirañjam,* பெ.(n.) ஆங்கில முறைப்படியும் ஆயுள்வேத முறைப்படியும் செய்யக்கூடியதான அபினியைச் சாராயத்திற் கரைத்துப் புளிக்க வைத்து வடித்த ஒரு நீர்மச் சத்து; a preparation obtained by fermenting the solution of opium and alchohol according to either the English system or the ayurvedic system. it is known as Arishtam, *Tincture of opium* (சா.அக.).

*[**U.** afim+nirañja>த. அபினிரஞ்சம்.]*

அபினிவைப்பு *abiṉi-vaippu,* பெ.(n.) கடுகு, கசகசா, மராட்டிமொக்கு முதலான சரக்குகளைக் கொண்டு உருவாக்கி, அபினிக்குப் பகரமாக விற்கும் போலி அபினி; a faked opium prepared from a mixture of the following drugs as ingredients viz., mustard, poppy seeds, gunjah and buds of dhatura and sold as a substitute for the genuine drug (சா.அக.).

[அபினி + வைப்பு.]

*[**U.** afim>த. அபினி.]*

அபீசனம் *abīśaṉam,* பெ.(n.) நோயற்ற நிலைமை; absence of disease.

அபீசி *abīśi,* பெ.(n.) நிரய (நரகம்) வகை (சி.போ.பா.2, 3, பக்.204); a hell.

*[**Skt.** a-vīci>த. அபீசி.]*

அபீசு *abīśu,* பெ.(n.) கைவிரல்கள்; fingers (சா.அக.).

அபீட்டிதம் *abīṭṭidam,* பெ.(n.) தொழுகை (சிந்தா.நி.180); prayer.

[Skt. abhīṣṭita>த. அபீட்டிதம்.]

அபீடனம் *abīḍaṉam,* பெ.(n.) **அபீசனம்** பார்க்க; see *abīšaṉam* (சா.அக.).

[Skt. abhīsana>த. அபீடனம்.]

அபீர் *abīr,* பெ.(n.) சந்தனத் தூள், முளரி (ரோசா), கத்தூரி, கற்பூரம் முதலியவற்றைக் கொண்டு உருவாக்கும் ஒரு நறுமணப் பொடி; a perfumed powder made up of sandal wood powder zedoary, rose musk, camphor etc. (சா.அக.).

[Skt. abhī>த. அபீர்.]

அபீரு *abīru,* பெ.(n.) தண்ணீர் மீட்டான் கிழங்கு; a plant water root, *Asparagus racemosus* (சா.அக.).

அபீனசம் *abīṉašam,* பெ.(n.) 1. நீர்க் கோப்பின்மை; absence of catarrh. 2. மூக்கின் வறட்சி; dryness of the nasal. 3. மூக்கடைப்பு; obstructions in the nostrils (சா.அக.).

[Skt. a-pīnasa>த. அபீனசம்.]

அபீனசரோகம் *abīṉaša-rōgam,* பெ.(n.) சளியினால் மூக்கின் நரம்புகள் அடைபட்டு, மூக்கினின்று சளி வராது வறண்டு, மூச்சுவிடும் போது 'குறு குறு' என்ற ஒலியை யுண்டாக்கி எந்நேரமும் வியர்வையை யுண்டு பண்ணுமொரு நீர்க்கோப்பு நோய்; a disease of the nose arising from the phlegmatic condition of the body in which the mucous in prevented from being discharged owing to the obstruction in the nasal passages and the adjacent sinuses (சா.அக.).

த.வ. நீர்க்கோப்பு.

[Skt. apīnasa+rōga>த. அபீனசரோகம்.]

அபீட்டம் *abīṭṭam,* பெ.(n.) விருப்பமானது; that which is desired.

[Skt. abhīsta>த. அபீட்டம்.]

அபீடேகம் *abīḍēgam* பெ.(n.) **அபிடேகம்** பார்க்க; see *abiḍēgam.*

த.வ. முழுக்கு.

[Skt. abhi-sēka> த.அபீடேகம்.]

அபுட்பபலம் *abuṭpa-palam,* பெ.(n.) 1. பூவாது காய்த்தல்; bearing fruits without flowering. 2. பலாமரம்; the jact tree, *Artocarpus integrifolia.* 3. அத்திமரம்; fig tree, *Ficus glemerata* (சா.அக.).

த.வ. பூவாமரம்.

அபுட்பம் *abuṭpam,* பெ.(n.) பூக்காதது, அதாவது மொட்டு; that which has not blossomed, a bud (சா.அக.).

[Skt. a-puspa>த.அபுட்பம்.]

அபுத்திபூருவம் *abutti-pūruvam,* பெ.(n.) அறியக்கூடாமல் நிகழ்வுறுகை; that which is unintentional. *"சிவபுண்ணியம் அபுத்திபூருவம் புத்தி பூருவமென் றிருவகைப்படும்" (சி.போ.பா.8, 1, 2, பக்.169).*

த.வ. அறியா நிகழ்வு.

[Skt. a-buddhi-pūrva>த. அபுத்திபூருவம்.]

அபுத்திரகன் *abuttiragaṉ,* பெ.(n.) பிள்ளைப் பெறாதவன்; one without male issue.

[Skt. a-putraka>த. அபுத்திரகன்.]

த. புத்திரன் > **Skt.** *putra.*

அபுதன் *abudaṉ,* பெ.(n.) மூடன் (திருக்காளத். பு.21, 11); fool, dolt.

[Skt. a-budha>த. அபுதன்.]

அபுரூபம் *aburūbam,* பெ.(n.) அருமை (வின்.); rarity. corr. of அபூர்வம்.

அபூதம் *abūdam,* பெ.(n.) முன் இல்லாதது; whatever has not been, has not happened.

த.வ. என்றுமிலி.

[Skt. a-bhūta>த. அபூதம்.]

அபூதவுவமை *abūda-v-uvamai,* பெ.(n.) இல்பொருளுவமை (தண்டி.30); figure of speech in which non-existent things are used as standards of comparison.

[அபூத(ம்) + உவமை.]

[Skt. a-bhūta> த. ஆபூதம்.]

உவ்→உவ→உவமை.

அபூபம் *abūbam,* பெ.(n.) அப்ப வகை (பிங்.); small round cake made of flour or meal.

[Skt. apūpa>த. அபூபம்.]

அபூர்ணகாலம் *abūrṇa-kālam,* பெ.(n.) பருவத்திற்குப் போதாத அல்லது குறைவான காலம்; the period wanting for maturity (சா.அக.).

த.வ. முதிராக்காலம்.

[அபூர்ண(ம்) + காலம்.]

[Skt. apūrṇa>த. அபூர்ண(ம்).]

அபூர்வம்[1] *abūrvam,* பெ.(n.) 1. புதிது; that which has not existed before, is quite new, rare. 2. கருமத்தால் பிறப்புக் கோள்களினால் (சன்மாந்தரங்களிற்) வலுவினைக் கொடுக்கும்படி தோன்றுவது (சி.சி.பர.பிரபா.2); *(Mīmāmsā)* that which arises from karma and leads to results aimed at.

த.வ. அரிது, அருந்தோற்றம்.

[Skt. a-pūrva>த. அபூர்வம்.]

அபூர்வம்[2] *abūrvam,* பெ.(n.) 1. அரிதாக ஒருமுறை நிகழ்வது அல்லது காணப்படுவது, அரிதானது; that which occasionally occurs or is seen, that which is rare. இந்த வகையான கூத்து அபூர்வமாகத்தான் ஆடப்படுகிறது. 2. முன்னர் அறிந்திராத வொன்று, புதுமையானது; that which is new or novel. *"அவர் அபூர்வமான ஒரு வழியில் இதை முடிக்க நினைக்கிறார்".* 3. வழக்கத்துக்கு மாறானது; that which is unusual. *அபூர்வமாக அவன் காலை ஐந்து மணிக்கே எழுந்துவிட்டான்.*

த.வ. நிகழாநிகழ்வு.

[Skt. a-pūrva>த. அபூர்வம்.]

அபூர்வி *abūrvi,* பெ.(n.) தலயாத்திரிகரான மறைநூல் வல்ல அந்தணர் (I.M.P.Tj.32); Brahmin pilgrims well-versed in the *vēdas.*

[Skt. a-pūrvin>த. அபூர்வி.]

அபூரணகாலம் *abūraṇa-kālam,* பெ.(n.) 1. முதிராமற் பிறந்தது; that which has come out before maturity. 2. காலம் நிறைவுறு முன் பிறந்தது; that which has taken birth before the due time or the prescribed period (சா.அக.).

த.வ. முதிராப்பிறப்பு.

[அபூரண(ம்) + காலம்.]

[Skt.a-pūrṇa>த. அபூரணம்.]

அபூரணம் *abūraṇam,* பெ.(n.) முற்றாதது; that which is undeveloped (சா.அக.).

[Skt. a-pūrṇa>த. அபூரணம்.]

அபூரணி *abūraṇi,* பெ.(n.) பட்டுப்பருத்தி; silk cotton, *Bombax malabaricum alias B.peptaphyllum* (சா.அக.).

அபூரி *abūri,* பெ.(n.) **அபூர்வி** பார்க்க; see *abūrvi. "அபூரித் திருமேனிகளுக்குக் கொடுக்க... அரிசி இருநாழி" (S.I.I.IV.129).*

[Skt. apūrvin>த. அபூரி.]

அபூரிதக்கரைசல் *abūrida-k-karaišal,* பெ.(n.) (வேதி.) கலக்கப்படும் பொருளைத் தொடர்ந்து கரையவிடும் நீர்மம்; unsaturated solution.

த.வ. தொடர்கரைசல்.

[அபூரிதம் + கரைசல்.]

[Skt. a-pūrita> த. அபூரிதம்.]

அபூருவம் *abūruvam,* பெ.(n.) 1. புதினம் (சிந்தா. நி.183); novelty. 2. அரியது (இ.வ.); rarity.

[Skt. apūrva>த. அபூருவம்.]

அபேசாக்கு-தல் *abēšākku-,* 5 செ. குன்றாவி. (v.t.) உயர்த்துதல் (M.navi.98.); to heave.

[அபேசு + ஆக்கு-.]

[E. upraise>அபேசு.]

ஆகு (த.வி.)-ஆக்கு (பி.வி.).

அபேசுசெய்-தல் *abēšu-šey-*, 1 செ. குன்றாவி. (v.t.) 1. பருக்க வைத்தல் (இ.வ.); to prostrate. 2. விழுங்குதல்; to swallow. 3. கவர்தல்; to misappropriate. 4. திருடுதல் (மதி.களஞ்.i, 187); to steal.

[அபேசு + செய்-.]

[E. abase> த. அபேசு-.]

அபேசுபோடு-தல் *abēšu-pōḍu-*, 19 செ.குன்றாவி. (v.t) திருடுதல் (மதி.களஞ்.i, 77); to steal.

[அபேசு + போடு-.]

[E. abase>த.அபேசு.]

அபேட்சகர் *abēṭcagar*, பெ.(n.) வேட்பாளர்; candidate for an election.

[Skt. apēkṣaga>த. அபேட்சகர்.]

அபேட்சி-த்தல் *abēṭci-*, 4 செ.குன்றாவி.(v.t.) விரும்புதல்; to desire.

[Skt. apēkṣi>த. அபேட்சி-.]

அபேட்சிதம் *abēṭšidam*, பெ.(n.) விரும்பப் பட்டது (ஈடு.); that which is desired.

[Skt. apēkṣita>த. அபேட்சிதம்.]

அபேட்சை *abēṭcai*, பெ.(n.) விருப்பம்; desire.

[Skt. apēkṣā>த. அபேட்சை.]

அபேதக்கட்சி *abēda-k-kaṭci*, பெ. (n.) **அபேதவாதம், 2** பார்க்க (பாரதி.கட்டுரை, IV, 163); see *abēdavādam.*

த.வ. நிகராண்மைக்கட்சி.

[Skt. a-bhēda+kaksya>த.அபேதக்கட்சி.]

அபேதகம் *abēdagam*, பெ.(n.) கொத்துப் பசலை; cluster basella, *Basella cordifolia alias B.lucida* (சா.அக.).

அபேதசைவம் *abēdašaivam*, பெ.(n.) சிவனியம் பதினாறனுள் ஒன்று; *šaiva* sect which holds that the initiate should mediate on *šivan* as one with himself, one of 16 *Šaivam*, q.v.

[Skt. abhēda+šaiva>த. அபேதசைவம்.]

*சிவ> சிவம்>***Skt.** *šaiva.*

அபேதம் *abēdam*, பெ.(n.) வேற்றுமையின்மை; absence of difference or distinction, indentity. *"பொன்னும் பணியும்போல அபேதம்" (சி.போ.சிற்.2,1).*

[Skt. a-bhēda>த. அபேதம்.]

அபேதவாதம் *abēda-vādam*, பெ.(n.) 1. ஆதனும் (சீவான்மா) பரவாதனும் (பரமான்மா) ஒன்றெனக் கூறும் கொள்கை (சொரூபசாரம், காப்பு உரை); the doctrine identifying the individual soul with god. 2. உலகத்துச் சொத்தை மக்களுக்குச் சமமாகப் பகிர்ந்து கொடுத்தல் தொழிலாளிகள் போட்டி முறையை மாற்றிக் கூடியுழைக்கு முறையைக் கையாளுதல் முதலிய கொள்கைகளை யுடைய அரசியல்வாதம் (புதுமை.); socialism.

[Skt. a-bhēda-vāda>த. அபேதவாதம்.]

அபேதவாதி *abēda-vādi*, பெ.(n.) ஒருமைக் கொண்முடிபாளன் (அத்துவைதி); one who maintains the identity of the individual self with the Supreme Soul.

[Skt. a-bhēda+vādin> த. அபேதவாதி.]

அபேதிவாதம் *abēdi-vādam*, பெ.(n.) முதியார் கூந்தல்; a plant, *Poederia foctida* (சா.அக.).

அபேயபானம் *abēya-bāṉam*, பெ.(n.) குடிக்கத் தகாதது; that which is unfit to drink (சா.அக.).

[Skt. a-bhēya-pāna>த. அபேயபானம்.]

அபேனம் *abēṉam*, பெ.(n.) கசகசாச் செடி; poppy plant, *Papaver somniferum* (சா.அக.).

அபேனரசம் *abēṉa-rašam*, பெ.(n.) **அபின் சாரம்** பார்க்க; see *abiṉ-šāram* (சா.அக.).

[U. afim+rasa>த. அபேனரசம்.]

அபையன் *abaiyaṉ,* பெ.(n.) **அபயன்** பார்க்க; see *abayaṉ*(சா.அக.).

[Skt. abhaya> த.அபையன்.]

அபோக்தா *abōktā,* பெ.(n.) துய்க்காதவன், புசிக்காதவன்; one who does not eat or enjoy.

[Skt. a-bhōktr> த. அபோக்தா.]

அபோகம் *abōgam,* பெ.(n.) சிற்றின்ப நுகர்வின்மை; absence of sexual enjoyment (சா.அக.).

[Skt. a-bhōga>த. அபோகம்.]

அபோச்சியம் *abōcciyam,* பெ.(n.) உண்ணத் தகாதது; that which is prohibited as food. *"போதமிகு ஞானிகட் கபோச்சியமொன் றேனுமிலை" (சூத.எக்சிய.45, 3).*

[Skt. a-bhōjya>த. அபோச்சியம்.]

அபோசம்[1] *abōšam,* பெ.(n.) பருத்தி; cotton, *Gossypium herbaceum* (சா.அக.).

அபோசம்[2] *abōšam,* பெ.(n.) உடம்பை ஆற்றலிழக்கச் செய்யுமொரு நோய்; a wasting disease resulting in weakness and loss of weight, size and function of an organ or organs, *Atrophy* (சா.அக.).

அபோசனம் *abōšaṉam,* பெ.(n.) 1. பட்டினி; starvation. 2. நோன்பு; fasting (சா.அக.).

[Skt. a-bhōjana>த.அபோசனம்.]

அபோதம் *abōdam,* பெ.(n.) அறியாமை; ignorance, stupidity. *"நின்னபோதமன்றி" (பாரத.சூது.183).*

[Skt. a-bōdha>த. அபோதம்.]

அபௌருசேயம் *a-pauruṣēyam,* பெ.(n.) ஒருவராற் செய்யப்படாதது (ஈடு, 1, 1, 7); that which is not made by any one, as the *Vēdas.*

[Skt. a-pauruṣēya>த. அபௌருசேயம்.]

அம்[1] *am,* பெ.(n.) கொடுமை (சம். அக. Ms.); cruelty.

[Skt. am> த. அம்]

அம்[2] *am,* பெ.(n.) 1. மணியின் ஒளி; lustre of gems. 2. நகைப்பு; laughter. 3. இன்பம்; happiness. 4. தசைச்சுரிப்புடன் கூடிய மயிர்க் கூச்செரிப்பு (புளகம்); horripilation. 5. கடவுள்; god. 6. அன்னம்; swan. 7. அழைப்பு; invitation. 8. செருக்கு; pride. 9. போர்; battle. 10. அம்பு; arrow.

[Skt. haṃ> த. அம்.]

அம்[3] *am,* பெ.(n.) 1. ஆணை; command. 2. கும்பிடு; obeisance with joined hands. 3. நீட்சி; length. 4. ஏழிசையாதி யளவு; measure of the musical notes. 5. நேர்மையற்ற தொடரியம் (வக்கிர வாக்கியம்); crooked sentence.

[Skt. am> த. அம்]

அம்சசக்கரம் *amša-šakkaram,* பெ.(n.) ஒன்பது கோண (நவாம்ச)ச் சக்கரம்; (Astrol.) one of the two diagrams used in casting horoscopes.

[அம்சம் + சக்கரம்.]

[Skt. aṃša> த. அம்சம்.]

சருக்கு→சருக்கரம் (வட்டம்)→சக்கரம் = வட்டம், உருளி (வே.க.239).

அம்சசந்தி *amša-šandi,* பெ.(n.) தோட் பொருத்து; shoulder joint.

[அம்ச + சந்தி.]
[Skt. aṃša> த. அம்ச(ம்).]
உம்→உந்து→அந்து→சந்து→சந்தி.

அம்சசுவரம் *amša-šuvaram,* பெ.(n.) ஒரு பண் பாடுவதில் அடிக்கடி பயன்படுத்தும் குரலோசை; (Mus.) prominent note of a melody-type.

[Skt. aṃša+svara>த. அம்சசுவரம்.]

அம்சபத்திரம் *amša-pattiram,* பெ.(n.) பாகப்பிரிவினை (கூறு) உறுதி ஆவணம் (பத்திரம்); (R.F.) deed or memorandum evidencing a division of family property effected with the consent of all the members.

த.வ. பகுத்தி ஆவணம்.

[Skt. aṃśa + patra> த. அம்சபத்திரம்.]

அம்சபப்பளி *amšapappaḷi,* பெ.(n.) சேலைவகை (இ.வ.); a kind of saree.

[Skt. haṃsa> த. அம்சம்.]

அம்சபாதம் *amšapādam,* பெ.(n.) புள்ளடிக் குறி; caret mark, interlineation indicated by a caret.

[அம்சம் + பாதம்.]

[Skt. haṃsa>த. அம்சம்.]

பள் → படு → படி → படிதல் = பதிதல். பதி → பதம் → பாதம் = நிலத்திற்பதியும் காலடி.

அம்சபாதயிலை *amša-pāda-yilai,* பெ.(n.) சிறு புள்ளடி; a plant.

[அம்சம் + பாதம் + இலை.]

[Skt. haṃsa> த. அம்சம்.]

பதி → பதம் → பாதம்.

அம்சபூதன் *amša-pūdaṉ,* பெ.(n.) இறைவனின் கூறாயிருப்பவன்; one who forms part, as of a deity. *"நம்முடைய அம்சபூத ரொருவரை" (குருபரம். 166).*

[அம்சம் + பூதன்.]

[Skt. aṃśa> த. அம்சம்.]

பூ → பூது → பூதம்→ பூதன்.

அம்சம்¹ *amšam,* பெ.(n.) அன்னப்பறவை; swan.

த.வ. எதின்.

[Skt. haṃsa> த. அம்சம்.]

அம்சம்² *amšam,* பெ.(n.) தேர்விற் பெற்ற மதிப்பெண் (புதுமை); mark.

[Skt. aṃśa> த. அம்சம்.]

அம்சம்³ *amšam,* பெ.(n.) 1. கூறு; part, portion. 2. உரிமைப்பங்கு (இ.வ.); share of property for expenses. 3. கீழ்வாயிலக்கத்தின் கீழெண்; denominator of a fraction.

[Skt. aṃśa> த. அம்சம்.]

அம்சம்⁴ *amšam,* பெ.(n.) நூற்றெட்டுபநிடதங்களு ளொன்று; name of an upaniṣad.

[Skt. haṃsa> த. அம்சம்.]

அம்சம்⁵ *amšam,* பெ.(n.) 1. பல பகுதிகளாக அல்லது பன்முகமாக உள்ள திட்டம், கலந்தாய்வு முதலியவற்றில் குறிப்பிட்ட ஒரு பகுதி; aspect (of an affair, idea, plan etc.), point. *'இருபது அம்சம் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது'.* 2. எடுத்துக் கூறும்படியாக இருக்கும் கூறு அல்லது தன்மை; (a typical or noticeable) feature. 3. (ஒருவரின் அல்லது ஒன்றின் அமைப்புக்கு வேண்டிய அளவான) அழகு; compactness. *"அம்சமான வீடு".*

[Skt. aṃśa> த. அம்சம்.]

அம்சமந்திரம் *amša-mandiram,* பெ.(n.) **அசபை** பார்க்க; see *ašabai.*

[அம்ச(ம்) + மந்திரம்.]

[Skt. aṃśa> த. அம்சம்.]

மன் + திரம் → மந்திரம்.

அம்சன் *amšaṉ,* பெ.(n.) தன்னொறுப்பாளன்; kind of ascetic.

[Skt. haṃsa > த. அம்சன்.]

அம்சாசனம் *amšāšaṉam,* பெ.(n.) ஓகவிருக்கை வகையுளொன்று; *(yōga)* a *yōgic* posture.

[Skt. haṃsa+ā-ṣana> த. அம்சாசனம்]

அம்பங்கி *ambangi,* பெ.(n.) விழாவரிசி; a kind of medicinal drug. (சா.அக.)

அம்பசாதிதம் *amba-šādidam,* பெ.(n.) செல் கொத்தான் கொடி; the red thread creeper, *Cassytha filiformis* (சா.அக.).

அம்பசாரம் *amba-šāram,* பெ.(n.) முத்து; pearl (சா.அக.).

அம்பசி *ambaši,* பெ.(n.) ஆடு தின்னாப் பாளை; worm killer; a bitter plant eaten not even by sheep, *Aristolachiabracteata* (சா.அக.).

அம்பட்டகி *ambaṭṭagi,* பெ.(n.) வட்டத்திருப்பி; India pareira, *Cissampelos pareira* (சா.அக.).

[Skt. ambaṣtha> த. அம்பட்டகி.]

அம்பட்டச்சி *ambaṭṭacci,* பெ. (n.) முடிதிருத்துபவனின் மனைவி; fem. of *ambaṭṭan.*

[அம்பட்ட(ன்) + அச்சி.]

[Skt. ambasṭha> த.அம்பட்டன்.]

அச்சன்(ஆ.பா.) → அச்சி (பெ.பா.).

அம்பட்டத்தி *ambaṭṭatti,* பெ.(n.) **அம்பட்டச்சி** பார்க்க; see *ambaṭṭacci.*

[Skt. ambaṣtha> த. அம்பட்டத்தி.]

அத்தன்(ஆ.பா.)–அத்தி (பெ.பா.)

அம்பட்டம் *ambaṭṭam,* பெ.(n.) **அம்பட்டகி** பார்க்க; see *ambaṭṭagi.*

[Skt. ambaṣtha> த.அம்பட்டம்.]

அம்பட்டன்[1] *ambaṭṭan,* பெ.(n.) 1. முடி திருத்துபவன்; barbar. 2. மருத்துவன்; literally means the person who stands near to cure, but generally the name refers to a barber. many of the barbers are doctors and surgeons as well and their women are employed as midwives. (சா.அக.)

த.வ. பண்டுவன், மருத்துவன், பரியாரி, மழிப்பன், மழிஞன், மஞ்சிகன்.

[Skt. ambaṣtha>த. அம்பட்டன் (நீக்கத் தக்க இழிவுச் சொல்).]

வடமொழியில் *ambaṣtha* எனும் சொல் அருகில் நின்று நோயைக் குணப்படுத்துபவன் எனப் பொருள்படுகிறது. வடமொழி நூல்கள் புண் ஆற்றும் மருத்துவப்பணி தூய்மையற்றதால் உயர் குலத்தார் செய்யத் தகாதது எனக் கூறுகின்றன. இச்சொல் தமிழில் மருத்துவர் என்றும் பண்டுவர் எனவும் வழங்கியது. மதிப்புக்குரிய தமிழ்ச் சொற்கள் வடமொழி புதுச் சொல் புகுந்ததால் மறைந்தன. தமிழ்ச் சொற்களை ஆள்வதே தகவானது.

அம்பட்டன்கத்தி *ambaṭṭan-katti,* பெ.(n.) கடல் மீன் வகை (மூ.அ.); a marine fish, deep blue on the back, becoming silvery white on the sides, attaining 81/2 in., *Mene maculata.*

த.வ. பண்டுவன்கத்தி.

[அம்பட்டன் + கத்தி.]

[Skt. ambaṣtha> த. அம்பட்டன்.]

கள் → கட்டு → கத்து → கத்தி.



அம்பட்டன்பாரை *ambaṭṭan-pārai,* பெ.(n.) **அம்பட்டன்கத்தி** பார்க்க; see *ambaṭṭan-katti.*

த.வ. பண்டுவன் பாரை.

[Skt. ambaṣtha> த. அம்பட்டன்.]

அம்பட்டன்வாளை *ambaṭṭaṉ-vāḷai,* பெ.(n.) சொட்ட வாளை; barber's knife, a freshwater fish, silvery, attaining more than 2 ft., *Notopterus kapirat.*

த.வ. பண்டுவன்வாளை, மழிஞன் வாளைமீன்.

[அம்பட்டன் + வாளை.]

[Skt. ambaṣṭha> த. அம்பட்டன்.]



அம்பட்டை¹ *ambaṭṭai,* பெ.(n.) கொடிவகை (தைலவ.); Indian pareira.

[Skt. ambaṣṭhā> த. அம்பட்டை.]

அம்பட்டை² *ambaṭṭai,* பெ.(n.) 1. முல்லை; Arabian jasmine. 2. பங்கம்பாளை; worm-killer. 3. புளியாரை; yellow wood-sorrel.

[Skt. ambaṣṭhā> த. அம்பட்டை.]

அம்பட்டை³ *ambaṭṭai,* பெ.(n.) **அம்பட்டகி** பார்க்க; see *ambaṭṭagi.*

[Skt. ambaṣṭha> த. அம்பட்டை.]

அம்பத்தை *ampattai,* பெ.(n.) கொடிவகை (இ.வ.); glacous backed triangular buckler-leaved moonseed.

அம்பர்சர்க்கா *ambar-šarkkā,* பெ.(n.) பஞ்சை இழைக்கப் பயன்படுத்துதற்காகக், கையால் இயக்கப்படும் கருவி; hand spinning wheel.

[U. ambar+carkhā> த. அம்பர்சர்க்கா.]

அம்பர்சா *ambaršā,* பெ.(n.) சீலைவகை; kind of woman's printed cloth.

[U. amberšā > த. அம்பர்சா.]

அம்பயஞானநூல் *ambayañāṉa-nūl,* பெ.(n.) தாமரை நூல்; filaments of lotus plant.

அம்பராந்தம் *ambarāndam,* பெ.(n.) அடிவானம் (பாண்டி.); horizon.

[Skt. ambarānta>த. அம்பராந்தம்.]

அம்பராம்புயம் *ambarāmpuyam,* பெ.(n.) (ஆகாசத்தாமரை) இல்பொருள் (பச்.மூ.); that which is non existent, as sky-lotus.

[Skt.ambara+ambuja>த. அம்பராம்புயம்.]

அம்பரிடம்¹ *ambariḍam,* பெ.(n.) மாநிரய மெட்டனு ளொன்று (சி.போ.பா.2,3,பக்.203); a hell, one of eight *mā-nirayam.*

[Skt. ambariṣa> த. அம்பரிடம்.]

அம்பரிடம்² *ambariḍam,* பெ.(n.) சூரியன்; the sun.

[Skt. ambariṡa> த. அம்பரிடம்.]

அம்பரியம் *ambariyam,* பெ.(n.) பேறுகால (பிரசவ) நோய்; pangs of child birth; the pains of the contraction of the uterus during labour (சா.அக.).

அம்பரீசம் *ambarīšam,* பெ.(n.) எண்ணெய்ச் சட்டி; a pot in which oil is kept or boiled (சா.அக.)

[Skt. ambarīṣa> த. அம்பரீசம்.]

அம்பரீடம் *ambarīḍam,* பெ.(n.) 1. போர்; battle. 2. புளிமா; a species of mango. 3. வறையோடு; pan used for parching, frying pan. 4. குதிரைக்குட்டி; colt.

[Skt. ambarīsa> த. அம்பரீடம்.]

அம்பரீடன்¹ *ambarīḍaṉ,* பெ.(n.) கதிரவ(ன்) குல அரசருளொருவன் (கம்பரா. மிதிலை. 120); name of a king of the solar race celebrated for his devotion to *Viṣṇu.*

[Skt. ambarīṣa > த. அம்பரீடன்.]

அம்பரீடன்² *ambarīḍaṉ,* பெ.(n.) சிவபெருமான்; *Šivaṉ.*

[Skt. ambarīṣa> த.அம்பரீடன்.]

அம்பா *ambā*, பெ.(n.) 1. தாய் (பரிபா. 11, 81); mother. 2. மலைமகள்; *Pārvadi*, as mother of the universe.

[Skt. ambā> த. அம்பா.]

அம்மை > Skt. ambā.

அம்பாயனக்குங்கிலியம் *ambāyaṉa-k-kuṅgiliyam*, பெ.(n.) ஒரு வகைத் தூய்மையான குங்கிலியம்; dammer proper from amboyna (resin of) *Canarium, Strictum*.

அம்பார் *ambār*, பெ.(n.) தவசக்குவியல் (P.T.L.); heap of paddy or other grain.

[U. ambār> த. அம்பார்.]

அம்பாரக்கடை *ambāra-k-kaḍai*, பெ.(n.) களஞ்சியம் (W.G.); store, granary, place where anything is stored.

[அம்பாரம் + கடை.]

[U. ambār>த. அம்பார(ம்).]

கட→கடை (தமி. வ : 138.)

அம்பாரம்[1] *ambāram*, பெ.(n.) அடுக்கு; pile. 'புகையிலை யம்பாரம்' (நெல்லை).

[U. ambār> த. அம்பாரம்.]

அம்பாரம்[2] *ambāram*, பெ.(n.) யானை மேற்றவிசு (இ.வ.); howdah with a canopy.

[Skt. ambāri>த. அம்பாரம்.]

அம்பாரம்[3] *ambāram*, பெ.(n.) 1. நெற்குவியல் (திவ். திருவிருத். 58, வ்யா. அரும்.); heap of paddy or other grain on the threshing floor. 2. களஞ்சியம் (இ.வ.); granary. 'ஆண்டிக்கு ஏன் அம்பாரக் கணக்கு' (பழ.).

[Skt. ambār> த. அம்பாரம்.]

அம்பாரராசி *ambārarāśi*, பெ. (n.) விளைசலான நெல்லில் அரசுக்குரிய பகுதி (R.T.); the government's share of the gross produce of paddy.

[U. ambār+rāśi> த. அம்பாரராசி.]

அம்பாரவாசி *ambāra-vāśi*, பெ.(n.) காய்ச்சற்பாடு முதலியவற்றால் நட்டமேற்படாதபடி, அதிகப்படியாய்க் கொடுக்கும் நெல்; extra quantity of grain measured by the tenant to the landlord to compensate for the loss due to shrinkage etc. "அம்பாரவாசி அரைவாயிலே கழித்து".

[அம்பார(ம்) + வாசி.]

[U. ambār> த. அம்பார(ம்).]

அம்பாவாடல் *ambā-v-āḍal*, பெ.(n.) தைநீராடல்; ceremonial ablutions of young girls in the month of (January) *Taiśam* under the guidance of their mothers. "அம்பா வாடலி னாய்தொடிக் கன்னியர்" (பரிபா. 11, 81).

[அம்பா + ஆடல்.]

[Skt. ambā>த. அம்பா.]

ஆடு → ஆடல் = நீராடல்.

அம்பாள் *ambāḷ*, பெ.(n.) மலைமகள்; a general term for goddess parvati in temples. அர்ச்சனை அம்பாளுக்கா, சுவாமிக்கா ?

[Skt. ambā >த. அம்பாள்.]

அம்பிகாபதி *ambigābadi*, பெ.(n.) 1. சிவபெருமான் (சூத. சிவமான். 7, 8); *Śivaṉ*, as the husband of *Pārvadi*. 2. ஒரு புலவர்; name of a poet, son of Kambar, author of the *Ambigāpadi-kōvai*.

[அம்பிகா + பதி.]

[Skt. ambikā + pati> த. அம்பிகாபதி.]

பதி = தலைவன் இறைவன்.

அம்பிகாபதிகோவை *ambigābadi-kōvai*, பெ.(n.) ஒரு நூல்; a *kōvai* poem attributed to *Ambigāpadi*.

[அம்பிகாபதி + கோவை.]

[Skt. ambikā+pati>த.அம்பிகாபதி.]

அம்பிகாவல்லவர் *ambigā-vallavar*, பெ.(n.) சிவபெருமான் (பெரியபு. ஏயர். 325); *Śivaṉ*, as the husband of *Pārvadi*.

[அம்பிகா + வல்லவர்.]

[Skt. ambikā>த. அம்பிகா.]

அம்பிகேயன் *ambikēyaṉ,* பெ.(n.) 1. திருதராட்டிரன் (பாரத. திரௌபதி. 107); *Dhṛtarāṣṭra.* 2. பிள்ளையார் (கணேசன்) (சங்.அக.); *Gaṇēšaṉ.* 3. முருகக்கடவுள் (சங்.அக.); *Kandaṉ.*

[Skt. ambikēya> த. அம்பிகேயன்.]

அம்பிகை[1] *ambigai,* பெ.(n.) மலைமகள் (பார்வதி) (கந்தபு. தெய்வ. 32); *Pārvadi,* as mother.

[Skt. ambikā> த. அம்பிகை.]

அம்பிகை[2] *ambigai,* பெ.(n.) 1. தாய்; mother. 2. அத்தை; aunt.

[Skt. ambikā> த. அம்பிகை.]

அம்பிகை[3] *ambigai,* பெ.(n.) வெட்பாலை; a plant, *Wrightia antidysenterica.*

அம்பிகைதனயன் *ambigai-taṉayaṉ,* பெ.(n.) பிள்ளையார் (விநாயகன்) (சூடா.); *Gaṇēšaṉ,* as son of *Pārvadi.*

[அம்பிகை + தனயன்.]

[Skt. ambikā> த. அம்பிகை.]

தன் + ஐயன் → தனயன்.

அம்பிகைபாகன் *ambigai-pāgaṉ,* பெ.(n.) சிவபெருமான் (காஞ்சிப்பு. அந்தர்வே. 32); *Šivaṉ,* as half-*Pārvadi.*

[அம்பிகை + பாகன்.]

[Skt. ambikā > த. அம்பிகை.]

பகு → பாகம் → பாகன்.

அம்பிகைமாலை *ambigai-mālai,* பெ.(n.) ஒரு நூல்; name of a poem in praise of goddess *Mīṉākṣi* of madura, by *Kulasēgara-pāṇḍiyaṉ.*

[அம்பிகை + மாலை.]

[Skt. ambikā> த. அம்பிகை.]

அம்பிசா *ambišā,* பெ.(n.) **அம்பளங்காய்** பார்க்க; see *ambalaṅgāy* (சா.அக.).

அம்பிசைக்குழலாள் *ambišai-k-kuḻalāḷ,* பெ.(n.) பெருச்சாளி; bandicoot.



அம்பிலி *ambili,* பெ.(n.) முட்டைக் கரு (பைஷஜ. பக். 127); yolk or white of egg.

[U. ambil > த. அம்பிலி.]

அம்புகிராதம் *ambu-kirādam,* பெ.(n.) முதலை; crocodile.

அம்புசம் *ambušam,* பெ.(n.) தாமரை (கொடி வகை); lotus, as water-born.

த.வ. அம்புசனி.

[Skt. ambu-ja > த. அம்புசம்.]

அம்புசன்மம் *ambušaṉmam,* பெ.(n.) தாமரை (பச். மூ.); lotus.

[Skt. ambu-janman> த. அம்புசன்மம்.]

அம்புசாகிதம் *ambu-šāgidam,* பெ.(n.) தம்பட்டை யவரை; sword bean; fowl's bean, *Canarajia ensiformis* (சா.அக.).

அம்புசாதகம் *ambu-šādagam,* பெ.(n.) கட்டுக்கொடி; a plant that freezes water, coagulating creeper, *Cocculus villosus.* (சா.அக.).

அம்புசாதம் *ambu-šādam,* பெ.(n.) 1. தாமரை (மலை.); lotus. 2. கடம்பு; cadamba.

[Skt. ambu+jāta> த. அம்புசாதம்.]

அம்புசாதன் *ambu-šādaṉ,* பெ.(n.) நான்முகன்; *Brahmā,* as lotus-born. *"அம்புசாதன் முகத்தினில்" (பாரத. சிறப். 2).*

[Skt. ambu+jata> த. அம்புசாதன்.]

அம்புசினி *ambu-šiṉi,* பெ.(n.) தாமரைச் செடி; lotus plant, *Nelumbium speciosum* (சா.அக.).

அம்புசூகரம் *ambu-šūgaram,* பெ.(n.) பன்றியைப் போன்ற ஒரு முதலை; a kind of porcine crocodile (சா.அக.).

அம்புசேதிகம் *ambu-šēdigam,* பெ.(n.) செங்கொழுஞ்சி; a plant (சா.அக.).

அம்புதம் *ambudam,* பெ.(n.) கோரைக்கிழங்கு; koray root, sedge, *Cyperus rotundus* (சா.அக.).

[Skt. ambu-da > த. அம்புதம்.]

அம்புதரம் *ambudaram,* பெ.(n.) கோரைக் கிழங்கு; koray root, *Cyperus rotundus.*

அம்புதிவல்லபம் *ambudi-vallabam,* பெ.(n.) பவளம்; coral (சா.அக.).

அம்புப்பிரசாதனம் *ambu-p-pira-šādaṉam,* பெ.(n.) தேற்றாங்கொட்டை (சித். அக.); water clearing nut (சா.அக.).

[Skt. ambu-prasādana > த. அம்புப் பிரசாதனம்.]

அம்புப்பிரசிதம் *ambu-p-pirašidam,* பெ.(n.) செங்கொள்ளு; red horse gram, *Dolichos biflorus* (சா.அக.).

அம்புபூரணரோகம் *ambu-pūraṇa-rōgam,* பெ.(n.) கருவுற்றிருக்கும் போது முலைப் பால் கொடுத்தலால் அக்குழந்தைக்கு ஏற்படும் நோய்; a disease in children arising from allowing the child to suckle during the time of the mother's pregnancy.

த.வ. யாக்கட்டு நோய்.

[Skt. ambu + pūrṇa + rōga > த. அம்புபூரண ரோகம்.]

அம்புமாகிகம் *ambu-māgigam,* பெ.(n.) காசரைக் கீரை; a vegetable green.

அம்புயநூல்நாணான் *ambuyanūl-nāṇāṉ,* பெ.(n.) மன்மதன் (நாமதீப.); Kāmaṉ, as having a bowstring of lotus-fibres. (தாமரை நூலை நாணாகவுடையவன்).

[அம்புய(ம்) + நூல்நாணான்.]

[Skt. ambuya > த. அம்புயம்.]

நாண்ன் → நாணான்.

அம்புயன்[1] *ambuyaṉ,* பெ.(n.) நான்முகன் (கந்தபு. தெய்வயா. 223); *Brsahmāṉ,* as lotus-born.

[Skt. ambuja > த. அம்புயன்.]

அம்புயன்[2] *ambuyaṉ,* பெ.(n.) நஞ்சு; a kind of arsenic poison (சா.அக.).

அம்புயை *ambuyai,* பெ.(n.) திருமகள் (திருவரங்கத்தந். 56); *Lakṣmi,* as ocean-born.

[Skt. ambu-jā > த. அம்புயை.]

அம்புருகம் *amburugam,* பெ.(n.) 1. செம்பரத்தம் பூ; the day lotus, *Hibiscus mutabilis.* 2. நாரை; Indian crane.

[Skt. amburuka > த. அம்புருகம்.]

அம்புரேசம் *amburēšam,* பெ.(n.) தாமரை; lotus (சா.அக.).

அம்புரோகினி *amburōgiṉi,* பெ.(n.) தாமரை (சிந்தா. நி. 213); lotus.

[Skt. ambu-rōhiṇi > த. அம்புரோகினி]

அம்பை[1] *ambai,* பெ.(n.) 1. மலைமகள் (திருக்காளத். பு. 24, 12); *Pārvadi.* 2. காசிராசன் மகள் (பாரத. குருகுல. 127); name of a sister of *Pāṇḍu's* mother, daughter of a king of *Kāši.*

[Skt. āmbā > த. அம்பை.]

அம்போசம்[1] *ambōšam,* பெ.(n.) தாமரை; lotus, as water - born (சா.அக.).

[Skt. ambhō-ja > த. அம்போசம்.]

அம்போசம்[2] *ambōšam,* பெ.(n.) நாரை; a water-bird stork (சா.அக.).

அம்போநிதி *ambōnidi,* பெ.(n.) பெருங்கடல்; ocean.

அம்போயோனி *ambōyōṉi,* பெ.(n.) தாமரை; lotus plant, *Nelumblum speciosum* (சா.அக.).

அம்மடியம் *ammadiyam,* பெ.(n.) பட்டாணி; pea, *Pisum-sativam* (சா.அக.).

அம்மணக்கட்டை *ammana-k-kattai,* பெ.(n.) உடுப்பற்றவன்; a naked person without the customary covring (சா.அக.).

[அம்மணம் + கட்டை.]

[Skt. sramana>த. அம்மணம்.]

அம்மணக்குண்டி *ammana-k-kundi,* பெ.(n.) அம்மணக்கட்டை (இ.வ) பார்க்க; see *ammana-k-kattai* (சா.அக.).

[அம்மணம் + குண்டி.]

[Skt. srammana> த. அம்மணம்.]

குள்→குண்டு→குண்டி.

அம்மணத்தர் *ammanattar,* பெ.(n.) அமணர் (சினேந். 139); Jains.

[Skt. sramana > த. அம்மணத்தார்.]

அம்மணத்தோண்டி *ammana-t-tōndi,* பெ.(n.) அம்மணக்கட்டை (இ.வ.) பார்க்க; see *ammana-k-kattai* (சா.அக.).

[அம்மணம் + தோண்டி.]

[Skt. šramana> த. அம்மணம்.]

அம்மணம்[1] *ammanam,* பெ.(n.) 1. ஆடை இல்லாத நிலை; nakedness, nudity. 2. வண்டப் பேச்சு (யாழ்ப்.); obscene language, abscenity.

[Skt. šramana > த. அம்மணம்.]

அம்மணம்[2] *ammanam,* பெ.(n.) 1. இடை (திவ். பெரியாழ். 1, 6, 3, வ்யா); waist. 2. கள்ளத் தொடர்பு; lewdness.

[Skt. šramana> த. அம்மணம்.]

அம்மணம்பேசு *ammanam-pēšu,* வி.எ. (adv.) அருவருப்பாகவும், நாணக்கேடாகவும் பேசுதல்; talk in obscenities.

[அம்மணம் + பேசு.]

[Skt. šramana> த. அம்மணம்.]

அம்மார் *ammār,* பெ.(n.) கப்பற்கயிறு; ship's cable.

[Port. amarva> த. அம்மார்.]

அம்மியம் *ammiyam,* பெ.(n.) செந்தாடு பாவை; one of the 21 kinds of rare plants (unidentified). The correct spelling of this term is probably (சா.அக.).

அம்மிரம் *ammiram,* பெ.(n.) மாமரம் (சங்.அக.); mango (சா.அக.).

[Skt. āmra > த. அம்மிரம்.]

அம்மிலசாரம் *ammila-šāram,* பெ.(n.) 1. புளித்த காடி; sour vinegar. 2. புளிப்பு; sourness (சா.அக.).

[Skt. amla> த.அம்மிலம்.]

சாறு → சாறம் → சாரம்.

அம்மிலம் *ammilam,* பெ.(n.) 1. புளிப்பு; sourness. 2. புளி; tamarind. 3. புளிவஞ்சி; *puli-vañji,* a creeper bearing sour fruits.

[Skt. amla > த. அம்மிலம்.]

அம்மிலவிருக்கம் *ammila-virukkam,* பெ.(n.) புளிய மரம்; tamarind tree, *Tamarindus Indica* (சா.அக.).

[Skt.amla + vrksa> த. அம்மிலவிருக்கம்.]

அம்மிலவிருட்சம் *ammila-virutcam,* பெ.(n.) புளியமரம் (மலை.); tamarind.

[Skt. amla+vrksa> த. அம்மிலவிருட்சம்.]

அம்மிலிகா *ammiligā,* பெ.(n.) 1. புளிப்பு; sourness. 2. புளி நறளைக் கிழங்கு; the root of the plant, *Cissue acida* (சா.அக.).

[Skt. amla>ammiliga]

அம்மிலிகை *ammilikai,* பெ.(n.) புளி (சிந்தா. நி. 206); tamarind.

[Skt. amlikā > த. அம்மிலிகை.]

அமங்கலம் *amangalam,* பெ.(n.) ஆமணக்கு; castor plant, *Ricinus communis* (சா.அக.).

அமசம் *amašam,* பெ.(n.) நோய்; disease (சா.அக.).

அமண் *aman,* பெ.(n.) 1. சமணமதம்; jainism. *"வல்லமணாசற" (தேவா. 861, 11).* 2. சமணர்; Jainas, as a sect. *"வல்லமண் விடுத்த வேழம்" (திருவிளை. அங்கம். 3).* 3. அரையில் ஆடையில்லாமை; nakedness, nudity. *"குவிமுலையார் தம்முன்ன நாணமின்றி .... அமணே நின்றார்" (தேவா. 962, 7).* 4. வரிக் கூத்து வகை (சிலப். 3, 13, உரை); a inasquerade dance.

[Skt. śramaṇa > த. அமண்.]

அமண்டம் *amaṇḍam,* பெ.(n.) ஆமணக்கு (மலை.); castor-plant (சா.அக.).

[Skt. amaṇḍa > த. அமண்டம்.]

அமண்டலம் *amaṇḍalam,* பெ.(n.) ஆமணக்கு (மூ.அ.); castor plant.

[Skt. amaṇḍa>த. அமண்டலம்.]



அமணக்கூத்து *amaṇa-k-kūttu,* பெ.(n.) 1. நாணம் சிறிதுமின்றி ஆடையின்றியாடுங் கூத்து; wanton, naked dance. 2. கட்டுக்கடங்காச் செயல் (திவ். திருமாலை, 34, வ்யா.); disorderly, uncontrolled conduct.

[அமணம் + கூத்து.]

[Skt. śramaṇa> த. அமண(ம்).]

குல் → குத்து → கூத்து = பல வகைகளில் கால் குத்திட்டு ஆடுவது.

அமணம் *amaṇam,* பெ.(n.) 1. சமணமதம்; Jainism. 2. அரையில் ஆடையின்மை; nakedness, nudity, as the characteristic of Jaina ascetics.

[Skt. śramaṇa > த. அமணம்.]

அமணர் *amaṇar,* பெ.(n.) சமணர் (பெரியபு. திருஞான. 704); Jains.

[Skt. śramaṇa > த. அமணர்.]

அமணழித்தோன் *amaṇa-ḻittōṉ,* பெ.(n.) திருஞானசம்பந்தர் (நாமதீப.); *St. Tiruñāṉa-sambandar.*

[அமணம் + அழித்தோன்.]

[Skt. śramaṇa> த. அமணம்.]

அமணன்பாழி *amaṇaṉ-pāḻi,* பெ.(n.) அமணர் கோயில்; jain temple. *"அமணன் பாழியிற் சிம்மத்தைக் காட்டி" (ஈடு. 4, 6, 6).*

[அமணம் + பாழி.]

[Skt. śramaṇa> த. அமணன்.]

அமத்திரம் *amattiram,* பெ.(n.) 1. ஏனம்; a vessel. 2. வெண்கலம்; bell metal which is a mitture or an alloy of copper and powder.

அமந்தம் *amandam,* பெ.(n.) நாட்டு வாதுமை மரம்; wild almond myrobalan, *Terminalia catappa.*

அமந்தி *amandi,* பெ.(n.) நாட்டு வாதுமை (மூ.அ.); Indian almond.

[Fr. amande > த. அமந்தி.]

அமம் *amam,* பெ.(n.) நோய் (சிந்தா. நி. 190); disease, illness.

[Skt. ama > த. அமம்.]

அமர்த்தன் *amarttaṉ,* பெ.(n.) திறமையில்லாதவன்; incapable person. *"அமர்த்தனுக்கும் காணி வேண்டாம், சமர்த்தனுக்கும் காணி வேண்டாம்".*

[Skt. a-samartha > த. அமர்த்தன்.]

அமரகிச்சிலி *amara-kiccili,* பெ.(n.) மஞ்சட் கிச்சிலி; a gold coloured orange (சா.அக.).

அமரகோசம் *amarakōšam,* பெ.(n.) ஒரு வடமொழி நிகண்டு; a Sanskrit vocabulary compiled by Amarasimhan (சா.அக.).

[Skt. āmara+kōša > த. அமரகோசம்.]

அமரசயம் *amarašayam,* பெ.(n.) இரைக்குடல்; the stomach and the intestines where the food is digested (சா.அக.).

[Skt. āmā-šaya> த. அமரசயம்.]

அமரசிங்கம் *amarašingam,* பெ.(n.) அமரகோசம் (பி.வி. 42) பார்க்க; see *amarakōšam.* (சா.அக.)

[Skt. amara-simha > த. அமரசிங்கம்]

அமரசிம்மன் *amara-šimmaṉ,* பெ.(n.) அமரகோச மென்னும் வடமொழி நிகண்டை இயற்றியவன்; the author of a vocabulary in Sanskrit (சா.அக.).

[Skt. amara+simha> த. அமரசிம்மன்.]

அமரத்துவம் *amarattuvam,* பெ.(n.) அழிவின்மை (சிந்தா. நி. 213); indestructibility; immortality.

த.வ. நிலைபேறு.

[Skt. amara-tva > த. அமரத்துவம்.]

அமரதாரு *amara-dāru,* பெ.(n.) 1. தேவதாரு; deccany deodar, *erythroxylon monogynum.* 2. தேட்கொடுக்கி; scorpion plant, *Heliotropium indicum* (சா.அக.).

[Skt. amara+tāru> த. அமரதாரு.]

அமரபக்கம் *amarapakkam,* பெ.(n.) தேய்பிறை (கிருட்டிணபட்சம்); the dark fortnight.

த.வ. கரும்பக்கம்.

[அமர(ம்) + பக்கம்.]

[Skt. apara > த. அமர.]

பக்கு → பக்கம்.

அமரபர்த்திரு *amaraparttiru,* பெ.(n.) இந்திரன் (சிந்தா. நி. 188); Indraṉ.

[Skt. amara-bhartṛ> த. அமரபர்த்திரு.]

அமரபில்லம் *amara-pillam,* பெ.(n.) கண்ணிமையில் குருதி போற் சிவந்து தசை தடித்துப் பீளை தள்ளிக் கீழிமையை யொட்டிக் கொண்டு, கண்ணொளி மயங்கி நீர் வடியும் ஒரு கண்ணோய்; an eye disease characterised by inflammation of the eye lids, hyperemia of the conjunctiva with a catarhal or muco-purulent discharge, sticking of the eye-lids, defective vision etc., *castarhal ophthalmia* (சா.அக.).

த.வ. இமைப்பிசிரி.

அமரபுட்பி *amara-puṭpi,* பெ.(n.) ஒரு வகைச் செடி; a plant, *Andropogon acicularis* (சா.அக.).

[Skt. amara+puṣp> த. அமரபுட்பி.]

அமரபுட்பிகம் *amara-puṭpigam,* பெ.(n.) ஒரு வகைப் பெருஞ்சீரகம்; a kind of anise, *Anetheum sowa* (சா.அக.).

[Skt. amara+puṣpika> த. அமரபுட்பிகம்.]



அமரம் *amaram,* பெ.(n.) 1. இதளியம் (பாதரசம்); mercury. 2. பொன்; gold. 3. ஒரு கிரந்த நிகண்டு; a thesaurus in Sanskrit. 4. வெண்மை; whiteness. 5. அழிவின்மை; immortality (சா.அக.).

[Skt. amara> த. அமரம்.]

அமரமாலை *amara-mālai,* பெ.(n.) அமரகோசத்தைச் செய்த நூலாசிரியரே, செய்ததாகக் கருதப்படும் ஒரு வடமொழி

அகராதி; the title of a dictionary considered to have been compiled by the same author as of the book known as *'Amarakōšam'* (சா.அக.).

[அமர(ம்) + மாலை.]

*[**Skt.** amara> த. அமரம்.]*

அமரமுனிவன் *amaramuṉivaṉ,* பெ.(n.) தேவமுனி; divine sage. *"அமரமுனிவ னகத்தியன் றனாது" (மணிமே. பதிக. 11).*

[அமர(ம்) + முனிவன்.]

*[**Skt.** amara> த. அமரம்.]*

அமரர்கற்பம் *amarar-kaṟpam,* பெ.(n.) வானுலுகம் (R.); heaven.

[அமரர் + கற்பம்.]

*[**Skt.** amara> த. அமரர்.]*

கல்→கல்பம்→கற்பம்.

அமரர்கோன் *amararkōṉ,* பெ.(n.) இந்திரன் (திவ். திருவாய். 10, 2, 6); Indraṉ as king of gods.

த.வ. தேவர்தலைவன், அமரர்பதி.

[அமரர் + கோன்.]

*[**Skt.** amara> த. அமரர்.]*

கோ→கோவன் →கோன் = தலைவன், அரசன்.

அமரர்பதி[1] *amarar-padi,* பெ.(n.) இந்திரன் (பிங்.); Indran, as lord of gods.

*[**Skt.** amara+pati > த. அமரர்பதி.]*

அமரர்பதி[2] *amarar-padi,* பெ.(n.) தேவர் உலகம்; Svargam, as the abode of gods.

த.வ. வானவருலகம், துறக்கவுலகம்.

[அமரர் + பதி.]

*[**Skt.** amara> த. அமரர்.]*

அமரர்வணங்குங்கன்னி *amarar-vaṇaṅgu-ṅ-kaṉṉi,* பெ.(n.) இந்திர பாடாணம்; the poisonous arsenical compound of zinc.

அமரலோகம் *amara-lōgam,* பெ.(n.) தேவர் உலகம் (தேவா. 264, 11); world of gods.

த.வ. புத்தேளுலகு.

*[**Skt.** amara +lōka > த. அமரலோகம்.]*

*த. உலகம் > **Skt.** lōka.*

உல்→உலவு→உலகு→உலகம்.

உலகம் என்னும் சொல்லிலுள்ள பெருமைப் பொருளின் பின்னொட்டாகிய "அம்" என்னும் ஈறு. சிறப்பாகத் தமிழுக்கே உரியது. (ஒ.நோ.) கம்பு → கம்பம். அரங்கு → அரங்கம். நிலை → நிலையம். நகர் → நகரம். "அம்" ஈறு கெட்டு வழங்குவது வடமொழியின் இயல்பு.

(ஒ.நோ.) த. அம்பலம்>**Skt.** அம்பல.

த. முகம் >**Skt.** முக.

வடமொழியாளர் காட்டும் மூலம் "லோக்" என்பதாகும். இச்சொல் "பார்" என்னும் பொருண்மைத்து. இச்சொல் "look" என்னும் ஆங்கிலச் சொல்லோடு தொடர்புடையது. மேலும், இச்சொல் "நோக்கு" என்னும் தமிழ்ச் சொல்லினின்று முகிழ்த்த தென்பார் பாவாணர். சுற்றி வருவது, உருண்டையானது; மக்கள் என்னும் பொருண்மையே அடிப்படையானது. உலகம் என்னும் சொல் பொதுமக்களைக் குறிப்பது பெருவழக்கு.

எ–கா. உலகம் என்ன சொல்லும் ?

ஒ.நோ.:– **L.** vulgus (volgus). the people, common people, the great multitude, the public, **L.** vulgaris, **E.** vulgar, characteristic of the common people.

அமரவல்லரி *amara-vallari,* பெ.(n.) கொத்தான்; a plant, *Cassytha filiformis* (சா.அக.).

அமரவல்லி *amara-valli,* பெ.(n.) **அமரவல்லரி** பார்க்க; see *amara-vallari* (சா.அக.).

அமராசயம் *amarāšayam,* பெ.(n.) 1. இரைப்பை (வின்.); stomach. 2. கருப்பை (சிந்தா. நி. 188); womb.

*[**Skt.** āmā-aya>த. அமராசயம்.]*

அமராஞ்சனம் *amarāñjaṉam,* பெ.(n.) சந்தன மரம் (சித்.அக.); sandalwood tree.

*[**Skt.** amara+añjaṉā > த. அமராஞ்சனம்.]*

அமராபகை *amarāpagai,* பெ.(n.) பால்வீதி (ஆகாய கங்கை) (சிந்தா.நி.193); the milky way.

[Skt. amarā+āpa-gā > த. அமராபகை.]

அமராபதி *amarāpadi,* பெ.(n.) இந்திரன் நகர் (சீவக.2335); names of Indira's capital.

[Skt. amarāpati > த. அமராபதி.]

அமராபுரம் *amarāpuram,* பெ.(n.) அமராவதி; Indra's capital, *Amarāvati.* *"உடம்பராளு மமராபுரந்தவிர" (தக்கயாகப்.17).*

[அமரா + புரம்.]

[Skt. amara>த. அமரா.]

புர்→ புரை = உயர்வு. புர்→புரம் = உயர்ந்தமனை.

அமரி *amari,* பெ.(n.) காயகற்பம்; a medicine which promotes health and bestows longevity (சா.அக.).

த.வ. வாணாள்மருந்து.

[Skt. amara > த. அமரி.]

அமரிடணம் *amariḍaṇam,* பெ.(n.) சினம் (சிந்தா.நி.211); anger.

[Skt. amarsana > த.அமரிடணம்.]

அமரிதம் *amaridam,* பெ.(n.) கடுக்காய் (மலை.); chebulic myrobalan.

[Skt. amrtā > த. அமரிதம்.]

அமரிறை *amariṟai,* பெ.(n.) வானவர், தலைவன், இந்திரன்; Indraṉ. *"அமரிறை யருள்வகை" (பெருங்.வத்தவ. 5, 76).*

[அமர் + இறை.]

[Skt. amara > த. அமர்.]

இறு→இறு-த்தல் = தங்குதல். இறு→இறை.

அமருடம் *amaruḍam,* பெ.(n.) 1. சினம்; anger. 2. பொறுமையின்மை; impatience.

[Skt. amarṣa > த. அமருடம்.]

அமருலகம் *amarulagam,* பெ.(n.) வானுலகம் (திவ்.பெரியதி.2, 2, 10); svargam.

[அமர் + உலகம்.]

[Skt. amara >த.அமர்.]

அமரேசம் *amarēśam,* பெ.(n.) குய்யாட்டக புவனத்து ளொன்று (சி.போ.பா.2, 3 பக்.213); (šaivam) a spiritual world, one of *kuyyāṭṭaga-puvaṉam* q.v.

[Skt. amara+īśa > த. அமரேசம்.]

அமரேசன் *amarēśaṉ,* பெ.(n.) 1. இந்திரன் (கந்தபு.தெய்வ.19); Indraṉ. 2. வியாழன் (விதான.குணா.37); Jupiter, as preceptor of gods.

[Skt. amara+īśa > த. அமரேசன்.]

அமரை *amarai,* பெ.(n.) 1. அமராவதி; *Amarāvadi.* 2. தூண்; pillar. 3. அறுகம்புல்; durva grass. 4. சீந்தில்; gulancha.

[Skt. amara > த. அமரை.]

அமரோர் *amarōr,* பெ.(n.) அமரர் (திருப்பு.518); immortals, *dēvas.*

த.வ. வானோர்.

[Skt. amara > த. அமரோர்.]

அமல் *amal,* பெ.(n.) 1. அதிகாரம்; authority, sway. 2. மேலாய்வு (R.F.); administration or management of any land or business of behalf of another.

[U. amal > த. அமல்.]

அமல்தார் *amaltār,* பெ.(n.) வரி தண்டுமதிகாரி (R.F.); native collector of revenue corresponding to a tahsildar, mamlatdar.

த.வ. சுங்கவதிகாரி, தண்டல்நாயகன்.

[U. amal-dār > த. அமல்தார்.]

அமல்நாமா *amalnāmā,* பெ.(n.) ஒரு பணியைச் செய்யும்படி கொடுக்கும் அதிகார ஆவணம் (R.T.); warrant or authority from a public functionary for doing a piece of work.

த.வ. பணிக்கட்டளை.

[U. amal+nāmā > த. அமல்நாமா.]

அமலகம்[1] *amalagam,* பெ.(n.) நெல்லி (மலை.); emblic myrobalan.

[Skt. āmalaka > த. அமலகம்.]

அமலகம்[2] *amalagam,* பெ.(n.) அருநெல்லி (சித்.அக.); a species of gooseberry tree.

[Skt. āmalaka > த. அமலகம்.]

அமலகம்[3] *amalagam,* பெ.(n.) 1. புளிய மரம்; tamarind tree, *Tamarindus indicus.* 2. பித்தத்தால் ஏற்படும் வாய்ப்புளிப்பு; sour taste in the mouth from biliousness. 3. வயிற்றுப் புளிப்பு; acidity of the stomach (from indigestion). 4. ஒரு செடி; a plant, *Artocarpus lakuca.* 5. புளியாரை; woodsorrel, *Oxalis Corniculata* (சா.அக.).

த.வ. அம்புளி.

[Skt. āmalaka > த. அமலகம்.]

புளியமரத்துக்கு அம்புளி என்னம் பெயருண்டு. சில வகை புளியம்பழம் சற்றே இனிக்கும் தன்மை நோக்கி அம்புளி எனவும் தீம்புளி எனவும் தமிழில் வழங்கப்படும். **அம்புளி** எனும் சொல் வடமொழியில் ஆமலக–ஆமல–அமல என்றெல்லாம் திரிபுற்றது. இது வடமொழி தமிழிலிருந்து பெற்ற கடன்சொல். புளிப்புச் சுவைநோக்கி நெல்லியையும் குறித்தது.

அமலகமலம் *amalakamalam,* பெ.(n.) ஆனீர் (கோமூத்திரம்) (சிந்தா.நி.189); cow's urine.

த.வ. கோமியம், ஆனுச்சை.

[Skt. amala+kamala> த. அமலகமலம்.]

அமலகவடகம் *amalaga-vaḍagam,* பெ.(n.) நெல்லிக்காய் வடகம்; a kind of dried cake of goose berry (சா.அக.).

[அமலகம் + வடகம்.]

[Skt. āmalaka > த. அமலகம்.]

அமலகாண்டம் *amala-kāṇḍam,* பெ.(n.) ஒரு பூடு; a plant (unidentified) (சா.அக.).

அமலகேசரம் *amala-kēšaram,* பெ.(n.) நாரத்தை மரம்; citron tree, *Citrus aurantium* (சா.அக.).

அமலசம்பீரம் *amala-šambīram,* பெ.(n.) எலுமிச்சை; lime tree, *Citrus medica* (சா.அக.).

[Skt. āmalaka+campīra> த. அமலசம்பீரம்.]

அமலசாகம் *amala-šāgam,* பெ.(n.) ஒரு செடி; a kind of sorrol (potherb) (சா.அக.).

அமலசாந்தம் *amala-šāndam,* பெ.(n.) 1. சுண்ணாம்பு; lime or slaked like. 2. ஆப்பீ, மாட்டுச் சாணி; cow's dung.

அமலசாரம் *amala-šāram,* பெ.(n.) 1. எலுமிச்சை; lime. 2. ஓர் ஆரைச் செடி; a kind of sorrel. 3. வடித்த கஞ்சிக் காடி; fermented rice water (சா.அக.).

[அமலம் + சாரம்.]

[Skt. aāmlaka> த. அமலகம்.]

அமலசுக்கிரம் *amala-šukkiram,* பெ.(n.) ஒரு விலாரிச் செடி; a kind of sorrel plant (சா.அக.).

அமலசூடம் *amala-šūḍam,* பெ.(n.) **அமலசுக்கிரம்** பார்க்க; see *amala-šukkiram* (சா.அக.).

அமலத்திரவம் *amala-t-tiravam,* பெ.(n.) புளிக்க வைத்த பழச்சாறு; acid or fermented juice of fruits (சா.அக.).

[Skt. āmalaka+drava > த. அமலத்திரவம்.]

அமலதிக்தகசாயம் *amaladikda-kašāyam,* பெ.(n.) துவர்ப்பு, கைப்பு, புளிப்பு இவை சேர்ந்த மருந்து நீர் (கசாயம்); a decoction of astringent, bitter and sour drugs (சா.அக.).

அமலந்தை *amalandai,* பெ.(n.) புளிப்பு; sourness (சா.அக.).

அமலநாயகம் *amala-nāyagam,* பெ.(n.) புளியாரை; wood sorrel, *Oxalis corniculata* (சா.அக.).

அமலநிசா *amala-nišā,* பெ.(n.) சிச்சலிக் கிழங்கு; the root of a plant, *Curcuma zerum* (சா.அக.).

அமலநிம்பூரம் *amala-nimbūram,* பெ.(n.) எலுமிச்சை; lime-*citrusmedica* (சா.அக.).

அமலபஞ்சகம் *amala-pañjagam,* பெ.(n.) ஐந்து வகைப் புளித்த காய், பழங்களின் சாறு; a mixture of the juices of five kinds of sour and unripe fruits (சா.அக.).

அமலபத்திரை *amala-pattirai,* பெ.(n.) புளியாரை முதலிய பூடுகள்; oxalis and other plants (சா.அக.).

அமலபலம் *amala-palam,* பெ.(n.) புளியமரம்; tamarind tree, *Manganifera indica* (சா.அக.).

அமலபனசம் *amala-panašam,* பெ.(n.) ஈரப்பலா; monkey jack tree, *Artocarpus lacucha (Roxb.)* (சா.அக.).

அமலபித்தம் *amala-pittam,* பெ.(n.) 1. வயிற்றுப்புளிப்பு; acidity of the stomach. 2. புளிப்பித்தம்; sourbile. 3. நெஞ்செரிவு, குலையெரிவு; burning sensation of the chest or the heart (சா.அக.).

[*அமல(ம்) + பித்தம்.*]

[**Skt.** *āmala> த. அமலம்.*]

பித்து→பித்தம்.

அமலபேதனம் *amala-bēdanam,* பெ.(n.) ஓர் ஆரைச் செடி; a sorrel plant (சா.அக.).

அமலம்[1] *amalam,* பெ.(n.) 1. ஒட்டுத்தாள் (அப்பிரகம்) (நா.நார்த்த.); mica. 2. அரி நெல்லி (சித்.அக.); a species of gooseberry.

[**Skt.** *āmalaka > த. அமலம்.*]

அமலம்[2] *amalam,* பெ.(n.) 1. மாசில்; that which is spotless, immaculate. *"அமலமாம் பொருளை யேற்று" (கந்தபு.திருக்கல்.83).* 2. அழுக்கின்மை (பிங்.); purity, cleanliness. 3. மரமஞ்சள் (மலை.); tree turmeric.

[**Skt.** *a-mala > த. அமலம்.*]

அமலம்[3] *amalam,* பெ.(n.) 1. மும்மலத்தினால் பற்றப் படாமை; (in philosophy) the state of being free from the three kinds of evil passions or inherent principles of the soul viz., selfishness, delusion and lust. 2. வெண்மை; whitness. 3. செவ்வள்ளி; red yam red sweet potato, *Disorya parpurea.* 4. அரிநெல்லி; country star gooseberry, *phyllanthus distinchus.* 5. அழகு; beauty. 6. நெல்லி மரம்; gooseberry tree, *Embilica officinalis.* 7. நஞ்சுக்கொடி; umbilical cord. 8. ஒரு பூடு; the plant saptala. 9. காக்கைப் பொன் (அப்பிரகம்); tale. 10. புளிப்பு; sourness or acidity. 11. புளியாரை; wood sorrel, *Oxalis corniculata.* 12. புளித்த தயிர்; sour curd.

[**Skt.** *āmala>த. அமலம். **அமலகம்**[3] பார்க்க.*]

அமலமேகம் *amala-mēgam,* பெ.(n.) சிறுநீர் நோய்; acidity of the urine (சா.அக.).

[**Skt.** *amala+mēgha > த. அமலமேகம்.*]

அமலர் *amalar,* பெ.(n.) நெல்லிமுள்ளி (வை.மூ.); dried flesh of gooseberry fruits.

[**Skt.** *āmalaka > த. அமலர்.*]

அமலருகம் *amalarugam,* பெ.(n.) ஒரு வகை வெற்றிலை; a kind of betel leaf (சா.அக.).

அமலலோனிகம் *amala-lōnigam,* பெ.(n.) புளியாரைச் செடி; wood sorrel, *Oxalia corniculata* (சா.அக.).

அமலலோனி *amalalōni,* பெ.(n.) **அமலலோனிகம்** பார்க்க; see *amala-lōnigam* (சா.அக.).

அமலவர்க்கம் *amala-varkkam,* பெ.(n.) நாரத்தை; கிச்சிலி முதலிய புளிப்பான இலைகளையுடைய மரம்; the class or trees and plants bearing leaves or fruits that taste sour such as, orange, lime, tamarind etc. (சா.அக.).

[**Skt.** *āmalaka+varga > த. அமலவர்க்கம். **அமலகம்**[3] பார்க்க.*]

அமலவரித்திரா *amala-varittirā,* பெ.(n.) **அமலநிசா** பார்க்க; see *amala-nišā* (சா.அக.).

அமலவல்லி *amala-valli,* பெ.(n.) ஒரு வகை செடி; a kind of plant, *Pythonium bulbiferum* (சா.அக.).

அமலவாடகம் *amala-vāḍagam,* பெ.(n.) புளிமா; hog-plum, *Spondias mangifera* (சா.அக.).

அமலவாடிகம் *amala-vāḍigam,* பெ.(n.) **அமலருகம்** பார்க்க; see *amalarugam* (சா.அக.).

அமலவிருட்சம் *amala-viruṭcam,* பெ.(n.) புளியமரம்; tamarind tree, *Tamarindus indicus* (சா.அக.).

[Skt. āmalaka+vrkṣa>த. அமல விருட்சம்.]

அமலவேதசம் *amala-vēdašam,* பெ.(n.) 1. ஒரு வகை ஆரைச்செடி; a kind of sorrel, *Rumex vesicarius.* 2. காடி; vinegar obtained from fruits (சா.அக.).

அமலன்[1] *amalaṉ,* பெ.(n.) 1. மாசிலன், மலம் நீங்கினவன்; one who is immaculate, freed from impurities, has attained liberation. 2. கடவுள்; the Supreme Being, as immaculate.

த.வ. மாசிலான்.

[Skt. a-mala> த. அமலன்.]

அமலன்[2] *amalaṉ,* பெ.(n.) கடுக்காய்; Indian gall-nut, *Terminalia chebula* (சா.அக.).

அமலா *amalā,* பெ.(n.) நெல்லி முள்ளி அல்லது நெல்லி வற்றல்; dried fruit of gooseberry, *Phyllanthus emblica* (சா.அக.).

[Skt. āmalaka > த. அமலா.]

அமலாங்குசம் *amalāṅ-gušam,* பெ.(n.) ஒரு செடி; a kind of sorrel (சா.அக.).

அமலாதியுசிதம் *amalādi-ušidam,* பெ.(n.) புளித்த வுணவு அல்லது புளித்த மாங்காயைத் திண்பதால் ஏற்படுமொரு கண்ணோய்; a disease of the eyes caused by eating sour mangoes or fermented food (சா.அக.).

அமலாயோகம் *amalāyōgam,* பெ.(n.) நல்லோரை அல்லது (சந்திரன்) நிலவிற்குப் பத்தாமிடத்தில் நற்கோள்க ளிருக்கை (இலக்கினம்); (Astrol.) location of auspicious planets in the tenth house from the moon or the ascendant.

[Skt. amalā+yōga> த. அமலாயோகம்.]

அமலாளி *amalāḷi,* பெ.(n.) வரிதண்டுவோன்; amaldar, an Indian revenue officer. *"கட்டளவாய் நம்புமமலாளி பற்றினானென்றும்" (சரவண.பணவிடு.187).*

த.வ. தண்டல்நாயகன்.

[U. amal> த. அமல்.]

ஆள்→ஆளி.

அமலிகம் *amaligam,* பெ.(n.) 1. வயிற்றுப் புளிப்பு; acidity of the stomach. 2. புளியாரை; wood sorrel, *Oxalis corniculata* (சா.அக.).

[Skt. āmalaka>த.அமலிகம்.]

அமலித்தல் *amalaittal,* பெ.(n.) புளித்தல்; acidified (சா.அக.).

அமலினிட்டமணி *amaliṉiṭṭa-maṇi,* பெ.(n.) சிவன் அணிந்த அக்கமணி; a sacred berd worn by Šivaṉ, *Eleocarpus tuberculatus* (சா.அக.).

அமலை *amalai,* பெ.(n.) 1. மாசற்றவள்; a woman who is pure. 2. மலைமகள்; *Pārvadi.* 3. கீழாநெல்லி; a small plant. 4. பூவந்தி; soapnut tree.

[Skt. a-malā> த. அமலை.]

அமலோத்கரம் *amalōt-karam,* பெ.(n.) எதிர்க்களித்தல்; sour aructation (சா.அக.).

த.வ. தேக்கெறிவு.

அமளிதம் *amaḷidam,* பெ.(n.) தீவதாட்சி; a fruit unknown in Southern India (சா.அக.).

அமனி *amaṉi,* பெ.(n.) தெரு (சிந்தா.நி.204); street.

[Skt. amaṉi > த. அமனி.]

அமாசயம் *amā-šayam,* பெ.(n.) உண்ட வுணவும் தண்ணீருந் தங்குமிடம், வயிறு; a membraneous sac or receptacle to receive the food and water which we take-it serves as the principal organ of digestion, *stomach* (சா.அக.).

அமாத்தம் *amāttam,* பெ.(n.) மனமழிந்து நிற்பது; the mind is raised from the gross to the subtle state to remain there in equilibrium (சா.அக.).

அமாத்தியன் *amāttiyan,* பெ.(n.) அமைச்சன்; minister, counsellor.

[த.அமைத்தன்>Skt.*amā-tya*>த. அமாத்தியன்.]

அமாநசியம் *amānašiyam,* பெ.(n.) வலி (சிந்தா.நி.195); pain.

[Skt. *amā-nasya* > த. அமாநசியம்.]

அமார் *amār,* பெ.(n.) கப்பற்கயிறு; ship's cable.

[Port. *amarva*> த. அமார்.]

அமார்க்கம்[1] *amārkkam,* பெ.(n.) சமய நெறியில்லாதது (வின்.); irreligion.

[Skt. *a-mārga*>த.அமார்க்கம்.]

அமார்க்கம்[2] *amārkkam,* பெ.(n.) நாயுருவி (பரி.அக.); a plant.

[Skt. *a-mārga*> த.அமார்க்கம்.]

அமாவாசி *amāvāši,* பெ.(n.) காருவா (அமாவாசை) (வின்.); new moon. *"ஆயிரம் வெதிபாத மொப்போ ரமாவாசி" (சேதுபு. சேதுபல.57).*

[Skt. *amā-vāši*>த. அமாவாசி.]

அமாவசியை *amāvašiyai,* பெ.(n.) காருவா (வின்.); new moon.

[Skt. *amāvāšyā*>த. அமாவசியை.]

அமாவாசை *amāvāšai,* பெ.(n.) கதிரவனும் நிலவும் கூடி நிற்கும் நாள்; new moon, as the time when the sun and the moon dwell together. *"பிற்றைநா ளமாவாசையில்" (உபதேசகா.சிவவி.229).*

த.வ. காருவா.

[Skt. *amā-vāsyā* > த. அமாவாசை.]

அமாவாசைக்கண்டம் *amāvāšai-k-kandam,* பெ.(n.) நோய் மிக்கார்க்கு காருவா நாளிலுண்டாகும் ஏதம், நேர்ச்சி (வின்.); crisis of a disease occuring at the new moon.

த.வ. காருவாநேர்ச்சி.

[அமாவாசை + கண்டம்.]

[Skt.*amā-vāšyā* > த. அமாவாசை.]

அமாவாசைக்கருக்கல் *amāvāšai-k-karukkal,* பெ.(n.) காருவா காரிருள்; great darkness in the night of the new moon day.

[அமாவாசை + கருக்கல்.]

[Skt.*amā-vāšyā*> த.அமாவாசை.]

கரு >கருகு >கருக்கு>கருக்கல்.

அமானத்து *amānattu,* பெ.(n.) 1. ஒப்படைத்த பொருள்; deposit, anything held in trust. 2. கருவூலத்தில் பெயர் விளத்தம் குறிக்காமல் வைத்த பணம் (R.F.); money kept in suspense and not credited under any head.

[U. *amānat*> த. அமானத்து.]

அமானத்துச்சிட்டா *amānattu-c-cittā,* பெ.(n.) பொதுக்குறிப்பேடு; miscellaneous account.

[U. *amānat+cittha* > த. அமானத்துச் சிட்டா.]

அமானம் *amānam,* பெ.(n.) அளவின்மை (சூடா.); boundlessness.

த.வ. வரம்பின்மை, கட்டுப்பாடின்மை.

[Skt. *a-māna*>த. அமானம்.]

அமானவன் *amānavan,* பெ.(n.) விரசைக் கரையிலுள்ள கடவுள் (உபதேசரத். சிறப்புப்.); *Vaisn.)* name of a god said to be on the banks of the river *Virajā,* who by his touch purifies souls on their way to heaven.

[Skt. *amānava*> த. அமானவன்.]

அமானி¹ *amāṉi,* பெ.(n.) 1. பொறுப்பு; security, trust, deposit. 2. அரசுப் பொறுப்பிலுள்ள நிலம் (C.G.); land held directly under the government, opp. to இஜாரா. 3. வரி நிலுவை முதலியவற்றிற்காக அரசுப் பார்வையிலுள்ள நிலம் (C.G.); land under the management of government officers for arrears of revenue or for any other reason. 4. உரிமையாளன் பொறுப்பில் இல்லாத நிலம்; (C.G.); land not held by the owner, for whom another holds it a trustee.

த.வ. சாராநிலம், உரிமைசாராநிலம்.

[U. amāni > த. அமானி.]

அமானி² *amāṉi,* பெ.(n.) வரையறுக்கப்படாதது; that which is not previously filled. *"அமானியிலே கண்டுமுதல் பண்ணிக்கொள்" (இ.வ.).*

[Skt. a-māni> த. அமானி.]

அமானிபாசேபாப் *amāṉi-pāsēpāp,* பெ.(n.) ஆட்சியர் ஆளுகையிலுள்ள சில்லறை பயிர்செய்யும் நிலங்கள் (P.T.L.); sundry farms under the management of a collector.

[Ar.amāni+pājēpāp>த. அமானிபாசேபாப்.]

அமானுடகிருத்தியம் *amāṉuḍa-kiruttiyam,* பெ.(n.) மனித வல்லமையைக் கடந்த செயல்; superhuman act.

[Skt. a-mānuṣa+kṛtya>த. அமானுட கிருத்தியம்.]

அமானுடம் *amāṉuḍam,* பெ.(n.) மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டது; that which is superhuman.

[Skt.mānuṣya> த.அமானுடம்.]

அமானுடரோகம் *amāṉuḍa-rōgam,* பெ.(n.) தெய்வத்தினாலும், தேவதைகள், பேய் முதலியவற்றினாலும் ஏற்படும் நோய்; disease brought on through superhuman influences, here super human beings include the deities, demons, ghosts, monsters, malignant spirits etc. (சா.அக.).

த.வ. புறச்சார்பு நோய்.

[Skt.a-mānuṣa+rōga>த. அமானுடரோகம்.]

அமிச்சை *amiccai,* பெ. (n.) அறிவு (சிந்தா.நி.212); knowledge.

[a-mithyā > த. அமிச்சை.]

அமிசகம் *amišagam,* பெ.(n.) நாள் (சிந்தா. நி.193); day.

[Skt. amšaka> த. அமிசகம்.]

அமிசபிதம் *amišapidam,* பெ.(n.) தோளெலும்பின் கவை; a cavity in the scapula (shoulder blade) to receive the knob of the humerus, *Glenoid cavity* (சா.அக.).

அமிசம்¹ *amišam,* பெ.(n.) பாகம்; part, portion.

[Skt. amša> த. அமிசம்.]

அமிசம்² *amišam,* பெ.(n.) ஓதிமம் (அன்னப்புள்); swan.

[Skt. hamsa > த. அமிசம்.]

அமிசனம் *amišaṉam,* பெ.(n.) பிரிக்கை (சிந்தா.நி.195); dividing, parting.

[Skt. amšana > த. அமிசனம்.]

அமிசாமம் *amišāmam,* பெ.(n.) மானசவாவி (சிந்தா.நி.196); lake manasarowar, a sacred lake at the foot of Mt. Kailas.

[Skt. hamša> த. அமிசாமம்.]

அமிசு *amišu,* பெ.(n.) அணு (பாண்டி.); atom.

[Skt. amša > த. அமிசு.]

அமிசுகம் *amišugam,* பெ.(n.) இலை; leaf (சா.அக.).

அமிசை *amišai,* பெ.(n.) தலையெழுத்து; lot. *"ஆசையிருக்கிறது தாசில்பண்ண, அமிசையிருக்கிறது கழுதை மேய்க்க".*

[Skt. amša > த. அமிசை.]

அமித்தியம் *amittiyam,* பெ.(n.) பொய்யல்லாதது (வேதாந்தசா.84); that which is not false.

[Skt. a-mithyā > த. அமித்தியம்.]

அமித்திரன் *a-mittraṉ,* பெ.(n.) பகைவன் (உரி.நி.); enemy, as unfriendly.

[Skt. a-mitra> த. அமித்திரன்.]

அமிதம் *amidam,* பெ.(n.) அளவிறந்தது; that which is unmeasured, immense. *"அமிதமாகிய பெரும்படை" (சூளா.கல்யாண. 49).*

[Skt. amita > த. அமிதம்.]

அமிதவாதி *amidavādi,* பெ.(n.) மிதமிஞ்சின கொள்கையுடையவன் (புதுமை.); extremist.

[Skt. amita+vādin> த. அமிதவாதி.]

அமிராகிதம் *amirāgidam,* பெ.(n.) செங்கருங்காலி (சித்.அக.); red catechu.

அமிரிநாளம் *amiri-nāḷam,* பெ.(n.) வெட்டிவேர்; the root of a fragrant grass (khus khus), *Andropogon muricatus* (சா.அக.).

அமிருதை *amirudai,* பெ.(n.) 1. திப்பிலி; long pepper, Piper longum. 2. மது; sweet drink. 3. துளசி; holy basil, *Ocimum sanctum* (சா.அக.).

அமில்தார் *amildār,* பெ.(n.) வரி தண்டுமதிகாரி; office employed to collect revenue.

த.வ. அமல்தார்.

[U. amal-dār > த. அமில்தார்.]

அமிலக்கினம் *amilakkiṉam,* பெ.(n.) உடலில் அழிந்த தாது உறுப்பை உள்வாங்குமல்லது வெளித்தள்ளு மருந்து; (in materia medica) a drug or medicine that produces absorption or exudaton of diseased tissues (சா.அக.).

த.வ. அகப்புறந்தள்ளி.

அமிலகரம் *amilagaram,* பெ.(n.) உயிர்வளி (பிராணவாயு); a gaseous element which is very essential to respiration, *Oxygen* (சா.அக.).

அமிலத்தன்மை *amila-t-taṉmai,* பெ.(n.) **அமிலம்** பார்க்க; see *amilam* (சா.அக.).

[Skt. amla> த. அமிலம்.]

அமிலதம் *amiladam,* பெ.(n.) கறி, கந்தம் முதலியவற்றோடு கூடி காரவகை (அமில வர்க்கங்)களை உண்டாக்கும் காய்கறிகள்; that which converts vegetables and roots into sour, substances (சா.அக.).

[Skt. amla-ta > த. அமிலதம்.]

அமிலதிகரணம் *amiladi-karaṇam,* பெ.(n.) உயிர்வளியைக் கலக்கச் செய்தல்; the act of uniting or causing to combine with oxygen, *Oxygenation* (சா.அக.).

[அமிலம் + அதி + கரணம்.]

[Skt. amla+adhi>த. அமிலதி.]

அமிலப்பிரதிகாரம் *amila-p-piradi-kāram,* பெ.(n.) புளிப் பெதிர்க்கை; the reciprocal action of acid, acid reaction (சா.அக.).

அமிலம் *amilam,* பெ.(n.) (வேதி.) 1. அரிக்கும் தன்மையும் புளிப்புச் சுவையும் கொண்ட காடி (திரவம்.); acid. 2. புளிப்புப்பொருள்; sour substances. 3. மண், மாழை முதலியவற்றோடு சேர்ந்து உப்பு வகைகளை உண்டு பண்ணுமொரு பொருள்; (in chemistry) a sub-substance which combines with bases to form salts, and of which hydrogen is an essential constituent (சா.அக.).

[Skt. amla > த. அமிலம்.]

அமிலமாக்கல் *amila-mākkal,* பெ.(n.) புளிப்பேற்றுகை; converting into acid, to make sour (சா.அக.).

[அமிலம் + ஆக்கல்.]

[Skt. amla> த. அமிலம்.]

அமிலமை *amilamai,* பெ.(n.) காடி (திராவக)த் தன்மை, புளிப்புத்தன்மை; acidity, sourness (சா.அக.).

[Skt. amla > த. அமிலமை.]

அமினா *amiṉā,* பெ.(n.) அற (நீதி) மன்றத்தின் ஆணை (உத்தரவு)களை உரியவரிடம் சேர்ப்பிக்கும் பொறுப்பான அலுவலர்; subordinate officer of civil court to serve legal processes.

த.வ. விடையதிகாரி, கட்டளை அதிகாரி.

[U. amin > த. அமீனா.]

அமிதூரம் *amidūram,* பெ.(n.) செம்மறிக்கடா; the male of a sheep which butts with its head, ram (சா.அக.).

அமிர் *amir,* பெ.(n.) தலைவன்; commander, nobleman.

[U. amir> த. அமீர்.]

அமீன்[1] *amin,* பெ.(n.) 1. பணம் தண்டல் செய்யும் ஓர் அதிகாரி; subordinate officer employed to collect arrears of revenue under a coercive process. 2. குடிம முறை மன்றக் கட்டளைகளை நிறைவேற்றுகிற ஓர் அதிகாரி; subordinate office employed by civil courts for various purposes such as to sell or deliver up possession of immovable property, carry out legal processes as a bailiff.

த.வ. கட்டளை அதிகாரி, கட்டளையர்.

[U. amin> த. அமீன்.]

அமீன்[2] *amin,* பெ.(n.) கமுக்க (அந்தரங்க) அலுவலர் (M.Sm.D.I.278); confidential officer.

த.வ. அணுக்க அதிகாரி, அணுக்கர், கமுக்க அலுவலன்.

[U. amin > த. அமீன்.]

அமீன்கெச்சு *amin-keccu,* பெ.(n.) சிற்றூரின் நிலஅளவுக் குறிப்பு; official plan of village lands.

[U. amin + F. sketch> த. அமீன்கெச்சு.]

அமீனா *amina,* பெ.(n.) 1. வல்லந்தமாய்க் கடன் நிலுவைத் தொகையைத் தண்டும் வருவாய் அலுவலர்; sub-ordinate officer employed to collect arrears of revenue under a coercive process. 2. அசையாச் சொத்துக்களை விற்றல், கைப்பற்றுதல் போன்ற நயமன்றக் கட்டளைகளை நிறைவேற்றும் அதிகாரி; subordinate officer employed by civil courts for various purposes such as to sell or deliver up possession of immovable property, carryout legal processes as a bailiff.

த.வ. தண்டலர்.

[U - amin > த. அமீனா.]

அமுதசம்பூதன் *amuda-šampūdan,* பெ.(n.) பாற்கடலில் பிறந்த நிலவு (வரத. பாகவத. குருகு. 23); Moon, as born from the ocean of milk.

[Skt. a-mrta+ sam - bhūta > த. அமுதசம்பூதன்]

அமுதவேணி *amuda-vēni,* பெ.(n.) கங்கையை முடியிலணிந்தவன், சிவன் (திருப்பு.202); Šivan, as having the Ganges in his matted hair.

[அமுதம் + வேணி]

அமுல் *amul,* பெ.(n.) 1. அதிகாரம்; authority, sway. 2. மேல் உசாவு; administration or management of any land or business on behalf of another (R.R.). 3. நடைமுறைப்படுத்தம்; effect. *'நாளையிலிருந்து இந்தச் சட்டம் அமுலுக்கு வருகிறது.'*

த.வ. நடைமுறைப்படுத்தம்.

[U. amal> த.அமுல்.]

அமூர்த்தம் *a-mürttam,* பெ.(n.) உருவில்லாதது; that which is without form.

த.வ. உருவிலி.

[Skt. a-mūrta>த. அமூர்த்தம்.]

அமூர்த்தன் *amūrttan,* பெ. (n.) உருவில்லாதவன், சிவன் (சி.சி.1, 30, மறைஞா.); Šivan, as formless.

த.வ. உருவிலன்.

[Skt. a-mūrta>த. அமூர்த்தன்.]

அமை *amai,* பெ.(n.) கதிரவனும் நிலவும் கூடி நிற்கும் நாளாகிய காருவா நாள்; new noon, as the time when the sun and the moon dwell together. *"அமையதனின் மாளயந்தா னாற்றுவரேல்" (சேதுபு. துராசா. 41).*

த.வ. உவா.

[Skt. amā> த.அமை.]



அமோகபாணம் *amōga-bāṇam,* பெ.(n.) இலக்குத் தவறாத அம்பு, (பாரத. நிவாத. 84); unerring arrow.

[Skt. a-mōgha+bāṇa>த. அமோகபணம்]

அமோகம் *amōgam,* பெ.(n.) 1. மிகுதி; plenty, abundance. 2. இலக்குத் தவறாமை (சீவக. 1646); unfailingness in hitting.

த.வ. மிகுதி, பெருக்கம்.

[Skt. a-mōgha > த. அமோகம்.]

அமோகன் *amōgaṉ,* பெ.(n.) மயக்கமில்லாதவன் (மச்சபு. சுக்கிர. 35); one in whom there is no ignorance.

[Skt. a-mogha > த. அமோகன்.]

அமோகை *amōgai,* பெ.(n.) கடுக்காய் (தைலவ. தைல. 34); chebulic myrobalan.

[Skt. amōghā > த. அமோகை.]

அயக்களங்கு *aya-k-kaḷaṅgu,* பெ.(n.) இரும்புத் துரு (வின்); oxide of iron, used as medicine.

[அயம்+களங்கு.]

[Skt. ayas > த. அயம்.]

களம்→களங்கு = கருமை.

அயக்கிரீவம் *ayakkirīvam,* பெ.(n.) நூற்றெட்டுச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று; name of an upanisad.

[Skt. hayagrīva > த. அயக்கிரீவம்.]

அயக்கிரீவன் *aya-k-kirīvaṉ,* பெ.(n.) திருமாலின் தோற்றரவுகளுள் ஒன்று; name of a form of *Tirumāl* as horse-necked.

[Skt. Hayagrīvā>த. அயக்கிரீவன்.]

அயகரம் *aya-karam,* பெ.(n.) மலைப்பாம்பு; boa-constrictor, as goat-swallower.

[Skt. aja-gara> த. அயகரம்.]



அயசு *ayacu,* பெ.(n.) இரும்பு (சி.சி.4, 8, சிவாக்); iron.

[Skt. ayas > த. அயசு.]

அயணம் *ayaṇam,* பெ.(n.) செலவு; moving, going. *"வெய்யோன் வடதிசை யயண முன்னி" (சீவக. 85).*

த.வ. செல்லுகை.

[Skt. ayana > த. அயணம்.]

அயத்தொட்டி *aya-t-toṭṭi,* பெ.(n.) வைப்பு நஞ்சு வகை; a prepared arsenic, said to be pieces of iron cauldron used in the preparation of cinnabar.

[அயம் + தொட்டி.]

[Skt. ayas > த. அயம்.]

அயதார்த்தம் *a-yadārttam,* பெ.(n.) மெய்யில்லாதது; untruth. *"அயதார்த்த ஸ்மரணம்" (தர்க்கபா. 68).*

த.வ. மெய்யின்மை.

[Skt. a-yathārtha> த. அயதார்த்தம்.]

அயப்பனை *ayappaṉai,* பெ.(n.) **அயபானி** பார்க்க; see *aya-pāṉi.*

அயபானி *aya-pāṉi,* பெ.(n.) ஒரு மருந்துச் செடி (மூ.அ.); a medicinal herb.

[Braz. ayapana > த. அயபானி.]

அயம்[1] *ayam,* பெ.(n.) விழா (அக.நி.); festival.

[Skt. aya > த. அயம்.]

அயம்[2] *ayam,* பெ.(n.) 1. இரும்பு (பிங்.); iron. 2. அரப்பொடி (தைலவ. தைல. 6); iron filings.

[Skt. ayas > த. அயம்.]

அயம்[3] *ayam,* பெ.(n.) குதிரை (பிங்.); horse.

[Skt. haya > த. அயம்.]

அயம்[4] *ayam,* பெ.(n.) அலரி (மூ.அ.); oleander.

[Skt. haya-māra > த. அயம்.]

அயம்பற்றி *ayam-paṟṟi,* பெ.(n.) காந்தம்; magnet, as an iron-attracter.

[அயம் + பற்றி.]

[Skt. ayas > த. அயம்.]

பற்று > பற்றி.

அயமகம் *aya-magam,* பெ.(n.) குதிரை வேள்வி; horse - sacrifice. *"அயமக மாயிரத்துக் கேனும்" (நல். பாரத. தீர்த்தம. 18).*

[Skt. haya-medha > த. அயமகம்.]

அயமரம் *aya-maram,* பெ.(n.) அலரி (பிங்.); oleander, as death to horse.

[Skt. haya-māra > த. அயமரம்.]

அயமுகம் *aya-mugam,* பெ.(n.) ஒன்பது இருக்கை வகைகளுள் ஒன்றான திரிதரவில்லா விருக்கை (சிலப். 8: 26, உரை); a posture, one of nine posture.

[அயம் + முகம்.]

[Skt.haya> த. அயம்.]

அயமேதம் *aya-mēdam,* பெ.(n.) குதிரை வேள்வி (உத்தரரா. அசுவமே. 7); horse - sacrifice.

[Skt. haya-mēda> த. அயமேதம்.]

அயவணம் *ayavaṇam,* பெ.(n.) ஒட்டகம் (பிங்.); camel.

[Skt. ravana > த. அயவணம்.]

அயவாகனன் *aya-vāgaṉaṉ,* பெ.(n.) ஆட்டை யூர்தியாகக் கொண்ட கடவுளெனக் கருதப்படும் தீக்கடவுள் (சூடா.); *Agni,* as riding on a goat.

[Skt. aja+vāhanaṉ>த. அயவாகனன்.]

அயவாரி *ayavāri,* பெ.(n.) வசம்பு; sweet-flag.

[Skt. aja+ari>த. அயவாரி.]

அயவெள்ளை *aya-veḷḷai,* பெ.(n.) மருந்துக்காகப் பொடியாக்கப்பட்ட இரும்பு; iron reduced to medicinal powder.

[அயம் + வெள்ளை.]

[Skt. ayas> த. அயம்.]

அயன்[1] *ayaṉ,* பெ.(n.) 1. பிறப்பில்லாதவ னெனக் கருதப்படும் நான்முகன்; *Brahmaṉ,* as not born. 2. தயரதனின் தந்தை; name of the father of *Dayarathan.* *"அயன் புதல்வன் தசரதனை" (கம்பரா. குலமுறை. 13).*

[Skt. Aja > த. அயன்.]

அயன்[2] *ayaṉ,* பெ.(n.) அரசு நிலம்; government lands.

[U. ain > த.அயன்.]

அயன்கணக்கு *ayaṉ-kaṇakku,* பெ.(n.) நான்முகன் வகுத்த நெறி; destiny ordained by *Brahmaṉ.* *'அயன் கணக்கு ஆருக்குந் தப்பாது'.*

[அயன்+கணக்கு.]

[Skt. aja>த. அயன்.]

கள்→கண்→கணக்கு.

அயன்தரம் *ayaṉ-taram,* பெ.(n.) நிலத்தின் முதன் மதிப்பு; original classification of lands in the Madras provinces at the time of survey according to their kinds of qualities.

[அயன் + தரம்.]

[U. ain>த. அயன்.]

அயன்தீர்வை *ayaṉ-tīrvai,* பெ.(n.) நிலவரி; tax on land.

[அயன் + தீர்வை.]

[U. ain>த. அயன்.]

அயன்மனைவி *ayaṉ-maṉaivi,* பெ.(n.) நான்முகன் மனைவியாகிய கலைமகள்; *Kalaimagaḷ* wife of *Brahmaṉ.*

[அயன் + மனைவி.]

[Skt. aja> த. அயன்.]

அயன்சமா *ayaṉ-samā,* பெ.(n.) அரசால் குறிக்கப்பட்ட மொத்தவரி; amount of government demand on land.

[U. ain+ jamā > த.அயன்சமா.]

அயன்சமாபந்தி *ayaṉ-samābandi,* பெ.(n.) ஆண்டு நிலவரித் தீர்மானம்; annual settlement of land revenue.

[U. ain+ jamābandi > த.அயன்சமாபந்தி.]

அயனப்பிறப்பு *ayaṉa-p-piṟappu,* பெ.(n.) கதிரவனின் வடதிசை, தென்திசைச் செலவுகளின் தொடக்கம்; commencement of the sun's northward or southward course, time of the sun's entry in *kaḍagam* or *magaram.*

[அயனம் + பிறப்பு.]

[Skt.ayana>த.அயனம்.]

பிற→பிறப்பு.

அயனம் *ayaṉam,* பெ.(n.) 1. வழி (பிங்.); road, path, course. 2. நிலநடுக்கோட்டிற்கு வடக்கிலாவது தெற்கிலாவது ஞாயிறு செல்லும் காலம்; time of the sun's northward or southward course. 3. அரையாண்டு (சூடா.); half year. 4. வடவழி, தென்வழிச் செல்லும் கதிரவன் காலம் (உத்தராயண தட்சிணாயன பிரவேச காலம்) (வேதாரணி. தோற்றச். 82); solstitial point, the first in either *kaḍagam* or *magaram.*

த.வ. செலவு.

[Skt. ayana > த.அயனம்.]

அயனமண்டலம் *ayaṉa-maṇḍalam,* பெ.(n.) நிலநடுக் கோட்டிற்கு வடக்கும் தெற்குமுள்ள கதிரவன் செல்லும் பாதை; the ecliptic.

[அயன(ம்) + மண்டலம்.]

[Skt. ayana> த. அயன(ம்).]

மண்டு > மண்டலம்.

அயனாள் *ayaṉāḷ,* பெ.(n.) 1. நான்முகனின் நாள்; a day of *Brahmaṉ.* 2. நான்முகனின் வாணாள்; age of *Brahmaṉ.*

[அயன் + நாள்]

[Skt. aja > த. அயன்.]

அயாசகம் *ayāšagam,* பெ.(n.) கேளாது கிடைக்கும் இரவல்; unsolicited alms. *"ஆய்ந்தார்க் கயாசகமுமாம்" (சைவச. பொது. 257).*

[Skt. a-yācaka > த. அயாசகம்.]

அயாசிதபிச்சை *a-yāšida-piccai,* பெ.(n.) இருந்தவிடத்திலேயே வரும் உணவை வாங்கியுண்ணும் இரவல் (சைவச. பொது. 405); food obtained unsought by saintly men, who neither leave their place nor make any effort to obtain it.

[Skt.a-yācita+bhikṣā>த.அயாசித பிச்சை.]

அயிக்கவாதசைவம் *ayikka-vāda-šaivam,* பெ.(n.) சிவனிய மதப் பிரிவுகளுளொன்று (சி. போ. பா. அவை. பக். 22); a šaiva sect.

அயிங்கிசை *ayiṅgišai,* பெ.(n.) துன்புறுத்தாமை; abstention from doing injury, esp. from killing. *"அயிங்கிசை பொறையே மெய்ம்மை" (சிவதரு. சிவதரும. 3).*

[Skt. a-himsā> த.அயிங்கிசை.]

அயிச்சுரியம் *ayiccuriyam,* பெ.(n.) செல்வம்; wealth.

[Skt. aiśvarya >த.அயிச்சுரியம்.]

அயிஞ்சை *ayiñjai,* பெ.(n.) துன்புறுத்தாமை; abstention from doing injury, esp. from killing. *"அயிஞ்சையே பரமதன்மம்" (பிரபோத. 18, 4).*

[Skt. a-himśā > த.அயிஞ்சை.]

அயிதம் *ayidam,* பெ.(n.) தீங்கு; harm. *"இந்த மானியத்துக்கு அயிதம் பண்ணினவன்" (தெ.க.தொ.1, பக். 138).*

[Skt. a-hita > த.அயிதம்.]

அயிந்தா *ayindā,* பெ.எ. (adj.) அடுத்து வருகிற; next, ensuring. *'அயிந்தா பசலி' (உ.வ.).*

[U. ā-inda > த.அயிந்தா.]

அயிந்திரதிசை *ayindra-disai,* பெ.(n.) கிழக்கு; the east quarter, as under the guardianship of Indira. *"அயிந்திர திசையின்" (சீகாளத். பு. தென்கை. 64).*

த.வ. கீழ்திசை.

[அயிந்திரம் + திசை.]

[Skt. ayindra > த.அயிந்திர(ம்).]

அயிம்சை *ayimśai,* பெ.(n.) **அகிம்சை** பார்க்க; see *ahimsai.*

[Skt. a-himśā > த.அயிம்சை.]

அயிமாசு *ayimāśu,* பெ.(n.) தேர்வு, ஆய்வு; examination, inspection.

[U. āzmā'ish >த.அயிமாசு.]

அயிராணி *ayirāṇi,* பெ.(n.) 1. அயிராவணனின் துணைவி அயிராவணி; consort of *Airāvaṇaṉ.* 2. இந்திரனின் துணைவி (நாலடி, 381); *Indirāṇi,* Indraṉ's consort. 3. மலைமகள் (திவா.); Pārvadi.

[Skt. aja+rani > த.அயிராணி.]

அயிராவணம் *ayirāvaṇam,* பெ.(n.) **அயிராவதம்** பார்க்க; see *ayirāvadam.*

[Skt. ayirāvada> த.அயிராவணம்.]

அயிராவதம் *ayirāvadam,* பெ.(n.) இந்திரனின் ஊர்தி என்று சொல்லப்படும் ஐராவதம் என்னும் யானை; Indiraṉ's elephant.

த.வ. தேவர்கோன்யானை.

[Skt. ayirāvada> த.அயிராவதம்.]

அயிராவதன் *ayirāvadaṉ,* பெ.(n.) அயிராவதம் என்னும் யானையை ஊர்தியாகக் கொண்டவன், இந்திரன்; *Indiraṉ.*

த.வ. தேவர்கோன்.

[Skt. ayirāvada> த.அயிராவதன்.]

அயில்வார் *ayil-vār,* பெ.(n.) முதல் வரித் திட்டத்திற்குப் பின் வரியிடப்பட்ட நிலங்கள் (G.Sm. D.I.ii. 28); lands assessed subsequent to the first settlement by the British.

[U. ain-wār > த. அயில்வார்.]

அயுத்தம் *ayuttam,* பெ.(n.) தகுதியின்மை; unfitness, incongruity. *"அயுத்தமெனுஞ் சுரிகை யொருபால் வீக்கி" (பிரபோத. 3 : 11).*

த.வ. பொருந்தாமை.

[Skt. a-yukta > த.அயுத்தம்.]

அயுதம் *ayudam,* பெ.(n.) பத்தாயிரம் (இரகு. திருவவ. 1); ten thousand.

[Skt. ayuta > த.அயுதம்.]

அயோக்கியதை *a-yōkkiyadai,* பெ.(n.) தீயொழுக்கம்; bad conduct, dishonesty.

[Skt. a-yōgya-tā > த. அயோக்கியதை.]

அயோக்கியம் *a-yōkkiyam,* பெ.(n.) தகாதது; that which is unsuitable, improper.

த.வ. ஒழுக்கமின்மை.

[Skt. a-yogya > த.அயோக்கியம்.]

அயோக்கியன் *ayōkkiyaṉ,* பெ.(n.) 1. நம்புதற்கேலா நடத்தையன்; unreliable person; 2. ஒழுக்கமற்றவன்; dishonest.

[Skt. a-yogya > த.அயோக்கியன்.]

அயோகவன் *a-yōgavaṉ*, பெ.(n.) நான்காம் வருணத்தா (சூத்திர)னுக்கும் வணிக (வைசிய)ப் பெண்ணுக்கும் பிறந்தவன் (சைவச. பொது. 467, உரை); son of a śūdra man and *vaiśya* woman.

[Skt. a-yogava > த. அயோகவன்.]

அயோத்தி *ayōtti*, பெ.(n.) கோசலர்களின் தலைநகர் (கம்பரா. கையடை. 7); name of the capital of the kingdom of *Kośala*.

[Skt. ayōdhyā > த. அயோத்தி.]

அயோனிசன் *ayōṉiśaṉ*, பெ.(n.) பிறப்புறுப்பு வழியாய் பிறவாதவன்; one not born from the womb.

[Skt. a-yōni-ja > த. அயோனிசன்.]

அர்க்கம் *arkkam*, பெ.(n.) எருக்கு (மலை.); madar.

[Skt. arka > த. அர்க்கம்.]

அர்க்கன் *arkkaṉ*, பெ.(n.) கதிரவன்; the sun.

[Skt. arka > த. அர்க்கம்.]

அர்க்காதிபதி *arkkādipadi*, பெ.(n.) (வானியல்) பொருள் முதல்வன் (திரவியாதிபதி); the planet presiding over riches.

[Skt. arga+adhipati > த. அர்க்காதிபதி.]

அர்க்காதிபன் *arkkādibaṉ*, பெ.(n.) **அர்க்காதிபதி** பார்க்க; see *arkkādipadi*.

[அர்க்காதிபதி → அர்க்காதிபன்.]

அர்க்கார் *arkkār*, பெ.(n.) தூதன்; messenger.

[U. -harkāra > த. அர்க்கார்.]

அர்க்கியம் *arkkiyam*, பெ.(n.) தேவர்களுக்கும், விருந்தினர்களுக்கும் நீரால் செய்யும் வரவேற்பு; water offered reverentially to gods and guests. *"மந்திரத்தினாலே விதமாரர்க்கியங் கொடுத்து" (சேதுபு. சேதுபல. 90).*

த.வ. நீரோம்பல்.

[Skt. arghya > த. அர்க்கியம்.]

அர்ச்சகன் *arccagaṉ*, பெ.(n.) கோயிலில் வழிபாடு நடத்துபவன்; temple priest.

த.வ. பூசகன், பூசாரி.

[Skt. arcaka > த. அர்ச்சகன்.]

அர்ச்சனாபாகம் *arccaṉā-pāgam*, பெ.(n.) **அர்ச்சனாபோகம்** பார்க்க; see *arccaṉā-pōgam*.

[அர்ச்சனா + பாகம்.]

[Skt. arcanā> த.அர்ச்சனா.]

அர்ச்சனாபோகம் *arccaṉā-bōgam*, பெ.(n.) கோயிற்பூசகனுக்கு விடப்பட்ட இறையிலி நிலம் (I.M.P. SA. 176); lands on free tenure bestowed on temple priests.

[அர்ச்சனா+போகம்.]

[Skt.arcanā >த. அர்ச்சனா.]

அர்ச்சனை *arccaṉai*, பெ.(n.) வழிபாடு; worship. *"செவ்வி தர்ச்சனை செய்தனர்" (கந்தபு. திருவி. 123).*

த.வ. பூசை.

[Skt. arcanā > த. அர்ச்சனை.]

அர்ச்சாவதாரம் *arccāvadāram*, பெ.(n.) திருமால் நிலைகளுளொன்று (அஷ்டாதச. தத்வத். 3,60); manifestation of *Tirumāl* as idols and other sacred symbols which are worshipped in temples and houses, one of five *Tirumāl nilai*.

[Skt. arcā +ava-tāra>த.அர்ச்சாவதாரம்.]

அர்ச்சாவிக்கிரகம் *arccā-vikkiragam*, பெ.(n.) பூசைத் திருமேனி; idol to be worshipped. *"சடகோபனை அர்ச்சா விக்கிரகமாகப் பிரதிஷ்டிப்பித்து" (கோயிலொ. 7).*

த.வ. கடவுட்சிலை.

[Skt.arcā+vi-graha>த.அர்ச்சாவிக்கிரகம்.]

அர்ச்சி *archi*, பெ.(n.) விண்ணப்பம்; official representation generally in writing from a sub-ordinate to a superior a petition.

த.வ. வேண்டுகோள்.

[U. arzi > த. அர்ச்சி.]

அர்ச்சி–த்தல் *arcci-,* 4 செ.குன்றாவி (v.t.) வழிபடுதல்; to worship. *"அர்ச்சிப்பா ரிந்நூ லலரினால்" (சைவச. பொது. 566).*

த.வ.பூசைசெய்தல்.

[Skt. arc- > த. அர்ச்சி–,]

அர்ச்சிதன் *arccidan,* பெ. (n.) வழிபடப்படுவோன்; one who is worshipped. *"ஆதிநாத னமரர்க ளர்ச்சிதன்" (தேவா. 784:7).*

த.வ. வழிபடத்தக்கோன்.

[Skt. arcita > த. அர்ச்சிதன்]

அர்ச்சியசிட்டர் *arcciya-cittar,* பெ.(n.) தூயகத் துறவியர் (கிறித்.); canonised saints.

[Skt. ariya+śiṣṭa>த. அர்ச்சியசிட்டர்.]

அர்ச்சிராதிமார்க்கம் *arccir-ādi-mārkkam,* பெ.(n.) துறக்கத்திற்குச் செல்வோரை முதலிற் கண்டு வரவேற்று வழி நடத்தும் சிறுதெய்வங்களைக் கடந்து துறக்கத்துக்குச் செல்லும் வழி; way to the supreme heaven which is open only to the Brahma-vit (knower of Brahman) and on which one has to pass by Arccis and other deities.

[Skt. arcist-ādi+mārga>த. அர்ச்சிராதி மார்க்கம்.]

அர்ச்சிசு *arccisu,* பெ.(n.) துறக்கத்திற்குச் செல்வோரை முதலிற்கண்டு வரவேற்று வழி நடத்துந் தெய்வம் (அஷ்டாதச. அர்ச்சி); name of the deity met with first on the way to the supreme heaven, who leads on to the next, and who presides over light.

[Skt. arcis > த. அர்ச்சிசு.]

அர்ச்சுனன் *arccunan,* பெ.(n.) **அருச்சுனன்** பார்க்க; see *aruccunan.*

அர்ச்சை *arccai,* பெ.(n.) தெய்வவுரு (வணங்கப்படும் சிலை); idol, as worshipped.

த.வ. இறையுரு.

[Skt. arcā > த. அர்ச்சை.]

அர்சாரோகம் *arśā-rōgam,* பெ.(n.) மலவாயிலில் தசை வளர்ந்து துன்புறுத்தும் மூல நோய்; a disease which gives rise to the growth of polypi or fleshy condylomata at the anus known as piles.

[Skt. arcā-rōga> த.அர்சாரோகம்.]

அர்சி *arci,* பெ.(n.) விண்ணப்பம்; official representation generally writting from a sub-ordinate to a superior, a petition.

த.வ. வேண்டுகோள்.

[U. arzi > த. அர்சி.]

அர்சிதாத்து *arci-dāddu,* பெ.(n.) எழுத்து மூலமான விண்ணப்பம்; written petition.

[U. arzi+dāsh > த. அர்சிதாத்து.]

அர்சிதார் *arcidār,* பெ.(n.) வேண்டுகோள் (விண்ணப்பம்) செய்வோன்; petition, memorialist.

[U. arzi-dār > த. அர்சிதார்.]

அர்சிதாவா *arsi-dāvā,* பெ.(n.) முறையீட்டு (பிராது) வேண்டுகோள் (விண்ணப்பம்) (இக். வ); petition of complaint, plaint, first pleading in a suit.

[U. arzi+tāva > த. அர்சிதாவா.]

அர்சோரோகம் *arsō-rōgam,* பெ.(n.) மூலநோய் (சு.வை.ர.); piles.

[Skt. arśas+rōga > த. அர்சோரோகம்.]

அர்த்தக்கிரகணம் *artta-k-kiragaṇam,* பெ.(n.) பாதிக் கோள் மறைப்பு (பாதிக் கிரகணம்); half eclipse.

த.வ. அரைமறைப்பு.

[Skt. ardha+grahaṇa>த.அர்த்தக் கிரகணம்.]

அர்த்தகோளம் *artta-kōlam,* பெ.(n.) அரைக்கோளம்; hemisphere.

[அர்த்த(ம்) + கோளம்.]

[Skt. ardha> த. அர்த்தம்.]

அர்த்தசந்திரக்குறி *artta-śandira-k-kuri,* பெ.(n.) இன்பந் துய்க்குங்கால் பெண்களின் மார்பு போன்ற பாகங்களில் ஆண்களின் உகிர்(நகங்)கள்பட்டு அரைநிலவு (அர்த்த சந்திர) வடிவில் உண்டாக்கப் பெறும் உகிர்(நக)க்குறி; semi lunar impression of the finger-nail left by a male on the female

breast etc. at sexual intercourse for the purpose of exciting sexual passion as laid down in the erotic science of kokkōga muni.

[அர்த்தசந்திர(ம்) + குறி]

[Skt.ardha+candra>த.அர்த்தசந்திரன்+ குறி]

அர்த்தசந்திரகபாடம் *artta-šandira-kabāḍam,* பெ. (n.) நெஞ்சத்தில் பெரிய, சிறிய அரத்தக்குழாய்களில் அதன் வாய்ப் பகுதிகளைக் காக்க வேண்டி அவை ஒவ்வொன்றிற்கும் அமைந்துள்ள கதவு போன்ற மூன்று பிறை வடிவ தசை; the three semi-lunar cuspid valves which guard the entrances leading to the aorta and the pulmonary artery.

[Skt. ardha+candra+kapāta>த. அர்த்த சந்திரகபாடம்.]

அர்த்தசந்திரப்பிரயோகம் *artta-šandira-p-pirayōgam,* பெ.(n.) கழுத்திற் கைகொடுத்துத் தள்ளுகை; pushing one by the neck with the open hand put in the shape of a crescent.

[Skt. ardha + candra + prayōgam>த. அர்த்தசந்திரப்பிரயோகம்.]

அர்த்தசந்திரபாணம் *artta-candra-pāṇam,* பெ.(n.) பிறை வடிவான அம்பு; arrow with crescent - shaped head.

[Skt. ardha+candra+pāṇa>த. அர்த்த சந்திரபாணம்.]



அர்த்தசந்திரம் *artta-šandiram,* பெ.(n.) 1. படைவகுப்புவகையுளொன்று; army arrayed in the form of a crescent. *"அர்த்தசந்திரப்போர் வியூகம் வகுத்தான்" (பாரத. மூன்றாம் போர். 2).* 2. திருவாசியின் மேல் வளைவு (தெ.க.தொ.ii.பக்.143); crescent arch on an idol.

[Skt. ardha+candra>த. அர்த்தசந்திரம்.]

அர்த்தசந்திரன்[1] *artta-šandiraṉ,* பெ.(n.) 1. எட்டாம் நாள் நிலவு; half-moon crescent. 2. உகிர் (நக)க்குறி (கொக்கோ. 5, 58 உரை); semi-circular impression of the finger nail. 3. ஒருவகை நெற்றிக் குறி; figure of crescent painted on the forehead.

[Skt. ardha+candra>த. அர்த்தசந்திரன்.]

அர்த்தசந்திரன்[2] *artta-šandiraṉ,* பெ.(n.) 1. பதினாறு (சோடச) கலையு ளொன்று (செந். IX, 248); a mystic centre in the body, one of *šōḍaša-kalai.* 2. திருவாசியின் ஒரு பகுதி (தெ.க.தொ.ii, 203); a part of the *tiruvāši.*

[Skt. ardha+candra>த. அர்த்தசந்திரன்.]

அர்த்தசம்வாதம் *arttašamvādam,* பெ.(n.) இறைக்கொள்கையின் உள்ளது இல்லது ஆகிய இரு கொள்கை, (அஸ்திநாஸ்திவாதம்) (சி.சி.அளவை, 1, சிவாக்.); (phil.) doctrine which affirms both existence and non-existence.

[Skt.artha+samvada>த.அர்த்தசம் வாதம்.]

அர்த்தசாத்திரம் *artta-šāttiram,* பெ.(n.) கௌடில்யர் எழுதிய அரசியல் நூல்; political economy, political science, a book written by Gowdilyar.

த.வ. பொருள்நூல்.

[Skt. ardha+šāstra>த. அர்த்தசாத்திரம்.]

அர்த்தசாமபூசை *artta-šāma-p-pūšai,* பெ. (n.) கோயிலின் நள்ளிரவுப் பூசை; midnight service in the temple.

[அர்த்த + சாமம் + பூசை.]

*[**Skt.** ardha>த. அர்த்தம்.]*

யாமம்→ சாமம் >**Skt.**jāma. பூசு→ பூசை >**Skt.** pūja.

அர்த்தசாமம் *artta-šāmam*, பெ.(n.) நள்ளிரவு, நடு இரவு; midnight.

[அர்த்த(ம்) + சாமம்.]

*[**Skt.** ardha > த. அர்த்த(ம்).]*

யாமம்→ சாமம்.

அர்த்ததர்சி *arttatarši*, பெ.(n.) புத்தருள் ஒருவர் (மணிமே. பக். 369); a Buddha.

அர்த்ததாயம் *arttadāyam*, பெ.(n.) பிறங்கடை (வாரிசு) உரிமையில் பெறும் பங்குப் பொருள்; property obtained as a share in inheritance. *"இவ்வூராருடன் ஒரு அர்த்ததாய ப்ராப்தி உடையேனல்லேன்" (திவ். பெரியாழ். 3: 1,8, வியா. பக். 521).*

[அர்த்த(ம்)+தாயம்.]

*[**Skt.** ardha>த. அர்த்தம்.]*

த. ஆயம்> **Skt.** தாயம்.

அர்த்தநாசம் *artta-nāšam*, பெ.(n.) பொருட்கேடு; loss of wealth.

*[**Skt.** artha> த. அர்த்த(ம்).]*

த. நசி > **Skt.** nāsa.

அர்த்தநாரி *artta-nāri*, பெ.(n.) மணிக்குற்ற வகை; flaw in a ruby.

*[**Skt.** ardha+nāri> த. அர்த்தநாரி.]*

அர்த்தநாரீசன் *artta-nārīšan*, பெ.(n.) **அர்த்தநாரீசுவரன்** பார்க்க; see *artta-nārīšuvaran*.

அர்த்தநாரீசுவரன் *artta-nārīšuvaran*, பெ.(n.) பாதியுடம்பு பெண் வடிவான சிவன் (மச்சபு. புராண. 22); form of Šivan, half female and half male.

த.வ. மாதொருபாகன்.

*[**Skt.**ardha + nārī + īšvara>த.அர்த்த நாரீசுவரன்.]*

அர்த்தப்படுத்து-தல் *arttappaduttu-*, 5 செ.குன்றாவி.(v.t.) பொருள் கொள்ளுதல்; interpret (in one's own way). *அவர் உன்னோடு பேசாததற்கு உன் மேல் சினம் என்று அர்த்தப்படுத்தத் தேவை இல்லை. (உ.வ.).*

[அர்த்தம் + படுத்து-.]

*[**Skt.** artha> த. அர்த்தம்.]*

அர்த்தப்பிசகு *artta-p-pišagu*, பெ.(n.) பொருட்பிழை; misconstruction, wrong sense.

[அர்த்தம் + பிசகு.]

*[**Skt.** artha> த. அர்த்த(ம்).]*

அர்த்தப்புரட்டு *artta-p-purattu*, பெ.(n.) **அர்த்தப்பிசகு** (பாண்டி.) பார்க்க; see *artta-p-pišagu*.

[அர்த்த(ம்)+புரட்டு.]

*[**Skt.** artha>த. அர்த்தம்.]*

அர்த்தபக்குவம் *artta-pakkuvam*, பெ.(n.) தேவையான பக்குவத்தில் பாதி (பாதி பழுத்தது); half-riped condition.

[அர்த்த(ம்)+பக்குவம்.]

*[**Skt.** artha>த. அர்த்தம்.]*

அர்த்தபஞ்சகம் *artta-pañjagam*, பெ.(n.) மாலியத்தின் ஐம்பெரும் உண்மைகள்; five truths of *Vaisņavism*.

*[**Skt.**artha + pañcaka>த.அர்த்தபஞ்சகம்.]*

ஐம்பெரும் உண்மைகளாவன :

1. ஸ்வஸ்வரூபம், 2. பரஸ்வரூபம், 3. புருஷார்த்த ஸ்வரூபம், 4. உபாயஸ்வரூபம், 5. விரோதிஸ்வரூபம்.

அர்த்தபரியங்கம் *artta-pariyañgam*, பெ.(n.) ஓர் ஓக நிலை; a particular reclaining posture practised in meditation or yoga.

*[**Skt.**ardha+pariyańka>த. அர்த்தபரியங்கம்.]*

அர்த்தபாதம் *artta-pādam*, பெ.(n.) ஒரு வகைச் செடி; a plant, *Phyllanthus niruri*.

அர்த்தபாராவதம் *artta-pārāvadam,* பெ.(n.) 1. ஒரு வகைப் புறா; a kind of pigeon. 2. கவுதாரி; a partridge, *Tetrax perdix.*

அர்த்தபிரசாதனி *artta-pirašādaṉi,* பெ.(n.) இமயத்தில் இருக்கும் ஒருவகை செடி; an unidentified Himalayam plant used in eye-disease.

அர்த்தபிருட்டகம் *artta-piruṭṭagam,* பெ.(n.) (நாட்டிய.) கூத்தின் உறுப்பசைவு களுளொன்று (சுத்தா. சிலப். பக். 81); a mode of gesticulation.

[Skt.ardha+pṛṣṭhaka>த.அர்த்த பிருட்டகம்.]

அர்த்தபுட்டி *artta-puṭṭi,* பெ.(n.) பொருட் பொலிவு; significative fullness, pregnant signification in speech, writting or action.

த.வ. பொருட்பொலிவு.

[Skt. artha+pusti > த. அர்த்தபுட்டி]

அர்த்தபுட்பி *artta-puṭpi,* பெ.(n.) சிறு நாகப்பூ மரம்; iron-wood of Ceylon-mesua ferrea.

அர்த்தபேதம் *artta-pēdam,* பெ.(n.) பொருள் வேறுபாடு; difference in meaning.

[Skt. artha+bhēda>த. அர்த்தபேதம்.]

அர்த்தபேதரோகம் *artta-pēda-rōgam,* பெ.(n.) 1. ஒற்றைத் தலைவலி; neuralgia or headache on one-side of the head, *Hemicrania.* 2. தலையின் ஒரு பக்கத்தில் குத்தல் வலி கண்டு தொல்லை செய்து 15 நாள் அல்லது மாதத்திற்கொரு முறை அதிகமாகி அதன்பின்தானே குணமடைவ தாயுமிருக்கும் நோய்; a neuraligic disease of the head in which a violent and excruciating pain of a pierecing nature is felt on one half of the cranium.

அர்த்தம்[1] *arttam,* பெ.(n.) 1. சொற்பொருள்; meaning. 2. பொருட்டு என்னும் பொருளில் வரும் வட சொல்; last member of a Skt. compound which conveys the sense of the dat., as in ஜீவனார்த்தம்.

[Skt. artha>த. அர்த்தம்.]

அர்த்தம்[2] *arttam,* பெ.(n.) பாதி; half.

த.வ. பகுதி, அரை.

[Skt. ardha>த. அர்த்தம்.]

அர்த்தம்பண்ணு-தல் *arttam-paṇṇu-,* 5 செ.குன்றாவி.(v.t.) பொருள் கொள்ளுதல்; to understand, interpret.

[அர்த்தம் + பண்ணு-.]

[Skt. artha > த. அர்த்தம்.]

அர்த்தமண்டபம் *artta-maṇḍabam,* பெ.(n.) கருவறையைச் சார்ந்த மண்டபம்; hall immediately in front of the innermost shrine in a temple.

[அர்த்தம் + மண்டபம்.]

[Skt. ardha > த. அர்த்தம்.]

அர்த்தமாகதி *arttamāgati,* பெ.(n.) பிராகிருத மொழி வகை (சி.சி.பாயி. 2, மறைஞா.); a Prakrtic dialect.

[Skt. ardha-māgadhi>த. அர்த்தமாகதி.]

அர்த்தமாகு-தல் *arttamāgu-,* 5 செ. குன்றாவி.(v.t.) 1. பொருள்படுதல்; to make sense, mean. *'அவர் விடை சொல்லவில்லை என்பதால் அவர் ஒப்புக் கொண்டார் என்று அர்த்த மாகாது'.* 2. புரிதல்; to understand. *'நீங்கள் சொன்னது எனக்கு அர்த்தமாகவில்லை'.*

[அர்த்தம் + ஆகு-.]

[Skt. artha > த. அர்த்தம்.]

த. ஆகு-, (து.வி.)

அர்த்தமானியம் *artta-māṉiyam,* பெ.(n.) பாதிப்பகுதி இறையிலியாக விடப்பட்ட நிலம்; land which pays half assessment.

[அர்த்த(ம்) + மானியம்.]

[Skt. ardha > த. அர்த்த(ம்).]

அர்த்தமூலம் *artta-mūlam,* பெ.(n.) குருகு (மூலம்) நாண்மீனின் முதலிரண்டு நாழிகை (சோதிட. சிந். 56); the first two *ghatikās*or forty-eight minutes in *mūla-naksatra.*

[அர்த்த(ம்) + மூலம்.]

[Skt. ardha > த. அர்த்த(ம்).]

அர்த்தரதம் *artta-radam,* பெ.(n.) தேர் நான்கனுள் ஒன்று (ஸ்ரீபத்ம. தென்றல்விடு. 67, உரை); a class of chariots, one of four iradam.

[Skt. ardha-ratha > த. அர்த்தரதம்.]

அர்த்தரதன் *artta-radaṉ,* பெ.(n.) போர் புரிந்து பின்னடையுந் தேர்வீரன் (பாரத. அணிவ. 3); warrior who fights from his car with another and runs away defeated, one of four *tēr-vīraṉ.*

[Skt. ardha+ratha> த. அர்த்தரதன்.]

அர்த்தராத்திரி *artta-rāttiri,* பெ.(n.) நள்ளிரவு; midnight.

[Skt. ardha+raṭri>த.அர்த்தராத்திரி.]

அர்த்தராத்திரிசுரம் *artta-rāttiri-śuram,* பெ.(n.) நடு இரவிலுண்டாகுங் காய்ச்சல்; an attack of fever during midnight hours.

[அர்த்த+ராத்திரி+சுரம்.]

[Skt. sardha+ratri> த. அர்த்தராத்திரி.]

சுள்>சுர>சுரம்.

அர்த்தவாதம் *artta-vādam,* பெ.(n.) நெறிவிலக்கங்களை வற்புறுத்தும் தொடர் (சிவசம.35); commendatory or condemnatory texts emphasizing the desirableness of what is enjoined or the undesirableness of what is prohibited. 2. புகழ்ச்சி; praise, eulogium. *'இவ்விசயத்தில் அர்த்தவாத மில்லை' (ஈடு. 3.9:2).*

[Skt. artha+vāda>த.அர்த்தவாதம்.]

அர்த்தவிருத்தை *artta-viruttai,* பெ.(n.) நடு அகவை; middle aged.

[Skt. artha+vrdhā>த.அர்த்தவிருத்தை.]

அர்த்தவேதம் *artta-vēdam,* பெ.(n.) பொருணூல் (வேதா. சூ. 3, உரை); political science, political economy, one of four *upa-vēdam.*

[Skt. artha + vēda>த. அர்த்தவேதம்.]

அர்த்தாங்கத்திமிர் *arttāṅga-t-timir,* பெ.(n.) 1. உடம்பினொரு பக்கத்தில் உணர்ச்சியின்மை; absence of sensibility to pain on one side of the body, *Hemi-analgesia.* 2. உடம்பின் ஏதாவதொரு பாதியிலுணர்ச்சியின்மை; loss of sensation in either half of the body, *Hemi-anesthesia.*

[அர்த்தம்+ஆங்கம்+திமிர்.]

[Skt. artha+aṅga> த. அர்த்தாங்கம்.]

அர்த்தாங்கம் *arttāṅgam,* பெ. (n.) 1. **அர்த்தாங்கவாதம்** பார்க்க; see *arttāṅga-vādam.* 2. பாதி உடம்பு; one half of the body.

[Skt. artha+aṅga> த. அர்த்தாங்கம்.]

அர்த்தாங்கவலி *arttāṅga-vali,* பெ.(n.) 1. உடம்பினொருபக்கத்து வலி; pain on one side of the body. 2. ஊதையினாலுடம்பிலொரு பக்கமுண்டாகும் குத்தல் வலி; a neuralgic attack on one side of the body. 3. உடம்பினொரு பகுதியிற் காணுங் கால்கை வலிப்பு; epilepsy affecting one half of the body.

[அர்த்தம்+ஆங்கம்+வலி.]

[Skt. artha+aṅga> த. அர்த்தாங்க.]

அர்த்தாங்கவாதம் *arttāṅga-vādam,* பெ.(n.) குருதியோட்டம் பாதி உடம்பிற் குறைவதனால் அப்பக்கத்துக் கை, கால் முதலிய உறுப்புகள் உதவாமற் போகும்படிச் செய்யும் வலிப்பு நோய்; paralysis of one side of the body due to insufficient circulation or supply of blood.

த.வ. குருதிக்குறைவலிப்பு.

[Skt.ardha+aṅga+vadham>த.அர்த்தாங்கவாதம்.]

அர்த்தாங்கவிசிவு *arttāṅga-v-iśivu,* பெ.(n.) பக்க ஊதை (வாதம்) (தைலவ. தைல. 128); paralysis of half the body.

[அர்த்தாங்கம் + இசிவு.]

[Skt. artha+aṅga> த. அர்த்தாங்கம்.]

அர்த்தாங்கி *arttāṅgi,* பெ.(n.) மனைவி; wife. *"கம்பணவுடையார் அர்த்தாங்கி இராமாதேவியார்" (தெ.க.தொ. 4 : 99).*

[Skt. artha+aṅga> த. அர்த்தாங்கி.]

அர்த்தாங்கீகாரம்[1] *arttāṅgikāram,* பெ.(n.) பாதியுடன்பாடு (ஈடு. 4. 1: 1, ஜீய); half consent.

[Skt. ardha+ aṅgikāra > த. அர்த்தாங்கீ காரம்.]

அர்த்தாங்கீகாரம்[2] *arttāṅgikāram,* பெ.(n.) இரு திறத்தாருள் ஒரு திறத்தார் மட்டும் உடன்படுகை (ஈடு. 4. 1: 1, ஜீய); consent of one of the two parties to an agreement.

[அர்த்தாங்கீகாரம்[1] >அர்த்தாங்கீகாரம்[2].]

அர்த்தாந்தரநியாசம் *arttāndara-niyāšam,* பெ.(n.) வேற்றுப் பொருள் வைப்பணி (அணியி. 61); figure of speech whereby a particular case is maintained by reference to a general truth, or a general tuth by reference to a particular case.

[Skt. arthāntara+nyāsa> த. அர்த்தாந்தர நியாசம்.]

அர்த்தாந்தரம்[1] *arttāndaram,* பெ.(n.) தோல்வித்தானத்தொன்று (செந். IV, 13); a defect in argumentation.

[Skt. artha+antara > த. அர்த்தாந்தரம்.]

அர்த்தாந்தரம்[2] *arttāndaram,* பெ.(n.) வேறுபொருள்; another meaning.

அர்த்தாப்பு *arttāppu,* பெ.(n.) உருளைக்கிழங்கு (பரதவ.); potato.

அர்த்தாபத்தி *arttāpatti,* பெ.(n.) ஒன்றைக் கூறி மற்றொன்றைக் குறிப்பிடாமலே விளங்கவைக்கும் ஒருமுறை; (Log.) assumption of something to account for another thing which is otherwise unaccountable.

[Skt. artha+ā-patti> த. அர்த்தாபத்தி.]

அர்த்தாலங்காரம் *arttālaṅgāram,* பெ.(n.) பொருளணி; figure of speech relating to the sense opp. to சப்தாலங்காரம்.

[Skt.artha+alaṅkara>த. அர்த்தாலங்காரம்.]

அர்த்தாவபேதகம் *arttāva-bēdagam,* பெ.(n.) தலையிலொரு பக்கங் காணும் வலி; pain on one side of the head-Hemicramia.

த.வ. ஒற்றைத் தலைவலி.

அர்த்தி[1]-த்தல் *artti-,* 4 செ.குன்றாவி.(v.t.) இரத்தல்; to beg.

[Skt.arth > த. அர்த்தி-,]

அர்த்தி[2]-த்தல் *artti-,* 4 செ.குன்றாவி.(v.t.) (கணிதம்) இரண்டு சரிபாகங்களாகப் பிரித்தல்; (Math.) to bisect, divide into two equal halves.

[Skt. ardha-, > த. அர்த்தி-.]

அர்த்தி[3] *artti,* பெ.(n.) இரவலன் (வின்.); begger.

[Skt. arthin > த. அர்த்தி]

அர்த்திதம் *arttidam,* பெ.(n.) 1. முகம் அல்லது வாயை ஒரு பக்கமாய்த் திருப்புகை; turning the face or the mouth to one side as in facial paralysis, spasm of the jaw-bones, Trismus, Hemiplegia etc. 2. முகம், கழுத்து இவற்றின் ஒரு பக்கத்திற் காணும் பக்கவலிப்பு; paralysis of the muscles on one side of the face and neck.

அர்த்திதவாதம் *arttida-vādam,* பெ.(n.) வளியானது தலை, முகம் ஆகிய விடங்களில் பரவி, ஒரு பாதியைத் தாக்கி, முகத்தை ஒரு பக்கம் திருப்பி, நோவு, குத்தல் முதலிய குணங்களைக் காட்டும் நோய்; a nervous disease due to the enraged condition of the local vayu which spreads and finds lodgment in the regions of the head and the face. It distorts the face on one side. Motor paralysis of one side of the face-Facial hemiplegia.

[அர்த்திதம்+வாதம்.]

அர்த்திராபிரமேகம் *arttirā-piramēgam,* பெ.(n.) பித்தவெட்டை; a kind of veneral disease.

அர்த்தோதயம் *arttōdayam,* பெ.(n.) சுறவ (தை) மாதத்துக் காருவாவும் (அமாவாசையும்) ஞாயிற்றுக் கிழமையும் திருவோணமும், வியதீபாதமும் கூடிய வைகறை நற்பொழுது; sacred conjunction of the sun and the moon, at sunrise on a sunday with *śravaṇa naksatra* and *viyatipāta yōga,* in the month of tai. *'மாசி மகத்திலாத் தோதயத்தில்'* *(அருணா. பு. திருமலைவலம். 24).*

[Skt. ardha+udaya > த. அர்த்தோதயம்.]

அர்ப்பணம் *arppaṇam,* பெ.(n.) உரியதாகக் கொடுக்கை; dedication. *'ஈசுராரர்ப்பணம்'* *(ஞானவா. அருச்சு. 16).*

த.வ. படையல், ஈவு, காணிக்கை.

[Skt. arpana > த. அர்ப்பணம்.]

அர்ப்பணி-த்தல் *arppaṇi-,* 4 செ.குன்றாவி. (v.t.) (அர்ப்பணம்) உரித்தாக்கம் செய்தல்; to dedicate (totally to a noble cause) sacrifice, dedicate (a new industry, etc.) to the nation.

த.வ. காணிக்கையாக்கல், படைத்தல்.

[Skt. arpana > த. அர்ப்பணி-,]

அர்ப்பம் *arppam,* பெ.(n.) 1. பனி; dew. 2. பூண்டு; plant.

அர்ப்பி-த்தல் *arppi-,* 4 செ.குன்றாவி.(v.t.) உரியதாக்குதல்; to dedicate.

த.வ. படையல்.

[Skt. arp > த. அர்ப்பி-,]

அர்ப்பிதம் *arppidam,* பெ.(n.) உரியதாக்கப்பட்டது; that which is offered. *"அத்தகை மேலோற்கே செவ்வயி னர்ப்பிதமாக" (பிரபோத. 18, 25).*

த.வ. படைக்கப்பெற்றது.

[Skt. arpita> த. அர்ப்பிதம்.]

அர்ப்புதம்[1] *arppudam,* பெ.(n.) ஆயிரங் கோடி (வின்.); ten thousand millions.

[Skt. arbuda > த. அர்ப்புதம்.]

அர்ப்புதம்[2] *arppudam,* பெ.(n.) 1. பாம்பு; snake. 2. கோரைக்கிழங்கு; coray root-cyperus rotundus. 3. இமையைப் பற்றிய ஒரு வகைக் கண்ணோய்; a disease of the eye lid-stye. 4. மார்பெலும்பின் மென்மையான பாகம்; the cartilage of a rib. 5. பாம்பைப் போன்ற பூதம்; a domen like a serpent. 6. இரண்டு மாதக் காலத்துப் பிண்டத்தைப் போன்றது; a lond round mass of fleshy growth of the size of a two months foetus. 7. வீக்கம்; swelling. 8. தசை வளர்த்தி; polypus. 9. புரைக்கழலை; goitre.

[Skt. arbuda > த. அர்ப்புதம்.]

அர்ப்புதவர்த்துமரோகம் *arppuda-varttuma-rōgam,* பெ.(n.) கண்ணிமையி னோரங்களில் மொத்தையாக தசை வளர்ந்து சிவந்து வலியையுண்டாக்கு மொரு வகைக் கண்ணோய்; an eye-disease marked by a morbid growth of flesh and inflammation on the margin of the eyelids-zeissian stye.

[Skt. arbuda+varttumarōga> த.அர்ப்புத வர்த்துமரோகம்.]

அர்ப்புதாகாரம் *arppudā-gāram,* பெ.(n.) 1. கட்டியைப் போன்றது; shaped like a tumar. 2. நருவிலி; common sebestan plant-cordia myta.

அர்ப்புதின் *arppudiṉ,* பெ.(n.) 1. கட்டி; tumour. 2. வீக்கம்; swelling.

அர்ப்புதோட்டரோகம் *arppudōṭṭa-rōgam,* பெ.(n.) உதடுகளிற் சிறிய பேரீச்சங் காயைப் போல் வீக்கத்தையுண்டாக்கு மொரு நோய்; a disease of the lips characterised by a growth of flesh and swelling about the size of a small date fruit-Labio mycosis.

அர்மம் *armam,* பெ.(n.) தசை வளர்ச்சியை யுண்டாக்கும் ஒரு வகைக் கண்ணோய்; an eye disease marked by the manifest vesetation or polypus on the affected eye.

அரகசா *aragaśā,* பெ.(n.) நறுமணக் குழம்பு வகை (இ.வ.); a spiced unguent.

[H. argajā > த. அரகசா.]

அரகத் *aragat,* பெ.(n.) மனவருத்தம் விளைக்கும் பேச்சு (தாசீல்தார்நா. 15); painful talk.

[Ar. harkat > த. அரகத்.]

அரசம்[1] *arašam,* பெ.(n.) சுவையின்மை; want of taste. *'அரசமாகப் பேசுகிறான்'.*

[Skt. a-raša > த. அரசம்.]

அரசம்[2] *arašam,* பெ.(n.) மூலநோய்; piles. *"அரசம்மொலி குன்மமும்" (தைலவ. தைல. 84).*

[Skt. aršas > த. அரசம்.]

அரசிகம் *arašigam,* பெ.(n.) 1. இரசமின்மை; saplessness. 2. சுவையில்லாமை; tastelessness.

[Skt. a-rasika > த. அரசிகம்.]

அரசிகன் *arašigaṉ,* பெ.(n.) சுவையறியாதவன்; dull man, one who cannot feel or appreciate.

[Skt. a-rasika > த. அரசிகன்.]

அரசோனம் *arašōṉam,* பெ.(n.) வெள்ளைப்பூண்டு (தைலவ. தைல. 9); garlic.

[Skt. rašōna > த. அரசோனம்.]

அரணியகசம் *araṇiya-gašam,* பெ.(n.) காட்டு யானை; wild-elephant.

[அரணியம்+கசம்.]

[Skt. araṇya > த. அரணியம்.]

த. கயம்> Skt. gaja> த. கசம்.

அரணம் > Skt. araṇya> த. அரணியம்.

அரணியகதலி *araṇiyagadali,* பெ.(n.) காட்டுவாழை (சித்.அக.); wild plantain.

[அரணியம்+கதலி.]

[Skt. araṇya > த. அரணியம்.]

[த. கதலி > Skt. katali.]

கதலி = சிறு வாழைப்பழம். கதலி → கசலி = மீன் குஞ்சு. இச்சொல் குதலை என்பதனொடு தொடர்புடையது. மிக இனிக்கும் சிறு வாழைப்பழவகை தேங்கதலி எனப்பெறும். (வ.வ.107).

அரணியகம் *araṇiyagam,* பெ.(n.) மலை வேம்பு; mountain neem-melia sempevirens.

[அரணிய+அகம்.]

[Skt. araṇya> த. அரணிய.]

அரணியகற்பாசி *araṇiya-kaṟpāši,* பெ.(n.) காட்டுப் பருத்திச் செடி; wild cotton shrub-coctilospermum Gossypium.

[அரணிய+கல்+பாசி.]

[Skt. araṇya> த. அரணிய(ம்).]

அரணியகாக்கை *araṇiya-kākkai,* பெ.(n.) காட்டுக் காக்கை; wild crow.

[அரணிய(ம்)+காக்கை.]

[Skt. araṇya> த. அரணிய(ம்).]

அரணியகுதம்பம் *araṇiya-kudambam,* பெ.(n.) காட்டுச் செந்திருக்க மரம்; a plant; false saffron; flame tree-carthamus tinctorius.

[அரணிய(ம்)+குதம்பம்.]

[Skt. araṇya> த. அரணிய(ம்).]

அரணியகுலத்திகை *araṇiya-kulattigai,* பெ.(n.) ஒரு செடிவகை; a plant-Glycine labialis.

[அரணிய(ம்)+குலத்திகை.]

[Skt. araṇya> த. அரணிய(ம்).]

அரணியகேது *araṇiya-kēdu,* பெ.(n.) ஒரு செடி வகை; a plant (unidentified).

[Skt. araṇya> த. அரணிய(ம்).]

அரணியகோலி *araṇiya-kōli,* பெ.(n.) ஒரு கறி வகை; the name of a vegetable.

[Skt. araṇya>த. அரணிய(ம்).]

அரணியசடகம் *araṇiya-šadagam,* பெ.(n.) காட்டுக் கவுதாரி; wild partridge.

[அரணிய(ம்)+சடகம்.]

[Skt. araṇya>த. அரணிய(ம்).]

[சகடம்>சடகம் = வட்டமிட்டுப் பறக்கும் பறவை.]



அரணியசணம் *arani-yašanam,* பெ.(n.) காட்டுக் சீரகம்; wild cumin seed - vernonia anthelmintica.

[Skt. aranya>த. அரணிய(ம்).]

அரணியசாலி *araniya-šāli,* பெ.(n.) 1. செவ்வகில்; a red species of agil which is a valuable fragrant wood. 2. காட்டரிசி; wild rice-oryza mutica.

அரணியசாறணை *araniyaša̱ranai,* பெ.(n.) காட்டிஞ்சி (மலை.); wild ginger.

அரணியசீரம் *araniya-šīram,* பெ.(n.) காட்டுச் சீரகம்; wild cumin seed.

[அரணிய+சீரம்.]

[Skt. aranya>த. அரணிய(ம்).]

அரணியசோகி *araniya-šōgi,* பெ.(n.) செம்முள்ளிக் கீரை; common naid dye-*Barleria prionitis.*

அரணியஞ்சபத்திகம் *araniyañja-pattigam,* பெ.(n.) பெரிய முள்ளங்கி; a medicinal plant said to act on mercury.

அரணியதானியம் *araniya-dāniyam,* பெ.(n.) காட்டரிசி; wild rice, *Oryza mutica.*

[Skt.aranya + dhānya>த.அரணிய தானியம்.]

அரணியதிலகம் *araniya-dilagam,* பெ.(n.) காட்டெள்; wild sesamum containing no oil.

[Skt.aranya+tilagam>த.அரணிய திலகம்.]

அரணியதுளசி *araniya-dulaši,* பெ.(n.) காட்டுத் துளசி; wild basil-ocimum adsendons.

[அரணிய(ம்)+துளசி.]

[Skt. aranya>த. அரணியம்.]

அரணியம் *araniyam,* பெ.(n.) காடு; wilderness, jungle, forest.

[த. அரணம்>Skt. aranya > த. அரணியம்.]

அரணியமாட்சிகம் *araniya-māṭcigam,* பெ.(n.) ஒரு வகை ஈ வகை; gad fly.

[Skt. aranya+makshika >த. அரணிய மாட்சிகம்.]

அரணியமார்ச்சாரம் *araniya-mārccāram,* பெ.(n.) காட்டுப்பூனை; a wild cat, *Felis chaus.*

[Skt.aranya+mārjāra>த.அரணியமார்ச்சாரம்.]



அரணியமுட்கம் *araniya-mutgam,* பெ.(n.) காட்டு அவரை; a kind of wild bean.

[Skt. aranya + mudga>த.அரணிய முட்கம்.]

அரணியயசுவன் *araniya-yašuvan,* பெ.(n.) 1. ஓநாய்; wolf. 2. நரி; jackal.

அரணியராசன் *araniya-rāšan,* பெ.(n.) அரிமா; lion.

[Skt. aranya + rāja>த.அரணிய.]

[த.அரசன் > Skt. rāja> த. ராசன்.]

அரணியவாயசம் *araniya-v-āyašam,* பெ.(n.) ஒரு பறவை, காட்டுக் காக்கை; raven.

அரத்தனி *arattani,* பெ.(n.) 1. முழங்கை; elbow. 2. முழங்கையினின்று சிறுவிரல் நுனி மட்டுமுள்ள முழும்; cubit, measured from the elbow to the tip of the little finger.

[Skt. aratni > த. அரத்தனி.]

அரத்துவாக்கி *arattu-vākki,* பெ.(n.) கருஞ்சீரகம்; black cumin seed-*Nigella sativa.*

அரதம் *aradam,* பெ.(n.) காதின்மை; earlessness, congenital absence of the ears-*Anotia.*

அரதனம் *aradanam,* பெ.(n.) 1. (இரத்தினம்) மணி; a precious stone. *"அரதனக் கலச வியன்கரம்" (தணிகைப்பு. கடவுள். 3).* 2. (மிருதபாடாணம்) ஒருவகை நஞ்சு (வின்.); a mineral poison.

[Skt. ratna > த. அரதனம்.]

அரதனமாலை *aradanamālai,* பெ.(n.) அணியிலக்கண வகைகளுளொன்று (அணியி. 74); figure of speech which consists in enumerating certain things in their regular order.

[அரதன(ம்) + மாலை.]

[Skt. ratna>த.அரதனம்.]

அரதனாகரம் *aradanāgaram,* பெ.(n.) தனுசுகோடிக்குக் கிழக்கிலுள்ள கடல் (அருணா. பு. திருக்கண். 14); the bay east of *Dhanuskōḍi.*

[Skt. ratna+ā-kara > த. அரதனாகரம்.]

அரதி[1] *aradi,* பெ.(n.) வேண்டாமை; absence of desire. *"அரதி கைவிஞ்சு மோகம்" (திருவாய். நூற். 62).*

[Skt. a-rati > த. அரதி.]

அரதி[2] *aradi,* பெ.(n.) துன்பம் (மேருமந். 1379); distress, misery.

[Skt. a-rati > த. அரதி.]

அரப்பதுமம் *ara-p-padumam,* பெ.(n.) 1. துளசி; holy or sacred basil-ocimum sanctum. 2. செந்தாமரை; red lotus-*Nelumbium speciosum.*

அரபி *arabi,* பெ.(n.) 1. அரபு நாடு; Arabic country. 2. ஒரு மொழி; Arabic language.

[U. arab > த. அரபி.]

அரபிப்பிசின் *arabi-p-pišin,* பெ.(n.) ஒரு வகைப் பிசின்; gum arabic - African gum.

[அரபி + பிசின்.]

[U. arab> த. அரபி.]

அரபிபோளம் *arabi-pōḷam,* பெ.(n.) ஒரு வகைப் போளம்; sccortine aloe - *Aloe socotrine.*

[அரபி+போளம்.]

[U. arab> அரபி .]

அரபீசம் *arabīšam,* பெ.(n.) இதளியம் (பாதரசம்); mercury.

அரபு *arabu,* பெ.(n.) அரேபிய நாடு; Arabic country.

[U. arab> த.அரபு.]

அரபுத்தமிழ் *arabuttamiḻ,* பெ.(n.) 1. அரபு சொற்களைத் தமிழில் எழுதிய குரான் (muham.); quoran written in Tamil script. 2. அரபுச் சொற்கள் கலந்து வழங்கும் தமிழ்; Tamil with a large admixture of Arabic words.

[அரபு+தமிழ்.]

[U. arab> அரபு.]

அரம்பை *arampai,* பெ.(n.) 1. வானுலக நடன மங்கையருளொருத்தி (திவ். பெரியாழ். 3, 6, 4); name of a courtesan in the world of the gods. 2. வாழை; plantain. *"அரம்பை நிரம்பிய தொல்வரை" (கம்பரா. வரைக். 59).*

[Skt. rambhā> த. அரம்பை.]

அரம்பையர் *arambaiyar,* பெ.(n.) தெய்வமகளிர்; celestial damsels. *"அரம்பையர்ச் சேர்குவ ரன்றே" (நைடத. நிலா. 13).*

[Skt. rambhā > த. அரம்பையர்.]

அரமனாபம் *aramanābam,* பெ.(n.) வாழை; plantain tree - *musa paradisiaca.*

அரமியம் *aramiyam,* பெ.(n.) 1. அரண்மனை (பிங்.); palace. 2. நிலாமுற்றம்; terrace of a house, open space above the first or other floor. *"அரமிய மேறித் தாங்காது வீழ்ந்து" (மணிமே. 12, 47).*

[Skt. harmya > த. அரமியம்.]

அரமேகலா *aramēgalā,* பெ.(n.) ஒரு வகை மருத்துவ அறிவியல்; an ayurvedic science.

அரர் *arar,* பெ.(n.) தூய நீரவ(தீர்த்தங்கர)ருள் ஒருவர் (திருக்கலம். காப்பு, உரை); Arhat, one of 24 Tirttaṅkarar, q.v.

[Skt. ara > த. அரர்.]

அரரம் *araram,* பெ.(n.) 1. கதவு; door. 2. இரும்பு; iron.

[Skt. arara > த. அரரம்.]

அரரி *arari,* பெ.(n.) கதவு (சூடா.); door.

[Skt. arari > த. அரரி.]

அரவதண்டம் *arava-daṇḍam,* பெ.(n.) கூற்றுவனின் தண்டனை; punishment by yama. *"அரவதண்டத்தி லுய்யலு மாமே" (திவ். பெரியாழ். 4, 5, 3).*

[அரவ+தண்டம்.]

[Skt. rāva> த.அரவ.]

அரவிந்தப்பாவை *aravinda-p-pāvai,* பெ.(n.) திருமகள் (திவ். பெரியாழ். 5, 2, 10); Laksmi, seated on or residing in the lotus.

[அரவிந்தம் + பாவை.]

[Skt. aravinda> த. அரவிந்தம்.]

அரவிந்தம் *aravindam,* பெ.(n.) 1. தாமரை (திவ். திருநெடுந். 21); lotus. 2. நாரை; crane. 3. செம்பு; copper. 4. இதளியம்; mercury.

[Skt. aravinda > த. அரவிந்தம்.]

அரவிந்தராகம் *aravinda-rāgam,* பெ.(n.) பதுமராகம்; a species of ruby, hyacinth. *"கோங்கமரவிந்த ராகம்" (கம்பரா. மார்ச. 96).*

[Skt.aravinda+rāgam > த. அரவிந்தராகம்.]

அரவிந்தலோசனன் *aravinda-lōcaṉaṉ,* பெ.(n.) திருமால் (திவ். திருவாய். 6, 7, 10); *Tirumāl,* having eyes like lotus.

த.வ. தாமரைக்கண்ணன்.

[Skt.aravinda + lochan>த.அரவிந்த லோசனன்.]

அரவிந்தன் *aravindaṉ,* பெ.(n.) பிரமன் (கல்வளை. 81); *Brahmā,* spring from the lotus.

த.வ. தாமரையான்.

[Skt. arbinda > த. அரவிந்தன்.]

அரவிந்தை *aravindai,* பெ.(n.) திருமகள்; Laksmi.

த.வ. தாமரையாள்.

[Skt. aravindā > த. அரவிந்தை.]

அராகதத்துவம் *arāga-tattuvam,* பெ.(n.) தூயதூவ மெய்ம்மங்களுள் (சுத்தாசுத்த தத்துவங்களுள்) ஒன்று (சி.போ.பா. 2,2, பக்.1155, புது.); (šaiva) that which excites disire in the soul, one of seven cuttacutta-tattuvam.

[Skt. rāga+tatva>த.அராகதத்துவம்.]

அராசகம்[1] *arāšagam,* பெ.(n.) தேயம் அரசியலற்றிருக்கை (கோயிலொ. 86); anarchy.

[Skt. a-rājaka > த. அராசகம்.]

அராசகம்[2] *arāšagam,* பெ.(n.) முறையற்ற அதிகாரப்போக்கு; anarcy.

[Skt. a-rājaka > த. அராசகம்.]

அராசரிகம் *arāšarigam,* பெ.(n.) அரசில்லாக் குழப்பம் (இ.வ.); anarchy.

[Skt. a-rājarika > த. அராசரிகம்.]

அராந்தாணம் *arāndāṇam,* பெ.(n.) சமணப் பள்ளி; jaina temple. *"தவலருஞ் சிறப்பி னராந்தாணத்துளோன்" (மணிமே. 3, 87).*

[Skt. arahantāṇam > த. அராந்தாணம்.]

அராதி *arādi,* பெ.(n.) எதிரி, பகைவன் (சிந்தா. நி. 283); enemy, foe.

[Skt. arāti > த. அராதி.]

அராமி *arāmi,* பெ.(n.) கொடியவன் (கொ.வ.); wicked, deceitful person.

[U. harāmi > த. அராமி.]

அராலம் *arālam,* பெ.(n.) பொது மகளிர்; a prostitute.

[Skt. arāla > த. அராலம்.]

அராலை *arālai,* பெ.(n.) விலைமகள் (சிந்தா. நி. 282); harlot, prostitute.

[Skt. arālā > த. அராலை.]

அராவான் *arāvāṉ,* பெ.(n.) அருச்சுனனுக்கு உலூபியிடம் பிறந்த மகன் (பாரத. அருச்சுனன்றீர். 9); name of the son of *Arjuna* and *Ulūpi,* who offered himself as a sacrifical victim on the eve of the Bhārata war.

[Skt. irāvat > த. அராவான்.]

அராளகடகாமுகம் *arāḷakaḍagā-mugam,* பெ.(n.) நாட்டியக் கைமுத்திரைகள் முப்பதனு ளொன்று (சிலப். 3, 13, பக். 81, கீழ்க்குறிப்பு); a hond-pose, one of 30 *nirruta-k-kui,* q.v.

[அராளம் + கடக(ம்)+முகம்.]

*[**Skt.** arāla>த. அராளம்.]*

அரிக்கன்விளக்கு *arikkaṉ-viḷakku,* பெ.(n.) காற்றுக்கு அணையாத விளக்கு வகை; hurricane lantern.

த.வ. காற்றெதிர் விளக்கு.

[E. hurricane>த. அரிக்கன்.]



அரிக்காரன் *arikkāraṉ,* பெ.(n.) 1. தூதன்; messenger, courier, emissary. 2. வெள்ளித்தடி பிடித்துக் கட்டியங் கூறுவோன்; mace-bearer one who carries a mace in royal functions, in front of the idol in temple service.

*[**U.** harkara > த. அரிக்காரன்.]*

அரிகரகுமரன் *arigara-kumaraṉ,* பெ.(n.) ஐயனார் (பிங்.); *Aiyanār,* the son of *Tirumāl* and *Śivaṉ.*

[அரிகரன்+குமரன்.]

*[**Skt.** Hari + Hara> த. அரிகரன்]*

அரிகரபுத்திரன் *arigara-puttiraṉ,* பெ.(n.) **அரிகரகுமரன்** (சூடா.) பார்க்க; see *arikara-kumaraṉ.*

*[**Skt.** Hari + Hara + puttra>த. அரிகர புத்திரன்.]*

அரிகரன் *arigaraṉ,* பெ.(n.) சிவனும் திருமாலும் கூடிய உருவம்; manifestation of God which combines, both the forms of *Tirumāl* and *Śivaṉ.*

*[**Skt.** Hari+Hara> த. அரிகரன்.]*

அரிகல் *arigal,* பெ.(n.) மேருமலை (சிந்தா. நி. 259); Mount Mēru.

அரிகாந்தி *arikāndi,* பெ.(n.) ஒரு வகைச் செடி; monkey wort, vishnu plant - *Evolvulus absinoides.*

அரிகிட்டி *arikiṭṭi,* பெ.(n.) காட்டுப் பன்றி; wild hog.

அரிகேசா *arikēśā,* பெ.(n.) இருவேலி; cuscus root - *Ardropogon muricatus.*

அரிகேந்திரதாரி *arikēndira-dāri,* பெ.(n.) மல்லிகை; jasmine.

அரிச்சந்திரன் *ariccandiraṉ,* பெ.(n.) பொய்யுரையாமையால் தன் நாட்டையும், மனைவியையும், மகனையும் இழந்ததோடு தன்னையும் இழக்கத் துணிந்து, மெய்மைக்காக எதை இழப்பதற்கும் அணியமாயிருந்த கதிரவக் குலத்தரசன்; king of the solar race who is said to have given up his country, his wife his son and himself as a martyr to truth a king upholding the truth till the end without minding any loss to him.

த.வ. ஒன்னிலவன்.

*[**Skt.** Haris-śandra > த. அரிச்சந்திரன்.]*

அரிச்சனை *ariccaṉai,* பெ.(n.) பூசை (சிந்தா. நி. 234); worship.

த.வ. வழிபாடு.

*[**Skt.** arcanā > த. அர்ச்சனை>அரிச்சனை]*

அரிச்சிகன் *ariccigaṉ,* பெ.(n.) நிலவு (சாதகசிங். 6); moon.

[Skt. arcita > த. அரிச்சிகம்.]

அரிசட்வர்க்கம் *ari-sat-varkkam,* பெ.(n.) மனத்தைக் கெடுக்கும் அறுபகை; the six emotions which disturb a man's mind.

[Skt. ari+sad-varga> த. அர்சட்வர்க்கம்.]

அறுவகையாவன : காமம், குரோதம், மோகம், உலோபம், மதம், மாற்சரியம்.

அரிசணம் *arisaṇam,* பெ.(n.) நல்லூழ் இருபத்தேழிலொன்று; (Astron.) a division of time, one of 27 yōgam.

[Skt. harsaṇa > த. அரிசணம்.]

அரிசம்[1] *ariśam,* பெ.(n.) காருவா அதிகமும் (பிரதமை) ஒரி குறைவுமாகக் கூடியிருக்கும் நாள் (மச்சபு. புரூரவா. 27); calendar day comprising the major part of the new moon lunar day.

[Skt. arśa > த. அரிசம்.]

அரிசம்[2] *ariśam,* பெ.(n.) மகிழ்ச்சி (சி.சி.2,800, மறைஞா.); joy, pleasure happiness.

[Skt. harsa > த. அரிசம்.]

அரிசமயதீபம் *ariśamaya-dībam,* பெ.(n.) மாலிய ஆழ்வார்களின் வரலாற்றைக் கூறும் நூல்; name of a history in verse of the *āḷvārs* and *ācāryas,* by *Kiḷai-caḍakōpa-tāśar.*

[அரி+சமயம்+தீபம்.]

[Skt. Hari> த. அரி.]

அரிசரோகம் *ariśa-rōgam,* பெ.(n.) மூலநோய்; a polypoid growth of the veins in the rectum of persons suffering from impaired digestion-Hemorrhoid.

அரிசவர்த்தமன் *ariśa-varttamaṉ,* பெ.(n.) கண்ணில் உண்டாகும் கட்டி; a tumour in the corner of the eye.

த.வ. கண்கட்டி.

அரிசேவை *ari-śēvai,* பெ.(n.) திருப்பதி (பயணம்) செலவு செய்வோர் நிகழ்த்தும் நடனம்; dance of the votaries of *Tirumāl* on their return from a pilgrimage to Tirupati.

[Skt. Hari+cēvai > த. அரிசேவை]

அரிசோபகந்தரவிரணம் *ariśō-pagandara-viraṇam,* பெ.(n.) எருவாயில் புரையோடிய புண்; piles and fistula.

த.வ. மூலப்புள்.

அரிசோரோகம் *ariśō-rōgam,* பெ.(n.) ஆண்குறியில் சிறு சிறு முளைகள் போலெழும்பிப் புண்ணாகி குருதி யொழுகுமொரு வகைப் புண்; a venereal sore giving rise to small vesicles on the penis with itching sensation. It is attended with discharge of blood from the affected parts.

த.வ. குறிபுண்ணோய்.

அரிசோவர்த்தமரோகம் *ariśō-varttama-rōgam,* பெ.(n.) கண்ணிமைப் பாகங்களில் சதை வளர்ந்து, வெள்ளரி விதைகளைப் போன்ற சிரங்குகளுண்டாகிச் சிவந்து எரிச்சலையும் மினுமினுப்பையும் சிறிது வலியையுமுண்டாக்குமொரு வகைக் கண்ணோய்; a morbid growth of flesh rescuting in small rough papinac in the eye lids resembling cucumber seeds. It gives rise to inflammation, with some burning sensation and glossiness.

த.வ. கண்ணிமைநோய்.

அரிட்டம்[1] *ariṭṭam,* பெ.(n.) 1. தீங்கு; evil, misfortune, calamity. *"அவர்க்கெலா மரிட்டஞ் செய்ய" (விநாயகபு. 71, 186).* 2. கள் (பிங்.); intoxicating liquor, toddy. 3. காக்கை; crow. *"எங்குஞ் சங்கவரிட்ட விரக்கமே" (இரகு.திக்குவ 185).* 4. வேம்பு (அகநி); margosa. 5. வெள்ளுள்ளி (மலை); garlic.

[Skt. a-riṣṭa > த. அரிட்டம்.]

அரிட்டம்[2] *ariṭṭam,* பெ.(n.) முட்டை (பிங்.); egg.

அரிட்டி-த்தல் *ariṭṭi-,* 4 செ.குன்றாவி.(v.t.) கொல்லுதல் (சது.); to kill.

[Skt. arista > த. அரிட்டி-,]

அரிட்டை *arittai,* பெ.(n.) 1. தீங்கு; evil, calamity, misfortune. *"நந்துயரா மரிட்டை யோதும்" (அருட்பா.2 ஸ்ரீ சிவசண்முக.4).* 2. கடுகுரோகணி (தைலவ. தைல. 23); black hellebore.

அரிடம் *aridam,* பெ.(n.) 1. தீங்கு; evil, misfortune. *"அரிடமானதன் விதியினால்" (பாரத. நிரை. 44).* 2. கடுகுரோகிணி (மலை.); black hellebore. 3. வேம்பு (மலை.); margosa.

அரித்திரம் *arittiram,* பெ.(n.) மஞ்சள் (பிங்.); turmeric.

[Skt. haridrā > த. அரித்திரம்.]

அரித்திராபம் *arittirābam,* பெ.(n.) பொன்னிறம் (உரி.நி.); golden colour. 2. மஞ்சள்; turmeric.

[Skt. haridrabha > த. அரித்திராபம்.]

அரித்திராமேகம் *arittirā-mēgam,* பெ.(n.) பித்தவெட்டை (தைலவ. தைல. 58, உரை); yellow diabetes.

[Skt. haridrā+mēham > த. அரித்திரா மேகம்.]

அரித்துவாரம் *ari-t-tuvāram,* பெ.(n.) மாயாபுரி (பிங்.); Hardvar, the celebrated sacred bathing place in the course of the Ganges.

[Skt. Haridvāra> த. அரித்துவாரம்.]

அரிதகி *aridagi,* பெ.(n.) கடுக்காய் (திவா.); chebulic myrobalan.

[Skt. haritaki > த. அரிதகி.]

அரிதம்[1] *aridam,* பெ.(n.) திக்கு (பிங்.); point of the compass.

த.வ. திசை.

[Skt. harit > த. அரிதம்.]

அரிதம்[2] *aridam,* பெ.(n.) 1. பச்சை (பிங்.); greenness, verdure. 2. பசும் புற்றரை (பிங்.); meadow, pasture, land with green grass growing on it. 3. பொன்னிறம் (பிங்.); gold colour.

[Skt. harita > த. அரிதம்.]

அரிதிருமருகன் *ari-tiru-marugan,* பெ.(n.) (விநாயகர்) 1. பிள்ளையார்; Tirumal's sister's son Ganesan. 2. முருகன் (பிங்.); *Tirumāl's* sister's son, Murugan.

[அரி+திருமகன்.]

[Skt. hari> த. அரி.]

அரிதினம் *ari-dinam,* பெ.(n.) பதினோரமை (ஏகாதசி); the 11th day in a lunar fortnight, sacred to *Tirumāl. "ஏதமறுந் துவாதசியி னிலங்கு மரிதினத்தும்" (வேதாரணி. அந்தர்க். 1).*

[அரி+தினம்.]

[Skt. hari> த. அரி.]

அரிந்தமன் *arin-daman,* பெ.(n.) 1. பகைவரை யடக்குவோன் (கம்பரா. மராமர. 12); subduer of foes. 2. திருமால் (பிங்.); Tirumāl.

த.வ. பகையடக்கி.

[Skt. arin-dama> த. அரிந்தமன்.]

அரிப்பிரியை *ari-p-piriyai,* பெ.(n.) திருமகள் (பிங்.); Tirumagal.

[Skt. hari+priya>த.அரிப்பிரியை.]

அரிமதா *arimadā,* பெ.(n.) வெள்வேல் (மலை.); panicled babul.

[Skt. ari-mēda> த. அரிமதா.]

அரியமன் *ariyaman,* பெ.(n.) கதிரவக்கடவுள் (துவாதசாதித்தருள் ஒருவர்); a sun-god, one of the *duvātacātittar.*

[Skt. aryaman > த. அரியமன்.]

அரியாசனம் *ari-y-āšanam,* பெ.(n.) அரியணை; lion-seat, throne. *"அரியாசனத்தில்...... வைத்த தாய்" (தனிப்பா. 1, 2, 1).*

[Skt. hari+ā-ṣana > த. அரியாசனம்.]

அரியூர்தி *ari-y-ūrdi,* பெ.(n.) (கருடன்) கலுழன் (பிங்.); Garuda, as the vehicle of *Tirumāl.*

[அரி+ஊர்தி.]

[Skt. hari> த. அரி.]

அரிவருடம் *ari-varuḍam,* பெ.(n.) ஒன்பாண் ஆண்டிலொன்று; a division of the earth, one of *nava-varuḍam. "அம்புவியினி சதமுத லேமங்காறுமரிவருடம்" (கந்தபு. அண்டகோ. 37).*

[அரி+வருடம்.]

[Skt. hari> த. அரி.]

அரிடம் *aridam,* பெ.(n.) கடுகுரோகிணி (மலை.); black hellebore.

[Skt. arista > த. அரிடம்.]

அருக்கன் *arukkan,* பெ.(n.) கதிரவன்; sun. *"அருக்க னணிநிறமுங் கண்டேன்" (திவ். இயற். 3, 1).*

[Skt. arka > த. அருக்கன்.]

அருக்கன்வீதி *arukkan-vidi,* பெ.(n.) சூரியன் செல்லும் வீதி; the ecliptic.

[அருக்கன்+வீதி.]

[Skt. arka> த. அருக்கன்.]

அருக்கன்றிசை *arukkanrisai,* பெ.(n.) கிழக்கு (பிங்.); east.

[அருக்கன்+திசை.]

[Skt. hari> த. அருக்கன்.]

அருக்கியம் *arukkiyam,* பெ.(n.) **அர்க்கியம்** பார்க்க; see *arkkiyam. "அருக்கிய முதலினோடாசனங் கொடுத்து" (கம்பரா. திருவவ. 42).*

[Skt. arghya > த. அர்க்கியம் → அருக்கியம்]

அருகசரணம் *aruga-šaranam,* பெ.(n.) அருகனை வணங்குகை (சீவக. உரை); (Jaina) seeking refuge with Arhat.

[Skt. arhat + sarana > த. அருகசரணம்.]

அருகந்தர் *arugandar,* பெ.(n.) அருகசமயத்தோர் (பதினொ. ஆளுடை. மும்மணி. 26); Jains.

த.வ. தகைஞன்மதத்தார்.

[Skt. arhanta > த. அருகந்தர்.]

அருகம்[1] *arugam,* பெ.(n.) மதிப்புடையது; that which is worthy.

த.வ. தக்கது.

[Skt. arha > த. அருகம்.]

அருகம்[2] *arugam,* பெ.(n.) சமணமதம்; jaina religion. *"பௌத்த மருகம்" (சூத.எக்கிய பூ. 32 : 12).*

த.வ. தகைஞன்மதம்.

[Skt. arhat > த. அருகம்.]

அருகன் *arugan,* பெ.(n.) அருகக்கடவுள் (திவா.); Arhat. 2. சமண மதத்தான்; Jain. *"அருகர்ச் சார்ந்து நின்று" (கல்லா. 4.).*

த.வ. தகைஞன்.

[Skt. Arhat > த. அருகன்.]

அருகனெண்குணம் *arugan-en-gunam,* பெ.(n.) சமண மதத்தவர்களின் எண் குணங்கள்; the eight attributes of Arhat.

[அருகன் + எண்குணம்.]

[Skt. arhat>த. அருகன்.]

எண்குணங்களாவன : 1. கடையிலாவறிவு, 2. கடையிலாக்காட்சி, 3. கடையிலா வீரியம், 4. கடையிலாவின்பம், 5. நாமமின்மை, 6. கோத்திரமின்மை, 7. ஆயுளின்மை, 8. அழியாவியல்பு – (குறள், 9, உரை).

அருகனைத்தரித்தாள் *aruganai-t-tarittāl,* பெ.(n.) அறத்தெய்வம் (பிங்.); Dharma personified as the wife of Arhat.

[அருகன்+ஐ+தரித்தாள்.]

[Skt. arhat>த. அருகன்.]

அருச்சகன் *aruccagan,* பெ. (n.) கோயிலில் பூசை செய்வோன்; temple priest. *"ஆதிசைவனா மருச்சக னொருவன்" (திருவிளை. வாதவூ. 25).*

த.வ. பூசகன்.

[Skt. arcaka > த. அருச்சகன்.]

அருச்சனை *aruccanai,* பெ. (n.) 1. பூசை (இரகு. தேனுவ. 20); worship. 2. ஒருவருக்காக கடவுள் பெயர் கூறி மலர் முதலியன இடுகை; offering of flowers, sacred leaves, or saffron accompanied by a recitation of the sacred names of a deity in a temple on behalf of particular individuals. *"கோயிலில் கிரகப்பிரிதிக்காக அருச்சனை நடந்து வருகிறது".*

த.வ. பூசை.

[Skt. arśanā > த. அருச்சனை.]

அருச்சனைவடிவு *aruccaṉai-vaḍivu,* பெ. (n.) திருமால் நிலையுள் ஒன்று; *Tirumāl* idol which is worshipped. *"திருவாழ் மார்பனருச்சனை வடிவிற் கெல்லாம்" (அரிசமய. பராங். 47).*

[அருச்சனை+வடிவு.]

*[**Skt.** aršanā > த. அருச்சனை.]*

அருச்சி-த்தல் *arucci-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. வழிபடுதல்; to worship. 2. கடவுள் பெயர்ச்சொல்லி மலர் முதலியன இடுதல் (பூ செய்தல்); to offer flowers, sacred leaves or saffron to the idol while the sacred names are being recited.

த.வ. பூசித்தல்.

*[**Skt.** arc-, > த. அருச்சி-,]*

அருச்சி *arucci,* பெ. (n.) 1. காந்தல்; splendour. 2. தீப்பிழம்பு; flame. 3. கதிர்; ray of light.

*[**Skt.** arci > த. அருச்சி.]*

அருச்சிகன் *aruccigaṉ,* பெ. (n.) நிலவு (திவா.); moon.

அருச்சியம் *arucciyam,* பெ. (n.) உவர்ப்பில்லாதது; that which is not brackish.

அருச்சுனசன்னியாசி *aruccuṉa-šaṉṉiyāši,* பெ. (n.) பொய்த்துறவி; one who puts on the garb of an ascetic to deceive others, as Arjuna did when marrying.

*[**Skt.** Arjuna + san + nyāsin > த. அருச்சுனசன்னியாசி.]*

அருச்சுனம்[1] *aruccuṉam,* பெ. (n.) 1. வெண்மை (சூடா.); whiteness. 2. மருதமரவகை (பிங்.); Arjan.

*[**Skt.** arjuna > த. அருச்சனம்.]*

அருச்சுனம்[2] *aruccuṉam,* பெ. (n.) எருக்கு என்னும் செடிவகை (மலை.); madar.

அருச்சுனம்[3] *aruccuṉam,* பெ. (n.) 1. பந்து (பொதி.நி.); ball. 2. வெள்ளையரிசியோடு அறுகுகூட்டி வாழ்த்துதல் (அரு.நி.463); bestowed on a person by sprinkling rice mixed with cynodon grass. 3. கண்ணோய் வகை; inflammation of the conjuctiva or white of the eye. 4. பொன் (நாநார்த்த.); gold. 5. புல் (நாநார்த்த.); grass.

அருச்சுனம்[4] *aruccuṉam,* பெ.(n.) 1. மருதமரம்; arjun tree-terminalia alata. 2. வெண்மை; whiteness. 3. மயில்; peacock. 4. அரக்கு; lac. 5. கடப்பம் பூ; the flower of the cadamba tree-*Barringtonia racemosa.* 6. வெள்விழி மேல், கடப்பம் பூ நிறமான படலத்தையுண்டாக்குமோர்வகைக் கண்ணோய்; a disease of the eye in which a yellow-coloured coating is formed in the white portion of the eye.

அருச்சுனன்[1] *aruccuṉaṉ,* பெ.(n.) 1. ஒருதாய்க்கொரு பிள்ளை (நாநார்த்த.); only son of a woman. 2. நெல்வகை (குருகூர்ப். 58); a kind of paddy.

*[**Skt.** arjuna > த. அருச்சுனன்.]*

அருச்சுனன்[2] *aruccuṉaṉ,* பெ. (n.) 1. மாபாரதக் கதைமாந்தர் ஐவருள் ஒருவன்; Arjuna, the third of the *Pāṇḍu* princes, one of *pañša-pāṇḍavar,* q.v. 2. கார்த்த வீரியன் (உத்தரரா. கார்த்த.2); *Kārttaviriyaṉ.*

*[**Skt.** arjuna > த. அருச்சுனன்.]*

அருச்சுனி[1] *aruccuṉi,* 1. ஆ (பசு); cow. 2. உசாதேவி; the goddess of the dawn. 3. ஓர் ஆறு; a river. 4. தொழுத்தை; bawd.

*[**Skt.** arjuni > த. அருச்சுனி.]*

அருச்சுனி[2] *aruccuṉi,* பெ.(n.) 1. ஒருவகைப் பாம்பு; a kind of snake. 2. தலைப்பிடிக்கி; a procures, a bawd.

அருச்சை *aruccai,* பெ. (n.) 1. வழிபாடு; worship, adoration. *"தோகைக்குஞ் சொன்முறை யருச்சை" (வேதாரணி. மண. 21).* 2. உருவச் சிலை; deity.

த.வ. பூசனை.

*[**Skt.** aršā > த. அருச்சை.]*

அருசி *aruši,* பெ.(n.) 1. சுவையின்மை; tastelessness, want of relish. *"வாயருசி சோபை" (பதார்த்த. 522).* 2. விருப்பின்மை; aversion, dislike.

[Skt. a-ruci > த. அருசி.]

அருசிசூலை *aruši-šūlai,* பெ.(n.) சுவையின்மையை யுண்டாக்கும் ஒரு வகைச் சூலைநோய்; a piercing pain in the stomach giving rise to loss of appetite or tastelessness a kind of colic arising from gastralgia.

[Skt. a-ruci>த.அருசி.]

அருசிப்பித்தம் *aruši-p-pittam,* பெ.(n.) உணவு வெறுக்கச் செய்யும் பித்தம்; bile which causes distaste for food.

[அருசி + பித்தம்.]

[Skt. a-ruci > த. அருசி.]

அருசுராணம் *arušurāṇam,* பெ.(n.) புண் கழுவும் நீர்; a kind of medical preparation to wash wounds; lotion.

அருசுனம் *arušuṇam,* பெ.(n.) அருச்சுனம் பார்க்க; see *aruccuṇam.*

அருட்டம்¹ *aruṭṭam,* பெ.(n.) கடுகுரோகிணி என்னும் ஒருவகைப் பூண்டு (மூ.அ.); black hellebore.

[Skt. arista > த. அருட்டம்.]

அருட்டம்² *aruṭṭam,* பெ.(n.) 1. வேம்பு (வை.மூ.); margosa. 2. மலைவேம்பு (T.C.M.iii. 2, 429); mountain neem. 3. மிளகு (T.C.M.ii, 2, 429); pepper.

அருட்டன் *aruṭṭaṉ,* பெ.(n.) மிளகு; black pepper.

அருட்டை *aruṭṭai,* பெ.(n.) கடுகுரோகிணி (பரி.அக.); black hellebore.

[Skt. arista > த.அருட்டை.]

அருத்தசாமம் *arutta-šāmam,* பெ.(n.) நடு இரவு; midnight.

[அருத்தம்+சாமம்.]
[Skt. ardha> த. அர்த்த.]

த. யாமம்> சாமம்.

அருத்தநாள் *arutta-nāl,* பெ.(n.) 1. பாதிநாள்; half day. 2. உச்சிப் பொழுது; midday; noon.

[அருத்தம்+நாள்.]

[Skt. ardha> த. அருத்த.]

அருத்தநிசா *aruttanišā,* பெ.(n.) **அருத்தசாமம்** பார்க்க; see *arutta-šāmam.*

[Skt. ardha-niśā> த. அருத்தநிசா.]

அருத்தநூல் *arutta-nūl,* பெ.(n.) பொருணூல் (புறநா. 166, உரை); political economy.

[அருத்தம்+நூல்.]

[Skt. ardha> த. அருத்தம்.]

அருத்தபாகம் *arutta-ṅāgam,* பெ.(n.) சமப்பங்கு; equal part.

[Skt.ardha>த. அருத்தம்.]

த.பகு > பாகம்.

அருத்தபாகை *arutta-pāgai,* பெ.(n.) மறைநூற்பொருள் வகை (சூடா.); *Brāhmaṇam*, that portion of the *vēda* which concerns itself mainly with the interpretation of the mantras (hymns) from the ritualistic point of view.

[Skt. artha+bhāga > த. அருத்தபாகை.]

அருத்தம்¹ *aruttam,* பெ.(n.) 1. சொற்பொருள் (சூடா.); meaning, signification, import. 2. கருத்து (உரி.நி.); object, intention. 3. செல்வப் பொருள்; wealth, riches. *"அருத்த மின்ப மென்றிவை" (தேவா. 863, 3).* 4. பொன் (பிங்.); gold. 5. பயன் (உரி.நி.); utility, usefulness.

[Skt. artha > த. அருத்தம்.]

அருத்தம்² *aruttam,* பெ.(n.) பாதி (பிங்.); half.

த.வ. துண்டம்.

[Skt. ardha> த. அருத்தம்.]

அருத்தம்³ *aruttam,* பெ.(n.) 1. செய்தி; object of sense. 2. பண்டம்; article. 3. காரணம்; cause, origin, ultimate cause. 4. (சாத்திரம்) அறிவு நூல்; śāstra. 5. வழக்கு; law, litigation. 6. வகை; manner, mode. 7. removal, abolition.

[Skt. artha> த. அருத்தம்.]

அருத்தம்[4] *aruttam,* பெ.(n.) துண்டம் (நாநார்த்த.); bit.

[Skt. ardha > த. அருத்தம்.]

அருத்தம்[5] *aruttam,* குக்கில் (சங்.அக.); dammer resin.

அருத்தமண்டபம் *arutta-mandabam,* பெ.(n.) **அர்த்தமண்டபம்** பார்க்க; see *artta mandabam.* *"அருத்த மண்டபத்துட் புக்கே" (அருணகிரி. வலம்புரி. 54, சங்.அக.).*

த.வ. ஓலக்கமண்டபம்.

[அருத்த(ம்)+மண்டபம்.]

[Skt. ardha> த. அருத்த(ம்).]

அருத்தயாமம் *arutta-yāmam,* பெ.(n.) நள்ளிரவு; midnight. *"அப்பதியருத்த யாமத் துனக்களி யுதவுங் கோலம்" (வேதாரணி. மணவா. 84).*

[அருத்தம்+யாமம்.]

[Skt. ardha> த. அருத்த(ம்).]

அருத்தலக்கணை *aruttalakkaṇai,* பெ.(n.) (இலக்.) இலக்கணை மூன்றனுள் ஒரு வரியில் ஒரு பாகத்தின் பொருளை விட்டு மற்றைப் பாகத்தின் பொருள் இயைபு பெற நிற்கும் இலக்கணையான விட்டும் விடாதவிலக்கணை (இலக்.அக.) (வேதா. சூ. 122),; a variety of ilakkaṇai, in which the primary sense of a word is partly discarded and partly retained, one of three ilakkaṇai, *viṭṭum-viḍāda-vilakkaṇai.*

[அருத்த(ம்)+இலக்கணை.]

[Skt. ardha> த. அருத்த(ம்).]

[த. இலக்கணை > **Skt.** *laksaṇa.]*

அருத்தவாதம் *aruttavādam,* பெ.(n.) புனைந்துரை (வேதாரணியபு. மேன்மைச். 81); exaggeration, over-statement.

த.வ. எடுத்துரைப்பு.

[Skt. artha-vāda > த. அருத்தவாதம்.]

அருத்தவேடனை *arutta-vēḍaṇai,* பெ.(n.) ஏடணாத்திரயத்தொன்று; attachment to wealth, one of *ēḍaṇā-t-tirayam,* q.v.

[Skt. artha+ēṭaṇā>த.அருத்தவேடணை.]

அருத்தன் *aruttaṉ,* பெ.(n.) அரைப்பாகமாகக் கொண்டவன்; one who has only half a body, as *tirumāl* in his union with *śivaṉ.* *"கண்ணுதல் கூடிய அருத்தனை" (திவ். பெரியதி. 7, 10, 7).*

த.வ. மாற்சிவன்.

[Skt. ardha > த. அருத்தன்.]

அருத்தாபத்தி *aruttāpatti,* பெ.(n.) **அர்த்தாபத்தி** பார்க்க; see *arttāpatti.*

அருத்தி[1]**-த்தல்** *arutti-,* 4 செ.குன்றாவி. (v.t.) இரத்தல்; to beg, ask for. *"நெடுமாலே யுன்னை யருத்தித்து வந்தோம்" (திவ். திருப்பா. 25).*

[Skt. arth-, > த. அருத்தி-,]

அருத்தி[2] *arutti,* பெ.(n.) 1. பணிவோன் (சேவிப்போன்); servant. 2. இரப்போன்; beggar. 3. செல்வன்; rich man.

[Skt. arthi > த. அருத்தி.]

அருத்தி[3] *arutti,* பெ.(n.) 1. ஆசை; avidity. *"அருத்தி யுற்றபி னாண முண்டாகுமோ" (கம்பரா. உலாவியல்.38).* 2. விரும்பப்படும் பொருள்; that which is desired. *"அருத்தி யீதல் பொற் சுரதரு வினுக்குமற் றரிது" (பாரத.கிருட்.241).*

[Skt. arth > த. அருத்தி.]

அருத்தி[4] *arutti,* பெ.(n.) பாதம், அடி; foot.

அருத்தி[5] *arutti,* பெ.(n.) கள்; toddy.

அருத்தி[6] *arutti,* பெ.(n.) கூத்து (வின்.); dancing.

அருத்தியன் *aruttiyaṉ,* பெ.(n.) விருப்ப முடையவன்; one who wants or desires. *"வந்த மனித்த னேதி லருத்தியன்" (பாரத. புட்ப. 119).*

அருத்திரம் *aruttiram,* பெ.(n.) மரமஞ்சள் (மலை.); turmeric tree.

[Skt. haridrā > த. அருத்திரம்.]

அருத்திரமாசு *aruttira-māšu,* பெ.(n.) பம்பளிமாசு; Batavian orange-citrus decumana typica.



அருத்திராங்கம் *aruttirāṅgam,* பெ.(n.) 'சி' காரம்; the sacred letter 'si'.

அருத்து *aruttu,* பெ.(n.) சொற்பொருள்; meaning, signification. *"கருத்தானா யருத்தானாய்" (தேவா. 286, 7).*

[Skt. artha > த. அருத்து.]

அருத்தோதயம் *aruttōdayam,* பெ.(n.) சுறவ(தை)த் திங்களில் காருவாவும் ஞாயிற்றுக்கிழமையும் திருவோணமும், வியதீபாதமும் கூடிய வைகறைப் புலர் பொழுது; sacred conjunction of the sun and the moon at sunrise on a sunday with sravana naksatra and viyatipata yōga, in the month of Tai. *"அருத்தோதய மகோதயம் பொருந்தி லோது புண்ணிய காலங்களாம்" (சேதுபு. சேதுபல. 23).*

த.வ. ஓணக்காருவா புலர்காலை.

[Skt. ardhōdaya > த. அருத்தோதயம்.]

அருந்ததி *arundati,* பெ.(n.) 1. வசிட்டர் மனைவி (ஐங்குறு. 442); name of the wife of Vasistar considered a paragon of chastity. 2. அருந்ததி விண்மீன் (பிங்.); the scarcely visible star alcor of the Great Bear, supposed to be Arundhati transformed.

[Skt. arundhati > த. அருந்ததி.]

அருந்ததிகாட்டு-தல் *arundadi-kāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) அருந்ததிபோலக் கற்புடைய ளாகுகவென்று அந்நாண்மீனை மணமகட்குக் காட்டுதல்; to point out the star Arundhati to the bride as a model worthy of imitation, a part of the marriage ceremony. *"விசும்பிற்பூத்த வருந்ததி காட்டி" (சீவக. 2469).*

[அருந்ததி+காட்டு-தல்.]

[Skt. arundhatā > த. அருந்ததி.]

அருந்ததியர் *arundatiyar,* பெ.(n.) தோலின்துன்னர் (சென்னை.); cobblers.

[Skt. arundhatiya > த. அருந்ததியர்.]

அருந்துதன் *arundudan,* பெ.(n.) துன்பம் செய்வோன் (பிங்.); one who inflicts wounds, causes pain.

[Skt. arun-tuda > த. அருந்துதன்.]

அருந்துதி *arundudi,* பெ.(n.) **அருந்ததி**[1], 1 (திருக்கோ. 300) பார்க்க; see *aruntati.*

அருநங்கன் *arunaṅgan,* பெ.(n.) நாகப்பாம்பு; cobra.

அருப்பகம் *aruppagam,* பெ.(n.) 1. வலுவில்லாதது; that which is not strong. 2. விலங்கின் குட்டி; the young one of a species of animals.

அருப்பகன் *aruppagan,* பெ.(n.) 1. சிறுவன்; male child. 2. வறிஞன்; poor man. 3. அறிவிலான்; ignorant man. 4. முரடன்; rude, heartless person.

[Skt. arbhaka > த. அருப்பகன்.]

அருமேதகம் *arumēdagam,* பெ.(n.) ஒரு வகை தீக்கொப்புளம்; a venomous creature the bite of which gives rise to a swelling or a boil.

அருருட்டுக்கிழங்கு *aruruṭṭu-k-kiḻaṅgu,* பெ.(n.) கூவைக் கிழங்கு (L); true arrowroot plant.

[அருருட்டு + கிழங்கு.]

[E. arrowroot> த. அருட்டு.]

அருவதா[1] *aruvadā,* பெ.(n.) சதாப்புச் செடி; rue, m.sh., *ruta graveolens.*

[Port. arruda > த. அருவதா.]

அருவதா[2] *aruvadā,* பெ.(n.) கழலை; tumour.

அருவதான் *aruvadāṉ,* பெ.(n.) **அருவதா** பார்க்க; see *aruvadā.*

அருதா *arūdā,* பெ.(n.) சதாப்புச் செடி; rue.

[Port. arruda > த. அருதா.]

அரூபம்[1] *arūbam,* பெ.(n.) உருவமின்மை; formlessness, incorporeity, invisibility. *"அஞ்சலி னபனநீ ருகுத் தரூபமாய்" (இரகு. திக்கு. 253).*

த.வ. உருவிலி.

[Skt. a-rūpa > த. அரூபம்.]

த. உருவம் >Skt. ரூப.

அரூபம்[2] *arūbam,* பெ.(n.) 1. வானம்; sky. 2. ஒரு வகைக் கண்ணோய்; a kind of eye-disease.

அரூபமா-தல் *arūbamā-,* 6 செ.கு.வி.(v.i.) பாழடைதல்; to become desolate. *"அந்த ஊர் அரூபமாய்விட்டது" (இ.வ.).*

[Skt. a-rūpa > த. அரூபம்.]

ஆதல் – தொ.பெ.வி.

அரூபவலி *arūbavali,* பெ.(n.) 1. உள்வலி; internal pain. 2. உடம்பினுள் மறைந்திருக்கும் வல்லமை; potential energy.

[அரூபம் + வலி.]

[Skt.a-rūpa > த.அரூப.]

அரூபி *arūbi,* பெ.(n.) 1. கடவுள்; god, without form. 2. சிவன் (பிங்.); šivaṉ. 3. உடலில்லாதது (அசரீரி.) (பாரத. புட்ப. 78); spirit, invisible presence.

[Skt. a-rūpin > த. அரூபி.]

அரேணு *arēṇu,* பெ.(n.) 1. குலப்பெண்; gentle woman. 2. வால் மிளகு; cubeb. 3. கடலை; bengal gram.

[Skt. harēnu > த. அரேணு.]

அரேணுகப்பூ *arēṇuga-p-pū,* பெ.(n.) கடுக்காய்ப்பூ; chebulic myrobalan galls.

அரேணுகம் *arēṇugam,* பெ.(n.) 1. வால்மிளகு என்ற கொடி வகை (மலை.); cubebs. 2. காட்டு மிளகு என்ற மிளகுக் கொடி வகை (தைலவ. தைல. 77); flat branched pepper. 3. கடுமரவேர் (மூ.அ.); root of chebulic myrobalan.

[Skt. harēnu > த. அரேணுகம்.]

அரேணுகை *arēṇugai,* பெ.(n.) **அரேணுகம்** பார்க்க; see *arēṇugam.*

அரோகதிடகாத்திரம் *arōgatiḍagāttiram,* பெ.(n.) நலமும் வலிமையுமுள்ள உடலும் (தாயு. பாயப். 59); sound and strong body.

[Skt.a-rōga +didha+gātra>த. அரோக திடகாத்திரம்.]

அரோகம் *arōgam,* பெ.(n.) நோயின்மை; freedom, from disease, health.

[Skt. a-rōga > த. அரோகம்.]

அரோகிணி *arōgiṇi,* பெ.(n.) **அரோகிணிக் கடுக்காய்** (பதார்த்த. 965) பார்க்க; see *arrōgiṇi-k-kaḍukkāy.*

[Skt. rōhiṇi>த. அரோகிணி.]

அரோகிணிக்கடுக்காய் *arōgiṇi-k-kaḍukkāy,* பெ.(n.) கடுக்காய் வகை (பதார்த்த. 965); species of chebulic myrobalan.

[அரோகிணி+கடுக்காய்.]

[Skt. rōhiṇi> த.அரோகிணி.]

அரோசகம் *arōšagam,* பெ.(n.) 1. உணவில் வெறுப்பு; loss of appetite, having no relish for food. 2. அருவருப்பு; disgust.

[Skt. a-rōcaka> த. அரோசகம்.]

அரோசனம் *arōšaṉam,* பெ.(n.) அருவருப்பு; disgust. *"அரோசனத்துட னத்தின நண்ணினார்" (பாரத. திரௌ. 105).*

[Skt. a-rōcana > த. அரோசனம்.]

அரோசி-த்தல் *arōši-,* 4 செ.கு.வி.(v.i.) ளஅருவருப்பாதல்; to feel abhorrence. *"உணவு எனக்கு அரோசித்துப் போயிற்று".*

[Skt. a-ruci> த. அரோசி-,]

அரோசிகம் *arōšigam,* பெ.(n.) **அரோசகம்** பார்க்க; see *arōšagam.*

[Skt. a-rōcaka > த. அரோசிகம்.]

அல்பத்துவம் *alpattuvam,* பெ. (n.) 1. சிறுமை; smallness, meanness. 2. ஒரு பண்ணில் சிறுபான்மையாய்ப் பயன்படுத்தப்படும் குரலோசை; note rarely used in a melody-type, opp. to பகுத்துவம்.

[Skt. alpa-tva > த.அல்பத்துவம்.]

அல்லா *allā,* பெ.(n.) முகமதியர் வணங்கும் கடவுளின் பெயர்; name of Muslim's god.

[U. allāh > த. அல்லா.]

அல்லேலூயா *allēlūyā,* பெ. (n.) (கிறித்.) ஒரு வழிபாட்டுச் சொல்; praise the Lord.

த.வ. இறைவா போற்றி.

[L. alleluia., Heb. halleluyah>த. அல்லேலூயா.]

அல்வா *alvā,* பெ.(n.) இனிப்பு வகைகளுள் ஒன்று; இன்களி; a kind of sweet.

த.வ. இன்கூழ்.

[U. halwā > த. அல்வா.]

அல்வான் *alvān,* பெ.(n.) வண்ணத்துணி; cotton cloth of various sorts and colours.

[U. alwān > த. அல்வான்.]

அலங்கரணம் *alangaranam,* பெ.(n.) ஒப்பனை; adornment, make up.

த.வ. ஒப்பனை.

[Skt. alamkārana > த. அலங்கரணம்.]

அலங்கரி-த்தல் *alankari-,* 4 செ.குன்றாவி. (v.t.) அழகுப்படுத்தல் (கோயிற்பு. பதஞ். 10); to adorn, decorate, ornament.

த.வ. ஒப்பனைசெய்தல், புனைதல், அணிசெய்தல்.

[Skt. alamkar > த. அலங்கரி-,]

அலங்காரசாத்திரம் *alangāra-šāttiram,* பெ.(n.) அணியிலக்கணநூல்; rhetoric, science of rhetoric.

த.வ. அணிநூல்.

[Skt. alam-kāra+šāstra > த. அலங்கார சாத்திரம்]

அலங்காரப்பஞ்சகம் *alangāra-pañjagam,* பெ.(n.) வெண்பா, கலித்துறை, அகவல், விருத்தம், சந்தவிருத்தம் ஆகிய ஐந்தும் ஈறு தொடங்கியாக வரப்பாடும் சிற்றிலக்கியம் (இலக்.வி.844); poem in five stanzas in five metres in which the last syllable of each stanza is the same as the first syllable of the next.

த.வ. ஐயணிப்பனுவல்.

[Skt. alam-kāra+pañcaka > த. அலங்காரப் பஞ்சகம்.]

அலங்காரப்பேச்சு *alankāra-p-pēccu,* பெ. (n.) 1. அழகுப் பேச்சு; fine or ornate speech. 2. புனைவுரை; false speech, flattery.

[அலங்காரம்+ பேச்சு.]

[Skt. alam-kāra> த. அலங்காரம்.]

அலங்காரம்[1] *alangāram,* பெ. (n.) 1. ஒப்பனை (பிங்.); adornment, decoration. 2. அழகு; beauty, elegance, attractiveness. "அலங்காரமால்" (அழகர்கலம். 69). 3. அணிகலன்; ornament, jewel. "பாம்பலங்காரப் பரன்" (திருக்கோ. 11). 4. திருமால் கோயில்களில் படைக்கப்படும் சோறு, சாறு, குழம்பு முதலிய உணவு; ordinary meal offered in a *Tirumāl* temple. 5. செய்யுளணி; rhetorical embellishment, in two main divisions, viz., அர்த்தா லங்காரம், சதோலங்காரம். 6. இசையுறுப்பு வகை; graces and ornaments of melody.

[Skt. alan-kāra > த. அலங்காரம்.]

அலங்காரம்[2] *alangāram,* பெ. (n.) வெடிகாரம் (சங்.அக.); saltpetre.

அலங்காரமண்டபம் *alangāra-mandapam,* பெ. (n.) வரவேற்புக் கூடம் (கட்டட. நாமா.); saloon.

த.வ. எழிற்கூடம்.

[அலங்காரம் + மண்டபம்.]

[**Skt.** *alaṅkāra> த. அலங்காரம்.*]

அலங்காரமாடம் *alaṅgāra-māḍam,* பெ.(n.) வழிபாட்டுப் பண்டங்களை வைப்பதற்கு ஏற்பட்ட மாடம் (கட்டட. நாமா.); tabernacle.

த.வ. எழில்மாடம்.

[அலங்காரம் + மாடம்.]

[**Skt.** *alaṅkāra> த. அலங்காரம்.*]

அலங்காரவிளக்கு *alaṅgāraviḷakku,* பெ. (n.) மரத்தண்டிற் பல கிளைகொண்ட மணவிளக்கு (E.T.); lamp on a wooden stand with several branches supporting a number of small lamps, used in the marriage ceremonies of the *vaṉṉiya* caste.

த.வ. எழில்விளக்கு.

[அலங்காரம் + விளக்கு]

[**Skt.** *alam-kāra> த. அலங்காரம்.*]



அலங்காரி-த்தல் *alaṅgāri-,* 4 செ.குன்றாவி. (v.t.) **அலங்கரி-த்தல்** பார்க்க; see *alaṅkari-* *"அயலலங்காரித்து" (தணிகைப்பு. அகத். 163).*

[**Skt.** *alam-kāra > த. அலங்காரி-,*]

அலங்காரி *alaṅgāri,* பெ.(n.) மிகையாக ஒப்பனை செய்து கொண்ட பெண்; a woman with heavy make-up.

த.வ. ஒப்பனைக்காரி.

[**Skt.** *alaṅkāra > த. அலங்காரி.*]

அலங்கிருதம் *alaṅgirudam,* பெ.(n.) ஒப்பனை (இராமநா. யுத்த. 122); adornment.

த.வ. புனைவம்.

[**Skt.** *alam-kṛta > த. அலங்கிருதம்.*]

அலங்கிருதி *alaṅgirudi,* பெ.(n.) **அலங்கிருதம்** பார்க்க; see *alaṅgirudam.*

[**Skt.** *alaṃ-kṛta > த. அலங்கிருதி.*]

அலசம் *alacam,* பெ.(n.) 1. மந்தம்; torpidity, inactivity of the organs. *"தலைநோயலசம்" (தைலவ. தைவ. 8).* 2. விரலிடைச் சேற்றுப்புண்; itching sore between the toes.

[**Skt.** *alasa > த. அலசம்.*]

அலசல் *alaśal,* பெ. (n.) சோம்பல் (வின்.); laziness, langour.

த.வ. மந்தம்.

[**Skt.** *alasa > த. அலசல்.*]

அலட்சியம் *alaṭciyam,* பெ.(n.) 1. கவனமின்மை; disconcentration. 2. மதிப்பின்மை; irrespect. 3. பொருட்படுத்தாமை; inapt.

[**Skt.** *a-lakṣya > த. அலட்சியம்.*]

அலப்படை *alappaḍai,* பெ. (n.) போர்க் கருவியாகப் பயன்படுத்தப்படும் கலப்பை (சூடா.1,10); plough, used as weapon.

[அலம்+படை]

[**Skt.** *hala > த. அலம்.*]



அலப்படையோன் *alappaḍai-yōṉ,* பெ. (n.) கலப்பையைப் போர்க்கருவியாகப் பயன்படுத்தும் பலராமன்; *Balarāmaṉ,* the elder brother of *Krishnaṉ* having the plough as his weapon.

[அலப்படை → அலப்படையோன்.]

அலப்பனாத்து *alappaṉāttu*, பெ. (n.) குண்டூசி (சென்னை); pin.

அலம்புரி-தல் *alampuri-*, 2 செ.குன்றாவி. (v.t.) மனநிறைவடையும் வரை கொடுத்தல்; to give to satisfaction or satiety. *"அலம்புரிந்த நெடுந்தடக்கை யாலே யிரப்பதோ" (திவ். திருச்சந். 25, வியா).*

[அலம்+புரி-தல்.]

[Skt. alam > த. அலம்.]

அலமாரி *alamāri*, பெ.(n.) நிலைப்பேழை; closed wall-shelves, wall cupboard.

[U. almāri > த. அலமாரி]

அலன் *alaṉ*, பெ. (n.) பலராமன் (பரிபா.3, 83); *Balarāmaṉ*, armed with a plough.

த.வ. வல்லெழிலன்.

[Skt. hala > த. அலன்.]

அலாக்காக *alākkāga*, பெ.எ.(adj.) அப்படியே, தனியாக; (with ease and facility) as it is. *'யானை குழந்தையை அலாக்காகத் தூக்கி முதுகில் வைத்தது' (உ.வ.).*

[U. alag > த. அலாக்கு + ஆக.]

அலாக்கு[1] *alākku*, பெ.(n.) கெடுதி (R.); wrong, injury.

[U. alag > த. அலாக்கு.]

அலாக்கு[2] *alākku*, பெ.(n.) தனிமை; separateness, aloofness, distinetness.

[U. alag> த. அலாக்கு.]

அலாதசக்கரம் *alādaśakkaram*, பெ. (n.) கொள்ளியைச் சுழற்றுதலிற் றோன்றும் வட்ட வடிவு (இ.வ.); apparent circle in the air caused by whirling a fire-brand.

த.வ. வட்டுரு.

[அலாத + சக்கரம்.]

[Skt. a-lāta > த. அலாதம்.]

அலாதம்[1] *alādam*, பெ. (n.) கடைக்கொள்ளி (பிங்.); fire-brand.

[Skt. a-lāta> த. அலாதம்.]

அலாதம்[2] *alādam*, பெ.(n.) மரஞ்சுட்ட கரி (நாநார்த்த.); charcoal.

[Skt. alāta>த. அலாதம்.]

அலாதி *alādi*, பெ.(n.) 1. தனிச் சிறப்பானது; something special, unique. *'அவருக்கு உன் மீது அலாதி விருப்பம்'.* 2. எதனோடும் தொடர்பில்லாமல் தனித்து நிற்பது; that which is singular. *'அவன் போக்கே அலாதி'.*

த.வ. தனிப்பு.

[U. alāhida > த. அலாதி.]

அலாபம் *alābam*, பெ. (n.) 1. இழப்பு, நட்டம், ஊதியமின்மை; absence of gain. 2. தீது (திவா.); evil.

[Skt. a-lābha > த. அலாபம்.]

அலாபு *alābu*, பெ. (n.) சுரை என்னும் ஒருவகைக் கொடி (பிங்.); calabash.

[Skt. alābu > த. அலாபு.]



அலாயுதன் *alāyudaṉ*, பெ. (n.) பலராமன் (பிங்.); *Balarāmaṉ*, armed with a plough.

த.வ. கலப்பைப்படையன்.

[Skt. Halāyudha > த. அலாயுதன்.]

அலாவு *alāvu*, பெ.(n.) **அலாபு** பார்க்க; see *alāpu*.

[Skt. alābu > த. அலாவு.]

அலிகம் *aligam*, பெ. (n.) நெற்றி (சிந்தா. நி. 299); forehead.

[Skt. alika > த. அலிகம்.]

அலிசிவிரை *ališvirai*, பெ. (n.) ஆளிவிதை(C.G.); linseed.

[*அலிசி+விரை.*]

[**U.** *alsi*> த. *அலிசி.*]

[*விதை → விரை.*]

அலீகன் *alīgan*, பெ.(n.) தலை; head. "*அலீகனிற அற்றுழியும் உடம்பாடுதெலின்*" (*தொல். பொருள். 71, உரை*).

[**Skt.** *alika* > த. *அலீகன்.*]

அலீசா[1] *alīšā*, பெ.(n.) பட்டு வகைகளு ளொன்று; silk cloth five yards long, which has a short wavy line pattern running in the length on either side.

[**U.** *ilāca* > த. *அலீசா.*]

அலுகோசு *alukōsu*, பெ.(n.) (யாழ்ப்.) தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் அரசு அலுவலர்; hangman.

அலுப்தசக்தி *alupdašakti*, பெ. (n.) பேரருளுடைமை; (Saivam) being possessed of infinite mercy.

[**Skt.** *alupta+ sakti*>த. *அலுப்தசக்தி.*]

அலேகம் *alēgam*, பெ.(n.) எழுத அணியப்படுத்திய வெற்றோலை (சிவதரு. சிவஞானதா. 58); blank palm leaves, prepared and joined together for writing.

த.வ. வெற்றேடு.

[**Skt.** *a-lēkha* > த. *அலேகம்.*]

அலேபகன் *alēbagan*, பெ.(n.) ஆதனைக் கரிசு (பாவம்) பற்றாதென்னுங் கொள்கையினன் (சங்கற்பசூரியோ. பக்.8); (phil.) one who believes that sin does not attach itsellf to a soul.

[**Skt.** *a-lēpaka* > த. *அலேபகன்.*]

அலோகம்[1] *alōgam*, பெ. (n.) 1. கதிரவனின் கதிர் படாத உலகம்; world where the sun's rays do not fall. 2. ஐம் பூதத் தொடர்பில்லாதது; that which is not constituted of the five elements.

த.வ. காணப்படாத உலகு.

[**Skt.** *alōka* > த. *அலோகம்.*]

அலோகம்[2] *alōgam*, பெ.(n.) மாழை யில்லாதது; non-metal.

[**Skt.** *a-lōka* > த. *அலோகம்.*]

அலெளகிகம் *alaukigam*, பெ. (n.) உலக நடைமுறைக்கு மாறானது; unworldy, nonconformity with worldy wisdom.

[**Skt.** *a-laukika* > த. *அலெளகிகம்.*]

அவ்யாசகருணை *avyāša-karuṇai*, பெ. (n.) காரணமே வேண்டாத அருள் (தென். இந். க்ஷேத். 252); grace which does not require any pretext to cause.

[**Skt.** *a-vyāja+karuṇā* > த. *அவ்யாச கருணை.*]

அவ்வச்சிலேடிகவியாபகம் *avvac-cilēḍiga-viyābagam*, பெ. (n.) நன்கு பொருந்தியுள்ளதாலுண்டாகும் நிறைவு (சிவப்பிர. சிந்தனையுரை); (phil.) permeation due to close or immediate contact.

[**Skt.** *aupašlēṣika + vyāpaka* > த. *அவ்வச்சிலேடிகவியாபகம்.*]

அவ்வல் *avval*, பெ.அ.(adj.) முதன்மையான (P.T.L.); first, principal.

[**Arab.** *awwal* > த. *அவ்வல்.*]

அவ்வியக்தம் *avviyakdam*, பெ. (n.) 1. **அவ்வியத்தம்** பார்க்க; see *avviyattam*. 2. நூற்றெட்டு சிற்றிலக்கியங்களுள் ஒன்று; name of an upanisad.

[**Skt.** *a-vyakta* > த. *அவ்வியக்தம்.*]

அவ்வியக்தி *avviyakti*, பெ. (n.) புகைக்கொடி, வால்வெள்ளி (தக்கயாகப். 457, உரை); a comet.

[**Skt.** *a-vyakti* > த. *அவ்வியக்தி.*]

அவ்வியத்தம்[1] *avviyattam*, பெ.(n.) 1. விளங்கக் காணப்படாதது; that which is imperceptible, invisible, not manifested or differentiated. 2. உலகத் தோற்றவியல் கோட்பாடு

(மூலபிரகிருதி) (சூத. சிவமான். 8,11); (*sāṅkhya*) primordial undifferentiated principle out of which the world is evolved. 3. பீடத்தோடு கூடிய சிவலிங்கம் (சைவச. பொது. 119); *liṅgam* on a pedestal representing Šiva, dist, fr. any image of *Šivan*. 4. ஒரு பேரெண் (பிங்.); a hundred thousand quintillions.

[Skt. a-vya-kta > த. அவ்வியத்தம்.]

அவ்வியத்தம்[2] *avviyattam*, பெ. (n.) 1. ஆதன் (ஆன்மா) (நாநார்த்த.); soul. 2. விண்வெளி (தக்கயாகப். 408. உரை); great cosmic space.

[Skt. a-vyakta > த. அவ்வியத்தம்.]

அவ்வியத்தலக்கணை *avviyat-talakkaṉai*, பெ. (n.) மலைமகள் (கூர்மபு. திருக்கலி. 23); *Pārvati*.

[Skt. avyakta-lakṣaṇā > த. அவ்வியத்தலக்கணை.]

அவ்வியத்தலிங்கம் *avviyattaliṅgam*, பெ. (n.) அருவத்திருமேனி (சி.சி.12, 4, மறைஞா.); (šaivam.) formless aspect of God.

[Skt. a-vyakta + liṅga > த. அவ்வியத்த லிங்கம்.]

அவ்வியத்தன்[1] *avviyattaṉ*, பெ. (n.) கடவுள் (வேதா. சூ. 422); God, as the unevolved being.

[Skt. a-vya-kta > த. அவ்வியத்தன்.]

அவ்வியத்தன்[2] *avviyattaṉ*, பெ. (n.) அறிவில்லாதவன் (நாநார்த்த.); one who is devoid of intelligence.

[Skt. a-vyakta > த. அவ்வியத்தன்.]

அவ்வியம் *avviyam*, பெ. (n.) தேவர்க்கிடும் காவு (மச்சபு. சிராத்தானு. 2); oblation offered to the gods.

த.வ. திருப்படையல்.

[Skt. havya > த. அவ்வியம்.]

அவ்வியயம் *avviyayam*, பெ.(n.) 1. அழியாதது; that which is imperishable. *"ஊழி தனினுங் குன்றறீர்த்தலினா லவ்வியயம்" (வேதாரணி. வேதநதி. 73).* 2. இடைச்சொல் (பி.பி.33, உரை); indeclinable word, particle.

[Skt. a-vyaya > த. அவ்வியயம்.]

அவ்வியயன் *avviyayaṉ*, பெ. (n.) கடவுள்; God, the imperishable.

[Skt. a-viyaya > த. அவ்வியயன்.]

அவ்வியாகிருதம் *avviyākirudam*, பெ. (n.) 1. தகாதது; being mischievously engaged. *"அவ்வியாகிருத வியாபரம்".* 2. சிவனது காரண உடலாகிய மாயை (கட்டளைக். 159); that which is undiffferentiated, the primordial substance from which all things are evolved, considered as the causal body of *Šivaṉ*.

[Skt. a-vyākṛta > த. அவ்வியாகிருதம்.]

அவ்வியாப்தி *avviyāpti*, பெ. (n.) இலக்கியத்தின் ஏகதேசத்தில் இலக்கணஞ் செல்லாதொழியுங் குற்றம் (தருக்க சங். 5); (Log.) faulty definition, being inapplicable to one of the objects indicated by the word, one of three *tōšam*, q.v.

த.வ. சொல்லாக்குற்றம்.

[Skt. a-vyāpti > த. அவ்வியாப்தி.]

அவ்விரதம் *avviradam*, பெ. (n.) நோன்புக்கேடு; breach of vow. *"அனைய வவ்விரதத் தோடறிசலம்" (நீலகேசி, 242).*

த.வ. நோன்புமுறிவு.

[Skt. a-vrata > த. அவ்விரதம்.]

அவ்வெதிரேகம் *avvetirēgam*, பெ. (n.) தன்னுறுப்புகளுள் ஒன்றான வெதிரேக வாக்கிய மின்றிக் கூறும் உய்த்துணரும் வகை (மணிமே. 29, 450); (Phil.) a fallacious example where the non-existence of both the major and the middle terms is stated but not the pervasion of one by the other.

[Skt. a-vyatirēka > த. அவ்வெதிரேகம்.]

அவ¹ *ava,* இடை. (part.) கீழ் முதலிய பொருள்களைக் குறிக்கும் வடமொழி முன்னடை; a Sanskrit prefix expressing down, off, away, as in அவதாரம்.

[**Skt.** *ava* > த. *அவ.*]

அவ² *ava,* இடை (part) எதிர்மறை முதலியவற்றைக் குறிக்க முன்வரும் வடமொழியிடைச்சொல்; a sanskrit prefix expressing negation, deterioration, inferiority. as in *avakirtti.*

[**Skt.** *apa* > த. *அவ.*]

அவக்கரம்¹ *avakkaram,* பெ. (n.) 1. குய்யம்; private parts off a male or female. 2. விட்டை; excrement, dung. 3. மக்களின் மலம்; human excrement.

[**Skt.** *avaṣkara* > த. *அவக்கரம்.*]

அவக்கரம்² *avakkaram,* பெ.(n.) தேரின் உறுப்பு (நாநார்த்த.); a part of a chariot.

[**Skt.** *apaskara* > த. *அவக்கரம்.*]

அவக்கியாதி *avakkiyādi,* பெ.(n.) அவப்பேறு; disrepute.

அவக்கிரகம் *ava-k-kiragam,* பெ.(n.) 1. ¿,டை; obstacle. 2. மழைத்தடை; drought, failure of rain. 3. யானையின் நெற்றி; elephant's forehead.

[**Skt.** *ava-graha* > *அவக்கிரகம்.*]

அவக்கிரசம் *ava-k-kirašam,* பெ. (n.) காடி (வின்.); vinegar.

[**Skt.** *ava+grāsa* > த. *அவக்கிரசம்.*]

அவக்கிராகம் *ava-k-kirāgam,* பெ.(n.) சாவிக்கை, (சபிக்கை) தீமொழி கூறுகை (சிந்தா. நி. 324); cursing.

த.வ. சாவித்தல்.

[**Skt.** *ava-grāha* > த. *அவக்கிராகம்.*]

அவகடம்¹ *avakaḍam,* பெ.(n.) ஏய்ப்பு; dissimulation, deceit. *"கழுத்திலே தாவடம், மனத்திலே யவகடம்" (பழ.).*

அவகடம்² *avakaḍam,* பெ. (n.) 1. தீச்செயல்; evil act. *"அற்பமாங் குணத்தினாலே அவகடஞ் செய்வர்" (நீதிசாரம், 19).* 2. தீயூழ் (துரதிர்ஷ்டம்) (நாஞ்.); misfortune.

த.வ. போகூழ்.

[**Skt.** *ava-kaṭa* > த. *அவகடம்.*]

அவகதி¹ *avagati,* பெ.(n.) தாழ்ந்த நிலை; state of degradation. *"அவமாய தேவ ரவகதியி லழுந்தாமே" (திருவாச. 11, 4).*

[**Skt.** *ava-gati* > த. *அவகதி.*]

அவகதி² *avagati,* பெ. (n.) அறிவு (சிந்தா. நி. 314); knowledge.

[**Skt.** *ava-gati* > த. *அவகதி.*]

அவககனத்துவம் *avakagaṇa-t-tuvam,* பெ. (n.) மனத்தினுட் புகுந்தன்மை (மேருமந். 93, உரை); the power of inter-penetration.

[**Skt.** *ava-gāhana-tva*>த.*அவககனத்துவம்.*]

அவகாகி¹-த்தல் *avakāki-,* 4 செ.கு.வி. (v.i.) உட்புகுதல் (திவ். திருவாய், 6, 1, 4, பன்னீ.); to plunge in, enter into.

[**Skt.** *ava-gāha* > த. *அவகாகி-,*]

அவகாகி²-த்தல் *avakāki-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஊன்றியறிதல்; to learn thoroughly, master.

[**Skt.** *ava-gāha* > த. *அவகாகி-,*]

அவகாசப்பெயர்ச்சி *avagāša-p-peyarcci,* பெ. (n.) கடன் முதலியவற்றைத் தீர்க்குந் திறன் (யாழ்ப்.); ability to solve loan and other financial commitments.

[**Skt.** *ava-kāša+peyarcci* > த. *அவகாசப் பெயர்ச்சி.*]

அவகாசம்¹ *avagāšam,* பெ. (n.) 1. சமயம்; time, occasion, opportunity, leisure. *"அந்தச் செயலைச் செய்ய அவகாச மில்லை".* 2. இடம்; place, room. *"இந்தக் குறைக்கு அவகாசமே யில்லை" (சி.சி. 6, 6, சிவாக்.).* 3. திறமை; ability, means. *"கடனைத் தீர்க்க எனக்கு அவகாசமில்லை" (வின்.).*

த.வ. வேளை.

[**Skt.** *ava-kāša* > த. *அவகாசம்.*]

அவகாசம்² *avagāšam,* பெ. (n.) (பாத்தியதை) உரிமை; proprietary right, claim, tittle. *பிறவி அவகாசம், பாட்ட அவகாசம் (நாஞ்.).*

த.வ. உடைமை.

[Skt. avakāśa > த. அவகாசம்.]

அவகாசம்³ *avakāśam,* வி.அ. (adv.) 1. ஒய்வு நேரம்; leisure time to spare. *'இப்போது தான் சற்று அவகாசம் கிடைத்தது, நிம்மதியாக உட்கார்ந்திருக்கிறேன்'.*

த.வ. அமையம்.

[Skt. avakāśa > த. அவகாசம்.]

அவகாசமுறி *avakāśamuri,* பெ. (n.) பிரிப்பு ஆவணம்; partition deed defining the rights of persons in property (R.F).

[Skt. avakāśa > த. அவகாசம்.]

அவகாசி-த்தல் *avakāśi-,* 4 செ.கு.வி.(v.i.) சுணங்குதல் (சிலப். 18, 25, உரை); to delay.

[Skt. ava-kāsa > த. அவகாசி-,]

அவகாசி *avakāśi,* பெ.(n.) வழியுரிமை (நாஞ்.); heir.

த.வ. மரபுரிமையன்.

[Skt. ava-kāsa > த. அவகாசி.]

அவகாசிப்பி-த்தல் *avakāśippi-,* 4 செ.குன்றாவி. (v.t.) இடம்பெறச் செய்தல் (த.நி.போ.114); to enable to make room, provide an apportunity to.

[Skt. ava-kāsa > த. அவகாசிப்பி-,]

அவகாயம் *avakāyam,* பெ. (n.) வானம்; space. *"அவகாயத்துத் தேரை யடித்தெருட் டாய்" (நீலகேசி, 504).*

[Skt. ava-kāśa > த. அவகாயம்.]

அவகாரம்¹ *avakāram,* பெ.(n.) முதலை; crocodile.

[Skt. ava-hāra > த. அவகாரம்.]



அவகாரம்² *avakāram,* பெ.(n.) 1. போர் முதலியவற்றின் இடைநிறுத்தம்; temporary cessation, as of war. 2. சூது; game of dice. 3. களவு; theft. 4. கவர்கை; taking by force. 5. அழைப்பு; invitation. 6. பொருள்; substance, article.

[Skt. ava-hāra > த. அவகாரம்.]

அவகாரன் *avakāraṉ,* பெ. (n.) 1. திருடன்; thief. 2. சூதாடுபவன்; gambler.

[Skt. ava-hāra > த. அவகாரன்.]

அவகாகம் *avakāgam,* பெ. (n.) மனத்திற் பதிகை; being well understood, going deep into the mind.

[Skt. ava-gāha > த. அவகாகம்.]

அவகாகனசிநானம் *ava-kāgaṉa-śiṉāṉam,* பெ. (n.) அமிழ்ந்து குளியல் பண்ணுகை, முழுகிக் குளிக்கை; complete immersion in water in bathing.

அவகிருத்தியம் *ava-kiruttiyam,* பெ. (n.) கெட்ட செய்கை; evil action.

[Skt. apa+kiruttiyam > த. அவகிருத்தியம்.]

அவகீதம்¹ *ava-gīdam,* பெ. (n.) 1. பலர் பழித்தது; that which is despised by many. 2. பழிச்சொல்; calumny, reproach.

[Skt. ava-gita > த. அவகீதம்.]

அவகீதம்² *ava-gīdam,* பெ. (n.) வசைப்பாட்டு (நாநார்த்த.); satiric verse.

[Skt. apa-gita > த. அவகீதம்.]

அவகீர்த்தி *ava-kīrtti,* பெ. (n.) புகழ்க்கேடு; infamy, disgrace. *"அவகீர்த்தி யுலகி னிற்ப" (மச்சபு. பத்திமான். 14).*

[Skt. apa+kīrtti > த. அவகீர்த்தி.]

அவகீரணம் *ava-kīraṇam,* பெ. (n.) சிதறுகை; scattering. *"மாசவகீரணந்தனையு மேவினார்" (வேதாரணிய. மேன்மை. 85).*

[Skt. ava-kīraṇa > த. அவகீரணம்.]

அவகுஞ்சனம் *ava-kuñjaṉam,* பெ. (n.) வளைவு (சிந்தா. நி. 323); bend, curve.

[Skt. ava-kuñcana > த. அவகுஞ்சனம்.]

அவகுண்டனம் *ava-kuṇḍaṇam,* பெ. (n.) மூடுகை; covering. *"பத்திசேர் கவசத் தவகுண்டனம் பண்ணி" (கடம்ப. பு. இலீலாசங். 184).*

[Skt. ava-gunṭhana > த. அவகுண்டனம்.]

அவகுணம் *ava-guṇam,* பெ. (n.) தீக்குணம்; vicious ways, bad disposition. *"அவ குணவிரகனை" (திருப்பு. 557).*

[Skt. ava-guṇa > த. கொடுங்குணம்.]

அவகேசி *ava-kēśi,* பெ.(n.) காய்க்காத மரம் (பிங்.); barren tree.

[Skt. ava-kēśin > த. அவகேசி.]

அவச்சேத்தியம் *ava-c-cēttiyam,* பெ. (n.) பிரிக்கக் கூடியது (விசாரசந். 321); that which can be split up.

[Skt. ava-c-chēdya > த. அவச்சேத்தியம்.]

அவச்சேதகம் *ava-c-cēdagam,* பெ.(n.) வேறுபடுத்துந் தன்மை (சி.சி.2, 54, சிவாக்.); distinguishing or differentiating attribute.

[Skt. ava-c-chēdaka > த. அவச்சேதகம்.]

அவசகுனம் *ava-śakuṇam,* பெ. (n.) தீக்குறி; bad omen.

த.வ. தீநிமித்தம்.

[Skt. apaśakuna>த. அவசகுனம்.]

அவசத்தம் *ava-śattam,* பெ. (n.) பிழைபாட்டுச் சொல்; incorrect word. *"சீவன்முத்த ரென்னும் அவசத்த மாபாதகமென்" (முத்திநிச். 17).*

[Skt. apa+śabda > த. அவசத்தம்.]

அவசம் *avaśam,* பெ. (n.) தன்வயப்படாமை; bewilderment, being beside oneself, not having one's own free will. *"ஆவிய தில்லா ளென்ன வவசமாய்" (கந்தபு. வள்ளியம். 153).*

[Skt. a-vaśa > த. அவசம்.]

அவசர்ப்பிணி *avaśarppiṇi,* பெ. (n.) வாணாள், இன்பம் முதலியவை சுருங்குங் காலம் (குறள், 361, உரை); (Jaina.) the moment of losing life and prosperity, a Jain era indicated a downward course in creation.

[Skt. ava-sarpiṇī>த. அவசர்ப்பிணி.]

அவசரக்குடுக்கை *avaśara-k-kuḍukkai,* பெ. (n.) பதற்றக்காரன் (கொ.வ.); hasty, rash person.

த.வ. பதற்றக்குடுக்கை.

[அவசரம்+குடுக்கை.]

[Skt. ava-śara> த. அவசரம்.]

குடு→குடுக்கை.

அவசரக்கோலம் *avaśara-k-kōlam,* பெ.(n.) (திருத்தமாகச் செய்ய முடியாத அளவுக்கு) விரைவாகச் செய்வது; something done in haste. *'அவசரக் கோலத்தில் கட்டிய வீடு இப்படித்தான் இருக்கும்' (உ.வ.).*

த.வ. பதற்றக்கோலம்.

[அவசரம்+கோலம்.]

[Skt. ava-śara> த. அவசரம்.]

அவசரச்சட்டம் *avaśara-c-caṭṭam,* பெ.(n.) நாடாளுமன்றத்தின் அல்லது சட்ட மன்றத்தின் கூட்டம் நடைபெறாத காலத்தில் குடியரசுத் தலைவராலோ மாநில ஆளுநராலோ விரைவுத் தேவை கருதி பிறப்பிக்கும் இடைக்காலச் சட்டம்; (in India) an ordinance promulgated by the President or the Governor of a state when the parliament or the legislature is not in session.

த.வ. விரைவுச் சட்டம்.

[அவசரம்+சட்டம்.]

[Skt. ava-śara> த. அவசரம்.]

அவசரச்சம்பா *avaśara-c-cambā,* பெ.(n.) பெருநெல்வகை (நெல்லை.); a kind of paddy.

த.வ. குறுஞ்சம்பா.

[அவசர+சம்பா.]

[Skt. ava-śara> த. அவசரம்.]

அவசரச்சிகிச்சை *avaśara-c-cikiccai,* பெ. (n.) மருத்துவமனைக்குக் கொண்டுவரும் கடுமையான நோயாளிக்கு உடனடியாகச் செய்யும் மருத்துவம்; emergency treatment.

த.வ. சடுத்த மருத்துவம், சடுத்த பண்டுவம்.

[Skt.avaśara-cikitsā> த. அவசரசிகிச்சை.]

அவசரச்சிகிச்சைப்பிரிவு *avašara-c-cikiccai-p-pirivu*, பெ. (n.) பேரிடர் நிலையில் மருத்துவமனைக்கு நோயருக்கு உடனடி மருத்துவம் வழங்கும் பிரிவு; emergency ward or emergency unit in a hospital.

த.வ. விரைவு மருத்துவப்பிரிவு.

[அவசரம்+சிகிச்சை+பிரிவு.]

*[**Skt.** ava-sara+cikitsā>த.அவசர சிகிச்சை.]*

அவசரத்துக்குப்போ—தல் *avašara-t-tukku-p-pō-*, 8 செ.கு.வி.(v.i.) மலம் நீர் கழித்தல் (பாண்டி.); to answer calls of nature.

த.வ. ஒதுங்கப்போதல்.

[அவசரம்+அத்து+கு+போ—.]

*[**Skt.** ava-šara> த. அவசரம்.]*

அவசரப்படு—தல் *avašarappaḍu-*, 20 செ.கு.வி.(v.i.) பரபரப்புடன் நடந்து கொள்ளுதல், விரைவு காட்டுதல்; show undue haste, be rash. *'அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்து விடாதீர்கள்' (உ.வ.).*

த.வ. பதற்றப்படுதல்.

[அவசரம்+படு—.]

*[**Skt.** ava-šara> த. அவசரம்.]*

அவசரப்படுத்து—தல் *avašara-p-paḍuttu-*, 2 பி.வி.(c.v.) விரைந்து முடிக்குமாறு முடுக்குதல், காலம் தாழ்த்தாமல் முடித்து விட தூண்டுதல்; make hasten, to do something, hurry up. *'விரைவாக வாங்குங்கள் நான் போக வேண்டும் என அவசரப்படுத்தினான்' (உ.வ.).*

த.வ. முடுக்குதல்.

[அவசரம்+படுத்து—.]

*[**Skt.** ava-šara> த. அவசரம்.]*

படு→படுத்து—.

அவசரப்பாடல் *avašara-p-pāḍal*, பெ.(n.) கட்டாயமாக நினைவில் வைக்க வேண்டிய பாடல்கள் (மீனா. சரித். i, 10); important stanzas worthy of memorisory.

த.வ. கட்டாயப்பாடல்.

[அவசரம்+பாடல்.]

*[**Skt.** ava-šara> த. அவசரம்.]*

அவசரம்[1] *avašaram*, பெ. (n.) 1. சமயம்; occasion, favourable opportunity. *"அவசரத்தவனிடை நிகழ்ந்த மெய்க்குறி" (பாரத. சம்பவ. 13).* 2. விரைவு; hurry, urgency. *"பணம் வாங்க அவசரமாய்ப் போகிறான்".* 3. வலுக்கட்டாயம் (ஆவசியகம்); necessity, compulsion. *"அவசரத்துக்குப் பாவமில்லை".* 4. கோலம்; various poses of a deity in a temple. *"பெருமாள் உட்கார்ந்த அவசரமாய்ச் சேவை சாதிக்கிறார்".*

த.வ. விரைவு, முடுக்கம், பதற்றம்.

*[**Skt.** ava-šara> த. அவசரம்.]*

அவசரம்[2] *avašaram*, பெ. (n.) 1. ஆண்டு (நாநார்த்த.); year. 2. அரசு பணிகளுளொன்று (M.E.R.104 off 1911); a government office.

*[**Skt.** ava-sara > த. அவசரம்.]*

அவசரவர்த்தனை *avašaravarttaṉai*, பெ.(n.) வரிவகை (M.E.R.427. of 1925); a tax.

[அவசரம் + வர்த்தனை.]

*[**Skt.** a-vašara> த. அவசரம்.]*

அவசன் *avašaṉ*, பெ.(n.) தன்வயமிழந்தவன்; one who has lost self-control. *"மயில் பூண்டவசராய்" (காஞ்சிபு. தலவிசேட. 8).*

த.வ. மெய்மறந்தவன்.

*[**Skt.** a-vaša > த. அவசன்.]*

அவசானகாலம் *avašāṉa-kālam*, பெ. (n.) இறப்புச் சமயம்; time of death.

த.வ. இறுதிக்காலம்.

[அவசானம்+காலம்.]

*[**Skt.** ava-sāna>த. அவசானம்.]*

அவசானம்[1] *avašāṉam*, பெ.(n.) முடிவு; conclusion, termination, end.

*[**Skt.** ava-sāna >த. அவசானம்.]*

அவசானம்[2] *avašāṉam*, பெ.(n.) 1. இறப்பு; death. 2. எல்லை; limit.

*[**Skt.** ava-sāna > த. அவசானம்.]*

அவசிட்டம் *avašiṭṭam*, பெ.(n.) மிச்சம் (இ.வ.); crumbs, leavings.

*[**Skt.** ava-šiṣṭa> த. அவசிட்டம்.]*

அவசித்தாந்தம் *ava-šittāndam,* பெ. (n.) தவறான முடிவு (சி.சி.1, 26, சிவஞா.); wrong or erroneous conclusion.

த.வ. வழுக்கொண்முடிபு.

[Skt. apa+siddhanta > த. அவசித்தாந்தம்.]

அவசிதம் *avašidam,* பெ.(n.) 1. உறுதி செய்வது; that which is determined. 2. முடிப்பது; that which is concluded. 3. அறிவது; that which is known.

த.வ. தீர்மானிப்பு.

[Skt. ava-sita> த. அவசிதம்.]

அவசிந்தம் *avašindam,* பெ.(n.) எண்ண (சிந்திக்க) முடியாதது (திருமந். 709); that which cannot be thought of.

த.வ. எண்ணில.

[Skt. a-cintya > த. அவசிந்தம்.]

அவசியம்[1] *avašiyam,* பெ.(n.) இன்றியமையாதது; necessity, need. *"எனக்குப் பணம் இப்பொழுது அவசியம்" (உ.வ.).*

[Skt. a-vašya > த. அவசியம்.]

அவசியம்[2] *avašiyam,* இடை.(adv.) 1. கட்டாயமாய்; necessarily. *"அவன் அவசியம் வரவேண்டும்".* 2. நிச்சயமாய்; surely. *'அவன் அவசியம் வருவான்'.*

த.வ. தேவை.

[Skt. a-vasya> த. அவசியம்.]

அவசேபணம் *avašēbaṇam,* பெ.(n.) கூத்தின் உடலசைவுகளிலொன்று (சிலப். பக். 81); *(Nāṭya)* a mode of gesticulation.

[Skt. ava-ksēpaṇa > த.அவசேபனம்.]

அவடி *avaḍi,* பெ.(n.) இடுதிரை (பிங். MS.); curtain.

[Skt. a-paṭi > த.அவடி.]

அவடு *avaḍu,* பெ.(n.) 1. கிணறு; well. 2. குழி; pit. 3. பிடர்; nape.

[Skt. avaṭu > த.அவடு.]

அவத்தாத்திரயம் *avattā-t-tirayam,* பெ.(n.) நனவு, கனவு, உறக்கம் (சாக்கிரம், சொப்பனம், சுழுத்தியம்) ஒகிய முந்நிலைகள்; the three conditions of the embodied soul.

[Skt.ava-sthā+traya>த.அவத்தாத்திரியம்.]

அவத்தானம் *avattāṉam,* பெ. (n.) இருப்பிடம்; dwelling, place of residence. *"மாயாத்துவய மத்தியே அவத்தானஞ் சொல்லப்பட்டது" (சி.சி. 8, 2, சிவாக்.).*

[Skt. ava-sthāna > த. அவத்தானம்.]

அவத்திதன் *avattidaṉ,* பெ.(n.) நுகர்ச்சிக்குரிய தொல்லைகளை நுகரும் ஆதன் (சி.போ.பா.4,3,பக்.273); (Saivam.) soul which experiences the various conditions to which it is liable.

த.வ. துயர்துய்ப்பாதன்.

[Skt. ava-sthita > த. அவத்திதன்.]

அவத்தியம் *avattiyam,* பெ.(n.) குற்றம் (அஷ்டாதச. அர்த்தபஞ். பக்.25); fault, defect.

[Skt. ava-dya > த. அவத்தியம்.]

அவத்தியா *avattiyā,* பெ.(n.) கப்பலின் முன்பக்கத்திற் கயிறு கட்டுங் கம்பம்; (Naut.) strong post of wood or iron to which cables are fastened.

அவத்திரியம் *avattiriyam,* பெ.(n.) ஊறு (சிந்தா. நி. 324); danger.

அவத்து *avattu,* பெ.(n.) 1. பொருளல்லாதது; that which is insubstantial, unreal. 2. பயனற்றது; worthlessthing.

[Skt. a-vastu > த.அவத்து.]

அவத்தை[1] *avattai,* பெ.(n.) 1. நிலை; state, condition, situation. 2. துன்பம்; agony. *"அன்னவளவத்தை கண்டாங் கிளையவன்" (உத்தரரா. சீதைவன. 61).* 3. களவொழுக்கத்தில் வெளிப்படும் பத்து வகை நிலைகள்; condition of mind in love, one of ten stages. *"காட்சி, வேட்கை, ஒரு தலையுள்ளுதல், மெலிதல், ஆக்கஞ்செப்பல் நோக்குவவெல்லா மவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு (நம்பியகப், 36, உரை).* 4. காரணநிலை (காரணாவத்தை), காரியநிலை (காரியாவத்தை); (šaivam) condition of the

soul which is of two kinds. 5. இரண்டற்றநிலை (இலயம்), நுகற்சி (போகம்), அதிகாரம்; (Šaivam) threefold aspect of god.

த.வ. மெய்ப்பாடு.

[Skt. ava-sthā > த. அவத்தை]

அவத்தை² *avattai,* பெ. (n.) 1. ஆதனுக் குண்டாஞ் நனவு (சாக்கிர) முதலிய நிலை; states of the embodied soul, five according to Saivites and three according to others. 2. மாந்தப்பருவங்கள்; stages of human life.

[Skt. ava-sthā > த. அவத்தை.]

அவத்தைஞான(ஸ்)ச்நானம் *avattai-ñāṉa-(š)c-nāṉam,* பெ.(n.) (கிறித்.) aptism admininstered to the dying (Chr.).

[Skt., ava-sthā+ñjāna >த-அவத்தை ஞானச்நானம்.]

அவத்தைப்பிரயோகம் *avattai-p-pirayōgam,* பெ. (n.) அறுபத்திநாலு கலையுள் ஒன்றான பாழ்படுத்தி (சூனியம்)க் கொல்லும் கலை (வின்.); art of killing by sorcery, one of *aṟupattunālu-kalai.* q.v.

[Skt. ava-sthā+pirayōkam>த. அவத்தைப் பிரயோகம்.]

அவதஞ்சம்¹ *avadañjam,* பெ.(n.) செவி மலர்ப்பூ; flower used as ear ornament. *"கன்னாவதஞ்சம்" (சூடா. 7, 28).*

[Skt. ava-taṃša > த. அவதஞ்சம்.]

அவதஞ்சம்² *avadañjam,* பெ.(n.) தலையில் சூடும் மாலை (நாநார்த்த.); garland for the head.

த.வ. தலைமலை.

[Skt. ava-taṃša > த. அவதஞ்சம்.]

அவதந்திரம் *avadandiram,* பெ.(n.) சூழ்ச்சித் திட்டம்; bad device, stratagem, under-hand dealing. *"அவதந்திரம் தனக்கு அந்தரம்".*

[Skt. ava+tantra> த. அவதந்திரம்.]

அவதரணம் *avadaraṇam,* பெ.(n.) திருப்பிறப்பு; descsent, incarnation.

த.வ. தோற்றரவு.

[Skt. avataraṇa>த. அவதரணம்.]

அவதரப்பெயர் *avadara-p-peyar,* பெ.(n.) அப்போதைய (தற்கால)ப் பெயர்; name of the time being.

[அவதரம் + பெயர்.]

[Skt. ava-tara>த. அவதாரம்.]

அவதரம் *avadaram,* பெ. (n.) சமையம் (சிவப்பிர. 2, 17, உரை, பக். 234); occasion.

[Skt. ava-sara> த. அவதரம்.]

அவதரி-த்தல் *avadari-,* 4 செ.கு.வி. (v.i.) 1. தெய்வக் கூறாகப் பிறத்தல்; to be born, as when a god descends to become a creature or when a saint is born. *"அங்கவர் தம்மிடை யவதரித்தனன்" (கந்தபு. பாயி. 41).* 2. தங்குதல்; to abide. *"வாகீசச் சுவாமிமடத் தவதரிப்ப" (திருவாலவா. 37, 32).*

த.வ. தோன்றுதல்.

[Skt. ava-tr> த. அவதரி-,]

அவதாதம்¹ *avadādam,* பெ.(n.) வெண்மை (உரி.நி.); whiteness.

[Skt. ava-dāta > த. அவதாதம்.]

அவதாதம்² *avadādam,* பெ.(n.) 1. தூய்மை; purity. 2. பொன்னிறம்; golden colour. 3. அழகு; beauty.

[Skt. ava-dāta > த. அவதாதம்.]

அவதாரணம் *avadāraṇam,* பெ. (n.) தேற்றம் (பி.வி.22, உரை); certainty, positiveness.

த.வ. தெளிவு.

[Skt. ava-dhāraṇa > த. அவதாரணம்.]

அவதாரப்புருடன் *ava-dāra-p-puruḍaṉ,* பெ.(n.) 1. தெய்வக் கூறாகப் பிறத்தல்; incarnation. 2. செய்வதற்கு அரிதான செயலைச் செய்து முடிப்பதற் கென்றே (மாந்தனாக) பிறந்தவன் (தெய்வப் பிறவி); man born with a mission.

த.வ. அருவினைப் பிறவியன்.

[Skt. ava-dhāra-p-purusa> த-அவதாரப் புருடன்.]

அவதாரம்[1] *avadāram,* பெ.(n.) 1. இறங்குகை (சூடா.); descent. 2. தெய்வப் பிறப்பு (திவ்வியப் பிறப்பு); birth of a great being. *திருவவதாரப் படலம் (கந்தபு.).*

த.வ. தோற்றரவு.

[Skt. ava-tāra > த. அவதாரம்.]

அவதாரம்[2] *avadāram,* பெ.(n.) நீர் (தீர்த்த)த்துறை (நாநார்த்த.); sacred ghat.

[Skt. ava-tāra > த. அவதாரம்.]

அவதாரம்[3] *avadāram,* பெ.(n.) பிரிக்கை (யாழ்ப்.); tearing, dividing.

அவதாரிகை *avadārigai,* பெ.(n.) முன்னுரை; introductory note to a verse, etc., explaining its bearing.

[Skt. ava-tārikā > த. அவதாரிகை.]

அவதானம்[1] *avadāṉam,* பெ.(n.) மேன்மையான செயல்; glorious act, achievement. *"இறைவன் செய்த சிந்தைகூ ரவதானத்தின் றிறங்களை" (திருவாலவா. நூல்வர. 7).*

[Skt. ava-dāna > த. அவதானம்.]

அவதானம்[2] *avadāṉam,* பெ.(n.) 1. பிரிவு; section, division. 2. ஒரே நேரத்திற் பலவற்றை நினைவிற் கொள்ளுதல்; simultaneous attention to various subjects. 3. வரம்பு மீறுகை; transgression.

த.வ. கவனகம்.

[Skt. ava-dāna > த. அவதானம்.]

அவதானம்[3] *avadāṉam,* பெ. (n.) மனவொருமைப்பாடு (நாநார்த்த.); agreement.

த.வ. ஒர்மை.

[Skt. ava-dhāna > த. அவதானம்.]

அவதானம்[4] *avadāṉam,* பெ.(n.) முடிவு; termination, end. *"உச்சச்சந்தி அவதானத்தில்" (தெ.க.தொ.5:136)*

[Skt. ava-sāna > த. அவதானம்.]

அவதானம்[5] *avadāṉam,* பெ.(n.) 1. கவனம்; attention, attentiveness, intentness. 2. நினைவு; memory, remembrance. 3. நினைவுத் திறமைச் செயல்; art of simultaneously solving a number of problems as a test of memory. *"அவர் அவதானத்தில் வல்லவர்".* 4. திறமை; skill. *"அவன் அந்தப் பொருளை அவதானமாய் எடுத்துக் கொண்டான்" (வின்.).*

த.வ. கவனகம், கவனிப்பு.

[Skt. ava-dhāna > த. அவதானம்.]

அவதானி[1]-த்தல் *avadāṉi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. நினைவூட்டிக் கொள்ளுதல்; to recollect, reflect. 2. மனத்திலமைத்தல் (விறலிவிடு. 102); to commit to memory, fix or retain in mind.

[Skt. ava-dhānin>த.அவதானி-,]

அவதானி[2] *avadāṉi-,* பெ. (n.) 1. கவனிப்புள்ளவன்; attentive person. 2. மறைநூல்களிற் தேர்ச்சி பெற்றவன்; title of one who is well versed in the Vēdas. *"இவனவதானி யிவன் கிரமதாடி" (பிரபோத. 11, 5).* 3. ஒரே நேரத்தில் பதினாறு வகை நினைவாற்றலைக் கவனத்தில் கொண்டிருப்பவன்; one skilled in feats of memory. *"அட்டாவதானி".*

த.வ. கவனிகன், கவனகர்.

[Skt. ava-dhānin > த. அவதானி.]

அவதி[1] *avadi,* பெ.(n.) 1. எல்லை (பிங்.); boundary, limit. 2. (இலக்.) ஐந்தாம் வேற்றுமை எல்லைப் பொருள் (பி.வி.9.); (Gram.) one of the senses of the abl. 3. தவணை; fixed term, stipulated time for payment, rest. *"அத்தனைக் குணின் பொருடர வவதியீ கென்றான்" (அரிச். பு. சூழ்வினை. 98).* 4. அளவு; extent, measure. *"எள்ளவதி யேனுங் கண்படாது" (கம்பரந். 48).* 5. கணக்கு; number. *"ஆயிர மாயிர மவதிசே ரவுணர்" (கந்தபு. வச்சிரவா. 54).* 6. முப்பிறப்பையும் அறியும் அறிவு; occult powers. *"ஆங்கு முனியவதியி னறிந்தபொரு ளதனை" (யசோதர. 5, 23).*

[Skt. ava-dhi > த. அவதி.]

அவதி² *avaḍi,* பெ.(n.) 1. பிரிவு (நாநார்த்த.); bit, section. 2. காலம் (நாநார்த்த.); time. 3. குழி (நாநார்த்த.); pit. 4. விடுமுறை (நாஞ்.); leave. 5. காலக்கெடு; adjournment.

[Skt. avadhi > த. அவதி.]

அவதி³ *avaḍi,* பெ. (n.) துன்பம்; suffering, distress. *"பாழவதிப் படவெனக்கு முடியாது" (தாயு. பன்மாலை. 4).*

த.வ. துயர்.

[Skt. ava-sthā > த. அவதி.]

அவதிக்கிரயம் *avaḍi-k-kirayam,* பெ.(n.) தவணை காட்டிச் செய்யும் விற்பனை; conditional sale, to become absolute if the purchase money is not repaid within a stipulated time or if the conditions are not fulfilled (R.F.).

த.வ. தவணைவிற்பனை.

[Skt. ava-dhi+kirayam>த.அவதிக்கிரயம்.]

அவதிகத்தம் *avaḍikattam,* பெ.(n.) கடல்நுரை (வின்.); seashell decayed by age.

அவதிஞானம் *avaḍiñāṉam,* பெ.(n.) தொலைவிலு (தூரத்து)ள்ளவற்றைப் பொறியுதவியின்றி உணரும் உணர்ச்சி (சீவக. 951, உரை); (Jaina.) clairvoyance, supersensual perception of objects and events distant in space and time.

த.வ. தொலையுணர்வு.

[Skt. ava-dhi+ñāṉa > த. அவதிஞானம்.]

அவதிப்படு-தல் *avaḍi-p-paḍu,* 20 செ.கு.வி. (v.i.) துன்பப்படுதல்; to suffer, to be in great straits.

[அவதி+படு-தல்.]

[Skt. ava-dhi> அவதி.]

அவதூதம்¹ *avadūdam,* பெ. (n.) நூற்றெட்டு சிற்றிலக்கியங்களுள் ஒன்று; name of an upanisad.

[Skt. ava-dhūta > த. அவதூதம்.]

அவதூதம்² *avadūdam,* பெ.(n.) 1. முழுத்துறவு (சிந்தா. நி. 321); complete renunciation. 2. பிராமணர் திறந்தமேனி; nakedness, nudity.

[Skt. ava-dhūta > த. அவதூதம்.]

அவதூதன் *avadūdaṉ,* பெ. (n.) 1. முற்றத் துறந்தவன் (திருவேங். சத. 95); one who has shaken off or renounced all worldly attachment. 2. திறந்த மேனித் துறவி (கொ.வ.); nacked sannyāsin.

[Skt. ava-dhūta > த. அவதூதன்.]

அவந்தரை *avandarai,* பெ.(n.) 1. சீர்கேடு; disorder, confusion. *"பகு அவந்தரையாயிருந்தபடியினாலே" (கோயிலொ. 42).* 2. திக்கற்ற நிலை; forlornness. *"அவந்தரையாய்ச் செத்தான்".* 3. பயனிலதாகை; becoming useless, fruitless. *"அது அவந்தரையாய்ப் போயிற்று" (வின்.).*

[Skt. a-bandhura > த. அவந்தரை.]

அவந்தி¹ *avanti,* பெ.(n.) காடி (தைலவ. தைல. 119); vinegar, fermentation of rice-water.

[Skt. avanti > த. அவந்தி.]

அவந்தி² *avanti,* பெ.(n.) 1. பிள்ளை பெற்றவள்; woman who has borne children. 2. காய்க்கும் மரம்; fruit-bearing tree. 3. ஈற்று ஆ (பசு); cow that has calved.

[Skt. a-vandhyā > த. அவந்தி.]

அவநதன் *avanadaṉ,* பெ.(n.) தலை குனிந்து வணங்குவோன்; one with head bowed down with humility. *"அரச னவநத னானான்" (கோயிற்பு. இரணி. 14).*

[Skt. ava-nāta > த. அவநதன்.]

அவநியாயம் *avaniyāyam,* பெ.(n.) அன்முறை (அநியாயம்) (வின்.); injustice.

த.வ. அந்நயம், தகவின்மை.

[Skt. ava-nyāya > த. அவநியாயம்.]

அவநீதன் *avanīdaṉ,* பெ.(n.) முறைமை யற்றவன்; unjust man. *"சூதனென்று மவநீதனென்றும்" (பிரதாப விலா. 43).*

த.வ. நேர்மையற்றவன்.

[Skt. ava-nīta > த. அவநீதன்.]

அவநீதி *ava-nīti,* பெ.(n.) முறைமைக்கேடு; injustice. *"மறனறு மவநீதியை" (வரத. பாகவத. குருகுல. 437).*

த.வ. நயக்கேடு, முறைக்கேடு.

[Skt. apa+nīti>த. அவநீதி.]

அவப்பலம் *ava-p-palam,* பெ.(n.) தீப்பயன்; evil results. *"வெய்தவப் பலத்துறா நன்னிலை கொடு" (இரகு. யாக. 2).*

[அவம்+பலம்.]

[Skt. apa> த. அவம்.]

பலம் > Skt. phala> த. பலம்.

அவப்பிரஞ்சம் *avappirañjam,* பெ. (n.) எளிய மக்கள் பேசும் வடநாட்டு வட்டார வழக்கு (உரி.நி.); a variety of Prakrit, a form of languages Sanskrit spoken by the vulgar.

த.வ. வடநாட்டுவட்டாரவழக்கு.

[Skt. apa-bhraṃśa > த. அவப்பிரஞ்சம்.]

பிராகிருதமொழிக்கு வடதமிழ் எனும் பெயர் இருந்தது. அம்மொழியின் கொச்சை வழக்காறுகள் அப்பிரஞ்சம் எனப்பட்டது. இதனை வடமொழியொடு தொடர்புபடுத்துவது முறையன்று என்பர்.

அவப்பிரஞ்சனம் *avappirañjaṉam,* பெ. (n.) ஒருவகைப் பிராகிருத மொழி (பேரகத். 141); a variety of Prākṛt.

[Skt. apa-bhraṃśa > த. அவப்பிரஞ்சனம்.]

அவபிரதம் *avapiradam,* பெ.(n.) வேள்வியின் முடிவில் நீராடுகை; bath at the completion of a sacrifice. *"முனிவ ரவபிரதங் குடைந்தாட" (திவ். பெரியாழ். 4, 7, 6).*

[Skt. ava-bhṛtha > த. அவபிரதம்]

அவபிருதம் *avapirudam,* பெ.(n.) **அவபிரதம்** (வேதாரணி. அக்கினிதீர்த். 8) பார்க்க; see *avapiradam.*

[Skt. ava-bhṛtha > த. அவபிருதம்.]

அவம் *avam,* பெ.(n.) 1. வேள்வி; sacrifice. 2. அழைப்பு; invitation. 3. ஆணை; command.

[Skt. hava > த. அவம்]

அவமாகம் *avamāgam,* பெ.(n.) மூன்று நாளா (திதியா)வது மூன்று நாண்மீனா (நட்சத்திர)மாவது மூன்று ஓக (யோக)மாவது கலந்திருக்கும் நாள் (பெரியவரு. 55); day on which either three titis, three naksatras or three yōkams occur.

[Skt. avama > த. அவமாகம்.]

அவமிருத்து *ava-miruttu,* பெ.(n.) கொடுஞ்சாவு; untimely or unnatural death. *"பல்கோடி சன்மப் பகையு மவமிருந்தும்" (கந்தர். கலி. 112).*

த.வ. அவச்சாவு.

[Skt. apa+mṛtyu > த. அவமிருத்து]

அவயம் *avayam,* பெ. (n.) 1. அடைக்கலம் புகுவோன்; one who seeks refuge. *"அவயநின் னவய மென்னா" (கம்பரா. வருணனை. 67).* 2. புகலிடம் (வின்.); refuge, place of shelter. 3. வெட்டிவேர் (இ.வ.); cuscuss grass.

[Skt. a-bhaya > த. அவயம்.]

அவயவம் *avayavam,* பெ. (n.) 1. உடலின் உறுப்பு; limp, part of body. *"தங்க ளவயவம் போல்வன கொய்தார்" (பாரத. வசந்த. 6).* 2. பாகம்; part, member.

[Skt. ava-yava > த. அவயவம்.]

அவயவர்க்கம் *avayavarkkam,* பெ.(n.) அச்சந்தீர அமைக்குங் கை (insc.); right hand of an idol, raised in token of dispelling fear.

[Skt. a-bhaya+varga>த. அவயவர்க்கம்.]

அவயவி *avayavi,* பெ.(n.) 1. உறுப்புள்ளது; whole composed of constituent parts. *"ஒரு பொருளே அவயவ அவயவிகளாயாதல்" (சி.போ.பா.6., 2, பக். 145).* 2. உடல்; body. 3. அவையின் உறுப்பினன் (கொ.வ.); member of an institution.

[Skt. avayavin > த. அவயவி.]

அவயோகம் *avayōgam,* பெ.(n.) தீயநிகழ்ச்சி; unfortunate occurrence, misfortune. *"மனையவண் முகங்கண் டவயோக முணர்ந்தழிந்து" (வேதாரணி. அக்கினிதீர்த்.9).*

[Skt. apa-yōga > த. அவயோகம்.]

அவர்ணியம் *avarṇiyam,* பெ.(n.) (உபமானம்) உவமை (அணியி. 3); standard of comparison.

[Skt. a-varṇya > த. அவர்ணியம்.]

அவரகாத்திரம் *avarakāttiram,* பெ.(n.) கால் (சீவக. 806, உரை); lower part of the body.

[Skt.avara+kattiram>த. அவரகாத்திரம்.]

அவரசன் *avaraśaṉ,* பெ.(n.) தம்பி (வின்.); younger brother, as after-born.

[Skt. avara-ja>த. அவரசன்.]

அவரம் *avaram,* பெ.(n.) 1. பிந்தியது; that which is behind or subsequent. 2. யானையின் பின்னங்காற்புறம்; the lower part of the hind legs of the elephant.

[Skt. apara > த. அவரம்]

அவரயன் *avarayaṉ,* பெ.(n.) **அவரசன்** பார்க்க; see *avaraśaṉ.*

[அவரசன் – அவரயன்.]

அவராகம் *avarāgam,* பெ.(n.) அவாவின்மை (இச்சையின்மை); freedom from desire. *அவராக வேத மலர்முனி" (பாரத. சூதுபோர். 204).*

[Skt. apa-rāga > த. அவராகம்.]

அவரைப்பிராயம் *avarai-p-pirā-yam,* பெ.(n.) பிள்ளைப் பருவம் (திவ். நாய்ச். 1,4); childhood.

[Skt. apara+pirāyam > த. அவரைப் பிராயம்.]

அவரோகணம் *avarōgaṇam,* பெ.(n.) 1. இறங்குகை; descending, alighting, lowering. 2. அசைவு (கமகம்) பத்தனு ளொன்று (பரத. இராக. 24); (mus.) complete descent of the gamut, one of 10 kamakam, q.v. 3. மறைநூலைத் திருப்பிச் சொல்லுகை; reciting the vēda back wards.

த.வ. இறங்கிசை, பகுப்பியம்.

[Skt. ava-rōhaṇa > த. அவரோகணம்.]

அவரோகம்[1] *avarōgam,* பெ.(n.) **அவரோகணம் 3** பார்க்க; see *avarōgaṇam.* *"சுரம்பதங் கிரமஞ் சடை யவரோகம்" (பிரபோ. 11, 4).*

[Skt. apa-rōgam > த. அவரோகம்.]

அவரோகம்[2] *avarōgam,* பெ.(n.) 1. விழுது; aerial root. 2. மரத்திற் படர்கொடி; climber.

[Skt. ava-rōha > த. அவரோகம்.]

அவரோகி *avarōgi,* பெ.(n.) ஆலமரம் (பரி.அக.); banyan tree.

[Skt. ava-rōhin > த. அவரோகி.]

அவரோதம்[1] *avarōdam,* பெ.(n.) மறைவு; obstruction, screening.

[Skt. ava-rōdha > த. அவரோதம்.]

அவரோதம்[2] *avarōdam,* பெ.(n.) 1. அரசியிருக்கை; ladies appartments in a palace. *"கோயி லவரோதம்" (பாரத. அருச். தீர்த். 23).* 2. அரண்மனை; palace.

[Skt. ava-rōdha > த. அவரோதம்.]

அவலத்தவிநயம் *avalattavinayam,* பெ.(n.) துன்பச் சுவை தோன்றும் உடற் செய்கை; dramatic action expressive of grief. *"அவலத் தவநயமறிவரக் கிளப்பின்.......... புலவர்" (சிலப். 3, 13, உரை).*

[Skt. apa+abhi-naya > த. அவலத்தவிநயம்.]

அவலம்பசிலேட்டுமம் *avalamba-śilēṭ-ṭumam,* பெ. (n.) (சிலேட்டுமம்) கோழை நோய் வகை (ஜுவரட்.); a disease due to excessive phlegm.

[Skt. ava-lamba+slēṣma > த. அவலம்ப சிலேட்டுமம்.]

அவலம்பம் *avalambam,* பெ.(n.) சார்பு (சங்.அக.); dependence, support, prop, stay.

[Skt. ava-lamba > த. அவலம்பம்.]

அவலம்பனம் *avalambaṉam,* பெ.(n.) சார்கை; dependence.

[Skt. ava-lambana > த. அவலம்பனம்.]

அவலம்பி–த்தல் *avalampi-,* 4 செ. குன்றாவி.(v.t.) பற்றுதல்; to catch, hold of, cling to. *"சாலம்ப சிவயோகம் அவலம்பித்து" (சி.சி.9,10, ஞானப்.).*

[Skt. ava-lamba > த. அவலம்பி–,]

அவலேசம் *avalēšam,* பெ.(n.) 1. சிறியது (அற்பம்); that which is small, unimportant. 2. அவமானம்; disgrace.

[Skt. lava+lēša > த. அவலேசம்.]

அவலேபம் *avalēbam,* பெ.(n.) 1. செருக்கு; arrogance. 2. பழிப்பு; calumny. 3. பூச்சு; smearing.

[Skt. ava-lēpa > த. அவலேபம்.]

அவலோகம் *avalōgam,* பெ.(n.) **அவலோகனம்** பார்க்க; see *avalōganam.*

[Skt. ava-lōka > த. அவலோகம்.]

அவலோகனம் *avalōganam,* பெ.(n.) பார்வை; look, glance. *"அனுக்கிரகாவ லோகனம்" (சி.சி.8,3, சிவாக்.).*

[Skt. ava-lōkana > த. அவலோகனம்.]

அவலோகி–த்தல் *avalōgi-,* 4 செ.குன்றாவி. (v.t.) நோக்குதல்; to see, perceive. *"அதனாலே ஸர்வத்தினையும் அவலோகித்தனன்" (ஸ்ரீபுராணம், m.s.).*

[Skt. ava-lōka > த. அவலோகி–,]

அவலோகிதன் *avalōgidan,* பெ.(n.) புத்த முனிவரு ளொருவர் (வீரசோ. பாயி. 2); name of a reputed Bodhi-sattva.

[Skt. ava-lōkita > த. அவலோகிதன்.]

அவளம் *avaḷam,* பெ.(n.) தீமை; evil. *"அவளங்கடரு காரணமாம்" (வேதா. சூ. 56).*

அவற்கம் *avargam,* பெ.(n.) கஞ்சி (வின்.); gruel.

அவனி *avani,* பெ. (n.) நிலம்; earth. *"அன்றெனக்குநீ யிசைந்த வவனிபாதி யமையும்" (பாரத. வாரணா. 82).*

த.வ. உலகம்.

[Skt. ava-ni> த. அவனி.]

அவனிகேள்வன் *avani-kēḷvan,* பெ. (n.) திருமால் (கந்தபு. திருவவதா. 70); Tirumāl, the husband of the goddess of earth.

[அவனி + கேள்வன்.]

[Skt. avni> த. அவனி.]

அவனிகை *avanigai,* பெ.(n.) இடுதிரை (சிந்தா. நி. 316); screen.

[Skt. yavanikā > த. அவனிகை.]

அவனிபன் *avaniban,* பெ.(n.) நாட்டைக் காக்கும் மன்னன்; king, the protector of earth. *"அவனிப னகரியில்" (பாரத. வாரணா. 18).*

[Skt. avani-pa > த. அவனிபன்.]

அவாக்கு *avākku,* பெ. (n.) 1. ஊமை; dumb man. 2. கவிழ்ந்த முகத்தோன்; person with his face looking downwards.

[Skt. avāk > த. அவாக்கு.]

அவாகு *avāgu,* பெ.(n.) கஞ்சி (பிங்.); gruel.

[Skt. yavāgū > த. அவாகு.]

அவாகேசவுப்பி *avākēšavuppi,* பெ.(n.) பெருந்தும்பை (பச்.மூ.); large species of white dead-nettle.

அவாசி *avāši,* பெ.(n.) தெற்கு; தென் திசை; south, southern direction. *"மாசிலா வவாசி நின்று" (சேதுபு. வேதாள. 41).*

[Skt. avāci > த. அவாசி.]

அவாசீனம் *avāšīnam,* பெ.(n.) தெற்குத் திசை (வின்.); southern direction.

[Skt. avācīna > த. அவாசீனம்.]

அவாசு *avāšu,* பெ.(n.) கேடு (R.); destruction.

[Skt. avāk > த. அவாசு.]

அவாதிதம் *avādidam,* பெ.(n.) கண்டிக்கப்படாதது; that which is unrefuted. *"யாது பிரமாணத்தானும் அவாதிதம்" (தர்க்கபரி. 72).*

[Skt. a-bādhita > த. அவாதிதம்.]

அவாந்தரசைவர் *avāndara-šaivar,* பெ.(n.) சிவதீக்கை பெற்ற நான்காம் வருணத்தவர் (சூத்திரர்); saiva initiates among *šūdras.* *"கரைந்த வவாநந்தர சைவன்றனக்குங் கன்மத் துரிமை யில்லை" (திருவானைக். கோச். 23).*

[Skt. avāntara+šaiva> த. அவாந்தர சைவர்.]

அவாந்தரப்பிரளயம் *avāndara-p-piralayam,* பெ.(n.) இடையிலுண்டாகும் உலக அழிவு (மச்சபு. பிரமாண்ட. 9); intermediate destruction of the universe, dist. r. மகாப்பிரளயம்.

த.வ. இடையூழி.

[Skt. avāntara+piralaya> த. அவாந்தரப் பிரளயம்.]

அவாந்தரபேதம் *avāndara-pēdam,* பெ.(n.) உட்பிரிவு; sub-division.

[Skt. avāntara+bhēda> த. அவாந்தர பேதம்.]

அவாந்தரம் *avāndaram,* பெ.(n.) 1. இடையிலுள்ளது; intermediate time, place, means, interim. 2. வெற்றுவெளி; void, vacuum, emptiness. *"அவாந்தரத்திலே அக்கினி பிறக்கிறது" (வின்.).* 3. உதவியின்மை; desolation, helpless state. *'அவன் குடும்பம் அவாந்தரமாயிருக்கிறது'.*

[Skt. avāntara > த. அவாந்தரம்.]

அவாந்தரவெளி *avāndar-veḷi,* பெ.(n.) வெட்டவெளி; open plain, desert.

[அவாந்தரம்+வெளி.]

[Skt. avāntara> த. அவாந்தரம்.]

அவாந்தரை *avāndarai,* பெ.(n.) வெறுமை; void, vacuum, emptiness. *"அவன்மிக்க அவாந்தரையாக விருக்கிறான்" (தஞ்சை.).*

[Skt. avāntara > த. அவாந்தரை.]

அவாந்திரை *avāndirai,* பெ.(n.) வெறுமை (சிந்தா. நி. 317); void, vacuum, emptiness.

[Skt. avāntara > த. அவாந்திரை.]

அவாப்தம் *avāpdam,* பெ.(n.) அடையப்பட்டது; which is obtained, acquired. *"அவாப்த ஸமஸ்த காமனாய்" (குருபரம். ப்ரவே.).*

[Skt. avāpta > த. அவாப்தம்.]

அவாயம் *avāyam,* பெ.(n.) (அபாயம்) பேரிடர்; danger, misfortune, calamity. *"அவாயமறவே" (திருமந். 2718).*

த.வ. ஏதம்.

[Skt. apāya > த. அவாயம்.]

அவாரி *avāri,* பெ.(n.) தடையின்மை; absence of restraint or hindrance. *"அவாரியாகப் பிராமணருக்கு ஸ்த்ரபோசன மிடுவர்" (குருபரம். ஆறா. 218).*

[Skt. a-vārya > த. அவாரி.]

அவால் *avāl,* பெ. (n.) பாதுகாப்பு (P.T.L.); charge, cave, custody.

[Ar. ahwāl > த. அவால்.]

அவால்தார் *avāldār,* பெ.(n.) இந்தியப் படைப்பிரிவுப் பொறுப்பாளர் (பாண்டி.); Indian sergeant.

[U. ahwāl-dār > த. அவால்தார்.]

அவாலத்து *avālattu,* பெ.(n.) கடன் சாட்டுகை; tranference of obligation to another.

[U. hawālat > த. அவாலத்து.]

அவாலுதார் *avāludār,* பெ. (n.) **அவால்தார் (பாண்டி.)** பார்க்க; see *avāltār.*

[U. havil-dār > த. அவாலுதார்.]

அவிக்கனம்[1] *avikkaṉam,* பெ.(n.) தடையின்மை (நாநார்த்த.); freedom from impediment.

[Skt. a-vighna > த. அவிக்கனம்.]

அவிக்கனம்[2] *avikkaṉam,* பெ.(n.) பெருங்களா (நாநார்த்த.); large Bengal currant.

[Skt. avigna > த. அவிக்கனம்.]

அவிக்கினம் *avikkiṉam,* பெ.(n.) இடையூறின்மை; freedom from obstacles, impediments.

[Skt. a-vighna > த. அவிக்கினம்.]

அவிகம் *avigam,* பெ.(n.) வைரம் (சங்.அக.); diamond.

[Skt. avika > த. அவிகம்.]

அவிகாரதை *avikāradai,* பெ.(n.) மாறுபாடுறாமை; unchangeableness. *"அவிகாரதை யுருவாய்" (பகவற். 2, 21).*

[Skt. a-vikāra-tā > த. அவிகாரதை.]

அவிகாரம் *avikāram,* பெ.(n.) **அவிகாரி** பார்க்க; see *avikāri.* *"நனவாதிகளி னவிகார மாகி" (வேதா. சூ. 108).*

[Skt. a-vikāra > த. அவிகாரம்.]

அவிகாரி *avikāri,* பெ.(n.) அருவருப்பற்றது; that which is immutable. *"பொய்ப் பொருள் கற்பிதமாயிற் றவிகாரியாகப் பொருந்தும்" (வேதா. சூ. 83).*

[Skt. a-vikārin > த. அவிகாரி.]

அவிச்சின்முகூர்த்தம் *aviccin-mukūrttam,* பெ. (n.) நண்பகல் காலம் (சோதிட. சிந். 50); middle part of the day; midday.

[அவிச்சின் + முகூர்த்தம்.]

[Skt. a-vic-chin> த. அவிச்சின்.]

த. முழுத்தம் → முகூர்த்தம்.

அவிச்சின்னம் *aviccinnam,* பெ. (n.) இடைவிடாமை (சிவதரு. சிவானயோ. 80); uninterruptedness, continuity.

[Skt. a-vic-chinna > த. அவிச்சின்னம்.]

அவிச்சை *aviccai,* பெ. (n.) அறியாமை; spiritual ignorance.

[Pkt. avijjā > த. அவிச்சை.]

[Skt. a-vidyā > த. அவிச்சை.]

அவிசாரம்[1] *avišāram,* பெ.(n.) 1. ஆராய்ச்சி யில்லாமை (கோயிற்பு. பதஞ். 31); want of discrimination. 2. கவலையில்லாமை (கொ.வ.); freedom from care.

[Skt. a-vicāra > த. அவிசாரம்.]

அவிசாரம்[2] *avišāram,* பெ.(n.) **அபிசாரம்** பார்க்க; see *abišāram.* *"அவிசார மவிசாரத் தமைத்தார்கள்" (கோயிற்பு. பதஞ். 31).*

[Skt. abhi-cāra > த. அவிசாரம்]

அவிசாரி *avišāri,* பெ.(n.) ஒழுக்கமிலாள்; adulteress.

த.வ. பரத்தை, பொதுமகள்.

[Skt. abhi-sārikā > த. அவிசாரி.]

அவிசு *avišu,* பெ.(n.) 1. வேள்வித் தீயில் தேவர்க்குக் கொடுக்கும் உணவு (தக்கயாகப். 46, உரை); offering made to the gods in sacrificial fire. 2. நெய் (நாநார்த்த.); ghee. 3. கஞ்சி வடியாது சமைத்த சோறு (இ.வ.); cooked rice, prepared without straining the gruel.

[Skt. havis > த. அவிசு.]

அவிசுவாசம் *a-višuvāšam,* பெ.(n.) 1. நம்பிக்கையின்மை; want of confidence, unbelif. 2. நன்றியின்மை; ingratitude.

[Skt. a-višvāsa > த. அவிசுவாசம்.]

அவிசுவாசி *avišuvāši,* பெ.(n.) 1. நம்பிக்கை யில்லாதவன்; unbeliever. 2. நன்றியறி வில்லாதவன்; ungrateful person.

[Skt. a-višvāsin > த. அவிசுவாசி.]

அவிஞ்சை *aviñ-jai,* பெ. (n.) அவித்தை (ஞானவா. நிருவாண. 1); illusion, spiritual ignorance.

[Pkt. avijjā>Skt.a-vidyā > த. அவிஞ்சை.]

அவிஞ்ஞை *aviññai,* பெ.(n.) **அவிஞ்சை** (ஞானவா. வைராக். 92) பார்க்க; see *aviñjai.*

அவிட்டம் *aviṭṭam,* பெ. (n.) ஒரு விண்மீன்; name of the 23rd naksatra, the constellation Dolphin in makara-rāši and kumpa-rāši.

த.வ. பறவைமீன்.

[Skt. šraviṣṭhā > த. அவிட்டம்.]

அவிட்டு *aviṣḍu,* பெ.(n.) 1. தீக்குறியான சொற்களைச் சொல்லுபவன்; one who utters words of ill-omen. 2. கெட்ட நடத்தையுள்ளவன்; one who is morally depraved.

த.வ. அறிவிலி.

[Skt. apaṣtha > த. அவிட்டு.]

அவித்தியம் *avittiyam,* பெ. (n.) இதளியம் (சங்.அக.); quick silver.

அவித்தியை *avittiyai,* பெ. (n.) அறியாமை; spiritual ignorance.

[Skt. a-vidyā > த. அவித்தியை.]

அவித்தை[1] *avittai,* பெ. (n.) 1. அறியாமை (பிரபோத. அவித்தியாபுர. 4); ignorance, spiritual ignorance. 2. மாயை (சூத. சிவமா. 8, 10); illusion personified, māyā. 3. ஆணவம் (சி.சி.2, 84); the soul's impurity.

[Skt. a-vidyā > த. அவித்தை.]

அவித்தை[2] *avittai,* பெ. (n.) ஐவகைத் துன்பங்களுளொன்று (விசாரசந். பக். 335); one of *pañja-k-kilēšam.* 2. காமம்; delusion of mind.

[Skt. a-vidyā > த. அவித்தை.]

அவிதூசம் *avidūšam,* பெ.(n.) ஆட்டுப்பால் (சங்.அக.); milk of goat or sheep.

[Skt. avi-dūsa > த. அவிதூசம்.]

அவிநயக்கூத்து *avinaya-k-kūttu,* பெ.(n.) பாடற் பொருளைக் கையாற் காட்டி ஆடும் கூத்து (சிலப். 3, 12, உரை); dancing using gesture language.

[அவிநயம் + கூத்து.]

[Skt. abhi-naya> த. அவிநயம்.]

அவிநயம் *avinayam,* பெ.(n.) 1. அவிநயரால் எழுதப்பட்டதும் வடமொழி பரத நூலுக்கு முற்பட்டதுமாகிய தமிழ் நாட்டிய நன்னூல்; A Tamil treatise on Tamil dance a original work composed prior to the Sanskrit Natya sastra of the sage Bharath Rishi. 2. மனக்கருத்தைக் குறிப்பாய் விளக்கும் உறுப்பு (அங்கச்) செய்கை; gesticulation. *"அவிநயங் காட்டி" (மதுரைப். 12).* 3. ஒரு யாப்பிலக்கணம் (நன். 369, மயிலை); name of a treatise on prosody by Avinayaṉār.

[Skt. abhi-naya > த. அவிநயம்.]

அவிநயர் *avinayar,* பெ.(n.) கூத்தர் (சூடா.); gesticulating dancers.

[Skt. abhi-naya > த.அவிநயர்.]

அவிநவம் *avinavam,* பெ.(n.) புதுமை (உரி.நி.); newness; modernness.

[Skt. abhi-nava > த. அபிநவம்.]

அவிநயன் *avinayaṉ,* பெ.(n.) தொல்காப்பியர் காலத்தில் தமிழ் நாட்டியக் கலை வல்லுநன்; the author of original Natya sastra - AVINAYAM a treatise on Tamil dance, a contemporary of the ancient Tamil gammeriar Tolkappiyar.

அவிப்பாகம் *avi-p-pāgam,* பெ. (n.) தேவருணவின் பங்கு; oblation offered to the Dēvas. *"திருமாலவிப்பாகங் கொண்டு" (திருவாச. 14, 6).*

[அவி+பாகம்.]

[Skt. havis > த. அவி.]

அவிபக்தகுடும்பம் *avipakta-kuḍumbam,* பெ.(n.) பிரிக்கப்படாத சொத்துள்ள குடும்பம் (Legal); undivided family, opp. to விபக்த குடும்பம்.

[அவிபக்த + குடும்பம்.]

[Skt. a-vibhakta > த. அவிபக்த.]

அவிமுத்தம் *avimuttam,* பெ.(n.) காசி நகரம்; Benares city. *"அவிமுத்தங் குடிகொண்டு" (குமர. பிரகாசிக். 53.).*

[Skt. a-vi-mukta > த. அவிமுத்தம்.]

அவிர்ப்பாகம் *avir-p-pāgam,* பெ.(n.) தேவருணவின் பங்கு; sacrificial offering to Dēvas. *"வானோர்...... அவிர்ப்பாகம்" (உத்தரரா. திக்குவி. 120).*

[அவிர் + பாகம்.]

[Skt. havis> த. அவிர்.]

அவிருத்தம் *aviruttam,* பெ.(n.) பகையில்லாதது; that which is compatible; not opposed. *"அவிருத்தமான சின்மாத்திரத்தை" (சூத. எக்கி. உத். 5 : 17).*

[Skt. a-viruddha > த. அவிருத்தம்.]

அவிரோதம் *avirōdam,* பெ.(n.) ஒத்தியல்பு, வேறுபாடின்மை, மாறின்மை; compatibility, congruity, consistency. *"மறைய விரோதமும் வகுப்பம்" (சூத. எக்கி. பூ. 39:1).*

[Skt. a-virōdha > த. அவிரோதம்.]

அவிவாதம் *avivādam,* பெ.(n.) மாறுபாடில்லாமை; concurrence, agreement.

[Skt. a-vivāda>த. அவிவாதம்.]

அவிவேகம் *avivēgam,* பெ.(n.) பகுத்தறிவின்மை; want of discrimination, foolishness.

[Skt. a-vivēka > த. அவிவேகம்.]

அவினாசி *avināši,* பெ.(n.) 1. கடவுள்; God, the indestrutible. *"அவினாசி கண்டாய்" (தேவா. 247, 7).* 2. கொங்கு நாட்டிலுள்ள ஒரு சிவத்தலம் (தேவா.); name of a Siva shrine in the Coimbatore district.

[Skt. a-vināšin > த. அவினாசி.]

அவினாபாவசத்தி *aviṉāpāva-šatti,* பெ.(n.) ஆற்றலரசி சிவத்தினின்று பிரியாத (சக்தி) சத்தி (சி.சி.1, 74, உரை); (Šaivam) Sakti which is inseparable from Šivan.

[அவினாபாவ+ சத்தி.]

[Skt. a-vinā-bhāva > த. அவினாபாவ.]

அவினாபாவி *aviṉāpāvi,* பெ.(n.) பிரிக்க முடியாதது; that which is inseparable. *கேவலஞானமும் அதனோடு அவினாபாவி யாகிய கேவலதரிசன கேவலவீரிய கேவலசுகமு முடையானவனே சுவாமியாக" (நீலகேசி, கடவுள். 1, உரை).*

[Skt. a-vinā-bhāvin > த. அவினாபாவி.]

அவினாபூதம் *aviṉābūdam,* பெ.(n.) நீக்கமின்றி யிருப்பது; that which is inseparable, that which cannot exist when separated.

[Skt. a-vinā-bhūta > த. அவினாபூதம்.]

அவினி *aviṉi,* பெ.(n.) கசகசா செடியின் பால்; opium; inspissated juice of papaver somniferum. *"மதுவினுள்ளு மவினியாதி யானபன் மருந்தினும்" (பிரபோத. 26:62).*

[U. afini > த. அவினி.]

அவீசி¹ *avīši,* பெ.(n.) நிரயம்; name of a hell. *"கிருமிசெறி யவீசி யிறை" (சிவதரு. சுவர்க்க. 127).*

[Skt. a-vīci > த. அவீசி.]

அவீசி² *avīši,* பெ.(n.) புகைக்கொடி (வால்வெள்ளி) வகை (தக்கயாகப். 457, உரை); a kind of comet.

அவீரை *avīrai,* பெ.(n.) பிள்ளையில்லாத விதவை (இ.வ.); issueless widow.

[Skt. avīrā > த. அவீரை.]

அவுசதம் *avucadam,* பெ.(n.) மருந்து; medicine.

[Skt. auṣadha > த. அவுசதம்.]

அவுண் *avuṇ,* பெ.(n.) அசுரர் இனம்; Asuras. *"அவுண்மக சேனை" (திருப்பு.).*

அவுதசியம் *avudašiyam,* பெ.(n.) பால் (தைலவ. தைல. 53); milk, coming from the udder.

[Skt. ūdhasya > த. அவுதசியம்.]

அவுதா *avudā,* பெ.(n.) யானையின் மேலிருக்கும் இருக்கை (அம்பாரி); howdah or seat usually with canopy, on an elephant's back. *"அவுதாக்கள் முத்துக்குடை" (இராமநா. யுத். 87).*

[U. haudā > த. அவுதா.]



அவுல்தார் *avuldār,* பெ.(n.) சிறுபடைக்குத் தலைவன்; non-commissioned officer in the Indian-army corresponding to a sergeant.

[U. hawāl-dār > த. அவுல்தார்.]

அவைதிகம் *avaidigam,* பெ.(n.) மறைநூலுக்கொவ்வாதது; that which is non-vēdic, irreligion.

[Skt. a-vaidika > த. அவைதிகம்.]

அவைராக்கியம் *avairākkiyam,* பெ.(n.) அறிவுக்குணம் எட்டனுள் ஒன்றான விடாப்பிடியின்மை (சி. போ. பா. 2, 2, பக். 164); absence of obstinacy, a characteristic of the intellect, one of eight putti-kuṇam, q.v.

[Skt. a-vairāgya > த. அவைராக்கியம்.]

அளகாதிபன் *aḷagādibaṉ,* பெ.(n.) செல்வக் கடவுள்; Kubēraṉ, the lord of Alakā. *"அளகாதி பனுரைத்த வாசகம்" (உத்தரரா. வரையெடு. 26).*

[Skt. alakā+adhipa > த. அளகாதிபன்]

அளகேசன் *aḷakēšaṉ,* பெ.(n.) செல்வக் கடவுள் (தாயு. பரிபூ. 10); Kubēraṉ, lord of Alakā.

[Skt. alakā+īša > த. அளகேசன்.]

அளீகம் *aḷīgam,* பெ.(n.) 1. நெற்றி; fore head. 2. வெறுப்பு; dislike. 3. பொய்; falsehood.

[Skt. alīka > த. அளீகம்.]

அற்களம் *aṟkaḷam,* பெ.(n.) 1. கதவின் தாழ்; bolt. 2. பேரலை; large wave, billow.

[Skt. argala > த. அற்களம்.]

அற்கன் *aṟkaṉ,* பெ.(n.) கதிரவன்; sun. *"அற்கன் மேல்வரு மெழிலிகளென" (கந்தபு. கயமுகன்வ. 35).*

[Skt. arka > த. அற்கன்.]

அற்சிரம் *aṟširam,* பெ.(n.) முன்பனிக்காலம்; first half of the dewy season. *"அற்சிர மறக்குந ரல்லர்" (ஐங்குறு. 464).*

அற்பத்தனம் *aṟpattaṉam,* பெ.(n.) இழிகுணம்; vileness, meanness, pettiness.

[Skt. alpa > த. அல்பம் – அல்பத்தனம் → அற்பத்தனம்.]

அற்பம் *aṟpam,* பெ.(n.) 1. சிறுமை; that which is trifling, insignificant. 2. இழிவு; vileness, meanness. 3. மெல்லியது; slightness, lightness. 4. நாய் (அக.நி.); dog.

[Skt. alpa > த. அற்பம்.]

அற்பர் *aṟpar,* பெ.(n.) கீழ்மக்கள் (பிங்.); mean ill-bred persons.

[Skt. alpa > த. அற்பர்.]

அற்பாயு *aṟpāyu,* பெ.(n.) அற்பாயுசு பார்க்க; see aṟpāyušu. *"அற்பாயு நரர்க்கென்றே" (சிவதரு. பரம. 26).*

[Skt. alpa+āyus > த. அற்பாயுசு → அற்பாயு.]

அற்பாயுசு *aṟpāyušu,* பெ.(n.) குறை வாழ்நாள் (வின்.); short life.

[Skt. alpa+āyus > த. அல்பாயுசு > அற்பாயுசு.]

அற்புதம்[1] *aṟpudam,* பெ.(n.) 1. வியப்பு; marvel, wonder, miracle.2. ஒன்பான்வகை சுவைகளுள் ஒன்று (திவா.); (poet.) sentiment of wonder, one of nava-rašam, q.v. 3. அழகு (திவா.); beauty.

[Skt. arbhuta > த. அற்புதம்.]

அற்புதம்[2] *aṟpudam,* பெ.(n.) ஆயிரங்கோடி (பிங்.); ten-thousand millions.

[Skt. arbuda > த. அற்புதம்.]

அற்புதம்[3] *aṟpudam,* பெ.(n.) வெறுமை (சி.போ.பா.9,2, வெண். 1); emptiness, void.

[Skt. arbhuta > த. அற்புதம்.]

அற்புதம்[4] *aṟpudam,* பெ.(n.) தசைக்கணு (நாநார்த்த.); tumurous growth to flesh.

[Skt. arbuda > த. அற்புதம்.]

அற்புதன் *aṟpudaṉ,* பெ.(n.) 1. கடவுள்; God, as a marvellous, wonderful being. *"அற்புத வகோசா" (தாயு. கருணா. 1).* 2. கண்ணாளன் (சூடா.); artificer.

[Skt. arbuda> த.அற்புதன்.]

அறாமி *aṟāmi,* பெ.(n.) 1. துடுக்குக் குணமுள்ளவன்; that which is wicked, vicious, also said of persons. 2. இடக்குப் பண்ணுகிற குதிரை (அசுவசா. 139); restive, ill-tempered horse.

த.வ. இடக்கன், அரம்பன்.

[U. harāmī > த. அறாமி.]

அன்யாபதேசம் *aṉyāpadēšam,* பெ.(n.) 1. உள்ளுறையல்லாத வெளிப்படைப் பொருள் (ஈடு. 6, 5, ப்ர.); allegorical presentation of one idea under the image of another. 2. சாக்கிட்டுச் சொல்லுஞ் சொல்; innuendo.

[Skt. anya+apa-dēša > த. அன்யாபதேசம்.]

அன்வயம் *anvayam,* பெ.(n.) (சமணம்) பிறவிக் குணம்; that which is inherent and inseparable. *"அன்வயம் வெதிரேகம்" (மேருமந். 698).*

த.வ. உடனொன்றிய இயல்பு.

[Skt. anvaya > த. அன்வயம்.]

அன்வயி¹-த்தல் *anvayi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. பின்தொடர்தல் (கம்பரா. இரணிய. 136); to follow, pursue. 2. பாட்டிலும் உரைநடையிலும் ஒரு மொழியை மற்றொன்றோடு பொருட் பொருத்தமுறப் பொருத்துதல்; to construe one word with another with which it is syntactically connected.

[Skt. anvaya > த. அன்வயி-,]

அன்வயி²-த்தல் *anvayi-,* 4 செ.கு.வி. (v.i.) ஒரு சொல் மற்றொரு சொல்லுடன் இயைதல்; to fit in syntactically.

அன்னக்களை *anna-k-kaḷai,* பெ.(n.) பசி அல்லது மிகுவுணவால் வரும் சோர்வு; fatigue resulting from hunger or over eating.

[அன்னம்+களை.]

[Skt. anna > த. அன்னம்.]

அன்னக்காவடி¹ *anna-k-kāvaḍi,* பெ.(n.) உணவு இரவல் ஏந்தும் காவடி; pole with two baskets suspended from the ends to receive boiled rice begged from door to door for distribution to mendicants.

[அன்னம் + காவடி]

[Skt. anna > த. அன்னம்.]



அன்னக்காவடி² *anna-k-kāvaḍi,* பெ.(n.) வறுமையானவன்; destitute person. begger.

[அன்னம் + காவடி.]

[Skt. anna> த. அன்னம்.]

அன்னக்கொடியோன் *annakkoḍiyōn,* பெ.(n.) நான்முகன் (சிந்தா. நி. 366); *Brahmā.*

[அன்னம் + கொடியோன்.]

[Skt. anna> த. அன்னம்.]

ஓதிமம் எனும் அன்னப்பறவையைக் கொடியின் அடையாளமாய்க் கொண்டவன்.

அன்னசத்திரம் *annaśattiram,* பெ.(n.) உணவுயிடுஞ்சாலை; choultry where cooked rice is distributed gratuitously. *"அன்ன சத்திரங்கட்டி" (குற்றா. குற. 90, 1).*

[Skt. anna+śatra > த. அன்னசத்திரம்.]

அன்னசலம் *annaśalam,* பெ.(n.) 1. கஞ்சி; water extracted from boiled rice. 2. சோற்றுநீர் (நீராகாரம்); water extracted from cold rice.

[Skt. anna > த. அன்னம்.]

த. சலம்→Skt.ஜலம்.

அன்னசாரம் *annaśāram,* பெ.(n.) **அன்னசாறம்** பார்க்க; see *annaśāṟam.*

[Skt. anna+sāra> த. அன்னசாரம்.]

அன்னசாறம் *annaśāṟam,* பெ.(n.) கஞ்சி; rice gurel.

[அன்னம் + சாறம்.]

[Skt. anna> த. அன்னம்.]

சாறு → சாறம்.

அன்னசிராத்தம் *annaśirāttam,* பெ.(n.) பாகம் பண்ணிய உணவு கொண்டு செய்யும் இறந்தநாட்கடன்; offering of cooked articles of food to *Brāhmans* in honour of the menes, dist. fr. *ஆமசிராத்தம்* and *இரணிய சிராத்தம்.*

[Skt.anna+śirāttam > த. அன்னசிராத்தம்.]

அன்னத்துரோகம் *aṉṉa-t-turōgam,* பெ.(n.) உண்டவீட்டுக்கு இரண்டகம் பண்ணுகை; treachery to the house by one where one has been fed.

[Skt.anna+turōkam>த.அன்னத் துரோகம்.]

அன்னதானக்குறுவை *aṉṉadāṉa-k-kuṟuvai,* பெ.(n.) மூன்று மாதத்தில் விளையும் நெல்வகை; a kind of paddy matures in three months.

[அன்னம் + தானம் + குறுவை]

[Skt. anna> த. அன்னம்.]

அன்னதானச்சம்பா *aṉṉadāṉa-c-cambā,* பெ.(n.) சம்பா நெல்வகை (ஏரெழு. உரை); variety of sampa paddy.

[அன்ன(ம்) + தானம் + சம்பா]

[Skt. anna> த. அன்னம்.]

அன்னதானம்[1] *aṉṉadāṉam,* பெ.(n.) உணவளிக்கை; giving away food in charity. *"அன்னதான மகிலநற் றானங்கள்" (கம்பரா. பாயி.).*

த.வ. ஊண்கொடை.

[அன்னம்+தானம்.]

[Skt. anna> த. அன்னம்.]

அன்னதானம்[2] *aṉṉadāṉam,* பெ.(n.) மூன்று மாதத்தில் விளையும் நெல் வகை (M.M.); kind of paddy. harvertel within 3 months.

[அன்னம் + தானம்.]

[Skt. anna> த. அன்னம்.]

அன்னதீபம் *aṉṉadīpam,* பெ.(n.) கோயில் விளக்கு வகை (பரத. ஒழிபி. 41); kind of temple lamp having the shape of a swan. *"swan shaper temple lamp"*

[அன்னம் + தீபம்.]

[Skt. hamsa> த. அன்னம்.]

ஓதிம (அன்னப்பறவை) வடிவிலமைந்துள்ள விளக்கு.



அன்னப்பால் *aṉṉa-p-pāl,* பெ.(n.) அரிசி கொதிக்கும் போது எடுக்குங் கஞ்சி; water strained from boiling rice, used as a very mild diet in sickness.

[அன்னம் + பால்.]

[Skt. anna>த. அன்னம்.]

அன்னபானம் *aṉṉapāṉam,* பெ.(n.) சோறும் நீரும்; food and drink. *"அபேக்ஷிதம் அன்னபானாதிகள்" (அஷ்டாதச. முமுக்ஷு. 1, 38).*

[Skt. anna+pāṉam>த.அன்னபானம்.]

அன்னபிச்சை *aṉṉa-piccai,* பெ.(n.) சோறாக வாங்கும் இரப்பு (மீனாட். சரித். i, 19); begging of boiled rice.

த.வ. ஊணிரப்பு.

[Skt. anna-bhiksa> த. அன்னபிச்சை.]

அன்னபேதி *aṉṉapēdi,* பெ.(n.) மருந்து சரக்குவகை (பதார்த்த. 1116); green vitriol, ferri sulphas, so called as it liquefies boiled rice.

[Skt. anna-bhēdin > த. அன்னபேதி.]

அன்னபோதம் *aṉṉa-pōdam,* இதளியம் (சு.வை.ர.536); mercury.

அன்னம் *aṉṉam,* பெ.(n.) சோறு; food, victuals, esp. boiled rice.

[Skt. anna > த. அன்னம்.]

அன்னம்பிடி–த்தல் *aṉṉampiḍi-,* 4 செ.கு.வி.(v.i.) நெல்மணி பால்பற்றுதல் (கொ.வ.); to be in the milk, as of grains of paddy.

த.வ. பால் பிடித்தல்.

[அன்னம்+பிடி–,]

[Skt. anna > த. அன்னம்.]

அன்னரசம் *aṉṉarašam,* பெ.(n.) உணவின் ஊட்டம்; essence of food, nutriment.

[Skt. anna+rašam>த.அன்னரசம்.]

அன்னவம் *aṉṉavam,* பெ.(n.) கடல் (சூடா.); sea.

[Skt. arṉava > த. அன்னவம்.]

அன்னவூறல் *aṉṉa-v-ūṟal,* பெ.(n.) வடிகஞ்சி (வின்.); gruel congee, water in which rice has been boiled.

[அன்னம்+ஊறல்.]

[Skt. anna> த. அன்னம்.]

அன்னவெட்டி *aṉṉaveṭṭi,* பெ.(n.) சோறு பரிமாறுவதற்குரிய கரண்டி (கொ.வ.); a spoon type vessel for serving rice.

த.வ. சோற்றுக்கரண்டி, கைகரண்டி.

[அன்னம் + வெட்டி.]

[Skt. anna> த. அன்னம்.]



அன்னாசி *aṉṉāši,* பெ.(n.) செந்தாழை என்னும் பழச்செடி; pine-apple, native of Maxico and Panama.

[E. Anisi > த. அன்னாசி.]

[Port. ananas > த. அன்னாசி.]

[Braz. nanas > த. அன்னாசி.]

அன்னாபிடேகம் *aṉṉāpiḍēgam,* பெ.(n.) கடவுளுக்குச் சோற்றால் செய்யும் திருமுழுக்கு; cermony of pouring boiled rice over an idol in a temple.

[Skt.anna+abhi-ṣēka>த.அன்னாபிடேகம்.]

அன்னியத்தன் *aṉṉiyattaṉ,* பெ.(n.) 1. புறம்பானவன்; one who is outside a particular community or society. 2. அறிமுகமில்லாதவன்; stranger.

[Skt. anya+stha > த. அன்னியத்தன்.]

அன்னியம் *aṉṉiyam,* பெ.(n.) 1. வேறாகை (சி.போ.7,1,1); being separate. 2. வேறானது; that which is different. 3. பிற நாட்டுள்ளது (வின்.); that which is foreign, alien.

[Skt. anya > த. அன்னியம்.]

அன்னியன் *aṉṉiyaṉ,* பெ.(n.) 1. புறம்பேயுள்ளான்; stranger, alien, foreigner. 2. பிறன் (உத்தரரா. இலவண. 15); other than oneself.

த.வ. அயலவன், உறவிலான்.

[Skt. anya > த. அன்னியன்.]

அன்னியாயம் *aṉṉiyāyam,* பெ.(n.) **அநியாயம்** பார்க்க; see *aniyāyam.*

[Skt. a-nyāya > த.அன்னியாயம் (கொ.வ.).]

அன்னியோன்னியம் *aṉṉiyōṉṉiyam,* பெ.(n.) ஒற்றுமை; mutuality, reciprocity, union, fellowship, initimacy.

மறுவ. ஒன்றிப்பு.

[Skt. anyōnya > த. அன்னியோன்னியம்.]

அனகம் *aṉagam,* பெ.(n.) கரிசு (பாவம)ற்றது; குற்றமற்றது; sinless, pure. *"அனகமா நெறிபட ரடிகள்" (கம்பரா. சடாயுவுயிர். 39).*

[Skt. an-agha > த. அனகம்.]

அனகன் *aṉagaṉ,* பெ.(n.) 1. கடவுள் (கந்தபு. தெய்வ. 208); God, as the sinless one, Brahmāṉ, Šivaṉ, Arhat. 2. அழகுள்ளவன் (கம்பரா. நீர்விளை. 1); handsome man.

[Skt. an-agha > த. அனகன்.]

அனசனம் *aṉašaṉam,* பெ.(n.) (சமணம்) சமணரின் உண்ணாநோன்பு; ceremony of fasting, preliminary to giving up one's life. *"அண்ண லனசனத் தவமமர்ந்தான்" (யசோதர. 1, 20).*

[Skt. an-ašana > த. அனசனம்.]

அனசனவிரதம் *aṉašaṉaviradam,* பெ.(n.) **அனசனம்** பார்க்க; see *aṉašaṉam.*

[Skt. an-asana+ விரதம் > த. அனசன விரதம்.]

அனத்தம் *aṉattam,* பெ.(n.) 1. பயனற்றது; that which is worthless, useless. *"அனத்தமான வுள்ளந்தான்" (ஞானவா. உபசாந். 11).* 2. பொல்லாங்கு; evil, calamity. *"அனத்தக் கடலு ளழுந்தி" (திவ். பெரியாழ். 5,3,7).*

[Skt. an-artha > த.அனத்தம்.]

அனந்தசயனம் *aṉandašayaṉam,* பெ.(n.) 1. திருமாலின் பாம்புப் படுக்கை; couch of *Tirumāl* consisting of the coils of *ādišēṣaṉ.* 2. திருவனந்தபுரம்; *Trivandrum,* as the seat of the shrine wherein *Tirumāl* is represented as reclining on the serpent *ādišēṣaṉ.*

த.வ. அரவத்துயில்.

[Skt. an-anta+sayana > த. அனந்தசயனம்.]

அனந்தசயனன் *aṉanda-šayaṉaṉ,* பெ.(n.) திருமால் (திவ். பெரியாழ். 1,7,2); Tirumāl, as reclining on *ādišēṣaṉ.*

த.வ. அரவத்துயிலோன், பாம்பணையான்.

[Skt. an-anta+sayana>த. அனந்தசயனன்.]

அனந்தசுகம் *aṉandašugam,* பெ.(n.) கடையிலாவின்பம் (சீவக. 2846, உரை); limitless bliss.

[Skt. an-anta+sukha > த. அனந்தசுகம்.]

அனந்தஞானம் *aṉanda-ñāṉam,* பெ.(n.) கடையிலாவறிவு (சீவக. 2846, உரை); limitless knowledge.

[Skt. an-anta+ñāṉa> த. அனந்தஞானம்.]

அனந்தஞானி *aṉanda-ñāṉi,* பெ.(n.) அருகன் (சூடா.); Arhat, as all-knowing.

[Skt. an-anta+ñāṉi> த. அனந்தஞானி.]

அனந்ததரிசனம் *aṉanda-darišaṉam,* பெ.(n.) கடையிலாக் காட்சி (சீவக. 2846, உரை); limitless vision.

[Skt. an-anta + daršana > த. அனந்த தரிசனம்.]

அனந்தம் *aṉandam,* பெ.(n.) 1. அளவின்மை (திவா.); limitlessness, infinity. 2. அளவற்றது (பிங்.); that which is boundless. 3. வானம் (சூடா.); sky, atmosphere. 4. ஒரு பேரெண் (வின்.); a hundred- thousand quadrillions.

[Skt. an-anta > த. அனந்தம்.]

அனந்தர் *aṉandar,* பெ.(n.) (தீர்த்தங்காரர்) அருக பதவியை அடைந்த சமணருள் ஒருவர் (திருக்கலம். காப்பு. உரை); Arhat, one of the twenty-four tirttaṅkarar, q.v.

[Skt. Ananta > த. அனந்தர்.]

அனந்தலோசனன் *aṉandalōšaṉaṉ,* பெ.(n.) புத்தன் (திவா.); Buddha, as having a limitless number of eyes.

[Skt. an-anta+lōcana > த. அனந்த லோசனன்.]

அனந்தன் *aṉandaṉ,* பெ.(n.) 1. கடவுள்; God, as the endless one. 2. திருமால்; Tirumāl. 3. சிவன்; *Sivaṉ.* 4. நான்முகன்; Brahmāṉ. 5. (அருகன்) சமணன்; Arhat. 6. (அஷ்டமநாகம்) எண் வகை பாம்புகளு ளொன்று (பிங்.); a serpent which supports the earth in the South-East, one of *aṣḍa-mā-nāgam,* q.v. 7. திருமாலின் பாம்பணை (ஆதிசேடன்) (திவ். பெரியாழ். 5, 4, 8); *Adišēšaṉ,* couch of Tirumāl. 8. பதஞ்சலி (கோயிற்பு. நடரா. 37.); the grammarian *patañjali.* 9. ஒருவகைப் பிறவி நஞ்சு (மூ.அ.); a prepared arsenic.

அனந்தாழ்வான் *anandāḻvān,* பெ.(n.) ஆதிசேடன்; the serpent *ādisēṣan.*

[அனந்தன் + ஆழ்வான்.]

*[**Skt.** an-anta > த. அனந்தன்.]*

அனந்தை[1] *anandai,* பெ.(n.) 1. சிறுகாஞ்சொறி (நாநார்த்த.); small climbing nettle. 2. நன்னாரி (நாநார்த்த.); Indian sarasaparilla. 3. குப்பைமேனி (நாநார்த்த.); Indian acalpha. 4. அறுகு (நாநார்த்த); harialli grass. 5. கடுமரம் (நாநார்த்த.); chebulic myrobalan. 6. சீந்தில் (நாநார்த்த.); gulancha. 7. செங்காந்தள் (நாநார்த்த.); red species of malabar glory-lily. 8. பதினாறு கலையுளொன்றான ஓகநிலை (தத்துவப். 142); (Saivam) a mystic centre in the body, one of *śōdśa-kalai,* q.v.

*[**Skt.** an-antā > த. அனந்தை.]*

அனந்தை[2] *anandai,* பெ.(n.) உலகம்; world.

த.வ. மண்ணகம்.

*[**Skt.** an-antā > த. அனந்தை.]*

அனபை *anabai,* பெ.(n.) ஒரு வேள்வி (விதான. சாதக. 23); configuration of the planets in which the favourable planets occupy the 12th place from the moon.

*[**Skt.** anaphā > த. அனபை.]*

Gr. anaphā.

அனயம் *anayam,* பெ.(n.) 1. தீவினை; evil deed. 2. கடுந்தொல்லை; danger. 3. தீயது; inauspiciousness. 4. துன்பம்; misery.

த.வ. மங்கலமின்மை.

*[**Skt.** a-naya > த. அனயம்.]*

அனர்த்தம் *anarttam,* பெ.(n.) 1. பொருளற்றது (திவா.); that which is without meaning, nonsense. 2. பயனற்றது; worthless, useless. *"அருந்தங்க ளனர்த்த மாகும்" (ஞானவா. வீமபா. 5).* 3. துன்பம்; calamity, evil. *"பிறவியான வனர்த்தத்தில்" (ஞானவா. வைராக். 28).* 4. குழப்பம்; muddle.

*[**Skt.** an-artha > த. அனர்த்தம்.]*

அனரசம் *anarasam,* பெ.(n.) பணியார வகை (இந்துபாக. 289); a sweet confection made of rice flour, ghee, etc.

*[**U.** anarsā > த. அனரசம்.]*

அனன்னியம் *ananniyam,* பெ.(n.) வேறன்மை; identical thing. *"கடத்தொடு மட் கனன்னியம்" (வேதா. சூ. 127).*

*[**Skt.** an-anya > த. அனன்னியம்.]*

அனன்னியார்கம் *ananniyārgam,* பெ.(n.) வேறொருவருக்கு உரிமையாகாமலிருப்பது (திவ். திருவாய். 6,1,1, பன்னீ.); that on which none else has a claim.

*[**Skt.** an-anya+arha > த. அனன்னியார்கம்.]*

அனாகுலன் *anāgulan,* பெ.(n.) கவலையற்றவன்; one who is collected, self-possessed, not perplexed or confused. *"அறிவனனாகுலன்" (ஞானா. 10).*

*[**Skt.** anākulon > த. அனாகுலன்.]*

அனாசி *anāsi,* பெ.(n.) (அன்னாசி) செந்தாழைப் பழச்செடி (மூ.அ.); pine-apple.

*[**Port.** ananas > த. அனாசி.]*



அனாதி *anādi,* பெ.(n.) 1. தொடக்கமில்லாதது; that which has no beginning. 2. கடவுள்; god, who has no beginning. 3. சிவன் (பிங்.); Śivan. *"அனாதியேக தத்துவ சொரூபத்தை" (தாயு. பரசிவ. 3).*

த.வ. ஏதுமிலி.

*[**Skt.** an-ādi > த. அனாதி.]*

அனாதிகாலம் *anādikālam,* பெ.(n.) மிகப் பழங்காலம், நெடுங்காலம்; ancient, time immemorial. *'உலகம் அனாதி காலமாகவே இருந்து வருகிறது'.*

[அனாதி+ காலம்]

[Skt. an-ādi > த. அனாதி.]

அனாதித்தரிசு *anādi-t-tarišu,* பெ.(n.) நெடுங்காலம் விளைவிக்காத நிலம்; immemorial waste land.

[அனாதி+தரிசு.]

[Skt. an-ādi > த. அனாதி.]

அனாதித்திட்டு *anādi-t-tiṭṭu,* பெ.(n.) நெடுங்காலம் பயிரிடப்படாத நிலம் (R.T.); immemorial waste-land.

[அனாதி+திட்டு.]

[Skt. an-ādi> த. அனாதி.]

அனாதிபாழ் *anādipāḷ,* பெ.(n.) நெடுங்காலம் பாழடைந்துள்ள இடம்; place in ruins from time immemorial. *"ஊற்றுக்கட்டுக் கோட்டத்து அனாதிபாழாய்க் கிடந்த ஊர்" (S.I.I.iv. 99).*

த.வ. தொன்பாழிடம்.

[அனாதி + பாழ்.]

[Skt. an-ādi > த. அனாதி.]

அனாமத்து *anāmattu,* பெ.(n.) தனிமையான; separate, not belonging to any specified item.

த.வ. தனிநிலை, கேட்பாரற்றது.

[U. amānat > த. அனாமத்து.]

அனாமத்துச்சிட்டா *anāmattu-c-ciṭṭā,* பெ.(n.) பொதுச் சிட்டை (குறிப்பேடு); miscellaneous account note.

த.வ. பொதுச்சிட்டை.

[U. amānat+ciṭṭā > த. அனாமத்துச்சிட்டா.]

சிட்டை–சிறுகுறிப்பேடு.

அனாமயம் *anāmayam,* பெ.(n.) நோயின்மை; health, freedom from disease. *"அசட மனாமயம்" (கைவல்ய சந்தேக. 137.).*

[Skt. an-āmaya > த. அனாமயம்.]

அனாமயன் *anāmayan,* பெ.(n.) 1. நோயற்றவன்; one not subject to disease, as God. *"நாதனனாமயன்" (ஞானா. 48).* 2. அருகன் (சூடா.); Arhat.

[Skt. an-āmaya > த. அனாமயன்.]

அனாயம் *anāyam,* பெ.(n.) 1. முறைகேடு; injustice. 2. வீண்; unprofitableness. *"ஆவி யனாயமே யுகுத்தெனைய" (கம்பரா. கும்ப. 140).*

[Skt. a-nyāya > த. அனாயம்.]

அனாயாசம் *anāyāšam,* பெ.(n.) வருத்தமின்மை; absence of pain.

[Skt. an-āyāsa > த. அனாயாசம்.]

அனாவசியம் *anāvašiyam,* பெ.(n.) தேவையற்றது; unneccessary.

த.வ. தேவையின்மை.

[Skt. an-ā-vašya > த. அனாவசியம்.]

அனிச்சை[1] *aniccai,* பெ.(n.) விருப்பின்மை (வேதா. சூ. 175); absence of desire.

த.வ. ஒவ்வாமை.

[Skt. an-icchā > த. அனிச்சை.]

அனிச்சை[2] *aniccai,* பெ.(n.) பழக்கத்தின் காரணமாக அல்லது தன்னை அறியாமல் ஒரு செயலைச் செய்கிற தன்மை; that which is involuntary. *"கண் இமைப்பது ஒரு அனிச்சைச் செயல்".*

[Skt. an-icchā > த. அனிச்சை.]

அனிட்டம் *aniṭṭam,* பெ.(n.) வெறுப்பு, வெறுப்பானது; that which is indesirable, unpleasent. *"அனிட்டநின் றகற்றி யிட்டநன் குதவி" (சிவப்பிரபந். நெடுங்கழி. 4).*

[Skt. an-iṣṭa > அனிஷ்டம் > த. அனிட்டம்.]

அனிருதம் *anirudam,* பெ.(n.) பொய்; false hood.

[Skt. an-ṛta > த. அனிருதம்.]

அனீகினி *anīkini,* பெ.(n.) படை; army. *"அனீகினித் தூளி" (பாரத. வாரணா. 76.).*

[Skt. anīkinī > த. அனீகினி]

அனிசு *aṉīšu*, பெ.(n.) 1. பெருஞ்சீரகம்; anise (w.). 2. நாண்மீன் (நட்சத்திர) சீரகம் (மூ.அ.); star-anise.

[Fr. anis > த. அனிசு.]

அனு[1] *aṉu*, இடை.(prep.) 'பின்' எனப் பொருள் தரும் வடமொழி முன்னடைகளுலொன்று; a sanskrit prefix meaning 'after'.

[Skt. hanu > த. அனு.]

அனு[2] *aṉu*, பெ.(n.) தாடை; jaw. *"நின்னனு வற்றிடலா லனுமனெனும் பேர்பெற்று" (உத்தரரா. அனுமப். 34).*

[Skt. hanu > த. அனு.]

அனு[3] *aṉu*, பெ.(n.) 1. மஞ்சள் (நாநார்த்த.); turmeric. 2. கருவி (நாநார்த்த.); weapon. 3. நோய் (நாநார்த்த.); disease. 4. இறப்பு (நாநார்த்த.); death. 5. நாகணம் என்னும் மணந் தரும் மரம் (நாநார்த்த.); a tree yielding an aromatic substance. 6. முகம் (பொதி. நி.); face.

[Skt. hanu > த. அனு.]

அனுக்கிரகம் *aṉu-k-kiragam*, பெ.(n.) 1. அருள்; grace, mercy. 2. (சிவனியம்) கடவுளின் ஐந்தொழில்களிலொன்று (பஞ்ச கிருத்தியம்); (šaivam) function of showing grace, designed to liberate the souls from bondage, one of *pañja-kiruttiyam*, q.v.

த.வ. ஏற்றருளல்.

[Skt. anu-graha > த. அனுக்கிரகம்.]

அனுக்கிரகி-த்தல் *aṉukkiragi-*, 4 செ.குன்றாவி. (v.t.) அருள் செய்தல்; to show favour to, bestow grace upon, have mercy on.

[Skt. anu-graha > த. அனுக்கிரகி-,]

அனுக்கிரி-த்தல் *aṉukkiri-*, 4 செ. குன்றாவி. (v.t.) அருள் செய்தல்; to bless, to show favour to. *"வேங்கட வராட்கொண் டனுக்கிரிக்க" (தெய்வச். விறலிவிடு. 29).*

[Skt. anu-grī > த. அனுக்கிரி-,]

அனுகதம் *aṉugadam*, பெ.(n.) தொடர்ந்து வருவது; that which follows or comes after. *"அனுகதமா யப்பொழுதே............ பார்வைகள் வந்தடையும்" (ஞானவா. தாசூர். 21).*

[Skt. anu-gata > த. அனுகதம்.]

அனுகம்பம் *aṉugambam*, பெ.(n.) இரக்கம்; sympathy, compassion. *"அனுகம்பம் ...... உடையவரே சிறந்தார்" (சிவதரு. பல. 39).*

[Skt. anu-kampā > த. அனுகம்பம்.]

அனுகற்பம் *aṉu-gaṟpam*, பெ.(n.) மந்தையில் இருந்து எடுத்த ஆவின் (பசுவின்) சாணத்தைக் கொண்டு முறைப்படி உண்டாக்கிய திருநீறு; generally a less stringent alternative to a rule, here applied to the sacred ashes prepared according to rule from cowdung picked up in pasture lands one of three viputi. *"இனியனு கற்பந்தனையுங் கூறுவம்" (சைவச. பொது. 179).*

[Skt. anu-kalpa > த. அனுகற்பம்.]

அனுகாரம் *aṉugāram*, பெ.(n.) ஒன்றைப் போலச் செய்கை (திவ். திருப்பா. வியா. பிர.); imitation.

[Skt. anu-kāra > த. அனுகாரம்.]

அனுகூலம் *aṉukūlam*, பெ.(n.) 1. நன்மை; good, blessing. 2. உதவி; friendly assistance, kindness. 3. (காரிய சித்தி) வினை கைகூடல்; success, prosperity.

த.வ. கைகூடல்.

[Skt. anu-kūla > த. அனுகூலம்.]

அனுகூலன் *aṉukūlaṉ*, பெ.(n.) இதமாக நடப்பவன் (திவ். பெரியாழ். 4,4,2); one who is friendly or helpful.

[Skt. anu-kūla > த. அனுகூலன்.]

அனுச்சை *aṉuccai*, பெ.(n.) அனுமதி; permission. *"அரசனு மனுச்சை செய்ய" (திருவிளை. சமணரை. 10).*

த.வ. ஒப்புகை.

[Skt. anu-jhā > த. அனுஞ்ஞை → அனுச்சை.]

அனுசம் *aṉušam*, பெ.(n.) (பனை) ஒரு நாண் மீன்; the 17th naksatra, part of scorpio.

[Skt. anu-rādha > த. அனுசம்.]

அனுசயம்[1] *aṉušayam*, பெ.(n.) செய்ததற்கு வருந்தும் தன்மை; repentance. *"அனுசயப்பட்டது விதுவென்னாதே" (தேவா. 784 : 6).*

த.வ. கழிவிரக்கம்.

[Skt. anu-šaya > த. அனுசயம்.]

அனுசயம்[2] *aṉušayam*, பெ.(n.) 1. வழக்காடுகை; contest, objection. 2. பெரும்பகை; feud. 3. பின்கூறு, தொடர்பகுதி; sequel.

[Skt. anu-šaya > த. அனுசயம்.]

அனுசரணம் *aṉušaraṇam*, பெ.(n.) சார்ந்தொழுகல் (கோயிலொ. 13); following, going after.

[Skt. anu-sarana > த. அனுசரணம்.]

அனுசரணை *aṉušaraṇai*, பெ.(n.) 1. சார்ந்தொழுகுகை; following, going after. 2. உதவி (கொ.வ.); support, help.

[Skt. anu-šarana > த. அனுசரணை.]

அனுசரி–த்தல் *aṉušari-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. பின்பற்றுதல்; to follow, practice. 2. உடன்படுதல் (ஆமோதித்தல்); to support, second. 3. வழிபடுதல் (வின்.); to worship, reverence. 4. கொண்டாடுதல் (வின்.); to celebrate, keep, as a day, observe, as a rite.

[Skt. anu-šara > த. அனுசரி–,]

அனுசரிப்பு *aṉušarippu*, பெ.(n.) 1. பின்பற்றுகை; following, observing. 2. இணக்கம்; conformity.

[Skt. anu-šara > த. அனுசரிப்பு.]

அனுசன் *aṉušaṉ*, பெ.(n.) தம்பி (பிங்.); younger brother.

[Skt. anu-ja > த. அனுசன்.]

அனுசாரி[1] *aṉušāri*, பெ.(n.) பின்பற்றுவோன்; adherent, follower. *"நேசானுசாரியாய் விவகரிப்பேன்" (தாயு. பரிபூர. 1).*

[Skt. anu-sārin > த. அனுசாரி.]

அனுசாரி[2] *aṉušāri*, பெ.(n.) மாணாக்கன்; disciple.

[Skt. anu-sārin > த. அனுசாரி.]

அனுசிதம் *aṉušidam*, பெ.(n.) 1. தகாதது; that which is unfit, improper. *"யானை யனுசிதமென்றதனைச் சிதைக்க" (பெரியபு. கோச்செங். 4).* 2. பொய் (திவா.); falsehood. 3. கக்கல்; வாயாலெடுப்பு செய்கை (உரி. நிக.); vomiting.

[Skt. an-ucita > த. அனுசிதம்.]

அனுசுருதி *aṉu-curuti*, பெ.(n.) ஒத்த சுருதி (சீவக.657, உரை); (Mus.) note assonant and harmonious with the curuti.

த.வ. ஒத்தொலி.

[Skt. anu-sruti > த. அனுசுருதி.]

அனுசூதன் *aṉušūdaṉ*, பெ.(n.) விடாது தொடர்ந்திருப்பவன் (வேதா.சூ.99); one whose connection is regular and uninterrupted.

[Skt. anu-syūta > த. அனுசூதன்.]

அனுசென்மம் *aṉušeṉmam*, பெ.(n.) (கணியம்) ஒருவனின் பிறந்த நாண்மீனிற்குப் பத்தாவது நாண்மீன் (இலக். வி. பக். 796); (Astrol.) the tenth naksatra from one's natal star.

[Skt. anu-janma > த. அனுசென்மம்.]

அனுசை *aṉušai*, பெ.(n.) தங்கை; younger sister.

[Skt. anu-jā > த. அனுசை.]

அனுசைவர் *aṉušaivar*, பெ.(n.) (சிவதீக்கை) சிவ குருவம் பெற்ற சத்திரியன்; நால்வகை வருணத்துள் இரண்டாம் வருணத்தினரான வைசியர் (சைவச. பொது. 435, உரை); *šaiva* initiates among ksatryas or *vaišyas*.

[Skt. anu-šaiva > த. அனுசைவர்.]

அனுஞ்ஞாலங்காரம் *anuññālaṅgāram,* பெ.(n.) வேண்டலணி (அணியி.71); figure of speach in which an undesirable thing is counted as ultimately leading to something desirable.

[Skt. an-jñā > த. அனுஞ்ஞாலங்காரம்.]

அனுட்டணம் *anuṭṭaṇam,* பெ.(n.) 1. வெப்பமின்மை (சங். அக.); coolness. 2. சோம்பல் (யாழ்.அக.); idleness.

[Skt. an-uṣṇa > த. அனுட்டணம்]

அனுட்டானம் *anuṭṭāṇam,* பெ.(n.) 1. (சந்தியாவந்தனம்) காலை, உச்சி, மாலை வழிபாடு; observance of religious rites. *"வயங்கனுட் டானம் பண்ணி" (மச்சபு. வீம. 21).* 2. வழக்கம்; established custom.

[Skt. anu-ṣṭhāna > த. அனுட்டானம்]

அனுட்டானி-த்தல் *anuṭṭāṇi-,* 4 செ. குன்றாவி.(v.t.) வழிபடுதல்; to practice. *"சொல்லிய தனுட்டானித்து" (விவேக. சூடா. 37).*

[Skt. anuṣṭhāna > த. அனுட்டானி-,]

அனுட்டி-த்தல் *anuṭṭi-,* 4 செ. குன்றாவி.(v.t.) பின்பற்றுதல்; to practice, as religious rites. *"மனிதரு மனுட்டித்து.... வீடடைந்தார்" (திருவிளை. இந்திரன் முடி. 29).*

[Skt. anu-ṣṭhā > த. அனுட்டி-,]

அனுதபி-த்தல் *anudabi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கழிந்ததற்கிரங்குதல்; to repent. 2. பிறர் இன்பதுன்பங்களில் அவரோடொன்று தல் (கிறித்.); to sympathise.

[Skt. anu-tāpa > த. அனுதபி-]

அனுதாத்தம் *anudāttam,* பெ.(n.) படுத்தலோசை; grave accent, esp. vedic. *"உதாத்தமோசை யனுதாத்த சொரிதம்" (திருவிளை. தடாதகை. 8).*

[Skt. an-udātta > த. அனுதாத்தம்.]

அனுதாபம் *anudābam,* பெ.(n.) 1. கழிவிரக்கம்; repentance, remorse. 2. இரக்கம்; pity. 3. பிறர் இன்ப துன்பங்களில் அவரோ டொன்றுகை (chr.); sympathy.

த.வ. அருளிரக்கம்.

[Skt. anu-tāpa > த. அனுதாபம்.]

அனுதாபி *anudābi,* பெ.(n.) ஓர் இயக்கத்தில் உறுப்பினராக இல்லாமல் (ஆதரவு) முன்னுதவி தருபவர்; பற்றாளர்; sympathizer (mostly of a political party).

த.வ. ஆதரவாளர்.

அனுதினம் *anu-diṇam,* பெ.(n.) நாடோறும் (திருவிளை. விடையில. 4.); every day, daily.

[Skt. anu-dina > த. அனுதினம்.]

அனுநாசிகம் *anunāśigam,* பெ.(n.) மெல்லெழுத்து (பி.வி. 5); nasal.

[Skt. anu-nāsika > த. அனுநாசிகம்.]

அனுப்பிரவேசம் *anu-p-piravēśam,* பெ.(n.) தொடர்ந்து புகுகை; entering after another.

[Skt. anu-pravēśa > த. அனுப்பிரவேசம்.]

அனுப்பிராசம் *anu-p-pirāśam,* பெ.(n.) வழியெதுகை (இலக். வி. 748. உரை); repetition of rhyming syllables.

[Skt. anu-prasā > த. அனுப்பிராசம்.]

அனுபந்தம் *anubandam,* பெ.(n.) 1. உறவின் முறை; relation, connection. 2. நூலின்பின் சேர்க்கப்படும் பிற்சேர்க்கை (இக்.வ.); appendix, supplement.

[Skt. anu-bandha > த. அனுபந்தம்.]

அனுபந்தன் *anubandaṉ,* பெ.(n.) தீமைக்கு உடன்படுபவன்; accomplice, one who approves a sinful act. *"காயுமவர்க் கனுபந்தருமா யுள்ளளித்தீரே" (சிவதரு. சுவர்க். 195).*

[Skt. anu-bandha > த. அனுபந்தன்.]

அனுபமன் *anubamaṉ,* பெ.(n.) ஒப்பில்லாதவன்; one who is incomparable. *"அனுபமன் செழியன்" (திருவாலவா. 13, 15.).*

த.வ. இணையிலி.

[Skt. an-upama > த. அனுபமன்.]

அனுபமை *aṉubamai*, பெ.(n.) 1. ஒப்பில்லாதது; that which is incomparable, matchless. 2. தென்மேற்றிசைப்பெண் யானை (சது.); name of the female elephant of the south-west, mate of kumutam.

[Skt. an-upamā > த. அனுபமை.]

அனுபல்லவி *aṉuballavi*, பெ.(n.) இசைப்பாடலில் இரண்டாம் உறுப்பான உடனெடுப்பு; second section of the South Indian melody known as kirthanam.

த.வ. இடைநிலை.

[Skt. anu+pallavi > த. அனுபல்லவி.]

இசைப்பாடலில் எடுப்பு, உடனெடுப்பு, தொடுப்பு என மூன்று கூறுகளாகப் பகுத்துள்ளனர். அவற்றை வடமொழியில் முறையே பல்லவி, அனுபல்லவி, சரணம் என்பர்.

அனுபலத்தி *aṉubalatti*, பெ.(n.) ஒன்றன் இன்மையால் மற்றொன்றின் இன்மையை அறியும் ஏது (சி.சி.அளவை. 10, மறைஞா.); inference of the absence of one thing from the absence of something else.

[Skt. an-upalabdhi > த. அனுபலத்தி.]

அனுபலத்தியேது *aṉubalatti-y-ēdu*, பெ.(n.) **அனுபலத்தி** பார்க்க; see *aṉubalatti*.

[Skt. an-upalab-dhi + hetu > த. அனுபலத்தியேது.]

அனுபவக்காட்சி *aṉubava-k-kāṭši*, பெ.(n.) (பிரத்தியட்ச ஞானம்) காட்சியறிவு (வின்.); perception by actual experience.

[அனுபவம்+காட்சி.]

[Skt. anu-bhava >த. அனுபவம்.]

அனுபவசாலி *aṉubavašāli*, பெ.(n.) பட்டறிவு மிக்கவன்; person of large experience.

[அனுபவம் + சாலி]

[Skt. anubhava > த. அனுபவம்.]

த. சாலி. சாலுதல் = நிறைதல். சாலி = நிறைந்தவன், மிகுந்தவன்.

அனுபவம் *aṉupavam*, பெ.(n.) 1. பட்டறிவு; experience. *"இமையோர் மெய்த்தனுபவ முதவுவர்" (இரகு. திக்குவி. 86).* 2. துய்ப்பு; enjoyment. *"அந்த வீடு அவன் அனுபவத்தில் இருக்கிறது".*

த.வ. வினையறிவு.

[Skt. anu-bhava > த. அனுபவம்.]

அனுபவி[1]-த்தல் *aṉubavi-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. துய்த்தல்; to experience good or evil. *"இச்சாப மனுபவித்தல்லது விடாதல்" (காஞ்சிப்பு. அரிசா. 15).* 2. உரிமையாகக் கையாளுதல்; to enjoy possession of. *"சொத்தை அவன் அனுபவிக்கிறான்".* 3. இன்பநுகர்தல்; to enjoy happiness.

[Skt. anu-bhava > த. அனுபவி-,]

அனுபவி[2] *aṉubavi*, பெ.(n.) 1. இன்பமாய் வாழ்பவன்; one who lives a life of enjoyment. 2. ஆன்மஞானி (வேதா. சூ. 14); one who has realised one's self.

[Skt. anu-bhavin > த. அனுபவி.]

அனுபாலனம் *aṉubālaṉam*, பெ.(n.) காப்பு; preservation.

[Skt. anu-pālana > த. அனுபாலனம்.]

அனுபானம் *aṉubāṉam*, பெ.(n.) மருந்து வைக்கும் கலன்; vehicle of medicine.

[Skt. anu-pāna > த. அனுபானம்.]

அனுபூதி *aṉubūti*, பெ.(n.) காட்சியறிவு (வேதா. சூ. 151); perception, apprehension, realisation.

த.வ. பட்டறிவு.

[Skt. anu-bhūti > த. அனுபூதி.]

அனுபோகசாலி *aṉubōgašāli*, பெ.(n.) **அனுபவசாலி** பார்க்க; see *aṉubavasāli*.

[Skt. aṉubhōga> த. அனுபோகசாலி.]

அனுபோகம் *aṉubōgam*, பெ.(n.) 1. துய்ப்பு; enjoyment. *"சிவமாதுடனே யனுபோகமதாய்" (திருப்பு. 518).* 2. பழக்கம்; experience,

practice. 3. கையாட்சி; legal possession. 4. நுகர வேண்டிய தீவினைப்பயன்; that which is fated to be experienced, esp. results of evil deeds. *"அநுபோகம் தொலைந்தால் அவிழ்தம் பலிக்கும்".*

[Skt. anu-bhōga > த. அநுபோகம்.]

அநுபோகி[1]–த்தல் *aṉubōgi-,* 4 செ. குன்றாவி.(v.t.) துய்த்தல்; to enjoy. *"அன்னை தந்தை யிருவருந்தா னநுபோகிக்க" (ஞானவெட்டி. பாயி. 24).*

த.வ. இன்பம் நுகர்தல்.

[Skt. anu-bhōga > த. அநுபோகி–,]

அநுபோகி[2] *aṉubōgi,* பெ.(n.) இன்பநுகர்ச்சி யுடையவன்; one who has experience of the pleasures of life.

[Skt. anu-bhōgin > த. அநுபோகி–,]

அநுமக்கொடியோன் *aṉuma-k-koḍiyōṉ,* பெ.(n.) குரங்குக் கொடியுடைய அருச்சுனன்; *Arjunan,* as having the figure of Hanuman as his flag.

[அநுமன் + கொடியோன்.]

[Skt. hanumān > த. அநுமன்.]

அநுமதம் *aṉumadam,* பெ.(n.) வீணைவகை (பாரத. ஒழிபி. 15); kind of lute.

அநுமந்தன் *aṉumandaṉ,* பெ.(n.) அநுமன் (இராமநா. சுந்தர. 31); nom. pl. of Hanumat, *Hanumāṉ.*

[Skt. hanuman-tān>த. அநுமந்தன்.]

அநுமரணம் *aṉumaraṇam,* பெ.(n.) உடன் இறப்பது; woman who dies with her husband, sati. *"பந்தமுற வனுமரணஞ் செய்த வுருக்குமணி" (நல். பாரத. முத்தியடை. 6).*

த.வ. உடன்கட்டை.

[Skt. anu-maraṇa > த. அநுமரணம்.]

அநுமன் *aṉumaṉ,* பெ.(n.) காற்றின் புதல்வன் (அநுமன்) (உத்தரரா. அநுமப். 34); nom. sing. of Hanumat *Hanumāṉ.*

[Skt. Hanu-mān > த. அநுமன்.]

அநுமான் *aṉumāṉ,* பெ.(n.) காற்றின் புதல்வன் (அநுமன்); *Hanumāṉ,* the monkey god, who greatly aided Rāma in his war with *Rāvaṇa.*

த.வ. திருக்குரக்கன்.

[Skt. Hanu-mān > த. அநுமான்.]

அநுமானப்பிரமானம் *aṉumāṉa-p-piramāṉam,* பெ.(n.) கருதலளவை; inference, as a mode of proof.

[Skt. anu -māna + Pirāmāna > த. அநுமானப்பிரமானம்.]

அநுமானபலன் *aṉumāṉapalaṉ,* பெ.(n.) (நியாயவிசாரணை) முறை ஆய்கையில் ஐயத்தால் கிடைக்கும் நன்மை (C.G.); benefit of the doubt.

[Skt. anu-māna+phala > த. அநுமான பலன்.]

அநுமி–த்தல் *aṉumi-,* 4செ.குன்றாவி.(v.t.) கருதுதல்; to infer. *"தூய மதிரு ரனுமித்துச் சொல்லு மருங்குல்" (பிரபுலிங். பிரபு. 37).*

த.வ. உன்னித்தல்.

[Skt. anu-miti-, > த. அநுமி–,]

அநுமிதி *aṉumidi,* பெ.(n.) கருதலளவையா லுண்டாகும் அறிவு (தருக்கசங். 45); (log.) knowledge obtained by inference.

[Skt. anu-miti > த. அநுமிதி.]

அநுமேயம் *aṉumēyam,* பெ.(n.) கருதலால் (அநுமானத்தால்) அறியத்தக்கது (மணிமே. 27, 26); (log.) that which is inferable.

[Skt. anu-mēya > த. அநுமேயம்.]

அநுயோகம் *aṉuyōgam,* பெ.(n.) தருக்கத்தில் எழுப்பும் வினா (பு.வெ.8, 19, உரை); question in argument.

[Skt. anu-yōga > த. அநுயோகம்.]

அநுராகம் *aṉurāgam,* பெ.(n.) 1. அன்பு (திவ். திருவாய். 8,8,8); attachment, affection, love. 2. காமப்பற்று; lasciviousness. *"அநுராக போக மிகுமாதர்" (பாரத. குரு. 139).*

[Skt. anu-rāga > த. அநுராகம்.]

அனுரூபம் *anurūbam,* பெ.(n.) ஏற்றது; fitness, suitability. *"தோன்றினர் கருமவனு ரூபமாய்" (சூத. சிவ. 11, 14).*

[Skt. anu-rūpa > த. அனுரூபம்.]

அனுலோமன் *anulōman,* பெ.(n.) உயர்குல ஆடவனுக்கு இழிகுலப் பெண்ணிடம் பிறந்தவன்; offspring of parents where the mother is inferior in caste to the father.

[Skt. anu-lōma > த. அனுலோமன்.]

அனுவர்த்தனம் *anuvarttanam,* பெ.(n.) பின்பற்றுதல்; following, compliance.

[Skt. anu-vartana > த. அனுவர்த்தனம்.]

அனுவாகம் *anuvāgam,* பெ.(n.) மறையின் உட்பகுப்பு; a sub-division of the veda.

[Skt. anu-vāka > த. அனுவாகம்.]

அனுவாதம் *anuvādam,* பெ.(n.) முன்னர் பெறப்பட்டதைப் பின்னர் எடுத்துக் கூறுதல் (குறள், 7239, உரை); repeating by way of explanation.

[Skt. anu-vāda > த. அனுவாதம்.]

அனுவிருத்தி *anuvirutti,* பெ.(n.) 1. தொடர்ச்சி (சி.சி.2, 60, சிவாக்.); continuance. 2. கூடவிருக்கை (சூத. எக்கி. பூ. 19, 10); being with, attending.

[Skt. anu-vṛtti > த. அனுவிருத்தி.]

அனேகம்[1] *anēgam,* பெ.(n.) பல; many, not one. *"யானைமீதுவரும் யானையுமனேக மெனவே" (கலிங். அவதா. 57.).*

[Skt. an-ēka > த. அனேகம்.]

அனேகம்[2] *anēgam,* பெ.(n.) காலம்; time.

[Skt. an-ēka > த. அனேகம்.]

அனேகமாய் *anēgam-āy,* வி.எ.(adv.) 1. பெரும்பாலும்; mostly, almost, very nearly. 2. நிகழக்கூடிய; most probably. *'அவர் அனேகமாய் இன்று வருவார்'.*

[Skt. an-ēka > த. அனேகமாய்.]

அனேகாந்திகம் *anēgāndigam,* பெ.(n.) 1. பலவகை; many ways. 2. ஏது போலிகளுள் ஒன்று; a fallacy in reasoning. (log.).

[Skt. an-aikāntika > த. அனேகாந்திகம்.]

அனேகான்மவாதம் *anēgānma-vādam,* பெ.(n.) ஆன்மாக்கள் பல உண்டு எனும் கொள்கை; doctrine which maintains the existence of individual soul.

[Skt. an-ēka + ātma + vāda > த. அனேகான்மவாதம்.]

அனைகாந்திகம் *anaigāndigam,* பெ.(n.) **அனேகாந்திகம்** பார்க்க; see *anēgāndigam.*

[Skt. an-aikāntika > த. அனைகாந்திகம்.]

ஆக்கர்[1] *ākkar,* பெ.(n.) உலாவிக் கொண்டே துணி முதலியவற்றை வணிகம் செய்வோன்; pedlar, hawker.

[E. Hawker > த. ஆக்கர்.]

ஆக்கர்[2] *ākkar,* பெ.(n.) துரப்பணம்; centerbit, tool for boring holes.

[E. Auger > த. ஆக்கர்.]



ஆக்கிரகம் *ākkiragam,* பெ.(n.) 1. விடாப்பிடி; persistence, obstinacy, determination. 2. கடுங்கோபம் (திவ். பெரியாழ். 3, 5, வியா. பிர); great anger, violent, temper, wrath.

[Skt. ā-graha > த. ஆக்கிரகம்.]

ஆக்கிரமணம் *ākkiramanam,* பெ.(n.) வலிந்து கவர்கை; seizing, taking by force.

[Skt. ā-kar-mana > த. ஆக்கிரமணம்.]

ஆக்கிரமி-த்தல் *ākkirami-,* 4 செ.குன்றாவி. (v.t.) வலிந்து கவர்தல்; to seize by violence, take or occupy by force.

[Skt. ā-kram-, > த. ஆக்கிரமி-த்தல்.]

ஆக்கிரமிப்பு *ākkiramippu,* பெ.(n.) வன்கவர்ப்பு; occupy by force.

[Skt. ā-kram, > த. ஆக்கிரமிப்பு.]

ஆக்கிராணம் *ākkirāṇam,* பெ.(n.) 1. முகர்கை; act of smelling. 2. மூக்கு (சூடா.); nose. 3. மூக்கிலிடும் மருந்துப் பொடி; a medicinal snuff intended to dispel humours from the head.

[Skt. ā-ghrāṇa > த. ஆக்கிராணம்.]

ஆக்கிராணி-த்தல் *ākkirāṇi-,* 4 செ. குன்றாவி.(v.t.) முகர்தல்; to smell, snuff up.

[Skt. ā-ghrāṇi > த. ஆக்கிராணி-த்தல்.]

ஆக்கிராந்தம் *ākkirāndam,* பெ.(n.) கைக்கொள்ளப்பட்டது; that which is seized, taken possession of. *"அஞ்ஞானாக் கிராந்தமாயிருக்கிற" (சி.சி.2,9) (சிவாக்.).*

த.வ. கையகப்பேறு.

[Skt. ā-krānta > த. ஆக்கிராந்தம்.]

ஆக்கினாசக்கரம் *ākkiṉā-cakkaram,* பெ.(n.) சக்கரம் போல் எங்கும் சுழலும் அரசாணை; king's authority, revolving as a discus and ready to strike evil-doers.

[ஆக்கினா+சக்கரம்.]

[Skt. ājñā > த. ஆக்கினா.]

ஆக்கினாசத்தி *ākkiṉā-catti,* பெ.(n.) அரசனாணையின் வன்மை; regal power to enforce a command. *"தனதாக்கினா சத்தியுங் கோடாமற் செங்கோல் நடத்தா நிற்பன்" (சி.சி.2,31, மறைஞா.).*

த.வ. ஆணையாற்றல்.

[Skt. ājñā+šakti > த. ஆக்கினாசத்தி.]

த. சத்தி > **Skt.** *சக்தி*

ஆக்கினாபங்கம் *ākkiṉā-paṅgam,* பெ.(n.) ஆணை மீறுகை; insubordination.

[Skt. ājñā+bhanga > த. ஆக்கினாபங்கம்.]

ஆக்கினேயபுராணம் *ākkiṉēya-purāṇam,* பெ.(n.) பதினெண் தொன்மத்தி(புராணத்) லொன்று; a chief *purāṇam,* one of *patiṉeṉ-purāṇam.*

[Skt. āgnēya+purānam > த. ஆக்கினேய புராணம்.]

ஆக்கினேயம்[1] *ākkiṉēyam,* பெ.(n.) 1. தீக்கடவுளுக்குரியது; that which belongs to Fire God. 2. தென் கீழ்த்திசை; the South East quarter of which Fire God is guardian. 3. சிவாகமத்துளொன்று; an ancient šaiva scripture in Sanskrit, one of 28 sivāgamam.

[Skt. āgnēya > த. ஆக்கினேயம்.]

ஆக்கினேயம்[2] *ākkiṉēyam,* பெ.(n.) திருநீறு; sacred ashes.

[Skt. āgnēya > த. ஆக்கினேயம்.]

ஆக்கினேயச்நானம் *ākkiṉēya-c(š)-nāṉam,* பெ.(n.) தூய்மைக்காக திருநீற்றைப் பூசிக்கொள்ளல் (சித். சிகா. விபூதி. 12, உரை); purification by smearing one's body with sacred ashes.

[Skt. āgnēya+snāṉam > த. ஆக்கினேயச் நானம்.]

ஆக்கினேயாச்திரம் *ākkiṉēyāc(š)tiram,* பெ.(n.) தீயைத் தேவியாகக் கொண்ட அம்பு; missile presided over by fire.

[Skt. āgnēyā+astra > த. ஆக்கினே யாச்திரம்]

ஆக்கினை *ākkiṉai,* பெ.(n.) 1. கட்டளை; order, command, mandate. 2. தண்டனை; punishment, penalty. *"தலைக்குமிஞ்சின ஆக்கினையில்லை".* 3. கட்டைவிரல்; thumb.

[Skt. ā-jñā > த. ஆக்கினை.]

ஆக்கினைப்பத்திரம் *ākkiṉai-p-pattiram,* பெ.(n.) அரசனது எழுத்து மூலமான கட்டளை; king's writ, royal edict.

[Skt. ā-jñā+patra > த. ஆக்கினைப்பத்திரம்.]

ஆக்குரோசம் *ākkurōšam,* பெ.(n.) கடுஞ்சினம்; great rage.

த.வ. **வெஞ்சினம்.**

[Skt. ā-krōša > த. ஆக்குரோசம்.]

ஆக்குவயம் *ākkuvayam,* பெ.(n.) பெயர் (பிங்.); name.

[Skt. a-hvaya > த. ஆக்குவயம்.]

ஆகடியம் *āgadiyam,* பெ.(n.) 1. பகடி; mockery, ridicule, banter. *"ஆகடியம் பண்ணாதே".* 2. பொல்லாங்கு; mischief, cruelty. *"அஞ்சுபூதமுண்டாகடிய காராரிவர்" (திருப்பு. 156).*

தெ. ஆகடமு; க. ஆகட.

[Skt. āgadamu > த. ஆகடியம்.]

ஆகண்டலன் *āgantalan,* பெ.(n.) இந்திரன் (பிங்.); Indran, the clipper of the wings of mountains.

த.வ. **தேவர்கோன்.**

[Skt. ā-khandala > த. ஆகண்டலன்.]

ஆகதம் *āgadam,* பெ.(n.) அலுக்கம் (கமகம்) பத்தனுளொன்று; succession of staccato notes in ascent, one of ten *kamakam.*

[Skt. āhata > த. ஆகதம்.]

ஆகதர் *ākatar,* பெ.(n.) சமணர்; jains. *"ஆகதர்க்கெளி யேனலேன்" (தேவா. 858, 2).*

[Skt. ārhata > த. ஆகதர்.]

ஆகந்துகம் *āgandugam,* பெ.(n.) இடையில் வந்தேறியது; that which has come accidentally, incidentally, uninvited. *"ஆகந்துக மன்றிக்கே" (ஈடு. 1,1,1,1).*

[Skt. ā-gantuka > த. ஆகந்துகம்.]

ஆகம்பிதசிரம் *āgambida-širam,* பெ.(n.) தலையால் காட்டுகை; gesture of the head to express a greeting.

[Skt. ā-kampita+ciram > த. ஆகம்பிதசிரம்.]

ஆகம்பிதமுகம் *āgambida-mugam,* பெ.(n.) இசைவிற்கு அறிகுறியாக மேல்கீழாகத் தலையாட்டுகை; nod of approbation, one of 14 *muka-v-apinayam.*

[Skt. ā-kampita+mugam > த. ஆகம்பிதமுகம்.]

ஆகமசாத்திரம் *āgama-šātiram,* பெ.(n.) சிவனிய, மாலிய, சமணத் தந்திரங்கள்; a class of sacred works in Sanskrit, Saiva, Vaisṇava, Jaina.

த.வ. **தோன்றியம்.**

[Skt. ā-gama+sāstiram > த. ஆகமசாத்திரம்.]

ஆகமம் *āgamam,* பெ.(n.) 1. மறைநூல்கள் (பிங்.); Sastras, scriptures, one of six *piramāṇam.* 2. முதல்வன் வாக்கு; scriptures believed to be revealed by God and peculiar to Saivism, Vaisṇavism, Šāktismor Jainism. 3. தோன்றல் நிலையில் வருமெழுத்து (வீரசோ. சந்தி. 13); (Gram.) augment, letter or syllable inserted in the combination of two words or two parts of a word.

[Skt. ā-gama > த. ஆகமம்.]

ஆகமமலைவு *āgama-malaivu,* பெ.(n.) மறைநூற்கு மாறாக வருவது (தண்டி. 121); anything contrary to scriptures.

[ஆகம+மலைவு.]
[Skt. ā-gama > த. ஆகமம்.]

ஆகமவளவை *āgama-v-aḷavai,* பெ.(n.) அறிவிற்கு அடிப்படையாக விளங்கும் மூன்று நூல்கள் scriptures, one of three sources of knowledge.

[ஆகம+அளவை.]
[Skt. ā-gama > த. ஆகம.]

ஆகமனம் *āgamanam,* பெ.(n.) வருகை; coming, arrival.

[Skt. ā-gamana > த. ஆகமனம்.]

ஆகர்சகம் *āgarsagam,* பெ.(n.) கவர்வது; that which is attractive. *"மனசுக்கு ஆகர்ஷகமாயிருக்கிற சோலை".*

[Skt. ā-karṣaka > த. ஆகர்சகம்.]

ஆகர்சணசக்தி *āgarsaṇa-cakti,* பெ.(n.) கவருந்திறம்; power of drawing to oneself, force of gravitation.

த.வ. ஈர்ப்பாற்றல்.

[Skt. ā-karṣaṇa > த. ஆகர்சணசத்தி.]

ஆகர்சணம் *āgarsaṇam,* பெ.(n.) 1. இழுக்கை; pulling, drawing near, attracting. 2. எண் கருமத்தொன்று; magic art of summoning an absent person into one's presence, one of asta-karumam.

[Skt. ā-karṣaṇa > த. ஆகர்சணம்.]

ஆகர்சி-த்தல் *āgarsi-,* 4செ.கு.வி.(v.i.) 1. கவருதல், ஈர்த்தல்; to draw towards oneself, attract, fascinate. 2. ஆவியை வரவழைத்தல்; to invoke or adjure a demon summon a spirit. (w.).

[Skt. ā-karṣa > த. ஆர்க ி-த்தல்]

ஆகரம்[1] *āgaram,* பெ.(n.) 1. மணிகளின் சுரங்கம்; mine of precious stones. *"ஆகரங்களிற் படுவனவும்" (குறள், 736, உரை).* 2. உறைவிடம் (திவா.); source, seat, abode, store house.

ஆகரம்[2] *āgaram,* பெ.(n.) கூட்டம்; crowd.

[Skt. ākara > த. ஆகரம்.]

ஆகரி[1]-த்தல் *āgari-,* 4 செ.கு.வி.(v.i.) தருவித்தல்; to send for, secure, get. *"ஐவகை வண்ணமுமாகரித் தூட்டி" (பெருங். உஞ்சைக். 38, 149).*

[Skt. āhr-,> த. ஆகரி-த்தல்.]

ஆகரி[2] *āgari,* பெ.(n.) ஒரு பண் (சிலப். 14, 166, உரை); a special melody-type, specially suitable for singing at midnight.

[Skt. āhiri> த. ஆகரி.]

ஆகருடணம் *āgaruḍaṇam,* பெ.(n.) 1. **ஆகர்சணம்** பார்க்க; see *āgarsaṇam. "அகரமாதிமூன் றாகிய வாகருடணமே" (திருவிளை. எல்லம். 17).* 2. அழைக்கை (பிங்.); calling, invitation, summons.

[Skt. ā-karṣaṇa > த. ஆகருடணம்.]

ஆகவபூமி *āgava-būmi,* பெ.(n.) போர்க்களம் (பிங்.); battle-field.

[Skt. ā-hava+būmi > த. ஆகவபூமி.]

ஆகவம் *āgavam,* பெ.(n.) போர் (பாரத. பதின்மூன். 97); war, battle.

[Skt. ā-hava > த. ஆகவம்.]

ஆகவனீயம் *āgavaṉiyam,* பெ.(n.) வேள்வித்தீ வகை (திருமுரு. 181, உரை); one of three sacred fires connected with *Srauta ritual* in which oblations are generally offered.

[Skt. ā-hava-niya > த. ஆகவனீயம்.]

ஆகவியன் *āgaviyaṉ,* பெ.(n.) போர்வீரன் (நிகண்டு); warrior.

[Skt. āhavya > த. ஆகவியன்]

ஆகளரசம் *āgaḷa-rašam,* பெ.(n.) இதளியம்; mercury.

ஆகச்மிகம் *āgasmigam,* பெ.(n.) எதிர்பாராமல் தோன்றுவது; accidental, unforeseen, unexpected.

[Skt. ākas-mika > த. ஆகச்மிகம்.]

ஆகா *ākā,* பெ.(n.) ஒரு கந்தருவன் (நைடத. அன்னத்தைத்தூ. 66); a Gandharva associated with *Hūhū.*

[Skt. hāhā > த. ஆகா.]

ஆகாசக்கத்தரி *ākāša-k-kattari,* பெ.(n.) வெண்டை (யாழ்.); lady's finger.

[Skt. ā-kāša+த. கத்தரி > த. ஆகாசக்கத்தரி.]

ஆகாசக்கப்பல் *ākāša-k-kappal,* பெ.(n.) வானத்தில் செல்லும் விண்ணூர்தி; airship, balloon.

[ஆகாசம்+கப்பல்.]

[Skt. ā-kāša>த. ஆகாசம்.]

ஆகாசக்கல் *āgāša-k-kal,* பெ.(n.) வானத்தில் பறக்கும் அணு (வின்.); aeorolite in regard to which the belief is that it so dazzles the eye that it does not recover from the affection till the next day.

[ஆகாசம்+கல்.]

*[**Skt.** ākāša > த. ஆகாசம்.]*

ஆகாசக்கோட்டை *agāša-k-kōṭṭai,* பெ.(n.) கற்பனை அல்லது நடைமுறைக்கு ஏற்பில்லாத திட்டம் அல்லது எதிர்பார்ப்பு; castle in the air.

[ஆகாசம்+கோட்டை.]

*[**Skt.** ākāša > த. ஆகாசம்.]*

ஆகாசகங்கை *āgāša-gaṅgai,* பெ.(n.) 1. மந்தாகினி; the celestial ganges. 2. வான்வெளி (பால்வீதி) மண்டலம்; the milky way.

[ஆகாசம்+கங்கை.]

*[**Skt.** ā-kāša> த. ஆகாசம்.]*

ஆகாசகமனம் *āgāša-gamaṉam,* பெ.(n.) அறுபத்து நாலு கலைகளுளொன்றான வான் வழிச் செலவு; flying through the air, an art believed to be acquired by magic and yōga.

[ஆகாசம்+மனம்.]

*[**Skt.** ā-kāša> த. ஆகாசகம்.]*

ஆகாசகருடன் *āgāša-garuḍaṉ,* பெ.(n.) கொல்லங்கோவை (மலை.) எனும் செடி; a climbing shrub.

ஆகாசகாமி *āgāša-kāmi,* பெ.(n.) 1. பறந்து செல்லும் ஆற்றலுடையோன்; one who is able to fly through the air, an angel. 2. பறக்குங் குதிரை (வின்.); fabled horse, having the power of flying through the air.

*[**Skt.** ā-kāša+gāmin > த. ஆகாசகாமி.]*

ஆகாசகாமினி *āgāša-kāmiṉi,* பெ.(n.) வானத்திற் செல்லுதற்குதவும் ஒரு மந்திரம் (சீவக. 1713, உரை); incantation that gives one the power of flying through the air.

*[**Skt.** ā-kāša+gāmini > த. ஆகாசகாமினி.]*

ஆகாசசபை *āgāša-šapai,* பெ.(n.) காஞ்சிபுரத்து ஆடலரசனின் ஆடரங்கு (நடராச சபை) (அபி.சிந்.); dancing hall of *Natarāja* at *Kāñcipuram*, a vast, open space.

[ஆகாச(ம்)+சபை.]

*[**Skt.** ā-kāša> த. ஆகாசகம்.]*

அவை→சவை>சபை > **Skt.** *sabā.*

ஆகாசத்தாமரை *āgāša-t-tāmarai,* பெ.(n.) 1. பூடு வகை; a weed. 2. கொட்டைப் பாசி (மூ.அ.); seed moss. 3. இல்பொருள்; that which is absolutely non-existent as an aerial lotus.

த.வ. ஆகாயத்தாமரை.

[ஆகாச(ம்) + தாமரை.]

*[**Skt.** ā-kāša> த. ஆகாசம்.]*

ஆகாசத்திற்பற-த்தல் *āgācattiṟ-paṟa-,* 3 செ.கு.வி.(v.i.) 1. செருக்காய் (நானுணர்வு) ஒழுகுதல்; to be on one's high horse, to give oneself airs, to be arrogant (colloq.). 2. முடியாததை முயலுதல்; to attempt to accomplish the impossible (colloq.).

த.வ. ஆகாயத்திற் பற-.

[ஆகாச(ம்)+அத்து+இல்+பற-.]

ஆகாசதீபம் *āgāša-dīpam,* பெ.(n.) உயர்ந்த கம்பத்தில் வைக்கப்படும் விளக்கு; lantern on a pole, beacon light, light-house.

[ஆகாசம் + தீபம்.]

*[**Skt.** ā-kāša> த. ஆகாசம்.]*

தீ→தீவம்>தீபம்.



ஆகாசப்பந்தல் *āgāśa-p-pandal,* பெ.(n.) **ஆகாயப்பந்தல்** பார்க்க; see *āgāya-p-pandal.*

[ஆகாசம் + பந்தல்.]

*[**Skt.** ā-kāśa > த. ஆகாசம்.]*

ஆகாசபஞ்சாங்கம் *āgāśa-pañjāṅgam,* பெ.(n.) பெரும்பொய்; stupendous lie, as an almanac written in the air.

*[**Skt.** ā-kāśa+pañjāṅga>த. ஆகாசப் பஞ்சாங்கம்.]*

ஆகாசபட்சி *āgāśa-paṭci,* பெ.(n.) சாதகபட்சி (வின்.); the shepherd koel.

[ஆகாசம் + பட்சி.]

*[**Skt.** ā-kāca+paṭci> த. ஆகாசபட்சி.]*

ஆகாசபலம் *ākāśa-palam,* பெ.(n.) எரி விண்மீன், விண் வீழ் கொள்ளி; meteor, shooting star. *"ஆகாசபலம் வீழ்வது போல்" (ஞானவா. சனக. 7).*

[ஆகாசம் + பலம்.]

*[**Skt.** ā-kāca+phala>த.ஆகாசபலம்.]*

*வலம்→**Skt.**phala.*

ஆகாசம் *āgāśam,* பெ.(n.) 1. ஐம்பூதத்தொன்று; ether pervading all space, one of five elements. 2. வெளி; open space. 3. வானம்; sky, the visible heavens. 4. காற்று மண்டிலம்; air, atmosphere (mod.).

த.வ. வானம்.

*[**Skt.** ā-kāśa > த. ஆகாசம்.]*

ஆகாசமண்டலம் *āgāśa-maṇḍalam,* பெ.(n.) **ஆகாயமண்டிலம்** பார்க்க; see *āgāya-maṇḍilam.*

[ஆகாசம் + மண்டலம்.]

*[**Skt.** ā-kāśa> த. ஆகாசம்.]*

மண்டு→மண்டலம்.

ஆகாசராமன் *āgāśa-rāmaṉ,* பெ.(n.) பெயரிலான்; nameless person, a nobody.

*[**Skt.** ā-kāśa+rāma> த. ஆகாசராமன்.]*

ஆகாசலிங்கம் *āgāśa-liṅgam,* பெ.(n.) தில்லையி (சிதம்பரத்தி)ல் உள்ள ஐவகை (பஞ்ச) லிங்கத்து ளொன்று; the *liṅkam* in the shrine at Chidambaram, which is considered to be formless like the ether; indicating the attributes of God as all pervading.

*[**Skt.** ā-kāśa+liṅgam > த. ஆகாசலிங்கம்.]*

ஆகாசவாசியர் *ākāśa-vāśiyar,* பெ.(n.) சிறு தெய்வங்கள்; a class of demi-gods.

*[**Skt.** ā-kāśa+vāsin>த. ஆகாசவாசியர்.]*

ஆகாசவாணம் *āgāśa-vāṇam,* பெ.(n.) வானிற் செல்லும் சீறுவாணம்; sky rocket.

[ஆகாசம் + வாணம்.]

*[**Skt.** ā-kāśa>த.ஆகாசம்.]*

வானம்→வாணம்.

ஆகாசவாணி *āgāśa-vāṇi,* பெ.(n.) 1. விண்குரல்; voice from heaven, incorporeal voice. 2. வானொலி; radio.

*[**Skt.** ākāśa-vāṇi > த. ஆகாசவாணி.]*

ஆகாத்தியம் *āgāttiyam,* பெ.(n.) பாசாங்கு; pretence, simulating agony. *"ஆகாத்தியக் காரனுக்குப் பிரமகத்திக் காரன் சாட்சி".*

தெ. ஆகாதியமு; க. ஆகாதிய.

ஆகாமி *āgāmi,* பெ.(n.) எண்போகத் தொன்றாகிய பிற்காலத்துத் துய்க்கும் உரிமை; propective right and privilage which possession of an estate may bring in its wake one of *aṣṭapōkam.*

*[**Skt.** ā-gāmin > த. ஆகாமி.]*

ஆகாமியம் *āgāmiyam,* பெ.(n.) இப்பிறப்பிலே செய்யும் நல்வினை தீவினை; karmā, which is yet to come, action good and bad of the present life which are expected to bring their rewards in future births, one of three karumam. *"மேல்வரு மாகாமியமு நாடாமல்" (திருக்காளத். பு. 12, 28).*

*[**Skt.** ā-gāmya > த. ஆகாமியம்.]*

ஆகாயக்கக்கரி *āgāya-k-kakkari*, பெ.(n.) முள்வெள்ளரி வகை (பாதர்த்த 705); variety of kakri-melon.

[ஆகாய(ம்) + கக்கரி.]

[Skt. a-kāša > த. ஆகாயம்.]

ஆகாயகங்கை *āgāya-gangai*, பெ.(n.) மந்தாகினி (மணி. பதி. 17); the celestial *Ganges.*

[ஆகாயம் + கங்கை.]

[Skt. ā-kāša> த. ஆகாயம்.]

ஆகாயகணம் *āgāya-gaṇam*, பெ.(n.) இரண்டு நிறையசையும் ஒரு நேரசையும் சேர்ந்த 'கருவிளங்காய்' போன்றதொரு செய்யுட்கணத்தொன்று (இலக். வி. 800, உரை); metrical foot of two nirai and one nēr as considered inapt and so boding evil, when used at the commencement of a poem.

ஆகாயகமனம் *āgāya-kamaṉam*, பெ.(n.) அறுபத்து நாலு கலையுள் காற்று வெளியில் நடந்து செல்லும் கலை (வின்.); art of walking in the air, one of *aṟupattu-nālu-kalai.*

ஆகாயச்சொல் *āgāya-c-col*, பெ.(n.) இல்லாதானொருவனை முன்னிலைப் படுத்தித் தானே கூறும் பேச்சு (சிலப். 3, 13, உரை); literally, a speech in the air, used in dramas as a stage direction when a character on the stage puts questions to some one who is not actually present and listens also to an imaginary speech, supposed to be a reply from the person so addressed.

[ஆகாயம் + சொல்.]

[Skt. ā-kāša > ஆகாயம்.]

ஆகாயசூலை *āgāya-šūlai*, பெ.(n.) குதிரை நோய்வகை (அசுவ. 50); a disease of horses.

ஆகாயப்பந்தல் *ākāya-p-pandal*, பெ.(n.) மனக்கோட்டை; castle in the air.

த.வ. வான்பந்தல்.

[ஆகாயம் + பந்தல்.]

[Skt. ā-kāša > ஆகாயம்.]

ஆகாயப்பிரவேசம் *āgāya-p-piravēšam*, பெ.(n.) அறுபத்து நான்கு கலைகளுள் காற்று வெளியில் புகுந்து மறையும் ஒரு கலை (வின்.); art of entering into the air and becoming invisible, disappearing into air, one of *aṟupattunālu-kalai.*

[Skt. ā-kāša-p-piravēcam> த. ஆகாயப்பிரவேசம்.]

ஆகாயம் *āgāyam*, பெ.(n.) வான்வெளி, வானம்; sky.

த.வ. விண்.

ஆகாயமண்டிலம் *ākāya-maṇḍilam*, பெ.(n.) 1. வானவட்டம்; the celestial sphere. 2. நாட்டிய வகையுளொன்று (திருவிளை. கான்மாற். 9); a mode of dancing.

[ஆகாயம் + மண்டிலம்.]

[Skt. ā-kāša > ஆகாயம்.]

ஆகாயமாஞ்சி *āgāya-māñji*, பெ.(n.) சிறு சடாமாஞ்சி (மலை.); spikenard.

ஆகாயவாசிகள் *āgāya-vāšigaḷ*, பெ.(n.) பதினெண்கணத்துளொரு சாரார் (திருமுருகு. 168, உரை); a class of demigods, sky-dwellers, one of *patiṉeṉ-kaṇam.*

[Skt. ஆகாசம் → ஆகாயம் + வாசிகள்.]

ஆகாரசமிதை *āgāra-šamidai*, பெ.(n.) வேள்வி குண்டலத்தில் தென்கிழக்கிலும் வடகிழக்கிலும் வைக்கப்படும் அரச மரத்துக் குச்சிகள் (சீவக. 2464, உரை); two pipal twigs dipped in ghee and placed one at the north-east and the other at the south-east corner of the grhya-sacred fire.

[Skt. a-ghāra+samidh > த. ஆகாரசமிதை.]

ஆகாரம்[1] *ā-gāram*, பெ.(n.) 1. உருவம்; shape, form, figure, outline, structure. *"ஆகாரமழகெறிப்ப" (பாரத. வசந்தகா. 19).*

2. உடம்பு; body. *"திருவாகாரங் குலுங்க" (திவ். பெரியதி. 4, 4, 8).*

*[**Skt.** ā-kāra > த. ஆகாரம்.]*

ஆகாரம்[2] *ā-kāram,* பெ.(n.) நெய் (பிங்.); clarified butter, ghee.

*[**Skt.** ā-ghāra > த. ஆகாரம்.]*

ஆகாரம்[3] *ā-kāram,* பெ.(n.) உணவு (பிங்.); food.

*[**Skt.** ā-hāra > த. ஆகாரம்.]*

ஆகிரந்தம் *āgirandam,* பெ.(n.) புன்கு (மலை.); Indian beech.

ஆகிருதி *āgirudi,* பெ.(n.) 1. உருவம்; form, shape. 2. அடிதோறும் ஒற்று நீங்கிய 22 உயிரெழுத்துக் கொண்ட நான்கடியையுடைய தாய் வருஞ் சந்தம் (வீரசோ. யாப். 33, உரை); meter of four lines with 22 vowel sounds each.

*[**Skt.** ā-krti > த. ஆகிருதி.]*

ஆகு *āku,* பெ.(n.) 1. எலி (பிங்.); rat. 2. பெருச்சாளி (திவா.); bandicoot.

*[**Tib.** gyāk > த. ஆகு.]*

ஆகுஞ்சனம் *āguñjaṉam,* பெ.(n.) சுருக்குகை (பிரபோத. 44, 23); contraction.

த.வ. சுருக்கம்.

*[**Skt.** ā-kuñcana > த. ஆகுஞ்சனம்.]*

ஆகுபாடாணம் *āgu-pāḍāṇam,* பெ.(n.) வெண் நஞ்சு; a mineral poison.

ஆகுலம் *āgulam,* பெ.(n.) 1. மனக்கலக்கம்; confusion, agitation, flurry. *"சிந்தாகுலமுற்று" (திருக்கோ. 12).* 2.ஆரவாரம் (குறள், 34); pomp, idle sound. 3. மனவருத்தம்; grief, sorrow, distraction of mind. *"ஆகுலப் புணரியுளழுந்தி னோரையும்" (கந்தபு. குமாரபுரி. 48).*

*[**Skt.** ā-kula > த. ஆகுலம்.]*

ஆகுலி-த்தல் *āguli-,* 4 செ.கு.வி.(v.i.) துன்புறுதல் (கம்பரா. பிரமாத். 193); to be distressed of mind, suffer grief.

ஆகுவாகனன் *āgu-vāgaṉaṉ,* பெ.(n.) பிள்ளையார் (விநாயகன்) (திவா.); Vinayagan.

வடமொழியில் 'ஆகு' என்னும் சொல் எலியைக் குறிக்கும் சொல். எலியை வாகனமாய் கொண்டவன் பிள்ளையார் என்ற பொருளில் வந்துள்ளது.

ஆகையர் *āgaiyar,* பெ.(n.) முடிவு; end, close.

*[**U.** ākhir > **Skt.** ākaiyar > த. ஆகையர்]*

ஆங்காரம் *āṅgāram,* பெ.(n.) பற்று; kindness, love, affection. *"தேனாங் காரப்பொழில்" (திவ். திருவாய். 10, 7, 11).*

*[**Skt.** ahaṃ-kāra > த. ஆங்காரம்.]*

ஆங்காரி[1]**-த்தல்** *āṅgāri-,* 4 செ.கு.வி.(v.i.) **அகங்கரி-,** பார்க்க; see *agaṅgari-. "ஆதலா லாங்காரித்தே யறிஞரை யிகழா நின்றான்" (திருவாலவா. 18, 1).*

ஆங்காரி[2] *āṅgāri,* பெ.(n.) அகங்கார முள்ளவன்; proud, haughtly-persons.

*[**Skt.** aham-kārin > த. ஆங்காரி.]*

ஆங்கிரசம் *āṅkiraśam,* பெ.(n.) அறநூல் பதினெட்டிலொன்று; a text-book of Hindu law in Sanskrit, ascribed to angiras, one of 18 *taruma-nūl.*

*[**Skt.** āṅgirasa > த. ஆங்கிரசம்.]*

ஆங்கிரசன் *āṅkiraśaṉ,* பெ.(n.) ஒரு முனிவன்; angiras, a sage.

*[**Skt.** aṅgiras > த. ஆங்கிரசன்.]*

ஆங்கிரன் *āṅkiraṉ,* பெ.(n.) ஒரு முனிவன் (உரி.நி.); a sage.

*[**Skt.** aṅgiras > த. ஆங்கிரன்.]*

ஆங்கீரச *āṅkīraša,* பெ.(n.) வியாழன் சுழற்சியில் அறுபது ஆண்டில் ஒன்று; a name of the sixth year of the jupiter cycle.

[Skt. āṅgirasa > த. ஆங்கீரச.]

ஆச்சரியம் *āccariyam,* பெ.(n.) வியப்பு; surprise, wonder.

[Skt. ā-š-carya > த. ஆச்சரியம்.]

ஆச்சாதனபலம் *āccādaṇa-palam,* பெ.(n.) பருத்திக்கொட்டை (தைலவ. தைல. 33); cotton seed.

[ஆச்சாதன(ம்)+பலம்.]

[Skt. ā-chādana > த. ஆச்சாதனம்.]

த. பலம் >**Skt.** phala.

ஆச்சாதனம் *āccādaṇam,* பெ.(n.) 1. ஆடை; cloth, clothes, mantle. 2. மறைப்பு (சி.சி.2,86, சிவாக்.); covering, concealing, hiding.

த.வ. மூடுகை.

[Skt. ā-chā-dana > த. ஆச்சாதனம்.]

ஆச்சான் *āccāṉ,* பெ.(n.) ஆதனிய (ஆன்மீக) முன்னோடி; spiritual preceptor. *"நாலூராச்சான்".*

[Skt. ā-cārya > த. ஆச்சான்.]

ஆச்சியம்[1] *ācciyam,* பெ.(n.) நெய் (கைவல்ய. தத்துவ. 66); ghee, clarified butter.

[Skt. ā-jya > த. ஆச்சியம்.]

ஆச்சியம்[2] *ācciyam,* பெ.(n.) பகடிக்குரியது; that which is fit to be ridiculed or derided. *"ஆச்சியப் பேய்களோடு" (தேவா. 1094, 10).*

த.வ. எள்ளல்.

[Skt. hāsya > த. ஆச்சியம்.]

ஆச்சியச்தாலி *ācciyactāli,* பெ.(n.) வேள்விக்குரிய நெய் ஏனம் (சீவக. 2463, உரை); vessel in which clarrified butter is kept during oblations.

[Skt. ājya+sthālī > த. ஆச்சியத்தாலி.]

ஆச்சிரமதருமம் *āccirama-darumam,* பெ.(n.) அந்தந்த குலத்தோர் செய்ய வேண்டிய கடமை; duties pertaining to the four stages of life esp. among the twice born.

[Skt. ā-šrama + dharma>த. ஆச்சிரம தருமம்.]

ஆச்சிரமம் *āccirаmam,* பெ.(n.) 1. முனிவர்கள் உறைவிடம் (சேதுபு. நைமிசா. 15); hermitage, abode of an ascetic. 2. வாழ்க்கை நிலை (பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம்); order or stage in life, esp. of the twice-born, of which four are mentioned. *"ஆச்சிரம நான்கவை யியம்புவாம்" (திருக்காளத்.பு. 29,6).*

த.வ. திருவாசிரிய இருக்கை.

[Skt. ā-šrama > த. ஆச்சிரமம்.]

ஆச்சிரமி *āccirami,* பெ.(n.) நால்வகை ஒழுக்கநெறிகளுள் ஒன்றிலிருப்பவன்; one who is in any one of the four stages of life or *ācciraman.*

[Skt. ā-šramin > த. ஆச்சிரமி.]

ஆச்சிரயம் *āccirayam,* பெ.(n.) 1. புகலிடம்; asylum, place of refuge. 2. பகை வெல்லுதற்குப் வலுவுள்ளானொரு வனையடைகை (இரகு. திக்கு. 22); seeking by a king the help of a mighter king to conquer an enemy, one of *aracar-aṟu-kuṇam.*

[Skt. ā-šraya > த. ஆச்சிரயம்.]

ஆச்சிரயாசித்தம் *āccirayācittam,* பெ.(n.) குறைந்த அளவில் இல்லாத ஏதுவைக்கூறும் ஏதுப்போலி (மணிமே. 29, 194); fallacy consisting in the minor term being non-existent.

[Skt. ā-šraya+a-siddha > த. ஆச்சிர யாசித்தம்.]

ஆச்சிராமம் *āccirāmam,* பெ.(n.) **ஆசிரமம்** பார்க்க; see *āciramam.* *"வதரியாச் சிராமம்" (திவ். பெரியதி. 1,4,1).*

[Skt. ā-šrama > த. ஆச்சிராமம்.]

ஆச்சிலை *ā-c-cilai,* பெ.(n.) திருமணி (கோமேதகம்) (சங்.அக.); cinnamon stone.

ஆசங்கி-த்தல் *ācaṅgi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஐயப்படுதல்; to suspect, doubt.

2. மறுத்துரைத்தல் (சி.போ. சிற். 2,2); to object to, state a possible objection to.

[Skt. ā-šaṅk-, > த. ஆசங்கி-த்தல்.]

ஆசங்கை *ācaṅgai,* பெ.(n.) 1. ஐயம்; doubt, suspicion. *"மழையென்றாசங்கை கொண்ட கொடை" (கம்பரா. நாகபாச. 263).* 2. மறுப்பு; abjection.

[Skt. ā-šāṅkā > த. ஆசங்கை.]

ஆசத்தி *ācatti,* பெ.(n.) பற்று; attachment, desire.

[Skt. ā-sakti > த. ஆசத்தி.]

ஆசந்தி[1] *ācandi,* பெ.(n.) பிணங்கொண்டு போகும் பாடை; bier. *"ஆசந்தி மேல்வைத்தமைய வழுது" (திருமந். 150).*



ஆசந்தி[2] *ācandi,* பெ.(n.) பெரிய வெள்ளிக்கிழமையன்று சிலுவையில் அமைந்த இயேசுநாதர் உருவத்தை ஊர்வலஞ் செய்விக்கை; procession of the image of Christ on the cross on Good Friday.

[Skt. ā-sandi > த. ஆசந்தி.]

ஆசந்திரதாரம் *ā-candira-dāram,* வி.அ.(adv.) நிலவும் உடுக்களும் உள்ளவரை; as long as the moon and stars endure, in perpetuity, a term used in deeds. *"இப்பரிசு ஆசந்திரதாரம் ஊட்டுவதாக" (தெ.க.தொகுதி 3. பக். 3).*

[Skt. ā+candra+tāra > த. ஆசந்திரதாரம்.]

ஆசந்திரார்க்கம் *ācandirārkkam,* (adv.) நிலவும் கதிரவனுமுள்ளவரை; as long as the sun and moon endure, in perpetuity, a term used in deeds.

[Skt. ā+candra+arka > த. ஆசந்திரார்க்கம்.]

ஆசம் *āšam,* பெ.(n.) சிரிப்பு (பிங்.); laughter, mirth,

[Skt. hāsa > த. ஆசம்.]

ஆசமனம் *āšamaṉam,* பெ.(n.) வலக்குடங்கையால் மந்திரபூர்வமாக நீரை மும்முறை யுட்கொள்ளுகை (கூர்மபு. நித்திய. 11); sipping while uttering certain mantras a little water three times from the palm of the right-hand.

[Skt. ā-camana > த. ஆசமனம்.]

ஆசமனீயம் *āšamaṉiyam,* பெ.(n.) ஆசமனநீர்; water used for *ācamaṉam.*

[Skt. ā-camaniya > த. ஆசமனீயம்.]

ஆசமி-த்தல் *āšami-,* 4 செ.குன்றாவி.(v.t.) வலக்குடங்கையால் மந்திரமோதி நீரை மும்முறையுட் கொள்ளுதல்; to sip while uttering certain *mantras* a little water three times from the palm of the right hand. *"அணிநீர் கரந்தொட்டா சமித்தான்" (சேதுபு. சேதுவந். 26).*

[Skt. ā-cam-, > த. ஆசமி-,]

ஆசயம் *ācayam,* பெ.(n.) 1. உறைவிடம்; resting place, abode, retreat. 2. உடலின் உட்பை; vessel of the body. *"பஞ்சாசயம்".* 3. கருத்து; intention meaning. *"இது கவியின் ஆசயம்".*

[Skt. ā-šaya > த. ஆசயம்.]

ஆசர் *āšar,* (adv.) வருகைப் பதிவேட்டில் வருநிலை; presence in attendance.

U. ḥāzir., **Skt.** ஆசர்.

ஆசர்ப்பட்டி *āšar-p-paṭṭi,* பெ.(n.) வருகைப்பதிவேடு; attendance register.

[ஆசர்+பட்டி.]

[U. hāzir > த. ஆசர்.]

ஆசர்படுத்து-தல் *āšar-paḍuttu-,* 5 செ.கு.வி.(v.i.) குற்றம் சாட்டப்பட்ட வரை

அறமன்றத்திற்குக் கொண்டு வருதல்; produce the accused before a court of law.

[ஆசர்+படுத்து-தல்.]

[U. hāzir>த. ஆசர்.]

ஆசரணம் *āśaraṇam,* பெ.(n.) நடைமுறை கூர்ந்து நோக்குகை; abservance, usage, practice.

[Skt. ā-carana > த. ஆசரணம்.]

ஆசரணை *āśaraṇai,* பெ.(n.) **ஆசரணம்** (வேதா. சூ.8) பார்க்க; see *āśaraṇam.*

ஆசரி¹-த்தல் *āśari-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கடைபிடித்தல்; to practice, follow habitually. *"ஆசரித்த ஆசாரம்" (உபதேசரத். 67).* 2. கைக் கொள்ளுதல்; to observe, keep holy, solemnise, practise as a rite. *"ஆசரிக்குங் கண்டியும்" (சைவச. ஆசா. 45).*

[Skt. ā-car-, > த. ஆசரி-,]

ஆசரி²-த்தல் *āśari-,* 4 செ.கு.வி.(v.i.) வழிபடுதல்; to worship. *"தானா சரித்துவரு தெய்வமிது" (குமரே. சத. 60).*

[Skt. ā-śraya > த. ஆசரி-,]

ஆசரிப்புக்கூடாரம் *āśarippu-k-kūḍāram,* பெ.(n.) யூதர் வழிபட்ட நடமாடும் ஆலயம்; tabernacle, a movable sanctuary. (chr.).

ஆசவம் *āśavam,* பெ.(n.) கள் (பிங்.); spirituous liquor which is distilled from molasses, toddy.

[Skt. ā-sava > த. ஆசவம்.]

ஆசவுசம் *āśavuśam,* பெ.(n.) தீட்டு (சைவச. பொது. 252); pollution caused either by the birth or death of a relative.

[Skt. ā-śauca > த. ஆசவுசம்.]

ஆசன்னம் *āśaṉṉam,* பெ.(n.) அண்மையது; that which is near or draws near in time, place or number.

[Skt. ā-sanna > த. ஆசன்னம்.]

ஆசனகிருமி *āśaṉa-kirumi,* பெ.(n.) மலப்புழுவகை; thread warm.

[Skt. āsana+kirmi> த-ஆசனகிருமி.]

ஆசனகுளிகை *āśaṉa-kuḷigai,* பெ.(n.) ஆசனவழியாய்ச் செலுத்தும் மாத்திரை; suppository.

[ஆசனம் + குளிகை.]

[Skt. ā-sana>த. ஆசனம்.]

ஆசனந்திருத்து-தல் *āśaṉan-diruttu-,* 4 செ.குன்றாவி.(v.t.) பெரியோர்க்கு இருக்கை யமைத்தல்; to provide seats esp. for elders.

[ஆசனம் + திருத்து-தல்.]

[Skt. ā-sana>த. ஆசனம்.]

ஆசனபவுத்திரம் *āśaṉa-pavuttiram,* பெ.(n.) எருவாயில் உண்டாகும் கட்டி; fisiula in ano.

ஆசனம் *āśaṉam,* பெ.(n.) 1. உட்காருமிடம் (இருக்கை.); seat, anything to sit on, raised seat. 2. ஒகத்தில் இருக்கை நிலை (சீவக. 656, உரை); yōgic posture of which nine are considered to be important. 3. உரியகாலம் வரும் வரை பகை மேற்செல்லாதிருக்கை; halting, encamping, biding one's time, awaiting a suitable opportunity to attack. *"ஆசன முந்திய காலமங் குணர்ந்திருத்தல்" (இரகு. திக்கு. 21).* 4. மலவாயில்; anus, rectum. *"ஆசன முபத்தங் கைகால்" (மச்சபு. பிரம. 11).*

[Skt. ā-ṣana > த. ஆசனம்.]

ஒன்பது வகை ஆசனவகைகள் : சுவத்திகாசனம், கோமுகாசனம், பதுமாசனம், வீராசனம், கேசரியாசனம், பத்திராசனம், முத்தாசனம், மயூராசனம், சுகாசனம்.

ஆசனவாய் *āśaṉa-vāy,* பெ.(n.) மலவாய்; anus.

[ஆசனம் + வாய்.]

[Skt. ā-sana> த.ஆசனம்.]

ஆசனவெடிப்பு *āśaṉa-veḍippu,* பெ.(n.) நோய்வகை; anal-fissure, crack-like sore or ulcer.

[ஆசனம் + வெடிப்பு.]

[Skt. ā-sana> த.ஆசனம்.]

ஆசாடபூதி *āšāḍa-pūḍi,* பெ.(n.) வெளித் தோற்றத்துக்குப் பொருத்தம் இல்லாத முரணான செயலைச் செய்பவன்; one who does things which are not appropriate to his appearance hypocrite.

த.வ. போலித்துறவி, தோற்றப்போலி.

[ஆசாட + பூதி.]

*[**Skt.** āṣāḍha > த. ஆசாட. புழுதி → பூதி.]*

ஆசாடம் *āšāḍam,* பெ.(n.) 1. பொதிய மலை; Pothigay hills near *Kuṟṟālam in* Thirunalvelly District; Malaya Mountain. 2. கடக (ஆடி) மாதம்; Tamil month corresponding to July. 3. முருக்கு மரம்; Indian coral tree - *Erythrina Indica* (சா.அக.).

*[**Skt.** āṣāḍha > த. ஆசாடம்.]*

ஆசாடி *āšāḍi,* பெ.(n.) குய்யாட்டக புவனத்து ளொன்று (சி.போ.பா. 2:3, பக். 213); a spiritual world, one of kuyyāṭṭakapuvaṉam.

*[**Skt.** āṣāḍhi > த. ஆசாடி.]*

ஆசாடிவேர் *āšāḍi-vēr,* பெ.(n.) கலியாண முருக்கன்வேர்; the root of the Indian coral tree (சா.அக.).

[ஆசாடி+வேர்.]

ஆசாதிகரம் *āšādikaram,* பெ.(n.) காசாங்கம்; the plant *kāšā* as a whole (சா.அக.).

ஆசாபங்கம் *āšā-baṅgam,* பெ.(n.) விரும்பியது பெறாமை; disappointment.

*[**Skt.** āšā + bhaṅga > த. ஆசாபங்கம்.]*

த. ஆசை>āšā.

ஆசு = பற்று. ஆசு>ஆசை = மனப்பற்று.

ஆசாபந்தம் *āšāpandam,* பெ.(n.) 1. நம்பிக்கை; confidence. 2. சிலந்திவலை; cobweb.

*[**Skt.** āšā+bandha > த. ஆசாபந்தம்]*

ஆசாபாசம் *āšā-pāšam,* பெ.(n.) உலகப் பொருள்களின் மீதும் உறவுகளின் மீதும் வைக்கும் ஆசை, உலகப்பற்று; noose of desire attachment. *ஆசாபாசங்களிலிருந்து விடுபட்டவர்களே துறவிகளாக முடியும்.*

த.வ. பரிவுப்பற்று.

*[**Skt.** āšā+pāsam > த. ஆசாபாசம்.]*

*த.ஆசை>**Skt.** āšā. த.பாசம்>**Skt.** pāsa.*

ஆசாபைசாசம் *āšāpaišāšam,* பெ.(n.) ஆசையாகிய பேய்; devilish desire. *"உம்மை ஆசாபைசாசங் குமைக்குங்கிமீர்" (பாடுது. 30:7).*

த.வ. ஆசைப்பேய்.

*[**Skt.** āšā+paišāca > த. ஆசாபைசாசம்.]*

ஆசாம்பரன் *āšāmbaraṉ,* பெ.(n.) சிவன்; Šivaṉ, the space-clad that is naked. *"அமகர வாசாம்பர" (திருப்பு. 436).*

*[**Skt.** āšā+ambara > த. ஆசாம்பரன்.]*

ஆசாமி *āšāmi,* பெ.(n.) அறிமுகம் இல்லாத ஆள்; தனியொருவன்; individual, a person. *ஊரிலிருந்து ஆசாமி ஒருவர் வந்துள்ளார். மதிப்புரவு இல்லாமல் நடந்துகொள்ளும் அந்த ஆசாமி யார்.* 2. செயலாளர், முகவர்; commission agent.

த.வ. ஆள்.

*[**U.** āsāmī > த. ஆசாமி.]*

ஆசாமிக்களவு *āšāmi-k-kaḷavu,* பெ.(n.) ஆளைத்திருடுகை; ஆளைக்கடத்துகை; kidnapping.

த.வ. ஆள்திருட்டு.

*[ஆசாமி + களவு. **U.** āšāmī > த. ஆசாமி.]*

ஆசாமிசோரி *āšāmi-šōri,* பெ.(n.) **ஆசாமிக் களவு** (C.G.) பார்க்க; see *āšāmi-k-kaḷavu.*

[ஆசாமி + சோரி.]

*[**Skt.** cōra > த. சோரி.]*

ஆசாமிமாறாட்டம் *āšāmi-māṟāṭṭam,* பெ.(n.) ஆள்மாறாட்டம் (C.G.); false personation.

[ஆசாமி + மாறாட்டம்.]

[U. āsami+ த. மாறாட்டம்.]

ஆசாமிவார் *āšāmi-vār,* கு.வி.எ.(adv.) ஒவ்வொருவராக; individually, personally, according to name applied to a revenue settlement with each individual cultivator (R.F.).

த.வ. ஆள்வாரி.

[U. āsāmi >த. ஆசாமி+வார். வார் = வரிசை.]

ஆசாமிவார்க்கணக்கு *āšāmi-vār-k-kaṇakku,* பெ.(n.) பெயரேடு; personal ledger.

த.வ. ஆளேட்டுக்கணக்கு.

[U. āsāmi > த. ஆசாமி + வார் + கணக்கு. பெயர் வரிசையாக எழுதப்பட்ட ஏடு.]

ஆசாமிவாரி *āšāmi-vāri,* கு.வி.எ.(adv.) இனவாரி (இனம்இனமாய்); individually.

[ஆசாமி + வாரி. U. āšāmi + wār. இனவாரி = இனவாரியாக என்னும் பொருளில் வருஞ்சொல். வகுப்புவாரி.]

ஆசாமிவாரிஇசாப் *āšāmi-vāri-išāp,* பெ.(n.) அடங்கற்கணக்கு *(P.T.L.)*; revenue account showing the name, etc., of individual taxpayer.

[U. āsāmivar + U. hisāb > த. ஆசாமிவாரி இசாப்.]

ஆசாமிவாரிச்சிட்டா *āšāmi-vāri-c-ciṭṭā,* பெ.(n.) இனவாரிக்கணக்கு; account showing under the name of each individual the assessment he has to pay.

[U. āsāmi+ vāri-c-ciṭṭā >த.ஆசாமிவாரிச் சிட்டா.]

ஆசார்யகிருதயம் *āšārya-hirudayam,* பெ.(n.) அழகிய மணவாளர் எழுதிய ஒரு மாலிய (வைணவ) சமய நூல்; a treatise on the Vaiṣṇava siddhānta written by *Aḻakiya-maṇavāḷa-nayiṉār.*

[Skt. ā-cārya+hṛdaya > ஆசார்ய ஹ்ருதயம் > த. ஆசார்யகிருதயம்.]

ஆசார்யாபிசேகம் *āšāryāpišēgam,* பெ.(n.) ஆசிரியர்க்குச் செய்யப்படும் சிறப்புச் சடங்கு; consecration of a guru or priest.

[Skt. ā-cārya+abisēka> த.ஆசார்யாபி சேகம்.]

ஆசாரக்கணக்கு *āšāra-k-kaṇakku,* பெ.(n.) கோயிலில் நடைபெறும் சடங்குகள் போன்ற வற்றைக் குறித்து வைக்கும் பொத்தகம் (நாஞ்.); record of temple rites and ceremonies.

த.வ. கோயில் நடப்புக்கணக்கு.

[ஆசாரம் + கணக்கு.]

ஆசாரக்கள்ளன் *āšāra-k-kaḷḷaṉ,* பெ.(n.) ஒழுக்கமுள்ளவன் போல் நடிக்கும் திருடன்; thief who pretends sancity sanctimonious person, one who makes a pretence of holiness. *அழுகள்ளன், தொழுகள்ளன், ஆசாரக்கள்ளன்.*

த.வ. படிமானக்கள்ளன்.

[ஆசாரம் + கள்ளன்.]

[Skt. ā-cāra > த. ஆசாரம்.]

கள் → கள்ளன், 'ன்' ஆ.பா.ஈறு.

ஆசாரக்கள்ளி *āšāra-k-kaḷḷi,* பெ.(n.) கற்புடையவள் (பதிவிரதை) போல் நடிப்பவள்; woman who pretends to be chaste.

த.வ. படிமானக்கள்ளி.

[ஆசாரம் + கள்ளி. Skt. ā - cāra > த. ஆசாரம். ஆசாரம் = நூலில் கூறிய (சாத்திர) முறைப்படி ஒழுகுதல், நன்னடத்தை. கள்ளி = கள்ளத்தன்மை மிக்கவள், வேலைசெய்யாது உழப்புபவள்]

ஆசாரகாண்டம் *āšāra-kāṇḍam,* பெ.(n.) வைத்திய நாத குருவனார் (தீட்சிதர்) எழுதிய அற நூலின் ஒரு பகுதி; a treatise on religious duties, one of the books written by Vaidyanātha Dīkṣitar.

[ஆசாரம் + காண்டம்.]

[**Skt.** *ā-cāra* + *த. காண்டம்.]*

கண்டம்>காண்டம்.

ஆசாரங்கூட்டு-தல் *āšārań-gūṭṭu-*, 5 செ. குன்றாவி.(v.t.) தூய்மையாகச் செய்தல்; to purify ceremonially.

[**Skt.** *ā-cāra* + *த. கூட்டு-தல்.]*

ஆசாரச்சாவடி *āšāra-c-cāvaḍi*, பெ.(n.) ஓலக்க மண்டபம் (வின்.); durbar hall.

[**Skt.** *ā-cāra* + **Mar.** *charady*.]

ஆசாரஞ்செய்-தல் *āšārañjey-*, 1 செ.கு.வி. (v.i.) ஒழுக்கத்தைப் பேணுதல் (ஆதரித்தல்) (குறள், 1075, உரை.); to perform one's duty sincerely, to perform duty for duty's sake.

த.வ. படிமானம் செய்தல்.

[**Skt.** *ā-cāra* > *த. ஆசாரம்.]*

[ஆசாரம் + செய்-தல்]

ஆசாரப்பிழை *āšāra-p-piḷai*, பெ.(n.) ஒழுக்கத்தவறு, கெட்டகுணம்; dereliction of duty, bad conduct.

த.வ. படிமானக்குற்றம்.

[ஆசாரம் + பிழை]

[**Skt.** *ā-cāra* > *த. ஆசாரம்.]*

ஆசாரபரன் *āšāra-paraṉ*, பெ.(n.) ஒழுக்கத்தில் ஊக்கமுள்ளவன்; one who is punctilious about the duties of his caste and order. *"ஆசாரபரனா யிருந்து மென்ன" (அறப். சத. 37.).*

த.வ. நல்லொழுக்கன், படிமானக்காரன்.

[**Skt.** *ā-cāra+paraṉ* > *த. ஆசாரபரன்.]*

ஆசாரபோசன் *āšāra-bōšaṉ*, பெ.(n.) ஆடம்பரத் தோற்றமுள்ளவன்; person of a very imposing appearance.

த.வ. ஆகுலத்தான்.

[**Skt.** *ā-cāra+bhōja* > *த. ஆசாரபோசன்.]*

ஆசாரம்[1] *āšāram*, பெ.(n.) 1. நூல்முறைப்படி ஒழுகுகை; conducting oneself according to the dictates of the šāstras. *"ஒழுக்கமன்பரு ளாசாரம்" (சி.சி. 2 : 23.).* 2. நன்நடத்தை; proper conduct, good behaviour. *"அச்சமே கீழ்கள தாசாரம்" (குறள், 1075). 'அவர் தன்குல ஆசாரப்படி நடப்பவர்'.* 3. பொது ஒழுக்கத்துக்கான அல்லது சமய குல ஒழுக்கத்துக்கான நெறிமுறைகள், வழக்கம்; custom, practice, usage. 4. தூய்மை; cleanliness. 5. ஆடை; cloth.

த.வ. நன்னடத்தை, படிமானம்.

[**Skt.** *ā-cāra* > *த. ஆசாரம்.]*

ஆசாரம்[2] *āšāram*, பெ.(n.) பெருமழை; heavy downpour of rain.

[**Skt.** *ā-šāra* > *த. ஆசாரம்.]*

ஆசாரம்[3] *āšāram*, பெ.(n.) காட்சி (அக.நி.); sight.

[**Skt.** *ācāra* > *த. ஆசாரம்.]*

ஆசாரம்[4] *āšāram*, பெ.(n.) 1. எங்கும் நிறைந்திருக்கும் அல்லது பரவியிருக்கும் தன்மை (வியாபகம்); pervasiveness. 2. படை; army.

[**Skt.** *āsāra* > *த. ஆசாரம்.]*

ஆசாரம்பண்ணு-தல் *āšāram-paṇṇu-*, 5 செ.கு.வி.(v.i.) விருந்தோம்பல்; to treat courteously. *'நீங்கள் அவனைக் கண்டு ஆசாரம் பண்ணுதல் செய்வீராகில்' (பாரதவெண். 159, உரை.).*

[ஆசாரம் + பண்ணு-தல்.]

[**Skt.** *āsāra* > *த. ஆசாரம்.]*

ஆசாரலிங்கம் *āšāra-liṅgam*, பெ.(n.) சிவக்குறி (சிவலிங்கம்) வகைகளுள் ஒன்று. (சித். சிகா. 201); one of *Šiva-liṅgam.*

[**Skt.** *ஆசாரம் + த. இலிங்கம்.]*

ஆசாரவீனன் *āšāra-vīṉaṉ*, பெ.(n.) தனக்குரிய ஒழுக்கத்தைக் கைவிட்டவன்; one who habitually breaks religious injunctions.

த.வ. ஒழுக்கக்கேடன்.

[Skt. ā-cāra-hīna > த. ஆசாரவீனன்[2].]

ஆசாரவீனி *āšāra-v-iṉi,* பெ.(n.) **ஆசாரவீனை** (திருப்பு. 488) பார்க்க; see *āšāra-viṉai.*

[Skt. ā-cāra-v-iṉi > த. ஆசாரவீனி.]

[வீனன் → வீனி.]

ஆசாரவீனை *āšāra-v-iṉai,* பெ.(n.) ஆசார வீனன் என்பதன் பெண்பால்; fem. of *āšāra-v-iṉaṉ.*

[Skt. ā-cāra-viṉai > த. ஆசாரவீனை.]

ஆசாரவுபசாரம் *āšāra-v-upašāram,* பெ.(n.) மிக்க மதிப்புரவு; sincere and hearty courtesy extended to a guest. *"ஆசார வுபசாரமா யாசனந்தனிலெழுந் தருளுமென்று" (திருவேங். சத். 84.).*

த.வ. ஒப்புரவு.

[Skt. ā-cāra+upa-cāra>த. ஆசாரவுபசாரம்.]

ஆசாரி *āšāri,* பெ.(n.) மாத்துவ மாலிய (வைணவ) பார்ப்பனரின் பட்டப் பெயர்; a title adopted by *Mādhva* and *Šrī Vaiṣṇava Brāhmans.*

T., k., Tu. ācāri

[Skt. ā - cārya > த. ஆசாரி.]

ஆசாரியசம்பாவனை *āšāriya-šampāvaṉai,* பெ.(n.) நல்ல நேரங்களில் ஆசாரியருக்குக் கொடுக்கும் காணிக்கை; offering of money to the spiritual head of a sect on auspicious occasions like marriage.

த.வ. குரவர் காணிக்கை, திருவாசிரிய உவந்தளிப்பு.

[Skt. ā-cārya+sambhāvanā > த. ஆசாரிய சம்பாவனை.]

ஆசாரியபக்தி *āšāriya-pakti,* பெ.(n.) ஆசானிடமுள்ள பற்று; devotion to a teacher, guru.

த.வ. ஆசான்பற்றி.

[Skt. ā-cārya+bhakti > த. ஆசாரியபக்தி.]

ஆசாரியபும்சதுவம் *āšāriya-pumšaduvam,* பெ.(n.) ஆசாரிய ஆண்கள் கொள்ளும் செருக்கு (கருவம்); sacerdotal hauteur of a religious preceptor.

த.வ. ஆசான்பெருமிதம்.

[Skt. ā-cārya+pumstva > ஆசாரியபும் ஸ்துவம் > த. ஆசாரியபும்சதுவம்.]

ஆசாரியபுருசம் *āšāriya-purušam,* பெ.(n.) கோயில் குருக்களுக்கு அளிக்கப்படும் மானியம்; grant of land to a priest for temple service.

த.வ. பூசகர்கொடை.

[Skt. ā-cārya+purusa > த. ஆசாரியபுருசம்.]

ஆசாரியபுருசன் *āšāriya-purušaṉ,* பெ.(n.) ஐந்து வகையான சடங்குகளைச் செய்வதற்குரிய மாலிய மறை அறிவன்; guru among Sri Vaiṣṇavas who is qualified to perform the *pañja-samskaras.*

த.வ. மாலியத்திருவாசிரியன், மாலியக் குரவன்.

[Skt. ā-cārya+purusa>த. ஆசாரியபுருசன்.]

[புருஷன் → புருசன்.]

ஆசாரியபோகம் *āšāriya-bōgam,* பெ.(n.) ஆசாரியன் நுகரும் பங்குரிமை (உரிமைத் துய்ப்பு) (தெ.இ.க. தொ.ii : 107); endowment enjoyed by an *ācāriya.*

த.வ. ஆசான் நுகர்வு.

[Skt. ā-cārya+bhōga>த. ஆசாரியபோகம்.]

ஆசாரியன் *āšāriyaṉ,* பெ.(n.) சமய ஆசிரியர் (மதகுரு); spiritual teacher duly anointed and authorized to initiate others into the esoteric doctrines of religion. 2. சமயத் (மதத்) தலைவன்; head of a religious sect. 3. ஆசிரியன்; teacher, preceptor.

த.வ. சமயக்குரவர்.

[Skt. ā-cārya > த. ஆசாரியன்.]

ஆசாரியன்திருவடியடை-தல் *āšāriyaṉ-tiru-v-āḍi-y-aḍai-,* 4 செ.கு.வி. (v.i.) இறந்து நற்பேறடைதல் (நற்கதி அடைதல்)

(மாலியவழக்கு); reaching the guru's feet, an euphemism for dying.

த.வ. திருவடிப்பேறு.

[ஆசாரியன் + திருவடியடை-தல்.]

[Skt. ā-cārya > த. ஆசாரியன்.]

ஆசாரோபசாரம் *āšārōbašāram,* பெ. (n.) விருந்தினரிடம் காட்டும் மதிப்புரவு; sincere and hearty courtesy to a guest.

த.வ. விருந்துபேணல்.

[Skt. ā-cāra+upa-cāra>த.ஆசாரோபசாரம்.]

ஆசாலுகம் *āšālugam,* பெ. (n.) ஒகவகைகளுள் ஆசானுகம் ஒன்று (தத்துவப். 109, உரை); a yōgic posture.

[Skt. ā-jānuka > த. ஆசாலுகம்.]

ஆசானவனுயிர் *āšāṉavaṉ-uyir,* பெ.(n.) முயல்; hare (சா.அக.).

ஆசானுபாகு *āšāṉu-pāgu,* பெ.(n.) **ஆசானுவாகு** பார்க்க; see *āšāṉu-vāgu.* (சா.அக.).

ஆசானுவாகு *āšāṉu-vāgu,* பெ.(n.) முழங்காலளவு நீண்ட கையுடைய பெருந்தோற்ற முள்ளோன்; one whose arms reach his knees, indicating majesty of stature.

த.வ. செந்தோற்றன், தாள்தோய்தடக்கையன்.

[Skt. ā-jānu+bāhu > த. ஆசானுவாகு.]



ஆசிகம்[1] *āšigam,* பெ.(n.) முகம்; face.

[Skt. āsya > ஆசிகம்.]

ஆசிகம்[2] *āšigam,* பெ.(n.) ஆட்டுப் புழுக்கை; the excretes of the sheep (சா.அக.).

ஆசிகரோகம் *āšigarōgam,* பெ.(n.) கண்ணின் கருவிழியில் ஆட்டுப்புழுக்கையைப் போல் கொப்புளங் கண்டு பிதுங்கி அதைச் சுற்றிலும் சிறுசிறு குருக்கள் நிறைந்து, அதிக வலியையும், செந்நீரொழுக்கையும் உண்டாக்கும் கண் நோய்; an eye disease attended with protrudsion of the cornea about the shape of the sheep's excrete (சா.அக.).

த.வ. கருவிழிக்கொப்புளம்.

[ஆசிகம் + ரோகம்.]

ஆசித்திரி *āšittiri,* பெ.(n.) மிகுந்த உணவு உண்பவன்; glutton (சா.அக.).

ஆசிதகுருக்கன் *āšida-kurukkaṉ,* பெ.(n.) 32 வகைச் செய்நஞ்சுள் ஒன்றான காக நஞ்சு; one of the 32 kinds of prepared arsenic.

ஆசிதம் *āšidam,* பெ.(n.) 1. ஒரு வண்டிச் சுமை; a cart-load, as a measure of weight. 2. இருநூறு துலாங் கொண்ட சுமை (பாரம்); weight of 200 tulām.

[Skt. āšita > த. ஆசிதம்.]

ஆசியக்காரன் *āšiya-k-kāraṉ,* பெ.(n.) சிரிப்பூட்டும் நகைச்சுவைப் பேச்சுக்காரன் (விகடஞ் செய்வோன்); buffoon.

[Skt. hāsya > த. ஆசியம் + காரன் - ஆசியக்காரன்.]

ஆசியக்குவாதம் *āšiya-k-kuvādam,* பெ.(n.) உடற் சூட்டால் வாயில் புண் உண்டாகி, மார்பில் வலியையும் உண்டாக்கும் ஒருவகை நோய்; an ulceration of the mouth due to excessive heat arising from the deranged *Vāyu.* It also cause pain in the chest (சா.அக.).

த.வ. மார்வலி.

ஆசியசீரகம் *āšiya-širagam,* பெ.(n.) கருஞ்சீரகம்; black cumin (சா.அக.).

ஆசியதகரான்னம் *āšiya-takarāṉṉam,* பெ.(n.) நஞ்சு கலந்த சோறு; food mixed with poison (சா.அக.).

த.வ. நஞ்சுணவு.

ஆசியநாடகம் *āšiya-nāḍagam,* பெ.(n.) நகைச்சுவை மிக்க நாடகம்; farce.

[ஆசியம் + நாடகம்.]

[Skt. hāsya> த. ஆசியம்.]

ஆசியபத்திரம் *āšiya-pattiram,* பெ.(n.) தாமரை (பச்.மூ.); lotus.

ஆசியபாகபித்தம் *āšiya-pāgapittam,* பெ.(n.) பித்தம் தலைக்கேறி வாயில் புண் உண்டாகி, பசியின்மை, ஏப்பம், காய்ச்சல், கொட்டாவி, விக்கல் ஆகிய குணங்களைக் காட்டும் ஒருவகைப் பித்த நோய்; a disease due to the aggravated bill in the system (சா.அக.).

த.வ. தலைப்பித்தம்

[ஆசியம்[1] + பாகம் + பித்தம்.]

[Skt. āsya>த. ஆசியம்.]

ஆசியபாகம் *āšiyapāgam,* பெ.(n.) முகத்தின் உறுப்புகள்; facial organs (சா.அக.).

[ஆசியம்[1] + பாகம்.]

[Skt. āsya>த. ஆசியம்.]

ஆசியபாகவாதம் *āšiya-pāga-vādam,* பெ.(n.) முக உறுப்புகளைத் தாக்கும் ஒருவகை ஊதை நோய்; a nervous disease affecting the facial organs (சா.அக.).

[ஆசியம் + பாகம் + வாதம்.]

[Skt. āsya>த. ஆசியம்.]

ஆசியம்[1] *āšiyam,* பெ.(n.) 1. வாய்; mouth. 2. முகம்; face. 3. கண்களின் நடுவிலிருக்கும் இடம்; a mystic spot between the eye-brows.

[Skt. āsya > த. ஆசியம்.]

ஆசியம்[2] *āšiyam,* பெ.(n.) 1. சிரிப்பு; laughter. 2. கிண்டல்; jest, ridicule. 3. ஒன்பான் சுவைகளுளொன்று; sentiment of humour, one of nava-rasam. 4. கருஞ்சீரகம்; black-cumin.

த.வ. நகைப்பு.

[Skt. hāsya > த. ஆசியம்.]

ஆசியலோமன் *āšiya-lōmaṉ,* பெ.(n.) முக மயிர் அல்லது தாடி மயிர்; the hair of the face such as, the mustaches or the beard. (சா. அக.)

ஆசியவாங்கலம் *āšiya-vāṅgalam,* பெ.(n.) கலப்பை முகம்; plough like face (சா.அக.).

ஆசியவாதம் *āšiya-vādam,* பெ.(n.) முக வூதை; முகத்தின் உறுப்புகளைச் சிதைக்கும் (பின்னப்படுத்தும்) ஓர் ஊதை நோய்; a disease affecting the facial organs.

ஆசியாசவம் *āšiyā-šavam,* பெ.(n.) 1. எச்சில்; matter ejected from the mouth. 2. உமிழ் நீர். the fluid secreted by the salivary glands which serves to moisten the tongue and the mouth-Saliva (சா.அக.).

ஆசியாசுகம் *āšiyā-šugam,* பெ.(n.) சுவையில்லாதது; disagreeableness to the mouth or to the taste (சா.அக.).

ஆசியாட்சேபவாதம் *āšiyāṭcēba-vādam,* பெ.(n.) முகவுறுப்புகளைப் பொறுத்து வலி உண்டாக்கும் ஒரு ஊதை நோய்; a disease affecting the nerves of the facial organs (சா.அக.).

த.வ. முகநரம்புநோய்.

ஆசியோதனம் *āšiyōdaṉam,* பெ.(n.) 1. கண்ணோய்க்கு விடும் மருந்து; eye drops. 2. உடலின் ஒன்பது துளைகள் வழியே செலுத்தும் எண்ணெய்; medicated oil caused to be absorbed through, the nine openings of the body (சா.அக.).

த.வ. கண் மருந்து.

ஆசியோபலேபம் *āsiyōbalebam,* பெ.(n.) சளியால் வாயில் ஏற்படும் தடை; obstruction in the mouth due to phlegm (சா.அக.).

த.வ. நீர்க்கோள் அடைப்பு.

ஆசிர்வதி-த்தல் *āsir-vadi-,* 4. செ.கு.வி.(v.i.) வாழ்வில் சீரும் சிறப்பும் நன்மையும் பெறுமாறு வாழ்த்துதல்; wish one happiness, prosperity, etc. bless.

[Skt. *āsirvad* > த. *ஆசிர்வதி-த்தல்.*]

ஆசிர்வாதம் *āsir-vādam,* பெ.(n.) சீரும், சிறப்பும் பெறுமாறு கூறும் நல்வாழ்த்து; blessing; good wishes; the invoking of happiness. *அமைச்சர்கள் மணமக்களுக்கு ஆசிர்வாதம் வழங்கினர்.*

த.வ. நல்வாழ்த்து.

[Skt. *āsir-vāda* > த. *ஆசிர்வாதம்.*]

ஆசிர்விடம் *āsir-vidam,* பெ.(n.) நச்சுப் பாம்பு; venomous snake (சா.அக.).

ஆசிரம் *āsiram,* பெ. (n.) நெருப்பு (சா.அக.); fire.

ஆசிரமம் *āsiramam,* பெ.(n.) 1. துறவிகள் வாழுமிடம்; sage's house. *'இந்த ஆசிரமம் துறவிகளுக்காவே கட்டப்பட்டது', "அறவோர் வைகுமாசிரமத்து" (சேதுபு. 2வது சக்கர. 1).* 2. முனிவர் அல்லது இறை நெறியில் ஈடுபட்டோர் வாழுமிடம்; the abode of an ascetic or anyone who is engaged in spiritual activities. *'அரவிந்தர் ஆசிரமம் புதுச்சேரிக்கருகில் உள்ளது'.* 3. களைகண் (ஆதரவு) அற்றோர் போன்றவர்களுக்குப் பாதுகாப்புத் தரும் முறையில் அமைக்கப்படும் இடம், விடுதி; home for the destitutes, disabled etc. *ஏதிலியர்க்காகக் கட்டப்பட்ட ஆசிரமம் இது.* 4. வாழ்வின் நால்நிலைகள்; four stages of life.

த.வ. திருவாசிரிய இருக்கை, புகலிடம்.

[Skt. *ā-srama* > த. *ஆசிரமம்.*]

ஆசிரமி *āsirami,* பெ.(n.) 1. வாழ்வின் நான்கு நிலைகளைக் கடைபிடிப்பவன்; one who is in any one of the four stages of life a word tacked on to compounds. 2. முனிவன்; sage.

[Skt. *ā - sramin* > த. *ஆசிரமி.*]

ஆசிரயணம் *āsirayaṇam,* பெ.(n.) சார்ந்து நிற்கை (திவ். திருவாய் 6.1 : 6, பன்னீ.); seeking refuge with or depending on another.

[Skt. *ā-srayaṇa* > த. *ஆசிரயணம்.*]

ஆசிரயம் *āsirayam,* பெ.(n.) அடுத்திருக்கை; dependence, seeking protection with another. *"இச்சைமற் றாசிரயங் குற்றோன்" (ஞானா. 61:19.).*

[Skt. *ā-sraya* > த. *ஆசிரயம்.*]

ஆசிரவம்[1] *āsiravam,* பெ.(n.) ஒன்பான் கறிவகைகளுள் ஒன்று (சீவக. 2814, உரை.); the way karma is acquired by the human soul, one of *nava-patārttam.*

[Skt. *ā-srava* > த. *ஆசிரவம்.*]

ஆசிரவம்[2] *āsiravam,* பெ.(n.) 1. அரிசி கொதிக்கும் போது உண்டாகும் நுரை; the foams in boiling rice. 2. புலனின் புறப்பற்று; the action of the senses which impels the soul towards external objects. 3. துன்பம்; pain. 4. ஏழுவகை மெய்ம்மைகளுள் ஒன்று; one of the seven tattuvams. 5. புறப் பற்றினால் வந்து சேரும் செருக்கு; the influence or action of the body, mind and speech in impelling the soul to generate karma (சா.அக.).

[*ஆசிரவம்*[1] → *ஆசிரவம்*[2].]

ஆசிரிதம் *āsiridam,* பெ.(n.) சார்ந்திருக்கை; dependence, depending upon another.

[Skt. *ā-srita* > த. *ஆசிரிதம்.*]

ஆசிருத்தம் *āsiruttam,* பெ. (n.) புன்குமரம்; a tree; Indian beech-*Dalbergia arborea* (சா.அக.).

ஆசில் *āšil,* பெ.(n.) வாழ்த்து (நாமதீப.); blessing.

[Skt. āših > த. ஆசில்.]

ஆசிலேடம் *āšilēḍam,* பெ.(n.) தழுவுகை; embrace (சா.அக.).

ஆசிலேடித்தல் *āšilēḍittal,* தொ. பெ. (vbl. n.) தழுவுகை; embrace (சா.அக.).

ஆசிவிடம் *āšiviḍam,* பெ.(n.) நன்மை செய்யாத வேளைகளுள் (அசுப யோகம்) ஒன்று; an inauspicious *yōkam.*

[Skt. āšī-viṣa > த. ஆசிவிடம்.]

ஆசீர்வசனம் *āšīr-vašaṉam,* பெ. (n.) வாழ்த்துரை (வீரசோ. அலங். 33.); word of blessing, benediction.

[Skt. āšīr-vacana > த. ஆசீர்வசனம்.]

ஆசீர்வதி–த்தல் *āšīr-vadi-,* 4 செ.கு.வி. (v.i.) வாழ்த்துதல்; to bless, pronounce benediction upon.

த.வ. வாழ்த்தல்.

[Skt. ā-šīrvad > த. ஆசீர்வதி–த்தல்.]

ஆசீர்வாதம் *āšīr-vādam,* பெ.(n.) வாழ்த்து; blessing, benediction.

[Skt. ā - šīr-vāda > த. ஆசீர்வாதம்.]

ஆசீல் *āšīl,* பெ.(n.) மதிப்பு; valuation, estimate.

[U. hāsil > த. ஆசீல்.]

ஆசீவகப்பள்ளி *āšīvaga-p-paḷḷi,* பெ.(n.) சமண முனிவர்களின் உறைவிடம் (நன். 158, மயிலை.); monastery of the ascetics of the Ājiv-aka sect.

[ஆசீவகன் + பள்ளி.]

[Skt. ā-jīvaka > த. ஆசீவகன்.]

ஆசீவகன் *āšīvagaṉ,* பெ.(n.) 1. சமணரில் ஒரு பிரிவினன் (மணிமே. 27 : 108); member of a Jaina sect founded by *Gōšāla.* 2. சமண முனிவன்; Jaina ascetic.

[Skt. ā-jīvaka > த. ஆசீவகன்.]

ஆசுக்காயம் *āšukkāyam,* பெ.(n.) பேய் வெங்காயம்; wild onion (சா.அக.).

ஆசுகம் *āšugam,* பெ.(n.) 1. காற்று (சூடா.); wind, being that which moves swiftly. 2. அம்பு; arrow. *"ஐந்திற னாகிய வாசுக வில்வேள்"(கந்தபு.காமதக.1).* 3. பறவைப் பொது; birds in general.

[Skt. āšu-ga > த. ஆசுகம்.]

ஆசுகவி *āšu-kavi,* பெ.(n.) 1. எந்த முன்னேற்பாடு மின்றிக் கொடுத்த பொருளில் உடனடியாகச் செய்யுள் இயற்றும் வல்லமை படைத்த புலவன்; one who composes verses extempore. 2. கொடுத்த பொருளில் அடுத்த பொழுதிற் பாடும் பாட்டு (வெண்பாப். செய். 2, உரை); verse composed extempore and satisfying certain given conditions, one of *nār-kavi.*

த.வ. ஊற்றுப்பலா, ஊற்றுப்பாவலன்.

[Skt. āšu+kavi > த. ஆசுகவி.]

ஆசுகன்[1] *āšugaṉ,* பெ.(n.) ஞாயிறு (நாநார்த்த.); sun.

[Skt. āšu-ga > த. ஆசுகன்.]

ஆசுகன்[2] *āšugaṉ,* பெ.(n.) வளி (வாயு) (பாரத. புட்ப. 67.); Vāyu, as one who moves swiftly.

[Skt. āšu-ga > த. ஆசுகன்.]

ஆசுகா *āšukā,* பெ.(n.) ஒருவகைச் சருக்கரை; sugar from āska in the Ganjam district.

[Skt. āska > த. அசுகா.]

ஆசுகா என்பது சருக்கரை செய்யும் ஊர்.

ஆசுகி *āšugi,* பெ.(n.) பறவைப் பொது; bird in common (சா.அக.).

[Skt. āšu-ga > த. ஆசுகி.]

ஆசுசம் *āšušam,* பெ.(n.) மாதவிடாய்; menstruation (சா.அக.).

ஆசுசுக்கணி *āšu-šukkaṇi,* பெ.(n.) நெருப்பு (பாரத. காண். 55.); fire, because it shines.

[Skt. ā-šušuk-ṣaṇi > த. ஆசுசுக்கணி.]

ஆசுதாபனம் *āsudābaṉam,* பெ.(n.) 1. வலிமை உண்டாக்கும் மருந்து; a strengthening remedy - *Restarative.* 2. எண்ணெய் அல்லது நெய் முதலிய கழிச்சலை உண்டாக்கும் பொருட்கள்; an enema of oil or ghee etc. 3. மலவாய் வழியாய்ச் செலுத்துகை; the act of introducing through the rectum (சா.அக.).

ஆசுதி *āsudi,* பெ.(n.) காய்ச்சி வடிக்கப்பட்டது; distilled - *Distila* (சா.அக.).

த.வ. வடிநெய்.

ஆசுதித்தநீர் *āsuditta-nīr,* பெ.(n.) 1. காய்ச்சி வடிகட்டிய நீர்; water boiled and filtered. 2. வாலையிலிறக்கிய நீர்; water obtained by evaporation and condensation - *Distilled water.*

த.வ. வடிநீர்

ஆசுபத்திரம் *āsupattiram,* பெ.(n.) அகச் சூலி; toon tree - *Cedrela ṯoona.*

ஆசுபத்திரி *āsupattiri,* பெ.(n.) மருத்துவமனை; hospital.

த.வ. மருந்தகம்.

[E. Hospital > ஆஸ்பத்திரி > த. ஆசுபத்திரி.]

ஆசுபதம் *āsupadam,* பெ.(n.) 1. இடம்; place. 2. பிடிபாடு; support, hold. 3. கரணியம் (காரணம்); cause. *கலகத்திற்கு ஆசுபதமென்ன ?*

*[**Skt.** ā-s-pada > ஆஸ்பதம் > த. ஆசுபதம்.]*

ஆசுபோடம் *āsupōḍam,* பெ.(n.) 1. புற் பூண்டுகளைக் குறிக்கும் பெயர்; a generic name for several plants. 2. நடுக்கம்; shivering, trembling (சா.அக.).

ஆசுரங்கமூலி *āsuraṅga-mūli,* பெ.(n.) பிரமியிலை; diabetes plant are important medical herb - *Gratiola Monieri* (சா.அக.).

ஆசுரம்[1] *āsuram,* பெ.(n.) 1. இஞ்சி; ginger. 2. வெள்ளை வெங்காயம்; white onion. 3. கத்தியாலறுக்கை; to open with a knife as is done to a boil, abscess etc. 4. மெய்யறிவு; philosophical wisdom; spiritualism. 5. காயங்களைக் குணப்படுத்தும் மருந்துவகை; a division of surgery. 6. கருவிகளால் வெட்டிச் செய்யும் மருத்துவ முறை; curing by cutting with an instrument. 7. சூடுபோடுகை, applying cautery (சா.அக.).

*[**Skt.** āsura > த. ஆசுரம்.]*

ஆசுரம்[2] *āsuram,* பெ.(n.) 1. அரக்கர் தொடர்பானது; that which belongs or relates to Asuras. *"ஆசுரப் பெரும்படைக்கலம்" (கம்பரா. இராவணன் வதை. 97.)* 2. தலைமகளுக்குப் பொன்பூட்டிச் சுற்றத்தார்க்கு வேண்டுவன கொடுத்துக் கொள்ளும் மணம் (நம்பியகப். 117, உரை); a form of marriage in which the bridegroom obtains the bride by bedecking her with jewels and by paying what is known as bride's price to her father and paternal kinsmen. 3. ஒரு பெண் பேய்; a female demon.

*[**Skt.** āsura > த. ஆசுரம்.]*

இது தமிழர்க்குரிய மணமுறையன்று.

ஆசுரம்[3] *āsuram,* பெ.(n.) நாளிகம் முதலிய கருவிகளாற் செய்யப்படும் போர் (சுக்கிர நீதி, 332); war waged with guns, etc.

*[**Skt.** āsura > த. ஆசுரம்.]*

நாளிகம்: கோட்டை மதிற்சுவரில் அமைக்கப்படும் எறிபடைவகை (சுக்கிர நீதி, 328).

ஆரியர் அல்லாதாரின் போர்முறை.

ஆசுரவைத்தியம் *āsura-vaittiyam,* பெ.(n.) அறுவை மருத்துவம்; the operative branch of medical practice. - Surgery, as one of the methods of healing (சா.அக.).

த.வ. பண்டுவம்.

*[**Skt.** āsura+vaidhya> த. ஆசுரவைத்தியம்.]*

ஆரியம் அல்லாத திரவிடரின் மருத்துவம்.

ஆசுராப்பண்டிகை *āšurā-p-paṇḍigai,* பெ.(n.) மொகரம் பண்டிகை; Muharram, a Muhammadan festival.

[ஆசுராம் + பண்டிகை.]

[U. āshūr > த. ஆசுராம்.]

ஆசுரி[1] *āšuri,* பெ.(n.) அரக்கர் குலப்பெண்; an Asura female. *"ஆசுரியின் சின்னங்களாவ" (விநாயகபு. 83:76).*

[Skt. āsurī > த. ஆசுரி.]

ஆசுரி[2] *āšuri,* பெ.(n.) அறுவை மருத்துவத்தில் தேர்ந்தவர்; surgeon (சா.அக.).

த.வ. பண்டுவர், தமிழ் மருத்துவர்.

ஆசுவம் *āšuvam,* பெ.(n.) சமணரில் ஒரு பிரிவினராகிய ஆசீவகரின் உணவு; food of the *Ajīvakas.* ஆசுவிமக்கள் ஆசுவமுண்ணும் பேரால் (E.C.)

[Skt. ā-jīvaka > த. ஆசுவம்.]

ஆசுவயுசி *āšuvayuši,* பெ.(n.) ஒரு வகை வேள்வி (திவா.); sacrifice in the household fire on the full moon of āšvina.

[Skt. āšvayuja > த. ஆசுவயுசி.]

ஆசுவலாயனம் *āšuvalāyaṉam,* பெ.(n.) மதச்சடங்குகள் பற்றிய ஒரு நூல்; a collection of ritualistic, aphorisms, by *Āšvalāyana* dealing with domestic and Vēdic rites.

[Skt. āšvalāyana > த. ஆசுவலாயனம்.]

ஆசுவாசம் *āšu-vāšam,* பெ.(n.) 1. பரபரப்பு, கவலை போன்றவை நீங்கிய பின் கிடைக்கும் ஆறுதல்; relief; consolation. *அவள் ஆசுவாசத்துடன் உட்கார்ந்துகொண்டு பேசத் தொடங்கினாள்.* 2. இளைப்பாறுகை; taking breath, resting.

த.வ. தணிவு.

[Skt. ā - švāsa > த. ஆசுவாசம்.]

ஆசுவிகன் *āšu-vigaṉ,* பெ.(n.) **ஆசீவகன்** பார்க்க (S.I.I. i, 108.); see *āšīvagan.*

[Skt. ā-jīvaka > த. ஆசீவகன்.]

ஆசுவினம் *āšuviṉam,* பெ.(n.) நிலவு மாதத்துள் ஏழாவது; seventh lunar month roughly corresponding to Aippaci.

[Skt. āšvina > த. ஆசுவினம்.]

ஆசுவீசம் *āšuvīšam,* பெ.(n.) **ஆசுவினம்** பார்க்க; see *āšuviṉam.*

[Skt. āšvayuja > த. ஆசுவீசம்.]

ஆசூ *āšū,* பெ.(n.) 1. நிரய உலகில் (நரக உலகம்) கொடுக்கப்படும் தண்டனை; torments of hell. 2. அமஞ்சி வேலை; working without wages.

[Skt. ājū > த. ஆசூ.]

ஆசூசம் *āšūšam,* பெ.(n.) தீட்டு; defilement, caused by the birth of a child or by the death of a relative. *"ஆ சூ ச மி ல் லை யருநியமத்தருக்கு" (திருமந். 2552.).*

த.வ. தீட்டு, தொடக்கு.

[Skt. āšauca > த. ஆசூசம்.]

ஆசேகம் *āšēgam,* பெ.(n.) நனைக்கை; moistening, pouring water upon. *"ஆசேகவொண்புனல்" (கந்தபு. வில்வலன் வாதாவிவ. 12.).*

[Skt. ā-sēka > த. ஆசேகம்.]

ஆசேதம் *āšēdam,* பெ.(n.) அரசனாணையை மேற்கொண்டு தடைசெய்கை. (சுக்கிர நீதி, 262); stopping or obstructing in the king's name.

த.வ. அரசுத்தடை.

[Skt. āsēdha > த. ஆசேதம்.]

ஆசைசவப்பனை *āšaiva-p-paṉai,* பெ.(n.) பனங்கள்; palmyra toddy (சா.அக.).

ஆசைசவம் *āšaivam,* பெ.(n.) கள்; toddy (சா.அக.).

ஆசோதை *āšōdai,* பெ.(n.) 1. ஓய்வு; rest or repose. 2. இளைப்பாறுகை; taking rest (சா.அக.).

த.வ. ஒழிவு.

ஆசௌசம் *āšaušam,* பெ. (n.) தீட்டு (கூர்மபு. அனுக்கிர 25.); pollution.

[Skt. āšauca > த. ஆசௌசம்.]

ஆஞ்சனேயன் *āñjaṉēyaṉ,* பெ.(n.) அனுமான் (நல். பாரத. இராமன் படையெழு. 111); Hanumāṉ.

[Skt. āñjanēya > த. ஆஞ்சனேயன்.]

ஆஞ்ஞாபனம் *āññābaṉam,* பெ.(n.) கட்டளையிடுகை; commanding, ordering.

[Skt. ā - jñāpana > த. ஆஞ்ஞாபனம்.]

ஆட்சேபகம் *āṭšēbagam,* பெ. (n.) 1. இசிவு; spasm. 2. வலிப்பு; convulsive contortion of the limbs. 3. உதைத்துக் கொள்கை; a violent involuntary action of the muscle as in convulsion or fits.

த.வ. நடுக்கம்.

[Skt. ā - kṣēpav > த.ஆட்சேபகம்.]

ஆட்சேபகவாதம் *āṭšēbagavādam,* பெ. (n.) பிட்டம், தோள், கை முதலியவிடங்களில் நின்று நரம்புகளில் பரவி, உடம்பில் வலிப்பையும், நடுக்கத்தையும் உண்டாக்கும் ஒரு நோய், a disease enraged Vayu while country swiftly through the nerves in the hips, shoulders, arms etc develops fits tremor, vanishing or loss of consciousness etc.

த.வ. நடுக்கநோய்.

[ஆட்சேபகம் + வாதம்.]

ஆட்சேபசமாதானம் *āṭšēba-šamādāṉam,* பெ. (n.) தடைவிடை; objection and its rejoinder.

[Skt. ā-kṣēpa + sam-ā-dhāna > த. ஆட்சேபசமாதானம்.]

ஆட்சேபணை *āṭšēbaṇai,* பெ. (n.) ஒன்றை ஏற்பதற்கு அல்லது ஒன்றைச் செய்வதற்கு ஒருவர் எழுப்பும் தடை, மறுப்பு; objection.

த.வ. தடை.

[Skt. ā-kṣēpaṇa > த. ஆட்சேபணை.]

ஆட்சேபம் *āṭšēbam,* பெ.(n.) 1. மறுப்பு, தடை; objection. *நீங்கள் இங்கு தங்குவதற்கு எந்த ஆட்சேபமும் இல்லை. "பாற்கவன்றனைக் குமாரி யாட்சேபம் பகர்ந்த வாறும்" (மச்சபு. அனுக்கிர. 9.).* 2. எதிர்ப்பு, கண்டனம்; protest. சுற்றுச்சூழல் அமைப்பு ஆட்சேபக் குரல் எழுப்பியது. 3. குற்றம், fault, flaw.

த.வ. மறுப்பு.

[Skt. ā-kṣēpa > ஆக்ஷேபம் > த. ஆட்சேபம்.]

ஆட்சேபாலங்காரம் *āṭšēbālaṅgāram,* பெ.(n.) ஒருவகை அணியிலக்கணம்; figure of speech in which a statement is withdrawn as if correcting oneself on second thought.

[Skt. ā-kṣēpa + alam-kāra > த. ஆட்சேபாலங்காரம்.]

ஆட்சேபி-த்தல் *āṭšēbi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. தடை செய்தல், தடை நிகழ்த்துதல்; to object, to challenge. 2. ஒரு கூற்றை எதிர்த்தல் அல்லது மறுப்புக்கூறுதல்; protest against object. *'தலைவரின் பேச்சை யாரும் ஆட்சேபிக்க வில்லை'.*

[Skt. ā-kṣēpa > த. ஆட்சேபி-த்தல்.]

ஆடகக்குடோரி *āḍaga-k-kuḍōri,* பெ.(n.) மயிலாடுங் குருந்து; a plant (unidentified) (சா. அக.).

ஆடகண்டம் *āḍagaṇḍam,* பெ.(n.) பெருங்காயம்; asafoetida - *Ferula asafoetida* (சா.அக.).

ஆடகாவிகம் *āḍakāvigam,* பெ.(n.) மரவுரி; bark tree - *Antarias toxicaria* (சா.அக.).

ஆடபிராக்கு *āḍapirākku,* பெ.(n.) வெள்ளை நோய்க்காகப் பயன்படுமோர் கடைச் சரக்கு; a bazaar drug used in gonorrhoea and other venereal complaints (சா.அக.).

ஆடாகங்கநிதானம் *āḍāgaṅga-nidāṉam,* பெ.(n.) ஒரு சிறந்த வடமொழி மருத்துவ நூல்; a celebrated Ayurvedic Science (சா.அக.).

ஆடுதலி *ādutali,* பெ.(n.) அதிகாரியுடன் இருக்கும் உதவியாள்; orderly.

[E. orderly > த. ஆடுதலி.]

ஆடோபம்[1] *ādōbam,* பெ.(n.) 1. செருக்கு, திமிர்; pride, self-conceit. 2. வீக்கம்; puffing; swelling.

[Skt. āṭōpa > த. ஆடோபம்.]

ஆடோபம்[2] *ādōbam,* பெ.(n.) காற்று கொள்ளல்; being affected with gas or morbid air in the system (சா.அக.).

ஆத்தசம் *āttašam,* பெ.(n.) மொச்சை; country bean, *Dolichos lablab* (சா.அக.).

ஆத்தாள்நாதம் *āttāḷnādam,* பெ.(n.) அப்பிரகம்; a hydrous silicate of magnesia - Indian mica (சா.அக.).

ஆத்தானகோழை *āttāṉa-kōḻai,* பெ.(n.) அவைக்கோழை; one who is afraid to speak in, or to face, an assembly.

[ஆத்தானம்+கோழை.]

[Skt. ā-sthāna > த. ஆத்தானம்.]

ஆத்தானசந்தோசி *āttāṉa-šantōši,* பெ.(n.) நகையாளன், நகைச்சுவையை விளைவிப்பவன் (விகடன்); buffoon.

த.வ. அவைக்கள நகைவன்.

[Skt. ā-sthāna + cantōsi >த.ஆத்தான சந்தோசி.]

ஆத்தானம் *āttāṉam,* பெ.(n.) 1. அரசசபை; king's audience hall. 2. அவை; assembly, hall of audience.

[Skt. ā-sthāna > த. ஆத்தானம்.]

ஆத்தானமண்டபம் *āttāṉa-maṇḍapam,* பெ.(n.) அவை நடக்கும் மண்டபம்; hall of audience.

த.வ. நாளோலக்கம், ஓலக்க மண்டபம்.

[ஆத்தானம் + மண்டபம்.]

[Skt. ā-sthāna > த. ஆத்தானம்.]

ஆத்தி *ātti,* பெ.(n.) சொத்து; property, wealth, riches.

[Skt. āsti > த. ஆத்தி]

ஆத்திகம் *āttigam,* பெ.(n.) கடவுள் உண்டென்று நம்பும் கொள்கை; theism.

[Skt. āstika > த. ஆத்திகம்.]

ஆத்திகன் *āttigaṉ,* பெ.(n.) கடவுள் முதலிவை உண்டென்று நம்புவோன்; one who believes in the existence of God and of a future world, opp. to nāsthigaṉ.

[Skt. āstika > த. ஆத்திகன்.]

ஆத்திபாத்தி *ātti-pātti,* பெ.(n.) சொத்து; property.

[Skt. āsti+bhāsti > த. ஆத்திபாத்தி.]

ஆத்தியந்தம் *āttiyandam,* பெ.(n.) முதலும் முடிவும்; beginning and end.

[Skt. ādi+anta > த. ஆதியந்தம் > ஆத்தியந்தம்.]

ஆத்தியந்திகபிரளயம் *āttiyandiga-piraḷayam,* பெ.(n.) முழு அழிவு (சர்வசங்காரம்) (அபி. சிந்); total annihilation; final deluge.

[Skt. ātyandiga+pra-laya > த. ஆத்தியந்தி கபிரளயம்.]

ஆத்தியாத்துமிகம் *āttiyāttumigam,* பெ.(n.) தன்வினைபற்றிவருந் துன்பம் (வின்); evil due to one's own acts.

[Skt. ādhyātmika > த. ஆத்தியாத்துமிகம்.]

ஆத்திரேயர்[1] *āttirēyar,* பெ.(n.) **ஆத்திரையன்** பார்க்க; see *āttiraiyaṉ.* 2. ஆத்திரையன் என்னும் தமிழ் மருத்துவர் பெயரின் வடமொழியாக்கம்; translation of the Tamil name *āttiraiyaṉ,* an ancient authority of Tamil medicine.

ஆத்திரேயர்[2] *āttirēyar,* பெ.(n.) ஆத்திரையன் என்னும் தமிழ்ப் பெயரிட்டுக் கொண்டவரும் வடமொழியில் மருத்துவச் சொல் வரிசை (நிகண்டு) எழுதி மிகமைபேர் பெற்றவருமாகிய வடநாட்டு முனிவர். இவர் பாஞ்சால நாட்டிற் பிறந்து, ஆயுள் மறையில் (வேதத்தில்) புலமை பெற்றவர். அக்கினி வேசருக்குக் குருவாய் இருந்தவரின் நூலை "ஆத்திரேய சம்மிதை" எனும் வடமொழிநூலாக எழுதியவர்; he is a great sage and is well known as the author of a medical vocabulary. He is a native of the Punjab and attained great celebrity in Ayurveda. He is said to be the Successor of Agnivesa and is now considered to be a great authority on Ayurveda (சா.அக.).

*[த. ஆத்திரையன் > **Skt.** āttrēya.]*

ஆத்திரேயன் *āttirēyaṉ,* பெ.(n.) 1. நிலவு; moon; 2. அத்திரி குலத்திற் பிறந்தவன்; a descendant of the sage Atri.

*[**Skt.** Atrēya > த. ஆத்திரேயன்.]*

ஆத்திரேயி *āttirēyi,* பெ.(n.) 1. ஓர் ஆறு; a river; 2. பூப்புள்ளவள்; woman in her periods.

*[**Skt.** ātrēyī > த. ஆத்திரேயி.]*

ஆத்திரேயிகை *āttirēyigai,* பெ.(n.) மாத விடாய்க்குப் பின் குளித்த பெண்; a woman who has bathed after her course (சா.அக.).

ஆத்திரேயை *āttirēyai,* பெ.(n.) அன்னப் பால்; chyle (சா.அக.).

ஆத்திரையம் *āttiraiyam,* பெ.(n.) மறைநூலின் ஒரு பகுதியாகிய (வேதாங்கமாகிய) கற்பத்தைப் பற்றிய ஒரு வடநூல் (தொல். பொருள். 75, உரை.); a ritualistic treatise in Sanskrit by Atri *Ṛṣi.*

*[**Skt.** ātrēya > த. ஆத்திரையம்.]*

ஆத்துமகத்தி *āttuma-katti,* பெ.(n.) தற்கொலை; suicide.

*[**Skt.** ātman+hatyā > ஆத்மஹத்தி > த. ஆத்துமகத்தி.]*

ஆத்துமகாமம் *āttumakāmam,* பெ.(n.) ஆதன் கடைத்தேறும் வழியில் விருப்பம் கொள்ளல்; desire for the emancipation of the Soul (சா.அக.).

ஆத்துமகுணம் *āttumaguṇam,* பெ.(n.) ஆதனிடத்தில் அமைந்துள்ள நற்குணம்; a virtue of the Soul (சா.அக.).

ஆத்துமகுப்தா *āttumaguptā,* பெ.(n.) பூனைக்காலி; cat bean - *Mucana pruriens* (சா.அக.).

*[**Skt.** ātma-gupta > த. ஆத்துமகுப்தா.]*

ஆத்துமகூண்டு *āttumagūṇdu,* பெ.(n.) மெய்; body as a cage for the soul (சா.அக.).

ஆத்துமகேசரி *āttumakešari,* பெ.(n.) நிலக்கடலை; ground nut, underground kidney bean, *Arachis hypogaea* alias *A. africana* (சா.அக.).

ஆத்துமகொடிமணி *attumakodimaṇi,* பெ.(n.) மணிக்குடல்; a membrane in the cavity of the abdomen serving to retain the intestines and their appendages in the proper position, *Mesentery* (சா.அக.).

ஆத்துமகோடம் *āttumagōḍam,* பெ.(n.) காகம்; crow (சா.அக.).



ஆத்துமசத்தி *āttuma-šatti,* பெ.(n.) ஆதனின் ஆற்றல். இது ஒவ்வொரு மாந்தனிடத்திலும் மறைந்திருக்கும் காந்தவலிமை. நூலில் கூறியபடி ஆதனை ஏற்கக் கண்டவர்களே இவ்வுலக துயரங்களினின்று விடுதலை அடைவார்கள். இது எல்லாப் பொருட்களிலும் நிறைந்து உள்ளது; soul power. Soul fores it is nothing, but the subtle magnetism which emanates from the properly controlled souls, and which, when properly, exerted, will overcome and remove all adverse and opposite impressions. It is the soul that is percolating through all kinds of matter and force (சா.அக.).

[ஆத்துமம் + சத்தி.]

ஆத்துமசல்லியை *āttumašalliyai,* பெ.(n.) தண்ணீர் விட்டான் கிழங்கு; water root - *Asparagus racemosus* (சா.அக.).

ஆத்துமசன் *āttumašan,* பெ.(n.) மகன்; son.

[Skt. ātma-ja > த. ஆத்துமசன்.]

ஆத்துமசிந்தை *attuma-šindai,* பெ.(n.) ஆதன் மெய் அறிவு பெற வேண்டி செய்யும் ஓகம்; meditation on the soul (சா.அக.).

த.வ. ஆதன்ஓகம்.

[ஆத்துமம் + சிந்தை.]

ஆத்துமசியோனி *āttuma-šiyōni,* பெ.(n.) சித்தினிகுலப்பெண்; one of the four classes of women (சா.அக.).

ஆத்துமசினேகிதன் *āttuma-šinēgidan,* பெ.(n.) உயிர்த்தோழன்; bosom friend.

[Skt. ātman + snēhida >த.ஆத்தும சினேகிதன்.]

ஆத்துமசுத்தி *āttuma-šutti,* பெ.(n.) 1. ஆதனின் தூய்மை; the purity of the soul, self purification. *காசு பணம் தான் வாழ்வின் குறிக்கோள் என்றில்லாமல் அனைவரும் ஆத்மசுத்தியுடன் உழைக்க வேண்டும்.* 2. ஆதனின் தெய்வீக நுகர்ச்சி; a spiritual experience of the soul (சா.அக.).

[Skt. ātman+šuddhi > த. ஆத்துமசுத்தி.]

ஆத்துமசௌசம் *āttuma-šausam,* பெ.(n.) மனத் தூய்மை; purity of mind (சா.அக.).

[Skt. ātman+šauca > த. ஆத்துமசௌசம்.]

ஆத்துமஞானம் *āttuma-ñānam,* பெ.(n.) 1. ஆதனை உணர்வது அல்லது தன்னைத் தானே அறிவது; individual consciousness or knowledge of the soul. 2. ஆதனை ஒகத்தால் அறிவது; spiritual knowledge attained through yogic power. *'எவன் ஒருவன் தனக்குள் மறைந்திருக்கும் ஆசைகளை வென்று ஒருவழியில் நிற்கின்றானோ அவனே ஆதனை அறியமுடியும். ஒவ்வொரு மூலப் பொருளிலும் அடங்கியுள்ள ஆதனினால் தான், உலகம் நடைபெறும். இவ்வாதனை அறிந்தவன் உலகமே கை வரப்பெற்றவன் ஆவான்'* (சா.அக.).

த.வ. மெய்யுணர்வு, தன்னுயிர் தானறிகை.

[Skt. ātman+jñāna > த. ஆத்துமஞானம்.]

ஆத்துமஞானி *āttuma-ñāni,* பெ. (n.) தன்னையறிந்தவன் (ஈ.டு. 4. 1 : 10.); one who has realized oneself.

த.வ. மெய்யுணர்வாளன்.

[Skt. ātman +ñāni > த. ஆத்துமஞானி.]

ஆத்துமத்தியாகம் *āttuma-tiyāgam,* பெ.(n.) தன்னை மறத்தல்; the self-forgetfulness (சா. அக.).

த.வ. தன்னிலை மறப்பு.

[ஆத்துமம் + தியாகம்.]

ஆத்துமதத்துவநூல் *āttuma-tattuva-nūl,* பெ.(n.) ஆதன் அல்லது மனதின் மூலக் கோட்பாட்டைப் பற்றிக் கூறும் நூல்; that branch of knowledge which deals with the philosophy of the mind, or the soul, or their operation - Psychology.

த.வ. உளவியல்.

[ஆத்துமதத்துவம் + நூல்.]

[Skt. ātman+tattva > த. ஆத்துமதத்துவம்.]

ஆத்துமதத்துவம் *āttuma-tattuvam,* பெ.(n.) பிறப்பற்றதும் நிலையானதுமான ஆதனின் இயற்கைக் குணம்; the true nature of the soul or the supreme spirit which is unborn, eternal and changeless.

த.வ. தன்னியல்.

[Skt. ātman+tattva> த. ஆத்துமதத்துவம்.]

இது நுண்மையிலும், நுண்மையானது; பெரிதினும் பெரிது; தானாகத் தோன்றக் கூடியது; காலத்திற் தோன்றி அழியும் பொருள் அல்ல; தொடக்கமும், முடிவும் அற்றது; எப்பொழுதும் அழிவற்றது (சா.அக.).

ஆத்துமதந்திரம் *āttuma-tandiram,* பெ.(n.) ஆதனின் நிலை; the basis of the self (சா.அக.).

[Skt. ātman+tantra> த. ஆத்துமதந்திரம்.]

ஆத்துமதரிசகம் *āttuma-tarišagam,* பெ.(n.) கண்ணாடி; mirror (சா.அக.).

[Skt. ātman+taricaka> த. ஆத்துமதரிசகம்.]

ஆத்துமதரிசம் *āttuma-tarišam,* பெ. (n.) **ஆத்துமதரிசகம்** பார்க்க; see *āttuma-tarišagam* (சா.அக.).

ஆத்துமதரிசனம் *āttuma-tarišaṉam,* பெ. (n.) 1. எல்லா உயிர்களிலும் மறைந்துள்ளதும், நுட்பமான அறிவை அடைந்தவர்களினால் தான் பார்க்க முடியும் என்று நம்பப்படுவதாகிய ஆதனின் நிலையை அறிகை; the soul's perception. The soul is hidden in all beings, but it could be seen only by the subtle seer through their pointed subtle intellect. 2. மெய்யுள் ஆதனின் நிலையை ஒகத்தால் தெளிகை; the spiritual illumination through contemplation or meditation. 3. பரம் பொருள் உள்ளில் இருந்து சிற்றுயிர்களை ஆட்டுவிக்குந் தன்மையை உணர்ந்து தெளிகை; a consciousness that the God within is the operator of the actions of the souls. 4. ஆதனைக் காண்கை; the seeing of the soul (சா.அக.).

த.வ. தற்காட்சி.

[Skt. ātman+daršana >த. ஆத்துமதரிசனம்.]

இதனைத் திருவள்ளுவர் தன்னுயிர்தானறப் பெறுதல் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆத்துமதிருப்தி *āttuma-tirupdi,* பெ.(n.) பிறருக்காகவோ பிறகரணியங்களுக்காகவோ செய்யாமல் தன் மகிழ்ச்சியின் பொருட்டே செய்வதால் ஒருவர் அடையும் மனநிறைவு; soul's satisfaction; *பணத்துக்காக அல்லாமல் ஆத்ம திருப்திக்காக வாழ்கின்றார்.*

த.வ. தன்னிறைவு.

[Skt. ātman+tṛpti > த. ஆத்துமதிருபதி.]

ஆத்துமதோத்திரம் *āttuma-tōttiram,* பெ. (n.) தற்புகழ்ச்சி; self-praise.

[Skt. ātman+stottira>த.ஆத்துமதோத்திரம்.]

ஆத்துமநாசம் *āttuma-nāšam,* பெ.(n.) தன்னைத் தானே கெடுத்துக்கொள்ளுகை; destroying or losing one's soul through misconduct.

த.வ. தற்கேடு.

[Skt. ātman+nāša > த. ஆத்துமநாசம்.]

ஆத்துமநிவேதனம் *āttuma-nivēdaṉam,* பெ.(n.) 1. தன் உயிரையே கொடையாகக் கொடுக்கை; sacrifice of life. 2. தன்னை ஒப்படைக்கை; self dedication, offering oneself (சா.அக.).

த.வ. தற்படையல்.

[Skt. ātman+ni-vēdana > த. ஆத்தும நிவேதனம்.]

ஆத்துமபந்து *āttuma-bandu,* பெ.(n.) 1. ஆதனின் உறுதிச்சுற்றம்; friend or relation in the spiritual sense as one's guru. 2.அத்தைமகன் முதலிய உறவுகள் (பந்துக்கள்); such as father's sister's son, mother's brother's son, etc.

[Skt. ātman+bandhu > த. ஆத்துமபந்து.]

ஆத்துமபவம் *āttuma-pavam,* பெ.(n.) தானாய் விளங்குகை; existing of one's self.

ஆத்துமபாரம் *āttumapāram,* பெ.(n.) ஆதனின் தேட்டம்; the requiste of the supreme spirit (சா.அக.).

[ஆத்துமம் + பாரம்.]

ஆத்துமபிரபோதம் *āttuma-pirabōdam,* பெ. (n.) நூற்றெட்டு மறைமுடிபுகளுள் ஒன்று; name of an Upanisad.

*[**Skt.** ātma-prabōdha>த.ஆத்துமபிரபோதம்.]*

ஆத்துமம்[1] *āttumam,* பெ.(n.) ஆதன்; soul. *"ஆத்துமம் விட்டிறக்கு நாள்" (குற்றா. குற கடவுள் வணக். 6).*

த.வ. ஆதன், உயிரன்.

*[**Skt.** ātman > த. ஆத்துமம்.]*

ஆத்துமம்[2] *āttumam,* பெ.(n.) நூற்றெட்டு மறை முடிபுகளுள் ஒன்று; name of an Upanisad.

*[**Skt.** ātman > த. ஆத்துமம்.]*

ஆத்துமராமன் *āttumarāman,* பெ.(n.) தன்னிறைவுடையவன் (ஆத்ம திருப்தி யுடையவன்) (வேதாந்தசா. 108); one who is self-satisfied.

*[**Skt.** ātmārāma > த. ஆத்துமராமன்.]*

ஆத்துமலாபம் *āttuma-lābam,* பெ.(n.) 1. ஆன்மப்பேறு; gain of soul. 2. சொந்த வருமானம் (ஆதாயம்); personal gain. 3. தன்னையறிகை; self-realization.

த.வ. ஆதன்பேறு, உயிரன்பேறு.

*[**Skt.** atman+lābha > த. ஆத்துமலாபம்.]*

ஆத்துமவதம் *āttuma-vadam,* பெ.(n.) தற்கொலை; suicide.

*[**Skt.** atma-vadha > த. ஆத்துமவதம்.]*

ஆத்துமவதிகாசனம் *āttuma-v-adikāšanam,* பெ.(n.) நல்லிருக்கை (நல்லாசனம்) என்னும் ஓகவிருக்கை (யோகாசனம்); a yōgic posture.

த.வ. நல்லோகம்.

*[**Skt.** ātman+adhika+ā-sana > த. ஆத்துமவதிகாசனம்.]*



ஆத்துமவிரக்கங்காட்டு-தல் *āttuma-v-irakkan-gāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) முழு மனதுடன் அன்புந் தயையுங் காட்டுதல் (இராட்.); to show favour and compassion with all one's heart.

[ஆத்துமன் + இரக்கம் + காட்டு–தல்.]

*[**Skt.** ātman > த. ஆத்துமன்.]*

ஆத்துமவிவேகம் *āttūma-vivēgam,* பெ.(n.) தன்னையறிகை (ஆத்மஞானம்) (இராட்); spiritual wisdom

*[**Skt.** ātma-vivēka > த. ஆத்துமவிவேகம்.]*

ஆத்துமா[1] *āttuma,* பெ. (n.) 1. ஆதன், soul. 2. உயிரி; living being.

த.வ. ஆதன், உயிரன்.

*[**Skt.** ātmā > த. ஆத்துமா.]*

ஆத்துமா[2] *āttumā,* பெ.(n.) மூச்சுவிடுவதில் தடை ஏற்படும் நுரையீரல் தொடர்பான நோய்; asthma.

த.வ. ஈளைநோய்.

*[**Skt.** āsduma > ஆஸ்த்மா>த. ஆத்துமா.]*

ஆத்துமாபகாரம் *āttumāpakāram,* பெ.(n.) ஆதனின் இயல்பை வேறாக நினைக்கை; misapprehension about the nature of Ātman.

*[**Skt.** ātman+apahāra>த. ஆத்துமாபகாரம்.]*

ஆத்துமார்த்தம் *āttumārttam,* பெ.(n.) மிக்க நட்பு, பழக்கம், பேச்சு முதலியவைக் குறித்து வருகையில் எந்த செய்தியையும் மனம்விட்டுப் பகிர்ந்து கொள்ளக்கூடிய நெருக்கம்; oneness of mind; identifying oneself with some one or samething.

த.வ. உயிரன்பு.

[Skt. ātmārtha > த. ஆத்துமார்த்தம்.]

ஆத்துமானந்தம் *āttumāṉandam,* பெ.(n.) 1. தனக்குள் மகிழ்கை; rejoicing in oneself. 2. தன்னறிவால் (தற்போதத்தால்) நிகழும் மகிழ்ச்சி; joy that arises or one's knowing oneself.

த.வ. உள்ளுவப்பு.

[Skt. ātman+ā-nanda> த. ஆத்துமானந்தம்.]

ஆத்துமானுபவம் *āttumāṉubavam,* பெ.(n.) தன்னைத்தான் உணர்கை (அஷ்டாதச. அர்த்தபஞ்.); self realization.

த.வ. தன்னறிவு.

[Skt. ātman+anu-bhava>த.ஆத்துமானுபவம்.]

ஆத்துமிகம் *āttumigam,* பெ. (n.) **ஆத்தியாத்துமிகம்** பார்க்க; see *āttiyāttumigam.*

[Skt. ātmika > த. ஆத்துமிகம்.]

ஆத்துமீகம் *āttumīgam,* பெ.(n.) **ஆன்மீகம்** பார்க்க; see *āṉmīgam.*

ஆத்துமீயம் *āttumīyam,* பெ.(n.) தன்னுடையது; that which belongs to oneself, one's own. *"ஆத்துமா ஆத்துமீயங் களில் நசை யறவேணும்".*

[Skt. ātmīya > த. அத்துமீயம்.]

ஆத்தை *āttai,* பெ.(n.) விருப்பம், அன்பு; regard, eager, desire. *அந்தப் பிள்ளைக்குப் படிப்பில் ஆத்தை மிகுதி.*

[Skt. ā-sthā> ஆஸ்தை > த. ஆத்தை.]

ஆத்மகத்தி *ātma-katti,* பெ.(n.) **ஆத்துமகத்தி** பார்க்க; see *āttuma-katti.*

[Skt. ātman+hatyā > த. ஆத்மகத்தி.]

ஆத்மசக்தி *ātma-šakti,* பெ.(n.) **ஆத்துமசத்தி** பார்க்க; see *āttuma-šatti.*

ஆத்மசினேகிதன் *ātma-šiṉēgidaṉ,* பெ. (n.) **ஆத்துமசினேகிதன்** பார்க்க; see *āttuma-šiṉēgidaṉ.*

ஆத்மசுத்தி *ātma-šutti,* பெ.(n.) **ஆத்துமசுத்தி** பார்க்க; see *āttuma-šutti.*

ஆத்மசௌசம் *ātma-šaušam,* பெ. (n.) **ஆத்துமசௌசம்** பார்க்க; see *āttuma-šaušam.*

ஆத்மஞானம் *ātma-ñāṉam,* பெ. (n.) **ஆத்துமஞானம்** பார்க்க; see *āttuma-ñāṉam.*

ஆத்மதரிசனம் *ātma-darišaṉam,* பெ. (n.) **ஆத்துமதரிசனம்** பார்க்க; see *āttuma-darišaṉam.*

ஆத்மநிவேதனம் *ātma-nivēdaṉam,* பெ.(n.) **ஆத்துமநிவேதனம்** பார்க்க; see *āttuma-nivēdaṉam.*

ஆதகம் *ādagam,* பெ.(n.) 1. அன்பு; kindness, affection. 2. ஆசை; love, desire. 3. இஞ்சி; ginger (சா.அக.).

ஆதங்கம்[1] *ādaṅgam,* பெ.(n.) 1. நோய்; disease, sickness. 2. அச்சம்; fear. *"இப்பா ராதங்க மாற (பாரத. அருச்.தீர்த். 87)"*

[Skt. ā-taṅka > த. ஆதங்கம்.]

ஆதங்கம்[2] *ādaṅgam,* பெ.(n.) இவ்வாறு நிகழ்ந்திருக்க வேண்டாம் அல்லது நிகழ வேண்டும் என்ற கவலை, மனக்குறை; feeling of regret or feeling of anxiety. *'விடுப்பு எடுத்துப் போயும் நண்பரைக் காண முடியவில்லையே என்ற ஆதங்கம் அவருக்கு; அதனால்தான் வருத்தமாயிருக்கிறார்'.*

த.வ. மனத்தாங்கல்.

ஆதங்கம்[3] *ādaṅgam,* பெ.(n.) 1. துன்பம்; grief. 2. முரசினோசை; sound of drum.

[Skt. ātaṅka > த. ஆதங்கம்.]

ஆதஞ்சனம் *ādañjaṉam,* பெ.(n.) நீறாக்கியது; that which is calcined or reduced to ashes (சா.அக.).

ஆததாயிகள் *ādadāyigaḷ,* பெ. (n.) கொடியோர் (குறள்,550,உரை.); desperadoes; incendiaries, poisoners, murderers, as having one's bow drawn to take another's life.

த.வ. வன்கணாளர்.

[Skt. ātatāyin > த. ஆததாயிகள்.]

ஆதபசுரம் *ādabaśuram,* பெ.(n.) கோடைக் காலங்களில் காலைப் பொழுதில் ஓயாமல் வழி நடத்தவினால் பித்தம் கோளாறடைந் துண்டாகும் காய்ச்சல்; a billious fever arising from the deranged pittam due to constant exposure to the sun by walking in the mornings of the summer season (சா.அக.).

த.வ. பித்தக்காய்ச்சல்.

ஆதபத்திரம் *ādapattiram,* பெ.(n.) 1. குடை; umbrella, as a protection against the sun. 2. வெண்குடை (சூடா.); white umbrella, as an emblem of the royalty.

[Skt. ātapatra > த. ஆதபத்திரம்.]

ஆதபத்தைலம் *ādabattailam,* பெ.(n.) வெயிலில் வைத்து எடுத்த நெய்மம்; oil obtained by leaving it with the ingredients exposed to the sun for some days (சா.அக.).

த.வ. வெயில் சூட்டுநெய்மம்.

ஆதபநீயம் *ādabanīyam,* பெ.(n.) ஒரு வகை நெல்; a kind of paddy (சா.அக.).

ஆதபம்[1] *ādabam,* பெ.(n.) 1. வெயில்; sunshine, sunlight. 2. ஒளி; lustre. *"ஒருவழியி னடையா வாதபஞ் சாயைபோல" (ஞானா. 63).*

த.வ. உருமம்.

[Skt. ā-tapa > த. ஆதபம்.]

ஆதபம்[2] *ādabam,* பெ.(n.) மூலப்பகுதிகளுள் (பிரகிருதிகளுள்) ஒன்று (மேருமந். 165); a pirakirudi.

[Skt. ātapa > த. ஆதபம்.]

ஆதபயோகம் *ātapa-yōgam,* பெ.(n.) வெயிலின் கடுமையைத் தாங்கும் ஓகநிலை (மேருமந். 619. உரை); a yōgic condition in which the yōgi is able to with stand the burning heat of the sun.

த.வ. சுடுவெயில் தவம்.

[Skt. ātaba+yōga > த. ஆதபயோகம்.]

ஆதபன் *ādabaṉ,* பெ.(n.) கதிரவன்; Sun, as the source of heat. *"ஆதபனிடத்தன் றருந்தொழில் புரியு நீதியில்லை" (ஞானா. 57).*

[Skt. ā-tapa > த. ஆதபன்.]

ஆதம் *ādam,* பெ.(n.) 1. கூந்தற் பனை; a kind of palm tree, so called from its numerous long, and thin spadices. Jaggery tree. Bastard sago tree - *Caryota urens.* 2. உயிர்; life. 3. சந்தன மரம்; sandalwood tree - *Santanum album* (சா.அக.).



ஆதம்பரம் *ādambaram,* பெ.(n.) மாதேவி; a tree flea-bane-*Vernonia cinerea* (சா.அக.).

ஆதம்பேதி *ādambēdi,* பெ.(n.) செருப்பு நெருஞ்சில்; a thistle bearing red flowers; trailing indigo-*Indigofera enneaphylla* (சா.அக.).

ஆதமதந்தம் *ādamatandam,* பெ.(n.) 1. சிலந்திக்கட்டி; pimple, a small boil. 2. நஞ்சுக்கட்டி; abscess, ulcer, venereal boil (சா.அக.).

ஆதமம் *ādamam,* பெ.(n.) அரத்தை; galangal - *Alpinia galangal* (சா.அக.).

ஆதமர்ணிகப்பொருள் *ādamarṇiga-p-poruḷ*, பெ.(n.) கடனாகக் கொடுக்கும் பொருள் (சுக்கிரநீதி, 97); money that is lent.

[Skt. ādhamarṇika > த. ஆதமர்ணிகம்.]

ஆதர்ச *ādarša*, பெ.அ.(adj) மிகச் சிறந்த; எடுத்துக்காட்டாகச் சொல்லக் கூடிய; something ideal; perfect; model. *ஆதர்ச நண்பர்கள்.*

ஆதரணை *ādaraṇai*, பெ.(n.) ஆதரவு; shelter, support, help. *"கைதூக்கி ஆதரணை செய்யும்" (கந்தபு. கீர். 31:18).*

[Skt. ādaraṇā > த. ஆதரணை.]

ஆதராதிசயம் *ādarādišayam*, பெ.(n.) பேரன்பு; great regard, ardent desire.

[Skt. ā-dara+ati-saya > த. ஆதராதிசயம்.]

ஆதரிசம்[1] *ātarišam*, பெ.(n.) 1. நூலுக்கு வழங்கப்படும் உரை; commentary. 2. மூல ஏடு; original manuscript.

[Skt. ādarša > த. ஆதரிசம்.]

ஆதரிசம்[2] *ādarišam*, பெ.(n.) கண்ணாடி; mirror.

[Skt. ā-darša > த. ஆதரிசம்.]

ஆதரிசனம் *ādarišaṉam*, பெ.(n.) **ஆதரிசம்**[2] பார்க்க; see *ādarišam*[2].

[Skt. ā-daršana > த. ஆதரிசனம்.]

ஆதவத்தைலம் *ādavattailam*, பெ.(n.) கதிரவன் சூடு படும் படி புட மிட்ட நெய்மம்; a medicated oil prepared by exposing it to the sun's rays (சா.அக.).

த.வ. வெயில் சூட்டுநெய்.

ஆதவம் *ādavam*, பெ.(n.) 1. வெயில்; sunshine. 2. ஒளி (பிங்.); light.

[Skt. ā-tapa > த. ஆதவம்.]

ஆதவன் *ādavan*, பெ.(n.) கதிரவன்; Sun.

[Skt. ā-tapa > த. ஆதவன்.]

ஆதனம்[1] *ādaṉam*, பெ.(n.) 1. யானைக் கழுத்து (நாநார்த்த.); nape of the elephant. 2. இருக்கை, பீடம் (நாநார்த்த.); seat. 3. சீலை (வின்.); cloth. 4. தரை; ground. 5. குண்டி (பிருட்டம்); buttocks.

த.வ. இருக்கை.

[Skt. āsana > த. ஆதனம்.]

ஆதனம்[2] *ādaṉam*, பெ.(n.) ஒக இருக்கை (யோகாசனம்), (நாநார்த்த.); yōgic posture. *"தலையினோ டாதனந்தட்ட" (ஈடு. 3.5:3).*

ஆதனமூர்த்தி *ādaṉa-mūrtti*, பெ.(n.) 1. படிமம்; image. 2. சிவகுறி (இலிங்கம்); liṅga or emblem of Šivaṉ (சா.அக.).

[ஆதனம் + மூர்த்தி.]

[Skt. āsana > த. ஆதனம் + மூர்த்தி]

ஆதாம் *ādām*, பெ.(n.) முதல் மாந்தன் (முதல்மனிதன்); name of the firstman.

[Heb. ādām > த. ஆதாம்.]

ஆதானம்[1] *ādāṉam*, பெ.(n.) 1. குதிரையணி (நாநார்த்த); caparisons of a horse. 2. பற்றுகை (மச்சபு. பிரமமு. ii); taking, seizing.

[Skt. ādāna > த. ஆதானம்.]

ஆதானம்[2] *ādaṉam*, பெ. (n.) வைக்கை (சேதுபு. அகத். 38); depositing, placeing usu. in compounds as அக்கினியாதானம், கர்ப்பாதானம்.

[Skt. ā-dhāna > த. ஆதானம்.]

ஆதிதேசசு *āditēšašu*, பெ.(n.) மஞ்சட் பூவுடைய ஒரு நீர்க்கொடி; a creeping plant with gold coloured flowers growing near the water - *Polanisia Icosandra* (சா.அக.).

ஆதிபன் *ādibaṉ*, பெ.(n.) இறைவன்; lord.

[Skt. adhi-pa > த. ஆதிபன்.]

ஆதிவெள்ளைச்சிந்தூரம் *ādiveḷḷai-c-cintūram*, பெ.(n.) வீரம்; corrosive sublimate (சா.அக.).

ஆதினம் *ādiṉam*, பெ.(n.) **ஆதீனம்** பார்க்க; see *ādīṉam*.

ஆதீனகர்த்தன் *ādiṉa-karttaṉ,* பெ.(n.) நிலவுடைமையாளர் (R.T.); proprietor, landlord.

[Skt. ādhīna+kartā> த.ஆதீனகர்த்தன்.]

ஆதீனகர்த்தா *ādiṉa-karttā,* பெ.(n.) **ஆதீனத்தர்** பார்க்க; see *ādiṉattar.*

ஆதீனத்தர் *ādiṉattar,* பெ.(n.) சிவமடத்தின் தலைவர் (இ.வ); head of a Šiva mutt.

த.வ. தம்பிரான், தம்பிரான் அடிகள்.

[Skt. āadhinastar > த. ஆதீனத்தர்.]

ஆதீனம் *ādiṉam,* பெ.(n.) 1. ஒரு குருவால் தோற்றுவிக்கப்பட்டுச் சிவனியத்தைப் பரப்புவதற்குச் சிவத்துறவிகளால் நடைமுறைப் படுத்தப்படும் அமைப்பு; an organization founded by a religious teacher for the propagation of Šaivism and later managed by his celibate disciples, *குன்றக்குடி ஆதீனம்.* 2. ஆதீனத்தின் தலைவர்; head of a Šaiva mutt. *மதுரை ஆதீனம் சொற்பொழிவு நிகழ்த்துகிறார்.*

த.வ. திருமடம், சிவமடம்.

[Skt. adhīna > த. ஆதீனம்.]

ஆதீனவம் *ādiṉavam,* பெ.(n.) 1. தீவினைப் பயன்கரிசு (பாவம்); sin. 2. கொடுஞ் சாவு (துர்மரணம்); unnatural death. 3. துன்ப மடைகை; suffering.

[Skt. ādiṉava > த. ஆதீனவம்.]

ஆதுயம் *āduyam,* பெ.(n.) கள்; toddy (சா.அக.).

ஆதுரசாலை *ādura-šālai,* பெ.(n.) **ஆதுரர்ச்சாலை** பார்க்க; see *ādurar-c-cālai*

ஆதுரம்[1] *āduram,* பெ.(n.) 1. அவா; desire. 2. நோய்; disease.

[Skt. ādura > த. ஆதுரம்.]

ஆதுரம்[2] *āduram,* பெ.(n.) பரபரப்பு; impatience, undue haste.

[Skt. ā-tura > த. ஆதுரம்.]

ஆதுரர்ச்சாலை *ādurar-c-cālai,* பெ. (n.) நோயாளிகளைக் கிடத்தும் இடம்; a place where the sick and the injured are lodged and nursed - Hospital (சா.அக.).

த.வ. மருத்துவமனை.

[ஆதுரர் + சாலை.]

[Skt. ā-tura > த. ஆதுரர்.]

ஆதுரன் *āduraṉ,* பெ.(n.) நோயாளி; a sickly man, a patient (சா.அக.).

[ஆதுரம் → ஆதுரன்.]

ஆதுலர்சாலை *ādular-cālai,* பெ.(n.) மெலிந்தோருக்கும், வறியோர்க்கும், ஏற் படுத்தப்பட்ட தங்குமிடம் ; poor - house for giving food and shalter to the disabled, poor and the destitute (சா.அக.).

த.வ. புகலிடச்சாலை.

[ஆதுலன் → ஆதுலர் + சாலை.]

ஆதுலன் *ādulaṉ,* பெ.(n.) 1. திறமையற்றவன்; disabled person. 2. வறியவன்; poor man. *"ஆதுலன் மூத்தான் (ஆசாரக். 101)."*

[Skt. ā-turā > த. ஆதுரர் →ஆதுலன்.]

ஆதுனிகன் *āduṉigaṉ,* பெ.(n.) இக் காலத்தவன் (பி.வி. 2, உரை.); person of the modern times.

[Skt. ādhunika > த. ஆதுனிகன்.]

ஆதெரிசனம் *āderišaṉam,* பெ.(n.) கண்ணாடி; mirror (சா.அக.).

ஆதோரணமஞ்சரி *ādōraṇa-mañjari,* பெ.(n.) எதிர்த்த மதயானைகளை அழித்தும் அடக்கியும் போரிடும் வீரனது சிறப்பை வஞ்சிப்பாவால் தொடுத்துப் பாடும் சிற்றிலக்கியம் (தொன். வி. 283, உரை.); poem in vañji metre in praise of a warrior who has subdued or killed one or more furious elephants of a hostile army.

த.வ. மறவஞ்சி.

[Skt. ā-dhōraṇa+mañjari > த. ஆதோரண மஞ்சரி.]

ஆதோரணன் *ādōraṇaṉ,* பெ. (n.) யானைப் பாகன் (திவா.); elephant-driver, mahout.

[Skt. ā-dhōraṇa > த. ஆதோரணன்.]

ஆப்தன் *āptaṉ,* பெ.(n.) 1. நண்பன்; friend. 2. நம்பிக்கைக்குரியவன் (தாயு. எங்கு.1); trust-worthy person one whose words are believable.

[Skt. ā-pta > த. ஆப்தன்.]

ஆப்திகம் *āptigam,* பெ.(n.) முதல் நினைவேந்தல் (தலைத்திவசம்); ceremony on the first anniversary of a deceased person.

[Skt. ā-bdika > த. ஆப்திகம்.]

ஆப்பகூரா *āppakūrā,* பெ.(n.) நீர்க் குடிக்கும் ஏனங்களுள் ஒருவகை; a narrow vessel for drinking from.

[U - ābkhora > த. ஆப்பகூரா.]



ஆப்பியந்தரம் *āppiyandaram,* பெ.(n.) உள்ளானது; that which is internal, mental. *"பூசை பாகிய மாப்பியந்தரமென விரண்டாகும்" (சூத. சிவமான். 5 : 2.).*

[Skt. ābhyantra > த. ஆப்பியந்தரம்]

ஆப்பியாயனம் *āppiyāyaṉam,* பெ.(n.) பொந்திகை (திருப்தி); satisfaction, contentment.

த.வ. தணிவு.

[Skt. āpyāyana > த. ஆப்பியாயனம்.]

ஆப்புலுதம் *āppuludam,* பெ.(n.) குதிரையின் நடைவகை (கதிவகை) (சுக்கிர நீதி, 72); a pace of horses.

[Skt. āpluta > த. ஆப்புலுதம்.]

ஆபகை *āpagai,* பெ.(n.) கங்கை யாறு (வின்.); river Ganges.

[Skt. āpagā> த. ஆபகை.]

ஆபச்சகாயன் *āpaccagāyaṉ,* பெ.(n.) துன்பத்தில் உதவுவோன்; friend in one's distress. *"ஆபச்சகாயனை யகந்தழீஇக் களிப்பாம்" (தணிகைப்பு. கடவுள்வா. 3.).*

த.வ. உறுதுணைவன்.

[Skt. ā-pad+sahāya > த. ஆபச்சகாயன்]

ஆபத்சன்னியாசம் *āpat-šaṉṉiyāšam,* பெ.(n.) இறக்குங் காலத்தில் (மரிக்குங்கால்) பெறுந் துறவு (வின்); taking to asceticism when at the point of death.

த.வ. வாழ்விறுதித்துறவு.

[Skt. āpat+šan-nyāsa>த.ஆபத்சன்னியாசம்.]

ஆபத்தம்பம் *ābattambam,* பெ.(n.) ஆரியச் சார்புடைய பதினெட்டு அற (தரும) நூல்களுள் ஒன்று (பிங்.); a work on Hindu law in Šanskrit, ascribed to Apastamba, one of eighteen *taruma-nūl.*

[Skt. āpa-stamba > த. ஆபத்தம்பம்.]

ஆபத்தனம் *ābattaṉam,* பெ. (n.) எய்ப்பினில் வைப்பு; wealth kept in reserve to serve in an emergency.

[Skt. ā - pad + dhana > த. ஆபத்தனம்]

ஆபத்து *ābattu,* பெ.(n.) 1. இழப்பு அல்லது தீங்கு ஏற்படும் நிலை; கேடு; danger; harm. *'ஆபத்துக் காலத்தில் உதவிய நண்பர்'. 'ஆபத்தான வளைவுகளில் வண்டியின் வேகத்தைக் குறைக்க வேண்டும்'.* 2. தொல்லைகளுக்குக் காரணம்; source of trouble and inconvenience. *'பகலில் நாயை அவிழ்த்துவிட்டது ஆபத்தாகப் போய்விட்டது'.* 3. ஏதம் (விபத்து); distress, danger.

த.வ. ஏதம், ஊறு.

[Skt. ā - pad > த. ஆபத்து.]

ஆபத்துஉதவி *āpattu-udavi,* பெ.(n.) மெய்க்காப்பாளர்; body guard.

த.வ. மெய்க்காவலர்.

[ஆபத்து + உதவி.]

ஆபத்துசம்பத்து *āpattu-šampattu,* பெ.(n.) வாழ்வுதாழ்வு; adversity and prosperity, weal and woe.

[Skt. ā-pad+šam-pad>த. ஆபத்துசம்பத்து.]

ஆபத்துரட்சகன் *āpattu-raṭcagaṉ,* பெ.(n.) துன்பத்தில் துணைநிற்பவன், இடர்நீக்குபவன்; a timely helper at the times of adversity.

த.வ. இடர்தாங்கி, ஏதக்காவலன்.

[ஆபத்து + ரட்சகன்.]

ஆபத்பாந்தவன் *ābat-pāndavaṉ,* பெ.(n.) ஆபத்ரட்சகன் பார்க்க; '**ஆபத்துரட்சகன்** *āpattu-raṭcagaṉ,* பெ.(n.) துன்பத்தில் துணைநிற்பவன்; see *ābat-raṭcakaṉ*.

ஆபதம் *ābadam,* பெ.(n.) இடர்; distress, calamity. *“சந்திராபதமும் தினகராபதமும்” (பாரத. இந்திர. 14.).*

த.வ. இடர்ப்பாடு.

[Skt. ā - pad > த. ஆபத்து →ஆபதம்.]

ஆபரணச்செப்பு *ābaraṇa-c-ceppu,* பெ. (n.) அணிகலப்பெட்டி; jewel-casket.

[Skt. ā-bharaṇa+šeppu>த. ஆபரணச் செப்பு.]



ஆபரணம்[1] *ābaraṇam,* பெ. (n.) தங்கம், வெள்ளியாலான அணிகலன், நகை; mostly gold or silver ornament. *கடவுள் திருமேனிகட்கு ஆபரணம் பூட்டுவர்.*

[Skt. ā-bharaṇa > த. ஆபரணம்.]

ஆபரணம்[2] *ābaraṇam,* பெ.(n.) ஒப்பனை (அலங்காரம்) (நாநார்த்த.); decoration.

த.வ. அணிசெயல்.

[Skt. abharaṇa > த. ஆபரணம்]

ஆபற்சன்னியாசம் *ābaṟ-šaṉṉiyāšam,* பெ.(n.) இறப்புக்கு (மரணத்துக்கு) அஞ்சி பெறும் துறவு; taking the order of *šaṉṉiyāsam* when apprehending death. *“ஆபற்சன்னியாசந் தீது” (வைராக். தீப. 25).*

த.வ. சாவஞ்சு துறவு.

[Skt. ā-pad+šaṉṉiyāšam> த. ஆபற் சன்னியாசம்.]

ஆபன் *ābaṉ,* பெ.(n.) எண் வகை சிறு தெய்வங்களுள் (அட்டவசுக்களுள்) ஒருவன் (கூர்மபு. அந்தகா. 9); name of a Vasu, one of *aṣṭa-vašukkaḷ.*

[Skt. apa > த. ஆபன்.]

ஆபாசப்படம் *ābāša-p-paḍam,* பெ.(n.) அருவருக்கத்தக்க கீழ்த்தரமான காட்சிகளைக் கொண்ட திரைப்படம்; a film of obscene actions.

த.வ. கீழ்த்தரவுப்படம்.

[Skt. ā-bhāša+த. படம்.]

ஆபாசம் *ābāšam,* பெ.(n.) 1. போலி; semblance of reason, fallacy. *“எட்டுள பிரமாணா பாசங்கள்” (மணிமே. 27 : 57).* 2. படிவுரு (பிரதி பிம்பம்); reflection. 3. தூய்மை யின்மை; that which is filthy. *“ஆபாசக் கொட்டிலை” (பட்டினத். திருப்பா. திருவேகம். 27.).* 4. கீழ்த்தரமான முறையில் பாலுணர்வைத் தூண்டி விடக்கூடியது; pornography; salaciousness; lewdness. *'திரைப் படங்களில் ஆபாசம் மிகுந்துவிட்டது'.*

5. தரக்குறைவு; கீழ்த்தரம்; obscenity; lewdness. *'பொதுக் கூட்டங்களில் ஆபாசமாகப் பேசக்கூடாது'.* 6. அருவருப்பான கழிவுப்பொருள்; refuse, filth. *'நாய் ஆபாசத்தில் கிடந்து புரண்டு எழுந்தது'.* 7. முறைகேடு; irregularity. 8. இகழ்ச்சி; calumny.

த.வ. கீழ்த்தரவு.

[Skt. ā-bhāsa > த. ஆபாசம்.]

ஆபாசவிசுவாசம் *ābāša-višuvāšam,* பெ.(n.) நம்பிக்கை ஏய்ப்பு, நம்பிக்கை இரண்டகம் (வின்.) (விசுவாசகாதகம்); violated faith.

த.வ. கீழ்த்தரவுக்குணம்.

[Skt. ā-paša+višvāsa>த.ஆபாசவிசுவாசம்.]

ஆபாத் *āpāt,* பெ. (n.) போர் வீரர்கட்குத் தேவைப்படும் போர்க்கருவிகளைத் திரட்ட (சேகரிக்க)க் கூடிய பேரூர் (R.T.); town where military supplies are available.

த.வ. படைக்கலப்பேரூர்.

[Persn. ābād > த. ஆபாத்.]

ஆபாத்கிராமம் *āpāt-kirāmam,* பெ.(n.) குடிவளமுடைய ஊர்; flourishing village having extensive cultivation and a large population.

த.வ. நல்லூர்.

[U. ābād+Skt. grāma > த. ஆபாத்கிராமம்.]

ஆபாதகேசம் *ā-pāda-kēšam,* பெ.(n.) **ஆபாதமத்தகம் (வின்.)** பார்க்க; see *āpāda-mattagam.*

[Skt. ā-pāda+kēša> த. ஆபாதகேசம்.]

ஆபாதம்[1] *āpādam,* பெ.(n.) 1. நிகழ்காலம்; present time. 2. விழுகை; falling.

[Skt. ā-pāta > த. ஆபாதம்.]

ஆபாதம்[2] *ā-pādam,* கு.வி.எ.(adv.) **ஆபாதமத்தகம்** பார்க்க; see *ā-pāda-mattagam.*

[Skt. ā-pādam > த. ஆபாதம்.]

ஆபாதமத்தகம் *ā-pāda-mattagam,* கு.வி.எ. (adv.) உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரை (வின்); from foot to head.

[Skt. ā-pāda-mastagam>த. ஆபாதமத்தகம்.]

ஆபாதமத்தம் *ā-pāda-mattam,* கு.வி.எ.(adv.) **ஆபாதமத்தகம் (வின்.)** பார்க்க; see *ā-pāda-mattagam.*

[Skt. āpāda-mastam > த. ஆபாதமத்தம்.]

ஆபாதன் *āpādaṉ,* பெ.(n.) தீயன், பொல்லாதவன்; impure person, wicked man. *"ஆபாத னேனு நாளு நினைவது" (திருப்பு. 326.).*

த.வ. கொடியவன்.

[Skt. ā-bhāsa > த. ஆபாதன்.]

ஆபாலகோபாலம் *āpāla-gōpālam,* பெ.(n.) எல்லோரும் (சி.சி. பாயி. சத்திவண. சிவாக்.); all, including children and cowherds.

[Skt. ā-pāla+go-pāla>த. ஆபாலகோபாலம்.]

ஆபிசாத்யம் *āpišātyam,* பெ.(n.) உயர்குடிப்பிறப்பு (ஈடு, 4. 2 : 5.); noble birth, nobility.

[Skt. ābhi-jātya > த. ஆபிசாத்யம்]

ஆபிசாரம் *āpišāram,* பெ.(n.) பிறருக்குத் தீங்கையுண்டாக்க வேண்டி மந்திரம் செய்கை; blackart. *"தென்னனை யாபிசாரஞ் செய்துயிர் செகுத்தால்" (திருவிளை. யானைபெ. 10.).*

த.வ. செய்வினை மந்திரம்.

[Skt. abhi-cāra > த. அபிசாரம் > ஆபிசாரம்.]

ஆபிமுக்கியம் *āpimukkiyam,* பெ.(n.) உடன் பாடாயிருக்கை, நன்மை செய்வதாய் இருக்கை; the state of being favourable.

[Skt. ābhi-mukhya > த. ஆபிமுக்கியம்.]

ஆபீசு *āpīsu,* பெ.(n.) அலுவலகம்; office, place of work, business.

த.வ. அலுவலகம், அதியம்.

[E. office > த. ஆபீசு.]

ஆபீசுநாடா *āpišu-nāṭā,* பெ.(n.) சிறுநாடா; narrow tape.

[E. office + U. nārā > த. ஆபீசுநாடா.]

ஆபீரம் *āpīram,* பெ.(n.) ஆயர்தெரு (சூடா.); street of herdsmen.

[Skt. ā-bhīra > த. ஆபீரம்.]

ஆபீரவல்லி *āpīra-valli,* பெ.(n.) இடைச்சேரி (பிங்.); village of herdsmen.

த.வ. ஆய்ப்பாடி.

[Skt. ā-bhīra+paḷḷi > த. ஆபீரவல்லி.]

ஆபீலம் *āpīlam,* பெ.(n.) 1. துன்பம்; distress. 2. அச்சம்; fear.

[Skt. ābhīla > த. ஆபீலம்.]

ஆபீனம் *āpīṉam,* பெ.(n.) முலைமடி (சூடா.); udder.

[Skt. āpīna > த. ஆபீனம்.]

ஆபூபிகன் *āpūpigaṉ,* பெ.(n.) 1. அப்பஞ்சுடுவோன்; one who prepares cakes. 2. அப்பம் விற்போன்; one who sells cakes.

த.வ. அப்பவணிகன்.

[Skt. āpūpiga > த. ஆபூபிகன்.]

ஆபோக்கிலிமம் *āpōkkilimam,* பெ.(n.) பிறப்போரைக்கு (இலக்கினத்திற்கு) மூன்று, ஆறு, ஒன்பது, பன்னிரண்டாம் இடங்கள் (குமாரசு. இராசி. 2.); the 3rd, 6th, 9th and 12th houses from that one's birth which are considered auspicious.

[Skt. āpōklima > த. ஆபோக்கிலிமம்.]

ஆபோகம்[1] *āpōgam,* பெ.(n.) பண் உறுப்புகளுள் ஒன்று (சிலப். 3 : 150, உரை.); one of four limbs of a musical piece.

[Skt. ā-bhōga > த. ஆபோகம்.]

ஆபோகம்[2] *āpōgam,* பெ.(n.) 1. முயற்சி; effort. 2. நிறைவு; fullness. 3. வருணன் குடை; Varuṇa's umbrella.

[Skt. ā-bhōga > த. ஆபோகம்.]

ஆபோசனம் *āpōšaṉam,* பெ.(n.) உணவு உட்கொள்ளும் முன்னும் பின்னும் மந்திர முறைப்படி நீர் அருந்துகை; sipping a little water with appropriate mantras both at the commencement and the close of a meal.

[Skt. āpōšana > த. ஆபோசனம்.]

ஆம்தனி *āmdaṉi,* பெ.(n.) வருவாய்; income, revenue, rents, profits, proceeds.

[U. āmad > த. ஆம்தனி.]

ஆம்பரியம் *āmpariyam,* பெ.(n.) மின்சாரம் (பாண்டி); electricity.

[Ar. ambar > த. அம்பர் → ஆம்பரியம்.]

ஆம்லட்டு[1] *āmlaṭṭu,* பெ.(n.) முட்டையப்பம்; omelette.

த.வ. முட்டைத்தோசை, முட்டை அடை.

[E. omelet or omelette > த. ஆம்லட்டு.]

ஆம்லட்டு[2] *āmlaṭṭu,* பெ.(n.) ஒருவகை இனிப்பு மாம்பழம்; variety of sweet mango.

[U. āmladdu > த. ஆம்லட்டு.]

ஆமகணம் *āma-kaṇam,* பெ. (n.) குழந்தைகளுக்கு ஏற்படும், கோழையும் அரத்தமும் கலந்து வெளியாகும் கழிச்சல் நோய் (சீதவழும்பு நோய்); in fantile dysentery.

த.வ. வழும்புக்கழிச்சல்.

[Skt. āma > த. ஆம + கணம்.]

ஆமசன்னி *āma-šaṉṉi,* பெ.(n.) உணவு செரியாமைக் கோளாறால் ஏற்படும் இசிவுநோய் (சன்னி) (வின்.); convulsions in children caused by indigestion.

த.வ. செரியா இசிவு.

[Skt. āma+san-ni > த. ஆமசன்னி.]

ஆமசிராத்தம் *āma-śirāttam,* பெ.(n.) சமைக்காத, வேகவைக்காத பொருள்களைக் கொண்டு (பாகம் பண்ணாத சாமக்கிரிகளைக் கொண்டு) இறந்தவர்களுக்குச் செய்யும் சடங்கு (சிராத்தம்) (சேதுபு. சேதுபல. 98); *śrāddha* in which uncooked articles of food are offered to *Brāhmans.*

த.வ. பச்சுணாச்சடங்கு.

[Skt. āma+śrāddha > த. ஆமசிராத்தம்.]

ஆமசுரம் *āma-śuram,* பெ. (n.) குழந்தைகளுக்குச் செரியாமை நோயால் (அசீரணத்தால்) வரும் காய்ச்சல் (வின்.); a fever in children caused by indigestion.

த.வ. செரியாக்காய்ச்சல்.

[Skt. āma+jvara > த. ஆமசுரம்.]

ஆமசூலை *āma-śūlai,* பெ.(n.) உணவு செரியாமையால் வரும் வயிற்றுவலி (மூ.அ.); colic pains arising from indigestion.

த.வ. செரியாச்சூலை.

[ஆம+சூலை.]

[Skt. āma > த. ஆம.]

ஆமத் *āmat,* பெ.(n.) வருமானம் (இ.வ.); income, revenue.

[U. āmad > த. ஆமத்.]

ஆமநாயம் *āmanāyam,* பெ.(n.) 1. தோன்றியம் (ஆகமம்); the *Āgamas.* 2. தொன்றுதொட்டு வரும் வழக்கம் (சம்பிரதாயம்); sacred tradition. 3. குலம்; clan.

[Skt. āmnāya > த. ஆமநாயம்.]

ஆமவாதரோகம் *āma-vāda-rōgam,* பெ.(n.) ஊதைநோய் வகை; rheumatism, as caused by indigestion.

[Skt. āma+vāda+roga > த. ஆமவாதரோகம்.]

ஆமாசயம் *āmāśayam,* பெ.(n.) உடலின் உட்புறம் உள்ள ஐந்து பைகளில் ஒன்றான இரைப்பை; stomach one of *pañjāśayam.*

[Skt. āma + ā-śaya > த. ஆமாசயம்.]

ஐந்து பைகள்: 1. இரைப்பை. 2. நெஞ்சப்பை. 3. கருப்பை 4. சிறுநீர்ப்பை. 5. மலப்பை.

ஆமிசம் *āmiśam,* பெ.(n.) 1. கண்டுமுதல்; produce of land. 2. விளைச்சலின் மதிப்பு; estimate of the yield or value of a standing crop.

[Skt. amśa > த. ஆமிசம்.]

ஆமிசம்டாப்பு *āmiśam-ṭāppu,* பெ.(n.) ஓராண்டின் விளைவுமதிப்பு; estimate of the produce of a piece of land for the whole year.

த.வ. கண்டுமுதல்.

[Skt. amśa + T. ḍābu > த. ஆமிசம்டாப்பு.]

ஆமிடம் *āmiḍam,* பெ.(n.) உணவு; food. *"எனக்காமிடமாய் வருவாய்கொல்" (கம்பரா. கடறாவு. 67.)*

[Skt. āmiṣa > த. ஆமிடம்.]

ஆமிலம் *āmilam,* பெ.(n.) 1. புளிப்பு (பிங்.); sourness, acidity. 2. புளியமரம் (சூடா.) tamarind.

[Skt. āmla > த. ஆமிலம்.]

ஆமிலிகை *āmiligai,* பெ.(n.) புளிப்பு (வின்.); acidity.

[Skt. āmliga > த. ஆமிலிகை.]

ஆமிலை *āmilai,* பெ.(n.) புளியாரை (தைலவ. தைல. 109); yellow wood - sorrel.

[Skt. āmlā > த. ஆமிலை.]

ஆமின் *āmiṉ,* பெ.(n.) முறைமன்ற ஆணையை நிறைவேற்றும் அதிகாரி; ameen, a public officer.

[U. amīn > த. ஆமின்.]

ஆமுசமிகம் *āmuśamigam,* பெ.(n.) மறுமை பற்றியது; that which pertains to the other world.

[Skt. āmuṣmika > த. ஆமுசமிகம்.]

ஆமென் *āmeṉ,* கு.வி.எ.(adv.) கிறித்தவர்கள் கடவுள் வாழ்த்தின் இறுதியில் பயன்படுத்தும் சொல்; verily, so be it, used by Christians usually at the close of prayer and hymn.

[Heb. āmēn > த. ஆமென்.]

ஆமோதம் *āmōdam,* பெ.(n.) 1. மகிழ்ச்சி; joy, pleasure. 2. மிக்க மணம் (திருப்பு. 54.); fragrance, diffusive perfume, strong smell.

[Skt. ā-mōda > த. ஆமோதம்.]

ஆமோதனம் *āmōdaṉam,* பெ.(n.) தீர்மானக் கோரிக்கைக்கு உடன்படுகை; support, as a motion.

[Skt. ā-mōdana > த. ஆமோதனம்.]

ஆமோதி-த்தல் *āmōdi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஒப்புக்கொள்ளுதல்; ஏற்றுக் கொள்ளுதல்; approve, agree with. *'ஒருமனதாக ஆமோதித்தனர்'.* 2. வழிமொழிதல்; second a motion, etc. *'குழுவின் தலைவர் கொண்டுவந்த தீர்மானத்தை ஒருவர் ஆமோதித்தார்'.*

த.வ. ஏற்பு.

[Skt. ā-mōda > த. ஆமோதி-.]

ஆயசூரி *āyaśūri,* பெ.(n.) கடுகு (மூ.அ.); Indian mustard.

[Skt. āsurī > த. ஆயசூரி.]

ஆயனம்[1] *āyaṉam,* பெ.(n.) ஆண்டு (பிங்.); year.

[Skt. hāyana > த. ஆயனம்.]

ஆயனம்[2] *āyaṉam,* பெ.(n.) 1. கதிரவன், நிலவு போன்றவற்றின் ஒளிக்கதிர் (கிரணம்); ray. 2. நெல் வகை; a kind of paddy.

[Skt. hāyana > த. ஆயனம்.]

ஆயாமம்[1] *āyāmam,* பெ.(n.) அடக்குகை; restraining the breath. பிராணாயாமம்.

[Skt. ā-yāma > த. ஆயாமம்.]

ஆயாமம்[2] *āyāmam,* பெ.(n.) 1. நீளம்; length. 2. அகலம்; breadth.

ஆயில் *āyil,* பெ.(n.) எண்ணெய்; oil, as a liquid using to fire, light.

த.வ. நெய்மம்.

[E.oil > த. ஆயில்.]

ஆயு *āyu,* பெ. (n.) 1. எண்வகைக் குற்றங்களுள் ஒன்றான வாழ்நாளை வரையறுப்பது (சூடா.); the karma which determines the length of time which a *Jīva* must spend in the form with which another of his karma has endowed him, one of *eṇ-kuṟṟam.* 2. வாழ்நாள்; life time.

[Skt. āyus > த. ஆயு.]

ஆயுகம் *āyugam,* பெ.(n.) **ஆயுசு** (திவா.) பார்க்க; see *āyuśu.*

ஆயுசயம் *āyuśayam,* பெ.(n.) **ஆயு** பார்க்க; see *āyu.*

[Skt. āyuṣya > த. ஆயுசயம்.]

ஆயுசயவோமம் *āyuśaya-v-ōmam,* பெ.(n.) நீண்ட வாழ்நாள் வேண்டி ஆண்டுதோறும் சிறப்புநாட்களில் செய்யும் ஓமம்; *ōma* ceremony performed on birthdays and on other important occasions for securing long life.

த.வ. வாழ்வோமம்.

[Skt. āyuṣya + hōma > த. ஆயுசயவோமம்.]

ஆயுசு *āyuśu,* பெ.(n.) வாழ்நாள் (பிங்.); lifetime.

த.வ. வாணாள்.

[Skt. āyus > த. ஆயுசு.]

ஆயுட்காரகன் *āyuṭ-kāragaṉ,* பெ.(n.) காரி (சனி); Saturn, whose influence is believed to determine the length of a man's life.

[Skt. āyus + kāraka > த. ஆயுட்காரகன்.]

ஆயுட்டானம் *āyuṭṭāṉam,* பெ.(n.) பிறப்போரையிலிருந்து (சன்மலக்கினத்

திலிருந்து) எட்டாமிடம் (வின்.); the eighth house from the *lagna* of ons's birth.

[Skt. āyus+sthāna > த. ஆயுட்டானம்.]

ஆயுட்டானாதிபதி *āyuṭṭāṉādipadi,* பெ.(n.) பிறப்போரை (லக்கினம்) யிலிருந்து எட்டாமிடத்தின் தலைவன் (அதிபதி); lord of the eighth house from the ascendant.

[Skt. āyus + sthāna + adhipati > த. ஆயுட்டானாதிபதி.]

ஆயுட்மான் *āyuṭmāṉ,* பெ.(n.) 1. நூற்றிருபது ஆண்டு வாழ்பவன்; one blessed with long life of 120 years. 2. ஓக வகை இருபத்தேழுள் ஒன்று; a division of time, one of 27 yōkam.

[Skt. āyuṣmān > த. ஆயுட்மான்.]

ஆயுர்ப்பாவம் *āyur-p-pāvam,* பெ.(n.) வாணாளின் நிலைமை (ரீதி); forecast of the length of a man's life.

[Skt. āyus + bhāva > த. ஆயுர்ப்பாவம்.]

ஆயுர்வேதம் *āyur-vēdam,* பெ.(n.) மருத்துவ நூல்; science of life, science relating to the Hindu system of medicine, one of four *upā-vēdam.*

[Skt. āyus+ vēdam > த. ஆயுர்வேதம்.]

ஆயுவின்மை *āyu-v-iṉmai,* பெ. (n.) அருகனின் எண்வகைக் குணத்தொன்று. (சூடா.); ever-lasting, eternity, one of *Arugaṉ-eṇ-kuṇam.*

[ஆயுள்+இன்மை.]

[Skt. āyus > த. ஆயுள்.]

அருகன் எண்குணம்: கடையிலாவறிவு, கடையிலாக்காட்சி, கடையிலா வீரியம், கடையிலா வின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுளின்மை, அழியாவியல்பு (குறள், 9, உரை.)

ஆயோகம் *āyōgam,* பெ.(n.) 1.துறையில் மரக்கலங்களைக் கட்டும் பந்தி (கரை); moorings to which boats are attached. *"திரள்கள் ஆயோகப் பொலிவி னைசைவிற் போதுவன" (பெரியபு. கழறிற். 49).* 2. நீர்க்கரை (நாநார்த்த.); bank, as of a stream. 3. பூசனை (அர்ச்சனை) (வின்.); offering of flowers and incense in worship.

[Skt. āyōga > த. ஆயோகம்.]

ஆயோகவர் *āyōgavar,* பெ.(n.) கைக்கோளர்வகை (M.E.R. 508 of 1922); a sect of weavers.

[Skt. āyōgava > த. ஆயோகவர்.]

ஆயோதம் *āyōdam,* பெ.(n.) **ஆயோதனம்**[1] பார்க்க; see *āyōdaṉam.*

ஆயோதனம்[1] *āyōdaṉam,* பெ.(n.) போர் (பிங்.); war, battle.

[Skt. ā-yōdhana > த. ஆயோதனம்.]

ஆயோதனம்[2] *āyōdaṉam,* பெ.(n.) வேட்டம் அல்லது வேட்டை (நாநார்த்த.); hunting.

[Skt. āyōdhana > த. ஆயோதனம்.]

ஆர்த்தவம் *ārttavam,* பெ. (n.) மகளிர்பூப்பு (விதான. தெருட்சி. 4, உரை.); menses.

த.வ. திட்டு.

[Skt. ārtava > த. ஆர்த்தவம்.]

ஆர்த்திப்பிரபந்தம் *ārtti-p-pirapandam,* பெ.(n.) மணவாளமாமுனிகள் செய்த ஒரு நூல்; a work by *Maṇavāḷa-māmuṉivar.* expressing his devotion to *Rāmānuja.*

[Skt. ārti+pra-bandha > த. ஆர்த்திப் பிரபந்தம்.]

ஆர்த்திரகம் *ārttiragam,* பெ.(n.) இஞ்சி (உரி.நிக.); ginger.

[Skt. ārdraka > த. ஆர்த்திரகம்.]

ஆர்த்திராதரிசனம் *ārttirā-tarišaṉam,* பெ.(n.) **ஆருத்திராதரிசனம்** பார்க்க; see *āruttirā-tarišaṉam.*

ஆர்மோனியம் *ārmōniyam,* பெ.(n.) காற்றை உட்செலுத்தி மேற்புறக் கட்டைகளை விரலால் அழுத்தி இசைக்கும், பெட்டி வடிவிலுள்ள ஓரிசைக்கருவி; harmonium.

த.வ. பாட்டுப்பெட்டி, இசைப்பெட்டி.

[E. harmonium > த. ஆர்மோனியம்.]



ஆரகோதம் *ārakōdam,* பெ.(n.) சரக்கொன்றை (மூ.அ.); Indian laburnum.

[Skt. ārag-vadha > த. ஆரகோதம்.]

ஆரஞ்சு *āranju,* பெ.(n.) கிச்சிலி பழவகைகளுள் ஒன்று; orange.

த.வ. மென்கிச்சிலி.

[E. orange > த. ஆரஞ்சு.]

ஆரண்யகம் *āraṇyagam,* பெ.(n.) மறையின் (வேதத்தின்) ஒருபகுதி; a class of Vēdic works closely connected with the Brāhmanas, and composed in the solitude of a forest.

[Skt. āraṇyaka > த. ஆரண்யகம்.]

ஆரநாளம் *āranāḷam,* பெ.(n.) காடி(தைலவ. தைல.21); vinegar made from sour gruel.

[Skt. āra-nāla > த. ஆரநாளம்.]

ஆரபி *ārabi,* பெ.(n.) ஒருவகைப் பண் (இராகம்); a specific melody type.

[Ar. ārabhi > த. ஆரபி.]

ஆராத்தியர் *ārāttiyar,* பெ.(n.) வீரச் சிவனியப் பிராமணர் (வீரசைவம்) *lingāyat Brāhmans.*

த.வ. சிவனியப் பார்ப்பனர்.

[Skt. ā-rādhya > த. ஆராத்தியர்.]

ஆராதகர் *ārātagar,* பெ.(n.) பூசை செய்பவர் (அருச்சகர்) (கோயிலொ. 27.); officiating priests in a temple.

த.வ. பூசகர்.

[Skt. ā-rādhaka > த. ஆராதகர்.]

ஆராதனம்[1] *ārādaṇam,* பெ.(n.) பூசை (அஷ்டப். திருவரங்கத்தந். 30); worship.

[Skt. ā-rādhana > த. ஆராதனம்.]

ஆராதனம்[2] *ārādaṇam,* பெ.(n.) 1. எண்ணுகை (சிந்திக்கை); fulfilment. 2. மகிழ்விக்கை உவப்பிக்கை; gratifying. 3. சமைக்கை; cooking. 4. பெறுகை; acquirement, attaining. 5. வெறியாட்டு (ஆவேசம்); possession by spirit. *சுடலைமாடன் ஆராதனமாகி ஆடினான்.*

[Skt. ā-rādhana > த. ஆராதனம்.]

ஆராதனை *ārādaṇai,* பெ.(n.) 1. மலர் தூவுகை, சுடர் காட்டுகை போன்றவற்றால் தெய்வத்துக்குச் செய்யும் வழிபாடு; worship by offering flowers, lighting lamps, etc. மூலவர்க்குத் தீவ ஆராதனை காட்டப்படுகிறது. 2. மறைந்த பெரியவர்கட்கு ஆண்டுதோறும் செய்யப்படும் வழிபாட்டுச் சடங்கு; ritual of worship to the memory of saints. திருவையாற்றில் தியாகராச ஆராதனை நடைபெறுகிறது. 3. கிறித்தவர் கோயில் வழிபாடு; prayer service in church.

த.வ. மலர்வழிபாடு, போற்றிவழிபாடு.

[Skt. ā-rādhanā > த. ஆராதனை.]

ஆராதி-த்தல் *ārādi-,* 4 செ.கு.வி. (v.i.) பூசை செய்தல், வழிபாடு செய்தல்; worship. *'கலைஞர்கள் அல்லது படைப்பாளிகள் அழகை ஆராதிக்கின்றனர்'.*

த.வ. போற்றிவழிபடல்.

[Skt. ā-rādh > த.ஆராதி-.]

ஆராமம் *ārāmam,* பெ.(n.) 1. பூஞ்சோலை; pleasure garden, park. *"ஆராமத்திடை யலர் கொய்வேன்றனை" (மணிமே. 3 : 32.)* 2. மலைச்சோலை; moutain grove.

*[**Skt.** ā-rāma > த. ஆராமம்.]*

ஆரிசப்பிரதிட்டை *ariśa-p-piradiṭṭai,* பெ.(n.) முனிவர்கள் தெய்வத்தைப் புதுக்கோயில் முதலியவற்றில் நிலைநிறுத்துகை; consecration of an idol by a *Ṛṣi* or *sage.*

*[**Skt.** ārṣa+prati-ṣthā>ஆரிஷப்பிரதிஷ்டை > த. ஆரிசப்பிரதிட்டை.]*

ஆரியசத்தை *āriya-śattai,* பெ.(n.) புத்தமதத்தைச் சார்ந்தவர்களுக்குரிய மேலான உண்மைகள்; the noble truths of the Buddhas. *"ஆரிய சத்தையலாற் கந்தம் வேறில்லையேல்" (நீலகேசி, 389).*

*[**Skt.** ārya-sattva > த. ஆரியசத்தை.]*

ஆரியப்பிராமணர் *ārya-p-pirāmaṇar,* பெ.(n.) வடநாட்டிலிருந்து வந்து இராமேசுவரத்தில் குடியேறியதாகக் கருதப்படும் ஒருவகைப் பிராமணர்; a sect of Brāhman's in Rameswaram, who have certain rights in the temple and are believed to be immigrants from North India.

த.வ. ஆரியப்பார்ப்பனர்.

*[**Skt.** ārya+brāhmaṇa>த.ஆரியப்பிராமணர்.]*

ஆரியபூமி *āriya-pūmi,* பெ.(n.) பனிமலை (இமயமலை), விந்திய மலைகளுக்கு இடையே அமைந்துள்ள ஆரியர் குடியேற்றப் பகுதி; the tract of country in India lying between the Himalayas and the Vindhya mountain, the land by Āryas.

*[**Skt.** ārya + bhūmi > த. ஆரியபூமி.]*

ஆருணி *āruṇi,* பெ.(n.) நூற்றியெட்டு மறை நூல்களுள் (உபநிடதங்களுள்) ஒன்று; name of an *Upanisad.*

*[**Skt.** Āruṇi > த. ஆருணி.]*

ஆருத்திராதரிசனம் *āruttirā-tarišaṉam,* பெ.(n.) சிலை (மார்கழி)த் திங்கள் வெள்ளுவா நாளில் சிதம்பரம் முதலிய ஊர்களில் உள்ள சிவன் கோயில்களில் யாழ் விண்மீன் (திருவாதிரை) தலை உச்சிக்கு மேலே வருகின்றபோது கொண்டாடப்படும் விழா; a luni-solar festival, celebrated in *Śivaṉ* temples and particularly at Chidambaram, about the full-moon of *Mārkaḻi* when the star *Ārdrā* is in the ascendant.

த.வ. சிலைநிலாப்பண்டிகை.

*[**Skt.** ārdrā+darśana > த. ஆருத்திரா தரிசனம்.]*

ஆரூபம் *ārūbam,* பெ. (n.) 1. ஒவ்வாமை; dissimilarity. 2. நீங்காமை; inseparableness.

*[**Skt.** ā-rūba > த. ஆரூபம்.]*

ஆரொட்டி *āroṭṭi,* பெ.(n.) கூவைக்கிழங்கு; East-Indian arrow-root, *Curcuma angustifolia.*

*[**E.** arrow-root > த. ஆரொட்டி.]*

ஆரொட்டிமா *āroṭṭimā,* பெ.(n.) கூவைக் கிழங்குமா; flour or fine starch obtained from the tubers of arrow root.

[ஆரொட்டி + மா.]

ஆரோக்கியகுளியல் *ārōkkiya-kuḷiyal,* தொ.பெ.(vbl.n.) நோயினின்று மீண்டபின் செய்யும் முதல் குளியல்; bath taken soon after recovery from illness.

த.வ. நலநீராட்டு.

[ஆரோக்கியம் + குளியல்.]

*[**Skt.** ā-rōgya > த. ஆரோக்கியம்.]*

ஆரோக்கியசாலை *ārōkkiya-śālai,* பெ.(n.) மருத்துவமனை (சிவ. தே.பிர. பக். 286); hospital.

த.வ. நலச்சாலை.

*[**Skt.** ā-rōgya > த. ஆரோக்கியம்.]*

ஆரோக்கியம் *ārōkkiyam,* பெ.(n.) நோய் இல்லாமல் நலமாக இருக்கும் நிலை; good

health: healthy state of the body. *'உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக இருந்தால் நோய் நொடிகள் வரா'.*

த.வ. நலப்பாடு.

[Skt. ā-rōgya > த. ஆரோக்கியம்.]

ஆரோகணம்[1] *ārōgaṇam,* பெ.(n.) 1. ஏறுகை; ascending, rising, mounting. 2. நினைவு (கமகம்) பத்தனுள் ஒன்று (பரத. இராக. 24.); complete ascent of the gamut one of ten *kamakam*. 3.படிக்கட்டு; staircase. 4. தாழ்வாரம்; inclined roof.

[Skt. ā-rōhaṇa > த. ஆரோகணம்.]

ஆரோகணம்[2] *ārōgaṇam,* பெ.(n.) ஏழு பண்களையும் (சுவரங்களையும்) படிப் படியாகக் கீழிருந்து மேலாக ஒலி அளவில் உயர்த்தும் முறை; ascending scale of the seven notes from the basic to the highest.

த.வ. ஏறுகிரல், ஆளத்தி.

[Skt. ā-rōhaṇa > த. ஆரோகணம்.]

ஆரோகணம்[3] *ārōgaṇam,* பெ. (n.) 1. வெளிப்போகை (நாநார்த்த.); exit. 2. முன்வாயில் (நாநார்த்த.); front entrance of a house. 3. ஏணி (பாண்டி); ladder.

[Skt. ā-rōhaṇa > த. ஆரோகணம்.]

ஆரோகணி–த்தல் *ārōgaṇi-,* 4 செ.கு.வி. (v.i.) குதிரை போன்ற ஒன்றின் மீது ஏறி உட்காருதல்; mount a horse. etc. *குதிரையின் மீது ஆரோகணித்து அரண்மனையை அடைந்தான்.*

த.வ. இவர்தல்.

[ஆரோகணம் → ஆரோகணி–த்தல்.]

ஆரோகம்[1] *ārōgam,* பெ.(n.) 1. ஏறுகை; ascent. 2. உயர்ச்சி; elevation, height. 3. நீட்சி; length. 4. பெண்களின் இடுப்புப்பகுதி (நிதம்பம்); woman's hip. 5. முளை; shoot, sprout.

[Skt. ā-rōha > த. ஆரோகம்.]

ஆரோகம்[2] *ārōgam,* பெ.(n.) மறை ஓதும் முறைகளுள் ஒன்று; a mode of reciting the *Vēdas*. *"சுரம்பதங் கிரமஞ் சடையவ ரோகஞ் சொல்லுமா ரோகம்" (பிரபோ. 11: 4).*

[Skt. ā-rōha > த. ஆரோகம்.]

ஆரோகி *ā-rōgi,* பெ.(n.) இசையமைக்கும் வகைகளுள் ஒன்று; variety of musical composition.

[Skt. ā-rōhin > த. ஆரோகி.]

ஆரோணம் *ārōṇam,* பெ.(n.) மீக்கோள் (நாமதீப); covering.

[Skt. ā-rōhaṇa > த. ஆரோணம்.]

ஆரோதமடி–த்தல் *ārōdam-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) இரக்கத்தினால் கொடுஞ் செயலினின்று உள்ளம் நெகிழ்தல் (ஈடு, 3. 10:1); recoiling out of pity from a contemplated terrible act.

[ஆரோதம் + மடி–த்தல்.]

[Skt. ā-rōda > த. ஆரோதம்.]

ஆரோபணம் *ārōpaṇam,* பெ.(n.) ஒரு பொருளின் குணத்தை மற்றொன்றின் மீது ஏற்றிக்கூறும் தன்மை; erroneous attribution to an object of a quality that belongs to another.

த.வ. வலிந்தேற்றம்.

[Skt. ā-rōpaṇa > த. ஆரோபணம்.]

ஆரோபம் *ārōpam,* பெ.(n.) **ஆரோபணம்** பார்க்க; see *ārōpaṇam.* *"ஆரோப மத்தியாசங் கற்பனை" (கைவல்ய. தத்துவ. 27.)*

[Skt. ā-rōpa > த. ஆரோபம்.]

ஆரோபி–த்தல் *ārōpi-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஒன்றன் மேல் மற்றொரு பொருளின் தன்மையையும், குணத்தையும் ஏற்றிக் கூறுதல்; to attribute to an object, a quality or property that belongs to another.

த.வ. வலிந்தேற்றல்.

[Skt. ā-rōpa > த. ஆரோபி–.]

ஆரோபிதம் *ārōpidam,* பெ.(n.) 1. ஏற்றப்பட்டது; that which is attributed. 2. ஒருவர் மேல் கற்பனையாகப் புனையப்பட்ட குற்றம்; concoction, false charge laid against one.

த.வ. வலிந்தேற்பு.

[Skt. ā-rōpitā > த. ஆரோபிதம்.]

ஆல்பகோடா *ālpakōḍā,* பெ.(n.) ஆலுபொகாரா பார்க்க; see *ālu-pokārā.*

ஆல்பகோரா *ālpakōrā,* பெ.(n.) ஆலுபொகாரா பார்க்க; see *ālu-pokārā.*

ஆலசியம் *ālašiyam,* பெ.(n.) 1. சோம்பி இருப்பது; idleness, indolence, sloth. 2. சுணக்கம்; delay. 3. கவனக்குறைவு; negligence, dereliction.

த.வ. மப்பு.

[Skt. ālasya > த. ஆலசியம்.]

ஆலதரன் *ālataraṉ,* பெ.(n.) சிவன் (உரி.நி.); Šivaṉ, holding poison in his throat.

[Skt. āla+dhara > த. ஆலதரன்.]

ஆலம்பனம் *ālambaṉam,* பெ.(n.) பற்றுக்கோடு; prop, support.

[Skt. ā-lambana > த. ஆலம்பனம்.]

ஆலவால் *āl-avāl,* பெ.(n.) ஒருவனுடைய நிலை அல்லது தகுதி (P.T.L.); one's circumstances.

[U. āl-aval > த. ஆலவால்.]

ஆலாசியம்[1] *ālāšiyam,* பெ.(n.) ஆண் முதலை (நாநார்த்த.); male crocodile

[Skt. ālāsya > த. ஆலாசியம்.]

ஆலாசியம்[2] *ālāšiyam,* பெ.(n.) மதுரை; Madurai.

[Skt. āla +āsya > த. ஆலாசியம்.]

ஆலாபம் *ālāpam,* பெ.(n.) உரையாடல் (சம்பாஷணை) (வின்.); conversation

[Skt. ālāpa > த. ஆலாபம்.]

ஆலாபனம்[1] *ālāpaṉam,* பெ.(n.) **ஆலாபம்** (வின்.) பார்க்க; see *ālāpam.*

[Skt. ālāpana > த. ஆலாபனம்.]

ஆலாபனம்[2] *ālāpaṉam,* பெ.(n.) பண்ணை விரித்துப் பாடுகை; improvised introduction to a melody, meant to notify to the audience the nature of the rāgā, which the melody will develop, and also to help the singer himself to get into its swing.

[Skt. ā-lāpana > த. ஆலாபனம்.]

ஆலாபனை *ālāpaṉai,* பெ.(n.) அராகத்தின் (ராகத்தின்) வடிவத்தைப் பாடமோ தாளமோ இல்லாமல் விரிவாக வெளிப்படுத்தும் முறை; the free rendering of a *'rāgam'* in such a way as to bring out its form without reference to '*tāḷam*' or words.

ஆலாபி-த்தல் *ālāpi-,* 4 செ.கு.வி. (v.i) பண்ணை விரித்துப் பாடுதல்; to extemporize a melody with a view to develop a *rāga* and get into its swing.

[Skt. ā-lāpa > த. ஆலாபி-.]

ஆலாபினி *ālāpiṉi,* பெ. (n.) இசை வேறுபாடுகளுள் ஒன்று (சுவர பேதம்) (பரத. இராக. 44); a division of the 5th note of the gamut.

[Skt. ālāpini > த. ஆலாபினி.]

ஆலிங்கனம் *āliṅgaṉam,* பெ. (n.) தழுவுகை (சூடா.); embrace.

த.வ. அணைப்பு.

[Skt. ā-lingana > த. ஆலிங்கனம்.]

ஆலிம் *ālim,* பெ.(n.) அறிந்தவன் (முகமதி.); learned man.

[Ar. ālim > த. ஆலிம்.]

ஆலீனகம் *ālīṉagam,* பெ.(n.) வெள்ளடம்(துத்தநாகம்) (சங். அக); zinc.

[Skt. ālīnaga > த. ஆலீனகம்.]

ஆலுபுகரா *ālu-pukarā*, பெ.(n.) - **ஆலுபொகாரா** பார்க்க; see *ālu-pokārā*.

ஆலுபொகாரா *ālu-pokārā*, பெ.(n.) பொகாரா நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் தேனிலிட்ட ஒருவகைப் பழம்; a kind of prunes seasoned in a solution of suger or honey and exported from Bokhara.

த.வ. பொகாராப்பழம்.

இப்பழம் மருந்துப் பொருளாகப் பயன்படுகிறது. தாகத்தைத் தணிக்கவும், வாய்க் கசப்பைப் போக்கவும் பயன்படுகிறது. ஆல் பகோடா பழம், காபூல் பழம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆலுபுகாரா என்றும் ஆல்பகோரா என்றும் இதற்கு வேறு பெயர்கள் உண்டு.

ஆலேபனம் *ālēpaṉam*, பெ.(n.) பூசுகை (தெ.இ.கல். 4 : 295); anointing.

[Skt. ā-lēpana > த. ஆலேபனம்.]

ஆலோகம் *ālōgam*, பெ. (n.) 1. பார்வை (வின்.); sight (w.). 2. ஒளி; light. *"சூரியகிரணம் முதலிய ஆலோக சகாயத்தினால்" (சித். மரபு. கண். 10).*

[Skt. ā-lōka > த. ஆலோகம்.]

ஆலோகனம் *ālōgaṉam*, பெ. (n.) பார்க்கை (வின்.); seeing.

[Skt. ā-lōkana > த. ஆலோகனம்.]

ஆலோசகபித்தம் *ālōšaga-pittam*, பெ.(n.) பார்வையைப் பெருகச் செய்யும் நரம்பு (சீவரட்); a nerve of the eye which makes the sight powerful.

[ஆலோசகம் + பித்தம்.]

[Skt. ālōsana > த. ஆலோசகம்.]

ஆலோசனை[1] *ālōšaṉai*, பெ.(n.) 1. ஒருவர் மற்றொருவருக்குத் தம் கருத்தைத் தெரிவிப்பதன் மூலம் காட்டும் வழிமுறை; ஒருவர் மற்றொருவரிடம் கலந்து பெறும் கருத்துரை; guidance; advice; consultation. *'கட்சித் தலைமையின் ஆலோசனையைக்கேட்ட பிறகே போராட்டத் திட்டம் வகுக்கப்பட்டது'.* 2. ஒரு துறையில் தேர்ச்சி பெற்றவர் வழங்கும் முறையான கருத்து; professional advice; counsel. *'பொய் சொல்பவர்களை உளவியல் அறிஞரின் ஆலோசனைப்படி திருத்துங்கள்'.* 3. சிந்தனை; thought in which one is immersed. *'என்ன பெரிய ஆலோசனையா?', 'பேசவே மாட்டேன் என்கிறீர்களே'.*

த.வ. கருத்துரை, கலந்தாய்வு.

[Skt. ā-lōšana > த. ஆலோசனை.]

ஆலோசனை[2] *ālōšaṉai*, பெ.(n.) பார்வை (நாநார்த்த); seeing, sight.

[Skt. ālōšana > த. ஆலோசனை.]

ஆலோசனைச்சங்கம் *ālōšaṉai-c-caṅgam*, பெ.(n.) அறிவுரை வழங்கும் குழு; council.

த.வ. கருத்துரைக்குழு.

[ஆலோசனை + சங்கம்.]

ஆலோசி-த்தல் *ālōši-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஒன்றை எவ்வாறு செய்யலாம் என்பதைப் பற்றி கலந்து பேசுதல்; to consult. *'என் தங்கையின் திருமணத்தைப் பற்றித் தந்தையுடன் ஆலோசித்து எழுதுகிறேன்'.* 2. எண்ணுதல் (சிந்தித்தல்); to think over. *'இந்த வினாவுக்கு ஆலோசித்துத் தான் பதில் சொல்ல முடியும்'. "என்றுள முடைந் தாலோசித்து" (மச்சபு. திரிபுரஞ். 5).*

த.வ. கலந்தாய்வு.

[Skt. ā-lōc > த. ஆலோசி-த்தல்.]

ஆலோபம் *ālōbam*, பெ.(n.) வருத்தம்; distress. *"களிறோலமென்ற வாலோபந் தீர்த்த" (குலோத். கோ. 493).*

[Skt. ālōla > த. ஆலோபம்.]

ஆலோலம் *ālōlam*, பெ.(n.) வருத்தம், கலக்கம் (சஞ்சலம்) (நாநார்த்த); commotion

[Skt. ālōla > த. ஆலோலம்.]

ஆலோலிதமுகம் *ālōlita-mugam,* பெ.(n.) ஆசையால் மலர்ந்த முகத்தோடு ஒருவனை அழைக்கும் மெய்ப்பாடு (அபிநய வகை); the gesture of calling one with a cheerful countenance indicative of joy, one of 14 *muga-v-apiṉayam.*

த.வ. உவப்பு முகம்.

[ஆலோலிதம் + முகம்.]

[Skt. ā-lōlita > த. ஆலோலிதம்.]

ஆவகம் *āvagam,* பெ.(n.) எழுவகைக் காற்றுள் (சப்தமருத்துக்களுள்) ஒன்று; a wind one of *šaptamaruttu.*

[Skt. āvaka > த. ஆவகம்.]

எழுவகைக் காற்றுகள்: 1. ஆவகம், 2. பிரவகம், 3. சம்வகம், 4. உத்வகம், 5. விவகம், 6. பரிவகம், 7. பராவகம்.

ஆவச்சீவாளம் *āva-c-cīvāḷam,* பெ.(n.) பொது வாழ்வையும், தனிப்பட்ட வாழ்வையும் காட்டும் வரலாற்று முழுநிலைமை; life history, details of life private and public. *'அவன் ஆவச்சீவாளமும் அறிந்திருக்கிறேன்'.*

[Skt. yāvat+jīva > த. ஆவச்சீவாளம்.]

ஆவசியகம் *āvaśiyagam,* பெ.(n.) இன்றியமையாதது; that which is indispensable, very important.

த.வ. அகத்தியம்.

[Skt. āvaśyaka > த. ஆவசியகம்.]

ஆவசியம் *āvaśiyam,* பெ.(n.) இன்றியமையாதது; necessity. *"ஆவசிய மென்ப தறியாயோ" (அழகிய நம்பியுலா, 125).*

த.வ. தேவை.

[Skt. āvaśyaka > அவசியம் >த. ஆவசியம்.]

ஆவணி *āvaṇi,* பெ.(n.) 1. மடங்கல், ஐந்தாம் தமிழ் மாதம்; the fifth Tamil month, August - September. 2. 22வது விண்மீனாகிய பறவை (அவிட்டம்) விண்மீன்; 22nd nakṣatra.

த.வ. மடங்கல்.

[Skt. śrāvaṇa > த. சிரவணம் → ஆவணி.]

ஆவணிமுழக்கம் *āvaṇi-muḻakkam,* பெ.(n.) மடங்கல் (ஆவணி) திங்களில் உண்டாகும் இடி முழக்கம், (சோதிட. சிந். 207); thunder after the sixth day of *Āvaṇi,* which indicates good rains.

த.வ. மடங்கல் இடி.

[ஆவணி + முழக்கம்.]

ஆவணியவிட்டம் *āvaṇi-y-aviṭṭam,* பெ.(n.) பெரும்பாலும் மடங்கல் முழுநிலவன்று (ஆவணி பூர்ணிமையன்று) புதுப்பூணூல் பூணுதல் முதலியவற்றுடன் திருமறை (வேத) பாடம் தொடங்குஞ் சடங்கு; ceremony performed generally on the full-moon day in the month of Āvaṇi, when the study of the Vēdas is commenced with the investiture of a sacred thread. 2. மதுரையில் முற்காலத்து நடந்த ஒரு திருவிழா (இறை.16. உரை); an ancient festival in Madurai which has now ceased to be observed.

த.வ. மடங்கல் பறக்கி.

[ஆவணி + அவிட்டம்.]

ஆவர்த்தம் *āvarttam,* பெ.(n.) 1. எழுவகை முகில்களில் ஒன்றான மழைபொழியும் முகில்; a celestial cloud which rains water, one of *šattamēgam.* 2. தடவை; time, in the sense of the repetition of anything once, twice etc. *'பத்தாவர்த்தம் சொல்'.*

[Skt. ā-varta > த. ஆவர்த்தம்.]

எழுவகை முகில்கள்: 1. சம்வர்த்தம், 2. ஆவர்த்தம், 3. புட்கலா வர்த்தம், 4. சங்காரித்தம், 5. துரோணம், 6. காளாமுகில், 7. நீலவருணம்.

ஆவர்த்தி[1] –த்தல் *āvartti-,* 4 செ.கு.வி. (v.i) முதல்மனைவி இறந்தபின் மறுமணஞ் செய்து கொள்ளுதல்; to remarry on the death of the first wife. *"கூரத்தாழ்வார், நங்கையார் திருவடி*

சார்ந்தவாறே, பின்பு ஆவர்த்திப்பதாக அறுதியிட்டு"(திவ். பெரியாழ். 1 : 8, அவ. பக். 156).

த.வ. மறுமணம் செய்தல்.

[Skt. ā-vṛt > த. ஆவர்த்தி–.]

ஆவர்த்தி[2] *āvartti*, பெ.(n.) தடவை; turn.

[Skt. ā-vṛtti > த. ஆவர்த்தி.]

ஆவரணீயம் *āvaraṇīyam*, பெ.(n.) மறைப்பது; that which blinds or obscures, as mental vision. *'ஞானாவரணீயம்'.*

த.வ. மறைப்பு.

[Skt. ā-varaṇīya > த. ஆவரணீயம்.]

ஆவாதம் *āvādam*, பெ.(n.) இசையை இனிமைப்படுத்தவும், ஒப்பனை செய்யவும் கையாளப்படும் பத்து, இசைக்குறிப்புகளுள் (கமகம்) ஒன்று; a musical molody note, one among ten variety which is used for graces, and embellishment.

த.வ. பண்ணாளம், உள்ளாளம்.

[Skt. ā-hata > த. ஆவாதம்.]

ஆவாபம் *āvābam*, பெ.(n.) 1. விதைப்பு; sowing. 2. பாத்தி; pan, seed-bed. 3. பருகவகை; a drink. 4. பாண்டத் தூய்மை; cleansing of a vessel.

[Skt. āvāpa > த. ஆவாபம்.]

ஆவாளஞ்சீவாளம் *āvāḷañjīvāḷam*, பெ.(n.) **ஆவச்சீவாளம்** பார்க்க; see *āva-c-cīvāḷam*. *'அவன் ஆவாளஞ்சீவாளமும் அறிந்திருக் கின்றேன்'.*

ஆவிர்ப்பவி–த்தல் *āvir-p-pavi-*, 4 செ.குன்றாவி. (v.i) வெளிப்படுதல்; to appear, become visible, manifest.

[Skt. āvir-bhāva > த. ஆவிர்ப்பவி–.]

ஆவிர்ப்பாவம் *āvir-p-pāvam*, பெ. (n.) வெளிப்படுகை; presenting oneself, as a deity before a devotee.

த.வ. வெளிப்பாடு.

[Skt. āvir-bhāva > த. ஆவிர்ப்பாவம்.]

ஆவிருத்தி *āvirutti*, பெ.(n.) 1. திரும்பத்திரும்ப ஓதுகை; repeated reading, study. *"ஆவிருத்தியெனத்தகு நாணேற்றி" (பிரபோத. 34 : 15.).* 2. தடவை; turn, time, as added to a number.

த.வ. மறை, மறையோதல்.

[Skt. ā-vṛtti > த. ஆவிருத்தி.]

ஆவிருத்தியலங்காரம் *āvirutti-y-alaṅgāram*, பெ.(n.) பின்வருநிலையணி; figure of speech in which the same expression or only the sense there of or both are repeated to heighten the effect.

[Skt. ā-vṛtti+alam-kāra > த. ஆவிருத்தி யலங்காரம்.]

ஆவிருதி *āvirudi*, பெ.(n.) ஆணவமலம்; *āṇava-malam*, as enveloping the soul. *"ஆவிருதி என்றற்றொடக்கத்துக் காரணக்குறிகளும்" (சி.போ.4 : 2, சிற்.).*

[Skt. ā-vṛti > த. ஆவிருதி.]

ஆவிலம் *āvilam*, பெ.(n.) தெளிவில்லாத நீர்; turbid water.

[Skt. ā-vila > த. ஆவிலம்.]

ஆவேசசமவாதம் *āvēśa-śama-vādam*, பெ.(n.) 1. சிவனியத்தின் அகப்புறச் சமயம் ஆறனுள் ஆதன் என்றென்றும் (நித்தியமாய்) பலவாய், எங்கும் பரந்து இருப்பதென்றும், பச்சைக் கொடிபிடித்து மக்களின் தலையோட்டில் இரந்து உண்பவர் முத்தராய்ச் சிவசமம் ஆவரென்றும், கூறும் சமயம் (சி.போ.பா.அவை); one of the minor *Śaivite*. systems which holds that souls are eternal, plural and omnipresent, enjoins taking alms in human skull with green flags in hand, as a necessary stage for becoming the mukta or perfected soul and promises the latter Śiva like bliss,

one of six *aka-p-pura-c-camayam.* 2. நான்முகனின் மண்டையோட்டைக் கையிலேந்தி சிவன் ஆடுங் கூத்து; dance of Šivan with the skull of Brahma in his hand.

த.வ. புருடைச்சமயம், புருடைக்கூத்து.

[Skt. ā-vēša + šamavāda > த. ஆவேச சமவாதம்.]

ஆவேசநீர் *āvēša-nīr,* பெ.(n.) தேறல் முதலிய, போதையூட்டும், வெறி நீர்மங்கள்; toddy, strong drink, intoxicating liquor. *"ஆவேசநீரைக் குடித்த துட்டர் " (திருப்பு.794).*

த.வ. வெறியம்.

[ஆவேசம் + நீர்.]

[Skt. ā-vēša > த. ஆவேசம்.]

ஆவேசம் *āvēšam,* பெ.(n.) 1. உணர்ச்சிப் பெருக்கு; உணர்ச்சி வயப்பட்ட நிலை, மருள்; frenzy ; state of being possessed. *காவடி ஆட்டத்தைக்கண்டதும் நண்பருக்கு ஆவேசம் வந்து விட்டது. மக்கள் கூட்டத்தைக் கண்டதும் தலைவர் ஆவேசமாகப் பேச்சைத் தொடங்கினார்.* 2. கடுஞ்சினம்; fury. *சல்லிக் கட்டில் காளைகள் ஆவேசமாக மோதின.* 3. பேய்; ghost; spirit. 4. பேய் ஆடுகை; demonical frenzy. 5. ஒன்றின்மேல் பற்று; devotedness to an object. 6. இசிவு (சன்னி) நோயால் ஏற்படும் மயக்கம்; apoplectic giddiness. 7. நோயின் வெறி; paroxysm in disease (சா.அக.).

[Skt. ā-vēša > த. ஆவேசம்.]

ஆவேசவாதி *āvēsa-vādi,* பெ.(n.) காபாலிகமதத்தான் (சி.போ.பா. அவை. 21.); member of the *Kapālika* sect.

[Skt. ā-vēša + vādi > த. ஆவேசவாதி.]

ஆவேசனம்[1] *āvēšanam,* பெ.(n.) அக்கசாலையர் தெரு (திவா.); street of goldsmiths and workers in metals.

[Skt. ā-vēšana > த. ஆவேசனம்.]

ஆவேசனம்[2] *āvēšanam,* பெ.(n.) 1. பணிக் கூடம்; smithy. 2. நுழைவு (பிரவேசம்); entrance. 3. பேய் வெறியாட்டு (பேய் ஆவேசிக்கை); possession by a spirit.

[Skt. ā-vēšana > த. ஆவேசனம்.]

ஆவேசாவதாரம் *āvēšāvadāram,* பெ.(n.) திருமாலின் கூர்மத் தோற்றரவு (கௌணாவ தாரம்) (அஷ்டாதச. பக். 25, குறிப்பு); *Vişņu's* secondary or partial incarnation.

[Skt. ā-vēša+ava-tāra>த.ஆவேசாவதாரம்.]

ஆவேசி-த்தல் *āvēši-,* 4 செ.கு.வி.(v.i) தெய்வம் ஏறுதல்; to be possessed, as by a deity.

த.வ. மருளாடல்.

[Skt. ā-vēša > த. ஆவேசி-.]

ஆவேதனம் *āvēdanam,* பெ.(n.) அறிக்கை; report. *"நான்காம் ஆவேதனத்தோடு" (ஆறுமுகநா. 19).*

[Skt. ā-vēdana > த. ஆவேதனம்.]

ஆற்கந்திதம் *ārkandidam,* பெ.(n.) குதிரையின் நடைவகை (சுக்கிரநீதி, 72); a pace of horse.

[Skt. āskandita > த. ஆற்கந்திதம்.]

ஆற்பணம் *ārpanam,* பெ.(n.) அன்பு; liking.

[Skt. arpana> த. அர்ப்பணம் → ஆற்பணம்.]

ஆற்பனேபதம் *ārpanēpadam,* பெ.(n.) வடமொழி வினைவகை (பி.வி.36); a kind of verbs in Sanskrit.

[Skt. ātmanēpada > த. ஆற்பனேபதம்.]

ஆன்னிகம் *ānnigam,* பெ.(n.) நாள்தோறும் செய்யும் மதத் தொடர்பான செயல்கள்; daily round of religious duties.

[Skt. āhnika > த. ஆன்னிகம்.]

ஆனத்தவாயு *ānatta-vāyu,* பெ.(n.) ஊதை (வாதம்) நோய்வகை (M.L.); muscular rheumatism.

[Skt. ā-naddha + vayu > த. ஆனத்த வாயு.]

ஆனந்த *āṉanda,* பெ.(n.) வியாழ வட்ட ஆண்டுகளில் 48 ஆவது ஆண்டு; the 48th year of the Jupiter cycle.

[*Skt. ā-nanda > த. ஆனந்த.*]

ஆனனம் *āṉaṉam,* பெ.(n.) முகம், (பிங்); face.

[*Skt. ānana > த. ஆனனம்.*]

ஆனிலன் *āṉilaṉ,* பெ.(n.) 1. காற்று (வாயு)க் கடவுளின் மகனான அனுமன் (வின்.); *Hanumāṉ* being a son of *Vāyu.* 2. காற்று (வாயு)க் கடவுளின் மற்றொரு மகனான வீமன் (பாரத. பதினெட். 181); *Bhīma* being another son of *Vāyu.*

[*Skt. ānila > த. ஆனிலன்.*]

ஆனுகூலியம் *āṉukūliyam,* பெ.(n.) நன்மை, உதவி (அனுகூலமுடைமை); suitableness, agreement of minds, friendliness.

[*Skt. ānukūlya > த. அனுகூலியம்.*]

ஆனுபூர்வி *āṉupūrvi,* பெ.(n.) ஒழுங்கு, தொடர்ச்சி (சீவக. 3076, உரை); order, sequence.

[*Skt. ānupūrvi > த. ஆனுபூர்வி.*]

இக்காமத்து *ikkāmattu,* பெ.(n.) 1. தங்கியிருக்கை; staying, dwelling. *ஓரூரில் இக்காமத்து செய்பவன் அவசியம் நோன்பு வைக்க வேண்டும் (முகமதி.).* 2. நின்று கொண்டிருக்கை; standing. *தொழுகைக்கு இக்காமத்தாய்விட்டது (முகமதி.).*

த.வ. தங்கல், இருப்பு.

[*Ar. iqāmat > த. இக்காமத்து.*]

இக்குரார் *ikkurār,* பெ.(n.) ஒத்துக் கொள்ளுகை; confession, admission. *நாம் செய்த குற்றங்களை இக்குரார் செய்து கொள்ளவேண்டும் (முகமதி).*

த.வ. ஒப்பேற்பு.

[*Ar. iqrār > த. இக்குரார்.*]

இக்தியார் *iktiyār,* பெ.(n.) விருப்பம்; will, option, discretion. *மாந்தன் உயிருடனிருப்பதும் இறப்பதும் அவனுடைய இக்தியாரி லில்லை (முகமதி.).*

[*Ar. ikhiiar > த. இக்தியார்.*]

இகுலாசு *igulāsu,* பெ.(n.) உண்மை அன்பு; sincerity, true, love, piety. *நாம் இகுலாசுடன் செய்யும் வணக்கங்களையே இறைவன் ஒத்துக்கொள்வான் (முகமதி.).*

[*Ar. ikhlas > த. இகுலாசு.*]

இங்கார் *iṅgār,* பெ.(n.) தடை, மறுப்புத் தெரிவிக்கை (முகமதி.); objection, contradiction.

[*Ar. iṅkār > த. இங்கார்.*]

இச்சத்து *iccattu,* பெ.(n.) மதிப்புரவு (கௌரவம்); honour. *"மனிதன் இச்சத்தோடு காலங்கழிக்க வேண்டும்".*

த.வ. பெருந்தகவு.

[*Ar. izzat> த. இச்சத்து.*]

இசதாசார் *isatāsār,* பெ.(n.) மதிப்புரவின் அடையாளம்; mark of respect (P.T.L.).

[*Ar. izzat-āthār > த. இசதாசார்.*]

இசப்கோல் *iśapkōl,* பெ.(n.) செடிவகை (மூ.அ.); ispaghul, *plantago isphagula.*

[*U. isapgōl > இஸ்கோல் > த. இசப்கோல்.*]

இசம் *iśam,* பெ.(n.) பெயர்; name, individual.

[*Ar. ism > த. இசம்.*]

இசம்கர்ணம் *iśam-karṇam,* பெ.(n.) சிற்றூர்க் (கிராமக்) கணக்கன்; registered village or accountant.

த.வ. மணியக்காரன்.

[*Ar. ism+***Skt.** *karana > த. இசம்கர்ணம்.*]

இசம்வார் *iśam-vār,* பெ.(n.) வருவாய்த்துறைக் கணக்கேடு (நபர் சிட்டா); revenue account of the holdings with assessment arrangement under the names of the several individuals.

[*Ar. ism+***U.** *wār > த. இசம்வார்.*]

இசா *isā,* பெ.(n.) 1. இரவின் முற்பாகம்; the first part of the night (Muham.). 2. இரவில் தொழுகை; the prayer of the night (Muham.).

த.வ. முன்னிராத்தொழுகை.

[Ar. isha > த. இசா.]

இசாசத்து *isā-sattu,* பெ.(n.) இசைவு, (அனுமதி); permission leave to depart. *நான் போவதற்கு முன் தங்களிடம் வந்து இசாசத்து பெற்றுக் கொள்கிறேன் (முகம்.).*

[Ar. ijazat > த. இசாசத்து.]

இசாபா *iśābā,* பெ.(n.) வருவாய் மிகுதி; increase in revenue whether from improved cultivation or from enhancement of the rate of assessment (C.G.).

[U. izāfā > த. இசாபா.]

இசாபு *iśābu,* பெ.(n.) கணக்கு; account, bill of charges.

[U. hisāb > த. இசாபு.]

இசார்நாமா *iśār-nāmā,* பெ.(n.) குத்தகை ஆவணம்; deed of lease.

[U. isār-nāmā > த. இசார்நாமா.]

இசாரா[1] *iśārā,* பெ.(n.) குத்தகை நிலம்; land leased or rented out.

[U. ijārā > த. இசாரா.]

இசாரா[2] *iśārā,* பெ.(n.) குறிப்புக்காட்டல் (சமிஞ்ஞை); hint, suggestion. *"இசாராவினால் தெரிந்து கொள்ளாதவன் என்ன சொன்னாலும் தெரிந்து கொள்ளமாட்டான்" (முகம்.).*

த.வ. குறிப்பு.

[U. ishara > த. இசாரா.]

இசாராதார் *iśārādār,* பெ.(n.) குத்தகைக்கு வாங்குவோன்; lessee, contractor, renter (W.G.).

[U. ijārā-dār > த. இசாராதார்.]

இசீகாத்திரம் *isīkāttiram,* பெ.(n.) ஏவுகணை வகை (கம்பரா.நிகும்.132, உரை); a kind of missile.

[Skt. isikāstra > த. இசீகாத்திரம்.]

இசுகார் *iśukār,* பெ.(n.) கப்பலில் லவுரானுக்குக் குறுக்கே ஏணிப் படிபோல இடப்பட்டிருக்குஞ் சிறு குறுக்குக் கயிறுகள்; ratives (M.Navi.85).

த.வ. படிக்கயிறு.

[Skt. iskar > த. இசுகார்.]

இசுகால் *iśukāl,* பெ.(n.) தடை; hindrance.

[U. ishkāl > த. இசுகால்.]

இசுசா *isusā,* பெ.(n.) பங்கு; part, portion, lot, share (W.G.).

[U. hissa > த. இசுசா.]

இசுசாகால் *isusākāl,* பெ.(n.) பொது வாய்க்கால் (W.G.); water channel jointly enjoyed by two or more parties.

[இசுசா + கால்.]

[U. hissa > த. இசுசா.]

இசுதவா *isutavā,* பெ.(n.) 1. படிப்படியாக உயர்த்தப்படும் நிலவரி (W.G.); land tax or rent levied at progressively increasing rates until it reaches the full sum imposable on land brought under cultivation, or on villager let out to farm. 2. நிலவரியைப் படிப்படியாக உயர்த்துகை; the practice of so taxing lands.

த.வ. ஏறுவரி.

[U. istiwā > த. இசுதவா.]

இசுதிக்பார் *iśutikbār,* பெ.(n.) கரிசுகளை (பாவங்களை) மன்னிக்குமாறு கடவுளிடம் வேண்டிக் கொள்ளுகை; begging forgiveness of god. *மனிதன் அடிக்கடி இசுதிக்பார் செய்து கொண்டிருக்க வேண்டும் (முகம்.).*

த.வ. மன்னிப்பு வேண்டுகை.

[Ar. istigfar > த. இசுதிக்பார்.]

இசுதிக்பால் *iśutikpāl,* பெ.(n.) எதிர் கொண்டழைக்கை; ceremonies reception of a person of distinction consisting in the villagers coming out of the village limits in procession to meet the hounoured guest (W.G.).

த.வ. எதிரேற்பு.

[U. istiqbal > த. இசுதிக்பால்.]

இசுதிபா *iśutibā,* பெ.(n.) விடுதலையாவணம்; deed of relinquishment (R.T.).

[Ar. istifa > த. இசுதிபா.]

இசுதிமிரார் *iśutimirār,* பெ.(n.) 1. தீர்வை வரையறை; permanent settlement of revenue (R.F.). 2. தீர்வை வரையறுக்கப்பட்ட நிலம்; land permanently settled (R.F.).

[U. istimrār > த. இசுதிமிரார்.]

இசுதியார் *iśutiyār,* பெ.(n.) விளம்பரம்; proclamation, notice, advertisement.

[U. ishtēhār > த. இசுதியார்.]

இசுதியார்நாமா *iśutiyār-nāmā,* பெ.(n.) விளம்பரச் சுவரொட்டி, விளம்பர அட்டை; advertisement, placard poster.

[U. ishtēhār-nāmā > த. இசுதியார்நாமா.]

இசுதீங்கு *iśutīṅgu,* பெ.(n.) கப்பற்பாயை ஏற்றவும் இறக்கவும் உதவும் கயிறுகள்; brails (M.Navi.86).

த.வ. ஏண்வடம்.

[Skt. istinki > த. இசுதீங்கு.]

இசும் *iśum,* பெ.(n.) பெயர்; name (Muham.).

[Ar. ism > த. இசும்.]

இசுமு *iśumu,* பெ.(n.) பெயர்; name.

[U. isum > த. இசுமு.]

இசுமுதார் *iśumutār,* பெ.(n.) மரபுவழியாக சிற்றூரில் வேலை செய்பவன்; hereditary holder of a village office.

த.வ. குடிமகன், குடிப்பிள்ளை.

[U. isum-dār > த. இசுமுதார்.]

இசுமுவாரி *iśumu-vāri,* பெ.(n.) பெயர் வரிசை (நபர்சிட்டா); revenue account of the holdings and their assessments arranged under the names of the several individuals.

த.வ. பெயரேடு.

[U. isum-wāri > த. இசுமுவாரி.]

இசுராபு *iśurābu,* பெ.(n.) தேவைக்கதிகமாக செலவு செய்கை; extravagance, waste (Muham.).

த.வ. வீணடிப்பு.

[Ar. israf > த. இசுராபு.]

இசுலாம் *iśulām,* பெ.(n.) 1. அமைதி; peace. 2. முகம்மதிய சமயம்; religion of Islam; the muhammadan religion (Muham.).

[Ar. islam > த. இசுலாம்.]

இசுலாம்மார்க்கம் *iśulām-mārkkam,* பெ.(n.) முகம்மதிய மதம்; religion of Islam.

[Ar. islam+Skt. mārkka > த. இசுலாம் மார்க்கம்.]

இசூக்கு *iśūkku,* பெ.(n.) அன்பு; love, affection. *"அவன் அல்லாவின் இஷீக்கினால் மயக்கம் கொண்டிருக்கிறான்" (முகமதி.).*

[Ar. ishq > த. இசூக்கு.]

இசூராக்கு *iśūrākku,* பெ.(n.) ஞாயிற்றின் தோற்றம்; rising of the sun, day-break (Muham.).

த.வ. எழுஞாயிறு.

[Ar. ishraq > த. இசூராக்கு.]

இஞ்சின் *iñjiṉ,* பெ.(n.) இயந்திரம், பொறி; engine; any complex and powerful machine.

[E. engine > த. இஞ்சின்.]

இஞ்சினியர் *iñjiṉiyar,* பெ.(n.) பொறியாளர்; engineer.

[E. engineer > த. இஞ்சினியர்.]

இஞ்சீல் *iñjil,* பெ.(n.) விவிலிய நூலில் உள்ள புதிய ஏற்பாடு; the Gospel; the New Testament.

[U. injil > த. இஞ்சீல்.]

இட்சி *itsi,* பெ.(n.) கத்தூரி மஞ்சள் (மூ.அ.); yellow zedoary.

[Skt. iksi > த. இட்சி.]

இட்சுவாகு *itsu-vāku,* பெ.(n.) கதிரவக் குலத்தின் முதலரசன்; the first king of the solar dynasty.

[Skt. iksvāku > த. இட்சுவாகு.]

இட்டகாமியம் *itta-kāmiyam,* பெ.(n.) மனம் மிக விரும்பியது; object ordently desired.

த.வ. உவந்தது.

[Skt. ista-gāmya > த. இட்டகாமியம்.]

இட்டசித்தி *itta-citti,* பெ.(n.) விருப்பம் நிறைவேறுகை; attainment of one's heart's desire.

த.வ. விழைவுப்பேறு.

[Skt. ista-siddhi > த. இட்டசித்தி.]

இட்டதெய்வம் *itta-deyvam,* பெ.(n.) கடவுள் (குல தெய்வம்); favourite deity, deity to whom one is devoted.

த.வ. உகப்புத் தெய்வம்.

[இட்டம் + தெய்வம்.]

[Skt. ista > த. இட்டம்.]

தேய் →தெய் →தெய்வம்> **Skt.** *deiva.*

இட்டதேவதை *itta-dēvadai,* பெ.(n.) **இட்டதெய்வம்** பார்க்க; see *itta-deyvam.*

த.வ. விழைவுத்தெய்வம்.

[இட்டம் + தேவதை.]

[Skt. ista > த. இட்டம்.]

இட்டப்பிரசாதம் *itta-p-pirasādam,* பெ.(n.) 1. கைமாறு வேண்டாக் கொடை; gift of grace. 2. கடவுட் கருணை; grace of god. 3. தெய்வப் படையல்; boiled rice offered to the idols. 4. தெய்வ அப்பம்; encharist.

த.வ. விழைவுப்படையல்.

[Skt. istam-prasatha > த. இட்டப்பிரசாதம்.]

இட்டபோகம் *itta-pōgam,* பெ.(n.) விரும்பியதை நுகர்கை; free licentious enjoyment of wished for pleasure.

த.வ. விழைவுத் துய்ப்பு.

[Skt. ista-pōga > த. இட்டபோகம்.]

இட்டம் *ittam,* பெ.(n.) 1. விருப்பம்; desire, will, wish, inclination of mind. *"நம்பனை நாடொறு மிட்டத்தா லினிதாக நினைமினோ"* (தேவா. 20,8.). 2. அன்பு; love, affection. *"இட்டமான வியற்புக ரோனிடங் கிட்டினான்"* (கந்தபு. சுக்கிரனுப. 15.). 3. நட்பு; friendship.

த.வ. உகப்பு.

[Skt. ista > த. இட்டம்.]

இட்டம்பண்ணு-தல் *ittam-pannu-,* 5 செ. குன்றாவி(v.t.) அடிமைத் தனத்தை விலக்குதல் (வின்.); to emancipate.

[இட்டம் + பண்ணு-தல்.]

[Skt. ista > த. இட்டம்.]

இட்டலிங்கம் *itta-lingam,* பெ.(n.) நாடோறும் வழிபாட்டுக்குரியதாக மாணாக்கனுக்குக் குருவினாற் கொடுக்கப்படும் சிவக்குறி (ஆன்மார்த்த லிங்கம்) (சைவச. பொது. 464); lingam which a guru hands over to a duly initiated disciple with instructions regarding the method of private worship.

த.வ. வழிபடு படிமம்.

[Skt. ista + linga > த. இட்டலிங்கம்.]

இட்டவிகாதம் *itta-vigādam,* பெ.(n.) விருப்பத்தைக் கெடுக்கை (சிவசம.பக்.54); destruction of one's cherished wish.

த.வ. விழைவுக்கேடு.

[Skt. ista-vihata > த. இட்டவிகாதம்.]

இட்டன் *ittan,* பெ.(n.) நண்பன்; friend.

[Skt. ista > த. இட்டன்.]

இட்டாநிட்டம் *iṭṭā-niṭṭam,* பெ.(n.) விருப்பு வெறுப்பானவை; those that are liked and those that are disliked.

த.வ. நச்சிநச்சாதவை.

[Skt. iṣṭa-an-iṣṭa > த. இட்டாநிட்டம்.]

இட்டாபூர்த்தம் *iṭṭā-pūrttam,* பெ.(n.) வேள்வி முதலிய செயல்களும் குளம் வெட்டுகை முதலிய அறச்செயல்களும் (S.I.I.iii, 3); sacrifices and charitable deeds.

த.வ. விழைவறம்.

[Skt. iṣṭa-pūrta > த. இட்டாபூர்த்தம்.]

இடபக்கொடியோன் *iṭaba-k-koṭiyōṉ,* பெ.(n.) கொடியில் எருதைச் சின்னமாகக் கொண்ட சிவன்; Šiva, who has the figure of a bull on his banner.

த.வ. ஏற்றுக்கொடியோன்.

[இடபம் + கொடியோன்.]

[Skt. ṛṣabha > த. இடபம்.]

இடபகிரி *iṭaba-giri,* பெ.(n.) அழகர் மலை (அழகர்கல. 33.); Aḻagar malai near Madurai.

[Skt. ṛṣabha+giri > ரிஷபகிரி > த. இடபகிரி.]

இடபதரன் *iṭaba-taraṉ,* பெ.(n.) உருத்திரர்களுள் ஒருவர் (சி.போ.பா. 2 : 3, பக். 212); a Rudra.

[Skt. Ṛṣabhadhara > த. இடபதரன்.]

இடபதீபம் *iṭaba-tībam,* பெ.(n.) கோயிலில் கடவுள் முன்பு காட்டப்படும் ஒப்பனை விளக்கு வகை (தமிழ்விடு. 233.); a kind of lamp waved before idols.

[Skt. ṛṣabha+dīpa > ரிஷபதீபம் > த. இடபதீபம்.]

இடபம் *iṭabam,* பெ.(n.) 1. ஏறு (திவா.); bull. 2. பொலியெருது (பிங்.); bull kept for breeding. 3. நந்தி (பிங்.); Nandi, the chief attendant of Šiva, so called as he has a face resembling that of a bull. 4. இரண்டாம் ஓரை (திவா.); name of the second sign of the Zodiac; Taurus. 5. விடை மாதம் (வைகாசி) (மணிமே. 15 : 23); Tamil second month.

த.வ. காளை.

[Skt. ṛṣabha > ரிஷபம் > த. இடபம்.]

இடபவாகனன் *iṭaba-vāgaṉaṉ,* பெ.(n.) எருதை ஊர்தியாகக் கொண்ட சிவன்; Šiva, who rides on a bull.

த.வ. ஏறூர்ந்தோன்.

[Skt. ṛṣabha+vāhaṉaṉ > த. இடபவாகனன்.]

இடபவீதி *iṭaba-vīdi,* பெ.(n.) மீனம், மேழம், கன்னி, துலை என்னும் ஓரைகளடங்கிய கதிரவன் இயங்கும் நெறி; trisection of the Zodiac, embracing the four signs, Pisces, Aries, Virgo, and Libra.

த.வ. ஞாயிற்றுச்சாலை.

[Skt. ṛṣabha+vīthi > த. இடபவீதி.]

இடபன் *iṭabaṉ,* பெ.(n.) காமநூல் கூறும் மூன்று பிரிவு ஆடவருள் ஒரு பிரிவினன் (கல்லா. 7, மயிலே.); man of bull-like nature; one of three *āḍavar-šādi.*

த.வ. ஏற்றன்.

[Skt. ṛṣabha > த. இடபன்.]

ஆடவர் இனம் : 1. சசன், 2. இடபன், 3. அச்சுவன்.

இடபாரூடர் *iṭabārūḍar,* பெ.(n.) சிவ வடிவங்களுள் ஒன்று; Šiva, in one of His aspects, appearing as mounted on the sacred bull. *"பிரமகபாலத்தர் மறைபேசு மிடபாரூடர்" (திருநெல். பு. அறம்வளர். 11).*

த.வ. ஏறூர்ந்த சிவன்.

[Skt. ṛṣabha + ārūḍha > த. இடபாரூடர்.]

இடாக்குத்தர் *iṭākkuttar,* பெ.(n.) ஆங்கில முறையைப் பின்பற்றும் மருத்துவர் (யாழ்ப்); doctor, physician.

த.வ. மருத்துவர்.

[E. doctor > த. இடாக்குத்தர்.]

இத்தத்து *ittattu,* பெ.(n.) **இத்தா** பார்க்க; see *ittā.*

[Ar. iddat > த. இத்தத்து.]

இத்தா *ittā,* பெ.(n.) வெளியில் வராமை; period of seclusion incumbent on a Muhammadan woman in consequence of the dissolution of her marriage either by divorce or by the death of her husband. *கணவன் இறந்தால் மனைவி நான்கு மாதம் பத்துநாள் இத்தாவிருக்க வேண்டும் (முகமதி.).*

த.வ. இற்செறிப்பு.

[Ar. iddat > த. இத்தா.]

இத்திகாத்தான *ittikāttāṉa,* பெ. எ. (adj.) ஒன்றுபட்ட (ஏகோபித்த); unanimous. *இவ்விடயத்தில் ஆலிம்களுக்குள் இத்திகாத்தான எண்ணம் இருக்கிறது (முகமதி.).*

த.வ. ஒன்றித்த.

[Ar. ittihād > த. இத்திகாத்தான.]

இத்திகாத்து *ittikāttu,* பெ. (n.) நம்பிக்கை; faith, belief. *நன்மை செய்தவனுக்கு மறுமையில் நற்பலன் உண்டென்று முகமதியர் இத்திகாத்து கொள்ள வேண்டும் (முகமதி.).*

[Ar. ittiquad > த. இத்திகாத்து.]

இத்திகாபு *ittikābu,* பெ.(n.) தனித்திருந்து ஊழ்கம் செய்கை (தியானித்தல்) (முகமதி.); meditation in retirement; silent devotion.

[Ar. ittikāf > த. இத்திகாபு.]

இத்திபார் *ittibār,* பெ.(n.) மதிப்பு, நம்பிக்கை; credence, confidence. *உம்முடைய சொல்லில் எனக்கு இத்திபாரில்லை (முகமதி.).*

[Ar. itibār > த. இத்திபார்.]

இத்திராசு *ittirāšu,* பெ.(n.) மறுத்துச் சொல்லுகை, தடை; dispute, objection. *நான் சொல்வதற்கெல்லாம் இத்திராசு செய்யாதே. (முகமதி.).*

[Ar. itirāz > த. இத்திராசு.]

இத்திரிப்பெட்டி *ittiri-p-peṭṭi,* பெ.(n.) சலவைப் பெட்டி; iron box.

[இத்திரி + பெட்டி.]

[U. istri > த. இத்திரி.]



இத்திலாக்கு *ittilākku,* பெ.(n.) குறியீட்டு மொழியாக (பரிபாஷையாக) வழக்கிலுள்ளது; technical language, conventional meaning. *உலக மாக்களுடைய இத்திலாக்கில் அவ்வார்த்தைக்கு வேறு அர்த்தம் ஏற்படும் (முகம்.).*

த.வ. இடவழக்கு.

[Ar. istilaq > த. இத்திலாக்கு.]

இத்திலா *ittilā,* பெ.(n.) செய்தி; information, advice, notification.

[U. ittillā > த. இத்திலா.]

இத்துவரம் *ittuvaram,* பெ.(n.) எருது (சங். அக.); bull.

[Skt. iḍvara > த. இத்துவரம்.]

இத்யாதி *ityādi,* பெ.(n.) என்ற இவை முதலானவை; இன்னும் பல; et cetera; and the rest. *"மோகினியென்றும் மகாளென்றும் இத்யாதி நாமங்களுண்டு" (சி.சி. 1 :57, சிவாக்.).*

[Skt. iti+ādi > த. இத்யாதி.]

இதசத்துரு *ita-šatturu,* பெ.(n.) வெளிநட்புக் காட்டும் பகைவன்; enemy in the guise of a friend.

த.வ. உட்பகைவன்.

[Skt. hita+šatru > த. இதசத்துரு.]

இதரேதராச்சிரயம் *itarētarāccirayam,* பெ.(n.) ஒன்றை யொன்று பற்றுதலென்னுங் குற்றம் (தொல். விருத். முதற். பக். 50.); arguing in a circle with reference to two things; fallacy of mutual dependence.

த.வ. இருபால் கவர்வு.

[Skt. itarētara+a-šraya>த. இதரேதராச்சிரயம்.]

இதாசனி *itāšani,* பெ.(n.) (ஓகநிலை) இருக்கை ஒன்பதனுள் ஒகி தன்மனம் போல அமைத்துக் கொள்ளும் இருக்கை (ஆசனம்) (சுகாசனத்தி லிருப்பவன்); person who sits at ease, cross-legged. *"இதாசனியா யிருந்தேன்" (திருமந். பாயி. 56).*

த.வ. உகப்பு இருக்கை.

[Skt. hitā+āsana> த. இதாசனி.]

இதிகாசம் *itikāšam,* பெ.(n.) 1. இராமாயணம், மகாபாரதம் போன்ற தொல் மறவனப்பு; ancient epic, as the *Rāmāyaṇa* or the *Mahābhārata.* 2. எடுத்துக்காட்டு; example, illustration. 3. உலகுரையாகிய அளவை (ஐதிகப் பிரமாணம்); tradition, which the *Paurānikas* recognize as a proof.

த.வ. தொன்மம்.

[Skt. itihāsa > த. இதிகாசம்.]

இதிபாரா *itibārā,* பெ. (n.) நம்பிக்கை (C.G.); confidence.

[U. etibār > த. இதிபாரா.]

இதோபதேசம் *itōpatēšam,* பெ.(n.) 1. நல்ல கருத்துகளைக் கற்பிக்கை (நற்போதனை); friendly advice, salutary instruction. 2.யாழ்ப்பாணத்து நாகநாத பண்டிதர் சமற்கிருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்த ஒரு நூல்; a Tamil translation, by *Nāganātha Paṇḍitar* of Jaffna of a Skt. work containing a popular collection of fables intermixed with didactic sentences and moral precepts, supposed to have been narrated by a *Brāhman* named *Viṣṇusaraman* to some young princes, and chiefly founded on the *pañja-tantra.*

த.வ. நல்லோதல்.

[Skt. hita+upa-dēša > த. இதோபதேசம்.]

இந்திராக்கம் *intirākkam,* பெ.(n.) குதிரைச் செவியினடியிற் காணப்படுஞ் சுழிவகை (சுக்கிரநீதி, 314.); a curl or mark found below the ears of horses.

[Skt. indrākṣa > த. இந்திராக்கம்.]

இந்திரி *intiri,* பெ.(n.) கிழக்கு; the eastern cardinal direction, as Indra's quarter. *"இந்திரி முதற்றிசை யெட்டுங் கேட்டன" (கம்பரா. வாலிவதை. 9.).*

[Skt. aindrī > த. இந்திரி.]

இந்திரிபேதி *indiri-bēdi,* பெ.(n.) தோல் (பிரமேக) நோயால் உடம்பினுள் தங்கி நிற்கும் நஞ்சை வெளிப்படுத்தும் முகத்தான், ஆயுள் வேத முறைப்படி செய்யும் மருத்துவம்; a method of purgation adopted in ayurveda, by which the septic poison stagnated in the body through venereal causes, is eliminated from the system (சா.அக.).

த.வ. நஞ்சுநீக்கு மருத்துவம்.

இந்திரியஆத்துமன் *indiriya-āttuman,* பெ.(n.) ஆதனில் (ஆன்மா) ஒன்றிய இந்திரியப் புலன்; identitical or one with the soul; senses merged in the soul (சா.அக.).

த.வ. உயிர்ப்புலன்.

[Skt.indriya-ātman>த.இந்திரியஆத்துமன்.]

இந்திரியஆர்த்தம் *indiriya-ārttam,* பெ.(n.) புலன்களின் செயல் பற்றியது; an object of the sense, as smell, sound etc. (சா.அக.).

[**Skt.** *indriya-ārttam>த.இந்திரியஆர்த்தம்.]*

இந்திரியக்கட்டு *indiriya-k-kaṭṭu,* பெ.(n.) 1. புலன்கள் அதன் வழி செல்லாது தடுக்கை; restraining the senses from indulgence. 2. பெண்ணுடன் சிற்றின்பத்தில் இருக்கும்போது விந்து வெளிப்படாமல் இருக்க மருந்தினால் கட்டுகை; suppression of semen during intercourse (சா.அக.).

த.வ. புலடனக்கம்.

[இந்திரியம் + கட்டு.]

[**Skt.** *indriya> த.இந்திரியம்.]*

இந்திரியக்கலனம் *indiriya-k-kalaṉam,* பெ.(n.) **இந்திரியக் கலிதம்** பார்க்க; see *indiriya-k-kalidam.*

[இந்திரியஸ்கலனம் → இந்திரியக்கலனம்.]

இந்திரியக்கலிதம் *indiriya-k-kalidam,* பெ.(n.) கருநீர் (சுக்கிலம்) வெளிப்படுகை; emission of semen.

த.வ. கருநீர்கழிவு.

[**Skt.** *indriyaškalita>த.இந்திரியக்கலிதம்.]*

கருநீர் (இந்திரியம்) இரண்டு முறையில் வெளிப்படும். ஒன்று உடலுறவின் போது தெரிந்தும், கனவின்கண் தெரியாமலும் வெளிப்படும்.

இந்திரியக்கனவு *indiriya-k-kaṉavu,* பெ.(n.) கருநீர் (இந்திரியம்) வெளிப்படும் முன் தூக்கத்திலுண்டாகுங் கனவு; wet dream (சா.அக.).

த.வ. உறவுக்கனவு.

[**Skt.** *indriya>இந்திரியம்.]*

இந்திரியக்காட்சி[1] *indiriya-k-kāṭci,* பெ.(n.) தூங்கும்பொழுது கருநீர் (சுக்கிலம்) வெளிப்படும் முன் பெண்ணைப் புணரவாவது அணைக்கவாவது காணும் தோற்றம்; an unreal fancy just before emission during which the sleeping man experiences if he is enjoying with or embracing a woman - *Emissional visions* (சா.அக.).

த.வ. இணைவிழைச்சுக்கனவு.

[இந்திரியம் + காட்சி.]

[**Skt.** *indriya> த. இந்திரியம்.]*

இந்திரியக்காட்சி[2] *indiriya-k-kāṭci,* பெ.(n.) ஆதன் பொறிபூதங்களுடன் கூடி வேறுபாடின்றி (நிருவிகற்பமாய்) அறியும் அறிவு (சி.சி. அளவை. 6.); sense - perception.

த.வ. புலக்காட்சி.

[இந்திரியம் + காட்சி.]

[**Skt.** *indriya> த. இந்திரியம்.]*

இந்திரியக்குழல் *indiriya-k-kuḻal,* பெ.(n.) 1. **இந்திரியக்கமலக்குழல்** பார்க்க; see *indiriya-k-kamala-k-kuḻal.* 2. உறுப்புகளின் குழாய்; organic vessels of the body (சா.அக.).

[இந்திரியம் + குழல்.]

[**Skt.** *indriya> த. இந்திரியம்.]*

இந்திரியக்கமலக்குழல் *indiriya-k-kamala-k-kuḻal,* பெ.(n.) கருநீர் (சுக்கிலம்) தங்குமிடத்திற்குச் செல்லுமொரு குழல்; the tube connecting the seminal sac - *Vas deferens* (சா.அக.).

[இந்திரியம் + கமலம் + குழல்.]

[**Skt.** *indriya> த. இந்திரியம்.]*

இந்திரியக்கமலம் *indiriya-k-kamalam,* பெ.(n.) கருநீர் (சுக்கிலம்) தங்கும் பை; seminal sac - *Vesiculae seminales.*

த.வ. கருநீர்ப்பை.

[இந்திரியம் + கமலம்.]

[**Skt.** *indriya-kamala>த.இந்திரியக்கமலம்.]*

இந்திரியக்கரணம் *indiriya-k-karaṇam,* பெ.(n.) உறுப்புகளின் அமைப்பு; organic structure; suitable disposition of the parts

in the body for the performance of vital functions (சா.அக.).

த.வ. பொறிப்பாங்கு.

[இந்திரியம் + கரணம்.]

*[**Skt.** indriya> த. இந்திரியம்.]*

இந்திரியக்காதம் *indiriya-k-kādam,* பெ.(n.) பொறிகளின் (புலனின்) வலுவின்மை; weakness of the organs of sense (சா.அக.).

*[**Skt.** indriya-ghāta> த. இந்திரியக்காதம்.]*

இந்திரியக்கிராமம் *indiriya-k-kirāmam,* பெ.(n.) மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகள்; the five sense organs *mey, vāy, kaṇ, mūkku, śevi* (சா.அக.).

த.வ. ஐம்பொறி.

*[**Skt.** indriya-grāma> த. இந்திரியக் கிராமம்.]*

இந்திரியக்கோசம் *indiriya-k-kōśam,* பெ.(n.) **இந்திரியக்கமலம்** பார்க்க; see *indiriya-k-kamalam.*

*[**Skt.** indriya-kōsa> த. இந்திரியக்கோசம்.]*

இந்திரியக்கோசரம் *indiriya-k-kōśaram,* பெ.(n.) 1. புலனால் அறியப்படுவது; that which is perceived by the sense. 2. புலன்களுக்குச் செய்தியாதல்; capability of being perceptible by the sense (சா.அக.).

த.வ. புலப்பாடு.

*[**Skt.** indriya-kōsaram> த. இந்திரியக் கோசரம்.]*

இந்திரியசக்தி *indiriya-śakti,* பெ.(n.) 1. புலனின் ஆற்றல்; the power of the sense and the sensory organs. 2. கருநீரின் (விந்துவின்) ஆற்றல்; virile power.

த.வ. புலனாற்றல்.

*[**Skt.** indriya-śakti> த. இந்திரியசக்தி.]*

இந்திரியசங்கம் *indiriya-śaṅgam,* பெ. (n.) பற்றற்ற தன்மை; indifference to pleasure or pain; non-attachment to sensual objects- *Stoicism.*

*[**Skt.** indriya-saṅgha> த. இந்திரியசங்கம்.]*

இந்திரியசிராவம் *indiriya-śirāvam,* பெ.(n.) வெள்ளை நோயினால் ஏற்படும் கருநீர் (சுக்கிலம்) ஒழுக்கு; a venereal disease attended with constant oozing or abnormal discharge of semen (சா.அக.).

*[**Skt.** indriya-śrāvya> த. இந்திரியசிராவம்.]*

இந்திரியஞானம் *indiriya-ñāṉam,* பெ.(n.) உணர்ச்சியின் கருவி; the faculty of perception (சா.அக.).

*[**Skt.** indriya-ñāna> த. இந்திரியஞானம்.]*

இந்திரியத்தாருட்டியம் *indiriya-t-tāruṭṭiyam,* பெ.(டே.) கருநீரின் (சுக்கிலத்தின்) வலிமை; the thickness of the semen (சா.அக.).

இந்திரியத்துவம் *indiriyattuvam,* பெ.(n.) உணர்ச்சியின் உறுப்பாயிருக்கும் நிலைமை; the condition of being an organ of sense (சா.அக.).

இந்திரியநரம்பு *indiriya-narambu,* பெ.(n.) நாடி (தாது) நரம்பு; spermatic cord (சா.அக.).

[இந்திரியம் + நரம்பு.]

*[**Skt.** indriya> த. இந்திரியம்.]*

இந்திரியநிக்கிரகம் *indiriya-nikkiragam,* பெ.(n.) பொறியடக்கம்; spiritual inhibition of the organs of sense.

*[**Skt.** indriya-nigraha> த. இந்திரியநிக்கிரம்.]*

இந்திரியப்பசை *indiriya-p-paśai,* பெ.(n.) கருநீரில் (இந்திரியத்தில்) உள்ள பிசின் போன்ற பொருள்; an albuminoid substance derived from the semen - *Spermatin.*

[இந்திரியம் + பசை.]

*[**Skt.** indriyam> த. இந்திரியம்.]*

இந்திரியப்பிரசங்கம் *indiriya-p-piraśaṅgam,* பெ.(n.) சிற்றின்ப நுகர்ச்சி; sensuality (சா.அக.).

*[**Skt.** indriya-pra-śaṅgam> த. இந்திரியப் பிரசங்கம்.]*

இந்திரியப்பெருக்கு *indiriya-p-perukku,* பெ.(n.) கருநீர் மிகுதியாக சுரக்கை (சுக்கில விருத்தி); abundant secretion of semen.

[இந்திரியம் + பெருக்கு.]

[Skt. indriyam> த. இந்திரியம்.]

இந்திரியப்போக்கு *indiriya-p-pōkku,* பெ.(n.) கருநீர் (சுக்கிலம்) மிகுதியாக வெளிப்படுகை; frequent involuntary discharge of semen with out copulation- *Spermatorrhoea.*

[இந்திரியம் + போக்கு]

[Skt. indriyam> த. இந்திரியம்.]

இந்திரியபலம் *indiriya-palam,* பெ.(n.) **இந்திரியத்தாருட்டியம்** பார்க்க; see *indiriya-t-tāruttiyam.*

[இந்திரியம் + பலம்.]

[Skt. indriyam> த. இந்திரியம்.]

இந்திரியபுத்தி *indiriya-putti,* பெ.(n.) 1. ஐம்புலன் உணர்ச்சி; perception by the five sense. 2. புலன் நுகர்ச்சி; the exercise of any sense 3. உறுப்புகளின் உணர்ச்சி; the faculty of any organ.

[இந்திரியம் + புத்தி.]

[Skt. indriyam> த. இந்திரியம்.]

இந்திரியபோகம் *indiriyā-pōgam,* பெ.(n.) புணர்ச்சியால் உண்டாகும் மகிழ்ச்சி; sexual happiness (சா.அக.).

த.வ. புணர்ச்சி மகிழ்தல்.

[Skt. indriya-pōka> த. இந்திரியபோகம்.]

இந்திரியம் *indiriyam,* பெ.(n.) 1. பொறி; organ or power of sense. 2. கருநீர் (சுக்கிலம்); semen. 3. மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகள் (பிங்.); the five organs of perception; the five sense of the body (சா.அக.).

[Skt. indriya > த. இந்திரியம்.]

மெய்மை நூற் (தத்துவ நூல்) கருத்துப் படி புலன் (இந்திரியம்) என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தோடு மனம், கல்வி (வித்தை) என்பதையும் சேர்த்து ஏழுவகை என்று கருதப்படும். மேலும் புலன் (இந்திரியம்) என்பது பொதுவாக அறிவுக்கருவிகள் (ஞானேந்திரியம்) செயற்கருவிகள் (கருமேந்திரியம்)உட்புலக்கருவிகள் (அந்தரேந்திரியம்) என மூவகையாகவும் கொள்ளப்படும். (சா. அக.)

இந்திரியம்நீற்றல் *indiriyam-nīṟṟal,* பெ.(n.) கருநீர் (சுக்கிலம்) தண்ணீரைப் போலாகை; liquidity of semen; destruction of solution of spermatoza - *Spermatolysis.*

த.வ. நீர்த்தகருநீர்.

[இந்திரியம் + நீற்றல்.]

[Skt. indriyam> த. இந்திரியம்.]

இந்திரியமடக்கல் *indiriyam-aḍakkal,* தொ.பெ. (vbl. n.) 1. ஐம்புலன்களையும் அடக்குகை; restraining the five senses. 2. புணர்ச்சியின் போது கருநீரை வெளிவிடாதபடி தடுக்கை; suppression of semen during coition (சா.அக.).

த.வ. புலனடக்கம்.

[இந்திரியம் + அடக்கல்.]

[Skt. indriyam> த. இந்திரியம்.]

இந்திரியமறுப்பு *indiriyamaṟuppu,* பெ.(n.) கருநீர் (இந்திரியம்) தடை; obstruction to the discharge of semen - *Sper - matempharxis* (சா.அக.).

இந்திரியமிறுகல் *indiriyamiṟugal,* தொ.பெ. (vbl.n.) கருநீர் (சுக்கிலம்) கட்டுகை; thickening of the seminal fluid (சா.அக.).

[இந்திரியம் + இறுகல்.]

[Skt. indriyam> த. இந்திரியம்.]

இந்திரியமுடைதல் *indiriyam-uḍaidal,* தொ.பெ. (vbl.n.) **இந்திரியம் நீற்றல்** பார்க்க; see *indiriyam-nīṟṟal* (சா.அக.).

[இந்திரியம் + உடைதல்.]

[Skt. indriyam> த. இந்திரியம்.]

இந்திரியமோசனம் *indiriyamōšaṉam,* பெ.(n.) ஐம்புலன்களின் அவா அறுக்கை; abandonment of sensuality (சா.அக.).

த.வ. புலன்தடை.

இந்திரியயிழிவு *indiriya-y-iḻivu,* பெ.(n.) கருநீர் உடைந்து கழிகை; destruction and discharge of semen - *Spermatorrhoea* (சா.அக.).

[இந்திரியம் + இழிவு.]

[Skt. indriyam> த.இந்திரியம்.]

இந்திரியவம் *indiriyavam,* பெ.(n.) வெட்பாலை யரிசி (தைலவ. தைல. 116.); seeds of *Holarrbena antidysenterica.*

[Skt. indra+yava > த. இந்திரியவம்.]

இந்திரியவிசயநோய்கள் *indiriya-višaya-nōygaḷ,* பெ.(n.) ஐம்பொறி (பஞ்சேந்திரியம்) களாலுண்டாகும் துன்பம், தொல்லை (அவஸ்தை); disorders pertaining to the sensory organs (சா.அக.).

த.வ. ஐம்பொறி நோய்.

[இந்திரியவிசயம் + நோய்கள்.]

[Skt. indriya-vi-saya > த. இந்திரியவிசயம்.]

இந்திரியவிசயம் *indiriya-višayam,* பெ.(n.) புலனின் கருவிகள்; object of the senes (சா.அக.).

[Skt. indriya-vi-saya > த. இந்திரியவிசயம்.]

இந்திரியவிருத்தி *indiriya-virutti,* பெ. (n.) 1. கருநீர் (இந்திரியம்) மிகுதியாக வுண்டாகுகை; excess in the secretion of semen. 2. உணர்ச்சியின் கருவி; sensitive faculty (சா.அக.).

[Skt. indriya+vrtti> த. இந்திரியவிருத்தி.]

இந்திரியவீனம் *indiriya-viṉam,* பெ.(n.) 1. கருநீர் (சுக்கிலம்) குறைவு; want of secretion of semen. 2. ஆண்மைத் தன்மைக் குறைவு; impotancy; want of virile power. 3. **இந்திரியயிழிவு** பார்க்க; see *indiriya-y-iḻivu.*

[Skt. indriya+hina> த. இந்திரியவீனம்.]

இந்திரியவொடுக்கம் *indiriya-v-oḍukkam,* பெ.(n.) ஐம்புலன்களும் ஒடுங்குகை; suppression of the five senes. 2. விந்து சுரக்காவண்ணம்தடைசெய்கை; suppression of the secretion of semen-*Spermatos chesis.*

த.வ. புலனொடுக்கம்.

[இந்திரியம் + ஒடுக்கம்.]

[Skt. indriya > த. இந்திரியம்.]

இந்திரியவொழுக்கு *indiriya-v-oḻukku,* பெ.(n.) **இந்திரியயிழிவு** பார்க்க; see *indiriya-y-iḻivu.*

[இந்திரியம் + ஒழுக்கு.]

[Skt. indriya > த. இந்திரியம்.]

இந்திரியவோதனம் *indiriya-v-ōdaṉam,* பெ.(n.) உடம்பின் ஆற்றலைத் தூண்டுகை; arousing the bodily powers (சா.அக.).

[இந்திரியம் + ஓதனம்.]

[Skt. indriya > த. இந்திரியம்.]

இந்திரியாசங்கம் *indiriyā-šaṅgam,* பெ.(n.) புலன் நுகர்வு (அனுபவம்) அல்லது செயல் வெறுப்பு; detachment from sensual object- *Stoicism* (சா.அக.).

இந்திரியாபதனம் *indiriyā-padaṉam,* பெ.(n.) உடல்; body (சா.அக.).

இந்திரியானி *indiriyāṉi,* பெ.(n.) புலனுறுப்பு, உணர்ச்சியுறுப்பு; an organ which receives a stimulus and transforms it into a sensation - *Sensory organ.*

இந்திரியோபாதானம் *indiriyō-pātāṉam,* பெ.(n.) ஐம்புலனையும் அடக்குகை; restraining the five senses (சா.அக.).

த.வ. புலனடக்கம்.

இந்திரை[1] *indirai,* பெ.(n.) திருமகள் (கம்பரா. இராவணன்வதை. 120.); Lakṣmi

[Skt. indirā > த. இந்திரை.]

இந்திரை² *indirai,* பெ.(n.) அரிதாரம்; orpiment prepared arsenic (சா.அக.).

இந்துத்தானம் *indu-t-tānam,* பெ.(n.) வடஇந்தியா; name given to that part of India, which is north of the Nerbudda.

[U. hindusthān > த. இந்துத்தானம்.]

இந்துத்தானி *indu-t-tāni,* பெ.(n.) இந்தி, உருது மொழிகள்; the language of Hindustan; the Hindi language; a term generally applied to Urdu.

[U. hindustān > த. இந்துத்தானி.]

இந்துவி *induvi,* பெ.(n.) இந்திமொழி; the Hindi language.

[U. hinduwi> த. இந்துவி.]

இந்தோளம் *intōlam,* பெ.(n.) மாலையில் பாடும் பண் வகை (பரத. இராக. 73.); a specific melody-type appropriate to be sung during evenings.

த.வ. இந்தளம்.

[Skt. hindōla > த. இந்தோளம்.]

இப்பவம் *ippavam,* பெ.(n.) இப்பிறப்பு; the present birth (சா.அக.).

இப்பா *ippā,* பெ.(n.) நன்கொடை; gift.

[U. hibā > த. இப்பா.]

இபம் *ibam,* பெ.(n.) 1. யானை; elephant *"திசையிபச்செவி" (கலிங். புதுப. 331).* 2. யானைக் கொம்பு; elephant's tusk. 3. மரக் கொம்பு; the branch or twig of a tree.

[Skt. ibha > த. இபம்.]

இபரோகம் *ibarōgam,* பெ.(n.) யானைக்கால்; Cochin leg - *Elephantiasis* (சா.அக.).

[Skt. ibha-rōga> த. இபரோகம்.]

[இபம் → இபரோகம்.]



இபாதத்து *ibātattu,* பெ.(n.) கடவுளுக்குச் செய்ய வேண்டிய வழிபாடு; worship of god. *ஒருவனுக்கு அறிவு எவ்வளவு இருந்தாலும் அவனிடம் இபாதத்து இல்லையானால் பயனில்லை (முகமதி.).*

[Ar. ibadat > த. இபாதத்து.]

இபாரத்து *ibārattu,* பெ. (n.) சொற்றொடரமைப்பு; style of writing, mode of expression. *நீ எழுதிய வியாசத்தில் இபாரத்துச் சரியாய் இல்லை (முகமதி.).*

[Ar. ibārat > த. இபாரத்து.]

இபுதார் *ibudār,* பெ.(n.) நோன்புக்குப்பின் உண்ணுகை; breaking a fast. *ரம்சான் நோன்பில் ஞாயிறு மறைந்த பின் இபுதார் செய்யவேண்டியது (முகமதி.).*

த.வ. நோன்புணவு.

[Ar. iftar > இப்தார் > த. இபுதார்.]

இபுனு *ibunu,* பெ.(n.) பிறங்கடை, வழித்தோன்றல்; son of, descendant of. *கத்தாபின் இபுனு ஹெஸரத் உமர் (முகமதி.).*

[Ar. ibn > த. இபுனு.]

இமாம் *imām,* பெ.(n.) தொழுகையை நடத்துபவர்; spiritual leader or guide, leader in congregational prayer. *தொழுகையில் இமாமைப் பின்பற்றியே மற்றவர்கள் செயல்பட வேண்டும் (முகமதி.).*

த.வ. தொழுகை ஆசான்.

[Ar. imam > த. இமாம்.]

இமாமத் *imāmat,* பெ.(n.) பள்ளிவாசலில் (தியானம்) உள்ளொடுக்கத்தைத் தொடங்கி நடத்துகை; the act of leading the prayers in a mosque.

[Ar. imāmat > த. இமாமத்.]

இயாத்து *iyāttu,* பெ.(n.) நோயாளியைப் பார்க்கை; visiting the sick. *இயாத்துச் செய்யவேண்டியது முகமதியர்களின் கடமை (முகமதி.).*

[Ar. iyadat> த. இயாத்து.]

இயாதம் *iyādam,* பெ.(n.) யானைத் தோட்டி (பிங்.); elephant goad.

[Skt. yāta > த. இயாதம்.]

இயேசு *iyēšu,* பெ.(n.) கிறித்துவின் இயற்பெயர்; the Tamil form of the personal name of Jesus Christ.

[Heb. yēshu'a > GK. iesoūs > த. இயேசு.]

இயேசுநாதர் *iyēšu-nādar,* பெ. (n.) **இயேசு** பார்க்க; see *iyēšu.*

இரக்கை *irakkai,* பெ.(n.) 1. காப்பு; amulet or charm. 2. திருநீறு; sacred ashes, as a charm or protection against evil. *"இரக்கை யெனும் பேரா மிதற்கு" (சைவச. பொது. 204.)*

[Skt. rākṣā > த. இரக்கை.]

இரகசியப்போலீசு *iragašiya-p-pōlīšu,* பெ. (n.) துப்பறியும் காவல்துறை; criminal Intelligence Department of the Police Service, so called because it is a secret service.

த.வ. கமுக்கக்காவல்.

[Skt.rahasya+E.Police> த. இரகசியப் போலீசு.]

இரகசியம்[1] *iragašiyam,* பெ.(n.) 1. தனக்கு மட்டுமே தெரிந்த, பிறர் அறியாமல் காக்கப் படுகிற செய்தி; secret. இந்த இரகசியம் யாருக்கும் தெரியக்கூடாது. 2. ஒரு சிலரைத் தவிரப் பிறர் அறியாத நிலை; secrecy. *'தொழிலதிபரிடம் இரகசியமாக வினாவுதல் நடைபெறுகிறது'.* 3. பிறர் அறியாதபடி தனக்குள்ளே வைத்துக்கொள்ளும் நிலை; privacy; in secret. 4. அறிவினால் புரிந்து கொள்ளவோ விளங்கவோ இயலாத மறை பொருள்; mystery, secret. *'படைப்பின் இரகசியத்தை யார் அறிவார்?'.*

த.வ. கமுக்கம்.

[Skt. rahasya > த. இரகசியம்.]

இரகசியம்[2] *iragašiyam,* பெ.(n.) பெண்குறி; the genital of a female.

[Skt. rahasya> த. இரகசியம்.]

இரச்சு *iraccu,* பெ.(n.) கயிறு (பிங்.); cord, rope, string.

[Skt. rajju> த. இரச்சு.]

இரச்சுப்பொருத்தம் *iraccu-p-poruttam,* பெ. (n.) திருமணப் பொருத்தங்களுள் ஒன்று (சோதிட. சிந். 197); a felicitous correspondence between the horoscopes of the prospective bride and of the bride-groom one of ten *Kaliyāna-p-poruttam.*

த.வ. மணப்பொருத்தம்.

[இரச்சு + பொருத்தம்.]

[Skt. rajju> த. இரச்சு.]

இரச்சுவம் *iraccuvam,* பெ.(n.) குற்றெழுத்து; short vowel. *"குறிலுங் குறுமையும் இரச்சுவமுங் குறில்" (பேரகத். 13.).*

த.வ. குறில்.

[Skt. hrasva > த. இரச்சுவம்.]

இரசக்கட்டு *iraša-k-kaṭṭu,* பெ.(n.) நெருப்பிற்கு ஓடாதபடி யிறுகச் செய்த இதளியம் (ரசம்); consolidated or solid fied mercury capable of standing the test of fire (சா.அக.).

த.வ. இதளியக்கட்டு.

[இரசம் + கட்டு.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசக்கலவை *iraša-k-kalavai,* பெ.(n.) இதளியம் (பாதரசம்) பிற மாழை (உலோகம்) களோடு சேர்ந்த கலப்பு; amalgam; a compound of mercury with another metal (சா.அக.).

[இரசம் + கலவை.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசக்களங்கு *iraša-k-kalaṅgu,* பெ.(n.) இதளிய (இரச)த்தைக் கட்டிய பிறகு மூலிகை களினால் அது நொறுங்கும் படிச் செய்வதும், ஊதை நோய்யைக் குணமாக்கப் பயன்படுவதுமான ஒரு பொருள்; a form of mercury which is consolidate with the aid of herbs into a state in which it can be easily powdered. It is useful in Alchemy (சா.அக.).

த.வ. இரசவெட்டை.

[இரசம் + களங்கு.]

இரசக்களிம்பு *iraša-k-kaḷimbu,* பெ.(n.) காயத்தை ஆற்றுவதற்காக இதளியத்தால் (பாதரசம்) செய்தவோர் மேற்பூச்சு மருந்து; a mercurial ointment applied for healing up wounds (சா.அக.).

[இரசம் + களிம்பு.]

[Skt. raša > த. இரசம்.]

இரசக்காரசிந்தூரம் *iraša-k-kāra-šindūram,* பெ.(n.) காரமேற்றிய இதளியச் செந்தூரம்; an irritant oxide of mercury.

[இரசம் + காரம் + சிந்தூரம்.]

[Skt. raša > த. இரசம்.]

இரசக்கிண்ணம் *iraša-k-kiṇṇam,* பெ.(n.) இதளியத்தை இறுகச் செய்து வெள்ளியைப் போலுருக்கித் தகடு தட்டிச் செய்த கிண்ணம்; a bowl made of consolidated mercury and used just like a silver ore (சா.அக.).

[இரசம் + கிண்ணம்.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசக்கிண்ணி *iraša-k-kiṇṇi,* பெ.(n.) கட்டியான இதளியத்தாற் செய்த உண்கலம்; a plate made of consolidated mercury (சா. அக.).

[இரசம் + கிண்ணி.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசக்கிணறு *iraša-k-kiṇaṟu,* பெ.(n.) இதளியக் குழி (வின்.); quick silver mine.

[இரசம் + கிணறு.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசக்கிரியை *iraša-k-kiriyai,* பெ.(n.) 1. மூலிகைச் சாற்றிலிருந்து கசாயம் இறக்கி அதைக் குழம்பாகக் காய்ச்சு முறை; a process of preparing medicine by thickening the decoction of any drug or drugs. 2. புண்களை ஆற்றுவதற்காகத் தேனோடு கூட்டிப்பயன்படுத்தும் ஓர் ஆயுள்வேத மருந்து; a preparation in ayurveda, applied for healing up an ulcer, or other syphilitic sore after mixing it up or maceration it with honey.

[Skt. rasa+kriyā > த. இரசக்கிரியை.]

இரசக்குடுக்கை *iraša-k-kuḍukkai,* பெ.(n.) இதளியத்தை அடைக்கும் குப்பி (வின்.); any small receptacle for mercury such as a coconut shell or a dry gourd.

த.வ. இதளியக்குப்பி.

[இரசம் + குடுக்கை.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசக்குண்டு *iraša-k-kuṇḍu,* பெ.(n.) அழகுக்காக தொங்கவிடும் இதளியம் பூசிய கண்ணாடி உருண்டை; globular glass coated with mercury, usually hung up as an article of decoration.

த.வ. இதளியக்குண்டு.

[இரசம் + குண்டு.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசக்குழி *iraša-k-kuḷi,* பெ.(n.) **இரசக்கிணறு** பார்க்க; see *iraša-k-kiṉaṟu.*

[இரசம் + குழி.]

*[**Skt.** rasa > **த.** இரசம்.]*

இரசகந்தபாடாணம் *iraša-kanda-pāḍāṇam,* பெ.(n.) சாதிலிங்கம் (மூ.அ.); red sulphurate of mercury.

*[**Skt.** rasa+gandaka+pāṣāṇa > **த.** இரசகந்தபாடாணம்.]*

இரசகந்தம் *iraša-kandam,* பெ.(n.) குங்கிலியம்; false myrrh-*Balsmodendron myrrha.* (சா.அக.)

*[**Skt.** raša+gandaka > **த.** இரசகந்தம்.]*

இரசகந்தாயம் *iraša-kandāyam,* பெ.(n.) 1. வரி; tribute, tax. 2. வளமான நிலம் (R.); fertility of the soil, soil productivity.

[இரசம் + கந்தாயம்.]

*[**Skt.** rasa > **த.** இரசம்.]*

இரசகர்ப்பூரம் *iraša-kar-p-pūram,* பெ.(n.) **இரசகருப்பூரம்** பார்க்க; see *iraša-karuppūram.*

[இரசம் + கர்ப்பூரம்.]

*[**Skt.** rasa > **த.** இரசம்.]*

த. கருப்பூரம் **> Skt.** *karppura.*

இரசகருப்பூரம் *iraša-karuppūram,* பெ.(n.) இதளிய (பாதரசம்)த்தினின்று செய்யப்படும் ஒரு சரக்கு; bichloride of mercury - Hydrargyri sub-chloridum of chemists. (சா.அக.)

[இரசம் + கருப்பூரம்.]

*[**Skt.** rasa > **த.** இரசம்.]*

இரசகன் *irašagaṉ,* பெ.(n.) சலவைத் தொழிலாளி; washer-man.

*[**Skt.** rajaka > **த.** இரசகன்.]*

இரசகா *irašakā,* பெ.(n.) சாதிலிங்கம்; red sulphuret of mercury (சா.அக.).

இரசகாந்தவிருட்சம் *iraša-kānda-viruṭcam,* பெ.(n.) ஒளிமிகுதியாகவுள்ள மரம்; mercury brightness tree. It is a tree supposed to be a bright as mercury (சா.அக.).

*[**Skt.** rasa + **த.** காந்தம் + **Skt.** vṛkṣa > **த.** இரசகாந்தவிருட்சம்.]*

இம்மரமிருக்கும் இடத்தில் இரவு தோன்றாது. இது தோற்றத்தில் பலாமரம் போலவும், மென்மையில் வாழைமரம் போலவுமிருக்கும். இதில் வெள்ளை, கறுப்பு என இருவகை உண்டு (சா.அக.).

இரசகி *irašaki,* பெ.(n.) வண்ணாத்தி; woman of the washerman caste.

*[**Skt.** rajakī > **த.** இரசகி.]*

இரசகிரீதம் *iraša-kirīdam,* பெ. (n.) சுண்ணாம்பு கலந்த இதளியம் (இரசம்); mercury combined with chalk.

*[**Skt.** rasa+kirīta > **த.** இரசகிரீதம்.]*

இரசகுரு *iraša-kuru,* பெ.(n.) 1. இதளிய (இரச) மருந்துகளில் முதன்மையான மருந்து; the chief of the mercurial compounds. 2. இதளிய (இரச) சுண்ணம்; a mercurial preparation having the peculiar property of transmuting inferior metals into gold.

[இரசம் + குரு.]

*[**Skt.** rasa > **த.** இரசம்.]*

இரசகுளிகை *iraša-kuḷigai,* பெ. (n.) 1. இதளியத்தால் செய்யப்பட்ட மாத்திரை; mercury pill. 2. சித்தர்கள் பயன்படுத்திய மாத்திரை (சி.சி.11 : 5); pill said to have been used by the Siddhars.

த.வ. இதளியக்குளிகை.

[இரசம் + குளிகை.]

*[**Skt.** rasa > **த.** இரசம்.]*

இரசகெந்தி *iraša-kendi,* பெ.(n.) அனைத்து மருந்துகளுடன் சேருமோர் இதளியகுரு (இரசக்குரு); black mercuric sulphide which was believed to be a universal agent in all medicines.

இரசகேசபீடம் *iraša-kēša-piḍam,* பெ. (n.) துத்தம்; white vitriol - *Zinc sulphate* (சா.அக.).

[Skt. rašakēsa-pēḍam > த. இரசகேசபீடம்.]

இரசகேசரம் *iraša-kēšaram,* பெ.(n.) கருப்பூரம்; camphor (சா.அக.).

இரசகேந்திரலோகன் *iraša-kēndira-lōgaṉ,* பெ.(n.) இதளியம் (சூதம்); mercury. (சா. அக.)

இரசச்சுண்ணம் *iraša-c-cuṇṇam,* பெ.(n.) பூச்சு மருந்துவகை (மூ.அ.); peroxide of mercury.

[இரசம் + சுண்ணம்.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசசித்தன் *iraša-šittaṉ,* பெ.(n.) இதள் மாற்றியம் (இரசவாதம்) பயின்றவன்; a Siddha who is skilled in alchemy (சா.அக.).

[இரசம் + சித்தன்.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசசித்தி *iraša-šitti,* பெ.(n.) இதள் மாற்றியப் (இரசவாதம்) பயிற்சியினாலுண்டாகும் அறிவு; the knowledge of alchemy.

[இரசம் + சித்தி.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசசிந்தாமணி *iraša-šindāmaṇi,* பெ.(n.) இதளிய (இரச) மருந்தைப் பற்றிக் கூறுமோர் மருத்துவ நூல்; a book on mercury and its compounds (சா.அக.).

[இரசம் + சிந்தாமணி.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசசிந்தூரம் *iraša-šindūram,* பெ.(n.) இதளியத்தால் செய்யப்படும் மருந்து (பைஷஜ.); oxide of mercury.

[Skt. rasa-sindur > த. இரசசிந்தூரம்.]

இரசசீவரட்சாமிர்தம் *iraša-šīva-raṭcāmirdam,* பெ. (n.) இதளியத்தைப் பற்றிக் கூறுமோர் ஆயுள் வேத நூல்; a treatise in ayurveda on mercury (சா.அக.).

இரசசீனிச்சூரணம் *iraša-šīṉi-c-cūraṇam,* பெ.(n.) அண்ட ஊதை (வாதம்), அரையாப்பு, புண், சூலை முதலியவைகளுக்குக் கொடுக்கும் ஒரு வகை மருந்துப் பொடி; a medicinal powder prescribed by Veidyans for Hydrocele, venereal complaints such as bubo etc. (சா.அக.).

[Skt. rasa+šīni+šūrṇa > த. இரசசீனிச் சூரணம்.]

இரசசு *irašašu,* பெ.(n.) 1. ஊனில் இருந்து உண்டாகி மாதவிலக்குக் காலத்தில் பெண்களுக்கு அல்குல் (யோனி) வழியாய் வெளிப்படும் நெய்மத்தைப் போன்ற ஒரு வகை அரத்தம்; the menstrual blood. 2. மகளிர் பூப்பு நீர்; the monthly discharge of a woman. 3. பூந்தாது அதாவது மலரின் மகரந்தப் பொடி; the pollen and anther of a flower (சா.அக.).

இரசசுத்தி *iracacutti,* பெ.(n.) ஈயம் (வை.மூ.); lead.

[Skt. rasa+šuddhi > த. இரசசுத்தி.]

இரசசுவலம் *iraša-šuvalam,* பெ.(n.) எருமை; buffalo.

இரசசுவலை *iraša-šuvalai,* பெ.(n.) மாதவிலக்கு, தீட்டு; menses (சா.அக.).

[இரசசு + வலை.]

[Skt. rašasu > த. இரசசு.]

இரசசூதம் *iraša-šūdam,* பெ.(n.) மண்டை யோட்டிலிருந்து செய்யும் ஒரு வகைச் சுண்ணம்; a calcined powder prepared from the human skull.

[Skt. rasa+sūta > த. இரசசூதம்.]

இரசசெந்தூரம் *iraša-šendūram,* பெ.(n.) 1. இதளியச் சிந்தூரம்; red oxide of mercury. 2. மஞ்சள் நிற இதளியச் சிந்தூரம்; yellow oxide of mercury - Hydrargyri Oxidum flavum.

[Skt. rasa-sindur > த. இரசசெந்தூரம்.]

இரசசெம்பு *iraša-šembu,* பெ.(n.) இதளியம் (இரசம்) ஏற்றிய செம்பு; copper amalgam.

[இரசம் + செம்பு.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசசெய்கை *iraša-šeygai,* பெ. (n.) அறுவகைச் சுவைக்கும் உண்டான தொழில். அதாவது – இனிப்பு, புளிப்பு, உப்பு முதலிய இம்மூன்றும் வளி (வாயு)யையும்; துவர்ப்பு, இனிப்பு, கசப்பு இம்மூன்றும் பித்தத்தையும்; துவர்ப்பு, கசப்பு, கார்ப்பு இம்மூன்றும் கோழை (கபம்)யையும் போக்கும்; the action of the six kinds of tastes in reducing the effects of the 3 humours as shown above.

[இரசம் + செய்கை.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசசெவ்வத்திரம் *iraša-ševvattiram,* பெ.(n.) **இரசசிந்தூரம்** பார்க்க; see *iraša-šindūram.*

இரசசெவ்வியோதிரம் *iraša-ševvi-yōdiram,* பெ. (n.) ஒருவகை இதளியச் (இரச) சிந்தூரம்; red oxide of mercury (சா.அக.).

இரசசோதனம் *iraša-šodanam,* பெ.(n.) வெண்காரம்; borax (சா.அக.).

இரசத்தைக்கருவாக்கும்வேந்தன் *irašattai-k-karuvākkum-vēndan,* பெ.(n.) கார் முகிற் பாடாணம்; a dark cloud-coloured arsenic (சா.அக.).

இரசதகிரி *irašada-giri,* பெ.(n.) பனிமலை (கைலாசமலை) (அழகர்கல. 33.); mount Kailasa the abode of Šivan, so called because it is considered to be a silver mountain.

[Skt. rajata+giri > த. இரசதகிரி.]

இரசதசபை *irašada-šapai,* பெ.(n.) மதுரையிலுள்ள வெள்ளியம்பலம் (நடராசர் அவை); dancing hall of Sri *Naṭarāja* in the shrine at Madurai from its being roofed with silver.

த.வ. வெள்ளிமன்றம்.

இரசதநிமிளை *irašata-nimiḷai,* பெ.(n.) வெள்ளிநிமிளை (இராட்.); bismuth of a white colour.

[Skt. rajata-nēmila > த. இரசதநிமிளை.]

இரசதபற்பம் *irašada-paṟbam,* பெ. (n.) வெள்ளிப்பொடி; oxide of silver.

[Skt. rajata+bhasman > இரசதபஸ்மம் > த. இரசதபற்பம்.]

இரசதம்[1] *irašadam,* பெ.(n.) 1. இதளியம் போன்ற நிறமுடைய வெள்ளி; silver, which is white in colour. 2. அரத்தம்; blood. 3. பொன்; gold. 4. யானைக் கொம்பு; the tusk of an elephant. 5. இதளியம் (பாதரசம்); mercury. 6. வெள்ளை, whiteness, white colour. 7. முத்துமாலை, garland of pearls.

[Skt. rajata > த. இரசதம்.]

இரசதம்[2] *irašadam,* பெ.(n.) உணர்ச்சி; passion or emotion. *"இரசதத்தின் குணமெய்தி நான்முகனா யுலகீனும்" (கூர்மபு. பிரகிருதி. 22.).*

[Skt. rajas > த. இரசதம்.]

இரசதம்[3] *irašadam,* பெ.(n.) அரைப்பட்டிகை (பிங்.); gridle, belt.

இரசதமணல் *irašada-maṇal,* பெ.(n.) வெள்ளி கலந்த மணல் (வின்.); sand containing silver.

த.வ. வெள்ளிமணல்.

[இரசதம் + மணல்.]

[Skt. rajasta > த. இரசதம்.]

இரசதமனி *irašadamani,* பெ.(n.) நுரையீரலி லோடும் அரத்தக் குழாய்; an artery of the lungs-*Pulmomary artery* (சா.அக.).

[இரசம்+தமனி.]

இரசதாகி *irašatāki,* பெ.(n.) கடுக்காய்; Indian gall-nut (சா.அக.).

இரசதாது *iraša-tādu,* பெ.(n.) 1. இதளியம் (இரசம்); quick-silver as a mineral. 2. உடம்பிலுள்ள எழுவகை ஆற்றல்கள்

(சத்துக்கள்); the seven fundamental principles of organisms in the animal body, such as the lymph chyle etc.

[இரசம்+தாது.]

*[**Skt.** rasa > த. இரசதம்.]*

இரசதாபமானி *irašatāpa-māṉi,* பெ.(n.) வெப்ப அளவை, வெப்ப நிலையை அறிந்துகொள்வதற்காக இதளியத்தைக் (பாதரசம்) கொண்டு அமைத்தவொரு கருவி; a thermometre which has mercury in its expanding column (சா.அக.).

த.வ. வெப்பமானி.



இரசதாப்பிரகம் *irašatāppiragam,* பெ.(n.) நான்கு வகை அப்பிரகங்களுள் வெண்மையான அப்பிரகம்; one of the four kinds of mica, white in colour (சா.அக.).

இரசதாரை *iraša-tārai,* பெ.(n.) உடம்பில் பரவி நிற்கும் அரத்தத்தோடு, உண்ட உணவு (அன்னாசம்) கலக்கும்படிச் செய்வதற்காக நெஞ்சறையிலமைக்கப்பட்டவொரு வகைக் குழல்; a passage with well-defined walls, which acts as a channel for the collection of the lymph from the portions of the body below the diaphragm and from the left side of the body above the diaphragm-*Thoracic duct* (சா.அக.).

[இரசம் + தாரை.]

*[**Skt.** rasa > த. இரசதம்.]*

இரசதாளி *iraša-tāḷi,* பெ.(n.) வாழை வகை; a kind of plantain.

*[**Skt.** rasa-dālika > த. இரசதாளி.]*

இரசதுவிகெந்தி *iraša-tuvi-kendi,* பெ.(n.) சாதிலிங்கம்; a beautiful red colouring matter artificially prepared from sulphur and mercury- *Bisulphuret of Mercury* (சா.அக.).

இரசதோடம் *iraša-tōḍam,* பெ.(n.) 1. இதளியத்திற்கு (இரசத்திற்கு) இயற்கையாகவே அமைந்த எட்டுவகைக் குற்றங்கள்; the eight natural defects existing in mercury. 2. இதளிய மருந்தின் பயன்பாட்டால் உடம்பினுள் ஏற்பட்ட நஞ்சு; the chronic poisoning from misuse of mercury - *Mercurialism.*

*[**Skt.** rasa+dōṣa > த. இரசதோடம்.]*

இரசநாதம் *iraša-nādam,* பெ.(n.) **இரசநாதன்** பார்க்க; *see iraša-nādaṉ.*

இரசநாதன் *iraša-nādaṉ,* பெ.(n.) இதளியம் (மூ.அ.); mercury.

*[**Skt.** rasa+nātha > த. இரசநாதன்.]*

இரசநிகான் *iraša-nigāṉ,* பெ.(n.) நிலவு; moon (சா.அக.).

இரசநிசலம் *iraša-nišalam,* பெ.(n.) பனி; frost, dew (சா.அக.).

இரசப்பிடிப்பு *iraša-p-piḍippu,* பெ.(n.) முடக்கூதை(வாதம்) (பைஷஜ.); mercurial rheumatism.

[இரசம் + பிடிப்பு.]

*[**Skt.** rasa > த. இரசதம்.]*

இரசப்புகை *iraša-p-pugai,* பெ. (n.) இதளியத்தின் ஆவி; mercurial vapour.

[இரசம் + புகை.]

*[**Skt.** rasa > த. இரசதம்.]*

இரசப்புண் *iraša-p-puṇ,* பெ.(n.) இதளிய மருந்தை அதிகமாக உட்கொள்வதால் ஏற்படும் வாய்ப்புண்; inflammation of the mouth etc. due to mercurial poisoning - *Mercurial stomatitis.*

[இரசம் + புண்.]

[Skt. rasa > த. இரசதம்.]

இரசபதங்கம் *iraša-padaṅgam,* பெ.(n.) இதளியத்தை மற்ற சரக்குகளுடன் சேர்த்து ஏனத்திலிட்டு மூடி எரிப்பதனால் ஆவியாக மேற்சென்று, மூடியிருக்கும் ஏனத்தின் அடியில் படிந்திருக்கும் இதளியம் (இரசம்); the mercury which is vapourised by heat and then condensed is to a solid-*sublimated mercury* (சா.அக.).

[Skt. rasa+padaṅ-ga > த. இரசபதங்கம்.]

இரசபந்தனி *iraša-pandaṉi,* பெ.(n.) இதளியத்தை (இரசத்தை)க் கட்டுவதற்காக பயன்படுத்தும் மூலிகைகள்; the drugs which are capable of consolidating mercury (சா.அக.).

இதளியத்தைக் கட்டும் மூலிகைகள்: சர்க்கரை வேம்பு, சாயா மரம், செம்பல்லிப் பூடு, தித்திப்புக்கோவை, கற்றாமரை, கண்பூ, தாம்பூரச் சிகை, உரோம மரம், கிளி முருக்கு, தேவதாளி, பொன்னூமத்தை முதலியன.

இரசபலம் *iraša-palam,* பெ.(n.) தென்னை (மலை.); coconut palm, so called from its bearing fruit which yields a sweet fluid.

[Skt. rasa+phala > த. இரசபலம்.]

இரசபற்பம் *iraša-paṟbam,* பெ.(n.) இதளியப் பொடிமம் (மூ.அ); oxide of mercury calx.

[Skt. rasa+basma > இரசபஸ்மம் > த. இரசபற்பம்.]

இரசபாடாணம் *iraša-pāḍāṇam,* பெ.(n.) 1. இதளியமும் (இரசமும்) பாடாணமும் கலந்த மருந்து; a compound of mercury and arsenic. 2. இதளியம் சேர்ந்த நச்சுத் தன்மையுள்ள மருந்து; a poisonous mercurial compound such as Cinnabar (சா.அக.).

[Skt. rasa+pāṣāṇa> த. இரசபாடாணம்.]

இரசபாண்டம் *iraša-pāṇḍam,* பெ.(n.) இதளியம் (இரசம்) வைப்பதற்கான குப்பி, குடுக்கை முதலிய ஏனம்; a receptacle, such as a bottle, cocoanut shell, dry gourd etc. for preserving mercury (சா.அக.).

[இரசம் + பாண்டம்.]

[Skt. rasa> த. இரசதம்.]

இரசபீதவச்சிரம் *iraša-pīda-vacciram,* பெ.(n.) மஞ்சள் வண்ணமுடைய ஒருவகை இதளிய மருந்து; a yellow oxide of mercury (சா.அக.).

இரசப்பிரீதி *iraša-p-pirīdi,* பெ.(n.) 1. அப்பிரகத் தகடு; slates or flakes of mica. 2. ஒருவகைப் பாடாணம்; a kind of native arsenic.

[Skt. rasa+prīti> த. இரசப்பிரீதி.]

இரசப்பிளாத்திரி *iraša-p-piḷāttiri,* பெ.(n.) சீலையிலூட்டிய இதளிய மருந்து; mercurial plaster.

[Skt.rasa+E.plaster > த. இரசப்பிளாத்திரி.]

இரசபுட்பம் *iraša-puṭpam,* பெ.(n.) இரசகருப்பூரம் (மூ.அ.); sublimate of mercury.

[Skt. rasa+pushpa > இரசபுஷ்பம் > த. இரசபுட்பம்.]

இரசபூபதி *iraša-pūpadi,* பெ.(n.) இசிவு (சன்னி) நோய்க்குக் கொடுக்கும் இதளியம் சேர்ந்த ஒருவகைக் குளிகை மருந்து; a mercurial pill prescribed for delirium, apoplexy etc. (சா.அக.).

[Skt. rasa+bhū-pati > த. இரசபூபதி.]

இரசபூரம் *iraša-pūram,* பெ.(n.) இதளியமும், பூரமும் சேர்ந்த மருந்து; a soft of muriate of mercury.

[Skt. rasa+pūra > த. இரசபூரம்.]

இரசம் *irašam,* பெ.(n.) 1. உண்ட உணவு குடலுக்குள் மாறுதலை அடைந்து அரத்த வோட்டத்தினால் அரத்தத்தில் கலக்கும் வெண்மையான சோற்றின் (அன்னத்தின்) சாரம்; rasa or lymph-chyle permeating the whole body by circulation. it is a nutritive fluid extraced by intestinal absorption from the food after digestion. It is purely white, sweet and cooling and keeps a man in good spirts. 2. சாறு; the expressed juice of medicinal fruits, plant etc. 3. சுவை; taste in general 4. சத்து; essence. 5. மிளகு சேர்த்த நீர்; pepper water used in food. 6. உமிழ்நீர்; saliva. 7. இரச வாழை; red costate - leaved banana - *Musa sapientum*. 8. மாமரம்; mango-tree *Mangifera indica*. 9. இனிப்பு; sweetness. 10. இலைச்சாறு; juice of leaves in general. 11. மதம்; the essence of body. 12. கருநீர் (சுக்கிலம்); semen. 13. பூந்தாது; the essential portion of the flower 14. நஞ்சுக் கொடி; the naval card. 15. பூப்பு நீர்; menstrual blood. 16. காந்தம்; வெண்காரம் முதலிய துணைச் சரக்குகள்; the natural substance, as classified in Tamil medicine viz-magnet, borax etc. (சா.அக.).

*[**Skt.** rasa > த. இரசம்.]*

இரசமணி *iraša-maṇi,* பெ. (n.) நோய் நீங்கக் காப்பாகக் கட்டப்படும் இதளியம் சேர்த்த மணி (வின்); hard globule of mercury prepared with incantatios and worn as an amulet (W.).

[இரசம் + மணி.]

*[**Skt.** rasa > த. இரசம்.]*

இரசமருந்து *iraša-marundu,* பெ. (n.) 1. இதளியத்திலிருந்து செய்த மருந்து; any preparation of mercury - *Mercurial*. 2. இதளியம் (இரசம்) சேர்ந்த மருந்து; medicinal preparation in which mercury forms one of the several ingredienst. 3. மூலிகைச் சாற்றைக் கொண்டு செய்த மருந்து; medicine prepared from the juice of plants (சா.அக.).

[இரசம் + மருந்து.]

*[**Skt.** rasa > த. இரசம்.]*

இரசமாத்திரை *iraša-māttirai,* பெ. (n.) 1. இதளிய மருந்துகளைக் கொண்டு செய்யும் மாத்திரை; pills prepared with the aid of mercurial compounds - *Mercury pill*. 2. மூலிகைச் சாற்றினால் செய்த மாத்திரை; pills prepared from the juice of herbs and prescribed for children (சா.அக.).

த.வ. இதளியமாத்திரை.

[இரசம் + மாத்திரை.]

*[**Skt.** rasa > த. இரசம்.]*

இரசமாதா *iraša-mādā,* பெ.(n.) ஒருவகைச் செய்நஞ்சு (மூ.அ.); a mineral poison.

*[**Skt.** rasa+mātā > த. இரசமாதா.]*

இரசமாரணம் *iraša-māraṇam,* பெ. (n.) இதளியத்தைக் கொல்லுகை; killing or destroying the virulency of mercury (சா.அக.).

த.வ. இதளிய அழிப்பு.

*[**Skt.** rasa+māraṇa > த. இரசமாரணம்.]*

இரசமிசிரம் *irašam-iširam,* பெ.(n.) இதளிய (இரச)க் கலப்பு; an alloy of mercury with another metal - *Amalgam*.

இரசமுரிஞ்சல் *irašam-uriñjal,* தொ.பெ. (vbl.n.) 1. சத்து வாங்குகை; absorbing the essence of anything. 2. இதளியத்தை (இரசத்தை) இழுத்துக் கொள்ளும்படிச் செய்கை; (in chemistry) causing to absorb mercury.

[இரசம் + உரிஞ்சல்.]

*[**Skt.** rasa > த. இரசம்.]*

இரசமுறி-த்தல் *irašam-muṛi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. இதளியத்தை வெளிப்படுத்தல்; purging mercury out. 2. இதளியத்தின் குணத்தை

அழித்தல்; neutralising or destroying the effects or properties of mercury (சா.அக.).

[இரசம் + முறி-த்தல்.]

*[**Skt.** rasa > த. இரசம்.]*

இரசமூட்டல் *irašam-ūṭṭal,* தொ.பெ.(vbl. n) 1. சுவைப் படுத்துகை; highly seasoning; to make or render any preparation highly delicious. 2. இதளியத்தை உட்கொள்ளும் படிச் செய்கை; (in Alchemy) causing to absorb mercury. 3. இதளியம் (இரசம்) சேரும்படிச் செய்கை; subjection of anything to the action of mercury; the act or process of putting under the influence of mercury - *Mercurialisation.* 4. இதளிய மருந்தினால் மருத்துவம் செய்கை; treating with medicines containing mercury (சா.அக.).

[இரசம் + ஊட்டல்.]

*[**Skt.** raja > த. இரசம்.]*

இரசமெழுகு *iraša-meḻugu* பெ.(n.) 1. இதளியத்தை (இரசத்தை) மற்றச் சரக்குகளுடன் சேர்த்து அரைத்துச் செய்த மருந்து; a pill prepared by grinding mercury with other drugs. 2. இதளியத்தை நெருப்புக் கோடாதபடிக் கட்டி மற்றப் பொருள்களுடன் சேர்த்துச் செய்த மெழுகைப் போன்ற ஒருவகை மருந்து; a wax-like substance prepared out of solidified mercury by adding to it other chemicals and used in Alchemy. 3. மண்டையோட்டைக் கொண்டு செய்யப்படும் ஒருவகை இதளியம் (இரசம்) சேர்ந்த மெழுகு; a mercurial paste prepared from the human skull by a secret process. *'இம்மெழுகு மந்திர வேலைகளுக்கு உதவும்'* (சா.அக.).

த.வ. இதளிய மெழுகு.

[இரசம் + மெழுகு.]

*[**Skt.** rasa > த. இரசம்.]*

இரசலிங்கம் *iraša-liṅgam,* பெ.(n.) 1. சாதிலிங்கம் (மூ.அ.); red sulphurate of mercury. 2. சிவகுறி(லிங்க) வகை (சைவச. பொது. 81, உரை.); linga, made of mercury (சா.அக.).

*[**Skt.** rasa+linka > த. இரசலிங்கம்.]*

இரசவலிவு *iraša-valivu,* பெ. (n.) 1. இதளியத்தைக் கட்டிக் கெட்டிப்படுத்துகை; consolidating mercuary and then making it as hard as a stone. 2. இதளியத்தின் வல்லமை; the strength of mercury. 3. இதளிய ஆற்றலினால் ஏற்பட்ட வலு (பலம்); the strength derived from the essence or juice of anything (சா.அக.).

[இரசம் + வலிவு.]

*[**Skt.** rasa > த. இரசம்.]*

இரசவாகி *iraša-vāgi,* பெ.(n.) நிணநீர் செல்லும் குழல்; serium carrying duct (சா.அக.).

இரசவாகினி *iraša-vāgiṉi,* பெ. (n.) உண்டஉணவின் சத்தைச் சிறுகுடல்களி னின்று எடுத்துப்போகும் சிறு குழாய்கள்; vessels or slender tubes of animal bodies for conveying the chyle or milk fluied from the alimentary canal-*Lacteals* (சா.அக.).

இரசவாடை *iraša-vāḍai,* பெ. (n.) 1. **இரசப்புகை** பார்க்க; see *irašap-pugai.* 2. இதளியமணம்; the scent or smell of mercury (சா.அக.).

த.வ. இதளியவாடை.

[இரசம் + வாடை.]

*[**Skt.** rasa > த. இரசம்.]*

இரசவாடைப்பிடிப்பு *raša-vāḍai-p-piḍippu,* பெ.(n.) இதளியப்புகை அல்லது இதளிய மருந்துகளின் மணத்தினால் ஏற்படும் ஒருவகை நோய்; an affection of the nerves arising from the fumigation of mercury.

த.வ. இதளியப்புகை நோய்.

[இரசம் + வாடை + பிடிப்பு.]

*[**Skt.** rasa > த. இரசம்.]*

இரசவாதகற்பம் *iraša-vāda-kaṟpam*, பெ. (n.) மலமூத்திரங்கள் பட்ட விடமெல்லாம் பொன்னாக (வேதை) காணும் படிக்கும், உடல் நீடித்திருக்க உண்ணும் மருந்து (காய கற்பம்); the alchemical preparation taken internally for longevity. it is capable of lending peculiar virtues to excreta and urine in transmuting into gold anything which may come in contact with them.

த.வ. இதளிய உடற்காப்பு.

[Skt. rasa+vāda+kalpa > த. இரசவாத கற்பம்.]

இரசவாதசாலை *iraša-vāda-šālai*, பெ. (n.) வேதியல் (இரசாயன) ஆய்வுக் கூடம் (பாண்டி); laboratory.

[இரசவாதம் + சாலை.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசவாதம் *iraša-vādam*, பெ. (n.) மாழைகளைப் (உலோகங்களை) பொன்னாக மாற்றும் கலை (வித்தை); transmuting baser metals into gold; alchemy. *"நேசித்திரசவாத வித்தைக் கலைந்திடுவர்" (தாயு. பரிபூர. 10.).*

த.வ. இதளியக்கலை.

[Skt. rasa+vāda > த. இரசவாதம்.]

இரசவாதி *iraša-vādi*, பெ.(n.) மாழைகளைப் (உலோகங்களை) பொன்னாக மாற்றுவோன்; alchemist.

[Skt. rasa+vādin > த. இரசவாதி.]

இரசவாழை *iraša-vāḻai*, பெ. (n.) பேயன்வாழை (வின்.); Manilla hemp.

[இரசம் + வாழை.]

[Skt. raja > த. இரசம்.]

இரசவீரி *iraša-vīri*, பெ. (n.) ஒருவகைச் செய் நஞ்சு; a kind of prepared arsenic-yellow oxide of arsenic (சா.அக.).

[Skt. rasa+viri > த. இரசவீரி.]

இரசவீறு *iraša-vīṟu*, பெ.(n.) இதளியத்தால் ஏற்பட்ட வாய் வேக்காளம் (இரசவேகம்); inflammation of the mouth due to mercurial poisoning-*Mercurial stomatitis.*

[இரசம் + வீறு.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசவுப்பு *iraša-v-uppu*, பெ.(n.) இதளியத்தைக் கொண்டு செய்த ஒருவகை உப்பு; mercurial salt (சா.அக.).

[இரசம் + உப்பு.]

[Skt. raja > த. இரசம்.]

இது கக்கல் கழிச்சல் (பேதி), உடம்பைத் தேற்றுவது போன்றவற்றிற்கு மருந்தாகப் பயன்படுகிறது.

இரசவெண்ணெய் *iraša-veṇṇey*, பெ. (n.) இதளியத்தை மூலிகைச் சரக்குகளினால் அரைத்து மடியச்செய்து பிறகு வெண்ணெயைப் போலாக்குவது; a butter-like preparation obtained from mercury by depriving it of its interent qualities (சா.அக.).

த.வ. இதளியவெண்ணெய்.

[இரசம் + வெண்ணெய்.]

[Skt. rasa > த. இரசம்.]

இதை மாழையில் (உலோகத்தில்) பாய்ச்சிட பொன்னாகும் (வேதையாகும்). செந்தூரம் முதலிய மருந்துகள் செய்ய இது பயன்படுகிறது.

இரசவேக்காடு *iraša-vēkkāḍu*, பெ. (n.) இதளிய மருந்தின் வலிமையால் வாய், வயிறு முதலியவுறுப்புகள் வெந்து வாய்நீர் சுருங்கிப் பல்லீறு புண்ணாகி கெட்ட மணம் வீசுகை; a state in which the mouth and the aliments are inflamed due to the virulence of mercury (சா.அக.).

த.வ. இதளியவேக்காடு.

[இரசம்+ வேக்காடு.]

[Skt. rasa > த. இரசம்.]

இரசவேகம் *iraša-vēgam*, பெ. (n.) 1. இதளியத்திற்குரிய ஆற்றல் (வீரம்); the high potency of mercury. 2. இதளிய

மருந்திற்குண்டான கொடுமை; the virulency of mercury and mercurial compounds (சா.அக.).

[இரசம் + வேகம்.]

*[**Skt.** rasa > த. இரசம்.]*

இரசவைப்பு *iraśa-vaippu,* பெ. (n.) ஊதை (வாதம்) முறையிலும், மருத்துவ முறையிலும் தமிழ் வாகடப்படி இதளிய மருந்துகள் செய்யும்முறை; the process of mercurial preparations in general, both in alchemy and medicine as contemplated in Tamil medicine (சா.அக.).

த.வ. இதளியவைப்பு.

[இரசம் + வைப்பு.]

*[**Skt.** rasa > த. இரசம்.]*

இரசனம்[1] *iraśaṉam,* பெ.(n.) 1. பொன்; gold. 2. வெள்ளி; silver. 3. நஞ்சு; poison. 4. பிசின்; gum, paste. 5. பழம்; fruit. 6. வடிநீர் (கஷாயம்); decoction. 7. இலைச்சாறு; extract of leaves. 8. ஒலிக்கை; sounding. 9. உணவு; food. 10. நேயம்; friendship.

*[**Skt.** rasana > த. இரசனம்.]*

இரசனம்[2] *iraśaṉam,* பெ.(n.) 1. ஒரு பொறி; an organ of sense. 2. பல்; tooth. 3. சுவை; taste (சா.அக.).

இரசனி *iraśaṉi,* பெ.(n.) 1. இரவு; night. *"பரநிருப விரசனி" (இரகு. அரசியற். 5.).* 2. மஞ்சள்; turmeric. *"ஏலமாவொடு நெல்லி யிரசனி" (தக்ஷிணகை. அர்ச்சனா. 38.).* 3. செம்பஞ்சு; red cotton.

*[**Skt.** rajanī > த. இரசனி.]*

இரசனிமுகம் *iraśaṉi-mugam,* பெ. (n.) சிவனை வழிபடுவதற்குரியதான, மாலைக் காலம். அதாவது கதிரவன் மறைவதற்கு முன்னும் பின்னும் உள்ள 1 1/2 மணி நேரம் (பிரதோசகாலம்) (வேதாரணியபு. பிரதக். 95, கீழ்க்குறிப்பு.); the period of 1½ hours before and after sunset.

[இரசனி + முகம்.]

*[**Skt.** rajanī > த. இரசனி.]*

இரசனை[1] *iraśaṉai,* பெ.(n.) 1. அணிவகை; a kind of array of troops. 2. மலர் முதலியவற்றைத் தொடுக்கை; stringing of garlands.

*[**Skt.** rasanā > த. இரசனை.]*

இரசனை[2] *iraśaṉai,* பெ.(n.) பதினாறு கோவையுள்ள அரைப்பட்டிவகையான காஞ்சி (நாநார்த்த.); a girdle of 16 strings.

*[**Skt.** raśanā > த. இரசனை.]*

இரசாதலம் *iraśādalam,* பெ.(n.) கீழ் ஏழு உலகங்களுள் ஒன்று; name of a region under the earth, the sixth of *kīḻ-ēḻ-ulakam.*

*[**Skt.** rasātala > த. இரசாதலம்.]*

இரசாதிபதி *iraśādibadi,* பெ.(n.) சாறு தரும் பொருள்களான காய், கனிகளுக்கு (இரசவசுதுகளுக்கு) அதிகாரியான கோள்மீன் (கிரகம்); one of the planets which, by annual rotation of office, becomes the regent over fruits and vegetables.

த.வ. கனிக்கோளகன்.

*[**Skt.** rasa+adhibadi > த. இரசாதிபதி.]*

இரசாபாசம்[1] *iraśāpāśam,* பெ. (n.) 1. சீர்கேடு; clumsiness, ugliness. 2. அருவருப்பு; disgust.

த.வ. கீழ்த்தரவு.

*[**Skt.** rasa+ā-bhāsa > த. இரசாபாசம்.]*

இரசாபாசம்[2] *iraśāpāśam,* பெ. (n.) 1. சுவையின்மை; tastelessness. 2. சுவைக்கேடு; bad taste. 3. சாறற்றது; that which is without juice. 4. சத்தற்றது; saplessness or loss of essence (சா.அக.).

இரசாயந்தம் *iraśāyandam,* பெ.(n.) 1. பால்; milk. 2. சாரம்; juice of anything (சா.அக.).

இரசாயனக்கலப்பு *iraśāyaṉa-k-kalappu,* பெ.(n.) **இரசாயனப்புணர்ச்சி** பார்க்க; see *iraśāyaṉa-p-puṇarcci.*

இரசாயனக்கவர்ச்சி *irašāyaṉa-k-kavarcci,* பெ.(n.) வேதியில் இழுப்பு; the affinity between two elements - *Chemical attraction* (சா.அக.).

[இரசாயனம் + கவர்ச்சி.]

[Skt. rašāyanā > த. இரசாயனம்.]

இரசாயனக்குறிப்பு *irašāyaṉa-k-kuṟippu,* பெ.(n.) வேதியல் வாய்ப்பாடு; chemical formula (சா.அக.).

[இரசாயனம் + குறிப்பு.]

[Skt. rašāyanā > த. இரசாயனம்.]

இரசாயனக்கூட்டுறவு *irašāyaṉa-k-kūṭṭuṟavu,* பெ.(n.) வேதியல் பொருத்தம்; chemical composition (சா.அக.).

[இரசாயனம் + கூட்டுறவு.]

[Skt. rašāyanā > த. இரசாயனம்.]

இரசாயனக்கூறுபாடு *irašāyaṉa-k-kūṟupāḍu,* பெ.(n.) வேதியல் பிரிவு; the chemical analysis.

[இரசாயனம் + கூறுபாடு.]

இரசாயனசங்கேதம் *irašāyaṉa-šaṅgēdam,* பெ.(n.) வேதியில் குறிப்பு; chemical formula (சா.அக.).

[Skt. rasāyana+saṅgēta > த. இரசாயன சங்கேதம்.]

இரசாயனசம்பந்தம் *irašāyaṉašambandam,* பெ.(n.) வேதியல்உறவு; chemical affinity.

[Skt. rasāyana+sam-bantha > த. இரசாயனசம்பந்தம்.]

இரசாயனத்திரவயோகம் *irašāyaṉa-t-tiravayōgam,* பெ.(n.) வேதியல் முறையால் ஏற்படும் கரைவு; chemical solution (சா.அக.).

[Skt. rašāyana-drava > த. இரசாயனத் திரவியம்.]

இரசாயனத்திரவியம் *irašāyaṉa-t-tiraviyam,* பெ.(n.) வேதியல் மருந்து; a substance used to produce chemical effects.

[இரசாயனம் + திரவியம்.]

[Skt. rašāyana-drava > த. இரசாயனத் திரவம்.]

இரசாயனத்தொழில் *irašāyaṉa-t-toḻil,* பெ.(n.) வேதியல் செய்கை; chemical action (சா.அக.).

[இரசாயனம் + தொழில்.]

[Skt. rašāyaṇa > த. இரசாயனம்.]

இரசாயனதந்திரம் *irašāyaṉa-tandiram,* பெ.(n.) உடலை நரைதிரையின்றி நெடு நாளிருக்கச் செய்யும் (காயசித்தி) முறைகள், மருந்துகள், நோயணுகா முறைகள் முதலியவைகளைப் பற்றிக் கூறும் ஓர் ஆயுள்வேத நூல்; one of the 8 parts of tantras in Ayurvēda treating of medicines, rejuvenation and the rules of restoring youth, improving memory, preventing diseases in general etc.

[இரசாயனம் + தந்திரம்.]

[Skt. rašāyana > த. இரசாயனம்.]

இரசாயனநூல் *irašāyaṉa-nūl,* பெ.(n.) 1. இயற்பியல் (பௌதிகம்) இயல்பை ஆராயும் நூல்; the science which relates to the peculiar properties of matter - *Chemistry.* 2. ஊதை(வாதம்), உடம்பை நரைதிரையின்றி நெடுநாளிருக்கச் செய்யும் முறை (காயசித்தி) முதலிய கமுக்கங்களைக் (இரகசியங்களை) கூறும் நூல்; in Āyurvēda the science which treats about medicines which tend to arrest the innate morbific tendencies, decay, death etc. and also about alchemy - *Alchemistry* (சா.அக.).

[இரசாயனம் + நூல்.]

[Skt. rašāyana > த. இரசாயனம்.]

இரசாயனப்பரிமானம் *irašāyaṉa-p-parimāṉam,* பெ. (n.) வேதியல் அளவு அல்விகிதம்; chemical proportion (சா.அக.).

[இரசாயனம் + பரிமானம்.]

இரசாயனப்புணர்ச்சி *irašāyaṉa-p-puṇarcci,* பெ.(n.) வேதியில் கலப்பு; chemical combination (சா.அக.).

[இரசாயனம் + புணர்ச்சி.]

*[**Skt.** rašāyana > த. இரசாயனம்.]*

இரசாயனபேதம் *irašāyaṉa-pēdam,* பெ. (n.) 1. வேதியல் வேற்றுமை; the chemical change. 2. வேதியல் வகைகள்; the different chemicals (சா.அக.).

[இரசாயனம் + பேதம்.]

*[**Skt.** rašāyana-pēda > த. இரசாயனபேதம்.]*

இரசாயனம் *irašāyaṉam,* பெ. (n.) 1. உடம்பிற்குத் தேவையான வலிமைகளை (தாதுக்களை) உண்டாக்கி தூக்கம், சோம்பல், சோர்வு (அசதி), வலுக்குறைவு (பலவீனம்) முதலியவைகளைப் போக்கி, வாணாளி (ஆயுள்), நலப்பாடு (ஆரோக்கியம்), அழகு (யௌவனம்) முதலியவைகளைத் தந்து ஊதை(வாதம்), பித்தம், கோழை (கபம்) முதலியவற்றைச் சமநிலைப்படுத்தி, உடம்பில் காந்தி, நிறம், குரல் முதலியவைகளை வளர்ச்சியடையச்செய்து, விரைவாக கிழத் தன்மை நேரிடாமல் வாழ்நாளைக் கூட்டக் கூடியமருந்து; a medicines that could produce favourable changes in the process of nutrition. and repair thereby re-establishing healthy functions of the system such as those described above- *Alteratives*. 2. உடலை நரைதிரையின்றி நெடுநாளிருக்கச் செய்யும் (காயசித்தி) மருந்து (மூ.அ.); elixir of life medicine credited to have the property of prolonging life and preventing the coming of old age. 3. நஞ்சு(மூ.அ.); poison. 4. வேதியல்நூல்; chemistry. 5. இதளிய மருந்து (இரசவாத மருந்து); ambrosial drugs capable of transmuting baser metals into gold (சா.அக.).

த.வ. வேதிமம்.

*[**Skt.** rasāyana > த. இரசாயனம்.]*

இரசாயனமுறிவு *irašāyaṉa-muṟivu,* பெ. (n.) பொருள்களிலுள்ள நச்சுத் தன்மையை இயற்பியல் (பௌதிகம்) முறையால் முறிக்கும் மருந்து; an antidote which neutralises the chemical nature of a poison so that it becomes insoluble and harmless - *Chemical antidote.*

த.வ. வேதிமுறிவு.

[இரசாயனம் + முறிவு.]

*[**Skt.** rasāyana > த. இரசாயனம்.]*

இரசாயனமுறை *irašāyaṉa-muṟai,* பெ.(n.) வேதியல் போக்கு; the chemical method or process.

[இரசாயனம் + முறை.]

*[**Skt.** rasāyana > த. இரசாயனம்.]*

இரசாயனவைரவம் *irašāyaṉa-vairavam,* பெ.(n.) மூர்ச்சைகளுக்குக் கொடுக்குமோர் மருந்து; a medicine prescribed by physician for restoring consciousness and reviving life in patients (சா.அக.).

[இரசாயனம் + வைரவம்.]

*[**Skt.** rasāyana > த. இரசாயனம்.]*

இரசாயனன் *irašāyaṉaṉ,* பெ.(n.) 1. இதளியத்தைப் பொன்னாக்குவோன்; one who is capable of converting mercury into gold. 2. கலுழன் (கருடன்); brahminy kite (சா.அக.).

த.வ. வேதிமன்.

[இரசாயனம் → இரசாயனன்.]

இரசாலவெலி *irašāla-v-eli,* பெ.(n.) ஒருவகை எலி; a kind of rat. *'இவ்வெலி கடிப்பதனால் மழைக் காலத்தில் நஞ்சு அதிகமாகி மனநிலைக் கெடும்' (சா.அக.).*

இரசாலை *irašālai,* பெ.(n.) 1. அறுகு; harialli grass. 2. சருக்கரையும் மணப்பொருளும் கலந்த தயிர்; curds mixed with sugar and spices. 3. நா; tongue. 4. வெள்ளீறில் செடி; *veḷḷīṟil,* a kind of plant.

[Skt. rasāla > த. இரசாலை.]

இரசானந்தன் *irašāṉandaṉ,* பெ.(n.) இதளியம் (சூதம்); mercury.

இரசி-த்தல் *iraši-,* 4 செ.கு.வி.(v.i.) இனித்தல்; to be pleasant to the taste; to be agreeable to the ear, to the mind.

[Skt. ras. > த. இரசி-த்தல்.]

இரசிகம் *irašigam,* பெ.(n.) 1. குதிரை; horse. 2. யானை; elephant. 3. வெள்ளி; silver (சா.அக.).

இரசிகர்மன்றம் *irašigar-maṉṟam,* பெ.(n.) நடிப்புக்கலை நயந்தோர் அமைத்த ஆர்வலர் மன்றம்; an association formed by the fans of a film artist.

த.வ. ஆர்வலர் மன்றம்.

[Skt. rasika + த. மன்றம்.]

இரசிகன் *irašigaṉ,* பெ.(n.) 1. சுவை யுணர்வோன்; man of taste; one who is able to appreciate excellence or beauty in anything. 2. சுவைஞன்; fan.

த.வ. ஆர்வலன்.

[Skt. rasika > த. இரசிகன்.]

இரசிதகுரு *irašida-kuru,* பெ.(n.) சட்டைமுனி 1000-ல் சொல்லியுள்ள வோர் இதள் மாற்றியம் (இரசவாதம்) பற்றிய மருந்து; an alchemical compound mentioned in the work of *Šattamuni* 1000 (சா.அக.).

இரசிதசத்துரு *irašida-šatturu,* பெ.(n.) ஒருவகைச் செய்நஞ்சு (கற்பரி பாடாணம்); a kind of native arsenic found on the beds of rocks (சா.அக.).

இரசிதசிங்கி *irašida-šiṅgi,* பெ.(n.) ஒருவகைச் செய்நஞ்சு (சிங்கி பாடாணம்); a kind of prepared arsenic (சா.அக.)

இரசிதசிலை *irašida-šilai,* பெ.(n.) வெள்ளிக் கல்; silver ore (சா.அக.).

[இரசிதம் + சிலை.]

[Skt. rasita > த. இரசிதம்.]

இரசிதசுண்ணம் *irašida-šuṇṇam,* பெ.(n.) வெள்ளிச்சுண்ணம்; a compound of silver carbonate prepared by Tamil Veidyans by a special process (சா.அக.).

[இரசிதம் + சுண்ணம்.]

[Skt. rasita > த. இரசிதம்.]

இரசிதநிமிளை *irašida-nimiḷai,* பெ.(n.) வெள்ளி நிமிளை; a veriety of hard mineral with silvery radiated crystals - *Iron pyrites* (சா.அக.).

[Skt. rasita-nēmila > த. இரசிதநிமிளை.]

இரசிதபற்பம் *irašida-paṟbam,* பெ.(n.) வெள்ளிப்பற்பம்; oxide of silver. 2. வெள்ளியைப் புடமிட்ட பற்பம்; calcined silver (சா. அக.).

[இரசிதம் + பற்பம்.]

[Skt. rasita-bhasman > த. இரசிதபற்பம்.]

இரசிதபாடாணம் *irašida-pāḍāṇam,* பெ.(n.) 1. வெள்ளிப்பாடாணம்; a poisonous compound of silver. 2. ஒரு வகை வைப்பு நஞ்சு; one of the 32 kinds of prepared poisons described in the Tamil Medicine.

[Skt. rasita-pāṣāṇa > த. இரசிதபாடாணம்.]

இரசிதம்[1] *irašidam,* பெ.(n.) 1. பொன்னின் பூச்சு; gilt. 2. ஒலி செய்வது; that which makes noise. 3. இடி முழக்கம்; thunder-clap.

[Skt. rasita > த. இரசிதம்.]

இரசிதம்[2] *irašidam,* பெ.(n.) 1. வெள்ளி; silver. 2. **இரசிதபாடாணம்** பார்க்க; see *irašida-pāḍāṇam.* 3. துத்தபாடாணம்; another variety of mineral poison. 4. நாகமணல்; zinc ore. 5. வெள்ளிமணல்; silver mixed with sand - *Silver ore.*

[Skt. rajata > த. இரசிதம்.]

இரசிதமரணம் *irašida-maraṇam,* பெ.(n.) **இரசிதபற்பம்** பார்க்க; see *irašida-paṟbam.*

இரசிதமலை *irašida-malai,* பெ.(n.) 1. வெள்ளி கிடைக்கும் மலை; mountain containing silver ore. 2. பனிமலை (வெள்ளியங்கிரி); mount Kailas; *Meru mountain.*

[இரசிதம் + மலை.]

*[**Skt.** rajata > த. இரசிதம்.]*

இரசிதமார்க்கம் *irašida-mārkkam,* பெ.(n.) வெள்ளி செய்யும் வேதியல் (வாத) முறை; the alchemical process of making artificial silver (சா.அக.).

த.வ. வேதிமுறை.

[இரசிதம் + மார்க்கம்.]

*[**Skt.** rajata > த. இரசிதம்.]*

இரசிதயேமம் *irašida-y-ēmam,* பெ.(n.) வெள்ளியைப் பொன்னாக்கும் மருந்து; alchemical compound capable of transmuting silver into gold (சா.அக.).

[இரசிதம் + ஏமம்.]

இரசிதவர்ணம் *irašida-varṇam,* பெ.(n.) 1. **இரசிதசிங்கி** பார்க்க; see *irašida-šiṅgi.* 2. வெள்ளி நிறம்; silver colour (சா.அக.).

[இரசிதம் + வர்ணம்.]

*[**Skt.** rasita > த. இரசிதம்.]*

***த. வண்ணம் > Skt.** varṇam.*

இரசிப்பு *irašippu,* பெ.(n.) 1. இனிமை; sweetness. 2. சுவை; taste (சா.அக.).

த.வ. உணர்த்தி.

இரசுவரோகம் *irašuva-rōgam,* பெ.(n.) பித்தத்தினால் கண்களின் பார்வையை மறைத்துக் கண்ணொளியைக் குறைக்கும் ஒருவகைக் கண்ணோய்; an eye-disease marked by diminution of eyesight arising from aggravated or deranged condition of bile (சா.அக.).

இரசேசுவரம் *irašēšuvaram,* பெ.(n.) இதளியம் (பாதரசம்); the most valuable and useful of fluids - *Quick silver* (சா.அக.).

இரசேந்திரகுரு *irašēndira-kuru,* பெ.(n.) பொன்னாக்குதல் (இரசவாதம்) முறைப்படிப் பொன் செய்வதற்கு ஏதுவான ஒரு வகைக் குருமருந்து; a superior kind of medicine prepared from mercury and used for transmuting metals into gold (சா.அக.).

இரசேந்திரம்[1] *irašēndiram,* பெ.(n.) தரம் குறைந்த மாழைகளைப் பொன்னாக்கும் மருந்து (பரிசவேதி) (வின்.); philosopher's stone.

த.வ. இதள்மாற்றி.

*[**Skt.** rašēndra > த. இராசேந்திரம்.]*

இரசேந்திரம்[2] *irašēndiram,* பெ.(n.) இதளியம் (இரசம்); mercury (சா.அக.).

இரசேந்திரன் *irašēndiran,* பெ.(n.) **இரசேந்திரம்**[1] பார்க்க; see *irašendiram.*

இரசேந்திரியம் *irašēndiriyam,* பெ.(n.) சுவையை உணர்த்தும் நாக்கு (இந்திரியம்); the organ of taste - *Tongue.*

*[**Skt.** rasa+indriya > த. இரசேந்திரியம்.]*

இரசை *irašai,* பெ.(n.) 1. நிலம்; earth. 2. நா; tongue.

*[**Skt.** rašā > த. இரசை.]*

இரசோகுணம் *irašō-kuṇam,* பெ.(n.) மூன்று வகைக் குணத்துள் ஒன்று, மாந்திகம்; the quality of passion manifested in one's activity, zeal, courage, pride, etc., one of *mu-k-kuṇam.*

த.வ. மாந்திகம், வெகுளி.

*[**Skt.** rajas > த. இரசோ.]*

மூன்று குணங்கள் : தேவிகம் (சாத்துவீகம்), மாந்திகம் (இராசதம்), பேயிகம் (தாமதம்).

இரசோபலம் *irašō-palam,* பெ.(n.) முத்து; pearl (சா.அக.).

இரஞ்சகம் *irañjagam,* பெ.(n.) மகிழ்ச்சி தருவது; that which pleases or delights.

*[**Skt.** rañjaka > த. இரஞ்சகம்.]*

இரஞ்சபித்தம் *irañja-pittam,* பெ.(n.) உண்டவுணவைச் செரிக்கச் செய்து உடலை வளர்ப்பதற்காக இரைக் குடலுக்குள் வந்து சேரும் பித்தம்; the bile which is help up for same time inthe gall-bladder before moving into the intestines to aid the action of digestion - Cysticbile.

இரஞ்சிகம் *irañjigam,* பெ.(n.) 1. ஈரல், மண்ணீரல் முதலியவைகளில் தங்கியிருந்து பிறகு உணவுச்சாற்றில் (அன்னரசம்) கலந்து அரத்தம் உண்டாகக் காரணமாக இருக்கும் பித்தம்; the bile which remains in the liver and the spleen and imparts redness to the essential juice, which is turned into blood by the formation of blood carpuscles. 2. அன்பு; affection.

இரஞ்சிதம் *irañjidam,* பெ.(n.) 1. இன்பமானது; that which pleases. 2. சித்தரிக்கப்பட்டது; that which is painted or drawn in colours. *"பத்தி யோவியஞ் சேர்ந் திரஞ்சித மெனவும்" (வேதா. சூ. 43.).*

த.வ. இனிமை.

[Skt. rañjita > த. இரஞ்சிதம்.]

இரட்சகன்[1] *iratšagaṉ,* பெ.(n.) இயேசு; Jesus the saviour.

[Skt. rakṣaka > த. இரட்சகன்.]

இரட்சகன்[2] *iratšagaṉ,* பெ.(n.) 1. காப்போன்; protector, preserver, guardian. இறைவனை ஏதிலிகளின் (அனாதைகளின்) இரட்சகன் என்கிறோம். 2. உய்விப்போன்; saviour.

[Skt. rakṣaka > த. இரட்சகன்.]

இரட்சசருமம் *iratša-šarumam,* பெ.(n.) நோயாளிகளின் நோயைத்தீர்ப்பதற்காகப் பயன்படும் மந்திரம்; incantations resorted to for the cure and safety of a patient (சா.அக.).

இரட்சணியசேனை *iratšaṇiya-šēṉai,* பெ. (n.) கிறித்தவ சபையில் ஒரு பிரிவு; Salvation Army, a Christian religious and philanthropic organization, founded by William Booth in the 19th century.

[Skt. rakṣaka + šēnā > த.இரட்சணிய சேனை.]

இரட்சணியம் *iratšaṇiyam,* பெ. (n.) வீடுபேறு; salvation.

[Skt. rakṣaṇya > த. இரட்சணியம்.]

இரட்சணை[1] *iratšaṇai,* பெ.(n.) வீடுபேறு; salvation.

[Skt. rakṣaṇā > த. இரட்சணை.]

இரட்சணை[2] *iratcaṇai,* பெ.(n.) காப்பாற்றுகை (இரட்சிப்பு) (பாண்டி.); protection.

த.வ. காப்பு.

[Skt. rakṣaṇā > த. இரட்சணை.]

இரட்சாணி *iratšāṇi,* பெ.(n.) சாதிக்காய்; nutmeg (சா.அக.).

இரட்சாபந்தனம் *iratšā-pandaṉam,* பெ.(n.) காப்பு; an amulet; a charm (சா.அக.).

த.வ. காப்புக்கட்டு, காப்புக்கயிறு.

இரட்சாபோகம் *iratšā-pōgam,* பெ.(n.) காவல்வரி (T.A.S.H.O.P.3.); fees levied for protecting anything such as land.

[Skt. rakṣā+bhōga > த. இரட்சாபோகம்.]

இரட்சாமூர்த்தி *iratšā-mūrtti,* பெ.(n.) திருமால்; *Viṣṇu* as Protector. *'இரட்சா மூர்த்தியான ஆமை' (தக்கயாகப். 341, உரை).*

[Skt. rakṣa-mūrti > த. இரட்சாமூர்த்தி.]

இரட்சி-த்தல் *iratši-,* 4 செ.கு.வி.(v.i.) 1. துன்பம் முதலியவற்றிலிருந்து காப்பாற்றுதல்; to preserve, protect, guard, defend. 2. உய்வித்தல்; to save.

[Skt. rakṣ > த. இரட்சி →இரட்சி-த்தல்.]

இரட்சிப்பு *iratšippu,* பெ.(n.) 1. காப்பாற்றுகை; saving, preserving, protecting. 2. உய்வு; salvation.

[Skt. rakṣ > த. இரட்சி →இரட்சிப்பு.]

இரட்சை *iratšai,* பெ.(n.) 1. காப்பு; protection. "*ஏணத் தமிழிற் கிரட்சையாம்*" (*தைலவ. கடவுள். 3.*). 2. திருநீறு; sacred ashes. 3. காப்புக்கயிறு; string of protect.

[**Skt.** *rakṣā* > *த. இரட்சை.*]

இரட்டர் *iraṭṭar,* பெ.(n.) இராட்டிரகூட மன்னர்; *Rāṣṭrakūṭa* kings. "*ஒண்டிற லிரட்ட மண்டலம்*" (*சோழவமி. பக். 91*).

[**Skt.** *rāṣṭra-kūṭa* >*த. இரட்டர்.*]

இரண்யகருப்பநீர் *iraṇya-karuppanir,* பெ.(n.) பானை நீர்; pot water (சா.அக.).

இரண்யகருப்பம் *iraṇya-karuppam,* பெ.(n.) நுட்பமான (சூக்கும) உடம்போடு கூடிய நிலை; chit united with the subtle body (சா.அக.).

இரணக்கிரந்தி *iraṇa-k-kirandi,* பெ.(n.) வெள்ளை நோயினால் உண்டான புண் (கிரந்திபுண்); a sore arising from syphylitic causes.

[**Skt.** *vraṇa+granthi* > *த. இரணக்கிரந்தி.*]

இரணக்குட்டம் *iraṇa-k-kuṭṭam,* பெ.(n.) புண்களோடு கூடிய ஒருவகைப் பெருநோய்; a form of leprosy attended with ulcers gradually eating away the flesh and bones (சா.அக.).

[*இரணம் + குட்டம்.*]

[**Skt.** *vraṇa* > *த. இரணம்.*]

த. குட்டம் > **Skt.** *kušta.*

இரணக்கொடி *iraṇa-k-koḍi,* பெ.(n.) குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவே புண்ணுடைய (விரணம்) பாகம்; the median line or area between the anus and the genital organs containing ulcers (சா.அக.).

[*இரணம் + கொடி.*]

[**Skt.** *vraṇa* > *த. இரணம்.*]

இரணகளம் *iraṇa-kaḷam,* பெ. (n.) 1. போர்க்களம்; battlefield. 2. பெருங் குழப்பம்; row, uproar, fracas.

[*இரணம் + களம்.*]

[**Skt.** *vraṇa* > *த. இரணம்.*]

இரணகன் *iraṇagaṉ,* பெ. (n.) நோய்களையும், காயங்களையும் கையினாலாவது, கருவிகளைக் கொண்டாவது, உடம்பின் உள்ளும் புறமும் மருத்துவம் (சிகிச்சை) செய்வோன்; a medical man whose profession or occupation is to treat disease or injuries of the body by manual operation or by medical appliances employed externally or internally, as distinguished from a physician-*Surgeon* (சா.அக.).

த.வ. அறுவைப் பண்டுவன்.

[*இரணம் → இரணகன்.*]

இரணங்கொடு-த்தல் *iraṇaṅ-goḍu-,* 4 செ. குன்றாவி.(v.t.) அடித்தல்; to cause bruises, give pepper. "*மற்றோரிரணங் கொடுத்தாலிடுவர்*" (*நல்வ. 18*).

[*இரணம் + கொடு-த்தல்.*]

[**Skt.** *vraṇa* > *த. இரணம்.*]

இரணசன்னி *iraṇa-šaṉṉi,* பெ.(n.) புண்களால் உண்டாகும் காய்ச்சல் நோய்; traumatic delirium.

[**Skt.** *vraṇa+san-ni-* >*த. இரணசன்னி.*]

இரணசிகிச்சை *iraṇa-šikiccai,* பெ.(n.) புண் மருத்துவம் (இரணவைத்தியம்); treatment of disease by manual and operative procedure; the operative branch of medical practice (சா.அக.).

த.வ. அறுவை மருத்துவம்.

[**Skt.** *vraṇa+cikitsā* > *த. இரணசிகிச்சை.*]

இரணசுக்கிரன் *iraṇa-šukkiraṉ,* பெ. (n.) 1. அழற்சியால் கருவிழியில் ஏற்படும் கண்ணோய்; an eye-disease affecting the black of the eye due to inflammation-*Iritis.* 2. கருமணியின் மீது கொப்புளங்கள் புறப்பட்டுப் புண்ணை உண்டாக்கும் ஒரு வகைக் கண்நோய்; ulceration of the iris of the eyes. 3. அடிப்பதனால் உண்டாகும் காயத்தாலும், வெள்ளை நோயாலும்

கருவிழியின் நிறம் மாறி உண்டாகும் புண்; discolouration and inflammation of the iris brought about by injury due to syphilis gonorrhoea etc. (சா.அக.).

[Skt. vraṇa+šukra > த. இரணசுக்கிரன்.]

இரணசூரன் *iraṇa-šūraṉ,* பெ.(n.) படை வீரன்; hero in war, warrior.

த.வ. மறவன்.

[Skt. raṇa+šūra > த. இரணசூரன்.]

இரணத்துருவம் *iraṇa-t-turuvam,* பெ.(n.) கோள் (கிரகப்) புடத்திற் கழிக்கப்படுவது (வின்.); longitude of a planet required to be subtracted in astron. calculations.

[Skt. ṛṇa + dhruva > த. இரணத்துருவம்.]

இரணத்தொடை *iraṇa-t-toḍai,* பெ.(n.) முரண்டொடை (காரிகை, ஒழிபி. 5.); a kind of *toḍai,* poetry grammar.

[இரணம் + தொடை.]

[Skt. raṇa > த. இரணம்.]

இரணதூபம் *iraṇa-tūbam,* பெ.(n.) காயத்தில் (இரணம்) சீழ்பிடிக்காதவாரும், புழுக்கள் புழுக்காதபடிக்கும், வேறு வகையான குற்றங்கள் ஏற்படாதபடிக்கும் காட்டும் புகை(தூபம்); disinfecting fumes used in cases of wound to prevent suppuration and to destory the micro organisms-Fumigant (சா.அக.).

த.வ. காயப்புகை.

[Skt. vraṇa+dhūpa > த. இரணதூபம்.]

இரணநாயகம் *iraṇa-nāyagam,* பெ.(n.) புண்(இரணம்), காயம், கட்டி, கொப்புளம் முதலியவற்றைக் குணமாக்கும் மருந்துப்பூடு; any harbaceous plant capable of curing injuries, wounds, burns, boils etc. (சா.அக.).

[இரணம் + நாயகம்.]

இரணபத்திரகாளி iraṇa-pattira-kāḷi, பெ.(n.) கொற்றவை (துர்க்கை); Durgā, conferring victory in war.

த.வ. கடுஞ்சினக்கொற்றவை.

[Skt. raṇa + bhadra + த. காளி > த. இரணபத்திரகாளி.]

இரணபாதகம் *iraṇa-bādagam,* பெ.(n.) கடனைத் திருப்பிக் கொடுக்காமல் ஏய்ப்பு செய்கை (துரோகம்); unfaithfulness to creditors.

த.வ. ஏய்ப்பாளி.

[Skt. ṛṇa+bādhaga > த. இரணபாதகம்.]

இரணபேரி *iraṇa-pēri,* பெ.(n.) போர்ப்பறை; battle-drum.



[Skt. raṇa+bhēri > த. இரணபேரி.]

இரணபேரிகை *iraṇa-pērigai,* பெ.(n.) **இரணபேரி** பார்க்க; see *iraṇa-pēri.*

இரணம்[1] *iraṇam,* பெ.(n.) கடன் (சூடா.); debt.

[Skt. ṛṇa > த. இரணம்.]

இரணம்[2] *iraṇam,* பெ.(n.) போர் (திவா.); war, battle, fight, conflict.

[Skt. raṇa > த. இரணம்.]

இரணம்[3] *iraṇam,* பெ.(n.) புண்; wound, sore, ulcer, cancer. *"உள்ளிலிரு பலமிட்டுப் பூசிரணம் போமால்" (தைலவ. தைல. 103.).*

[Skt. vraṇa > த. இரணம்.]

இரணம்[4] *iranam,* பெ.(n.) 1. பொன் (சூடா.); gold. 2. மாணிக்கம்; ruby. 3. பலகறை; cowry.

[Skt. hirana > த. இரணம்.]

இரணம்[5] *iranam,* பெ.(n.) விந்துநீர் (சுக்கிலம்); semen.

[Skt. hirana > த. இரணம்.]

இரணம்[6] *iranam,* பெ.(n.) உணவு; food (சா.அக.).

இரணமத்தம் *irana-mattam,* பெ.(n.) யானை; elephant (சா.அக.).

[இரணம்[2] + மத்தம்.]

இரணமேகம் *irana-mēgam,* பெ.(n.) வெள்ளை நோயால் உண்டாகும் சிரங்கு, புண், கொருக்கு முதலிய நோய்கள்; syphilitic sores such as chancre etc. due to veneral causes (சா.அக.).

[Skt. vrana+mēha > த. இரணமேகம்.]

இரணரங்கம் *iranarangam,* பெ.(n.) போர்க்களம்; battle-field.

[Skt. rana+ranga > த. இரணரங்கம்.]

இரணவஞ்சம் *irana-vañjam,* பெ.(n.) மகிழ்ச்சியைத் தரும் நிலங்களுள் (போக பூமியுள்) ஒன்று; one of six blissful regions or *pōka-pūmi* where the fruits of the good deeds of former births are enjoyed.

[Skt. hirana+vamša > த. இரணவஞ்சம்.]

இரணவாதம் *irana-vādam,* பெ.(n.) நோய் வகை (கடம்ப. பு. இலீலா. 140.); a disease.

[Skt. rana+vāta > த. இரணவாதம்.]

இரணவீரன் *irana-vīran,* பெ.(n.) 1. போர் வீரன்; hero in war. 2. அங்காளம்மை கோயிலின் சுற்றுச் சுவர் தெய்வம் (பரிவார தேவதை); a demonhero represented by an image in *Angālamman's* temple.

[Skt. rana> த. இரணம்.]

இரணவைத்தியம் *irana-vaittiyam,* பெ.(n.) அறுவை மருத்துவம்; surgery.

[Skt. vrana+vaidya > த. இரண வைத்தியம்.]

இரணவைத்தியன் *irana-vaittiyan,* பெ.(n.) அறுவை மருத்துவர்; surgeon.

[Skt. vrana+vaidya > த. இரணவைத்தியன்.]

இரணியகசிபு *iraniya-kašipu,* பெ.(n.) திருமாலின் தோற்றரவுகளில் ஒன்றான அரிமா தலையும் மனித உடலும் கொண்ட ஆளரிமா (நரசிம்மம்) வால் கொல்லப்பட்ட ஓர் அசுரன்; name of an impious *Ašuran* who was destroyed by *Visnu* in His man-lion incarnation.

[Skt. hiranya+kasipu> த. இரணியகசிபு.]

இரணியகர்ப்பதானம் *iraniya-karppatānam,* பெ.(n.) பொற்குடத்தை யளிக்குந் தானம் (அபி.சிந்.); gift of gold pot, in religious ceremonies.

[இரணியகர்ப்பம் + தானம்.]

[Skt. hiranya-garbha > த. இரணியகர்ப்பம்.]

இரணியகர்ப்பம் *iraniya-karppam,* பெ.(n.) ஒரு வேள்வி; ceremony of passing through a golden cow, such as the one observed by the Maharaja of Travancore, which is believed to be equivalent to a second birth and so to bestow *Brāhman-hood* on a *Ksatriya.*

[Skt.hiranya+garbha > த. இரணியகர்ப்பம்.]

இரணியகர்ப்பமதம் *iraniyakarppamadam,* பெ.(n.) நான்முகனே முதற்கடவுள் என்னும் மதம்; doctrine that Brahmā is the supreme God.

[Skt.hiranya+garbha > த. இரணியகர்ப்பம்.]

இரணியகர்ப்பயாசி *iraniya-karppa-yāši,* பெ.(n.) இரணியகர்ப்பயாகம் செய்தவன்; one who has performed the ceremony of passing through a golden cow.

[Skt. hiranya + garbha + yāji > த. இரணியகர்ப்பயாசி].

இரணியகர்ப்பர் *iraṇiya-karppar,* பெ.(n.) உயிர் மூச்சே ஆதன் என்னுஞ் சார்வாகருள் ஒரு சாரார் (விவேக சிந். பக். 17); the sect of the *Sārvākas* who hold that *ātman* is *pirāṇaṉ.*

[Skt. hiraṇya-garbha > த. இரணியகர்ப்பர்.]

இரணியகர்ப்பன் *iraṇiya-karppaṉ,* பெ.(n.) நான்முகன் (பிங்.); *Brahmā* who was born from the golden egg.

[Skt.hiraṇya+garbha>த. இரணியகர்ப்பன்.]

இரணியசிராத்தம் *iraṇiya-śirāttam,* பெ.(n.) இறந்தோர் பொருட்டு பொன் கொடுத்து செய்யும் (சிராத்தம்) சடங்கு; ceremony in honour of a deceased ancestor in which the offering consists only of money.

[Skt. hiraṇya + śrāddha>த. இரணிய சிராத்தம்.]

இரணியதானம் *iraṇiya-tāṉam,* பெ.(n.) பொன் கொடை; distribution of gold.

[இரணியம் + தானம்.]

[Skt. hiraṇya > த. இரணியம்.]

இரணியநேரம் *iraṇiya-nēram,* பெ.(n.) அந்திநேரம்; evening.

[இரணியம் + நேரம்.]

இரணியம்[1] *iraṇiyam,* பெ.(n.) 1. பொன்; gold. *"இரணியவரைக்கண்" (கந்தபு. திருவி. 92.).* 2. பணம்; money.

[Skt. hiraṇya > த. இரணியம்.]

இரணியம்[2] *iraṇiyam,* பெ.(n.) **இரணம்**[5] (நாநார்த்த.) பார்க்க; see *iraṇam*[5].

[Skt. hiraṇya > த. இரணியம்.]

இரணியவருடம் *iraṇiya-varuḍam,* பெ.(n.) ஒன்பதாண்டுகளுள் ஒன்று; a division of earth; one of *nava-varuḍam.* *"சிருங்கமுதற் சுவேதமட்டும் நீதியிரணிய வருடம்" (கந்தபு. அண்டகோ. 36.).*

[Skt. hiraṇya+varṣa > த. இரணியவருடம்.]

இரணியவேளை *iraṇiya-vēḷai,* பெ.(n.) **இரணியநேரம்** பார்க்க; see *iraṇiya-nēram.*

[இரணியம் + வேளை.]

[Skt. hiraṇya > த. இரணியம்.]

இரணியன்[1] *iraṇiyaṉ,* பெ.(n.) 1. ஓர் அசுரன் (சீவக. 1813); name of an *Aśuraṉ.* 2. பன்னிரு கதிரவர்களில் (துவாத சாதித்தருள்) ஒருவன்; a sun-god, one of the *tuvāta-šātittar.*

[Skt. hiraṇya > த. இரணியன்.]

இரணியன்[2] *iraṇiyaṉ,* பெ.(n.) வியாழன் (சாதகசிந். 6); Jupiter.

[Skt. hiraṇya > த. இரணியன்.]

இரணியாக்கதன் *iraṇiyākkadaṉ,* பெ.(n.) இரணியகசிபுவோடு இரட்டையாகப் பிறந்தவன்; (அறப். சத. 98); the golden-eyed twin brother of *Hiraṇya-kašipu,* killed by *Viṣṇu* in His boar incarnation.

[Skt. Hiraṇyākṣa > த. இரணியாக்கதன்.]

இரத்தக்கட்டி *iratta-k-kaṭṭi,* பெ.(n.) **அரத்தக் கட்டி** பார்க்க; see *aratta-k-kaṭṭi.*

[இரத்தம் + கட்டி.]

இரத்தக்கட்டு *iratta-k-kaṭṭu,* பெ.(n.) **அரத்தக்கட்டு** பார்க்க; see *aratta-k-kaṭṭu.*

இரத்தக்கண்ணன் *iratta-k-kaṇṇaṉ,* பெ.(n.) **அரத்தக் கண்ணன்** பார்க்க; see *aratta-k-kaṇṇaṉ.*

இரத்தக்கமலம் *iratta-k-kamalam,* பெ.(n.) **அரத்தக்கமலம்** பார்க்க; see *aratta-k-kamalam.*

இரத்தக்கலப்பு *iratta-k-kalappu,* பெ.(n.) **அரத்தக்கலப்பு** பார்க்க; see *aratta-k-kalappu.*

இரத்தக்கவிச்சு *iratta-k-kaviccu,* பெ.(n.) **அரத்தக்கவிச்சு** பார்க்க; see *aratta-k-kaviccu.*

இரத்தக்கழிச்சல் *iratta-k-kaḻiccal,* பெ.(n.) **அரத்தக்கழிச்சல்** பார்க்க; see *aratta-k-kaḻiccal.*

இரத்தக்கனப்பு *iratta-k-kaṉappu,* பெ.(n.) **அரத்தக்கனப்பு** பார்க்க; see *aratta-k-kaṉappu.*

இரத்தக்காசம் *iratta-k-kāšam,* பெ.(n.) **அரத்தக்காசம்** பார்க்க; see *aratta-k-kāšam.*

இரத்தக்காட்டேறி *iratta-k-kāṭṭēṟi,* பெ.(n.) **அரத்தக்காட்டேறி** பார்க்க; see *aratta-k-kāṭṭēṟi.*

இரத்தக்காணிக்கை *iratta-k-kāṇikkai,* பெ.(n.) **அரத்தக்காணிக்கை** பார்க்க; see *aratta-k-kāṇikkai.*

இரத்தக்கிட்டம் *iratta-k-kiṭṭam,* பெ.(n.) **அரத்தக்கிட்டம்** பார்க்க; see *aratta-k-kiṭṭam.*

இரத்தக்கிராணி *iratta-k-kirāṇi,* பெ.(n.) **அரத்தக்கழிச்சல்** பார்க்க; see *aratta-k-kaḻiccal.*

இரத்தக்குமுதம் *iratta-k-kumudam,* பெ.(n.) **அரத்தக்குமுதம்** பார்க்க; see *aratta-k-kumudam.*

இரத்தக்குழல் *iratta-k-kuḻal,* பெ.(n.) **அரத்தக்குழல்** பார்க்க; see *aratta-k-kuḻal.*

இரத்தக்குறைச்சல் *iratta-k-kuṟaiccal,* பெ.(n.) **அரத்தக்குறைச்சல்** பார்க்க; see *aratta-k-kuṟaiccal.*

இரத்தக்குறைவு *iratta-k-kuṟaivu,* பெ.(n.) **அரத்தக்குறைவு** பார்க்க; see *aratta-k-kuṟaivu.*

இரத்தக்குன்மம் *iratta-k-kuṉmam,* பெ.(n.) **அரத்தக்குன்மம்** பார்க்க; see *aratta-k-kuṉmam.*

இரத்தக்கைரவம் *iratta-k-kairavam,* பெ.(n.) செவ்வாம்பல் (மூ.அ.); red indian water-lily.

[த. அரத்தம் > வ. இரத்தம்.]

இரத்தக்கொதி *iratta-k-kodi,* பெ.(n.) **அரத்தக்கொதி** பார்க்க; see *aratta-k-kodi.*

இரத்தக்கொழுப்பு *iratta-k-koḻuppu,* பெ.(n.) **அரத்தக்கொழுப்பு** பார்க்க; see *aratta-k-koḻuppu.*

இரத்தக்கோமாரி *iratta-k-kōmāri,* பெ.(n.) **அரத்தக்கோமாரி** பார்க்க; see *aratta-k-kōmāri.*

இரத்தச்சந்தனம் *iratta-c-candaṉam,* பெ.(n.) **அரத்தச்சந்தனம்** பார்க்க; see *aratta-c-candaṉam.*

இரத்தச்சந்தியகம் *iratta-c-candiyagam,* பெ.(n.) **அரத்தச்சந்தியகம்** பார்க்க; see *aratta-c-candiyagam.*

இரத்தச்சம்பந்தம் *iratta-c-cambandam,* பெ.(n.) **அரத்தக்கலப்பு** பார்க்க; see *aratta-k-kalappu.*

இரத்தச்சாகம் *iratta-c-cāgam,* பெ.(n.) செங்கீரை (மலை.); cockscomb greens.

இரத்தச்சாட்சி *iratta-c-cāṭci,* பெ.(n.) **அரத்தச்சாட்சி** பார்க்க; see *aratta-c-cāṭci.*

இரத்தச்சாமுண்டி *iratta-c-cāmuṇḍi,* பெ.(n.) கொற்றவையின் வேறு வடிவம்; a form of Durgai.

இரத்தச்சாரம் *iratta-c-cāram,* பெ.(n.) **அரத்தச்சாரம்** பார்க்க; see *aratta-c-cāram.*

இரத்தச்சிலந்தி *iratta-c-cilandi,* பெ.(n.) **அரத்தச்சிலந்தி** பார்க்க; see *aratta-c-cilandi.*

இரத்தச்சுரப்பு *iratta-c-curappu,* பெ.(n.) **அரத்தச்சுரப்பு** பார்க்க; see *aratta-c-curappu.*

இரத்தச்சுருட்டை *iratta-c-curuṭṭai,* பெ.(n.) **அரத்தச்சுருட்டை** பார்க்க; see *aratta-c-curuṭṭai.*

இரத்தச்சூலை *iratta-c-cūlai,* பெ.(n.) **அரத்தச்சூலை** பார்க்க; see *aratta-c-cūlai.*

இரத்தச்சூறை *iratta-c-cūṟai,* பெ.(n.) **அரத்தச்சூறை** பார்க்க; see *aratta-c-cūṟai.*

இரத்ததிருட்டி *iratta-tirutti,* பெ.(n.) சன்னி வகை (தஞ். சரசு, iii, 194.); a kind of delirium.

[த. அரத்தம் > வ. இரத்தம்.]

இரத்தந்ததும்பு-தல் *irattan-tatumbu-,* 5 செ.கு.வி. (v.i.) **அரத்தந்ததும்பு-தல்** பார்க்க; see *arattan-tatumbu-.*

இரத்தநரம்பு *iratta-narambu,* பெ.(n.) அரத்தநரம்பு பார்க்க; see *aratta-narambu.*

இரத்தப்பலம் *iratta-p-palam,* பெ.(n.) ஆல மரவகை (மலை.); banyan, so called from its bearing red fruit.

[த. அரத்தம் > வ. இரத்தம்.]

இரத்தப்பழி *irattappali,* பெ.(n.) **அரத்தப்பழி** பார்க்க; see *aratta-p-pali.*

இரத்தப்பிரமியம் *iratta-p-piramiyam,* பெ.(n.) **அரத்தவெட்டை** (வின்.) பார்க்க; see *aratta-vettai.*

இரத்தப்பிரமேகம் *iratta-p-piramēgam,* பெ.(n.) **அரத்தவெட்டை** பார்க்க; see *aratta-vettai.*

இரத்தப்பிரவாகம் *iratta-p-piravāgam,* பெ.(n.) **அரத்தப்பெருக்கு** பார்க்க; see *aratta-p-perukku.*

இரத்தப்பிரியன் *iratta-p-piriyan,* பெ.(n.) **அரத்தப்பிரியன்** பார்க்க; see *aratta-p-piriyan.*

இரத்தப்புடையன் *iratta-p-pudaiyan,* பெ.(n.) **அரத்தப்புடையன்** பார்க்க; see *aratta-p-pudaiyan.*

இரத்தப்பெருக்கு *iratta-p-perukku,* பெ.(n.) **அரத்தப்பெருக்கு** பார்க்க; see *aratta-p-perukku.*

இரத்தப்பந்தனம் *iratta-p-pandanam,* பெ.(n.) **அர்த்தக்கலப்பு** (பாண்டி.) பார்க்க; see *aratta-k-kalappu.*

இரத்தப்பலி *iratta-p-pali,* பெ.(n.) **அரத்தப்பலி** பார்க்க; see *aratta-p-pali.*

இரத்தப்பலை *iratta-p-palai,* பெ.(n.) கோவைப் பழம் (சங். அக); fruit of common creeper of the hedges.

[த. அரத்தம் → வ. இரத்தம்.]

இரத்தப்பாடாணம் *iratta-pādānam,* பெ.(n.) வைப்புநஞ்சு வகை (மூ.அ.); a prepared arsenic.

[த. அரத்தம் > வ. இரத்தம்.]

இரத்தப்பாரதம் *iratta-p-pāradam,* பெ.(n.) சாதிலிங்கம் (மூ.அ.); cinnabar vermilion.

இரத்தப்பிண்டம் *iratta-p-pindam,* பெ.(n.) **அரத்தப் பிண்டம்** பார்க்க; see *aratta-p-pindam.*

இரத்தப்பித்தம் *iratta-p-pittam,* பெ.(n.) **அரத்தப்பித்தம்**[1] பார்க்க; see *aratta-p-pittam.*

இரத்தப்பிந்து *iratta-p-pindu,* பெ.(n.) **அரத்தப்பிந்து** பார்க்க; see *aratta-p-pindu.*

இரத்தப்பீனசம் *iratta-p-pīnašam,* பெ.(n.) மூக்கிலிருந்து குருதியொழுகும் நோய் (இங். வை. 175); bleeding from nose.

[த. அரத்தம் > வ. இரத்தம்.]

இரத்தப்பூடம் *iratta-p-pūdam,* பெ.(n.) **அரத்தப்பூடம்** பார்க்க; see *aratta-p-pūdam.*

இரத்தப்போளம் *iratta-p-pōlam,* பெ.(n.) **அரத்தப்போளம்** பார்க்க; see *aratta-p-pōlam.*

இரத்தம்[1] *irattam,* பெ.(n.) **அரத்தம்** பார்க்க; see *arattam.*

இரத்தம்[2] *irattam,* பெ.(n.) தாமிரம் (நாநார்த்த); copper.

[Skt. rakta > த. இரத்தம்.]

இரத்தமடக்கி *irattam-adakki,* பெ.(n.) **அரத்தமடக்கி** பார்க்க; see *aratta-madakki.*

இரத்தமண்டலம் *iratta-mandalam,* பெ.(n.) **அரத்தமண்டலம்** பார்க்க; see *aratta-mandalam.*

இரத்தமண்டலி *iratta-maṇḍali,* பெ.(n.) **அரத்தமண்டலி** பார்க்க; see *aratta-maṇḍali.*

இரத்தமாடன் *iratta-māḍaṉ,* பெ.(n.) **அரத்தமாடன்** பார்க்க; see *aratta-māḍaṉ.*

இரத்தமாரணம் *iratta-māraṇam,* பெ.(n.) **அரத்தமாரணம்** பார்க்க; see *aratta-māraṇam.*

இரத்தமானியம் *iratta-māṉiyam,* பெ.(n.) **அரத்தமானியம்** பார்க்க; see *aratta-māṉiyam.*

இரத்தமூத்திரம் *iratta-mūttiram,* பெ.(n.) **அரத்தமூத்திரம்** பார்க்க; see *aratta-mūttiram.*

இரத்தமூலம் *iratta-mūlam,* பெ.(n.) **அரத்தமூலம்** பார்க்க; see *aratta-mūlam.*

இரத்தமேகம் *iratta-mēgam,* பெ.(n.) **அரத்தவெட்டை** பார்க்க; see *aratta-veṭṭai.*

இரத்தவடி *iratta-vaḍi,* பெ.(n.) **அரத்தவடி** பார்க்க; see *aratta-vaḍi*

இரத்தவமனம் *iratta-vamaṉam,* பெ.(n.) **அரத்தவாந்தி** பார்க்க; see *aratta-vāndi.*

இரத்தவலிப்பு *iratta-valippu,* பெ.(n.) **அரத்தவலிப்பு** பார்க்க; see *aratta-valippu.*

இரத்தவழலை *iratta-vaḻalai,* பெ.(n.) **அரத்தவழலை** பார்க்க; see *aratta-vaḻalai.*

இரத்தவள்ளி *iratta-vaḷḷi,* பெ.(n.) **அரத்தவள்ளி** பார்க்க; see *aratta-vaḷḷi.*

இரத்தவாந்தி *iratta-vāndi,* பெ.(n.) **அரத்தவாந்தி** பார்க்க; see *aratta-vāndi.*

இரத்தவிந்து *iratta-vindu,* பெ.(n.) **அரத்தவிந்து** பார்க்க; see *aratta-vindu.*

இரத்தவிரியன் *iratta-viriyaṉ,* பெ.(n.) **அரத்தவிரியன்** பார்க்க; see *aratta-viriyaṉ.*

இரத்தவுதிரி *iratta-v-udiri,* பெ.(n.) **அரத்தவுதிரி** பார்க்க; see *aratta-v-udiri.*

இரத்தவெட்டை *iratta-veṭṭai,* பெ.(n.) **அரத்தவெட்டை** பார்க்க; see *aratta-veṭṭai.*

இரத்தவெறி *iratta-veṟi,* பெ.(n.) **அரத்தவெறி** பார்க்க; see *aratta-veṟi.*

இரத்தவோட்டம் *iratta-vōṭṭam,* பெ.(n.) **அரத்தவோட்டம்** பார்க்க; see *aratta-v-ōṭṭam.*

இரத்ததாகம் *iratta-tāgam,* பெ.(n.) சிற்றாமணக்கு (தைலவ. தைல. 93.); castor plant.

இரத்தாசயம் *irattāśayam,* பெ.(n.) இதயம்; heart, one of *pañjāśayam.*



இரத்தாட்சி *irattāṭśi,* பெ.(n.) ஓர் ஆண்டின்பெயர்; name of the 58th year of the jupiter cycle.

இரத்தாதிசாரம் *irattātiśāram,* பெ.(n.) **அரத்தக்கழிச்சல்** பார்க்க; see *aratta-k-kaḻiccal.*

இரத்தாம்பரசாயம் *irattāmbaraśāyam,* பெ.(n.) சிவப்புவண்ணம்(பாண்டி); red dye.

இரத்தாம்பரம்[1] *irattāmbaram,* பெ.(n.) மரவகை (பாண்டி); a tree.

இரத்தாம்பரம்[2] *irattāmbaram,* பெ.(n.) செவ்வாடை; red clothes.

இரத்தாளிக்கரும்பு *irattāḷi-k-karumbu,* பெ.(n.) செங்கரும்புவகை; a species of sugarcane.

இரத்தினகசிதம் *irattiṉa-kaśidam,* பெ.(n.) மணியிழைக்கப்பட்டது; that which is studded with gems.

[இரத்தினம் + கசிதம்.]

இரத்தினகம்பளம் *irattiṉa-kambaḷam*, பெ.(n.) ஓவிய வேலைப்பாடுகள் நிறைந்த வண்ணவிரிப்பு (மூ.அ.); carpet of variegnted colours

[இரத்தினம் + கம்பளம்.]

இரத்தினச்சுருக்கம்[1] *irattiṉa-c-curukkam*, பெ.(n.) மிகச் சுருக்கமான செய்தி; message in a very short form; abstract.

த.வ. மணிச்சுருக்கம்.

[இரத்தினம் + சுருக்கம்.]

இரத்தினச்சுருக்கம் *irattiṉa-c-curukkam*, பெ.(n.) 1. மகளிர் உறுப்புவமை முதலியவற்றைக் கூறும் ஒரு நூல்; name of a treatise giving smilies drawn from nature suitable to describe the feature of the fair sex, and other matters. 2. ஒரு மருத்துவ நூல்; name of a treatise on medicine.

[இரத்தினம் + சுருக்கம்.]

[**Skt.** *ratna* > த. இரத்தினம்.]

இரத்தினசபை *irattiṉa-šabai*, பெ.(n.) திருவாலங்காட்டிலுள்ள நடராசர் அவை; dancing hall of *Naḍarāja* in the shrine at *Tiru-v-ālangāḍu* in the North Arcot District, so called from its being roofed with gems.

[இரத்தினம் + சபை.]

[**Skt.** *ratna* > த. இரத்தினம்.]

இரத்தினசிரசு *irattiṉa-širašu*, பெ.(n.) 393 உச்சிகளையும் 50 மேனிலைக் கட்டுக்களையுமுடைய கோயில் (சுக்கிரநீதி, 230); temple with 393 towers and 50 storeys.

[இரத்தினம் + சிரசு.]

[**Skt.** *ratna* > த. இரத்தினம்.]

இரத்தினத்திரயம் *irattiṉa-t-tirayam*, பெ.(n.) சமணரின் நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் என்னும் மும்மணிக்கொள்கை; the three gems, Right faith, Right knowledge and Right conduct which sum up the beliefs and tenets of the Jaina cult. *"நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம்" (சீவக. 374, உரை).*

[**Skt.** *ratna+traya* > த. இரத்தினத்திரயம்.]

இரத்தினதீவம் *irattiṉa-dīvam*, பெ.(n.) இலங்கை (மணிமே. 11 : 21); ancient name of Śrilanka.

த.வ. மணிபல்லவம்.

[இரத்தினம் + தீவம்.]

[**Skt.** *ratna* > த. இரத்தினம்.]

மணி பல்லவத்திற்கு அயலிலுள்ள ஒரு சிறு தீவு. இதில் புத்தருடைய பாதப்படிமை அமைக்கப்பட்ட ஒரு மலையுண்டு. இதுவே இலங்கை (மணிமேகலை).

இரத்தினப்பிரத்தம் *irattiṉa-p-pirattam*, பெ.(n.) பனிமலையின் (கைலாயத்தின்) தாழ்வரை (சி.சி. 1 : 52, மறைஞா.); name of the base of Mount *Kailāsa*.

[**Skt.** *ratna+pra-stha*> த. இரத்தினப் பிரத்தம்.]

இரத்தினப்பிரபை *irattiṉa-p-pirabai*, பெ.(n.) எழுவகை நிரயத்துள் (நரகத்துள்) ஒன்று (சீவக. 2817, உரை.); a hell strewnfully with sharp stones, one of *eḻu-naragam*.

[**Skt.** *ratna+pra-bhā*> த. இரத்தினப்பிரபை.]

இரத்தினபரீட்சை *irattiṉa-parīṭcai*, பெ.(n.) அறுபத்து நான்கு கலைகளுள் மணிகளின் இயல்பறியும் கலை; knowledge of precious stones, art of the connoisseur of gems, one of *aṟupattu-nālu-kalai*.

[**Skt.** *ratna+parīkṣā* > த. இரத்தினபரீட்சை.]

இரத்தினம்[1] *irattiṉam*, பெ.(n.) மணி; jewel, gem, a precious stone.

[**Skt.** *ratna* > த. இரத்தினம்.]

இரத்தினம்[2] *irattiṉam*, பெ.(n.) **அரத்தை** (சங்.அக) பார்க்க; see *arattai*.

இரத்தினமாலை *irattiṉa-mālai,* பெ.(n.) மணிவடம்; garland of gems.

த.வ. மணிமாலை.

[இரத்தினம் + மாலை.]

[Skt. ratna > த. இரத்தினம்.]

இரத்தினாகரம் *irattiṉākaram,* பெ.(n.) 1. மணிகள் நிறைந்த கடல்; ocean, as the repository of in numerable precious gems. 2. தனுட்கோடிக்கு வடக்கேயுள்ள கடல்; the popular name of that part of the Bay of Bengal north of *Dhanuṣkōḍi* near Rameswaram.

[Skt. ratna+ā-kara > த. இரத்தினாகரம்.]

இரத்தினி *irattiṉi,* பெ.(n.) 1. பிடிமுழம்; cubit measured with closed hand. 2. முன்கைப் பேரெலும்பு; ulna.

[Skt. ratni > த. இரத்தினி.]

இரத்து[1] *irattu,* பெ.(n.) சேனைக்குரிய உணவுப் பொருள் (வின்.); stores, provisions for army.

[Persn. rasad> இரஸ்து > த. இரத்து.]

இரத்து[2] *irattu,* பெ.(n.) வாழைவகை (வை.மூ.); a kind of plantain.

[இரஸ்து → த. இரத்து.]

இரத்தை *irattai,* பெ.(n.) மலைமகளின் (பாராசத்தியின்) நால்வகை வடிவுகளுள் ஒன்று (சைவச. பொது. 74, உரை.); a form of parā-sakti, one of four forms. 2. மஞ்சிட்டி; Indian madder.

[Skt. raktā > த. இரத்தை.]

சிவசத்தியின் நால்வகைப் பிரிவு : இரத்தை, சுக்கிலை, அசிதை, இருட்டிணை.

இரத்தோற்பலம் *irattōṟpalam,* பெ.(n.) **அரத்தோற்பலம்** பார்க்க; see *arattōṟ-palam.*

இரதகம் *iradagam,* பெ.(n.) இச்சி மரவகை (மலை.); jointed ovate-leaved fig.

இரதகுளிகை *irada-kuḷigai,* பெ.(n.) இதளிய மாத்திரை; mercury pill.

[இரதம் + குளிகை.]

[Skt. rasa > த. இரதம்.]

இரசகுளிகை→இரதகுளிகை.

இரதசத்தமி *irada-šattami,* பெ.(n.) கும்ப மாதத்தின் ஒளிப் பக்கத்து ஏழாம் நாள் (விநாயகபு. 75 : 13); the seventh day in the bright fortnight of *Māgam,* considered holy on account of its synchronisation, at some time in the past, with the day on which the sun turns northward, which circumstance now happens, however, only on the 22nd of December.

[Skt. ratha+saptamī > த. இரதசத்தமி.]

இரதபதம் *irada-padam,* பெ.(n.) புறா (அக.நி.); dove.

[Skt. ratha+pada > த. இரதபதம்.]



இரதபந்தம் *irada-pandam,* பெ.(n.) ஓவியப் பாடல் (சித்திர கவி) வகை (மாறன. 286.); variety of *šittira-kavi* which is fitted into a fanciful diagram representing a temple chariot.

[Skt. ratha+bandha > த. இரதபந்தம்.]

இரதபரீட்சை *irada-parītcai,* பெ.(n.) அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்றாகிய தேர் ஓட்டும் கலை (சாரத்தியம்); art of charioteering; one of *aṟupattu-nālu-kalai.*

[Skt. ratha + parīkṣa > த. இரதபரீட்சை.]

இரதம்[1] *iradam,* பெ.(n.) புணர்ச்சி (பிங்.); coition.

[Skt. rata > த. இரதம்.]

இரதம்[2] *iradam,* பெ.(n.) தேர் (திவா.); chariot, car.

[Skt. ratha > த. இரதம்.]



இரதம்[3] *iradam,* பெ.(n.) 1. சாறு; sap, juice. (தைலவ.தைல. 6.) 2. சோற்றுச்சாறு; essence of rice. 3. சுவை (பிங்); flavour, taste. 4. இனிமை; sweetness, agreeableness, pleasantness. *"இரதமுடையநடமாட்டுடையவர்" (திருக்கோ. 57.)* 5. வாயூறுநீர்(திவா.); saliva. 6. வண்டு (பிங்.);bee, so called because it tastes honey. 7. இதளியம்(பாதரசம்); mercury *"இரும்பெரிபொன் செயுமிரத நீர தொன்று" (சீவக. 1204.)* 8. இதளியலிங்கம் (சைவச. பொது. 81.); mercury Lingam. 9. கற்பனை; imagination. *"பரிசவிதை யிரதத்தி லெழுவதாம்" (ஞானவா. தாசு. 34.).* 10. பல்; tooth.

[Skt. rasa > த. இரசம் → இரதம்.]

இரதம்[4] *iradam,* பெ.(n.) அரைஞாண் (பிங்.); waist string, waist ornament.

இரதம்[5] *iradam,* பெ.(n.) மாமரம் (மூ.அ.); mango tree.

இரதம்[6] *iradam,* பெ.(n.) 1. கால்; leg. 2. உடல்; body. 3. வஞ்சிமரம்; *vañjitree.* 4. ஊர்தி; vehicle.

[Skt. ratha > த. இரதம்.]

இரதம்[7] *iradam,* பெ.(n.) எழுதுகை (நாநார்த்த); writing.

[Skt. rada > த. இரதம்.]

இரதம்[8] *iradam,* பெ.(n.) 1. அன்பு (அனுராகம்)(நாநார்த்த); disire, affection. 2. நீர்; water. 3. எழுவகை; (சத்த) தாதுக்களுளொன்று (சூடா.); chyle, a constituent element in the human body, one of *šatta-tātu.* 4. வலிமை (நாநார்த்த.); strength. 5. நஞ்சு(நாநார்த்த); poison.

[Skt. rasa > த. இரதம்.]

இரதரேணு *iradarēnu,* பெ.(n.) பரமாணு நான்கு கொண்ட நீட்டலளவை (சிற்பசாத். 18.); a measure of four atoms.

இரதனம் *iradanam,* பெ.(n.) அரைஞாண் (திவா.); waist string.

[Skt. rašanā > த. இரசனம் → இரதனம்.]

இரதனை *iradanai,* பெ.(n.) 1. அரத்தை; galangal. 2. நா; tongue.

இரதாங்கம் *iradāngam,* பெ.(n.) 1. தேர்க்கால்; chariot - wheel. 2. சக்கரவாகப்புள்; cakra bird.

[Skt. rathānga > த. இரதாங்கம்.]

இரதாரூடன் *iradārūdan,* பெ.(n.) தேரின் மேற்செல்வோன் (பயணிப்போன்) (வின்.); one riding on a chriot.

[Skt. ratha + ā-rūdha > த. இரதாரூடன்.]

இரதி[1] *iradi,* பெ.(n.) 1. விருப்பம் (சீவக. 3076, உரை.); desire, longing. 2. புணர்ச்சி; coition. *"இரதி வேட்டையிற் பொருதனர்" (செவ்வந் திப்பு. தாயான. 11).* 3. காமனின் மனைவி (கந்தபு. மோன நீங்கு. 1.); name of Kama's wife.

[Skt. rati > த. இரதி.]

இரதி[2] *iradi,* பெ.(n.) பெண் யானை (சூடா.); female elephant.

[Skt. radini > த. இரதி.]

இரதி³ *iradi,* பெ.(n.) பித்தளை (பிங்.); brass.

*[**Skt.** riti > த. இரதி.]*

இரதி⁴-த்தல் *iradi,* 4 செ.குன்றாவி. (v.t.) விரும்புதல்; to desire. *"வேளுமிரதியிரதியும்" (மாறன. 677.)*

*[**Skt.** radi > த. இரதி →இரதி-த்தல்.]*

இரதி⁵-த்தல் iradi-, 4 செ.கு.வி(v.i.) தித்தித்தல்; *to be sweet, mellifluous. "இரதித்த மொழியொடு" (அரிச்.பு.விவா. 282).*

*[**Skt.** rasa > த. இரதி.]*

இரதிக்கிரீடை *iradi-k-kiriḍai,* பெ.(n.) புணர்ச்சி; sexual intercourse.

*[**Skt.** rati+kriḍā > த. இரதிக்கிரீடை.]*

இரதிகன் *iradigaṉ,* பெ.(n.) 1. தேரோட்டி; charioteer. 2. தேர்க்குரியவன்; owner of a car.

*[**Skt.** rathika > த. இரதிகன்.]*



இரதிகாதலன் *iradi-kādalaṉ,* பெ.(n.) காமன், இரதியின் காதலன்; *Kāma,* husband of Radi.

[இரதி + காதலன்.]

*[**Skt.** rati > த. இரதி.]*

இரதிகாந்தன் *iradi-kāndaṉ,* பெ.(n.) **இரதி காதலன்** பார்க்க; see *iradi-kādalaṉ.*

இரதிசம் *iradiśam,* பெ.(n.) கொருக்கு நோய்; the primary lesion of syphilis - Chancere (சா. அக.)

இரதிபதி *iradi-padi,* பெ.(n.) **இரதிகாதலன்** பார்க்க; see *iradi-kādalaṉ.*

*[**Skt.** rati+pati > த. இரதிபதி.]*

இரதிமந்திரம் *iradi-mandiram,* பெ.(n.) பெண்குறி; the gentital of a female.

இரதோற்சவம் *iradōṟcavam,* பெ.(n.) தேர்த் திருவிழா; car festival when there is a grand and solemn procession of an idol mounted on a car which is drawn around the streets.

த.வ. தேரோட்டம்.

*[**Skt.** ratha+ut-sava> த. இரதோற்சவம்.]*

இரந்திரம்¹ *irandiram,* பெ.(n.) 1. துளை; hole, opening slit. 2. வெளி (சி.சி. 2 : 66, சிவாக்); space. 3. பிறப்போரை (வின்.); zodiacal sign at the time of one's birth. 4. மறைபொருள்; cunning, weak point.

*[**Skt.** randhra > த. இரந்திரம்.]*

இரந்திரம்² *irandiram,* பெ.(n.) சுருங்கை (நாநார்த்த.); subterraneous passage.

*[**Skt.** randhra > த. இரந்திரம்]*

இரம்மியம் *irammiyam,* பெ.(n.) 1. மகிழ்ச்சி தருவது; that which is pleasant or lovely. 2. அழகியது; that which is beautiful. 3. விரும்பத்தக்கது; that which is lovable, desirable.

த.வ. கவின்.

*[**Skt.** ramya > த. இரம்மியம்.]*

இரம்மி *irammi,* பெ.(n.) சீட்டு விளையாட்டில் ஒரு வகை; a kind of play at cards.

இரமணீயம் *iramaṉiyam,* பெ.(n.) 1. இன்ப மூட்டுவது; that which is pleasant, delightful. 2. அழகுள்ளது; that, which is charming.

*[**Skt.** ramaṉiya > த. இரமணீயம்.]*

இராமாப்பிரியம் *iramā-p-piriyam,* பெ.(n.) தாமரை (மூ.அ.); lotus, the favourite flower of *Lakṣmi.*

*[**Skt.** ramā+priya > த. இராமாப்பிரியம்.]*

இரமாபதி *iramā-padi,* பெ.(n.) திருமால்; *Visnu,* consort of *Laksmi.*

[Skt. ramā+pati > த. இராமாபதி.]

இரமி[1]-த்தல் *irami-,* 4 செ.கு.வி.(v.i.) மகிழ்ச்சியாய் இருத்தல்; to rejoice, feel delight.

[Skt. ram > த. இரமி → இரமி-த்தல்.]

இரமி[2]-த்தல் *irami-,* 4 செ.குன்றாவி. (v.t.) புணர்தல்; to copulate.

[Skt. ram > த. இரமி-.]

இரமியம் *iramiyam,* பெ.(n.) **இரமியவருடம்** பார்க்க; see *iramiya-varudam.* *"சுவேதநீல நெடுங்கிரியி னடுவ ணிரமிய மாம்" (கந்தபு. அண்டகோ.36).*

[Skt. ramya > த. இரமியம்.]

இரமியவருடம் *iramiya-varudam,* பெ.(n.) ஒன்பது ஆண்டுகளுக்கு ஒன்று; a division of the earth; one of *nava-varudam.*

[Skt. ramya+varsa > த. இரமிய வருடம்]

இரமை *iramai,* பெ.(n.) திருமகள் (இலக்குமி); Laksmi, the goddess of fortune.

[Skt. ramā> த. இரமை.]

இரவுத்திரியம் *iravuttiriyam,* பெ.(n.) சிவகுருவம் (சிவதீட்சை); Šaiva initiation. *"விளங்கு மிரவுத்திரிய முற்றுவித்து" (பிரமோத், 22 : 69).*

[Skt. raudriya > த. இரவுத்திரியம்.]

இரவை *iravai,* பெ.(n.) 1. நுட்பமான பொருள்; small particle, little thing. 2. கோதுமைக் குறுநொய்; coarsely ground wheat - flour. 3. துமுக்கியிலிடும் ஈயச்சன்னம்; shot. 4. வயிரம்; diamond.

த.வ. குறுணை.

[Skt. lava > Te. rava > த. இரவை.]

இரவைசல்லா *iravai-šallā,* பெ.(n.) மெல்லிய துணி; transparent muslin.

த.வ. ஆவித்துணி.

[Skt. lava > T. rava + Skt. cēla > த. இரவைசல்லா.]

இராக்கதம்[1] *irākkadam,* பெ.(n.) 1. தலைமகளை வலிதிற்கொள்ளும் திருமணம் (தொல். பொ.92, உரை); a form of marriage in which the bride is carried away by force without her consent or the permission of her relatives, a form of characteristic of *Rāksasās,* one of *asta-vivāgam,* q.v. 2. இரவு 15 முழுத்தத்துள் ஆறாவது (விதான. குணா.73, உரை); the sixth of 15 divisions of the night.

த.வ. பொருந்தா ஒழுக்கம், பெருந்திணை.

[Skt. rāksasa > த. இராக்கதம்.]

இராக்கதம்[2] *irākkadam,* பெ.(n.) 1. பத்துத் தாலங் கொண்ட ஒரு நீட்டலளவை (சுக்கிரநீதி, 232); a lineal measure of ten *tālam.* 2. உருத்திர உலகங்களுள் ஒன்று (சி.போ.2, 3, பக்.214); a mythical world of the Rudras.

[Skt. rāksasa > த. இராக்கதம்.]

இராக்கதன் *irākkadan,* பெ.(n.) அரக்கன் (திவ்.பெரியாழ்.4, 4, 8); giant, demon or goblin.

[Skt.rāksasa > த.இராக்கதன்.]

இராக்கதி[1] *irākkadi,* பெ.(n.) அரக்கி (திவ். பெரியதி.10, 6, 9); giantess, female goblin.

[Skt.rāksasī > த. இராக்கதி.]

இராக்கதி[2] *irākkadi,* பெ.(n.) சன்னக் கச்சோலம் (நாநார்த்த.); a kind of long zedoary.

[Skt.rāksasī > த. இராக்கதி.]

இராகவம் *irāgavam,* பெ.(n.) திமிங்கிலத்தை விழுங்கவல்ல பெரிய மீன் (சுக்கிரநீதி, 146); a large fish capable of devouring *timingilam.*

இராகத்துக்கொன்றை *irāgattu-k-konrai*, பெ.(n.) கொன்றை வகை; a kind of cassia tree (சா.அக.).

[இராகம் + அத்து (சாரியை) + கொன்றை.]

*[**Skt.** rāga > த. இராகம்.]*

இராகப்புள் *irāga-p-pul*, பெ.(n.) கின்னரப் பறவை; a small migratory bird that sings at night (சா.அக.).

[இராகம் + புள்.]

*[**Skt.** raga > த. இராகம்.]*



இராகம் *irāgam*, பெ.(n.) 1. காமம்; passion. 2. சிவப்பு; redness. 3. நிறம்; colour tint. 4. இசை (பிங்.); music. 5. முப்பத்திரண்டு எண்ணிக்கையில் குறிப்பிட்ட பண் வகைகள்; (Mus.) specific melody-types of which those mentioned in standard works number 32, viz..., *மேகரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், கைசிகம், வராளி, மலகரி, பல்லதி, இந்தோளம், படமஞ்சரி, நாராயணி, நாட்டை, வசந்தம், பௌளி, ஸ்ரீராகம், பங்காளம், கூர்ச்சரி, கௌளி, காந்தாரி, காம்போதி, இலலிதை, தேவக்கிரியை, தேசுஷரி, மாளவி, சாவேரி, தேசி, சாரங்கம், தோடி, இராமக் கிரியை, வேளாவளி, பைரவி, குண்டக் கிரியை, தன்னியாசி (பரத.இராக. 56).*

*[த. அராகம் > **Skt.** rāga> த. இராகம்.]*

[அர்–ஒர் ஒலிக்குறிப்பு. அர் >அர >அரவு > அரவம் = ஒலி, ஓசை. அரவம்>அராவம்>அராகம் = ஒலிச் சிறப்புள்ள செய்யுளுறுப்பு அல்லது பண்.]

இராகமாலிகை *irāga-māligai*, பெ.(n.) இசைப் பாட்டு வகை; song whose several parts are adapted to be sung in different melody types.

த.வ. இசைப்பாட்டு.

*[**Skt.** rāga+mālikā>த. இராகமாலிகை.]*

இராகவன் *irāgavan*, பெ.(n.) இரகுவின் மரபில் வந்தவன், இராமன் (திவ்.பெருமாள். 8, 1); *Rāma*, a lineal descendant of *Raghu*.

*[**Skt.** rāghava>த. இராகவன்.]*

இராகவிராகம் *irāga-virāgam*, பெ.(n.) வேண்டுதல் வேண்டாமை; desire and aversion.

*[**Skt.** rāga+vi-rāga>த.இராகவிராகம்.]*

இராகவி *irāgavi*, பெ.(n.) பெரு நெருஞ்சில்; large thistle (சா.அக.).

*[**Skt.** ragavi> த.இராகவி.]*

இராகவிண்ணாடகம் *irāgavinnāḍagam*, பெ.(n.) 1. கொன்றை; a kind of cassia tree. 2. சரக்கொன்றை; Indian laburnam (சா.அக.).

இராகவேகம் *irāga-vēgam*, பெ.(n.) ஆசை மிகுகை (பு.வெ.12, பெண், 5, உரை); increasing of desire.

த.வ. வேணவா.

[இராகம் + வேகம்.]

*[**Skt.** rāga > த. இராகம்.]*

இராகாதனம் *irāgādanam*, பெ.(n.) ஒக இருக்கை வகை; a kind of yogic posture. *"இராகாதனமாவது பிடரியிலேறிட்டகால் முன்தொங்கக் கையிரண்டும் முன்னேயூன்றி யிருக்கை" (தத்துவப்.108, உரை).*

*[**Skt.** rāga+āsanā > த. இராகாதனம்.]*

இராகினி *irāgini*, பெ.(n.) வெற்றிலை (T.C.M. ii, 2, 429); betel leaf.

*[**Skt.** rākini > த. இராகினி.]*

இராகு *irāgu,* பெ.(n.) நிழற்கோள், ஒன்பது கோள்களுள் ஒன்று; *rāhu*, the ascending node of the moon regarded as one of the nine planets, and believed to have the form of a monstrous serpent or dragon which, with *kētu*, the descending node, is supposed to seize the sun and the moon and thus cause the eclipses, caput draconis.

த.வ. **நிழற்கோள், அரா.**

[Skt. rāhu > த. இராகு.]

இராகுவை அரா என்றும் கேதுவை அரவு என்றும் குறிப்பிடலாம்.

இராகுகாலம் *irāgu-kālam,* பெ.(n.) நிழற்கோளுக்கு உரிய வேளை; a shifting period of 1 1/2 hours on everyday of the week, considered to be inauspicious, being the time under the influence of *rāhu.*

த.வ. **நிழற்கோள் நேரம், அராக்காலம்.**

[இராகு + காலம்.]

[Skt. rāhu>த. இராகு.]

இராகுமண்டலம் *irāgu-maṇḍalam,*பெ.(n.) நிலவுருண்டையின் நிழல்; shadow of the earth. *"மருவுபூமியின் சாயலா மிராகு மண்டலம்" (கூர்மபு. மண்டலவளவை.10).*

[இராகு + மண்டலம்.]

[Skt. rāhu>த. இராகு.]

இராச்சியக்கலக்கம் *irācciya-k-kalakkam,* பெ.(n.) வன்கொடுமை (அராசகம்); cataclysm; anarchy (புதுவை வ).

[இராச்சிய(ம்) + கலக்கம்.]

[Skt. rajjiyam> த. இராச்சிய(ம்).]

[கலங்கு>கலக்கு>கலக்கம்.]

இராச்சியப்புரட்டு *irācciya-p-puraṭṭu,* பெ.(n.) **இராச்சியக்கலக்கம்** பார்க்க; see *irācciya-k-kalakkam* (புதுவை, வ).

[இராச்சியம் + புரட்டு.]

[Skt. rājjiya> த. இராச்சியம்.]

இராச்சியபரிபாலனம் *irācciya-paribālaṉam,* பெ.(n.) அரசாட்சி; administration of a kingdom or state.

[Skt. rājya+paribālaṉa > த. இராச்சிய பரிபாலனம்.]

இராச்சியபாரம் *irācciya-bāram,* பெ.(n.) அரசாளும் பொறுப்பு; burden or responsibilities of government.

த.வ. **ஆட்சிச்சுமை.**

[Skt. rājya+bhāra> த. இராச்சியபாரம்.]

இராச்சியம் *irācciyam,* பெ.(n.) 1. அரசு; kingdom, state, realm. 2. உலகு; world. 3. ஆளுகை; rule, reign. chr. *"இராச்சியமு மாங்கொழிய" (திவ்.பெரியாழ். 4, 8, 4).*

[Skt. rājya > த.இராச்சியம்.]

இராச்சியலட்சுமி *irācciya-latcumi,* பெ.(n.) அரசுச் செல்வம்; sovereign power, personified as a goddess.

[Skt.rājya+laksmi>த.இராச்சியலட்சுமி.]

இராச்சியவலங்கோலை *irācciya-v-alaṅgōlai,* பெ.(n.) ***இராச்சியக்கலக்கம்*** பார்க்க; see *irācciya-k-kalakkam(புதுவை.வ.).*

[இராச்சியம் + அலங்கோலை.]

[Skt.rājya >த.இராச்சியம்.]

அலங்கோலம் > த. அலங்கோலை.

இராசஇராசன் *irāša-rāšaṉ,* பெ.(n.) 1. சோழப்பேரரசன் இராசராசன்; king of kings, chola emperor, paramount sovereign, a title given as a compliment. 2. துரியோதனன்; Duryodhana. 3. குவையன் (குபேரன்); Kubera, the god of wealth. 4. சோழ மன்னரின் பெயர்; name of the *Chōla* kings.

த.வ. **கோவேந்தன், மன்னர்மன்னன்.**

அருண்மொழிவருமண் பார்க்க; see *Aruṇmoḻi varuman*

[Skt. rājan+rājan > த. இராசராசன்.]

*அரசன்>**Skt.** rāja> த. இராச(ன்)*

இராசக்கட்டி *irāša-k-katti,* பெ.(n.) பக்கப் பிளவை; carbuncle (சா.அக.).

த.வ. அரசப்பிளவை.

[இராசன் + கட்டி.]

இராசக்கிருகம் *irāša-k-kirugam,* பெ.(n.) அரண்மனை; royal palace.

[Skt. rājan+grha> த. இராசக்கிருகம்.]

இராசகம்பீரன் *irāša-kambīran,* பெ.(n.) வீரராசேந்திர சோழனுடைய பட்டப் பெயர்களுள் ஒன்று; a title of *Vīra- rājēndra-cōlā. "இராசகம்பீரனை வாழ்த்தினவே" (தக்கயாகப். 774).*

[Skt. rāja+gambhīra> த. இராசகம்பீரன்.]

இராசகரம்[1] *irāšakaram,* பெ.(n.) அரசு (S.I.I. V, 512); government.

[Skt. rāja-kara > த. இராசகரம்.]

இராசகரம்[2] *irāša-karam,* பெ.(n.) **இராசக் கிருகம்** பார்க்க; see *rāsa-k-kirugam.*

[Skt. rājan+graha > த. இராசகரம்.]

இராசகருவி *irāša-karuvi,* பெ.(n.) நெஞ்சகம் முதலிய உடலுறுப்புகள்; the vital or principal organs such as the heart etc. (சா.அக.).

[இராசன் + கருவி.]

[Skt. rājan>த. இராச(ன்).]

கரு > கருவி.

இராசகற்பனை *irāša-karpanai,* பெ.(n.) அரசன் கட்டளை; royal command, order of a king or other ruling power (w.).

[Skt.rājan+karpanā> த. இராசகற்பனை.]

இராசகன்னி *irāša-kanni,* பெ.(n.) இளவரசி; king's daughter, princess.

[இராசன் + கன்னி.]

[Skt. rājan>த. இராச(ன்).]

கன்>கன்னு > கன்னி.

இராசகனி *irāša-kani,* பெ.(n.) எலுமிச்சை; lime fruit (சா.அக.).

இராசகாரியம் *irāša-kāriyam,* பெ.(n.) 1. அரசியல்; king's duty, affairs of state. 2. அரசர்க்குச் செய்யும் ஊழியம்; service to the king. 3. உயர்ந்த செயல்; matters of great importance.

[Skt.rājan+kāriyam>த. இராசகாரியம்.]

இராசகீயம் *irāša-kīyam,* பெ.(n.) 1. அரசனுக் குரியது; matters pertaining to the king. 2. அரசியல்; politics.

[Skt. rājakiya > த. இராசகீயம்.]

இராசகீரி *irāša-kīri,* பெ.(n.) 1. வெள்ளைக் கீரிப்பிள்ளை; white mongoose. 2. கீரிப்பூடு; a kind of mongoose plant (சா.அக.).



இராசகுஞ்சரம் *irāša-kuñjaram,* பெ.(n.) 1. அரச யானை (அரசுவா); state elephant. 2. அரசர் தலைவன்; king of kings. *"ஏழுய ரிராசகுஞ்சரமேல்...... வந்தான்" (பாரத. இந்திரப்.6). "இராசகுஞ்சரம் பிறந்திடும்" (பாரத.சம்பவ.13).*

[இராசன் + குஞ்சரம்.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசகுமாரன் *irāša-kumāran,* பெ.(n.) இளவரசன்; king's son, prince.

[இராசன் + குமாரன்.]

[Skt. rājan > த. இராசன்.]

குமரன்>குமாரன்>Skt. kumāra.

இராசகுலம் *irāša-kulam,* பெ.(n.) அரச குலம்; races of kings of ancient India, royal family.

[இராசன் + குலம்.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசகுலவாழை *irāšakulavāḻai,* பெ.(n.) செவ்வாழை; royal banana (சா.அக.).

இராசகேசரி[1] *irāša-kēsari,* பெ.(n.) சோழ மன்னர்களில் சிலர் ஏற்று வந்த பட்டப் பெயர் (கலிங்.178); a title assumed by certain *cōla* kings.

[Skt. rājakēsari > த. இராசகேசரி.]

இராசகேசரி[2] *irāša-kēsari,* பெ.(n.) சோழர் காலத்து அளவுக் கருவி; measure of capacity which was in use in the time of the *cōla* king *Rājarāja* I.

[Skt. rājan+kēsari > த. இராசகேசரி.]

இராசகோபாலச்சக்கரச்சுழி *irāša-gōpāla-c-cakkara-c-cuḻi,* பெ.(n.) பொன் நாணய வகை; gold coin issued by *Vijaya Rāghava,* a king of Tanjore.

[இராசன் + கோபாலன் + சக்கரம் +சுழி.]

[Skt.rājan+gōpāla>த. இராசகோபாலன்.]

இராசகோலம் *irāša-kōlam,* பெ.(n.) அரசனின் கொலு உடை; court dress of a king, royal robes.

[இராசன் + கோலம்.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசகோழை *irāša-kōḻai,* பெ.(n.) காச நோய் வகை; tuberculosis, pulmonary consumption (w.) (சா.அக.).

[இராசன் + கோழை.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசசக்கரம் *irāša-šakkaram,* பெ.(n.) அரசாணை (தக்கயாகப். 2, உரை); kings command.

[இராசன் + சக்கரம்.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசசகுனம் *irāša-šagunam,* பெ.(n.) ஒருவகை வல்லூறு; king's vulture (சா.அக.).



இராசசபை *irāša-šabai,* பெ.(n.) அரசவை; kings assembly, durbar.

த.வ. திருவோலக்கம், நாளவை, நாளோலக்கம்.

[Skt. rāja > த. இராச.]

த.அவை→சபை>Skt. sabhā.

இராசசம் *irāša-šam,* பெ.(n.) **இரசோகுணம்** பார்க்க; see *irasō-kuṇam.*

இராசசம்பு *irāša-šambu,* பெ.(n.) 1. சம்பு நாவல் அல்லது பெருநாவல்; large rose apple. 2. வெண்ணாவல்; jaumoon of white variety (சா.அக.).

இராசசமுகம் *irāša-šamugam,* பெ.(n.) அரசனின் முன்னிலை; king's presence.

[Skt.rāja+sam-mukha>த.இராசசமுகம்.]

இராசசாரம் *irāša-šāram,* பெ.(n.) மயில்; peacock (சா.அக.).



இராசசிங்கம் *irāša-šiṅgam,* பெ.(n.) அரசரேறு; illustrious monarch, a lion among kings.

[Skt. rājan+simha > த. இராசசிங்கம்.]

இராசசின்னம் *irāša-šiṉṉam,* பெ.(n.) அரசர் சின்னம்; insignia of royalty.

[இராசன் + சின்னம்.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசசூயம்[1] *irāša-šūyam,* பெ.(n.) 1. வெற்றி வேந்தனால் செய்யப்படும் ஒரு வேள்வி; sacrifice performed by a victorious monarch attended by his vanquished tributary princes. *"தரணிபனிராசசூய மாமகமுற்றி" (பாரத. சூது.2).* 2. தாமரை (மலை.); lotus.

[Skt. rāja+šūya > த. இராசசூயம்.]

இராசசூயம்[2] *irāša-šūyam,* பெ.(n.) 1. தாமரை; lotus. 2. மலை; mountain (சா.அக.).

இராசசேகரன் *irāša-šēkaraṉ,* பெ.(n.) அரசர் தலைவன்; chief of kings, paramount king.

[Skt.rājan+šēkhara > த. இராசசேகரன்.]

இராசசேவை *irāša-šēvai,* பெ.(n.) 1. அரசர்க்குச் செய்யும் பணி; royal service. 2. அரசனுக்கு மதிப்பளிக்கை; paying one's respects to a sovereign.

[Skt. rājan+šēvā > த. இராசசேவை.]

இராசத்துரோகம் *irāša-t-turōgam,* பெ.(n.) அரசுக்குச் செய்யும் இரண்டகம் (துரோகம்); treason, disloyalty.

[Skt.rājan+dhurōga>த. இராசத்துரோகம்.]

இராசத்துவம் *irāšattuvam,* பெ.(n.)அரசன் தன்மை; royalty, regal power or qualities, royal prerogative, kingship.

[Skt. rājatva > த. இராசத்துவம்.]

இராசத்துவாரம் *irāša-t-tuvāram,* பெ.(n.) 1. அரண்மனை வாசல்; palace gate. 2. அரசவை; royal court, durbar. *"இராசத்துவாரத்துக்கோர் மந்திரியாய்" (தனிப்பா.).*

[Skt.rājan+tuvara>த. இராசத்துவாரம்.]

இராசத்தேள் *irāšattēḷ,* பெ.(n.) நால்வகைத் தேள்களிலொன்றாகிய சிவப்புத் தேள்; one of the 4 kinds of scorpions; it is red in colour and is known as 'king scorpian' (சா.அக.).

[இராசன் + தேள்.]

[Skt. rāja > த. இராசன்.]

இராசதண்டம் *irāša-taṇḍam,* பெ.(n.) அரசத் தண்டனை; punishment inflicted by the king, state penalty. *"இராச தண்டத்துக்குட்பட்டு" (S.I.I.i. 84).*

[இராசன் + தண்டம்.]

[Skt. rājan > த. இராசன்.]

தண்டுதல்>தண்டம்.

இராசதந்தம் *irāša-tandam,* பெ.(n.) 1. முன் வாய்ப்பல்; royal tooth, applied to the two central canine teeth. 2. முன்வாய் மேற்பல்; the two upper canine teeth called the eye-teeth (சா.அக.).

[Skt. rājan+danta > த. இராசதந்தம்.]

இராசதந்திரம் *irāša-tandiram,* பெ.(n.) 1. அரசியல் உத்தி; state-craft, politics. 2. அரசியல் நூல்; science of government.

[Skt.rājan+tandira>த. இராசதந்திரம்.]

இராசதபுராணம் *irāšada-purāṇam,* பெ.(n.) நான்முகனைப் போற்றும் தொன்மங்களின் தொகுதி; group of the chief *Purāṇas* exalting Brahma in whom the predominating *guṇa* is rajas.

[Skt.rājasa+purāṇa>த. இராசதபுராணம்.]

இராசத புராணத்துள் உள்ள புராணங்கள்:– பிரமம், பிரமாண்டம், பிரமவைவர்த்தம், மார்க்கண்டேயம், பவிடியம், வாமனம்.

இராசதம் *irāšatam,* பெ.(n.) அரச பதவி; kingly state. *"ஏடே விராசதத்தினைப் பணித்ததும்" (திருப்பு.1132).*

[Skt. rājatsa > த. இராசதம்.]

இராசதரு *irāšataru,* பெ.(n.) குறாமரம்; bottle - flower (சா.அக.).

[Skt. rājan+taru>த. இராசதரு.]

இராசதருமம் *irāša-tarumam,* பெ.(n.) அரசன் அறநெறி; king's duties; rules or laws relating to a king's duties in respect of his government, etc.

த.வ. அரசநெறி.

[Skt. rājan+dharma>த. இராசதருமம்.]

இராசதாலம் *irāša-tālam,* பெ.(n.) கமுகு; areca-palm (சா.அக.).

த.வ. இராசதாலி.

இராசதானம் *irāša-tāṉam,* பெ.(n.) தலைநகர்; capital city.

[Skt. rāja+sthāna > த. இராசதானம்.]

இராசதானி *irāša-dāṉi,* பெ.(n.) 1. தலைநகரம்; metropolis, capital, seat of government. *"ஏகசக்ர மாப்புரக்கு மிராசதானி" (பணவிடு. 69).* 2. மாநிலம்; province. *சென்னை யிராசதானி (தற்.).*

[Skt. rājan+dhāni > த. இராசதானி.]

இராசதானிப்பாலை *irāšatāṉi-p-pālai,* பெ.(n.) கணுப்பாலை; Indian mimusops (சா.அக.).

இராசதிருட்டி *irāša-tiruṭṭi,* பெ.(n.) அரசன் கண்ணேறு; evil eye of a king or a person in power.

[Skt. rājan+drṣṭi > த. இராசதிருட்டி.]

இராசநாகம் *irāša-nāgam,* பெ.(n.) அரச நாகம், நாகப் பாம்பு வகை; cobra of the *kṣatrya* class, being large or superior of its kind (சா.அக.).

த.வ. அரசநாகம்.

[இராசன் + நாகம்.]

[Skt. rājan+nāga > த. இராசநாகம்.]

[நகர்(தல்) > நாகம் > Skt. nāga.]



இராசநோக்கம் *irāša-nōkkam,* பெ.(n.) 1. அரசனின் அருட் பார்வை; royal favour or clemency, graciousness. 2. அரசனின் எண்ணம், மனப்போக்கு; king's bent of mind, king's pleasure, disposition.

[இராசன் + நோக்கம்.]

[Skt.rājan>த. இராசன்.]

இராசநோக்காடு *irāša-nōkkāḍu,* பெ.(n.) இறுதியான மகப்பேற்றுத் துன்பம், பேற்று வலி; the final pains of child-birth, the most excruciating (சா.அக.).

[இராசன் + நோக்காடு.]

[Skt.rājan>த. இராசன்.]

இராசப்பிரதிட்டையுள்ளோன் *irāšappiratiṭṭai yuḷḷōṉ,* பெ.(n.) ஆமை; turtle (சா.அக.).

இராசப்புறா *irāša-p-puṟā,* பெ.(n.) ஒரு வகை உயர்தரமான புறா; imperial pigeon (சா.அக.).

இராசபக்தி *irāša-pakti,* பெ.(n.)அரசப்பற்று; loyalty to the king.

[Skt. rājan+bhakthi > த. இராசபக்தி.]

இராசபஞ்சகம் *irāša-pañjagam,* பெ.(n.) தீக்குறிகாட்டும் பஞ்சக வகை (Astrol.); an inauspicious period of time, considered

as portending harm from king or other public authority in respect of any function commenced during such period, one of *pañcagam*.

[Skt. rājan+pañcaka > த. இராசபஞ்சகம்.]

இராசபத்திரம் *irāša-pattiram,* பெ.(n.) அரசனுடைய ஆணை; royal edict.

[Skt. rāja+patra>த. இராசபத்திரம்.]

இராசபத்தினி *irāša-pattiṉi,* பெ.(n.) அரசி; king's consort, queen.

[Skt. rājan+pattiṉi > த. இராசபத்தினி.]

இராசபதவி *irāša-padavi,* பெ.(n.) அரச நிலை; rank of a king, kingship.

[இராசன் + பதவி.]

[Skt. rājan>த இராச.]

இராசபரினி *irāša-bariṉi,* பெ.(n.) பாலை; silvery-leaved ape flower (சா.அக.).

இராசபலா *irāša-palā,* பெ.(n.) 1. முதியோர் கூந்தல் என்னும் மூலிகை; king's tonic. 2. காய்ச்சலைக் குறைக்கும் சீனமூலிகை; stinking opal berry (சா.அக.).

[இராசன் + பலா.]

[Skt. rājan > த. இராச.]

இராசபாட்டை *irāša-pāṭṭai,* பெ.(n.) போக்குவரத்துக்கு உரிய பெருவழி; king's highway, public road.

[இராசன் + பாட்டை.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசபாதை *irasapātai,* பெ.(n.) பொதுச் சாலை; kings highway, public road.

[இராசன் + பாதை.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசபாவம் *irāša-bāvam,* பெ.(n.) அரசத் தன்மை (சிலப்.27, 53, அரும்.); kingliness.

[Skt. rājan+bhāva > த. இராசபாவம்.]

இராசபிரதிநிதி *irāša-piradinidi,* பெ.(n.) அரசப்படிநிகராளி; viceroy, the king's representative.

[Skt. rājan+piradhinidhi>த. இராசபிரதிநிதி.]

இராசபிளவை *irāša-piḷavai,* பெ.(n.) பெரிய நச்சுப்புண்; carbuncle, being a large boil; anthrax.

[இராசன் + பிளவை.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசபுட்பி *irāšapuṭpi,* பெ.(n.) ஒரு வகை வெள்ளரி; a kind of cucumber (சா.அக.).

த.வ. கக்கரி.

இராசபுடல் *irāsapuḍal,* பெ.(n.) ஒரு வகைப் புடல்; a kind of gourd with round seeds (சா.அக.).

[இராசன் + புடல்.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசபுண் *irāsapuṉ,* பெ.(n.) **இராசபிளவை** பார்க்க; see *irāšapiḷavai.*

இராசபுத்தி *irāsaputti,* பெ.(n.) சிறப்பான அறிவு; special wisdom, peculiar knowledge (வின்.).

[இராச+புத்தி.]

[Skt. raja> த. இராச.]

இராசபுத்திரன் *irāša-puttiraṉ,* பெ.(n.) இளவரசன்; king's son, prince.

[இராச+புத்திரன்.]

[Skt. rājan> த. இராச.]

இராசபுத்திரி[1] *irāsaputtiri,* பெ.(n.) இளவரசி; king's daughter, queen.

[இராச+புத்திரி.]

[Skt. rājan> த. இராச.]

இராசபுத்திரி[2] *irāsaputtiri,* பெ.(n.) 1. சிறு சண்பகம்; canbaga flower tree. 2. பேய்ச்சுரை; a bitter variety of gourd, bitter gourd (சா.அக.).

இராசபுள் *irāsapuḷ,* பெ.(n.) 1. எட்டுக்காற் பூச்சி; an insect with eight legs. 2. கருடன்; the king of birds.

[இராசன் + புள்.]

[Skt. rājan > த. இராச.]

இராசபோகம்[1] *irāša-bōgam,* பெ.(n.) அரசனுக்குரிய நுகர்ச்சியின்பம்; little enjoyment fit for a king, princely happiness.

த.வ. அரச நுகர்வு.

[Skt. rājan+bhōga > த. இராசபோகம்.]

இராசபோகம்[2] *irāša-bōgam,* பெ.(n.) அரசர்க்குரிய பாதுகாவல் வரி; (T.A.S. iv. 8); taxes levied for protecting property.

[Skt. rajan+bogam > த. இராசபோகம்.]

இராசமகிசி *irāša-magiši,* பெ.(n.) அரசி; queen.

[Skt. rājan+mahiṣi > த. இராசமகிசி.]

இராசமடைப்பள்ளி *irāša-maḍai-p-paḷḷi,* பெ.(n.) அரசர்க்குச் சமையல் செய்தோர் வழிவந்த ஒரு வகுப்பார்; sub-caste of *maṭai-p-paḷḷi* who derive their name from their ancestors having been cooks in royal households (J.).

[இராசன் + மடைப்பள்ளி.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசமண்டலம் *irāša-manḍalam,* பெ.(n.) அரசர்கள் அவை; assembly of kings. *"எங்கணு நெருங்கி வைகும் இராச மண்டலங்களோடும்" (பாரத. திரௌப.18).*

[இராசன் + மண்டலம்.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசமண்டூரம் *irāša-manḍūram,* பெ.(n.) முதன்மைத் தவளை; the chief of frogs (சா.அக.).

இராசமணி *irāšamaṇi,* பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[இராசன் + மணி.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசமாடம் *irāša-māḍam,* பெ.(n.) பெரும் பயறு; a big variety of grain (சா.அக.).

இராசமாநாகம் *irāša-mā-nāgam,* பெ.(n.) கருவழலை; nocturnal ground-snake of the black variety, cobra of the *kṣatrya* class. *"இராசமாநாக மென்பார்" (சீவக. 1276).*

[இராசன் + மாநாகம்.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசமாபுரம் *irāša-mā-puram,* பெ.(n.) சீவகனின் தலைநகரம் (சீவக. 78, உரை); name of the capital city of king *Cīvagan.*

[இராச(ன்)+மா+புரம்.]

[Skt.rājan >த. இராச.]

இராசமாமந்தம் *irāša-mā-mandam,* பெ.(n.) ஒரு வகைப் பாம்பு (சீவக.1276, உரை); a kind of snake.

[Skt.rājan+mā-mandam>த. இராசமா மந்தம்.]

இராசமார்க்கம் *irāša-mārkkam,* பெ.(n.) **இராசபாட்டை** பார்க்க; see *irāša-pāṭṭai.*

[Skt.rājan+mārga > த. இராசமார்க்கம்.]

இராசமானியம் *irāša-māṉiyam,* பெ.(n.) அரசரால் விடப்பட்ட இறையிலி நிலம்; royal gift of land, rent free.

[Skt.rājan+manya > த. இராசமானியம்.]

இராசமுடி *irāša-muḍi,* பெ.(n.) 1. அரசமுடி, மகுடம்; royal crown. 2. சாயக் கொண்டை; artistic coiffare inclined to oneside, occasionally used as an adornment for the head of the images of deities in *Vaisṇava* as well as *Šaiva* temples.

[இராசன் + முடி.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசமுத்திரை *irāša-muttirai,* பெ.(n.) அரசச் சின்னம் (இலச்சினை); royal signet, government seal.



[இராசன் + முத்திரை.]

[Skt. rājan > த. இராசன்.]

முகம் + திரை – முத்திரை.

இராசமோடி *irāša-mōḍi,* பெ.(n.) அரச வீறு, மிடுக்கு; royal grandeur.

[Skt. rajan+mōḍi > த. இராசமோடி.]

இராசயோகம் *irāša-yōgam,* பெ.(n.) 1. ஒகச் சிறப்பு; configuration of planets at the birth of any man, indicating that he is destined to rise to a position of power and influence. 2. அரசரின் இன்ப நுகர்ச்சி; enjoyment of the luxury of kingship. 3. ஒக வேறுபாடு; easy way in *yōga,* as fit for princes to practise.

[Skt. rājan+yōga > த. இராசயோகம்.]

இராசர்கவசரோப்பியம் *irāšarkavaša rōppiyam,* பெ.(n.) வெள்ளெருக்கு; white madar.

இராசராசதேவன் *irāša-rāša-dēvan,* பெ.(n.) சோழ மன்னர் மூவரின் பெயர்; name of three *Chōla* kings in the 11th, 12th and 13th century respectively.

[இராசராச+தேவன்.]

[Skt. rājan+rājan > த. இராச ராசனே.]

இராசராசேச்சுரம் *irāša-rāšēccuram,* பெ.(n.) தஞ்சைப் பெரியகோயில்; name of the great *Šivan* temple in Tanjavūr, built by *Rājarājan* I. "தஞ்சையிராச ராசேச்சுரத்து" (திருவிசை. கருவூர். தஞ்சை.1).



[Skt. rājan+rājēswaram> த. இராச ராசேச்சுரம்.]

இராசராசேச்சுவரி *irāša-rāšēccuvari,* பெ.(n.) காளியின் பெயர்; a form of Durgai.

[Skt. rājan+rājēswari> த. இராச ராசேச்சுவரி.]

இராசராசபலம் *irāšarāšapalam,* பெ.(n.) வலம்புரிக்கொடி; twisted horn (சா.அக.).

இராசராசேகரரசம் *irāša-rāšēgararašam,* பெ.(n.) ஒரு வகை உயர்தரமான ஆயுர்வேத மருந்து; an excellent preparation in *ayurveda.*

இராசரிகம் *irāšarigam,* பெ.(n.) அரசாட்சி; government, rule, administration.

[Skt. rājarigam > த. இராசரிகம்.]

இராசரிசி *irāša-risi,* பெ.(n.) அரசகுல முனிவன்; royal sage, a *kṣatriya* of the ruling caste who was turned a sage.

த.வ. அரசமுனி.

[Skt. rājan+ṛṣi > த. இராசரிசி.]

இராசலட்சணம் *irāša-laṭcaṇam,* பெ.(n.) 1. அரசர்க்குரிய உடற்குறி; mark on a man's body indicating kingship. 2. அரசக்குறியீடு; royal insignia.

[Skt.rājan+lakṣaṇa> த. இராசலட்சணம்.]

இராசரோகம் *irāšarōgam,* பெ.(n.) எலும்புருக்கி நோய்; the king of disease; consumption (சா.அக.).

[Skt.rājan+rōga> த. இராசரோகம்.]

இராசலம் *irāsalam,* பெ.(n.) தாமரைப்பூ; lotus flower (சா.அக.).

இராசவட்டம் *irāša-vaṭṭam,* பெ.(n.) 1. அரசச் செய்திகள்; public matters, politics. 2. அரச மேன்மை; royal dignity. நாளை வலிய வருவா ரவருக்கிராச வட்டமென்னடி" (மதுரகவி.).

[இராசன் + வட்டம்.]

[Skt. rājan > த. இராசன்.]

வள்>வட்டு>வட்டம்.

இராசவத்தனம் *irāšavattaṉam,* பெ.(n.) மணி (வைடூரிய) வகை (யாழ்.அக.); a kind of precious stone.

[Skt. rāja+vattana > த. இராசவத்தனம்.]

இராசவமிசம் *irāša-vamišam,* பெ.(n.) அரச குலம்; royal family, dynasty.

[Skt. rājan+vamša > த. இராசவமிசம்.]

இராசவர்க்கம்[1] *irāša-varkkam,* பெ.(n.) 1. அரச குலம்; king's ancestry, lineage. 2. அரச குலத்தார்; king relatives.

[Skt. rājan+varga > த. இராசவருக்கம்.]

இராசவர்க்கம்[2] *irāšavarkkam,* பெ.(n.) வெண்மையும் கருப்புங் கலந்த நிறம்; a mixed colour of white and black (சா.அக.).

இராசவர்ணம் *irāša-varṇam,* பெ.(n.) பேய்ப்புடல்; a wild snake-gourd or devils gourd (சா.அக.).

[Skt. rājan+varṇa>த. இராசவர்ணம்.]

இராசவர்த்திக்கல் *irāsavarttikkal,* பெ.(n.) நடுவில் பொன்னிறமான புள்ளிகளை உடைய வயிரத்தைப் போன்ற கல்; one of the two inferior varietes of diamond with yellow speck, which is used as a substitude for pure diamonds (சா.அக.).

இராசவரிசை *irāša-varišai,* பெ.(n.) அரசர்க்கு செய்யும் சிறப்பு; royal honours.

த.வ. கோமுறை.

[இராசன் + வரிசை.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசவல்லபன் *irāša-vallabaṉ,* பெ.(n.) அரசனிடத்துச் சாய்காலுள்ளவன்; one who has influence with the king.

[Skt.rājan+vallabha >த. இராசவல்லபன்.]

இராசவல்லபை *irāša-vallabai,* பெ.(n.) இலந்தைப் பழம்; jujube fruit (சா.அக.).

இராசவல்லி *irāšavalli,* பெ.(n.) ஒரு வகைக் கசப்புக் கொடிப் பாகல்; a creeper of bitter gourd (சா.அக.).

இராசவள்ளிக்கிழங்கு *irāšavaḷḷi-k-kiḻaṅgu,* பெ.(n.) ஒரு பருத்த சிவப்பு வள்ளிக் கிழங்கு; a large red species of yam (சா.அக.).

[இராசன் + வள்ளி + கிழங்கு.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசவாகனம்[1] *irāša-vāgaṉam,* பெ.(n.) 1. அரசனின் ஊர்தி; royal conveyance or vehicle. 2. சிவிகை; palanquin.

த.வ. கோவூர்தி.

[Skt.rājan+vāhana>த. இராசவாகனம்.]

இராசவாகனம்[2] *irāšavāgaṉam,* பெ.(n.) கோவேறு கழுதை; the off-spring of a horse and an ass - mule (சா.அக.).

இராசவாதங்கி *irāšavātaṅki,* பெ.(n.) கற்றாழை; aloe, *alce vera* (சா.அக.).

இராசவாய்க்கால் *irāša-vāykkāl,* பெ.(n.) தலைமையான நீர்க்கால்; main irrigation channel.

த.வ. தலைவாய்க்கால்.

[இராசன் + வாய்க்கால்.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசவாழை[1] *irāsa-vālai,* பெ.(n.) குலை யொன்றுக்கு 1000 காய்கள் காய்க்கும் வாழை வகை; a kind of plantain that yields 1000 fruits to a bunch.

த.வ. பெருங்குலைவாழை.

[இராசன் + வாழை.]

***[Skt.** rājan > த. இராசன்.]*

இராசவாழை[2] *irāšavālai,* பெ.(n.) செவ்வாழை; royal banana (சா.அக.).

[இராசன் + வாழை.]

***[Skt.** rājan > த. இராசன்.]*

இராசவிகுரதம் *irāšaviguradam,* பெ.(n.) கொன்றை; common cassia (சா.அக.).

இராசவிசுவாசம் *irāša-višuvāšam,*பெ.(n.) அரச நன்றியுடைமை; loyalty.

***[Skt.**rajan+višvāsa>த. இராசவிசவாசம்.]*

இராசவிரணம் *irāša-viranam,* பெ.(n.) நடுமுதுகின் முள்ளந் தண்டின் மேற்பகுதியில், தாமரைக் காயைப் போல் வீங்கி, புரையோடி வலி மிகுதியுண்டாக்கும் கொப்புளம்; a painful dark-coloured tumour of the cellular tissue, ending in mortification of the part and the discharge of a fetid bloody pus (சா.அக.).

த.வ. தண்டுப்பிளவை.

***[Skt.** rājan+vrana>த. இராசவிரணம்.]*

இராசவிபாடன் *irāsa-vibādan,* பெ.(n.) விசய நகரத்தரசர் பட்டங்களுள் ஒன்று (S.I.I.iv, 96); a title of the Vijayanagar kings.

***[Skt.** rājan+vi-pāṭa > த. இராசவிபாடன்.]*

இராசவிருட்சம் *irāša-virutcam,* பெ.(n.) கொன்றை (மலை.); cassia (சா.அக.).

***[Skt.** rājan+vrkṣa>த. இராசவிருட்சம்.]*



இராசவீதி *irāša-vidi,* பெ.(n.) அரசர் உலா வருதற்குரிய சாலை; king's high road; broad street of a capital city fit for royal processions.

த.வ. திருவுலாச்சாலை.

***[Skt.** rājan+vīthi > த. இராசவீதி.]*

இராசவுறுப்பு *irāšavuruppu,* பெ.(n.) நெஞ்சாங்குலை முதலிய ஆற்றல் வாய்ந்த முதன்மை உறுப்புக்கள்; the vital or principal organs such as the heart etc. (சா.அக.).

[இராசன் + உறுப்பு.]

***[Skt.** rājan > த. இராசன்.]*

உறு > உறுப்பு.

இராசவைத்தியம் *irāša-vaittiyam,* பெ.(n.) பத்தியமில்லாத மருத்துவம்; medical treatment which does not entail any loss of the usual personal comforts of a patient, a method of treatments appreciated by princes (சா.அக.).

த.வ. வேந்து மருத்துவம்.

***[Skt.**rājan+vaidya>த.இராசவைத்தியம்.]*

இராசன்[1] *irāšan,* பெ.(n.) 1. அரசன்; king. 2. மதி; moon. *"இராகு திசையில் வாழ்ந்தவனில்லை, இராச திசையில் கெட்டவனில்லை".* 3. தலைவன்; the greatest or the most superior.

த.வ. அரசன்.

***[Skt.** rājan > த. இராசன்.]*

இராசன்² *irāšaṉ,* பெ.(n.) 1. வேந்தன் (இந்திரன்); Indra. 2. இயக்கன் (நாநார்த்த.); Yakṣa.

[Skt. rājan > த. இராசன்.]

இராசனை *irāšaṉai,* பெ.(n.) வெள்ளைப் பூண்டு (தைலவ. தைல. 45); garlic (சா.அக.).

[Skt. rāsana > த. இராசனை.]

இராசா *irāšā,* பெ.(n.) 1. அரசன்; king. 2. தெலுங்கர் வகுப்பினர்; name of a Telugu caste who, being *kṣatriyas,* style themselves *Rādzu.*

[Skt. rāja > த. இராசா.]

இராசாக்கினை *irāšākkiṉai,* பெ.(n.) 1. அரசன் கட்டளை; king's edict, royal decree. 2. அரச தண்டனை; penalty of law.

த.வ. அரசகட்டளை.

[Skt. rājan+ājñā > த. இராசாக்கினை.]

இராசாகரங்காணிக்கை *irāšākaraṅ-kāṇikkai,* பெ.(n.) வரிவகை; a tax.

[இராசா + கரம் + காணிக்கை.]

[Skt. rājakaram > த. இராசாகரம்.]

இராசாகி *irāšāgi,* பெ.(n.) இருதலைப் பாம்பு; a snake with head on either ends (சா.அக.).



இராசாங்கநாடி *irāšāṅga-nāḍi,* பெ.(n.) சூத முனி செய்த ஒரு தமிழ் நாடி நூல்; an easy guide on pulsation compiled by *Sootha muṉi* in Tamil (சா.அக.).

[இராசாங்கம் + நாடி.]

[Skt. rājan-aṅga > த. இராசாங்கன்.]

இராசாங்கம் *irāšāṅgam,* பெ.(n.) 1. படை, கூழ், குடி, அமைச்சு, நட்பு, அரண் (குறள், 381) என்னும் அரசின் ஆறு உறுப்புகள். அரசுக்குரிய உறுப்புகள்; requisites of legal administration, six in number. 2. அரசாட்சி; rule, government.

[Skt. rājan+aṅga > த. இராசாங்கம்.]

இராசாத்தி *irāšātti,* பெ.(n.) அரசி; queen.

[Skt. rājathi > த. இராசாத்தி.]

இராசாததம் *irāšādadam,* பெ.(n.) 1. முரளஞ் செடி; a plant (unidentified). 2. பழமுண்ணிப் பாலை; also a plant (unidentified) (சா.அக.).

இராசாதனம் *irāšādaṉam,* பெ.(n.) 1. முருக்க மரம்; palas tree. 2. முரள் என்னும் ஓடுடைய மீன்; a shell fish. 3. அரியணை; throne, royal seat. 4. கிங்கிணிப் பாலை என்னும் மூலிகை மரம்; a kind of tree.

[Skt. rajadana > த.இராசாதனம்.]

இராசாதிகாரம் *irāšādigāram,* பெ.(n.) அரசனுக்குரிய அதிகாரம்; royal power or authority.

[இராசன்+அதிகாரம்.]

[Skt.rājan>த. இராசன்.]

இராசாதிராசன் *irāšādi-rāšaṉ,* பெ.(n.) அரசர்க்கரசன்; king of kings, emperor.

த.வ. கோவேந்தன், மன்னர்மன்னன்.

[Skt.rajan+adhi-rāja> த. இராசாதிராசன்.]

இராசாமந்திரி *irāšā-mandiri,* பெ.(n.) ஒரு விளையாட்டு (G.tn.D 105); boy's game consisting in the mock trial of a thief by the king.

[Skt. rājan+mantrin > த. இராசாமந்திரி.]

இராசாவர்த்தம் *irāšāvarttam,* பெ.(n.) நடுவில் பொன்னிறமான புள்ளிகளை உடைய வயிரத்தைப் போன்ற கல்; one of the two inferier varieties of diamonds with yellow specks, which is used as a substitute for pure diamonds (சா.அக.).

இராசாவேறுங்கழுதை *irāšā-v-ēruṅ kaḻudai,* பெ.(n.) கோவேறு கழுதை; mule.

இராசாளி[1] *irāšāḷi,* பெ.(n.) 1. வல்லூறு; royal falcon, prized for hawking, the varieties being red, white, blue and black. 2. பறவை வகை; crestless hawk-eagle, dark above and white beneath. 3. வைரி; pergrine falcon. 4. கள்ளச் சாதியாருள் ஒரு பட்டப் பெயர்; a title among *Kallars* in the *Tanjāvūr* District.

[ஒருகா. இராசன் + ஆளி.]

[Skt. rājan > த. இராசன்.]

இராசாளி[2] *irāšāḷi,* பெ.(n.) வெண் புள்ளிகளை உடைய சிகப்புப் பருந்தினம்; royal alcon, with reddish, body and white spots about the head and the back of the neck (சா.அக.).



இராசான்னம்[1] *irāšāṉṉam,* பெ.(n.) மூக்குங் காலும் சிவந்து, உடம்பு வெண்மையாயுமுள்ள ஓர் உயர்வகை எகினப் பறவை; a superior breed of swan with red beak and legs and white body (சா.அக.).

இராசான்னம்[2] *irāšāṉṉam,* பெ.(n.) ஒரு உயர்ந்த வகை நெல் (பெரும்பாண்.305, உரை); a superior kind of paddy.

[Skt. rājan+aṉṉa > த. இராசான்னம்.]

இராசி[1] *irāši,* பெ.(n.) 1. வான் கணியத்தில் உள்ள 12 விண்மீன் கூட்டங்கள்; in astrology the sign of the zodiac, 12 in number. 2. கைவரி; magnetic power of healing naturally possessed by one (சா.அக.).

இராசி[2] *irāši,* பெ.(n.) வரிசை; row, line, range.

[Skt. rāji > த. இராசி.]

இராசி[3] *irāši,* பெ.(n.) 1. கூட்டம்; collection, flock, assemblage (w.). 2. குவியல்; heap (பிங்.). 3. மொத்தம்; total out-turn, aggregate (arith.). 4. பன்னிரு ஓரைகள்; signs of the zodiac, 12 in number (சூடா.). 5. ஆகூழ்; luck. 6. இனம்; kind; sort, as of grains. 7. இயல்பு; disposition. 8. பொருத்தம்; agreement, harmony.

த.வ. ஓரை.

[Skt. rāši > த. இராசி.]

இராசி[4] *irāši,* பெ.(n.) உடன்பாடு; amicable settlement between litigants; reconciliation.

[U. rāzi > த. இராசி.]

இராசிக்கணக்கு *irāši-k-kaṇakku,* பெ.(n.) கூட்டு வணிகத்தில் தனித்தனிக் கூட்டாளிக்கு ஊதியம் இழப்புக் கணக்கிடும் முறைகளுள் ஒன்று; a special method of calculating the share of profits or losses of each individual in a joint partnership account.

த.வ. கூட்டாண்மைக் கணக்கு.

[இராசி + கணக்கு.]

[Skt. rāši > த. இராசி.]

[கள் > கண் > கணக்கு.]

இராசிக்காரன் *irāši-k-kāraṉ,* பெ.(n.) ஆகூழ்க்காரன்; fortunate person; lucky fellow.

[இராசி + காரன்.]

[Skt. rāši > த. இராசி.]

இராசிகம் *irāšigam,* பெ.(n.) 1. நரம்பு வரி; the line of the nerves. 2. கரும்பு; sugarcane. 3. கேழ்வரகு; raggy (சா.அக.).

இராசிகர்ச்சு *irāši-karccu,* பெ.(n.) புன்செய் அறுவடை உரிமை (G.Sm.D.ii, 49); perquistie in a dry-crop harvest.

[Skt. rāši+karccu > த. இராசிகர்ச்சு.]

இராசிகாரோகம் *irāšikārōham,* பெ.(n.) வேனிற் காலத்தில் வெயிலின் புழுக்கத்தினால் வியர்வை மிகுதியாகக் காணுவதாலுண்டாகும் வியர்க்குரு; an acute inflammation of the sweat-glands, characterised by the formation of patches of small red papules and vesicles with intense itching and burning sensation (சா.அக.).

[இராசி + காரோகம்.]

இராசிகுணாகாரம் *irāši-kuṇākāram,* பெ.(n.) கணியக்கணக்கு வகை (சோதிட. சிந்.228); (Astrol.) a mode of calculation.

இராசிகை *irāšigai,* பெ.(n.) 1. வயல்; field, land. 2. கைவரி (இரேகை); line, as in palm. 3. ஒழுங்கு; orderliness, order. 4. கேழ்வரகு; ragi.

[Skt. rajikā > த. இராசிகை.]

இராசிசக்கரம் *irāši-cakkaram,* பெ.(n.) 1. ஓரை மண்டலம்; zodiac. 2. ஓரைகளை எழுதியடைத்த சக்கரம்; diagram showing planetary houses in the fixed siderial zodiac.

[இராசி + சக்கரம்.]

[Skt. rāši > த. இராசி.]

[சருக்கு > சருக்கரம் > சக்கரம்.]

இராசிதகம் *irāšitakam,* பெ.(n.) கலுவம், மருந்தரைக்குங் கல்; an oval shaped shallow vessel made of hard granite stone in which drugs are beaten, crushed, pulveresed or ground with a pestle-stone- mortar (சா.அக.).



இராசிதம் *irāšitam,* பெ.(n.) செஞ்சந்தனம்; red sandel (சா.அக.).

இராசிநாதன் *irāši-nādaṉ,* பெ.(n.) ஓரைக்கு அதிகாரியான கோள்மீன்; regent of a sign in the Zodiac.

[Skt. rāši+nātha > த. இராசிநாதன்.]

இராசிநாமா *irāši-nāmā,* பெ.(n.) 1. உடன்படிக்கை ஆவணம்; written deed of compromise, where by the parties to a case agree to adjust their differences, on certain terms. 2. வேலை விலகல் கடிதம்; letter of resignation of an office.

[U. rāzi+u-nāmā > த. இராசிநாமா.]

இராசிப்பணம் *irāši-p-paṇam,* பெ.(n.) தனித்தனியாக எண்ணாமல் மொத்தமாக எண்ணும் பணம்; coin reckoned in quantity, by weight, the pieces not being separately counted.

த.வ. எடைப்பணம்.

[இராசி + பணம்.]

[Skt. rāši>த. இராசி.]

இராசிப்பிரிவு *irāśi-p-pirivu,* பெ.(n.) கோள் (கிரகம்) ஓரையைக் (இராசியைக்) கடக்கை; passage of planet from one sign to another in the zodiac (w.)

[இராசி + பிரிவு.]

***[Skt.** rāśi>த. இராசி.]*

இராசிப்பொருத்தம் *irāśi-p-poruttam,* பெ.(n.) திருமணப் பொருத்தங்களுள் ஒன்று (சோதிட.சிந்.196); correspondence between the horoscopes of the prospective bride and the groom in respect of the zodiacal signs, one of ten *kaliyāṇa-p-poruttam.*

[இராசி + பொருத்தம்.]

***[Skt.** rāśi>த. இராசி.]*

இராசிப்பொன் *irāśi-p-poṉ,* பெ.(n.) கலப்பற்ற தூய்மையான பொன்; pure gold. *'ஒடுக்கின இராசிப்பொன்' (S.I.I.vi, 133).*

[இராசி + பொன்.]

***[Skt.** rāśi>த. இராசி.]*

இராசிபுடம் *irāśi-puḍam,* பெ.(n.) ஓரைகளில் கோள் (மீன்கள்) நிற்கும் நிலையைச் சரியாகப் பார்க்கை; clear calculation of the situation of the planets in zodiacal signs.

த.வ. கோள்கணிப்பு.

***[Skt.** rāśi+sphuṭa > த. இராசிபுடம்.]*

இராசிமண்டலம் *irāśi-maṇḍalam,* பெ.(n.) கோள்மீன்கள் செல்லும் பாதை; zodiac.

த.வ. ஓரைமண்டலம்.

[இராசி + மண்டலம்.]

***[Skt.** rāśi>த. இராசி.]*

இராசியக்காரன் *irāśiya-k-kāraṉ,* பெ.(n.) அலுவலகக் கணக்காளர் (இராயசக்காரன்) (சீதக்.123); writer.

[இராசிய + காரன்.]

***[Skt.** இராயசம் > த. இராசியம்.]*

"காரன்" த. உடைமைப் பொருள்.

இராசியடி *irāśi-y-aḍi,* பெ.(n.) 1. பொலியடித் தவசம் (தானியம்); first grain beaten out on the threshing-floor. 2. அளந்த பின் கிடக்கும் களநெல்; residue left on the treshing-floor after a heap of grain has been measured.

த.வ. தலையடித்தவசம்.

[இராசி + அடி.]

***[Skt.** rāśi > த. இராசி.]*

இராசியத்தானம் *irāśiya-t-tāṉam,* பெ.(n.) மறைவிடம்; secret place, place of concealment.

த.வ. மறைவகம்.

***[Skt.**rahasya+stāna>த. இராசியத்தானம்.]*

இராசியதிபதிப்பொருத்தம் *irāśi-y-adipati-p-poruttam,* பெ.(n.) திருமணப் பொருத்தங்கள் பத்தனுள் ஒன்று; correspondence between the horoscopes of the prospective bride and the groom in respect of the ruling planets of their respective birth-signs, one of ten *kaliyaṇa-p-poruttam.*

[இராசி + அதிபதி + பொருத்தம்.]

***[Skt.** rāśi+adhi+pati> த.இராசியதிபதி.]*

இராசியம்[1] *irāśiyam,* பெ.(n.) 1. மறைவு (சூடா.); secret, mystery, anything hidden. 2. பெண்குறி (சூடா.); pudendum muliebre.

***[Skt.**rahasya>த. இராசியம்.]*

இராசியம்[2] *iraciyam,* பெ.(n.) தாமரை (மூ.அ.); lotus.

***[Skt.** cf.rājīva > த. இராசியம்.]*

இராசியத்தானம் *irāśiyattāṉam,* பெ.(n.) **இராசியம்** பார்க்க; see *irāśiyam.*

இராசியெழுத்து *irāśi-y-eḻuttu,* பெ.(n.) குறியீட்டெழுத்து வகை (யாப்.வி.536); a kind of symbolic letter.

[இராசி + எழுத்து.]

***[Skt.** rāśi > த. இராசி.]*

இராசில் *irāšil,* பெ.(n.) மகிழம்பூ; pointed leaved Ape flower (சா.அக.).

இராசிலம்¹ *irāšilam,* பெ.(n.) சாரைப்பாம்பு (சூடா.); rat snake.

[Skt. rājila > த. இராசிலம்.]

இராசிலம்² *irāšilam,* பெ.(n.) நீர்ப்பாம்பு; water snake (சா.அக.).

இராசிவக்கிரம் *irāši-vakkiram,* பெ.(n.) ஓர் ஓரையில் உள்ள கோள் தான் முன்பு விட்டு வந்த ஓரைக்குச் செல்லுதல்; retrogression of a planet to the next sign.

[Skt.rāši+vakra > த. இராசிவக்கிரம்.]

இராசிவங்கம் *irāšivangam,* பெ.(n.) வெள்ளீயம்; white lead tin (சா.அக.).

இராசிவட்டம் *irāši-vattam,* பெ.(n.) கோள்களின் பாதை; zodiac.

[இராசி + வட்டம்.]

[Skt. rāši>த. இராசி.]

இராசினா *irāšinā,* பெ.(n.) அரத்தை; a drug galangal.

இராசீகம் *irāšigam,* பெ.(n.) அரசனால் வருவது; that which is caused by the king; act of state.

[Skt. rājan > த. இராசீகம்.]

இராசீவம்¹ *irāšivam,* பெ.(n.) தாமரை (பிங்.); lotus.

[Skt. rājiva > த. இராசீவம்.]

இராசீவம்² *irāsivam,* பெ.(n.) 1. வரைக் கெண்டை; carp. 2. மான் வகை; a kind of deer (நாநார்த்த.).

[Skt. rajiva > த. இராசீவம்.]

இராசுனை *irāsunai,* பெ.(n.) சிற்றரத்தை; lesser galangal.

இராசேந்திரதேவன் *irāšēndira-dēvan,* பெ.(n.) சோழ மன்னர் சிலரின் பெயர்; name of three *Chōla* kings of the 11th, 12th and 13th century, respectively.

[Skt. rājendra+dēva > த. இராசேந்திர தேவன்.]

இராசோத்துங்கன் *irāšōttungan,* பெ.(n.) சிறந்த அரசன்; distinguished sovereign.

[Skt.rājan>uttunga>த. இராசோத்துங்கன்.]

இராசோபசாரம் *irāšōbacāram,* பெ.(n.) அரசனின் விருந்தோம்பல்; royal entertainment.

த.வ. அரசோம்பல்.

[Skt.rājan+upa-šāra>த. இராசோபசாரம்.]

இராட்சச *irātcaša,* பெ.(n.) ஓர் ஆண்டின் பெயர் (சோதிட.சிந்.); name of the forty - ninth year of the jupiter cycle.

[Skt. rākṣasa > த. இராட்சச.]

இராட்சசசிகிச்சை *irātcaša-šigicai,* பெ.(n.) காரச் சீலை, காரம் முதலியவற்றைக் கொண்டு செய்யும் ஒரு கொடிய மருத்துவ முறை; that branch of medicine which deals with the treatment of diseases wholly or in part with (சா.அக.).

த.வ. வன்பண்டுவம்.

இராட்சசம் *irātcašam,* பெ.(n.) **இராக்கதம்** பார்க்க; see *irākkadam.*

[Skt.rāksasa>த. இராட்சசம்.]

இராட்சசன் *irātcašan,* பெ.(n.) அரக்கன்; giant, monster.

[Skt. rāksasa > த. இராட்சசன்.]

இராட்சசி¹ *irātcaši,* பெ.(n.) அரக்கி; female giant (சா.அக.).

[Skt. rākṣasi > த. இராட்சசி.]

இராட்சசி² *irātcaši,* பெ.(n.) 1. துளசி; holy basil. 2. சதுரக் கள்ளி; square spurge. 3. கற்றாழை; aloe (சா.அக.).



இராட்சதகணசிகிச்சை *irātcatakaṇa šihiccai,* பெ.(n.) **இராட்சசசிகிச்சை** பார்க்க; see *iraṭcaša-sihiccai* (சா.அக.).

[இராட்சதம் + கணம் + சிகிச்சை.]

இராட்சதகணம் *irāṭcada-kaṇam,* பெ.(n.) அரக்க குலத்தைச் சார்ந்த ஒன்பது நாள்மீன்கள் (விதான. கடிமண. 7, உரை); the nine nakatras belonging to the giant class dist. fr. *maṉiṭa-kaṇam* and *tēva-kaṇam* viz., ஆரல் (கார்த்திகை), கவ்வை (ஆயில்யம்), கொடுங்கம் (மகம்), நெய்ம்மீன் (சித்திரை), சுளகு (விசாகம்), தழல் (கேட்டை), குருகு (மூலம்), பறவை (அவிட்டம்), குன்று (சதயம்).

[Skt. rākṣasa+> த. இராட்சசகணம்.]

இராட்சதவைத்தியம் *irāṭcatavaittiyam,* பெ.(n.) அறுத்தல், காரம் வைத்தல், சூடு போடல் முதலிய முரட்டுத் தனமான மருத்துவம்; a crude and painful treatment as by operation blistering cauterisation etc., as distinguished by administration of drugs or other medicines (சா.அக.).

த.வ. வன்மருத்துவம்.

இராட்டிரம் *irāṭṭiram,* பெ.(n.) 1. நாடு; country. 2. நகரிலுள்ள மக்கள்; townsfolk, citizens. 3. தீநிகழ்வு; portent.

த.வ. பைதிரம்.

[Skt. rāsṭrā > த. இராட்டிரம்.]

இராட்டினவாழை *irāṭṭiṉa-vāḻai,* பெ.(n.) கிளைகள் நெருங்க இருக்கும் ஒரு வகை வாழை மரம்; a plaintain tree, with branches having no intermediate blank spaces (சா.அக.).

[இராட்டினம் + வாழை.]



இராட்டு *irāṭṭu,* பெ.(n.) தேன் கூடு; honey-comb (சா.அக.).

இராணம் *irāṇam,* பெ.(n.) 1. இலை; leaf. 2. மயில் தோகை; pea-cocks feather (சா.அக.).

இராணி *irāṇi,* பெ.(n.) அரசி; queen, wife of a king.

[Skt. rājñi > த. இராணி.]

இராணிவாசம் *irāṇi-vāšam,* பெ.(n.) அரசியின் உவளகம் (அந்தப்புரம்); queen's apartments.

[Skt. rājñi+vāsa > த. இராணிவாசம்.]

இராணுவம் *irāṇuvam,* பெ.(n.) படை; army. *"தமிட்ட ராணுவம் பெருக்கி" (தனிப்பா.).*

த.வ. படைத்துறை.

[Skt. raṇa > த. இராணுவம்.]

இராணுவமோடி *irāṇuva-mōḍi,* பெ.(n.) அணிவகுப்பு; array of an army.

[Skt. rāṇa+mōḍi > த. இராணுவமோடி.]

இராத்தல் *irāttal,* பெ.(n.) 1. 40 உருபாய் எடை; arabian pound = 40 tolas. 2. ஒரு யூத எடை (விவிலி. லூக்.19:13); a jewish measure of weight. 3. பதின்மூன்று பலஎடை; thirteen rupees (or 1 ib weight).

[U.ratl > த. இராத்தல்.]

இராத்தி *irātti,* பெ.(n.) வெண்காரவுள்ளி; a kind of white pungent onion (சா.அக.).

இராத்திரிவேதம் *irāttiri-vētam,* பெ.(n.) சேவல் (சித்.அக.); cock (சா.அக.).

[Skt. rātri-vēda > த. இராத்திரிவேதம்.]

இராதம் *irādam,* பெ.(n.) கடைக்கொள்ளி (பிங்.); fire brand nearly burnt out.

[Skt. rādhā > த. இராதம்.]

இராதா *irādā,* பெ.(n.) எண்ணம்; design, intention.

[U. irādā > த. இராதா.]

இராதாரி *irātāri,* பெ.(n.) ஆயத் தீர்வைச் சீட்டு; customs permit.

[Skt. rahatāri > த. இராதாரி.]

இராதினி *irātini,* பெ.(n.) 1. சல்லகி மரம்; a tree. 2. ஓர் ஆறு; a river. 3. வேந்தனின் வயிரப்படை; indra's thunderbolt. 4. மின்னல்; lightning. 5. இடி; thunder.

[Skt. hrādinī > த. இராதினி.]

இராதை[1] *irādai,* பெ.(n.) 1. பதினாறாவது விண்மீனாகிய சுளகு (விசாகம்); the 16th nakṣatra. 2. விட்டுணுக் கிராந்தி என்னும் மூலிகை; a medicinal plant. 3. நெல்லி; amblic myrobalan. 4. மின்னல்; lightning.

[Skt. rādhā > த. இராதை.]

இராதை[2] *irādai,* பெ.(n.) 1. கண்ணன் காதலித்த ஆயர்குலப் பெண்களுள் ஒருத்தி; a celebrated *gōpi* or herdswoman loved by Sri *kṛṣṇa.* 2. கன்னனின் (கர்ணனின்) செவிலித்தாய்; foster mother of *karṇā.*

[Skt. rādhā > த. இராதை.]

இராமக்கரும்பு *irāmakkarumbu,* பெ.(n.) 1. வெள்ளையும் சிவப்புக் கோடுங் கலந்த கரும்பு; sugarcane with white and red stripe. 2. பேய்க் கரும்பு; a wild not useless sugarcane (சா.அக.).

[இராமம் + கரும்பு.]

இராமக்கிரி *irāma-k-kiri,* பெ.(n.) குறிஞ்சிப் பண் வகை (பிங்.); a primary melody-type of the *kuriñci* class.

[Skt. rāma-kiri > த. இராமக்கிரி.]

இராமக்குமிட்டி *irāma-k-kumiṭṭi,* பெ.(n.) பேய்க் கொம்மட்டி; bitter apples (சா.அக.).

[இராமம் + குமிட்டி.]

இராமக்குறண்டி *irāma-k-kuraṇḍi,* பெ.(n.) முட் குறண்டி; a throny shrub grown in barren island (சா.அக.).

[இராமம்+ குறண்டி.]

இராமக்கோவை *irāma-k-kōvai,* பெ.(n.) கற்கோவை; rama's caper.

[Skt. rāma+kōvai > த. இராமக்கோவை.]

இராமகலி *iramakali,* பெ.(n.) பண் வகை (பரத. ராக.103); (Mus.) a specific melody - type.

[இராமம்+ கலி.]

[Skt. rama > த. இராம.]

இராமசந்திரன் *irāma-candiran,* பெ.(n.) இராமபிரான் (திருப்பு. 174); *Śrī Rāma,* the benignant.

[Skt. rāmā+candira > த. இராமசந்திரன்.]

இராமசித்தா *irāma-šittā,* பெ.(n.) பழ மரவகை; bullock's heart - *Anona reticulata*.

த.வ. பறங்கிச் சக்கை.

[Skt. rāma+sītā > த. இராமசீத்தா.]

இராமசேது *irāma-šēdu,* பெ.(n.) இராமரணை ஆதம் பாலம் என்று சொல்லப்படுவதும், இராமன் இலங்கை செல்லும் போது கடந்து சென்றதாகக் கருதப்படுவதும், மன்னார் வளைகுடாவிற்கும் பாக் (ஜல) நீர்ச் சந்திக்கும் இடைப்பட்ட இடத்தில் காணலாகும் மண்ணாலும் பவழப் பாறைகளாலும் ஆன நீர்மட்டத்திற்கு அடியில் இருக்கும் மணல் திட்டு; popular name of the bridge of coral rocks between the gulf of mannar and the palk's straits, now known as Adam's bridge, so called because it is believed to be the bridge by which Rama crossed the sea to Ceylon.

[Skt. rāma+sēdhu > த. இராமசேது.]

இராமடங்கா *irāmadangā,* பெ.(n.) ஒரு வகைப் பொற்காசு; an ancient gold coin.

[Skt. rāma+tanka > த. இராமடங்கா.]

இராமடம் *irāmadam,* பெ.(n.) பெருங்காயம் (மூ.அ.); asafoetida.

[Skt. rāmatha > த. இராமடம்.]

இராமடை *irāmadai,* பெ.(n.) பெருங்காயம்; asafoetida (சா.அக.).

இராமதாசன் *irāmadāšan,* பெ.(n.) கடற் காக்கை; sea crow.

இராமதாபனி *irāma-tābani,* பெ.(n.) நூற்றெட்டு மறை முடிபுகளுள் ஒன்று; name of an upanisad.

[Skt. rāma-tāpanī > த. இராமதாபனி.]

இராமதூதன் *irāma-tūdan,* பெ.(n.) அனுமான்; Hanuman, the messenger of Rama.

[Skt. rāma+dūta > த. இராமதூதன்.]

இராமநாடகம் *irāma-nādagam,* பெ.(n.) அருணாசலக்கவிராயர், புகழ்ப் பாவடிவில் (கீர்த்தனைகளாக) இயற்றிய இராமாயண நூல்; a work narrating the story of the Ramayana in songs interpersed with verses by *Aruṇācala-k-kavirāyar*, dated A.D. 1772.

[இராமம் + நாடகம்.]

[Skt.rāma>த. இராமம்.]

இராமநாதன் *irāma-nādan,* பெ.(n.) இராமனால் வழிபடப்பட்ட இராமேச்சுரத்துச் சிவன் (சேதுபு.); *Šiva-linga* in *Rāmēšwaram*, which is reputed to have been installed by *Šrī Rāma*.

[Skt. rāma+nātha > த. இராமநாதன்.]

இராமப்பிரியம் *irāma-p-piriyam,* பெ.(n.) தாமரை (வை.மூ.); lotus.

[Skt. rāma+priya > த. இராமப்பிரியம்.]

இராமப்பிரியா *irāma-p-piriyā,* பெ.(n.) ஒருவகைப் பண்; a specific melody-type (mus.).

[Skt. rāma+priyā > த. இராமப்பிரியா.]

இராமபாணம் *irāma-bāṇam,* பெ.(n.) 1. இராமனின் அம்பு; *Rāma's* arrow. 2. ஏடுகளைத் துளைத்துக் கெடுக்கும் பூச்சி; a worm which eats through the palmyra leaves of m.s. books. 3. பாச்சை வகை; silver fish, a household pest, lepisma domestica. 4. மல்லிகை வகை; variety of jasmine. 5. ஒரு வகை மருந்து; a medicinal preparation (w.). 6. மாலியர்களின் நெற்றிக் குறியான திருமண்; sacred earth used by Vaishnavas in marking their foreheads.

[Skt. Rāma+bāṇa > த. இராமபாணம்.]

இராமம்[1] *irāmam,* பெ.(n.) 1. வெண்மான்; white deer. 2. வெண்மை; whiteness. 3. கருமை; blackness.

[Skt. rāma > த. இராமம்.]

இராமம்² *irāmam,* பெ.(n.) 1. அழகு; beauty. *"மெய்ப்பொலி யிலங்கொளி யிராமம்" (இரகு.தேனு.17).* 2. விரும்பத்தக்கது; that which is lovely, charming.

த.வ. எழில்.

[Skt. rāma > த. இராமம்.]

இராமமுழியன் *irāma-muḻiyaṉ,* பெ.(n.) ஒருவகைக் கடல் மீன்; a silvery sea-fish (சா.அக.).

இராமரகசியம் *irāma-ragaśiyam,* பெ.(n.) நூற்றெட்டு மறைமுடிபுகளுள் ஒன்று; name of an upanisad.

[Skt. rāma-rahasya > த. இராமரகசியம்.]

இராமரசம் *irāma-raśam,* பெ.(n.) ஒரு வகை நீர்ம மருந்து; medicinal drink made of hemp leaves, spices and other drugs (சா.அக.).

[Skt. rāma+rasa > த. இராமரசம்.]

இராமராச்சியம் *irāma-rācciyam,* பெ.(n.) இராமனால் நடத்தப்பட்டதாகக் கருதப்படும் நல்லரசாட்சி; government of equity and benignity as Rama's government.

[Skt. rāma+rājya > த. இராமராச்சியம்.]

இராமலிங்கம் *irāma-liṅgam,* பெ.(n.) **இராமநாதன்** பார்க்க; see *irāma-nādaṉ.*

[Skt. rāma+liṅga > த. இராமலிங்கம்.]

இராமலிங்கஅடிகளார் *irāma-liṅga-aḍigaḷār,* பெ.(n.) திருவருட்பா இயற்றிய, வள்ளலார் எனப் புகழப்படும் சிவனிய வெள்ளாடைத் துறவி; a modern saivaite sage, author of the *tiru-v-aruṭpā* and some other minor works (1823-1874).

திருவருட் பிரகாச வள்ளலார் என அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் 19ஆம் நூற்றாண்டில் (1823–1874) வாழ்ந்தவர். தென்னார்க்காடு மாவட்டம் மருதூரில் பிறந்தவர். வடலூரில் அறச்சாலை நிறுவி மக்களுக்கு இடையறாது சோறிட்டார். 51ஆம் அகவையில் வடலூரில் ஓர் அறையில் திருக்காப்பிட்டுக் கொண்டு மறைந்தார். மனுமுறை கண்ட வாசகம், சிவநேச வெண்பா, நெஞ்சறிவுறுத்தல், மகா தேவமாலை முதலிய அருள் நூல்களை இயற்றியுள்ளார். அருட்பெருஞ்சோதி ஒளிவழிபாட்டைத் தோற்றுவித்தார். கொல்லாமையை வலியுறுத்தினார். இவருடைய பாடல்கள் திருவருட்பா என அழைக்கப்படுகின்றது.

இராமவாசகம் *irāma-vāśagam,* பெ.(n.) தவறாத சொல்; sacred promise, plighted word, as irrevocable as the word of Rama.

[Skt. rāma+vāsaka > த. இராமவாசகம்.]

இராமன் *irāmaṉ,* பெ.(n.) 1. பரசுராமன்; *Paraśurāma.* 2. இராமாயண இராமன்; *Śri Rāma,* the hero of the *Rāmāyaṇa.* 3. பலராமன்; *Balarāma.*

[Skt. rāma > த. இராமன்.]

திருமாலின் தோற்றரவாக (அவதாரமாக) கருதப்படுபவர்கள் பரசுராமன், இராமன், பலராமன்.

இராமன்சம்பா *irāmaṉ-śambā,* பெ.(n.) நெல்வகை; variety of paddy.

[Skt. rāma+campā > த. இராமன்சம்பா.]

இராமாயணம் *irāmāyaṇam,* பெ.(n.) வால்மீகியால் எழுதப்பட்ட வடமொழிக் காப்பியம்; famous skt. epic by *Vālmīki* rendered into tamil by *Kambar,* relating the adventures of *Rāmaṉ.*

[Skt. rāmayaṇa > த. இராமாயணம்.]

மறவனப்புகள் (இதிகாசங்கள்)இரண்டனுள் ஒன்றான இராமாயணம், வடமொழியில் வால்மீகியால் எழுதப்பட்டது. அதை முதனூலாகக் கொண்டு கம்பர் தமிழில் கம்பராமாயணம் படைத்தார். இராமாயணம் இராமனின் கதையைக் கூறும். ஒரு மாலிய (வைணவ) நூல். வால்மீகி இராமாயணத்தினின்றும் வேறுபட்டுச் சில இடங்களில் கம்பர் தமிழ் மரபுக்கு ஏற்ப மாற்றி அமைத்துள்ளார். தமிழில் இராமாயணம் எழுந்த காலம் கி.பி.12–ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியாகும்.

இராமாவதாரம் *irāmāvadāram,* பெ.(n.) 1. இராமனாகப் பிறந்த திருமாலின் தோற்றரவு; incornation of *Visnu* as *Rāma*, the son of *Dašarathan*. 2. கம்பர் தனது வனப்பு நூலுக்கு (காப்பியத்திற்கு) வைத்த பெயர்; the *Rāmāyanam* in tamil by the poet *Kambar*. (புறத்திரட்டு) *"நாயகன் றோற்றத்தி னிடை நிகழ்ந்த விராமவ தாரப்போர்....... மாக்கதை" (கம்பரா.பாயி.).*

த.வ. கம்பராமாயணம்.

[Skt.rāma+ava-tāra>த. இராமாவதாரம்.]

இராமானுசகூடம் *irāmānuša-kūdam,* பெ.(n.) மாலிய (வைணவ) அடியார்கள் வழியிடைத் தங்கும் சாவடி (I.M.P.Tp.492, R); rest house for *Vaisn* travellers.

[இராமானுசம் + கூடம்.]

[Skt. rāmānuja>த. இராமானுசம்.]

இராமானுசதரிசனம் *irāmānuša-darišanam,* பெ.(n.) இராமானுசரால் கற்பிக்கப்பட்ட கோட்பாடு (விசிட்டாத் வைதம்); philosophy of *Višistādvaitam* as expounded by *Ramanujar.*

[Skt.rāmānuja+darsana>த. இராமானுச தரிசனம்.]

இராமானுசநூற்றந்தாதி *irāmānuša-nūrrandādi,* பெ.(n.) இராமானுசரைப் புகழ்ந்து திருவரங்கத்தமுதனார் இயற்றிய ஒரு நூல்; a poem in praise of Ramanuja by *Tiru-v-arangattamutanār*, one of his contemporaries.

[Skt.rāmānuja>த. இராமானுசம்.]

இராமானுசம் *irāmānušam,* பெ.(n.) மாலியர் (வைணவர்) பயன்படுத்தும் ஒருவகைச் செப்புக் கலன்; drinking vessel, use of copper, used by *Vaisnavas.*

[Skt. rāmānuja > த. இராமானுசம்.]

இராமானுசர் *irāmānušar,* பெ.(n.) விசிட்டாத்துவிதம் என்னும் சமயக் கோட்பாட்டை நிறுவிப்பரப்பியவர்; *Rāmānuja*, a *Sri Vaisnava Acārya* (teacher) and ascetic (1017-1137 A.D.) who was the leading exponent of the *Višistadvaita* doctrine of pantheistic non - dualism.

[Skt. rāmānuja > த. இராமானுசர்.]

இராமானுசன் *irāmānusan,* பெ.(n.) இராமனின் தம்பியாகிய இலக்குவன்; *laksmanan* brother of *Rāmān.*

[Skt. rāmānuja > த. இராமானுசன். அனுசன் = தம்பி.]

இராமானுசீயர் *irāmānušiyar,* பெ.(n.) இராமானுசரைப் பின்பற்றுபவர்கள்; followers of Ramanujar.

[Skt. rāmānujiya > த. இராமானுசீயர்.]

இராமேச்சுரம் *irāmēccuram,* பெ.(n.) சிவன் கோயில் உள்ள இடம்; *Rāmēšvaram*, the celebrated *Šiva* shrine on an island, which is reputed to have been founded by *Šri Rāman.*

[Skt. rāma+īšvara > த. இராமேச்சுரம்.]

இராமன் இலங்கைப் போருக்குமுன் இங்கு சிவக்குறி (இலிங்கம்) அமைத்து வழிபட்டதாகக் கூறப்படுகிறது. இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையில் கடலில் உள்ள ஒரு தீவு.

இராமேசம் *irāmēšam,* பெ.(n.) **இராமேச்சுரம்** பார்க்க; see *irāmēccuram.*

[Skt.rāma+īša>இராமேஸம்>த. இராமேசம்.]

இராமேசுவரம் *irāmēšuvaram,* பெ.(n.) **இராமேச்சுரம்** பார்க்க; see *irāmē-c-curam.*

[Skt. rāma+īšvara > த. இராமேசுவரம்.]

இராமை *irāmai,* பெ.(n.) 1. மன்மத நூல் கற்றவள்; woman who is an expert in erotics. 2. சிறுவழுதலை; a kind of brinjal.

[Skt. rāmā > த. இராமை.]

இராயசம் *irāyasam,* பெ.(n.) ஆணை ஆவணம்; written order. *"நரசிங்க ராஜ உடையார் கட்டளை பண்ணி இராயசமும் கொடுக்கையில்" (S.I.I. iv, 83).*

[T. vrāyasamu > த. இராயசம்.]

இராயசவர்த்தனை *irayasavarttanai,* பெ.(n.) வரிவகை (S.I.I. viii, 188); a tax.

[இராயசம் + வர்த்தனை.]

*[T. vrāyasamu+***Skt.** *vartana> த.இராயச வர்த்தனை.]*

இராயர் *irāyar,* பெ.(n.) 1. விசய நகர மன்னர்களின் பட்டப்பெயர்; title assumed by the Vijayanagar kings. 2. மராட்டிய மத்துவ பார்ப்பனரின் பட்டப் பெயர்; caste title of *mahārāṣṭara* and Madhva and other *brāhmins.*

த.வ. அரையர்.

*[***Skt.** *rājan>த. இராயர்.]*

இராயன் *irāyaṉ,* பெ.(n.) 1. அரசன்; king. 2. உரோம மன்னன் (விவிலி.மார்.12, 14); Caesar, the Rome's king.

த.வ. அரையன்.

*[***Skt.** *rājan > த. இராயன்.]*

இராவணம் *irāvaṇam,* பெ.(n.) அழுகை (திருப்பு.330); crying, screaming.

*[***Skt.** *rāvaṇa > த. இராவணம்.]*

இராவணன் *irāvaṇaṉ,* பெ.(n.) இராம காதையில் குறிக்கப் பெறும் எதிராளித் தலைவனான இலங்கை மன்னன்; *rāvaṇa,* a villain king of *Laṅka* and chief in *Rāmayana.*

*[***Skt.** *rāvaṇa > த. இராவணன்.]*

ராவண என்னும் சொல் அரற்றுதல், ஒலியிடுதல் என்னும் பொருள்படும் 'ராவ' என்னும் அடியிலிருந்து பிறந்ததாக மா.வி. காட்டுகிறது. இராமகாதையில் வரும் எதிராளிக் கதை மாந்தன் என்றாலும் இலங்கை மன்னன் ஒரு சிவனடியான். இசைவல்லோன், வீணை இசைப்போன், அரக்கர் தலைவன், விண்ணவரை ஏவல் கொண்டவன், வீபிணன், கும்பகர்ணன் ஆகியோரின் தமையன், இந்திரசித்துவின் தந்தை, கைலாயத்தைப் பெயர்த்தவன் போன்ற பாங்குகளை இராவணனுக்குரியதாகக் காட்டுவர். முதலாவதாக பண்டைக்காலத்தில் இலங்கையிலும் பிற இடங்களிலும் அரக்கர் இருந்ததாகக் கருதப்படும் கருத்து தொன்ம அடிப்படையில் கற்பிக்கப்பட்டது. மேலும் பிற்காலத்தில் ஆரிய திராவிட (தமிழ்) வேறுபாட்டை குறிக்கும் குறியீடாகக் கொண்டு தமிழர் தம்மை இழிவுபடுத்தும் நோக்கில் கற்பிக்கப்பட்டதே இராவணன் அரக்கர் தன்மையாம்.

இராவணன்புல் *irāvaṇaṉ-pul,* பெ.(n.) கடற்கரையிலுள்ள ஒருவகைக் கூரிய புல்; water-pink, a seashore grass, spinifex squarrosus, from its resemblance to *Rāvanan's* whiskers.

[இராவணன் + புல்.]

*[***Skt.** *rāvaṇa>த. இராவணன்.]*

இராவணன்மீசை *irāvaṇaṉ-mīšai,* பெ.(n.) **இராவணன்புல்** பார்க்க; see *irāvaṇaṉ-pul.*

[இராவணன் + மீசை.]

*[***Skt.** *rāvaṇa>த. இராவணன்.]*

இராவணாகாரம் *irāvaṇākāram,* பெ.(n.) அச்சம் தரும் வடிவம்; frightful form, as the terror-striking mien of *Rāvaṇa.* *"இராவணாகாரமாகி" (தாயு. மௌன.9).*

*[***Skt.** *rāvaṇa+ā-kārā>த. இராவணாகாரம்.]*

இராவணாசுரம் *irāvaṇāšuram,* பெ.(n.) வீணை வகை (பரத. ஒழிபி.15); kind of *viṇā.*

*[***Skt.** *rāvaṇa+a-sura> த. இராவணாசுரம்.]*

இராவணாத்தம் *irāvaṇāttam,* பெ.(n.) கொட்டாங்கச்சியில் செய்த ஒருவகைச் சிறுவீணை; an ancient stringed instrument formed with a coconut shell.

[Skt. rāvaṇa+hasta > த. இராவணாத்தம்.]



இராவணி *irāvaṇi,* பெ.(n.) இராவணன் மகன் (கம்பரா.நாகபா.13:7); Indrajit, son of *Rāvaṇa.*

[Skt. rāvaṇi > த. இராவணி.]

இராவுத்தராயன் *irāvutta-rāyaṉ,* பெ.(n.) குதிரைப் பாகரின் தலைவன் (திருவாலவா. உரி, 23); leader of horseman.

[U. raut+raya > த. இராவுத்தராயன்.]

இராவுத்தன் *irāvuttaṉ,* பெ.(n.) 1. குதிரை வீரன்; cavalier, horseman, trooper. 2. தமிழ் முகமதியருள் ஒரு பிரிவினரின் பட்டப் பெயர்; title of a certain class of tamil-speaking Muhammadans.

[U. raut > த. இராவுத்தன்.]

[cf. Skt. raja-dūta.]

இரிசபகம் *irisabakam,* பெ.(n.) இலந்தை; Indian plum (சா.அக.).

இரிசபதாரகிருதம் *irisabatārakirutam,* பெ.(n.) சீவகம் அல்லது இலந்தை; Indian plum (சா.அக.).

இரிசபதாரம் *irisabatāram,* பெ.(n.) ஆவு; the cow (சா.அக.).

இரிசால் *irišāl,* பெ.(n.) 1. ஊர் அலுவலர்கள் அரசுக் கருவூலத்தில் தண்டல் பணம் செலுத்துதல்; remittance or despatch of collections of rents forworded by the village revenue officer to the treasury. 2. கருவூலத்திற்கு அனுப்பும் பணம்; collections of rents to be forwarded to the treasury.

த.வ. வரிஒடுக்கல்.

[Arab. iršal > த. இரிசால்.]

இரிசி *iriši,* பெ.(n.) வேத முனி; sage versed in vedas (சா.அக.).

இரிசியா *irišiyā,* பெ.(n.) பூனைக்காலி (மலை.); cowhage.

[Skt. irisya > த. இரிசியா.]

இரிட்டம் *iriṭṭam,* பெ.(n.) 1. நன்மை; good. 2. வாள்; sword. 3. நன்மையல்லாதது; inauspiciousness. 4. முடிவு, அழிவு; end, destruction. 5. கரிசு (பாவம்); sin.

[Skt. riṣṭa > த. இரிட்டம்.]

இரீதி *iriti,* பெ.(n.) 1. குடவம் (பித்தளை); brass. 2. இரும்புக் கிட்டம்; scoria of iron. 3. தூள்; dust (சா.அக.).

[Skt. riti > த. இரீதி.]

இருக்கம் *irukkam,* பெ.(n.) 1. விண்மீன்; naksatra. 2. கரடி; bear. 3. கோள்; zodiacal sign.

[Skt. rksa > த. இருக்கம்.]

இருக்கமாலி *irukkamāli,* பெ.(n.) 766 முழ அகலமும் உயரமுமுள்ளதாய் 766 முகடுகளோடு (சிகரம்) 96 மேனிலைக் கட்டுகள் கொண்ட கோயில் (சுக்கிரநீதி.229); temple of the width of 766 hands and of the same height, with 766 towers and 96 storeys.

த.வ. சதுரக்கூம்பு (பிரமிடு)

[Skt. rkṣamāli > த. இருக்கமாலி.]

இருசகம் *irušagam,* பெ.(n.) மாதுளை; pomegranate (சா.அக.).

[Skt. rucaka > த. இருசகம்.]



இருசால் *irušāl,* பெ.(n.) **இரிசால்** பார்க்க; see *irisāl.*

[U. irsāl > த. இருசால்.]

இருசால்நாமா *irušāl-nāmā,* பெ.(n.) ஊர் அலுவலர் கருவூலத்தில் செலுத்தும் தண்டல் பணத்துக்கு விளக்கம் தரும் பட்டி; invoice of collections of rents forwarded to the treasury by the village revenue officer.

த.வ. வரிஒடுக்கல் பட்டி.

[U. irsāl+nāmā > த. இருசால்நாமா.]

இருசிதாரி *irusitāri,* பெ.(n.) கருஞ்சீரகம்; black cumin (சா.அக.).

இருசியகெந்தா *irušiya-kendā,* பெ.(n.) சிற்றாமுட்டி; ceylon pavonia (சா.அக.).

இருசியசிம்மகருட்டம் *irušiyasimmaka kuttam,* பெ.(n.) புழுக்கள் நிறைந்து, நோவையும், எரிச்சலையுண்டாக்கும் ஒரு தொழுநோய்; a form of leprosy with formation of maggots, burning semation and pain (சா.அக.).

[இருசிய + சிம்மம் + குட்டம்.]

[Skt. irušiya-simma>த. இருசியசிம்மகம்.]

த. குட்டம் > Skt. kusta.

இருசீக்கியம் *irušīkkiyam,* பெ.(n.) கருஞ் செந்தொட்டி; black climbing nettle plant (சா.அக.).

இருசுபசுந்தரவிரணம் *irušupasuntara-viranam,* பெ.(n.) மலவாயையொட்டிச் சீலை ஒழுகச் செய்யும் ஒருவகை மூலநோய்; a form of fistula marked by a regular perforated ulcer near the rectum with a discharge of pus for therefrom (சா.அக.).

இருசுபாலை *irusuppālai,* பெ.(n.) திருநாமப் பாலை; a kind of herb.

இருசுவசற்பாட்சி *irušuvašarpātci,* பெ.(n.) 1. நோய் பரப்பும் நுண்ணுயிர்களின் குற்றத்தைப் போக்கும் ஒரு மூலிகை; a plant said to be used in complaints arising from germs. 2. ஒரு வகை நாணற்புல்; a kind of darba grass (சா.அக.).

இருசுவம் *irušuvam,* பெ.(n.) மலையிலுப்பை; wild mohwah (சா.அக.).

இருடிநங்கை *irudinankai,* பெ.(n.) கற்பூரயிலை; thick leaved lavender or camphor creeper (சா.அக.).

இருடிபட்சி *irudipatci,* பெ.(n.) பழந்தின்னி வௌவால்; sage bird, flying fox (சா.அக.).

[Skt. rishabatci > த. இருடிபட்சி.]



இருடிமூலம் *irudimūlam,* பெ.(n.) வசம்பு; sweet flag (சா.அக.).

இருடீகம் *irudigam,* பெ.(n.) புலனுறுப்பு; sensory organ. *"இருடீகங்க ளீரைந்துஞ் சரங்களாக" (தேசிகப்.2, 41).*

[Skt. hrṣika > த. இருடீகம்.]

இருத்தி *irutti,* பெ.(n.) வட்டி (T.A.S. viii, 15); interest.

[Skt. rddhi > த. இருத்தி.]

இருதயஅடைப்பு *irudaya-adaippu,* பெ.(n.) மூச்சு விட முடியாமல், மயக்கம், வலி முதலிய குணங்களைக் காட்டும் மாரடைப்பு நோய்; a disease marked by pain in the chest with suffocation and swooning due to the spasm of the systemic arteries (சா.அக.).

த.வ. நெஞ்சடைப்பு, மாரடைப்பு.

[இருதயம் + அடைப்பு.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயகந்தம் *irudayakantam,* பெ.(n.) கொத்த மல்லி; coriander (சா.அக.).

[Skt. hrdaya+kanta > த. இருதயகந்தம்.]

இருதயகபாடதாபிதம் *irudayakapāda tābitam,* பெ.(n.) நெஞ்சகத்தில் ஒருவழி அடைப்புத் தடுக்கில் ஏற்படும் அழற்சி; inflammation of the heart-valves (சா.அக.).

[இருதயம் + கபாடம் + தாபிதம்.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயகபாடம் *irudayakapādam,* பெ.(n.) 1. உடலில் நெஞ்சகத்தின் பக்கங்களில் அமைந்துள்ள ஒரு வழி அடைப்புத் தடுப்புகள்; the two sets of valves inside the heart. 2. தமனி, சிரைகளின் தடுக்கிதழ்கள்; aricklo ventriculer valves. 3. பிறை கபாடம் அல்லது நாடிக் கபாடம்; semilunar valves (சா.அக.).

[இருதயம் + கபாடம்.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயகவசம் *irudayakavašam,* பெ.(n.) இதயத்தின் மேல் போர்வை போல் சுற்றிக் கொண்டிருக்கும் ஒரு சவ்வுப்பை; the membraneous sacenclosing the heart (சா.அக.).

[இருதயம் + கவசம்.]

[Skt.hrdaya >த. இருதயம்.]

கவ்வு>கவ்வியம்>கவயம்>கவசம்.

இருதயகிரகம் *irudayakirakam,* பெ.(n.) நெஞ்சகத்தில் உண்டாகும் ஒரு பிடிப்பு வலி; a catching pain in the chest (சா.அக.).

[Skt. hrdaya+graha>த. இருதயகிரகம்.]

இருதயகோசம் *irudayakōšam,* பெ.(n.) **இருதயகவசம்** பார்க்க; see *irudaya kavasam.*

[Skt. hrdaya+kōsa > த. இருதயகோசம்.]

இருதயக்கட்டி *irudayakkatti,* பெ.(n.) நெஞ்சகத்தில் உண்டாகும் கட்டி; an abscess of the heart (சா.அக.).

[இருதயம் + கட்டி.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

குள்>கள்>கட்டு>கட்டி.

இருதயக்கண்டரை *irudaya-k-kandarai,* பெ.(n.) நெஞ்சாங்குலையின் பக்கத்திலுள்ள பெரிய தூய அரத்தக் குழாய்; the great artery that springs from the left side of the heart (சா.அக.).

[இருதயம் + கண்டரை.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

கண்டு>கண்டரை.

இருதயக்கழலை *irudaya-k-kalalai,* பெ.(n.) உடம்பினுள் நெஞ்சாங்குலையி லுண்டாகுங் கழலைக் கட்டி; a tumour or swelling containing any fluid or solid blood in direct communication with the cavity of the heart (சா.அக.).

த.வ. நெஞ்சக்கழலை.

[இருதயம் + கழலை.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

கழல்>கழலை = கழற்சிக்காய் போன்ற கட்டி.

இருதயக்குவிப்பு *irudaya-k-kuvippu,* பெ.(n.) நெஞ்சகச் சுருக்கம்; the contraction of the heart (சா.அக.).

[இருதயம் + குவிப்பு.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயக்கூச்சு *irudaya-k-kūccu,* பெ.(n.) நெஞ்சக முனை; the apex of the heart (சா.அக.).

[இருதயம் + கூச்சு.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயசனிப்பு *irudaya-šanippu,* பெ.(n.) நெஞ்சகத்தில் உருவாதல்; originating in the heart itself (சா.அக.).

[Skt. hrdaya+jani> த. இருதயசனிப்பு.]

இருதயசிகிச்சை *irudayašihiccai,* பெ.(n.) நெஞ்சில் ஏற்படும் நோய்களுக்கு செய்யும் மருத்துவ முறை; treatment for all diseases of the heart - *Cardiotherapy* (சா.அக.).

[Skt.hrdaya+shitsa>த. இருதயசிகிச்சை.]

இருதயசூலை *irudayašūlai,* பெ.(n.) மார்புவலி மிகுந்து, மூச்சுவிட முடியாமல் குத்தலை உண்டாக்கும் ஒரு நோய்; an uneasy and painful sensation with difficulty of respiration due to the deranged of the bodily *vayū* (சா.அக.).

[இருதயம் + சூலை.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயத்தவறு *irutayattavaru,* பெ.(n.) மார்புத் துடிப்பு நிற்றல்; arrest of the hearts action (சா.அக.).

[இருதயம் + தவறு.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயத்திமிர்ப்பு *irutaya-t-timirppu,* பெ.(n.) நெஞ்சாங்குலையின் உணர்ச்சியின்மை; absence of sensation in the heart (சா.அக.).

[இருதயம் + திமிர்ப்பு.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயத்திமிர்வாதம் *irutaya-t-timirvātam,* பெ.(n.) நெஞ்சக நரம்பிற்கேற்படும் உணர்ச்சியின்மையாகிய ஒரு வகை இழுப்புநோய்; paralysis of the heart (சா.அக.).

[இருதயம் + திமிர்வாதம்.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயத்துடிதுடிப்பு *irutaya-t-tuditudippu,* பெ.(n.) நெஞ்சகப்பதைபதைப்பு, அதாவது அதிவேகமாய்த் துடித்தல்; excessive rapidity in the action of the heart (சா.அக.).

[இருதயம் + துடிதுடிப்பு.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயத்துடிப்பு *irudaya-t-tudippu,* பெ.(n.) நோயினாலும், அச்சம், மனக்கவலை, சினம் முதலியவற்றாலும், மார்பின் இடது பக்கத்திலிருக்கும் நெஞ்சகம் அளவு கடந்து வேகமாய்த் துடித்தல்; extreme and unusual rapid action of the heart through disease or emotion fear, anger, exercise drugs.

[இருதயம் + துடிப்பு.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயதாபிதம் *irutayatābitam,* பெ.(n.) நெஞ்சில் உண்டாகும் ஓர் அழற்சி; the inflammation of the actual muscular of the heart itself (சா.அக.).

த.வ. நெஞ்சு அழற்சி.

[இருதயம் + தாபிதம்.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயநார்க்கடிமை *irutayanārkkadimai,* பெ.(n.) நெஞ்சாங்குலையில் தசை நாரமைப்புக் கேற்படும் வன்மை; the process of hardening the fibrous structure of the heart, the fibroid induration of the heart (சா.அக.).

[இருதயம் + நார் + கடிமை.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயநாளம் *irutayanāḷam,* பெ.(n.) நெஞ்சகத்தில் ஓடும் நாளங்கள்; veins of the walls of the heart (சா.அக.).

த.வ. நெஞ்சநாளம்.

[இருதயம் + நாளம்.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயநோய் *irutayanōy,* பெ.(n.) நெஞ்சகத்தில் உண்டாகும் நோய்கள்; diseases of the heart, in general heart affections (சா.அக.).

த.வ. நெஞ்சநோய், குண்டை நோய்.

[இருதயம் + நோய்.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயப்படபடப்பு *irutayappadapadappu,* பெ.(n.) **இருதயத்துடிப்பு** பார்க்க; see *irudayattudippu* (சா.அக.).

[இருதயம் + படபடப்பு.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயப்பிடிப்பு *irutaya-p-pidippu,* பெ.(n.) நெஞ்சகத்தில் ஏற்படும் பிடிப்பு; spasm of the heart (சா.அக.).

த.வ. நெஞ்சப்பிடிப்பு.

[இருதயம் + பிடிப்பு.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயப்பிதுக்கம் *irutaya-p-pidukkam,* பெ.(n.) நுரையீரல் தாங்கியில் ஏற்படும் வெடிப்பு மூலமாய் நெஞ்சகம் வெளிப் பிதுங்கல்; protrusion of the heart through a fissure produced in the diaphragm-cardiocele (சா.அக.).

த.வ. நெஞ்சப்பிதுக்கம்.

[இருதயம் + பிதுக்கம்.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயப்பிளவு *irutaya-p-piḷavu,* பெ.(n.) நெஞ்சக வெடிப்பு; rupture of the heart, cardiorrhexis (சா.அக.).

த.வ. நெஞ்சவெடிப்பு.

[இருதயம் + பிளவு.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயப்புற்று *irutaya-p-puṟṟu,* பெ.(n.) நெஞ்சகத்தில் புரையோடிய புண்; cancer of the heart (சா.அக.).

த.வ. நெஞ்சப்புண்.

[இருதயம் + புற்று.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயப்போக்கு *irutayappōkku,* பெ.(n.) நெஞ்சம் அசைவு; movement of the heart, cardiomobility (சா.அக.).

[இருதயம் + போக்கு.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயம்¹ *irutayam,* பெ.(n.) நெஞ்சகக் கூட்டினிலிருக்கும் ஓர் உறுப்பு. இது தாமரை மொக்கைப் போல், நுரையீரலுக்கு நடுவில், மேற்புறத்தில் துளையுடன் தலைகீழாய் மார்பின் இடது புறத்தின் தொங்கும் உறுப்பு; heart, an organ resembles the Lotus, believed to be the most important of all the parts (சா.அக.).

த.வ. நெஞ்சகம், குண்டிக்காய், குண்டை.

[Skt. hrdaya > த. இருதயம்.]



இருதயம்² *irudayam,* பெ.(n.) 1. மனம்; mind. 2. நடுவக் கருத்து; central idea. 3. நடு; centre, core.

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயமுனை *irudayamuṉai,* பெ.(n.) நெஞ்சக முனை; the apex of the heart.

[இருதயம் + முனை.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயலயம் *irutayalayam,* பெ.(n.) அரத்த ஓட்டத்தினால் நெஞ்சாங்குலை மாறி மாறிச் சுருங்குவதும் விரிவதுமாயுள்ள முறையான கால அளவு; the rhythm of the heart beat due to its contraction and dilation (சா.அக.).

[Skt. hrdaya+laya > த. இருதயலயம்.]

இருதயவலி *irutayavali,* பெ.(n.) 1. சூலை நோவு; pain in the heart-cardinodynia. 2. நெஞ்செரிவு; heart burn-pyrosis (சா.அக.).

த.வ. நெஞ்சுவலி.

[இருதயம் + வலி.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயவழற்சி *irutayavalarci,* பெ.(n.) நெஞ்சாங்குலையில் ஏற்படும் ஒருவகை வேக்காடு; inflammation of the heart - carditis (சா.அக.).

த.வ. நெஞ்செரிச்சல்.

[இருதயம் + அழற்சி.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

அழல் > அழற்சி.

இருதயவழுவு *irudayavaḷuvu,* பெ.(n.) நெஞ்சகத்திற்கு உண்டான அவக்கேடு; defermity or malfermation of the heart-cardiamorphia (சா.அக.).

[இருதயம் + வழுவு.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயவாயு *irutayavāyu,* பெ.(n.) நெஞ்சாங்குலையின் நரம்புகளிலேற்படும் ஒரு வகை வலி, இதனால்தான் மாரடைப்பு உண்டாகும்; neuralgia of the heart leading to a disease of the heart known as Angina pectoris (சா.அக.).

[Skt. hrdaya-vāyu > த. இருதயவாயு.]

இருதயவிரிவு *irutayavirivu,* பெ.(n.) 1. அரத்தவோட்ட உறுப்புகள் விரியுந் தன்மை அடைதல்; the stage of dilalation of the heart Diastole. 2. அரத்தவோட்ட உறுப்பு நீண்டு விகாரப்படல்; dilalation of the heart cardiectasis (சா.அக.).

[இருதயம் + விரிவு.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயவீக்கம் *irutayavīkkam,* பெ.(n.) நெஞ்சக வீக்கம்; swelling of the heart.

த.வ. நெஞ்சுவீக்கம்.

[இருதயம் + வீக்கம்.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயவுட்கவசம் *irudayavuṭkavaśam,* பெ.(n.) நெஞ்சாங்குலையின் புறத்தில் மூடியிருக்கும் ஒரு மெல்லிய சவ்வு; the epithellial lung membrane of the heart - *Endo cardium* (சா.அக.).

[இருதயம் + உள்+கவசம்.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இருதயவுப்பிசம் *irudaya-uppiśam,* பெ.(n.) நெஞ்சமானது நோயின் காரணமாய் வீக்கங் கொள்வது; abnormal dilalation of the heart-cardiacdilation (சா.அக.).

[இருதயம் + உப்பிசம்.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

உப்பு > உப்பம் (தொ.பெ.).

உ> உப்பு (வீங்குதல்) > உப்பசம் >உப்பிசம்.

இருதயவெடிப்பு *irudya-veḍippu,* பெ.(n.) அரத்தவோட்டக் குழல்களிலுண்டாகிய ஒரு பிளவு; cardiac rupture, *Cardioclasis* (சா.அக.).

[இருதயம் + வெடிப்பு.]

[Skt. hrdaya > த. இருதயம்.]

இரேக்கு *irēkku,* பெ.(n.) 1. தங்கத்தாள், பொன் தகடு; gold leaf, tinsal. 2. பூவிதழ்; the petal of a flower (சா.அக.).

இரேகம் *irēkam,* பெ.(n.) 1. உடம்பு; body. 2. வயிறு; stomach. 3. கழித்தல்; purging (சா.அக.).

இரேகாம்சம் *irēkāmsam,* பெ.(n.) நிலக் கோளத்தை வடக்குத் தெற்காக 360 சம பங்குகளாய்ப் பிரிக்கப்பட்டவற்றுள் ஒரு பாகம் (தீர்க்க ரேகை)(Astron.); terrestrial longtitude.

த.வ. நெடுவரி.

[Skt. rēkhā+amsa > த. இரேகாம்சம்.]

இதன் எதிரான இடைக்கோடு (அட்சரேகை) கிடைவரி எனப்படும்.

இரேகி¹–த்தல் *irēki-,* 11 செ.குன்றாவி.(v.t.) ஒன்றுபடுதல்; to unite, become one; to be very intimate, as friends. *'அவனோடு இரேகித்துப் பூரித்து இருக்கிறான்' (கொ.வ.).*

[Skt. cf.rēcakā > த. இரேகி–,]

இரேகி²–த்தல் *irēki-,* 11 செ.குன்றாவி.(v.t.) எழுதுதல்; to draw, to write. *"இரேகித்த சித்திரம்".*

[Skt. rēkha > த. இரேகி–,]

இரேகுத்தி *irēkutti,* பெ.(n.) ஒருவகைப் பண்; (mus.) a specific melody-type.

[U. rēkhtī > த. இரேகுத்தி.]

இரேகுலிசம் *irēkulišam,* பெ.(n.) மணித் தக்காளி; black berried nightshade.

இரேகை¹ *irēkai,* பெ.(n.) 1. இடையறா வொழுங்கு; unbroken series. 2. வஞ்சம்; deceit, wile.

[Skt. rēkhā > த. இரேகை.]

இரேகை² *irēgai,* பெ.(n.) 1. கைகால் முதலியவற்றிலுள்ள கோடு; lines on the palm of hand or on the sole of foot or on the forehead as marks observed in palmistry. 2. வரி; line. 3. எழுத்து; letter, chiro-graphy, writing. 4. மதிக்கலை; digit of the moon (astron.). 5. அரசிறை; tax, assessment. 6. தராசு படி முதலியவற்றின் அளவு கோடு; degree, as of a scale, unit of measure.

த.வ. வரிகை.

[Skt. rēkhā > த. இரேகை.]

இரேகைசாத்திரம் *irēkai-sāttiram,* பெ.(n.) உள்ளங்கைக் கோடுகளை வைத்துக் கணியம் கூறும் கணியநூல்; palmistry, chiromancy.

த.வ. வரிகைநூல்.

[Skt. rēkhā+sāstra>த. இரேகைசாத்திரம்.]

இரேகைநூல் *irēkainūl,* பெ.(n.) கை வரிகளைப் பற்றிய ஒரு நூல்; a treatise on the art or practice of telling fortunes by examening the lines on the hand - chiromany (சா.அக.).

த.வ. வரிகைநூல், கைவரி நூல்.

[இரேகை + நூல்.]

[Skt. rēkhā>த. இரேகை.]

இரேகையுடையோன் *irēkaiyuḍaiyōṉ,* பெ.(n.) முட்டைச்சிலந்தி; egg shaped spider (சா.அக.).

இரேசககுணா *irēšakakuṇā,* பெ.(n.) கடுகு; mustard (சா.அக.).

இரேசகம் *irēcakam,* பெ.(n.) 1. வெளிவிடும் மூச்சுக் காற்றை (மூக்கால்) புறத்தே கழிக்கை; (yōgā) expiration of breath, a part of *pirāṇa-yamam.* 2. கழிச்சல் மருந்து; catharlic (w.). *"போற்றிரேசக நன்மூச்சை விடுக்குதல்" (கூர்மபு. யோகமு.11).*

[Skt. rēcaka > த. இரேசகம்.]

இரேசகி–த்தல் *irēšagi-,* 11 செ.குன்றாவி. (v.t.) மூச்சுப் பயிற்சி ஒகத்தில் ஒரு மூக்கின் வழியாய் மூச்சுவிடல்; letting out the breath rythmically through one nostrils in the course of praṇāyamā (சா.அக.).

இரேசகி *irēšaki,* பெ.(n.) 1. கடுக்காய்; Indian galnut; myrobalan. 2. சீந்தில்; moon creeper (சா.அக.).

இரேசகிக்குடிரம் *irēšagikkudiram,* பெ.(n.) மலை எருக்கு; species of madar grown on the hills-calotropis gigantea (சா.அக.).

இரேசகுணம் *irēšakuṇam,* பெ.(n.) குளிர் தாமரை; floating lotus, sky lotus (சா.அக.).

இரேசக்கடுகு *irēšakkadugu,* பெ.(n.) செங்கடுகு; brown mustard (சா.அக.).

இரேசக்குணா *irēša-k-kuṇā,* பெ.(n.) கடுகு; mustard (சா.அக.).

இரேசக்கொடி *irēšakkodi,* பெ.(n.) ஊணாங்கொடி; silver weed (சா.அக.).

இரேசந்திரம் *irēšantiram,* பெ.(n.) இதளியம் (பாதரசம்); mercury (சா.அக.).

இரேசப்பூடு *irēša-p-pūdu,* பெ.(n.) வெள்ளைப் பூண்டு; garlic (சா.அக.).

இரேசலம் *irēšalam,* பெ.(n.) நெல்லி நிறம்; the colour of goose berry-yellowish colour (சா.அக.).

இரேசன் *irēšaṉ,* பெ.(n.) **இரேசனி** பார்க்க; see *irēšaṉi* (சா.அக.).

இரேசனம் *irēšaṉam,* பெ.(n.) 1. கழிச்சல் மருந்து; a purgative a catharlic. 2. கழிச்சல்; purging (சா.அக.).

இரேசனி[1] *irēšaṉi,* பெ.(n.) வெள்ளுள்ளி; garlic (சா.அக.).



இரேசனி[2] *irēšaṉi,* பெ.(n.) 1. சிவதை; indian jalap. 2. ஞாழல்; orange cupcasslyxed brasiletto. 3. நேர்வாள விதை; croton seed. 4. மனோ சிலை; realgar (நாநார்த்த.).

இரேசி[1]–த்தல் *irēci-,* 11 செ.குன்றாவி. (v.t.) மூச்சைப் புறத்து விடுதல்; to breatheout, empty the lungs. *"மதியிலிருநான் கிரேசித்து" (காசிக. யோக.23).*

இரேசி[2]–த்தல் *irēci-,* 11 செ.குன்றாவி.(v.t.) ஒன்று சேரும்படிக் குழைத்தல்; to mix upto become one (சா.அக.).

இரேசிதம் *irēšidam,* பெ.(n.) 1. குதிரை வேகத்தில் ஒருவகை; canter of a horse, one of five *acuva-kati* (w.). 2. நாட்டிய வகை; a mode of dancing. *"அங்ககாரமே யிரேசித மென்ன" (திருவிளை. கான்மா.9).*

[Skt. rēcita > த. இரேசிதம்.]

இரேசுதல் *irēšutal,* பெ.(n.) செரிமானம் ஆகாநிலை; the state of indigestion (சா.அக.).

இரேணு[1] *irēṇu,* பெ.(n.) 1. பூந்தாது; pollen. 2. அழகு; beauty (சா.அக.).

இரேணு[2] *irēṇu,* பெ.(n.) பற்படகப்புல் (நாநார்த்த.); fever plant.

[Skt. rēṇu > த. இரேணு.]

இரேணு[3] *irēṇu,* பெ.(n.) துகள்; dust, atom of dust. *"வணங்கிரேணு வடிவுமிலாது" (சங்.அக.தக்ஷிணகை. அர்ச்ச.36).*

[Skt. rēṇu > த. இரேணு.]

இரேணுகம் *irēṇugam,* பெ.(n.) ஒரு வகை மருந்துப் பொருள்; a fragrant drug.

[Skt. rēṇukā > த. இரேணுகம்.]

இரேணுகாமூலி *irēṇukāmūli,* பெ.(n.) செவ்வாமணக்கு; a red variety of castor (சா.அக.).

இரேணுகை[1] *irēṇukai,* பெ.(n.) 1. தவிடு; bran. 2. தக்கோலம்; cubeb.

[Skt. rēṇukā > த. இரேணுகை.]

இரேணுகை² *irēṇukai,* பெ.(n.) காட்டு மிளகு; wild pepper (சா.அக.).

இரேதகம் *irētakam,* பெ.(n.) விந்து; semen, semen virile (சா.அக.).

இரேதசு *irēdašu,* பெ.(n.) விந்து; semen virile.

[Skt. rētas > த. இரேதசு.]

இரேதசுகலிதம் *irētašukalitam,* பெ.(n.) தானாக விந்து ஒழுகிவிடல்; involuntary discharge of semen (சா.அக.).

இரேபன் *irēbaṉ,* பெ.(n.) 1. கொடியவன்; cruel man. 2. இகழத் தக்கவன்; contemptible man.

[Skt. rēpa > த. இரேபன்.]

இரேயம் *irēyam,* பெ.(n.) 1. காய்ச்சி வடித்த சாராயம்; spirituous liquor. 2. கள்; toddy.

[Skt. airēya > த. இரேயம்.]

இரேவடம் *irēvaḍam,* பெ.(n.) 1. வலம்புரிச் சங்கு; conch with right spirals. 2. சூறைக் காற்று; whirl wind. 3. மூங்கில்; bamboo (நாநார்த்த.).

[Skt. rēvaṭa > த. இரேவடம்.]



இரேவணசித்தர் *irēvaṇa-sittar,* பெ.(n.) அகராதி நிகண்டின் ஆசிரியர். இவரது முழுப் பெயர் புலியூர்ச் சிதம்பர ரேவண சித்தர்; இந்நிகண்டின் காலம் கி.பி.1594; author of a thesaurus inverse as giving the words in alphabetical order in AD 1594.

இரேவணாராத்தியர் *irēvaṇārāttiyar,* பெ.(n.) சிவஞான தீவவாசிரியர்; name of a Brahmin devotee of *Vīra-šaiva* persuasion, author of the *Šiva-ñāṉa-tīpam.*

[Skt. rēbhaṇa+ā-rādhya> த. இரேவணா ராத்தியர்.]

இரேவதர் *irēvatar,* பெ.(n.) புத்தர்களுள் ஒருவர் (மணிமே.பக்.369); a buddha.

[Skt. rēvata > த. இரேவதர்.]

இரேவதி *irēvadi,* பெ.(n.) 1. இருபத்து ஏழாம் விண்மீன்; the 27th nakṣatra, part of pisces. 2. பலராமனின் மனைவி (பிங்.); wife of *Balarāma.*

த.வ. தொழுபஃறி.

[Skt. rēvati > த. இரேவதி.]

இரேவற்சின்னி *irēvaṟ-ciṉṉi,* பெ.(n.) 1. சீன மஞ்சட் கிழங்கு; rhubarb. 2. மரவகை; ceylon gamboge.

[U. revandcīnī > த. இரேவற்சின்னி.]

இரேவல்சீனி *irēvalcīṉi,* பெ.(n.) **இரேவற் சின்னி** பார்க்க; see *irēvaṟciṉṉi* (சா.அக.).

இரேவல்சீனிப்பால் *irēvalcīṉippāl,* பெ.(n.) மக்கிப்பால்; rhubarb milk product of Garcinia morella (சா.அக.).

இரேவை¹ *irēvai,* பெ.(n.) நருமதை ஆறு (பிங்.); the river Narmada.

[Skt. rēvā > த. இரேவை.]

இரேவை² *irēvai,* பெ.(n.) அவுரி (நாநார்த்த.); indigo.

[Skt. rēvā > த. இரேவை.]

இரௌத்தன் *irauttaṉ,* பெ.(n.) **இராவுத்தன்** பார்க்க; see *irāvuttaṉ.*

[Skt. rāja-dūta>U.rāūt> த. இரௌத்தன்.]

இரௌத்திரம் *irauttiram,* பெ.(n.) 1. பெருஞ் சினம்; great anger, wrath. 2. ஒன்பான் சுவைகளுள் ஒன்று (திவா.); sentiment of anger of fury, one of *nava-racam*(rhet.). 3. பகலிரவுகளுக்குத் தனித்தனியே உரிய15 நல்ல நேரங்களுள் முதலாவது (விதான. குணா.73, உரை); the first of 15 divisions of day or night.

த.வ. எரிசினம்.

[Skt. raudra > த. இரௌத்திரம்.]

இரௌத்திராகாரம் *irauttirākāram,* பெ.(n.) பெருஞ்சினத் தோற்றம்; inexorable mien, ferocious appearance.

த.வ. எரிசினத்தோற்றம்.

[Skt.raudra+ākāra>த.இரௌத்திராகாரம்.]

இரௌத்திரி[1] *irauttiri,* பெ.(n.) ஒரு சிவசத்தி (சைவபூ.சந்.219); a sakti of *śiva.*

[Skt. raudri > த. இரௌத்திரி.]

இரௌத்திரி[2] *irauttiri,* பெ.(n.) ஓர் ஆண்டின் பெயர்; the 54th year of the jupiter cycle.

[Skt. raudri > த. இரௌத்திரி.]

இரௌரவம் *irauravam,* பெ.(n.) 1. ஒரு நிரையம்; a hell. 2. சிவத் தோன்றியத்துள் ஒன்று; a *śaiva* scripture in Sanskrit, of a part of which the Tamil *Civā-ñāṉapōtams* is said to be a translation one of 28 *sivākamam.*

[Skt. raurava > த. இரௌரவம்.]

இல்லாடம் *illāḍam,* பெ.(n.) நெற்றி; forehead.

இல்லாடலிபி *illāḍalibi,* பெ.(n.) தலை யெழுத்து; fate, destiny.

இல்லாடவிளிம்பு *illāḍavilimbu,* பெ.(n.) 1. தலைமுட்டு; coronol suture. 2. நெற்றி எலும்பையும் பித்திகை எலும்பையும் ஒரு காதினின்று மற்றொரு காது வரையில் சென்று இணைக்கும் வரி; the coronal suture which connects the parietal and the frontal bones.

இல்லாடோதயம் *illāḍōtayam,* பெ.(n.) மகப்பேற்றின் போது குழந்தை நெற்றி வெளிவருதல்; presentation of the forehead in delivery.

இல்வலன் *ilvalaṉ,* பெ.(n.) வாதாபியின் தமையனான அசுரன் (வேதாரணி. மணவளை.13); a daitya, elder brother of *vātāpi*, destroyed by agastya.

[Skt. ilvala > த. இல்வலன்.]

இலக்கினம் *ilakkiṉam,* பெ.(n.) 1. பிறப்பு ஓரையின் தோற்றம்(விதான. மரபி. 3, உரை); rising of a sign of the zodiac. 2. நன் முழுத்தம் (இரகு. முடிசூ.63); hour fixed for auspicious ceremonies.

[Skt. lagna > த. இலக்கினம்.]

இலக்கினாதிபதி *ilakkiṉādipati,* பெ.(n.) பிறப்போரைக்கு (இலக்கினத்திற்கு) உரியவன்; ruling planet of the ascendant.

த.வ. ஓரையன்.

[Skt. lagna+adipati>த. இலக்கினாதிபதி.]

இலக்குமணன் *ilakkumaṇaṉ,* பெ.(n.) இராமனின் தம்பி (காஞ்சிப்பு. வீரராக.8); the brother and faithful companian of R*āma* during his exile.

[Skt. laksmaṇa > த. இலக்குமணன்.]

இலக்குமன் *ilakkumaṉ,* பெ.(n.) **இலக்குமணன்** பார்க்க (திவ். பெரியதி.2, 3, 7); see *ilakkumaṇaṉ.*

[Skt. laksmaṇa > த. இலக்குமணன் > த. இலக்குமன்.]

இலக்குமி *ilakkumi,* பெ.(n.) 1. அரியின் மனைவி; the consort of *Visṇu.* 2.திருமகள்; the goddess of prosperity.3. செல்வம்; good fortune. 4. மஞ்சள் (விநாயகபு. 3:57); turmeric.

[Skt. lakṣmi > த. இலக்குமி.]

இலக்குவன் *ilakkuvaṉ*, பெ.(n.) **இலக்குமணன்** பார்க்க (கம்பரா.மாரீச.57); see *ilakkumaṇaṉ*.

[Skt. lakṣmaṇa > த. இலக்குவன்.]

இலக்கை *ilakkai*, பெ.(n.) பாதுகாவல்; protection. *"இலக்கை யற்றதவ் விலங்கைக்கு மிராவணன் றனக்கும்" (கம்பரா. கும்பகரு. 339).*

[Skt. raksa > த. இலக்கை.]

இலகடம் *ilakaḍam*, பெ.(n.) அம்பாரி; howdah. *"யானைமேல்...... பொன்னிலகடங்கள்" (கலிங்.புதுப்.278).*

[Mhr. lagada > த. இலகடம்.]

இலகிரி[1] *ilakiri*, பெ.(n.) 1. அபினி; opium. 2. கஞ்சா; gunjah, which is the produce of cannabis satives. 3. சாதிக்காய்; nutmeg. 4. சாதிப்பத்திரி; mace covering the nutmeg kernal. 4. மயக்கத்தை உண்டு பண்ணும் பொருள்; intoxicating substance in general (சா.அக.).

இலகிரி[2] *ilakiri*, பெ.(n.) அறிவு நூலில் கூறியுள்ள மெய் மறந்த ஒரு நிலைமை; இலகிரியில் சொக்குதல்; (in philosophy) a modifical of physical consciousnes in which the man forget all about him (சா.அக.).

இலகிமா *ilakimā*, பெ.(n.) எட்டுப் பேறுகளில் (அட்டமா சித்திகள்) ஒன்று. அதாவது பஞ்சினொய்தாதல்; இலேசாதல் (திருவிளை. அட்டமா.24); one of the eight supernatural powers practised by siddhars, i.e the art of becoming as soft as cotton on becoming extremely light as dust. It also includes the art of floating on the surface of water, or in the atmosphere.

[Skt. laghiman > த. இலகிமா.]

இலகோட்டா *ilakōṭṭā*, பெ.(n.) மரவகை; loquat.

[Chi. luhwat > த. இலகோட்டா.]

இலங்கணி *ilaṅgaṇi*, பெ.(n.) அங்கார தாரை (இராமநா.சுந்தர.2); a female demon who was the keeper of the entrance gate of the city of *laṅkā*, slain by *Hanumān*.

[Skt. laṅkā > த. இலங்கணி.]

இலங்கனம்[1] *ilaṅgaṉam*, பெ.(n.) 1. தடை; stopping, opposing, preventing. *"இத்தர்மத்தை இலங்கனம் பண்ணுவான்" (S.I.I.IV, 20).* 2. நோன்பு; fasting.

[Skt. laṅghana > த. இலங்கனம்.]

இலங்கனம்[2] *ilaṅkaṉam*, பெ.(n.) கடக்கை (நாநார்த்த.); transgression.

[Skt. laṅghana > த. இலங்கனம்.]

இலங்காபுரம் *ilaṅgā-puram*, பெ.(n.) இராவணனின் தலைநகரம் (திவ்.இயற்.3, 51); capital city of the *Laṅkā* of *Rāvaṇa*.

[Skt. laṅka+puram > த. இலங்காபுரம்.]

இலங்காபுரி *ilaṅgā-puri*, பெ.(n.) **இலங்காபுரம்** பார்க்க; see *ilaṅgāpuram*.

[Skt. laṅka+puri > த. இலங்காபுரி.]

இலங்கிகன் *ilaṅkikaṉ*, பெ.(n.) துறவி (அக.நி.); asetic.

[Skt. lingi > த. இலிங்கிகன்.]

இலங்கோடு *ilaṅkōḍu*, பெ.(n.) நீர்ச்சீலை (கோவணம்); stripe of cloth fitted to the loins. *"இலங்கோடு கௌபீனமே" (அலங்காரச் சிந்து.16).*

[Hind. laṅgōṭa > த. இலங்கோடு.]

இலச்சி-த்தல் *ilacci-*, 11 செ.குன்றாவி.(v.t.) நாணுதல்; to be bashful, coy, shy.

[Skt. lajja > த. இலச்சி-.]

இலச்சை *ilaccai*, பெ.(n.) 1. கூச்சம்; bashfulness, coyness, shyness (பிங்.). 2. நாணம்; shame.

[Skt. lajjā > த. இலச்சை.]

இலச்சைக்கேடு *ilaccai-k-kēḍu,* பெ.(n.) வெட்கக் கேடு; shamelessness.

த.வ. நாணக்கேடு.

[இலச்சை+கேடு.]

[Skt. lajjā + > த. இலச்சை.]

இலட்சணகாவியம் *ilaṭcaṇa-kāviyam,* பெ.(n.) அகத்தியர் இயற்றிய ஐந்து பாடங்கள் பற்றிய ஐந்து தொகுப்புகள்; one of the five volumes compiled by Agastya on five different subjects (சா.அக.).

இலட்சணம் *ilaṭcaṇam,* பெ.(n.) 1. அழகு; beauty. 2. இயல்பு; nature quality. 3. அடையாளம்; symbol, sign.

[த. இலக்கணம் > Skt. லக்ஷண > த. இலட்சணம்.]

சிறந்த நடைக்கு எடுத்துக்காட்டாக கற்றோர் பின்பற்றும் இலக்கு.

இலட்சணமாயி *ilaṭcaṇamāyi,* பெ.(n.) வெண்காரவுள்ளி; white onion - *Allium cepa* (சா.அக.).

இலட்சம் *ilaṭcam,* பெ.(n.) நூறாயிரம்; lakh, 1,00,000.

[த.இலக்கம்>Skt.லக்ஷ>த. இலட்சம்.]

இலட்சாதிகாரி *ilaṭcātikāri,* பெ.(n.) பெருஞ் செல்வன்; wealthy man, lord of a lakh.

[Skt. lakṣa+adikāri > த.இலட்சாதிகாரி.]

இலட்சாதிபதி *ilaṭcātipati,* பெ.(n.) **இலட்சாதிகாரி** பார்க்க; see *ilaṭcātikāri.*

[Skt. lakṣa+adipati > த. இலட்சாதிபதி.]

இலட்சியம் *ilaṭciyam,* பெ.(n.) 1. குறி; aim, target. 2. மதிப்பு; esteem, respect.

[த.இலக்கியம்>Skt.லக்ஷ்ய>த. இலட்சியம்.]

இலட்சுணா *ilaṭcuṇā,* பெ.(n.) பெரு வழுதலை; long brinjal (சா.அக.).

இலட்சுமணபுத்திரர் *ilaṭcumaṇaputtirar,* பெ.(n.) நறுந்தாளி; a fragrant plant of the convolvulus (சா.அக.).

இலட்சுமணமூலம் *ilaṭcumaṇamūlam,* பெ.(n.) **இலட்சுமணபுத்திரர்** பார்க்க; see *ilaṭcumaṇaputtirar* (சா.அக.).

இலட்சுமணம் *ilaṭcumaṇam,* பெ.(n.) தாளி; American bind weed (சா.அக.).

இலட்சுமி[1] *ilaṭcumi,* பெ.(n.) திருமகள்; *Lakṣmī,* goddess of prosperity.

[Skt. lakṣmī > த. இலட்சுமி.]

இலட்சுமி[2] *ilaṭcumi,* பெ.(n.) 1. அரிதாரம்; orpiment. 2. வன்னி; suma tree. 3. பொடுதலை; a plant-verbena nodiflora. 4. பன்னீர்; rose water. 5. தாளி; American bind weed (சா.அக.).

இலட்சுமிசிரேட்டர் *ilaṭcumisirēṭṭar,* பெ.(n.) வெளித்தாமரை; sky Lotus, the roots of which float in the air (சா.அக.).

த.வ. ஆகாசத்தாமரை.

இலட்சுமிசுவர்ணம் *ilaṭcumisuvarṇam,* பெ.(n.) பொன் வண்ணச் சாலி; a gold coloured plant unidentified (சா.அக.).

இலட்சுமிசேர்க்கை *ilaṭcumi-cērkkai,* பெ.(n.) வன்னி; suma tree (சா.அக.).

இலட்சுமிசைபத்திரசனனி *ilaṭcumišai pattiracaṉaṉi,* பெ.(n.) தாளி; American bind weed.

இலட்சுமிநாசனி *ilaṭcuminā̄šaṉi,* பெ.(n.) 1. தான்றிக்காய்; devils abode. 2. தாளி; American bind weed (சா.அக.).

இலட்சுமிரேட்டம் *ilaṭcumirēṭṭam,* பெ.(n.) ஓரிதழ்த் தாமரை; a little herb with mono petalous flower (சா.அக.).

இலட்சுமிவண்டு *ilaṭcumivaṇḍu,* பெ.(n.) கரப்பான்பூச்சி; cockroach, is a harbinger of prosperity.

[இலட்சுமி + வண்டு.]

***[Skt.** lakṣmi>த. இலட்சுமி.]*



இலட்சுமிவிலாசம் *ilaṭcumivilāšam,* பெ.(n.) 1. பாக்கு; areca-nut. 2. வெள்ளரிசி அல்லது பச்சரிசி; raw rice (சா.அக.).

இலட்சோபலட்சம் *ilaṭcōbalaṭcam,* பெ.(n.) பெருந்தொகை; lakhs upon lakhs, vast numbers.

***[Skt.** lakṣa+upa-lakṣa>த.இலட்சோபலட்சம்.]*

இலட்டு *ilaṭṭu,* பெ.(n.) உருண்டை வடிவான இனிப்பு வகை; sweet meat balls in many varities.

த.வ. இன்னுருண்டை.

***[Skt.** laḍḍu > த. இலட்டு.]*

இலட்டுகம் *ilaṭṭugam,* பெ.(n.) **இலட்டு** பார்க்க; see *ilaṭṭu.*

***[Skt.** laḍḍuka > த. இலட்டுகம்.]*

இலட்டுவம் *ilaṭṭuvam,* பெ.(n.) **இலட்டு** பார்க்க (திவ்.பெரியாழ்.2, 9, 9); see *ilaṭṭu.*

***[Skt.** laḍḍuka > த. இலட்டுவம்.]*

இலட்டை[1] *ilaṭṭai,* பெ.(n.) அப்பம் (அக.நி.); round cake of rice flour and sugar.

***[Skt.** laḍḍu > த. இலட்டை.]*

இலட்டை[2] *ilaṭṭai,* பெ.(n.) 1. அடை, தோசை; cake. 2. பொரிமா உருண்டை; a ball made of fried rice flour and sugar (சா.அக.).

இலடகம் *iladagam,* பெ.(n.) புளிய மரம்; tamarind tree (சா.அக.).

இலடதாவிகம் *iladatāvikam,* பெ.(n.) எருமை முன்னை; heart leaved dusky fire brand teak (சா.அக.).

இலடம் *iladam,* பெ.(n.) புளியமரம்; tamarind tree (சா.அக.).

இலடவி *iladavi,* பெ.(n.) நான்கு வகைப்பட்ட நறுமணமுள்ள கட்டைகளுள் கள்ளி மரத்தினுள் இருக்கும் கட்டை; an aromatic wood which consist of four varities, white, red, yellow and black. Its formed inside the kalli tree (சா.அக.).

இலண்டம் *ilaṇḍam,* பெ.(n.) யானை, குதிரை முதலியவைகளின் சாணம்; dung as of elephants, horses etc. (சா.அக.).

இலண்டனாமணக்கு *ilaṇḍaṉāmaṇakku,* பெ.(n.) சீமை ஆமணக்கு; foreign castor plant (சா.அக.).

[இலண்டன் + ஆமணக்கு.]

[E. London > த. இலண்டன்.]

இலண்டன்பருத்தி *ilaṇḍaṉparutti,* பெ.(n.) அமெரிக்கா நாட்டுப் பருத்தி; American cotton tree or plant (சா.அக.).

த.வ. இலாடன் பருத்தி.

[இலண்டன் + பருத்தி.]

[E. London > த. இலண்டன்.]

இலணை *ilaṇai,* பெ.(n.) அரசு; peepul tree (சா.அக.).



இலதிகை *ilatigai,* பெ.(n.) சிறுபடர் கொடி; a small spreading plant (சா.அக.).

இலதுமுகி *ilatumuki,* பெ.(n.) கல்லுப் பயிற்றங் கொடி; a kind of country bean (சா.அக.).

இலபனம் *ilabaṉam,* பெ.(n.) வாய் (Anat.); mouth (சா.அக.).

[Skt. lapana > த. இலபனம்.]

இலபனரம் *ilabaṉaram,* பெ.(n.) வாய்ப்புண்; the formation of small superficial ulcers in the mucous membrane of the mouth (சா.அக.).

இலபி-த்தல் *ilabi-,* 11 செ.குன்றாவி.(v.t.) 1. நேர்தல், நிகழ்தல்; happening. 2. வாய்வேக்காடு; inflammation of the mouth, stomatitis (சா.அக.).

இலபேதகி *ilapētagi,* பெ.(n.) கழுநீர்ப்பூ; water lily (சா.அக.).

இலம்பம் *ilambam,* பெ.(n.) 1. உயர்வு; height. 2. மிகு அகலம்; expanse, width.

[Skt. lamba > த. இலம்பம்.]

இலமலர் *ilamalar,* பெ.(n.) இலவ மலர்; flower of silk cotton tree (சா.அக.).



இலயசத்தி *ilayasatti,* பெ.(n.) சிவனியக் கொண்முடிபில் உருவமில்லாத சிவனின் சத்தி (சி.சி.2, 75, மறைஞா); (*Śaiva) Śakti* of ilaya *Śivaṉ.*

[Skt. laya-satti > த. இலயசத்தி.]

இலயதத்துவம் *ilayatattuvam,* பெ.(n.) ஊழிக்காலத்தில் தன் செயல்களெல்லாம் ஒடுங்கிக் காரண மாத்திரையாய் நிற்கும் இறைவனிலை (சி.சி.6, 6, ஞானப்.); *(Śaiva)* state of the supreme being during the *maka-caṅkāram.*

[Skt. laya-tattva > த. இலயதத்துவம்.]

இலயம் *ilayam,* பெ.(n.) 1. அழிவு; dissolution. 2. இரண்டறக்கலத்தல்; merging, absorption. 3. ஞானத்தை மட்டும் திருமேனியாக உடைய கடவுள் நிலை; state of god in which knowledge alone is manifest, one of three avattai (*Śaiva*). 4. ஒழிவு (சீவக.1256); effacement. 5. தாளவறுதி; exactness of time-measure. *"ஆக்கிய விலயம் நீங்கிற்று" (சீவக.1258).* 6. சருதிலயம்; union of song, dance and instrumental music. *"பண்ணிய விலயம் பற்றிப் பாடிய" (சீவக.727).* 7. கூத்து; a dance *"இலயங்களாடக் கண்டேன்" (தேவா. 1234, 6).*

[Skt. laya > த. இலயம்.]

இலயமாதல் *ilayamātal*, பெ.(n.) 1. ஒன்றுபடல்; to be united, absorbed, an euphemism for dying. 2. அழிதல்; to vanish, to fade away. *"சாந்த மிலயமா வாடுகின்றான்" (சீவக. 1256).*

இலயமுத்தி *ilaya-mutti*, பெ.(n.) பரம் பொருளொடு இரண்டறக் கலக்கையாகிய (முத்தி) வீடுபேறு (யாழ்.அக.); salvation through absorbtion into God head.

[இலயம் + முத்தி.]

*[**Skt.** laya> த. இலயம்.]*

*த. முத்தி > **Skt.** mukti*

இலயன் *ilayaṉ*, பெ.(n.) உருவமற்ற சிவன்; the formless aspect of *Śiva* in which he is united with the energy of knowledge.

*[**Skt.** laya > த. இலயன்.]*

இலயி-த்தல் *ilayi-*, 11 செ.கு.வி.(v.i.) 1. ஒடுங்கல்; to dissolve; to be reduced to original state, as the elements, etc., at the dissolution of the world. *"இலயித்த தன்னி லிலயித்ததாம்" (சி.போ.1, 2, 1).* 2. இரண்டறக் கலத்தல்; to be absorbed as a soul in the diety. 3. ஐக்கியமாதல்; to unite. 4. அழிதல்; to come to destruction, die, perish.

*[**Skt.** lay > த. இலயி-.]*

இலயை *ilayai*, பெ.(n.) தாள உறுப்புகளில் ஒன்று (பரத. தாள.51); element of time-measure which specifies the pace at which a composition is to be performed, of three kinds, one of ten *tāḷa-p-pirāṇam*

*[**Skt.** laya > த. இலயை.]*

இலலாடம் *ilalāḍam*, பெ.(n.) நெற்றி (பிங்.); forehead.

*[**Skt.** lalāṭa > த. இலலாடம்.]*

இலலாடலிபி *ilalāṭa-lipi*, பெ.(n.) தலையெழுத்து; lines on the skull regarded as *Brahmā's* writing indicative of one's destiny; fate.

*[**Skt.** lalāṭa+lipi > த. இலலாடலிபி.]*

இலலாலம் *ilalālam*, பெ.(n.) 1. குதிரை; horse. 2. வரி; the lines on the palm forehead etc.

இலலிதபஞ்சமி *ilalita-pañchami*, பெ.(n.) பண்வகை (பரத. ராக.103); (Mus.) a specific melody-type.

*[**Skt.** lalita-pañchami>த. இலலிதபஞ்சமி.]*

இலவிதை *ilavithai*, பெ.(n.) மான் மதம் (கத்தூரி); musk.

இலவகம் *ilavakam*, பெ.(n.) தசையரும்புகள்; small round fleshy masses in a wound.

இலவணம் *ilavaṇam*, பெ.(n.) 1. உப்பு; common salt. 2. உவர்ப்பு; saltness (சா.அக.).

*[**Skt.** lavaṇa > த. இலவணம்.]*

இலவணவாயு *ilavaṇa-vāyu*, பெ.(n.) உப்பு வாயு; nitrogen.

*[**Skt.** lavaṇa-vāyu > த. இலவணவாயு.]*

இலவணவாழை *ilavaṇa-vāḻai*, பெ.(n.) ஒரு வாழை; a kind of plantain.

[இலவணம் + வாழை.]

*[**Skt.** lavana > த. இலவணம்.]*

இலவணவாழைக்குழிநீர் *ilavaṇa-vāḻai-k-kuḻinir*, பெ.(n.) வாழை மரத்தின் அடியில் நிற்கும் தண்ணீர்; water found deposited at the bottom of the plaintain tree.

[இலவணம் + வாழை + குழிநீர்.]

*[**Skt.** lavana > த. இலவணம்.]*

இலவணவித்தை *ilavaṇavittai*, பெ.(n.) 1. உப்பை நெருப்பிற்கு ஓடாதபடிக் கட்டும் கலை; the art of consolidating common salt or any salt so as to melt in field. 2. ஒரு வகை கண்கட்டுக் கலை; kind of jugglery.

இலவணவேதை *ilavaṇa-vēdai,* பெ.(n.) உப்பைக் கட்டி அதினின்று பொன்னாக்கம் செய்தல்; transmiting metals into gold with the aid of consolidated salt.

இலளிதம் *ilaḷidam,* பெ.(n.) 1. விருப்பம், ஆசை (நாநார்த்த.); longing wish. 2. பொருளின் தெளிவு; lucidity of expression.

[**Skt.** *lalita* > *த. இலளிதம்.*]

இலளிதை[1] *ilaḷidai,* பெ.(n.) பார்வதி; *Pārvati,* literally a gentle, tender - hearted woman. *"இலளிதை மாதினை உயிர்த்தான்" (காஞ்சிப்பு. திருவே.5).*

[**Skt.** *lalitā* > *த. இலளிதை.*]

இலளிதை[2] *ilaḷitai,* பெ.(n.) ஒருவகை முத்தாரம் (நாநார்த்த.); a kind of pearl necklace.

[**Skt.** *laḷita* > *த. இலளிதை.*]

இலாக்கா *ilākkā,* பெ.(n.) 1. மாவட்டம்; district, jurisdiction. 2. அலுவலகத் துறை; department.

[**Arab.** *ilāqā* > *த. இலாக்கா.*]

இலாக்கை[1] *ilākkai,* பெ.(n.) 1. செம்பஞ்சு (நாநார்த்த.); red cotton. 2. அரக்கு; shell-lac.

[**Skt.** *laksā* > *த. இலாக்கை.*]

இலாக்கை[2] *ilākkai,* பெ.(n.) 1. இந்திர கோபத்தைப் போன்ற பூச்சி; an insect resembling ladies fly. 2. ஈர்; louse.

இலாகவம் *ilāgavam,* பெ.(n.) திறமை; dexterity, skill, knack. *"குலிசமன்னுங் கையிலாகவத்தினோடும்" (திருவாலவா. 1, 14).*

[**Skt.** *lāghava* > *த. இலாகவம்.*]

இலாகா *ilākā,* பெ.(n.) **இலாக்கா** பார்க்க; see *ilākkā.*

[**Arab.** *ilāqā* > *த.இலாகா.*]

இலாக்கிரி *ilākkiri,* பெ.(n.) செம்மெழுகு; red sealing wax.

இலாகிரிவத்து *ilākirivattu,* பெ.(n.) மயக்கத்தை உண்டு பண்ணும் பொருள்; intoxicating drug or other substances (சா.அக.)

[*தெ.lāhir> த.இலாகிரி.*]

இலாகு *ilāgu,* பெ.(n.) தாங்கல்; support, hold. *"மகாசந்நிதானம் திருவீதிக்கு எழுந்தருளும் போது இளையதம்பிரான்கள் கைலாகு கொடுத்து வந்தனர்" (தஞ்.வ.).*

[**Skt.** *lāga* > *த.இலாகு.*]

இலாகுளம் *ilāguḷam,* பெ.(n.) சிவனியப் பிரிவுகளுள் ஒன்று (திருக்காளத். பு.30, 26); name of a *Śaiva* sect founded by *lakuliśa.*

[**Skt.** *lākula* > *த. இலாகுளம்.*]

இலாங்கலம் *ilāṅkalam,* பெ.(n.) 1. பூவகை; a kind of flower. 2. பனை; palmyra. 3. கலப்பை; plough. 4. கொடுங்கை; curved cornice. 5. ஆண்குறி; the genital part of a male (சா.அக.).

[**Skt.** *lāṅgala* > *த. இலாங்கலம்.*]

இலாங்கலி[1] *ilāṅkali,* பெ.(n.) 1.செங்காந்தள்; flame flower. 2. தென்னை; cocoanut. 3. தென்னை பனை முதலியன; palmyra tree in general. 4. கார்த்திகைப் பூ; white species of November flower.

[**Skt.** *laṅgali* > *த. இலாங்கலி.*]

இலாங்கலி[2] *ilāṅkali,* பெ.(n.) கலப்பை (பிங்.); plough.

[**Skt.** *lāṅgala* > *த. இலாங்கலி.*]



இலாங்கலிகம் *ilāṅkaligam,* பெ.(n.) கலப்பைக் கிழங்கு; plough root.

இலாங்கலித்தைலம் *ilāṅkali-t-tailam,* பெ.(n.) தேங்காய்ப் பாலில் மருந்துச் சரக்குகளைப் போட்டுக் காய்ச்சி இறக்கும் நெய்மம்; a medicated oil extracted from cocoanut milk mixed with other drugs.

இலாங்கூலம் *ilāṅkūlam,* பெ.(n.) ஆண்குறி (நாநார்த்த.); membrum virile.

[Skt. laṅgūla > த. இலாங்கூலம்.]

இலாச்சம் *ilāccam,* பெ.(n.) 1. தவச அளவை வகை; a dry measure (j.). 2. ஒரு நில அளவை; space of land in the proportion of 18 units of length to oen of breadth.

[Port. lash > த. இலாச்சம்.]

இலாசவோமம் *ilāca-v-ōmam,* பெ.(n.) திருமணத்தின் போது பொரியால் செய்யப்படும் வேள்வி (சீவக.2464, உரை); sacrificial act of throwing parched paddy into the sacred fire in a marriage ceremony.

[Skt. lāja+hōma > த. இலாசவோமம்.]

இலாஞ்சனை[1] *ilāñjaṉai,* பெ.(n.) 1. குறி; sign, symbol, mark. 2. முத்திரை; seal, signet bearing the name or symbol of the owner. 3. உருத்தோன்ற அச்சுக்கட்டின படம்; outline of a picture. *"நீனிறத் திலாஞ்சனை யெனவும்" (வேதா.சூ.43).* 4. மதிப்பு; credit, esteem.

[Skt. lāñchana > த. இலாஞ்சனை.]

இலாஞ்சனை[2] *ilāñjaṉai,* பெ.(n.) கூச்சம்; bashfulness.

[Skt. lajjā > த. இலாஞ்சனை.]

இலாஞ்சனம் *ilāñjaṉam,* பெ.(n.) **இலாஞ்சனை** பார்க்க; see *ilāñjaṉai.*

இலாஞ்சி *ilāñji,* பெ.(n.) ஏலம்; cardomom plant.

[U. ilāci > த. இலாஞ்சி.]

இலாஞ்சினைப்பேறு *ilāñjiṉai-p-pēṟu,* பெ.(n.) பழைய வரிவகை (S.I.I.ii, 115); an ancient tax.

[Skt. lāñchana+pēṟu>த. இலாஞ்சினைப் பேறு.]

இலாட்சை *ilāṭcai,* பெ.(n.) செல்வாக்கு; red lac. *"இலாட்சைச் சத்தான தைலத்தின்" (தைலவ.தைல.60).*

[Skt. lākṣā > த. இலாட்சை.]

இலாடம்[1] *ilāḍam,* பெ.(n.) சேலை (நாநார்த்த.); saree.

[Skt. lāṭa > த. இலாடம்.]

இலாடம்[2] *ilāḍam,* பெ.(n.) குருகு (மூலம்) விண்மீனுக்கும் கதிரவனுக்கும் உள்ள தொலைவை யொட்டி வரையறுக்கும் நாள் (பஞ்.); (astron.) the day in which the sun's position is in a specified relation to the constellation *mūlam.*

[Skt. lāṭa > த. இலாடம்.]

இலாடம்[3] *ilāḍam,* பெ.(n.) குதிரைக் காலில் பொருத்தும் இரும்புக் காலணி; horse shoe.

த.வ. குளம்பணி.

[U. lāḍa > த. இலாடம்.]

இலாபகரம் *ilāba-karam,* பெ.(n.) ஊதியம் தருவது; that which is profitable.

[Skt. lābha+> த. இலாபகரம்.]

இலாபத்தானம் *ilāba-t-tāṉam,* பெ.(n.) பிறப்போரைக்கு (இலக்கினத்திற்கு)ப் பதினோராமிடம்; the 11th house from the ascendant, as indicative of prosperity.

[Skt. lābha+stāna > த. இலாபத்தானம்.]

இலாபநட்டம் *ilāba-naṭṭam,* பெ.(n.) ஆதாயமும், இழப்பும்; profit and loss.

த.வ. ஆகுபோகு.

[Skt. lābha+naṣṭa > த. இலாபநட்டம்.]

இலாபம் *ilābam,* பெ.(n.) 1. ஆதாயம்; gain, profit. 2. பயன்; advantage, benefit. 3. தவச அளவையில் முதலெண்ணுக்கு வழங்கும் சொல்; `fortunate first', an

auspicious term applied to the first unit in measuring grain.

த.வ. ஆகு, ஆதாயம்.

[Skt. lābha > த. இலாபம்.]

இலாபாந்தராயம் *ilāpāntarāyam,* பெ.(n.) குறித்த பேற்றை இடைநின்று விலக்குங் கருமத் தடை (சீவக. 3081, உரை); (jaina) an inpediment to the attainment of one's object, caused by karma.

[Skt.lābha+antarāya>த. இலாபந்தராயம்.]

இலிகிதம் *iligidam,* பெ.(n.) 1. எழுதப்பட்டது; written document. 2. கடிதம்; letter, epistic. 3. அறுபத்து நான்கு கலையுள் ஒன்றான எழுதும் திறமை; penmanship, one of *arupattunāṉku-kalai.*

த.வ. எழுத்து, மடல்.

[Skt. likhita > த. இலிகிதம்.]

த. இலக்கு > Skt. likh.

இலிகிதன் *iligidaṉ,* பெ.(n.) 1. எழுத்தாளன்; writer. 2. இந்து சமையம், (மதச்) சட்டங்களை உருவாக்கியவருள் ஒருவர்; a writer on hindu law.

[Skt. likhita > த. இலிகிதன்.]

இலிகுசம் *iligušam,* பெ.(n.) எலுமிச்சை (பிங்.); sour lime.

[Skt. likuca > த. இலிகுசம்.]



இலிங்கக்கட்டி[1] *iliṅga-k-katti,* பெ.(n.) ஆண் குறியிலுண்டாகும் கட்டி; a lump of vermilon.

[இலிங்கம் + கட்டி.]

[Skt. liṅga> த. இலிங்கம்.]

இலிங்கக்கட்டி[2] *iliṅga-k-katti,* பெ.(n.) வீர சைவன்; *liṅgāyat,* one who wears round his neck a *liṅga* enclosed usuu in a silver case.

[இலிங்கம் + கட்டி.]

[Skt. liṅga> த. இலிங்கம்.]

இலிங்கக்கட்டு[1] *iliṅga-k-kattu,* பெ.(n.) நெருப்பிற்கோடாதபடிக் கட்டுண்ட இலிங்கம்; a lump of consolidated vermilion which is used for transmiting metals into gold.

[இலிங்கம் + கட்டு.]

[Skt. liṅgula> த. இலிங்கம்.]

இலிங்கக்கட்டு[2] *iliṅga-k-kattu,* பெ.(n.) வைப்பு மருந்து வகை (பைஷஜ. 127); preparation of mercury with sulphur.

[இலிங்கம் + கட்டு.]

[Skt. liṅgula> த. இலிங்கம்.]

இலிங்கக்கல் *iliṅga-k-kal,* பெ.(n.) வளைவுக் கட்டடத்தின் மையக்கல் (C.E.M.); guard-stone in an arch.

[இலிங்கம் + கல்.]

[Skt. liṅga> த. இலிங்கம்.]



இலிங்கக்கவறை *iliṅga-k-kavarai,* பெ.(n.) சிவனிய (சைவ)க் கவறை வகுப்பினர்; a division of the Kavarai caste who are Lingayats, the Kavara is being mostly *Vaiṣṇavaites.*

[Skt.liṅga+kavarai>த. இலிங்கக்கவறை.]

இலிங்கக்கவசம் *iliṅga-k-kavašam,* பெ.(n.) ஆண் குறியின் மேல் தோல்; perpuce or foreskin of the penis (சா.அக.).

[இலிங்கம் + கவசம்.]

***[Skt.** liṅga> த. இலிங்கம்.]*

இலிங்கக்கழலை *iliṅga-k-kaḻalai,* பெ.(n.) ஆண்குறியில் உண்டாகும் கழலைக் கட்டி; a wart attended with swelling of the part and is due to the aggravated vayu, in the hard and inflammed penis causing pressure in the urethra (சா.அக.).

[இலிங்கம் + கழலை.]

***[Skt.** liṅga> த. இலிங்கம்.]*

இலிங்கக்குழம்பு *iliṅga-k-kuḻambu,* பெ.(n.) ஒரு வகை மருந்துக் கூட்டு; a semi solid preparation with consolidated vermilion used in medicine (சா.அக.).

[இலிங்கம் + குழம்பு.]

***[Skt.** liṅga> த. இலிங்கம்.]*

இலிங்கக்கோவை *iliṅga-k-kōvai,* பெ.(n.) கை விரல்களைப் போன்று தோற்றமுள்ள ஐவிரலி என்னும் படர் கொடியின் இலை; creeping plant whose leaf is said to resemble the fingers.

[இலிங்கம் + கோவை.]

***[Skt.** liṅga> த. இலிங்கம்.]*

இலிங்ககாசம்[1] *iliṅga-kāšam,* பெ.(n.) விழிவெண்படலம்; cataract.

***[Skt.** liṅga+kāsam > த. இலிங்ககாசம்.]*

இலிங்ககாசம்[2] *iliṅga-kāšam,* பெ.(n.) கண்ணில் வரும் ஒரு நோய் (நேத்திர வெண்படலம்); cataract of the eye.

த.வ. கண்புரை.

***[Skt.** liṅga+kāsam > த. இலிங்ககாசம்.]*

இலிங்ககீடரோகம் *iliṅgakīḍa-rōgam,* பெ.(n.) புழுக்களை உண்டாக்கும் ஆண் குறியைப் பற்றிய நோய்; a disease of the penis developing germs.

இலிங்ககோளம் *iliṅgakōḷam,* பெ.(n.) அண்ட வாதம்; a circumscribed collection of fluid in the scrotam - hydrocele or scrotal hydrocele.

இலிங்கச்சோர்வு *iliṅga-c-cōrvu,* பெ.(n.) அகவை முதிர்ச்சியாலும், நோய், வலுவின்மை, நரம்புக் கோளாறு முதலிய காரணங்களை முன்னிட்டும், ஆண்குறி தளர்ச்சி அடைதல்; want of erectile power in the penis due to old age, sexual abuse, nervousdeblity nervous disorder etc.

[இலிங்கம் + சோர்வு.]

***[Skt.** liṅga> த. இலிங்கம்.]*

இலிங்கசத்துரசம் *iliṅgacattu-rašam,* பெ.(n.) பல கல்லு மருந்து; a kind of medicine prepared from the essense of several stones.

***[Skt.** liṅga-cattu-rāšā>த. இலிங்கசத்து ரசம்.]*

இலிங்கசரீரம் *iliṅgašarīram,* பெ.(n.) வீடுபேறு அடையும் வரை ஆதனோடு கூட இருக்கும் ஒரு வகை (வித) மெல்லிய உடல்; a sublle or tenuous body penetrading and encasing the gross or the visible body.

***[Skt.** liṅga-šarīra> த. இலிங்கசரீரம்.]*

இலிங்கசுத்தி[1] *iliṅgasutti,* பெ.(n.) தமிழ் மருத்துவத்தில் கூறிய ஐந்து முறையில், செந்நிற கனிமத் தூளைத் தூய்மை செய்யும் முறை; (in medicine) vermilion which has been purified according to the five processes of purification contemplated in the Tamil medicine.

***[Skt.** liṅga-sutti> த. இலிங்கசுத்தி.]*

இலிங்கசுத்தி[2] *iliṅga-šutti,* பெ.(n.) ஐந்தாற்றலுள் (பஞ்ச சுத்தியுள்) ஒன்று; realizing the imminence of God in the

non-sentient universe, as well as in the sentient, one of *pañca-cutti*.

[**Skt.** *linga+cutti* > த. *இலிங்கசுத்தி.*]

இலிங்கசூலை *ilinga-sūlai,* பெ.(n.) ஆண் குறியில் வரும் ஒரு வகை நோய்; a kind of a venereal disease of men (சா.அக.).

[**Skt.** *lingasūlai* > த. *இலிங்கசூலை.*]

இலிங்கத்துருத்திரம் *ilinka-t-turuttiram,* பெ.(n.) மண்டையோட்டு (அண்ட)ச் சுண்ணம்; a calcined medicine prepared out of human skull (சா.அக.).

[**Skt.** *linga-turuttira*>த.*இலிங்கத் துருத்திரம்.*]

இலிங்கத்தேகம் *ilinga-t-tēgam,* பெ.(n.) 1. நுண்ம உடம்பு; the astral body. 2. தத்துவங்களடங்கிய உடம்பு; the spiritual body consisting of the real or essential nature of things. 3. உயர்நிலை அடையும் பருப்பொருளாகிய உடம்பு; a higher development of the material body (சா.அக.).

[**Skt.** *linga-dēha*> த. *இலிங்கத்தேகம்.*]

இலிங்கதாரி *ilinga-dāri,* பெ.(n.) **இலிங்கக் கட்டி** பார்க்க; see *ilinga-k-katti.*

[**Skt.** *linga+dharin* > த. *இலிங்கதாரி.*]

இலிங்கநாசனி *ilinka-nāśini,* பெ.(n.) கண்ணிலுண்டாகுங் காசநோயை விரைவில் குணப்படுத்தாவிடில், காற்றழுத்தமானது கண்களின் நான்காம் புரையை அடைந்து, பார்வை மண்டலமாகிய, பாவை திரை போட்டதுபோல் மறையப்படுவது அல்லாமற் பார்வையைக் கெடுத்துக் குருட்டுண்டாக்கும்; a form of cataract of the eye defeating, the eye sight and thus making one completed blind. It is due to the opacity of the whole lens. If it is not treated properly at the onset it progresses and passes into several stages owing to the deranged condition of vayu and finally destroys the lens (சா.அக.).

[**Skt.** *linga-nāśini*> த. *இலிங்கநாசினி.*]

இலிங்கபந்தனி *ilingapantani,* பெ.(n.) 1.ஆத்தி மல்லிகை; இளமையை உண்டாக்கும் ஒரு மருந்து மூலிகை; a herb used in rejuvenation. This is said to consolidate vermilion. 2. இலிங்கத்தைக் கட்டக்கூடிய சரக்கு; any drug capable of consolidating vermilion (சா.அக.).

[**Skt.** *linga-pattani*> த. *இலிங்கபந்தனி.*]

இலிங்கபந்தி *ilingapandi,* பெ.(n.) பேய்த் தும்மட்டி; bitter apple.

[**Skt.** *linga+panti*> த. *இலிங்கபந்தி.*]

இலிங்கபற்பம் *ilinga-parpam,* பெ.(n.) நீற்று மருந்துவகை; calcined powder of cinnabar.

[**Skt.** *hingula+paspa* > த. *இலிங்கபற்பம்.*]

இலிங்கபாடாணம் *ilinga-pāḍāṇam,*பெ.(n.) முப்பத்திரண்டு நஞ்சுகளில் ஒன்று; one of the 32 kinds of arsenics in its native state.

[**Skt.** *hingula+pāsāṇa*> த. *இலிங்க பாடாணம்.*]

இலிங்கபிராணி *ilingapirāṇi,* பெ.(n.) பரு உடலின் ஆவி; the soul of the astral body (சா.அக.).

[**Skt.** *linga-pirāṇi*> த. *இலிங்கபிராணி.*]

இலிங்கபுடோல் *ilingapuḍōl,* பெ.(n.) ஐவிரலிக் கொவ்வை; ghee-ajwaun.

[**Skt.** *linga-puḍōl*> த. *இலிங்கபுடோல்.*]

இலிங்கபுராணம் *ilinga-purāṇam,* பெ.(n.) 1. ஒரு தமிழ் நூல்; a rendering of the above in Tamil by *Kula-śēkara-pāṇḍian.* 2. பதினெண் தொன்மங்களுள் ஒன்று; a chief *puraṇa*, one of *patinen-purāṇam.*

[**Skt.** *linga+purāṇa* > த. *இலிங்கபுராணம்.*]

இலிங்கபெந்தகத்தி *ilingapendagatti,* பெ.(n.) செவ்வாமணக்கு; a variety of red castor plant (சா.அக.).

இலிங்கப்பருப்பு *iliṅga-p-paruppu,* பெ.(n.) புங்கன் கொட்டைப் பருப்பு; the kernal of the seed of the plant.

[இலிங்கம் + பருப்பு.]

[Skt. liṅga> த. இலிங்கம்.]

இலிங்கப்புகை *iliṅga-p-pugai,* பெ.(n.) எருக்கன் வேர்ப் பட்டை–8, விராகனிடை, எருக்கன் கரி, 4. வி.சாதி லிங்கம், 4. வி.மிளகு, 1. இவற்றைத் தனித் தனியே பொடித்துப் பிறகு ஒன்றுபடக் கலந்து கல்வத்திலிட்டுப், பரட்டை இலையின் சாற்றை விட்டரைத்து, மயினமாயின பின் எடுத்து, பன்னிரண்டு அடைகளாகத் தட்டி வெயிலிலுலர்த்தி அவற்றிலொன்றெடுத்து நெருப்பிலிட்டுப் புகையை உள்ளுக்குக் கொள்வது இலிங்கப் புகை; the fumes of vermilon or factitious cinnabar (சா.அக.).

[இலிங்கம் + புகை.]

[Skt. liṅga> த. இலிங்கம்.]

இலிங்கம்[1] *iliṅgam,* பெ.(n.) 1. குறி; sign, mark, symbol, token, emblem. 2. ஆண்குறி (திவா.); glans penis. 3. ஏது; the invariable mark that proves the existence of anything in an object. 4. வடமொழிப் பெயர்ச்சொற்கு உரிய பால்; gender of Sanskrit nouns, in three forms, viz. *புல்லிங்கம், ஸ்திரீலிங்கம், நபுஞ்சகலிங்கம்.* 5. சிவகுறி (லிங்கம்) கல்லினாற் செய்த குழவியைப் போன்ற உருவமைப்பு; symbol of *Śivaṉ* in stone or other material, set up and worshipped. 6. **இலிங்கபுராணம்** பார்க்க; see *iliṅgapurāṇam.*

[Skt. liṅga > த. இலிங்கம். வல்லங்கம் பார்க்க; see vallaṅgam.]

வல்=கல். அங்கம்=துண்டு, சிறுபகுதி. வல்லங்கம் – சிறிய கல். த. வல்லங்கம் > வலங்கம் >லங்க>Skt.லிங்க எனத் திரிந்துள்ளது. வடமொழியில் ஆண் குறியைக் குறித்த லிங்க என்னும் சொல்லுக்குச் சிவலிங்கத்தைக் குறித்த வல்லங்கத்தின் திரிபாகிய லிங்கம் என்னும் சொல்லுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

த.வ. வல்லங்கம், தாணு, சிவக்குறி.

இலிங்கம்[3] *iliṅgam,* பெ.(n.) 1. ஏது; the invariable mark, that proves the existence of anything in an object. 2. நோய்க்குறி; the symptom of a disease. 3. மாவிலிங்கம்; lingam tree. 4. கண் விழியின் நடுவிலிருக்கும் பாவை; the transparent lenticular organ behind the pupil eye lens. 5. பெண்குறி வழியில் நடுவிலிருக்கும் நீள நரம்பன் பகுதி; an organ of the female similar.

[Skt. liṅga> த. இலிங்கம்.]

இலிங்கம்[4] *iliṅgam,* பெ.(n.) சாதிலிங்கம்; cinabar, a preparation of mercury with sulphur.

[Skt. liṅgula > த. இலிங்கம்.]

இலிங்கம்[5] *iliṅgam,* பெ.(n.) இயற்கை (பிரகிருதி) (நாநார்த்த.); prakrti (phil.).

[Skt. liṅga > த. இலிங்கம்.]

இலிங்கம்பெற்றகன்னி *iliṅgamperrakaṉṉi,* பெ.(n.) செவ்வலரி; oleander rosebay (சா.அக.).

இலிங்கமுத்திரை *iliṅga-muttirai,* பெ.(n.) பூசை செய்யும்போது காட்டும் முத்திரை வகை (செந்.X, 426); a kind of hand-pose, in worship.

[இலிங்கம்+முத்திரை.]

[Skt. liṅga> த. இலிங்கம்.]

இலிங்கமூலி *iliṅkamūli,* பெ.(n.) கறிப்புடலை; snake gourd used in curry (சா.அக.).

இலிங்கமெழுகு *iliṅga-meḻugu,* பெ.(n.) ஒருவகை மருந்து; medicine prepared from cinnabar (சா.அக.).

[Skt. liṅga+meḻugu>த. இலிங்கமெழுகு.]

இலிங்கவட்டம் *iliṅga-vaṭṭam,* பெ.(n.) கிணறு இடியாமல் வைக்கும் மரச்சுவர்; timber planks used for walling a well.

[இலிங்கம்+வட்டம்.]

[Skt. liṅga> த. இலிங்கம்.]

இலிங்கவலரி *iliṅgavalari,* பெ.(n.) மஞ்சட் பூப்பூக்குமோர் வகை அலரி; a kind of Nerium bearing yellow flowers.

இலிங்கவிரணம் *iliṅga-viraṇam,* பெ.(n.) ஆண்குறிநோய் வகை; chancre.

[Skt.liṅga+viraṇam> த. இலிங்கவிரணம்.]

இலிங்கவைப்பு *iliṅga-vaippu,* பெ.(n.) 1. இலிங்கத்தை மருத்துவ முறைப்படி செய்வது; artificial preparation of cinnabar according to the process laid down. 2. செயற்கை லிங்கம்; artificial medicine.

[இலிங்கம் + வைப்பு.]

[Skt. liṅga> த. இலிங்கம்.]

இலிங்கவைப்புமுறை *iliṅgavaippumuṟai,* பெ.(n.) இலிங்கம் செய்ய வாகடத்திற் சொல்லிய முறை; the method of preparing cinnabar according to the rules prescribed in the Tamil medicine (சா.அக.).

[இலிங்கம் + வைப்புமுறை.]

[Skt. liṅga> த. இலிங்கம்.]

இலிங்காரிசம் *iliṅgāriśam,* பெ.(n.) ஆண்குறிநோய்; a veneral disease attended with warts or condylomatous growth about the genitals (சா.அக.).

இலிங்கி[1] *iliṅgi,* பெ.(n.) 1. குறியை உடையது; that which has a distinguishing mark. 2. சிவ (லிங்க) பூசை செய்வோன்; one who worships *Śivaliṅgam.* 3. முனிவன்; sage. 4. துறவி; ascetic. 5. வஞ்சகத் துறவி; pseudo ascetic.

[Skt. liṅgin > த. இலிங்கி.]

இலிங்கி[2] *iliṅgi,* பெ.(n.) 1. பருப்பொருளாகிய உடல்; one who has the astral body. 2. முனிவன்; sages. 3. இலிங்கத்தை வழிபடும் ஒரு துறவி; an ascetic meditating on *Śivaṉ* (சா.அக.).

இலிங்கியர் *iliṅgiyar,* பெ.(n.) அனுமானத்தை முதன்மையாகக் கொண்டு சொற்போர் செய்யும் (வாதிக்குந்) ஏரண வாதியர் (திவ்.திருவாய்.4, 10, 5); logicians who emphasize the importance of inference.

[Skt. rliṅgin > த. இலிங்கியர்.]

[இலிங்கம்→இலிங்கியர்.]

இலிங்கு *iliṅgu,* பெ.(n.) மரவிலங்கு; species of jarlic-pear. *"இந்தடிதராமுனி யிலிங்க வுரிசயை" (தைலவ.தைல.72).*

இலிங்கோற்பவர் *iliṅgōṟ-pavar,* பெ.(n.) சிவத்திருமேனிகளுள் ஒன்று; *Siva,* who emanated from a linga for the sake of his devotee *Mārkaṇḍēya.*

த.வ. தாணுருவர்.

[Skt.liṅga+ud-bhava>த.இலிங்கோற்பவர்.]

இலிச்சம் *iliccam* பெ.(n.) எலுமிச்சை; lime tree (சா.அக.).

இலிந்தகம் *ilindagam,* பெ.(n.) கருங் குவளை; blue lotus (சா.அக.).

இலிபி *ilibi,* பெ.(n.) 1. எழுத்து (நன்.273, மயிலை); writting, letter, character. 2. ஊழ் (விதி); destiny, fate, as written on the head.

[Skt. lipi > த. இலிபி.]

இலிக்கை *ilikkai,* பெ.(n.) 1. பேனின் முட்டை வடிவான ஈர்; nit, egg of louse. 2. ஒரு நீட்டலளவை (கந்தபு.அண்டகோ.5); a linear measure = 8 கசாக்கிரம்.

[Skt. likkā > த. இலீக்கை.]

இலீலாவினோதம் *ilīlā-viṉōtam,* பெ.(n.) இயல் முரணிய பாலுணர்வு; perversion of the sexual impulse (சா.அக.).

இலீலை[1] *ililai,* பெ.(n.) விளையாடல்; play, sport.

த.வ. விளையாட்டு.

[Skt. līlā > த. இலீலை.]

இலீலை[2] *ililai,* பெ.(n.) ஏளனம் (நாநார்த்த.); plafulness.

[Skt. līlā > த. இலீலை.]

இலீனகர்ப்பம் *silinakarppam,* பெ.(n.) உடற் காற்றினால், கருப்பை வழி, இரத்தக் குழாய்கள், முதலியவை அடைபட்டுக் கருப்பையினுள் கரு வளர முடியாமல் வயிற்றில் ஒட்டிக் கிடக்குமோர் கருப்ப நோய்; a kind of pregnancy in which the product of conception are not fully developed consequent on the obstruction of the passage due to the thickening of the vagina, the wall of the uterus etc. The child will be in the womb undeveloped (சா.அக.).

இலீனம் *ilinam,* பெ.(n.) 1. அழிவு; dissolution. 2. அடக்கம்; involution. *"அப்படிப்போலப் பிரகிருதியில் ஜீவர்கள் இலீனமா யிருக்கிறார்கள்" (வாசுதேவ மனனம், பக்.3).*

[Skt. lina > த. இலீனம்.]

இலுகாம் *ilugām,* பெ.(n.) மறைவான செய்திகள், ஆண்டவன் அருளால் வெளியாதல்; revelation by divine inspiration. *"ஆண்டவனுடைய உண்மையான அடியார்களுக்கு இலுஹாமுண்டாவது இயற்கையே"* Muham.

[Arab. ilham > த. இலுகாம்.]

இலுதை *ilutai,* பெ.(n.) அணில்; squirrel (சா.அக.).

இலுமு *ilumu,* பெ.(n.) கல்வியறிவு; learning, knowledge. *"இலுமுஇல்லாத மனிதன் மிருகத்துக்குச் சமானம்"* Muham.

[Ar. ilm > த. இலுமு.]

இலேககன் *ilēgagan,* பெ.(n.) 1. எழுதுவோன்; writter, clerk, amanuensis. 2. சித்திரக் காரன்; painter, delineator.

[Skt. lekhaka > த. இலேககன்.]

இலேகம் *ilēgam,* பெ.(n.) நக்கியுண்ணும் இளகிய மருந்து வகை; electuary, taken by licking.

[Skt. lehya > த. இலேகம்.]

த. இளகியம் > Skt. lehya.

இலேகர் *ilēgar,* பெ.(n.) தேவர்; *dēvas,* gods. *"இலேகரும்பரவ" (திருப்பு.1127).*

[Skt. lēkha > த. இலேகர்.]

இலேகனம்[1] *ilēganam,* பெ.(n.) எழுத்து; letter.

[Skt. lēkhana > த. இலேகனம்.]

இலேகனம்[2] *ilēganam,* பெ.(n.) 1. பூவரசு மரத்தின் மேலுரி (நாநார்த்த.); bark of paper tree. 2. வெட்டுகை; cutting.

[Skt. lēkhana > த. இலேகனம்.]

இலேகனம்[3] *ilēganam,* பெ.(n.) அரிதாரம்; orpiment (சா.அக.).

இலேகனி *ilēgani,* பெ.(n.) 1. எழுத்தாணி (சூடா.); style, pointed piece of iron, used in writing on the palmyra leaf. 2. எழுதுகோல்; pen, pencil.

த.வ. இலக்காணி.

[Skt. lēkhani > த. இலேகனி.]

த. இலக்காணி > Skt. lakani.



இலேகி–த்தல் *ilēgi-,* 11 செ.குன்றாவி.(v.t.) 1. எழுதுதல்; to write. 2. வரைந்து காட்டுதல்; to delineate, draw. *"இலேகித்த சித்திர மண்டபம்" (விநாயகபு. 79, 43).*

த.வ. இலக்குதல்.

[Skt. lekha > த. இலேகி–த்தல்.]

இலேகிதம் *ilēkitam,* பெ.(n.) செருந்தி; golden champak (சா.அக.).

இலேகியபாகம் *ilēgiya-bāgam,* பெ.(n.) இளகியம் செய்யும் முறை. அதாவது வெல்லத்தைக் கருக்கு நீருடன் சேர்த்துக் காய்ச்சிய நூல் பதத்திலிறக்கி மருந்துப் பொடியைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கலந்து அத்துடன் நெய்யும் தேனும் ஊற்றிக் கிளறி இலகு பதமாகத் திரண்ட பின்னர் இறக்கிப் பதனப்படுத்திக் கொள்வது; the method of preparing by making jaggery into a pure syrup of a thick consistency with the addition of the decoction, when the syrup is hot, and the powder things ghee and honey are mixed and the resulting thick mass is taken out of the vessel at a certain state and preserved for use.

[இலேகியம் + பாகம்.]

த. இளகியம் > Skt. lehya.

இலேகியம் *lēgiyam,* பெ.(n.) இளகியம்; அளவில் குறிப்பிட்ட பொடிகளைச் செய்து, சர்க்கரையில் தண்ணீர், பால் அல்லது கருக்கு நீரைக் கலந்து காய்ச்சிக் கிண்டிப் பாகு பதத்தில் இறக்கிப் பொடியைக் கொஞ்சம், கொஞ்சமாகப் போட்டுக் கிளறித் தேன் நெய்விட்டுப் பிசைந்து உருவாக்கிய இளக்கமான மருந்து; an electuary made by addings drugs in powder to the boiling sugar, milk, water, decoction and stir it to thicken and made as a thick mass in taken out of the vessel and preserved for use (சா.அக.).

த.வ. இளகியம்.

த. இளகியம் > Skt. lehya.

இலேகினி *ilēgini,* பெ.(n.) மஞ்சள்; turmeric plant (சா.அக.).

இலேகை *ilēkai,* பெ.(n.) 1. எழுத்து; letter. *"இலேகை யக்கரப்பெயர்" (பேரகத்.4).* 2. நிலம்; earth. 3. தழும்பு; cicatrice. *"நுதிமருப்பிலேகை நுண்ணிது தோன்ற" (பெருங்.வத்தவ.7, 184).*

[Skt. lēkhā > த. இலேகை.]

இலேசகம் *ilēšagam,* பெ.(n.) 1. இழிவானது; the smallest quantity. 2. மிகச் சிறிய அளவு; the lowest limit (சா.அக.).

இலேசம் *ilēsam,* பெ.(n.) 1. சிறுமை, இழிவு; small bit, very small quantity. *"என்னிடம் இலேசமுமில்லை".* 2. அதிவிரைவு (சூடா.); in a moment; instantaneously.

[Skt. lēša > த. இலேசம்.]

இலேசுணம் *ilēšuṇam,* பெ.(n.) அரிதாரம்; orpiment or kings yellow.

இலேஞ்சி *ilēñci,* பெ.(n.) பொதுவாகச் சிவப்பு நிறத்திலுள்ள கைக்குட்டை, சிறுதுண்டு; kerchief, scarf, usually, red.

[Port. lenco > த. இலேஞ்சி.]

இலேதிதம் *ilētitam,* பெ.(n.) எரிபூடு; a plant, garlic (சா.அக.).

இலேந்து *ilēntu,* பெ.(n.) 1. கல்லுப்பு; common salt found in masses at the bottom of the sea. 2. வெடியுப்பு; a prepared black salt (சா.அக.).

இலேபபேதி *ilēba-bēti,* பெ.(n.) மாழைகளை மாற்ற வேண்டிக் கல்லுப்பைக் கொண்டு செய்த, ஒருவகைக் குரு மருந்து; a universal solvent prepared out of rock-salt and used in alchemy (சா.அக.).

இலேபம்[1] *ilēbam,* பெ.(n.) 1. வால் மிளகு; cubebs, Java pepper. 2. பூச்சு; smearing, plastering. 3. பூசு மருந்து; a medicinal preparation for external application. 4. கல்லுப்பு; rock salt. 5. கந்தகவுப்பு; black salt (சா.அக.).

இலேபம்[2] *ilēbam,* பெ.(n.) பூச்சு; smearing, daubing, plastering.

[Skt. lepa > த. இலேபம்.]

இலேபம்[3] *ilēbam,* பெ.(n.) 1. உணவு; food. 2. சாந்து; paste.

[Skt. lēpa > த. இலேபம்.]

இலேபி *ilēbi,* வி.எ.(adv.) 1. பூச; to smear. 2. பூச்சு; smearing (சா.அக.).

இலேபிதம் *ilēbitam,* பெ.(n.) தடவல்; smearing (சா.அக.).

இலேபை[1] *ilēbai,* பெ.(n.) சீலை மருந்து; plaster, any tenacious preparation for applying on the surface of the body (சா.அக.).

இலேபை[2] *ilēbai,* பெ.(n.) வெட்டுக் காயங்களுக்கான ஒட்டுப் பசைத் துணி (C.G.) plaster (சா.அக.).

த.வ. பசைத்துணி, காரத்துணி.

[Skt. lēpana > த. இலேபை.]

இலேம்புகம் *ilēmbugam,* பெ.(n.) நிலக் கடம்பு; kadamba tree (சா.அக.).

இலேம்போருகம் *ilēmpōrugam,* பெ.(n.) பாம்புக் கொல்லி; common rue (சா.அக.).

இலேலிசம் *ilēlišam,* பெ.(n.) 1. பாம்பு; snake. 2. வயிற்றுக் கீரிப்பூச்சி; the worm in the intestines; a small thread like worm (சா.அக.).

இலேலிகானம் *ilēlikāṉam,* பெ.(n.) பாம்பு; snake (சா.அக.).

இலேவுந்து *ilēvundu,* பெ.(n.) **இலேந்து** பார்க்க; see *ilēndu* (சா.அக.).

இலைங்கம் *ilaiṅgam,* பெ.(n.) **இலிங்க புராணம்** பார்க்க; see *iliṅgapurāṇam.*

[Skt. laiṅga > த. இலைங்கம்.]

இலௌகிகம் *ilaugigam,* பெ.(n.) 1. உலக நடை; worldly affairs. 2. வாழ்க்கை; occupation; means of livelihood.

[Skt. laukika > த. இலௌகிகம்.]

இலௌகிகசாத்திரம் *ilaugiga-sāttiram,* பெ.(n.) கண்கூடாகப் பயனளிப்பவற்றைக் கூறும் வரலாறு (விவேகசிந்.13); treatise dealing with perceptable results, dist. fr. *Vaitika-šāttiram.*

த.வ. உலகியல்நூல்.

[இலௌகிகம் + சாத்திரம்.]

[Skt. laukika > த. இலௌகிகம்.]

இவேசித்தொகையேடு *ivēšttogai-y-ēdu,* பெ.(n.) தண்டல் செய்த பணம், தவசம் (தானியம்) முதலியவற்றின் கணக்கைக் காட்டும் விவரக் குறிப்பு (R.T.); a statement showing the asount of collection and balance in money or in kind.

[இவேசி + தொகையேடு.]

[U. iwāz > த. இவேசி.]

இறசால் *iṟašāl,* பெ.(n.) 1. பழைய இலங்கை நாணய வகை; an ancient coin of Ceylon of the value of Is. 6d CJ.). 2. முக்கால் உரூபா; sum of money amounting to twelve annas (J.).

[Port. real > த. இறசால்.]

இறாத்தல் *iṟāttal,* பெ.(n.) **இராத்தல்** பார்க்க; see *irāttal.*

[U. ratl > த. இறாத்தல்.]

இறையால் *iṟaiyāl,* பெ.(n.) **இறசால்** பார்க்க; see *iṟašāl.*

[Port. real > த. இறையால்.]

இன்சாபு *insābu,* பெ.(n.) அறம் (நீதி); justice. *எனக்கு இன்ஸாபு செய்தால் போதும்; உபகாரமாகத் தாங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம் (Muham.).*

[Ar. insaf > த. இன்ஸாபு.]

இன்சான் *insān,* பெ.(n.) மனிதன்; human being. *"தவறுவது இன்சானுக்கு இயற்கையே" (Muham.).*

[Ar. insan > த. இன்சான்.]

இனாம் *inām,* பெ.(n.) 1. நன்கொடை; gift from a superior to an inferior, present, reward. 2. இறையிலி நிலம்; grant of land made by government for religious or charitable purposes or for services rendered, sometimes given rent-free and sometimes with a light quit-rent.

[U. inām > த. இனாம்.]

இனாம்நாட்கள் *inām-nātkaḷ,* பெ.(n.) சரக்கு ஏற்றற்காவது, இறக்கற்காவது விடப்படும் நாட்கள்; lay days (M.Navi.122).

[இனாம் + நாட்கள்.]

[U. inām> த. இனாம்.]

இனாயத்நாமா *ināyat-nāmā,* பெ.(n.) கொடை ஆவணம்; deed of gift.

[U. ināyet+nāmā> த. இனாயத்நாமா.]

ஈகாமிருகம் *igāmirugam,* பெ.(n.) நாடக வகைப்பத்தனுள் ஒன்று (சிலப்.பக்.84, கீழ்க்குறிப்பு); one of ten different kinds of drama in four acts, representing men, gods and demon as fighting for the possession of a beautiful damsel who, however, does not love anyone of them, sc named after the bestrial lust of the characters. One of the rupakam.

[Skt. ihāmrga > த. ஈகாமிருகம்.]

ஈசத்துப்பீசம் *īsattu-p-pīsam,* பெ.(n.) கொட்டையில்லாக் கொடிமுந்திரி; a species of grapes having no seeds (சா.அக.).



ஈசத்துவறுகு *īsattuvaruku,* பெ.(n.) சிற்றறுகு; a kind of grass (சா.அக.).

ஈசத்துவம் *īsattuvam,* பெ.(n.) எண்மா இயற்கையிறந்த செயல்களுள் (அட்டமா சித்திகளுள்) ஒன்று; supremacy or superiority considered as a super natural power, one of *asṭa-mā-citti.*

[Skt. īsa-tva > த. ஈசத்துவம்.]

ஈசதேசாத்தி *īsatēsātti,* பெ.(n.) பெரு மருந்துக் கொடி; a twining plant (சா.அக.).

ஈசப்பரிவிந்து *īsappari-vintu,* பெ.(n.) கந்தகம்; sulphur (சா.அக.).

ஈசன்[1] *īsan,* பெ.(n.) 1. இறைவன்; supreme being; Lord of the universe. *"இளந்தளிரிற் கண்வளர்ந்த வீசன்றன்னை" (திவ். பெரியதி.2, 10, 1).* 2. சிவன்; Śiva. *"ஈசன் காரியானைத்தான்" (நள.காப்பு).* 3. அரசன்; king. *"தரணிபர்க்கெல்லா மீசனும்" (பாரத.குரு.91).* 4. தலைவன்; lord, master. 5. குரு (பிங்.); preceptor. 6. மூத்தோன் (திவா.); eldest brother.

த.வ. அவ்வன், இயனன்.

[Skt. īsa > த. ஈசன்.]

த. இயனன்>ஈயன் > **Skt.** *isa.*

ஈசன்² *īšaṉ,* பெ.(n.) 1. கௌரி நஞ்சு; a kind of arsenic. 2. சவுக்காரம்; வழலை; soap. 3. மூன்று வகைப் பச்சைக் கருப்பூரங்களில் ஒன்று; one of the three kinds of crude camphor (சா.அக.).

ஈசன்³ *īšaṉ,* பெ.(n.) 1. பச்சைக் கருப்பூரம்; a preparation of camphor. *"ஈசனென்னும் பூரம்வெண்மை" (பதார்த்த. 1076).* 2. ஒருவகைச் செய்நஞ்சு; a mineral poison.

ஈசன்கொடி *īsaṉkodi,* பெ.(n.) கொன்றை; cassia tree (சா.அக.).

[ஈசன் + கொடி.]

[Skt. īšaṉ > த. ஈசன்.]

ஈசன்சுண்மை *īšaṉcuṇmai,* பெ.(n.) **ஈசனுப்புச்சுண்ணம்** பார்க்க; see *īšaṉuppu-c-cuṇṇam* (சா.அக.).

[ஈசன் + சுண்மை.]

[Skt. īšaṉ > த. ஈசன்.]

ஈசன்திருமூலி *īšaṉtirumūli,* பெ.(n.) கஞ்சா; ganjah (சா.அக.).

[ஈசன்+திருமூலி.]

[Skt. īšaṉ > த. ஈசன்.]



ஈசன்மதுவுண்டகிண்ணி *īšaṉmatuvuṇḍa-kiṇṇi,* பெ.(n.) அப்பிரகத்தினின்று சத்தெடுத்து, உருக்கிக் கருவில் பாய்ச்சி வார்த்தெடுத்த கிண்ணி; a mica eating dish, which is prepared from the active prenciple contained in the mica by melting and castina it into a mould (சா.அக.).

[ஈசன்+மது+உண்ட+கிண்ணி.]

[Skt. īšaṉ+matu > த. ஈசன்மது.]

ஈசன்விந்து *īšaṉvindu,* பெ.(n.) உப்பைக் கட்டி மணியாகத் திரட்டியது; salt bread (சா.அக.).

[ஈசன் + விந்து.]

[Skt. īšaṉ > த. ஈசன்.]

ஈசன்றார் *īšaṉṟār,* பெ.(n.) கொன்றைமரம்; cassia tree (சா.அக.).

ஈசன்றினம் *īšaṉṟiṉam,* பெ.(n.) ஆறாவது நாள் மீனான யாழ் (திருவாதிரை); the sixth naksatra, a day sacred to *Šiva* (சூடா.).

[Skt. īša+dina>த. ஈசன்றினம்.]

ஈசனாரணி *īšaṉāraṇi,* பெ.(n.) கொன்றை; cassia tree (சா.அக.).

[ஈசனார் + அணி.]

[Skt. īšaṉ > த. ஈசனார்.]



ஈசனுப்பு *īšaṉuppu,* பெ.(n.) வெடியுப்பு; nitre potasium nitrate (சா.அக.).

[ஈசன் + உப்பு.]

[Skt. īšaṉ > த. ஈசன்.]

ஈசனுப்புச்சுண்ணம் *īšaṉuppu-c-cuṇṇam,* பெ.(n.) வழலைச் சுண்ணம்; a calcined carbonate extracted from fullers earth combined with other ingredients (சா.அக.).

[ஈசன் + உப்பு + சுண்ணம்.]

[Skt. īšaṉ > த. ஈசன்.]

ஈசாபு *īsābu,* பெ.(n.) திருமணக்கோரிக்கை; proposal. *விவாஹம் நிறைவேறுதற்கு ஈசாபு அவசியமானது (முகம்.).*

[Ar. ijab > த. ஈசாபு.]

ஈசாவாசியம் *īšāvāšiyam,* பெ.(n.) நூற்றெட்டு மறைமுடிபுகளுள் (உபநிடதங்களுள்) ஒன்று; one of the 108 upanisads.

[Skt. īšāvāsya > த. ஈசாவாசியம்.]

ஈசானகோணம் *īšāna-kōṇam,* பெ.(n.) வடகீழ்த்திசை; north east quarter for which *Šiva* is regent.

[ஈசானம் + கோணம்.]

[Skt. īšāna > த. ஈசானம்.]

ஈசானதிசை *īšāna-tisai,* பெ.(n.) **ஈசானகோணம்** பார்க்க (திவா.); see *īšānakōṇam.*

[ஈசானம் + திசை.]

[Skt. īšāna>த. ஈசானம்.]

ஈசானம்[1] *īšānam,* பெ.(n.) 1. சிவனின் ஐம்முகத்துள் ஒன்று; one of the five faces of *Šiva*represented as being directed upward, one of *šivan-ai-m-mugam.* 2. ஒரு சிவனிய (சைவ) மந்திரம்; a *Šaiva* mantra. 3. வடகீழ்த்திசை ; the northest quarter being the region which is under the guardionship of *īšāna* who is *Šiva* in one of his aspects.

[Skt. īšāna > த. ஈசானம்.]

ஈசானம்[2] *īšānam,* பெ.(n.) இலவ மரம்; the silk cotton tree (சா.அக.).

ஈசானன் *īšānan,* பெ.(n.) 1. சிவன்; aspect of *Šiva*, who is regent of the north east quarter, one of *asṭa-tikku-p-pālakar.* 2. சிவனின் பதினொரு உருவங்களில் (ஏகாதச ருத்திரருள்) ஒன்று (திவா.); one of *ēkātaca-ruttirar.*

[Skt. īšāna > த. ஈசானன்.]

ஈசானி *īšāni,* பெ.(n.) சிவனின் ஐந்து பெண் ஆற்றல்களில் ஒன்று; one of the five female energies of *Šiva* (சா.அக.).

ஈசானிகம் *īšānigam,* பெ.(n.) உடை மரம்; arrow thorn tree (சா.அக.).

ஈசானியப்பார்வை *īšāniya-p-pārvai,* பெ.(n.) வீடு வடகீழ்த்திசை நோக்கி இருக்கை; orientation of a house toward the north-east, an aspect considered auspicious.

[ஈசானியம் + பார்வை.]

[Skt. īšānya>த. ஈசானியம்.]

ஈசானியம் *īšāniyam,* பெ.(n.) வடகீழ்த் திசை; north-east quarter.

[Skt. īšānya > த. ஈசானியம்.]

ஈசானியமூலை *īšāniya-mūlai,* பெ.(n.) **ஈசானியம்** பார்க்க; see *īšāniyam.*

[ஈசானியம் + மூலை.]

[Skt. īšānya>த. ஈசானியம்.]

ஈசிகம் *īsigam,* பெ.(n.) மூசையிலிட்டு மாழையை உருக்கும்போது, அதை ஆய்வு செய்யப் பயன்படுத்தும் ஒரு இரும்புக் காம்பு; a dipping iron rod something thrust into a cruicible to examine if the metal it contains is in fusion or not (சா.அக.).

ஈசித்துவம் *īsittuvam,* பெ.(n.) **ஈசத்துவம்** பார்க்க; see *īsattuvam.*

[Skt. īši-tva > த. ஈசித்துவம்.]

ஈசிதை *īsidai,* பெ.(n.) **ஈசத்துவம்** பார்க்க (சிவதரு.சிவஞானயோ.90); see *īsattuvam.*

[Skt. īsitā > த. ஈசிதை.]

ஈசுகணுவெலும்பு *īsukaṇuvelumbu,* பெ.(n.) முழங்காலின் எலும்பு; the joint connecting the two principal parts of the leg-knee (சா.அக.).

[ஈசு + கணுவெலும்பு.]

[Skt. īšu> த.ஈசு.]

ஈசுரச்செயம் *īšura-c-ceyam,* பெ.(n.) **ஈசுரசத்து** பார்க்க; see *īšuracattu* (சா.அக.).

[Skt. īšura-ceyam> த.ஈசுரச்செயம்.]

ஈசுரச்செயல் *īšura-c-ceyal,* பெ.(n.) கடவுள் செயல் (குமரேச.சத.64); will of god; divine act, act of providence.

[ஈசுவரன் + செயல்.]

[Skt. īšvara>த. ஈசுவரன்.]

ஈசுரசுருளி *īšura-curuḷi,* பெ.(n.) பெரு மருந்து; a twining plant (சா.அக.).

[Skt. ēsura+curuḷi > த. ஈசுரசுருளி.]

ஈசுரதேவி *īšuradēvi,* பெ.(n.) கௌரிநஞ்சு; a kind of prepared arsenic (சா.அக.).

[ஈசுவரன் + தேவி.]

[Skt. īšvara>த. ஈசுவரன்.]

ஈசுரப்பிரமி *īšurapirami,* பெ.(n.) நெற்றி; forehead (சா.அக.).

[Skt. īšvara-pirami>த. ஈசுவரப்பிரமி.]

ஈசுரப்புல் *īšurappul,* பெ.(n.) ஒரு வகைப் புல்; a kind of grass (சா.அக.).

[ஈசுவரன் + புல்.]

[Skt. īšvara>த. ஈசுவரன்.]

ஈசுரபூதம் *īšurapūtam,* பெ.(n.) ஒரு பேய்த் தொடர்பான நோய்; a devilish disease with the symptoms characteristic of Iswara (சா.அக.).

[Skt. īšuvara-pōta>த. ஈசுவரபூதம்.]

ஈசுரமூலி *īšuramūli,* பெ.(n.) 1. பெருமருந்து; a twinning plant. 2. கஞ்சா; ganjah. 3. இதளியத்தைக் கட்டும் ஒரு மூலிகை; lord root which is so called from its peculiar viritus of consolidating mercury. 4. வலம்புரி; twisted slick (சா.அக.).

[ஈசுவரன் + மூலி.]

[Skt. īšuvara>த. ஈசுர.]

ஈசுரவல்லி *īšuravalli,* பெ.(n.) ஒருவகைக் கொடி; a creeper (சா.அக.).

[ஈசுவரன் + வல்லி.]

[Skt. īšuvara>த. ஈசுர.]

ஈசுரவவிகாரவாதசைவம் *īšura-v-avikāra-vāta-šaivam,* பெ.(n.) அகச் சமயத்துள் ஒன்று; a *šaiva* sect, one of six *aka-c-camayam.*

[Skt. īšvara+avikāra+vādha+šaivam> த. ஈசுரவவிகாரவாதசைவம்.]

ஈசுரவிந்து *īšura-vindu,* பெ.(n.) இதளியம் (மூ.அ.); quick silver.

[ஈசுவரன் + விந்து.]

[Skt. īšuvara>த. ஈசுர(ம்).]

ஈசுரன் *īšuraṉ,* பெ.(n.) 1. தலைவன்; chief, leader, head, lord. 2. கடவுள்; the almighty. 3. சிவன்; siva.

[Skt. īšuvara>த. ஈசுர(ன்).]

ஈசுவர *īšuvara,* பெ.(n.) அறுபது ஆண்டு வட்டத்துள் பதினோராமாண்டின் பெயர்; name of the eleventh year of the jupiter cycle.

[Skt. īšuvara>த. ஈசுவர.]

ஈசுவரன் *īšuvaraṉ,* பெ.(n.) **ஈசுரன்** பார்க்க; see *īšuraṉ.*

[Skt. īšuvara>த. ஈசுரன்.]

ஈசுவரார்ப்பணம் *īšuvarārppaṇam,* பெ.(n.) கடவுளுக்கு உரியதாக்குதல்; dedication to god, consecration.

த.வ. இறைக்காணிக்கை.

[Skt.īšvara+arpana>த. ஈசுவரார்ப்பணம்.]

ஈசுவரி *īšuvari,* பெ.(n.) மலைமகள் (பார்வதி); P*ārvati,* being the consrt of *Šiva,* who is *īšvara.*

[Skt. īšvari>த. ஈசுவரி.]

ஈசுவரிநாதம் *īśuvari-nādam,* பெ.(n.) கந்தகம் (மூ.அ.); sulphur.

[Skt. īśvari+nādha>த. ஈசுவரிநாதம்.]

ஈசுவரோபாத்தி *īśuvarōbātti,* பெ.(n.) கடவுள் வழிபாடு (வேதா.சூ.24, உரை); devotion to God head, worship of God.

[Skt. īśvara+upāsti>த. ஈசுவரோபாத்தி.]

ஈசோபநிடதம் *īśōbaniḍadam,* பெ.(n.) பத்து மறைமுடிபுகளுள் (உபநிடதங்களுள்) ஒன்று ; name of an upanisad, one of *tacōpaniḍatam.*

[Skt. eśa+upa-ni-sad>த. ஈசோபநிடதம்.]

ஈத்து *ittu,* பெ.(n.) முகமதியர் திருவிழா; islamic festival.

[Ar. id > த. ஈத்து.]

ஈதுல்பிதர் *ītulpidar,* பெ.(n.) முகமதியர் நோன்பு முடிந்த முதல் நாள்; festival day afte the close of Ramzan.

[Ar. idulfitr>த. ஈதுல்பிதர்.]

ஈமான் *īmāṉ,* பெ.(n.) முகமதியக் கொள்கை; islamic faith, belief.

[Ar. iman > த. ஈமான்.]

ஈர்சை *īrsai,* பெ.(n.) பொறாமை (சி.சி.2, 39, சிவாக்.); envy, jealousy.

[Skt. irṣā>த. ஈர்சை.]

ஈரங்கி *īraṅgi,* பெ.(n.) வழக்குக் கேட்கை; judge's investigation and hearing of arguments in a case.

த.வ. நேர்கேட்பு.

[E. hearing > த. ஈரங்கி.]

ஈரான் *īrāṉ,* பெ.(n.) பண்டைய பாரசீக நாடு; persia.

[Ar. iran > த. ஈரான்.]

ஈனக்கிரயம் *īṉa-k-kirayam,* பெ.(n.) குறைய விற்பு; discredit sale.

ஈனசாமந்தன் *īṉa-sāmandaṉ,* பெ.(n.) சாமந்தர் வகையினர் (சுக்கிரநீதி, 26); a class of *Śāmandar.*

[Skt. hīna+sāmanda > த. ஈனசாமந்தன்.]

ஈனசுரம் *īṉa-suram,* பெ.(n.) தாழ்ந்தக்குரல்; lowly voice.

[Skt. hina-svara > த. ஈனசுரம்.]

ஈனம் *īṉam,* பெ.(n.) கீழ்மை; vulgarity.

[Skt. hina> த. ஈனம்.]

ஈனன் *īṉaṉ,* பெ.(n.) தாழ்ந்தோன்; ignoble person.

[Skt. hina> த. ஈனன்.]

உக்கா *ukkā,* பெ.(n.) கஞ்சா முதலியவற்றின் புகை குடிக்கும் கருவி; hookah, turkish tobacco pipe and its apparatus by which smoke is drawn through water.

த.வ. புகைக்குப்பி.

[U. huqqa > த. உக்கா.]



உக்கிதசிரம் *ukkida-ciram,* பெ.(n.) வான்முகட்டை நோக்கும் மெய்ப்பாடு (சிரவபிநயம்) (பரத.பாவ.74); (natya.) gesticulation of the head, looking up at the sky, a theatrical attitude.

[Skt. ud-dhṛta+cira > த. உக்கிதசிரம்.]

உக்கிரகந்தம்[1] *ukkira-kandam,* பெ.(n.) 1. வெள்ளைப் பூண்டு; garlic. 2. பெருங்காயம்; asafoetida. 3. வேம்பு; margosa. 4. கருவேம்பு (மலை.); grey downy balsam tree. 5. கரும்பு; sugarcane.

[Skt. ugragandha > த. உக்கிரகந்தம்.]

உக்கிரகந்தம்² *ukkira-kandam,* பெ.(n.) 1. வசம்பு (சித்.அக.); sweet flag. 2. ஓமம் (நாநார்த்த.); bishop's weed.

[Skt. ugragandha > த. உக்கிரகந்தம்.]

உக்கிரகந்தை *ukkirakantai,* பெ.(n.) 1. வசம்பு (சித்.அக.); sweet flag. 2. ஓமம் (நாநார்த்த.); bishop's weed.

[Skt. ugragandhā > த. உக்கிரகந்தை.]



உக்கிரமம் *ukkiramam,* பெ.(n.) சுடரொளி; blaze,glow (புதுவை.வ.).

[Skt. ugra > த. உக்கிரமம்.]

உக்கிரன் *ukkiran,* பெ.(n.) சிவ வடிவங்களுள் ஒன்று (வீரபத்திரன்) (காஞ்சிப்பு.சிவபுண்.15); a manifestation of *Śiva.*

[Skt. ugra > த. உக்கிரன்.]

உக்கிருட்டம் *ukkiruṭṭam,* பெ.(n.) மேன்மை; excellence, greatness.

[Skt. ut-krṣṭa > த. உக்கிருட்டம்.]

உக்கிரை *ukkirai,* பெ.(n.) ஏழாம் இசை (ஏழாஞ் சுருதியின்) வேறுபாடுகளுள் ஒன்று (பரத. இராக.46); a variety of the seventh note of the gamut.

[Skt. ugra > த. உக்கிரை.]

உக்கும் *ukkum,* பெ.(n.) ஆணை; permission, order (P.P.L.).

[U. hukm > த. உக்கும்.]

உக்கும்நாமா *ukkumnāmā,* பெ.(n.) எழுத்து மூலமான ஆணை; written order.

[U. hukm-nāma > த. உக்கும்நாமா.]

உக்குமத்து *ukkumattu,* பெ.(n.) 1. செல்வாக்கு; influence. 2. செருக்கு (நெல்லை.); arrogance. 3. உடந்தை (தஞ்.); complicity.

[U. hukumat > த. உக்குமத்து.]

உச்சரிடம் *uccariḍam,* பெ.(n.) மலம்; excrement, dung (சா.அக.).

உச்சலம்¹ *uccalam,* பெ.(n.) மனம் (வின்.); mind (சா.அக.).

[Skt. uccala > த. உச்சலம்.]

உச்சலம்² *uccalam,* பெ.(n.) 1. அறிவு; knowledge. 2. மனம்; mind (சா.அக.).

உச்சாடனம்¹ *uccāḍanam,* பெ.(n.) 1. இருப்பிடத்தை விட்டு ஒட்டுந் தொழிலாகிய எட்டுவித மாய மந்திரவித்தைகளில் ஒன்று; the art of driving away or causing a person to quit his occupation by magical incantation. 2. பேய் முதலியவற்றை ஒட்டல்; expelling an evil spirit or devil from a person or place by adjurations and ceremonies. 3. ஏவல் அல்லது மந்திர வித்தை; incitement by magic or neromancy of an evil spirit or demon to cause injury or ruin to anyone at will (சா.அக.).

உச்சாடனம்² *uccāḍanam,* பெ.(n.) 1. நெய்மத்தாலும், மணப்பொருளினாலும், உடம்பைத் தேய்த்துத் தூய்மை செய்தல்; cleaning or rubbing the body with oil or perfume. 2. புகையிட்டுத் தூய்மைப்படுத்தல்; cleaning by fumegaling (சா.அக.).

உச்சாயம் *uccāyam,* பெ.(n.) மகிழ்ச்சி; ஆற்றல்; energy.

[Skt. ut-sāha > த. உச்சாயம்.]

உச்சிகரணம் *uccikaraṇam,* பெ.(n.) பதங்கம்; the process by which a solid substance in brought into the state of vapour by application of heat without melting it (சா.அக.).

உச்சீவனம் *uccīvaṉam,* பெ.(n.) 1. உய்கை; revival of life. 2. பிழைப்பு; livelihood, means of living (சா.அக.).

உச்சீவி-த்தல் *uccīvi-,* 11 செ.கு.வி.(v.i.) 1. நோயினின்று பிழைத்தல்; regaining life of from a diseases. 2. இறப்பின் பிடியிலிருந்து பிழைத்துத் தேறுதல்; to pass off the crisis of a disease and become free from the jawr of death.

உச்சுவலம் *uccuvalam,* பெ.(n.) 1. ஆசை (யாழ்.அக.); desire. 2. பொன்; gold.

[Skt. ujjvala > த. உச்சுவலம்.]

உச்சே *uccē,* பெ.(n.) பிரெஞ்சு ஆட்சித் துறையில் ஓர் ஊர் (கிராம) அலுவலன்; sheriff's officer in the communes of French India.

[Fr. huissier > த. உச்சே.]

உச்சேதம் *uccēdam,* பெ.(n.) அழிதல் (நீலகேசி. 637); desolation.

[Skt. uccēda > த. உச்சேதம்.]

உச்சைச்சிரவம் *uccai-c-ciravam,* பெ.(n.) இந்திரன் குதிரை; name of an Indra's steed.

[Skt. uccaiś-śravas> த. உச்சைச்சிரவம்.]

உசரிதம் *uśaritam,* பெ.(n.) நெருஞ்சில்; a thorny shrub (சா.அக.).

உசரிபம் *uśaribam,* பெ.(n.) **உசரிதம்** பார்க்க; see *uśaritam* (சா.அக.).

உசரு *uśaru,* பெ.(n.) உயிர்; life (சா.அக.).

உசலம் *usalam,* பெ.(n.) உசிலை மரம்; oosilay tree (சா.அக.).

உசவோர்கம் *uśavōrkam,* பெ.(n.) முயல்; hare (சா.அக.).

உசற்காலம் *uśaṟkālam,* பெ.(n.) விடியற் காலம் (யாழ்.அக.); dawn.

[உசற்+காலம்.]

[Skt. uslat > த. உசற்.]

உசார் *uśār,* பெ.(n.) விழிப்புடன் இருத்தல்; alertness, watchfulness, vigilance.

[U. hushyār > த. உசார்.]

உசிச்செடி *uśicceḍi,* பெ.(n.) புல்லூரி; a parasitie plant (சா.அக.).



உசிதம்[1] *uśidam,* பெ.(n.) 1. தகுதி; propriety, suitability, fitness. 2. மேன்மை; excellence, good quality, transcendence. *"வார்த்தை யுசிதத்தை மந்திரிகளன்றி யறிவரோ" (திருவேங்.சத.30).*

[Skt. ucita > த. உசிதம்.]

உசிதம்[2] *uśitam,* பெ.(n.) 1. பெருங்காயம்; asafoetida. 2. கத்தூரி மஞ்சள்; round zedoary (சா.அக.).

உசிதவசனம் *uśita-vasaṉam,* பெ.(n.) 1. சரியான உணவு; a good dinner or food. 2. மேம்பட்ட உணவு; rich meal (சா.அக.).

உசிதன் *ucitaṉ,* பெ.(n.) பாண்டியன் (இறை.2, 32, மேற்கோட்பாடு) (அக.நி.); the *Paṇḍiya* king.

[Skt. ucita > த. உசிதன்.]

உசிரம் *uširam,* பெ.(n.) இலாமிச்சை வேர்; a fragrant root (சா.அக.).

உசிலோசிதம் *ušilōšitam,* பெ.(n.) கருப்புக் கடுக்காய்; a black variety of gallnut (சா.அக.).

உசுவாசநிசுவாசம் *ušuvāšanišuvāšam,* பெ.(n.) வலது மூக்கின் வழியாக ஆற்றலுள்ள காற்றை உள்ளிழுத்து, இடது மூக்கின் வழியாக வெளியே விட்டும், மறுமுறை மாறாக மூச்சுவிடும் ஒகமுறை; (in yoga philosophy) the vital air inhaled through the right and exhaled through the right and exhaled through the left nostril and vice versa (சா.அக.).

உசுவாசம் *ušuvāsam,* பெ.(n.) 1. உள்ளே மூச்சை இழுத்தல்; inhalation. 2. உயிர்க் காற்றை உட்கொளல்; inhalation of prana, through the right nostrill (சா.அக.).

[உள் + சுவாசம் → உசுவாசம்.]

உசூர் *ušūr,* பெ.(n.) 1. திருமுன்; presence of a superior authority, as of a magistrate. 2. அரசியல் நடத்துமிடம்; hall of audience, court; office of the chief magistrate or administrator.

[U. huzūr > த. உசூர்.]

உசூர்க்கச்சேரி *ušūr-k-kaccēri,* பெ.(n.) மாவட்டத் தலைமை வருவாய் அலுவலகம்; chief revenue office of the district.

[U. huzūr+kachahri > த. உசூர்க்கச்சேரி.]

உசேனி *usēṇi,* பெ.(n.) பண் வகை (பரத.ராக.104); (mus.) a specific melody-type.

[Skt. usēṇi > த. உசேனி.]

உஞ்சேனைமாகாளம் *uñcēṇai-mākāḷam,* பெ.(n.) உச்சயினியில் உள்ள சிவன் கோயில் (தேவா.1221, 8); the šiva shrine at ujjain.

[Skt. uñcēnaimaha-kāla > த. உஞ்சேனை மாகாளம்.]

உட்டணம் *uṭṭaṇam,* பெ.(n.) 1. முதிர்வேனில் (நாநார்த்த.);summer. 2. மிளகு (யாழ்.அக.); pepper.

[Skt. usṇa > த. உட்டணம்.]

உட்டாறா *uṭṭāṟā,* பெ.(n.) கப்பலில் சவாய்ப் பாய்களை இறக்க உதவும் கயிறுகள்; down-haul.

[U. uṭhānā > த. உட்டாறா.]

உட்டீனம் *uṭṭīṉam,* பெ.(n.) குறிப்பிட்ட வகைப் பறவைகளின் சிறப்புகளுள் ஒன்று; a particular kind of the flight of birds, one of eight different kinds mentioned. *"உட்டீனம்... கதிபறவைட்கெட்டுள" (காசிக். திரிலோ.6).*

[Skt. uḍḍina > த. உட்டீனம்.]

உடான் *uṭāṉ,* பெ.(n.) விளையாட்டாகச் சொல்லும் பொய்; fib, lie uttered for fun.

த.வ. பகடி.

[U. uḍāṉ > த. உடான்.]

உடோளக்கை *uḍoḷa-k-kai,* பெ.(n.) விரல்களை நெருக்கிக் கொண்டு, தோளுக்கு நேராக இரு கைகளையும் நீட்டும் இணைக்கை வகை (பரத.பாவ.52); (Natya.) a hand-pose in which both hands are stretched in front of the shoulders, with fingers kept close to one another.

[உடாளம் + கை.]

[Skt. ḍola > த. உடோளம்.]

உத்கிரமணம் *ut-kiramaṇam,* பெ.(n.) வெளிப்போகை; passing out.

[Skt. ūt-kramaṇa > த. உத்கிரமணம்.]

உத்கிருட்டம் *ut-kruṭṭam,* பெ.(n.) சிறந்தது; that which is excellent, eminent, superior.

[Skt. ut-krsṭa > த. உத்கிருட்டம்.]

உத்கோசம் *ut-kōsam,* பெ.(n.) பெரு முழக்கம்; loud roaring.

[Skt. ud-ghōsa > த. உத்கோசம்.]

உத்சர்ச்சனம் *utsarccanam,* பெ.(n.) ஓதா தொழிந்திருக்கை; temporary suspension of recitation of sacred books. *"உபக்கிரம உத்ஸர்ஜன காலத்தை" (கோயிலொ.33).*

[Skt. ut-sarjana > த. உத்சர்ச்சனம்.]

உத்சேபணம் *utsēbaṇam,* பெ.(n.) கூத்தின் மெய்ப்பாடுகளுள் (அங்க கிரியைகளுள்) ஒன்று (சிலப்.பக்.81, ft.n.); a mode of gesticulation.

[Skt. ut-kṣēpaṇa > த. உத்சேபணம்.]

உத்தஞ்சம் *uttañcam,* பெ.(n.) 1. செவிப் பூண்; ear-pendant. 2. சூட்டு மாலை; wreath.

[Skt. uttaṇsa > த. உத்தஞ்சம்.]

உத்தமர்ணன் *uttamarṇaṉ,* பெ.(n.) கடன் கொடுப்பவன் (சுக்கிரநீதி, 96); creditor, money lender.

[Skt. uttamarṇa > த. உத்தமர்ணன்.]

உத்தமவிம்சதி *uttama-vimsati,* பெ.(n.) ஆண்டு அறுபதனுள் 'பிரபவ' முதல் 'விய' வரையுமுள்ள 20 ஆண்டுகள்; the cyclic years from 'prapava' to viya in the jupitar cycle.

[Skt. uttama > த. உத்தமம்.]

உத்தரணி *uttaraṇi,* பெ.(n.) நீர் எடுத்தற்குரிய சிறு கரண்டி; small spoon used for taking water.

[Skt. ud-dharani > த. உத்தரணி.]

உத்தரத்திரயம் *uttara-t-tirayam,* பெ.(n.) மூன்று நாண்மீன்கள்; the three naksatras.

[Skt. uttara+ traya > த. உத்தரத் திரயம்.]

மானேறு (உத்தரம்), கடைக்குளம் (உத்தராடம்), பிற்கொழுங்கால் (உத்தரட்டாதி).

உத்தராகம் *uttarāgam,* பெ.(n.) சரணடைதலுக்குப் பின் செய்யப்படும் தீவினை (ஈடு, 10, 2, 1, ஜீ.); sin committed after pirapatti or self-surrender.

[Skt. uttarāga > த. உத்தராகம்.]

உத்தராசாடம் *uttarāsāḍam,* பெ.(n.) கடைக்குளம், இருபத்தோராவது நாண்மீன்; the 21st naksatra.

[உத்தரம் + ஆசாடம்.]

[Skt. uttara+sāḍhā > த. உத்தரசாடம்.]

உத்தரி–த்தல் *uttari-,* 11 செ.குன்றாவி.(v.t.) கொடுமை செய்தல்; to annoy, hurt, worry. *"உத்தமனாக்கை யுத்தரித்த பாடுகள் அத்தனைக்கும் எனவறிதி" (இரட்சணிய. பக்.78).*

[Skt. uddhr > த. உத்தரி–.]

உத்தவம் *uttavam,* பெ.(n.) விழா (நாநார்த்த.); festival.

[Skt. uddhava > த. உத்தவம்.]

உத்தரியம் *uttariyam,* பெ.(n.) **உத்தரீயம்** பார்க்க; see *uttarīyam. "அறுவை யுத்தரியந் தனிவிசும்பி லெறிந்தார்க்குந் தன்மையாலே" (பெரியபு.திருஞான.95).*

[Skt. uttariya > த. உத்தரியம்.]

உத்தாபம் *uttābam,* பெ.(n.) 1. மிகுவெப்பு; great heat. 2. தவிப்பு; distress. 3. முயற்சி; effort.

[Skt. uttāpa > த. உத்தாபம்.]

உத்தாபனி *uttāpaṉi,* பெ.(n.) தசை வகை (Anat.); exector, a muscle.

[Skt. utthāpanī > த. உத்தாபனி.]

உத்தாரக்கூறு *uttāra-k-kūṟu,* பெ.(n.) பாகப் பிரிவினை (சுக்கிரநீதி, 12); partition of ancestral property.

[உத்தாரம் + கூறு.]

[Skt. uddhāra > த. உத்தாரம்.]

உத்தாரணம் *uttāraṇam,* பெ.(n.) 1. எடுத்து நிறுத்துகை; lifting up, elevating. 2. தீங்கினின்று மீட்கை; rescuing, as from a trouble; delivering.

[Skt. ud-dhāraṇa > த. உத்தாரணம்.]

உத்தாரம் *uttāram,* பெ.(n.) முறையாகக் கொடுக்கும் சம்பளம்; regular, fixed payment. *"மாதவழி நூறுபொன்னு முத்தாரம்" (தெய்வச்.விறலிவிடு.295).*

[Skt. uttāra > த. உத்தாரம்.]

உத்தாலகம் *uttālakam,* பெ.(n.) ஒருவகை மரம் (வீரவனப்பு. வீரைபலா.26); a kind of tree.

[Skt. uddāla > த. உத்தாலகம்.]

உத்தாலம் *uttālam,* பெ.(n.) நறுவிலி (மூ.அ.); narrow-leaved sebesten.

[Skt. uddāla > த. உத்தாலம்.]

உத்தானத்துவாதசி *uttāva-t-tuvataci,* பெ.(n.) நளி (கார்த்திகை) மாதத்து வெண்பக்கப் பன்னிரண்டாம் நாள்; the 12th titi in the bright fortnight of *kārthikai.*

[உத்தானம் + துவாதசி.]

[Skt. utthāna > த. உத்தானம்.]

உத்தானம்[1] *uttāṉam,* பெ.(n.) 1. அடக்குகை; subduing. 2. இடை; waist.

[Skt. uddāna > த. உத்தானம்.]

உத்தானம்[2] *uttāṉam,* பெ.(n.) அடுப்பு (திவா.); oven.

[Skt. ud-dāna > த. உத்தானம்.]



உத்தானம்[3] *uttāṉam,* பெ.(n.) உயிர்த்தெழுகை; rising from the dead, resurrection.

[Skt. ut-thāna > த. உத்தானம்.]

உத்தானம்[4] *uttāṉam,* பெ.(n.) குழந்தையைப் பிள்ளைப்பேறு (பிரசவ) அறையினின்று வெளிக்கொணரும் வினை முறை; ceremony of bringing out an infant from the lying in room, one of *cōṭaca-camskāram.* *"உத்தானஞ் செய்துகந்தன ராயரே" (திவ். பெரியாழ்.1, 1, 8).*

[Skt. ut-thāpana > த. உத்தானம்.]

உத்தானவஞ்சிதம் *uttāṉavañcitam,* பெ.(n.) நாட்டியக்கை முப்பதனுள் ஒன்று (சிலப்.பக்.81); (Natya.) one of thirty *nirutta-k-kai.*

[உத்தானம் + வஞ்சிதம்.]

[Skt. uddāṉa > த. உத்தானம்.]

உத்தானி *uttāṉi,* பெ.(n.) தசைவகை; (Anat.) erector, a muscle.

[Skt. utthāṉi > த. உத்தானி.]

உத்திட்டம் *uttiṭṭam,* பெ.(n.) குறிப்பு (யாழ்.அக.); mention, note, indication.

[Skt. uddiṣṭa > த. உத்திட்டம்.]

உத்திதாங்குலி *uttitāṅguli,* பெ.(n.) வரமளிக்கும் கை (யாழ்.அக.); hand raised in abhaya pose.

[Skt.uddhita+aṅguli > த. உத்திதாங்குலி.]

உத்தியம் *uttiyam,* பெ.(n.) வேள்விவகை (திவா.); a sacrifice.

[Skt. ukthya > த. உத்தியம்.]

உத்தியாபனம் *uttiyābaṉam,* பெ.(n.) 1. முடிக்கை; bringing to conclusion, as a periodical fast. 2. நீங்கச் செய்கை; causing to depart. *"அண்ண லோடுமையை நண்பி னுத்தியாபனஞ்செய்தே" (பிரமோத்.18; 31).*

[Skt. ud-yāpana > த. உத்தியாபனம்.]

உத்தியானம் *uttiyāṉam,* பெ.(n.) பூஞ்சோலை (திவா.); garden, park.

[Skt. ud-yāna > த. உத்தியானம்.]

உத்தியுத்தன் *uttiyuttaṉ,* பெ.(n.) 1. ஊக்கமுள்ளவன்; a zealous person. 2. அருவுருவத்திருமேனி கொண்ட சிவன் (சி.போ.பா.1, 1); the *Sadāšiva* form of *Šiva.*

[உத்தி + உத்தன்.]

[Skt. ud-yukta > த. உத்தியுத்தன்.]

உத்தியோகம் *uttiyōgam,* பெ.(n.) 1. முயற்சி; effort, exertion. *"வேகமார் கலுழனுத்தியோகமென" (பிரபோத.28, 2).* 2. வேலை; business, employment, work.

[Skt. ud-yōga > த. உத்தியோகம்.]

உத்தியோகன் *uttiyōkaṉ,* பெ.(n.) பணியாளர்; officer, official. *"உபயத்திராளையும் ஏத்தி வாங்கிடும் உத்தியோகர்கள்" (சர்வசமய. பக்.190).*

உத்திரதம் *uttiratam,* பெ.(n.) அச்சுருவாணி (யாழ்.அக.); linch-pin.

[Skt. udratha > த. உத்திரதம்.]

உத்திரம் *uttiram,* பெ.(n.) தேட்கொடுக்கி என்னும் மூலிகை; indian heliotrope.

[Skt. uddira > த. உத்திரம்.]



உத்திலேசம் *uttilēsam,* பெ.(n.) ஒருவனை நால்வகை வழிகளால் உண்மை கூறும்படிச் செய்தல் (சுக்கிரநீதி, 282); making one speak the truth by the four fold expedients.

[Skt. yuki-lēša > த. உத்திலேசம்.]

உத்தீபகம் *uttībagam,* பெ.(n.) எழுச்சி யுண்டாக்குவது; that which excites or inspirits, stimulant. *"காமோத்தீபகமான பொருள்".*

[Skt. ud-dīpaka > த. உத்தீபகம்.]

உத்தீபனம் *uttīpaṉam,* பெ.(n.) எழுச்சி யுண்டாக்குகை; kindling, exciting, stimulating.

[Skt. ud-dīpana > த. உத்தீபனம்.]

உத்தீயம் *uttīyam,* பெ.(n.) ஏழுவித சோம வேள்விகளுள் ஒன்று (பிரபோத.39, 14); one of seven varieties of the *Sōma*sacrifice.

[Skt. ukthya > த. உத்தீயம்.]

உத்துவாகம் *uttuvākam,* பெ.(n.) திருமணம் (பார்ப்பன.); marriage.

[Skt. udvāha > த. உத்துவாகம்.]

உத்துவாகிதமுகம் *uttuvāgida-mugam,* பெ.(n.) தலையண்ணாந்து பார்க்கை; looking up with the head thrown back, one of 14 *muka-v-apiṉayam.*

[உத்துவாகிதம் + முகம்.]

[Skt. ud-vāhita→த. உத்துவாகிதம்.]

உத்துவாசனம் *uttuvāšaṉam,* பெ.(n.) அனுப்பிவிடுகை; send-off, farewell, quitting, dismissal.

[Skt. ud-vāsana > த. உத்துவாசனம்.]

உத்துவீதம் *uttuvītam,* பெ.(n.) நாட்டியக்கை முப்பதனுள் ஒன்று (சிலப்.பக்.81); (Natya) one of thirty *nirutta-k-kai.*

[Skt. ud-vīta > த. உத்துவீதம்.]



உத்துவேகம் *uttuvēkam,* பெ.(n.) 1. மிகு விரைவு (நாநார்த்த.); quickness of motion. 2. அச்சம்; fear. 3. திருமணம்; marriage. 4. பாக்கு; areca-nut.

[Skt. udvēga > த. உத்துவேகம்.]

உத்துளம் *uttuḷam,* பெ.(n.) திருநீற்றை நீரிற் குழையாது உடலிற் பூசுகை; smearing one's body with dry sacred ashes. *"மிக்க விருமுத்துள மெய்வீறு" (அலங்காரச் சிந்து, 9).*

[Skt. ud-dhūlana > த. உத்துளம்.]

உத்தூளம் *uttūḷam,* பெ.(n.) திருநீற்றை நீரில் குழைக்காது வரியின்றிப் பூசுகை (சித். சிகா.விபூதி.14); besmearing parts of one's body with dry sacred ashes.

[Skt. ud-dhūlana > த.உத்தூளம்.]

உத்தூளனம் *uttūḷaṉam,* பெ.(n.) **உத்தூளம்** பார்க்க (தணிகைப்பு.இராம.22); see *uttūḷam.*

[Skt. ud-dhūlana > த. உத்தூளனம்.]

உத்தூளி *uttūḷi,* பெ.(n.) **உத்துளம்** பார்க்க; see *uttuḷam. "வெண்ணீற்றி னுத்தூளி" (சிதம்பர.திருப்பதி.454).*

[Skt. ud-dhūlita > த. உத்தூளி.]

உத்தேசம்[1] *uttēśam,* பெ.(n.) உயரம்; height. *"உத்சேதம் எழுநூற்றெழுபத்தைந்து வில்லு" (ஸ்ரீபுராணம்.).*

த.வ. குத்துமதிப்பு.

[Skt. utsēdha > த. உத்சேதம்.]

உத்தேசம்[2] *uttēśam,* பெ.(n.) 1. நோக்கம்; intention, object, motive, aim. 2. மதிப்பு; estimate, guess, conjecture, surmise. 3. பின்னர் விரித்துக் கூறுவதற்காகப் பேர் மாத்திரையால் பொருளை மட்டும் குறிப்பிடுகை; preliminary indication of a topic which is to be further defined and classified.

[Skt. ud-dēśa > த. உத்தேசம்.]

உத்தேசியம் *uttēśiyam,* பெ.(n.) கருதிய பொருள்; object in view.

[Skt. ud-dēśya > த. உத்தேசியம்.]

உத்பாதம் *utpādam,* பெ.(n.) **உற்பாதம்** பார்க்க; see *uṟpādam.*

[Skt. ut-pāta >த. உத்பாதம்]

உதகபூருவஞ்செய்தல் *utaka-pūrvañcey,* செ.குன்றாவி.(v.t.) திருக்கொடை (தானம்) செய்யும்போது நீர்வார்த்தல்; to pour water when a gift is made ceremonially. *"உதக பூருவஞ் செய்து கொடுத்தேன்" (S.I.I.i, 77).*

[உதகம் + பூருவம் + செய்தல்.]

[Skt. udhaka+pūrvam> த. உதகபூருவம்.]

உதயகாந்தாரி *utaya-kāntāri,* பெ.(n.) பண்வகை (பரத.ராக.103); (mus.) a specific melody-type.

[உதயம் + காந்தாரி.]

[Skt. udhyam > த. உதயம்.]

உதயபானு *utaya-bāṉu,* பெ.(n.) பண்வகை (பரத.இராக.103); (mus.) a specific melody type.

த.வ. எடுத்துக்காட்டு.

[உதயம் + பானு.]

[Skt. udhaya > த. உதயம்.]

உதாகரணம் *udākaraṇam,* பெ.(n.) சான்று; illustration.

[உதாரணம் →உதாகரணம்.]

[Skt. ud-ā-haraṇa > த. உதாகரணம்.]

உதாகரிகன் *utākarikaṉ,* பெ.(n.) எடுத்துக்காட்டாகவுள்ளவன்; exemplar. *"சொன்மரு வுதாரிகன்" (மான்விடு.198).*

[Skt. உதாகரி + > த. உதாகரிகன்.]

உதாசனன்[1] *udāšaṉaṉ,* பெ.(n.) 1. நெருப்பு; fire. 2. நெருப்புக் கடவுள்; Agni, the god of fire. 3. கொடுவேலி (மூ.அ.); Ceylon leadwort. *"எழில்கொ ளுதாசன ளைகமதே" (தேவா.150;7).*

[Skt. huta+ašana > த. உதாசனன்.]



உதாசனன்[2] *udāšaṉaṉ,* பெ.(n.) இகழ்பவன் (நிந்திப்பவன்); reviler, abuser (w.).

[Skt. ud-ā-sina > த. உதாசனன்.]

உதாசனி-த்தல் *utāsaṉi-,* 11 செ.குன்றாவி. (v.t.) புறக்கணிப்புச் செய்தல்; to treat with contempt. *"இரப்பவரைக் கண்டால் உதாசனித்தலும் இன்றி" (குறள், 1055, மணக்.).*

[Skt. udāsina > த. உதாசனி-த்தல்.]

உதாசனி *udāšaṉi,* பெ.(n.) கொடியவள்; fiery, cruel woman. *"சூர்ப்பணகைப் படுமூளி யுதாசனி" (திருப்பு.266).*

[Skt. huta+ašana > த. உதாசனி.]

உதாசினம் *udāšiṉam,* பெ.(n.) நினைவில் (கவனத்தில்) கொள்ளப்படாத சொல்; contemtible word. *"உற்றாரை யுதாசினங்கள் சொல்ல வேண்டாம்" (உ.வ.).*

த.வ. தாழ்ச்சியுரை.

[Skt. ud-ā-sina > த. உதாசினம்.]

உதாசீனம் *udāšīṉam,* பெ.(n.) 1. விருப்பு வெறுப்பின்மை; indifference, apathy, neutrality. 2. இகழ்வு; contempt. *"நட்பேயுதாசீனம் பகை" (பன்னிருபா.56).*

த.வ. தாழ்ச்சி.

[Skt. ud-ā-sina > த. உதாசீனம்.]

உதாசீனன் *udāšīṉaṉ,* பெ.(n.) 1. பொதுவா யிருப்பவன் (சி.சி.4, 8, சிவாக்.); one who is indifferent or neutral. 2. இல்லறக் கடனை முடித்து உவர்ப்புப் பிறந்த இல்லறத்தான்; a house holder who has discharged his duties and given up all worldly attachment.

[Skt. ud-ā-sina > த. உதாசீனன்.]

உதாத்தம் *utāttam,* பெ.(n.) 1. செல்வத்தி னுயர்ச்சி; figure of speech which expresses either abundance of wealth, or the greatness of thought. 2. மறையோதும் ஓசை நான்கனுள் ஒன்றாகிய எடுத்தலோசை (திருவிளை. தடாதகை.8); rising accent, one of four *vēdasvaram.*

[Skt. udātta → த. உதாத்தன்.]

உதாத்தன் *utāttaṉ,* பெ.(n.) 1. பெரியோன் (நாநார்த்த.); great man. 2. கொடையாளி; libral donor.

[Skt. udātta → த. உதாத்தன்.]

உதாரகுணம் *udāra-kuṇam,* பெ.(n.) வள்ளன்மை; liberality, manificence.

[உதாரம் + குணம்.]

[Skt. udāra> த. உதாரம்.]

உதாரணம் *udāraṇam,* பெ.(n.) 1. எடுத்துக்காட்டு; example, illustration. 2. கண்டபொருளைக்கூறி காணாத பொருளை சிந்திக்க வைக்கும் கருதளவை (அனுமானம்); statement of instance, the third member

of an indian syllogism (log.) *"அசைச் சீர்க்குதாரண நாண்மலரே" (காரிகை. உறுப்.7).*

த.வ. சான்று.

[Skt. ud-ā-harana > த. உதாரணம்.]

உதாரத்துவம் *udārattuvam,* பெ.(n.) வள்ளன்மை; liberality, munificence.

[Skt. udāratva > த. உதாரத்துவம்.]

உதாரதை *udāradai,* பெ.(n.) 1. கொடை; liberality. *"ஊணிலான் செய்யும் உதாரதையும்" (சிறுபஞ்.12).* 2. **உதாத்தம்** பார்க்க (வீரசோ.அலங்.29); see *udāttam.*

[Skt. udāra-tā > த. உதாரதை.]

உதாரம் *udāram,* பெ.(n.) 1. கொடை; liberality, generosity, munificence. *"உதார சீலனுய ரங்கர்கோன்" (பாரத.கிருட்.134).* 2. மேம்பாடு; nobility, greatness. *"கனமிலதா முதாரமதா மென்னினும்" (ஞானவா. வைராக்.64).* 3. குறிப்பினால் ஒரு பொருள் சிறப்புப்படத் தோன்றுவதாகிய குணம் (தண்டி.20); indication by indirect suggestion of the excellance or the eminence of a thing, a merit of poetic composition (poet).

[Skt. udāra > த. உதாரம்.]

உதாரன் *udāran,* பெ.(n.) 1. கொடையாளி; liberal man, generous person. 2. சிறந்தவன்; a person of good address, of confidence, of manliness (w.).

[Skt. udāra > த. உதாரன்.]

உதாரி *udāri,* பெ.(n.) **உதாரன்** பார்க்க; see *udāran. "உதாரி மேவிய கானமே" (சேதுபு. தரும.9).*

[Skt. udāra > த. உதாரி.]

உதானன் *udāṉaṉ,* பெ.(n.) பத்து வளிகளுள் (தசவாயுக்களுள்) ஒன்று; a vital air of the body, the ascending *vāyu,* one of *tasa-vāyu* (பிங்.).

[Skt. udāna > த. உதானன்.]

உதானன்றிசை *utāṉaṉṟišai,* பெ.(n.) வாயு விளங்கம் (சங்.அக.); small elliptic cuspidate-leaved wind berry.

[உதானன் + திசை.]

[Skt. உதானன் > உதானன்.]

உதிட்டிரன் *udiṭṭiraṉ,* பெ.(n.) பாண்டவரில் மூத்தவனான தருமன்; *yudhistira,* the eldest of the *Pañca-pāṇḍavar.*

[Skt. yudhi-ṣṭhira > த. உதிட்டிரன்.]

உதீசி *udīśi,* பெ.(n.) வடக்கு; north. *"உதீசித் திருத்திய திசையில்" (இரகு.முடிசூ.34).*

[Skt. udicī > த. உதீசி.]

உப்பர்காவி *uppar-kāvi,* பெ.(n.) காவியின் மேற்பாய்; upper top sail (M.Navi.83).

[U. upar+ > த. உப்பர்காவி.]

உப்பர்சவர் *uppar-savar,* பெ.(n.) கப்பலின் மேலிடத்துக் கட்டப்படும் பாய்வகை; upper top-gallant sail (M.Navi.83).

[U. upar > த. உப்பர்.]



உப *uba,* இடை. (part.) 1. உபசந்தி, உபக்கிரகம் என்பவற்றில் வருவது போல அருகு (சமீபம்), முதன்மையற்றது (அப்பிரதானம்) என்பவற்றைக் காட்டும் ஒரு வடமொழி முன்னொட்டு (உபசருக்கம்); a Skt. adverbial or adnominal prefix implying proximity or subsidiariness. 2. குறைந்த அல்லது குறை என்னும் பொருள்படும் ஒரு முன்னொட்டு; a prefix denoting lack or deficiency. 3. துணை; auxillary or secondary.

வடமொழியில் upa, அடிப்படையாக, அருகில் செல்லுதல், முன்னுக்குப் போதல் அதாவது பக்கத்தில் போதல், என்னும் பொருள் தருகிறது. ஒன்றுக்கு அருகில் இருப்பது என்னும் வழக்கு பின்னர் ஒன்றுக்குத் துணையாவது, அடுத்த நிலையில் இருப்பது போன்ற பொருள்களிலும் ஆளப்பட்டுள்ளது. தமிழில் உப பெரும்பான்மை துணை அதாவது இரண்டாம் நிலை என்னும் பொருளிலேயே வழக்கெய்தியுள்ளது. எ-டு : உபதலைவர்.

வடமொழியில் upa. ஒடு, உடன், கீழ் முதலியவற்றையும் அன்றியும், அதன்கூட என்பவற்றையும் உணர்த்தும் முன்னொட்டாக வருகிறது.

உபக்கிரகம்[1] *uba-k-kiragam,* பெ.(n.) பெருங்கோளை (கிரகத்தை)ச் சுற்றியோடுஞ் சிறுகோள்; satellite.

த.வ. துணைக்கோள்.

[Skt. upa-graha > த. உபக்கிரகம்.]

உபக்கிரகம்[2] *uba-k-kiragam,* பெ.(n.) சிறை (நாநார்த்த.); prison.

[Skt. upa-graha > த. உபக்கிரகம்.]

உபக்கிரம் *uba-k-kiram,* பெ.(n.) முகர்தல்; smelling.

உபக்கிரமணம்[1] *uba-k-kiramaṇam,* பெ.(n.) தொடக்கம்; commencement, beginning.

[Skt. upa-kramaṇa > த. உபக்கிரமணம்.]

உபக்கிரமணம்[2] *uba-k-kiramaṇam,* பெ.(n.) பண்டுவம் (மருத்துவம்) செய்தல்; applying medicine to or operating upon, patients to cure diseases.

[Skt. upa-kramaṇa > த. உபக்கிரமணம்.]

உபக்கிரமணிகை *uba-k-kiramaṇigai,* பெ. (n.) 1. முகவுரை; preface. 2. பாயிரம்; introduction.

[Skt. upa-kramaṇikā> த. உபக்கிரமணிகை.]

உபக்கிரமம்[1] *uba-k-kiramam,* பெ.(n.) தொடக்கம்; beginning, commencement. *"விஞ்சுமுபக்கிரம முபசங்கார நடையாய்" (பிரபோத. 22, 17).*

[Skt. upa-krama > த. உபக்கிரமம்.]

அருகில் செல்லுதல், வருதல், சென்று சேர்தல் என்ற பொருளுள்ள kram என்னும் வேரிலிருந்து upakram என்னும் சொல் பிறந்துள்ளது (மா.வி.). தமிழில் அது தொடக்கம் என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது.

உபக்கிரமம்[2] *uba-k-kiramam,* பெ.(n.) 1. பண்டுவம் (மருத்துவம்); medicine in theory. 2. மருத்துவப் பயிற்சி (வைத்தியாப்பியாசம்); medicine in practice.

[Skt. upa-krama > த. உபக்கிரமம்.]

உபக்கிரமம்[3] *ubakkiramam,* பெ.(n.) மறம் (விக்கிரமம்) (நாநார்த்த.); prowess.

[Skt. upa-krama > த. உபக்கிரமம்.]

உபக்கிரமி-த்தல் *uba-k-kirami-,* 11 செ.குன்றாவி.(v.t.) தொடங்குதல்; to begin. *"பாட்டுக்களையடைவே விவரிப்பதாக உபக்கிரமிக்கிறார்" (ஈடு. 1, 1, 1, ஜீ).*

kram என்னும் வேரிலிருந்து பிறந்த upakram என்னும் வடசொல் தமிழில் உபக்கிரமம் என்னும் வடிவத்தில் வழக்கூன்றியுள்ளது. இப்பெயர் பின்னர் வினைப்படுத்தும்போது உபக்கிரமித்தல் என்று வடிவம் பெற்றுள்ளது. வடமொழியில் upakram என்பது தொடங்குதல் என்னும் வினைவடிவத்தில் ஆட்சியுள்ளது. தமிழ் வினைவடிவம் பெயரிலிருந்து வினைதோன்றிய பின்னாக்க நிலையையே காட்டுகிறது.

உபக்கிரயம் *uba-k-kirayam,* பெ.(n.) முகர்தல்; smelling.

உபக்கிராமம் *uba-k-kirāmam,* பெ.(n.) சிற்றூர் (உட்கிடைச் சிற்றூர்); hamlet, dependent village (C.G.).

த.வ. பட்டி.

[Skt. upa+grāma > த. உபக்கிராமம்]

உபக்கிராமம் = கிராமத்தை (ஊரை)க் காட்டிலும் சிறியது. இன்றைய அரசு கணக்கின்படி பல சிற்றூர்கள் சேர்ந்தது ஓர் ஊர். வடசொல் grāma என்பதற்கு மக்கள் வாழிடம், ஊர், சிற்றூர் ஆகிய பொருள்கள் உண்டு. இச்சொல் தமிழில் ஊர் என்ற பொருளுடனும் பெருவழக்கெய்தியுள்ளது. கிராமம் என்னும் சொல் ஊரைக் குறித்தபின் அதனினும் சிறிய வாழிடமான சிற்றூரைக் குறிக்க உபக்கிராமம் என்னும் சொல் வடமொழியில் வழக்கூன்றியுள்ளது.

உபகச்சம் *uba-kaccam,* பெ.(n.) வெள்ளை யாமணக்கு; moghul castor-oil plant.



உபகஞ்சிகம் *uba-kañjigam,* பெ.(n.) கருஞ்சீரகம்; black cumin seed, nigella-satica.

உபகண்டம் *uba-kaṇḍam,* பெ.(n.) கழுத்தடி; the portion of the trachea between the neck and the thorax, cervico-thorax.

[உப + கண்டம்]

[Skt. upa > த. உப]

கள் → கண்டு → கண்டம் = கழுத்து.

உபகணம் *uba-kaṇam,* பெ.(n.) கருங்கோள் செங்கோள் (இராகுகேது) (மங்கலே. பாயி. 1); (Astron.) the ascending and descending nodes.

[உப + கணம்]

[Skt. upa > த. உப]

குல் → குலம் = கூட்டம். குல் → கல் → கல. கலத்தல் = கூடுதல். குல் → குள் → கள். கள்ளுதல் = கூடுதல். கள் → களம் = கூட்டம். கள் → கண். கண்ணுதல் = பொருந்துதல். கண் → கண. கணத்தல் = கூடுதல். கண் → கணம் = கூட்டம்.

[த. கணம் > Skt. gaṇa.]

உபகதை *uba-kadai,* பெ.(n.) 1. கிளைக்கதை; subordinate narrative, short story, episode. 2. கட்டுக்கதை (சங்.அக.); fable.

[உப + கதை.]

[Skt. upa > த. உப]

[த. கதை > Skt. kathā.]

upakathā என்னும் வடசொற்குச் சிறுகதை, கதை, துணையாக விளக்கப்படுவது (கிளைக்கதை) என்னும் பொருள்களை மா.வி. காட்டுகிறது. இப்பொருள்களுள் கிளைக்கதை என்னும் பொருளே தமிழில் இடம்பெற்றுள்ளது. மேலும், கட்டுக்கதை என்னும் புதுப் பொருளும் இங்கு உருவாகியுள்ளது. கிளைக்கதை மூலக் கதையோடு தொடர்புற்றிருப்பது போன்று மூலக்கதையை விளக்குமுகத்தான் புனைந்துரைப்பதால் இப்பொருள் தொடர்புடையதாயிற்று.

உபகந்தகம் *uba-kandagam,* பெ.(n.) கந்தகம் குறைவாயுள்ள ஓர் உப்பு; any salt containing less of sulphate, *Hyposulphite.*

உபகந்தம் *uba-kandam,* பெ.(n.) அளவிற் குறைந்த மண(வாசனை)ப் பொருள்; perfumes with less odour.

[உப + கந்தம்]

[Skt. upa > த. உப]

காந்து → கந்து → கந்தம்.

உபகம் *ubagam,* பெ.(n.) பெண்ணிடம் சேர்தல்; approaching a woman sexually.

[*Skt. upagam > த. உபகம்.*]

உபகமம் *ubagamam,* பெ.(n.) 1. ஏற்பு (அங்கீகாரம்) (நாநார்த்த.); acceptance. 2. அணுகுகை; approach.

[*Skt. upa-gama > த. உபகமம்.*]

உபகரணம் *uba-karaṇam,* பெ.(n.) 1. துணைப் பொருள்கள்; instrument, implement, means, apparatus. paraphernalia, as vessels at a sacrifice. *"உகந்த பொருளோ டுபகரண மொருங்கு சேர்த்தி" (சேதுபு. அநும. 22).* 2. துணைக் காரணம் (திவா.); instrumental cause. 3. உயிருக் குதவியானது; means of subsistence anything supporting life. 4. துணைச் செய்கை; action or operation done with an instrument.

த.வ. **துணைக்கருவி.**

[*உப + கரணம்.*]

[*Skt. upa > த. உப.*]

கருத்தல் = செய்தல். கரு → கரணம். *karaṇa* என்னும் சொல் செய், செயல்படுத்து என்னும் பொருளுள்ள kṛi என்னும் வேரிலிருந்து பிறந்ததாக மா.வி. காட்டுகிறது. 'கரு' என்னும் தமிழ்வினை *kṛi* எனத் திரிந்து அங்கு வழக்கூன்றியுள்ளது.

உபகரணவைத்தியம் *uba-garaṇa-vaittiyam,* பெ.(n.) கருவியினால் செய்யும் மருத்துவ முறை; the operative branch of medical practice-surgery.

[*உப + கரண(ம்) + வைத்தியம்.*]

[*Skt. vaidya > த. வைத்தியம்.*]

உபகரி-த்தல் *uba-kari-,* 14 செ.கு.வி.(v.i.) உதவுதல்; to render aid, do a kindness, confer a benefit, bestow favour. *"திவ்யாத்ம ஸ்வரூப வைலக்ஷண்யத்தைக் காட்டியுபகரித்தான்" (ஈடு. 1,1,1).*

[*உப + கரி-.*]

[*Skt. upa > த. உப.*]

கருத்தல் = செய்தல். கரு → கரி. 'upkṛi'என்னும் வடமொழி வடிவத்தில் தமிழ்வினை கருவுடன் உபமுன்னொட்டு சேர்ந்துள்ளது.

உபகருமம் *uba-karumam,* பெ.(n.) குறைவான தொழில்; (in medicine) diminished function-Hypo function.

[*உப + கருமம்.*]

[*Skt. upa > த. உப.*]

கரு → கருமம்.

உபகற்பம் *uba-kaṟpam,* பெ.(n.) 1. காட்டுத்தீ, செங்கல் சூளையின் நெருப்பு முதலிய வற்றால் வெந்த சாம்பலைக் கொண்டு முறைப்படியமைத்த திருநீறு (வீபூதி) (சைவச. பொது 183); sacred ashes taken from natural forest fire or from artificially made brick or kiln fire and prepared according to rule, one of three vibūdi. 2. காய கற்ப மூலிகைகளைக் கொண்டு மருந்து உருவாக்குங் காலத்து அவற்றிற்கு உதவியாகச் சேரும் சரக்குகள்; auxillary or minor drugs which are added as ingredients to the life - promoting drugs used in the preparation of a cordial or an elixir. 3. தேற்று மருந்து; a preparation consisting of drugs promoting vigiour by relieving pain paregoric elixir.

[*உப + கற்பம்.*]

[*Skt. upa > த. உப.*]

கல் → கலி = ஒன்று சேர்தல், கூடுதல், மிகுதல், பெருகுதல். கல் → கல்பு → கல்பம் → கற்பம்.

உபகாதம் *uba-kādam,* பெ.(n.) நோய்; disease.

உபகாரகன் *ubakāragaṉ,* பெ.(n.) 1. உதவி செய்வோன்; assistant, friend, benefactor. *"நிர்ஹேதுகமாகத்தானே யுபகாரக னானான்" (ஈடு. 1,1,1).* 2. மருத்துவனுக்குத் துணையாளி; a male medical assistant.

[*Skt. upa-kāraka > த. உபகாரகன்.*]

'ன்' ஆ.பா.ஈறு.

உபகாரச்சம்பளம் *ubakāra-c-cambaḷam,* பெ.(n.) 1. ஒய்வூதியம்; pension. 2. படிப்புக்காக அளிக்கப்படும் பொருளுதவி; scholarship.

த.வ. உதவிச்சம்பளம், உதவித்தொகை.

[உபகாரம் + சம்பளம்.]

[Skt. upa > த. உப.]

கரு > காரு > காரம்.

சம்பு = கூலம், நெல்; அளம் = உப்பு. பழங்காலத்தில் சம்பளம் கூலமும் உப்புமாகக் கொடுக்கப்பட்டது.

த. சம்பளம் > **Skt.** šambaḷa (provender or provisions for a journey, stock for travelling.)

உபகாரசுமிருதி *ubakārasumirudi,* பெ.(n.) செய்ந்நன்றியறிகை; rememberance of a kind act, gratitude for a benefit received. *"உபகாரஸ்மிருதியினாலே ஆழ்வானைக் கொண்டாடுகிறார்கள்" (திவ். திருப்பல். 7).*

[உப + கார + சுமிருதி.]

[Skt. upa > த. உப.]

[Skt. upa-kāra-smiriti > த. உபகாரசுமிருதி.]

உபகாரம்[1] *ubakāram,* பெ.(n.) 1. உதவி; help, assistance, opp. to அபகாரம். *"நல்லாரொருவர்க்குச் செய்த வுபகாரம்" (வாக்குண். 2).* 2. கொடை (பிங்.); present, gift. 3. காணிக்கை; offering, oblation. *"நயந்தினிய வுபகார நல்கினார்கள்" (திருவாலவா. 2, 4).*

த.வ. உதவி.

[உப + காரம்.]

[Skt. upa > த. உப.]

கருத்தல் = செய்தல். கரு → காரு → காரம் = செய்கை. உப = துணை, உதவி. உபகாரம் = துணை செய்கை, உதவி புரிகை, உதவி.

உபகாரம்[2] *ubagāram,* பெ.(n.) மகிழ்ச்சி (அக.நி.); joy.

[Skt. upa-hāra > த. உபகாரம்.]

உபகாரம்[3] *ubakāram,* பெ.(n.) குறைந்த காரம்; less alkaline than normal-Hypo-alkaline.

[உப + காரம்.]

[Skt. upa > த. உப.]

[கடு → கடி → கரி → கார். கார்த்தல் = உறைத்தல். கார்ப்பு = உறைப்பு. கார் → காரம் = உறைப்பு, எரிச்சல், பிள்ளை பெற்ற பெண்டிர்க்குக் கொடுக்குங் காரமருந்து.]

உபகாரன் *ubakāraṉ,* பெ.(n.) **உபகாரி** பார்க்க; see *ubakāri.*

[Skt. upa-kāra > த. உபகாரம் > உபகாரன்]

உபகாரி *ubakāri,* பெ.(n.) உதவி செய்வோன் (பிங்.); benefactor, generous person, one who is obliging.

த.வ. உதவுநன்.

[Skt. upa-kārin > த. உபகாரி.]

[உபகாரம் → உபகாரி. 'இ' உடைமை குறித்த ஈறு]

உபகாரிப்பு *ubagārippu,* பெ.(n.) முழுவதுமாக மலர்ந்த பூ; a blossom, a full blown flower.

உபகாரிவிரணம் *ubagāri-v-iraṇam,* பெ.(n.) மெழுகு; wax.

உபகாலிகம் *ubagāligam,* பெ.(n.) **உபகுஞ்சம்** பார்க்க;see *upa-kuñjam.*

உபகிதம் *ubagidam,* பெ.(n.) தொல்லை (உபாதி)யுடையது (விசாரசந். 321); that which has *ubādi.*

[Skt. upahita > த. உபகிதம்.]

உபகிரகம் *ubakiragam,* பெ.(n.) நோய்களை யுண்டாக்கும் ஆவி, காற்று (கிரகம்); a kind of demon causing diseases.

உபகிரமம் *uba-kiramam,* பெ.(n.) 1. நோயாளியைக் கவனித்தல்; attendance on a patient. 2. மருத்துவம், பண்டுவம்; treatment, practice or application of medicine.

உபகிருசம் *ubakirušam,* பெ.(n.) ஒரு வகைப் பல் நோய்; a kind of teeth disease.

உபகிருதம் *ubakirudam,* பெ.(n.) உதவி (சங்.அக.); assistance, help, aid.

[Skt. upa-krta > த. உபகிருதம்.]

உபகிருதன் *ubakirudan,* பெ.(n.) தானாகவே ஒருவற்குத் தன்னேற்பு (சுவீகாரம்) புகுந்தவன் (ஏலா. 31); (Law) self-given son, son adopted with his own consent.

உபகிருதி *ubakirudi,* பெ.(n.) **உபகிருதம்** (வின்.) பார்க்க; see *upakirudam.*

[Skt. upa-krti > த. உபகிருதி.]

உபகில்லியம் *ubakilliyam,* பெ.(n.) திப்பிலி; long-pepper.

[Skt. upa-kulyā > த. உபகுல்லியம் → உபகில்லியம்.]

உபகுசம் *ubakušam,* பெ.(n.) பல்லீறில் வரும் கொப்புளம்; gum-boil.

உபகுஞ்சம் *ubakuñjam,* பெ.(n.) 1. கருஞ்சீரகம்; black cumin. 2. ஏலம்; cardamom.

உபகுஞ்சிகம் *ubakuñjigam,* பெ.(n.) சிற்றேலம்; small cardamom.

[Skt. upa-kuñcika > த. உபகுஞ்சிகம்.]

உபகுஞ்சிகை *ubakuñjigai,* பெ.(n.) 1. கருஞ்சீரகம்; black cumin. 2. ஏலம் (மூ.அ.); cardamom plant.

[உப + குஞ்சிகை.]

[Skt. upa > த. உப.]

குஞ்சி >குஞ்சிகை.

உபகுஞ்சிதம் *ubakuñjidam,* பெ.(n.) கத்தூரியரளி; musk-oleander.

உபகும்பம் *ubakumbam,* பெ.(n.) 1. சீரகம்; cumin-seed. 2. காட்டாமணக்கு; wild-croton.

உபகுரு *uba-guru,* பெ.(n.) துணை ஆசிரியர்; assistant teacher, assistant to the guru.

[உப + குரு.]

[Skt. upa > த. உப.]

குரு = பெருமை. குரு → குரவன் = பெரியோன், ஐங்குரவர், இரு முது குரவர். குரு என்னும் சொல்லுக்குப் பெரியோன் என்பதே மூலப் பொருளாகும்.

உபகுல்லம் *ubakullam,* பெ.(n.) சுக்கு (மூ.அ.); dried ginger.

உபகுல்லாவிசம் *ubakullāvišam,* பெ.(n.) கம்பளி மரம்; cater pillar tree.

உபகுல்லியை[1] *ubakulliyai,* பெ.(n.) திப்பிலி, மருந்துக் கொடிவகை; long pepper.

[Skt. upa-kulyā > த. உபகுல்லியை.]

உபகுல்லியை[2] *ubakulliyai,* பெ.(n.) கிளை வாய்க்கால் (நாநார்த்த.); branch channel.

[Skt. upakulyā > த. உபகுல்லியை]

உபகுலியம் *ubakuliyam,* பெ.(n.) **உபகுல்லியை**[1] (மூ.அ.) பார்க்க; see *upakulliyai*[1].

[Skt. upa-kulyā > த. உபகுலியம்.]

உபகுலியை *ubakuliyai,* பெ.(n.) **உபகில்லியம்** பார்க்க; see *upakilliyam.*

[Skt. upakulyā > த. உபகுலியை.]

உபகுலோசிகம் *ubakulōšigam,* பெ.(n.) கத்தைக் காம்பு; black catechu or pegu catechu.

உபகேசி *ubakēši,* பெ.(n.) 1. நப்பின்னை; *Nappinnai,* a wife of Krṣṇa. *"உபகேசி தோண்மணந்தான்" (வள்ளுவமா. 21, நேமிநா. சொல். 5, உரை).* 2. இடுமுடியாள்; wigged woman.

[Skt. upa-kēsi > த. உபகேசி.]

உபசங்காரம் *uba-šaṅgāram,* பெ.(n.) 1. முடிவு, அழிவு; end, destruction, reduction. 2. கூட்டுறவை யழித்தல்; reducing a compound to its original elements. *"தனுவாதி யுபசங்காரப்*

படுகையால்" (சி.சி.1, 32, சிவாக்.). 3. முடிக்கை; summarizing, summing up, resume. *"உபசங்கார நடையாய்" (பிரபோத. 22, 17).* 4. படைக்கலனைத் தடுக்கும் மந்திரம்; *mantra* for preventing a particular missile from harming *"பிரமன் மெய்த்தவப் படையை விலக்குதற் குப சங்கார நானறிகிலன்" (வரத. பாகவத. பரீட்சித். சனன. 10).*

[**Skt.** *upa-saṃ-hāra > த. உபசங்காரம்.*]

உபசத்தி *ubašatti,* பெ.(n.) 1. ஒன்றுபடுதல்; union. 2. உதவி; service. 3. ஈகை; gift.

[**Skt.** *upašatti > த. உபசத்தி.*]

உபசந்தானம் *ubašandāṉam,* பெ.(n.) தொடுக்கை; fastening, tacking, affixing as an arrow. *"வெங்கணை..... உபசந்தானம் புரியரு மறையு மீந்தான்" (கூர்மபு. இராமனவ. 21).*

[**Skt.** *upa-san-dhāna > த. உபசந்தானம்.*]

உபசந்தி *uba-šandi,* பெ.(n.) சந்திக்குச் சற்று முந்தின காலம்; period of time just before sunrise or sunset. *"சந்தி உபசந்திகளின் பேதத்தையறிந்து" (சைவச. பொது. 76, உரை).*

த.வ. **அந்திசந்தி.**

[*உப + சந்தி.*]

[**Skt.** *upa > த. உப.*]

அந்து → அந்தி → சந்தி.

உபசம்மாரம் *uba-šammāram,* பெ.(n.) **உபசங்காரம்** பார்க்க; see *upašaṅgāram.*

[**Skt.** *upa-saṃ-hāra > த. உபசம்மாரம்*]

உபசமயம் *ubašamayam,* பெ.(n.) முட்கத்திரி; prickly brinjal-solanum melongena.



உபசமனம் *ubašamaṉam,* பெ.(n.) 1. அமைதி; tranquility, cessation of external action for the purpose of silent contemplation. 2. அமைதிப்படுத்துதல்; mitigating. 3. தணித்தல்; appeasing. 4. வலி ஆற்றும் மருந்து; a medicine that relieves pain an allaying medicine.

[**Skt.** *upašamana > த. உபசமனம்*]

உபசமி-த்தல் *ubašami-,* 11 செ.கு.வி.(v.i.) அமைதியடைதல் (உபசாந்த மடைதல்) (மேருமந். 724); to become quiescent.

[**Skt.** *upa-ša-, > த. உபசமி-*]

உபசயசரீரம் *ubašaya-šarīram,* பெ.(n.) பரு உடல்; physical body. *"ரோசாதிகளாற் கெடுகின்ற உபசயசரீரம் விட்டு" (நீலகேசி. 309, உரை).*

[**Skt.** *upa-caya+šarīra > த. உபசயசரீரம்.*]

உபசயம்¹ *ubašayam,* பெ.(n.) 1. மிகுதி (பி.வி.44, உரை); abundance, excess. 2. எழு கோள்வீடு (லக்கினத்துக்கு) 3, 6 , 10, 11 ஆம் இடங்கள் (விதான. மரபி. 3); the 3rd, 6th, 10th, 11th signs from the ascendent. 3. வளர்ச்சி; growth. *"உபசயாபசயங்கள் உடம்பின் தன்மைகள்".*

[**Skt.** *upa-caya > த. உபசயம்.*]

உபசயம்² *ubašayam,* பெ.(n.) 1. நோய் குணப்படல்; disease being cured. 2. நோயைத் தணித்தல்; the allaying of disease by suitable remedies. 3. ஆற்று மருந்து; an allaying medicine, a healing drug. 4. தடுமன் கொள்ள வாய்ப்பு; the likelihood or predeliction of a sick person as for cold etc. 5. உணவு அல்லது மருந்துகளின் குணத்தைக் கொண்டு நோயை உறுதி படுத்துதல்; diagonosis from the effect of certain articles of food or medicine. 6. அருகிருத்தல்; lying near, at hand or close by.

உபசர்க்கதாகம் *ubašarkka-dāgam,* பெ.(n.) இனிப்பு, உப்பு முதலியவற்றை அளவு கடந்து உண்பதாலும் களைப்பு அல்லது சோர்வடைந்த பொழுதும் கடுங் காய்ச்சல் காலத்தும் உடம்பில் நெடுநாளாகப் பற்றிய நச்சு, காலத்தும் உண்டாகித் துன்புறுத்தும், மேன்மேலும் உண்டாகும் நாவறட்சி; a marbid or excessive thirst-polydypsis, due to the consumption of excessive salt or sugar in food or through fatigue or weariness or incases of fever accompanied by thirst or of poisoning from chronic disease.

[உபசர்க்க + தாகம்.]

[Skt. upasarga > த. உபசர்க்கம்.]

தாவம்→தாகம் > Skt. dāha.

உபசர்க்கம்[1] *ubašarkkam,* பெ.(n.) **உபசருக்கம்** பார்க்க; see *ubašarukkam.* *"கையாதிமிடைந்து நின்றதனைப் பெயரிட்டது பசர்க்கம்" (பி.வி.45).*

[Skt. upa-sarga > த. உபசர்க்கம்]

உபசர்க்கம்[2] *ubašarkkam,* பெ.(n.) 1. நோய்வகை (நாநார்த்த.); a disease. 2. துன்பம்; trouble. 3. நோய் மேல் நோய்; a disease super-induced on another. 4. நோயின் வேறுபாடு; change occasioned by any disease. 5. இறப்புக் குறி; indication or symptom of death.

[Skt. upa-sarga > த. உபசர்க்கம்.]

உபசர்மம் *ubašarmam,* பெ.(n.) தோலின் கீழ்; beneath the skin - hypodermic.

[Skt. upasarma > த. உபசர்மம்.]

உபசரணம் *ubašaraṇam,* பெ.(n.) (குருதி) அரத்தத் திரட்சி; accumulation of blood, congestion.

உபசரணை *ubašaraṇai,* பெ.(n.) பணிவிடைச் செய்கை; act of civility, courteous behaviour, respect.

த.வ. பணிவிடை.

[Skt. upa-caraṇa > த. உபசரணை.]

உபசரம் *ubašaram,* பெ.(n.) ஆ (பசு)க்கள் கருக் கொள்ளுங் காலம்; the period of gestation in cows.

உபசரி-த்தல் *ubašari-,* 11 செ.கு.வி.(v.i.) 1. பணிவிடை செய்தல்; to wait upon with respect, show veneration. 2. மதிப்புரவு (மரியாதை) காட்டுதல்; to show courtesy to, receive and wait on with marks of polite attention, treat with civility. *"குமரன் றன்னை முற்கொடு பாதலம்போ யுபசரித்த பின்னர்" (சேதுபு. விதூம. 110).*

த.வ. விருந்தோம்புதல்.

[Skt. upa-car > த. உபசரி-,]

உபசரியம் *ubašariyam,* பெ.(n.) கருக் கொள்ளல்; impregnation as in females.

உபசருக்கம்[1] *ubašarukkam,* பெ.(n.) பெயர் வினைகளுக்கு முன்வரும் முன்னொட்டு (அவ்வியயம்); Skt. adverbial and adnominal perfix as அப, உப.

[Skt. upa-sarga > த. உபசருக்கம்.]

உபசருக்கம்[2] *ubašarukkam,* பெ.(n.) 1. சிவப்பு; redness. 2. அம்மை (மாரி) முதலிய கொள்ளை நோய்கள்; epidemic disease such a small-box. 3. நோயின் கடுமை அல்லது இறப்பைக் காட்டுங் குறிகள்; supervening symptoms of a disease or symptoms of death.

உபசருச்சி *ubašarucci,* பெ.(n.) **உபகாரம்**[3] பார்க்க; see *upa-kāram*[3].

உபசல்லியம் *ubašalliyam,* பெ.(n.) 1. ஊரின் அருகு (நாநார்த்த.); proximity. 2. தாழ்த்தப்பட்டோரின் குடியிருப்பு (புலைச் சேரி); quarters of the depressed classes.

[Skt. upa-šalya > த. உபசல்லியம்.]

உபசன்னத்துவம் *ubašannattuvam,* பெ.(n.) அடைக்கலம் புகுந்து (சரணடைந்து) கேட்க வேண்டியவற்றைக் கேட்கை; seeking refuge in a *guru* so as to have one's doubts

cleared. "சீடன்றனது விதிவதுப சன்னத்துவமாம்" (வேதா. சூ. 18).

[Skt. upa-sanna-tva > த. உபசன்னத்துவம்.]

உபசனனம் *ubašaṉaṉam,* பெ.(n.) பிறப்பு; generation procreation.

[Skt. upa-janana > த. உபசனனம்.]

உபசாகை *uba-šāgai,* பெ.(n.) 1. கிளையைச் சேர்ந்த கிளை (சி.சி.1, 14, சிவாக்.); smaller branch of a tree, secondary or sub-axillary branch. 2. உட்பிரிவு; subdivision.

[Skt. upa-sākha > த. உபசாகை.]

உபசாந்தசாதி *ubašānda-šādi,* பெ.(n.) பாலியல் உணர்வுத் தொடர்பாக வகைப்படுத்தும் நால்வகை ஆண்பிரிவு களுளொன்று; one of the four classes of men derived according to lust.

உபசாந்தம் *uba-šāndam,* பெ.(n.) 1. மனவமைதி; calmness, tranquillity, peacefulness. "உபசாந்த சித்தகுருகுல பவ பாண்டவர்க்கு" (திருப்பு. 773). 2. தணிகை; mitigation, alleviation. "நோய் (வியாதி) உபசாந்தமாயிற்று".

[உப + சாந்தம்.]

[Skt. upa > த. உப.]

உபசாந்தமருந்து *ubasānda-marundu,* பெ.(n.) 1. நோய் தீர்க்கும் மருந்து; any medicine affording relief but not cure an alleviating medicine - palliative. 2. வலியைக் குறைக்கும் மருந்து; medicine that relieves pain - Anodyne.

[உப + சாந்தம் + மருந்து.]

[Skt. upa > த. உப.]

மரு → மருந்து.

உபசாந்தி[1] *uba-šānti,* பெ.(n.) **உபசாந்தம்** பார்க்க; see *upa-šāndam.* "தொடர்ப்பா லனயாவையு மகலநீத்துப சாந்தியளித் திடும்" (சேதுபு. கோடித். 3).

[உப + சாந்தி.]

[Skt. upa > த. உப.]

சாந்தம் → சாந்தி.

உபசாந்தி[2] *uba-šānti,* பெ.(n.) 1. வலி அல்லது துன்பத்தைக் குறைக்கும் மருந்து; any medicine that relieves pain as opium morphia etc. 2. மருந்தின் வேகத்தைத் தணிக்கும் மருந்து; paregoric. 3. நோயாளிகளுக்குத் தொல்லை (உபாதை) நீங்கி அமரிக்கையை யுண்டாக்கல்; a temporary treatment given to a wounded or sick person before the doctor's arrival, first - aid.

த.வ. ஆற்றுமருந்து, தணிப்பு மருந்து.

[உப + சாந்தி.]

[Skt. upa > த. உப.]

சாந்தம் → சாந்தி.

உபசாபம் *uba-šābam,* பெ.(n.) 1. வேறுபாடு; disunion. 2. இரண்டகம் (துரோகம்); treachery, treason.

[Skt. upajāpa > த. உபசாபம்.]

உபசாயகம் *uba-šāyagam,* பெ.(n.) அடுத்துத் தூங்கல்; sleeping alternately.

உபசாயிதத்துவம் *ubašāyi-tattuvam,* பெ.(n.) பத்தியம் முதலியவற்றால் நோயைத் தணிக்கும் வழி; means of allaying a disease with diet etc - dietetic treatment.

[Skt. upa-sāyi + tatva > த. உபசாயி தத்துவம்.]

உபசாரக்கை *ubašāra-k-kai,* பெ.(n.) இரண்டு கைகளையுங் குவித்து மார்போடணைத்து மதிப்புரவாகக் காட்டும் இணைக்கைவகை; (Nāṭya.) gesture with both hands in which the hollow of both palms are brought close face to face and are held together on the breast implying polite submission to the words of elders. "உபசாரக்கை......

குடங்கையிரண்டுங் கூப்பிமார்பிருத்தல்" (பரத. பாவ. 54).

[உபசாரம் + கை.]

[Skt. upa-cāra > த. உபசாரம்.]

செய் → கெய் → கை.

உபசாரகன் *uba-šāragaṉ*, பெ.(n.) மதிப்புரவு செய்வோன் (சங்.அக.); courteous person, one who behaves respectfully.

[Skt. upacāraka > த. உபசாரகன்.]

'ன்' ஆ.பா.ஈறு.

உபசாரங்கேள்(ட்)-த(ட)ல் *ubašāraṅ-kēḷ-*, 11 செ.குன்றாவி.(v.t.) இழவு கேட்டல் (துக்கம் விசாரித்தல்); to condole.

[உபசாரம் + கேட்டல்.]

[Skt. upa-cāra > த. உபசாரம்.]

கேள் → கேட்டல்.

உபசாரஞ்சொல்(லு)-தல் *ubašārañjol-*, 8 செ.குன்றாவி.(v.t.) 1. முகமன் கூறுதல்; to express compliments pay respects. 2. இழவு கேட்டல் (துக்கம் விசாரித்தல்); to condole.

[உபசாரம் + சொல்(லு)-,]

[Skt. upacāra > த. உபசாரம்.]

உபசாரப்பூநீர் *ubašāra-p-pūnīr*, பெ.(n.) உவர் மண்ணினின்று உருவாக்கும் பூநீர்; fuller's earth used in the preparation of *pūnīr*.

[உபசாரம் + பூநீர்.]

[Skt. upa-cāra > த. உபசாரம்.]

உபசாரப்பத்திரம் *ubašāra-p-pattiram*, பெ.(n.) ஒருவரை வரவேற்கும் போது அல்லது விடைகொடுத்து அனுப்பும்போது படித்துக் கொடுக்கும் அறிக்கை; complimentary address, on a formal occasion, as in welcoming a person or bidding him farewell.

த.வ. வரவேற்பிதழ், விடைதருவாழ்த்து.

[Skt. upa-cāra-patra > த. உபசாரப்பத்திரம்.]

உபசாரம்[1] *uba-šāram*, பெ.(n.) 1. மதிப்புரவு; civility, politeness, urbanity, attention, guest, affability. 2. முகமன் கூற்று (பிங்.); salutation, compliment. 3. **உபசாரவழக்கு** (பி.வி.48) பார்க்க; see *upacāra-vaḻakku*. 4. மரபாக கூறும் கூற்று (உபசாரமாத்திரமாகச் சொல்லப்பெறும் வார்த்தை); commen-dation expressed only by way of formality.

த.வ. முகமன், மரபுக்கூற்று.

[Skt. upa-cāra > த. உபசாரம்.]

உபசாரம்[2] *uba-šāram*, பெ.(n.) 1. தொண்டு (சேவை) (நாநார்த்த.); service. 2. காணிக்கை; offering. 3. நோயாளிக்குச் செய்யும் உதவி; nursing rendered to a patient. 4. நோயாளிக்குச் செய்யும் பண்டுவம்; treatment accorded to a patient. 5. குறைந்த அன்னசாரம்; deficiency of chyle - hypochylia.

[Skt. upacāra > த. உபசாரம்.]

உபசாரவசனம் *ubašāra-vašaṉam*, பெ.(n.) முகமன் கூற்று; courteous discourse, complimentary address.

[Skt. upa-cāra-vacana > த. உபசாரவசனம்.]

உபசாரவழக்கு *ubasāra-vaḻakku*, பெ.(n.) ஒன்றன் தன்மையை, மற்றொன்றன் மேலேற்றிக் கூறுவது (குறள், 73, உரை); figurative, application of the attribute of one object upon another; secondary meaning.

த.வ. பிறிதேற்றம்.

[உபசார(ம்) + வழக்கு.]

[Skt. upacāra > த. உபசாரம்.]

வழங்கு → வழக்கு.

உபசாரன் *ubašāraṉ*, பெ.(n.) **உபசாரகன்** பார்க்க; see *ubašāragaṉ*.

[Skt. upa-cāraka > த. உபசாரன்.]

உபசாரி¹ *uba-sāri,* பெ.(n.) **உபசாரகன்** (வின்.) பார்க்க; see *ubašāragaṉ.*

[Skt. upacāriṉ > த. உபசாரி.]

உபசாரி² *uba-šāri,* பெ.(n.) நோயாளிக்கு உதவி செய்பவள்; a trained nurse who takes care of the sick.

[உபசாரம் → உபசாரி.]

'இ' பெ.பா.ஈறு.

உபசாரிகம் *ubašārigam,* பெ.(n.) **உபசார வழக்கு** பார்க்க; see *upašāravaḻakku.* *"ஆளினையே யருமாசென்பது போவுப சாரிகம்" (வேதா. சூ. 126).*

[Skt. upacārika > த. உபசாரிகம்.]

உபசாரிகை *uba-šārigai,* பெ.(n.) துணையாளி; a person who attends on a sick patient.

[Skt. upacārika → உபசாரிகை.]

உபசி *ubaši,* பெ.(n.) கலவிக்காகப் பெண்ணிடம் சேருபவன்; he who lies by the side of or approaches a woman for the purpose of sexual intercourse.

[Skt. upasī > த. உபசி.]

உபசிக்குவா *ubašikkuvā,* பெ.(n.) **உபசிகுவை** பார்க்க; see *ubasiguvai.*

உபசிகுவை *ubašiguvai,* பெ.(n.) உண்ணாக்கு நீண்டு வீக்கத்தை உண்டாக்கி உண்ணமுடியாது, இருமல், அருவுதல் முதலிய குணங்களைக் காட்டுமோர் நோய்; a disease marked by cough and irritation of the throat and elongation of the uvula accompanied by swelling, in which the patient could not eat or drink without pain.

[Skt. upa+jihvā > உபசிகுவை.]

உபசிங்கி *ubašiṅgi,* பெ.(n.) நாவில் வரும் புண்; an ulcer on the tongue.

உபசித்தி *ubašitti,* பெ.(n.) வெள்ளை நாகணம்; white croton oil plant-croton tigillium.

உபசித்திரை *ubašittirai,* பெ.(n.) 1. ஆல்; banyan tree. 2. எலி; rat.

உபசிதரோகம் *ubašidarōgam,* பெ.(n.) 1. வெப்பச் சன்னி; an apoplectic stroke caused by exposure to excessive heat, natural or artificial heat stroke or heat apoplexy. 2. வெயிலில் திரிவதா லுண்டாகும் இசிவு; a sudden attack of paralysis from injury to the brain-sunstroke.

[Skt. upacita+rōha > த. உபசிதரோகம்.]

உபசிரிட்டம் *ubaširiṭṭam,* பெ.(n.) புணர்ச்சி; coition, sexual intercourse.

உபசீரிடம் *ubašīriḍam,* பெ.(n.) தலையி லேற்படும் வளி மிகுதியி (கபாலவாயுவி)னால் சூலி (கருப்பிணி)களின் தலையில் வீக்கத்தையுண்டாக்கி அவ்வாறே வயிற்றி லிருக்கும் குழந்தைக்கும் உண்டாக்குமோர் நோய்; a disease characterised by swelling of the heads of both the child in the womb and the pregnant woman. It is said to arise from the deranged condition of vāyu in the region of the head.

த.வ. தலைப்பருமல்.

உபசீவனம் *uba-šīvaṉam,* பெ.(n.) 1. பிறரைச் சார்ந்த வாழ்க்கை; depending upon others, living, subject to others. 2. வாழ்வி (சீவனத்தி)ற்குரிய பொருள்; means of livelihood, sustenance.

த.வ. ஒட்டுவாழ்வு.

[Skt. up-jīvana > த. உபசீவனம்.]

உபசீவி-த்தல் *ubašīvi-,* 11 செ.குன்றாவி. (v.t.) உயிர்வாழப் பிறரை அல்லது பிறிதொன்றைச் சார்ந்திருத்தல்; to depend for one's life upon a person or thing. *"இந்த ஔஷத மொன்றையுபே உபஜீவிக்க வமையும்" (ரஹஸ்ய. 1225).*

த.வ. அண்டிவாழ்தல்.

[Skt. upajīva > த. உபசீவி-,]

உபசுகரம் *ubašugaram,* பெ.(n.) 1. கறிமசாலை; condiment. 2. நறுமணப்

பொருள்; spices. 3. சேரும் பொருள்; an ingredient.

உபசுருதி *uba-šurudi,* பெ.(n.) இரவிற் கேட்கும் வானொலி (ஆகாயவாணி); kind of supernatural voice heard at night and supposed to foretell the future. *"போகேலென்ன வுபசுருதி சொல்லிவை யெலாம்" (அறப். சத. 62).*

[Skt. upa-šruti > த. உபசுருதி.]

உபசென்மம் *uba-šenmam,* பெ.(n.) ஒருவன் பிறந்த விண்மீனுக்குப் பத்தொன்பது முதல் இருபத்தேழு முடியவுள்ள விண்மீன்கள் (இலக்.வி.பக்.796); the third group of nine naksatras counted from one's natal naksatra.

த.வ. ஈற்றொன்பான்.

[Skt. upajanma > த. உபசென்மம்.]

உபசேசனம் *ubašēšanam,* பெ.(n.) இன்றியமையாது வேண்டப்பெறும் உப்பிட்டு ஊற வைத்த ஊறுகறி முதலிய பக்க உணவு வகைகள் (உபகரணங்கள்); relish, condiment. *"யாவனொருவனுக்கு ம்ருத்யு உபஸேசன கோடியிலே நிற்கிறான்" (ஈடு. 1, 1, 8, வ்யா. பக். 37).*

த.வ. தொடுகறி.

[Skt. upa-sēsana > த. உபசேசனம்.]

உபசேவை *ubašēvai,* பெ.(n.) புணர்தல்; having intercourse with.

உபஞ்சரோகம் *ubañjarōgam,* பெ.(n.) மேக நோயினாலேற்படும் புண் (விரணம்); a venereal or syphilitic sore.

த.வ. மேகப்புள்.

உபத்தநிக்கிரகம் *ubatta-nikkiragam,* பெ.(n.) பாலியல் விருப்பத்தை விலக்கல்; rest - raint of sexual passion or desire.

உபத்தபத்திரம் *ubatta-pattiram,* பெ.(n.) அத்திமரம்; Indian fig-tree.



உபத்தபாதம் *ubatta-pādam,* பெ.(n.) ஆண்குறிக்குப் போகும் அரத்தக் குழாய்; a particular blood-vessel leading to the generative organ of a male.

த.வ. ஆணநாளி.

உபத்தம் *ubattam,* பெ.(n.) 1. பிறப்புறுப்பு (சன்மேந்திரம்) (மச்சபு. பிரமமு. 11); generative organ. 2. பெண்குறி (பிங்.); pudendum muliebre. 3. இடுப்பு; the haunch or the hip.

த.வ. அல்குல்.

[Skt. upa-stha > த. உபத்தம்.]

உபத்தாயம் *ubattāyam,* பெ.(n.) 1. பொய், பொய்ப்பழி (அபத்தம்); mistake. 2. துன்பம்; misery. 3. வழிவகை; means.

உபத்தானம் *ubattāṉam,* பெ.(n.) அந்திநேர வழிபாட்டு (சந்தியாவந்தன) முடிவிற் செய்யும் மந்திரப் புகழ் (துதி); hymns recited at the close of *santiyā-vandaṉam.* *"காயத்திரி செவியா வுபத்தானத்தின் றொழில் முடிக்க" (கூர்மபு. நித்தியகன். 6).*

த.வ. அந்திப்போற்றி.

[Skt. upa-sthāna > த. உபத்தானம்.]

உபத்திதி *ubattidi,* பெ.(n.) 1. அறிவு (ஞானம்); wisdom. 2. அருகு, அண்மை (சமீபம்); proximity.

[Skt. upasthiti > த. உபத்திதி.]

உபத்திரம் *ubattiram,* பெ.(n.) துன்பம் (யாழ்.அக.); misery.

உபத்திரவசுரம் *ubattirava-šuram,* பெ.(n.) புண் (விரணம்), காயம், வலி முதலியவற்றினா லுண்டாகுமோர்வகைக் காய்ச்சல்; a kind of fever arising wounds, injury and pain - traumatic fever.

த.வ. வலிக்காய்ச்சல்.

[உபத்திரவம் + சுரம்.]

[Skt. upa-drava > த. உபத்திரம்.]

சுள் > சுர > சுரம்.

உபத்திரவம் *ubattiravam,* பெ.(n.) 1. இடுக்கண்; tyranny, oppression, violence. *"அரசன் குடிகளை உபத்திரவம் செய்தான்".* 2. இன்னல், துன்பம்; calamity as famine, affliction, tribulation suffering of mind or body. *'பசியுபத்திரவம், மனோபத்திரவம்'.* 3. நோயின் மூலமாய் ஏற்படும் துன்பங்கள்; the side issues of a disease. 4. ஒரு நோய் மூலமாக மற்றும் சில நோய்கள் உண்டாதல்; a disease or diseases concurring with another disease, the concurrence of two or more diseases in the same patient-complication. 5. சீழ்ப்புண் (ரணம்), புண் முதலியவற்றால் படும் கொடுந்துன்பம்; the supervening and distressing symptoms found in cases of wound, ulcer etc. any grieves accident, misfortune calamity, mischief, national distress. 6. திடீரென உண்டாகும் நிகழ்வு; that which attacks or occurs suddenly. 7. தொல்லை, தொந்தரவு; worry. *"பட்டுப்புடவை வேணுமென்று மனைவி உபத்திரவஞ் செய்கிறாள்".*

த.வ. தொந்தரவு.

[Skt. upa-drava > த. உபத்திரவம்]

உபதஞ்சக்கறை *ubadañja-k-karai,* பெ.(n.) மேகவொழுக்கினால் ஏற்படும் மாசு; a venereal or syphilitic taint.

[உபதஞ்சம் + கறை.]

[Skt. upa-danša > த. உபதஞ்சம்.]

கரு → கறு → கறை = கருப்பு, மாசு.

உபதஞ்சம் *uba-tañjam,* பெ.(n.) 1. பாலியல் நோய் (மேக கிரந்தி); lues venerea. 2. உண்ணும் போது தொட்டுக் கொள்ளும் ஊறுகாய் முதலியன; pickle etc. used as auxilliaries in eating food.

[Skt. upa-danša > த. உபதஞ்சம்.]

உபதஞ்சவீறு *ubadañja-vīṟu,* பெ.(n.) பாலியல் (மேக) நோயின் வீறு; venereal or syphilitic virus.

[உபதஞ்ச(ம்) + வீறு.]

[Skt. upa-dansa > த. உபதஞ்சம்.]

உபதம்சம் *ubadamšam,* பெ.(n.) **உபதஞ்சம்** பார்க்க; see *ubatañjam.*

[Skt. upa-danša > த. உபதம்சம்.]

உபதமிசம் *ubatamišam,* பெ.(n.) 1. பக்க உணவு (உணவின் உபகரணம்); relish anything eaten with food to whet the appetite. 2. பால் (மேகவிரண) நோய் (பைஷஜ.); primary syphilis, chancre.

[Skt. upa-damšā > த. உபதமிசம்.]

உபதாகம் *uba-tāgam,* பெ.(n.) பனை (மூ.அ.); palmyra-palm.



உபதாது *uba-tādu,* பெ.(n.) பொன் முதலிய ஏழு மாழை (தாது)க்களைப் போலத் தோற்றமுடைய இழிந்த ஏழு மாழை (உலோகங்)கள் (சங்.அக.); any one of seven minerals, inferior to *tātu* viz. சுவர்ணமாட்சிகம், தாரமாட்சிகம், துத்தம், காஞ்சியம், ரீதி, சிந்தூரம், சிலாசத்து.

த.வ. தாழ்மாழை.

[Skt. upa-tatu > த. உபதாது.]

உபதாபம் *ubadābam,* பெ.(n.) அழற்சி, வெப்பவுணர்வு (நாநார்த்த.); burning sensation.

[Skt. upatāpa > த. உபதாபம்.]

உபதாபனநாடி *ubadāpana-nāḍi,* பெ.(n.) மூச்சுக் குழலின் நாடி (தமரக சாகை நாடி); the bronchial artery.

[உபதானம் + நாடி.]

[Skt. upa-dhana > த. உபதானம்.]

நாள் → நாளி → நாழி → நாடி.

உபதாபனம் *ubadāpaṉam,* பெ.(n.) **உபதாபம்** பார்க்க; see *uba-dābam.*

உபதாளம் *uba-tāḷam,* பெ.(n.) ஐந்து சிறுதாளங்கள் (பரத. தாள. 3); secondary time-mesures, five in number. *ஆதிதாளம், பார்வதிலோசனம், குடுக்கம், சிங்கநந்தம், திரிமாத்திரை.*

த.வ. சிறுதாளம்.

[உப + தாளம்.]

[Skt. upa > த. உப.]

தாள் → தாளம்.

உபதானம்[1] *ubadāṉam,* பெ.(n.) **உபாதானகாரணம்** பார்க்க; see *ubātāṉakāraṇam.* *"அவையிதற்கே யுபதானமாகும்" (பாரத. இராச. 4).*

[உப + தானம்.]

[Skt. upa > த. உப.]

[த. தானம் > Skt. dāna.]

தரு → தா → தானம்.

உபதானம்[2] *ubadāṉam,* பெ.(n.) 1. தலையணை (திவா.); pillow, cushion. 2. அடிக்கல் (அஸ்திவாரம்) (வின்.); foundation.

[Skt. upa-dhāna > த. உபதானம்.]

உபதானம்[3] *ubadāṉam,* பெ.(n.) நோன்பு (விரதம்) (நாநார்த்த.); religious sensation.

[Skt. upadhāna > த. உபதானம்.]

உபதானம்[4] *ubadāṉam,* பெ.(n.) நஞ்சு (விடம்); poison.

உபதி[1] *ubadi,* பெ.(n.) 1. சக்கரத்தின் ஆரம் (வின்.); the part of a wheel between the nave and the circumference. 2. அச்சம் (வின்.); fear. 3. வஞ்சனை (நாநார்த்த.); deceit.

[Skt. upadhi > த. உபதி.]



உபதி[2] *ubadi,* பெ.(n.) 1. பயன்பாடுள்ளது, அதாவது கை; that which is useful i.e. the hand. 2. புல்லூரி; a parasitical plant.

உபதிசை *uba-tišai,* பெ.(n.) கோணத்திசை; intermediate point of the compass.

[உப + திசை.]

[Skt. upa > த. உப.]

திக்கு > திசை.

உபதிருட்டை *ubatiruṭṭai,* பெ.(n.) பூசகன் (புரோகிதன்) (சீவக. 2362, உரை); priest, as the conductor of ceremonies.

[Skt. upa-drasṭā > த. உபதிருட்டை.]

உபதேசகலை *ubadēša-kalai,* பெ.(n.) சமய மெய்ப்பொருள் கற்பிக்கும் (மததத்துவ போதனா) முறை (சி.சி.அளவை. 13, சிவாக்.); art of communicatng to a disciple the basic truths of religion.

[உபதேச + கலை.]

[Skt. upa-dēsa > த. உபதேசம்.]

கல் → கலை.

உபதேசகாண்டம் *ubadēša-kāṇḍam*, பெ.(n.) வடமொழி கந்தபுராணத்தின் ஒரு பகுதியினின்று கோனேரியப்ப முதலியார் மொழிபெயர்த்துப் பாடிய தமிழ்நூல்; a Tamil poetic version by *Kōnēriyappamudaliyār* of the last *kāṇḍa* of the *śivarahasyakhaṇḍa* of the *skānda-purāṇa*.

[உபதேச(ம்) + காண்டம்.]

[Skt. upa-dēsa > த. உபதேசம்]

குள் → குண்டு → கண்டு = கட்டி; நூற்றிரளை; கண்டு → கண்டம் = பெரிய துண்டு. கண்டம் → காண்டம் = பெரிய நூலின் ஒரு பகுதி, ஒரியல்.

உபதேசப்பஃறொடை *ubadtēša-p-pa kroḍai*, பெ.(n.) தட்சிணாமூர்த்தி தேசிகரியற்றிய ஒரு பண்டார சாத்திரம்; a *šaiva - šiddhānda* treatise by *Taṭciṇāmūrtti-tēsigar*, one of *panṭāra-cattiram*.

[உபதேசம் + பஃறொடை. பல் + தொடை – பஃறொடை.]

[Skt. upa-dēsa > த. உபதேசம்.]

உபதேசம் *ubadēšam*, பெ.(n.) 1. நல்லுரை, அறிவுரை (ஞானபோதனை) (சி.போ.3,6,சிற். பக். 76); spiritual instruction, teaching of doctrine. 2. மந்திர அறிவுரை (மந்திரோப தேசம்) (விதான. நல்வினை. 15); initiation into the mysteries of religion, by communication of the mantras.

த.வ. அறிவுரை.

[Skt. upa-dēsa > த. உபதேசம்.]

உபதேசரத்தினமாலை *ubadēša-rattiṉamālai*, பெ.(n.) மணவாளமா முனிகளியற்றிய ஒரு மாலியச் சடங்கு (வைணவ சம்பிரதாய) நூல்; a poetical treatise in Tamil by *manavāḷamā-muṉigaḷ* 15th C explaining the vaiṣṇava traditions and discribing the lives and teachings of the long lineage of vaisṇ *ācāryas*.

[உபதேசம் + ரத்தின + மாலை.]

[Skt. upa-dēša > த. உபதேசம்.]

[Skt. ratna > த. ரத்தினம்.]

மால் → மாலை.

உபதேசவெண்பா *ubadēša-veṇbā*, பெ.(n.) அம்பலவாண தேசிகரியற்றிய ஒரு சிவக்கொண்முடிபு நூல் (பண்டார சாத்திரம்); a šaiva šiddhānda treatise by *ambala-vāṇa-dēšigar*, one of *paṇḍāra-šāttiram*.

[உபதேச(ம்) + வெண்பா.]

[Skt. upadēsa > த. உபதேசம்.]

உபதேசி[1]-த்தல் *ubadēši-*, 11 செ.குன்றாவி. (v.t.) 1. கற்பித்தல் (போதித்தல்); to teach spiritual truths, give religious instruction. 2. மந்திரத் தொடர்பில் அறிவு கொளுத்தல்; to initiate into the mysteries of ceremonies religion by communicating appropriate mantras. *"உபதேசித்த சித்தியை" (திருவிளை. அட்டமா. 29).* 3. மந்தண (இரகசிய)மாக இணங்கக் கூறுதல்; to influence in private, give secret advice. *"அவள் அவனுக்கு உபதேசித்துவிட்டாள்".*

[Skt. upadēsa > த. உபதேசம் → உபதேசி,]

உபதேசி[2] *uba-dēši*, பெ.(n.) 1. கற்பிப்போன், அறிவுரைஞன் (போதிப்போன்); preceptor, teacher. 2. அறிவுரை (உபதேசிக்கப்) பெறுபவன் (சி.போ.7, 3, சிற்); recepient of spiritual instruction.

[Skt. upadēsin > த. உபதேசி.]

உபதேசிகை *ubadēšigai*, பெ.(n.) பெரு முன்னை; large-leaved fire brand teak.

உபதேசியார் *ubadēšiyār*, பெ.(n.) துணை அறிவுரையாளர், உபபோதகர் (கிறித்.); catechist.

[Skt. upa-dēsika > த. உபதேசியார்.] 'ஆர்' உயர்வுப் பன்மை ஈறு.

உபதேந்திரியம் *ubadēndiriyam,* பெ.(n.) ஆண்குறி அல்லது பெண்குறி; the genitals whether of a male or a female.

உபதை[1] *ubadai,* பெ.(n.) அமைச்சர் முதலியோரைத் தேர்ந்தெடுத்து அமர்த்துவதற்கு அரசர் செய்யுந் தேர்வு (குறள், 501, உரை); test of the character and honesty of a minister or any officer of state in four ways viz. *அறவுபதை, பொருளுபதை, இன்பவுபதை, அச்சவுபதை.*

[**Skt.** *upa-dhā > த. உபதை.*]

உபதை[2] *ubadai,* பெ.(n.) காணிக்கை (நாநார்த்த.); offering.

[**Skt.** *upadhā > த. உபதை.*]

உபந்நியாசம் *ubanniyāšam,* பெ.(n.) சொற்பொழிவு; discourse.

[**Skt.** *upa-nyāsa > த. உபந்நியாசம்.*]

upa-nyāsa என்னும் சொல்லிற்கு வடமொழியில் கீழேவைத்தல், பக்கத்தில் வைத்தல், முன்னுக்குக் கொண்டு வருதல், பேசுதல், குறிப்பிடுதல், உரை, தூண்டுரை, குறிப்பு, மேற்கோள் போன்ற பொருள்கள் உள்ளன. (மா.வி.). தமிழில் இச்சொற்கு சொற்பொழிவு குறிப்பாக பேருரை என்னும் பொருள் மட்டும் உண்டு.

உபநகரோகம் *ubanaga-rōgam,* பெ.(n.) உகிரிடையி (நகச்சந்தி)ல் கட்டியுண்டாகிக் குத்தல், வீக்கம் முதலிய குணங்களைக் காட்டுமோர் புண் (விரணை) நோய்; a malignant disease of the nail bed characterised by swelling, shooting pain etc. - whitlow.

[**Skt.** *upa-nakha+rōha > த. உபநகரோகம்.*]

உபநட்சத்திரம் *uba-naṭcattiram,* பெ.(n.) சிறு விண்மீன்கள் (அப்பிரதான நட்சத்திரம்) (சங்.அக.); secondary star, minor constellation.

[**Skt.** *upa-naksatra > த. உப நட்சத்திரம்.*]

உபநதி *uba-nadi,* பெ.(n.) பேராற்றில் வந்து விழும் ஆறு, சிற்றாறு; tributary, stream, affluent.

த.வ. **கிளையாறு.**

[**Skt.** *upa-nadi > த. உபநதி.*]

உபநயம் *ubanayam,* பெ.(n.) அனுமான வுறுப்புகள் ஐந்தனுள் நான்காவது (மணிமே. 29, 62); statement bringing the invariable concomitant middle term into relation with the minor, the fourth member of an Indian syllogism.

[**Skt.** *upa-naya > த. உபநயம்.*]

உபநயனம்[1] *uba-nayaṉam,* பெ.(n.) 1. பூணூல் அணிவிக்கு (தரிக்கு)ஞ் சடங்கு (திருவானைக் கோச். செங். 14); initiatory ceremony intended to qualify the boys of the three twice-born castes among the Brahmins for commencement of the study of the *vēdas*, accompanied by the investiture with the sacred thread, one of *cōṭava-camskāram.* 2. மூக்குக் கண்ணாடி; spectacles, lit. supplementary eyes or help to vision.

த.வ. **பூணூல் பூணல்.**

[**Skt.** *upa-nayaṉa > த. உபநயனம்.*]

உபநயனம்[2] *ubanayaṉam,* பெ.(n.) கண்ணில் மருந்திட்டுக் கட்டுகை; bandage to the eyes after applying medicine.

உபநயி-த்தல் *ubanayi-,* 11 செ.கு.வி.(v.i.) பூணூற் சடங்கு செய்தல் (விதான மைந்தர். 25); to perform the ceremony of investing the sacred thread.

[**Skt.** *upanaya > த. உபநயம் > உபநயி-.*]

உபநளகம் *ubanaḷagam,* பெ.(n.) முன் கால் சிற்றெலும்பு; the outer and smaller of the two bones of the leg-fibula.

உபநாகக்கட்டு *ubanāga-k-kaṭṭu,* பெ.(n.) புண்ணுக்கு மருந்து வைத்துக் கட்டல்; application of poultice to a wound.

[உபநாக(ம்) + கட்டு.]

[Skt. upa-nāha > த. உபநாகம்.]

கள் → கட்டு.

உபநாகம்[1] *ubanāgam,* பெ.(n.) 1. யாழின் பீருடை (நாநார்த்த.); peg to which the strings of a *yāḻ* are attached. 2. புண் கட்டிகளில் வைத்துக் கட்டும் மா முதலியன (வின்.); poultice.

[Skt. upa-nāha > த. உபநாகம்.]

உபநாகம்[2] *ubanāgam,* பெ.(n.) 1. தாமரையின் அடித்தண்டு; the stalk of the lotus. 2. கபத்தினால் வெள் விழிச்சந்தில் தாமரைக் கொடியின் அடித் தண்டைப் போல் கட்டியை யெழுப்பி, வீக்கத்தையும், வலியையு முண்டாக்குமோர் வகைக் கண்ணோய்; a painful cyst of considerable size (that of a bit of lotus stalk) occuring at the function of the pupil with the iris attended with swelling, itching sensation, pain etc. inflammation of the ciliary gland-stye.

உபநாகனம் *uba-nāgaṉam,* பெ.(n.) 1. புண்ணுக்குக் கட்டும் மருந்து; poultice or external application to a wound, swelling etc. 2. மருந்திலைகளை வதக்கி வைத்துக் கட்டுதல்; application of medicinal leaves coated with oil and exposed to fire. 3. களிகிண்டிக் கட்டுதல்; the act of putting a plaster or poultice upon. 4. எண்ணெய் (தைலம்) பூசுதல்; anoiting medicated oil. 5. இடித்துக் கட்டும் மருந்து; a bandage of pounded leaves or other medicine applied to a wound.

[Skt. upa-nāhana > த. உபநாகனம்.]

உபநாயகன் *uba-nāyagaṉ,* பெ.(n.) கள்ளக்காதலன்; paramour, illicit partner of a married woman.

[Skt. upanāyak > த. உபநாயகன்.]

உபநாயம்[1] *ubanāyam,* பெ.(n.) **உபநாகம்**[1] பார்க்க; see *ubanāgam*[1].

உபநாயம்[2] *uba-nāyam,* பெ.(n.) **உபநாகம்**[2] **பார்க்க**; see *ubanāgam*[2].

உபநிகழ்தம் *uba-nigaḻdam,* பெ.(n.) ஓங்காரம்; the mystic name of the deity prefacing and concluding all the prayers of the daily worshipper.

உபநிட்கிராமணம் *uba-niṭkirāmaṇam,* பெ.(n.) பிறந்த நான்கா மாதத்தில் பிள்ளையை முதன்முதல் வெளிக்கொணருஞ் சடங்கு (திருவானைக். கோச்செங். 39); ceremony of taking a child out for the first time in the fourth month after its birth.

[Skt. upa-nis-krāmaṇa > த. உபநிட் கிராமணம்.]

உபநிடகிறமணம் *uba-niḍakiṟamaṇam,* பெ.(n.) வெளிக்கிளம்பல், வெளியே அடி எடுத்து வைத்தல்; the act of going or stepping out.

[Skt. upa-nis-krāmaṇa > த. உபநிட கிறமணம்.]

உபநிடதம்[1] *ubaniḍadam,* பெ.(n.) 1. மறையின் (வேதத்தின்) ஓதி (ஞான) காண்டம் (பிங்.); upaniṣad, philosophical writing forming part of the *vēdas.* 2. மறை (வேதம்); *vēda.* *"உபநிடத மொரு நான்கும்" (கலிங். கடவுள். 5).*

[Skt. upa-ni-ṣad > த. உபநிடதம்.]

உபநிடதம்[2] *uba-niḍadam,* பெ.(n.) 1. அறம் (தருமம்) (நாநார்த்த.); virtue. 2. கமுக்கம் (இரகசியம்); secret.

[Skt. upa-ni-ṣad > த. உபநிடதம்.]

உபநிதி *uba-nidi,* பெ.(n.) தக்கவனிடத்தில் முத்திரையிட்டு அடைக்கலமாக வைக்கும் பொருள்; (Law) sealed deposit, entrusted to a responsible party.

[Skt. upa-ni-dhi > த. உபநிதி.]

உபநிபாதம் *ubani-pādam,* பெ.(n.) திடீரென ஏற்படும் நோய்; a sudden and unexpected attack of a disease.

உபநியசி-த்தல் *uba-niyaśi-,* 11 செ.கு.வி. (v.i.) விரிவுரையாற்றுதல்; to deliver lectures, to elaborate. *"தம்முடைய மதத்தை உபநியசித்து நின்றார் கீழ்" (ஈடு. 1,1,9, வ்யா. பக். 62).*

[Skt. upa-nyāsa > த. உபநியாச > உபநியாசி-,]

உபநியாசம் *uba-niyāśam,* பெ.(n.) பரப்புரை, பேருரை (பிரசங்கம்); address, speech, lecture.

த.வ. பேருரை.

[Skt. upa-nyasa > த. உபநியாசம்.]

உபநேத்திரம் *ubanēttiram,* பெ.(n.) **உபநயனம்** பார்க்க; see *ubanayanam.*

உபப்பிரமா *uba-p-piramā,* பெ.(n.) மக்கள் தலைவர் பதின்மருள் (தசப் பிரசாபதியுள்) ஒருவர்; any one of *taśa-p-pirasāpadi.*

[Skt. upa-brahmā > த. உபப்பிரமா.]

உபப்பிரும்மணம் *ubappirummaṇam,* பெ.(n.) மறை (வேத)ப்பொருளை விளக்கும் மறவனப்பு (இதிகாசம்), தொன்மம் (புராணம்) போன்றன; *itihāsas, purāṇas,* etc. which dilate on the meaning of the *vēdas.*

[Skt. upa-brmhaṇa > த. உபப்பிரும்மணம்.]

உபப்பிலவம் *uba-p-pilavam,* பெ.(n.) கருங்கோள் (இராகு); rāhu, the ascending node. 2. கெடுகுறி (உற்பாதம்); evil portent.

[Skt. upa-plava > த. உபப்பிலவம்]

உபபட்சம் *uba-patcam,* பெ.(n.) 1. அக்குள்; arm-pit. 2. அக்குள் மயிர்; hair in the arm-pit.

உபபத்தி *uba-patti,* பெ.(n.) 1. நயம், நயன்மை (நியாயம்); reason, justification (Brāh.). *"அப்படிச் சொல்வதற்கு உபபத்தி என்ன?".* 2. சொத்து; property, wealth (Brāh.). *"அவன் உபபத்தியுள்ளவன்".* 3. சொல்லும் செய்தியை உறுதிபடுத்தும் பொருட்டுக் காட்டும் உத்தி; argument advanced for the establishment of proposition, proof. *"சச்சிதானந்த முப பத்தியகமுஞ் சீவனுமாய்" (பிரபோத. 22, 17).*

[Skt. upa-patti > த. உபபத்தி.]

உபபத்திரம் *uba-pattiram,* பெ.(n.) இலைக்காம்பருகேயுள்ள சிறிய இலை; a small leaf like appendage at the base of the pedicle, a stipule.

த.வ. தளிர்.

[Skt. upa-pattra > த. உபபத்திரம்.]

உபபதி *uba-padi,* பெ.(n.) கள்ளக்காதலன் (சோரநாயகன்); illicit partner of a married woman, paramour.

[Skt. upa-pati > த. உபபதி.]

உபபரிசனை *uba-pariśaṇai,* பெ.(n.) 1. புணர்ச்சி; coition. 2. உண்டாயிருத்தல்; impregnation.

உபபலம் *uba-palam,* பெ.(n.) துணை வலி; auxiliary, allied army, (Brāh.).

[Skt. upa-bala > த. உபபலம்.]

உபபாதகம் *uba-pādagam,* பெ.(n.) சிறுகுற்றம் (பாதகம்) (சிவதரு. பாவ. 34); sin less heinous than *pañjamā-pādagam.*

[Skt. upa-pātaka > த. உபபாதகம்.]

உபபுராணம் *uba-purāṇam,* பெ.(n.) தொன்ம (மகாபுராண)ங்கட்கு அடுத்து மதிக்கப்பெறுஞ் சிறு தொன்மங்கள் (புராணங்கள்); secondary or minor purāṇas which are 18 in number.

சனற்குமாரம், நாரசிங்கம், நந்தி, துருவாசம், சிவதருமம், நாரதீயம், காபிலம், மானவம், ஔசனம், வரசிட்டலைங்கம், வாருணம், காளிகம், சாம்பேசம், அங்கிரம், சௌரம், பராசரம், மாரீசம், பார்க்கவம் (கூர்மபு. இந்திரத். 10).

த.வ. துணைத்தொன்மம்.

[Skt. upapurāṇa > த. உபபுராணம்.]

உபபேறு *ubapēṟu*, பெ.(n.) துணைப்பயன் (உபபலன்); something obtained in addition to the principal material, as in a process of manufacturing, a secondary product obtained during the manufacture of a primary product - by product.

[உப + பேறு.]

[Skt. upa > த. உப.]

பெறு → பேறு.

உபபோக்கியம் *uba-pōkkiyam*, பெ.(n.) பலவகை அரசிறையை ஈட்டுவதிலுங் காப்பாற்றுவதிலுஞ் செலவு செய்யப்படும் பொருள் (சுக்கிரநீதி, 98); money expended in the collection of revenue from several sources and in its safe guarding.

[Skt. upa-bhōgya > த. உபபோக்கியம்.]

உபபோகாந்தராயம் *uba-pōgāndarāyam*, பெ.(n.) பயன்பாட்டி (அனுபவித்த)ற்குரிய பொருள்களை விலக்குவதாகிய கருமம் (சீவக. 3081, உரை); (Jaina.) the karma which keeps away the articles of enjoyment.

த.வ. விழைவுநீக்கம்.

[Skt. upa-bhōga + tarāyam > த. உபபோகாந்தராயம்.]

உபம் *ubam*, பெ.(n.) இரண்டு; two. *"முன்னான்கி னவிலந்த மொருகழஞ்சா மற்றையும்" (தைலவ. தைல. 109).*

[Skt. ubha > த. உபம்.]

உபமருந்து *uba-marundu*, பெ.(n.) துணையாகக் கொள்ளும் மருந்து; an ingredient in a prescription to help the main ingredient - adjuvant.

[உப + மருந்து.]

[Skt. upa > த. உப.]

மரு → மருந்து.

உபமலம் *uba-malam*, பெ.(n.) 1. உள்ளிருக்கும் மாசு; internal impurities or filth such as phelgm, sweat etc. 2. மனமாசு (பிங்.); mental impurity, inward depravity.

[உப + மலம்.]

[Skt. upa > த. உப.]

மல் > மலம் = அழுக்கு, பவ்வீ.

உபமன்னியு *uba-maṉṉiyu*, பெ.(n.) ஒரு சிவனிய (சைவ) முனிவர்; a Saivite ṛṣi, the reputed author of the *upamaṉyu-bhakta-vilāsa*, a Skt. work relating the stories of the 63 šaiva saints.

[Skt. upamanyu > த. உபமன்னியு.]

உபமானம் *uba-māṉam*, பெ.(n.) 1. உவமை; standard of comparison, recognition of likeness, resemblance. 2. ஓர் ஒப்புமை (பிரமாணம்) (அணியி. 1); (Log.) analogy, opp. to உபமேயம்.

[த. உவமானம் > Skt. upa-māna > த. உபமானம்.]

உபமானரகிதம் *ubamāṉa-ragidam*, பெ.(n.) உவமையற்றது; that which is matchless, incomparable.

[Skt. upamāna-rahita > த. உபமானரகிதம்.]

உபமிதி *ubamidi*, பெ.(n.) ஒப்புமை வகையால் (பிரமாணத்தினால்) வரும் அறிவு (தர்க்கபா. 30); knowledge of things derived from analogy.

[Skt. upa-miti > த. உபமிதி.]

உபமேயம் *ubamēyam*, பெ.(n.) உவமிக்கப்பட்ட பொருள் (அணியி. 1); that which is compared, subject of comparison.

[த. உவமேயம் > Skt. upamēya > த. உபமேயம்.]

உபமேயோபமாலங்காரம் *ubamēyōpa mālaṅgāram*, பெ.(n.) உவமானம் (உபமான) உவமேயம் (உபமேயம்) ஒன்றற்கு ஒன்று பொருள் உவமேய உவமானங்களாக வரும் அணி (அணியி. 3.); a figure of speech in which the *upa-māṉam*, and *upa-mēyam* are compared to each other; reciprocal comparison, as of the moon to a beautiful face.

உபமை *ubamai,* பெ.(n.) ஒப்புமை; comparison, similarity.

*[த. உவமை > **Skt.** upa-mā > த. உபமை.]*

உபயகர்ப்போட்டம் *ubaya-karppōṭṭam,* பெ.(n.) சிலை (மார்கழி) மாதத்துக் கடைசி நாளிற் சூற்கொண்டு மழை பெய்யாது நிற்கும் மேகம்; double conception of rain by the clouds, supposed to take place if clouds appear without rain on the last day of the month of *mārkaḻi.*

த.வ. காரோட்டம்.

[உபய + கர்ப்ப + ஒட்டம்.]

*[**Skt.** ubhaya > த. உபய.]*

*[த. குரு > கரு > கருப்பம் > **Skt.** garbha.]*

ஒடு → ஒட்டு → ஒட்டம்.

உபயகவி *ubaya-kavi,* பெ.(n.) இருவேறு மொழிகளில் பா வியற்றும் பாவலன்; poet who has attainments enabling him to compose verses with equal facility in two languages; as for example, in Sanskrit and Tamil. *"உபயகவிப் புலவன்" (திவா. 1. கட்டுரை).*

த.வ. இருமொழிப் பாவலன்.

*[**Skt.** ubhayakavi > த. உபயகவி.]*

உபயகுலம் *ubaya-kulam,* பெ.(n.) தாய் தந்தை வழி மரபுகள்; the two ancestral lines, paternal and maternal. *"உபயகுல தீபதுங்க" (திருப்பு. 128).*

த.வ. ஈன்றோர்வழி.

[உபய(ம்) + குலம்.]

*[**Skt.** ubha > த. உபய.]*

குல் → குலம்.

உபயகுலோத்தமன் *ubaya-kulōttamaṉ,* பெ.(n.) தாய்வழி, தந்தை வழிகளால் உயர்ந்தவன்; one of noble extraction on this paternal as well as maternal sides. *"உபயகுலோத்தமன பயன் (கலிங். கடவுள். 2).*

த.வ. ஈன்றோர் வழி மேலான்.

[உபய(ம்) + குலம் + உத்தமன்.]

*[**Skt.** ubhaya > த. உபயம்.]*

உத்து = உயர்வு. உத்து > உத்தம் > உத்தமன்.

உபயகோமுகி[1] *ubaya-kōmugi,* பெ.(n.) ஈனும் போது கன்றின்முகம் வெளியே உதயமாகியுள்ள மாசு; cow in the act of calving, as having two faces, or heads towards both ways, considered as a fit object of gift for the acquirement of merit. *"உபய கோமுகியை யீந்தோர்" (காகிக. தேவர்க. பி. 22).*

[உபய + கோ + முகி.]

*[**Skt.** ubhaya > த. உபய.]*

முகம் → முகி.

உபயகோமுகி[2] *ubaya-kōmugi,* பெ.(n.) இரு பக்கம் பார்வையுள்ள உயிரி; two faced living beings or looking both ways as do worms.

த.வ. இருநோக்கி.

உபயசம்மதம் *ubaya-šammadam,* பெ.(n.) இரு திறத்தார் இசைவு (அனுமதி); acceptance by both parties in a dispute.

த.வ. இருசார் இசைவு.

*[**Skt.** ubhaya-šammada > த. உபயசம்மதம்.]*

உபயத்திரர் *ubayattirar,* பெ.(n.) இருதிறத்தாரும்; both parties.

த.வ. இருசாரார்.

*[**Skt.** ubhayatra > த. உபயத்திரர்.]*

உபயதன்மவிகலம் *ubaya-taṉma-vigalam,* பெ.(n.) திட்டாந்தத்தில் துணியப்படும் பொருள் (சாத்திய) துணைக்காரணம் (சாதன) மிரண்டும் குறைந்த ஏதுப்போலி வகை (மணிமே. 29, 359); (Log.) a fallacious example, defective in both the major and the middle terms.

த.வ. இருசார் ஏதுப்போலி.

*[**Skt.** ubhaya + taṉma-vikalam > த. உபயதன்மவிகலம்.]*

உபயந்திரம் *ubayantiram,* பெ.(n.) அறுவை மருத்துவஞ் செய்வதற்கான சிறிய அல்லது துணைக் கருவிகள்; minor surgical accessories.

த.வ. அறுவைப்பணிமுட்டு.

உபயநாகமலர் *ubaya-nāgamalar,* பெ.(n.) இருவகை நாகப்பூ (சிறு நாகப்பூ, பெரு நாகப்பூ); the two kinds cassiabuds, *mesua ferrea.*

[உபய(ம்) + நாகமலர்.]

[Skt. ubhaya > த. உபய(ம்).]

உபயநொச்சி *ubaya-nocci,* பெ.(n.) இருவகை நொச்சி (வெண்ணொச்சி, கரு நொச்சி); the two kinds of vitex-vitex negundo and vitex trifolia.

த.வ. இருநொச்சி.

[உபய(ம்) + நொச்சி.]

[Skt. ubhaya > த. உபய(ம்).]

உபயபாகம் *ubaya-pāgam,* பெ.(n.) கக்கல் கழிச்சல் (வாந்திபேதி) உண்டாக்கும் மருந்து; a medicine that acts in two ways as an emetic and as a purgative.

[உபய(ம்) + பாகம்.]

[Skt. ubhaya > த. உபயம்.]

பகு > பாகு > பாகம்.

உபயம்[1] *ubayam,* பெ.(n.) 1. இரண்டு (திவா.); two. 2. கோயில் முதலியவற்றிற்குக் கொடுக்கும் அறக்கொடை (தருமம்); gift to a temple or a monastery (S.I.I.iii, 209).

த.வ. திருப்பணிக்கொடை.

[Skt. ubhaya > த. உபயம்.]

உபயம்[2] *ubayam,* பெ.(n.) பழைய வரி (சுவர்ணாதாய) வகை; an ancient tax, payable in cash.

உபயமாதம் *ubaya-mādam,* பெ.(n.) இரு ஓரை (உபயராசி) மாதங்கள் (வின்.); the four months in which the sun is in the common signs, viz. ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி, corresponding to June-July, September-October, December-January and March - April.

த.வ. ஈரோரை மாதம்.

[உபய + மாதம்.]

[Skt. ubhaya > த. உபய(ம்).]

மதி → மாதம்.

உபயமார்க்கம் *ubaya-mārkkam,* பெ.(n.) வரிவகை; a tax (S.I.I.IV. 99).

உபயமுகம் *ubaya-mugam,* பெ.(n.) 1. மேல்முகம், கீழ்முகம் முதலிய விருபுறம்; the two directions, namely upward and downward. 2. தாயின் முகமும் அதற்கு நேர்மாறாக இருக்கும் சூலியின் வயிற்றில் இருக்கும் கருவின் முகமும்; the two-faced said of a pregnant woman because of the embryo which has its face turned in the opposite direction to that of the mother. 3. இரு பக்கமும் திரும்பக்கூடிய முகம்; having a face that can be turned either way.

த.வ. இருமுகம்.

[உபய(ம்) + முகம்.]

[Skt. ubhaya > த. உபய(ம்).]

[த. முகம் > Skt. mukha.]

உபயமுகரத்தபித்தம் *ubaya-muga-ratta-pittam,* பெ.(n.) ஒரே காலத்தில் உடம்பின் ஏழு துளைகளின் வழியாகவும், மேலுங் கீழுமாக குருதியை வெளிப்படுத்துமோர் வகை நோய்; hemorrhage or escape of blood through all the seven opening of the body viz. the eyes, the nose, the ears, the mouth, the anus and the genitals in directions both upwards and downwards.

த.வ. குருதிப்பீச்சு.

[உபய + முகம் + ரத்த + பித்தம்.]

[Skt. ubhaya > த. உபயம்.]

[Skt. rakta > த. ரத்தம்.]

பித்து → பித்தம் > Skt. pitta.

உபயர் *ubayar,* பெ.(n.) இருவர்; two persons. *"புதல்வரு முபய ரானார்" (வேதாரணியபு. கோலர்கல. 37).*

[Skt. uphaya > த. உபயர்] 'ர்' ப.பா.ஈறு.

உபயராசி *ubaya-rāši,* பெ.(n.) 1. இயக்கம், நிலை (சரம், ஸ்திரம்) என்னும் இருவகைக்கும் ஏற்ற ஓரை (இராசி) (விதான. மரபி. 5, உரை); (Astrol.) the four common signs of the zodiac, viz. மிதுனம், கன்னி, தனுசு, மீனம் as distinguished from the moveable and fixed signs. 2. உடைவாரம்; heap of grain comprising *mēl-vāram.* i.e. share of the government or landlord, and *kīḻ-vāram,* i.e., the share of the cultivator. *"மேல்வாரங் குடிவாரமாகப் பிரிப்பதற்கு முன்னுள்ள மொத்த விளைவுத் தவசம்".*

த.வ. ஈரோரை.

[Skt. ubhaya+rāsi > த. உபயராசி.]

உபயவசை *ubayavasai,* பெ.(n.) 1. சீரகம்; cumin seed. 2. கருஞ்சீரகம்; black cumin - nigella Sativa.

உபயவாதிகள் *ubaya-vādigaḷ,* பெ.(n.) 1. வழக்கின் வழக்காளி எதிர் வழக்காளி (வாதி பிரதிவாதிகள்); plaintiff and defendant. 2. வழக்குத் தொடுக்கும் வழக்காளி எதிர்வழக்காளியென்னு மிரு திறத்தார்; opponents in a controversy, upholders of opposite sides in a debate. *"ஈதுபயவாதிகள் சம்மதம்" (தாயு. எங்கு. 3).*

த.வ. வம்பாளி வழக்காளி.

[உபயவாதி + கள்.]

[Skt. ubhayavādi > த. உபயவாதி.] 'கள்' பன்மை ஈறு.

உபயவிட்டகம் *ubaya-viṭṭagam,* பெ.(n.) பெண்களுக்குக் கருப்பக் காலத்தில் மாதவிடாய்த் தவறுதலில்லாமல் இயல்பாக திங்கடொறும் வெளிப்படுவதனால் இளைத்து வயிற்றுக்குள் உலாவிக் கொண்டிருக்கும் பிண்டம் (சுப்தி); the emaciated foetus found moving in the womb, and this emaciation is due to the continuance of the menstrual discharge inspite of pregnancy.

த.வ. வற்றல்கரு.

[உபய + விட்டகம்.]

[Skt. ubhaya > த. உபயம்.]

உபயவிபூதி *ubaya-vibūdi,* பெ.(n.) பேரருளும் இவ்வுலகவின்பமும் (லீலாவிபூதி நித்தியவிபூதிகள்) (ஈடு.6,1,8); eternal bliss and worldly happiness.

த.வ. இருதுய்ப்பு.

[உபய + வி + பூதி.]

[Skt. ubhaya > த. உபயம்.]

புழுதி → பூதி.

உபயவியஞ்சனன் *ubaya-viyañjaṉaṉ,* பெ.(n.) இரண்டு குறிகளையும் உடைய பேடு (அலி); one with the marks of both the sexes - hermaphrodite.

[Skt. ubhaya-vyañjana > த. உபய வியஞ்சனம் → உபயவியஞ்சனன்.] 'ன்' ஆ.பா.ஈறு.

உபயவேதாந்தம் *ubaya-vēdāndam,* பெ.(n.) வடமொழி தென்மொழி மறை (வேதங்)களின் முடிவு; philosophy of both the Sanskrit and the Tamil scriptures. (vaisṇ.).

த.வ. இருமொழி மறைமுடிபு.

[Skt.ubhayavēdanda > த. உபயவேதாந்தம்.]

உபயவேதாந்தாசாரியர் *ubaya-vēdandā-šāriyar,* பெ.(n.) வடமொழி தென்மொழி மறைகளில் (உபயவேதாந்தங்களிலுந்) தேர்ந்த மாலியருக்கு வழங்கும் ஒரு பட்டப் பெயர்; a distinguishing title of reverence of such a vaisṇ. sage or learned man, as master of *ubaya-vēdāndam.*

[Skt. ubhaya-vēdanda-ācāri > த. உபய வேதாந்தாசியர்.]

உபயவேர் *ubaya-vēr,* பெ.(n.) இருவகை வேர் – வெட்டிவேர், விலாமிச்சை வேர்; the two kinds of aromatic roots - khus khus.

[உபய + வேர்.]

*[**Skt.** ubhaya > த. உபயம்.]*

உபயவோசை *ubaya-v-ōsai,* பெ.(n.) ஈரடுக்கொலி (திவா.); imitative, reiterated sound, as படபட, கடகட.

த.வ. இரட்டைக் கிளவி.

[உபய(ம்) + ஓசை.]

*[**Skt.** ubhaya > த. உபயம்.]*

உபயாங்கம் *ubayāṅgam,* பெ.(n.) பாட்டுக்கும் நாட்டியத்திற்கும் வாசிக்கும் வாச்சியம் (வாத்தியம்) (சிலப். 3, 14, உரை); musical instrument adapted to dancing as well as singing.

த.வ. இருபால் இன்னியம்.

*[**Skt.** ubhaya+aṅga > த. உபயாங்கம்.]*

உபயாசித்தம் *ubayāšittam,* பெ.(n.) ஏதுப்போலி வகை (மணிமே. 29, 193); fault of appealing to a middle term that is not accepted by either party to a controversy.

[உபய(ம்) + சித்தம்.]

*[**Skt.** ubhaya > த. உபயம்.]*

செ → செத்து → சித்து → சித்தம் > **Skt.** citta.

உபயாத்தம் *ubayāttam,* பெ.(n.) இரு பொருள் (வின்.); two meaning.

*[**Skt.** ubhaya-artha > த. உபயாத்தம்.]*

உபயார்த்தம் *ubayārttam,* பெ.(n.) **உபயாத்தம்** பார்க்க; see *ubayāttam.*

*[**Skt.** ubhaya-artha > த. உபயார்த்தம்.]*

உபயாவியாவிருத்தி *ubayāviyāvirutti,* பெ.(n.) துணைக்கரணம் (சாதனம்), துணியப்படும் பொருள் (சாத்தியம்) இரண்டும் மீளாதிருக்கும் ஒப்பின்மை (வைதன்மிய) திட்டாந்தப் போலி (மணிமே. 29, 441); (Log.) a fallacious example of co-absence where neither the major term nor the middle term is absolute.

*[**Skt.** upaya-viyāvirutti> த. உபயாவியா விருத்தி.]*

உபயானுகம் *ubayāṉugam,* பெ.(n.) **உபயாங்கம்** (சிலப். 3, 14, அரும்.) பார்க்க; see *upayāṅgam.*

*[**Skt.** ubhaya-anu-ga > த. உபயானுகம்.]*

உபயானுசம்மதம் *ubayāṉu-šammadam,* பெ.(n.) இரு திறத்தாரும் ஒப்புக் கொள்கை; consent of both parties to an agreement. *"உபயானு சம்மதமாய் நிச்சயித்த தொகை".*

த.வ. இருதிற ஏற்பு.

*[**Skt.** upaya+anušammada > த. உபயானு சம்மதம்.]*

உபயுக்தா *ubayuktā,* பெ.(n.) முதியார் கூந்தல், அம்மையார் கூந்தல்; Sita's thread.

உபயோகப்படு–தல் *ubayōga-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) பயன்படுதல்; to be serviceable, turned to account.

[உபயோகம் + படு–,]

*[**Skt.** upa-yōga > த. உபயோகம். 'படு' து.வி.]*

உபயோகம்¹ *uba-yōgam,* பெ.(n.) 1. உதவி; use, fitness, suitableness. 2. உதவிப் பொருள்; thing useful for given purpose. *"தாங்கி யுபயோகந் தன்னை" (சைவச. பொது. 259).*

த.வ. பயன்பாடு, பயன்.

*[**Skt.** upa-yōga > த. உபயோகம்.]*

உபயோகம்² *uba-yōgam,* பெ.(n.) கோள்வீட்டிலும் (இலக்கினத்திலும்) 2, 3, 4 ஆம் இடங்களிலும் ஏழு கோள் (கிரகங்)களும் நிற்பதாகிய ஒரு நிலை (யோகம்); (Astrol.) conjunction in which the seven major planets are found distributed over the ascendant and the next three houses. *"உதயாதி நாலினுமேழு கோளுமுறவுபயோ கமாம்" (வீமே. உள். 312).*

*[**Skt.** yūpa-yōga > த. உபயோகம்.]*

உபயோகம்[3] *uba-yōgam,* பெ.(n.) மருந்து கூட்டல்; compounding medicines.

உபயோகி[1] *ubayōgi,* பெ.(n.) உதவுபவன்; useful, helpful person.

[Skt. upa-yōgin > த. உபயோகி.]

உபயோகி[2]–த்தல் *ubayōgi-,* 11 செ.கு.வி. (v.i.) பயன்படுத்துதல்; to use, apply or employ, as words.

[Skt. upayōga > த. உபயோகி–,] 'இ' வினையாக்க ஈறு.

உபரசக்குற்றம்போக்கி *ubaraša-k-kuṟṟam -pōkki,* பெ.(n.) நறுந்தக்காளி; an unknown drug capable of removing the defects in the several natural bodies or substances called uparasams.

[உபரச + குற்றம் + போக்கி.]

[Skt. uparasa > த. உபரச.]

உபரசகுணம் *ubaraša-guṇam,* பெ.(n.) தமிழ் மருத்துவத்தில் சொல்லியுள்ள துணைச் சரக்குகளின் குணம்; qualities of the natural bodies or products enumerated in Tamil medical science.

[உபரச + குணம்.]

[Skt. uparasa > த. உபரச.]

உபரசச்சத்து *ubaraša-c-cattu,* பெ.(n.) தமிழ் மருத்துவ நூலிற் கண்ட 120 துணைப் பொருளினின்றும் ஊதை (வாத) நூலின் வழியின் படி எடுக்கும் சத்து; the quintessence extracted from any of the one hundred and twenty kinds of natural substances by an alchemical process.

[உபரசம் + சத்து.]

[Skt. upa-rasa > த. உபரச.]

சள் > (சண்) > சத்து.

உபரசச்சத்துரு *ubaraša-c-catturu,* பெ.(n.) சிங்கி செய்நஞ்சு (பாடாணம்); a kind of poison consisting, chiefly of lead and nitre.

[Skt. uparasasatru > த. உபரசச்சத்துரு.]

உபரசச்சத்துவாதி *ubaraša-c-cattuvādi,* பெ.(n.) கற்பூர சிலாசத்து; a beautiful crystallised foliated gypsum.

உபரசத்தைத்தயிலமாக்கி *ubarašattai-t-tailamākki,* பெ.(n.) சின்னாருகை; a plant (not known) capable of reducing or converting uparasas into oils.

உபரசநிகண்டு *ubaraša-nigaṇḍu,* பெ.(n.) போகரால் செய்யப்பட்ட ஒரு மருத்துவ நூல்; a poetic vocabulary of Tamil chemistry complied by 'Bogar' a great siddha.

உபரசம் *uba-rašam,* பெ.(n.) 1. துணை மாழை (உபதாது); secondary mineral, as red chalk, bitumen, etc. *"தாரார் மணியுபரசல் களையும்" (தைலவ. பாயி. 31).* 2. கல்லுப்பு (மூ.அ.); rock-salt. 3. சேர்க்கை இதளியம் (ரசம்); mercury in a combined state as opposed to nascent or natural state, underneath the sea. 4. களிம்பு கலந்த மாழைப் பொருள் (உலோகம்); metallic ores, such as iron rust, iron sulphate, copper sulphate etc. 5. கடல் நுரை; sea-froth. 6. இயற்கைச் சரக்கு; natural substance. 7. இழிந்த சுவையுள்ளது; that which is inferior in taste. 8. அடுத்த மணம்; secondary flavour.

[Skt. upa-rasa > த. உபரசம்.]

உபரசன் *ubarašaṉ,* பெ.(n.) தம்பி (யாழ்.அக.); younger brother.

த.வ. இளவல்.

[Skt. upara-ja > த. உபரசன்.]

உபரசிதம் *ubarašidam,* பெ.(n.) **உபராசிதம்** பார்க்க; see *ubarāšidam.*

உபரஞ்சகம் *ubarañjagam,* பெ.(n.) வேறுபடுத்தும் தன்மை (அவச்சேதகம்) நான்கனு ளொன்று (விசாரசந். 320); (Log.) one of four *ava-c-cēdagam.*

[Skt. upa-rañ-jaka > த. உபரஞ்சகம்.]

உபரஞ்சப்பஞ்சபூதம் *ubarañja-p-pañja-būdam,* பெ.(n.) போகர் நிகண்டிற் கூறியுள்ள துணைச் சரக்குகளின் ஐந்து வகை வேறுபாடுகள்; the five classes into which the secondary or auxillary minerals called uparasas are divided according to the five elements opposed to பாடாணப் பஞ்ச பூதம் which refers to the five classes of poisons bearing reference to the five elements.

உபரஞ்சிப்பி-த்தல் *uba-rañjippi-,* 11 செ.கு.வி.(v.i.) மகிழ்வுறச் செய்தல்; to cause to rejoice. *"பிறரை உபரஞ்சிப்பிக்குங் குணம்" (சி.சி.2, 23, ஞானப்.).*

[**Skt.** *upa-rañj* > *த. உபரஞ்சி.] 'பி' பி.வி. ஈறு.*

உபரதம் *ubaradam,* பெ.(n.) வெடியுப்பு (மூ.அ.); salt-petre.

உபரதாமிரத்தட்டை *ubara-tāmira-t-taṭṭai,* பெ.(n.) **உபரதாமிரம்** பார்க்க; see *ubara-tāmiram.*

உபரதாமிரம் *ubara-tāmiram,* பெ.(n.) நாரை மரம்; a kind of tree (un-identified).

உபரதி[1] *ubaradi,* பெ.(n.) 1. செயலொழிகை; cessation from action *"நித்திரை யென்றது இந்திரியங்களுடைய உபரதியே" (சி.சி.3, 4, சிவாக்.).* 2. பற்றொழிகை (விசாரசந். 345); renunciation of worldly attachments, one of *camāti-caṭka-campattu.* 3. பேரின்பம்; the spiritual enjoyment rejecting sensual pleasure.

[**Skt.** *upa-rati* > *த. உபரதி.]*

உபரதி[2] *ubaradi,* பெ.(n.) இறுதி; conclusion, end. *"உபரதியில் மண்டலம் போன் முன்னிறுத்தி" (விறலி விடு. 559).*

[**Skt.** *uparati* > *த. உபரதி.]*

உபரமணம் *ubaramaṇam,* பெ.(n.) உலகப் பற்றை விடல்; abstaining from worldly actions or desires.

உபராகம்[1] *ubarāgam,* பெ.(n.) கோள்மறைப்பு (கிரகணம்); eclipse of the sun or of the moon. *"ஓது பானுவெண் மதிபுபராகத்தில்" (சேதுபு. சேதுபல. 21).*

த.வ. கோள்மறை.

[**Skt.** *upa-rāga* > *த. உபராகம்.]*

உபராகம்[2] *ubarāgam,* பெ.(n.) 1. கருங்கோள் (இராகு) (நாநார்த்த.); rāhu, the ascending node. 2. வசைமொழி (நிந்தை); abuse.

[**Skt.** *uparāga* > *த. உபராகம்.]*

உபராசன் *ubarāšaṉ,* பெ.(n.) இளவரசன் (யாழ்.அக.); prince.

[உப + ராசன்.]

[**Skt.** *upa* > *த. உப.] 'ன்' ஆ.பா.ஈறு.*

அரசன் → ராசன்.

உபராசிதம் *ubarāsidam,* பெ.(n.) சிற்றகத்தி, ஒரு செடிவகை (மூ.அ.); a kind of plant, *common sesban.*

உபராமயம் *ubarāmayam,* பெ.(n.) வெண்டை; rose-mallow.

உபரால் *ubarāl,* பெ.(n.) உதவி; help, aid, assistance (P.T.L.).

உபரி[1] *ubari,* வி.அ.(adv.) 1. மேல்; on, upon, above. *"உபரி யெழுகின்ற சீயம்" (பாரத. பதின்மூ. 39).* 2. மிகுதியாய்; more.

த.வ. மிகை.

[உப்பரி = மிகை, மிகுதி, மேற்படல். உப்பரி → உபரி > **Skt.** *upari]*

உபரி[2] *ubari,* பெ.(n.) 1. உடலுறவின் ஒருவகை (உபரிசுரதம்); a mode of sexual intercourse. *"மிக்கா முபரி செயக் கார்க் கொண்டை பின்சரிய" (விறலி விடு. 523).* 2. மிகுதி; excess as in பித்த உபரி, biliousness.

[**Skt.** *upari* > *த. உபரி.]*

உபரிசம் *ubarišam,* பெ.(n.) மேலாக முளைத்தல்; growing upwards or out-protuberant.

உபரிசரம் *ubarišaram,* பெ.(n.) வான (ஆகாய)த்தில் உலாவல்; moving or walking in the air.

உபரிசரர் *ubari-šarar,* பெ.(n.) வான்வெளியில் செல்பவர்கள்; sojourners in the air, those who move above in the air. *"உபரிசரரென வுர னோடு புகுதர" (பாரத. பதினாறு. 30).*

த.வ. வான் உலவர்.

[Skt. uparicara > த. உபரிசரர். 'ர்' ப.பா.ஈறு.]

உபரிசுரதம் *ubari-šuradam,* பெ.(n.) சிறப்புப் புணர்ச்சி (கொக்கோ. 6, 47); *coitus muliere super, virum decumbonte.*

[Skt. upari-su-rata > த. உபரிசுரதம்.]

உபரிதகம் *ubaridagam,* பெ.(n.) கொக்கோக நூலில் சொல்லியுள்ள அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றான அழகிய இணைவு (சிருங்கார பந்தம்); a kind of coitus described in the erotic science *kokkōgam.*

உபரிதம் *ubaridam,* பெ.(n.) **உபரிசுரதம்** பார்க்க; see *upariśuradam. "இசலியிசலி யுபரித லீலையுற்று" (திருப்பு. 497).*

[Skt. uparitaka > த. உபரிதம்.]

உபரிபாகம் *ubari-pāgam,* பெ.(n.) மறைமுடிபு; *vedānta,* the crown of the *vēdas. "உபரிபாகப் பொருள்" (பதினொ. திருநாவுக். 1.).*

[உபரி + பாகம்.]

[Skt. upari > த. உபரி.]

பகு → பகுப்பு. பகு → பாகு = பகுதி, பக்கம், பக்கமாயிருந்து பேணுபவன் (பாகன்). பகு → பாகு → பாகம்.

உபரியாவி *ubariyāvi,* பெ.(n.) ஒரு வகை செடிவகை (கோஷ்டம்) (வை.மூ.); costus plant.

உபலக்கணம் *ubalakkaṇam,* பெ.(n.) 1. ஒரு மொழி ஒழிந்த தன்னினத்தையுங்குறிப்பது (சி.போ.5,1,சிற்); implying something that has not been made explicit by expressing another thing associated or connected with it. 2. குறிக்கோளைப் பக்கவுதவியாகக் கொண்டு உணர்த்தும் இலக்கணம் (லட்சணம்); secondary or unessential mark which helps the recognition of a thing, as the branch of a tree is pointed out to enable one to see through it a constellation or the crescent moon.

த.வ. குறிப்புமொழி.

[உப + இலக்கணம்.]

[Skt. upa > த. உப.]

[த. இலக்கணம் > Skt. laksaṇa.]

உபலட்சணம் *ubalaṭcaṇam,* பெ.(n.) **உபலக்கணம்** பார்க்க; see *ubalakkaṇam.*

[உப + லட்சணம்.]

[Skt. upa > த. உப.]

[த. இலக்கணம் > Skt. laṭcaṇa > த. லட்சணம்.]

உபலநாடிக்கல் *ubala-nāḍi-k-kal,* பெ.(n.) காதிற்குள்ளாக நரம்புகள் படருமிடத்து இருக்குமோர் கல்; a kind of calculus found near the auditory nerves inside the ear-aural calculus.

[உபல + நாடிக்கல்.]

upala என்னும் சொற்கு வடமொழியில் கல், பாறை போன்ற பொருள்களுண்டு. நாடிக்கல் என்னும் சொல்லிற்கு உபல அடையாக வருவது மிமிசை.

உபலம் *ubalam,* பெ.(n.) 1. கல் (சூடா.); stone, rock. 2. சிறுகல் (பிங்.); small stone. 3. பளிங்கு; crystal. *"பலநிறங் கவரு முபலமாய்" (தாயு. சிற்சுகோ. 2).* 4. உடம்பிலுண்டாகுங் கல்; (in medicine) a calculus or concretion formed in any part of the body such as gall stone, stone in the bladder, lung stone etc. 5. எருமுட்டை; cow-dung cake.

[Skt. upa-la > த. உபலம்.]

உபலம்பம் *ubalambam,* பெ.(n.) தோற்றுகை; perception, recognition. *"அவன்றனக்கு ஈஸ்வரனையொழிய ப்ருதக்ஸ் திதியாதல் உபலம்பமாதல் இல்லாமையாலே" (ஈடு. 1,1,6).*

[Skt. upa-lambha > த. உபலம்பம்.]

உபலாலனை *uba-lālaṉai,* பெ.(n.) கொண்டாடுகை; fondling, caressing.

[Skt. upa-lālana > த. உபலாலனை.]

உபலாளனம் *uba-lāḷaṉam,* பெ.(n.) 1. **உபலாலனை** பார்க்க; see *uba-lālaṉai. "உத்ஸ்வங்களையும் உபலாளனங்களையும் ஸ்ரீ பாஞ்சராத்ரப்ரகாரமாக வ்யவஸ்தை பண்ணி" (கோயிலொ. 54).* 2. தூய்மை, செய்கை (திவா.); cleansing, purifying.

[Skt. upa-lālanam > த. உபலாளனம்.]

உபலிபம் *ubalibam,* பெ.(n.) சாணத்தால் மெழுகுகை; besmearing with cow dung.

உபலேபம் *ubalēbam,* பெ.(n.) 1. **உபலேபனம்** பார்க்க; see *ubalēbaṉam.* 2. கோழைக் கட்டு; formation phlegm. 3. மந்தம்; dullness.

உபலேபனம் *uba-lēbaṉam,* பெ.(n.) 1. சாணத்தால் மெழுகுகை (வின்.); smearing with cow dung. 2. ஆ நீரால் மெழுகுகை; smearing with cow's urine. 3. ஆ நீரால் தூய்மை செய்தல்; a ceremony of cleaning with cow's urine.

[Skt. upa+lēbana > த. உபலேபனம்.]

உபலை *ubalai,* பெ.(n.) 1. சருக்கரை (நாநார்த்த.); sugar. 2. சுக்கான் பாறை; limestone.

[Skt. upalā > த. உபலை.]

உபலோகத்திறம் *ubalōga-t-tiṟam,* பெ.(n.) வெள்ளி; silver.

உபலோகம் *ubalōgam,* பெ.(n.) மாழையை (உலோகத்தை) அடுத்த பொருள்; secondary mineral.

[Skt. upa-lōha > த. உபலோகம்.]

உபலோத்திரம் *uba-lōttiram,* பெ.(n.) விளாம் பிசின் (மூ.அ.); gum of wood apple tree.

[Skt. upa-lōdhra > த. உபலோத்திரம்.]

உபவசி¹-த்தல் *ubavaši-,* 11 செ.கு.வி.(v.i.) உண்ணாதிருத்தல்; to fast. *"ஆயிரமாண்டுபவசித்து" (உத்தரரா. இராவணன் பிற. 26).*

த.வ. **நோன்பு.**

[Skt. upa-vas > த. உபவசி-,]

உபவசி² *ubavaši,* பெ.(n.) **உபவாசி** பார்க்க; see *uba-vāši. "அன்றைக் குபவசியாய்" (சைவச. பொது. 303).*

[Skt. upa-vāsiṉ > த. உபவசி.]

உபவம் *ubavam,* பெ.(n.) சீந்தில் (மூ.அ.); gulancha.

உபவராகப்பிரண்டை *ubavarāga-p-piraṇḍai,* பெ.(n.) கரணைப் பிரண்டை; coarse toothed heart-vine.

[உபவராகம் + பிரண்டை.]

புரு → புரள் → புரண்டை → பிரண்டை.

உபவரி *ubavari,* பெ.(n.) **உபவம்** பார்க்க; see *upavam.*

உபவல்லிகம் *ubavalligam,* பெ.(n.) ஒருவகைப் பூடு; a plant (unidentified).

[Skt. upavalliga > த. உபவல்லிகம்.]

உபவனம்¹ *uba-vaṉam,* பெ.(n.) சோலை, பூஞ்சோலை; grove, flower-garden. *"அந்த மன்ன னோர் நாளி லுபவனத் தொருவனாய்" (ஞானவா. உற்பத்தி. 31).*

[Skt. upa-vana > த. உபவனம்.]

உபவனம்² *uba-vaṉam,* பெ.(n.) 1. காஞ்சொறி (மூ.அ.); climbing nettle. 2. கடுக்காய்; myrobalan.



உபவாசக்காலம் *ubavāša-kālam,* பெ.(n.) 1. உண்ணா நோன்புக் காலம்; time for religious fasts. 2. தவமிருக்கும் காலம்; lent (Chr.).

[உபவாச(ம்) + காலம்.]

*[**Skt.** upa-vāsa > த. உபவாசம்.]*

கால் > காலம்.

உபவாசகம் *ubavāsagam,* பெ.(n.) பேய்த் தும்மட்டி; bitter apple, *Cucumis colocynthis.*

உபவாசம் *ubavāšam,* பெ.(n.) 1. உண்ணா நோன்பு (விரதம்); fast, fasting. *"இதன் புனலாடிய யுபவாச முஞற்றியக் கால்" (சேதுபு. பலதீ.19).* 2. சிற்றின்பம் தொடர்பானவற்றையும், மணம், அழகு படுத்துதல், ஆடல்பாடல், இசை, தாம்பூலம் முதலியவற்றையும் தவிர்த்து நோன்பு இருத்தல்; a religious mortification by abstinence from indulgence in all sexual gratification such as perfumes, flowers, unguents, ornaments, betel, music, dancing etc.

*[**Skt.** upavāsa > த. உபவாசம்.]*

வடமொழியில் இச்சொல் upa-vas என்றுள்ளது. இச்சொல்லுக்குப் பொறுத்திருத்தல், ஒன்றுடன் தங்கி இருத்தல், நுகர்பொருளை விலக்கியிருத்தல், உணவு உட்கொள்ளாமலிருத்தல் என்ற வகையில் பொருள் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது (மா.வி.). இவற்றுள் உண்ணா நோன்புப் பொருளே தமிழ் மொழியில் பெரும்பான்மை ஆளப்பட்டுள்ளது.

உபவாசி[1]-த்தல் *ubavāši-,* 11 செ.கு.வி.(v.i.) உண்ணாநோன்பு மேற்கொள்ளல், பட்டினியா யிருத்தல்; to fast, especially from religious motives. *"ஓங்குந் திரிதி கையுபவாசித்தே" (மச்சபு. அனந்ததிரி. 28).*

வடமொழியில் upa-vasati என்று வினை வடிவம் இருக்கிறது (மா.வி.). தமிழில் உபவாசம் என்னும் பெயர்வடிவத்திலிருந்தே உபவாசி என்னும் வினைவடிவம் உருவாகியிருக்கிறது.

உபவாசி[2] *ubavāši,* பெ.(n.) உண்ணா நோன்பிருப்பவன்; one who observes a fast. *"மதத்தவுடலதனா லற்ற வுபவாசி யொளித்துண்பாளென்றுணர்தல்" (உபநி.16).*

த.வ. உண்ணாநோட்பர்.

*[**Skt.** upa-vāsin > த. உபவாசி.]*

உபவாயு *uba-vāyu,* பெ.(n.) உடலிலுள்ளனவும் சிறந்தெடுத்துக் கூறவியலாததுமான விக்கன் (நாகன்), இமையன் (கூர்மன்), எரியன் (கிருகரன்), ஆவிரியன் (தேவ தத்தன்), உச்சியன் (தனஞ்சயன்) என்ற ஐந்து வளி (ஊதை) (விசாரசந். 330); the five subsidiary breaths, *vikkaṉ, imaiyaṉ, eriyaṉ, āviriyaṉ* and *ucciyaṉ.*

த.வ. ஐவளி.

*[**Skt.** upa+vāyu > த. உபவாயு.]*

விக்கல், ஏப்பம், இமைகொட்டல், இருமல், தும்மல், வீங்கல் ஆகிய செயற்பாடுகளுக்கு ஏதுவாயிருக்கும் பத்து வளி (தசவாயு)களுக்குத் துணையாயிருப்பவை உபவாயு என சா.அக. குறிப்பிடுகிறது.

உபவாளிதம் *ubavāḷidam,* பெ.(n.) ஒரு வகைச் செடி; Indian lead wort.

உபவிட்டக்கருப்பம் *uba-viṭṭa-k-karuppam,* பெ.(n.) மூவகைச் சூல்களுள் நன்றாகக் கருதப்படும் கருப்பையில் குறை கண்டு குருதி (அரத்தம்) கசிந்து அதனால் கரு மெலிந்து துடித்துக் கொண்டிருக்குமோர் நிலைமை; one of the three conditions of pregnancy marked by the oozing of blood or slight hemorrhage and emaciated and quivering condition of the womb.

[உபவிட்டம் + கருப்பம்.]

*[**Skt.** upa-viṭṭa > த. உபவிட்டம்.]*

த. குரு > கரு > கருப்பம் > **Skt.** garbha.

உபவிட்டரம் *uba-viṭṭaram,* பெ.(n.) தங்குபிண்டம் (*சீவரட். 206*); embryo shrunken in size owing to menstrual discharges during the period of gestation.

[Skt. upa+viṣṭara > த. உபவிட்டரம்.]

உபவிடம் *uba-viḍam,* பெ.(n.) 1. ஒரு மருந்துச் செடி (அதிவிடயம்); a kind of herb *(adi-viḍayam).* 2. ஒன்பது வகை நிலைத்திணை நஞ்சு (தாவரவிடம்); the nine kinds of vegetable poisons.

1. எருக்கம்பால், 2. கள்ளிப்பால், 3. சிவனார் கிழங்கு, 4. அலரி, 5. குன்றி, 6. அபினி, 7. ஊமத்தை, 8. எட்டி, 9. நாபி ஆகியன ஒன்பது நிலைத்திணை நஞ்சுகளாம்.

உபவிடை *uba-viḍai,* பெ.(n.) **உபவிடம்** பார்க்க; see *uba-viḍam.*

உபவிருங்கணம் *ubaviruṅgaṇam,* பெ.(n.) **உபப்பிரும்மணம்** (பெரியபு. திருமலைச். சூசனம்) பார்க்க; see *ubappi-rummaṇam.*

[Skt. upa-bṛṃhaṇa > த. உபவிருங்கணம்.]

உபவீதம் *ubavīdam,* பெ.(n.) 1. பூணூல் (பிங்.); sacred thread worn by men of the twice-born castes. 2. இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாய்ப் பூணூல் அணிதல்; wearing the sacred thread in the usual manner over the left shoulder and under the right arm opp. to பிராசீனாவிதம்.

[Skt. upa-vīta > த. உபவீதம்.]



உபவீதி *ubavīdi,* பெ.(n.) 1. **உபவீதம்**[2] பார்க்க; see *ubavīdam.* opp. to பிராசீனாவீதி.

[Skt. upa-vītin > த. உபவீதி.]

உபவுப்பு *uba-uppu,* பெ.(n.) பிண்டவுப்பு செயநீர்; a peculiar liquid extracted from the salt derived from the foetus.

[உப + உப்பு.]

[Skt. upa > த. உப.]

உபவேசனம் *uba-vēśaṇam,* பெ.(n.) மலங் கழித்தல்; passing of stools, evacuation of the bowels.

உபவேட்டனம் *ubavēṭṭaṇam,* பெ.(n.) கூத்திடுங்காலுண்டாம் உறுப்பசைவு முறைகளுளொன்று (சுத்தா; சிலப். பக். 81); a mode of gesticulation.

[Skt. upa-vēṣṭana > த. உபவேட்டனம்.]

உபவேட்டிதம் *uba-vēṭṭitam,* பெ.(n.) நடன முத்திரை (அபிநய) வகை (சீவக. 1257, உரை); a gesture by the fingers in dancing.

[Skt. upa-vēṣṭita > த. உபவேட்டிதம்.]

உபவேதம் *uba-vēdam,* பெ.(n.) நான் மறை (வேதங்)களையடுத்து மதிக்கப்பெறும் ஆயிர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்த வேதம் ஆகிய நான் மறைகள் (வேதங்கள்) (திருக்காத். பு. 29, 38); secondary vēdas, class of writings subordinate to the vēdas, of which four are enumerated.

[உப + வேதம்.]

[Skt. upa > த. உப.]

விழி → வித் → வேத் → வேதம்.

உபற்பவம் *ubaṟ-pavam,* பெ.(n.) பாம்புக் கொல்லி; the herb of repentance.

உபறியாவி *ubaṟiyāvi,* பெ.(n.) கோட்டம் (மூ.அ.); Arabian costume.

உபனோரஞ்சகன் *ubaṉō-rañjagaṉ,* பெ.(n.) எலுமிச்சை; lime-citrus medicalima.

உபா *ubā,* பெ.(n.) தன்மாத்திரை; subtle, elements. *"உபாக்கடெரிவுரைப்பின்" (நீலகேசி. 486, உரை).*

உபாக்கியானம் *ubākkiyāṉam,* பெ.(n.) கிளைக்கதை; episode, short story introduced into a long one. *"நளோபாக்கியானம்".*

[Skt. upā-khyāna > த. உபாக்கியானம்.]

உபாகமம் *ubāgamam,* பெ.(n.) 1. மூல தோன்றிய (மூலாகம)ங்களின் வழித் தோன்றிய சைவத் தோன்றிய (ஆகம)ங்கள் (சைவச. பொது. 336, உரை); secondary āgamas said to be 207 in number. 2. பழைய ஏற்பாட்டில் ஐந்தாவது புத்தகம் (கிறித்.); the Tamil name for the book of Deuteronomy.

த.வ. துணைத் தோன்றியம்.

[Skt. upāgama > த. உபாகமம்.]

உபாகர்மம் *ubākarmam,* பெ.(n.) வேதங்களை ஓதத் தொடங்குமுன் ஆண்டிற்கொருமுறை புதியதாகப் பூணூல் போட்டுக் கொள்ளும் சடங்கு, (சிராவணச் சடங்கு) (பிராக்.); ceremony performed once a year before commencing to recite the vēda when the sacred thread is put on a new.

[Skt. upā-karman > த. உபாகர்மம்.]

உபாகிதம் *ubāgidam,* பெ.(n.) எரிகொள்ளி (நாநார்த்த.); fire brand.

[Skt. upāhita > த. உபாகிதம்.]

உபாகிதை *ubāgidai,* பெ.(n.) **உபாகிதம்** பார்க்க; see *ubāgidam.*

[Skt. upāhita > த. உபாகிதை.]

உபாங்கதாளம் *ubāṅga-tāḷam,* பெ.(n.) தாளவகை (பரத. தாள. 4, உரை); (Mus.) variety of time-measure.

[உபாங்கம் + தாளம்.]

[Skt. upāṅga > த. உபாங்க.]

தாள் = கால், அடி. தாள் → தாளம் = ஆடுபவர் காலால் தட்டும் காலக்கணிப்பு.

உபாங்கம் *ubāṅgam,* பெ.(n.) 1. சார்புறுப்பு; minor limb or member. 2. மறைமுடிவு (வேதாங்கங்)களுக்கு உறுப்பா (அங்கமா)யுள்ள நூல்கள் (சாத்திரங்கள்) (சி.சி.8, 14, மறைஞா.); a class of writings, supplementary to the *vēdāṅ-gas,* of which four are enumerated. 3. தோற் கருவி வகை (சிலப். 3, 27, உரை); kind of drum. 4. இசைக்கருவி பக்கவாச்சியம்; subsidiary musical instrument. *"தார்கிண்டு வண்டுபாங்கங்கூட" (இரகு. நாட்டுப். 54).* 5. **உபாங்கதாளம்** பார்க்க; see *ubāṅga-tāḷam. "அங்க முபாங்க மாகிடுநேர் பங்குமுடன்" (பரத. தாள. 4).*

[Skt. upāṅga > த. உபாங்கம்.]

உபாங்கராகம் *ubāṅga-rāgam,* பெ.(n.) அராகவகை; a melody-type.

[உபாங்கம் + ராகம்.]

[Skt. upāṅga > த. உபாங்கம்.]

[த. அராகம் > Skt. rāga > த. ராகம்.]

உபாசகன் *ubāšagaṉ,* பெ.(n.) 1. வழிபடு (உபாசனை) வோன்; worshipper, devotee. *"விழைவா லுபாசக ராகி" (விநாயகபு. 83, 107).* 2. புத்த மதத்தைச் சார்ந்தவ (பௌத்த)ரில் இல்லறத்தோன்; buddhist layman, opp. to பிக்ஷு. *"சீல வுபாசகர் செங்கைநறு நீரும்" (மணிமே. 28, 12).*

[Skt. upāsaka > த. உபாசகன்.]

உபாசகை *ubāšagai,* பெ.(n.) புத்த சமயத்தவரில் இல்லறத்தவள் (மணிமே. 28, 12. அரும்.); buddhist woman of the laity.

உபாசங்கம் *ubāšaṅgam,* பெ.(n.) அம்புக்கூடு; quiver.

[Skt. upāsaṅga > த. உபாசங்கம்.]



உபாசயம் *ubāšayam,* பெ.(n.) உறக்கம்; sleep.

உபாசனம் *ubāšaṉam,* பெ.(n.) **உபாசனை** பார்க்க; see *upāšaṉai.*

[Skt. upāsana > த. உபாசனம்.]

உபாசனை *ubāšaṉai,* பெ.(n.) வழிபாடு; worship. *"இரு வேறாகு முபாசனை" (விநாயகபு. 83, 67).*

[Skt. upāsanā > த. உபாசனை.]

upāsana என்னும் வடசொல் உட்காருதல் அல்லது அருகில்இருத்தல், தொண்டு செய்தல், காத்திருத்தல், தொண்டு, உதவி செய்தல், மதித்தல், புகழ்தல், வணங்குதல் என்னும் வகையில் பொருள் வளர்ச்சி கொண்டுள்ளது. இவற்றுள் 'வழிபாடு' என்னும் இறுதிப் பொருளை மட்டும் தமிழ் ஏற்றுக் கொண்டுள்ளது.

உபாசி-த்தல் *ubāši-,* 11 செ.குன்றாவி.(v.t.) வழிபடுதல்; to worship. *"நயந்துபா சித்த வாறும்" (விநாயகபு. பதி. 3).*

[Skt. upās > த. உபாசி-,]

உபாசி *ubāši,* பெ.(n.) தெய்வந் தொழுதலான் அவனருள் (அனுக்கிரகம்) பெற்றவன்; one who has obtained the grace of a particular deity by worshipping it.

[Skt. upās > த. உபாசி.] 'இ' உடைமை குறித்த ஈறு.

உபாஞ்சு *ubāñju,* பெ.(n.) **உபாம்சு** (சைவச. பொது. 152. உரை) பார்க்க; see *ubāmšu.* 2. தனிமை (ஏகாந்தம்); loneliness, solitude.

[Skt. upāmšu > த. உபாஞ்சு.]

உபாத்தி *ubātti,* பெ.(n.) ஆசிரியர் (உபாத்தியாயன்) (பிங்.); teacher.

[Skt. upādhya > த. உபாத்தி.]

உபாத்தியாயம் *ubāttiyāyam,* பெ.(n.) பூசாரியம் (புரோகிதம்); profession of conducting religious ceremonies (Brāh.).

[Skt. upadhyāyam > த. உபாத்தியாயம்.]

உபாத்தியாயன் *ubāttiyāyaṉ,* பெ.(n.) 1. ஆசிரியர்; teacher, school master. 2. மதகுரு; religious preceptor. *"அவனுபாத்தியாயன்" (பிரபோத. 11, 5).*

த.வ. ஆசான்.

[Skt. upādhyāya > த. உபாத்தியாயன்.] 'அன்' ஆ.பா.ஈறு.

உபாத்தியாயனி *ubāttiyāyaṉi,* பெ.(n.) ஆசிரியை; lady teacher, school mistress.

[Skt. upā-dhyāyāni > த. உபாத்தியாயனி.]

உபாத்தியாயி *ubāttiyāyi,* பெ.(n.) **உபாத்தியாயனி** பார்க்க; see *ubā-ttiyāyaṉi.*

[Skt. upā-dhyāyani > த. உபாத்தியாயி.]

உபாத்து *ubāttu,* பெ.(n.) சாவு (முகம); death.

த.வ. சாக்காடு.

[Arab. wafāt > த. உபாத்து.]

உபாதாயவுரு *ubādāya-v-uru,* பெ.(n.) வலி, இரதம், வன்னம், கந்தம் என்று நால்வகைப்பட்ட உருவ வகை (மணிமே. 30, 190, கீழ்க்குறிப்பு); (Buddh.) a variety of uruvam, of four kinds viz., vali, iradam, *vaṉṉam* and kandam.

[உபதாய + உரு.]

[Skt. upadāya > த. உபாதாய.]

உபாதானகாரணம் *ubādāṉa-kāraṇam,* பெ.(n.) முதற்காரணம்; material cause, as clay for a pot.

[உபாதானம் + காரணம்.]

[Skt. upā-dāna > த. உபாதான.]

உபாதானபூதம் *ubādāṉa-būdam,* பெ.(n.) கலப்பான பூதம்; that which is composed of two or more elements or ingredients - compound.

[உபா + தான(ம்) + பூதம்.]

[Skt. upā > த. உபா.]

உபாதானம் *ubātāṉam,* பெ.(n.) 1. **உபாதான காரணம்** பார்க்க; see *upātāṉa-kāraṇam.* 2. அரிசிப்பிச்சை; dole of uncooked rice.

[உபா + தானம்.]

[Skt. upā > த. உபா.]

தர் – (தர்) → தரு → தா. தரு → தருகிறாள், தருவான், தருகை, தரவு.

தா → தானம்.

[த. தானம் > Skt. dāna.]

உபாதி[1] *ubādi,* பெ.(n.) 1. கடமை; dues. *"எப்பேர்ப்பட்ட உபாதிகளும் இழித்து விட்ட அளவுக்கு" (தெ.க.வெ.தொ.2, 118).* 2. விளைவில் பரவி காரணத்தில் பரவாமல் இருப்பது (சாத்தியத்திலே வியாபித்துச் சாதனத்தில் வியாபகமில்லாதது) (தர்க்கபா. 18); special cause of a general effect. 3. மாயையாலுண்டாகுந் தோற்றம்; appearance, phantom.

[Skt. upā-dhi > த. உபாதி.]

உபாதி[2] *ubādi,* பெ.(n.) 1. தொல்லை (வேதனை); torment, agony, pang. *"உச்சியிற் சாலவுபாதி பசிதாகமாகும்" (பட்டினத். திருப்பா. திருத்தில்லை.).* 2. நோய்; disease, ailment. *"பெருணவு உபாதியை யுண்டாக்கும்".* 3. இடையூறு; hindrance, obstruction. *"உம்பரால் உருமுபாதி காப்பன்" (மச்சபு. பிருகுவி. 49).* 4. ஆதனு (ஆன்மாவு)க்கு ஏற்படும் துயரம்; in vedanta philosophy a condition of the body, which is specially applied to certain forms, considered disguises of the spirit.

த.வ. துன்பம்.

[Skt. bādhā > த. உபாதி.]

உபாதி[3]-த்தல் *ubādi-,* 11 செ.கு.வி.(v.i.) தொந்தரை செய்தல்; to cause distress, to afflict, torment, torture.

[Skt. bādhā > த. உபாதி-,]

உபாதி[4] *ubādi,* பெ.(n.) வேறுபடுத்தும் தன்மை (அவச்சேதகம்) நான்கனுளொன்று (விசாரசந். 320); (Log.) one of four *ava-c-cēdagam.*

[Skt. upādhi > த. உபாதி.]

உபாதேயம் *ubādēyam,* பெ.(n.) ஏற்றுக் கொள்ளத்தக்கது; that which is worthy of acceptance or adoption. *"குருவசனம் எப்போதும் உபாதேயமானது".*

[Skt. upā-dēya > த. உபாதேயம்.]

உபாதை *ubādai,* பெ.(n.) **உபாதி[2]** பார்க்க; see *ubādi[2].*

[Skt. bādhā > த. உபாதை.]

உபாந்தியம் *ubāndiyam,* பெ.(n.) 1. கடைக்கண் (வின்.); corner of the eye. 2. ஈற்றயல் (வின்.); the last but one, the penultimate. 3. அண்மை (சமீபம்) (பிராம.); proximity, vicinity.

[Skt. upāntya > த. உபாந்தியம்.]

உபாம்சு *ubāmšu,* பெ.(n.) மந்திரத்தை நாவசைவின்றி செவியுணருமாறு நெட்டுருச் செய்கை; recitation of a mantra in a hushed low voice so as to be heard by the reciter alone. *"சிவமந்திரத்தை வாசகமாகத் தான் உபாம்சுவாகத்தான் மானசமாகத்தான்..... ஜபிப்பது" (சி.சி.8,23,சிவாக்.).*

[Skt. upāmšu > த. உபாம்சு.]

உபாயக்காரன் *ubāya-k-kāraṉ,* பெ.(n.) சூழ்ச்சியாளன் (தந்திரி); artful person, schemes, contriver.

[உபாயம் + காரன்.]

[Skt. upāya > த. உபாய(ம்).]

உபாயசொரூபம் *ubāya-śorūbam,* பெ.(n.) வீடுபேறு (மோட்சம்) பெறும் வழியின் தன்மை (அஷ்டாதச. பக். 25); nature of the path to final bliss, which is of five kinds, viz. கருமம், ஞானம், பத்தி, பிரபத்தி, ஆசாரியாபிமானம், one of *artha-pañjagam.*

[Skt. upāya + švarūpa > த. உபாய சொரூபம்.]

உபாயதந்திரம் *ubāya-tandiram,* பெ.(n.) ஏமாற்று (வஞ்சகம்) (Pond.); deceit.

[Skt. upāya+tantra > த. உபாயதந்திரம்.]

உபாயநிசம் *ubāya-nisam,* பெ.(n.) உயிர் வளியினை உள்வாங்குகை, உள்ளிழுக்கை; inhalation of vital air.

த.வ. பூரகம்.

உபாயநிட்டை *ubāya-niṭṭai,* பெ.(n.) எளிதிற் வீடுபேறு அடையும் வழியிலூன்றி நிற்கை; fixing on an easy method of attaining spiritual tranquillity. *"மேலோர் உபாய நிட்டை யுணர்த்துகின்றார்" (சி.சி.9,8, மறைஞா. அவ.).*

[Skt. upāya+niṣṭai > த. உபாயநிட்டை.]

உபாயநிட்டைவெண்பா *ubāya-niṭṭai-veṇpā,* பெ.(n.) பண்டார சாத்திரங்களுள் அம்பலவாணரியற்றிய நூல்; a śaiva śiddhānda treatise by *ambalavāṇa-dēśigar,* one of *paṇḍāra-cāttiram.*

[உபாயநிட்டை + வெண்பா.]

[Skt. upāyaniṭṭai > த. உபாயநிட்டை.]

வெள் → வெண் + பா – வெண்பா.

உபாயபாரமிதை *ubāya-pāramidai,* பெ.(n.) பத்துச் சிறப்புக் குணங்களுள் (தசபாரமிதையுள்) ஒன்றான அறம் (உபாயம்) (மணிமே. 26, 45, குறிப்பு. பக். 297); (Buddh.) a transcendental virtue, characteristic of the Buddha, one of *taśa-pāramidai.*

உபாயம்¹ *ubāyam,* பெ.(n.) 1. சூழ்ச்சி; that by which a person realizes his aim, means, stratagem, artifice. *"யாஅரு பாயத்தின் வாழாதார்" (நாலடி. 119).* 2. அரசர்க்குரிய நான்கு வழிவகைகள் (உபாயங்கள்) (பிங்.); means of overcoming an enemy, one of *cadurvidōbayam.* 3. நான்கு; four. *"அம்பு பாயமாம்படி யட்டி" (தைலவ. தைல. 94, 12).* 4. சிறிதளவு (சொற்பம்); smallness. *'உபாயமாய்க் கொடுத்தான்'.*

[Skt. upāya > த. உபாயம்.]

upaya என்னும் சொல்லிற்கு வடமொழியில் அருகில் வருதல், அடைதல், வந்துசேர்தல், நோக்கத்தை அடையும் வழி, வழிவகை, வழி போன்ற பல பொருள்களுள்ளன. இவற்றுள் வழிவகை, சூழ்ச்சி போன்ற ஒரு சில பொருள்களே தமிழில் உள்ளன.

உபாயம்² *ubāyam.* பெ.(n.) வழிவகை (சாதனம்): means. *"கால ஒடுக்க உபாயமில்லாமையாலும்" (தெ.க.தொ. 5. பக். 370).*

[Skt. upāya > த. உபாயம்.]

உபாயனபத்திரம் *ubāyaṇa-pattiram,* பெ.(n.) கையுறையாகக் கொடுக்கும் பொருளைப் பற்றிய ஆவணம் (பத்திரம்) (சுக்கிரநீதி. 93); document specifying present.

[Skt. upāyaṇa + pattiram > த. உபாயனபத்திரம்.]

உபாயனம் *ubāyaṇam,* பெ.(n.) காணிக்கை; present to a superior. *"மன்னனுக்கிய லுபாயன மென்று கொடுத்தனர்" (யசோதர. 3, 5.).*

[Skt. upāyana > த. உபாயனம்.]

உபாயி *ubāyi,* பெ.(n.) சூழ்ச்சியாளன் (தந்திரமுள்ளவன்); artful person.

[Skt. upāya > த. உபாயி.]

உபாலம்பனம் *ubālambaṇam,* பெ.(n.) இடித்துரைத்தல் (நிந்திக்கை); reproach, reproof. *"சந்திரோபாலம்பனம்" (நைடத.).*

[Skt. upā-lambhana > த. உபாலம்பனம்.]

உபானம்¹ *ubāṇam,* பெ.(n.) மிதியடி; a kind of shoes, wooden sandals. *"உபானபதத்தொடு நடக்கும்" (சிவதரு. சுவர்க்கம். 142).*

த.வ. பாதுகை.

[Skt. upa-nah > த. உபானம்.]

உபானம்² *ubāṇam,* பெ.(n.) கோபுரத்தின் அடிச்சித்திரவரை; first moulding above the plinth in the structure of towers, etc.

forming the base above the lowest of a series of rows or layers intended to produce an ornamental effect, pedestal (T.A.S.I, 180).

[Skt. upāna > த. உபானம்.]

உபானவரி *ubāṉa-vari,* பெ.(n.) **உபானம்²** பார்க்க; see *ubāṉam.*

[உபானம் + வரி.]

[Skt. upāna > த. உபானம்.]

உபுக்கு-தல் *ubukku-,* 5 செ.கு.வி.(v.i.) பெருகுதல் (வின்.); to swell, overflow.

தெ. உபுகு; உரு. உபக்.

உபேட்சாபாவனை *ubēṭcā-pāvaṉai,* பெ.(n.) சார்பு பற்றாது ஒப்பு நோக்குந் தன்மை (மணிமே. 30, 253, அரும்.); impartiality.

[Skt. upēkṣā + pāvaṉai> த. உபேட்சா பாவனை.]

உபேட்சி-த்தல் *ubēṭci-,* 11 செ.குன்றாவி. (v.t.) புறக்கணித்தல்; to neglect, disregard, overlook, ignore. *"பரமபதத்தை உபேட்சித்துவந்து"* (குருபரம். 69. பன்னீ.).

[Skt. upēkṣ > த. உபேட்சி-,]

உபேட்சை *ubēṭcai,* பெ.(n.) 1. புறக்கணிப்பு; disregard, neglect, indifference. *"மேதகு மறைவிரோத மேவுநூலுபேட்சை"* (சூத. சருவவேதாந்.). 2. உடல் நலமின்மை (அசௌக்கியம்); indisposition.

[Skt. upēkṣā > த. உபேட்சை.]

உபேட்சையானம் *ubēṭcai-yāṉam,* பெ.(n.) தோல்வியடைந்த அரசன் பகைவனைப் புறக்கணித்துத் திரும்புகை (சுக்கிரநீதி, 337); the return march of a defeated king unmindful of his defeat.

[Skt. upēkṣā+yāna > த. உபேட்சையானம்.]

உபேந்திரன் *ubēndiraṉ,* பெ.(n.) இந்திரனின் தம்பியாகிய திருமால்; Visṇu, who, at one time, incarnated as a younger brother of Indra. *"முச்சசகமளந்த வுபேந்திரன்"* (தணிகைப்பு. விடை. 18).

[உப + இந்திரன்.]

[Skt. upa > த. உப.]

வேந்தன் → இந்திரன்.

முல்லை நிலத் தெய்வமாகிய திருமாலை இந்திரன் தம்பியாக்கியதும் குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகனைப் பிள்ளையாரின் தம்பியாக்கியதும் தமிழ்ப் பண்பாட்டில் ஆரியப்பண்பாட்டின் வீச்சுகளாகக் கருதப்படுகின்றன.

உபேந்திராசிரியர் *ubēndirāśiriyar,* பெ.(n.) சினேந்திரமாலை யியற்றியவர்; the author of the *śiṉēndira-mālai.*

[உப + இந்திரன் + ஆசிரியர்.]

[Skt. upa > த. உப.]

வேந்தன் → இந்திரன்.

உபோதகம் *ubōdagam,* பெ.(n.) **உடுபோதம்** (யாழ்.அக.) பார்க்க; see *uḍupōdam.*

[உடுபோதம் → உபோதகம்.]

உபோதம் *ubōdam,* பெ.(n.) பேய்ப்பசளை (மலை.); a wild species of purslane.

[Skt. upōdaka > த. உபோதம்.]

உபோற்காதம் *ubōṟkādam,* பெ.(n.) பாயிரம் (தொல். பாயி.விருத். பக். 16); introduction, preface.

[Skt. upōdghāta > த. உபோற்காதம்.]

உம்மத்து *ummattu,* பெ.(n.) பற்றாளர் (இசுலாம்); followers, adherents.

[Ar. ummat > த. உம்மத்து.]

உம்மியம் *ummiyam,* பெ.(n.) உமியம், செய் நஞ்சு விளையும் நிலம்; soil or mine from which mineral poisons are dug out.

உமலிட்சாரம் *umaliṭ-cāram,* பெ.(n.) 1. குடல் சீராக்கத்திற்குக் கொடுக்கப்படும் உமரியுப்பு; a vegetable salt given in cases of bowel complaints such as hernia etc. 2. உமரிப் பூண்டினின்று எடுக்கும் சத்து; salt sort soda obtained from the plant 'umari'.

த.வ. உமரிஉப்பு.

உமதகி *umatagi,* பெ.(n.) சணல் (மலை.); sunnhemp.

உமலோத்திரம் *umalōttiram,* பெ.(n.) **உபலோத்திரம்** பார்க்க; see *ubalōttiram.*

உமற்கடம் *umar-kadam,* பெ.(n.) திரு (தருப்பை)ப்புல்; the kusa grass, the sacrifical grass.

உமா[1] *umā,* பெ.(n.) குன்றிமணி; crab's eye; gold-smith's grain.

உமா[2] *umā,* பெ.(n.) சிலை; pārvathi.

உமாக்கலைக்கியானம் *umā-k-kalai-k-kiyāṉam,* பெ.(n.) மலைமகளா (பார்வதியா)ற் கூறப்பட்டதாகச் சொல்லப்படுமோர் வட மொழி நூல்; arts and sciences said to have been revealed by Pārvathi, wife of god Šivaṉ.

உமாக்குருவி *umā-k-kuruvi,* பெ.(n.) வான் வலப் (ஆகாய) பறவை; a bird of paradise-paradisea.

[உமா + குருவி.]

குள் → குரு → குருவி = சிறு பறவை.



உமாகட்கம் *umākaṭkam,* பெ.(n.) **உமற்கடம்** பார்க்க; see *umarkadam.*

உமாதகி *umātagi,* பெ.(n.) 1. **உமதகி** பார்க்க; see *umatagi.* 2. ஒரு வகை (இரசதாளி)க் கரும்பு; a species of sugar-cane.

உமாதகியம் *umātagiyam,* பெ.(n.) **உமா** பார்க்க; see *umā.*

உமாதகியரிசி *umātagi-y-ariši,* பெ.(n.) கருங்குருவை யரிசி; the rice of a black variety of paddy.

உமாதசி *umātaši,* பெ.(n.) **உமதகி** பார்க்க; see *umatagi.*

உமாதாதகி *umātātagi,* பெ.(n.) மஞ்சள் செவ்வந்தி; an yellow variety of chamomile.

உமாபட்சி *umā-paṭci,* பெ.(n.) பறவை வகை (வின்.); species of paradise-bird.

உமாபதி *umā-padi,* பெ.(n.) சிவன் (திவா.); Šivaṉ whose consort is Umā.

[Skt. umāpati > த. உமாபதி.]

உமாபதிசிவாசாரியார் *umāpadi-šivā cāriyār,* பெ.(n.) சந்தான குரவருள் ஒருவர்; a šaiva *ācārya,* author of the *siva-p-piragāsam* and seven other treatises of the 14 *sittānda-sāttiram*besides several other works like *kōyirpurāṉam,* 13th C. one of four *šandāṉakuravar*(q.v.).

[உமாபதி + சிவா + ஆச்சாரியார்.]

[Skt. umāpati > த. உமாபதி.]

உமாமகேச்சுரம் *umāmagēccuram,* பெ.(n.) ஒரு நோன்பு; a religious observance in honour of. *Umā-mahesvaran.* "உமாமகேச் சுரமென் றொரு அவவிரதம்" (பிரமோத். உமாம. 17).

[Skt. uma-mahesvaran > த. உமாமகேசுவரன் > உமாமகேச்சுரம்.]

உமாமகேசன் *umā-magēšaṉ,* பெ.(n.) **உமாமகேசுவரன்** பார்க்க; see *umā-magēšuvaraṉ.*

[Skt. umā+makēsan > த. உமாமகேசன்.]

உமாமகேசுவரன் *umā-magēšuvaraṉ,* பெ.(n.) சிவன்; Šivaṉ, the great lord whose consort is Umā.

[Skt.umāmahesvara>த. உமாமகேசுவரன்.]

'ன்' ஆ.பா.ஈறு.

உமியல்தாரி *umiyaltāri,* பெ.(n.) கருநெய்தல்; blue lotus - monochoria - vaginalis.

உமேசன் *umēšaṉ,* பெ.(n.) சிவன்; Šivaṉ, Umā's lord.

[Skt. umēša > த. உமேசன்]

உமேதுபண்ணு-தல் *umēdu-paṇṇu-,* 15 செ.கு.வி.(v.i.) சம்பளமின்றி வேலை பழகுதல்; to serve as an unpaid probationer in expectation of permanent employment.

[உமேது + பண்ணு-,]

[Skt. ummēd > த. உமேது.]

உமேதுவார் *umēduvār,* பெ.(n.) 1. சம்பளமின்றி வேலை பழகுநர்; unpaid probationer who works in expectation of being provided with a permanent employment. 2. பதவியை விரும்புவன் (இசுலாம்); a condidate for an office or position (Muham.).

[U. ummēd+war > த. உமேதுவார்.]

உமேதுவார்ப்பட்டாளம் *umēdu-vār-p-paṭṭāḷam,* பெ.(n.) தன் விருப்பார்வப் படை; volunteer corps.

[U. ummēd+war > த. உமேதுவார்; E. battalion > த. பட்டாளம்.]

உமையாளீசன் *umaiyāḷīśaṉ,* பெ.(n.) சவர்க்காரம்; earth impregnated with carbonate of soda, fuller's earth.

உயசதி *uyaṣati,* பெ.(n.) **உயத்தி** பார்க்க; see *uyatti.*

உயத்தி *uyatti,* பெ.(n.) 1. வெண் செய்நஞ்சு (பாடாணம்); white arsenic. 2. ஒட்டை மரம்; a tall tree.

உயந்திசம் *uyandiśam,* பெ.(n.) ஆள்வாடைத்தட்டி; a plant.

உயாத்தவம் *uyāttavam,* பெ.(n.) இலந்தை; Indian apple.

உயில் *uyil,* பெ.(n.) இறப்பிற்குப் பின் நடைமுறைபடுத்தக்கோரி எழுதும் விருப்பாவணம் (மரண சாசனம்); will, legal declaration of a person's intentions, to take effect after his death.

த.வ. விருப்பாவணம்.

[E. will > த. உயில்.]

உயிறு *uyiṟu,* பெ.(n.) நறுமண (வாசனை) வேர் (இலாமிச்சை) (மலை.); cuscus-grass, with aromatic root.

உயுத்தம் *uyuttam,* பெ.(n.) போர்; war, battle. *"தானவானவ ருயுத்தமும்" (பாரத. பதினெட்டாம். 68).*

[Skt. yuddha > த. உயுத்தம்.]

உயோகுதுயில் *uyōgu-tuyil,* பெ.(n.) அறிதுயில் (யோகநித்திரை); trance in yōga, wakeful sleep. *"ஆலினிலையதன் மேற்பைய வுயோகுதுயில் கொண்ட பரம்பரனே" (திவ். பெரியாழ். 1, 5, 1).*

[உயோகு + துயில்.]

[Skt. yōga > த. உயோகு.]

உரகக்கன்னி *uraga-k-kaṉṉi,* பெ.(n.) நாகமல்லிகை; snake jasmine.

[உரகம் + கன்னி.]

[Skt. uraga > த. உரகம்.]

உரகச்சீரகம் *uraga-c-cīragam,* பெ.(n.) காட்டுச் சீரகம்; wild cumin.

[உரகம் + சீரகம்.]

[Skt. uraga > த. உரகம்.]

உரகபந்தம் *uraga-bandam,* பெ.(n.) ஒன்றிணைந்த இரண்டு பாம்பு போல வரைந்த சித்திரத்தின் அறைகளில் எழுத்துகளை அடைக்கும்படியமைந்த சித்திர பாவகை; a variety of cittira-kavi whose letters can be arranged to fit in a diagram in the form of two intermining snakes.

த.வ. நாகபந்தம்.

[உரக + பந்தம்.]

[Skt. uraga > த. உரக.]

உரகபந்தனம் *uraga-bandaṉam,* பெ.(n.) **உரகபந்தம்** பார்க்க; see *uraga-pandam.*

[உரக + பந்தனம்.]

[Skt. uraga > த. உரக.]

[பந்தம் → பந்தனம்.]

உரகம் *uragam,* பெ.(n.) பாம்பு; snake.

[Skt. ura-ga > த. உரகம்.]

உரகாதிபன் *uragādiban,* பெ.(n.) முதற்பாம்பு (ஆதிசேடன்); *ādišēša,* chief of the serpents.

[Skt. uraka+adhipa > த. உரகாதிபன்.]

உரகாரி *uragāri,* பெ.(n.) 1. கருடன்; brahminy kite. 2. மயில்; peacock.

உரகாரிவாதம் *uragāri-vādam,* பெ.(n.) ஈரலில் வளி (வாயு) சேர்ந்து நெஞ்சு, குரல் வளை முதலியவிடங்களில் வலியுண்டாகிச் சோறு செல்லாது நெஞ்சடைக்குமோர் வகை ஊதைநோய்; a disease characterised by spasmodic suffocative attacks with pain especially in the thoracic region and difficulty in swallowing food, supposed to be due to the deranged vāyu accumulated in the liver.

த.வ. நெஞ்சடைநோய்.

உரகேந்திரன் *uragēndiran,* பெ.(n.) **உரகாதிபன்** பார்க்க; see *uragādiban.*

உரசகத *urašagada,* பெ.(n.) உப்பு வாயு கலந்தது; nitrogenous.

உரசகதம் *urašagadam,* பெ.(n.) உப்பு வாயு கலந்த பொருட்கள்; nitrogenous substances or constituents.

உரசகதி *urašagadi,* பெ.(n.) உடம்பின் குருதியில் உப்புவாயு தொடர்பான பொருட்களால் ஏற்படும் நிலைமை; a condition marked by the presence of nitrogenous bodies in the blood azotemia.

உரசம் *urašam,* பெ.(n.) 1. தூய இதள் (சுத்த ரசம்); purified or cleansed mercury. 2. வாலையிட் டிறக்கிய இதள்; sublimed mercury.

உரசன் *urašan,* பெ.(n.) நெஞ்சுரமுள்ளவன்; a man of stout mind.

[Skt. uraša > த. உரசன்.] 'ன்' ஆ.பா.ஈறு.

உரசிதக்கட்டி *urašida-k-katti,* பெ.(n.) முலைக்கட்டி; mammary abscess.

[உரசிதம் + கட்டி.]

[Skt. uras > த. உரசிதம்.]

குல் → கள் → கட்டு → கட்டி = இறுகியது

உரசிதம் *urašidam,* பெ.(n.) முலை; the breast of the woman.

[Skt. uras > த. உரசிதம்.]

உரசிருகம் *uraširugam,* பெ.(n.) **உரசிதம்** பார்க்க; see *urašidam.*

உரசிலன் *urašilan,* பெ.(n.) நெஞ்சுரமுடையவன்; one having a strong chest.

உரணம் *uraṇam,* பெ.(n.) செம்மறிக் கடா; ram.

[Skt. uraṇa > த. உரணம்.]



உரணாட்சம் *uraṇātcam,* பெ.(n.) தகரை; ringworm plant.

உரணாட்சியம் *uraṇātciyam,* பெ.(n.) **உரணாட்சம்** பார்க்க; see *uraṇātcam.*

உரத்தபித்தவாதம் *uratta-pitta-vādam,* பெ.(n.) பித்தமிகுதியினால் நல்லது கெட்டதென்று அறியாதபடித் திடீரென சினமுண்டாகி அடிக்கடி சண்டையிடத் தூண்டுமோர் வகை ஊதை (வாத) நோய்; nervous disease, due to aggravated condition of bile in the system characterised by sudden anger, excitement and indiscriminate quarrel.

த.வ. சீறுநோய்.

உரத்தை *urattai,* பெ.(n.) உத்தாமணி, வயிரம்; diamond of superior quality.

உரதம் *uradam,* பெ.(n.) 1. வித்தமிழ்து; semen. 2. மாதவிடாய்; the menstrual blood. 3. சிறு பூளை; wooly caper - erna lanata alias achyranthes lanata.

உரதாரை *uratārai,* பெ.(n.) நெஞ்சாங் குழல்; the canal in the region of the thorax.

உரப்பிரம் *urappiram,* பெ.(n.) வெள்ளாடு; goat.



உரப்பிரு *urappiru,* பெ.(n.) செம்மறியாடு; ram; ewe.

உரம்பம் *urambam,* பெ.(n.) பேய்ப்புல்; wild bitter grass.

உரலாகை *uralāgai,* பெ.(n.) கரு விழி; apple of the eye.

உராகசாரசந்தனம் *urāga-šāra-šandaṉam,* பெ.(n.) நறு மண (வாசனை)முள்ள ஒரு வகைச் சந்தனக் கட்டை; a kind of sandal wood with a strong smell.

உராதரம் *urādaram,* பெ.(n.) முலை; woman's breast.

உரிசை *urišai,* பெ.(n.) 1. சுவை; taste. *"கைப்புப் புளிப்புரிசை" (சினேந். 244).* 2. தீஞ்சுவை; sweet taste.

[Skt. ruci > த. உரிசை.]

உரிசைபார்-த்தல் *urišai-pār-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. சுவைத்தல்; to try by tasting. 2. சிற்றின்பந் துய்த்தல் (அனுபவித்தல்); to enjoy or experience the sexual pleasure.

[உரிசை + பார்-,]

[Skt. ruci > த. உரிசை.]

உரிசையாயிரு-த்தல் *uricai-yā-yiru-,* 3 செ.குன்றாவி.(v.t.) நாவுக்கினிமையா யிருத்தல்; to have a good flavour, to be savoury.

[உரிசை + ஆய் + இரு-,]

[Skt. ruci > த. உரிசை.]

உரிணி *uriṇi,* பெ.(n.) கொத்துமல்லி; coriander- coriandrum sativum.

உரிதாகம் *uridāgam,* பெ.(n.) கல்லுசில், ஊடுசில்; a kind of usil.

உருக்குமிணி *urukkumiṇi,* பெ.(n.) கண்ணபெருமானின் முதன் மனைவி (பாகவத.); name of the principal wife of Krsṇa.

[Skt. rukmiṇi > த. உருக்குமிணி.]

ஒளிக்கான ஏக்கம், ஒளிமயமாக இருப்பதற்கான விருப்பம் என்னும் பொருள்படும் ruj என்னும் வேரிலிருந்து (ruj → ruk → ruknā →)rukmiṇi என்னும் சொல் உருவாகியுள்ளது (மா.வி.).

'உருக்குமிணி' யை இருக்குமணி என்று குறிப்பிடுவதும் உண்டு (அபி.சிந்.).

உருகம் *urugam,* பெ.(n.) பிறப்பு; birth.

உருசகதம் *uruša-kadam,* பெ.(n.) 1. நாம் மூச்சுவிடும் (சுவாசிக்கும்) காற்றின் மூன்று பங்காயிருக்கும் உப்புக் காற்று (வாயு); nitrogen which forms 3/4 of the air inhaled by us. 2. உப்புக் காற்று (வாயு) சேர்ந்த பொருள்; a compound containing nitrogen - nitrogenous compound.

உருசகதேந்திரியோபாதனபூதங்கள் *urušaga-tēndiri-yōpādaṉa-pūdaṅgaḷ,* பெ.(n.) உப்பு வளி (வாயு) சேர்ந்த கூட்டு முறை; nitrogenous organic compounds.

உருசகம் *urušagam,* பெ.(n.) (நாநார்த்த.) 1. மாதுளை; pomegranate. 2. விளங்கம்; elliptic cuspidate-leaved wind-berry. 3. ஆன்மணத்தி (கோரோசனை); bezoar. 4. ஆமணக்கு; castor plant. 5. கொம்மட்டி மாதளை; melon lime - citronmedica. 6. புண் (இரணம்) முதலியவற்றிக்கிடும் காரம்; caustic applied to wounds, sores etc. caustic application.

[Skt. urceka > த. உருசகம்.]

உருசி[1] *uruši,* பெ.(n.) 1. சுவை; taste. 2. இன்சுவை; good taste, relish, flavour. 3. இனிமை; pleasantness, agreableness. *'அவன் பேச்சு உருசியானது'.* 4. விருப்பம்; wish, desire. *'அவனுக்குப் படிப்பில் உருசி அதிகம்'.*

[Skt. ruci > த. உருசி.]

வடமொழியில் ஒளி, அழகு என்னும் பொருள்படும் ru என்னும் வேரிலிருந்து விரும்புவது, சுவையானது எனப் பொருள்படும் ruci என்னும் சொல் பிறந்துள்ளது (மா.வி.) என்பது பொருந்துவதன்று. சொற்பிறப்பு நோக்கில் நாவின் அடிப்படையிலான சொல்லிலிருந்துதான் சுவை தொடர்பான சொல் தோன்ற முடியும். உணர்த்தி→ ருத்தி→ருசி எனத் திரிந்து வடநாட்டில் வழக்கூன்றியது என்பது அறியத்தக்கது. தமிழில் உருசி, சுவை, இன்சுவை என்னும் பொருள்களிலேயே பெருவழக்கெய்தியுள்ளது.

உருசி[2]**-த்தல்** *uruši-,* 11 செ.கு.வி.(v.i.) சுவையாதல்; to relish, to be savoury, pleasant to the senses or mind. *'எனக்கு இக்கனி உருசிக்கிறது'.*

உருசித்தலெனும் வினைச்சொல் உருசி என்னும் பெயர்ச்சொல்லிலிருந்து பின்னாக்க முறை (back formation)யில் உருவானது.

உருசி[3]**-த்தல்** *uruši-,* 11 செ.குன்றாவி.(v.t.) 1. சுவைத்தல்; to taste, examine by the taste. *'அவன் மாங்கனியை உருசிக்கிறான்'.* 2. துய்த்தல்; to experience, as pleasure, to enjoy, as happiness. *"உள்ளத்து ருசித்து" (திருவிளை.அன்னக்.11).*

த.வ. உணர்த்தி>ருத்தி>ருசி

[Skt. ruci > த. உருசி → உருசி-,]

உருசி[4] *uruši,* பெ.(n.) 1. ஒளிக்கற்றை (நாநார்த்த.); ray of light. 2. ஒளி (நாநார்த்த.); brilliance. 3. **உருசியாதனம்** பார்க்க; see *uruši-y-ādaṉam.* *"மயிறண்டுருசி" (தத்துவப். 107).*

[Skt. ruci > த. உருசி.]

உருசிகரம் *urušikaram,* பெ.(n.) இன்சுவையானது, இனிமையானது; that which is delicious savoury.

[Skt. ruci-kara > த. உருசிகரம்.]

உருசிகாட்டு-தல் *uruši-kāṭṭu,* 11 செ.கு.வி.(v.i.) இனிப்புக் காட்டுதல்; to allure by baits or dainties, cause one to engage in a pursuit by giving a gratifying foretaste.

[உருசி + காட்டு-]

[Skt. ruci > த. உருசி. காண் (த.வி.) – காட்டு (பி.வி.).]

உருசிகாண்(ணு)-தல் *uruši-kāṇ(ṇu)-,* 12 செ.கு.வி.(v.i.) சுவையறிதல்; to get a taste, know the flavour. *'உருசி கண்ட பூனை'.*

[உருசி + காண்-,]

[Skt. ruci > த. உருசி.]

உருசிதட்டு-தல் *uruši-taṭṭu-,* 15 செ.கு.வி. (v.i.) சுவை தோன்றுதல்; to be sweet, pleasant to the taste.

[உருசி + தட்டு-,]

உருசிபார்-த்தல் *urušipār-,* 4 செ.குன்றாவி. (v.t.) **உருசிகாண்(ணு)-தல்** பார்க்க; see *urušikāṇ.*

[உருசி + பார்-,]

[Skt. ruci > த. உருசி.]

உருசியம் *urušiyam,* பெ.(n.) 1. காட்டா; a wild cow. 2. எருமை போன்ற மயிரடர்ந்த மான்; a very large kind of deer resembling a

buffalo with hair grown thick or bushy. a kind of yawk. 3. ஒரு வகைக் குட்டம்; a kind of leprosy.

உருசியாதனம் *uruši-y-ādaṉam,* பெ.(n.) ஓகவிருக்கை வகை (தத்துவப். 107. உரை); (Saiva.) a yōgic posture.

[உருசி + ஆதனம்.]

*[**Skt.** ruci> த. உருசி.]*

*[த. ஆதனம் > **Skt.** āsana.]*

உருசு[1] *urušu,* பெ.(n.) 1. கரி, மெய் அறுதிச் சான்று; proof. 2. கையெழுத்து; signature.

*[**Skt.** rujū > த. உருசு.]*

உருசு[2] *urušu,* பெ.(n.) திருவிழா; festival. *'நாகூர் உருசுக்குப் போக வேண்டும்'* (முகமதி.).

*[**Ar.** urus > த. உருசு.]*

உருசுச்செய்-தல் *urušu-c-cey-,* 11 செ.குன்றாவி.(v.t.) மெய்ப்பித்தல்; to prove or establish by evidence, to bringhome, as a change or accusation.

[உருசு + செய்-,]

*[**U.** ruju > த. உருசு.]*

உருசுப்படுத்து-தல் *urušu-p-paḍuthu-,* 5 செ.குன்றாவி.(v.t.) **உருசுச்செய்-தல்** பார்க்க; see *urušu-c-cey-.*

[உருசு + படு-,]

*[**U.** ruju > த. உருசு.]*

உருசுப்பண்ணு-தல் *urušu-p-paṇṇu-,* 12 செ.குன்றாவி.(v.t.) **உருசுச்செய்-தல்** பார்க்க; see *urušu-c-cey-.*

த.வ. மெய்ப்பித்தல்.

[உருசு + பண்ணு-,]

*[**U.** ruju > த. உருசு.]*

உருசுப்பொறுப்பு *urušu-p-poṟuppu,* பெ.(n.) உண்மையெனக் காட்டவேண்டிய பொறுப்பு (ஈச்சுர நிச்சயம், 38); burden of proof.

[உருசு + பொறுப்பு.]

*[**U.** ruju > த. உருசு.]*

உருசுப்போடு-தல் *urušu-p-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) கையெழுத்துப் போடுதல்; to affix one's signature.

[உருசு + போடு-,]

*[**U.** ruju > த. உருசு.]*

உருசை *urušai,* பெ.(n.) இன்சுவை; relish, flavour. *"நாக்குக் கதியு ருசை நல்கும்"* *(பதார்த்த. 801).*

*[**Skt.** ruci > த. உருசி > உருசை.]*

உருட்சம் *uruṭcam,* பெ.(n.) மொந்தன் வாழைக் கிழங்கு; tuber of kuntela plantain.

உருட்சணசிகிச்சை *uruṭcaṇa-cigiṭcai,* பெ.(n.) கோழை முதலியவற்றை அறுத்துத் தள்ளி, அந்தந்த வுறுப்புகளுக்கும், தாதுக்களுக்கும் ஊட்டம் (போஷணை) உண்டாக்கு முறை; a form of treatment with tonic, which braces up every organ and increases the tone of the nervous system by completely removing the phlegm and the watery mucous from the lungs - tonic-treatment

உருட்சை *uruṭcai,* பெ.(n.) வாழைக்கிழங்கு; the root of the plantain tree.

உருட்டா *uruṭṭā,* பெ.(n.) பகட்டுப் பேச்சு (இடம்ப வார்த்தை); vain boast, rodomontade. *'அவன் உருட்டா அடிக்கிறவன்'.*

*[**U.** ulta > உல்டா > த. உருட்டா.]*

உருட்டால் *uruṭṭāl,* பெ.(n.) **உருட்டா** பார்க்க; see *uruṭṭā. 'ஏன் உருட்டாலடிக்கிறாய்'?*

*[**Skt.** ulṭā > த. உருட்டா > உருட்டால்.]*

உருடகம் *uruḍagam,* பெ.(n.) கருநாவி; black aconite.

உருத்தகம் *uruttagam,* பெ.(n.) 1. ஒருவகை இசிவு (சன்னி) நோய்; a kind of apolexy. 2. ஒருவகை இசிவு நோய் (உருத்தாக சன்னி

பாத சுரம்); typhoid fever characterised by excessive pain in the bodily organ.

உருத்தகுதம் *uruttagudam,* பெ.(n.) 1. ஒரு வகை எருவாய் (குத) நோய்; a disease of the anus. 2. எரு (ஆசன) வாயிலேற்படும் வலியுள்ள ஒரு வகைக் கட்டி (விரணம்); a painful linear ulcer at the margin of the anus.

உருத்திதம் *uruttidam,* பெ.(n.) (அக.நி.) 1. ஊதியம்; profit, wages. 2. உறு பொருள்; property. 3. வளர்ச்சி; increase.

உருத்திரகிரந்தி *uruttira-kirandi,* பெ.(n.) பாலக (மூலாதார)மும் அகட்டக (சுவாதிட்டான)மும் (ஆ.நி.); mystical circles, in ancient Hindu physiology, of *mūlātāram* and *cuvādiṭṭāṉam.*

[Skt. uruṭṭira+kiranti > த. உருத்திரகிரந்தி.]

உருத்திரபூமி *uruttira-pūmi,* பெ.(n.) சுடுகாடு; burning-ground.

[Skt. rudra-bhūmi > த. உருத்திரபூமி.]

உருத்திரம் *uruttiram,* பெ.(n.) பெருஞ்சினம்; anger.

[Skt. rudra > த. உருத்திரம்.]

உருத்திரன் *uruttiraṉ,* பெ.(n.) சிவன்; God *Śivaṉ.*

உருத்திராக்கம் *uruttirākkam,* பெ.(n.) அக்கமணி; rudrakṣa bead.

த.வ. கடவுண்மணி, சிவமணி, தெய்வமணி, நாயகமணி, கண்மணி, கண்டம், கண்டி, கண்டிகை முண்மணி.

[Skt. rudrakṣa > த. உருத்திராக்கம்.]

அக்கமணி எனப் பொருள்படும் கண்மணி என்னும் கூட்டுச் சொல்லைக் கண் + மணி என்று தவறாகப் பிரித்து, கண் என்பதை அட்ச என்று திரித்து வடமொழி வழி ருத்திர+அக்ஷ (சிவன் கண்ணினின்று தோன்றுயது) எனப் பெயர் பெற்றதாகக் காட்டியுள்ளனர். அக்கமணியில் வரும் அக்கம் முண்முனை, எனப் பொருள்படுவதுபோல் கண்மணியில் வரும் கள் என்பதற்கும் முள் என்பது பொருள்.

உருதம் *urudam,* பெ.(n.) விலங்கு (மிருகம்) பறவை முதலியவற்றின் ஒலி; the noise made by animals and birds in general.

உருதம்பண்ணு-தல் *urudam-paṇṇu-,* 12 செ.குன்றாவி.(v.t.) பலுக்குதல், ஓதுதல் (உச்சரித்தல்); to pronounce, utter, articulate, to chant. *"வேதத்தையுருதம் பண்ணு நலத்தாலும்" (திருக்காலித். 4, 5, 49).*

[உருதம் + பண்ணு-,]

உருது *urudu,* பெ.(n.) 1. படை (சேனை); an army (Muham.). 2. பாசறை; military encampment (Muham.). 3. வட இந்திய மொழிகளில் ஒன்று; lit., the camp, applied to the Hindustani language which is spoken commonly in north India, and which is a mixture of Sanskrit, Persian and Arabic.

[Ar. urdu > த. உருது.]

உருபசொரூபம் *uruba-šorūbam,* பெ.(n.) காண்குறும் காட்சிப் பொருள்; the object of sight.

*[உரு → உருவு → உருவம் → **Skt.** rūpa → த. உருபம்.]*

[Skt. sva-rūpa > த. சொரூபம்.]

உருபட்சா *urubaṭcā,* பெ.(n.) பெருங்காயம்; asafoetida.

உருபதன்மாத்திரை *urupadaṉ-māttirai,* பெ.(n.) ஐந்து (பஞ்ச) மாத்திரையிலொன்று அதாவது ஐம் (பஞ்ச) பூத மூலத்திலொன்று; one of the rudimentary elements of the five senses i.e. the primitive element of sight.

உருபம் *urubam,* பெ.(n.) 1. உருவம்; form, shape. 2. அழகு; beauty. 3. நிழற்படம் (பிரதிமை); image. 4. நிறம்; colour. 5. நிலை; posture. 6. சாயல்; features.

[உரு → உருவு → உருவம் → Skt. rūpa → த. உருவம்.]

உருபுகம் *urupugam,* பெ.(n.) ஆமணக்கு; castor-plant.

உரும்பரம்[1] *urumbaram,* பெ.(n.) செம்பு (வின்.); copper.

[Skt. udumbara > த. உரும்பரம்.]

உரும்பரம்[2] *urumbaram,* பெ.(n.) 1. பெருங்காயம் (வின்.); asafoetida. 2. பாம்பு (வின்.); serpent.

உருமால் *urumāl,* பெ.(n.) 1. தலைப்பாகை; turban. 2. மேற்துண்டு; upper cloth, fine shawl.

[U. rūmāl > த. உருமால்.]



உருமாலை *urumālai,* பெ.(n.) **உருமால்** பார்க்க; see *urumāl.*

[U. rūmāl > த. உருமால் > உருமாலை.]

உருமிச்சோம்பு *urumi-c-cōmbu,* பெ.(n.) ஒரு வகைச் சோம்பு; a kind of sweet fennel seed.

உருமியம் *urumiyam,* பெ.(n.) பெருச்சாளி; bandicoot.



உருரசம் *uru-rašam,* பெ.(n.) இதளியம் (பாதரசம்) (மூ.அ.); mercury, quick silver.

[Skt. uru+rašam > த. உருரசம்.]

உருவசி *uruvaši,* பெ.(n.) ஊர்வசி, ஆடற்றிறத்து அரமகள்; *ūruvaši,* a nymph, celebrated for her superior skill in dancing. *"உருவசி யென்னும் பேரா னொப்பிலா வழகு வாய்ந்த திருநிகர் மங்கை" (மச்சபு. அகத்தியர்பு. 17).*

[Skt. urvasi > த. உருவசி.]

உரூட்சம் *urūṭcam,* பெ.(n.) மொந்தன் வாழைக் கிழங்கு (தைலவ. தைல. 35); tuber of a species of plantain tree.

[Skt. rūksā > த. உரூட்சம்.]

உரூடி *urūḍi,* பெ.(n.) 1. இடுகுறி; word used in its conventional sense, arbitrary name. 2. செய்யுஞ் செயல் கண்டு காரணத்தை உறுதிப் படுத்துதல் (நிச்சயிக்கை); inference of the cause from the effect. *"ஒலிகெழு முரூடியானும்" (ஞானா. 15).*

[Skt. rūḍhi > த. உரூடி.]

உரூப்பியம் *urūppiyam,* பெ.(n.) 1. பொன்; gold. 2. வெள்ளிக்காசு (நாணயம்); silver coin, rupee. 3. அழகு (வின்.); that which is handsome, beautiful. 4. வெள்ளை; white.

[Skt. rūpya > த. உரூப்பியம்]

உரூபகத்தாளம் *urūbaga-t-tāḷam,* பெ.(n.) தாள மேழனுள் ஒன்று (ரூபகதாளம்) (பரத. தாள. 5, உரை); a variety of time-measure, one of the seven *tāḷam.*

துருவதாளம், அடதாளம், ஏகதாளம், திரிபுடைதாளம், ரூபகதாளம், சம்பைதாளம், மட்டியதாளம் என்பன எழுவகைத் தாளங்கள்.

[உரூபக(ம்) + தாளம்]

[உரு → உருவு → உருவகம் → Skt. rūpaka > த. உரூபகம் (ரூபக). தாள் → தாளம்.]

உரூபகம் *urūbagam,* பெ.(n.) 1. உருவகம்; metaphor. 2. **உரூபகத்தாளம்** பார்க்க (பரத. தா. 5); see *urūbaga-t-tāḷam.*

[உரு → உருவு → உருவகம் → Skt. rūpaka > த. உரூபகம்.]

உரூபகாரப்படுத்து-தல் *urūpa-kāra-p-paḍuttu-,* 5 செ.குன்றாவி.(v.t.) மெய்ப் பித்தல் (யாழ்.அக.); to prove, demonstrate.

[உரூபகாரம் + படுத்து-,]

[Skt. rūpa+kāra > த. உரூபகாரம். படு → படுத்து-,]

உரூபகாரம் *urūba-kāram,* பெ.(n.) சான்று (அத்தாட்சி) (யாழ்.அக.); proof, demonstration.

[Skt. rūpakāra > த. உரூபகாரம்.]

உரூபம் *urūbam,* பெ.(n.) உருவம் (மணிமே. 6, 177); form, shape.

உரு = தோற்றம், வடிவம், உடல், படிமை, தெய்வச்சிலை. ஓவியம், ஓவிய வேலையான பூத்தொழில், வடிவுள்ள தனிப்பொருள். உரு → உருவு → உருவம். (மு.தா.37).

உருவம் > Skt. rūpa > த. உரூபம். தமிழில் உருக்கொள்ளுதல் என்னும் வினையிலிருந்து வளர்ந்த வடிவமாக உருவம் (உருவு போன்றன) இருப்பதும் வடமொழியில் *rūpayati* என்று பெயரிலிருந்து வினை உருவாகியிருப்பதும் உருவம் என்னும் சொல் தமிழில் இயல்பாய் வளர்ந்து வந்துள்ளமையைக் காட்டுகின்றன.

உரூபா *urūbā,* பெ.(n.) பணம்; money. *'எனக்கு பத்து உரூபா வேண்டும்'.*

[உருவா > Skt. rūpā > த. ரூபா → உரூபா.]

உரூபா-த்தல் *urūbi-,* 11 செ.குன்றாவி.(v.t.) உறுதிப்படுத்துதல் (ருஜுப்படுத்தல்); to prove.

[Skt. rūpa > த. உரூபி-,]

உரூபிகரம் *urūbigaram,* பெ.(n.) திருவுருவேற்கை (யாழ்.அக.); visible. manifestation, appearance, as of a deity.

[த. உருவம் > Skt. rūpi+kara > ரூபிகரம் > உருபீகரம்.]

உரூபிகரி[1]-த்தல் *urūbi-kari-,* 11 செ.குன்றாவி.(v.t.) நிறுவுதல், மெய்ப்பித்தல் (உரூபித்தல்); to prove.

[Skt. rūpi-kar > த. உரூபிகரி-,]

உரூபிகரி[2]-த்தல் *urūbi-kari-,* 11 செ.கு.வி.(v.i.) கடவுளாகத் தோற்றந் தருதல் (யாழ்.அக.); to appear, as a deity, to become manifest, asume a shape.

[Skt. rūpi-kar > த. உரூபிகரி-,]

உரூபிகை *urūbigai,* பெ.(n.) வெள்ளெருக்கு (சங்.அக.); white madder.

உரொக்கம் *urokkam,* பெ.(n.) அணியமாக (தயாராக) விருக்கும் பணம் (யாழ்.); cash, ready money.

[U. rōk > த. ரொக்கம் > உரொக்கம்]

உரொட்டி *uroṭṭi,* பெ.(n.) கோதுமையாற் செய்த அடை; bread, an ariticle of food prepared by backing wheat flour.

த.வ. அடை.

[U. rōṭi > த. ரொட்டி → உரொட்டி.]

உரோ—தல் *urō-,* 8 செ.கு.வி.(v.i.) அழுதல்; to cry, to weep.

உரோகக்கினம் *urōga-k-kiṉam,* பெ.(n.) உரோகக்கினம் பார்க்க; see *urōga-k-kiṉam.*

உரோககக்கினம் *urōga-k-kiṉam,* பெ.(n.) நோய் தீர்க்கும் மருந்து; medicine or any substance that cures diseases.

உரோககரம் *urōgakaram,* பெ.(n.) நோய்களைக் கண்டித்தல்; the art of healing diseases, therapeuties.

உரோககரி *urōgakari,* பெ.(n.) நோய்களைக் கண்டிக்கும் மருந்து; therapeutic agent.

உரோகசஞ்சீவி *urōga-sañjīvi,* பெ.(n.) பெரும் ஊதை (மகாவாத) நோய்கள், இசிவுக் காய்ச்சல் (சன்னி பாத சுரம்) கொடி எலும்புருக்கி (காசம்) முதலிய நோய்களைத் தீர்த்து உயிர்தரும் ஒருவகை எண்ணெய் (தைலம்); a medicated oil capable of restoring life by rooting out all grave diseases such as rheumatism, typhoid fever, lung diseases etc., from the system.

த.வ. நோயகற்றி.

உரோகசாந்தகன் *urōga-šandagaṉ,* பெ.(n.) 1. நோயை மட்டு (சாந்த)ப் படுத்துபவன்; one who alleviates pain and cures diseases. 2. மருத்துவன்; a doctor.

உரோகசிரோட்டம் *urōga-cirōṭṭam,* பெ.(n.) காய்ச்சல்; fever as the principal one of all disease.

உரோகணி *urōgaṇi,* பெ.(n.) 1. **உரோகிணி** பார்க்க; see *urōgiṇi.* 2. ஒருவகை (அரோகிணி)க்கடுக்காய் (பாலவா. 171); a kind of chebulic myrobalan.

[Skt. rōhiṇi > த. உரோகணி.]

உரோகத்தன் *urōgattaṉ,* பெ.(n.) நோயாளி; a sickly man, a patient.

உரோகதம் *urōgadam,* பெ.(n.) மார்பு வலி; pain in the chest.

உரோகதி *urōgadi,* பெ.(n.) நாய் (யாழ்.அக.); dog.

உரோகநிதானம் *urōganidāṉam,* பெ.(n.) 1. நோயை ஆராய்தல்; diagnosis of diseases by their distinctive marks or symptoms. 2. நோயின் கூறுபாடுகளையும், அதன் காரணம், குறி முதலியவற்றையும் கூறும் குண நூல் (வாகடம்); a science relating to the nature of diseases and the changes caused by them - pathology.

உரோகநீருறை *urōga-nīruṟai,* பெ.(n.) பிணி நீர்ப்பை; a sac containing a liquid or a semi-solid-cyst.

[உரோக + நீருறை.]

[Skt. rōga > த. ரோக > உரோகம்.]

உரோகராசம் *urōga-rāšam,* பெ.(n.) நோய்களுக்கரசன், எலும்புருக்கி நோய் (சயரோகம்); the king of diseases namely consumption.

[Skt. rōga+rāja > த. ரோகராசன் > ரோகராசம்.]

[த. அரசன் > Skt. rāja > த. ராச.]

உரோகம்[1] *urōgam,* பெ.(n.) நோய் (பிங்.); disease.

[Skt. rōga > த. ரோகம் > உரோகம்.]

உரோகம்[2] *urōgam,* பெ.(n.) பூவரும்பு; bud.

உரோகாதம் *urōgādam,* பெ.(n.) மார் துடிப்பு; palpitation of the heart.

உரோகி *urōgi,* பெ.(n.) 1. நோயாளி; diseased person. 2. செம்மரம்; red wood.

[Skt. rōhin > த. ரோகி > உரோகி.]

உரோகிகாரி *urōgikāri,* பெ.(n.) 1. நோய்களைத் தீர்ப்பவன்; one who cures diseases. 2. மருத்துவன்; physician, doctor.

[உரோகி + காரி.]

[Skt. rōhi > த. உரோகி.]

உரோகிடம் *urōgidam,* பெ.(n.) காவட்டம் புல் (நாநார்த்த.); citronella grass.

[Skt. rōhisa > த. உரோகிடம்.]

உரோகிணி[1] *urōgiṇi,* பெ.(n.) 1. ஒரு விண்மீன் (நட்சத்திரம்) (திவா.); the 4th naksatra, hyades, part of Taurus. 2. பலராமன் தாய் (பாகவத. 1,1,36); one of the wives of Vasudēva and the mother of Balarāma. 3. ஒன்பது அகவை நிறைபெதும்பை (வின்.); girl of nine years. 4. கடுகுரோகிணி; purgative drug called christmas rose. 5. பீதரோகிணி (மலை.); stinking hellebore. 6. கடுக்காய்; Indian gall-nut or chebulic myrobalan. 7. ஓமை; mango tree. 8. சிறுகாஞ்சொறி; small climbing nettle.

[Skt. rōhiṇi > த. உரோகிணி.]

உரோகிணி[2] *urōgiṇi,* பெ.(n.) பெருங்குமிழ் (நாநார்த்த.); coomteak.

[Skt. rōhiṇi > த. உரோகிணி.]

உரோகிணிதனயன் *urōgiṇi-taṉayaṉ,* பெ.(n.) பலராமன் (பிங்.): Balarāma, the son of Rohiṇi.

[Skt. rōhiṇitanaya > த. உரோகிணிதனயன்.]

உரோகிதப்பட்டை *urōgida-p-paṭṭai,* பெ.(n.) வெளிப்புறம் சிறிது கருப்பாயும், உட்புறம் சிறிது சிவப்பாயும் மருந்துக்குதவுவதுமான துவர்ப்புடைச் செம்மரப்பட்டை; the bark of red wood, is used as a medicinal astringment, is of a black brownish colour externally and the substance inside, is of a deep reddish brown colour.

[உரோகிதம் + பட்டை.]

[Skt. rōhita > த. உரோகிதம்.]

உரோகிதம் *urōgidam,* பெ.(n.) (நாநார்த்த.) 1. செங்கயல்; red carp. 2. குங்குமம்; saffron. 3. சிவப்பு; redness.

[Skt. rōhita > த. உரோகிதம்.]

உரோகிதாசுவம் *urōgidāśuvam,* பெ.(n.) நெருப்பு; fire.

உரோகிநேயம் *urōginēyam,* பெ.(n.) கற்றுளசி; stone-basil.

உரோகிரகம் *urōgiragam,* பெ.(n.) மார்புப் பிடிப்பு; chest seizure, inflammation of the pleura.

உரோகீசம் *urōkīsam,* பெ.(n.) கலைமான்; the male red deer, stag.



உரோங்கல் *urōṅgal,* பெ.(n.) உலக்கை (பிங்.); pestle.

த.வ. இடிமரம்.

தெ. ரோகலி.

உரோசம் *urōśam,* பெ.(n.) 1. சினம்; anger, fury. 2. மட்டு மீறிய கூருணர்வு மானம்; keen sensitiveness.

[Skt. rōsa > த. உரோசம்.]

உரோசலரோகம் *urōśala-rōgam,* பெ.(n.) நெஞ்சறைக்குள் நீர் சேர்வதாலுண் டாகுமோர் வகைக் குத்தல் நோய்; the presence of an effused fluid in the pleural cavity due to venous obstruction and it is marked by pricking pain. hydrothorax.

உரோசனக்களிம்பு *urōśaṉa-k-kaḷimbu,* பெ.(n.) உரோசனம் என்னும் ஒரு வகைப் பிசினைக் கொண்டு செய்யுமோர் களிம்பு; a medicated preparation with resin as an ingredient, applied externally.

[உரோசனம் + களிம்பு.]

[**Skt.** *rōcana* > த. ரோசனம் > உரோசனம்.]

உரோசனகம் *urōšaṉagam,* பெ.(n.) எலுமிச்சை; lime.

உரோசனம்[1] *urōšaṉam,* பெ.(n.) **உரோசனை** பார்க்க; see *urōšaṉai.*

[**Skt.** *rōcana* > த. உரோசனம்.]

உரோசனம்[2] *urōšaṉam,* பெ.(n.) 1. முள்ளிலவு (மலை.); thorny cotton tree. 2. ஒரு வகைப் பிசின்; a resin.

[**Skt.** *rōcana* > த. உரோசனம்.]

உரோசனமூங்கில் *urōšaṉa-mūṅgil,* பெ.(n.) கல் மூங்கில்; hard bamboo.

உரோசனி[1] *urōšaṉi,* பெ.(n.) 1. செந்தாமரை (மலை.); red lotus. 2. ஆன்மணத்தி (கோரோசனை); bezoar. 3. கடுகு (கருப்பு); black mustard. 4. சிறு காஞ்சொறி; small climbing nettle. 5. மேற்பூச்சு மருந்தாகப் பயன்படும் கற்பாசி; licken growing upon rocks which is used in medicine as a liniment.

[**Skt.** *rōcani* > த. உரோசனி.]

உரோசனி[2] *urōšaṉi,* பெ.(n.) **உரோசனை**[2] (மலை.) பார்க்க; see *urōšaṉai.*

உரோசனியம் *urōšaṉiyam,* பெ.(n.) கடுகு; mustard.

உரோசனை[1] *urōšaṉai,* பெ.(n.) 1. ஆன்மணத்தி (கோரோசனை); a billiary calculus in a cow-bezoor. *"உரோசனை நிறத்த பொற்பரியே" (திருவிளை. நரிபரி. 109).* 2. ஒரு வகைப் பித்தம்; bile, yellow in colour resembling bezoar. 3. மூங்கிலுப்பு; bamboo salt. 4. மகிடரோசனை முதலிய மணத்தி (ரோசனை); concretions in general found in the intestines of some animals especially ruminants like ox etc.

[**Skt.** *rōcanā* > த. உரோசனை.]

உரோசனை[2] *urōšaṉai,* பெ.(n.) கடுகு (வின்.); mustard.

உரோசனை[3] *urōšaṉai,* பெ.(n.) செங்கழுநீர் (நாநார்த்த.); red water lily.

[**Skt.** *rōcana* > த. உரோசனை.]

உரோசா *urōšā,* பெ.(n.) முளரி (பூச்செடி); rose.

[**L.** *rosa* > த. உரோசா.]

உரோசி-த்தல் *urōši-,* 11 செ.கு.வி.(v.i.) 1. நாணுதல்; to exhibit a feeling of shyness of delicacy. 2. சுணை கொள்ளுதல்; to be spirited, sensitive to indignity.

[**Skt.** *rōsa* > த. உரோசி-,]

உரோசி *urōši,* பெ.(n.) பொழுது வணங்கி (சூரிய காந்தி) மலர்; sun flower.

[**Skt.** *rōci* > த. உரோசி.]



உரோசிகாரம் *urōšikāram,* பெ.(n.) பேய்ப்புல்; a poisonous red grass.

உரோசினி *urōšiṉi,* பெ.(n.) சிறுகாஞ்சொறி; small climbing nettle.

உரோடணம் *urōḍaṇam,* பெ.(n.) 1. இதளியம் (நாநார்த்த.); quick silver. 2. உவர்நிலம்; saline tract.

[**Skt.** *rōṣāṇa* > த. உரோடணம்.]

உரோடம் *urōḍam,* பெ.(n.) சினம்; anger. *"உரோடமொன்று மிலோங்கண்டாய்" (திவ். நாய்ச்.2,6).*

[**Skt.** *rōṣa* > த. உரோடம்.]

உரோணி *urōṇi,* பெ.(n.) 1. **உரோகிணி** பார்க்க; see *urōgiṉi.* *"வெண்மதி...... உரோணியோ டொளித்த தொத்ததே" (சீவக. 198).*

2. தொண்டை நோய் வகை (திருமந். 263); inflammation of the throat.

[Skt. rōhiṇi > த. உரோணி.]

உரோதகம் *urōdagam,* பெ.(n.) **உரோசலரோகம்** பார்க்க; see *urōsala-rōgam.*

[Skt. rōdhaka > த. உரோதகம்.]

உரோத்தபத்திரம் *urōtta-pattiram,* பெ.(n.) நஞ்சுப்பாலை; a poisonous milky plant - a kind of mimusops.

உரோதம் *urōdam,* பெ.(n.) 1. நீர்க்கரை; bank, shore. *"சீதரோதக் குருதித் திரையொரீஇ" (கம்பரா. இராவணன் சோ. 11).* 2. அணை; dam.

[Skt. rōdha > த. உரோதம்.]

உரோதனம்[1] *urōdaṉam,* பெ.(n.) அழுகை (திவா.); weeping, crying, lamentation.

[Skt. rōdana > த. உரோதனம்.]

உரோதனம்[2] *urōdaṉam,* பெ.(n.) தடை; obstruction.

[Skt. rōdhana > த. உரோதனம்.]

உரோதனி *urōdaṉi,* பெ.(n.) சிறுகாஞ்சொறி (மலை.); small climbing nettle.

[Skt. rōdaṉi > த. உரோதனி.]

உரோதனை *urōdaṉai,* பெ.(n.) 1. தொந்தரை; trouble, annoyance. 2. **உரோதனம்** பார்க்க; see *urōdaṉam.*

[Skt. rōdana > த. உரோதனை.]

உரோதி-த்தல் *urōdi-,* 11 செ.கு.வி.(v.i.) அழுதல்; to cry, bewail. *"உயிர்களெவற் றினையும் .... உரோதிப்பிப்பாய்" (திருக்காளத். பு. 5, 48).*

[Skt. rud > த. உரோதி-,]

ru என்னும் மூலத்திலிருந்து பிறந்த rud என்னும் வடசொல் அழுதல், அழுகை என்று முறையே வினை, பெயர் ஆகிய இருவகையிலும் செயல்படுகிறது (மா.வி.).

உரோபந்தனம் *urōbandaṉam,* பெ.(n.) மார்புக்கட்டு; a bandage round the chest.

உர் → உறு = மிக்க உறுதி. உர் → உரம் = வலிமை, நிலத்திற்கு அல்லது பயிருக்கு வலிமைதரும் எரு. உடம்பில் வலிய உறுப்பான மார்பு.

[த. உரம் > Skt. uras, uro > த. உரோ.]

உரோபந்திகை *urōbandigai,* பெ.(n.) காசித்தும்பை; balsam flower, snapweed.

உரோபம் *urōbam,* பெ.(n.) அம்பு (நாநார்த்த.); arrow.

[Skt. rōpa > த. உரோபம்.]

rub என்னும் மூலத்திலிருந்து பிறந்த rōpa என்னும் சொல்லுக்கு மேலெழுப்பும் செயற்பாடு, நிலைபெறச் செய்தல், நடுதல், பொருத்துதல் என்னும் முதற்பொருள்களும் அம்பு, பிளவு, துளை முதலிய வழிப் பொருள்களும் உள்ளன (மா.வி.). இவற்றுள் அம்பு என்னும் பொருள் மட்டும் தமிழில் வழக்கூன்றியுள்ளது.

உரோமக்கட்டி *urōma-k-kaṭṭi,* பெ.(n.) வயிற்றினில் மயிர் போய்த் தங்குவதா லேற்படும் கட்டி; a concretion in the stomach due to the accumulation of hair - trichobezoar.

[உரோமம் + கட்டி.]

[Skt. urōman > த. உரோமம்.]

கள் → கட்டி.

உரோமக்கட்டு *urōma-k-kaṭṭu,* பெ.(n.) புறமயிரடர்த்தி (வின்.); hair thick-set on the body.

த.வ. நிறைமயிர்.

[உரோமம் + கட்டு.]

[Skt. rōman > த. உரோமம்.]

கள் → கட்டு = போர்க்களம், ஒரு கொள்கை பற்றிய கூட்டம், மரமடர்ந்த காடு. கள் → கண → கணம் = கூட்டம், படைப்பகுதி. கள் → கட்டு. கட்டுதல் = சேர்த்தல், பிணித்தல், திரள்தல்.

உரோமக்கழலை *urōma-k-kaḻalai,* பெ.(n.) மயிர்க் கால்களுக்கேற்படும் கழலைக் கட்டி; a tumour of hair - follicles.

[உரோமம் + கழலை.]

[Skt. urōman > த. உரோமம்.]

உரோமக்கால் *urōma-k-kāl,* பெ.(n.) மயிர்த் துளை; hair follicles.

[உரோமம் + கால்.]

***[Skt.** rōman > **த.** உரோமம்.]*

உரோமக்கால்ரோகம் *urōma-k-kāl-rōgam,* பெ.(n.) மயிர்க்கால்களுக் குண்டாகும் நோய்; disease of the hair follicles.

[உரோகம் + கால் + ரோகம்.]

***[Skt.** rōman > **த.** உரோமம். **Skt.** rōha > **த.** ரோகம்.]*

உரோமக்கிழங்கு *urōma-k-kiḻaṅgu,* பெ.(n.) வசம்பு; sweet flag.

[உரோமம் + கிழங்கு.]

***[Skt.** rōman > **த.** உரோமம்.]*

உரோமக்குணக்கு *urōma-k-kuṇakku,* பெ.(n.) உள் வளைந்த மயிர்; a condition of ingrowing hairs about an orifice or of ingrowing eye lashes trichiais.

[உரோமம் + குணக்கு.]

***[Skt.** rōman > **த.** உரோமம்.]*

குள் → குண → குணகு → குணக்கு.

உரோமக்குறடு *urōma-k-kuṟaḍu,* பெ.(n.) மயிரைப் பிடுங்குவதற்காகப் பயன்படுத்தும் குறடு அல்லது சாமணம்; tweezers for pulling out hairs - tricholabis.

[உரோமம் + குறடு.]

***[Skt.** urōman > **த.** உரோமம்.]*



உரோமக்கூச்சம் *urōma-k-kūccam,* பெ.(n.) மயிரைத் தொடவுண்டாம் கூச்சம்; the sense which one perceives when the hairs of the skin are touched, hair sensibility, *Trichoesthesia.*

[உரோமம் + கூச்சம்.]

***[Skt.** rōman > **த.** உரோமம்.]*

கூசு → கூச்சம்.

*[**த.** கூச்சம் > **Skt.** guccha.]*

உரோமகூபம் *urōma-kūbam,* பெ.(n.) மயிர்ச்சிலிர்ப்பு; horripilation, the standing on end of the hair through emotion. *"உகந்தெதிர் விம்மியுரோம கூபங்களாய்" (திவ். பெரியாழ். 5, 1, 7).*

***[Skt.** rōman+kūpa > **த.** உரோமகூபம்.]*

உரோமக்கேடு *urōma-k-kēḍu,* பெ.(n.) மயிர்க் கால்களுக்குக் கெடுதியேற்பட்டு மயிர் முறிதல்; an atrophied condition of the hair-bulbs, leading to brittleness of hair - trichatrophia.

[உரோமம் + கேடு.]

***[Skt.** rōman > **த.** உரோமம்.]*

கெடு → கேடு.

உரோமக்கொட்டு *urōma-k-koṭṭu,* பெ.(n.) தலைமயிர் உதிர்தல்; failing of the hair through affections of the scalp or through some enfeebled condition of health, rapid loss of hair, *Trichorrca.*

[உரோமம் + கொட்டு.]

***[Skt.** rōman > **த.** உரோமம்.]*

உரோமகக்கவணம் *urōmaga-k-kavaṇam,* பெ.(n.) மயிர்க்கூச்சம்; a sensation in which hairs stand on end.

[உரோமம் + கவணம்.]

***[Skt.** rōman > **த.** உரோமன்.]*

உரோமகம் *urōmagam,* பெ.(n.) 1. இராச புதனத்தில், சாம்பார் ஏரியில் விளையும் சாம்பரியென்னும் ஓர் உயர்தரமான வுப்பு; the best and the purest of evaporated salts,

obtained from sambhar lake in Rajputana. 2. நால்வகைக் காந்தகற்களுளொன்று; one of the four kinds of load stones.

உரோமகி *urōmagi*, பெ.(n.) முதியார் கூந்தல்; a plant (un identified) c.f. Drowpady's hair.

த.வ. அம்மையார் கூந்தல்.

உரோமகுரு *urōmakuru*, பெ.(n.) **உரோமகுருபீடம்** பார்க்க; see *urōma-kuru-pīḍam*.

உரோமகுருபீடம் *urōmakuru-pīḍam*, பெ.(n.) பிண்டம்; foetus in the womb.

உரோமங்கொள்ளல் *urōmaṅ-koḷḷal*, பெ.(n.) 1. மயிருண்ணல்; the practice of eating hair, hair eating - trichophagy. 2. மயிர் வளர்தல்; growing of hair.

[உரோமம் + கொள்ளல்.] 'அல்' தொ.பெ.ஈறு.

[Skt. rōman > த. உரோமம்]

கொள் → கொள்ளல்.

உரோமச்சங்கு *urōma-c-caṅgu*, பெ.(n.) முட்சங்கு; chank or conch shell with thorn like points.

[உரோமம் + சங்கு.]

[Skt. rōman > த. உரோமம்]

[த. சங்கு > Skt. saṅkh]



உரோமச்சல்லடை *urōma-c-callaḍai*, பெ.(n.) மயிர்த்துளை; pores of the skin through which hairs shoot out.

[உரோமம் + சல்லடை]

[Skt. rōma > த. உரோமம்]

உரோமச்சிலிர்ப்பு *urōma-c-cilirppu*, பெ.(n.) மயிர்க்கூச்சு; a sensation in which hairs stand on end.

[உரோமம் + சிலிர்ப்பு]

[Skt. rōman > த. உரோமம்]

சிலிர் → சிலிர்ப்பு

உரோமச்சுருளி *urōma-c-curuḷi*, பெ.(n.) மா மூலிகைகள் இருபத்து மூன்றில் ஒன்று; an unknown tree said to be rarely found on mountain tree.

உரோமச்சுழி *urōma-c-cuḻi*, பெ.(n.) மயிர்ச்சுழி. நன்மை, கெடுதி, ஆகூழ், போகூழ் போன்றவற்றைக் குறிக்கப் பயன்படுத்தும் மனிதர், விலங்கு, பறவை போன்றவற்றின் உடம்புகளின் சில பாகங்களில் காணப்படும் வளையமிட்டிருக்கும் மயிர்; a spiral growth of hair found at a particular spot on the surface of the body of both the human and animal kingdoms and by examining it good or evil, fortune or misfortune is said to be predicted.

த.வ. மயிர்ச்சுழி.

[உரோமம் + சுழி.]

[Skt. rōman > த. உரோமம்.]

உரோமச்செம்பு *urōma-c-cembu*, பெ.(n.) மயிரிலிருந்து எடுக்கும் செம்பு; copper extracted from hair.

[உரோமம் + செம்பு.]

[Skt. rōman > த. உரோமம்.]

கும் → செம் → செம்பு.

உரோமச்சோளம் *urōma-c-cōḷam*, பெ.(n.) வாலுடைய சோளவகை; a kind of American corn, the ears of which have hair-like projections.

[உரோமம் + சோளம்.]

[Skt. rōma > த. உரோமம்.]

உரோமசக்கிரி *urōma-šakkiri,* பெ.(n.) சவுக்கு மரம்; casuarina tree.

உரோமசங்காரி *urōma-šaṅgāri,* பெ.(n.) உடற்புற மயிரைப் போக்குவதற்காகப் பயன்படுத்தும் மருந்து; any substance or preparation used in removing the superfluous hair on the body - hair destroyer.

[Skt. rōmasaṅgāri > த. உரோமசங்காரி.]

உரோமசத்தி *urōma-šatti,* பெ.(n.) 1. கெந்த மாஞ்சள்; round zedoary - curcuma aromatica which strenghens the hair. 2. அரைக்கீரை; an edible greens very commonly eaten and considered to be a medicinal food.

உரோமசயரோகம் *urōmašayarōgam,* பெ.(n.) தலைவழுக்கை; lack or loss of hair baldness - alopecia.

உரோமசன் *urōmašaṉ,* பெ.(n.) **உரோமமுனி** பார்க்க; see *urōma-muṉi.*

உரோமசாலியான் *urōma-šāliyāṉ,* பெ.(n.) கக்கரி; cucumber.

உரோமஞ்சிலிர்-த்தல் *urōmañ-cilir-,* 4 செ.கு.வி.(v.i.) மயிர்க் கூச்செறிதல்; to bristle, as the hairs of the body.

[உரோமம் + சிலிர்-,]

[Skt. rōma > த. உரோமம்.]

உரோமண்டலி *urō-maṇḍali,* பெ.(n.) நாட்டியமுத்திரை (நிருத்தக்கை) முப்பதனு ளொன்று (சிலப். பக். 81); (Nāṭya.) one of 30 *nirutta-k-kai.*

[உரோ + மண்டலி.]

[Skt. uras > த. உரோ.]

முல் → முள் → முடம் = வளைவு. முடம் → முடங்கு. முடங்குதல் = வளைதல். முடங்கு → மடங்கு. முள் → முண்டு → மண்டு. மண்டுதல் = வளைதல். மண்டு → மண்டலம் = வட்டம், நாட்டுப்பகுதி. மண்டலம் → மண்டலி = வட்டமான பொறியுள்ள பாம்பு, வட்டமான களவன், கூத்தின் மண்டிலநிலை.

உரோமத்தினிடை *urōma-t-tiṉiḍai,* பெ.(n.) மயிரினிடைத் துளை; the opening or the cavity in the hair.

[உரோம + அத்து + இன் + இடை.]

[Skt. rōman > த. உரோமம்.]

'அத்து' சாரியை.

உரோமத்துவாரம் *urōma-t-tuvāram,* பெ.(n.) மயிர்க்கால்; pores of the skin through which the hairs shoot out.

[Skt. rōman +dvāra> த. உரோமத்துவாரம்.]

உரோமத்தைலம் *urōma-t-tailam,* பெ.(n.) 1. மயிரினின்று இறக்கிய தைலம்; oil extracted from the hair. 2. மயிருக்கிடும் தைலம்; hair-oil for the growth of hair.

[Skt. rōman+taila > த. உரோமத்தைலம்.]

உரோமதரு *urōma-taru,* பெ.(n.) **உரோமச்சுருளி** பார்க்க; see *urōma-c-curuḷi.*

[Skt. urōmataru > த. உரோமதரு.]

உரோமநாக்கு *urōma-nākku,* பெ.(n.) நாக்கில் முள் பாய்தல், நாக்குச் சொரசொரப்பு; hairy state of the tongue due to a thickening of the papillac - trichoglossia.

[உரோமம் + நாக்கு.]

[Skt. rōman > த. உரோமம்.]

உரோமநிவாரணி *urōma-nivāraṇi,* பெ.(n.) மயிர் நீக்குந் தன்மையுள்ள பொருள்; any application to remove the hair without injuring the skin and without smarting pain and irritation.

[Skt. rōmanivāraṇi > த. உரோமநிவாரணி.]

உரோமநீர் *urōma-nīr,* பெ.(n.) 1. வேர்வை நீர்; perspired water; water secrected from the hair folicles - sweat. 2. கெட்ட நீர்; dirty water.

த.வ. வியர்வை.

[உரோமம் + நீர்.]

[Skt. rōma > த. உரோமம்.]

உரோமப்பட்டு *urōma-p-paṭṭu,* பெ.(n.) எலிமயிர் முதலியவற்றாற் செய்த பட்டு; cloth woven with fine hair. *"உரோமப் பட்டுடுத்து" (சீவக. 2425).*

[உரோமம் + பட்டு.]

[Skt. rōman > த. உரோமம்.]

பட்டம் = பட்டையான துணி, பாய். பட்டம் → படம் = துணி, சீலை. பட்டம் → பட்டு.

உரோமப்பரப்பு *urōma-p-parappu,* பெ.(n.) மயிரடர்த்தி; thick or close hair.

[உரோமம் + பரப்பு.]

[Skt. urōman > த. உரோமம்.]

உரோமப்பரிட்சை *urōma-p-pariṭcai,* பெ.(n.) மயிராய்வு (சோதித்தல்); examination of the hair, *Trichoscopy.*

[Skt. urōman-parikṣa > த. உரோமப் பரிட்சை.]

உரோமப்பிளப்பு *urōma-p-piḷappu,* பெ.(n.) **உரோமவெடிப்பு** பார்க்க; see *urōma-veḍippu.*

[உரோமம் + பிளப்பு.]

[Skt. rōma > த. உரோமம்.]

உரோமப்புளகம் *urōma-p-puḷagam,* பெ.(n.) மயிர்ச் சிலிர்ப்பு; errection of the hairs of the body caused by emotion, horripilation.

[Skt. rōman+puḷagam > த. உரோமப் புளகம்.]

உரோமப்புளகிதம் *urōma-p-puḷagidam,* பெ.(n.) **உரோமபுளகம்** பார்க்க; see *urōma-puḷagam.*

[Skt. rōma-pulaka > த. உரோமப்புளகம் > உரோமப்புளகிதம்.]

உரோமப்பைத்தியம் *urōma-p-paittiyam,* பெ.(n.) கோட்டி (பைத்தியம்) அல்லது இசிவுற்ற (சன்னி) காலத்தில் தன் மயிரைப் பறித்துக் கொள்ளுதல்; pulling out of the hair by delirious or insane persons - trichomania.

[உரோமம் + பைத்தியம்.]

[Skt. rōman > த. உரோமம்.]

பிதற்று → பேத்து → பித்து = பிதற்று நிலை. அறிவு மயக்கம். பித்து → பித்தம். த. பித்த > **Skt.** paitya.

உரோமப்பொடிப்பு *urōma-p-poḍippu,* பெ.(n.) மயிர்க்கூச்செறிவு (உரோமபுளகம்); raising of the hair of the body, horripilation.

[உரோமம் + பொடிப்பு.]

[Skt. rōman > த. உரோமம்.]

பொடி → பொடிப்பு.

உரோமப்போசணம் *urōma-p-pōsaṇam,* பெ.(n.) எண்ணெய் முதலியவற்றைத் தடவி மயிரை வளர்த்தல்; applying hair oils to promote development and growth of hair, nutrition for the hair.

[Skt. rōman - bhōṣana > த. உரோமப்போசணம்.]

உரோமபயம் *urōma-bayam,* பெ.(n.) மயிர் கண்டு அஞ்சவருமோர் நோய்; morbid dread of hair, *Trichophobia.*

[Skt. rōman-bhaya > த. உரோமபயம்.]

உரோமபூமி *urōmabūmi,* பெ.(n.) உடம்பின் மேற்றோல்; the skin on the surface of the body.

உரோமம் *urōmam,* பெ.(n.) 1. மனிதர், விலங்கு, பறவை ஆகியவற்றின் உடற் புறமயிர் (திவா.); hair on the body of men or animals, down of birds. 2. மயிர்; hair. 3. மயிர்ப்பரப்பு; thick or close hair. 4. வழலை; an emphemistic name for fuller's earth.

[Skt. rōman > த. உரோமம்.]

வடமொழியில் ruh என்னும் மூலத்திலிருந்து வளர்ந்த rōman என்னும் சொற்கு ஆண்கள் உடம்பிலும் விலங்குகளின் உடம்பிலும் வளரும் மயிர் என்னும் பொருளே முதற்கண் தோன்றியுள்ளது. அவ்வகையில் உரோமம் பெரும்பாலும் உடற்பரப்பில் வளரும் சிறு மயிரையே குறிக்கும்.

உரோமம்சிலும்பெறிதல் *urōmam-šilumberidal,* பெ.(n.) மயிர்ச்சிலிர்ப்பு; horripilation.

[உரோமம் + சிலும்பு + எறிதல்.]

[Skt. rōman > த. உரோமம்.]

உரோமமது *urōmamadu,* பெ.(n.) சீமைச் சாராயம்; foreign liquor formerly exported from Rome.

[உரோம + மது.முத்து → மத்து → மது = கள், தேன்.]

[த. மது > Skt. madhu.]

[E. Rōme > த. உரோமம்.]

உரோமமுட்டி *urōmamutti,* பெ.(n.) புறங்கை நாளி, ஒரு மரவகை; a tree.

உரோமமுள்ளோன் *urōmamullōn,* பெ.(n.) உடம்பெல்லாம் மயிருள்ளவன்; hairy man.

[உரோமம் + உள்ளோன்.]

[Skt. rōman > த. உரோமம்.]

உள் → உள்ளோன்.

உரோமமுறிவு *urōma-murivu,* பெ.(n.) மயிரின் மென்மை (மிருது)த் தன்மை இழந்து முறிதல்; a condition in which hair becomes brittle and breaks off.

[உரோமம் + முறிவு.]

[Skt. rōman > த. உரோமம். முறி → முறிவு.]

உரோமமுறைப்பு *urōma-muraippu,* பெ.(n.) மயிரின் நொய்மை; brittleness of the hair.

[உரோமம் + முறைப்பு.]

[Skt. rōman >த.உரோமம். முறை→ முறைப்பு.]

உரோமமுனி *urōma-muni,* பெ.(n.) வாதம், வைத்தியம், யோகம், ஞானம் முதலிய தமிழ் நூல்களைச் செய்த பதினெண் சித்தர்களிலொருவர்; one of the eighteen Siddhars mentioned in the Tamil medical science, who is the author of many works in Tamil on alchemy, medicine and yoga philosophy.

இவருக்கு உடம்பெல்லாம் மயிர் நிறைந்துள்ள தாலிப் பெயர். இவர் இப்பொழுதும் உயிரோடு இருப்பதாகக் கருதப்படுகிறது.

[Skt. rōman > த. உரோமம்.] முனி = முனிவன். முனி → முனிவன் = உலகப் பற்றைத் துறந்த அறிவன்.

உரோமர்வேதை *urōmar-vēdai,* பெ.(n.) மயிலெச்சக் களங்க வேதை; a process in alchemy followed by Roma, in which the excreta of the peacock is used as the chief ingredient.

உரோமரஞ்சம் *urōma-rāñjam,* பெ.(n.) மயிர்கூச்சு; thrill of the hair.

உரோமராசி *urōma-rāši,* பெ.(n.) 1. மயிரொழுங்கு; the order in which the hair is grown. 2. **உரோமரேகை** பார்க்க; see *urōma-rēgai.*

[Skt. rōmarāši > த. உரோமராசி.]

உரோமரிசி *urōma-risi,* பெ.(n.) **உரோமமுனி** பார்க்க; see *urōma-muni.*

உரோமரிசிகற்பம் *urōmarisi-karpam,* பெ.(n.) 1. உரோம முனி (ரிஷி) காய கற்பத்துக்காக வேண்டியுண்ட மயிலெச்சம்; the excreta of the peacock taken in by the Siddha named Roma for the purpose of longevity. 2. அம்பு (நாநார்த்த.); arrow.

உரோமரிசி *urōmarisi,* பெ.(n.) **உரோமமுனி** பார்க்க; see *rōmamuni.*

உரோமரேகை *urōma-rēgai,* பெ.(n.) மயிரொழுங்கு; line of hair above the navel. *"ஞால மருளும் துரோமரேகை யென்னவே" (சௌந்த. 76).*

[உரோமம் + ரேகை.]

[Skt. rōman > த. உரோம.வரி → வரிகை → ரேகை. வரிகை → ரேகை.]

உரோமரோகம் *urōma-rōgam,* பெ.(n.) 1. மயிர்க் கால்களுக்கேற்படும் நோய்; disease of the hair follicles - trichocryptosis. 2. மயிருக்கேற்படும் நோய்; disease

of the hair - trichopathy. 3. பொதுவாக மயிருக்கு உண்டாகும் நோய்; any disease of the hair - trichonosis.

த.வ. மயிர்க்கால்நோய்.

[*Skt. rōma+roha* > *த. உரோமரோகம்.*]

உரோமரோசனை *urōma-rōšanai,* பெ.(n.) வயிறு அல்லது குடலுக்குள்ளுண்டாகும் மயிர் உருண்டை; a hair ball or a similar concretion found within the stomach or the intestines - trichobezoar.

உரோமலம்பம் *urōma-lambam,* பெ.(n.) வண்டு; beetle.

உரோமலவணம் *urōma-lavaṇam,* பெ.(n.) இலகு குணமுள்ள ஒரு பழைய (பூர்வ) வுப்பு; a salt with light qualities in use formerly.

உரோமவல்லி *urōmavalli,* பெ.(n.) காக்கணம்; hair creeper - clitoria ternatea.

உரோமவழற்சி *urōma-v-aḻaṟci,* பெ.(n.) மயிர்க்காலுக்கேற்படும் கொதிப்பு (தாபிதம்); inflammation of the hair bulbs - trichitis.

[உரோம் + அழற்சி.]

[*Skt. rōman* > *த. உரோமம்.*]

அழல் + சி → அழற்சி.

உரோமவளர்த்தி *urōma-vaḷartti,* பெ.(n.) மயிர் மிகுதியாக வளருதல்; abnormal growth of hair - trichosis.

[உரோம் + வளர்த்தி.]

[*Skt. rōman* > *த. உரோமம்.*]

வளர் → வளர்த்தி.

உரோமவிருட்சம் *urōma-viruṭcam,* பெ.(n.) **உரோமச்சுருளி** பார்க்க; see *urōma-c-curuḷi.*

[*Skt. rōmaviruksa* > *த. உரோமவிருட்சம்.*]

உரோமவிருகம் *urōma-virugam,* பெ.(n.) கல்லத்தி; stone - fig.

உரோமவுள்ளம் *urōma-v-uḷḷam,* பெ.(n.) மயிரைப் போல் மேலே முசுமுசுப்பாயுள்ள நெஞ்சாங்குலை; a hairy appearance upon the heart, hairy heart - trichocardia.

[உரோம் + உள்ளம்.]

[*Skt. rōman* > *த. உரோமம்*

உள் → உள்ளம்.]

உரோமவெடிப்பு *urōma-veḍippu,* பெ.(n.) 1. மயிர் இரண்டாகப் பிளத்தல்; splitting of the hairs. 2. மயிர் முனை பலவாகப் பிளத்தல்; a hair split at the end in a star like form.

[உரோம + வெடிப்பு.]

[*Skt. rōman* > *த. உரோமம்.*

வெடி → வெடிப்பு.]

உரோமவேங்கை *urōma-vēṅgai,* பெ.(n.) உதிரவேங்கை; East-Indian kino.

உரோமவேதை *urōma-vēdai,* பெ.(n.) தலை மயிரினின்று செம்பெடுத்துப் பிறகு பொன்னாக்கத்திற்குப் பயன்படுத்தும் முறை; a process of extracting copper (pure) from the hair and then using it for transmuting baser metals into gold.

உரோமன் *urōmaṉ,* பெ.(n.) உதிரவேங்கை; East-Indian kino.

உரோமாஞ்சம் *urōmāñjam,* பெ.(n.) **உரோமப்புளகம்** பார்க்க; see *urōma-p-puḷagam.*

உரோமாஞ்சிதம் *urōmāñjidam,* பெ.(n.) **உரோமப்புளகம்** பார்க்க; see *urōma-p-puḷagam.*

[*Skt. rōmāñcita* > *த. உரோமாஞ்சிதம்.*]

உரோமாதிக்கம் *urōmādikkam,* பெ.(n.) அதிகமாகவும், நீளமாகவும் மயிர் வளருதல்; excessive growth of hair, long and luxurious growth of hair.

உரோமாதீதம் *urōmātītam,* பெ.(n.) **உரோமாதிக்கம்** பார்க்க; see *urōmādikkam.*

உரோமாம்பரம் *urōmāmbaram,* பெ.(n.) கம்பளம்; blanket.

உரோமாரிசம் *urōmāriśam,* பெ.(n.) **உரோமப்புளகம்** பார்க்க; see *urōma-p-puḷagam.*

உரோமாரிசம் *urōmārisam,* பெ.(n.) **உரோமப்புளகம்** பார்க்க; see *urōma-p-puḷagam.*

உரோமாவலி *urōmāvaḷi,* பெ.(n.) **உரோமரேகை** பார்க்க; see *urōmarēgai.*

உரோமி *urōmi,* பெ.(n.) மயிர்ச்சிகைப் பூண்டு, ஒரு வகைக் கொடி (மலை.); peacock crest.

[**Skt.** *rōman* > *த. உரோமம் → உரோமி.*]

உரோமிகி *urōmigi,* பெ.(n.) **உரோமி** பார்க்க; see *urōmi.*

உரோருகம் *urōrugam,* பெ.(n.) முலை (யாழ்.அக.); breast.

[**Skt.** *uro-ruha* > *த. உரோருகம்.*]

[*த. உரம்* > **Skt.** *urō* > *த. உரோ.*]

உரோவிபந்தம் *urōvi-bandam,* பெ.(n.) 1. மார்பில் ஏற்படும் தொல்லை (சங்கடம்); oppressive feeling experienced in the chest. 2. ஈளை (காச) நோய்; asthma.

உல்பகம் *ulpagam,* பெ.(n.) முலைப்பால் நீர் குழந்தையைத் தாக்குவதால் குழந்தைகட் குண்டாகுமோர் நோய்; a disease in children arising from the impaired condition of mother's breast milk.

உல்பம் *ulpam,* பெ.(n.) கருப்பையில் கருவைக் கவர்ந்துள்ளவோர் பை போன்ற தோல் அல்லது சவ்வு; the membraneous sac covering the foetus in the womb.

உல்மசு *ulmaśu,* பெ.(n.) பருத்த இலைகளுடையவோர் வகைக் காட்டு மரம்; broad-leaved elm grown in the forests of Europe.

உல்லங்கனம் *ullaṅgaṉam,* பெ.(n.) மீறுகை; transgressing, ignoring. *"பெரியோர் சொல்லை உல்லங்கனம் செய்யலாகாது".*

[**Skt.** *ul-laṅghana* > *த. உல்லங்கனம்.*]

உல்லங்கி–த்தல் *ullaṅgi-,* 11 செ.குன்றாவி. (v.t.) நெறி திறம்புதல்; to transgress, to stray from the path of virtue. *"குருவங்கிசம் உல்லங்கியாமல்" (பாரத வெண். 171, உரை).*

[**Skt.** *ullaṅ-gha* > *த. உல்லங்கி-,*]

உல்லாசம் *ullāsam,* பெ.(n.) களிப்பு, அகமகிழ்வு; mirth.

[**Skt.** *ul-lāsa* > *த. உல்லாசம்.*]

உல்லாபம் *ullābam,* பெ.(n.) 1. நிரம்பாமென் மொழி, மழலைச் சொல் (திவா.); babble, prattle, stammering, imperfect, utterance, as of children, of birds. 2. நலிந்த குரல்; feeble voice due to sickness. 3. மாற்றுக் குரல்; change of voice.

[**Skt.** *ul-lāpa-* > *த. உல்லாபம்.*]

உல்லாபன் *ullābaṉ,* பெ.(n.) நோய் தீர்ந்து நலமாகி வருபவன் (சூடா.); one who has recovered from illness, convalescent.

[**Skt.** *ul-lāgha* > *த. உல்லாபன்.*]

உல்லிபாடாணம் *ulli-pāḍāṇam,* பெ.(n.) ஒரு வகை செய்நஞ்சு; a kind of poison.

உல்லேகம் *ullēgam,* பெ.(n.) 1. புனைந்துரை; description. 2. பலபடப் புனைவணி (மாறனலங். 126); figure of speech in which an object is described according to the different impressions produced by its appearance.

[**Skt.** *ul-lēkha* > *த. உல்லேகம்.*]

உல்லேகனம் *ullēgaṉam,* பெ.(n.) கக்கல் (வாந்தி); vomiting.

உல்லோலம் *ullōlam,* பெ.(n.) 1. பேரலை (வின்.); large wave, surge. 2. கூத்தின் கண் காண்குறலாகும் மெய்ப்பாடு (அங்கக்கிரியை)களுள் ஒன்று (சிலப். பக். 81. 81. சுந்தா); (Nāṭya) a mode of gesticulation.

[**Skt.** *ul-lōla* > *த. உல்லோலம்.*]

உலங்கலம் *ulaṅgalam,* பெ.(n.) கல்லேனம்; stone-vessel.

உலங்காரணை *ulaṅgāraṇai,* பெ.(n.) அவுரி; indigo plant.

உலங்காரை *ulaṅgārai,* பெ.(n.) அக்கமணி (உருத்திராட்சம்); wild olive tree - paralysis seed tree.

உலபம் *ulabam,* பெ.(n.) விழற்புல் (நாநார்த்த.); a kind of grass.

[Skt. *ulapa* > த. *உலபம்.*]

உலம்பேசம் *ulambēsam,* பெ.(n.) காட்டு முல்லை; wild jasmine.

உலவைநாசி *ulavai-nāśi,* பெ.(n.) திப்பிலி; long pepper.

[Skt. *ulavai+naś* > த. *உலவைநாசி.*]

உலாகுமம் *ulāgumam,* பெ.(n.) மனோசிலை (வின்.); arsenic sulphide, realgar.

உலாந்தா *ulāndā,* பெ.(n.) ஐரோப்பாவிலுள்ள ஒரு நாடு; Holland.

[E. *Holland* > த. *உலாந்தா.*]

உலாந்தாக்கமலம் *ulāndā-k-kamalam,* பெ.(n.) தரந்தாழ்ந்த வயிரவகை; Holland cut diamond or white stone of inferior quality.

[E. *Holland*+ Skt. *kamalam* > த. *உலாந்தாக்கமலம்.*]

உலாந்தாலிங்கம் *ulāndā-iiṅgam,* பெ.(n.) பம்பாய் இலிங்கம்; Bombay vermilion.

இது உலாந்தா தேசத்தினின்று ஏற்றுமதியாகும் சரக்கு. இது இதள் (இரசம்) நிறைந்து கருஞ் சிவப்பு நிறம் வாய்ந்து, ஊசிக் கம்பிகள் போல ஈர்க்குகளமைந்தது.

உலாமா[1] *ulāmā,* பெ.(n.) 1. கடுகுரோகணி (மலை); christmas rose, herb. 2. கொழுமிச்சை; citron.

உலாமா[2] *ulāmā,* பெ.(n.) மகமதிய குரு; high priest of Muhammadanism.

[Ar. *ulamā* > த. *உலாமா*]

உலிமிடி *ulimiḍi,* பெ.(n.) மாவிலிங்கை; garlic pear.

உலிமிடிச்சக்கை *ulimiḍi-c-cakkai,* பெ.(n.) மாவிலிங்கப்பட்டை; the bark of the garlic pear tree.

[*உலிமிடி + சக்கை*]

உலிமிடிவேர் *ulimiḍi-vēr,* பெ.(n.) மாவிலிங்க வேர்; the root of garlic pear tree.

[*உலிமிடி + வேர்*]

உலிற்கள் *uliṟkaḷ,* பெ.(n.) வெண்கலம்; any amalgam of zinc and copper-bell metal, white copper or queen's metal.

உலுகத்தண்டு *uluga-t-taṇḍu,* பெ.(n.) கீரைத் தண்டு; a culinary vegetable of amaranthus genus.

[*உலுகம் + தண்டு*]

உலுகமாலினம் *uluga-māliṉam,* பெ.(n.) நோயையுண்டாக்கும் ஒரு பேய்; the name of a demon causing diseases.

உலுகம் *ulugam,* பெ.(n.) கீரைச்செடி; vegetable greens - amaranthus.

உலுத்தன் *uluttaṉ,* பெ.(n.) வேடன் (நாநார்த்த.); hunter.

[Skt. *lubdha* > த. *உலுத்தன்*]

உலுபம் *ulubam,* பெ.(n.) ஒரு வகைப் புல்; a species of grass.

உலுபேனா *ulupēṉā,* பெ.(n.) பாலுடன் முலாம்பழம், வாழைப்பழம் ஆகியவற்றின் சாறு கலந்த உணவுவகை; a particular dish consisting of milk mixed with the juice of melon, banana etc.

உலுலாயம் *ululāyam,* பெ.(n.) காட்டெருமை; wild buffalo.

உலுவம் *uluvam,* பெ.(n.) வெந்தயம்; fenugreek or dill seed.

உலுவா *uluvā,* பெ.(n.) 1. **உலுவம்** பார்க்க; see *uluvam.* 2. பெருஞ்சீரகம்; chinese anise.

உலுவாசகெந்தி *uluvāša-gendi,* பெ.(n.) தைவேளை; a plant.

உலுவாவரிசி *uluvāvariši,* பெ.(n.) பெருஞ்சீரகம்; chinese anise. 2. **உலுவா** பார்க்க; see *uluvā.*

[*உலுவா + அரிசி. அரி → அரிசி.*]

உலுவாவிகம் *uluvāvigam,* பெ.(n.) கறிவேப்பிலை; curry leaf.

உலுவிந்தை *uluvindai,* பெ.(n.) **உலுவேந்தம்** பார்க்க; see *uluvēndam.*

உலுவேந்தம் *uluvēndam,* பெ.(n.) ஒரு வகைப் பூடு; east coast cherry nutmeg.

உலூகல்கம் *ulūkalgam,* பெ.(n.) **உலூகம்** பார்க்க; see *ulūgam.*

உலூகாரி *ulūkāri,* பெ.(n.) காக்கை; crow.

உலூதம் *ulūdam,* பெ.(n.) **உலூதை** (நன். 273, மயிலை) பார்க்க; see *ulūdai.*

[*Skt. lūtā > த. உலூதம்.*]

உலூதை[1] *ulūdai,* பெ.(n.) சிலந்திப் பூச்சி (திவா.); spider.

[*Skt. lūtā > த. உலூதை.*]

உலூதை[2] *ulūdai,* பெ.(n.) எறும்பு (நாநார்த்த.); ant.

[*Skt. lūtā > த. உலூதை.*]

உலூபி *ulūbir,* பெ.(n.) ஒரு வகை மீன்; a kind of fish.



உலூனகம் *ulūnagam,* பெ.(n.) 1. கீழ்வாய் இலக்கம் (பின்னம்) (நாநார்த்த.); fraction. 2. ஆ (பசு); cow.

[*Skt. lūnaka > த. உலூனகம்.*]

உலேகவாதம் *ulēgavādam,* பெ.(n.) கண் பூ, கண்ணோய் வகை; a disease of the eye - cataract.

த.வ. கண்புரை.

உலொட்டி *ulotti,* பெ.(n.) 1. வெறிமருந்து; intoxicating drug. 2. கள்ளுக்குடுவை; toddy-pot.

உலொட்டிக்காரன் *ulotti-k-kāran,* பெ.(n.) குடியன்; drunkard.

உலோகக்கட்டி *ulōga-k-katti,* பெ.(n.) 1. மாழை (உலோகங்) கலந்த கட்டி; ore, metalliferous mineral. 2. ஐம்மாழையையும் (பஞ்சலோகத்தையும்) உருக்கிச் சேர்த்த கட்டி (வின்.); amalgam of *panca-lōgam* in equal proportion. 3. இரும்புக்கட்டி; a hump or mass of iron.

[*உலோகம் + கட்டி.*]

[*Skt. lōha > த. உலோகம்.*

கள் → கட்டு → கட்டி.]

உலோகக்கலப்பு *ulōga-k-kalappu,* பெ.(n.) பலவகை மாழை (உலோக)களின் சேர்மானம்; a mixture of different metals or metallic compounds by fusion - alloy.

[*உலோகம் + கலப்பு.*]

[*Skt. loha > த. உலோகம்.*

கல → கலப்பு.]

உலோகக்கலவை *ulōga-k-kalavai,* பெ.(n.) **உலோகக்கலப்பு** பார்க்க; see *ulōga-k-kalappu.*

[*உலோகம் + கலவை.*]

[*Skt. lōha > த. உலோகம்.*

கல → கலவை.]

உலோகக்களிம்பு *ulōga-k-kalimbu,* பெ.(n.) 1. இயல்பாக மாழைகளின் மேல் படியும் மாசு;

a deposit formed usually on surfaces of metals exposed to air, heat etc. for a long time, oxide or oxide of any metal. 2. இரும்புத் துரு; rust of iron. 3. செம்புக் களிம்பு; rust of copper, sub-acetate of copper - verdigris.

[உலோகம் + களிம்பு.]

*[**Skt.** rōha > த. உலோகம்.*

களி → களிம்பு.]

உலோகக்கற்பஞானி *ulōga-k-kaṟpa-ñāṉi,* பெ.(n.) கஞ்சா; gunjah.

உலோகக்காந்தம் *ulōga-k-kāndam,* பெ.(n.) இயற்கைக் காந்தம்; natural load-stone as opposed to magnet artificially made.

[உலோகம் + காந்தம்.]

*[**Skt.** lōha > த. உலோகம்.*

காந்து → காந்தம்.]

உலோகங்களைப் பற்பமாக்கி *ulōgaṅgaḷai-p-paṟpamākki,* பெ.(n.) காட்டுத்தீ; a great fire useful for calcining metals.

உலோகங்களைப்பேதிப்பாக்கி *ulōgaṅgaḷai-p-pēdippākki,* பெ.(n.) குழலாதொண்டை; common caper-capparis aphylla.

உலோகச்சத்துரு *ulōga-c-catturu,* பெ.(n.) கற்பரி செய்நஞ்சு; a kind of arsenic.

உலோகச்சித்து *ulōga-c-cittu,* பெ.(n.) வயிர (வச்சிர)க் கல்; a precious stone - one of the nine gems, diamond - adamantine.

உலோகச்சிப்பி *ulōga-c-cippi,* பெ.(n.) சிப்பி முத்து; oyster pearl, as distinguised from pearls derived from other sources as described in the Tamil medical science.

[உலோகம் + சிப்பி.]

*[**Skt.** lōha > த. உலோகம்.]*

உலோகச்சுத்தி *ulōga-c-cutti,* பெ.(n.) 1. இரும்பைக் கலப்பில்லாமற் செய்வது; cleaning the impurities of iron. 2. நிலத்திலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட மாழைகளை மருத்துவ (வைத்திய) முறைப்படி தூய்மை செய்து, மருந்திற்குப் பயன்படுத்து வதற்குக் களிம்பு முதலியவற்றை அகற்றல்; cleaning of minerals which are dug out from the earth, as per methods described in the Tamil medical science before they are introduced on used in medicine. 3. பொன், வெள்ளி, செம்பு முதலியவற்றை மூலிகைத் தூய்மை (சுத்தி), ஊத்துமுறை, எரிப்பு, பாடம் முதலியவற்றால் தூய்மை செய்தல்; (in alchemy) the process of refining gold, silver, copper, lead etc., by different methods such as cleansing with the essence of drugs, melting by blowing or burning smelting or by cupellation.

உலோகச்செந்தூரம் *ulōga-c-cendūram,* பெ.(n.) இரும்புத் தூளைக் கொண்டு செய்யுமோர் வகைச் செந்தூரம்; a calcined red-oxide of iron prepared by vaidyans.

[உலோகம் + செந்தூரம்.]

*[**Skt.** lōha > த. உலோகம்.*

செந்தூள்→ செந்தூளம்→ செந்தூரம்.]

உலோகசாட்சி *ulōga-šāṭci,* பெ.(n.) பன்னிரு (துவாதச) சித்தருளொருவன் (பிங்.); witness of (whatever happens in) the world, one of *tuvādašādittar.*

*[த. உலகம் → **Skt.** loha>த. உலோகம். **Skt.** sāksin > த. சாட்சி.]*

உலோகத்தம்பம் *ulōga-t-tambam,* பெ.(n.) இராசராசேச்சுரநிரைய (நரக)ங்களுளொன்று (சி.போ.பா.2,3,பக்.204); a hell, one of eight *irāša-rāsēccura-naragam.*

*[**Skt.** lōha + sthanbha > த. உலோகத் தம்பம்.]*

உலோகத்தாது *ulōga-t-tādu,* பெ.(n.) 1. துத்த செய்நஞ்சு (பாஷாணம்); a kind of arsenic. 2. பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்

படும் மாழைகள் (உலோகங்கள்); metallic ores dug out from the earth, natural metals as distinguished from artificial or wrought metals. 3. வெட்டியெடுத்த இரும்பு; iron ore.

உலோகத்திரம் *ulōga-t-tiram,* பெ.(n.) வெள்ளிலோத்திரம்; the bark of a tree.

உலோகத்திராவகம் *ulōga-t-tirāvagam,* பெ.(n.) **உலோகநீர்** பார்க்க; see *ulōga-nir.*

[Skt. ulāhadravaga > த. உலோகத் திராவகம்.]

உலோகத்தைச்செந்தூரமாக்கி *ulōgattai-c-cendūramākki,* பெ.(n.) சிறு கல்லூரி; an unknown plant capable of reducing iron and other metals into red oxides.

[உலோகத்தை + செந்தூரம் + ஆக்கி.]

[Skt. loha > த. உலோகம்.

செந்தூளம் → செந்தூரம்.

ஆக்கு → ஆக்கி.]

உலோகத்தைத்தகர்த்துசாடுமாருதி *ulōgattai-t-tagarttu-šāḍumārudi,* பெ.(n.) பொன் நிமிளை; iron phrites occuring in dark yellow nodules.

உலோகத்தைநயத்தவேகன் *ulōgattai-nayatta-vēgaṉ,* பெ.(n.) பலண்டுறுக செய்நஞ்சு (பாஷாணம்); a kind of native arsenic.

உலோகத்தைப்பேதிக்குங்கன்னி *ulōgattai-p-pēdikkuṅ-kaṉṉi,* பெ.(n.) ஏகம்பச் சாரம்; a salt used in alchemy.

உலோகத்தைப்பளிப்பிடக்கூர்மை *ulōgattai-p-paḷippiḍa-k-kūrmai,* பெ.(n.) பிடாவுப்பு (லவணம்); a prepared salt used in alchemy.

உலோகதம் *ulōgadam,* பெ.(n.) **உலோகநீர்** பார்க்க; see *ulōga-nir.*

உலோகதருமிணி *ulōga-tarumiṇi,* பெ.(n.) உலகநாட்டம் கொண்ட மாணாக்கனுக்கு மறை ஆற்றலை அடையாளமாகக் கொண்டிருக்கும் சிண்டினை எடுக்காமல் செய்யப்படும் தீக்கைவகை (போககாமி கட்குச் செய்யப்படுவதான சபீசதீட்சை வகை) (சைவச. ஆசாரி.62, உரை); (Saiva.) a mode of initiation in which the hair tuft which represents the veiling energy is not removed for the worldly minded disciple, a kind of *šubiša-tiṭcai.*

[Skt. lōha+darmiṇi > த. உலோகதருமிணி.]

உலோகதாது *ulōga-tādu,* பெ.(n.) ஒரு செய்நஞ்சு (துத்த பாடாணம்) (மூ.அ.); a mineral poison.

[Skt. lōha+tātu > த. உலோகதாது.]

உலோகதிதம் *ulōgadidam,* பெ.(n.) புன்கு; poonga oil tree.

உலோகநாதமூலி *ulōga-nādamūli,* பெ.(n.) சிறு தும்மட்டி; a plant whose seeds are medicinal.

உலோகநிமிளை *ulōga-nimiḷai,* பெ.(n.) நிமிளை வகை (வின்.); variety of bismuth.

உலோகநீர் *ulōga-nir,* பெ.(n.) 1. துரிசைப் பொடியிலிருந்து உருவாக்கப்படும் ஒரு வகை நீர்மம்; an oil substance produced from copper aceta. 2. இரும்பு ஆற்றல் (சத்து) கலந்த நீர்; water containing or charged with iron.

[உலோகம் + நீர்.]

உலோகநீறு *ulōganiṟu,* பெ.(n.) 1. இரும்புச் சாம்பல் (பற்பம்); calcined iron oxide. 2. பொதுவாக மாழை (உலோகங்களின்) சாம்பல் (பற்பம்); any calcined oxide of metal in general.

[உலோகம் + நீறு.]

[Skt. lōha > த. உலோகம்.]

உலோகப்பஞ்சபூதம் *ulōga-p-pañja-būdam,* பெ.(n.) ஐம்பூதக்கூறாகிய மாழை (உலோக) வகைகள்; the five elemental qualities

attributed to five metals.

[உலோகம் + பஞ்ச + பூதம்.]

[Skt. lōha > த. உலோகம்.

பூ→பூது→பூதம்.]

[த. பூதம் > Skt. bhūta.]

[Skt. pānja > த. பஞ்ச.]

உலோகப்பத்திரம் *ulōga-p-pattiram,* பெ.(n.) பனை மரம்; palmyra-tree.

உலோகப்பந்தனி *ulōga-p-pandaṉi,* பெ.(n.) மான் செவிக்கள்ளி; spiral leafy milk hedge.



உலோகப்பற்பம் *ulōga-p-paṟpam,* பெ.(n.) **உலோகநீறு** பார்க்க; see *ulōga-nīru.*

உலோகப்பாதம் *ulōga-p-pādam,* பெ.(n.) அவலந்தி, கொசு நீர்மம்; a kind of watery substance.

உலோகப்பாந்தவன் *ulōgappāndavaṉ,* பெ.(n.) மாழை (உலோக) க்குப் பந்தத்தைப் போல் வெளிச்சத்தைக் கொடுக்கும் ஞாயிறு (சூரியன்); the sun which gives to the world light, compared to a torch light.

உலோகப்பாய்ச்சல் *ulōga-p-pāyccal,* பெ.(n.) மருந்துகளை மாழைகளின் பேரில் உருக்கு முகத்திற்குக் கொடுத்துக் கலக்கும்படிச் செய்து அம்மாழையைப் பொன்னாக மாற்றுதல்; the process of transmulting inferior metals into gold by introducing or adding alchemical compounds to the metal under experiment while in a state of fusion.

உலோகப்பிரகாசன் *ulōga-p-pirakāšaṉ,* பெ.(n.) உலகத்தை ஒளி பெறச்செய்பவன் (துவாதசாதித்தருளொருவன்) (பிங்.); lit, he who illumines the world, one of *tuvādasātittar.*

[Skt. lōka+pra-kāsa>த.உலோகப்பிரகாசன்.]

காள் → காளம் = சுடுகை. காளவனம் = சுடுகாடு. காளவாய் = சுண்ணாம்புச்சுள்ளை. காள் → காய். காய்தல் = எரிதல், சுடுதல், ஒளி வீசுதல், உலைகாய்தல், நிலாக்காய்தல் என்னும் வழக்குகளை நோக்குக. காய் → காய்ச்சு. காய்ச்சுதல் = சுடவைத்தல், சமைத்தல். காய் → காச் (வ) வடசொல் ப்ர என்னும் முன்னொட்டொடு கூடிப் ப்ரகாச் என்று வழங்குவதே பெரும்பான்மை. ய–ச போலி (வ.வ.1:114).

உலோகப்பிரதீபிதம் *ulōga-p-piratīpidam,* பெ.(n.) நிரைய (நரக.) வகை (சி.போ.பா.2, 3, பக். 204); a hell.

[Skt. lōha+piratiptam > த. உலோகப் பிரதீப்தம்.]

உலோகபற்பம் *ulōga-paṟpam,* பெ.(n.) அயவெள்ளை (மூ.அ.); oxide of iron.

[Skt. lōha+paṟpam > த. உலோகபற்பம்.]

உலோகபாலர் *ulōga-pālar,* பெ.(n.) எண் திசைக்காவலர் (அஷ்டதிக்குப் பாலகர்) (திவ். பெரியாழ். 5, 2, 9); regents of the eight points of the compass.

[Skt. lōka+pāla > த. உலோகபாலர்.]

[த. உலகம் > Skt. lōka > த. உலோகம்.]

உலோகம் *ulōgam,* பெ.(n.) 1. பொன் முதலிய தாதுப்பொருள் (பிங்.); metal in general. 2. இரும்பு; a term peculiar to iron. 3. நிலவுலகம்; earth. 4. குருதி; blood. 5. அகிலமரம்; a fragrant tree. 6. மனிதர்; human being.

[Skt. lōha > த. உலோகம்.]

சிவப்பாதல் எனப் பொருள்படும் rudh என்னும்

வேரிலிருந்து சிவப்பு, செம்பு வண்ணம், செம்பால் ஆனது, இரும்பாலானது, சிவப்பு மாழை (உலோகம்), செம்பு என்றவாறு பொருள் வளர்ச்சி கொண்ட loha என்னும் வடசொல் உருவாகியுள்ளது. பின்னர் இச்சொல் இரும்பு உருக்கு, பொன் அல்லது மாழைப்பொது என்றின்ன வகையில் விரிந்த பொருள் வளர்ச்சி கொண்டுள்ளது (மா.வி.). தமிழில் இச்சொல் மாழைப் பொது என்னும் பொருளிலேயே பெருவழக்கெய்தியுள்ளது.

மாழை (உலோகம்)யை ஐவகை, எழுவகை, ஒன்பது வகை என்று மூவேறு பிரிவுகளில் சிறப்பித்துக் கூறுவர். **ஐவகை :** பொன் (gold), வெள்ளி (silver), இரும்பு (iron), ஈயம் (lead); **எழுவகை :** இவற்றுடன் வெண்கலம் (bronze), தரா (tara). **ஒன்பது வகை :** மேற்சொன்னவற்றுடன் பித்தளை (brass), நாகம் (zinc).

உலோகம்பழுத்தல் *ulōgampaḻuttal,* பெ.(n.) 1. இரும்பு, செம்பு முதலிய மாழை (உலோகங்) கள் பொன்னாக மாறுதல்; change or conversion on transmutation of inferior metals such as iron, copper etc. into gold. 2. பொன் பழுத்தல்; refining gold to yellow colour.

[உலோகம் + பழுத்தல்.]

[Skt. lōha > த. உலோகம்.
பழு → பழுத்தல்.

உலோகமணல் *ulōga-maṇal,* பெ.(n.) 1. இருப்பு மணல் (வின்.); iron sand or iron ore. 2. கருமணல்; black sand. 3. மண் கலந்த மாழை வகைகள்; a common term for matallic ores.

[உலோகம் + மணல்.]

[Skt. lōha > த. உலோகம்.]

உலோகமத்தம் *ulōga-mattam,* பெ.(n.) ஓமம்; bishob's weed.

உலோகமுசிக்கல் *ulōga-muśikkal,* பெ.(n.) மாழை (உலோகங்) களைக் களிம்பு முதலிய மாசுகளினின்றும் பிரித்தெடுக்க வேண்டி, உலைக் களத்தில் வைத்துருகும்படி ஊதுதல்; melting or fusing metallic ores for the purpose of separating the metal from the dross in a furnace, with special agents - smelting.

உலோகயாத்திரை *ulōga-yāttirai,* பெ.(n.) உலகநடை; way of the world, world, affairs. *"உலோகயாத்திரைக விதிகரியா துறுநரர்க்கு" (வேத. சூ. 164).*

[உலோக + யாத்திரை.]

[த. உலகம் > Skt. lōka > த. உலோகம்.]

உலோகரஞ்சனம் *ulōga-rañjanam,* பெ.(n.) 1. நீலாஞ்சனக்கல்; blue vitriol. 2. அஞ்சனக்கல்; sulpheret of antimony.

உலோகரூடம் *ulōga-rūḍam,* பெ.(n.) நாட்டு வளமை (யாழ்.அக.); customs and manners of a country.

[Skt. lōka+rūṭam > த. உலோகரூடம்.]

உலோகரேட்சை *ulōga-rēṭcai,* பெ.(n.) தன்னைப் போல் மற்றவர்களையும் பார்த்தல்; treating others on the same level as self.

உலோகலன் *ulōgalaṉ,* பெ.(n.) தெளிவாகப் பேசாதவன்; one who does not talk clearly.

உலோகவாதம் *ulōgavādam,* பெ.(n.) மரபு (ஐதீகம்) (சி.சி.அளவை. 1. ஞானப்.); popular report, tradition.

உலோகவாதி *ulōga-vādi,* பெ.(n.) இல்லறத்திலிருந்து கொண்டு பொன்னாக்கம் (வாதம்) செய்வோன்; one who practices alchemy in his domestic or family life.

உலோகவிருட்டம் *ulōga-viruṭṭam,* பெ.(n.) 1. கழுகு; eagle. 2. பருந்து; hawk.



உலோகவிருத்தம் *ulōga-viruttam,* பெ.(n.) உலக வழக்குக்கு மாறுபட்டது (மணிமே. 29, 162); (Log.) that which is against the customs of the country.

[Skt. lōka+viruddha > த. உலோகவிருத்தம்.]

உலோகவிரும்பு *ulōga-virumbu,* பெ.(n.) மாழையை (உலோகத்தை)ச் சார்ந்த இரும்பு; metalic iron.

[உலோக(ம்) + இரும்பு.]

[Skt. lōha > த. உலோகம்.

இர் → இரு → இரும்பு = கரியதாது.]

உலோகவிலாசினி *ulōga-vilāśiṉi,* பெ.(n.) பழையதொரு தொன்மம் (புராணம்) (பெருங். உஞ்சைக். 32, 2, குறிப்பு); an ancient purāṇa.

[Skt. lōka+vilācini > த. உலோகவிலாசினி.]

உலோகவேதிச்சி *ulōga-vēdicci,* பெ.(n.) கருநொச்சி; three-leaved chaste tree.

உலோகவேதியாக்கி *ulōga-vēdiyākki,* பெ.(n.) தொட்டி செய்நஞ்சு (பாஷாணம்); a kind of prepared arsenic.

[உலோகவேதி + ஆக்கி.

ஆக்கு → ஆக்கி.]

உலோகாசவம் *ulōgāśavam,* பெ.(n.) இரும்பு (அய)ப் பொடியோடு மற்றக் கடைச் சரக்குகளையும் கலந்து ஆயுள் வேத முறைப்படிப் புளிக்க வைத்து உருவாக்குமோர் வகை குடிப்பு (ஆசவம்); a wine or spirituous liquor obtained by fermenting a mixture of iron fillings and other powdered drugs as per process laid down in ayurveda.

உலோகாதீதம் *ulōgāditam,* பெ.(n.) உலக இயல்புக்கு மேற்பட்டது; above or beyond the powers or laws of nature.

[Skt. lōka+atita > த. உலோகாதீதம்.]

உலோகாமிலம் *ulōgāmilam,* பெ.(n.) மாழை (உலோகங்)களினின்று உருவாக்கும் நீர்மம்; metallic acid.

உலோகாயதம் *ulōgāyadam,* பெ.(n.) பொருண் முதன்மை கோட்பாடு (சார்வாகமம்) (திருக்காலித். 4, 30, 25); materialism.

[Skt. lōkāyata > த. உலோகாயதம்.]

உலோகாயதன் *ulōgāyadaṉ,* பெ.(n.) பொருளே முதன்மை எனக் கொண்டொழுகுபவன்; materialist. *"உலாகாயதனெனு மொண்டிறற்பாம்பின்" (திருவாச. 4, 56).*

த.வ. பொருள் முதன்மையன்.

[Skt. lōkāyata > த. உலோகாயதன்.]

உலோகாயிதன் *ulōgāyidaṉ,* பெ.(n.) **உலோகாயதன்** (பிரபோத. 31, 81) பார்க்க; see *ulōgāyadaṉ.*

[Skt. lōkāyatika > த. உலோகாயிதன்.]

உலோகார்த்தம் *ulōgārttam,* பெ.(n.) உலகிய (இலௌகீக) நயம்; material benefit. 2. உலக நன்மை; public good, secular advantages.

உலோகானந்தர் *ulōgānandar,* பெ.(n.) பொன்னாக்கம், மருத்துவம் ஆகிய நூற்களைத் தமிழில் இயற்றிய அகத்தியர் கூட்டத்தைச் சார்ந்தவோர் சித்தர்; one of the Siddhar's of Agastiyar's school who compiled various books on medicine and alchemy.

உலோகிதகம் *ulōgidagam,* பெ.(n.) செம்புக்கல்; ruby stone.

[Skt. lōhita > த. உலோகிதகம்.]

உலோகிதசந்தனம் *ulōgida-śandaṉam,* பெ.(n.) குங்குமப்பூ; english saffron.

[உலோகிதம் + சந்தனம்.]

[Skt. lōhita > த. உலோகிதம்.]

உலோகிதம் *ulōgidam,* பெ.(n.) 1. சிவந்தது (உரி.நி.); that which is red. 2. சந்தனம் (மூ.அ.); sandalwood tree. 3. சூதாட்ட வகை; a game at cards with heavy stakes.

[Skt. lōkita > த. உலோகிதம்.]

lōhita என்னும் சொல்லிற்கு வடமொழியில் சிவப்பு, சிவப்பு வண்ணம், சிவப்பாய் இருப்பது,

செம்பாலானது, செம்பு மாழை (உலோகம்) போன்ற பொருள்கள் உள்ளது (மா.வி.).

உலோகிதன் *ulōgidaṉ,* பெ.(n.) செவ்வாய் (பிங்.); mars, being reddish.

[Skt. lōkita > த. உலோகிதன்.]

உலோச்சு *ulōccu,* பெ.(n.) 1. தம் தலை மயிரைத் தம்கையாற் பறிக்கை (சீவக. 2520, விசேடக் குறிப்பு); (Jaina.) pulling out, by the root, the hair on one's head with one's own hands. 2. தலைமயிரைப் பிய்த்துக் கொள்ளும் ஒரு நோய்; a devilish disease tempting one to pull off the hair by the root.

[Skt. luñc > த. உலோச்சு.]

luñc என்னும் வடசொற்குப் பிடுங்குதல், இழுத்தல், கிழித்தல் ஆகிய பொருள்கள் உள்ளன. luñcitakēsa, அல்லது luñcitamūrdhajaஎன வரும் பொழுது தன் தலைமயிரைப் பிடுங்கும் சமணத் துறவியினரைக் குறிக்கும். luñc என்பது luñcita kēsa போன்ற சொற்களின் சுருக்கமாகும்.

உலோசம் *ulōsam,* பெ.(n.) 1. கண்மணி; the pupil of the eye. 2. வானம்; sky.

உலோசமத்தகம் *ulōśa-mattagam,* பெ.(n.) ஓமம்; bishop's weed.

உலோசரா *ulōśarā,* பெ.(n.) அவல்; paddy soaked in water and then fried and flattened.

உலோசனம் *ulōśaṉam,* பெ.(n.) கண்; eye. *"தணவறு முலோசனம் போல்" (பிரபோத. 32, 54).*

[Skt. lōcana > த. உலோசனம்.]

உலோசி *ulōśi,* பெ.(n.) பேய்ப்பசளை (மூ.அ.); a wild species of purslane.

உலோசிதம் *ulōśidam,* பெ.(n.) சந்தனமரம்; sandalwood tree.

உலோட்டம் *ulōṭṭam,* பெ.(n.) 1. மண்ணாங்கட்டி; lump of clay, clod. *"தூமமேகா வணமுலோட்டமொடு கோமயந் தோயப் பொதிந்து" (தைலவ. தைல. 127).* 2. இரும்புக்கிட்டம், இரும்புருக்கையில் மேல் திரளும் கட்டி; irondross.

[Skt. lōṣṭa > த. உலோட்டம்.]

உலோட்டி *ulōṭṭi,* பெ.(n.) 1. சாராயச்சாரம் (பாண்டி.); alcohol. 2. தொல்லை, தொந்தரவு (யாழ்.அக.); annoyance.

தெ. லோட்டி.

உலோடகம் *ulōḍagam,* பெ.(n.) ஒடை மரம்; whell creeper.

உலோத்திரச்சம் *ulōttiraccam,* பெ.(n.) 1. வெள்ளிலோத்திரம்; the bark of a tree. 2. குறட்டைப் பருப்பு (சவரிலோத்திரம்); the pulp of the seed of a tree.

உலோபம்[1] *ulōbam,* பெ.(n.) 1. கடும்பற்றுள்ளம்; avarice, miserliness, penuriousness. *"உட்டெறு வெம்பகையாவ துலோபம்" (கம்பரா. வேள்விப். 32).* 2. எறும்பு; ant.

[Skt. lōbha > த. உலோபம்.]

உலோபம்[2] *ulōbam,* பெ.(n.) 1. குறைவு; want, shortcoming, deficiency. *"மந்திரவு லோபம்".* 2. கெடுதல் வேறுபாடு (விகாரம்); (Gram.) dropping a letter, by rule of combination, elision in sandi. *"ஆன்றாமு லோபத் தொடாகமம்" (வீரசோ. சந்தி. 10).*

[Skt. lōpa > த. உலோபம்.]

lōpa என்னும் வடசொற்கு உடைத்தல், புண்படுத்துதல், புண், அழ்வு, தலையீடு, புறக்கணிப்பு, மீறுகை, திருடுதல், கொள்ளையடித்தல், தேவை, குறைவு, இல்லாமை, மறைதல் போன்ற பல பொருள்கள் உள்ளன. (மா.வி.) இவற்றுள் குறைவு, கெடுதல் வேறுபாடு ஆகிய பொருள்களிலே இச்சொல் தமிழில் வழக்கெய்தியுள்ளது.

உலோபன் *ulōbaṉ,* பெ.(n.) **உலோபி** பார்க்க; see *ulōbi.* *"உலோபர் கடைத்தலை" (கம்பரா. பள்ளி. 26).*

[Skt. lōbha > த. உலோபன்.] 'ன்' ஆ.பா.ஈறு.

உலோபாமுத்திரை *ulōbāmuttirai,* பெ.(n.) அகத்தியர் மனைவி (தொல். பாயி. உரை); the wife of the sage Agastya.

[உலோபா + முத்திரை.]

[Skt. lōpā > த. உலோபா. த. முத்திரை > Skt. mudra.]

முக + திரம் = மோதிரம், முத்திரையிட்ட விரலணி. முகத்திரம் → (முத்திரம்) → முத்திரை.

உலோபி[1] *ulōbi*, பெ.(n.) 1. பேராசையுள்ளன்; avaricious person. 2. இவறன், ஈயாதவன்; miser.

த.வ. இவறி.

[Skt. lōbhin > த. உலோபி.]

lōbhin என்னும் வடசொல் குழப்பம், பொறுமை, இன்மை, விருப்பம், அவா, பேராசை போன்ற பொருள்களுள்ள *lobha* என்னும் அடியிலிருந்து பிறந்தது (மா.வி.). தமிழில் இச்சொல் பேராசையுடையவன், ஈயாதவன் என்னும் பொருளிலேயே பெரு வழக்கெய்தியுள்ளது.

உலோபி[2]**-த்தல்** *ulōbi-*, 11 செ.கு.வி(v.i.) 1. செட்டுச் செய்தல்; to be stingy, miserly. 2. பற்றுள்ளஞ் செய்தல்; to be sordid, greedy.

[Skt. lōbha > த. உலோபி-,]

lōbha என்னும் சொல் வடமொழியில் வினைப்படும் போது *lōbhaniya* என்று வடிவம் பெறும். உலோபித்தல் என்னும் தமிழ் வடிவம் பெயர் *lōbha* விலிருந்து உருவானதாகும்.

உலோபி[3]**-த்தல்** *ulōbi-*, 11 செ.குன்றாவி. (v.t.) கெடுதல் விகாரமடைவித்தல்; (Gram.) to bring about elision in sandi. *"சவ்வை யுலோபித்து" (வீரசோ. வேற். 5, உரை).*

[Skt. lōpa > த. உலோபி-,]

உலோபு-தல் *ulōbu-*, 10 செ.கு.வி.(v.i.) **உலோபி**[2]**-தல்** பார்க்க; see *ulōbi-*. *"ஏதுமுலோ பாய்காண்" (திவ். பெரியாழ். 2, 7, 6).*

[Skt. lōbha > த. உலோபு-,]

உலோமசம் *ulōmaśam*, பெ.(n.) சடாமாஞ்சில்; spikenard herb.

[Skt. lōmaśa > த. உலோமசம்.]

உலோமதகரி *ulōmadagari*, பெ.(n.) கல்லால்; dalhousie's fig.

உலோமம்[1] *ulōmam*, பெ.(n.) வால் (நாநார்த்த.); tail.

[Skt. lōman > த. உலோமம்.]

உலோமம்[2] *ulōmam*, பெ.(n.) புறமயிர் (சங்.அக.); hair growing over the body of men or of animals.

[Skt. lōman > த. உலோமம்.]

உலோலம் *ulōlam*, பெ.(n.) 1. அலைகை (நாநார்த்த.); wandering. 2. காமம்; cupidity, lust.

[Skt. lōla > த. உலோலம்.]

உலோலம்பம் *ulōlambam*, பெ.(n.) வண்டு; beetle.

உலோலன் *ulōlaṉ*, பெ.(n.) சிற்றின்பத் தோய்வாளன்; a volluptuary.

த.வ. ஓலன்.

[Skt. lola > த. உலோலம் → உலோலன்.] 'ன்' ஆ.பா.ஈறு.

உலோலாட்சவிருட்சம் *ulōlāṭca-viruṭcam*, பெ.(n.) மலைமா; hill mango.

உலோலிதம் *ulōlidam*, பெ.(n.) 1. அசைவு; shaking. 2. நடுக்கம்; trembling.

உலோலிதமுகம் *ulōlida-mugam*, பெ.(n.) ஆழ்ந்த கருத்தொன்றைத் தோள்மீது தலைசாய்த்து குறிப்பாய் விளக்கும் முகவெளிப்பாடு (முகவபிநயம்) (சது.); (Nāṭya) mode of facial gesticulation consisting in the person inclining his head to a side over his shoulder, to indicate that he is absorbed in deep through, one of 14 *muga-v-abinayam*.

[உலோலித +முகம்.]

[Skt. lōlita > த. உலோலிதம்.]

உலோலுபன் *ulōlubaṉ*, பெ.(n.) சிற்றின்ப விருப்பமுள்ளவன்; one indulging in sexual pleasures.

[Skt. lōlupa > த. உலோலுப → உலோலுபன்.] 'ன்' ஆ.பா.ஈறு.

உலோலை *ulōlai*, பெ.(n.) நாக்கு; the tongue.

உலோவு-தல் *ulōvu-*, 5 செ.கு.வி.(v.i.) **உலோபி²-தல்** பார்க்க; see *ulōbi²-*. "நீரென்னுயிர்தரவு லோவினீரோ" (கம்பரா. கார்முக. 46).

[Skt. lōbha > த. உலோவு-தல்.]

உவ்வாதம் *uvvādam*, பெ.(n.) தவக் கோட்பாடு (நீலகேசி. அரும்.); austerity.

த.வ. துறவறம்.

உவகாலி *uvakāli*, பெ.(n.) கடுகு ரோகிணி; a purgative drug.

உவகுருவாணன் *uvaguruvāṇaṉ*, பெ.(n.) இல்லறத்தையடையும் நிலையிலிருக்கும் மாணி (பிரமசாரி) (கூர்மபு. வருண. 37); brahmachārin who is about to become a house-holder.

[Skt. upa+kurvāṇa > த. உவகுருவாணன்.]

உவகுலம் *uvakulam*, பெ.(n.) 1. திப்பிலி (மலை.); long pepper. 2. திரிபலை (மலை.); the three myrobalans.

[Skt. upakulyā > த. உவகுலம்.]

உவசமம் *uvaśamam*, பெ.(n.) அமைதி (உபசாந்தம்); quiescence. "உவசமத்தி னுய்ப்பனவும்" (நீலகேசி. 113).

[உவ + சமம்.]

[Skt. upa > த. உவ.]

உவணகேதனன் *ulvaṇa-kēdaṉaṉ*, பெ.(n.) திருமால் (சூடா.); Visṇu, who has the white-headed kite on his banner.

உவரம் *uvaram*, பெ.(n.) கண்ட திப்பிலி; a kind of long pepper.

உவரோதம் *uvarōdam*, பெ.(n.) இடையூறு; obstruction, impediment, obstacle. "வசையபராதமாய வுவரோதம்" (தேவா. 212, 5).

[Skt. upa-rodha > த. உவரோதம்.]

உவனாயம் *uvaṉāyam*, பெ.(n.) துவைத்துக் கட்டும் மருந்து; unguent applied to a wound or sore. "உவனாயத்தால்.......... கானோ யொழித்தனர்" (உபதேசகா. சிவபுண். 346).

[Skt. upa-nāha > த. உவனாயம்.]

உவனியம் *uvaṉiyam*, பெ.(n.) **உபநயனம்¹** பார்க்க; see *ubanayaṉam*. "ஓது வாய்மையு முவனியப் பிறப்பும்" (திவ். பெரியதி. 5, 8, 7).

[Skt. upa-nayana > த. உவனியம்.]

உவாத்தி *uvātti*, பெ.(n.) கற்பிப்போன், ஆசிரியன்; teacher. "ஆரண வுவாத்தி யபஞ்சிகன்" (மணிமே. 13, 4).

[Skt. upādhyāya > த. உவாத்தி.]

உவாத்திகன் *uvāttigaṉ*, பெ.(n.) ஆசிரியன், கற்பிப்போன் (மணிமே. 13, 4, அரும்.); teacher.

[Skt. upādhyāya > த. உவாத்திகன்.]

உவாத்திச்சி *uvātticci*, பெ.(n.) கற்றுத்தருபவள், ஆசிரியை; lady teacher, school mistress.

[உவாத்தி + இச்சி]

[Skt. upadhyāya > த. உவாத்தி.] 'இச்சி' பெ.பா.ஈறு.

உவாத்திமை *uvāttimai*, பெ.(n.) எழுத்தறிவிக்கும் தொழில்; profession of a school master, teaching profession. "அவன் உபாத்திமைத் தொழில் செய்கிறான்".

[Skt. upādhyāya > த. உவாத்தி → உவாத்திமை.] 'மை' தொ.பெ.ஈறு.

உவாத்தியன் *uvāttiyaṉ*, பெ.(n.) ஆசிரியன், கற்பிப்போன் (மணிமே. 13, 4, அரும்.); teacher.

[Skt. upādhyāya > த. உவாத்தியன்.]

உவாத்தியாயன் *uvāttiyāyaṉ*, பெ.(n.) **உபாத்தியாயன்** பார்க்க; see *ubāttiyāyaṉ*.

[Skt. upādhyāya > த. உவாத்தியாயன். 'ன்' ஆ.பா.ஈறு.]

உவாத்தியாயனி *uvāttiyāyaṉi*, பெ.(n.) ஆசிரியை; lady teacher.

[Skt. upādhyāyani > த. உவாத்தியாயனி.]

உவாத்தியாரம்மாள் *uvāttiyārammāḷ,* பெ.(n.) ஆசிரியை; lady teacher.

[உவாத்தியார் + அம்மாள்.]

[Skt. upādhyāya > த. உவாத்தியாய.]

உவாத்தியான் *uvāttiyāṉ,* பெ.(n.) ஆசிரியன் (ஆசாரக். 17); teacher.

[Skt. upādhyāya > த. உவாத்தியான்.] 'ன்' ஆ.பா.ஈறு.

உவாத்தினி *uvāttiṉi,* பெ.(n.) **உபாத்தியாயனி** பார்க்க; see *ubāttiyāyaṉi.*

[Skt. upādhyāyaṉi > த. உவாத்தினி.]

உவாத்து *uvāttu,* பெ.(n.) ஆசிரியர் (உபாத்தியாயன்); teacher, male or female. *"பொறைக்கு உவாத்தாவாரும்" (ஈடு. 9, 8, 5).*

[Skt. upādhyāya > த. உவாத்து.]

உவாதி[1] *uvādi,* பெ.(n.) எல்லை; limitation, condition, as of time or space. *"காலத்துவாதிதனை" (திருவாய். நூற். 33).*

[Skt. upādhi > த. உவாதி.]

உவாதி[2] *uvādi,* பெ.(n.) கடுந்துன்பம்; severe pain, distress.

[Skt. upādhi > த. உவாதி.]

உவாந்தி *uvāndi,* பெ.(n.) கக்கல்; nausca. vomiting.

த.வ. வாயாலெடுக்கை.

[Skt. vānti > த. வாந்தி > உவாந்தி.]

உவாந்திபிராந்தி *uvāndi-pirāndi,* பெ.(n.) கக்கல் கழிச்சல் (வாந்தியும், மயக்குமுங் கூடிய வயிற்றுப் போக்கும்); diarrhoea attended with bewilderment.

உவாலம்பம் *uvālambam,* பெ.(n.) **உபாலம்பனம்** (வின்.) பார்க்க; see *uvālambaṉam.*

[Skt. upā-lambhana > த. உவாலம்பம்.]

உவாலம்பனம் *uvālambaṉam,* பெ.(n.) **உபாலம்பனம்** பார்க்க; see *ubā-lambaṉam.* *"சந்திரோவாலம்பனம்" (வின்.).*

[Skt. upa-lambhana > த. உவாலம்பனம்.]

உவையம் *uvaiyam,* பெ.(n.) **உபயம்**[1] பார்க்க; see *ubayam*[1]. *"உவையம் முறுமுலகின்" (கம்பரா. நிகும். 156).*

[Skt. ubhaya > த. உவையம்.]

உற்கடம் *uṟkaḍam,* பெ.(n.) 1, நன்னாரி (வின்.); Indian sarasaparilla. 2. செருக்கு; pride. 3. வெறி; intoxication.

உற்கடிதம் *uṟkaḍidam,* பெ.(n.) (பஞ்ச) தாளமைந்தனுளொன்று (பரத. தாள. 15); (Mus.) variety of time-measure, represented thus, 222 one of *pañja-tāḷam.*

உற்கம் *uṟkam,* பெ.(n.) 1. கடைக்கொள்ளி; fire-brand. 2. அனற்றிரள் (திவா.); a body of fire, flame. 3. விண்வீழ்கொள்ளி; meteor, shooting star. *"வான்பூத்த வுற்கம்" (காசிக. கணபதிகா. 13).*

[Skt. ulka > த. உற்கம்.]

உற்கமபாத்திரம் *uṟkama-pāttiram,* பெ.(n.) சுண்ட வைக்கும் ஏனம் (பாத்திரம்); evaporating dish or vessel.

உற்கமம் *uṟkamam,* பெ.(n.) ஆவியாகப் போக்கிச் சுண்ட வைத்தல்; the conversion of a fluid or a solid into vapour - evaporation.

உற்கமமுறை *uṟkama-muṟai,* பெ.(n.) சுண்ட வைக்கும் முறை; the process of evaporation.

[உற்கம + முறை.]

[Skt. ulkā > உற்கமம்.]

உற்கமோபகரணம் *uṟkamōpa-karaṇam,* பெ. (n.) சுண்ட வைக்கப் பயன்படுத்தும் துணைக்கருவி; an apparatus used in evaporation.

[உற்கமம் + உபகரணம்.]

உற்கலம் *uṟkalam,* பெ.(n.) பண்டைய நிலப் பகுதி (பஞ்சகௌடத்தொன்று) (சது.); name of an ancient district including a large part

of Orissa, one of *pāñja-kauḍam.*

[Skt. utkala > த. உற்கலம்.]

உற்காசுதி *uṟkāšudi,* பெ.(n.) நீண்ட வெலும்பு; any shaft of a long bone.

உற்காதா *uṟkādā,* பெ.(n.) வேள்வி (யாகம்) செய்யும் மத குருமாருளொருவர்; one of the four principal priests at a sacrifice, who chants the hymns of the *šāmavēda.* *"பிரமனுற்காதா" (மச்சபு. சந்திரோ. 12).*

[Skt. ud-gāta > த. உற்காதா.]

உற்காமுகம் *uṟkā-mugam,* பெ.(n.) கொள்ளிவாய்ப் பேய்; a phantom, will 'o' the wisp; marsh-gas.

[உற்கா + முகம்.]

[Skt. ulkā > த. உற்கா. த. முகம் > Skt. mukha.]

உற்காரசூலை *uṟkāra-šūlai,* பெ.(n.) ஒருவகை குத்தல் நோய் (வின்.); pain in the joints, an arthritic disease.

[உற்கார + சூலை.]

[Skt. ud-gāra > த. உற்கார.]

சுல் → சூலை = குத்தும் கூரிய படைக்கலம். சூல் → சூலம் = முக்கவர்வேல், இடிதாங்கி. சூலுதல் = குத்துதல். சூல் → சூலை = குத்தல் குடைச்ச லெடுக்கும் அல்லது கைகாலை முடக்கும் நோய்.

உற்காரம்¹ *uṟkāram,* பெ.(n.) தூற்றுந்தவசம் (தானியம்) (வின்.); grain piled up for winnowing.

[Skt. ut-kāra > த. உற்காரம்.]

உற்காரம்² *uṟkāram,* பெ.(n.) வாயாலெடுக்கை (வாந்தி); vomiting. *"உதானன் களமுற் நுற்காரம் புரியும்" (வேதா. சூ. 75).*

[Skt. ud-gāra > த. உற்காரம்.]

உற்காரிகை *uṟkārigai,* பெ.(n.) மாவுக்களி; a soft composition of rice or wheat or something molifying to be applied to sores, abscesses etc.

உற்காரிப்பு *uṟkārippu,* பெ.(n.) ஏப்பம்; eructation or act of belching.

உற்கிரமச்சா *uṟkirama-c-cā,* பெ.(n.) ஒருவகைக் குறிப்பு மொழி (ஒரு பரிமாண சங்கேதம்) (வின்.); (Math.) the versed sine.

[Skt. ut-krama+jyā > த. உற்கிரமச்சா.]

உற்கிருட்டம் *uṟkiruṭṭam,* பெ.(n.) மேன்மை(யானது); that which is excellent, superior, eminent.

[Skt. ut-kṛsta > த. உற்கிருட்டம்.]

உற்கிருதி *uṟkirudi,* பெ.(n.) அடிதொறும் இருபத்தா றசைகளுடன் நான்கடியினதான வடமொழியிலுள்ளதொரு பாவகை (வடமொழி சத்தவகை) (யாப்.வி. 94, பக். 476); a Sanskrit metre of four lines of 26 syllables each.

[Skt. utkṛti > த. உற்கிருதி.]

உற்கிதை *uṟgidai,* பெ.(n.) முளைமந்திரம், ஓம். (பிரணவம்); the syllable ōm, the triliteral name of god.

[Skt. ud-githa > த. உற்கீதை.]

உற்கிரணம் *uṟkiraṇam,* பெ.(n.) வாயாலெடுத்தல் (வாந்தி செய்தல்); vomiting.

உற்குரோசம் *uṟkurōšam,* பெ.(n.) நீர்வாழ்பறவை (பிங்.); a water bird.

உற்சங்கக்கை *uṟcaṅga-k-kai,* பெ.(n.) இணை (அபிநய)க்கை வகை (பரத. பாவ. 53); (Nāṭya.) gesture with both hands in which the two palms, in *kudaṅgai.* pose are placed against the cheeks, as if to ward off the effect of a cold blast.

[உற்சங்க(ம்) + கை.]

[Skt. ut-saṅga > த. உற்சங்கம்.]



உற்சங்கம் *urcangam,* பெ.(n.) இணைக்கை வகை (சிலப். 3, 18, உரை); (Nāṭya.) gesture with both hands in which one hand in *ilam-pirai,* pose and the other in arāḷam pose are brought together in such a manner that one wrist may go over the other.

[Skt. ut-sanga > த. உற்சங்கம்.]

உற்சர்க்கம் *urcarkkam,* பெ.(n.) மலம்; excretion.

உற்சர்ப்பிணி *urcarppini,* பெ.(n.) வளம் (போகம்) பெருகுங் காலம்; days or prosperity in a man's life; period of waxing life as opposed to அவசர்ப்பிணி, waning life.

உற்சவபேரம் *urcava-pēram,* பெ.(n.) திருவிழா, மணவிழா மற்றும் இன்னபிற கொண்டாட்டத்தின்போது ஊர்வலமாக எடுத்துச் செல்லும் தெய்வத் திருமேனி (உற்சவ விக்கிரம்); idol taken out in processions.

[Skt. ut-sava+bēra > த. உற்சவபேரம்.]

உற்சவம் *urcavam,* பெ.(n.) 1. திருவிழா; temple festival. *"சிவன்றனுற் சவத்தினும்" (சைவச. பொது. 346).* 2. கொண்டாட்டம்; public festivity. 3. திருமணம் (விவாகம்) (வின்.); wedding.

த.வ. விழா.

[Skt. ut-sava > த. உற்சவம்.]

ut-sava என்னும் வடசொல் மேலே செல்லக் காரணியமாக இருத்தல் என்னும் பொருள்படும் ut-sū என்னும் அடியிலிருந்து பிறந்தது. இச்சொற்கு முயற்சி, தொடக்கம், விழா, கொண்டாட்டம், களிப்பு, மகிழ்ச்சி, மகிழாரவாரம் போன்ற பொருள்கள் உள்ளன (மா.வி.). இவற்றுள் விழா, கொண்டாட்டம் என்னும் பொருள்களுடன் தமிழில் உற்சாகம் வழக்கெய்தி உள்ளது.

உற்சவமூர்த்தி *urcava-mūrtti,* பெ.(n.) **உற்சவர்** பார்க்க; see *urcavar.*

[Skt. ut-sava+mūrtti > த. உற்சவமூர்த்தி.]

உற்சவர் *urcavar,* பெ.(n.) திருவிழாவின் போது நாட்டுமக்கள் காண்குறவும் வழிபடவும், ஊர்வலத்தில் கொண்டு வரப்படும் திருமேனி (உற்சவத்தி லெழுந்தருளும் விக்கிரகம்); idol taken out in processions.

[Skt. ut-savar > த. உற்சவர்.]

உற்சவவிக்கிரகம் *urcava-viggiragam,* பெ.(n.) **உற்சவர்** பார்க்க; see *urcavar.*

[Skt. ut-sava-vi-graha > த. உற்சவ விக்கிரகம்.]

உற்சாகஞ்செய்-தல் *urcagañ-cey-,* 1 செ.கு.வி.(v.i.) பெருமுயற்சி செய்தல் (வின்.); to make great efforts.

[உற்சாகம் + செய்-,]

[Skt. ut-saga > த. உற்சாகம்.]

உற்சாகப்பிழை *urcāga-p-pilai,* பெ.(n.) ஊக்கமின்மை (வின்.); aversion, unwillingness, backwardness.

[உற்சாகம் + பிழை.]

[Skt. ut-sāha > த. உற்சாகம்.]

உற்சாகபங்கம் *urcāga-bangam,* பெ.(n.) ஊக்கக்கேடு; loss of zeal, dejection of spirits. *"உற்சாக பங்க முற்றேயுறைகின் றாரால்" (சிவரக. நந்திகணங்கள். 5).*

[Skt. ut-sāga+bhanga > த. உற்சாகபங்கம்.]

உற்சாகம் *urcāgam,* பெ.(n.) 1. ஊக்கம் (பிங்.); zeal, promptitude, spontaneity, alacrity. 2. முயற்சி (பிங்.); effort, exertion. 3. மகிழ்ச்சி; joy, happiness. *"உற்சாகங் கொண்டு மச்சைத் தாவுகிறான்" (வின்.).*

[Skt. ut-sāha > த. உற்சாகம்.]

வடமொழியில் utsāha என்னும் சொல்லுக்கு ஆற்றல், வலிமை, விருப்ப ஆற்றல், உறுதிப்பாடு, முயற்சி, விடாமுயற்சி, தொடர் முயற்சி, ஊக்கம், களிப்பு, மகிழ்ச்சி போன்ற பொருள்கள் உள்ளன (மா.வி.). இவற்றுள் ஊக்கம், முயற்சி, மகிழ்ச்சி ஆகிய பொருள்களுடன் இச்சொல் தமிழில் பெருவழக்கு எய்தியுள்ளது.

உற்சாகமருந்து *urcāga-maruntu,* பெ.(n.) மகிழ்வூட்டும் மருந்து, சுறுசுறுப்பை உண்டாக்கும் மருந்து; cheering stimulant.

[உற்சாகம் + மருந்து.]

[Skt. ut-sāha > த. உற்சாக.]

முள் → முரு → முருகு = முரு → மரு = மணம். மருவுதல் = கலத்தல். மரு → மருந்து = நோய் தீர்க்கும் மருந்துத்தழை, நோய் தீர்க்கும் பொருள்.

உற்சேதம் *urcēdam,* பெ.(n.) 1. உடல்; body. 2. புண் (காயம்) பட்டவுடம்பு; a wounded or an injured body.

உற்பட்சமன் *urpaṭcaman,* பெ.(n.) கண் இமை (ரப்பை)யில் மேல் நோக்கிய மயிர்; upturned eye-lashes.

உற்படம் *urpaḍam,* பெ.(n.) மரப் பொந்தினின்று ஒழுகும் பால்; the sap issuing from the cleft of a tree.

உற்பத்தி *urpatti,* பெ.(n.) தோற்றம்; birth, origin, derivation. *"உற்பத்தியுநாசமும்" (திருநூற். 79).* 2. கருத்தோற்றம்; conception.

[Skt. ut-patti > த. உற்பத்தி.]

வடமொழியில் ut-pat என்னும் சொல்லிற்குப் பறத்தல் அல்லது மேலே குதித்தல், மேனோக்கிப் பறத்தல், உயர்ந்து செல்லுதல், எழுதல், பள்ளியெழுதல், மேலே எறிதல், தொடங்குதல், விட்டோடுதல், உருவாக்குதல், தோன்றுதல் போன்ற பொருள்கள் உள்ளன (மா.வி.). இவற்றுள் தமிழில் உருவாக்குதல், தோன்றுதல் போன்ற சில பொருள்களே வழக்கூன்றியுள்ளன.

உற்பத்திக்காலம் *urpatti-k-kālam,* பெ.(n.) தோன்றுங் காலம்; time of birth or origin.

[உற்பத்தி + காலம்.]

[Skt. utpatti > த. உற்பத்தி. கால் > காலம்.]

உற்பத்திக்கிரமம் *urpatti-k-kiramam,* பெ.(n.) தோன்றுமுறை; the successive stages of creation as described below.

பெரும (பிரமம்)த்திலிருந்து வான்வெளியும் (ஆகாசமும்), வான் வெளியிலிருந்து வளியும் (வாயுவும்), வளியி (வாயுவி)னின்று நீரும், நீரி னின்று மண்ணும் மண்ணினின்று புற்பூண்டு முதலிய நிலைத் திணையும், நிலைத் திணையி னின்று உணவும், உணவினின்று விதை அதாவது விந்து (சுக்கிலம்)வும், விதையினின்று மனிதரும் தோன்றுவதாக வரிசை யொழுங்குபடக் கூறுவர் (மா.வி.).

உற்பத்திகாலினம் *urpatti-kāliṉam,* பெ.(n.) பிறக்கும் பொழுதே உண்டான குறைபாடு; defects existing at or even before birth-congenital defects.

உற்பத்திகாலினல் *urpatti-kāliṉal,* பெ.(n.) பிறக்கும் பொழுது நேர்வது; taking place at the time of birth.

உற்பத்திசமவாதம் *urpatti-šama-vādam,* பெ.(n.) சிவனிய (சைவ) சமயத்தின் அகச் சமயமாறனுளொன்று (மாவிரதம்); a section of šaivaism.

[உற்பத்தி + சம + வாதம்.]

[Skt. ut-patti+vādam > த. உற்பத்திவாதம்.]

உற்பத்திப்பிரயோகம் *urpatti-p-pirayōgam,* பெ.(n.) காரண காரிய வகைகளால் தோற்றுகை; production by the join operation of the cause and an effect.

உற்பதனம் *urpadaṉam,* பெ.(n.) 1. உயரப் பறத்தல்; flying upwards. 2. பறப்பதற்குப் பலுக்கும் (உச்சரிக்கும்) மந்திரம்; a spell by means of which one is able to fly upwards or to rise up from the earth. 3. பிறப்பு; birth.

உற்பலகண்டிகம் *urpala-kaṇḍigam,* பெ.(n.) மஞ்சட் சந்தனம், அரிச்சந்தனம்; a species of sandal paste of brass or yellow colour and very fragrant.

உற்பலகோபம் *urpala-kōbam,* பெ.(n.) ஊதற்கொடி; a dark blue creeper.

த.வ. சமதேவிப் பூடு. மலையாளத்தில் இதனைப் பால்வள்ளி எனக் குறிப்பர்.

உற்பலசட்கம் *urpalašaṭgam,* பெ.(n.) ஒரு வகை மருந்து; the name of a medicament.

உற்பலசட்சு *urpala-šatcu,* பெ.(n.) 1. முளரி (தாமரை)க் கண்; lotus eye. 2. நேர்த்தியான கண்; fine eye.

உற்பலசாகிதம் *urpala-šāgidam,* பெ.(n.) கருவாகை; black or fragrant sirissa.

உற்பலசாரிவம் *urpala-šārivam,* பெ.(n.) **உற்பலகோபம்** பார்க்க; see *urpala-kōbam.*

உற்பலசாசனன் *urpala-šāšanan,* பெ.(n.) பெருங்காயம் (மூ.அ.); asafoetida.

[Skt. utpala+šāsanan >த. உற்பலசாசனன்.]

உற்பலசானன் *urpala-šānan,* பெ.(n.) **உற்பலசாசனன்** (வின்.) பார்க்க; see *urpala-šāšanan.*

[Skt. utpalasāsana > த. உற்பலசானன்.]

உற்பலபத்திரகம் *urpala-pattiragam,* பெ.(n.) பட்டைக்கத்தி; a broad bladed knife or lancet used by surgeons.



உற்பலபத்திரம் *urpala-pattiram,* பெ.(n.) 1. நெய்தல் இலை; the leaf of a water lily. 2. உகிர் (நக)க் குறி; (in erotic science), the nail mark on the breast and other prescribed or recognised parts of a woman, caused by her love.

உற்பலபேதியகம் *urpalapēdiyagam,* பெ.(n.) ஒரு வகைக் கட்டு; a kind of bandage.

உற்பலம்[1] *urpalam,* பெ.(n.) 1. கருநெய்தல் (சூடா.); blue Indian water lily. 2. செங்குவளை (திவா.); red Indian water-lily. 3. செங்கழு நீர்; purple Indian water-lily. 4. கோட்டம் (மலை.); Arabian costum. 5. குவளை; water lily in general. 6. நீராலம்பலுக்குள்ள பொதுப்பெயர்; a general name of the different species of the nymphaca and the pontederia.

[Skt. ut-pala > த. உற்பலம்.]

உற்பலம்[2] *urpalam,* பெ.(n.) 1. ஒரு வகைச் சிற்றுண்டி (பலகாரம்); a kind of cake. 2. மெலிந்தது; that which is emaciated.

உற்பலவரை *urpala-varai,* பெ.(n.) திருத்தணிகைமலை; another name for Tiruttani-hill, in Tiruvallūr district where there is a tank abounding in water lilies. *"உற்பலவரையின் வாழ்வோர்" (கந்தபு. வள்ளி. 228).*

[உற்பல + வரை.]

[Skt. ut-pala > த. உற்பல.]

உற்பலவனதை *urpala-vanadai,* பெ.(n.) சிவதை; Indian jalap.

உற்பலாதி *urpalādi,* பெ.(n.) குளிர்ச்சியைக் கொடுக்கும் மருந்துச் சரக்கு; drugs of cold producing potency cooling drugs.

உற்பவநாடி *urpava-nādi,* பெ.(n.) குழந்தைகளுக்கேற்படும் நாடி நடை; pulsation in a new-born baby.

[உற்பவ + நாடி.]

[Skt. ud-bhava > த. உற்பவம்.]

நாளி → நாழி → நாடி = அரத்த அல்லது மூச்சுக்குழாய், ஊதை (வாத) பித்துக் கோழை நாடி, நாடித்துடிப்பு (வ.வ.1,19).

உற்பவம் *urpavam,* பெ.(n.) 1. தோற்றம், உருவாக்கம் (உற்பத்தி); origin, birth. *"மானுடவுற்பவம் பெற்று வாழுத லரிது" (பாரத. சஞ்சய. 7).* 2. கருக்கொள்ளுகை; conception.

[Skt. vd-bhava > த. உற்பவம்.]

உற்பவமா-தல் *urpava-mā-,* 6 செ.கு.வி. (v.i.) 1. பிறத்தல்; to be born. 2. கருக் கொள்ளுதல்; to conceive.

[உற்பவம் + ஆ-,]

[Skt. ud-bhava > த. உற்பவம்.]

உற்பவமாலை *urpava-mālai,* பெ.(n.) திருமாலின் பதின் தோற்றரவுக் கதைகளையும் ஆசிரிய மண்டில (விருத்த)த்தாற் கூறும் தெய்வப் பனுவல் (பிரபந்தம்) (தொன். 283, உரை); poem which describes the ten incarnations of Viṣṇu.

[உற்பவம் + மாலை.]

[Skt. ud-bhava > த. உற்பவம். மால்>மாலை.]

உற்பவி[1]-த்தல் *urpavi-,* 11 செ.கு.வி.(v.i.) தோன்றுதல்; to be conceived, be born; to originate, come into existence, to rise, as the sun. *"உற்றயோனி கடம்பிலுற்பவியாமல்" (பாரத. சஞ்சய. 7).* 2. கரு உண்டாதல்; to be conceived.

[Skt. ud-bhava > த. உற்பவி-த்தல்.]

உற்பவி[2]-த்தல் *urpavi-,* 11 செ.குன்றாவி. (v.t.) தோற்றுவித்தல்; to bring into existence, create. *"நாவல னோமத்தீயி னம்மையுற்பவித்து விட்டான்" (பாரத. நச்சு. 41).*

[Skt. ud-bhava > த. உற்பவி-,]

உற்பவிப்பு *urpavippu,* பெ.(n.) கருவுறுகை; formation in the womb, conception, fructification.

[உற்பவி → உற்பவிப்பு. 'பு' தொ.பெ.ஈறு.]

உற்பன்னம் *urpannam,* பெ.(n.) 1. **உற்பனம்[1]** பார்க்க; see *urpanam.* 2. விடத்தேர்; mint. 3. தோற்றம்; visible manifestation due to the power of incantation.

[Skt. uyut-panna > த. உற்பன்னம்.]

உற்பன்னமருந்து *urpanna-marundu,* பெ.(n.) நற்கலை கூட்டு மருந்து; a medicine of extraordinary virtues.

[உற்பன்ன + மருந்து.]

[Skt. urpanna > த. உற்பன்ன. மரம்→மரு → மருந்து.]

உற்பனம்[1] *urpanam,* பெ.(n.) 1. வல்விரைந் தறிகை; quick apprehension. *"உற்பனமாகக் கிரகிக்கிறது.* 2. ஏற்பு, நன்று (உத்தமம்); excellence, exquisiteness. *"அவனிடத்தில் உற்பனமான செயல் (காரியங்)களுண்டு".*

[Skt. ut-panna > த. உற்பனம்.]

உற்பனம்[2] *urpanam,* பெ.(n.) 1. தோன்றியது; that which is born, produced. *"உற்பன வேதத் திருப்பொருளை" (இரகு. அரசி. 4).* 2. புள்குறி (நிமித்தம்); omen. *"இவ்வகை யுற்பனங் காட்ட" (விநாயகபு. 75, 125).*

[Skt. ut-panna > த. உற்பனம்.]

உற்பாகநிபாக *urpāga-nibāga,* பெ.(n.) சரியாகச் சமைத்தல்; cooking thoroughly and well, cooking properly.

உற்பாசிதம் *urpāśidam,* பெ.(n.) சரியாகக் கொதிக்க வைத்தல்; heating or boiling thoroughly or correctly.

உற்பாடகம் *urpāḍagam,* பெ.(n.) 1. **உற்பாடம்** பார்க்க; see *urpāḍam.* 2. மரத்தின் வெளிப்பக்கத்துப் பட்டை; the external bark of a tree. 3. சரபப் பறவை (பட்சி); a fabulous eight legged bird supposed to attack even the lion.

உற்பாடசயனம் *urpāḍa-śayanam,* பெ.(n.) 1. நின்றபடித் தூக்கம், கோழித் தூக்கம்; sleeping while standing on the legs as fowls do. 2. ஒரு வகைக் கோழி; a species of fowl. 3. குறைந்த தூக்கம்; slight sleep.

உற்பாடம் *urpāḍam,* பெ.(n.) 1. வேரொடு பிடுங்கல்; pulling up by the root. 2. அழித்தல்; destroying. 3. காதின் வெளிப்புறம் ஏற்படும் நோய்; a disease of the external ear.

உற்பாடனம் *urpāḍanam,* பெ.(n.) 1. வேரொடு பிடுங்கல்; pulling up by the root. 2. கிழித்தல்; tearing out.

உற்பாதகம் *urpādagam,* பெ.(n.) எண்காற்பூச்சி; an insect with eight legs, a spider.



உற்பாதபிண்டம்[1] *urpāda-pindam,* பெ.(n.) தகவு, மேதாவி; genius, prodigy.

[உற்பாத + பிண்டம்.]

[Skt. utpāta > த. உற்பாதம். பிள் → பிண்டி. பிண்டித்தல் = தொகுத்தல், திரட்டுதல். பிண்டி = கூட்டம், வடிவம். பிண் → பிண்டி → பிண்டம்.]

உற்பாதபிண்டம்[2] *urpāda-pindam,* பெ.(n.) தீயநிமித்தமாகக் கொடூரமான உருவத்துடன் பிறந்த பிண்டம்; a foetus of unnatural form on of great size or one exhibiting very abnormal structure or malformation - monster.

[உற்பாதம் + பிண்டம்.]

[Skt. utpāta > த. உற்பாதம். பிண் → பிண்டி → பிண்டம்.]

உற்பாதம் *urpādam,* பெ.(n.) 1. தீய(துர்க்)குறி; portent, evil omen, preternatural, phenomenon boding calamity. *"உற்பாதமாகப் படியிடை யற்று வீழ்ந்த......... பதாகை" (கம்பரா.தாட.74).* 2. கடுந்துன்பம்; excess of trouble, great suffering or pain.

[Skt. ut-pāta > த. உற்பாதம்.]

உற்பாதயோகம் *urpāda-yōgam,* பெ.(n.) ஒரு நன்றல்லா (தீய) வேளை (அசுபயோகம்); (Astrol.) an inauspicious conjunction of a week-day with a lunar asterism, one of six *yōgam.*

[Skt. ut-pāta+yōgam > த. உற்பாதயோகம்.]

உற்பாதி-த்தல் *urpādi-,* 11 செ.குன்றாவி. (v.t.) உண்டாக்குதல்; to cause to be. *"வல்லே யுற்பாதிக்கும் வலி" (ஞானா. 15, 15).*

[Skt. ut-pad-, > த. உற்பாதி-,]

உற்பாலனம் *urpālanam,* பெ.(n.) நோயணுகாதபடித் தடுத்துக் கொள்ளல்; preventing from being attacked with diseases by following hygienic principles.

உற்பாலனி *urpālani,* பெ.(n.) நோய்த்தடுப்பு; preventive.

உற்பிச்சம் *urpiccam,* பெ.(n.) உயிர்த் தோற்றம் நான்கனுள் வித்து, வேர் முதலிய வற்றினின்று தோன்றுவன; lives that sprout or germinate from seeds, roots twigs etc., plant life, one of four *uyir-t-tōrram.*

[Skt. ud-bhij-ja > த. உற்பிச்சம்.]

உற்பிசம் *urpišam,* பெ.(n.) நிலத்திணை (தாவரம்); that which is produced from the earth, vegetable kingdom.

உற்பிட்டம் *urpittam,* பெ.(n.) 1. நொறுங்கினது; crushed or bruised. 2. முறிவு அல்லது சுளுக்கு; (in surgery) a kind of fracture or dislocation.

உற்பிண்டிதம் *urpindidam,* பெ.(n.) வீக்கம்; swelling.

உற்பித *urpida,* பெ.(n.) உப்பு (இலவணம்); saline.

உற்பிதம் *urpidam,* பெ.(n.) கறியுப்பு; common or culinary salt.

உற்பிரேட்சை *urpirētcai,* பெ.(n.) தற்குறிப்பேற்றம் (அணியி. 12); (Rhet.) poetical fancy, a figure of speech which consists in the poet indulging in a flight of fancy whereby he seeks to find motives and purposes in natural things and objects.

[Skt. ut-prēksā > த. உற்பிரேட்சை.]

உற்பீசம் *urpīšam,* பெ.(n.) **உற்பிச்சம்** பார்க்க; see *urpiccam.* *"அண்டஞ் சுவேதசங்க ளுற்பீசஞ் சராயுசத்தோடு" (சி.சி.2, 89).*

[Skt. ud-bhij-ja > த. உற்பீசம்.]

உற்பீடம் *urpīdam,* பெ.(n.) நசுக்கல்; squeezing, crushing.

உற்புடகம் *urpudagam,* பெ.(n.) காதின் வெளிப்பக்கத்து நோய்; a disease of the external ear.

உற்பேதம் *urpēdam,* பெ.(n.) முளைத்தல்; germination.

உறுமால் *urumāl,* பெ.(n.) **உருமால்** பார்க்க; see *urumāl.*

[U. rūmāl > த. உறுமால்.]

உன்மச்சனம் *unmaccanam,* பெ.(n.) காய்ச்சல் உண்டாக்குமோர் பெண் பேய்; a female demon causing fever.

உன்மத்தகம் *un-mattagam,* பெ.(n.) 1. ஊமத்தை; thorn apple. *"உன்மத்தக மலர் சூடி" (தேவா. 1200, 6).* 2. கோட்டி (பைத்தியம்); insanity.

[Skt. un-mattaka > த. உன்மத்தகம்.]



உன்மத்தகி *unmattagi,* பெ.(n.) 1. குறிஞ்சா (மலை.); common delight of the woods. 2. சிறுகுறிஞ்சா (மூ.அ.); a medicinal climber.

உன்மத்தகோரம் *unmatta-kōram,* பெ.(n.) கல் வாழை; stone plantain.

உன்மத்ததொந்தம் *unmatta-tondam,* பெ.(n.) கல் வாழை; stone plantain.

உன்மத்தநாகலை *unmatta-nāgalai,* பெ.(n.) தலைக்கு (பிரம்மரந்திரத்திற்கு) மேல் படர்ந் (வியாபித்) திருக்கும் ஒருவகைக் கலை; a subtle emanation of light found extending over the fontanelle or the crown of the head, aura.

உன்மத்தபிரலாபிதம் *unmatta-piralābidam,* பெ.(n.) கோட்டியின் பிதற்றல்; the chatter of a mad man.

உன்மத்தம் *un-mattam,* பெ.(n.) 1. வெறி; madness, infatuation, frenzy. *"உன் மத்த மேற் கொண் டுழிதருமே" (திருவாச. 5, 7).* 2. மயக்கம் (பிங்.); stupor, induced by drugs or mantras. 3. காமன்கணைகளுள் உன்மத்த முண்டாக்குவது (ஆ.நி.); the arrow of Kāma whose dart makes one mad on account of love. 4. காமனைங் கணைகளிலொன்றன் செயல் (பிங்.); action of one of the five arrows of Kāma. 5. ஊமத்தை (திவா.); datura or thorn apple.

[Skt. un-matta > த. உன்மத்தம்.]

உன்மத்தரோகநாசினி *unmatta-rōga-nāsini,* பெ.(n.) மனக்கோளாற்றினையும், மனக்குழப்பத்தினையும் நீக்கும் தன்மை பொருந்திய நறுந்தக்காளி; an unknown plant probably of the physalis genus capable of curing mental disturbances and disorders.

உன்மத்தரோகம் *unmatta-rōgam,* பெ.(n.) வளி முதலா யெண்ணிய மூன்றும் (வாத பித்த சிலேட்டுமம்) தத்தம் வழியின்று தப்பி நடக்கும் போது உடலுக்குச் செல்லும் நரம்புகள் தாக்கப்பட்டு, மன வேறுபாட்டை (விசறப்பத்தை) யுண்டு பண்ணுமோர் வகை மனநலக் கோளாறு (சித்தப் பிரமை); a disease in which the deranged bodily humours transversing the upper part of the body, affect the up coursing nerves and produce thereby a distracted state of the mind, insanity.

உன்மத்தவாதம் *unmatta-vādam,* பெ.(n.) ஊதை (வாத)ச் சூலை அல்லது ஊதை (வாத)ப் பிடிப்பினால் ஏற்படும் கோட்டி (பைத்தியம்);

insanity due to gout or rheumatism, arthritic insanity.

உன்மத்தன் *uṉ-mattaṉ,* பெ.(n.) 1. வெறியன், பித்தன்; mad man, infatuated person. *"மனவாசகங்கடந்தானெனைமத் தோன்மத்த னாக்கி" (திருவாச. 34, 3).* 2. வெறியன்; infatuated or intoxicated person.

[Skt. un-matta > த. உன்மத்தன்.]

உன்மத்தி *uṉmatti,* பெ.(n.) குறிஞ்சா; species of scammony swallow wort.

உன்மத்து *uṉmattu,* பெ.(n.) ஊமத்தை; datura.

[Skt. un-matta > த. உன்மத்து.]

உன்மத்துவம் *uṉmattuvam,* பெ.(n.) 1. மனநலக்கோளாறு (பைத்தியம்); insanity. 2. குடி மயக்கம் (போதை); intoxication.

உன்மத்தை *uṉmattai,* பெ.(n.) ஊமத்தை (மலை.); datura.

உன்மதகம் *uṉmadagam,* பெ.(n.) 1. **உன்மத்தம்** பார்க்க; see *uṉmattam.* 2. செவிப் புறத்தில் வரும் நோய்; a disease of the outer ear.

உன்மதம் *uṉ-madam,* பெ.(n.) 1. கழிகாமம்; intense lust, lasciviousness. *"முன்னமுன் மதத்தான்" (பாரத. குரு. 95).* 2. அறிவு (புத்தி) மயக்கம்; stupor induced by drugs like ganjah. 3. கோட்டி (பைத்தியம்); lunacy. 4. மயக்கம்; giddiness. 5. வெறி; intoxication.

உன்மதனம் *uṉmadaṉam,* பெ.(n.) காமவெறி கொள்ளல்; being inflamed with love.

உன்மதிதம் *uṉmadidam,* பெ.(n.) வெறி (ஆவேசங்) கொள்ளல்; being excited, being wrought up into an ecstatic state.

உன்மந்தம் *uṉmandam,* பெ.(n.) செவ்விண்டுக் கொடி; a red variety of creeper of the species of mimosa.

உன்மனி *uṉmaṉi,* பெ.(n.) ஓகிகளுக்கு மட்டும் புலப்படும் உடம்பிலுள்ளவோர் ஓக இடம் (யோகத்தானம்); a mystic centre of the body, perceived only by person of high spiritual development. *"உன்மனிக்கு ளொளிர்பரஞ் சோதியாம்" (தாயு. பொன். 38).*

[Skt. un-manas > த. உன்மனி.]

உன்மனை *uṉmaṉai,* பெ.(n.) இறங்கு வகை (பிராசாத) வியல்பி னொன்று; (in yoga practice) the mind or soul in the lower or the descending state of (அவஸ்தை) the five stages of consciousness of the soul.

உன்மாதபித்தம் *uṉmāda-pittam,* பெ.(n.) பித்தம் மிகுதியினால் அறிவிழந்து, வெட்கம் விட்டுத் தூக்கமின்றிப் பித்தனைப் போன்ற குணங்களை யுண்டாக்குமோர் வகை நோய்; due to the excessive secretion of bile in the system any uneasiness or indisposition (malaise) marked by loss of sense and shame, sleeplessness and expansive emotional state like that of a lunatic.

[உன்மாதம் + பித்தம்.]

[Skt. un-māda > த. உன்மாதம்.

பித்து → பித்தம்.]

உன்மாதம்[1] *uṉmādam,* பெ.(n.) 1. வெறி; madness, mania, intoxication. 2. மயக்கம்; giddiness. 3. மனநலக்கோளாறு (சித்தப்பிரமை); mentals torpor.

[Skt. un-māda > த. உன்மாதம்.]

உன்மாதம்[2] *uṉmādam,* பெ.(n.) **உன்மத்தரோகம்** பார்க்க; see *uṉmatta-rōgam.*

உன்மாதரோகம் *uṉmāda-rōgam,* பெ.(n.) **உன்மத்தரோகம்** பார்க்க; see *uṉmatta-rōgam.*

உன்மாதவானு *unmāda-vānu,* பெ.(n.) மன நலக்கோளாறு (சித்தப்பிரமை) கொண்டவன்; one who is affected with insanity, lunatic.

உன்மாதனம் *unmādanam,* பெ.(n.) பித்து பிடிக்கச் செய்தல்; causing lunacy as in sorcery.

உன்மானம் *unmānam,* பெ.(n.) அளவிடுகை, நிறுக்கை (பி.வி.23, உரை); weighing, measuring.

[*Skt. un-māna > த. உன்மானம்.*]

உன்மீலனல் *unmīlanal,* பெ.(n.) கண்ணிமைத்தல்; winking.

உன்முகம் *un-mugam,* பெ.(n.) 1. முன்னோக்குகை; raising the face, looking up. 2. உதவியாயிருக்கை; taking a favourable attitude. *"சிவசத்தி அவ்வக் காரியங்களில் உன்முகமாதலாகிய சங்கற்பம்" (சி.போ.5, 2,1,சிற்.).* 3. ஒன்றிற் கருத்தாயிருக்கை (வின்.); intentness in a pursuit.

[*உன் + முகம்.*]

[*Skt. un > த. உன்.*]

உன்முகன் *un-mugan,* பெ.(n.) கருத்தொன்றியிருப்பவன்; he that is intent on an object. *"சூதிலே யுன்முகனாயிருக்கிறான் (வின்.).*

[*உன் + முகன்.*]

[*Skt. un- > த. உன். முகம் → முகன். 'ன்' ஆ.பா.ஈறு.*]

உன்முகி *unmugi,* பெ.(n.) **உன்முகன்** (வின்.) பார்க்க; see *un-mugan.*

[*உன் + முகி.*]

[*Skt. un- > த. உன். முகம் → முகி. 'இ' உடைமை குறித்ததோ ரீறு.*]

உன்மேடம் *unmēdam,* பெ.(n.) கண்ணிமை விரித்தல்; excessive separation of the eye lids, causing the eye to be open very wide.

உன்மேதை *unmēdai,* பெ.(n.) கொழுப்பு; fat.

உன்மை *unmai,* பெ.(n.) தசை பிடுங்குங் குறடு; an instrument by which pieces of flesh or muscles are pulled out from the body.

உன்னதம் *unnadam,* பெ.(n.) 1. உயர்ச்சி (திவா.); height, elevation loftiness. 2. மேன்மை; eminence.

[*Skt. un-nata > த. உன்னதம்.*]

உன்னததானம் *unnata-tānam,* பெ.(n.) உயர்விடம், மேலிடம்; elevated place, high position.

[*Skt. un-nata+stānam > த. உன்னததானம்.*]

உன்னதை *unnadai,* பெ.(n.) மும்முரம்; a periodical increase in the severity of any symptoms or of violence in a disease.

உன்னமாகதம் *unnamāgadam,* பெ.(n.) புல்லாமணக்கு; creeping amanak.

உன்னயம் *unnayam,* பெ.(n.) 1. பரிநூற் கலை (அசுவசாத்திரம்)களுளொன்று; a treatise on the doctrine of diseases of horses. 2. உயர்த்துகை; elevating.

உன்னயவங்கம் *unnaya-vangam,* பெ.(n.) பீசைப்புல்; a kind of grass (unidentified).

உன்னயனம் *unnayanam,* பெ.(n.) 1. நீர் வாங்கல்; drawing out a fluid. 2. நீள நினைத்தல் (ஆலோசித்தல்); thoughtful consideration. 3. ஊழ்கம் (தியானம்); that form of intelligent and exercised attention in which the mind is elevated and the emotions are aroused.

உன்னலாகம் *unnalāgam,* பெ.(n.) முன்றொடரிக்கு எதிரானதும் மாயக் கலையில் பயன்படுவதுமான பின் தொடரி; a plant (unknown) causing bewilderment.

உன்னாகம் *unnāgam,* பெ.(n.) காடி; sour-gruel made from the fermentation or rice.

உன்னாகன்கொடி *unnāgan-kodi,* பெ.(n.) பெருமுசுட்டை; many flowered bind weed.

உன்னாம் *unnām,* பெ.(n.) 1. (யுனானி) சீமையிலந்தைப் பழம்; foreign jujuba. 2. அரத்தி (ஆப்பிள்)ப் பழம்; apple.

உன்னாயங்கொடி *unnāya-ṅ-koḍi,* பெ.(n.) ஒரு வகைக் கொடி; a kind of creeper.

த.வ. ஒணான் கொடி.

உன்னாயம் *unnāyam,* பெ.(n.) 1. சோனைப் புல்; guinea grass. 2. உயர்த்துகை; elevating.

உன்னாலயம் *unnālayam,* பெ.(n.) நெஞ்சாங்குலை (இருதயம்); heart.



உன்னி *unni,* பெ.(n.) 1. ஏறழிஞ்சில்; sage-leaved alangium. 2. உண்ணி எனும் ஒரு வகைக் கொடி; orange flowered lantana. 3. நீள நினைக்கும் (தியானிக்கும்) பொருள்; object of contemplation. 4. கருத்தொன்றிப் பார்க்கும் பொருள்; (in occult science) subject which is concentrated upon.

உன்னிசன்னி *unni-šanni,* பெ.(n.) இடைவிடாது கண்ணூன்றிப் பார்த்தலினாலும் நினைத்தல் அல்லது எண்ணு (யோசித்) தலாலும் ஏற்படும் மயக்கம் அல்லது துன்பம்; fainting or temporary suspension of consciousness due to steadfast looking or by constant thinking.

உன்னு *unnu,* பெ.(n.) 1. சடைச்சி; common Indian linden. 2. பலிசை; sweet falsah.

உனத்தகு *unattagu,* பெ.(n.) குறிஞ்சா; Indian ipecacuanha.

உனத்திதம்போக்கி *unattidampōkki,* பெ.(n.) கற்றுளசி; stone basil.

உனினம் *uninam,* பெ.(n.) சிறு பூனை; woolly caper.

ஊக்கு *ūkku,* பெ.(n.) கொக்கி; clasp, used in clothing.

[E. hook > த. ஊக்கு.]

ஊக்கும் *ūkkum,* பெ.(n.) உத்தரவு; order (P.T.L.).

[U. hukkum > த. ஊக்கும்.]

ஊகடகம் *ūgaḍagam,* பெ.(n.) ஒரு வகை மீன்; a kind of fish.



ஊகடன் *ūkaḍan,* பெ.(n.) முருங்கை (மூ.அ.); horse radish tree.

ஊகண்டகம் *ūgaṇḍagam,* பெ.(n.) கடலை; Bengal gram.

ஊகத்தாதனம் *ūgattādanam,* பெ.(n.) ஒக விருக்கை வகை (யோகாசன வகை) (தத்துவப். 107, உரை); (šaiva.) a yōgicposture.

ஊகாக்கியம் *ūgākkiyam,* பெ.(n.) கலவைக் கீரை; different varieties of greens mixed together for use in food.

ஊகாஞ்சிதம் *ūgāñjidam,* பெ.(n.) தற்குறிப் பேற்றயணி வகை (தொன். வி. 346); a figure of speech.

[Skt. ūha+añcita > த. ஊகாஞ்சிதம்.]

ஊந்து *ūndu,* பெ.(n.) கச்சோலம் (வின்.); cardamom husk.

ஊர்ச்சங்கிழங்கு *ūrccaṅ-kiḻaṅgu*, பெ.(n.) நளி (கார்த்திகை)க் கிழங்கு; the root of November flower plant.

[ஊர்ச்ச(ம்) + கிழங்கு. கீழ் > கீழ்ங்கு > கிழங்கு.]

ஊர்ச்சசம் *ūrccašam*, பெ.(n.) வலிமை (பலம்); strength.

ஊர்ச்சம் *ūrccam*, பெ.(n.) 1. நளி (கார்த்திகை) மாதம்; the Tamil month corresponding to November. 2. உயிர்; life. 3. மூச்சு; breath.

ஊர்ச்சிதப்படு-தல் *ūrccida-p-paḍu-*, 20 செ.கு.வி.(v.i.) நிலைப்படுதல் (ஸ்திரப் படுதல்); to be confirmed, as in an appointment, to be ratified, as an arrangement.

[ஊர்ச்சிதம் + படு-,]

[Skt. ūrjita > த. ஊர்ச்சிதம். 'படு' து.வி.]

ஊர்ச்சிதம் *ūrccidam*, பெ.(n.) 1. நம்பகத் தன்மை; confirmation, ratification. 2. வலுக்கட்டாயம்; importunity, compulsion. *'அவ்வளவு ஊர்ச்சிதமாய்க் கேட்கக்கூடாது'.*

[Skt. ūrjita > த. ஊர்ச்சிதம்.]

வடமொழியில் வலிமைப்படுத்துதல், எழுச்சியூட்டுதல், புத்துயிரூட்டுதல் எனப் பொருள்படும் *ūrj* என்னும் அடியிலிருந்து உருவான *ūrjita* என்னும் சொல்லிற்கு வலிமை, ஆற்றல், பேராண்மை போன்ற பொருள்கள் உள்ளன (மா.வி.). தமிழில் இச்சொல் பெரும்பான்மை உறுதிப்படுத்துதல் என்னும் பொருளிலேயே வழக்கூன்றியுள்ளது.

ஊர்ணநாபி *ūrṇa-nābi*, பெ.(n.) சிலந்திப் பூச்சி வகை; species of woolly spider.

[Skt. ūrṇa-nābhi > த. ஊர்ணநாபி.]



ஊர்ணம் *ūrṇam*, பெ.(n.) 1. ஆட்டு மயிர்; sheep's hair. 2. புருவ நடுச் சுழி; the spiral or curve between the eye-brows.

ஊர்த்தசைவம் *ūrtta-šaivam*, பெ.(n.) சிவனியம் (சைவம்) பதினாறனுள் ஒன்று (அபி. சிந்.); šaiva sect which emphasises the fact that Šivan is above all tattvas, one of 16 šaivam.

[Skt. ūrdhva > த. ஊர்த்த.]

சிவ > சிவம் > சிவன் = சிவந்தன்.

[சிவன் > Skt. šiva > šaiva > த. சைவம்.]

ஊர்த்தம்[1] *ūrttam*, து.வி.(adv.) **ஊர்த்துவம்** பார்க்க; see *ūrttuvam.*

[Skt. ūrdhva > த. ஊர்த்தம்.]

ஊர்த்தம்[2] *ūrttam*, பெ.(n.) மேடு (நாமதீப.); upland, highland.

ஊர்த்தமுகி *ūrtta-mugi*, பெ.(n.) பூடு வகை (நாமதீப.); a plant.

ஊர்த்தவெள்ளை *ūrttavellai*, பெ.(n.) ஒரு வகை மீன்; a kind of fish. *"கெண்டைக்கார லூர்த்த வெள்ளை" (பறாளை. பள்ளு. 16).*

ஊர்த்துவகததோசம் *ūrttuva-kada-dōṣam*, பெ.(n.) ஒரு வகை எலும்புருக்கி நோய் (சய ரோகம்); a morbid affection.

ஊர்த்துவககதம் *ūrttuvaga-gadam*, பெ.(n.) 1. மேற் செல்லல்; rising upwards. 2. மேன்முக நோக்கம்; upward tendency.

ஊர்த்துவகதி *ūrttuva-gadi*, பெ.(n.) மேனோக்கிச் செல்கை; ascent, as of heavenly bodies, of celestials.

[Skt. ūrdhva+gadi > த. ஊர்த்துவகதி.]

ஊர்த்துவகந்தம் *ūrttuva-kandam*, பெ.(n.) தண்ணீர் விட்டான் கிழங்கு; climbing asparagus.

ஊர்த்துவகமனி *ūrttuva-kamaṉi,* பெ.(n.) மேலெழும்பி வான் வழியே செல்பவன்; one who ascends in the aerial regions.

ஊர்த்துவகலிகை *ūrttuva-kaligai,* பெ.(n.) கூத்தின் உடலசைவுகளுளொன்று (சிலப். பக். 81); a mode of gesticulation in dancing.

[Skt. ūrdhva+kalikai > த. ஊர்த்துவகலிகை.]

ஊர்த்துவகாமினி *ūrttuva-kāmiṉi,* பெ.(n.) மேனோக்கிச் செல்லுங் குதிரை (வின்.); horse which mounts to the skies.

[Skt. ūrdhva+gāmin > த.ஊர்த்துவகாமினி.]

ஊர்த்துவகாயம் *ūrttuva-kāyam,* பெ.(n.) 1. உடம்பின் மேற்புறம்; the upper part of the body as opposed to அதோ காயம், the lower part. 2. மேனோக்கிய முகம்; the face in or the lock towards the upward direction; organs facing upwards. 3. மனித உடம்பு; the human body.

ஊர்த்துவகேசம் *ūrttuva-kēšam,* பெ.(n.) மயிர்க் கூச்சிடல்; having the hair erect, horripilation.

ஊர்த்துவசிதம் *ūrttuva-šidam,* பெ.(n.) பாகற்காய்; balsam pear.



ஊர்த்துவசீலம் *ūrttuva-šīlam,* பெ.(n.) நெருப்பு; fire having a tendency to pass or spread upwards.

ஊர்த்துவசுவாசம் *ūrttuva-šuvāšam,* பெ.(n.) 1. மேல் மூச்சு; short breathing, as of a dying person. 2. இரைப்பு நோய்வகை; a kind of asthma attended with hard breathing.

[Skt. ūrdhva+cuvāšam > த. ஊர்த்துவசுவாசம்]

ஊர்த்துவசூதம் *ūrttuva-šūdam,* பெ.(n.) 1. குடல் நோய் (ரோகங்)கள்; diseases of the bowels as in iliac passion. 2. வாய் நாற்றம் முதலிய குணங்களை யுண்டாக்கும் ஒரு வகை நோய்; a disease due to the vital air apana passing upwards through the alimentary canal from various causes.

ஊர்த்துவதாண்டவம் *ūrttuva-tāṇḍavam,* பெ.(n.) மேலே ஒரு பாதத்தைத் தூக்கியாடும் நடனம்; dance with one leg poised upward, as Šivaṉ's.

[ஊர்த்துவ(ம்) + தாண்டவம்.]

[Skt. ūrdhva > த. ஊர்த்துவம்.]

தாண்டுதல் = குதித்தாடுதல். தாண்டு → தாண்டவம், கூத்துவகை.

ஊர்த்துவதேகம் *ūrttuva-dēgam,* பெ.(n.) கொப்பூழ் (நாபி)க்கு மேற்பட்டவுடற் பகுதி; that part of the body above the navel region; the upper part of the body.

[Skt. ūrdhva+dēha > த. ஊர்த்துவதேகம்.]

ஊர்த்துவநயனம் *ūrttuva-nayaṉam,* பெ.(n.) சரபப் பறவை (பட்சி); a fabulous bird.



ஊர்த்துவநிருத்தம் *ūrttuva-niruttam,* பெ.(n.) 1. ஊர்த்துவதாண்டவம்; Šivaṉ's dance with one leg poised upward. 2. ஒரு கால் மேனோக்கி நிற்க அதனை ஒரு கை கொண்டு கட்டி ஒரு காலினிற்கை (தத்துவப். 109. உரை); (šaiva.) standing on one leg, the other leg being raised upward and held by one hand.

[ஊர்த்துவ(ம்) + நிருத்தம்.]

நளிதல் = ஒத்தல். நளி → நடி. நடித்தல் = ஒத்து நடத்தல், நாடகம் நிகழ்த்தல், கூத்தாடுதல், பாசாங்கு செய்தல். நடி → நடம் – நட்டம் (வட.வ.2.18). நட்டம் → Skt. nrtta → த. நிருத்தம்.

[Skt. ūrdhva > த. ஊர்த்துவம்.]

ஊர்த்துவபாகம் *ūrttuva-bāgam,* பெ.(n.) மேற்பாகம்; the upper part, the higher part.

[ஊர்த்துவ(ம்) + பாகம்.]

[Skt. ūrdhva > த. ஊர்த்துவம்.]

ஊர்த்துவபாதம் *ūrttuva-pādam,* பெ.(n.) மேனோக்கிய பாதத்தையுடைய எட்டுக்காற் பூச்சி; a spider with legs turned upwards.

[ஊர்த்துவ(ம்) + பாதம்.]

[Skt. ūrdhava > த. ஊர்த்துவம். பதி > பாதம்.]

ஊர்த்துவபாதனம் *ūrttuva-pādaṉam,* பெ.(n.) 1. பதங்கித்தல்; sublimation. 2. இதள் (இரசம்) மேலே எழும்படிச் செய்தல்; the act of causing mercury to rise up. 3. இதள் (இரசம்) பதங்கம்; sublimation of mercury.

ஊர்த்துவபாதனயந்திரம் *ūrttuva-pādaṉa-yandiram,* பெ.(n.) ஆவியாக்கப் பயன்படும் துணைக்கருவி; an apparatus or vessel used in the process of vaporizing and condensing substances such as mercury etc.

ஊர்த்துவபித்தம் *ūrttuva-pittam,* பெ.(n.) மேனோக்கிய பித்தம்; bile tending to pass upwards.

[ஊர்த்துவ(ம்) + பித்தம்.]

[Skt. ūrdhva > த. ஊர்த்துவம். பித்து > பித்தம்.]

ஊர்த்துவபித்தரோகம் *ūrttuva-pitta-rōgam,* பெ.(n.) ஒரு வகைப் பித்த நோய்; a disease caused by the bile taking an upwards course in the system.

[ஊர்த்துவ(ம்) + பித்தம் + ரோகம்.]

[Skt. ūrdhva > த. ஊர்த்துவம்.]

[Skt. roha > த. ரோகம்.]

ஊர்த்துவபிரகனநாளம் *ūrttuva-piragaṉa-nāḷam,* பெ.(n.) கார் குருதியை (ரத்தத்தை) மேனோக்கிக் கொண்டு போகும் ஒரு பெரிய நாளக் குழாய்; one of the two great venous trunks going upward.

[ஊர்த்துவபிரகன + நாளம்.]

நுள் > நள் > நாள் > நாளம் = உட்டுளையுள்ள தண்டு.

ஊர்த்துவபுண்டரம் *ūrttuva-puṇḍaram,* பெ.(n.) நெற்றியின் கீழிருந்து மேற் செல்லுமாறு இடுங் குறி; distinctive sect mark worn vertically esp. on the forehead.

[Skt. ūrdhva + puṇṭaram > த. ஊர்த்துவபுண்டரம்.]

ஊர்த்துவம்[1] *ūrttuvam,* து.வி.(adv.) மேல்; upwards, aloft, above.

[Skt. ūrdhva > த. ஊர்த்துவம்.]

vridh என்னும் அடியிலிருந்து ஊர்த்துவம் என்னும் சொல் உருவாகியிருக்கிறது. எழுதல், மேனோக்குதல், மேலாதல், நேராக நிற்றல் போன்ற பல பொருள்களுடன் இச்சொல் வழக்கில் உள்ளன. பெரும்பாலும் இச்சொல் கூட்டுச் சொற்களிலேயே இடம் பெறுகிறது (மா.வி.). மேல் என்னும் பொருளுடன் வழக்கிலுள்ள இச்சொல் பல கூட்டுச் சொற்களிலும் தமிழில் இடம் பெற்றுள்ளது.

ஊர்த்துவம்[2] *ūrttuvam,* பெ.(n.) 1. மேலெழும்பல்; rising or tending upwards. 2. மேலே வைக்கப்பட்டது; anything placed higher or above. 3. நிமிர்ந்திருப்பது; that which is erect.

[Skt. ūrdhva > த. ஊர்த்துவம்.]

ஊர்த்துவமந்தினம் *ūrttuva-mandiṉam,* பெ.(n.) விந்து கீழ் நோக்காமை; keeping or restraining the semen from flowing out i.e. abstaining from sexual intercourse.

ஊர்த்துவமாயை *ūrttuva-māyai,* பெ.(n.) துன்பமின்றி இன்பமே அளிப்பதும் சொல்லுலகத் (சுத்தப் பிரபஞ்சத்)திற்கு முதற்காரண மானதுமான மாயை (சுத்தமாயை); pure māya, the material cause of *cutta-p-pirapañjam* yielding unmixed happiness, dist. fr. *asutta-māyai.* *"ஒன்று தானே ஊர்த்துவ மாயை அதோமாயை என்றிரு வகைப்படு மென்பாரும்" (சி.போ. சிற். 2, 2, 3.).*

[ஊர்த்துவ + மாயை.]

[Skt. ūrdhva > த. ஊர்த்துவம்.]

ஊர்த்துவமுகம் *ūrttuva-mugam,* பெ.(n.) மேனோக்கின முகம் (சைவச. பொது. 338, உரை); upturned face, one of the five faces of Šivaṉ.

[ஊர்த்துவ(ம்) + முகம்.]

[Skt. ūrdhva > த. ஊர்த்துவம். த. முகம் > Skt. mukha.]

ஊர்த்துவமுகராசி *ūrttuva-muga-rāsi,* பெ.(n.) மேனோக்கிய முகத்தையுடைய ஓரை (இராசி) (விதான குணா. 69, உரை); those signs of the zodiac that are supposed to look upwards.

[Skt. ūrdhva > த. ஊர்த்துவம்.

த. முகம் > Skt. mukha. Skt. rāsi > த. ராசி.]

முகம் = முன்பக்கம், தலையின் முன்பக்கம். முகத்தின் முன் நீண்டுள்ள மூக்கு, நுனி, தொடக்கம், முன்பு, முதன்மை.

ஊர்த்துவமுகவாதம் *ūrttuva-muga-vādam,* பெ.(n.) முகத்தை அண்ணாந்த படியிருக்கச் செய்யும் ஒரு வகை ஊதை (வாத) நோய்; paralysis turning the face upwards.

[ஊர்த்துவ(ம்) + முக(ம்) + வாதம்.]

[Skt. ūrdhva > த. ஊர்த்துவம்.]

[த. முகம் > Skt. mukha.]

[Skt. vāda > த. வாதம்.]

ஊர்த்துவமுகவிரத்தவொழுக்கு *ūrttuvamuga-viratta-voḻukku,* பெ.(n.) நாளத்தின் வழியாக மேனோக்கிய முகமாக (குருதி) அரத்தம் வெளிவருதல்; escape of blood from a vein with an upward flow as opposed to அதோ முக விரத்தவொழுக்கு, that from an artery with a downward flow.

[ஊர்த்துவ முக(ம்) + இரத்த + ஒழுக்கு.]

[Skt. ūrdhva > த. ஊர்த்துவம்.]

[Skt. rakta > த. இரத்தம்.]

ஊர்த்துவயந்திரம் *ūrttuva-yandiram,* பெ.(n.) பதங்கத்திற்குப் பயன்படுத்தும் கருவி; an apparatus used in sublimations especially in that of mercury.

ஊர்த்துவரேதசு *ūrttuva-rēdasu,* பெ.(n.) வித்தமிழ்தை (சுக்கிலம்) இழக்குறாமல் மேல்முகப்பாக்குபவன்; lit. one who keeps the

semen so that it may not flow downwards, i.e. one who abstains from sexual intercourse.

[Skt. ūrdhva+rētas > த. ஊர்த்துவரேதசு.]

ஊர்த்துவலோகம் *ūrttuva-lōgam,* பெ.(n.) மேலுலகம்; upper world, heaven.

[ஊர்த்துவம் + லோகம்.]

[Skt. ūrdhva > த. ஊர்த்துவம்.]

[த. உலகம் > Skt. lōka > த. லோகம்.]

ஊர்த்துவாங்கம் *ūrttuvāṅgam,* பெ.(n.) இடுப்பிற்கு மேலுள்ள உறுப்பு (தைலவ. தைல. 54, உரை); part of the body above the waist.

[Skt. ūrdhva+aṅga > த. ஊர்த்துவாங்கம்.]

ஊர்த்துவாமிச்சிரவாதம் *ūrttuvāmi-c-ciravādam,* பெ.(n.) தலைவலியுண்டாக்கு மோர் ஊதை (வாத) நோய்; ncuralgia affecting chiefly the head or the facial region.

ஊர்மி *ūrmi,* பெ.(n.) 1. வயிற்றின் மடிப்பு; the folds of the abdomen. 2. இன்ப துன்பங்களின் அலைவு; the wave of pain or passion. 3. உயிர் வாழ்க்கைக்கு ஏற்பட்ட ஆறுவகை நிலை மாற்றங்கள்; the six waves of existence.

ஊர்வசி *ūrvaśi,* பெ.(n.) தேவருலகத்து நாடகமகளிரி லொருத்தி; Urvaši, a nymph, celebrated for her superior skill, in dancing.

[Skt. ūrvaši > த. ஊர்வசி.]

ஊரணம் *ūraṇam,* பெ.(n.) 1. புருவத்தின் இடையேயுள்ள மயிர்ச்சுழி; a circle or spiral of hair between the eye-brows. 2. சிலந்திப் பூச்சி; spider.

ஊரணாயு *ūraṇāyu,* பெ.(n.) 1. சிலந்தி; spider. 2. ஆடு; goat. 3. கம்பளம்; woollen blanket.

[Skt. ūrṇāyu > த. ஊரணாயு.]

ஊரு *ūru,* பெ.(n.) தொடை; thigh. *"அவளைத்தன் னூரு மிசை யேற்றி" (கந்தபு. அயிராணிசோ. 7).*

[Skt. ūru > த. ஊரு.]

வடமொழியில் மூடுதல், மறைத்தல், சூழ்தல் போன்ற பொருள்களுள்ள *ūrṇa* என்னும் வினைச் சொல்லிலிருந்து *ūru* என்னும் சொல் உருவாகியுள்ளது (மா.வி.). தமிழில் ஊரு என்னும் பெயர்ச்சொல் தொடை என்னும் பொருளில் மட்டும் வழக்கியுள்ளது. இதற்கு அடியான வினைச்சொல் தமிழில் வழக்கெய்தவில்லை.

ஊருசன் *ūruśaṉ,* பெ.(n.) வணிகன் (வைசியன்) (நிகண்டு); *vaiśya,* reputed to have been born from Brahma's thigh.

[Skt. ūru-jā > த. ஊருசன்.]

ஊருத்தம்பம் *ūru-t-tambam,* பெ.(n.) தொடையில் உண்டாகும் ஒருவகை ஊதை (வாத) நோய்; paralysis of the thigh. *"ஓங்கட லூருத்தமாட் சேபம்" (தைலவ. தைல.78).*

[Skt. ūru+tampam > த. ஊருத்தம்பம்.]

ஊருப்பிரகூடம் *ūru-p-pirakūḍam,* பெ.(n.) கலவியலின் வகை (ஆலிங்கன வகை) (கொக்கோ. 5, 45); a mode of sexual embrace.

[Skt. ūru+prakūta > த. ஊருப்பிரகூடம்.]

ஊரோசம் *ūr-ōśam,* பெ.(n.) பரந்த புகழ் (கீர்த்தி); wide spread fame. *'ஊரோசம் வீடு பட்டினி'.*

[Skt. ūru+ōjas > த. ஊரோசம்.]

ஊலிகா *ūlikā,* பெ.(n.) குதிரையின் அகவை (வயது) 20 என்றறியும் அடையாளமாக அதன் பற்களிலும் பற்சதைகளிலும் விழும் தொளை (அசுவசா. 6); hollow in the gums and teeth of a horse, which indicates its age to be twenty.

ஊலுகம் *ūlugam,* பெ.(n.) கோட்டான் (வின்.); rock horned-owl.

[Skt. ulūka > த. ஊலுகம்.]

வடமொழியில் val என்னும் வேரிலிருந்து ஆந்தையைக் குறிக்கும் ulūka என்னும் சொல் பிறந்துள்ளது (மா.வி.). தமிழில் உலுகம், ஊலுகம் என்னும் இரு வடிவங்கள் உள்ளன.

ஊனமாசிகம் *ūṉa-māśigam,* பெ.(n.) இறந்த முன்னோர்க்குச் செய்யும் படையல் (சிராத்த) வகை; sraddha offering to a deceased ancestor performed on the 27th and 45th days, and in the 6th month as well as at the end of the year after death.

[Skt. ūna+māsika > த. ஊனமாசிகம்.]

ஊனாயம் *ūṉāyam,* பெ.(n.) பிழை (யாழ்.அக.); mistake.

எக்கண்டபரப்பு *ekkaṇḍa-parappu,* பெ.(n.) ஒன்றாக இருக்கும் பெரும்நிலப்பரப்பு (வின்.); sheet of one piece.

[எக்கண்டம் + பரப்பு.]

[Skt. ēka > த. ஏகம். ஏகக்கண்டம் > எக்கண்டம்.]

கள் → கண்டு = துண்டு, கட்டி, நூற்பந்து, சக்கரைக்கட்டி. கண்டு → கண்டம் = துண்டு மாநிலப் பிரிவு. (பட) → பர → பரவு. பர → பரப்பு.

எக்கம் *ekkam,* பெ.(n.) நரம்பொன்றுடைய தோலிசைக் கருவி; one-stringed musical instrument. *"தண்ணுமை யெக்க மத்தளி தாழ்பீலி" (திவ். பெரியாழ். 3,4,1).*

த.வ. ஏகதந்திரி.

ஒருகா. *Skt. ēka* > த. எக்கம்.



எக்கா *ekkā,* பெ.(n.) (வட இந்தியாவிலுள்ள ஒற்றைக்) குதிரை வண்டி; a single-horse carriage, in use in north India.

[H. ekkā > த. எக்கா.]



எக்கியம் *ekkiyam,* பெ.(n.) வேள்வி (திருவானைக். கோச்செங். 70); sacrifice, ceremony in which oblations are offered.

[Skt. yajña > த. எக்கியம்.]

இறை யன்பினால் (தேவப்பிரீதியாய்) விருப்பப் பேற்றின் பொருட்டுச் செய்யப்படும் ஓகம் (யாகம்). இது அன்றாடு (நித்தியமாய்ச்) செய்யப்படுவதும் சிறப்பாய்ச் செய்யப்படுவதும் என இரு வகைப்படும். அவற்றுள், அன்றாடு (நித்தியமாய்ச்) செய்யப்படுவது தேவயஞ்ஞும், பிதுர்யஞ்ஞும், பூதயஞ்ஞும், பிரமயஞ்ஞும், மானுஷயஞ்ஞும் எனப்படும். சிறப்பாய்ச் செய்யப்படுவது ஓகம். தேவயஞ்ஞும் என்பது சூரியர், அக்கினி முதலிய தேவர்களைப் பூசிப்பது. பிதுர்யஞ்ஞும் என்பது தாய்தந்தையரை (பிதுர்க்களை)ப் பூசிப்பது. பூதயஞ்ஞும் பூதங்களுக்குக் காவு (பலி) போடுதல். பிரமயஞ்ஞு மென்பது மறை (வேத) யோதுகை. மனித (மானுஷ) யக்ஞும் விருந்தினரை (அதிதிகனை)ப் பூசித்தல். (அபி.சிந்.).

எக்கியோபவீதம் *ekkiyōbavīdam,* பெ.(n.) இருபிறப்பினர்கள் தம் தோளில் இட்டுக் கொள்ளும் நூல்; sacred thread worn over the shoulder by men of the twice-born castes.

த.வ. பூணூல், முப்புரிநூல்.

[Skt. yajnōpavīta > த. எக்கியோபவீதம்.]

எக்கீன் *ekkīn,* பெ.(n.) நம்பிக்கை (Muham.); faith. *'மருந்தில் எக்கீன் வைத்துச் சாப்பிட வேண்டும்'.*

[Ar. yaggin > த. எக்கீன்.]

எகடம் *egaḍam,* பெ.(n.) தென்னை (சங்.அக.); coco-palam.

எகுத்து *eguttu,* பெ.(n.) வாயு; air, wind.

எகுன்று *eguṉṟu,* பெ.(n.) குன்றிச் செடி; crab's eye.

எச்சம் *eccam,* பெ.(n.) அலுவல் (யாழ்.அக.); work.

[Skt. yajña > த. எச்சம்.]

எச்சன் *eccaṉ,* பெ.(n.) 1. வேள்வி செய்வோன்; one who performs a sacrifice. *"தக்கனையு முனிந்தெச்சன் றலைகொண்டான்காண் (தேவா. 596, 9).* 2. வேள்வியின் போது படைத்ததை ஏற்றுக் கொள்வதாகக் கருதப்படும் தேவதை *(கந்தபு. யாகசங். 38);* the deity supposed to be present at a sacrifice and to accept the offerings given.

[Skt. yajña > த. எச்சன்.]

எச்சினி *ecciṉi,* பெ.(n.) ஏழாமாதம் (சங்.அக.); the seventh month.

எசமாட்டி *eśamāṭṭi,* பெ.(n.) குடும்பத்தலைவி; mistress of a household.

[எசமா(னன்) + ஆட்டி (பெ.பா.ஈறு).]

[Skt. yajamāna > த. எசமானன்.]

எசமான் *eśamāṉ,* பெ.(n.) **எசமானன்** பார்க்க; see *eśamāṉaṉ. "மறையோராட்டிட வெசமானாடியே" (மச்சபு. விருக்கவு. 7).*

[Skt. yajamāna > த. எசமான்.]

எசமானன் *eśamāṉaṉ,* பெ.(n.) 1. வேள்வித்தலைவன்; one who performs a sacrifice. *"ஆன்மாயூப மெசமான் னளவேனும்" (மச்சபு. தடாகவிதி).* 2. தலைவன், முதலாளி, குடும்பத்தலைவன் (கொ.வ.); lord, master, employer, owner, proprietor, head of a family. 3. கணவன் (கொ.வ.); husband.

[Skt. yajamāna > த. எசமானன்.]

வடமொழியில் வணங்குதல், ஏத்துதல், படைத்தல், மூலம், மதிப்பளித்தல் போன்ற பொருள்களுள் yaj என்னும் மூலத்திலிருந்து வேள்வியாற்றுதல், வணங்குதல் போன்ற பொருள்களுள்ள yajamāna என்னும் சொல் பிறந்துள்ளது. வேள்விக்குரிய பொருள்களைத் தருபவன், வேள்வி நடத்தும் தலைமைப் பூசகன், புரவலன், முதலாளி, குடும்பம் அல்லது குலத்தலைவன் போன்ற பொருள்களையும் இச்சொல் ஏற்றுள்ளது (மா.வி.). தமிழில் தலைவன், முதலாளி, கணவன் ஆகிய பொருள்களுடன் இச்சொல் பெருவழக்கெய்தியுள்ளது.

எசமானத்துவம் *eśamāṉattuvam,* பெ.(n.) தலைமைத்தன்மை; superiority, rank.

[Skt. yajamāna-tva > த. எசமானத்துவம்.]

எசமானி *eśamāṉi,* பெ.(n.) **எசமாட்டி** பார்க்க; see *eśamāṭṭi.*

எசமானன் (ஆ.பா.) – எசமானி (பெ.பா.). 'இ' பெ.பா.ஈறு.

வேள்வித் தலைவன், தலைமைப் பூசகன், குடும்பம் அல்லது குலத்தலைவன் என்றாற்போன்று பொருள்படும் *yajamāna* வடமொழியில் ஆண்பாற் சொல்லாகவே வருகிறது. தமிழில் பெண்பாற் சொல்லாய் ஆளப்படுகிறது.

எசமானிக்கை *eśamāṉikkai,* பெ.(n.) தலைமை (யாழ்.அக.); leadership.

எசு *eśu,* பெ.(n.) ஆரிய வேதம் நான்கனு ளொன்றாகிய யசுர்வேதம்; yajur-vēda இருக்கெசுச் சாமவேத நாண்மலர்கொண்டு (திவ். பெரியாழ். 5, 1, 6).

[Skt. yajur > த. எசு.]

எசுர்வேதம் *eśurvēdam,* பெ.(n.) **எசு** (சிவரக. காயத்திரி. 29) பார்க்க; see *eśu.*

[Skt. yajurvēda > த. எசுர் வேதம்.]

எஞ்ஞம் *eññam,* பெ.(n.) **எக்கியம்** பார்க்க; see *ekkiyam. 'இருக வெஞ்ஞவீதியினை" (மச்சபு. அநுக்கிர. 26).*

[Skt. yajña > த. எஞ்சம்.]

எஞ்ஞுவற்கியன் *eññavarkiyan,* பெ.(n.) சமற்கிருத அறநூலாசிரியருளொருவர் (வேதாரணி. பிரமயாத்திரை. 14); Yajñavalkya, an ancient sage, the author of a code of laws in Sanskrit.

[Skt. yajñavalkya > த. எஞ்ஞுவற்கியன்.]

எட்கை *etkai,* பெ.(n.) தென்னை (சங்.அக.); coco-palm.

த.வ. ஏடகம்.

எட்சம் *etcam,* பெ.(n.) ஈருள்ளி; onion.



எட்சிணி *etcini,* பெ.(n.) இயக்கி, ஒரு வகை பெண் பேய்; kind of female demon.

[Skt. yakšini > த. எட்சிணி, யட்சிணி.]

எட்சித்தோசம் *etcit-t-tōsam,* பெ.(n.) குழந்தைகட்கு வரும் ஒரு நோய் (பாலவா. 62); an etraciating disease of children.

[எட்சி + தோசம்.]

[Skt. dōsam > த. தோசம்.]

இந்நோய் குழந்தைகளுக்குக் குருதியில் கொதிப்புக் கண்டு, கண்ணிற் பீளைகட்டி, உடல்வற்றி, கனல்மீறி, மயங்கிக் கிடக்கச் செய்யும். (சா.அக.).

எட்சினி *etcini,* பெ.(n.) 1. ஒரு பெண் பேய் (பிசாசு); a demoners or a female friend. 2. ஒரு மாயக்கலை (சால வித்தை); a magic performed with the aid of a female demon, attached to the service of Durga or *Kāli.*

இது அழகி பெண் போல் தோன்றி, நர மனிதருடன் புணர்ச்சி செய்வதாகக் கருதப்படுகிறது.

எதளா *edaḷā,* பெ.(n.) புளியமரம் (மலை.); tamarind.

எதா *edā,* வி.எ.(adv.) எப்படி; always used as a relative, and in Tamil generally in compounds, in which manner, as much as.

[Skt. yathā > த. எதா.]

எதாசத்தி *edāšatti,* வி.எ.(adv.) இயன்ற வரை, கூடிய வரை; to the best of one's ability, one's mite. *"பொருந்திய வெதாசத்தி யீந்தான்" (மச்சபு. தீர்த்தயாழ். 5).*

[எதா + சத்தி.]

[Skt. yathā > த. எதா.]

சத்து > சத்தி.

எதாப்பிரகாரம் *edā-p-pirakāram,* வி.எ. (adv.) வழக்கம் போல்; as usual. *'எதாப்பிரகாரம் நடக்கட்டும்'.*

[Skt. etā-pirakāram > த. எதாப்பிரகாரம்.]

எதார்த்தம் *edārttam,* பெ.(n.) உண்மை; truth. *"எதார்த்தவாதி வெருசன விரோதி".*

[Skt. yathārtha > த. எதார்த்தம்.]

எதார்த்தவாதி *edārttavādi,* பெ.(n.) 1. உண்மை விளம்பி; one who speaks truth. 2. வெளிப்படையாக இயங்குபவன்; one who acts openly.

[Skt. yathārthavādin > த. எதார்த்தவாதி.]

எதி *edi,* பெ.(n.) துறவி; ascetic. *"எதிகளேனும் வணங்குவர் தாயை (காசிக. சிவசன். அக். 13).*

[Skt. yati > த. எதி.]

எதிராசன் *edirāšan,* பெ.(n.) 1. துறவிகளுள் சிறந்தவன்; king of ascetics. 2. இராமானுசர்; an appellation of *Rāmānujācārya.* *"முனியெதிராசன் பேர்மொழி (அஷ்டப். நூற்றெட். காப்பு).*

[எதி + ராசன்.]

*[**Skt.** yati > த. எதி.]*

அரசன் → ராசன்.

எதுகுலகாம்போதி *edukulakāmpōdi,* பெ.(n.) ஓர் இசைப்பண் (இராகம்); (Mus.) a specific melody-type.

எதுகுலம் *edukulam,* பெ.(n.) யதுகுல அரசர் கால்வழியினர் (யதுவமிசம்); dynasty of king Yadu. *"எது குலத்துதித்து" (காஞ்சிப்பு. வாணி. 15).*

[எது + குலம்.]

*[**Skt.** yadu > த. எது.]*

குல் → குலம் = கூட்டம், பெற்றோரும் பிள்ளைகளும் கூடிய குடும்பம், மரபுவழிக் குடும்பம், உயர்மரபு வழிக் குடும்பம்.

எதேச்சாதிகாரம் *edēccādigāram,* பெ.(n.) விருப்பம் போல் அதிகாரஞ் செலுத்துகை; autocracy.

எதேச்சையாக *edēccai-y-āga,* வி.எ.(adv.) விருப்பத்தின் படி; agreebly to one is own sweet will and pleasure, without let or hinderance.

[எதேச்சை + ஆக.]

*[**Skt.** yathā-iccahā > த. எதேச்சை.]*

எதேட்டமாய் *edēṭṭamāy,* பெ.(n.) 1. விருப்பப்படி; as much as could be wished for, in abundance. 2. மிகுதியாய்; abudantly. *'அது எதேஷ்டமாய் கிடைக்கிறது'.*

*[**Skt.** yathā-iṣta > த. எதேட்ட.]*

ஏக்கர் *ēkkar,* பெ.(n.) நில அளவை வகைகளுள் ஒன்று; a kind of measurement.

த.வ. குறுக்கம்

[E. acre > த. ஏக்கர்.]

ஏக்கோசம் *ēk-kōšam,* பெ.(n.) சிற்றூர் நிலங்களை ஒருவர் பேரிற் பதிவு செய்கை; registry of the lands of a village in the name of a single ryot (P.T.L.).

*[**Hind.** ēk+kōša>த. ஏக்கோசம்.]*

ஏககண்டமாய் *ēka-kaṇḍamāy,* கு.வி.எ. (adv.) ஒரே குரலாய்; all together, unanimously with one voice. *"குழலொடு கண்டங்கொள" (மணிமே. 19:83). 'ஏககண்டமாய் அதனை அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்' (பே.வ.).*

*[**Skt.** ēka+த.கண்டம்+ஆய்>த. ஏககண்டமாய்.]*

[கண்டு→கண்டம்=தொண்டை, குரல்.]

ஏககுடும்பம் *ēka-kuḍumbam,* பெ.(n.) சொத்து பிரிக்கப்படாதக் கூட்டுக் குடும்பம்; undivided family. *'அவர்கள் ஏக குடும்பமாக இருக்கிறார்கள்' (பே.வ.).*

[ஏக + குடும்பம்.]

*[**Skt.** ēka + த.ஏக.]*

குடி>(குடிம்பு) குடும்பு>குடும்பம்.

ஏககுண்டலன் *ēka-kuṇḍalaṉ,* பெ.(n.) ஒற்றைக் குழையை யணிந்த பலராமன்; *Balarāma,* who had ear-ring in one ear only.

[ஏக + குண்டலன்.]

*[**Skt.** ēka+ த. ஏக.]*

[குள்>குண்டு=உருண்டை. குண்டு>குண்டலம் = வட்டம், சுன்னம், வானவட்டம், ஆடவர் காது வளையம். வடமொழியில் குண்டு என்னும் வடிவமும் இல்லை. குள் என்னும் மூலமும் இல்லை.]

ஏககுரு *ēka-guru,* பெ.(n.) உடன் கற்றோன்; fellow student, colleague (யாழ்.அக.).

[ஏக + குரு.]

*[**Skt.** ēka+த.ஏக.]*

ஏகசக்ரவர்த்தி *ēka-cakravartti,* பெ.(n.) தனியாளுமை செலுத்துவோன்; paramount sovereign, suzerain, emperor.

த.வ. பேரரசன்.

*[**Skt.** ēka+cakra+vartin> த.ஏகசக்கரவர்த்தி.]*

ஏகசக்கராதிபத்தியம் *ēka-cakkarādi pattiyam,* பெ.(n.) தனியரசாட்சி; paramount sovereignty.

த.வ. பேரரசு.

[Skt. ēka+cakra+adhi+patya>த. ஏக சக்கராதிபத்தியம்.]

ஏகசக்கராதிபதி *ēka-cakkarātipati,* பெ.(n.) **ஏகசக்கரவர்த்தி** பார்க்க; see *ēka-cakkaravartti.*

[Skt. ēka + cakra+adhi + pati > த.ஏக சக்கராதிபதி.]

ஏகசகடு *ēka-cagaḍu,* பெ.(n.) 1. மொத்தம்; aggregate, whole. 2. சராசரி; average.

[Skt. ēka+ U. sakat>த.ஏகசகடு.]

ஏகசமன் *ēka-šaman,* பெ.(n.) ஒரு நிகர் (வின்.); uniformity, sameness.

[ஏக + சமன்.]

[Skt. ēka+த.ஏக.]

[உம்>அம்>சம்>சமம்>சமன்.]

ஏகசமானம் *ēka-šamānam,* பெ.(n.) **ஏகசமன்** பார்க்க (வின்.); see *ēka-šaman.*

[ஏக + சமானம்.]

[Skt. ēka+த.ஏக.]

[சமம்→சமானம்.]

ஏகசரம் *ēka-šaram,* பெ.(n.) காண்டாமிருகம்; rhinoceros (யாழ்.அக.).

த.வ. கல்யானை.

[Skt. ēkacara> த.ஏகசரம்.]



ஏகசிந்தை *ēka-šintai,* பெ.(n.) 1. ஒத்த மனம்; unanimity. *'இணையர் இருவரும் ஏக சிந்தை யுள்ளவர்கள்'.* 2. ஒரே நினைவு; singleness of purpose, undivided attention. *"நாடொறுமேக சிந்தையனாய்" (திவ்.திருவாய். 5, 10, 11).*

த.வ. நினைவொருமை.

[Skt. ēka+த. ஏக.]

[சித்து>சிந்து>சிந்தை.]

ஏகசிருங்கி *ēka-širuṅgi,* பெ.(n.) **ஏகசரம்** பார்க்க; see *ēka-šaram* (நாமதீப.).

[Skt. ēka+šṛṅga> த. ஏகசிருங்கி.]

ஏகசுபாவம் *ēka-šubāvam,* பெ.(n.) 1. ஒரே மாந்தத் தன்மை; evenness of disposition in a person. 2. பல மாந்தர்களின் ஒத்த தன்மை; similarity of nature in different person.

[Skt. ēka+sua-bhāva>த. ஏகசுபாவம்.]

ஏகத்தாய் *ēkattāy,* கு.வி.எ.(adv.) ஒருமைப்பட்டு; jointly, unanimously. *'இருவரும் ஏகஸ்தாய் எழுதிக் கொடுத்த உடன்படிக்கை' (வின்.).*

த.வ. ஏகமனதாய்.

[Skt. ēka+sthā.>த.ஏகத்தாய்.]

ஏகத்துவம் *ēkattuvam,* பெ.(n.) ஒன்றா யிருக்குந் தன்மை; oneness, unity, identity. *"ஏகத்துவத்திலே சுழுத்தி யிதயமுற் றின்பமே பெறுவாய்" (ஞானவா. தாகு.101).*

[Skt. ēka-tva>த. ஏகத்துவம்.]

ஏகத்தொகை *ēka-t-togai,* பெ.(n.) முழுத் தொகை; total amount (w.).

[Skt. ēka>த. ஏக.]

[தொகு >தொகை.]

ஏகதண்டி *ēka-taṇḍi,* பெ.(n.) ஒற்றைக்கோல் தாங்கி நிற்கும் துறவி, திரிதண்டியிலிருந்து வேறுபட்டவர்; Ascetic who bears a single staff, dist. fr. (குருபரம். ஆறா.92).

[Skt. ēka+ த. ஏக.]

[தண்டு→தண்டி.]

ஏகதந்தன் *ēka-tantaṉ,* பெ.(n.) ஒற்றை மறுப்பை யுடையவரான பிள்ளையார்; pillaiyar, the one-tusked (பிங்.).

த.வ. ஒற்றைமருப்பன்.

[Skt. ēka+danta>த. ஏகதந்தன்.]

ஏகதார் *ēka-tār,* பெ.(n.) ஓர் இழையை யுடைய வாய்ச்சியம்; one stringed tamboura.

த.வ. சுரையாழ்.

[U. ēk-tāra>த. ஏகதார்.]

ஏகதாரவிரதன் *ēka-tāra-viradaṉ,* பெ.(n.) ஒருத்தியையே மனைவியாகக் கொள்ளும் உறுதியுள்ளவன்; one who adheres to one wife, monogamist (ஈடு, 4, 2, 8).

த.வ. ஒருதாலிநோன்பன்.

[Skt. ēka+dāra+virata>த. ஏகதாரவிரதன்.]

ஏகதாளம் *ēka-tāḷam,* பெ.(n.) ஒலி தாளத்தொன்று; variety of time-measure, one of *catta-tāḷam.* *"ஏகதாளத்துக் கிலருவொன்றாமே" (பரத. தாள.24).*

[Skt. ēka+த. ஏக.]

[தாள்>தாளம்.]

தாள் – காலைத் தட்டி எழுப்பப்படும் சீரொலி.

ஏகதிரித்துவம் *ēka-tirittuvam,* பெ.(n.) ஒன்றில் மூன்று மெய்மங்கள் உள்ள நிலை; unity in trinity.

[Skt. ēka+tri-tva>த. ஏகதிரித்துவம்.]

ஏகதேசப்படு-தல் *ēka-tēca-p-paḍu-,* செ.கு.வி.(v.i.) வேறுபடுதல்; to be incorrect, as an account. *'கணக்கு ஏகதேசப் பட்டிருக்கிறது'* (w.).

[Skt. ēka+tēšam>த. ஏகதேசம்+படு-தல்.]

[தேசம்>தேயம்.]

ஏகதேசம் *ēka-tēcam,* பெ.(n.) 1. ஒருபுடை; one side (திருக்கோ.70, உரை). 2. சிறுபான்மை; small degree. *"ஏகதேசம் தமிழாகவும் பிராயிகம் தற்சமம் தற்பவமாகவுங் கூறினாம்" (பி.வி.2, உரை).* 3. அருமை; rareness, scarceness. *'ஏகதேசமாக அங்கே அது கிடைக்கும்' (w.).* 4. வேறுபாடு; anomaly, different. *'அதற்கு மிதற்கு மேகதேசம்'* (w.). 5. மாறுபாடு; blunder, mistake (w.). 6. சமமின்மை; unevenness. *இந்த நிலம் ஏகதேசமா யிருக்கிறது.* 7. நிந்தை; abuse. *'அவன் என்னை ஏகதேசமாகப் பேசினான்' (பே.வ.).* 8. குறைந்தது; low in rank or character, that which is inferior. *'பகவதானந்தத்தைப் பற்ற இது ஏகதேசமா யிருக்கையாலே' (ஈடு, 4, 1, 10).*

த.வ. ஒருசார், ஒருபுடை.

[Skt. ēka+tēsa>த.ஏகதேசம்.]

[திசை→தேசம்.]

ஏகதேசவறிவு *ēka-tēca-v-aṟivu,* பெ.(n.) சிற்றுணர்வு; limited knowledge. *"ஏகதேச வறிவைச் செய்தல் ஏகதேசப்படுந் தகுதியுடைய பொருட்கேயன்றி ஏனையதற் குரித்தன்று" (சி.சி.1, 41, சிவஞா).*

த.வ. சிற்றறிவு.

[Skt. ēka+tēšam>த. ஏகதேசம்+அறிவு.]

ஏகதேசவுருவகம் *ēka-tēša-v-uruvagam,* பெ.(n.) ஒரு பொருளின் ஏகதேசத்தை உருவகப்படுத்தும் உருவக அணி; metaphor in which the comparison is partially expressed (குறள், 24, உரை.).

[Skt. ēka+tēšam>த.ஏகதேசம்+உருவகம்.]

ஏகதேசாகாரம் *ēkatēcākāram,* பெ.(n.) அளவுபட்ட உணவு; finite form of food. *"உபாதி பற்றி ஏகதேசகாரம் உயினெனவும் அகண்ட காரமீச னெனவும்" (உபநிடதம், பக்.12).*

[Skt. ēka+tēsā+ā+hāra>த. ஏகதேச+ ஆகாரம்.]

ஏகதேசி *ēkatēci,* பெ.(n.) ஓரிடத் திருப்புடையது; that which is to be found only within a limited area. *'இவ்வைங் கோசங்களில்.... ஏகதேசியாய்ப் போக்குவரவு*

செய்து நிற்கும்' (சி.சி.4, 23, சிவஞா.).

*[**Skt.** ēkatēsi.]*

ஏகதேவன் *ēka-tēvaṉ,* பெ.(n.) 1. இறைவன்; one supreme god (w.). 2. புத்தன்; buddha (திவா.).

*[**Skt.** ēka>த. ஏக+தேவன்.]*

[தேய்>தீ>தேவன்.]

ஏகநாதன் *ēka-nātaṉ,* பெ.(n.) தனித் தலைவன்; god, the one lord of the universe.

*[**Skt.** ēka+nātha>த. ஏகநாதன்.]*

ஏகநாயகன் *ēka-nāyakaṉ,* பெ.(n.) **ஏகநாதன்** பார்க்க; see *ēkanātaṉ. 'ஏகநாயகனை மானதன் பிரவிருத்தியா லுதவும்' (பிரபோத. 28, 2).*

*[**Skt.** ēka> த. ஏக.]*

[நாயன் >நாயகன்.]

ஏகப்பசலி *ēka-p-pacali,* பெ.(n.) ஒரு விளைச்சல் நிலம்; land yielding one crop a year.

*[**Skt.** ēka+U. fasli>த. ஏகபசலி]*

ஏகப்பிரளயம் *ēka-p-piraḷayam,* பெ.(n.) பெருவெள்ளம்; huge flood.

*[**Skt.** ēka+pralaya> த. ஏகபிரளயம்.]*

ஏகப்பிழை *ēka-p-pilai,* பெ.(n.) முழுவதும் வழு; all error.

[ஏகம் + பிழை.]

*[**Skt.** ēka+ த. ஏக.]*

ஏகபந்தனம் *ēka-bandaṉam,* பெ.(n.) ஒன்றிப்பு; uniting, fastening (யாழ்.அக.).

*[**Skt.** ēka+bandhana> த. ஏகபந்தனம்.]*

ஏகபத்திரிகை *ēka-pattirikai,* பெ.(n.) **வெண்டு(து)ளசி** பார்க்க; see *veṇtuḷaši* (மலை.).

*[**Skt.** ēka+patrikā>த. ஏகபத்திரிகை.]*

ஏகபத்தினிவிரதம் *ēka-pattiṉi-viratam,* பெ.(n.) ஒரு மனையாள் நோன்பு; faithful adherence to one wife, monogamy.

*[**Skt.** ēka+patni+vrata>த. ஏகபத்தினி விரதம்.]*

ஏகபாதம் *ēka-pātam,* பெ.(n.) 1. ஒரே யெழுத்துத் தொடரால் அமைந்து வரும் மிறைப்பாடல்; stanza of four lines all apparently alike but really made up of different meanings. 2. ஒற்றைக்கால் விலங்கு; a one-legged sevage creature. *'ஈற்றா மதமா வேகபாதம்' (தொல்.பொ.249, உரை).* 3. இருக்கை வகை யொன்பதனுள் ஒன்று; a pose, one of nine irukkai, q.v. (சிலப்.8, 25, உரை.).

*[**Skt.** ēka+த. பாதம்.]*

[பதி>பதம்>பாதம்.]

ஏகபாதர் *ēka-pātar,* பெ.(n.) ஒற்றைத் தாளர் ஆகிய சிவத் தோற்றம்; a manifestation of šiva with one foot.

*[**Skt.** ēka+த. பாதர்.]*

[பதி>பாதம்>பாதர்.]

ஏகபாதனம் *ēka-bātaṉam,* பெ.(n.) ஒக இருக்கையாசன வகை; a yōgic posture (தத்துவப்.108, உரை).

*[**Skt.** ēka+pātana>த. ஏகபாதனம்.]*



ஏகபாவம் *ēka-pāvam,* பெ.(n.) ஒத்த எண்ணம்; unanimity.

[Skt. ēka + bhāva>த. ஏகபாவம்.]

ஏகபாவனை *ēka-pāvanai,* பெ.(n.) ஒருமையாக எண்ணுகை; conception of oneness, as of the universe.

[Skt. ēka+bāvanā> த. ஏகபாவனை.]

ஏகபிங்கலன் *ēka-piṅkalan,* பெ.(n.) பசப்படைந்த ஒற்றைக் கண்ணையுடைய குபேரன்; kubera, having a yellow taint in one eye (சூடா.).

[Skt. ēka+piṅgala>த. ஏகபிங்கலன்.]

ஏகபிராணன் *ēka-pirāṇan,* பெ.(n.) ஒருயிர் போன்ற நட்பு; intimate friendship between persons, as if they were one (w.).

[Skt. ēka+pirāṇa>த. ஏகபிராணன்.]

ஏகபுத்திரன் *ēka-puttiran,* பெ.(n.) 1. ஒரே மகன்; only son. 2. ஒரு மகனுடையவன்; one who has an only son.

த.வ. ஒருமகன்.

[Skt. ēka+put-tra>த. ஏகபுத்திரன்.]

ஏகபோகம்[1] *ēka-bōgam,* பெ.(n.) மொத்த நுகர்வு; sole enjoyment or possession.

த.வ. ஒருமைத் துய்ப்பு.

[Skt. ēka+bhōga>த. ஏகபோகம்.]

ஏகபோகம்[2] *ēka-bōkam,* பெ.(n.) ஒரு விளைவு பயிர் வைத்தல், ஆண்டுக்கு ஒருமுறை வளரும் பயிர்; single crop for a year.

[Skt. ēka+த. போகம்.]

[பூகம்>போகம்.]

ஏகம்[1] *ēkam,* பெ.(n.) 1. ஒன்று; unit (திவா.). 2. ஒப்பற்றது; that which is unique. *'ஏக மாநகர் வீதி நிரைத்தலே' (சீவக. 2398).* 3. தனிமை; solitariness, singleness (திவா.). 4. வீடு; final liberation (சூடா.). 5. மொத்தம்; total (w.). 6. வேறுபாடின்மை; identity, unity. *'வாரிகணங்கட் கேகமெனல் போல' (வேதா.சூ.127).* 7. அக்குரோணி எட்டுகொண்ட சேனை; army consisting of eight akkuronis (பிங்.). 8. மிகுதி; abundance. *"பொருள் ஏகமாய்க் குவிந்து கிடக்கிறது".*

[Skt. ēka> த. ஏகம்.]

ஏகம்[2] *ēkam,* பெ.(n.) வெண்கலம்; bell-metal (யாழ்.அக.).

ஏகம்பட்சாரம் *ēkampaṭcāram,* பெ.(n.) மாழை வகை; kind of metal (w.).

ஏகம்பம் *ēkambam,* பெ.(n.) காஞ்சி சிவன் தலம்; name of a *Śiva* shrine, in *conjeevaram.* *"ஏகம்பத் துறையீசன்" (தேவா.1033, 6).*

[Skt. ēkamra > த. ஏகம்பம்.]

ஏகம்பன் *ēkamban,* பெ.(n.) காஞ்சிபுரத்தில் கோயில் கொண்ட சிவபிரான்; *Śiva,* worshipped in the shrine at *conjeevaram.* *"ஏத்திநின்ற வேகம்பன்றன்னை" (தேவா. 1039, 7).*

[Skt. ēkāmara > த. ஏகம்பன்.]

ஏகமாயிரு–த்தல் *ēkam-āy-iru-,* செ.கு.வி. (v.i.) 1. ஒன்றாயிருத்தல்; to be united. *'நானேகமாய் நின்னோடிருக்கு நாளெந்த நாள்' (தாயு. எங்குநிறை. 6).* 2. மிகுதியா யிருத்தல்; to be abundant.

[Skt. ēka+ த.ஆயிரு–த்தல்.]

ஏகரா *ēkarā,* பெ.(n.) **ஏக்கர்** பார்க்க; see *ēkkar.*

[Eng. Acre > த. ஏகரா.]

ஏகராசி *ēka-rāsi,* பெ.(n.) காருவா (அமாவாசை); new moon. *'ஒளியோனை யேகராசியினி னெய்த வெதிர்க்கும் வேகராகு' (கம்பரா.இராவணன்றோ.19).*

[Skt. ēkarāsi>த.ஏகராசி.]

ஏகரூபன் *ēka-rūban,* பெ.(n.) இறைவன்; God (யாழ்.அக.).

த.வ. கடவுள், ஒருருவன்.

[Skt. ēka+rupa> த. ஏகரூபன்.]

த. உருவம் > Skt. rupa.

ஏகல் *ēkal,* பெ.(n.) உயரம்; height.

ஏகலபுச்சன் *ēkala-puccan,* பெ.(n.) கிறுக்கன்; crazy fellow.

ஏகவசனம் *ēka-vacanam,* பெ.(n.) 1. ஒருமை; singular, number. *'வாருமென் றவர்களே கவசனமுஞ் சொல்வர்' (திருவேங்.சத.78).* 2. மதிப்புயர்வாகப் பயன்படுத்தும் பன்மைச் சொல்லான அவர் நீர் என்று பேசாது அவன் நீ என்று பேசும் மதிப்பு குறைவானச் சொல்; disrespectful term, sing, for hon. pl. *'அவன் ஏக வசனமாய்ப் பேசினான்' (பே.வ.).* 3. சத்திய வசனம்; honesty, uprightness, truth, as singleness of statement (w.).

[Skt. ēka+vasana>த. ஏகவசனம்.]

ஏகவட்டம் *ēka-vaṭṭam,* பெ.(n.) **ஏகவடம்** பார்க்க; see *ēka-vaḍam. "இனமணிப்பூணு மேகவட்டமும்" (பெருங். இலாவண.5, 139).*

[Skt. ēka+த. ஏக.]

[வல்>வள்>வட்டு>வட்டம்.]

ஏகவடம் *ēka-vaḍam,* பெ.(n.) **ஏகாவலி** பார்க்க; see *ēkāvali 'பொங்கிள நாகமொ ரேகவடத்தோடு' (தேவா. 350, 7).*

[Skt. ēka+த. ஏக.]

[வட்டம்>வடம்.]

ஏகவல்லி *ēka-valli,* பெ.(n.) **ஏகாவலி** பார்க்க; see *ēkāvali* (பெருங்.உஞ்சைக்.46, 211).

ஏகவாசம் *ēka-vācam,* பெ.(n.) 1. தனிமையாய் இருக்கை; solitary life as of a hermit. 2. கூடியிருக்கை; dwelling together.

[Skt. ēka+vāsa> த. ஏகவாசம்.]

ஏகவாணை *ēka-v-āṇai,* பெ.(n.) பொதுவற ஆளுகை; sole dominion. *"ஏகவாணை வெண்குடை" (சீவக.141).*

[Skt. ēka+ā-jnā>த. ஏகவாணை.]

ஏகவாரம்[1] *ēka-vāram,* பெ.(n.) ஒரு போது (ஒரே வேளை உணவு); partial fasting, such as taking only one meal. *'இன்று ஏகவாரந்தான் உணவு'.*

[Skt. ēka+hāra>த. ஏகவாரம்.]

ஏகவாரம்[2] *ēka-v-āram,* பெ.(n.) **ஏகாவலி** பார்க்க; see *ēkāvali. 'ஏகவார மிலங்கு கழுத்தினன்' (பெருங்.நரவாண.2, 26).*

[Skt. ēka+vāram>த. ஏகவாரம்.]

ஏகவிடுகொடி *ēka-viḍu-koḍi,* பெ.(n.) **ஏகாவலி** பார்க்க; see *ēkāvali "ஏகவிடுகொடி யெழிற்றே ளெழுதி" (பெருங். உஞ்சைக். 34, 21).*

[ஏக + விடு + கொடி.]

[Skt. ēka>த. ஏக.]

ஏகவீரன் *ēka-vīran,* பெ.(n.) தனிவீரன்; unique or incomparable warrior (திவ்.திருவிருத்.13, வ்யா.).

[Skt. ēka+த.ஏக.]

[வீறு>வீரு>வீரன்.]

ஏகவீரியன் *ēka-vīriyan,* பெ.(n.) வீரபத்திரன்; vira-bhadra (பிங்.).

[Skt. ēka+த. ஏக.]

[வீறு→வீரியம்→வீரியன். 'அன்' – ஆண்பால் ஈறு.]

ஏகவெளி *ēka-veḷi,* பெ.(n.) பெருவெளி; wide, open space.

[Skt. ēka+த. ஏக.]

ஏகவேணி *ēka-vēṇi,* பெ.(n.) ஒற்றைச் சடையுடைய மூதேவி; goddess of misfortune, wearing one lock (பிங்.).

[Skt. ēka+vēni> த. ஏகவேணி.]

ஏகன் *ēkaṉ,* பெ.(n.) 1. ஒருவன்; one man. 2. கடவுள்; god, as one. *'ஏக னநேக னிறைவ னடிவாழ்க' (திருவாச.1, 5).*

[Skt. ēka> த. ஏகன்.]

ஏகாக்கிரசித்தம் *ēkākkira-cittam,* பெ.(n.) ஒன்றிலே ஊன்றிய மனம்; mind concentrated on one object. *'ஏகாக்கிரசித்தமென்னும் விரதங்கெடாத திடவிரதம்' (சிவப்.பிரபந்.அபிஷேக.8).*

[Skt. ēkāgra+citta>ஏகாக்கிரசித்தம்.]

ஏகாக்கிரதை *ēkākkiratai,* பெ.(n.) ஒன்றிலே மனம் பதிந்திருக்கை; concentration of mind.

[Skt. ēkāgrata>த. ஏகாக்கிரதை.]

ஏகாக்கிரம் *ēkākkiram,* பெ.(n.) வளமான சாப்பாடு; rich meal.

த.வ. நிறைவுணா.

[Skt. ēka+agra>த. ஏகாக்கிரம்.]

ஏகாகம் *ēkākam,* பெ.(n.) இறந்தவர்க்குப் பதினோராம் நாளிற் செய்யுஞ் செய்கை; ceremony for the deceased on the 11th day.

த.வ. பதினோராம் நடப்பு.

[Skt. ēkāha > த. ஏகாகம்.]

ஏகாகாரம் *ēkākāram,* பெ.(n.) 1. மாறாத உருவம்; unchanging form. *'சூரியன் சந்திரனைப் போலன்றி ஏகாகாரமாய்த் தோன்றுகின்றான்'.* 2. ஒரு படி; uniform manner. *'நேற்று முழுதும் மழை ஏகாகாரமாகப் பெய்தது'.*

[Skt. ēkā+karā> த. ஏகாகாரம்.]

ஏகாகி *ēkāki,* பெ.(n.) தனித்திருப்போன்; one who is alone, solitary man.

[Skt. ēkā> த. ஏகாகி.]

ஏகாங்கநமக்காரம் *ēkāṅka-namakkāram,* பெ.(n.) தலை தாழ்த்திச் செய்யும் வணக்கம்; bowing the head in worship, as the act of a single member of the body(சங்.அக.).

[Skt. ēka+aṅga+namaskāra>த. ஏகாங்க நமஸ்காரம்.]

ஏகாங்கம் *ēkāṅgam,* பெ.(n.) 1. தனிமை; solitude (யாழ்.அக). 2. சந்தனம்; sandal wood (பச்.மூ.).

[Skt. ēka+aṅga>த.ஏகாங்கம்.]

ஏகாங்கரூபகம் *ēkāṅga-rūpagam,* பெ.(n.) உருவ வகை; a kind of metaphor (மாறனலங்.பக்.181).

[Skt. ēkā + aṅga + rupakam>த.ஏகாங்க ரூபகம்.]

ஏகாங்கி[1] *ēkāṅgi,* பெ.(n.) திருமாலடியாருள் ஒரு வகையார்; a class of vaisnava devotees (குருபரம். ஆறா.172.).

[Skt. ēkāgin > த. ஏகாங்கி.]

ஏகாங்கி[2] *ēkāṅgi,* பெ.(n.) குடும்பமின்றித் தனித்து வசிப்பவன்–ள்; single person, one who has no family.

த.வ. தனியன்.

[Skt. ēkāgin > த. ஏகாங்கி.]

ஏகாசம் *ēkācam,* பெ.(n.) தளர்வு உடை; loose cloth worn over the shoulders, scarf. *"ஐந்தலைய மாசுணங்கொண்டம் பொற்றோண்மே லேகாசமா விட்டு" (தேவா. 257, 3).*

[Skt.ēka+amšu > த. ஏகாசம்.]

ஏகாட்சரம் *ēkāṭcaram,* பெ.(n.) நூற்றெட்டு மெய்ம்மறைகளுள் ஒன்று; name of a upanisad.

[Skt. ēkākṣara>த. ஏகாட்சரம்.]

ஏகாட்சரி *ēkāṭcari,* பெ.(n.) 1. ஒரெழுத்தாலாய மந்திரம்; monosyllabic mantra. 2. உயிரோடும் தனித்தும் ஒரே மெய் வரும் இறைப்பாடல்; quatrain composed of the same consonant in combination with various vowels, as. *தித்தித்த தோதித் திதி (w.).*

[Skt. ēkākṣari> த.ஏகாட்சரி.]

ஏகாட்சி *ēkāṭci,* பெ.(n.) 1. ஒன்றைக் கண்ணன்-ணி; one eyed person. 2. காகம்; crow, supposed to see only with one eye at a time.

[Skt. ēkākṣa>த. ஏகாட்சி.]

ஏகாடம் *ēkāṭam,* பெ.(n.) ஏளனம்; scoffing, Jest. *'என்னத்துக்கிந்த ஏகாடஞ் செய்கிறீர்' (கனம். கிருஷ்ணையா, கீர்த்.6).*

ஏகாண்டம் *ēkāṇḍam,* பெ.(n.) முழுக்கூறு; that which is of one piece, not made of parts. *'ஏகாண்டமான தூண்'.*

[Skt. ēka+த. கண்டம்.]

[ஏக+கண்டம்>ஏகாண்டம்.]

ஏகாதசம் *ēkātacam,* பெ.(n.) பதினோராமிடம்; the 11th sign from one's *caṉma-lakkinam. "ஏகாதசந்தன்னி லெக்கோளு நிகரென்ன" (பாரத. பதினேழாம்.228).*

[Skt. ēkadaśan>த. ஏகாதசம்.]

ஏகாதசர் *ēkātacar,* பெ.(n.) 1. **ஏகாதச ருத்திரர்** பார்க்க; see *ēkātasaruttirar. "எண்வசுக்க ளேகாதசர்கள்" (தேவா.1040, 5).* 2. பதினோறாமிடத்துள்ள கோள்; *kirakam* in the 11th sign from one's *canmalakkinam* (கம்பரா.திருவவ.110).

[Skt. ēkādasa>த. ஏகாதசர்.]

ஏகாதசருத்திரர் *ēkātaca-ruttirar,* பெ.(n.) பெருந் தேவன், சிவன், உருத்திரன், சங்கரன், விசயன், நீலலோகிதன், ஈசானன், வீமதேவன், சுபாலி, பவோற்பவன், சௌமியன் (திவா.), அரன் for சிவன் (பிங்.); the 11 *rudras*, as class of gods viz.

[Skt. ēkadasa+rudras>த.ஏகாதச ருத்திரர்.]

ஏகாதசி *ēkātaci,* பெ.(n.) பதினோராம் நாள்; the 11th day of a bright or dark fort night.

த.வ. பதினோரமை.

[Skt. ēkādasi>த. ஏகாதசி.]

ஏகாதசிவிரதம் *ēkātaci-viratam,* பெ.(n.) பதினோராம் நாளில் மேற்கொள்ளப்படும் உண்ணா நோன்பு; fast in honour of *Visṇu* on the *ēkātaci.*

[Skt. ēkādasi+viratam>த.ஏகாதசிவிரதம்.]

ஏகாதிபத்தியம் *ēkātipattiyam,* பெ.(n.) தனியராட்சி; paramount sovereignty, empire. *'ஏகாதிபத்தியம் விடாமல்' (இராமநா. பாலகா.2).*

[Skt. ēka+adhipatya> த.ஏகாதிபத்தியம்.]

ஏகாதிபதி *ēkātipati,* பெ.(n.) மாமன்னன்; paramount sovereign.

த.வ. தனியாண்மை அரசன்.

[Skt. ēka+adhi+pati>த. ஏகாதிபதி.]

ஏகாந்தசேவை *ēkānta-cēvai,* பெ.(n.) சில திருவிழாக்களில் இரவில் தனித்து நிகழும் இறைப்பணி; the appearance of the god in a temple in procession at midnight during some festivals.

த.வ. தனிச்சேவை.

[Skt. ēkānta+sēva>த. ஏகாந்தசேவை.]

ஏகாந்தஞ்சமர்ப்பி-த்தல் *ēkāntañcamarppi-,* செ.கு.வி.(v.i.) ஊர்திகளில் தெய்வ உருவங்களை வைத்துக் கச்சுச் சாத்துதல்; to fasten an idol to its vehicle for a procession.

[Skt. ēka+anta+samarpana>த. ஏகாந்தஞ் சமர்ப்பி-.]

ஏகாந்தம் *ēkāntam,* பெ.(n.) 1. தனிமை; loneliness, solitude. *'ஏகாந்த மினிது' (தனிப்பா.1, 112, 35).* 2. ஒருவருமில்லாத இடம்; solitary place. 3. கமுக்கம்; secret. *'அவனுடன் உனக்கென்ன ஏகாந்தம்'.* 4. உறுதியான (குறள், 563, உரை); certainty. 5. நாடிய ஒரே பொருள் (அறநெறி.18); sole end, one only end. 6. தகுதியானது; that which is appropriate or fit. *'பரஹிம்ஸைக்கு ஏகாந்தமான காலத்திலே' (திவ்.அமலனாதி, 2, வ்யா).*

[Skt. ēka+anta> த. ஏகாந்தம்.]

ஏகாந்தவாதி *ēkānta-vāti,* பெ.(n.) துறவு நெறியாளர்; non-Jain, as one who looks at things from only one point of view. *'ஏகாந்த வாதிக ளெண்கெட்ட வாதம் போல்' (அறநெறி.18).*

[Skt. ēkānta+vddin> த.ஏகாந்தவாதி.]

ஏகாந்தவாழ்வு *ēkānta-vālvu,* பெ.(n.) 1. தனி வாழ்க்கை; single life. 2. துறவியின் வாழ்க்கை; monastic life.

[ஏகாந்தம்+ வாழ்வு.]

[Skt. ēkānta+ த. ஏகாந்தம்.]

ஏகாந்தன் *ēkāndan,* பெ.(n.) சமய நோன்பினன்; devotee whose mind is fixed on god alone. *"மாதேவர்க் கேகாந்த ரல்லராஇல்" (தேவா.1230, 10).*

ஏகாந்தி *ēkānti,* பெ.(n.) 1. **ஏகாந்தன்** பார்க்க; see *ēkāntan.* 2. ஒரே வழி நோக்காளன்; one who looks at things from only one point of view (தேசிகப்.பரமத.26).

[Skt. ēkāntam> ekānti>த.ஏகாந்தி.]

ஏகாந்தநித்திரை *ēkānta-nittirai,* பெ.(n.) 1. அமைதியான தூக்கம்; sweet sleep. 2. உலக தொடர்பு சிறிதுமில்லாத துறவுநிலை; entire abstraction of the ascetic, free from worldly cares (சங்.அக.).

த.வ. தனித்தூக்கம்.

[Skt. ēkanta+nidrā>த.ஏகாந்தநித்திரை.]

ஏகாம்பரநாதர் *ēkāmpara-nātar,* பெ.(n.) காஞ்சிபுரத்தில் கோயில் கொண்டுள்ள சிவபிரான்; *Šiva* at *conjeevaram.*

த.வ. சிவன்.

[Skt. ēkāmra+nātha>த. ஏகாம்பரநாதர்.]

ஏகாம்பரர் *ēkāmparar,* பெ.(n.) **ஏகாம்பர நாதர்** பார்க்க; see *ēkāmbaranāthar.*

[Skt. ēkamra>த. ஏகாம்பரர்.]

ஏகாம்பரம் *ēkāmparam,* பெ.(n.) ஒரு மாமரத்தின் கீழ் சிவன் கோயிலைக் கொண்டுள்ள காஞ்சிபுரம்; a name for *conjeevaram*, a city famous for its *Šiva* shrine under a mango tree. *"தொல்லுலகு புகழ் காசியேகாம்பரம" (அறப்.சத.59).*

[Skt. ēka+āmra>த. ஏகாம்பரம்.]

ஏகாம்பரன் *ēkāmbaran,* பெ.(n.) **ஏகம்பன்** பார்க்க; see *ēkamban.*

[Skt. ēka+āmra>த. ஏகாம்பரன்.]

ஏகாயம் *ēkāyam,* பெ.(n.) **ஏகாசம்** பார்க்க; see *ēkāšam.* *"தோலுடையாடையேகாயமிட்டு" (தேவா.159, 4).*

ஏகாயனர் *ēkāyanar,* பெ.(n.) மாத்துவர்; *Madhvas*, from their doctrine that *Visnu* alone needs to be worshipped for salvation (ஈடு, மஹாப்ர.).

[Skt. ēka+ayana>த.ஏகாயனர்.]

ஏகார்க்களம் *ēkārkkaļam,* பெ.(n.) தீயநாளறிதற்குரிய சக்கரம்; diagram drawn up to find out inauspicious days (விதான.பஞ்சாங்.28).

[Skt. ēka+argala>த. ஏகார்க்களம்.]

ஏகார்ணவம் *ēkārṇavam,* பெ.(n.) ஊழிப் பெரு வெள்ளம்; cosmic deluge. *"இப்படி ஏகார்ணவத்திலே தனியே சாய்ந்தருளுகிறவன் தான் ஆர் என்னில்" (ஈடு, 1, 5, 4, பக்.235).*

ஏகாரவல்லி *ēkāravalli,* பெ.(n.) 1. **பாகல்** பார்க்க; see *pāgal* (மலை.). 2. **பழுபாகல்** பார்க்க; see *paḻupāgal.* 3. **பலா** பார்க்க; see *pala* (மலை.).

[Skt. ēkāravalli.]

ஏகாலத்தி *ēkālatti,* பெ.(n.) **ஏகாலாத்தியம்** பார்க்க; see *ēkālāttiyam.*

ஏகாலாத்தியம் *ēkālāttiyam,* பெ.(n.) பூசையில் சாமிக்குமுன் ஏற்றும் ஒற்றைச் சுடர் தீபம்; single light waved before an idol in worship (பரத. ஒழிபி.41, உரை.).

[Skt. ēkārātrika>த. ஏகாலாத்தியம்.]

ஏகாவல்லி *ēkāvalli,* பெ.(n.) **ஏகாவலி** பார்க்க; see *ēkāvali (S.I.I.ii, 399).*

[Skt. ēkāvali>த. ஏகாவல்லி.]

ஏகாவலி *ēkāvali,* பெ.(n.) ஒற்றைச்சர மாலை; long gold or pearl necklace of a single string. *"ஏகாவலியுந் சாத்தீரே" (கலிங்.500, புதுப்.).*

[Skt. ēkā-vali>த. ஏகாவலி.]

ஏகான்மவாதம் *ēkāṉma-vātam,* பெ.(n.) படைப்பு ஒன்றைத்தவிர வேறொன்றுமில்லை என அறுதியிடும் மதம் (சி.போ. அவைய.பக்.47); monistic doctrine according to which there is only reality, viz., the soul.

த.வ. ஓராதன்மதம்.

[Skt. ēka+ātman+vadam > த. ஏகான்ம வாதம்.]

ஏகி *ēki,* பெ.(n.) கைம்பெண் (வின்.); widow, as one who leads a lonely life in this world.

[Skt. ēka > த. ஏகி.]

ஏகீபவி-த்தல் *ēkīpavi-,* செ.குன்றாவி.(v.t.) ஒன்றுபடுதல்; to combine, coalesce.

[Skt. ēkībhāva- > த. ஏகிபவி-த்தல்.]

ஏகீபாவம் *ēkīpāvam,* பெ.(n.) ஒன்றுபடுகை (சி.சி.6, 1, ஞானப்.);

[Skt. ēkībhāva > த. ஏகீபாவம்.]

ஏகீயன் *ēkīyaṉ,* பெ.(n.) தோழன்; friend (யாழ்.அக.).

[Skt. ēkīya>த. ஏகீயன்.]

ஏகூன் *ēkūṉ,* பெ.(n.) முழுவதும்; whole.

[Mahr. ēkūṉ-ēk>த. ஏகூன்.]

ஏகோத்தரவிருத்தி *ēkōttara-virutti,* பெ.(n.) இறந்தவர்க்கு முதற் பத்துநாட் செய்யும் ஒரு சிராத்தம் ஈமக்கடன் (பிரா.); obsequial distribution of doles of rice during the first ten days after death, the quantity given being increased each day by one unit of measure.

த.வ. நீத்தார்கடன்.

[Skt. ēka+ut-tara-vrddhi > த. ஏகோத்தர விருத்தி.]

ஏகோத்திட்டம் *ēkōttiṭṭam,* பெ.(n.) இறந்தவர்க்குப் பதினோறாம் நாளிற் செய்யும் ஒரு நடப்பு; *śrāddha* or funeral rite performed on the 11th day after death for the deceased exclusively, without including other ancestors.

த.வ. நீத்தார்நடப்பு.

[Skt. ēka+ud-dista.]

ஏகோதகம் *ēkōtakam,* பெ.(n.) சிற்றாறுகள் ஒன்று கலக்குமிடம் (வின்.); confluence of waters, union of one stream with another.

[Skt. ēko+udaka > த. ஏகோதகம்.]

ஏகோபி-த்தல் *ēkōpi-,* 11 செ.கு.வி.(v.i.) ஒன்றுபடுதல்; to be united. *"ஏகோபித்து முளைத்துக் கொண்டார்" (இராமநா. உயுத்த. 88).*

[Skt. ēkibhāva > த. ஏகோபி-த்தல்.]

ஏட்டு *ēṭṭu,* பெ.(n.) காவல் துறையின் தலைமைக் காவலர்; head constable.

[E. head > த. ஏட்டு.]

ஏணகம் *ēṇagam,* பெ.(n.) ஒருவகை மருந்துச் சரக்கு; a drug (நாமதீப.395).

ஏணம் *ēṇam,* பெ.(n.) மான்தோல்; deer skin (w.).

[Skt. ēṇa > த. ஏணம்.]

ஏத்திரி *ēttiri,* பெ.(n.) சாதிபத்திரி; mace, a spice.

[U. jawatri > த. ஏத்திரி.]

ஏத்துவாபாசம் *ēttuvāpācam,* பெ.(n.) **ஏதுப்போலி** (பிரபோத.42, 5) பார்க்க; see *ēttu-p-pōli.*

[Skt.hētu+vāpācam > த.ஏத்துவாபாசம்.]

ஏதனம் *ēdaṉam,* பெ.(n.) மூச்சு விடுகை; breathing (யாழ்.அக.).

[Skt. ētaṉa > த. ஏதனம்.]

ஏதுனம் *ēduṉam,* பெ.(n.) அரிதாரம்; yellow orpiment (யாழ்.அக.).

ஏப்பிரன் *ēppiraṉ,* பெ.(n.) இழுவண்டி முதலியவற்றில் உள்ள மூடுதுணி; apron, covering for legs, as in a rickshaw.

[E. Apron > த. ஏப்பிரன்.]

ஏமகரம் *ēmagaram,* பெ.(n.) பொன்; gold (அக.நி.).

[Skt. hēmaka > த. ஏமகரம்.]

ஏமகூடம் *ēma-kūḍam,* பெ.(n.) 1. எண்குல மலைகளுளொன்று (கந்தபு.அண்டகோ.34); name of a mountain to the north of the *Himālaya,* one of *asta-kula-parvatm.* 2. மேரு (திவா.); Mt. *Mēru.*

[Skt. hēma-kūṭa > த. ஏமகூடம்.]

ஏமதாரி *ēmadāri,* பெ.(n.) பொன்னூமத்தை; parple stramony (பச்.மூ.).

[Skt. hēma-dhustura > த. ஏமதாரி.]

ஏமந்தருது *ēmanta-rutu,* பெ.(n.) முன்பனிப் பருவம்; the months of *mārkaḻi*and *tai* one of six *rutu.*

[Skt. hēmanta+rutu > த. ஏமந்தருது.]

ஏமநாகம் *ēma-nāgam,* பெ.(n.) ஊமத்தை; thorn-apple (சித்.அக.).

[Skt. hēma+nāga> த. ஏமநாகம்.]



ஏமாங்கி *ēmāṅgi,* பெ.(n.) நிலவுருண்டை; earth (நாமதீப.).

த.வ. வையம்.

[Skt. hēmāṅgi > த. ஏமாங்கி.]

ஏரண்டி *ēraṇḍi,* பெ.(n.) திப்பிலி; long pepper (சங்.அக.).

[Skt. ēraṇdhi> த. ஏரண்டி.]

ஏரம்பம் *ērambam,* பெ.(n.) யானை; elephant (நாமதீப.).

[Skt. hēramba > த. ஏரம்பம்.]

ஏவிளம்பி *ēviḷambi,* பெ.(n.) ஓர் ஆண்டு; the 31st year of the jupiter cycle of 60 years.

[Skt. hēma-lamba > த. ஏவிளம்பி.]

ஏனம் *ēṉam,* பெ.(n.) குற்றம்; fault (யாழ்.அக.).

[Skt. ēṉas > ஏனம்.]

ஐக்கவாதசைவம் *aikka-vāta-caivam,* பெ. (n.) சிவணியத்தின் அகப்புறச் சமயத்தொன்று (சி.போ.பா.அவை.); (šaiva) a *Šaiva* sect which denies the *Aṉavamata* to the souls and declares that the souls attain their original pure state when they have gone through the round of births and got themselves rid of all *karma*, one of *aka-p-pura-c-camayam.*

[Skt. aikya+vāta+saiva > த. ஐக்கவாத சைவம்.]

ஐக்கியநாடுகள்சபை *aikkiya-nāḍugaḷ-sabai,* பெ.(n.) உலக ஒன்றிய நாடுகளின் பேரவை; united nations organisation (UNO).

த.வ. உலகநாடுகள் ஒன்றியம்.

[Skt.aikya+த. நாடுகள் + சபை.]

ஐக்கியநாணயசங்கம் *aikkiya-nāṇaya-saṅgam,* பெ.(n.) கூட்டுறவால் பணம் பெருக்குஞ் கூட்டுறவுக் குழு; co-operative credit society.

த.வ. கூட்டுறவுக்குழு.

[ஐக்கிய + நாணயம் + சங்கம்.]

[Skt.aikya+nāṇaya>த. ஐக்கியநாணயம்.]

ஐக்கியபாவம் *aikkiya-bāvam,* பெ.(n.) ஒற்றுமைத் தன்மை; unity.

[Skt. aikya+bhāva>த. ஐக்கியபாவம்.]

ஐக்கியம் *aikkiyam,* பெ.(n.) 1. ஒன்றுந் தன்மை; oneness. *"ஐக்கியமுன்னி வருந்தி நிற்பேன்" (தாயு.ஆகார.29).* 2. ஒற்றுமை; union, communion, fellowship.

த.வ. ஒன்றிப்பு, ஒன்றியம்.

[Skt. aikya>த. ஐக்கியம்.]

ஐககண்டியம் *aikakaṇḍiyam,* பெ.(n.) கருத்தொத்திருக்கை; consensus of opinion. *"சிவாகமங்களெல்லாம் ஐககண்டியமாகச் சொல்வது" (சிவசம்.67).*

[Skt. aikakaṇthya > த. ஐககண்டியம்.]

ஐகமத்தியம் *aikamattiyam,* பெ.(n.) ஒற்றுமை; unanimity. *"அவர்களும் ஐகமத்தியம் பண்ணிக் கொண்டு" (குருபரம். 226, பன்னீ).*

[Skt. aikamatya > த. ஐகமத்தியம்.]

ஐகிகம் *aikikam,* பெ.(n.) 1. இம்மைக்குரியது; that which pertains to this world. 2. இவ்வுலகம்; this world. *"ஐகிகத்திலும் நபம்ஸகனாகிறதுக்கு ஏதுவான பாபமும்" (சி.சி.4, 40, சிவாக்.).*

[Skt. aihika > த. ஐகிகம்.]

ஐசுவரியம் *aicuvariyam,* பெ.(n.) 1. செல்வம்; wealth, riches, prosperity. 2. ஈச்சுவரத் தன்மை; the quality or nature of the Lord.

[Skt. aišvarya > த. ஐசுவரியம்.]

ஐணம் *aiṇam,* பெ.(n.) மான்தோல்; deer-skin.

[Skt. aiṇa > த. ஐணம்.]

ஐதரேயம் *aitarēyam,* பெ.(n.) நூற்றெட்டு மறை நூல்களிலொன்று; name of an upanisad.

[Skt. aitarēya > த. ஐதரேயம்.]

ஐதி *aiti,* பெ.(n.) **ஐதிகப்பிரமாணம்** பார்க்க; see *aitika-piramāṇam.*

[Skt. aiti > த. ஐதி.]

ஐதிகப்பிரமாணம் *aitika-p-piramāṇam,* பெ.(n.) உலகுரையாகிய அளவை; evidence or authority from tradition.

[Skt. aitihya+piramāṇa> த. ஐதிகப் பிரமாணம்.]

ஐதிகம் *aitikam,* பெ.(n.) 1. உலகுரை; traidion. 2. **ஐதிகப்பிரமாணம்** பார்க்க; see *aitika-p-piramāṇam. "அளவை மேலு மொழிபுண்மை யைதிகத்தோ டியல்பென நான்கு" (சி.சி. அளவை.).*

[Skt. aitihya > த. ஐதிகம்.]

ஐதிகவளவை *aitika-v-aḷavai,* பெ.(n.) **ஐதிகப்பிரமாணம்** (மணி.27, 49) பார்க்க; see *aitika-p-piramāṇam.*

ஐதுகன் *aitukaṉ,* பெ.(n.) மெய்மறை உரையை மறுத்து முறையீடு செய்வோன்; one who is a *hētu-vādin* and denies the authority of the vedas. *"சூரண நூல்வழிச் செவ்வை யழித்திடு மைதுகர்க்கோர் வாரணமாய்" (ரஹஸ்ய.61).*

[Skt. haituka > த.ஐதுகன்.]

ஐந்தவம் *aintavam,* பெ.(n.) மாழ்கு விண்மீன்; the fifth naksatra, *mirukaciritam* (யாழ்.அக.).

[Skt. aindava > த. ஐந்தவம்.]

ஐந்தாசால் *aintā-cāl,* பெ.(n.) அடுத்த ஆண்டு; ensuing year.

[U. aindā + U. sal > த. ஐந்தாசால்.]

ஐந்திரி *aintiri,* பெ.(n.) இந்திரனைத் திக்குக் குழந்தையாகக் கொண்ட கிழக்கு (சூடா.); East, being Indra's Quarter.

[Skt. aindrī > த. ஐந்திரி.]

ஐப்பசி *aippaci,* பெ.(n.) 1. ஏழாவது மாதம் (உபதேசரத்.6); the seventh Tamil month, October-Novermber. 2. அசுவதி இரவை (சீவக.1770); the first naksatra.

த.வ. சிலைத் திங்கள்.

[Skt. āśrayuj>த. ஐப்பசி.]

ஐப்பசிக்குழப்பம் *aippaci-k-kuḻappam,* பெ.(n.) ஐப்பசி மாதத்தில் தோன்றுகிற புயல் (யாழ்ப்.); rough weather at the setting in of the north-east monsoon in October.

த.வ. சிலைப்புயல்.

ஐப்பசிமுழுக்கு *aippaci-muḻukku,* பெ.(n.) துலை மாதத்தில் காவிரியில் போடும் குளியல் (இலவ.); bathing in the *Kāvēri* during the month of *Aippaci.*

த.வ. சிலைமுழுக்கு.

ஐமவதி *aimavati,* பெ.(n.) பார்வதி (திருவானைக்கோச்செங்.81); *Pārvati.*

[Skt. Haimavatī > த. ஐமவதி.]

ஐராவதம் *airāvatam,* பெ.(n.) எட்டு திக்கு யானைகளுள் ஒன்றான இந்திரனின் யானை; Indra's elephant said to be in the eastern quarter according to mythology, one of *asṭa-tik-kajam.*

[Skt. airāvata > த. ஐராவதம்.]

ஐரோப்பியன் *airōppiyaṉ,* பெ.(n.) ஐரோப்பா கண்டத்தான்; European, white man.

[Ger. Europa> Fr., Gk. Europe > த. ஐரோப்பியன்.]

ஐவசு *aivacu,* பெ.(n.) 1. ஈடு; substitute. 2. கைம்மாறு; recompense. 3. விளைவு; produce.

[Arab. iwāz > த. ஐவசு.]

ஐவேசி *aivēci,* பெ.(n.) **ஐவேசு** பார்க்க; see *aivēcu.*

[U. aiwaz > த. ஐவேசி.]

ஐவேசு *aivēcu,* பெ.(n.) சொத்திருப்பு; property, wealth, stock, capital.

[U. aiwaz > த. ஐவேசு.]

ஓயின் *oyin,* பெ.(n.) நாட்பட்ட கொடிமுந்திரிச் சாறு; wine.

ஓர்லோட்கட்டை *orlōṭ-kaṭṭai,* பெ.(n.) பொழுதுகாட்டி (கெடியாரம்); clock, timepiece.

*[Fr. horooge > **Port.** relogio> த. ஓர்லோர்கட்டை.]*

ஓர்லோசுகட்டை *orlōsu-kaṭṭai,* பெ.(n.) **ஓர்லோட்கட்டை** பார்க்க; see *orlōṭ-kaṭṭai.*

ஒலிவு *olivu,* பெ.(n.) ஒருவகை மரம்; European olive.

*[**Lat.** oliva > த. ஒலிவு.]*

ஒலு *olu,* பெ.(n.) தொழுகைக்குமுன் கைகால் முதலியன கழுவுகை; ablution before prayer.

*[**Ar.** wazu > த. ஒலு.]*

ஓகணம் *ōkaṇam,* பெ.(n.) மூட்டுப் பூச்சி; bug (யாழ்.அக.).

*[**Skt.** ōkaṇa > த. ஓகணம்.]*



ஓங்காரி *ōṅkāri,* பெ.(n.) ஓம் என்ற வலிமைப் பொருளானவள்; sakti, as the personification of the mystic syllable, ōm (திருமந்.1073).

*[**Skt.** ōm-kāra > த. ஓங்காரி.]*

ஓசீவனம் *ōcīvaṉam,* பெ.(n.) வாழ்வுத் தொகை (யாழ்ப்.); support, livelihood alimony.

*[**Skt.** upa-jīvana > த. ஓசீவனம்.]*

ஓசு *ōśu,* பெ.(n.) புகழ்; fame (யாழ்.அக.).

*[**Skt.** ōjas > த. ஓசை.]*

ஓசுவனம் *ōcuvaṉam,* பெ.(n.) **ஓசீவனம்** (யாழ்ப்.) பார்க்க; see *ōśīvaṉam.*

*[**Skt.** upa-jīvaṉa > த. ஓசுவனம்.]*

ஓட்டல் *ōṭṭal,* பெ.(n.) உண்டிச்சாலை; Hotel.

த.வ. உணவகம்.

*[**Eng.** Hotel > த. ஓட்டல்.]*

ஓட்டியம் *ōṭṭiyam,* பெ.(n.) பாடல் முழுதும் இதழ் குவிந்தும் கூடியும் இயலும் எழுத்துக்களேயுள்ள மிறைக்கவி (மாறன. 275); kind of fanciful verse, which contains only labials or other sounds produced by rounded lips.

த.வ. இதழ் குவிபா.

*[**Skt.** ōsṭhya > த. ஓட்டியம்.]*

ஓடதீசம் *ōḍadīśam,* பெ.(n.) கருப்பூரம்; campher (சவ்.அக.).

*[**Skt.** osadhi-ja > த. ஓடதீசம்.]*

ஓடிகை *ōḍigai,* பெ.(n.) காட்டு நெல்; wild paddy (யாழ்.அக.).

*[**Skt.** ōḍikā > த. ஓடிகை.]*

ஓதம் *ōtam,* பெ.(n.) பெருமை; greatness.

*[**Skt.** ōjas > த. ஓதம்.]*

ஓது *ōtu,* பெ.(n.) பூனை (நன்.273, மயிலை); cat.

*[**Skt.** ōtu > த. ஓது.]*

ஓமகுண்டம் *ōma-kuṇḍam,* பெ.(n.) வேள்விக்குழி (கந்தபு.அசுரர்யாக.42); pit dug

out in the ground for keeping sacrificial fire.

[Skt. hōma+kuṇḍa > த. ஓமகுண்டம்.]

ஓமசாந்தி *ōma-cānti,* பெ.(n.) தீ வளர்த்துச் அமைதிபண்ணுகை; propitiating by fire.

[Skt. hōma+šānti > த. ஓமசாந்தி.]

ஓமசாலை *ōma-cālai,* பெ.(n.) வேள்விச் சாலை (சிலப்.10, 143, அரும்).; sacrificial hall.

[ஓம + சாலை.]

[Skt. hōma>த. ஓம.]

[சால்>சாலை.]

ஓமத்திரவியம் *ōma-t-tiraviyam,* பெ.(n.) வேள்விச் செய்யும் பொருள்; requisites for a sacrifice, including fire wood.

[Skt. hōma+dravya > த. ஓமத்திரவியம்.]

ஓமாக்கினி *ōmākkiṇi,* பெ.(n.) வேள்வித் தீ; sacrificial fire.

[Skt. hōma+agni > த. ஓமாக்கினி.]



ஓமி–த்தல் *ōmi-,* 11 செ.கு.வி.(v.i.) வேள்வி செய்தல்; to perform the *hōma* sacrifice. *"யாவையும் வாரி யோமித்தான்" (உபதேசக. பண்டாசு.65).*

[Skt. hōma-, > த. ஓமி–த்தல்.]

ஓமியம் *ōmiyam,* பெ.(n.) வேள்வி; sacrifice. *"ஓமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினோ" (தேவா.432, 8).*

[Skt. hōmya > த. ஓமியம்.]

ஓர்சு *ōršu,* பெ.(n.) பொதுப்பணி முதலியவை மேற்பார்க்கும் மேற்பார்வையாளன்; overseer.

ஔசனம் *aušaṇam,* பெ.(n.) துணைத் தொன்மம் பதினெட்டுனுள் ஒன்று; a secondary *purāṇa,* one of 18 *upa-purāṇam.*

[Skt. aušanasa > த. ஔசனம்.]

ஔசித்தியம் *aušittiyam,* பெ.(n.) தகுதி; fitness, suitableness.

[Skt. aucitya > த. ஔசித்தியம்.]

ஔட்டு[1] *auṭṭu,* பெ.(n.) ஒருவகை வாண வெடி; fire work bomb which, when fired into the air, bursts into glowing sparks.

[U. auṭ > த. ஔட்டு.]

ஔட்டு[2] *auṭṭu,* பெ.(n.) சீட்டு விளையாட்டு வகை; a game at cards played by two persons, finished with saying out, when either has scored 108.

ஔத்தமர்ணிகம் *auttamarṇikam,* பெ.(n.) வட்டியோடு தருவதாக வாங்கிய பணம்; money borrowed on interest (சுக்கிரநீதி. 96).

[Skt. auttamarṇika >த. ஔத்தமர்ணிகம்.]

ஔத்திரிதீட்சை *auttiri-tiṭcai,* பெ.(n.) சிவ தீக்கையேழனு ளொன்று (சைவச.ஆசாரி 62, உரை); (*šaiva*) a mode of initiation in whcih the guru performs the regular rites accompained by *hōma* one of seven *tiṭicai*

[Skt. hautrī+dīksa > த. ஔத்திரிதீட்சை.]

ஔதா *autā,* பெ.(n.) யானைமேல் அமைக்கும் இருக்கை (அம்பாரி); Canopy.

[U. haudah > த. ஔதா.]



ஔதாரியம் *autāriyam,* பெ.(n.) தாராளக் குணம்; generosity, nobility, magnamity, liberality.

[Skt.audarya > த. ஔதாரியம்.]

ஔபசாரிகம் *aupacārikam,* பெ.(n.) ஒன்றன் தன்மையை மற்றொன்றிலேற்றிக் கூறுவது; a kind of metonymy by which the attributes of one are spoken of as those of something or some one connected with it.

[Skt. aupacārika > த. ஔபசாரிகம்.]

ஔபனிதிகம் *aupanitikam,* பெ.(n.) அடைக்கலப் பொருள்; deposit, entrusted for state safe keeping (சுக்கிரநீதி.96).

[Skt. aupanidhika > த. ஔபனிதிகம்.]

ஔபாசனம் *aupācanam,* பெ.(n.) காலை மாலைகளில் திருமணமான பிராமணர்கள் எழுப்பும் வேள்விப் புகை; the worship of the consecrated fire both morning and evening, a duty enjoined on a married Brahman.

[Skt. aupāsana > த. ஔபாசனம்.]

ஔபாதிகம் *aupātikam,* பெ.(n.) கடமை தொடர்பானது (சி.சி.2, 1, ஞானப்.); that which is limited by particular conditions which are valid under particular supposition.

[Skt. aupādhikā > த. ஔபாதிகம்.]

ஔரசபுத்திரன் *aurasa-puttiran,* பெ.(n.) சொந்தப்பிள்ளை, தத்துப் பிள்ளைக்கு எதிரானது; own son, legitimate son.

[Skt. aurasa+putrra> த. ஔரசபுத்திரன்.]

ஔரசன் *auraśan,* பெ.(n.) **ஔரசபுத்திரன்** பார்க்க; see *auraśa-puttiran.*

[Skt. aurasa > த. ஔரசன்.]

ஔரதன் *auratan,* பெ.(n.) **ஔரசபுத்திரன்** பார்க்க; see *auraśaputtiran.*

[Skt. aurasa > ஔரதன்.]

ஔராத்து *aurāttu,* பெ.(n.) நாள்தோறும் கூறும் வழிபாட்டுக்குரிய வழிபாட்டுச் சொல்; farmulae of daily devotional exercises. *"அவர்கள் காலை நேரங்களில் ஔராத்து ஓதிக்கொண்டிருப்பார்கள்" (முகமது.).*

[Ar. aurad > த. ஔராத்து.]

ஔரிதம் *auritam,* பெ.(n.) ஓர் அறநூல் (திவா.); code of laws by *Hārita.*

[Arab. hārita > த. ஔரிதம்.]

ஔலாத்து *aulāttu,* பெ.(n.) கால்வழி; issue, children. *ஔலாத்துகளை நல்வழியில் பயிற்ற வேண்டியது பெற்றோர்களின் கடமை.*

[Ar. aulad > ஔலாத்து.]

ஔலியா *auliyā,* பெ.(n.) பத்தர்கள்; saints *(Muham).*

[Ar. auliya > த. ஔலியா.]

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

பத்தாம் மடலம் - இரண்டாம் பாகம்

[அயற்சொல் மடலம்]

(க-டௌ)

Vol. X - Part II

[Loan words]

முனைவர் இரா. மதிவாணன்

மதிப்புறு இயக்குநர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்

அகரமுதலித்திட்ட இயக்கக வெளியீடு

தமிழ்நாடு அரசு

2009

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

பத்தாம் மடலம் – இரண்டாம் பாகம்
[அயற்சொல் மடலம்]

(க–டௌ)

A COMPREHENSIVE ETYMOLOGICAL DICTIONARY OF THE TAMIL LANGUAGE

Vol. X - Part II
[Loan words]

முனைவர் இரா. மதிவாணன்
மதிப்புறு இயக்குநர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்கக வெளியீடு

தமிழ்நாடு அரசு

2009

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 27.

முதற் பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு 2040 மடங்கல் (ஆவணி) (September 2009)

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. X, Part-II

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு

© Government of Tamilnadu

விலை : உருபா 400/-

Price : Rs. 400/-

குறியீட்டெண் : Colon No.P.J1-J, 314"K.M4

வெளியிட்டோர் :

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்,
அண்ணாநகர், சென்னை–600 040.

Published by :

Directorate of Tamil Etymological Dictionary Project,
C- 48, Ist Floor, T.N.H.B.,
IInd Avenue, Anna Nagar,
Chennai - 40.

அச்சீடு :

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை–600 113.

Printed at :

International Institute of Tamil Studies,
Tharamani, Chennai -113.

நூல் கிடைக்குமிடங்கள் :

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
சி–48, முதல் தளம்,
தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரிய அலுவலக வளாகம்,
அண்ணாநகர், சென்னை–600 040.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை–600 113.

Copies available at :

Directorate of Tamil Etymological Dictionary Project,
C- 48, Ist Floor, T.N.H.B.,
IInd Avenue, Anna Nagar,
Chennai - 40.

International Institute of Tamil Studies,
Tharamani, Chennai -113.

பதிப்புக்குழு

முனைவர் **இரா. மதிவாணன்**, மதிப்புறு இயக்குநர்

தலைவர்–பதிப்புக்குழு

திரு. **முத்து.பிச்சை**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

முனைவர் **மு.கண்ணன்**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

முனைவர் **பா.வெற்றிச்செல்வன்**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

முனைவர் **ச. செந்திலாண்டவன்**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

முனைவர் **இரா.கு.ஆல்துரை**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

திரு.**கா. இளமுருகு**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

திரு.**ச.கி. கணேசன்**, சிறப்பு நிலை ஓவியர் – முதனிலை

திரு. **மா. பூங்குன்றன்**, பதிப்பாசிரியர்

திரு.**க.கணேசன்**, பதிப்பாசிரியர்

திரு.**சு.வீரவேலு**, பதிப்பாசிரியர்

திருவாட்டி.**வே.உமாராணி**, உதவிப் பதிப்பாசிரியர்



பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு

நிறைவு விழா வெளியீடு

15.09.2009



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
"முத்தமிழறிஞர்"

கலைஞர் மு. கருணாநிதி

செம்மொழிச் செம்மல் கலைஞர் பெருந்தகையே
செம்மாந்த செந்தமிழர் பாவாணர் நுண்ணோக்கில்
சீர்கொள் அகர முதலி வெளியிட்டுப்
பேர்கொண்டீர் வாழ்க நெடிது!

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 16.7.2009

அணிந்துரை

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களை இயக்குநராகக் கொண்டு 1974 இல் அமைக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் 12 மடலங்களில், 31 தொகுதிகளாகச் "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி" வெளியிடத் திட்டமிட்டது. திட்டமிட்டவாறே, இதுவரை 10 மடலங்களில் 'அ' முதல் 'ஔ' வரை உயிரெழுத்துகளில் 3 தொகுதிகள், 'க' முதல் 'வெள' வரை உயிர்மெய் எழுத்துகளில் 21 தொகுதிகள், தமிழ் அகரமுதலி வரலாறு 1 தொகுதி என மொத்தம் 25 தொகுதிகளை வெளியிட்டுள்ளது. அவற்றைத் தொடர்ந்து தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொற்கள் தொடர்பாக "அயற்சொல் மடலம்" 10–வது மடலமாக 3 தொகுதிகள் வெளியிடத் திட்டமிடப்பட்டு, அதில் முதற்கட்டமாக இரண்டு தொகுதிகள் தற்போது வெளியிடப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து மற்ற இரு தொகுதிகளுடன் 12–வது இறுதி மடலமும் மிக விரைவில் வெளியாகி இவ்வரும் பணி நிறைவு பெறவிருக்கிறது.

இந்திய மொழிகளில் இதுவரை வெளிவந்துள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிகளில் இதுவே மிகவும் விரிவானதும், செறிவானதும் ஆகும். அனைத்துச் சொற்களுக்கும் எழுத்துப் பெயர்ப்புடன், இலக்கணக் குறிப்பு, தமிழ் மற்றும் ஆங்கிலப் பொருள்கள், காலந்தோறும் மாறிவந்துள்ள பொருள்கள், திராவிட மொழிகளில் சென்றுள்ள ஒலி வடிவங்கள், பழமொழிகள், பல்வேறு சொல் வழக்குகள் ஆகியவற்றுடன் தேவைப்படும் இடங்களில் பட விளக்கங்களும் இப்பேரகரமுதலியில் இடம் பெற்றுள்ளன.

அனைவர்க்கும் பயன்படும் பொதுவகை அகரமுதலியாகவும், மொழியியல் மற்றும் திராவிட மொழிகள் ஆராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன் தரும் ஒரு சிறந்த கருவி நூலாகவும் உருவாகியுள்ள இந்தச் "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி" நூல் தொகுதிகளின் துணையோடு தமிழ் மொழியைப் பேணிக்காத்திட தமிழார்வலர்கள் முனைந்திடல் வேண்டும்.

இந்த அரும்பெரும் தமிழ் மொழிக் கருவூலத்தை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுத் தமிழ் மொழிக்கு அணிசேர்த்துள்ள அறிஞர் பெருமக்கள், பணியாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த பாராட்டுகளும் நல்வாழ்த்துகளும் உரித்தாகுக.

(மு.கருணாநிதி)



மொழிஞாயிறு

ஞா. தேவநேயப்பாவாணர்

ஞால முதன்மொழி எந்தமிழே என்றென்று
சால நிறுவிய பாவாணச் செம்மலே
நின்று நிலவும் சொற்பிறப்பு காட்டியதால்
பொன்றாது நின்றதும் பேர்!

அணிந்துரை

க. முத்துசாமி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் (ம) செய்தித் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பிறந்த நாடும் பேசும் மொழியும் நாட்டு மக்களுக்கு இரு கண்கள். தமிழ்த்தாய் உலக மொழிகளுக்குத் தாய்

"தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும் – இவள்
என்று பிறந்தவள் என்றறி யாத
இயல்பினளாம் எங்கள் தாய்" என, பாரதி சிறப்பித்துப் பாடினார்.

செந்தமிழிலக்கியங்களைக் கொண்டதால் உயர்தனிச் செம்மொழி என்னும் தகுதிப்பாட்டுடன் தமிழ் செம்மாந்து நிற்கிறது. தமிழின் தனித்தன்மையை வேர்ச்சொல் ஆராய்ச்சி வாயிலாக நிறுவிக்காட்டியவர் இத்திட்டத்தின் முதல் இயக்குநர் 'மொழிஞாயிறு' ஞா. தேவநேயப் பாவாணர். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலித் திட்ட இயக்ககத்தை உருவாக்கித் தந்தார்கள்.

மூவாயிரம் ஆண்டுகளாக இலக்கணக் கட்டமைப்புடன் திகழும் தமிழ் பிறமொழி உதவியின்றி தனித்தியங்கும் தகுதிபெற்றது.

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தின் தாய்மொழி பண்டு"

என்று பாவேந்தர் பாரதிதாசன் அழகாகக் குறிப்பிட்டார்.

அயலவர் தொடர்புகளால் பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தன. இக்கலப்பு கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக ஏற்பட்டதால் தமிழில் புகுந்த கலப்பினை ஆராய்ந்து பிரித்தெடுத்து 'அயற்சொல் மடலம்' எனும் வகைப்பாட்டில் கொடுத்திருப்பதனை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். மேலும், அந்த அயற்சொற்களுள் பொதுமக்கள் வழக்கிலும் புகுந்த சொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் காட்டி அயற்சொற்களை நீக்கித் தூய தமிழ்ச்சொற்களை வழங்குவதற்கு வழிவகை காட்டப்பட்டுள்ளது. இம்முயற்சி பிறசொல் கலவாமல் தமிழைப் பயன்படுத்துவோர்க்குப் பெரிதும் பயன்படும்.

வானுயர்ந்த பொதியமலையில் தோன்றி மன்னுபுகழ் மூவேந்தர் மடியில் தவழ்ந்து பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய் விளங்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு இப்பேரகரமுதலி பெருந்துணைபுரியும். இவ்வகையில் புத்தம்புதிய துறைகளில் தேவைப்படும் சூழல்களில் மரபார்ந்த சொற்களைப் படைத்து, தமிழை எதிர்காலத்தேவைகட்குத் தகுதிப்படுத்துவது நம் கடமை. அதற்கும் இத்துறைப் பணியாளர்கள் உதவுவார்களென நம்புகிறேன்.

இவ்வகரமுதலிப் பணியில் அரசின் திட்டங்களை நிறைவுறுத்த நாளும் கருத்தூன்றிப் பணியாற்றும் தமிழறிஞர் அனைவர்க்கும் என் நல் வாழ்த்துகள்.

க. முத்துசாமி

(க. முத்துசாமி)

பதிப்புரை

வளர்ந்து வரும் உலகில் மலர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் மொழியும் வளர வேண்டும். மொழிவளம் என்பது சொல்வளம். சொல்வளச் செழுமையைப் போற்றுவதும் பெருக்குவதும் அகரமுதலித் தொகுப்பின் தலையாயப் பணி. அதிலும் வேர்ச்சொல் மூலம் காட்டிச் சொற்பிறப்பு விளக்குவது உலக மொழியாராய்ச்சியாளர்க்கும் மாந்தநூலார்க்கும் அடிப்படை ஆய்வுச் சான்றுகளாக அமையும்.

அகராதியைப் பாவாணர் அகரமுதலி என்றார். ஆதி என்பது வடதமிழ் என்னும் பிராகிருதச் சொல்லாதலின் அதனைவிடுத்து அகரமுதலி எனும் சொற்படைத்தார். முத்தமிழ் அறிஞராகவும் செம்மொழிச் செம்மலாகவும் விளங்கும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய இந்த அகரமுதலித் திட்ட இயக்ககம் இறுதி மடலங்களை வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளது. பிறமொழிகளிலிருந்து சொற்களைக் கடன் பெறுவது உலக மொழிகள் அனைத்திலும் காணப்படும் பொதுவியல்பு. கடன்பெற்ற பிறமொழிச் சொற்களைப் பெரும்பாலான மொழிகளால் விலக்கிக் கொள்ள முடிவதில்லை. பிறமொழிச் சொற்களை முற்றாக நீக்கித் தன்சொற்களைப் படைத்துக் கொள்ளும் திறன் வாய்ந்தது தமிழ்மொழி. இந்தச் சிறப்பினைப் புலப்படுத்தும் பாங்கில் அயற்சொற்களை மட்டும் அயற்சொல் மடலம் எனத் தனியாகத் தொகுத்து வெளியிடப்படுகிறது.

இம்மடலம் மூன்று பாகங்களாக வெளியிடப்படுகிறது. இத்தொகுப்புப் பணிக்கு வேண்டிய உதவிகளைத் தக்காங்கு வழங்கிய தமிழக அரசுக்கும் தமிழ் வளர்ச்சித் துறையைத் தன் பொறுப்பில் பேணும் **தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** அவர்களுக்கும் தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறையின் அரசுச் செயலாளர் **உயர்திரு. க.முத்துசாமி, இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதனை நன்கு வெளியிட உதவிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தாருக்கும், இப்பணிக்கு அயராது உழைத்த அகரமுதலித் திட்டப் பணியாளர் அனைவர்க்கும், நெஞ்சார்ந்த நன்றியுடையோம்.

மதிப்புறு இயக்குநர்

ஆய்வு முன்னுரை

அயற்சொல் மடலம்

மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் தலைமையில் **மாண்புமிகு தமிழக முதல்வர் செம்மொழிச் செம்மல் முத்தமிழ்க் காவலர் கலைஞர்** அவர்களால் உருவாக்கப்பட்ட அகரமுதலித் திட்ட இயக்ககம் இதுவரை 25 பாகங்களை வெளியிட்டுள்ளது. இப்போது 26ஆம் பாகமாக அயற்சொற் மடலத்தின் முதற்பாகம் வெளியிடுவதில் அகரமுதலித் திட்ட இயக்ககம் பெருமை கொள்கிறது.

தமிழக அரசின் தளரா உதவியால் வளரும் பயிராகச் செழித்து வண்டமிழுக்கு வளம் சேர்த்துச் செம்மொழி எனும் தகவுபெற்ற தமிழுக்கு அணிகலன்களாக அகரமுதலி வெளியீடுகள் அமைந்துள்ளன எனில் அது மிகையாகாது.

ஆங்கிலம் தமிழோடு முந்நூறு ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டுள்ளது. ஆனால், சமற்கிருதம் தமிழோடு மூவாயிரம் ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டிருந்ததால் ஆங்கிலத்தைவிட அரபியம், பாரசீகம் போன்ற செமித்திய மொழிகளைவிட, சமற்கிருதச் சொல்லாட்சிகள் மிகுதியாகத் தமிழில் புகுந்துள்ளன.

தமிழ் மலையாம் மறைமலையடிகள், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் போன்ற பெருமக்கள் சமற்கிருதம் உள்ளிட்ட அனைத்து அயற்சொற்களையும் அறவே களைந்து என்றுமுள இனித்தமுடைய தனித்தமிழை மீட்டெடுத்தனர். அவர்கள் மீட்டெடுத்த முயற்சியை வெளிப்படுத்துவதாக அமைந்ததே அயற்சொல் மடலம்.

சொல்வளம்

"தமிழைப்போலச் சொல்வளமுள்ள மொழி உலகத்தில் வேறொன்றுமில்லை..... தமிழ் பழைமையான மொழியாயும், சென்ற மூவாயிரம் ஆண்டுகளாகத் தளர்ச்சியடைந்து வருவதாயும், வழங்கும் நிலம் வரவரக்குறுகி வருவதாயும், குறுகிய தன்னாட்டிலும் பெருகிய பகையுள்ளதாயும், தன் மக்களாலும் தள்ளப்படுவதாயும் இக்கால நூல்கள் எழுதப்படாததாயும், அரசியன் மொழியல்லாததாயும், எத்துணையோ கலைகளும் நூல்களும் சொற்களும் இறந்துபட்டும் வழக்கற்றுமுள்ளதாயும், இது போதுள்ளனவும் வழக்கற்று வருவதாயும் உள்ளது"[1].

உலகிலுள்ள எம்மொழியிலும் அயற்சொல் கலவாத நிலை இல்லை என்றும் அயற்சொற்களை வழங்குவதனால் மொழி வளர்ச்சியடையும் என்றும் சிலர் கூறுகின்றனர். இதற்கு வரையிகந்து அயற்சொற்களைக் கடன்பெற்ற ஆங்கில மொழியை எடுத்துக்காட்டுவர். ஒரு மொழியில் குறிப்பிட்ட பொருளையோ கருத்தையோ தெரிவிக்க சொல் இல்லாத நிலையில் அதற்குரிய சொல்லாக்கம் உருப்பெறா நிலையில் அயற்சொல்லைக் கடன் வாங்குதல் ஒருவகை. ஆயின், வழக்கிலுள்ள சொற்களைக் கையாளாமல் அவற்றிற்கு இணையான பிறமொழிச் சொற்களைக் கையாள்வது எவ்வகையில் மொழி வளர்ச்சிக்கு உதவும்? உவகை, களிப்பு, மகிழ்ச்சி என இனிமையான சொற்களிருக்க அவற்றிற்கு மாற்றாக ஆனந்தம், சந்தோஷம், குஷி, ஜாலி என அயற்சொற்களைப் பயன்படுத்துவது எங்ஙனம் தமிழ் வளத்தைப் பெருக்கும்? இவ்வகையில் பெரும் எண்ணிக்கையிலான அயற்சொற்கள், குறிப்பாகச் சமற்கிருதச் சொற்கள் ஒரு பொருட் பன்மொழிகளாகவே தமிழில் இடம்பெற்றுள்ளன. எ–டு: சொல்–வார்த்தை, நீர்–ஜலம், துப்புரவு–சுத்தம், விலங்கு–பிராணி, கூலம்–தானியம், விண்மீன்–நட்சத்திரம், சாறு–ரசம், கையூட்டு–லஞ்சம், அகவை–வயது, அறம்–தருமம், இரப்போன்–பிச்சைக்காரன், இழப்பு–நஷ்டம், நலம்–சௌகரியம்.

வழக்கற்றசொல்

வழக்கில் இடம்பெறாத பழைய சொல் எளிதாய்ப் பொருள் உணர்த்துவது இல்லை. ஆகையால் அதற்கு ஈடான பிறமொழிச் சொல்லைப் பயன்படுத்துவது எளிதாய் அமையும் என்று குறிப்பிடுவாரும் உளர். வழக்கற்ற சொல் எளிதில் பொருளுணர்த்தாமைக்குரிய கரணியம் அச்சொல்லின் குற்றமன்று. அதனைப் பயன்படுத்தாததொன்றே அது எளிதில் பொருளுணர்த்தா நிலைக்குக் கொண்டு செல்லும். இதனை "நீண்ட காலமாக உறவாடாத மக்கள் அயலாராகத் தோன்றுவது போன்றே நீண்ட காலமாக வழங்காத சொற்களும் அருஞ் சொல்லாய்த் தோன்றுகின்றன" என்று எடுத்துக்காட்டி விளக்கினார் பாவாணர்.

---

1. பாவாணர், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், தமிழ்மண் பதிப்பகம், 2000 (முதற்பதிப்பு 1949), பக்.72.

இந்திய மொழிகளில் பிறசொல் கலவாமல் எழுதவும் பேசவும் வல்ல ஒரே மொழி தமிழ்மொழி. இதனை நிலை நாட்டும் உயரிய நோக்கத்தை மொழிஞாயிறு பாவாணர் தம் வாணாட் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இலக்கியம், இலக்கணம், வரலாறு, உலகியல், அறிவியல், கணிதம், கணியம் போன்ற துறைகளில் முழுமையாகத் தமிழாக்கம் செய்யப்படாத சமற்கிருதச் சொற்களின் நிலைப்பு நீடித்தது. குறிப்பாகத் தமிழ் மருத்துவ நூல்கள், ஓரிலக்கம் பாடல்களுக்கு மேற்பட்டவை, சமற்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டபோது மூலத் தமிழ்ச் சொற்கள் உருவறிய முடியாமல் மறைந்து போயின. மருந்துகளின் பெயர்களும் மூலம் இழந்தன. அவற்றையும் மீட்டெடுக்க முயன்ற முயற்சியில் ஓரளவு துப்பு துலங்கியிருக்கிறது. அகரமுதலி திருந்திய மடலங்கள் வெளிவரும்போது சமற்கிருதமாக உருமாறிய தமிழ்ச் சொற்கள் முழுமையாக மீட்டெடுக்கப்படும். அதற்கான இடைக்கால ஏற்பாடாக முற்றிலும் தமிழாக்கப்படாத மருத்துவச் சொற்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

சொற்கடன்

“திராவிட மூலத்தினின்று முளைத்த சொற்கள் சமற்கிருதத்தில் இடம்பெற்றுள்ளன என்பதைப் பல்லாண்டுகளுக்கு முன்பே ஏற்றுக்கொண்டேன்.... ஆங்கில மொழியில், பிரித்தானியச் சொற்கள் எந்த அளவு கலந்துள்ளனவோ அந்த அளவு திரவிடச் சொற்கள் சமற்கிருதத்தில் கலந்துள்ளன. ஆனால் இவ்வுண்மை நெடுங்காலமாக உணரப்படவில்லை. எங்கேனும் ஒரு சொல் சமற்கிருத மொழியிலும் தமிழ் மொழியிலும் இருந்தால் அதை உடனே சமற்கிருத மூலத்தினின்று உருவானது என்று கருதிவிடுகின்றனர். பெரும் எண்ணிக்கையிலான சமற்கிருதச் சொற்கள் திரவிடமொழிகளில் வழக்கிலுள்ளன. இத்தகைய சொற்களைத் தமிழ், தெலுங்கு அகரமுதலித் தொகுப்பாளர்கள், சமற்கிருதச் சொற்களாகக் கருதி இயற் சொற்களான தம்மொழிச் சொற்களினின்று பிரித்து வழங்கி வந்திருக்கின்றனர். சில இடங்களில் தமிழ் சமற்கிருதத்தினின்று கடன் பெற்றதா, சமற்கிருதம் தமிழினின்று கடன் பெற்றதா என்னும் ஐயம் நிலவுகிறது. தமிழ்வாணர்களைப் போல் சமற்கிருதவாணர்கள் எப்போதும் பிரித்துக் காட்டவில்லை. யாரேனும் ஓர் ஆசிரியர் தாம் வாழும் உள்ளூர் அல்லது வட்டார மொழிச் சொற்களைப் பயன்படுத்திவிட்டால் (யாப்பமைதிக்காகவும் அல்லது வேறு கரணியங்களுக்காகவும் சமற்கிருதம் பேச்சு மொழி என்ற தகுதியை இழந்தபின் அவ்வாறானவை அருகிய வழக்காக இருப்பது இயல்பு), அவற்றைத் தவறாது சமற்கிருதச் சொற்கள் என்று குறிப்பிட்டு விடுகின்றனர்”[1]

மொழிக் கடன்பெறுவது தேவை கருதிப் பெறுவது பெருமை கருதிப் பெறுவது என இருவகைப்படும். தமிழில் கடன் கொள்ளப்பட்ட வடசொற்களுள் பெரும்பான்மையானவை பெருமை கருதிப் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தமிழ் அகரமுதலிகள் பெரும் எண்ணிக்கையிலான சொற்களை வட சொற்கள் எனக் காட்டியுள்ளன. அவற்றுள் பெரும்பான்மையானவை மக்கள் வழக்கில் இடம்பெறாதன. இலக்கியங்களில் இடம்பெற்ற வடசொற்களல்லாமல் வழக்கில் உள்ளனவாகப் பல வடசொற்களை அகரமுதலிகள் காட்டுகின்றன. அவற்றுள்ளும் பல பெரும்பான்மையோரால் கேள்விப்படாத சொற்கள். இவை போன்றனவல்லாமல் சென்ற நூற்றாண்டில் விளைந்த தமிழுணர்வின் கரணியமாகத் தமிழில் கலந்த வடசொற்கள் பல வழக்கு வீழ்ந்து வருகின்றன. எ–டு: அபேட்சகர்–வேட்பாளர்.

---

1 I have long felt persuaded that some words of Dravidian origin has found their way into Sanskrit vocabularies.... There is probably almost large a proportion of Dravidian words in Sanskrit, as of British words in English; but this probability has generally remained unnoticed: and wherever any word was found to be the common property of the Sanskrit and any of the Dravidian tongues, it was at once assumed to be a Sanskrit derivatives. Doubtless, the number of Sanskrit derivatives, properly so called, which have been introduced into the Dravidian Languages, is very great; but those words are almost always recognised and admitted to be derivatives by Tamil and Telugu lexicographers, and carefully distinguished from national or native Dravidian words. In a few cases, as might be expected, but in a few cases only, some doubt exists whether a particular word was borrowed by the Sanskrit from the Tamil, or by the Tamil from the Sanskrit. Sanskrit lexicographers and grammarians were not always so discrimate as their Dravidian brethern: and if any writer had happened to make use of a local or provincial word, that is, a word belonging to the vernacular of the district in which he resided (and it was natural that such words showed occasionally be used, for variety of metre or some other cause, especially after Sanskrit has caused to be a spoken tongue) every such word, provided only it were found written in Sanskrit charactors, was forthwith set down with vocabularies as Sanskrit. - **Caldwell, Robert**, A Camparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, AES 1987, (First Published 1913) P.566.

"தமிழ்ச்சொல் வட பாடைக்கட் செல்லாமையாலும் வடசொல் எல்லாத் தேயத்திற்கும் பொதுவாகலானும், இவை வட சொல்லாக ஈண்டு வழங்கப்பட்டன வெனல் வேண்டும்" (சேனாவரையர்) என்றாற் போன்று தமிழன்றி வடமொழி ஒரு போதும் கடன்பெறாது என்னும் பிழைக் கருத்து, பன்னூறு ஆண்டுகளாக நிலவி வந்துள்ளதன் விளைவாகப் பல தூய தென் சொற்கள் வடசொற்களாகக் கொள்ளப்பட்டு வந்துள்ளன.

தமிழில் திசைச்சொல் அயற்சொல் வேறுபாடுகள்

வேற்று மொழித் தாக்கமில்லாத தாய்மொழியிலுள்ள மரபார்ந்த சொற்கள் இயற்சொற்கள் எனப்படும். இவற்றை மரபிலக்கணத்தார் பெயர் வினை இடை உரி என நால்வகைப்படுத்துவர்.

பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலுமுள்ள இயற்சொற்கள் பண்டுதொட்டே செய்யுள் வழக்கில் ஒரு பொருள் குறித்த பல சொல்லாகவும் பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவும் திரிபுற்றவற்றைத் தனியாகப் பிரித்துத் திரிசொல் என்றும் நெடிய வரலாற்றுக் காலத்தில் மக்கள் வழக்கில் வட்டார வழக்காகத் திரிபுற்றனவற்றைத் திசைச்சொல் என்றும் வகைப்படுத்தினர். இவையல்லாமல் பிற குடும்ப மொழிச் சொற்களும் தாய்மொழியில் கலப்பதுண்டு. அவ்வகையில் தமிழ்நாட்டுக்கு முப்புறமும் கடல் எல்லையாக இருத்தலின் வடதிசை வாயிலாக மட்டும் பிற குடும்ப மொழிச் சொற்கள் தமிழில் புக வாய்ப்புண்டாதலின் தொல்காப்பியர் தமிழில் புகத்தக்க பிற குடும்ப மொழிச் சொற்களுக்கு வடசொல் எனப் பொதுவாகப் பெயரிட்டார். இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் எனச் சொற்களை நால்வகைப்படுத்தினார்.

இக்காலத்தில் பிறமொழிச் சொற்கள் நிலவழியாகவும் கடல் வழியாகவும் எல்லாத் திசைகளிலிருந்தும் வருதலால் வடசொல் என்பதைத் தவிர்த்து அயற்சொல் என வகைப்படுத்த வேண்டியுள்ளதால் வடமொழியுள்ளிட்ட பிற மொழிக் கடன் சொற்கள் அடங்கிய இத்தொகுதிக்கு அயற்சொல் மடலம் எனப் பெயரிட நேர்ந்தது.

தமிழின (திரவிட) மொழிகள் தமிழின் கிளை மொழிகளாகக் கிளைத்து வளர்ந்தவை. அச்சொற்கள் தமிழுக்குத் திசைச் சொற்களாக இருத்தலின் அவை தமிழ்ச் சொற்களாகவே கருதப்பட்டுத் தமிழ்ச் சொல் வளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழில் வழக்கிறந்து திராவிடமொழி வழக்கில் உள்ளதைத் தமிழ்ச்சொல்லென்று கொள்வதற்கு எவ்வகைத் தயக்கமும் இல்லை.

வடதமிழ் எனும் பிராகிருதத்தில் வழங்கிய தமிழ்ச்சொற்களுள் பல ஒருசார் பிறழ்ந்த ஒலிப்புடையனவாயினும் பிறமொழி எழுத்தாலன்றித் தமிழ் எழுத்தால் எழுதிக் காட்டத்தக்கனவும் திசைச் சொல்லாகவே ஏற்று தமிழ்ச் சொல் வளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழிலிருந்து பிராகிருதத்தின் வாயிலாக வடமொழிக்குச் சென்று மீண்டும் பிராகிருதத்தின் வாயிலாகத் தமிழுக்கு வந்த சொற்களும், தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்று வடமொழி ஒலிப்பை ஏற்றுக்கொண்ட தமிழ்ச் சொற்களும் அயற்சொற்களாகவே கருதப்பட்டு அயற்சொன் மடலத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

பிராகிருதம் ஒரு காலத்தில் தமிழின் கிளைமொழியாக வடநாட்டில் பேசப்பட்டது. இதனை வடதமிழ் என்றனர். அக்காலத்திய சொல்லாட்சிகளில் தமிழ்மரபிலிருந்து திரிந்தனவற்றை மட்டும் திசைச்சொல்லாக ஏற்றுள்ளோம். பிராகிருதத்திலிருந்து பிறந்த வடநாட்டு மொழிகளில் சமற்கிருதக் கலப்பு மிகுந்த பிறகு உருமாறிய வடபுல மொழிச் சொற்களில் பன்மடிபுத் திரிபுற்ற வடதமிழ்ச் சொற்கள் அயற்சொற்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் எனும் மூன்று நிலைகளில் ஊடாடும் சொற்கள் மட்டும் தமிழ்ச் சொற்கள். திசைச் சொல் வரம்பைக் கடந்தன அனைத்தும் உலகப் பிறமொழிச் சொல் வகை சார்ந்த அயற்சொற்கள். இவை வேற்றுக்குடும்ப மொழிச் சொற்கள். இயற்சொல் திரிசொல் திசைச்சொல் எனும் மூவகையும் தமிழுக்குத் தன் குடும்ப மொழிச் சொற்கள். வேற்றுக்குடும்ப அயற்சொற்களுக்குத் தேவை கருதி தமிழில் கலைச் சொல் படைத்துக் கொள்வது கடன் சொற்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும். இவ்வகைக் கலைச் சொற்களும் அகரமுதலியில் இடம்பெற்றுள்ளன.

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று

அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே" (தொல்.சொல்.397) என்று நான்கு வகைச் சொற்களைப் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

"தொல்காப்பியர் காலத்தில் தமிழ்ச் சொற்கள் இலக்கண முறையிற் போன்றே சொற்பிறப்பியல் முறையில் நான்காக வகுக்கப்பட்டன. முதலாவது தன்சொல் அயற்சொல் என்கிற முறையில் தென்சொல் வடசொல் என்ற பாகுபாடும், பின்பு தன் சொற்குள் செந்தமிழ் கொடுந்தமிழ் என்கிற முறையில் நாட்டுச் சொல் திசைச் சொல் என்ற பாகுபாடும், பின்பு நாட்டுச் சொற்கள் இயல்பும் திரிபும் பற்றி இயற்சொல் திரிசொல் என்ற பாகுபாடும் தோன்ற இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என நான்கமைந்தன.

தெலுங்கு கன்னடம் முதலிய திராவிட மொழிகள் முற்காலத்தில் கொடுந்தமிழா யிருந்தமையின், அவற்றின் சொற்கள் திசைச்சொற்கள் எனப்பட்டன. இன்று அம்மொழிகள் ஆரியக் கலப்பால் வேற்றுமொழியாய் வழங்குகின்றமையான், வேற்றுமொழிச் சொற்களையெல்லாம் திசைச் சொல்லெனக் கூறுவது தவறாம். முற்காலத்தில் திசைச் சொல்லாகக் காட்டப்பட்ட கொடுந்தமிழ்ச் சொற்களே இன்றுந் திசைச் சொல்லாகும்.

வடமொழி யொன்றே முற்காலத்து வழங்கிய அயன்மொழி. அதனால், அதன் சொல் அம்மொழிப் பெயராலேயே வடசொல் லெனப்பட்டது. அதுபோல் இதுபோது தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களும் ஆங்கிலச் சொல் போர்த்துக்கீசியச் சொல் என அவ்வம் மொழிப் பெயராலேயே அழைக்கப்படல் வேண்டும்"[1].

எழுத்துக்கடன்

பொதுவாகப் பெயர்ச்சொற்களையே ஒரு மொழி கடனாகப் பெறும். இதை "வடசொல்லுள்ளும் பெயரல்லது செய்யுட் குரியவாய் வாரா" (சேனாவரையர்) என்று உரையாசிரியர் காலத்திலேயே குறிப்பிட்டுள்ளது கவனிக்கத் தக்கது.

ஒருமொழி பிறமொழிகளிலிருந்து சொற்களைக் கடன்பெறலாம். ஆனால் பிறமொழிக்குரிய எழுத்துகள் அல்லது எழுத்தொலிப்புகளைக் கடன்பெற்ற மொழிகள் வேற்று மொழிகளாகத் திரிந்து விடுகின்றன. உலகில் மொழிகள் பலவாகப் பெருகுவதும் சிறுபான்மை மொழிகள் மறைவதும் பிறமொழி எழுத்தொலிப்புகளைக் கடன் வாங்கியபின் சின்னஞ்சிறு கிளைமொழிகளாகவும், வட்டார வழக்கு மொழிகளாகவும் தேய்ந்து போவதால்தான் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

தமிழ் உலகமுதல் செம்மொழி எனும் தகுதியுடன் இலக்கிய இலக்கண வளம் கொண்டது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளைக் கடந்தும் செம்மை இழவாத நிலை தன் எழுத்தொலிப்புகளைப் பிறமொழி எழுத்தொலிப்புத் தாக்குதல்களிலிருந்து காத்துக் கொண்டதால்தான் என்பதை மொழியாராய்ச்சி அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். இந்நிலைப்பாட்டை வலியுறுத்துவதற்கென்றே தொல்காப்பியம் வடதிசையிலிருந்து வரும் கடன் சொற்களைத் தமிழ் உள்வாங்கிக் கொண்டாலும் அவற்றைப் பிறமொழி எழுத்தொலிப்பு நீக்கி முற்றிலும் தமிழ் எழுத்தொலிப்புகளிலேயே எழுதவேண்டும் என்கிறது

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ

எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே" (தொல்.சொல்.401)

தமிழில் பிறமொழி எழுத்துகள் புகலாகாது என்பதற்காகத் தமிழ் எழுத்துக் காப்புப் போராளிகள் பழந்தமிழர் வரலாறு நெடுக வாழ்ந்துள்ளனர் எனத் தெரிகிறது.

வடமொழியில் தற்சமம்–தற்பவம் என்பன இலக்கண மரபு இகந்தவை

ஒரு மொழியில் தன்சொல் என்றும் கடனாகப் பெறப்பட்ட அயற்சொல் என்றும் இரண்டு வகைப்பாடே காணப்படும். இரண்டு மொழிகளுக்கும் பொதுவான சொல் என்று எதுவும் எக்காலத்திலும் இருந்ததில்லை. சொற்பிறப்பு ஆராய்ச்சி இந்த உண்மையை வெளிப்படுத்திக் காட்டிவிடும்.

1. பாவாணர், தொல்காப்பியம் சொல்லிலக்கணம், சேனாவரையருரை, கழகம், நூற்பா அடிக்குறிப்பு.

ஆதலின் வடமொழிக்கும் பிற இந்திய மொழிகளுக்கும் பொதுவான சொல் எனப் பொருள்படும் தற்சமம் என்னும் இலக்கண வகைப்பாடு மொழியியல் மற்றும் மரபிலக்கண நோக்கில் முற்றிலும் பொருளற்ற வறுஞ்சொல்லாகும். அதிலிருந்து பிறந்தது என வட மொழியாளர் கணிக்கும் தற்பவம் என்பதும் சொற்பிறப்பு மூலம் சரியாகக் கணிக்கப்பட்டது என்று சொல்ல முடியாது. இத்தகைய வகைப்பாடுகளை வடமொழிக்கென்றே இலக்கண நூல்கள் ஏற்படுத்தின. அவை இந்திய மொழிகளுக்குத் தேவையில்லை. தொல்காப்பியர் இத்தகைய இலக்கண வகைப்பாட்டைக் குறிப்பிடவில்லை. பிராகிருத பாலிமொழிகளில் பயிற்சி மிக்க உரையாசிரியர்கள் தேவையில்லாமல் நன்னூல் இலக்கணத்தில் இவற்றைப் புகுத்தினர்.

தற்சமம் என்பதற்கு நன்னூல் (146, உரை) உரையாசிரியர், "ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகி விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழிச்சொல்" என விளக்கம் தந்துள்ளார். சொல்லின் வரலாறு என்பது பொருளின் வரலாறு. அது எழுத்தின் வரலாறு ஆகாது என்பது அவருக்குப் புலப்படவில்லை. கமலம், குங்குமம் என்பன நட்டாசியாவில் ஆரியரால் கண்டறியப் பட்டவை அல்ல. எனவே இவை சமற்கிருதம் எனும் வடமொழிக்கு உரியனவல்ல என அவரால் கணித்தறிய இயலவில்லை. இவை திரவிட மொழிக்குரிய சொற்கள். வடமொழி கடன் கொண்டதால் சில அடிப்படைத் திரிபுற்று அதே வடிவில் இந்திய மொழிகளிலும் வழக்கூன்றியுள்ளன.

மணி என்பதைத் தற்சமம் என உரையாசிரியர் குறித்தனர். ஆனால் மொழிஞாயிறு பாவாணர் அதன் வேர்ச்சொல்லை ஆராய்ந்து நால்வகை வேரடிப் பொருள்களில் அது விரிந்திருப்பதைப் பின்வருமாறு விளக்கிக் காட்டி மணி என்பது முற்றிலும் தமிழ் என்று நிறுவியிருக்கிறார்.

1. மணி = சிறியது	எ–டு: மணிக்காடை, மணிக்குடல்
2. மணி = வட்டமானது	எ–டு: மணியோசை, நாழிமணி
உருண்டது, குண்டு	எ–டு: மணிவலை, குன்றிமணி
உருண்டு திரண்டது	எ–டு: நென்மணி, மணிச்சம்பா
3. மணி = கரியது	எ–டு: மணிமிடற்றோன்
நீலமானது	எ–டு: மணிவண்ணன், மணிமலர்
4. மணி= ஒளிபெறக் கழுவியது	எ–டு: மணிமாலை
அழகானது	எ–டு: மணிவாசல்

தற்பவம் என்பதற்கு நன்னூல் உரையாசிரியர் "ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்தாலும், பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாலும் முடிந்திருக்கிற ஆரிய மொழிகளாகத் திரிதல் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் போது பெறும் பெயர்" (நன்.146, உரை) எனக் குறித்திருக்கிறார்.

எ.டு புட்பம் எனும் சொல் தற்பவம் எனப்படுகிறது. தமிழ் பூ எனும் சொல் வட மொழியில் pushpa எனப்படும். இது மீண்டும் தமிழில் வந்து வழங்கும்போது புட்பம் எனத் திரிபடைகிறது.

தமிழிலிருந்து பூ–புஷ்பம் எனத் திரிந்ததை வடமொழி இலக்கண ஆசிரியர்கள் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டது ஏன் என்று எவரும் வினாத் தொடுக்கவில்லை. வடமொழி பிறமொழிகளிடமிருந்து கடன்பெற்ற சொற்களை வெளியில் தெரியாமல் மறைத்துத் தன் சொற்களாகக் காட்டிக் கொள்வதற்குச் செய்த முயற்சியே தற்பவம் என்னும் செயற்கையான இலக்கண வகைப்பாடாக மாறியிருக்கிறது. ஒருசொல் எம்மொழிக்கு உரியது எனச் சரியாகக் கணிக்கும் சொற்பிறப்பு நெறிமுறை (Principles of Etymology) ஆரியர்க்கும் குறிப்பாக பாணினி உள்ளிட்ட வடமொழியாளர்க்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இதனால் தோன்றிய தற்சமம் தற்பவம் என்னும்

வகைப்பாடுகள் பொய்யானவை. இலக்கண மரபுகளுக்கு மாறானவை. இவற்றைத் தமிழிலக்கண நூல்களில் ஆள வேண்டியதில்லை.

இருமொழிகளுக்கும் பொதுவான சொல் என்றோ இருமொழி எழுத்துகளுக்கும் பொதுவான ஒலிப்பு என்றோ வகைப்படுத்துவது முறையன்று. அத்தகு சொற்கள் முறையாக எம்மொழிக்குரிய சொல் என்பதை சொற்பிறப்பு வாயிலாக அயற்சொன் மடலம் நிறுவிக் காட்டவல்லது.

மேலும் அயற்சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொல் தருதல், பொருள்வரையறை, மரபார்ந்த விளக்கம் தருதல், பிற அகரமுதலித் தவறுகள் திருத்துதல் ஆகியனவும் இடம்பெறும்.

வடமொழிச் சொற்களும் பிறமொழிச் சொற்களுமாக அயன்மொழிச் சொற்கள் தமிழில் புகும்போது எத்தகைய எழுத்துத் திரிபு பெறும் என்பதைத் தமிழிலக்கணச் சான்றோர் வகைப்படுத்தியுள்ளனர். அவற்றை 19ஆம் நூற்றாண்டில் மணிப்பவள நடைதோன்றும் வரை தமிழ்ப் புலவர்கள் மட்டுமன்றி கிறித்தவ முகமதியப் புலவர்களும் பின்பற்றியுள்ளனர். உரைநடையிலும் செய்யுளிலும் அயன்மொழிச் சொற்கள் தமிழாக்கப்படும் பாங்கு கீழே தரப்பட்டுள்ளன.

பிறமொழிச் சொற்கள் தமிழில் திரியும் பாங்குகள்

1. வடசொற்களின் இடையில் உள்ள **'த்', 'ஸ்', 'ல்'** என்பன தமிழ் வடிவம் பெறும் போது **றகர** மெய்யாகத் திரியும்.

   உத்சவம் – உற்சவம்

   பஸ்பம் – பற்பம்

   கல்பம் – கற்பம்

2. 'டகர' முதல் பிறமொழிச் சொற்கள் '**தகர**' முதலாகிய தமிழ்ச் சொற்களாகத் திரியும்.

   டமருகம் – தமருகம்

   டொப்பி – தொப்பி

3. '**டகர**' முதல் '**இகர**' முன்னெழுத்து பெறும்.

   டம்பம் – இடம்பம்

4. **ஆகார** ஈற்றுப் பெயர் **ஐகார** ஈறாகும்.

   பிக்ஷா – பிச்சை

   தீக்ஷா – தீட்சை

5. **ர, ல** முன்னெழுத்துச் சொல்லுக்கு முன் 'இ'கர துணைமுன்னெழுத்து சேரும்.

   ராமன் – இராமன்

   லாபம் – இலாபம்

6. **'ஷ'** – டகரமாகத் திரியும் (இடையில்)

   விபீஷணன் – விபீடணன்

   புஷ்பம் – புட்பம்

7. **ஸ, ஷ** மொழி முதலில் சகரமாகத் திரியும்.

   ஸரஸ்வதி – சரசுவதி

   ஷங்கர் – சங்கர்

8. **க்ஷ**– மொழி முதலில் '**ச**'வாகத் திரியும்.

க்ஷேமம் – சேமம்

9. **க்ர, ப்ர** எனத் தொடங்கும் வடசொற்கள் முன்னெழுத்தோடு இகர உயிர்த்துணை பெறும்.

ப்ரகதி – பிருகதி

க்ரந்தம் – கிரந்தம்

10. வல்லின மெய்யீறுகள் **உகரத்** துணையீறு பெறும்.

தத் – தத்து

சத் – சத்து

11. '**ஜ**' – **சகர**மாகும்.

ஜோதி – சோதி

பங்கஜம் – பங்கசம்

சரோஜா– சரோசா

12. **ஸ்வ** எனும் கூட்டெழுத்து **சு, சி, சொ** எனவாகும்.

ஸ்வாமி – சுவாமி

ஸ்நேகம் – சினேகம்

ஸ்வதேசி – சுதேசி

ஸ்வர்க்கம் – சொர்க்கம்

ஈஸ்வர் – ஈசுரன்

13. **ஸ்த– த்த** ஆகும் (தனிக்குறில் சார்ந்தவை).

புஸ்தகம் – புத்தகம்

14. **ஸ்** முன் ககரம் வருமாயின் '**ஸ்**' **றகர** மெய்யெழுத்தாகும்.

பாஸ்கரன் – பாற்கரன்

15. **ஹ** வரிசையிலுள்ள மொழிமுதலான வடமொழிச் சொற்கள் மெய்கெட்டு அத்துடன் பொருந்திய உயிரெழுத்து மட்டும் ஒலிக்கும்.

ஹிமாலாயா – இமாலயம்

ஹோமம் – ஓமம்

ஹேது – ஏது

16. வடசொற்களில் இடையில் வரும் '**ஹ**' எழுத்து **ககர**மாகத் திரியும். **ரகர லகரத்**தில் தொடங்குவதாயின் **இகர உகர** முன் எழுத்துகளைப் பெறும்.

ரோஹிணி – உரோகிணி

17. '**க்ஷ**' மொழி முதலில் **க, ச** எனத் திரியும்.

க்ஷணம் – சணம், கணம்

க்ஷேமம் – சேமம்

18. '**க்ஷ**' மொழி இடையிலும் ஈற்றிலும் **க்க–ட்ச–ச்ச** எனத் திரியும்

லக்ஷ்மி – இலக்குமி

தீக்ஷ – தீட்சை, தீக்கை

பக்ஷணம் – பட்சணம்

அக்ஷரம் – அச்சரம், அக்கரம்

19. '**க்த**', '**ப்த**' என வரும் கூட்டெழுத்துகள் உடனிலை மெய் மயக்கங்களாகும்.

சக்தி – சத்தி

சப்தம் – சத்தம்

20. 'ப' (ba) – மொழி முதல் – 'ப' (pa) மொழி முதலாக ஒலிக்கும்.

பாவன – பாவனை

21. சொல்லிடையில் வரும் 'ப' – '**வ**' ஆகும்.

பாபம் – பாவம்

22. **ந–ன** ஆகும்.

ஜநகன் – சனகன்

23. **யகர** முதலெழுத்துகள் ஒலித் துணை முன் உயிர் பெறும் அல்லது யகரமெய் கெடும்.

யந்திரம் – இயந்திரம் (எந்திரம்)

யக்ஷன் – இயக்கன்

யூகி – ஊகி

யூகம் – ஊகம்

யோகம் – ஒகம்

24. குறில் கீழ் ஒற்றாகும் **ரகர** மெய்யெழுத்து **இகர** அல்லது **உகரத்** துணையெழுத்து பெற்று உயிர் மெய்யாகும்.

தர்மம் – தருமம்

துர்யோதனன் – துரியோதனன்

25. '**ர்ண**', '**ர்ந**' என்ற கூட்டெழுத்து தமிழில் '**ன்**' மெல்லின மெய் இரட்டிப்பாகும்.

கர்ணன் – கன்னன்

துர்நிமித்தம் – துன்னிமித்தம்

26. **ஈகார** ஈற்றுப் பெயர் **இகர** ஈறாகக் குறுகும்.

நதீ – நதி

27. **ண்ய, க்வ, த்ம, வ்ய, ம்ச** என்பவை மெய் இரட்டித்து முன்னெழுத்தோடு உயிர் எழுத்து இணைந்து ஒலிக்கும்.

பக்வம் – பக்குவம்

புண்யம் – புண்ணியம்

பத்மம் – பதுமம்

காவ்ய – காவியம்

வம்ச – வமிசம்

28. **உப** எனும் வடமொழி முன்னொட்டு தமிழ்ச் சொல்லாகும் போது **பகரம்** வகரமாகி உயிர் முதலாகவோ, வகரம் பெற்ற உயிர்மெய் முதலாகவோ மாறும்.

உபாத்தியாயன் – உவாத்தியாயன் – வாத்தியான்

29. வடசொல்லிடையில் **க்ன** எனும் கூட்டெழுத்தில் ககரம் இரட்டிக்கும்.

அக்னி – அக்கினி

30. வடசொல்லினிடையில் வரும் '**ஸ்வ**' எனும் கூட்டெழுத்து **சு** அல்லது **ச்சு** எனத் திரியும்.

அஸ்வனி – அசுவினி

அஸ்வினித்தேவர் – அச்சுவினித்தேவர்

வடசொல், தமிழ்ச்சொல்

பொதுவாகப் பிறமொழி எழுத்தொலிப்பு அல்லது பிற மொழிக்கே உரிய எழுத்துள்ள சொல்லை அயற்சொல் என்று எளிதில் கண்டுபிடித்து விடலாம். இருமொழிகளுக்கும் பொதுவான எழுத்துகளால் எழுதத்தக்க சொல் ஒலிப்பிலும் பொருளிலும் ஒத்திருந்தால் எம்மொழியிலிருந்து எம்மொழிக்குச் சென்றது எனக் கண்டுபிடித்தல் ஒரு புதிராகவே இருந்தது. கமலம் என்ற சொல் சமற்கிருதம் தமிழ் இரண்டிலும் ஒன்று போல் ஒலிக்கும் பொருள் கொண்டுள்ளது. இரு மொழியாளரும் தம்சொல் என உரிமை கொண்டாடும் சூழலுக்கு இது இடந்தருகிறது.

1) இத்தகு சூழல்களில் சொற்பிறப்பு ஆராய்ச்சி ஒன்றே குறிப்பிட்ட சொல் எந்த மொழியில் இயல்பாகத் தோன்றியது என்பதையும் வேறெந்த மொழிகளில் கடன் சொல்லாக ஊடாடியது என்பதையும் அறிய உதவும்.

2) கடன் கொண்ட மொழி தான் பெற்ற சொல்லின் பாங்கைத் தன் மொழிப் பாங்குக்கு ஏற்ற சொற்கட்டமைப்பாக மாற்றிக் கொள்ளும். சொற் கட்டமைப்பு மாற்றத்தைக் கண்டறிவதன் வாயிலாக அச்சொல் எம்மொழியிலிருந்து எம்மொழிக்குச் சென்றது எனக் கண்டறிய முடியும்.

தமிழ். மாலை > **சமற்.** மாலா.

ஐகார ஈற்றுத் தமிழ்ச் சொற்களைச் சமற்கிருதம் 'ஆ'கார ஈறாக மாற்றிக் கொள்வதாலும் பூவிட்டுப் பூசை செய்யும் வழக்கம் திரவிடருடையது என்பதாலும் மாலை என்னும் தமிழ்ச் சொல் மாலா என்னும் வடிவில் சமற்கிருதத்தில் கடன் கொள்ளப்பட்டிருப்பது தெளிவாகிறது.

3) தமிழ் வேரடியும் சமற்கிருத ஈறும் கொண்ட சொல் பிராகிருதப் பேச்சு மொழியில் இடம்பெற்று மீண்டும் தமிழுக்கு வரின் அது வேரளவில் தென் சொல்லாயினும் அந்த வடிவம் வடநாட்டில் திரிபுற்றதால் தமிழுக்குத் தன்சொல்லன்று என்றாலும் பிராகிருதம் வடதமிழ் எனப்பட்டதால் திசைச்சொல்லாகத் தமிழில் வழங்கத்தக்கதாயிற்று. ஆதி எனும் சொல் இதற்குத் தக்க சான்றாகும்.

வடசொல் தென்சொல் வேறுபாடுகள் - கண்டறியும் முறை

பழைய உரையாசிரியர்களும் மொழியியல் நுட்பங்களை அறியாதவர்களும் வடமொழி தவமொழியாதலின் அதன்கண் பிறமொழிச் சொல் புகாததெனவும் வடமொழிச்சொற்கள் பிறமொழிக்குப் பொதுவாகலின் எம்மொழிக்கும் வடமொழிச்சொல் செல்லும் எனவும் தவறான கருத்து கொண்டிருந்தனர்.

இங்கிலாந்து நாட்டு வடமொழிப் பேராசிரியரும் திராவிட மொழியியல் வல்லுநருமாகிய பேராசிரியர் பரோ அவர்களும், கன்னட ஆங்கில அகரமுதலி தொகுத்த பேராசிரியர் கிட்டலும், ஒரு சொல் வட மொழிக்கே உரிய சொல்லா அல்லது வடமொழி பிற மொழிகளிடம் பெற்ற கடன் சொல்லா என்பதைக் கண்டறியும் வழிமுறைகளைத் தெளிவாக்கினர். அதன் விளைவாக வடமொழியில் கடன் கொள்ளப்பட்ட

சொற்களையும் இருக்கு வேதத்தில் உள்ள பழந்திரவிடம் எனும் தமிழ்ச் சொற்களையும் பட்டியலிட்டுக் காட்டினர். மொழிஞாயிறு பாவாணர் மேலும் பன்னூற்றுக்கணக்கான தமிழ்ச்சொற்கள் வடமொழியில் கடன் கொள்ளப்பட்டிருப்பதைத் தம் ஆய்வுநூல்களில் வெளிப்படுத்தினார். அவருடைய வடமொழி வரலாறு இதற்குத் தக்க சான்றாகும்.

பேராசிரியர் பரோ குறிப்பிட்ட அடிப்படை வேறுபாட்டுக் காரணங்கள் அனைவரும் நினைவிற் கொள்ளத்தக்கன.

1. ஒருசொல் சமற்கிருதம் எனும் வடமொழிக்கே உரியதாயின் அச்சொல் அதன் இனமொழிகளாகிய செருமானியம், கிரேக்கம், இலத்தீனம் போன்ற மேலையாரிய மொழிகளில் இனச்சொல்லாகக் காணப்பட வேண்டும். இல்லையாயின் அது கடன் சொல்லாகக் கருதப்படும்.
2. ஒரு சொல்லின் வேர்ச்சொல்லும் அதன் எண்ணிறந்த தாய்மொழிச் சொல்லாட்சிகளும் அச்சொல் எம்மொழிக்குரியது எனக்காட்டும். வேர்ச்சொல் இல்லாது பரந்துபட்ட சொல்வளர் நிலைகளும் இல்லாமல் ஓரிரு இடங்களில் மட்டும் பயின்றிருந்தால் அது கடன் சொல்லாகக் கருதப்படும்.
3. அம்மண்ணுக்கே உரிய நிலைத்திணை இயங்குதிணைப் பொருள்களும், உயிரிபயிரிகளின் பெயர்களும் பண்பாட்டுக் குமுகாய வரலாற்றுப் பின்னணிச் சொற்களும் எந்தத்தாய் மொழிக்குரிய சொல் இது என்பதைக் காட்டிவிடும்.

எ–டு. முத்து, பவளம் போன்ற கடல்படுபொருள்கள் நட்டாசியாவிலிருந்து வந்த ஆரியர்க்குத் தெரியாதவை. எனவே இவற்றை வடமொழி முக்தா, ப்ரவள என உருமாற்றிக் கடன் கொண்டுள்ளது.

பேராசிரியர் பரோ ஐநூற்றுக்கும் மேற்பட்ட சொற்களையும் கிட்டல் நானூற்றுக்கும் மேற்பட்ட சொற்களையும் குறிப்பிட்டு இவை திரவிட மொழிகளிலிருந்து சமற்கிருதத்துக்குச் சென்றுள்ளன என எடுத்துக் காட்டினர். மொழிஞாயிறு பாவாணர் வடமொழியில் 40% சொற்கள் தமிழிலிருந்து கடன் கொள்ளப்பட்டுள்ளன என எடுத்துக்காட்டினார்.

வேதமொழி பேச்சு மொழியாக இருந்தது. ஈரானிய ஆரியர் கி.மு.16ஆம் நூற்றாண்டிலும் இருக்குவேத ஆரியர் கி.மு. 13ஆம் நூற்றாண்டிலும் வடமேற்கு இந்தியாவில் திரவிட மக்களோடு கலந்தனர். கி.மு.19ஆம் நூற்றாண்டில் இயற்கைச் சீற்றத்தால் அழிந்துபோன சிந்துவெளி தமிழர் நாகரிகக் காலத்துக்கும் ஆரியர்க்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை. இருக்குவேதப் பாடல்கள் வேள்விக்குப் பயன்பட்ட கி.மு.1200 முதல் கி.மு. 800 கால வரம்பில் வடமொழி மந்திரமொழியாக மட்டும் பயன்பட்டு பேச்சுவழக்கு இழந்ததால் உள்நாட்டுத் திரிபு மொழிகளாகிய பிராகிருத பாலி மொழிகளை ஆரியர் தம் பேச்சு மொழிகளாக்கிக் கொண்டனர். கி.மு.800க்குப்பின் வடபுலச் சமண பவுத்த நெறிகளால் தாக்குண்டு தென்னாட்டில் குடிபுகுந்த ஆரியக் கூட்டத்தினர் பல்வேறு புலத்துறைத் தமிழ் நூல்களை வடமொழியில் மொழி பெயர்த்ததால் பல்லாயிரக் கணக்கான தமிழ்ச் சொற்களை வடமொழியில் உருமாற்றிச் சேர்த்துக் கொண்டனர். அவற்றைத் தெளிவாக்குவதற்கு இந்த அயற்சொன் மடலம் தனியாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

பேசப்படாத மொழியில் கடன் சொற்களே மிகுதி

"சமற்கிருதம் எப்பொழுதும் நாட்டின் எப்பகுதியிலும், அது வடநாடாக இருக்கட்டும் அல்லது தென்னாடாக இருக்கட்டும் ஒரு காலத்திலும் பேச்சு மொழியாக இருந்தது இல்லை"[1].

1. Sanskrit, though it was improbable that it ever was the vernacular language of any district or country, whether in the north or in the south.. Caldwell, Robert, A Comparative Grammar of the Dravidian or South Indian Family of languages, AES 1987 (First Published 1913), int. P.2.

பேசப்படாமல் வெறும் எழுத்து வடிவில் மட்டும் இருக்கும் மொழியில் வேற்று மொழியிலிருந்து மொழிபெயர்ப்பு வாயிலாகப் பல்லாயிரம் சொற்கள் புக வாய்ப்பு ஏற்படுகிறது. பேசப்படும் மொழியில் தேவை கருதி மக்கள் தாமாகவே புதுச் சொல் படைத்துக் கொள்கின்றனர். இது இயற்கை மொழியின் இயல்பு. கடன்சொற்களால் மட்டும் வாழும் மொழியைக் கலவை மொழியென்றும் செயற்கை மொழியென்றும் கூறுவர். சமற்கிருதம் எனும் மிகு கலவை செயற்கை மொழி பன்மடித் திரிபுச் சொற்களைத் தன் சொற்களாகக் காட்டிக் கொண்டாலும் மொழியகழ்வாராய்ச்சியாளர்கள் (Language Archaelogists) அவற்றை எளிதில் கண்டறிகின்றனர்.

பேசப்படாத வடமொழிச் சொற்களாகக் காட்டப்பட்டவற்றுள் தமிழில் மக்களின் அன்றாட வழக்கில் புகுந்துள்ள சொற்களின் எண்ணிக்கை 1500 எனலாம். அதிலும் மருத்துவம், வானநூல், கணியம், சமயம், இசை, நாட்டியம், சிற்பம் போன்றவற்றில் புகுத்தப்பட்டவை மிகுதி. இக்காலத்தில் ஆங்கிலச் சொல்லாட்சிகள் அன்றாட வழக்கத்தில் சற்றொப்ப 2000 புகுந்துள்ளன எனலாம். இவையனைத்தையும் களைந்து தமிழை அதனியல்பில் வளர்க்கும் தாளாண்மையின் வெளிப்பாடாக அயற்சொன் மடலம் தொகுக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்த நிலையில் திரிபுக்குத் திரிபாகப் பன்மடித் திரிபுற்ற சொற்களில் தமிழிலிருந்து திரிந்தன எவை? சமற்கிருதத்திலிருந்து திரிந்தன எவை? இது தமிழ்ச்சொல் இது சமற்கிருதச்சொல் என்று மிக நுட்பமாக வரையறுக்கும் எல்லைக்கோடு எது? எத்தகைய சொற்பிறப்பு நெறிமுறைகள் இவற்றை வரையறுக்கின்றன என்னும் வினாக்களுக்கு விடைகளாகச் சொற்பிறப்பு நெறிமுறைகள் எழுதுவதற்கு முன்பே பாவாணர் இயற்கையெய்திவிட்டார். அவரோடு ஆறாண்டுகளாக நீங்கா நிழலாய் இருந்த எனக்கு அவர் கற்பித்த நெறிமுறைகளே மேற்கண்ட வினாக்களுக்கு விடையளித்துள்ளன. அடுத்து வெளிவரும் தமிழ்ச் சொற்பிறப்பு நெறிமுறை மடலத்தில் அவை விரிவாக இடம் பெறும்.

1994இல் நான் ஓய்வுபெற்ற பின்னர் 14 ஆண்டுகளாக இயக்குநர் அமர்த்தப்படாத நிலையில் அரசு செயலாளர்களாக இருந்த இ.ஆ.ப., அதிகாரிகள் பொறுப்பு இயக்குநர்களாக இருந்த காலத்தில் தக்க மேற்பார்வைக்குரிய தமிழறிஞர்கள் இல்லாததால் வடசொல் எது தமிழ்ச் சொல் எது எனும் வரையறை முறையாகப் பின்பற்றப்படாத குறைகள் சில காணப்படுகின்றன. அவை திருந்திய பதிப்பில் சீராக்கப்படவுள்ளன. அயற்சொல் மடல வெளியீடு அயற்சொற்களை அறவே நீக்கி முற்றிலும் செந்தமிழ்ச் சொற்களை ஆள்வதற்குத் தக்க கருவி நூலாக அமையும்.

சொற்பயன்பாடு

“மக்கள் வரவரக் கலைநாகரிக வளர்ச்சியடைந்து வருவதால், அன்றன்று தோன்றும் புதுப் புதுக் கருத்துகட்கெல்லாம் உடனுடன் சொற்கள் அமையப் பெறல் வேண்டும். ஆங்கிலத்தில் அது நடைபெற்று வருகின்றது. ஆனால் தமிழிலோ அஃதில்லை. அதோடு இருந்த சொற்களும் பல இறந்துவிட்டன. உலக வழக்கிறந்த சொற்கள் செய்யுள் அல்லது நூல் வழக்கிலும், நூல் வழக்கிறந்த சொற்கள் அகரமுதலியிலும் இடம்பெறுவதுண்டு. தமிழில் ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பு அகரமுதலியும், இவ்விருபதாம் நூற்றாண்டிற்கு முன்பு விரிவான அகரமுதலியும் இருந்ததில்லை. ஆதலால் இதற்குமுன் வழக்கிழந்த சொற்களெல்லாம் மீளா இருளில் மூழ்கிவிட்டன. அவைபோக எஞ்சியவற்றுள்ளும் பல வழக்கிழந்துள்ளன. அவை வழக்கற்றமைக்குக் காரணம் அவற்றை வழங்காமையே”[1]. ஆகையால் இங்கு அயற்சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இது தமிழின் வளமையை எடுத்துக்காட்டுவதோடு வழக்கிழந்த சொற்களை மீட்டுருவாக்கம் செய்வதற்கும் பெருந்துணை புரியும் என்பதில் ஐயம் இல்லை.

---

1. பாவாணர், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், தமிழ் மண் பதிப்பகம், 2000 (முதற்பதிப்பு 1949), பக்.73.

கக்கசம் *kakkašam,* பெ.(n.) இடர்ப்பாடு, கடுமை; hindrance, hardship.

[Skt. karkasa > த. கக்கசம்.]

கக்கலாத்து *kakkalāttu,* பெ. (n.) கரப்பான்பூச்சி; cockroach.

[Port. cacalacca > த. கக்கலாத்து.]

கக்குசு *kakkušu,* பெ. (n.) 1. சிறுநீர் கழிக்குமிடம்; latrine. 2. காலைக் கடன் கழிக்குமிடம்; lavatory.

த.வ. ஒதுங்கறை.

[Du. kakhui > த. கக்குசு.]

கக்கூசு *kakkūšu,* பெ.(n.) **கக்குசு** பார்க்க; see *kakkušu.*

த.வ. கழிப்பறை.

[Du. kakhuis> த. கக்கூசு.]

ககணி *kagaṇi,* பெ.(n.) வானத்திலுள்ள பொருள்களின் நிலையை அறிபவன்; one who has a knowledge of the motions of heavenly bodies. *"ககணியாகிய வாய்பொருட் கேள்விச் சகுனி கௌசிகன்" (பெருங்.மகத, 26:26).*

த.வ. கணிவன்.

[Skt. kha-gaṇin > த. ககணி.]

ககபதி *kaga-padi,* பெ.(n.) பறவைகளின் அரசனாகிய கலுழன் (கருடன்); *Garuḍaṉ,* king of birds. *"ககபதி யூர்தி காத்ததை" (கசேந்திர.).*

[Skt. kha-ga+pati> த. ககபதி.]



ககம்[1] *kagam,* பெ.(n.) 1. பறவை (திவா.); bird in general, from its moving in the air. 2. அம்பு (சூடா.); arrow. 3. சரகண்ட வைப்பு நஞ்சு (மூ.அ.); a mineral poison.

[Skt. kha-ga> த. ககம்.]

ககம்[2] *kagam,* பெ.(n.) **ககமாரம்** பார்க்க; see *kaga-māram.*

ககமாரம் *kaga-māram,* பெ.(n.) மணித் தக்காளி (மலை.); black night-shade.

ககராசன் *kaga-rāšaṉ,* பெ.(n.) **ககபதி** பார்க்க; see *kaga-padi. "இபராசன் முன்றாவு ககராசனும்" (அழகர்.கல.19).*

த.வ. கலுழன்.

[ககம் + ராசன்]

[Skt.kha-ga+ rājan]

த.அரசன்>Skt. rājan

ககவசுகம் *kaga-vašugam,* பெ. (n.) ஆலமரம் (மலை.); banyan tree.

த.வ. ஆலமரம்.

[Skt. kha-gavasuka > த. ககவசுகம்.]

ககனசாரி *kagaṉa-šāri,* பெ. (n.) 1. வானத்தில் சுற்றித் திரிபவன்–ள்; one who travels through the air, aeronaut. 2. **ககனசாரிகை[2]** பார்க்க; see *kagaṉa-šārigai.*

த.வ. வானுலாவி.

[Skt. gagana+cārin > த. ககனசாரி.]

ககனசாரிகை[1] *kagaṉa-šārigai,* பெ.(n.) வானத்தில் உலாவுகை; aerial travel.

த.வ. வானுலா.

[Skt.gagana+cārika > த. ககனசாரிகை.]

ககனசாரிகை[2] *kagaṉa-šārigai,* பெ.(n.) நாட்டியவுறுப்புகளுள் ஒன்று (திருவிளை. கான்மாறி.12); a poise in dancing.

ககனம்[1] *kagaṉam,* பெ.(n.) 1. வானம் (திவா.); sky, firmament. 2. பேரின்பவீடு, துறக்கம் (சுவர்க்கம்); heaven. *"ககனவாணர்கள்" (கந்தபு. அமரர்சிறை.13).* 3. வளி மண்டலம்; air, atmosphere.

த.வ. வானம்

[Skt. gagana > த. ககனம்.]

ககனம்² *kagaṉam,* பெ.(n.) 1. காடு (பிங்.); wood, thickest jungle. 2. ஒருவகைக் கூம்புக்கிழங்கு (மூ.அ.); tahiti arrow root.

[Skt. gahana > த. ககனம்.]

ககனம்³ *kagaṉam,* பெ.(n.) படை (சேனை.); army.

ககனாரவிந்தம் *kagaṉāravindam,* பெ.(n.) 1. வான்தாமரை (வேதா. சூ.63, உரை); lotus which flowers in the sky, as a thing that is non-existent. 2. கொட்டைப்பாசி (மலை.); seed moss, sida. humilis.

[Skt.gagana + aravinda> த.ககனார விந்தம்.]

ககுபம்¹ *kagubam,* பெ.(n.) கருமருது (மலை.); *terminalia tomentosa.*

[Skt. kakubha > த. ககுபம்.]

ககுபம்² *kagubam,* பெ.(n.) திசை; region, any of the eight chief points of the compass. *"ககுபமுற்றையும் விழுங்கி" (ஞானவா. சுரகு.29).*

[Skt. kakubhā > த. ககுபம்.]

ககுளம் *kaguḷam,* பெ.(n.) ஒருவகைப் பண் (பரத.இராக.23); a musical scale.

[Skt. kākalī > த. ககுளம்.]

ககேசன் *kagēšaṉ,* பெ.(n.) 1. கலுழன் (கருடன்); *Garudaṉ,* the lord of birds. 2. கதிரவன்; sun. *"ககேசன்மேல் வருமிராகுவின்" (கந்தபு. இரண்டா.163).*

[Skt. kha-ga+īša > த. ககேசன்.]

ககேந்திரன் *kagēndiraṉ,* பெ.(n.) கலுழன் (கருடன்) (வின்.); the Brahminee kite.

[Skt. khagēndra > த. ககேந்திரன்.]

ககோதரம் *kagōdaram,* பெ.(n.) பாம்பு, snake, prob. from its moving in a zigzag manner upon its belly. *"ககோதரநற்பையரா" (காளத்.உலா, 148).*

[Skt. kākōdara > த. ககோதரம்.]

ககோளசாத்திரம் *kagōḷa-šāttiram,* பெ.(n.) வானநூல்; astronomy.

[Skt. kha-gōla+šāstra > த. ககோள சாத்திரம்.]

ககோளம் *kagōḷam,* பெ.(n.) வான் மண்டலம்; vault of the heavens.

[Skt. kha-gōla > த. ககோளம்.]

கங்கடம் *kaṅgaḍam,* பெ.(n.) காப்புறை, கவசம் (யாழ்.அக.); armour.

த.வ. மெய்புகுகருவி.

[Skt. kaṅkaṭa> த. கங்கடம்.]

கங்காகுலம் *kaṅgā-kulam,* பெ.(n.) **கங்கா கோத்திரம்** பார்க்க; see *kaṅgā-kōttiram.*

[த.கங்கை>Skt. gaṅgā > த.கங்காகுலம் > கங்காகுலம்.]

கங்காகுளியல் *gaṅgā-kuḷiyal,* பெ. (n.) கங்கையில் நீராடிப் பெற்ற பயனையடைவதற்குச் செய்யும் தானம்; gift to obtain the spiritual benefit of a bath in the Ganges. 2. விளக்கணி நாளன்று செய்யும் மங்கலக் குளியல்; oil-bath on the *viḷakkaṇi-nāḷ.*

த.வ. கங்கைக்குளியல்.

[த.கங்கை>Skt.kaṅgā>]

கங்காகோத்திரம் *kaṅgā-kōttiram,* பெ.(n.) கங்கைச் சமவெளியிலிருந்து வந்து குடியேறியதாகக் கூறப்படும் வேளாளர் குலம்; the *Vēḷāḷa* tribe, who claim to have migrated from the Gangetic region.

த.வ. கங்கைக்குடி, கங்கைக்குலம்.

[த.கங்கை>Skt.gaṅgā+gōtra> த. கங்கா கோத்திரம்.]

கங்காசலக்குப்பி *kaṅgāšala-k-kuppi,* பெ. (n.) கங்கை நீரடைத்த ஒருவகைக் குடுவை; vessel of coarse black glass or any bottle-shaped vessel in which Ganges water is carried by pilgrims.

த.வ. க்ங்கை நீர்க்குப்பி.

[த.கங்கை>Skt.gaṅgā+jala>த. கங்காசலம் + குப்பி.]

கங்காசுதன் *kaṅgā-šudaṉ,* பெ.(n.) 1. முருகன்; *Murugaṉ,* a son of *Kaṅgā-dēvi.* 2. வீடுமர் (பீச்மர்); *Bhīsmar,* also a son of *Kaṅgā-dēvi. "கங்காசுதனொடும் வெகுளிமாற்றி" (பாரத.வாசுதேவ.2).*

[த.கங்கை>Skt. gaṅgā+suta > த. கங்காசுதன்.]

கங்காசேத்திரம் *kaṅgā-sēttiram,* பெ. (n.) கங்கையாற்றைச் சார்ந்த நன்னிலம்; the holy region of the Ganges.

த.வ. கங்கைநிலம்.

[த.கங்கை>Skt.gaṅgā + kṣētira > த.கங்காசேத்திரம்.]

கங்காதரன் *kaṅgādaraṉ,* பெ. (n.) கங்கையை முடிமேலணிந்த சிவன் (திவா.); *Śivaṉ,* who holds the Ganges in his matted locks.

த.வ.ஆறணியன்.

[த.கங்கை>Skt. gaṅgā + dhara >த. கங்காதரன்.]

கங்காதேவி *kaṅgā-dēvi,* பெ. (n.) கங்கையாகிய பெண் தெய்வம்; the goddess of the Ganges.

[த.கங்கை>Skt. gaṅgā > த. கங்காதேவி.]

கங்காநீலன் *kaṅgā-nīlaṉ,* பெ. (n.) நீல நிறமுள்ள குதிரை வகை (அசுவசா.151); a species of horse, so called from its being bluish in colour.

[த.கங்கை>Skt.gaṅgā>த.கங்கா +நீலன்.]

கங்காபட்டாரகி *kaṅgā-paṭṭāragi,* பெ.(n.) கோயில்களிலுள்ள சிவ (வடிவ)ம் அணியுங் கங்கை வடிவான தலையணி (S.I.I. ii, 170); head-ornament for the idol of *Śivaṉ,* to represent the Ganges.

[த.கங்கை>Skt.gaṅgā-bhaṭṭāraki> த.கங்காபட்டாரகி.]

கங்காபவானி *kaṅgā-bavāṉi,* பெ. (n.) கங்கைதேவி (சி.சி.1: 47, மறைஞா.); the goddess of the river Ganges, regarded as a consort of Bhava or *Śivaṉ.*

[த.கங்கை>Skt.gaṅgā+bhavāni> த.கங்காபவானி.]

கங்குரோகம் *kaṅgu-rōgam,* பெ. (n.) கொப்புள நோய் வகை (சீவரட்.144); small blisters on the skin, resembling grains of millet.

[Skt. kaṅgu+rōga> த. கங்குரோகம்.]

கச்சதூசன் *kacca+tūaṉ* பெ.(n.) தவளை (மூ.அ.); frog.

[Skt. kaccha+dūṣa> கச்சதூஷன்>த. கச்சதூசன்.]

கச்சபம் *kaccabam,* பெ.(n.) 1. ஆமை; turtle, tortoise. 2. தொண்பது (ஒன்பது) செல்வ (நிதி)க் குவையங்களுளொன்று; one of the nine treasures of *kubēraṉ.*

[Skt. kaccha-pa > த. கச்சபம்.]



கச்சபீ *kaccabi,* பெ.(n.) கலைமகளின் வீணை (பரத.ஒழிபி.15); name of the *Viṉai* of *Kalaimagaḷ.*

[Skt. kacchapi > த. கச்சபீ.]

கச்சலாட்டம் *kaccal-āṭṭam,* பெ.(n.) சச்சரவு; squabbling, strife, quarrel.

[U. khajya> த. கச்சல்+ஆட்டம்.]

கச்சாவசூல் *kaccā-vasūl,* பெ.(n.) பிறன் கையாடிய பொருளை மீளப்பெறுகை (வின்.); recovery of what has been embezzled.

[U. kaccā+wasūl > த. கச்சாவசூல்.]

கச்சி *kacci,* பெ.(n.) மகமதியர் '**மெக்கா**' என்னும் திருத்தலத்திற்குச் செல்லும் செலவு; pilgrimage to Mecca.

த.வ. திருத்தலச் செலவு.

[Ar. hajji> த. கச்சி.]

கச்சியா *kacciyā,* பெ.(n.) சண்டை (வின்.); quarrel.

[U. qaziya > த. கச்சியா.]

கச்சூர்க்காய் *kaccūr-k-kāy,* பெ. (n.) 1. பேரீச்சம்பழம்; date-fruit. 2. தின்பண்ட வகை; a kind of sweet-meat.

[கச்சூர்+காய்.]

[Skt. khar-jūra > த. கச்சூர்.]

கச்சேரி *kaccēri,* பெ.(n.) 1. பணிபுரியுமிடம்; cutcherry, office for the transaction of any public business, an office of administration, revenue office, court-house. 2. பணிபுரியுமிடத்தில் நடக்கும் பணி; business proceeding in a public office. *கச்சேரி நடந்து கொண்டிருக்கிறது.* 3. ஆடல் பாடல் முதலிவற்றிற்காகக் கூடும் கூட்டம்; assembly, as for musical entertainments or other parties for play or pastime. *சீட்டுக்கச்சேரி, பாட்டுக் கச்சேரி.*

த.வ. அலுவற்கூடம், அவையம், அவை.

[U. kachahri > த. கச்சேரி.]

கச்சேரிகரைவாசல் *kaccēri-karai-vāšal,* பெ.(n.) பணிபுரியுமிடம்; public office.

[U. kachahri > த. கச்சேரி + கரைவாசல்.]

கச்சேரிவேட்டி *kaccēri-vēṭṭi,* பெ.(n.) கச்சேரிக்குச் செல்வதற்கென்று வைத்திருக்கும் நீண்ட தலைச்சுற்று வேட்டி; white cloth, eight to ten yards long, washed and kept in reserve to be used as a turban, in order to qualify an illiterate villager to appear in court as a man of standing.

த.வ. அவைவேட்டி.

[U. kachahri > த. கச்சேரி + வேட்டி.]

கச்சோடு *kaccōḍu,* பெ.(n.) மட்டமான வெற்றிலை (C.G.); black betel devoid of tenderness and pungency.

[U. kaccā+jōḍi>த. கச்சோடு.]

கசக்கார் *kašakkār,* பெ.(n.) தேமா (மலை.); sweet mango.

கசக்கோல் *kašakkōl,* பெ.(n.) மூன்று அடி அல்லது இரண்டு முழவளவைக் குறிக்கும் கோல்; yard stick.

த.வ. அரைமார்க்கோல்.

[U. gaz>கஜ> த. கசம் + கோல்.]

கசகசோபிதம் *kašaga-šōbidam,* பெ.(n.) இலவங்கம் (கிராம்பு); clove, *Eugenia caryophyllata* (சா.அக.).

கசகர்ணம்[1] *kaša-karṇam,* பெ.(n.) 1. காதாட்டும் கலை; (Lit.) elephant's ear, term used to denote the art of moving or waving one's ears in imitation of the elephant. 2. பெரு முயற்சியால் ஆக வேண்டிய செயல்; a task involving stupendous effort.

த.வ. அருங்கலை.

[Skt. gaja+karṇa> கஜகர்ணம் > த. கசகர்ணம்.]

கசகர்ணம்[2] *kaša-karṇam,* பெ. (n.) அம்பு வகை (கம்பரா.நாகபாச.113, உரை); a kind of arrow.

[Skt. gaja+karṇa>கஜகர்ணம் > த. கசகர்ணம்.]

கசகர்ணம்போடு-தல் *kaša-karṇam pōḍu-,* 18 செ.கு.வி.(v.i.) பெருமுயற்சி செய்தல்; to put forth unusual or extraordinary effort to realize an object. *அவன் அந்த வேலையைப் பெறக் கசகர்ணம் போட்டான்.*

[Skt.gaja+karṇa>த.கசகர்ணம் போடுதல்.]

கசகர்ப்பம் *kasa-karppam,* பெ.(n.) 1. வெகுகாலந் தங்குஞ் சூல் (கர்ப்பம்); long period of gestation, as of an elephant

which is 18 months for a female calf and 22 months for a male calf. 2. நீடித்த கால முயற்சி; a tediously long period of endeavour before actual realization. *இதைப்பற்றிய பிரயத்தினம் கசகர்ப்பம்.* (இ.வ.)

[Skt. gaja+garbha > த. கசகர்ப்பம்.]

கசகன்னம் *kaša-kannam,* பெ.(n.) **கசகர்ணம்** பார்க்க; see *kaša-karnam.*

[Skt. gaja+karna > த. கசகர்ணம் > கசகன்னம்.]

கசதி *kašadi,* பெ.(n.) 1. வருத்தம்; grief. 2. அல்லல்; துன்பம்; difficulty, trouble. *"பிணியுற்றுக் கசதிப்பட்டு" (திருப்பு.149).*

[T. kasti > கஸ்தி > த. கசதி.]

கசப்பு *kašappu,* பெ. (n.) தொழில் (C.G.); occupation, calling, profession. .

[U. kasab > த. கசப்பு.]

கசப்புளுகன் *kaša-p-pulugan,* பெ.(n.) பெரும் பொய்யன்; big liar.

த.வ. அண்டப்புளுகன்.

[Skt. gaja > த.கசம் + புளுகன்.]

கசபரீட்சை *kaša-paritcai,* பெ.(n.) அறுபத்து நான்கு கலையுள் யானை யிலக்கணம் அறியும் கலை; science relating to the points of the elephant, one of *arupattu-nālu-kalai.*

த.வ. யானைநூல்.

[Skt. gaja+pariksā > த. கசபரீட்சை.]

கசபோக்கிரி *kaša-pōkkiri,* பெ.(n.) பெரும்போக்கிலி (துட்டன்); notorious scoundrel.

[Skt. gaja > த.கசம் + போக்கிரி > த. போக்கிலி >போக்கிரி.]

கசம்[1] *kašam,* பெ.(n.) யானை; elephant.

[Skt. gaja > த. கசம்]

கசம்[2] *kašam,* பெ.(n.) 3 அடி அல்லது 2 முழம் கொண்ட அளவு; one yard in length.

த.வ. அரைமார்.

[U. gaz > த. கசம்.]

கசமடையன் *kaša-madaiyan,* பெ.(n.) பெருமூடன்; big fool, a confirmed dolt.

த.வ. பெருமூடன்.

[Skt. gaja> த. கசம்+மடையன்.]

கசமுகத்திப்பிலி *kašamuga-t-tippili,* பெ.(n.) யானைத்திப்பிலி; long pepper-Piper longum.

[Skt. gaja> த. கசம்+முகத்திப்பிலி.]

கசமுகானுக்கிரகர் *kaša-mugānukkiragar,* பெ.(n.) சிவ வடிவங்களுள் ஒன்று; *Šivan,* in His aspect of showing grace to *Gaja-mukha.*

[Skt. gaja - mukha + anu - graha > த. கசமுகானுக்கிரகர்.]

கசர்[1] *kašar,* பெ.(n.) மீதம்; surplus, balance, profit or loss on the exchange of coins.

த.வ. எச்சம்.

[U. kasar > த. கசர்.]

கசர்[2] *kašar,* பெ.(n.) குறைவு; deficiency, diminution.

[Ar. quāsir > த. கசர்.]

கசர்பாபத்து *kašar-pāpattu,* பெ.(n.) நிலுவை (வின்.); undisturbed balance.

த.வ. சொக்க நிலுவை, தொச்சம்

[U. kasar+bābat>த.கசர்பாபத்து.]

கசரத்து *kašarattu,* பெ.(n.) உடற்பயிற்சி; athletic or gymnastic exercises.

த.வ. களரி, களரிப்பயிற்று.

[U. kasrat > த. கசரத்து.]

கசரயோகம் *kašara-yōgam,* பெ.(n.) ஞாயிறு நின்ற நாள் முதல், திங்கள் நின்ற நாள் வரை எண்ணி 9–ஆல் வகுத்தபின் 3, 4, 5, 6 மீதியாக வருமாறு ஞாயிறும் திங்களும் அமைந்துள்ள நிலை (சோதிடகிரக.49); the position of the sun and the moon, when the star which is in conjunction with the moon counted from the star which is in conjunction with the sun gives a number which on casting out the nines is, 3, 4, 5 or 6.

த.வ. நிலா, கதிர்நிலை.

[Skt. khacara+yōga>த.கசரயோகம்.]

கசலட்சுமி *kaša-latcumi,* பெ.(n.) இருபக்கமும் யானைகள் பூச்சொரிய தாமரை மலர்மேல் அமர்ந்துள்ள திருமகள்; figure of Laksmi with elephants on both sides.

த.வ. ஈரானைத் திருமகள்.

[Skt. gaja+laksmi> த. கசலட்சுமி.]

கசவேட்டை *kaša-vēttai,* பெ.(n.) யானை வேட்டை; elephant hunt.

த.வ. கரிவேட்டை, கயவேட்டை.

[Skt. gaja > த.கசம் + வேட்டை.]

கசனா *kašanā,* பெ.(n.) கருவூலச்சாலை; treasury, public treasury.

[U. khazāna > த.> கசனா.]

கசாக்கிரம் *kašākkiram,* பெ.(n.) 1. மயிர் நுனி; point of a hair. 2. ஒரு சிற்றளவு; a linear measure equal to a hair's, breadth. *"கதிரெழுதுகளெண்மூன்று கசாக்கிர மந்தானாகும்" (கந்தபு.அண்டகோ. 5).*

[Skt. kaca+agra > த. கசாக்கிரம்.]

கசாசனம் *kašāšanam,* பெ.(n.) அரசமரம் (வின்.); pipal.

[Skt. gajasana > த. கசாசனம்.]

கசாப்பு *kašāppu,* பெ.(n.) 1. ஆடு மாடு அடிக்கை; slaughter of animals for food. 2. இறைச்சி விற்போன்; butcher.

த.வ. புலால்.

[U. kassāb > த. கசாப்பு.]

கசாப்புக்கடை *kašāppu-k-kadai,* பெ.(n.) இறைச்சி விற்குமிடம்; butcher's shop.

த.வ. புலால்கடை.

[U. kassāb> த.கசாப்பு + கடை.]

கசாப்புக்காரன் *kašāppu-k-kāran,* பெ. (n.) கசாப்பு பார்க்க; see *kašāppu.*

த.வ. வெட்டுகறியாளன்.

[U. kassāb > த.கசாப்பு + காரன் (உடைமைப் பொருள் ஈறு).]

கசாப்புக்கிடங்கு *kašāppu-k-kidangu,* பெ.(n.) ஆடுமாடுகள் அடிக்குமிடம்; slaughter-house.

த.வ. வெட்டுகிடங்கு.

[U. kassāb > த.கசாப்பு + கிடங்கு.]

கசாயக்கிராயினம் *kašāya-k-kirāyinam,* பெ.(n.) மாஞ்சரோகணி, ஒருவகை மூலிகை; a rejuvenating plant.

கசாயகசாயம் *kašāya-kašāyam,* பெ. (n.) மிக்கத் துவர்ப்பான கருக்குநீர். இது சில சமயம் சுரத்தை யுள்ளடக்கி, மறுபடியு மெழுப்பும் தன்மை வாய்ந்தது; a decoction extremely astringent. It has a tendency at times to suppress fever, which subsequently relapses (சா.அக.).

த.வ. துவர்கருக்கி.

[கசாயம்+கசாயம்.]

[Skt.kasāya+kacāya > த.கசாயகசாயம்.]

கசாயதித்தம்[1] *kašāya-tittam,* பெ.(n.) ஒருவகைக் கரந்தை; Vishnu blue, Vishnu plant-spaeranthus Indicus alias Evolvulus hirsutus (சா.அக.).

த.வ. கரந்தைப்பூடு.

[Skt.kasāya+tikta> த.கசாயதித்தம்.]

கசாயதித்தம்[2] *kašāya-tittam,* பெ.(n.) வெள்வேல்; white acacia-*Acacia leucopholea* (சா.அக.).

[Skt.kasāya+tikta> த.கசாயதித்தம்.]

கசாயபாகவிதி *kašāya-bāgavidi,* பெ.(n.) கருக்குநீர் (கசாயம்) செய்முறை; a rule for preparing decoction (சா.அக.).

த.வ. கருக்குமுறை.

[Skt.kasāya+pāka+vidhi> த.கசாயபாக விதி.]

கசாயபாண்டம் *kašāya-pāndam,* பெ.(n.) கருக்குநீர் (கசாயம்) காய்ச்சுவதற்காகப் பயன்படுத்தும் மட்கலம்; an earthern pot used for preparing decoction (சா.அக.).

த.வ. கருக்குச்சட்டி.

[Skt.kasāya> த.கசாயம் + பாண்டம்.]

கசாயம்[1] *kaśāyam,* பெ.(n.) 1. காய்ச்சிய மருந்துக் குடிநீர்; decoction, infusion. *"கசாயமுங் கரிசமானவே" (மேருமந்.543).* 2. மாதவிலக்குக் கழிவு; menstrual blood. 3. ஐம்மூலக் கருக்குநீர் – ஐந்து வகை வேர்களையிட்டுக் காய்ச்சி வடித்த நீர்; a decoction prepared using five different roots. 4. துவர்ப்பு மருந்து; astringent medicine. 5. நோயைக் கண்டிக்கும் மருந்து நீர்; any healing or medicinal potion (சா.அக.).

த.வ. மருந்துக்குடிநீர், குடிநீரம்.

[Skt. kasāya>த. கசாயம்.]

கசாயம்[2] *kaśāyam,* பெ.(n.) தீவினை (சீவக.3076, உரை); impurity or sin clinging to the soul; defect.

[Skt.kaṣāya > த. கசாயம்.]

கசாயம்[3] *kaśāyam,* பெ. (n.) பேசாதிருக்கின்ற பெருநிலைக்கு நேர்கின்ற இடையூறுகளுள் ஒன்று (வேதாந்தசா.103); one of the obstacles to *nirvigarpa-śamādi.*

த.வ. பேசாநிலை இடர்.

[Skt. kaṣāya > த. கசாயம்.]

கசாயம்போடல் *kaśāyam-pōḍal,* பெ. (n.) கசாயம் வடித்தல்; the act or process of boiling to prepare decoction (சா.அக.).

த.வ. கருக்கிடல்.

[Skt. kaṣaya > த.கசாயம் + போடல்.]

கசாயர் *kaśāyar,* பெ.(n.) மஞ்சள்; turmeric (சா.அக.).

கசாயரசம் *kaśāya-raśam,* பெ. (n.) 1. துவர்ப்பு; astringency.2. கருக்குநீர்ச்சாறு; the essence in decoction (சா.அக.).

[Skt. kaṣāya+rasa>த.கசாயரசம்.]

கசாயவா *kaśāyavā,* பெ.(n.) பேரீந்து; date-tree, wild date palm - *Phoenix dactylifera* (சா.அக.).

கசாயிக்காரன் *kaśāyi-k-kāraṉ,* பெ. (n.) இறைச்சி விற்போன்; meat vendor, butcher.

த.வ. வெட்டுகறிக்காரன்.

[U. kasāyi > த. கசாயி+காரன் (உடைமைப் பொருள் ஈறு).]

கசாலா *kaśālā,* பெ.(n.) 1. துன்பம்; affliction, distress, grief, trouble. 2. வருத்தம்; difficulty, obstruction, trouble. *வழி கசாலாவாயிருந்தது.*

[U. kasālā > த. கசாலா.]

கசான்சி *kaśāṉśi,* பெ.(n.) பொருளாளர், கருவூலர்; treasurer.

[U. khazānci > த. கசான்சி.]

கசானனன் *kaśāṉaṉaṉ,* பெ.(n.) ஆனைமுகன் (விநாயகபு.69:2); Piḷḷaiyār, who has the face of an elephant.

[U. gaja+ānana > த. கசானனன்.]

கசானா *kaśāṉā,* பெ.(n.) கருவூலம்; treasury.

[U. khazānā > த. கசானா.]

கசுக்கொட்டை *kaśu-k-koṭṭai,* பெ.(n.) மரத்தின் தவிட்டு நிறத்தைப் போன்ற கொட்டை; chestnut.

கசுப்பா *kaśuppā,* பெ.(n.) தலைமையூர்; chief station or head-quarters of a district or division.

[U. kasuba > த. கசுப்பா.]

கசூர் *kaśūr,* பெ. (n.) கவனமின்மை (C.G.); neglect, carelessness.

[U. qasūr > த. கசூர்.]

கசூரி *kaśūri,* பெ.(n.) **கசூர்** பார்க்க; see *kaśūr.*

கசேந்திரன் *kaśēndiraṉ,* பெ.(n.) சிறந்த யானை; lord of elephants.

[Skt. gaja+indra> த. கசேந்திரன்.]

கசேந்திரைசுவரியம் *kaśēndiraiśuvariyam,* பெ.(n.) பெருஞ் செல்வம்; greataffluence, opulence.

த.வ. யானைப்பெருஞ்செல்வம்.

[U. gaja+indra+aiśvarya > த. கசேந்திரை சுவரியம்.]

கசேரிகை *kaśērigai,* பெ. (n.) முதுகெலும்பு; back-bone - *vertebra* (சா.அக.).

த.வ. முதுகுத்தண்டு.

கசேரு[1] *kaśēru,* பெ.(n.) 1. கருணைக் கிழங்கு; elephant yam. 2. முத்தக்காசு; straight sedge.

[Skt. kaśēru> த. கசேரு.]

கசேரு[2] *kaśēru,* பெ.(n.) முள்ளந்தண்டு; spinal column-*Vertebral column* (சா.அக.).

கசேருகம் *kaśērugam,* பெ.(n.) தமரத்தை (மூ.அ.); carambolā tree.

[Skt. kaśēruka > த. கசேருகம்.]

கசேருநீர்க்கோவை *kaśēru-nīr-k-kōvai,* பெ.(n.) முள்ளந்தண்டில் இறங்கி நிற்கும் ஊதை நீர்; a collection of morbid fluid in the vertebral column-*Hydrorachis* (சா.அக.).

த.வ. முள்ளந்தண்டு நீர்க்கோவை.

கசேருபம் *kaśērubam,* பெ. (n.) முள்ளந் தண்டிலிருக்கும் 33 முள் எலும்புகள்; the thirty three vertebrae. 2. முதுகெலும்பு; back-bone (சா.அக.).

த.வ. முள்ளந்தண்டு.

[Skt. kaśēru > த. கசேருபம்.]

கசேருபவர் *kaśērubavar,* பெ.(n.) முள்ளந் தண்டிற் பிளவு ஏற்பட்டுப் பிதுங்கி நிற்குமோர் பிறவிநோய்; congenital cleft of the vertebral column with some protrusion-*Spina bifida* (சா.அக.).

த.வ. பிதுக்கு முள்ளந்தண்டு.

கசோதம் *kaśōdam,* பெ. (n.) பிராய்முட்டி; Ceylon pavonia-*Pavonia zeylanica* (சா.அக.).

கசோதிகம் *kaśōdigam,* பெ. (n.) கருப்பெள்(ளு); black gingelly seed-*Sessamum indicum* (சா.அக.).

த.வ. காரெள்.

கசோரம் *kaśōram,* பெ.(n.) ஒரு வகைப்பூடு; a plant-*Curcuma zerumbet* (சா.அக.).

கஞ்சீயம் *kañjīyam,* பெ.(n.) வெண்கலம் (யாழ்.அக.); bell-metal.

[Skt. kamsiya> த. கஞ்சீயம்.]

கஞ்சுகசரீரம் *kañjuga-śarīram,* பெ.(n.) விழைவு (அராகம்), அறிவம் (வித்தை), கலை, ஊழ் (நியதி), காலம் முதலான மெய்ம (தத்துவ)ங்களினாலாகிய நுண்ணுடம்பு (பரசரீரம்) (சி.போ.பா.2:2); a subtle body of the soul composed of the five principles *arāgam, vittai, kalai, niyadi* and *kālam.*

[Skt. kañcuka+sarīra >த.கஞ்சுகசரீரம்.]

கஞ்சூழ் *kañjūḷ,* பெ.(n.) பேரீந்து (பச்.மூ.); date palm.

[Skt. kharjūra> த. கஞ்சூழ்.]

கஞ்சோற்பவம் *kañjōṟpavam,* பெ. (n.) மணமுள்ள மண்; a fragrant earth (சா.அக.).

த.வ. மணமண்.

கட்கன் *kaṭkaṉ,* பெ. (n.) வீரபத்திரத் தெய்வம் (நாமதீப.); God *Vīrabhadraṉ.*

[Skt. khaḍga> த. கட்கன்.]

கட்சம் *kaṭcam,* பெ.(n.) 1. சங்க நஞ்சு; a kind of arsenic, a mineral poison. 2. மந்திரநூல்; a mantric science of this name. 3. மாயக்கலை அடங்கிய தந்திரக்கலை (விதி); a tantric science treating of magic etc. (சா.அக.).

[Skt. kakṣa>த.கட்சம்.]

கடபயாதி *kaḍapayādi,* பெ. (n.) எண்களை வடமொழி எழுத்தாற் குறிப்பதற்கமைந்த ஒரு முறை (சாச.தமிழ்க்.87); a system of signifying numerals by Sanskrit letters.

த.வ. எண்ணாக்க எழுத்து.

[Skt. ka-ṭa-pa-yatādi> த. கடபயாதி.]

கடவல்லி *kaḍa-valli,* பெ.(n.) 108 உபநிடதங்களுள் ஒன்று; name of an *Upaniṣad.*

[Skt. Kaṭha-valli> த. கடவல்லி.]

கடாட்சவீட்சணம் *kaḍāṭca-vīṭcaṇam,* பெ.(n.) கடைக்கண்பார்வை; side glance.

த.வ. அருணோக்கம்.

[Skt. kaṭākṣa + vīkṣaṇa > த. கடாட்ச வீட்சணம்.]

கடாட்சி–த்தல் *kaḍāṭci-,* 4 செ.குன்றாவி. (v.t.) அருணோக்கஞ் செய்தல்; to condescend to cast a side glance, to look upon with gracious favour. *"அன்பர் மகிழ்வுறக் கடாட்சிக்கும்" (சிவரக. தேவிமேருவரை.13).*

[Skt. kaṭākṣa> த. கடாட்சம் >கடாட்சி–த்தல்.]

கடி *kaḍi,* பெ. (n.) இடம்விட்டு இடம் செல்லும் பொழுது எருது குதிரைகளை மாற்றும் இடம்; stage in a journey, where the horses or bulls of carriages are changed.

த.வ. எருதுபூட்டெல்லை.

[U.gaḍi > த. கடி.]

கடிகம் *kaḍigam,* பெ. (n.) கரமுட்டி (யாழ்.அக.); fist.

[Skt. khataka> த. கடிகம்.]

கடேரியம் *kaḍēriyam,* பெ.(n.) மரமஞ்சள்; turmeric.

[Skt. kaṭarikaṭēri> த. கடேரியம்.]

கடோபநிடதம் *kaḍōba-niḍadam,* பெ.(n.) நூற்றெட்டு உபநிடதங்களுளொன்று; name of an *upaniṣad.*

[Skt. katha+upa-ni-sad>த. கடோப நிடதம்.]

கடோரம் *kaḍōram,* பெ.(n.) 1. கடினம்; hardness, solidity. 2. கொடுமை; severity, cruelty.

[Skt. kaṭhōra > த. கடோரம்.]

கடோற்கசன் *kaḍōṟkaśaṉ,* பெ.(n.) வீமனுக்கு இடும்பியிடம் பிறந்த அரக்கன் (பாரத.வேத்திர.30); bald-headed powerful gaint, name of the son of *Bhīma* and *Hiḍimbā.*

[Skt. Ghaṭōtkaca> த. கடோற்கசன்.]

கண்டகப்பிரபத்தி *kaṇḍaga-p-pirapatti,* பெ. (n.) தஞ்சம் புகுதலில் (பிரபத்தியில்) ஓர் இழிவான வகை; *(Vaiṣṇ)* an inferior kind of *Pirapatti. "கண்டகப் பிரபத்தி செய்திருக்கச் செய்தேயும்" (திவ்.பெரியாழ்.2, 6, 7, வ்யா. பக்.377).*

[Skt. kaṇṭaka+pra-patti>த. கண்டகப் பிரபத்தி.]

கண்டகாசனம் *kaṇḍagāśaṉam,* பெ.(n.) ஒட்டகம் (யாழ்.அக.); camel.

[Skt. kaṇṭaka+aśana> த. கண்டகாசனம்.]



கண்டகிரகணம் *kaṇḍa-kiragaṇam,* பெ. (n.) பாதி கோள் மறைப்பு (பார்சுவகிரகணம்); partial eclipse.

த.வ. அரைக்கவ்வல், துண்டுகவ்வணம்.

[Skt. khaṇḍa+grahaṇa>த.கண்டகிரகணம்.]

கண்டகுப்சம் *kaṇḍa-kupšam,* பெ. (n.) சன்னிவகை (வின்.); a kind of convulsion, one of 13 *caṉṉi.*

த.வ. சார்இழுப்பு.

[Skt. kaṇtha-kubja >த. கண்டகுப்சம்.]

கண்டகூணிகை *kaṇḍa-kūṇigai,* பெ. (n.) வீணை (யாழ்.அக.); the Indian lute, *vīṇai.*

[Skt. kaṇṭha + kūṇikā>த.கண்டகூணிகை.]

கண்டபத்திரம் *kaṇḍa-pattiram,* பெ.(n.) வழக்கைத் தீர்த்தெழுதுஞ் சீட்டு (நாஞ்.); award in a dispute.

த.வ. தீர்ப்புமுறி.

கண்டாத்திரிலேகியம் *kaṇḍāttiri-lēgiyam,* பெ.(n.) இஞ்சி சேர்ந்த இளகிய வகை (பைஷஜ.); electuary with ginger as its chief ingredient.

த.வ. இஞ்சி இளகியம்.

[Skt.khaṇḍārdraka+lēhya>த.கண்டாத்திரிலேகியம்]

[த. இளகியம் > Skt. lēhya.]

கண்டாபரணம் *kaṇḍābaraṇam,* பெ.(n.) **கண்டாபரன்** பார்க்க; see *kaṇḍābaraṉ.*

கண்டாபரன் *kaṇḍābaraṉ,* பெ.(n.) குதிரைக் கழுத்தின் இரண்டு புறத்தும் உள்ள இரு சுழிகள் (அசுவசா.19); two auspicious curls one on each side of a horse's neck, a point of the horse.

த.வ. கண்டல் சுழி.

[U. kaṇṭhā-bharan>Skt.kaṇṭha+ā-bharaṇa > த. கண்டாபரன்.]

கண்டுசம் *kaṇḍušam,* பெ.(n.) **கண்டூசம்** பார்க்க; see *kaṇḍūšam.*

[Skt. kaṇḍū> த. கண்டுசம்.]

கண்டூசகசாயம் *kaṇḍūša-kašāyam,* பெ. (n.) ஆறிலொன்றாய்க் காய்ச்சி வடித்து வாய்க்கொப்பளிக்கப் பயன்படுத்தும் நீர் அல்லது கியாழம்; a decoction or extract obtained by boiling and reducing to one sixth part. It is used as a gargle (சா.அக.).

த.வ. கொப்புளிப்பு கருக்கு.

[Skt.kaṇḍū+kasāya >த. கண்டூசகசாயம்.]

கண்டூசம் *kaṇḍūšam,* பெ. (n.) 1. வாய் நிரம்ப மருந்து நீரை ஊற்றிக் கொப்பளிக்கும் மருந்து; a solution or extract used in mouthfuls for rinsing the mouth and the throat. It is opposed to கவளம், which means using it in small quantities, gargle (சா.அக.).

த.வ. கொப்புளி நீரம்

[Skt.kaṇḍū > த. கண்டூசம்.]

கணசங்கியாபாகம் *kaṇa-šaṅgiyā-pāgam,* பெ. (n.) சிற்றூர்ப் பங்குகளின் பிரிவுத்தொகை; aggregate number of shares into which the lands of a village are, at the time of the original grant, equally divided.

த.வ. ஊர்ப்பாகம்.

[கணசங்கியை + பாகம்.]

[Skt. gaṇa + saṅkhyā > கணசங்கியை.]

கணாநந்தி *kaṇānandi,* பெ. (n.) புகையிலை (நாமதீப.); tobacco.

[Skt. gaṇa+ānandi>த.கணாநந்தி.]

கணேரம் *kaṇēram,* பெ. (n.) மலைப்புளிச்சை (சங்.அக.); hill hemp bendy.

[Skt. kaṇēra>த.கணேரம்.]

கத்தணம் *kattaṇam,* பெ.(n.) காப்புறை; jacket, tunic, coat of mail. *"கத்தணங் கடிது பூண்டார்" (இரகு.மீட்சிப்.7).*

தெ. கட்டலமு.

கத்தபம் *kattabam,* பெ.(n.) கழுதை (திவா.); ass. *"கத்தபத்தின் பாற்குக்கரிய கிரந்தியறும்" (பதார்த்தகுண.108).*

[Skt. gardabha>த. கத்தபம்.]



கத்தாப்பு *kattāppu,* பெ.(n.) நாட்டு வாதுமை; Indian almond.

[Mal. Catapang> த.கத்தாப்பு]

கத்தி *katti,* பெ.(n.) 1. துன்பம்; grief. 2. கடினம் (கஷ்டம்); difficulty, trouble.

[Skt. kaṣta > Te. kasti > கஸ்தி > த. கத்தி]

கத்துரு *katturu,* பெ.(n.) காசியபமுனிவர் மனைவி (கம்பரா.சடாயுகாண்.29); *Kadrū,* daughter of *Dakṣa,* wife of *Kāšyapa* and mother of the *Nāgās.*

[Skt. kadru> த. கத்துரு.]

கத்து *kattu,* பெ.(n.) இரவில் சுற்றும் ஊர்காவல்; night patrol.

[U. gasht> த. கத்து.]

கத்தோலிக்கன் *kattōlikkaṉ,* பெ. (n.) கிறித்துவ மதத்தின் ஒரு பிரிவைச் சார்ந்தவன் (நாஞ்.); catholic.

[E. catholic> த. கத்தோலிக்கன்.]

கதர் *kadar,* பெ.(n.) கையிராட்டின நூல் கொண்டு நெய்த ஆடைகள்; cloth woven with yarn produced on the spinning wheel.

[U. khaddar > த. கதர்.]

கதலிபாகம் *kadali-pāgam,* பெ.(n.) செய்யுளமைதியுளொன்று; (Rhet.) easy, felicitous style of poetry, delicious as plantain fruit; sweet sytle of poetry, pleasing to the ear, one of the three kinds of *pāgam.*

கதாகுவயம் *kadāguvayam,* பெ.(n.) கோட்டம் (தைலவ.தைல.1); costus.

[Skt. gadāhvaya> த. கதாகுவயம்.]

கதாசித்து *kadā-šittu,* வி.எ. (adv.) அரியதாய்; rarely.

[Skt. kadā-chit> த. கதாசித்து.]

கதாபாணி *kadā-pāṇi,* பெ.(n.) தண்டு எனும் படைக்கலனை யேந்தியவன் (வின்.); one armed with a club.

த.வ. தண்டேந்தி.

[Skt. gadā+pāṇi> த. கதாபாணி.]

கதாயுதம் *kadāyutam,* பெ. (n.) தண்டாயுதம்; clup, mace.

த.வ. மறத்தண்டு.

[Skt. gada + த. ஆயுதம்.]

கதாயுதன்[1] *kadā-yudaṉ,* பெ. (n.) வீமன் (பிங்.); *Bhīmaṉ,* son of *Pāṇdu,* so called. because his chief weapon of fighting was a mace or clup.

[Skt. gadā+a-yudan> த. கதாயுதன்.]

கதாயுதன்[2] *kadāyudaṉ,* பெ. (n.) வைரவக் கடவுள் (யாழ்.அக.); God Bhairavar.

[Skt. gadāyudha> த. கதாயுதன்.]

கதாவணி *kadāvaṇi,* பெ.(n.) கணக்குப் பொத்தகம்; ledger, account book.

[Mhr. khatāvaṇi> த. கதாவணி.]

கதானுகதிகநியாயம் *kadāṉugadiga-niyāyam,* பெ. (n.) ஒருவர் சென்ற வழியே மற்றவர் செல்லுதலைக் குறிக்கும் நெறி; one blindly following another that precedes, referred to in illustration of blind adherence to precedent or custom.

த.வ. சென்றோர் செல்வழி.

[Skt.gatā + anu-gatika + nyāya > த. கதானுகதிகநியாயம்.]

கதிமி *kadimi,* பெ.(n.) தலைமைக் குடியானவன் (வின்.); head ryot, hereditary cultivator.

த.வ. வேளாண்கோ.

[U. kadīm> த. கதிமி.]

கந்திரி[1] *kandiri,* பெ.(n.) மகமதிய விழா (பண்டிகை) (G.Tj.D.i, 243); a Muhammadan festival held in honour of a deceased holy person as the annual festival held at *Nāgore* in honour of the saint *Mīrāṉ Sahib.*

[U. kandūri> த. கந்திரி.]

கந்திரி[2] *kandiri,* பெ.(n.) இரவலன்; beggar.

[U. kamtarin>த. கந்திரி.]

கப்சாவீசு-தல் *kapšā-višu-,* 5 செ.கு.வி. (v.i.) பொய்ச்செய்தி பரப்புதல்; to spread false rumours.

த.வ. புரட்டுபரப்புதல்.

[U. kabza > த.கப்சா.]

கப்சா *kapšā,* பெ. (n.) பொய்ச்சொல்; lie, falsehood.

த.வ. புரட்டு.

[U. kabza > த. கப்சா.]

கப்பாலத்து *kappālattu,* பெ. (n.) பிணையல் (இ.வ.); bail, security.

[Ar. kafālat > த. கப்பலாத்து.]

கப்பித்தான் *kappittāṉ,* பெ. (n.) கப்பற்றலைவன் (இ.வ.); captain of a ship.

த.வ. மீகாமன், நாவாய்கன், வங்கன்.

[F. capitaine > த. கப்பித்தான்.]

கப்பிர் *kappir,* பெ.(n.) செருக்கு (கருவம்); pride, haughtiness. *"கப்பிர்பிடித்து அலைகிறான்" (இ.வ.).*

[U. gubbar > த. கப்பிர்.]

கப்பே *kappē,* பெ.(n.) குளம்பி (காப்பி) (Pond.); coffee.

த.வ. காணீர் (காழ் + நீர்).

[F. caffē > த. காப்பி.]

கபக்கட்டு *kapa-k-kaṭṭu,* பெ. (n.) கோழை நெஞ்சில் திரண்டிருக்கை; accumulation of phlegm in the throat.

த.வ. கோழைக்கட்டு.

[Skt. kapha > த.கபம்.]

கபகரைகசாயம் *kabagarai-kašāyam,* பெ.(n.) கோழையை அறுக்கும் கருக்குநீர்; a decoction capable of bringing out the phlegm, i.e. promoting expectoration (சா.அக.).

த.வ. கோழைக்கரைநீரம்.

[கபம்+கரை+கசாயம்.]

[Skt. kapha > த. கபம் > Skt. kaṣāya > த.கசாயம்.]

கபகரகாரி *kabagara-kāri,* பெ. (n.) 1. கோழையை வெளிப்படுத்தி இருமலைத் தணிக்கும் மருந்து; a medicine which promotes expectoration Expectorant. 2. நெஞ்சிலிருக்கும் கோழையை அறுப்பது; anything which promotes the ejection of mucous or other fluids from the lungs and the trachea (சா.அக.).

த.வ. கம்மல் தணும்பி.

கபந்தம் *kapandam,* பெ.(n.) 1. **கவந்தம்** பார்க்க; see *kavandam.* 2. அறிவிலி; simpleton, stupid person (Brah.).

[Skt. kabandha > கபந்தம்.]

கபநாசம் *kapa-nāšam,* பெ.(n.) **கண்டங்கத்தரி** (மலை.) பார்க்க; see *kaṇḍaṅgattari.*

[Skt. kapha+nāša > த. கபநாசம்.]

கபநாசனி *kapa-nāšaṉi,* பெ. (n.) தேற்றாங்கொட்டை (யாழ்.அக.); clearing nut.

[Skt. kapha-nāšaṉa > த. கபநாசனி.]

கபம் *kabam,* பெ.(n.) கோழை; phlegm, one of three kinds of *nāḍi.* *"வாதபித்தகபமென... மூவரும்... நலிந்தனர்" (உத்தரரா.அரக்கர்.31).*

[Skt. kapha > த. கபம்.]

கபர் *kabar,* பெ. (n.) செய்தி (வின்.); news.

[U. khabar > த. கபர்.]

கபர்த்தம் *kabarttam,* பெ. (n.) சிவபெருமான் சடை; *Šiva's* matted locks.

[Skt. kaparda > த. கபர்த்தம்.]

கபர்த்தி *kabartti,* பெ.(n.) சிவன்; *Šivaṉ,* having matted locks.

[Skt. kapardin > த. கபர்த்தி.]

கபர்தார் *kabardār,* பெ. (n.) விழிப்பாயிருத்தல்; beware, take care.

[U. khabadār > த. கபர்தார்.]

கபருசுதான் *kabarušutāṉ,* பெ.(n.) (இசுலாம்.) இடுகாடு; burial place (கிரியா.).

[U. khaba > த. கபருசுதான்.]

கபரோகம் *kaba-rōgam,* பெ.(n.) கோழை நோய்; any disease caused by excess of phlegm, as bronchitis or asthma.

த.வ. ஈளை.

[Skt. kapha+rōga > த. கபரோகம்.]

கபவாதசுரம் *kaba-vāda-šuram,* பெ. (n.) கோழை வளிமிகுதியால் ஏற்படும் சுரம்; pneumonia.

த.வ. கடுங்காய்ச்சல்.

[கபம் + வாதம் + சுரம்.]

[Skt. kapha + vāda > த.கபவாதம்.]

கபவிரோதி *kaba-virōdi,* பெ.(n.) சிற்றரத்தை (தைலவ.); lesser galangal.

கபளீகரி-த்தல் *kabaḷīgari-,* 4 செ.குன்றாவி. (v.t.) **கவளீகரி-** பார்க்க; see *kavaḷīgari-.*
[Skt. kabaḷīkr-> த. கபளீகரி-த்தல்.]

கபாத்து[1] *kabāttu,* பெ.(n.) 1. விதையடி சேவல் (வின்.); capon. 2.மரஞ்செடிகளின் மிகைக்கிளைகளை ஒழுங்குபெறக் கத்திரிக்கை; pruning.
[U. kabāt> த. கபாத்து.]

கபாத்து[2] *kabāttu,* பெ. (n.) படைப்பயிற்சி; military drill.
[U. qawāid> த. கபாத்து.]

கபாபு *kabābu,* பெ.(n.) சூட்டிறைச்சி (வின்.); roast, dish of roasted meat.
த.வ. சூட்டூன்.
[U. kabāb> த. கபாபு.]

கபாய் *kabāy,* பெ. (n.) நிலையங்கி; frock, a kind of long flowing tunic reaching to the ankles such as that worn generally by Muhammadans. *"கடகளிறுதவு கபாய்மிசைப் போர்த்தவள்" (மீனாட். பிள்.காப்பு.10).*
[U. qabā > த. கபாய்.]

கபாலன் *kapālan,* பெ.(n.) பிறவி நஞ்சு வகை (மூ.அ.); a mineral poison.

கபிலசம் *kabilaśam,* பெ.(n.) காடை (நாமதீப.); rain quail.
[Skt. kapiñjala>த. கபிலசம்.]



கபிதம் *kabidam,* பெ.(n.) **கருஞ்சீரகம்** (மலை.) பார்க்க; see *karuñjīragam.*

கபிலவத்து *kabilavattu,* பெ.(n.) புத்தர் பிறந்த நகரம் (மணிமே.அரும்.); Buddha's birth - place.
[Skt. kabilavas tu>த. கபிலவத்து.]

கபிலை *kabilai,* பெ.(n.) நறுமணப் பொருள் வகை (நாமதீப.); a fragrant substance.
[Skt. kabilā > த. கபிலை.]

கபீதனம் *kabīdaṉam,* பெ. (n.) **வாகை** (மலை.) பார்க்க; see *vāgai.*
[Skt. kapītana> த. கபீதனம்.]

கபுல் *kabul,* பெ.(n.) வஞ்சனை (இ.வ.); deceit, fraud.
[U. qaul> த. கபுல்.]

கபூல் *kabūl,* பெ. (n.) இசைவு (வின்.); consent, approval, admission, confession.
[U. qabul > த. கபூல்.]

கபூலி *kabūli,* பெ.(n.) **கபூல்** பார்க்க (C.G.); see *kabūl.*

கபூலியத்து *kabūliyattu,* பெ.(n.) **கபூலியத் நாமா** பார்க்க; see *kabūliyat-nāmā.*
[U. qabūliyat > த. கபூலியத்து.]

கபூலியத்நாமா *kabūliyat-nāmā,* பெ. (n.) எதிரீட்டாவணம்; counter-agreement, counter part of a license.
[U. qabūliyat+nāmā>த. கபூலியத்நாமா.]

கபூலேத்து *kabūlēttu,* பெ.(n.)உடன்படிக்கை யாவணம் (வின்.); agreement in writing.
[U. qabūliyat > த. கபூலேத்து.]

கபோணிகுளநியாயம் *kabōṇi-kuḷa-niyāyam,* பெ. (n.) முழங்கையிலுள்ள வெல்லத்தை நாவாற் சுவைக்க இயலாததுபோல, அடுத்திருந்துந் தனக்கு அடைய முடியாமையைக் காட்டும் நெறி; illustration of absolute inaccessibility or unattainability, as the illustration of the treacle on one's elbow, being tantalizingly out of reach of one's tongue.
த.வ. எட்டாக்கனி உறழ்.

கம்சன் *kamšan*, பெ. (n.) கண்ணபெருமானாற் கொலையுண்ட ஓர் அரசன்; *Kamsa*, a king of *Madhurā*, slain by *Krishnan*.
[U. kamsa>த. கம்சன்.]

கம்பத்து[1] *kambattu*, பெ. (n.) இடம்பம் (வின்.); pomp, splendour.
[U. gammat>த. கம்பத்து.]

கம்பத்து[2] *kambattu*, பெ. (n.) கப்பலில் விழும் ஓட்டை (Naut.); leakage in a ship.
த.வ. கசிவுத்துளை.
[Port. gamote> த. கம்பத்து.]

கம்பத்துப்பார்–த்தல் *kambattu-p-pār-*, 4 செ.கு.வி. (v.i.) கப்பலின் ஓட்டையை அடைத்தல் (வின்.); to stop a ship's leak.
த.வ. கசிவு பார்த்தல்.
[Port. gamote > த.கம்பத்து.]

கம்பீர் *kambīr*, பெ. (n.) வெற்றிலைத் தம்பலத்துடன் சேர்க்கும் ஒருவகைத் துவர்ப்புச் சரக்கு (மூ.அ.); a preparation from the astringent leaf of a Malay shrub used along with betel.
[Mal. gambier> த. கம்பீர்.]

கம்பீரசன்னி *kambīra-šanni*, பெ.(n.) 1. மிகை இசிவு (அதிகாரசன்னி); high delirium. 2. இறுமாப்பு (இ.வ.); superciliousness, boastfulness, haughtiness.
[Skt. gambhīra+sanni> த. கம்பீரசன்னி.]

கம்பீரம் *kambīram*, பெ.(n.) 1. ஆழம் (சூடா.); depth, profundity. 2. ஆழ்ந்த அறிவு (வின்.); profound knowledge. 3. வீறு; majestic air or bearing; manliness.
த.வ. வீறு.
[Skt. gambhīra > த. கம்பீரம்.]

கம்பீரவாக்கு *kambīra-vākku*, பெ.(n.) பொருளாழ்ந்த செய்யுள் (வின்.); superior style of writing, pregnant with meaning. 2. எடுப்பான குரல்; manly, authoritative, majestic voice, deep, grave intonation.
த.வ. வீறார்ந்த குரல்.
[கம்பீரம்+வாக்கு.]
[Skt. gambhīra > த.கம்பீரம்.]

கம்பீரி–த்தல் *kambīri-*, 4 செ.கு.வி.(v.i.) எடுப்பான குரலாற் பேசுதல் (வின்.); to exult, to speak in a majestic tone.
[Skt. gambhīra > த. கம்பீரி–த்தல்.]

கமகம் *kamagam*, பெ.(n.) 1. இசை வேறுபாடு (ஸ்வரபேதம்) (பரத. இராக. 24); (Mus.) graces and embellishments of melody of which there are ten varieties. (ஆரோகணம், அவரோகணம், டாலு, ஆந்தோளம், ஸ்புரிதம், ஆகதம், மூர்ச்சனை, திரியுச்சம், பிரத்தி யாகதம், கம்பிதம்). 2. ஒன்றையறிதற்கு ஏதுவாயுள்ள குறிப்பு; clue, key, as of a solution. *"இப்புகை யுடைமை தீயுடைமையது கமகம்" (தர்க்கபரி. 72).*
[Skt. gamaka > த. கமகம்.]

கமடாதனம் *kamaṭātanam*, பெ.(n.) ஆமை வடிவாயமைந்த இருக்கை (கூர்மாசனம்); a raised wooden board shaped like a tortoise used as a seat while meditating. *"இருந்து கமடாதனத்திலே" (சைவச. பொது. 61).*
த. வ. ஆமை இருக்கை.
[Skt. Kamtha+ ātanam > த. கமடாதனம்.]

கமலகுண்டலமாய் *kamala-kunṭalam*, து.வி.(adv.) தலைகீழாய் (யாழ்ப்.); head foremost, upside down.
[Skt. Kamala+kunṭalam > த. கமல குண்டலமாய்.]

கமலத்தோன் *kamalattōn*, பெ.(n.) நான்முகன் (பிரமன்); *Brahmān*. *"கமலத்தோனாயுளும் (திவா. 11, 80).*

கமலநிருத்தம் *kamala-niruttam*, பெ.(n.) கூத்தின் வகை (யாழ்.அக.); a kind of dance.

கமலபுத்திரி *kamalaputtiri*, பெ. (n.) முசுக் கட்டைச் செடி; Indian mulberry plant - Morus indica.



கமலமனோகரி *kamala-manōgari,* பெ.(n.) ஒரு வகை அராகம் (பரத. இராக. 55); a musical mode.

[Skt. kamala-manōhari > த. கமலமனோகரி.]

கமலமூலம் *kamalamūlam,* பெ.(n.) தாமரைக் கிழங்கு; lotus root.

[கமலம் + மூலம்.]

கமலயோனி *kamala-yōni,* பெ.(n.) நான்முகன் (பிரமன்) (திவா.); Brahmān, the lotus - born.

[Skt. kamala + yōni > த. கமலயோனி.]

கமலராகம் *kamala-rāgam,* பெ. (n.) ஒன்பான் மணிகளுள் ஒன்றான பதுமராகம் (யாழ்.அக.); the precious stone, *padumarāgam.*

[Skt. kamala + rāga > த. கமலராகம்.]

கமலவருத்தனை *kamala-varuttanai,* பெ. (n.) வணங்குதற்கு அடையாளமாக தாமரை மொட்டுப் போலக் கைகளைக் குவிக்கை (பரிபா. 16, 11, உரை); *(Nāṭya)* a gesture with both hands signifying obeisance, consisting in folding one's hands so as to resemble a lotus bud.

த. வ. தாமரைக் கை கூப்பு

[Skt.kamala+vartanā>த.கமலவருத்தனை.]



கமலவல்லி *kamala-valli,* பெ.(n.) **கமலத்தேவி** பார்க்க; see *kamala-t-tēvi.*

த. வ. தாமரைச்செல்வி.

கமலாகாரமாகவெரி-த்தல் *kamalāgāramāga -veri-,* செ.கு.வி. (v.i) தாமரை வடிவத்தைப் போல் கொழுந்துவிட்டு எரியும்படி தீ மூட்டல்; to burn moderately with little fire so that the flame may resemble the shape of a lotus.

[கமலாகாரம் + ஆக + எரி-.]

கமலாசனன் *kamalācanan,* பெ. (n.) 1. நான்முகன் (பிரமன்); Brahmān, seated on a lotus. 2. அருகன்; Arhat, seated on a lotus.

[கமலம் + ஆசனன்.]

கமலாசனி *kamalācani,* பெ.(n.) திருமகள் (இலக்குமி); Lakṣmi, seated on a lotus.

[கமலம் + ஆசனி.]

கமலாலயம் *kamalālayam,* பெ.(n.) தாமரைக் கோயில்; lotus temple.

[Skt. kamala-a-laya > த. கமலாலயம்.]



கமலாலயன் *kamalālayan,* பெ.(n.) தாமரையை வாழிடமாகக் கொண்ட நான்முகன்; Brahmān who has his abode in a pink lotus. *"கமலாலயனுக்கருள்வோய் சரணம்" (பிரமோத். 22, 75).*

[கமல+ஆலயன்.]

[Pkt. Kamalam >த. கமலம்.]

கமலினி *kamalini,* பெ. (n.) 1. தாமரை; lotus plant. 2. பதின்மூன்று தரம் சாரணை தீர்ந்த இரசக் குளிகை, இதை 9 நாள் சாரணை தீர்ந்த இரசக் குளிகையென்றும் சொல்வர். (விளக்கத்திற்குக் கருவூரார் குருநூலையும், போகர் 7000 யும் பார்க்கவும்); a consolidated mercurial pill animated 13 times or for 9 days. (For details see the works of *Karuvūrār Gurunūl* and *Bōgar 7000).*

கமலோத்தரம் *kamalōttaram,* பெ.(n.) 1. செந்நிறம்; reddish colour or thinge. 2. செந் துருக்கம்; safflower-Carthamus tinctorious.

கமனசித்தர் *kamana-cittar,* பெ.(n.) வான்வழியே நினைத்தவிடம் செல்ல வல்ல சித்தர் (வின்.); siddhar reputed to have the supernatural power of freely traversing through space.

த. வ. வான்செலல் அறிவர்.

[கமனம் + சித்தர்.]

[Skt. kamana > த. கமனர்.]

கமனசித்தி *kamana-citti,* பெ.(n.) வான் வழியே நினைத்தவிடம் செல்லும் ஆற்றல் (வின்.); supernatural power of freely traversing through space.

த. வ. வான்செலவாற்றல்.

[Skt. kamana+siddhi > த. கமனசித்தி.]

கமனப்பிரியா *kamana-p-piriyā,* பெ.(n.) மேளகர்த்தாக்களுளொன்று (சங். சந். 47); (Mus.) a primary rāga.

[Skt. gamana+priya > த. கமனப்பிரியா.]

கமனம்[1] *kamanam,* பெ.(n.) செல்லுகை; going, journeying, walking.

[Skt. gamana > த. கமனம்.]

கமனம்[2] *kamanam,* பெ.(n.) கருஞ்சீரகம்; black cumin seed Nigella sativa.

கமனம்[3] *kamanam,* பெ.(n.) 1. வானில் செல்லல்; wandering, as in. 2. வான் கமனம்; moving through the mid-air. 3. பெண் கமனம்; copulation.

கமனாயகம் *kamanā-yagam,* பெ.(n.) ஒருவகைப் பிசின் மரம்; gum-ammoniacal tree.

[E. gumammoniacum > த. கமனாயகம்.]

கமனியம் *kamaniyam,* பெ.(n.) அழகு; beauty.

கமாசு *kamāšu,* பெ.(n.) ஒரு வகைப் பண் (இராகம்); a musical mode.

[U. Khamāz > த. கமாசு.]

கமாசுதார் *kamāšudār,* பெ.(n.) சத்திர மேற்பார்க்கும் அலுவலர்; person appointed to supervise a cattiram.

[U. kamāshdār > த. கமாசுதார்.]

கமாமிசு *kamāmišu,* பெ.(n.) செயற்பாடு (வின்.); affairs, business.

[U. kamāsh > த. கமாமிசு]

கமால் *kamāl,* பெ.(n.) செயல் திறமை; cleverness.

[Ar. kamāl > த. கமால்]

கமான்[1] *kamān,* பெ.(n.) வளைவு; arch.

[U. kamān > த. கமான்.]

கமான்[2] *kamān,* பெ.(n.) வளைந்த குறடு; curling tongs.



கமிசு *kamisu,* பெ.(n.) மேல்சட்டை; shirt, chemise.

[U. Qamis > த. கமிசு.]

கமிர் *kamir,* பெ.(n.) புளிப்பு; leaven, yeast, fermented matter.

[U. khamir > த. கமிர்.]

கயடேரிகம் *kayaṭērigam,* பெ.(n.) அகில் (மூ.அ.); eagle wood.

கயத்தம் *kayattam,* பெ.(n.) துளசி (மலை.); sacred basil.

[Skt. kāya-sthā > த. கயத்தம்.]

கயரோகம் *kaya-rōgam,* பெ.(n.) என்புருக்கி நோய்; pulmonary disease, consumption. *"கயரோகத் திளைப்பர்" (சேதுபு. துராசார. 27).*

[Skt. kṣaya+rōgam > த. கயரோகம்.]

கயாசிராத்தம் *kayā-cirāttam,* பெ.(n.) கயையிற் செய்யும் முன்னோர் (பிதிரர்) சடங்கு; religious ceremony for the departed performed at *Gayā.*

[Skt. gaya+cirāttam > த. கயாசிராத்தம்.]

கயாவாளி *kayā-vāḷi,* பெ.(n.) 1. கயையிற் செய்யுஞ் சடங்கில் உண்ணுதற்கு உரிய பிராமணன்; one of the priestly class at *Gayā.*

[Skt. kayā+U. wāl > த. கயாவாளி.]

த. ஆள் > H. wala

கயிங்கரியபரர் *kayiṅkariya-parar,* பெ.(n.) பணிவிடை செய்வோர்; servants (Brah.).

த. வ. பணியாளர்.

[Skt. kainkarya+para > த. கயிங்கரியபரர்.]

கயிமவாதி *kayimavādi,* பெ.(n.) வசம்பு (மலை.); sweet flag.

கயிரவம் *kayiravam,* பெ.(n.) ஆம்பல்; water lily, white and red. *"கயிரவ நிறத்த பூங்கச்சு" (கந்தபு. யுத்தகாண். முதனாட். 21).*

[Skt. kairava > த. கயிரவம்.]

கயிலி *kayili,* பெ.(n.) பல வண்ணமுள்ள முகம்மதியர் உடை (யாழ்ப்.); a kind of checkered cloth worn by Muhammadans.

த. வ. சாரம்.

மறுவ. கைலி

[U. khilat > த. கயிலி.]

கயை *kayai,* பெ.(n.) பீகார் மாநிலத்திலுள்ள புகழ்பெற்ற இறைவழிபாட்டிடம்; *Gaya,* sacred city in *Bihar,* famous place of pilgrimage.

[Skt. Gayā > த. கயை.]

கர்க்கசம் *karkkaśam,* பெ.(n.) நயமற்றது, கடினமானது; that which is rough, gruff, grating, unpolished. *"என் கர்க்கசச் சொல்" (இரகு. பாயி. 7).*

[Skt. karkaśa- > த. கர்க்கசம்.]

கர்க்கடகசங்கிராந்தி *karkkaḍaga-caṅkirānti,* பெ. (n.) கடக (ஆடி) மாதப் பிறப்பு; beginning of the month of *kaḍagam (Āḍi),* when the sun passes to the sign of cancer.

[Skt. karkaṭaka + caṅkirānti > த. கர்க்கடகசங்கிராந்தி.]

கர்க்கடகசந்திரன் *karkkaḍaga-canḍiraṉ,* பெ. (n.) கடக ஓரை (ராசி)யில் நிற்குந் திங்கள்; the moon in cancer.

[Skt. karkadaka+candiraṉ > த. கர்க்கடக சந்திரன்.]

கர்க்கடகசிங்கி *karkkaḍaga-siṅgi,* பெ.(n.) கடுக்காய்ப் பூமரம்; Japanese wax-tree. *"கர்கடகசிங்கி...... அரிவையரைக் கூடு திறங் கொடுக்கும்" (பதார்த்த. 1008).*

[Skt. karkaḍaka+śṛngi > த. கர்க்கடக சிங்கி.]

கர்க்கடகபாடாணம் *karkkaṭaka-pāḍāṇam,* பெ.(n.) பிறவி செய்நஞ்சுகளுள் ஒன்று; a mineral poison.

கர்க்கடகம் *kar-k-kaṭakam,* பெ.(n.) 1. நண்டு (திவா.); crab. 2. ஓர் ஓரை (இராசி.) (சூடா.); cancer, a constellation of the Zodiac.

[Skt. karkaṭaka > த. கர்க்கடகம்.]



கர்க்கர் *karkkar,* பெ.(n.) வான நூல் ஆசிரியரான ஒரு முனிவர்; *Garga,* one of the earliest astronomers.

[Skt. garga > த. கர்க்கர்.]

கார்க்கரி[1] *karkkari,* பெ.(n.) கரகம் (பிங்.); a jar for holding water.

[Skt. karkari > த. கார்க்கரி.]

கார்க்கரி[2] *karkkari,* பெ.(n.) தயிர்கடை தாழி (சூடா.); churn.

[Skt. gargari > த. கார்க்கரி]

கார்க்கவம் *karkkavam,* பெ.(n.) மரவகை; Ceylon tea.

கார்ச்சினை *karccinai,* பெ.(n.) பேரொலி (திவா.); roar, as of a lion or a thunderstorm.

த. வ. உரப்பு, உரப்புதல்.

[Skt. garjana > த. கார்ச்சினை.]

கார்ச்சி[1]-த்தல் *karcci-,* 4 செ.கு.வி.(v.i.) முழங்குதல்; to roar, as a wild beast or thunder.

[Skt. garj-, > த. கார்ச்சி-,]

கார்ச்சி[2] *karcci,* பெ.(n.) சிறுவழுதுணை; Indian night shade.

கார்ச்சிதம் *karccidam,* பெ.(n.) முழக்கம்; rumbling of clouds, rolling of distant thunder; roaring of a lion.

[Skt. garjita > த. கார்ச்சிதம்.]

கார்ச்சிப்பு *karccippu,* பெ.(n.) **கார்ச்சிதம்** பார்க்க; see *karccidam.*

கார்ச்சு *karccu,* பெ.(n.) செலவு; charge, expense, expenditure (G.Sm.D.i.ii, 50).

[U. kharcu > த. கார்ச்சு.]

கார்ச்சூர் *karccūr,* பெ.(n.) கார்ச்சூரம் பார்க்க; see karccuram.

[Skt. kharcu > த. கார்ச்சு.]

கார்ச்சூரம் *karccūram,* பெ.(n.) பேரீந்து; date fruit.

கார்ச்சூரிக்காய்[1] *karccūri-k-kāy,* பெ.(n.) பேரீச்சங்காய்; date fruit.

[கார்ச்சூரி+காய்.]

[Skt. kharjura > த. கார்ச்சூரி.]

கார்ச்சூரிக்காய்[2] *karccūri-k-kāy,* பெ.(n.) ஒருவகைப் பணிகாரம்; a preparation of confectionery, a puff.

[கார்ச்சூரி + காய்.]

[Skt. kharjura > த. கார்ச்சூரி.]

கார்சு *karcu,* பெ.(n.) **கார்ச்சு** பார்க்க; see *karccu.*

கார்ணகடூரம் *karṇa-kaḍūram,* பெ.(n.) **கார்ணகடோரம்** பார்க்க; see *karṇa kaḍōram.*

கார்ணகடோரம் *karṇa-kaḍōram,* பெ. (n.) காதுக்குக் கடுமையானது; that which is unpleasant to hear, harsh, jarring, discordant sound.

த.வ. செவிக்கடூரம்.

[Skt. karṇa+kaṭhōra > த. கார்ணகடோரம்.]

கார்ணகூசிகை *karṇa-kūśigai,* பெ.(n.) காதுநோய் வகை (தைலவ. தைல. 44); a disease of the ear.

[Skt. karṇa-gūthaka > த. கார்ணகூசிகை.]

கார்ணசூலை *karṇa-śūlai,* பெ.(n.) காது வலி (தைலவ. தைல. 44); ear-ache.

த.வ. காதுவலி.

[கார்ணம் + சூலை.]

[Skt. karṇa>த. கார்ணம்.]

கார்ணநாதம் *karṇa-nādam,* பெ. (n.) காதிரைச்சல் நோய் (தைலவ. தைல. 44); singing in the ears, a disease of the ear.

த.வ. காதரவம்.

[Skt. karṇa +nādha> த. கார்ணநாதம்.]

கார்ணப்பூ *karṇa-p-pū,* பெ.(n.) காதின் மேற்பகுதியில் முருகு எனும் காதணியை யடுத்து அணியப்பெறும் பொன்னாலான ஒருவகைக் காதணி; jewel worn at the top of the ear next to the murugu, usually made of gold.

[கார்ணம் + பூ.]

[Skt. karṇa>த. கார்ணம்.]

கர்ணபத்திரம் *karṇa-pattiram,* பெ. (n.) 1. ஓலையால் செய்த காதணி; gold earning fashioned after a roll of palmyra leaf worn by women. 2. கடவுள் திருமேனிகளுக்குச் சாத்தும் காது போன்ற அணி; ear-like ornament for the idol made of gold or silver.

த.வ. காதோலை.

[Skt. karṇa+patra > த. கர்ணபத்திரம்.]

கர்ணபரம்பரை *karṇa-parambarai,* பெ.(n.) கேள்வி வழியாக வந்த செய்தி; tradition, traditional story or information.

த.வ. செவிமரபு.

[Skt. karṇa-parampara > த. கர்ணபரம்பரை.]

கர்ணபூரம் *karṇa-pūram,* பெ.(n.) காதணி வகை; a kind of ear-ornament.

த.வ. காதணி.

[Skt. karṇa+pūra > த. கர்ணபூரம்.]

கர்ணம் *karṇam,* பெ.(n.) காது; ear.

[Skt. karṇa > த. கர்ணம்.]

கர்ணமந்திரம்[1] *karṇa-mandiram,* பெ.(n.) இறக்கும் நிலையிலிருப்பவரின் காதில் சொல்லும் மந்திரம்; verses of mandram, uttered into the ear of a dying person. (Brah.).

த.வ. செவிமந்திரம்.

[கர்ணம்+மந்திரம்.]

[Skt. karṇa > த. கர்ணம்.]

கர்ணமந்திரம்[2] *karṇa-mandiram,* பெ.(n.) 1. காதோடு சொல்லும் கமுக்கம் (இரகசியம்); secret, as whispered in the ear. 2. கமுக்கமாகப் பேசிப் பெறுஞ் செல்வாக்கு; influence over a person obtained by gaining his ear.

த.வ. செவிமந்தணம்.

[கர்ணம்+மந்திரம்.]

[Skt. karṇa > த. மந்திரம்.]

கர்ணன் *karṇaṉ,* பெ.(n.) **கன்னன்** பார்க்க; see *kaṉṉaṉ.*

[Skt. karṇaṉ > த. கர்ணன்.]

கர்ணா *karṇā,* பெ.(n.) ஒருவகை இசைக்கருவி; a kind of musical instrument. *"கர்ணாவொடு சிறந்த கொம்புகள்........ முழங்கிவர" (இராமநா. யுத்த. 87).*

[U. karṇā > த. கர்ணா.]

கர்ணிகம் *karṇigam,* பெ.(n.) இசிவுநோய் (சன்னி)வகை (சீவரட். 27); a kind of delirium, one of 13 *caṉṉi.*

[Skt. karṇika > த. கர்ணிகம்.]

கர்ணிகை *karṇigai,* பெ.(n.) தாமரைப் பொகுட்டு; pericarp of the lotus or rudiment of the future fruit.

த.வ. பொகுள்.

[Skt. karṇikā > த. கர்ணிகை.]

கர்த்தத்துவம் *karttattuvam,* பெ. (n.) கர்த்திருத்துவம் பார்க்க; see karttiruttuvam. *"கர்த்தத்துவம் அவர்தோளின் மேலிருக்கும்" (விவிலி. ஏசா. 9, 6).*

[Skt. kartṛtva > த. கர்த்தத்துவம்.]

கர்த்ததுரோகம் *kartta-durōgam,* பெ.(n.) அரச இரண்டகம் (வின்.); high treason.

த.வ. அரசஇரண்டகம்.

[Skt. kartṛ+drōha > த. கர்த்ததுரோகம்.]

கர்த்ததுரோகி *kartta-durōgi,* பெ.(n.) அரச இரண்டகம் செய்வோன் (வின்.); one guilty off high treason.

த.வ. இரண்டகன்.

கர்த்தபம் *karttapam,* பெ.(n.) கழுதை (பிங்.); ass, donkey.

[Skt. gardabha > த. கர்த்தபம்.]

கர்த்தமன் *kartttaman*, பெ.(n.) **கருத்தமன்** பார்க்க; see *karuttaman*.

[Skt. kardama > த. கர்த்தமன்.]

கர்த்தரிப்பிரயோகம் *karttari-p-pirayōgam*, பெ.(n.) செய்வினை சொற்றொடர் (பி.வி.36, உரை); (Gram.) active voice.

[Skt. kartari-prayōga > த.கர்த்தரிப் பிரயோகம்.]

கர்த்தவம் *karttavam*, பெ.(n.) **கர்த்தபம்** பார்க்க; see *karttapam*. *"நீ கர்த்தவ மாதியென்றான்" (உபதேசகா. சிவத் துரோகி. 455).*

[Skt. gardabha > த. கர்த்தவம்.]

கர்த்தவியம் *karttaviyam*, பெ.(n.) செய்யத்தக்கது; that which ought to be done, duty, obligation. *"கர்த்தவிய மெவ்விடம்" (தாயு. எங்குநிறை. 1).*

த.வ. கடமை

கர்த்தன் *karttan*, பெ.(n.) **கர்த்தா** பார்க்க; see *karttā*.

கர்த்தா *karttā*, பெ.(n.) 1. செய்வோன்; doer, maker, agent, author, managing member of a family, one who performs, as a religious ceremony. 2. வினை முதல் (நன். 297); (Gram.) subject of a sentence, agent of an action. 3. கடவுள்; God, as creator. 4. தலைவன் (விவிலி. மத். 7, 22); master, chief, lord.

த.வ. கருத்தன்.

[Skt. kartā > த. கர்த்தா.]

கர்த்தாக்கள் *karttākkaḷ*, பெ.(n.) படைப்பு முதலிய தொழில் புரியம் ஐந்து வினைஞர்கள். (பஞ்சகர்த்தாக்கள்); (śaiva.) agents, term applied to the five deities as those through whose actions for the benefit of souls the supreme power manifests itself, the deities being. *நான்முகன் (பிரமன்), திருமால் (விஷ்ணு), சிவன் (உருத்திரன்), பெருவுடையார் (மகேசுவரன்), அருட்சிவன் (சதாசிவன்).* 2. மதுரை நாயக்கவரசர் பட்டப் பெயர்; title of thee *Nāyaka* kings of Madurai. *"கர்த்தாக்கள் மெச்சஞ்சலியா மதி மந்திரி" (பெருந்தொ. 1300).*

கர்த்தாரியோகம் *karttāri-yōgam*, பெ.(n.) ஓரை(இலக்கினத்து)க்கு இரண்டு, பன்னிரண்டாமிடங்களில் பாவிகளிருக்கையால் பிறப்பியத்துக்குரியோனு(சாதகனு)க்குண்டாம் ஓகம் (யோகம்) (சோதிடகிரக. 57); (Astrol.) a yōga in which malefic planets occupy the second and the twelvth sign from the ascendant.

[Skt. karttāri+yōga > த. கர்த்தாரியோகம்.]

கர்த்தாளி *karttāḷi*, பெ.(n.) உரியவன்; heir. *"அம்மான் சொத்துக்கு மருமகன் கர்த்தாளி" (இ.வ.).*

[Skt. கர்த்தா > த. கர்த்தாளி; ஆள் – ஆளி.]

கர்த்திருசாதாக்கியம் *karttiru-sādākkiyam*, பெ. (n.) நான்கு முகங்களோடும் எட்டுக் கைகளோடுங் கூடிய பெருவுடையார்(மகேசுர) வடிவம் (தத்துவப். 191); *Mahēśvara* manifestation of *Śiva* with four faces and eight hands.

த.வ. எண்டோளீச வடிவம்.

[Skt.kartṛ+sādākhya>கர்த்திருசாதாக்கியம்.]

கர்த்திருத்துவம் *karttiruttuvam*, பெ.(n.) 1. தொழில் நடத்து முதன்மை; privilege of commencing or doing an act. 2. கடவுட்டன்மை; God head.

த.வ. செயலாண்மை.

[Skt. kartṛ-tva > த. கர்த்திருத்துவம்.]

கர்ப்பகிரகம் *karp-pa-kiragam*, பெ.(n.) கோயிலின் நடுவில் மூலவர் இடத்தைக் கொண்டு விளங்கும் இடம், கருவறை; sanctum sanctorum.

[Skt. garbha+gṛha>த.கர்ப்பகிரகம்.]

கர்ப்பக்கிருகம் *karppa-k-kirugam*, பெ.(n.) கருவறை; inner sanctuary of a Hindu temple, in which the fixed idols is placed.

த.வ. உண்ணாழிகை.

[Skt. garbha-grha > த. கர்ப்பக்கிருகம்.]

கர்ப்பக்குழி *karppa-k-kuḻi,* பெ.(n.) கருதங்கும் உறுப்பு; the uterus.

[கர்ப்பம் + குழி.]

*[த. கருப்பம் >**Skt.** garbha.]*

கர்ப்பகோசம் *karppa-kōšam,* பெ.(n.) கர்ப்பக்குழி பார்க்க; see karppa-k-kuḻi.

*[**Skt.** garbha+kōsa> த. கர்ப்பகோசம்.]*

கர்ப்பமேகம் *karppa-mēgam,* பெ.(n.) வெள்ளைநோய்; leucorrhoea.

கர்ப்புரை *karppurai,* பெ.(n.) நறும்புகை (சாம்பிராணி) மரம் (சங்.அக.); benzoin tree.

*[**Skt.** karburā> த. கர்ப்புரை.]*

கர்பூரக்கிச்சிலிக்கிழங்கு *karppūra-k-kiccili-k-kiḻaṅgu,* பெ.(n.) பூலாங்கிழங்கு; zedoary root.

[கர்ப்பூரம்+கிச்சிலி+கிழங்கு.]

*[**Skt.** karpurā > த. கர்ப்பூரம்.]*

கர்ப்பூரக்கிளுவை *karppūra-k-kiluvai,* பெ.(n.) மலைமா; hill balsam tree.

[கர்ப்பூரம்+கிலுவை.]

*[**Skt.** karpurā > த. கர்ப்பூரம்.]*

கர்ப்பூரக்கொடி *karppūra-k-kōḍi,* பெ.(n.) வெள்ளைக்கொடி; a kind of betel. (G.sm.D.215).

[கர்ப்பூரம்+கொடி.]

*[**Skt.** karpūra > த. கர்ப்பூரம்.]*

கர்ப்பூரசிலாசத்து *karppūra-cilā-cattu,* பெ. (n.) ஒருவகை மருந்துக்கல்; foliated *Gystallized gypsum.*

கர்ப்பூரத்துளசி *karppūra-tuḷaši,* பெ.(n.) கர்ப்பூர மணமுள்ள துளசி வகை; a kind of *tuḷaci* plant that diffuses the smell of camphor.

[கர்ப்பூரம்+துளசி.]

*[**Skt.** karpūra > த. கர்பபூரம்.]*

கர்ப்பூரத்தைலம் *karppūra-t-tailam,* பெ.(n.) 1. கர்ப்பூரம் போல மணமுள்ள பூச்சு மருந்து; oil or spirit of turpentine. 2. கர்ப்பூரத்தினின்று எடுக்கும் நெய்மம் (தைலம்); oil of camphor.

[கர்ப்பூரம் + தைலம்.]

கர்ப்பூரதீபம் *karppūra-tīpam,* பெ.(n.) கர்ப்பூரத்தினின்று எரியுந் தீபம் (பரத. ஒழிபி. 42, உரை); lighted camphor used in worship.

[கர்ப்பூரம் + தீபம்.]

கர்ப்பூரநீர் *karppūra-nīr,* பெ.(n.) கர்ப்பூர நீர்மம் (வின்.); tincture of camphor, camphor in solution.

[கர்ப்பூரம் + நீர்.]

கர்ப்பூரப்புல் *karppūra-p-pul,* பெ.(n.) ஒருவகை மணப்புல் (வின்.); lemon-grass. Andropogon citratus.

[கர்ப்பூரம் + புல்.]

கர்ப்பூரம்[1] *karppūram,* பெ.(n.) 1. எரிக்குங் கர்ப்பூரம்; common camphor. 2. முக வாசங்களுள் ஒன்றான பச்சைக் கர்ப்பூரம் (சீவக. 838, உரை); comphor in its native state, one of five *muka-vācam.* 3. **கர்ப்பூரமரம்** பார்க்க; see *karppūra-maram.*

*[**Skt.** karpūra > த. கர்ப்பூரம்.]*

கர்ப்பூரம்[2] *karppūram,* பெ.(n.) பொன் (பிங்.); Gold.

*[**Skt.** karbūra > த. கர்ப்பூரம்.]*

கர்ப்பூரமணி *karppūra-maṇi,* பெ.(n.) **அம்பர்**[3] பார்க்க; see *amber*[3].

[கர்ப்பூரம் + மணி.]

கர்ப்பூரமரம் *karppūra-maram,* பெ.(n.) 1. கர்ப்பூரம் உண்டாதற்குரிய மரம்; Japan comphor tree. 2. மரவகை (வின்.); blue-gum tree.

[கர்ப்பூரம் + மரம்.]

கர்ப்பூரவல்லி *karppūra-valli,* பெ.(n.) **கர்ப்பூரவள்ளி** பார்க்க; see *karppūra-vaḷḷi.*

கர்ப்பூரவள்ளி *karppūra-vaḷḷi,* பெ.(n.) 1. ஒருவகை மருந்துச் செடி; thick-leaved lavender. *"நெஞ்சிற் கட்டு கபம் வாதமும்போம்.......... கர்ப்பூரவள்ளி" (பதார்த்த. 330).* 2. ஒருவகை வாசனைச் செடி; country borage.

[கர்ப்பூரம் + வள்ளி.]

[**Skt.** *karpūra + த. வள்ளி.*]



கர்ப்பூரவாழை *karppūra-vāḻai,* பெ.(n.) வாழைவகை; a kind of plantain.

[*கர்ப்பூரம் + வாழை.*]

கர்ப்பூரவில்வம் *karppūra-vilvam,* பெ.(n.) வில்வமரவகை (வின்.); a very fragrant bael tree.

[*கர்ப்பூரம் + விலை.*]

கர்ப்பூரவிலை *karppūra-vilai,* பெ.(n.) கோவில் நிலங்களுக்குக் கொடுக்கும் விலை; price paid for temple lands.

கர்ப்பூரவெற்றிலை *karppūra-veṟṟilai,* பெ.(n.) வெற்றிலை வகை (வின்.); fragrant white betel.

[*கர்ப்பூரம் + வெற்றிலை.*]

கர்ப்பூராரத்தி *karppūrāratti,* பெ.(n.) கர்ப்பூரத்தாலாகிய ஆலத்தி; waving of lighted camphor.

[*கர்ப்பூரம் + ஆரத்தி.*]

கர்ப்போட்டம் *karppōṭṭam,* பெ.(n.) சிலை (மார்கழி)ப் பிற்பகுதியில் கருக்கொண்ட மேகத்தின் தென்சார்பான ஓட்டம்; southern passage of the rain clouds about the latter half of the *Mārkaḻi* month.

[**Skt.** *garbha + த. ஓட்டம்.*]

கர்பரி *karpari,* பெ.(n.) குழப்பம் (வின்.); confusion.

[**Skt.** *garbari > த. கர்பரி.*]

கர்மகாண்டம்[1] *karmakāṇḍam,* பெ.(n.) சடங்குகளைப் பற்றிக் கூறும் மறை (வேத) நூல்; (In veda) a portion of the vedas which deals about the sacrificial rites and ceremonial acts and observances as mentioned above. 2. கணிய (சோதிட) நூலின்படிக் கோள்களின் (கிரகக்) கோளாறினாலேற்பட்ட துன்பங்களுக்குப் (பாப நிவர்த்தி)யைக் கூறும் சித்தர்கள் செய்த நாடி நூல்; (In Astrology)) that portion of siddhar's science treating about expiation of sin and reparation for the evil influences of stars. 3. மருத்துவ (வைத்திய) நூலின்படி (கர்மத்தினால்) ஏற்படும் நோய்களையும், அவற்றை நீக்கும் (நிவர்த்திக்கும்) ஏதுவைப் பற்றியும் கொடுக்கும் மருந்துகளைப் பற்றியும் கூறும் நூல்; (In medicine).

கர்மகாண்டம்[2] *karma-kāṇḍam,* பெ. (n.) 1. முறைமை யாகம் முதலிய வைதிகங்களைப் பற்றிக் கூறும் மறையின் (வேதத்தின்) முற்பகுதி; that part of the *vēda* chiefly *Brāhmaṇā* literature which treats about dharma, ceremonial acts and sacrificial rites. 2. அகத்தியர் எழுதியதாகக் கூறப்படும் ஒரு மருத்துவ நூல்; a medical treatise, attributed to Agastya.

[**Skt.** *karman + த. காண்டம்.*]

கர்மகுணம் *karmakuṇam,* பெ.(n.) ஊழ் வினையால் மனிதருக்கு நேரும் நிலைமை; the condition of life in man resulting from his acts done in the previous birth.

[*கர்மம் + குணம்.*]

கர்மசங்கடம் *karmaśaṅkaḍam,* பெ. (n.) முற்பிறப்பிற் செய்த கரிசு (பாவங்)களினாலேற்பட்ட தீராச் சங்கடங்கள்; endless sufferings according to one's karma in the former births.

[*கர்மம் + சங்கடம்.*]

கர்மசலம் *karmaśalam,* பெ.(n.) வியர்வை; perspiration.

[*கர்மம் + சலம்.*]

கர்மசிரத்தை *karmaširattai,* பெ.(n.) செயலில் (காரியத்தில்) முழு ஈடுபாடு; கவனம்; dedication (to work) : (of one's work) application. *'கர்மசிரத்தையோடு பணியாற்றும் போது மனம் செயலில் ஒன்றிவிடுகிறது'.*

த. வ. கடப்பாடு.

கர்மசீலன் *karmašīlaṉ,* பெ.(n.) பயனைக் கருதாமலே தான் செய்யும் கடமையைச் செய்து முடிப்பவன்; one who perseveres in his duties without looking forward to any reward.

[கர்மம் + சீலன்.]

கர்மடன் *karmaḍaṉ,* பெ.(n.) கருமமே பெரிதென்று கருதுவோன் (தென். இந். க்ஷேத். 58); one who holds that *karma* is of supreme importance.

த. வ. கருமக்கோட்பாட்டாளன்.

[Skt. karmaṭha > த. கர்மடன்.]

கர்மணிப்பிரயோகம் *karp,* பெ. (n.) செயப்பாட்டு வினை வழக்கு (பி.வி.36, உரை); passive voice.

[Skt. karmaṇi+prayōga > த. கர்மணிப் பிரயோகம்.]

கர்மதாரயம் *karma-tārayam,* பெ.(n.) இரு பெயரொட்டுப் பண்புத்தொகை (பி.வி.22, உரை); (Gram.) appositional compound noun made up of two nouns in which 'ākiya' the particle of apposition is understood.

[Skt. karmadhāraya > த. கர்மதாரயம்.]

கர்மநிட்டன் *karma-niṭṭaṉ,* பெ.(n.) கருமத்தை மேற்கொண்டொழுகுவோன்; one devoted to the strict observance of one's religious duties.

த. வ. கடப்பாட்டாளன்.

[Skt. karman+ni-ṣṭha > த. கர்மநிட்டன்.]

கர்மநோய் *karma-nōy,* பெ.(n.) 1. யாதொரு காரணமு மில்லாமலே ஏற்பட்டு ஊழ்வினை தன்னை விட்டகல அதுவும் கூடவே உடம்பை விட்டகலும் ஊழ்வினை நோய்; disease coming on without any apparent cause and disappearing with the extinction of Karma (sins of previous births). 2. தீராத நோய்; an incurable or chronic disease. 3. உடம்பை விட்டகலாது எப்போதும் துன்பத்தைக் கொடுக்கும் நோய்; any chronic or lingering disease attended with unbearable sufferings. 4. ஆயுள் வேதப்படி குட்டம் முதலிய வினைப்பயன் நோய்கள்; according to Ayurveda, the karmic diseases as leprosy etc.

கர்மப்பிரமவாதி *karma-p-pirama-vādi.* பெ.(n.) வைதிகச் சடங்குகளையே பிரமமெனவாதிக்கும் பூர்வமீ மாஞ்சகன்; one who affirms that *karma* itself is *Brahman*, i.e. one who believes that the strict observance of *vēdic* rituals is the highest goal of man and that in such observance alone lies the true path of liberation.

த. வ. தொன்மநடப்பாளன்.

கர்மபந்தம் *karmapantam,* பெ.(n.) முழு வினைப்பயனாலேற்படும் பிறவி முதலிய சொந்தங்கள்; bonds of action. i.e., re-birth as the result of actions in the previous life (சா.அக.).

த. வ. பிறவித்தொடர்.

[கர்மம் + பந்தம்.]

கர்மபலம் *karma-palam,* பெ. (n.) 1. முழுமையான முன்வினைப் பயனுக்கு ஈடாக மாந்தர்களுக்கு ஏற்படும் இன்பம் துன்பம் முதலியன; the fruit or recompense of actions such as pain, pleasure etc. resulting from act or acts in a former life. 2. வினைப்பயன்; the reflections or results of acts of former births, which one has to suffer in the present birth. (சா.அக.).

த. வ. வினைப்பயன்.

[கர்மம் + பலம்.]

கர்மபிந்து *karmapindu,* பெ.(n.) **கர்மசலம்** பார்க்க; see *karmacalam* (சா.அக.).

கர்மம்[1] *karmam,* பெ.(n.) முற் பிறப்பிற் செய்த வினை; ஊழ்வினை (In philosophy) actions or deeds of previous birth (good or evil) rebounding on the soul and resultiing subsequently in the enjoyments and sufferings during the present birth or shifted to future births. 2. வாக்கு, மனம், காயம் ஆகியவற்றின் முயற்சி; (in psychology) the increase in speeches or utteraces of words, reflections of thought or mind and actions of the body. 3. (In medicine) மருந்துகளுக் கேற்பட்ட உடம்பின் தொடர்புடைய தொழில்கள்; the physiological actions of medicines. 4. மூன்று மாதத்திய கரு; (figuratively) refers to the foetus three month's old in the womb. 5. ஒரு பூடு; a plant (சா.அக.).

த. வ. கருமம்.

[Skt. karma > த. கர்மம்.]

கர்மம்[2] *karmam,* பெ.(n.) **கருமம்** பார்க்க; see *karumam.*

[தமிழ் – கருமம் > ***Skt.*** *karman.]*

கர்மம்[3] *karmam,* பெ.(n.) 1. (தன் வாழ்நாளில் குடும்பத்துக்கும் குமுகத்துக்கும் செய்ய வேண்டிய) கடமை; duty (to one's family and the society), action. *"கர்மத்தைச் செய், பலனை எதிர்பார்க்காதே" என்பது கீதையின் சாரம்.* 2. (பின் பிறவியில் பயன் தருவதாக இருக்கக் கூடிய முன் பிறவியின்) செயல்; வினை; deeds in the previous birth whose consequences one has to bear now, karma. *'நான் இப்படி இருப்பதற்குப் போன பிறவியில் என்ன கர்மம் செய்தேனோ!', 'நீ செய்த கர்மம் ஏழு பிறவிக்குப் போதும்'.*

த. வ. பிறவிவினை.

கர்மயோகம் *karmayōgam,* பெ. (n.) ஊதியத்தைக் கருதாமல் கடமை எண்ணமாகச் செய்யும் தொழில்களும் அவற்றிற்குரிய கடைப்பிடிகளும்; (In moral philosophy) performance of virtuous actions, rites and observances without any expectation of fruits derived there from. 2. நெடுங்காலம் நிலைத்திருக்க வேண்டி, மூச்சையடக்கிச் செய்யும் வாசியோகம்; (In yoga philosophy) that kind of yoga which consists chiefly in the control of breath. It is practised mainly for the purpose of attainment of longevity.

த. வ. வினைஓகம்.

கர்மரோகம் *karmarōgam,* பெ.(n.) **கர்மநோய்** பார்க்க; see *karma-nōy.*

த. வ. விடா வினைநோய்.

கர்மவசம் *karmavaśam,* பெ.(n.) ஊழ்வினையின் பயனாக ஒருவனை வந்தடையும் வினைப்பயன்; the necessary sufferings considered as the inevitable consequences of actions done in a former life (சா.அக.)

த. வ. வினைப்பயன்.

கர்மவிபாகம் *karmavipākam,* பெ. (n.) 1. அகத்தியர் செய்ததாகச் சொல்லும் ஒரு மருத்துவ நூல்; a treatise on medicine said to have been compiled by Agastya. 2. ஊழ்வினைப் பயன், இப்பிறவியில் நேரப் பக்குவப்படுதல்; the ripening of actions. i.e. the good or evil consequences occurring in this life for human acts performed in previous births.(சா.அக.).

[Skt. karma+vibaga]

கர்மவியாதி *karmaviyāti,* பெ.(n.) **கர்மநோய்** பார்க்க; see *karma-nōy.*

கர்மவேதனை *karmavēdaṉai,* பெ.(n.) ஊழ்வினையினா லேற்படுந் துன்பங்கள்; sufferings and troubles due to sins of previous births or past karma.

த. வ. வினைத்துன்பம்.

[கர்மம் + வேதனை.]

கர்மபசயாதிசயம் *karma-kṣayādiśayam,* பெ.(n.) அருகசமயத்தார் கூறும் வியப்பு மூன்றனுள் வினை நீங்குகையாகிய வியப்பு (சீவக. 2813, உரை); (Jaina) pre-eminence arising from annihilation of all karma, one of three aticayam.

த. வ. **வினையகல் வியப்பு.**

[Skt. karma + kṣata + ati - śaya > த. கர்மசயாதிசயம்.]

கர்மாந்தரம் *karmāndaram,* பெ.(n.) **கருமாந்தரம்** பார்க்க; see *karumāndaram.*

கர்மி *karmi,* பெ.(n.) ஊழ் வினையால் கட்டுண்டவன்; one who is afflicted by past karma. 2. தொழிலாளி; artisan (சா.அக.).

கர்மேந்திரியம் *karmēndiriyam,* பெ.(n.) ஐம்பொறிகள்; the operative organs such as the mouth or the tongue, hands, the genitals, the anus and the feet. 2. **கருமேந்திரியம்** பார்க்க; see *karu-mēndiriyam.* 3.தொழிலியற்றும் அங்கங்கள்; the functioning organs (சா.அக.).

த. வ. **ஐம்பொறிகள்.**

கர்மை *karmai,* பெ.(n.) காரைச்செடி; thorny webera, canthium parviflorum alias webera tetrandra (சா.அக.).

கர்லா *karlā,* பெ.(n.) **கர்லாக்கட்டை** பார்க்க; see *karlā-k-kaṭṭai.*

[U. karela > த. கர்லா.]

கர்லாக்கட்டை *karlā-k-kaṭṭai,* பெ.(n.) உடற்பயிற்சிக்காகச் சுழற்றுந் திரண்ட கனத்த மரக்கட்டை; Indian club used for physical exercises.



த. வ. **சுழற்றுக்கட்டை, சுக்குமாந்தடி.**

[கர்லா + கட்டை.]

[U. karela > த.கர்லா.]

கர்வடம்[1] *karvaḍam,* பெ.(n.) மலையும் ஆறுஞ் சூழ்ந்த ஊர் (திவா.); town surrounded by mountains and rivers.

த. வ. **முல்லை.**

[Skt. harvaṭa > த. கர்வடம்.]

கர்வடம்[2] *karvaḍam,* பெ.(n.) நானூறு சிற்றூர்களுக்குத் தலைச் சிற்றூர் (யாழ்.அக.); the chief village in a group or 400 villages.

த. வ. **முல்லைப்பேரூர்.**

[Skt. karvaṭa > த. கர்வடம்.]

கர்வம்[1] *karvam,* பெ.(n.) ஆயிரங்கோடி (சுக்கிரநீதி. 106); thousand crores.

த. வ. **ஆயிரம் குவளை.**

[Skt. kharva > த. கர்வம்.]

கர்வம்[2] *karvam,* பெ.(n.) பெருமை; pride. *'நாம் அனைவருமே கர்வப்பட்டுக் கொள்ள வேண்டிய செய்தியிது'.*

த. வ. பீடு.

கர்வம்[3] *karvam,* பெ.(n.) செருக்கு; haughtiness, arrogance.

[Skt. garva > த. கர்வம்.]

கர்வம்[4] *karvam,* பெ.(n.) ஒன்பான் செல்வங்களுளொன்று; one of the none treasures of *Kubēra.*

[Skt. kharva > த. கர்வம்.]

கர்வி[1]**-த்தல்** *karvi-,* 4 செ.கு.வி.(v.i.) செருக்குதல்; to be proud, arrogant.

[Skt. garva-, > த. கர்வி-த்தல்.]

கர்வி[2] *karvi,* பெ.(n.) செருக்கன்; proud fellow.

[Skt. garvin > த. கர்வி.]

கர்விதன் *karvidan,* பெ.(n.) **கர்வி** பார்க்க; see *karvi.*

[Skt. garvita > த. கர்விதன்.]

கர்விட்டன் *karviṭṭan,* பெ.(n.) **கர்வி**[2] பார்க்க; see *karvi*[2].

[Skt. garviṣṭha > கர்விஷ்டன் > த. கர்விட்டன்.]

கர்னகுட்டம் *karnakuttam,* பெ. (n.) உடம்பில் பச்சை நிறத்துடன் பொடிப் பொடியாக வெடித்தலும், தாக்கத்தினால் உடம்பு பருத்துத் திமிருடன் காக்கட்டான் பூ நிறமாகத் தோன்றித் தடிப்பு, வீக்கம், மிகுந்த கபம் முதலிய குணங்களைக் காட்டும் ஒருவகைத் தொழு நோய்; a kind of leprosy marked by scaly affections of the skin, which soon become greenish on its surface and when afflicted with the aggrevated condition of the three humours, the body is turned livid with the characteristic symptoms of raised patches, swelling numbness etc. (சா.அக.)

த. வ. கடுங்குட்டம்.

கர்னசூலை *karnašūlai,* பெ. (n.) 1. கன்னசூலை பார்க்க; see kann-sūlai. 2. குத்தல் வலியோடு கூடிய கன்னக் கழலை; a tumour in the region of the cheek accompanied by acute pain. 3. எவ்வித காரணத்தினாலும், கன்னத்திலேற்படும் குத்தல் நோய்; any acute or exacting pain of the cheek from any cause whatsoever.

த. வ. கன்னச்சூலை.

[கர்னம் + சூலை.]

கர்னம் *karnam,* பெ.(n.) கன்னம்; cheek. (சா.அக.)

கர்னிகயோனிரோகம் *karnika-yōni-rōgam,* பெ.(n.) இது காலமற்ற காலத்தின் புணர்ச்சியினால் வளி அதிகரித்து அரத்தத்தைக் கெடுத்து அல்குலின் வழியில் இரத்தம் திரண்டு, தாமரைக் காயைப் போலும், விழுது விட்டதைப் போலும் தொங்கும் ஒரு வகைத் தசையண்ட நோய்; a disease of the vagina, arising from abnormal growth of flesh and accumulation of blood in the walls of the vagina. It is marked by a pendulous growth (poly-poid) hanging in the passage of the vagina (சா.அக.).

த. வ. முகிழ்நோனிநோய்.

[Skt. karnika+yoni+roga.]

கர்னிகை *karnigai,* பெ.(n.) தாமரைக் கொட்டை; the pericarp of a lotus. (சா.அக.)

த. வ. பொகுட்டுக்காய்.

கர்னியேசா *karniyēšā,* பெ.(n.) பேய்த் தும்மட்டி; bitter-apple, cucumis colocynthis (சா.அக.).

கர்ச்சனை *karjanai,* பெ.(n.) அரிமா முழக்கம் (பெரும் குரல்), அதிர் முழக்கம்; (of lion) roar. *'அவர் பேச ஆரம்பித்தால் சிம்ம கர்ச்சனைதான்!'* (சா.அக.).

த. வ. உரப்பல்.

கர்ச்சி-த்தல் *karcci-,* செ.கு.வி.(v.t.) 1. (அரிமா, கடல்) பேரொலி எழுப்புதல், முழங்குதல்; (of lion, sea, wind, etc.) to roar, to rumble. *'தொழிற்சாலையின் இயந்திரங்கள் எழுப்பிய பேரோசை சிங்கங்கள் கர்ச்சிப்பது போல் இருந்தது'.* 2. உரத்த குரலில் பேசுதல்; spack in full-throated voice, roar. *'பொது மேடையில் கர்ச்சிக்கும் அவர் வீட்டுக்குப் போனால் பூனையாகி விடுவார்'.*

த. வ. உரப்புதல்

கரகரப்பிரியா *karakara-p-piriyā,* பெ.(n.) ஒரு வகைப் பண்; a musical mode.

[Skt. kharaharapriyā > த. கரகரப்பிரியா]

கரகோசம் *kara-kōšam,* பெ.(n.) ஒருவரைப் பாராட்டும் நோக்கத்தில் அவையினர் கைதட்டி உண்டாக்கும் ஒலி; வலுத்த கைதட்டல்; (thunderous) applause : ovation. *'கலை நிகழ்ச்சி முடிந்ததும் பார்வையாளர்கள் கரகோசம் செய்தனர்'* (சா.அக.).

த. வ. கைக்கொட்டு, கைத்தட்டு.

[கரம் + கோசம்.]

கரச்சேத்திரம் *kara-ccēttiram,* பெ.(n.) வீடு கட்டக் கூடிய மனை; building site (S.I.I.IV. 100).

த. வ. வீட்டுமனை.

[Skt. ghara+kṣettiram > த. கரச்சேத்திரம்]

கரடகபாடாணம் *karaḍaga-pāḍāṇam,* பெ.(n.) செய்நஞ்சு வகை (வின்.); a kind of arsenic.

கரண்டகபாடாணம் *karaṇḍaga-pāḍāṇam,* பெ.(n.) ஒரு வகை நஞ்சு; a kind of poison. (சா.அக.)

கரணகளேபரம் *karaṇa-kalēbaram,* பெ.(n.) உணர்வுப் பொறிகளுடன் கூடிய உடல்; the physical body with its sensory organs. *"கரணகளே பரங்களை யிழந்து" (அஷ்டாதச. முமுட்சுப். வ்யா. அவ.).*

த. வ. உணர்வுடல்.

[Skt. karaṇa + kalēparam > த. கரண களேபரம்.]

கரணசிராவேதை *karaṇaśirāvēdai,* பெ.(n.) அண்ட வீக்கம், விதை வீக்கம் முதலியவற்றைச் சரி செய்வதற்காகக் காது நடுவிலிருக்கும் அரத்த மூல நரம்பைத் துளையிடல்; boring the central concavity of the external ear (concha) as a reflex treatment, resorted to in olden days for purposes of arresting growth or swelling in cases of hydrocele, orchitis etc. (சா.அக.).

த. வ. செவிமடல் குத்து.

கரணம்பலம் *karaṇambalam,* பெ.(n.) வரிதண்டும் பணி; ancient name for the office of village headman. (Rd.).

[Skt. karna+ த. அம்பலம்.]

கரணம்பாய்-தல் *karaṇam-pāy-,* செ.கு.வி. (v.i.) 1. கூத்தாடுதல் (திருக்கோ, 389, உரை); to dance with gestures. 2. **கரணம் போடு-தல்** பார்க்க; see *karaṇam-pōḍu-.*

த. வ. கூத்தாட்டம்.

[Skt. கரணம் + த. பாய்-தல்.]

கரணம்போடு-தல் *karaṇam-pōḍu-,* செ.கு.வி. (v.i.) 1. தலைகீழாகப் பாய்தல்; to tumble heels over head, to gambol. 2. கெஞ்சுதல்; to solicit pressingly and persistently; to importune; to crave or beg for. 3. தன்னாற் கூடியதெல்லாம் செய்தல்; to do one's utmost; to use all possible means; to leave no stone unturned to accomplish an object.

த. வ. கூத்தாட்டு காட்டுதல்.

[கரணம் + போடு-தல்.]



கரணவாசனை *karaṇa-vāśaṇai,* பெ.(n.) **கரணவாதனை** பார்க்க; see *karaṇa-vātaṇai.*

கரணவாதனை *karaṇa-vādaṇai,* பெ.(n.) பொறிகளின் பழக்கவறிவு (வின்.); sensation, experience, pleasing or painful, as associated either with bodily organs or mental faculties.

த. வ. பொறியுணர்வு.

[கரணம் + வாதனை.]

கரணாதசம்மிதை *karaṇāda-śammidai,* பெ.(n.) காதைப் பற்றிய வரலாற்றைக் கூறுமோர் ஆயுள் வேத நூல்; an Ayurvedic science treating all about the ear (சா.அக.).

த. வ. செவிப்பிணிநூல்.

கரணிகசன்னி *karaṇika-śaṇṇi,* பெ.(n.) காதின் நோயினால், கண்டத்தை இறுக்கிப் பிடிப்பதனாலேற்படும் ஒரு வகை இசிவு நோய் சன்னி; a kind of delirium caused through the disease of the ear attended with constriction of the throat. (சா.அக.).

த. வ. செவிப்பிணி இழுப்பு.

[Skt. கரணிக + சன்னி.]

கரத்தம்பவாதம் *karattampavādam,* பெ.(n.) இரண்டு உள்ளங்கைகளிலும் உள்ளங் கால்களிலும், நெருப்பில் வைத்தாற் போல் எரிச்சல் கண்டு, உடம்பெங்கும் வெளுத்துலர்ந்து புரைதனில் புழுக்கள் ஊருதல் போல் ஊர்ந்து நடை கொடாது, வாயுலர்ந்து, உடம்பு கனத்துக் காணுமோர் வளிம நோய் (யூகி. முனி. 800); a kind of rheumatism marked by burning sensation on both the palms and the soles, pale and dried condition of the body, a peculiar sensation in the folds of the skin corresponding to the movements of a worm in a wound, inability to walk or more about freely. parched tongue, heaviness of body etc.

த. வ. எரிச்சல் ஊதை.

கரத்தை *karattai,* பெ.(n.) (ஒற்றை) மாட்டு வண்டி (இலங்.); bullock cart (drawn by a single ox).

[E. cart > த. கரத்தை.]



கரதபத்திரம் *karata-pattiram,* பெ.(n.) அரசிறையை நிலைக்க வைக்கும் ஆவணம் (பத்திரம்) (சுக்கிரநீதி. 93); document fixing the tax.

த. வ. வரியாவணம்.

[Skt. karada+pattiram > த. கரதபத்திரம்.]

கரதலாமலகம் *karatalāmalakam,* பெ.(n.) உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவானது; Lit. a fruit of the myrobalan placed on the palm of the hand; fig, perception at once easy and quite clear. *"மறைகள் .... கரதலாமலகமதாக வுணர்வில் வைத்த" (செவ்வந்திப்பு. சார. 2).*

த. வ. அங்கையுள் நெல்லி.

[Skt. karatala+āmalaka>த. கரதலாமலகம்.]

கரதாளம் *kara-tālam,* பெ.(n.) கைத்தாளம்;

[Skt. kara+த. தாளம்.]

கரதோடம் *karatōḍam,* பெ.(n.) வேதி மருந்துகளால் ஏற்பட்ட நஞ்சுக்கேடு; chemical poisoning (சா.அக.).

[Skt. kara-dosha.]

கரநியாசம் *kara-niyāšam,* பெ.(n.) தேவர்களை மந்திர வழி விரல்களில் வைக்கும் செய்கை; assignment of the fingers of the hand severally to different deities with appropriate mantras and gesticulation previous to meditation and prayer. *"அஞ்செழுத்தா லங்ககரநியாசம் பண்ணி" (சி.சி. 9, 8).*

த. வ. கைவயம்.

[Skt. kara+niyācam > த. கரநியாசம்.]

கரப்பர்ணம் *karapparṇam,* பெ.(n.) ஆமணக்கு (சங். அக.); castor-plant.

கரப்பிரசாரம் *kara-p-pirašāram,* பெ.(n.) செய்கை வகை; (nātya) a kind of gesture. *"சீர் சால் கரப்பிரசார முவமையில் சிரக்கரகருமம்" (திருவிளை. கான்மா. 8).*

[Skt. kara+pra-cāra > த. கரப்பிரசாரம்.]

கரப்பொத்தான் *karap-pottān,* பெ.(n.) கரப்பான் பூச்சி (இலங்.வ); cockroach.

கரபவல்லபம் *karapa-vallabam,* பெ.(n.) விளா மரம் (சங்.அக.); wood apple tree.

[Skt. karabha+vallabba > த. கரபவல்லபம்.]

கரபத்திரம் *kara-pattiram,* பெ.(n.) 1. ஈர்வாள் (திவா.); saw. 2. வாள்; sword. *"பணிக்கர் கரபத்திரமதாகும்" (திருவாதபு. புத். 74).*

[Skt. kara-patra > த. கரபத்திரம்.]



கரபம்[1] *karabam,* பெ.(n.) மணிக்கட்டிலிருந்து விரல் வரையில் உள்ள பகுதி; metacarpus, the part of the hand between the wrist and fingers. *"யானைத் தடவுடைக் கையுங் கரபமும்" (திருவிளை. உக்கிர. வேல்வளை. 37).*

[Skt. karabha > த. கரபம்.]

கரபம்[2] *karabam,* பெ.(n.) யானை; elephant. *"ஒரு நாற் றந்தக் கரபத்தினண்ணல்" (கந்தபு. அசமுக்கு. 22).* கழுதை (வின்.); ass.

கரபாகம் *kara-bāgam,* பெ.(n.) சூடுபட்டு மென்மையான குளிகை போல் திரளுகிற மருந்துப் பாகம் (பைஷஜ. 9); that stage in the preparation of any medicine by heating, when it reaches such consistency as would admit of a small pinch between wet fingers being easily rolled into a soft globule.

த. வ. கைபாகம்.

[Skt. kara+pāka > த. கரபாகம்.]

கரபாதம் *karapātam,* பெ.(n.) கையும் காலும்; the arm and the leg; the limbs.

கரம் *karam,* பெ.(n.) கை; arm, hand. *'பேருந்தில் சிரம், கரம், புறம் நீட்டாதீர்' என்று ஓர் அறிவிப்பு', 'எனக்கு வலது கை போல் விளங்கும் நண்பன்'*

[Skt. kara > த. கரம்.]

(இ.சொ) 1. பெரும்பாலும் (சமற்கிருத) பெயர்ச்சொற்களோடு சேர்க்கப்படுவதும் 'தரக் கூடியது' என்னும் பொருள்படுவதும் (வேற்றுமை உருபோ பன்மை ஈறோ ஏற்காத) பெயர்ச் சொல் அமைக்கக் கூடியதுமான ஓர் ஈறு. (எ.கா.) திருப்திகரம். 2. சுட்டும் முறையாகவும் ஒலிப்பு முறை கருதியும் உயிர் எழுத்திலும் உயிர்மெய் எழுத்திலும் குறில் எழுத்துகளோடு சேர்க்கப்படும் இடைச்சொல். சிலர் ழகரத்தை ளகரமாக பலுக்குகிறார்கள். (உ.வ).

கரம்பற்று-தல் *karamparru-,* 11. செ.கு.வி. திருமணம் செய்து கொள்ளுதல், மணத்தல்; marry. *'அவளைக் கரம் பற்றிய நாளிலிருந்து அவனுக்கு நல்ல வாழ்வு தான்'.*

[கரம் + பற்று-]

கரமசாலை *kara-macālai,* பெ.(n.) காரமான மசாலை (வின்.); pungent curry-stuff.

த. வ. காரஉசிலை.

[U. garmmasāla > த. கரமசாலை]

கரமஞ்சரி *kara-mañcari,* பெ.(n.) நாயுருவிச் செடி (பிங்.); a plant growing in hedges and thickets.

[Skt. khara-mañjari > த. கரமஞ்சரி]



கரமாலம் *karamālam,* பெ.(n.) புகை (சங். அக.); smoke.

[Skt. karamāla > த. கரமாலம்.]

கரலட்சணம் *kara-laṭcaṇam,* பெ.(n.) கையாற் புரியும் மெய்ப்பாட்டுச் செய்கை (பரத. பாவ. 19, தனம்பு); (Nātya) gestuculation by the hands.

த. வ. கைநயம்.

[கரம் + லட்சணம்.]

கரவாகம் *karavāgam,* பெ.(n.) காக்கை (வின்.); grow from its being harsh-voiced.

[Skt. khara+vāka > த. கரவாகம்.]



கரவாதசன்னி *karavāda-śanni,* பெ.(n.) 1. நஞ்சினாலேற்படும் இசிவுநோய் (சன்னி); delirium due to poisoning. 2. ஊதை நோயால் உடம்பில் நஞ்சு தங்கி அதனாலேற்படும் இசிவு நோய் (சன்னி); delirium due to sceptic poison arising from rheumatism (சா.அக.).

த. வ. நஞ்சு இசிவு.

கரவாலம் *karavālam,* பெ.(n.) உகிர் (நகம்) (சங்.அக.); nail.

[Skt. kara-vāla > த. கரவாலம்.]

கரவிகாரம் *karavigāram,* பெ. (n.) 1. நஞ்சினால் உடம்பிலேற்படும் வேற்றுமைகள்; various modifications or changes occurring in the system due to poisoning. 2. இடு மருந்தினால் உடம்பிலுண்டாகும் நோய்கள்; diseases occurring in the body due to introduction of love philter as an after effect. 3. இடு மருந்தினால் ஆண்கள் அல்லது பெண்களுக்கு கேற்படும் காமக் கவலை; lustful thoughts or venereal passions arising from introducing love-potion.

த. வ. செய்மருந்து நோய், கை மருந்து நோய்.

[கரம் + விகாரம்.]

கரவிடம் *karavḍam,* பெ.(n.) 1. சிறிதளவாக நஞ்சேற்றி வரல்; slow poisoning. 2. ஆடவர்களைத் தம்மிடம் பாசமுள்ளவர் களாகச் செய்ய விருப்பமுள்ள பெண்களாவது, பகைவர்களாவது, உணவு, தின்பண்டம் முதலியவற்றில் இடும் ஒரு வகை இடு மருந்து; a philter or substance usually administered by jealous wives to their husbands or by an enemy to one, in food or other eatables for purposes of subjecting him to her or his control. It is a slow poisoning by which the health of the victim is impaired and the person dies ultimately (சா.அக.).

த. வ. இடுமருந்து, கைமருந்து.

கரவிடாணம் *kara-viḍāṇam,* பெ.(n.) கழுதைக் கொம்பு போல் இல்பொருள் (நீலகேசி. 393, உரை); that which is non-existent, as an ass's horn.

[Skt. khara+viṣāṇam > த. கரவிடாணம்.]

கரவொலி *karavoli,* பெ.(n.) கைதட்டுதலால் ஏற்படும் ஓசை; applause. *'தலைவர் மேடைக்கு வந்ததும் தொண்டர்கள் கரவொலி எழுப்பி வரவேற்றார்கள்'.*

த.வ. கையொலி.

[கரம் + ஒலி.]

கராக்கி *karākki,* பெ.(n.) **கிராக்கி** (வின்.) பார்க்க; see *kirākki.*

[U. giraki > த. கராக்கி.]

கராகண்டிதம் *karā-kaṇḍidam,* பெ.(n.) கண்டிப்பு; severity, rigour. *"கராகண்டிதமாய்ச் சொல்லு" (வின்.).*

[U. qarār+kantitam > த. கராகண்டிதம்.]

கராசனம் *karāśaṉam,* பெ.(n.) புலி (யாழ்.அக.); tiger.

[Skt. khara+aśana > த. கராசனம்]



கராட்சேபகவாதம் *karāḍśebagavādam,* பெ.(n.) அதிக ஊதைப் பண்டங்களைப் புசிப்பதனாற் பிறந்து, உடம்பு முழுவதும் பரவி பின்னர் கை கால்களை அசைக்கவும், நீட்டவும், மடக்கவும் கூடாமையாயிருக்கும் ஒரு வகை ஊதை நோய்; a kind of paralysis attended with loss of motion and function of the limbs, especially the arms, as a result of the deranged condition of vayu, which begins in the muscles of a particular part and gradually spreads all over the body. It is aid to be caused by over indulging in articles of fare likely to develop vatha.

கராடம் *karāḍam,* பெ.(n.) தாமரைக் கிழங்கு (நாநார்த்த.); tuber of the lotus plant.

[Skt. karahāṭa > த. கராடம்.]

கராபத்தினி *karāpattiṉi,* பெ.(n.) பேராமுட்டி; fragrant sticky mallow - *Pavonia odorata* (சா.அக.).

கராம்பு *karāmbu,* பெ.(n.) **இலவங்கம் 1, 2** பார்க்க; see *elavaṅgam.*

[Gr. karnophullon > ū. quaranful > த. கராம்பு.]

கரார் *karār,* பெ.(n.) 1. உறுதி; fixity, stability, certainty, fixedness. 2. **கரார்நாமா** பார்க்க; see *karārnāmā.*

[U. qarār > த. கரார்.]

கரார்க்காரன் *karār-k-kāraṉ,* பெ.(n.) கண்டிப்புள்ளவன்; strict man, man of exacting character in respect of word and deed.

த. வ. கண்டிப்புக்காரன்.

[கரார் + காரன்.]

கரார்நாமா *karār-nāmā,* பெ.(n.) உறுதி ஆவணம்; deed of ratification, written agreement, contract or engagement.

த. வ. உறுதிமுறி.

[கரார் + நாமா.]

கரிசன்னி *kariśaṉṉi,* பெ.(n.) வெண் காக்கணம்; white-flowered mussel shell creeper - *Clitoriaternatea* (albi-flora).

கரிணிகம் *kariṇigam,* பெ.(n.) காதணி வகை (யாழ்.அக.); an ear ornament.

[Skt. karṇika > த. கரிணிகம்.]

கரிபரிசம் *kariparišam,* பெ.(n.) கையிற் தொடுதலினாலேற்படும் உணர்ச்சி; sensation arising from touch by hand (சா.அக.).

[கர > கரி + பரிசம்.]

கரீத்து *karīttu,* பெ.(n.) அடக்க விலை; net price (C.G.).

த. வ. மூலவிலை, அடக்கவிலை.

[U. kharid > த. கரீத்து.]

கரீத்துபட்டி *karīttu-paṭṭi,* பெ.(n.) கைச்சாத்து; invoice (C.G.).

கரீப்பு *karīppu,* பெ.அ.(adj.) எளிய; poor, indigent (C.G.).

த. வ. ஏழ்மையான, வறிய.

[U. garib > த. கரீப்பு.]

கரீரம் *karīram,* பெ.(n.) 1. மிடா (பிங்.); large boiler, water-jar. 2. கும்ப ஓரை (சூடா.); aquarius, the 11th sign of the zodiac. 3. **அகத்தி** (திவா.) பார்க்க; see *agatti.* 4. **கருவேல்** (மலை) பார்க்க; see *karuvēl.* 5. முளை; sprout, shoot. 6. மூங்கில் முளை; shoot of the bamboo. *"காம்பாங் கரீரம்" (தைலவ. தைல. 35).* 7. யானை மருப்பு மூலம் (பிங்.); root of an elephant's tusk.

[Skt. karira > த. கரீரம்.]

கருசணம் *karuṣaṇam,* பெ.(n.) 1. தேய்க்குந் தைலம்; embrocation. 2. மஞ்சள்; turmeric.

கருசபாடாணம் *karusa-pāṣdāṇam,* பெ. (n.) உரைகல் (பி.வி.22, உரை); touchstone.

[Skt. gharṣa+pāṣāṇam > த. கருசபாடாணம்]

கருசோபலம் *karuṣōpalam,* பெ.(n.) **கருசபாடாணம்** (பி.வி.22, உரை) பார்க்க; see *karuṣa-pāṣāṇam.*

கருணா[1] *karuṇā,* பெ.(n.) 1. **கருணை**[1] பார்க்க; see *karuṇai. 'கருணாமூர்த்தி'.* 2. முகக்குறி (பாவனை) ஐந்தனுள் ஒன்றான அருள்; (Buddh) grace, one of five kinds of *pāvaṇai. "மைத்திரி கருணா முதிதையென் றறிந்து" (மணிமே. 30, 256).*

[Skt. karuṇā > த. கருணா.]

கருணா[2] *karuṇā,* பெ.(n.) ஒரு வகை இசைக்கருவி (வாச்சியம்) (வின்.); large brase trumpet which sounds the bass.

[U. karnā > த. கருணா.]

கருணாகடாட்சம் *karuṇā-kaṭāṭcam,* பெ.(n.) அருளோடு (கருணையோடு) கூடிய கடைக்கண் பார்வை (பே.வ.); gracious look.

த. வ. அருள்நோக்கு

[கருணா + கடாட்சம்.]

[Skt. karuṇā > த. கருணை + Skt. kaṭaksa > த. கடாட்சம்.]

கருணாகரன் *karuṇākaraṉ,* பெ.(n.) கருணைக்கு இருப்பிடமான கடவுள்; God as the storehouse of grace. *"நஞ்சமுது செய்தாய் கருணாகரனே" (திருவாச. 6, 28).*

த. வ. அருளாளன்.

[Skt. karṇa+a-kara > த. கருணாகரன்.]

கருணாநிதி *karuṇā-nidi,* பெ. (n.) அருளுக்கு இருப்பிடமானவன்; God as the highest repository of grace.

த. வ. அருட்செல்வன்

[Skt. karuṇā+niti > த. கருணாநிதி.]

கருணாமூர்த்தி *karuṇā-mūrtti,* பெ.(n.) அருளுருவானவன்; God as grace personified.

த. வ. அருளன்.

[Skt. karuṇā+murtti.]

கருணாலயன் *karuṇālayaṉ,* பெ.(n.) அருளுக்கு நிலைக்களமானவன்; God, the storehouse of grace. *"கடைப்பட்டேனை யாண்டு கொண்ட கருணாலயனை" (திருவாச. 27, 1).*

த. வ. அருளுருவன்.

[Skt. karuṇā+ā-laya > த. கருணாலயன்.]

கருணி *karuṇi,* பெ.(n.) 1. மலை (வின்.); nill, mountain. 2. குகை (சது.); cave, cavern.

கருணிகை *karuṇigai,* பெ.(n.) தாமரைப் பொகுட்டு (வின்.); pericarp of the lotus, germ or rudiment of the fruit.

[Skt. karṇikā > த. கருணிகை.]

கருணை *karuṇai,* பெ.(n.) இரக்கம், அருள்; compassion, grace, mercy, benignity. *"மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்" (திருவாசக. 2, 107).*

கருணைமறம் *karuṇai-maṟam,* பெ.(n.) கருணையாற் செய்யும் தண்டனை (நிக்கிரகம்); reformative punishment, as an act of divine grace. *"அக்கருணை மறமாகிய செய்கை மாறி" (சி.போ.பா.8,1,பக். 174).*

[கருணை + மறம்.]

[Skt. karuṇa + த. மறம்.]

கரோடம் *karōḍam,* பெ.(n.) தலையோடு (வின்.); skull.

த. வ. புருடை.

[Skt. karōṭa > த. கரோடம்.]

[கர + ஓடு + அம்.]

கல்கம் *kalkam,* பெ.(n.) உலர்நிற சரக்கைப் பால் அல்லது நீர் விட்டு அரைத்துச் செய்யுங் குளிகை (பைஷஜ.); medicinal pill prepared by mixing dried drugs with milk or water.

[Skt. kalka > த. கல்கம்.]

கல்கித்துவாதசி *kalki-t-tuvādaśi,* பெ.(n.) பாத்திரபத திங்கள் மாதத்துப் பன்னிரண்டாம் நாள் (பஞ்.); the twelveth tithi in the lunar month of bhādrapada.

கல்நாதம் *kal-nādam,* பெ.(n.) அன்னபேதி (வின்.); green virtriol.

கல்பவாசியர் *kalpa-vāśiyar,* பெ.(n.) தேவருள் ஒருவகையினர் (மேருமந். 8, உரை); (Jaina.) a class of *Dēvas.*

கல்பா *kalpā,* பெ.(n.) கலவரம்; disturbance, tumult.

[H. khalbal > த. கல்பா.]

கல்பு *kalpu,* பெ.(n.) மனம்; mind. *"செய்த சட்டம் லாக்கள் முற்றுங் கல்பிற் பொதிந்த களஞ்சியவான்" (பஞ்ச. திருமுக. 1613).*

[Ar. qalf > த. கல்பு.]

கல்மசம் *kalmaśam,* பெ.(n.) 1. அழுக்கு; dirt, dross, impurity. 2. புண்ணினின்று வெளிவரும் சீழ் முதலியன; pus of a boil. 3. கரிசு (பாவம்); sin. 4. குற்றம்; fault.

த. வ. மனத்தில் கல்மசம் கூடாது.

மறுவ. கல்மிசம்.

கல்யாணகுணம் *kalyāṇa-kuṇam,* பெ.(n.) நற்குணம் (சம்.அக.); good disposition nobility of character.

[கல்யாணம் + குணம்.]

[Skt. kalyāṇa + த. குணம்.]

கல்யாணதரம் *kalyāṇa-taram,* பெ.(n.) சமவசரணத்திலுள்ள மூன்று மதில்களுள் ஒன்று (மேருமந். 61, உரை); (Jaina.) one of the three fort-walls in Camavacaraṇam.

[Skt. kalyāṇa+tara > த. கல்யாணதரம்]

கல்லி *kalli,* பெ.(n.) மேலங்கியுறுப்பு (வின்.); triangular piece of cloth, gore in long Indian jacket.

[U. kalli > த. கல்லி.]



கல்லோலம் *kallōlam,* பெ.(n.) அலை; billow, wave, surge. *"பெருங்கல் லோலப் புணரியின் மூழ்க" (திருவாலவா. 9, 5).*

த. வ. கல்லோதம்.

[Skt. kallōla > த. கல்லோலம்.]

கலவிகரணன் *kala-vikaraṇaṉ,* பெ.(n.) வைரவமூர்த்தி (காஞ்சிப். வயிர வீசப். 26); God vairava.

[Skt. khala-vikaraṇan > த. கலவிகரணன்.]

கலாங்கிசம் *kalāṅgiśam,* பெ.(n.) ஒரை (இராசி)யைப் பதினாறு கூறிடுகை (சோதிடகிரக. 123); (Astrol.) dividing a zodiacal sign into 16 parts.

[Skt. kalā+amśa > த. கலாங்கிசம்.]

கலாசாலை *kalāśālai,* பெ.(n.) (இலங்.) (மொழி கற்பிக்கும் அல்லது பயிற்சி தரும்) கல்லூரி; school (of languages), college (for training teachers). *'அரபுக் கலாசாலை / ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை'.*

த. வ. கல்லூரி.

[கலா + சாலை.]

[த. கலை > Skt. kalā + த. சாலை.]

கலாசு *kalāśu,* பெ.(n.) மரக்கலத்தொடர்பானது (வின்.); shipping.

த. வ. நாவாயிகம்.

[U. khalās > த. கலாசு.]

கலாட்டா *kalāṭṭā,* பெ.(n.) கலவரம்; riot, commotion, tumult, insurrection, strife.

[U. galātā > த. கலாட்டா.]

கலாத்துவா *kalāttuvā,* பெ. (n.) ஐங்(பஞ்ச)கலைகளாகிய அத்துவாவகை (சி.சி.8, 6–9, மறைஞா.); (Šaiva) a path to salvation in the form of *pañca-kalai*, one of six *attuvā*.

[Skt. kalā+adhvan > த. கலாத்துவா.]

கலாதத்துவம் *kalā-tattuvam,* பெ.(n.) தூய்மையற்ற மெய்மங்களுள் (சுத்தாசுத்த தத்துவங்களுள்) ஒன்று (சி.போ.பா.2,2, பக். 151); (Saiva) that which slightly reduces the power of *āṇava-malam* (which acts as a veil on the soul) so as to enable the soul to act, one of seven *cuttācutta-tattuvam*.

கலாதி *kalādi,* பெ.(n.) கலகம் (வின்.); agitation, stir, disturbance, tumult, quarrel, scuffle, squablole, brawl, wrangle.

த. வ. போராட்டம்.

[Skt. kalaha > த. கலாதி.]

கலாநிதி[1] *kalā-nidi,* பெ.(n.) 1. நிலவு (பிங்.); moon, having phases. 2. கல்விக் களஞ்சியம்; treasure-house of learning, a title given to a learned person. *"தாக்ஷிணாத்யகலாநிதி".*

த. வ. கலைவல்லோன்.

[கலா + நிதி.]

[த. கலை > Skt. kalā+niti > த. கலாநிதி.]

கலாநிதி[2] *kalānidi,* பெ.(n.) (இசை, நாட்டியம் முதலிய) கலைகளில் சிறந்தவருக்கு வழங்கப்படுகிற மதிப்புப் பட்டம்; a title given to a great master of fine arts such as music, dance, etc. *'சங்கீதக் கலாநிதி / நாட்டியக் கலாநிதி'.* 2. (இலங்.) முனைவர்; Doctor of philosophy (Ph.D.).

த. வ. கலைச்செல்வன்.

கலாபூர்வம் *kalā-pūrvam,* பெ. (n.) கலையழகு பொருந்தியது; that which is artistic. *'ஓவியம் கலாபூர்வமாக அமையவில்லை / அந்த இளைஞனின் கலாபூர்வமான சிந்தனை அவரை மிகவும் கவர்ந்தது'.*

கலாயி *kalāyi,* பெ.(n.) ஏனங்களுக்குப் பூசப்படும் ஈயம் (இ.வ.); tin used for tinning vessels.

த. வ. ஈயப்பூச்சு.

[U. galai > த. கலாயி.]

கலாலாபம் *kalālābam,* பெ.(n.) வண்டு; bee. *"அரியமாமலர் விரியத் தேனுகர்ந் தார்த்திடுங் கலாலாபம்" (அலங்காரச்சிந்து. 10).*

[Skt. kalālāpa > த. கலாலாபம்.]

கலாவியூகம் *kalā-viyūgam,* பெ.(n.) ஒன்பான் அணி வகுப்புகளுள் ஒன்று (நவவியூகத்தொன்று) (சௌந்த. 1, உரை); a category of things, one of nava-viyūkam.

த. வ. ஒன்பான். அணி

[Skt. kalā+viyūkam > த. கலாவியூகம்.]

கலிக்கத்துரா *kalikkatturā,* பெ.(n.) முன்னெற்றியில் அணியும் ஒருவகை அணி; aigrette, spray of gems, diadem of gold or of gold set with precious stones, set up as an ornament vertically over the forehead, on the turban.

த. வ. சூளாமணி.

[Skt. kalikā+U. turai.]



கலிசந்தரணம் *kalicandaraṇam,* பெ.(n.) நூற்றெட்டு மறைநூல்களுள் ஒன்று; name of an upaniṣad, one of 108.

[Skt. kalisantaraṇa > த. கலிசந்தரணம்.]

கலித்தம் *kalittam,* பெ.(n.) 1. கக்குகை (யாழ்.அக.); vomitting, emitting. 2. பொசிகை; oozing. 3. பொலிவு; grand appearance.

[Skt. skhalita > த. கலித்தம்.]

கலிபுருடன் *kali-puruḍaṉ,* பெ.(n.) கலிகாலத்துக்கு உரிய தெய்வம் (தேவதை); the deity presiding over the iron age.

த. வ. கலியன்.

[Skt. kali+puruṣan > த. கலிபுருடன்.]

கலிமா *kalimā,* பெ.(n.) 1. வழிபாட்டு (விண்ணப்பம்); prayer. 2. இசுலாம் மதத்தில் சேரும் போது அல்லாவைத் தவிர வேறு கடவுள் இல்லை; முகம்மது அவருடைய திருத்தூதர் என்று பொருள்படச் சொல்லும் அரபி வசனம்; the muslim confession of faith, beginning with *iāyilāhillallāhu.*

த. வ. இசுலாம்ஓதல்.

[Ar. kalimā > த. கலிமா.]

கலியப்தம் *kali-y-aptam,* பெ.(n.) கலியுகம் பிறந்தது முதலாக எண்ணப்படும் வருடம்; the era of kali yuga, which is said to have commenced in 3102 B.C.

த. வ. கலியூழி.

[Skt. kali+abda > த. கலியப்தம்.]

கலேகபோதநியாயம் *kalē-kapōda-niyāyam,* பெ. (n.) புறாக்கள் பல ஒரே நெற்களத்தில் தவசங்களைப் பொறுக்க மேல்விழுவது போலும் நெறி; maxim of the doves and the threshing-floor used to denote the way in which many seek the same vast source of enrichment and each do so unmindful of others.

த.வ. மூசுபுறாமுறையம்.

[Skt. khalē + kapōta + nyāya > த. கலேகபோதநியாயம்.]

கவ்டா *kavḍā,* பெ.(n.) கிராமத் தலைவன் (வின்.); head of a village.

த.வ. ஊராளி.

[Mhr. gāvaḍā > த. கவ்டா.]

கவ்வா *kavvā,* பெ.(n.) நீண்ட அங்கி; long-coat, tunic (Parav).

த.வ. தொளாய்சட்டை.

[U. kabā > த. கவ்வா.]

கவ்வியம்[1] *kavviyam,* பெ.(n.) ஆனைந்தனுள் (பஞ்சு கவ்வியத்துள்) ஒன்று; any one of the five choice products yielded by the cow.

[Skt. gauya > த. கவ்வியம்.]

கவ்வியம்[2] *kavviyam,* பெ.(n.) இறந்துபட்ட முன்னோர்களை எண்ணி கொடுக்கும் பிண்டம்; oblation of food to manes. *"அவ்விய கவ்வியத்தை .... மறையோர்க் கீயின்" (மச்சபு. சிராத்தானு. 2).*

ஐம்பொருள்களாவன : *பால், தயிர், நெய், ஆனீர், சாணம்.*

த. வ. நீத்தார்கடன்.

கவசி-த்தல் *kavaśi-,* 4 செ.குன்றாவி.(v.t.) சீலைமண் செய்தல் (இராசவைத். 89. உரை); to coat with clay over the mouth of a pot, to lute for calcining medicine.

[Skt. kavaca-, > த. கவசி-த்தல்.]

கவளீகரி-த்தல் *kavaḷīkari-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. மொத்தமாக விழுங்குதல்; to take in at one sweep. 2. முழுதும் பறித்தல் (கொ.வ.); to misappropriate.

[Skt. kavali-kr-, > த. கவளீகரி-த்தல்.]

கவாடிபந்தி *kavāḍi-pandi,* பெ. (n.) யானைக் கூடத்தைத் தூய்மை செய்வோன் (இ.வ.); elephant's stable - cleaner.

த.வ. கட்டுத்தறி பணியாளன்.

[Skt. kavāṭi+U. bandi.]

கவாத்து *kavāttu,* பெ.(n.) போர்வீரர் புரியும் உடற்பயிற்சி மையம் (உ.வ.); military drill.

த.வ. களரி.

[U. qawāid > த. கவாத்து.]

கவாய் *kavāy*, பெ.(n.) பாடகன்; musician.

[H. gavaiya > த. கவாய்.]

கவாளம் *kavāḷam*, பெ.(n.) குதிரை மருந்து (வின்.); horse physic.

[Pkt. kavāta > த. கவாளம்.]

கவியம் *kaviyam*, பெ.(n.) கடிவாளம் (பிங்.); bit of a horse's bridle.

[Pkt. kavi(y)a > த. கவியம்.]

கவீனம் *kavīṉam*, பெ.(n.) வெண்ணெய்; butter.

[Skt. haiyaṅ-gavīna.]

கவுல் *kavul*, பெ.(n.) நிலக்குத்தகை உடன்படிக்கை; favourable tenure of land; agreement whereby land is held for rent either perpetually or for a term of years. (G.S.M. D.ii.22)

த. வ. நிலவாரம்.

[U. qaul > த. கவுல்.]

கவோடணம் *kavōḍaṇam*, பெ.(n.) மிதமான சூடு; moderate heat.

களத்திரம் *kaḷattiram*, பெ.(n.) 1. அரைப்புறம் (நாநார்த்த.); hip. 2. அரணிடம்; citadel, stronghold.

[Skt. kalatra > த. களத்திரம்.]

களத்தொனி *kaḷa-t-toṉi*, பெ.(n.) 1. குயில் (நாநார்த்த.); Indian cuckoo. 2. புறா; dove. 3. மயில்; peacock.

[Skt. kala-dhavani > த. களத்தொனி.]



களதௌதம் *kaḷataudam*, பெ.(n.) 1. பொன் (நாநார்த்த.); gold. 2. இனிய மெல்லோசை; dulcet sound.

[Skt. kaladhauta > த. களதௌதம்.]

களாசுக்காரன் *kaḷāšu-k-kāraṉ*, பெ.(n.) கப்பல் வேலையாள் (இ.வ.); lascar.

த. வ. கடலகன்.

[U. khalās > த. களாசுக்காரன்.]

களாய் *kaḷāy*, பெ.(n.) 1. **கலாயி** பார்க்க; see *kalai*. 2. ஏன (பாத்திர)ங்கட்குப் பூசப்படும் ஈயம் (இ.வ.); tin used for tinning vessels. *"ஏனத்துக்குக் களாய் பூசுகிறது".*

த. வ. ஈயம்.

[U. qalaī > த. களாய்.]

கற்கசம் *kaṟkašam*, பெ.(n.) கரும்பு (நாநார்த்த.); sugar cane.

[Skt. karkaša > த. கற்கசம்.]

கற்கரம் *kaṟkaram*, பெ.(n.) மத்து (யாழ்.அக.); churn.

[Skt. gargara > த. கற்கரம்.]



கற்கரிகை *kaṟkarigai*, பெ.(n.) சதங்கை (யாழ்.அக.); tinklers.

[Skt. ghargharikā > த. கற்கரிகை.]

கற்கிச்சா *kaṟ-kiccā*, பெ.(n.) 1. சோதிடம் எனும் கணியத்தில் ஒரு சமன்பாடு; (Astrol.) equation for the second inequality of a planet when its position is within six signs of Aries. 2. கற்கிசீக்கிரபரிதி (வின்.); (Astrol.) table of these equations, the annual parallax of the orbits of planets,

given when their place in the heavens is from cancer to capricornus.

த. வ. கோள்சமன்பாடு.

கற்பகன் *ka<u>r</u>pagan,* பெ.(n.) நாவிதன் (சங்.அக.); barber.

த. வ. பரியாரி.

[Skt. kalpaka > த. கற்பகன்.]

கறாமத்து *karāmattu,* பெ.(n.) தாராளத்தன்மை; generosity, liberal, mindedness.

த. வ. வள்ளன்மை..

[Skt. karāmat > த. கறாமத்து.]

கறார் *karār,* பெ.(n.) உறுதி; fixity, stability, certainty, fixedness.

த. வ. கண்டிப்பு

[U. qarār > த. கறார்.]

கறி *kari,* பெ.(n.) ஒரு நாழிகை; measure of time - 24 minutes.

த. வ. நாழிகை, கழிகை.

[U. ghari > த. கறி.]

கன்மசண்டாளன் *kanma-šandālan,* பெ.(n.) மேற்குடியில் பிறந்திருப்பினும் அவனது இழிவான செய்கையால் தாழ்ந்தவன்; person of high birth who degrades himself by his own vile deeds.

த.வ. குலக்கேடன்.

[Skt. karman > த. கன்மம் + சண்டாளன்.]

கன்மசாதாக்கியம்[1] *kanma-šādākkiyam,* பெ.(n.) சிவனின் ஐந்து முகங்களில் ஒன்றான ஈசான முகத்தை அடைய மனோன்மணியுடன் (கிரியாசத்தி யுடன்) சேர்ந்த பரசிவம்; *Parašivan* in contact with *kiriyā-šatti* assaming the form of *Isāna*, one of five *šātākkiyam*, (சதாசிவ. 6.)

[Skt.karman+sādākhya >த.கன்ம சாதாக்கியம்.]

கன்மசாதாக்கியம்[2] *kanma-šādākkiyam,* பெ.(n.) இலிங்கமும் ஆவுடையும் (பீடமும்) இவ்வுலகின் முகமாக உருவெடுக்கும் சிவவடிவம் (தத்துவப். 191, உரை); manifestation of Šiva in *lingam, pidam,* and *pirapañjam.*

[Skt.karman+sādākhya>த.கன்ம சாதாக்கியம்.]

கன்மசாதாக்கியர் *kanma-šādākkiyar,* பெ.(n.) தூய ஆதனில் (சுத்தாத்துவாவில்) படைப்பு முதலிய (சிருஷ்டியாதி) காரியங்களைச் செய்யும் சிவன் (சதாசிவ. 42, உரை.); Šiva, the creator in *šuttāttuvā.*

[Skt.karman+sādākhya>த.கன்ம சாதாக்கியர்.]

கன்மசாந்தி *kanma-šāndi,* பெ.(n.) முற்பிறப்புக்களின் தீவினை யொழியச் செய்யும் சடங்கு; ceremonial rites for expiation of sins of former births.

த.வ. பழவினையறுப்பு.

[Skt. karman > த. கன்மம்.]

கன்மடம் *kanmadam,* பெ.(n.) 1. அழுக்கு; dirt, dross, impurity. 2. காயத்திலிருந்து வெளிவரும் சீழ் முதலியவை; pus, of a boil. 3. கரிசு (பாவம்); sin.

[Skt. kalmaṣa > த. கன்மடம்.]

கன்மத்தியாகம் *kanma-t-tiyāgam,* பெ.(n.) முன் செய்தவினை தீர்க்கை (வின்.); expiation of the evil done in former births.

த.வ. பழவினைபாறல்.

[Skt.karma+tyāga>த.கன்மதியாகம்.]

கன்மதாரயம் *kanma-dārayam,* பெ.(n.) இரு பெயரொட்டுப் பண்புத்தொகை (கர்மதாரயம்) (வீரசோ. தொகைப். 2); appositional compound noun made up of two nouns in which *ākiyā* the particle of apposition is under stood.

[Skt. karmadhāraya > த. கன்மதாரயம்.]

கன்மநிட்டன் *kanma-nittan,* பெ.(n.) நடைமுறைச் சடங்குகளில் (கருமானுட் டானத்தில்) பற்றுள்ளவன்; one who adheres to his ordained duties. *"கன்மநிட்டா சிறு பிள்ளாய் நீ" (தாயு. உடல்பொய். 52.)*

[Skt. karma+niṣṭha > த. கன்மநிட்டன்.]

கன்மநிவிர்த்தி *kanma-nivirddi,* பெ.(n.) **கருமநிவிர்த்தி** பார்க்க; see *kauma-nivirddi.*

[Skt. karman + ni-vrtti > த. கன்மநிவிர்த்தி.]

கன்மப்பிரமவாதி *kanma-p-piramavādi,* பெ.(n.) **கர்மப்பிரமவாதி** (வின்.) பார்க்க; see *karma-p-pirma-vādi.*

*[**Skt.**karma + brahman + vādin >த. கன்மப்பிரமவாதி.]*

கன்மபந்தம் *kanma-pandam,* பெ.(n.) முன்வினைப் பயனின் தொடர்பிலேயே எதிர்கால இன்பதுன்பம் அமையும் என தொடர்புபடுத்துவது; the result of past actions, good or bad, and the cause of future happiness or misery.

த.வ. பழவினைக்கட்டு.

[கன்மம் + பந்தம்.]

*[**Skt.**karman>த.கன்மம்.]*

கன்மபாதகன் *kanma-pādagan,* பெ.(n.) கொடியவன் (வின்); heinous sinner.

*[**Skt.** karman+pātaka > கன்மபாதகன்.]*

கன்மபாவம் *kanma-pāvam,* பெ.(n.) தன் முன்னோர் செய்த தீவினைப் பயன் தான் பிறப்பெடுத்தபோது தன்னுட் கரிசாகத் (பாவமாகத்) தோன்றினது நிற்கத் தானே செய்த கரிசு (பாவம்); sins actually committed by an individual.

த.வ. தன்கரிசு.

*[**Skt.** karman+bhāva > கன்மபாவம்.]*

கன்மபூமி *kanma-pūmi,* பெ.(n.) ஓகம் முதலிய நற்செயல்கள் புரிதற்குரிய பாரத ஆண்டு; Bhāratavarsa, the land of Bharata or India where virtuous deeds such as religious sacrifices are performed.

*[**Skt.** karman+bhūmi > த.கன்மபூமி.]*

கன்மம் *kanmam,* பெ.(n.) தொழில்; business, profession. *"கன்மமன் றெங்கன் கையிற் பாவை பறிப்பது"* (திவ். திருவாய். 6.2: 7).

*[**Skt.** karman > த. கன்மம்.]*

கன்மம்புசி-த்தல் *kanmam-puši-,* 4 செ.கு.வி. (v.i.) வினைப்பயனை நுகர்தல்; to experience the results of one's deeds.

த.வ. வினைத்துய்ப்பு.

[கன்மம் + புசி-த்தல்.]

*[**Skt.**karman>த.கன்மம்+புசி-த்தல்.]*

கன்மயக்ஞம் *kanma-yakñam,* பெ.(n.) விடியல் ஐந்து நாழிகைக்கு முன் எழுந்து விடிவதற்குமுன் செய்யக்கூடிய செயல்களைச் சரிவரச் செய்கை (சி.சி. 8 : 23.); performance of ordained duties, as praying to God, etc., between 4 a.m. and dawn.

த.வ. வைகறைக் கடன்.

*[**Skt.** karmayagña > கன்மயக்ஞம்.]*

கன்மயாகம் *kanma-yāgam,* பெ.(n.) ஐம்பான் வேள்விகளுள் குலங்களுக்குரிய நாட்கடனிறுக்கும் (நித்தியக் கிரியைகளாகிய) வேள்வி (சி. சி. 8, 23, சிவாக்.); performing daily the rites appropriate to each *varunācciramam,* one of pañja-yāgam.

த.வ. கருமவேள்வி.

*[**Skt.** karma+yāga > த. கன்மயாகம்.]*

கன்மவிந்தியம் *kanma-v-indiyam,* பெ.(n.) **கருமேந்திரியம்** பார்க்க; see *karumēndiriyam. "நீடிய கன்மவிந்தியத்தின்" (மச்சபு. பிரமமு.12.)*

*[**Skt.** karman + **Pkt.** indiya > த. கன்மவிந்தியம். **Skt.** indriya > **Pkt.** indiya.]*

கன்மவேள்வி *kanma-vēḷvi,* பெ.(n.) **கருமயாகம்** (சி.சி.8 : 23, சிவஞா.) பார்க்க; see *karuma-yāgam,* performance of religious duties.

[கன்மம் + வேள்வி.]

*[**Skt.**karman>த.கன்மன்+வேள்வி.]*

கன்மாதிகன் *kanmādigan,* பெ.(n.) குல முன்னோர்களின் நினைவைப் போற்றும் வகையில் சடங்குகள் செய்வோன்; (பிதிர்கருமஞ்செய்வோன்) (சங்.அக.); one who performs funered rites to his ancestors.

த.வ. நினைவேந்தலோன்.

*[**Skt.** karman+adhi-krta > கன்மாதிகன்.]*

கன்மிட்டன் *kanmiṭṭan,* பெ.(n.) 1. எல்லாச் செயல்களையும் ஆர்வத்தோடு செய்பவன்; one who earnestly performs all religious rites. 2. செயல் செய்வதில் வல்லவன்; one skilled in

business, clever man. *"தயித்தியர்க்குக் கன்மிட்டனாகிக் காக்குங் கவி"* *(உத்தரரா. இலவண. 33)*

த.வ. வினைத்திறலன்.

[Skt. karmiṣtha > த. கன்மிட்டன்.]

கன்மேந்திரியம் *kaṉmēndiriyam,* பெ.(n.) **கருமேந்திரியம்** (பரிபா. 3 : 77, உரை.) பார்க்க; see *karumēndiriyam.*

த.வ. கருமப்பொறி.

[Skt. karman+indriya > த. கன்மேந்திரியம்.]

கன்னிகாதானம் *kaṉṉigā-dāṉam,* பெ. (n.) 32 அறங்களுள் ஒன்றான, கன்னியை ஆடவனுக்கு மணம் செய்து கொடுக்கும் அறம் (பிங்.); giving away a virgin in marriage, one of *muppattiraṇḍaṟam.*

த.வ. மகட்கொடை.

[கன்னிகா+தானம்.]

[த.கன்னிகா > Skt. kaṉyakā]

கன்னிகா→ கன்னி என்னும் தமிழ்ச்சொல்லின் வடமொழித் திரிபு.

கன்னிகாமடம் *kaṉṉigā-maḍam,* பெ.(n.) **கன்னியாத்திரீமடம்** பார்க்க; see kaṉṉiyāttirī-maḍam.

த.வ. கன்னிமாடம்.

[கன்னிகா + மடம்.]

[த.கன்னி > Skt. kaṉyakā]

கன்னிப்பை *kaṉṉi-p-pai,* பெ.(n.) கோணிப்பை; gunny bag.

[E. gunny>gōṇi > த. கன்னி + பை]

கன்னியாசுல்கம் *kaṉṉiyā-sulgam,* பெ.(n.) 1. திருமணத்தில் மணமகன் மணமகளைச் சார்ந்தார்க்குக் கொடுக்கும் பரிசுப் பணம்; money given to the bride's father as her price; purchase money of a girl. 2. ஒருவன் ஒரு கன்னியை மணந்து கொள்வதற்கு ஏற்படுத்தும் வில் வளைக்கை ஏறு தழுவுகை போன்ற செயல்; arduous undertaking, as bending a bow or successfully handling a wild ox, set as a test to win the hand of a bride.

த.வ. கன்னிப்பரிசம்.

[த. கன்னி >Skt. kaṉyā + śulka > த. கன்னியா+சுல்கம்]

கன்னியாத்திரீ *kaṉṉiyā-t-tirī,* பெ.(n.) 1. கன்னிப் பெண் (மணமாகாத பெண்); virgin, damsel. 2. கிறித்தவப் பெண் துறவி; nun.

த.வ. கன்னியாத்திரீ.

[த. கன்னி > Skt. kanyā + strī > த. கன்னியாத்திரீ]

கன்னியாத்திரீமடம் *kaṉṉiyā-t-tirī-maḍam,* பெ.(n.) கிறித்தவப் பெண்துறவிகள் வசிக்கும் இடம்; convent for nuns.

[கன்னியாத்திரீ + மடம்.]

[த. கன்னி > Skt. kanyā + strī.]

கன்னியாதானம் *kaṉṉiyā-dāṉam,* பெ.(n.) **கன்னிகாதானம்** பார்க்க; see *kaṉṉigā-dāṉam.*

த.வ. மகட்கொடை.

[கன்னியா + தானம்.]

[த. கன்னி > Skt. kanyā.]

கன்னியாபுத்திரன் *kaṉṉiyā-puddiraṉ,* பெ.(n.) கன்னிப் பெண் பெற்ற மகன்; son of an unmarried woman.

த.வ. கன்னிமகன்.

[கன்னியா + புத்திரன்.]

[த. கன்னி > Skt. kanyā]

கன்னியாமடம் *kaṉṉiyā-maḍam,* பெ.(n.) **கன்னியாத்திரீமடம்** பார்க்க; see *kaṉṉiyā-ttirī-maḍam.*

[கன்னியா + மடம்.]

[த. கன்னி > Skt. kanyā.]

கன்னியாமாடம் *kaṉṉiyā-māḍam,* பெ.(n.) **கன்னிமாடம்** பார்க்க; see *kaṉṉi-māḍam* *"மணியிற் செய்த கன்னியா மாட மெய்தி"* *(சீவக.585)*

[கன்னியா + மாடம்.]

[த. கன்னி> Skt. kanyā]

கனகாசம் *kaṉa-gāśam,* பெ. (n.) கண்ணோய்வகை (யாழ்.அக.); a disease of the eye.

[Skt. ghana + kāca > த. கனகாசம்.]

கனரதம் *kana-radam,* பெ.(n.) **கனவிரதம்** (உரி. நி.) பார்க்க; see *kana-v-iradam.*

[Skt. ghana + rasa > த. கனரதம்.]

கனவிரதம் *kana-v-iradam,* பெ.(n.) நீர் (பிங்.); juice from the cloud, water.

[கனரதம் >கனவிரதம்.]

கனிட்டமாத்திரை *kani-t-ta-mättirai,* பெ.(n.) சிறுவடிவிலான மாத்திரைவகை (சாரங்க. 251.); small - sized medicinal pill.

த.வ. நுண்மாத்திரை.

[கனிட்டம் + மாத்திரை.]

[Skt. kanistha > த. கனிட்டம்.]

கனிட்டன்[1] *kanittan,* பெ.(n.) 1. கடைசிப்பிள்ளை (C.G.); last-born son. 2. தம்பி; younger brother. *"ஆனைமுகார் கனிட்ட" (திருப்பு. 513).* 3. கீழ்மகன் (திவா.); base, vile, low person.

த.வ. இளையன், கடைக்குட்டி.

[Skt. kanistha > த. கனிட்டன்.]

கனிட்டன்[2] *kanittan,* பெ.(n.) **கனிட்டை, 3** (சிலப். 3 : 58 உரை.) பார்க்க; see *kanittai,3.*

[Skt. kanisthā > த. கனிட்டன்.]

கனிட்டிகை *kanittigai,* பெ.(n.) **கனிட்டை, 3** பார்க்க; see *kanittai, 3.*

[Skt. kanisthikā > த. கனிட்டிகை.]

கனிட்டை *kanittai,* பெ.(n.) 1. கடைசியாகப் பிறந்த மகள்; last-born daughter. 2. தங்கை; sister, younger than oneself. 3. சிறுவிரல்; the little finger. *"அணியலு மாகுங் கனிட்டை யங்குட்டமின்றி" (சைவச. பொது. 190).*

த.வ. கடைக்குட்டி.

[Skt. kanisthā > த. கனிட்டை.]

கனோபலம் *kanōpalam,* பெ.(n.) ஆலங்கட்டி; hail-stone. *"மழையிற் சுரும்பு கனோபலத்திற் கருல" (சேதுபு. அகத்திய. 15)*

த.வ. ஆலி.

[Skt. ghana + upala > த. கனோபலம்.]

காக்கலாதிதம் *kākkalādidam,* பெ.(n.) காளான்; mushroom (சா.அக.).

காக்கா *kākkā,* பெ.(n.) அண்ணன் (மு.வ.); elder brother.

[U. kākā > த. காக்கா.]

காகபாடாணம் *kāga-pādānam,* பெ.(n.) வைப்பு நஞ்சு வகை; a prepared arsenic, one of 32.

[Skt. kāka+pașāņa > காகபாஷாணம்>த. காக பாடாணம்.]

காகிதம் *kākidam,* பெ.(n.) 1. கடுதாசி; paper. 2. கடிதம்; epistle written on paper.

U. kāgaz.

த.வ. தாள்.

[Mhr. kāgada > த. காகிதம்.]

காங்கி[1] *kāngi,* பெ.(n.) பணியாளர் தொகுதி; company of workmen.

த.வ. களமர்.

[E. Gang > த. காங்கி.]

காங்கி[2] *kāngi,* பெ.(n.) பேராசைக்காரன்; avaricious person. *"மற்றவன் கைத்துண்பான் காங்கி யெனப்படுவான்" (நான்மணி. 61).*

[Skt. kānkṣin > த. காங்கி.]

காசச்சுரம் *kāša-c-curam,* பெ.(n.) ஈளை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்டாகும் காய்ச்சல்; fever of an asthmatic patient followed by cough (சா.அக.).

[காசம்+சுரம்.]

[Skt. kāša > த. காசம்.]

காசசிலேட்டுமம் *kāša-šilēttumam,* பெ.(n.) ஈளை நோயினால் எழும் கோழை அல்லது சளி; the mucous sputum or phlegm arising from asthma (சா. அக.).

த.வ. ஈளைச்சளி.

[Skt. kāša+šlēsman > த. காசசிலேட்டுமம்.]

காசசுவாசம் *kāša-šuvāsam,* பெ.(n.) ஈளை நோய் இழுப்பு (காச இழுப்பு) (பதார்த்த. 24.); asthmatic breathing, difficult breathing as in asthma (சா.அக.).

த.வ. ஈளை இழுப்பு.

[Skt. kāša+švāsa > த. காசசுவாசம்.]

காசபாகயந்திரம் *kāšabāga-yandiram,* பெ.(n.) வாலைக்குப் [நீர்மம் (திரவம்) வடிக்கும் பாண்டம்] பயன்படுத்தும் மூக்கு நீண்ட ஏனம்; a glass retort (சா.அக.).

த.வ. மூக்குருனம்.

[Skt. kāsa+bāha+yantra>த. காசபாக யந்திரம்]

காசரணவாதம் *kāša-raṇa-vādam*, பெ.(n.) ஈளை நோய் ஏற்பட்டு நெஞ்சு புண்ணாகிக் காணும் ஒரு இழுப்பு நோய்; a kind of rheumatism attributed to irritation of the mucous membrane of the bronchial tubes (சா. அக.).

த.வ. ஈளை இழுப்பு.

[Skt. kāša+vraṇa+vāta > த. காசரண வாதம்.]

காசரோகம் *kāša-rōgam*, பெ.(n.) நாசித் துளை எரிச்சலால் உடம்பில் ஏற்படும் ஈளை நோய்; bronchitis or asthma due to irritation of the mucous membrane of the bronchial tubes (சா.அக.).

த.வ. ஈளைநோய்.

[Skt. kāša+rōga > த. காசரோகம்.]

காசலவணம் *kāša-lavaṇam*, பெ.(n.) ஐவகை உப்புகளுள் ஒன்று; salt of potash or soda in crystalline state, one of *pañja-lavaṇam*.

[Skt. kāša+lavaṇa > த. காசலவணம்]

ஐவகையுப்புகள்: 1. காசலவணம், 2. பிடாலவணம், 3. சயிந்த வலவணம், 4. சவ்வர்ச்சலலவணம், 5. சமுத்திரலவணம்.

காசனம் *kāšaṇam*, பெ.(n) கொலை (வின்.); killing, slaying.

[Skt. šasana > த. காசனம்.]

காசா[1] *kāša*, பெ.எ.(adj.) முதல் தரமான; excellent, pure, good.

[U. khāšā > த. காசா.]

காசா[2] *kāša*, பெ.(n) பதினாறு அகவையாகும் போது குதிரைப் பற்களில் ஏற்படும் கருஞ் சிவப்பு நிறம் (அகவசா. 6.); deep-red colour of the teeth of horses when they are sixteen years old.

[U. gajā > த. காசா.]

காசா[3] *kāšā*, பெ.(n) உடையில் பொத்தானைப் பொருத்த அளவாக வெட்டித் தைக்கப்படும் சிறிய துளை; button hole. *'இந்தச் சட்டைக்கு எத்தனை காசா எடுக்க வேண்டும்? காசா வெட்டத் தேவையான இடங்களில் குறி போட்டுக் கொடு'.*

[U. gajā > த. காசா.]

காசா[4] *kāsā*, பெ.(n) துணிவகை; a kind of cloth. *காசா கச்சா.*

[Hi. kaccha > த. காசா.]

காசா[5] *kāšā*, பெ.(n) தலைவன் (எசமான்); master, proprietor.

[Persn. khwājā > த. காசா.]

காசா[6] *kāsā*, பெ.(n) 1. சொந்தம்; one's own, personal possession. 2. உண்மை விலை (அசல் விலை); original price.

[U. khāsā > த. காசா.]

காசா[7] *kāsā*, பெ.எ.(adj.) மிகவுஞ் சிறந்த; fine, capital, elegant.

[U. khāsā > த. காசா.]

காசாக்காரன் *kāšā-k-kāraṉ*, பெ.(n) உரிமையாளன், சொந்தக்காரன்; owner, proprietor.

[U khāsā > த. காசா + காரன்]

காசாப்பற்று *kāsā-p-paṟṟu*, பெ.(n) தனதுபற்று; dues, as to a shop, bank, etc.

[கசா + பற்று.]

[U. khāsā > த. கசா + பற்று.]

காசாமண்டிகை *kāša-maṇḍigai*, பெ.(n) கோதுமை மாவினாலும், அரிசி மாவினாலும் செய்யப்படும் ஒருவகைப் பணியாரம் (இந்துபாக. 326.); a kind of cake made of wheat and rice flour.

[U.gajā+Skt.maṇḍikā> த. காசாமண்டிகை.]

காசாயங்கொடு-த்தல் *kāšāyaṅ-goḍu-*, 4 செ.கு.வி.(v.i.) காவி வண்ண ஆடையைக் கொடுத்துத் துறவி (சன்னியாசி) ஆக்குதல்; to initiate one into the order of *šaṉyāši*, as by giving him a cloth dyed brown-red.

[காசாயம் + கொடு-,]

[Skt. kāšāya > த. காசாயம்.]

காசாயநாதாந்தி *kāšāya-nādāndi*, பெ.(n) செம்பு; copper (சா.அக.).

காசாயம் *kāšāyam,* பெ.(n) செங்காவி வண்ணம் ஊட்டப் பெற்ற ஆடை; brown-red cloth of a *šanyāši.*

[Skt. kāšāya > த. காசாயம்.]

காசாயம்வாங்கிக்கொள்(ளு)-தல் *kāšāyam-vāṅgi-k-koḷ(ḷu)-,* 16 செ.கு.வி.(v.i.) காவி வண்ண ஆடையைப் பெற்றுத் துறவியாதல்; to be admitted to the order of *šanyāšiš.*

த.வ. துறவறம் ஏற்றல்.

[காசாயம் + வாங்கி + கொள்(ளு)-,]

[Skt. kāšāya > த. காசாயம்.]

காசாயமூட்டு-தல் *kāšāyam-ūṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) காவி வண்ணம் ஊட்டல்; to dye a cloth with ochre.

[காசாயம்+ஊட்டு-,]

[Skt. kāšāya > த. காசாயம்.]

காசாவசம் *kāšāvasam,* பெ.(n) பற்றுவரவுக் கணக்கில் தன் வயமானது; that which is received or paid personally by the individual in whose name the account stands.

[U. khāsā+vaša > த. காசாவசம்]

காசாவர்க்கம்[1] *kāša-varkkam,* பெ.(n) குடிக்கூலி கொடுக்கும் நல்ல குடிகள்; good tenants.

[U. khāsā + Skt. varga > த. காசாவர்க்கம்]

காசாவர்க்கம்[2] *kāšā-varkkam,* பெ.(n) ஊர்ப்பொதுவேலை செய்வதென்னும் கட்டுப் பாட்டின் மேல் சிற்றூர் பொது மனைக்கட்டில் குடியிருக்கை; occupying the *manaikkaṭṭu* of a village, free of rent, in return for common village service.

[Ar. khāsā + Skt. varga > த. காசாவர்க்கம்.]

காசாவில்லை *kāšā-villai,* பெ.(n) சந்தனத்துடன் பல நறுமணப் பொருள்கள் சேர்ந்த சிறப்புச் சந்தனக் கூட்டு (யாழ். அக.); sandal paste with special fragrant ingredients.

[காசா + வில்லை.]

[Ar. khāsa > த. காசா.]

காசாவெடு-த்தல் *kāšā-veḍu-,* 4. செ.கு.வி. (v.i.) சட்டையின் பொத்தான் துளையைத் தைத்தல்; to stitch a buttonhole.

த.வ. பொல்லம் பொத்தல்

[U. kājā > த. காசா.]

காசியார் *kāšiyār,* பெ.(n) சட்டப்படி தீர்ப்பு வழங்கும் முறை மன்றாளரும் (நீதிபதியும்) முகம்மதிய குருவும், ஆனவர்; Muhammadan judge having jurisdiction over all cases of law, religious, moral, civil and criminal.

[U. qāzi > த. காசியார்.]

காசி *kāji,* பெ.(n) **காசியார்** பார்க்க; see *kāšiyār.*

[U. qāzi > த. காசி.]

காசீசம் *kāšīsam,* பெ.(n) அன்ன பேதி; green-vitriol, Iron sulphate (சா.அக.).

காசீயார் *kāšīyār,* பெ.(n) **காசியார்** பார்க்க; see *kāšiyār.*

காசுசவாரி *kāšu-šavāri,* பெ.(n) பெரியோரின் சுற்றுலா (P.T.L.); tour of a high or noble person.

[Ar. khāss + U. sawār > த. காசுசவாரி]

காசுதாரி *kāšu-dāri,* பெ.(n) குதிரைக்காரன்; groom, syce, horsekeeper.

[Ar. khāss + Persn bardār > த. காசுதாரி.]

காசை *kāšai,* பெ.(n) ஈளை நோய் (வின்.); consumption.

[Skt. kāša > த. காசை.]

காசையாடை *kāšaiyāḍai,* பெ.(n) காவி வண்ணம் ஊட்டப்பட்ட ஆடை; brown-red cloth worn by ascetics. *"காசையாடை மூடியோடி" (திவ். பெரியதி. 2. 2 :1).*

[காசா + ஆடை.]

[Skt. kāṣāya > த. காசாயம்.]

காட்டாக்கினி *kāṭṭākkini,* பெ.(n) கட்டையைக் கடைந்து உண்டாக்கும் நெருப்பு; fire produced from sticks by friction.

[Skt. kāṣṭa+agni > காஷ்டாக்கினி > த. காட்டாக்கினி]

காட்டாசாரி *kāṭṭāšāri,* பெ.(n) தச்சன்; carpenter.

[Skt. kāṣṭha+ācārya > காஷ்டாசாரி > த. காட்டாசாரி.]



காட்டை[1] *kāṭṭai,* பெ.(n) 1. ஒரு நுட்பமான காலவளவு; a measure of time = 1/30 *kalā.* 2. எல்லை; boundary, limit.

[Skt. kāṣṭhā > த. காட்டை.]

காட்டை[2] *kāṭṭai,* பெ.(n) விருப்பம்; desire.

[Skt. kāṅkṣā > த. காட்டை.]

காடாலிங்கனம் *kāḍāliṅganam,* பெ.(n) இறுகத்தழுவுகை; close embrace.

[Skt.gāḍha+ā-liṅgana > த. காடாலிங்கனம்.]

காடிகானா *kādi-gānā,* பெ.(n) வண்டியை நிறுத்தும் இடம் (கட்டிடம்); cart-stand carriage-house, shed far keeping carts.

[U. gādi-khāna > த. காடிகானா.]

காடினியம் *kāḍiṉiyam,* பெ.(n) கடினத்தன்மை இறுகுத் தன்மை; hardness, rigidity, thoughness.

[Skt. kāthinya > த. காடினியம்.]

காடீசம் *kāḍīsam,* பெ.(n) வெங்காரம்; borax or biborate of soda - *Soda biborous* (சா.அக.).

காணாதன் *kāṇādaṉ,* பெ.(n) கணாத மதத்தினன்; adherent of the school of *kaṇādam.* *"கண்டகராய்நின்ற காணாதர் வாதங் கழற்றுவமே" (தேசிகப். 5 : 30.).*

[Skt. kaṇāda > த. காணாதன்.]

காத்தியம் *kāttiyam,* பெ.(n) கடித்துண்ணும் உணவு; food munched and eaten.

[Skt. khādya > த. காத்தியம்.]

காத்தியாயனம் *kāttiyāyaṉam,* பெ.(n) அறநூல் பதினெட்டனுள் காத்தியாயனரால் இயற்றப்பட்டது (திவா.); a treatise in Sanskrit on Hindu law, ascribed to *Kātyāyana* one of 18 *tāruma-nūl.*

[Skt. Kātyā-yana > த. காத்தியாயனம்.]

காத்தியாயனர் *kāttiyāyaṉar,* பெ.(n) 1. அற (தரும) நூலாசிரியருள் ஒருவர்; name of a Hindu-law-giver. 2. வரருசி, சமற்கிருத இலக்கண ஆசிரியர் (பி.வி.1.); Vararuci, a Sanskrit grammarian, as a descendant of Kata.

[Skt. Kātyāyana > த. காத்தியாயனர்.]

காத்தியாயனி *kāttiyāyaṉi,* பெ.(n) 1. மலை மகள் (சிவரக. தாருக. 30.); *Pārvati.* 2. கொற்றவை (பிங்.); *Durgā.*

[Skt. kātyāyani > த. காத்தியாயனி.]

காத்திரம்[1] *kāttiram,* பெ.(n) 1. உடல்; body. *"காத்திரங் கரணஞ்சேர்த்தி" (வைராக். தீப. 39).* 2. உறுப்பு (திவா.); limb, member. 3. யானையின் முன்னங்கால்; fore leg of an elephant. *"காத்திரங்களாற் றலத்தொடுந் தேய்த்ததொர் களிறு" (கம்பரா. வரைக். 6).* 4. கனம், நெருக்கம், இறுக்கம் (சூடா.); thickness, solidity. 5. உடலின் பருமன்; corpulence. 6. இன்றியமையாதது; importance.

[Skt. gātra > த. காத்திரம்.]

காத்திரம்[2] *kāttiram,* பெ.(n) **காத்திரவேயம்** பார்க்க; see *kāttiravēyam.*

காத்திரவேயம் *kāttiravēyam,* பெ.(n) பாம்பு (உரி. நி.); serpent.

[Skt. kādravēya > த. காத்திரவேயம்.]

காத்திரவேயர் *kāttira-vēyar,* பெ.(n) கீழ்த்திசையில் வாழ்வதாகக் கருதப்படும் நாகர்; a class of *Nāgas* or serpent demons supposed to inhabit the lower regions, as the children of *Kadru.* *"காத்திரவேயரை மன்னன் மைந்தரு மொத்தார்" (பாரத. சம்பவ. 119).*

[Skt. kādravēya > த. காத்திரவேயர்.]

காத்திராந்தலேபனி *kāttirāndalēbaṉi*, பெ.(n) நறுமணச் சந்தனம்; perfumed sandal paste. (சா. அக.)

காத்திரி[1] *kāttiri*, பெ.(n) கீரி (திவா.); mungoose.

[Skt. kṣātra > த. காத்திரி.]



காத்திரி[2] *kāttiri*, பெ.(n) சினம், வெகுளி (கோபம்); displeasure, anger.

[Skt. kṣātra > த. காத்திரி.]

காத்திரி[3] *kāttiri*, பெ.(n) படைக்கலம் (வின்.); weapon.

[Skt. šastra > த. காத்திரி.]

காத்திரை *kāttirai*, பெ.(n) **காத்திரி**[3] (அக. நி.) பார்க்க; see *kāttiri*[3].

காதர் *kādar*, பெ.(n) அனைத்து வல்லமைகளும் உடைய இறைவன் (முகமதி.); almighty.

ம. காதர்.

[U. qādir > த. காதர்.]

காதர்பசந்து *kādar-pašandu*, பெ.(n) சிறுநீரக வடிவில் இருக்கும் சுவைமிக்க மாம்பழவகை; a kidney-shaped graft mango, fleshy and of milky flavour when ripe.

[U. qādir+pasand > த. காதர்பசந்து.]

காதரோகம் *kāda-rōgam*, பெ.(n) கரப்பான் (கிரந்தி) நோய்; glandular swellings; syphilis (சா.அக.).

காதனவிரணம் *kādaṉa-viraṇam*, பெ.(n) அரிபுண்; rodent ulcer (சா.அக.).

காதா *kādā*, பெ.(n) பற்றுவரவுக் கணக்கு (C.G.); current account in a person's name; ledger.

[U. khāta > த. காதா.]

காதி *kādhi*, பெ.(n) இரட்டுத் துணி; double-threaded coarse cloth.

[U. khādi > த. காதி.]

காதியம் *kādiyam*, பெ.(n) மென்று தின்னும் மருந்து; a medicine to be taken by mastication (சா.அக.).

காதேமார் *kādēmār*, பெ.(n) மிகப்பெரிய காய்களையுடைய புளிப்பான மாவகை; a mango tree that bears very big fruits sour to the taste.

[U. gadhā-mār > த. காதேமார்.]

காந்துவி *kānduvi*, பெ.(n) மண்ணீரல்; spleen. (சா. அக.)

காப்பி[1] *kāppi*, பெ.(n) 1. ஒரு வகையான செடி; Arabian coffee, *Coffea arabica*. 2. காப்பித் தூளைக் கொதிக்கும் நீரில் போட்டுத் தெளியவைத்துப் பால் கலந்து தேவையான அளவு இனிப்புச் சேர்த்துச் செய்யும் பருகக் கூடிய சிறப்பான சுவைப்பருகம்; coffee.

த.வ.குளம்பி, காணீர்

[E. coffee > த. காப்பி.]

காப்பி[2] *kāppi*, பெ.(n) படி (நகல்); copy.

[E. copy > த. காப்பி.]

காப்பிக்கசாயம் *kāppi-k-kašayam*, பெ.(n) காப்பிப் பொடியிட்டுக் காய்ச்சிய கொதிநீர், காணீர்க் கருக்கு; coffee decoction (சா.அக.).

[E.coffee+Skt.கஷாயம் > த. காப்பிக்கசாயம்.]

காப்பிக்கொட்டை *kāppi-k-kōṭṭai*, பெ.(n) காப்பிச் செடியின் பழத்தினின்று கொட்டையை எடுத்துக் காயவைத்துப் பதப்படுத்திய விதை; coffee seeds, coffea beans. It is from the ripe red berries that this seed is taken, washed and then dried.

[காப்பி + கொட்டை.]

[E. coffee > த. காப்பி.]

இதற்குக் கோப்பிக் கொட்டையென்றும் பெயர். இக்கொட்டையின் தரம், காயின் வடிவு, நிறம், மணம், செழிப்பு முதலியவற்றைக் கருதி பலவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதை வறுத்துப் பொடி செய்து

காப்பிச்சூரை *kāppi-c-cūrai,* பெ.(n) காப்பிச் செடியில் பூச்சிகளினால் ஏற்படும் நோய்; a disease common to coffee crops caused by a fungus, *coffee blight* (சா.அக.).

[காப்பி + சூரை.]

[E. coffee > த. காப்பி.]

காப்பிச்செடிநோய் *kāppi-c-cedi-nōy,* பெ.(n) காப்பிச் செடியில் பூச்சி விழுந்து அதன் காய்ப்பைக் கெடுக்கும் ஒரு நோய்; a disease of the coffee plant caused by fungus (Hemibia vastatrix) which destroys the whole crops (சா.அக.).

[காப்பி+செடி+நோய்.]

[E. coffee > த. காப்பி.]

காப்பித்தண்ணீர் *kāppi-t-tannīr,* பெ.(n) காப்பித் தூளை வெந்நீரில் கொதிக்க விட்டு, அந்நீரில் பாலும் சருக்கரையும் பலவாறாகக் கலந்துள்ள ஒருவகைப் பருகம்; coffee drink. It is a decoction of coffee powder to which are added milk and sugar in desired proportions (சா.அக.).

[காப்பி + தண்ணீர்.]

[E. coffee > த. காப்பி.]

காப்பித்தூள் *kāppi-t-tūḷ,* பெ.(n) காப்பிக் கொட்டையை வெண்ணெய் அல்லது நெய்யிட்டு வறுத்து இடித்து எடுத்த பொடி; powder of coffee seeds prepared by adding some butter or ghee to the seeds and then roasted (சா.அக.).

[காப்பி + தூள்.]

[E. coffee > த. காப்பி.]

காப்பியடி—த்தல் *kāppi-y-aḍi-,* 4 செ.கு.வி.(v.i) 1. தேர்வின் நெறிமுறைகளுக்குப் புறம்பாக வினாக்களுக்குப் புத்தகம் முதலியவற்றைப் பார்த்து எழுதுதல்; copy, the answer from sources that are not allowed in the examination. *காப்பியடித்துப் பிடிபட்டால் மூன்றாண்டுகள் தேர்வு எழுத முடியாது.* 2. ஒன்றில் இருப்பதைப் போன்று அல்லது ஒருவர் செய்யும் செயலைப் பார்த்து அப்படியே அது போன்றே செய்தல்; imitate. *'தலை முடியை வாருவதில் கூட என்னைப் பார்த்துக் காப்பியடிக்க வேண்டுமா என்ன?'.*

[காப்பி + அடி-,]

[E. copy > த. காப்பி.]

காபடிகன் *kābaḍigan,* பெ.(n) மாயக்கலை (இந்திர சாலம்) செய்வோன்; a magician; one creating an illusion (சா.அக.).

காபந்து *kābandu,* பெ.(n) காப்பு, பாதுகாப்பு; careful protection. *'முந்தும் அரவம் நச்சுயிரிகளால் ஏதம் வந்து கெடாமலே காபந்து செய்தாயே'. (சர்வசமய சமரசக் கீர்த்தனை).*

[U. khāwand > த. காபந்து.]

காபந்துஅரசு *kābandu-arašu,* பெ.(n) மறு அரசு தேர்ந்தெடுக்கப்படும் வரையுள்ள காலத்தில் நாட்டை ஆளும் அரசு; caretaker government.

[காபந்து + அரசு.]

[U. khāwand > த. காபந்து.]

காபரா *kābarā,* பெ.(n) குழப்பம், மனக்கலக்கம்; disorder, confusion, alarm, excitement. *'ஆள் மெத்த காபராகிவிட்டான்' (உ.வ.).*

[U. ghābrā > த. காபரா.]

காபி *kāpi,* பெ.(n) **காப்பி** பார்க்க; see *kāppi.*

[E. copy > த. காபி.]

காபிசம் *kāpišam,* பெ.(n) **காபிசாயனம்** பார்க்க; see *kāpi-šāyanam* (சா.அக.).

காபிசாயனம் *kāpi-šāyanam,* பெ.(n) கள்; toddy (சா.அக.).

காபித்தம் *kābittam,* பெ.(n) விளா; wood-apple - *Feronia elephantum* (சா.அக.).

காபிரம் *kābiram,* பெ.(n) சாம்பிராணி; frankincense benzoin. (சா. அக.)

காபிரியமதம் *kābiriya-madam,* பெ.(n) ஒரு வகை மதம்; a kind of religion.

இம்மதத்தவர்களின் படைப்புக் கடவுளுக்குக் குவினியாடிக்வோசா என்று பெயர். இவர்கள் பல சிலைகளைச் செய்து கோயில்களில் வைத்துப் பூசிப்பர். ஆடு, மாடுகளைப் பலியிடும் இவர்கள் மேபக் என்னும் புழுவை நல்லவற்றைத் தெரிவிக்கும் எனக் கருதிக் காப்பாற்றுவர். குருக்கள் தங்கள் விருப்பப்படிப் பெண்களை மணந்து கொள்ளலாம். இம்மத வழக்கப்படிக் கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ளலாம் (அபி.சிந்.).

காபில் *kābil,* பெ.(n) அனைத்துத் திறமைகளும் பொருந்தியவன்; a fit, clever or competent person.

[U. qabil > த. காபில்.]

காபிலம் *kābilam,* பெ.(n) 1. கபிலரது மதமான சாங்கிய மதம்; *šāṅgiya,* one of the Indian systems of philosophy whose founder or the earliest systematic exponent was Kapilar. *"காபிலப் பொருளென் றுரைசெயு நூலின்" (பிரபோத.11 : 6).* 2. தலையிலிருந்து கால்வரை ஈரத் துணியால் உடம்பைத் துடைத்துக் கொள்ளுதலாகிய குளியல் வகை; a kind of bath which consists in wiping the body clean from head to foot with a wet cloth and which is generally resorted to by persons who are not in a position ot take a both. 3. கபிலம் என்னும் ஆ (பசு)வினது நெய்; ghee from a brown cow. *"திருவிளக்கைக் காபிலத்தா னிகழ்த்துகவே" (சிவதரு. சிவஞானதா. 24.).* 4. துணைத் தொன்ம (உப புராண) வகையுள் ஒன்று; a secondary Purana one of 18 *upa-purānam.*

[Skt. kāpila > த. காபிலம்.]

காபுரம் *kāburam,* பெ.(n) 1. வயிற்றுப்பிசம்; tympany, wind dropsy. 2. பாக்கு மரம்; areca nut tree. 3. ஒரு வகைக் கோரைப்புல்; a kind of sedge grass - *Cyperus pertinuis.* 4. ஒரு நறுமணம்; a perfume (சா.அக.).

காபுருசன் *kā-purušaṉ,* பெ.(n) இழிந்தவன், சிறுமையுடையவன்; insignificant despicable person. *"ஒரு காபுருசன் எடுக்கிலும்" (திவ். திருநெடுந். 21, வியா. 176).*

[Skt. kā-puruṣa > த. காபுருசன்.]

காம் *kām,* பெ.(n) சிற்றூர் (வின்.); village.

[த. கம்மம் > U. gām > த. காம்.]

காம்காரி *kām-gāri,* பெ.(n) அரசின் கட்டட வேலை(C.G.); public works.

[U. kām+kārin > த. காம்காரி.]

காம்பரா *kāmbarā,* பெ.(n) 1. அறை; room, chamber. 2. இன்றியமையாத (முக்கியமான) பொருள்களை வைக்கும் அறை; room in which important articles are kept.

[L. camera > த. காம்பரா.]

காம்பலிகம் *kāmbaligam,* பெ.(n) காடி, மோர், கஞ்சி, யவாக்கஞ்சி முதலியவைகளின் கலப்பு; a mixture of vinegar, sour milk, whey, gruel, barley water etc. (சா. அக.)

காம்பவுண்டு *kāmbavuṇḍu,* பெ.(n) 1. ஒரு சுற்றுச் சுவரை உடைய கட்டடத் தொகுதி, வளாகம்; compound, building complex. 2. ஒரு வீடு அல்லது கட்டடத் தொகுதிக்கு வெளியில் உள்ள சுற்றுச் சுவர்; compound wall.

[E. compound > த. காம்பவுண்டு.]

காம்பீரம் *kāmbīram,* பெ.(n) **காம்பீரியம்** பார்க்க; see *kāmbīriyam.*

காம்பீரியம் *kāmbīriyam,* பெ.(n) 1. கம்பீரம்; dignity, majestic bearing. 2. ஆழம்; profundity, depth.

[Skt. gāmbhīrya > த. காம்பீரியம்.]

காம்வார்¹ *kām-vār,* வி.எ.(adv.) சிற்றூர் வாரியாக; village by village.

[U. gāmvār > த. காம்வார்.]

காம்வார்² *kām-vār,* பெ.(n) சிற்றூர் வருவாய் வகைத்திட்டம் (P.T.L.); village settlement.

[H. gāmvār > த. காம்வார்.]

காமதாலம் *kāmatālam*, பெ.(n) குயில்; Indian cuckoo (சா.அக.).



காமமிய்வோன் *kāmamiyvōṉ*, பெ.(n) கோழித் தலைக் கெந்தி; red sulphur found in irregular pieces of brick-dust colour (சா. அக.).

காமராவுள் *kāmarā-v-uḷ*, பெ.(n) சிறப்பான உடைமைகளை வைக்கக்கூடிய உள்ளறை; inner room in a house where valuable things are kept.

[காமரா + உள்.]

[L. camera > த. காமரா.]

காமலம் *kāmalam*, பெ.(n) 1. கழுதைப்பீ, எச்சம் (லத்தி); ass's dung. 2. கண்ணில் பீளை தள்ளும் ஒரு நோய்; an eye disease attended with purulent discharge. 3. பாலை நிலம்; desert. 4. இளவேனிற் காலம்; spring season. 5. காமம்; lust (சா.அக.).

காமில் *kāmil*, பெ.(n) 1. முழுமை; completeness, entirety. 2. ஊரிலிருந்து வரியாக வாங்கும் மொத்தத் தொகை; the total land revenue realised from a village.

[Ar. kāmil > த. காமில்.]

காய்தா *kāydā*, பெ.(n) 1. முறை (வின்.); order, rule. 2. வழக்கம்; custom, usage, practice. 3. கட்டுப்படுத்துகை; checking.

[U. qāida > த. காய்தா.]

காயகப்பிரியா *kāyagappriyā*, பெ.(n) மேளகர்தாக்களுளொன்று (சங். சந். 47.); a primary rāga.

[Skt. gāyaka-priyā > த. காயகப்பிரியா.]

காயம்பௌனாகவுல் *kāyam-pauṉā-kavul*, பெ.(n) ஏற்பட்ட நிலத்தீர்வையில் முக்கால் பங்கு நிலையாகச் செலுத்தும் குத்தகை உடன்படிக்கை; a cowle, according to the terms of which three-quarters of the original assessment is permanently payable.

[Ar. qāim+H. pauna>த. காயம்பௌனா+ கவுல்.]

காயம்சமாபந்தி *kāyam-śa(j)māpandi*, பெ.(n) நிலைத்த நிலவரித்திட்டம் (P.T.L.); permanent settlement.

த.வ. வரித்தணிக்கை.

[Ar. qāim + jema > த. காயம்சமா + பந்தி.]

சிற்றூர்க் கணக்குகளைச் சரிபார்க்கவும், நிலத்தீர்வைக் குறித்த பிணக்குகளைத் தீர்க்கவும் மாவட்ட வருவாய் அலுவலர்களால் நடத்தப்படும் கூட்டம் – (ஜமாபந்தி)

காயிதம் *kāyidam*, பெ.(n) **காகிதம்** பார்க்க; see *kāgidam*.

காயிதா *kāyidā*, பெ.(n) 1. முறை; order, rule. 2. வழக்கம்; custom, usage, practice. *அங்கு அவனுக்கு ஒன்றும் கட்டுகாயிதா இல்லையோ (வழ.).*

[U. qāida > த. காயிதா.]

காயி *kāyi*, பெ.(n) பாய்மரத்திற்குப் பற்றுக் கோடாகக் கட்டுப்படும் கயிறு (M.navi.84); guy.

[E. guy > த. காயி.]

கார்க்கானாதார் *kār-k-kāṉādār*, பெ.(n) பண்டசாலை அதிகாரி; proprietor of a factory.

[U. kārkhāna-dār > த. கார்க்கானாதார்.]

கார்க்கோன் *kārkkōṉ*, பெ.(n) வட்டாட்சியரின் கீழுள்ள ஓர் அரசிறை அலுவலர் (P.T.L.); a subordinate revenue officer under a Tahsildar.

[Persn. kārkun > த. கார்க்கோன்.]

கார்கானா *kār-kāṉa*, பெ.(n) தொழில் செய்யும் இடம்; workshop, factory, place of business.

த.வ. தொழிற்கூடம், பணியகம், தொழிற்சாலை.

[U. kārkhāna > த. கார்கானா.]

கார்கோன் *kār-kōṉ,* பெ.(n) தலைமைப் பதவியில் இருப்பவன்; chief executive.

[U. kārkun > த. கார்கோன்]

கார்த்தபசத்துவம் *kārttapa-šattuvam,* பெ.(n) பெண்களுக்குரிய பத்துக் குணங்களுள் ஒன்று (கொக்கோ. 4 : 28.); the natural disposition of women of the donkey-class, one of pattu-cattuvam.

[Skt. gārdabha + sat-tva > த. கார்த்தபசத்துவம்.]

கார்த்தபம் *kārttabam,* பெ.(n) கழுதை; ass.

[Skt. gardabha > த. கார்த்தபம்.]

கார்த்திகம் *kārttigam,* பெ.(n) நிலவின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் ஆண்டின் எட்டாவது மாதம்; eighth lunar month.

[Skt. kārtika > த. கார்த்திகம்.]

கார்ப்படிகன் *kārppaḍigaṉ,* பெ.(n) தூயப் (புனிதப்) பயணன் (யாழ். அக.); pilgrim.

[Skt. kārpaṭika > த. கார்ப்படிகன்.]

கார்பார் *kārpār,* பெ.(n) அதிகாரம்; rule, dominion. *கார்பார் பண்ணுகிற வேங்கடராயர் காதிலேகேட்டிடவே (தேசிங்கு–கதை).*

[U. kārbār > த. கார்பார்.]

கார்பாரி *kārpāri,* பெ.(n) **கார்வாரி** பார்க்க; see *kārvāri.*

[U. kārbāri > த. கார்பாரி.]

கார்வார் *kārvār,* பெ.(n) **கார்பார்** பார்க்க; see *kārpār.*

[U. kārbār > த. கார்வார்.]

கார்வாரி *kārvāri,* பெ.(n) செயலாளன், செயல்காரன்; one who conducts the affairs or business of another, manager, agent, superintendent.

[U. kārbāri > த. கார்வாரி.]

கார்வாரித்தம்பிரான் *kār-vāri-t-tambirāṉ,* பெ.(n) சிவமடத்தின் உசாவல் (விசாரணைத்) தம்பிரான்; a sanyasi superintendent of a šaiva monastery.

[கார்வாரி+தம்பிரான்.]

[U. kārbāri > த. கார்வாரி.]

காரகபஞ்சகம் *kāraga-pañjagam,* பெ.(n) ஐவகைப் பொறிகளின் செயல் (சி.சி. 1 : 5, சிவாக்); the five organs of action.

[Skt. kāraka + pañjaka > த. காரகபஞ்சகம்.]

காரகம் *kāragam,* பெ.(n) சிறைச்சாலை; jail, prison, dungeon. *"காரகத் திவனையாக்கி" (உபதேசகா. சிவபுண். 338).*

[Skt. kārā-grha > த. காரகம்.]

காரட்டு[1] *kāraṭṭu,* பெ.(n) தங்கம், மணிகள் (இரத்தினம்) போன்றவற்றை நிறுக்கும் ஒரு நிறை; carat, standard weight for precious stones, 3 1/6 gr. troy.

[U. qirāṭ > E. carat > த. காரட்டு.]

காரட்டு[2] *kāraṭṭu,* பெ.(n) மஞ்சள் முள்ளங்கி (சு.வை.ர.482); carrot.

[E. carrot > த. காரட்டு.]

காராகாரம் *kārā-kāram,* பெ.(n) **காராகிரகம்** பார்க்க; see *kārā-kiragam.*

காராகிரகம் *kāra-kiragam,* பெ.(n) சிறைச்சாலை; prison, dungeon. *"காராகிரகங் கழிவுற்றபினும்" (தணிகைப்பு. பிரமன். 3).*

[Skt. kārā-grha > த. காராகிரகம்.]

காருகத்தம் *kārugattam,* பெ.(n) இல்லற நிலை (சிலப். 9 : 28, உரை.); the state of being a householder.

[Skt. gārhasthya > த. காருகத்தம்.]

காருகத்தியம் *kārugattiyam,* பெ.(n) **காருகத்தம்** பார்க்க; see *kārugattam. "நீதி நிலைபெறு காருகத்தியமா மாச்சிரமம்"* (குற்றா. தல. மந்தமா. 34.)

[Skt. gārhasthya > த. காருகத்தியம்.]

காருகபத்தியம் *kārugapattiyam,* பெ.(n) துவிசனுக்குரிய வேதாக்கினி மூன்றனுள் முதன்மையானது; the central sacrifical fire of a *tuvišaṉ,* one of three *vētākkiṉi. "காருக பத்தியமாதி மூன்றழல்" (தணிகைப்பு, அகத். 490).*

[Skt. gārhapatya > த. காருகபத்தியம்.]

காருகம் *kārugam,* பெ.(n) இல்லறம்; life of a householder. *"காருக மடந்தை" (மணிமே 23:105.)*

[Skt. gārha > த. காருகம்.]

காருகவடி *kāruga-v-aḍi,* பெ.(n) கோள் நிலை; position of a planet. *"காருகவடிப் பயின்று" (சிலப். 26:25.).*

[காருகம்+அடி.]

[Skt. graha > த. காருகம்.]

காருகன் *karugaṉ,* பெ.(n) கொலையாளன் (சூடா.); murderer.

[Skt. ghātuga > த. காருகன்.]

காருடதந்திரம் *kāruḍa-tandiram,* பெ.(n) விடம் தீர்க்கும் மந்திரங்கள் முதலியவற்றைக் கூறும் நூல்; a work dealing with the art of removing poison with charms, etc.

[Skt. gāruḍa+tantra > த. காருடதந்திரம்.]

காருடம் *kāruḍam,* பெ.(n) 1. கருட கூட்டம் (சமூகம்); a flock of kites. *"காருடங் கண்ட பாந்தட் கணமென"* (கந்தபு. தாரகன்வ. 54). 2. அறுபத்துநாலு கலையுள் நஞ்சைத் தீர்க்கும் கலை (வித்தை); art of removing poison with charms, mantras, etc., invoking *Garuḍa* one of *aṟupattunālu-kalai.* 3. நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று; name of an Upaniṣad. 4. **கருடபுராணம்** (கந்தபு. பாயி. 55.) பார்க்க; see *karuḍapurāṇam.* 5. பச்சைக்கல்; green stone, digneous rock, composed chiefly of felspar and hornblende. *"முத்தந் துப்புக் காருடம்" (திருவிளை. மாணிக். 48).*

[Skt. gāruḍa > த. காருடம்.]

காருடயூகம் *kāruḍa-yūgam,* பெ.(n) கலுழன் உருவாக (கருடவுருவாக) அமைக்கும் ஒரு படைவகுப்பு; garuḍa-shaped array of an army. *"வீடுமனும் வகுத்தான் கருங்கா ருடயூகம்" (பாரத. மூன்றாம் போ. 2.).*

[gāruḍa + vyūha > த. காருடயூகம்.]

காருடவிஞ்சை *kāruḍa-viñjai,* பெ.(n) **காருட வித்தை** பார்க்க; see *kāruḍa-vittai. "காருடவிஞ்சை வித்தகர்" (பெரியபு. திருஞான. 1062).*

[காருடவித்தை → காருடவிஞ்சை.]

காருடவித்தை *kāruḍa-vittai,* பெ.(n) நஞ்சு மருத்துவம்; art of counteracting poison by charms, incantations, etc.

[Skt. gāruḍa+vidyā > காருடவித்தை.]

காருண்ணியம் *kāruṇṇiyam,* பெ.(n) **காருணியம்** பார்க்க; see *kāruṇiyam.*

[Skt. kāruṇya > த. காருண்ணியம்.]

காருண்யபிதிர்க்கள் *kāruṇya-pidirkkaḷ,* பெ.(n) மாளய பக்கத்தில் (பக்ஷத்திற்) பூசிக்கப்படும் பெயரறியப் படாத தென்புலத்தார் தொகுதி; the manes whose names are not known and who are propitiated during the Mahālaya fortlight.

[Skt. kāruṇya+pitṟ > த. காருண்ய பிதிர்க்கள்.]

காருண்யம் *kāruṇyam,* பெ.(n) **காருணியம்** பார்க்க; see *kāruṇiyam.*

காருண்யமேகம் *kāruṇya-mēgam,* பெ.(n) முகிலைப் (மேகம்) போற் கைம்மாறு கருதாது உதவி செய்பவன் (வின்.); one whose bounty flows without stint or expectation of recompense, as a cloud.

[Skt. kāruṇya+mēgha> த. காருண்யமேகம்.]

காருணிகன் *kāruṇigaṉ,* பெ.(n) நல்ல குணம் கொண்டவன், அன்புள்ளவன்; kind, benevolent person. *பரம காருணிகரான பெரியவாச்சான் பிள்ளை.*

[Skt. kāruṇika > த. காருணிகன்.]

காருணியம் *kāruṇiyam,* பெ.(n) இரக்கம், அருள், அன்பு; mercy, grace, compassion. *"காருணியத்தால் வாவென வந்து" (திருப்போ. சந். பிள்ளை. செங்கீரை 5.).*

[காருண்யம் → த. காருணியம்.]

காருணியன் *kāruṇiyaṉ,* பெ.(n) **காருணிகன்** பார்க்க; see *kāruṇigaṉ.*

[காருண்ய → காருணியன்.]

காருவன் *kāruvaṉ*, பெ.(n) **காருவாகன்** பார்க்க; see *kāruvāgaṉ*.

காருவாகன் *kāruvāgaṉ*, பெ.(n) வண்ணான்; washerman. *"சாணாகம் உவர் காரமுதலியவற்றால் காருவாகன்... நின் மலமாக்காநிற்பன்" (சி.சி. 2:52, மறை.)*

[Skt. kāru+vāka > த. காருவாகன்.]

காலகன் *kālagaṉ*, பெ.(n) சிவகணத் தலைவரில் ஒருவன்; Kalaga who one of the head to Śiva's celestial hosts (அபி.சிந்.).

காலசர்ப்பி *kāla-śarppi*, பெ.(n) ஒரு தூய நீர்த்துறை (தீர்த்தம்); sacred bath-ghat (அபி.சிந்.).

காலசேயம் *kālaśēyam*, பெ.(n) மோர் (பிங்.); buttermilk.

[Skt. kālaśēya > த. காலசேயம்.]

காலதட்சணி *kāladaṭcaṇi*, பெ.(n) ஒரு வகைப் பாம்பு; a kind of snake (சா.அக.).

காலரா *kālarā*, பெ.(n) உமட்டல் மற்றும் வயிற்றுப் போக்கு; vomiting and diarrhoea (சா.அக.).

காலா *kālā*, பெ.(n) தாயின் உடன்பிறந்தவள் (முகமதி.); mother's sister.

[Ar. khālā > த. காலா.]

காலாசயம் *kālāśayam*, பெ.(n) இரும்பு; iron (சா.அக.).

காலாசுவரம் *kālā-śuvaram*, பெ.(n) கொடிய காய்ச்சல் வகை (M.L.); black fever.

[U. kālā+hazar > த. காலாசுவரம்.]

காலாயசம் *kālāyaśam*, பெ.(n) **காலாசயம்** பார்க்க; see *kālāśayam* (சா.அக.).

காலாவதிகபத்திரம் *kālāvadiga-pattiram*, பெ.(n) ஒன்றைச் செய்தற்குக் காலங் குறிப்பிட்டு எழுதிக் கொடுக்கும் ஆவணம் (சுக்கிரநீதி, 93); document fixing a time-limit for the performance of an act.

[Skt. kālāvadhika + patra > த. காலாவதிகபத்திரம்.]

காலிகவிப்புருதி *kāliga-vippurudi*, பெ.(n) நாட்பட்ட புண் கட்டி; chronic abscess (இங். வை. 298).

த.வ. புற்றுக்கட்டி.

[Skt. kālika + vidradhi > த. காலிகவிப்புருதி.]

காலேசுத்தி *kālēśutti*, பெ.(n) தீட்டு, பிள்ளைப்பேற்றுத் தீட்டு, சாவுத் தீட்டு; a period of ceremonial impurity or pollution as at the birth of a child or death of a relation (சா.அக.).

த.வ. தீட்டு, துடக்கு.

காலேசுரவாதி *kālēśura-vādi*, பெ.(n) காலத்தையே கடவுளென எதிராடுபவன் (வாதிப்பவன்) (சி.சி. 8 : 12, ஞானப்.); one who maintains that time is the Supreme Being.

[Skt. kāla + īśvara + vādin > த. காலேசுரவாதி.]

காவந்து *kāvandu*, பெ.(n) **காபந்து** (வின்.) பார்க்க; see *kābandu*.

[U. khāwand > த. காவந்து.]

காவாலி *kāvāli*, பெ.(n) மனம் போனபடி நடப்பவன்; vagabond. *அவன் மெத்த காவாலியாய்த் திரிகிறான் (உ.வ.).*

த.வ. தெம்மாடி.

[U. qawwāli > த. காவாலி.]

காவிந்து *kāvindu*, பெ.(n) முதலாளி; master; employer. *அதுகளைக் காவிந்தவர்கள் பார்வையிடுகிற இங்கிலீசு புத்தகத்திலும் எழுதுவித்தேன்* (P.T.L. 185.).

[Pers. khawand > த. காவிந்து.]

கார்பனிகம் *kārpaṉigam*, பெ.(n) கற்பிக்கப்பட்டது; that which is invented, newly fashioned. *"தியான பூசாதிநிமித்தம் கார்பனிக தேகம்" (சி.சி. 1: 47, ஞானப்.).*

[Skt. kālpanika > த. கார்பனிகம்.]

காறட்டுக்கிழங்கு *kāṟaṭṭu-k-kiḻaṅgu,* பெ.(n) **காரட்டு²** பார்க்க; see *kāraṭṭu²* (சா.அக.).

காறுபாறு *kāṟū-pāṟu,* பெ.(n) **கார்பார்** பார்க்க; see *kārbār.*

[U. kārbār > த. கார்பார் → காறுபாறு.]

கான் *kāṉ,* பெ.(n) 1. செவி; ear. 2. புகழ் (தக்கயாகப். 448, உரை.); fame.

[Skt. karṇa > Pkt. kān > த. கான்.]

கான்சாகிப் *kāṉ-šākip,* பெ.(n) முகம்மதியர்க்குக் கொடுக்கும் சிறப்புப் பெயர்களுள் ஒன்று; a title of honour bestowed on distinguished Muhammadans.

[U. khān-šāhib > த. கான்சாகிப்.]

கான்பகதூர் *kāṉ-pāgadūr,* பெ.(n) முகமதியர்க்கு வழங்கப்படும் மதிப்புரவுப் பட்டப்பெயர்களுள் ஒன்று; a title of honour, higher than *kāṉ-šākib,* bestowed on distinguished Muhammadans.

[U.khān + Pkt. bahādūra > த. கான்பகதூர்.]

கான்மிகம் *kāṉmigam,* பெ.(n) **கான்மியம்** பார்க்க (சி.சி.2 : 39, சிவாக்.); see *kāṉmiyam.*

[Skt. kārmika > த. கான்மிகம்.]

கான்மியம் *kāṉmiyam,* பெ.(n) மும்மலத்துள் ஒன்றாய் கருக்கொண்டபோதேயுள்ள கன்மமலம் (சி.சி. 3, 39, ஞானப்.); one of the three eternal obstructive principles which creates bondage for the soul as a result of good and evil deeds.

[Skt. kārmya > த. கான்மியம்.]

கானகுப்பிசம் *kāṉa-kuppišam,* பெ.(n) ஐந்து நாடுகளுள் (பஞ்ச கௌடத்துள்) ஒன்றாகிய கானிய குப்த நாடு (சங். அக.); Kanouj, one of *pañja-gauḍam* (சா.அக.).

[Skt. kānya-kubja < த. கானகுப்பிசம்.]

கானிசுமாரிக்கணக்கு *kāṉišu-māri-k-kaṇakku,* பெ.(n) **கானேசு மாரிக்கணக்கு** பார்க்க; see *kāṉēšumāri-k-kaṇakku.*

[கானிசுமாரி + கணக்கு.]

[Pers. khāna-shumāri > த. கானிசுமாரி.]

கானுகோ *kāṉu-gō,* பெ.(n) முகம்மதிய அரசு ஊழியன் (C.G.); village or district officer who, under Muhammadan governments, recorded full details regarding landed property within his sphere.

[U. khānun+go > த. கானுகோ.]

கானூன் *kāṉūṉ,* பெ.(n) சட்டம் (C.G.); rule, regulation, statute.

[U. khānun > த. கானூன்.]

கானேசுமாரிக்கணக்கு *kāṉēšumāri-k-kāṇakku,* பெ.(n) குடிமதிப்புக் கணக்கு (P.T.L.); census.

[கானேசுமாரி+கணக்கு.]

[Persn. khāna-shumāri > த. கானேசுமாரி.]

கிசிமிசி *kiši-misi,* பெ.(n) ஏசு கிறித்து பிறந்த நாள்; Christmas.

[E. Christmas > கிறிஸ்மஸ் > த. கிசிமிசி.]

கிசுதி *kišudi,* பெ.(n) நிலச் சொந்தக்காரர் களிடம் பெறப்பட்ட நிலவரி; kist, land revenue payable in instalments.

[U. quist > கிஸ்தி > த. கிசுதி.]

கிசுதிபந்தி *kišudi-pandi,* பெ.(n) நிலவரியின் வரையறைத் திட்டம்; settlement of kists.

[U. qisṭbandi > கிஸ்திபந்தி > த. கிசுதிபந்தி]

கிசுதிபேரீத்து *kišudi- pērittu,* பெ.(n) சிற்றூரின் மொத்தத் தீர்வை; total revenue of a village.

[U. quisṭ+U. bāriz > கிஸ்திபேரிஸ்து > த. கிசுதிபேரீத்து.]

கிசுமிசு *kišu-mišu,* பெ.(n) விதையில்லாத கொடி முந்திரிப் பழம்; small seedless raisins, originally imported from Persia, Sultana raisin.

[U. kishmish > த. கிசுமிசு.]

கிஞ்சிக்கியத்துவம் *kañjikkiyattuvam,* பெ.(n) சிற்றறிவுடைமை; state of being limited in knowledge.

[Skt. kiñji-jña-tva > த. கிஞ்சிக்கியத்துவம்.]

கிஞ்சிஞ்ஞன் *kiñjiññaṉ,* பெ.(n) 1. சிற்றறிவினன்; one having limited knowledge. 2. ஆதன் (சீவான்மா); *āṉmā,* the individual soul.

[Skt. kiñji-jña > த. கிஞ்சிஞ்ஞன்.]

கிட்டிணகாரம் *kiṭṭiṇakāram,* பெ.(n) சவர்க்காரம்; fuller's earth; soap (சா.அக.).

[கிட்டிணம்+காரம்.]

[Skt. kṛṣṇa > த. கிட்டிணம்.]

கிட்டிணசாசி *kiṭṭiṇaśāśi,* பெ.(n) கருஞ்சீரகம்; black cumin, *Nigella sativa* (சா.அக.).

[கிருட்டிணம்+சாசி.]

[Skt. kṛṣṇa > த. கிட்டிணம் + சாசி.]

கிட்டிணசாரம் *kiṭṭiṇa-śāram,* பெ.(n) திப்பிலி; long-pepper, *Piper longam* (சா.அக.).

[கிருட்டிணம் + சாரம்.]

[Skt. kṛṣṇa > த. கிட்டிணம்.]

கிட்டிணபேடம் *kaṭṭiṇa-pēḍam,* பெ.(n) கடுகுரோகிணி, ஒரு கடைச்சரக்கு; black hellebore, *Helleborous niger* (சா.அக.).

[Skt. kṛṣṇa > த. கிட்டிணம்.]

கிட்டிணபோளம் *kiṭṭiṇa-pōḷam,* பெ.(n) கரிய போளம்; black myrrh (சா.அக.).

[Skt. kṛṣṇa > த. கிட்டிணம்.]

கிட்டிணன் *kiṭṭiṇaṉ,* பெ.(n) கண்ணன்; *Kirṣṇa,* son of *Vāśudēva,* one of ten incarnations of Viṣṇu.

[Skt. kṛṣṇa > த. கிட்டிணம்.]

கித்தம் *kittam,* பெ.(n.) செய்யப்பட்டது (திருக்கோ.388, உரை); that which is made.

[Skt. kṛta > த. கித்தம்.]

கித்தா *kittā,* பெ.(n.) துடைப்பான் (தரங்.); rubber.

[Danish. kitta > த. கித்தா.]

கித்தாப்பு *kittāppu,* பெ.(n.) கண்ணியமான பட்டம்; title, degree, honour.

த.வ. பட்டம்.

[U.khiṭāb > த. கித்தாப்பு.]

கித்தார் *kittār,* பெ.(n.) மரவகை; fiddle wood, *Citharexylon subseratum.*

த.வ. கின்னர மரம்.

[E. guitar > த. கித்தார்.]

கித்தான்[1] *kittāṉ,* பெ.(n.) ஒரு வகை உரப்புத்துணி; linen, canvas.

த.வ. உரப்பு.

[U. katāṉ, M. kittān > த. கித்தான்.]

கித்தான்[2] *kittāṉ,* பெ.(n.) ஒரு நூல்; cotton thread.

த.வ. முரட்டுநூல்.

[U. katāṉ, M. kittāṉ > த. கித்தான்.]

கித்தான்கட்டில் *kittāṉ-kaṭṭil,* பெ.(n.) உரப்புத் (கித்தான்) துணி வைத்துத் தைத்த கட்டில்; canvas cot.

த.வ. உரப்புக்கட்டில்.

[கித்தான்+ கட்டில்.]

[U. katān > த. கித்தான்.]

கித்தான்கயிறு *kittāṉ-kayiṟu,* பெ.(n.) சணற் கயிறு; hemp rope.

த.வ. உரப்புக்கயிறு.

[கித்தான்+ கயிறு.]

[U. katān>த. கித்தான்.]

கித்தான்பஞ்சு *kittāṉ-pañju,* பெ.(n.) கப்பலின் பலகை மூட்டுக்களை நீர்க் காப்புடையதாகச் செய்யப் பயன்படும் சணற்கூளம்; tow, oakum for caulking ships.

த.வ. சனற்கூளம்

[கித்தான்+ பஞ்சு.]

[U. katān > த. கித்தான்.]

கித்தான்பாய் *kittāṉ-pāy,* பெ.(n.) கப்பலில் காற்றை முகப்பதற்காக முரட்டுச் சீலையாலமைந்த பாய்; canvas sail.

[கித்தான்+ பாய்.]



[U. katān > த. கித்தான்.]

கித்தில் *kittil,* பெ.(n.) 1. ஒருவகைக் கூந்தற் கமுகு; jaggery-palm. 2. கூந்தற் கமுகின் நார்; kittul-fibre obtained from the leaf stalks of the jaggery-palm.

த.வ. கமுகுநார்.

[Skt. kitul > த. கித்தில்.]

கித்துள் *kittul,* பெ.(n.) கமுகு வகை (பிங்.); areca palm.

த.வ. கமுகம்பாக்கு.

[Sinh. kitul > த. கித்துள்.]

கித்மிவிதை *kitmi-vitai,* பெ.(n.) சீமைத்துத்தி விதை; seeds of marsh-mallow (சா.அக.).

கிதபம் *kidabam,* பெ.(n.) ஊமத்தைச் செடி வகை; thorn-apple, *Datura* (சா.அக.).

கிதபாடணம் *kidapādaṇam,* பெ.(n.) தீயசொல்; evil, wicked words. *"பாங்கிலர்வாய்க் கிதபாடணனே" (சிவதரு. பலவிசி.) (த.சொ.அக.).*

த.வ. தீச்சொல், கடுஞ்சொல்.

கிதம் *kidam,* பெ.(n.) நெய்; ghee (சா.அக.).

கிதயுகம் *kita-yugam,* பெ.(n.) **கிருதயுகம்** பார்க்க; see *kiruda-yugam.*

[Skt. krta+yuga > த. கிதயுகம்.]

கிதவபன் *kitavabaṉ,* பெ.(n.) போக்கிலி (நீலகேசி, 286, உரை); rogue.

[Skt. kitava > த. கிதவபன்.]

கிதவம் *kitavam,* பெ.(n.) **கிதபம்** பார்க்க; see *kitabam* (சா.அக.).

கிதாப்பு *kidāppu,* பெ.(n.) 1. பொத்தகத்தின் பெயர்; title of a book. 2. பொத்தகம்; book.

[U. kitāb > த. கிதாப்பு.]

கிந்துக்கினம் *kindukkiṉam,* பெ.(n.) ஐந்திய (பஞ்சாங்க)க் கரணங்களுள் ஒன்றாய் வளர்பிறையின் முதனாளின் முதற் பகுதியாகிய வேளை (விதான.பஞ்சாங்க.29); a division of the day, the first half of the first day of the bright fortnight, one of 11 *karaṇam.*

[Skt. kintughna > த. கிந்துக்கினம்.]

கிபாயத்து *kibāyattu,* பெ.(n.) நன்மை, ஊதியம்; profit, advantage, gain from lands held at reduced rent or tax.

[U. kifāyat > த. கிபாயத்து.]

கிம்புருடவருடம் *kimburuḍa-varuḍam,* பெ.(n.) ஒன்பது (நவ) ஆண்டுகளுள் ஒன்று (கந்தபு.அண்டகோ.37); land between *ēmakūṭam* and *imācalam*, one of *nava-varuṭam.*

[Skt. kimpuruṣa+ varuḍa>த. கிம்புருட வருடம்.]

கிம்மீரன் *kimmīraṉ,* பெ.(n.) ஓர் அரக்கன்; a giant.

வீமனால் கொல்லப்பட்ட பகாசுரனின் தம்பி. பாண்டவர்கள் காட்டில் வாழ்ந்திருந்த போது பாஞ்சாலியைக் கவர வந்து வீமனால் கொல்லப்பட்டவன். இவனுக்குக் கிம்மீரணன் எனவும் பெயர் (அபி.சிந்.).

கிமித்துக்கினம் *kimittukkiṉam,* பெ.(n.) 1. **கிந்துக்கினம்** பார்க்க; see *kindukkiṉam.* 2. புழு; worm.

[Skt. kintughna > த. கிமித்துக்கினம்.]

கியமதம் *kiya-madam,* பெ.(n.) நலிவு (யாழ்.அக.); weakness.

கியாதம் *kiyādam,* பெ.(n.) **கியாதி** (பிங்.) பார்க்க; see *kiyādi.*

[Skt. khyāta > த. கியாதம்.]

கியாதி[1] *kiyādi,* பெ.(n.) புகழ் (சூடா.); fame.

த.வ. பாடாண்.

[Skt. khyāta > த. கியாதி.]

கியாரசம்பர் *kiyārašambar,* பெ.(n.) சரக்கொன்றைப் புளி; a unani term referring to Indian laburnam (சா.அக.).

கியால் *kiyāl,* பெ.(n.) ஒரு வகை இந்துத்தானிப் பாட்டு; a Hindustani musical composition, or anything similar to it in Tamil.

[U. khiyāl > த. கியால்.]

கியாழம் *kiyāḻam,* பெ.(n.) காய்ச்சிய மருந்துக் குடிநீர் (கஷாயம்); decoction. *"கலிகங் கியாழம்" (திருவேங்.சத.68).*

த.வ. கருக்கு.

[Skt. kaṣāya > த. கியாழம்.]

கியாழமிறக்கல் *kiyāḻamiṟakkal,* தொ.பெ. (vbl.n.) மருந்தைக் காய்ச்சி வடித்து இறக்கல்; preparation of decoction or infusion (சா.அக.).

த.வ. கருக்கிறக்கல்.

[கியாழம்+இறக்கல்.]

[Skt. kaṣāya>த.கியாழம்.]

கியானம் *kiyāṉam,* பெ.(n.) அறிவு (யாழ்.அக.); wisdom, knowledge.

[Skt. jñāna > த. கியானம்.]

கிரகக்கழிப்பு *kiraga-k-kaḻippu,* பெ.(n.) **கிரகசாந்தி** பார்க்க; see *kiraga-šānti.*

த.வ. கோளமைதி.

[Skt. graha+> த. கிரகம்+கழிப்பு.]

கிரககதி *kiraga-gadi,* பெ.(n.) கோளின் (கிரகத்தின்) நடை; planetary motion.

த.வ. கோள்நடை.

[Skt. graha> த. கிரகம்.]

கிரககபோதம் *kiraga-kapōdam,* பெ.(n.) வீட்டுப் புறா; house-pigeon (சா.அக.).

த.வ. வீட்டுப்புறா.



[Skt. graha+apōta> த. கிரக+கபோதம்.]

கிரகங்கழி-த்தல் *kiragaṅ-kaḻi,* செ.கு.வி. (v.i.) கோள்களை அமைதியடையச் செய்தல்; to perform a propitiatory ceremony to avert or mitigate the evil influence of planets.

த.வ. கோள்கழித்தல்.

[கிரகம்+கழி-,]

[Skt. graha> த. கிரகம்.]

கிரகச்சித்திரம் *kiraga-c-cittiram,* பெ.(n.) குடும்பக் கலகம் (சச்சரவு); family dissensions. *"சென்மித்த வருடமு முண்டான வத்தமுந் தீதாங் கிரகச் சித்திரமும்" (அறப்.சத.39).*

த.வ. இல்லக்கலகம்.

[கிரகம்+சித்திரம்.]

[Skt. graha >த.கிரகம்.]

கிரகச்சுற்று *kiraga-c-cuṟṟu,* பெ.(n.) கோள்கள் சுழலும் பாதை; revolution of planets.

த.வ. கோள்சுற்று.

[கிரகம்+சுற்று.]

[Skt. graha > த. கிரகம்.]

கிரகசபுடம் *kiraga-šapuḍam,* பெ.(n.) பிறப்புக் கணியத்தில் (ஜாதகம்) கோள்களின் நிலையை வரையறுக்கை; determining the correct position of planets, at the time of one's birth.

த.வ. கோள்வரையறை.

[Skt. graha> த. கிரகம்.]

கிரகசம் *kiragašam,* பெ.(n.) ஒரு வகை நிரயம் (சிவதரு.சுவர்க்க.115); hell.

[Skt. krakaca > த. கிரகசம்.]

கிரகசன் *kiragašaṉ,* பெ.(n.) ஒரு காபாலிக மதத்தவன்; one who belonged to *kāpāli* religion.

கிரகசாந்தி *kiraga-šāndi,* பெ.(n.) கோள்களால் உண்டாகக் கூடிய தீமைகள் கழியும் பொருட்டுச் செய்யும் நீக்கவினை; propitiation of planets by offering oblation prayer, etc.,

த.வ. கோளமைதி.

[Skt. graha +sānti> த.கிரகம்+ சாந்தி.]

கிரகசாரம் *kiraga-šāram,* பெ.(n.) 1. கோள்களின் சுழற்சி நிலை; planetary motion. 2. தீமை தரும் கோளின் பயன்; evil influence of planets, as pain, poverty, sickness.

த.வ. கோள்பயன்.

[Skt. graha>த. கிரகம்.]

கிரகசுரம் *kiraga-šuram,* பெ.(n.) பண்ணின் தொடக்க இசை; initial note of a melody-type.

த.வ. தொடக்கப்பண்.

[Skt. graha+s̤varam>த.கிரகசுவரம்.]

கிரகசெபம் *kiraga-šebam,* பெ.(n.) கோள்களினால் ஏற்படக் கூடிய தீமை கழியும் பொருட்டு உருவேற்றுகை; prayer offered to planets to propitiate them toward off their evil influence.

த.வ. கோளுரு.

[Skt. graha+šeba>த.கிரகசெபம்.]

கிரகணச்சந்துக்கட்டு *kiragaṇa-c-candu-k-kaṭṭu,* பெ.(n.) கோள் மறைப்புத் தொடங்கி, விடுமளவும் உள்ள காலம்; duration of an eclipse.

த.வ. கோள்மறைப்புக்காலம்.

[Skt.grahaṇa+sandhi+>த.கிரகணச் சந்து+கட்டு.]

கிரகணசத்தி *kiragaṇa-šatti,* பெ.(n.) உணர்ந்து கொள்ளுந் திறமை; power of comprehension.

த.வ. உள்ளுணர்திறன்.

[Skt. grahaṇa > த.கிரகணசத்தி.]

கிரகணதோடம் *kiragaṇa-tōḍam,* பெ.(n.) சூலுற்றிருக்கும் காலத்தில் தாய், கோள் மறைப்பைக் காண்பதால், குழந்தைக்கு உண்டாவதாகக் கருதப்படும் மேலுதட்டுப் பிளவுநோய் (பைஷஜ.207); harelip in a child, supposed to be the result of the mother's seeing an eclipse when pregnant.

த.வ. கோட்குற்றம்.

[Skt. grahaṇa+tōs̤a>த.கிரகணதோடம்.]

கிரகணம் *kiragaṇam,* பெ.(n.) 1. பற்றுகை; holding fast, grasping, seizure. 2. மனத்தில் உணர்ந்து கொள்ளுகை; comprehension. 3. நிலவு மற்றும் ஞாயிற்றின் கோள் மறைப்பு; eclipse, as the seizing of the sun or moon by the nodes *irāgu* or *kēdu.*

த.வ. கோள்பற்று, கோள்மறைப்பு.

[Skt. grahaṇa > த. கிரகணம்.]

கிரகணமோசனம் *kiragaṇa-mōšaṇam,* பெ.(n.) **கிரகணமோட்சம்** பார்க்க; see *kiragaṇa-mōṭcam.*

த.வ. கோட்பேறு.

[Skt. grahaṇa+>த.கிரகணமோசனம்.]

கிரகணமோட்சம் *kiragaṇa-mōṭcam,* பெ.(n.) கோள் மறைப்பு நீங்குகை; end of an eclipse.

த.வ. கோட்பேறு.

[Skt.girahaṇa+mōṭca> த.கிரகண மோட்சம்.]

கிரகணி *kiragaṇi,* பெ.(n.) செரியாமையால் உண்டாகும் வயிற்றுப் போக்கு (பைஷஜ.); continual looseness of the bowels, chronic diarrhoea of six kinds.

[Skt. grahaṇi > த. கிரகணி.]

கிரகத்தி *kiragatti,* பெ.(n.) இல் வாழ்க்கையிலிருப்பவள்; married woman (யாழ்.அக.).

த.வ. இல்லாள், மனைவி.

[Skt. grha-sthi > த. கிரகத்தி.]

கிரகதானம் *kiraga-dāṉam,* பெ.(n.) ஒன்பது கோள்களின் நன்மைகளைப் பெறும் பொருட்டு செய்யும் கொடை; gift intended to avert the malignant influence of planets.

த.வ. கோள்கொடை.

[Skt. graha+dāna > த. கிரகதானம்.]

கிரகதோடம் *kiraga-tōḍam,* பெ.(n.) கோள்களினால் ஏற்படும் தீமை; affliction, calamity, suffering from the malignant influence of planets.

த.வ. கோள்குற்றம்.

[Skt. graha+tōs̤am> த. கிரகதோடம்.]

கிரகநடை *kiraga-naḍai,* பெ.(n.) கோள்களின் நகர்வுநிலை; planetary motion.

த.வ. கோளியக்கம்.

[கிரகம்+நடை.]

[Skt. graha > த. கிரகம்.]

கிரகநிலை *kiraga-nilai,* பெ.(n.) கோள் நிற்கும் ஐந்து நிலைமை; aspect of planets of which there are five.

அவை: நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம்.

த.வ. கோள்நிலை.

[Skt. graha+> த. கிரகம்.]

கிரகநோக்கு *kiraga-nōkku,* பெ.(n.) கோள்களின் பார்வை; relative aspect of planets, one to another; configuration, in four aspects,

அவையாவன; கால்நோக்கு, அரை நோக்கு, முக்கால் நோக்கு, முழு நோக்கு.

த.வ. கோள்நோக்கு.

[Skt. graha> த. கிரகம்.]

கிரகப்பாடு *kiraga-p-pāḍu,* பெ.(n.) கதிரவனோடு வேறு கோள் இணைந்து ஓர் ஓரையில் நிற்கை (யாழ்.அக.); the conjunction of the sun and a planet.

த.வ. கோள்நிலை.

[Skt. graha>த. கிரகம்.]

கிரகப்பிரவேசம் *kiraga-p-piravēšam,* பெ.(n.) **கிருகப்பிரவேசம்** பார்க்க; see *kirugappravesam,* புதிதாகக் கட்டிய அல்லது வாங்கிய வீட்டில் நடப்பு (சடங்குகள்) செய்து குடியேறும் நிகழ்ச்சி; a ceremony performed at the time of occupying a newly built house; house warming.

த.வ. புதுமனை புகுவிழா.

கிரகப்பிரவேசம் என்பது தவறு

கிரகப்பிரீதி *kiraga-p-pirīdi,* பெ.(n.) கோள்களுக்குக் கொடை முதலியவற்றால் அன்பு செய்கை; propitiation of planets, by prayer, offerings, etc.

த.வ. கோள்விருப்பம்.

[Skt. graha+prīti > த. கிரகப்பிரீதி.]

கிரகப்பிழை *kiraga-p-piḻai,* பெ.(n.) **கிரகதோடம்** பார்க்க; see *kiraga-tōdam.*

த.வ. கோள்குற்றம்.

[Skt. graha> த.கிரகம்.]

கிரகப்பெயர்ச்சி *kiraga-p-peyarcci,* பெ.(n.) கோள்கள் இடமாறுகை; transit of a planet from one zodiacal sign to another.

த.வ. கோள்பெயர்நிலை.

[கிரகம்+பெயர்ச்சி.]

[Skt. graha> த. கிரகம்.]

கிரகபதனம் *kiraga-padaṉam,* பெ.(n.) கிடைவரை (அட்சரேகை); latitude of a planet.

[Skt. graha+patana>த. கிரகபதனம்.]

கிரகபதி *kiragabati,* பெ.(n.) ஞாயிறு; sun, as lord of planets.

த.வ. கோள்தலைவன்.

[Skt. graha+pati> த. கிரகபதி.]

கிரகபரிவிருத்தி *kiraga-parivirutti,* பெ.(n.) கோள்களின் சுழற்சி; revolution of a planet.

த.வ. கோள்சுழற்சி.

[Skt.graha+parivirutti> த. கிரகபரி விருத்தி.]

கிரகபீடை *kiraga-pīdai,* பெ.(n.) **கிரக தோடம்** பார்க்க; see *kiraga-tōdam.*

த.வ. கோள்குற்றம்.

[Skt. graha+pēta > த.கிரகபீடை.]

கிரகம்¹ *kiragam,* பெ.(n.) 1. கோள்கள்; planets of which there are nine in the Hindu System. அவை; ஞாயிறு, திங்கள், செவ்வாய், அறிவன் (புதன்), வியாழன், வெள்ளி, காரி (சனி), இராகு, கேது. 2. இசைப்பாட்டின் (கீர்த்தனை) தொடக்க காலத்தை உணர்த்துவதாகிய தாள அளவுகளுளொன்று (பரத.தாள.42); the element of time-measure which specifies the starting beat of a song, of four kinds அவை; அதீதம், அநாகதம், சமம், விஷமம், one of ten *tāḷa-p-pirāṇam.*

[Skt. graha > த. கிரகம்.]

கிரகம்² *kiragam,* பெ.(n.) **கிருகம்** பார்க்க; see *kirugam.*

த.வ. இல்லம்.

[Skt. gṛha > த. கிரகம்.]

கிரகமண்டலம் *kiraga-mandalam,* பெ.(n.) **கிரகவீதி** பார்க்க; see *kiraga-vidi.*

த.வ. கோள்மண்டிலம்.

[கிரகம் + மண்டலம்.]

[Skt. graha> த. கிரகம்.]

கிரகமாலிகை *kiraga-māligai,* பெ.(n.) **கிரகமாலை** பார்க்க; see *kiraga-mālai.*

த.வ. கோள்மாலை.

[கிரகம்+மாலிகை.]

[Skt. graha> த. கிரகம்.]

கிரகமாலை *kiraga-mālai,* பெ.(n.) கோள்கள் மாலை போன்று தொடர்ந்து நிற்கும் நிலை; position of two or more planets in the zodiacal signs following each other as a garland in their own order.

த.வ. கோள்மாலை.

[கிரகம்+மாலை.]

[Skt. graha> த.கிரகம்.]

கிரகவட்டம் *kiraga-vattam,* பெ.(n.) **கிரக வீதி** பார்க்க; see *kiraga-vidi* 2. கோள்களின் சுழற்சி; revolution of a planet.

த.வ. கோள்வட்டம்.

[கிரகம்+வட்டம்.]

[Skt. graha > த. கிரகம்.]

கிரகவீதி *kiraga-vidi,* பெ.(n.) கோள் செல்லும் வழி; planetary orbit.

த.வ. கோள்வழி.

[கிரகம்+வீதி.]

[Skt. graha> த.கிரகம்.]

கிரகன் *kiragan,* பெ.(n.) ஒரு வகைப் பறவை; a kind of bird (சா.அக.).

கிரகாகமம் *kiragāgamam,* பெ.(n.) பேய்ப் பிடிக்கை; demoniacal possession (சா.அக.).

த.வ. பேய்ப்பிடி.

கிரகாராதனை *kiragārādanai,* பெ.(n.) ஒன்பது கோள்களுக்கும் செய்யப்படும் பூசை; prayer, etc., offered to planets.

த.வ. கோட்பூசை.

[Skt.graha+ā-rādhanā >த. கிரகாராதனை.]

கிரகி-த்தல் *kiragi-,* 11 செ.கு.வி.(v.i.) 1. பற்றுதல்; to seize, grasp. 2.நுண்ணிதின் உணர்ந்து கொள்ளுதல்; to comprehend, discern, understand. 3. ஏற்றுக் கொள்ளுதல்; to receive, accept. 4. குறிப்பாலறிதல்; to infer, deduce, conjecture. 5. துப்பறிதல்; to draw out, as secrets; to get information about. 6. தொகுப்பை (சாரம்) வாங்குதல்; to extract, as essence.

த.வ. உள்வாங்குதல்.

[Skt. graha > த. கிரகி-த்தல்.]

கிரணம் *kiranam,* பெ.(n.) 1. கதிர்; ray of light, beam. 2. ஒளி; light, brightness, brilliancy. *"கிரணக் கலாபி" (கந்தரலங்.21).* 3. சிவத் தோன்றியங்கள் இருபத்தெட்டனுள் ஒன்று (சைவ.பொது.335, உரை); an ancient *Šaiva* scripture in sanskrit one of 28 *Šivākamam.*

த.வ. கதிரொளி.

[Skt. kirana > த. கிரணம்.]

கிரணம்வீசு-தல் *kiranam-visu-,* 5 செ.கு.வி. (v.i.) ஒளியடித்தல்; to emit rays.

த.வ. கதிரொளித்தல்.

[கிரணம்+வீசு-,]

[Skt. kirana> த.கிரணம்.]

கிரணமாலி *kiranamāli,* பெ.(n.) பகலவன் (சூடா.); sun, as emitting rays.

த.வ. கதிரவன்.

[Skt. kirana-mālin > த. கிரணமாலி.]

கிரணன் *kiranan,* பெ.(n.) ஞாயிறு, பகலவன், கதிரவன்; sun, as having rays. *"கிளைத்த பல்பெருங் கிரணனில் வயங்கொளி கிளர்ந்தான்" (பாரத. பதினான்காம்.108).*

[Skt. kirana > த. கிரணன்.]

கிரது *kiradu,* பெ.(n.) 1. வேள்வி; sacrifice. *"கிரதுக்கடவுடானும்" (அரிசமய.பத்திசார.93).* 2. நிரய (நரக)வகை (சிவதரு.சுவர்க்கந.115); a hell. 3. ஒரு முனிவர்; an ancient *rsi.*

[Skt. kratu > த. கிரது.]

கிரந்தகர்த்தா *kiranda-karttā,* பெ.(n.) நூலாசிரியன்; author of a book, writer.

[Skt.grantha>த.கிரந்தகர்த்தா.]

கிரந்தகாரன் *kirandakāraṉ,* பெ.(n.) 1. **கிரந்தகர்த்தா** பார்க்க; see *kiranda-karttā.* 2. மதிப்புரவில்லாதவன்; impudentfellow.

[Skt. granta> த. கிரந்த. 'காரன்'- உடைமைப் பெயரீறு.]

கிரந்தனம் *kirandaṉam,* பெ.(n.) 1. அழுகை; weeping. 2. ஒலி; cry, as of birds (யாழ்.அக.).

[Skt. granta > த. கிரந்தனம்.]

கிரந்தித்தொய்வு *kirandi-t-toyvu,* பெ.(n.) புண்களால் தோன்றும் நோய்வகை; a disease (யாழ்.அக.).

[கிரந்தி+தொய்வு.]

[Skt. granthi> த. கிரந்தி.]

கிரமக்காரன் *kirama-k-kāraṉ,* பெ.(n.) ஒழுங்காக நடப்பவன் (யாழ்.அக.); well-behaved person, man of good conduct.

த.வ. நன்னடையன்.

[Skt. krama > த. கிரமம். 'காரன்'- உடைமைப் பொருள்ஈறு.]

கிரமச்சா *kiramaccā,* பெ.(n.) கோள் கணக்கின் உறுப்பு; sine of a planet's declination.

[Skt. krama+jyā > த. கிரமச்சா.]

கிரமசிருட்டி *kirama-ciruṭṭi,* பெ.(n.) இயற்கை (பிரகிருதி) முதல் மண் (பிருதி) வரை ஒன்றன்பின் ஒன்று அடைவே படைக்கப் படுகை (வேதா.சூ.80); creation of elements one after another, dist. fr. *yukapar-ciruṭṭi.*

[Skt. krama+śurtti> த.கிரமசிருட்டி.]

கிரமதாடி *kirama-dāḍi,* பெ.(n.) மறையின் ஒழுங்குமுறை தவறாமல் (கிரமபாட) ஓதுவதில் வல்லவன்; one well-versed in the *krama* method of reciting the *vēdā.* *"இவனவதானி யிவன் கிரமதாடி" (பிரபோத.11, 5).*

[Skt. krama+dhāti > த. கிரமதாடி.]

கிரமதாவா *kiramatāvā,* பெ.(n.) ஒழுங்கு வழக்கு; original suit, regular suit.

[Skt. kirama+dāvā> த.கிரமதாவா.]

கிரமப்பிரசவம் *kirama-p-pirašavam,* பெ.(n.) இயல்பான பிள்ளைப்பேறு (இங். வை.393); normal, easy delivery.

த.வ. பிள்ளை நற்பேறு.

[Skt.kirama+pra-sava>த.கிரமப்பிரசவம்.]

கிரமுகம் *kiramugam,* பெ.(n.) பாக்குமரம்; areca palm.

த.வ. கமுகம்.

[Skt. kramuka > த. கிரமுகம்.]

கிரயசாசனம் *kirayašāsaṉam,* பெ.(n.) விற்பனை ஆவணம்; bill of sale, sale-deed.

[Skt. kraya+šāšaṉa > த. கிரயசாசனம்.]

கிராகதி *kirāgadi,* பெ.(n.) செடிவகை; french, chiratta.

கிராம் *kirām,* பெ.(n.) கடிவாளம் (பிங்.); bridle.

[Skt. grāha > த. கிராம்.]

கிராம்பாணி *kirāmbāṇi,* பெ.(n.) கிராம்பு வடிவிலான ஆணி வகை; nail resembling a clove.

த.வ. இலவங்கவடிவாணி.

[கிராம்பு + அணி.]

கிராம்பு *kirāmbu,* பெ.(n.) 1. இலவங்கம் (திவா.); clove. 2. கிராம்பு (இலவங்கம்) மரம் (சீவக.1901); clove-tree.

[U. qaranful > த. கிராம்பு.]



கிராமக்கணக்கன் *kirāma-k-kaṇakkaṉ,* பெ.(n.) ஊர்க் கணக்கு வேலை பார்ப்போன்; village accountant.

த.வ. **ஊர்க்கணக்கன்.**

[கிராமம்+கணக்கன்.]

[Skt. grāma > த. கிராமம்.]

கிராமக்காவல் *kirāma-k-kāval,* பெ.(n.) 1. ஊர்க்காவல்; service of a village watchman. 2. ஊர்க்காவற்காரன்; village watchman.

த.வ. **ஊர்க்காவலன்.**

[கிராமம்+காவல்.]

[Skt. girāma> கிராமம்.]

கிராமச்சாவடி *kirāma-c-cāvaḍi,* பெ.(n.) ஊர்ப் பொதுவிடம்; public building in a village.

த.வ. **ஊர்ச்சாவடி.**

[கிராமம்+சாவடி.]

[Skt. grāma> த.கிராமம்.]

கிராமச்செலவு *kirāma-c-celavu,* பெ.(n.) ஊர்ப் பொதுவில் செய்யப்படும் செலவு; village contribution for the performance of public functions like festivals.

த.வ. **ஊர்நலச் செலவு.**

[கிராமம்+செலவு.]

[Skt. grāma>கிராமம்.]

கிராமசடகம் *kirāma-šaḍagam,* பெ.(n.) ஊர்க்குருவி; domestic sparrow (சா.அக.).

[கிராமம் + சடகம்.]



கிராமசமுதாயம் *kirāma-šamudāyam,* பெ.(n.) வருமானமுள்ள ஊர்ப்பொதுச் சொத்து; rights enjoyed in common by villagers, as the produce or income from trees on common land, tanks, fisheries etc.

[Skt. grāma+samudaya>கிராம சமுதாயம்.]

கிராமசாந்தி *kirāma-šāndi,* பெ.(n.) சிற்றூரின் நன்மைக்காகக் அவ்வூர்த் தெய்வத்திற்குச் செய்யும் பூசை (சடங்கு); propitiatory ceremony to the tutelary deity of a village.

[கிராமம் + சாந்தி.]

[Skt. grāma > த. கிராமம்.]

கிராமசிம்மம் *kirāma-šimmam,* பெ.(n.) நாய்; dog, as the lion of the village. *"கிராமசிம்மம் போலே படுத்திருந்து" (குருபரம்.பன்னீ.177).*

[Skt. grāma+simha> கிராமசிம்மம்.]

கிராமணி *kirāmaṇi,* பெ.(n.) 1. சிற்றூரின் தலைவன்; headman of a village. 2. தலைமையானவன் (கூர்மபு.ஆதவர்.4); leader or chief. 3. சிற்றூரான்; peasant, villager. 4. சான்றோரிலும், கைக்கோளரிலும் ஒரு வகையினர்க்கு வழங்கும் சிறப்புப் பெயர்; title of some *shāṇārs* and *kaikkōḷas.*

த.வ. **ஊர்த்தலைவன்.**

[Skt. grāmaṇi > த. கிராமணி.]

கிராமத்தார் *kirāmattār,* பெ.(n.) சிற்றூரில் வாழும் மக்கள்; inhabitants of a village.

த.வ. **ஊர்மக்கள்.**

[Skt. grāma+>த.கிராமம்→கிராமத்தார்.]

கிராமத்தான் *kirāmattāṉ,* பெ.(n.) நாட்டுப்புறத்தான்; rustic, uncivilized person.

த.வ. **ஊரான்.**

[Skt. grāma>த.கிராமம்→கிராமத்தான்.]

கிராமதேவதை *kirāma-dēvadai,* பெ.(n.) ஊரைக் காவல் செய்து மக்களைக் காக்குந் தேவதை; tutelary deity of a village.

த.வ. **ஊர்க்காவல்தெய்வம்.**

[கிராமம் + தேவதை.]

[Skt. grāma>த.கிராமம்.]

கிராமநத்தம் *kirāma-nattam,* பெ.(n.) ஊரையடுத்து வீடுகள் கட்டக்கூடிய இடம்; ground in a village set apart for building houses, village site.

த.வ. ஊர்ப்புறம்.

[கிராமம் + நத்தம்.]

[Skt. grāma>த.கிராமம்.]

கிராமப்பிரதட்சிணம் *kirāma-p-piradatcinam,* பெ.(n.) ஊரைச் சுற்றுதல் (ஊர்வலம்); procession round a village from left to right.

த.வ. ஊர்வலம்.

[Skt. grāma+piradatcina>த.கிராமப் பிரதட்சிணம்.]

கிராமப்பிரவர்த்திகம் *kirāma-p-pira varttigam,* பெ.(n.) ஊர் அவை; village council.

[Skt.grāma + iravartiga> த.கிராமப் பிரவர்த்திகம்.]

கிராமபாகம் *kirāma-bāgam,* பெ.(n.) தாங்கள் விட்டுக்கொடுத்த சில உரிமைகளுக்காக நிலக்கிழாருக்குச் சிற்றூரார் செலுத்தும் விளைச்சலின் ஒரு பகுதி; portion of the crop delivered to the *mirasdārs* of a village in lieu of their miras rights.

த.வ. பகுதி.

[கிராமம் + பாகம்.]

[Skt. grāma> த. கிராமம்.]

கிராமம்[1] *kirāmam,* பெ.(n.) 1. மருத நிலத்தூர்; village in an agricultural tract. *"அந்தணருறைதருங் கிராமம்" (மணிமே.13: 102-3).* 2. ஊர்; village. 3. பண்களின் சேர்க்கை வகை (பரத. இராக.80); combination of musical notes going up and down the scale.

[Skt. grāma > த. கிராமம்.]

கிராமம்[2] *kirāmam,* பெ.(n.) நீர்ப்பறவை (பிங்.); water fowl.

[Pāli. girā > த. கிராமம்.]



கிராமாதிபதி *kirāmādipadi,* பெ.(n.) ஊர்த்தலைவன்; head of a village, either the proprietor, headman or collector of the revenue on government account.

த.வ. ஊர்நாயகன்.

[Skt. grāma+adhipati > த. கிராமாதிபதி.]

கிராமாந்தரம் *kirāmāndaram,* பெ.(n.) நாட்டுப்புறம்; rural parts.

[Skt. grāma+antara > த. கிராமாந்தரம்.]

கிராமமானியம் *kirāma-māniyam,* பெ.(n.) பல, தலைமுறையாகக் கொடை பெற்றோர் (இனாம்தார்) நுகரும் இறையிலி நிலம்; land enjoyed rent-free by a hereditary proprietor of a part of the village lands.

த.வ. இறையிலிநிலம்.

[Skt.grāma+mānya>த. கிராமமானியம்.]

கிராமமுன்சீபு *kirāma-munšibu,* பெ.(n.) ஊரை நிருவாகம் செய்பவர்; ஊரையாளக் கூடிய பதவியிலிருப்பவர்; head of a village, vested with judicial, criminal and police powers, an office created by the British.

த.வ. ஊர்நில அலுவலர், ஊர் நாயகம்.

[Skt. grāma+>த. கிராமம் + முன்சீபு.]

கிராமமேரை *kirāma-mērai,* பெ.(n.) சிற்றூர்களில் வேலைக்காரரின் உரிமை (சுதந்திரம்); allowance of a portion of the crop to the village officers and servants.

[Skt. grāma+mēra> த.கிராமமேரை.]

கிராமாதிகாரி *kirāmādigāri,* பெ.(n.) **கிராமாதிபதி** பார்க்க; see *kirāmādipadi.*

[Skt.grāma+adhikārin>த. கிராமாதிகாரி.]

கிராமியம் *kirāmiyam,* பெ.(n.) 1. தாழ்ந்தோருடைய கொச்சைப் பேச்சு (இலக்.வி.635, உரை); rustic, vulgar speech; language of uncultured people. 2. இழிவானது; barbarism, that which is corrupt. *"கிராமியமாங் கருமச் சழக்கில்" (ஞானவா.நிருவா.11).*

[Skt. grāmya > த. கிராமியம்.]

கிராமியன் *kirāmiyaṉ,* பெ.(n.) நாட்டுப் புறத்தவன் (சூடா.); villager, rustic, pleasant.

த.வ. நாட்டான், நாட்டுப்புறத்தான்.

[Skt. grāmya > த. கிராமியன்.]

கிராவாதி *kirāvāti,* பெ.(n.) இரும்பு (யாழ்.அக.); iron.

த.வ. இரும்பொன்.

கிரான் *kirāṉ,* பெ.எ.(adj.) விலை மிகுந்த; dear, high priced.

[U. girān > த. கிரான்.]

கிரி[1] *kiri,* பெ.(n.) பன்றி; hog-boar. *"கரியுங் கிரியும் பேரையுஞ் சீரையுங் கேட்டு" (வெங்கைக்கோ.122).*

[Skt. kiri > த. கிரி.]



கிரி[2] *kiri,* பெ.(n.) மலை; hill, mountain. *"கொண்டல்கொள் கிரி" (ஞான.50, 10).*

[Skt. giri > த. கிரி.]

கிரி[3] *kiri,* பெ.(n.) பிணையாளி; hostage. *"கிரியிருக்கிறவன்".*

[Perh. கரி > த. கிரி.]

கிரிகிரி *kiri-kiri,* பெ.(n.) மருட்டுப் பன்றி (திவா.); wild hog.

த.வ. காட்டுப்பன்றி.

[Skt. giri+kiri > த. கிரிகிரி.]

கிரிகை[1] *kirigai,* பெ.(n.) **கிரியை** பார்க்க; see *kiriyai.*

[Skt. kriyā > த. கிரிகை.]

கிரிச்சம் *kiriccam,* பெ.(n.) வருத்தம், துன்பம்; difficulty, trouble, hardship. *"காளைநீ கிரிச்சமெல்லாங் கழித்தி" (கம்பரா. திருமுடி.28).*

த.வ. ஏதம்.

[Skt. kṛcchra > த. கிரிச்சம்.]

கிரிச்சரம் *kiriccaram,* பெ.(n.) **கிருச்சிரம்** பார்க்க; see *kirucciram. "கிரிச்சர மென்ப மன்னே" (காசிக.வியாதன்.சாப.14).*

[Skt. kṛcchra > த. கிரிச்சரம்.]

கிரிச்சரரோகம் *kiriccara-rōgam,* பெ.(n.) சிறுநீர் நோய் வகை (சீவரட்.); a urinary disease.

[Skt. kṛcchra+ > த. கிரிச்சரரோகம்.]

கிரிச்சிரம் *kiricciram,* பெ.(n.) **கிருச்சிரம்** பார்க்க; see *kirucciram. "சாந்திராயண கிரிச்சிரம்" (காஞ்சிப்பு.சிவபு.57).*

[Skt. kṛcchra > த. கிரிச்சிரம்.]

கிரிச்சிரீட்டம் *kiricirīṭṭam,* பெ.(n.) **கிரிச்சரீடம்** பார்க்க (யாழ்.அக.); see *kiriccarīḍam.*

கிரிசம் *kiriśam,* பெ.(n.) மென்மை (யாழ்.அக.); slenderness, thinness, tenderness.

த.வ. இளந்தை.

[Skt. kṛsa > த. கிரிசம்.]

கிரிசரம் *kiriśaram,* பெ.(n.) மலையிற் பிறந்த யானை (திவா.); elephant, as born in mountain.

த.வ. மலையானை.

[Skt. giri+cara > த. கிரிசரம்.]

கிரிசன் *kiriśaṉ,* பெ.(n.) சிவன்; *Śiva,* as dwelling in Mt. *Kailāśā. "கிரிசனை யுன்னி" (பாரத. அருச்சுனன்றவ. 26).*

[Skt. Giri-śa > த. கிரிசன்.]

கிரிசு *kirišu,* பெ.(n.) **கிரிசுக்கத்தி** பார்க்க; see *kirišu-k-katti.*

[T. kirusu > த. கிரிசு.]

கிரிசுக்கத்தி *kirišu-k-katti,* பெ.(n.) குறுவாள்; malay dagger, small double-edged sword.

த.வ. சூரிக்கத்தி.

[கிரிசு+கத்தி.]

*[**Skt.** kirisu> த.கிரிசு.]*



கிரிசுவா *kirišuvā,* பெ.(n.) தக்கசன் மருகன்; son in law of *Taṭcaṉ* (அபி.சிந்.).

கிரிசை[1] *kirišai,* பெ.(n.) மலைமகள்; *pārvati,* as born of the himalaya. *"பார்ப்பதியே வம்பறு கிரிசை" (திருவானைக். கோச்செங். 81).*

*[**Skt.** giri-jā > த. கிரிசை.]*

கிரிசை[2] *kirišai,* பெ.(n.) **கிரியை** பார்க்க; see *kiriyai.*

கிரிட்டணம் *kiriṭṭaṇam,* பெ.(n.) உறைப்பு (யாழ்.அக.); pungency.

கிரிட்டம் *kiriṭṭam,* பெ.(n.) **கிரிட்டணம்** பார்க்க; see *kiriṭṭaṇam.*

கிரிதுர்க்கம் *kiri-durkkam,* பெ.(n.) மலையாலான அரண்; hill fort, mountain stronghold. *"பேரரணான கிரிதுர்க்க நீக்குதல்" (ஒருதுறைக்.41).*

த.வ. மலையரண்.

*[**Skt.** giri+durga > த. கிரிதுர்க்கம்.]*

கிரிப்பிரதட்சிணம் *kiri-p-piradaṭciṇam,* பெ. (n.) இறைவன் உறையும் நல்லிடமாய் உள்ள மலையை வலம் வருகை; going round a sacred hill from left to right.

த.வ. மலைவலம்.

*[**Skt.**giri+piradaṭciṇa>த.கிரிப் பிரதட்சிணம்.]*

கிரிபுட்பகம் *kiripuṭpagam,* பெ.(n.) நறும் புகைத்தி (சாம்பிராணி); benzoin (சா.அக.).

கிரிமல்லிகை *kiri-malligai,* பெ.(n.) **1.** கசப்பு வெட்பாலை (மரவகை) (பதார்த்த.235); conessibark. **2.** நீண்ட மரமல்லிகை; Indian cordk, *Millingtonia hortensis.*

த.வ. காட்டுமல்லிகை.

[கிரி+மல்லிகை.]

*[**Skt.** giri > த. கிரி.]*

கிரிமிஞ்சி *kiri-miñji,* பெ.(n.) ஒருவகைச் சிவப்புச் சாயம்; cochineal, the dried female insect; scarlet dyestuff.

[U. qirmiz > த. கிரிமிஞ்சி.]

கிரிமிஞ்சிப்புழு *kirimiñji-p-puḻu,* பெ.(n.) புழு வகை; cochineal insect, *Coccus cacti.*

[கிரிமிஞ்சி+புழு.]

*[**Skt.** qirmiz>த. கிரிமிஞ்சி.]*

கிரியன் *kiriyaṉ,* பெ.(n.) சேரன் (யாழ்.அக.); the *Cērā* king.

கிரியாங்கக்கட்டளை *kiriyāṅga-k-kaṭṭaḷai,* பெ.(n.) நடப்பு நெறி (சடங்கு விதி); ceramonials.

[கிரியாங்கம் + கட்டளை.]

*[**Skt.** kriya > த. கிரியா.]*

கிரியாசத்தி *kiriyā-šatti,* பெ.(n.) ஐந்து (பஞ்ச) ஆற்றல்களுள் ஒன்றாகி உலகப் படைப்புக்களைச் செய்து, அச்செயல்களுக்கு ஈடாக உள்ளுணர்வுகளை ஆதன்களுக்குக் கொடுக்குஞ் சிவஆற்றல் (சி.சி.1, 63); ***Šivās*** energy which provides the souls with gross and subtle bodies and with experience-planes according to their *karma,* one of *Pañja-šatti.*

த.வ. ஆக்கசத்தி.

[கிரியா+சத்தி.]

*[**Skt.** kriyā > த. கிரியா.]*

கிரியாசைவம் *kiriyā-šaivam,* பெ.(n.) பதினாறு வகை சிவனிய சமயங்களுள் செயல்களையே முகாமையாகக் கொள்ளுஞ் சமயம் (த.நி.போ.256); a saiva sect which gives prominence to rites and ceremoneis, one sect of 16 *šaivam.*

[Skt. kriya+šaiva>த. கிரியாசைவம்.]

கிரியாத்து *kiriyāitu* பெ.(n.) செடிவகை; chiretta.

[Skt. kairāta > த. கிரியாத்து.]

கிரியாதிகாரன் *kiri-y-ādigāran,* பெ.(n.) பிள்ளையார் (யாழ்.அக.); God G*anēšā.*

[Skt. kriyādhikāra > த. கிரியாதிகாரன்.]

கிரியாதீக்கை *kiriyā-dikkai,* பெ.(n.) **கிரியாவதி** பார்க்க; see *kiriyāvadi.*

[Skt. kriyā > த. கிரியா. கிரியா + தீக்ஷை >தீக்கை.]

கிரியாபதம் *kiriyā-padam,* பெ. (n.) வினைமுற்றுச் சொல்; finite verb, as the word denoting action.

[கிரியா+பதம்.]

[Skt. kriyā > த. கிரியா.]

கிரியாபாதம் *kiriyā-pādam,* பெ.(n.) சிவாகமத்தில் பராபராக்கிரியைகளின் வகைகளைக் கூறும் பகுதி; the section of the *šivāgamam*, which deals with the modes of worship.

[கிரியா+பாதம்.]

[Skt. kriyā > த.கிரியா.]

கிரியாபூசை *kiriyā-pūšai,* பெ.(n.) சிவாகமத்தில் கூறியுள்ள வழிபாட்டுமுறை; the worship offered to *šivā* through *kiriyai.*

[கிரியா+பூசை.]

[Skt. kriyā> த.கிரியா.]

கிரியாமார்க்கம் *kiriyā-mārkkam,* பெ.(n.) முத்தியடைவதற்கு வழி வகையான (உபாயம்) செயல்கள்; rites and ceremonies as the means to attain salvation.

[Skt.kriyā+mārkka > த. கிரியாமார்க்கம்.]

கிரியாலோபம் *kiriyā-lōbam,* பெ.(n.) வேத ஒழுங்கு நடப்பை (வைதீகச் சடங்கு) கடைப்பிடிக்கும் போது சுருதி முதலியவை உறுப்புகளால் செய்யும் செயல்களில் நேருங் குறை; omission to perform duties ordained by *šruti*, etc.,

[Skt. kriyā+lōba> த.கிரியாலோபம்.]

கிரியாவதி *kiriyāvati,* பெ.(n.) குண்டல மண்டலாதிகளையும் மறை(வேதி)களையும் புறத்தே அமைத்து ஆகமத்திற் கூறியபடி செய்யும் ஒளத்திரி தீக்ஷை வகை (சி.சி.8, 3, சிவாக்.); initiatory ceremony in which the guru actually performs the necessary rites, as dist. fr. *ñāṉavati*, a kind of *auttiri-dišai.*

[Skt. kriyāvatī > த. கிரியாவதி.]

கிரியாவான்[1] *kiriyāvāṉ,* பெ.(n.) ஒழுக்க முள்ளவன்; one who duly performs his duties as ordained in Hindu *Šaštrās.*

த.வ. **நெறிமுறையாளன்.**

[Skt. kriyā > த. கிரியாவான்.]

கிரியாவான்[2] *kiri-y-āvāṉ,* பெ.(n.) மனத்தால் பூசனை செய்பவன் (ஞானபூசா.14, உரை); one who mentally worships God.

[Skt. kriyā > த. கிரியாவான்.]

கிரியாவுத்திரி *kiriyāvuttiri,* பெ.(n.) **கிரியாவதி** பார்க்க; see *kiriyāvadi.*

கிரியாவூக்கி *kiriyā-v-ūkki,* பெ.(n.) தான் எந்த வகை மாற்றத்திற்கும் உள்ளாகாமல் தான் சேர்ந்துள்ளதில் வேதியியல் மாற்றத்தைத் தூண்டுவதற்கான பொருள்; catalyst.

த.வ. **செயலூக்கி.**

[Skt. kriyā > த. கிரியா.]

கிரியேந்திரியம் *kiri-y-ēndiriyam,* பெ.(n.) செயற் கருவிகள் அதாவது ஐவகைப் புலன்கள்; organs of motor action and they are so called from their five different actions in the body (சா.அக.).

[கிரியை + இந்திரியம்.]

கிரியை *kiriyai,* பெ.(n.) 1. செய்கை; act, action, deed. 2. சிவனை மறைகளில் கூறியவாறு புறத்தாலும், அகத்தாலும் வழிபடுகை (சி.போ.பா.359); second of the fourfold means of attaining salvation, which consists in worshipping *Śivā* with rites and ceremonies prescribed in the *āyamas.* 3. இறந்தோர் பொருட்டு செய்யும் செய்கை; funeral rites and solemnities, ceremony of offering oblations to the deceased ancestors. 4. தாளப் பிராணத்தொன்று; mode of measuring time, one of ten *tāḷa-p-pirāṇam.* 5. வினை; verb. 6. **கிரியாசத்தி** பார்க்க; see *kiriyā-šatti.* 7. **கிரியாவதி** பார்க்க (சி.சி.8, 3); see *kiriyāvadi.*

த.வ. செயல்.

[Skt. kriyā > த. கிரியை.]

கிரியைக்கேடு *kiriyai-k-kēḍu,* பெ.(n.) முறைகேடு; slovenliness, debauchery, disorderliness.

[கிரியை+கேடு.]

[Skt. kriya > த.கிரியை.]

கிரியைகெடு-தல் *kiriyai-keḍu-,* 4 செ.கு.வி. (v.i.) ஒழுங்கறுதல்; to be disorderly, solvenly, destitute of good conduct, irregular in habits. *"கிரியை கெட்டவன்".*

[கிரியை+கெடு-,]

[Skt. kriya> த.கிரியை.]

கிரியையில்ஞானம் *kiriyaiyil-ñāṉam,* பெ.(n.) மனத்தால் பூசனை செய்யும் பொழுது நிகழும் நுகர்வு உணர்வு (சி.பொ.பா.8, 1, 2, பக்.358); ecstatic condition during mental worship.

[Skt. kriyayil+ñāna> த. கிரியையில் ஞானம்.]

கிரியையில்யோகம் *kiriyayil-yōgam,* பெ.(n.) மனத்தால் செய்யப்படும் பூசனை (சி.போ.பா.8, 1, 2, பக்.358); mental worship of *Śivā.*

[Skt. kriyā+yōga> த. கிரியையில்யோகம்.]

கிரியையிற்கிரியை *kiriyaiyiṟ-kiriyai,* பெ.(n.) சிவாகமத்திற் கூறிய வாலிப்பு முறைப்படி (சுத்தி முன்னாக) சிவகுறி (சிவலிங்கம்) வடிவிற் செய்யும் பூசனை (சி.போ.பா.பக்.357); purificatory ceremonies enjoined in *āgamas.*

[Skt. kriyā+kiriya> த.கிரியையிற்கிரியை.]

கிரியையிற்சரியை *kiriyaiyiṟ-šariyai,* பெ.(n.) சிவபூசனைக்கு வேண்டப்படும் துணைப் பொருட்களெல்லாம் செய்கை (சி.போ.பா. பக்.357); collecting materials for the worship of *Śivā.*

[Skt. kriyā+šariya>த.கிரியையிற்சரியை.]

கிரிராசன் *kiri-rāšaṉ,* பெ.(n.) பனி (இமய) மலை (பிங்.); *Himālaya,* as the king of mountains.

[கிரி+ராசன்.]

[Skt. giri> த.கிரி.]

கிரிராளி *kiri-rāḷi,* பெ.(n.) பச்சைக் கருப்பூரம்; crude camphor (சா.அக.).

கிரிவாணம் *kiri-vāṇam,* பெ.(n.) நீலாஞ்சனக் கல்; antimony.

[Skt. kiri+> த.கிரிவாணம்.]

கிரீச்செனல் *kiriccenal,* பெ.(n.) ஓர் ஒலிக்குறிப்பு; onom, signifying creaking sound.

[க்ரீச் + எனல்.]

கிரீசன் *kirīšaṉ,* பெ.(n.) சிவன் (பிங்.); *Śiva,* as lord of Mt. *Kailasa.*

[Skt. giri+īša > த. கிரீசன்.]

கிரீட்மருது *kiriṭma-rudu,* பெ.(n.) முதுவேனிற் காலம்; summer, the months of *āṉi* and *āḍi,* one of six rutu.

[Skt. grišma > கிரீட்மருது.]

கிரீட்டுமம் *kiriṭṭumam,* பெ.(n.) முதுவேனிற் காலம் (பிங்.); hot season, the months of *āṉi* and *āḍi.*

[Skt. grišma > த. கிரீட்டுமம்.]

கிரீடதாரி *kiridadāri,* பெ.(n.) முடிவேய்ந்தோன்; one who wears a diadem, crowned prince, king.

[Skt. kirīta+dhārin > த. கிரீடதாரி.]

கிரீடம்[1] *kiridam,* பெ.(n.) மணிமுடி (திவா.); crown, diadem.

[Skt. kirīta > த. கிரீடம்.]



கிரீடதாரணம் *kirida-dāranam,* பெ.(n.) முடிசூடுதல்;crowning, coronation.

[கிரீடம் + தாரணம்]

[Skt. kirīta > த. கிரீடம்]

கிரீடாதிபதி *kiridādibati,* பெ.(n.) முடி சூடிய மன்னன்; crowned king.

[Skt. kirītā+adhi-pati > த. கிரீடாதிபதி.]

கிரீடாப்பிரமவாதி *kirida-p-piramavāti,* பெ.(n.) உலகத்திலுள்ள தோற்றங்களெல்லாம் முழுமுதற் பொருளி (பிரமத்தி)ன் விளையாட்டென்று எடுத்துரைக்கும் சமயத்தான் (தத்துவநிஜா.94); a sect of *vēdantists* who hold that all the manifestations in the universe are but the sport of brahman.

கிரீடாபர்வதம் *kirida-parvadam,* பெ.(n.) விளையாடுவதற்கென அமைக்கப் பெற்ற செய்குன்று; mound erected for pastime.

[Skt. kridā+பர்வதம்→பருவதம்.]

கிரீடி[1] *kiridi,* பெ.(n.) 1. அருச்சுனன் (திவா.); *Arjuna.* 2. மணிமுடி அணிந்த மன்னன்; king.

[Skt. kirītin > த. கிரீடி.]

கிரீடி[2]**-த்தல்** *kiridi-,* 11 செ.கு.வி.(v.i.) 1. விளையாடுதல்; to sport, play. *"கிரீடிக்கும் பாடும்" (பதினொ. பொன்வண். 47).* 2. புணர்தல்; to copulate.

[Skt. krid > த. கிரீடி²-த்தல்.]

கிரீடை *kiridai,* பெ.(n.) 1. விளையாட்டு; play, sport, amusement. 2. மகளிர் விளையாட்டு (திவா.); pastime of women. 3. புணர்ச்சி (சூடா.); copulation, coition.

[Skt. kriḍa > த. கிரீடை.]

கிரீதம் *kiridam,* பெ.(n.) மென் சுண்ணம்; chalk (சா.அக.).

கிரீதன் *kiridan,* பெ.(n.) பெற்றோரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்ட தன்னேற்பு (சுவீகார)ப் புதல்வன் (ஏலா.31); son, purchased from his natural parents and adopted, one of 12 puttiran.

[Skt. krīta > த. கிரீதன்.]

கிரீவநாடி *kirivanādi,* பெ.(n.) கழுத்து நாடி; carotid artery (சா.அக.).

[கிரீவம் + நாடி.]

கிரீவம் *kirivam,* பெ.(n.) கழுத்து (திவா.); neck.

[Skt. grīvā > த. கிரீவம்.]

கிருககருசம் *kirugakarušam,* பெ.(n.) குழந்தைகளைத் தாக்கும் 'கொல்' எனும் இருமலும், துன்பமான மூச்சு விடுகையும்; a spasmodic state of the glottis, specially characterised by crowing inspiration, occasioned by the narrowing of the glottis (சா.அக.).

[கிருகம் + கருசம்.]

கிருகச்சித்திரம் *kiruga-c-cittiram,* பெ.(n.) குடும்பச் சச்சரவு; family dissension.

த.வ. குடும்பச் சண்டை.

[Skt. gṛha+chidra > த. கிருகச்சித்திரம்.]

கிருகசாரி *kirugaśāri,* பெ.(n.) இல்லற நிலையிலுள்ளவன்; house holder. *"பேரறமோம்பிடுங் கிருகசாரியை யூட்டிய கேண்மையர்" (சிவதரு.கோபுர.179).*

த.வ. இல்லறத்தான்.

[Skt. gṛha-cārin > த. கிருகசாரி.]

கிருகத்தம் *kirugattam,* பெ.(n.) நான்கு வகையாகக் கூறப்படும் நிலைகளுள் ஒன்றான இல்லறநிலை; life of a householder, one of four *ācciramam.*

[Skt. gṛha-stha > த. கிருகத்தம்.]

கிருகத்தன் *kirugattaṉ,* பெ.(n.) 1. இல் வாழ்வான்; householder, one in the second stage of life or *ācciramam.* 2. சிறப்பான நிலையிலுள்ளவன்; honest, worthy man; man of status.

த.வ. இல்லறத்தான்.

[Skt.gṛha-stha>கிருகஸ்தன்>த.கிருகத்தன்]

கிருகப்பிரதிட்டை *kiruga-p-piradiṭṭai,* பெ. (n.) புது வீடு கட்டிக் கொடுத்து ஏழைக் குடும்பத்தைக் குடியேற்றுகை; settling a poor family by providing it with house, provisions, etc.

த.வ. குடிபுகல்.

[Skt. gṛha+>த. கிருகப்பிரதிட்டை.]

கிருகப்பிரவேசம் *kiruga-p-piravēšam,* பெ. (n.) 1. புது வீட்டிற் குடிபுகும் போது செய்யும் நடப்பு (சடங்கு); ceremony performed when occupying a newly built house. 2. மணப்பெண்ணைக் கணவன் வீட்டிற்கு முதன் முறை அழைத்துக் கொள்ளும்போது செய்யும் நடப்பு (சடங்கு); ceremony performed when a bride is first taken to her husband's house.

த.வ. புதுமனைபுகுவிழா.

[Skt.gṛha+piravēša>த. கிருகப்பிரவேசம்.]

கிருகபதி[1] *kirugapati,* பெ.(n.) 1. வீட்டுத் தலைவன்; master of the house. 2. இல்லறத்தான்; house holder. *"பரிகாரங் கிருகபதிக்கும் பிரமசரிக்கும் பகர்ந்திடுவாம்" (சிவதரு.பரிகார.2).*

த.வ. குடும்பத்தலைவன்.

[Skt. gṛha+> த. கிருகபதி.]

கிருகபதி[2] *kirugapati,* பெ.(n.) ஒரு நெருப்புக் கடவுள்; God of fire, fire God.

த.வ. அங்கியங்கடவுள்.

கிருகம்[1] *kirugam,* பெ.(n.) வீடு; house. *"கிருகத்தின் மைந்தர்கண் மேவுறாமையில்" (விநாயகபு.20, 10).*

த.வ. மனை, இல்.

[Skt. gṛha > த. கிருகம்.]

கிருகம்[2] *kirugam,* பெ.(n.) மிடறு (யாழ்.அக.); throat.

கிருகரன் *kirugaraṉ,* பெ.(n.) பசி, சினம் முதலியவற்றை உண்டாக்கும் பத்து வகைக் காற்றுகளுள் ஒன்று (சிலப்.3, 26, உரை); a vital air of the body, causing hunger, anger, etc., one of *taša-vāyu.*

[Skt. kṛkara > த. கிருகரன்.]

கிருகவாயில் *kirugavā-y-il,* பெ.(n.) சோறு, தண்ணீர் முதலியவை வாயின் வழியாக இறங்கும் குழாய்; the passage in the neck by which food and water are carried through into the stomach; carrier of food and drink, *Oesophagus or gullet* (சா.அக.).

த.வ. உணவுக்குழாய்.

[கிருகம் + வாயில்.]

[Skt. gṛha > த. கிருகம்.]

கிருகாராதனை *kirugārādaṉai,* பெ.(n.) வீட்டுத் தெய்வ வழிபாடு; worship in the house.

த.வ. மனைத் தெய்வவழிபாடு.

[Skt.gṛha+ā-rādhanā>த. கிருகாராதனை.]

கிருகி *kirugi,* பெ.(n.) இல்வாழ்வான்; householder. *"பிரமசரி கிருகியென்னவே பேசு மிருவருமே" (சைவ.ஆசா.60).*

த.வ. இல்லறத்தான்.

[Skt. gṛhin > த. கிருகி.]

கிருகிணி *kirugiṇi,* பெ.(n.) மனைவி; mistress of the house, wife.

த.வ. இல்லாள்.

[Skt. gṛhiṇi > த. கிருகிணி.]

கிருச்சிரம் *kirucciram,* பெ.(n.) 1. கழுவாயாகக் (பிராயச்சித்தமாக) கடைப்பிடிக்கப்படும்

நோன்பு; religious observance for the expiation of sin. *"கிருச்சிரஞ் சாந்தபன முதலரிதாய விரதம்" (பிரபோத.13, 19).* 2. நீர்ச்சுருக்கு நோய்; urethral stricture.

த.வ. **நேர்ந்த நோன்பு.**

[Skt. kṛcchra > த. கிருச்சிரம்.]

கிருச்சிராகரம் *kiruccirākaram,* பெ.(n.) கலிங்க நாட்டில் உள்ள ஒரு தூய நீர்த்துறை; sacred bath-ghat in *kaliṅga* (அபி.சிந்.).

கிருச்சிரோன்மீலனவர்த்தமம் *kiruccirōṉ-mīlaṉa-varttamam,* பெ.(n.) ஒரு கண் நோய்; a disease of the eye.

[கிருச்சிரோன் + மீலன + வர்த்தமம்.]

கிருச்சினம் *kiruccinam,* பெ.(n.) **கிரிச்சரம்** பார்க்க; see *kiriccaram* (சா.அக.).

கிருசம்[1] *kiruśam,* பெ.(n.) இளைப்பு (சூடா.); leanness, thinness, weakness.

த.வ. **இளைப்பு நோய்.**

[Skt. kṛca > த. கிருசம்.]

கிருசம்[2] *kiruśam,* பெ.(n.) 1. உழவு; ploughing. 2. கலப்பை; plough. 3. கொழு; ploughshare.



கிருசயம் *kiruśayam,* பெ.(n.) மலைப்பூவரசு; hill portia (சா.அக.).

கிருசரான்னம் *kiruśarāṉṉam,* பெ.(n.) சோற்றுடன் எள்ளுப் பொடி கலந்த உணவு (சைவ. பொது.544, உரை); a dainty made of sesamam and rice.

த.வ. **எள்ளுச்சோறு, எட்சோறு.**

[Skt. krsara+anna > த. கிருசரான்னம்.]

கிருசரோகம் *kiruśa-rōgam,* பெ.(n.) உடலை வற்ற வைத்து ஒடுக்கும் நோய் (பைஷஜ.230); emaciating disease.

த.வ. **உயிர்க்கொல்லிநோய்.**

[Skt. kṛśa+rōga > த. கிருசரோகம்.]

கிருசாட்சம் *kiru-śāṭcam,* பெ.(n.) சிலந்தி (யாழ்.அக.); spider.



கிருசாணு *kiruśāṇu,* பெ.(n.) 1. பவளக் கொடி; coral reef. 2. நெருப்பு; fire (சா.அக.).

கிருசாந்தன் *kiruśāndaṉ,* பெ.(n.) நெருப்பு; fire (சா.அக.).

[கிரு + சாந்தன்.]

கிருசாநாசி *kiruśānāśi,* பெ.(n.) மெல்லிய மூக்கு; a thin nose (சா.அக.).

த.வ. **இல்லிமூக்கு.**

கிருசி *kiruśi,* பெ.(n.) 1. வேளாண்மை; cultivation of soil, tillage, agriculture. 2. முயற்சி; effort, activity.

த.வ. **வெள்ளாண்மை.**

[Skt. krśi > த. கிருசி.]

கிருசிகன் *kiruśigaṉ,* பெ.(n.) உழவன்; cultivator, ryot, farmer.

த.வ. **ஏருழவன்.**

[Skt. krśika > த. கிருசிகன்.]

கிருட்டவிரணம் *kiruṭṭa-viraṇam,* பெ.(n.) ஆறாத காயம் அல்லது புண்; a wound or sore not completely healed up (சா.அக.).

த.வ. **ஆறாப்புண்.**

[கிருட்ட + விரணம்.]

[Skt. grsṭi+viraṇa > த. கிருட்டவிரணம்.]

கிருட்டி[1] *kirutti,* பெ.(n.) தலையீற்றுப் பசு (சூடா.); young cow that has calved once.

த.வ. தலையீற்று ஆ(ன்).

[Skt. grṣṭi > த. கிருட்டி.]

கிருட்டி[2] *kirutti,* பெ.(n.) பன்றி; hog. *"எதிர்த்த கிருட்டியின்" (அரிச்.பு. வேட்டஞ்.70).*

த.வ. கேழல்.

[Skt. ghṛṣṭi > த. கிருட்டி.]

கிருட்டி[3] *kirutti,* பெ.(n.) 1. கொடி வகை; square stalked vine. 2. பறவை வகை (பதார்த்த.893); a kind of bird.

கிருட்டி[4] *kirutti,* பெ.(n.) 1. அறிஞன்; wiseman. 2. வேள்வி செய்தவன்; one who has performed a sacrifice.

த.வ. வல்லுநன்.

கிருட்டிகம் *kiruttigam,* பெ.(n.) கொட்டை யில்லா முந்திரிக் கொடி; creeper of seedless raisins (சா.அக.).

த.வ. கொடிமுந்திரி.

[கிருட்டி + அகம்.]

கிருட்டிசாகியம் *kiruttišāgiyam,* பெ.(n.) கடற் பழம் என்னும் பெயருடைய மரம்; south sea island bottle-brush tree (சா.அக.).

கிருட்டிசாரம் *kiruttišāram,* பெ.(n.) தீம்பிரண்டை; a variety of sweet adamant creeper (சா.அக.).

த.வ. இனிப்புப் பிரண்டை.

[கிருட்டி + சாரம்.]

கிருட்டிணகந்தகம் *kiruttina-kandagam,* பெ.(n.) கிடைப்பதற்கு அரிதான ஒரு வகைக் கறுப்புக் கந்தகம்; a black or dark and rare variety of sulphur (சா.அக.).

த.வ. கருங்கந்தகம்.

[கிருட்டிணம் + கந்தகம் – கிருட்டிணகந்தகம் - வண்ணம்பற்றி வந்த சொல்லாகும்.]

கிருட்டிணகந்தம் *kiruttina-kandam,* பெ.(n.) 1. கறுப்பு அல்லி; black lotus, *Nymphae tringra.* 2. முருங்கை; *moringa-Hyarin-thera moringa* (சா.அக.).

[கிருட்டிணம் + கந்தம்.]

கிருட்டிணகர்க்கடகம் *kiruttinakar-k-kadagam,* பெ.(n.) கறுப்பு நண்டு; black crab (சா.அக.).

த.வ. கருநண்டு.

[கிருட்டிண+கல்+கடகம்.]

கிருட்டிணகர்ப்பம் *kiruttina-karppam,* பெ.(n.) ஒரு வகைப்பூடு; a kind of plant (சா.அக.).

த.வ. கருங்கருப்பம்.

கிருட்டிணகரித்துருமம் *kiruttina-kari-t-turumam,* பெ.(n.) பேய்த் தும்பை; wild leucas (சா.அக.).

த.வ. கருந்தும்பை.

[கிருட்டிணம் + கரி + துருமம்.]

கிருட்டிணகருமம்[1] *kiruttina-karumam,* பெ.(n.) வெள்ளை விழுந்த காயத் தழும்பைக் கறுப்பாக்குகை; the blackening of a white cicatrix, due to a bad or defective granulation (சா.அக.).

த.வ. காயமாற்றி.

[கிருட்டிணம் + கருமம்.]

கிருட்டிணகருமம்[2] *kiruttina-karumam,* பெ.(n.) புண்களைச் சூடிடல் அல்லது தீய்க்கை; a peculiar way of cauterising a wound or sore (சா.அக.).

த.வ. சூட்டுக்கோல்போடுதல்.

[கிருட்டிணம் + கருமம்.]

கிருட்டிணகற்பம் *kiruttina-karpam,* பெ.(n.) கருப்பத்திற்காக வேண்டிச் செய்யும் அயக் காந்தச் செந்தூரம்; calcined red oxide prepared with iron and magnet for purposes of rejuvenation (சா.அக.).

த.வ. காயகற்ப செந்தூரம்.

[கிருட்டிணம் + கற்பம்.]

கிருட்டிணகாம்போசி *kiruttina-kampōši,* பெ.(n.) பூலா என்னும் ஒருவகைச் செடி; black honey shrub (சா.அக.).

த.வ. கரும்பூலா.

கிருட்டிணகாயா *kiruṭṭiṇa-kāyā,* பெ.(n.) பனை மரம்; palm tree (சா.அக.).

த.வ. கரும்புல், பனை.



கிருட்டிணகுச்சம் *kiruṭṭiṇa-kuccam,* பெ.(n.) கண்ணில் உண்டாகும் பூ; cataract of the eye (சா.அக.).

த.வ. கண்பூ.

கிருட்டிணகுட்டம் *kiruṭṭiṇa-kuṭṭam,* பெ.(n.) ஒரு வகைக் குட்ட நோய்; black leprosy.

த.வ. கருங்குட்டம்.

[கிருட்டிணம் + குட்டம்.]

கிருட்டிணகெந்தம் *kiruṭṭiṇa-kendam,* பெ.(n.) பனை மரம்; palm tree (சா.அக.).

த.வ. கரும்புல்.

கிருட்டிணகெந்தா *kiruṭṭiṇa-kendā,* பெ.(n.) முருங்கை; drum-stick tree (சா.அக.).

த.வ. கருப்பு முருங்கை.

கிருட்டிணகேழி *kiruṭṭiṇa-kēḻi,* பெ.(n.) ஒரு செடி; brazilian hog weed (சா.அக.).

கிருட்டிணகேளி *kiruṭṭiṇa-kēḷi,* பெ.(n.) கொடி வகை; brazilian hogweed, *Bougainvillea spectabilis.*

கிருட்டிணசகாயன் *kiruṭṭiṇa-šagāyāṉ,* பெ.(n.) பாண்டவர்களில் ஒருவரான அருச்சுனன் (பிங்.); *Arjuṇa* as having *Krṣṇa* for his comrade.

[Skt. krṣṇa+> த. கிருட்டிணசகாயன்.]

கிருட்டிணசகுனி *kiruṭṭiṇa-šaguṉi,* பெ.(n.) காக்கை; crow (சா.அக.).

த.வ. அண்டங்காக்கை.

[கிருட்டிணம் + சகுனி.]



கிருட்டிணசதுகம் *kiruṭṭiṇa-šadugam,* பெ.(n.) கறுப்பு சதுக மரம்; a black variety of *`Sadugam'* an unknown tree (சா.அக.).

கிருட்டிணசயந்தி *kiruṭṭiṇa-sayandi,* பெ.(n.) ஆண்டு தோறும் கண்ணன் பிறந்த நாளில் கொண்டாடப்படும் விழா; celebration of *kršṇā's* birthday.

[Skt. krišṇa > கிருட்டிணம் + செயந்தி.]

கிருட்டிணசர்ப்பம் *kiruṭṭiṇa-šarppam,* பெ.(n.) 1. ஒரு வகைக் கரும்பாம்பு; a black snake. 2. கருநாகம்; lance hooded black cobra (சா.அக.).

த.வ. கருப்புநாகம், கருநாகம்.

[கிருட்டிணம் +சர்ப்பம்.]

கிருட்டிணசன்னுகம் *kiruṭṭiṇa-šaṉṉugam,* பெ.(n.) கறுப்புக் கடலை; black Bengal gram (சா.அக.).

த.வ. கருங்கடலை.

[கிருட்டிணம் + சன்னுகம்.]

கிருட்டிணசாபம் *kiruṭṭiṇa-šābam,* பெ.(n.) நிலப்பனை; ground palm (சா.அக.).

த.வ. கரும்பனை.

கிருட்டிணசாரம் *kiruṭṭiṇa-šāram,* பெ.(n.) கறுப்புப் புள்ளிகளை உடலில் கொண்ட மான்; deer whereon the black dots in whole body (சா.அக.).

த.வ. கரும்புள்ளிமான்.



கிருட்டிணசாலி *kiruṭṭiṇašāli,* பெ.(n.) ஒரு கறுப்பு நெல்; a black variety of paddy (சா.அக.).

த.வ. கருஞ்சாலி.

[கிருட்டிணம் + சாலி.]

கிருட்டிணசாலிச்சம் *kiruṭṭiṇa-šāliccam,* பெ.(n.) கறுப்பரிசி; a variety of black rice (சா.அக.).

த.வ. கருஞ்சாலியரிசி.

கிருட்டிணசிங்குவாததோடம் *kiruṭṭiṇa-šinguvāda-tōṭam,* பெ.(n.) நாக்குக் கறுத்து இறப்பிற்கேதுவாகும் ஒரு நோய்; a fatal disease marked by the dark appearance of the tongue (சா.அக.).

[கிருட்டிணம் + சிங்கு + வாதம் + தோடம்.]

கிருட்டிணசீரகம் *kiruṭṭiṇa-šīragam,* பெ.(n.) சீரக வகை (பதார்த்த.1034); black cumin, *Nigella sativa.*

த.வ. கருஞ்சீரகம்.

கிருட்டிணசுக்கிலை *kiruṭṭiṇa-šukkilai,* பெ.(n.) கதிரவனைச் சுற்றிக் காணப்படும் ஒளியுள்ள பகுதி (செந்.10, 238); penumbra.

த.வ. ஒளிவட்டம்.

[Skt.kṛṣṇa-šukla> த.கிருட்டிணசுக்கிலை.]

கிருட்டிணசுரம் *kiruṭṭiṇa-šuram,* பெ.(n.) ஒரு வகைக் காய்ச்சல்; a kind of fever.

த.வ. கருஞ்சுரம்.

[கிருட்டிணம் + சுரம்.]

[Skt.kṛṣṇa> த.கிருட்டிணம்.]

இக்காய்ச்சல் ஏற்பட்டால் உடம்பில் கருப்புத் தழும்பும், நாக்கு, பல், உதடு முதலியவை கருப்பாயும் காணப்படும் (சா.அக.).

கிருட்டிணசூரணம் *kiruṭṭiṇa-šūraṇam,* பெ. (n.) இரும்புத் துரு; iron rust (சா.அக.).

த.வ. கருந்தூறு.

[கிருட்டிணம் + சூரணம்.]

[Skt.kṛṣṇa-šurana> த.கிருட்டிணசூரணம்.]

கிருட்டிணசூரிகை *kiruṭṭiṇa-šūrigai,* பெ.(n.) பாம்பின் நஞ்சு முறியும்படிக் கொடுக்கும் ஒரு மூலிகை வேர்; the root of an unknown plant given as an antidote for snake-poison (சா.அக.).

த.வ. கருவேர்.

கிருட்டிணதுளசி *kiruṭṭiṇa-tuḷaši,* பெ.(n.) துளசி வகை (பதார்த்த.304); purple-stalked basil, *Ocimum sanctumtypica.*

த.வ. கருந்துளசி.

[கிருட்டிண(ம்)+துளசி.]

[Skt. kršṇa> த. கிருட்டிணம்.]

கிருட்டிணதேவராயர் *kiruṭṭiṇa-tēvarāyar,* பெ.(n.) தொண்டை நாட்டுச் சிற்றரசர்; a petty king of *Toṇḍai-nāḍu* (அபி.சிந்.).

கிருட்டிணதோடம் *kiruṭṭiṇa-tōḍam,* பெ.(n.) ஒருவகை நச்சுக் காய்ச்சல்; typhus fever.

த.வ. கருங்காய்ச்சல்.

[Skt. kršṇa>த.கிருட்டிணம்.]

கிருட்டிணப்பக்கம் *kiruṭṭiṇa-p-pakkam,* பெ. (n.) இருள் பக்கம்; dark half of a lunar month or the period of the waning moon.

[கிருட்டிணம்+பக்கம்.]

[Skt. kršṇa>த.கிருட்டிணம்.]

கிருட்டிணபரணி *kiruṭṭiṇa-paraṇi,* பெ.(n.) ஒரு வகைத் துளசி; a kind of basil (சா.அக.).

த.வ. கருந்துளசி.

[கிருட்டிணம் + பரணி.]

கிருட்டிணமாது *kiruṭṭiṇa-mādu,* பெ.(n.) கருப்புத் துளசி; black basil.

த.வ. கருந்துளசி.

[கிருட்டிணம் + மாது.]

கிருட்டிணமிச்ரர் *kiruṭṭiṇa-micrar,* பெ.(n.) ஒரு பார்ப்பனர்; a Brahmin (அபி.சிந்.).

கிருட்டிணமிருகம் *kiruṭṭiṇa-mirugam,* பெ.(n.) கருநிறமுள்ள மான் வகை; black antelope.

கிருட்டிணமூர்த்தி *kiruṭṭiṇa-mūrtti,* பெ.(n.) கண்ணபிரான்; Lord *Kṛṣṇa.*

த.வ. திருமால்.

கிருட்டிணமூலி *kiruṭṭiṇa-mūli,* பெ.(n.) துளசி (மலை.); holy basil.

கிருட்டிணயசுர்வேதம் *kiruṭṭiṇa-yaśur-vēdam,* பெ.(n.) எசுர் மறையின் (வேதத்தின்) இருபகுதிகளுள் மந்திரமும், மந்திரம் அல்லாத மறை (வேத)ப் பகுதி (பிராமணம்)யும் கலந்து கிடக்கும் பகுதி; the black *yajurvēda,* as having the mantras and brahmanas mixed up, dist. fr. *śukkila-yaśur-vēdam.*

[Skt. krṣṇa+yaśur-vēda>த. கிருட்டிண யசுர்வேதம்.]

கிருட்டிணராசன் *kiruṭṭiṇa-rāśaṉ,* பெ.(n.) 1. சூடாமணி நிகண்டில் புகழப்பட்டவன்; one who celebrated by *cūḍāmaṇi-nigaṇḍu.* 2. செஞ்சியை ஆண்ட மன்னன்; a king of *ceñji.*

கிருட்டிணராயன் *kiruṭṭiṇa-rāyaṉ,* பெ.(n.) பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஜய நகரத்தை ஆண்ட முக்கியமான மன்னருள் ஒருவர்; *kriṣṇa-raya* the famous king of the narasimha dynasty of vijayanagar, 1509-1530. *"கிருட்டிண ராயன் கைபோற் கொடை மடமென்பது" (சூடா.9, 10).*

கிருட்டிணவெலி *kiruṭṭiṇa-v-eli,* பெ.(n.) கறுப்பு எலி; black variety of rat, Musrattas.

த.வ. காரெலி.

[கிருட்டிணம் + எலி.]

[Skt.krṣṇa> த.கிருட்டிணம்.]

இது கடித்தால் அடிக்கடி அரத்தமாகக் கக்குவதோடன்றி, மழைக் காலத்தில் மிகுதியாக அரத்தம் விழும் (சா.அக.).



கிருட்டிணன் *kiruṭṭiṇaṉ,* பெ.(n.) 1. கண்ணபிரான்; kirusna, son of *vaśudēvā,* one of ten incarnations of visnu. 2. கண்மணிப் பாவை; Iris of the eye. 3. அருச்சுனன் (பிங்.); Arjuna.

த.வ. கருங்கொண்டல்.

[Skt. krṣṇa > த. கிருஷ்ணன்.]

கிருட்டிணா[1] *kiruṭṭiṇā,* பெ.(n.) இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஒரு ஆறு; one of the river in Andrapradesh, India.

கிருட்டிணாசினம் *kiruṭṭiṇāśiṇam,* பெ.(n.) கறுப்பு மானின் தோல்; skin of black antelope, used as a seat during religious meditation.

[Skt.karśna+ajina> த. கிருட்டிணாசினம்.]

கிருட்டிணாசுரன் *kiruṭṭiṇāśuraṉ,* பெ.(n.) ஓர் அரக்கன்; a giant.

கிருட்டிணாஞ்சனம் *kiruṭṭiṇāñjaṉam,* பெ.(n.) 1. கறுப்பு மை; black collyrium. 2. கருங்குமிழம் பூ மரம்; black kandahar tree, bearing blue or black flowers (சா.அக.).

[கிருட்டிணம் + அஞ்சனம்.]

கிருட்டிணாட்டமி *kiruṭṭiṇāṭṭami,* பெ.(n.) கண்ணன் பிறந்த நாள்; birthday of *Kršṇa*, the eighth day of the dark half of the month *šrāvaṇa.*

[Skt.kršṇa+asṭami>த. கிருட்டிணாட்டமி.]

கிருட்டிணாப்பிரகம் *kiruṭṭiṇā-p-piragam,* பெ.(n.) அப்பிரக வகை; mica.

[Skt. kṛsṇa+abhraka>த. கிருட்டிணாப் பிரகம்.]

கிருட்டிணார்ப்பணம் *kiruṭṭiṇār-p-paṇam,* பெ.(n.) செயலின் முடிவில் அதனைக் கண்ணனுக்குக் கொடுக்கும் தொடர்; expression used generally at the close of ablutions, rituals, etc., dedicating them to *šrikršṇa.*

[Skt. kršṇa+arppaṇa>த. கிருட்டிணார்ப் பணம்.]

கிருட்டிணை[1] *kiruṭṭiṇai,* பெ.(n.) கதிரவனைச் சுற்றிக் காணப்படும் கருமையுள்ள பகுதி (செந்.X, 233); umbra, round the solar disc.

கிருட்டிணை *kiruṭṭiṇai,* பெ.(n.) 1. திரௌபதை; Draubadai. 2. நான்கு வகை ஆற்றலுள் (பராசத்தியுள்) ஒன்று (சைவச. பொது.74, உரை); a form of *parā-šatti,* one of 4.

[Skt. kṛsṇā > த. கிருட்டிணை.]

கிருத்தம் *kiruttam,* பெ.(n.) செய்யப்பட்டது; that which is done, made, produced. *"சத்தமனித்தங் கிருத்தத் தாலெனின்" (மணிமே.29:395).*

[Skt. kṛta> த. கிருத்தம்.]

கிருத்தி *kirutti,* பெ.(n.) தோல் (சூடா.); skin, hide.

[Skt. kṛtti > த. கிருத்தி.]

கிருத்திகாதீபம் *kiruttigā-dibam,* பெ.(n.) கார்த்திகை விளக்கு; lights lit on the evening of *tiru-k-kārttigai.*

[Skt. kṛttikā > த. கிருத்திகா.]
[தீ>தீவம்>Skt.dipā > த. தீபம்.]



கிருத்திகை[1] *kiruttigai,* பெ.(n.) 1. ஏழு இருடிகளில் வசிட்டர் ஒழிந்த மற்ற அறுவரின் மனைவிமார்; six saints wives. 2. தீக்கடவுளின் (அக்னி) மனைவி; wife of Agni. 3. ஒரு விண்மீன்; constellation pleiades.

கிருத்திகை[2] *kiruttigai,* பெ.(n.) ஒரு விண்மீன் (திவா.); the constellation pleiades, part of *mēṭa-rāši* and *iṭapa-rāši.*

த.வ. கார்த்திகை.

கிருத்திமம்[1] *kiruttimam,* பெ.(n.) **கிருத்தி** பார்க்க; see *kirutti.*

கிருத்திமம்[2] *kiruttimam,* பெ.(n.) 1. செயற்கையானது (சூடா.); that which is artificial. 2. பொய் (சூடா.); falsehood, lie, fraud. 3. பூதம்; a class of demons. *"கிருத்திமவினம் பல குதித்தன கிளைத்தே" (இரகு.திக்குவி.113).*

த.வ. செய்மம்.

கிருத்தியம் *kiruttiyam,* பெ.(n.) 1. தொழில்; act, action, operation, function. *"பூதங்கள் கிருத்தியகர்த்தாவென்று" (சி.சி.1, 4, மறைஞா.).* 2. ஆதன் மும்மலங்களை ஒழித்து வீடு பெறுவதற்குத் துணையாயிருக்கும் படைப்பு (கிருட்டி) (சி.சி.1, 36); the five functions of God, designed by divine grace for the deliverance of the souls. அவையாவன; சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்ற கடவுளின்

ஐந்தொழில். 3. அபரக் கிரியை (உத்தரக் கிரியை); funeral rites, obsequies.

த.வ. வினை.

[Skt. krtya > த. கிருத்தியம்.]

கிருத்தியமுறை *kiruttiya-murai,* பெ.(n.) செய்முறை; modus-operandi (சா.அக.).

த.வ. வினைமுறை.

[கிருத்திய + முறை.]

[Skt. krtya > த. கிருத்திய.]

கிருத்திரகூடம் *kiruttira-kūdam,* பெ.(n.) மகதநாட்டில் உள்ள மலை; a hill in *magadā.*

[கிருத்திர + கூடம்.]

[Skt. krtya > த. கிருத்திர(ம்).]

கிருத்திரசிவாதம் *kiruttiraśi-vādam,* பெ.(n.) தொடை நரம்புகளைப் பற்றிய நோய் (இங்.வை.227); sciatica.

த.வ. தொடைநரம்பிசிவுநோய்.

[Skt.gr harasi+vāta>த.கிருத்திரசி வாதம்.]

கிருத்திரம் *kiruttiram,* பெ.(n.) கழுகு (நிகண்டு); eagle.

த.வ. பருந்து, கலுழன்.

[Skt. gr dhra > த. கிருத்திரம்.]



கிருத்திராசுரன் *kiruttirāśuran,* பெ.(n.) ஒரு அரக்கன்; giant.

கிருத்திரிமபுத்திரன் *kiruttirama-puttiran,* பெ.(n.) **கிருத்திரிமன்** பார்க்க; see *kiruttiri-man.*

[Skt. krtrima+> த.கிருத்திரிமபுத்திரன்.]

கிருத்திரிமம் *kiruttirimam,* பெ.(n.) 1. போலியானது; that which is artificial, sham. *"கிருத்திரிமவேடம்".* 2. கரவடம் (வஞ்சனை); deception, fraud. *"கன்னியர் கிருத்திரிமத்தைக்காணரிது" (பஞ்ச.அர்த்தநா.61).* 3. குறும்பு (சேட்டை); mischief.

[Skt. krtrima > த. கிருத்திரிமம்.]

கிருத்திரிமன் *kiruttiriman,* பெ.(n.) பெற்றோர் இசைவின்றி தன்னேற்பு (சுவீகார) மகனாகச் செய்து கொள்ளப்பட்டவன்; artificial or adopted son; adult son adopted without the consent of his natural parents, one of 12 *puttiran.*

கிருத்திவாசன் *kirutti-vāšan,* பெ.(n.) காசியில் எழுந்தருளி இருக்கும் சிவன்; God *Śivā.*

த.வ. உலகநாயகன்.

கிருத்துருணி *kiruttiruni,* பெ.(n.) பம்பந்திராய்; Indian chick weed (சா.அக.).

கிருதக்கிருமி *kiruda-k-kirumi,* பெ.(n.) நெய்யில் உண்டாகும் புழு; a worm found in putrified ghee (சா.அக.).

த.வ. நெய்புழு.

[Skt. krta+krmi > த. கிருதக்கிருமி.]

கிருதக்கினதை *kirudakkinadai,* பெ.(n.) செய்ந்நன்றி கோறல்; ingratitude.

த.வ. செய்ந்நன்றிகொல்லல்.

[Skt. krta-ghna-tā > த. கிருதக்கினதை.]

கிருதக்கினன் *kirudakkinan,* பெ.(n.) நன்றி கொன்றவன்; ungrateful person.

த.வ. நன்றிமறந்தவன்.

கிருதக்கு *kirudakku,* பெ.(n.) குறும்பு, போக்கிரித்தனம் (வக்கிரம்); roguery, perveristy.

த.வ. போக்கிலித்தனம்.

[Pkt. krtaka > த. கிருதக்கு.]

கிருதக்குளபாளிதபோசனம் *kiruda-k-kuḷa-pāḷida-pōšaṉam*, பெ.(n.) சர்க்கரைப் பொங்கல்; the rice mixed with sugar.

த.வ. அக்காரவடிசில்.

[கிருதம் + குளம் + பாளிதம் + போசனம்.]

கிருதகன் *kirutagaṉ*, பெ.(n.) கண்ணனின் தந்தையாகிய வாசுதேவருக்குப் பத்திரையிடம் பிறந்த மகன்; son of *vāšudēvā* from *pattirai*.

கிருதகிருத்தியன் *kiruda-kiruttiyaṉ*, பெ.(n.) செய்தற்குரிய கடமையைச் செய்து முடித்தவன் (சிலப்.10:177, உரை); one who has done his duty.

த.வ. செய்வினையாளன்.

கிருதகோடி *kiruta-kōḍi*, பெ.(n.) அளவை நூல் இயற்றிய முனிவன்; a saint authority of logic book.

கிருதகௌசகம் *kiruta-kaušagam*. பெ.(n.) விதர்ப்ப நாட்டிலுள்ள ஒரு பட்டணம்; ancient city in *vidarpa* country.

கிருதசமகன் *kiruta-šamagaṉ*, பெ.(n.) ஒரு இருடி; a saint.

கிருதசூடன் *kiruda-šūḍaṉ*, பெ.(n.) உச்சிக் குடுமிக்காரன் (யாழ்.அக.); man who has a knotted lock of hair on the crown of the head.

த.வ. உச்சிக்குடுமி.

[Skt. kṛta+ > த. கிருதசூடன்.]

கிருதஞ்ஞதை *kirudaññadai*, பெ.(n.) செய் நன்றியறிகை; gratitude.

த.வ. செய்ந்நன்றிஅறிதல்.

[Skt. kṛtajñatā > த. கிருதஞ்ஞதை.]

கிருதஞ்ஞன் *kirudaññaṉ*, பெ.(n.) செய்நன்றி அறிபவன்; grateful person.

த.வ. செய்ந்நன்றிஉடையான்.

[Skt. krta-jña > த. கிருதஞ்ஞன்.]

கிருததன்வா *kirutataṉvā*, பெ.(n.) கண்ணனால் வெல்லப்பட்ட மன்னன்; a king defeated by Lord *Krishṇā*.

கிருதபாகம் *kiruda-pāgam*, பெ.(n.) நெய்யினால் செய்த மருந்து; a medicinal preparation made of ghee (சா.அக.).

த.வ. நெய்ம்மருந்து.

[கிருதம் + பாகம்.]

[Skt. krta > த. கிருதம்.]

கிருதபிராயச்சித்தம் *kiruta-pirāyaccittam*, பெ.(n.) ஒழுக்கக் கேட்டிற்கு நெய்யினால் வேள்வி செய்தல்; expiration, atonement, expiratory ceremoney for past sins. *"கிருதப்ராயஸ்சித்தஞ்செய்துசுத்தராயினார்– வாரியத்துக் குடவோலை யெழுதிப்புகவிடப் பெறாததாகவும்" (உத்தரமேரூர் கல்வெட்டு, முதல் பராந்தகன், கி.பி.921).*

த.வ. கழுவாய்.

"வழுவாய் மருங்கிற் கழுவாயுமுளவென" (புறநா.34,4).

கிருதம்[1] *kirudam*, பெ.(n.) 1. செய்யப்பட்டது; that which is done, made. 2. **கிருதயுகம்** பார்க்க; see *kiruda-yugam*.

[Skt. kṛta > த. கிருதம்.]

கிருதம்[2] *kirudam*, பெ.(n.) 1. நெய் (திவா.); ghee. 2. நெய் கலந்த குழம்பு வடிவான மருந்து; a medicinal preparation having ghee as the vehicle.

த.வ. நெய்ம மருந்து.

[Skt. gṛta > த. கிருதம்.]

கிருதயுகம் *kiruda-yugam*, பெ.(n.) நான்கு உகங்களுள் 17,28,000 ஆண்டு கொண்ட முதல் உகம்; the first of four yugas, golden age of the Hindus, consisting of 17,28,000 years.

[Skt. kṛta+ > த. கிருதயுகம்.]

கிருதவன்மன் *kirutavaṉ*, பெ.(n.) 1. பாரதப் போரில் முதல் நாள் கேகயனுடன் போர் புரிந்தவன்; the person who quarrel with *kēkayā* in *Bārathā* war. 2. இருதயன் மகன்; son of *irutayaṉ*. 3. தேவமீடனுக்குத் தம்பி; brother of *tēvamīṭaṉ*.

கிருதவீரியன் *kiruta-viriyaṉ,* பெ.(n.) தனகன் என்னும் மன்னனின் மகன்; son of king *taṉagaṉ.*

கிருதன் *kirudaṉ,* பெ.(n.) செருக்குடையவன்; arrogant, insolent fellow.

த.வ. செருக்காளன்.

கிருதா *kirudā,* பெ.(n.) கன்ன மீசை; ringlets on the cheeks almost touching the curls of moustache, whiskers.

[U. girdā > த. கிருதா.]

கிருதாசி *kirudāśi,* பெ.(n.) 1. குசநாபன் மனைவி; wife of *kuśa-nāpaṉ.* 2. ஒரு தேவ மகள்; a deity damsel. 3. ஒரு தெய்வக் கணிகை; a deity harlot.

[Skt. kṛutāśi > த. கிருதாசி.]

கிருதாந்தம் *kirutāndam,* பெ.(n.) முடிந்த முடிவு (யாழ்.அக.); established truth.

த.வ. கொண்முடிபு.

[Skt. kṛtānta > த. கிருதாந்தம்.]

கிருதாந்தன் *kirutāndaṉ,* பெ.(n.) இயமன் (யாழ்.அக.); yama.

த.வ. எமன்.

[Skt. kṛtānta > த. கிருதாந்தன்.]

கிருதாமீசை *kirudā-miśai,* பெ.(n.) **கிருதா** பார்க்க; see *kiruda.*

த.வ. கன்னமீசை.

[கிருதா + மீசை.]

[U. girdā > த. கிருதா.]

கிருதார்த்தன் *kirudārttaṉ,* பெ.(n.) பெரும் பேறு பெற்றவன்; one who has attained his object.

த.வ. பெரும்பேறாளன்.

[Skt. kṛta+artha > த. கிருதார்த்தன்.]

கிருதி *kirudi,* பெ.(n.) ஓர் இசைப்பாட்டு (கீர்த்தனம்); musical composition. *"இரண்டு கிருதி பாடினான்".*

த.வ. இசைப்பாடல்.

[Skt. kṛti > த. கிருதி.]

கிருதிவந்தன் *kiruti-vandaṉ,* பெ.(n.) வாசுதேவருக்குத் தேவகியிடம் பிறந்த குமரன்; son of *Vāsudeva* and *Devaki.*

கிருதுப்பாகை *kirudu-p-pāgai,* பெ.(n.) ஒரு பக்கமாக அணியும் தலைப்பாகை; turban slipped on one side of the head, heap near fixed on one side of the head.

த.வ. சாய்தலைப்பாகை.

[கிருது + பாகை.]

[Skt. kṛudi > த. கிருது.]

கிருதுவுடை *kiruduvudai,* பெ.(n.) இயல்பல்லாத உடை; foppish dress, finery.

த.வ. செயற்கையுடை.

[கிருது+உடை.]

[Skt. krtu > த. கிருது.]

கிருபணத்துவம் *kirubaṇattuvam,* பெ.(n.) கடுங்கஞ்சத்தனம்; niggardliness, miserliness.

த.வ. கடுங்கஞ்சம்.

[Skt. kṛpaṇa-tva > த. கிருபணத்துவம்.]

கிருபணம் *kirubaṇam,* பெ.(n.) **கிருபணத்துவம்** பார்க்க; see *kirubaṇattuvam.*

[Skt. kṛpaṇa > த. கிருபணம்.]

கிருபணன் *kirubaṇaṉ,* பெ.(n.) கடுங் கஞ்சன்; niggard, miser.

த.வ. ஈர்ங்கைவிதிரான்.

[Skt. kṛpaṇa > த. கிருபணன்.]

கிருபன்¹ *kirubaṉ,* பெ.(n.) **கிருபாசாரியன்** பார்க்க; see *kirubāśāriaṉ.*

[Skt. kṛpa > த. கிருபன்.]

கிருபன்² *kirubaṉ,* பெ.(n.) கௌதமர் குலத்தில் பிறந்தவன்; one who born in *Kautama's* lineage.

கிருபாகடாட்சம் *kirubā-kaḍāṭšam,* பெ.(n.) அருட்பார்வை; benign, gracious look; look of mercy, compassion.

[Skt. kṛpā+gatācia> த. கிருபாகடாட்சம்.]

கிருபாகரம் *kirubāgaram,* பெ.(n.) திருவருள்; divine grace. *"உனது கிருபாகரமேதோ" (திருப்பு.499).*

த.வ. திருவருட்கருணை.

[Skt. kṛpakaram > த. கிருபாகரம்.]

கிருபாகரன் *kirubāgaraṉ,* பெ.(n.) அருளுக்கு இருப்பிடமானவன்; the fountain of mercy or grace, as god. *"கிருபாகர ஞானாகர" (கந்தரலங்.21).*

த.வ. அருளாளன்.

[Skt. kṛuba+ākara > த. கிருபாகரன்.]

கிருபாசமுத்திரம் *kirubā-šamuttiram,* பெ.(n.) அருட்கடல்; ocean of grace, as god.

[Skt. kṛubā+samudra > த. கிருபா சமுத்திரம்.]

கிருபாசனம் *kirubāšaṉam,* பெ.(n.) அருட்செல்வத்திற்கு இருப்பிடமான கடவுள்; mercy-seat, god, as the seat of mercy and grace.

த.வ. அருட்செல்வன்.

[Skt. kṛupa+pāšaṉa > த. கிருபாசனம்.]

கிருபாசாரியன் *kirubāšāriyaṉ,* பெ.(n.) கௌரவர்கள் மற்றும் பாண்டவர்களுக்கு வில்வித்தை கற்றுக் கொடுத்த ஆசிரியர்களுள் ஒருவர் (பாரத.); a preceptor who taught archery to the *Kauravas* and *Pāṇḍavas*, one of seven *cirañciviyar.*

[Skt kṛpa+ācārya > த. கிருபாசாரியன்.]

கிருபாணம் *kirubāṇam,* பெ.(n.) வாள் (யாழ்.அக.); sword.

[Skt. kṛpāṇu > த. கிருபாணம்.]

கிருபாமூர்த்தி *kirubā-mūrtti,* பெ.(n.) அருள் வடிவானவன்; one who is the embodiment of mercy.

த.வ. அருளாளன்.

[Skt. kṛpā+moorthy > த. கிருபாமூர்த்தி.]

கிருபாளு *kirubāḷu,* பெ.(n.) உள்ளத்தில் அருள் உடையவன்; merciful, compassionate person. *"மாம்ஸத்தை மாற்றி அன்னாதிகளினால் உருசிக்கப் பண்ணிற் கிருபாளுவாவான்" (சி.சி.பர. சௌத்.ம.6).*

த.வ. அருளுள்ளமுடையான்.

[Skt. kṛpā > த. கிருபாளு.]

கிருபி *kirupi,* பெ.(n.) நான்முகன் பேரன் சதாநந்தர் பெண்; great grand daughter of *Nānmugaṉ* and *šatānandar.*

[Skt. kṛti > த. கிருபி.]

கிருபீடபாலம் *kirupīḍa-pālam,* பெ.(n.) கடல் (யாழ்.அக.); ocean.

[Skt. kṛpīṭa+pāla > த. கிருபீடபாலம்.]

கிருபை *kirubai,* பெ.(n.) அருள் (பிங்.); grace, mercy, clemency, compassion, benevolence.

த.வ. அருள்.

[Skt. kṛpā > த. கிருபை.]

கிருபைக்கண் *kirubai-k-kaṇ,* பெ.(n.) அருட்பார்வை (யாழ்.அக.); gracious or merciful look.

த.வ. அருட்கண்.

[கிருபை + கண்.]

[Skt. kṛpa> த. கிருபை.]

கிருமி[1] *kirumi,* பெ.(n.) புழு; worm, insect, maggot. *"ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்" (திருவாச.4, 14).*

த.வ. பூச்சி.

[Skt. kṛmi > த. கிருமி.]

கிருமி[2] *kirumi,* பெ.(n.) மன்னன் உசீநரனின் நான்காவது மகன்; fourth son of a king *ušīnaraṉ.*

கிருமிக்கிரந்தி *kirumi-k-kirandi,* பெ.(n.) அரிபுண் (யாழ்.அக.); canker, an eating, spreading sore.

[Skt. kṛmi+> த. கிருமிக்கிரந்தி.]

கிருமிகண்டசோழன் *kirumi-kaṇḍa-cōḻaṉ,* பெ.(n.) சோழ மன்னன்; *Cōḻa* king.

[இவன் கூரத்தாழ்வார் கண்ணைப் பிடுங்கினவன் என்பர். ஆனால் வைணவர்கள், கூரத்தாழ்வாரே இவரைப் பார்க்கக் கூடாது எனத் தம் கண்ணைப் பிடுங்கி இவன் மேல் எறிந்தார். எனவே இவனுக்குக் கிருமி நோய் உண்டாயிற்று. அதனால் கிருமிகண்டசோழன் என்ற பெயர் பெற்றான் என்பர் (அபி.சிந்.).]

கிருமிகொல்லி *kirumi-kolli,* பெ.(n.) புழுக்கொல்லி; an agent either killing or rendering powerless the intestinal germs or parasites, *vermicide* (சா.அக.).

த.வ. பூச்சிக்கொல்லி.

[கிருமி + கொல்லி.]

[Skt. krmi > த. கிருமி.]

கிருமிச்சத்துரு *kirumi-c-catturu,* பெ.(n.) 1. பலாசு; Palas tree. 2. பலாசம் விதை; palas seed.

த.வ. பூச்சிப்பகை.

[Skt. krmi+śatturu> த. கிருமிச்சத்துரு.]

கிருமிச்சுரம் *kirumi-c-curam,* பெ.(n.) நுண்ணுயிரிகளால் உண்டாகும் காய்ச்சல் வகை (மூ.அ.); fever caused by worms.

த.வ. நுண்ணுயிரிக்காய்ச்சல்.

[கிருமி+சுரம்]

[Skt. krmi > த. கிருமி.]

கிருமிச்சூலை *kirumi-c-cūlai,* பெ.(n.) நுண்ணுயிரிகளால் உண்டாகும் சூலை நோய் வகை (மூ.அ.); gnawing pain caused by intestinal worms.

த.வ. நுண்ணுயிரிவலி.

[கிருமி+சூலை.]

[Skt. krmi > த. கிருமி.]

கிருமிச்சொறி *kirumi-c-cori,* பெ.(n.) நுண்ணுயிர்களால் உண்டாகும் சொறி நோய் வகை (மூ.அ.); itching caused by worms.

த.வ. நுண்ணுயிரிசொறி.

[கிருமி+சொறி.]

[Skt. krmi > த. கிருமி.]

கிருமிசத்துரு *kirumi-śatturu,* பெ.(n.) 1. புரசம் விதை; seed of palaus tree. 2. பலாசம் விதை; seed of portia tree. 3. ஆடு தின்னாப் பாலை; worm-killer, woody. 4. ஒரு பூடு; a plant (சா.அக.).

த.வ. நுண்ணுயிரிப்பகை.

[Skt. krmi+śatturu > த. கிருமிசத்துரு.]

கிருமிநாசம் *kirumi-nāśam,* பெ.(n.) 1. குராசானியோமம் (மலை.); black henbane. 2. பலாசம் விதை (மூ.அ.); Palas seed. 3. கொடிவகை; bitter luffa. *"சுரையொடு பேய்ப்பீர்க்குஞ் சுமந்த" (பு. வெ. 3, 25).* 4. புழுக்கொல்லிப்பூடு; worm killer.

[கிருமி+நாசம்.]

[Skt. krmi > த. கிருமி.]

கிருமிநாசி *kirumi-nāśi,* பெ.(n.) செடி வகை (மலை.); tinnevelly senna.

[கிருமி+நாசி.]

[Skt. krmi > த. கிருமி.]

கிருமிநாசினி *kirumi-nāśini,* பெ.(n.) தீமை விளைவிக்கும் நுண்ணுயிரிகளைக் கொல்லப் பயன்படும் திண்ம அல்லது நீர்ம வடிவில் இருக்கும் மருந்து; germicide; antiseptic.

[கிருமி+நாசினி.]

[Skt. krmi > த. கிருமி.]

கிருமிநிசயம் *kirumi-niśayam,* பெ.(n.) எட்டு வகையான அரச நிரயங்களுள் ஒன்று (சி.போ.பா.2, 3, 1); a hell, one of eight *irāśanaragam.*

[Skt. krmi+niśaya > த. கிருமிநிசயம்.]

கிருமிமலடு *kirumi-maladu,* பெ.(n.) கருப்பையில் புழுக்கள் உண்டாவதால் உண்டாகும் மலட்டுத் தன்மை (மூ.அ.); sterility from animalculae in the uterus.

[கிருமி+மலடு.]

[Skt. krmi > த. கிருமி.]

கிருமியுணா *kirumiyuṇā,* பெ.(n.) ஒரு வகை நிரயம்; a hell where souls in the form of worms eat and are eaten by worms. *"கிருமியுணா வெனுநரகந் தனிற்புகுந்து- கிருமிகளுக்குணவாகித் தாமுமவைதின்று" (சேதுபு.தனுக்.12).*

த.வ. புழுநிரயம்.

[கிருமி+உணா.]

[Skt. krmi > த. கிருமி.]

கிருமியோமம் *kirumi-yōmam,* பெ.(n.) மருந்து வகை; a vermifuge containing omum.

[கிருமி+ஓமம்.]

[Skt. krmi > த. கிருமி.]

கிருமிரோகம் *kirumi-rōgam,* பெ.(n.) நாக்குப் பூச்சியை உண்டாக்கும் நோய் (பைஷஜ.231); worms, as a disease.

த.வ. பூச்சிநோய்.

[Skt. krmi+rōga> த. கிருமிரோகம்.]

கிருமிவை-த்தல் *kirumi-vai,* செ.கு.வி.(v.i.) புண்ணில் புழு உண்டாதல்; to breed maggots, as in a sore.

த.வ. புழுப்புண்.

[கிருமி+வை-,]

[Skt. krmi > த. கிருமி.]

கிருமுதலாடை *kirumudalāḍai,* பெ.(n.) பொடுதலை; creeping vervain (சா.அக.).

கிருவைசூரி *kiruvai-šuri,* பெ.(n.) தட்டம்மை; measles; flat variola (சா.அக.).

த.வ. பெரியம்மை.

[கிரு + வைசூரி.]

கிருனம்பீரம் *kiruṉambīram,* பெ.(n.) 1. வெங்காயம்; onion. 2. வெள்ளைப்பூண்டு; garlic (சா.அக.).

த.வ. ஈருள்ளி.

[கிருனம் + பீரம்.]



கிரேணு *kirēṉu,* பெ.(n.) சிவபத்திமை கொண்ட பெண்; pious of *šivā.*

[இவள் மக்கட்பேறு வேண்டித் தவம் செய்து கங்கையைக் குழந்தையாக அடைந்தாள். அக்குழந்தையை வியிரமலையரசன் வளர்த்தான். பின் அக்குழந்தை சிவனை மணந்தது (அபி.சிந்.).]

கிரேதம் *kirēdam,* பெ.(n.) **கிருதயுகம்** பார்க்க; see *kiruda-yugam.*

த.வ. கிரேதை.

[Skt. krta > த. கிரேதம்.]

கிரேதயுகம் *kirēda-yugam,* பெ.(n.) **கிருதயுகம்** பார்க்க; see *kiruda-yugam.*

[Skt. krta > த. கிரேதம்.]

கிரேந்தி *kirēndi,* பெ.(n.) ஏலத்தோல் (மூ.அ.); cardamom husk.

த.வ. ஏலக்காய்த்தோல்.

கிரேனிடல் *kirēṉiḍal,* பெ.(n.) அஞ்சி ஒடுங்குதற் குறிப்பு; expr. signifying startling, standing aghast, being panic-stricken.

கிரோ *kirō,* பெ.(n.) அடைமானம் (P.T.L.); pledge, mortgage, pawn.

[Persn. girwī > த. கிரோ.]

கிரௌஞ்சத்துவீபம் *kirauñja-t-tuvībam,* பெ.(n.) **கிரவுஞ்சத்தீவு** பார்க்க; see *kiravuñja-t-tīvu.*

[Skt.krauñca+tuvība>த.கிரௌஞ்சத்து வீபம்.]

கிரௌஞ்சம் *kirauñjam,* பெ.(n.) **கிரவுஞ்சம்** பார்க்க; see *kiravuñjam.*

[Skt. krauñca > த. கிரெஞ்சம்.]

கிரௌஞ்சம் *kirauñjam,* பெ.(n.) 1. ஒரு பட்டணம்; a city. 2. **கிரவுஞ்சன்** பார்க்க; see *kiravuñjaṉ.*

1. இது எமபுரிக்குச் செல்லும் வழியில் உள்ளது. இந்த இடத்திற்கு உடலை நீங்கிய ஆதன் சேர ஆறு மாதம் ஆகும் (அபி.சிந்.)

கிரௌஞ்சன் *kirauñjaṉ,* பெ.(n.) தேவர் உலகத்தவன்; heavenly men.

சௌபரி முனிவரின் மனைவி மனோமயை தனியாக இருக்கும் போது அவன் அவளின் கையைப் பிடித்தான். இதைக் கண்ட முனிவன் அவனைப் பெருச்சாளியாகுமாறு தீமொழி கூறினான். பின் இவனது வேண்டுதலால் பிள்ளையாருக்கு வாகனமாக அருள் புரிந்தார் (அபி.சிந்.).

கிரௌஞ்சாதனம் *kirauñjādaṉam,* பெ.(n.) 1. தாமரை நூல்; the 0. fibres of the stalk of the lotus. 2. திப்பிலி; long pepper. 3. தாமரைக் கொட்டை; the seed of the lotus (சா.அக.).

கிரௌரியம் *krauriyam,* பெ.(n.) கொடுமை; cruelty, hard-heartedness.

[Skt. kraurya > த. கிரௌரியம்.]

கில்-தல் (கிற்றல்) *kil-,* செ.கு.வி.(v.i.) சம்மதித்தல்; to agree, consent. *'இறைவி கிற்குமே' (தக்கயாகப்.57).*

கில்பிச(ஷ)ம் *kilbišam,* பெ.(n.) இரக்கம் (பாவம்) (கோயிலொ.45); sin.

[Skt. kilbiša > த. கில்பிச(ஷ)ம்.]

கில்லத்து *killattu,* பெ.(n.) பெரியோர் அல்லது மன்னர்களால் பரிசாகக் கொடுக்கப்படும் ஆடை; robe of honour conferred by the nobility or royalty.

[Ar. Khilat > த. கில்லத்து.]

கில்லேதார் *killēdār,* பெ.(n.) கோட்டை உசாவல் (விசாரணை) தலைவன்; commandant of a fort.

[U. qiladār > த. கில்லேதார்.]

கில *kila,* பெ.(n.) எதிர்பார்த்தல் முதலிய பொருளையுணர்த்தும் வடமொழி இடைச் சொல்; a sanskrit word signifying expectation, probability, etc. *"சுவாகதங் கிலவென்று" (திருவிளை.இரசவாத.15).*

[Port. kila > த. கில.]

கிலம் *kilam,* பெ.(n.) 1. சிதைகை; that which is ruined, dilapidated, laid waste, destroyed. *"வீடு கிலமாய்விட்டது".* 2. இழிவு (சூடா.); that which is insufficient; trifle.

த.வ. பழுது.

[Skt. khila > த. கிலம்.]

கிலவம் *kilavam,* பெ.(n.) கழுத்து (யாழ். அக.); neck.

கிலாசம் *kilāšam,* பெ.(n.) 1. சதையை மூடிக்கொண்டிருக்கும் ஏழு வகைத் தோல்களில் ஒன்று; one of the seven layers of the skin covering the muscles of the body. 2. தேமல்; a form of skin disease.

கிலாசு *kilāšu,* பெ.(n.) கப்பல் தொழிலாளி; lascar; Indian sailor.

த.வ. மாலுமி.

[U. khalāsu > த. கிலாசு.]

கிலாதன் *kilātaṉ,* பெ.(n.) இரண்யகசிபுவின் குமரன்; son of *Iraṇyakašibu.*

இவன் மனைவி தெமனி. மகன் வாதாபி. பிரகலாதனின் தம்பியான இவனுக்கு அனுக்கிலாதன் எனவும் பெயருண்டு (அபி.சிந்.).

கிலாபத்து *kilābattu,* பெ.(n.) இசுலாம் மதத்தின் தலைமைப் பதவி; caliphate.

[Ar. khilāfat > த. கிலாபத்து.]

கிலாம் *kilām,* பெ.(n.) சினம்; indignation, vexation. *"கிலாந்தோற்றச் சொல்லுகிறாள்" (ஈடு, 6, 1, 1).*

கிலிகை *kiligai,* பெ.(n.) சிற்றெலி; small rat (சா.அக.).

த.வ. சுண்டெலி.

கிலிகோலம் *kili-kōlam,* பெ.(n.) சீர்கேடு; slovenliness, disorder, confusion.

கிலிசம்பறை *kilišam-paṟai,* பெ.(n.) **கிலிகோலம்** பார்க்க; see *kili-kōlam.*

கிலிசைகெட்ட *kilišai-keṭṭa,* பெ.எ.(adj.) வேலையற்ற; idle, unemployed, good for nothing.

கிலிட்டம் *kiliṭṭam,* பெ.(n.) எளிதில் பொருள் விளங்காமையாகிய குற்றம்; obscurity of a passage, unintelligibility.

[Skt. klišṭa > த. கிலிட்டம்.]

கிலியம்பறை *kiliyam-paṟai,* பெ.(n.) **கிலிசம்பறை** பார்க்க; see *kilišam-paṟai.*

கிலிடகம் *kiliḍagam,* பெ.(n.) 1. ஒரு பூடு; a plant. 2. ஒரு நச்சுக் கிழங்குடைய பூடு; a plant with a poisonous bulbous root (சா.அக.).

கிலிபம் *kilibam,* பெ.(n.) ஆண், பெண் அல்லாதது (அலி) (உரி.நி.); person or animal that is neither male nor female, hermaphrodite.

த.வ. **பேடு.**

[Skt. klība > த. கிலிபம்.]

கிலுசிதம் *kilušitam,* பெ.(n.) வறுமை (யாழ்.அக.); poverty.

[Skt. kliśita > த. கிலுசிதம்.]

கிலுப்தம் *kilupdam,* பெ.(n.) எப்பொழுதும்; readiness, settled order, certainty.

[Skt. klpta > த. கிலுப்தம்.]

கிலேசம் *kilēšam,* பெ.(n.) துயர்; affliction, distress, pain, anguish, sorrow, grief.

[Skt. klēša > த. கிலேசம்.]

கிலேசி-த்தல் *kilēši-,* 11 செ.கு.வி.(v.i.) துன்பப்படுதல்; to be in anguish, distress, to be afflicted.

[Skt. klēšu > த. கிலேசி-த்தல்.]

கிலேசு *kilēšu,* பெ.(n.) கீழ்மை (யாழ்.அக.); lowness.

கிலேதம் *kilēdam,* பெ.(n.) உடலின் மேல் இடும் மருந்துநீர் (இங்.வை.21); lotion.

த.வ. **நீர்மமருந்து.**

[Skt. klēda > த. கிலேதம்.]

கிளப் *kiḷap,* பெ.(n.) 1. உணவகம்; restaurant; hotel. 2. பொழுதுபோக்காகக் கூடும் இடம்; recreation club. *"கிளப்பில் சீட்டு விளையாடலாம்" (க்ரியா.).*

த.வ. **சாப்பாட்டிடம்.**

கிளப்போசு *kiḷa-p-pōsu,* பெ.(n.) சோற்றுக்கடை; உணவகம்; a restaurant, an eating-house, a hotel.

[E. Club > த. கிளப்போசு.]

கிறாக்கி *kiṟakki,* பெ.(n.) விலையேற்றம்; high price.

[U. khiragı > த. கிறாக்கி.]

கிறாக்கிபண்ணு-தல் *kirākki-paṇṇu-,* செ.கு.வி. (v.i.) அருமைப்படுத்திக் கொள்ளுதல்; to affect reserve.

கிறிசு *kiṟišu,* பெ.(n.) **கிரிசுக்கத்தி** பார்க்க; see *kirišu-k-katti.*

[Malay. kris > த. கிறிசு.]

கிறித்து *kiṟittu,* பெ.(n.) இயேசு கிறித்து; christ, the messiah.

[Gr. kristos > த. கிறித்து.]

கிறித்துமசு *kiṟittumašu,* பெ.(n.) இயேசு பிறந்த நாள்; the day who birth in jesus.

[E. Chrištmas > த. கிறித்துமசு.]

கிறித்துமார்க்கம் *kiṟittu-mārkkam,* பெ.(n.) கிறித்துவ மதம்; christianity.

[கிறித்து + மார்க்கம்.]

[Gr. kristos> த. கிறித்து.]

கின்னரகண்டி *kiṉṉara-gaṇḍi,* பெ.(n.) **கின்னரகீதம்** பார்க்க; see *kiṉṉara-gīdam.*

[Skt. kinnara+kaṇṭa> த. கின்னரகண்டி.]

கின்னரகீதம் *kiṉṉara-gīdam,* பெ.(n.) யாழ் இசைக் கலைஞ(கின்னர)ர்களால் பாடப்படும் இசை; the music of the celestial minstrels. *"கின்னரகீதத்துக் கேள்வி மாந்தர்" (பெருங்.உஞ்சைக்.37, 108).*

[Skt. kiṉṉara+gīta >த. கின்னரகீதம்.]

கினாரா *kiṉārā,* பெ.(n.) ஆறு முதலியவற்றின் கரை; side, bank, shore.

[U. kinārā > த. கினாரா.]

கீகசம் *kīgašam,* பெ.(n.) உடலில் எலும்பை ஒட்டியுள்ள தசை; flesh on the bone. *"வசைகீகசமென் றிருவகையாய்த் துன்னும் புலவு" (சேதுபு. வேதாள.30).*

[Skt. Kikaša > த. கீகசம்.]

கீசதாருகம் *kīšatārugam,* பெ.(n.) மூங்கில் மரம்; bamboo tree (சா.அக.).

கீசபாதிகம் *kīša-pātigam,* பெ.(n.) நீலிச்செடி; Indigo plant (சா.அக.).

கீசவல்லி *kīša-valli,* பெ.(n.) **கீசபர்ணி** பார்க்க; see *kīša-parṇi* (சா.அக.).

கீசா *kīšā,* பெ.(n.) பொய் (யாழ்.அக.); falsehood.

கிசுதி *kišudi,* பெ.(n.) இசைக் கருவிகளுள் ஒன்றாகிய வீணை வகை (பரத.ஒழிபி.15); a kind of lute.



கீடதந்தம் *kiḍa-tandam,* பெ.(n.) நச்சுப் பற்களை உடைய விலங்கு; creature having venomous teeth (சா.அக.).

[கீடம்+தந்தம்.]

[Skt. kidam > த. கீடம்.]

கீதகோவிந்தம் *kita-kōvindam,* பெ.(n.) ஒரு வடநூல்; வடமொழி இசை நூல்; a sanskrit music book (த.சொ.அக.).

[Skt. gita+kōvinda> த. கீதகோவிந்தம்.]

கீதசாத்திரம் *kida-šāttiram,* பெ.(n.) இசை குறித்த நூல்; sciene of music.

[Skt. gita+ > த. கீதசாத்திரம்.]

கீதசாலை *kida-šālai,* பெ.(n.) இசை பயிலுங் கூடம்; hall where music is taught; music hall. *"கீதசாலையுங் கேள்விப்பந்தரும்" (பெருங்.இலாவாண.7, 131).*

த.வ. இசைக்கல்லூரி.

[கீதம்+சாலை.]

[Skt. gitā > த. கீதம்.]

கீதநடை *kita-naḍai,* பெ.(n.) நான்கு வகை மறைகளுள் ஒன்றாகிய சாம மறை (வேதம்) (திவா.); *sāmavēda,* as composed of chants.

[கீதம்+நடை.]

[Skt. gita>த.கீதம்.]

கீதம்[1] *kidam,* பெ.(n.) 1. இசைப்பாட்டு; song, chant. *"மங்கையரமுதகீதம்" (கம்பரா. கார்முக.40).* 2. இசை; melody, music. *"கீதமினிய குயிலே" (திருவாச.18, 1).* 3. வண்டு (திவா.); beetle, bee.

த.வ. இசைப்பாடல்.

[Skt. gita > த. கீதம்.]

கீதம்[2] *kitam,* பெ.(n.) 1. நெய்; ghee. 2. பழமை; oldness (த.சொ.அக.).

கீதவம் *kitavam,* பெ.(n.) ஊமத்தஞ் செடி; thorn apple tree.

த.வ. உன்மத்தஞ்செடி



கீதவீதி *kita-viti,* பெ.(n.) இசை ஒலி வருகின்ற வழி; avenue through which music sounds proceed. *"கனிந்த கீதவீதியே..... தடங்கணார்......எய்தினார்" (சீவக.2039).*

[கீதம்+வீதி.]

[Skt. gita > த. கீதம்.]

கீதவுறுப்பு *kida-v-uruppu,* பெ.(n.) இசைப்பாட்டின் கூறு (சிலப்.3, 150, உரை); limbs or component elements of a musical piece, which are four.

[கீதம்+உறுப்பு.]

[Skt. gita>த.கீதம்.]

அவையாவன; உக்கிரம், துருவை, ஆபோகம், பிரகலை.

கீதவேதம் *kita-vēdam,* பெ.(n.) நான்கு வகை மறைகளில் ஒன்றாகிய சாமமறை (வேதம்); *sāmavēda,* as composed of chants.

[கீதம்+வேதம்.]

[Skt. gita>த.கீதம்.]

கீதாங்கம் *kidāṅgam,* பெ.(n.) இசைக்கு வாசிக்கும் வாச்சியக்கூறு (சிலப்.3, 14, உரை); instrumental accompaniment to vocal music.

[Skt. gita+aṅga > த. கீதாங்கம்.]

கீதாநுகம் *kitāṉugam,* பெ.(n.) கூத்து வேறுபாடுகளுக்கிசைந்த இசைக்கூறுகளில் ஒன்று (சிலப்.3:14, அரும்.); music classification which accomodate with different pantomince (த.சொ.அக.).

கீதானுகம் *kidāṉugam,* பெ.(n.) **கீதாங்கம்** பார்க்க; see *kidāṅgam.*

[Skt. gita+aṉu-ga > த. கீதானுகம்.]

கீதி[1] *kiti,* பெ.(n.) பாடகன் (யாழ்.அக.); musician.

[Skt.gita> த. கீதி.]

கீதி[2] *kidi,* பெ.(n.) 1. பாடுகை; singing, chanting. 2. பாட்டு; song.

[Skt. giti > த. கீதி.]

கீதி[3] *kidi,* பெ.(n.) மரவகை; coromandal ebony of mysore.

கீதை *kidai,* பெ.(n.) 1. நல்ல அறங்களைக் கூறும் தெய்வப் பாடல்; sacred song or poem containing religious doctrines, by an inspired sage. 2. அருச்சுனன் பொருட்டுக் கண்ணன் போர்க்களத்தில் அறிவுரை கூறிய மொழிகள் உடையதும், 18 பகுதிகள் கொண்டதுமான மகாபாரதத்தில் அடங்கியதுமான வடமொழி அறிவு (ஞான) நூல்; a section of 18 chapters in the M*ahābārata*, containing the sacred instruction of K*ršṉa* to A*rjuṉa*. *"கண்ணன்..... ஸ்ரீ கீதையருளிச் செய்து" (மதுரைக்.753, உரை).*

[Skt. gita > த. கீதை.]

கீயாக்கணக்கு *kiyā-k-kaṉakku,* பெ.(n.) வடமொழியிலுள்ள கூட்டு மெய் யெழுத்துகளைக் குறித்து கூறும் நூல்; work dealing with conjunct consonants in sanskrit.

கீர்[1] *kir,* பெ.(n.) 1. ஒரொலிக்குறிப்பு; onom sound. 2. சொல்; word (த.சொ.அக.).

கீர்[2] *kir,* பெ.(n.) பாட்டு; verse, song. *"கீரென்று பாட்டாய் அதுக்கு நிறம் சிவப்பாகி" (திவ்.பெரியாழ்.1, 5, அவ. பக்.86).*

கீர்[3] *kir,* பெ.(n.) பாயச வகை; a semi-liquid food prepared with milk..

த.வ. கன்னலமுது.

கீர்த்தனம் *kirttaṉam,* பெ. (n.) **கீர்த்தனை** பார்க்க; see *kirttaṉai.*

[Skt. kirtaṉa > த. கீர்த்தனம்.]

கீர்த்தனை *kirttaṉai,* பெ.(n.) 1. இசைப்பாட்டு; song, psalm, hymn. 2. புகழ்ச்சி; praise.

த.வ. இசைப்பாடல்.

[Skt. kirtaṉā > த. கீர்த்தனை.]

கீர்த்தி–த்தல் *kirtti,* 11 செ.கு.வி.(v.i.) புகழுதல்; to praise, extol. *"தன்சொல்லாற் றான்றன்னைக் கீர்த்தித்த மாயன்" (திவ். திருவாய்.7, 9, 2).*

[Skt. kirti > த. கீர்த்தி–த்தல்.]

கீர்த்தி *kirtti,* பெ.(n.) புகழ்; fame, celebrity, renown, distinction, glory. *"விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்" (திருவாச.8, 8).*

த.வ. மிகுபுகழ்.

[Skt. kirti > த. கீர்த்தி.]

கீர்த்தித்தானம் *kirtti-t-tāṉam,* பெ.(n.) பிறப்பு நல்லோரை (சங்.அக.); ascendant, house of one's birth.

[Skt. kirti+tāna +> த. கீர்த்தித்தானம்.]

கீர்த்திப்பிரதாபம் *kirtti-p-piradābam,* பெ.(n.) 1. புகழும் ஆற்றலும்; fame and splendour. 2. மிகு புகழ்; lustre of fame, glory, renown.

[Skt.kirti+pra+tāpa>த. கீர்த்திப்பிரதாபம்.]

கீர்த்திபூடணபாண்டியன் *kirtti-pūḍaṉa-pāṇḍiaṉ,* பெ. (n.) அதுலகீர்த்தி பாண்டியனின் மகன்; son of *atula-kirtti-pāṇḍiyaṉ.*

கீர்த்திமதி *kirtatimati,* பெ.(n.) மன்னர் குலத்தைச் சேர்ந்த சுகனின் பெண்; daughter of king *šugaṉ* (அபி.சிந்.).

கீர்த்திமான்[1] *kirttimāṉ,* பெ.(n.) வசுதேவருக்குத் தேவகியிடம் பிறந்த குமரன்; son of *vašu-tēvā* and *tēvagi*(அபி.சிந்.).

கீர்த்திமான்[2] *kirttimāṉ,* பெ.(n.) புகழ் பெற்றவன்; celebrated person, illustrious personage.

[Skt. kirti-mān > த. கீர்த்திமான்.]

கீர்த்திலட்சுமி *kirtti-latcumi,* பெ.(n.) புகழாகிய திரு; fame personified as *lakšmi.*

[Skt. kirtti+lašmi > த. கீர்த்திலட்சுமி.]

கீர்த்திவர்த்தனசோழன் *kirtti-varttaṉa-cōḻaṉ,* பெ.(n.) ஒரு சோழ அரசன்; a *Cōḻā* king.

கீர்வாணம் *kirvāṇam,* பெ.(n.) வானுலகில் வாழும் தேவர்கள் பேசக்கூடியதாகக் கருதப்படும் வடமொழி; *šanškrit,* believed as the language of the gods.

[Skt. gir-vāṇa > த. கீர்வாணம்.]

கீரங்கீரனார் *kiraṅ-kiraṉār,* பெ.(n.) புலவர் கீரனின் மகனாகிய கீரனார்; son of *kiraṉ.*

கீலக *kilaga,* பெ.(n.) ஆண்டுகள் அறுபதில் நாற்பத்திரண்டாம் ஆண்டு (பெரியவரு.); the 42nd year of the Indian cycle of 60 years.

கீலகம் *kilagam,* பெ. (n.) கலகம்; intrigue, trouble. *'ஏவர் கீலகத்தினால்.... மெத்தவுங் காய்கிறாய்' (சீவக்.பிரபந்.சரபேந்திர.குற.17, 7).*

[Skt. kilaka > த. கீலகம்.]

கீலகை *kilagai,* பெ.(n.) கீழ்மை (யாழ்.அக.); lowness.

கீலம்கீலமாக *kilam-kilamāga,* வி.அ. (adv.) துண்டு துண்டாக; into pieces. *கீலம் கீலமாகக் கிழித்த ஓலை.*

[Skt. kila+kila> த. கீலம்கீலமாக.]

குகமுனிவர் *kuga-muṉivar,* பெ.(n.) ஒரு இருடி; a saint.

குகர்த்தமன் *kugarttamaṉ,* பெ.(n.) ஒரு மன்னன்; a king.

குகனேரியப்பமுதலியார் *kuganēriyappa-mudaliyār,* பெ.(n.) தமிழில் உபதேச காண்டம் பாடிய ஆசிரியர்; the author of the Tamil *upadēšakaṇḍam.*

குகூகண்டம் *kukū-kaṇḍam,* பெ. (n.) குயில் (யாழ்.அக.); the Indian cuckoo.

[Skt. kuhū-kaṇtha > த. குகூகண்டம்.]

குசலப்பிரசினம் *kušala-p-piraširam,* பெ. (n.) நலம் குறித்து உசாவுதல்; friendly enquiry after a person's welfare.

த.வ. நன்னலம் கேட்டல்.

குசலர் *kušalar,* பெ.(n.) 1. அறிஞர்; man of knowledge, wiseman. 2. வல்லோர்; skilful person, expert. *"அறநூலிற் குசலராகிய மாதவர்" (சேதுபு.இலக்கும்.21) (த.சொ.அக.).*

த.வ. திறவோர்.

குசன் *kušaṉ,* பெ. (n.) செவ்வாய்; the planet Mars.

த.வ. செங்கோள்.

[Skt. ku-ja > த. குசன்.]

குசாமத்தி *kušāmatti,* பெ.(n.) முகமன் (முகஸ்துதி); flattery, coaxing, wheedling. *"குசாமத்தித்தனம்".*

[U. khusāmad > த. குசாமத்தி.]

குசாரத்து *kušārattu,* பெ.(n.) கைவழி; through a person.

[U. guzāra > த. குசாரத்து.]

குசிகன் *kušigaṉ,* பெ.(n.) விசுவாமித்திரனின் தந்தையாகிய ஒரு முனிவன்; a sage, the father of *Višuvāmitra.*

[Skt. kušika > த. குசிகன்.]

குசிராத்தி *kuširatti,* பெ.(n.) கூர்ச்சர நாடு; *kūrccaranāḍu.*

த.வ. குச்சரம்.

குசும்பாவிதை *kušumbā-vitai,* பெ.(n.) குசும்ப மரத்தின் விதை; seed of false saffron tree.

[குசும்பா + விதை.]

குசுமை *kušumai,* பெ.(n.) சுதன்மன் என்னும் மறையோனின் இளைய மனைவி; younger wife of *šutaṉmaṉ.*

குடீரகம் *kudiragam,* பெ.(n.) **குடீரம்** பார்க்க; see *kudiragam.* *"குறியுறுஞ் செபத்தர் மேவுங் குடீரகங் குலவி" (வேதாரணிய. பலபத்.21).*
[**Skt.** *kutiraka* > த. *குடீரகம்.*]

குடீரம் *kudiram,* பெ.(n.) 1. குடிசை; hut, cottage. *"படகுடீரபாவம்" (த.நி.போ.115).* 2. இலைக்குடில் (பர்ணசாலை); hermitage.
[**Skt.** *kutira* > த. *குடீரம்.*]

குணாகுணம் *kuṇākuṇam,* பெ.(n.) நோயை நீக்கமுடியும் தன்மை அல்லது நீக்க முடியாத் தன்மை (யாழ்.அக.); curability or otherwise of disease.
[**Skt.** *guṇa+aguṇa* > த. *குணாகுணம்.*]

குணி *kuṇi,* பெ.(n.) வில்; bow (யாழ்.அக.).
[**Skt.** *guṇin* > த. *குணி.*]

குத்திரசங்கம் *kuttira-šaṅgam,* பெ.(n.) ஊமச்சி (நாமதீப.), நத்தை; snail.

குத்தினி *kuttiṇi,* பெ.(n.) ஒருவகைப் பட்டுச்சீலை; a kind of striped silk.
[**U.** *khutnī* >**Skt.** *khutani*> த. *குத்தினி.*]

குதப்பிரம்சம் *kuda-p-piramšam,* பெ.(n.) அண்டு தள்ளுகை (பைஷஜ.232); prolapsus.

குதாம் *kudām,* பெ.(n.) பொருட்களைப் பாதுகாத்து சேர்த்து வைக்கும் இடம்; godown.
த.வ. பண்டகசாலை, கிடங்கு.
[**U.** *gudām* > த. *குதாம்.*]

குதுகம் *kutugam,* பெ.(n.) விருப்பம் (யாழ்.அக.); desire, longing.
[**Skt.** *kautuka* > த. *குதுகம்.*]

குதூகலம் *kutūkalam,* பெ.(n.) அகக்களிப்பு; delight, rapture.
த.வ. அகமகிழ்வு.
[**Skt.** *kutūhala* > த. *குதூகலம்.*]

குதோதரி *kutōdari,* பெ.(n.) அரக்கர் இனப் பெண்; anthropomorlphous demoness.

குந்தமர் *kundamar,* பெ.(n.) ஓர் இருடி; a saint.

குந்தலம் *kundalam,* பெ.(n.) வடநாட்டில் பல்லாரியில் உள்ள நாடு; the city in North *Pallāri* (அபி.சிந்.).

குந்தாலம் *kundālam,* பெ.(n.) புள் வகை (யாழ்.அக.).; a kind of bird.
[**Skt.** *guṇḍala* > த. *குந்தாலம்.*]

குந்திரம் *kundiram,* பெ.(n.) புல்வகை (யாழ்.அக.); a kind of grass.
[**Skt.** *gundra* > த. *குந்திரம்.*]

குநகவெலி *kunaga-v-eli,* பெ.(n.) மரக்காலைப் போல் உடல் உள்ள ஒரு வகை எலி; a species of rat with a cylinderical body resembling a wooden measure.

குநகி *kunagi,* பெ.(n.) கெட்டுப் போன நகத்தை உடையவன்; one whose nails are rotten. *"சிந்திய குநகியாவான் செம் பொனைத் திருடினானும்" (சிவதரு. சுவர்க்க நரகசேட.10).*
[**Skt.** *ku-nakhin* > த. *குநகி.*]

குப்தம் *kuptam,* பெ.(n.) பூனைக்காலி; cowhage (சா.அக.).



குப்தி *kupti,* பெ.(n.) மூன்று வகை செயல்களின் அடக்கம்; restraint, as in thought, speech or deed.
[**Skt.** *gupti* > த. *குப்தி.*]

குபாகும்பர் *kupā-kumpar,* பெ.(n.) மார்வாட நாட்டுக் குயவர்; potter in *Mārvā* city.

குபாடி *kupādi,* பெ.(n.) இழிவான சொற்களைப் பேசுபவள்; woman using foul language. *'நகையால்மய லெழுப்புங் குபாடிகள்' (நூற்றெட்டுத்.திருப்பு.15).*
[**Skt.** *ku-bhāšiṇī* > த. *குபாடி.*]

குபாண்டன் *kupāṇḍaṉ,* பெ. (n.) பாணாசுரனின் அமைச்சன்; minister of P*āṇāśuraṉ* (அபி.சிந்.).

குபார் *kubār,* பெ. (n.) 1. கூச்சலிடுகை; outcry, complaint. 2. ஒவ்வாமையால் ஏற்படும் வாந்தி பேதி; cholera.

[U. gubār > த. குபார்.]

குபாரா *kubārā,* பெ.(n.) குபார் பார்க்க; see *kubār.*

குபிகை *kubigai,* பெ.(n.) 1. எள்; sesamum seed. 2. நல்லெண்ணெய்; gingelly oil (சா.அக.).

குபிதன் *kubidaṉ,* பெ. (n.) சினங் கொண்டவன்; angry man. *"இகழ்திட வவன் குபிதனாய்" (உத்தரரா. வரையெடு.67).*

[Skt. kupita > த. குபிதன்.]

குபிலன் *kubilaṉ,* பெ.(n.) அரசன் (யாழ். அக.); king.

[Skt. gupila > த. குபிலன்.]

குபினன் *kubiṉaṉ,* பெ.(n.) வலைஞன் (யாழ்.அக.); fisherman.

த.வ. மீனவன்.

[Skt. kupinin > த. குபினன்.]

குபினி *kubiṉi,* பெ.(n.) மீன் பிடிக்கும் வலை வகை (யாழ்.அக.); a kind of fishing net.

[Skt. kupini > த. குபினி.]

குபுர் *kubur,* பெ.(n.) நம்பிக்கையின்மை; disbelief. 'குபுரான காரியம் செய்தான்' (முகம்மதிய).

[Arab. kufr > த. குபுர்.]

கும்பகாரி *kumpakāri,* பெ.(n.) 1. குயத்தி; potterwoman. 2. கண்ணிலிடும் மை வகை; a kind of collyrium. 3. செம்பாடாணம் என்னும் செய்ந்நஞ்சு வகை; a mineral poison.

[Skt. kumbha-kāri > த. கும்பகாரி.]

கும்பதாசி *kumbatāsi,* பெ.(n.) 1. சங்கதூதி; procuress. 2. விலைமகள்; prostitute.

[Skt. kumbha-dāsi > த. கும்பதாசி.]

கும்பம் *kumbam,* பெ.(n.) ஒரு சிற்றூரின் காற்பங்கு அளவுள்ள ஊர் (சுக்கிரநீதி, 27); hamlet, one fourth the size of a *cirrūr.*

[Skt. kumbha > த. கும்பம்.]

கும்பம்பாலை *kumbam-pālai,* பெ.(n.) கோபுரம் முதலியவற்றின்மேல் வைக்கும் அணியழகுக் கலசம்; pitcher shaped finial as of a tower.

[கும்பம் + பாலை.]

[Skt. kumba > த. கும்பம்.]

கும்பமுத்திரை *kumba-muttirai,* பெ.(n.) முத்திரை வகை (சைவாநுட்வி.12); a hand-pose in worship.

[கும்பம் + முத்திரை.]

[Skt. kumba > த. கும்பம்.]

கும்பரேகை *kumba-rēkai,* பெ.(n.) கைவரிவகை (திருவாரூர். குற.Ms.); (palmistry) a line in palm of hand.

[Skt. kumba+rēkha > த. கும்பரேகை.]

கும்பன் *kumbaṉ,* பெ.(n.) 1. அரக்கன்; a raksasa. 2. வஞ்சகன்; libertine.

[Skt. kumba > த. கும்பன்.]

கும்பானு *kumpāṉu,* பெ.(n.) ஒரு அரக்கன்; a giant (அபி.சிந்.).

கும்பி *kumbi,* பெ.(n.) மட்பாண்டம் (யாழ்.அக.); the zodiacal sign Aquaries.

[Skt. kumbhi > த. கும்பி.]



கும்பிலன் *kumbilaṉ,* பெ.(n.) 1. திருடன்; house-breaker, theif. 2. மனைவியின் தம்பி; wife's brother, brother-in-law.

[Skt. kumbhila > த. கும்பிலன்.]

கும்பீநசம் *kumbīnasam,* பெ.(n.) பெரும் பாம்பு வகை (யாழ்.அக.); a kind of large serpent.

[Skt. kumbhinasa > த. கும்பீநசம்.]

கும்பீலம் *kumbīlam,* பெ.(n.) முதலை (யாழ்.அக.); crocodile.

[Skt. kumbhila > த. கும்பீலம்.]



கும்பை[1] *kumbai,* பெ.(n.) விலைமகள் (யாழ்.அக.); prostitute.

[Skt. kumbha > த. கும்பை.]

கும்பை[2] *kumbai,* பெ.(n.) ஓம குண்டத்தின் வேதிகை (யாழ்.அக.); enclosure round a sacrificial pit.

[Skt. kumbā > த. கும்பை.]

கும்மக்கு *kummakku,* பெ.(n.) உதவி; aid, help, assistance. *"குமுக்குப் பண்ண".*

[U. kumak > த. கும்மக்கு.]

குமாத்தா *kumāttā,* பெ.(n.) 1. செயலன்; agent, steward. 2. எழுத்தர் முதலிய வேலை பார்க்கும் கீழ்ப் பதவியி லிருப்பவன்; writer, clerk.

த.வ. எழுத்தர்.

[U. gumāshta > குமாஸ்தா>த. குமாத்தா.]

குமாரகாலம் *kumāra-kālam,* பெ.(n.) இளையபருவம்; the period of youth. *"குமார கால நிறைவுற வுய்த்து" (பெருங். நரவாண. 8, 44).*

த.வ. இளம்பருவம்.

[குமார+காலம்.]

[Skt. kumāra > த. குமார(ம்).]

குமாரவிருத்தியை *kumāraviruttiyai,* பெ.(n.) மருத்துவச்சி (யாழ்.அக.); mid-wife child's nurse.

[Skt.kumāra-byrtyā>த.குமார விருத்தியை.]

குமுதம் *kumutam,* பெ.(n.) கருப்பூரம் (யாழ்.அக.); camphor.

[Skt. kumuda > த. குமுதம்.]

குமுர்தா *kumurtā,* பெ.(n.) தட்சன் பெண்; daughter of *taṭcaṉ* (அபி.சிந்.).

குமை *kumai,* பெ.(n.) பவளம் முத்து நீங்கலாக மற்ற மணிகளை நிறுப்பதற்கு உதவும் சிறு எடை (சுக்கிர நீதி.188); smallest weight used in weighing precious stones other than corals and pearls being the weight of linseed.

[Skt. ksumā > த. குமை.]

குய்யதீபகம் *kuyyatībagam,* பெ.(n.) மின்மினி (யாழ்.அக.); fire-fly.

த.வ. எரிபூச்சி

[Skt. guhyadipaka > த. குய்யதீபகம்.]

குய்யபாசிதம் *kuyyabāsitam,* பெ.(n.) கமுக்கச் சொல் (யாழ்.அக.); secret speech.

[Skt. guhya-bhāṣitā > த. குய்யபாசிதம்.]

குர்த்தனம் *kurttaṉam,* பெ.(n.) கூத்து ஆடும் பொழுது செய்யும் உடற்செயல்களுள் ஒன்று (சிலப்.81, கீழ்க்குறிப்பு); a kind of gesticulation in dancing.

குரணம் *kuraṇam,* பெ.(n.) முயற்சி (யாழ்.அக.); effort, perseverance.

[Skt. guraṇa > த. குரணம்.]

குருதுரியம் *kuruturiyam,* பெ.(n.) முத்தாத்துமாவின் தூயநிலை; (phil.) the highest state attainable in the liberation of the soul.

[Skt. guru+turīya > த. குருதுரியம்.]

குரக்கன் *kurakkaṉ,* பெ.(n.) கேப்பை (மலை.); ragi, a millet, *Eleusine coracana.*

த.வ. கேழ்வரகு.

[Sinh. kurrakan > த. குரக்கன்.]

குரதாரம் *kuradāram,* பெ.(n.) எட்டு வகையான மாநிரயங்களுள் ஒன்று (சி.போ. பா.2, 3); a hell, one of eight *magā-naragam.*

த.வ. பெருநிரயம்.

குராசானி *kurācāṉi,* பெ.(n.) குரோசானி யோமம் (மூ.அ.) என்னும் ஓமம் விளையும் ஒருவகை மூலிகைச் செடி; black henbane.

குராசானியோமம் *kurāšāṉiyōmam,* பெ.(n.) குராசானி என்னும் ஓமம் உண்டாகும் ஒருவகை மூலிகைச் செடி; black henbane.

குராசோ *kurācō,* பெ.(n.) தென் அமெரிக்காவிலுள்ள ஒருவகைப் பறவை யினங்களைச் சார்ந்தது; the bird belonged to a South America's bird.

இது ஒரு வான்கோழி அளவில் இருக்கும் என்பர். குரோசா தீவில் வாழுகின்றதால் இப்பெயர் பெற்றது (அபி.சிந்.).

குரான் *kurāṉ,* பெ.(n.) முகமது நபி மூலமாக இறைவனால் அருளப்பட்டதாகக் கூறப்படும் மறை நூல்; *korāṉ* (க்ரியா.).

குரூப்பியம் *kurūpiyam,* பெ.(n.) துத்தநாகம்; zinc.

குரூபகூபகம் *kurūba-kūbagam,* பெ.(n.) வேறுபாட்டமைப்பு கொண்ட (விகாரப்பட்ட) இடுப்பு; a deformed pelvis, especially in a female distorted pelvis.

த.வ. சப்பாணிஇடுப்பு

[Skt. krupa+kupakam]

குரூபசன்மம் *kurūpa-šaṉmam,* பெ.(n.) வேறுபாடுடைய (விகாரப்) பிறப்பு; monster birth.

த.வ. கொடுந்தோற்றப்பிறப்பு

குரூபபிண்டம் *kurūba-pinḍam,* பெ.(n.) வேறுபாடான (விகாரமான) பிண்டம்; monster fotus.

த.வ. கொடும்பிண்டம்

[குரூப + பிண்டம்.]

[Skt. kurūba > த. குரூப.]

புள் > (பிள்) > பிண்டு > பிண்டம்.

குரூபம் *kurūpam,* பெ. (n.) 1. இயல்பிலிருந்து மாறுபட்ட (விகாரமான) உருவம், உறுப்புக்கேடு; deformity in features, in limbs. 2.அழகின்மை; ugliness.

த.வ. கொடுஉரு.

[கு + ரூபம்.]

[Skt. ku- > த. கு.]

உருத்தல் = தோன்றுதல். உரு = தோற்றம், வடிவம், வடிவுடைப் பொருள், உடல். உரு → உருவு → உருவம்.

[த. உருவம் > Skt. rūpa(வ.வ.1.92)]

வடமொழியில் அழிகேடு, அவமதிப்பு, குறைபாடு, குறை, சிறுமை, தடை, பழிக்கூறு, இகழ்ச்சி போன்ற பொருளுடன் 'கு' முன்னொட்டு இருக்கிறது.

குரூபி *kurūpi,* பெ.(n.) இயல்பிலிருந்து மாறுபட்ட உருவமுள்ளவ-ன்-ள்; ugly, ill-shaped, deformed person.

த.வ. சப்பாணி.

[Skt. ku- > த. கு.]

த. உருவம் > Skt. rūpa > rūpin > த. ரூபி.

குரூரகோட்டம் *kurūra-kōṭṭam,* பெ.(n.) கழிச்சல் (பேதி) மருந்தாலும் அசையா கெட்டிக் குடல்; costive bowels unaffected by even strong purgatives.

த.வ. கல்குடல்.

[குரூர + கோட்டம்.]

குள் > கொள் > கோள் > கோடு > கோட்டம்.

குரூரகோட்டி *kurūra-kōṭṭi,* பெ.(n.) கற் குடலோன்; one with costive bowels.

குரூரம் *kurūram,* பெ.(n.) 1. கொடுமை (உரிநி); cruelty, savageness. 2. வேறுபாடு (விகாரம்); ugliness.

த.வ. கடூரம்.

[Skt. krūra > த. குரூரம்.]

வடமொழியில் kravi என்னும் மூலத்திலிருந்து பிறந்த krūra என்னும் சொல்லிற்கு ஊறு, புண், ஊறுபாடு, வெம்புண், நோவு, தீங்கு, இரக்கமற்ற, கடுப்பான, முரண்பாடான போன்ற பலபொருள்கள் உள்ளன. (மா.வி.). இவற்றுள் கொடுமை வேறுபாடு ஆகிய பொருள்களிலேயே இச்சொல் தமிழில் வழக்கூன்றியுள்ளது.

குரூரமருந்து *kurūra-marundu,* பெ.(n.) 1. கொடிய மருந்து; any medicine of a virulent type. 2. வேகமான மருந்து; drastic medicine. 3. உறைப்பான மருந்து; medicine with burning or pungent, acrimonious medicine.

த.வ. கடுமருந்து.

[குரூர + மருந்து.]

[Skt. kurūra > த. குரூர.]

மரு → மருந்து.

குரூரமாவு *kurūra-māvu,* பெ.(n.) கொல்ல மாவு; penni-nerved cinnamon - machilus maerantha.

[குரூர + மாவு.]

[Skt. kurūa > த. குரூர.]

மா → மாவு.

குரூரவதை *kurūra-vadai,* பெ.(n.) துன்புறுத்திக் கொல்லுகை (சித்திரவதை); cruel butchery, in human murder.

த.வ. துன்புறுத்தல்

[Skt. krūra+vatai > த. குரூரவதை.]

குரூரவாந்திபேதி *kurūra-vāndi-pēdi,* பெ.(n.) கொடிய கக்கல் கழிச்சல் (வாந்தி பேதி); cholera of a virulent or severe type - cholera morbus.

த.வ. கடுங்கக்கல் கழிச்சல்.

குரூரன் *kurūraṉ,* பெ.(n.) கொடியவன்; cruel person.

த.வ. அரம்பன்.

[Skt. krūra > த. குரூரன். 'ன்' ஆ.பா.ஈறு.]

குரூராசயன் *kurūrāsayaṉ,* பெ.(n.) ள பார்க்க; see *kurūra-kōṭṭi.*

குரூராட்சம் *kurū-rāṭcam,* பெ.(n.) ஆந்தை; owl.

குரோசாணியோமம் *kurōsāṇi-y-ōmam,* பெ. (n.) **குராசானியோமம்** பார்க்க; see *kurācāṉi-yōmam.*

[U. khurāsāni+yōmam > த. குரோசாணி யோமம்.]

குரோசானி *kurōśāṉi,* பெ. (n.) **குரோசானியோமம்** பார்க்க; see *kurōśāṉi-yōmam.*

குரோசானியோமம் *kurōsāṉiyōmam* பெ. (n.) குராசான்தேசத்தில் விளையும் ஓமம்; *omum* plant growing in *kurāsāṉ.*

குரோசானியோமப்பத்திரி *kurōśāṉi-yōma-p-pattiri,* பெ. (n.) குராசான் நாட்டில் விளையும் ஓமச் செடியின் இலை (இது ஒரு கற்ப மூலிகை); leaves of *omum* plant growing in *kurāsāṉ,* a re-juvenating drug.

[குரோசான்+ஓமம்+பத்திரி.]

குரோட்டுசிரிடம் *kurōṭṭu-siriḍam,* பெ. (n.) முழங்கால் வீக்கம்; synovitis of the knee-joints.

த.வ. மூட்டு வீக்கம்.

குரோட்டுபலம் *kurōṭṭu-palam,* பெ.(n.) 1. நாட்டு வாதுமை; Indian almond *teminalia catappa.* 2. ஒரு பெரியமரம்; relnut tree. 11. செகுன்றாவி. (vt)

குரோடீகரி–த்தல் *kurōḍi-kari-,* பெ.(n.) முறைப்படுத்துத் தொகுத்தல்; to systematise and summarise.

த.வ. முறைப்படுத்தல்.

[Skt. krōdikṛ-, > த. குரோடீகரி–த்தல். 'தல்' தொ.பெ.ஈ.]

குரோதபரணி *kurōda-parani,* பெ.(n.) கண்டங் கத்தரி; prickly night shade - solanum jacquini.



குரோதம்[1] *kurōdam,* பெ.(n.) 1. சினம் (கோபம்); anger, wrath. *"குரோதமே குணமாயிருந்தவர்" (சி.சி.பர.லோகா. மறு. 29).* 2. செற்றம், காழ்ப்புணர்ச்சி; malice, rancour. 3. காய்ச்சல்; fever.

த.வ. வன்மம்.

[Skt. krōdha > த. குரோதம்.]

குரோதம்[2] *kurōdam,* பெ.(n.) மார்பு; breast, chest.

[Skt. krōda > த. குரோதம்.]

குரோதவல்லபம் *kurōda-vallapam,* பெ. (n.) ஒரு வகைக் கோரை; a variety of cyperus.

குரோதன்[1] *kurōdan,* பெ.(n.) 1. ஒரு வகைச் கோழை (சிலேட்டுமம்)க் கூறு; a form of phlegmatic humour or tendency. 2. கோழை மிகுதியினால் சினம் கொள்பவன்; a man angry, because of his phlegmatic tendency.

குரோதன்[2] *kurōdan,* பெ. (n.) சினம் கொண்டவன் (கோபமுள்ளவன்) (வீரபத்திரன்.) (சூடா.); Virabhadra, as being wrathful.

த.வ. காய் சினத்தன்.

[Skt. krōda > த. குரோதம் > குரோதன்.]

'ன்' ஆ.பா.ஈறு

குரோதன *kurōdana,* பெ.(n.) அறுபதாண்டு வட்டத்தில் ஐம்பத்தொன்பதாம் ஆண்டு (வருடம்); the 59th year of the Jupiter cycle of 60 years.

[Skt. krōdhana > த. குரோதன.]

குரோதனி *kurōdani,* பெ. (n.) காமங்கொள்ளும் பெண் (காமி); a passionate or amorous woman.

த.வ. காமி.

குரோதி[1]**-த்தல்** *kurōdi-,* 11 செ.கு.வி.(v.i.) செற்றங் கொள்ளுதல்; to bear rancour.

த.வ. சீறுதல்.

[Skt. krōdha-, > த. குரோதி-.]

குரோதி[2] *kurōdi,* பெ. (n.) செற்றங் கொண்டவன்-ள்; rancorous person.

த.வ. சீறாடி, சீறாளி.

[Skt. krōdhin > த. குரோதி.]

குரோதி[3] *kurōdi,* பெ.(n.) அறுபதாண்டு வட்டத்தில் முப்பத்தெட்டாம் ஆண்டு (வருடம்); the 38th year of the Indian cycle of 60 years.

[Skt. krōdha > த. குரோதி.]

குரோதிமுகம் *kurōdi-mugam,* பெ. (n.) காண்டா விலங்கு; rhinoceros.

த.வ. கல்யானை.

குல் *kul,* பெ.(n.) மொத்தம்; all, total (C.G.).

[U. kull > த. குல்.]

குல்கந்து *kulkandu,* பெ.(n.) சர்க்கரை அல்லது தேன் கலந்து பக்குவப்படுத்திய முளரி (ரோசா)ப்பூ இதழ்; a confection of rose prepared in sugar or honey-candied rose.

த.வ. தேன்முளரி.

[Pers. gul+Ar. gand > த. குல்கந்து]

குல்பேரிசு *kulpērisu,* பெ.(n.) மொத்தத் தீர்வை; total revenue.

[U. kul-bāris > த. குல்பேரிசு]

குல்மகேது *kulmakēdu,* பெ.(n.) ஆரை; sorrel.

குல்மரோகம் *kulmarōkam,* பெ.(n.) மண்ணீரல், ஈரல் முதலியவற்றில் வீக்கம் கண்டு அதனால் ஏற்படும் செரிமானக் கோளாறு (அசீரணம்) முதலிய குணங்கள்; indigestion and its consequent symptoms, due to the enlargement of the spleen, liver etc.- abdominal tumor.

த.வ. செரியாநோய்.

குல்மவாதம் *kulmavādam*, பெ. (n.) மண்ணீரலைப் பற்றிய ஊதை (வாத) நோய்; a disease of the spleen.

த.வ. ஈரல் ஊதை.

குல்மாசம் *kulmāšam*, பெ. (n.) 1. கழுநீர், lotion with which wounds are cleaned 2. புளித்த கஞ்சி; sour - gruel. 3. ஒரு வகை மொச்சை; a kind of beans - *Dolichos genus*.

குல்மால்பண்ணு-தல் *kulmāl-paṉṉu-*, 5 செ.கு.வி. (v.i.) 1. புரட்டுச் செய்தல் (இ.வ.); to cheat. 2. குழப்பஞ் செய்தல்; to create a hubbub.

த.வ. தகிடுதத்தம் செய்தல், தக்கடி செய்தல்.

[குல்மால் + பண்ணு-]

[U. gulmāl > த. குல்மால்.]

குல்யம் *kulyam*, பெ.(n.) **குல்லியம்** பார்க்க; see *kulliyam*.

குல்லகி *kullagi*, பெ.(n.) பூலாச்செடி; black money shrub.

குல்லயம்[1] *kullayam*, பெ.(n.) 1. பிட்டம்; buttocks. 2. இறைச்சி (மாமிசம்); flesh, muscle.

குல்லயம்[2] *kullayam*, பெ.(n.) கருங்குவளை; blue nelumbo.

குல்லரிச்சோறு *kullari-c-coru.*, பெ.(n.) கற்றாழைச்சோறு; aloe pulp.

குல்லா[1] *kullā*, பெ.எ.(adj.) வெளியான; open, plain, not hidden.

[U. khulā > த. குல்லா.]

குல்லா[2] *kullā*, பெ.(n.) 1. தலைக்கவிப்பு; a kind of cap, skull-cap, night cap, fez. *"குல்லாவும் தொங்கற் பரியட்டமாகப் பட்டும் பருத்தியும்" (கோயிலொ. 36).* 2. படகின் பாய்மரத்தைக் கட்டுங்கயிறு (யாழ்ப்.); out-rigger of a boat. 3. கவிப்பு (குல்லா)த் தோணி (வின்.); boat or dhony with an out-rigger.

த.வ. கவிப்பு.

[U. kulāh > த. குல்லா]



குல்லாச்சிப்பாய் *kullā-c-cippāy*, பெ.(n.) காவல் துறையினன்; lit. one who wears a kullā, policeman.

குல்லாச்சேவகன் *kullā-c-cēvagaṉ*, பெ. (n.) **குல்லாச்சிப்பாய்** பார்க்க; see *kullā-c-cippāy*.

[U. kulla > த. குல்லா.]

[Skt. šēvaka > த. சேவகன்.]

குல்லாப்போடு-தல் *kullā-p-pōḍu-*, 9 செ.குன்றாவி.(v.t.) ஏமாற்றுதல்; lit., to cap one, to cajole coax.

[குல்லா + போடு-,]

[U. kullā > த. குல்லா.]

குல்லாய் *kullāy*, பெ.(n.) **குல்லா** பார்க்க; see *kullā*.

[U. kulla > த. குல்லாய்.]

குல்லாயிட்டுப்பிறத்தல் *kullāyiṭṭu-p-piṟattal*, பெ.(n.) முகத்தில் சவ்வு மூடிப் பிறக்கை; birth of child with a piece of the amniotic membrance oceasionally covering its face like a veil being born with a caul.

த.வ. மூடுமுகப் பிறப்பு.

[குல்லா + இட்டு + பிறத்தல்.]

[U. kulla > த. குல்லா.]

குல்லாலி *kullāli*, பெ. (n.) 1. எல்லாம் வல்லவன் (சர்வ சக்தன்); the omnipotent. 2. திறமையானவன் (சாமர்த்தியசாலி); clever person. *'வைப்பு நிசமாச்சோ குல்லாலி நீயோ' (விறலி விடுதூது. 788).*

த.வ. திறலன்.

[Ar. kulāli > த. குல்லாலி.]

குல்லிகம் *kulligam,* பெ.(n.) சிவப்புக் குன்றிமணி; crab's eye - abrus precatorius.

த.வ. செங்குன்றி.

குல்லியம் *kulliyam,* பெ. (n.) எலும்பு; bone.

குல்லோசிதம் *kullōšidam,* பெ.(n.) பூனைக் காஞ்சொறி; cowhage - tragia cannabira.

குல்வார் *kulvār,* பெ.(n.) குடியானவருடன் தனித்தனியே செய்யும் ஒப்பந்தம்; individual settlement with ryots. (C.G.119).

த.வ. உழவர் ஒப்பந்தம்.

[U. kuḷwār > த. குல்வார்]

குலக்கினி *kula-k-kiṉi,* பெ.(n.) ஒருவகை அம்மை நோய்; a kind of small pox in which the scabs fall off.

குலகா *kulakā,* பெ. (n.) பேய்ப்புடல் (மலை); wild snake - gourd.

குலசன் *kulašaṉ,* பெ.(n.) நற்குலத்தோன்; man of respectable family.

த.வ. குடிப்பிறப்பளான்.

*[**Skt.** kula-ja > த. குலசன்]*

*குல → குல → குலவு. குலவுதல் = கூடுதல். குல் → குலம் : கூட்டம், குடும்பம், வகுப்பு, குலப்பிரிவு, இனம். த. குலம் > **Skt.** kula. (வ.வ 1 : 127.*

*[**Skt.** kula >kulaja > த. குலசன்.]*

'ன்' ஆ. பா.ஈறு.

குலசுவேதகன் *kula-suvēdagaṉ,* பெ.(n.) குறட்டைக் கிழங்கு; the pulp of mussel shell creeper.

குலஞ்சம் *kulañjam,* பெ.(n.) அரத்தை; galangal- *alpinia galanga.*

குலடன் *kulaḍaṉ,* பெ.(n.) ஏற்பாரான்பிள்ளை (சுவிகார புத்திரன் (வின்.)); adopted son.

த.வ. ஏற்புப்பிள்ளை.

குலத்தன் *kulattaṉ,* பெ.(n.) நற்குலத்தோன்; man of good family or birth.

த.வ. குலமகன்.

*[குல் → குலம் > **Skt.** kulasta > த. குலத்தன்.]*

குலத்திரி *kulattiri,* பெ.(n.) 1. கற்புக்கரசி (பதிவிரதை); chaste woman. 2. மனைவி (வின்.); the lawful wife.

த.வ. குலமகள்.

*குல் → குலம் > **Skt.** kula.*

*[**Skt.** kulastrī > த. குலத்திரி.]*

குலத்துருமம் *kula-t-turumam,* பெ.(n.) வெடியுப்பு; pottasium nitrate.

குலநர்சகம் *kula-naršagam,* பெ.(n.) ஒட்டகம் (யாழ்.அக.); camel.



குலப்பசிமாது *kulappaši-mādu,* பெ.(n.) சீந்திற் கொடி; moon - creeper - meniapermum cordifollum.

குலபௌ *kulapau,* பெ.(n.) கணுக்கால்; ankle.

குலவியூகம் *kulaviyūgam,* பெ. (n.) படையணிகளுளொன்று(நவவியூகத்தொன்று) (சௌந்த. 1, உரை); a kind of battle-array, one of nava-viyukam (q.v.).

குலாசலம் *kulāsalam,* பெ.(n.) பனிமலை (அட்டகுலபர்வதம்); chief mountain ranges of *Jambu-dvipa.*

[Skt. kula+a-cala > த. குலாசலம்.]

குலாசா *kulāšā,* பெ.எ.(adj.) பரந்த; spacious, roomy, wide.

[U. khulāsa > த. குலாசா.]

குலாசாரம் *kulāšāram,* பெ.(n.) ஒரு குடும்பம் அல்லது ஒரு பிரிவினர்க்கான ஒழுக்க நடைமுறை, குலவொழுக்கம்; established or time honoured custom or usage of a family or caste.

த.வ. குடிப்பண்பு.

[Skt. kula+ā-cāra > த. குலாசாரம்.]

குல் → குல → குலவு. குலவுதல் = கூடுதல். குல் → குலம் = கூட்டம், குடும்பம், வகுப்பு, குலப்பிரிவு, இனம். த. குலம் > Skt. kula. (வ.வ.1 : 127)..

குலம் + Skt. ā-cāra - குலாசாரம் வடமொழிப் புணர்ப்பு.

குலாசாரியன் *kulāsāriyan,* பெ.(n.) குலகுரு; family preceptor or priest.

த.வ. குடிஆசான்.

[த. குலம் > Skt. kula.]

[Skt. ācārya > த. ஆசிரியன். 'ன்' ஆ.பா.ஈறு]

குலாசாரியன் வடமொழிப் புணர்ப்பு.

குலாட்டு *kulāttu,* பெ.(n.) 1. மகிழ்ச்சி; joy. 2. கிளர்ச்சி (உற்சாகம்); enthusiasm.

குலாதனி *kulādani,* பெ.(n.) கடுரோகினி (மலை.); christmas rose.

குலாதிக்கன் *kulādikkan,* பெ.(n.) குடும்பத்தில் உயர்ந்தவன், சிறந்தவன் (குலசிரேஷ்டன்) (வின்.); chief man of the family.

த.வ. குடித்தலைவன்.

[த. குலம் > Skt. kula.]

[Skt. kula+adhika > த. குலாதிக்கன்.]

குலாதினி *kulādini,* பெ.(n.) **குலாதனி** (தைலவ. தைல. 1) பார்க்க; see *kulādani.*

[Skt. šakulādani > த. குலாதினி.]

குலாப்சான் *kulāp-sān,* பெ.(n.) இனிப்புப் பணியாரவகை (இ.வ); a kind of confectionery.

த.வ. பாகுபணியாரம், இன்மிதவை.

[Ar. gulāb+jāmun > த. குலாப்+சான்.]

குலாபி *kulābi,* பெ.(n.) **குலாபு** பார்க்க; see *kulābu.*

[U. gulāba > த. குலாபி.]

குலாபிமானம் *kulābimānam,* பெ.(n.) பிறந்த குடியிடத்துக் கொள்ளும் பற்று; love of one's family or caste.

த.வ. பிறந்தகப்பற்று.

[குல(ம்) + அபிமானம்.]

[த. குலம் > Skt. kula.]

[Skt. abhimāna > த. அபிமானம். வடமொழிப் புணர்ப்பு.]

குலாபு *kulābu,* பெ.(n.) 1. சிவப்பு முளரி (ரோசா), முட்செவந்தி; damask rose. 2. பன்னீர்; rose-water.

த.வ. செம்முளரி.

[U. gulāba > த. குலாபு.]

குலாபுசாயம் *kulābušāyam,* பெ.(n.) முளரி (ரோசா) நிறச் சாயம்; rose colour.

த.வ. முளரிச்சாயம்.

குலாபுப்பூ *kulābu-p-pū,* பெ.(n.) முளரி (ரோசா)ப்பூ; rose flower.

[குலாபு + பூ.]

[U. gulābu > த. குலாபு.]

குலாபுப்பூவித்து *kulābu-p-pū-vittu,* பெ.(n.) அரச (இராச)ப் பூ அல்லது முளரி (ரோசா)ப்பூ விதை; rose seed.

த.வ. முளரி வித்து.

[குலாபு + பூ + வித்து.]

[U. gulābu > த. குலாபு.]

புகு > பூ, விந்து > வித்து.

குலாபூ *kulāpū,* பெ.(n.) அடுக்கு முளரி (ரோசா) இதழ்; cabbage rose petal.

த.வ. முளரி இதழ்.

[குலா + பூ.]

[U. gulā > த. குலா.]

குலாம் *kulām,* பெ.(n.) அடிமை; slave, menial servant. *'அந்தப் பிரபுவுக்கு அவன் குலாமாயிருக்கிறான்'.*

[U. gulāma > த. குலாம்.]

குலாமர் *kulāmar,* பெ.(n.) பணத்திற்கு அடிமையானவர், இவறன்மார் (உலோபிகள்); misers, as slaves to money. *"இச்செல்வம் .... கொடுக்கறியா திறக்குங் குலாமருக்கு" (பட்டினத். திருப்பா. திருவே. மா. 7).*

த.வ. தொழும்பர்.

[U. gulāma > த. குலாமர்.]

குலாயம் *kulāyam,* பெ.(n.) 1. பறவைகட்டுங் கூடு; bird's nest. *"சேனந் தனது குலாயெந்தனில்" (கைவல்ய. சந். 124).* 2. மக்களாற் செய்யப்படும் பறவைக் கூடு (பிங்.); bird's cage.

[Skt. kulāya > த. குலாயம்.]



குலாயனம் *kulāyanam,* பெ.(n.) **குலாயம்**[2] (திவா.) பார்க்க; see *kulāyam.*

[Skt. kulāyana > த. குலாயனம்.]

குலாரி *kulāri,* பெ.(n.) ஒரு வகை வண்டி (வின்.); chariot, Indian coach.

த.வ. குடாரி.

க. குலாரு; ம. குலால்.

[Mhr. khulā + த. குலாரி.]

குலால் *kulāl,* பெ.(n.) 1. சிவப்பு; redness. 2. வடநாட்டில் அறுவடைக் காலத்தில் கொண்டாடப்படும் (Holi) பண்டிகையில் பயன்படுத்தும் ஒருவகைச் செந்நிறப் பொடி (இ.வ.); red powder thrown at the time of *Hōli* festival.

[U. gulāl > த. குலால்.]

குலால்வண்டி *kulāl-vaṇḍi,* பெ.(n.) **குலாரி** (வின்.) பார்க்க; see *kulāri.*

[குலால் + வண்டி.]

[Mhr. kulāl > த. குலால்.]

வண்டு > வண்டி = சக்கரத்தையுடைய ஊர்தி.

குலிகாயம் *kuli-kāyam,* பெ.(n.) ஒரு வகை நீர் வாழ் விலங்கு; an aquatic animal.

குலிசத்துருமம் *kuliša-t-turumam,* பெ.(n.) ஒரு வகைக் கள்ளி; opuntia tree.

குலிசம் *kulišam,* பெ.(n.) நிரயம் வகைகளுளொன்று (நரக விசேடம்) (சிவதரு. சுவர்க்க நரக. 109); a kind of hell.

குலீனன் *kulīnan,* பெ.(n.) உயர்குலத்தோன் (திவா.); man of noble birth.

த.வ. குடிப்பிறப்பாளன்.

[Skt. kulina > த. குலீனன்.]

குலுத்தாகிதம் *kulu-t-tāgidam,* பெ.(n.) பூஞ் சாந்துப் பட்டை; a bazzara drug.

குலேநிலோபர் *kulēnilōpar,* பெ.(n.) வெண்டாமரைப் பூ; white lotus flower - *nelumbium speciosum.*

குலைகீசம் *kulai-kīšam,* பெ.(n.) ஆட்டுலா மரம்; a kind of tree.

குலோடி *kulōḍi,* பெ.(n.) தொப்புள் பகுதி; navel region.

குலோப்சாமூன் *kulōp-jāmun,* பெ.(n.) மைதாமாவைச் சில உருண்டைகளாக உருட்டிப் பொரித்து சருக்கரைப் பாகில் (சீராவில்) போட்டு ஊறவைத்துச் செய்யும் ஓர் இனிப்பு வகை; brownroasted-balls soaked in sugar treacle.

த.வ. பாகுபணியாரம்.

[Ar. gulābjāmun > த. குலோப்ஜாமூன்.]

குலோமிசை *kulōmišai,* பெ.(n.) வசம்பு; sweet-flag -*calamus indicus.*

குவசிமரம் *kuvaši-maram,* பெ.(n.) ஐரோப்பிய நாட்டு மரவகை; jamaica quassia - quassic excelga, a native of Europe.

குவர் *kuvar*, பெ.(n.) மேலாக மூடும் பாய் (பாய்மரப் பாய்க்கு மேலுள்ள பாய்); sky-sail. (M.Navi. 84).

த.வ. மீப்பாய்.

[E. cover > த. குவர்.]

குவலயம் *kuvalayam*, பெ.(n.) நிலவுலகம்; the earth, world. *"குவலய மிசைக் குப்புற்று" (கந்தபு. தாரக. 51).*

த.வ. உலகம்.

[கு + வலயம்.]

[Skt. ku- > த. கு.]

வள் → வளை → வளையம் = வட்டம், வளையல்.

[த. வளையம் > Skt. valaya. (வ.வ. 2 : 85)]

குவலயம்[2] *kuvalayam*, பெ.(n.) 1. நெய்தல் (திவா.); white Indian water - lily. 2.கருங்குவளை; blue nelumbo. *"குவலியத் திருமலர்" (சூடா.).* 3. செங்குவளை (வின்.); purple Indian water lily.

[த. குவளை > Skt. kuvala, kuvalaya > த. குவலயம்.]

குவலையம் *kuvalaiyam*, பெ.(n.) 1. நீலோற்பல மலர்; blue Indian water lily. 2. அரக்காம்பல், செவ்வாம்பல்; red water - lily.

குவாகசாரவரிட்டம் *kuvāga-śāra-varittam*, பெ. (n.) சீமைப்பிசின் கொண்டு அணியமாக்கிய அரிட்டம்; ammonlated tincture of gulacum.

த.வ. பிசினி.

குவாதோத்பவம் *kuvā-tōtpavam*, பெ.(n.) கொதிக்க வைத்தது; produced as collyrium.

த.வ. கடுங்காய்ச்சு.

குவாமா *kuvāmā*, பெ. (n.) கூவைக் கிழங்கிலிருந்து எடுக்கப்படும் மாவு; Indian arrow-root flour.

த.வ. குச்சுவள்ளி மாவு.

குவிலேசம் *kuvi-lēšam*, பெ.(n.) கருங்கொள்; black gram.

குவேகசுமரம் *kuvēkasumaram*, பெ.(n.) ஓக்கு மரம்; oak tree.

குவைனா *kuvainā*, பெ.(n.) கொய்னா; quinine.

குளவன் *kulavan*, பெ.(n.) முருகக் கடவுள்; god Murukan. *'குளவன் வீற்றிருந்த வளர்புகழ்க் குன்றமும்' (வீரவனப்பு. திருநாட்டு. 23).*

குளிகாசித்தி *kuligā-sitti*, பெ.(n.) இதளியம் (இரச) குளிகை முதலியவற்றாற் பெறக்கூடியதாகக் கருதும் வான்வெளியில் பறக்கும் மிகு ஆற்றல் (ஆகாசகமன சக்தி) (வின்.); the power of flying through the air at an enormous speed believed to be acquired by means of mercurial or other pills.

த.வ. குளிகைப்பேறு.

[குளிகா + சித்தி.]

குளம் → குளிகை = உருண்டை மாத்திரை.

[த. குளிகை > Skt. gulikā > த. குளிகா.]

சித்து → சித்தன் = அறிவன், முக்கால அறிவுள்ள முனிவன். சித்தன் ஆற்றலைத் தமிழிற் சித்து என்பதே மரபு (வ.வ.1 : 148).

சித்து → சித்தி. த. சித்தி > Skt. siddhi.

குளிசதோசம் *kulisa-dōsam*, பெ.(n.) கருப்பமாதலை வேண்டும் மகளிர் குளிசங்கட்டிக் கொள்ளும் பொழுது எதிர்ப்பட்ட குழந்தைகளுக்கு வரும் ஒரு வகை நோய் (சீவரட். 221); a child's ailment believed to be the result of encountering a woman when an amulet is fastened on her for favouring pregnancy.

த.வ. குளிசநோய்.

[குளிசம் + தோசம்.]

குளம் → குளிகை = உருண்டை மாத்திரை.

[குளிகை > Skt. gulikā > த. குளிசம்.]

[Skt. dōsha > த. தோசம்.]

குளோப்பர் *kuḷōppar,* பெ.(n.) உருண்டை வடிவாய்த் தொங்கும் ஒருவகைக் கண்ணாடி விளக்கு; globe lamp.

த.வ. கோளவிளக்கு.

[E. globe > த. குளோப்பர்.]



குளோப்பு *kuḷōppu,* பெ.(n.) **குளோப்பர்** பார்க்க; see *kuḷōppar.*

[E. globe > த. குளோப்பு.]

குளோப்புக்கொன்னை *kuḷōppu-k-konnai,* பெ.(n.) யானைப் புளிய மரம்; elephant tamarind tree.

த.வ. பப்பரப்புளி, பொந்தம், புளிமரம், பூரிமரம்.

குறுமா *kuṟumā,* பெ.(n.) கூட்டாணம் (குழம்புணவின் வகை); a kind of stew seasoned with condiments.

த.வ. கூட்டாணம்.

[U. kormā > த. குறுமா.]

குறோகணத்தி *kuṟō-kaṇatti,* பெ.(n.) **காக்கணத்தி** பார்க்க; see *kākkaṇatti.*

குனட்டை *kuṇaṭṭai,* பெ.(n.) 1. குறும்பு; bomischief, pranks. 2. நோய் கொடியதாக மாறுகை; bounfavourable turn, as of a disease.

க. குனஷ்டா; ம. குனஷ்டம்.

[Skt. ku-naṣṭa > த. குனட்டை.]

குனா *kuṇā,* பெ.(n.) குற்றம் (வின்.); fault, crime.

[U. gunāh > த. குனா.]

குனாசகம் *kuṇāšagam,* பெ.(n.) 1. சிறுகாஞ்சொறி (மலை.); small climbing nettle.

[Skt. kunāšaka > த. குனாசகம்.]

குனாசம் *kuṇāšam,* பெ.(n.) குன்றி (மலை.); crab's eye.

[Skt. kunāša > த. குனாசம்.]

கூசா *kūsā,* பெ.(n.) (நீர், பால் முதலியவற்றை வைத்துக் கொள்ளப் பயன்படுத்தும்) புடைத்த இடைப்பகுதியும், மூடியும் கொண்ட கலன், குடக்கலம்; a small round, short-necked vessel with a lid, golet, water-monkey.

த.வ. கைச்சாடி.

[U. kūza > கூஜா > த. கூசா]



கூசாதூக்கு-தல் *kūjā-tūkku,* 9 செ.கு.வி. (v.i.) தான் சார்ந்தவரை மனநிறைவுபடுத்த செய்ய சிறு பணிகள் செய்து தாழ்ந்து நடத்தல்; to do menial things in support of one to please him.

[கூஜா + தூக்கு-,]

[U. kūza > த. கூஜா > கூசா-,]

கூசுமாண்டம் *kūsumaṇṭam,* பெ.(n.) பூசணி; white gourd cucurbita pepo.

[Skt. kūṣumāṇḍam > த. கூசுமாண்டம்.]

கூசுமாண்டர் *kūsumāṇḍar,* பெ.(n.) நிரைய (நரக) உலகங்களுக்குத் தலைவர்; (Šaiva) Lord of hells. *"கூசுமாண்டர் முப்பத்திரண்டு நரகங்களுக்கும் அதிபதியாய்" (சி. போ. பா. 2,3, பக். 204).*

[Skt. kūṣmāṇḍa > த. கூசுமாண்டர்.]

கூட்டிலிப்பனாதி *kūṭṭili-p-panādi*, பெ.(n.) மொச்சைக் காய்; country bean-dolichos (genus).

கூடசன் *kūḍasaṉ*, பெ.(n.) பன்னிரண்டு வகைப் புத்திரருள்) மகன்களுள் கணவன் வீட்டிலில்லாதகாலத்தில்இன்னானென்றறியப்படாத ஒருவனுக்கு ஒருத்தியிடம் தோன்றிய மகன்; son born secretly of a woman when her husband is absent, the real father being unknown, one of twelve *puttiraṉ*.

த.வ. தப்பல்.

[Skt. gūḍhaq-ja > த. கூடசன்.]

கூடசாசனம் *kūḍa-sāšaṉam*, பெ (n.) உண்டாக்கிய ஓலைகள் (சிருஷ்டித்த fabricated document சாசனம்) (கலைமகள் x 56).

கூடணை *kūḍaṇai*, பெ.(n.) மயிற் (பீலி) கண் (யாழ்.அக.); eye of peacock.

கூடத்தசைதன்னியம் *kūḍatta-šaitaṉṉiyam*, பெ. (n.) மேலான அறிவுருவாய் விளங்கும் நிலையான முழுமுதற்பொருள்; the immutable *Brahman* as the embodiment of supreme knowledge.

த.வ. முதற்பொருள்.

கூடத்தப்பிரமம் *kūḍatta-p-piramam*, பெ.(n.) நிலைப்பேறான முழுமுதற் பொருள் (நிர்விகாரப் பிரமம்); the immutable Brahman.

த.வ. முழுமுதல்வன்.

[Skt. kūṭastha > த. கூடத்தப்பிரமம்.]

கூடத்தன்[1] *kūḍattaṉ*, பெ.(n.) 1. முழு முதற் பொருள் (பரப்பிரமம்); supreme soul, eternal and unchangeable (வேதா. சூ. 79, உரை). 2. குலத்தின் முன்னோன் (மூல புருஷன்); the founder of a family.

[Skt. kūṭastha > த. கூடத்தன்.]

கூடத்தன்[2] *kūḍattaṉ*, பெ.(n.) **கூடசன்** பார்க்க; see *kūḍašaṉ*. *"நும்முடைய கூடத்தர் கூறிய வாக்குக்களே" (சித். மரபுகண். 19).*

[Skt. gūḍaja > த. கூடத்தன்]

கூடபதம் *kūḍa-padam*, பெ.(n.) பாம்பு (வின்); snake.



கூடவற்சை *kūḍavaṟcai*, பெ.(n.) தவளை; frog.

கூடன் *kūḍaṉ*, பெ.(n.) **கூடசன்** பார்க்க; see *kūḍašaṉ*.

கூடிலி *kūḍili*, பெ.(n.) புலால் தின்போன்; flesh eater.

த.வ. புலால்உண்ணி.

கூதனம் *kūdaṉam*, பெ.(n.) இடக்கர்ச் சொல் (திவா.); indecent, obscene terms.

த.வ. இடக்கர்.

கூபகத்திபந்தனம் *kūbaga-ttibandaṉam*, பெ.(n.) இடுப்பெலும்பைக் கவர்ந்துள்ள நார்; ligaments of the pelvis.

கூபகத்துருவம் *kūbaka-t-turuvam*, பெ.(n.) இடுப்பெலும்புக் கூட்டின் ஒடுவம் (மையம்); axix of the pelvis.

கூபகமானம் *kūbagamāṉam*, பெ.(n.) இடுப்பெலும்புக் கூடு அல்லது இடுப்புக்குழி (அனாமிகை)யின் குறுக்கு அளவு; the transverse measurement of the pelvis.

கூபகமானி *kūbagamāṉi*, பெ.(n.) இடுப்புக்குழி (அனாமிகை)யின் குறுக்களவை உறுதிப்படுத்தும் கருவி; an instrument used for measuring the diameter of the pelvis-pelvimeter.

கூம்பரிட்டம் *kūmpariṭṭam*, பெ.(n.) 1. ஆமையோடு; the shell of a tortoise. 2. ஆமணக்கு; castor plant.

கூம்பூரணம் *kūmpūraṇam,* பெ.(n.) கொள்ளுக்காய் வேளை; purple wild indiger-*tephrosia purperea.*

கூர்க்கா *kūrkkā,* பெ.(n.) நேப்பாள நாட்டில் இருந்து வந்து காவல் காக்கும் பணி செய்பவர்; *Nepali* employed as a guard.

த.வ. **சேமக்காவலன்.**

கூர்ச்சேகரம் *kūr-c-cēgaram,* பெ.(n.) தென்னை (மலை.); coconut palm.

கூர்மசெயந்தி *kūrma-jayandi,* பெ.(n.) திருமால் எடுத்த ஆமைத் தோற்றரவத்தை (கூர்மாவதாரத்தை)க் கொண்டாடுதற்குரிய திருநாள்; the sacred day on which *viṣnu* incarnated himself as tortoise, a day of festivity.

கூர்மத்துவாதசி *kūrma-t-tuvādasi,* பெ.(n.) ஆடவை (ஆனி) மாதத்து 12 ஆம் நாள் மேற்கொண்ட (துவாதசியில்) ஒரு நோன்பு (விரதம்); a fast on the 12th lunar day of the month of Aṉi.

த.வ. **ஆடவைப் பன்னிரி.**

கூர்மப்புராணம் *kūrma-p-purāṇam,* பெ.(n.) 1. பதினெண் தொன்ம (புராணங்)களுள் திருமால் ஆமை (கூர்மா) தோற்றரவம் எடுத்தபொழுது அறிவுறுத்திய நல்லுரைகள்; a chief purāṇa narrated by *Viṣṇu,* in his incarnation as tortoise, one of *patineṉ-purāṇam.* 2. வட மொழியிலிருந்து அதிவீரராம பாண்டியன் செய்யுளுருவமாகத் தமிழிலியற்றிய நூல்; a metrical translation of the above in Tamil by *Adivīra-rāma-pāṇḍiyaṉ.*

[Skt. kūrma+purāṇa > த. கூர்மப் புராணம்.]

கூர்மபற்பம் *kūrma-paṟpam,* பெ.(n.) ஆமையோட்டுச் சாம்பல் (இ.வ.); calcinated medicinal powder of tortoise shell.

த.வ. **ஆமையோட்டுப்பொடி.**

[Skt. kūrma+bhaṣman > த. கூர்மபற்பம்.]

கூர்மபிரிட்டம் *kūrma-piriṭṭam,* பெ.(n.) ஆமையின் முதுகோடு; shell of the tortoise.

கூர்மரிசிமுறிப்பு *kūrmarisi-muṟippu,* பெ.(n.) **கூர்மமுனிமுறிப்பு** பார்க்க; see *kūrmamuṉi-muṟippu.*

கூர்மமுனிமுறிப்பு *kūrmamuṉi-muṟippu,* பெ.(n.) மாழைகளை முறித்து தூய்மை (சுத்தி) செய்வதற்கான கூர்ம முனி (ரிஷி) சொன்ன பாகம்; the method or principle laid down in the works of the sage *Kūrmamuṉi* for altering the virtues of metals for purposes of purifying them.

[கூர்மமுனி + முறிப்பு.]

முறி → முறிப்பு.

கூர்மயோகம் *kūrma-yōgam,* பெ.(n.) ஒருவன் பிறக்குங் காலத்து அவனுக்கு உயர்ந்த நிலையைக் கொடுக்குமாறு கோள்கள் நிலை சேர்ந்த ஒரு நல்லூழ் (யோகம்) (சங்.அக.); a peculiar conjunction of planets at the time of one's birth indicative of great success in life.

த.வ. **நற்கோள்நிலை.**

கூர்மன் *kūrmaṉ,* பெ.(n.) பத்து (தச) காற்றுகளுள் இமைத்தல், விழித்தல்களைச் செய்யும் காற்று (பிங்.); the vital air of the body which causes closing and opening of eyelids, one of tasa-vayu.

த.வ. **விழிப்புவளி.**

கூர்மாண்டர் *kūrmāṇḍar,* பெ.(n.) **கூசுமாண்டர்** பார்க்க; see *kūsumāṇḍar.* *"பாரிடப் படையுடைக் கூர்மாண்டர்" (திருவிளை. திருமணப். 82).*

[Skt. kūrmānda > த. கூர்மாண்டர்]

கூர்மாதனம் *kūrmādaṉam,* பெ.(n.) 1. கால்மடித்து உட்காருகை; squatting on the floor with the legs crossed. 2. (ஊழ்கத்தின் போது அமர்வதற்குப் பயன்படுத்தும்) ஆமையின் வடிவமைந்த இருக்கை (ஆசன) வகை; wooden seat in forms of a tortoise or with figure of tortoise on it, used for meditation. *"வில் வாதியினாற் செய்க..... கூர்மதானம் (சைவச. பொது. 57).*

த.வ. **பாதமடிப்பு இருக்கை.**

[Skt. kūrma+ā-sana > த. கூர்மாதனம்.]

கூராசாகிகம் *kūrā-sākigam,* பெ.(n.) தேயிலை; tea.

கூலங்கசமாய் *kūlaṅkaṣamāy,* வி.எ.(adv.) (இரண்டுகரையும் உராய்ந்து கொண்டு) முழுவதும்; completely, washing off both the banks.

த.வ. இருகரை புரளி.

[கூலங்கசம் + ஆய்.]

[Skt. kūlañ-kaṣa > த. கூலங்கசம்.]

'ஆய்' - வி.எ.ஈறு.

கூலபிந்து *kūlabindu,* பெ.(n.) எட்டி (சங்.அக.); strychnine-tree.

கூளிவாசமூலி *kūḷivāšamūli,* பெ.(n.) கருவூமத்தை; purple stramony.

[கூளிவாச + மூலி.]

கூனிதாரன் *kūṉi-dāraṉ,* பெ.(n.) கொலையாளி (இ.வ.); murder.

[கூனி + தாரன்.]

[U. khūnī > த. கூனி.]

கூனிமித்திரம் *kūṉi-mittiram,* பெ.(n.) மந்திரத்தால் கொல்லும் இறப்பு; killing by witchcraft or sorcery.

த.வ.சாவிப்பு, சாவம்.

கெக்கரிசம் *ke-k-karisam,* பெ.(n.) செங்கழுநீர்; red indian water lilly; American sweet-scented water lilly.

கெச்ச *kecca,* 5 செ.கு.வி. (v.i.) ஏவல் வடிவம் போ; go. *"கெச்ச நெறி" (சிவதரு. கோபுர. 129).*

கெச்சனா *keccaṉā,* பெ.(n.) கையாந்தகரை; a plant growing in wet places.

கெச்சு *keccu,* பெ.(n.) கோடுகளால் வரைந்து காட்டப் பெற்ற மனை முதலியவற்றின் உருவம்; sketch as of a building. *அமீன் கெச்சு (இ.வ.).*

த.வ. வடிவுரு.

[E. sketch > த. கெச்சு.]

கெசகங்காடம் *keša-kaṅgāḍam,* பெ.(n.) யானை; elephant.

[கெச + கங்காடம் - கெசகங்காடம்.]

கெசகரணம் *keša-karaṇam,* பெ.(n.) **கசகர்ணம்** பார்க்க; see *kasakarṇam.*

[Skt. gaja+karna > த. கெசகரணம்.]

கெசகன்னம் *keša-kaṉṉam,* பெ.(n.) **கசகர்ணம்** பார்க்க; see *kaca-karṇam.* (யாழ்.அக.).

[Skt. gaja+karna > த. கெசகன்னம்.]

கெசட்டு *kešaṭṭu,* பெ.(n.) அரசு செய்தித் திரட்டுத் தாள் (இராஜாங்க விளம்பரப் பத்திரிகை); gazette.

த.வ. அரசிதழ்.

[E. gazette > த. கெசட்டு.]

கெசடம் *kešaḍam,* பெ.(n.) நாகப்பூ; Ceylon ironwood.

கெசப்பி *kešappi,* பெ.(n.) பூடுவகை (மச்சபு. சருவ. 8); liquorice-plant.

கெசப்பிடி *keša-p-piḍi,* பெ.(n.) யானைக் கொம்பு; the tusk of an elephant.

கெசப்பிரியம் *keša-p-piriyam,* பெ.(n.) இலவம் பிசின்; the gum of silk cotton tree.

கெசபடசு *keša-paḍasu,* பெ.(n.) **கெசப்பி** பார்க்க; see *kesapi.*

கெசபுட்பி *kešapuṭpi,* பெ.(n.) பெருவேம்பு; mountain neem, *melia azedaracham* alias composita.

கெசபுடம் *kesapuḍam,* பெ.(n.) நூற்றொரு புடம்; calcination repeated 101 items.

[கெசம் + புடம்.]

கெசபூகம் *kesapūgam,* பெ.(n.) துவரை (சித். அக.); dholl.

கெசராசினி *kešarāšiṇi,* பெ.(n.) பூலா (சித். அக.); black-berried feather foil.

கெசம்[1] *kesam,* பெ.(n.) யானை; elephant. *"கெசதுரக முதலான சதுரங்கம்" (தாயு. சித்தர். 6).*

[Skt. gaja > த. கெசம்.]

கெசம்[2] *kešam,* பெ.(n.) இரண்டு முழம் கொண்ட அளவு; yard-measure.

[U. gaz > த. கெசம்.]

கெசமாமுட்டி *keša-mā-muṭṭi,* பெ.(n.) எட்டி (மலை); strychnine tree.

கெசமூசம் *kešamūšam,* பெ.(n.) இலைப்பாசி; species of duckweed.

கெசாசனை *kešāšaṉai,* பெ.(n.) அரசமரம் (யாழ்.அக.); pipal tree.

கெசாசைநா *kešāšainā,* பெ.(n.) கையாந்தகரை (மலை); a plant found in moist places.

கெண்டகச்சிலை *keṇḍaka-c-cilai,* பெ.(n.) **கண்டகச்சிலை** பார்க்க; see *kaṇḍaka-c-cilai.*

கெணசங்கியாபாகம் *keṇa-šaṅgiyā-bāgam,* பெ.(n.) **கணசங்கியாபாகம்** பார்க்க; see *kaṇasaṅkiyābāgam.*

கெத்தாமார் *kettāmār,* பெ.(n.) **கத்தாமார்** பார்க்க (இ.வ.); see *kattāmār.*

[U. gadhā+mār > த. கெத்தமார்.]

கெத்தபரிவிருத்தி *ketta-parivirutti,* பெ.(n.) கணிய (சோதிட) வாய்பாட்டு வகை(வின்.); the number of synodic revolutions of a planet deducted as the first step in the use of the parivirutti tables

த.வ. பரிப்பு வாய்பாடு.

கெதாயு *kedāyu,* பெ.(n.) வாழ்நாள் (ஆயுள்) முடிந்தவன்; one whose life is extinct. *"சமர் புரிந்தவன் றானுங் கெதாய வாயினன்" (பாரத. பதினான்காம். 37).*

கெதானுகெதிகநியாயம் *kedāṉugediga-niyāyam,* பெ.(n.) **கதானுகதிகநியாயம்** பார்க்க; see *kadānugadiniyāyam.*

[Skt. gata-anu-gatika-niyāya > த. கெதானுகெதிகநியாயம்.]

கெந்தகமிஞ்சிதம் *kendakamiñjidam,* பெ.(n.) நாகத்தாளி கள்ளி; manyspined prickly pear.

கெந்தசாரஞ்சம் *kenda-sārañjam,* பெ.(n.) சந்தனம்; sandal.

கெந்தபுட்பபத்திரி *kendapuṭpapattiri,* பெ.(n.) துளசி; holy basil.

கெந்தரசம் *kenda-rašam,* பெ.(n.) நறும்பிசின்; fragrant resin.

கெந்தனம் *kendaṉam,* பெ.(n.) கோடக சாலை; a very small plant known as coromandal gendarussa.

கெந்தனோபிதம் *kenda-ṉōbidam,* பெ.(n.) பரம்பை; Indian mesquit or arjun as penance tree.

கெந்தாளிரோகம் *kendāḷi-rōgam,* பெ.(n.) குன்ம நோய்; gastritis (M.L.).

கெந்திரதூதிசம் *kendira-dūtišam,* பெ.(n.) பெரு வழுதலை; brinjal of a larger specis.

கெந்திவிருட்சம் *kendi-viruṭcam,* பெ.(n.) **கெந்திவிருட்சோகம்** பார்க்க; see *kendi-viruṭcōgam.*

கெந்திவிருட்சோகம் *kendi-viruṭcōgam,* பெ.(n.) முன்னை; spino fire-brand teak.

கெபூரமயம் *kepūra-mayam,* பெ.(n.) கொடி மாதுளை; lemon citron.

கெர்ப்பத்தலைவன் *kerppa-t-talaivaṉ,* பெ.(n.) சவ்வீரம்; corrosive sublimate.

[கெர்ப்ப + தலைவன்.]

கெர்வம் *kervam,* பெ.(n.) ஆணவம், செருக்கு; pride, arrogance.

[Skt. garva > த. கெர்வம்.]

கெர்விதம் *kervidam,* பெ.(n.) செருக்குள்ள சொல்; words spoken in pride. *"மாந்தர் கெர்விதங்கள் பேசி வந்து" (பட்டனத்துப். பத்திரகிரி. பக். 343).*

கெராசி *kerāši,* பெ.(n.) பூலா; a tall plant of the phyllanthus genus.

கெருடக்காந்தகம் *keruḍa-k-kāndagam,* பெ.(n.) செம்பருந்து; red kite-hallastur indus.



கெருடாபதி *kerudā-padi,* பெ.(n.) விஷ்ணு காந்தி; *Vishnu* basil; *Vishnu* plant - ersolvulus alsimoides.

கெரோசின் *kerōšin,* பெ.(n.) சீமைத்தண்ணி, மண்ணெய்; kerosine.

[E. kerosine > த. கெரோசின்.]

கெவ்வியமலம் *kevviya-malam,* பெ.(n.) தயிர்; curd.

கெவின்பலுக்கா *kevin-palukkā,* பெ.(n.) கப்பலறைக் கதவு; companion door (Naut.).

[கெவின் + பலுக்கா.]

[E. cabin > த. கெவின்.]

கெவின்வாசல் *kevin-vāšal,* பெ.(n.) கப்பலறைக்குச் செல்லும் வழி; companion-way, stair-case leading to the cabin (Naut).

[கெவின் + வாசல்.]

[E. cabin > த. கெவின்.]

வாயில் > வாசல்.

கெவுதவராணி *kevudavarāni,* பெ.(n.) வெண்காக்கணம்; white-flowered mussel-shell creeper.

கெவுனகம் *kevunagam,* பெ.(n.) கணங்கன் மரம் (விருட்சம்); an unknown tree supposed to posses high virtues.

கெவுனகலை *kevuna-kalai,* பெ.(n.) சூரிய கலை; vital air or prana passing through the right nostril.

[கெவுனம் + கலை.]

கல் > கலை.

கெவுனகுளிகை *kevuna-kuligai,* பெ.(n.) வானில் பறப்பதற்காகச் சித்தர்கள் பயன்படுத்தும் ஒரு வகை இதள் (இரச)க் குளிகை; animated mercurial pills used by Siddhars for flying in the aerial region.

[கெவுனம் + குளிகை.]

குள் > குளி > குளிகை.

கெவுனசித்தி *kevuna-sitti,* பெ.(n.) வானத்தில் பறப்பதற்குண்டான ஆற்றல் (சித்தி); success in the art of flying in the aerial region.

கெவுனம் *kevunam,* பெ.(n.) 1. வானம்; sky. 2. காக்கைப் பொன் (அப்பிரகம்); mica. 3. பல புடவி (அண்டம்)களுக்கு இடையிலி லுள்ள இடைவெளி; the inter-spaces or regions between the several planets.

கெவுனம்பாய்-தல் *kevunam-pāy-,* 2 செ.கு.வி. (v.i.) வானில் பறத்தல்; to fly in the air.

[கெவுனம் + பாய்-,]

கெவுனயோகம் *kevuna-yōgam,* பெ.(n.) ஒரு வகை ஓகம் (யோகம்); a kind of yoga practice.

கெவுனலிகம் *kevuna-ligam,* பெ.(n.) மூலாதாரம்; one of the six psychic centres in the human system known as sacral plescus.

கெவுனி *kevuni,* பெ.(n.) வானில் பறக்கக் கூடிய ஆற்றல் (சித்தி) வாய்ந்த சித்தன்; a Siddha skilled in the art of flying in the sky.

கெற்பவிப்புருதி *kerpavippurudi,* பெ.(n.) பெண்கள் வயிற்றில் கட்டி (சூதகம்) கட்டுவதனால் மாதவிடாய் காலத்தில் வயிற்றில் வலியுண்டாகி, சூலுண்டாகாது, உடல் மெலிந்து காணும் ஒரு நோய்; a swelling in the womb occasioned by the suspended flow or failure of the monthly course and it is marked by pain in the abdomen, absence of conception, emaciation etc.

கெற்பாதகினி *ker-pādagini,* பெ.(n.) சேவகனார் கிழங்கு; a kind of root, used medicinally.

கெற்பாதபூதகி *kerpāda-pūdagi,* பெ.(n.) சிற்றுயிரிகளுக்கு எதிரானது (கிருமி எதிரி); that which destroys worms.

கெற்பாதனம் *kerpādanam,* பெ.(n.) **கர்ப்பாதானம்** பார்க்க; see *kar-p-pādānam.*

[கெற்ப(ம்) + ஆதனம்.]

குருத்தல் = தோன்றுதல். குரு → கரு → (கருப்பு) – கருப்பம். கரு = சூல், பீள், முட்டை, சேய், குட்டி. த. கரு > **Skt**. *garbha* (வ.வ.1:107).

[Skt. ā-dhāna > த. ஆதனம்]

கேக்குவிரை *kēkku-virai*, பெ.(n.) சீமைச் சோம்பு; caraway (M.M.128).

[கேக்கு + விரை.]

[E. cake > த. கேக்கு.]

கேகாபலம் *kēkāpalam*, பெ.(n.) மயில்; peacock.



கேசம் *kēśam*, பெ.(n.) 1. மக்கள் தலைமயிர்; human hair. *"குறையிவட் குண்டேற் கேசங் குறைத்தற்கு" (பெருங். வத்தவ. 14:29).* 2. விலங்கின் மயிர் (பிங்.); hair of animals.

klis என்னும் வேரிலிருந்து உருவான kēsa என்னும் சொல் வடமொழியில் மாந்தத் தலையில் முளைக்கும் மயிர், குதிரை, அரிமா ஆகியவற்றின் பிடரிமயிர் ஆகிய பொருள்களுடன் வழக்கிலுள்ளது (மா.வி.). இச்சொல் தமிழில் தலைமுடி என்னும் பொருளுடன் தலை என்னும் பொருளிலும் "கேசாதிபாதம்" என்பன போன்றவற்றில் வருகின்றது.

[Skt. kēsa > த. கேசம்.]

கேசகம் *kēśagam*, பெ.(n.) அத்தி; fig tree.

கேசபாரம் *kēśapāram*, பெ.(n.) பெண் மயிர்; woman's hair.

கேசரஞ்சகம் *kēśa-rañjagam*, பெ.(n.) **கேசரஞ்சனம்**[1] பார்க்க (தைலவ. தைல. 134); see *kēca-rañjaṉam*.

[Skt. kēsa+rañjaka > த. கேசரஞ்சகம்.]

கேசரஞ்சனதைலம் *kēśarañjaṉa-tailam*, பெ. (n.) பொற்றலைக்கையாந்தகரை எண்ணெய்; a scented hair-oil prepared from a plant - Ceylon verbesina marigold.

கேசரஞ்சனம்[1] *kēśa-rañjaṉam*, பெ.(n.) 1. பொற்றலைக்கையாந் தகரை (சங்.அக.); Ceylon verbesina. 2. தலை மயிர் வளர்க்கும் எண்ணெய் (தைல) வகை; a kind of hair-oil.

த.வ. கையாந்தகரை

[Skt. kēsa+rañjana > த. கேசரஞ்சனம்.]

வடமொழியில் தலைமயிர்க்கு வண்ணம் ஊட்டும் எண்ணெய் எனப் பொருள் உள்ளது. தலை மயிர்க்குத் தடவும் எண்ணெய் தலைமயிர் வளர்க்கும் தன்மைத்து எனக் கருதியதால் அவ்வாறு பொருள் வரையப்பட்டுள்ளது.

கேசரஞ்சனம்[2] *kēśarañjaṉam*, பெ. (n.) 1. கரிசலாங்கண்ணி; a plant usually found in wet places. 2. பெருங்குறிஞ்சி; conehead.

கேசரம் *kēśaram*, பெ. (n.) 1. பூந்தாது; pollon of flowers. 2. மகிழமரம் (பிங்.); pointed-leaved ape-flower. 3. குங்குமப்பூ; saffron.

[Skt. kēsar > த. கேசரம்.]

கேசரமாதயம் *kēśaramādayam*, பெ.(n.) மகிழமரம்; ape-flower tree.

கேசராசம் *kēśarāśam*, பெ.(n.) 1. கடாரநாரத்தை; seville orange. 2. பொற்றலை; Ceylon verbesina.

கேசராதனம் *kēsarādaṉam*, பெ.(n.) இருக்கை (ஆசன) வகை (தத்துவப். 108, உரை); a yogic posture.

கேசராதிக்கசாயம் *kēśarādi-k-kaṣāyam*, பெ. (n.) நாககேசரத்தை முதலாகக் கொண்டு திப்பிலி முதலிய கடைச் சரக்குகளைச் சேர்த்துப் பாண்டு நோய்க்காக இறக்குங் கருக்கு (இதனால் மண் தின்னும் ஆசை நீங்கும்); a kind of docoction prepared with Ceylon iron wood as a chief ingredient

along with other bazaar durgs such as long-pepper etc. and prescribed for dropsical anemia, (it is a curative in morbid desire for eating mud etc).

கேசராமிலம் *kēšarāmilam,* பெ.(n.) புளி மாதுளை; sour pomegranate.

கேசரிப்பவுடர் *kēšari-p-pavudar,* பெ.(n.) **கேசரிப்பொடி** பார்க்க; see *kēšari-p-podi.*

[Skt. kēsarin > த. கேசரி.]

[E. powder > த. பவுடர்.]

கேசரிப்பொடி *kēšari-p-podi,* பெ.(n.) மஞ்சள் நிறமுள்ள ஒரு வகைப் பொடி; a powder in the colour of saffron.

த.வ. செம்பொடி.

[Skt. kēsarin > த. கேசரி+பொடி.]

புள் → பூள் → (பூழ்) → பூழி = தூள், புழுதி. புள் → பூழ்தி → புழுதி → புள் → (பொள்) → பொடி (மு.தா. 127).

கேசரிபாத்து *kēšari-bāttu,* பெ.(n.) குங்குமப்பூ சருக்கரை முதலியவை கலந்த கலவைச் சோறு வகை; rice boiled with saffron, sugar and other ingredients.

த.வ. செம்பொடிச்சோறு.

[Mhr. kēsari-bhāta > த. கேசரிபாத்து.]

கேசரிமார்க்கம் *kēšari-mārkkam,* பெ.(n.) வானத்தினடு; the region of mid-air.

கேசரியாசனம் *kēšari-y-āšanam,* பெ.(n.) கணைக்கால்கள் பிட்டத்தைத் தொடவும், விரித்த கைவிரல்கள் துடையிற் படவும், வாய் மலர்ந்தும், பார்வை மூக்கு நுனியை நோக்கியும் இருக்கும் ஓக இருக்கை (யோகாசன) வகை; a yogic posture in which the legs are disposed in such a way that the left ankle touches the right side and the right ankle touches the left side of perineum, the hands are on the thigh with stretesed fingers the mouth is kept open and the gaze is fixed on the tip of the nose, one of nine *āšanam.*

த.வ. அரிஓகநிலை.

[Skt. kēsarin + āsana > த. கேசரியாசனம்.]

கேசரியோகம் *kēšari-yōgam,* பெ.(n.) பிறப்புக் (சென்ம) காலத்தில் திங்களுள்ள இடத்துக்கு நடுஇடத்தில் (கேந்திரலக்கினத்தில்) வியாழன் இருக்கும் ஓகம் (சங்.அக.); situation of Jupiter in the Ist, 4th, 7th or 10th house from the position of the moon at the time of the birth of a child, considered auspicious.

[Skt. kēsarin-yōga > த. கேசரியோகம்.]

கேசரிரூபம் *kēšari-rūpam,* பெ.(n.) சூடம் (கற்பூரம்); camphor.

கேசரிகம் *kēšarigam,* பெ.(n.) நாயுருவி; a plant growing in hedges and thickets.



கேசருகாசம் *kēšaru-kāšam,* பெ.(n.) சிறுநீலி; a small species of indigo plant.

கேசரோமம் *kēša-rōmam,* பெ.(n.) பூனைக்காலி; velvet been.

கேசவர்த்தனம் *kēšavarttanam,* பெ.(n.) ஆனைக் குருந்தோட்டி; common balah.

கேசவரிட்டம் *kēšavarittam,* பெ.(n.) பூவா மரம்; a tree bearing no flowers.

கேசவற்குத்தோழன் *kēšavarku-t-tōlan,* பெ.(n.) கண்ணனுக்குத் தோழனான, அருச்சுனன் (சூடா.); the friend of *Krisna,* Arjuna.

[கேசவற்கு + தோழன்.]

[கேசவன் + கு → கேசவற்கு.]

[Skt. kēsa-va > த. கேசவன்.]

துள் > தொள் > தொழு > தோழம் > தோழன்

கேசவன் *kēsavan,* பெ.(n.) 1. திருமால்; Visnu. *'கேசவன்றமர்' (திவ். திருவாய். 2,7,1).* 2. சோழன் (பிங்.); *Chōla* king.

[Skt. Kēsa-va > த. கேசவன்.]

கேசாகம் *kēšāgam,* பெ.(n.) மகிழம் பூ; ape-flower, West Indian medlar.

கேசாங்காதனம் *kēšāṅgādaṉam,* பெ.(n.) இருக்கை (ஆசன) வகை; a yogic posture.

கேசாதிபாதம் *kēšādi-pādam,* பெ.(n.) 1. உச்சி தொட்டு உள்ளங்கால் வரை; from head to foot as opposed to from foot to head. 2. முழு உடம்பு; the entire body.

[கேசம் + ஆதி + பாதம்.]

பதி → பாதம்.

கேசாதியக்கு *kēšādiyakku,* பெ.(n.) தின் பீர்க்கு; edible luffa.

கேசாம்பு *kēšāmbu,* பெ.(n.) வெட்டி வேர்; khus khus root.

கேசாரங்கம் *kēšāraṅgam,* பெ.(n.) செவ்வந்தி; Indian chamomile.

கேசாரம் *kēsāram,* பெ.(n.) சிவப்புச் (குங்குமச்) செவ்வந்தி; red champmile.

கேசாரிசம் *kēšārišam* பெ.(n.) ஒரு வகை நாரத்தை; a kind of bitter orange.

கேசாவர்த்தம் *kēšāvirttam,* பெ. (n.) குதிரைக் காலிலுள்ள தீய சுழிவகை (அசுவசா. 149); a whorl or ring of hair on the leg of a horse, considered inauspicious.

[Skt. kēša+ā-vartta > த. கேசாவர்த்தம்.]

கேசி *kēši,* பெ.(n.) 1. நீண்ட கூந்தலையுடையப் பெண்; a woman with fine, long and flowing hairs. 2. அரிமா (சிங்கம்); lion.



கேசிகர் *kēšigar,* பெ.(n.) சுமார்த்தப் பார்ப்பனர்களுள் ஒரு வகையார்; (G.Tj.D.78) a sub division of smārta Brahmans.

[Skt. kēsika > த. கேசிகர்.]

கேசிகன் *kēšigaṉ,* பெ.(n.) உடல் முழுதும் மயிருடையவன்; a hairy man.

கேசு *kēšu,* பெ.(n.) வழக்கு (வியாச்சியம்); suit, complaint.

[E. case > த. கேசு.]

கேசுப்புணர்ச்சி *kēšu-p-puṇarcci,* பெ.(n.) எதிர் வழக்கு (வியாச்சியம்) (இ.வ.); counter-case.

[கேசு + புணர்ச்சி.]

[E. case > த. கேசு.]

புணர் → புணர்ச்சி.

கேடா *kēḍā,* பெ.அடை.(adj.) பிரிந்துள்ள (இ.வ.); seperate, partitioned, divided.

[U. khēṭā > த. கேடா.]

கேடாய்-த்தல் *kēḍāy-,* 1 செ.குன்றாவி.(v.t.) பங்கு பிரித்தல் (இ.வ.); to seperate, effect a partition, divide.

[கேடா + ஆய்-,]

[U. khēṭā > த. கேடா.]

கேத்திரக்கியன் *kēttira-k-kiyaṉ,* பெ.(n.) ஆதன் (ஆன்மா), உடம்பிலுள்ள அறிவுப் பொருள்; the concious principle in the body. *'கேத்திரக்கியனைத் தொடர்ந்து' (வாயுசங். பஞ்சப்பி. 2).*

[Skt. kṣētra-gña > த. கேத்திரக்கியன்.]

கேத்திரகணிதம் *kēttira-kaṇidam,* பெ.(n.) வரிகை (இரேகா) கணிதம்; geometry.

[கேத்திர(ம்) + கணிதம்.]

[Skt. kṣētra > த. கேத்திர(ம்).]

கணி → கணிதம்.

கேத்திரபாலன் *kēttira-bālaṉ,* பெ.(n.) 1. தெய்வம் இருக்கும் இடத்தைக் காக்குஞ்சிறு தெய்வங்கள்; guardian deity of sacred places. 2. வைரவன் (பிங்.); Bhairava.

[Skt. kṣētra > த. கேத்திரம் + பாலன்.]

கேத்திரம் *kēttiram,* பெ.(n.) 1. திருப்பதி, திருவிடம் (புண்ணிய ஸ்தலம்); sacred place, shrine, any place of pilgrimage. *'ஞானமிக்களிக்குங் கேத்திரத்தின்' (திருவானைக். மூர்த். 4).* 2. விளைநிலம்; cultivated land.

[Skt. kṣētra > த. கேத்திரம்.]

கேத்திரி *kēttiri,* பெ.(n.) திருமால்; Viṣṇu. *'திப்பியநான்முகன் கேத்திரி புராந்தகன்" (வேதா. சூ. 71).*

[Skt. kṣētrin > த. கேத்திரி.]

கேத்து *kēttu,* பெ.(n.) வயல் (இ.வ.); field.

*[Skt. kṣētra > **U. khet** > த. கேத்து.]*

கேத்துவாரி *kēttu-vāri,* பெ.(n.) புன்செய் விளைவில் குடியானவனும் அரசும் பாகஞ் செய்து கொள்ளுமுன் கோயில்களுக்குக் கொடுக்கும் பங்கு (G.Tn.D.i.313); portion taken as temple-revenue from the gross produce of dry lands, before a division of the yield is effected between the ryot and government.

[U. khētwāri > த. கேத்துவாரி.]

கேதனம் *kēdaṉam,* பெ.(n.) கொடி; flag, banner. *'பொருங் கேதனப் படை மன்னரை' (அட்டப். திருவரங். மா. 73).*

[Skt. kētana > த. கேதனம்.]

கேதாரகௌரிநோன்பு *kēdāra-gauri-nōṉbu,* பெ.(n.) துலை (ஐப்பசி) மாத தேய்பிறை நான்காம் நாள் (கிருஷ்ண சதுர்த்தசியில்) கேதார திருப்பதியிலுள்ள கௌரியின் பொருட்டுப் பெண்பாலார் கடைப்பிடிக்கும் நோன்பு; religious vow observed by women on the day before the new moon in the month of *Aippasi,* in honour of Pārvati who dwells in kētavam.

[Skt. kēdāra+gauri > த. கேதாரகௌரி+ நோன்பு]

கேதாரகௌளம் *kēdāra-gauḷam,* பெ.(n.) ஒரு வகைப் பண் (பரத. இராக. 55); a musical mode.

கேதாரசிருங்கி *kēdāra-śiruṅgi,* பெ.(n.) ஒரு வகைத் தாதுச் சரக்கு; a kind of mineral substance.

கேதாரயோகம் *kēdāra-yōgam,* பெ.(n.) ஏழு கோள்கள் இடையீடின்றி நான்கு ஓரைகளில் நிற்கவரும் நல்லூழ் (சங்.அக.); presence of seven planets in four consecutive houses, indicating good fortune.

[Skt. kēdāra+yōha > த. கேதாரயோகம்.]

கேதாரவிரதம் *kēdāra-viradam,* பெ.(n.) **கேதாரிநோன்பு** பார்க்க; see *kēdāri-nōṉbu.*

[Skt. kēdāra+vrata > த. கேதாரவிரதம்.]

கேதாரிநோன்பு *kēdāri-nōṉbu,* பெ.(n.) கேதாரகௌரி நோன்பு; a religious observance by women (T.C.M.II, 548).

கேதாரி *kēdāri,* பெ.(n.) 1. குதிரைப்பிடர் (கலித். 96, உரை); upper side of a horse's neck. 2. குதிரைச் சுழிவகை (அசுவசா. 149); a whorl or ring of hair on a horse's body.

கேதிசம் *kēdiśam,* பெ.(n.) ஒரு வகை மருந்து; a drug capable of converting black lead into copper.

கேது *kēdu,* பெ.(n.) விளைநிலம் (இ.வ.); field, tract of land especially fit for cultivation.

[U. khēt > த. கேது.]

கேதுக்கல் *kēdu-k-kal,* பெ.(n.) வயலின் எல்லைக் கல் (இ.வ.); demarcation stone.

[கேது + கல்.]

[U. khēt > த. கேது.]

கேதுப்பிரியம் *kēdu-p-piriyam,* பெ.(n.) விடரகன் (வைடூரியம்); cat's eye.

கேதுபுட்பம் *kēdu-puṭpam,* பெ.(n.) இறப்பை (மரணத்தை) விளைவிக்கக் கூடிய ஒரு வகை நச்சுக் கிழங்கு; a poisonous root causing death.

கேதுமால் *kēdumāl,* பெ.(n.) **கேதுமாலம்** பார்க்க; see *kēdumālam.* *"கேதுமாலோ டிம்பர்புகழ் பத்திரம்" (கந்தபு. அண்டகோ. 37).*

[Skt. kētumāla > த. கேதுமால்.]

கேதுமால்வருடம் *kēdumāl-varuḍam,* பெ.(n.) **கேதுமாலம்** பார்க்க; see *kēdumālam.* *"கந்தமாதனமேற் புணரி நாப்பண் கேதுமால் வருடம்" (கந்தபு. அண்டகோ. 36).*

[Skt.kēdumāla+varṣa> த. கேதுமால் வருடம்]

கேதுமாலம் *kēdumālam,* பெ.(n.) ஒன்பான் (நவ) கண்டங்களுள் ஒன்று; western portion of jambū-dvipa, between the Gandhamadana range and the sea, one of nava kanḍam. *"குட கடற்குக் கீழ்க் கேதுமாலமெனக் குறித்திடுக" (சிவதரு. கோபுர. 53).*

[Skt. kēdumāla > த. கேதுமாலம்.]

கேதுரத்தினம் *kēdu-rattinam,* பெ.(n.) **கேதுப்பிரியம்** பார்க்க; see *kētu-p-piriyam.*

கேதுவசம் *kēdu-vašam,* பெ. (n.) கட்டுக்கொடி; coagulating creeper.

கேந்தகம் *kēndagam,* பெ.(n.) ஒருவகைப்பூடு (மலை); a very small plant.

கேந்திக்கியக்கினி *kēndikkiyakkini,* பெ.(n.) அண்டச் சுண்ணம்; a secret medicine prepared by Siddhars from the human skull.

கேந்துவாலிகம் *kēnduvāligam,* பெ.(n.) புகையிலை (சித். அக.); tobaco.

கேநாரவென்பு *kēnāra-venbu,* பெ.(n.) கன்னப் பொறியெலும்பு; temporal bone.

[கேநார + என்பு.]

[Skt. kēnāra > த. கேநார.]

எல் → என் → என்பு.

கேப்புமாறி *kēppu-māri,* பெ. (n.) 1. போக்கிரி, கயவன் (அயோக்கியன்); knave, rogue. 2.தென்னார்க்காடு செங்கற்பட்டு மாவட்டங்களில் திருட்டுத் தொழிலாற் பிழைக்கும் ஒரு தெலுங்க இனத்தார் (E.T); name of a criminal caste, speaking Telugu in South Arcot and Chingleput districts.

[E. cap > த. கேப்பு + மாறி → கேப்புமாறி.]

கேமாசிகம் *kēmāsigam,* பெ.(n.) பிரப்பங் கிழங்கு; water-rattan root.

கேரா *kērā,* பெ.(n.) தலையின் முன்பக்கமாக வளைந்து வரும் மயிர்; hair over the front part of the head and adjoining the *kuḍumi.*

[U. gharā > த. கேரா.]

கேரியர் *kēriyar,* பெ.(n.) உணவு எடுத்துச் செல்லும் அடுக்கு ஏனம்; box in tier system for packing lunch (tiffin).

[E. carrier > த. கேரியர்.]



கேலாசம் *kēlāšam,* பெ.(n.) பளிங்கு (யாழ்.அக.); crystal.

கேலி *kēli,* பெ.(n.) 1. விளையாட்டுப் பேச்சு; fun, jest, joke, pleasantry. 2 கிண்டல் (பரிகாசம்); ridicule, mockery. 3. விகடம்; mimicry.

த.வ. ஏகடியம்.

[Skt. kēli > த. கேலி.]

கேலிமாலி *kēlimāli,* பெ.(n.) கிண்டல் (பரிகாசம்) (யாழ்.அக.); ridicule.

கேலிவிருட்சம் *kēlivirutsam,* பெ.(n.) கடம்ப மரம்; kadambu tree.

கேவகதிரவியம் *kēvaga-diraviyam,* பெ.(n.) மிளகு; black-pepper.

கேவர்த்தன் *kēvarttan,* பெ.(n.) கரையான்; white ant.

கேவலசாக்கிரம் *kēvala-šākkiram,* பெ.(n.) விழிப்பு நிலையில் (சாக்கிரத்தில்) ஆதன் (ஆன்ம) நிலை; the condition of the embodied soul.

கேவலம் *kēvalam,* பெ.(n.) 1. தனிமை; singleness. 2. இணையற்றது; uniqueness. 3. வீடுபேறு (மோட்சம்); supreme bliss. 4. இழிவானது; that which is insignificant. 5. தாழ்நிலை; low status. 6. அவமானம்; disgrace.

[Skt. kēvala > த. கேவலம்.]

கேவலாவத்தை *kēvalā-vattai,* பெ.(n.) ஆதனு (ஆன்மா) குரிய மூன்று வகை துன்பங்களுள் (அவத்தை) ஒன்று; one of the three degrees of consciousness of the soul.

கேவலோத்பத்தி *kēvalōtpatti,* பெ.(n.) ஐவகை மணத்திலொன்று (பஞ்ச கல்யாணத் தொன்று) (திருநூற். 4, உரை); one of *pañša-kalyāṇam.*

கேவு *kēvu,* பெ.(n.) தோணி முதலியவற்றில் ஏற்றுதற்குரிய கூலி; charge for transporting goods by sea; freight.

ம., தெ., துளு. கேவு.

[U. khewā > த. கேவு.]

கேழ்வு *kēḻvu,* பெ.(n.) தோணிக்கூலி (இ.வ.); freight.

[U. khewā > த. கேழ்வு.]

கேள்வாகம் *kēḷvāgam,* பெ.(n.) கருங்குன்றி; a black bead of the plant of rhynchosia genus.

கேள்வு *kēḷvu,* பெ.(n.) கேவு பார்க்க; see *kēvu.*

[U. khewā > த. கேள்வு.]

கேளிருள்ரத்தினம் *kēḷiruḷ-rattinam,* பெ.(n.) மாணிக்கம்; a kind of superior ruby.

கேளிவிலாசம் *kēḷi-vilāšam,* பெ.(n.) காலப்போக்கு (இ.வ.); pastime.

கேற்று *kēṟṟu,* பெ.(n.) சிறுநங்கூரம்; light anchor used in warping.

[E. kedge > த. கேற்று.]

கைசிகத்துவாதசி *kaišiga-t-duvādaši,* பெ.(n.) நளி (கார்த்திகை) மாதத்தில் வெண்பக்கத்து வருவதும் நம்பாடு வானுக்குரியதுமான பனிரெண்டாம் நாள் (துவாதசி); the twelth day of the bright fortnight in the month of *Kārttikai,* sacred to *Nampāṭuvān.*

கைசிகநிடாதம் *kaišiga-nidādam,* பெ.(n.) ஏழுவகைப் பண் (சோடச சுரங்)களுள் ஒன்று; middle variety of the seventh note of the gamut, one of *šōdaša-šuram.*

கைசிகவேகாதசி *kaišiga-v-ēgādaši,* பெ.(n.) கைசிகமென்ற பண்ணைப் பாடிக்கொண்டு நம்பாடுவானென்பான் திருமாலை வழிபட்டு முத்திபெற்ற நாளாகிய நளி (கார்த்திகை) மாதத்துச் வெண்பக்கத்து (சுக்கில பட்சத்து) பதினோறாம் நாள் (ஏகாதசி); the eleventh day of the bright fortnight in the month of *kārttikai,* sacred to *Nampāṭuvān* who sang the musical mode kaišigam and obtained salvation.

கைசிகிவிருத்தி *kaišigi-virutti.,* பெ.(n.) காமம் பொருளாகக் காமுகராகிய மக்கள் தலைவராக வரும் நாடக நடை (சிலப். 3:13, உரை); a variety of dramatic composition in which a libertine is the hero, one of four kinds of *nātaka-virutti.* (q.v.).

கைடவன் *kaiḍavaṉ,* பெ.(n.) திருமாலால் கொல்லப்பட்ட ஓர் அரக்கன் (அசுரன்); an Aśura slain by *Viṣṇu.* *"மதுகைடவரும் வயிறுருகி மாண்டார்" (திவ். இயற். 3:66).*

[Skt. kitaidi > த. கைதி.]

கைடவை *kaiḍavai,* பெ.(n.) காளி (துர்க்கை) (யாழ்.அக.); Durgā.

கைதி *kaidi,* பெ.(n.) சிறைப்பட்ட குற்றவாளி; prisoner, captive, accused person.

[U. qaidī > த. கைதி.]

கைது *kaidu,* பெ.(n.) சிறைக்காவல், தளை; imprisonment.

[U. qaid > த. கைது.]

கைதுசெய்–தல் *kaidu-cey-,* 1 செ.குன்றாவி. (v.t.) சிறைப்படுத்துதல்; to arrest, imprison.

[கைது + செய்–,]

[U. qaid > த. கைது.]

கைப்பீது *kaippīdu,* பெ.(n.) **கைபீது** பார்க்க; see *kaipīdu.*

[U. kaifiyat > த. கைப்பீது.]

கைபத்து *kaipattu,* பெ.(n.) 1. நேரில் செல்லாமை; absence. 2. உரிமை கொண்டாடுவோ ரின்மையால் கருவூலத்தில் தனியாக வைக்கப்பட்டிருக்கும் தொகை (உ.வ.); money in a treasury lying unclaimed.

[U. gaibat > த. கைபத்து.]

கைபியத்து *kaipiyattu,* பெ.(n.) **கைபீது** பார்க்க; see *kaipīdu.*

[U. kaifiyat > த. கைபியத்து.]

கைபியத்துநாமா *kaipiyattu-nāmā,* பெ.(n.) உறுதியோலை (பிரமாண பத்திரம்); affidavit.

[U. kaifiyat+nāmā > த. கைபியத்துநாமா.]

கைபீது *kaipīdu,* பெ.(n.) விளக்கக் (விவர)க் குறிப்பு; statement, report, detailed account, particulars.

[U. kaifiyat > த. கைபீது.]

கைமா *kaimā,* பெ.(n.) கொத்தின இறைச்சி; minced meat.

[U. qīma > த. கைமா.]

கையாப்புடை *kaiyā-p-puḍai,* பெ. (n.) மரவகை; white Australian tea tree, m.tr., Melaleuca leucadendron minhor (செ.பே.).

[Malay. kāyūpuṭih > த. கையாப்புடை.]

கைர் *kair,* வி.எ.(adv.) நல்ல; good (Muham.).

[Ar. khair > த. கைர்.]

கைரவம் *kairavam,* பெ.(n.) ஆம்பல் (திவா.); Indian water-lilly.

[Skt. kairava > த. கைரவம்.]

கைராத்தாசாமி *kairāttā-šāmi,* பெ.(n.) 1. இரவலன்; begger. 2. ஒன்றுக்கும் உதவாதவன்; a good-for-nothing person.

[U.khairāt+āsāmi > த. கைராத்தஆசாமி.]

கைராத்தினாம் *kairāttiṉām,* பெ.(n.) அறக் கொடை (இ.வ.); charitable endowment.

[U. khairāt+iṉam > த.கைராத்து+ இனாம்.]

கைராத்து[1] *kairāttu,* பெ.(n.) ஒரு வசைமொழி; a term of abuse.

[Ar. khairāt > த. கைராத்து.]

கைராத்து[2] *kairāttu,* பெ.(n.) 1. அறம்; charity, alms. 2. பயனற்றது; that which is useless.

[U. khairat> த. கைராத்து.]

கைரிகம் *kairigam,* பெ.(n.) 1. காவிக்கல் (பிங்.); red ochre. 2. பொன் (சது.); gold.

[Skt. gairika > த. கைரிகம்.]

கைரியத் *kairiyat,* பெ.(n.) நலம் (இ.வ.); welfare.

[Ar. kaifiyat >த. கைரியத்.]

கைல் *kail,* பெ.(n.) பிடரி; back of the neck; nape (சா.அக.).



கைவீது *kaivītu,* பெ.(n.) **கைபீது** பார்க்க; see *kaipītu.*

[U. kaifiyat > த. கைவீது.]

கொசர் *kosar,*பெ.(n.) **குசர்** பார்க்க; see *kušar.*

[U. khusr > த. கொசர்.]

கொசறு *kosaṟu,* பெ.(n.) **குசர்** பார்க்க; see *kušar.*

[U. khusr > த. கொசறு.]

கொட்டம் *koṭṭam,* பெ.(n.) ஒருவகை மணப்பண்டம்; costus root. *"கொட்டமே கமழும்.... மொய் குழல்" (சீவக.2575).*

[Skt. kuṣṭha > த. கொட்டம்.]

கொத்தவால் *kottavāl,* பெ.(n.) நகர முதலியவற்றின் காவற்றலைவன்; chief police officer for a city or town, superintendent of markets.

[U. kotwāl > த. கொத்தவால்.]

முகம்மதிய ஆட்சியில் நகரம், பேரூர் ஆகியவற்றிற்குப் பொறுப்பாளியாக இருந்த காவல் தலைவன் 'கொத்தவால்' என்று அழைக்கப்பெற்றான்.

கொத்துவால் *kottuvāl,* பெ.(n.) **கொத்தவால்** பார்க்க; see *kottavāl.*

[U. kotwāl > த. கொத்துவால்.]

கொந்தாலி *kontāli,* பெ.(n.) குந்தாலி (யாழ்ப்.); pick axe.

[Skt. kuddāla > த. கொந்தாலி.]

கொய் *koy,* பெ.(n.) எட்டரை விரற்கடை (அங்குலம்) நீளமுள்ளதும் நன்னீரில் வாழ்வதும் பசிய நிறத்ததுமான மீன்வகை; a fresh-water fish, rifle-green, attaining 8 1/2 in. in length, anabas, scandens. *"செம்புனல் கொய்யனைத்துங் கொணரும்" (தேவா.196, 3).*

[U. khowai > த. கொய்.]



கொய்னா *koynā,* பெ.(n.) 1. சுரப்பட்டை மரம்; red cinchona bark, a tree, *Cinchona succirubral.* 2. காய்ச்சல் மருந்து; quinine, product of cinchona alkaloids.

[E. quinine > த. கொய்னா.]

கொர்னிசு *kornišu,* பெ. (n.) எழுத்துப் பணி; writting work.

[E. cornice > த. கொர்னிசு.]

கொரடா *koraṭā,* பெ. (n.) **கொறடா** பார்க்க; see koṟaḍā.

[Port. corda > த. கொரடா.]

கொரான் *korān,* பெ.(n.) **குறான்** பார்க்க; see *gurān.*

[U. qurān > த. கொரான்.]

கொரில்லா *gorillā,* பெ.(n.) ஆப்பிரிக்க நாட்டுக் காடுகளில் காணப்படும் வால் இல்லாத பெரிய கருங்குரங்கு; gorilla.



கொரில்லாபோர் *gorillā-pōr,* பெ.(n.) மறைவிடத்திலிருந்து திடீரென்று வெளிப்பட்டு, அரசுப் படைகளுக்கு எதிராக நடத்தும் தாக்குதல்; guerrilla warfare.

[E. guerrilla > த. கொரில்லா+போர்.]

கொறடா *koṟaḍā,* பெ.(n.) குதிரைச் சாட்டை; horsewhip, whip, scourge.

T. koraḍā; **K**. koṟaḍē; **M**. koṟaṭā; **Tu**. korḍe.

[Port. corda > த. கொறடா.]

கோக்கோ *kōkkō,* பெ. (n.) பாலில் கலந்துண்ணக் கூடிய நீர்ம பண்டம்; cocoa.

[E. cocoa > த. கோக்கோ.]

கோகடம் *kōkaṭam,* பெ.(n.) முயல் வகை (யாழ்.அக.); a kind of hare.

[Skt. kōkaḍa > த. கோகடம்.]

கோகண்டம் *kōkaṇḍam,* பெ.(n.) நெருஞ்சி (மலை.); a small prostrate herb.

[Skt. gō-kaṇṭaka > த. கோகண்டம்.]

கோகயம் *kōkayam,* பெ.(n.) தாமரை (மலை.); lotus flower.

[Skt. gō-śaya > த. கோகயம்.]

கோகர்ணம் *kōkarṇam,* பெ.(n.) 1. மலை நாட்டில் உள்ள ஒரு சிவன்கோயில்; Śiva shrine in Malabar. 2. மூக்குச் சட்டி; a vessel with a nozzle foı pouring liquids from.

[Skt. gō-karṇa > த. கோகர்ணம்.]

கோகிலாட்சம் *kōkilāṭcam,* பெ.(n.) 1. நீர்முள்ளி; white long flowered naildye. 2. கொம்மட்டி; citron.

[Cf. kokilākṣa > த. கோகிலாட்சம்.]

கோகிலோற்சவம் *kōkilōṟcavam,* பெ.(n.) மாமரம் (மலை.); lit., that which causes festivity to the koels. Mango tree. (குயிலுக்கு மகிழ்ச்சியை விளைவிக்கும்).

த.வ. கோகிலவாசம்.

[Skt. kōkila+ut-sava > கோகிலோற்சம்.]

கோகுலாட்டமி *kōkulāṭṭami,* பெ.(n.) கண்ணன் பிறந்ததாகக் கூறப்படும் மடங்கல் (ஆவணி) மாதத்து எட்டாம் நாள்; birthday of *Śrikṛṣṇa.*

[Skt.gōkula+aṣṭamī > த. கோகுலாட்டமி.]

கோச்சு *kōccu,* பெ.(n.) 1. தொடர்வண்டிப் பெட்டி; train carriage. 2. பழங்கால அரசுக் குதிரை வண்டி; coach, a four-wheeled carriage draw by horses.

[E. coach > த. கோச்சு.]

கோசஞ்சாரபூமி *kō-śañsāra-pūmi,* பெ.(n.) மாடுகள் மேய்வதற்கென்று விடப்பட்ட நிலம்; land allotted for pasturage of cows.

[Skt.gō-sañcāra-bhūmi>த. கோசஞ்சாரபூமி]

கோசனை *kōsaṉai,* பெ.(n.) **கோசை** பார்க்க; see *kōsai.*

[Skt. ghōṣaṇā > த. கோசனை.]

கோசத்தம்பரோகம் *kōśatamba-rōgam,* பெ.(n.) ஆண்குறித்தண்டிற் காணுமோர் நோய்; a disease of the male genital organ (penis) (சா.அக.).

கோசம் *kōśam,* பெ. (n.) 1. பேரொலி; noise roar, thunder, 2. இடைச்சேரி; herdsmen's quarters. *"கங்கையிற் கோசமென்றும்"* (கைவல். தத். 79)

[Skt. ghōsa > த. கோசம்.]

கோசமாதிகம் *kōśamādigam,* பெ. (n.) கொன்றை வகை; a kind of *koṉṟai* (சா.அக.).

[Skt. kōsa-matigam > த. கோசமாதிகம்.]

கோசயம் *kōśayam,* பெ.(n.) குதிரையின் நெஞ்சத்தசை; the two lumps of flesh near the heart of a horse (சா.அக.).

கோசரங்கம் *kōśa-raṅgam,* பெ.(n.) நாணல்; reed.

கோசவாகாரக்கட்டி *kōśa-v-ākāra-k-kaṭṭi,* பெ.(n.) பையைப்போல உள்ள கழலை வகை (இங்.வை.307); cystic tumour.

[கோசவாகாரம் + கட்டி.]

[Skt. kōśa + ākāra > த.கோசவாகாரம்.]

குள் > கள் > கட்டு > கட்டி.

கோசன் *kōśaṉ,* பெ.(n.) வைப்பு நஞ்சு; a mineral poison.

[Skt. kōsana > த. கோசன்.]

கோசா[1] *kōśā,* பெ.(n.) திருநங்கை அலி (வின்.); hermaphrodite, eunuch.

[U. khōjā > த. கோசா.]

கோசா[2] *kōcā,* பெ.(n.) இசுலாமியப் பெண்கள் நெருங்கிய உறவினர்களைத் தவிரப் பிற ஆண்கள் தங்களைப் பார்க்காதவாறு உடலை மறைத்துக் கொள்ளுகை; covering the body so as not to be seen by men other than one's close relation as Practised by Muslim women, who wear screen on her face.

[U. ghōsa > த. கோசா.]

கோசாங் *kōśāṅ,* பெ.(n.) கோரைக் கிழங்கு; tuberous root (சா.அக.).

கோசாங்கம் *kōšāṅgam,* பெ.(n.) நாணல் (மலை.); kaus.

[Skt. kōšāṅga > த. கோசாங்கம்.]

கோசாதகி *kōsātaki,* பெ.(n.) பேய்ப்பீர்க்கு; bitter luffa - luffa acutangula. (சா.அக.).

[Skt. gōsataka > த. கோசாதகி.]

கோசாமி *kōšāmi,* பெ.(n.) **கோசாயி** பார்க்க; see *kōšāyi.*

[Skt. gōšvāmi > த. கோசாமி.]

கோசாயி *kōšāyi,* பெ. (n.) இசுலாமிய இரவலன்; a mahomadan fakir. (சா.அக.).

கோசாரம் *kōšāram,* பெ.(n.) **கோசரம்**¹, 4 பார்க்க; see *kōšaram.*

[Skt. gō-cāra > த. கோசாரம்.]

கோசாரி *kōsāri,* பெ.(n.) **கோசாவதி** பார்க்க; see *kōsāvati* (சா.அக.).

கோசாவெடு-த்தல் *kōšā-v-eḍu-,* 4 செ.கு.வி. (v.i.) வெளிநாட்டில் பணியாற்றுதற்கு அதிகார ஆவணம் (பத்திரம்) பெறுதல்; to obtain power of attorney for acting as agent outside British India.

கோசி-த்தல் *kōsi-,* 4 செ.கு.வி. (v.i.) பேரொலி ஒலித்தல்; to sound, roar, *"டமாரங்கள் கோசிப்ப"* (பணவிடு. 71)

[Skt. ghōṣ(a) > த. கோசி-த்தல்.]

கோசிகுவா *kōši-kuvā,* பெ.(n.) கறிமுன்னை; curry nellipramna esculenta (சா.அக.).

கோசிகுவிகம் *kōši-kuvigam,* பெ.(n.) உண்ணாக்கு; the uvula (சா.அக.).

கோசு *kōšu,* பெ.(n.) முட்டைக்கோசு; cabbage.

[E. cosh > த. கோசு.]



கோசுக்கீரை *kōšu-k-kīrai,* பெ.(n.) **கோசு** பார்க்க; see *kōšu.*

கோசுபறுவான் *'kōšuparuvān,* பெ.(n.) கப்பலிற் பாயை இழுத்துக் கட்ட உதவும் அறை (M. Navi 82); gaff.

[E. gaff-spar > த. கோசுபறுவான்.]

கோசுமலி *kōšumali,* பெ.(n.) **கோசும்பரி** பார்க்க; see *kōšumpari.*

[Mhr. kōsimbari > த. கோசுமலி.]

கோசுமாசு *kōšumāšu,* பெ. (n.) ஏமாற்று; juggling, deception, hoax.

[U. ghōlmāl > த. கோசுமாசு.]

கோசை *kōšai,* பெ. (n.) பேரொலி (வின்); loud noise.

[Skt. ghōsa > த. கோசை.]

கோட்டகம் *kōṭṭagam,* பெ.(n.) செங்கத்தாரி; false - pea-cock food tree Niebuhria linearis (சா.அக.)

கோட்டசததோடம் *kōṭṭa-šadaḍōcam,* பெ.(n.) குழந்தைகளுக்கு வயிற்றுக்குள் காற்றை உலாவச் செய்து கக்கலையுண்டாக்கும் ஒரு வகை தோ(ஷ)ட நோய்; a morbific diathesis in children marked by flatulence of the stomach and vomiting (சா.அக.)

கோட்டசதம் *kōṭṭa-šatam,* பெ. (n.) வயிறு; belly (சா.அக.)

கோட்டநாகம் *kōṭṭa-nāgam,* பெ. (n.) மலச்சிக்கல்; costiveness, constipation. (சா.அக.)

கோட்டபேதம் *kōṭṭa-pēdam,* பெ. (n.) குடலுக்குண்டான சிதைவு; morbid affections of the bowels. (சா.அக.)

கோட்டம்¹ *kōṭṭam,* பெ. (n.) 1. ஒரு வகை மணமுள்ள செடி; costus shrub savssurea lappa. 2. நறுமணப் பண்ட வகை; putchock

[Skt. ghōsa > த. கோட்டம்.]

கோட்டம்² *kōṭṭam,* பெ. (n.) ஆரவாரம்; loud noise.

[Skt. ghōsa > த. கோட்டம்.]

கோட்டம்³ *kōṭṭam,* பெ. (n.) குடல்; intestines, bowels (சா.அக.)

கோட்டரோகம் *kōṭṭa-rōgam,* பெ. (n.) அடிவயிற்றில் ஏற்படும் நோய்; disease of the abdomen (சா.அக.)

[Skt. ghōsa-rōka > த. கோட்டரோகம்.]

கோட்டா *kōṭṭā,* பெ.(n.) பகடி, கிண்டல் (கேலி); ridicule, mockery.

[U. khōṭā > த. கோட்டா.]

கோட்டாங்கம் *kōṭṭāṅgam,* பெ.(n.) அரத்தம் முதலியவை தங்கி நிற்பதற்காக உட்பக்கம் குழியமைந்துள்ளவுறுப்பு; an internal orgam with acavity foı retaining the blood. (சா.அக.)

கோட்டி¹ *kōṭṭi,* பெ.(n.) 1. கூட்டம்; assembly, congregation. *"விர்தாகோட்டி யென்னிலே செல்வாதத்தனை"* (தாயு. ஆனந்தமான.1) 2. கருவறை முதலியவற்றில் திருவாய்மொழி முதலியன சொல்வார் இருக்கும் வரிசை; row, order, as of reciters of sacred works in the presence of the idol.

[Skt. gōsṭhi > த. கோட்டி.]

கோட்டி² *kōṭṭi,* பெ.(n.) சிலந்திப் பூச்சி; spider (சா.அக.).



கோட்டிப்பு *kōṭṭppu,* பெ.(n.) பேரொலி (வின்); loud noise.

கோட்டியம் *kōṭṭiyam,* பெ.(n.) நுரையீரல் நடு; the centre of the lungs (சா.அக.).

கோட்டு¹ *kōṭṭu,* பெ. (n.) சீட்டாட்டத்தில் எல்லாப்பிடிகளையும் பிடித்து வெற்றி பெறுகை; to win all the cards in a card-game.

[E. court-card > த. கோட்டு.]

கோட்டு² *kōṭṭu,* பெ (n.) வயிறு; belly; stomach. (சா.அக.)

[Skt. gōtu > த. கோட்டு.]

கோட்டுநோய் *kōṭṭu-nōy,* பெ. (n.) வயிற்று நோய்; stomach-ache colic. (சா.அக.)

[கோட்டு + நோய்.]

[Skt. gōtu > த. கோட்டு.]

கோட்பாரா *kōṭpārā,* பெ (n.) கணக்குச் சுருக்கம்; abstract of account.

[U. gōswāra > த. கோட்பாரா.]

கோடம் *kōḍam,* பெ(n.) 1. பேரொலி; loud noise roar. *"இங்கய லெழுந்த கோடம் யாது" (பாரத. பதின்மூன்.155).* 2. வெண்கலம் (சங்.அக.); bell metal.

[Skt. ghōsa > த. கோடம்.]

கோடா *kōṭā,* பெ.(n.) **கோட்டா** பார்க்க; see *kōṭṭā.*

கோணம்¹ *kōṇam,* பெ.(n.) மூக்கு (பிங்.); nose, snout, nostril.

[Skt. ghōṇa > த. கோணம்.]

கோத்திரசன் *kōttiraśaṉ,* பெ(n.) ஒரு குலவழியில் பிறந்தவன்; one born in the same *gōtra* or family.

[Skt. gōtra-ja > த. கோத்திரசன்.]

கோத்திரப்பெயர் *kōttira-p-peyar,* பெ.(n.) குடிப்பெயர் (பன்னிருபா.146); patronymic.

[Skt. gōtra > த. கோத்திரம் + பெயர்.]

கோத்திரம் *kōttiram,* பெ.(n.) **கோத்திரை** (சூடா.) பார்க்க; see *kōttirai.*

கோத்திரமின்மை *kōttiram-iṉmai,* பெ. (n.) அருகன் எண்குணங்களுள் மறுபிறப்புக்குரிய முன் வினையில்லாமை (பிங்.); condition of being free from Karma that causes re-birth, one of *arukaṉ-eṉ-kuṇam.*

[Skt. gōtrā > த. கோத்திரம் + இன்மை.]

கோத்திரவம் *kōttiravam,* பெ.(n.) வரகு (பிங்.); common millet.

[Skt. kōdrava > த. கோத்திரவம்.]

கோத்திரி[1] *kōttiri,* பெ.(n.) நற்குலத்தோன்; man of noble birth. *"பரத்துவசனுக் குறவுரிய கோத்திரி" (பாரத. பதினான்காம். 200).*

கோத்திரை *kōttirai,* பெ.(n.) நிலம்; earth.

[Skt.gōtra>த. கோத்திரை.]

கோதண்டபாணி *kōtaṇḍa-pāṇi,* பெ.(n.) இராமன் (வில்லை கையிற் கொண்டவன்); *Rāma*, as having bow in his hand. *"கோதண்டபாணி குலமருகன்" (திருப்போ. சந்நிதி. மாலை, 66).*

[Skt.kōdaṇḍa+pāṇi>த. கோதண்டபாணி.]

கோதா *kōdā,* பெ. (n.) மற்கட்டும் களம்; wrestling ground.

[U. gōdhā > த. கோதா.]

கோதாகொடு-த்தல் *kōdā-koḍu-,* 4 செ. குன்றாவி. (v.t.) ஏமாற்றி விட்டுப் போதல்; to give the slip, play the hoax.

[U.gōdhā+koḍu > த. கோதாகொடு-த்தல்.]

கோது *kōdu,* பெ.(n.) **கோதுகம்** பார்க்க; see *kōdugam. "வானவர் தங்கோதா" (திவ். பெரியதி.6. 2 : 9).*

[Skt. kautuka > த. கோது.]

கோதுகம் *kōdugam,* பெ.(n.) உள்ளக்களிப்பு; joy, delight. *"கோதுக மியாவர் கொண்டாடுவார்" (சூளா. முத். 36).*

[Skt. kautuka > த. கோதுகம்.]

கோதுகலம் *kōdu-kalam,* பெ.(n.) **கோதுகம்** பார்க்க; see *kōdugam. "கோதுகலமுடைக் குட்டனேயோ" (திவ். பெரியாழ். 2 .9 : 6).*

[Skt. kautāhala > த. கோதுகலம்.]

கோதுமை *kōdumai,* பெ.(n.) ஒருவகைத் தவசம் (பதார்த்த. 827); wheat, triticum *vulgare.*

[Skt. gōdhūma > த. கோதுமை.]

கோதூமம் *kōdūmam,* பெ.(n.) **கோதுமை** பார்க்க; see *kōdumai. "நலத்தகு பொருள் கோதூமம்" (திருவானைக் நானவி.25).*

[Skt. gōdhūma > த. கோதூமை.]

கோதூளி *kō-dūḷi,* பெ.(n.) சாயுங்காலம் (பிங்.) வீட்டுக்குத் திரும்பி வரும் ஆசுக்களின் நடையால் தூளியெழுங் காலம்; evening, as the time when dust is raised by home returning cattle, considered auspicious.

[Skt. gō-dhūli > த. கோதூளி.]

கோதூளிசமயம் *kōdūḷi-śamayam,* பெ.(n.) **கோதூளி** பார்க்க; see *kōdūḷi.*

[Skt.gō-dhūḷi +samayam> த. கோதூளிசமயம்.]

கோதை[1] *kōdai,* பெ.(n.) 1. உடும்பு (பிங்.); iguana. 2. வில்லாளர் கையிற் பூணும் தோலுறை; glove of iguana leather, worn by archers on the left fore-arm to protect it from being injured by the bowstring. *"ஞரிச் சிலையு முரட்கோதை யுங்கட்டி" (பாரதவெண். 776).* 3. மரக்காற்பறை; a cylindrical drum. *"மரக்கா லன்ன வொருவாய்க் கோதை" (கல்லா.8).*

[Skt. gōdhā > த. கோதை.]

கோதை[2] *kōdai,* பெ.(n.) கௌதமி என்னும் ஆறு (பிங்.); an ancient river.

கோந்து *kōndu,* பெ. (n.) பிசின்; gum.

தெ. கோந்து

[U. gond > த. கோந்து.]

கோந்துத்தான் *kōnduttāṉ,* பெ.(n.) பிசின் ஏனம் (C.G.); gum-pot, gum-bottle.

[U. gōnddān > த. கோந்துத்தான்.]

கோந்துலா *kōndulā,* பெ. (n.) மராட்டியப் பிச்சைக்காரர் பயன்படுத்தும் பறைவகை (இ.வ.); a kind of musical drum used by Mahratta beggars.

[Mhr. gōṇdhala> த. கோந்துலா.]

கோப்பி[1] *kōppi,* பெ. (n.) **காப்பி** (யாழ்ப்.) பார்க்க; see *kāppi.*

[E. coffee> த. கோப்பி.]

கோப்பி *kōppi,* பெ.(n.) காப்பித்தூளைக் கொதிக்கும் நீரில் போட்டுத் தெளியவைத்துப் பால் கலந்து தேவையான அளவு இனிப்பு சேர்த்துச் செய்யும் பருகம்; coffee (usually with milk and sugar).

த.வ. காணீர் (காழ் + நீர்), குளம்பி

[E. coffee > த.காப்பி > இலங்.வ.கோப்பி.]

கோபக்கிதம் *kōpakkitam,* பெ. (n.) கழற்சி (சங்.அக.); bonduc-nut.

[Skt. gō-bhaksita > த. கோபக்கிதம்.]

கோபங்கம் *kōbangam,* பெ. (n.) வைப்புநஞ்சு (சரகண்டபாடாணம்) (யாழ்.அக.); a mineral poison.

கோபதி *kō-padi,* பெ.(n.) 1. எருது (உரி.நி.); bull, as lord of cows.

[Skt. gō-pati > த. கோபதி.]

கோபம் *kōbam,* பெ.(n.) பொன்; gold (பிங்.).

[Skt. karbura > த. கோபம்.]

கோபவல்லி *kōbavalli,* பெ.(n.) 1. பெருங் குப்பை; moorva stemless plant. 2. நன்னாரி; indian sarsaparilla (சா.அக.).

[Skt. gōpa-valli > த. கோபவல்லி.]

கோபாலதாபனம் *kōbāla-tābanam,* பெ. (n.) நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று; an Upanisad, one of 108.

[Skt. gōpāla-tāpana > த. கோபாலதாபனம்.]

கோபாலதாபினி *kōpāla-tāpini,* பெ.(n.) **கோபாலதாபனம்** பார்க்க; see *kōbāla-tābanam.*

கோபாலவார்னிசு *kōbāla-vārnicu,* பெ. (n.) 1. பசைமிகுந்த குங்கிலியத்தையும் சூடத்தையும் ஆறுக்கு ஒன்றாகக் கூட்டிச் சூரணமாக்கிச் சாராயத்தை விட்டுக் குழைத்துச் சித்தஞ் செய்யும் மின்னுநெய் செய்யும் வகை (உ.வ.); spirit-varnish prepared by mixing hot alcohol with 6 parts of piney dammar and one part of camphor.

த.வ. மினுப்பி.

[E. copal+ E.varnish > த. கோபாலவார்னிசு.]

கோபிகை *kōbikai,* பெ.(n.) இடையர் குலப்பெண்; herds woman, shep herdess.

கோபிசந்தனம் *kōbi-santanam,* பெ.(n.) ஒருசார் திருமால் அடியவர்கள் ஊர்த்துவ புண்டரமாக நெற்றியிலணிவதும் வெண்மை கலந்த மஞ்சள் நிறமுள்ளதுமாகிய ஒருவகைத் திருமண்; yellowish earth used by certain devotees of *Visnu* for upright sectarian marks. *"தாமரைத் திருமணியு மெய்க்கோபி சந்தனமும்" (பிரபோத.10:13).*

த.வ. திருமால் திருமண்.

[Mhr. gōpicandana > த. கோபிசந்தனம்.]

கோபுளகம் *kōbulagam,* பெ.(n.) வைப்பு நஞ்சு (தாலபாடாணம்) (சங்.அக.); a mineral poison.

[Skt. gōpulaka > த. கோபுளகம்.]

கோர்சா *kōrša,* பெ.(n.) 20 உருப்படி அடங்கிய துணி மூட்டை (C.G); bale of cloth containing 20 pieces.

[U. kōrja > த. கோர்சா]

கோர்ட்டார் *kōrttār,* பெ.(n.) அறமன்ற நடுவர்; magistrate, judge.

[E.court>த.கோர்ட்டார். 'ஆர்' தமிழ் உயர்வு ஒருமை ஈறு.]

கோர்ட்டு *kōrttu,* பெ.(n.) அறமன்றம்; court.

[E. court > த. கோர்ட்டு.]

கோர்ட்டுமௌகூப்பு *kōrttu-maukūppū,* பெ.(n.) அறமன்றம் சாத்துகை(C.G.); closing of the court.

[E.court+U.maukūz > த. கோர்ட்டுமௌகூப்பு]

கோரதந்தம் *kōra-tandam,* பெ. (n.) வளைந்தகொடுந்தந்தம்; curvad tusks, as of wild boars.

[Skt. ghōra+tandam > த. கோரதந்தம்.]

கோரதம் *kō-radam,* பெ.(n.) பெரும்பாலும் எருதுகளால் இழுக்கப்படும் தேர்; a car, generally drawn by oxen.

த.வ. காளைத்தேர்.

[Skt. gō-ratha > த. கோரதம்.]

கோரதரம் *kōrataram,* பெ. (n.) நிரயம் (சிவதரு.சுவர்க்க நரக.107); a hell.

[Skt. ghōra-tara > த. கோரதரம்.]

கோரரூபம் *kōra-rūbam,* பெ. (n.) 1. அழகற்ற வடிவம்; ahideous figure.

[Skt. ghora-rūpa > த. கோரரூபம்.]

கோரவாரம் *kōra-vāram,* பெ.(n.) சந்தனமரம் (யாழ்.அக.); sandalwood tree.

[Skt. ghōra+v-āram > த. கோரவாரம்.]

கோராகோரம் *kōrā-kōram,* பெ. (n.) ஒருவகை நிரயம் (சிவதரு.சுவர்க்கநரக.107); a hell.

[Skt. ghōra+a-ghōra > த. கோராகோரம்.]

கோராவாரி *kōrā-vāri,* பெ.(n.) பெரும்புயல் (j.); violent storm.

[Skt. ghōra + vāri > த. கோராவாரி.]

கோல்மால் *kōlmāl,* பெ.(n.) **குல்மால்பண்ணு-தல்** பார்க்க; see *kulmāl-paṇṇu-.*

[U. gulmāl > த. கோல்மால்.]

கோலா *kōlā,* பெ.(n.) ஒருவகைப் பருகம்; a kind of aerated water.

[E. kola > த. கோலா[3].]

கோலி *kōli,* பெ.(n.) சிறு குண்டுவடிவான விளையாட்டுக் கருவி; marble, a plaything.

[Mhr. gōli > த. கோலி.]

கௌகப் *kaugap,* பெ.(n.) தோலா எடையுள்ள ஒரு பண்டைக் காலத்து முகமதிய வெள்ளி நாணயம்; an ancient Mahomadan silver coin weighing 50 totals (சா.அக.).

கௌசபாகம் *kaušapāgam,* பெ.(n.) ஒரு வகைக் கருக்கு நீர்; a kind of decoction (சா.அக.).

[Skt. kauša+ த. பாகம்.]

கௌசல்யம் *kaušalyam,* பெ.(n.) திறமை; ability. *"சிற்பகௌசல்யத்துடனே குண்ட மண்டபவேதிகளைச் சமைத்து" (சி.சி.8:3 சிவாக்.).*

[Skt. kaušalya> த. கௌசல்யம்.]

கௌசலம்[1] *kausalam,* பெ.(n.) 1. **கௌசல்யம்** பார்க்க; see *kaušalyam.* 2. தந்திரம் (இ.வ.); art, artfulness.

[Skt. kaušalya>த.கௌசலம்.]

கௌசலம்[2] *kausalam,* பெ.(n.) கள்; toddy (சா.அக.).

கௌசலை *kaušalai,* பெ.(n.) இராமனின் தாய்; Rama's mother. *"மன்னுபுகழ்க் கௌசலை தன் மணிவயிறு வாய்த்தவனே" (திவ்.பெருமாள்.8:1).*

[Skt. kausalyā>த. கௌசலை.]

கௌசனம் *kaušaṉam,* பெ.(n.) **கௌபீனம்** (இ.வ.) பார்க்க; see *kaubīṉam.*

[Skt.gō-vali>த.கோவலி.]

கௌசனை *kaucaṉai,* பெ.(n.) 1. உறை; cover, envelope. 2. குதிரை முதலியவற்றின் மேற்றவிசு (வின்.); cushion or pad for a rider on a horse or elephant.

தெ. கௌசினா.

[Skt. koša> த. கௌசனை.]

கௌசாம்பி *kaušāmbi,* பெ.(n.) கங்கைக் கரையிலுள்ள ஒரு பழைய நகரம்; an ancient city on the banks of the Ganges in the lower part of the Doab.

[Skt. kaušāmbi>த.கௌசாம்பி.]

கௌசி *kauši,* பெ.(n.) வயிற்றி லுண்டாகும் ஓர் நீராமைக்கட்டி; dropsy of the belly or abdomen abdominal dropsy-*Ascites* (சா.அக.).

கௌசிகம் *kaušigam,* பெ.(n.) 1. கூகை (பிங்.); owl. 2. பட்டாடை (பிங்.); silk cloth. 3. பண் வகை (சிலப்.6, 35, உரை); a primary melody-type.

[Skt. kausika > த. கௌசிகம்.]

கௌசிகன் *kaušigaṉ,* பெ.(n.) 1. விசுவா மித்திரன்; *Viswamittiraṉ. "கௌசிகன் சொல்லுவான்" (கம்பரா.மிதிலை.42).* 2. இந்திரன் (பிங்.); Indira.

[Skt. kaušika >த. கௌசிகன்.]

கௌசிகேயம் *kausikēyam,* பெ.(n.) வெள்ளைக் கிலுகிலுப்பை; fox frightener-*Crotolaria angulosa* (சா.அக.).

கௌசிபல் *kausipal,* பெ.(n.) தென்னைமரம்; cocoanut tree (சா.அக.).



கௌசிரர்நிலக்குரோசினை *kausirarnila-k-kurōsinai,* பெ.(n.) இது செம்பினின்று களிம்பெடுக்கும் மருந்து; an unknown paste used to remove verdigris from copper (சா.அக.).

கௌசீகபலம் *kausiga-palam,* பெ.(n.) தேங்காய்; cocoanut (சா.அக.).

கௌசீதகி *kausītaki,* பெ. (n.) நூற்றெட்டு (உபநிடதம்) துணைத் தோன்றியங்களுளொன்று; an upanisad, one of 108.

[*Skt. kausītakī > த. கௌசீதகி.*]

கௌசீதளம் *kausīdaḷam,* பெ.(n.) 1. வெள்ளை ஈர்கொல்லி; stinking swallow-wort. 2. **ஈர்கொல்லி** பார்க்க; see *īr-k-kolli* (சா.அக.).

கௌசுகம்[1] *kausugam,* பெ.(n.) **குங்கிலியம்** பார்க்க; see *kuṅgiliyam.*

[*Skt. kausika > த. கௌசுகம்.*]

கௌசுகம்[2] *kausugam,* பெ.(n.) குங்கிலியம்; tripterocarp dammar.

[*Skt. kausika > த. கௌசுகம்.*]

கௌஞ்சம்[1] *kauñsam,* பெ.(n.) **கிரவுஞ்சம்** (சூடா.) பார்க்க; see *kiravuñjam.*

[*Skt. kraunea > த. கௌஞ்சம்.*]

கௌஞ்சம்[2] *kauñcam,* பெ.(n.) 1. அசாமிற்கு கிழக்கேயுள்ள பனிமலை (இமயமலை)த் தொடர்; the eastern part of the Himalayan range in Assam. 2. திருநெல்வேலிக்கு அருகிலுள்ள ஒரு தீவு; an unknown island near Tirunelvelly Dt. (சா.அக.).

கௌடதம் *kauḍadam,* பெ. (n.) 1. வெள்ளுள்ளி; garlic. 2. வெட்பாலை; Tellicherry bark - *Nerium antidysentericum* (சா.அக.).



கௌடநடை *kauḍa-naḍai,* பெ.(n.) **கௌட நெறி** (வின்.) பார்க்க; see *kauḍa-neṟi.*

[*Skt. gauḍa > த. கௌடம் + நடை.*]

கௌடநெறி *kauḍa-neṟi.* பெ.(n.) செறிவு முதலியவை தடுப்ப நெறிக்குரிய குணங்கள் நிரம்பி வாராமல் சொற்பெருகத் தொடுக்குஞ் செய்யுணெறி (தண்டி.12, உரை); the *kauṭam* style of poetry characterised mainly by verbosity, dist. fr. *vaitarappa-neṟi.*

[*Skt. gauḍa > த. கௌடம் + நெறி.*]

கௌடம் *kauḍam,* பெ. (n.) 1. வெல்லத்தினால் செய்த ஒரு மது; a liquor prepared out of jaggery; Molasses or that which is prepared from sugar. 2. ஒரு பின்னலான மருத்துவக் கொடி; a medicinal twining creeper. 3. வடதேயம்; North India (சா.அக.).

[*Litt. gūd* (வெல்லம்) விந்தியத்தின் வடபால் பஞ்ச கௌடம் எனும் வடநாடு பஞ்சதிரவிடம் என்பதன் எதிர்.]

கௌடலி *kauḍali,* பெ.(n.) 1. ஆடையில்லாள்; one having no clothes on. 2. சத்தி; the goddess sakti (சா.அக.).

கௌடிலம் *kaudilam,* பெ.(n.) வளைவு; curve, bent.

[Skt. kautilya > த. கௌடிலம்.]

கௌண்டன் *kaundan,* பெ.(n.) 1. உயிர்க் கொல்லி; life-killer. 2. வேடன்; hunter (சா.அக.).

கௌண்டினியன் *kaundiniyan,* பெ.(n.) 1. ஒரு முனிவன்; the name of a great sage. 2. கொடிவழி;

கௌணப்பொருள் *kauna-p-porul,* பெ.(n.) இலக்கண வகையாற் கொள்ளும் பொருள் (சி.சி.பாயி.2,ஞானப்.); secondary meaning or sense of a word, metaphorical sense, opp. to *mukkiya-p-porul.*

[Skt.gauna+porul>த. கௌணப்பொருள்.]

கௌணம் *kaunam,* பெ.(n.) முகாமை யல்லாதது; that which is subordinate or secondary.

[Skt. gauna > த. கௌணம்.]

கௌணாவதாரம் *kaunāvatāram,* பெ.(n.) ஒரு நிமித்தம் பற்றித் தன்சத்தியை ஒருவர்பால் ஏறிட்டு நிகழ்த்தும் தெய்வத் தோற்றரவு; secondary or patial incarnation in which God's spirit enters and works through a human being.

த. கூடுபாய்தோற்றரவு.

[Skt. gauna+ava-tāra > த. கௌணாவ தாரம்.]

கௌணியன் *kauniyan,* பெ.(n.) கவுணியக் குலத்தான்; one born in the *kaudinya* gotra.

[Skt. கௌடிண்யம் > த.கவுணியம், கௌணியம்]

வடமொழியாளர் மரபின் வண்ணம் கௌடிண்ய கோத்திரத்தைச் சார்ந்தவனைக் கௌடிண்யன் என்பர். இது தமிழில் கவுணியன் விண்ணந்தாயின் எனும் புலவர் பெயர் உள்ளது.

கௌத்துபம் *kauttūbam,* பெ.(n.) திருமால் மார்பிலணியும் மணி; by Viṣṇu on his chest.

[Skt. kaustuba > கௌஸ்துபம் > த. கௌத்துபம்.]

கௌத்துவம்[1] *kauttuvam,* பெ.(n.) மாணிக்கம்; a kind of carb- (gem); a ruby (சா.அக.).

கௌத்துவம்[2] *kauttuvam,* பெ.(n.) 1. **கௌத்துபம்** பார்க்க; see *kaustubam.* *"கௌத்துவமுடைக் கோவிந்தன்" (திவ். பெரியாழ்.4 5:8).* 2. தாமரைக்கல்; a kind of ruby (சூடா.).

[Skt. kaustubha > த. கௌத்துவம்².]

கௌத்துவம்[3] *kauttuvam,* பெ.(n.) **கவுத்துவம்**[1] பார்க்க; see *kavuttuvam.*

[Skt. kaitava > த. கௌத்துவம்.]

கௌத்துவவழக்கு *kauttuva-valakku,* பெ.(n.) பொய்வழக்கு (இ.வ.); barratry, vexatious litigation, false suit.

[கௌத்தும் + வழக்கு.]

[Skt. kaitava > த. கௌத்துவம்.]

கௌதம் *kaudam,* பெ.(n.) கிச்சிலிக் குருவி; the king fisher Haicyon (சா.அக.).



கௌதமதந்திரம் *kaudama-tandiram,* பெ. (n.) விசுவாமித்திரராற் செய்யப்பட்ட ஓர் ஆயுள் வேத நூல்; an Ayurvedic treatise by sage Viswamitra (சா.அக.).

கௌதமநாடி *kaudama-nādi,* பெ.(n.) கௌதமரால் தமிழில் செய்யப்பட்ட ஒரு கை வரிக் கணிய நூல், தமிழ், நாடி நூல்கள் பொதுவாக உள்ளங்கைக் கோடுகளைக் கொண்டே வரும். ஆகவே, கை வரி நூலிற்கும் கணிதத்திற்கும் நெருங்கிய தொடர்பு முண்டென்பது தெற்றென

விளங்கும்; a work on Astrology written by sage Goutana C' Viswamitra, Tamil Nadi work is generally based on Palmistry; and therefore a close relation between palmistry and astrology is clearly established (சா.அக.).

கௌதமம்[1] *kaudamam,* பெ.(n.) அறநூல் பதினெட்டனுள் கௌதமரால் இயற்றப்பட்ட நூல்; *Dharmasūtra* by Gautama, one of 18 *tarumanūl.*

[Skt. gautama > த. கௌதமம்.]

கௌதமம்[2] *kaudamam,* பெ.(n.) நறும் பிசின்; fragrant resin (சா.அக.).

கௌதமன் *kaudamaṉ,* பெ.(n.) 1. ஒரு முனிவர்; an ancient rsi, husband of *Ahalyā.* 2. அறநூல் செய்த அக்க பாதர்; the founder of the *Nyāya* system of Indian philosophy. 3. புத்தன்; the Buddha. 4. கிருபாசாரியார்; *Krpāšārya,* a preceptor of the *Pāṇḍavas.* *"முன்னிருந்த கௌதமன்" (பாரத. வாரணா.66).*

[Skt. Gautama > த. கௌதமன்.]

கௌதமனார் *kaudamaṉār,* பெ.(n.) தலைச் சங்கப் புலவருள் ஒருவர்; a poet of the first *šaṅgam* (தொல்.பொ.15, உரை).

[Skt. gautama > த. கௌதமனார்.]

கௌதமி *kaudami,* பெ.(n.) 1. ஒரு ஆறு (பிங்.); a river. 2. ஆமணத்தி (கோரோசனை) (வின்.); bezoar-stone.3. ஆன்; cow.

[Skt. gautamī > த. கௌதமி.]

கௌதமை *kaudamai,* பெ.(n.) **கௌதமி** பார்க்க (வின்.); see *kaudami.*

கௌதாரம் *kaudāram,* பெ.(n.) 1. உடும்பின் குட்டி; young of guana. 2. உடும்பின் நிறமான பாம்பு; a snake of the colour of guana (சா.அக.).

கௌதுகம் *kaudugam,* பெ.(n.) 1. மகிழ்ச்சி; joy, pleasure. 2. சாலவிளையாட்டு; legerdemain, jugglery. *"கதுமெனத்தரும் விஞ்சையர் கௌதுகம் போல" (சேதுபு. காசிப.37).* 3. காப்பாக மணிக்கட்டிற் கட்டும் நூல் (சங்.அக.); thread worn on the wrist as amulet.

[Skt. kautuka > த. கௌதுகம்.]

கௌதூகலம் *kaudūgalam,* பெ.(n.) மிதி பாகல், நிலத்தில் படரும் சிறுபாகல்; ground creeper mimordica humilis (சா.அக.).

கௌதேரசர்ப்பம் *kaudēra-sarppam,* பெ.(n.) சாரைப் பாம்பு. இது உடும்பு நிறத்தை போன்றதால் இப்பெயர்; rat-snake called from its resemblence in colour to guana. (சா.அக.).



கௌந்தியம் *kaundiyam,* பெ.(n.) வெண்மருது; white murdah - *Terminalia arjuna* (சா.அக.).

கௌபம் *kaupam,* பெ.(n.) கிணற்று நீர்; well water (சா.அக.).

கௌபலம் *kaupalam,* பெ.(n.) மிளகாய்; chilly-*Capsicum fruitescens* (சா.அக.).

கௌபலா *kaupalā,* பெ.(n.) தட்டுப் பலா; a kind of jack tree (சா.அக.).

கௌபீனசுத்தம் *kaupīnā-šuttam,* பெ. (n.) அயற்பெண்களைக்கூடாதிருக்குந் தூயதன்மை; man's sexual purity.

[*கௌபீனம்+சுத்தம்.*]

[*Skt. kaupīna > த. சுத்தம்.*]

கௌபீனசுத்தன் *kaupīna-šuttan,* பெ.(n.) பிற பெண்களைச் சேராதவன்; man of sexual purity (இ.வ.).

[*Skt. kaupīna+šuddha > த. கௌபீன சுத்தன்.*]

கௌபீனதோசம் *kaupīna-tōšam,* பெ. (n.) பிறபெண்களைச் சேர்தலாகிய குற்றம்; man's sexual impurity.

[*Skt. kaupīna+tōsa> கௌபீனதோசம்.*]

கௌபீனம் *kaupīnam,* பெ.(n.) நீர்ச்சீலை; man's loin-cloth.

த.வ. **கோவணம்.**

[*Skt. kaupīna > த. கௌபீனம்.*]

[*த.வ. கோவணம் > Skt. kaupīnam.*]

கௌமாதம் *kaumādam,* பெ.(n.) நளி (கார்த்திகை) மாதம்; the month of November and December (சா.அக.).

கௌமாரகம் *kaumāragam,* பெ.(n.) இளமை; juvenile age (சா.அக.).

த.வ. **குமரம்.**

கௌமாரதந்திரம் *kaumāra-tantiram,* பெ. (n.) பிள்ளைகளை வளர்ப்பதைப் பற்றியும், பயிற்சியைப் பற்றியும் கூறும் ஒரு வடமொழி மருத்துவ நூல்; the section of a medical work in Sanskrit treating of the rearing and education of children (சா.அக.).

த.வ. **குமரகல்வி.**

கௌமாரம்[1] *kaumāram,* பெ.(n.) 1. இளமை; youth; maiden age of sixteen. 2. இளமை ருவம்; childhood; young age. 3. ஒன்று முதல் 16 வயது வரையுள்ள ஆண்; a male aged 1 to 16 years. 4. 16 வயது முதல் 32 வரையுள்ள பெண்; a female aged 16 to 32 years.

த.வ. **குமரம்.**

[*Skt. kaumāra > த. கௌமாரம்.*]

கௌமாரம்[2] *kaumāram,* பெ.(n.) 1. இளம் பருவம்; childhood. 2. முருகக் கடவுளே பரம்பொருளென்று வழிபடுஞ் சமயம்; the religion of the *Kaumāras* who hold Skanda as the supreme being and are exclusively devoted to his worship.

த.வ. **குமரம்.**

[*Skt. kaumāra > த. கௌமாரம்.*]

கௌமாரி *kaumāri,* பெ.(n.) 1. தூய பெண்களுள் ஒருத்தி; *kaumārī,* the female principle of *Kumāra* or Skanda, one of *catta-mātar.* 2. மாகாளி (பிங்.); *kāḷi.*

[*Skt. kaumārī > த. கௌமாரி.*]

கௌமிதி *kaumidi,* பெ.(n.) நிலவு; moon (சா.அக.).

கௌமோதகி *kaumōdaki,* பெ.(n.) திருமாலின் படைக்கலன் (பிங்.); the mace of *Visṇu.*

[*Skt. kaumōdakī > த. கௌமோதகி.*]

கௌரம் *kauram,* பெ.(n.) 1. வெண்மை; whiteness. 2. பொன்னிறம் (சிலப்.12, 67, உரை.); yellow colour.

[*Skt. gaura > த. கௌரம்.*]

கௌரமிருகம் *kauramirugam,* பெ.(n.) காட்டு மாடு; wild cow-*Bos gaurus* (சா.அக.).



கௌரவம் *kauravam,* பெ.(n.) 1. மேன்மை; dignity; eminence, honour. 2. பெருமிதம்; pride. *"அடர்ச்சிமிகுங் கௌரவம்" (சிவப்பிர. பொது.30).*

[Skt. gaurava > த. கௌரவம்.]

கௌரவர் *kauravar,* பெ.(n.) கவுரவர்; Kaurava princes. *"வரிவெஞ்சிலைக்கைக் கௌரவர்" (பாரத.ஒன்பதாம்.31).*

[Skt. kaurava > த. கௌரவர்.]

கௌராங்கம் *kaurangam,* பெ.(n.) வெள்ளை அல்லது மஞ்சள் உடம்பை உடைத்தாயிருக்கை; having a white or yellowish body (சா.அக.).

கௌரி[1] *kauri,* பெ. (n.) 1. மலைமகள் (திவா.); பார்வதி; Parvati. *"பேருங் கௌரியென் றழைத்தனர்" (திருவிளை.விருத்த.4).* 2. காளி; *Kāḷi.* *"அம்பிகை மாதரிகௌரி" (அரிச்.பு.துதி.).* 3. எட்டு அல்லது பத்தகவைப் பெண்; young girl of for 10 years. 4. பொன்னிறம் (வின்.); yellow colour. 5. கடுகு (மலை.); mustard. 6. கொடி வகை; bristly trifoliate vine.

[த. கௌரி >Skt. கௌரி]

கௌரி[2] *kauri,* பெ. (n.) சோழி; (M.M.238); cowry, small white or yellow shell, used as a coin in some parts of India, Cypraca moneta.

[U. kauri > த. கௌரி[2].]

கௌரிகம் *kaurigam,* பெ.(n.) வெள்ளைக் கடுகு; white mustard (சா.அக.).

கௌரிகாளை *kauri-kāḷai,* பெ.(n.) எக்காள வகை; a long brass trumpet.

[Skt.gaurava+kāhala >த. கௌரிகாளை.]

கௌரிகேணி *kauri-kēṇi,* பெ.(n.) வெள்ளைக் காக்கணம் (மலை.); white flowered mussell - shell creeper.

[Skt. gaura+kēṇi > த. கௌரிகேணி.]

கௌரிசிப்பி *kauri-šippi,* பெ.(n.) வழிபாட்டுக் கலனாகப் பயன்படும் பெருஞ்சங்கு (வின்.); a big conch which is used as a thing to be worshipped.

[U. kauri+šippi > த. கௌரி+சிப்பி.]

கௌரிசங்கம் *kauri-sangam,* பெ.(n.) 1. சிவனும் சிவையும் உருவினதாய் இணைந்து உள்ளதாகக் கருதப்பெறும் இருபிளவுபட்ட அக்கமணி; a double *Rudrāsa*bead believed to represent Siva and Sivai. 2. **கவுரிசங்கரம்** பார்க்க; see *gaurišankara.*

[Skt. gauri+sanka > த. கௌரிசங்கம்.]

கௌரிசங்காமணி *kauri-šangā-mani,* பெ.(n.) **கவுரிசங்கம்** (வின்.) பார்க்க; see *kauri-sangam.*

கௌரிப்பழம் *kauri-p-palam,* பெ.(n.) ஒரு சிவப்புப் பழம், இது சாப்பிடவும் ஊறுகாய் போடவும் உதவும்; Indian black berry - Rubus flavus. It is eaten and made into preserves (சா.அக.).

கௌரிபாடாணம் *kauri-pāḍāṇam,* பெ.(n.) ஒரு வைப்பு நஞ்சு (வின்); a prepared arsenic.

[Skt.gauri+pāsāṇam>த.கௌரிபாடாணம்.]

கௌரிமாதி *kaurimādi,* பெ.(n.) மணமுறிப்பு மர வகை; a kind of Deoder tree (சா.அக.).

கௌரிமைந்தன் *kauri-maindaṉ,* பெ.(n.) முருகக் கடவுள், பார்வதி மைந்தன் (பிங்.); Skanda, as son of *Pārvati.*

[Skt.gauri+maindaṉ>த. கௌரிமைந்தன்.]

கௌரியச்சம் *kauriyaccam,* பெ.(n.) ஒரு பூடு; an unknown plant (சா.அக.).

கௌரியன் *kauriyaṉ,* பெ.(n.) பாண்டியன் பட்டப்பெயர்; *Pāṇḍiya* title. *"தவிரா வீகைக் கௌரியர் மருக" (புறநா.3, 5).*

[Skt. kauravya > த. கௌரியன்.]

கௌரிலம் *kaurilam,* பெ.(n.) 1. **கௌரிகம்** பார்க்க; see *kaurigam.* 2. இரும்புப் பொடி; iron filings (சா.அக.).

கௌரிவிரதம் *kauri-viradam,* பெ.(n.) துலை (ஐப்பசி) மாதத்தில் மலைமகளை நோக்கிப் புரியும் நோன்பு; religious observance in honour of *Pārvatī* in the month of *Aippaci.*

[Skt. gaurī+vrata > த. கௌரிவிரதம்.]

கௌரீயந்திரம் *kaurīyantiram,* பெ.(n.) சாரணை கொடுப்பதற்காகப் பயன்படுமோர் இயந்திரம்; an apparatus used in Alchemy for purposes of animating mercurial pills. (சா.அக.).

இவ்வியந்திரம் 8 சதுர செங்கல்லைக் கண்ணாடியைப் போல மெதுவாகத் தேய்த்துப் பிறகு அதன் நடுவில் மூசையைப் போற் குடைந்து அதற்குள் சுண்ணாம்பு தடவிப் பின் வெள்ளி, பொன், அப்பி ரேக்கு இவற்றை அரைத்து மூசையில் வார்த்து, வாய்மூடி சீலை மண் செய்து புடமிடப்படும்.

கௌரீலலிதம் *kaurī-lalidam,* பெ.(n.) **அரிதாரம்** பார்க்க; see *aridāram.*

கௌரேகிதம் *kaurēgidam,* பெ.(n.) பாம்பு; a serpent (சா.அக.).

கௌரேசியம் *kaurēsiyam,* பெ.(n.) வெள்ளை முகமுடைய கருங்குரங்கு; a black monkey with a white face (சா.அக.).

[Skt. gaurōciam > த. கௌரேசியம்.]



கௌல்[1] *kaul,* பெ.(n.) **கவுல்[1]** பார்க்க; see *kavul.*

கௌல்[2] *kaul,* பெ.(n.) **கவுல்[2]** பார்க்க; see *kavul[2].*

[U. qaul > த. கௌல்.]

கௌல்தார் *kaul-tār,* பெ.(n.) **கவுல்தார்** பார்க்க; see *kavultār.*

கௌலவம் *kaulavam,* பெ.(n.) கரணம் பதினொன்றனுள் ஒன்றாகிய காலப் பகுதி; a division of time, one of eleven *karaṇam.* q.v., (Astron.).

[Skt. kaulava > த. கௌலவம்.]

கௌலகம் *kaulagam,* பெ.(n.) வால் மிளகு; long pepper (சா.அக.).



கௌலவம்[1] *kaulavam,* பெ.(n.) குதிரை யுடலின் ஒரு பக்கத்திலிருக்கும் சுழிவகை (அசுவசா.149); a curl of hair on one side of a horse's body.

கௌலேயகன் *kaulēyagaṉ,* பெ.(n.) நாய்; dog (சா.அக.).

கௌலியம் *kauliyam,* பெ.(n.) 1. **கோரோசினை** பார்க்க; see *kōrōsiṉai.* 2. சாணி; dung. 3. **கவ்வியம்** பார்க்க; see *kavviyam* (சா.அக.).

கௌவியம் *kauviyam,* பெ.(n.) ஆனைந்து, ஆவினின்று பெறப்படும் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகிய பொருள்கள்; the

five choice products of a cow. *"தீதில் கௌவியங் கூட்டுபு பிசைந்தனர்" (சூத. சிவமா.2, 23).*

[Skt. gavya > த. கௌவியம்.]

கௌளம் *kaulam,* பெ.(n.) பண் வகை; a primary melody-type (பரத.இராக.55).

[Skt. gauda > த. கௌளம்.]

கௌளா *kaulā,* பெ.(n.) (யூனானி) உடம்பிற்குக் குளிர்ச்சியை உண்டாக்குமோர் பழம், யவனிய (யூனானி) மருத்துவர்கள் இதை மிகுதியாகப் பயன்படுத்துவர்; a kind of fruit much used by unani doctors for cooling the system. see கௌரிப்பழம் (சா.அக.).

கௌளி[1] *kauli,* பெ.(n.) கவுளி; house-lizard.

கௌளி[2] *kauli,* பெ.(n.) ஓர் இசை வகை; a specific melody-type (பரத. இராக.56).

கௌளிக்கட்டு *kauli-k-kattu,* பெ.(n.) **கௌளிக்காதல்** (இ.வ.) பார்க்க; see *kauli-k-kādal.*

கௌளிக்கட்டாய்ச்சொல்(லு)-தல் *kauli-k-kāttāy-c-col-,* 8 செ.குன்றா.(v.t.) குறி சொல்லி ஏமாற்றுதல் (இ.வ.); to deceive a person by professing to foretell, to mislead by sooth saying.

கௌளிக்காதல் *kauli-k-kādal,* பெ.(n.) நன்மை தீமைகளை அறிவிக்கும் பல்லி ஒலி (வின்.); chirp of a lizard, as presaging good or evil.

கௌளிச்சொல் *kauli-c-col,* பெ.(n.) **கௌளிக்காதல்** (இ.வ.) பார்க்க; see *kauli-k-kādal.*

கௌளிசாத்திரம் *kauli-šāttiram,* பெ.(n.) பல்லிச் சொற்குப் பலன்கூறும் நூல்; treatise interpreting the chirps of lizards.

கௌளிசொல் *kauli-sol,* பெ.(n.) பல்லி எழுப்பும் சத்தம்; chirp of the lizard. *கௌளி சொல்லுக்குப் பலன் சொல்லுவார்கள் (க்ரியா).*

கௌளிநூல் *kauli-nūl,* பெ.(n.) பல்லி சொல்லுவதின் பயன் கூறும் நூல்; a treatise containing the inter pretation of the chrips of lizards; a science on the noise of lizards and its presage (சா.அக.).

கௌளிபத்திரம் *kauli-pattiram,* பெ.(n.) வெள்ளை வெற்றிலை வகை; white betel-leaf.

[Skt. gaura + pattiram > த. கௌளி பத்திரம்.]

கௌளிபாத்திரம் *kauli-pāttiram,* பெ.(n.) 1. மஞ்சள் நிறமான காய்கள் காய்க்குந் தெங்கு வகை (இ.வ.); a variety of coconut tree bearing yellow coconuts. 2. தேங்கா யோட்டினால் செய்யப்பட்டுத் துறவிகள் நீர் அல்லது உணவு கொள்ளப் பயன்படுத்தும் ஏனம்; coconut shell used by ascetics as a begging bowl, water-vessel, etc.

[Skt. gaura > த. கௌளி + பாத்திரம்.]

கௌளிபந்து *kauli-pantu,* பெ.(n.) ஒரு பண்; a melody type.

[T. gauli + > த. கௌளிபந்து.]

கௌனகுளிகை *kauna-kuligai,* பெ.(n.) **குளிகை** பார்க்க; see *kuligai* (சா.அக.).

கௌனிகம் *kaunigam,* பெ.(n.) 1. வான்; sky. 2. கரும்பளிங்கு; a black granite stone (சா.அக.).

கௌசிதகி *kausitaki,* பெ.(n.) நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று; an upanisad, one of 108.

[Skt. kausītakī > த. கௌசிதகி.]

கௌத்துபம் *kaustupam,* பெ.(n.) திருமால் மார்பிலணியும் மணி; the gem worn by *Visnu* on his chest.

[Skt. kaustuba > த. கௌத்துபம்.]

சக்கம் *šakkam,* பெ.(n.) சாறு; extract (சா.அக.).

சக்கரகபிரசங்கம் *šakkaraga-pirašaṅgam,* பெ.(n.) வளைய வளையப் பேசுகை (பாண்டி.); arguing in a vicious circle a defect in argumentation.

த.வ. வேணாவெட்டிப்பேச்சு, வேண்டா வெற்றுப்பேச்சு.

சக்கரப்பிரதர் *šakkara-p-piradar,* பெ.(n.) சிவத்திருவுருவங்களு ளொன்று (காஞ்சிப்பு. சிவபுண். 23); a manifestation of Šivaṉ (Šaivam)

[Skt. cakra+prada> த. சக்கரப்பிரதர்.]

சக்கரகம் *šakkaragam,* பெ.(n.) 1. ஒரு வகைப் பாம்பு; a kind of serpent. 2. கொள்ளு; Madras horse gram-*Dolichos unflorus.* 3. வெண்குன்றி; white abrus-*Abrus precatorius* (சா.அக.).

[Skt. cakraka>த. சக்கரகம்.]

சக்கரநாமன் *šakkara-nāmaṉ,* பெ.(n.) ஒரு வகை அய மாட்சிகம்; a pyritic ore of iron (சா.அக.).

சக்கரேந்திரகம் *šakkarēndiragam,* பெ.(n.) ஒரு வகைக் கடுகு; a kind of mustard (சா.அக.).

சக்காத்து *šakkāttu,* பெ.(n.) இலவயம் (நெல்லை.); anything obtained free or gratis.

[U. zakāt>த. சக்காத்து.]

சக்கிடுத்தார் *šakkiḍuttār,* பெ.(n.) செயலாளர் (யாழ்ப்.); secretary.

[E. secretary >த. சக்கிடுத்தார்.]

சக்கிந்திரியம் *šakkindiriyam,* பெ.(n.) கண்; the organ of sight (சா.அக.).

சக்கியார்த்தம் *šakkiyārttam,* பெ.(n.) சொல்லாற்றலால் உணரும் பொருள்; explicit, direct or literal meaning of a word or sentence.

த.வ. வெளிப்படை.

[Skt. šakya+artha> த. சக்கியார்த்தம்.]

சக்கிரதரம் *šakkiradaram,* பெ.(n.) பாம்பு; snake (சா.அக.).

சக்கிரவாணு *šakkiravāṉu,* பெ.(n.) கழுதை; ass (சா.அக.).

சக்கிரிகம் *šakkirigam,* பெ.(n.) கொள்ளு; Madras horse gram, *Dolichos unflorus.* (சா.அக.).

த.வ. காணம்.

சக்கிரிதம் *šakkiridam,* பெ.(n.) குதிரை நடை வகை (சுக்கிரநீதி, 72); a pace of horses.

[Skt. cakrita> த. சக்கிரிதம்.]

சக்கிரீவதம் *šakkirīvadam,* பெ.(n.) கழுதை; ass (சா.அக.).

சக்கிலிடல் *šakkiliḍal,* பெ.(n.) கண்ணுக்கிடல்; to apply to the eye, as collyrium (சா.அக.).

சக்கினம் *šakkiṉam,* பெ.(n.) அம்பர்; amber-*succinum* (சா.அக.).

சக்குரம் *šakkuram,* பெ.(n.) கண்ணோய்ப் பொது; a general term for the diseases of the eye - *Ophthal-mia* (சா.அக.).

சக்கேரா *šakkērā,* பெ.(n.) **சகேரா** பார்க்க; see *šagērā.*

[U. zakhira > த. சக்கேரா.]

சக்கைமுக்கி *škkai-mukki,* பெ.(n.) **சக்கிமுக்கி** பார்க்க; see *sakkimukki* (சா.அக.).

சக்கோலி *šakkōli,* பெ.(n.) ஒரு வகைப் பூடு (சங்.அக.); a plant.

சக்சு *šakšu,* பெ.(n.) பார்வைத்திறன்; faculty of seeing (சா.அக.).

சக்சுசியம் *šakšušiyam,* பெ.(n.) 1. கண்ணுக்கினிமை; agreeable to the eyes. 2. கண்மை; collyrium for the eyes, extracted from Amomum antorhiza. 3. தாழை; a fragrant plant - *Pandanus odaratissimus* (சா.அக.).

[Skt. cakcu> த. சக்சுசியம்.]

சக்சுபீதம் *šakšupīdam,* பெ.(n.) கண்வலி; pain of eye (சா.அக.).

சக்சுரோகம் *šaksu-rōgam,* பெ. (n.) கண்ணோய்; disease of the eye (சா.அக.).

சக்தன் *šakdaṉ,* பெ.(n.) **சக்திமான்** பார்க்க; see *saktimāṉ.*

த.வ. திறமையாளன், ஆற்றலாளன்.

[Skt. šakta > த. சக்தன்.]

சக்தி *šakti,* பெ.(n.) **சத்தி** பார்க்க; see *šatti.*

த.வ. ஆற்றல், திறமை, வல்லமை.

[Skt. šakti>த. சக்தி.]

சக்திபூசை *šakti-pūšai,* பெ.(n.) பேராற்றலைப் பூசிக்கும் வாமமார்க்கம்; worship of sakti or the principle of energy in Godhead.

த.வ. காளிவழிபாடு.

[சக்தி + பூசை.]

[Skt. šakti > த. சக்தி.]

[பூசு→பூசி→பூசை = வழிபாடு செய்தல்.]

சக்திபோற்றல் *šakti-pōṟṟal,* பெ.(n.) ஆண் வித்தமிழ்தை (விந்தைக்) காப்பாற்றல்; conservation of energy through preservation of semen in the system (சா.அக.).

[சக்தி + போற்றல்.]

[Skt. šakti → த. சக்தி.]

சக்திமாற்றம் *šaktimāṟṟam,* பெ.(n.) ஒன்றன் வலிமையைப் பிறிதொன்றாக மாற்றுதல்; converting energy from one from into another (சா.அக.).

த.வ. திறன்.

[சக்தி + மாற்றம்.]

[Skt. šakti> த. சக்தி.]

சக்திமான் *šaktimāṉ,* பெ.(n.) ஆற்றலுள்ளவன் (இ.வ.); strong man, able or skilful person, a man of powerful personality.

த.வ. திறலன்.

[Skt. šakti-māṉ> த. சக்திமான்.]

சக்திமுகம் *šakti-mugam,* பெ.(n.) அரசாணை; (T.A.S.) royal mandate .

[சக்தி + முகம்.]

[Skt. šakti> த. சக்தி.]

சக்தியானுசாரம் *šaktiyāṉušāram,* பெ. அ. (adv.) ஆற்றலுக்கு ஏற்ப; to the best of one's ability. *"சக்தியானுசாரம் தானஞ் செய்ய வேண்டும்".*

[Skt. šakti+anu-sāra>த. சக்தியானுசாரம்.]

சக்பந்தி *šakpandi* பெ.(n.) **செக்குபந்தி** பார்க்க; see *šekku-pandi.*

[U. cakbandi> த. சக்பந்தி.]

சக்ரகம் *šakragam,* பெ.(n.) **சக்கரகம்** பார்க்க; see šakkaragam.

[Skt. cakraka>த. சக்ரகம்.]

சக்ரவத்துப்பிடி-த்தல் *šakravattu-p-piḍi-,* 4 செ.கு.வி.(v.i.) மாமன்னரென்ற சிறப்புப்பட்டம் எய்துதல்; to proclaim title to sovereignty. *"நடைச் சக்கரவத்துப்பிடிக்கலாம் படி" (ஈடு. 3, 9,9).*

[சக்ரவத்து + பிடி.]

[Skt. cakravarti>த. சக்ரவத்து.]

சக[1] *šaga,* பெ.அ. (adj.) ஒரே துறையில் பணிபுரிபவர்கள்; collegue, fello. *"சக ஆசிரியர்களே ஒன்றுபடுங்கள்! சக எழுத்தாளருக்கு நேர்ந்தது நமக்கும் நேரலாம்"*

த.வ. உடன்கூட்டு.

[Skt. saha>த. சக.]

சக[2] *šaga,* பெ.(n.) கணிதத்தில் கூட்டல்குறி (இலங்.); (in arithmetic) plus sign. *"ஐந்து சக ஐந்து சமன் பத்து".*

த.வ. கூட்டல்.

சககமனம் *šaga-gamaṉam,* பெ.(n.) உடன்கட்டையேறுகை; self-immolation of a Hindu widow on her husband's funeral pyre, concremation, sati.

த.வ. மாலை நிலை.

[சக + கமனம்.]

[Skt. saha >சக.]

கம்→கமனம் = செல்லுதல்.

சகலரும் *šagalarum,* பெ.(n.) எல்லோரும், அனைவரும் (அ.வ.); all, everyone. *"சகலரும் இதையே சொல்கிறார்கள்" (கிரியா.).*

[சகலர் + உம்.]

[Skt. sakala>த. சகலர்.]

சககாரி *šaga-gāri,* பெ.(n.) துணைக்காரணம்; secondary cause. *"அடுத்துவருமனன சககாரிகளாம்" (வேதா.சூ.134).*

[Skt. sahakāri>த. சககாரி.]

சகச்சிரம் *šaga-c-ciram,* பெ.(n.) 1. ஆயிரம்; the number 1000. 2. சிவத்தோன்றியங்கள் இருபத்தெட்டனுள் ஒன்று (சைவச.பொது.332, உரை); an ancient *Šaivam* scripture in sanskrit, one of 28 *Sivāgamam.*

[Skt. sahasra>த. சகச்சிரம்.]

சகசட்சு *šaga-šaṭcu,* பெ.(n.) கதிரவன் (யாழ்.அக.); sun, as the eye of the world.

[Skt. jagat-cakṣuḥ> த. சகசட்சு.]

சகசண்டி *šaga-šaṇḍi,* பெ.(n.) பெருமுரடன் (இ.வ.); rough, quarrelsome person.

த.வ. சண்டைக்காரன்.

[சக + சண்டி.]

[Skt. jagat>த.சக]

சகசநிட்டை *šagaša-niṭṭai,* பெ.(n.) பயிற்சியால் (அப்பியாசத்தால்) ஒருவனுக்கு இயற்கையாயமைந்த ஊழ்கம் (நிட்டை); religious meditation that has become second nature by long practice. *"இன்னணஞ் சகசநிட்டை யெய்திய நந்திப்புத்தேள்" (தணிகைப்பு.நந்தியு.147).*

த.வ. இயல்பு ஊழ்கம், தன்மெய்யுணர்வு.

[Skt. saha-ja+ni-ṣṭha > த. சகசநிட்டை.]

சகசமலம் *šagasa-malam,* பெ.(n.) உயிர்கட்கு இயல்பாயுளதாகிய ஆணவமலம் (சிவப்பிர.2, 20, உரை); the *āṇava-malam,* as an obstructive principle or bond inherent in the soul.

[சகச(ம்) + மலம்.]

த.வ. பிறப்பு மலம்.

[Skt. saha-ja>த. சகசம்.]

சகசரநாமம் *šagašara-nāmam,* பெ.(n.) கடவுளின் ஓராயிரம் திருப் பெயர் (நாமங்)களைக் கூறும் நூல்; sacred book containing thousand names of a deity.

த.வ. ஆயிரம் பெயர்.

[Skt. sahas-ra-nāma> சகசுரநாமம்.]

சகசரநாமார்ச்சனை *šagašara-nāmārccaṉai,* பெ. (n.) கடவுளுடைய ஓராயிரம் பெயர்(நாமங்)களையும் ஒவ்வொன்றாகச் சொல்லி மலர் முதலியவற்றை அவன் திருவடிகளில் இட்டு வழிபாடுசெய்கை; worship of a deity by offering at its feet a leaf, flower or pinch of saffron on pronouncing each of its thousand names.

த.வ. ஆயிரம் பூசனை.

[Skt. sahasra-nāma+arcanā> த. சகசர நாமார்ச்சனை.]

சகசரம் *šagašaram,* பெ.(n.) ஆயிரம்; the number 1000.

[Skt. sahasra>த. சகசுரம்.]

சகசரம் *šagasaram,* பெ.(n.) **சகசா** பார்க்க (வின்.); see *šagašā.*

[Skt. sahā-jara>த. சகசரம்.]

சகசரன் *šagašaraṉ,* பெ.(n.) தோழன்; friend, companion, associate.

[Skt. saha-cara>த. சகசரன்.]

சகசரிதம் *šaga-šaridam,* பெ.(n.) உடன் நிகழ்வது; concomitant. *"ஆணவ சகசரிதமாக" (சி.சி.2.80, சிவாக்.).*

த.வ. உடனிகழ்ச்சி.

[Skt. saha+carita>த. சகசரிதம்.]

சகசவேது *šagaša-v-ēdu,* பெ.(n.) கூறப்பெற்ற பண்பினால் பண்பியைப் பற்றி அறியும் வழி, ஏது (சி.சி.அளவை.10, சிவாக்.); inference by which a thing is determined from a predication of its nature.

[Skt. saha-ja+hētu>த. சகசவேது.]

சகசன் *šagašaṉ,* பெ.(n.) உடன்பிறந்தவன் (சகோதரன்) (சங்.அக.); brother.

த.வ. பிறவன்.

[Skt. saha-ja>த. சகசன்.]

சகசாலக்கில்லாடி *šaga-šāla-k-killāḍi,* பெ.(n.) 1. தந்திரக்காரன்; a cunning person. 2. நாடறிந்த மாயவித்தைக்காரன்; a famous magician.

த.வ. படுகில்லாடி.

[சகசாலம் + கில்லாடி.]

[Pkt. jaga>Skt. jagat> த. சகம்.]

சலுக்கு → சாலக்கு → சாலம்.

கிள்ளை + ஆடி→கிள்ளையாடி→கில்லாடி.

சகசாலப்புரட்டன் *šaga-šāla-p-purāṭṭaṉ,* பெ.(n.) பெருமோசக்காரன்; consummate deceiver, as a magician.

த.வ. பெரும்புரட்டன்.

[சகசாலம் + புரட்டன்.]

[Pkt. jaga→ Skt. jagat→ த. சகம்.]

சகசாலம் *šaga-cālam,* பெ.(n.) மாய வித்தை; magical illusion. *"மானெனுமோர் சகசாலச் சிறுக்கி" (அருட்பா.vi, தான்பெற்ற.9).*

[சக + சாலம்.]

[Pkt. jaga→Skt. jagat→த. சகம் +சாலம்.]

சகசாலவித்தை *šaga-šāla-vittai,* பெ.(n.) ஞாலம் புகழும் மாயக்கலை; a famous magic or jugglery.

த.வ. பெரும்மாயக்கலை.

[சக+சால(ம்) + வித்தை.]

[Pkt. jaga>Skt. jagat> த.சகம்.]

சகசா *šagaša,* பெ.(n.) சிறுகுறிஞ்சா (மலை); small Indian ipecacuanha.

[Skt. sahā-ja>த. சகசா.]

சகசாட்சி *šaga-šāṭci,* பெ.(n.) (உலக முழுவதையுங் காண்பவன்) கதிரவன் (வின்.); sun, as spectator of the whole world.

[Skt. jagat + sāksin > த. சகசாட்சி.]

சகசாதிசயம் *šagašādišayam,* பெ.(n.) விந்தை (அதிசயம்) மூன்றனுள் ஒன்று (சீவக.2813, உரை); innate pre-eminence, one of the three *adišayam.*

[Skt. saha-ja+ati-šaya>த. சகசாதிசயம்.]

சகசாலக்காரன் *šaga-šāla-kāraṉ,* பெ.(n.) **சகசாலக்கில்லாடி** பார்க்க; see *šaga - šāla -k-killāḍi.*

த.வ. வித்தைக்காரன்.

[சகம் + சாலக்காரன்.]

[Pkt. jaga> Skt. jagat>த. சகம்.]

சகசிரதாரை *šagašira-dārai,* பெ.(n.) 1. முத்துமாலை வகை (தக்கயாகப்.106, உரை); a garland of pearls. 2. திருநீராட்டில் (அபிஷேகத்தில்) பயன்படுத்தப்படுந் துளைகளுள்ள தட்டு (இ.வ.); a seive-like vessel used in *abhiṣēkam.*

[Skt. sahasra+tārā> த. சகசிரதாரை.]

சகசிரம் *šagaširam,* பெ.(n.) **சகச்சிரம்**[1] பார்க்க (திவா.); see *saga-c-ciram.*

[Skt. sahasra> த. சகசிரம்.]

சகசுரபேதி *šagašurabēdi,* பெ.(n.) மாழை (உலோக) மண் வகை; a kind of ore.

சகசுராரசக்கரம் *šagašurāra-šakkaram,* பெ.(n.) புத்தரது பாதத்திலுள்ள வரி (இரேகை)ச் சிறப்பு. (விசேடம்) (மணிமே. 5, 104, உரை); a discus-mark on the foot of Lord Buddha, as having thousand spokes.

த.வ. ஆயிரஆரச்சக்கரம்.

[சகசுரார(ம்) + சக்கரம்.]

[Skt. sahasra> த. சகசுராா(ம்).]

[சருக்கு→சருக்கரம்→சக்கரம் (வே.க.239).]

சகசுராரத்தட்டு *šagašurāra-t-taṭṭu,* பெ.(n.) **சகத்திரதாரை** பார்க்க; see *šagattira-tārai.*

[சகசுராரம் + தட்டு.]

[Skt. sahasra-dhārā>த. சகசுரார(ம்).]

சகசை *šakašai,* பெ.(n.) உடன்பிறந்தாள் (சங்.அக.); sister.

த.வ. பிறவி.

[Skt. saha-jā>த. சகசை.]

சகசோதி *šaga-šōdi,* பெ.(n.) 1. பேரொளி; brilliant light that illumines the whole world, over powering light. 2. (உலகிற்கு ஒளியாயிருப்பவன்) கடவுள் (வின்.); God, as the light of the world.

[Skt. jagat+jyotis>த. சசசோதி.]

சகடோல் *šagadōl,* பெ.(n.) அம்பாரி (வின்.); howdah.

[U. cakdōl>த. சகடோல்.]

சகத்குரு *šagat-kuru,* பெ.(n.) பரமகுரு (இ.வ.); preceptor of the world, an eminent religious leader.

[சக(ம்) + குரு.]

[Skt. jagat> த. சகம்.]

சகத்தன் *šagattan,* பெ.(n.) நடுவு நிலைமை யுள்ளவன்; unbiassed, impartial person. *"சகத்தனாய் நின்றொழுகும் சால்பு" (பழ.339).*

த.வ. நயனாளன்.

[Skt. sa-hārda>த. சகத்தன்.]

சகத்திரதாரம் *šagattira-dāram,* பெ.(n.) ஆயிரம் முனைகளையுடைய திருமாலின் சக்கரப்படை (யாழ்.அக.); discus of *Viṣṇu*, as thousand pointed.

த.வ. மாலாழி.

[Skt. sahas-ra-dhāra>த. சகத்திரதாரம்.]

சகத்திரதாரை *šagattira-dārai,* பெ.(n.) பல கண்களுள்ள பூசை (அபிடேக)த் தட்டு; sieve like vessel used in bathing an idol. *"சகத்திர தாரையாலே.... நீராட்டி" (விநாயகபு. பட்டாபி.74).*

த.வ. ஆயிரம் கண்தட்டு.

[Skt. sahasra-dhāra>த. சகத்திரதாரை.]

சகத்திரபேதி *šagattira-pēdi,* பெ.(n.) 1. பெருங்காயம்; asafoetida. 2. **சகச்ரபேதி** பார்க்க; see *šagasrapēdi.*

[Skt. sahasravēdhin> த. சகத்திரபேதி.]

சகத்திரம் *šagattiram,* பெ.(n.) சகச்சிரம்; a kind of ore. *"சகத்திர கோதான பலன்" (சேதுபு.பலதீர்.19).*

[Skt. sahasra>த. சகத்திரம்.]

சகத்திரவீரியம் *šagattira-viriyam,* பெ.(n.) அருகு (மலை.); hurrially grass.

[சகத்திர(ம்) + வீரியம்.]

[Skt. sahasra>த. சகத்திர(ம்).]

வீரம்→வீரி→வீரியம்.

சகத்திரவேதி *šagattira-vēdi,* பெ.(n.) **சகத்திரபேதி** பார்க்க; see *šagattira-pēdi.*

[Skt. sahasra-vēdhin>த. சகத்திரவேதி]

சகத்திராட்சன் *šagattirāṭcan,* பெ.(n.) (ஆயிரங்கண்ணுடையோன்) இந்திரன் (வின்.); Indra, as thousand eyed.

[Skt. sahasrākṣa> த. சகத்திராட்சன்.]

சகத்து *šagattu,* பெ.(n.) உலகம்; universe, world, earth.

[Pkt. jagat → Skt. jagat >த. சகத்து.]

சகதண்டம் *šagad-aṇḍam,* பெ.(n.) உலக உருண்டை; world, as being spherical, universe. *"பெற்றாள் சகதண்டங்க ளனைத்தும்" (பாரத. அருச்சுனன்றீர்.15).*

[Skt. jagat+aṇḍa> த. சகதண்டம்.]

சகதலப்புரட்டன் *šaga-dala-p-puraṭṭan,* பெ.(n.) பெருஏமாற்றுக்காரன்; consummate cheat, as one capable of over turning or upsetting the whole world.

த.வ. உலகப்புரட்டன்.

[சக(ம்) + தலம் + த. புரட்டன்.]

[Pkt. jaga → Skt. šakti → த. சகம்.]

சகதாத்திரி *šaga-dāttiri,* பெ.(n.) கொற்றவை (துர்க்கை) (உலகத்திற்குத் தாய்) (யாழ்.அக.); see *Durgāi*, as the mother of the universe.

த.வ. வெற்றிச்செல்வி.

[Skt. jagat+dhātrī>த. சகதாத்திரி.]

சகதாத்துமா *šaga-dāttumā,* பெ.(n.) கடவுள் (உலகத்திற்கு உயிரானவன்); God, as the soul of the universe.

[Skt. jagat+ātmā> த. சகதாத்துமா]

சகதாதான்மியம் *šagadādānmiyam,* பெ.(n.) உலகத்தில் அழுந்திய பற்று (வின்.); earthly connections worldliness, secularity.

[Skt.jagat+tādātmya>த. சகதாதான்மியம்.]

சகதீசன் *šagad-īšan,* பெ.(n.) கடவுள் (உலகத்திற்குத் தலைவன்); God, as lord of the universe.

த.வ. ஞாலமுதல்வன்.

[Skt. jagad-īša> த. சகதீசன்.]

சகதேவம் *šagadēvam,* பெ.(n.) உண்கலமாக பயன்படுத்தத் தகாத இலைகளுடைய ஒருவகை மரம்; a kind of tree whose leaves should not be used for serving food. *"சகதேவ முண்முருக்கு" (அறப்.சத.73).*

[Skt. sahadēva>த. சகதேவம்.]

சகதேவன் *šagadēvan,* பெ. (n.) பாண்டவர் ஐவரின் இளையோன் (பாரத.); *Šahadēvan,* the youngest of the *Pāṇḍu* princes, one of *Pañja-pāṇḍavar.*

[சகம் + தேவன்.]

[Skt. saha>த. சகம்.]

சகதேவி¹ *saga-dēvi,* பெ.(n.) நிலமகள் (வின்.); Goddess of the earth.

[சகம் + தேவி.]

[Skt. jagat>த.சகம்.]

சகதேவி² *saga-dēvi,* பெ.(n.) நெய்ச்சிட்டி (தைலவ.தைல.64); wild cumin.

[Skt. sahadēvi> த. சகதேவி.]

சகதேவி³ *šaga-dēvi,* பெ.(n.) திருமகள் (இலக்குமி) (யாழ்.அக.); Lakshmi.

[Skt. jagat> த.சகம் + த. தேவி.]

சகதேவித்தைலம் *šagadēvi-t-tailam,* பெ.(n.) நெய்ச்சிட்டியினின்று வடிக்கப்பட்ட தைல மருந்து (தைலவ.தைல.64); a medicinal oil extracted from *šagadēvi.*

[Skt.sahadēvi+tailam > த. சகதேவித் தைலம்.]

சகந்நாதம் *šagan-nādam,* பெ.(n.) ஒரிசா மாநிலத்தில் பூரி என்று வழங்கும் (விட்டுணு) மாலியத்தலம்; Puri in Orissa famous as a *Viṣṇu* shrine and place of pilgrimage.

[Skt. jagan-nātha> த. சகந்நாதம்.]

சகந்நாதன் *šagan-nādan,* பெ.(n.) 1. கடவுள் (உலகிற்கு இறைவன்); God, as Lord of the world. 2. பூரியில் கோயில் கொண்டுள்ள திருமால்; *Viṣṇu* worshipped in Jagannath.

த.வ. உலகிறைவன்.

[Skt. jagan-nātha > த. சகந்நாதன்.]

சகநாதன் *šaga-nādan,* பெ.(n.) **சகந்நாதன்** பார்க்க; see *sagan-nādan.* *"தைய லோர்புறம் வாழ் சகநாதனே" (தாயு. பொன்னை.59).*

[Skt. jagat + nātha> த. சகநாதன்.]

சகநாயகன் *šaga-nāyagan,* பெ.(n.) காந்தம் (யாழ்.அக.); magnet.

சகப்பிராந்தி *šaga-p-pirāndi,* பெ.(n.) உலகவின்பத்தால் ஏற்படும் மயக்கம்; infatuation in worldly enjoyments and attractions.

த.வ. மண்ணுலகப்பற்று.

[Skt. jagat + bhrānti>த. சகப்பிராந்தி.]

சகப்புரட்டன் *šaga-p-purattan,* பெ.(n.) **சகதலப்புரட்டன்** பார்க்க; see *šagatala-p-purattan.*

[சக+புரட்டன்.]

[Skt. jagat>த. சக.]

சகப்புரட்டு *šaga-p-purattu,* பெ.(n.) பெருமோசம் (இ.வ.); audacious swindling.

[சகம்+புரட்டு.]

[Skt. jagat>த. சகம்.]

சகப்புரளி *šaga-p-purali,* பெ.(n.) **சகப்புரட்டு** பார்க்க (இ.வ.); see *šaga-p-purattu.*

[சகம்+புரளி.]

[Skt. jagat> த. சகம்.]

சகபாடி¹ *šaga-pādi,* பெ.(n.) ஒருசாலை மாணாக்கன்; classmate, school-fellow.

த.வ. பள்ளித்தோழன்.

[Skt. saha-pāṭhi>த. சகபாடி.]

சகபாடி² *šaga-pādi,* பெ.(n.) **சகலபாடி** பார்க்க; see *šagala-pādi.*

சகபாடி³ *šaga-pādi,* பெ.(n.) கூடப்பாடுவோன் (யாழ்.அக.); accompanist.

த.வ. உடன்பாடி.

[Skt. saha-pāṭhin> த. சகபாடி.]

சகம்¹ *šagam,* பெ. (n.) உலகம் (பிங்.); earth, world, universe.

[Pkt. jaga>Skt. jagat> த. சகம்.]

சகம்² *šagam,* பெ.(n.) 1. **சகாப்தம்** பார்க்க; see *šagāptam.* 2. குறிப்பிட்ட காலங்களிலிருந்து தொடங்கிக் காலங்கணிக்க வழங்கப்பட்டு வரும் ஆண்டு மானம்; era, in general.

[Skt. šaka> த. சகம்.]

சகம்³ *šagam,* பெ.(n.) 1. பாம்புச்சட்டை (சங்.அக.); slough of a serpent. 2. சட்டை (அக.நி.); coat.

[Skt. jahaka> த. சகம்.]

சகமாதா *šaga-mādā,* பெ.(n.) மலைமகள் (பார்வதி) (கூர்மபு.திருக்கலியாண.23); *Pārvati.*

[Skt. jaga+mātā> த. சகமாதா.]

சகமார்க்கம் *šaga-mārkkam,* பெ.(n.) கடவுளைப் போல் வடிவம் பெறுதற்குரிய ஒக (யோக) நெறி; *yōgā,* as the path leading to *cārūppiyam. "சகமார்க்கம்.... அட்டாங்க யோகமுற்று முழத்தல்" (சி.சி.8, 21).*

த.வ. தோழமைநெறி.

[Skt. saha+mārga> த. சகமார்க்கம்.]

சகமீன்றவள் *šagam-īnraval,* பெ.(n.) (உலகங்களைப் பெற்றவள்) உமை (பிங்.); *Pārvati,* as the mother of the universe.

[சகம் + ஈன்றவள்]

[Skt. šaha> த. சகம்]

ஈல் →ஈன் → ஈன்ற + அவள்.

சகமுனியா *šagamuniyā,* பெ.(n.) மாழுதா என்னுங் கொடி (M.M.); gum scam-mony.

சகர்ப்பபிராணாயாமம் *šagarppa-pirāṇāyāmam,* பெ.(n.) மந்திரத்தோடு செய்யப்படும் வளிநிலை (பிராணாயாமம்) (திருக்காளத்.பு. ஞானயோ. 16); restraint of breath, practised with the use of mantras.

த.வ. மந்திர வளியோகம்.

[Skt. sa-kalpa+pirāṇāyāma> த. சகர்ப்பபிராணாயாமம்.]

சகரர் *šagarar,* பெ.(n.) கடலுண்டாகுமாறு (பூமியை)த் தோண்டியவரான சகரமக் (புத்திரர்)கள்; the sons of sagara, who are believed to have dug out of the sea. *"சகரர் தொட்டலாற் சாகர மெனப் பெயர் தழைப்ப" (கம்பரா.அகலி.43).*

த.வ. கடலகழர்.

[Skt. sāgara> த. சகரர்.]

இத்தொன்மக்கதையின் மூலம் தென்தமிழகக்கந்தபுராண காலத்து ஆகலாம். கடல் கொண்ட குமரி நாட்டின் கிழக்கிலிருந்ததாகக் கூறப்படும் இந்துமாக்கடல் பகுதிக்குத் தொடுகடல் எனும் பெயர் இருந்தது. தோண்டிய கடல்தொடுகடல் எனப்பட்டது. கடல்வழி மரத்தோணிப் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்த தீவுநில இணைப்புகளை வெட்டிக்கால்வாய் உண்டாக்கிய பழந்தமிழக மன்னர் மரபினர் கடலர் (சகரர்) – கடலகழர் எனும் பெயர் பெற்றிருக்கலாம்.

சகராதனம் *šagarādanam,* பெ. (n.) ஒகவிருக்கை (யோகாசன) வகை (தத்துவப்.109, உரை); *(Šaiva)* a yogic posture.

[சகரா + ஆதனம்.]

[Skt. sakara>த. சகர.]

சகரூபன் *šaga-rūban,* பெ.(n.) உடன்பிறந்தவன் (யாழ்.அக.); brother.

[Skt. saha+rūpa> த. சகரூபன்.]

த. உருவம் > Skt. rūpa.

சகலகலாவல்லவன் *šagala-kalā-vallavan,* பெ.(n.) எல்லாக் கலைகளுங் கற்றுத் தேர்ந்தவன்; person well-versed in all branches of learning.

[சகலம் + கலா + வல்லவன்.]

[Skt. sakala+kalā> த. சகலகலா.]

த. கலை > Skt. kalā

சகலகலாவல்லி *sagala-kalā-valli,* பெ.(n.) (கலைகளனைத்திற்கும் உரியவள்) கலைமகள்; Kalaimagaḷ, as the Goddess of all learning. *"சகலகலாவல்லி மாலை" (குமர. பிர.சகல).*

த.வ. அருங்கலைச்செல்வி.

சகலகுணசம்பன்னன் *šagala-kuṇa-cam-pannan,* பெ.(n.) நற்குணங்களெல்லாம் நிரம்பியவன்; one endowed with all good qualities.

த.வ. சான்றோன்.

[சகல + குணம் + சம்பன்னன்.]

[Skt. sakala>த. சகல + குணம் + panna.]

சகலத்திராள் *šagala-t-tirāḷ,* பெ. (n.) எல்லோரும் (இ.வ.); all persons, including men, women and children.

த.வ. ஐந்திணையார்.

[Skt.sakala > சகலம் + த. திரள்>திராள்.]

சகலபாசனம் *šagala-pāšaṉam,* பெ. (n.) அருகன் முக்குடையுள் ஒன்று (சூடா.); an umbrella of Arhat, one of mu-k-kuḍai.

[Skt. sakala+bhāajana →த. சகலபாசனம்.]

சகலபாடி *šagala-pāḍi,* பெ.(n.) **சகலன்** பார்க்க; see *sakalaṉ.*

[சகலம் + பாடி.]

[Skt. sakula>த. சகல.]

படு → பாடி

சகலம்[1] *šagalam,* பெ.(n.) 1. எல்லாம்; all, the whole. *"சகலத்திற்குநேத்திரமாகி நின்றோன்" (உத்தரரா.அசுவமேத.1).* 2. **சகலாவத்தை** பார்க்க; see *sagalāvattai. "கலாதிசேர்ந்த சகலமாந் தன்மை" (சிவப்பிர.உண்மை.4, 12).*

த.வ. எல்லாம்.

[Skt. sa-kala> த. சகலம்.]

சகலமங்கலை *šagala-maṅgalai,* பெ.(n.) மலைமகள் (யாழ்.அக.); *Malaimagal.*

[Skt. sakala + த. மங்கலம் > மங்கலை.]

சகலமோகினி *šagala-mōgiṉi,* பெ.(n.) உலகத் தோற்றத்திற்குக் காரணமாயுள்ள மாயை சக்தி (வின்.); *māyā,* the power of illusion in creation, personified as a female principle obscuring the mind.

த.வ. மாயை மகள்.

[Skt. sakala+mōhiṉi> த. சகலமோகினி.]

சகலர் *šagalar,* பெ.(n.) கடை மக்கள் மும்மலமுடைய ஆதன்; souls of the lowest class subject to mummalam. *"அஞ்ஞான ரச்சகலத்தர் சகலராம்" (திருமந்.498).*

[Skt. sakala> த. சகலர்.]

சகலவியாபி *šakala-viyāpi,* பெ.(n.) **சர்வவியாபி** பார்க்க; God, as omni present.

த.வ. அனைத்தூடி.

[Skt. sa-kala+vyāpin> த. சகலவியாபி.]

சகலன் *šagalaṉ,* பெ.(n.) தன் மனைவியின் உடன் பிறந்தாள் கணவன் (பிங்.); wife's sister's husband.

[Skt. sakula> த. சகலன்.]

சகலாகமபண்டிதர் *šagalāgama-paṇḍidar,* பெ. (n.) சிவஞானசித்தியார் இயற்றிய அருணந்தி சிவாசாரியர்; *Aruṇanti-Šivācāriyar,* the author of *Šiva-ñāṉa-cittiyār,* as learned in all the *Āgamās.*

[சகலாகமம் + பண்டிதர்.]

[Skt. sa-kala+āgama>த. சகலாகமம்.]

பண்டு → பண்டம் → பண்டிதம் → பண்டிதர்

சகலாத்துக்கீரை *šagalāttu-k-kīrai,* பெ.(n.) கீரை வகை (வின்.); sorrel.

[சகலாத்து + கீரை.]

[Port. escarlata > U. saklāt + த. சகலாத்து + கீரை.]

சகவாசம் *šagavāšam,* பெ.(n.) நட்பு; association, friendship, intercourse.

[Skt. saha-vāsa> த. சகவாசம்.]

சகவாசி *šaga-vāši,* பெ.(n.) நண்பன் (பாண்டி.); associate.

[Skt. saha-vāsin> த. சகவாசி.]

சகளதத்துவம் *šagaḷa-tattuvam,* பெ.(n.) வழிபாடு (கிரியை) மிகுந்து அறிவு குறைந்த தூயமெய்ப்பொருள் (ஈச்சுர தத்துவம்) (சி.சி.1,65, ஞானப்.); *(Šaivam.)* the function of God in which the principle of energy predominates over that of wisdom.

[சகளம் + தத்துவம்.]

[Skt. sakala>த. சகளம்+தத்துவம்.]

சகளபஞ்சகம் *šagaḷa-pañjagam,* பெ.(n.) மாநோன்புடையாரது (மகாவிரதருடைய) முழுமையான பணி விடைசெய்கைக்குரிய மது மச்சிய மாங்கிச முத்திரை இணைவிழைச்சு என்பன (தக்கயாகப். 51, உரை); the five categories, viz., drink, fish, flesh, pose and coition, required in *Šakaḷa* worship of *mākāviratar.*

[Skt. sakala+pañcaka>த. சகளபஞ்சகம்.]

சகளீகரணஞ்செய்-தல் *šagaḷīkaraṇañ-cey-,* 1 செ.கு.வி.(v.i.) உடல் நிலம் புரள, வலம் வந்து வழிபடுதல் (சங்.அக.); to perform *aṅga-niyāšam* and *kara-niyāšam.*

த.வ. உருள்தண்டம்.

[Skt. šakali> சகளீ + த. கரணம் + செய்–.]

சகளீகரி–த்தல் *šakalikari-,* 4 செ.கு.வி. (v.i.) உருவங்கொள்ளுதல் (சிவப்பிர.4, அவ.); to assume form.

[Skt. šakalikr-, > த. சகளிகரி–.]

சகன்[1] *šagan,* பெ.(n.) உலக நாயகன்; Lord of the Universe. *"குறைவில்சகன் சூழ்கொள்பவர்க்கு" (சி.போ.8, 2).*

[Skt. jagat> த. சகன்.]

சகன்[2] *šagan,* பெ.(n.) தோழன்; companion.

[Skt. sakhā> த. சகா.]

சகன்மகதாது *šaganmaga-tādu,* பெ.(n.) செயப்படு பொருள் குன்றாவினை (பி.வி.35, உரை); transitive verb, as a verb accompanied by an object.

[Skt. sakarmaka + த. தாது.]

சகன்மகர்த்தரிப்பிரயோகம் *šaganma-karttari-p-pirayōgam,* பெ.(n.) செயப்படு பொருள் குன்றாவினை கொண்ட செய்வினை வழக்கு (பி.வி.36, உரை); active voice of a transitive verb.

[Skt. sakarma +kartari-prayoga.]

சகன்மம் *šaganmam,* பெ.(n.) **சகன்மகதாது** பார்க்க; see *šaganmaga-tādu.*

சகனம்[1] *šaganam,* பெ. (n.) பிருட்டம் (பிங்.); buttocks, rumb.

[Skt. jaghana> த. சகனம்.]

சகனம்[2] *šaganam,* பெ.(n.) **சகாப்தம்** பார்க்க; see *šagāptam. "ஏழுஞ்சிருநூ றெடுத்தவாயிரம் வாழுநற் சகன மருவா நிற்ப" (சங்கற்ப.பாயி.).*

[Skt. šaka> த. சகனம்.]

சகாகோடிசங்கம் *šagākōdi-šangam,* பெ. (n.) **சதகோடிசங்கம்** பார்க்க (வின்.); see *šadakōdi-šangam.*

சகாகௌலம் *šagā-kaulam,* பெ.(n.) நிரைய (நரக) வகை (யாழ்.அக.); a hell.

சகாசீரகம் *šagāširagam,* பெ.(n.) சீமைச்சீரகம் (இந்துபா.96); caraway.

சகாத்தம் *šagāttam,* பெ.(n.) **சகாப்தம்** பார்க்க; see *šagāptam. "எண்ணிய சகாத்தமெண்ணூற் றேழின்மேல்" (கம்பரா. தனியன்.).*

த.வ. நூறாண்டு, நூற்றாண்டு

[Skt. šakābda> த. சகாப்தம்.]

சகாத்தன் *šagāttan,* பெ.(n.) தோழன் (யாழ்.அக.); companion, friend.

[Skt. sakhā+āpta> த. சகாத்தன்.]

சகாதேவன் *šagādēvan,* பெ.(n.) **சகதேவன்** பார்க்க; see *šaga-dēvan.*

[Skt. sahā> த. சகா + த.தேவன்.]

சகாதேவி *šagā-dēvi,* பெ.(n.) **சகதேவி**[2] பார்க்க; see *šaga-dēvi.*

[Skt. saha> த. சகா + த. தேவி.]

சகாப்தம் *šagāptam,* பெ.(n.) கி.பி.78–ல் தொடங்குவதும் சாலிவாகனன் பெயரால் வழங்குவதுமான ஆண்டுமானம்; sālivāhana era commencing from 78 A.D.

[Skt. šakābda> த. சகாப்தம்.]

சகாபாடி *šagāpādi,* பெ.(n.) **சகபாடி** பார்க்க; see *šaga-pādi.*

சகாமியம் *šagāmiyam,* பெ.(n.) பயன்கருதிச் செய்யும் வினை; acts performed in expectation of reward, opp. to nis - kāmiyam.*"சாபாதிக்குச் சகாமியமே யேது"* (வேதா. சூ. 179).

[Skt. sa-kāmya→ த. சகாமியம்.]

சகாயதனம் *šagāya-tanam,* பெ.(n.) உதவியாகக் கொடுக்கும் பணம்; grant in aid.

[சகாயம் + தனம்.]

[Skt. sahāya+> த. சகாயம்.]

சகாயம் *šagāyam,* பெ.(n.) 1. துணை (பிங்.); help, aid, support, patronage. 2. விலைநயம்; cheapness, low or moderate price. *'சகாயமாக வாங்கினேன்'.* 3. நலம் (சௌக்கியம்); relief, ease, improvement in health. *'எனக்கு உடம்பு கொஞ்சம் சௌக்கியம்தான்' (இ.வ.).*

த.வ. உதவி.

[Skt. sahāya> த. சகாயம்.]

சகாயன் *šagāyaṉ,* பெ.(n.) 1. உதவி செய்வோன்; assistant, helper. 2. தோழன் (பிங்.); companion, friend.

[Skt. sahāya> த. சகாயன்.]

சகாயி¹-த்தல் *šagāyi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. உதவி செய்தல்; to assist, help. 2. மலிவாய்க் கொடுத்தல்; to sell cheap.

த.வ. உதவுதல்.

[Skt. sahāya> த. சகாயி-.]

சகாயி² *šagāyi,* பெ.(n.) **சகாயன்** பார்க்க; see *šakāyaṉ.*

[Skt. sahāya> த. சகாயி.]

சகார்த்தத்திருதியை *šagārtta-t-tirudiyai,* பெ.(n.) உடனிகழ்ச்சிப் பொருளில்வரும் மூன்றாம் வேற்றுமை (பி.வி. 6, உரை); (gram.) the instrumental case in the sense of concomitance.

[Skt.sahārtha+tṛtiyā>த.சகார்த்தத்திருதியை.]

சகாரி *šagāri,* பெ.(n.) (சகர்களின் பகைவன்) விக்கிரமாதித்தன் (வின்.); *Vikramāditya* of Ujjayini, as the enemy of the *šakas.*

[Skt. šaka+ari> த. சகாரி.]

சகாவாங்கு-தல் *šagā - vāngu* - 5 செ. குன்றாவி.(v.t.) பின்வாங்குதல்; *to withdraw, to retreat.*

[Skt. sakhā → த. சகா + த. வாங்கு-.]

சகானா *šagāṉā,* பெ.(n.) ஒரு வகை அராகம் (பரத.இராக.55); (Mus.) a specific melody - type.

[U. sahānā> த. சகானா.]

சகி¹ *šaki,* பெ.(n.) தோழன்; male companion. *"சிந்தை கலந்தசகியாகச் சேர்ந்து" (உத்தரரா.அனுமப்.45).*

[Skt. sakhi> த. சகி.]

சகி² *šaki,* பெ.(n.) தோழி; female companion, lady's maid.

[Skt. sakhi> த. சகி.]

சகி³-த்தல் *šagi-ttal,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. பொறுத்தல் (சூடா.); to bear, brook, tolerate, forbear. 2. மன்னித்தல் (இ.வ.); to excuse, forgive.

[Skt. sah> த. சகி-.]

சகித்தல் *šagittal,* தொ. பெ.(vbl.n.) சமாதி இன்ப - துன்பங்களை ஒரு நிகராக நுகர்கை; (*Vēdānta*) treating pleasure and pain alike, one of *camāti-catka-campattu. "அமர்செயுஞ் சுகதுக்காதி யனுபவிப்பது சகித்தல்" (கைவல். தத்துவ.9).*

த.வ. பொறுத்தல்.

[Skt. sah> த. சகித்தல்.]

சகித்துவம் *šagittuvam,* பெ.(n.) தோழமை (யாழ்.அக.); companionship, friendship.

[Skt. sakhi-tva> த. சகித்துவம்.]

சகிதம் *šagitam,* கு.வி.எ.(adv.) கூட; together, in company with. *தன்சினேகிதன் சகிதம் வந்தான்.*

[Skt. sahita> த. சகிதம்.]

சகிதன்¹ *šagitaṉ,* பெ.(n.) உடன் கூடியவன்; one in company with another. *"உமாசகிதா போற்றி" (சிவரக.கணபதிகுமர.4).*

[Skt. sahita > த. சகிதன்.]

சகிதன்² *šagitaṉ,* பெ.(n.) அஞ்சி நடுங்குபவன் (சூடா.); timid person, coward.

[Skt. cakita> த. சகிதன்.]

சகிப்பாளி *šagippāḷi,* பெ.(n.) பொறுமையுள்ளவன்; one who bears with patience; one who forgives.

[Skt. caki > த. சகிப்பு+ஆளி.]

சகிப்பு *šagippu,* பெ.(n.) பொறுக்கை; bearing, sustaining, enduring, forgiving.

த.வ. பொறுமை, பொறை.

[Skt. caki > த. சகிப்பு.]

சகிப்புத்தன்மை *šagippu-t-taṉmai,* பெ.(n.) பொறுத்துக் கொள்ளும் குணம்; tolerance. *'விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் சகிப்புத் தன்மையும் இல்லாவிட்டால் நட்பு என்பதே இயலாதே?.*

த.வ. பொறையுடைமை.

[Skt. caki → த. சகிப்பு + தன்மை.]

சகு *šagu,* பெ.(n.) நெய்ப்பரிசி (சவ்வரிசி) (மூ.அ.); sago.

[Malay. sagu> த. சகு.]

சகுணத்தியானம் *šaguṇa-t-tiyāṉam,* பெ. (n.) கடவுளைக் குணவுருவங்களுடையவராக ஊழ்கம் செய்கை (தியானிக்கை); meditation on God, as having from and attributes.

[Skt. sa-guṇa+dhyāna>த. சகுணத்தியானம்.]

சகுல்யன் *šagulyaṉ,* பெ.(n.) பேரனுக்குப் பேரன் முதலிய கொடிவழியொன்றிற் பிறந்த உரிமைப் பங்காளி (தாயாதி); distant relation, remote kinsman, said to apply to a grandson's grandson, and sometimes extended to one of tenth remove.

த.வ. தாயன், தாயப்பங்காளி.

[Skt. sa-kulya> த. சகுல்யன்.]

சகுலாட்சம் *šagulāṭcam,* பெ. (n.) வெள்ளறுகு (மலை.); white bermuda grass.

[Skt. šakulākṣaka> த. சகுலாட்சம்.]

சகுனக்காரன் *šakuṉak-kāraṉ,* பெ.(n.) குறிகூறுவோன் (இ.வ.); fortune teller.

த.வ. புள்கணியன்.

[சகுனம் + காரன்.]

[Skt. šakuna> த. சகுன(ம்).]

சகுனசாத்திரம் *šaguṉa-šāttiram,* பெ. (n.) அறுபத்துநாலு கலையுள் புள்குறிணர்த்தும் நூல்; science of augury, one of *aṟubattu-nālu-kalai.*

த.வ. புள்குறி(நிமித்த)நூல், புள்ளோர்ப்புகல்.

[Skt. sakuna+ šastra> த. சாத்திரம்.]

சகுனத்தடை *šaguṉa-t-taḍai,* பெ.(n.) கெட்டது காட்டும் குறி; ill-omen.

த.வ. புள்தடை.

[சகுனம் + தடை.]

[Skt. šakuna> த. சகுனம்.]

சகுனப்பிழை *šaguṉa-p-piḻai,* பெ.(n.) **சகுனத்தடை** பார்க்க; see *saguṉa-t-taḍai.*

[சகுனம் + பிழை.]

[Skt. šakuna> த. சகுனம்.]

சகுனிகிரகம் *šaguṉi-kiragam,* பெ.(n.) குழந்தை பிறந்த ஆறாம் நாளிலேனும், ஆறாம் மாதத்திலேனும், ஆறாம் ஆண்டிலேனும் குழந்தை அல்லது தாயை வருத்துவதாகக் கருதப்படும் ஒரு தீக்கோள் (சீவரட்.227); an evil planet supposed to cause distress to an infant or its mother on the 6th day, 6th month or 6th year of its birth.

த.வ. ஆறாம் கேடு.

[Skt. šakuni+graha> த. சகுனிகிரகம்.]

சகுனிமாமன் *šaguṉi-māmaṉ,* பெ.(n.) சகுனியைப் போல் கெடுமதியுடையோன்; evil counsellor, as *Šakuni.*

[Skt. šakuni> த. சகுனி + மாமன்.]

சகேரா *šakērā,* பெ.(n.) பண்டசாலை (வின்.); store, treasure, hoard.

[U. zakhīrā> த. சகேரா.]

சகோத்தி *sakōtti,* பெ.(n.) உடனிகழ்ச்சியணி (அணியி.21); a figure of speech.

[Skt. sahōkti> த. சகோத்தி.]

சகோடன் *šagōḍaṉ,* பெ.(n.) பிறனுக்குண்டான கருப்பத்தோடு திருமணமான பெண்ணிடம் அந்தக் கருப்பத்திற் பிறந்தவன் (மநு.9, 173); son begotten by another father but born after marriage, as received with the bride one of twelve *puttiraṉ.*

[Skt. sahōḍha> த. சகோடன்.]

சகோத்திரன் *šagōttiraṉ,* பெ.(n.) ஒரே குலத்தில் பிறந்தவன்; a kinsman belonging to the same *kulam.*

த.வ. ஒரு பிதிரன், ஒரு கிளையன்.

[Skt. sa-gōtra> த. சகோத்திரன்.]

சகோதரன் *šagōdaraṉ,* பெ.(n.) 1. உடன் பிறந்தவன் (சூத.ஞான.7, 15); brother. 2. தந்தையுடன் பிறந்தான், தாயுடன் பிறந்தாள் இவர்கள் மகன் (இ.வ.); son of the father's brother or mother's sister, cousin.

த.வ. பிறவன்.

[Skt. sahōdara> த. சகோதரன்.]

சகோதரி *šagōdari,* பெ.(n.) 1. உடன் பிறந்தாள்; sister. 2. தந்தையுடன் பிறந்தான் தாயுடன் பிறந்தாள் இவர்கள் மகள் (இ.வ.); daughter of the father's brother or mother's sister, cousin.

த.வ. பிறவி.

[Skt. sahōdari> த. சகோதரி.]

சங்க *šaṅga,* பெ.(n.) 1. கக்கம்; the space below the arm-pit between the hip and the bend of arm. 2. அக்குள்; arm-pit (சா.அக.).

சங்கங்காட்டிலுமரி *šaṅgaṅ-kāṭṭilumari,* பெ. (n.) நாகர வண்டு; a kind of golden-coloured beetle supposed to live under the tree, four spined monetia (சா.அக.).

சங்கங்கோலகம் *šaṅgaṅ-gōlagam,* பெ.(n.) மிளகாய் நங்கை; dhoby's itch (சா.அக.).

சங்கதோசம் *šaṅga-dōšam,* பெ.(n.) பெற்றோர் தம் புணர்ச்சிக்குப் பிறகு குழந்தைகளைக் குளியாமற் தொடுவதால் ஏற்பட்ட குற்றம் (தோசம்); a morbid affection in children due to parents handling them, immediately after sexual intercourse without having a bath.

[Skt. saṅ-ga+dōsa> த. சங்கதோசம்.]

சங்கநாபி *šaṅga-nābi,* பெ.(n.) 1. ஒரு கடைச் சரக்கு; a bazaar drug. 2. வெண்ணாபி; white aconite (சா.அக.).

சங்கபதம் *šaṅga-padam,* பெ.(n.) அறநூல்களுளொன்று (வின்.); a treatise on Hindu law.

[Skt. šaṅkha+pada>த. சங்கபதம்.]

சங்கபாடாணம் *šaṅga-pāḍāṇam,* பெ.(n.) பிறவி நஞ்சு வகை (மூ.அ.); a mineral poison (சா.அக.).

சங்கபோட்டம் *šaṅga-pōṭṭam,* பெ.(n.) புணர்ச்சி; sexual intercourse (சா.அக.).

சங்கமம் *šaṅgamam,* பெ.(n.) 1. இயங்கு திணைப் பொருள்; living creatures, as capable of locomotion, opp. to *nilai-t-tiṇai* 2. சங்கமசொத்து (இக்.வ.); movable property.

[Skt. jaṅgama>த. சங்கமம்.]

சங்கமர் *šaṅgamar,* பெ.(n.) ஒருசார் வீரசைவர்; a class of *Virašaivas,* lingayats.

[Skt. saṅ-gama>த. சங்கமர்]

சங்கமரூபம் *šaṅgama-rūbam,* பெ.(n.) சிவவுருவம் (சங்.அக.); a manifested form of *Šivaṉ.*

[Skt. saṅ-gama+rūpa> த. சங்கமரூபம்.]

சங்கமலிங்கம் *šaṅgama-liṅgam,* பெ.(n.) சங்கம வகுப்பினன் (வின்.); person belonging to the *Jaṅgama* sect.

[Skt. jaṅgama+liṅga> த. சங்கமலிங்கம்.]

சங்கமாண்டி *šaṅgamāṇḍi,* பெ.(n.) 1. இலங்கங்கட்டிகளுள் ஒருவகையார் (திருநெல்.); a sect of lingayats. 2. இரந்துண்ணும் இனத்தாருள் ஒருவகையார் (இ.வ.); a sub-sect of *āṇḍi* caste.

[சங்கமம் + ஆண்டி.]

[Skt. saṅ-gama > த. சங்கமாம்.]

சங்கயம் *šaṅgayam,* பெ.(n.) ஐயம்; doubt. *"சங்கய மெய்தி யநேகாந்திகமாம்" (மணிமே.29, 230).*

[Skt. saṃšaya> த. சங்கயம்.]

சங்கருடணன் *šaṅgaruḍaṇaṉ,* பெ.(n.) திருமாலின் ஐந்து நிலைகளுள் ஒன்று (அஷ்டாதச.தத்துவ.பக்.23); a manifestation of *Visṇu,* as destroyer, one of four *viyūgam.*

[Skt. saṅkarsaṇa> த. சங்கருடணன்.]

சங்கரசாதி *šaṅgara-šādi* பெ.(n.) கலப்புச் சாதி (சீவக.116, உரை); mixed castes.

[Skt. saṅgara+jāti>த. சங்கரசாதி.]

சங்கரநமச்சிவாயர் *šaṅgara-namaccivāyar,* பெ.(n.) 18-ஆம் நூற்றாண்டிலிருந்தவரும் நன்னூல் விருத்தியுரை இயற்றியவருமான புலவர்; a commentator on *Naṉṉūl,* 18th C.

சங்கரநாராயணன் *šaṅkara-nārāyaṇaṉ,* பெ. (n.) அரி அர(ன்) வடிவமான சிவத் திருமேனி; manifestation of God in the combined form of *Šiva* and *Visṇu.*

[Skt. šaṅkara+nārāyaṇa> த. சங்கர நாராயணன்.]

சங்கரம்[1] *šaṅkaram,* பெ.(n.) இனக்கலப்பு; mixture of castes.

[Skt. saṅ-kara>த. சங்கரம்.]

சங்கரம்[2] *śaṅkaram,* பெ.(n.) 1. போர்; war, battle. 2. நஞ்சு; poison.

[Skt. saṅ-gara>த. சங்கரம்.]

சங்கரர் *śaṅkarar,* பெ.(n.) போர்வீரர் (யாழ்.அக.); warriors.

[Skt. saṃhāra>த. சங்கரர்.]

சங்கரன்[1] *śaṅgaraṉ,* பெ.(n.) 1. நலஞ் செய்பவன் (சிலப்.10, 186, உரை); dispenser of happiness. 2.சிவன்; *Śivaṉ. "சங்கரன் காண்" (தேவா.725, 6).* 3. பதினோரு (ஏகாதச) உருத்திரருள் ஒருவர் (திவா.); a Rudra, one of *ēgādaśa-ruttira.*

[Skt. śaṅ-kara>த. சங்கரன்.]

சங்கரன்[2] *śaṅgaraṉ,* பெ.(n.) கலப்பினத்துள் பிறந்தவன்; a person born of a mixed caste, hybrid. *"சதுர்வேதஞ் சொலுமிதனைச் செய்திடானேற் சங்கரனாய் விடுவன்" (சிவரக. சிவடுண்டி.46).*

[Skt. saṅ-kara>த. சங்கரன்.]

சங்கரன்பெண்டிர் *śaṅgaraṉ-peṇḍir,* பெ.(n.) கவுரிபாடாணம்; a prepared yellow oxide of arsenic (சா.அக.).

சங்கராசனம் *śaṅgarāśaṉam,* பெ.(n.) இரண்டு கால்களையும் மடக்கி, பாதங்களையும் நெருக்கி, முகப்பின் மேல் நிற்கும் ஓர் இருக்கை (ஆசனம்); a posture in yoga practice in which the man rests on his knees with folded legs while feet remain close together (சா.அக.).

சங்கராசாரியார் *śaṅgarācāriyār,* பெ.(n.) அத்வைத மதநிறுவனரும் உபநிடத்து பிரமசூத்திரம் பகவத்கீதைகட்கு விரிவுரைகளும் பிற வடநூல்களும் செய்தவருமாகிய பெரியவர்; the celebrated teacher of Advaita philosophy and author of commentaries on Upaniṣads, *vēdānta sūtra* and Bhagavadgita and many original works in Sanskrit.

[Skt. śaṅkarācārya> த. சங்கராச்சாரியர்.]

சங்கராதனம் *śaṅgarādaṉam,* பெ.(n.) இருகால்களையும் மடக்கி இருபாதத்தையுங் கூட்டி நேரேயூன்றி இருகான் முகப்பின்மேல் நிற்பது (யாழ்.அக.); a standing posture with legs bent and feet close together.

[Skt. saṅ-kara>த. சங்கரன்+ ஆதனம்> த. சங்கராதனம்.]



சங்கராந்தி *śaṅgarāndi,* பெ.(n.) **சங்கிராந்தி** பார்க்க; see *śaṅgirāndi.*

[Skt. saṅ-krānti> த. சங்கராந்தி.]

சங்கராபரணம் *śaṅgarāparaṇam,* பெ.(n.) பண்வகை (பரத.இராக.55, உரை); a specific melody type.

[Skt. śaṅkarābharaṇa> த. சங்கராபரணம்.]

சங்கராவாசம் *śaṅgarāvāśam,* பெ.(n.) கருப்பூர வகை (மூ.அ.); a kind of camphor.

[Skt. saṅ-karāvāsa> த. சங்கராவாசம்.]

சங்கரி[1] *śaṅgari,* பெ.(n.) மலைமகள் (பிங்.); Malaimagal.

[Skt. śaṅkari> த. சங்கரி.]

சங்கரி[2]**-த்தல்** *śaṅgari-,* 4 செ.கு.வி.(v.i.) அழித்தல்; to destroy, annihilate.

[Skt. saṃ-hāra> த. சங்கரி-.]

சங்கரீகரணம் *śaṅgarī-karaṇam,* பெ.(n.) இனக்கலப்பு (வின்.); mixing of castes.

[Skt. saṅ-karīkaraṇa> த. சங்கரீகரணம்.]

சங்கருடம் *śaṅgaruḍam,* பெ.(n.) எதிரிடை (யாழ்.அக.); opposition.

[Skt. saṅkarṣa> த. சங்கருடம்.]

சங்கரோகம் *śaṅgarōgam,* பெ.(n.) வளி (வாத)கோழை (சிலேட்டுமம்)களினால்இரண்டு தாடைகளிலும், சிவந்து, வீங்கிப் பழுத்துடைந்து மூன்று நாளைக்குள் இறப்பை யுண்டு பண்ணும் ஒரு நோய்; a phleg matic disease in which the tonsils are inflamed, glands swollen with redness of the parts and the characteristic exudation makes its appearance, resulting in a fatal termination within three dyas, probably Diphtheria (சா.அக.).

[Skt. saṅka-rōga>த. சங்கரோகம்.]

சங்கல்வகோட்டம் *śaṅgalva-kōṭṭam,* பெ.(n.) பேரொலி ஆரவாரம்; Arabian costus - Costus speciosus (சா.அக.).

சங்கலம்[1] *śaṅgalam,* பெ.(n.) **சங்கலனம்** பார்க்க (சங்.அக.); see *śaṅgalaṇam.*

சங்கலம்[2] *śaṅgalam,* பெ.(n.) ஊன் (யாழ்.அக.); flesh, meat.

[Skt. jaṅgala> த. சங்கலம்]

சங்கலனம்[1] *śaṅgalaṇam,* பெ.(n.) 1. கலப்பு; blending, inter mixture. 2. **சங்கலிதம்,**[2] பார்க்க; see *śaṅgalidam.*

[Skt. saṅkalana> த. சங்கலனம்.]

சங்கலனம்[2] *śaṅgalaṇam,* பெ.(n.) தொகுக்கை; collecting. *"நீர்வேலிச் சங்கரபண்டித ரவர்களாற் சங்கலனஞ் செய்யப்பட்டு...பதிப்பிக்கப்பட்டது" (தாதுமாலை, முகப்புப் பக்கம்).*

[Skt. saṅkalana> த. சங்கலனம்.]

சங்கலார் *śaṅgalār,* பெ.(n.) பகைவர்; enemies, foes. *"சங்கலாரிடை வளைத்த சக்கரத்தை" (பாரத.பதின்மூ.142).*

[Skt. saṅga> த. சங்கலார்.]

சங்கலிகிதம் *śaṅgaligidam,* பெ. (n.) சங்கர் லிகிதர் என்ற முனிவரிருவரால் இயற்றப்பெற்றதும், அறநூல் பதினெட்டனுள் ஒன்றுமாகிய நூல்; a Sanskrit text book on Hindu law described two stages, *śaṅkha* and likhita, one of 18 *taruma-nūl.*

[Skt. śaṅkha-likhita> த. சங்கிலிகிதம்.]

சங்கலிதம் *śaṅgalidam,* பெ.(n.) 1. கலப்பு (பிங்.); blending, intermixture. 2. எட்டு (அட்ட) கணிதங்களுள் ஒன்றான எண் கூட்டல் (பிங்.); (math.) addition, aggregation, summation, one of *aṭṭa-kaṇidam.* 3. குறித்த கணிதமுறை யொன்றன்படித் தொடர்ந்து செல்லும் எண்களின் தொடர் அல்லது அவற்றின் கூட்டல்; (Math.) progression, series of numbers or quantities, increasing or decreasing according to some mathematical order.

[Skt. saṅ-kalita> த. சங்கலிதம்.]

சங்கவாதவத்திரோகம் *śaṅgavātavatti-rōgam,* பெ.(n.) வளி (வாயு)யானது கீழ் வயிற்று முகத்தை அடைத்து நீரை உள்ளில் சேர்த்துக் கட்டுப்படுத்துவதாலேற்படும் நோய்; suppression of urine due to vayu prevailing upon the downmost portion of the abdomen i.e., about the genital region, and obstructing the urethra (சா.அக.).

த.வ. அடிவயிற்று கழலை.

சங்கவிடம் *śaṅgaviḍam,* பெ.(n.) 1. வெள்ளை நஞ்சு; white arsenic. 2. பாம்பு இன நஞ்சு; animal poisons (சா.அக.).

சங்கற்பசிராத்தம் *śaṅgaṟpa-sirāttam,* பெ. (n.) வேள்வி நெருப்பின்றி இறந்தோர் பொருட்டுச் செய்யுஞ் சடங்கு (சிராத்தம்); (*brāh.*) the *śrādda* performed without sacrificial oblations.

[Skt. saṅ-kaṟpa+śrāddha> த. சங்கற்ப சிராத்தம்.]

சங்கற்பஞானம் *śaṅgaṟpa-ñāṇam,* பெ.(n.) அறிவிற்குரிய அறிவு அறிபொருள்கள் (சிசி. 11,2, சிவாக்.); relative knowledge. *"ஞானம்" (சி.சி.11, 2, சிவாக்.).*

[Skt. saṅkalpa+ ***Pkt.*** *ñana<* ***Skt.*** *jñana> த. சங்கற்பஞானம்.]*

சங்கற்பநிராகரணம் *śaṅgaṟpa-nirākaraṇam,* பெ.(n.) மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்றானதும் உமாபதி சிவாசாரியரால்

இயற்றப் பெற்றதுமான நூல்; a text book on *Šaiva Siddhānda* Philosophy by *Umāpadi-Civācāriyar*, being a statement and refutation of the doctrines of some of the *Šaiva* sects related to the same *Siddhānda*, one of 14 *meykaṇda-šāttiram*.

[**Skt.** *saṅkalpa+nir-ākarana> த.சங்கற்ப நிராகரணம்.*]

சங்கற்பம் *šaṅgaṟpam,* பெ.(n.) 1. உறுதியுள்ளம் (மனோநிச்சயம்); mental resolve, solemn vow, determination. 2. சடங்குத் தொடக்கத்தில் அச்சடங்கினைச் செய்வதாகக் கூறும் உறுதிக் கட்டுரை; a declaration of intention made at the commencement of any ritual. 3. ஒருவன் தன்பட்டறிவால்பொருளின் குணங்களினின்று இன்னபொருளென்று துணியும் துணிவு (சி.போ.பா.2, 2, 171); determination of an object from a consideration of its properties. 4. கருத்து; purpose, intention, design, motive. *"மறைநூற் சங்கற்பவிதிப்படி" (திருவிளை. மலயத்துவச.18).* 5. கொள்கை; doctrine. *"அழகிது நீங்கள் சங்கற்பம் நிராகரித்தமை" (சங்கற்ப.பாயி.).* 6. மனப்பாங்கு (சித்தவிருத்தி); volition, mental activity. *"அடத்தக்கது மனச்சங்கற்பம்" (திருக்கருவை.கலித்.33).*

த.வ. மனவுறுதி, கடைப்பிடி.

[**Skt.** *saṅ-kalpa> த. சங்கற்பம்.*]

சங்கற்பமாசம் *šaṅgaṟpa-māšam,* பெ.(n.) 1. சாந்திரமான மாதம்; lunar month. 2. இரண்டு காருவா (அமாவாசைகளை)க் கொண்ட மாதம் (விதான.குணாகுண.81, உரை); a solar month in which two new moon days occur.

த.வ. இரு காருவா மாதம்.

[*சங்கற்பம் + மாசம்.*]

மாதம் > மாசம்.

சங்கற்பனை *šaṅgaṟpaṉai,* பெ.(n.) **சங்கற்பம்** பார்க்க; see *šaṅgaṟpam.*

[**Skt.** *saṅ-kalpanā> த. சங்கற்பனை.*]

சங்கற்பனைஞானம் *šaṅgaṟpaṉai-ñāṉam,* பெ.(n.) **சங்கற்பஞானம்** பார்க்க; see *šaṅgaṟpa-ñāṉam. "ஞாதிரு ஞானஞேயந் தங்கிய ஞானஞ் சங்கற்பனை ஞானமாகும்" (சி.சி. 11, 2).*

[**Skt.** *saṅkalpanā+ñāna<jñāna> த. சங்கற்பனைஞானம்.*]

சங்கற்பி-த்தல் *šaṅgaṟpi-,* 4 செ.கு.வி. (v.i.) உறுதி செய்து கொள்ளுதல்; to determine, resolve. *"துவரைப் பிரானுக்கே சங்கற்பித்து" (திவ்.நாய்ச்.1, 4).*

த.வ. உறுதியேற்றல்.

[**Skt.** *saṅ-kalpa> த. சங்கற்பி-.*]

சங்கற்பிதம் *šaṅgaṟpidam,* பெ.(n.) முன்னே உறுதி செய்யப்பட்டது (சி.சி.2, 59, ஞானம்); that which was will or pre - determined.

த.வ. உறுதிப்பாடு.

[**Skt.** *saṅ-kalpita> த. சங்கற்பிதம்.*]

சங்கனனம் *šaṅgaṉaṉam,* பெ.(n.) நரம்பு (சூடா.); nerves, tendons, veins.

[**Skt.** *saṃ-hanana> த. சங்கனனம்.*]

சங்காசம் *šaṅgāšam,* பெ.(n.) ஒப்புமை (வின்.); likeness, similarity, resemblance.

[**Skt.** *saṅ-kāša> த. சங்காசம்.*]

சங்காடகம் *šaṅgāḍagam,* பெ.(n.) கொக்கோகத்திற் சொல்லியுள்ள 64 கலைகளில் ஒன்று; one of the 64 postures in the embrace of or sexual intercourse with women, described in the Erotic science of the sage named Kokkogamuni (சா.அக.).

[**Skt.** *saṅ-kāṭa>த. சங்காடகம்.*]

சங்காத்தி *šaṅgātti,* பெ.(n.) தோழன்; friend, intimate acquaintance, companion. *"அளகைக்கோன்றன் சங்காத்தி" (தேவா. 886, 5).*

[**Skt.** *saṅ-ghāta> த. சங்காத்தி.*]

சங்காதோசம் *šaṅgā-tōšam,* பெ.(n.) பேய்க்கோளாறு; demoniac possession.

[**Skt.** *šaṅkā+dōṣa> த. சங்காதோசம்.*]

சங்காரகர்த்தா *šaṅgāra-karttā,* பெ.(n.) (அழித்தற் தொழிலைச் செய்பவன்) சிவன்; *šiva,* as the destroyer of the worlds.

[Skt. sam-hāra+kartā>த.சங்கார கர்த்தா.]

த. கரு → கருத்தன் → Skt. karta

சங்காரம்[1] *šaṅgāram,* பெ.(n.) 1. அழிக்கை (சூடா.); destruction, annihilation, dissolution in general. 2. மூலகாரணத்தில் அனைத்தும் ஒடுங்கும் உலகவழிவு (சி.சி. 1, 33, ஞானப்.); periodical destruction of the universe reducing it to the primitive *Māya,* one of *pañca-kiruttiyam,* q.v. 3. அடக்குகை (வின்.); suppression, restraining.

[Skt. sam-hāra> த. சங்காரம்.]

சங்காரம்[2] *šaṅgāram,* பெ.(n.) **சங்காரித்தம்** (சூடா.) பார்க்க; see *šaṅgārittam.*

[Skt. sam-hāra>த.சங்காரம்.]

சங்காரமூர்த்தி *šaṅgāra-mūrtti,* பெ.(n.) அழித்தற் தொழிலைப் புரியும் சிவன்; *šivan,* the God of destruction. *"சங்காரமூர்த்தி ஆறுமாக" (சி.சி.1, 47, மறை.).*

[Skt. sam-hāra+mūrti>த.சங்காரமூர்த்தி.]

சங்காரன் *saṅgāran,* பெ.(n.) அழிப்பவன்; destroyer. *"அந்தகாசுர சங்காரனை" (சிவரக.கத்தரிப்.15).*

[Skt. sam-hāra> த. சங்காரன்.]

சங்காராதனம் *saṅgārā-danam,* பெ.(n.) ஒகவிருக்கை (யோகாசன) வகை (தத்துவப்.108, உரை); (*šaiva*) a yogic posture.

[சங்காரா(ம்) + ஆதனம்.]

[Skt. sam-hāra>த. சங்காராம்.]

சங்காரி *šaṅgāri,* பெ.(n.) குதிரைவாலி (மலை.); horse-tail millet.

[Skt. sam-hārin> த. சங்காரி.]

சங்காரித்தம் *saṅgārittam,* பெ.(n.) ஏழு மேகங்களுள் பூவைப் பொழியும் மேகம்(பிங்.); celestial cloud which rains flowers, one of *catta-mēgam,* q.v.

[Skt. sam-hṛta> த. சங்காரித்தம்.]

சங்காவர்த்தம் *šaṅgā-varttam,* பெ.(n.) சங்கினுட் பக்கத்துச் சுழியைப் போன்ற முறிவு; an ulcer resembling the inner spiral of a conch, an ulcer of a spiral form (சா.அக.).

சங்காவியத்துக்குப்பார்-த்தல் *šaṅgā-viyattukku-p-pār-,* 4 செ.கு.வி.(v.i.) பேதலிப்பு நீங்க மந்திரித்தல் (யாழ்ப்.); to attempt by magic to relieve one who is panicstricken.

[Skt. saṅkā+bhaya>த.சங்காவியம் + பார்-.]

சங்காவியம் *šaṅgāviyam,* பெ.(n.) அச்சத்தால் நிகழும், தன்வயப்படா (அவச) நிலை (யாழ்ப்.); state of panic.

த.வ. பேதலிப்பு.

[Skt. šaṅka+bhaya> த. சங்காவியம்.]

சங்கான்பெண்டிர் *šaṅkāṉ-peṇḍir,* பெ.(n.) கவுரி பாடாணம்; a prepared yellow oxide of arsenic (சா.அக.).

சங்கிதம் *šaṅgidam,* பெ.(n.) ஐயப்பட்டது (சி.சி.6, 5, சிவாக்.); that which is questioned or doubted.

[Skt. šaṅkita> த. சங்கிதம்.]

சங்கிதன் *šaṅgidaṉ,* பெ.(n.) தீரமில்லாதவன்; a timid person (சா.அக.).

சங்கிதாமந்திரம் *šaṅgidā-mandiram,* பெ.(n.) மந்திரவகை (தத்துவப்.70, உரை); (*šaiva*) a group of mantras.

[சங்கிதா + மந்திரம்.]

[Skt. saṃhitā → த. சங்கிதா]

சங்கிதை *šaṅgidai,* பெ.(n.) 1. செய்தித் தொகுதி; தொகுப்பியம் collection, extensive compilation, any systematically arranged collection of texts or verses. *"வாயு சங்கிதை".* 2.திருமறையை (வேதத்தை)ப் பதப்பிரிப்பின்றித் தொடர்ச்சியாக ஒதும் பாடம்; a continuous hymnal text of the *vēda,* formed out of the padas or individual words by proper phonets changes. 3. மறையின் (வேதத்தின்) ஒரு பகுதி; the collection of mantras in *Rig-vēda,* etc.

"ஒட்டரிய சங்கிதைகளும்" (கலிங்.170). 4. வரலாறு (இலக்.அக.); history.

[Skt. saṃ-hitā> த. சங்கிதை.]

சங்கியை *śaṅgiyai,* பெ.(n.) 1. எண் (சங்.அக.); number. 2. எண்ணிக்கை; calculation, reckoning. 3. மதி (புத்தி) (இலக்.அக.); intellect.

[Skt. saṅ-khyā> த. சங்கியை.]

சங்கிரகக்கிராணி *śaṅgiraga-k-kirāṇi,* பெ.(n.) வயிறு பொருமி, சோறு செரியாது, எருவாய் (அபானம்) சூடாகி, வாந்தி, மயக்கங் கண்டு, கண்ணிரண்டும் சுழலும் ஒரு வகைக் கழிச்சல்; a form of diarrhoea characterised by the following symptoms viz. rumbling noise, in the stomach, indigestion, purging, burning pain at the anus, fever, vomitting, giddiness, whirling of the eyes etc. - Lienteric diarrhoea (சா.அக.).

[Skt. saṅ-graha + grahaṇi> த. சங்கிரகக் கிராணி]

சங்கிரகக்கூர்மை *śaṅgiraga-k-kūrmai,* பெ.(n.) கடலுப்பு (வின்.); sea-salt.

சங்கிரகம் *śaṅgiragam,* பெ.(n.) சுருக்கம்; compendium, abridgement, epitome. "தர்க்கசங்கிரகம்".

த.வ. சங்கிரகம்.

[Skt. saṅ-graha> த. சங்கிரகரணம்.]

சங்கிரகி–த்தல் *śaṅgiragi-,* 4 செ.கு.வி.(v.i.) சுருக்குதல்; to abridge, summarise. "இம்மூன்று விருத்தத்தினாலும் சங்கிரகித்துச் சொன்ன" (சி.சி.1, 14, சிவாக்.).

[Skt. saṅ-graha> த. சங்கிரகி–.]

சங்கிரந்தனன் *śaṅgirandaṉaṉ,* பெ.(n.) இந்திரன் (பிங்.); Indiran.

[Skt. saṅ-krandana> த. சங்கிரந்தனன்.]

சங்கிரம் *śaṅgiram,* பெ. (n.) காடு (பிங்.); jungle, forest.

[Skt. Perh. jāṅgala> த. சங்கிரம்.]

சங்கிரமசாதி *śaṅgirama-sādi,* பெ.(n.) **சங்கரசாதி** பார்க்க (யாழ்.அக.); see *śaṅgarasādi.*

சங்கிரமணம் *śaṅgiramaṇam,* பெ. (n.) 1. ஒரு கோள் ஓர் ஓரை (இராசி)யிலிருந்து அடுத்த ஓரை (இராசி)க்குச் செல்லுகை; (Astron.) passage of a planet from one sign of the zodiac to another. 2. கதிரவன் ஓர் ஓரை (இராசி)யிலிருந்து அடுத்த ஓரை (இராசி)க்குச் செல்லுகை; (Astron.) sun's passage from one sign of the zodiac to another. 3. கதிரவன் (சூரியன்) ஓர் ஓரை (இராசி)யிற் புகும் காலம்; (Astron.) exact time when the sun enters a sign of the zodiac.

த.வ. ஓரைச்செலவு.

[Skt. saṅ-kramaṇa> த. சங்கிரமணம்.]

சங்கிரமதுருவம் *śaṅgirama-turuvam,* பெ.(n.) புதுவருடம் பிறக்கும் நாட்பொழுது (வின்.); (Astron.) the time of day at which the new year commences.

த.வ. புத்தாண்டு நேரடி.

சங்கிரமம் *śaṅgiramam,* பெ. (n.) 1. **சங்கிரமணம், 1, 2** பார்க்க; see *saṅgiramaṇam.* "சீர்தரு சங்கிரமத்தினும்" (விதான. தெய்வவழி.1). 2. சென்று பற்றுகை; meeting, approaching, entering into relationship. "சித்துக்கன்றிச் சடத்துக்குச் சங்கிரமங் கூடாது" (சி.சி.8, 28, சிவஞா.).

[Skt. saṅ-krama> த. சங்கிரமம்.]

சங்கிரமி–த்தல் *śaṅgirami-,* 4 செ.கு.வி.(v.i.) 1. ஓரை (இராசி) மாறுதல் (விதான. குணாகுண.81); (Astron.) to pass from one sign of the zodiac to another. 2. நோய் பரவுதல்; to spread, as a contagious disease. 3. சேர்தல்; to meet, encounter, enter. "முதல்வன் திருவருள், ஆன்மாவின் மாட்டுஞ் சங்கிரமித்துச் சென்று" (சி.போ.பா.7, 2, பக்.155).

த.வ. கலத்தல்.

[Skt. saṅkram> த. சங்கிரமி–.]

சங்கிராணி *śaṅgirāṇi,* பெ.(n.) வயிறூதி, சீழ், சீதம், நெய் போலும் மற்றும் பல விதமாய்க் கழிந்து, எருவாய்க் கடுத்து, வலியை உண்டாக்கும் ஒரு வகைக் கழிச்சல் (சீதபேதி); an acute form of dysentery accompanied by distension of abdomen, mucous discharge, passing of stool in varied forms, irritation of the anus attended with pain etc. (சா.அக.).

[Skt. saṅ-grahaṇi> த. சங்கிராணி.]

சங்கிராந்தசமவாதம் *śaṅgirānda-śamavādam,* பெ.(n.) பாசுபதம் (சி.போ.பா. அவை. பக்.50); a *śaiva* sect.

[சங்கிராந்த(ம்) + சமம் + வாதம்.]

[Skt. saṅ-krānta>த. சங்கிராந்தம் + த. சமம் + Skt. vata.]

சங்கிராந்தவாதசைவன் *śaṅgirāndavāda-śaivaṉ,* பெ. (n.) **சங்கிராந்தவாதி** பார்க்க; see *śaṅgirānda-vādi.*

சங்கிராந்தவாதம் *śaṅgirānda-vādam,* பெ.(n.) மலம் நீங்கிய ஆன்மாவின் கண் திருவருள் தோன்றும் தன்மை, அதனை அருள் வடிவம் என்று கூறும் சமயம் (சங்கற்ப.11); (*śaiva*) the doctrine which holds that the grace of Siva reflects itself in the soul in its perfect state, making it an embodiment of divinity itself.

த.வ. உள்ளங்கோயில் கோட்பாடு.

[Skt. saṅ-krānta-vāda>த. சங்கிராந்த வாதம்.]

சங்கிராந்தவாதி *śaṅgirānda-vādi,* பெ.(n.) சங்கிராந்தவாத சமயத்தைச் சார்ந்தவன் (சி.சி.9, 1, நிரம்ப.); follower of the doctrine of *śaṅgirāndavādam.*

[Skt. saṅ-kirānta-vādin> த. சங்கிராந்தவாதி.]

சங்கிராந்தி-த்தல் *śaṅgirāndi-,* 4 செ.கு.வி. (v.i.) தொடர்புபடுத்தல்; to become connected, related. *"முத்தான்மாவிற் சிவசத்தி சங்கிராந்திக்கும்" (சி.சி.10, 1, ஞானப்.).*

[Skt. saṅ-krānta> த. சங்கிராந்தி-.]

சங்கிராந்தி *śaṅgirāndi,* பெ.(n.) 1. மாதப்பிறப்பு; beginning of a month, passage of the sun from one sign of the zodiac to another. *"ஆசில் சங்கிராந்தி தன்னோடயனத்தில்" (சரசோ.தெய்வ.4, சங்.அக.).* 2. பொங்கல் விழா கொண்டாடும் தைமாதம் முதல் நாள்; tai, when *poṅkal-paṇḍigai* is celebrated.

த.வ. மாதநாள், மாதப்பிறப்பு.

[Skt. saṅ-krānti> த. சங்கிராந்தி.]

சங்கிராமம்[1] *śaṅgirāmam,* பெ. (n.) மலைமேல்வழி (யாழ்.அக.); hill path.

[Skt. saṅkrāma> த. சங்கிராமம்.]

சங்கிராமம்[2] *śaṅgirāmam,* பெ.(n.) போர் (திவா.); war, battle.

[Skt. saṅ-grāma> த. சங்கிராமம்.]

சங்கிராமவிலக்கணம் *śaṅgirāma-v-ilakkaṇam,* பெ.(n.) அறுபத்துநான்கு கலைகளுள் ஒன்றாகிய போர்த்தொழிற்கலை (வின்.); art of warfare, one of *aṟupattunālu-kalai,* q.v.

த.வ. போர்நூல்.

[சங்கிராம(ம்) + இலக்கணம் சங்கிராம(ம்)]

[Skt. saṅ-grāma> த. இலக்கணம்.]

சங்கிரியம் *saṅgiriyam,* பெ.(n.) நெய்; ghee, clarified butter (சா.அக.).

சங்கிருதம்[1] *śaṅgirudam,* பெ.(n.) வடமொழி (வின்.); sanskrit.

[Skt. saṃ-s-kṛta> த. சங்கிருதம்.]

சங்கிருதம்[2] *śaṅgirudam,* பெ.(n.) கலப்பு (யாழ்.அக.); mixture.

[Skt. saṅ-kṛta> த. சங்கிருதம்.]

சங்கிருதி[1] *śaṅgirudi,* பெ.(n.) ஒற்றொழித்து ஓரடிக்கு 24 எழுத்துக் கொண்டதாய்த் தமிழில் வழங்கும், வடமொழிச் சந்தம் (வீரசோ.யாப்.33, உரை); metrical line of 24 letters exclusive of consonants adopted from sanskrit.

த.வ. வடசந்தம்.

[Skt. saṅkṛti> த. சங்கிருதி.]

சங்கிருதி[2] *šaṅgirudi,* பெ.(n.) பேரழிவு; destruction.

[Skt. saṃ-hṛti> த. சங்கிருதி]

சங்கிலிகரணம் *šaṅgili-karaṇam,* பெ.(n.) இயற்கைக்கு மாறான புணர்ச்சி (யாழ்.அக.); unnatural coition.

த.வ. வன்புணர்வு.

[Skt. saṅkalīkaraṇa> த. சங்கிலிகரணம்.]

சங்கிலிதம் *šaṅgilidam,* பெ.(n.) **சங்கலிதம்** பார்க்க (j.); see *šaṅgalidam.*

[Skt. saṅ-kalita> த. சங்கிலிதம்.]

சங்கின்குடியோன் *šaṅgiṉ-kuḍiyōṉ,* பெ.(n.) நாகரவண்டு (யாழ்.அக.); a gold-coloured beetle.

சங்கின்னராகம் *šaṅginṉa-rāgam,* பெ.(n.) (Mus.) a specific தனிச்சிறப்புடைய பண்வகை (திவா.); melody-type.

[Skt.saṅkīrṇa-rāga> த. சங்கின்னராகம்.]

சங்கினி *šaṅgiṉi,* பெ.(n.) 1. காமநூல்கள் கூறும் நால்வகைப் பெண்களில், மூன்றாம் வகையினள் (கொக்கோ.1, 11–14); (Erot.) the third of the four classes into which women are classified in *kāma-šāstra.* 2. பத்து வகை நாடியு ளொன்று (சிலப்.3. 26, உரை); a principal tubular vessel of the human body, one of *taša-nāḍi,* q.v. 2. சங்கங்குப்பி (மலை.); smooth volkameria.

[Skt. šaṅkhinī> த. சங்கினி.]

சங்கீதக்கச்சேரி *šaṅgīda-k-kaccēri,* பெ.(n.) துணை இன்னியங்களுடன் நிகழும் பாட்டரங்கம்; music performance with accompaniments.

த.வ. பல்லியப்பாட்டரங்கம்.

[Skt. saṅ-gīta+U.kachahri> த.சங்கீதக் கச்சேரி.]

சங்கீதக்காரன் *šaṅgīdakkāraṉ,* பெ.(n.) 1. இசையில் வல்லவன்; musician. 2. கிறித்தவப் பாடல்களைப் பாடுவோன்; psalmist.

[சங்கீதம் + காரன்.]

த.வ. வாணன்.

[Skt. saṅ-gīta> த. சங்கீதம்.]

சங்கீதக்கியானம் *šaṅgīda-k-kiyāṉam,* பெ.(n.) இசையறிவு; knowledge of music, skill in music.

[Skt. saṅ-gīta+jñāna> த. சங்கீதக் கியானம்.]

சங்கீதசாகித்தியம் *šaṅgīda-šāgittiyam,* பெ.(n.) 1. இசைப் பாடல்கள்; the arts of music and poetry. 2. இசைப் பயிற்சி (யாழ்.அக.); practice in the art of music.

த.வ. பண்இலக்கியம்.

[Skt. saṅ-gīta+sāhitya> த. சங்கீத சாகித்தியம்.]

சங்கீதப்பாரி *šaṅgīda-p-pāri,* பெ.(n.) பாட்டுடன் ஊர்க்காவல் செய்யும் இராக் காவலாளர் (Pd.); night watch patrolling the streets with instrumental music.

த.வ. இராக்காவல்பாடகன்.

[Skt. saṅ-gīta+U.pahra> த. சங்கீதப்பாரி.]

சங்கீதப்பிரியர் *šaṅgīda-p-piriyar,* பெ.(n.) இசை ஆர்வலர்; music affectionate.

[Skt. saṅ-gīta+priya த. சங்கீதப்பிரியர்.]

சங்கீதபூசணம் *šaṅgīda-pūsaṇam,* பெ.(n.) இசைவல்லுநருக்கு வழங்கும் சிறப்புப் பட்டம்; a title given to musicians.

த.வ. இசைமாமணி.

[Skt.saṅ-gīta+bhūṣaṇa>த. சங்கீதப்பூசணம்.]

சங்கீதப்பெட்டி *šaṅgīda-p-peṭṭi,* பெ.(n.) இசைக் கருவி வகை (இக்.வ.); hand-harmonium.

த.வ. நொடிப்பிசைப்பெட்டி.

[சங்கீதம் + பெட்டி.]

[Skt. saṅ-gīta> த. சங்கீதம்.]

சங்கீதம்[1] *šaṅgīdam,* பெ.(n.) 1. இசை (பிங்.); music. 2. இசைநூல்; art or science of music. 3. இசைப்பாட்டு (கிறித்.);psalm, hymn.

[Skt. saṅ-gīta> த. சங்கீதம்.]

சங்கீதம்² *šaṅgīdam,* பெ.(n.) கச்சோரம், 2. (தைலவ.தைல.) பார்க்க; spiked garland flower.

சங்கீதலோலன் *šaṅgīda-lōlaṉ,* பெ.(n.) இசையில் பெரிதும் ஈடுபட்டவன்; one who revels in music, a votary of music.

த.வ. இசையார்வலன்.

[Skt. saṅ-gīta+lōla> த. சங்கீதலோலன்.]

சங்கீதவாத்தியம் *šaṅgīda-vāttiyam,* பெ.(n.) இசைக்கருவி; musical instrument.

[சங்கீதம் + வாத்தியம்.]

[Skt. saṅ-gīta> த. சங்கீதம்.]

சங்கீதி *šaṅgīdi,* பெ.(n.) கலந்துரையாடல் (யாழ்.அக.); conversation.

[Skt. saṅgīti> த. சங்கீதி.]

சங்கீர்ணசாதி *šaṅgīrṇa-šādi,* பெ.(n.) ஒன்பது எழுத்துக் காலங் கொண்ட தாளவளவை (பரத.தாள.47, உரை); (Mus.) a sub-division of time measure consisting of nine *akṣara-kālam* q.v.

த.வ. இருசீர்த்தாளம்.

[Skt. saṅ-kīrṇa+jāti> த. சங்கீர்ணசாதி.]

கருவிளங்கனி, புளிமா போன்ற யாப்பு வகைக்குரிய தாளம்.

சங்கீர்ணம் *šaṅgīrṇam,* பெ.(n.) **சங்கீரணம்** பார்க்க (இலக்.அக.); see *saṅgīraṇam.*

[Skt. saṅ-kīrṇa> த. சங்கீர்ணம்.]

சங்கீர்த்தனம் *šaṅgīrttaṉam,* பெ.(n.) 1. சொல்லுகை; telling, reciting. 2. புகழ்கை (வின்.); celebration, praise. 3. கரிசு (பாவ) அறிக்கை (R.C.); confession to a priest.

[Skt. saṅ-kīrtana> த. சங்கீர்த்தனம்.]

சங்கீர்தம் *šaṅgīrdtam,* பெ.(n.) 1. ஒன்று சேர்கை; combination, amalgamation. 2. புணர்ச்சி; copulation.

[Skt. sam-hitā> த. சங்கீர்த்தம்.]

சங்கீரணம் *šaṅgīraṇam,* பெ.(n.) 1. கலப்பு; mixing, commingling, coalescing. 2. கலவையணி (தண்டி.87); (Rhet.) a composite figure of speech in which several figures of speech are blended. 3. **சங்கீர்ணசாதி** பார்க்க (பரத.தாள.47); see *saṅgīrṇa-sādi.* 4. மத்தள வகை (பரத.ஒழிபி. 13); a kind of *mattaḷam.*

[Skt. saṅ-kīrṇa> த. சங்கீரணம்.]

சங்குட்டம் *šaṅguṭṭam,* பெ.(n.) எதிரொலி (யாழ்.அக.); echo, reverberation.

[Skt. saṅ-ghuṣṭa> த. சங்குட்டம்.]

சங்குத்தான் *šaṅguttāṉ,* பெ.(n.) கிறித்தவக் கோயிலைச் சார்ந்த பணியாளன்; (R.C.) sexton of a church.

[E. sacristan> த. சங்குத்தான்.]

சங்கேசுரரசம் *šaṅgēšura-rašam,* பெ.(n.) கெந்தி, நாதப் பொடி, இதளியப் பொடி, வெண்காரம், பலகறை, நீலத்துத்தம் இவற்றைச் சேர்த்தரைத்து, ஆயுள்வேத முறைப்படி புடமிட்டெடுத்து நோய்க்காகக் கொடுக்கும் மருந்து; a medicine prepared by mixing sulphur, calcined zinc and mercury, berax, cowries and blue vitriol in due proportions and grinding them all together the product is then calcined according to Ayurvedic method. It is prescribed for consumption (சா.அக.).

சங்கேதம்¹ *šaṅgedam,* பெ.(n.) 1. குறி; preconcerted sign, signal. 2. உடன்படிக்கை; agreement, stipulation, understanding between parties. 3. சாதிசமயங்களால் உளதாகும் ஒற்றுமையுணர்ச்சி (குறள், 735, உரை); sense of solidarity due to religious or social identify. 4. குழூஉக்குறி; conventional terms limited to trades, professions. 5. உறுதிமொழி; word of assurance. *"எனக்கோர் சங்கேதஞ் சொன்னால்" (சேதுபு.சாத்தி.17).*

[Skt. saṅ-kēta> த. சங்கேதம்¹.]

சங்கேதம்² *šaṅgēdam,* பெ.(n.) கோயிலுக்கு இறையிலியாக விடப்பட்ட மானிய நிலம் (நாஞ்சி.); land assigned to a temple and made tax-free.

சங்கேதமொழி *śaṅgēda-moḻi,* பெ.(n.) குறியீடு (அ) குழூஉக்குறி (பரிபாஷை) வார்த்தை; technical term; code word (சா.அக.).

[சங்கேதம் + மொழி.]

[Skt. saṅ-kēta> த. சங்கேதம்.]

சங்கேதமொழிப்பிரயோகம் *śaṅgēda-moḻippirayōgam,* பெ.(n.) சாத்திரார்த்தம்; use of term or technical expression; technicality (சா.அக.).

[Skt. saṅ-kēta> த. மொழி + pra-yōga.]

சங்கேதி *śaṅgēdi,* பெ. (n.) பார்ப்பனருள் ஒரு வகையினர் (இ.வ.); a sub-sect among Brahmins.

[Skt. saṅ-gēti> த. சங்கேதி.]

சங்கேப்பம் *śaṅgēppam,* பெ. (n.) சுருக்கம்; abstract, epitome, compendium, abridgement.

[Skt. saṅ-ksēpa> த. சங்கேப்பம்.]

சங்கேமாயி *śaṅgēmāyi,* பெ.(n.) ஒரு சேணிய (யுனானி) கடைச் சரக்கு; a bazaar drug useful in unani system (சா.அக.).

சங்கை[1] *śaṅgai,* பெ.(n.) 1. ஐயம்; doubt, hesitation, suspicion. *"சங்கையுந் துணிவும்" (திவ்.பெரியதி.4, 5, 8).* 2. அச்சம் (வின்.); fear, terror, apprehension. 2. பூதபிசாசு முதலியவை; evil spirit. *"சங்கையஞ்சார்.... பங்கயத்தானடிப் பத்தர்களே" (திருநூற்.68).*

[Skt. śaṅkā> த. சங்கை[1].]

சங்கை[2] *śaṅgai,* பெ.(n.) 1. எண்ணம்; motive, thought. *"சங்கையிற் சழக்கிலன்" (கம்பரா.சம்பா.28).* 2. வழக்கம் (வின்.); custom, usage.

[Skt. samjñā> த. சங்கை[2].]

சங்கைப்பாடு *śaṅgai-p-pādu,* பெ.(n.) ஐயப்பாடு; doubt, uncertainty. *"எங்கள் குடியிருப்புச் சங்கைப்பா டென்னத்தகாது" (தெய்வச்.விறலிவிடு.233).*

[Skt. śaṅkā+> த. சங்கை+பாடு.]

சங்கைவிடம் *śaṅgai-vidam,* பெ.(n.) பாம்பைத் தொடுதல், பார்த்தல் முதலியவற்றால் தோன்றிய அச்சத்தாலாகிய நோய் (சீவரட்.); suffering caused by fear at the sight or touch of serpents.

[Skt. śaṅkā+ viṣa> த. சங்கைவிடம்.]

சங்கோசகம் *śaṅgōśagam,* பெ.(n.) இறப்பை யுண்டாக்கும் ஒரு நச்சுக் கிழங்கு; a poisonous root causing death (சா.அக.).

சங்கோசபரிவாரம் *śaṅgōśa-parivāram,* பெ.(n.) தக்கோரை மதித்தழைப்பதற்கென்று, அரசனால் நியமிக்கப்பட்ட சிறு கூட்டத்தார் (சிலப்.28, 89, உரை); a small company of men appointed by a king to receive guests.

[Skt. saṅ-kōca+parivārā> த. சங்கோச பரிவாரம்.]

சங்கோசபிசுனம் *śaṅkōśa-piśuṇam,* பெ.(n.) செஞ்சாந்து (குங்குமம்); English saffron - croeus sativus (சா.அக.).

சங்கோசம் *śaṅgōśam,* பெ.(n.) 1. சுருங்குகை; contracting, shrinking. *"யாயையிதற் கிருதருமஞ் சங்கோச விகாச மென்றாம்" (வேதா.சூ.60).* 2. கூச்சம்; bashfulness, shyness, coyness, ticklishness.

[Skt. saṅ-kōca> த. தங்கோசம்.]

சங்கோசனகாரி *śaṅgōśaṇa-kāri,* பெ.(n.) துவர்ப்புப் பொருள் (பைஷஜ.12); astringents.

[Skt. saṅ-kōcana+> த. சங்கோசனகாரி.]

சங்கோசி *śaṅkōśi,* பெ.(n.) கூச்சம் நிறைந்தவர் (அ.வ.); shy person. *"அவன் சரியான சங்கோஜி; பெண்களை சரியாக நிமிர்ந்துகூடப் பார்க்கமாட்டான்" (கிரியா.).*

சங்கோபனம் *śaṅgōbaṇam,* பெ.(n.) மறைவு (சங்.அக.); secrecy.

[Skt. saṅ-gō-pana> த. சங்கோபனம்.]

சங்கோலம் *śaṅgōlam,* பெ.(n.) தயிர்; curd (சா.அக.).

சங்சேபம் *śaṅkṣēbam,* பெ.(n.) சுருக்கம்; abstract, epitome.

[Skt. saṅ-kṣēpa> த. சங்சேபம்.]

சச்சந்தன் *šaccandaṉ,* பெ.(n.) சீவகனுடைய தந்தை (சீவக.); father of *šivagaṉ.*

[Skt. satyan-dhara> த. சச்சந்தன்.]

சச்சம் *šaccam,* பெ.(n.) உண்மை (வின்.); truth, genuineness.

[Skt. satya> த. சச்சம்.]

சச்சம்பிரதாயம் *šaccampiratāyam,* பெ. (n.) நல்ல வரன்முறை; good custom or approved usage. *"சச்சம்பிரதாயந் தாமுடையோர் கேட்டக்கால்" (உபதேசரத்.58).*

[Skt.sat-sampradāya>த. சச்சம்பிரதாயம்.]

சச்சற்புடம் *šaccaṟpuḍam,* பெ.(n.) இரண்டு குருவும், ஓர் இலகுவும், ஒரு புலுதமுமாக எட்டு மாத்திரை கொண்ட தாளவகை (பரத.தாள.11); (mus.) a variety of time-measure represented by one of *pañja-tāḷam* (q.v.).

த.வ. எண்மாத்திரைத்தாளம்.

[Skt. caccat-puṭa> த. சச்சற்புடம்.]

சச்சனம் *šaccaṉam,* பெ.(n.) நாவல்; common jaumoon-*Eugenia jambolina* (சா.அக.).

சச்சாரம் *saccāram,* பெ.(n.) யானைக்கூடம்; elephant-stable. *"வாசமுறு சச்சாரமீ தென்னை.... மத்தகசமென வளர்த்தாய்" (தாயு. மௌனகுரு.1).*

[T. satjjāramu<sāmajāgāra< த. சச்சாரம்.]

சச்சிக்காரம் *šacci-k-kāram,* பெ.(n.) உப்பு வகை; impure carbonate of soda.

[Skt. sarjikā-kṣāra> த. சச்சிக்காரம்.]

சச்சிதானந்தன் *šaccidāṉandaṉ,* பெ. (n.) உளதாயிருத்தல் மெய்யறிவு இன்பம் என்னும் முக்குணங்களையுடைய பரம்பொருள்; the Supreme Spirit, as having the threefold attributes of existence, knowledge and bliss.

[Skt.šat+cit+ānanda>த. சச்சிதானந்தன்.]

சச்சிதானந்தை *šaccidāṉandai,* பெ.(n.) உளதாயிருத்தல். மெய்யறிவு, இன்பம் என்னும் முக்குணங்களுடைய உமாதேவி (சக்தி சொரூபம்); the Supreme *Šakti*, as having the three fold attributes of existence, knowledge and bliss. *"அகண்டாகார சச்சிதானந்தையை யறியாதபேர்" (சி.சி. 148 சிவாக்.)*

[Skt.sat+cit+ā-nanda>த.சச்சிதானச்தை.]

சச்சினி *šacciṉi,* பெ.(n.) ஆறாவது மாதம்; the sixth month (சா.அக.).

சச்சுருவம் *šaccuruvam,* பெ.(n.) மெய்யுருவம் (இ.வ.); exact resemblance or likeness.

[Skt.tad-rūpa>Tu.sadrūpa>த.சச்சுருவம்.]

சச்சுவாயு *šaccuvāyu,* பெ. (n.) 1. தூய்மைக்கேடான காற்று; contaminated air. 2. மாசடைந்த காற்று; impure air or gas. 3. கரியமில வாயு; carbonic acid gas (சா.அக.).

த.வ. கெடுங்காற்று.

[T. tcaccu+vāyu>த.சச்சுவாயு.]

சச்சை *šaccai,* பெ.(n.) 1. ஆராய்ச்சி; research, investigation, deliberation, discussion. 2. பலமுறை ஓதுகை; repeated reading, recitation. *"சச்சை மறையின்" (பாரத. இராச.114).*

[Skt. carcā> த. சச்சை.]

சச்சையன் *šaccaiyaṉ,* பெ.(n.) உண்மைப் பொருளானவன்; God, as reality. *"சச்சையனே மிக்க தண்புனல்.... விச்சையனே" (திருவாச.6, 31).*

[Skt. sattā> த. சச்யைன்.]

சசகதி *šaša-kadi,* பெ.(n.) குதிரை நடை ஐந்தனுள் முயலோட்டம் போன்ற நடை (திவா.); a hare-like pace of horse, one of the five *ašuva-kadi* (q.v.).

சசகம் *šasagam,* பெ.(n.) சசம் பார்க்க; see *šašam.*

[Skt. šašaka> த. சசகம்.]

சசசிருங்கம் *šaša-širuṅgam,* பெ.(n.) முயற்கொம்பு; hare's horn, a term figuratively used for indicating an impossibility or sometimes rarity (சா.அக.).

சசமதம் *šaša-nadam,* பெ.(n.) மான்மணத்தி (கத்தூரி) (மூ.அ.); musk.

[சசம்+மதம்.]

[Skt. šuša> த. சச(ம்).]

சசலம் *šašalam,* பெ.(n.) ஈரம்; dampness (சா.அக.).

சசவிசாணம் *šaša-višāṇam,* பெ.(n.) முயற்கொம்பு (இல்பொருட்கு எடுத்துக்காட்டாகக் காட்டப்படுவது) (வேதா.சூ.57, உரை); hare's horn, a term for illustrating an impossibility.

[Skt. šaša+viṣāṇa> த. சசவிசாணம்.]

சசாங்கன் *šašāṅgaṉ,* பெ. (n.) நிலவன் (முயற்கறையுடையவன்); moon as have marked.

[Skt. šašāṅka> த. சசாங்கன்.]

சசி[1] *šaši,* பெ.(n.) 1. **சசாங்கன்** (பிங்.) பார்க்க; see *šašāṅgaṉ.* 2. கருப்பூரம் (சூடா.); camphor. 3. இந்துப்பு (தைலவ.தைல.119); rock-salt. 4. கடல் (அக.நி.); sea.

[Skt. šašīnom-sing ofšašin> த. சசி¹.]

சசி[2] *šaci,* பெ.(n.) இந்திராணி; wife of Indraṉ.

[Skt. šacī> த. சசீ.]

சசிசேகரன் *šaši-šēkaraṉ,* பெ.(n.) சந்திரனைத் தலையில் சூடிய சிவன்; *Šiva,* as wearing the moon on his head.

[Skt. šacī> த. சசீ.]

சசிதரன் *šaši-taraṉ,* பெ.(n.) **சசிசேகரன்** பார்க்க (பிங்.); see *šaši-šēgaraṉ.*

சசிப்பிரியம் *šaši-p-piriyam,* பெ.(n.) 1. முத்து (மூ.அ.); pearl. 2. வெள்ளாம்பல்; white indian water - lily.

[Skt. šaši+priya> த. சசிப்பிரியம்.]

சசிபுடபுத்தி *šaši-puda-putti,* பெ.(n.) குறிப்பிட்ட நேரத்திலேற்படும் நிலவின் நிலை (வின்); true motion of the moon in a given time

[சசிபுடம் + புத்தி.]

[Skt. šaši+puṭa> த. சசிபுடம்.]

சசிபுடம் *šaši-puḍam,* பெ.(n.) குறித்த காலத்தில் கோள்சாய்விலிருந்து நிலவு நிற்கும் நிலை (வின்.); (Astron.) true longitude of the moon.

[Skt. šaši-puṭa> த. சசிபுடம்.]

சசிமணாளன் *šaši-maṇāḷaṉ,* பெ.(n.) (சசியின் கணவன்) இந்திரன் (சூடா.); Indraṉ, as husband of *šašī.*

[சசி + மணாளன்.]

[Skt. šaci>த.சசி.]

சசியுப்பு *šaši-y-uppu,* பெ.(n.) இந்துப்பு; rock salt; sindh salt (சா.அக.).

சசிவர்ணபோதம் *šaši-varṇa-pōdam,* பெ.(n.) தத்துவராயர் தமிழில் இயற்றிய ஒரு மறைமுடிவு நூல்; a *vēdānda* work in Tamil by *uattuvarāyar.*

[Skt. šaši-varṇa-bōdha> த. சசிவர்ண போதம்.]

சசிவல்லவன் *šaši-vallavaṉ,* பெ.(n.) **சசிமணாளன்** பார்க்க (பிங்.); see *šaši-maṇāḷaṉ.*

[சசி + வல்லவன்.]

[Skt. šaci > த. சசி.]

சசிவன் *šašivaṉ,* பெ.(n.) 1. அமைச்சன்; minister. 2. நண்பன்; friend.

[Skt. saciva> த. சசிவன்.]

சசுந்தரம் *šašundaram,* பெ.(n.) ஒரு கடைச் சரக்கு; a bazaar drug (சா.அக.).

சசுபாகிதம் *šašubāgidam,* பெ.(n.) முக்கூட்டு நெய்; நோய் தீர்ந்தவுடன் தலைமுழுகக் கொடுப்பது; a mixture of three oils viz., cow's ghee, gingelly oil and castor oil. It is prescribed for patients to have an oil bath immediately after cure (சா.அக.).

த.வ. முக்கூட்டெண்ணெய்.

சசேலசநானம் *šašēasnāṉam,* பெ.(n.) சாச்சடங்கில் உடுத்த உடையோடு முழுகுகை; ceremonial bathing without undressing oneself.

[Skt. sa-cēla+šnāna>த. சசேலஸ்நானம்.]

சசோபநேத்திரபாகம் *śaśōbanēttirabāgam,* பெ.(n.) கண் நோவெடுத்து, குத்தல் கண்டு, பீளை சேர்ந்து, சீழும் நீரும் வடிந்து விழியில் எரிச்சலை யுண்டாக்கும் ஒரு கண்ணோய்; an eye disease attended with symptoms of itching sensation, pricking pain, suppuration of the eyes, deposit of mucous matters, slimy discharge lacrimation and inflammation with burning sensation (சா.அக.).

த.வ. குத்தல் கண்ணோய்.

சஞ்சத்தகர் *śañattagar,* பெ.(n.) போரில் வீரச் செய்கை ஒன்றைச் செய்வதாகச் சூளுரை செய்து, அச்சூளுரைப்படியே தவறாது நடக்கும் அரசவீரக் கூட்டத்தார்; a band of warrior-kings who, under a vow, perform a heroic deed in battle. *"அருச்சுனனைச் சஞ்சத்தகரொழிந்தார் வந்து அறை கூவிக்கொண்டு" (பாரதவெண்.772, உரைநடை).*

த.வ. சூள்மாறாமறவர்.

[Skt. saṃ-śaptaka> த. சஞ்சத்தகர்.]

சஞ்சம் *śañjam,* பெ.(n.) 1. பூணூல் (வின்.); sacred cord or thread worn by the twice-born. 2. கச்சு (யாழ்.அக.); sash.

[T. tjannidamu<, yajñōpavita>த. சஞ்சம்.]

சஞ்சமஞ்சம் *sañja-mañjam,* பெ.(n.) ஆரவாரம் (கோஷ்டம்); Arabian costus-costus speciosus (சா.அக.).

சஞ்சமனம் *śañjamanam* பெ.(n.) முப்பிணிக் கூறுகளைச்சமனப்படுத்தி, அதனாலுண்டான சினங்களை அமைதிப் (சாந்தம்)படுத்தி, உடம்பினின்று கழிவு ஏற்படாமல் செய்யும் மருந்து; medicine rectifying the deranged humoursin this system and calm their excitement without promoting the excretions (சா.அக.).

த.வ. சீர்செய் மருந்து.

சஞ்சயம்[1] *śañjayam,* பெ.(n.) கூட்டம் (யாழ்.அக.); assembly, multitude, collection.

[Skt. saṃ-śaya> த. சஞ்சயம்.]

சஞ்சயம்[2] *śañjayam,* பெ.(n.) ஐயம் (இலக்.அக.); doubt.

[Skt. saṃ-śaya> த. சஞ்சயம்.]

சஞ்சயன் *śañjayaṉ,* பெ. (n.) திருதராட்டிரனுடைய தேர்ப்பாகன்; the cahrioteer of *Dhṛtarāṣṭra*, a character in the Mahabharatam. *"சஞ்சயன் றனை வருகவென்று" (பாரத.சஞ்சயன்றூது. 2).*

[Skt. sañ-jaya> த. சஞ்சயன்.]

சஞ்சயனம் *śañjayaṉam,* பெ.(n.) பால் தெளித்தலாகிய ஈமச்சடங்கு; funeral ceremony in which the ashes and bones of a cremated body are collected, sprinkled with milk and thrown into sacred waters.

த.வ. பால்தெளி.

[Skt. sañ-cayana> த. சஞ்சயனம்.]

சஞ்சரம் *śañjaram,* பெ.(n.) 1. **சஞ்சலம்** பார்க்க; see *sañjalam. "சஞ்சரத் திரைக்கரங்களால்" (பாரத.சம்பவ.40).* 2. உடல் (இலக்.அக.); body. 3. வழி (சங்.அக.); way, path.

[Skt. sañ-cāra> த. சஞ்சரம்.]

சஞ்சரி-த்தல் *śañjari-,* 4 செ.கு.வி.(v.i.) 1. நடமாடுதல்; to move about. 2. திரிதல்; to wander, range, haunt, as beasts. 3. வாழ்தல்; to lodge, dwell, abide. *"மாலவிடஞ் சஞ்சரியாமல்" (தனிப்பா.ii, 25, 57).* 4. நெறிதப்பி ஒழுகுதல் (இ.வ.); to lead immoral life.

[Skt. sañ-car> த. சஞ்சரி.]

சஞ்சரிகம் *śañjarigam,* பெ.(n.) **சஞ்சரீகம்** பார்க்க; see *śañjarīgam. "சஞ்சரிக நறுமலர்த்தார்" (பாரத.அருச்சுனன்றீர்.36).*

சஞ்சரீகம் *śañjarīgam,* பெ.(n.) வண்டுவகை; a large black bee, beetle. *"சஞ்சரீக மிசைபாட" (மச்சபு.நைமிசா.9).*

[Skt. cañcarīka> த. சஞ்சரி.]

சஞ்சலசீவனன் *šañjala-šivaṉaṉ,* பெ.(n.) ஒன்பான் மணியுளொன்று; topaz (சா.அக.).

சஞ்சலம்¹ *šañjalam,* பெ.(n.) 1. காற்று; wind. 2. மின்னல்; lighting.

[Skt. šañjala> த. சஞ்சலம்.]

சஞ்சலம்² *šañjalam,* பெ.(n.) 1. நிலையின்மை; fickleness, unsteadiness. 2. விரைந்து அசைகை; rapid motion. 3. நடுக்கம் (உரி.நி.); trembling, shivering, tremulousness. 4. துன்பம்; sorrow, grief, trouble. *"சாந்துணையுஞ் சஞ்சலமே தான்" (நல்வழி.28).* 5. நோய்; disease, ailment. *"அவன் சஞ்சலமாய்க் கிடக்கிறான்" (வின்.).*

[Skt. cañcala> த. சஞ்சலம்.]

சஞ்சலரகிதன் *šañjala-ragidaṉ,* பெ.(n.) மனக்கலக்கமற்றவன் (தாயு.கருணாகர.1); a person of undisturbed equanimity; one who is resolute and steadfast.

[Skt. cañcala+rahita> த. சஞ்சலரகிதன்.]

சஞ்சலனம் *šañjalaṉam,* பெ.(n.) அச்சத்தால் உண்டாகும் நடுக்கம் (யாழ்.அக.); trepidation.

[Skt. cañjalana> த. சஞ்சலனம்.]

சஞ்சலைசீவகன் *šañjalai-šivagaṉ,* பெ.(n.) குருந்தம் (புட்பராகம்) (யாழ்.அக.); topaz.

சஞ்சனம் *šañjaṉam,* பெ. (n.) அணிகலன்களால் எழும் ஒலி (யாழ்.அக.); tinkling of ornaments.

[Skt. jhañjhana> த. சஞ்சனம்.]

சஞ்சா *šañjā,* பெ.(n.) ஆற்றும் மருந்து; healling balm (சா.அக.).

சஞ்சாமாருதம் *šañjā-mārudam,* பெ.(n.) **சண்டமாருதம்** பார்க்க; see *šaṇḍa-mārudam.*

[Skt.jhañjhā+māruta>த. சஞ்சாமாருதம்.]

சஞ்சாயக்குளி *šañjāya-k-kuḷi,* பெ.(n.) அரசாங்கத்தில் நடத்தும் முத்துக்குளி; pearl - fishery undertaken by the government.

[சஞ்சாயம் + குளி.]

[Skt. cañcāyam> த. சஞ்சாயம்.]

சஞ்சாயகம் *šañjāyagam,* பெ.(n.) வண்டு; bee. *"சஞ்சாயகமங்குச் சார்ந்தால்" (கச்சி.வண்டுவிடு.396).*

[Skt. cañcāya> த. சஞ்சாயகம்.]

சஞ்சாரசமாதி *šañjārašamādi,* பெ.(n.) பசி தாகத்தை அமைதி (சாந்தி) செய்து கொண்டு நடக்கையிலும், இருக்கையிலும் இருபுருவ நடுவில் (கேசரி) மனத்தை நாட்டிக் கடைப்பிடிக்கும் ஒரு நிலைமை; a state or condition in which one after appeasing his hunger and thirst, concentrates his mind even while walking and sitting during his wakeful life (சா.அக.).

[சஞ்சாரம் + சமாதி.]

[Skt. šañcāra> த. சஞ்சாரம்.]

சஞ்சாரபிரேதம் *šañcāra-pirēdam,* பெ. (n.) நடைப்பிணம் மக்கட்பதர்; a good for nothing person, worthless fellow. *சிவபூசையில்லாதான்...சஞ்சார பிரேதமெனக் கூறலாமே" (சிவரக.கத்தரிப்.19).*

த.வ. நடைப்பிணம்.

[Skt.sañ-cāra+preta>த.சஞ்சார பிரேதம்.]

சஞ்சாரம்¹ *šañjāram,* பெ.(n.) 1. உலா; travelling, touring. 2. நடமாட்டம்; movement, frequenting. 3.அமைக்கப்படாது இயற்கையில் அமைந்த விடுதி (இ.வ.); natural habitat. 4. நெறிதப்பிய ஒழுக்கம்; immoral life. 5. நடனத்திற்குரிய பாதவைப்பு வகை ஐந்தனுள் ஒன்று (சிலப்.3, 12, பக். 81, கீழ்க்குறிப்பு); (*Nāṭya*) one of the five modes of stepping in a dance. 6. எடுப்பிசையும் இறங்கிசையும் கலத்தல் (ஆரோகண அவரோகண) (வின்.); (Mus.) modulations of the voice in singing the notes of the gamut.

[Skt. sañ-cāra> த. சஞ்சாரம்.]

சஞ்சாரம்² *šañjāram,* பெ.(n.) **சமுசாரம்** பார்க்க; see *šamucāram.*

[Skt. sam-sāra> த. சஞ்சாரம்.]

சஞ்சாரம்³ *šañjāram,* பெ.(n.) 1. தொற்று நோய்; contagious disease. 2. நாக மணி (ரத்தினம்); *Nāgaratna*, a fabulous gem.

[Skt. sañcāra> த. சஞ்சாரம்.]

சஞ்சாரவியாதி *šañjāra-viyādi,* பெ.(n.) தொற்று நோய் (வியாதி.) (இ.வ.); contagion, infectious, disease.

[Skt.sañ-cāra+viyāti>த. சஞ்சாரவியாதி.]

சஞ்சாரன் *šañjāran,* பெ.(n.) 1. உயிர்; life. 2. திரிந்து வாழ்பவன்; one leading a wandering life (சா.அக.).

[Skt. šañ-cāra> த. சஞ்சாரன்.]

சஞ்சாரி¹ *šañjāri,* பெ. (n.) 1. அலைந்து திரிவோன்; wanderer, traveller. 2. இசையின் பல வகை; (Mus.) a melody type having a considerable variety of notes.

[Skt.sañ-cāri→sañ-cārin> த. சஞ்சாரி.]

சஞ்சாரி² *šañjāri,* பெ.(n.) 1. குடியானவன்; cultivator,farmer.2.பெரும்குடும்பமுடையவன்; a man having a large family.

[Skt. sam-sāri> த. சஞ்சாரி.]

சஞ்சாரிகன் *šañjārigan,* பெ.(n.) தூதன் (யாழ்.அக.); ambassador, messenger.

[Skt. sañcārika> த. சஞ்சாரிகன்.]

சஞ்சாலி *šañjāli,* பெ.(n.) பெரிய துமுக்கி (வின்.); large gun.

[U. janjāl> த. சஞ்சாலி.]

சஞ்சாலிகம் *šañjāligam,* பெ.(n.) **சஞ்சரிகம்** (சூடா.) பார்க்க; see *šañjarigam.*

சஞ்சாவாதம் *šañjāvādam,* பெ.(n.) காற்றும் மழையும் (யாழ்.அக.); wind and rain, stormy weather.

[Skt. jhañjhā+vāta> த. சஞ்சாவாதம்.]

சஞ்சாளிகம் *sañjāḷigam,* பெ.(n.) **சஞ்சரிகம்** (சூடா.) பார்க்க; see *sañjārigam.*

சஞ்சி *šañji,* பெ.(n.) பை (இ.வ.); bag, pouch.

த.வ. தூக்குப்பை.

[T. sañci> த. சஞ்சி.]

சஞ்சிகை *šañjigai,* பெ.(n.) புத்தகம் அல்லது தாளிகையின் பகுதி; part, as of a book; issue, number, as of a periodical.

[Skt. sañ-cikā> த. சஞ்சிகை.]

சஞ்சிதம் *šañjidam,* பெ.(n.) 1. சேர்த்து வைக்கப்பட்டது: what is stored up, accumulated. 2. தொடக்கம் கண்டறியப்படாத காலந்தொட்டு ஈட்டப்பட்டுள்ள கருமத்தில் துய்த்துத்தீர்ந்ததுபோக எஞ்சியது; accumulated karma of former births that still remains to be experienced, one of three karumam, q.v. *"பிராயச்சித்தஞ் சஞ்சிதந் தவிர்க்கு மன்றே" (பிரபோத.39, 18).*

[Skt. sañ-cita> த. சஞ்சிதம்.]

சஞ்சிமூலி *sañji-mūli,* பெ.(n.) உயிர்ப்பிக்கச் செய்யும் (சஞ்சீவி) மருந்து; elixir (சா.அக.).

[சஞ்சி+ த. மூலி.]

[Skt. sañi > த. சஞ்சி.]

சஞ்சீவகரணி *šañjīva-karaṇi,* பெ.(n.) 1. மூர்ச்சைதீர்த்து உயிர்தரு(ம்) மருந்து (மூ.அ.): medicine that restores suspended animation. 2. புளியமரம் (பிங்.); tamarind tree.

[Skt. sañ-jīva-karaṇi> த. சஞ்சீவகரணி.]

சஞ்சீவராயர் *šañcīva-rāyar,* பெ.(n.) அனுமன் (M.E.R.95 of 1923); *Hanuman.*

[Skt.sañjīva+K.rāyaru>த. சஞ்சீவராயர்.]

சஞ்சீவனம்¹ *šañjīvaṇam,* பெ.(n.) உயிர்ப்பிக்கை (யாழ்.அக.); restoring to life, resuscitating.

[Skt. sañ-jīvana> த. சஞ்சீவனம்.]

சஞ்சீவனம்² *šañjīvaṇam,* பெ.(n.) நிரய வகை (மணிமே. 6, 181. அரும்.); a hell.

[Skt. sañ-jīvana> த. சஞ்சீவனம்.]

சஞ்சீவனி *šañjīvaṇi,* பெ.(n.) **சஞ்சீவி** பார்க்க; see *šañjīvi.* *"சஞ்சீவனி கண்ட செம்பொ னிமயாசலத்தில்" (திருவாவடு.கோ.113).*

[Skt. sañ-jīvani> த. சஞ்சீவனி.]

சஞ்சீவனை *šañjīvaṇai,* பெ.(n.) 1. **சஞ்சீவி** பார்க்க; see *šañjīvi.* 2. நாங்கூழ்; earth-worm.

[Skt. Perh. sañ-jīvanā> த. சஞ்சீவனை.]

சஞ்சீவி *šañjivi,* பெ.(n.) 1. உயிர்ப்பிக்கும் மருந்து அல்லது மூலிகை; medicine or herb for reviving one from swoon or death. *"மூர்ச்சை கடிதகல வலியவரு ஞான சஞ்சீவியே" (தாயு.சின்மயானந்த.3).* 2. சீந்தில்; gulancha.

[Skt. sañ-jīvi>த. சஞ்சீவி.]

சஞ்சீவிபருவதம் *šañjivi-paruvadam,* பெ.(n.) இறந்தவரைப் பிழைப்பிக்கும் மூலிகை யுடையதாக இராமாயணத்துக் கூறப்பட்ட ஒரு மலை; a mountain mentioned in Ramayana, as producing herbs which restore the dead to life.

[Skt. sañ-jīvi+paruvata> த. சஞ்சீவி பருவதம்.]

சஞ்சீவிமூலிகை *šañjivi-mūligai,* பெ.(n.) உயிர்தரும் ஒருவகை மருந்துப் பச்சிலை (வின்.); revivifying roots or herbs.

த.வ. உயிரூட்டி.

[சஞ்சீவி + மூலிகை.]

[Skt. sañjīvi> த. சஞ்சீவி.]

சஞ்சீவினி *šañjivini,* பெ.(n.) **சஞ்சீவி** பார்க்க; see *šañjivi. "சோருமுயிர் பரக்குஞ் சஞ்சீவினிபோல்" (திருவாவடு.கோ.66).*

சஞ்சுவிருதம் *šañjuvirudam,* பெ.(n.) பறவை; bird (சா.அக.).

சஞ்சேபம் *šañjēbam,* பெ.(n.) சுருக்கம்; epitome, abstract.

[Skt. sañ-kṣēpa> த. சஞ்சேபம்]

சஞ்சோதனம் *šañjōdaṇam,* பெ.(n.) வளி, பித்த, கோழையின் தலைமை உடம்பில் அதிகமாகத் தங்காமலும், அப்படிச் சேர்ந்தாலும், கழிவு வழியாக வெளிப்படுத்தும் மருந்து; medicine preventing the accumulation of the deranged humours or discharging them even if retained, by excretions (சா.அக.).

[Skt. sañjōtaṇa> த. சஞ்சோதனம்]

சட்கோணம் *šaṭ-kōṇam,* பெ.(n.) ஆறுகோணம் பார்க்க; see hexagon. *"சட்கோண நெடுந்தேர் மிசை" (பாரத. பதினாறாம்.65).*

[Skt. ṣaṭ-kōṇa> த. சட்கோணம்.]

சட்சம் *šaṭcam,* பெ.(n.) சுரவரிசையில் ஒன்று (சிலப்.3, 26, உரை); (Mus.) a note of the gamut.

[Skt. ṣaḍ-ja> த. சட்சம்.]

சட்சமயம் *šaṭ-šamayam,* பெ.(n.) அறுசமயம்; the six *vēdic* religious systems. *"சட்சமயவேத" (திருப்பு.132).*

[சட் + சமயம்.]

[Skt. ṣaṭs-samaya>த. சட்சமயம்.]

சட்சரணம் *šaṭšaraṇam,* பெ.(n.) வண்டு; beetle (சா.அக.).

சட்சு *šaṭu-diṭcai,* பெ. (n.) கண் (சிசி.2,61,மறைஞா.); eye.

[Skt. cakṣuḥ> த. சட்சு.]

சட்சுதீட்சை *šaṭcu-diṭcai,* பெ.(n.) குரு, சீடனைத் தனது அருட்பார்வையால் அறிவுமுண்டாகும்படி செய்வது; gracious look, as a mode of initiation.

த.வ. கண்குருவம்.

[Skt. cakṣuḥ+dīkṣā → த. சட்சுதீட்சை]

சட்சுபீடை *šaṭcu-pīḍai,* பெ.(n.) கண் வலி; pain of the eyes (சா.அக.).

[சட்சு + பீடை.]

[Skt. cakṣḥ> த. சட்சு.]

சட்சுருதிதைவதம் *šaṭšurudi-daivadam,* பெ.(n.) எண்ணிரு (சோடச) சுரங்களுள் ஒன்று; (Mus.) lowest variety of the sixth note of the gamut, one of *cōḍaša-šuram,* q.v.

[Skt. saṭ-šruti+daivada>த. சட்சுருதி தைவதம்.]

சட்சுருதிரிசபம் *saṭ-surudi-riṣabam,* பெ.(n.) பதினாறு (சோடச) சுரங்களுள் ஒன்று; (Mus.) middle variety of the second note of the gamut, one of *cōdaša-šuram,* q.v.

[Skt. saṭ-šruti+ṛṣbaha> த. சட்சுருதி ரிசபம்.]

சட்சுரோகம் *šaṭšurōgam,* பெ.(n.) கண்ணோய்; disease of the eyes (சா.அக.).

[Skt. cakṣuh+rōga> த. சட்சுரோகம்.]

சட்சுவை *šaṭ-šuvai,* பெ.(n.) அறுசுவை; the six kinds of tastes (சா.அக.).

[சட் + சுவை.]

[Skt. sat> த. சட்.]

சட்டகன் *šaṭṭagaṉ,* பெ.(n.); நீள உறங்குவோன்; one who indulges in excessive sleep-*Hypersomnambulist* (சா.அக.).

த.வ. நெட்டுறங்கி.

சட்டி[1] *šaṭṭi,* பெ.(n.) வளர்பிறை மற்றும் தேய்பிறையில் வரும் ஆறாம் பக்கல் (விதான. குணாகுண.6); the sixth tidi of a bright or dark fortnight.

த.வ. அறுமி.

[Skt. ṣaṣthī> த. சட்டி.]

சட்டி[2] *šaṭṭi,* பெ.(n.) அறுபது; sixty. *"சட்டி விரத வத்தியாயம்" (மச்சபு.).*

[Pkt. saṭṭhi<ṣaṣṭi> த. சட்டி.]

சட்டிபூர்த்தி *šaṭṭi-pūrtti,* பெ.(n.) அறுபதாம் அகவை நிறைவு; attainment of one's sixtieth birthday. 2. **சட்டிபூர்த்திசாந்தி** பார்க்க; see *saṭṭi-pūrtti-cānti.*

த.வ. அறுபான் நிறை.

[சஷ்டி + பூர்த்தி.]

[Skt. ṣaṣṭi+Pūrti.]

சட்டிபூர்த்திசாந்தி *šaṭṭi-pūrtti-cānti,* பெ.(n.) அறுபதாம் வயது நிரம்பிய நாளில் செய்யுஞ் சடங்கு; ceremony performed on one's sixtieth birthday.

த.வ. அறுபதாம் சடங்கு.

[Skt. ṣaṣṭi+pūrti+šānti> த. சட்டிபூர்த்தி சாந்தி.]

சட்டிரசவர்க்கம் *šaṭ-irasa-varkkam,* பெ.(n.) அறுசுவைத் தொகுதி; the six palatable elements of a meal. *"சட்டிரசவர்க்கத் தமுதருந்தி" (கொண்டல்விடு.412).*

[Skt. ṣaḍ-rasa+varga> த. சட்டிரசவர்க்கம்.]

சட்டிவிரதம் *šaṭṭi-viradam,* பெ.(n.) திங்கள்தோறும் வளர்பிறை ஆறாம் பக்கலில் மேற்கொள்ளும் நோன்பு; religious observance on the sixth day of the bright fortnight in every month.

[Skt. ṣaṣṭhī+vrata> த. சட்டிவிரதம்.]

சட்டினி *šaṭṭiṉi,* பெ.(n.) துவையல் வகை; chutney, a kind of strong relish.

த.வ. பச்சினி.

[U. caṭni]

சட்டு *šaṭṭu,* பெ.(n.) ஆறு (தைலவ.பாயி.30); six.

[Skt. ṣaṭ> த. சட்டு.]

சட்டுவர்க்கம் *šaṭṭu-varkkam,* பெ.(n.) 1. அறுசுவை; the six flavours. 2. பிறப்பிய (சாதக)க் கணிப்பின் அறுவகைப் பிரிவு; (Astrol.) the six main modes of casting a horoscopical chart.

[Skt. ṣaḍ-varga> த. சட்டுவர்க்கம்.]

சட்பதம் *šaṭ-padam,* பெ.(n.) அறுகால்; beetle, as six legged. *"சட்பதங் குடைந்தெழு தாமம்" (செவ்வந்தி.4, நினைத்தது.4).*

[Skt. ṣaṭ-pada> த. சட்பதம்.]

சட்பலம் *šaṭ-palam,* பெ.(n.) ஆறு வகைக் கடைச்சரக்கு; the six kinds of bazaar drugs (சா.அக.).

சட்பாவம் *šaṭ-bāvam,* பெ.(n.) உடலில் உண்டாகும் இருத்தல், தோன்றுதல், உருத்திரிதல், வளர்தல், சுருங்குதல், அழிதல் என்ற ஆறுநிலைகள்; the six states of the physical body, viz., *iruttal, tōṉrudal, uru-t-tiridal, vaḷardal, curuṅgudal, aḻidal. "சட்பாவம்... இயைந்திடாப் புற்கலன் றன்னை" (காசிக.யோக.13).*

த.வ. ஆறுநிலை.

[Skt. ṣaḍ-bhāva> த. சட்பாவம்.]

சட்பித்துதயிலம் *šaṭpittu-tayilam,* பெ.(n.) ஆயுள் வேத முறைப்படி, தலை நோய் முதலியவற்றிற்கு அணியம் செய்து மூக்கில் ஆறு துளியிடும் மெய்ம்மருந்து (தைலம்); an Ayur vedic preparation of medicated oil, 6

drops of which are administered into the nostrils in oase of cerebral complaints (சா.அக.).

த.வ. ஆறுதுளி மருந்து.

சட்பிதாபுத்திரிகம் *šaṭ-bidā-puttirigam,* பெ. (n.) பஞ்சதாளங்களுள் ஒன்று (பரத. தாள.13); (Mus.) a variety of time measure, one of *pañja-tāḷam*, q.v.

[Skt. ṣaṭ-pitā-putraka> த. சட்பிதா புத்திரிகம்.]

சட்ரசநிகண்டு *šaṭraša-nigaṇḍu,* பெ.(n.) வடமொழி நூலினின்று மொழி பெயர்த்த சட்ரச (ஷட்ரச) நிகண்டு என்னும் நூல்; a vocabulary translated into Tamil from Sanskrit (சா.அக.).

சட்ரசம் *šaṭrašam,* பெ.(n.) அறுசுவை; the six distinctive tastes.

[Skt. saḍ-rasa> த. சட்ரசம்.]

சட்ரசம்பரிமாறுகை *šaṭrašam-pari-māṟugai,* பெ.(n.) பூதக்கலம் (நெல்லை.); serving of food by the bride to the bridegroom for the first time at the marriage.

[Skt. saḍ-rasa > சட்ரசம்+ த. பரிமாறுகை > த. சட்ரசம்பரிமாறுகை.]

சட்னி *šaṭṉi,* பெ.(n.) **சட்டினி** பார்க்க; see *šatiṉi.*

த.வ. பச்சினி.

[U. caṭnī> த. சட்னி.]

சடக்கரம் *šaḍakkaram,* பெ.(n.) குமரக் கடவுளுக்குரிய ஆறெழுத்துக்களாலாகிய மந்திரம் (இலக்.அக.); the mantra of six letters, sacred to God *Kumaran.*

த.வ. ஆறெழுத்து மந்திரம்.

[Skt. ṣaḍ-akṣara> த. சடக்கரம்.]

சடகாசம் *šaḍa-kāšam,* பெ.(n.) 1. மூச்சுக் குழல் வெடிப்பு; rupture or ulcar of the respiratory organs. 2. நுரையீரல் வெடிப்பு; fissure of the lungs (சா.அக.).

சடங்கர் *šaḍaṅgar,* பெ.(n.) **சடங்கவி** பார்க்க; see *šaḍaṅkavi.* *"சடங்கர் வாயடங்கிட" (பெருந்தொ.1814).*

[Skt. ṣaḍ-aṅga> த. சடங்கர்.]

சடங்கவி *šaḍaṅkavi,* பெ.(n.) வேதத்துக்குரிய ஆறங்கங்களையும் அறிந்தவன்; one who is well versed in the six *vēdāṅgas. "புத்தூர்ச் சடங்கவி மறையோன் றன்பால்" (பெரியபு. தடுத்தாட்7).*

த.வ. ஆறங்கவித்தகன்.

[Skt. ṣaḍ-aṅga-vit> த. சடங்கவி.]

சடங்கன் *šaḍaṅgaṉ,* பெ. (n.) கந்தக செய்நஞ்சு. இது 32 பிறவிச் செய்நஞ்சுகளுள் ஒன்று; (In siddha medicine) one of the 32 kinds of native arsenic; any poisonous compound of sulphur (சா.அக.).

சடசம் *šaḍašam,* பெ.(n.) ஒரு வகை இருமல்; a kind of cough (சா.அக.).

சடசீதி *šaḍašīdi,* பெ.(n.) 1. சரராசியின் ஏழாம் பாகையிலும், திரராசியின் ஐந்தாம் பாகையிலும் உபயராசியின் ஒன்பதாம் பாகையிலும், கதிரவன் நிற்கச் சம காரியங்கள் செய்யத்தகாவென்று விலக்கப்பட்ட காலம் (விதான. குணாகுண. 33); (Astron.) time when the sun is in the 7th degree of šararāši 5th degree of *tira-rāši*, and 9th degree of *usaya-rāši*, considered inauspicous. 2. **சடசீதிமுகம், 1** (சைவச.பொது.15) பார்க்க; (Astron.) see *šadašīdi-mugam.*

[Skt. ṣaḍ-aśīti> த. சடசீதி.]

சடசீதிமுகம் *saḍašīdi-mugam,* பெ.(n.) 1. ஆடவை (ஆனி), கன்னி (புரட்டாசி), சிலை (மார்கழி), மீனம் (பங்குனி) மாதங்கள் பிறக்கும் நாள் (சைவச.பொது.14); (Astron.) the first day of *āṉi, Puraṭṭāši, Mārkaḻi,* and *Paṅguṉi* months. 2. கதிரவன் தனுசு 26வது பாகையிலும், மீனம் 22வது பாகையிலும், மிதுனம் 18வது பாகையிலும், கன்னி 14வது பாகையிலும், செல்லும் காலம் (செந்.X, 378); (Astron.) time when the sun is in the 26th

degree of *tanucu*, 22nd degree of *minam*, 18th degree of *midunam*, and 14th of *kanni*.

த.வ. கோளோட்டம்.

தெ. சடசீதிமுகம்

[Skt. ṣaḍ-aśiti> த. சடசீதி + த. முகம்.]

சடத்துவசாத்திரம் *šaḍattuva-šāttiram*, பெ.(n.) பொய்த்தன்மையைக் குறிக்கும் நூல்; science which treats of the laws of nature and especially of the forces and general properties of matter-physics (சா.அக.).

[Skt. ṣaḍ-adhvā+šāstra>த. சடத்துவ சாத்திரம்.]

சடத்துவா *šaḍ-attuvā*, பெ.(n.) ஆவி (ஞான.68, 1, உரை); (*šaivam*) six paths to liberation.

[Skt. ṣaḍ-adhvā> த. சடத்துவா.]

சடதன் *šaḍadan*, பெ.(n.) முட்டாள்; an idiot (சா.அக.).

[Skt. ṣaḍ> த. சட → த. சடதன்.]

சடதை *šaḍadai*, பெ.(n.) 1. மடமை; modesty. 2. அறியாத்தனம்; idioey, void of understanding. 3. அறியாமை; ignorance. 4. அறியாப் பெண்; a simple woman, simpletion (சா.அக.).

[சடதன் →சடதை]

சடா *šaḍā*, பெ.(n.) காற்சோடுவகை; slippers with pointed toes, usually worn by muhammadans.

[U. chedao> த. சடா.]

சடாக்கரம் *šaḍākkaram*, பெ.(n.) **சடக்கரம்** பார்க்க; see *šaḍakkaram*. *"ஆய்க்குஞ் சடாக்கர மில்லாத நாவிற்கும்" (தனிப்பா.ii, 141, 357).*

[Skt. ṣaḍ-akṣāra> த. சடாக்கரம்.]

சடாட்சரம் *šaḍāṭcaram*, பெ.(n.) ஆறு மந்திர எழுத்துகள்; the six mantric letters. (சா.அக.).

[Skt. saḍ-akṣara.]

சடாதாரம் *šaḍādāram*, பெ.(n.) ஆறாதாரம்; the six mystic cakras in the body.

[சடா + தாரம்.]

[Skt. ṣaḍ> த. சடா.]

சடாமுத்திரை *šaḍā-muttirai*, பெ.(n.) **சபாமுத்திரை** பார்க்க; see *šabā-muttirai* (சா.அக.).

சடானனன் *saḍ-ānanan*, பெ.(n.) ஆறுமுகன்; God *Kumāra*, as being six faced. *"மனோலய முற்றமெய்ப் பண்பினைக்காட்டிய சடானனனை" (குமர.பிரபந்.முத்துக்.4).*

[Skt. saḍ-ānana> த. சாடனைன்.]

சடுத்தாசனம் *šaḍuttāšanam*, பெ.(n.) **சலாசனம்** பார்க்க (சைவச.பொது.523, உரை); see *šalāšanam*.

சடுரசம் *šaḍurašam*, பெ.(n.) அறுசுவை; the six flavours.

[Skt. ṣaḍ-rasa> த. சடுரசம்.]

சடுவர்க்கம் *šaḍu-varkkam*, பெ.(n.) **சட்டுவர்க்கம்**[2] பார்க்க ; see *šaṭṭu-varkkam*.

சடுவிதவாதம் *šaḍuvidavādam*, பெ.(n.) அறுவகை ஊதை (வாதம்); the six kinds of rheumatic or nervous affections (சா.அக.).

சடையரசன் *šaḍaiyarašan*, பெ.(n.) 1. வாணக்கெந்தி; stick sulphur. 2. குழாய்க் கெந்தி; roll sulphur (சா.அக.).

சடோகரம் *šaḍōkaram*, பெ.(n.) 1. புண்ணாற்றல்; healing of sores. 2. அகரு; aloe wood - *Agallocah* (சா.அக.).

சடோதரம் *šaḍōtaram*, பெ.(n.) 1. வயிற்றளைச்சல்; dysentry or flux. 2. செரியாத பண்டங்களினால் ஏற்பட்ட குடற்கோளாறு; disorder of bowels due to indigestive substances (சா.அக.).

சண்டகன் *šanḍagan*, பெ.(n.) இலிங்க பாடாணம் (மூ.அக.); a mineral poison.

[Skt. prob.canḍaka> த. சண்டகன்.]

சண்டகோலாகலம் *šanḍa-kōlākalam*, பெ.(n.) நிரய வகை (சேதுபு.துராசார்.22); a hell.

[Skt. canḍa-kōlākaala> த. சண்டகோலாகலம்]

சண்டகோலாலம் *šaṇḍa-kōlālam,* பெ.(n.) **சண்டகோலாகலம்** பார்க்க (சிவதரு. சுவர்க்கநரக.180); see *saṇḍa-kōlākalam.*

[Skt. caṇḍa-kōlāhala> த. சண்டகோலாலம்]

சண்டத்துவம் *šaṇḍattuvam,* பெ.(n.) ஆண் தன்மை யில்லாமை; impotency (சா.அக.).

சண்டபானுரசம் *šaṇḍabāṉuraśam,* பெ.(n.) குளிர்க் காய்ச்சலுக்குக் கொடுக்கும் ஆயுள் வேத மருந்து; an Ayurvedic medicine prescribed for fever from chillness or cold (சா.அக.).

சண்டமாருதசிந்தூரம் *šaṇḍa-māruda-šindūram,* பெ.(n.) சிந்தூர வகை (வின்.); a medicinal powder.

[Skt. caṇḍa+māruta>கண்டமாருதம் + த. சிந்தூரம்> த. சண்டமாருதசிந்தூரம்.]

சண்டரசம் *šaṇḍa-rašam,* பெ.(n.) ஒரு வகை இனிப்புப் பற்பம்; a compound of mercury oxide (சா.அக.).

சண்டன்[1] *šaṇḍaṉ,* பெ.(n.) அலி (பிங்.); eunuch, hermaphrodite.

[Skt. saṇḍa> த. சண்டன்.]

சண்டன்[2] *šaṇḍaṉ,* பெ.(n.) புளி (மலை.); tamarind tree.

[Skt. ciñcā> த. சண்டன்.]

சண்டாளக்கரு *šaṇḍāḷa-k-karu,* பெ.(n.) கழுதைக் கொழுப்பு; ass'es fat (சா.அக.).

சண்டேசானுக்கிரகர் *šaṇḍē-šāṉukkira-gar,* பெ.(n.) சண்டேசுரருக்கு அருள்புரிந்த சிவமூர்த்தம்; *Šiva,* as bestowing grace on *šaṇḍēšura-nāyaṉār.*

[Skt. caṇḍēšvara+kira-kar > த. சண்டேசானுக்கிரகர்.]

சண்டைக்குச்சூரன் *šaṇḍaikku-c-cūraṉ,* பெ. (n.) 1. கோழி; fowl. 2. சேவல்; cock (சா.அக.).

சண்மதம் *šaṉ-madam,* பெ. (n.) மறைநெறிக்குட்பட்ட ஆறுமதம்; six *vēdic* religious; six systems of philosophy.

[Skt. ṣaṉ-mata> த. சண்மதம்.]

சண்முகக்கொடியோன் *šaṇmuga-k-koḍiyōṉ,* பெ.(n.) 1. கோழி; fowl. 2. சேவல்; cock (சா.அக.).



சண்முகசாலம் *šaṇmuga-šālam,* பெ.(n.) அகத்தியர் செய்த நூற்களிலொன்று; one of the several treatises compiled by sage Agastiya; a book on magic (சா.அக.).

சண்முகமுத்திரை *šaṉ-muga-muttirai,* பெ. (n.) **சண்முகிமுத்திரை** (செந்.X, 423) பார்க்க; see *šaṉ-mugi-muttirai.*

[Skt. ṣaṉ-mukha>சண்முக(ம்)+ த. முத்திரை.]

சண்முகத்திராவகம் *šaṇmuga-t-tirāvagam,* பெ.(n.) கொங்கணவன் ஊதை (வாத) பாவியத்திற் (காவியத்திற்) சொல்லியுள்ள ஒருவகை எரிநீரகம் (திராவகம்); an acid preparation contemplated in konganava works on Alchemy (சா.அக.).

சண்முகப்பிரியை *šanmuga-p-piriyai,* பெ.(n.) அராக (இராக) வகை (பரத.இராக.104); (Mus.) a specific melody type.

[Skt. sanmukha-priyā > த. சண்முகப் பிரியை.]

சண்முகன் *šanmugan,* பெ.(n.) ஆறுமுகன்; Arumugam, as six-faced. *"சண்முகன் பாங்க ரேகி" (கந்தபு. வள்ளியம்மை.194).*

[Skt. san-mukha > த. சண்முகன்.]

சண்முகிமுத்திரை *šan-mugi-muttirai,* பெ.(n.) நீராடும் போது காது, கண், மூக்குத்துளைகளை முறையே பெருவிரல், சுட்டுவிரல், அணிவிரல்களால் மூடும் முத்திரை; a hand-pose in bathing in which earholes, eyes and nostrils are closed respectively by thumb, forefinger and ring-finger.

[சண் + முகி + முத்திரை.]

[Skt. san > த. சண்.]

சணபுட்பிகை *šana-putpigai,* பெ.(n.) கிலுகிலுப்பை; rattle-wort - *crotalaria laburnifolia* (சா.அக.).

சணபேதி *šana-bēdi,* பெ.(n.) கணப் பொழுதில் மாழைகளை வேறு பிரித்துப் பொன்னாக்கும் மருந்து; medicine capable of trausmuting metals into gold in a moment (சா.அக.).

சணப்பொழுது *šana-p-poludu,* பெ.(n.) நொடிநேரம் (இ.வ.); short space of time, a moment's time.

த.வ. கணப்பொழுது.

[Skt. ksana > சணம் + த. பொழுது.]

சணம் *šanam,* பெ.(n.) **சணப்பொழுது** பார்க்க; see *šana-p-poludu.*

[Skt. ksana > த. சணம்.]

சணாய்² *šanāy,* பெ.(n.) **சணகம்** பார்க்க; see *šangam. "கொழுந்துபடு சணாயும்" (பெருங். உஞ்சைக்.49, 107).*

சத்தக்கட்டை *šatta-k-kattai,* பெ.(n.) முத்திரைக்காசின், ஓசைக்குறைவு (இ.வ.); dullaness of metallic ring in a coin.

[Skt. šabda > சத்த(ம்) + த. கட்டை.]

சத்தக்கருவி *šatta-k-karuvi,* பெ.(n.) தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக் கருவி, மிடற்றுக் கருவி என்ற ஐவகைப்பட்ட இசைக்கருவி (பிங்.); musical instrument, of five kinds, viz., *tōr-karuvi, tulai-k-karuvi, narambu-k-karuvi, kañja-k-karuvi, mitarru-k-karuvi.*

[சத்த(ம்) + கருவி.]

[Skt. šabda > த. சத்த.]



சத்தக்கேடு *šattakkēdu,* பெ.(n.) செவிடு; deafness, wanting, in the sense of hearing (சா.அக.).

[சத்த(ம்) + கேடு.]

[Skt. šabha > த. கேடு.]

சத்தகம் *sattagam.* பெ.(n.) 1. ஏழு கூடியது; aggregate of seven. 2. அரிசி, ஆடை, பணம் முதலிய ஏழுபொருள்களை பார்ப்பனர்

எழுவர்க்குத் தானஞ்செய்யும் ஈமக்கடன் வகை (வின்.); a funeral ceremony, in which seven kinds of things as rice, clothes, money, etc. are offered as gift to seven Brahmans.

[Skt. šaptaka> த. சப்தகம் →சத்தகம்.]

சத்தகன்னி *šatta-kanni,* பெ.(n.) சிவசத்தியின் வேறுபட்ட வடிவங்களான ஏழு கன்னியர்; the seven Deities or supreme divinities, called also sakthis (personified energies) as shown above (சா.அக.).

[சப்தம் + சத்த(ம்) + கன்னி.]

சத்தகன்னிகை *šatta-kannigai,* பெ. (n.) **சத்தமாதர்** பார்க்க (சங்.அக.); see *šattamātar.*

[சத்த + கன்னிகை.]

[Skt. சப்த → த. சத்த.]

கன்னி →கன்னிகை

சத்தகுணம் *šatta-kunam,* பெ.(n.) ஒலி (சத்தம்); sound (சா.அக.).

[சத்த(ம்) + குணம்.]

[Skt. šabda> த. சத்த(ம்).]

சத்தகுலாசலம் *šatta-kulāšalam,* பெ.(n.) நிலத்தைத் தாங்குவனவாகக் கூறப்படும் இமயம், ஏமகூடம், கயிலை, நிடதம், நீலமலை, மந்தரம், விந்தம் என்னும் ஏழுமலைகள் (சங்.அக.); the seven mountain's belived to support the earth, viz., *imayam, ēmakūdam, kailai, nidadam, nīlakiri, mandaram, vindam.*

சத்தங்கட்டு–தல் *šattan-kattu,* 5 செ.கு.வி. (v.i.) களைக்கட்டு (வ.); to sound effectively.

சத்தங்காட்டு–தல் *šattan-kāttu-tal,* செ.கு.வி. (v.i.) 1. ஒலியெழுப்புதல்; to give a vocal signal; to call; halloo, make a noise. 2. தீய ஆவிகள் விலகும்படி கைதட்டுதல்; to clap hands for scaring a way snakes of wild beasts. 3. ஏதமுறுகாலம் முதலியவற்றில் முறையிட்டுக் கூவுதல்; to cry of bawl out, as a signal in case of danger.

[சத்தம் + காட்டு-.]

[Skt. šabda> த. சத்த(ம்).]

சத்தசமுத்திரம் *šatta-šamuttiram,* பெ.(n.) ஏழுகடல் (சூடா.); the seven concentric seas of the terrestrial sphere.

[Skt. saptan + samudra > த. சப்த சமுத்திரம்→சத்தசமுத்திரம்.]

சத்தசாட்டரணை *šatta-šāttaranai,* பெ.(n.) **சத்திசாட்டரணை** பார்க்க; see *šatti-šāttaranai* (சா.அக.).

சத்தசாத்திரம் *šatta-šāttiram,* பெ.(n.) எழுத்துச் சொற்களைப் பற்றிய இலக்கண நூல்; grammar, as the science of sounds and words.

[Skt. šabda+šāstra> த. சத்தசாத்திரம்.]

சத்தசிப்பி *šatta-šippi,* பெ.(n.) கிளிஞ்சில் (இ.வ.); mollusc.

[சத்த(ம்) + சிப்பி.]

[Skt. šabda> த. சத்த(ம்)]

இப்பி > சிப்பி.

சத்தசுரம் *šatta-šuram,* பெ.(n.) ஏழிசை (சங்.அக.); the seven notes of the gamut.

[சத்த(ம்) + சுரம்.]

[Skt. saptan→சப்தம் →சத்த(ம்).]

சத்ததந்தி *šatta-tandi,* பெ.(n.) ஏழிசையிசைக்கும் ஏழுகம்பிகளையுடைய வீணைவாச்சியம் (இ.வ.); *viṇai,* as having seven strings or wires representing the seven šuram.

[சத்த(ம்) + தந்தி.]

[Skt. saptan → சப்தம் → சத்த(ம்).]

சத்ததாது *šatta-tātu,* பெ.(n.) உடம்பின் அமைப்பிலுள்ள இரதம், செங்குருதி, எலும்பு, தோல், இறைச்சி, மூளை, வித்தமிழ்து என்ற எழுவகைப் பொருள்கள் (சூடா.); the seven constituent elements of the human body, viz., *iradam, utira, elumbu, tōl, iraicci, mūḷai, šukkilam. cen-kurudi vitlamildu.*

[சத்த(ம்) + தாது.]

[Skt. saptan > த.சத்த(ம்).]

சத்ததாரணை *šatta-dāraṇai,* பெ.(n.) தொண்கவனவூழ்கம் (நவதாரணையுளொன்று) (திவா.); one of *nava-tāraṇai.*

[சத்த(ம்) + த. தாரணை.]

[Skt. sabda> த. சத்த(ம்).]

சத்ததாளம் *šatta-tāḷam,* பெ.(n.) துருவதாளம், அடதாளம், ஏகதாளம், திரிபுடைதாளம், ரூபகதாளம், சம்பைதாளம், மட்டிய தாளம் என்ற எழுவகைத் தாளங்கள்; seven common varieties of time measure, viz., *turuva-tāḷam, ada-tāḷam, ēga-tāḷam, tiripudai-tāḷam, rūbaga-tāḷam, cambai-tāḷam, maṭṭiya-tāḷam.*

[சத்த(ம்) + த. தாளம்.]

[Skt. sabtan> த. சப்தம் → சத்த(ம்).]

தாள் > தாளம்

சத்ததானம் *šatta-tāṉam,* பெ.(n.) வெடியுப்பு; saltpetre.

[Skt. šabda+sthāna> த. சத்ததானம்.]

சத்ததீவு *šatta-tivu,* பெ.(n.) ஏழு தீவு; the seven concentric continents with Mt. *Mēru* as their centre.

[சத்த(ம்) + தீவு.]

[Skt. saptan> த. சப்தம் → சத்த(ம்).]

சத்தநதி *šatta-nadi,* பெ.(n.) கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி என்ற ஏழு தெய்வத் தன்மை வாய்ந்த ஆறுகள் (சங்.அக.); the seven sacred rivers, viz., *kaṅgai, yamuṉai, saracuvati, ñarumadai, kāvēri, kumari, kōdāvari.*

[Skt. šaptan→nadi→த.சப்தநதி →சத்த நதி]

சத்தநரகம் *šatta-naragam,* பெ.(n.) எழுநிரயம்; the seven hells.

[Skt. šaptan+naraka → த. சப்தநரகம் → த. சத்த நரகம்.]

சத்தநாரசம் *šatta-nārašam,* பெ.(n.) உடம்பில் வயிறு, நெஞ்சு முதலிய உறுப்புகளில் இட்டு ஒலியை கண்டு பிடிக்கும் சலாகை; an instrument by which cavities as stomach, cheast etc., are sainded - stethescope (சா.அக.).

சத்தநாராசம் *šattanārāšam,* பெ.(n.) அட்டை; leech (சா.அக.).

சத்தநிலை *šatta-nilai,* பெ.(n.) பனங்கள்; palmyra toddy (சா.அக.).

சத்தநூல் *šatta-nūl,* பெ.(n.) **சத்தசாத்திரம்** பார்க்க (பி.வி.18, உரை); see *šatta-šāttiram.*

சத்தப்பிரகரணம் *šatta-p-pirakaraṇam,* பெ.(n.) ஒரு மறை முடிவு நூல்; a treatise on *vēdānta* in seven chapers of parts.

[Skt. saptan > த. சத்தப்பிரகரணம்.]

சத்தப்பிரதி *šatta-p-piradi,* பெ. (n.) கேள்விமூலம் தெரிவது (வின்.); knowing only by hearsay.

[Skt. šabda +Prati> சப்தபிரதி → த. சத்தப்பிரதி]

சத்தப்பிரபஞ்சம் *šatta-p-pirapañcam,* பெ.(n.) சொல்லுலகம் (சி.போ.பா.பக்.136); (*Šaiva*) the universe of sound, a division of the *satta-pirapañjam* (சா.அக.).

[Skt. šabda+pra-pañca>த. சத்தப்பிரபஞ்சம்]

சத்தப்பிரமம் *šatta-p-piramam,* பெ.(n.) 1. ஒலிவடிவாகிய முழுமுதற்பொருள் கடவுள்; word-Brahman, sound or word identified withs the supreme being. 2. அறுபத்துநாலு கலையுள் இசை வேறுபாடு அறியும் வித்தை; the art of modulation of sounds. one of *arupattunālu-kalai* q.v.

[Skt. šabda+brahma>த. சத்தப்பிரமம்]

சத்தப்பிரமவாதம் *satta-p-pirama-vādam,* பெ.(n.) (நாதமே) ஓசையே முழு முதற்பொருள் (பிரமம்) என்னுங் கொள்கை(சி.போ.பா.அவை.); the philosophic system which holds that sound is Brahman.

[Skt. šabda-brahma-vāda> த. சத்தப் பிரமவாதம்.]

சத்தப்பிரமாணம் *šatta-p-piramāṇam,* பெ.(n.) மெய்யுணர்வு விளக்கத்திற்காக மறை முதலியவற்றைக் கொண்டு அறியும் ஓர் அளவை; verbal authority; revelation or scripture, as a means of acquiring correct knowledge.

த.வ. மெய்யுணர்வு அளவை.

[Skt. šabda-pramāṇa> த. சத்தப் பிரமாணம்.]

சத்தபரிபூரணம் *sattapari-pūraṇam,* பெ.(n.) யகாரம்; the mystic letter `ya' referring to cerebral region (சா.அக.).

சத்தபரியாவாசம் *šattapariyā-vāšam,* பெ.(n.) காஞ்சிரை; nux vomica (சா.அக.).

சத்தபருணி *šatta-paruṇi,* பெ.(n.) ஏழிலைப் பாலை (மலை.); seven leaved milk-plant.

[Skt. saptan-parṇa> த. சப்தபருணி→ சத்தபருணி]



சத்தபுரி *šattapuri,* பெ.(n.) அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்ற ஏழு தெய்வத்தன்மை பெற்ற நகரங்கள் (சங்.அக.); the seven sacred cities, viz., *Ayōtti, Madurai, Māyai, Kāši, Kāñji, Avandi, Tuvāragai.*

[சத்த(ம்) + புரி.]

[Skt. sabtan> த. சப்தம் → சத்தம்.]

சத்தபோடம் *šattapōḍam,* பெ.(n.) செய்யான்; a venomous centipede (சா.அக.).

சத்தபோதம் *šattapōdam,* பெ.(n.) **பூதணம்** பார்க்க; see *būdaṇam* (சா.அக.).

சத்தம்[1] *šattam,* பெ.(n.) 1. ஒலி (சூடா.); voice. 2. சொல் (பி.வி.6); word, vocable. 3. பெயர்; name. *"தத்துவ சத்தஞ் சாரும்" (சி.சி.2, 71).* 4. **சத்தசாத்திரம்** பார்க்க; see *šatta-šāttiram. "சத்தமுஞ் சோதிடமு மென்றாங்கு" (நாலடி.52).* 5. **சத்தப்பிரமாணம்** பார்க்க; see *šatta-p-piramāṇam.*

[Skt. šabda> த. சத்தம்.]

சத்தம்[2] *šattam,* பெ.(n.) ஏழு (சூடா.); seven.

[Pkt. satta →Skt. saptan> த. சத்தம்.]

சத்தமண்டலம் *šatta-maṇḍalam,* பெ.(n.) ஏழுலகங்கள் (வின்.); seven regions of the universe.

[சத்த(ம்) + மண்டலம்.]

[Pkt. sabtan → த. சப்தம் → சத்தம்.]

சத்தமருத்து *šattamaruttu,* பெ.(n.) கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, மேல், கீழ், பலயோனியுயிர்கள் இவற்றினின்று வரும் ஏழுவகைக் காற்று (பிங்.); the seven kinds of winds.

சத்தமருந்து *šatta-marundu,* பெ.(n.) ஏழு வகை மருந்துகள்; the seven kinds of medicines (சா.அக.).

[சத்த(ம்) + மருந்து.]

[Skt. saptan → த. சப்தம் → சத்த(ம்).]

சத்தமன் *šattamaṉ,* பெ.(n.) யாவரினுஞ் சிறந்தவன் (இலக்.அக.); most excellent person.

[Skt. sat-tama> த. சத்தமன்.]

சத்தமாங்கிசம் *šatta-māṅgišam,* பெ.(n.) (ஏழில் ஓர் அம்சம்) ஓரையை ஏழாகப் பிரித்துக் கோள்களின் நிலையைக் குறிக்குஞ் சக்கரம் (சோதிட.சிந்.123); (Astrol.) lit., one seventh part. A horoscopical chart wherein the position of each planet is determined by dividing its *rāši* into seven parts.

[Skt. šaptama+amša > த. சத்தமாங்கிசம் → சத்தமாங்கிசம்.]

சத்தமாதர் *šatta-mādar,* பெ. (n.) சிவ சத்தியின் வடிவவேறுபாடுகளான ஏழு மாதர்கள்; the seven divine mothers or personified energies of the principal deities.

[சப்த →சத்த(ம்) + த. மாதர்.]

[Skt. sapta → த. சப்த → சத்த.]

சத்தமாதாக்கள் *šatta-mādākkaḷ,* பெ.(n.) **சத்தமாதர்** (சிலப்.20, 37, உரை) பார்க்க; see *šatta-mādar.*

[சத்த(ம்) + த. மாதாக்கள்.]

[Skt. saptan→ த. சப்தம் → சத்தம்.]

சத்தமி *šattami,* பெ.(n.) 1. ஏழாம் பக்கல் (திதி) (விதான. குணாகுண.7); the seventh titi in a lunar fortnight. 2. ஏழாம் வேற்றுமை (பி.வி.6, உரை); (Gram.) the locative case, as the seventh.

[Skt. saptami> த. சப்தமி → சத்தமி.]

சத்தமேகம் *šattamēgam,* பெ.(n.) சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீல வருணம் என்ற ஏழு மேகங்கள் (பிங்.); the seven celestial clouds under the control of Indra, viz., *šamvarttam, āvarttam, puṭkalāvarttam, šaṅgāridam, turōṇam, kālamugi, nīlavaruṇam. "சத்தமேகங்களும் வச்ரதரனாணையிற் சஞ்சரித்திட வில்லையோ" (தாயு.பரிபூ.9).*

[சத்த(ம்) + மேகம்.]

[Skt. saptan → த. சப்தம் → சத்த(ம்).]

சத்தராசிகம் *šattarāšigam,* பெ.(n.) கணித வகை (வின்.); (math) rule of seven, a compound proportion in which seven terms are given.

[Skt.saptanrāši→த.சப்தராசிகம்→ சத்தராசிகம்.]

சத்தரி *šattari,* பெ.(n.) ஊசிக்காந்தம்; magnet (சா.அக.).

சத்தரிசிகள் *šatta-rišigaḷ,* பெ.(n.) அகத்தியன், புலத்தியன், அங்கிரசு, கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டன் முதலான இருடிகள் எழுவர்; (பிங்) the seven sages.

[Skt. saptarṣi> த. சப்தரிசிகள்→ சத்தரிசிகள்.]

சத்தரிசிமண்டலம் *šattariši-manḍalam,* பெ.(n.) ஏழு இருடிகளாகிய ஏழு விண்மீன்களில் தோன்றும் மண்டிலம்; ursa major or the great Bear, the seven chief stars of which are personified as sapta ṛi ṣi.

[சத்தரிசி + மண்டிலம் → மண்டலம்.]

[Skt. saptarṣi + த. சப்தரிசி → சத்தரிசி.]

சத்தலோகம் *šatta-lōgam,* பெ.(n.) பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், தரா, கஞ்சம் என்ற ஏழுவகை மாழைகள் (உலோகங்கள்) (திவா.); the seven metals, viz., *poṉ, veḷḷi, cembu, irumbu, īyam, tarā, kañjam.*

[Skt. saptan+lōha> த. சத்தலோகம்.]

சத்தவருக்கம் *satta-varukkam,* பெ.(n.) நெல்லி, வெட்டிவேர், இலாமிச்சை வேர், சடாமாஞ்சி, இலவங்கம், ஏலம், திராட்சை என்ற ஏழுவகை மருந்துப் பொருள்கள் (சங்.அக.); the seven vegetable drugs, viz., *nelli, veṭṭi-vēr, ilāmiccai-vēr, cadāmāñji, ilavaṅgam, ēlam, tirāṭcai.*

[Skt. saptan+varga → த. சத்தவருக்கம்.]

சத்தவிடங்கத்தலம் *šatta-viḍaṅga-t-talam,* பெ.(n.) தியாகராசமூர்த்தி கோயில் கொண்டுள்ள ஆரூர், நாகை, நள்ளாறு, மறைக்காடு, காறாயல், வாய்மூர், கோளிலி என்ற ஏழு தலங்கள் (திருவாரூ.25–26, அரும்.); the seven shrines celebrated for the manifestation of *Šivan* as *Thyāgarājar,* viz. *Arūr, Nāgai, Naḷḷāṟu, Maṟaikkādu, Kāṟāyal, Vāymūr, Kōḷili.*

[சத்தம் + விடங்கம் + தலம்.]

[Skt. saptan → த. சப்தம் →சத்தம்.]

சத்தவுதகிருதம் *šattavuda-kirudam,* பெ.(n.) புண்ணின் மேல் தடவும் ஒரு மருந்து நெய்; a medicatede oil used for wounds as an external application (சா.அக.).

சத்தவெடி *šatta-veḍi,* பெ.(n.) இலக்குக் குறியாது சுடும்வெடி (இ.வ.); aimless shooting.

[சத்தம் + த. வெடி.]

[Skt. šabda → த. சத்த(ம்)]

சத்தவேகமணி[1] *šattavēga-maṇi,* பெ.(n.) இதளிய மணிவகையுளொன்று; a kind of consolidated mercurial pill (சா.அக.).

சத்தவேகமணி[2] *šatta-vēga-maṇi,* பெ.(n.) மருந்து வகை (தஞ்.சர.iii, 58); a kind of medicine.

சத்தறி *šattaṟi,* பெ.(n.) நவகண்ட மூதண்டம்; the oldest of the seven worlds (சா.அக.).

சத்தாகம்[1] *šattāgam,* பெ.(n.) ஏழு நாளைக்குள் பாகவதம் போன்ற தொன்மங்களைப் படித்துப் பொருள் கூறுகை (இ.வ.); an exposition of a religious work as *Bhāgavata,* in seven days.

[Skt. saptāha> த. சப்தாகம் → சத்தாகம்.]

சத்தாகம்[2] *šattāgam,* பெ.(n.) **சத்தாவரணம்** பார்க்க (இ.வ.); see *šattāvaraṇam.*

சத்தாங்கசெவிடு *šattāṅga-seviḍu,* பெ.(n.) முழுச் செவிடு; complete deafness; stone-deafness (சா.அக.).

சத்தாங்கமும் *šattāṅgamum,* கு.வி.எ.(adv.) அரசாட்சிக்குரிய ஏழுறுப்புகளும் மற்றும் அனைத்தும்; lit., all the seven limbs (of a kingdom.) wholly. *"சத்தாங்கமும் தோற்றுவிட்டான்".*

[Skt. saptāṅga> த. சத்தாங்கம்.]

சத்தாங்கோபகாரம் *šattāṅgōbakāram,* பெ.(n.) அன்னம், பருகுமுணவு, அம்பரம், மந்திரம், தாசபாலனம், காராமயத்திரிதயமோசனம்,

சவச்சேமம் என்ற உடல் தொடர்பாக நிகழும் ஏழுவகைத் தயாவிருத்தி (வின்.); the seven acts of beneficence relating to the body, viz., *annam, pānam, ambaram, mandiram, tāsa-pālanam, karāmayat tiritaya-mōšanam, cavaccēmam.*

[Skt. saptānga + upakāra > த. சத்தாங் கோபகாரம்.]

சத்தாண்டுமூலி *šattāṇḍu-mūli,* பெ.(n.) சித்தர்கள் பசியாமல் இருக்க வேண்டி ஏழு ஆண்டிற்கொரு முறை உண்ணும் மூலி; an unknown rare drug supposed to be taken by siddhars once in seven years to avoid hunger (சா.அக.).

[சத்த(ம்) + ஆண்டு + மூலி.]

[Skt. šaptan → த. சப்தம் →சத்த(ம்)]

சத்தாமாத்திரம் *šattāmāttiram,* பெ.(n.) தாழ்நிலையுள்ளதாயிருக்கை; bare existence. *"சுயம்பிரகாசமாய்...சத்தாமாத்திரமாய் இருக்குமென்னில்" (சி.சி.6, 9, ஞானப்.).*

[Skt. sattā-mātra > த. சத்தாமாத்திரம்.]

சத்தாய்-த்தல் *šattā-y-,* 4 செ.குன்றா.வி.(v.t.) 1. தொந்தரவு செய்தல்; to tease, torment. 2. பகடித்தல் (இ.வ.); to ridicule, mock at.

[U. satānā > த. சத்தாய்-.]

சத்தார் *šattār,* பெ.(n.) சாய்வு (இ.வ.); oblique, slanting or sloping direction.

[U. sattār > த. சத்தார்.]

சத்தார்த்தம் *šattārttam,* பெ.(n.) சொல்லின் படி அமைந்த பொருள் (சித். மரபுகண்.18); literal meaning.

[Skt. šabda+artha > த. சத்தார்த்தம்.]

சத்தாவத்தை *šattāvattai,* பெ.(n.) ஆதனுக்கு நிகழக்கூடிய அறியாமை, ஆவரணம், விட்சேபம், பரோட்சஞானம், அபரோட்ச ஞானம் சோகநிவர்த்தி, தடையற்றவானந்தம் என்னும் எழுவகை நிலைகள் (உபநி.17, உரை); (Advaitam) the seven states of the soul from ignorance and self-delusion to the knowledge of Brahman and consequent felicity, viz., *ariyāmai āvaranam, viṭcēpam, parēṅcañāṉam, aparōṭcañāṉam, sōga-ni varttitaḍaiyarra-v-āṉandam.*

[Skt. šaptan+ava-sthā → த. சப்தாவத்தை → சத்தாவத்தை.]

சத்தாவரணம் *šattāvaraṇam,* பெ.(n.) விழாக்கொண்டாட்ட முடிவில், வழிபாட்டிற் குரிய தெய்வத்திருமேனி சுற்றுமதிலுக் குள்ளேயே ஏழுதரஞ் சுற்றுகை; procession of the idol seven times round the shrine, made towards the close of festivals.

[Skt. saptan+ā-varaṇa > த. சப்தா வரணம் → சத்தாவரணம்.]

சத்தாவாசி *šattāvāši,* பெ.(n.) பூசபத்திரி; an unknown drug (சா.அக.).

சத்தானபேதி *šattāna-bēdi,* பெ.(n.) நல்ல கழிச்சல் மருந்து; a cathartic (சா.அக.).

சத்தி[1]**-த்தல்** *šatti-,* 4 செ.கு.வி.(v.i) ஒலித்தல்; to sound, utter a noise.

[Skt. šabda > த. சத்தி-.]

சத்தி[2]**-த்தல்** *šatti-,* 4 செ.குன்றா.வி.(v.t.) வாயாலெடுக்கை (இ.வ.); to vomit.

[Skt. chard > த. சத்தி-.]

சத்தி[3] *šatti,* பெ.(n.) 1. வாயாலெடுக்கை (பிங்.); vomiting. 2. வேம்பு (மலை.); neem. 3. கொம்மட்டி (மலை.); a small water-melon. 4. பேய்ப்புல்; wild snake-gourd.

சத்தி[4] *šatti,* பெ.(n.) குடை (பிங்.); umbrella.

[cf. chatra > த. சத்தி.]

சத்தி[5] *šatti,* பெ.(n.) இசைச்செய்யுள் (அக.நி.); a melodious verse.

[Skt. šabda > த. சத்தி.]

சத்திக்காய்ச்சல் *šatti-k-kāyccal,* பெ.(n.) கக்கலோடு கூடிய காய்ச்சல்; fever accompanied by vomiting (சா.அக.).

சத்திக்கூர்மைக்கல் *šatti-k-kūrmaikkal,* பெ. (n.) படிகக்கல்; red crystal or cashmere stone (சா.அக.).

சத்திசெய்-தல் *šatti-šey-,* செ.குன்றாவி.(v.t.) வாயிலெடுக்கை (திவா.); to vomit.

[Skt. chardi> த. சத்தி-.]

சத்திதத்துவம் *šatti-tattuvam,* பெ.(n.) தூமெய்ப்பொருள்களுள் ஒன்றாய்ச் சிவனது வினையாற்றலுக்கு இடமாய்ச் தூமாயை காரியப்படுவதாயுள்ள விருத்தி (சி.போ.பா.2, 2, பக்.139); (Šaivam) stage or region in which action is manifest, presided over by the kiriyA-catti of Šivan, one of five šutta-tattuvam, q.v.

[சத்தி + தத்துவம்.]

[Skt. šakti → த. சக்தி →சத்தி]

சத்திதீட்சை *šatti-tītcai,* பெ. (n.) தீக்கைவகை யுளொன்று (ஞானவதி); a mode of religious initiation.

[Skt. šakti+diikṣa → த. சத்திதீட்சை.]

சத்திநாதம் *šatti-nādam,* பெ. (n.) 1.பொன்னிறம்; golden colour. 2. பொன்னிமிளை; bismuth of a golden colour. 3. ஏமாப்பிரகம் (சங்.அக.); yellow mica.

சத்திநிபாதம் *šatti-nipādam,* பெ.(n.) (பக்குவ முடைய ஆதனிடத்தில் இறைவனின்) திருவருள் பதிகை; (Saiva) settling of the divine grace in the sould when it is ripe. *"ஒழிப்பன் மலஞ்சதுர்த்தா சத்திநிபாதத்தால்" (சி.சி.8, 2).*

[சத்தி + நிபாதம்.]

[Skt. šakti+ni-pāta> த. சத்திநி.]

சத்திநிபாதன் *šatti-nipādan,* பெ.(n.) திருவருள் பதியப்பெற்றவன்; one on whom the divine grace has settled. *"உலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு நிகழ்த்தியது" (சி.சி.8, 15).*

[Skt. sakti+ni-pāta > த. சத்திநிபாதன்.]

சத்திப்பு *šattippu,* பெ.(n.) கக்கல் (M.L.); vomitting.

[Skt. chard> த. சத்திப்பு.]

சத்திபீடம் *satti-pīdam,* பெ.(n.) மலைமகளின் திருவருள் நிறைந்த ஆலயம்; (*šaiva*) shrine where *šivā's šakti* is considered to predominate.

[சத்தி + பீடம்.]

[Skt. šakti→சக்தி →த. சத்தி.]

சத்திபூசை *šatti-pūšai,* பெ.(n.) **சக்திபூசை** பார்க்க; see *šakti-pūšai.*

[சத்தி + பூசை.]

[Skt. šakti → த. சத்தி]

சத்திமத்து *šatti-mattu,* பெ.(n.) நினைமுறை (ஞானவதி); (*šaivam*) a mode of religious initiation. *"சத்தி மத்தாலாத லத்துவா சுத்திபண்ணி" (சி.சி.8, 6).*

[Skt. šakti-mat> த. சத்திமத்து.]

சத்தியக்கடுதாசி *šattiya-k-kaḍutāši,* பெ.(n.) உறுதிமொழி ஆவணம் (J.); affidavit.

[Skt. satya +Port. cardy→ த. சத்தியக் கடுதாசி]

சத்தியங்கேள்-தல் *šattiyaṅ-kēḷ-,* 11 செ. குன்றாவி.(v.t.) உறுதிமொழி வாங்குதல் (வின்.); to put one on oath.

[சத்தியம் + கேள்]

[Skt. satya → த. சத்தியம்.]

கேள்-தல் = தொ.பெ.ஈறு

சத்தியசந்தன் *šattiya-šandan,* பெ.(n.) உண்மை விளம்பி; truthful man.

[Skt. satya-sandha> த. சத்தியசந்தன்.]

சத்தியசந்தை *šattiya-šandai,* பெ.(n.) உண்மை விளம்பி; truthful woman.

[Skt. satya→ த. சத்தியசந்தை]

சத்தியசம்பன்னன் *šattiya-šambaṉṉaṉ,* பெ.(n.) **சத்தியசந்தன்** பார்க்க; see *šattiya-šandaṉ.*

[*Skt.satya+sam-paṇṇa* > *த.சத்தியம் பன்னன்.*]

சத்தியஞ்செய்—தல் *šattiyañ-šey-,* 1. செ. குன்றாவி.(v.t.) உறுதி மொழிதல்; to swear, take oath, as in a court of justice.

[*சத்தியம் + செய்*]

[*Skt. satya → த. சத்தியம்.*]

செய்.தல் = தொ.பெ.ஈறு

சத்தியஞானம் *šattiya-ñāṉam,* பெ.(n.) மெய்யுணர்வு (மணிமே.27, 286, உரை); true, valid knowledge.

[*Skt.satya+Pkt.ñāna→jñāna த.சத்தியஞானம்.*]

சத்தியநாதர் *šattiya-nādar,* பெ.(n.) சித்தருள் ஒருவர் (சது.); name of a great siddha.

[*Skt. satya+nātha → த. சத்தியநாதர்.*]

சத்தியநிருவாணம் *šattiya-niruvāṇam,* பெ.(n.) **சத்தியோநிர்வாணதீட்சை** பார்க்க; see *šattiyō-nirvāṇa-tīṭcai.*

[*Skt. satya+nirvāṇa→ த. சத்தியநிருவாணம்.*]

சத்தியப்பிரமாணம் *šattiya-p-piramāṇam,* பெ.(n.) 1. உண்மை; veracity, truth. 2. உறுதிமொழி; taking oath, swearing, as of witnesses.

[*Skt.satya+pra-māṇa→த.சத்தியப்பிரமாணம்.*]

சத்தியப்பிரமாணிக்கம் *šattiya-p-piramāṇikkam,* பெ. (n.) **சத்தியப்பிரமாணம்** (வின்.); see *šattiya-p-piramāṇam.*

[*Skt. satya+pra-māṇika→ த. சத்தியப்பிரமாணிக்கம்.*]

சத்தியப்பொருள் *šattiya-p-poruḷ,* பெ.(n.) உள்பொருள் (சி.போ.பா.6, பக்.114, சுவாமிநா.); reality.

[*சத்தியம் + பொருள்*]

[*Skt. satya → த. சத்தியம்.*]

சத்தியபாமை *šattiyapāmai,* பெ.(n.) கண்ணன் உகந்த தேவியருளொருத்தி (பாகவத.10, 25, 1); a favourite wife of *kṛṣṇa.*

[*Skt. satya-bhāmā> த. சத்தியபாமை.*]

சத்தியம்[1] *šattiyam,* பெ.(n.) 1. உண்மை (திவா.); truth, veracity, sincerity 2. உறுதிமொழி; oath,swearing.3.துன்பம், துன்பமேற்படுத்துதல், துன்பத்தைத் தாங்குதல், துன்பத்தை நீக்கும் முறை ஆகிய நான்கு வகைப்பட்ட புத்தமத உண்மைகள் தத்துவங்கள் (மணிமே. 20, 5. உரை); the four fold truths, viz., *tukkam, tukkōṟpatti, tukkanivāraṇam, tukka-nivārṇamārkkam.*

[*Skt. satya> த. சத்தியம்.*]

சத்தியம்பண்ணு—தல் *šattiyam-paṇṇu-,* 5 செ.கு.வி.(v.i.) **சத்தியஞ்செய்** பார்க்க; see *šattiyañ-cey-.*

[*சத்தியம் + பண்ணு.*]

[*Skt. satya → த. சத்தியம்.*]

செய்.தல் = தொ.பெ.ஈறு

சத்தியயுகம் *šattiya-yugam,* பெ.(n.) (உண்மையே நிகழ்ந்த) நீண்ட கிருதயுகம்; krtayuga, as the age of truth.

[*Skt. satya+yuga த. சத்தியயுகம்.*]

சத்தியலேக்கியம் *šattiya-lēkkiyam,* பெ.(n.) சிற்றூர்களும் பெரியநாடும் தம்முள் ஒற்றுமை குறித்து எழுதிக் கொள்ளும் ஆவணம் (சுக்கிரநீதி, 94); deed of agreement between villages and province.

[*Skt. satya+lēkhya> த. சத்தியலேக்கியம்.*]

சத்தியலோகம் *šattiya-lōgam,* பெ.(n.) மேலேழுலகத்துள் நான்முகன் வசிப்பதாகக் கருதப்படும் உலகம் (பிங்.); an upper world, abode of *Brahmā,* seventh of *mēl-ēḻ-ulagam,* q.v.

[Skt. satya + lōka→ த. சத்தியலோகம்.]

சத்தியவசனம் *šattiya-vašaṉam,* பெ.(n.) 1. உண்மைமொழி; true statement. 2.உண்மைபேசுகை(குமரே.சத.3); truthfulness.

[Skt.satya+vacana→ த.சத்தியவசனம்.]

சத்தியவந்தன் *šattiyavandāṉ,* பெ.(n.) **சத்தியசந்தன்** பார்க்க; see *sattiyašandaṉ.*

[Skt. satya-vantaḥ> த. சத்தியவந்தன்.]

சத்தியவாசகம் *šattiya-vāšagam,* பெ.(n.) **சத்தியவசனம்** பார்க்க; see *satya-vašaṉam.*

[சத்தியம் + வாசகம்.]

[Skt. satya → த. சத்தியம்.]

வாசி → வாசகம்

சத்தியவாதி *šattiya-vādi,* பெ.(n.) **சத்தியசந்தன்** பார்க்க; see *šattiya-šandaṉ.*

[Skt. satya-vādin> த. சத்தியவாதி.]

சத்தியவான் *šattiyavāṉ,* பெ. (n.) 1. **சத்தியவந்தன்** பார்க்க; see *satiyavandaṉ.* 2. சாவித்திரியின் கணவன் (நல்.பாரத. சாவித்திரி.14); the husband of *Šāvitri.*

[Skt. satyavāṉ> த. சத்தியவான்.]

சத்தியவிரதன் *šattiyaviradaṉ,* பெ.(n.) உண்மைபேசுதலையே நோன்பாக உடையவன்; one who scrupulously adheres to truth, as under a vow. 2. தருமன்; Dharmaputra, the eldest of the five *Pāṇḍavas.* *"சத்திய விரதன்றம்பி"(பாரத. அருச்சுனன்றவ.31).*

[Skt. satya+vrata> த. சத்தியவிரதன்.]

சத்தியானிருதம் *sattiyāṉirudam,* பெ.(n.) (மெய்யும் பொய்யும் கலந்த) வாணிகத் தொழில்; commerce, trade, as mixed with truth and falsehood. *"சத்தியானிருதம் வாணிக விருத்தி" (காஞ்சிப்பு. ஒழுக்.37).*

[Skt. satya+anṛta> த. சத்தியானிருதம்.]

சத்தியோசாதம் *šattiyōšādam,* பெ.(n.) 1. சிவன் ஐம்முகங்களுள் மேற்கு நோக்கியது; a face of Šivaṉ which looks westward, one of *Šivaṉ-ai-m-mugam,* q.v. *"சத்தியோசாதத்திற் காமிக மாதியைந்தும்" (சைவச. பொது.331).* 2. ஒரு சிவனியமந்திரம்; a *Šaiva* mantra. *"சத்தியோசாதத் தபிடேகஞ் சாதிக்க" (சைவச.பொது.136).*

[Skt. sad-yō-jāta> த. சத்தியோசாதம்.]

சத்தியோசாரவிரணம் *šattiyōšāraviraṇam,* பெ.(n.) பக்குடன் கூடியிருக்கும் புண்; a scab wound (சா.அக.).

சத்தியோநிர்வாணதீட்சை *šattiyōnirvāṇa-tīṭcai,* பெ.(n.) மாணாக்கனை உடனே வீடுபேறு எய்துவிக்கும் அவிப்பு தீக்கை (நிர்வாண தீட்சை) வகை (சி.சி.8, 4, சிவஞா.); (*šaivam.*) a kind of *nirvāṇa-tīṭcai* which enables the disciple to attain salvation instantaneously.

[Skt.sadyaḥ+nirvāṇa+dīkṣā→ த. சத்தியோநிர்வாணதீட்சை.]

சத்தியோநிர்வாணம் *šattiyō-nirvāṇam,* பெ.(n.) **சத்தியோநிர்வாணதீட்சை** பார்க்க; see *šattiyōnirvāṇa-tīṭcai.*

[Skt. šadyaḥ+nirvāṇa→ த. சத்தியோநிர்வாணம்.]

சத்தியோவிரணம் *šattiyō-viraṇam,* பெ.(n.) நேரக்கூடாததால் அல்லது காயங்களினால் உண்டாகும் ஒரு புண்; an extended or elongated would or sore which is traumatic or accidental in its character (சா.அக.).

[Skt. sadyaḥ+vraṇa→ த. சத்தியோவிரணம்.]

சத்திரக்கத்தி *šattira-k-katti,* பெ.(n.) **சத்திரம்** பார்க்க; see *šattiram.*

[சத்திரம் + கத்தி.]

[Skt. šastra> சத்திரம்]

சத்திரக்கருவி *šattira-k-karuvi,* பெ.(n.) தமிழ் மருத்துவத்தின் படி உடம்பின் பாகத்தை அறுத்துப் பண்டுவம் (சிகிச்சை) செய்வதற்கான 26 கருவிகள்; (In the siddha system of medicine) the twenty six instruments used in surgery according to Tamil system of medicine (சா.அக.).

[சத்திரம் + கருவி.]

[Skt. šaștra > சத்திரம்]

சத்திரக்குறடு *sattirakkuradu,* பெ.(n.) அறுவை மருத்துவத்தில் பயன்படுத்தும் குறடு; surgical pincers (சா.அக.).

[சத்திரம் + குறடு.]

[Skt. šastra > சத்திரம்]



சத்திரக்கத்திரி *sattira-k-kattiri,* பெ.(n.) அறுவை மருத்துவத்தில் பயன்கொள்ளும் கத்திரி; scissors used in operation (சா.அக.).

[சத்திரம் + கத்திரி.]

[Skt. šastra > சத்திரம்]

சத்திரக்கருமம் *šattira-k-karumam,* வி.(v.) கத்தி கொண்டறுக்கும் பண்டுவம்; surgical operation (சா.அக.).

த.வ. அறுவைப் பண்டுவம்

[சத்திரம் + கருமம்.]

[Skt. šastra> சத்திரம்]

சத்திரகன்மம் *šattira-kanmam,* பெ.(n.) ஆயுதத்தாலறுத்துச் செய்யும் பண்டுவம்; surgical operation. *"வைத்திய சத்திர கன்மத்தால்" (சிவசம.68).*

[Skt. šastra > சத்திரம் + த. கருமம் → கன்மம் → சத்திரகன்மம்.]

சத்திரகோசம் *šattira-kōšam,* பெ.(n.) கத்தி கொண்டறுக்கும் நோய்; instrument case, surgical case, a disease requiring operation (சா.அக.).

[Skt. šastra + த. கோசம் → சத்திரகோசம்.]

சத்திரசலாகை *šattirašalāgai,* பெ.(n.) புண்களைத் தூய்மை செய்யும் இரும்புச் சலாகை; an iron or steel probe used for exploring wounds (சா.அக.).

த.வ. அறுவைச்சலாகை

[Skt. šastra > சத்திரம் + த. சலாகை → சத்திரசலாகை.]

சத்திரசாலை *šattira-šālai,* பெ.(n.) **சத்திரம்**[1] பார்க்க (யாழ்.அக.); see *šattiram.*

சத்திரசிட்கா *šattira-šiţkā,* பெ.(n.) அறுவை மருத்துவத்தில் எளிதான பண்டுவமான கட்டு கட்டல், பத்தை கட்டல், தூய்மை செய்தல் முதலியவற்றைக் கூறும் நூல்; that branch of surgery which is connected with less operations such as bandagings, application and dressings - Minor surgery (சா.அக.).

த.வ. அறுவைமருத்துவ நூல்

சத்திரசேதனம் *šattira-šēdanam,* பெ.(n.) 1. கத்தியாலறுக்கை; operation with knife. 2. கத்தியால் துண்டித்தல்; amputation with knife or saw (சா.அக.).

த.வ. அறுவை

சத்திரசோபுட்பம் *šattirašōpuţpam,* பெ.(n.) குழலாதொண்டை; caper shurb-*Caparis aphylla* (சா.அக.).

சத்திரட்சதை *šattiraț-šadai,* பெ.(n.) கத்தி கொண்டறுக்கை; operating with a knife (சா.அக.).

சத்திரண்டம் *šattirandam,* பெ.(n.) அரக்கு; lac; shellac (சா.அக.).

சத்திரப்படை *šattira-p-padai,* பெ.(n.) அறுவை மருத்துவக் கருவிகள்; surgical instruments in general (சா.அக.).

[Skt. šastra > த. சத்திரம்]

படை → சத்திரப்படை.

சத்திரப்பிரதிட்டை *šattira-p-piradittai,* பெ. (n.) நற்செயல் ஏழுள் (சப்தசந்தானத்தில்) ஒன்றாகிய உண்டிச்சாலை கட்டிவைக்குந் தருமம்; building a choultry for public use, one of *šapta-šandānam.*

[Skt. šastra + prati-ṣṭhā → த. சத்திரப் பிரதிஷ்டை → சத்திரப்பிரதிட்டை.]

சத்திரப்பிரயோகம் *šattira-p-pirayōgam,* பெ.(n.) 1. கத்தியை உடம்பிற் செலுத்துதல்; inserting knife into the body. 2. அறுவை மருத்துவம்; operative surgery (சா.அக.).

[Skt. šastra + pra-yōgā → த. சத்திரப் பிரயோகம்.]

சத்திரபதி *šattira-padi,* பெ.(n.) (குடையை யுடைய தலைவன்) அரசன்; king, emperor, as the lord having an umbrella. *"சத்திரபதி கனகனெற்றி நேராகவர" (இராமநா. பாலகா.17).*

[Skt. šastra + pati → சத்திரபதி.]

சத்திரம்[1] *šattiram,* பெ.(n.) பல நாட்கள் செய்யும் வேள்வி (யாக) வகை; a sacrifice lasting many days. *"திருந்திய சத்திரயாகம்" (மச்சபு. நைமிசா.33).*

[Skt. sattra > த. சத்திரம்.]

சத்திரம்[2] *šattiram,* பெ.(n.) 1. கைவிடாப்படை (பிங்.); weapon used in close combat; hand-weapon, as sword, lance. 2. வேல் (பிங்.); spear, javelin. 3. இரும்பு (பிங்.); iron. 4. அறுவைமருத்துவத்திற்குரிய கத்தி; surgeon's knife, lancet. 5. எசுர் வேதத்தின் ஓர் உட்பிரிவு (சிலப்.13, 141, உரை); a sub-division of the *yajur-vēda.*

[Skt. šastra > த. சத்திரம்.]

சத்திரம்[3] *šattiram,* பெ.(n.) குடை; umbrella. *"சத்திர மேந்தித் தனியொரு மாணியாய்" (திவ்.பெரியாழ்.1, 9, 6).*

[Skt. chatra > த. சத்திரம்.]

சத்திரம்[4] *šattiram,* பெ.(n.) இறும்பூது (பிங்.); wonder.

[Skt. citra > த. சத்திரம்.]

சத்திரம்வை-த்தல் *šattiram-vai-,* செ.கு.வி. (v.t.) ஆயுதத்தாற் புண்ணையறுத்தல் (இ.வ.); to perform a surgical operation.

[Skt. šastra > த. சத்திரம் + வை-.]

சத்திரமேயோதி *šattiramēyōdi,* பெ.(n.) புண் ஆற்றுமருந்து; any drug or composition useful in the cure of wounds, medicines used for healing operated wounds and sores-vulnerary (சா.அக.).

சத்திரயாகம் *šattira-yāgam,* பெ.(n.) **சத்திரம்** பார்க்க; see *šattiram.*

[Skt. šattra + yāga > சத்திரயாகம்]

சத்திரவாள் *šattiravāl,* பெ.(n.) அறுக்கும் கை வாள்; a small hand - saw used in surgery (சா.அக.).

[சத்திரம் + வாள்]

[Skt. šastra > சத்திரம்]

சத்திரவித்தை *šattira-vittai,* பெ.(n.) 1. ஆயுதம் பயிலுங் கல்வி; art of using weapons. 2. அறுவை மருத்துவம்; (J) surgery.

[Skt. šastra + த. வித்தை.]

சத்திரவிதி *šattira-vidi,* பெ.(n.) 1. சித்த நூற்படி அறுவை செய்வதற்காக வேண்டிய 26 ஆயுத விளத்தங்களையும், அவைகளின் இலக்கணங்களையும் கூறும் நூல்; (In siddha medicine), that branch of science which

treats about the description, uses, etc. of the 26 instruments and their employment in operation-surgery. 2. புண், கட்டி இவைகளை அறுப்பதில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளைப் பற்றிய விதி; rules of surgery regarding the mode of operating wounds, abscess etc., and the principles involved in each case (சா.அக.).

த.வ. அறுவைநெறிநூல்

[Skt. šastra + vidhi→ த. சத்திரவிதி.]

சத்திரவைத்தியம் *šattira-vaittiyam,* பெ.(n.) அறுவை மருத்துவம் (இக்.வ.); surgery.

[Skt. šastra +vaidya> த. சத்திர வைத்தியம்.]

சத்திராப்பை *šattirāppai,* பெ.(n.) 1. இரும்புச் சட்டி; iron vessel or kettle. 2. அறுவை மருத்துவத்தில் பயன்படும் சிறு கரண்டி; a spoon used in surgery (சா.அக.).

சத்திரி[1] *šattiri,* பெ.(n.) **சத்திரியன்** பார்க்க (இ.வ.); see *šattiriyaṉ.*

சத்திரி[2]–த்தல் *šattiri-,* 4 செ.குன்றாவி.(v.t.) கருவியால் அறுத்து மருத்துவஞ் செய்தல்; to open, as a tumour.

[Skt. šastra> த. சத்திரி–த்தல்.]

சத்திரித்தல் *šattirittal,* பெ.(n.) 1. பொதுவாகக் கத்தியாற் கீறுதல்; simple opening as abscess or tumour with knife. 2. கருவியால் அறுத்துப் பண்டுவம் செய்து மருந்திடல்; treating by operation and administering medicine (சா.அக.).

[Skt. šastri → த. சத்திரித்தல்.]

சத்திரிய குலக்கரு *šattiriyakula-k-karu,* பெ.(n.) அரச குலத்தில் உதித்த பெண்ணின் கருப்பிண்டம்; the fetus of the woman of a royal family (சா.அக.).

த.வ. அரசக்கரு

[சத்திரிய(ன்) + குலம் + கரு.]

[Skt. kṣatiriya>சத்திரிய]

சத்திரியநாபி *šattiriya-nābi,* பெ.(n.) 1. நாபி வகை (மூ.அ.); red variety of aconite. 2. வச்ச நாபிக்கு ஒரு மாற்று மருந்து (வின்.); an antidote to *vaccanābi.*

[Skt. kṣatriya+nābhi> த. சத்திரியநாபி.]

சத்திரியன் *sattiriyaṉ,* பெ.(n.) அரசகுலத்தான் (வின்.); a person of the *kṣatriyan* caste.

[Skt. kṣatriya> த. சத்திரியன்.]

சத்திரிகம் *šattirigam,* பெ.(n.) கத்தியால் அறுத்துச் செய்யும் மருத்துவம்; operation done by the use of knife, surgery, (சா.அக.).

சத்திவங்கம் *šatti-vaṅgam,* பெ.(n.) காரீயம்; black lead (சா.அக.).

சத்திவிப்புருதி *šattivippuruti,* பெ.(n.) ஐந்து வகைப் புண்களுள் ஒன்று; one of the five kinds of cancer (சா.அக.).

சத்திவினாசினி *šattiviṉāšiṉi,* பெ.(n.) அதிவிடயம்; Indian atees-*Aconitum heterophyllum* (சா.அக.).

சத்தினாதம் *šattiṉātam,* பெ. (n.)1. பொன்னிமிளை;gold-pyrites. 2. பெண்ணின் நாதம்; semen-like fluid in a female (சா.அக.).

சத்துடியாவம் *šattuḍi-yāvam,* பெ.(n.) விருத்தி அல்லது மருது; winged myrobalan-*Terminalia alata* (சா.அக.).

சத்துமன் *šattumaṉ,* பெ.(n.) நன்கு பயிற்சி பெற்ற மருத்துவன் (அனுபோக வைத்தியன்); a quack or vitapathic practitioner-vitapath (சா.அக.).

சத்துராதி *šatturādi,* பெ.(n.) **சத்துருவாதி** பார்க்க (இ.வ.); see *šatturuvāti.*

[Skt. šatru+arāti> த. சத்துராதி.]

சத்துருக்கன்[1] *šatturukkaṉ,* பெ.(n.) மார்பில் நான்கு சுழிகளுள்ள குதிரை (அசுவசா.19); a

horse which has four curl marks on its breast.

[Skt. catur> த. சத்துருக்கன்.]

சத்துருக்கன்² *šatturukkaṉ,* பெ.(n.) **சத்துருக்கனன்** பார்க்க; see *satturukkaṉaṉ.* *"சத்துருக்கன்னெனச் சாற்றினன் நாமம்" (கம்பரா.திருவவ.123).*

சத்துருக்கனன் *šatturukkaṉāṉ,* பெ.(n.) இராமனுடைய கடைசித் தம்பி; youngest brother of Rama.

சத்துருசங்காரம் *šatturu-caṅgāram,* பெ.(n.) பகைவரை அழிக்கை; destruction of foes. *"சத்துருசங்கார வேலா".*

[Skt. šatru+sam-hāra>த. சத்துருசங்காரம்.]

சத்துருத்தானம் *šatturu-t-tāṉam,* பெ.(n.) (பிறப்பிய (சாதக)னுக்கு பகையிடம்) இலக்கினத்துக்கு ஆறாம்வீடு (விமே.உள்.236, உரை); (Astrol.) the sixth house from the ascendant, as being inimical to *šādagaṉ.*

[Skt. šatru+sthāna> த. சத்துருத்தானம்.]

சத்துருதுரந்தரன் *šatturu-turandaraṉ,* பெ.(n.) பகைவென்று முடிப்போன்; one who subdues his foes. *"வென்றிதானனடையான் றென்னன் சத்துருதுரந்தரன்" (இறை, 18, 149, உதா.).*

[Skt. šatru+dhurandhara→த.சத்துருதுரந்தரன்.]

சத்துருநாமத்தீ *šatturu-nāma-t-tī,* பெ.(n.) நஞ்சு வகை; a mineral poison.

சத்துருபட்சத்தார் *šatturu-paṭcattār,* பெ.(n.) பகையினத்தவர்; hostile side or party. *"வீமன்... சத்துருபட்சத்தாரை விநாசஞ் செய்து" (பாரதவெண்.782, உரைநடை).*

[Skt. šatru+paksa→த.சத்துருபட்சத்தார்.]

சத்துருபாடாணம் *šatturu-pāḍāṇam,* பெ.(n.) நச்சுத்தன்மையற்ற கத்தூரி மஞ்சள் (வின்.); yellow zedoary.

சத்துருவுப்பு *satturu-v-uppu,* பெ.(n.) வெடியுப்பு; nitre-potassium nitrate, salt petre (சா.அக.).

சத்துருவாதி *šatturu-vādi,* பெ.(n.) பகைவன் (இ.வ.); foe, enemy.

சத்துரோதம் *šattu-rōdam,* பெ.(n.) கெம்பு; ruby (சா.அக.).

சத்துவக்கேடு *šattuva-k-kēḍu,* பெ.(n.) 1. வலுவின்மை; weakness. 2. நரம்புத் தளர்ச்சி; nervous debility (சா.அக.).

சத்துவசக்தி *šattuva-šakti,* பெ.(n.) இயல்பாயுளதாம் ஆற்றல்; potential energy (சா.அக.).

[Skt. sat-tva+sakti > த. சத்துவசக்தி]

[த. சத்தி >Skt. sakti]

சத்துவரம்¹ *šattu-varam,* பெ.(n.) விரைவு; haste, hurry.

[Skt. sa-tvaram> த. சத்துவரம்.]

சத்துவரம்² *šattuvaram,* பெ.(n.) வேதிகை (யாழ்.அக.); dais, pial.

[Skt. catvara> த. சத்துவரம்².]

சத்துவாரி *šattuvāri,* பெ.(n.) (பெரும்பாலும் ஒருவனுடைய) நாற்பது வயதில் வரும் வெள்ளெழுத்து (இ.வ.); longsight, as usually occuring in the fortieth year of a person.

[Skt. catvārimšat> த. சத்துவாரி.]

சத்துவாலம்¹ *šattuvālam,* பெ.(n.) 1. வேள்விக்குழி (ஓம குண்டம்); the sacrificial pit. 2. கருப்பம்; pregnancy.

[Skt. sadvāra > த. சத்துவாலம்.]

சத்துவாலம்² *šattuvālam,* பெ.(n.) தருப்பைப்புல் (சங்.அக.); darbha grass.

[Skt. šād-vala> த. சத்துவாலம்².]

சத்துவேது *šattu-vēdu,* பெ.(n.) நேர்மையான காரணம் (சங்.அக.); (log.) true cause.

[Skt. sat+hētu> த. சத்துவேது.]

சத்துளமிருகக்கொம்பு *šattuḷa-miruga-k-kombu,* பெ. (n.) கல்யாண(காண்டாவிலங்கு)க் கொம்பு; horn of rhinoceros (சா.அக.).

சத்தெடுக்காச்செம்பு *šatteḍukkāccembu,* பெ.(n.) களிம்புள்ள செம்பு; ordinary copper with verdigris, copper green (சா.அக.).

சத்தை *šattai,* பெ.(n.) 1. உளதாந்தன்மை; being, existence. 2. பலன் (கொ.வ.); effect, use. 3. **சத்து, 1, 4, 5** பார்க்க; see *sattu.*

[Skt. sat-tā> த. சத்தை.]

சத்ரேசன் *šatrēšaṉ,* பெ.(n.) சத்துருத் தானாதிபதி (சாதகசிந்.1098); (Astrol.) lord of the sixth house from the ascendent.

[Skt. šatru+īša> த. சத்ரேசன்.]

சதக்கிரதம் *šadakkiradam,* பெ.(n.) மின்னல் (யாழ்.அக.); lightning.

[Skt. šatahradā> த. சதக்கிரதம்.]

சதக்கிரது *šada-k-kiradu,* பெ.(n.) (வேள்வி நூறு செய்தவன்) இந்திரன் (இரகு. யாகப்.58); Indra, as one who performed hundred sacrifices.

த.வ. நூறுவேள்வியன்

[Skt. šata-kratu> த. சதக்கிரது.]

சதக்கிராணி *šadakkirāṇi,* பெ.(n.) ஒரு வகைக் கழிச்சல் நோய்; a kind of diarrhoea (சா.அக.).

சதக்கிருதன் *šata-k-kirudaṉ.* பெ.(n.) **சதக்கிரது** பார்க்க (வின்.); see *sada-k-kiradu.*

சதக்கினா *sadakkiṉā,* பெ.(n.) அரக்கு; sealing wax, shellac (சா.அக.).

சதக்கினி *šadakkiṉi,* பெ.(n.) நூற்றுவரைக் கொல்லி என்னும் மதிற்பொறி (சிலப்.15, 216, உரை); a deadly machine mounted on forts, as killing hundred persons at a time.

த.வ. நூற்றுவர்க்கொல்லி

[Skt. šata-ghnī> த. சதக்கினி.]

சதக்கேசம் *šadakkēšam,* பெ.(n.) நீரடி முத்து; hydrogogue nut - *Hydnocarpus inebrians* (சா.அக.).

சதகண்டம் *šada-kaṇḍam,* பெ.(n.) பொன்; gold (சா.அக.).

சதகம் *šadagam,* பெ.(n.) 1. நூறு பாடல் களுள்ள சிற்றிலக்கிய வகை (இலக்.வி.847); a poem of 100 stanzas. 2. நூற்றாண்டு (நாஞ்.); century.

[Skt. šataka> த. சதகம்'.]

சதகாசம் *šadakāšam,* பெ.(n.) 1. நுரையீரல் கோளாறடைந்து இருமும்போது அரத்தம் வெளிவருவதுடன் நெஞ்சுவலி, நொதிக்கும் வலி முதலிய குணங்களைக் காட்டும் ஒரு வகை ஈளைநோய்; a kind of asthma affecting the lungs. Its is marked by bloody discharge followed by soring pain in the chest. 2. அரத்தம் கக்கும் இருமல்; cough attended with vomitting of blood- *Hemoptysis* (சா.அக.).

சதகும்பம் *šadakumbam,* பெ.(n.) பொன்மலை; mountain from which gold is dug out (சா.அக.).

சதகோடி *šada-kōḍi,* பெ.(n.) 1. நூறுகோடி; hundred crores. *"சதகோடி மின்சேவிக்க" (கம்பரா.மிதிலை.31).* 2. மழுவாய்தம் (வச்சி ராயுதம்) (பிங்.); thunderbolt of Indra, as having 100 edges.

[சத(ம்) + கோடி.]

[Skt. šata + த. சத(ம்).]

சதகோடிசங்கம் *šada-kōḍi-saṅgam,* பெ.(n.) பெருங்கூட்டம் (வின்.); very large assembly.

[Skt. šata > சதம்+த. கோடி+ த. சங்கம் > த. சதகோடிசங்கம்.]

சதங்கம் *šadaṅgam,* பெ.(n.) குளிர்ச்சி தரும் அறுவகைச் சரக்குகள்; the six cooling drugs (சா.அக.).

சதச்சதம் *šada-c-cadam,* பெ.(n.) சதபத்திரம் பார்க்க (யாழ். அக.); see šada-pattiram

சதசஞ்சீவி *šada-šañjīvi,* பெ. (n.) நீண்ட ஆயுளையுடையோன் (பாண்டி.); long lived person.

[Skt. šata+sañ-jīvi> த. சதசஞ்சீவி.]

சதசத்து *šada-cattu,* பெ.(n.) 1. உளதும் இலதும்; reality and illusion, entity and non-entity. *"ஆன்மா... நித்தனாய்ச் சதசத்தாகி" (சி.சி.7, 2).* 2. ஆதன்; (*šaiva*) soul. *"தத்துவம்... சதசத்துமன்று" (சி.சி.6, 5).*

[Skt. sat+a-sat> த. சதசத்து.]

சதசபகந்திரம் *šadašapagandiram,* பெ.(n.) மலவாயிற் (ஆசனவாய்) காணும் குறிக்கட்டி (பவுத்திரம்)யை சரிவரப் பண்டுவம் செய்யாததினால், மறுபடியும் கிளைத்துக் குதறி, புழுக்களுண்டாகி எருவாயைச் சுற்றிலும் அரித்திடும் நோய் வகை; a kind of fistula in ano which, if not properly treated or neglected, will develope ulcers and the worms which are bred, burrow anal orifice (சா.அக.).

த.வ. குதக்குரு

சதசல்லியம் *šada-šlliyam,* பெ.(n.) பெருந்தொந்தரவு; great nuisance; worry from various causes.

[Skt. sata+šalya> த. சதசல்லியம்.]

சதசிருங்கம் *šadaširuṅgam,* பெ.(n.) நூற்றுக் கணக்கான அடையாளங்கள்; hundreds of innumerable symptoms (சா.அக.).

[Skt. sata+srnga→ த. சதசிருங்கம்.]

சதசு *šadašu,* பெ.(n.) கல்வியாளர் கூடும் அவை; assembly, especially of learned men.

த.வ. அறிஞர் அவை, கல்விக்களம்

சதசுக்கிலம் *šada-šukkilam,* பெ.(n.) கருவிழியிலாவது பார்வையிலாவது காயம் படுவதாலேற்படும் கண்ணோய்; a disease of the eyes due to an injury to the iris or to the lens (சா.அக.).

சதசுலோகம் *šada-šulōgam,* பெ.(n.) சொற்பொருள் (பதார்த்த) குணங்களைப் பற்றிய நூறு பாடல்களடங்கிய ஓர் ஆயுள் வேத நூல்; an Ayurvedic materia medica written in 100 stanzas, treating of plants and drugs (சா.அக.).

சதஞ்சீவி *sadañjīvi,* பெ.(n.) (நூறாண்டு வாழ்பவன்) நீள் ஆயுளுடையோன்; long lived person, as living hundred years. *"சதஞ்சீவியாயிரு" (வின்.).*

த.வ. நீடுவாழி

[Skt. šata+jīvi> த. சதஞ்சீவி.]

சதத்துவம் *šadattuvam,* பெ.(n.) இயல்பு (சுபாவம்); nature. 2. இயற்குணம் (சுபாவப் பழக்கம்); second nature (சா.அக.)

சததசுரம் *šadada-šuram,* பெ.(n.) 1. பகலில் ஒரு முறையும், இரவில் ஒரு முறையும் வரும் முறைக் காய்ச்சல். இதனால் அதிக உணவு கொள்ளும்; fever occurring once in the day and once in the night, and in such cases, one is inclined to take more food. 2. எப்பொழுதும் காய்ச்சல் இருத்தல்; kala-azar or tuberculosis in which there is always a rise of temperature (சா.அக.).

[சதத(ம்) + சுரம்.]

[Skt. šatata→ சதத(ம்).]

சததம் *šadadam,* வி.எ.(adv.) எப்பொழுதும்; constantly, always, ever.

[Skt. satatam> த. சததம்.]

சததளம் *sada-daḷam,* பெ.(n.) (நூறு இதழ்களை யுடையது) தாமரை; lotus, as having hundred petals. *"சததளமின் வழிபடு தையலை" (மீனாட்.பிள்ளைத்.2).*

[சத(ம்) + தளம்.]

[Skt. šata > சதம்.]

சததாரை[1] *šada-dārai,* பெ.(n.) **சதகோடி,** 2 பார்க்க (யாழ்.அக.); see *šada-kōḍi.*

[சத(ம்) + தாரை.]

[Skt. šata > சதம்.]

சததாரை[2] *šadadārai,* பெ.(n.) இடி; thunder.

சதநியுதம் *šada-niyudam,* பெ.(n.) கோடி; one hundred lakhs, crore. *"நிரந்தகற்ப சதநியுத நிகழ" (சிவதரு.ஐவகை.10).*

[Skt. šata+ni-yuta → த. சதநியுதம்.]

சதபத்திரம் *šada-pattiram,* பெ.(n.) 1. **சததளம்** பார்க்க; see *šadatalam. "விழைவுபடப் பொதிவிரிசத பத்திரவீ" (இரகு.நகர.16).* 2. கிளி (யாழ்.அக.); parrot. 3. மயில்; peacock. 4. வெண்ணாரை; white crane. 5. தச்சன் கருவி; carpenter's implement, woodpecker.

[Skt. šata-patra > த. சதபத்திரம்.]

சதபத்திரி *šada-pattiri,* பெ.(n.) 1. **சததளம்** பார்க்க (திவா.); see *šadatalam.* 2. ஆடு தின்னாப் பாளை (மலை.); worm-killer.

[Skt. šata-patra > த. சதபத்திரி]

சதபதம் *šadapadam,* பெ.(n.) 1. நூறு கால்களையுடைய ஓர் உயிரினம்; any creature or insect with 100 legs. 2. பூரான்; centepede (சா.அக.).

த.வ. ஆயிரக்காலி

[சத(ம்) + பதம்.]

[Skt. šata → த. சதம்]

சதபதுமம் *šada-padumam,* பெ.(n.) **சததளம்** பார்க்க (மலை.); see *sada-talam.*

[Skt. šata+padma> சதபதுமம்]

சதம்[1] *šadam,* பெ.(n.) 1. நூறு (பிங்.); a hundred. 2. ஒரு ரூபாயில் நூற்றிலொரு பங்கு மதிப்புள்ளதாய் இலங்கையில் வழங்கும் செப்பு நாணயம்; cent, a ceylon coin = 1/100 rupee.

[Skt. šata> த. சதம்[1].]

சதம்[2] *šadam,* பெ.(n.) 1. இலை; leaf. 2. இறகு; feather.

[Skt. chada> த. சதம்[2].]

சதம்[3] *šadam,* பெ.(n.) அறுபட்ட பயிர் (வின்.); vegetable plant pruned to prevent over growth; cropped grain.

[Skt. šada> த. சதம்[3].]

சதம்[4] *šadam,* பெ.(n.) அழிவற்றது; that which is perpetual, eternal. *"ஊருஞ்சதமல்ல வுற்றார்சதமல்ல" (பட்டினத்.திருவேகம்பமா.13).*

[Skt. šāšvata> த. சதம்[4].]

சதம்[5] *šadam,* பெ.(n.) இறுதி (அக.நி.); end, termination.

[Skt. kṣata> த. சதம்[5].]

சதம்பவாசி *šadambavāši,* பெ.(n.) கற்பரி நஞ்சு (பாடாணம்); a kind of native arsenic; a mineral poison (சா.அக.).

சதமகன் *šada-magan,* பெ.(n.) **சதக்கிரது** பார்க்க; see *šadakkiradu. "சதமகனுடல மெல்லாங் காதுளானல்லே னென்றான்" (திருவிளை.விறகு.39).*

[Skt. šata-makha> த. சதமகன்.]

சதமன்யு *šada-manyu,* பெ.(n.) **சதக்கிரது** பார்க்க; see *šada-k-kiradu.*

[Skt. sata-manyu> த. சதமன்யு.]

சதமானம் *šata-mānam,* பெ.(n.) நூற்றுக்குரிய விழுக்காடு (வீதம்) (இ.வ.); percentage.

த.வ. விழுக்காடு

[சத + மானம்]

[Skt. šata → த. சதம்]

சதமுகக்குருவி *šatamuga-k-kuruvi,* பெ.(n.) ஒரு வகைக் குருவி; a mystic sparrow (சா.அக.).

சதமுனை *šada-munai*, பெ.(n.) **சதகோடி,** 2 பார்க்க (வின்.); see *šadakōdi.*

[சத + முனை]

[Skt. šata → த. சதம்]

சதயம் *šadayam*, பெ.(n.) கும்பவோரை (ராசி)ஓரையின் கூறான இருபத்து நான்காம் நாண்மீன் (நட்சத்திரம்) (பிங்.); the 24th nakṣatra, part of Aquarius.

[Skt. šatabhiṣaj> த. சதயம்.]

சதர்கர்ச்சு *šadar-karccu*, பெ.(n.) ஊர் வருமானத்திலிருந்து ஏரிச் சீரமைப்பு (மராமத்து) முதலியவற்றின் பொருட்டு அரசாள்வோர் விட்டுக் கொடுக்கும் தொகை (R.T.); remission or allowance made by the Government, of a certain percentage of the revenue raised from a village, for repairing tanks, giving alms to mendicants, and other incidental expenses.

[U. sādir+kirc> த. சதர்கர்ச்சு.]

சதர்வாரித்து *šadar-vārittu*, பெ.(n.) 1. **சாதல்வார்** பார்க்க; see *sādalvār.* 2. பொதுத்துறை அலுவலகத்திற்குத் தேவையான மை, எண்ணெய், தாள் (காகிதம்) இவற்றின் பொருட்டுக் குடிகளிடம் தண்டல் (வசூல்) செய்து வந்த தொகை; charge formerly livied on ryots for supplying the public office with ink, paper, oil and the like.

[U.sādir+wārid > த.சதர்வாரித்து.]

சதரதாலத்து *šadar-adālattu*, பெ.(n.) தலைமை முறைமன்றம் (C.G.); chief court of justice.

[U.sadr+adālat> த.சதரதாலத்து.]

சதரமீன் *šadar-amīn*, பெ.(n.) முறைமன்ற நடுவருக்கு மகமதியராட்சியில் வழங்கிய பெயர்; the name given to the subordinate judge during Muhammadan rule.

[U. sadr+amīn> த. சதரமீன்.]

சதருத்திரீயம் *šada-ruttiriyam*, பெ.(n.) உருத்திரர்க்குரிய மறை (வேத) மந்திரம்; a *vēdic* hymn addressed to Rudran or *Šivan* in his hundred aspects.

[Skt. šata-rudrīya> த. சதருத்திரீயம்.]

சதவிகிதம்/சதவீதம் *šadavigidam/šada-vīdam*, பெ.(n.) (ஒரு குறிப்பிட்ட) மொத்தத்தை நூறாக மாற்றும்போது மொத்தத்துக்கு இவ்வளவு என்று அடையும் மதிப்பு; விழுக்காடு; percentage. *"இருபதுக்குப் பத்து மதிப்பெண் வாங்கினால், பெற்ற மதிப்பெண்ணின் சதவீதம் ஐம்பது / சில பொருள்களின் விலை நூற்றுப்பத்து சதவீதம் உயர்ந்துள்ளது" (கிரியா.).*

த.வ. விழுக்காடு

[Skt. šata+vi-hita →த. சதவிகிதம்]

சதவிசர்ப்பி *šada-višarppi*, பெ.(n.) கருவி (ஆயுதம்) முதலியவற்றால் அடிபட்டுப் புண்ணேற்பட்டவர்களுக்கு, அரத்தம் கெட்டுத் தடிக்கும்போது, எண்ணிறந்த கருநிறச் செந்நிற கொப்புளங்களை யுண்டாக்கும் நோய்; innumeral red and blue septic vesicles on the skin due to the contamination of blood with putrefied matter, arising from wounds caused by weapons (சா.அக.).

[Skt. šata+visarpi →த. சதவிசர்ப்பி.]

சதவுருத்திரம் *šada-v-uruttiram*, பெ.(n.) **சதருத்திரியம்** பார்க்க; see *šada-ruttiriyam.* *"சதவுருத்திரத்தினாலே முக்கணா ரமுதையாட்டி" (குற்ற.தல.திருமால்.149).*

[Skt. šata-rudra> த. சதவுருத்திரம்.]

சதவூசிக்காந்தம் *šada-v-ūsıkkāndam*, பெ.(n.) பத்து அல்லது அதற்கு மேற்பட்ட ஊசிகளைப் பிடிக்கும் காந்தம்; a magnet having the power of attracting ten or several needles (சா.அக.).

[சதம் + ஊசிக்காந்தம்.]

*[**Skt.** šata > த. சதம்.]*

சதனம்¹ *šadanam,* பெ.(n.) **சதம்²** பார்க்க (பிங்.); see *šadam.*

*[**Skt.** chadana > த. சதனம்.]*

சதனம்² *šadanam,* பெ.(n.) 1. இலை; leaf. 2. இறகு; feather. 3. நீர்; water (சா.அக.).

சதனம்³ *šadanam,* பெ.(n.) வீடு; house. *"அச்சதன மேவருந் தபோதனன்" (பாரத. அருச்சுனன்றீர்.61).*

*[**Skt.** sadana > த. சதனம்.]*

சதா¹ *šadā,* பெ.(n.) 1. மரக்கலம் (திவா.); canoe, boat. 2. பழுது (J.); defect in timber; decay in fruit; rottenness. 3. காலத்தாழ்வு, தாமதம்; delay, procrastination, as of a business. *"அதைச் சதாவிலே விடாதே" (இ.வ.).*

*[**Pkt.** jahājā > த. சதா.]*

சதா² *šadā,* கு.வி.எ.(adv.) எப்பொழுதும்; always, continually, perpetually. *"சதாவின் மொழியால்" (திருப்பு.186).*

*[**Skt.** sadā > த. சதா.]*

சதாக்கினி *šadākkini,* பெ.(n.) தேள் (எப்பொழுதும் தீயைப் போன்ற கொடுக்குடையது) (சங்.அக.); scorpion, as always having a fiery sting.

*[**Skt.** sadāgni > த. சதாக்கினி.]*



சதாகதி *šadā-gadi,* பெ.(n.) காற்று (இடைவிடாமற் சஞ்சரிப்பது); wind as being in perpetual motion. *"சதாகதி மைந்தனும்" (பாரத.புட்ப.15).*

[சதா + கதி.]

*[**Skt.** sadā → த. சதா.]*

கது → கதி (மு. தா. 58)

சதாகாசம் *šadāgāsam,* பெ.(n.) (மாங்கிசபேதி) தசையைக் கரைக்குமொரு வகை வயிற்றுப் போக்கு; a mineral capable of curing overgrowth of flesh in the system or ordinarily dissolving flesh (சா.அக.).

சதாகாலம் *šadā-kālam,* கு.வி.எ.(adv.) **சதா²** பார்க்க; see *šadā.*

சதாகுழை *šadā-kuḻai,* பெ.(n.) குக்கில்; Indian gum or resin - *vateria indica* (சா.அக.).

சதாங்கம் *šadāngam,* பெ.(n.) தேர் (இரதம்) (சங்.அக.); chariot, car.

*[**Skt.** šatānga > த. சதாங்கம்.]*

சதாசார்வகாலம் *šadā-šārva-kālam,* கு.வி.எ. (adv.) **சதா²** பார்க்க (இ.வ.); see *sadā².*

[சதா+சார்வ+காலம்]

*[**Skt.** sadā+sarva+ த. சதாசார்வ(ம்)]*

சதாசாரம் *šadā-šāram,* பெ.(n.) நல்லோரொழுக்கம்; practice of the good or virtuous men; good old custom; approved usage. *"சதாசாரம் விசாரணையே" (வேதா. சூ.146).*

*[**Skt.** sad-ācāra > த. சதாசாரம்.]*

சதாசிவத்தி *šadāšivatti,* பெ.(n.) சீனக்காரம் (மூ.அ.); alum.

*[**Skt.** sadā-šiva-šakti > த. சதாசிவத்தி.]*

சதாசிவதத்துவம் *šadā-šiva-tattuvam,* பெ.(n.) சிவ மெய்ப்பொருள் ஐந்தனு ளொன்று

(திருக்கோ.112, உரை); (*šaivam*) the state in which *šivaṉ* manifests himself as *Šadāšivam*.

[சதாசிவம் + தத்துவம்.]

[Skt. sadāšiva > த. சதாசிவம்.]

சதாசிவதினம் *šadā-šiva-diṉam,* பெ.(n.) பேரிறைவ (மகேச்சுர)னுடைய ஆயுட்காலம் இரண்டு கூடின காலம் (சங்.அக.); (*šaivam*) period equal to twice the life time of *Mahēšvaraṉ.*

[Skt. sadāšiva+dina > த. சதாசிவதினம்.]

சதாசிவதேவர் *šadā-šiva-dēvar,* பெ.(n.) ஐந்து முகமும் பத்துக்கையும் இரண்டு பாதமுமுடைய சிவனுருவம் (சங்.அக.); (*šaivam*) one of the manifestations of *šiva* having five faces, ten hands and a pair of feet.

[சதாசிவம்+தேவர்]

[Skt. sadāšiva → த. சதாசிவம்]

சதாசிவநாள் *šadāšiva-nāḷ,* பெ.(n.) சகடு (உரோகிணி), கை (அஸ்தம்), முக்கோல் (திருவோணம்), கொடிறு (பூசம்), பனை (அனுடம்), முரசு (உத்திரட்டாதி), உத்திரம், (உத்திராடம்), தோணி (இரேவதி) ஆகிய நாண்மீன்கள் (சோதிட கிரக.38); the *nāṉ-miṉ, urōgiṇi, astam, tiruvōṇam, pūšam, aṉušam, uttiraṭṭādi, uttiram, uttirādam, irēvadi.*

[சதாசிவம் + நாள்.]

[Skt. šadāšiva > த. சதாசிவம்.]

சதாசிவம்[1] *šadāšivam,* பெ.(n.) 1. (பஞ்ச கர்த்தாக்களில்) படைப்பு முதலிய தொழில் புரியும் ஐவருள் முதல்வராய், உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டுச் சிவன் மேற்கொள்ளும் வடிவம் (சி.சி.1, 65); (*šaivam*) manifestation of *šiva* bestow in grace upon sentiment beings, highest of five *kart-tākkaḷ,* q.v., one of nine *civa-pētam,* q.v. 2. உருவாய் விளங்குதற்கு முன் உயிர்களின் பொருட்டுச் சிவன் மேற்கொள்ளும் அருவுருவாகிய வடிவம்; (*šaivam*) manifestation of *šiva* when designing the salvation of souls, before he assumes visible forms for the purpose. *"சிவம் சத்திநாதம் விந்து சதாசிவந் திகழுமீசன்" (சி.சி.2, 74).*

த.வ. அருஉருவன், இறைத்தோன்றல், அறாஇன்பன்

[Skt. sadāšiva > த. சதாசிவம்.]

சதாசிவம்[2] *šadāšivam,* பெ.(n.) துணி வழலை (சவுக்காரம்) (தஞ்.சர.iii, 51); soap.

சதாசிவவடிவம் *šadāšiva-vaḍivam,* பெ.(n.) இலங்கமாய் அருவுருவத்திருமேனி கொண்ட சிவவடிவம்; (*šaivaṉ*) *šiva* manifested in *liṅga*, when he is said to have a form and yet no form.

[சதாசிவம் + வடிவம்.]

[Skt. sadāšiva → த. சதாசிவம்.]

படி → வடி → வடிவு → வடிவம்

சதாசிவன் *šadāšivaṉ,* பெ. (n.) உயிர்கள் மாட்டு அருளிச் செய்யும் நல்லான்; *šivaṉ,* in his highest form, one of five *karttākkaḷ,* q.v.

[Skt. sadāšiva > த. சதாசிவன்.]

சதாசிவன்வாசம் *šadāšivaṉ-vāsam,* பெ.(n.) 1. பொன்மலை; mountain containing gold ore. 2. கைலாச மலை; mount kailas (சா.அக.).

சதாசேர்வை *šadā-sērvai,* பெ.(n.) நாளும் தொடரும் ஊழியம் (S.I.I.i, 127); perpetual devotion.

[Skt. sadā+sēvā > த. சதாசேர்வை.]

சதாட்டகம் *šadāṭṭagam,* பெ.(n.) நூற்றெட்டு; one hundred and eight. *"அகோர சதாட்டகத்தைப் பகர்ந்து" (சிவதரு.பரி.26).*

[Skt. šatāṣṭaka > த. சதாட்டகம்.]

சதாநந்தம் *šadānandam,* பெ.(n.) முடிவிலா இன்புறவு (இ.வ.); perpetual happiness, eternal bliss.

த.வ. அறாஇன்பம்

[Skt. sadā+ā-nanda > த. சதாநந்தம்.]

சதாநிருத்தமூர்த்தி *sadā-nirutta-mūrtti,* பெ.(n.) ஐந்தெழுத்தே திருமேனியாகக் கொண்டு நந்தியாதி பக்தர்கள் வணங்கும்படி ஐந்தொழில் (பஞ்சகிருத்திய) தாண்டவம் செய்யும் சிவத் திருமேனி (மூர்த்தம்) (சங்.அக.); *šivaṉ* having the five lettered mantra for his form and performing his dance to the delight of his ardent devotees Nandi and others.

[Skt. sadā + nṛtta + mūrti > த. சதா நிருத்தமூர்த்தி.]

சதாபடம் *šadāpaḍam,* பெ.(n.) எருக்கு (மலை.); madar.

சதாபதி[1] *sadāpadi,* பெ.(n.) மரவட்டை (வின்.); a kind of millipede living in trees.

[Skt. šata-padi > த. சதாபதி.]

சதாபதி[2] *šadā-padi,* பெ.(n.) கடவுள் (வின்.); God.

[சதா + பதி.]

[Skt. sadā > த. சதா.]

சதாபரி *šadāpari,* பெ.(n.) தங்கம்; gold.

சதாபலம் *šadā-palam,* பெ.(n.) எலுமிச்சை (பிங்.); sour lime.

[Skt. sadā+phala > த. சதாபலம்.]

சதாபிடேகம் *šadābiḍēgam,* பெ.(n.) எண்பது வயதிற்கு மேற்பட்டு வாழ்ந்து, ஆயிரம் பிறை கண்டவர்க்குச் செய்யுஞ் சடங்கு (விதான. நல்வினை.17); ceremony performed when a man is past 80 years and has seen 1000 crescent moons.

த.வ. ஆயிரம்பிறைநாளணி

[Skt. šata+abhi-ṣēka > த. சதாபிடேகம்.]

சதாபுசம் *šadāpuṣam,* பெ.(n.) வண்டுவகை (வின்.); a kind of beetle.

சதாபுட்பம் *šadā-puṭpam,* பெ.(n.) 1. வெள்ளெருக்கு; white madar. 2. முல்லை; jasmine.

[Skt. sadā + puṣpa > த. சதாபுட்பம்.]

சதாபுட்பி *šadā-puṭpi,* பெ.(n.) எருக்கு (தைலவ.தைல.73); madar.

[Skt. sadā+puṣpa > த. சதாபுட்பி.]

சதாபூடம் *šadā-pūḍam,* பெ.(n.) **சதாபடம்** பார்க்க; see *šadā-paḍam.*

சதாமூர்க்கம் *šadā-mūrkkam,* பெ.(n.) பாம்பு கொல்லி (மலை.); a plant belived to cure snake - bite.

[Skt. sadā+mūrkha > த. சதாமூர்க்கம்.]

சதாய்-த்தல் *šadāy-,* 4 செ.குன்றாவி.(v.t.) ஏளனம் செய்தல் (Madr.); to ridicule, mock at.

[U. satānā > த. சதாய்-.]

சதாயுசு *sadāyušu,* பெ.(n.) (நூறு வயதுள்ளோன்) வயது முதிர்ந்தவன்; ripe old man, as having lived hundred years.

[சதா + ஆயுள் → ஆயுசு → சதாயுசு.]

[Skt. šatā → த. சதா.]

சதாயுசோன் *šadāyušōṉ,* பெ.(n.) 1. நூறு வயதுடையோன்; one aged 100 years -

centenarian. 2. கிழவன்; an old man. 3. வயது முதிர்ந்தவன்; an elderly person (சா.அக.).

[Skt. šatā → த. சதா + த. ஆயுள் > ஆயுசு ஆயுசோன்.]

சதாவர்த்தி *šadāvartti,* பெ.(n.) **சதாவிருத்தி** பார்க்க; see *šadā-virutti.*

[Skt. šadā+vṛtti → த. சதாவர்த்தி.]

சதாவாதம் *šadāvādam,* பெ.(n.) தீராத ஊதை (வாதம்); chronic rupture (சா.அக.).

[Skt. sadā + vata→ த. சதாவாதம்.]

சதாவிருத்தி *šadā-virutti,* பெ.(n.) சாலை முதலியவற்றில் வழிப்போக்கர் முதலாயினார்க்குத் நாள்தோறும் அளிக்கும் உணவுப்பொருள் (இ.வ.); daily provisions to travellers and mendicants, as in a choultry.

[Skt sadā+vṛtti> த. சதாவிருத்தி.]

சதானகம் *šadānagam,* பெ.(n.) 1. இடுகாடு; burial ground. 2. சுடுகாடு; cremation ground (சா.அக.).

சதானிகன் *šadānigan,* பெ.(n.) 100 காலாட் படைக்குத் தலைவன் (சுக்கிரநீதி, 73); captain of a unit of 100 infantry men.

[Skt. šatānika> த. சதானிகன்.]

சதி *šadi,* பெ.(n.) 1. கற்புடையவள் (பிங்.); good, virtuous or faithful wife. 2. சகடு (உரோகிணி) (பிங்.); the fourth naksatra. 3. பார்வதி (பிங்.); Pārvati. 4. இறந்தவனோடு மனைவி உடன்கட்டையேறுகை; suttee; self-immolation of a widow along with her deceased husband.

[Skt. satī > த. சதி]

சதிபதி *šati-padi,* பெ.(n.) 1. சிவபெருமான் (வின்.); *Šivan,* as lord of *Pārvati.* 2. மணவிணையர் (தம்பதி) (இ.வ.); husband and wife.

[Skt. satī+pati> த. சதிபதி]

சதிபுருடநியாயம் *sadi-puruḍa-niyāyam,* பெ.(n.) கணவன் மனைவியர் தம்மிலுள்ள உரிமை (சங்.அக.); mutual rights and duties of husband and wife.

[Skt. satī+puruta+nyāya> த. சதிபுருட நியாயம்.]

சதிலம் *šadilam,* பெ.(n.) 1. மூங்கில் (மலை.); bamboo. 2. காற்று (சங்.அக.); wind.

[Skt. satila> த. சதிலம்.]

சதீனகம் *šadīnagam,* பெ.(n.) பயறு (மலை.); pulse.

[Skt. satīnaka> த. சதீனகம்.]

சதீனம் *šadīnam,* பெ.(n.) **சதீனகம்** பார்க்க (மலை.); see *šadīnagam.*

சதுங்கம் *šaduṅgam,* பெ.(n.) பறவை; a bird.

சதுசுருதிதைவதம் *šadu-šurudi-taivadam,* பெ.(n.) பதினாறு (சோடசசுரப்) குரலோசைகளுளொன்று; middle variety of the sixth note of the gamut, one of *šōḍaša-šuram,* q.v.

[Skt. catur+šruti+dhaivata> த.சதுசுருதி தைவதம்.]

சதுசுருதிரிசபம் *šadu-šurudi-riṣabam,* பெ.(n.) **சதுசுருதிதைவதம்** பார்க்க; see *sadu-suruti-taivadam.*

[Skt. catur+šruti+ṛṣabha > த.சதுசுருதி ரிசபம்.]

சதுட்கசாயம் *šaduṭ-kašāyam,* பெ.(n.) கடுஞ்சினம், மானம், மாயை, கடும்பற்றுள்ள மாயை என்ற தீய எண்ணங்கள் (மேருமந். 397, உரை); (Jaina.) the four evil thoughts, viz., *kurōdam, māṉam, māyai, lōbam.*

[Skt. catur+kasāya> த. சதுட்கசாயம்.]

சதுட்கிகை *šadutkigai,* பெ.(n.) கட்டட உறுப்புகளுளொன்று; (S.I.I.ii, 87) a part of a building .

[Skt. catuṣ → த. சதுட்கிகை.]

சதுட்டயம் *šaduttayam,* பெ.(n.) 1. நான்கன் தொகுதி; aggregate of four. *"சாதன சதுட்டயம்".* 2. நடுவம்; (Astrol.)1st, 4th, 7th and 10th houses from the ascendant. *"கேந்திரங்கண்டஞ் சதுட்டயமென்று" (விதான.மரபி.3).*

[Skt. catuṣṭaya> த. சதுட்டயம்.]

சதுட்பாதம் *šadutpādam,* பெ.(n.) 1. விலங்கு (வின்.); quadruped. 2. நாய்; dog. 3. கரணம் பதினொன்றனுள் காருவாவின் முற் பகுதியில் நிகழுங் காலக்கூறு (வீமே.உள்.26, உரை); (Astron.) a division of time, first half of the new moon day, one of eleven *karaṇam.*

[Skt. catuṣ-pāda> த. சதுட்பாதம்.]

சதுதாரம் *šadu-dāram,* பெ.(n.) அகட்டகம்; one of the six mystic centres of the human body in the genital region (சா.அக.).

சதுரிகை *šadurigai,* பெ.(n.) தவ (தபசு) நாள்; (chr.) lent.

[Skt. caturikā> த. சதுரிகை.]

சதேகமுத்தர் *šadēga-muttar,* பெ.(n.) இப்பிறப்பிலேயே தன்னையறிவதற்கு உலகப் பற்றினின்று விலகியவர்கள்; that type of a person who has attained liberation of soul, having been restored from the influence of worldly maya or bondage (சா.அக.).

[Skt. sa-dēha+mukta → த. சதேக முத்தர்.]

சதேகமுத்தி *šadēga-mutti,* பெ.(n.) உயிர் முத்தி; final deliverance in the embodied condition of the soul, dist. fr. *videga-mutti.*

[சதேக+முத்தி.]

[Skt. sa-dēha>சதேகம்]

[த. முத்தி> Skt. mukti]

சதேகரு *sadēgaru,* பெ.(n.) இலவங்கப்பட்டை (மூ.அ.); cinnamon bark.

சதேகை *šadēgai,* பெ. (n.) உயிர் உள்ளொழுக்கத்திற் (நிஷ்டை) பொருந்தியிருக்கை (சி.சி.4, 35, மறை.); (*šaivam*) the mystic union in *šadēga-mutti.*

[Skt. sa-dēha> த. சதேகை.]

சதேசன் *šadēšan,* பெ. (n.) நூறு சிற்றூர்களுக்குத் தலைவன் (யாழ்.அக.); chief of a hundred villages.

[Skt. šatēša> த. சதேசன்.]

சதேந்திரர் *šadēndirar,* பெ.(n.) 42 பவணேந்திரரும், 32 வியந்தரேந்திரரும், 22 கற்பேந்திரரும், சந்திரன், சூரியன், நரேந்திரன், மிருகேந்திரன் என்ற நால்வரும் ஆகிய இந்திரர் நூற்றுவர் (மணிமே.27, 171, உரை); (Jaina) the hundred Indras, viz., 42 *pavaṇēndirar,* 332 *viyandarēndirar,* 22 *kaṟpēndirar, cantiraṉ, cūriyaṉ, narēndiraṉ, mirukēntiraṉ.*

[Skt. šata+indra> த. சதேந்திரர்.]

சதேரன் *šadēran,* பெ.(n.) பகைவன் (யாழ்.அக.); foe, enemy.

[Skt. šatēra> த. சதேரன்.]

சதோகநாதர் *šadōga-nādar,* பெ.(n.) நவநாத சித்தருள் ஒருவர் (சது.); a šiddhar, one of *nava-nāda-šittar,* q.v.

சதோகரு *šadōgaru,* பெ.(n.) **சதேகரு** பார்க்க (வின்.); see *šadēgaru.*

சதோடம் *šadōdam,* பெ.(n.) குற்றத்துடன் கூடியது; that which has flaws or defects. *"சகுணமெனச் சதோடமென வவையிரண்டில்" (திருவிளை.மாணிக்க.66).*

[Skt. sa-dōṣa> த. சதோடம்.]

சதோதயம் *šadō-tayam,* பெ.(n.) எப்பொழுதும்; always. *"வேண்டுவ தந்து சதோதயம் ஆதரிப்பர்" (இரக்ஷணிய.13).*

[சதம் + உதயம்.]

[Skt. śasu> சதம்.]

சந்த *śanda,* கு. பெ.அ.(adj.) தூய்மையான (R.C.); saintly.

[It. santo> த. சந்த.]

சந்தகபுட்பம் *śandaga-putpam,* பெ.(n.) இலவங்கம் (மலை.); cloves.

[Skt. candana-puṣpa> த. சந்தகபுட்பம்.]

சந்தகன் *śandagaṉ,* பெ.(n.) திங்கள் (யாழ்.அக.); moon.

[Skt. candaka> த. சந்தகன்.]

சந்தசு *śandaśu,* பெ.(n.) 1. யாப்பு; metre. 2. மறையுறுப்புகளுளொன்றாய் யாப்பிலக்கணங் கூறும் நூல்; science of *Vēdic* prosody, one of six *Vēdāṅgam.* *"சந்தசுமுதலிய ஆறங்கங்களும்" (வேதா.சூ.6, உரை).* திருமறை (சங்.அக.); *Thirumaṟai.*

[Skt. chandas> த. சந்தசு.]

சந்தசுரம் *śandaśuram,* பெ.(n.) பொதுநிலைக் காய்ச்சல் (சாதாரண சுரம்); common fever without complications (சா.அக.).

[சந்த + சுரம்.]

[Skt. chandas→ த. சந்த.]

சந்தஞ்சம் *śandañjam,* பெ.(n.) 1. ஆண் மக்கட்குரிய கையமைதி வகைகளுள் ஒன்று (சிலப்.பக்.92, கீழ்க்குறிப்பு.); (*Nāṭya*) one of the hand poses appropriate to men. 2. ஈக்கள் மொய்த்துத் துன்புறுத்திடக் காய்கின்ற இருப்புக்கடாரத்தில் கிடத்தித் திருடர்களைத் தண்டிக்கும், நிரயச்சிறப்பு (சேதுபு.தனுக்கோ.13); a hell where thieves or dacoits are punished by being thrown into a boiling iron - cauldron, flies hovering about, and molesting them.

[Skt. saṉ-daṃśa> த. சந்தஞ்சம்.]

சந்ததம் *śandadam,* பெ.(n.) எப்பொழுதும்; always, perpetually, for ever. *"சந்ததமுஞ் சிந்தித்தே" (மாறனலங்.663).*

[Skt. santatam> த. சந்ததம்.]

சந்தததாவர்ணி *śandadā-varṇi,* பெ.(n.) பொன் வண்ணச்சாலி; an unknown plant supposed to be always yellow in colour (சா.அக.).

சந்ததி *śandadi,* பெ.(n.) 1. வழித்தோன்றல்; descendant, heir. *"சந்ததி யெனக்கு நீயே" (பிரபோத.2, 33).* 2. மகன் (பிங்.); son. 3. குலம்; lineage, pedigree.

த.வ. பிறங்கடை

[Skt. santati> த. சந்ததி.]

சந்ததிப்பிரவேசம் *śandadi-p-piravēśam,* பெ.(n.) தலைமுறை தலைமுறையாய்; from generation to generation. *"ஆசந்திராற்கம் சந்ததிப்பிரவேசமே இறையிலியாக" (S.I.I. V.331).*

[Skt. santati+pra-vēśa> த. சந்ததிப் பிரவேசம்.]

சந்ததிமுட்டு-தல் *śandadi-muṭṭu-,* 5. செ.கு.வி. (v.i.) குலமற்றுப்போதல்; to become heirless or issueless.

த.வ. காலற்றுபோதல்

[சந்ததி + முட்டு-.]

[Skt. santati→ த. சந்ததி]

சந்தநதிவித்து *śanda-nadi-vittu,* பெ.(n.) இடையீடின்றித் தொடர்ந்து ஊறும் வித்தமிழ்து; semen secreted constantly (சா.அக.).

[சந்தநதி + வித்து.]

[Skt. saṇta-nati→ த. சந்தநதி]

சந்தயம் *śandayam,* பெ.(n.) 1. ஐயம்; doubt. *"சந்தயந் தீரீர்" (மாறனலங்.303, உரை).* 2. ஐயவணி (மாறனலங்.136); (Rhet.) figure of speech which consists in expressing a doubt.

[Skt. saṉ-dēha> த. சந்தயம்.]

சந்தர்ப்பணை *śandarppaṇai,* பெ.(n.) பார்ப்பானுக்கு விழாவிற்செய்யும் விருந்து

(சமாராதனை) (தைலவ.தைல.43); feast given to Brahmins on religious or festive occasions.

[Skt. san-tarp-pana > த. சந்தர்ப்பணை.]

சந்தர்ப்பம் *šandarppam,* பெ.(n.) 1. சமயம்; circumstance, opportunity. 2. முன் பின்னமைவு; context. *'சந்தர்ப்பத் தைநோக்கிப் பாடலுக்குப் பொருள் கொள்ள வேண்டும்'.*

[Skt. san-darbha> த. சந்தர்ப்பம்.]

சந்தலீலை *šanda-lilai,* பெ.(n.) 1. நாற் கால் உயிரி (சீவன்) போற் புரியும், புணர்ச்சி; four legged cohabitation. 2. கொக்கோகத்திற் சொல்லியுள்ள, 64 காமவிளையாட்டுகளில் ஒன்றாகிய, (பசுகரணம் என்பதைப் போன்ற) விலங்குப்புணர்ச்சி; human sexual intercourse like animals called pasukarnam-one of 64 sexual postures mentioned in the Erotic Science (சா.அக.).

[Skt. sanda +līlā → த. சந்தலீலை.]

சந்தனு *sandanu,* பெ.(n.) வீடுமற்குத் தந்தையான திங்கட்(சந்திர)குலத்தரசன் (பிங்.); a king of the lunar race, father or *Bhīsman* (சா.அக.).

[Skt. santanu> த. சந்தனு.]

சந்தனுமுன்பெற்றோன் *šandanu-mun-perrōn,* பெ.(n.) சந்தனுவின் முதற் புதல்வன் வீடுமன் (சூடா.); *Bhīsman,* the eldest son of santanu.

[சந்தனு + முன்பெற்றோன்.]

[Skt.santanu>த.சந்தனு.]

சந்தனுமுன்மைந்தன் *šandanu-mun-maindan,* பெ.(n.) **சந்தனுமுன்பெற்றோன்** பார்க்க (பிங்.); see *šandanu-mun-perrōn*

[சந்தனு + முன் + மைந்தன்.]

[Skt. santanu → த. சந்தனு]

சந்தா *šandā,* பெ.(n.) செய்தித்தாள் முதலியவற்றுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் (இக்.வ.); money subscription.

[U. candā> த. சந்தா.]

சந்தாக்கு *šandākku,* பெ.(n.) சவப்பெட்டி; (Muham.) coffin.

[Arab. sandāh> த. சந்தாக்கு.]

சந்தாதார் *šandādār,* பெ. (n.) உறுப்புக்கட்டணம் கொடுப்பவன் (இக்.வ.); subscriber.

[U. candā-dār> த. சந்தாதார்.]

சந்தாபம் *šandābam,* பெ.(n.) 1. சுடுகை (திவா.); socrching, burning. 2. மனத்துன்பம்; distress, affliction. *"சந்தாபந் தீர்ந்த சட கோபன்" (திவ்.திருவாய்.நூற்.15).* 3. எண் வகை நிரயங்களுள் ஒன்று (சி.போ.பா. 2, 3, பக்.230.); one of eight kinds of nirayam. 4. செய்த கரிசு (பாவத்து)க்கு இரங்குகை (R.C.); repentance, confession, penitence.

[Skt. san-tāpa> த. சந்தாபம்.]

சந்தாமப்பம் *šandāmappam,* பெ.(n.) எருக்கு (மலை.); madar.

சந்தாமியம் *šandāmiyam,* பெ.(n.) வயிரம் (வச்சிரம்); diamond (சா.அக.).

சந்தாயம் *šandāyam,* பெ.(n.) 1. சஞ்சாயம், (இ.வ); management of lands, etc., by the proprietors themselves. 2. குமுகாயம் (சமுதாயம்), 5. (R.T.); anything held, in common by villagers.

[Skt. sam-ud-āya> த. சந்தாயம்.]

சந்தாயநிலம் *šandāya-nilam,* பெ.(n.) பொதுநிலம் (P.T.L.); land held in common.

[சந்தாய(ம்) + நிலம்.]

[Skt. sam-ud-āya→ த. சந்தாய(ம்).]

சந்தாயயானம் *šandāya-yānam,* பெ.(n.) ஓர் அரசன் பின்தொடரும் பகைவனை வழி

முறையினால், நண்பனாகச் செய்துகொண்டு முன்னிற்கும் பகைவனை எதிர்த்துச் செல்லுஞ் செலவு (சுக்கிரநீதி, 336); the march of a king against his enemy in front, making an ally of the enemy who attacks him from behind.

[Skt. sandhāya+yāna> த. சந்தாயயானம்.]

சந்தானக்குறி *šandāṉa-k-kuṟi*, பெ.(n.) கருத்தரித்தலை உறுதிசெய்யும் குறிகள்; sign or symptom of pregnancy (சா.அக.).

த.வ. கருஅடையாளம்

[சந்தானம் + குறி.]

[Skt. san-tāna→ த. சந்தானம்.]

சந்தானகுரு *šandāṉa-guru*, பெ.(n.) மரபு வழி அறிவாசிரியன் (யாழ்.அக.); hereditary guru or spiritual teacher.

[சந்தானம் + குரு.]

[Skt. san-tāna> த. சந்தானம்]

சந்தானச்சாபம்[1] *šandāṉa-c-cābam*, பெ. (n.) தலைமுறையில்லாமற் போகும்படி செய்யும் தீமொழி – சாவம் (I.M.P. Tn.328); curse that prevents progeny.

[Skt. san-tāna+šāpa →த. சந்தானச்சாபம்.]

சந்தானச்சாபம்[2] *šandāṉa-c-cābam*,பெ.(n.) குடும்ப முழுவதும் நசிக்கவொட்டாமல் பிறராற் பாதுகாக்கப்படுஞ் சிறுகுழந்தை (திவ். அமலனாதி.5, வ்யா, பக்.64–65); child kept away in hiding or safe custody in order that the line may not become extinct by a catastrophe.

[Skt.san-tāna+šāpa>த. சந்தானச்சாபம்.]

சந்தானசர்வோத்தம் *šandāṉa-šarvōttam*, பெ (n.) சிவ துணைத்தோன்றியங்களுளொன்று; a treatise on *šaivaism*, one of *Upāgamam.*

சந்தானசன்னிமாத்திரை *šandāṉa-šaṉṉi māttirai*, பெ.(n.) குளிர் சுரத்துக்குக் கொடுக்கும் மாத்திரை; a pill prescribed fer typhoid fever and delirium (சா.அக.).

சந்தானதருமம் *šantāṉa-darumam*, பெ.(n.) நற்கதியடைய வேண்டிச் செய்யப்படும் அறம்; meritorious act done with the hope of attaining salvation. (சா.அக.).

[சந்தான(ம்) + தருமம்.]

[Skt. san-tāna → சந்தான(ம்).]

சந்தானபரணி *šandāṉa-baraṇi*, பெ.(n.) பெரு மருந்து; Indian birth-wort-aristolochia indica (சா.அக.).

சந்தானபரம்பரை *šandāṉa-parambarai*, பெ.(n.) மெய்கண்ட தேவர் முதல்வராக வந்த சிவணியக் கொண்முடிபைக் கற்பித்து (சைவசித்தாந்தத்தை உபதேசித்து) வந்த சிவகுரு (சைவாசாரிய), கொடிவழி (பரம்பரை); the line of succession of *Šaiva Acāryas* who promulgated the *Šaiva Šiddhānta* philosophy, *Meykaṇḍa-tēvar*, being regarded as the first among them.

[Skt. san-tāna+ paramparā> த. சந்தானபரம்பரை.]

சந்தானம்[1] *šandāṉam*, பெ.(n.) 1. வழித்தோன்றல் (சந்ததி); offspring, progeny, issue. *"துதிவாணிவீரம் விசயம் சந்தானம்" (தனிப்பா.).* 2. குலம் (வமிசம்); descent, lineage, pedigree. 3. தொடர்பு; uninterrupted succession. 4. குரு (பரம்பரை); line of succession in spiritual preceptorship. *"மெய்கண்ட சந்தானம்".* 5. சிவத்தோன்றியம் இருபத்தெட்டனுள் ஒன்று (சைவச. பொது. 335, உரை.); an ancient *Šaivam* scripture in sanskrit, one of 28 *Šivāgamam*. 6. தேவருலகத்து ஐவகை மரங்களுள் ஒன்று (திவா.); a tree of svarga, one of *pañja-taru.*

[Skt. san-tāna> த. சந்தானம்.]

சந்தானம்² *šandānam,* பெ.(n.) அம்பு எய்கை; shooting an arrow.

[Skt. san-dhāna> த. சந்தானம்.]

சந்தானமறிப்பு *šandāna-marippu,* பெ.(n.) 1. பிள்ளை பெறுவதைத் தடுத்தல்; birth-control. 2. பிள்ளையில்லாமற் செய்தல்; to make a woman barren or sterile (சா.அக.).

[சந்தானம் + மறிப்பு.]

[Skt. santāna → த. சந்தான(ம்).]

சந்தானரேகை *šandāna-rēgai,* பெ.(n.) கை வரி (ரேகை) வகை (திருவாரூ.குற.Ms.); (Palmistry) a line in Palm of hand.

[Skt. san-tāna+rēkha> த. சந்தான ரேகை.]

சந்தானலட்சுமி *šandāna-laṭcumi,* பெ.(n.) மகப்பேறுருடையவள் (புத்திரபாக்கியம்); offspring, progeny, considered as wealth.

[Skt. san-tāna+lakṣmī> த. சந்தான லட்சுமி.]

சந்தானவிரதம் *šandāna-viradam,* பெ.(n.) மகப்பேறடையச் செய்யும் நோன்பு (வின்.); religious observance for obtaining offspring.

[Skt. san-tāna+vrata> த. சந்தானவிரதம்.]

சந்தானிகசைவாசாரியர் *šandānika-šaivāšāriyar,* பெ.(n.) சந்தான குரவர் மாணவகர் (சிஷ்ய) மரபில் வந்த (சைவக்குரவர்) (I.M.P. N.A.276); a *šaivam* priest owing allegiance to *cantāna-kuravar.*

[Skt. sāntānika + šaivāsāriyā > த. சந்தானிகசைவாசாரியர்.]

சந்தித்தம் *šandittam,* பெ.(n.) ஐயம் கொள்ளப்பட்டது; that which is in doubt. *"சந்தித்தமாயிருக்கின்ற வஸ்துவில்" (சி.சி.2, 59, ஞானப்.).*

[Skt. san-digdha> த. சந்தித்தம்.]

சந்திபந்தனம் *šandibandanam,* பெ.(n.) 1. நரம்பு; nerve. 2. மூட்டுகளை இறுகக் கட்டும் தசை நார்; fibrous tissue by which muscles are attached to bones or other parts - *Tendon* (சா.அக.).

[சந்தி + பந்தனம்]

[Skt. santi→ த. சந்தி]

சந்தியாம்சம் *šandiyāmšam,* பெ.(n.) வழிகள் சந்திக்கும்காலம்; ஓகம், the period at the end of each yuga.

[Skt. sandhyā+amša> த. சந்தியாம்சம்.]

சந்தியாமடம் *šandiyā-maḍam,* பெ.(n.) நிலையான வழிபாடு செய்தற்குரிய நீர்க்கரை மண்டபம்; stone - building beside a tank or river where religious duties are performed. *"சந்தியா மடத்தேகித் தபோதனர்" (திருவாலவா.63, 10).*

[சந்தியா + மடம்.]

[Skt. san-dhyā → த. சந்தியா.]

சந்தியாமண்டபம் *šandiyā-maṇḍabam,* பெ.(n.) **சந்தியாமடம்** பார்க்க; see *šandiyā-maḍam.*

[சந்தியா + மண்டபம்.]

[Skt. san-dhyā → த. சந்தியா.]

சந்தியாராகம் *šandiyā-rāgam,* பெ.(n.) செவ்வானம் (வின்.); crimson colour of the evening sky.

[Skt. sandhyā + rāga → த. சந்தியா ராகம்.]

சந்தியை¹ *šandiyai,* பெ.(n.) **சந்தி³, 1** பார்க்க; see *šandi³, 1.*

[Skt. sandhyā> த. சந்தியை.]

சந்தியை² *šandiyai,* பெ.(n.) மல்லிகை (சங்.அக.); jasmine.

[Skt. candrikā> த. சந்தியை.]

சந்திர *šandira,* பெ.(n.) வெள்ளாடு; goat (சா.அக.).

சந்திரகணம் *šandira-gaṇam,* பெ.(n.) நூலின் முதற் செய்யுளின் முதலில் அமையும்படிப் புளிமாங்காய் என்னும் வாய்பாடு பற்றிவரும் நற்கணச்சீர்வகை (பிங்.); metrical foot consisting of one *nirai*, and two *nēr*, considered auspicious at the commencement of a poem.

[சந்திர(ம்) + கணம்.]

[Skt. candra → த. சந்திர(ம்).]

சந்திரகபாலம் *šandira-kabālam,* பெ.(n.) படுஞாயிறுநோய் (பரராச1, 24); pain in the head, recurring in the evenings.

[சந்திர(ம்) + கபாலம்.]

[Skt. candra > த. சந்திர(ம்)]

சந்திரகம் *šandiragam,* பெ.(n.) வண்டு (பிங்.); beetle.

[Skt. cañcarīka> த. சந்திரகம்.]

சந்திரகலை *šandira-kalai,* பெ.(n.) 1. நிலவின்கூறு; digit of the moon. 2. நிலவொளி; moon light. *"சந்திரகலையால் எனக்கு நீர் பொழிவ சந்திரகாந்தம்" (அரிச்.பு.விவாக.20).* 3. தலைமுடியிற் பெண்கள் அணிந்துகொள்ளும் ஓரணி; crescent shaped ornament for the hair, worn by women. *"சந்திரகலையார் மேகக் கருங்குழலை" (பிரமோத்.பிரதோஷ.5).* 4. இடைகலை; breath passing through the left nostril.

[சந்திர(ன்) + கலை.]

[Skt. candra → த. சந்திரன்.]

சந்திரகாசம் *šandira-kāšam,* பெ.(n.) 1. சிவன் இராவணனுக்குக் கொடுத்த வாள்; the sword presented by *Šivaṉ* to *Rāvaṇa.* 2. **சந்திரகாசரசம்** பார்க்க (பதார்த்த.122.); see *šandira-kāša-rašam.*

[Skt. candra-hāsa > த. சந்திரகாசம்.]

சந்திரகாசரசம் *šandirakāša-rašam,* பெ.(n.) நீர் வடிவான ஒருவகை மருந்து (பதார்த்த. 1221.); a kind of decoction or medical infusion.

[Skt. candra-hāsa+rasa> த.சந்திர காசரசம்.]

சந்திரகாஞ்சம் *šandira-kāñjam,* பெ.(n.) சந்தனம்; sandal (சா.அக.).

சந்திரகாந்தக்கல் *šandira-kānda-k-kal,* பெ.(n.) **சந்திரகாந்தம்** பார்க்க (சிலப்.10, 25, உரை.); see *šandira-kāndam.*

[சந்திரன் + காந்தம் + கல்.]

[Skt. candra→ த. காந்தம் + த.கல்.]

சந்திரகாந்தச்சிலை *šandira-kānda-c-cilai,* பெ.(n.) **சந்திரகாந்தம்** பார்க்க (வின்.); see *šandira-kāndam.*

[சந்திர(ன்) + காந்தம் + சிலை.]

[Skt. candra → சந்திர(ன்).]

சந்திரகாந்தச்சேலை *šandira-kānda-c-cēlai,* பெ.(n.) சேலைவகை (பஞ்ச.திருமுக.116.); a kind of saree.

[சந்திரன் + காந்தம் + சேலை.]

[Skt. candra → சந்திர(ம்).]

சந்திரகாந்தம் *šandira-kāndam,* பெ.(n.) நிலவினொளியில் நீர்கால்வதாகிய கல்வகை; moon stone, a crystal said to emit water when exposed to moon light, as moon-beloved. *"சந்திரகாந்த மென்னும் தண்மணி" (சீவக.585).*

த.வ. நிலாக்கல்

[சந்திர(ன்) + காந்தம்.]

[Skt. candra → த. சந்திரன்.]

சந்திரகாந்தமணி *šandira-kānda-maṇi,* பெ.(n.) **சந்திரகாந்தக்கல்** (பிங்.); see *šandira-kānda-k-kal.*

[சந்திர(ன்) + காந்தம் + மணி.]

[Skt.candra→ த. சந்திரன்.]

சந்திரகாந்தாரி *śandira-kāndāri,* பெ.(n.) பண்வகை (பரத.இராக.103.); a specific melody type.

சந்திரகாந்தி *śandira-gāndi,* பெ.(n.) ஒரு வகைப் பூஞ்செடி (பதார்த்த.255); moon-flower, Ipomaea.

[சந்திர(ம்) + காந்தி.]

[Skt.candra→ த. சந்திரம்.]

காந்தம் → காந்தி

சந்திரகாம்புயம் *śandira-gāmbuyam,* பெ.(n.) வெண்டாமரை (மலை.); white lotus.

[Skt. candrakāmbuja> த. சந்திரகாம் புயம்.]

சந்திரகாரம் *śandira-gāram,* பெ.(n.) மதி (அ) திங்கள் போன்று வட்டமான தங்க வளையங்கள் கோக்கப் பெற்ற மாலைவகை (இ.வ.); a necklace of moon-like gold ringlets.

[Skt. candra+gāra → த. சந்திரகாரம்.]

சந்திரகி *śandiragi,* பெ.(n.) மயில்; peacock. *"நீலச்சந்திரகி மேல்கொடு" (திருப்பு.896).*

[Skt. candrakī> த. சந்திரகி.]



சந்திரகிரகணம் *śandira-giraganam,* பெ.(n.) கருங்கோள் செங்கோள் (இராகு கேதுக்)களால் நிலவு மறைக்கப்படுகை; lunar eclipse.

த.வ. நிலாமறை, கோள்மறை.

[Skt.candra + grahana>த.சந்திரகிரகணம்.]

கிரகணம் = பற்றுகை

சந்திரகுப்தன் *śandira-guptan,* பெ.(n.) 1. கி.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்த மோரிய குலத்துப் பேரரசன்; the famous Maurya Emperor of the 4th century B.C. 2. **சித்திரகுத்தன்** பார்க்க (யாழ்.அக.); see *šittirakuttan.*

[சந்திர(ன்) + குப்தன்.]

சந்திரகும்பம் *śandira-kumbam,* பெ.(n.) நிலவினை முன்னிருத்தி (உத்தேசித்து) மந்திரபூர்வமாக அமைத்துள்ள கும்பம் (வின்.); a sanctified water-pot dedicated to the moon.

[சந்திர(ன்) + கும்பம்]

[Skt. candra> த. சந்திர(ன்).]

சந்திரகுரு[1] *śandira-guru,* பெ.(n.) வெண்முத்து (சிலப்.14, 195, அரும்.); white pearl.

[சந்திர(ன்) + குரு]

[Skt. candra> த. சந்திரன்.]

சந்திரகுரு[2] *śandira-guru,* பெ.(n.) (வெண்ணிறமுடைய அசுரகுரு) சுக்கிரன் (சிலப்.14, 195, உரை); *cukkiran,* as the white-complexioned preceptor of *Asuras.*

[சந்திர(ன்) + குரு]

[Skt. candra> த. சந்திர(ன்).]

சந்திரகுலம் *śandira-kulam,* பெ.(n.) அரசகுலம் மூன்றனுள் திங்களைக் குலமுதல்வனாகக் கொண்ட மரபு; lunar race, as of kings descended from the moon, one of three *irāśa-kulam,* q.v.

த.வ. திங்கள்மரபு

[சந்திர(ன்) + குலம்]

[Skt. candra> த. சந்திர(ன்).]

சந்திரசாலிகை *šandira-šāligai,* பெ.(n.) **சந்திரசாலை** பார்க்க (யாழ்.அக.); see *šandira-šālai.*

[சந்திர(ன்) + சாலிகை]

[Skt. candra→ த. சந்திர(ன்).]

சந்திரசாலை *šandira-šālai,* பெ.(n.) நிலாமுற்றம் (யாழ்.அக.); terrace on the house-top, as a place for enjoying moon light.

[சந்திர(ன்) + சாலை]

[Skt. candra→ த. சந்திர(ன்).]

சந்திரசிலை *šandira-šilai,* பெ.(n.) **சந்திரகாந்தம்** பார்க்க; see *šandira-kāndam.*

[சந்திர(ன்) + சிலை]

[Skt. candra→ த. சந்திர(ன்)]

சந்திரசுத்தசுபுடம் *šandira-šuttasupuḍam,* பெ.(n.) வானத்தில் நிலவு நிற்கும் உண்மை நிலை (செந்.viii, 218); (Astron.) moon's geocentric longitude or true position.

[Skt. candra+šuddha+sphuṭa>த. சந்திரசுத்த புடம்.]

சந்திரசுவணம் *šandira-šuvaṇam,* பெ.(n.) குதிரைப்பற் செய்நஞ்சு (சங்.அக.); a mineral poison.

[Skt. candra + su-parṇa → த. சந்திரசுவணம்.]

சந்திரசூடன் *šandira-šūḍan,* பெ.(n.) **சந்திரசேகரன்** பார்க்க; see *šandira-šēkaran.*

[சந்திர(ன்) + சூடன்]

[Skt. candra→ த. சந்திர(ன்).]

சந்திரசேகரம் *šandira-sēgaram,* பெ.(n.) 586 கோபுர (சிகர)ங்களையும் 64 மேனிலைக் கட்டுகளையுமுடைய கோயில் (சுக்கிரநீதி, 230); a temple with 586 towers and 64 storeys.

[சந்திர(ம்) + சேகரம்]

[Skt. candra→ த. சந்திர(ம்).]

சந்திரசேகரன் *šandira-šēgaran,* பெ.(n.) பிறைசூடி சிவன்; *Šivan,* as having the moon on his crown. *"சந்திரசேகர னமருந் தானங்கள்" (பெரியபு. கோச்செங்.14).*

[Skt. canda-šēkhara> த. சந்திரசேகரன்.]

சந்திரஞானம் *šandira-ñāṉam,* பெ.(n.) சிவத்தோன்றியம் இருபத்தெட்டனுள் ஒன்று (சைவச.பொது.334, உரை.); an ancient *Šaiva* scripture in sanskrit, one of 28 *šivāgamam,* q.v.

[Skt. candra-jñāna> த. சந்திரஞானம்.]

சந்திரத்தீவு *šandira-t-tīvu,* பெ.(n.) குரு ஆண்டிற்கு அணித்தாக வடதிசையிலுள்ள தீவு (சி.போ.பா.2, 3, பக்.208); an island to the north of *kuruvarudam.*

[சந்திர(ம்) + தீவு]

[Skt. candra→ த. சந்திர(ம்)]

சந்திரதீபம் *šandira-tībam,* பெ.(n.) பிரிட்டிசு தீவு; the Brittish Isles (சா.அக.).

[சந்திர + தீபம்]

[Skt. candra→ த. சந்திர]

தீவம் → தீபம்.

சந்திரதரிசனம் *šandira-darišaṉam,* பெ.(n.) 1. குழந்தைக்கு மங்கலக் காலத்தில் நிலவை முதன்முதற் காட்டுஞ் சடங்கு (வின்.); ceremony of showing the moon to a child for the first time in an auspicious evening. 2. வளர்பிறையில் முதன்முதல் நிலவு கட்புலனாகுகை; sighting of the moon in the sky for the first time after new moon.

த.வ. நிலாக்காட்சி

[Skt. candra+daršana> த. சந்திர தரிசனம்.]

சந்திரதிசை *šandira-dišai,* பெ. (n.) (குபேரனது திசை) வடக்கு (திவா.); north, as *Kubēra's* quarter.

[சந்திரன் + திசை]

*[**Skt.** candra→ த. சந்திரன்.]*

சந்திரப்பிறை *šandira-p-pirai,* பெ.(n.) 1. மகளிரணியும் பிறைபோன்ற கழுத்தணி; crescent-shaped necklace of women.

[சந்திரன் + பிறை]

*[**Skt.** candra→ த. சந்திரன்]*

சந்திரபதம் *šandira-padam,* பெ.(n.) நிலவு (சந்திர) மண்டலம் (திவ்.திருநெடுந்.5, வ்யா.); lunar region.

[சந்திர(ன்) + பதம்]

*[**Skt.** candra→ த. சந்திர(ம்).]*

சந்திரபாணி *šandira-pāṇi,* பெ.(n.) வயிரக் கல்; diamond. *"சந்திரபாணி தகைபெறு கடிப்பிணை" (சிலப்.6, 104.).*

*[**Skt.** candra + pāṇi → த. சந்திரபாணி.]*

சந்திரபாவலி *šandira-bāvali,* பெ.(n.) மாதர்கள் காதில் அணியும் நிலவு வடிவான ஓராபரணம் (இ.வ.); moon-shaped ear-ornament worn by women.

*[**Skt.** candra+bāvali → த. சந்திரபாவலி.]*



சந்திரபிம்பம் *šandirabimbam,* பெ.(n.) நிலவுமண்டலம்; disc or orb of the moon.

*[**Skt.** candra+bimba → த. சந்திரபிம்பம்.]*

சந்திரபீசம் *šandira-pīšam,* பெ.(n.) தம்பலப்பூச்சி (மூ.அ.); cochineal insect.

சந்திரபுட்கரணி *šandira-putkaraṇi,* பெ.(n.) திருவரங்கத்து (சீரங்கத்து)க் கோயிலிலுள்ள பொய்கை; a small tank inside the *Šrīrangam* temple. *"தாழ்பிறப் பேழறுக்கு நன்னீருறை சந்திரபுட்கரணியு மேவும்" (குருகூர்ப்.5).*

*[**Skt.** candra + puṣkariṇī → த. சந்திர புட்கரணி.]*

சந்திரபுடம்[1] *šandira-puḍam* பெ.(n.) நிலவொளியில் வைத்தெடுக்கும் மருந்துப்புடம் (Med.); calcination for medical purpose, done in moon light.

[சந்திரம் + புடம்]

*[**Skt.** candra + த. சந்திரம்.]*

சந்திரபுடம்[2] *šandira-puḍam,* பெ.(n.) 1. வானத்தில் நிலவு (சந்திரன்) தோன்றும் நிலை (வின்.); (Astron.) moon's longitude. 2. **சந்திரசுத்தசுபுடம்** பார்க்க; see *šandirašutta-šupudam.*

*[**Skt.** candra+sphuṭa> த. சந்திரபுடம்.]*

சந்திரமண்டலம் *šandira-maṇḍalam,* பெ.(n.) 1. நிலவி (சந்திர)னது வட்டம்; orb or disc of the moon. *"சந்திரமண்டலம்போற் றாமோதரன் கையில்... ஏறி" (திவ்.நாய்ச்., 4).* 2. ஞாயிற்று (ஆதித்த) மண்டலத்திற்கு மேலுள்ளதும் வானுலகத்தைச் சார்ந்ததுமாகிய உலகம் (சி.போ.பா.2, 3); the region or sphere of the moon belived to be above the sun's region. 3. கபாலமத்தியிலுள்ள ஓர் ஒகவிடம் (யோகஸ்தானம்) (வேதா.கட்.50); (*yōga*) moon centre in the central portion of the skull, belived to be the seat of *parā-šakti.*

த.வ. திங்கள்மண்டிலம்

[சந்திர(ன்) + மண்டலம்.]

*[**Skt.** candra→சந்திர(ன்).]*

சந்திரமணி *šandira-maṇi,* பெ.(n.) **சந்திரகாந்தம்** பார்க்க (யாழ்.அக.); see *šandira-gāndam.*

[சந்திர(ன்) + மணி.]

[Skt. candra→சந்திர(ன்).]

சந்திரமத்திமபுத்தி *šandira-mattima-putti,* பெ.(n.) நிலவினது சராசரி கதி (வின்.); (Astron.) mean motion of the moon in the fixed time, as a day, an hour.

[சந்திரமத்திமம் + புத்தி.]

[Skt. candra+madhya→த. சந்திரமத்திமம்.]

சந்திரமத்தியம் *šandira-mattiyam,* பெ.(n.) துங்கமத்தியம் கழித்து தூய்மைச் செய்யப் படாத நிலவின் (சந்திர)கதி (செந்.viii, 218); (Astron.) mean longitude of the moon.

[Skt. candra+madha→த. சந்திரமத்தியம்.]

சந்திரமதி *šandiramadi,* பெ.(n.) அரிச் சந்திரன் மனைவி (அரிச்.பு.); *Hariščandra's* queen.

சந்திரமந்தோச்சம் *šandira-mandōccam,* பெ.(n.) கதிவலயத்திலிருந்து திங்கள் (சந்திரன்) செல்லும் அதிக தூரம்; (Astron.) apsis of the moon.

[Skt. candra+mandōccam→ த. சந்திரமந்தோச்சம்.]

சந்திரமவுலி *šandiramavuli,* பெ.(n.) வைப்பு நஞ்சு (நீலபாடாணம்); a kind of arsenic (native) (சா.அக.).

சந்திரமாசம் *šandira-māsam,* பெ.(n.) இரண்டு மறை உலா மதிகட்கிடைப்பட்ட காலம் (சாந்திரமான மாதம்) (C.G.); lunar month.

[Skt. candra → த. சந்திர(ன்).]

மாதம் → மாசம்.

சந்திரமாலை *šandira-mālai,* பெ.(n.) கழுத்தணி வகை (இ.வ.); a kind of necklace.

[சந்திர(ம்) + த. மாலை.]

[Skt. candra → த. சந்திர(ம்).]

சந்திரமானம் *šandira-mānam,* பெ.(n.) **சாந்திரமானம்** பார்க்க (வின்.); see *šāndira-mānam.*

[Skt. candra→ சந்திரன் + த. மானம்→ சந்திரமானம்.]

சந்திரமுருகு *šandira-murugu,* பெ.(n.) பிறை வடிவாயமைந்த காதணி வகை; crescent shaped ear-ornament.

[Skt. candra + U. candramuru+ த. முருகு.]

சந்திரமோலி *šandira-mōli,* பெ.(n.) **சந்திரமௌலி** பார்க்க; see *šandira-mauli.*

சந்திரமௌலி *šandira-mauli,* பெ.(n.) **சந்திரசேகரன்** பார்க்க; see *šandira-Šēgaran. "சந்திரமௌலி சீர் வெண்டாமரை" (பிரபுலிங்.வசவண்ணர்வ.45).*

[Skt. candra+mauli> த. சந்திரமௌலி.]

சந்திரயோகம் *šandira-yōgam,* பெ.(n.) பிறப்பு ஓரையிலிருந்து ஏழாமிடம் முதல் பன்னிரண்டாம் இடம் வரையும் ஏழு கோள்கள் வரிசையாய் நிற்கும் ஓகம் (சங்.அக.); (Astrol.) a peculiar conjunction of planets in a horoscope in which there are seven planets from the seventh house to the twelfth house calculated from *pirappōrai.*

[Skt. candra+yōga→ த. சந்திரயோகம்.]

சந்திரரோகம்[1] *šandira-rōga,* பெ.(n.) வெறியன் (உன்மத்தம்); moon-struck (சா.அக.).

சந்திரரோகம்[2] *šandira-rōgam,* பெ.(n.) 1. தொழுநோய்; a kind of leprosy. 2. பைத்தியம்; lunacy.

[Skt. candra+rōga> த. சந்திரரோகம்.]

சந்திரரோகி *šandira-rōgi,* பெ.(n.) பித்துப் (பைத்தியம்) பிடித்தவன்; a man in the moon, mad man (சா.அக.).

[Skt. candra+rōgin→ த. சந்திரரோகி.]

சந்திரரேகை[1] *šandira-rēgai,* பெ.(n.) **சந்திரகலை[1]** பார்க்க; see *šandira-kalai.*

[Skt. candra+rekhā→ த. சந்திரரேகை.]

சந்திரரேகை[2] *šandira-rēgai,* பெ.(n.) கைவரி (ரேகை) வகை; (palmistry) a line in palm of hand. *"மருவுசீத சந்திரரேகையினால்" (திருவாரூ.குற. Ms.).*

[Skt. candra+rēkhā> த. சந்திரரேகை.]

சந்திரலக்கினம் *šandira-lakkinam,* பெ.(n.) குறிப்பிட்டா ரொருவர் பிறந்த காலத்தில் திங்களிருக்கும் ஓரை; (Astrol.) zodiacal sign occupied by the moon at the time of one's birth.

[Skt. candra+lagna→ த. சந்திரலக்கினம்.]

சந்திரலவணம் *šandira-lavaṇam,* பெ.(n.) 1. இந்துப்பு; rock salt. 2. கருப்பூரம் (மூ.அ.); camphor.

[Skt. candra+lavaṇa→த. சந்திரலவணம்.]

சந்திரலேகை *šandira-lēgai,* பெ.(n.) **சந்திரகலை, 1.** பார்க்க; see *šandira-kalai.*

[Skt. candra-lēkha> த. சந்திரலேகை.]

சந்திரலோகம் *šandira-lōgam,* பெ.(n.) **சந்திரமண்டலம், 2.** பார்க்க; see *šandira-maṇḍalam,* 2.

[சந்திரன் + உலகம்]

[Skt. candra + த. சந்திர(ன்)]

[த. உலகம் >Skt. Loka]

சந்திரவங்கி *šandira-vaṅgi,* பெ.(n.) பிறைவடிவாயமைந்த தலையணி வகை; crescent shaped ornament for head.

[சந்திரன் + வங்கி.]

[Skt. candra> த. சந்திரன்.]

சந்திரவட்டக்குடை *šandira-vaṭṭa-k-kuḍai,* பெ.(n.) அரசச் சின்னங்களில் ஒன்றாகிய வெண்கொற்றக்குடை (கொ.வ.); state umbrella in the form of a moon, one of king's paraphernalia.

[சந்திர(ம்) + வட்டம்குடை.]

[Skt. candra→ த. சந்திர(ன்).]

சந்திரவட்டம் *šandira-vaṭṭam,* பெ.(n.) **சந்திரவட்டக்குடை** பார்க்க; see *šandira vaṭṭa-k-kuḍai. "வெண்சந்திரவட்ட மேலாட" (காளத்.உலா.171).*

[சந்திர(ம்) + வட்டம்.]

[Skt. candra→ த. சந்திர(ம்).]

சந்திரவம்சம் *šandira-vamšam,* பெ.(n.) **சந்திரகுலம்** பார்க்க; see *šandira-kulam.*

[Skt. candra+vamša→ த. சந்திரவம்சம்.]

சந்திரவலயம் *šandira-valayam,* பெ.(n.) சிலம்புவடிவா யமைந்த இன்னியவகை (J.); brass-ring filled with pebbles, worn on each thumb by a street-singer and used as a small tabour.

[சந்திர(ம்) + த. வலயம்.]

[Skt. candra→ த. சந்திர(ம்).]

சந்திரவளையம் *šandira-vaḷaiyam,* பெ.(n.) 1. தோற்கருவி வகை (சிலப்.3, 27, உரை); a kind of drum. 2. **சந்திரவலயம்** பார்க்க; see *šandiravalayam.*3.தொட்டில் முதலியவற்றைத் தொங்கவிடுவதற்கு மேற்கூரையில் மாட்டுகின்ற வளைய வகை; rings fixed on the ceiling for suspending a swing. 4. கிணற்றுள் வட்டமாக அமைத்து இறக்கப்படும் நெல்லிக்கட்டை; a circular frame of nelli tree fixed at the bottom of a well.

[சந்திர(ம்) + வளையம்.]

[Skt. candra→ த. சந்திர(ம்).]

சந்திரவாதி *šandira-vādi,* பெ.(n.) நிலாவுலகம் அடைவதே முத்தியென்று தருக்குவோன் (த.நி.போ.287); one who holds that final liberation consists in reaching the moon's world.

[Skt. candra+vādin > த. சந்திரவாதி.]

சந்திரவாள் *šandira-vāḷ,* பெ.(n.) **சந்திரகாசம், 1** பார்க்க; see *šandirakāšam,* 1. *"எவ்வகைப் படையும் வெல்லுஞ் சந்திரவாளு மீந்தான்" (உத்தரரா. வரையெடுத்.75).*

[சந்திர(ம்) + த. வாள்.]

[Skt. candra→ த. சந்திர(ம்).]

சந்திரவாளி *šandira-vāḷi,* பெ.(n.) சேலைவகை (இ.வ.); a kind of saree.

[சந்திர(ம்) + வாளி.]

[Skt. candra→ த. சந்திர(ம்).]

சந்திரன் *šandiraṉ,* பெ.(n.) 1. திங்கள்; moon. 2. குபேரன்; *kubēraṉ. "சந்திரதிசை" (திவா.).* 3. இடைகலை; breath of the left nostril. *"சந்திர னொடுங்கி நிற்பத் தபனனே சரிக்குமாறு" (பாரத.வாசுதேவனை.8).*

த.வ. நிலவு, திங்கள்

[Skt. candra> த. சந்திரன்.]

சந்திரன்சிப்பி *šandiraṉ-cippi,* பெ.(n.) முத்துச்சிப்பி (யாழ்.அக.); oyster-shell containing pearl.

[சந்திர(ம்) + சிப்பி.]

[Skt.candra>சந்திரன்]

சந்திரனுப்பு *šandiranuppu,* பெ.(n.) இந்துப்பு; rock-salt (சா.அக.).

சந்திராட்டமம் *šandirāṭṭamam,* பெ.(n.) பிறப்பிய ஓரையினின்று எட்டாமிடத்திலமைந்த நாண்மீன்களுடன் திங்கள் கூடியிருக்கும் நிலை; (Astrol.) conjunction of the moon with the constellations at the eighth house from the *piṟappiya ōrai,* considered inauspicious.

[Skt. candrāṣṭama > சந்திராஷ்டமம் → த. சந்திராட்டமம்.]

சந்திராதபம் *šandirādabam,* பெ.(n.) நிலவொளி (இலக்.அக.); moon light.

[Skt. candra+ā-tapa> த. சந்திராதபம்.]

சந்திராதித்தம் *šandirādittam,* பெ.(n.) அருகனது முக்குடையுள் ஒன்று (சிலப்.11, 1, உரை); an umbrella of Arhat, one of *mu-k-kuḍai*

[Skt. candrāditya> த. சந்திராதித்தம்.]

சந்திராதித்தவரையும் *šandirāditta-varaiyum,* வி.எ. (adv.) திங்கள், ஞாயிறுள்ள வரையில்; as long as moon and sun endure. *"இத்தன்மம் சந்திராதித்தவரையும் நடக்கக் கடவதாகவும்"* (S.I.I.i, 109).

[சந்திராதித்த(ம்) + வரையும்.]

[Skt. candrāditya > த. சந்திராதித்தம்.]

சந்திராதித்தவல் *šandirādittaval,* வி.எ.(adv.) **சந்திராதித்தவரையும்** பார்க்க; see *šandirāditta-varaiyum. "இத்தேவர்க்குச் சந்திராதித்தவல் இறுப்பார்களாகவும்" (S.I.I.iii, 94).*

[Skt.candrāditya-vat>த. சந்திராதித்தவல்.]

சந்திராபீடன் *šandirāpīḍaṉ,* பெ.(n.) **சந்திரசேகரன்** பார்க்க (யாழ்.அக.); see *šandira-sēgaraṉ.*

[Skt. candra+ā-pīḍa> த. சந்திராபீடன்.]

சந்திராயுதம் *šandirāyudam,* பெ.(n.) பிறைவடிவான அம்பு; a crescent headed arrow.

[Skt.candra + a-yudha> த. சந்திராயுதம்.]

சந்திராலோகம் *šandirā-lōgam,* பெ.(n.) ஓர் அணியிலக்கண நூல்; a treatise on rhetoric.

[Skt. candrālōka> த. சந்திராலோகம்.]

த. உலகம் → **Skt.** லோகம்

சந்திராவர்த்தம் *šandirāvarttam,* பெ.(n.) ஞாயிறுமறையும் நேரத்திலிருந்து நள்ளிரவு வரை உள்ளதாகிய தலைநோய் வகை (சீவரட்); severe head-ache which begins at sunset and leves only after midnight.

[Skt. candrāvarta> த. சந்திராவர்த்தம்.]

சந்திரி[1] *šandiri,* பெ.(n.) பல ஆண்டுகளின் திங்கள், நாள் முதலியவற்றின் குறிப்பு (கொ.வ.); almanac, calendar, usually of several years.

[U. jantri> த. சந்திரி.]

சந்திரி² *šandiri*, பெ.(n.) **சந்திரகம்²**, 3 பார்க்க; see *šandiragam³*. *"சந்திரியோலையைக் கண்டு" (இராமநா.அயோத்.2).*

சந்திரிகம் *šandirigam*, பெ.(n.) **சந்திரகம்²**, 3 பார்க்க; see *šandiragam²*

சந்திரிகை *šandirigai*, பெ.(n.) 1. நிலவு (திவா.); moon light. 2. பேரேலம் (மலை.); greater cardamom.

[Skt. candrikā > த. சந்திரிகை.]

சந்திரரோதயக்குளிகை *šandirōdaya-k-kuḷigai*, பெ.(n.) குதம்பைச் சித்தர் முறைப்படி செய்து குளிர்க்காய்ச்சல், காய்ச்சல் போன்றவற்றிற்குக் கொடுக்கும் மாத்திரை; a pill prepared according to the process of kudambai siddha and prescribed for fever and delirum (சா.அக.).

த.வ.நிலாக்குளிகை

[சந்திரோதயம்+குளிகை.]

[Skt. candra+udaya →த. சந்திரோதயம்.]

சந்திரோதயம் *šandirōdayam*, பெ.(n.) 1. நிலாத்தோற்றம்; moon rise. 2. குளிர்ச்சியைத் தரும் ஒருவகை மாத்திரை (பதார்த்த. 1221); (Med.) a cooling pill.

த.வ. நிலாவுதயம்

[சந்திர(ன்)+ உதயம்.]

[Skt.candra→த.சந்திர(ன்).]

சந்திரோபராகம் *šandirōba-rāgam*, பெ.(n.) **சந்திரகிரகணம்** பார்க்க; see *šandira-giragaṇam*.

[Skt. candra+uparāga > த. சந்திரோபராகம்.]

சந்திரோபாலம்பனம் *šalndirōpālambaṇam*, பெ. (n.) காதலருட்பிரிந்தோர் பிரிவுத் துன்பத்தால் திங்களைப் பழித்துக் கூறுகை; reproach of the moon by a lover in separation. *"சந்திரோபாலம்பனப் படலம்" (நைடத.).*

[Skt.candra+upā-lambhana>த. சந்திரோபாலம்பனம்.]

சந்திவாதம் *šandi-vādam*, பெ.(n.) கீல்வாயு என்னும் நோய் (பைஷஜ.190); rheumatism.

[Skt. san-dhi + vāta > த. சந்திவாதம்.]

சந்திவிக்கிரகம் *šandi-vikkiragam*, பெ.(n.) ஐந்து சூழ்ச்சிகளுள் (பஞ்சதந்திரங்களுள்) ஒன்றாகிய அடுத்துக் கெடுக்கை; associating with a foe with a view to ruin him, one of *pañjatandiram*.

[Skt. san-dhi+vi-graha→ த. சந்திவிக்கிரகம்.]

சந்திவிக்கிரகி *šandi-vikkiragi*, பெ.(n.) அமைச்சன் (இ.வ.); minister.

[Skt.sandhi+vi-graha→த. சந்திவிக்கிரகி.]

சந்துக்கினம் *šandukkiṇam*, பெ.(n.) பெருங்காயம்; asafoetida (சா.அக.).

சந்துகோபம் *šandu-kōbam*, பெ.(n.) காரணம் இல்லாமலே மூட்டுகளுக்கேற்படும் அழற்சி; inflammation of a joint (சா.அக.).

சந்துட்டன் *šanduṭṭaṇ*, பெ.(n.) பொந்திகை (திருப்தி)யுடையவன்; one who is happy, contented. *"ராஜனும் சந்துஷ்டனாய்" (குருபரம்.102, பன்னீ.).*

[Skt. san-tuṣṭa> த. சந்துட்டன்.]

சந்துட்டி *šanduṭṭi*, பெ.(n.) **சந்தோச(ட)ம்** 1, 2 பார்க்க; see *šandōšam*, 1,2.

[Skt. san-tuṣṭi> த. சந்துட்டி.]

சந்தூக்கு *šandūkku*, பெ.(n.) பெட்டி (வின்.); chest, box, coffer.

[U. sandūq> த. சந்தூக்கு.]

சந்தூக்குசட்தி *šandūkku-šaṭṭi*, பெ.(n.) கருவூலப் பேழை ஆய்வுச் சோதனை (வின்.); inspection of coffers or treasury.

[U. sandūq+jhaḍti> த. சந்தூக்குசட்தி.]

சந்தேகக்காரன் *šandēga-k-kāraṇ*, பெ.(n.) 1. எதனிடத்தும் ஐயங் (அச்சம்) கொண்டவன்; suspicious, mistrustful person. 2 . (சந்தேகிக்கப்பட்டவன்) ஐயப்பாட்டிற்குரியவன் (இ.வ.); suspect.

[சந்தேகம் + காரன்.]

[Skt. san-dēha → த. சந்தேகம்.]

சந்தேகப்பிராணி *šandēga-p-pirāṇi,* பெ.(n.) மிக எளிதில் ஐயப்படுவோன்; one who is suspicious by nature (கிரியா.).

த.வ. ஐயங்கொளி

[Skt. san-dēha + prāṇin → த. சந்தேகப்பிராணி.]

சந்தேகம் *šandēgam,* பெ.(n.) 1. ஐயம்; doubt, uncertainty, hesitation. *"இதிலோ சந்தேகமில்லை" (தாயு.தேசோ.3).* 2. குற்றம் பற்றிக் கொள்ளும் ஐயம்; suspicion. 3. இல்லாமை; deficiency, want, used euphemistically. *"சாப்பாட்டுக்குச் சந்தேகம்"* (J.). 4. பேரிடர்; peril, risk.

த.வ. ஐயம்

[Skt. san-dēha> த. சந்தேகம்.]

சந்தேகவாரணம் *šandēga-vāraṇam,* பெ.(n.) ஒழுக்கங்கள் பதினான்கனுள் ஒன்றாகிய ஐயந்தெளிவிக்கை (வின்.); clearing of doubts, one of 14 *tayā-virutti,* q.v.

[Skt. san-dēha+vāraṇa> த. சந்தேக வாரணம்.]

சந்தேகாலங்காரம் *šandēgālaṅgāram,* பெ.(n.) ஐயவணி (Rhet.); a figure of speech.

[Skt.san-dēha+alaṅ-kāra>த. சந்தேகாலங் காரம்.]

சந்தேகி[1]-த்தல் *šandēgi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. துணிவு கொள்ளாதிருத்தல்; to doubt, hesitate. 2. (குற்றமுளதாக) ஐயப்படுதல்; to suspect.

த.வ. ஐயப்படுதல்

[Skt. san-dēha> த. சந்தேகி-.]

சந்தேகி[2] *šandēgi,* பெ.(n.) பார்க்க; சந்தேகக் காரன்; see *sandēga-k-kāran.*

[Skt. san-dēhi> த. சந்தேகி.]

சந்தேசம் *šalndēšam,* பெ.(n.) தூது; message, embassy.

[Skt. san-dēša > சந்தேசம்.]

சந்தை *šandai,* பெ.(n.) 1. மறை; the *vēdas. "சந்தைகளுல் சாகையாகி" (காஞ்சிப்பு. கழுவா.232).* 2. மறை முதலியவற்றை, குரு சொல்ல மாணாக்கன் இரண்டு அல்லது மூன்று முறை அவற்றைத் திரும்பச் சொல்வது; recital of the *vēdic* text, etc., by a disciple following his preceptor's lead. *"வேதச் சந்தை சொல்லி" (திருவாலவா.56, 19).* 3. பதிக முதலியவற்றுள் செய்யுள்தோறும் திரும்பத் திரும்பவருஞ் சொல்; refrain, burden. *"நமச்சிவாயவெனுஞ் சந்தையாற் றமிழ்ஞானசம்பந்தன் சொல்" (தேவா.1177, 11).* 4. செய்யுள் (இலக்.அக.); verse, stanza. 5. சிந்தித்தற்குரிய பெரியோர் கூற்று; utterance of great men. *"ஆளவந்தார் அருளிச்செய்த சந்தை" (ஈடு.1, 1, 1).*

[Skt. chandas> த. சந்தை.]

சந்தைசொல்(லு)-தல் *šandai-šol-,* 8. செ.குன்றாவி.(v.t.) மறை முதலியன ஓதுதல்; to recite the *vēdas,* etc. *"வேதச்சந்தை சொல்லி" (திருவாலவா.56, 19).*

[Skt. chandas>சந்தை + த. சொல்(லு)-.]

சந்தைவை-த்தல் *šandai-vai-,* 4 செ.கு.வி. (v.i.) பிறர் திருப்பிச் சொல்லும்படி மூலபாடம் முதலியன சொல்லுதல்; to lead the recitation of a text, disciples and others following in chorus.

[Skt. sandas>சந்தை + த. வை-.]

சந்தோகசூத்திரம் *šandōga-šūttiram,* பெ.(n.) சாமவேதபுலவனுக்குரிய கற்பநூல்; *sūtra* prescribing the rites and rituals of the *šāma-vēda* sect. *"இக்கோத்திரத்துச் சந்தோக சூத்திரத்து" (S.I.I.ii, 522, 54).*

[Skt. chandō-ga+sūtra> த. சந்தோக சூத்திரம்.]

சந்தோகன் *šandōgan,* பெ.(n.) 1. சாம வேதத்துக்கு உரியவன்; brahmin belonging to the *šāma-vēda* sect. 2. மறை யொன்றால் மட்டும் அறியப்படும் பரம்பொருள்; God, as one who can be realised only through *Vēdās*. *"சந்தோகன்... சாமவேதி" (திவ்.பெரியதி.5, 5, 9).*

[Skt. chandō-ga> த. சந்தோகன்.]

சந்தோசம் *šandōšam,* பெ.(n.) 1. மகிழ்ச்சி; pleasure, delight. 2. மனநிறைவு; satisfaction, gratification. 3. நன்கொடை (இ.வ.); present.

[Skt. san-tōṣa> த. சந்தோசம்.]

சந்தோசி-த்தல் *šandōši-,* செ.கு.வி.(v.i.) 1. மகிழ்தல்; to rejoice. 2. பொந்திகை அடைதல்; to be gratified.

[Skt. san-tōṣa> த. சந்தோசி-த்தல்.]

சந்தோடகினி *šandōḍagiṉi,* பெ.(n.) துன்பநீக்கம் to get rid of sufferings (சா.அக.).

சந்தோடம் *šandōḍam,* பெ.(n.) **சந்தோசம்** பார்க்க; see *šandōšam* *"சந்தோடமோட டக்கன்றனைத் தான் பார்த்திடலோடும்" (பிரபோத.5, 27).*

[Skt. san-tōṣa> த. சந்தோடம்.]

சந்தோபிசிதம் *šandōbišidam,* பெ.(n.) **சந்தோவிசிதி** பார்க்க (திவா.); see *šandōvišidi.*

சந்தோபிசிதி *šandōbišidi,* பெ. (n.) **சந்தோவிசிதி** பார்க்க (வின்.); see *sandōvi-šidi.*

[Skt. candō-vicit → த. சந்தோபிசிதி.]

சந்தோவிசிதி *šandōvišidi,* பெ.(n.) மறையின் ஓசைகளை (சந்தங்களை) உணர்த்தும் நூல் (சி.போ.பா.1, 1, பக்.62); treatise on prosody, especially *vēdic.*

[Skt. candō-viciti> த. சந்தோவிசிதி.]

சந்நத்தம் *šannattam,* பெ.(n.) **சன்னத்தம்** பார்க்க; see *šaṉṉattam.*

சந்நத்தன் *šannattaṉ,* பெ.(n.) **சன்னத்தன்** பார்க்க; see *šṉṉattaṉ.*

சந்நதம் *šannadam,* பெ.(n.) **சன்னதம்** பார்க்க; see *šaṉṉadam.*

சந்நபித்தம் *šannapittam,* பெ.(n.) கண்டதுண்டம்; the name for several pieces sliced or eut off (சா.அக.).

சந்நம் *šannam,* பெ.(n.) 1. அராவிய பொடி; fine particles obtained by filing as of metals. 2. சிறுகெம்புக் கற்கள்; small fine rubies (சா.அக.).

சந்நிகிதம் *šannigidam,* பெ. (n.) அண்ண ணியம்; மிக அருகிலுள்ளது (மணிமே.14, 29, உரை); that which is near or proximate.

த.வ. அண்மைநிலை

[Skt. san-ni-hita> த. சந்நிகிதம்.]

சந்நிதானம் *šannidāṉam,* பெ.(n.) **சன்னிதானம்** பார்க்க; see *saṉṉidāṉam.*

[Skt. šan-ni-dhāna>சந்நிதானம்.]

சந்நிதி *sannidi,* பெ.(n.) **சன்னிதி** பார்க்க; see *šaṉṉidi.*

[Skt. šan-ni-dhi → த. சன்னிதி → சந்நிதி.]

சந்நிதித்துவாரம் *sannidi-t-tuvāram,* பெ.(n.) கோயிற்கதவு தாழிட்டிருக்குங்கால் கருவறையில் உள்ள (மூல விக்கிரகத்தைக்) மூலவரை வழிபடுவதற்கு உதவியாகத் திருமதிலில் அமைக்கப்பட்ட புழை (இ.வ.); aperture in the wall of a temple through which the deity can be seen even when the door is shut.

[Skt. san-ni-dhi + dvāra. > த. சந்நிதித்துவாரம்]

சந்நிபாதம் *šanni-pādam,* பெ.(n.) **சன்னிபாதம்** பார்க்க; see *saṉṉi-pādam.*

[Skt. šan-ni-pāta > த. சந்நிபாதம்.]

சந்நியசி–த்தல் *šanniyaši-,* 4 செ.கு.வி. & செ.குன்றாவி.(v.i.&v.t.) **சன்னியசி–த்தல்** பார்க்க; see *sanniyaši-,.*

[Skt. šan-ñyas→ த.சன்னியசி→சந்நியசி.]

சந்நியம் *sanniyam,* பெ.(n.) 1. உடல் (தேகம்); body. 2. மரமஞ்சள்; tree turmeric-*coscinum.fenestratum.* (சா.அக.).

சந்நியாசம் *šanniyāšam,* பெ.(n.) **சன்னியாசம்** பார்க்க; see *šanniyāsam.*

[Skt. san-nyāsa→ த. சன்னியாசம் → சந்நியாசம்.]

சந்நியாசயோகம் *šanniyāša-yōgam,* பெ.(n.) 1. ஆதன் (சீவான்மா) பரவாதனோடு (பரமான்மாவோடு) ஒன்றுதற்கு அடிப்படையாகும் பற்றொழிகை (சர்வசங்க பரித்தியாகம்); complete renunciation as a means to the *jivātman* becoming one with *paramātman.* 2. துறவியாதலை (சன்னியாசியாதலை) உணர்த்தும் கோள்நிலை (கிரக நிலை); configuration of planets at birth of a person, indicating that he is destined to become a *šanniyāši.*

த.வ. பற்றுநீக்கம்

[Skt. san-nyāsa + yōga→ த. சந்நியாசயோகம்.]

சந்நியாசி *šanniyāši,* பெ.(n.) **சன்னியாசி** பார்க்க; see *šanniyāsi.*

[Skt. san-nyāsa → த. சந்நியாசி.]

சந்நியை *šanniyai,* பெ.(n.) தோழி; a female companion (சா.அக.).

சந்நிருத்தகுதம் *šannirutta-kudam,* பெ.(n.) எருவாய்ச் சுருக்கம்; contraction of the orifice of the anus (சா.அக.).

சந்நிரோதனம் *šanni-rōdanam,* பெ.(n.) **சன்னிரோதனம்** பார்க்க; see *sanni-rōdanam.*

[Skt.san-ni-rōdhana→ த. சன்னிரோதனம் → சந்நிரோதனம்.]

சந்நிவேசம் *šanni-vēšam,* பெ.(n.) **சன்னிவேசம்** பார்க்க; see *sanni-vēsam.*

[Skt. san-ni+vēša→ த. சன்னிவேசம் → சந்நிவேசம்.]

சநாதனதர்மம் *šanādana-darmam,* பெ.(n.) **சனாதனதர்மம்** பார்க்க; see *sanādana-darmam* (சா.அக.).

[சநாதன(ம்) + தருமம்.]

[Skt. šanātana→ த. சநாதனம்.]

சநிட்குடி *šanit-kudi,* பெ.(n.) ஏலம்; cardamon-*elleteria cardamomum* (சா.அக.).

சநிதம் *šanidam,* பெ.(n.) பிறப்பு; birth, child-birth (சா.அக.).

[Skt. jan →த. ஜனிதம் →சநிதம்.]

சநுக்கிரகம் *šanukkiragam,* பெ.(n.) வடமொழி (பேரகத்.141); sanskrit.

[Skt. samskrta> த. சநுக்கிரகம்.]

சநுசம் *šanušam,* பெ.(n.) மிளகு; black pepper - *Pipernigrum* (சா.அக.).

சநைநர்மேகம் *šananari-mēgam,* பெ.(n.) ஒருவகை வெள்ளை நோய் (மேக நோய்). இதனால் சிறுநீர் கொஞ்சம் கொஞ்சமாக மிருதுவைப் பெற்று இறங்கும்; a venereal disease signifying the contraction of the urethra. It is marked by little dribbling out while trying to make water stricture of urine (சா.அக.).

சப்சாகொட்டடி *šapšā-kottadi,* பெ.(n.) சேலை வகை (இ.வ.); a saree of dark green colour.

[சப்சா + கொட்டடி.]

[Persn. sabzā> சப்சா.]

சப்சாசேலை *šapšā-šēlai,* பெ.(n.) ஒருவகைப் பட்டுச்சேலை (இ.வ.); a kind of silk cloth worn by women.

[சப்சா + சேலை.]

[U. sabza→ த. சப்சா.]

சப்சாடா *šapšāḍā,* பெ.(n.) முழுவதும் (இ.வ.); completely.

[U. sāfjāḍā> த. சப்சாடா.]

சப்சீ *šapcī,* பெ.(n.) கீரை வகைகள் (இ.வ.); greens.

[U. sabzi> த. சப்சீ.]

சப்தக்கிரந்தி *šapda-k-kirandi,* பெ.(n.) மான், அகங்காரம், ஐம்பூதங்களின் நுண்ணிலைகள் (பஞ்சதன் மாத்திரை) என்னும் ஏழு மெய்ப் பொருள்கள் (தத்துவங்கள்) (சித்.சா.ஞான.10); (*šaivam*) the seven principles in metaphysics, viz., *māṉ, agaṅkāram, pañja-taṉmāttirai.*

[Skt. saptan+grandhi> த. சப்தக்கிரந்தி.]

சப்தகம் *šapdagam,* பெ.(n.) 1. ஏழு கொண்டது; a collection of seven. 2. ஏழு தானம், கொடுக்கப்படும் ஒரு சவச் சடங்கு; a religious ceremony performed on the 12the day after death in which 7 things are given as charity (சா.அக.).

[Skt. saptan→ த. சப்தகம்.]

சப்தசந்தானம் *šapda-šandāṉam,* பெ.(n.) தடாக நிலைகோள் (பிரதிஷ்டை), நிலத்தடியில் செல்வத்தை புதைக்கை (தனநிட்சேபம்), பார்ப்பனச்சேரி நிலைகோள் (அக்கிரகாரப் பிரதிஷ்டை), தேவாலயநிலை கோள் (பிரதிஷ்டை) முதலான ஏழு வகையான நற்பெருஞ்செயல்களைச் செய்தலால் ஏற்படுங் புகழ்; fame resulting from seven kinds of great deeds, viz., *tadāga-p-piradistai, taṉa-nitcēpam, akkirakāra-p-piraḍstai, tēvālaya-p-piradištai, nandavaṉa-p-piradistai, pirapanda-nirmāṇam, cattira-p-piratišḍai.*

[Skt. saptan + san-tāna >த.சப்தசந்தானம்.]

சப்தசமுத்திரம் *šapda-šamuttiram,* பெ.(n.) ஏழுகடல்; the seven circular concentric oceans.

[Skt. saptan+samudra> த.சப்தசமுத்திரம்.]

சப்தசரி *šapdašari,* பெ.(n.) ஏழு சரமுள்ள கழுத்தணிவகை; a kind of necklace having seven strands. *"சப்தசரியொன்றிற் கோத்த முத்து வட்டமும்" (S.I.I.ii, 143).*

[சப்த(ம்) + சரி.]

[Skt. sapta → த. சப்த(ம்).]

சரி → சரி

சப்தசாகரம் *šapda-šāgaram,* பெ.(n.) (ஓசைமிக்க கடல்) **சப்தசமுத்திரம்** பார்க்க; see *šapta-šamuttiram.*

[Skt. šabda+sāgara> த. சப்தசாகரம்.]

சப்தசாதி *šapda-šādi,* பெ.(n.) ஏழு பிறப்பு; the seven kinds of birth (சா.அக.).

[Skt. saptan+jāti → த. சப்தசாதி.]

சப்தசாலம் *šapda-šālam,* பெ.(n.) ஒலித் திரள்; series of sounds. *"சங்கீதம் அர்த்த மில்லாத சப்தஜாலந்தானே" (கோபால கிருஷ்ணபாரதி, 62).*

[Skt. šabda+jāla> த. சப்தசாலம்.]

சப்தசுரம் *šapta-šuram,* பெ.(n.) ஏழிசை; (Mus.) the seven notes of the gamut.

[Skt. saptan+svara> த. சப்தசுரம்.]

சப்தசோதனைக்குழல் *šapda-šōdaṉai-k-kuḻal,* பெ.(n.) இதயத் துடிப்பறியுங் கருவி (இக்.வ.); stethescope.

[சப்தசோதனை + குழல்.]

[Skt. sabda+šōdhana → த. சப்தசோதனை.]



சப்ததாது *šapda-tādu,* பெ.(n.) உடம்பின் எழு வகைத் தாதுக்கள்; the seven constituent parts of the body (சா.அக.).

த.வ. ஏழமூல

[சப்த(ம்) + தாது.]

***[Skt. sapta +** த. சப்த(ம்)]*

சந்திரிகாபைரவி *šandirikā-bairavi,* பெ.(n.) இசை வகை (பரத.இராக.102); (Mus.) a specific melody-type .

***[Skt. candrikā+bhairavi>** த. சந்திரிகா பைரவி.]*

சப்ததாளம் *šapda-tāḷam,* பெ.(n.) ஏழுவகைத் தாளம்; (Mus.) seven common varieties of time measure.

[சப்த(ம்) + தாளம்.]

***[Skt. saptan→**த. சப்த(ம்).]*

சப்தபாலம் *šapda-pālam,* பெ.(n.) குதிரை எருது ஒட்டகம் இவற்றின் அழுக்கைப் போக்கப் பயன்படுத்தும் கருவி (சுக்கிரநீதி, 325); a kind of brush used in grooming horse, ox or camel.

***[Skt. sapta+phāla>** த. சப்தபாலம்.]*

சப்தபுரி *šapda-puri,* பெ.(n.) ஏழு தெய்வத்தன்மை நிறைந்த நகரங்கள்; the seven sacred cities.

[சப்த(ம்) + புரி.]

***[Skt. sapta →** த. சப்த(ம்).]*

சப்தம்[1] *šapdam,* பெ.(n.) ஒலி, ஓசை (சூடா.); sound, voice.

***[Skt. šabda>** த. சப்தம்¹.]*

சப்தம்[2] *šaptam,* பெ.(n.) ஏழு (சூடா); seven.,

***[Pkt. satt→Skt. saptan>** த. சப்தம்².]*

சப்தம்[3] *šapdam,* பெ.(n.) (நாட்.) பாடமும் சொற்கட்டுகளும் மாறிமாறி வரும் அமைப்பு அல்லது உருப்படி; suggestive and expressive use of gestures communicating the meaning of individual words (கிரியா.).

சப்தமண்டலம் *šapda-manḍalam,* பெ.(n.) எழு வகை விண் மண்டிலங்கள் (சது.); the seven regions of the universe, viz.

[சப்தம் + மண்டலம்.]

***[Skt.saptan →** த. சப்த(ம்)]*

எழு வகை மண்டலங்கள் : 1. முகில் (மேக) மண்டிலம் 2. கதிரவ (சூரிய) மண்டிலம், 3. திங்கள் (சந்திரன்) மண்டிலம், 4. விண்மீன் (நட்சத்திர) மண்டிலம், 5. கோள் (கிரக) மண்டிலம், 6. ஏழு முனிவர்கள் (ஸப்தரிஷி) மண்டிலம், 7. துருவ மண்டிலம் என்று விட்ணு (விஷ்ணு) புராணமும், வாயு மண்டிலம், வருண மண்டிலம், சந்திர மண்டிலம், சூரிய மண்டிலம், நட்சத்திர மண்டிலம், அக்கினி மண்டிலம், திரிசங்கு மண்டிலம் என்று சதுரகராதி கூறுகின்றன.

சப்தமருத்து *šapda-maruttu,* பெ.(n.) ஏழு மண்டலங்களிலும் உள்ள ஏழு வளி (வாயுக்கள்); the seven winds of the universe residing in the *šaptamanḍalam.*

***[Skt. saptan+marut →** சப்தமருந்து.]*

எழு வகை வாயுக்கள்: 1. ஆவகம், பிரவகம், சம்வகம், உத்வகம், விவகம், பரிவகம், பராவகம் என்பன.

சப்தராசிகம் *šapda-rāšigam,* பெ.(n.) கணித வகை; (Math.) the rule of seven, a kind of compound proportion.

***[Skt. sapta-rāšika>** த. சப்தராசிகம்.]*

சப்தரிசிமண்டலம் *šapdariši-manḍalam,* பெ.(n.) ஏழு விண்மீன்கள் அடங்கிய ஒரு விண்மீன் கூட்டம்; ursa major or the great bear (கிரியா.).

[சப்தரிசி + மண்டலம்.]

***[Skt. saptarṣi →** த. சப்தரிசி.]*

சப்தவர்க்கம் *šapda-varkkam,* பெ.(n.) 1. அரசு, படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு,

அரண் என்ற அரசியற்குரிய ஏழுறுப்புகள்; the seven elements constituting a Government according to the Hindu polity, viz., *arašu, padai, kudi, kūl, amaiccu, naṭpu, araṇ.* 2. **சத்த வருக்கம்** பார்க்க; see *šatta-varukkam.*

[Skt. saptan+varga> த. சப்தவர்க்கம்.]

சப்தவாதம் *šapda-vādam,* பெ.(n.) ஒரு நரம்பு நோய்; a kind of nervous disease (சா.அக.).

[Skt. sapta+vāta → த. சப்தவாதம்.]

சப்தவாயு *šapda-vāyu,* பெ.(n.) **சப்தமருத்து** பார்க்க; see *šapda-marttdu* (சா.அக.)

[Skt. sapta+vāyu → த. சப்தவாயு.]

சப்தவேதி *šapda-vēdi,* பெ.(n.) ஒலியின் மூலம் பொருளை இலக்காக வைத்து அம்பு எய்யும் வித்தை; the art of shooting at an unseen object, judging its position by sound.

த.வ. ஒலியிலக்கு

[Skt. šabda-vēdhin> த. சப்தவேதி.]

சப்தறா *šapdaṟā,* பெ.(n.) கப்பலின் முன்னணியத்திலிருந்து வெளியே புறப்படும் உத்திரம் (M.Navi.81); bowsprit.

த.வ. அணியக்கால்

சப்தறாசேர்பறுவான் *sapdaṟā-cērpaṟuvāṉ,* பெ.(n.) சப்தறாவுக்கு அருகிலுள்ள, சிறிய உத்திரம்; (M.Navi.82) spirit-sail gaff.

சப்தறாபோயிபந்து *šapdaṟā-pōyipandu,* பெ.(n.) கப்பலின் முன்னணியத்தின் (சப்தறாவின்) அடிப்பக்கத்தைக் கட்டுவதற்கு உதவுங் கயிறு அல்லது சங்கிலி (M.Navi.85); bowspirit gammoning.

த.வ. அணியக்கனல்கயிறு

சப்தறாலவுரான் *šapdaṟā-lavurāṉ,* பெ.(n.) கப்பலின் முன்னணியத்தின் (சப்தறா மரத்தின்) பக்கப் பற்றுக்கோடு (ஆதாரம்); bow spirit shrouds.

சப்தாகபாராயணம் *šapdāga-pārāyaṇam,* பெ.(n.) **சத்தாகம்** பார்க்க (கொ.வ.); see *šattāgam.*

[Skt. sa ptāha + parāyaṇa த. சப்தாகபாராயணம்.]

சப்தாகம் *šapdāgam,* பெ.(n.) **சத்தாகம்** பார்க்க (இ.வ.); see *šattāgam.*

[Skt. saptāha> த. சப்தாகம்.]

சப்தாங்கம் *šapdāṅgam,* பெ.(n.) **சப்தவர்க்கம், 1.** பார்க்க; see *sapda-varkkam.*

[Skt. saptāṅga → த. சப்தாங்கம்.]

சப்தார்த்தம் *šapdārttam,* பெ.(n.) **சத்தார்த்தம்** பார்க்க (இ.வ.); see *sattārttam.*

[Skt. šabda+artha> த. சப்தார்த்தம்.]

சப்தி *šapti,* பெ.(n.) கைப்பற்றுகை (legal) attachment.

[U. zapti> த. சப்தி.]

சப்திசெய்–தல் *šapti-cey-,* 1. செ.குன்றாவி. (v.t.) வரி முதலியவைகட்கு ஈடாகச் சொத்துக்களை அதிகாரிகள் அரசு வசப் படுத்துதல்; (legal) to attach property, to distrain.

த.வ. கைப்பற்றல்

[U. zabti + ஜப்தி > சப்தி > த. செய் > த. சப்திசெய்–.]

சப்தியிலிரு–த்தல் *šaptiyil-iru-,* 4 செ.கு.வி. (v.i.) பொருள்கள் நீதிமன்றத்தின் கட்டுப் பாட்டில் (ஆதீனத்தில்) இருத்தல்; (legal) to be under sequestration.

[U. zabti> த. சப்தி + இல் + இரு–.]

சப்நிவீசு *šapnivīšu,* பெ.(n.) எழுத்தர்; writer, scribe.

[U. sabnivis> த. சப்நிவீசு.]

சப்பங்கம் *šappaṅgam,* பெ.(n.) **சப்பங்கி[3]** (M.M.) பார்க்க; see *šappaṅgi.*

சப்பங்கி[1] *šappaṅgi,* பெ.(n.) சப்பான் அரசாங்கம் (வின்.); Japan.

[Chin. zhi-pan-kwe> த. சப்பங்கி.]

சப்பங்கி² *šappangi,* பெ.(n.) ஒரு வகை மரம் (வின்.); sappan-wood, m.tr. caesalpina sappan.

[Malay. sapang> த. சப்பங்கி.]

சப்பங்கி³ *šappanngi,* பெ.(n.) மந்தமான அறிவுள்ளவன்; slow, dull person (யாழ்ப்) ஒ.நோ.சோப்பனாங்கி.

சப்பங்கிச்சாயம் *šappangi-c-cāyam,* பெ.(n.) சப்பங்கி வேரிலிருந்து எடுக்கும் வண்ணம்; colour or dye from the root of *cappangi.*

[Skt. sapang > சப்பங்கி + த. சாயம் → த. சப்பங்கிச் சாயம்.]

சால் → சாய் → சாயம்

சப்பங்கு *šappangu,* பெ.(n.) **சப்பங்கி²** பார்க்க; see *šappangi.*

சப்பளாத்தி *šappaḷātti,* பெ.(n.) 1. பருத்த உடலுடையவன்-ள்; corpulent person. 2. திறமையில்லாதவ-ன்-ள்; unintelligent, dull person.

சப்பன்னம் *šappannam,* பெ.(n.) ஐம்பத்தாறு; the number 56. *"சப்பன்னபாசை" (வின்.).*

[Pkt. cappanaca > த. சப்பன்னம்.]

சப்பு¹ *šappu,* பெ.(n.) வழலைக்கட்டி (சவுக்காரம்) (இ.வ.); soap.

[E. soap > த. சப்பு.]

சப்பு² *šappu,* பெ.(n.) காரணம்; cause.

[Arab. sabab> த. சப்பு.]

சப்போட்டா *šappōṭṭā,* பெ.(n.) மண் வண்ணத்தோலும், வெளிர்ப் பழுப்பு நிறச் சதைப் பகுதியுமுடைய சிறு பழம்; sapota plum (க்ரியா.).

த.வ. மண்ணிப்பழம், சீமைஇலுப்பை



சப்ராசி *šaprāsi,* பெ.(n.) வில்லையூழியன்; (C.G.) liveried peon, orderly, as wearing a badge .

[U. caprāsi> த. சப்ராசி.]

சப்சா *šapjā,* பெ.(n.) 1. கருமயிலை வண்ணம் (நிறம்); iron-grey, as the colour of a horse. 2. திருநீற்றுப்பச்சை; sweet basil.

[U. sabza> த. சப்ஜா.]

சபக்கத்தொடர்ச்சி *šabakka-t-toḍarcci,* பெ.(n.) நற்பக்கத்தினின்று (சபக்கத்தினின்று) எடுத்துக்காட்டும் தொழில் (வியாத்தி) (மணிமே.29, 72); affirmative statement of invariable concomitant illustrated by an affirmative example.

[Skt. sa-pakṣa> சபக்கம் + தொடர்ச்சி > த. சபக்கத்தொடர்ச்சி.]

சபக்கம் *šabakkam,* பெ.(n.) நெருப்புண்மை துணியப்பட்ட அடுக்களைபோலத் துணியப்பட்ட பொருள் முன்பு வெளியான இடம்; an instance in which the major term is found concomitant with the middle term, as kitchen when fire is the major term. *"சபக்கத்துண்டாதலும்" (மணிமே.29, 123).*

[Skt. sa-pakṣa > த. சபக்கம்.]

சபட்சம் *šabaṭcam,* பெ.(n.) **சபக்கம்** பார்க்க; see *sabakkam.*

[Skt. sa-paksa> த. சபட்சம்.]

சபதக்காரன் *šabada-k-kāran,* பெ.(n.) சூளுரை செய்வோன் (இ.வ.); one who bets or takes a vow.

[சபதம் + காரன்.]

[Skt. šapatha> த. சபதம்.]

சபதபம் *šaba-dabam,* பெ.(n.) மறை யொழுக்கங்கள் (வைதிகவொழுக்கங்கள்) (கொ.வ.); religious or devotional exercises.

[Skt. japa+tapas> த. சபதபம்.]

சபதம் *šabadam,* பெ.(n.) சூளுரை; asseveration by oath, vow. *"சில சபதந்தனைப் பண்ண" (இராமநா. உயுத்.57).* 2. போட்டி (பந்தயம்) (வின்.); wager.

த.வ. சூளுரை, சூள்

[Skt. šapatha> த. சபதம்.]

சபதம்போடு-தல் *šabadam-pōḍu-,*20 செ.கு.வி. (v.t.) 1. உறுதி செய்தல்; to take vow. 2. போட்டி போடுதல் (பந்தயங்கட்டுதல்) (கொ.வ.); to lay a wager.

த.வ. சூளுரைத்தல்

[சபதம் + போடு-.]

[Skt. šapatha → த. சபதம்.]

சபதமாயிரு-த்தல் *šabadamāy-iru-,* 4 செ.கு.வி. (v.i.) இறுமாந்திருத்தல் (இ.வ.); to be haughty and reserved.

[Skt. sapatha→ த. சபதம் + த. ஆய் + த. இரு> த. சபதமாயிரு-.]

சபப்நாமா *šabap-nāmā,* பெ.(n.) முறை மன்றத்தின் ஆணையை நேரில் நிறைவேற் றாமைக்குச் சிற்றூர் அலுவலர் (கிராமாதிகாரி) முதலியவரைக் கொண்டு நயனகக் கட்டளையர் (அமீனா) செய்து கொள்ளும் மெய்ச்சான்று (அத்தாட்சி) (இ.வ.); (legal) return of a process server reporting the circumstances under which service of summons, etc., could not be effected on a person, usually attested by village officer.

[Skt. sapadi+U. nāmā > த. சபப்நாமா.]

சப்பு *šabappu.* பெ.(n.) காரணம்(C.G.); reason, explanation .

[U. sabab> த. சபப்பு.]

சபர்[1] *šabar,* பெ.(n.) கப்பற் செலவு (வின்); voyage.

த.வ. கடற்செலவு

[U. safar> த. சபர்.]

சபர்[2] *šabar,* பெ.(n.) பொறுத்தற் குறிப்பு; expr. signifying 'silence!' 'pause'.

[U. ṣabr> த. சபர்.]

சபர்[3] *šabar,* பெ.(n.) அரபி ஆண்டில் இரண்டாம் மாதம்; the second month in the Arabic year.

[Arab. safar> த. சபர்.]

சபரசிந்தாமணி *šabara-šindāmaṇi,* பெ.(n.) மலையாளத்து மலைவாணர்கள் சாவமிடும் (சபிக்கும்) சாவிப்பு (மாரண) மந்திரத்தைக் கூறும் ஒரு கருநாடக மந்திர நூல்; a carnatic treatise on black art or sorcery practised by the mountaineers of Malabar (சா.அக.).

சபரணை[1] *šabaraṇi,* பெ.(n.) ஆதரவு (யாழ்.அக.); support.

[Skt. saṃ-rakṣaṇa> த. சபரணை.]

சபரணை *šabaraṇai,* பெ.(n.) 1. நிறைவு; fulness. 2. முன்னேற்பாடு (ஆயத்தம்); readiness. 3. ஒழுங்கு; propriety. *"செட்டுஞ் சபரணையு மாயிருந்தான்" (நெல்லை.).*

[Skt. sam-pūrṇa> த. சபரணை.]

சபரம் *šabaram,* பெ.(n.) கெண்டை மீன் (பிங்.); carp, silvery, attaining 5 inch in

length-Barbus chola.

[Skt. šaphara> த. சபரம்.]



சபரன் *šabaran,* பெ.(n.) வேடன்; hunter.

[Skt. šabara> த. சபரன்.]

சபரி[1] *šabari,* பெ.(n.) இராமனின் அருள் பெற்றவளாக, இராமாயணத்திற் கூறப்படும் ஒரு வேட்டுவப் பெண்; a huntress devotee who won the blessings of *Srī Rāma.*

[Skt. šabarī> த. சபரி[1].]

சபரி[2] *šabari,* பெ.(n.) **சபரியை** பார்க்க (வேதாரணி. இராமநாத.12); see *šabariyai.*

சபரியை *šabariyai,* பெ.(n.) பூசை; worship. *"சபரியை விதிமுறை புரிகுவார்" (திருவிளை. திருமணப்.60).*

[Skt. saparyā> த. சபரியை.]

சபலங்கெட்டவன் *šabalaṅ-keṭṭavan,* பெ.(n.) பயனற்றவன் (இ.வ.); a useless or good for nothing fellow.

[சபலம் + கெட்டவன்.]

[Skt. sa-phala → த. சபலம்.]

சபலம் *šabalam,* பெ.(n.) நிலையிலாவுள்ளம்; transitory person.

த.வ. அலைபுளம்

[Skt. sa-phala> த. சபலம்.]

சபலன் *šabalan,* பெ. (n.) புலனடக்கமில்லாதவன் (இ.வ.); a fickle minded person, one unable to control his senses.

[Skt. capala> த. சபலன்.]

சபலி *šabali,* பெ.(n.) மாலையொளி; evening twilight (சா.அக.).

[Skt. sabali> த. சபலி.]

சபலை *šabalai,* பெ.(n.) 1. மின்னல் (பிங்.); lightning. 2. மனத்திட்பமற்றவள் (இ.வ.); fickle-minded woman. 3. திருமகள் (சங்.அக.); Tiru magaḷ, the Goddess of wealth, as inconstant.

[Skt. capalā> த. சபலை.]

சபவடம் *šaba-vaḍam,* பெ.(n.) உருச்செய்யும் மாலை (செபமாலை); string of beads for keeping count in prayer, rosary. *"சபவடமும் வெண்ணூல் மார்பும்" (திருவாலவா.27, 51).*

[சபம் + வடம்.]

[U. japa + த. வடம் > த. சபவடம்.]

சபவிசாரணை *šaba-visāraṇai,* பெ.(n.) சவ ஆய்வு; coroner's inquest.

[சபம் + விசாரணை.]

[த. சவம் > Skt. சபம்.]

சபவேள்வி *šaba-vēḷvi,* பெ.(n.) மந்திரவழிபாடு (செபயாகம்) (சி.சி.8, 23, சிவஞா.); recitation of mantras.

[சபம் + வேள்வி.]

[Skt. japa → த. சபம்.]

சபா *šabā,* பெ.(n.) கலை நிகழ்ச்சிகளை உறுப்பினர்களுக்காக நடத்தும் ஓர் அமைப்பு; organization conducting cultural programmes. *"நாடக சபா/வருடம் தவறாமல் இசை விழாக்களை நடத்தும் சபாக்கள்" (க்ரியா.).*

த.வ. அவை

[த. அவை → சவை → சபை → Skt. sabha.]

அமைதல் = நெருங்குதல், கூடுதல். அமை = கூட்டம். அமை → அவை → சபை → சபா.

சபாக்கிரமம் *šabā-k-kiramam,* பெ.(n.) தொழுகைக்குக் கூடும் கிறித்துவ மதக் கூட்டத்தின் கோட்பாடுகள் (R.C.); church rules.

[Skt. šabhā+krama> த. சபாக்கிரமம்.]

சபாகம்பம் *šabā-kāmbam,* பெ.(n.) அவைக்கு அஞ்சுகை (இலக்.அக.); stage-fright, nervousness on facing an audience.

[சபா + கம்பம்.]

[த. சபை → Skt. sabhā → த. சபா]

கம் → கம்பம் =அச்சம், நடுக்கம்

சபாகாரியம் *šabā-kāriyam,* பெ.(n.) அவையோர் செய்யும் செயல் (T.A.S.i.249); business transacted by an assembly.

[Skt. sabhā→த. சபா + த. காரியம்.]

சபாகுசுமம் *šabā-gusumam,* பெ.(n.) செம்பரத்தை மலர் (சி.சி.2, 67, சிவாக்.); Hibiscuss flower.

[சபா + த. குசுமம்.]

[Skt. jaba → த. சபா]

கும் → குசு → குசுமம். குசுமம் = மலர்



சபாசனம் *šabāšanam,* பெ.(n.) ஒருவனுக்குச் செய்யும் மதிப்புரவு (மரியாதை) (சங்.அக.); honour done to a person.

[Skt. sabhājana> த. சபாசனம்.]

சபாசு *šabāšu,* பெ.(n.) 'மிகநன்று' எனப் பொருள்படும் குறிப்புச்சொல்; expression signifying 'well done!, bravo! excellent' a term of cheering. *"சபாசென்று மெச்சிக் கொடுக்கு மதிகாரமே" (திருவேங்.சத.41).*

த.வ. வல்லே, வலே

[U. shābāsh → த. சபாசு]

சபாத்தியட்சன் *šabāttiyatcan,* பெ.(n.) அவைத் தலைவன்; president of an assembly.

[Skt.sabhā+adhyaksa>த.சபாத்தியட்சன்.]

சபாதாம்பூலம் *šabā-tāmbūlam,* பெ.(n.) திருமணம் முதலிய காலங்களில் வந்துள்ள மக்களுக்கு வழங்கும் வெற்றிலை முதலியன (இ.வ.); betel, arecanuts, etc., distributed at a public meeting or at a marriage.

[சபா + தாம்பூலம்]

[Skt. sabhā → த. சபா.]

தம்பரம் → தம்பலம் → தாம்பூலம். (தமி.வ.58)

சபாநாதன் *šabā-nādan,* பெ.(n.) 1. **சபாத்தியட்சன்** பார்க்க; see *šabāttiyatcan.* 2. **சபாபதி** பார்க்க; see *šabāpadi.*

[சபா + நாதன்.]

[த. அவை → த. சபை]

[Skt. sabhā + nātha. > த. சபாநாதன்.]

சபாநாயகன் *šabā-nāyagan,* பெ. (n.) 1. **சபாத்தியட்சன்** பார்க்க; see *šabāttiyatcan.* 2. **சபாபதி** பார்க்க; see *sabāpadi.*

[Skt. சபா + நாயகன்.]

சபாநாயகர் *šabā-nāyagar,* பெ.(n.) பேரவைத் தலைவர்; speaker of the legislature (கிரியா.).

[சபா + நாயகர்.]

சபாபதி *šabā-padi,* பெ.(n.) சிதம்பர அவையின் தலைவன் –நடராச மூர்த்தி; *Naṭarāja*, as the lord of the sacred hall at Chidambaram.

[Skt. sabhā-pati> த. சபாபதி.]

சபாமண்டபம் *śabā-maṇḍabam,* பெ.(n.) அவை கூடும் மண்டபம்; assembly-room, public hall.

[சபா + மண்டபம்.]

[Skt. sabhā > த. சபா + த. மண்டபம்.]

சபாமணி *śabā-maṇi,* பெ.(n.) **சபாவணி** பார்க்க; see *śabāvaṇi.*

[U. chipā'onī> த. சபாமணி.]

சபாமுத்திரை *śabā-muttirai,* பெ.(n.) இரண்டு கைகளையும் இணைத்து சிறு விரல்களால் நீரை விடுவது; (In Agama Philosophy), to let water flow out through the fingers by uniting the two palms (சா.அக.).

சபாமூப்பன் *śabā-mūppaṉ,* பெ.(n.) கிறித்தவக் கோயிலின் முதன்மைப் பாதிரியார்; (R.C.) church warden.

[Skt. sabhā → த. சபா + த. மூப்பு > மூப்பன்> த. சபாமூப்பன்.]

(M.sabhāmūpam)

சபாரஞ்சகம் *śabā-rañjagam,* பெ.(n.) அவையிலுள்ளோர் மனத்தைக் கவர்வது; that which is pleasing to an audience, as a speech.

[Skt. sabhā >rañjaka→த. சபாரஞ்சகம்.]

சபாரஞ்சிதம் *śabārañjidam,* பெ.(n.) **சபாரஞ்சகம்** பார்க்க; see *śabā-rañjagam.*

[Skt. sabhā +rañjita →த. சபாரஞ்சிதம்]

சபாலை *śabālai,* பெ.(n.) மின்னல்; lightning (சா.அக.).

[Skt. jvālā → த. சுவாலை → சபாலை.]

சபாவணி *śabāvaṇi,* பெ.(n.) 1. ஒப்படைப் பொருளைப் பறித்துக் கொள்ளுகை; embezzlement. 2. வரி (தீர்வை)யில்லாது போகும்படி நிலத்தைக் கணக்கில் கொண்டு வராது மறைத்து விடுகை; non-mention in the records of a piece of land with a view to evade payment of revenue.

[U. chipā'onī> த. சபாவணி.]

சபி¹-த்தல் *śabi-,* 4. செ.குன்றாவி.(v.t.) வெகுண்டுரைத்தல் (சவித்தல்); to curse, utter an imprecation. *"தலையற்று விழுகவெனச் சபித்தா ரன்றே" (உத்தரரா. திக்குவி.94).*

த.வ. சாவித்தல், சவித்தல்

[Skt. śap> த. சபி-.]

சபி²-த்தல் *śabi-,* 4. செ.குன்றாவி.(v.t.) மந்திரத்தை நிரல்பட சொல்லுதல்; to recite, as *mantrās*; to pray.

[Skt. jap> த. சபி-.]

சபிகர் *śabikar,* பெ.(n.) அவையோர்; members of an assembly.

[Skt. sabhika> த. சபிகர்.]

சபிண்டர் *śabiṇḍar,* பெ.(n.) முன்னோர்க்குப் பிண்டச்சோறு (பிதிர்ப்பிண்டம்) இடுதற்குரிய ஏழு தலைமுறைக்குட்பட்ட தாய்வழி முன்னோர்; agnates up to the seventh degree, as participating in *piṇḍam* offered to a common ancestor, sometimes extended to certain maternal relations also.

[Skt. sa-piṇḍa> த. சபிண்டர்.]

சபிண்டி *śabiṇḍi,* பெ.(n.) **சபிண்டீகரணம்** பார்க்க; see *sabiṇḍi-garaṇam. "அத்தலத்திற் செயத்தகுஞ் சபிண்டி" (சேதுபு.சங்கரபாண்.55).*

[Skt. sa-piṇḍi > த. சபிண்டி.]

சபிண்டீகரணம் *śabiṇḍī-garaṇam,* பெ.(n.) முன்னோர்கட்குரிய ஈமச்சடங்கை இறந்தவனுக்கும் உரிமையாதற் பொருட்டு, பெரும்பாலும் இறந்த பன்னிரண்டாம் நாள் செய்யப் படும் பிண்டப் படையல் (சிராத்தம்) (திருவானைக். கோச்செங்.15); *Śrāddha,*

usually performed on the 12th day after death for the purpose of including the deceased among the manes.

த.வ. பிண்டப்படையல்

[Skt. sapiṇḍi > சபிண்டி + த. கரணம் > சபிண்டீகரணம்.]

சபினம் *šabiṉam,* பெ.(n.) வசம்பு (மலை.); sweet flag.

[Skt. jaṭilā > த. சபினம்.]

சபீசதீட்சை *šabīsa-dīṭcai,* பெ.(n.) அறிவொழுக்கங்களில் சிறந்துள்ள சைவசமய நெறிமுறைகள் செய்து வரும்படி அறிவுறுத்தும், வினைமுறை தீக்கை (தீட்சை) வகை (சி.சி.8, 3, சிவாக்.); (*šaivam*) a mode of initiation in which the guru gives a properly qualified and learned disciple instructions on routine religious duties, a kind of *kiriyāvadi*, q.v.

[Skt. sa-bīja + dīkṣā > த. சபீசதீட்சை.]

சபீசை *šabīsai,* பெ.(n.) **சபீசதீட்சை** பார்க்க (சி.சி.8, 4, ஞானப்.); see *šabīša-dīṭcai.*

[Skt. sa-bīja → த. சபீசை.]

சபீனம் *šabīṉam,* பெ.(n.) **சபினம்** பார்க்க (சங்.அக.); see *šabiṉam.*

[Skt. jaṭilā → த. சபினம் → சபீனம்.]

சபு *šabu,* பெ.(n.) துணிவழலை (சவுக்காரம்); soap (சா.அக.).

சபுத்தி *šabutti,* பெ.(n.) பற்றுகை (ஜப்தி); (legal) attachment. 'சபுத்தி வாரண்டுப் பியோனொடு' (பஞ்ச. திருமுக. 1583.).

[Arab. zabt > த. சபுத்தி.]

சபுபிளாசுத்திரி *šabu-piḷāšuttiri,* பெ.(n.) துணிவழலை (சவுக்கார)ச் சீலை; soap plaster (சா.அக.).

சபுனீற்று *šabu-ṉīṟṟu,* பெ.(n.) 1. துணி வழலைக் கல் (சவுக்காரக் கல்); soap stone - *saponite.* 2. மாக்கல்; stealite (சா.அக.).

சபேடம் *šabēḍam,* பெ.(n.) உள்ளங்கை; palm of the hand (சா.அக.).

சபேடிகை *šabēḍigai,* பெ.(n.) கைத்தலத்தால் அறைகை (இ.வ.); slapping.

[Skt. capēṭikā > த. சபேடிகை.]

சபேதா *šabēdā,* கு. பெ.எ.(adj.) வெண்மையான (இவ.); white.

[U. safetā > த. சபேதா.]

சம்¹ *šam,* பெ.(n.) வடமொழித் தொடரின் தொடக்கத்தில் வளமைப்பொருளில் வரும் வடசொல் முன்னொட்டு (இலக்.அக.); a sanskrit word meaning prosperity used as a prefix, as in *Šāṅkaraṉ.*

[Skt. šam > த. சம்.]

சம்² *šam,* பெ.(n.) நிறைவு மிகுதி சிறப்பு முதலிய பொருள்களில் வரும் வடமொழி யிடைச் சொல்; a sanskrit particle meaning completeness, abundance or excellence - used as prefix, as in *sandōsam.*

[Skt. sam > த. சம்.]

சம்காரம் *sam-hāram,* பெ.(n.) அழித்தல் (இ.வ.); destruction, annihilation. *"சூரசம்ஹாரம்" (கிரியா.).*

சம்சயம் *šamšayam,* பெ.(n.) **சமுசயம்** பார்க்க; see *šamušayam.*

சம்சர்க்கம் *šamšarkkam,* பெ.(n.) 1. சேர்க்கை; association. 2. புணர்ச்சி; sexual union.

[Skt. sam-sarga > த. சம்சர்க்கம்.]

சம்சா *šamšā,* பெ.(n.) கரண்டி (இந்துபாக.65); spoon.

[U. camca > த. சம்சா.]

சம்சாயி¹ *šamšāyi,* பெ.(n.) 1. கடன் (இ.வ.); debt, liabilities. 2. நிறைவு செய்கை; satisfying one's needs.

[U. samjāish > த. சம்சாயி.]

சம்சாயி²–த்தல் *šamsāyi-,* 4. செ.கு.வி.(v.i.) ஏற்பாடு செய்தல் (இ.வ.); to make arrangements, settle.

[U. samjāish> த. சம்சாயி–.]

சம்சாயிசி *šamsāyiši,* பெ.(n.) விளக்கம்; (C.G.) explanation.

[Skt. samjāna> த. சம்சாயிசி.]

சம்சாயி³–த்தல் *šamsāyi-,* 4. செ.குன்றாவி. (v.t.) அமைதிப்படுத்துதல் (இ.வ.); to reconcile hostile parties, bring to an understanding.

[U. samjāna> த. சம்சாயி–த்தல்.]

சம்சாரசீவன் *šamšāra-sīvan,* பெ.(n.) வினைத்தொடர்பால் நிரயகதி, விலங்குகதி, மக்கட்கதி தேவகதிகளில் உழலும் உயிர் (மேருமந்.71, உரை); (Jaina.) Átman that passes through *naraga-kadi manusya-kadi* and *tēva-kadi* by the bondage of *karma.*

[Skt. saṃsāra+jīva> த. சம்சாரசீவன்.]

சம்சாரம் *šamšāram,* பெ.(n.) **சமுசாரம்** பார்க்க (இ.வ.); see *šamu-šāram.*

[Skt. saṃ-sāra> த. சம்சாரம்.]

சம்சாரி¹ *šamsāri,* பெ.(n.) குடியானவன்; person of large family.

[Skt. saṃ-sārī> த. சம்சாரி.]

சம்சாரி² *šamsāri,* பெ.(n.) நிலத்தில் பயிரிடுபவர்; உழவர்; farmer, cultivator. *"மழையே இல்லையென்றால் சம்சாரி எப்படிப் பிழைப்பான்?" (கிரியா.).*

[Skt. saṃ-sārī > த. சம்சாரி]

சம்சிலேசம் *šamšilēšam,* பெ.(n.) சேர்க்கை (ஈடு.); union.

[Skt. saṃ-šlēṣa> த. சம்சிலேசம்.]

சம்சோதனம் *šamšōdanam,* பெ. (n.) வயிற்றால் போக்கியும் வாயாலெடுத்தும் உடம்பை தூய்மையாக்கல்; a medication which purifies the system by purgative and vomiting (சா.அக.).

சம்ஞாகந்தம் *šamñā-gandam,* பெ.(n.) குறிப்பு, 18 (சி.போ.பா.அவை.பக்.38); (Buddh) mind and the five senses.

[Skt.saṃ-jñā+skandha>த.சம்ஞாகந்தம்.]

சம்ஞை *šamñai,* பெ.(n.)1. செய்கை; significant gesture. 2. குறியீடு; technical term.

[Skt. sam-jñā> த. சம்ஞை.]

சம்பத்தி *šambatti,* பெ.(n.) 1. பேறு; attainment, acquisition. 2. **சம்பத்து** பார்க்க; see *šambattu. "ஒடிவி லியமாதி சம்பத்தியுள்ளோ னாகி" (சூத.ஞானயோ.5, 3).*

[Skt. sam-patti> த. சம்பத்தி.]

சம்பத்து¹ *šambattu,* பெ.(n.) செல்வம்; wealth, prosperity.

[Skt. sam-pad> த. சம்பத்து.]

சம்பத்து² *šambattu,* பெ.(n.) பொன்; gold. *"மேனாளிற் சம்பத்துதிக்குந் தரணி தராசென்ன" (பத்ம.தென்றல்விடு.3).*

[Skt. sampat> த. சம்பத்து.]

சம்பத்துவேட்டம் *šambattu-vēṭṭam,* பெ.(n.) ஐந்து தாளத்தொன்று (பரத.தாள.14); (Mus.) a variety of time measure, one of *pañja-tāḷam,* q.v.

[Skt. sampadvēṣṭa> த. சம்பத்துவேட்டம்.]

சம்பந்தக்காரர் *šambanda-k-kārar,* பெ.(n.) **சம்பந்தக்குடியார்** பார்க்க (இ.வ.); see *šampanda-k-kuḍiyār.*

[Skt. sambandha> த. சம்பந்தக்காரர்.]

சம்பந்தக்குடியார் *šambanda-k-kuḍiyār,* பெ. (n.) உறவாடிகள் (சம்பந்திகள்) (இ.வ.); relatives by marriage.

[Skt. sambandha > சம்பந்தம் + த. குடியார் > த. சம்பந்தக்குடியார்.]

சம்பந்தகிரேத்தன் *šambanda-girēttaṉ,* பெ.(n.) நாணயமற்றவன்; lit., worthy householder. Unreliable person, used ironically.

[Skt. sam-panna + gṛhāstha > த. சம்பந்தகிரேத்தன்.]

சம்பந்தங்கல—த்தல் *šambandaṅ-kala-,* 3 செ.கு.வி. (v.i.) மக்கள் தம் திருமணத்தால் தொடர்புடைய பெற்றோர் உறவு கொள்ளுதல் (இ.வ.); to contract relationship, as parents by marriage of their children.

த.வ. மணஉறவாடல்

[சம்பந்தம்+கல—த்தல்]

[Skt. sam-bandha > த. சம்பந்தம்]

சம்பந்தங்கூறல் *šambandaṅ-kūṟal,* பெ.(n.) மண உறுதியின் போது இருதிறத்தாரும் கள்ளுண்டு தங்கள் உறவுமுறையைக் கூறிக் கொள்ளுகை; proclamation of relationship by the headmen of bridegroom's and bride's parties, exchanging drinks of toddy on the betrothal day.

த.வ. உறவுகூறல்

[சம்பந்தம்+கூறல்]

[Skt. sam-bandha> த. சம்பந்தம்]

சம்பந்தச்சொல் *šambanda-c-col,* பெ.(n.) இனமான சொல் (பாண்டி.); correlative word.

[சம்பந்தம்+சொல்]

[Skt. sam-bandha> த. சம்பந்தம்]

சம்பந்தத்திரயம் *šambanda-t-tirayam,* பெ. (n.) சமானாதிகரண்யசம்பந்தம் விசேடண விசேடியபாவ சம்பந்தம் லட்சிய லட்சணபாவ சம்பந்தம் என்னும் மூவகைப் பட்ட தொடர்பு (வேதாந்தசாரம், பக்.79); the three kinds of relation, *camā-ṉātikaraṇya-campantam, vicēṭaṇā-vicēṭiya-pāva-campantam, laṭciya-laṭcaṇa-pāva-campandam.*
[Skt. campantam+traya> த. சம்பந்தத்திரயம்.]

சம்பந்தப்பட்ட *šambanda-p-paṭṭa,* கு. பெ. அ.(adj.) குறிப்பிட்ட ஒன்றோடு தொடர் புடைய; connected with something; related, concerned. *திரைப்படம் சம்பந்தப்பட்ட துறைகள்; திருட்டில் சம்பந்தப்பட்ட இருவர் கைது (கிரியா.).*

[சம்பந்தம்+பட்ட]

சம்பந்தப்படுத்து *šambanda-p-paḍuttu,* கு.வி.எ. (adv.) குற்றத்தில் மற்றொருவரையும் தொடர்புபடுத்திக் கூறுதல்; implicate. *கள்ளக்கடத்தல் தொடர்பாகக் கைதாகியிருப்பவர் சில உயர் அதிகாரிகளையும் அதில் சம்பந்தப்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது (கிரியா.).*

சம்பந்தப்பொருள் *šambanda-p-poruḷ,* பெ.(n.) ஆறாம் வேற்றுமைப் பொருள்; significance of genitive case.

[சம்பந்தம்+பொருள்]

[Skt. sam-bandha > த. சம்பந்தம்]

சம்பந்தம் *šambandam,* பெ.(n.) 1. தொடர்பு; relation, connection, relevancy, agreement. 2. திருமணத்தால் ஏற்படும் உறவு; alliance, relationship by marriage. 3. **சன்னிகரிடம்** பார்க்க (சி.சி.அளவை. 6, மறைஞா.); see *šaṉṉigariḍam.*

[Skt. sam-bandha> த. சம்பந்தம்.]

சம்பந்தம்பேசு-தல் *šambandam-pēsu* 5. செ.கு.வி.(v.i.) மணம் பேசுதல் (இ.வ.); to negotiate a marriage.

[சம்பந்தம்+பேசு-தல்]

[Skt. sam-bandha> த. சம்பந்தம்]

சம்பந்தவாட்டி *šambanda-v-āṭṭi,* பெ.(n.) பெண் கொடுத்து உறவு (சம்பந்தஞ்) செய்தவள் (இ.வ.); woman having married son or daughter.

[சம்பந்தம்+ஆட்டி]

[Skt. sam-bandha> த. சம்பந்தம்]

சம்பந்தி-த்தல் *šambandi-* 4 செ.கு.வி. (v.t.) 1. சேர்த்தல்; to connect, blend, mix. intr. 2. உறவாதல்; to become related.

[Skt. sambanam> த. சம்பந்தி-த்தல்.]

சம்பந்தி *šambandi-* பெ.(n.) உறவாளி, விழைவன் பெண் கொண்டு கொடுத்து உறவு கொள்பவன்; parent of bride and bridegroom.

த.வ. உறவாளி

[Skt. sam+bandati. > த. சம்பந்தி]

சம்பம்[1] *šambam,* பெ.(n.) 1. இருதலைச்சூலம் (வச்சிராயுதம்); thunderbolt, the weapon of Indra. *"மூசுசம்ப முசலங் கணையம்வாள்" (குற்றா.தல.மந்தமா.99).* 2. மரவைரம் (பிங்.); close grain; core, as of a tree.

[Skt. šamba> த. சம்பம்.]

சம்பம்[2] *šambam,* பெ.(n.) புனைவுப் பகட்டு (இடம்பம்); ostentation, show. .

*[Mhr. jambha>**Skt.** ḍambha>த. சம்பம்.]*

சம்பம்[3] *šambam,* பெ.(n.) அங்கநாடு (யாழ்.அக.); the country of *Aṅgam.*

[Skt. campā> த. சம்பம்.]

சம்பர்க்கம் *šambarkkam,* பெ.(n.) சேர்க்கை; union, contact, association.

[Skt. sam-parka> த. சம்பர்க்கம்.]

சம்பர்க்கார்த்தம் *šambarkkārttam,* பெ.(n.) 1. கதிரவ மறைப்பில் (சூரிய கிரகணத்தில்) கதிரவன் (சூரியன்) நிலா (சந்திரன்) இவற்றின் பாதிக் குறுக்களவைக் கூட்டி வந்த அளவு (சூடா.உள்.436, உரை); (Astron.) sum of the semi-diameters of the sun and the moon in a solar eclipse. 2. நிலவு மறைப்பில் (சந்திர கிரகணத்தில்) நிலா பூமியின் சாயையிவற்றின் பாதிக்குறுக்களவைக் கூட்டிவந்த அளவு (சூடா.உள்.443, உரை); (Astron.) sum of the semi-diameters of the moon and the earth's shadow in a lunar eclipse.

த.வ. கோளக்குறுக்கம்

[Skt. sam-parka+ardha> த. சம்பர்க் கார்த்தம்.]

சம்பரசூதன் *šambara-šūdaṉ,* பெ.(n.) **சம்பரசூதனன்** பார்க்க (உரி.நி.); see *šambara-šūdaṉaṉ.*

சம்பரசூதனன் *šambara-šūdaṉaṉ,* பெ.(n.) 1. சம்பரனைக் கொன்ற காமன் (பிங்.); *Kāma,* the Hindu god of love, as the slayer of *Šambara.* 2. **சம்பராரி, 2** பார்க்க; see *šambarāri.*

[Skt. šambara-sūdana>த.சம்பரசூதனன்.]

சம்பரநாரை *šambara-nārai,* பெ.(n.) ஒரு நாரை; a red crane (சா.அக.).



சம்பரம்[1] *šambaram,* பெ.(n.) சரபம் என்னும் எண்காற் பறவை (பிங்.); a fabulous eight-legged creature.

[Skt. sambara> த. சம்பரம்.]

சம்பரம்[2] *šambaram,* பெ.(n.) சம்பிரமம், 1, 2, 3 பார்க்க (இ.வ.); *šampiramam.*

சம்பரன் *šambaran,* பெ.(n.) 1. காமனால் கொல்லப்பட்ட; அரக்கன் *Asuran* killed by *Kāman. "சம்பரனுக் கொருபகைவா" (கந்தபு. காமதக.99).* 2. தசரதனாற் கொல்லப்பட்ட அரக்கன்; an *Asuran* killed by *Dašarathan. "சம்பரனைக் குலத்தோடுந் தொலைத்து" (கம்பரா.கையடை.8).*

[Skt. šambara> த. சம்பரன்.]

சம்பராரி *šambarāri,* பெ.(n.) 1. சம்பரனது பகைவன்; lit., the enemy of *šambaran. "சம்பராரி நாணேற்றுந் தனுவைப் பொருவ" (திருப்போ.சந்.சிற்றில்.9).* 2. தசரதன்; *Daša-rathan.*

[Skt. šambara+ari> த. சம்பராரி.]

சம்பவப்பிரமாணம் *šambava-p-piramānam,* பெ.(n.) பொருளின் இயற்கைக் குணத்தைச் சுட்டிச் சொல்வதாகிய ஓர் அளவை; (log.) statement relating to the properties of natural objects, physical facts, etc.

[Skt.sam-bhava+pra-māna> த. சம்பவப் பிரமாணம்.]

சம்பவம் *šambavam,* பெ.(n.) 1. பிறப்பு; birth, origin. *"சம்பவச்சருக்கம்" (பாரத.).* 2. நிகழ்ச்சி; occurrence, event. 3. சம்பவப் பிரமாணம் (மணிமே.27:55, உரை); பார்க்க see *šambava-p-piramānam.*

[Skt. sam-bhava> த. சம்பவம்.]

சம்பவர் *šambavar,* பெ.(n.) இருபத்து நான்கு தூய நீரவருள் (தீர்த்தங்கரருள்) ஒருவர் (திருக்கலம்.காப்பு.உரை); Jaina Arhat, one of 24 *tirttangarar.*

[Skt. sam-bhava> த. சம்பவர்.]

சம்பவி-த்தல் *šambavi-,* 4 செ.கு.வி.(v.i.) நிகழ்தல்; to happen, occur, come to pass.

[Skt. sam-bhava> த. சம்பவி-.]

சம்பளங்கி *šambalangi,* பெ.(n.) நக்கவாரத் தீவு; Nicobar islands.

[Malay. sam-balang> த. சம்பளங்கி.]

சம்பற்காத்தம் *šambar-gāttam,* பெ.(n.) **சம்பர்க்கார்த்தம்** பார்க்க; see *šambar-k-kārttam.*

சம்பன்னகிருகத்தன் *šambanna-kirugattan,* பெ.(n.) நாணயமற்றவன்; lit., worthy householder, unreliable person, used ironically.

[Skt.sam-panna+grah-stha> த. சம்பன்ன கிருகத்தன்.]

சம்பாசணம் *šambāšanam,* பெ.(n.) ஒருவரோடொருவர் பேசுகை; conversation, dialogue.

த.வ. உரையாட்டு, உரையாடல்

[Skt. sambhāsana> சம்பாஷணம் > த. சம்பாசணம்.]

சம்பாசணை *šambāšanai,* பெ.(n.) ஒருவரோடொருவர் உரையாடுவதுபோல் எழுதிய பாடம்; lesson in the form of a dialogue.

[Skt. sambhāsana> த. சம்பாசணை.]

சம்பாசி-த்தல் *šambāsi-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஒருவரோடொருவர் பேசுதல்; to converse.

[Skt. sambhasana> த. சம்பாசி-.]

சம்பாவனை *šambāvanai,* பெ.(n.) 1. மதிப் புரவு; honour. 2. வெகுமானம்; offering, gift.

[Skt. sambhāvanā> த. சம்பாவனை.]

சம்பாவிதம் *šambāvidam,* பெ.(n.) நிகழக் கூடியது; that which is probable or likely.

[Skt. sam-bhāvita> த. சம்பாவிதம்.]

சம்பிரஞ்ஞாதசமாதி *šampiraññāda-samādi,* பெ. (n.) **சவிகற்பசமாதி** பார்க்க; see *šavigarpa-šamādi.*

[Skt. sam-pra-jñāta+samādhi > த. சம்பிரஞ்ஞாதசமாதி.]

சம்பிரதம் *šambiradam,* பெ.(n.) 1. விளைவு; that which is caused; effect, result. *"வித்தின்றிச் சம்பிரதமில்" (பழ.327).* 2. வியத்தகு செயல் செய்வதாக, ஒரு பொருள் தோன்றுமாறு அமைத்துப்பாடும் கலம்பக வுறுப்பு (திவா.); a constituent theme in *kalambagam* which apparently relates the wondrous performances of a magician but really signifies ordinary things. 3. விண்ணுலகத்தார் செய்யும் மாயக்கலை (இந்திரசாலம்); magic, jugglery. *"மணி வண்ணன் மலையுமோர் சம்பிரதம்" (திவ்.பெரியாழ்.3, 6, 10).*

[Skt. sam-bhṛta > த. சம்பிரதம்.]

சம்பிரதாபனம் *šambiradābanam,* பெ.(n.) அளறு (நரக) வகை (மணிமே.6, 181, அரும்.); a hell.

த.வ. நிரயம்

[Skt. sampratāpana> த. சம்பிரதாபனம்.]

சம்பிரதாயக்காரன் *šambiradāya-k-kāran,* பெ.(n.) **சம்பிரதாயத்தன்** பார்க்க; see *šambiradāyasttan.*

[Skt. sam-pra-dāya > த. சம்பிரதாயம் + காரன்.]

சம்பிரதாயத்தன் *šambiradāyattan,* பெ.(n.) 1. முன் வழக்க வொழுக்கங்களைப் பின் பற்றுபவன் (அனுசரிப்பவன்); one who respects customs or traditions, a traditionist. 2. திறமைசாலி (சாமர்த்தியசாலி); clever, skilfulman.

த.வ. மரபாளி, தொன்மரவன்

[Skt. sam-prāḍaya + stha > த. சம்பிரதாயத்தன்.]

சம்பிரதாயம் *šambiradāyam,* பெ.(n.) 1. குருமரபாக வந்த அறிவுரை (உபதேசம்); tradition, traditional doctrine or knowledge transmitted from teacher to disciple. 2. தொன்று தொட்ட வழக்கம்; time honoured custom, established usage. *"சாசுவத சம்பிரதாய மோராமல்" (தாயு.சின்மயா.9).* 3. வல்லமை (சாமர்த்தியம்); skill, cleverness, artfulness, shrewdness. *"இந்திரலோக மழித்தவன் சம்பிரதாயஞ்சுட" (திருப்பு.12).*

த.வ. அறிவர் உரை, பண்டாடு பழநடை

[Skt. sam-pra-dāya> த. சம்பிரதாயம்.]

சம்பிரதாயி *šambiradāyi,* பெ.(n.) **சம்பிரதாயத்தன்** பார்க்க; see *šambiradāyattan.*

[Skt. sam-pra-dāyi> த. சம்பிரதாயி.]

சம்பிரதாரணை *šambira-dāraṇai,* பெ.(n.) ஆராய்ந்து செய்யுந் தீர்மானம் (யாழ்.அக.); decision after due deliberation.

[Skt. sam-pra +dhāraṇa> த. சம்பிர தாரணை.]

சம்பிரதானம் *šambira-tāṉam,* பெ.(n.) 1. கொடை; donation, gift. 2. நான்காம் வேற்றுமைப் பொருள்; meaning of dative case. *"ஒழியாது கொள்பவன் சம்பிரதானம்" (பி.வி.9).*

த.வ. கொடை

[Skt. sam-pra-dāna> த. சம்பிரதானம்.]

சம்பிரதி *šambiradi,* பெ.(n.) 1. தலைமைக் கணக்கன் (I.M.P. Mr.225); public accountant; accountant in a temple or a zemindary. 2. சிற்றூர்க்கணக்கனுக்கு உதவி செய்யும் எழுத்தன் (C.G.82); assistant to a village accountant; writer, clerk. 3. வட்டத் தலைமைக் கணக்கன் (இ.வ.); taluk head accountant.

[Te. samprati> த. சம்பிரதி.]

சம்பிரமம் *šambiramam,* பெ.(n.) 1. பரபரப்பு; confusion, agitation, flurry. 2. களிப்பு; elation, high spirit. *"தீரசம்பிரம வீரா" (திருப்பு.94).* 3. சிறப்பு; splendour, pomp, excellence. *"கல்யாணசம்பிரமம் சொல்லத் தரமன்று".* 4. நிறைவு; fulness, plenty, sumptuousness. *ஆகாரம் சம்பிரமமாகக் கிடைத்தது (இ.வ.).* 5. வெள்ளை நீர் நஞ்சு (வின்.); a mineral poison.

[Skt. sam-bhrama> த. சம்பிரமம்.]

சம்பிரமலோலன் *šambirama-lōlaṉ,* பெ.(n.) பகட்டுக்காரன் (வின்.); pompous person.

[Skt. sam-bhrama + lola> த. சம்பிரம லோலன்.]

சம்பிரமி-த்தல் *šampirami-,* 4 செ.கு.வி. (v.i.) மகிழ்தல் (தக்கயாகப்.109, உரை); to be glad.

[Skt. sambhrama> த. சம்பிரமி-.]

சம்பிராத்தி *šambirātti,* பெ.(n.) பேறு; anything obtained, blessing, acquisition. *"மற்றுமேற்பட்ட சம்பிராத்தியும்"*(T.A.S.i. : 280).

[Skt. sam-prāpti> த. சம்பிராத்தி.]

சம்பிரேட்சியம் *šampirēṭciyam,* பெ.(n.) ஆராய்ந்தறிகை (வின்.); deliberation, consideration.

[Skt. samprēkṣya> த. சம்பிரேட்சியம்.]

சம்பினத்தாதி *šambiṉa-t-tādi,* பெ.(n.) வாயு விளங்கம்; wind-killer- *Embelia ribes* (சா.அக.).

சம்புகானா *šambu-gāṉā,* பெ.(n.) சிவப்பு வண்ணத் தரைவிரிப்பு (இரத்தினக் கம்பளம்) (இ.வ.); carpet.

த.வ. தரைவிரிப்பு

[U. jamkāna> த. சம்புகானா.]

சம்புகேச்சுரம் *šambu-kēccuram,* பெ.(n.) ஆனைக்கா; a *Šiva* shrine.

[Skt. Jambukešvara> த. சம்புகேச்சுரம்.]

சம்புத்தி *šambutti,* பெ.(n.) ஒருமைவிளி (பி.வி.5, உரை); vocative singular.

[Skt. šam-buddhi> த. சம்புத்தி.]

சம்புபட்சம் *šambu-paṭcam,* பெ.(n.) தூ(சுத்தமாயை)யுலகத்தில் தொழில் புரியும் சிவபேதங்கள் (சி.போ.பா.2 : 4, பக்.223); the manifestations of *Šiva* functioning in the universe of pure *māya,* viz., *šadāšivaṉ* and dist. fr. *anu-paṭcam.*

[Skt. šam-bhu+pakṣa> த. சம்புபட்சம்.]

சம்புரோட்சணம் *šambu-rōṭcaṉam,* பெ.(n.) துப்புரவிற்காகக் கோயில்களில் செய்யும் நடப்புகள்; purificatory ceremony, as in a temple.

த.வ. தூவிகம்

[Skt. saṃ-prōkṣaṇa> த. சம்புரோட் சணம்.]

சம்புரோட்சணை *šamburōṭcaṉai,* பெ.(n.) **சம்புரோட்சணம்** பார்க்க; see *camburōṭcaṉam.*

[Skt. saṃ-prōkṣaṇa> த. சம்புரோட் சணை.]

சம்பூகை *šambūgai,* பெ.(n.) கிளிஞ்சில்; bi-valve-shell; mollusc (சா.அக.).

சம்பூயயானம் *šambūya-yāṉam,* பெ.(n.) திறன் வாய்ந்த சிற்றரசர் பலரோடு, ஓர் அரசன் தன் பகைவன்மேற் செல்லுகை (சுக்கிரநீதி, 337); the march of a king with his able feudatories to meet his enemy.

த.வ. படையியக்கம்

[Skt. sambhūya+yāna> த. சம்பூயயானம்.]

சம்பூர்த்தி *šambūrtti,* பெ.(n.) **சம்பூரணம், 1, 2** பார்க்க (இ.வ.); see *šambūraṇam.*

[Skt. sam-pūrtti> த. சம்பூர்த்தி.]

சம்பூரணம் *šambūraṇam,* பெ.(n.) 1. நிறைவு; fulness, completion. 2. முடிவு பல பெண் குழந்தைகளைப் பெற்றுச் சலித்தோர் மேலும்

பெறுதலில் வெறுப்புற்று, இதுவே கடைப்பெண்ணாக என்று பிறந்த பெண் குழந்தைக்கிடும் பெயர்; name given to a female child by parents who have had enough of female children and wish to have no more. end, termination. 3. மிகுதி; abundance, plenty. 4. **சம்பூரணராகம்** (சிலப்.13, 106, உரை) பார்க்க; see *šambūraṇa-rāgam.*

[Skt. sam-pūrṇa> த. சம்பூரணம்.]

சம்பூரணராகம் *šambūraṇa-rāgam,* பெ. (n.) எல்லா இசை, ஒலிக்குறிப்புகளும் (சுரங்களும்) அமைந்த பண்; primary melody type, as containing all the notes of the gamut.

த.வ. நிறைபண்

[Skt. sam-pūrṇa+rāga→ சம்பூரணராகம்.]

சம்பேதனம் *šambēdaṉam,* பெ.(n.) கரையச் செய்யும் வேதிப்பொருள் (கர்த்தா); a dissolving agent as gastric juice-catalysis (சா.அக.).

சம்போக்கு *šambōkku,* பெ.(n.) கப்பற் கூட்டம்; fleet of ships (R.).

[Persn. sumbuk> த. சம்போக்கு.]

சம்போகம் *šambōgam,* பெ.(n.) 1. புணர்ச்சி; sexual enjoyment. 2. இருவரும் துய்க்கும் இன்பம்; the sexual pleasures enjoyed by both. 3. ஒத்த இன்பம்; sexual enjoyments shared equally (சா.அக.).

த.வ. புணர்ச்சி

[Skt. sam-bhoga> த. சம்போகம்.]

சம்போகவிவரணம் *šambōga-vivaraṇam,* பெ.(n.) புணர்ச்சியைப் பற்றியும், தொழிலியற்றும் விளத்தங்களையும், காமநுகர்ச்சியின் இன்பங்களையும் விளக்கமாகக் கூறும் நூல்; that branch of sexual science dealing particularly about sexual intercourse, the process of the effecting it successfully and the sexsual pleasures and enjoyments derived from it Physiology of coitus (சா.அக.).

த.வ. புணர்ச்சிநூல்

[Skt. sam - bhoga + vivaraṇa > த. சம்போகவிவரணம்.]

சம்போகியடிக்கடி *šambōgi-yaḍikkaḍi,* பெ.(n.) சேவல்; cock, so called from its frequent copulation (சா.அக.).

சம்போதனம் *šambōdaṉam,* பெ.(n.) பன்மைவிளி (பி.வி.17); vocative plural.

[Skt. sambōdhana> த. சம்போதனம்.]

சம்போதனை *šambōdaṉai,* பெ.(n.) விளி வேற்றுமை (வின்.); vocative case.

[Skt. sambōdhana> த. சம்போதனை.]

சம்போர் *sambōr,* பெ.(n.) பூதம் (அக.நி.); goblin.

[Skt. šambara> த. சம்போர்.]

சம்மதக்கைச்சீட்டு *šammadakkai-c-cīṭṭu,* பெ.(n.) **சம்மதிப்பத்திரம்** பார்க்க; see *šammadi-p-pattiram.*

[Skt.sam-mata+ ***U.*** *ciṭṭhi> த.சம்மதக்கைச் சீட்டு.]*

சம்மதம் *šammadam,* பெ.(n.) 1. உடன்பாடு; approval, acquiescence, consent. *"ஈது பயவாதிகள் சம்மதம்" (தாயு.எங்கு.3).* 2. நட்பு; friendship. *"தானஞ் சம்மதமின்சொல்" (காசிக.தீர்த்.7).* 3. கொள்கை (யாழ்.அக.); opinion.

[Skt. sam-mata> த. சம்மதம்.]

சம்மதன் *šammadaṉ,* பெ.(n.) 1. நண்பன்; friend. 2. மைத்துனன்; wife's brother.

[Skt. sam-mata> த. சம்மதன்.]

சம்மதி[1] *šammadi,* பெ.(n.) **சம்மதம், 1** பார்க்க; see *šammadam, "தனியேயகச் சம்மதியின்றேல்" (சிவரக.கணபதியு.10).*

[Skt. sam-mati> த. சம்மதி.]

சம்மதி²–த்தல் *šammadi-* 4 செ.கு.வி.(v.i.) உடன்படுதல்; to agree, consent, acquiesce.

[Skt. sam-mati> த. சம்மதி²-.]

சம்மதி³–த்தல் *šammati-,* 4 செ.குன்றாவி.(v.t.) நன்கு மதித்தல்; to esteem, regard, approve. *"சதுரமென்று தம்மைத் தாமே சம்மதித்து" (திவ்.திருவாய்.9. 1: 5).*

[Skt. sam-mati> த. சம்மதி-.]

சம்மதிப்பு *šammadippu,* பெ.(n.) உடன்பாடு (சம்மதம்) (வின்.); willingness, consent.

த.வ. இணக்கம்

[Skt. sam-mati> த. சம்மதிப்பு.]

சம்மதிபத்திரம் *šammadi-pattiram,* பெ.(n.) உடன்படிக்கை ஆவணம் (சாசனம்); (C.G.) deed of agreement.

[Skt. sam-mati+patra> த. சம்மதிபத்திரம்.]

சம்மதிவசனம் *šammadi-vašaṉam,* பெ.(n.) மேற்கோள் (இ.வ.); a text or except cited as authority.

[Skt. sam-mati> த. சம்மதிவசனம்.]

சம்மந்தம் *šammandam,* பெ.(n.) தொடர்பு (சம்பந்தம்) (வின்.); connection. உறவு relationship.

[சம்பந்தம் + சம்மந்தம்.]

சம்மந்தி *šammandi,* பெ.(n.) **சம்பந்தி** பார்க்க; see sambandi

சம்மன் *šammaṉ,* பெ.(n.) நடுவர் மன்ற அதிகாரியின் அழைப்புக் கட்டளை; order to be issue by court officer.

த.வ. அழைப்பாணை, விளியாணை

[E. summons> த. சம்மன்.]

சம்மனசு *šammaṉašu,* பெ.(n.) தேவதூதன் (R.C.); divine spirit, angel.

[Skt. su-manas> த. சம்மனசு.]

சம்மார்ச்சனம் *šammārccaṉam,* பெ.(n.) துடைப்பத்தாற் பெருக்குகை (சங்.அக.); sweeping.

[Skt. sammārjana> த. சம்மார்ச்சனம்.]

சம்மாரம் *sammāram,* பெ.(n.) அழிவு; destruction.

[Skt. saṃ-hāra> த. சம்மாரம்.]

சம்மானம்¹ *šammāṉam,* பெ.(n.) 1. முகமனுரை (உபசாரச் சொல்) (திவா.); compliment. 2. அன்பளிப்பு; gift, reward, present. *"பாடிப் பறை கொண்டு யாம்பெறு சம்மானம்" (திவ்.திருப்பா.27).* 3. இறையிலி நிலம் (வின்.); land exempt from tax.

[Skt. sam-māna> த. சம்மானம்.]

சம்மிதை *šammidai,* பெ.(n.) 1. ஏதாவதொரு கலையைப் பற்றிக் கூறும் நூல், சாரங்கதர சம்மிதை; a treatise on any branch of knowledge or science, for example sarangadara sammidah, an Ayurvedic science. 2. சரகசம்மிதை; a medical treatise by charaka (சா.அக.).

த.வ. நூல், பொத்தகம்

சம்மியஞானம் *šammiyañāṉam,* பெ.(n.) பேரறிவு; supreme wisdom (சா.அக.).

சம்மிராட்டு¹ *šammirāṭṭu,* பெ.(n.) தனியாணைப் பேரரசன்; supreme ruler, paramount sovereign.

[Skt. sam-rāṭ> த. சம்மிராட்டு.]

சம்மிராட்டு² *šammirāṭṭu,* பெ.(n.) ஆண்டொன்றுக்கு வெண்பொற்காசுகள் ஒரு கோடிக்கு மேல் பத்துக்கோடி வரை வருவாயாக வுடைய அரசன் (சுக்கிரநீதி,26); king whose annual revenue is above 1 crore and below 10 crores of silver coins.

[Skt. samrāṭ> த. சம்மிராட்டு.]

சம்மேளனம் *šammēḷaṉam,* பெ.(n.) 1. கலப்பு; mixing intermingling. 2. கூட்டம் (இக்.வ.); conference.

[Skt. sam-mēlana> த. சம்மேளனம்.]

சம்மோகம் *šammōgam,* பெ.(n.) **சம்மோகனம்** பார்க்க; see *šammōganam.*

சம்மோகனம் *šammōganam,* பெ.(n.) ஈர்ப்பு, (அ) வயப்படுத்துகை (வசீகரம்); fascination, delusion, infatuation.

[Skt. sammōhana> த. சம்மோகனம்.]

சம்யுக்தசமவாயம் *šamyukta-šamavāyam,* பெ.(n.) அயல்வழித் தொடர்பு; intimate relation with that which is in direct contact with another.

[Skt.sam-yukta+samavāya>த. சம்யுக்த சமவாயம்.]

சம்யுக்தாட்சரம் *šamyuktāṭcaram,* பெ.(n.) வடமொழிக் கூட்டு மெய்யெழுத்து; conjunct consonant in Sanskrit.

த.வ. மெய்ம்மயக்கம்

[Skt.sam-yukta+akṣara> த. சம்யுக்தாட் சரம்]

சம்யோகசம்பந்தம் *šamyōga-sambandam,* பெ.(n.) இருபொருள்கள் கூடியிருத்ததால் ஏற்படும் தொடர்பு; direct material contact.

[Skt. saṃ-yōga+sam-bandhaṃ > த. சம்யோகசம்பந்தம்.]

சம்யோகம் *šamyōgam,* பெ.(n.) 1. சேர்க்கை; combination, union. *"அவனது ஞானசக்தி சம்யோகத்தால்" (சி.சி.பாயி.5, சிவாக்.).* 2. புணர்ச்சி; copulation. 3. **சம்யோக சம்பந்தம்** பார்க்க; see *šamyōga-šambandam.*

[Skt. saṃ-yōga> த. சம்யோகம்.]

சம்ரட்சணம் *šamraṭcaṇam,* பெ.(n.) காப்பாற்றுகை; preservation, maintenance, protection.

[Skt. samrakṣaṇa> த. சம்ரட்சணம்.]

சம்ரட்சணை *šamraṭcaṇai,* பெ.(n.) **சம்ரட்சணம்** பார்க்க; see *šamraṭcaṇam.*

சம்ரட்சி-த்தல் *šamraṭci-,* 4 செ.குன்றாவி. (v.t.) காப்பாற்றுதல்; to maintain, support, protect.

[Skt. samrakṣ> த. சம்ரட்சி-.]

சம்ரம்பம்[1] *šamrambam,* பெ.(n.) பரபரப்பு; activity. *"கிரியாசத்தி சம்ரம்பத்தோடு அகங்காரங் கிளம்பி" (சி.சி.2 : 62, ஞானப்.).*

[Skt. saṃ-rambha> த. சம்ரம்பம்.]

சம்ரம்பம்[2] *šamrambam,* பெ.(n.) முயற்சி (அஷ்டப்பிர.80); diligence.

[Skt. samrambha> த. சம்ரம்பம்.]

சம்வகம் *šamvagam,* பெ.(n.) ஏழு மருந்துகளுள் ஒன்று; one of *capta-marundu.*

[Skt. saṃ-vaha> த. சம்வகம்.]

சம்வச்சரம் *šamvaccaram,* பெ.(n.) ஆண்டு; year. *"அறுபதினாயிரம் சம்வச்சரபலன்" (இராமநா.).*

த.வ. யாண்டு

[Skt. saṃ-vatsara> த. சம்வச்சரம்.]

சம்வத்சரவாரியம் *šamvatcara-vāriyam,* பெ.(n.) ஆண்டுதோறும் தெரிந்தெடுக்கப்படும் சிற்றூர் செயற்பாட்டவை (நிருவாக சபை) (I.M.P.Rd.241); supervising committee elected annually by a village assembly.

[சம்வத்சர+வாரியம்]

[Skt. saṃ-vatsara> த. சம்வத்சர]

சம்வர்த்தம் *šamvarttam,* பெ.(n.) 1. ஏழு முகில்களுள் (சத்த மேகங்களுள்) மணி பொழியும் முகில் (பிங்.); a celestial cloud which rains gems, one of *catta-mēgam.* 2.வடமொழியிலுள்ள அறநூல் பதினெட்டனுள் ஒன்று; a Sanskrit text-book of Hindu law, one of 18 *taruma-nūl,.*

[Skt. saṃ-varta> த. சம்வர்த்தம்.]

சம்வரம் *šamvaram,* பெ.(n.) **சம்வரை** பார்க்க; see *šamvarai.*

சம்வரை *šamvarai,* பெ.(n.) ஒன்பது வகைக் கறி யுணவில் ஆதனை வினை அணுகவொட் டாதபடி தடுப்பது (சீவக.2814, உரை); (Jaina.) that which impedes the inflow of karma into the soul, one of *nava-padārttam.*

[Skt. saṃ-vara> த. சம்வரை.]

சம்வற்சரம் *šamvarcaram,* பெ.(n.) **சம்வச்சரம்** பார்க்க; see *šamvaccaram.*

சம்வன்னம் *šamvannam,* பெ.(n.) தன்வய மாக்குதல் (வசிகரித்தல்); to gain love (சா.அக.).

சம்வாகம் *šamvāgam,* பெ.(n.) நெல்லும் புல்லும் நிறைந்த மலையூர் (தி.வா.); fertile town on a hill abounding in paddy, etc.

[Skt. saṃ-vāha> த. சம்வாகம்.]

சம்வாதம் *šamvādam,* பெ.(n.) 1. தருக்கம்; disputation, debate. 2. **சம்பாசணம்** பார்க்க; see *šambāšaṇam.*

[Skt. saṃ-vāda> த. சம்வாதம்.]

சம்வாதிசுரம் *šamvādišuram,* பெ.(n.) வாதி இசையுடன் (சுரம்) ஒத்தொலிக்கும் பண் (சுரம்) (Mus. of India. P. 26); a note which is in consonance with the *vātsvaram.*

[Skt.saṃvādi+svara>த. சம்வாதிசுவரம்.]

சம்வாரம் *šamvāram,* பெ.(n.) உதட்டுச் சுருக்கம்; compression of lips (சா.அக.).

சம்வித்து *šamvittu,* பெ.(n.) அறிவு; consciousness, intelligence. *"இந்திரியாதி களனைத்தினும் வியாபித்து நிற்கும் சம்வித்து" (சிவசம.42).*

[Skt. saṃ-vit> த. சம்வித்து.]

சம்விற்பத்திரம் *samvir-pattiram,* பெ.(n.) அரசர்கள் தம்முட் பகைமையின்றி ஒத்து வாழ்வதற்கு, எழுதிக் கொள்ளும் ஆவணம் (சுக்கிரநீதி, 94); treaty of friendship and co-operation between kings.

[Skt. saṃ-vit+patra> த. சம்விற்பத்திரம்.]

சம்வேகம் *šamvēgam,* பெ.(n.) அறத்திலும் அறப்பயனிலும் ஆசையுடைமை (சீவக.3133, கீழ்க்குறிப்பு); (Jaina.) desire of virtue and its fruits.

[Skt. saṃ-vēga> த. சம்வேகம்.]

சமக்காளம் *šama-k-kāḷam,* பெ.(n.) விரிப்பு வகை (இ.வ.); carpet.

[U. jamkāna> த. சமக்காளம்.]

சமக்கிரதம் *šamakkiradam,* பெ.(n.) வடமொழி (சமற்கிருதம்); Sanskrit language. *"பாவினங்களுட் சமக்கிரதமும் வேற்றுப்பாடையும் விரவிவந்தால்" (யாப்.வி. பக். 461).*

[Skt. saṃ-s-kṛta> த. சமக்கிரதம்.]

சமக்கிரமாய் *šamakkiram-āy,* பெ.(n.) நிறைவாய்; fully, completely.

[Skt. samagra> சமக்கிரம் + ஆய் > த. சமக்கிரமாய்.]

சமகலி *šamagali,* பெ.(n.) உடல் அசைவுகளுள் ஒன்று (சிலப்.பக்.81); (*Nāṭya*) a gesticulation of the limbs.

[Skt. sama-skhalatikā> த. சமகலி.]

சமகோலம் *šama-kōlam,* பெ.(n.) பாம்பு; snake (சா.அக.).

சமசத்தமம் *šama-šattamam,* பெ.(n.) வியாழன் நின்ற ஓரை (இராசி)க்கு ஏழாம் ஓரை (இராசி)யிலே வெள்ளி (சுக்கிரன்) நிற்கும் நிலை; (Astrol.) horoscopic position in which Venus occupies the seventh house from that of Jupiter. *"பொன்னவனின்ற ராசிக் கேழதாய்ப் புகன்ற ராசி தன்னிலே வெள்ளி நின்றாற் சமசத்தமப்பே ராகும்" (சங்.அக.).*

[Skt. sama+saptama> த. சமசத்தமம்.]

சமசம் *šamašam,* பெ.(n.) ஒருவகை மது (சோமரசம்) வைத்தற்குரிய கைப்பிடியுள்ள வேள்வியேனம்; a sacrifical vessel with a handle for keepinhg *sōma* juice.

"வேள்வியிற் சமசம்போலும்" (காஞ்சிப்பு. ஒழுக்கப்.03).

[Skt. camasa > த. சமசம்.]

சமசாதி *šama-šādi*, பெ.(n.) ஒத்த இனத்தார் (இ.வ.); homogeneous race.

[Skt. sama+jāti > த. சமசாதி.]

சமசி[1] *šamaši*, பெ.(n.) நிறைவு; முடிவு (பூர்த்தி) (வின்.); completeness, fulness.

[Skt. samṛddhi > த. சமசி.]

சமசி[2] *šamaši*, பெ.(n.) **சமசை** பார்க்க; see *šamašai*.

சமசு *šamašu*, பெ.(n.) கலகக் கூட்டம் (இ.வ.); seditious assembly, faction, junto.

[Skt. samāja > த. சமசு.]

சமஞ்சசம் *šamañjašam*, பெ.(n.) உருவொப்புமை; conformity, resemblance. "பொன் சமஞ்சஸங் காண்பதற்கு" (S.I.I.vi., 149).

[Skt. samañ-jasa > த. சமஞ்சசம்.]

சமஞ்சிதன்[1] *šamañjidaṉ*, பெ.(n.) ஊர் அல்லது ஊரவையின் (சபையின்) கணக்கன்; accountant of a village or its assembly. "திருவனந்தபுரத்துச் சபையும் சமஞ்சிதனும்... கூடி" (T.A.S.II, 174).

[Skt. samañcita > த. சமஞ்சிதன்.]

சமஞ்சிதன்[2] *šamañjitaṉ*, பெ.(n.) கோயில் வேலைக்காரன் (S.I.I.v, 339); temple servant.

[Skt. samañcita > த. சமஞ்சிதன்.]

சமட்சம் *šamaṭcam*, பெ.(n.) நேருரை (இ.வ.); presence.

[Skt. sam-akṣam > த. சமட்சம்.]

சமட்டியாத்தி *šamaṭṭiyātti*, பெ. (n.) தொகுபடு (அவிபக்த) சொத்து (கொ.வ.); joint or undivided property.

[Skt. samaṣṭi+āoti > த. சமட்டியாத்தி.]

சமத்காரம் *šamat-kāram*, பெ.(n.) 1. பேச்சுத் திறமை; cleverness, skill in speaking. 2. செய்யுணயம்; poetic charm. 3. தோற்றம்; aspect, manifestation. "சொரூபத்தியற் சமத்காரந்தான்" (ஞானவா.வில்வ.12).

[Skt. camat-kāra > த. சமத்காரம்.]

சமத்தம் *šamattam*, பெ.(n.) எல்லாம்; all, everything.

[Skt. samasta > த. சமத்தம்.]

சமத்தானபதி *šamattāṉapadi*, பெ.(n.) அரசன்; ruler of a state, king, chief.

[Skt. saṃ-sthāna+pati > த. சமத்தானபதி.]

சமத்தானம் *šamattāṉam*, பெ.(n.) 1. அரசாண்மை நிலம் (அ) ஆள்புலம் (இராச்சியம்); kingdom, state, dominion. 2. தலைநகரம் (வின்.); place of residence, especially of a king or chief; capital.

[Skt. saṃsthāna > த. சமத்தானம்.]

சமத்தானவித்துவான் *šamattāṉa-vittuvāṉ*, பெ.(n.) அரசவைப் புலவன்; poet-laureate, court poet.

[Skt. saṃsthāna+vidvān → த. சமத்தானவித்துவான்]

சமத்தானாதிபதி *šamattāṉādipadi*, பெ.(n.) **சமத்தானபதி** பார்க்க; see *samattāṉapadi*.

[Skt. saṃsthāna + adhi-pati > த. சமத்தானாதிபதி]

சமதக்கினி *šamadakkiṉi*, பெ.(n.) பரசுராமனது தந்தையாகிய முனிவர்; a *Rṣi* father of *Parašurāmaṉ*.

[Skt. jamadagni > த. சமதக்கினி.]

சமதரிசி *šama-darišį*, பெ.(n.) பொது நோக்குடையவன் (இ.வ.); one who views impartially.

[Skt. sama-darśī > த. சமதரிசி.]

சமதன்[1] *šamadaṉ,* பெ.(n.) **சம்மதன், 1** பார்க்க; see *šammadaṉ.*

சமதன்[2] *šamadaṉ,* பெ. (n.) பொறிவாய விப்பவன் (சங்.அக.); one who enables another to subdue his senses.

[Skt. šama-da> த. சமதன்[2].]

சமதானநிலை *šama-dāṉa-nilai,* பெ.(n.) சமனிசை (மத்தியஸ்தாயி.); middle octave.

[சமதானம்+நிலை]

[Skt.sama+sthāna> சமதானம்]

சமதிருட்டி *šama-diruṭṭi,* பெ.(n.) அதி காலையில் வியாழன் மறைய, வெள்ளி உதிக்கும் நன்றல்லா (தோஷ) காலம் (விதான. குணாகுண.49); inauspicious time in early mornings when Venus rises just as Jupiter sets.

[Skt. sama+drṣṭi> த. சமதிருட்டி.]

சமதீதம்[1] *šamadīdam,* பெ.(n.) கழிந்தது (சங்.அக.); that which is past.

[Skt. sam-atita> த. சமதீதம்.]

சமதீதம்[2] *šamadīdam,* பெ.(n.) ஒன்றியம் (ஐக்கியம்) (யாழ்.அக.); union.

[Skt. samati-tā> த. சமதீதம்.]

சமந்தகம் *šamandagam,* பெ.(n.) கண்ண பிரான் கழுத்தில் அணிந்த தெய்வமணி வகை; a gem of miraculous virtue worn by *Kṛṣṇa* on his neck.

[Skt. syamantaka> த. சமந்தகம்.]

சமந்தகமணி *šamandaga-maṇi,* பெ.(n.) **சமந்தகம்** (பாகவத.10, சத்தியாபா, 7) பார்க்க; see *šamandagam.*

[Skt. samantaka + த. மணி> த. சமந்தகமணி]

சமந்தகவிரத்னம் *šamandaga-v-iratṉam,* பெ.(n.) **சமந்தகம்** பார்க்க; see *šamandagam.* *"சமந்தக விரத்னந் தாவென" (பிரபோத.26 : 34).*

[Skt.syamantaka+ratna>த.சமந்தகவிரத்னம்]

சமந்தபத்திரன் *šamandapattiraṉ,* பெ.(n.) புத்த தேவன்; lord Buddha.

[Skt.samanta-bhadra > த.சமந்தபத்திரன்.]

சமமுகம் *šama-mugam,* பெ.(n.) முகநளிநயம் (அபிநயம்) பதினான்கனுள் ஊழ்கஞ்செய்வது (தியானிப்பது) போல அசையாது நேர்முக மாயிருக்கும் நளிநயம் (அபிநயம்) (சது.); (*Nāṭya*) holding one's head erect and steady as if in contemplation, one of 14 *muga-v-abi-nayam*, q.v.

சமமூலம் *šama-mūlam,* பெ.(n.) வளையலுப்பு; glass gall-felvitri (சா.அக.).

சமர்ச்சனம் *šamarccaṉam,* பெ.(n.) வழி படுகை (இ.வ.); worshipping, offering obeisance.

[Skt. sam-arccana> த. சமர்ச்சனம்.]

சமர்த்தம் *šamarttam,* பெ.(n.) அறநூல்களில் (சுமிருதிகளில்) நெறிப்படுத்திய சடங்கு; rites prescribed by the smṛtis. *"சமர்த்தமென்றும் புகழ்ந் தெவருமேத்துந் தருமம்" (கூர்மபு. அழற்கரும.5).*

[Skt. smārta> த. சமர்த்தம்.]

சமர்ப்பணம் *šamarppaṇam,* பெ.(n.) கடவுளர் – பெரியோர்களுக்குக் காணிக்கை முதலாயின அளிக்கை; dedication, votive offering.

த.வ. படையல்

[Skt. samarppaṇa> த. சமர்ப்பணம்.]

சமர்ப்பணை *šamarppaṇai,* பெ.(n.) **சமர்ப்பணம்** பார்க்க; see *šamarppaṇam.*

சமர்ப்பி-த்தல் *šamarppi-,* 4 செ.குன்றாவி. (v.t.) கடவுளர் – பெரியோர்களுக்குக் காணிக்கை முதலாயின அளித்தல்; to offer, as to God; to dedicate, as a book. *"ஈசனிடத் தெப்பொருளுஞ் சமர்ப்பித்து" (ஞானவா.அருச்.13).*

த.வ. படை–த்தல்

[Skt. samarppi> த. சமர்ப்பி–.]

சமரதம் *šama-radam,* பெ.(n.) நால்வகைத் தேர்(இரதம்)களுள்ஒன்று (பத்ம.தென்றல் விடு.67, உரை); a class of chariots, one of four *iradam.*

[Skt. samaratha> த. சமரதம்.]

சமரதி *šama-radi,* பெ.(n.) கலவி வகை; a mode of sexual enjoyment.

[Skt. samarati> த. சமரதி.]

சமரவி *šama-ravi,* பெ.(n.) கோள்களின் நடுநிலையைக் குறிக்கும் கதிரவன் நிரைகோடு, (வின்.); (Astron.) sun's true longitude as the middle of an eclipse.

[Skt. samaravi> த. சமரவி.]

சமரிக்கேசு *šamari-k-kēšu,* பெ.(n.) சுருக்கமாக உசாவுகை (விசாரணை) செய்யப்படும் வழக்கு (இ.வ.); a judicial enquiry conducted summarily.

[E. summary +case> த. சமரிக்கேசு.]

சமலம் *šamalam,* பெ.(n.) 1. மலம்; ordure, refuse. 2. அழுக்கு (யாழ்.அக.); impurity.

[Skt. sa-mala> த. சமலம்.]

சமலன் *šamalan,* பெ.(n.) (மலத்தோடு கூடியவன்) சிற்றுயிர் (சீவான்மா); soul, as being with malam. *"சமலர்க்குப் பாசந் தடுத்து" (சைவச.ஆசா.23).*

[Skt. sa-mala> த. சமலன்.]

சமலாவத்தை *šamalāvattai,* பெ.(n.) ஆதன் (ஆன்மா) மலத்தோடு கூடியிருக்கும் பொழுது அடையும் நிலை (சி.சி.4, 36, மறைஞா.); (*šaivam*) condition of the soul when it is subject to malam.

[Skt. sa-mala+avasthā> த. சமலாவத்தை.]

சமவசரணம் *šamavašaranam,* பெ.(n.) கேவலியிடமிருந்து அறிவுரை பெறுதற்குப் பூமிக்குமேலே 5000 விற்கிடைத் தூரத்தில் தேவர்களால் உருவா(நியமி)க்கப்பட்ட சினாலயம் (Jaina.); heavenly pavilion erected by the Gods at a distance of 5000 bow lengths above the earth for receiving sacred instructions from *kēvali,* the perfected soul. *"சமவசரணச்சருக்கம்" (மேருமந்.).*

[Skt. sama-vašarana> த. சமவசரணம்.]

சமவாகாரம் *šama-vāgāram,* பெ.(n.) தேவர் அரக்கர்களுடைய வீரச் செயல்களைக் காட்டுவதாய் மூன்று உறுப்புகளைக் (மூன்றங்களைக்) கொண்ட உருவக வகை (சிலப்.பக்.84); (Drama) species of drama in three acts representing the heroic deeds of gods or demons, one of ten *rūpagam,* q.v.

[Skt. sam-avākāra> த. சமவாகாரம்.]

சமவேதசமவாயம் *šamavēda-šamavāyam,* பெ.(n.) காட்சிக்குக்கரணியமான பொறி புலத் தொடர்பு (சன்னிகரிடம்) ஆறுனுள் நீக்கமின்றியிருப்பதனோடு நெருங்கியுள்ள நற்றொடர்பு (தருக்கசங்.நியாய.31); (log.) intimate relation of an object with that which is intimately united with another, one of six *cannikaridam,* q.v.

[Skt. sam-avēta+sam-avāya> த. சமவேத சமவாயம்.]

சமற்கிருதம் *šamar-kirudam,* பெ.(n.) வடமொழி; the Sanskrit language.

[Skt. sams-krta> த. சமற்கிருதம்.]

சமன்சாரிசெய்-தல் *šamansāri-šey-,* 1 செ.கு.வி.(v.i.) அழைப்பாணை (சம்மன்) நிறைவேற்றுதல் (கொ.வ.); to serve summons.

[E.summons>த. சம்மன்→த.சமன்+சாரிசெய்- .]

சமனத்துவயம் *šamana-t-tuvayam,* பெ.(n.) ஒரு மூலிகை; an unknown drug (சா.அக.).

சமாக்கினி *šamākkini,* பெ.(n.) 1. வயிற்றுத்தீ; want of the chief solvent fluid in the digestive process. 2. இயல்பான பசி; moderate-appetite (சா.அக.).

சமா *šamā,* பெ.(n.) குழுமம்; company.

[U. jamā> த. சமா.]

சமாகமம் *šamāgamam,* பெ.(n.) சேர்க்கை; union.

[Skt. sam-ā-gama> த. சமாகமம்.]

சமாகிதம் *šamāgidam,* பெ.(n.) ஒருவன் முயலுந்தொழிலின் பயன் அத்தொழிலாற் கைகூடாது (சித்தியாகாது) வேறொன்றாற் கைகூடுவதாகக் கூறும் அணி (தண்டி.71); (Rhet.) figure of speech in which an effect is described as proceeding from something other than its natural cause.

த.வ. அயற்காரணஅணி

[Skt. sam-ā-hita> த. சமாகிதம்.]

சமாகோராத்திரம் *šamāgōrāttiram,* பெ.(n.) பகலிரவுகள் நாழிகையளவில் ஒத்தநாள் (பாண்டி.); equinox.

த.வ. நடுநாள்

[Skt.sama+ahōrātra>த. சமாகோராத்திரம்.]

சமாச்சிரயம் *šamācciraуam,* பெ.(n.) ஆற்றலில்லாத ஒருவன் தன்னைக் காப்பாற்றுபவனைச் சார்ந்தொழுகை (சுக்கிரநீதி, 336); dependence of a weak person upon his protector.

த.வ. புகலிடச்சார்பு

[Skt. sam-ā-šraya> த. சமாச்சிரயம்.]

சமாசம்[1] *šamašam,* பெ.(n.) அவை (சபை); assembly, association.

[Skt. sam-āja> த. சமாசம்[1].]

சமாசம்[2] *šamāšam,* பெ.(n.) தொகைமொழி; (Gram.) compound word. *"நன்மொழியானுரைத்தார்கள் சமாசம்" (வீரசோ.தொகை.6).*

த.வ. தொகை

[Skt. samāsa> த. சமாசம்.]

சமாசம்[3] *šamāšam,* பெ.(n.) நஞ்சு வகைகளில் ஒன்று (யாழ்.அக.); a mineral poison.

சமாசன் *šamāšan,* பெ.(n.) **சமாசம்[2]** பார்க்க; see *šamāšam. "கற்பவர் கூறுஞ் சமாசன்களே" (பி.வி.20).*

சமாசாரபத்திரிகை *šamāšāra-pattirigai,* பெ.(n.) வணிகச் செய்தித்தாள் (இக்.வ.); newspaper.

த.வ. செய்தித்தாள்

[Skt.sam-ā-cāra+patrikā> த. சமாசாரப் பத்திரிகை.]

சமாசாரம் *šamāšāram,* பெ.(n.) செய்தி; news, intelligence, information.

[Skt. sam-ā-cāra → த. சமாசாரம்.]

சமாசிரயணம் *šamāširayaṇam,* பெ.(n.) சமயத் தலைவன் (ஆசாரியன்) சங்கு சக்கர முத்திராதானஞ் செய்து மாலியம் (வைணவத்துவம்) அளிக்கும் சடங்கு; initiation ceremony in which a priest brands upon his disciple's shoulders the marks of discus and conch.

[Skt. samā-šrayaṇa> த. சமாசிரயணம்.]

சமாசிரயம் *šamāširayam,* பெ.(n.) பால்; milk (சா.அக.).

சமாசோக்தி *šamā-šōkti,* பெ.(n.) 1. ஒட்டணி (தண்டி.51, உரை); (Rhet.) a figure of speech. 2. அடைமொழி ஒப்புமையாற்றல்களால் அல்பொருட் செய்தி தோன்றப் புகழ்பொருட் செய்தியைச் சொல்லும் அணி (அணியி.23); (Rhet.) a figure of speech in which the description of an object in question suggests something else owing to similarity in action or attributes.

த.வ. அல்பொருளணி

[Skt. samāsōkti> த. சமாசோக்தி.]

சமாதானக்கொடி *šamādāṉa-k-koḍi,* பெ.(n.) அமைதியைத் (சமாதானத்தை) தெரிவிக்குங் கொடி (வின்.); flag of truce.

த.வ. அமைதிக்கொடி

[Skt. sam-ā-dhāna +த. கொடி > த. சமாதானக் கொடி.]

சமாதானத்தினாவி *šamādāṉa-t-tiṉāvi,* பெ.(n.) அமைதியின் அதிதேவதை (கிறித்.); the spirit of peace.

[Skt. sam-ā-dhāna > த. சமாதானத் தினாவி.]

சமாதானநீதிவான் *šamādāṉa-nīdivāṉ,* பெ.(n.) நயன்மை (நீதி) அதிகாரி (J.); justice of the peace.

த.வ. நயனாளன், நாயன்

[Skt. sam-ā-dhāna+niti > த. சமாதான நீதிவான்.]

சமாதானம்[1] *šamādāṉam,* பெ.(n.) 1. அமைதி; peace, tranquillity, equanimity. 2. உடன்பாடு; reconciliation, compromise. 3. தடைக்குவிடை; answer to an objection; explanation. 4. இன்பதுன்பங்களைப் பொருட்படுத்தாத மனநிலை (வின்.); stoicism; indifference to pain or pleasure, as of a yogi or sage. 5. இறைவிருப்பு (சமாதி சட்கசம்பத்துள்) கொள்கைகளுள் ஒன்றான சிந்தனை எளிதாக நிகழுமாறுள்ள மனநிலை; (Phil.) state of mind which facilitates contemplation, one of *šamādi-caṭka-šambattu,* q.v. *"சித்தஞ் சிந்திக்கு மாறு சரசமாய்வைக்குமித்தைச் சமாதான மென்பர்" (கைவல்.தத்துவ.10).* 6. உடன்பாடு (வின்.); consent, agreement.

[Skt. sam-ā-dhāna> த. சமாதனம்.]

சமாதானம்[2] *šamādāṉam,* பெ.(n.) மன வொருக்கம் (நாநார்த்த.909); concentration of mind.

[Skt. sam-ā-dāna> த. சமாதானம்.]

சமாதானலங்கனம் *šamādāṉa-laṅgaṉam,* பெ. (n.) அமைதிக்கேடு உண்டாக்குகை (இ.வ.); breach of peace.

[Skt. sam-ā-dhāna+laṅghana> த.சமாதானலங்கனம்]

சமாதானி *šamādāṉi,* பெ.(n.) நடுக் கற்றவன்–ள் (யாழ்.அக.); even-tempered person.

[Skt. sam-ā-dāna> த. சமாதானி.]

சமாதி *šamādi,* பெ.(n.) 1. எண்ணுறுப்பு ஒகங்களுள் மனத்தைப் பரம்பொருளோடு, ஒன்றிணைத்து நிறுத்துகை (சிலப்.14, 11, உரை); (*yōga*) intense contemplation of God, identifying oneself with him, one of *aṣṭāṅga-yōgam.* 2.மனவுறுதி (சங்கற்பம்); will, as of God. *"பிஞ்ஞகன் சமாதியாலே" (திருவாலவா.16:5).* 3. **கல்லறைக்குழி** பார்க்க; see *kallaṟai-k-kuḻi.* 4. தொழுநோயாளியை உயிருடன் புதைக்கை; burial alive of a leper (R.E.). 5. ஒன்றன் வினையை, ஒப்புடைப் பொருள்மேல் ஏற்றிச் சொல்லுகையாகிய செய்யுட் குணம் (தண்டி.24); (Rhet.) attribution of a deed to a person or thing other than its agent, a merit of poetic composition.

த.வ. 1. மனவொழுக்கம், 2. கல்லறை

[Skt. samādhi > த. சமாதி.]

சமாதிக்கல்[1] *šamādi-k-kal,* பெ.(n.) கல்லறையை மூடுங்கல்; tomb-stone.

[Skt. samādhi > சமாதி + த. கல் > த. சமாதிக்கல்.]

சமாதிக்கல்[2] *šamādi-k-kal,* பெ.(n.) மணிக்குடல் (மூ.அ.); small intestines.

சமாதிக்குழி *šamādi-k-kuḻi,* பெ.(n.) 1. நிமிர்ந்து உட்கார்ந்த நிலையிலேயே இறந்த துறவியை அடக்கஞ் செய்யுங் குழி; grave for interring the remains of an ascetic in an

erect sitting posture. 2. கல்லறை; grave. *"அவனுமொளித்தான் சமாதிக்குழி புகுந்தே" (தனிப்பா.i, 238, 8).*

[Skt. samādhi>சமாதி+த.குழி>த.சமாதிக்குழி.]

சமாதிகநீர் *šamādiga-nīr,* பெ.(n.) சித்தர்கள் கமுக்கமாய் உருவாக்கும் ஐங்காயச் செயநீர்; a pungent liquid extracted from a foetus by a secret process known only to siddhars (சா.அக.).

சமாதிசட்கசம்பத்து *šamādi-šaṭka-šampattu,* பெ.(n.) சமம், தமம், விடல் அல்லது உபரதி, சகித்தல் அல்லது திதிட்சை, சமாதானம், சிரத்தை என்ற அறுகுணங்களும் நிறைகை யாகிய கோட்பாடு (கைவல்.தத்துவ.9); (Phil.) the six principles of conduct, considered as wealth, viz., *šamam, tamam, viḍal (or) ubaradi, šagittal (or) tititcai, šamādāṉam, šrattai,* one of *šādaṉa-šaduṣṭayam* q.v.

[Skt. šama+ādi+ṣaṭka +sam-pad> த. சமாதிசட்கசம்பத்து.]

சமாதிட்டன் *šamādiṭṭaṉ,* பெ.(n.) **சமாதிமான்** பார்க்க; see *šamādimāṉ.*

[Skt. samādhi+stha> த. சமாதிட்டன்.]

சமாதிபெறு-தல் *šamādi-peṟu-,* 5 செ.கு.வி. (v.i.) குருவினிடம் ஊழ்கவொருக்கம் (தியானநிட்டை) பெறுதல் (வின்.); to get initiated into yogism.

த.வ. ஊழ்கநிறைபெறுதல்

[Skt. samādhi+த. பெறு> த. சமாதி + பெறு-]

சமாதிமான் *šamādimāṉ,* பெ.(n.) தவத்திலிருப்பவன் (சங்.அக.); person absorbed in the contemplation of God, yogi.

த.வ. ஒகி, தவசி

[Skt. samādhi-mān> த. சமாதிமான்.]

சமாதியடை-தல் *šamādi-y-aḍai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. அகவழிபாட்டு வழிமுறை (ஒக) நிலையில் அமர்தல்; to sit in yogic contemplation. 2. வீடுபேறு (சித்தி) பெறுதல்; to die, said euphemistically an ascetic.

[சமாதி+அடை-தல்.]

[Skt. samādhi> சமாதி]

சமாதியில்வை-த்தல் *šamādiyil-vai-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. இறந்த துறவி முதலியோரை அமர வைத்துப் புதைத்தல்; to bury in a sitting posture, as the remains of an ascetic. 2. கேடுசெய்தல் (இ.வ.); to slay, crush out utterly.

த.வ. அமர்வுஅடக்கம்

[சமாதி+இல்+வை+(த்)தல்]

[Skt. samādhi> சமாதி]

சமாதியுப்பு *šamādi-y-uppu,* பெ.(n.) 1. உடம்பு அழுகாதிருத்தற்பொருட்டு கல்லறையில் இடும் உப்பு; salt cast into the grave at interment to prevent putrefaction. 2. நல்லடக்கம் (சமாதி) செய்த இடத்தினின்று எடுக்கும் உப்பு; salt from a corpse taken some years after burial.

[சமாதி+உப்பு]

[Skt. samadhi > சமாதி]

சமாப்தி *šamāpti,* பெ.(n.) முடிவு; end, conclusion, completion.

[Skt. sam-āpti> த. சமாப்தி.]

சமாபந்தி *šamāpandi,* பெ.(n.); அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிப்பணத்தைக் குறித்து ஏற்படும் யாண்டிறுதி வருவாய்க் கணிப்பு; annual settlement of revenue.

த.வ. ஆண்டுவரிக்கணிப்பு, வரித்தணிக்கை

[U. jamābandi> த. சமாபந்தி.]

சமாபந்தித்தீர்ப்பு *samābandi-t-tīrppu,* பெ.(n.) தீர்மானங்கள் (W.G.); orders or particulars of revenue orders at *šamāpandi.*

[சமாபந்தி+தீர்ப்பு]

[U. jamābandi > த. சமாபந்தி]

சமாபனம் *šamāpaṉam,* பெ.(n.) **சமாப்தி** பார்க்க; see *šamāpti.*

[Skt. sam-ā-pana > த. சமாபனம்.]

சமாய்-த்தல் *šamāy-,* 4 செ.கு.வி.(v.i.) ஒரு செயலைத் திறமையோடு செய்தல் (இ.வ.); to do excellently.

த.வ. திறனாடல்

[U. jamāi > த. சமாய்-.]

சமாராதனை *šamārādaṉai,* பெ. (n.) பார்ப்பனர் உணவு (பிராமண போசனம்) (Brah.); feeding of Brahmins.

த.வ. பார்ப்புணவு

[Skt. sam-ā-rādhana > த. சமாராதனை.]

சமால்கொட்டை *šamāl-koṭṭai,* பெ.(n.) 1. நேர்வாளவிதை; croton seed. 2. இன்புலவு வகை (இக்.வ.); a kind of sweet meat.

[சமால்+கொட்டை]

[U. jamāl+ > த. சமால்]

சமாலம்பம் *šamālambam,* பெ.(n.) பூசுகை (சங்.அக.); smearing; coating.

[Skt. samā-lambha > த. சமாலம்பம்.]

சமாலேபனம் *šamālēbaṉam,* பெ.(n.) சாணியால் மெழுகுகை (சங்.அக.); cleansing floor with cow-dung solution.

[Skt. sam-ā-lēpana > த. சமாலேபனம்.]

சமாவர்த்தனம் *šamāvarttaṉam,* பெ.(n.) பதினாறு (சோடச) நோன்புகளுள் குருவினிடமிருந்து (ஆசாரியனிடமிருந்து) மறை (வேதம்) ஓதி, மீண்டு வந்ததும் மாணியநோன்பு (பிரமசரிய விரதம்) நீங்கும்படி செய்யும் சடங்கு (சீவக.822, உரை); ceremony observed on the return home of a *Brahmacārin* after finishing his *Vēdic* studies at his preceptor's house, one of *šoḍaca-camskāram,* q.v.

[Skt. sam-ā-vartana > த. சமாவர்த்தனம்.]

சமாவர்த்தனை *šamāvarttaṉai,* பெ.(n.) **சமாவர்த்தனம்** பார்க்க; see *šamāvarttaṉam.*

[Skt.sam-ā-vartana → த. சமாவர்த்தனை.]

சமாவேசம் *šamā-vēšam,* பெ.(n.) 1. நன்கு தெய்வமேறுகை (ஆவேசிக்கை); entrance, possession, as by spirits. *"சமாவேசமாகிய கபாலமுத்தியும்" (சி.சி.8 : 12, மறைஞா.).* 2. மணமக்களின் முதற்சேர்க்கை; consummation of marriage.

[Skt. sam-ā-vēša > த. சமாவேசம்.]

சமானகோத்திரன் *šamāṉa-kōttiraṉ,* பெ.(n.) 1. ஒரே குல மரபைச் (கோத்திரத்தை) சேர்ந்தவன்; person of the same clan.

த.வ. ஒருகுடியன்

சமானதை *šamāṉadai,* பெ.(n.) **சமானம்,** 1.பார்க்க;see *šamāṉam. "சிவசமானதையாயிருக்கும்" (சிவப்.பிரபந்.சிவஞானபாலை. திருப்பள்.1).*

[Skt. samāna-tā > த. சமானதை.]

சமானம் *šamāṉam,* பெ.(n.) 1.ஒப்பு; likeness, equality. 2. ஒத்துள்ளது; that which is equal or similar.

[Skt. samāna > த. சமானம்.]

சமானரகிதம் *šamāṉa-ragidam,* பெ.(n.) ஒப்பற்றது; that which is incomparable or unequalled.

[Skt. samāna+rahita > த. சமானரகிதம்.]

சமானாதிகரணசம்பந்தம் *šamāṉādi-karaṇa-šambandam,* பெ.(n.) ஒரே தொடரியத்தில், ஒரு பொருளையே பற்றிவரும் பல சொற்களுக்குள்ள தொடர்பு (சம்பந்தம்) (வேதா.சூ.117); appositional relation, in a sentence, of words having the same

denotation but different connotations.

சமானாதிகரணியம் *šamānādikaraniyam,* பெ.(n.) **சமானாதிகரணசம்பந்தம்** பார்க்க (வேதா.சூ.117, உரை); see *šamānādi-karana-šambandam.*

[Skt.sāmānādhi-karanya> த.சமானாதி காணியம்.]

சமானார்த்தபதம் *šamānārtta-padam,* பெ. (n.) ஒரு பொருட்பன்மொழி (பி.வி.18); synonyms, words having the same meaning.

[Skt.samānārtha+>pada->த.சமானார்த்தபதம்.]

சமானோதகன் *šamānōdagan,* பெ.(n.) எட்டாந் தலைமுறை முதல் பதினான்காந் தலைமுறைவரையும், முன்னோர்கட்கு எள்ளுந் தண்ணீரும் விடுதற்கு உரிமையுள்ள தாயாதியர்; (legal) agnates from the 8th to the 14th degree, extended to remoter agnates also if the relationship can be clearly established, as connected through libations of water.

[Skt. samānōdaka> த. சமானோதகன்.]

சமிக்கத்தக்க *šamikka-t-takka,* பெ.(n.) செரிமானமாகக் கூடிய; digestable (சா.அக.).

சமிக்கை *šamikkai,* பெ.(n.) 1. செய்கை; signal, hint, gesture, as winking of the eyes. 2. குறியீட்டுப் பெயர்; technical term in art or science.

[Skt. sam-jñā> த. சமிக்கை.]

சமிஞ்ஞாட்சரம் *šamiññātšaram,* பெ.(n.) இயற்பெயர், தந்தை பெயர், ஊர்ப்பெயர், குடிப்பெயர்களைக் குறிக்க வழங்கும் முதற் குறிப்பெழுத்து; a letter, often an initial, denoting name of a person or thing.

த.வ. முன்னெழுத்து

[Skt. sam-jñā+akṣara> த. சமிஞ்ஞாட்சரம்.]

சமிஞ்ஞை *šamiññai,* பெ.(n.) 1. **சமிக்கை,** 1. பார்க்க; see *šamikkai,* 2. பெயர் (த.நி. போ.25); name, appellation.

[Skt. samjñā> த. சமிஞ்ஞை.]

சமித்தம் *šamittam,* பெ.(n.) வேள்வி மண்டபம்; sacrifical hall. *"நின்றதோர் சமித்தங் கண்டான்" (கம்பரா.பொழிலிறுத்த.49).*

[Skt. sam-iddha> த. சமித்தம்.]

சமித்து *šamittu,* பெ.(n.); வேள்விக்குரிய சுள்ளிகள் sacrificial fuel. *"சமித்தேந்திய காவன் மன்னன்" (பாரத.சம்பவ.57).*

[Skt. samidh> த. சமித்து.]

சமிதி *šamidi,* பெ.(n.) 1. அவை (சபை)க் கூட்டம்; association, conference. 2. கருமந் தொடர்ந்து பற்றாமைப் பொருட்டுக் கடைப் பிடிக்கும் ஒழுக்கமான நிறை; (Jaina.) restraints observed for arresting the inflow of karma. *"கோபனஞ் சமிதி தம்மம்" (மேருமந்.99).* 3. **சமீகம்** (யாழ்.அக.) பார்க்க; see *šamīgam.*

[Skt. samiti> த. சமிதி.]

சமிதை *šamidai,* பெ.(n.) வேள்வி (யாகத்து)க் குரிய ஆல், அரசு, அத்தி, இத்தி, மா, பலாசு, வன்னி, நாயுருவி, கருங்காலி என்பவற்றின் சுள்ளி; sacrificial fuel, of which there are nine kinds, viz., *āl, arašu, atti, itti, mā, palāšu, vanni, nāyuruvi, karuṅgāli. "புண்ணியப் பலாசின் கண்ணிறை சமிதை" (பெருங். இலாவண.3, 14).*

[Skt. samidhā> த. சமிதை.]

சமிதைக்கிரிகை *šamidai-k-kirigai,* பெ.(n.) மந்திரமுன்னிட்டு வேள்விச்சுள்ளிகளை தீ (அக்னி) யிலிட்டு, வேள்வி செய்யுஞ் செயல்; act of kindling sacred fire by throwing *šamidai* into sacrifical pit with appropriate mantras. *"சமிதைக்கிரிகை சால் புளிக் கழிப்பி" (பெருங். இலாவாண.3 :81).*

[Skt.samidhā+kriyā>த.சமிதைக் கிரிகை.]

சமிபாடு *šami-pāḍu,* பெ.(n.) 1. செரிக்கும் (சீரணிக்கும்) காலம்; time required for digestion. 2. செரித்தல் (சீரணம்); digestion.

[சமி+பாடு]

[Skt. šam > த. சமி]

சமியன் *šamiyaṉ,* பெ.(n.) அருகன் (வின்.); (Jaina.) arhat.

[Skt. samyama> த. சமியன்.]

சமிர்த்தி *šamirtti,* பெ.(n.) நிறைவு; fulness, abundance. *"அன்னசமிர்த்தி" (குற்றா.தல. சிவபூசை.46).*

[Skt. samṛddhi> த. சமிர்த்தி.]

சமிரணன் *šamiraṇaṉ,* பெ.(n.) **சமீரணன்** பார்க்க; see *šamīraṇaṉ. "சமிரணன்றன் மதலை" (சேதுபு. இராமதீர்.68).*

சமிராட்டு *šamirāṭṭu,* பெ.(n.) **சம்மிராட்டு** பார்க்க; see *sammirāṭṭu. "சுராட்டுமச் சமிராட்டு மானானே" (சேதுபு.கோடிதீர்.48).*

[Skt. sam-rāṭ> த. சமிராட்டு.]

சமீகம் *šamīgam,* பெ.(n.) போர் (ஆ.நி.); war, battle, fight.

[Skt. samīka> த. சமீகம்.]

சமீசணம் *šamīšaṇam,* பெ.(n.) ஆராய்ச்சி (யாழ்.அக.); investigation.

[Skt. sam-īkṣaṇa> த. சமீசணம்.]

சமீந்தார் *šamīndār,* பெ.(n.) குடிகளிடம் தாமே வரி தண்டுதல் செய்து அரசுக்கு மொத்த வரி செலுத்தி (பூமியை) ஆள்வோர்; zemindar, landed proprietor paying land-tax to Government.

த.வ. நிலக்கிழார்

[U. zamīn-dār> த. சமீந்தார்.]

சமீந்தாரி *šamīndāri,* பெ.(n.) 1. சிற்றூர் நிலச்சொத்து; estate of a zemindar. 2. **சமீந்தார்** பார்க்க; see *šamīndār.*

த.வ. நிலக்கிழமை

[U. zamīn-dār> சமீந்தார் > த. சமீந்தாரி.]

சமீபம் *šamībam,* பெ.(n.) அண்மை; nearness, proximity. *"நஞ்சமீபத்தில் வாவென்று" (மச்சபு.ஆதிசி.8).*

[Skt. sam-īpa> த. சமீபம்.]

சமீபலசணை *šamība-lašaṇai,* பெ.(n.) ஒரு பொருளை உணர்த்துஞ் சொல் அப்பொருளினை அடுத்துள்ள பிறிதொரு பொருளை உணர்த்துவதாகிய இலக்கணை (சி.சி.பு.28, சிவாக்.); (Log.) variety of *ilakkaṇai* in which a word denotes an object which is in the vicinity of what it normally signifies, as *kaṅgaikkaṇidai-c-cēri.*

த.வ. பிறிதுணர் இலக்கணம்

[Skt.samīpa+lakṣaṇā> த. சமீபலசணை]

சமீபலபசணை *šamība-laṭṣaṇai,* பெ.(n.) **சமீபலசணை** பார்க்க; see *šamībalašaṇai.*

சமீபவிலக்கணை *šamība-v-ilakkaṇai,* பெ.(n.) **சமீபலட்சணை** பார்க்க; see *šamība-laṭṣaṇai.*

சமீபி-த்தல் *šamībi-,* 4 செ.குன்றாவி.(v.t.) கிட்டுதல்; to approach, come close.

M.samīpikka.

[Skt. samīpa> த. சமீபி-.]

சமீரணம் *šamīraṇam,* பெ.(n.) 1. கிடாரை (மலை.); seville orange. 2. எலுமிச்சை; bergamotte orange.

[Skt. sam-īraṇa> த. சமீரணம்.]

சமீரணன் *šamīraṇaṉ,* பெ.(n.) காற்றுக் கடவுள் (வளிச்செல்வன்); air, wind-god. *"சமீரணன் றுடைப்ப மன்னோ" (கம்பரா.மாரீச.15).*

[Skt. sam-īraṇa> த. சமீரணன்.]

சமீரணி *šamīraṇi,* பெ.(n.) வளிமகன் (வாயு புத்திரன்); *Bhīmaṉ,* as son of *Vāyu.* *"சங்கையுறாது சமீரணி கேட்டு" (பாரத. புட்ப. 79).*

[Skt. samīraṇi> த. சமீரணி.]

சமீரன் *šamīraṉ,* பெ.(n.) **சமீரணன்**(உரி.நி.) பார்க்க; see *šamīraṇaṉ.*

[Skt. sam-īra> த. சமீரன்.]

சமீன் *šamīṉ,* பெ.(n.) **சமீந்தாரி** பார்க்க; see *šamīndāri.*

[U. zamīn> த. சமீன்.]

சமீனம் *šamīṉam,* பெ.(n.) ஆண்டிற்கு ஒருமுறை உண்டாவது (யாழ். அக.); that which is produced once a year.

[Skt. samīna> த. சமீனம்.]

சமு *šamu,* பெ.(n.) 729 யானைகளும் 729 தேர்களும் 2187 குதிரைகளும் 3645 காலாட்களும் அடங்கிய படை (சூடா.); large army consisting of 729 elephants, 729 chariots, 2187 horses and 3645 foot-soldiers.

[Skt. camū> த. சமு.]

பழந்தமிழ் படைவகுப்பில் 9x9=81 கொண்ட நாற்படை அடுக்காகிய அணிவகுப்பு நிலவியது. 9x9x9=729 யானைப்படை, தேர்ப்படைகளும அதன் மும்மடங்காகிய, குதிரைப்படையும் (2187) ஐம்மடங்காகிய (3645) காலாட்படையும் ஒரு பெரும்படை எனப்பட்டது. இதனை வடமொழியாளர் 'சமு' என்னும் சேனையாகக் கருதினர்.

சமுக்கா[1] *šamukkā,* பெ.(n.) திசையறிகருவி (J.); mariner's compass.



சமுக்கா[2] *šamukkā,* பெ.(n.) **சமுக்காக்குழல்** பார்க்க; see *šamukkā-k-kuḻal.*

சமுக்காக்குழல் *šamukkā-k-kuḻal,* பெ.(n.) தொலைநோக்குக் கண்ணாடி (வின்.); telescope.

த.வ. தொலைநோக்கி

[Skt. camukkā+ த. குழல்→சமுக்காக்குழல்.]

சமுக்காரம் *šamukkāram,* பெ. (n.) தூய்மைப்படுத்தும் விழா (சமற்காரம்) (யாழ்.அக.); purificatory ceremony.

[Skt. sam-s-kāra> த. சமுக்காரம்.]

சமுக்காளக்கோட்டுப்புலி *šamukkāḷa-k-kōṭṭuppuli,* பெ.(n.) புலி வகை (யாழ்.அக.); a kind of tiger.

[சமுக்காளம்+கோட்டுப்புலி]

[U. jāmkāna > த. சமுக்காளம்.]

சமுக்காளம் *šamukkāḷam,* பெ.(n.) **சமக்காளம்** பார்க்க; see *šamakkāḷam.*

சமுக்கு *šamukku,* பெ.(n.) குதிரை மாடு முதலியவற்றின் முதுகில் இவர்ந்தூருதற்கு இடப்பெறுந் தவிசு: saddle. *"இடப முதுகிடைச் சமுக்கிட்டேறி" (திருப்பு.902).*

த.வ. சேணம்

[U. jamkhāna > த. சமுக்கு.]

சமுகங்கா-த்தல் *šamugaṅ-kā-,* 4 செ.கு.வி. (v.i.) 1. அருள் (தயை) வேண்டிப் பிறரிடம் (சேவை) பணி செய்தல் (இ.வ.); to serve as attendant for favour. 2. ஒருவரது நல்ல நேரம் கிடைத்தற்குக் காத்திருத்தல்; to wait one's convenience.

[சமுகம்+கா-த்தல்]

[Skt. sam-mukha>த.சமுகம்]

சமுகங்கொடு-த்தல் *šamugaṅ-koḍu-,* 4 செ.கு.வி.(v.i.) தெளிவாயிருத்தல் (பிரசன்னம்); to attend, used respectfully. *"அத்தருணம் தாங்களும்சமுகங்கொடுத்துச் சிறப்பித்துச்*

சொல்லுமாறு வேண்டுகின்றோம்".

த.வ. செவ்விதருதல்

[சமுகம்+கொடு]

[Skt. sam-mukha> த. சமுகம்]

சமுகசேவை *šamuga-šēvai,* பெ.(n.) அரசன், குரு முதலானோரது ஆள்கணத்தில் (சன்னிதானத்தில்) செய்யும் ஊழியம் (வின்.); serving or waiting on a king, guru, etc.

[Skt. sam-mukha+sēvā> த. சமுகசேவை]

சமுகத்தார் *šamugattār,* பெ.(n.) அமைச்சர்கள் (வின்.); councillors, courtiers.

[Skt. sam-mukha> சமுகம் > த. சமுகத்தார்.]

சமுகம் *šamugam,* பெ.(n.) 1. இறையகம் (சன்னிதானம்); august presence, as of a king, guru. 2. நேருரை (பேட்டி); audience, interview, as of a superior. *அந்தப் பிரபுவின் சமுகம் கிடைக்கவில்லை.* 3. பெரியோரை முன்னிலைப்படுத்த வழங்கும் மதிப்புரவுச் சொல்; a term of respect, used in addressing persons of rank.

[Skt. sam-mukha> த. சமுகம்.]

சமுகமளி-த்தல் *šamugamaļi,* 4 செ.கு.வி. (vi.) நேரில் வருகை தருதல் (இலங்.); be present (in a meeting). *கூட்டத்திற்குப் பலர் சமுகமளித்திருந்தனர் .*

[சமுகம்+அளி]

சமுசயப்பட்டவன் *šamušaya-p-paṭṭavaṉ,* பெ. (n.) **சந்தேகக்காரன்** பார்க்க (இ.வ.); see *šandēga-k-kāraṉ.*

த.வ. ஐயமுடையன்

[Skt. sam-šaya > த. சமுசயம் + பட்டவன்.]

சமுசயம் *šamušayam,* பெ.(n.) 1. ஐயம்; doubt, hesitation. 2. குற்றம் பற்றிக் கொள்ளும் ஐயம் (சந்தேகம்); suspicion.

[Skt. sam-šaya> த. சமுசயம்.]

சமுசயவாதி *šamušaya-vādi,* பெ.(n.) எதனையும் ஐயுறுபவன் (சந்தேகிப்பவன்) (வின்.); sceptic.

[Skt. sam-šaya+vadin.> த. சமுசயவாதி]

சமுசாகி *šamušāgi,* பெ.(n.) தொந்தரை; worries. *அவனுக்குச் சமுசாகி அதிகம் (கொ.வ.).*

சமுசாகிசெய்-தல் *šamušāgi-cey-,*1 செ.கு.வி. (v.i.) 1. மனநிறைவு (திருப்தி) செய்தல்; to satisfy. 2. போக்குச் சொல்லுதல் (இ.வ.); to give evasive explanations.

சமுசாரக்காரன் *šamušāra-k-kāraṉ,* பெ.(n.) பெரிய குடும்பத்தை உடையவன் (இ.வ.); a man having a large family.

த.வ. பெருங்குடும்பி

[Skt. sam-sāra > த. சமுசாரம்+காரன்.]

சமுசாரபந்தம் *šamusāra-bandam,* பெ.(n.) இல்லற வாழ்க்கையில் கட்டுப்படல்; bondage of married life (சா.அக.).

த.வ. குடும்பக்கட்டு

[Skt.saṃ-sāra+bandha>த. சமுசாரபந்தம்]

சமுசாரம்[1] *šamušāram,* பெ.(n.) 1. உலக வாழ்க்கை; cycle of mundane existence; worldly life. *"சமுசாரத்தின் புத்தி நீங்குமாறருளும் பார்ப்பதி" (விநாயகபு.2, 7).* 2. குடும்பம்; family. 3. மனைவி (இ.வ.); wife.

[Skt. saṃ-sāra> த. சமுசாரம்.]

சமுசாரம்[2] *šamu-šāram,* பெ. (n.) 1. **சமாசாரம்** (நாஞ்.) பார்க்க; see *šamāšāram.* 2. பொருண்மை, செய்தி (விஷயம்); business, affair. *உன்னிடத்தில் ஒரு சமுசாரம் சொல்ல வேணும்.*

[Skt. samācāra> த. சமுசாரம்.]

சமுசாரவாட்டி *šamušāra-v-āṭṭi,* பெ.(n.) பெரிய குடும்பத்தையுடையவன் (இ.வ.); a woman having a large family.

[Skt. šam-sāra > த. சமுசாரம் + ஆட்டி.]

சமுசாரவாளி *šamušāra-v-āli*, பெ.(n.) **சமுசாரக்காரன்** பார்க்க (இ.வ.); see *šamušārakkāran*.

[Skt. sam-sāra > த. சமுசாரம் + த. ஆளி]

சமுசாரவிருத்தி *šamušara-virutti*, பெ.(n.) குடும்ப நிகழ்ச்சி (J.); family cares or concerns.

[Skt.sam-sāra+vṛtti→த. சமுசாரவிருத்தி]

சமுசாரி *šamusāri*, பெ.(n.) 1. இல்வாழ்வான் (கிருகத்தன்); married person, house holder. 2. **சமுசாரக்காரன்** பார்க்க; see *šamušārakkāran*. 3. குடியானவன்; husbandman, farmer. 4. கரும (கர்ம)த் தொடர்புடையவன்; one involved in the cycle of births as a result of karma. *"சேதனன்றான் சமுசாரியோ" (சி.சி.வரலாறு).*

த.வ. குடும்பி

[Skt. sam-sāri > த. சமுசாரி.]

சமுசாரித்தொழில் *šamusāri-t-tolil*, பெ.(n.) உழவுத்தொழில்; husbandry.

[சமுசாரி+தொழில்]

[Skt.sam-sāri > த. சமுசாரி]

சமுசாரிமகன் *šamušāri-magan*, பெ.(n.) நல்ல குடும்பத்திற் பிறந்தவன் (வின்.); man born of good family.

[சமுசாரி+மகன்]

[Skt. sam-sāri > த. சமுசாரி]

சமுசு *šamušu*, பெ.(n.) 1. கலகக் கூட்டம் (யாழ்.அக.); seditious or riotous assembly. 2. துராலோசனை (வின்.); evil counsel, plot.

[Skt. sam-aj> த. சமுசு.]

சமுசுசெலுத்து-தல் *šamušu-šeluttu-*, 5 செ.கு.வி.(v.i.) கெடு சிந்தனைபடி நடத்தல் (R.); to put the plot in execution.

[சமுசு+செலுத்து-]

[Skt. sam-aj > த. சமுசு]

சமுத்தி[1] *šamutti*, பெ.(n.) **சமிர்த்தி** பார்க்க; see *šamirtti*.

[Skt. samṛddhi > த. சமுத்தி.]

சமுத்தி[2] *šamutti*, பெ.(n.) **சமசை** பார்க்க; see *šamašai*.

சமுத்திகட்டு-தல் *šamutti-kattu-*, 5 செ.கு.வி. (v.i.) செய்யுளின் முடிப்புறுப்பை நிறைவு செய்தல்; to complete a šamasai.

[சமுத்தி+கட்டு-]

[Skt. samṛddhi + த. சமுத்தி]

சமுத்திபாடு-தல் *šamutti-pādu-*, 5 செ.கு.வி. (v.i.) **சமுத்திகட்டு-தல்** பார்க்க; see *šamutti-kattu-*.

[சமுத்தி+பாடு-]

[Skt. samṛddhi > சமுத்தி]

சமுத்திரக்கடம்பு *šamuttira-k-kadambu*, பெ.(n.) வெண்கடம்பு (L.); seaside Indian oak.

[Skt.samudra+kadamba> த. சமுத்திரக கடம்பு.]

சமுத்திரக்கல்லுப்பு *šamuttira-k-kalluppu*, பெ.(n.) கடலினுள் பாறைகளில் உறைந் திருக்கும் கல்லுப்பு; rock salt found adhering to the surface of rocks at the bottom of the sea from where it is dug out (சா.அக.).

[சமுத்திரம்+கல்+உப்பு]

[Skt. šamudra → சமுத்திரம்]

சமுத்திரக்கபம் *šamuttira-k-kabam*, பெ.(n.) **சமுத்திரகோசம்** பார்க்க (மூ.அ.); see *šamuttira-kōsam*.

[Skt. samudra + kaba > த. சமுத்திரகபம்.]

சமுத்திரகலசநியாயம் *šamuttira-kalasa-niyāyam*, பெ.(n.) கடலில் நிரம்ப நீரிருப்பினும் முகக்கும் முகவையளவே நீர் கொள்ளுதல் போலும் நெறி (சி.சி.8, 13, சிவாக்.); principle of sea and cup,

illustrating the fact that the knowledge one can acquire is limited to one's mental capacity, as the cup can hold only its own measure of water though a large quantity is available in the sea.

த.வ. நாழிமுகப்பு நெறி

[Skt. samudra + த. கலசம் + nyāya → த. சமுத்திரகலச நியாயம்.]

சமுத்திரகோசம் *šamuttira-kōšam,* பெ.(n.) கடனுரை (வின்.); cuttlefish bone, as sepiae.

[Skt. samudra+kōṣa> த. சமுத்திர கோசம்.]

சமுத்திரச்செடி *šamuttira-c-cedi,* பெ.(n.) சமுத்திரப்பாலை (பாண்டி.); elephant creeper.

[சமுத்திரம்+செடி]

[Skt. samudra> சமுத்திரம்]

சமுத்திரசித்தி *šamuttira-citti,* பெ.(n.) ஆரால் மீன் (மலை.); lamprey, brownish, attaining 15 in. in length-Rhynchobdella aculeata.

[Skt. samudra+siddhi> த. சமுத்திரசித்தி]



சமுத்திரசுண்டி *šamuttira-sundi,* பெ.(n.) கிளிஞ்சில் (வின்.); bivalve mollusc.

[சமுத்திரம்+சுண்டி–]

[Skt. samudra > சமுத்திரம்]

சமுத்திரசோகி *šamuttira-šōgi,* பெ.(n.) **சமுத்திரப்பாலை** (மலை.) பார்க்க; see *šamuttira-p-pālai.*

[Skt.samudra+sōgi> த.சமுத்திரம் + சோகி.]

சமுத்திரத்தானம் *šamuttira-t-tānam,* பெ.(n.) கடலாட்டு; sea-bath (சா.அக.).

சமுத்திரதோயம் *šamuttira-tōyam,* பெ.(n.) முடக்கொற்றான் வகை; lesser balloon vine, s.cl., cardiospermum canescens (சா.அக.).

[Skt. samudra+tōya> த. சமுத்திரதோயம்.]

சமுத்திரநாதம் *šamuttira-nādam,* பெ.(n.) முப்பு; (In Alchemy) qunit, essence salt or the mystio three salts (சா.அக.).

சமுத்திரநீலக்கல் *šamuttira-nīlakkal,* பெ.(n.) நீலப் பவளம்; acorus (சா.அக.).

சமுத்திரப்பச்சை *šamuttira-p-paccai,* பெ.(n.) **சமுத்திரப்பாலை** பார்க்க; see *šamuttira-p-pālai.*

சமுத்திரப்பழம் *šamuttira-p-palam,* பெ.(n.) கடல் மீன்; sea-fish.

சமுத்திரப்பாலை *šamuttira-p-pālai,* பெ.(n.) மருந்துக்கொடி வகை (L.); elephant creeper, m.cr., Argyreia speciosa.

[சமுத்திரம் + பாலை.]

[Skt.samudra > த. சமுத்திரம்.]



சமுத்திரப்புளியன் *šamuttira-p-puḷiyaṉ,* பெ.(n.) இரிக்கி (இ.வ.); scimitar pod.

[Skt.samudra>த.சமுத்திரம் + த. புளியன்.]

சமுத்திரபகவான் *šamuttirabagavāṉ,* பெ. (n.) **சமுத்திரராசன்** பார்க்க; see *šamuttira-rāšaṉ.*

[Skt.samudra+bhagavān> த. சமுத்தி பகவான்.]

[த. பகவான் > Skt. bhagavān.]

சமுத்திரம் *šamuttiram,* பெ.(n.) 1. கடல் (பிங்.); sea, ocean. 2. ஒன்றையடுத்துப் பதினான்கு சுன்னம் கொண்ட பேரெண் (பிங்.); a very large number, one followed by fourteen cyphers. 3. **சமு** (பிங்.) பார்க்க; see *šamu.* 4. மிகுதி; large quantity, abundance. 5. **சமுத்திரதோயம்** (வின்.) பார்க்க; see *šamuttira-tōyam.*

[Skt. samudra> த. சமுத்திரம்.]

சமுத்திரமட்டப்பாரை *šamuttira-maṭṭa-p-pārai,* பெ.(n.) கடல் மீன் வகை; a kind of mackerel, caranx.



சமுத்திரராசன் *šamuttira-rāsaṉ,* பெ.(n.) கடற்குரிய கடவுள் வருணன்; *Varuṇaṉ,* the sea-god.

[Skt. samudra+rāja> த. சமுத்திரராசன்.]

[த. அரசன் > Skt. rāja.]

சமுத்திரலவணம் *šamuttira-lavaṇam,* பெ.(n.) ஐந்து உப்பு (பஞ்சலவணத்துள்) வகையுள் ஒன்றாகிய கடலுப்பு; sea-salt, one of *pañja-lavaṇam,* q.v.

த.வ. கடலுப்பு

[Skt. samudra+lavaṇa.]

சமுத்திரவருணக்கல் *šamuttira-varuṇakkal,* பெ.(n.) (கடல் நிறம் போன்ற பச்சைக்கல்) படிகப் பச்சை (வின்.); Beryl, as being sea - green.

[சமுத்திரம் + வருணம் + கல் .]

[Skt.samudra>த. சமுத்திரவருணக்கல் .]

த. வண்ணம் > Skt. Varṇa

சமுத்திரவருணச்சிலை *šamuttira-varuṇa-c-cilai,* பெ.(n.) 1. **சமுத்திரவருணக்கல்** பார்க்க; see *šamuttira-varuṇa-k-kal.* 2. கருங்கல் வகை; a variety of granite stone.

[Skt. samudra+Varṇa+ த. சிலை.]

த. வண்ணம் > Skt. Varṇa

சமுத்திரவிலாசம் *šamuttira-vilāšam,* பெ.(n.) தன்னைப் பிரிந்திருக்கும் தலைவனைக் குறித்துத் தலைவி கடற்கரையிலிருந்து புலம்புவதாகப் பாடும் சிற்றிலக்கியவகை; poem in which a maiden laments on the sea-shore her lover's separation.

த.வ. நெய்தல்நிலப்பா

[Skt.samudra+vi-lāsa→த.சமுத்திரவிலாசம்.]

சமுத்திராந்தம் *šamuttirāndam.* பெ.(n.) 1. சிறுகாஞ்சொறி; small climbing nettle. 2. பருத்தி (வின்.); Indian cotton plant. 3. சாதிக்காய்; nutmeg.

சமுத்திராப்பச்சை *šamuttirā-p-paccai,* பெ. (n.) **சமுத்திரப்பாலை** (வின்.) பார்க்க; see *šamuttira-p-pālai.*

சமுத்திராப்பழம் *šamuttirā-p-paḻam,* பெ.(n.) கீழைத் தீவுகளினின்று மருந்தின் பொருட்டுக் கடல் வழியாகக் கொண்டு வரப்பட்டதாகக்

கூறப்படும் குந்தளப்பழம் (வின்.); a medicinal fruit said to have been brought to India from the eastern islands.

த.வ. குந்தளப்பழம், கடற்பழம்

[Skt.samudra+phal(K.pan)(M.samudra-p-palam)> த. சமுத்திராப்பழம்.]

சமுதாடு *šamudāḍu,* பெ.(n.) ஈட்டி வகை; dagger. *"வேல்சமுதாடு வீரவாள் காட்டுதல்" (பரத.பாவ.20).*

[U. jamdhār> த. சமுதாடு.]

சமுதாளி *šamudāḷi,* பெ.(n.) **சமுதாடு** (வின்.) பார்க்க; see *šamudāḍu.*

சமுதிதபிரயோசனம் *šamudida-pira-yōsaṉam,* பெ. (n.) பகிர்ந்துண்ணுகை (R.C.); communion of saints.

[Skt. samudita + prayōjana>த. சமுதித பிரயோசனம்.]

சமுயமினி *šamuya-miṉi,* பெ.(n.) காலனின் தலைநகர் (சி.போ.பா.2, 3, பக்.206); yama's capital.

[Skt. sam-yamini> த. சமுயமினி.]

சமுவரம் *šamu-varam,* பெ.(n.) **சம்வரை** (சி.போ.பா.அவை. பக்.40) பார்க்க; see *šamvarai.*

[Skt. sam-vara> த. சமுவரம்.]

சமுற்கம் *šamuṟkam,* பெ.(n.) இரண்டு அல்லது பல அடிகள் சொல்லளவில் ஒத்தும் பொருளளவில் வேறுபட்டும் வரும் மிறைக்கவி (வின்.); stanza in which two or more lines correspond in sound but differ in sense.

த.வ. பொருள்முரண்அணி

[Skt. sam-ud-ga> த. சமுற்கம்.]

சமுற்பவம் *šamuṟpavam,* பெ.(n.) பிறப்பு (யாழ்.அக.); birth, origin.

[Skt. sam-ud-bhava> த. சமுற்பவம்.]

சமுன்னதி *šamuṉṉadi,* பெ.(n.) செருக்கு (அகந்தை) (வின்.); self-conceit, arrogance.

[Skt. sam-unnati> த. சமுன்னதி.]

சமுனையம் *šamuṉaiyam,* பெ.(n.) ஈரம்; moisture (சா.அக.).

சமூ *šamū,* பெ.(n.) **சமு** (சங்.அக.) பார்க்க; see *šamu.*

சமூகக்காடு *šamūga-k-kāḍu,* பெ.(n.) ஊராரின் தேவைகளை நிறைவு செய்யவும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் பொது இடங்களில் வளர்க்கப்படும் காடு; social forestry (கிரியா.).

த.வ. பொதுக்காடு

[Skt. samūha + த. சமூகம் + த. காடு.]

சமூகசேவகி *šamūga-sēvagi,* பெ.(n.) குமுகாயத்திலெழும் சிக்கலைத் தீர்த்தல், ஏழைகளுக்கு உதவுதல் போன்ற ஊழியத்தில் ஈடுபட்டுள்ள பெண்; a woman social worker (கிரியா.).

த.வ. பொதுநலப்பணிமடந்தை

சமூகம்[1] *šamūgam,* பெ.(n.) திரள்; assembly, multitude. *"சுரசமூகமும்" (பாரத.குருகுல.27).*

த.வ. குமுகம், மன்பதை

[Skt. samūha> த. சமூகம்.]

சமூகம்[2] *šamūgam,* பெ.(n.) தேர், யானை, பரி, காலால் என்பவை மும்மடி கொண்ட படை வகுப்பு (திவா.); a division of an army consisting of three times the unit required for *pirataṉai.*

[Skt. camūka> த. சமூகம்.]

சமூகவாதம் *šamūga-vādam,* பெ.(n.) கரணியத்தின் கூட்டமே காரியமாம் என்று கொள்ளும் (வாதம்) தருக்கம் (சி.போ.பா.2, 2, பக்.142); a doctrine which holds that the effect is simply the aggregate of its causes and nothing more.

[Skt. samūha +vāda→த. சமூகவாதம்.]

சமூகவியல் *šamūgaviyal,* பெ.(n.) குழுவாக வாழும் மனிதர்களைப் பற்றியும், சமூக அமைப்பைப் பற்றியும் ஆராயும் படிப்பு; sociology. *"சமூகவியல் துறை/சமூகவியல் பேராசிரியர்" (கிரியா.).*

[சமூகம் + இயல்.]

[Skt. samūha → த. சமூகம்]

சமூகவிரோதி *šamūga-virōdi,* பெ.(n.) குமுகாயத்துக்குக் கேடு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுபவர்; racketeer, antisocial element (கிரியா.).

த.வ. பொதுநலப்பகைவன்

[Skt.samūha+virōdhin→த. சமூகவிரோதி]

சமூகனி *šamūgani,* பெ.(n.) துடைப்பம் (யாழ்.அக.); broom.

[Skt. sam-ūhani> த. சமூகனி.]

சமூலம்[1] *šamūlam,* பெ.(n.) வேர்முதல், இலையீறாகவுள்ள எல்லாம் (தைலவ.தைல.41); whole, all.

[Skt. sa-mūla> த. சமூலம்.]

சமூலம்[2] *šamūlam,* கு.வி.எ..(adv.) முழுவதும்; wholly.

[Skt. sa-mūla > த. சமூலம்.]

சமேதராக *šamēdarāga,* கு.வி.எ. (adv.) (அ.வ.) (மணவினையர் (தம்பதி) ஒன்று கூடி இணைந்து, உடனிருக்க; (of married people) together, (of gods) along with his or her consort. *"தாங்கள் தம்பதி சமேதராகத் திருமணத்திற்கு வந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்/வள்ளி தெய்வானை சமேதராகக் காட்சியளிக்கும் முருகன் படம்" (கிரியா.).*

த.வ. உடனாக

[Skt. samēta > த. சமேதர் + ஆக.]

சமேதன் *šamēdan,* பெ.(n.) கூடியிருப்பவன்; companion, associate. *"அம்பைசமேதனா யமர்தலினால்" (சங்.அக.).*

த.வ. உடனாளி

[Skt. samēta> த. சமேதன்.]

சமேதார் *šamēdār,* பெ.(n.) படையதிகாரி (சுபேதார்)க்கு அடுத்த அலுவலன்; Indian military officer of the rank of lieutnant, second to the subhadar.

த.வ. சாமந்தன்

[U. jamdār> த. சமேதார்.]

சமைதார் *šamaidār,* பெ.(n.) **சமேதார்** (வின்.) பார்க்க; see *šamēdār.*

சமோகி *šamōgi,* பெ.(n.) அடிக்கடி ஒருவர் கையிலிருந்து மற்றொருவர் கைக்கு மாறி துய்த்தாளப்படும் ஊர் (கிராம) நிலங்கள் N.A. (R.T.); tenure in which village or lands of a community are held individually under periodical distribution.

த.வ. காலநிரல் ஆள்நிலம்

[Skt. sama-bhōgya > த. சமோகி.]

சய்யம் *šayyam,* பெ.(n.) சருக்கரை; sugar (சா.அக.).

சயகாசரோகம் *šayagāša-rōgam,* பெ.(n.) நுரையீரலில் ஏற்படும் புற்று நோய் (சயரோகம்); a tubercular disease of the lungs-*Pulmonary consumption or phthisis* (சா.அக.).

த.வ. ஈரல்புற்று

சயங்கொண்டசோழமண்டலம் *šayan-konda-cōla-mandalam,* பெ.(n.) முதலாம் இராசராசனது சிறப்புப் பெயரால் வழங்கிய, தொண்டை மண்டலம்; (I.M.P.N.A.297) *Tondai-mandalam* called after the sur name of the chola king Raja Raja I.

த.வ. வெற்றிகொண்டசோழன்

[Skt.jaya>த.சயம்+கொண்ட+சோழமண்டலம்.]

சயங்கொண்டசோழன் *šayan-konda-cōlan,* பெ.(n.) முதலாம் இராசராசனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று (S.I.I.11, 7); a

surname assumed by the chola king Raja-Raja I.

[Skt.jaya > த. சயம் + கொண்டசோழன்.]

சயங்கொண்டதொண்டைமண்டலம் *šayaṅ-koṇḍa-toṇḍai-maṇḍalam,* பெ.(n.) **சயங்கொண்டசோழமண்டலம்** பார்க்க (I.M.P.Madr.315); see *šayaṅ-koṇḍa-cōḻa-maṇḍalam.*

[Skt.jaya > த. சயம் + கொண்டதொண்டை மண்டலம்.]

சயங்கொண்டமண்டலம் *šayaṅ-koṇḍa-maṇḍalam,* பெ.(n.) **சயங்கொண்டசோழ மண்டலம்** பார்க்க (I.M.P.N.A.390); see *šayaṅ-koṇḍa-šōḻa-maṇḍalam.*

[Skt.jaya > த. சயம் + கொண்டமண்டலம்.]

சயங்கொண்டான் *šayaṅ-koṇḍāṉ,* பெ.(n.) 11-ம் நூற்றாண்டினரும் கலிங்கத்துப்பரணி இயற்றியவருமான புலவர்; the author of the *kaliṅgattu-p-paraṇi,* 11th C. *"பரணிக்கோர் சயங்கொண்டான்" (தனிப்பா.).*

[சயம்+கொண்டான்.]

[Skt. jaya > த. சயம்]

சயசய *šaya-šaya,* பெ.(n.) வெற்றி குறித்த வாழ்த்து மொழி; expr. meaning 'may victory attend thee!' - addressed to kings and great personages.

த.வ. உகேஉகே

[Skt. jaya+jaya> த. சயசய.]

சயசீலன் *šaya-šīlaṉ,* பெ.(n.) வெற்றிச் செல்வன்; victorious person.

[Skt. jaya+šīla > த. சயசீலன்.]

சயசெம்பு *šaya-šembu,* பெ.(n.) மாசுடைச் செம்பு; impure copper (சா.அக.).

சயத்தம்பம் *šaya-t-tambam,* பெ.(n.) வெற்றித்தூண்; triumphal column. *"சயத்தம்பம் பல நாட்டி" (கலிங்.10).*

[Skt. jaya+stambha> த. சயத்தம்பம்.]

சயத்திரதன் *saya-t-tiradaṉ,* பெ.(n.) பாரதத்திற் கூறப்படும் சிந்துநாட்டரசனும் துரியோதனன் தமக்கை கணவனுமான வீரன் (பாரத.பதின்மூன்றாம்.117); a hero mentioned in *Mahābhārata,* king of the sindhu country and brother-in-law of *Duryōdhana.*

[Skt. jayad-ratha> த. சயத்திரதன்.]

சயதம் *šayadam,* பெ.(n.) 1. உடம்பில் அரத்தக் கேட்டினால் ஏற்படும் கண்டமாலை, சயநோய் முதலியன; an idiopathic blood disease producing tubercle, struma or scrofula; phthisis etc. - *Tubercular diseases.* 2. இடுப்பெலும்பின் ஒரு பகுதி; that portion of the hip bone (சா.அக.).

சயதரன் *šayadaraṉ,* பெ.(n.) கலிங்கத்துப் பரணித் தலைவனான முதற் குலோத்துங்கன் சிறப்புப் பெயர்; a surname of *kulōttuṅga,* 1. the hero of *kaliṅgattu-p-paraṇi.*

[Skt. jaya-dhara> த. சயதரன்]

சயதாளம் *šaya-tāḷam,* பெ.(n.) ஒன்பது (நவ) வகை தாளங்களுள் ஒன்று (திவா.); (Mus.) a variety of time-measure, one of *nava-tāḷam,* q.v.

[Skt. jaya > த. சயம் + த. தாளம்.]

சயந்தகுமாரன் *šayanda-kumāraṉ,* பெ.(n.) **சயந்தன்** (சிலப்.3, 2, அரும்.) பார்க்க; see *šayandaṉ.*

[Skt. jayanta+kumāra > சயந்தகுமாரன் > த. குமரன் > Skt. குமாரன்.]

சயந்தமம் *šayandamam,* பெ.(n.) சாதி அடையாளம் (லிங்கம்); vermilion-*Bisulpheret of mercury* (சா.அக.).

சயந்தன் *šayandaṉ,* பெ.(n.) இந்திரனின் மகன்; Indra's son. *"இந்திர சிறுவன் சயந்தருகென" (சிலப் 3:119)*

[Skt. jayanta> சயந்தன்.]

சயந்தி *šayandi,* பெ.(n.) 1. பிறந்தநாட் பெருவிழா; birthday celebration. 2. வாத மடக்கி (மலை.); wind-killer. 3. சிற்றகத்தி (தைலவ.தைல.89); common sesban.

த.வ. **வெள்ளணிநாள்**

[Skt. jayanti> த. சயந்தி.]

சயபத்திரம் *šaya-pattiram,* பெ.(n.) தருக்கத்தில் தடைவிடைகளை முறைமையாக ஆய்ந்து அவையோரளிக்கும் வெற்றியாவணம் (பு.வெ.8, 19, உரை); certificate of success; record of contentions with the final decision of a learned council.

த.வ. **நாநலவாகை**

[Skt. jaya+Patra> த. சயபத்திரம்.]

சயபருவதம் *šaya-paruvadam,* பெ.(n.) காவிரியாறு தோன்றும் மலை; a mountain. *"ஆம்பல்பூத்த சயபருவத மடுவிலே" (இராமநா.பக்.21).*

[Skt. sahya+Parvata> த. சயபருவதம்.]

சயபித்தம் *šaya-pittam,* பெ.(n.) (வின்.) எலும்புருக்கி நோய்; tuberculosis.

[சய + பித்தம்.]

[Skt. kṣaya> த. சயம்]

சயபேரி *šaya-pēri,* பெ.(n.) **சயபேரிகை** பார்க்க; see *šaya-bērigai.*

த.வ. **வெற்றிமுரசு**

சயபேரிகை *šaya-bērigai,* பெ.(n.) வெற்றி முரசு; drum of victory.

த.வ. **வெற்றிபேரிகை**

[சய + பேரிகை.]

[Skt. jaya > த. சயம்]

சயம்[1] *šayam,* பெ.(n.) 1. வெற்றி; triumph, victory. *"தண்ணீர்ப்பந்தர் சயம்பெறவைத்தும்" (திருவாச.2, 58).* 2. கதிரவன் (சூரியன்) (அக.நி.); sun.

[Skt. jaya> த. சயம்.]

சயம்[2] *šayam,* பெ.(n.) 1. **சயரோகம்** பார்க்க; see *šaya-rōgam. "சயந்தான் பிரமேகம்" (விநாயகபு.69, 62).* 2. சிதைவு (வின்.); waste, loss.

[Skt. kṣaya> த. சயம்.]

சயம்[3] *šayam,* வி.எ.(adv.) தானாக; of one's own accord. *"சயமே யடிமை தலைநின்றார்" (திவ்.திருவாய்.8, 10, 2).*

[Skt. svayam> த. சயம்.]

சயம்பு *šayambu,* பெ.(n.) 1. தானாக உருவானது (நீல. வேதவாத.3); that which is self-existent. 2. சிவன் (பிங்.); *Śivan.* 3. பிரமன் (உரி.நி.); *Brahmā.* 4. அருகன்; Arhat. *"சங்கர னீசன் சயம்பு" (சிலப்.10, 186).*

த.வ. **தான்தோன்றி**

[Skt. svayam-bhū> த. சயம்பு.]

சயம்புலிங்கம் *šayambu-lingam,* பெ.(n.) திருக்கோயிலிலுள்ள இலங்கத்தொன்று (சைவச.பொது.431); one of *parārtta-lingam.*

[Skt. svayam-bhū+linga> த. சயம்புலிங்கம்.]

சயமகள் *šaya-magaḷ,* பெ.(n.) 1. (வெற்றிக் குரிய பெண்) கொற்றவை; *Durgā,* as Goddess of victory. *"கலைமகள் சயமகள்" (தேவா.569, 11).* 2. இரட்டை (மிதுன) யோரை (திவா.); gemini of the zodiac.

[சயம்+மகள்.]

[Skt. jaya> த. சயம்]

சயமங்கலம் *šaya-mangalams,* பெ.(n.) ஒள்ளூரியம் (வைடூரியம்) போன்ற கண்ணும் பல நிறத்தினையுமுடைய குதிரை (சுக்கிரநீதி. 317); a horse of variegated colour with eyes like cat's eye.

[சயம்+மங்கலம்.]

[Skt. jaya > த. சயம்]

சயமரம்[1] *šaya-maram,* பெ.(n.) தன் விழைவு வரைவு (சுயம்வரம்); self-choice of a husband by a princess or a daughter of

a *kṣatriya* at a public assembly of suitors. *"சயமர மறைதுமேனும்" (சூளா.மந்திர.119).*

[Skt. svayam-vara> த. சயமரம்.]

சயமரம்² *šaya-maram,* பெ.(n.) வெற்றிக் குறியான தோரணம்; triumphal arch. *"எத்திசையுஞ் சயமரங் கோடித்து" (திவ். பெரியாழ்.1, 1, 8).*

[சயம்+மரம்.]

[Skt. jaya > த. சயம்]

சயரோகம் *šaya-rōgam,* பெ.(n.) சயமித்தம் பார்க்க; see *šayapittam.*

[Skt. kṣaya+rōga → த. சயரோகம்.]

சயலட்சுமி *šaya-laṭcumi,* பெ.(n.) கொற்றவை; the Goddess of victory.

[Skt. jaya+lakṣmi> த. சயலட்சுமி.]

சயவிசயர் *šaya-višayar,* பெ.(n.) மாலுலகத்தில் (வைகுண்டத்தில்) திருமால் கோயிலின் வாயில்காவலரான இருவர்; the twin-deities guarding the portals of *Viṣṇu's* residence at *Vaiguṇḍam. "பரந்தாமன் சீர்ப் புனைமணி வாயில் காத்தபுகழ்ச் சயவிசயர்" (பாகவ.7, 1, 8).*

[Skt. jaya+vijaya> த. சயவிசயர்.]

சயனக்கிருகம் *šayaṉa-k-kirugam,* பெ.(n.) பள்ளியறை; bed-room.

[Skt. šayana+gṛha →த. சயனக்கிருகம்.]

சயனம் *šayaṉam,* பெ.(n.) 1. படுக்கை (திவா.); bed, couch. 2. படுத்திருக்கை; lying down, taking rest. 3. உறக்கம் (நித்திரை) செய்கை; sleeping. 4. புணர்ச்சி; sexual union.

[Skt. šayana> த. சயனம்.]

சயனாதனம் *šayaṉādaṉam,* பெ.(n.) ஒகவிருக்கை (யோகாசன) வகை (தத்துவப். 109, உரை); (*šaiva.*) a yogic posture.

[சயனம்+ஆதனம்.]

[Skt. šayana> சயனம்]

சயனாதி *šayaṉādi,* பெ.(n.) கனவு (சொற்பனம்); dream (சா.அக.).

சயனி-த்தல் *šayaṉi-,* 4 செ.கு. வி.(v.i.) 1. படுத்தல்; to lie down, take rest. 2. கண் வளர்தல் அல்லது (நித்திரை) உறங்குதல்; to sleep. 3. புணர்தல்; to have sexual intercourse.

த.வ. உறங்கல்

[Skt. šayana> த. சயனி-.]

சயனிப்பு *šayaṉippu,* பெ.(n.) 1. உறக்கம் (நித்திரை); slumber. 2. புணர்கை; the act or state of having intercourse, cohabitation (சா.அக.).

[Skt. šayana → த. சயனிப்பு.]

சயி-த்தல் *šayi-,* 4 செ.குன்றாவி.(v.t.) வெல்லுதல்; to conquer. *"சலங்கொடு சயித்த வினை" (சேதுபு.கத்துரு.110).*

[Skt. jay > த. சயி-.]

சயித்தகம் *šayittagam,* பெ.(n.) சிற்ப நூல் முப்பத்திரண்டனுள் ஒன்று (இருசமய. சிற்பசாத்.3); a treatise on architecture, one of 32 *širpa-nūl.*

[Skt. caityaka> த. சயித்தகம்.]

சயித்தம் *šayittam,* பெ.(n.) அறிவன் கோயில் (சைத்தியம்); Buddhist temple. *"வானோங்கு சிமையத்து வாலொளிச் சயித்தம்" (மணிமே. 28. 131).*

[Skt. caitya> த. சயித்தம்.]

சயித்தான் *šayittāṉ,* பெ.(n.) பேய்; satan, devil.

[U. shaitān> த. சயித்தான்.]

சயித்தி *šayitti,* பெ.(n.) அரசு (சங்.அக.); pipal.

[Skt. caitya> த. சயித்தி.]

சயிதூன் *šayitūṉ,* பெ.(n.) ஒலிவை யெண்ணெய்; olive oil-olivae oleum (சா.அக.).

சயிந்தம் *šayindam,* பெ.(n.) 1. இலிங்கம்; vermilion. 2. இந்துப்பு; rock-salt or sindh salt (சா.அக.).

சயிந்தர் *šayindar,* பெ.(n.) சிந்து நாட்டினர்; people of sind. *"விராடர் மயிந்தர் சயிந்தர்களே" (கலிங்.317).*

[Skt. sindhu> த. சயிந்தர்.]

சயிந்தவலவணம் *šayindava-lavaṇam,* பெ.(n.) ஐந்துவகை உப்பில் (பஞ்சலவனத்துள்) ஒன்றும் சிந்து நாட்டில் உண்டாவதுமாகிய கல்லுப்பு வகை; a kind of rock salt found in sind, one of *pañja-lavaṇam*, q.v.

[Skt. saindhava+lavaṇa> த. சயிந்தவ லவணம்.]

சயிந்தவி *šayindavi,* பெ.(n.) ஓர் (இராகம்) பண் (பரத.இராக.55); (Mus.) a specific melody-type.

[Skt. saindhavī> த. சயிந்தவி.]

சயிரேகம் *šayirēgam,* பெ.(n.) மேக வண்ணக் குறிஞ்சி (மலை.); western Ghats blue nail dye.

[Skt. sairēyaka> த. சயிரேகம்.]

சயிலகோபன் *šayila-kōbaṉ,* பெ.(n.) (மலைகளின் மீது சினமுடையவன்) இந்திரன்; Indra, as one angry with mountains. *"தருவுடைச் சயிலகோபனும்" (கம்பரா. திருவவ.106).*

[Skt. šaila+kōpa> த. சயிலகோபன்.]

சயிலநீர் *šayila-nīr,* பெ.(n.) 1. தூய்மையான கங்கை; pure water. 2. பாறை நீர்; rock-water (சா.அக.).

[சயிலம்+நீர்.]

[Skt. šaila>சயிலம்]

சயிலவருக்கு *šayila-varukku,* பெ.(n.) மலை விளை மூலி; mountain herb (சா.அக.).

[Skt. šaila + varga → த. சயிலவருக்கு.]

சயிலங்கமாலை *šayilaṅga-mālai,* பெ.(n.) வெட்டிவேர் (மலை.); cuscus grass.

சயிலம் *šayilam,* பெ.(n.) மலை (பிங்.); mountain.

[Skt. šaila> த. சயிலம்.]

சயிலாதி[1] *šayilādi,* பெ.(n.) (மலைகளுள் முதன்மையானது) கயிலை (பிங்.); Mt. *Kailās*, as the foremost of mountains.

[Skt. šaila > த. சயிலம் + ஆதி.]

சயிலாதி[2] *šayilādi,* பெ.(n.) (சிலாதனுக்குப் புத்திரன்) நந்தி; Nandi, son of *Šilāda*. *"சயிலாதி–வாய்மொழியும்" (காஞ்சிப்பு. குமர.20).*

[Skt. šailādi> த. சயிலாதி.]

சயிலுப்பு *šayiluppu,* பெ.(n.) வளையலுப்பு (மூ.அ.); glass-gall.

[Skt. šaila > த. சயிலம் + உப்பு.]

சயிலேகம் *šayilēgam,* பெ.(n.) ஒரு நறுமணப் பண்டம்; a kind of fragrant resin, one of 32 *ōmāligai*. *"எண்ணுஞ் சயிலேக மின்புழுகு" (சிலப்.6, 77, உரை).*

[Skt. šailēya> த. சயிலேகம்.]

சயு *šayu,* பெ.(n.) 1. பெரும்பாம்பு; big snake. 2. மலைப்பாம்பு; mountain snake (சா.அக.).

சர்க்கராகசுமரி *šarkkarāga-šumari,* பெ.(n.) மூத்திரப்பையில் கல் உண்டாகும் நோய் (இங்.வை.); gravel.

[Skt. šarkarā+ašmari> த. சர்க்கராகசுமரி]

சர்க்கரா *šarkkarā,* பெ.(n.) நோய் வகை (M.L.); (Med.) calculus.

சர்க்கரைபேரி *šarkkarai-pēri,* பெ.(n.) பேரி வகை (இ.வ.); a kind of pear.

சர்க்கா *šarkkā,* பெ.(n.) கையினால் நூல் நூற்கும் கருவி ராட்டினம் (G.Sm.D.I.i, 264); hand spinning wheel.

த.வ. இராட்டை

[U. carkhā> த. சர்க்கா.]

சர்க்கார் *šarkkār,* பெ.(n.) 1. அரசு;; government. 2. தாழ்வாரம் (வின்.); veranda under a sloping roof.

[U. sarkār> த. சர்க்கார்.]

சர்க்கார்காரியத்தன் *šarkkār-kāriyattan,* பெ.(n.) அரசு அலுவலன் (உத்தி யோகஸ்தன்); public servant.

[U. sarkār+kārya-stha → த.சர்க்கார் காரியத்தன்.]

சர்க்கார்தட்டி *šarkkār-taṭṭi,* பெ.(n.) அரசு (சர்க்கார்) உத்தரவு பெற்று கடை முகப்பில் வெயிற்படாதபடி இடும் தட்டி (இ.வ.); lit., screen put upon official sanction, screen, awning of a shop-window.

[சர்க்கார்+தட்டி.]

[U. sarkār > த. சர்க்கார்]

சர்க்காரூழியம் *šarkkār-ūḻiyam,* பெ.(n.) ஊதியமின்றி அரசாங்கத்துக்குச் செய்யும் வேலை (R.T.); work done for Government without remuneration.

த.வ. அரசுஊழியம்

[சர்க்கார்+ஊழியம்]

[U. sarkār + சர்க்கார்]

சர்க்கில்தார் *šarkkildār,* பெ.(n.) நாட்டின் செயலலுவல் புரியும் அலுவலன் (உத்தியோகத்தன்) (இ.வ.); executive officer in charge of a circle.

[E. circle > த. சர்க்கில் + தார்.]

சர்க்கீல் *šarkkīl,* பெ.(n.) மராட்டியர் ஆட்சியில் அரசியற் பணி செய்து வந்த அமைச்சர் (R.T.); the minister or chief officer vested with general control over administration, under Mahratta Government.

[U. sarkhail > த. சர்க்கீல்.]

சர்க்கூட்டு *šarkkūṭṭu,* பெ.(n.) ஊர்சுற்றுச் செலவு (பிரயாணம்) (இ.வ.); tour, circuit.

[E. circuit> த. சர்க்கூட்டு.]

சர்க்கெல் *šarkkel,* பெ.(n.) **சர்க்கீல்** (R.T.) பார்க்க; see *šarkkīl.*

[U. sarkhail → த. சர்க்கெல்.]

சர்க்கோடு *šar-k-kōḍu,* பெ.(n.) **சர்க்கூட்டு** (இ.வ.) பார்க்க; see *šarkkūṭṭu.*

சர்க்கோணம் *šar-k-kōṇam,* பெ.(n.) மலைமகள் (சாமளாதேவி) திருவீற்றிருக்கும் அறுகோணவிருக்கை; a hexagonal magical diagram forming the seat of the Goddess samala.



சர்த்தி-த்தல் *šartti-,* 4 செ.குன்றாவி.(v.t.) வாயாலெடுக்கை; vomit. *"சீறி மிகவே சர்த்திக்கும்" (பாலவா.931).*

[Skt. chardi> த. சர்த்தி-.]

சர்தார் *šardār,* பெ.(n.) அரசாங்க மேலதிகாரிகளுள் ஒருவன்; an officer of rank.

[U. sardār> த. சர்தார்.]

சர்நாமா *šarnāmā,* பெ.(n.) மேல்முகவரி (விலாசம்) (C.G.); superscription, address of a letter.

[U. sarnāma> த. சர்நாமா.]

சர்ப்பகேது *šarppa-kēdu,* பெ.(n.) அரவக் கொடியோன், துரியோதனன்; *Duryōdhana,* as having a banner with serpent-ensign. *"தன் மைந்தனையு முடனேவினன் சர்ப்பகேது" (பாரத.பதின்மூன்றாம்.81).*

[Skt. sarpa-kētu> த. சர்ப்பகேது.]

சர்ப்பயாகம் *šarppa-yāgam,* பெ.(n.) பாம்புகள் சாகும்படி செய்யும் வேள்வி (யாகம்) (பாகவத.); sacrificial rite for the destruction of serpents.

த.வ. அரவவேள்வி

[Skt. sarpa+yāga> த. சர்ப்பயாகம்.]

சர்ப்பராச்சி *šarpparācci,* பெ.(n.) பீநாறிச் சங்கு; smooth volkameria.

சர்ப்பராசி *šarppa-rāši,* பெ.(n.) நாணல் (சங்.அக.); kaus.

[Skt. sarpa-rāši> த. சர்ப்பராசி.]

சர்ப்பராட்சியம் *šarppa-rāṭciyam,* பெ.(n.) அக்கமணிக்காய் (உருத்திராட்சம்); olive linden-*Eleocarpus* tuberculatus (சா.அக.).

சர்ப்பனை *šarppaṉai,* பெ.(n.) ஏய்ப்பு; hyporcrisy, deception. *"சாமங்கடோறு மிவர்செய்யும் பூசைகள் சர்ப்பனையே" (பட்டினத்.பொது.44).*

[Skt. sarppana> த. சர்ப்பனை.]

சர்ப்பாராதி *šarppārādi,* பெ.(n.) 1. கருடன்; brahminy kite. 2. கீரி; mungoose. 3. மயில்; pea-cock (சா.அக.).

சர்ப்பாரூடம் *šarppārūḍam,* பெ.(n.) கணிய (ஆரூட) வகை (தஞ்.சர.iii, 34); (Astrol.) a mode of prediction.

[Skt. sarpa+a-rudha→ த. சர்ப்பாரூடம்.]

சர்ப்பிராசி *šarppirāši,* பெ.(n.) உணவு, உறைவிடம் முதலியன உதவுகை (வின்.); providing accomodation, etc.; supplying.

[U. sarbarāhi> த. சர்ப்பராசி.]

சர்ப்பி *šarppi,* பெ.(n.) நெய்; ghee. *"சர்ப்பிசமுத்திரம்".*

[Skt. sarpis> த. சர்ப்பி.]

சர்ப்பிராகி *šarppirāgi,* பெ.(n.) **சர்ப்பிராசி** பார்க்க; see *šarppirāši.*

[Persn. sarba-rāhi> த. சர்ப்பிராகி.]

சர்ப்பிராயி *šarppirāyi,* பெ.(n.) **சர்பிராகி** பார்க்க; see *šarppirāgi.*

சர்பத்து *šarbattu,* பெ.(n.) **சரபத்து** பார்க்க; see sarapattu.

[U. sharbat> த. சர்பத்து.]

சர்பரா *šarbarā,* பெ.(n.) உணவு முதலியன உதவுகை; purveying. supplying. *"சர்பராவுக்கெனப் பொருள் பறித்தான்" (இ.வ.).*

[U. sarbarāh> த. சர்பரா.]

சர்பராசு *šarba-rāšu,* பெ.(n.) (adj.) புகழ்பெற்ற (வின்.); distinguished, famous.

[U. sarfarāz> த. சர்பராசு.]

சர்மம் *šarmam,* பெ.(n.) சருமம் பார்க்க; see *šamam.*

[Skt. carman> த. சர்மம்.]

சர்மா *šarmā,* பெ.(n.) பார்ப்பனர் (பிராமணர்) பெயர்களின் பின் சேர்க்கப்படும் பட்டப் பெயர்; honorific title added at the end of names of Brahmins.

[Skt. šarmā> த. சர்மா.]

சர்மாசனம் *šarmāšaṉam,* பெ.(n.) சருமாசனம் பார்க்க; see *šammāšam.*

[Skt. carman+ā-ṣana> த. சர்மாசனம்.]

த. ஆதனம் > **Skt.** *ā-sana.*

சர்வஅக்கிரகாரம் *šarva-akkiragāram,* பெ.(n.) முற்றூட்டாக (சர்வமானியமாக) விடப்பட்ட இறையிலி நிலம் (பிரமதாயம்) (R.T.); village granted to Brahmins tax-free.

[Skt.sarva+agra-hāra>த.சர்வஅக்கிரகாரம்.]

சர்வஇனாம் *šarva-iṉām,* பெ.(n.) **சர்வ மானியம்** பார்க்க; see *šarva-māṉiyam.*

[Skt. sarva+U. inām> த. சர்வஇனாம்.]

சர்வஉத்தரவு *šarva-uttairavu,* பெ.(n.) விருப்பப்படி உத்தரவு முதலியன எழுதிக் கொள்ளும்படியாக ஒருவனுக்குக் கையெழுத்

திட்டுக் கொடுத்த தாள் (பாண்டி.); carte blanche, signed paper given to a person to write his own terms on it.

[சர்வம்+உத்தரவு.]

[Skt. sarva > த. சர்வம்]

சர்வக்கியானம் *šarva-k-kiyāṉam,* பெ.(n.) முற்ற (பூரண) பேரறிவு; (chr.) omniscience.

[Skt. sarva+jñāna→ த. சர்வக்கியானம்]

சர்வகடையம் *šarva-kaḍaiyam,* பெ.(n.) கையணி வகை (parav.); a kind of bracelet.

சர்வகர்த்திருத்துவம் *šarva-karttiruttvam,* பெ.(n.) எல்லாவற்றையும் இயற்றுந் தன்மை; power to create all things.

[Skt. sarva+kartr̥-tva> த. சர்வகர்த் திருத்துவம்]

சர்வகலாசாலை *šarva-kalā-šālai,* பெ.(n.) பல்கலைக் கழகம்; university

[சர்வம்+கலை+சாலை]

[Skt. sarva > சர்வ > த. கலை > Skt. கலா > த. கலா]

சர்வகலையகராதி *šarva-kalai-y-agarādi,* பெ.(n.) எல்லாக் கலைகளையும் விளக்கும் அகராதி (பாண்டி.); encyclopaedia.

[சர்வம்+கலை+அகராதி]

[Skt. sarva> சர்வம்]

சர்வகாடி *šarva-kāḍi,* பெ.(n.) கடும் புளிப்பா யிருக்கும் ஊறுகாய் (காடி) (இ.வ.); very strong vinegar.

[சர்வம்+காடி.]

[Skt. sarva> சர்வம்]

சர்வகிரகணம் *šarva-kiragaṇam,* பெ.(n.) வான கோள்களின் முழு மறைப்பு (கிரகணம்) (C.G.); total eclipse.

த.வ. நிறை ஒளிமறை

[Skt. sarva+grahaṇa> த. சர்வகிரகணம்.]

சர்வகொள்ளை *šarva-koḷḷai,* பெ.(n.) முழுக்கொள்ளை (இ.வ.); whole sale plunder.

[சர்வம்+கொள்ளை]

[Skt. sarva>சர்வம்]

சர்வசக்தி *šarva-sakti,* பெ.(n.) முழு (சர்வ) வல்லமையுடையவன்; he who is omnipotent. *"சர்வசக்தி திரித்ததாகையாலே" (திருவிருத். 51, வ்யா.).*

[Skt. sarva+šakti> த. சர்வசக்தி.]

சர்வசத்திமத்துவம் *šarva-sattimat-tuvam,* பெ.(n.) பெருவல்லமையுடைமை (விவேகசிந்.பக்.4); omnipotence.

[Skt.sarva+šakti-mat+tva>த. சர்வசத்தி மத்துவம்.]

சர்வசங்கநிவிர்த்தி *šarva-saṅga-nivirtti,* பெ.(n.) எல்லாப் பொருளினும் பற்றுவிடுகை; renunciation of all worldly ties. *"சர்வசங்க நிவிர்த்தி வந்த தபோதனர்கள்" (சி.சி.8, 35).*

த.வ. முற்றாகப்பற்றறுத்தல்

[Skt.sarva-saṅga+ni-vr̥tti> த. சர்வசங்க நிவிர்த்தி.]

சர்வசங்கபரித்தியாகம் *šarva-saṅga-parittiyāgam,* பெ.(n.) **சர்வசங்கநிவிர்த்தி** பார்க்க; see *šarva-saṅga-nivirtti.*

[Skt. sarva-saṅga+ parityāga > த. சர்வசங்கபரித்தியாகம்.]

சர்வசங்காரகாலம் *šarva-šaṅgāra-kālam,* பெ.(n.) உலக முழுதும் அழியுங்காலம்; the day of universal destruction, the Doomsday.

த.வ. பேரழிவுக்காலம்

[சர்வ+சங்காரம்+காலம்]

[Skt.sarva+sam-hara>சர்வசங்காரம்+காலம்]

சர்வசாட்சி *šarva-šāṭci,* பெ.(n.) (எல்லா வற்றையுங் காண்பவர்) கடவுள்; God, as observing everything.

[Skt. sarva+sākṣin> த. சர்வசாட்சி.]

சர்வசாதகம் *šarva-šādagam,* பெ.(n.) 1. எல்லா வகையாலும் உதவியாவது; that which is helpful in every day. 2. வேங்கை (மலை.); East Indian kino.

[Skt. sarva+sādhaka > த. சர்வசாதகம்.]

சர்வசாமானியம் *šarva-šāmāṉiyam,* பெ.(n.) மிகப் பொதுநிலையானது (சாதாரணமானது); anything very common.

[Skt. sarva+sāmānya > த. சர்வ சாமானியம்]

சர்வசாரம் *šarva-šāram,* பெ.(n.) நூற்றெட்டுப் நிடதங்களுள் ஒன்று; an *upaniṣad,* one of 108.

[Skt. sarva-sāra > த. சர்வசாரம்.]

சர்வசாரமூலிகை *šarva-šāra-mūligai,* பெ.(n.) கற்றாழை, நீராரை, சிறுசின்னி, பற்பாடகம், வெள்ளறுகு, வல்லாரை, பெருங்கரந்தை, விஷ்ணுகாந்தி, சிவனார் வேம்பு ஆகிய ஒன்பது மூலிகைகளுக்கு வழங்கும் பொதுப்பெயர் (தைலவ.தைல.135, 38, உரை); a general name for the nine important medicinal plants, viz., *kaṟṟāḻai, nīrārai, siṟušiṉṉi, paṟ-pāḍagam, veḷḷaṟugu, vallārai, peruṅ-karandai, viṣṇu-gāndi, šivaṉār vēmbu.*

த.வ. ஒன்பான்மூலிகை

[சர்வம்+சாரம்+மூலிகை.]

[Skt. sarva > சர்வ.]

சர்வசித்திரசம் *šarva-sitti-rašam,* பெ.(n.) மருந்து வகை (பதார்த்த.1214); a medicine.

[Skt. sarva+siddhi+rasa > த. சர்வசித்தி ரசம்]

சர்வசித்து *šarva-šittu,* பெ.(n.) வடமொழியாளரின் அறுபது ஆண்டுகளுள் இருபத்தொன்றாவது; the 21st year of the Jupiter cycle.

[Skt. sarva-jit > த. சர்வசித்து.]

சர்வசுதந்திரம் *šarva-šudandiram,* பெ.(n.) முழுவுரிமை; absolute right.

[Skt. sarva+sva-tantra > த. சர்வசுதந்திரம்]

சர்வசுவதானம் *šarva-šuva-dāṉam,* பெ.(n.) எல்லாச் சொத்தையும் கொடுத்துவிடுகை; donation of one's entire property.

[சர்வசுவ(ம்)+தானம்.]

[Skt. sarva + sva > த. சர்வசுவ(ம்).]

சர்வசுவாதீனம் *šarva-šuvādīṉam,* பெ.(n.) 1. **சர்வசுதந்திரம்** பார்க்க; see *šarva-šudandiram.* 2. முற்றும் கட்டுப்படுதல்; absolute control.

[Skt. sarva+svādhīna > த. சர்வசுவாதீனம்.]

சர்வஞ்ஞத்துவம் *šarvaññattuvam,* பெ.(n.) முற்றுமுணர்ந்தவனாயிருக்குந் தன்மை; omniscience.

[Skt. sarva-jña-tva > த. சர்வஞ்ஞத்துவம்.]

சர்வஞ்ஞதை *šarvaññadai,* பெ.(n.) (முற்றறிவுடையோன்) கடவுள்; God, as omniscient.

[Skt. sarva-jña > த. சர்வஞ்ஞன்.]

சர்வத்தியாகம் *šarva-t-tiyāgam,* பெ.(n.) முற்றத் துறக்கை; complete renunciation.

[Skt. sarva+tyāga > த. சர்வத்தியாகம்.]

சர்வத்திர *šarvattira,* வி.எ.(adv.) எங்கும்; everywhere, in every case.

[Skt. sarva-tra > த. சர்வத்திர.]

சர்வத்திரரும் *šarvattirarum,* பெ.(n.) எல்லாரும் (இ.வ.); all people.

[Skt. sarva-tva > த. சர்வத்திரரும்.]

சர்வதா *šarvadā,* கு.வி.எ.(adv.) எப்பொழுதும்; at all times, always.

[Skt. sarva-dā > த. சர்வதா.]

சர்வதாரி *šarvadāri,* பெ.(n.) வடமொழியாளரின் அறுபது ஆண்டுகளுள் இருபத்திரண்டாவது; the 22nd year of the Jupiter cycle.

[Skt. sarva-dhārin > த. சர்வதாரின்.]

சர்வதும்பால-இனாம் *šarvadumbāla-iṉām,* பெ.(n.) அரசு முத்திரையோடு கூடி உரிமையைக் கொடுக்கும் ஆவண(ம்) (சன்னது) மூலமாகப் பிரித்தாளும் இறையிலி நிலம் (R.T.); land granted rent-free under a dumbala or sanad.

[**Skt.** *sarva+***U.** *dumbālā+***U.** *iṉām> த. சர்வதும்பால-இனாம்.*]

சர்வதுமாலா *šarva-dumālā,* பெ.(n.) **சர்வதும்பால-இனாம்** (வின்.) பார்க்க; see *šarvadumbāla-iṉām.*

[**Skt.** *sarva+dumbāla> த. சர்வதுமாலா.*]

சர்வதேசம் *šarva-dēšam,* பெ.(n.) அனைத்துலக நாடுகள்; international. *"உலக வங்கி ஒரு சர்வதேச நிறுவனம் / இந்தக் கருத்தரங்கில் சர்வதேச நிபுணர்கள் கலந்து கொள்வார்கள்" (கிரியா.).*

[**Skt.** *sarva + த. தேயம் → தேசம் → த. சர்வதேசம்.*]

சர்வதோபத்திரம் *šarvadōpattiram,* பெ.(n.) 1. மிறைக்கவி (தண்டி.95, உரை); a fantastic metrical composition. எல்லாப் பக்கங்களிலும் போர் புரியுமாறு அமைக்கப்பட்ட படை வகுப்பு (வியூகம்); array of an army with fronts in all directions.

[**Skt.** *sarvatō-bhadra> த. சர்வதோபத்திரம்.*]

சர்வதோமுகமா-தல் *šarvatōmugamā-,* 6 செ.கு.வி.(v.i.) எல்லா வழியிலும் நோக்கி நிற்றல்; to face all directions. *"விமலமுமாய்ச் சர்வதோமுகமாயிருக்கிற சிவஞானம்" (சி.சி.10, 5, மறைஞா.).*

த.வ. பன்னோக்கு முகமாதல்

[**Skt.** *sarvatō-mukha> த. சர்வதோ முகம் + ஆ-தல்.*]

சர்வப்பிராயச்சித்தம் *šarva-p-pirāyac cittam,* பெ.(n.) எல்லாத் தீங்குகளும் நீங்கும்படி பெரும்பாலும் இறப்புக் (மரண) காலத்தில் செய்து கொள்ளும் சடங்கு (இ.வ.); ceremony for the explation of all sins, performed generally at the time of death.

த.வ. அனைத்துக்கரிசு நீக்கச்சடங்கு

[**Skt.** *sarva +praya-c-citta >த. சர்வப் பிரயச்சித்தம்.*]

சர்வம் *šarvam,* பெ.(n.) முழுதும்; whole.

[**Skt.** *sarva> த. சர்வம்.*]

சர்வமங்கலை *šarva-maṅgalai,* பெ.(n.) (எல்லா நல்கையுஞ் செய்பவள்) மலைமகள்; *Malaimagaḷ,* as the dispenser of all blessings.

[**Skt.** *sarva-maṅgalā> த. சர்வமங்கலை.*]

சர்வமானியம் *šarva-māṉiyam,* பெ.(n.) எவ்வகை வரியுமில்லாது துய்த்தாளப்படும் நிலம்; rent-free grants; land exempt from all kinds of tax.

த.வ. முற்றூட்டு

[**Skt.** *sarva+mānya> த. சர்வமானியம்.*]

சர்வமுக்தியார்நாமா *šarvamuktiyār-nāmā,* பெ.(n.) எல்லாவற்றுக்குமாகக் கொடுக்கும் அதிகார ஆவணம் (C.G.); general power of attorney.

த.வ. முற்றதிகார ஆவணம்

[**Skt.** *sarva+* **U.** *mukhtārnāma> த. சர்வமுக்தியார்நாமா.*]

சர்வமுகாசா *šarva-mukāšā,* பெ.(n.) ஊழியம் புரிய வேண்டிய கட்டுப்பாட்டுக் குட்படாத இறையிலியாக விடப்பட்ட சிற்றூர் (மானிய கிராமம்) (R.T.); village granted without any condition of service.

[**Skt.** *sarva+ persn. mukāsa > த. சர்வமுகாஸா → சர்வமுகாசா.*]

சர்வமுகூர்த்தம் *šarva-mugūrttam,* பெ.(n.) எல்லா நற்கருமங்கட்குமுரிய நல்வேளை; time held auspicious for all ceremonies.

த.வ. நன்முழுத்தம்

[Skt. sarva+muhūrta>த. சர்வமுகூர்த்தம்.]

சர்வமுட்டாள் *šarva-muṭṭāḷ*, பெ.(n.) அடி மடையன் (இ.வ.); absolute idiot.

[சர்வம்+முட்டாள்]

[Skt. sarva >சர்வம்]

சர்வர் *šarvar*, பெ.(n.) (ஓட்டல் போன்ற) உணவுச்சாலையில், உணவு பரிமாறும் வேலையைச் செய்பவர்; waiter; (in India) server.

த.வ. படையலன், பரிமாறி

[E. server> த. சர்வர்]

சர்வரசம் *šarva-rašam*, பெ.(n.) கறியுப்பு (R.); common salt.

[Skt. sarva+rasa> த. சர்வரசம்.]

சர்வரோகநிவாரணி *šarvarōganivāraṇi*, பெ.(n.) அனைத்து நோய்களையும் குணப் படுத்தவல்லது; cure all, panacea. *"இந்த மூலிகை ஒரு சர்வரோகநிவாரணி"* (கிரியா.).

த.வ. அனைத்து நோய் நீக்கி

[Skt. sarva + rōga+ni-vāraṇa → த. சர்வரோகநிவாரணி.]

சர்வலோத்திரம் *šarva-lōttiram*, பெ.(n.) காகோளி; caper-shrub-*Capparis aphylla* (சா.அக.).

[Skt.sarva +lōdhra→த. சர்வலோத்திரம்.]

சர்வவல்லமை *šarva-vallamai*, பெ.(n.) எல்லாம் வல்லனாந் தன்மை; omnipotence. *"சர்வ வல்லமையுள்ள தெய்வத்தின் முன்பாக".*

த.வ. பேராற்றல்

[சர்வம்+வல்லமை]

[Skt. sarva> சர்வம்]

சர்வவித்தியாகரநூல் *šarva-vittiyāgara-nūl*, பெ.(n.) **சர்வகலையகராதி** (பாண்டி.) பார்க்க; see *šarva-kalai-y-agarādi.*

[சர்வம்+வித்தியாகரம்+நூல்]

[Skt.sarva+vidyākara>சர்வவித்தியாகரம்]

சர்வவியாபி *šarva-viyābi*, பெ.(n.) (எங்கும் நிறைந்தவன்) கடவுள்; God, as omnipresent.

த.வ. எங்கும்பரவி

[Skt. sarva-vyāpin> த. சர்வவியாபி.]

சர்வவில்லங்கசுத்தி *šarva-villaṅga-šutti*, பெ.(n.) சொத்தின் பேரில் எவ்வகை முறை கேடுமின்றியிருக்கை; freedom from all encumberance; clearness of title-used in conveyancing.

த.வ. அவ்வில்லங்கச்செப்பம்

[Skt. sarva+ த. வில்லங்கம் + šuddhi→ சர்வவில்லங்கசுத்தி.]

சர்வன்[1] *šarvaṉ*, பெ.(n.) சிவன்; *Šivaṉ.*

[Skt. šarva> த. சர்வன்.]

சர்வன்[2] *šarvaṉ*, பெ.(n.) சிவனது பதினொரு உருத்திரருள் ஒருவர் (ஏகாதசருத்திரரு ளொருவர்) (தக்கயாகப்.443, உரை); one of *ēgātas-ruttirar*, q.v.

[Skt. šarva> த. சர்வன்.]

சர்வாங்கசவரம் *šarvaṅga-savaram*, பெ.(n.) உடல் முழுதும் மயிர் மழிக்கை (இ.வ.); shaving the whole body.

த.வ. முழுமழிக்கை

[Skt.sarva+aṅga+kṣaura> த. சர்வாங்க சவரம்.]

சர்வாங்கசுந்தரன் *šarvāṅga-sundaraṉ*, பெ.(n.) எல்லா உடலுறுப்பமைதிகளாலும் நிரம்பிய(அவயவங்களும்) அழகன்; one perfect in every limb; embodiment of beauty.

த.வ. முழுமேனியழகன்

[Skt.sarva+aṅga+sundara>த. சர்வாங்கசுந்தரன்.]

சர்வாங்கதகனபலி *šarvāṅga-tagaṉabali*, பெ.(n.) முற்றும் எரித்து விடுவதாகிய கருமியம் (பலி) (Chr.); whole burnt-offering, holocaust.

[Skt. sarva + aṅga + த. தகனம் + Skt. bali > சர்வாங்கதகனபலி.]

சர்வாங்கதகனம் *šarvāṅga-taganam,* பெ. (n.) 1. முழுமையும் எரிக்கை; burning the whole. 2. **சர்வாங்கதகனபலி** (வின்.) பார்க்க; see *šarvāṅga-taganabali.*

த.வ. முற்றெரிவு

[Skt. sarva + aṅga > சர்வாங்கம் + த. தகனம் → சர்வாங்கதகனம்.]

சர்வாங்கவாயு *šarvāṅga-vāyu,* பெ. (n.) நோய் வகை (கடம்ப.பு.இலீலா.132); a disease.

[Skt. sarva + aṅga + vāyu > த. சர்வாங்கவாயு.]

சர்வாணி[1] *šarvāṇi,* பெ. (n.) (சர்வனுடைய மனைவி) மலைமகள் (சிவரக.தாருகன்.30); *Malaimagaḷ,* as the spouse of *Šarvan.*

[Skt. šarvāṇi > த. சர்வாணி.]

சர்வாணி[2] *šarvāṇi,* பெ. (n.) பார்ப்பன (பிராமண)க் கூட்டத்துள் எல்லார்க்கும் ஒப்பக் கொடுக்கும் பொருள்(பூரி) (தட்சிணை); (*Brāh.*) distribution of small money gifts to every one in a company of Brahmins.

[Skt. sarvāṇi > த. சர்வாணி.]

சர்வாத்துமகத்துவம் *šarvāttumagattuvam,* பெ. (n.) எல்லாவற்றிலும் ஊடுருவியிருக்கை (விவேகசிந்.4); all pervasiveness, immanence.

த.வ. அனைத்து ஊடாட்டம்

[Skt. šarva+ātman+mahat-tva > த. சர்வாத்துமகத்துவம்.]

சர்வாதிகாரம் *šarvādigāram,* பெ. (n.) தனிமனிதன் அல்லது ஓர் அமைப்பு எல்லா அதிகாரங்களையும் வைத்துக் கொண்டு அடக்கி ஆளும் முறை; dictatorship. *"சர்வாதிகார ஆட்சியை மக்கள் ஒழித்திருக் கிறார்கள்" (கிரியா.).*

த.வ. முற்றதிகாரம்

[Skt. šarva > த. சர்வம் + த. அதிகாரம் → சர்வாதிகாரம்.]

சர்வாதிகாரி[1] *šarvādigāri,* பெ. (n.) எல்லா செயல் (காரியம்) களையுங் கவனிக்கும் அதிகாரி; general superintendent.

த.வ. முற்றதிகாரி

[Skt. sarva > சர்வம் + த. அதிகாரி → சர்வாதிகாரி.]

சர்வாதிகாரி[2] *šarvādigāri,* பெ. (n.) அரசியல் முதலிய செயல்களைத் தனித்து நிருவகிப் போன் (இக்.வ.); dictator.

[Skt. sarvā > சர்வம் + த. அதிகாரி → சர்வாதிகாரி.]

சர்வாதித்தியம் *šarvādittiyam,* பெ. (n.) பெரு விருந்து; public feast.

[Skt. sarva + diatya > த. சர்வாதித்தியம்.]

சர்வாந்தர்யாமி *šarvāndaryāmi,* பெ. (n.) (எங்கும் உள்ளிருந்து நியமிப்பவன்) கடவுள்; God, as Immanent.

த.வ. அனைத்துள்ளகன்

[Skt. sarva+antaryāmin > த. சர்வாந்தர் யாமி.]

சர்வே *šarvē,* பெ. (n.) நில அளவை, (land) survey. *"சர்வே எண்/சர்வே கல்" (கிரியா.).*

த.வ. அளவை

[E. survey > த. சர்வே.]

சர்வேக்கல் *šarvē-k-kal,* பெ. (n.) அரசு நில அளவையாளர் நிலத்தை அளந்து பிரித்திடும் எல்லைக்கல்; boundary stone fixed in surveying.

த.வ. அளவைக்கல், எல்லைக்கல்

[சர்வே+கல்]

[E. survey > சர்வே]

சர்வேச்சுரன் *šarvēccuran,* பெ. (n.) (எல்லா வுயிர்க்கும் நாதன்) கடவுள்; God, as the Lord of all.

[Skt. šarva+īšvara > த. சர்வேச்சுரன்.]

சர்வேசன் *šarvēšan,* பெ. (n.) **சர்வேச்சுரன்** பார்க்க; see *šarvēccuran. "சர்வேசவென்று நான்" (தாயு. கருணாகர.1).*

[Skt. šarva+īša > த. சர்வேசன்.]

சரகாடி *šaragāḍi,* பெ.(n.) **சர்வகாடி** (வின்.) பார்க்க; see *šarva-kāḍi.*

சரச்சா *saraccā,* பெ.(n.) கடகத்தினின்றுங் கொண்ட வாக்கிய எண்; (Astron.) sine of ascensional difference.

[Skt. cara-jyā> த. சரச்சா.]

சரச்சுவதி *šaraccuvadi,* பெ.(n.) 1. கலைமகள்; *Kalaimagaḷ.* 2. ஓர் ஆறு; a river. *"சாமியோடு சரச்சுவதியவள்" (தேவா.432, 8).*

[Skt. sarasvatī> த. சரச்சுவதி.]

சரச்சொதி *šaraccodi,* பெ.(n.) 1. **சரசுவதி**[1] பார்க்க; see *sarasvatī.* 2. மலைமகள்; *Malaimagaḷ* *"சுருதி சருவாணி சரச்சொதி" (கூர்மபு.திருக்கல்.22).*

[Skt. sarasvatī> த. சரச்சொதி.]

சரசக்காரன் *šaraša-k-kāraṉ,* பெ.(n.) 1. இனிய குணமுள்ளவன்; courteous, sweet-natured person. 2. பகடியன் (விகடன்); a mimic.

[சரசம்+காரன்]

[Skt.sarasa > த. சரசம்]

சரசகேளிக்கை *šaraša-kēḷikkai,* பெ.(n.) மகளிர் விளையாட்டு; love play (சா.அக.).

சரசங்காட்டு-தல் *šarašaṅ-kāṭṭu-,* 5 செ.குன்றாவி. (v.t.) உறுப்பசைவால் (அ) விளையாட்டு செய்தல் (அங்க சேட்டைகளால் பரிகசித்தல்) (இ.வ.); to ridicule by mimicking.

[சரசம்+காட்டு]

[Skt. sa-rasa>சரசம்]

சரசச்சேட்டை *šaraša-c-cēṭṭai,* பெ.(n.) காமச் செய்கை (சேட்டை); wanton sport (சா.அக.).

[Skt.sa-rasa+cēṣṭa த. சரசச்சேட்டை.]

சரசசல்லாபம் *šaraša-šallābam,* பெ.(n.) **சரசப்பேச்சு** பார்க்க; see *šaraša-p-pēccu.*

[Skt.sa-rasa+sallāba> த. சரசசல்லாபம்.]

சரசப்பேச்சு *šaraša-p-pēccu,* பெ.(n.) 1. காதற்பேச்சு; amorous talk. 2. வேடிக்கைச் சொல் (வார்த்தை); pleasantry, jest. *"தாயென்ற நீலிக்குஞ் சரசப்பேச்சு மாச்சு" (தனிப்பா.i, 388, 41).*

[சரசம்-பேச்சு]

[Skt. sa-rasa > சரசம்]

சரசபம் *šarašabam,* பெ.(n.) கடுகு (தைலவ.); mustard.

[Skt. sarṣapa> த. சரசபம்.]

சரசம்[1] *šarašam,* பெ.(n.) 1. இனிய குணம்; courteousness, sociability. 2. பகடி (பரிகாசம்) (வின்.); joking, mimicry, banter. 3. காமச் செய்கை (சேஷ்டை); amorous gestures. *"சரசவித மணவாளா" (திருப்பு. 133).* 4. மலிவு; cheapness, lowness of price. 5. தேக்கு (மலை.); teak. 6. உண்மை; truth. *"சரசம் போன் முந்துன் வளவிற் சிலவுடைமை வைத்து வைத்தே னென்றாய்" (விறலிவிடு.803).*

[Skt. sa-rasa> த. சரசம்.]

சரசம்[2] *šarašam,* கு.வி.எ.(adv.) இனிமையாக; sweetly, pleasantly. *"சரசம் வாசியென்று சொல்லை" (அழகர்கல.25).*

[Skt. sa-rasa> த. சரசம்.]

சரசமாடு-தல் *šarašam-āḍu,* 5 செ.கு.வி. (v.t.) போலியாக நடித்தல், ஏமாற்றுதல்; to feign. *"யாரிடம் சரசமாடுகிறாய்" (கிரியா.).*

[சரசம்+ஆடு]

[Skt. sa-rasa> த. சரசம் + ஆடு]

சரசயனம் *šara-šayaṉam,* பெ.(n.) **சரதல்பம்** பார்க்க; see *šaradalbam.*

[Skt. šara+šay-ana> த. சரசயனம்.]

சரசலீலை *šaraša-līlai,* பெ.(n.) புணர்ச்சி (அ) காம (சுரத) விளையாட்டு (இ.வ.); amorous caressing; dallying.

[Skt. sarasa+līlā> த. சரசலீலை.]

சரசா *šarašā,* பெ.(n.) **சரச்சா** (வின்.) பார்க்க; (Astron.) see *šaraccā.*

சரசாங்கி *šarašāṅgi,* பெ.(n.) மேளகர்த்தாக்களு ளொன்று (சங்.சந்.47); (mus.) a primary *rāga.*

[Skt. sarasāṅgi> த. சரசாங்கி.]

சரசி *šaraši,* பெ.(n.) 1. இனிய குணமுள்ளவ-ன்–ள்; courteous, sweet-natured person. 2. கிண்டல் செய்பவன்–ள் (பரிகாசக்காரன்–(வின்.); jester, humorist.

[Skt. sa-rasa> த. சரசி.]

சரசிசம் *šarašišam,* பெ.(n.) (தடாகத்தில் தோன்றுவது) தாமரை (சங்.அக.); lotus, as born in a pond.

[Skt. sarasi-ja> த. சரசீசம்.]

சரசீருகம் *šara-širugam,* பெ.(n.) **சரசிசம்** (சங்.அக.) பார்க்க; see *šarašišam.*

[Skt. sarasi-ruha> த. சரசீருகம்.]

சரசு *šarašu,* பெ.(n.) நீர் நிலை; a tank, pond, lake. *"பால்புரை வாவிகள் சரசு" (திருக்காளத்.பு.14, 8).*

[Skt. saras> த. சரசு.]

சரசுராதி *šarašurādi,* பெ.(n.) பெரு மருந்து; Indian birthwort-*Aristolochia indica* (சா.அக.).

சரசுவதி[1] *šarašuvadi,* பெ.(n.) 1. நான்முகன் (பிரமன்) தேவியாகிய கலைமகள் (சூடா.); the spouse of *Brahmāṉ,* the divine embodiment of speech and learning. 2. ஓர் ஆறு; a river. 3. பள்ளிக்கூடத்திற்கு முதலில் வரும் பையன் (இ.வ.); boy who is earliest in class-attendance.

[Skt. sarasvati> த. சரசுவதி.]

சரசுவதி[2] *šarašuvati,* பெ.(n.) நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று; an upanisad, one of 108.

[Skt. sarasavati-rahasya> த. சரசுவதி.]

சரசுவதி[3] *šarašuvadi,* பெ.(n.) பண் வகை (பரத.ராக.104); a specific melody-type.

[Skt. sarasvati> த. சரசுவதி.]

சரசுவதிகிருதம் *šarašuvadi-kirudam,* பெ.(n.) **சரசுவதிநெய்** பார்க்க; see *šarašuvadi-ney.*

[Skt.sarasvati+ghṛta → த.சரசுவதிகிருதம்]

சரசுவதிநெய் *šarašuvati-ney,* பெ.(n.) நினைவாற்றல் முதலியவற்றை வளர்க்கும் (விருத்தி) மருந்துவகை (J.); medicinal ghee for improving memory, voice, etc.

[சரசுவதி+நெய்]

[Skt.sarasvatī > சரசுவதி]

சரசுவதிபண்டாரம் *šarašuvadi-paṇḍāram,* பெ.(n.) (கலைமகளின் பொருளறை) (பொக்கிசம்) நூலகம், புத்தக சாலை; library, as the treasure-house of *sarasvatī.*

[சரசுவதி+பண்டாரம்]

[Skt. sarasvatī > சாசுவதி]

சரசுவதிபீடம் *šarašuvadi-pīḍam,* பெ.(n.) 1. (கலைமகள் தங்குமிடம்) கல்வியாளன்; learned man, as the abode of *šarašvadi.* 2. கல்வி விளங்கும் இடம்; seat of learning. 3. **சிக்குப்பலகை** (இ.வ.) பார்க்க; see *šikku-p-palagai.*

[சரசுவதி+பீடம்]

[Skt. sarasvatī >சரசுவதி]

பீடு → பீடம்

சரசுவதிபூசை *šarašuvadi-pūšai,* பெ.(n.) தொள்ளிராவில் (நவராத்திரியில்) கலைமகள் (சரசுவதி) தேவியைப் பூசிக்கும் ஒன்பதாம் நாள்; the ninth day of *Navarāttiri* when *šarasvadī* is worshiped by the Hindus.

[சரசுவதி+பூசை]

[Skt. sarasvatī >சரசுவதி]

பூசி → பூசை

சரசுவதிமனோகரி *šarašuvadi-manōgari*, பெ.(n.) பண் வகை (பரத.ராக.103); (mus.) a specific melody-type.

[Skt. sarasvatī+manohari> த. சரசுவதி மனோகரி.]

சரணக்கிரந்தி *šarana-k-kirandi*, பெ.(n.) 1. கணுக்கால் சதை; that portion of the muscle between the knee and the ankle. 2. கணுக்கால்; ankle (சா.அக.).

[Skt.carana+granthi→த. சரணக்கிரந்தி.]

சரணகோசம் *šarana-kōšam*, பெ.(n.) மேற்சோடு (Pond); stockings.

[Skt.carana+kōša> த. சரணகோசம்.]

சரத்து *šarattu*, பெ.(n.) 1. ஆள்வினையுடைமை (சிரத்தை); diligence. *"சரத்துளதீரன்"* (பிரதாப. விலா.2). 2. பந்தயம்; wager. *'சரத்துப் போட்டுக் கொண்டிருக்கிறேன்'* (இ.வ.).

[U. shart > த. சரத்து.]

சரத்தொட்டி *šarattotti*, பெ.(n.) நீர்த்தொட்டி; water-tube (சா.அக.).

சரந்தம் *šarandam*, பெ.(n.) எருது; bull. (சா.அக.).

சரப்பம் *šarappam*, பெ.(n.) மயிர்; hair. (சா.அக.).

சரபத்து[1] *šarapattu*, பெ.(n.) இன்சுவைப் பருகவகையுளொன்று; a kind of sherbet.

[U. sharbat> சர்பத் > த. சரபத்து.]

சரபத்து[2] *šarapattu*, பெ.(n.) கம்பி (தந்தி) களமைந்த வாத்தியவகை; a kind of guitar with catgut strings.

[U. sarod> > த. சரபத்து².]

சரபா *šarabā*, பெ.(n.) உணவு முதலியன உதவுகை; purveying.

[U. sarbarāh> த. சரபா.]

சரம்[1] *šaram*, பெ.(n.) **சரத்ருது** (பிங்) பார்க்க; see *sarat-rudu*.

[Skt. šarad> த. சரம்.]

சரம்[2] *šaram*, பெ.(n.) இசையொலி (இசைச்சுரம்); musical note. *"பாடு மென்மைச் சரங்கொடு" (திரு. வாலவா. 57, 31).*

[Pkt. sara> த. சரம்.]

சரமகவி *šarama-kavi*, பெ.(n.) இறந்தவர்மீது இரங்கிப்பாடும் கையறுநிலைப் பாட்டு (கவி); elegy, dirge.

[Skt. carma+kavi> த. சரமகவி.]

சரமகிரியை *šarama-kiriyai*, பெ.(n.) ஈமக் கடன் (உத்திரக் கிரியை); funeral rites.

[Skt. carama+kriyā> த. சரமகிரியை.]

சரமசுலோகம் *šarama-šulōgam*, பெ.(n.) 1.**சரமகவி** பார்க்க; see *šarama-kavi*. 2. இறைவனிடம் தஞ்சமேற்பு (பிரபத்தி) முதலாவனற்றைத் தெரிவிக்குஞ் செஞ்சொல் (அ) வடமொழிச் செய்யுள் (சுலோகம்) (அஷ்டாதச முமுக்ஷுப்); verse which teaches the means of attaining final bliss.

[Skt. carama+šlōka> த. சரமசுலோகம்.]

சரமண் *šaraman*, பெ.(n.) தூய்மையானமண்; dhoby's earth. (சா.அக.).

சரமதசை *šarama-tašai*, பெ.(n.) இறக்கும் தறுவாய்; dying moments, last moments. *"பட்டர் சரமதசையிலே அருளிச் செய்த வார்த்தை" (ஈடு. 10, 10, 7).*

[Skt. carama+dašā> த. சரமதசை.]

சரமதிசை *šarāma-tišai*, பெ.(n.) சரமதசை பார்க்க; see *šarama tašai* (சா.அக.).

[சரமதசை → சரமதிசை]

சரமதேகதாரி *šarama-dēgadāri*, பெ.(n.) முத்திக்கு முன்னுள்ள கடைசி உடல முடையோன்; (Jaina) one who has taken a mortal body for the last time before final deliverance.

[Skt.carma+dēha+dārin>த.சரமதேகதாரி.]

தாரி – தரிப்பவன் என்னும் பொருள்பயக்கும் ஓர் ஈறு.

சரமம் *šaramam,* பெ.(n.) 1. முடிவு; end, finality. *"சரம முலகந் தவத்தழலாற் சாரும்"* (வேதாரணிய. திரிசங்.18) 2. மேற்கு (இலக்.அக.); west.

[Skt. carma> த. சரமம்.]

சரமநாதம் *šara-nādam,* பெ.(n.) ஓரைக்கு உற்ற சித்திரை, ஆடி, ஐப்பசி, தை மாதம் (வின்.); the month *cittiraiaṭi, aippaci* or tai corresponding to its appropriate *cara-rāci.*

[Skt. cara+ñāda> த. சரமநாதம்.]

சரமை *šaramai,* பெ.(n.) பெண்ணாய்; bitch, female dog (சா.அக.).

சரமோபாயம் *šaramōbāyam,* பெ.(n.) பரமனையே ஆம்புடை (உபாயமாகப்)யாகப் பற்றுகை (பிரபத்தி); *(vaišṇ)* absolute surrender to God, as the final means of salvation.

[Skt. carama+upāya> த. சரமோபாயம்.]

சரயு *šarayu,* பெ.(n.) அயோத்திக்கருகிலுள்ள ஓர் ஆறு; a rivers on which stands the ancient city of *Ayōdhyā.* *"சரயுவென்பது தாய்முலை யன்னது"* *(கம்பரா. பாலகா. ஆற்றுப். 12).*

[Skt. sarayū> த. சரயு.]

சரராசி *šara-rāši,* பெ.(n.) வழிநடைச் செலவுப் (பயணம்) முதலியவற்றுக்கு நற்காலமாகக் கொள்ளப்படும் மேடம், கற்கடகம், துலாம், மகரம் என்னும் ஓரை (இராசி)களுள் ஒன்று (விதான மரபி. 5, உரை); one of the four signs of the zodic, viz. mēṭam, karkaṭakan, tulām, makaram, auspicious for activities involvingmovement.

[Skt. cara-rāsi> த. சரராசி.]

சரலகம் *šaralagam,* பெ.(n.) நீர், தண்ணீர்; water (சா.அக.).

சரவணப்பொய்கை *šaravana-p-poygai,* பெ.(n.) இமயமலைச்சாரலிலுள்ளதும் முருகக் கடவுள் தோன்றிய இடமுமான நாணற் புல் உள்ள நீர்நிலை (பு.வெ. 9, 21, உரை); a sacred pond in the *Himālayas* amidst a thicket of kaus, where *Murugan* was born.

[Skt. šara-vaṇa + த. பொய்கை → சரவணப்பொய்கை.]

சரவணபவன் *šaravaṇa-bavaṉ,* பெ.(n.) (நாணற் பொய்கையிற் பிறந்தவன்) முருகக் கடவுள்; Kandan, as born in *šaravāṇa-p-poygai* *"சரவணத்தின் பாங்கரின் வருதலாலே சரவணபவனென்றானான்"* *(கந்தபு. திருவிளை. 16.).*

[Skt. šara-vaṇa+bhava>த. சரவணபவன்.]

சரவணோற்பவன் *šaravaṇōrpavaṉ,* பெ.(n.) **சரவணபவன்** பார்க்க; see *šaravaṇa-bavaṉ.*

[Skt. šara-vana+ud-bhava> த. சரவணோற்பவன்.]

சரவாச்சம் *šaravāccam,* பெ.(n.) கறியுப்பு (வின்.); comman salt.

[Skt. sarva-rasa> த. சரவாச்சம்.]

சரற்காலம் *šaraṟ-kālam,* பெ.(n.) 1. கூதிர்காலம்; autumn. *"சரற்கால சந்திர னிடையுவாவில் வந்து"* *(திவ். நாய்ச். 7,3).* 2. கார்காலம் (திவா.); rainy season.

[சரத்து+காலம்]

[Skt. sarat> த. சரத்]

சரா *šarā,* பெ.(n.) குறிப்பு (இ.வ.); remarks, note.

[U. sharah> த. சரா.]

சராங்கு *šarāṅgu,* பெ.(n.) 1. தோணிக்காரர் கண்காணி; native boatswain, chief of a lascar crew, skipper of a small native vessel. 2 தொடர்வண்டியில் வேலை செய்யும் தொழிலாளிகளுள் ஒருவன்; a railway mechanic.

[U. sar-hang> த. சராங்கு.]

சராசரந்தாங்கி *šarāšarantāṅgi,* பெ.(n.) 1. இளவழுக்கை; tender cocoanut. 2. மூன்று திங்கள் (மாதம்) ஆன கருப்பிண்டம்; three month foetus 3. நீர்ச்சுழல் வண்டு; whirling beetle in water (சா.அக.).

சராத்தி *šarātti,* பெ.(n.) இயங்குடைமைப் பொருள் (சங்கம) (C.G.); movable property.

[Skt. cara+āsti> த. சராத்தி.]

சராதீதை *šarātīdai,* பெ.(n.) மலைமகள் (கூர்மபு. திரக்கலியாண.23.); *pārvati.*

[Skt. cāratīta> த. சராதீதை.]

சராப்பு *šarāppu,* பெ. (n.) 1. பணப் பொறுப்பாளன்; teller employed by banks and commercial firms. 2. கருவூல (பொக்கிச) வேலைக்காரன்; treasury assistant. 3. காசுக்கடைக்காரன்; banker, dealer in precious metals.

த.வ.காசாளன்

[Skt. sarrāf> த. சராப்பு.]

சராப்புகடை *šarāppu-k-kaḍai,* பெ.(n.) காசுக்கடை (madr); a place of business where precious metals are sold.

த.வ. காசுக்கடை.

[Skt. sarrāf >சராப்பு]

சராய்[1] *šarāy,* பெ. (n.) காற்சட்டை; trousers.

சராய்[2] *šarāy,* பெ.(n.) வழிப்போக்கர் தங்கற்குரிய விடுதி (R.T.); mansion, rest house for travellers, caravansary.

[U. sarā> த. சராய்.]

சராயம் *šarāyam,* பெ.(n.) 1. வரவர வரி (தீர்வை) மிகுதிப்படும் நிலம்; land held on a progressive rent for a term of years. 2. முன் நிலவரித்தள்ளுபடி (வஜாச்) செய்ததற்குப் ஒத்ததன்மை (பிரதி)யாகத் தீர்வையில் அதிகமாகக் கூட்டும் வரி (M.N.A.D.I. 285.); additions, made to the assessment, of a sum equal to the amount of temporary remissions.

[U. shrāyam> த. சராயம்.]

சராயு *šarāyu,* பெ.(n.) கருப்பப் பை; womb.

[Skt. jarāyu> த. சராயு.]

சராயுசம் *šarāyušam,* பெ.(n.) உயிர்த் தோற்றம் நான்கனுள் கருப்பையினின்று தோன்றுவன(சி.சி. 2, 89.); viviparous animals, one of four *uyir-t-tōṟṟam.*

[Skt. jarāyu-ja> த. சராயுசம்.]

சராரோபம் *šarārōbam,* பெ.(n.) **சராசனம்** (சூடா) பார்க்க; see *šarāšaṉam.*

[Skt. šara+ā-rōpa> த. சராரோபம்.]

சராவிகை *šarāvigai,* பெ.(n.) மடக்குக்கட்டி; an abscess raised at the margin and depressed in its centre.

சரிங்கம் *šariṅgam,* பெ.(n.) மொச்சைக்காய்; country bean or green beans-*Dolichous* (genus) (சா.அக.).

சரித்திரகாரன் *šarittira-kāraṉ,* பெ.(n.) வரலாற்றாசிரியன்; historian.

[சரித்திரம்+காரன்]

[Skt. caritra >சரித்திரம்]

சரித்திரம் *šarittiram,* பெ.(n.) 1. வரலாறு; histroy, biography. *"எம்மான் சரித்திரங் கேட்டோர்" (சிவரக. பசாசு. 42).* 2. ஒழுக்கம்; conduct. *"அவன் சரித்திரம் நன்றாயில்லை" (இ.வ.).*

த.வ. வரலாறு.

[Skt. caritra> த. சரித்திரம்.]

சரிதம் *šaridam,* பெ.(n.) 1. **சரித்திரம்1** பார்க்க; see *šarittiram,* *"ஆரிச்சந்திரன்றன் சரிதமதை"* (அரிச். பு. பாயி. 13). 2. **சரித்திரம்,** பார்க்க; see *sarittiram* *"நெறியில் சரிதமும்" (பாரத. வேத்திர. 40)*

[Skt. carita> த. சரிதம்.]

சரிதை *šaridai,* பெ.(n.) 1. **சரித்திரம்** பார்க்க; see *sarittiram.* *"வேடம் பலவாஞ் சரிதை கண்டேன்"* (தேவா. 830, 3). 2. **சரியை** பார்க்க; (siva) see *šariyai.* *"சரிதை நற்கிரியை யோகம்"* (பிரபுலிங். சித்தரா. 69). 3. இரவலர்க்கு வழங்கும் பொருள்; alms. *"இன்றுநீர் சரிதை போகி நம்மிடை வருக" (யசோதர.1, 22).*

[Skt. carita> த. சரிதை.]

சரியாபாதம் *šariyā-pādam,* பெ.(n.) சிவாகமப் பகுதி நான்கனுள் ஒன்று (பெரியபு. தில்லைவா. சூச. பக். 59).; (siva) one of the four sections into which *šivāgamam* is divided.

[Skt. caryā+த. பாதம் → த. சரியாபாதம்.]

சரியாவான் *šariyāvān,* பெ.(n.) தொண்டு (சரியை) செய்பவன். (சி.சி. 12, 5, சிவாக்.); one who practises the religious duties of *šariyai.*

[Skt. caryā+வான்> த. சரியாவான்.]

சரியையில்ஞானம் *šariyaiyil-ñāṉam,* பெ.(n.) சிவபெருமானைக் குறித்த ஒன்றல் (தியானம்) உணர்வில் (பாவனை) உறைப்பான ஓர்அனுபவ உணர்ச்சி. (சி. போ. பா. 8, 1, பக். 357); (siva) ecstatic state in the meditation on *šivaṉ.*

[Skt. caryā>சரியை+ த. இல் + Skt. jñāna > த. சரியையில்ஞானம்.]

சரியையில்யோகம் *šariyaiyil-yōgam,* பெ.(n.) மனத்தின்கண் சிவபெருமானை நினைத்து ஒன்றுதல் (தியானிக்கை) (சி. போ. பா. 8, 1, பக். 357); (šivam) meditation on *šivaṉ.*

[Skt. caryā > த. சரியை + த. இல் Skt. yoga.]

சரியையிற்கிரியை *šariyaiyiṟ-kiriyai,* பெ.(n.) ஆவரண வடிவங்களில் ஒருவரைப் பூசிக்கை. (சி. போ. பா. 8, 1, பக். 357).; (saivam) worship of *šiva's* manifested forms in a temple.

[Skt. caryā + த. இல் + Skt. kriyas> த. சரியையிற்கிரியை.]

சரியையிற்சரியை *šariyaiyiṟ-šariyai,* பெ.(n.) திருக்கோயிலில் அலகிடல் மெழுகல் முதலிய திருப்பணிச்செயல் (சி. போ. பா. 8, 1. பக். 357).; (*šaiva*) personal service in temple, such as cleaning.

[Skt.caryā+ த.இல் +caryā→த. சரியையில் சரியை.]

சரிலம் *šarilam,* பெ.(n.) தண்ணீர்; cold water (சா.அக.).

சரிற்புதல்வன் *šariṟ-pudalvaṉ,* பெ.(n.) (கங்கா நதியின் புத்திரன்) வீடுமன்; *Bhismaṉ,* as the son of the river Ganges. *"சரிற்புதல்வனுக்கு நல்லறக்கடவுளுக்கு முரையா" (பாரத. வாரணா. 54).*

[சரித்+புதல்வன்]

[Skt. sarit > த. சரித்]

சரீரக்கனப்பு *šarīra-k-kaṉappu,* பெ.(n.) உடற்குருதி (அரத்த) மிகுதியால் உடல் கனமாயிருக்கை; heaviness of body as in plethora.

[சரீரம்+கனப்பு]

[Skt.šarīra> த. சரீரம்]

சரீரக்கூறு *šarīra-k-kūṟu,* பெ.(n.) 1. உடலின் பகுதி; component or anatomical parts of the body. 2. **சரீரப்போக்கு** பார்க்க; *see sarīra-p-pōkku.* *"சரீரக்கூறு அறிந்து மருந்து கொடுக்க வேண்டும்" (இ.வ.).*

[சரீரம்+கூறு]

[Skt. šarīra > சரீரம்]

சரீரசகாயம் *šarira-šagāyam,* பெ.(n.) உடலுழைப்பாற் செய்யக்கூடிய உதவி (இ.வ.); help afforded by personal labour.

[Skt. šarira+sahāya > த. சரீரசகாயம்.]

சரீரசம்பந்தம் *šarira-šambandam,* பெ.(n.) 1. அரத்த உறவு; blood relationship. 2. புணர்ச்சி (இ.வ.); sexual intercourse.

[Skt. šarira+sam-bandha>த.சரீர சம்பந்தம்.]

சரீரசம்ரட்சனை *šarira-šamratcanai,* பெ.(n.) 1. உடலைப் போற்றுகை; protection of care of the person. 2. வாழ்க்கைப்படி (சீவனாம்சம்) (இக். வ.); maintenance.

[Skt. šarira+samraksana→ த. சரீர சம்ரட்சணை.]

சரீரசரீரிபாவம் *šarira-šariri-bāvam,* பெ.(n.) உடலுக்கும் (சரீரத்திற்கும்) உயிர்க்கும் (சரீர முடையவனுக்கும்) உள்ள உறவு (சம்பந்தம்) (சி. போ. பா. 8, 4, பக். 375); relationship of body and soul.

த.வ. உடலுயிர் உறவு

[Skt. šarira-šariri-bhāva > த. சரீரசரீரி பாவம்.]

சரீரசாத்திரம் *šarira-šāttiram,* பெ.(n.) உடற்கூறு பற்றிய நூல் (இக்.வ.); physiology.

த.வ. உடற்கூற்றுநூல்

[Skt. šarira + šāstra → த. சரீரசாஸ்திரம் → சரீரசாத்திரம்.]

சரீரத்திரயம் *šarira-t-tirayam,* பெ.(n.) பருவுடல், நுண்ணுடல் காரண உடல்கள்; (phil.) three kinds of bodies, viz. *tūla-šariram, cūkkuma-šariram, kārana-šariram.*

[Skt. šarira+traya+ > த. சரீரத்திரயம்.]

சரீரத்துபானம் *šarirattubānam,* பெ.(n.) முலையமுது; women's breast milk.

[Skt. sarira> த. சரீரம் + த. அத்து + Skt. pāna→சரீரத்துபானம்.]

சரீரதண்டனை *šarira-dandanai,* பெ.(n.) மெய்வருத்தம்; corporal punishment.

[சரீரம்+தண்டனை]

[Skt. sarira> த.சரீரம்]

சரீரதருமம் *šarira-darumam,* பெ.(n.) **சரீரப்போக்கு** பார்க்க; *see šarira-p-pōkku.*

[சரீரம் + தருமம்.]

[Skt. šārira > த.சரீரம்.]

சரீரப்பழுது *šarira-p-paludu,* பெ.(n.) உறுப்புக் குறைவு (அங்கவீனம்)(R); deformity.

[சரீரம்+பழுது]

[Skt. šarira> த. சரீரம்]

சரீரப்போக்கு *šarira-p-pōkku,* பெ.(n.) உடல் நிலை; nature of the body, constitution.

[சரீரம்+போக்கு]

[Skt. šarira> த. சரீரம்]

சரீரபதனம் *šarira-padanam,* பெ.(n.) இறப்பு; lit. falling off of the body, death. *"சரீரபதனபர்யந்தஞ் செய்யப்படும் நித்தியகன் மாதிகள்" (சிவசம. 69).*

[சரீரம்+பதனம்]

[Skt. šarira> த. சரீரம்]

சரீரபந்தம் *šarira-bandam,* பெ.(n.) **சரீர சம்பந்தம்** பார்க்க; see *šarira-šambandam.*

சரீரம் *šariram,* பெ.(n.) 1. உடல் (பிங்); body. 2. தனியொருவர்; individual person. *"இப் பன்னிருவருக்குஞ் சரீரம்பிரதி ஆழாக்கு நெய்யும்" (S.i.i.iii, 3).*

[Skt. šarira> த. சரீரம்.]

சரீரயாத்திரை *šarira-yāttirai,* பெ.(n.) பிழைப்பு (சீவனம்); livelihood, as means of sustaining the body.

[Skt. šarira+yatra> த. சரீரயாத்திரை.]

சரீரவதை *šarira-vadai*, பெ.(n.) உடல் உறும் துன்பம் (காயக்கிலேசம்) (வின்); mortification of body by austere penance.

[சரீரம் + வதை.]

[Skt. šarira> த. சரீர.]

சரீரவாக்கு *šarira-vākku*, பெ.(n.) **சரீரப்போக்கு** (வின்) பார்க்க; see *šarira-p-pōkku T.bāgu*

[Skt. šarira> சரீரம் + த. வாக்கு → சரீரவாக்கு.]

சரீரவாகு *šarira-vāku*, பெ.(n.) **சரீரப்போக்கு** பார்க்க; see *šarira-p-pōkku.*

[Skt. šarira> சரீரம் + த. வாகு > த. சரீரவாகு.]

சரீரி *šariri*, பெ.(n.) (சரீரத்தை) உடையது) உயிர்; soul, as the owner of the body.

[Skt. šaririn> த. சரீரி.]

சரீராவரணம் *šarirāvaranam*, பெ.(n.) தோல்; the skin covering the body; integument (சா.அக.).

[சரீரம் + ஆவரணம்.]

[Skt. šarira+a-varana → த. சரீராவரணம்.]

சருக்கராபம் *šaru-k-karābam*, பெ.(n.) மணி (இரத்தின) வகை (சுக்கிரநீதி, 186.); a kind of gem.

[Skt. šarka-rābha> த. சருக்கராபம்.]

சருப்பணம் *šaruppaṇam*, பெ.(n.) குதிரை கதிவகை (சுக்கிர நீதி, 72); a pace of horse.

[Skt. sarpaṇa> த. சருப்பணம்.]

சருப்பதோபத்திரம் *šaruppadōpattiram*, பெ.(n.) 1. சதுரமொன்றில் 64 அறைகள் அமைத்து அவற்றில் 32 எழுத்துள்ள செய்யுளை இருமுறை எழுதிச் சதுரத்தின் எந்தபக்கத்தினின்று தொடங்கினும், அது படிக்கவரும்படி அமைக்கப்படும் மிறைக்கவி (தண்டி. 95, உரை); a fancy verse of 32 letters which, when entered twice in a square of 64 compartments, will read identically from any corner of the square.. 2. **சர்வதோபத்திரம் 2.** பார்க்க; see, *šarvadō-pattiram "போரியூகஞ் சருப்பதோ பத்திரமாக வணிசெய்து"* (பாரத. ஒன்பதாம். 10). 3. பலநிறப்பொடிகளைக் கொண்டு வேள்வி (ஓம)க் குண்டத்திற்கு முன்பாக இடும் கோலம்; figure drawn with powders of varied colours on the floor of a sacrificial ground. *"நுண்பொடிகடொக்க பன்னிறச் சருப்பதோ பத்திரந் துணையும்" (காஞ்சிப்பு. திருக்கண். 24).*

[Skt. sarvatōbhadra> த. சருப்பதோ பத்திரம்.]

சருப்பாங்கக்கல் *šaruppāṅga-k-kal*, பெ.(n.) ஒரு வகைக்கல் (M.M. 248); serpentine hydrous silicate of magnesia.

[Skt. sarpa + aṅga + த.கல்> த. சருப்பாங்கக்கல்.]

சருபந்து *šarubandu*, பெ.(n.) **சருவந்து** பார்க்க; see *šaruvandu.*

சருமகன் *šaru-magan*, பெ.(n.) **சருமகாரன்** பார்க்க; see *šarumakāran*

சருமகாரன் *šaruma-kāran*, பெ.(n.) செம்மான்; leather-worker.

[Skt.carma > சருமம் + த.காரன் → த. சருமகாரன்.]

சருமசோபை *šaruma-šōbai*, பெ.(n.) தோல் தடித்திருக்கையாகிய நோய் (இங்.வை.); hypertrophy of the skin.

[Skt. carman+šōphā> த. சருமசோபை.]

சருமபந்தம் *šaruma-bandam*, பெ.(n.) மிளகு (தைலவ. தைல. 5); black pepper.

[Skt.dharmapattana> த. சருமபந்தம்.]

சருமம் *šarumam,* பெ.(n.) 1. தோல்; skin, hide, leather. *"தைப்பமை சருமத்து"*(தொல். சொல். 402, உரை) 2. தோலாலாகிய பாய் (பிங்.); skin commonly of antelope or tiger, used as seat or bed. 3. கேடயம் (சங். அக.); shield. 4. மரப்பட்டை; bark of a tree.

[Skt. carman> த. சருமம்.]

சருமன்[1] *šaruman,* பெ.(n.) **சருமகன்** (வின்) பார்க்க; see *šarumagan.*

[Skt. carman> த. சருமன்[1].]

சருமன்[2] *šaruman,* பெ.(n.) **சர்மா** பார்க்க; see *šarmā. "சருமன் வருமன்... சார்த்தி வழங்குமியற் பெயர்கள்" (திருவானைக். கோச்செங். 69).*

[Skt. šarman> த. சருமன்[2].]

சருமாசனம் *šarumāšanam,* பெ.(n.) ஒரு வகை ஒகவிருக்கை (யோகாசனம்); a kind of yogic posture.

[Skt. carmāsana> த. சருமாசனம்.]

சருவக்கியன் *šaruvakkiyan,* பெ.(n.) முற்றறிவுடையோன்; God, as omniscient. *"உயர் சருவக்கியன்" (வாயசங். பாசுப. 10).*

[Skt. sarva-jña → த. சர்வஞ்ஞன் → சருவக்கியன்.]

சருவகம் *šaruvagam,* பெ.(n.) 1. தண்ணீர்; water. 2. மனம்; mind.

சருவசங்காராதனம் *šaruva-šaṅgārā-danam,* பெ.(n.) ஒகவிருக்கை (யோகாசன) வகை. (தத்துவப். 108, உரை); *(Šivan)*a yogic posture.

[Skt.sarva+saṁhāra > த. சருவ சங்காரம் + த. ஆதனம் → சருவசங்காராதனம்.]



சருவசத்தி *šaruva-šatti,* பெ.(n.) மலைமகள் (பார்வதி) (கூர்மபு. திருக்கலியாண.23); *Pārvatī.*

[Skt. sarva-šakthi> த. சருவசத்தி.]

சருவசாதகம் *šaruva-šadagam,* பெ.(n.) **சர்வசாதகம்** பார்க்க; see *šarva-šādagam.*

[Skt.sarva+sādhaka → த. சருவசாதகம்.]

சருவசித்து[1] *šaruva-šittu,* பெ.(n.) எல்லாவற்றையும் வென்றவன்; all-conqueror. *"சருவசித்தாகிமே லக்ஷ்யனாகுவாய்" (சரபேந்திர. குற. 17. 8).*

[Skt. sarva-jit> த. சருவசித்து.]

சருவசித்து[2] *šaruvašittu,* பெ. (n.) **சர்வசித்து** பார்க்க; see *šarva-šittu.*

[Skt. sarva-jit → த. சர்வசித்து → சருவசித்து.]

சருவணம் *šaruvanam,* பெ.(n.) 1. உண்ணல்; to eat. 2. வாய்; the mouth (சா.அக.).

சருவதா *šaruvadā,* வி.எ.(adv.) **சர்வதா** பார்க்க; see *šarvadā. "இருவரன்பும் சருவதா ஒருவரன்பாக" (சிலப். 1, 62, உரை).*

[Skt.sarva-dā→த. சர்வதா → சருவதா.]

சருவதாரி *šaruvatāri,* பெ.(n.) **சர்வதாரி** பார்க்க; see *šarvadāri.*

[Skt. sarva-dhārin → த. சர்வதாரி → சருவதாரி.]

சருவந்து *šaruvandu,* பெ.(n.) தலைக்கவசம்; helmet. *"சருவந்து கைக்கொண்டு" (இரகு. திக்குவி. 232).*

[U. sarband>širō-bandha →த. சருவந்து.]

சருவம் *šaruvam,* பெ.(n.) **சர்வம்** பார்க்க; see *šarvam. "சருவநஞ்சிவைபோம்" (பதார்த்த. 1020).*

[Skt. sarva > த. சருவம்.]

சருவமுத்திப்பிரசங்கம் *šaruva-mutti-p-pirašangam,* பெ.(n.) எல்லாரும் முத்தி பெறலாமென்ற கொள்கை; theory of universal salvation.

[Skt.sarva-mukti-prasanga> த.சருவ முத்திப்பிரசங்கம்.]

சருவரி *šaruvari,* பெ.(n.) 1. இரவு; night. *"சருவரி வாரல்" (பதினொ. திருவலஞ். 7).* 2. இருள் (பிங்.); darkness, gloom.

[Skt. šarvari> த. சருவரி.]

சருவவியாபி *šaruva-viyābi,* பெ.(n.) **சர்வ வியாபி** பார்க்க; see *šarva-viyābi.*

[Skt.sarva+vyāpin→த. சர்வவியாபி → சருவவியாபி.]

சருவாங்கம் *šaruvāngam,* பெ.(n.) 1. உடம்பு முழுதும்; body as a whole. 2. எல்லா உறுப்புகள்; all organs.

[Skt.sarva+anga → த. சர்வாங்கம் → சருவாங்கம்.]

சருவிதம் *šaruvidam,* பெ.(n.) உண்ணல்; eating (சா.அக.).

சருவே *šaruvē,* பெ.(n.) நில முதலியவற்றை அளக்கை (இக்.வ.); measurement of land, etc.

[E. survey> த. சருவே.]

சருவோக்தம் *šaruvōktam,* பெ.(n.) சிவாகமங்கள் இருபத்தெட்டனுள் ஒன்று. (சைவச பொது. 335, உரை); an ancient *šaivam* scripture in Sanskrit, one of 28 *šivāgamam* q.v.

[Skt. šarvōkta> த. சருவோக்தம்.]

சரூபாயனம் *šarūbāyanam,* பெ.(n.) வழிபாட்டு உருபோடுதல் (செபம்); prayers (சா.அக.).

சரூர் *šarūr,* பெ.(n.) விரைவு; promptitude, dispatch.

[U. zarūr> த. சரூர்.]

சரை¹-த்தல் *šarai-ttal,* 4 செ.கு.வி.(v.i.) முதுமையடைதல்; to grow old. *"சரைத்ததென் யாக்கை" (ஞானவா. சித். 20).*

[Skt. jarā> த. சரை¹-.]

சரை² *šarai,* பெ.(n.) 1. நரை மயிர் (பிங்.); grey hair. 2. கிழத்தனம்; old age, decrepitude. *"நிகரிலாத் தருமமே சரைமரண நீக்கி" (சிவரக. வருணராச. 35).*

[Skt. jarā> த. சரை².]

சரோசம் *šarōšam,* பெ. (n.) **சரோருகம், 1** (சூடா.) பார்க்க; see *šarōrugam.*

[Skt. sarō-ja> த. சரோசம்.]

சரோசரம் *šarōšaram,* பெ.(n.) இரும்பு; iron (சா.அக.).

சரோசனம் *šarōšanam,* பெ.(n.) சினத்தோடு கூடயிருக்கை; being in anger.

[Skt. sa-rōṣaṇa> த. சரோசனம்.]

சரோருகம் *šarōrugam,* பெ.(n.) 1. தாமரை; lotus. *"முக சரோருகத்தினார்" (பாரத. வாரணா. 65).* 2. அளறு (நரக)வகை (சிவதரு. சுவர்க்க நரக. 108.); a hell.

[Skt. sarō-ruha> த. சரோருகம்.]

சரோருகன் *šarōrugan,* பெ.(n.) (தாமரையினின்று தோன்றியவன்) நான்முகன்; *brahmān,* as born in lotus. *"கமலமென் பொகுட்டுமேவிய வரசரோருகன்" (கம்பரா. திருவவ. 5).*

[Skt. sarō-ruha> த. சரோருகன்.]

சரோவரம் *šarōvaram,* பெ.(n.) சிறந்த பொய்கை; lake of special excellence.

[Skt. sarō-vara> த. சரோவரம்.]

சல்தி *šaldi,* வி.எ.(adv.) விரைவு; quickly.

[U. jaldi> த. சல்தி.]

சல்லகண்டம் *šalla-kaṇḍam,* பெ.(n.) புறா (யாழ்.அக.); dove.

[Skt. jhalla-kantha> த. சல்லகண்டம்.]

சல்லரி *šallari,* பெ.(n.) பூடுவகை; (M.M.404) apium graveolens.

[E. celery> த. சல்லரி.]

சல்லாத்து *šallāttu,* பெ.(n.) மா, பலா முதலிய பழங்களைத் துண்டாக நறுக்கிக் கூட்டிச் செய்யும் ஒருவகை இனிப்புணவு; salad.

த.வ. பழக்கூட்டு

[E. salad> த. சல்லாத்து.]

சல்லாபத்தரு *šallāba-t-taru,* பெ.(n.) வினா விடையாக நாடகவரங்கிற் பாடும் பாடல் (வின்.); stage song in the form of a duet.

[Skt.sallāpa+dhruva > த. சல்லாபத்தரு.]

சல்லாபம் *šallābam,* பெ.(n.) 1. கலந்துரையாடல் pleasant conversation, dialogue. 2. காதற்பேச்சு; a amorous talk. *"சல்லாப மாதுலீலர்" (குற்றா. குற. 16).* 3. வினா விடை (திவா); catechism, discourse in the form of questions and answers.

[Skt. sallāpa> த. சல்லாபம்.]

சல்லாபன் *šallāban,* பெ.(n.) மகிழ்நன் (பிங்.); jovial person.

[Skt. sallāpa> த. சல்லாபன்.]

சல்லாரி *šallāri,* பெ.(n.) மரவகை (வின்.); a tree, harwigia.

சலக்கரணை *šalakkaraṇai,* பெ.(n.) 1. ஏந்து வசதி (சௌகரியம்); convenience, pleasantess, comfortableness. *"இவ்விடத் துக்கு அவ்விடம் சலக்கரணை"* (இ.வ.) 2. தணிவு. (வின்.); all eviation, mitigation; reduction of a debt in one's favour. 3. உரிமை (வின்.); privilege, prerogative.

K.*salakaraṇe*

[Skt.saukarya → த. சலக்கரணை.]

சலலியம் *šalaliyam,* பெ.(n.) முள்ளம்பன்றி; porcupine (சா.அக.).



சலவுகம் *šalavugam,* பெ.(n.) 1. ஆண்குறி; the genital organ of a male. 2. இலிங்கம்; the penis (சா.அக.).

சலாக்கியம் *šalākkiyam,* பெ.(n.) **சிலாக்கியம்** பார்க்க; see *šilakkiyam.*

[Skt. šlāghya> த. சலாக்கியம்.]

சலாகாபுருடர் *šalāgā-puruḍar,* பெ.(n.) 24 தூய நீரவர் (தீர்த்தங்கரரை) உள்ளிட்ட 63 சமண (சைன)ப் பெரியோர்கள் (Jainam.); saints, 63 in number, including the 24 *Tirttaṅgarar.*

[Skt. šlāghā+puruṣa> த. சலாகாபுருடர்.]

சலாசத்து *šalāšattu,* பெ.(n.) **சிலாசத்து** பார்க்க (இ.வ.); see *šilāšattu.*

[Skt. šilā-jatu> த. சலாசத்து.]

சலாசலம் *šalā-šalam,* பெ.(n.) ஆன் (பசு); cow (சா.அக.).

சலாசலலிங்கம் *šalāšala-lingam,* பெ.(n.) வழிபாட்டிற்குரிய இலலிங்கங்கள் (சைவச. பொது.123); various kinds of *linga*, such as *vāṇa-lingam*, *irattina-lingam*, etc., used for both private and public worship.

[Skt. *cala+ā-cala+linga*> த. *சலாசலலிங்கம்.*]

சலாசனம் *šalā-šaṉam,* பெ.(n.) வழிபாட்டில் சிவவிலங்கம் அமைதற்குரிய (அனந்தர், தன்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், பதுமம் என்ற அறுவகை) இருக்கை (ஆசனம்) (சைவச.பொது.523); (šaivam.) pedestals imagined for seating a *linga* when bathing it for worship, six in number, viz., *aṉantar, taṉmam, ñāṉam, vairākkiyam, aisuvariyam, padumam.*

[Skt. *cala+ā-sana*> த. *சலாசனம்.*]

[த. *ஆதனம்*>Skt. *ā-sana.*]

சலாஞ்செய்–தல் *šalāñ-cey-,* 1. செ.குன்றாவி. (v.t.) 1. கையை நெற்றியில் வைத்து வணக்கம் செலுத்தும் முறை; to salute by raising the hand to the forehead. 2. வணங்குதல் (உரி.நி.); to bow in obeisance. *"குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு குமரனை" (மீனாட். பிள்ளைத். காப்பு.4).*

[U. *salām*> த. *சலாம்* + த. *செய்–*]

சலாடு *šalāḍu,* பெ.(n.) காய்கறிகள்; vegetables (சா.அக.).

சலாந்தரு *šalān-daru,* பெ.(n.) நாட்டியவுறுப்பு வகை (*Nāṭya*); a saluting pose in dancing. *"தள்ளரிய சலாந்தருவும்" (குற்றா.தல, தருமசாமி.55).*

[U. *salām+dhruva*> த. *சலாந்தரு.*]

சலாபத்து *šalābattu,* பெ.(n.) 1. விடுதலை தன்வயம் (சுவாதீனம்) (வின்.); freedom, liberty. 2. எளிமை (சுலபம்); ease, facility. *"இதைச் சலாபத்தாய் முடிக்கலாம்".* 3. பெரியது (விசாலம்); commodiousness, spaciousness. *"இடம் சலாபத்தாயிருக்கிறது"* (இ.வ.).

[U. *salāmat*> த. *சலாபத்து.*]

சலாம் *šalām,* பெ.(n.) வணக்கம் (வந்தனம்); salutation. *"மாலயன்.... சலாமிடு" (திருப்பு.189).*

[U. *salām*> த. *சலாம்.*]

சலாவத்து *šalāvattu,* பெ.(n.) **சலாபத்து** பார்க்க; see *šalābattu.*

[Skt. U. *salāmat* → த. *சலாபத்து* → *சலாவத்து.*]

சலான் *šalāṉ,* பெ.(n.) 1. பணத்துடன் கருவூலகத்திற்கு (க.ஜானா) அனுப்பும் விவரக்குறிப்புச் சான்று (நமுனா.) (C.G.); a form of particulars concerning money remitted to a treasury. 2. பணம் கட்டும்படி வழக்குமன்றம் (கோர்ட்டு) வழங்கும் ஆணை (உத்தரவு) (இ.வ.); order issued by a court directing deposit of moeny.

[U. *calān*> த. *சலான்.*]

சலிசு *šališu,* பெ.(n.) **சலீசு** பார்க்க; see *šalīšu.*

சலிதம் *šalidam,* பெ.(n.) 1. வெறுப்பு; hatred. 2. இளைப்பு; emaciation (சா.அக.).

சலீகம் *šalīgam,* பெ.(n.) போர் (ஆ.நி.); war.

[Skt. *samīka*> த. *சலீகம்.*]

சலீசு *šalīšu,* பெ.(n.) 1. எளிமை (சுலபம்); ease, facility. 2. மலிவு; cheapness.

[U. *salīs*> த. *சலீசு.*]

சலூன் *šalūn,* பெ.(n.) முடி திருத்தகம்; hair dressing saloon.

[E. saloon > த. சலூன்]

சலேசரம் *šalēšaram,* பெ.(n.) 1. நீர்ப் பறவை; water bird. 2. மீன்; fish. (சா.அக.).

சலேருகம் *šalērugam,* பெ.(n.) செங்கழுநீர்; red Indian water lily - Nympae oderata. (சா.அக.).

சலோகிதம் *šalōgidam,* பெ.(n.) வயல் நெட்டி (அ) நீர் நெட்டி; a species of pith plant - Aeschynomenle aspera. (சா.அக.).

சலோதயம் *šalōdayam,* பெ.(n.) பேறு காலத்திற் பனிக்குடம் உடைகை; flooding at the beginning of delivery.

[Skt. jala+udaya > த. சலோதயம்]

சலோதரசன்னிபாதம் *šalōdara-šanni-pādam,* பெ.(n.) வயிற்றுப்பிசத்தாலேற்படும் குளிர் காய்ச்சல்; typhoid fever as a result of abdominal dropsy. (சா.அக.).

[சலம் + உதரம் + சன்னி+ பாதம்]

சலோதரம் *šalōdaram,* பெ.(n.) ஒரு வகையான வயிற்றுப்பிச நோய்; ropsy, ascitis.

[Skt. jala+udara > த. சலோதரம்]

சலோபாதை *šalōpādai,* பெ.(n.) 1. சிறுநீர் கழிப்பதில் தொல்லை; difficulty in passing urine-*Dysuria*. 2. உடற் கழிவை வெளி யேற்றுவதில் தொல்லை; a term loosely employed for evacuations by stool, urine and other excrements. (சா.அக.).

[Skt. jala+upādhi > த. சலோபாதை]

சவ்வச்சரலவணம் *šavvaccara-lavaṇam,* பெ.(n.) நாட்பட்ட வயிற்று நோவைப் போக்கும் ஒரு வகை யுப்பு; a kind of salt used in chronic dyspepsia and it also tends to remove chronic colic. (சா.அக.).

சவ்வர்ச்சலம் *šavvarccalam,* பெ.(n.) **சவ்வர்ச்சலவணம்** பார்க்க; see *savvarccalavaṇam.*

சவ்வர்ச்சலலவணம் *šavvarccalalavaṇam,* பெ.(n.) ஐவகை உப்புகளுள் ஒன்று; mineral alkali, natron, one *pañja-lavaṇam.*

[Skt. sauvrarcala+lavana > த. சவ்வர்ச்சலவணம்]

சவ்வாது *šavvādu,* பெ.(n.) ஒரு வகைப் பூனையினின்று கொள்ளப்படும் மணப் பொருள்; a kind of scent being the secretion of the civet cat, civet. *"கலவைபுழுகொடு சவ்வாதார்ந்த" (தனிப்பா. i, 227:21).*

[U. zabād → சவ்வாது]

சவ்வியசாசி *šavviyašāši,* பெ.(n.) இடக் கையாலும் அம்பு தொடுப்பவனான அருச்சுனன் (பாரத. அருச்சனன்றீர்.44); Arjuna, as shooting arrows with his left hand also.

[Skt. savya+sācin> த. சவ்வியசாசி]

சவர்[1] *šavar,* பெ.(n.) **சபர்**[1] (வின்.) பார்க்க; see *šabar.*

[U. safar > த. சவர்]

சவர்[2] *šavar,* பெ.(n.) அரபியர் ஆண்டின் இரண்டாம் திங்கள் (பெரியவரு.28); the second Arabic month.

[Ar. safar > த. சவர்]

சவர்க்குந்தா *šavar-k-kundā,* பெ.(n.) கப்பலின் மேலிடத்துள்ள மூன்றாம் பாய்மரம்; top-gallant mast.

[U. saba+kunda > த. சவர்க்குந்தா]

சவர்க்குந்தாபாஞ்சிறா *šavar-k-kundā-pāñjirā,* பெ.(n.) சவர்க்குந்தாவில் கயிறு மாட்டுஞ் சட்டம்; cross - trees at the head of the top-gallant mast.

சவர்ணவிருத்தி *šavarṇa-virutti,* பெ.(n.) ஆவணமெழுதும் வேலை; profession of writing documents.

த.வ. **ஆவணவேலை**

[Skt. savarṇa +vṛtti> த. சவர்ணவிருத்தி]

சவர்ப்பருவான் *šavar-p-paruvāṉ,* பெ.(n.) கப்பலின் மூன்றாம் மேற்பாய் சுருட்டும் குறுக்குமரம்; top - gallant yard.

[U. sabar-p-paruvāṉ > த. சவர்ப்பருவான்]

சவர்ப்புளோதி *šavar-p-puḷōti,* பெ.(n.) பாய்மரத்தின் பின் கயிறு; top-gallant back-stay.

சவர்பாய் *šavarpāy,* பெ.(n.) சவர்மரத்திற் கட்டப்படும் பாய் (M.Navi. 83); top-gallant sail.

[சவர்+பாய்]

[U. sabar > த. சவர்+பாய்]

சவர்மரம் *šavar-maram,* பெ.(n.) காவி மரத்துக்கு மேலுள்ள பாகம் (M. Navi. 81); top gallant mast .

[சவர்+மரம்]

[U. sabar > த. சவர்]

சவர்லவளான் *šavar-lavaḷāṉ,* பெ.(n.) பாய் மரத்தின் மேற்கயிறு; top-gallant rigging.

[U. sabar +lavaḷāṉ> த. சவர்லவளான்]

சவரஅலகு *šavara-alagu,* பெ.(n.) முகத்தை மழிப்பதற்குப் பயன்படும் இரண்டு பக்கங் களிலும் கூரிய விளிம்புடைய இரும்பினா லான மெல்லிய தகடு, மழிதகடு (யாழ்ப்.); blade.

த.வ. மழிப்பி

[Skt. kṣaura > த. சவர+அலகு]



சவரக்கத்தி *šavara-k-katti,* பெ.(n.) முகம் மழிப்பதற்குதவுங் கத்தி; razor.

[Skt. kṣaura > த. சவரம்+கத்தி]



சவரக்காரன் *šavara-k-kāraṉ,* பெ.(n.) **சவரகன்** பார்க்க; see *šavaragaṉ.*

த.வ. பரியாரி, மழிப்பாளன், நாவி

[Skt. kṣauraka > த. சவரக்காரன்]

சவரகன் *šavaragaṉ,* பெ.(n.) முகம்மழிக்குந் தொழிலாளி; barbar.

[Skt. kṣauraka > த. சவரகன்]

சவரட்சணை *šavaraṭšaṇai,* பெ.(n.) காப்பாற்றுகை; preservation, maintenance, protection.

[Skt. samrakṣaṇā > த. சம்ரட்சணம் > சம்ரட்சணை > சவரட்சணை]

சவரணை *šavaraṇai,* பெ.(n.) **சவரட்சணை** பார்க்க; see šavaraṭ šaṇai.

சரவரம் *šavaram,* பெ.(n.) மயிர் மழிக்கை; shaving. "சம்பந்தனுக்கு... தலைச்சவரம் பண்ணுவதேன்" (தமிழ்நா.108).

[Skt. kṣaura > த. சவரம்]

சவரன்[1] *šavaraṉ,* பெ.(n.) இங்கிலாந்து (ஐரோப்பிய) நாட்டின் பொற்காசு (பவுன் நாணயம்) (உ.வ.); pound sterling.

[E. sovereign > த. சவரன்]

சவரன்[2] *šavaraṉ,* பெ.(n.) எட்டு கிராம் பொன் கொண்ட ஓர் அளவு; பவுன்; a measure of gold equal to eight grams sovereign formerly equal to a pound. *நாங்கள் பெண்ணுக்கு இருபது சவரன் நகை போடுகிறோம்.*

சவரியார் *šavariyār,* பெ.(n.) சேவியர் என்ற அர்ச்சியசிட்டர்; St. Xavier.

[E. St.Xavier > த. சவரியார்]

சவரியார்குழம்பு *šavariyār-kuḻambu,* பெ.(n.) ஒரு வகைக் கழிச்சல் மருந்து; St. Xavier's purgative mixture.

[சவரியர்+குழம்பு]

[E. St.Xavier > த. சவரியர்]

சவனிக்கை *šavaṉikkai,* பெ.(n.) 1. திரை; screen, curtain. 2. நாடகவரங்கிலிடுந் திரை; curtain used on the stage. 3. **சவனிக்கை மண்டபம் (வின்)** பார்க்க; see *šavaṉikkai-maṇḍabam.*

த.வ. அரங்கத் திரை

[Skt. javanikā > த. சவனிக்கை]

சவனிக்கைத்தரு *šavaṉikkai-t-taru,* பெ.(n.) சவனிக்கைப்பாட்டு பார்க்க; see *šavaṉikkai-p-pāttu.*

சவனிக்கைப்பாட்டு *šavaṉikkai-p-pāṭṭu,* பெ.(n.) நாடகவரங்கில் நடிகன் தோன்றும் போது பாடும் பாட்டு (வின்.); song on the appearance of an actor on the stage.

[சவனிக்கை+பாட்டு]

[Skt. javanikā > த. சவனிக்கை]

சவனிக்கைபடித்தல் *šavaṉikkai-paḍittal,* பெ.(n.) நாடகவரங்கில் கடைசி நடிகன் வரும் பொழுது பாடும் பாட்டு (வின்.); song sung when the last player in a performance enters and dances on the stage.

[சவனிக்கை+படித்தல்]

[Skt. javanikā > த. சவனிக்கை]

சவனிக்கைபிடி-த்தல் *šavaṉikkai-piḍi-,* 4 செ.கு.வி.(v.i.) நடிகர்கள் வருமுன் நாடகத்திரையைப் பிடித்தல் (வின்.); to hold a curtain before actors in a performance, when they are about to show themselves on the stage.

[சவனிக்கை+பிடி-]

[Skt. javanikā> த. சவனிக்கை]

சவனிக்கைமண்டபம் *šavaṉikkai-maṇḍapam,* பெ.(n.) வீதிப்புறப்பாட்டின் பின்உலாத்திருமேனி (உற்சவ மூர்த்தி) வீற்றிருக்கும் விடையாற்றுமண்டபம் (வின்.); hall in which a deity takes rest after procession.

[சவனிக்கை+மண்டபம்]

[Skt. javanikā> த. சவனிக்கை]

சவனிகை *šavanikai,* பெ.(n.) **சவனிக்கை** (வின்) பார்க்க; see *šavaṉikkai.*

[Skt. javanikā> த. சவனிக்கை > சவனிகை]

சவாசனம் *šavāšaṉam,* பெ.(n.) அவையோர்; councillors. *"சவாசனங்களுந் தானுமே மகிழ்ந்து" (உத்தரரா. அசுவமே. 127).*

[Skt. sabhā+jana> த. சவாசனம்]

சவாசு *šavāšu,* பெ.(n.) 'மிகநன்று' எனப் பொருள்படும் குறிப்புச்சொல்; expression signifying "well done!" 'bravol', excellent a term of cheering.

[U. shābāsh> த. சபாசு → சவாசு]

சவாது *šavādu,* பெ.(n.) படி (நகல்) (வின்.); copy, transcript, duplicate.

[U. sawād > த. சவாது]

சவாப்தார் *šavā-p-dār,* பெ.(n.) **சவாப்புதாரி** பார்க்க; see *savāppu-dāri.*

சவாப்நவீசு *šavāpnavīšu,* பெ.(n.) 1. முறைமன்ற நடுவரின் மொழிபெயர்ப்பாளர்; interpreter and clerk of a magistrate. 2. செயலாளர்; secretary.

[U. jawābnawis → சவாப்நவீசு]

சவாப்பு *šavāppu,* பெ.(n.) மறுமொழி, விடை (உ.வ.); answer, reply.

[U. jawāb → சவாப்பு]

சவாப்புதாரி *šavāpputāri,* பெ.(n.) பொறுப்பாளி (உ.வ.); responsible person.

[U. jawab+dār> த. சவாப்புதாரி]

சவாபுட்பம் *šavāputpam,* பெ.(n.) முளரி, முட்செவ்வந்தி (யாழ்.அக.); rose.

சவாய் *šavāy,* பெ.(n.) கப்பலிற் பாய் மரந்தாங்குங் கயிறு; stay, rope supporting mast (naut).

[U. sawāi(rit)→ சவாய்]

சவாரி *šavāri,* பெ.(n.) 1. வண்டி முதலியவற்றிற் செல்லுகை; ride, drive. 2. சுற்றுச் செலவு (பிரயாணம்); circuit, tour. *"துரை சவாரியிலிருக்கிறார்" (இ.வ.).* 3. ஊர்தி (வாகனம்) (வின்.); conveyance, vehicle.

த.வ. இவரி

[U. sawār→ சவாரி]

சவாரிசெய்-தல் *šavārišey-,* செ.கு.வி.(v.i.) ஊர்திகளில் ஏறிச் செல்லுதல்; to ride, drive.

த.வ. இவர்ந்துசெல்லுதல்

[சவாரி + செய்தல்] [U. sawār> த. சவாரி]

சவாரிபோ-தல் *šavāri-pō-,* செ.கு.வி.(v.i.) 1. சுற்றுச் செலவு (சுற்றுப் பிரயாணம்) போதல்; to go on circuit or tour. 2. **சவாரிசெய்-,** பார்க்க; see *savāri-cey-.*

[சவாரி+போ-]

[U. sawār> த. சவாரி]

சவால்[1] *šavāl,* பெ.(n.) 1. வினா; question, interrogation. 2. மூர் என்னுஞ் சாதியினர்க்குள் வழங்கும் ஒரு வகைப் பாட்டு (வின்.); a sacred song of the Moors.

[U. sawāl → த. சவால்]

சவால்[2] *šavāl,* பெ.(n.) அறைகூவல் (இக்.வ.); challenge.

[Persn. suwāl > Arab. sual > த. சவால்]

சவால்சவாப்பு *šavāl-šavāppu,* பெ.(n.) வினாவிடை; question and answer. (C.G.).

[U. sawal+jawb> த. சவால்சவாப்பு]

சவாலக்கம் *šavālakkam,* பெ.(n.) வயிரம் உண்டாகும் இடங்களிலொன்று; one of the diamond-producing countries.

[Skt. saurivaka> த. சவாலக்கம்]

சவான் *šavāṉ,* பெ.(n.) 1. வலுவான ஆள்; strong robust person. 2. பணியாளன்; peon. 3. காவலன்; costable.

[U. javāna → ஜவான்> த. சவான்]

சவிகற்பக்காட்சி *šavikaṟpak-kāṭci,* பெ.(n.) ஒரு பொருளின் பெயர் இனம், குணம் முதலிய எல்லாக் கூறுகளும நிறைந்த அறிவு, (சி.சி.அளவை. 3, மறைஞா.); (Log), differentiated knowledge in which a thing understood in all its bearings.

[சிவிகற்பம்+காட்சி]

[Skt. sa-vikarpak > த. சவிகற்பகம்]

சவிகற்பசமாதி *šavikaṟpašamāti,* பெ.(n.) கொங்கணவர் வாத காவியத்திற் சொல்லியுள்ள ஐந்துவகை சமாதிகளுளொன்று (இது ஞேயம், ஞாதுரு ஞானம் என்னும் வேறுபடவுணரும் உணர்ச்சியோடு கூடிய யோக நிலை); one of the five kinds of samadhi (abstract meditation) contemplated in Kongavanava works (3000) on Alohemy. (It is a meditation in which the sense of unity is aware of the differentiations between the knower and the known. so it is the one in which the mind is in a lesser degree. It consists of two kinds . vis. sathanu and Tvisanu as mentioned in the above stanzas.

[Skt. sa-vikal+samādhi> த. சவிகற்பசமாதி]

சவிகற்பஞானம் *śavikarpañāṉam,* பெ.(n.) ஒரு மனிதன் அல்லது பொருள் தன்னை அடைந்த மாத்திரத்தில் அதன் குணாகுணம் முதலிய முழுத் தன்மைகளையும் தானே உணரும் அறிவு; a faculty of divining by mental operation, the qualities and properties of an object coming in contact with him or of persons approaching him - psychometrical knowledge.

[Skt. sa-vikalpa-janām> த. சவிகற்பஞானம்]

சவிகற்பம் *śavikarpam,* பெ. (n.). **சவிகற்பக் காட்சி** பார்க்க; see *sa-vikalpa-k-kātci.* (சி.சி.அளவை 3, ஞான)

சவிசங்கம் *śaviśaṅgam,* பெ.(n.) 1. ஒரு வகை ஊதை நோய்; a kind of rheumatism. 2. எண்பது வகை வளிநோயுள் ஒன்று; one of the eighty kinds of flatulency in the human system.

சவித்தாரம் *śavittāram,* பெ. (n.) 1. விரிவுடையது; that which is wide or eleborate. 2. இன்றியமையாச் செயல் (இ.வ.); anything of importance or consequence.

[Skt. sa-vistāra> த. சவித்தாரம்]

சவித்திரு *śavittiru,* பெ.(n.) பன்னிரு ஞாயிற்றுக் கடவுள்களுள் ஒருவர்; sun-god, one of *tuvātacātittar.*

[Skt. savitṛ> த. சவித்திரு]

சவிதா *śavitā,* பெ.(n.) பகலவன்; sun. *"சந்திரன் சவிதா வியமானனானீர்" (தேவா. 613, 3).*

[Skt. savitē> த. சவிதா]

சவிர்சங்கி *śavirśaṅgi,* பெ.(n.) சிறுதகரி (சிறு பீரங்கி) (வின்.); small cannon.

[U. jabarjangi→ த. சவிர்சங்கி]

சவிலைக்கொடி *śavilai-k-koḍi,* பெ.(n.) ஒருவகைக் கொடி; a creeper-Rubia mangith.

[Skt. savili> த. சவிலை]

சவுக்கியக்குறைவு *śavukkiya-k-kuṟaivu,* பெ.(n.) 1. நலக்குறைவு; ill health. 2. நலங்குன்றுகை; alight indisposition. (சா.அக.).

[சவுக்கியம் + குறைவு]

[Skt. savili> சௌக்கியம் > த. சவுக்கியம்]

சவுக்கியம் *śavukkiyam,* பெ.(n.) 1. நலம்; health. 2. மலங்கழிக்கை; the act of clearing the bowels. (சா.அக.).

[Skt. saukhya> த. சவுக்கியம்]

சவுக்கியமுறைவிளக்கம் *śavukkiyamuṟai-viḷakkam,* பெ.(n.) தூய்மை விளக்கம் (புதுவை. வழக்கு); hygiene.

[சவுக்கியம் + முறை+விளக்கம்]

[Skt. saukhya> த. சவுக்கிய(ம்)]

சவுக்கியவீனம் *śavukkiya-vīṉam,* பெ.(n.) நலக்குறைவு; break of health, ill-health. (சா.அக.).

[சவுக்கியம் + ஈனம்]

[Skt. saukhya> த. சவுக்கியம்]

சவுக்கிரியா *śavukkiriyā,* பெ.(n.) எரி பூடு (அ) பூண்டு; garlic. (சா.அக.)

சவுகதநூல் *śavugada-nūl,* பெ.(n.) புத்தர்களுக்குரிய முப்பிடகம்; Buddhist scriptures.

[சவுகத + நூல்]

[Skt. saugata> த. சவுகத(ம்)]

சவுகதன் *śavugadaṉ,* பெ.(n.) புத்தன்; Budhan. *"தன்னே ரில்லாச் சவுகதன்". (பிரபோத. 18,18)*

[Skt. sugata> த. சவுகதன்]

சவுகந்திகம் *šavukandigam,* பெ.(n.) செங்கழுநீர்; red Indian water lily - Nymphae lotus alias N.odorata. (சா.அக.)

சவுகந்திரா *šavugandirā,* பெ.(n.) கந்தகம்; sulphur.(சா.அக.)

சவுகரியம் *šavukariyam,* பெ.(n.) நலம்; convenience.

[Skt. saukarya> த. சவுகரியம்]

சவுசம் *šavušam,* பெ.(n.) தூய்மை; cleansing, ablution. *"ஒருங்குறச் சவுச முடித்த பின்". (குற்றா. தல. சிவபூ. 19)*

[Skt. šauca> த. சவுசம்]

சவுசன்னியம் *šaušanniyam,* பெ.(n.) 1. இனிய குணம்; kindly disposition, amiability. 2. நட்பு, உறவின் நெருக்கம்; friendship, intimacy.

[Skt. saujanya> த. செளசன்னியம்]

சவுடால் *šavuḍāl,* பெ.(n.) **சவடால்** பார்க்க; see *savaḍāl.*

சவுடோல் *šavuḍōl,* பெ.(n.) அம்பாரி (வின்.); howdah.

[U. haudah→ சவுடோல்]

சவுண்டம் *šavunḍam,* பெ.(n.) **சவுண்டி** பார்க்க; see *savunḍi.*

சவுண்டி *šavunḍi,* பெ.(n.) திப்பிலி (மலை.); long pepper.

[Skt. šaunḍi > த. சவுண்டி]

சவுத்தியம் *šavuttiyam,* பெ.(n.) வெள்ளி; silver.(சா.அக.)

சவுத்திராந்திகம் *šavuttirāndigam,* பெ.(n.) புத்தமதப் பிரிவு; a Buddhist sect.

[Skt. sautrāhtika> த. சவுத்திராந்திகம்]

சவுத்திராந்திகன் *šavuttirāndigan,* பெ.(n.) சவுத்திராந்திக பிரிவைச் சேர்ந்த புத்த மதத்தினர்; follower of sautrāntika sect of Buddhism.

[Skt. sautrāhtika>த. சவுந்திராந்திகன்]

சவுதலியா *šavutaliyā,* பெ.(n.) கப்பலின் முகப்புக்கட்டை; Bowsprit (Navt).

[Skt. savadari→ த. சவுதலியா]

சவுதாகிரி *šavutākiri,* பெ.(n.) குதிரைக்காரன்; horsse - dealer.

[Persn. saudāgari> த. சவுதாகிரி]

சவுதி *šavuti,* பெ.(n.) 1. மறைநெறியறிந்த பார்ப்பான்; Brahmin proficient in vēdic rituals. *"மாதவச் சவுதிமார்கள் வந்தனர்". (சிவரக நைமிசா 44)* 2. மறை நிகழ்வுகளை நடத்துபவன்; one who performs vēdic sacrifices.

[Skt. šrautin> த. சவுதி]

சவுந்தம் *šavuntam,* பெ.(n.) ஒருவகை நஞ்சு; a kind of native arsonic. (சா.அக.)

சவுந்தரம்[1] *šavuntaram,* பெ.(n.) அழகு; beauty especially of fearaler. (சா.அக.)

[Skt. saundarya> த. சவுந்தரியா > சவுந்தரம்]

சவுந்தரம்[2] *šavuntaram,* பெ.(n.) **சவுந்தரியம்** பார்க்க; see savundariyam. *"சவுந்தர மானே". (அருட்பா, 1, வடிவுடை. 26)*

[Skt. saundarya> த. சவுந்தரம்]

சவுந்தரி *šavuntari,* பெ.(n.) 1. அழகுடையவள்; a beautiful woman. 2. மலைமகள் (யாழ்.அக.); goddess pārvati.

[Skt. sundari> த. சவுந்தரி]

சவுந்தரிகை *šavuntarikai,* பெ.(n.) சோலை வெண்தேக்கு; looking glass plant. (சா.அக.).

சவுந்தரியம் *šavuntariyam,* பெ.(n.) அழகு; beauty. *"பெயர் சவுந்தரியலகரியென".* *(சௌந்த பாயி.6)*

*[**Skt**. saundarya> த. சவுந்தரியம்]*

சவுப்பு *šavuppu,* பெ.(n.) முறை மன்றத்துக்குத் திரும்பும் அழைப்புக் கட்டளையிற் கண்டிருக்கும் விவரம் (இ.வ.); return on a court - process.

*[**Arab**. sawb> சவுப்பு]*

சவுபஞ்சம் *šavupañjam,* பெ.(n.) புனல் முருங்கை; forest drum-stick. (சா.அக.)

சவுபாக்கியசுண்டி *šavupākkiyašuṇḍi,* பெ.(n.) ஆயுள் வேத முறைப்படி தயாரித்த ஒரு இளகியம் (இதை குன்மம் கிராணி, பிரசவ சுரம் முதலிய நோய்களுக்குக் கொடுக்கப்படும்); an ayurvedic preparation of an electuary prescribed for dyspesia, chronic diarrboea and pusrperal fever.(சா.அக.)

சவுபாக்கியம் *šavupākkiyam,* பெ.(n.) 1. சுக்கு; dried ginger. 2. ஒரு வானியல் . (சோதிட) நூல்; a kind of astrology. (சா.அக.)

சவுபாக்கியம்[1] *šavupākkiyam,* பெ.(n.) ஏந்துகள்; auspiciousness.

த.வ. பெரும்பேறு.

*[**Skt**. saubhāgya> த. சவுபாக்கியம்]*

சவுபாச்சியம்[2] *šavupācciyam,* பெ.(n.) நீர் முள்ளி; water thistle - *Barleria longifelia.*

சவுபானம் *šavupāṉam,* பெ.(n.) மாடிப்படி; stair, ascending series or scale. *"சவுபான நன்னெறி விரும்பவில்லை". (தாயு. சிற்சுசோ 4)*

*[**Skt**. sōpāna> த. சவுபானம்]*



சவுமியம் *šavumiyam,* பெ.(n.) அமைதி; calmness, gentleness. *"சவுமியப் படிவமும்".* (பிரபோத. 14,5) 2. பொறுமை; patience.

*[**Skt**. saumya> த. சவுமியம்]*

சவுமியன் *šavumiyaṉ,* பெ.(n.) பண்பாளன்; noble or gentle person. *"வாழ்வர் சவுமியர்". (பிரபோத. 9,7)*

*[**Skt**. saumya> த. சவுமியன்]*

சவுரசம் *šavurašam,* பெ.(n.) 1. அரத்தத்திலுண்டான ஒருவகைப் பூச்சி; a minute organism found in the blood. 2. மலப்பூச்சியாலுண்டாகும் ஒருவகை நோய்; a disease due to the worm in the intestines. (சா.அக.)

சவுரம் *šavuram,* பெ.(n.) **சவரம்** பார்க்க; see savaram. (சா.அக.)

சவுரமாதம் *šavuramātam,* பெ.(n.) பகலவன் ஒரு கோளை (இராசியை)க் கடந்து செல்லும் நாளளவாற் கணக்கிடப்பெறும் மாதம்; solor month.*(விதான. குணாகுண. 80)*

[சவுரம் + மாதம்]

*[**Skt**. saura> த. சவரம்]*

சவுரர் *šavurar,* பெ.(n.) பகலவனை வழிபடும் மதத்தினர்; sun-worshippers. *"சைவரே யன்றியல்லாச் சவுரர் சாத்தர்". (விநாயக 4.68 :36)*

[Skt. saura> த. சவுரர்]

சவுரியம் *šavuriyam,* பெ.(n.) சூரத்தனம்; bravery, valour.

[Skt. šaurya> த. சவுரியம்]

சவுரேசுரம் *šavurēšuram,* பெ.(n.) நொச்சி; five-leaved chaste tree - vitex negundo. (சா.அக.).

சவுல் *šavul,* பெ.(n.) களிப்பு; gaiety, merrymood.

[U. caul> த. சவுல்]

சவுனாகம் *šavuṉākam,* பெ.(n.) **சவுநாயகம்** பார்க்க; see *savunāyagam.* (சா.அக.)

சவுனாதிதம் *šavuṉātitam,* பெ.(n.) விராலி; bog myrtle - Dodonaea. (சா.அக.).

சற்கரி-த்தல் *šaṟkari-,* 4 செ.குன்றாவி.(v.t.) விருந்தோம்புதல்; to accord welcome, show hospitality. *"தனதிருநாள் வணங்கினரைத் தலையிற் சொல்லால் விழியாற் சற்கரித்தான்" (ஞானவா. வைரா. 56).*

[Skt. sat-kar> த. சற்கரி-த்தல்]

சற்கருமம் *šaṟ-karumam,* பெ.(n.) நற்செய்கை; good deed, meritorious act. *"சற்கருமஞ் செய்வோர்தம் பக்க மேகி" (குசேலோ. குசேலர்தந். 126).*

[சற்+கருமம்]

[Skt. sat> த. சற்]

சற்காரம் *šaṟ-kāram,* பெ.(n.) ஓம்புகை; welcome, hospitality. *"கண்டெழுந்து சற்காரஞ் செய்து" (பிரபோத. 11, 87).*

[Skt. sat-kāra> த. சற்காரம்]

சற்காரியம் *šaṟkāriyam,* பெ.(n.) **சற்கருமம்** பார்க்க; see *sa-karumam.*

[சற்+காரியம்]

[Skt. sat> த. சற்]

சற்காரியவாதம் *šaṟkāriya-vādam,* பெ.(n.) தோற்றத்துக்கு (உற்பத்திக்கு) முன்னும் காரியப் பொருள் காரணப்பொருளில் உள்ளது என்னுங் கொள்கை (சி.போ.பா.1,2,பக். 64); (Phil.) doctrine of causation according to which an effect is held to exist in its cause.

[Skt. sat-karya+vētam> த. சற்காரியவாதம்]

சற்குணம் *šaṟkuṇam,* பெ.(n.) நற்குணம்; good nature, nobility of character.

[சற்+குணம்]

[Skt. sat> த. சற்]

சற்குணன் *šaṟkuṇaṉ,* பெ.(n.) குணவான்; person of noble character, virtuous man. *"மாசனங்காள் சற்குணர்நீ ரென்றிருந்தேன்" (தனிப்பா.).*

[சற்குணம் → சற்குணன்]

சற்குரு *šaṟkuru,* பெ.(n.) அறிவாசிரியன்; spiritual preceptor. *"சற்குருவுங் கண்ணாரக் காணின்" (தனிப்பா.* ii, 116, 296).

[சற்+குரு]

[Skt. sat> த. சற்]

சற்சங்கம் *šaṟšaṅgam,* பெ.(n.) நல்லோருடன் கூடுகை; association with the good. *"பேருவகைக்* கடறழவு சற்சங்கம்" (இரகு. தேனுவ. 108).

சற்சலம் *šaṟšalam,* பெ.(n.) தெளிந்த நீர் (திவா.); fresh, limpid water.

[சத் + சலம்]

[Skt. sat> த. சற்]

சற்சவுக்கம் *šaṟšavukkam,* பெ.(n.) **சச்சவுக்கம்** பார்க்க; see *saccavukkam.*

[சச்சவுக்கம் → சற்சவுக்கம்]

சற்சனர் *śaṟ-śaṉar,* பெ.(n.) நல்லோர்; good, virtuous persons. *"நகர்க்குறுதி சேர்ந்திடும் சற்சனர்களாம்" (குமரே. சத. 76).*

[Skt. sat+jana> த. சற்சனர்]

சற்சுகாதி *śaṟ-śukāti,* பெ.(n.) பெருமருந்து (மலை.); Indian birthwort.

[Skt. sat+sukha+ādi> த. சற்சுகாதி]

சற்சூத்திரன் *śaṟ-śūttiraṉ,* பெ.(n.) ஊனுண்ணலை ஒழித்துச் சமய ஒழுக்கத் தோடிருக்குஞ் சூத்திரவகுப்பினன் (சி.போ. பா. சிறப்புப்பாயி. பக். 26); sect of sūdras who abstain from animal food and are strict in religious observances.

[Skt. sat+sudraṉ> த. சற்சூத்திரன்]

சற்பம் *śaṟpam,* பெ.(n.) பாம்பு; serpent. *"சற்பவெம் பதாகை வேந்தன்" (பாரத.வாசு. 9).*

[Skt. sarpa> த. சற்பம்]

சற்பனை *śaṟpaṉai,* பெ.(n.) **சர்பனை** பார்க்க; see *śarpaṉai. "ஆறு முகவேலர் மலர்த் தாரியா துற்றதென்ன சற்பனையோ" (தனிப்பா. ii, 57, 140).*

சற்பாத்திரம் *śaṟ-pāttiram,* பெ.(n.) கொடை (தானம்) பெறுதற்குத் தகுதியானவன்; worthy recipient for gifts, virtuous person. *"சற்பாத்திரமிருக்க மிருதானமது குணமிலார்க் கீந்த பேரும்" (குமரே. சத. 95).*

[Skt.sat+pātra> த. சற்பாத்திரம்]

சற்பாவம் *śaṟpāvam,* பெ.(n.)1. உளதாந் தன்மை; existance. *"அஞ்ஞான விலேச சற்பாவ வுடன்பாட்டால்" (வேதா.சூ. 162).* 2. நால்வகைக் குருசேவைகளுள் நற்குருவை இறையுருவாய்க் கருதிப் போற்றுகை (பாவிக்கை) (வேதா. சூ. 12); the conception that guru is a manifestation of the supreme being, one of four *kuru-cēvai,* q.v.

[Skt.sat+bhāva> த. சற்பாவம்]

சற்பிரசாதம் *śaṟ-piraśādam,* பெ.(n.) படையல் சோறு (நற்குருணை); sacrament of Lord's supper.

[Skt.sat+preesādam> த. சற்பிரசாதம்]

சற்புத்தி *śaṟputti,* பெ.(n.) நல்லறிவு; noble mind.

[Skt.sat+putti> த. சற்புத்தி]

சற்புத்திரமார்க்கம் *śaṟputtiramārkkam,* பெ.(n.) சமயவொழுக்க வழி; a mode of religious discipline.

[Skt.sat + putra + mārkkam> த. சற்புத்திரமார்க்கம்]

சற்புத்திரன் *śaṟ-puttiraṉ,* பெ.(n.) நற்குண நற்செய்கையுள்ள புதல்வன்; good, virtuous, dutiful son.

[Skt. sat+putra> த. சற்புத்திரன்]

த.வ. நற்புதல்வன்.

சற்புருடன் *śaṟ-puruḍaṉ,* பெ.(n.) உத்தமன்; good, virtuous person. *"ஐயவிங்கி வரெலாந் சற்புருடர்" (அறப். சத. 16).*

[Skt. sat+puruṣa> த. சற்புருடன்]

சன் *śaṉ,* பெ.(n.) ஆண்டு (இ.வ.); year.

[U. san→ த. சன்]

சன்மக்கவிச்சு *śaṉma-k-kaviccu,* பெ.(n.) பிறப்பிலேயே உடம்பிலுண்டான புலால் நாற்றம்; the smell of a rotten flesh, from the natural perspiration of the body. (சா.அக.)

[சன்மக்+கவிச்சு]

[Skt.janma> த. சன்மக்]

சன்மகாலம் *śaṉma-kālam,* பெ.(n.) 1. பெண்கள் கருப்பமடைந்து குழந்தை பெறுதற்குரிய காலம்; the time of delivery after full - term of pregnancy. 2. குழந்தை பிறந்த நேரம்; the time of a child's birth.

[சன்ம+காலம்]

[Skt.janma> த. சன்மம்]

சன்மச்சனி *šaṉma-c-caṉi,* பெ.(n.) தீங்கின் அறிகுறியாய்ப் பிறப்புக்கோளில் இருக்கும் காரி (சனி); saturn occupying one's *caṉma-rāci,* generally considered malignant.

[Skt.jaṉma+cani> த. சன்மச்சனி]

சன்மசாபல்லியம்[1] *šaṉmašāpalliyam,* பெ.(n.) 1. இறத்தல்; death. 2. பிறவிப்பேறு; the fruitful results derived from one's birth. (சா.அக.)

[Skt.jaṉma+sapalya> த. சன்மசாபல்லியம்]

சன்மபல்லியம்[2] *šaṉma-šāpalliyam,* பெ.(n.) பிறவிப்பயனைப் பெறுகை; realisation of one's life - purpose.

[Skt.janma+sapalya> த. சன்மபல்லியம்]

சன்மசூலை *šaṉma-šūlai,* பெ.(n.) பிறவிச் சூலைநோய் (பிறக்கும் பொழுதே பெருங் குடல் கோளாறுகளினால் ஏற்படும் வயிற்று வலி); a condition of colic in the vermiform appendix of the large intestine occasioned by inflammation - vermicular colic or Appendicular colic. (சா.அக.)

[Skt.janma+culai> த. சன்மசூலை]

சன்மதினம் *šaṉmadiṉam,* பெ.(n.) சன்ம நாள் பார்க்க; see *saṉma-nal.*

[Skt.janma+dina> த. சன்மதினம்]

சன்மநட்சத்திரம் *šaṉmanaṭcattiram,* பெ.(n.) பிறந்த நாண்மீன்; natal star. (சா.அக.)

[Skt.janma+naksatra> த. சன்மநட்சத்திரம்]

சன்மநாள்[1] *šaṉma-nāḷ,* பெ.(n.) ஒருவரின் பிறந்த நாள்; birthday.

[சன்ம+நாள்]

[Skt.janma> த. சன்ம]

சன்மநாள்[2] *šaṉma-nāḷ,* பெ.(n.) பிறந்த நாளைக் குறித்து பெருமை கொண்டாடல்; celebration of birthday ceremony. (சா.அக.)

சன்மநோய் *šaṉma-nōy,* பெ.(n.) பிறவி நோய்; a disease present at birth, congenital disease. (சா.அக.)

[சன்ம+நோய்]

[Skt.janma> த. சன்ம]

சன்மப்பகை *šaṉma-p-pagai,* பெ.(n.) 1. இயற்கைப் பகை; natural enmity. *"பூனைக்கும் எலிக்கும் சன்மப்பகை".* 2. தீராப்பகை; inveterate enmity. *"அவனுக்கும் இவனுக்கும் சன்மப் பகை".*

த.வ. பிறவிப்பகை

[சன்ம+பகை]

[Skt.janma> த. சன்ம]

சன்மப்போழ்து *šaṉma-p-pōḻtu,* பெ.(n.) பிள்ளை பெறும் சமயம்; பேறு காலம்; delivery time, the approximate time of giving birth to a child. (சா.அக.)

[சன்ம+போழ்து]

[Skt.janma+poldu]

சன்மபாடை *šaṉma-pāḍai,* பெ.(n.) தாய் மொழி; mother-tongue.

[Skt.janma+parda> த. சன்மபாடை]

சன்மபாவம் *šaṉmapāvam,* பெ.(n.) தன் முன்னோர் செய்த தீவினைப் பயனால் தான் பிறந்த போது தன்னுள் தோன்றும் கரிசு (பாவம்); original sin, dist. fr. *kaṉma-pāvam.*

[Skt.janma+paba> த. சன்மபாவம்]

சன்மபீதம் *šaṉmapīdam,* பெ.(n.) கடற்றாமரை; a big variety of lotus - sea-lotus. (சா.அக.)

சன்மபூமி *šaṉma-pūmi,* பெ.(n.) பிறப்பிடம்; one's native land, motherland.

சன்மம்[1] *šaṉmam,* பெ.(n.) பிறப்பு; birth. *"சன்மம் பலபல செய்து" (திவ். திருவாய். 3,10,1).*

[Skt. janma+ த. சன்மம்]

சன்மம்[2] *šaṉmam,* பெ.(n.) தோல் (சி.சி.2,61, சிவாக்.). skin.

சன்மமலடு *šaṉma-maladu,* பெ.(n.) வெளிக் காரணங்களினால் ஏற்படாமல் உடலியல் பினாலே ஏற்படும் மலட்டுத் தன்மை (இதனால் வயிற்றில் மூன்று மடிப்புகள் விழுந்து இடுப்பு பருத்து உடம்பும் பெருக்கும்); natural incapability of re-production in women without due regard to external causes. (The condition is marked by three folds of the skin in the stomach broad hip and corpulency. (சா.அக.)

[Skt. janman+ த. மலடு]

சன்மமெடு-த்தல் *šaṉmam-edu-,* செ.கு.வி. (v.i.) மீண்டும் பிறத்தல்; to be born again.

சன்மராசி *šaṉmarāši,* பெ.(n.) ஒருவன் (சாதகன்) பிறந்த காலத்திற் நிலவு (சந்திரன்) இருந்த நிலை; zodiacal sign occupied by the moon at the time of one's birth. (சா.அக.)

[Skt. janman+rasi> த. சன்மராசி]

சன்மலக்கனம் *šaṉma-lakkaṉam,* பெ.(n.) ஒருவன் பிறக்கும் பொழுது தோன்றும் (இலக்கனம்) ஓரையின் உதயம்; (Astrol) the ascendant.

சன்மவாரம் *šaṉma-vāram,* பெ.(n.) **சன்மதினம்** பார்க்க; see *šaṉma-tiṉam.*

சன்மன் *šaṉmaṉ,* பெ.(n.) **சர்மா** பார்க்க; see *šarmā. கண்ணின் மணி நிகர் சன்மனும்" (பாரத. வேத்திரகீய. 44).*

[Skt. sarman> த. சர்மா + சன்மன்]

சன்மாந்திரம் *šaṉmāntiram,* பெ.(n.) முற்பிறப்பு; previous birth. (சா.அக.)

சன்மார்க்கசித்தியார் *šaṉ-mārkka-sittiyār,* பெ.(n.) பண்டாரசாத்திரத்துள் ஒன்றானதும் அம்பலவாண தேசிகரியற்றியதுமான மெய்ப் பொருள் நூல் (சித்தாந்த சாஸ்திரம்); a treatise on Saiva siddhānta by *Ampalavāna - tēcikar*, one of *paṇṭāra-cātti-vam, q.v.*

சன்மார்க்கம் *šaṉmārkkam,* பெ.(n.) 1. நன்னெறி; good contact, morality, the path of virtue. *"சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையும்" (தாயு. சின்மய. 1).* 2. அறிவு (ஞான)நெறி (சி.சி.8,22); (Saiva) the path of wisdom.

த.வ. நன்னெறி

[Skt. sat+markha. > த. சன்மார்க்கம்]

சன்மானம் *šaṉmāṉam,* பெ.(n.) **சம்மானம்** பார்க்க; see *šammāṉam.*

த.வ. அன்பளிப்பு

சன்மி[1] *šaṉmi,* பெ.(n.) இப் பூமியில் வந்து பிறந்தவன்; one who has taken birth . this world. (சா.அக.)

[Skt. janmi> த. சன்மி.]

சன்மி[2] *šaṉmi,* பெ.(n.) நிலக்கிழார்; land owner.

[M. janmi> த. சன்மி]

சன்மிப்பு *šaṉmippu,* பெ.(n.) பிறக்கு; தன்மை; the state of being born. (சா.அக.)

[சன்மி – சன்மிப்பு]

சன்மினி *šaṉmiṉi*, பெ.(n.) கொற்றவைக்குத் தொண்டு புரியும் பெண்பேய் (திவா.); demoness attendant on Durgā.

[Skt. šarmiṇi > த. சன்மினி]

சன்வாது *šaṉvādu*, பெ.அ. (adj.) ஆண்டு தோறும் (இ.வ.); yearly. *"சன் வாது பாக்கி"*.

[U. san-wār > த. சன்வாது]

சன்னத்தம் *šaṉṉattam*, பெ.(n.) ஆயத்தம்; preparedness, readiness. *"அடைவொடு சன்னத்த மாருவர்" (திருக்காளத். பு. 28, 39).*

த.வ. அணியம்

[Skt. san-naddha > த. சன்னத்தம்]

சன்னத்துமானியம் *šaṉṉattu-māṉiyam*, பெ.(n.) சன்னது மூலமாக விடப்பட்ட ஒரு வகை இறையிலி (இனாம்) நிலம் (C.G.); rent - free land granted under a sanad.

[U. sanad+mānya > த. சன்னத்துமானியம்]

சன்னத்தன் *šaṉṉattaṉ*, பெ.(n.) 1. மெய்புறை பூண்டவன்; person clad with armour. *"சன்னத் தனாகித் தனுவேந்துதற் கேதுவென்றான்" (கம்பரா.நகர்நீ.126).* 2. *போர்முதலியவற்றுக்குஅணியமாயிருப்பவன்;* one who is ready for any emergency; one armed and prepared for war. *"சன்னத் தனானாலெவர்வந்து சமர்க் கெதிர்ப்பார்" (பிரபோத. 26, 99).*

[Skt. san-naddha > த. சன்னத்தம்]

சன்னதக்காரன் *šaṉṉada-k-kāraṉ*, பெ.(n.) தெய்வ மேறிக் குறி சொல்பவன் (வின்); one who acts as soothsayer under inspiration of a deity.

[சன்னதம்+காரன்.]

[Skt. sannadam > த. சன்னதம்.]

சன்னதங்கேள்–தல் *šaṉṉadaṅkēḷ-*, செ.கு.வி. (v.i.) குறிகேட்டல் (இ.வ.); to consult oracle.

[சன்னதம்+கேள்–]

[Skt. sannadam > த. சன்னதம்]

சன்னதம் *šaṉṉadam*, பெ.(n.) 1. வெறி (ஆவேசம்); temporary possession by a spirit. *"சன்னதமானது குலைந்தாற் கும்பி லெடங்கே" (தண்டலை. 34).* 2. தெய்வங் கூறுகை (வின்.); oracle, utterance of oracles. 3. கடுஞ்சினம் (வின்.); rage fury. 4. வீறாப்பு (வின்.); vanity elation.

[Skt. sannam > த. சன்னதம்.]

சன்னதி *šaṉṉadi*, பெ.(n.) 1. **சன்னிதி** பார்க்க (உ.வ.); see *šaṉṉidi*. 2. அண்மை நிலை; nearness, proximity. 3. தெய்வம் குரு பெரியோர் இவர்களின் திருமுன்பு; presence of deity guru or some great person. 3. கோயில்; temple. 4. **சன்னிதானம்** பார்க்க; see *šaṉṉi-dāṉam*.

[Skt. san-nidhi > த. சன்னதி]

சன்னது *šaṉṉatu*, பெ.(n.) அரசாங்க முத்திரையோடு உரிமையைக் கொடுக்கும் ஆவணம்; grant, charter, patent, document creating rights and given under the seal of the ruling authority.

[U. sanad > த. சன்னது]

சன்னல் *šaṉṉal*, பெ.(n.) பலகணி, காலதர்; window.

[Port. janella > த. சன்னல்]



சன்னாசி *šannāsi,* பெ.(n.) **சன்னியாசி** பார்க்க; see *šanniyāsi.* *"சன்னாசியார் சடலம்படுத்து" (பதினொ. ஆளு. திருவந். 66).*

சன்னி[1] *šanni,* பெ.(n.) 1. **சந்நிநாயகம்** பார்க்க; see *šanni-nāyagam.* 2. **சந்நிகுன்மம்** பார்க்க; see *šanni-kunmam.* 3. காட்டுக் கரணை; common Indian hellet - Pavelta indica. 4. குளிர் நோய்; disease due to extreme chillness. (சா.அக.)

சன்னி[2] *šanni,* பெ.(n.) பேருள்ளது; that which has a name. *"யாவையுந் தோற்செவி யுடைய சன்னியாம்" (மேருமந். 1352).*

சன்னிக்கட்டி *šanni-k-katti,* பெ.(n.) காதுவீக்கம்; tumour near or in, the ear.

[சன்னி + கட்டி]

[Skt. sanni > த. சன்னி]

சன்னிக்கட்டு *šanni-k-kattu,* பெ.(n.) 1. இசிவு நோய்க் கட்டு அல்லது குறி; symptoms of apoplexy. 2. இசிவு நோய்த் தொடர்பானது; predisposing causes of apoplexy. 3. போலி இசிவு; a soporous state resembling apoplexy - False apoplexy or par-apoplexy. (சா.அக.)

[சன்னி + கட்டு]

[Skt. sanni > த. சன்னி]

சன்னிக்காய்ச்சல் *šanni-k-kāyccal,* பெ.(n.) 1. இசிவுடன் கூடிய குளிர்க்காய்ச்சல்; thphus fever exhibiting the symptoms of delirimi, typhoid fever with marked cerebral complications. 2. மூளைக் காய்ச்சல்; fever affecting the brain as in apoplexy-brain fever. (சா.அக.)

[சன்னி + காய்ச்சல்]

சன்னிக்கிருமி *šanni-k-kirumi,* பெ.(n.) வீட்டுப் புறக் கடையின் புழுதியில் மாட்டு சாணத்தில் அல்லது மனித மலத்திற் காணப்படும் இசிவு நோயையுண்டாக்கும் புழு; the micro-organism in the rubbish in the backyard of the dwelling house or in the faces of cattle or human beings. It produces a powerful toxin which causes tatanus. (சா.அக.).

சன்னிக்குடோரி *šanni-k-kōdāri,* பெ.(n.) சன்னி நோய் கொண்ட காலையில் தலையைக் கீறிப் புகட்டும் மருந்து; the medicine applied in cases of apoplexy by scarification. (சா.அக.)

சன்னிக்கோட்டி *šanni-k-kōtti,* பெ.(n.) வலிப்பு நோய் வகை; convulsions.

[சன்னி + கோட்டி]

சன்னிகணாயன் *šanni-kaṇāyan,* பெ.(n.) **சன்னிநாயகம்** (வின்.) பார்க்க; see *šanni-nāyagam.*

சன்னிகம் *šannikam,* பெ.(n.) **சதுகமரம்** பார்க்க; see *šadukamaram.*

சன்னிகரிடம் *šanni-karidam,* பெ.(n.) காட்சிக்குக் காரணமாய்ப் பொறியும் புலனும் அடுத்து நிற்கும் சையோகம், சையுத்தசம வாயம், சையுத்த சமவேதசமவாயம், சமவாயம், சமவேதசமவாயம், விசேடண விசேடியபாவமாகிய அறுவகைச் சம்பந்தம் (சி.சி.அளவை. 6, மறைஞா.); relation existing between a sense-organ and its object as the cause of perception of six kinds viz., caiyōkam, caiyutta-camavāyam, caiyutta camavēta-camavāyam, camavāyam, camavēta - camavāyam, vicēṭaṇa-vicēṭiya-pāvam.

சன்னிகுணம் *šanni-kuṇam,* பெ.(n.) வலிப்பு அல்லது இசிவு; spasmodic convulsion which is a characteristic symptom of apoplexy. (சா.அக.)

[சன்னி + குணம்]

[Skt. sanni> த. சன்னி]

சன்னிகுன்மம் *šaṉṉi-kuṉmam,* பெ.(n.) **சந்நிகுன்மம்** பார்க்க; see *sannikuṉmam.* (சா.அக.)

[சன்னி + குன்மம்]

சன்னிசயித்தியம் *šaṉṉi-šayittiyam,* பெ.(n.) 1. இசிவு நோயில் காணும் குளிர்; a condition of the body which is bathed in cold sweat through apoplexy. 2. மூடு சன்னி; catalepsy. (சா.அக.)

சன்னிசேட்டை *šaṉṉi-šēṭṭai,* பெ.(n.) 1. நினைவு தடுமாற்றத்திற்கு பின்னதாக ஏற்படும் ஒரு வகை மூளைப் பிறழ்ச்சி; the mental derangement as in frenzy or delirium following a violent agitation of mind. 2. இசிவு நோயின் கெட்ட குறிகள்; the bad or unfavourable symptoms of apoplexy, delivium or tetanus. (சா.அக.)

[சன்னி + சேட்டை]

சன்னித்தலைவலி *šaṉṉi-t-talaivali,* பெ.(n.) இசிவு நோயில் ஏற்படும் தலைவலி இது தலையின் கோளாறினால் உண்டாகும்; headache in apoplexy as a result of cerebral affections. (சா.அக.)

[சன்னி + தலைவலி]

[Skt. sanni> த. சன்னி]

சன்னித்துடிப்பு *šaṉṉi-t-tuḍippu,* பெ.(n.) 1. இசிவு நோயுற்ற போது காணும் நெஞ்சுத் துடிப்பு; violent tremulous beating of the heart - Delirium cordis. 2. இசிவு நோயிலுண்டாகும் நாடித் துடிப்பு; irregularity of pulse in apoplexy or delirium. (சா.அக.)

[சன்னி + துடிப்பு]

[Skt. sanni> த. சன்னி]

சன்னிதானம் *šaṉṉitāṉam,* பெ.(n.) 1. திருமுன்பு; presence. *பெரியோரது சன்னிதானத்தில் அடக்கமாயிருக்க வேண்டும்".* 2. கடவுளின் திருமுன்பு; sacred presence of a deity. 3. வெறியேறுகை; entrance or advent of divine spirit. *"தாவி லாவாகன சன்னிதான சன்னி ரோதனந் தான் மேவவமைத்து" (சிவரக. பசாசுமோ. 11).* 4. மடத்துத் தலைவர்கள் போன்ற பெரியோரைக் குறிக்க வழங்கும் மதிப்புரவுச் சொல்; a term of respect, used in addressing or referring to great personages, especially in mutts. *"சன்னிதானத்தைத் தரிசிக்க வந்தேன்"*

சன்னிதானம்பண்ணு-தல் *šaṉṉāṉam-paṇṇu-,* செ.குன்றாவி.(v.t.) 1. திருமுன்பு கொணர்தல் (வின்.); to bring into the presence. 2. தெய்வ வெறி ஏறியிருத்தல்; to be present, as the divine spirit entering idol.

[சன்னி+தானம்+பண்ணு-,]

[Skt. san-ni-dhana > த. சன்னிதானம்]

சன்னிதானமுத்திரை *šaṉṉidāṉa-muttirai,* பெ.(n.) பெருவிரல்களுயர்ந்து முன்கைகள் (முட்டிகள்) இணைந்த கைமுத்திரைவகை (செந். x, 425); juxtaposition of the two fists with thumbs erect, used in religious worship.

[சன்னிதான + முத்திரை]

[Skt. san-ni-dhāna > த. சன்னிதான(ம்)]



சன்னிதி *šannidi*, பெ.(n.) 1. அண்மைநிலை (பி.வி.19, உரை); nearness, proximity. 2. தெய்வம் குரு பெரியோர் இவர்களின் திருமுன்பு; presence of deity guru or some great person. 3. கோயில்; temple. 4. **சன்னிதானம்** பார்க்க; see *šannidānam*.

[Skt. san-ni-dhi > த. சன்னதி]

சன்னிதிக்கடா *šannidi-k-kaḍā*, பெ.(n.) சிறு தெய்வத்திற்குக்காக வெட்டப்படும் ஆட்டுக்கடா; sheep reared for sacrifice to a deity.

[சன்னிதி+கடா]

[Skt. san-ni-dhi > த. சன்னிதி]

சன்னிதிப்படு-தல் *šannidi-p-paḍu-*, செ.குன்றா வி.(v.t.) முன்னிலையிற் சேருதல்; to enter into one's presence.

[சன்னிதி + படு]

சன்னிதியிலடி-த்தல் *šannidiyillaḍi-*, செ.குன்றாவி.(v.t.) உறுதி கூறுதல்; to take oath.

[சன்னி + அடி]

சன்னிதோடம் *šannidōam*, பெ.(n.) 1. இசிவு நோயினைப் போல, மண்டைக்குள் அரத்தம் பாயாமலே, அரத்தாதிக்கத்தினால் வெறும் குறிகள் மட்டுமே காணும் இசிவு; congestion without extravasation of blood; but followed by mere symptoms resembling those of true apoplexy - congestive apoplexy. 2. பல காரணங் களினால் இசிவு இல்லாமலே அவைத் தொடர்பான தீக் குறிகள் காணும் போலி இசிவு நோய்; attacks without apparent apoplexy, exhibiting only certain symptoms from various causes : a condition resembling apoplexy but without cerebral hemorrhage. 3. மயக்கம் வாய்குளறல் முதலிய இசிவு நோயின் முற் குறிகள்; premonitary sysptoms of apoplexy such as giddiness, faltering speech etc. (சா.அக.)

சன்னிநரம்பு *šanni-narambu*, பெ.(n.) காலின் கட்டைவிரல்நரம்பு (சன்னியை உண்டாக்கும் நரம்பு) (வின்.); nerves of the great toe, as causing lock jaw when injured.

[சன்னி + நரம்பு]

[Skt. sanni > த. சன்னி]

சன்னிநாயன் *šanni-nāyan*, பெ.(n.) **சந்நிநாயகம்** பார்க்க; see *šanni-nāyagam*. (சா.அக.)

சன்னிநோய் *šanni-nōy*, பெ.(n.) **சன்னி** பார்க்க; see *šanni*. (சா.அக.)

சன்னிப்பிதற்றம் *šanni-p-pidarram*, பெ.(n.) இசிவுக் காய்ச்சலால் காணும் வாய் குழறல்; incoherant talk or delirious utterances through typhoid fever; delirious talks. (சா.அக.)

[சன்னி + பிதற்றம்]

சன்னிப்பைத்தியம் *šanni-p-paittiyam*, பெ.(n.) இசிவு நோயுற்றதாலுண்டாகும் மூளைப் பிறழ்ச்சி (இதனால் தன்னை மறந்து கூச்சலிடல், பினத்தல், கடுஞ் செய்கைகள் முதலிய தீய குணங்களோடு கூடிய மனோ நிலைமை ஏற்படும்); a kind of tetanus characterised by an expansive emotional state (such as incoherent speech, crying or bawling out, delusions, violent tendencies etc. as distinguished from real insanity with depression). (சா.அக.)

சன்னிபாதக்காய்ச்சல் *šannipāda-k-kāyccal*, பெ.(n.) இசிவுடன் கூடிய காய்ச்சல்; typhus fever. (சா.அக.)

[சன்னிபாதம் + காய்ச்சல்]

[Skt. sanni > த. சன்னி]

சன்னிபாதசிர்க்கரம் *šannipāda-širkkaram,* பெ. (n.) **சந்நிபாதசிர்க்கரா ரோகம்** பார்க்க; see *šannipāta-širkkarārōgam.* (சா.அக.)

சன்னிபாதசுரக்கட்டி *šannipāda-šura-k-katti,* பெ.(n.) இசிவுக் காய்ச்சலினா லுண்டாகும் ஆறாத கட்டி; a chronic abscess following typhoid fever - post typhoid abscess. (சா.அக.)

சன்னிபாதசுரம் *šannipādašuram,* பெ.(n.) **சன்னிபாதக்காய்ச்சல்** பார்க்க; see *šanni-pāda-k-kāyccal.*

[சன்னி + பாதம் + சுரம்]

[Skt. sanni > த. சன்னி]

சன்னிபாதபிதற்றல் *šanni-pāda-pitarral,* பெ.(n.) **சந்நிபாதபிதற்றல்** பார்க்க; see *šannipāda-pitarral.* (சா.அக.)

சன்னிபாதபைரவம் *šanni-pāta-pairavam,* பெ.(n.) நீடித்து அல்லது அடுத்தடுத்து வரும் பலவிதக் காய்ச்சலைக் குணப்படுத்த வேண்டி 18 வகை மூலிகைகளைச் சமனிடை கொண்டு கருக்கிட்டுக் கொடுக்கும் ஓர் ஆயுள் வேத மருந்து; an Ayurvedic decoction composed of 18 drugs taken in equal measure and prescribed for various kinds of fevers chronic or intermittent. (சா.அக.)

சன்னிபாதம் *šannipādam,* பெ.(n.) 1. சன்னி பார்க்க (மூ.அ.); see šanni. 2. கண்டகுப்சம், சிம்பகம், தாந்திரிகம், பக்கின நேத்திரகம், ருக்தாகம், சிஃகுலீகம், பிரலாபம், அந்தகம், இரத்தஷ்டீவி, சித்தவிப்பிரமம், சீதாங்கம், கர்ணிகம், அபின்னியாசம் என்ற பதின்மூன்று வகைப்பட்ட சன்னிநோய் (சீவரட். 22); diseases resulting from the morbid condition of the three bodily humours 13 in number viz., *kantakupcam, cimpakam, tāntirikam, pakkina-nēttirakam, ruktākam, cikkulikam, piralāpam, antakam, iratta.stivi, cittavippiramam, citāṅkam, karnikam, apinniyācam.* (சா.அக.)

சன்னிபாதமதம் *šanni-pātamatam,* பெ.(n.) வெண்ணீர் (விந்துப்) பெருக்கத்தினால் மதங்கொண்டு எழும்பிய காமக் காய்ச்ச லினால் ஏற்பட்ட சன்னி பாதக் குறிகள்; complex symptoms of delirium exhibited through fever due to sexual excitement arising from the accumulation of semen or virile power in the system. (சா.அக.)

சன்னிபாதமூலம் *šanni-pāda-mūlam,* பெ.(n.) **சந்நிபாதமூலம்** பார்க்க; see *šanni-pāda-mūlam.*

சன்னிபாதம் *šannipādam,* பெ.(n.) **சந்நிபாதம்** பார்க்க; see *šanni-pādam.* (சா.அக.)

சன்னிபிற-த்தல் *šanni-pira-,* செ.கு.வி.(v.i.) இசிவு நோயுண்டாதல்; being in a state of delirium.

[Skt. sanni + த. பிற-,]

சன்னிபோக்கி *šanni-pōkki,* பெ.(n.) இசிவுநோயை விலக்கக் கூடிய மருந்து; any drug or medicine efficient in preventing or affording relief in cases of apoplexy - anti - apoplectic. (சா.அக.)

[சன்னி + போக்கி]

[Skt. sanni > த. சன்னி]

சன்னிமயக்கம் *šanni-mayakkam,* பெ.(n.) இசிவுநோயால் ஏற்பட்ட உணர்ச்சியற்ற மெய் மயக்கம்; stupor or deep sleep attended with complete unconsciousness - Apoplectic coma. (சா.அக.)

[சன்னி + மயக்கம்]

[Skt. sanni > த. சன்னி]

சன்னிமாந்தம்[1] *šanni-mānddam,* பெ.(n.) மாந்தத்தினால் குழந்தைகளுக்குக் காணும் இசிவோடு கூடிய வலிப்பு; convulsion from

indigestion or gastric disturbances due to over indulgence in eating and drinking found in children in whom it is a pre-disposing cause of typhoid.

[சன்னி + மாந்தம்]

[Skt. sanni > த. சன்னி]

சன்னிமாந்தம்² *šanni-māndam,* பெ.(n.) உணவு செரியாமையால் (அசீரணத்தால்) குழந்தைகளுக்க வரும் மாந்த வகை (சீவரட்.); converlsions of children due to indigestion.

[சன்னி + மாந்தம்]

சன்னிமிட்டான் *šanni-miṭṭān,* பெ.(n.) மூஞ்சுறு; grey musk shrew; Indian musk rat - Crocidura caerulea. (சா.அக.)

சன்னிமூர்ச்சை *šanni-mūrccai,* பெ.(n.) **சன்னிமயக்கம்** பார்க்க; see *šanni-mayakkam.* (சா.அக.)

சன்னியசி-த்தல் *šanniyaši-,* 4 செ.கு.வி. (v.i.) துறத்தல்; to renounce the world, become an ascetic.

[Skt. san-nyas > த. சன்னியசி-,]

சன்னியநாயன் *šanniya-nāyan,* பெ.(n.) **சந்நிநாயகம்** பார்க்க; see *šanni-nāyagam.* (சா.அக.)

சன்னியாசம்¹ *šanniyāšam,* பெ.(n.) உலகத் தொடர்பை விட்டு முற்றும் துறந்து, முத்தியடைய வேண்டி கொள்ளும் துறவு (இது நால்வகைத் துறவு நிலைகளில் ஒன்று, அதாவது கடைசி நிலை); asceticism consisting in renouncing all worldly affections and possessions with a view to work out for salvation. It is one of the four states and the last stage of the religious act contemplated in a man's life. (சா.அக.)

த.வ. துறவு

சன்னியாசம்² *šanniyāšam,* பெ.(n.) 1. குடீசகம், பகூதகம், அம்ஸம், பரமஅம்ஸம் என்ற நால்வகைப்பட்ட துறவு; rrenunciation of the world asceticism of four kinds viz., kuṭicakam, pakūtakam, hamsam, parama-hamsam. 2. நூற்றெட்டுச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று; an upaniṣad, one of 108.

[Skt. san-nyāsa > த. சன்னியாசம்]

சன்னியாசமுத்திரை *šanniyāša-muttirai,* பெ.(n.) கோல், குவளை, துவராடை ஆகிய துறவிகட்குரிய அடையாளங்கள் (w.); distinctive marks of a sannyāsin, as staff, water-pot, salmon-coloured.

[Skt. san-nyāsa > த. சன்னியாச]



சன்னியாசி[1] *šaṉṉiyāši,* பெ.(n.) துறவிகள்; one who has abandoned or renounced worldly affairs, religious, mendicant of four classes viz.,

[Skt. san-nyāsin > த. சன்னியாசி]

சன்னியாசி[2] *šaṉṉiyāši,* பெ.(n.) **சன்னியசி–** பார்க்க; see *šaṉṉiyaši-. "சன்னியாசித் தனன்று" (குமரே. சத. 81).*

சன்னியாசிரோகம் *šaṉṉiyāši-rōgam,* பெ.(n.) உடலை அசைவறச் செய்யும் நோய்வகை (பைஷஜ. 235); catalepsy.

சன்னிரோதனம் *šaṉṉi-rōdaṉam,* பெ.(n.) கடவுளது இறையுணர்வை ஓரிடத்து நிறுத்துகை; circumscribing the divine presence to a particular spot or place. *"சன்னிதான சன்னிரோதனந்தான் மேவவமைத்த" (சிவரக. பசாசுமோ. 11).*

[Skt. san-ni-rōdhana > த. சன்னி ரோதனம்]

சன்னிரோதனமுத்திரை *šaṉṉi-rōtaṉa-muttirai,* பெ.(n.) முட்டிகளை இணைக்குங் கைமுத்திரைவகை (செந். x, 425); juxtaposition of two fists with thumbs bent in, used in religious worship. (சா.அக.)

சன்னிவலிப்பன் *šaṉṉi-valippaṉ,* பெ.(n.) மாட்டு நோய்வகை; a kind of cattle disease.

[சன்னி+வலிப்பன்]

[Skt. sanni > த. சன்னி]

சன்னிவாதசுரம் *šaṉṉi-vāda-šuram,* பெ.(n.) மார்பு, கழுத்து, நெற்றி வியர்த்து, விக்கலுடன் வாய்பிதற்றி, மேல் மூச்சுடன் வயிறு கழிந்து காணும் ஒருவகைக் காய்ச்சல்; a form of rheumatic fever attended with perspiration in the region of the chest, neck and forehead. hiccough, impaired speech, hard-breathing diarrhoea and other characteristic symptoms of apoplexy. (சா.அக.)

சன்னிவாதசுரம் *šaṉṉi-vātašuram,* பெ.(n.) **சன்னிபாதசுரம்** பார்க்க; see *šaṉṉipāta-šuram.*

சன்னிவாதசூலை *šaṉṉi-vāta-šulai,* பெ.(n.) உடம்பில் வளி தங்குவதினால் கை, கால், மூட்டுகளில் மோது கட்டி, உடம்பு வீங்கி, அயர்ந்து, நரம்பு தோன்றி, நாவு குளறி, காது மந்தித்து, கை, கால் குளிர்ந்து காணும் ஒரு வகைச் சூலை நோய்; a gouty condition of the system forming a predisposing cause of apoplexy. It then exhibits all the symptoms of apoplexy but chiefly the rigidity of the joints, swelling, fatigue, nervous affection. faltering speech, deafness, chillness of the extremities and other cerebral disturbances. (சா.அக.)

சன்னிவாதசெவிடு *šaṉṉivāta-ševiḍu,* பெ.(n.) காது அல்லது மூளையின் கோளாறினால் உடம்பு வெளுத்து மயக்கம் முதலிய இசிவு நோய்க் குறிகளால் ஏற்படும் செவிட்டுத் தனம்; complete or partial deafness, due to the aural and sevebral disturbances and marked by swimming in the head. vertigo paleness of the skin etc - A peplectiform deafness. (சா.அக.)

சன்னிவாதத்தலைநோய் *šaṉṉi-vāta-t-talainōy,* பெ.(n.) நெஞ்சடைத்து பெரு மூச்சுண்டாகி, இரண்டு காதிலும் ஆப்படித்தாற் போல கேளாது, வாய் பேசாது உணர்ச்சியறிவில்லாத குணங்களைக் காட்டும்; a form of neuralgic head-ache exhibiting almost all the symptoms of apoplexy, due to suspension of senseperceptions such as affection of the chest, deep sigh, in audibleness, as if stuck with a plug in the ear speechlessness, unconsciousness etc. (சா.அக.)

சன்னிவாதம் *śaṉṉi-vātam,* பெ.(n.) வாத பித்த சிலேட்டுமம் மிகுமாகில் உடம்பில் வெப்பு மிகுந்து மூளையைத் தாக்கி அதனால் சீதள முண்டாகி எப்பொழுதும் கெடுதியையே விளைவிக்கும் ஊதைநோய்; rheumatism always attended with chillness as a result of excess of heat due to the cerebral affections manifested by the derangements of the three humours in the system. (சா.அக.)

சன்னிவிசபாகம் *śaṉṉi-viṣapākam,* பெ.(n.) மதுபானம், அபினி சாப்பிடல் முதலிய காரணங்களினால் உடம்பில் வீக்கம் ஏற்பட்டு, அதனால் இசிவு நோய்க்குரிய குறிகளைக் காட்டுமோர் நிலைமை (இதனால் வயிற்றுப் போக்கு, சுரம், மயக்கம், முகவீக்கம், பிதற்றல் அசதி முதலிய குணங்கள் உண்டாகும்); attacks resembling tetanus resulting from over indulgence in intoxi cating liquors, opium eating and other narcotic poisoning. The symptoms are :- diarrhoea, fever, giddiness, swelling of the face raving : fatigue etc. - Toxic tetanus. (சா.அக.)

சன்னிவேசம் *śaṉṉi-vēśam,* பெ.(n.) அமைப்பு; lie, situation. *"வீட்டின் சன்னி வேசம் நன்றாயிருக்கிறது".*

த.வ. கட்டமைப்பு

[Skt. san-ni-vēśa > த. சன்னிவேசம்]

சனக்கட்டு *śaṉa-k-kaṭṭu,* பெ.(n.) 1. உறவினர்களின் கூட்டம்; family circle. 2. உறவினரது பற்று (இ.வ.); family tie. 3. மக்களின் கூட்டமைப்பு; unity among the people.

[சனம் + கட்டு] *[Skt. jana > த. சனம்]*

சனக்குறைவு *sana-k-kuraivu,* பெ.(n.) மக்கள் குடியோடிப் போகை (புதுவை); depopulation.

[சனம்+குறைவு]

[Skt. jana > த. சனம்]

சனகபிதா *śaṉaka-pitā,* பெ.(n.) பெற்றெடுத்த தந்தை; natural father dist. fr. *cuvikāra-pitā.*

[Skt. janaka +pita> த. சனகபிதா]

சனகம் *śaṉakam,* பெ.(n.) சாதிக்குக் காரண மான சூக்குமவினை வகை (சி.போ. பா.2,2,பக்.116); a subtle karma which determines the caste of an individual.

[Skt. janaka > த. சனகம்]

சனகமாதா *śaṉaka-mādā,* பெ.(n.) பெற்றதாய்; natural mother, dist. fr., *cuvikāra-mātā.*

[Skt. janaka+mādā > த. சனகமாதா]

சனகன்[1] *śaṉakaṉ,* பெ.(n.) 1. தந்தை; father. progenitor. *"சனகனுக்கென் றுதகமுடன் ...... ஈந்தான்" (குற்றா. தல. கவுற்சன. 84).* 2. இராமகாதையின் கதைத்தலைவியாகிய சீதையின் தந்தையாகிய மிதிலையரசன்; a king of Mithila, father of Sitā, considered a royal sage. *"கோமகன் முன் சனகன் குளிர்நன்னீர் .... தடக்கையினீந்தான்" (கம்பரா. கடிமண. 87).*

[Skt. janaka > த. சனகன்]

சனகன்[2] *śaṉakaṉ,* பெ.(n.) சனகாதியருள் ஒருவராகிய முனிவர்; aa sage, one of four caṉakātiyar, q.v. *"துங்கமிகு பக்குவச் சனகன் முதன் முனிவோர்கள்" (தாயு. சின்மயாநந்த. 1).*

[Skt. sanaka > த. சனகன்]

சனகாதியர் *śaṉakātiyar,* பெ.(n.) சனகன், சனாதனன், சனற்குமாரன், சனந்தனன் என்ற நான்முகனது பிரமனது மானச மக்கள் (புத்திரர்)களான நான்கு இருடிகள்; the four celebrated sages, spiritual or mindborn sons of Brahmā, viz., *caṉakaṉ, caṉātaṉav, caṉaṟ-kumāraṉ, caṉantaṉaṉ.*

[Skt. janaka + ādi> த. சனகாதி]

சனகி *šaṉagi,* பெ.(n.) **சானகி** பார்க்க; see *šāṉaki. "சனகன்மா மகள்பெயர் சனகி" (கம்பரா. கடாயுவ். 39).*

[Skt. janaki > த. சனகி]

சனசதளம் *šaṉašataḷam,* பெ.(n.) மக்கட் கூட்டம் (வின்.); crowd of people.

[சன+சதளம்]

[Skt. jana > த. சதளம்]

அதித்தல் = மிகுதல். அதி + அனம் - அதனம் = அதிகம், மிகுதி. மிகை. அதனம் → சதனம் → சதளம்

சனஞ்சேர்-த்தல் *šaṉañ-šēr-,* 4 செ.கு.வி. (v.i.) 1. ஆட்கூட்டுதல்; to assemble partisans, constituents, voters. 2. படைதிரட்டுதல்; to enlist forces, levy an army.

[சனம் + சேர்] *[Skt. jana > த. சனம்]*

சனந்தனன் *šaṉantaṉaṉ,* பெ.(n.) சனகாதி யருள் ஒருவராகிய முனிவர் (பிங்.); a sage, one of four *caṉakātiyar,* q.v.

[Skt. sanandana > த. சனந்தனன்]

சனப்பெருக்கம் *šaṉa-p-perukkam,* பெ.(n.) மக்கட்செறிவு; dense population.

[சனம் + பெருக்கம்]

[Skt. jana > த. சனம்]

சனபதம் *šaṉa-padam,* பெ.(n.) நாடு (திவா.); country, rural district.

[Skt. jana-pada > த. சனபதம்]

சனபதி *šaṉa-pati,* பெ.(n.) அரசன்; king, emperor. *"சனபதியடியிற் புகவிழு பொழுதத்தே" (கலிங். 36).*

சனம் *šaṉam,* பெ.(n.) 1. மக்கள்; people, community. *"மாசன மிடம்பெறாது" (சீவக. 116).* 2. இனத்தார் (கொ.வ.); relation, one's own people. 3. கூட்டம்; crowd, herd. *"தானப்பகடு முதலாய சனங்கள்" (பாரத. சம்பவ. 47).*

[Skt. jana > த. சனம்]

சனமடிவு *šaṉa-maḍivu,* பெ.(n.) **சனக் குறைவு** பார்க்க (புதுவை.); see *šaṉa-k-kuṟaivu.*

[சனம்+மடிவு]

[Skt. jana > த. சனம்]

சனமாலி *šaṉamāli,* பெ.(n.) **சன்மலி 1** (மலை.) பார்க்க; see *saṉmali.*

சனமேசயன் *šaṉamēšayaṉ,* பெ.(n.) பரீட்சித்தின் மகனும் அர்ச்சுனன் பேரனுமாகிய அத்தினாபுரவரசன்; a celebrated king of Hastināpura son of Parīksit and grandson of Arjuna.

[Skt. janamējaya > த. சனமேசயன்]

சனலோகம் *šaṉa-lōkam,* பெ.(n.) மேலேழுலகத்துள் முன்னோர் முதலிய தேவதைகளின் வாழ்விடமாகிய உலகம்; an upper world inhabited by the sons of Brahmā, manes and celestials, fifth of *mēl-ēḻ-ulakam,* q.v. *"இகலோகம் பரவு சனலோகம்" (கந்தபு. அண்டகோ. 64).*

[Skt. jana-lōka > த. சனலோகம்]

சனற்குமாரம் *šaṉaṟkumāram,* பெ.(n.) துணைத் தொன்மங்கள் பதினெட்டனு ளொன்று (திவா.); a secondary purāṇa, one of 18 upapurāṇam, q.v.

[Skt. sanat-kumāra > த. சனற்குமாரம்]

சனற்குமாரன் *šaṉaṟkumāraṉ,* பெ.(n.) சனகாதியருள் ஒருவராகிய முனிவர் (பிங்.); a sage, one of four caṉakātiyar, q.v.

[Skt. sanatkumāra > த. சனற்குமாரன்]

சனற்சுசாதன் *šanaršušātan,* பெ.(n.) பிரமாவின் மானபப்புத்திரரான ஒரு முனிவர் (அபி.சிந்.); a sage, one of the mind-born sons of Brahmā.

[Skt. sanatsujāta > த. சனற்சுசாதன்]

சனன்மாலி *šananmali,* பெ.(n.) **சனனமாலி** பார்க்க; see *šananamāli.*

சனனகாண்டம் *šananakāndam,* பெ.(n.) உலகப் பெருக்கத்தைக் கூறும் முதற் தோன்றியம் (ஆதியாகமம்); Book of Genesis.

[சனன+காண்டம்]

[Skt. janana > த. சன்ன]

சனனகாலம் *šanana-kālam,* பெ.(n.) 1. பிறக்கும் காலம் அல்லது பொழுது (அ) நேரம்; period or time of birth. 2. பிறக்கிற பொழுது கோள்கள் அமையப்பெற்ற நேரம் அல்லது வேளை; the time of birth in consideration of the position of the planets or the zodiacal constellations. (சா.அக.)

[சனை+காலம்]

[Skt. janana > த. சன்ன]

சனனசாலம் *šanana-šālam,* பெ.(n.) வெண்கடுகு; white mustard - Brassica alba. (சா.அக.)

சனனத்தடை *šanana-t-tadai,* பெ.(n.) பிறப்புத் தடுப்பு; preventing birth through contraception - Birth control. (சா.அக.)

[சனனம்+தடை]

[Skt. janana > த. சனனம்]

சனனத்தடையம் *šanana-t-tadaiyam,* பெ.(n.) கருத் தரித்தலை மறுக்கப் பயன் படுத்தும் பொருள்; anything used to prevent conception - contraceptive. (சா.அக.)

[சனன(ம்)+தடையம்]

[Skt. janana > த. சனனம்]

சனனதத்துவம் *šanana-tattuvam,* பெ.(n.) 1. பிறவிச் சத்து; procreative power. 2. பிறப்பின் இயற்கை; the real or essential nature of coporeal existence. (சா.அக.)

[சனனம்+தத்துவம்]

[Skt. janana > த. சனனம்]

சனைநீயம் *šanai-nīyam,* பெ.(n.) நெய்; ghee.

சனனபூமி *šananabūmi,* பெ.(n.) **சன்மபூமி** பார்க்க; see *šanma-būmi.*

[Skt. janana+bumi> த. சனனபூமி]

சனனம் *šananam,* பெ.(n.) 1. பிறப்பு; birth. 2. மறுபிறப்பு; rebirth. (சா.அக.).

[Skt. janana > த. சனனம்]

சனனமரணக்கணக்கு *šananamarana-k-kanakku,* பெ.(n.) மக்களின் பிறப்பிறப்புப் பதிவு (இக்.வ.); vital statistics.

த.வ. தோற்றமறைவுக்கணக்கு

[சனனம்+மரணம்+கணக்கு]

[Skt. jananamarana+ த. சனனமரணம்]

சனனமரணம் *šanana-maranam,* பெ.(n.) பிறப்பு, இறப்பு; birth and death. (சா.அக.)

[Skt. janana+marana >த. சனனமரணம்]

சனனமறு-த்தல் *šanana-m-aru-,* பெ.(n.) பிறவி வேண்டாமை அதாவது கடவுளை நோக்கிப் பிறவா வரம் வேண்டுகை; praying God to prevent from taking birth in the world. (சா.அக.)

த.வ. பிறவிநீத்தல் வேண்டுகை

[சனனம்+மறு-]

[Skt. janana > த. சனனம்]

சனனமாலி *šananamāli,* பெ.(n.) சதகுப்பி; bishop's weed. (சா.அக.)

சா[1] *śā* பெ.(n.) வளைகோட்டின் ஒரு பகுதியின் இரு முனைகளையும சேர்க்குங் கோடு; (Astron.) chord of an arc; sine of an are.

த.வ. நாண்

[Skt. jyā> த. சா]

சா[2] *śā* பெ.(n.) தேயிலைச்செடி (இவ); tea-plant.

[U. chā> த. சா]

சாக்கணாக்கறி *sākkaṉā-k-kaṟi,* பெ.(n.) மதுவுண்போர் தின்னும் புலால்; meat prepared and sold at taverns to be taken by drunkards along with the drink.

த.வ. களியாஊன்

[சாக்கணா + கறி]

[U. cāknā > த. சாக்கணா]

சாக்கி *sākki,* பெ.(n.) நேர் பார்வைச் சான்று; eye witness "தேவர் சாக்கியாக" (இராமநா.உயுத்.71)

த.வ.சான்று, காட்சிச் சான்று

[Skt. śākṣin > த. சாக்கி]

சாக்கி[2] *sākki,* பெ.(n.) நெருப்புண்டாக்க பயன்படுத்தி வந்த ஒரு வகைக் கல்; flint - stone used for kindling fire.

த.வ. அழற்கல், வெங்களிச்சான்கல், வெண்கல், சக்கிமுக்கிகல், தீக்கடைகல்.

[Skt. சக்கி > சாக்கி]

சாக்கியநாயனார் *sākkiya-nāyaṉar,* பெ.(n.) புத்தமதத்திலிருந்து சிவனிய மதத்தைத் தழுவியவரும் நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவருமாகிய சிவனடியார் (பெரியபு.); a canonized Śaiva saint converted to Śaivaism from Buddhism, one of 63.

[சாக்கிய(ம்) + நாயனார்]

[Skt. sākya > த. சாக்கிய(ம்)]

சாக்கியம் *sākkiyam,* பெ. (n.) புத்தமதம்; Buddhism, as founded by śākya-muni. "சாக்கியங் கற்றோஞ் சமண்கற்றோம்" (பெருந்தொ.1812).

த.வ. அறிவன்மதம்

[Skt. śākya > த. சாக்கியம்]

சாக்கியமுனி *sākkiya-muṉi,* பெ. (n.) புத்தர்; Gautama Buddha.

[சாக்கியம்+முனி]

[Skt. śākya + த. சாக்கியம்]

சாக்கியர் *sākkiyar,* பெ. (n.) 1. புத்தர்; Buddhists. சாக்கியரும் (தி.வ். திருவாய், 4,10,5.) 2. அருகர் சைனர்; Jainas. *"பாக்கியமில் சாக்கியர்கள்"* (திருவாலவா. 38,50).

[Skt. śākya > த. சாக்கியர்]

சாக்கியன்[1] *sākkiyaṉ,* பெ. (n.) 1. புத்தர் (பிங்); Gautama Buddhar. 2. சாக்கிய நாயனார் பார்க்க; see śākkiya-nāyaṉār.

சாக்கியன்[2] *sākkiyaṉ,* பெ. (n.) சாக்கையன் பார்க்க; see sākkaiyan.

சாக்கிரக்கருவி *sākkira-k-karuvi,* பெ. (n.) பொறிகள் புலன்கள் தன்மாத்திரைகள் உயிர்வளி ஆதன் என்னும் விழிப்புணர்வுக்கு (சாக்கிராவத்தைக்கு) உரிய கருவிகள் (சி.சி.4,34.); (Saiva) agents or elements operating in the state of waking, as organs of action, of sense and of mind, vital airs and soul.

த.வ. விழிப்பேந்துகள்

[சாக்கிரம் + கருவி]

[Skt. Jāg.rat > த. சாக்கிரம்]

சாக்கிரத்தானம் *sākkira-t-tānam,* பெ. (n.) சாக்கிரத்தில் ஆதனின் இடமாகக் கருதும் புருவ நடுவம் (மத்தியம்); centre between the eyebrows where the soul dwells in the waking state. "ஆன்மா வானவன் சாக்கிரத் தானமாகிய புருவமத்தியத்தைப் பொருந்தும் போது (சி.சி.4, 33, மறைஞா)

த.வ. புருவநடு

[Skt. Jagrat-sthāna > த. சாக்கிரத்தானம்]

சாக்கிரத்திலதீதம் *sākkirattil-atitam,* பெ. (n.) ஆன்மா தொடர்பானவற்றைத் துய்க்கின்ற (விடயங்களை யனுபவிக்கிற) வேளையில் உயிர் வளியும் (பிராணவாயுவும்) இயங்காமல்

ஒன்றையும் அறியாமல் மூர்ச்சித்து மயங்கி நிற்கும் நிலை (ஞானா கட். 29); (Šaiva) condition of the soul while in waking state, in which preathing is suspended and consciousness is utterly lost, as when a person is stunned by a sudden shock.

[சாக்கிரம் → சாக்கிரத்தில் + அதீதம்]

சாக்கிரத்திற்சாக்கிரம் *sākkirattir-sākkiram,* பெ. (n.) ஆதன் (ஆன்மா) கொண்முடிபு நிலை (தத்துவதாத்துவிகங்) களோடு கூடித் (விடயங்களை) துய்க்கும் நிலை (அனுபவிக்கும் அவசரம்) (ஞான. கட்.30); (Šaiva) condition of the soul while in waking state, in which all its powers are in full play, as when a person is alert and wide awake.

[சாக்கிரத்தில் + சாக்கிரம்]

சாக்கிரத்திற்சுழுத்தி *sākkiratt.,-culutti,* பெ. (n.) ஆதன் உயிர்வளியுடனும் மெய்ப்பாட்டு டனுங் கூடி அறிவுணர்ச்சியடங்கி நிற்கும் நிலை (ஆன்மா சித்தத்துடனும் பிராண வாயுவுடனுங் கூடி அறிவுணர்ச்சி முதலியன அடங்கி நிற்கும் அவசரம்) (தத்துவ தாத்துவிகங்) (ஞானா. கட்.30); (Šaiva) condition of the soul while in waking state, in which breathing and consciousness are not lost but the mental powers are not roused to full activity, as when a person loses though and memory.

[சாக்கிரம் → சாக்கிரத்தில் + சுழுத்தி]

சாக்கிரத்திற்சொப்பனம் *sākkirattir-soppanam,* பெ. (n.) ஆதன் மனத்துடனும் உயிர்வளியுடனுங் கூடிய அறிவுணர்ச்சி முதலியன தெளிவின்றி நிகழும் நிலை (ஆன்மா சித்தத்துடனும் பிராணாதி வாயுவுடனுங் கூடிய அறிவுணர்ச்சி முதலியன தெளிவின்றி நிகழும் அவசரம்) (ஞானா.கட்.30); (Šaiva) condition of the soul while in waking state, in which breathing and consciousness east and the mental powers are dreamily active, as wwhen a person has vague thoughts and memories.

[சாக்கிரம் → சாக்கிரத்தில் + சொப்பனம்]

சாக்கிரத்திற்றுரியம் *sākkirattirruriyam,* பெ. (n.) ஆதன் மனமழிந்து உயிர்வளி சிறிதே இயங்கி நிற்கும் நிலை (ஆன்மா சித்தமழிந்து பிராணவாயு சிறிதே இயங்கி நிற்கும் அவசரம்) (ஞானா.கட்.30); (Šaiva) condition of the soul while in waking state, in which consciousness is lost and breathing is low, as when a person is half stunned by a sudden shock.

சாக்கிரத்திற்றுரீயாதீதம் *sākkirattirru-riyādam,* பெ. (n.) சாக்கிரத்திலதீதம் பார்க்க; see cākkirattil-atitam.

[சாக்கிரம் → சாக்கிரத்தில் + துரியாதீதம்]

சாக்கிரதை *sākkiradi,* பெ. (n.) விழிப்பு; wake fulness vigilance.

த.வ. கூர்ங்கவனம்

[Skt. Jagrat-ta> த. சாக்கிரதை]

சாக்கிரபாலன் *sākkirabālan,* பெ. (n.) விழிப்பு நிலையில் இயங்கும் ஆதன் (ஆன்மா) (சி.சி. 4, 33, மறைஞா) (சாக்கிரதசையில் விளங்கு பவன்); soul, as active in the waking state.

[Skt. Jāgra-pāla> த. சாக்கிரபாலன்]

சாக்கிரம் *sākkiram,* பெ. (n.) ஆன்மா புருவ நடு நின்று கோட்பாட்டு (தத்துவங்)களுடன் கூடி (விடய) நுகர்ச்சியில் மெத்தென நிற்கும் நிலை (சி.போ.பா.4,3, பக். 275, புது.); (Phil.) waking state in which the soul is in the forehead with all its faculties active.

த.வ. விழிப்புநிலை

[Skt. Jāgrat > த. சாக்கிரம்]

சாக்கிராதீதம் *sākkirādidam,* பெ. (n.) சாக்கிரத்திற்றுரியாதீதம் பார்க்க; see cākkirattirru-riyātitam.

[Skt. Jāgrātita > த. சாக்கிராதீதம்]

சாக்கிலி *sākkili,* பெ. (n.) அடிமைவேலை; menial service.

த.வ. ஏவற்பணி, சிறுபணி, தொழும்பு

[U. cākari > த. சாக்கிலி]

சாக்குக்கட்டி *sākku-k-katti,* பெ. (n.) கரும்பலகையில் எழுதப்பயன்படும் சீமைச் சுண்ணாம்புத் துண்டு; chalk piece; piece of chalk.

[சாக்கு+கட்டி]

[E. chalk > த. சாக்கு]

சாக்தம் *sākdam,* பெ. (n.) மலைமகளே மீமிசைத் தெய்வமென வழிபடுஞ் சமயம். சிவையம்; (சக்தியே பரதேவதையாக வழிபடுஞ் சமயம்); the religion which enjoins the exclusive worship of šakti as the supreme Being.

[Skt. šakta > த. சாக்தம்]

சாக்தன் *sākdan,* பெ. (n.) கொற்றவை அல்லது காளி (சிவை) வழிபாட்டாளன்; follower of šakta religion.

[Skt. šakta > த. சாக்தன்]

சாக்தேயம் *sākdēyam,* பெ. (n.) சாக்தம் பார்க்க; see cāktam.

[Skt. šāktēya > த. சாக்தேயம்]

சாகசக்கியம் *sākasakkiyam,* பெ. (n.) 1. திறமை, ஆற்றல் (சாமர்த்தியம்); cleverness, as in speech; trickery. 2. போலித்தனம் (பாசாங்கு); false pretence "சாகசக்கியம் பண்ணுகிறான்"

த.வ. ஏமாற்றுவேலை

[Skt. cāka-cakya > த. சாகசக்கியம்]

சாகசபட்சி *sāgasa-patci,* பெ. (n.) 1. சாகசத்தொழில் செய்யலாகாது என்று பிறவற்றுக்கு அறிவுரை செய்து அரிமா (சிங்கம்) வாயைத் திறக்கும் போது தான் உட்புகுந்து அதன் தொண்டைத் தசையைத் தின்னும் இயல்பினதாகக் கூறப்படும் குலிங்கமென்னும் பறவை, a fabulous bird which preaches against cruelty but itself enters the lion's mouth when it gapes, and eats its flesh. 2. முதலையின் பல்லழுக்கைக் கவரும் துணிவுள்ளதொரு பறவை(வின்); a kind of bird bold enough to pick the crocodile's teeth.

[Skt. sāhasa-pakṣin > த. சாகசபட்சி]

சாகசம்[1] *sāgasam,* பெ. (n.) 1. துணிவு; daring, daring act. "சாகசங்கள் பல செய்தும்" (பிரபோத. 30,53). 2. போலிநடிப்பு, பாசாங்கு; false, pretence. "இத்தனை சாகசமும் வேணுமோ" (இராமநா. அயோத். 7)

[Skt. sāhasa > த. சாகசம்]

சாகசம்[2] *sāgasam,* பெ. (n.) மெய்ம்மை; truth. "சாகசமொன்றும் விரும்புவோள்" (ஞானவா. தா. (சூ. 80)

[Skt. sahaja > த. சாகசம்]

சாகசம்[3] *šāgašam,* பெ. (n.) யானை (அக.நி); elephant.

சாகசரியம் *sagasariyam,* பெ. (n.) தோழமை; companionship.

த.வ. நட்பு

[Skt. sāhacarya > த. சாகசரியம்]

சாகசன் *sāgašan,* பெ. (n.) துணிகரமுள்ளவன்; a clever, brave man.

[Skt. sāhasa > த. சாகசன்]

சாகசிகன் *sāgasigan,* பெ. (n.) 1. துணிவுள்ளவன்; daring man. 2. பாசாங்கு செய்வோன், போலியாக நடிப்போன்; pretender

[Skt. sāhasika > த. சாகசிகன்]

சாகதன் *sāgadaṉ,* பெ. (n.) சாகசன் பார்க்க; see sākašaṉ

[Skt. sāhasa > சாகசன் →த. சாகதன்]

சாகதுண்டம் *šāka-tuṇdam,* பெ. (n.) அகில் (அக.நி.); eaglewood.

சாகபசுநியாயம் *sāga-pasu-niyā-yam,* பெ. (n.) முன்னர் ஆ (பசு)வெனப் பொதுப் பெயராற் கூறிப் பின்னர் புல்லுண்ணி ஆ (சாகபசு) வெனச் சிறப்புப் பெயரடையோடு பொது நீக்கிக் கூறுதலான் முன்னர்க் கூறிய ஆ (பசு)வும் புல்லுண்ணியே (சாகமே) எனப் பொருள் கொள்ள நிற்பதோர் நெறி. (சி.போ.பா. 1,2, பக். 73) Illustration of sacrificial animal and goat by which a general term like sacrificial animal in a text is construed in ,limited sense like goat because of subsequent specification.

[Skt.chāga-pasu-niyāya > த. சாகபசுநியாயம்]

சாகபட்சிணி *sāga-paṭcini,* பெ. (n.) இலையுணவு கொள்ளும் விலங்கு; Herbivorous animal

த.வ. இலைக்கறியுண்ணி

[Skt. šaka+patcini > த. சாகபட்சிணி]

சாகம்[1] *sāgam,* பெ. (n.) வெள்ளாடு(பிங்); he - goat.

[Skt. chāga > த. சாகம்]

சாகம்[2] *sāgam,* பெ. (n.) தேனீ(சூடா); bee.

[சரகம் >சாகம்]

சாகரணம் *sāgaraṇam,* பெ. (n.) சாகரம்[1] பார்க்க; see sāgaram. "சாகரணா வஸ்தையில் இருக்கிறான்"

[Skt. Jāgarana >த. சாகரணம்]

சாகரப்பிரபை *sāgara-p-pirabai,* பெ. (n.) எப்பொழுதும் விழித்தே இருக்க வேண்டிய ஒரு நிரயம் (நரகம்) (யாழ். அக.); hell of perpetual sleeplessness.

சாகரம்[1] *sāgaram,* பெ. (n.) விழிப்புநிலை; விழித்திருக்கை (பிங்); sleeplessness, watchfulness.

[Skt. Jāgara > த. சாகரம்]

சாகரம்[2] *sāgaram,* பெ. (n.) 1. சகரர்கள் தோண்டியதாகக் கருதப்படும் கடல்; ocean, sea, as dug by cakarar. "சகரர் தொட்டலாற் சாகரம் (கம்பரா. அகலி. 43) 2. பதினாயிரங்கோடி (வின்); ten quadrilions.

[Skt. sāgara > த. சாகரம்]

சாகவாசம் *šāgavāšam,* பெ. (n.) தோழமை, நட்பு; association, friendship.

[Skt. sahavāsa > த. சாகவாசம்]

சாகாங்கம் *sāgaṅgam,* பெ. (n.) மிளகு (மலை); Pepper.

[Skt. šākāṅga > த. சாகாங்கம்]

சாகாசந்திரநியாயம் *sāgā-sadira-niyāyam,* பெ. (n.) நிலவு கிளைக்கு மேலிருப்பதாகக் காட்டி உணர்த்துவதுபோலப் பார்வைக்குத் தொடர்புள்ளது போலிருக்கும் பொருளை அடையாளமாகக் காட்டி வேறொரு முகாமையானப் (முக்கியமான) பொருளைத் தெரிவிக்கும் நெறி; Illustration of the bough and the moon by which an object in question, like moon, has its position assigned in reference to another object, like bough, with which it is apparently connected.

[Skt. šahā + santira - niyaya > த. சாகாசந்திரநியாயம்]

சாகி *sāgi,* பெ. (n.) 1. மரம் (சூடா); tree. 2. சிற்றீஞ்சு; shiny-leaved dwarf date 3. திராய் (மலை); Indian chickweed.

[Skt. šākhin> த. சாகி]

சாகித்திய சக்தி *sāgittiya-sakti,* பெ. (n.) பாத்திறன்; பாடுந்திறமை; poetic skill.

[சாகித்திய(ம்) + சக்தி]

[Skt. sāhitya> த. சாகித்திய(ம்)]

[த. சத்தி > Skt. skti]

சாகித்தியம் *sāgittiyam,* பெ. (n.) 1. பா; செய்யுள்; literary composition, 2. இசைப்பாட்டு; musical composition.

சாகியம் *sāgiyam,* பெ. (n.) நட்பு (இலக் அக.), friendship.

[Skt. sakhya > த. சாகியம்]

சாகேதம் *sākēdam,* பெ. (n.) அயோத்தி (திவா.); (Ayōdhyā)Ayotti.

[Skt. sākēta > த. சாகேதம்]

சாகோபசாகையாய் *sagopasagaiyai,* து.வி. (Adv.) (கிளைகளும் உட்கிளைகளுமாய்) தூரும் கிளையுமாய், செழிப்பாய்; Lit; with branches and branchlets, luxuriantly abundantly.

[சாகோப(ம்) + சாகையாய்]

[Skt. šākhōpa > த. சாகோப(ம்)]

சாங்கம் *sāṅgam,* பெ. (n.) 1. உறுப் புக்களனைத்தும்; all the limbs. "கரசரணாதி சாங்கம்" (சி.சி. 1,47, மறை. ஞா) 2. சாயல்; likeness, similarity of features."பார்த்தால் அவன் சாங்கமாயிருக் கிறது."

[Skt. sāṅga > த. சாங்கம்]

சாங்கமாய் *sāṅgam-āy,* து.வி. (adv.) 1. முழுதும், wholly, completely. "சாங்கமாய ஹுட்டிக்கும் சாமர்த்திய மில்லா தாராய் (சி.சி. 8,4, ஞானப்) 2. காப்பாய் (பத்திரமாய்); (வின்) with safety. 'அந்த வழியிலே சாங்கமாய் நடக்கலாம்."

[Skt. sāṅga > த. சாங்க + த. ஆய்]

சாங்கமிலார் *sāṅgam ilār,* பெ. (n.) சாதிவிலக்குப்பட்டவர்; outcastes. "சூளைக் காரச் சாங்கமிலார்" (திருப்பு. 589)

[சாங்கம் + இலார்]

[Skt. sāṅgha > த. சாங்கம்]

சாங்கரம் *sāṅgaram,* பெ. (n.) கலப்பின வகுப்பு (சாதி); mixed caste. "சாங்கரத்திணங்கு பலவேறு சாதியினும்" (திருவானைக். நகரப். 64)

[Skt. sāṅkara > த. சாங்கரம்]

சாங்கரர் *sāṅgarar,* பெ. (n.) கலப்பினத்தார்; persons of mixed caste. "வெய்ய காருகர்க்குஞ் சாங்கரரார்க்குமடாது வேந்தே" (திருவானைக். கோச்செங். 24)

[Skt. sāṅkara > த. சாங்கரர்]

சாங்கரிசம் *sāṅgarisam,* பெ. (n.) சாங்கரியம் பார்க்க; see sāṅgariyam

சாங்கரியம் *sāṅgariyam,* பெ. (n.) கலப்பு; mixture. "சாங்கரியம் வாராமல்" (சிவசம. 40)

[Skt. sāṅkarya > த. சாங்கரியம்]

சாங்கரீயம் *sāṅgarīyam,* பெ. (n.) கலப்பானது; that which is mixed as caste. "சாங்கரீய மரபிற் சனித்தவன்" (சேது 4. தனுக். 24)

[Skt. sāṅkarya > த. சாங்கரீயம்]

சாங்கியம்[1] *sāṅgiyam,* பெ. (n.) 1. கபிலரால் வெளிப்படுத்தப்பட்டதும் கொண்முடிபுகள் (தத்துவங்கள்) இருபத்தைந்து எனக் கணக் கிடுவதுமான ஒரு சமயம்; the sāṅkhya system of Philosophy expounded by Kapila, enumerating twenty-five tattvas."இது சாங்கிய மதமென்றெடுத் துரைப்போன்" (மணி. 27, 202.) 2. எண்ணிக்கை; that which can be

counted. "அருவாய்ப் பல சாங்கியமாய்" (சி.போ.பா. அவை)

[Skt. sāṅkhya > த. சாங்கியம்]

சாங்கியம்[2] *sāṅgiyam*, பெ. (n.) சடங்குகள்; ceremonies, rites.

சாங்கியன் *sāṅgiyaṉ*, பெ. (n.) சாங்கியவாதி; follower of the sāṅkhya philosophy. "பௌத்தன் மாறாய் நின்ற சாங்கியனைக் குறித்து" (மணிமே. 29, 169.)

[Skt. sāṅkhya > த. சாங்கியன்]

சாங்குசித்தன் *sāṅgusittaṉ*, பெ. (n.) குருவிடம் நல்லுரை (உபதேசம்) பெற விரும்புவோன்; one who wishes to be initiated by a guru.

[Skt. saṃ-siddha > த. சாங்குசித்தன்]

சாங்கேதிகம் *sāṅgēdigam*, பெ. (n.) அடையாளம், கட்டுப்பாடு முதலியவற்றால் நிகழ்வது; that which is conventional; signs based on agreement. "அந்த அகாரங் களினுடையசாங்கேதிகத்துக்குஅபிவ்யஞ்சகம்" (சி.சி.2,62 சிவாக்)

[Skt. saṅkētika > த. சாங்கேதிகம்]

சாங்கோபாங்கம் *sāṅgōpāṅgam*, பெ. (n.) 1 முழுமை; completeness. 2. சிறந்த கிருத்துவர்களின் வாழ்க்கை (கிருத்); true christian perfection.

[Skt. sāṅgōpāṅga > த. சாங்கோபாங்கம்]

சாங்கோபாங்கமாகப் பண்ணு-தல் *sāṅgōpāṅgam-āga-p-paṉṉu-*, செ.கு.வி; (vt.) சுறுசுறுப்பாகச் செய்வது போல நடித்தல் (யாழ்ப்); to make pretence of being diligent or active.

சாங்கோபாங்கமாய் *sāṅgōpāṅgam-āy*, து. வி. (adv.) முழுவதும்; completely, in detail.

சாசனக்காணி *sāsaṉa-k-kāṇi*, பெ. (n.) அரசனால் விடப்பட்ட உரிமை நிலம். (யாழ்ப்); hereditary property held under a royal grant.

[சாசனம்+ காணி]

[Skt. šāsana > த. சாசனம்]

காண் → காணி

சாசனம் *sāsaṉam*, பெ. (n.) 1. கட்டளை, order, edict, command. 2. அரசாணை முதலியவற்றைக் குறிக்கும் கல்வெட்டு செப்புப்பட்டயம் முதலியவை; royal grant of land or of privileges, charter, patent usually inscribed on stone or copper. 3. (பத்திரம்) ஆவணம்; document. 4. இறையிலி நிலம்; (வின்.) tax - free land. 5. அதிகாரச்சின்னம் (வின்.) insignia of authority. 6. தண்டனை (வின்.) punishment, retribution. 7. வேட்டுவச்சேரி (வின்.) village of a hinter-tribe attached to a royal household.

[Skt. šāsana > சாசனம்]

சாசனம்பண்ணு-தல் *sāsaṉam-paṉṉu-*, 12 செ. குன்றாவி. (vt.) நிலம் முதலியவற்றை விற்பனை செய்தல்; to sell or convey by deed.

[சாசனம் + பண்ணு]

[Skt. šāsana > த. சாசனம்]

சாசனவிருத்தி *sāsaṉa-virutti*, பெ. (n.) (பத்திர) ஆவண ஆதரவில் பயன்படும் வாழ்வூதியம்; maintenance enjoyed under a written deed or grant. (R.T)

[Skt.sasana+vṛuttiāsana→த.சாசனவிருத்தி]

சாசாரம் *sāsāram*, பெ. (n.) தேவருலகத்துளொன்று; a celestial world. "நிலையிலா வுடம்பு நீங்கி........சாசாரம் புக்கான்" (மேருமந். 480)

[Skt. sahasrāra> த. சாசாரம்]

சாசிபம் *sāsibam,* பெ. (n.) தவளை (சது.); frog.

[Skt. šālūka> த. சாசிபம்]



சாசுவதக்கவுல் *sāsuvada-k-kavul,* பெ. (n.) குத்தகைதாரனும் அவன் வழித் தோன்றல்களும் உடன்படிக்கைத் திட்டப்படி வரி செலுத்தி (நிரந்தரமாக அனுபவித்து) தொடர்ந்து துய்த்து வரும் வழியுரிமை (கவுல்) நிலம்; perpetual lease of land to be enjoyed by the lessee and his heirs, subject to payment of the rent agreed upon, which generally is only nominal (R.F.)

[Skt. šāšvata-kauvl> த. சாசுவதக்கவுல்]

சாசுவதக்குத்தகை *sāsuvada-k-kuttagai,* பெ. (n.) சாசுவதக்கவுல் பார்க்க; see cācuvata-k-kavul.

சாசுவதப்பகுதி *sāsuvada-p-pagudi,* பெ. (n.) வழியுரிமை (கவுல்) நிலக்குத்தகையில் வாங்கப்படும் நிலைக் குத்தகைப்பணம்; fixed rent, as in a permanent lease.

[சாசுவதம் + பகுதி]

[Skt. šāšvata > த. சாசுவதம்]

சாசுவதப்பனை *sāsuvada-p-panai,* பெ. (n.) பட்டாநிலமுழுதிலும் பிறர்க்குரித்தன்றிப் பட்டாதார்க்கே உரிமையான பனை; (G.Tn.D.1,307); palmyras on a piece of land belonging exclusively to its owner.

[சாசுவதம் + பனை]

[Skt. šāšvata > த. சாசுவதம்]

சாசுவதம் *sāsuvadam,* பெ. (n.) 1.நிலைபேறுடைமை; ஈறில்காலம் (நிக்தியம்); perpetuity, eternity. "சாசுவதபுட்கல.......வ் யோம நிலையை (தாயு. திருவருள்வி.3) 2. அசையாநிலை; immobility, steeddd fastness. 3. வீடுபேறு (மோட்சம்) (சங்.அக); eternal bliss, salvation. 4. சாசுவதக்கவுல் பார்க்க; see sāsuvada-k-kavul.

[Skt. šāšvata > த. சாசுவதம்]

சாஞ்சலியம் *sāñsaliyam,* பெ. (n.) நிலையின்மை; instability, fickleness. "அவன் மனத்துச் சாஞ்சலியம் உடையவன்" (சங்.அக)

[Skt. cāñcalya > த. சாஞ்சலியம்]

சாஞ்சித்தன் *šāñsittan,* பெ. (n.) சாமுசித்தன் (பதிபசுபாச) பார்க்க; see šāmusittan.

[Skt. samsiddha > த. சாஞ்சித்தன்]

சாட்சாத்கரி-த்தல் *sātsat-kari,* 4. செ.குன்றாவி (v.t.) நேரே காணுதல்; to visualise, realize. "தியானித்துச் சமாதித்துச் சாட்சாத்கரிப்பன் (சி.சி.66. ஞானப்).

[Skt. sā kṣāt-kṛ > த. சாட்சாத்கரி-,]

சாட்சாத்காரம் *sātsātkāram,* பெ. (n.) நேரில் உணர்கை; direct or actual perception, realization. "சாட்சாத்காரக் கிரமத்தில் அறிந்து" (சி.சி.6,6. ஞானப்).

[Skt.sākṣāt-kāra> த. சாட்சாத்காரம்]

சாட்சாத்து *sātsāttu,* பெ. (n.) 1. வெளிப்படை; manifestly,evidently 2. கண்கூடு; actually, really, directly.

[Skt. sā kṣāt > த. சாட்சாத்து]

சாட்சி *sātci,* பெ. (n.) 1. நேரிற் பார்த்தறிந்தவ-ன்-ள்; eye-witness. 2. வழக்கில் சான்று கூறுவோ-ன்-ள்; witness in court. "சாட்சியழைத்ததும்" (திருவு சாத்தான நான்மணிமாலை, 53; திருவாலவா. பக். 27). 3. உடனுண்ணும் விருந்து; guest, as dining at the same table. "சாட்சியறப் பசியாறியை"

(திருப்பு. 266). 4. சைதன்யம் (வின்); (Phil.) pure spirit intelligence, intelligent being.

த.வ. சான்றாளர்

[Skt. sā kṣin> த. சாட்சி]

சாட்சிக்கட்டளை *sāṭci-k-kaṭṭaḷai,* பெ. (n.) சான்றுரைக்க அழைப்பு (சாட்சி, சம்மன்) summons for witnesses.

[சாட்சி + கட்டளை]

[Skt. sā kṣin> த. சாட்சி]

சாட்சிக்காரன் *sāṭci-k-kāraṉ,* பெ. (n.) சாட்சி பார்க்க; see sāṭci.

[சாட்சி + காரன்]

சாட்சிகாட்டு–தல் *sāṭci-kāṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) தன்கூற்றுக்கு சான்றாக எடுத்துச் சொல்லுதல் (வின்); to cite authority for a statement.

[சாட்சி + காட்டு–]

[Skt. sā kṣin> த. சாட்சி]

சாட்சிகோரு–தல் *sāṭci-kōru-,* 5 செ.கு.வி. (v.i.) வழக்கில் சான்றாளரைக் குறிப்பிடுதல்; to name or cite witnesses.

[சாட்சி + கோரு–]

[Skt. sā kṣin> த. சாட்சி]

சாட்சிசாப்தா *sāṭci-sāptā-,* பெ. (n.) சாட்சிப்பட்டி பார்க்க; see cāṭci-p-paṭṭi.

[சாட்சி சாப்தா →சாட்சிப்பட்டி]

சாட்சிப்பட்டி *sāṭci-p-paṭṭi,* பெ. (n.) சான்றாளர்களின் பெயர் குறிக்கப்பட்ட பட்டியல்; list of witnesses.

[சாட்சி + பட்டி]

[Skt. sā kṣin> த. சாட்சி]

சாட்சிப்படி *sāṭci-p-paṭi,* பெ. (n.) வழிச் செலவிற்காகச் சான்றுரைப்போர்களுக்குக் கட்டும் பணம்; (legal); allowance or batta paid to witnessesfor travelling and other expenses.

[சாட்சி + படி]

[Skt. sā kṣin> த. சாட்சி]

சாட்சிப்பெட்டி *sāṭci-p-peṭṭi,* பெ. (n.) சான்றாளர்கள் நின்று வாக்குமூலம் கொடுக்கும் இடம்; witness-box.

த.வ. சான்றாளர் கூண்டு

[சாட்சி + பெட்டி]

[Skt. sā kṣin> த. சாட்சி]



சாட்சிபூதம் *sāṭci-pūdam,* பெ. (n.) சான்றா (சாட்சியா)யிருப்பது (சங். அக.); that which is a witness.

[Sk.. sā kṣi-bhūta> த. சாட்சிபூதம்]

சாட்சிபூதமாயிரு–த்தல் *cāṭci-pūtam-ayiru-*, 5 செ.கு.வி. (v.i.) நோக்கின்றி (உதாசீன னாய்) நோக்கியிருத்தல்; to be an indifferent or passive witness to an event.

[சாட்சி + பூதமாய் + இரு]

சாட்சிபோசனம் *sāṭci-pōsaṉam,* பெ. (n.) விருந்தினரோடு உண்ணும் உணவு; dining in company with guests.

த.வ. விருந்துணா

[Skt. sā kṣi+bhōjana> த. சாட்சிபோசனம்]

சாட்சிபோடு–தல்¹ *sāṭci-pōḍu-,* 17 செ.குன்றாவி. (v.t.) சாட்சி கோருதல்; to cite, as witness.

[சாட்சி + போடு–,]

[Skt. sā kṣi > த. சாட்சி]

சாட்சிபோடு–தல்² *sāṭci-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) (பத்திர) ஆவணம் முதலியவற்றின்

சான்றொப்பமிடுதல்; to sign one's name as attesting witness in bond etc.,

[Skt. sā kṣi > த. சாட்சி]

சாட்சியம் *sāṭciyam*, பெ. (n.) வழக்கிற் கூறுஞ் சான்று; (சங்.அக.); testimony, deposition.

[Skt. sā kṣya > த. சாட்சியம்]

சாட்சியொப்பனை *sāṭci-y-oppaṉai*, பெ. (n.) 1. சாட்சியம் பார்க்க; see; cāṭciyam 2. வாய் மூலமாகவும் எழுத்து மூலமாகவுமாயுள்ள சான்று; oral and documentary evidence. 3. சான்று ஒப்பம்; attestation by a witness.

[Skt. sā kṣin > த. சாட்சி]

சாட்சிவாங்கு-தல் *sāṭci-vāṅku-*, 9 செ.கு.வி (v.i.) 1. சான்றாளரை உசாவல்; (வின்); to examme witness, to take down evidence. 2. சான்றாளரின் கையொப்பம் வாங்குதல்; to get the attestation.

[Skt. sā kṣin > த. சாட்சி]

சாட்சிவிசாரணை *sāṭci-vicāraṇai*, பெ. (n.) சான்றாளரை அறமன்றத்தில் வினாவுதல்; examination of witness.

த.வ. சான்றுஉசாவல்

[Skt. sākṣin-vicārana > த. சாட்சிவிசாரணை]

சாட்சிவிடு-தல் *sāṭci-viṭu-*, 20 செ.கு.வி. (v.i.) வழக்கில் சான்றாளரை உசாவல் செய்தல்; to let in evidence.

[Skt. sā ksin > த. சாட்சி]

சாட்சிவிளங்கு-தல் *sāṭci -viḷaṅgu-*, 7 செ.கு.வி. (v.i.) சான்றாளரை (ஆய்வு) உசாவல் செய்தல்; to examine witness.

[Skt. sā ksin > த. சாட்சி]

சாட்சிவை-த்தல் *sāṭci-vai-*, 4 செ.கு.வி. (v.i.) சாட்சி போடுதல் பார்க்க; see cāṭci-pōḍu-,

[சாட்சி + வை-,]

சாட்சுதீட்சை *sāṭcuca-tiṭcai*, பெ. (n.) அருணோக்க நோன்புறுதி (நயனதீட்சை); (Šaiva) a mode of religious intitiation. "சாட்சுச தீட்சையினாலே ஆணவ மலத்தையும் நீக்கி (சி.சி. 12,7, சிவாக்.)

த.வ. நோக்கு அருளிப்பு

[Skt. cākṣuṣa-dikṣā > த. சாட்சுதீட்சை]

சாட்டங்கமாக *sāṭṭāṅkamāka*, வி.அ. (adv.) உடலின் எட்டு இடங்கள் தரையில் படும்படியாக prostrating 'பெரியவர்கள் முன் சாட்டாங்கமாக விழுந்து வணங்கினான்'.

த.வ. நெடுஞ்சான் கிடையாக

சாட்டியாயனி *sāṭṭiyāyaṉi*, பெ. (n.) நூற்றெட்டு மறைகளுள் ஒன்று(சங். அக.); an upanisad one of 108.

[Skt. šāṭyāyani > த. சாட்டியாயனி]

சாட்ணி *sāṭṇi*, பெ. (n.) அழிப்பு; burning, destruction, as of records. "பழைய பத்திரங்கள் சாட்ணிக்கு அனுப்பப்பட்டன." (C.G.)

த.வ. நசிவு, அழிப்பு.

[U. chaṭnā > த. சாட்ணி]

சாடராக்கினி *sāṭarākkiṉi*, பெ. (n.) உணவைச் செரிக்கச் செய்யும் வயிற்றுத்தீ; digesting agency, considered a fire or heat abiding in the stomach. "தேபமிலகுவாகுஞ் சாடராக்கினி சொலிக்கும்."(பிரபோத. 44, 16)

[Skt. jāṭhara-agni > த. சாடராக்கினி]

சாடவம் *sāḍavam*, பெ. (n.) ஆறுசுரமுள்ள பண் (இராகம்) (சிலப். 13, 106, வரை); (Mus.) secondary melody-type, hexatonic.

த.வ. நிறைப்பண்

[Skt. ṣāḍava > த. சாடவம்]

சாடாவாக *cāḍā-v-āga*, (து.வி) (adv.) முழுவதும்; completely, entirely.

சாண்டில்லியம் *sāṇḍilliyam*, பெ. (n.) நூற்றெட்டு மறை நூல்களொன்று (சங்.அக.); an upanisad, one of 108.

[Skt. šāṇḍil-ya > த. சாண்டில்லியம்]

சாண்மாதுரன் *sāṇmāduraṉ*, பெ. (n.) முருகக்கடவுள் (இலக் அக.); Lord Murugan.

[Skt. ṣāṇmā-tura > த. சாண்மாதுரன்]

சாணக்கி *šāṇakki,* பெ.(n.) **சானிகை** (இ.வ.) பார்க்க; see *šāṉigai.*

[U. sānaka > த. சாணக்கி]

சாணக்கியம் *šāṇakkiyam,* பெ.(n.) கரவடம் (தந்திரம்); art, stratagem. "அவன் சாணக்கியமெல்லாம் பலிக்கவில்லை (நாஞ்.).

த.வ. வலக்காரம், நுண்சூழ்ச்சித்திறம்

[Skt. cāṇakya > த. சாணக்கியம்]

சாணக்கியன் *šāṇakkiyaṉ,* பெ.(n.) 1. வடமொழியில் அர்த்தசாத்திரம் இயற்றிய வரும் சந்திரகுப்தரின் அமைச்சராகவும் விளங்கியவர்; author of the Artha - šātra in sanskrit and minister of Candra gupta 2. 2. தந்திரக்காரன்; cunning, artful person.

[Skt. cāṇakya > த. சாணக்கியன்]

சாணாக்கு *šāṇākku,* பெ.(n.) **சாக்கணாக்கறி** (வின்.) பார்க்க; see *šākkaṇā-k-kaṟi.*

[U. caknā > த. சாணாக்கு]

சாணி *šāṇi,* பெ.(n.) குதிரை பழக்குவோன் (வின்.); horse-breaker.

[E. johnnie > த. சாணி]

சாத்தம் *šāttam,* பெ.(n.) மலைமகளை (சத்தியை) முதற் கடவுளாக வழிபடும்சமயம்; the religion which enjoins the exclusive worship of Sakthi as the Supreme Being. *"சிலர்கள் சாத்தமுஞ் சிலர்கள் சாம்பவமுரசமாய்" (திருக்காளத். பு. 30, 26).*

[Skt. šākta > த. சாத்தம்]

சாத்திகம் *šāttigam,* பெ.(n.) **சாத்துவிகம்** பார்க்க; see *šāttuvigam. "தாமதத்துட னிராசதஞ் சாத்திக மென்னும்" (ஞானவா. திதி. 7).*

[Skt. sātvika > த. சாத்திகம்]

சாத்திகன் *šāttigaṉ,* பெ.(n.) **சாத்துவிகன்** பார்க்க; see *šāttuvigaṉ. "சாத்திகனாய்ப் பரதத்துவந் தானுன்னி" (திருமந். 1696).*

[Skt. sātvika > த. சாத்திகன்]

சாத்தியதன்மவிகலம் *šāttiyataṉma-vikalam,* பெ.(n.) சாதன்மியதிட்டாந்த வாபாசம் ஐந்தனுள் ஒன்றாய் *சத்தம் நித்தம் அமூர்த்தத்தால் புத்திபோல்* என்று காட்டப்பட்ட திருட்டாந்தத்திற் புத்தி அமூர்த்தமாய் நின்றும் அநித்தியமாதல் போலச் சாத்தியதன்மங் குறைவு பட்டிருப்பது (மணிமே. 29:349); a fallacious example defective in cāttiyam or the major term, one of *five-cātaṉmiya-tiṭṭānta-v-āpācam,* q.v.

[Skt. sādhya-dharma-vi-kala> த. சாத்தியதன்மவிகலம்]

சாத்தியம் *šāttiyam,* பெ.(n.) 1. இயல்வது (சாதிக்கத்தக்கது); that which is practicable, possible, attainable. *"விழைவெ லாஞ் சாத்திய மாக்கம்" (சேதுபு. சாத்தியா.).* 2. **சாத்தியரோகம்** பார்க்க; see *šāttiya-rōgam. "பிணியளவு சாத்தியம் அசாத்தியம் யாப்பிய மென்னுஞ் சாதிவேறுபாடும்" (குறள், 949, உரை).* 3. அனுமானவுறுப்புள் துணியப் படவேண்டும் பொருள் (log.); that which remains to be proved or concluded, the major term, dist. fr. *cātaṉam. "சாதன சாத்திய மிவையந்நு வயம்" (மணிமே. 27, 29).* 4. யோக மிருபத்தேழனுள் ஒன்று (விதான. பஞ்சாங்க. 24, உரை); (Astrol.) a division of time, one of 27 yōkam, q.v. 5. எண் வகையுரிமைகளுள் (அட்டபோகங்)களுள் விளைபொருளுரிமை(C.G.); right to fruits of the earth, one of *aṣṭa-pōkam.* q.v.

[Skt. sādhya > த. சாத்தியம்]

சாத்தியர் *šāttiyar,* பெ.(n.) தேவருள் ஒரு சாரார்; a class of celestial beings. *"விசுவதேவர் வசுக்கள் சாத்தியராதி விண்ணவர்" (சேதுபு. கலிதீர்த். 7).*

[Skt. sādhya > த. சாத்தியர்]

சாத்தியரோகம் *šāttiya-rōkam,* பெ.(n.) தீர்க்கக்கூடிய நோய்; curable disease, one of three rōkam, q.v.

[Skt. sādhya+rogam> த. சாத்தியரோகம்]

சாத்தியாவியாவிருத்தி *šāttiyāviyāvirutti,* பெ.(n.) வைதன்மிய திட்டாந்தவாபாசவகை ஐந்தனுள் ஒன்றாய் *சத்தம் நித்தம் அமூர்த்*

தத்தால் பரமாணுப்போல் என்று காட்டப்பட்ட வைதன்மிய திருட்டாந்தத்தில் பரமாவை நித்தமும் மர்த்தமுமாதலால் சாதனதன்மம் மீண்டு சாத்தியதன்மம் மீளாதொழிவது (மணிமே. 29:403); (Log.) a fallacious example of contrary proposition in which cāttiyam or the major term does not agree. one of five *vaitaṉmiya-tiṭṭānta-v-āpācam.* q.v.

[Skt. sādhya + a-vyāvrtti > த. சாத்தியா வியாவிருத்தி]

சாத்தியேகவசனம் *šāttiyēga-vašaṉam,* பெ.(n.) சாதியையுணர்த்துதற்கு வரும் ஒருமை; (Gram.) singular number denoting the entire genus or class.

[Skt. jātyēka-vacana > த. சாத்தியேகவசனம்]

சாத்திரதீட்சை *šāttira-tīḍšai,* பெ.(n.) தீக்கை (தீட்சை)யேழனுள் சிவாகமதத்துவங்களை ஆசிரியன் மாணவனுக்கு ஓதுவிப்பது (உபதேசிப்பது) *(சாத்திரதீக்ஷையானது சைவாகமாதி சிவசாத்திரப் பொருளைப் போதித்தலாம்) (சி.சி.8,3, உரை)*; (saiva) a mode of religious initiation in which a guru teaches his disciple the truths of the šivāgamas, one of seven tīṭcai, q.v.

சாத்திரபஞ்சகம் *šāttira-pañšakam,* பெ.(n.) இலௌகிக சாத்திரம், வைதிகசாத்திரம், அத்தியாத்துமசாத்திரம், அதிமார்க்கிகசாத்திரம், மந்திரசாத்திரம் என்று ஐவகைப்பட்ட சாத்திரம்; the five sciences, *ilaukika-cāttiram, vaitika cāttiram, attiyāttuma-cāttiram, atimār-k-kika-cāttiram* and *mantira-cāttiram.*

சாத்திரபேதி *šāttirapēti,* பெ.(n.) மாழை கலந்த மணல் வகை (வை.மூ.); a kind of ore.

சாத்திரம்[1] *šāttiram,* பெ.(n.) 1. நூல்; science. 2. சோதிடநூல்; astrology or astromony. 3. தயிர்; curd. 4. மருத்துவம் (வைத்தியம்); medical science.

சாத்திரம்[2] *šāttiram,* பெ.(n.) 1. நூல்; treatise, especially religion or scientific. 2. வேதாந்தம், தருக்கம் முதலிய நூல், department of knowledge as vēdānda, ṭarka, ālankara ect. 3. அறிவியல் நூல்; science. *"சாத்திரம் பலபேசுஞ் சழக்கர்காள்" (தேவா. 1070, 3).*

த.வ. அறிவுநூல்

[Skt. šāstra > த. சாஸ்திரம் > சாத்திரம்]

சாத்திரமாணி *šāttira-māṇi,* பெ.(n.) மாணவன் (S.I.I.V. 500); student.

[சாத்திரம்+மாணி]

[Skt. sāstra > த. சாத்திரம்]

சாத்திரமுயற்சி *šāttira-muyaṟci,* பெ.(n.) சாத்திரமுறைப்படி சடங்கு செய்கை (வின்.); performing religious ceremonies according to the šāstras.

[சாத்திரம்+முயற்சி]

[Skt. sāstra > த. சாத்திரம்]

சாத்திரர் *šāttirar,* பெ.(n.) மாணவர்; students. *"மூவர்சாத்திரர் அமிர்துசெய்வது"* (T.A.S. III. 173).

[Skt. chātra > த. சாத்திரர்]

சாத்திரவாராய்ச்சி *šāttira-vārāycci,* பெ.(n.) நூலாராய்ச்சி; scientific research.

[சாத்திரம் + ஆராய்ச்சி]

[Skt. sāstra > த. சாத்திரம்]

சாத்திரவேரி *šāttiravēri,* பெ.(n.) தண்ணீர் விட்டான் (மலை.); a common climber.

[Skt. šatāvari > த. சாத்திரவேரி]

சாத்திராலவணம் *šāttirālavaṇam,* பெ.(n.) பொட்டிலுப்பு; saltpetre.

சாத்திரி *šāttiri,* பெ.(n.) 1. வேதமறிந்தவன்; one versed in the sāstrās. 2. கற்றவன்; learned man. 3. பார்ப்பனர்களுக்கு வழங்கும் பட்டப் பெயர்களுள் ஒன்று; a title, especially of *smārta-Brahmin.*

[Skt. šastrin > த. சாத்திரி]

சாத்திரிய *šāsttiriya,* பெ. அ (adj.) 1. பழங்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பு, தரம் முதலியவற்றை அடிப்படை

யாகக் கொண்ட உயர்வான, கலப்பற்ற; classical. *'சாஸ்திரிய சங்கீதம், சாஸ்திரிய கலைகள்'.* 2. (அ.வ.) (குறிப்பிட்ட ஒன்றின்) வரையறுக்கப்பட்ட, ஒழுங்கான; traditional. *'இங்கே சாஸ்திரிய முறைப்படி தையல் கற்றுத் தரப்படும்'.*

[Skt. sāstriya > த. சாத்திரிய]

சாத்திரை *šāttirai,* பெ.(n.) விழாவகை (யாழ்.அக.); a festival.

[H. jātrā > த. சாத்திரை]

சாத்துக்குடி *šāttu-k-kuḍi,* பெ.(n.) 1. கிச்சிலி வகை; (m.m.) batavian orange produced in Cātíukkuti, a village in North Arcot District, m.tr., citrus aurantium. 2. தித்திப்பெலுமிச்சை; sweet lime, m.tr., citrus medica-limetta.

த.வ. சாற்றுக்கனி

சாத்துவகுணம் *šāttuva-kuṇam,* பெ.(n.) **சாத்துவிகம்** பார்க்க; see *šāttuvigam.*

சாத்துவதி *šāttuvati,* பெ.(n.) அறம் பொருளாகவும் தெய்வமானிடர் தலைவராகவும் வரும் நாடக வகை (விருத்தி); a variety of dramatic composition which has a semi-divine being for hero and treats of virtue one of four nāṭaka-virutti, q.v. *"அவன் சாத்துவதி .... பாரதியென வினவ" (சிலப். 3, 13, உரை).*

[Skt. sātvati > த. சாத்துவதி]

சாத்துவம் *šāttuvam,* பெ.(n.) **சாத்துவிகம்** பார்க்க; see *šāttuvigam. "ஏத்து சாத்துவத்தா லரியுருவென" (பாகவ. 1, மாயவன். 16).*

[Skt. satva > த. சாத்துவம்]

சாத்துவி *šāttuvi,* பெ.(n.) (சத்துவ உருவமாயுள்ள) சிவபெருமான் (தசகா. சிவரூ. 5); Siva in his satva form.

[Skt. sātvika > த. சாத்துவி]

சாத்துவிகபுராணம் *šāttuviga-purāṇam,* பெ.(n.) சத்துவகுணப் பிரதானமாய் திருமாலைத் துதிக்கும் வைணவம், பாகவதம், நாரதீயம், காருடம், பதுமம், வராகம் என்ற ஆறு புராணங்கள் (மச்சபு. முகவுரை. பக். 7); the group of chief purāṇasexalting viṣṇu, whose predominating guṇa is satva, viz., *vaiṇavam, pākavatam, ñāratiyam, kāruṭam, patumam, varākam.*

சாத்துவிகம்[1] *šāttuvigam,* பெ.(n.) **சத்துவகுணம்** பார்க்க see *šattuva-kuṇam. "குணமொரு மூன்றுந் திருந்து சாத்துவிக மேயாக" (பெரியபு. தடுதீதா. 106).*

[Skt. sātvika > த. சாத்துவிகம்]

சாத்துவிகம்[2] *šāttuvigam,* பெ.(n.) முக்குணத்திலொன்று; one of the three qualities i.e. mildness in thought, word and deed, purity.

சாத்துவிகன் *šāttuvigaṉ,* பெ.(n.) அமைதியன் (சாந்தன்); quite, gentle person.

[Skt. sātvika > த. சாத்துவிகன்]

சாத்துவிகவேளை *šāttuviga-vēḷai,* பெ.(n.) முக்குண வேளைகளுளொன்று (பஞ்.); one of *mu-k-kuṇa-vēḷai.*

சாத்துவிதஅகங்காரம் *šāttuvita-akaṅkāram,* பெ.(n.) மனமும் ஞானேந்திரியங்களும் பிறப்பதற்கான குணதத்துவம் (அட்டப்பிர. தத்துவசங். 83); the principle from which the mind and the *ñāṉēntiriyam emanate.*

சாத்மியம் *šātmiyam,* பெ. (n.) எப்பண்டங்களினால் உடம்பிற்கு கேடு உண்டாகிறதோ அப்பண்டத்தையே கொஞ்சம் கொஞ்சமாக உடம்பிற் செலுத்திப் பயிற்சி (சாதக) படுத்திக்கொள்வது; habituating or making familiar with by bringing into practice anything injurious or disagreeable to health by taking it frequently in minute quantities and by doing so such substances would then become agreeable to health.

சாத்மீகம் *šātmīkam,* பெ.(n.) அமைதிக் (சாந்த) குணம்; mild or amiable quality, meekness.

சாத்மீகன் *šātmīkaṉ,* பெ.(n.) அடக்க மானவன்; quietman.

சாதகக்குறிப்பு *šātaka-k-kurippu,* பெ.(n.) பிறந்த ஆண்டு, மாதம், ஓரை (ராசி) முதலியவற்றின் குறிப்பு; extract of a horoscope.

த.வ. பிறப்பியக்குறிப்பு

[சாதகம்+குறிப்பு]

[Skt. jātaka + த. சாதகம்]

சாதகங்கணி-த்தல் *šātakaṅkaṇi-,* **சாதகஞ்செய்-4** பார்க்க ; see *šātakañ-cey-*

[சாதகம்+கணி-,]

[Skt. jātaka > த. சாதகம்]

சாதகசூதகம் *šādakašūdagam,* பெ.(n.) வாலாமை (யாழ்.அக.); pollution on account of child-birth.

சாதகஞ்செய்-தல் *šātakañcey-,*1 செ.கு.வி (v.i.) கணக்கிட்டுக் கோள் (கிரக) நிலையறிந்து ஒருவனது பிறப்பிய (சாதக)த்தை எழுதுதல்; to cast a horoscope. *"கணி கடுகச் சாதகஞ் செய்துவருக" (சீவக. 539, உரை).*

த.வ. பிறப்பியம்கணித்தல்

[சாதகம்+செய்-.]

[Skt. jātaka+த. சாதகம்]

சாதகப்பட்டிகை *šādaga-p-paṭṭigai,* பெ.(n.) பிறப்பிய (சாதக) மெழுதிய ஆவணம் (பத்திரம்); horoscope. *"சாதகப்பட்டிகை சாலவை நாப்பண்" (பெருங். நரவாண. 6, 82).*

த.வ. பிறப்பியஓலை நறுக்கு

[Skt. jātaka+patrikā > த. சாதகப்பட்டிகை]

சாதகப்பொருத்தம் *šādaga-p-poruttam,* பெ.(n.) மணமக்களுடைய பிறப்பிய (சாதக)ங்கள் தம்முட் பொருந்துகை; horoscopic agreement observed in selecting suitable matches in marriages.

த.வ. பிறப்பியப்பொருத்தம்

[சாதகம்+பொருத்தம்]

[Skt. jātaka + த. சாதகம்]

சாதகபட்சி *šādaga-paṭci,* பெ. (n.) வானத்தினின்று விழும் மழைத்துளியைப் பருகி வாழும் ஒரு பறவை; shepherd koel, Coccystes jacobinus, believed to subsist on rain drops.

த.வ. வானம்பாடி

சாதகபலன் *šādaga-palan,* பெ.(n.) பிறப்பிய (சாதக)த்தின்படியுள்ள நிகழ்ச்சிகள்; events indicated by a horoscope.

த.வ. பிறப்பியநிகழ்வு

[Skt. jātaka+phala > த. சாதகபலன்]

சாதகபாதகம் *šādaga-pādagam,* பெ.(n.) நன்மை தீமைகள் (அனுகூலப் பிரதிகூலங்கள்); pros and cons, as of a case; convenience and inconvenience; good and bad consequences.

த.வ. நலந்தீங்குகள்

[Skt. sādhaka+bādhaka > த. சாதகபாதகம்]

சாதகபுட்பம் *šādaga-puḍpam,* பெ.(n.) கடல்நுரை (யாழ்.அக.) பார்க்க; see *kaḍalnurai.*

[Skt. sāgara+puṣpa > த. சாதகபுட்பம்]

சாதகபுடம் *šādaga-puḍam,* பெ.(n.) பிறப்பியம் (சாதகம்) கணிக்கை; casting of horoscope.

[சாதகம்+புடம்]

சாதகம்¹ *šādagam,* பெ.(n.) 1. பிறப்பு (சனனம்) birth. *"சாதகமு மான பின்பு" (திருப்பு. 339).* 2. பிறவிக்குணம் nature, natural tendency. *"நல்ல மனத்தர்தமை.......... தாழ்வுரைத்த லென்னுடைய சாதகங்காண்" (அருட்பா. i, விண்ணப்பக். 339).* 3. பிறப்பியம் (சன்மபத்திரிகை) horoscope. *"மூவிய நிரிதலின்றிச் சாதகமுறையிற் செய்தார்" (சீவக. 1886).* 4. கலியுகம் சகாப்தம் ஆண்டு மாதம் தேதிகள் அடங்கிய தலைவன் பிறப்பியத்தைக் கூறும் சிற்றிலக்கியம் (பிரபந்தம்) (பன்னிருபா. 172); A poem which relates all the particulars indicated by one's horoscope as the year, month, date, etc.

த.வ. பிறப்பியம்

[Skt. jātaka > த. சாதகம்]

சாதகம்² *šādagam,* பெ.(n.) 1. பயிற்சி; constant practice. *"அமண் சமயச் சாதகத்தா லிது*

செய்து" (பெரியபு. திருநாவுக். 102). 2. துணைக்காரணம் subsidiary cause, means to an end. 3. உதவி assistance, help. 'படிக்கச் சாதகம் ஏற்பட்டது' (இ.வ.). 4. ஏந்து (சௌகரியம்) facility. 'படிக்க இடம் சாதகமாயிருக்கிறது'. 5. பயன், வாய்ப்பு (அனுகூலம்); success. 'அந்த வழக்கு அவனுக்குச் சாதகமாயிற்று' (கொ.வ.). 6. முடிக்க வேண்டியது; that which is to be accomplished. "சாதக நான்குந் தன்பாலுற்றோன்" (திருமந். 1699). 7. சான்று (பிரமாணம்) (யாழ்.அக.) evidence. 8. பற்றுச்சீட்டு; voucher.

[Skt. *sādhaka* > த. சாதகம்]

சாதகம்³ *šādagam,* பெ.(n.) பூதம்; goblin. "சாதக மென்னவுந் தழைத்த மாலையே" (கம்பரா. மிதிலைக். 63).

[Skt. *sādhaka* > த. சாதகம்]

சாதகம்⁴ *šādagam,* பெ.(n.) **சாதகபட்சி** பார்க்க; see *šādaga-padši.* "கொண்டல் பேரொலியினால் .... மகிழ்வுறுஞ் சாதகத் தன்மை" (கந்தபு. திருவவ. 30).

[Skt. *cātaka* > த. சாதகம்]

சாதகம்⁵ *šādagam,* பெ.(n.) மறைப்பு; that which conceals. "விவேகந் தன்னிற் றோன்றிச் சாதக மனைத்தையும்" (சங்கற்ப. மாயா. 40).

[Skt. *chādaka* > த. சாதகம்]

சாதகம்⁶ *šādagam,* பெ.(n.) எருக்கு (மலை.); madar.

சாதகம்பண்ணு-தல் *šādagam-pannu-,* 12 செ.குன்றாவி. (v.) 1. பழகுதல்; to practise, train oneself in any art. 2. உதவிபுரிதல்; to render assistance.

[சாதகம் + பண்ணு-,]

[Skt. *sādhaka* > த. சாதகம்]

சாதகருமம் *šādagarumam,* பெ.(n.) **சாதகன்மம்** பார்க்க; see *šātakanmam.*

சாதகலம்பம் *šādagalambam,* பெ.(n.) ஒரு வகை நஞ்சு (தாலம்பபாடாணம்) (யாழ்.அக.); *jālampa-pāṣāṇam,* a mineral poison.

சாதகவாதி *šātakavāti,* பெ.(n.) நாகமணல் (யாழ்.அக.); sand containing lead-ore.

சாதகவோலை *šādaga-v-ōlai,* பெ.(n.) பிறப்பியம் (சன்மபத்திரிகை); horoscope. "சாதக வோலை யெழுதிற்றால்" (சூளா. மந்திர. 75).

த.வ. பிறப்போலை

[சாதகம் + ஓலை]

[Skt. *jātaka* + த. சாதகம்]

சாதகன்¹ *šādagan,* பெ.(n.) 1. பயிற்சியுள்ளவன்; one who practises or gets trained. 2. யோகவழி நிற்போன்; one who practises yōga. "சாதகா பாசங்கழுவி" (திருவிளை. நகரப். 90). 3. வீடுபேற்று அருளிப்பு (நிர்வாண தீட்சை) பெற்றவன்; (saiva) one who has advanced to *nirvāna-tītcai,* as practising the means of attaining salvation. "சமயியெனப் புத்திரகன் சாதகனுமென்ன" (சைவச. மாணாக். 4). 4. மாணாக்கன்; student, disciple. "சாதகன் றனைப்போ ராற்றி" (திருவிளை. அங்கம். 1). 5. மரணம் வரை இல்லறவொழுக்கத்தில் நிற்பவன்; one who remains a householder till his death, dist fr. *utācinan.* "இல்லறத்தி னின்றோ ருயருதாசீனன் மிக்க......... சாதகனென விரண்டாந் தன்மையர்" (கூர்மபு. வருணாச்சிரம. 38). 6. உதவியாளன்; one who renders assistance, helper. "தகுந்தவரைச் சாதக ராக்கி" (தேவை. 268). 7. பூதம்; goblin. "சாதகரொடு சிறுகட்கூளியும்" (கம்பரா. கிளைகள். 35).

[Skt. *sādhaka* > த. சாதகன்]

சாதகன்² *šādagan,* பெ.(n.) பிறப்பிய (சாதக)த்துக்கு உரியவன்; one to whom an horoscope pertains. "கனயோக சாதக னெனப் படுதலும்" (அறப். சத. 3).

[Skt. *jātaka* > த. சாதகன்]

சாதகன்மம் *šādaganmam,* பெ.(n.) சோடச சம்த்காரங்களுள் பிறந்த குழந்தைக்குச் செய்யப்படுஞ் சடங்கு; ceremony performed on the birth of a child, one of *cōtaca-*

camskāram, q.v. "விழைவொடு சாதகன்மம் விதியினா லியற்றி" (விநாயகபு. 62, 21).

[Skt. jāta-karma > த. சாதகன்மம்]

சாதகாசாரியன் šādakāšāriyaṉ, பெ.(n.) சமயமத (சம்பிரதாய) காரியங்களில் தலைமைப் பூசாரி (ஆசாரியனு)க்கு உதவியாகயிருப்பவன் (இ.வ.); assistant to a head priest.

[Skt sādhaka+ā-cārya > த. சாதகாசாரியன்]

சாதகாலங்காரம் šātakālaṅkāram, பெ.(n.) கி.பி.1665-ம் ஆண்டில் கீரனூர் நடராசன் இயற்றிய ஒரு கணிய (சோதிட)நூல்; a treatise on astrology by *Kiraṉūr-Naṭarājaṉ* in A.D. 1665.

[Skt. jātaka+alaṅkāra > த. சாதகாலங்காரம்]

சாதகும்பம் šāta-kumbam, பெ.(n.) பொன்; gold. "விற்சாதகும்பன்" (காளத். உலா. 87).

[Skt. šātakumbha > த. சாதகும்பம்]

சாதம்[1] šātam, பெ.(n.) சத்தியோசாதமந்திரம்; a mantra pertaining to *cattiyōcātam*, a form of Siva. "ஏற்றிடுக சாதத்தால்" (சைவச. பொது. 169).

[Skt. jāta > த. சாதம்]

சாதம்[2] šādam, பெ.(n.) 1. பிறப்பு; birth, nativity. "போதத்தினகன்று சாதத்தின் வழி நின்று" (பெருங். உஞ்சைக். 43, 61). 2. தோன்றுவது; that which arises or originates. "தற்புருடத்தே ரௌரவாதி யைந்துஞ் சாதமாய்" (சைவச. பொது. 334). 3. புள்ளினங்களில் இளமையுடையது; the young as of birds. "செவிப் படுத்திய கிள்ளைச் சாதமே" (இரகு. குறைகூ. 31). 4. உண்மை (பிங்.); truth. 5. கூட்டம்; multitude, crowd. "அன்று சாதத் தலைகைக ளாடவே" (பாரத. பதினான்காம். 153).

[Skt. jāta > த. சாதம்]

சாதம்[3] šātam, பெ.(n.) **சாதவேதநீயம்** பார்க்க; see šātavētaniyam.

[Skt. šāta > த. சாதம்]

சாதர்[1] šādar, பெ.(n.) பிறந்தவர்; those that are born. "குருகுலம் பொற்புறப் பொழுதுற்றுச் சாதராயினர்" (பாரத. சம்பவ. 17).

[Skt. jāta > த. சாதர்]

சாதர்[2] šādar, பெ.(n.) **சாதரா** பார்க்க; see šādarā. "வங்கச்சாதர்" (பெருங். உஞ்சைக். 42, 205).

சாதரா šādarā, பெ.(n.) உயர்ந்த முடிப்போர்வை (சால்வை); fine shawl, embroidered silk cloth.

த.வ. வெவ்வை

[U. cādara > த. சாதரா]

சாதரா-தல் šātarā, -, 6 செ.கு.வி.(v.i.) சார்வாதல்; to be served as an order. 'உத்திரவு சாதராயிற்று' (கொ.வ.).

[சாதர் + ஆ]

[U. sadir > த. சாதர்]

சாதரூபம் šādarūpam, பெ.(n.) நால்வகைப் பொன்களில் ஒன்று; a kind of gold, one of four poṉ, q.v. "சாதரூபங் கிளிச்சிறை யாடகம் சாம்புநதம்" (சிலப். 14:201).

[Skt jāta-rūpa > த. சாதரூபம்]

சாதரூபி šādarūpi, பெ.(n.) பொன்னிறமுடை யோனான அருகன் (சூடா.); Arhat (gold-coloured).

[Skt. jātarūpin > த. சாதரூபி]

சாதல்வாத் šādalvāt, பெ.(n.) **சாதல்வார்** (வின்.) பார்க்க; see šādalvār.

சாதல்வார் šādalvār, பெ.(n.) சில்லறைச் செலவு (இ.வ.); contingencies, incidental expenses.

[U. sādarwār > த. சாதல்வார்]

சாதவேதநீயம் šāda-vēdaniyam, பெ.(n.) இன்பத்தை விளைவிக்குங் கருமம் (மேருமந். 96, உரை); (jaina) tha karma that leads to happiness.

சாதவேதா šādavēdā, பெ.(n.) 1. நெருப்பு (பிங்.); fire. 2. கொடுவேலி (மலை.); ceylon leadwort.

[Skt. jātavēdāh > த. சாதவேதா]

சாதன்மியதிட்டாந்தம் *šātaṉmiya-tiṭṭāntam,* பெ.(n.) சாதனசாத்தியங்களைத் தவறாமற் கொண்டுள்ள திட்டாந்தம் (மணிமே. 29, 137); a homogeneous example one of two tiṭṭāntam, q.v.

[Skt. sā-dharmya - dṛṣtānta > த. சாதன்மியதிட்டாந்தம்]

சாதன்மியதிட்டாந்தவாபாசம் *šātaṉmiyatiṭṭāntavāpāšam,* பெ. (n.) சாதனதன்மவிகலம், சாத்தியதன்மவிகலம், உபயதன்மவிகலம், அனன்னுவயம், விபரீதான்னுவயம் என்று ஐவகைப்பட்ட சாதன்மிய திட்டாந்தப் போலி (மணிமே. 29, 329); fallacious homogeneous example of five kinds viz., *cātaṉa-taṉma-vikalam, cāttiya-taṉma-vikalam, upaya-taṉma-vikalam, aṉaṉṉuvayam, viparitāṉṉu-vayam.*

[Skt. sā-dharmya-dṛṣtāntābhāsa > த. சாதன்மியதிட்டாந்தவாபாசம்]

சாதன்மியம் *šātaṉmiyam,* பெ.(n.) ஒப்புமை; similarity.

[Skt. sādharmya > த. சாதன்மியம்]

சாதனக்காணி *šādaṉa-k-kāṇi,* பெ.(n.) ஆவண (சாசன)க்காணி; hereditary property.

[சாதனம்+காணி]

[Skt. sāsana > த. சாதனம்]

சாதனசதுட்டயம் *šātaṉašatuṭṭayam,* பெ.(n.) வேதாந்தம் பயிலுவதற்கு முன் மாணவனிடத்தில் இருக்கவேண்டிய நித்தியாநித்தியவத்துவிவேகம், இகாமுத்திரார்த்த பலபோக விராகம், சயாதிசட்க சம்பத்து, முமுட்சுத்துவம் என்னும் நான்கு குணங்கள் (கைவல். தத்துவ. 8, உரை); the four disciplinary requisites indispensable to a student before he is initiated into the vēdānta philosophy, viz., *nittiyānittiya-vastu-vivēkam, ikāmuttirārtta-palapōka-virākam, camāti-caṭka-campattu, mumuṭcuttuvam.*

[Skt. sādhana+catuṣṭaya> த. சாதன சதுட்டயம்]

சாதனதன்மவிகலம் *šātaṉa-taṉma-vikalam,* பெ. (n.) சாதன்மியதிட்டாந்தவாபாசம் ஐந்தனுள் ஒன்றாய் சத்தம் நித்தம் அமூர்த்தமாதலால் பரமாணு நித்தியமாய் நின்றும் அமூர்த்தமாயிராதது போலச் சாத்திய தன்மம் நிரம்பிச் சாதனதன்மங் குறைவுபடுவது (மணிமே. 29, 340); a fallacious example defective in catāṉamor the minor term, one of five *cātaṉmiyatiṭṭānta-v-āpācam,* q.v.

[Skt. sādhana-dharma-vikala > த. சாதனதன்மவிகலம்]

சாதனப்படிசெலுத்து-தல் *šādaṉa-p-paḍi-šeluttu-,* 5 செ.கு.வி.(v.i.) விருப்பாவணம் (உயில்) எழுதுதல் (வின்.); to execute a testament or will.

[சாதனப்படி+செலுத்து]

சாதனப்பத்திரிகை *šādaṉa-p-pattirgai,* பெ.(n.) ஆவணம் (பத்திரம்); (W.G.) a document. 2. விருப்பாவணம்; will.

சாதனபத்திரம் *šātaṉa-pattiram,* பெ. (n.) 1. உரிமை (ஆவணப்பத்திரம்); (j) title deed, deed of grant inscribed on copper plate, etc. 2. விற்பனை ஆவணம் (கிரயபத்திரம்); sale-deed.

சாதனம்[1] *šādaṉam,* பெ.(n.) 1. கருவி; means, instrument, expedient. *"சாதனமின்றி யொன்றைச் சாதிப்பார்" (கைவல். தத்துவ. 11).* 2. துணைக்காரணம் (சூடா.); subsidiary cause. 3. அனுமானவுறுப்புகளுள் ஒன்றாகிய ஏது; (log.) reason leading to inference, the minor term, dist. fr. cāttiyam. *"பொது வெனப்படுவது சாதன சாத்தியம்" (மணிமே. 27, 29).* 4. பயிற்சி; practice. *"தன்னுறு படைகளுஞ் சாதனஞ் செய்வோன்" (கந்தபு. இரண்டா. யுத். 385).* 5. அக்கமணி (உருத்திராக்கம்) முதலிய சின்னம்; distinctive mark of šaivites, as rudrākṣa beads, etc.

"இலாடத்திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டால்" (தேவா. 811, 3). 6. முத்திரை (இலாஞ்சனை) (பிங்.); seal,signet.

[Skt. sādhana > த. சாதனம்]

சாதனம்[2] *śādanam,* பெ.(n.) 1. இடம்; place, residence. 2. நகரம்; town, city.

[Skt. sādana > த. சாதனம்]

சாதனம்[3] *śādanam,* பெ.(n.) அடிப்படை யாவணம் (ஆதாரபத்திரம்); document, any instrument in writing.

[Skt. śāsana > த. சாதனம்]

சாதனமுறி *śādanamuṟi,* பெ.(n.) 1. பற்று (ரசீது)ச் சீட்டு முதலியன; (W.G.) a promise or voucher in writing. 2. **சாதனபத்திரம்** பார்க்க; see *śādana-pattiram.*

[சாதனம் + முறி]

[Skt. śāsana > த. சாதனம்]

சாதனாந்தரம்[1] *śādanāndaram,* பெ.(n.) மாற்றுவழி (வேறு உபாயம்); other means.

[Skt. sādhanāntara > த. சாதனாந்தரம்]

சாதனாந்தரம்[2] *śātanāndaram,* பெ.(n.) துணை ஆவணம் (பத்திரம்); (W.G.) an additional document or voucher.

[Skt. śāsanāntara > த. சாதனாந்தரம்]

சாதனாபாசம் *śādanāpāśam,* பெ.(n.) ஏதுப்போலி (வின்.); (log.) fallacy in the premise.

[Skt. sādhana+ā-bhāsa > த. சாதனாபாசம்]

சாதனாவியாவிருத்தி *śātanāviyāvirutti,* பெ.(n.) வைதன்மியதிட்டாந்தவாபாசம் ஐந்தனுள் சத்தம் அநித்தம் அமூர்த்தத்தால் சன்மம்போல என்ற வைதன்மிய திட்டாந் தத்துச் சாத்தியதன்மம் மீண்டு சாதனதன்மம் மீளாதொழிகை (மணிமே. 29, 413); a fallacious example of contrary proposition, in which cātanam or the minor term does not agree, one of five *vaitanmiya-tiṭṭānta-v-āpācam.* q.v.

[Skt. sādhana-avyāvṛtti > த. சாதனா வியாவிருத்தி]

சாதனை *śātanai,* பெ.(n.) 1. வினைவென்றி (காரியஞ் சாதிக்கை); accomplishment of an object. *"தவமார் சாதனை" (பெருங். மகத. 4, 76).* 2. விடாப்பயிற்சி; steady and persevering practice, unwearied application. *"சாதனையா லெனை வெல்வா ரில்லை" (திருவாலவா. 35, 3).* 3. ஒட்டாரம் (பிடிவாதம்) (கொ.வ.); obstinacy, persistence. 4. விடாப்பயிற்சி (சலஞ்சாதிக்கை) (வின்.); bearing malice. 5. நடித்துக் காட்டுகை (வின்.); perfect imitation or representation of life, as in drama. 6. பொய் (திவா.); falsehood.

[Skt. sādhanā > த. சாதனை]

சாதா *śādā,* பெ.எ. (adv.) இயல்பான, பகட்டில்லாத (ஆடம்பரமில்லாத); plain, unadorned. *சாதாவேட்டி, சாதாமுருகு.*

[U. sādā > த. சாதா]

சாதாக்கியதத்துவம் *śādākkiyatattuvam,* பெ.(n.) சுத்ததத்துவங்கள் ஐந்தனுள் ஒன்றாகவும் சாதாக்கியத்துக்கு இடமாகவும் ஞானமுங் கிரியையும் ஒத்து நிற்கும் நிலை (சிவப். கட்.); stage or region in which both knowledge and action are balanced and catā-civam presides, one of five cuttatattuvam, q.v.

சாதாக்கியம் *śātākkiyam,* பெ. (n.) சிவசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம், கன்ம சாதாக்கியம் என்று ஐவகைப்பட்டதும் சீவன் முத்தன், சாதகன், ஞானி இவர்கள் தியானிப்பதற்காக ஈசானன், தத்புருஷன், அகோரன், வாமதேவன், சத்தியோசாரன் என்ற மூர்த்தத்தையடையுமாறு சத்தியுடன் சேர்ந்ததுமான பரசிவம்; para-civam in company with cakti, as suming the forms of *icāṉaṉ, tatpuru.saṉ, akōraṉ, vāmatēvaṉ* and *cattiyōcātaṉ* to facilitate the meditation of *civaṉ-muttaṉ, cātakaṉ* and ñāṉi of five

kinds viz., *civa-cātākkiyam, amūrtti-cātākkiyam, mūrtti-cātākkiyam, kart-tiru-cātākkiyam, kanma-cātākkiyam.*

[Skt. sādākhya > த. சாதாக்கியம்]

சாதாக்கு-தல் *šādākku-,* 6 செ.குன்றாவி. (v.t.) பழக்கிச் அமைதி (சாந்த)ப்படுத்துதல் (பு.வ.); to tame.

[சாதா+ஆக்கு]

சாதாக்கொப்பு *šātā-k-koppu,* பெ.(n.) மகளிர் காதணிவகை (வின்.); plain ear ornament of women.



சாதாதபம் *šādādapam,* பெ.(n.) அறநூல் பதினெட்டனுள் ஒன்று; a sanskrit text-book of Hindu law, ascribed to *šātātapa*, one of 18 *taruma-nūl*, q.v.

[Skt. šātātapa > த. சாதாதபம்]

சாதாரண்ணியம் *šādārannniyam,* பெ.(n.) எங்கும் (யாழ்.அக.); everywhere.

[Skt. sādhāranya > த. சாதாரண்ணியம்]

சாதாரண *šādārana,* பெ.(n.) (வடமொழி யாளரின்) ஆண்டு அறுபதனுள் நாற்பத்து நான்காவது; the 44th year of the jupitar cycle.

[Skt. sādhārana > த. சாதாரண]

சாதாரணகாந்தாரம் *šādāranakāntāram,* பெ.(n.) சோடசசுரங்களுள் மூன்றாம் சுரத்தின் நடுத்தரமான பகுதி; middle variety of the third note of the gamut, one of *cōṭaca-curam*, q.v.

சாதாரணடப்பு *šādārana-ḍappu,* பெ.(n.) கப்பலின் வேகத்தைக் கட்டுப்படுத்த உதவும் ஒருவகைக் கருவி; (m.navi. 607) an apparatus for gauging the speed of a ship, log.

சாதாரணத்திருச்சபை *šādārana-t-tiruccabai,* பெ.(n.) கிறித்துவமதம் (chr); christianity.

[சாதாரணம்+திருச்சபை]

சாதாரணதருமம் *šādārana-tarumam,* பெ.(n.) 1. எல்லாச் சாதியாருக்கும் பொதுவான ஒழுக்கம்; duties common to all castes. 2. உவமான உவமேயங்களின் பொதுத் தன்மை (அணியி. 1); point of comparison between the two objects of a simile.

த.வ. பொதுநெறி

[சாதாரணம்+தருமம்]

சாதாரணநட்சத்திரம் *šādārana-naṭšattiram,* பெ. (n.) கார்த்திகை, விசாகம், பூராடம், பூரட்டாதி என்ற நாட்கள் (விதான. பஞ்சாங்க. 20, உரை); the four nakṣatras, *kārt-tikai vicākam, pūrāṭamandpūraṭṭāti.*

[சாதாரணம்+நட்சத்திரம்]

சாதாரணப்படு-தல் *šādārana-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) எல்லாராலும் அறியப்படுதல் (வின்.); to become common.

சாதாரணம் *šādāranam,* பெ. (n.) 1. பொதுவானது; that which is common, universal. 2. எளிது; that which is ordinary, easy. *"சாதாரணத்ததல வேள்பூசல்" (அழகர்கல. 75).* 3. தாழ்வானது (வின்.); that which is vulger, mean. 4. சபக்கத்தும் விபக்கத்தும் ஏது பொதுவாயிருக்கையாகிய ஏதுப்போலி (மணிமே. 29, 217); (log.) a fallacy in which cātanam or the middle term exists even in counter - instance.

த.வ. எளிய நிலை

[Skt. sādhārana > த. சாதாரணம்]

சாதாரணை[1] *šādāraṇai,* பெ.(n.) பொது வானது; (Nāñ) commonness.

சாதாரணை[2] *šādāraṇai,* பெ.(n.) பொதுமகள்; prostitute.

சாதாரதீக்கை *šādāra-tikkai,* பெ.(n.) ஆசிரியனை அதிட்டித்து நின்று சிவபிரான் செய்யுந் தீக்கை (சி.சி.8,2, மறைஞா.); religious initiation of a disciple by Siva manifesting himself in the teacher.

சாதாரம் *šādāram,* பெ.(n.) சான்றோடு (ஆதாரத்தோடு) கூடியது (சி.போ.பா.8,2. பக்.368); that which has a base or foundation, that which has a bodily vehicle.

[Skt. sādhāra > த. சாதாரம்]

சாதி[1]-த்தல் *šādi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. நிறைவேற்றுதல்; to effect, accomplish, attain. *"அடியேன் பண்டெடன் சாதித்ததே" (சடகோபரந். 14).* 2. நிலைநாட்டுதல்; to establish, confirm. *"சாதிக்குமே பரதத் துவத்தை" (சடகோபரந். 18).* 3. விடாது பற்றுதல்; to adhere to, continue the observance of. *"தொழுதுருகிச் சாதித்த புத்தி" (கந்தரலங். 63).* 4. மந்திரசித்திபெறுதல்; to obtain mastery over a mantra. *"தாம் சாதித்த மந்திரத்தை நாவிடத்தே வழுத்து வராயின்" (சிலப். 16, 172, உரை)* 5. தேய்த்தல்; to rub on carefully, as a coating of oil, to paint, polish. *"சாதித்துப் பூச" (வின்.).*

த.வ. நிறைவேற்றுதல்

[Skt. sādh > த. சாதி-,]

சாதி[2]-த்தல் *šādi-,* 4 செ.குன்றாவி.(v.t.) கண்டித்தல்; to chastise, punish. *"தம்மிடையே பொய்யானாற் சாதிப்பா ராரினியே" (திவ். நாய்ச். 11. 10).*

[Skt. šās > த. சாதி-,]

சாதி[3]-த்தல் *šādi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. அழித்தல்; to destroy. *"கஞ்சனைச் சாதிப்பதற்கு" (திவ். திருவாய். 3.5.5).* 2. வெல்லுதல்; to conquer. (வின்.).

[Skt. sad > த. சாதி-,]

சாதி *sādi,* பெ.(n.) இந்திய மக்களிடை இல்லாதிருந்ததும் ஆரியர் வரவுக்குப்பின் நிற அடிப்படையிலும் தொழில் அடிப்படையிலும் பிறப்பு காரணமாகவும் ஆரியரால் புகுத்தப் பட்டதுமான மக்கட்பிரிவு; a subdivision of Indian population made by the Aryan race in India based on colour, occupation and birth which were unknown in India before the advent of the Aryans.

[Skt. jāti > த. சாதி]

சாதிக்கட்டு *šādi-k-kaṭṭu,* பெ.(n.) 1. குல வழக்கம் (வின்.); caste rules. 2. குல (சாதி) யொற்றுமை; unity in a caste.

[சாதி + கட்டு]

[Skt. jāti > த. சாதி]

சாதிக்கலப்பு *šādi-k-kalappu,* பெ.(n.) 1. பலசாதியினர் தொடர்பால் (சம்பந்தத்தால்) தோன்றும் நிறக்கலப்பு (வர்ணசங்கரம்); intermingling of different castes by intermarriage.

[சாதி + கலப்பு]

[Skt. jāti > த. சாதி]

சாதிக்கலாபம் *šādi-k-kalābam,* பெ.(n.) சாதிக்கலகம் (வின்.); caste disturbance, as between the *itaṅkai* and the *valaṅkai.*

[சாதி + கலாபம்]

சாதிக்காரன் *šāti-k-kāraṉ,* பெ.(n.) 1. தூய (சுத்தமான) சாதியான்; person of good caste, of pure or unmixed descent. 2. சாதிக்கலப்பற்ற ஐரோப்பியன்; genuine European or one of pure European descent.

[சாதி + காரன்]

சாதிக்காரை *šādi-k-kārai,* பெ.(n.) தகுதி (யாழ்.அக.); fitness.

[Skt. sādhikāra > த. சாதிக்காரை]

சாதிகம் *šādikam,* பெ.(n.) **சாதீயம்** (யாழ்.அக.) பார்க்க; see *šātiyam.*

[Skt. jātiya > த. சாதிகம்]

சாதிகாரதீட்சை *šādikāra-tidšai,* பெ.(n.) சபீசதீட்சை (சைவச. ஆசாரி. 62, உரை); a mode of religious initiation.

சாதிகுலம் *šāti-kulam,* பெ.(n.) உயர்குலம்; (j) high caste.

[சாதி + குலம்]

[Skt. jāti > த. சாதி]

சாதிகெட்டவன் *šādi-kettavan,* பெ.(n.) 1. **சாதிப்பிரட்டன்** பார்க்க; see *šāti-p-piraşdan.* 2. தாழ்குலத்தோன் (வின்.); one of low caste.

[சாதி + கெட்டவன்]

[Skt. jāti> த. சாதி]

சாதிகோசம் *šādi-kōšam,* பெ.(n.) **சாதிக்காய்** (மலை.) பார்க்க; see *šādi-k-kāy.*

[Skt. jāti+kōša > த. சாதிகோசம்]

சாதிங்குலிகம் *šātinkulikam,* பெ.(n.) சாதிலிங்கம்; vermilion. *"சாதிங் குலிகமொடு சமர மொழுகிய" (பெருங். இலாவாண. 5, 22).*

[Skt. jāti+hinguli > த. சாதிங்குலிகம்]

சாதிச்சரக்கு *šādi-c-carakku,* பெ.(n.) நல்ல சரக்கு (இ.வ.); article of good quality, genuine article.

[சாதி + சரக்கு]

சாதிசண்டாளன் *šāti-šaṇḍāḷan,* பெ.(n.) 1.பார்ப்பனிக்கும் பிறஇனத்தானுக்கும் பிறந்தவன்; one born of a Brahmin mother and a sudra father. dist, fr. *karuma-caṇṭāḷan. "முன்னாட் சாதி சண்டாளன் மற்றொருத்தன்" (திருக்காளத். 4, 27, 13).* 2. தாழ் (நீச)குலத்தான்; a man of low caste.

[சாதி + சண்டாளன்]

சாதிசம் *šādišam,* பெ.(n.) 1. **சாதிக்காய் 1** (தைலவ. தைல. 98) பார்க்க; see *šādi-k-kāy.* 2. நறும்பிசின் (யாழ்.அக.); socotrine aloe.

சாதிசனம் *šādišanam,* பெ.(n.) இனத்தாரும் உறவினர்களும் (கொ.வ.); fellow members of a caste, relatives.

த.வ. உறவினர், உறவின்முறையார்

[சாதி + சனம்]

சாதிசாங்கரியம் *šādi-šānkariyam,* பெ.(n.) **சாதிக்கலப்பு** பார்க்க; see *šādi-k-kalappu.*

சாதித்துப்பூசு-தல் *šādittu-p-pūšu-,* 5 செ.கு.வி.(v.t.) தேய்த்துப் பூசுதல் (வின்.); to rub, as oil, ointment.

[சாதித்து + பூசு]

சாதித்துமினுக்கு-தல் *šādittu-minukku-,* 5 செ.குன்றாவி.(v.t.) தேய்த்து பெருகிடுதல் (வின்.); to polish by rubbing well.

[சாதித்து + மினுக்கு-]

சாதித்துவாங்கு-தல் *šādittu-vānku-,* 5 செ.குன்றாவி.(v.t.)கோட்டை முதலிய வற்றைப் பிடித்தல் (வின்.); to capture as a fort.

[சாதித்து + வாங்கு]

சாதிதருமம் *šāditarumam,* பெ.(n.) (குலம்) இனத்துக்குரிய வழக்கவொழுக்கங்கள்; duty practice or occupation peculiar to a caste.

த.வ. ஆரியரின் பிறப்புக் குல வழக்கம்

[சாதி + தருமம்]

சாதிநரந்தம் *šādi-narandam,* பெ.(n.) **சாதிநாரத்தை** (பதார்த்த. 747) பார்க்க; see *šādi-nārattai.*

[சாதி + நரந்தம்]

சாதிநாய் *šādi-nāy,* பெ.(n.) உயர்ந்த இன நாய்வகை (கொ.வ.); dog of good breed.

[சாதி + நாய்]

சாதிநாரத்தை *šādi-nārattai,* பெ.(n.) நாரத்தைவகை (பதார்த்த 747, உரை); a kind of bitter orange.

[சாதி + நாரத்தை]

சாதிப்பகை *šāti-p-pagai,* பெ. (n.) 1. பிறவி (சன்ம)ப்பகை; instinctive hatred of one species of animal towards another. *"கருடனுக்குச் சருப்பத்தோடு சாதிப்பகை".* 2. குல (சாதி) வேற்றுமையால் மனிதர்கள்

கொள்ளும் பகை; enmity between nations or castes, racial animosity.

[சாதி + பகை]

சாதிப்பதங்கம் *śādi-p-pataṉkam,* பெ.(n.) **சாதிலிங்கம்** (வின்.) பார்க்க; see *śādiliṅkam.*

சாதிப்பன்மை *śādi-p-paṉmai,* பெ.(n.) குலத்தைக் (சாதியைக்) குறிக்கும் பன்மை (சீவக. 901, உரை); plural number denoting the entire genus or class.

[சாதி + பன்மை]

சாதிப்பன்னம் *śādi-p-paṉṉam,* பெ.(n.) சாதிபத்திரி (தைலவ. தைல. 109); mace.

***[Skt.** jāti+parṇa > த. சாதிப்பன்னம்]*

சாதிப்பாய் *śādi-p-pāy,* பெ.(n.) பிரப்பம்பாய் (திவா.); rattan matting.

[சாதி + பாய்]

சாதிப்பிரஞ்சம் *śādi-p-pirañśam,* பெ.(n.) குலவழக்கத்தவறு (குலாசாரத்தவறு) (யாழ்.அக.); falling from caste traditions.

[சாதி + பிரபஞ்சம்]

சாதிப்பிரட்டன் *śādi-p-piraṭṭaṉ,* பெ.(n.) 1. சாதிவிலக்குண்டவன்; outcaste. 2. **சாதிகெட்டவன்** பார்க்க; see sādi-keṭṭavaṉ.

சாதிப்பிள்ளை *śādi-p-piḷḷai,* பெ.(n.) 1. பள்ளர் (G.Sm.D.I,i, 187); paḷḷars, as "servants of the caste". 2. சில இனத்தார்க்கு ஊழியஞ் செய்யும் கீழ்ச் சாதியார்; (E.T.) servile caste attached to a particular community.

[சாதி + பிள்ளை]

சாதிப்பூ *śādi-p-pū,* பெ.(n.) 1. சாதிபத்திரி (பதார்த்த. 651); mace, as the nutmeg flower. 2. முல்லைப்பூ வகை; flower of jasminum grandiflorum.

[சாதி + பூ]

சாதிப்பெயர் *śādi-p-peyar,* பெ.(n.) இனத்தைக் (சாதி) குறிக்கும் பெயர்; class name, caste name. *"புள்ளியிரலை யென்றதனை அதன் சாதிப்பெயர் கூறிய வாறாகக் கொள்க" (பதிற்றுப். 74, 8, உரை).*

[சாதி + பெயர்]

சாதிப்பெரும்பண் *śādi-p-perumpaṇ,* பெ. (n.) அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என்ற நால்வகைத் தலைமைப் பண்கள் (சிலப். 8: 41, உரை); primary melody types, four in number, viz., *aka-nilai, puṟa-nilai, arukiyal, perukiyal.*

த.வ. தலைமைப்பண்

[சாதி + பெரும்பண்]

சாதிபத்திரம் *śādi-pattiram,* பெ. (n.) ஈட்டாவணம் (ஈட்டுப்பத்திரம்) (சுக்கிரநீதி. 94); mortgage bond.

[சாதி + பத்திரம்]

சாதிபத்திரி *śādi-pattiri,* பெ.(n.) சாதிக்காயை மூடியிருக்குந் தோல் (பதார்த்த. 1005); mace.

***[Skt.** jāti-patri > த. சாதிபத்திரி]*

சாதிபலம் *śādi-palam,* பெ.(n.) **சாதிக்காய்** (மலை.) பார்க்க; see *śādikkai.*

***[Skt.** jāti-phala > த. சாதிபலம்]*

சாதிபேதம் *śādi-pēdam,* பெ.(n.) ஆரியரின் பிறப்பு வழி குல (சாதி) வேறுபாடு; difference in castes. *"சாதிபேதங்கடனையறிய மாட்டாமல்" (பட்டினத். திருப்பா. பூரண. 35).*

[சாதி + பேதம்]

சாதிமல்லிகை *śādi-mallikai,* பெ.(n.) மல்லிகைவகை; large-flowered jasmine. l.sh., Jasminum grandiflorum.

[சாதி + மல்லிகை]

***[Skt.** jāti+mallikā > த. சாதிமல்லிகை]*

சாதிமாசம் *śādi-māśam,* பெ.(n.) ஆங்கில மாதம் (கொ.வ.); calendar month.

[சாதி + மாசம்]

சாதிமான் *śādi-māṉ,* பெ.(n.) நற்குலத்தோன் (யாழ்.அக.); person of high birth.

***[Skt.** jāti-mān > த. சாதிமான்]*

சாதிமானம் *šādi-mānam,* பெ. (n.) 1. குலப்பற்று (வின்.); love of one's own caste. 2. குலம் ஒத்திருக்கை (யாழ்.அக.); identity of caste.

[**Skt.** *jāti+māna* > *த. சாதிமானம்*]

சாதிமுல்லை *šādi-mullai,* பெ.(n.) **சாதிப்பூ** பார்க்க; see *šādippū.*

[சாதி + முல்லை]

சாதிமுறை *šādi-murai,* பெ.(n.) குல வொழுக்கம்; manners and Ustoms of a caste.

[சாதி + முறை]

சாதிமை *šādimai,* பெ.(n.) 1. ஓரினத்திற்குரிய தனிப்பட்ட குணம்; trait, characteristic of a genus or class. 2. பெருமை (இலக். அக.); greatness.

[**Skt.** *jāti* > *த. சாதிமை*]

சாதியடி *šādi-y-adi,* பெ.(n.) பன்னிரண்டு விரல (அங்குல)ங்கொண்ட ஆங்கில அடி (யாழ்.அக.); foot of twelve inches.

[சாதி + அடி]

சாதியாசாரம் *šādi-y-āšāram,* பெ.(n.) ஒரு குலத்துக்குரிய வழக்கவொழுக்கம்; manners and customs of a caste.

[சாதி + ஆசாரம்]

சாதியிளப்பம் *šādi-y-iḷappam,* பெ.(n.) 1. குலத்தாழ்வு (கொ.வ.); low caste. 2. **சாதிப்பிரஞ்சம்** பார்க்க; see *šādi-p-pirañšam.*

[சாதி + இளப்பம்]

சாதியீனன் *šādi-y-īnan,* பெ.(n.) இழி குலத்தான்; one of low caste.

[சாதி+ ஈனன்]

[**Skt.** *jāti* > *த. சாதி*]

சாதியேகவசனம் *šādi-y-ēkavašanam,* பெ.(n.) **சாத்தியேகவசனம்** (மாறனலங். 92, உரை) பார்க்க; see *šātti-y-ēkavašanam.*

சாதியொருமை *šādi-y-orumai,* பெ.(n.) இனத்தைக் குறிக்கும் ஒருமை; singular number denioting the entire genus or class. சாதி யொருமையைச் சாத்தியேகவசன மென்பர் (பி.வி. உரை.)

[சாதி+ ஒருமை]

சாதிரம் *šādiram,* பெ.(n.) **விட்ணுக்கரந்தை** (மலை.) பார்க்க; see *visniuk-karantai.*

[**Skt.** *chardikā* > *த. சாதிரம்*]

சாதிருசியம் *šādirušiyam,* பெ.(n.) ஒப்பு (சங்.அக.); resemblance, similarity.

[**Skt.** *sādṛšya* > *த. சாதிருசியம்*]

சாதிரேகம் *šādirēgam,* பெ.(n.) **சாதிரேசம்** (யாழ்.அக.) பார்க்க; see *šātirēšam.*

சாதிரேசம் *šādirēšam,* பெ.(n.) குங்குமப்பூ (வின்.); saffron.

[**Skt.** *kašmira-ja* > *த. சாதிரேசம்*]

சாதிரை *šādirai,* பெ.(n.) ஊர்வலம்; procession. *"சாதிரைத் தீவட்டி வெளிச்ச மினுமினென" (விறலிவிடு.).*

[**U.** *jātra* > *த. சாதிரை*]

சாதிவிருத்தி *šādi-virutti,* பெ.(n.) குலத் தொழில்; hereditary occupation of a caste.

[சாதி+ விருத்தி]

சாதீகம் *šādīgam,* பெ.(n.) **சாதீயம்** (யாழ்.அக.) பார்க்க; see *šādīyam.*

சாதீயம் *šādīyam,* பெ.(n.) 1. **சாதியாசாரம்** (யாழ்.அக.) பார்க்க; see *šādiyāšāram.* 2. உயர்ந்தது; that which is superior.

[**Skt.** *jātīya* > *த. சாதீயம்*]

சாது *šādu,* பெ.(n.) 1. நல்லது; that which is good, excellent. *"சாதுவென்றுணார் கிற்றியேல்" (கம்பரா. பிணிவீ.91).* 2. நற்குணமுள்ளவ-ன்-ள்; good, virtuous person. *"பஞ்சதுட்டனைச் சாதுவேயென்று" (தேவா. 648, 5).* 3. அருகன் (பிங்.); arhat. 4. துறவி (சீவக. 1, உரை); ascetic. 5. வடபுலத் துறவி (பைராகி); religious mendicant, especially from north-india. 6. அப்பாவி; harmless person, simpleton. 7. காரமின்மை;

insipidity, as of mild pepper - water. *'சாறு சாதுவாயிருக்கிறது' (கொ.வ.).*

சாதுசங்கம் *šādu-šaṅgam,* பெ. (n.) பெரியாருடன் கூட்டுறவு (யாழ்.அக.); association with the good and the great.

[Skt. sādhu+saṅga > த. சாதுசங்கம்]

சாதுசரணம் *šādu-šaraṇam,* பெ.(n.) சாதுக்களை அடைக்கலம் (சரணம்) புகுகை (சீவக. கடவுள் வாழ்த்து. உரை); seeking refuge in the company of sādhus or monks.

[சாது + சரணம்]

சாதுதி *šātuti,* பெ.(n.) மாமி (யாழ்.அக.); aunt.

சாதுர்சாதம் *šādur-šādam,* பெ.(n.) ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறு நாகப்பூ என்ற நான்கு மருந்துச் சரக்குகள் (தைலவ. தைல. 29); the four medicinal substances viz., *ēlam, ilavaṅka-p-paṭṭai, ilavaṅka-p-pattiri, ciṟunāka-p-pū.*

[Skt. catur+jāta > த. சாதுர்சாதம்]

சாதுர்த்திகம் *šādurttigam,* பெ.(n.) நாலு நாளைக்கு ஒருமுறை வரும் முறைக் காய்ச்சல் (ஈடு.); quartan fever.

[Skt. cāturthika > த. சாதுர்த்திகம்]

சாதுர்ப்பாகம் *šādur-p-pāgam,* பெ.(n.) நாலில் ஒரு பங்கு (யாழ்.அக.); a quarter.

[சாதுர் + பாகம்]

[Skt. catur > த. சாதுர்]

சாதுர்மாசியம் *šātur-māšiyam,* பெ.(n.) 1. கடக (ஆடி) மாதம் தொடங்கி நாலு மாதத்திற் செய்யும் வேள்வி (யாகங்)களின் பொதுப்பெயர் (திவா.); name of the sacrifices performed for four months commencing from āṭi. 2. துறவி (சந்நியாசி)கள் மாரிக்காலத்தில் இரண்டு மாதம் ஒரே இடத்தில் இருந்து கொண்டு நோற்கும் ஒருவகை நோன்பு; vow observed by sannyāsins, which consists in their remaining in the same place for two months in winter.

[Skt. cāturmāsya > த. சாதுர்மாசியம்]

சாதுரங்கம் *šāturaṅkam,* பெ.(n.) 1. முழுப்படை (சதுரங்கசேனை); a complete army. *"சாதுரங்கத்தலைவனை" (கலிங். 488).* 2. பதுமராகம்; a kind of ruby. *"பதுமம் பதுமராகம் சாதுரங்கம் என்பதும் அது" (சிலப். 14: 186, உரை).*

த.வ. நாற்படை

[Skt. catur-aṅga > த. சாதுரங்கம்]

சாதுரம் *šāturam,* பெ.(n.) தேர் (யாழ்.அக.); chariot.

[சாதுரன் > சாதுரம்]

சாதுரன் *šāturaṉ,* பெ.(n.) 1. பகுத்தறிவன் (விவேகி); discerning, wise man. 2. தேர்ப்பாகன்; charioteer.

[Skt. catura > த. சாதுரன்]

சாதுரிகன் *šāturikaṉ,* பெ.(n.) **சாதுரன்** (யாழ்.அக.) பார்க்க; see *šāturaṉ.*

[Skt. catura > த. சாதுரிகன்]

சாதுரியம் *šāturiyam,* பெ.(n.) 1. வல்லமை (சாமர்த்தியம்); cleverness, ability. *"சாதுரிய மில்ல வரு மில்லை" (மேருமந். வைசயந்த. 19).* 2. நாகரிகம் (இலக்.அக.); civilised state.

த.வ. திறமை, வல்லமை

[Skt. caturya > த. சாதுரியம்]

சாதுரியன் *šāturiyaṉ,* பெ.(n.) அறிவுள்ளவன்; clever person.

த.வ. வல்லவன்

[Skt. cāturya > த. சாதுரியன்]

சாதுரியாகமம் *šāturiyākamam,* பெ.(n.) விவிலியநூலின் ஒரு பகுதி; book of proverbs.

[Skt. cāturya+āgama > த. சாதுரியாகமம்]

சாதுவன் *šātuvaṉ,* பெ.(n.) 1. நல்லவன்; good, gentle person. *"சாதுவராய்ப் போதுமின்க ளென்றான்" (திவ். இயற். நான்மு. 68).* 2. ஐம்புலன்களும் அடக்கியவன்; one who has subdued his senses. *"தத்துவன் சாதுவன்" (சிலப். 10:182).*

த.வ. ஐம்புலனடங்கி.

[Skt. sādhu > த. சாதுவன்]

சாதுன்மாசியம் *šātun-māšiyam,* பெ.(n.) **சதுர்மாசியம்** பார்க்க; see *šaturmāšiyam.* *"சாதுன்மாசிய நல்விரதந் தொடங்கினேன்" (விநாயகபு. 80, 192).*

சாதேட்டி *šātētti,* பெ.(n.) **சாதகன்மம்** (யாழ்.அக.) பார்க்க; see *šātakanmam.*

[Skt. jāta-isti > த. சாதேட்டி]

சாதேவம் *šādēvam,* பெ.(n.) 1. **குழிநாவல்** (பிங்.) பார்க்க; see *kulināval.* 2. **சிறுநாவல்** (மலை.) பார்க்க; see *širunāval.*

[Skt. sahadēva > த. சாதேவம்]

சாதேவன் *šādēvan,* பெ.(n.) **சகதேவன்** பார்க்க; see *šakatēvan.* *"இவ்வண்ணஞ் சாதேவ னியம்புதலும்" (பாரத. கிருட்டிணன்றூ. 33).*

[Skt. sahadeva > த. சாதேவன்]

சாந்தாத்மா *šāndātmā,* பெ.(n.) தூய முழு முதற்பொருள் (சுத்தப்பிரம்மம்) (விசாரசந். 305); (phil) pure Brahman.

[Skt. šāntatman > த. சாந்தாத்மா]

சாந்திக்காரன் *šāndi-k-kāran,* பெ.(n.) **சாந்தியடிகள்** பார்க்க; see *šāndiyadikal.* (T.A.S. 11, 154).

சாந்திகம் *šāndikam,* பெ. (n.) 1. அரிட்டநிவிருத்தியின் பொருட்டாகச் செய்யுங் கிரியை; propitiatory rite for avarting or removing evil. *"சாந்திக முன்னாய கருமத்தின் மனம்வைத்தோராய்" (திருக்காளத். 4, 11, 10).* 2. திருநீற்றுக்காகக் மூத்திரத்தை (கோமயத்தைப்) ஆ(பசு)வின் பின்னிருந்து ஏற்றுக்கொள்ளுஞ் செயல் (சைவச. பொது. 169, உரை); obtaining dung from the cow while being evacuated for the preparation of sacred ashes.

த.வ. நலஞ்சேர்த்தி

[Skt. šāntika > த. சாந்திகம்]

சாந்திகலியாணம் *šāndikaliyānam,* பெ.(n.) மிகு இளமையில் திருமணம் செய்து கொண்ட பெண் பூப்படைந்த பின்பு விதிப்படி கணவனுடன் சேர்தற்குச் செய்யும் ஆரியச் சடங்கு ; ceremony of post-puberty consummation in child-marriage.

[சாந்தி + கலியாணம்]

[Skt. šānti > த. சாந்தி]

சாந்திகலை *šāndi-kalai,* பெ.(n.) சிவசத்தியின் பஞ்சகலைகளுள் அனுபவஞானம் பெற்ற ஆன்மாக்கட்கு விருப்பு வெறுப்புச் சங்கற்பம் முதலிய எல்லாத் துன்பங்களுஞ் சாந்தமாகச் செய்யுங் கலை (சி.போ.பா. 2,2. பக்.143); sphere of action for the energy of Šiva which calms down all the turbulent elements in fully riped souls, one of *pañca-kalai,* q.v.

சாந்திகழி-த்தல் *šāndi-kali-,* 4 செ.கு.வி. (v.i.) சாந்திக் கிரியைகளால் கிரகம் முதலியவற்றின் பீடையைப் போக்குதல்; to perform propitiatory rites for averting or removing the evil influences of planets, spirits, etc.

சாந்திசெய்வான் *šāndi-šeyvān,* பெ.(n.) **சாந்தியடிகள்** பார்க்க; see *šāndiyadigal.* *"சாந்திசெய்வானுக்கு விருத்திக்காக அடுத்த பூமி" (T.A.S.I. 7).*

[சாந்தி + செய்வான்]

சாந்திமுகூர்த்தம் *šāndi-mugūrttam,* பெ.(n.) **சாந்திகலியாணம்** பார்க்க; see *šāndikaliyānam.*

சாந்தியடிகள் *šāndiyadikal,* பெ.(n.) கோயிற்பூசகன் (T.A.S.11. 136); temple priest.

[சாந்தி + அடிகள்]

சாந்தியடை *šāndi-y-adai,* வி.(v.) (-அடைய, -அடைந்து) (ஒருவர் இறந்துபோனதற்காக வருத்தம் தெரிவிக்கும் முறையில் கூறும் போது) (ஆன்மா) அமைதியில் நிலைத்தல்; (when referring to the departed) rest in peace. *"தலைவருடைய ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்".*

[சாந்தி + அடை]

சாந்தியதீதகலை *śāndiyatītakalai,* பெ.(n.) சிவசத்தியின் பஞ்சகலைகளுள் அனுபவ ஞானம் பெற்று விருப்பு வெறுப்பு முதலிய எல்லாத் துன்பங்களுஞ் சாந்தமாய் நின்ற ஆன்மாக்கட்கு அத்துன்பங்களை முற்றும் ஒழியச் செய்யுங் கலை (சி.போ. பா. 2,2,பக்.143); (saiva) sphere of action for the energe of Šiva which destroys all the turbulent elements is fully riped souls one of *pañca-kalai,* q.v.

[சாந்தியத்த+கலை]

[Skt. šānti+atīta > த. சாந்தியதீத]

சாந்தியதீதம் *śāndi-y-atītam,* பெ.(n.) **சாந்தியதீதகலை** பார்க்க; see *śāndi-y-atītakali.*

சாந்தியதீதை *śāndi-y-atītai,* பெ.(n.) **சாந்தியதீதகலை** (சி.சி.2, 74, சிவாக்) பார்க்க; see *śāndi-y-atītakalai.*

சாந்தியாதீதம் *śāndiyātitam,* பெ.(n.) **சாந்தியதீதகலை** (சி.சி.2, 74, சிவாக்.) பார்க்க; see *śāndi-y-atītakalai.*

சாந்திரம் *śāndiram,* பெ. (n.) 1. நிலவுத் தொடர்பானது (சந்திரசம்பந்தமானது); that which pertains to the moon. 2. **சந்திரகாந்தம்** (வின்.) பார்க்க; see *śandirakāndam.*

[Skt. cāndra > த. சாந்திரம்]

சாந்திரமாதம் *śāntira-mātam,* பெ.(n.) சைத்திரம், வைசாகம், சியேட்டம், ஆஷாடம், சிராவணம், பாத்திரபதம், ஆசுசீம், கார்த்திகம், மார்க்கசிரம், புஷ்யம், மாகம், பால்குனம் என்ற சந்திரகதியைக் கொண்டளவிடப்படும் பன்னிரு மாதங்கள்; lunar month 12 in number viz., *caittiramī vaicākam, ciyēṭṭam, āṣāṭam, cirāvaṇam, pāttirapatam, ācuvīcam, kārttikam, mārkkaciram, puṣyam, mākam, pālkuṇam. "சாந்திர மாதங் குரு வந்தமாகும்" (விதான. குணாகுண. 80).*

சாந்திரமானம் *śāntira-māṇam,* பெ.(n.) நிலவின் வளர்ச்சியைக் (சந்திரகதியைக்) கொண்டு மாத, ஆண்டுகள் அளவிடும் முறை; system of calculating months and years by the movements of the moon. *"சாந்திரமான பட்சம்பற்றிக் கூறினான்" (சீவக. 493, உரை).*

த.வ. நிலாக்கணிப்பு

[சந்திரம் > சாந்திரம் + மானம்]

சாந்திராண்டு *śāndirāṇḍu,* பெ.(n.) நிலவைக் (சந்திரகதியைக்) கொண்டு அளவிடப்படும் ஆண்டு (யாழ்.அக.); lunar year.

சாந்திராயணம் *śāndirāyaṇam,* பெ.(n.) வெள்ளுவா தொடங்கி காருவா வரை ஒவ்வொருபிடி சோறு குறைத்தும் காருவா தொடங்கிப் வெள்ளுவா வரை ஒவ்வொரு பிடி மிகுதிப்படுத்தியும் உண்ணும் நோன்பு; expiatory fast for one month commencing from the full moon, the food being diminished every day by one handful during the dark fortnight and increased in like manner during the bright fortnight.

[Skt. cān-drāyaṇa > த. சாந்திராயணம்]

சாந்தோக்கியம் *śāndōkkiyam,* பெ.(n.) நூற்றெட்டுச் சிற்றிலக்கியங்களுள் (உபநிடதம்) ஒன்று; an upaniṣad, one of 108.

[Skt. chān-dōgya > த. சாந்தோக்கியம்]

சாப்பா *śāppā,* பெ.(n.) 1. முத்திரை; stamp, seal. 2. மத்தள வாத்தியத்தில் ஒவ்வொரு கெத்தின் முடிவையும் காட்டி அதன் தொப்பையில் அடிக்கும் அடி; (mus.) the concluding stroke in an instalment of drum-play.

[U. chāpā > த. சாப்பா]

சாப்பாய் *śāppāy,* பெ.எ(adv.) முழுதும்; wholly, entirely. *'சொத்துக்கள் சாப்பாய்ப் போய்விட்டன' (உ.வ.).*

சாப்பிரா *śāppirā,* பெ.(n.) சிறுமரவகை; arnotto. s.tr. Bixa orellane.

[T. jāphara > த. சாப்பிரா]

சாப்பு[1] *śāppu,* பெ.அ.(adj.) 1. பகட்டுப்புனைவற்ற (ஆடம்பரமற்ற); unostentatious, plain.

'அவன் மிகவும் சாப்பாயிருப்பவன்'. 2. நேர்மையான; (c.g.) fair-minded.

சாப்பு[2] *šāppu,* பெ.(n.) படி (நகல்); (c.g.) copy transcript.

[*Skt. sāf* > *த. சாப்பு*]

சாப்பு[3] *šāppu,* பெ.(n.) துமுக்கி (துப்பாக்கி)ச் சாப்பு; gunlock, the cock of a gun.

த.வ. அமுக்கி

[*Port. chāpa* > *த. சாப்பு*]

சாப்பு[4] *šāppu,* பெ.(n.) கடை; shope.

[*ē. shop* > *த. ஷாப்* > *சாப்*]

சாபல்லியம்[1] *šāballiyam,* பெ.(n.) பயனுள்ள தாகை; fruitfulness. *"அவன் சன்ம சாபல்லிய னன்றோ" (சிவரக. மறலியுத்தர. 16).*

[*Skt. sāphalya* > *த. சாபல்லியம்*]

சாபல்லியம்[2] *šāballiyam,* பெ.(n.) **சாபலியம்** பார்க்க; see *šāpaliyam.*

[*Skt. sāphalya* > *த. சாபல்லியம்*]

சாபலம்[1] *šābalam,* பெ.(n.) வானகணித வாக்கியவெண்; anamolistic equation (Astron.).

[*Skt. jyā-phala* > *த. சாபலம்*]

சாபலம்[2] *šāpalam,* பெ.(n.) 1. விடாப்பற்று; persistence, firm attachment. *"தன் சாபலாதிசயத்தாலேயும்" (ஈடு. 4, 2, ப்ர.)* 2. எளிமை; discomfiture. *"தந்தைபோ ரழிந்துபோன சாபலங்கண்டு வெம்பி" (பாரத. நிரை. 95).*

[*Skt. cāpala* > *த. சாபலம்*]

சாபலியம் *šāpaliyam,* பெ.(n.) நிலையில்லா மனம் (கொ.வ.); fickleness.

[*Skt. cāpalya* > *த. சாபலியம்*]

சாபனை *šāpanai,* பெ.(n.) சாவம் (வின்.); curse.

[*Skt. šapana* > *த. சாபனை*]

சாபா *sāpā,* பெ.(n.) சாப்பா பார்க்க; see *sāppā.*

[*U. chāpā* > *சாப்பா* > *சபா*]

சாபாகாகிதம் *šāpā-kākitam,* பெ.(n.) முத்திரைக்கடிதம் (இ.வ.); stamp paper.

[*சாப்பா+காகிதம்*]

[*U. chāpā* > *த. சாபா*]

சாபாகானா *šāpākānā,* பெ.(n.) அச்சுக்கூடம் (இ.வ.); printing office.

[*U. chāpā* > *த. சாப்பா* > *சாபா* + *U. kanah*> *த. கானா*]

சாபாலம் *šāpālam,* பெ.(n.) நூற்றெட்டுச் சிற்றிலங்களுளொன்று; an *upanisad,* one of 108. *"நற்சாபால முரைத்த பலன்" (சேதுபு. மங்கல. 45).*

[*Skt. jābāla* > *த. சாபாலம்*]

சாபாலன் *šāpālan,* பெ.(n.) ஆட்டுவாணிகன் (பிங்.); one who deals in sheep.

[*Skt. jābāla* > *த. சாபாலன்*]

சாபானுக்கிரகசக்தி *šāpānu-k-kiraga-šakti,* பெ.(n.) சவிக்கவும், வாழ்த்தவும் வல்ல ஆற்றல்; power to curse or bless, as one wills.

[*Skt. šāpa+anu-graha* + *த. சாபானுக் கிரகசக்தி*]

சாபாசு *šāpāsu,* பெ.(n.) 'மிக நன்று' என்னும் குறிப்பு; expr. meaning excellent well done.

த.வ. வல்லே, வலே

[*U. shābāsh* > *சபாஷ்* > *த. சாபாசு*]

சாபிதா *šāpitā,* பெ.(n.) **சாப்தா** பார்க்க; see *šāptā.*

சாபீத்து *šāpittu,* பெ.(n.) எண்பித்தது; (C.G.) that which is proved, established, as an offence or charge.

[*U. sābit* > *த. சாபீத்து*]

சாபேட்சம் *šāpēṭšam,* பெ.(n.) ஒன்றை சார்ந்(அபேட்சித்)திருப்பது; that which is dependent. *"இந்திரிய சாபேட்சம்" (சி.சி. அளவை. 1. சிவாக்.).*

[*Skt. sāpēksa* > *த. சாபேட்சம்*]

சாபேட்சை *šāpēḍšai,* பெ.(n.) தீராத வாஞ்சை (யாழ்.அக.); insatiable desire.

[Skt. sāpēkṣa > த. சாபேட்சை]

சாம்பிராச்சியம் *šāmpirāacciyam,* பெ.(n.) **சாம்ராச்சியம்** பார்க்க see *šāmrācciyam.* *"முத்தி யெனுமோர் சாம்பிராச்சிய முழுது முனது" (பிரபோத. 48, 13).*

சாம்பிராணி *šāmpirāṇi,* பெ.(n.) 1. குதிரைகள் அதிகமாக வாழும் தேசங்களுட் சிறந்ததான ஒரு நாடு; a district in Malacca famous for its horses. *"காம்போச மாரியஞ் சாம்பிராணி .... முன்னான துரங்கம்" (திருவாலவா. 27, 73).* 2. **பரங்கிச்சாம்பிராணி** பார்க்க; see *parankiccampirāṇi.* 3. ஒரு வகை மரம்; nitta tree of Africa.1. tr., parkia biglandulosa. 4. ஒருவகை மரம்; benzoin tree, s.tr., styrax benzoin. 5. நறுமணப்பொருள் (பதார்த்த. 1072); frankincense, olibanum, gum benzoin. 6. மூடன்; fed, good for nothing fellow.

[Malay. sāmrāni > த. சாம்பிராணி]

சாம்பிராணித்தூபம் *šāmpirāṇi-t-tūpam,* பெ.(n.) கோயிலில் புகைக்கும் சாம்பிராணிப் புகை; fragrant smoke of frankincense, as an offering.

[சாம்பிராணி + தூபம்]

சாம்பிராணித்தைலம் *šāmpirāṇi-t-tailam,* பெ.(n.) சாம்பிராணியினின்று வடிக்கப்படும் தைலம்; a medicinal oil extracted from benzoin.

[சாம்பிராணி + தைலம்]

சாம்பிராணிப்பட்டயம் *šāmpirāṇi-p-paṭṭayam,* பெ.(n.) சாம்பிராணித் தூபமேற்றிப் போற்றப்படுவதும் கோயில் முதலியவற்றிற்கு உரியதுமான கொடை ஆவணம் (தான சாசனம்) (வின்.); deed of gift to temple, etc. preserved with smoke-perfume.

[சாம்பிராணி + பட்டயம்]

சாம்பிராணிப்பதங்கம் *šāmpirāṇi-p-padangam,* பெ.(n.) 1. சாம்பிராணியைப் புகைத்தெடுத்த மருந்துப்பொடி; a medicinal powder of solidified benzoin smoke. 2. நறுமணப்புகை வகை; a smoke-perfume of frankincense.

[Malay.sāmrāni+patanga>த.சாம்பிராணிப்பதங்கம்]

சாம்பிராணிபோடு-தல் *šāmpirāṇi-pōḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. நறும்புகையிடுதல்; to burn or offer incense. 2. வெறியேற்றம் (ஆவேசம்) வரச்செய்தல் (கொ.வ.); to invoke the descent of a spirit on a person by burning frankincense. 3. புகழ்தல் (கொ.வ.); to flatter, praise. 4. தூண்டுதலைச் செய்தல் (கொ.வ.); to instigate, incite.

[சாம்பிராணி + போடு]

[Skt. sāmrāni > த. சாம்பிராணி]

சாம்பிராணிவத்தி *šāmpirāṇi-vatti,* பெ.(n.) ஊதுவத்தி; joss stick, incense stick.

[Malay.sāmrāni+vartti> த. சாம்பிராணிவத்தி]

சாம்பேசம் *šāmpēšam,* பெ.(n.) பதினெட்டு துணைத் தொன்மங்களுள் ஒன்று; a secondary purāṇa, one of 18 *upa-purāṇam,* q.v.

[Skt. sāmba+iša > த. சாம்பேசம்]

சாம்ராச்சியம் *šāmrācciyam,* பெ.(n.) 1. முற்றாளுமை (ஏகாதி பத்தியம்); sole, universal sovereignty. 2. பெரும் பதவி; supreme state, exalted position. *"சேஷத்வ சாம்ராச்சியத்திற்கு முடிசூடி யிருக்கப் பெறுவர்கள்" (ஈடு. 4, 4, 11).*

த.வ. பேரரசு

[Skt. sām-rājya > த. சாம்ராச்சியம்]

சாமக்கிரி *šāmakkiri,* பெ.(n.) 1. கருவிகள் (அ) பொருட்கள்; things or materials needed for an occasion. 2. உணவுப் பண்டம் (கொ.வ.) food stuffs, provisions.

[Skt. sāmagri > த. சாமக்கிரி]

சாமக்கிரியை *šāmakkiriyai,* பெ.(n.) **சாமக்கிரி** பார்க்க see *šāma-k-kiri.*

சாமகண்டர் *šāma-kaṇṭar,* பெ.(n.) கருங் கழுத்துடையவராகக் கருதப்படும் சிவன் (நீலகண்டமுடையவர்) Šiva as black-

throated. *சாமகண்டர்த மாலயம் புகுவித்தரோ (திருவிளை. விடையி. 13).*

[Skt. šyāma+kantha > த. சாமகண்டர்]

சாமகம் *šāmagam,* பெ.(n.) சாணைக்கல் (யாழ்.அக.) whet stone.

[Skt. šānaka > த. சாமகம்]

சாமகலியாணி *šāmakaliyāṇi,* பெ.(n.) பண் வகை (பரத ராக. 103); a specific melody-type. (mus.).

சாமகன் *šāmakaṉ,* பெ.(n.) **சாமவேதி 1** (கொ.வ.) பார்க்க; see *šāma-vēti.*

[Skt. sāma-ga > த. சாமகன்]

சாமகாலம் *šāma-kālam,* பெ.(n.) வற்கட (பஞ்ச)காலம்; times of famine.

[சாம+காலம்]

[Skt. kṣāma > த. சாமம்]

சாமகானம் *šāma-kāṉam,* பெ.(n.) சாமவேதம் பாடுகை chanting of *šāma-vēda. சாமகானஞ் செய்தவற் காலயம் (திருவிளை. வரகுலா. 46).*

[Skt. sāman+gāna > த. சாமகானம்]

சாமகீதம் *šāma-kītam,* பெ.(n.) 1. **சாமகானம்** பார்க்க see *šāma-kāṉam.* 2. இசை (சங்கீத)ப்பாட்டு a musical piece. *சாமகீத மற்றுமொன்று சாமிநன்கு பாடினான் (சீவக. 2038).*

சாமத்தியம் *šāmattiyam,* பெ.(n.) **சாமர்த்தியம்** (இ.வ.) பார்க்க; see *šāmarttiyam.*

[Skt. sāmarthya > த. சாமர்த்தியம்]

சாமத்துரோகி *šāma-t-turōki,* பெ.(n.) கொடிய வஞ்சகன் (இ.வ.) (பஞ்சகாலத்திற் துரோகஞ் செய்பவன்); cruel, treacherous person, as one who commits heinous crimes in times of famine.

சாமர்த்தியக்கலியாணம் *šāmarttiya-k-kaliyāṇam,* பெ.(n.) 1. பெண் பருவமடைந்த போது செய்யப்படும் சடங்கு (j) ceremony performed on attaining puberty. 2. **சாந்திகலியாணம்** பார்க்க; see *šānti-kaliyāṇam.*

[சாமர்த்தியம்+கலியாணம்]

[Skt. sāmartya > த. சாமர்த்தியம்]

சாமர்த்தியம் *šāmarttiyam,* பெ.(n.) 1. திறமை, திறன் skill, ability. 2. பூப்படைகை (j) pubescence of a girl.

[Skt. sāmarthya > த. சாமர்த்தியம்]

சாமர்த்தியமா-தல் *šāmarttiyamā-,* 6 செ.கு.வி. (v.i.) பூப்படைதல் (j) to attain puberty.

த.வ. சமைதல், நிறைதல், பருவமடைதல்

[சாமர்த்தியம்+ஆ]

[Skt. sāmarthya > த. சாமர்த்தியம்]

சாமர்த்தியன் *šāmarttiyaṉ,* பெ.(n.) சமர்த்தன் (வின்.); skilful person.

[Skt. sāmarthya > த. சாமர்த்தியன்]

சாமரபுட்பம் *šāmara-puḍpam,* பெ.(n.) 1. கமுகு; areca palm. 2. மாமரம்; mango tree.

[Skt. cāmara-puṣpa > த. சாமரபுட்பம்]

சாமலிகபத்திரம் *šāmalika-pattiram,* பெ.(n.) வாணிகக்குழுவினர் கூடிப் பங்குப் பொருள்களைப் பற்றிச் செய்து கொள்ளும் உடன்படிக்கையாவணம் (சுக்கிரநீதி. 94); agreement relating to the shares of the members of a trade guild.

[Skt. sāayika> த. சாமலிகம்]

சாமவேதம் *šāma-vētam,* பெ.(n.) நான்கு வேதங்களுள் கீதநடையான மூன்றாம் வேதம் (திவா.); the third of the four vēdas consisting of chants based on Rks.

[Skt. sāma-vēda > த. சாமவேதம்]

சாமவேதி *šāma-vēti,* பெ.(n.) 1. சாமவேதத்தை முதலில் படிப்பதற்கு உரிமை கொண்டவன்; person entitled to study šāma-vēda first. 2. சாமவேதமுணர்ந்தோன்; one who has studied the šāma-vēda. *"சந்தோகன் பவுழிய னைந்தழலோம்பு தைத்திரியன் சாமவேதி" (திவ். பெரியதி. 5, 5, 9).*

[Skt. sāma-vēdin > த. சாமவேதி]

சாமளாதேவி *šāmaḷa-tēvi,* பெ.(n.) **சாமளை** பார்க்க; see *šāmaḷai.*

[Skt. syāmalā+p > த. சா]

சாமளை *šāmaḷai,* பெ.(n.) கருநிறமுடைய மலைமகள்; Pārvati, as being of dark-green complexion. *"சாம்பவி சங்கரி சாமளை" (அபிராமி. 50).*

த.வ. கரும்பச்சையம்மை

[Pkt. sāmala > த. சாமளை]

சாமாசி *šāmāci,* பெ.(n.) 1. நடுநிலையாளன் (மத்தியத்தன்); mediator, arbitrator. 2. தூதன் (வின்.); messenger, envoy. 3. சுற்றாய்வு, கலந்தாய்வு (ஆலோசனை) (யாழ்.அக.); deliberation.

[Skt. sāmājika > த. சாமாசி]

சாமாசிகம் *šāmāšikam,* பெ.(n.) நடுநிலை (மத்தியஸ்தம்); arbitration, mediation.

சாமாஞ்சி *šāmāñji,* பெ.(n.) **சாமாசி 3** (யாழ்.அக.) பார்க்க; see *šāmāsi.*

சாமாதி *šāmāti,* பெ.(n.) **சாமாசி** (R) பார்க்க; see *šāmāši.*

சாமாநதி *šāmānati,* பெ.(n.) பச்சையாறு (நாமதீப. 528); the river *paccaiyāṟu.*

[சாமா+நதி]

[Skt. śyāmā+ > த. சாமா]

சாமார்த்தியம் *šāmārttiyam,* பெ.(n.) **சாமர்த்தியம்** (கொ.வ.) பார்க்க; see *šāmarttiyam.*

சாமால்பண்ணு–தல் *šāmāl-paṇṇu-,* 12 செ.குன்றாவி.(v.t.) பொதுக்கட்டுதல்; to deposit with a mediator.

[சாமால்+பண்ணு]

[H. sambhālnā+ > த. சாமால்]

சாமான்[1] *šāmāṉ,* பெ.(n.) (ஓர் இடத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய) அன்றாடப் புழக்கத்துக்குத் தேவையான பொருள்; ஒரு செயலைச் செய்வதற்குப் பயன்படும் பொருள் (manufactured) goods; articles; items. *'மரச் சாமான்கள் விற்கும் கடை; வெள்ளையடிப்பதற்குத் தேவையான சாமான்கள் வாங்கிவிட்டாயா'.*

த.வ. பொருள்

[U. sāmān > த. சாமான்]

சாமான்[2] *šāmāṉ,* பெ.(n.) பண்டம் (கொ.வ.); goods, furniture, articles.

[U. sāmān > த. சாமான்]

சாமானட்டவணை *šāmāṉ-aṭṭavaṇai,* பெ.(n.) சரக்கு அனுப்புவோன் அவற்றை ஏற்றுக் கொள்வோனுக்கு அனுப்புஞ் சரக்கு விவரச் சீட்டு; (m.navi. 123) invoice.

[சாமான்+அட்டவணை]

[U. sāmāṉ > த. சாமான்]

சாமானம் *šāmāṉam,* பெ.(n.) சாமான் (இ.வ.); article.

[சாமான் > சாமானம்]

சாமானாதிகரணியம் *šāmāṉāti-karaṇiyam,* பெ.(n.) சமானாதிகரண தொடர்பு (சம்பந்தம்) (வேதா. சூ. 117, உரை); *šamāṉātikaraṇa-šampantam.*

[Skt. sāmānādhi+karaṇya > த. சாமானாதிகரணியம்]

சாமானிடாப்பு *šāmāniḍāppu,* பெ.(n.) சாமான்களின் விவரப்பட்டிகை (புதுவை வழக்கு); inventory of goods.

சாமானியசுரம் *šāmāṉiya-šuram,* பெ.(n.) ஒரு வகைக் காய்ச்சல் (இ.வ.); pyrexia.

[சாமான்யம்+சுரம்]

[Skt. sāmānya> த. சாமானியம்]

சாமானியம் *šāmāṉiyam,* பெ.(n.) 1. பொது commonness, university, opp. to vicēṣam. 2. ஏழு பதார்த்தங்களுள் ஒன்றானதும் நித்தியமாய் ஒன்றாய்ப் பலவற்றில் ஒருங்கு சேர்தலையுடையதுமான சாதியென்னும் பதார்த்தம் (தருக்கசங்.2); generality, common characteristics, considered eternal, one and intimately connected with several objects, one of seven patārttam. q.v. 3. பெறுதற்கு எளியது; that which is easy

of attainment. 4. முழுமை; all, whole. *"சாமானியமுங் கொண்டு வந்தாற் செய்கிறேன்" (வின்.).*

த.வ. பொது

[Skt. sāmānya > த. சாமானியம்]

சாமானியன் *šāmāṉiyaṉ,* பெ.(n.) 1. இயல்பான ஆற்றலுடைய (சாதாரண சத்தியுள்ள) மனிதன்; man of ordinary capacity. 2. தன் சாதியில் மட்டமானவன்; person of low rank in a caste.

த.வ. பொதுவன்

[Skt. sāmānya > த. சாமானியன்]

சாமானியை *šāmāṉiyai,* பெ.(n.) குணம் செயல்களாற் பிரிக்கப்பட்ட மூவகைப் பெண்டிருள் ஒருவகையினர் (சுக்கிரநீதி. 212); one of the three kinds of women classed according to their character and conduct.

[Skt. sāmānyā > த. சாமானியை]

சாமி[1] *šāmi,* பெ.(n.) 1. கடவுள்; Lord, the supreme being. 2. முருகன் (பிங்.); Murugan. *"சாமி தாதை" (தேவா. 64ப, 9).* 3. அருகன் (பிங்.); Arhat. 4. தலைவன்; chief, chieftain. *"சாமி நன்கு பாடினான்" (சீவக. 2038).* 5. குரு (பிங்.); guru, spiritual preceptor. 6. மூத்தோன் (திவா.); elder, senior, elder brother. 7. மதிப்புறவு (மரியாதை) அன்பு முதலியன குறித்து அழைக்குஞ் சொல்; a term of respectful address, of endearment.

[Pkt. sāmi > த. சாமி]

சாமி[2] *šāmi,* பெ.(n.) தலைவி (பிங்.); lady, mistress.

[Skt. svāmini > த. சாமி]

சாமி[3] *šāmi,* பெ.(n.) 1. பொன் (பிங்.); gold. 2. செல்வம் (சூடா.); wealth.

[Skt. cāmikara > த. சாமி]

சாமி[4] *šāmi,* பெ.(n.) **சாமை** (j) பார்க்க; see *šāmai.*

சாமிகாரியம் *šāmi-kāriyam,* பெ.(n.) 1. முதலாளியி (எசமான)னுடைய வேலை; master's business. *"சேவகர் தமக்கெலாம் சாமிகாரியமே பெலம்" (குமரே. சத. 25).* 2. தெய்வத்தின் வேலை; God's business.

[சாமி + காரியம்]

[Pkt. šāmi > த. சாமி]

சாமிகும்பிடு-தல் *šāmi-kumbiḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. கடவுளை வழிபடுதல்; to worship a deity. 2. தெய்வ வழிபாடு நடத்துதல் (எங்களூர். 95); to conduct the worship of a deity.

[சாமி + கும்பிடு-,]

சாமிசெய்-தல் *šāmišey-,* 1 செ.கு.வி.(v.i.) 1. வற்கட (பஞ்ச)கால முதலியவற்றில் தேவதைகட்கு திருவிழா (உற்சவம்) நடத்துதல்; (J) to celebrate festival for village deities in times of sickness pastilence etc.

[சாமி + செய்-,]

சாமித்துரோகம் *šāmitturōkam,* பெ.(n.) முதலாளிக்கு இரண்டகம் (எசமானத் துரோகம்); treachery. *"சாமித்துரோகஞ் செய்த" (இராமநா. கிட்கி. 17).*

[சாமி + துரோகம்]

சாமிநாதன் *šāmi-nādaṉ,* பெ.(n.) முருகக் கடவுள் (சிவனது குரு) இறைக்குருவன்; Murugan, as the Guru of Šiva.

த.வ. இறைநம்பி

சாமிபோகம் *šāmipōgam,* பெ.(n.) **சுவாமிபோகம்** (C.G.) பார்க்க; see *šuvāmipōkam.*

சாமியம்[1] *šāmiyam,* பெ.(n.) உணவு (போசனம்) (யாழ்.அக.); food.

[Skt. cāmya > த. சாமியம்]

சாமியம்[2] *šāmiyam,* பெ.(n.) ஒப்புமை; resemblance, equality.

[Skt. sāmya > த. சாமியம்]

சாமியம்[2] *šāmiyam,* பெ.(n.) **சுவாமியம்** (R.T.) பார்க்க; see *šuvāmiyam.*

[Skt. svāmya > த. சாமியம்]

சாமியன் *šāmiyan*, பெ.(n.) பிறர் கடனுக்கு ஈடு நிற்போன் (யாழ்.அக.); one who stands surety for another's debt.

சாமியாடி *šāmiyāḍi*, பெ.(n.) தெய்வம் ஆவேசிக்கப் பெற்றவ–ன்–ள் (இ.வ.); a devil - dancer.

த.வ. மருளாடி

[சாமி + ஆடி]

சாமியாடு–தல் *šāmi-y-āḍu-*, 5 செ.கு.வி.(v.i.) தெய்வாவேசத்தால் குறி சொல்லுதல் (கொ.வ.); to dance under inspiration of a demon or deity and give oracular responses.

த.வ. மருளாடுதல்

[சாமி + ஆடு–,]

சாமியார் *šāmiyār*, பெ.(n.) 1. துறவி (சன்னியாசி); secetic. *'ஊருக்குப் புதிதாக வந்திருக்கும் சாமியாரின் மகிமையைப் பற்றி எங்கும் பேச்சு.'* 2. பாதிரியார்; clergyman, parish priest. *'சாமியாரிடம் பாவமன்னிப்புக் கேட்டான்.'*

[சாமி > சாமியார்]

சாமியோடு *šāmi-y-ōḍu*, பெ.(n.) ஒரு வகை ஓடு; (Nāñ) a kind of tile.

[சாமி + ஓடு]

சாமிலாத்து *šāmilāttu*, பெ.(n.) தனித் தனியாகப் பிரிக்கப்படாமல் ஊர்ப் பொதுவாக துய்க்கப்பட்டு ஆவணவாயிலாகஇன்னாருக்கு இவ்வளவென்று வரையறுக்கப்பட்ட விளை நிலம்; (R.T) village land held in common, the produce being enjoyed in specified shares.

[U. shāmilāt > த. சாமிலாத்து]

சாமிலாத்பஞ்சர் *šāmilāt-pañšar*, பெ.(n.) **சாமிலாத்து** பார்க்க; see *šāmilāttu*.

[U. shāmilāt+ū.banjar > த. சாமிலாத்பஞ்சர்]

சாமீகரம் *šāmīkaram*, பெ.(n.) பொன் (பிங்.); gold.

[Skt. cāmikara > த. சாமீகரம்]

சாமீபம் *šāmīpam*, பெ.(n.) 1. அண்மை, அருகு (சமீபம்); proximity, nearness. 2. நான்கு பதவிகளுள் கடவுளை அணுகியிருக்கும் நிலை; (šaiva) the state of being near to God, one of four patavi, q.v. *"சாமீப தொண்டர் பெருமாளே" (திருப்பு. 1140).*

சாமீன்கத்து *šāmīṉ-kattu*, பெ.(n.) **சாமீன்பத்திரம்** (வின்.) பார்க்க; see *šāmīṉ-pattiram*.

சாமீன்தார் *šāmīṉtār*, பெ.(n.) பிணையாளி; surety, bail.

சாமீன்பத்திரம் *šāmīṉ-pattiram*, பெ.(n.) பிணைச்சீட்டு; security-bond, bail-bond.

[U. zamīṉ > த. சாமீன்]

சாமுசித்தன் *šāmušittaṉ*, பெ.(n.) முற்பிறவி நல்வினையால் ஞானத்துடன் பிறந்து சிவனிடத்தில் பத்தி செய்வோன் (சி.சி. பாயி. 3, சிவஞா.); devotee of Šiva with inborn enlightenment owing to the influence of his meritorious deeds in previous births.

[Skt. sam-siddha > த. சாமுசித்தன்]

சாமுத்திரிகம் *šāmuttirikam*, பெ.(n.) மெய் இலக்கண நூல்; physiognomy, art of interpreting marks on the body.

த.வ. உறுப்பமைவுநூல், மேனி இலக்கணநூல்

[Skt. sāmu-drikā > த. சாமுத்திரிகம்]

சாமுத்திரிகாலட்சணம் *šāmuttrikā-latšaṇam*, பெ.(n.) பெண்ணுக்கோ ஆணுக்கோ இருக்க வேண்டிய அங்க அமைப்பு; physical features of a beautiful woman or handsome man., physiognomy.

த.வ. மேனி இலக்கணம்.

சாமுத்திரிகை *šāmuttirikai*, பெ.(n.) **சாமுத்திரிகம்** (வின்.) பார்க்க; see *šāmuttirigam*.

சாமோபாயம் *šāmōpāyam*, பெ.(n.) **சாமம்**² 3 பார்க்க; see *šāmam*.

[Skt. sāmō-pāya > த. சாமோபாயம்]

சாமோற்பலம் *šāmōr̤-palam,* பெ.(n.) யானை நுதலில் அணியும் சிந்தூரம் (பிங்.); decorative red mark on the elephant's forehead.

[perh. sāmōdbhavā > த. சாமோற்பலம்]

சாமோற்பவை *šāmōrpavai,* பெ.(n.) பெண் யானை (உரி.நி.); female elephant.

[Skt. sāmōdbhavā > த. சாமோற்பவை]

சாய்கை *šāykai,* பெ.(n.) தங்குமிடம்; house, rest house.

[U. jāgā > த. சாய்கை]

சாய்மணைக்கதிரை *šāymaṇa-k-katirai,* பெ.(n.) சாய்வு நாற்காலி (இலங்.); easy chair.



சாய *šāya,* பெ.(n.) தேயிலை; tea.

[U. chā > த. சாய]

சாயகம் *šāyakam,* பெ.(n.) அம்பு; arrow. *"இரட்டிச் சாயகங்கள்" (கம்பரா. மகரக்கண்ணன். 18).*

[Skt. sāyaka > த. சாயகம்]

சாயபு *šāyapu,* பெ.(n.) முகமதியர்க்கும் மராட்டிரர்க்கும் உரிய பட்டப்பெயர்; title of Muhammadans and *Mahārāṣtras.*

[U. sāhib > த. சாயபு]

சாயம்பு *šāyampu,* பெ.(n.) **சுவாயம்புமனு** பார்க்க; see *šuvāyampumaṉu.* *"சாயம்பு மைந்தன்" (கந்தபு. அண்டகோ. 26).*

[Skt. svāyambhuva > த. சாயம்பு]

சாயர் *šāyar,* பெ.(n.) 1. நிலவரி நீங்கிய (மாமூல்) தீர்வை (C.G.) customs, duties; current or customary sources of revenue other than land tax. 2. தீர்வை வசூலிப்பவர்; custom-house officer.

[U. šāir > த. சாயர்]

சாயரட்சை *šāya-ratcai,* பெ.(n.) 1. மாலை வேளை; சாயுங்காலம்; evening 2. கோயிலில் நடக்கும் மாலைப்பூசை; evening services in temple.

சாயனபோகம் *šāyaṉa-pōkam,* பெ.(n.) நெடுவரை (தீர்க்கரேகை) (C.G.); longitude.

[Skt. sāyana+bōgam > த. சாயனபோகம்]

சாயா *šāyā,* பெ.(n.) தேநீர் (பே.வ.); tea.

சாயாதனயன் *šāyā-taṉayaṉ,* பெ.(n.) காரி (சனி) (வின்.) (சாயையின் மகன்); saturn, as son of *cāyātēvi.*

[Skt. chāyā+danayan > த. சாயாதனயன்]

சாயாதேவி *šāyā-tēvi,* பெ.(n.) கதிரவன் (சூரியன்) மனைவியருளொருத்தி; a consort of the sun. *"சாயாதேவியைத் தழீஇயினானே" (காசிக. செவ்வாய். 22).*

[Skt. chāyā+dēvi > த. சாயாதேவி]

சாயாபுத்திரன் *šāyā-puttiraṉ,* பெ.(n.) **சாயாதனயன்** (வின்.) பார்க்க; see *šāyā-taṉayaṉ.*

சாயாபுருடன் *šāyā-puruḍaṉ,* பெ.(n.) நிழல்வடிவமாகத் தோன்றுபவன்; person in the form of a shadow. *"சுழிகின்ற சாயா புருடனைப் போல" (திருமந். 2587).*

சாயாலகராகம் *šāyālakarākam,* பெ.(n.) **சாலகராகம்** பார்க்க (திருவாலவா. 54, 13, அரும்.); see *šālakarākam.*

சாயான்னம் *šāyāṉṉam,* பெ.(n.) 1. மாலைப்பொழுது; evening. 2. மாலையிற் செய்யும் வழிபாடு; evening worship. *"பின்னைத் திருந்தவே சாயானஞ்செய்" (சைவச. பொது. 222).*

[Skt. sāyāhna > த. சாயான்னம்]

சாயி¹ *šāyi,* பெ.(n.) மை; ink (C.G.).

[U. siyāhi > த. சாயி]

சாயி² *šāyi,* பெ.(n.) படுத்துக்கிடப்பவன்; recling person used only in compounds, as in சேஷசாயி.

த.வ.படுக்கையன்

[Skt. šāyin > த. சாயி]

சாயித்தியம் *šāyittiyam,* பெ.(n.) **சாகித்தியம்** பார்க்க: see *šākittiyam.*

[Skt. sāhitya > த. சாயித்தியம்]

சாயிதான் *šāyitān,* பெ.(n.) மைக்கூடு; inkstand (C.G.).

[U. siyāhi+dān > த. சாயிதான்]



சாயுச்சியக்காரர் *šāyacciya-k-kārar,* பெ.(n.) இலிங்கதாரிகள் (வின்.) (சாயுச்சியத்தை விரும்புபவர்); *Lingāyats,* as seeking absorption into the deity.

[சாயுச்சியம்+ காரர்]

[Skt. sāyujya > த. சாயுச்சியம்]

சாயுச்சியம் *šāyucciyam,* பெ. (n.) 1. சீவேச்சுவரர்களின் ஒப்புமை; equality or intimate union with God. 2. பதவி நான்கனுள் சீவான்மா பரமான்மாவுடன் ஐக்கியமாகும் நிலை; (šaiva) condition in which the soul becomes absorbed in god head, the highest state of bliss, one of four qatavi, q.v. *"சாரூப்பிய சாயுச்சியமென்று" (சி.சி.8. 18).*

[Skt. sāyujya > த. சாயுச்சியம்]

சார்ங்கபாணி *šārnka-pāṇi,* பெ.(n.) சாரங்க பாணி பார்க்க; see *sāranga-pāṇi. "சங்க வண்ண மன்ன மேனி சார்ங்கபாணி யல்லையே" (திவ். திருச்சந். 15).*

[Skt. šārnga+pāṇi > த. சார்ங்கபாணி]

சார்பார் *šārpār,* பெ.(n.) நான்காய் வகுக்கை (இ.வ.); division into four parts.

[U. cārpāra > த. சார்பார்]

சார்வபூமம் *šārvapūmam,* பெ.(n.) **சார்வபௌமம்** (சங்.அக.) பார்க்க; see *šārvapaumam.*

சார்வபூமன் *šārvapūman,* பெ.(n.) **சார்வபௌமன்** பார்க்க; see *šārvapauman. "தண்ணளிசேர் தேவராசார்வபூமா" (சிவரக. கணபதிகுமார. 4).*

சார்வபௌமம் *šārvapaumam,* பெ.(n.) எண்டிசை யானைகளில் ஒன்றாகிய வட திசையானை (சூடா.); the male elephantof the northern region, one of *aṣṭa-tik-kajam.* q.v.

[Skt. sārvabhauma > த. சார்வபௌமம்]

சார்வபௌமன் *šārva-pauman,* பெ.(n.) மாமன்னன் (சக்கரவர்த்தி); emperor, universal monarch.

[Skt. sārvabhauma > த. சார்வபௌமன்]

சார்வாகம் *šārvākam,* பெ.(n.) காட்சியே அளவையாவதென்றும் நிலம், நீர், தீ, வெளியெனப் பூதம் நான்கே யென்றும் அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றிப் பிரிவால் மாய்வதாய் உடம்பின் கண்ணே அறிவு மதுவின் களிப்புப் போல வெளிப்பட் டழியுமென்றும், மறுமையில்லையென்றும், உடலே (சரீரமே) ஆதன் (ஆன்மா) வென்றும், கடவுள் இல்லையென்றும், இன்பமும் பொருளுமே குறிக்கோள் (புருஷார்த்தங்)க ளென்றும் சொல்லும் உலகாயதமதம் (பிரபோத.); the materialistic philosophy of *cārvāka* which says that perception is the only source of knowledge, that earth, water, fire and air are the only elements,

that life is produced or annihilated according as the elements combine or separate, that there is no life beyond, that there is no soul, that God does not exist and that accumulation of wealth and enjoyment of pleasures are the only goal of life.

[Skt. cārvāka > த. சார்வாகம்]

சார்வாகன் *šārvākaṉ*, பெ.(n.)1. உலகாயத மதத்தை நிறுவியவன்; founder of materialistic philosophy. 2. சார்வாக மதத்தவன்; follower of *cārvāka* philosophy. *"தேகமே ஆன்மாவென்பவன் சார்வாகன்" (த.நி.போ. பக். 259).*

[Skt. cārvāka > த. சார்வாகன்]

சாரங்கபாணி *šāraṅka-pāṇi*, பெ.(n.) சாரங்கத்தைக் கையிலுடைய திருமால்; Tirumal, as holding *saraṅgam* in his hand. *"சாரங்க பாணியே யிவனென் றோதுவார்" (பிரமோத். 13, 65).*

த.வ.விற்கையன்

[Skt. šārṅga-pāṇi > த. சாரங்கபாணி]

சாரசன் *šārašaṉ*, பெ.(n.) கள்ளக்கணவனின் மகன்; பொதுமகன் (சோரபுத்திரன்) (சங்.அக.); bastard, son begotten in adultery.

த.வ.பரத்தை மகன்

[Skt. jāra+ja > த. சாரசன்]

சாரசாதன் *šāra-šātaṉ*, பெ.(n.) **சாரசன்** (சங்.அக.) பார்க்க; see *šārašaṉ*.

[Skt. jāra+jāta > த. சாரசாதன்]

சாரசியம் *šārašiyam*, பெ.(n.) இனிமை (இ.வ.); pleasantness, as of speech.

[Skt. sārasya > த. சாரசியம்]

சாரசுவதம் *šārašuvadam*, பெ.(n.) ஐங் (பஞ்ச)கௌடங்களுள் ஒன்றாய் வட இந்தியாவிலுள்ள நாடு (யாழ்.அக.); an ancient district in northern India, one of *pañca-kauṭam*, q.v.

[Skt. sārasvata > த. சாரசுவதம்]

சாரட்டு *šāraṭṭu*, பெ.(n.) குதிரை பூட்டிய வண்டிவகை; horse-carriage.

த.வ.பரிவண்டி

[U. chariot > த. சாரட்டு]



சாரணம் *šāraṇam*, பெ.(n.) 1. கொடியார் கூந்தல்; seeta's thread - cuscata reflexa. 2. மாழை (உலோகங்)களை பற்பமாக்கல்; the calcination of metals into oxides. 3. ஒன்றின் சாரத்தை மற்றொன்று கவர்ந்து கொள்ளுகை; drawing of the essence by one from another. 4. இரசத்தைக் கட்டி சாரணை தீர்த்தல்; the act of animating a consolidated mercurial pill. 5. வாலையிடல்; the distilling process. (சா.அக.).

சாரணரியக்கம் *šāraṇar-iyakkam*, பெ.(n.) தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளுதல், பிறருக்கு உதவுதல் போன்ற பழக்கங்களையும் பண்புகளையும் பள்ளி மாணவர்களிடையே ஏற்படுத்தும் இயக்கம்; scout movement.

[சாரணர் + இயக்கம்]

சாரணன் *šāraṇaṉ*, பெ.(n.) செய்நஞ்சு வகை; a prepared arsenic. (சா.அக.)

சாரணியர் *šāraṇiyar*, பெ.(n.) சாரணரியக்கச் சிறுமியர்; girl guides.

[சாரணர் ஆ.பா. > சாரணியர் பெ.பா]

சாரத்தின்சத்துரு *šārattiṉ-šatturu*, பெ.(n.) முட்டை (வின்.); egg, as having neutralising property.

[Skt. kṣāra + Satru > த. சாரத்தின் சத்துரு]

சாரத்துவம் *šārattuvam,* பெ.(n.) பரத்தைமை (வின்.); adultery.

[Skt. jāra-tva > த. சாரத்துவம்]

சாரதப்பாட்டு *šārada-p-pāṭṭu,* பெ.(n.) ஒருவகை இசைப்பாட்டு (வின்.); a kind of ode in rhythamical verses sung to melodious tune.

[சாரதம்² + பாட்டு]

[Skt. sārasa> த. சாரதம்]

சாரதம்¹ *šāradam,* பெ.(n.) பூதம் (பிங்.); goblin, demon.

[Perh. sādhaka > த. சாரதம்]

சாரதம்² *šāradam,* பெ.(n.) 1. இன்னோசை; melodious sound, sweet note. 2. **சாரதப் பாட்டு** பார்க்க; see *šārata-p-pāṭṭu.*

[Skt. sārasa > த. சாரதம்]

சாரதர் *šāratar,* பெ.(n.) பூதக்கூட்டத்தார் (பூதகணத்தார்); goblin hosts. *"மிகுசாரத ரிப்பொழுதுஞ் சோர்வுற்றனர்" (சிவரக. நந்திகண. 12).*

[Perh. sādhaka > த. சாரதர்]

சாரதா¹ *šāradā,* பெ.(n.) 1. மாகாளி; false sarsaparilla. 2. ஓர் ஆயுள் வேதநூல்; an ayurvedic science. 3. நீர்த் திப்பிலி; water long-pepper. 4. ஏழிலைப் பாலை; seven leaved milk plant - Alstonia Scholaris. (சா.அக.).

சாரதா² *šāratā,* பெ.(n.) கலைமகள் (சரசுவதி); Sarasvati.

[Skt. šāradā > த. சாரதா]

சாரதாகற்பம் *šāradā-karpam,* பெ.(n.) மனோசிலையைக் கொண்டு செய்யும் ஒரு காய கற்பம்; a medicine prepared with the aid of red sulphur, for purpose of rejuvenation. (சா.அக.).

சாரதி¹ *šāradi,* பெ.(n.) 1. ஆடாதோடை; malabar winer cherry - Audhatoda vesica. 2. துருசு; blue vitriol. 3. சிறுகுமிழ்; small cashmere tree - Gmelina asiatica. 4. ஓரிதழ்த் தாமரை; one-petal lotus - Ionidium suffruticosum. (சா.அக.)

சாரதி² *šāradi,* பெ.(n.) புலவன் (பிங்.); poet, learned man.

[Skt. višārada > த. சாரதி]

சாரதி³ *šāratd,* பெ.(n.) தேர்ப்பாகன்; charpoteer, coachman, driver. *"சாரதி தொழுது சொன்னான்" (கம்பரா. இராவணன் வதை. 10).*

[Skt. sārathi > த. சாரதி]

சாரதை *šāradai,* பெ.(n.) **சாரதா** பார்க்க; see *šāratā.*

சாரந்தா *šārantā,* பெ.(n.) கம்பிக் கருவி வகை; a stringed musical instrument played with a bow.

[U. sārindā > த. சாரந்தா]

சாரப்பெண் *šāra-p-peṉ,* பெ.(n.) பரத்தை (வேசி) (சிவரக. அபுத்தி. 9); harlot.

[சாரம் + பெண்]

[Skt. jārā > த. சாரம்]

சாராத்தியம் *šārāttiyam,* பெ.(n.) தேர் செலுத்துந் தொழில்; profession of charioteering or coach-driving.

[Skt. sārathya > த. சாராத்தியம்]

சாரிசம்¹ *šārišam,* பெ.(n.) **சாரசம்** பார்க்க; see *šārašam.*

[Skt. sarasa > த. சாரிசம்]

சாரிசம்² *šārišam,* பெ.(n.) கறியுப்பு (யாழ்.அக.); common salt.

[Skt. kṣāraka > த. சாரிசம்]

சாரிசாதன் *šārišādaṉ,* பெ.(n.) மான்மணத்தி (கஸ்தூரி) மான் (யாழ்.அக.); musk deer.

[Perh. mārjārijāta > த. சாரிசாதன்]

சாரித்திரம் *šārittiram,* பெ.(n.) 1. ஒழுக்கம்; conduct. *"சாரித்திரமாகிய நீரை வற்றாமற் பாய்த்தி" (சீவக. 962, உரை).* 2. வரலாறு (வின்.); history, life.

[Skt. cāritra > த. சாரித்திரம்]

சாரிதம் *šāridam,* பெ.(n.) **சாரீரம்** (J) பார்க்க; see *šārīram.*

சாரீர *šārira,* பெ.(n.) உடம்பைப் பற்றிய; relating to the body : physical.

சாரீரகம்[1] *šāriragam,* பெ.(n.) 1. உடல் (சாரீரம்); body. 2. உடற்கூறு (அங்காதிபாதம்); anatomy. 3. உடம்பின் தொடர்பானது (சம்பந்தமானது); that which relates to the body. (சா.அக.)

சாரீரகம்[2] *šārirakam,* பெ.(n.) 1. நூற்றெட்டுச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று (சங்.அக.); an upaniṣad one of 108. 2. **பிரமசூத்திரம்** (சங்.அக.) பார்க்க; see *piramašūttiram.* 3. உடல் தொடர்பானது; that which pertains to the body. *"சாரீரக மாவது குல்மம் காசம் முதலிய வியாதிகளால் வருவது" (சிவப்பிர.).*

[Skt. šariraka > த. சாரீரகம்]

சாரீரசம்பத்து *šārira-šampattu,* பெ.(n.) **சாரீரநயம்** பார்க்க; see *šāriranayam.* *'இவனுடைய சாரீரசம்பத்தை என்னென்று சொல்வேன்'.*

[சாரீரம் + சம்பத்து]

சாரீரசுரம் *šārirašuram,* பெ.(n.) உடம்பில் கதகதப்பை யுண்டாக்கிப் பிறகு வரும் காய்ச்சல்; fever preceded by a glowing sensation of the body. (சா.அக.).

[சாரீரம் + சுரம்]

சாரீரசூத்திரம் *šārira-šūttiram,* பெ.(n.) 1. ஒரு வடமொழி ஆயுள் வேதநூல்; an ayurvedic science written in Sanskrit. 2. மனித உடம்பின் அமைப்பையும் வேறுபாடுகளையும் பற்றி சொல்லும் நூல்; the science which deals with the structure and the phenomena of the human body - physiology. (சா.அக.)

[சாரீரம் + சூத்திரம்]

சாரீரநயம் *šārira-nayam,* பெ.(n.) குரலின் மேம்பாடு; excellence in the quality of voice. *'இவனுக்குச் சாரீரநயம் உண்டு'.*

[சாரீரம் + நயம்]

சாரீரம்[1] *šāriram,* பெ.(n.) 1. பாடுதற்குரிய குரல்; singing voice. 2. **சாரீரகம் 3** பார்க்க; see *šāriragam.* *"சாரீரமாவது குல்மம் .... சித்தியாதிகள்" (சி.சி.2, 39, சிவாக்.)*

த.வ. குரல்வளம்

[Skt. šārira > த. சாரீரம்]

சாரீரம்[2] *šāriram,* பெ.(n.) 1. உடல்; body. 2. இடைக்காடர் செய்த தமிழ் மருத்துவ நூல்; a treatise on medicine compiled in Tamil by Idaikkadar, a siddha. 3. உடல் தொடர்பானது; that which relates to the body. 4. ஆதன்; the soul. 5. குரல்; voice. 6. இனிய குரல்; sweet voice (in music) (சா.அக.)

சாரீரவீணை *šārira-viṇai,* பெ.(n.) சரீரமாகிய வீணை; body considered as guitar. *"யாதான்........ சாரீரவீணைக்குரிய நாவாலும் பாடிற்றோ" (சீவக. 658, உரை).*

[சாரீரம் + வீணை]

சாரிலம் *šārilam,* பெ.(n.) மலம்; excrement, feces.

சாருகருணாடசாரங்கம் *šāru-karuṇāḍa-šāraṅgam,* பெ.(n.) பண் வகை (இராகவகை) (பரத. ராக. 104); a specific melody type.

சாருலோசனம் *šārulōšaṉam,* பெ.(n.) மான்; deer.

சாருவர்ணி *šāruvarṇi,* பெ.(n.) முதியார் கூந்தல், கொடியார் கூந்தல்; seeta's thread.

சாருவாகன் *šāruvāgaṉ,* பெ.(n.) **சார்வாகன்** பார்க்க; see *šārvāgaṉ.* *"நல்லவன் சாருவாகனான் சொலு நெறிக்கு" (தாயு. தேன்முகம். 9).*

[Skt. cārvāka > த. சாருவாகன்]

சாரூப்பியம்[1] *šārūppiyam,* பெ.(n.) பதவி நான்கனுள் கடவுளைப் போல் வடிவம் பெறுகை; (šaiva) a blissful condition in which a devotee obtains a form similar to God's one of four patavi, q.v. *"சன்மார்க்க முத்திகள் .... சாரூப்பிய சாயுச்சியமென்று" (சி.சி.8, 18).*

த.வ. இறையுருவெய்தல்

[Skt. sārupya > த. சாரூப்பியம்]

சாரூப்பியம்² *šārūppiyam,* பெ.(n.) சிவாகம நூலின்படி சத்வ குணமாக விருக்கும் ஒரு பதவி; (in saiva philosophy) one of the four states i.e. the third state of bliss or beatitude : identity with the deity in form : assimilation to the deity. c.f. சாயுச்சியம். (சா.அக.)

சாரூபம்¹ *šārūpam,* பெ.(n.) 1. **சாரூப்பியம்** பார்க்க; see *šārūppiyam. "சாரூப தொண்டர்" (திருப்பு. 1140).* 2. இணக்கம் (வின்.); conformity.

[Skt. sārūpa > த. சாரூபம்]

சாரூபம்² *šārūpam,* பெ.(n.) பொன் (மூ.அ.); gold.

[Skt. jātarūpa > த. சாரூபம்]

சாரூபம்³ *šārūpam,* பெ.(n.) 1. பொன்; gold. 2. **சாரூசம்** பார்க்க; see *šārušam.* 3. **சாரூப்பியம்** பார்க்க; see *šārūppiyam.* (சா.அக.).

சாரூபமண்டலம் *šārūpa-mandalam,* பெ.(n.) 1. கதிர் மண்டலம்; orb of the sun. 2. ஆகமப் படி வயிறு, இருதயம் இவ் விரண்டையும் குறிக்கும் உடம்பிலோர் தானம்; (In Agama Philosophy) that region in the human body referring to the stomach and the heart. (சா.அக.)

சாரூரகம் *šārūrakam,* பெ.(n.) **சாருசம்** (வின்.) பார்க்க; see *šārušam.*

[Skt. cāru-rasa > த. சாரூரகம்]

சாரூரசம்¹ *šārūrašam,* பெ.(n.) **சாருசம்** (வின்.) பார்க்க; see *šārūšam.*

[Skt. cāru-rasa > த. சாரூரசம்]

சாரூரசம்² *šārūrašam,* பெ.(n.) 1. கல்லுப்பு; crystallised sea-salt, salt in limps or masses. 2. **சாருசம்** பார்க்க; see *šārušam.* (சா.அக.)

சாரேக்கிசம் *šārēkkisam,* பெ.(n.) செய்த கண்ணாடி; a manufactured glass. (சா.அக.).

சாரேகதம் *šārēkatam,* பெ.(n.) சாம்பலுப் பிலிருந்து சாரத்தைப் பிரித்துத் தயாரிக்கப் படும் நஞ்சை மாற்றும் மருந்து,; an antidote prepared by extracting the alkaline particles from the ashes of plants. (சா.அக.)

சாரேச்சம் *šārēccam,* பெ.(n.) கடலுப்பு; sea-salt. (சா.அக.)

சாரேஞ்சனம் *šārēñšanam,* பெ.(n.) சாரம் சேர்ந்த அஞ்சனம்; an alkaline unguent. (சா.அக.).

சாரேம்பு *šārēmpu,* பெ.(n.) சாரத் திரவம்; an alkaline fluid. (சா.அக.)

சாரைதோடம் *šārai-tōdam,* பெ.(n.) சதையில் ஏற்படும் ஒரு நோய்; a skin disease. (சா.அக.)

சாரோசி *šārōši,* பெ.(n.) நவச்சாரம்; sal ammoniac - Hydrochlorate of ammonia. (சா.அக.)

சால்அய்ந்தா *šāl-ayntā,* பெ.(n.) அடுத்த ஆண்டு (வின்.); next year.

[U. sāl-i-ā-yanda > த. சால்அயந்தா]

சால்குசத்தா *šālkucaštā,* பெ.(n.) சென்ற ஆண்டு (இ.வ.); last year.

[U. sāl-ē-guzashta > த. சால்குசத்தா]

சால்தி *šālti,* பெ.(adj.) நடப்பிலுள்ள; current. *'சால்தி ரிகார்டு' (இ.வ.).*

[mhr. cālatā > த. சால்தி]

[K. cālti > த. சால்தி]

சால்பசால் *šālpašāl,* பெ.(n.) ஆண்டுதோறும் (வின்.); year by year.

[U. sāl-basāl > த. சால்பசால்]

சால்சமாகர்ச் *šāl-camā-karc,* பெ.(n.) ஆண்டு வரவு செலவு (P.T.L); annual receipts and expenditure.

[U. sāljamakarj > த. சால்சமாகர்ச்]

சால்சாப்பு¹ *šālcāppu,* பெ.(n.) சாக்குப் போக்கு, பொருத்தமற்ற ஒப்புரவு (சமாதானம்); lame excuse. *'உடம்பு சரியில்லை என்ற சால்ஜாப்பு' (பே.வ.).*

சால்சாப்பு² *šālcāppu,* பெ.(n.) 1. வினாவிடை; question and answer. 2. வினாவுக்கு விடை; answer. 3. சாக்குப் போக்கு, ஏதோ சால்சாப்பு சொல்லி சமாளிக்கப்பார்க்கிறான் (உ.வ.); lame excuse.

[U. savā+jawāb > த. சால்சாப்பு]

சாலக்கு *šālakku,* பெ.(n.) 1. போலிநடிப்பு, சாலாக்கு காட்டாதே; pretence, show. 2. தந்திரம், உன் சாலாக்கு என்னிடம் செல்லாது; cunning. 3. திறன் (சாமர்த்தியம்) (இ.வ.), இவன் சாலாக்குக்க காரன்; skill, cleverness.

[U. cāiak > த. சாலக்கு]

சாலக *šālaka,* பெ.(n.) தாள வகைகளுளொன்று (சங்.சந். 47); a primary rāga.

சாலகடங்கடர் *šālakadaṅkaḍar,* பெ.(n.) அரக்கர் (சாலகடங்கடை யென்பவளிடம் தோன்றியவர்); Rākṣasas, as born of *sālaghaṭaṅghaṭā. "சாலகடங்கடர் மரபின்றையல்" (கம்பரா. சூர்ப்பண. 50).*

[Skt. sālaghaṭaṅghaṭā > த. சாலகடங்கடர்]

சாலப்பு *šālappu,* பெ.(n.) கொடிவகை; Indian jalap.

[U. jālab > த. சாலப்பு]

சாலம்பபாடாணம்¹ *šālampa-pāḍāṇam,* பெ. (n.) ஒரு வகை நஞ்சு (யாழ்.அக.); a kind of arsenic.

[Skt. sālamba> த. சாலம்பம்]

சாலம்பபாடாணம்² *šālampa-pāṣāṇam,* பெ.(n.) **சாலம்பபாடாணம்** பார்க்க; see *šālampa-pāḍāṇam.*

சாலம்பம் *šālampam,* பெ. (n.) பற்றுக் கோடுள்ளது; that which has a support. *"சாலம்பரகிதமான .... சாந்தபத வ்யோமநிலை" (தாயு. திருவருள்வி. 3).*

[Skt. sālamba > த. சாலம்பம்]

சாலர் *šālar,* பெ.(n.) அலங்காரத் தொங்கல் (வின்.); decorative fringes of cloth, as of a tester.

[U. jhālar > த. சாலர்]



சாலன் *šālaṉ,* பெ.(n.) சாலிவாகனன் (யாழ்.அக.); *Cālivāhaṉa,* from whom the current epoch started.

[Skt. šālivāhana > த. சாலன்]

சாலத்திரி *šālattiri,* பெ.(n.) குதிரை மருத்துவன் (வின்.); horse-doctor.

[U. sālotri > த. சாலத்திரி]

சாலாக்கியசிகிச்சை *šālākkiyašikiccai,* பெ.(n.) உடம்பின் மேற் பகுதியில் உள்ள தலை, கண், காது, மூக்கு, தொண்டை முதலிய உறுப்புகளின் நோய்களைக் குறிப்பிட்டு ஆயுள் வேத முறைப்படி செய்யும் மருத்துவம்; an ayurvedic treatment accorded for diseases of the organs over the clavicular region, such as head, eye, ear, nose, throat etc.

சாலாக்கியதந்திரம் *šālākkiya-tantiram,* பெ.(n.) மார்பின் மேற் பகுதியாகவுள்ள தலையின் உறுப்புகளாகிய முகம், காது, கண், மூக்கு, வாய், தொண்டை இவைகளின் நோய்களைப் பற்றிக் கூறும் ஆயுள் வேத நூல்; an Ayurvedic treatise on the diseases of that portion of the body above the chest such as the face, eyes, ear, nose, mouth and the throat - surgery minor.

[சாலாக்கியம்+தந்திரம்]

சாலாகர் *šālākar,* பெ.(n.) ஆண்டிறுதி (வின்.); end of the year.

[U. sālākhir > த. சாலாகர்]

சாலாக்கு *šālākku,* பெ.(n.) **சாலக்கு** பார்க்க; see *šālakku.*

சாலாங்கபாடாணம் *šālāṅka-pāḍāṇam,* பெ.(n.) ஒரு பிறவிச் செய் நஞ்சு; a mineral poison, a kind of native arsenic.

சாலாங்கம் *šālāṅkam,* பெ. (n.) **சாலாங்கபாடாணம்** பார்க்க; see *šālāṅka-pāḍāṇam.*

சாலாங்கி *šālāṅki,* பெ.(n.) மரப்பாவை (யாழ்.அக.); wooden image.

சாலாபாத்து *šālāpāttu,* பெ.(n.) ஆண்டு தோறும்; annually, year by year (C.G).

[U. šāl-ā-bād > த. சாலாபத்து]

சாலாமிசிரி *šālāmiširi,* பெ.(n.) எகிப்து தேசத்துக் கிழங்குவகை; salep tuber of Eulophia of Egyptian origin.

[U. šālēbmisr > த. சாலாமிசிரி]

சாலிகாநாதம் *šālikānātam,* பெ.(n.) பூர்வமீமாஞ்சகருள் சீவான்மாவினின்று பரமான்மா வேறில்லை என்னுங் கொள்கை யினரின் மதம்; school of pūrva-mimā,msakas who do not accept the postulate of a paramātmanas distinct from the jivātman. *"குருமதம் பாட்டம் சாலிகா நாதக் கொள்கை" (பிரபோத. 11, 6).*

[Skt. šālika-nātha > த. சாலிகாநாதம்]

சாலிகோத்திரம் *šāli-kōttiram,* பெ.(n.) குதிரை (யாழ்.அக.); horse.

[Skt. šāli-hōtra > த. சாலிகோத்திரம்]

சாலியானா *šāliyāṉā,* பெ.அ.(adj.) ஆண்டுதோறும்; (C.G.) annual, yearly.

[U. sāliyāna > த. சாலியானா]

சாலேசரம்[1] *šālēšaram,* பெ.(n.) 1. மாந்தர் களுக்கு 45–50 வயதில் கண்ணொளி மழுங்கி பார்வை குறைந்து தோன்றலாகிய வெள்ளெழுத்து; error of refraction in men of 45-50 year of age in which the eye-sight, from growing inelasticity of the lens is consequently diminished. In popular language it is called old sight-presbyopia. 2. கண் புகைச்சல்; short-sight-Amanrosis. 3. பார்வைக்குறைபாடு; imperfect vision. (சா.அக.)

சாலேசரம்[2] *šālēšaram,* பெ.(n.) வெள் ளெழுத்து (நாற்பதாம் வயதில் வருவது) (இ.வ.); cataract, Hypermetrophia, as usually appearing in the 40th year of a person.

[U. cālisā > த. சாலேசரம்]

சாலோக்கியம் *šālōkkiyam,* பெ.(n.) **சாலோகம்** பார்க்க; see *šālōkam. "சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பியம்" (சி.சி. 8, 18).*

[Skt. sālōkya > த. சாலோக்கியம்]

சாலோகம் *šālōkam,* பெ.(n.) நான்கு பதவிகளுள் கடவுளுடன் ஓரிடத்தில் உறைகை; the blissful condition of being in God's world one of four patavi q.v. *"சாலோக தொண்டர்" (திருப்பு. 1140).*

[Skt. sālōka > த. சாலோகம்]

சாவ்காா் *šāvkār,* பெ.(n.) பணம் கொடுக்கல் வாங்கல் செய்பவன்; native banker, sowcar.

த.வ. பணப்பேரத்தன்

[pkt.sāvakār > த. சாவ்கார்]

சாவகாசம் *šāvakāšam,* பெ.(n.) ஒழிவு, ஒய்வுநேரம் (சௌகரியசமயம்); leisure, opportunity, convenience.

த.வ. ஏந்து நேரம்

[Skt. sāvakāša > த. சாவகாசம்]

சாவகாசமாய் *šāvakāšamāy,* வி.அ.(adj.) விரைவின்றி; leisurely, slowly. *'சாவகாசமாய் வந்தான்'.*

சாவகாசவிதி *šāvakāša-viti,* பெ.(n.) காட்டிய இடத்தில் மட்டுமன்றி வேறிடத்துஞ் செல்லக் கூடிய விதி; a rule which applies not only to the case in question but also to other cases, a rule of common application, opp. to *nir-avakāca-viti. "நீர் ஈண்டு எடுத்துக் காட்டிய வசனங்களெல்லாஞ் சாவகாச விதிவசனங்கள்" (சிவசம. 65).*

[Skt. sāva-kāša-vidhi > த. சாவகாசவிதி]

சாவகாரி *šāvakāri*, பெ.(n.) **சாவ்கார்** பார்க்க; see *šāvkār*.

சாவதானம் *šāvatāṉam*, பெ.(n.) 1. எச்சரிக்கை; care, deliberateness, circumspection. 2. விரைவி (அவசரமி)ன்மை; leisureliness, slowness.

[Skt. sāvadhāna > த. சாவதானம்]

சாவயவம் *šāvayavam*, பெ.(n.) உடல் உறுப்புகளோடு கூடியது; that which is composed of parts. *"சாவயவமெல்லாம் நாசத்தை யடையும்" (சி.சி. 4, 15, சிவாக்.).*

[Skt. sāvayava > த. சாவயவம்]

சாவனம் *šāvaṉam*, பெ.(n.) கதிரவன் தோன்றி மறையும் வரையுள்ள காலம் (சுக்கிரநீதி. 107); time from sunrise to sunset.

[Skt. sāvana > த. சாவனம்]

சாவாது *šāvātu*, பெ.(n.) படி மூலத்துக்குப் பிரதி (வின்.); copy, transcript, duplicate.

[U. sawād > த. சாவாது]

சாவி *šāvi*, பெ.(n.) தாழ்க்கோல்; key.

த.வ. திறவுகோல்

[Port. chiavi > த. சாவி]

சாவிகொலுசு *šāvi-kolušu*, பெ.(n.) சாவிகள் கோக்கப்பட்ட சங்கிலி (கொ.வ.); chain for holding keys.

[சாவி + கொலுசு]

சாவித்திரி *šāvittiri*, பெ.(n.) 1. நான்முகன் (பிரமன்) மனைவியருள் ஒருத்தி; a wife of Brahmā. *"சுநீதியுட் டுளங்கு சாவித்திரி" (காசிக. கற்பிலக். 7).* 2. கலைமகள் (சரசுவதி) (திவா.); Sarasvati. 3. காயத்திரி மந்திரம்; sacred mantra of Gāyatri. 4. சத்தியவான் மனைவியும் அசுவபதியரசன் மகளும் கற்பிற் பேர்பெற்றவளுமான தூய கற்பினள்; the wife of Satyavān and daughter of king Ašvapati, regarded as model of wifely devotion. *"சாவித்திரியென நாமஞ் சாத்தி" (நல். பாரத., சாவித்தி. 5).* 5. இரவு 15 முழுத்தத்துள் பதின்மூன்றாவது (விதான. குணாகுண. 73, உரை); (Astron) the 13th of 15 divisions of night. 6. நூற்றெட்டுச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று (சங்.அக.); name of an upanisad, one of 108.

[Skt. sāvitri > த. சாவித்திரி]

சாவித்திரிசூத்திரம் *šāvittiri-šūttiram*, பெ.(n.) பூணூல் (யாழ்.அக.); sacred thread worn by the twice-born.

[சாவித்திரி+ சூத்திரம்]

சாவித்திரிவிரதம் *šāvittiti-viratam*, பெ.(n.) சாவித்திரி நோற்றவாறு தங்கணவருக்கு நீண்ட வாழ்நாள் வேண்டி மகளிர் ஆடவை மாதவெள்ளுவாவில்(ஆனிப்பௌர்ணிமையில்) நோற்கும் நோன்பு (அபி. சிந்.); a fast observed by married women on the full moon day of Aṉi to secure longevity for their husbands, after the manner of sāvitri.

சாவிதா *šāvitā*, பெ.(n.) பண்டம் முதலியவற்றின் பட்டி; list inventory.

[U. zābita > த. சாவிதா]

சாளேசரம் *šāḷēšaram*, பெ.(n.) **சாலேசரம்** பார்க்க; see *šālēsaram*.

சான்னித்தியம் *šāṉṉittiyam*, பெ.(n.) கடவுள் முதலியவற்றின் தெளிவு (வின்.); manifestation or presence, as of a deity.

[Skt. sānnidhya > த. சான்னித்தியம்]

சானகி[1] *šāṉaki*, பெ.(n.) 1. இராமனது மனைவி யாகிய சீதை (சனகன் மகள்); Sītā, wife of Rāma, as the daughter of Janaka. *"சானகியைக் கரந்த காதல்" (கம்பரா. இராவணன் வதை.239).* 2. பொன்னாங்காணி (மலை.); a plant growing in damp places. 3. கொற்றான்; a plant.

[Skt. jānaki > த. சானகி]

சானுபோகத்தார் *šāṉu-pōkattār*, பெ.(n.) 1. குத்தகைக்காரர் (இ.வ.); lessees of land. 2. தலைமைக் குடிகள்; (R.T) chief tenants.

[Skt. sānubhōga > த. சானுபோகத்தார்]

சிக்கரி *šikkari,* பெ.(n.) குளம்பி (காப்பி)த் தூளுடன் சேர்க்கப்படும் ஒரு வகைக் கிழங்கின் பொடி; chicory. *"சிக்கரி கலக்காத காப்பித்தூள் இருக்கிறதா?"*

சிக்கை *šikkai,* பெ.(n.) **சிட்சை** பார்க்க; see *šiṭšai. "நிருத்தஞ்செவி சிக்கைமூக்கு" (மணிமே. 27, 101).*

[Skt. šikṣā > த. சிக்கை]

சிக்சா *šiksā,* பெ.(n.) மகம்மதியர்கள் குளியலில் பயன்படுத்தும் நறுமணப் பொடி; a perfumed powder used by Muhammadans in bathing. (சா.அக.)

சிகண்டம் *šikaṇḍam,* பெ.(n.) 1. மயிற்றோகை (பிங்.); peacock's tail. 2. தலைமயிர்; tuft of hair on the head. *"சரிகண்ட சிகண்டா" (திருவிசை. திருமாளி.கோயில். 1, 3).*

[Skt. šikhaṇḍa > த. சிகண்டம்]

சிகண்டிசன் *šikaṇḍišaṉ,* பெ.(n.) சித்ரசிகண்டி யென்னும் ஆங்கிரசனது மகனெனக் கருதப்படும் வியாழன் (சூடா); jupiter, as son of šitra-šikaṇḍi or Aṅgiras.

[Skt. citra-šikhaṇḍ-ja > த. சிகண்டிசன்]

சிகத்து *šikattu,* பெ.(n.) பழுதுற்ற நிலை (P.T.L); disrepair.

[Persn. šikast > த. சிகத்து]

சிகமதம் *šigamadam,* பெ.(n.) அரத்தை; galangal - Alpiniagalanga. (சா.அக.)

சிகமதாகிதம் *šikamadākidam,* பெ.(n.) **சிகமதம்** பார்க்க; see *šikamadam.* (சா.அக.)

சிகமதாதிகம் *šikamadādigam,* பெ.(n.) கோங்கிலவு; golden silk cotton tree - Cochlospermum gossypium. (சா.அக.)

சிகரகேவலம் *šigarakēvalam,* பெ.(n.) கருவம்பூ (கிராம்பு); clove - deum caryophylla. (சா.அக.)

சிகரத்தங்கம் *šikara-t-taṅgam,* பெ.(n.) உயர்ந்த பொன்; gold of superior quality : refined gold. (சா.அக.)

சிகரத்தலை *šikara-t-talai,* பெ.(n.) நீண்ட தலை; tower head. (சா.அக.)

[சிகரம் + தலை]

[Skt. šikara> த. சிகரம்]

சிகரத்தேன் *šikara-t-tēṉ,* பெ.(n.) கொம்புத் தேன்; honey collected on branches on the top of trees. (சா.அக.)

[Skt. šikara> த. சிகரம்]

சிகரப்பாகிதம் *šikarappāgidam,* பெ.(n.) **சிகமதாதிகம்** பார்க்க; see *šikamadādigam.*

சிகரப்பாடி *šikara-p-pāḍi,* பெ.(n.) கோட்டம்; Arabian costus - Costus speciosus. (சா.அக.)

சிகரப்பாடிகம் *šikara-p-pādigam,* பெ.(n.) **சிகரப்பாடி** பார்க்க; see *šikara-p-pāḍi.* (சா.அக.)

சிகரம்¹ *šikaram,* பெ.(n.) 1. மலையுச்சி; summit, top of a mountain. *சிகரமுயர்ந்த நெடிய மலை (புறநா. 135, உரை).* 2. மலை (சூடா.); mountain. 3. உயர்ச்சி (சூடா.); height. 4. தலை (பிங்.); head. 5. கோபுரம் (பிங்.); tower, turret. 6. விற்பிடி; (Nāṭya) gesture with one hand. 7. பொறி வளைவின் நடு (C.E.M.); (Engin.) crown.

[Skt. šikara > த. சிகரம்]

சிகரம்² *šikaram,* பெ.(n.) 1. நீர்த்துளி (பிங்.); drop of water, spray. 2. அலை (சூடா.); wave. 3. புளகம் (இலக். அக.); horripilation.

[Skt. šikara > த. சிகரம்]

சிகரம்³ *šigaram,* பெ.(n.) இலவங்கம் (கிராம்பு) (தைலவ. தைல. 105); clove.

த.வ. கருவம்பூ

[Skt. šēkhara > த. சிகரம்]

சிகரம்வை–த்தல் *šigaramvai-,* 4 செ.கு.வி. (v.i.) 1. கோபுரம் முதலியவற்றின் உச்சியிற் கூம்பு அமைத்தல்; to put up knob on a steeple or tower. 2. அணிகலனில் கொண்டை வைத்தல் (வின்.); to furnish with knobs as in ear-ornaments worn by women. 3. மனத்திற் பதியும்படி திறம்படப் பேசுதல் (இ.வ.); to speak in an impressive clever manner.

[சிகரம் + வை–]

சிகரி[1] *šigari,* பெ.(n.) 1. சிகரத்தையுடையதான; மலை; mountain, as being peaked. *"கோல வருவியஞ் சிகரியும்" (பெருங். நரவாண. 1, 182). 2. கோபுரம்;* tower. *"மங்குறோய் சிகரி" (பரத. பாவ். 29).* 3. **புல்லுருவி** (மலை.); honey suckle mistletoe.

*[**Skt.** šikharin > த. சிகரி]*

சிகரி[2] *šigari,* பெ.(n.) எலிவகை (பிங்.); a kind of rat.

*[**Skt.** girikā > த. சிகரி]*

சிகரிகை *šigarigai,* பெ.(n.) **நேர்வாளம்** (சங்.அக.); true croton oil plant.

*[**Skt.** saikharikā > த. சிகரிகை]*

சிகலோகம் *šigalōgam,* பெ.(n.) அகில் (மலை); eagle-wood.

*[**Skt.** vaṃšika +lōha > த. சிகலோகம்]*

சிகாமணி *šigāmaṇi,* பெ.(n.) 1. முடியிலணியும் மணி; gem of a diadem; crest-jewel. *"இந்து சிகாமணி யெங்களை யாள" (திருவாச. 49, 7).* 2. சிறந்தோன்; excellent, distinguished person, generally used in compounds. *"பண்டிதசிகாமணி".*

[சிகா + மணி]

*[**Skt.** šikā> த. சிகா]*

சிகாமோதிரம் *šigāmōdiram,* பெ.(n.) முத்திரைக் கணையாழி (இ.வ.); a ring with initials.

சிகாரியாள் *šigāri-y-āḷ,* பெ.(n.) 1. வேட்டைக் காரன்; hunter. 2. வேட்டையில் உதவியாள்; hunter-boy.

[சிகாரி + ஆள்]

சிகாவர்க்கம் *šigā-varkkam,* பெ.(n.) சுவாலைக் கூட்டம்; shooting flames in thick rows. *"வன்னியின் சிகாவர்க்கம்" (பாரத. காண்டவ. 16).*

சிகாவரம் *šigāvaram,* பெ.(n.) பலாமரம் (மூ.அ.); jack tree.

*[**Skt.** šikhā-vara > த. சிகாவரம்]*

சிகாவலம்[1] *šigāvalam,* பெ.(n.) மயில்; peacock. *"சிகாவல கலாபமேல்" (பாரத. காண்டவ. 21).*

*[**Skt.** šikha-vala > த. சிகாவலம்]*



சிகாவலம்[2] *šigāvalam,* பெ.(n.) பாசி (மலை.); a kind of moss.

*[**Skt.** šaivala > த. சிகாவலம்]*

சிகாவளம் *šigāvaḷam,* பெ.(n.) **சிகாவலம்**[1] பார்க்க; see *šigāvalam. "பொருவேற் சிகாவள கொங்கில் வேளே" (திருப்பு. 1141).*

சிகாவிம்பம் *šigāvimbam,* பெ.(n.) வட்ட வடிவாகிய தலை; round-shaped head. *"இமையோர் மகுடச் சிகாவிம்பமே" (கந்தரந். 80).*

*[**Skt.** šikhā+bimba > த. சிகாவிம்பம்]*

சிகி[1] *šigi,* பெ.(n.) 1. மயில் (பிங்.); peacock. 2. நெருப்பு (பிங்.); fire. 3. செங்கோள் (கேது) (பிங்.); the descending node. 4. மலை (உரி.நி.); mountain. 5. ஆமணக்கு (இலக்.அக.); castor-plant. 6. மரம் (இலக்.அக.); tree.

[Skt. šikhin > த. சிகி]

சிகி[2] *šigi,* பெ.(n.) புத்தர்களுள் ஒருவர் (மணிமே.பக்.369); a Buddha.

[Pāli. šikhī > த. சிகி]

சிகிக்கிரீவம் *šigi-k-kirīvam,* பெ.(n.) **சிகிகண்டம்** (மூ.அ.) பார்க்க; see *šikikaṇḍam.*

சிகிகண்டம் *šigi-kaṇḍam,* பெ.(n.) மயிலின் கழுத்துப்போலும் நிறமுடையதான மயிற்றுத்தம் (மூ.அ.); blue vitriol, as having the colour of peacock's neck.

சிகிச்சம் *šigiccam,* பெ.(n.) 1. மருத்துவம் (வைத்தியம்); pharmacy. 2. தீர்வு (பரிகாரம்); cure. (சா.அக.).

சிகிச்சன் *šigiccaṉ,* பெ.(n.) 1. மருத்துவன் (வைத்தியன்); physician. 2. மருந்து கொடுப்போன் dispenser. (சா.அக.)

சிகிச்சாக்கிரமம் *šigiccā-k-kiramam,* பெ.(n.) நோயின் தீர்வை (பரிகாரத்தை)ப் பற்றிய நெறிமுறைகள்; rules or methods of treatment in diseases. (சா.அக.)

சிகிச்சாசாரம் *šigiccā-šāram,* பெ.(n.) நோயின் மருத்துவத்தைப் (சிகிச்சையை) பற்றியும், மருந்துக்குரிய பண்டங்களைத் தூய்மை செய்யும் முறையைப் பற்றியும் (பதார்த்தங் களை சுத்திக் கிரமப்படி சுத்தி செய்யும் விதத்தையும்) கூறும் வடமொழி மருத்துவ நூல் an ayurvedic medical treatise on the methods of treatment and purification of drugs. (சா.அக.)

சிகிச்சாதரிசனம் *šigiccā-darišaṉam,* பெ.(n.) தட்சப் பிரசாபதி அசுவினி தேவர்களுக்குக் கற்பித்து எடுத்துச் சொல்லிய ஆயுள் வேதநூல்; an ayurvedic science comprising the lectures given out by Daksha prajapathy to their disciples Aswini Devas. (சா.அக.)

சிகிச்சாதீபிகை *šigiccā-dībigai,* பெ.(n.) பிற்காலத்தில் வடமொழியில் செய்த ஒரு மருத்துவ (வைத்திய) நூல்; an ayurvedic book on treatment of diseases written in Sanskrit by subsequent writers. (சா.அக.)

சிகிச்சாபீடம் *šigiccāpīḍam,* பெ.(n.) நோய்க்காக மருந்துகள் கலக்கும் ஓர் உயரமான இடம்; dispensing counter. (சா.அக.)

[சிகிச்சை + பீடம்]

[Skt. cikitsā > த. சிகிச்சா]

சிகிச்சாரத்தினதந்திரம் *šigiccā-rattiṉa-tandiram,* பெ.(n.) அசுவினி தேவர்கள் ஆகிய மருத்துவர்கள் செய்த ஆயுள் வேதநூல்; an ayurvedic science compiled by Aswin kumars. (சா.அக.)

சிகிச்சாவாகடம் *šigiccā-vāgaḍam,* பெ.(n.) நோய்களைக் குணப்படுத்தும் மருந்து முறைகளைச் சொல்லும் நூல்; a book describing the methods of preparation of the several kinds of medicines with their uses and manner of application - pharmacopoeia. (சா.அக.)

சிகிச்சை[1] *šigiccai,* பெ.(n.) தேவசிகிச்சை ராட்சசசிகிச்சை, மானுடசிகிச்சை என்று மூவகையாய் நோய்க்குச் செய்யும் நீக்கவினை (பதார்த்த. 1202); treatment of diseases, of three kinds viz., tēva-cikiccai, rākṣasa-cikiccai, māṉuṭa-cikiccai.

[Skt. cikitsā > த. சிகிச்சை]

சிகிச்சை² *śigiccai,* பெ.(n.) நோய்களைக் குணப்படுத்துவதற்காகச் செய்யப்படும் மருத்துவம் (வைத்தியம்).; treatment.

சிகிச்சைக்காண்டம் *śikiccai-k-kāṇḍam,* பெ.(n.) நோய்களைக் குணப்படுத்த வேண்டிய செய்திகளைப் பற்றிச் சொல்லும் மருத்துவ நூலின் ஒரு பகுதி; a chapter of the medical science dealing with the treatment of diseases. (சா.அக.)

[சிகிச்சை + காண்டம்]

[Skt. *cikitsā* > த. *சிகிச்சை*]

சிகிச்சைக்கிரமம் *śigiccai-k-kiramam,* பெ.(n.) 1. நோயின் நீக்கத்தை (பரிகாரத்தை)ப் பற்றி தேரையர் செய்த தமிழ் மருத்துவ நூல்; a Tamil treatise compiled by Teriyar on treatment of diseases and their cure. 2. பொதுவாக நோயின் நீக்கத்தை (பரிகாரத்தை)ப் பற்றிய நூல்; the science and art dealing in general with curing of diseases - Therapeutics 3. மருத்துவம் (பரிகாரம்) செய்யும் ஒழுங்கு; the order or regularity in the treatment of diseases. (சா.அக.)

சிகிச்சைக்குறி *śigiccai-k-kuṟi,* பெ.(n.) மருத்துவம் (வைத்தியம்) செய்யும்பொழுது நோய் குணப்பட்டு வருவதற்கும் அல்லது வாராததற்கும் நோயாளியிடம் காணப்படும் அடையாளங்கள்; the favourable or unfavourable signs or symptoms exhibited by a patient in the course of treatment by the physician. (சா.அக.)

[சிகிச்சை + குறி]

[Skt. *cikitsā* > த. *சிகிச்சை]*

சிகிச்சைக்குற்றம் *śigiccai-k-kuṟṟam,* பெ.(n.) மருத்துவம் (வைத்தியம்) செய்யுங் காலத்தில் மருத்துவனாலுண்டாகும் தவறுதல்கள்; the defects or faults caused in the course of treatment for which the physician is responsible for his neglect. (சா.அக.)

த.வ. மருத்துவக் குறைபாடு

[சிகிச்சை + குற்றம்]

[Skt. *cikitsā* > த. *சிகிச்சை]*

சிகிச்சைக்கூறு *śigiccai-k-kūṟu,* பெ.(n.) 1. நோய் நீக்க மருத்துவத்திற்காக ஏற்பட்ட பகுதிகள்; the several sub-divisions or departments in the treatment of diseases. 2. **சிகிச்சைவகை** பார்க்க; see *śigiccai-vagai.* (சா.அக.)

[சிகிச்சை + கூறு]

சிகிச்சைபேதம் *śigiccai-bēdam,* பெ.(n.) நோய்களுக்காகச் செய்யும் பல வகையான (விதமான) தீர்வுகள் (பரிகாரங்கள்); the several changes or differences in the treatment afforded for purposes of effecting a cure. (சா.அக.)

[சிகிச்சை + பேதம்]

சிகிச்சைமுறை *śigiccai-muṟai,* பெ.(n.) மருத்துவம் செய்யும் முறை; the method of treatment. (சா.அக.)

[சிகிச்சை + முறை]

சிகிச்சையிலட்சணம் *śigiccai-y-ilaṭcaṇam,* பெ.(n.) மருத்துவச் செய்கைக்கு ஏற்பட்ட ஒரு சிறப்பு; the characteristic beauty underlying the treatment of disease. (சா.அக.)

[சிகிச்சை + இலட்சணம்]

சிகிச்சைவகை *śigiccai-vagai,* பெ.(n.) பொதுவாக எல்லா மருத்துவ நூல்களிலும் நோய்க்காகச் சொல்லியுள்ள தீர்வு (பரிகாரங்)கள்; general remedial measure pointed in medical books. (சா.அக.)

[சிகிச்சை + வகை]

சிகிடிமா *śigiḍimā,* பெ.(n.) கொட்டை முந்திரிகை; cashew nut - Anacardium வகை occidentale. (சா.அக.)

சிகிபாடவரசம் *śigipāḍavaraśam,* பெ.(n.) வாத குன்மத்தைப் போக்குமோர் ஆயுள் வேத மருந்து; an ayurvedic medicine prescribed for dyspepsia. (சா.அக.)

சிகிமுகி *śigimugi,* பெ.(n.) **சிக்கிமுக்கி** பார்க்க; see *śikkimukki.*

சிகில்லி *śigilli,* பெ.(n.) **சிகில்** (வின்.) பார்க்க; see *śigil.*

சிகிலாடு-தல் *śigilāḍu-,* 5 செ.கு.வி.(v.i.) ஆயுதந் துலக்குதல் (வின்.); to polish arms.

சிகிலேகியம் *śigilēgiyam,* பெ.(n.) விக்கல், மூச்சிரைப்புக்காக ஆயுள் வேதப்படி மயிலிறகுப் பற்பம், திப்பிலிப் பொடி (சூரணம்) இவற்றைத் தேனில் கலந்து தரும் மருந்து; an Ayurvedic medicinal powder prepared with peacock's feather baspam (calcined powder) and powder of long pepper. It is prescribed for hiccough and hard breathing. (சா.அக.)

சிகுரம் *śiguram,* பெ.(n.) மயிர் (வின்.); hair.

[Skt. cikūra > த. சிகுரம்]

சிகுவா *śiguvā,* பெ.(n.) நாக்கு; the tongue. (சா.அக.).

சிகுவாக்கிரம் *śiguvākkiram,* பெ.(n.) நுனிநா; tip of the tongue. (சா.அக.)

சிகுவாகண்டரோகம் *śiguvākaṇḍarōgam,* பெ.(n.) நாக்கு வெடித்துப் புண்ணாகும் ஒரு நோய்; a disease of the tongue attended with cracks, ulceration of the tongue and the throat furrowed tongue. (சா.அக.)

சிகுவாசன்னி[1] *śiguvā-śanni,* பெ.(n.) நாவை உள்ளிழுக்கச் செய்யும் ஒருவகை இசிவு நோய் (சன்னி) (வின்.); a kind of high fever in which the tongue is drawn in.

[Skt. jihvā+sanni > த. சிகுவாசன்னி]

சிகுவாசன்னி[2] *śiguvāśanni,* பெ.(n.) நரம்புக் கோளாறினால் நாக்கை உள்ளுக்கிழுத்துக் கொள்வதினால் பேச முடியாமற் செய்யும் ஒரு வகைச் சன்னி; apoplexy or a nervous affection in which the tongue is withdrawn and it cannot be put up straight and consequently the speech is impaired. 2. ஊமைத்தனம்; dumbness. 3. **சிஃகுவீகம்** பார்க்க; see *śikguvīgam.* (சா.அக.)

சிகுவாத்தம்பவாதம் *śiguvāttambavādam,* பெ.(n.) பக்கஊதத்தி (பாரிச வாயுவி)னால் நாக்குக் குளறல்; impaired speech as a result of paralytic stroke., palsy of the tongue. (சா.அக.)

சிகுவாதாபிதம் *śiguvātāpidam,* பெ.(n.) நாக்கு சிவந்து புண்ணாதல்; inflammation of the tongue. (சா.அக.)

சிகுவாபம் *śiguvābam,* பெ.(n.) நாய்; dog. (சா.அக.)

சிகுவாமூலம் *śiguvāmūlam,* பெ.(n.) அடி நாக்கு; the root of the tongue. (சா.அக.)

சிகுவாரோகம் *śiguvā-rōgam,* பெ.(n.) நாக்கைப் பற்றிய நோய்கள்; diseases of the tongue in general. (சா.அக.)

சிகுவாலசலரோகம் *śiguvālaśalarōgam,* பெ.(n.) நாக்கில் கொப்புளங்களை எழுப்பிப் புண்ணை யுண்டாக்கும் நோய்; ulceration of the tongue. (சா.அக.)

சிகுவை *śiguvai,* பெ.(n.) 1. நாக்கு (பிங்.); tongue. 2. வாக்கு (இலக்.அக.); power of speech. 3. **சிங்நுவை 2** (சிவப். கட்.) பார்க்க; see *śiṅṅuvai.*

[Skt. jihvā > த. சிகுவை]

சிகைதாடு *śigaitāḍu,* பெ.(n.) 1. தலையணி வகை (இ.வ.); a head ornament, especially of a child. 2. தலைமயிர்கட்டுங் கயிறு (வின்.); string for fastening the hair.

[sikatāḍu > த. சிகைதாடு]

சிகைமாலை *šigai-mālai,* பெ.(n.) வாசிகை (பிங்.); wreath for the hair or head.

[Skt. šikhā+mālā > த. சிகைமாலை]

சிங்கச்சுவணம் *šinka-c-cuvaṇam,* பெ.(n.) ஒருவகை உயர்தரப் பொன்; a kind of superior gold. *"தீதுதீர் சிறப்பிற் சிங்கச் சுவணமென் றோசைபோகிய வொண் பொன்" (பெருங். வத்தவ. 11, 23).*

[Skt. siṃhala+svarna > த. சிங்கச் சுவணம்]

சிங்கணந்தம் *šiṅgaṇandam,* பெ.(n.) **சிங்கநந்தம்** (பரத. தாள. 3) பார்க்க; see *šinkanantam.*

சிங்கத்திசை *šiṅga-t-tišai,* பெ.(n.) தெற்கு (வின்.); south.

[சிங்கம் + திசை]

[Skt. šikhā > த. சிங்க(ம்)]

சிங்கதீபம் *šinka-tipam,* பெ.(n.) கோயில் விளக்கு வகை (பரத. ஒழிபி. 41–43); a kind of temple lamp.

த.வ. அரிமா விளக்கு

[சிங்கம் + தீபம்.]

[Skt. *šikhā* > த. *சிங்கம்*]



சிங்கநகக்கை *šiṅga-naga-k-kai,* பெ.(n.) ஒரு கையின் விரல்களை அரிமாவின் நகங்கள் போல் அகற்றி வளைத்தலாகிய அவிநயக்கை வகை (பரத. பாவ. 38); gesture with one hand in which the fingers are so held as to resemble a lion's claws.

த.வ. அரிமா நகக்கை

[சிங்கம் + நகம்+கை]

[Skt. *šikhā+naga* > த. *சிங்கநகம்*]

சிங்கநகம் *šiṅ¥a-nagam,* பெ.(n.) **சிங்க நகக்கை** (வின்.) பார்க்க; see *šiṅga-naga-k-kai.*

சிங்கநந்தம் *šiṅga-nandam,* பெ.(n.) முப்பத்திரண்டு மாத்திரை கொண்ட துணைத்தாளவகை (தாளசமுத்திரம்); (mus.) an intricate variety of time measure consisting of 32 mättirai, one of five *upa-tālam*, q.v.

[Skt. siṃha-nandana > த. சிங்க நந்தம்]

சிங்கநாதம்¹ *šiṅga-nādam,.* பெ.(n.) 1. அரிமா முழக்கம்; lion's roar. 2. போரில் வீரர் செய்யும் உரப்பல் (கர்ச்சனை) முழக்கம்; war-whoop, battle - shout. *"தலைவர் சிங்கநாதமும்" (கம்பரா. பிரமாத். 104).* 3. தொல்லை (தொந்தரவு) (இ.வ.); trouble, vexation.

[சிங்கம் +நாதம்.]

சிங்கநாதம்² *šiṅga-nādam,* பெ.(n.) ஊதுகொம்பு; horn, a wind-instrument. *"உடன்சிங்கநாதங் கிடந்தசைய" (திருவிளை. உலவாக். 7).*

[சிங்கம் + நாதம்.]

[Skt. *šikhā* > த. *சிங்கம்*]



சிங்கநோக்கு *śiṅga-nōkku,* பெ.(n.) 1. அரிமாவைப் போலக் கழுத்தைத் திருப்பிப் பார்க்கை; looking over the shoulder with neck turned, as a lion. *"சிங்க நோக்கிற் பணையெருத் துறழ நோக்கி" (சீவக. 1569).* 2. அரிமாநோக்கம் (இறை. 4, 57); a mode of setting a sūtra in a treatise.

த.வ. அரிமா நோக்கு

[சிங்கம் + நோக்கு]

சிங்கப்பல் *śiṅga-p-pal,* பெ.(n.) முன்புறம் நீண்டுள்ள துணைப்பல்; projecting extra tooth.

சிங்கப்பிரான் *śiṅga-p-pirāṉ,* பெ.(n.) மாந்தவுடலும் அரிமா தலையுங் கொண்ட தோற்றம் (நரசிங்கமூர்த்தி); Tirumāl in his man-lion incarnation. *"சிங்கப்பிரான் பெருமை யாராயுஞ் சீர்மைத்தே" (திவ். திருவாய். 2,8,9).*

சிங்கப்பெருமாள் *śiṅga-p-perumāḷ,* பெ.(n.) 1. **சிங்கப்பிரான்** பார்க்க; see *śiṅga-p-pirāṉ.* 2. துளசி (மலை.); holy basil.

சிங்கபாதம் *śiṅga-pādam,* பெ.(n.) அரிமாவின் அடிபோன்று அமைக்கப்படும் கால்; legs of vessels or vessel-stands in the shape of lion's feet. *"தாரைத்தாள் வட்டில் ஒன்று கருக்கிரண்டுஞ் சிங்கபாத மிரண்டும் உட்பட "*(S.I.I.II. 5).

த.வ. அரிமாக் கால்

[சிங்கம் + பாதம்.]

[Skt. *śikhā* > த. *சிங்கம்*]

சிங்கம்[1] *śiṅgam,* பெ.(n.) 1. மிக்க வன்மையுள்ள ஒரு விலங்கு; lion. *"மாற்றுச் சிங்கத்து மறக்குரல்" (பெருங். உஞ்சைக். 47, 111).* 2. அரிமா ஓரை (சிங்கராசி) (பிங்.); Leo, the fifth sigh of the zodiac. 3. வேளாளரின் ஒரு பட்டப்பெயர் (J); a title, chiefly among vēḷāḷas as in பாலசிங்கம்.

[Skt. siṃha > த. சிங்கம்]



சிங்கம்[2] *śiṅgam,* பெ.(n.) ஆடாதோடை (மலை.); malabar - nut.

[Skt. siṃhi > த. சிங்கம்]

சிங்கம்[3] *śiṅgam,* பெ.(n.) 1. கொம்பு; horn. 2. வாழையின் இளங்கன்று; tender plantain. *'வாழைக்குச் சிங்கம் வெடித்திருக்கிறது' (இ.வ.).* 3. கிட்டிப்புள் விளையாட்டில் வழங்கும் ஏழு அல்லது பத்துக்கிட்டி நீளங்கொண்ட அளவு (j); distance of seven or sometimes ten sticks in the game of tip-cat, measured from where the cat falls to the goal.

[Skt. sṛṅga > த. சிங்கம்]

சிங்கம்[4] *śiṅgam,* பெ.(n.) ஒரு வகை நஞ்சு (மூ.அ.); a mineral poison.

சிங்கம்[5] *śiṅgam,* பெ.(n.) ஒருவகை நறுமண (வாசனை)ப்பண்டம் (அக.நி.); an aromatic.

சிங்கம்பட்டு *śiṅgam-paṭṭu,* பெ.(n.) நாணயத்தைத் தூக்கியெறிந்து அது விழும் பக்கங்களைக் கொண்டு வெற்றி தோல்விகளை உறுதி செய்யும் பந்தய விளையாட்டு (இ.வ.); a kind of betting game in which small coins are tossed up heads winning and tails losing.

[சிங்கம் + பட்டு]

சிங்கம்புள் *śiṅgam-puḷ,* பெ.(n.) கிட்டிப்புள் (நாஞ்சில்); the game of tip-cat.

[சிங்கம் + புள்.]

சிங்கமடங்கல் *śiṅga-maḍaṅgal,* பெ.(n.) சிங்கக்குட்டி; young of lion. *"மலைபக விடிக்குஞ் சிங்க மடங்கலை" (சீவக. 392).*

த.வ. அரிமா ஏறு

சிங்கமடி-த்தல் *śiṅgam-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) கிட்டியடித்தல் (J); to toss up and strike the cat in the game of tip-cat.

[சிங்கம் + அடி-.]

சிங்கமதாணி *śiṅga-madāṇi,* பெ.(n.) வெற்றிவேந்தன் மார்பிலணியும் அரிமா (சிங்க)முகப் பதக்கம் (சங்.அக.); lion-faced ornament for breast worn by a victorious king.

த.வ. அரிமா பதக்கம்

சிங்கமுகக்காப்பு *śiṅga-muga-k-kāppu,* பெ.(n.) அரிமா (சிங்க) முகத்தைக் கொண்ட தோடா (வின்.); bracelet with a lion's face on the clasp.

[சிங்கம்+முகம் + காப்பு]

[Skt. *śikhā* > த. *சிங்கம்*]

சிங்கமுகப்பல்லக்கு *śiṅga-muga-p-pallakku,* பெ.(n.) அரிமா (சிங்க) முகவடிவை முகப்பிற் கொண்ட பல்லக்கு வகை (வின்.); palanquin with the face of a lion carved in front.

த.வ. அரிமுகச்சிவிகை

[சிங்கமுகம் + பல்லக்கு]



சிங்கமுகம்வை-த்தல் *śiṅga-mugam-vai-,* 4 செ.கு.வி.(v.i.) சினங்கொண்டிருத்தல்; to put on an angry look (Nāñ).

த.வ. சீறுதல்

[சிங்கமுகம் + வை]

சிங்கமுகவோடம் *śiṅga-muga-vōḍam,* பெ.(n.) சிங்கத்தின் உருவை முகப்பிற் கொண்ட தோணி; boat with a lion-shaped prow. *"யானைமுக வோடமும் சிங்கமுக வோடமுமென்னும் இவற்றின் ஏறி" (சிலப். 13. 177. உரை).*

த.வ. அரிமுகஓடம்

[சிங்கம்+முகம் +ஓடம்.]

[Skt. *śikhā* > த. *சிங்கம்*]



சிங்கமுகாசுரன் *śiṅga-mugāśuran,* பெ.(n.) முருகக் கடவுளால் வதஞ் செய்யப் பெற்றவனும் அரிமா (சிங்க) முகத்தையுடையவனுமாகிய ஓர் அசுரன் (கந்தபு.); lion-faced Asura slain by Skanda.

த.வ. அரிமுகஅரக்கன்

[Skt. siṃhamukhāsura > த. சிங்கமுகாசுரன்]

சிங்கமுகி *śiṅgamugi,* பெ.(n.) பொன்னூமத்தை (மலை.); thorn-apple.

[Skt. siṃha-mukhi > த. சிங்கமுகி]

சிங்கலை *śiṅgalai,* பெ.(n.) வில்லங்கம் முதலியன (இ.வ.); encumbrance, tangle of difficulties.

[Skt. śṛṅkhalā > த. சிங்கலை]

சிங்கவாகனி *śiṅga-vāgaṉi,* பெ.(n.) அரிமாவை ஊர்தியாகக் கொண்டவளாகக் கருதப் பெறும் கொற்றவை; Durgā, as lion-mounted. *"சிங்கவாகனி வந்து செந்திருமா கொடிருக்கவே" (கலிங். 306. புதுப்.)*

[Skt. siṃha+vāhani > த. சிங்கவாகனி]

சிங்காசனம் *śiṅgāśaṉam,* பெ.(n.) 1.அரிமா தாங்குவதுபோல் அமைக்கப்பெற்ற இருக்கை; throns supported by carved lions. *"சிங்காசனமும் பொங்குபூந் தவிசும்" (பெருங். உஞ்சைக். 57, 60).* 2. கேசரியாசனம் எனும் ஒக முறை; (yōga) yōgic posture.

த.வ. அரியணை

[Skt. siṃhāsana > த. சிங்காசனம்]

சிங்காதனம் *śiṅgātaṉam,* பெ.(n.) 1. **சிங்காசனம் 1** பார்க்க; see *śiṅgāśaṉam*[1]. *"தண்டுஞ் சிவிகையுஞ் சிங்காதனமுந் தமிழ்க் களித்த கண்டன்" (தனிப்பா. ii.* 127. 322). 2. **சிங்காசனம் 2** (திருமந். 562) பார்க்க; see *śiṅgāsaṉam*[2].

த.வ. அரியணை

சிங்காரக்கண்டி *śiṅgāra-k-kaṇḍi,* பெ.(n.) நெடுங்கோடு கொண்ட புடைவை வகை (கொ.வ.); a kind of saree with long stripes.

[சிங்காரம் +கண்டி]

சிங்காரக்கழு *śiṅgāra-k-kaḻu,* பெ.(n.) கொலைக் கழுவகை; a kind of impaling-stake (J).

[சிங்காரம் +கழு]

சிங்காரக்காரன் *śiṅgāra-k-kāraṉ,* பெ.(n.) புனைவான (அலங்கார) உடையுள்ளவன்; fop gaily - dressed person.

த.வ. அணிசெய்ஆடையன்

[சிங்காரம் +காரன்]

சிங்காரத்தாட்டுப்பத்திரி *śiṅgāra-t-tāṭṭu-p-pattiri,* பெ.(n.) சேலைவகை (கொ.வ.); a kind of saree.

[சிங்காரம் +தாட்டுப்பத்திரி]

சிங்காரத்தோட்டம் *śiṅgāra-t-tōṭṭam,* பெ.(n.) மனமகிழ்ப்பூங்கா (உத்தியானவனம்); pleasure-garden.

த.வ. எழில்வனம்

சிங்காரத்தோப்பு *śiṅgāra-t-tōppu,* பெ.(n.) **சிங்காரத்தோட்டம்** (I.M.P.S.a. 52) பார்க்க; see *śiṅgāra-t-tōṭṭam.*

[சிங்காரம் +தோப்பு]

சிங்காரநடை *śiṅgāra-naḍai,* பெ.(n.) 1. ஒய்யார நடை; graceful gait. *"நடன சிங்கார நடையழகின்" (தனிப்பா. i, 146, 45).* 2. பெருமித நடை (கொ.வ.); affected gait.

த.வ. ஒயில் நடை

[சிங்காரம் + நடை]

சிங்காரப்பாய்ச்சல் *śiṅgāra-p-pāyccal,* பெ.(n.) குழந்தைகளின் துள்ளுநடை (j); lively, frisky movement as of children.

த.வ. துள்ளல் நடை

[சிங்காரம் +பாய்ச்சல்]

சிங்காரப்பேச்சு *śiṅgāra-p-pēccu,* பெ.(n.) 1. ஒய்யார (அலங்கார)மான பேச்சு (கொ.வ.); flowery speech. 2. காதற் (சரசப்) பேச்சு; amorous talk. 3. வேடிக்கைப் பேச்சு; witty, humorous talk.

த.வ. அலப்புரை

[*சிங்காரம் + பேச்சு*]

சிங்காரம் *śiṅgāram,* பெ.(n.) 1. ஒன்பான் சுவையுள் (நவரசத்துள்) ஒன்றாகிய இன்பச் சுவை (சூடா.); (poet) sentiment of love, one of nava-rašam, q.v. 2. ஒப்பனை (அலங் காரம்); decoration, embellishment, beauty, especially artificial. *"கொத்தலர்தார் மார்பன் கொலுவிருக்குஞ் சிங்காரம்" (பணவிடு. 85).*

த.வ. ஒப்பனை

[Skt. śṛṅgāra > த. சிங்காரம்]

சிங்காரி[1]-த்தல் *śiṅgāri-,* 11 செ.கு.வி. (v.t.) 1. ஒப்பனை செய்தல் (அலங்கரித்தல்); to decorate, beautify. *"உன்னைச் சிங்காரித் துன்னழகைப் பாராமல்".* 2. ஒப்பனை (அலங்கரி)த் துரைத்தல்; to use flowery language.

த.வ. ஒப்பனைசெய்தல்

சிங்காரி[2] *śiṅgāri,* பெ.(n.) அலங்கார முடையவ-ன்-ள் (வின்.); gaily dressed man or woman.

த.வ. மினுக்கி

[Skt. śṛṅgārin > த. சிங்காரி]

சிங்காவலோகனம் *śiṅgāvalōkaṉam,* பெ.(n.) **சிங்கநோக்கு, 2** (சி.சி.5, 9, சிவாக்) பார்க்க; *see śiṅga-nōkku,2.*

[Skt. siṃha+ava-lōkana > த. சிங்காவலோகனம்]

சிங்கிகைபுதல்வன் *śiṅgigai-pudalvaṉ,* பெ.(n.) சிங்கிகையின் புதல்வனான செங்கோள் (கேது) ; kētu, as the son of siṃhikā. *"சிங்கிகைபுதல்வ னென்றும்" (மச்சபு. புவனகோச. 27).*

சிங்கிணிகோசு *śiṅgiṇi-kōšu,* பெ.(n.) பம்பர விளையாட்டில் பம்பரத்தைச் சுற்றும் போதே கயிற்றால் தூக்கிப் பிடித்ததைக் குறிக்கும் சொல் (கொ.வ.); a term used in the game of tops to denote the lifting up of a spinning top with a cord and catching it.

த.வ. ஏந்துபம்பரம்



சிங்கிநாதம் *śiṅgi-nādam,* பெ.(n.) 1. இடம்பஞ் செய்கை (பிங்.); assuming airs, display of vanity. 2. தன் விருப்ப (சுவாதந்திரிய)த்தை மேற்கொள்கை (வின்.); wantonness, taking liberties. 3. வீண்காலங்கழிக்கை (இ.வ.); wasting or idling time.

[Skt. siṃha-nāda > த. சிங்கிநாதம்]

சிங்கிவேரம் *śiṅgivēram,* பெ.(n.) சுக்கு (மூ.அ.); dried ginger.

[Skt. śṛṅga-bēra > த. சிங்கிவேரம்]

சிச்சன் *śiccaṉ,* பெ.(n.) மாணாக்கன்; disciple. *"ஆசாரியன் சிச்ச னாருயிரைப் பேணுமவன்" (உபதேசரத். 65).*

[Skt. śiṣya > த. சிச்சன்]

சிசிரம் *śiśiram,* பெ.(n.) 1. **சிசிரருது** பார்க்க; see *śiśirarudu. "வெருவிப்போய்ச் சிசிரம் நீங்கி" (கம்பரா. மாரீசன். 99).* 2. சந்தனம் (மலை.); sandalwood.

[Skt. śiśira > த. சிசிரம்]

சிசிரருது *śiśirarudu,* பெ.(n.) கும்பம் (மாசி), மீனம் (பங்குனி) மாதங்களாகிய பின்பனிக்காலம்; cool season, the months of *māsi* and *paṅguṉi*, one of six rudu. q.v.

த.வ. பின்பனி

[Skt. śiśra+rudu> த. சிசிரருது]

சிசினம் *śiśiṉam,* பெ.(n.) ஆண்குறி; male generative organ.

[Skt. śiśna > த. சிசினம்]

சிசு[1] *śiśu,* பெ.(n.) குழவி; baby, young of animals. *"சிசுக்களி னறிவிலாச் சிந்தை" (பாரத. குருகுல. 65).*

த.வ. குழந்தை

[Skt. śiśu > த. சிசு]

சிசு[2] *śisu,* பெ.(n.) 1. கரு அல்லது கருப்பக் குழந்தை (சிசு); embryo. 2. கருப்பிண்டம்; foetus in the womb. 3. பிறந்த குழந்தை; new born baby. 4. எட்டு அகவைக்குட்பட்ட குழந்தை; child below eight years of age. 5. சிசு மரம்; sissoo - Dalbergia sissu. (சா.அக.)

சிசுகத்தி *śiśukatti,* பெ.(n.) கரு(சிசு)க்களை அழிக்கை (இ.வ.); infaniticide, causing abortion or miscarriage.

த.வ. கருவழிப்பு

[Skt. śiśu-hatyā > த. சிசுகத்தி]

சிசுகத்தி *śisukatti,* பெ.(n.) **சிசுவத்தி** பார்க்க; see *śisu-vatti.* (சா.அக.)

சிசுகம் *śisugam,* பெ.(n.) 1. ஒரு மரம்; an unknown tree. 2. கடற் பன்றி; sea-hog. 3. முதலை; crocodile, whale. (சா.அக.)

சிசுகாகிதம் *śisukāgidam,* பெ.(n.) வெள்ளை யெள்ளு; white gingelly seed. (சா.அக.)

சிசுசிதை-தல் *śisu-śidai, -*,4 செ. குன்றாவி (v.t.) கருவழிதல்; abortion, miscarriage. (சா.அக.)

[சிசு + சிதை-]

சிசுதானேதிரும்பு-தல் *śisutāṉē-tirumbu-,* 5 செ.கு.வி. (v.t.) கருப்பைக்குள் குழந்தை யானது தனக்குத் தானே திரும்புதல்; to the spontaneous evolution of the child in the womb. (சா.அக.)

[சிசு + தானே+திரும்பு-.]

சிசுதோடம் *śisu-tōdam.,* பெ.(n.) குழந்தை களுக்குக் கருப்பத்தில் அல்லது பிறக்கும் பொழுதே ஏற்பட்ட குற்ற (தோச)ங்கள்; congenital diseases or morbid diathesis acquired by children during their birth. (சா.அக.)

சிசுத்துவம் *śisuttuvam,* பெ.(n.) குழந்தைப் பருவம்; childhood, in fancy. (சா.அக.)

சிசுநாயகம் *śisu-nāyagam,* பெ.(n.) சிறுவர் ஆளும் ஆட்சி (வின்.); government by juveniles, used in contempt.

[சிசு + நாயகம்.]

சிசுநோய் *śisu-nōy,* பெ.(n.) 1. குழந்தை களுக்கு ஏற்படும் பொதுவான நோய்கள்; diseases of children in general. 2. குழந்தைகளின் உடம்பை அடுத்த நோய்கள்; constitutional diseases of children. (சா.அக.)

[சிசு + நோய்.]

[Skt. *śiśu* > *த. சிசு*]

சிசுபுடம் *śisu-puḍam,* பெ.(n.) இருபது வறட்டியினால் போடும் புடம்; calcination effected with twenty cow-dung cakes. (சா.அக.)

[சிசு +புடம்.]

[Skt. *śiśu* > *த. சிசு*]

சிசுமரம் *śisu-maram,* பெ.(n.) 1. நூக்கமரம்; cissum tree-Dalbergia sesso. 2. **சிசு** பார்க்க; see *śisu.* (சா.அக.)

[சிசு + மரம்.]

[Skt. *śiśu* > *த. சிசு*]

சிசுமரி-த்தல் šišu-mari-, 4 செ.கு.வி.(v.i.) குழந்தை கருப்பத்தில் இறத்தல்; to die as of a child in the womb still-born. (சா.அக.)

[சிசு + மரி-,]

[Skt. *śiśu* > *த. சிசு*]

சிசுமாந்தம் *śisu-māndam,* பெ.(n.) 1. குழந்தைகளுக்குக் காணும் மாந்தநோய்; indigestion in children. 2. மாந்தக் கொடி; an unknown creeper. (சா.அக.)

த.வ. பிள்ளைமாந்தம்

[சிசு + மாந்தம்.]

சிசுமாரம் *śisu-māram,* பெ.(n.) 1. கடற்பன்றி; porpoise, sea-hog. 2. முதலை; crocodile, the Gangetic dolphin. 3. முதலையைப் போன்ற ஒரு பெருமீன்; a large fish of the species of whale. (சா.அக.)

சிசுமூலிகம் *śiśu-mūligam,* பெ.(n.) 1. நூலாஞ்செடி; cotton tree. 2. நூலிலைச் செடி; doodooga - polyalthia cerasoides. (சா.அக.)

சிசுமூலிகா *śiśu-mūligā,* பெ.(n.) **சிசுமூலிகம்** பார்க்க; see *śisumūligam.* (சா.அக.)

சிசுரம் *śiśuram,* பெ.(n.) 1. கிலுகிலுப்பை; rattle-wort. 2. புளி; tamarind. (சா.அக.)

சிசுரவாரி *śisura-vāri,* பெ.(n.) **சிசுரம்** பார்க்க; see *śiśuram.* (சா.அக.)

சிசுராலிகம் *śisurāligam,* பெ.(n.) ஆவிரை; tanner's senna - Cassia auriculata. (சா.அக.)

சிசுருட்சை[1] *śisu-rutcai,* பெ.(n.) (நோயாளி, முதியவர் முதலியோருக்குச் செய்யும்) பணிவிடை; caring : nursing (esp. the sick and the old). *'ஒரு மாதம் நான் நோய் வாய்ப்பட்டிருந்தபோது என் மனைவி செய்த சிசுருட்சைகளை மறக்க முடியாது' (உ.வ.)*

த.வ. பணிவிடை

சிசுருட்சை[2] *śiśurutcai,* பெ.(n.) குற்றேவல்; service, nursing.

[Skt. śuśrūṣā > த. சிசுருட்சை]

சிசுரோகம் *śisu-rōgam,* பெ.(n.) குழந்தைக்கு வரும் நோய்; diseases attacking especially children, diseases peculiar to children. (சா.அக.)

த.வ. குழந்தைநோய்

[சிசு + ரோகம்]

சிசுவத்தி *śiśu-vatti,* பெ.(n.) **சிசுவதை** பார்க்க; see *śisuvadai.*

சிசுவதை *śisu-vadai,* பெ.(n.) 1. கருவிலிருக்கும் குழந்தையைக் கரைக்கை; causing abortion, aborting. 2. குழந்தையைக் கொல்லுகை; child murder, infanticide.

த.வ. குழந்தைக்கொலை

[சிசு + வதை.]

சிசுவாகடம் *śiśu-vāgaḍam,* பெ.(n.) குழந்தை நோய்களைப் பற்றிய மருத்துவநூல்; a treatise on children's diseases.

த.வ. குழந்தை மருத்துவ நூல்

[சிசு + வாகடம்.]

சிசுவாரிணி *śiśu-vāriṇi,* பெ.(n.) அப்பொழுது பிறந்த குழந்தை; new-born baby. (சா.அக.)

சிசுவாருணி *śiśu-vāruṇi,* பெ.(n.) **சிசுவாரிணி** பார்க்க; see *śiśuvāriṇi.* (சா.அக.)

சிசுவிசேதம் *śiśuviśēdam,* பெ.(n.) அறுவை செய்து குழந்தையை வெளிப்படுத்தல்; the dismembering of the foetus in the womb in order to admit or facilitate delivery - Embryotomy. (சா.அக.)

சிசுவியற்கைத்திருப்பம் *śiśu-v-iyaṟkai-t-tiruppam,* பெ.(n.) 1. கருப்பைக்குள் குழந்தை தனக்குத் தானே திரும்புகை; the spontaneous evolution of the foetus in the womb. 2. **சிசுதானேதிரும்பு-தல்** பார்க்க; see *śiśutāṉē-tirumbu-,.* (சா.அக.)

சிசுணம் *śisuṇam,* பெ.(n.) ஆதொண்டை; climbing caper, - Capparis horrida. (சா.அக.)

சிஞ்சிதம் *śiñjidam,* பெ.(n.) அணிகலன்களின் ஓசை; நகையொலி; tinkling of ornaments. *"நாணொலியோடணி சிஞ்சிதமும் மெழ" (பாரத. பதினேழாம். 64).*

[Skt. śiñjita > த. சிஞ்சிதம்]

சிஞ்சினி *śiñjiṉi,* பெ.(n.) வில்லின் நாண்; bow-string. *"சிஞ்சினீமுகந் நெறித்தனன்" (பாரத. காண்டவ. 9).*

[Skt. śiñjinī > த. சிஞ்சினி]



சிஞ்சுபம் *śiñśupam,* பெ.(n.) நூக்கு மரம்; shisham. *"சிஞ்சுபவ்வனத்திடை" (கம்பரா. சடாயுவு. 146).*

[Skt. śiṃśupā > த. சிஞ்சுபம்]

சிஞ்சை[1] *śiñjai,* பெ.(n.) முழக்கம்; rumbling sound. *"சிஞ்சை யிடங்கரை" (கல்லா. 26, 24).*

[Skt. śiñjā > த. சிஞ்சை]

சிஞ்சை[2] *śiñjai,* பெ.(n.) 1. புளி (சங்.அக.); tamarind. 2. புளிப்பு; sourness. *"சிஞ்சையிலின் பலியுமாகும்" (தைலவ. தைல. 105).*

[Skt. ciñcā > த. சிஞ்சை]

சிஞ்ஞாசு *śiññāśu,* பெ.(n.) உண்மையான அறிவைப் பெற விரும்புவோன்; a seeker of true knowledge, enquirer. *"சிஞ்ஞாசு ஞானவா னென்றிரண்டு பேர்கள்" (கைவல். சந்தேக. 162).*

த.வ. மெய்ம்மைவிரும்பி

[Skt. jijñāsu > த. சிஞ்ஞாசு]

சிட்சகன் *śiḍśagaṉ,* பெ.(n.) 1. கற்பிப்போன்; teacher, instructor. 2. தண்டிப்பவன் (சங்.அக.); punishing authority.

[Skt. śikṣaka > த. சிட்சகன்]

சிட்சி-த்தல் *śiṭśi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. தண்டித்தல்; to reprove, punish. 2. கற்பித்தல் (சங்.அக.); to teach, train.

[Skt. śikṣā > த. சிட்சி-த்தல்]

சிட்சை *śiṭcai,* பெ.(n.) 1. தண்டனை; reproof, punishment. 2. பயிற்சி; teaching, training. 3. இசை (சங்கீத)ப்பயிற்சி முதலியன; lessons in music and dancing. *'அவளுக்குச் சிட்சை சொல்லி வைக்கிறான்'.* 4. எழுத்துக்களின் பலுக்கம் (உச்சரிப்பு) முதலியவற்றை உணர்த்துவதும் வேதாங்கம் ஆறனுள் ஒன்றுமான நூல்;

treatise dealing with vēdic phonology, one of six *vēdāṅgam*, q.v. *"சிட்சை சோதிடாதி மற்றங்க நூல்" (தாயு. ஆகார. 10).*

[Skt. śikṣā > த. சிட்சை]

சிட்சைரட்சை *śiṭcai-raṭcai,* பெ.(n.) அடிப்பும் அணைப்பும் (வின்.); punishment and protection.

[Skt. śikṣā+rakṣā > த. சிட்சைரட்சை]

சிட்டபரிபாலனம் *śiṭṭa-pari-pālaṉam,* பெ.(n.) நல்லோரைக் காப்பாற்றுகை (வின்.); protection of the good.

சிட்டர் *śiṭṭar,* பெ.(n.) 1. மறை (வேத வேதாங்கங்)களைக் கற்றுவல்ல பெரியோர்; learned persons well versed in vēdic lore. *"சிட்டர் வாழ் தில்லை" (தேவா. 2, 10).* 2. கல்வி நிரம்பிய சான்றோர்; wise, learned men. *"அரசன் சிட்டரை யெல்லாங் கூவி" (இறை. பக். 6).*

[Skt. śiṣṭa > த. சிட்டர்]

சிட்டன் *śiṭṭaṉ,* பெ.(n.) மாணாக்கன்; pupil, disciple. *"சிட்ட னிவ்வாறு சொல்ல" (கைவல். தத்துவ. 87).*

[Skt. śiṣya > த. சிட்டன்]

சிட்டாசாரம் *śiṭṭāśāram,* பெ.(n.) பெரியோர் கையாண்ட வழக்கம்; established line of conduct or usage of the virtuous as an authority in the absence of 'śruti' and 'smṛti'. *"சிட்டாசரத்தோடும் முரனுவன வன்றி" (சித். மராகண். 21).*

[Skt. śiṣṭa+ā-cāra > த. சிட்டாசாரம்]

சிட்டி-த்தல் *śiṭṭi-,* 4. செ.குன்றாவி.(v.t.) 1. படைத்தல்; to create, make, produce 2. கற்பனை செய்தல்; to fabricate, as a document இது சிருட்டித்த ஆவணம். *"தரைவிசும்பைச் சிட்டித்த விருக்கன்" (திருப்பு. 419).*

த.வ. படைத்தல்

[Skt. sṛṣṭi > த. சிட்டி-.]

சித்தசமாதானம் *śittaśamādāṉam,* பெ.(n.) மனவமைதி (வின்.); peace of mind, tranquility.

த.வ. மனவமைதி

[சித்தம் + சமானம்.]

சித்தசமுன்னதி *śitta-samuṉṉadi,* பெ.(n.) செருக்கு; egotism.

[Skt. citta+sam-un-nati > த. சித்தசமுன்னதி]

சித்தசரணம் *śitta-śaraṇam,* பெ.(n.) சித்தரை அடைக்கலம் புகுகை (சீவக. 1, உரை); seeking refuge with the Siddhas or the perfected ones.

[Skt. siddha+śaraṇa > த. சித்தசரணம்]

சித்தசன் *śittaśaṉ,* பெ.(n.) மன்மதன் (மனத்தில் தோன்றுபவன்); Kāma, as mind-born. *"சித்தசற் புரிதரு செங்கண்மால்" (கந்தபு. மார்க்கண்டேயப். 281).*

[Skt. citta-ja > த. சித்தசன்]

சித்தசாதனம் *śitta-śādaṉām,* பெ.(n.) 1. முன்பே எண்ணிய (சிந்தித்த) தொன்றைப் பின்னுஞ் செய்து முடிக்கை (சாதிக்கை); fallacy of proving what has already been proved. *"அதுவுஞ் சித்தசாதனம்" (சித். மரபுகண்.).* 2. வெண்கடுகு (மலை.); white mustard.

[Skt. siddha+sādhana > த. சித்தசாதனம்]

சித்தசாந்தி *śitta-śāndi,* பெ.(n.) மனவமைதி; stoical tranquility of mind. *"சித்த சாந்தியுடனே சரிப்போரும்" (அருட்பா. i, நெஞ்சறி. 689).*

[Skt. siddha+sānti > த. சித்தசாந்தி]

சித்தசுத்தி *śitta-śutti,* பெ.(n.) மனத்தூய்மை; purity of mind. *"சித்தசுத்தியும் பல்வகைச் சித்தியும் பயக்கும்" (திருவிளை. மாயப். 32).*

[Skt. siddha+śutti > த. சித்தசுத்தி]

சித்தசுவாதீனம் *šitta-šuvādīṉam,* பெ.(n.) மனம் வசப்பட்டிருக்கை (கொ.வ.); control over one's mind; sanity.

த.வ. மனத் தெளிவு

[Skt. siddha+šuvātin > த. சித்தசுவாதீனம்]

சித்தடக்கம் *šittaḍakkam,* பெ.(n.) **சிற்றடக்கம்** பார்க்க; see *šiṟṟaḍakkam.* *'கட்டடம் சித்தடக்கமாக இருக்கிறது' (இ.வ.)*

சித்தத்தியாகம் *šitta-t-tiyāgam,* பெ.(n.) **சித்தநிவர்த்தி** பார்க்க; see *šittanivartti.*

சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார் *šittattai-c-civaṉpālēvaittār,* பெ.(n.) உள்ளத்தைச் சிவனிடத்தே வைத்தவர் தொகையடியாருள் ஒரு கூட்டத்தார் (பெரியபு); those who are absorbed in the contemplation of Šivan, one of *togai-y-aḍiyār,* q.v.

சித்தநிவர்த்தி *šitta-nivartti,* பெ.(n.) எல்லாப் பொருளிலும் பற்றுவிடுகை; subjugation of the will; renunciation of all worldly attachments and desires (j).

சித்தப்படுத்து-தல் *šitta-p-paḍuttu-,* 5 செ.குன்றாவி.(v.t.) அணிய (ஆயத்த)ஞ் செய்தல் (இ.வ.); to prepare, make ready.

சித்தப்பிரமை *šitta-p-piramai,* பெ.(n.) 1. மனமயக்கம் (வின்.); infatuation, stupefaction. 2. கோட்டி (பைத்தியம்) (சங்.அக.); insanity. 3. இசிவு (சன்னி)வகை (இ.வ.); delirium.

[Skt. citta+bhrama > த. சித்தப்பிரமை]

சித்தபரமேட்டிகள் *šitta-paramēṭṭikaḷ,* பெ.(n.) சித்தர் (சீவக. 962, உரை); supernals, perfected ones.

சித்தபரிகர்மம் *šitta-parikarmam,* பெ.(n.) மைத்திரி, கருணை, முதிதை, இகழ்ச்சி என்ற நான்கு குணங்கள் (பரிபா. 4, 1, உரை) (சித்தத்தை அலங்கரிப்பவை); virtues which cleanse the mind, as adorning the mind, four in number, viz., *maittiri, karuṇai, mudidai, igaḻcci.*

[Skt. citta+parikarman > த. சித்தபரிகர்மம்]

சித்தபுத்தி *šitta-putti,* பெ.(n.) மனம்; mind. *"துரியோதனன் சொன்ன பருஷவாக்கியம் நின் சித்தபுத்தியில் வைக்கத்தக்க தில்லை" (பாரதவெண். 116, உரை).*

சித்தபுருசன் *šitta-purušaṉ,* பெ.(n.) **சித்தன்**[1] பார்க்க; see *šittaṉ.*

சித்தமுகம் *šitta-mugam,* பெ.(n.) கிலுகிலுப்பை (மலை); laburnum-leaved rattlewort.

[Skt. siddha+mukha > த. சித்தமுகம்]

சித்தயோகம் *šitta-yōgam,* பெ.(n.) ஆகூழ் (யோகம்) ஆறனுள் ஒன்று (விதான. குணாகுண. 19, உரை); an auspicious conjunction of a week day with a nakṣatra, one of six yōgam, q.v.

[Skt. siddha+yōga > த. சித்தயோகம்]

சித்தலயம் *šitta-layam,* பெ.(n.) பரம் பொருளுடன் மனமொன்றுகை (வின்.); complete subjugation of the will and identification of the soul with the supreme ascetic.

சித்தவிகாரம் *šitta-vigāram,* பெ.(n.) மனமாறுபாடு (மனோவிகாரம்); changing mental mood. *"சித்தவிகாரக் கலக்கந் தெளிவித்த" (திருவாச. 10, 6).*

சித்தவிப்பிரமம் *šitta-vippiramam,* பெ.(n.) இசிவு (சன்னி) வகை (யாழ்.அக.); fainting fits, syncope.

[Skt. citta-vibhrama > த. சித்தவிப்பிரமம்]

சித்தவிருத்தி *šittavirutti,* பெ.(n.) மனப்பாங்கு (இ.வ.); temperament, disposition.

[Skt. citta-vṛtti > த. சித்தவிருத்தி]

சித்தவிலாசம் *šitta-vilāšam,* பெ.(n.) உலகப்பற்றில் ஈடுபடுகை (வின்.); yielding to the desires of earthly passion, without control, opp. to cittalayam.

சித்தாசித்தம் *šittāšittam,* பெ.(n.) ஐயத்துக் கிடமான பொருளை ஏதுவாகக் கொண்டு கணிப்பு (அனுமானம்) செய்வதாகிய ஏதுப்போலிவகை; a fallacious reasoning in which cātaṉam or the minor term given is doubtful. *"சித்தாசித்தமாவ தேதுச் சங்கயமாய்ச் சாதித்தல்" (மணிமே. 29, 203, 4).*

த.வ ஐயக்காரணஎதிராடல்

[Skt. siddhāsiddha > த. சித்தாசித்தம்]

சித்தாதிகள் *šittātikaḷ,* பெ.(n.) பொன்னாக்கம் (இரசவாதம்) முதலான அரிய வித்தைகள் கை வந்தவரெனக் கருதப்படும் ஒகி (யோகி)கள்; a sect of yōgis who are believed to possess supernatural or magical powers such as transmuting iron into gold. *"மேம்படுசித்தாதிகள் செய்வித்தை யிலும்" (பணவிடு. 101).*

சித்தாந்தத்தொகை *šittānta-t-tōgai,* பெ.(n.) தமிழ் மொழியில் செய்த ஒரு புத்த நூல்; (சி.சி.பா.சௌத்.2,உரை); a treatise in Tamil on Buddhism.

சித்தாந்தசாத்திரம் *šittānda-šāttiram,* பெ.(n.) சிவனியக் கொண்முடிபை (சைவ சித்தாந்தத்தை)க் கூறுவனவாகிய மெய் கண்ட சாத்திர முதலியன (சங்.அக.); treatises on the šaiva siddhānta philosophy especially the 14 text books known as the *meykaṇḍa-šāttiram.*

[Skt.siddhānta+šāstra>த.சித்தாந்தசாத்திரம்]

சித்தாந்தசிகாமணி *šittānda-šigāmaṇi,* பெ.(n.) 1. சிவப்பிரகாசரால் 17-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட ஒரு வீரசைவநூல்; a vīra-saiva treatise by sivappiragāšar, in the 17th C. 2. அம்பல வாணதேசிகரியற்றியதும் பண்டார சாத்திரத்தொன்றுமாகிய கொண்முடிபு (சித்தாந்த) நூல்; a šaiva siddhānda treatise by Ampala-vāṇa-dēšikar, one of paṇḍāra-šāttiram, q.v.

[Skt. siddhānta + šikhā-maṇi > த. சித்தாந்தசிகாமணி]

சித்தாந்தசைவம் *šittānda-šaivam,* பெ.(n.) பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மையை மேற்கொண்டு மும்மலங்களும் ஆற்றல் கெட ஆன்மா சத்திநிபாதமடைந்து திருவருளால் முத்திபெறுமென்று கொள்வதாகிய சைவ சமய பேதம் (சி.சி. 4, 13, உரை); a philosophical system of the Saivaites which recognises the three entities of Šiva, soul and māyā and holds that salvation is for those who have subdued the threefold mala and obtained God's grace.

த.வ. கொண்முடிபுச்சிவனியம்

சித்தாந்தமோகம் *šittāndamōgam,* பெ.(n.) பேரோசனை என்னும் மாழை (உலோக) வகை (வின்.); a kind of ore.

சித்தாயதனம் *šittāyadaṉam,* பெ.(n.) விசயார்த்த மலையின் கீழ்த் திசையில் மலைமுகட்டில் உள்ள முதன்மையான அருகன் கோயில்; the jaina shrine on the foremost peak east of the Vijayārtta mountain. *"சிவத்திறை யுறையுஞ் சித்ராயதன நற்கூடம்" (மேருமந். 620).*

[Skt. siddāya-tana > த. சித்தாயதனம்]

சித்தார் *šittār,* பெ.(n.) அறமன்ற அழைப்பு; summons.

[Port. citar > த. சித்தார்]

சித்தார்த்தம் *šittārttam,* பெ.(n.) வெண் கடுகு (பிங்.); white mustard.

[Skt. siddhārtha > த. சித்தார்த்தம்]

சித்தார்த்தன் *šittārttaṉ,* பெ.(n.) வீடுபேற்றை (நிர்வாணத்தை)யடைந்த புத்தன்; Buddha, as one who realised the great objective of life.

[Skt. siddhārtha > த. சித்தார்த்தன்]

சித்தார்த்தி *šittārtti,* பெ.(n.) வடமொழி யாளரின் ஆண்டு அறுபதனுள் ஐம்பத்து மூன்றாவது; the 53rd year of the jupitar cycle.

[Skt. siddhārthin > த. சித்தார்த்தி]

சித்தாரி-த்தல் *šittāri-,* 4 செ.கு.வி.(v.i.) வழக்கு தொடுத்தல்; to file a suit or case in court (J).

[Port. citar > த. சித்தாரி-,]

சித்திகணபதி *šitti-gaṉapadi,* பெ.(n.) **சித்திவிநாயகன்** (வின்.) பார்க்க; see *šitti-vināyagaṉ.*

சித்தியடை-தல் *šitti-yaḍai-,* 2 செ.கு.வி.(v.i.) 1. பயன (அனுகூலம)டைதல்; to succeed. 2. வீடுபேறு அடைதல்; to obtain salvation. to die, euphemistically said of ascetics.

சித்தியாரோகணம் *šitti-yā-rōgaṇam,* பெ.(n.) உடன்கட்டை யேறுகை (யாழ்.அக.); suttee.

சித்திரகாயம் *šittirakāyam,* பெ.(n.) புலி; tiger, panther. *"கடும்புலிகளயர்ந்து சித்திரகாயமெனும் பெயர்விளக்க" (அழகர்கல. 1).*

[Skt. citra-kāya > த. சித்திரகாயம்]

சித்திரகாரன் *šittirakāraṉ,* பெ.(n.) 1. ஓவியன்; சித்திரமெழுதுவோன்; painter. portrait-painter. *"சித்திரகாரருஞ் செல்கெனச் சொல்லி" (பெருங். வத்தவ. 3, 28).* 2. சிற்பி (சூடா.); sculptor, engraver.

சித்திரகாரி *šittira-kāri,* பெ.(n.) **சித்திரகாரன்** (மணிமே. 28, 38, அரும்.) பார்க்க; see *šittirakāraṉ.*

[Skt. citra+kārin > த. சித்திரகாரி]

சித்திரகுத்தன் *šittirakuttaṉ,* பெ.(n.) இயமதருமனிடம் ஆன்மாக்களின் நற்செயல் தீச்செயல்களைக் கணக்கிலெழுதிப் படிப்போன்; Yama's officer who records the good and evil deeds of human beings. *"சித்திரகுத்த னெழுத்தால்" (திவ். பெரியாழ். 5, 2, 2).*

[Skt. citra-gupta > த. சித்திரகுத்தன்]

சித்திரகோசாவளி *šittira-kōsāvaḷi,* பெ.(n.) வீணை வகை (பரத. ஒழிபி. 15); a kind of lute.

சித்திரபானு *šittirapāṉu,* பெ.(n.) 1. நெருப்பு (பிங்.); fire. 2. கதிவன் (சூரியன்) (சூடா.); sun. 3. வடமொழியாளரின் ஆண்டு அறுபதனுள் பதினாறாவது (சூடா.); the 16th year of the jupiter cycle.

[Skt. citrabhānu > த. சித்திரபானு]

சித்திரபுண்டரம் *šittira-puṇḍaram,* பெ.(n.) மாலியர்கள் நெற்றியில் அணிந்துக் (தரித்துக்) கொள்ளும் திருமண்காப்பு (கொ.வ.); the sacred mark worn on the forehead by vaiṣṇavites.

த.வ. திருமண்

சித்திரபுத்திரன் *šittira-puttiraṉ,* பெ.(n.) **சித்திரகுத்தன்** (இ.வ.) பார்க்க; see *šittira-kuttaṉ.*

சித்திரரேகை *šittira-rēgai,* பெ.(n.) 1. உள்ளங்கை வரிகைகளுள் ஒன்று (வின்.); a line in palm of hand significant in palmistry. 2. **அரசு** (மலை) பார்க்க; see *arasu.*

[Skt. *citra+rēgai* > த. *சித்திரரேகை*]

சித்திரவதம் *šittira-vadam,* பெ.(n.) அலைப்புக்கொலை (வேதனைப்படுத்திக் கொல்லுகை); butchery, horrible slaughter; torture to death. *"இராமன்*

வெஞ்சரஞ் சித்திரவதஞ்செயக் கண்டு தீர்தியோ" (கம்பரா. விபீடண. 12).

த.வ. அலைகொலை

சித்திரவதை *šittira-vadai,* பெ.(n.) **சித்திரவதம்** (சங்.அக.) பார்க்க; see *šittiravadam.*

சித்திரவாராத்தி *šittira-vāratti,* பெ.(n.) கண்டங்கத்தரி (மலை); a thorny plant with diffuse branches.

[Skt. kṣudra+vārtāka > த. சித்திரவாராத்தி]

சித்திராபூரணை *šittirā-pūraṇai,* பெ.(n.) **சித்திராபௌர்ணிமை** (சிலப். 5, 64, அரும்.) பார்க்க; see *šittirā-paurṇimai.*

த.வ. மேழவெள்ளுவா

சித்திராபௌர்ணிமை *šittirā-paurṇimai,* பெ.(n.) மேழ (சித்திரை) மாதத்து வெள்ளுவாவில் நிகழுந் திருவிழா; festival celebrated on the fullmoon-day in the month of cittirai.

த.வ. மேழத் திருவிழா

சித்திராம்பரி *šittirāmpari,* பெ.(n.) மேளகர்த்தாக்களுளொன்று (சங்.சந்.); a primary rāga.

சித்திரிணி *šittiriṇi,* பெ.(n.) **சித்தினி** (கொக்கோ. 1. 7. 10) பார்க்க; see *šittiṇi.*

[Skt. citriṇi > த. சித்திரிணி]

சித்திவிநாயகன் *šitti-vināyagaṉ,* பெ.(n.) பிள்ளையார் (கணபதி); a manifestation of *Gaṇēša.*

சித்துவேலை *šittuvēlai,* பெ.(n.) மாயவித்தை; தந்திரவித்தை; magic, sleight of hand. *'ஆளை மறையவைக்கும் சித்து வேலை'.*

[சித்து + வேலை.]

சித்தேசன் *šittēšaṉ,* பெ.(n.) பிறைநிலா உருவுள்ள தலைக்குட்டை அணிந்த ஒருவகைப் பிச்சைக்காரன் (Tinn); a class of mendicants, wearing crescent-like metal pieces on their head-dress.

சித்தேசி *šittēši,* பெ.(n.) **சித்தேசன்** (இ.வ.) பார்க்க; see *šittēšaṉ.*

சித்தௌடதம் *šittauḍadam,* பெ.(n.) சித்தமருத்துவ முறைப்படி அமைந்த மருந்து; medicine prepared according to citta-vaittiyam.

சிதடன் *šitaḍaṉ,* பெ.(n.) 1. குருடன்; a blind man. 2. அறிவில்லான்; an idiot. (சா.அக.)

சிதளம் *šitaḷam,* பெ.(n.) கோடகசாலை; a drug-rungia repens. (சா.அக.)

சிதளி *šitaḷi,* பெ.(n.) பொன்னாங்காணி; sessile plant - Illecebrum sessile. (சா.அக.)

சிதாக்கியா *šitākkiyā,* பெ.(n.) கிளுவை; commen teal - Querquedula crecca. (சா.அக.)

சிதாகாசம்[1] *šitākāšam,* பெ.(n.) 1. பேரறிவுற்ற நிலை; intelligence which knows no bounds. 2. அறிவுவெளி (ஞானாகாசம்) (in philosophy); the wide sphere of pure intelligence. 3. முழுமை (பூரணம்) (In adwaita philosophy); the all - pervading spirit or God or the intellectual ether. 4. பாழ் (சூனிய) நிலை. (சா.அக.) nothingness, vacuum, non-entity.

சிதாகாசம்[2] *šitākāšam,* பெ.(n.) அறிவுவெளி (ஞானவெளி) (யாழ்.அக.); region of pure intelligence.

[Skt. cit+ā-kāša > த. சிதாகாசம்]

சிதாகாஞ்சி *šitākañši,* பெ.(n.) காட்டு முல்லை; wild jasmine - Jasminum angustifolium. (சா.அக.)

சிதாசமியம் *šitāšamiyam,* பெ.(n.) கருங்கொள்; black horse-gram - Cassia absus. (சா.அக.)

சிதாடம் *šitādam,* பெ.(n.) பல்லீறு அழற்சியினால் குருதி (இரத்தம்) ஒழுகி, பல்லை விழச் செய்யுமோர் பல் நோய்; a disease of the gum from which bloody discharges take place from the gums which begin to root out and gradually fall off. (சா.அக.)

சிதாத்தானம் *šitā-t-tāṉam,* பெ.(n.) சிதைக்குத் தென்கிழக்கு மூலை; the south-east corner of funeral pyre. *"அங்கிமூலை சிதாத்தானம்" (தத்துவப். 102).*

[சிதை + தானம்.]

சிதாபாங்கம் *šitāpāṅgam,* பெ.(n.) மயில்; peacock. (சா.அக.)

சிதாபாசம் *šitāpāšam,* பெ.(n.) 1. ஆதன் (ஆத்துமா); the soul. 2. உயிர் (சீவன்); life. (சா.அக.)

சிதாபு *šitābu,* பெ.(n.) பொன்னாங்காணி; sessile - Illecebrum sessile. (சா.அக.)

சிதாமலா *šitāmalā,* பெ.(n.) சர்க்கரை; sugar. (சா.அக.)

சிதாம்புசம் *šitāmbušam,* பெ.(n.) வெண்டாமரை (மலை.); white lotus.

[Skt. sita+ambu-ja > த. சிதாம்புசம்]

சிதாம்பூகம் *šitāmbūgam,* பெ.(n.) ஆள்வாடைத் தட்டி; an unknown plant. (சா.அக.)

சிதாம்போசம் *šitāmbōšam,* பெ.(n.) **சிதாம்புசம்** (மலை.) பார்க்க; see *šidāmbušam.*

[Skt. sita+ambhō-ja > த. சிதாம் போசம்]

சிதாயதம் *šitāyadam,* பெ.(n.) ஐந்தெழுத்து மந்திரம் (பஞ்சாட்சரம்); the five mystic letters capable of destroying the mind and its faculties. (சா.அக.)

சிதாயம் *šitāyam,* பெ.(n.) கடலை; Bengal gram - cicer arietinum.(சா.அக.)

சிதாரி *šitāri,* பெ.(n.) பவள மறுகு; red couch grass. (சா.அக.)

சிதாரிகம் *šitārigam,* பெ.(n.) **சிதாரி** பார்க்க; see *šitāri.* (சா.அக.)

சிதாலதம் *šitālatam,* பெ.(n.) 1. கருப்பறுகு; black cynodon grass - cynodon dactylon. 2. வெள்ளறுகு; white cynodon grass. (சா.அக.)

சிதாவிபரி *šitāvipari,* பெ.(n.) இதிரக் கிழங்கு; wild yam root - Dracontium polyphyllum. (சா.அக.)

சிதானகம் *šitāṉagam,* பெ.(n.) கருடக் கொடி; Indian birth - wort, Aristolochia indica. (சா.அக.)

சிதானந்தம் *šitāṉandam,* பெ.(n.) அகமகிழ்வு (ஞானானந்தம்); spiritual happiness. (சா.அக.)

சிதானனன் *šitāṉaṉaṉ,* பெ.(n.) கழுலன் (கருடன்); brahmini kite, Haliastur indus. (சா.அக.)

சிதி[1] *šiti,* பெ.(n.) 1. வெண்மை; whiteness. 2. கருப்பு; blackness. (சா.அக.)

சிதி[2] *šiti,* பெ.(n.) கோடாரி (யாழ்.அக.); axe.

[Skt. chidi > த. சிதி]

சிதிச்சதம் *šiticcadam,* பெ.(n.) பாலைத் தண்ணீரினின்று பிரிக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்ததாகக் கருதப்படும் ஓதிம (அன்ன)ப் பறவை; swan of the olden days capable of seperating the milk from water. (சா.அக.)

த.வ. ஓதிமம்

சிதிரம் *šitiram,* பெ.(n.) நெருப்பு; fire.

சிதிலம் *šitilam,* பெ.(n.) 1. தளரல்; loosening. 2. கீல் தளரல்; loosening of joints.

3. பதனழிவு; rottenness. 4. நெகிழ்தல்; relaxing. (சா.அக.)

சிதிலாவர்த்தவாதம் *śitilāvartta-vādam,* பெ.(n.) சீதளம், செரிமானமாகக் கடின மானவற்றை உண்பதால் நரம்புகள் தொல்லை (வேதனை) கண்டு, அனைத்து மூட்டுகளையும் தளரச் செய்யும் ஓர் ஊதை (வாத) நோய்; a kind of rheumatism tending of affect the nerves and loosen the joints, due to eating cold and indigestible substances. (சா.அக.)

சிதுமலர் *śitumalar,* பெ.(n.) தண்ணீர் விட்டான்; water-root - Asparagus recemosus. (சா.அக.)

சிதுமலி *śitumali,* பெ.(n.) பச்சைக் கடுக்காய்; raw or fresh gall-nut. (சா.அக.)

சிதேந்திரம் *śitēndiram,* பெ.(n.) கோயில் (பிங்.); temple.

[Skt. jinēndra > த. சிதேந்திரம்]

சிதேந்திரியன் *śitēndiriyaṉ,* பெ.(n.) புலன்களை வென்றோன்; one who has subdued his senses. *"கங்குற்போ தகன்றபின் னிவர் சிதேந்திரியர்" (பிரபோத. 10, 11).*

[Skt. jita+indriya > த. சிதேந்திரியன்]

சிந்தனாவாதி *śindaṉāvādi,* பெ.(n.) ஆழமாக (தீவிரமாக) எண்ணி(சிந்தித்து)க் கருத்து களை வெளிப்படுத்துபவர்; thinker, intellectual.

[சிந்தணை > சிந்தனா + வாதி.]

சிந்தாக்கிராந்தன் *śindā-k-kirāndaṉ,* பெ.(n.) கவலையுள் ஆழ்ந்தவன் (கொ.வ.); one stricken with grief.

[Skt. cintā+ā-krānta > த. சிந்தாக்கிராந்தன்]

சிந்தாகுலம் *śindākulam,* பெ.(n.) மனக் கவலை; care, deep sorrow. *"சிந்தாகுல முற்றெனனோ வென்னை வாட்டத திருத்துவதே" (திருக்கோ. 12).*

[Skt. cintā+ā-kula > த. சிந்தாகுலம்]

சிந்தாசமத்தி *śindā-śamatti,* பெ.(n.) பிறர் கருத்தினை நுட்பமதியால் உணர்ந்து பாடும் பா(கவி)த்திறமை (தமிழ்நா. பக். 5); trial of poetic skill by which the competitors are required to divine the thoughts of a person and give the same in verse form.

[Skt. cinta-samasyai > த. சிந்தாசமத்தி]

சிந்தாத்திரி *śindāttiri,* பெ.(n.) 1. காப்பான செலவு (நல்ல பயணம்); safe voyage or journey. *சிந்தாத்திரியாகப் போய்விட்டுவா".* 2. நல (சுக)வாழ்வு; welfare, prosperity.

சிந்தாத்திரை *śindāttirai,* பெ.(n.) **சிந்தாத்திரி** (j) பார்க்க; see *śintāttiri.*

சிந்துராமக்கிரியை *śindurāmakkiriyai,* பெ.(n.) பண்வகை (பரத. ராக. 104); a specific melody-type.

சிந்துலவணம் *śindu-lavaṇam,* பெ.(n.) கடலுப்பு (வின்.); sea salt.

சிநேகபாவம் *śinēgabāvam,* பெ.(n.) நட்புணர்வு; friendliness. *'அவர் எல்லோரிடமும் சிநேகபாவத்துடன் பழகுவார்.'*

[சிநேகம் + பாவம்.]

சிநேகம் *śinēgam,* பெ.(n.) நட்பு; friendship.

சிநேகிதம் *śinēgidam,* பெ.(n.) **சிநேகம்** பார்க்க; see *śinēgam.*

சிநேகிதன் *śinēgidaṉ,* பெ.(n.) நண்பன்; friend.

சிநேகிதி *šinēgidi,* பெ.(n.) நண்பன் என்பதன் பெண்பால்; feminine of *šinēgidan.*

சிப்பந்தி *šippandi,* பெ.(n.) படைக்கலம் ஏந்திய காவற்படை (G.md. D.i. 197); armed police.

[Persn. sibandi > த. சிப்பந்தி]

சிப்பில் *šippil,* பெ.(n.) வடிதட்டு (வ.வ.); rice-strainer, colander.

சிப்பிலாட்டி *šippilātti,* பெ.(n.) தொந்தரை (யாழ்.அக.); trouble.

சிப்ளாக்கட்டை *šiplā-k-kattai,* பெ.(n.) **சப்பளாக்கட்டை** பார்க்க; see *sappalā-k-kattai.*



சிபிடம் *šipidam,* பெ.(n.) மணி (இரத்தின) வகை (சுக்கிரநீதி. 186); a kind of gem.

[Skt. cipita > த. சிபிடம்]

சிபுகம் *šipugam,* பெ.(n.) கன்னம்; cheek. *"பொலிவுறு நின்சிபுகம் போற்றின்" (சௌந்தரிய. 66).*

[Skt. cibuka > த. சிபுகம்]

சிம்சுமாரப்ரசாபதி *šimšumāra-p-rašāpadi,* பெ.(n.) விண்மீன் (நட்சத்திர) பதத்துக்கு மேலெல்லையான துருவ மண்டலம்; the region of the pole star beyond the naksatra-pada. *"நக்ஷத்ர பதத்து மேலெல்லை சிம்சுமார ப்ரஜாபதியிறே" (திவ். திருநெடுந். 5, வ்யா. பக். 45).*

சிம்புளாதனம் *šimbulātanam,* பெ.(n.) ஓகவிருக்கை (யோகாசன) வகை (தத்துவப். 109, உரை); a yogic posture (saiva).

சிம்மசொப்பனம் *šimma-šoppanam,* பெ.(n.) திகிலை ஏற்படுத்தும் பேரச்சம் (பயங்கரம்), நடுநடுங்க வைப்பது; nightmare, devil incarnate, terror. *'கணித ஆசிரியர் என்றால் மாணவர்களுக்கு சிம்ம சொப்பனம்'.*

த.வ. நடுக்கக்கனவு

[சிம்மம் + சொப்பனம்.]

சிம்மகாரம் *šimmagāram,* பெ.(n.) பண் வகை (பரத. ராக. 104); a specific melody-type. (mus.)

சிம்மேந்திரமத்யமம் *šimmēndira-matyamam,* பெ.(n.) பண்வகை, (மேள கர்த்தாக்)களுளொன்று (சங்.சந்.); a primary rāga.

சிம்னி *šimni,* பெ.(n.) **சிமினி** பார்க்க; see *simini.*

சிமிட்டி *šimitti,* பெ.(n.) சுதைமா, பொருளின் மேல் பற்றிக் கொள்ளும் தன்மை உடைய தாகச் சுண்ணாம்பு, களிமண் முதலிய வற்றைக் குறிப்பிட்ட அளவில் கலந்து செய்த கருஞ் சாம்பல் நிற மாவுப் பொருள்; cement. வீடு கட்ட முடியவில்லை, சிமிட்டி விலை ஏறிக்கொண்டே போகிறது (உ.வ.)

[E. cement > த. சிமிட்டி]

சிமினி *šimini,* பெ.(n.) (காற்றினால் சுடர் அணையாமல் இருக்க) மண்ணெண்ணெய் விளக்கில் பொருத்தும் கண்ணாடிக் கூடு; chiney (for kerosene lamps).

த.வ. ஆடிக்கூடு, மூடாடி

சிமினிவிளக்கு *śimiṉi-viḷakku,* பெ.(n.) கண்ணாடிக்கூடு (சிமினி) பொருத்திய மண்ணெண்ணெய் விளக்கு; kerosene lamp with a chimney.

த.வ. மூடாடிவிளக்கு

சியாமகன்னம் *śiyāma-kaṉṉam,* பெ.(n.) காது மட்டும் நீலநிறமும் மற்றைப் பாகமெல்லாம் ஒரே நிறமுமுடைய குதிரை (சுக்கிரநீதி. 317); horse of a single colour with the ears alone blue.

த.வ. நீலக்கதுப்பி

[Skt. śyāmakarṇa > த. சியாமகன்னம்]

சியாமளாங்கி *śiyāmaḷāṅgi,* பெ.(n.) பண்வகை (மேளகர்த்தாக்)களுளொன்று (சங். சந். 47); a primary rāga.

[Skt. śyāmalāṅgi > த. சியாமளாங்கி]

சியேட்டை *śiyēṭṭai,* பெ.(n.) ஒரு சிவசத்தி (சைவபூ. சந். 219); a śiva-śakti.

[Skt. jyēṣṭhā > த. சியேட்டை]

சிரச்சேதம் *śiraccēdam,* பெ.(n.) தலையை வெட்டுகை; decapitation.

த.வ. தலைவெட்டு

[Skt. śiras+chēda > த. சிரச்சேதம்]

சிரசாக்கினை *śiraś-ākkiṉai,* பெ.(n.) கொலைத்தண்டனை (வின்.); capital sentence.

[Skt. śiras+ājñā > த. சிரசாக்கினை]

சிரசாவகி–த்தல் *śiraśāvagi-,* 4 செ.கு.வி. (v.i.) மதிப்பு (மரியாதை)யுடன் ஏற்றுக் கொள்ளுதல் (யாழ்.அக.) (தலையால் தாங்குதல்); Lit., to bear on one's head, to accept, as a command, etc., with respect.

சிரசீவி *śiraśivi,* பெ.(n.) **சிரஞ்சீவி** (யாழ்.அக.) பார்க்க; see *śirañjivi.*

சிரசு *śiraśu,* பெ.(n.) தலை; head.

[Skt. śiras > த. சிரசு]

சிரசுதயம் *śiraś-utayam,* பெ.(n.) **சிரோதயம்** (யாழ்.அக.) பார்க்க; see *śirōtayam.*

[Skt. śiras+udaya > த. சிரசுதயம்]

சிரசுவெட்டி *śiraśu-veṭṭi,* பெ.(n.) தலையைத் துண்டாக்கும் கருவி (வின்.); executioner's axe.

சிரஞ்சீவி *śirañjivi,* பெ.(n.) 1. நெடுநாள் வாழ்பவன்; long-lived person. 2. அகவையிற் குறைந்த ஆண்பாலாரைக் குறித்து மூத்தோர் வாழ்த்தும்போது வழங்குஞ் சொல்; a term of blessing, prefixed to names of male persons either in speech or writing. 3. காகம் (இலக்.அக.); crow. 4. இலவு (இலக்.அக.); silk-cotton tree. 5. மார்க்கண்டேய முனிவர் (இலக். அக.); sage *Mārkkaṇḍēyaṉ.*

த.வ. நீடுவாழி

[Skt. ciram+jivin > த. சிரஞ்சீவி]

சிரஞ்சீவியர் *śirañjiviyar,* பெ.(n.) நீண்ட காலம் வாழ்ந்திருக்க அருள் (வரம்) பெற்றவர் களான அச்சுவத்தாமன், மகாபலி, வியாசன், அனுமான், வீடணன், கிருபாசாரியன், பரசுராமன் என்ற எழுவர் (வின்.); persons blessed with immortality, seven in number viz., *Accuvattāmaṉ, Magāpali, Viyāśaṉ, Aṉumāṉ, Vipiṣaṇaṉ, Kirupāśāriyaṉ, Para-śurāmaṉ.*

த.வ. நீடுவாழியர்

சிரத்தவன் *śirattavaṉ,* பெ.(n.) தலைவன்; leader, great person. *"இச்சிரத்தவ னுரைத்திறுக்கு மேல்வையில்" (கம்பரா. உயுத். மந்திரப். 28).*

[Skt. śiras-stha > த. சிரத்தவன்]

சிரத்தார் *širattār,* பெ.(n.) முறைமன்றம், ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகம் ஆகியவற்றில் உள்ள ஆளுவ (நிருவாக)ப் பணியாளர்க்குத் தலைவரான அதிகாரி; head officer of a court of justice or collector's office, head accountant of a taluk who has the general superintendence of the establishment.

த.வ.மேற்காணகர்

[U. sarrishtadār > த. சிரத்தார்]

சிரத்தாமந்தர் *širattāmandar,* பெ.(n.) கோயிலறங்களை மேற்பார்க்கும் மதிப்புறுவு அறங்காவலர் (M.E.R.163 of 1922); honorary superintendents who take interest in the management of a temple charities.

[Skt. šradhā+mat > த. சிரத்தாமந்தர்]

சிரதரம் *šira-taram,* பெ.(n.) தலையைத் தாங்குவதாகிய கழுத்து (உரி.நி.); neck, as supporting the head.

[Skt. širas+dhara > த. சிரதரம்]

சிரநதி *šira-nadi,* பெ.(n.) (பிங்.) சிவனது தலையினின்று பெருகுவதாகக் கருதப்படும் கங்கையாறு; the river Ganges, as flowing from the head of Šivan.

[Skt. širas+nadi > த. சிரநதி]

சிரபங்கம் *širabaṅgam,* பெ.(n.) **சிரச்சேதம்(j)** பார்க்க; see *širaccēdam.*

[Skt. siras+bhaṅga > த. சிரபங்கம்]

சிரபாத்திரி *širapāttiri,* பெ.(n.) சிவன்; Šivan, as having skull for his begging bowl. *"சிரபாத்திரி கையிலாயி" (கந்தரந். 34).*

[Skt. širas+pātrin > த. சிரபாத்திரி]

சிரம்பம் *širambam,* பெ.(n.) ஒருவகை நஞ்சு (சாலாங்கபாடாணம்) (வின்.); a mineral poison.

சிரமசாத்தியம் *širamašāttiyam,* பெ.(n.) வருந்திச் செய்யக்கூடியது; that which is accomplishable with difficulty. *'சிரமசாத்தியமான வேலை' (இ.வ.)*

சிரமதசை *širamadašai,* பெ.(n.) துன்பப் படுகிற காலம் அல்லது நிலை; period of bad luck or difficulty, straits. *'நிதி உதவியை அரசு நிறுத்திவிட்டதால் இந்த விடுதி சிரமதசையில் இருக்கிறது'.*

த.வ. துன்பநிலை

[சிரமம்+தசை]

சிரமபரிகாரம் *širamaparigāram,* பெ.(n.) ஓய்வு; rest.

[சிரமம்+பரிகாரம்]

சிரமம் *širamam,* பெ.(n.) 1. களைப்பு; exhaustion, weariness. *"சிரம மெல்லாஞ் செல்லிருட் டீர்ந்து" (பெருங். இலாவாண. 9, 31).* 2. உழைப்பு; exertion, toil. 3. படை (ஆயுத)ப்பயிற்சி; practice of arms, military, exercise. *"சிரமநீதி...... கண்டு சீறி" (திருவாலவா. 35, 4).*

[Skt. šrama > த. சிரமம்]

சிரமாலை *širamālai,* பெ.(n.) சிவனணியுந் தலைமாலை (திவா); garland of skulls worn by Šivan.

[சிரம்+மாலை]

[Skt. širas > த. சிரம்]

சிரமிலி *širamili,* பெ.(n.) தலையில்லாததான நண்டு (சங்.அக.); crab; as having no head.

[சிரம்+இலி]

சிரமேற்கொள்(ளு)-தல் *širamērkol(lu)-,* 10 செ.குன்றாவி.(v.t.) மதிப்புடன் ஏற்றுக் கொள்ளுதல் (தலையால் தாங்குதல்); lit., to bear on one's head to accept as a command etc.

த.வ. தலைமேற்கொள்ளுதல்

[சிரம்மேல்+கொள்–]

சிரமை *śiramai,* பெ.(n.) சிரமம் 1 பார்க்க; see siramam. *வழிச்சிரமை நீர்மின் (சூளா. தூது. 18).*

[Skt. śrama > த. சிரமை]

சிரவணத்துவாதசி *śiravaṇattuvādaśi,* பெ.(n.) கன்னிமாதத்தில் வளர்பிறை பன்னீராம் திருவோண நாண்மீன் நாளில் ஏற்கும் நோன்பு; fast observed when śravaṇanakṣatra falls on the twelfth titi of the bright fortnight in pāttirapatam.

[சிரவணம்+துவாதசி]

சிரவணம் *śiravaṇam,* பெ.(n.) 1. காது; ear. *"சீரார் வசனச் சுவைநோக் கிடுமென் சிரவணமே" (தனிப்பா. ii, 210, 500).* 2. கேள்வி; listening, hearing. *"நல்வேதாந்தத் தெளிவைச் சிரவணஞ் செயலே" (சூத. ஞான. 14, 10).* 3. திருவோண நாண்மீன் (பிங்.); the 22nd nakṣatra.

[Skt. śravaṇa > த. சிரவணம்]

சிராங்கம்[1] *śirāṅgam,* பெ.(n.) தலை; head.

[Skt. śiras+aṅga > த. சிராங்கம்]

சிராங்கம்[2] *śirāṅgam,* பெ.(n.) உடல்நலம்; health, soundness. *'அவனுக்கு உடம்பு சிராங்கமாயிருக்கிறது' (இ.வ.)*

சிராங்கம்[3] *śirāṅgam,* பெ.(n.) தடையின்மை (இ.வ.); absence of obstruction.

சிராங்கு *śirāṅgu,* பெ.(n.) கப்பற்கண்காணி; boatswain, skipper of a small vessel, chief of a lascar crew.

[U. sar-hang > த. சிராங்கு]

சிராத்தம் *śirāttam,* பெ.(n.) இறந்தோர் பொருட்டுச் செய்யுஞ் சடங்கு; the ceremony of offering oblations of food and water to the manes. *"சிராத்தஞ் செயற்கென" (யசோதர. 3, 33).*

த.வ. நினைவேந்தல்

[Skt. śrāddha > த. சிராத்தம்]

சிராப்பு *śirāppu,* பெ.(n.) காசு (நாணய) நோட்டக்காரன் (இ.வ.); shroff.

[Ar. sarāfā > த. சிராப்பு]

சிராபரன் *śirāparaṉ,* பெ.(n.) வாராச்சேட்புல (துவாதசாந்தத்தான)த்திலிருக்கும் இறைவன்; god, as the supreme being having His seat at *tuvātacāntam.* *"மனக்கோயிற் சிராபரன்" (திருமந். 1760).*

[Skt. śiras+para > த. சிராபரன்]

சிராய் *śirāy,* பெ.(n.) காற்சட்டை; trousers.

[U. sharāi > த. சிராய்]

சிராய்ப்பீனசம் *śirāy-p-pīṉaśam,* பெ.(n.) பீனச நோய்வகை (வின்.); an inflammatory disease with discharges from the nose in bean-like flakes.

சிரார்த்தம் *śirārttam,* பெ.(n.) நீத்தார் படையல் (திவசம், திதி) (சமூக வழக்கு); ritual offering to the dead on the occasion of the death anniversary.

சிராவகன் *śirāvagaṉ,* பெ.(n.) பௌத்த சமணரில் இல்லறத்தான்; a Buddhist or Jaina lay disciple.

[Skt. śrāvaka > த. சிராவகன்]

சிராவணம்[1] *śirāvaṇam,* பெ.(n.) 1. பெரும்பாலும் மடங்கல் மாத முழுமதியன்று (ஆவணிப் பூர்ணிமையன்று) புதுப்பூணூல் பூணுதல் முதலிய (பூர்வாங்க)ப் பழமைச் சடங்குகளுடன் மறை (வேத)பாடந் தொடங்கும் சடங்கு; ceremony performed generally on the full moon day in the month of Avaṇi, when the study of the vēdas is commenced with the investiture of a new sacred thread. 2. நிலா மாதத்துள் ஐந்தாவது (யாழ்.அக.); fifth lunar month roughly corresponding to Āvaṇi.

[Skt. śrāvaṇa > த. சிராவணம்]

சிராவணம்[2] *śirāvaṇam,* பெ.(n.) கல் (சூடா.); stone.

[Skt. grāvan > த. சிராவணம்]

சிராவணம்[3] *śirāvaṇam,* பெ.(n.) இடுக்கிப்பொறி சாவணம்; pincers.

த.வ. குறடு

சிராவணி *śirāvaṇi,* பெ.(n.) மடங்கல் முழுமதி நாளில் (ஆவணிப் பௌர்ணிமையில்) நடத்தற்குரிய ஒரு வேள்வி (திவா.); a sacrifice performed on the full-moon day in the month of Āvaṇi.

[Skt. śrāvaṇī > த. சிராவணி]

சிராவியம் *śirāviyam,* பெ.(n.) கேட்டற்கு இனியது; that which is sweet or pleasing to the ear. *'அந்தப்பாடல் சிராவியமாயிருந்தது' (சங்.அக.)*

[Skt. śrāvya > த. சிராவியம்]

சிராவிருத்தம் *śirāviruttam,* பெ.(n.) ஈயம் (யாழ்.அக.); lead.

[Skt. śirāvṛtta > த. சிராவிருத்தம்]

சிரானந்தம் *śirāṉandam,* பெ.(n.) அழியாத இன்பம்; everlasting bliss. *"சிரானந்தம் பூரித்து" (திருமந். 2750).*

[Skt. cira+ā-nanda > த. சிரானந்தம்]

சிரி *śiri,* பெ.(n.) தீர்வைக்குட்பட்ட நிலம் (வின்.); land liable to assessment, dist. fr. *iṉām.*

[U. śēri > த. சிரி]

சிரிதம் *śiridam,* பெ.(n.) கருக்கு (கஷாயம்); decoction or infusion.

[Skt. śṛta > த. சிரிதம்]

சிரீதத்தம் *śirī-tattam,* பெ.(n.) புகழ்ப்பயன் கருதிக் கொடுக்கப்படும் கொடைப் பொருள் (சுக்கிரநீதி. 145); gift made in expectation of fame.

த.வ. புகழ்க்கொடை

[Skt. śrī-datta > த. சிரீதத்தம்]

சிரீதரன் *śirīdaraṉ,* பெ.(n.) திருமால்; Tirumāl *"சிரீதரன்றன் வண்குலவு தண்குழாய்த் தார்" (திவ். இயற். நான்மு. 62).*

[Skt. śrī-dhara > த. சிரீதரன்]

சிரீமத்து *śirīmattu,* பெ.(n.) 1. நற்பேறு (பாக்கியம்); prosperity, wealth. 2. பெருமை தங்கியது (சி.சி.II,2, சிவாக். உரை); that which is great.

[Skt. śrīmat > த. சிரீமத்து]

சிரீமுக *śirīmuka,* பெ.(n.) வடமொழியாளரின் ஆண்டு அறுபதனுள் ஏழாவது (சங்.அக.); the seventh year in the jupiter cycle.

[Skt. śrī-mukha > த. சிரீமுக]

சிரீமுகம் *śirī-mukam,* பெ.(n.) திருமுகம் (வின்.); letter or epistle from a great personage.

[Skt. śrī-mukha > த. சிரீமுகம்]

சிரீவற்சம் *śirīvaṟśam,* பெ.(n.) 1. திருமாலின் மார்பு மச்சம்; திருமறு; திருவத்தம்; mark on Viṣṇu's breast. 2. மார்பில் ஐந்து நற்சுழியுள்ள குதிரை; horse with five curl-marks on its breast, believed to be lucky. *"பிரிவுறவுரத்தி லைஞ்சுழி யுளது பேர்சிரீவற்சமாம்" (திருவிளை. நரிபரி. 112).*

[Skt. śrī-vatsa > த. சிரீவற்சம்]

சிரீவிருட்சம் *śirī-viruṭcam,* பெ.(n.) குதிரைச் சுழிகளுளொன்று (இ.வ.); a curl-mark of horses.

சிருங்கபசுமம் *śiruṅga-paśumam,* பெ.(n.) மான்கொம்பாற் செய்யும் பொடி (சங்.அக.); medicinal powder, obtained by calcining deer's horn.

[Skt.sringa + basma> த. சிருங்கபசுமம்]

சிருங்கம் *śiruṅgam,* பெ.(n.) 1. விலங்கின் கொம்பு; horn of a quadruped. *"ஒருகலை முகச்சிருங்க முயர்தவன்" (கம்பரா. திருவவ. 33).* 2. கொடுமுடி; peak. *"சதசிருங்க*

வெற்பெனத் திசை போயது" (காஞ்சிப்பு. சனற்குமார. 5). 3. **சிருங்கவான்** பார்க்க; see *śiruṅgavāṉ.* *"வடகடல் முதலாச் சிருங்கங் காறுங் குருவருடம்" (கந்தபு. அண்டகோ. 36).*

[Skt. sṛśṅga > த. சிருங்கம்]

சிருங்கலம் *śiruṅgalam,* பெ.(n.) **சிருங்கலை** (வின்.) பார்க்க; see *śiruṅgalai.*

சிருங்கலை *śiruṅgalai,* பெ.(n.) 1. விலங்கு (சூடா.); chain or fetter. 2. இருப்புச் சங்கிலி; iron chain. *"சிருங்கலையைப் பூட்டிடுவர்" (சிவதரு. சுவர்க்க. 179).* 3. வில்லங்கம் (இ.வ.); encumbrance.

[Skt. śṛṅkhalā > த. சிருங்கலை]

சிருங்கவான் *śiruṅgavāṉ,* பெ.(n.) பூவுலகின் (பூமியின்) எல்லையில் அமைந்த மலை (பர்வதங்)களுள் ஒன்று; a mythical mountain believed to be one of the boundaries of the earth.

[Skt. śṛṅga-vān > த. சிருங்கவான்]

சிருங்காடம் *śiruṅgāḍam,* பெ.(n.) படைமுற்று (வியூக) வகையுள் ஒன்று (குறள், 767, உரைக்குறிப்பு); a battle-array.

[Skt. śṛṅgāṭaka > த. சிருங்காடம்]

சிருங்காரநிலை *śiruṅgāra-nilai,* பெ.(n.) இறந்துபட்ட வீரனது மார்பை அவன் மனைவி போர்க்களத்துத் தழுவுதலைக் கூறும் புறத்துறை (பு.வெ. 7, 24); (purap.) theme of a warrior's devoted wife embrancing his corpse on the battle field.

த.வ. அழுவத்தழுவல்

[சிருங்காரம்+நிலை]

சிருங்காரம் *śiruṅgāram,* பெ.(n.) காதற்சுவை (சிங்காரம்) (கொ.வ.); sentiment of love.

[Skt. śṛṅgāra > த. சிருங்காரம்]

சிருச்சியம் *śirucciyam,* பெ.(n.) உருவாக்கப் படுவது; that which is created.

[Skt. sṛjya > த. சிருச்சியம்]

சிருட்டம் *śiruṭṭam,* பெ.(n.) ஒரு சிற்பநூல் (இருசமய. சிற்ப சாத். 3); a treatise on architecture.

[Skt. sṛṣṭa > த. சிருட்டம்]

சிருட்டி[1]-த்தல் *śiruṭṭi-,* 11 செ.குன்றாவி.(v.t.) உருவாக்குதல்; to create.

சிருட்டி[2] *śiruṭṭi,* பெ.(n.) 1. படைப்பு; creation. *ஆதிசிருட்டியைச் சொல் (மச்சபு. ஆதிசிருட்டிப். 1).* 2. ஐவகைத் தொழில் (பஞ்ச கிருத்தியங்)களுள் உயிர்கள் முத்தி எய்துதற்பொருட்டு அவற்றுக்கு மெய்ப்புலன், உலக நுகர்வுகளை (தனுகரண புவன போகங்களை) அருளுவதாகிய படைப்புத் தொழில்; (śaiva) function of creation or providing the souls with physical and mental organs and the necessary environment designed to enable the souls to attain salvation on the *pañca-kiruttiyam,* q.v. 3. உருவாக்கப்பட்ட பொருள்; creature, created things.

[Skt. sṛṣṭi > த. சிருட்டி]

சிருட்டியாளன் *śiruṭṭiyāḷaṉ,* பெ.(n.) சவுக்காரம் (மூ.அ.); soap.

சிருணி *śiruṇi,* பெ.(n.) 1. யானைத்தோட்டி; elephant goad. 2. பகைவன் (யாழ்.அக.); foe, enemy.

[Skt. sṛṇi > த. சிருணி]

சிருணிகை *śiruṇigai,* பெ.(n.) எச்சில், சாளைவாய் (யாழ்.அக.); saliva, spittle.

[Skt. sṛṇikā > த. சிருணிகை]

சிருதரம் *śirutaram,* பெ.(n.) பாம்பு (யாழ்.அக.); snake.

[Skt. sṛdara > த. சிருதரம்]

சிரும்பணம் *širumbaṇam,* பெ.(n.) கொட்டாவி விடுகை (யாழ்.அக.); yawning.

[Skt. jṛmbhaṇa > த. சிரும்பணம்]

சிரும்பிகை *širumbigai,* பெ.(n.) கொட்டாவி (யாழ்.அக.); yawn.

[Skt. jṛmbhikā > த. சிரும்பிகை]

சிரேட்டாதேவி *širēṭṭādēvi,* பெ.(n.) (யாழ்.அக.) திருமகளுக்கு மூத்தவளாகக் கருதப்படும் மூதேவி; goddess of misfortune as the elder sister of Lakṣmī.

சிரேட்டி *širēṭṭi,* பெ.(n.) வணிகன் (சூடா); member of the vaišya caste.

சிரேணம் *širēṇam,* பெ.(n.) நெடுநாள் (யாழ்.அக.); long period of time.

[Skt. cirēṇa > த. சிரேணம்]

சிரேணி *širēṇi,* பெ.(n.) 1. தெரு (பிங்.); street, row of house. 2. இடையர் வீதி (சூடா.); herdsmen's street. 3. வரிசை (சங்.அக.); line, row, series.

[Skt. šrēṇi > த. சிரேணி]

சிரேணியம் *širēṇiyam,* பெ.(n.) சிரேணி (சங்.அக.) பார்க்க; see *širēṇi.*

[Skt. šrēṇi > த. சிரேணியம்]

சிரேணியர் *širēṇiyar,* பெ.(n.) பதினெண் குடிமக்கள் (சங்.அக.); the eighteen servile castes.

[Skt. šrēṇi > த. சிரேணியர்]

சிரேயசு *širēyašu,* பெ.(n.) 1. நன்மை (சங்.அக.); good, welfare. 2. புகழ்; renown. *"அந்தக் காரியத்தைச் செய்தால் உனக்குச் சிரேயசு உண்டாகும்" (கொ.வ.)*

[Skt. šrēyas > த. சிரேயசு]

சிரேயாஞ்சர் *širēyāñjar,* பெ.(n.) தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர் (திருக்கலம். காப்பு, உரை); a Jaina Arhat, one of 24 *tirttāṅgarar,* q.v.

[Skt. šrēyāṃsaḥ > த. சிரேயாஞ்சர்]

சிரேவணம் *širēvaṇam,* பெ.(n.) காட்டா மணக்கு (மலை); common physic-nut.

சிரேவரிசம் *širēvarišam,* பெ.(n.) கண்நரம்பைக் (சிரோபாதத்தை) கவனியாது விட்டு விடுவதால் கண்ணில் பலவிதமான ஒழுக்குகள் ஏற்பட்டு, கண் பார்வை முழுமையையும் கெடுத்துக் குருடாகச் செய்யும் நோய்; neglected or advanced stages of shiropādam (சிரோபாதம்) mentioned above giving rise to abnormal discharges from the eyes with complete loss of vision. (சா.அக.)

சிரேட்ட *širēṭṭa,* பெ.எ (adv.) பெரும்பாலும் திருமண அழைப்பிதழ் முதலியவற்றில் குறிப்பிடும் சொல்லான (குழந்தைகளுள்) மூத்த, முதல்; (of children) eldest, first. *'சிரேட்ட புத்திரன்', 'சிரேட்ட புதல்வி'.*

[Skt. srēsta > த. சிரேட்ட]

சிரேட்டபுத்திரன் *širēṭṭa-puttiraṉ,* பெ.(n.) மூத்த மகன் (இ.வ.); eldest son.

சிரைத்தல் *širaittal,* பெ.(n.) மயிர் மழிக்கை; to shave, to remove the hairs of the head. (சா.அக.)

சிரைப்புண் *širaippuṇ,* பெ.(n.) முக மழிப்போன் சிரைப்பதினால் உண்டாகும் புண்; barber's itch, barber's rash. (சா.அக.)

சிரைபாசி *širaipāši,* பெ.(n.) கடுக்காய்; gallnut. (சா.அக.)

சிரையதிகேசம் *širaiyadikēšam,* பெ.(n.) ஆனைத் திப்பிலி; elephant pepper - Ciper longum. (சா.அக.)

சிரோக்கிரகம் *širōkkiragam,* பெ.(n.) 1. தலையை அசைக்க முடியாமற் செய்யும் பிடிப்பு; p. 2. பிடரி ஊகை (வாதம்);spas modic retro-flexion of the head. (சா.அக.)

த.வ: கழுத்துப் பிடிப்பு

சிரோகுட்டம் *širōkuṭṭam,* பெ.(n.) நோய் வகை; a disease. *கன்மமார் வழுக்கற் கொடித்தலையாக்கிக் காட்டும் புண் சிரோகுட்ட நோயர் (கடம்ப. பு. இலீலா. 108).*

சிரோசக்காரம் *širōšakkāram,* பெ.(n.) வெடிகாரம்; nitre. (சா.அக.)

சிரோசம்[1] *širōšam,* பெ.(n.) 1. மயிர்; hair. 2. தலைமயிர்; hair of the head. (சா.அக.)

சிரோசம்[2] *širōšam,* பெ.(n.) **சிரோருகம்** (யாழ்.அக.) பார்க்க; see *širōrugam.*

[Skt. širō-ja > த. சிரோசம்]

சிரோசூலை *širōšūlai,* பெ.(n.) 1. மண்டைக் குத்தல்; neuralgic pain in the head. 2. மண்டைக் குடைச்சல், severe gouty pain in the head - caphalagra. (சா.அக.)

சிரோட்டம் *širōṭṭam,* பெ.(n.) 1. கடுக்காய்; gallnut. 2. திரிபலை; the three myrobalans. 3. திரிகடுகு; the three special stimulants. 4. நெல்லி மரம்; Indian gooseberry. 5. தான்றிமரம்; devils abode. (சா.அக.)

சிரோணி *širōṇi,* பெ.(n.) காட்டாமணக்கு (மலை); common physic-nut.

[Skt. šrāvaṇi > த. சிரோணி]

சிரோணியம் *širōṇiyam,* பெ.(n.) நேர்வாளம்; a species of croton seed -Croto tigilium. (சா.அக.)

சிரோத்தாபம் *širōttāpam,* பெ.(n.) நரம்பழற்சி; nervous irritation.

சிரோத்தி *širōtti,* பெ.(n.) 1. தலையோடு; the skull. 2. கழுத்து; the neck.

[Skt. širas+asthi > த. சிரோத்தி]

சிரோத்திரம் *širōttiram,* பெ.(n.) 1. காது; ear. 2. கேட்கும் திறன்; hearing. (சா.அக.)

சிரோத்பாதரோகம் *širōtpāda-rōgam,* பெ.(n.) வெண்விழியில் சிவந்த புண்ணை யெழுப்பி, கண் வீங்கி எரிச்சலை யுண்டாக்குமோர் கண்ணோய்; a disease of the eye causing or developing red vasicles on the eye.

த.வ. விழிப்புண்

சிரோததி *širōtadi,* பெ.(n.) கழுத்து; the neck. (சா.அக.)

சிரோதபம் *širōtabam,* பெ.(n.) அதிக சூட்டினால் உண்டாகும் மண்டைக் கொதிப்பு; thermalgia of the head due to excess of heat in the system. (சா.அக.)

சிரோதயம் *širōtayam,* பெ.(n.) பேறு காலத்தின் போது குழந்தையின் தலை வெளித் தோன்றுகை (இ.வ.); presentation of head in childbirth.

த.வ. தலைக்காண்பு

[Skt. širas+udaya > த. சிரோதயம்]

சிரோதரம் *širōtaram,* பெ.(n.) கழுத்து; the neck. (சா.அக.)

[Skt. širas+dhara > த. சிரோதரம்]

சிரோதாபம் *širōtābam,* பெ.(n.) 1. மண்டையழற்சி; inflammation of the scalp. 2. மூளையின் அழற்சி; inflammation of the brain Cerebritis.

சிரோதி *širōti,* பெ.(n.) கழுத்து; the neck. (சா.அக.)

சிரோதிகம் *širōtigam,* பெ.(n.) பனிதாங்கி அல்லது காட்டு மருக்கொழுந்து; southern wood. (சா.அக.)

சிரோந்தகம் *širōntagam,* பெ.(n.) மயிர்க் கொன்றை; pea-cock flower. (சா.அக.)

சிரோந்தம் *širōndam,* பெ.(n.) செறிமயிர்ப் பரப்பு (திவா.); hairiness.

சிரோந்திதம் *širōnditam,* பெ.(n.) பூவந்திக்கொட்டை; soap-nut-sapindas tripoliatus.

சிரோநதம் *širōnadam,* பெ.(n.) மயிர்; hair. 2. மயிர்ச் செறிவு; density of hair. (சா.அக.)

சிரோபத்தியம் *širōpattiyam,* பெ.(n.) கடுக்காய் (R); gallnut - chebulic myrobalan.

சிரோபத்திரம் *širōpattiram,* பெ.(n.) கடுக்காய்; gallnut. (சா.அக.)

சிரோபத்திரவிசோதனி *širōpattira-višōdaṇi,* பெ.(n.) தாளிசபத்திரி; East Indian plum. (சா.அக.)

சிரோபாதம் *širōpādam,* பெ.(n.) கண்ணில் ஓடும் சிறிய நரம்புகள் அடிக்கடி சிவந்து, வலியோடும் வலியில்லாமலும் துன் புறுத்துமோர் கண்ணோய்; a disease of the eyes in which the thin veins all over inferior ophthalmic become copper-coloured very frequently, but attended with or without pain. (சா.அக.)

சிரோபாரம் *širōpāram,* பெ.(n.) தலைப்பாரம்; heaviness of the head. (சா.அக.)

சிரோபிரமாணம் *širōpiramāṇam,* பெ.(n.) மூளைக்கு வலிவையும் ஊட்டத்தை (புஷ்டியை)யும் தரக்கூடிய மருத்துவம்; a treatment which can afford strength and nutrition to the brain. (சா.அக.)

சிரோபிரமை *širōpiramai,* பெ.(n.) தலைமயக்கம்; giddiness. (சா.அக.)

சிரோமணி[1] *širōmaṇi,* பெ.(n.) நாகத்தின் தலையிலுள்ளதாகக் கருதப்படும் மாணிக்கம்; a ruby of intense red supposed to be on the head of long-lived cobra. (சா.அக.)

சிரோமணி[2] *širōmaṇi,* பெ.(n.) 1. தலைமணி (யாழ்.அக.); crest-gem, jewel worn on the head. 2. உயர்ந்த மணி; superior gem. *ஊனமில் சிரோமணியும் பொன்னும் (பிரமோத். 11, 8).* 3. தலைசிறந்த-வன்-வள்-து (வின்.); a person or thing of superior excellence. 4. பண்டிதர்க்குக் கொடுக்கும் சிறப்புப் பெயர் (இக்.வ.); a title of honour conferred on pandits. (சா.அக.)

த.வ. முடிமணி

[Skt. širas+maṇi > த. சிரோமணி]

சிரோமணிமாது *širōmaṇi-mādu,* பெ.(n.) பேய்ப் புடலை; wild bitter snake gourd. (சா.அக.)

சிரோமத்தியசேது *širōmattiyašētu,* பெ.(n.) மனிதர் தலையிலுள்ள சிறு மூளையின் இரண்டு கோளங்களையும் இணைத்துக் கொண்டிருப்பது; the organ which connects the cerebrum, cerebullum and oblongata in the human body. (சா.அக.)

சிரோமதுமேகம் *širōmadumēgam,* பெ.(n.) **சிரோமேகம்** பார்க்க; see *širōmēgam.* (சா.அக.)

சிரோமுட்டி *širōmuṭṭi,* பெ.(n.) கீழ்நோக்கி அம்பெய்கை (சீவக. 1680, உரை); shooting an arrow downward.

[Skt. širas+muṣṭi > த. சிரோமுட்டி]

சிரோமூலம் *širōmūlam,* பெ.(n.) தலைச்சுருடு வள்ளி; hary's plant. (சா.அக.)

சிரோமேகம் *širōmēgam,* பெ.(n.) அதிக சிந்தனையினால் தலை மூளையினின்றும் சர்க்கரையுண்டாகி ஏற்படும் மதுமேக நோய்; cerebral diabetes due to the sugar principle derived from the brain

substance known as cerebros arising from brain work - cerebrosuria. (சா.அக.)

சிரோரத்தினம் *śirōrattiṉam*, பெ.(n.) **சிரோமணி**[1] பார்க்க; see *śirōmaṇi*.

[Skt. śiras+ratna > த. சிரோரத்தினம்]

சிரோருகம் *śirō-rugam*, பெ.(n.) தலைமயிர் (பிங்.); hair on the head.

[Skt. śiras+ruha > த. சிரோருகம்]

சிரோரோகம் *śirōrōgam*, பெ.(n.) 1. தலையில் ஏற்படும் நோய்கள்; diseases of the head in general. 2. தலைவலி; head ache. (சா.அக.)

சிரோலிகம் *śirōligam*, பெ.(n.) மிளகு; black-pepper-Piper nigruns. (சா.அக.)

சிரோவர்த்தனை *śirō-varttaṉai*, பெ.(n.) சிவலிங்கத்தின் தலை (S.I.I.ii, 135); top portion of *śiva-liṅgam*.

சிரோவர்த்தி *śirōvartti*, பெ.(n.) எதிரி சொல்லும் உறுதிமொழி (சத்தியம்) முதலியவற்றை யொப்புக் கொள்பவன் (சுக்கிரநீதி. 286); person accepting the oath or trial by ordeal of his opponent.

[Skt. śirōvarti > த. சிரோவர்த்தி]

சிரோவல்லி *śirō-valli*, பெ.(n.) மயிலின் உச்சிக் கொண்டை (யாழ்.அக.); peacock's crest.

சிரோவசுத்தி *śirōvasutti*, பெ.(n.) தலையிலுள்ள நீர் வெளிப்படும் படி முகரும் போது, தும்பலும், மூக்கு சிந்துவதுடன் கண்ணீரும் வடியச் செய்யும் பொடி; (literally, it means the cerebral purgative) medicines which, when applied to the nostrils, produce an increased discharge of nasal mucous, frequently attended by sneezing and an unusual secretion of tears sternutatories or errhines. 2. தலையில் மருந்தெண் ணெயைப்பூசுகை; an application of medicinal oil as over the scalp. (சா.அக.)

சிரோவலி *śirōvali*, பெ.(n.) தலைவலி; pain in the head, head ache - Cephalalgia. (சா.அக.)

த.வ. தலைவலி

சிரோவாதம் *śirōvādam*, பெ.(n.) தலை, முகம் இவ்விடங்களிற் காணும் சதையை அடுத்த பக்கவூதை; paralysis of the muscles about the head and the face - Caphaloplegia. 2. மூச்சுக் குழாயை (நாசியை) அடுத்த முகவூதை (வாதம்); that which is also due to the lesion of the facial nerve or of its nucleus - Facial paralysis, c.f. முகவாதம். (சா.அக.)

த.வ. ஓரடி, பக்கவூதை (பக்கவாதம்)

சிரோவிகாரம் *śirōvigāram*, பெ.(n.) தலையில் உண்டாகும் கோளாறுகள்; disorders causing or occurring in the head -Cephalopathy. (சா.அக.)

சிரோவித்திரதி *śirōvittiradi*, பெ.(n.) தலையில் ஏற்படும் வீக்கம் அல்லது கட்டி; a tumour or swelling on the head, cerebral abscess. (சா.அக.)

த.வ. தலைக்கட்டி

சிரோவிரத்தக்கழலை *śirōviratta-k-kaḻalai*, பெ.(n.) தலையைச் சுற்றிலும் அரத்தம் சுரந்து

ஏற்படும் வீக்கம் அல்லது கழலை; a tumour or swelling filled with blood beneath the pericranium - Cep halhematoma. (சா.அக.)

த.வ. மண்டைக்கழலை

சிரோவிருத்தம் *širōviruttam,* பெ.(n.) மிளகு (மலை.); pepper.

சிரோவேட்டம் *širō-vēṭṭam,* பெ.(n.) தலைப்பாகை (சங்.அக.); turban.



சிரௌதகற்பம் *širauda-kaṟpam,* பெ.(n.) வேள்வி வினைக்கு உரியவற்றைக் கூறும் மறை (வேத)மந்திர பாகம் (சுக்கிரநீதி); the mantra portion of the vēdas pertaining to sacrifices.

[Skt. šrouta-kalpa > த. சிரௌதகற்பம்]

சிரௌதம் *širaudam,* பெ.(n.) மறையி (வேதத்தி)ல் விதிக்கப்பட்டது (சங்.அக.); that which is ordained by vēdas. (சா.அக.)

[Skt. šrauta > த. சிரௌதம்]

சிரௌதி *širauti,* பெ.(n.) மறையி (வேதத்தி)ற் கூறப்பட்ட வினை (கருமங்)களில் வல்லவன்; one who is proficient in vēdic rites.

[Skt. šrautin > த. சிரௌதி]

சில்லத்து *šillattu,* பெ.(n.) சிறுசட்டை; small jacket.

[U. zillat > த. சில்லத்து]

சில்லா *šillā,* பெ.(n.) மாவட்டம்; district.

[U. zillā > த. சில்லா]

சிலக்கு *šilakku,* பெ.(n.) இன்னும் கொஞ்சம் (இ.வ.); something more.

[U. silak > த. சிலக்கு]

சிலமான்கல் *šilamāṉkal,* பெ.(n.) ஒருவகை விலையுயர்ந்த கல் (m.m); agate, a variegated form of silica.

[U. sulaimān > த. சிலமான்கல்]

சிலமீலிகை *šilamīligai,* பெ.(n.) 1. மின்னல்; lightning. 2. மின்மினி; glow worm.

[Skt. cilamīlikā > த. சிலமீலிகை]

சிலாக்கியம் *šilākkiyam,* பெ.(n.) 1. மெச்சத்தக்கது; that which is commendable, praiseworthy. 2. சிறந்தது; that which is excellent; good. *அதைவிட இதுவே சிலாக்கியம்.* 3. புகழ்; fame, renown. *சிலாக்கியமுள வீரன் (இராமநா. பாலகா.1.).* 4. உரிமை (வின்.); privilege.

த.வ. சிறப்பு

[Skt. šlāghya > த. சிலாக்கியம்]

சிலாக்கியன் *šilākkiyaṉ,* பெ.(n.) புகழ்தற் குரியவன் (வின்.); praiseworthy, distinguished person.

த.வ. சான்றோன்

சிலாகி-த்தல் *šilāki-,* 4 செ.குன்றாவி.(v.t.) புகழ்தல்; to praise, commend. *சிலாகிக்குமாறு...... கொள்ளுந் திருவுரு வெல்லாம் (அஷ்டப். திருவரங். மா. 76).*

[Skt. šlāgh > த. சிலாகி-,]

சிலாடகம் *šilāḍagam,* பெ.(n.) மேல்வீடு (யாழ்.அக.); storey.

[Skt. šilāṭaka > த. சிலாடகம்]

சிலாமணி *šilāmaṇi,* பெ.(n.) செல்லக் கூடியது; that which is in currency.

[U. calāōni > த. சிலாமணி]

சிலாமனா *šilā-manā,* பெ.(n.) மனோசிலை (மு.அ.); a mineral poison.

[Skt. manasšilā > த. சிலாமனா]

சிலார் *šilār,* பெ.(n.) நன்கொடை (இனாம்); reward, recompense.

[U. sila > த. சிலார்]

சிலாலிகிதம் *šilālikidam,* பெ.(n.) **சிலாலேகை** பார்க்க; see *šilālēgai.*

த.வ. கல்வெட்டு

[Skt. šilā+likhita > த. சிலாலிகிதம்]

சிலாலேகை *šilā-lēgai,* பெ.(n.) கல்வெட்டு; stone inscription. *"முன்புள்ள சிலாலேகைப்படி" (S.I.I.iii. 99).*

[Skt. šilā+lēkhā > த. சிலாலேகை]

சிலாவங்கம் *šilā-vaṅgam,* பெ.(n.) ஈயக்கல் (வின்.); a kind of stone containing ores of lead.

சிலாவட்டம் *šilā-vaṭṭam,* பெ.(n.) 1. கற்பீடம்; a stone-slab used as a seat. *அச்சுனை மருங்கிலோர் மணிச்சிலா வட்ட முண்டு (சீவக. 1213).* 2. சந்தனக்கல் (பிங்.); stone for grinding sandal. 3. சாணைக்கல் (பிங்.); hone, grindstone.

[சிலை > சிலா + வட்டம்.]

சிலாவருடம் *šilāvaruḍam,* பெ.(n.) 1. கல்மழை; hail-storm. 2. காளமுகி (சூடா.); a cloud believed to rain hail stones.

த.வ. ஆலங்கட்டி மழை

[Skt. sila varsha>த. சிலாவருடம்.]

சிலிங்காரம் *šiliṅkāram,* பெ.(n.) ஒப்பனை; decoration. *"சிலிங்காரத்தாற் குழல் தாழவிட்டு" (திவ். பெரியாழ். 3,4,9).*

[Skt. šṛṅgāra > த. சிலிங்காரம்]

சிலும்பி *šilumpi,* பெ.(n.) கஞ்சாக் குடிக்கும் குழாய்; pipe for smoking bhang.

த.வ. சூம்பி

[U. cilm > த. சிலும்பி]



சிலுவை *šiluvai,* பெ.(n.) 1. கிறித்துவை வைத்தறைந்த மரம்; cross on which christ was crucified. 2. கிறித்துவ சமய சின்னத்துள் ஒன்று; cross, as the symbol of christianity.

த.வ. குறுக்கை

[Skt. slibo > த. சிலுவை]

சிலுவையிலறை-தல் *šiluvaiyilaṟai-,* 2 செ.குன்றாவி.(v.t.) சிலுவை மரத்தில் ஆணி பிணைத்து அடித்துக் கொல்லுதல்; to crucify (chr.)

சிலுவைவரை-தல் *šiluvaivarai-,* 12 செ.கு.வி.(v.i.) நெற்றியில் சிலுவை யடையாளஞ் செய்தல் (R.C); to make the sign of the cross upon the forehead.

[Skt. *slibo* > த. சிலுவை]

சிலேட்டர் *šilēṭṭar,* பெ.(n.) வணிகர் (யாழ்.அக.); merchants.

[Skt. šrēṣṭhin > த. சிலேட்டர்]

சிலேட்டி *šilēṭṭi,* பெ.(n.) செட்டி (திவா.); member of the cheṭṭi caste.

[Skt. šrēṣṭhin > த. சிலேட்டி]

சிலேட்டு *šilēṭṭu,* பெ.(n.) (சிறுவர் எழுதப் பயன்படுத்தும்) சட்டம் போட்ட சதுர, செவ்வக வடிவ மாக்கல் அல்லது தகரம்; slate (for children to write on).

த.வ. கல்லேடு



சிலேட்டுக்குச்சி *šilēṭṭu-k-kucci,* பெ.(n.) கல்லேட்டில் (சிலேட்டில்) எழுதப் பயன்படும் குச்சி வடிவக் கல், பலப்பம்; pencil like stone to write with on a slate.

த.வ. மாக்குச்சி

சிலேட்டுமஅதிசாரம் *šilēṭṭuma-adišāram,* பெ.(n.) **சிலேட்டுமாதிசாரம்** பார்க்க; see *šilēṭṭumādicāram.* (சா.அக.)

சிலேட்டுமஅபசுமாரம் *šilēṭṭuma-apasumāram,* பெ.(n.) தொடர்ந்து எச்சில் வடிதல், உடல், கண், முகம் வெளுத்தல், மறதி, வெறிச்சேட்டை முதலிய குணங்களை யுண்டாக்கி அறிவின் தெளிவை நீக்கும் ஒரு வகை இசிவு நோய்; a kind of epileptic fits attended with symptoms such as - constant flow of saliva, paleness or serious impairment of intellect. (சா.அக.)

சிலேட்டுமஅரோசகம் *šilēṭṭuma-arōšagam,* பெ.(n.) உணவில் வெறுப்பு; deigust for food. (சா.அக.)

சிலேட்டுமஆவிருதவாதம் *šilēṭṭuma-āvirudavādam,* பெ.(n.) குருதியோட்டம் தடைபடுவதினால் சிலேட்டுமம் வளியுடன் கூடி உடம்பில் சீதளம், கனத்தல், காரத்தில் விருப்பம், உடம்பில் எறும்பூருவதைப் போல் காணல் முதலிய குணங்களைக் காட்டும் நோய்; a nervous affection in a phlegmatic patient due to obstruction in circulation arising from the concerted action of wind and phlegm. It is marked by chillness and cold, heaviness of body uncommon desire to eat pungent substances. a peculiar ant moving sensation on the surface of the body etc. (சா.அக.)

த.வ. குருதிக்குறைநோய்

சிலேட்டுமஇரத்தபித்தம் *šilēṣṭuma-iratta-pittam,* பெ.(n.) இதயத்திலிருந்து நிறம் மாறி வெளிப்பட்டு வந்த அரத்தம், சிலேட்டு மத்தோடு கலந்து வெண்மையாகவும், வழுவழுப்பாயும் இருக்கும் அரத்த பித்த நோய் வகை; hemcrrhage originating from the heart due to the aggravated condition of bile combined with phlegm. The altered blood will be found whitish in colour and viscus. (சா.அக.)

சிலேட்டுமஉபதம்சம் *šilēṭṭuma-upatamšam,* பெ.(n.) ஆண்குறி தடித்து வீங்கி நமைச்சல் உண்டாதல்; swelling and itching sensation of the penis. (சா.அக.)

த.வ. வீக்க நமைச்சல்

சிலேட்டுமஉன்மாதரோகம் *šilēṭṭuma-unmātarōgam,* பெ.(n.) 1. கோழைக் கோளாறின் மேலீட்டினால் தூக்கமின்மை, பெண்மேல் விருபபம், யாரையும் அச்சுறுத்தல், கண்ட பண்டங்களில் விருப்பம் முதலிய குணங்களையுண்டாக்கும் ஒரு கோட்டி (பைத்திய) நோய்; a kind of insanity due to the derangement of the three humours in a patient of phlegmatic tendency., and

it is characterised by sleeplessness, desire for women. i.e. sexual desire longing to eat things seen by him and other mischievous tendencies as - frightening persons etc. 2. **உன்மாத ரோகம்** பார்க்க; see *unmātarōkam*. (சா.அக.)

த.வ. **கோழைவெறிநோய்**

சிலேட்டுமக்கபம் *šilēṭṭuma-k-kabam,* பெ.(n.) உடம்பின் தாதுக்களை ஒன்று படுத்தும் தன்மை வாய்ந்த கோழை (சிலேட்டும) வகை ஏழில் ஒன்று; one of the seven kinds of phlegm uniting the different elements of the body. (சா.அக.)

சிலேட்டுமக்காய்ச்சல் *šilēṭṭuma-k-kāyccal,* பெ.(n.) கோழை (சிலேட்டும)க் கோளாறினால் ஏற்படும் காய்ச்சல் (சுரம்); a phlegmatic fever more common in children than in adults. (சா.அக.)

த.வ. **கோழைக்காய்ச்சல்**

சிலேட்டுமக்கிரகணி *šilēṭṭuma-k-kirakaṇi,* பெ.(n.) **சிலேட்டுமக்கிராணி** பார்க்க; see *šilēṭṭuma-k-kirāṇi*. (சா.அக.)

சிலேட்டுமக்கிரந்தி *šilēṭṭuma-k-kiranti,* பெ.(n.) சிலேட்டுமாதிக்கத்தினால் தோலைப் பற்றிய கோளங்களுக்குக் கோளாறுண்டாகி அதனால் உடம்பின் சதை, கொழுப்பு முதலியவைகள் கெடுதியடைந்து திரண்டு வரும் ஒரு கடினமான கட்டி; a variety of encysted tumours which present a cyst filled with different matters as fibrous tissues, fat - like matter etc. It is supposed to occur from obstruction of the excretory ducts of the sebaceous glands. (சா.அக.)

த.வ. **கோழைக்கட்டி**

சிலேட்டுமக்கிராணி *šilēṭṭuma-k-kirāṇi,* பெ.(n.) சிலேட்டுமத்தால் உண்டாகும் கோழையுடன் கூடிய ஒரு வகைக் கழிச்சல் நோய்; a chronic diarrhoea due to the derangement of phlegm (humour) in the system. 2. அளவுக்கு மீறி சாப்பிட்டு பகலில் உறங்குவதினால் செரிமான (பக்குவாச யத்தின்) உறுப்புகள் வலுவிழந்து, அதனால் சிலேட்டுமக் கோளாறுகளுண்டாகி ஏற்படும் கழிச்சல் நோய்; dysenteric diarrhocaea used by vitiated phlegm arising from the weakening of the digestive power due to day sleep, especially after excessive eating. (சா.அக.)

த.வ. **கோழைக்கழிச்சல்**

சிலேட்டுமக்கிரிச்சரம் *šilēṭṭuma-k-kiriccaram,* பெ.(n.) அடி வயிற்றிலும் ஆண் குறியிலும் வீக்கமுண்டாகி, பிசினைப் போல் வழுவழுத்த கட்டுப்பட்ட மூத்திரம் மிகு துன்பத்தோடு இறங்கும் ஒரு வகை நோய்; strictu.e of urine attended with swelling in the abdomen and the penis followed by a discharge of viscous urine which remained suppressed. (சா.அக.)

த.வ. **உச்சைக்கடுப்பு**

சிலேட்டுமக்கிருமி *šilēṭṭuma-k-kirumi,* பெ.(n.) பார்வைக்குப் பொதுவாக தோன்றாமலும், தருப்பைப் பூ வாசனையைப் பெற்று, குடலில் சுற்றிக் கொண்டு மார்பு மட்டும் ஏறி அதிக தொல்லை (வேதனை)யை யுண்டாக்கும் வட்டமாக நூலைச் சுற்றியதுப் போன்ற ஒரு வகை நுண்ணுயிரி; thread - worms generally existing in the intestines. They form in clusters and have no legs. In shape, they resemble a coiled thread, sometimes invisible owing to their microscopic nature and have a peculiar smell of a flower. They stick to the intestines and invade up to

the thoracic region causing great inconvenience. 2. எலும்புருக்கிக நோயால் சயரோகத்தில் காணப்படும் புழுக்கள்; bacteria found in consumption. (சா.அக.)

சிலேட்டுமக்குணம் *śilēṭṭuma-k-kuṇam,* பெ.(n.) உடலையும் மனத்தையும் கட்டுப் படுத்துவதாகக் கருதப்படும் மூவகை நீர்மப் பொருள்களுள் ஒன்றானதும், உடம்பிற்கு மிக்க முகாமையானதும், உடம்பு வறட்சியடையாமல் ஈரம் ஏற்படுத்திக் கொண்டேயிருப்பதும், மூட்டெலும்புகளுக்கு நயநயப்பும், வழவழப்பும் புண்களுக்கு ஆற்றும் தன்மையும், உடம்பில் தசையுண்டாக்கி பருமனையும், வலிமையையும், நல்லுணர்ச்சி யையும் உறுப்புகளுக்கு உறுதியையும் கொடுக்கக்கூடியதுமான நீர்மம்.; one of the three humours in the system viz phlegan. It forms a very essential element in the constitution of the human body. It supplies the body with moisture and prevents it from becoming dry.. lubricates the inferior joints and adds to its gloss., contributes greatly to the formation of healthly granules in the sores., increases the size of the body.. brings about fresh tissues and a pleasant sensation to the system., furnishes strength and increases firmness to the limbs. It also imparts several characteristics as, forgiveness, mildness, patience, contentment etc.

[சிலேட்டுமம் + குணம்]

சிலேட்டுமக்குரற்கம்மல்ரோகம் *śilēṭṭuma-k-kuraṟ-kammal-rōgam,* பெ.(n.) ஒரு வகைத் தொண்டைநோய்; one of the throat infection. (சா.அக.)

த.வ. தொண்டைவலி

சிலேட்டுமக்குன்மம் *śilēṭṭuma-k-kuṉmam,* பெ.(n.) நாக்கு வழுவழுத்து, கக்கல் (வாந்தி), விக்கல், கொட்டாவி, இருமல், வயிறு இரைச்சல், மலம் இறுகல், உணவின் மீது வெறுப்பு, இளைப்பு முதலிய குணங்களைக் காட்டும் ஒரு வகைக் குன்ம நோய்.; a form of dyspepsia originated from the derangement of phlegmatic humour in the system, It is marked by the following symptoms viz-viscous or shining tongue vomiting hiccough, cough, rumbling of the stomach, constipation, aversion to food. fatigue and all-other specific indications of kapha (humour). 2. கபத்தினால் ஏற்படும் செரியாமை. இதனால் குளிர்சுரம், குமட்டல் (அரோசகம்), மார்பு துடித்தல், இருமல், உடம்பு வெளுப்பு முக்கினால் நீர் வடிதல் உண்டாகும்; dyspepsia due to excess of phlegmatic humour. It is attended with cold and fever, nausea, palpitation of the heart, cough, anemia, caturrh of the nose etc - catarrhal dyspepsia. (சா.அக.)

[சிலேட்டுமம் + குன்மம்]

சிலேட்டுமக்கூறு *śilēṭṭuma-k-kūṟu,* பெ.(n.) சிலேட்டுமத் தன்மை; phlegmatic humour or tendency. 2. கபத்திற்குண்டான இயற்கைத் தன்மை, வேறுபாடுத் தன்மை முதலிய பிரிவுகள். இது மீறினால் உடல் காய்ந்து உணவு செல்லாது, விக்கல், சக்தி குன்மம், இருமல், இரைப்பு, ஈளை முதலிய குணங்கள் ஏற்படும்; the inherent principles and the functionery changes of phlegm. Excess of this humour in the system mad lead to aversion to food, dyspeptic trouble, cough, hard breathing, expectoration etc. (சா.அக.)

[சிலேட்டுமம் + கூறு]

சிலேட்டுமக்கேணா *śilēṭṭuma-k-kēṇā,* பெ.(n.) காட்டுக் கரணை; wild elephant yam. (சா.அக.)

சிலேட்டுமக்கொதி *šilēttuma-k-kodi,* பெ.(n.) ஒரு வகைக் காய்ச்சல்; fever believed to be due to heated phlegm. (சா.அக.)

சிலேட்டுமக்கோபம் *šilēttuma-k-kōbam,* பெ.(n.) கோழை மிகுதல் (சிலேட்டுமாதிக்கம்); excess of phlegmatic humour in the system : excited condition of phlegm. (சா.அக.)

சிலேட்டுமக்கோளம் *šilēttuma-k-kōlam,* பெ.(n.) நாக்கு அடிப்புறத்தில் இரண்டு பக்கத்திலுமுள்ள உமிழ்நீர் கோளங்கள்; the smallest of the salivary glands, placed beneath the tongue on either side of sublingual gland. (சா.அக.)

சிலேட்டுமகணம் *šilēttumakaṇam,* பெ.(n.) 1. கோழைக் குற்றத்தினால் குழந்தைகட்கு உடம்பில் நீர் சேர்ந்து உடம்பிளைக்கும் ஒரு வகைக் கண நோய்; atrophy humour of in children, resulting in the collection of morbid fluid in the system. 2. கோழையினால் குழந்தைகட்கு உண்டாகும் ஒரு வகைக் கண் நோய்; a congenital disease of a phlegmatic ovigin, affecting the eyes in children. (சா.அக.)

சிலேட்டுமகண்டகம் *šilēttumakaṇḍakam,* பெ.(n.) நாவெல்லாம் இலவு முட்களைப் போல் தடித்து வெளுத்தும் நெருங்கியும், வலியை யுண்டாக்கிக் கொப்புளங்களையும் எழுப்பும் ஒருவகை நாக்கு நோய்; a disease in which the tongue is rendered thick, white and heavy and is over grown with vegetation of slender fleshy papillae like thorns of a cotton tree. (சா.அக.)

சிலேட்டுமகம் *šilēttumakam,* பெ.(n.) உடம்பில் எலும்பின் பொருத்துகளிற் தங்கி அவற்றைப் பிரியாத படி செய்யும் கோழை; phlegm located in all the joints of the human body preventing them from seperation. (சா.அக.)

சிலேட்டுமகர்ணசூலை *šilēttumakarṇa šūlai,* பெ.(n.) தாடை, கழுத்து பிடரி வீங்கி வலியுண்டாக்கி காதினின்று வெண்மையாய்ச் சீழ் வடியும் காது நோய் (இது சிலேட்டும பண்டங்களை உண்பதினால் ஏற்படும் நோயாதலினால் இப்பெயர்); a disease of the ear marked by swelling of the jaw, neck and nape followed by pain and discharge from the ear. It is so called because it is caused by irregular diet. i.e., taking unsuitable food giving rise to phlegmatic tendencies - Ofitis. (சா.அக.)

சிலேட்டுமகழலை *šilēttumakaḻalai,* பெ.(n.) கோழைக் கூறினால் ஏற்பட்ட கழலை; a tumour arising from phlegmatic causes. (சா.அக.)

சிலேட்டுமகளகண்டகம் *šilēttumakaḷakaṇḍakam,* பெ.(n.) கழுத்திற்கும் தாடைக்கும் நடுவில் புடைகளை எழுப்பி, நமைச்சலும் வாயினிப்பையுமுண்டாக்கும் ஒருவகைத் தொண்டையெழுச்சி; simple goitre marked by overgrowth (hypertrophy) of flesh between the jaw and the neck, attended with itching sensation and sweet taste. (சா.அக.)

சிலேட்டுமகாசம்[1] *šilēttuma-kāsam,* பெ.(n.) ஒரு வகைக் ஈளை காசநோய்; a type of Asthma. 2. கண்ணோய்; an eye disease. 3. கோழையினால் கண்ணின் கரு மணியின் மேல் வெண் கொப்புளங்கள் கண்டு, நீர் வடிந்து பார்வை மங்கும் நோய்; opacity of the eyes due to a vesicular growth over the area of the pupil, attended with discharge of white watery fluid from the pupil arising from phlegmatic causes. (சா.அக.)

சிலேட்டுமகாசம்[2] *šilēṭṭumakāšam,* பெ.(n.) எலும்புருக்கி (காச)நோய் வகை (சீவரட்.); consumption due to diseased phlegm.

சிலேட்டுமகாசரோகம் *šilēṭṭumakā šarōgam,* பெ.(n.) 1. ஒரு வகை ஈளை நோய்; a kind of bronchial asthma. 2. **சிலேட்டுமகாசம்** பார்க்க; see *šilēṭṭuma-kāšam.* 3. கண் பார்வைக்குள் வெண்ணிறத்தையுண்டாக்கி, கதிரவனையும் விளக்குச்சுடரையும் பார்க்கில் பல உருவங்களாகப் புலப்படும் நோய்; a disease of vision marked by white coating, in which one object appears as two or more objects when seen before lamp light or the sunlight - polyopia. (சா.அக.)

சிலேட்டுமகாமாலை *šilēṭṭumakāmālai,* பெ.(n.) முகம் வியர்த்து, உடல் நடுங்கி, வெளுத்து, வீங்கி, இருமல், விக்கலுடன் மேல் மூச்சும், இளைப்பும் காணும் காமாலை நோய்; jaundice of phlegmatic origin. It is marked by perspiration on face, tremor, paleness and swelling of body, hiccough, fatigue etc - catarrhal jaundice. (சா.அக.)

சிலேட்டுமகுன்மம் *šilēṭṭumakuṉmam,* பெ.(n.) குன்மநோய்வகை (சீவரட்.); disease due to excess to phlegm. (சா.அக.)

சிலேட்டுமங்கட்டல் *šilēṭṭumaṅ-kaṭṭal,* பெ.(n.) 1. தொண்டை அல்லது நெஞ்சில் கோழை கட்டல்; formation or accu mulation of phlegm in the lungs. 2. மரணக்குறியுள் ஒன்று; a symptom of death, as obstruction of respiration due to the collection of phlegm in the throat. (சா.அக.)

சிலேட்டுமங்கட்டியிழு-த்தல் *šilēṭṭumaṅkaṭṭiyiḻu-,* 4 செ.கு.வி.(v.i.) கோழை மிகுதியினால் மூச்சு விட முடியாது திணறிக் காணும் இழுப்பு நோய்; an attack of asthma attended with difficulty of breathing of a spasmodic character occuring in paroxysms. 2. சாகுங் காலத்தில் தொண்டையில் கோழை கட்டி, அதனால் மூச்சு விட முடியாமல் துன்புறுத்தும் நிலைமை; agony of death due to obstruction of respiration caused by increase of phlegm in the chest. 3. **சிலேட்டுமங்கட்டல்** பார்க்க; see *šilēṭṭumaṅ-kaṭṭal.* (சா.அக.)

சிலேட்டுமசமனி *šilēṭṭuma-šamaṉi,* பெ.(n.) கோரைக் கிழங்கு; coray root - Cyperus pertenuis. (சா.அக.)

சிலேட்டுமசமானஆவிருதவாதம் *šilēṭṭumašamāṉaāvirudavādam,* பெ.(n.) கோழையை சமான வாயு ஆவரணமாகச் சூழும் போது சீதளம், மந்தாக்கினி முதலிய குணங்களை யுண்டாக்கம் இதே வகையில் பிராணன், உதானன், வியானன், அபானன் என்னும் வாயுக்கள் கோழையைச் சூழும் போது அவற்றிற்குத் தக்கபடி குணங்கள் வேறுபடும்; the functional changes brought about when the vital air samana, responsible for digestion. covers the phlegmatic humour of the system viz. cold and chillness, impaired digestion etc. In the same way, several are the changes that occur when the vital airs - prana, uthanal (which is promoting digestion), viyana and Apana cover the same humour, according to their principles. (சா.அக.)

சிலேட்டுமசயம் *šilēṭṭumasayam,* பெ.(n.) **சிலேட்டுமசயரோகம்** பார்க்க; *šilēṭṭuma-sayarōgam.* (சா.அக.)

சிலேட்டுமசயரோகம் *šilēṭṭuma-sayarōgam,* பெ.(n.) தலை கனத்து உடம்பு

பருத்து, குமட்டல், கக்கல், இருமல், வாயிற்சலம் ஊறல், பீனிசம் இரைப்பு, இளைப்பு, கோழை முதலிய குணங்களை யுண்டாக்கி சளி மேலீட்டினால் காணும் ஒரு வகை எலும்புருக்கி நோய்; a kind of phthisis or consumption due to excess of phlegmatic humour in the system. It is characterised by the following symptoms viz - heaviness of head and the body, nausea, cough, insalivation, cattarrh of the nose, breathing with wheezing, expectoration, general wasting of the body etc. (சா.அக.)

சிலேட்டுமசரீரம் *šilēṭṭuma-šarīram,* பெ.(n.) கோழை மிகுதிப்பட்டிருக்கும் உடற்கூறு; bodily constitution in which the phlegmatic humour predominates.

சிலேட்டுமசருமகிலம் *šilēṭṭuma-šaruma-kilam,* பெ.(n.) முகத்தில் முளைகள் எழும்பி வழுவழுத்து, வெளுத்து, ஊசியாற் குத்துவது போல் குத்தலையுண்டாக்கும், மருத்துவம் செய்யாவிடில் அபான வாயுவை அடைத்து மலச்சிக்கலையும் பந்தத்தையும், வயிறு பருத்தலையுமுண்டாக்கும்; pimples or pustules on the face with a whitish appearance and glossy surface and followed by pinprick pain. If these are not treated, they may lead to gas in the intestines and distension of the bowels thus resulting in constipation. (சா.அக.)

சிலேட்டுமசலமிழிவு *šilēṭṭuma-šalamiḻivu,* பெ.(n.) சளி மிகுதியினால் பிறக்கும் 4 வகை மூத்திரநோய். இதில் மூத்திரம் தாழைமலர், எலுமிச்சை, சாணம், உதிரம் இவைகளைப் போல் வாசனையும் சுவையுமுடையது; a urinary disease consisting of four kinds. each of which attended with abnormal discharge of urine. In this, the urine is sweet to the taste and smells like screw pine flower, lemon, cowdung and blood. The disease is attributed to the deranged phlegm. (சா.அக.)

சிலேட்டுமசவ்வு *šilēṭṭuma-šavvu,* பெ.(n.) உடம்பினுட் பகுதியில் உள்ள அறைகளைக் கவர்ந்து கொண்டிருக்கும் சளிசவ்வு; the mucus membrane lining all the cavities of the body. (சா.அக.)

சிலேட்டுமசன்னி *šilēṭṭuma-šanni,* பெ.(n.) நெஞ்சில் சளி கட்டி வியர்த்து, தோன்றாத தெல்லாம் மனதிற் தோன்றி, தண்ணீர் வெறுத்து, அறிவை மயக்கும் ஒரு வகை இசிவு; a type of delirium in which the accumulation of phlegm in the chest and perspiration form the predominent symptoms. It gives rise to disorder of the brain occasioned by extravagant thought, dislike for water, perplexity of mind etc. (சா.அக.)

சிலேட்டுமசிக்வாகண்டரோகம் *šilēṭṭumašikvākaṇḍarōgam,* பெ.(n.) நாக்கில் முள்ளைப் போல் தடித்து வெளுத்து கொப்புளங்களை எழுப்பும் ஒரு வகை நோய்; a disease of the tongue thickened with papillae and is so changed as to give the mucous membrane an appearance of whitish colour. (சா.அக.)

சிலேட்டுமசிம்மககாசம் *šilēṭṭuma-šimmaka-kāsam,* பெ.(n.) கோழை தங்கிய ஒரு வகை ஈளை நோய்; phlegmatic asthma. (சா.அக.)

சிலேட்டுமசிராவம் *šilēṭṭuma-širāvam,* பெ.(n.) 1. கண்ணில் வலி ஏற்படாமலே அதினின்று வெண்மையாயும், கடினமாயும், சீதம் போலும் சீழ்வடிந்து, பீளை தள்ளிக் கொண்டிருக்குமோர் கண்ணோய்; an eye disease in which the secretion of slimy,

white and thick muco-purulent discharge is marked by absence of pain. 2. **கபச்சிராவம்** பார்க்க; see *kaba-c-ciravam.* (சா.அக.)

சிலேட்டுமசிர்க்காரோகம் *śileṭṭuma-śirkkā-rōgam,* பெ.(n.) பெண்களுக்கு அல்குல் வழியாக மஞ்சள் நிறமாய் நாற்றத்துடன் வெளிப்படும் அரத்தமும் சீழும் கலந்த ஒழுக்கு. இதனால் பசி இன்மை மலச்சிக்கல், முதுகுவலி சூதக சன்னிக் குறி முதலிய குணங்களைக் காட்டும்; the increased secretion from the female private parts called whites. The discharge is due to the phlegmatic humour of the system and is of a white and faint yellow colour. By this disease, the appetite is impaired, and the bowels constipated; there is often pain in the back followed by hysterical symptoms. (சா.அக.)

சிலேட்டுமசிலேட்டுமம் *śileṭṭuma-śileṭṭumam,* பெ.(n.) **சிலேட்டுமத்தில் சிலேட்டுமம்** பார்க்க; see *śileṭṭumattil-sileṭṭumam.* (சா.அக.)

சிலேட்டுமசுபாவம் *śileṭṭuma-śupāvam,* பெ.(n.) 1. உடம்பில் அரத்தங் குறைந்த காலங்களில், கோழையே அரத்தமாக மாறி உடம்பை பேணுந் தன்மையது, அன்றியும், கணு, முட்டி முதலியவற்றை நீட்டவும், முடக்கவும், வறட்சியடையாமல் பசையாகவே இருக்கும்படி பயன்படும் தன்மை வாய்ந்தது; the nature of phlegm which is capable of turning itself into blood, when the latter is found insufficient in supply. It lends nutrition to the body; and it not only facilitates the free movement of the limbs and joints. but also lubricates them. 2. **சிலேட்டுமக்கூறு** பார்க்க; see *śileṭṭuma-k-kūṟu.* (சா.அக.)

சிலேட்டுமசுரம் *śileṭṭumaśuram,* பெ.(n.) காய்ச்சலா (கபாதிக்கத்தினா) லுண்டான கோழை; phlegm - born fever. (சா.அக.)

சிலேட்டுமசூலை *śileṭṭumaśūlai,* பெ.(n.) கோழையின் தாக்கத்தினால் (கபாதிக் கத்தினால்) அடிவயிற்றில் நோவு, வியர்வை, குமட்டல் (அரோசகம்), கைகால் கனத்தல் முதலிய குணங்களையுண்டாக்கும் ஒரு வகைச் சூலை நோய்; a kind of colic attended with agonising pain in the abdomen, perspiration, nausea, heaviness in the limbs etc. It is said to be due to the deranged phlegm in the system. 2. மேக சம்பந்தத்தினா லுண்டாகும் சூலைப் பிடிப்பு; a chronic gout. (சா.அக.)

[சிலேட்டுமம் + சூலை]

சிலேட்டுமசோகை *śileṭṭuma-śōgai,* பெ.(n.) கோழை (கபத்தி)னால் ஏற்படும் சோகை; phlegmatic anemia. (சா.அக.)

[சிலேட்டுமம் + சோகை]

சிலேட்டுமத்தடிப்பு *śileṭṭuma-t-taḍippu,* பெ.(n.) கோழை (கபம்) அதிகரித்தல்; excess of phlegm. 2. கோழை (கபம்) உறைதல்; solidity or thickness of phlegm. (சா.அக.)

[சிலேட்டுமம் + தடிப்பு]

சிலேட்டுமத்தலைவலி *śileṭṭumat-talaivali,* பெ.(n.) கபத்தின் கோளாறுகளினால் ஏற்படும் ஒரு வகைத் தலைவலி; a kind of head ache; due to the derangement of phlegm in the system. (சா.அக.)

சிலேட்டுமத்தானம் *śileṭṭuma-t-tāṉam,* பெ.(n.) உடம்பில் கழுத்து (கண்டம்) முதல் தலை வரையுள்ள பாகம்; the region of phlegm extending from the neck to the head. (சா.அக.)

[சிலேட்டுமம் + தானம்]

சிலேட்டுமத்தில்சிலேட்டுமம் *śilēṭṭumattil-śilēṭṭumam,* பெ.(n.) ஒரு மாத்திரையாய் நடக்கும் சிலேட்டுமத்தோடு, வேறொரு மாத்திரையாய் நடக்கும் சிலேட்டுமம் சேர்ந்தால் ஆத்துமா வெளிப்பட்டு தேகம் இறந்து போம்; when the force or degree in a particular pulse-wave is found to exhibit altogether a different degree or force by the radial artery the soul will leave the body and instantaneous death is the immediate result. *யாத்திரை விழி வட்டமிட்டு உயிர் பிரியும் நாடி.* (சா.அக.)

சிலேட்டுமத்துக்காதி *śilēṭṭumattu-k-kādi,* பெ.(n.) கோழையை (கபத்தை)யறுக்கும் மருந்து, **சிலேட்டுமத்திறமான்** பார்க்க; see *śilēṭṭuma-t-tiṟamāṉ.* 2. திப்பிலி; long - pepper-piper longum, for a list of drugs classified as expectorants. (சா.அக.)

[சிலேட்டுமத்துக்கு + ஆதி]

சிலேட்டுமதந்தமூலரோகம் *śilēṭṭumatantamūlarōgam,* பெ.(n.) பித்தம் பல்லில் நுழைந்து அதன் வேரிலுள்ள அரத்தத்தைச் சீழாக மாறச் செய்து, எரிச்சலையுண்டாக்கும் பல் நோய் வகை; a dental disease in which the bile prevails in the gums at the root of the teeth causing pus with burning sensation. (சா.அக.)

சிலேட்டுமதாகம் *śilēṭṭuma-tāgam,* பெ.(n.) கபக் கோளாறினால் நெஞ்சில் குத்தல், வாயினிப்பு, வயிற்றுப்பல், தலையும் உடம்பும் மரத்தல், கக்கல், குமட்டல், சோம்பல், செரியாமை முதலிய தீக்குறிகள் ஏற்படுத்தும் நாவறட்சி; intense thirst as a result of excited condition of phlegm in the system. It may lead to the following bad symptoms viz - pinerick pain in the chest, sweetness of taste, flatulency, numbnmess, vomiting, nausea, indolence and indigestion. (சா.அக.)

சிலேட்டுமதாது *śilēṭṭuma-tādu,* பெ.(n.) உடம்பில் பித்த தாது சம்பந்தமான பலவிதமான வேதியியல் மாறுபாடுகளினால் உண்டாகிற உடற்சூட்டைத் தடுப்பதற்கு ஆற்றல் வாய்ந்தது; kapha humour combined chemically with pitta (bilo) gives rise to heat in the body and so. pittam is the positive heat of the body and kapha is the negative heat or the cooling principle which presents the excessive effect of the bodily heat by means of its humidity. Thus protecting the cellular tissues from wasting away. (சா.அக.)

சிலேட்டுமதிமிரம் *śilēṭṭumatimiram,* பெ.(n.) கபாதிக்கத்தினால் கருவிழியை வெளுப்பாக மாற்றி, பார்வையையும் வெளுப்பாகத் தோற்றுவித்து, ஒரு பொருளைப் பல பொருளாய்க் காட்டும் நோய்; an affection in the black of the eye (iris) from phlegmatic causes by which the iris is rendered white giving a whitish appearance to the sight. (சா.அக.)

சிலேட்டுமதிறமான் *śilēṭṭuma-tiṟamāṉ,* பெ.(n.) கபத்தை கண்டிக்கக் கூடிய மூலி; medicine promoting the discharge of mucous or other matters from the trachea-Expectorant. 2. செவ்வியம்; black pepper root. (சா.அக.)

சிலேட்டுமதுட்டவிரணம் *śilēṭṭuma-tuṭṭa-viraṇam,* பெ.(n.) நரம்புகளில் சிலையோடி வெளுத்து, கெட்டிப் பட்டு குத்தலுடனும், வலியுடனும் பிசினைப் போல் சீழ் வடியும் புண்; an open sore or lesion affecting the nerves and causing sinuses, attended

with boring pain and purulent discharge. (சா.அக.)

சிலேட்டுமதேகக்குறி *šilēttuma-tēgakkuri,* பெ.(n.) நாடி துர்ப்பலம், உடல் வியர்வை, சன்மார்க்கத்தில் விருப்பம், காமவிருப்பக் குறைவு முதலிய குணங்கள் ஏற்படும் கப உப்பு (இவர்களுக்கு கண்வழியாய் ஜீவன் பிரியும்); the temperament of a man of phlegmatic humour, will exhibit symptoms such as - weak blood vesels, perspiration, spiritual desire, a low ebb of sexual passion, etc., In men of such types, the soul on their death, will leave the body through the eyes. (சா.அக.)

சிலேட்டுமதேகக்கூறு *šilēttuma-tēga-k-kūru,* பெ.(n.) **சிலேட்டுமக்கூறு** பார்க்க; see *šilēttuma-k-kūru.* (சா.அக.)

சிலேட்டுமதேகம் *šilē ttuma-tēgam,* பெ.(n.) **சிலேட்டுமசரீரம்** பார்க்க; see *šilēttuma-sariram.* (சா.அக.)

சிலேட்டுமநடத்தல் *šilēttuma-nadattal,* பெ.(n.) 1. தொண்டையிற் கபங்கடைகை; rattle in the throat due to phlegm (J.). 2. நாடிவிழுகை (வின்.); low pulse as of a dying person.

சிலேட்டுமநடை *šilēttuma-nadai,* பெ.(n.) தொண்டையில் கபங் கட்டியிழுத்தல்; ratlling in the throat due to the deposit of phlegm. (சா.அக.)

சிலேட்டுமநாசம் *šilēttuma-nāšam,* பெ.(n.) இருள் மருது; black murdah. 2. **கருமருது** பார்க்க; see *karu-marudu.* (சா.அக.)

சிலேட்டுமநாசனி[1] *šilēttuma-nāšni,* பெ.(n.) மராமரம்; common saul. 2. மருவகம்; southern wood. (சா.அக.)

சிலேட்டுமநாசனி[2] *šilēttuma-nāšani,* பெ.(n.) கார்போக வரிசி; hazel leaved psoralea - psoralea corylifolia. 2. கக்கரி; cucumber. 3. மராமரம்; flowering tree - Engenia racemosa. 4. நறுந்தாளி; fragrant laldanah - Thomaeagenus. (சா.அக.)

சிலேட்டுமநாசி *šilēttumanāši,* பெ.(n.) திப்பிலி; long-pepper - piper longum. (சா.அக.)

சிலேட்டுமநாடி[1] *šilēttuma-nādi,* பெ.(n.) சிலேட்டும நிலையைக் குறிக்கும் நாடி; pulse indicating the condition of the phlegmatic humour in the body. (சா.அக.)

[சிலேட்டும்+நாடி]

[Skt. šlēșman > த. சிலேட்டும்]

சிலேட்டுமநாடி[2] *šilēttuma-nādi,* பெ.(n.) மணிக் கட்டுமேலே ஒரு விரலத்தில் ஆரையெலும்பின் பேரில் ஓடுவதும் மூன்று விரலால் அழுத்த மோதிர விரலுக்கடியில் துடிக்கக் கூடியதுமான கோழையைக் குறிக்கும் தாழ்ந்த அல்லது மெல்லிய கால் மாத்திரை அளவுள்ள நாடி; a slow beat pulse indicating phlegmatic humour of the system. The movement of this pulse is shown by the radial artery situated an inch above the left wrist, It is felt at the ring-finger generally by pressing with the three fingers. The force or degrees of it is considered to be a quarter. (சா.அக.)

சிலேட்டுமநாடிவிரணம் *šilēttumanādi-viranam,* பெ.(n.) நரம்பிலுண்டாகும் கட்டியானது, தடித்து கெட்டிப் பட்டு, மினுமினுத்துப் பழுத்துடைந்தால் இடையறாது சீழ் ஒழுகி, இரவுக் காலத்தில் அளவுக் கதிகமாய் ஒழுகும் விரண நோய்; an ulcer or an abscess found in the nervous region and marked by a shining surface and hardened swelling with a constant

discharge of pus and its profuse flow in the night. (சா.அக.)

சிலேட்டுமநோய் *šilēṭṭuma-nōy,* பெ.(n.) மூலத்தில் சூடு மிகுதியாகி மண்டையைப் பற்றி, அரத்தம் ஏற்றி, வெண்ணீர் (விந்து) கெட்டு, நெஞ்சில் கோழைகட்டி இருமலையும் இளைப்பையும் உண்டாக்கும் நோய்; phlegmatic diseases in common due to excess of heat in the region of the sacral plexus and its distribution over or communication with the cerebral system. which is marked by diminution of blood, vitiation of seman, collection of phlegm in the chest, cough fatigue etc.

சிலேட்டுமபலம் *šilēṭṭuma-palam,* பெ.(n.) புளி வஞ்சி; an unknown drug. (சா.அக.)

சிலேட்டுமபாசம் *šilēṭṭuma-pāšam,* பெ.(n.) கருமருது, பார்க்க; black murdah.

சிலேட்டுமபாண்டு *šilēṭṭuma-pāṇḍu,* பெ.(n.) கோழையின் தாக்கத்தினால் கண், உடம்பு, முகம், நகம், மலமூத்திரம் முதலியவை வெளுப்பாகவும், நரம்பெழுச்சியும் காணும் ஒரு வகைப் பாண்டு நோய்; a form of dropsy due to the aggravated condition of phlegm in the system. Which is marked by paleness of the eyes, the body, face, nail, faces, urine etc. along with prominent and raised appearance of the veins. (சா.அக.)

சிலேட்டுமபாதவன்மீகரோகம் *šilēṭṭuma-pāta-vaṉmīka-rōkam,* பெ.(n.) யானைக் காலின் மீதுண்டாகும் புற்று; tumours or tubercles of various sizes found grown like ant - hill in the elephantiasis of the leg. (சா.அக.)

சிலேட்டுமபித்தசமனி *šilēṭṭuma-pitta-šamaṉi,* பெ.(n.) கருவேல்; black babool - Acacia arabica. (சா.அக.)

சிலேட்டுமபித்தசூலை *šilēṭṭuma-pitta-šūlai,* பெ.(n.) **சிலேட்டுமசூலை** (வின்.) பார்க்க; see *šilēṭṭumašūlai.* (சா.அக.)

சிலேட்டுமம் *šilēṭṭumam,* பெ.(n.) உடம்பிலுள்ள கோழை; phlegm, phlegmatic humour, one of the three humours of the body. (சா.அக.)

[Skt. *šlēṣman* > *த. சிலேட்டுமம்*]

சிலேட்டுமவாதக்கிராணி *šilēṭṭumavāda-k-kirāṇi,* பெ.(n.) கிராணிவகை (வின்.); diarrhoea from phlegm, etc. (சா.அக.)

சிலேட்டுமாதிசாரம் *šilēṭṭumādišāram,* பெ.(n.) அதிசாரவகை (வின்.); diarrhoea of a virulent type caused by phlegm.

[Skt. *šlēṣman+atisāra* > *த. சிலேட்டுமாதிசாரம்*]

சிலேடகம் *šilēḍakam,* பெ.(n.) மருந்துவேர் (மலை.); pellitory root.

[Skt. *sleṣmāntaka* > *த. சிலேடகம்*]

சிலேடி-த்தல் *šilēḍi-,* 4 செ.கு.வி.(v.i.) இருபொருள்படப் பேசுதல் (வின்.); to speak ambiguously.

[Skt. *šlēṣa* > *த. சிலேடி*]

சிலேடை *šilēḍai,* பெ.(n.) 1. செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை என்ற இரு பிரிவுடையதாய் ஒருவடிவாக நின்ற சொற்றொடர் பல பொருளுடையதாக வரும் அணி (தண்டி. 75); (Rhet.) paranomasia, figure of speech in which a word or phrase admits of two or more interpretations, of two kinds viz., cem-moli-c-ciledai, piri-moli-c-ciledai.

2. இனிய சொற்றொடர்; pleasing combination of words. *"அயன் சிருஷ்டி சிலேடையா யுனக்குரைத்தேன்" (ஞானவா. தாசூர. 53).*

[Skt. ślēṣa > த. சிலேடை]

சிலேதம் *śilēdam,* பெ.(n.) செம்முருங்கை (மலை) பார்க்க; red Indian laburnum.

சிலேபி *śilēbi,* பெ.(n.) இன்பண்டம்; a sweet meat.

[U. jilēbi > த. சிலேபி]

சிலேயம் *śilēyam,* பெ.(n.) கற்போலக் கடினமாயிருப்பது (சங்.அக.); anything hard like a stone.

[Skt. śilēya > த. சிலேயம்]

சிலேற்பனம் *śilērpaṉam,* பெ.(n.) 1. சிலேட்டுமம் பார்க்க; see silettumam. 2. இறக்குந் தறுவாயில் தோன்றும் மென் மூச்சு (இ.வ.); short breaths of a dying person; death rattle.

[Skt. ślēṣman > த. சிலேற்பனம்]

சிலேற்பனை *śilērpaṉai,* பெ.(n.) **சிலேற்பனம்** பார்க்க; see *śilērpaṉam.*

[Skt. ślesman > த. சிலேற்பனை]

சிலோத்துவாசனம் *śilōttuvāśaṉam,* பெ.(n.) ஈமச்சடங்கில் இறந்தோனை எழுச்சிப் பண்ணின கல்லை அப்புறப் படுத்துகை; the rite of removing the stone set up to represent the deceased person in his obsequies.

த.வ. கல்சாய்ப்பு

[Skt. śilā+ud-vāsana > த. சிலோத்துவாசனம்]

சிவசாதாக்கியம் *śivaśātākkiyam,* பெ.(n.) அருட்சத்தியால் மெய்யுணர்வுத் திரு மேனியாய் (தியானமூர்த்தியாய்) நின்ற சிவம்; Śivaṉ, as an object of contemplation, so disposed by his Energy of Grace.

த.வ. மெய்யுணர்திருமேனி

சிவதருமிணி *śivatarumiṇi,* பெ.(n.) முத்திகாமிகட்குத் திரோதான சக்தி உருவமாகிய சிகாச்சேதத்தோடு செய்யுஞ் சபீசதீட்சைவகை (சைவச. ஆசாரி. 62, உரை); (śaiva) a way religious initiation accompanied with the removal of hair-tuft which is believed to represent the obscuring principle, a kind of *capica-tīṭcai,* q.v.

த.வ. குடுமிகளை அருளிப்பு

[Skt. śiva-dharmiṇi > த. சிவதருமிணி]

சிவாய் *śivāy,* பெ.எ.(adj.) அதிகப்படியான (C.G.); extra.

[U. siwāi > த. சிவாய்]

சிவாய்சமா *śivāysamā,* பெ.(n.) 1. நிலவரி, இறக்குமதி வரி முதலியன வொழிந்த அதிகப்படியான வரிகள்; (W.G) extra revenue, revenue derived from miscellaneous sources other than land customs or excise. 2. பட்டாச் செய்யாத நிலத்தினின்று கிடைக்கும் வரிப்பணம்; revenue derived from lands unassigned or cultivated with out patta. 3. ஒரு முறையின்றி அவ்வப்பொழுது தண்டும் வரிப்பணம்; temporary or irregular items of revenue.

த.வ. மிகுவரி

[U.siwai+jama> த. சிவாய்சமா]

சிவார்ச்சனாசந்திரிகை *śivārccaṉā-cantirikai,* பெ.(n.) சிவ வழிபாட்டைப் பற்றிக் கூறும் ஒரு நூல்; a treatise on Śiva worship.

சிவிகாரம் *śivikāram,* பெ.(n.) சுவீகாரம் பார்க்க; see śuvīkāram.

சிறாப்பு *śirāppu,* பெ.(n.) 1. காசு ஆய்வாளன் (நாணய நோட்டக்காரன்); shroff, teller employed by banks and commercial firms. 2. கருவூல வேலைக்காரன்; treasury assistant. 3. காசுக்கடைக்காரன்; banker, dealer in precious metals.

த.வ. நாணயநோட்டகன், நோட்டக்காரன்
[U. sarrāf > த. சிறாப்பு]

சின்மயவாத்துமா *śiṉmaya-v-āttumā,* பெ.(n.) மெய்யறிவாளன்; spiritual soul. (சா.அக.)

[சின்மயம்+ஆத்துமா]

சின்மாத்திரம் *ciṉ-māttiram,* பெ.(n.) ஆதனின் இயல்பு; natural of the soul. (சா.அக.)

சினகர் *śiṉagar,* பெ.(n.) சமணர்; Jains. *"சினகருக் கெளியேனலேன்" (தேவா. 859, 6).*
[Skt. jinaka > த. சினகர்]

சினகரம் *śiṉagaram,* பெ.(n.) 1. சமணக்கோயில்; jains temple. *"அம்மலைச் சினகரம் வணங்கி" (சீவக. 1248).* 2. கோயில்; temple. *"சினகரம் புகுது மெல்லை" (கந்தபு. திருவவ. 11).* 3. சிறு கோயில் (அக.நி.); small temple. 4. அரண்மனை; palace, royal residence. *"இணையறு சினகரமெய்தி" (கந்தபு. – 386).*

த.வ. அருகன்கோயில்
[Skt. jina+gṛha > த. சினகரம்]

சின்சாசங்கமாத்திரை *śiṉśā-śaṅgu-māttirai,* பெ.(n.) உடம்பு வலி வயிற்றுப் புண்களுக்குக் கொடுக்கப்படும் ஆயுள் மறை (ஆயுர்வேத) மருந்து. சகல சூலை, சகலகுன்மம் இவைகளைப் போக்கும் ஆயுள் மறை மருந்து. an ayurvedic medicine in the form of pill given for all sorts of pain in the body and stomach disorders gunmam. (சா.அக.)

சினீவாலி *śiṉīvāli,* பெ.(n.) திங்கட்கலை தொடங்கும் காருவா (அமாவாசை) நாள் (சூடா.); the first day of the new moon when it rises with a scarcely visible crecent.
[Skt. śinīvāli > த. சினீவாலி]

சினேகநசியம் *śiṉēga-naśiyam,* பெ.(n.) 1. எண்ணெய்ப் பசை சேர்ந்த மூக்குத்தூள்; snuff or pulverised tobacco prepared with oil or other obigenous substance as an ingredient. 2. எண்ணெய் அல்லது நெய் சேர்ந்த மருந்துப் பொடி; a medicinal powder prepared with oil or ghee as an ingredient. (சா.அக.)
[Skt. snēha+naś-ya> த.சினேகநசியம்]

சினேகவர்மம் *śiṉēga-varmam,* பெ.(n.) வெள்விழியில் சொர சொரப்புள்ள, சிறிது மஞ்சள் நிறமான, சதை வளர்ந்து நாளா வட்டத்தில் பருக்கும் ஒரு வகை நோய்; a rough yellowish growth of flesh on the white coat of the eye slowly grows in size. (சா.அக.)

சினேகபந்து *śiṉēga-bandu,* பெ.(n.) நட்பினால் உறவானவன் (உ.வ.); friend, considered a relative.
[Skt. śnēha+bandhu > த. சினேகபந்து]

சினேகபலம் *śiṉēga-balam,* பெ. (n.) எண்ணெய் எடுக்கப் பயன்படும் எள் (தைலவ.); sesame, as containing oil.
[சினேகம் + பலம்]
[Skt. śnēha > த. சினேகம்]

சினேகபொட்டணம் *śiṉēga-poṭṭaṇam,* பெ.(n.) மருந்துகளை அடக்கி எண்ணெயிற் றேய்த்து உடல்வலிக்கு ஒத்தடங் கொடுக்குந் துணிமுடிப்பு (வின்.); cloth soaked in oil or ointment and applied to a diseased limb.
[சினேகம் + பொட்டணம்]
[Skt. snēha > த. சினேகம்]

சினேகம் *śiṉēgam,* பெ.(n.) 1. நட்பு; friendship, intimacy, love. 2. எண்ணெய் (யாழ்.அக.); oil, grease, unguent.
[Skt. snēha > த. சினேகம்]

சினேகவங்கணம் *šinēga-vaṅganam,* பெ.(n.) அளவளாவுகை (வின்.); friendliness, sociability.

சினேகன் *šinēgan,* பெ.(n.) நண்பன்; friend.

[Skt. šnēha > த. சினேகன்]

சினேகனம் *šinēganam,* பெ.(n.) கண்ணிற்குள் விடும் சொட்டு மருந்து ; eye drops. (சா.அக.)

சினேகனி *šinēgani,* பெ.(n.) **சினேகனம்** பார்க்க; see *šinēganam.*

சினேகி¹ *šinēgi,* பெ.(n.) நட்புடையவள்; a female friend or associate.

[Skt. šnēha > த. சினேகி]

சினேகி²-த்தல் *šinēgi-,* 4 செ.குன்றாவி.(v.t) நட்புக் கொள்ளுதல்; to make friends with, form friendship. *"பன்னகத்தைச் சினேகித்து" (பஞ்ச. அர்த்தநா. 25).*

[Skt. šnēha > த. சினேகி-,]

சினேகிதம் *šinēgidam,* பெ.(n.) நட்பு; friendship.

[Skt. šnēhita > த. சினேகிதம்]

சினேகிதன் *šinēgidan,* பெ.(n.) **சினேகன்** (உ.வ.) பார்க்க; see *šinēgan.*

[Skt. snēhita > த. சினேகிதன்]

சினேகிதி *šinēgidi,* பெ.(n.) **சினேகி** (இ.வ.) பார்க்க; see *šinēgi.*

[Skt. snēha > த. சினேகிதி]

சீ¹ *šī,* பெ.(n.) 1. திருமகள்; Lakṣmi. *"சீதனங்கோடு புயங்கை கொண்டார்" (கந்தரந். 8).* 2. ஒளி; light, brilliancy. *"சீவனசத்துருச் செய்யாள்" (கந்தரந். 69).*

[Skt. šrī > த. சீ]

சீ² *šī,* இடை (part.) சிறப்புக் குறிக்கும் ஓர் அடைமொழி; an honorific prefix added to the names of deities, eminent persons and sacred objects. சீராமன், சீபாதம்.

[Skt. šrī > த. சீ]

சீக்காளி *šikkāḷi,* பெ.(n.) நோயாளி; sick person, invalid.

[சீக்கு + ஆளி]

[E. sick> த. சீக்கு]

சீக்கிரகாரன் *šikkira-kāran,* பெ.(n.) விரைந்து செயலை முடிப்பவன் (வின்.); man of prompt action, hasty man.

[Skt. šighra > த. சீக்கிரம்]

[காரன் = உடைமைப் பொருள் ஈறு]

சீக்கிரகேந்திரம் *šikkira-kēndiram,* பெ.(n.) ஞாயிற்றுக்கும் கோளுக்குமுள்ள கோணவளவுத்தொலைவு (வின்.); commutation, the angular distance of the sun from a planet.

[Skt. šighra-kēndra > த. சீக்கிரகேந்திரம்]

சீக்கிரதை *šikkiradai,* பெ.(n.) **சீக்கிரம்,** 1 (யாழ்.அக.) பார்க்க; see *šikkiram 1.*

[Skt. šighratā > த. சீக்கிரதை]

சீக்கிரப்படு-தல் *šikkira-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. விரைவுபடுதல்; to be in haste; to expedite, hasten. 2. எளிதிற் சினங் கொள்ளுதல் (வின்.); to be peevish, to take offence easily.

[சீக்கிரம்+படு-,]

[Skt. šighra > த. சீக்கிரம்]

சீக்கிரபரிதி *šikkira-paridi,* பெ.(n.) கோளின் தொலைக்கோண வளவு (வின்.); annual parallx of a superior planet or elongation of a inferior planet.

[Skt. šighra+paridhi > த. சீக்கிரபரிதி]

சீக்கிரபுத்தி *šikkira-putti,* பெ.(n.) முடுக்கவறிவு (அவசரபுத்தி); hastiness, rashness.

[Skt. šighra+buddhi > த. சீக்கிரபுத்தி]

சீக்கிரம்¹ *šikkiram,* பெ.(n.) 1. விரைவு (திவா.); haste, speed. 2. நோய் முதலியவற்றின் வீறு, வீரியம் (வின்.); intensity, severity, rapidity; 3. உறைப்பு; acerbity, pungency, as of tobacco, spirituous liquors. 4. **சீக்கிரபரிதி** பார்க்க; see *šikkira-paridi.* 5. குதிரை பூட்டிய பெட்டி; a small hack palankeen - carriage (M.M.822).

த.வ. முடுக்கம் *[Skt. šighra > த. சீக்கிரம்]*

சீக்கிரம்² *šikkiram,* பெ.(n.) சினம்; anger; irritability.

[Skt. šighra > த. சீக்கிரம்]

சிக்கிரம்போ *śikkiram-pō,* பெ.(n.) குதிரைவண்டி (இ.வ.); jutka.

[சிக்கிரம் + போ]

[Skt. śighra > த. சீக்கிரம்]



சிக்கிரவரை *śikkira-v-arai,* பெ.(n.) கோளின் சரியான நிலை (கந்தஸ்புடம்)யில் முதலாவதாக இருக்கும் (தீர்க்கும்) பிழைக் கோடு (வாக்கியப் பிழை) first eqvated geocentric longitude.

[சிக்கிரம் + அரை]

[Skt. śighra > த. சீக்கிரம்]

சிக்கிரன் *śikkiran,* பெ.(n.) மூவகைப் பணியாளருள் ஒருவகையான் (சுக்கிரநீதி, 108); one of the three classes of servants.

[Skt. śighra > த. சிக்கிரன்]

சிக்கிராத்தம் *śikkirāttam,* பெ.(n.) சீக்கிரவரை (வின்.) பார்க்க; see *śikkirā-v-arai.*

[Skt. śighra+ardha > த. சிக்கிராத்தம்]

சிக்கிரார்த்தம் *śikkirārttam,* பெ.(n.) **சிக்கிரவரை** (வின்.) பார்க்க; see *śikkira-v-arai.*

[Skt. śighra+ardha > த. சிக்கிரார்த்தம்]

சிக்கிரோச்சம் *śikkirōccam,* பெ.(n.) கோள் வீதியில் நிலவுலகத்திலிருந்து மிக தொலை விலுள்ள இடம் (வின்.); the farthest point from the centre of the earth in the orbit of the planets.

[Skt. śighra+ucca > த. சிக்கிரோச்சம்]

சிக்கு *śikku,* பெ.(n.) நோய்; sickness, disease.

[E. sick > த. சிக்கு]

சிக்குப்புள்ளி *śikku-p-pulli,* பெ.(n.) **சிக்காளி** (இ.வ.) பார்க்க; see *śikkāḷi.*

[சிக்கு + புள்ளி]

[E. sick > த. சிக்கு]

சீகத்தம் *śigattam,* பெ.(n.) அழகிய கை; comely, graceful hand, as of God. *"சீகத்த மாத்திரை திண்பிரம் பாகுமே" (திருமந்.* 1663).

[Skt. śri+hasta > த. சீகத்தம்]

சீகரம்[1] *śigaram,* பெ.(n.) 1. நீர்த்துளி; drop of water. *"சீகர மகரவேலைக் காவலன் சிந்த" (கம்பரா. மாரீசன். 14).* 2. ஆலங்கட்டி (பிங்.); hail-stone. 3. மழை; rain. 4. அலை (திவா.); wave, ripple.

[Skt. śikara > த. சீகரம்]

சீகரம்[2] *śigaram,* பெ.(n.) 1. செல்வச் செழிப்பு; prosperity, fortune. *"சீகர மிக்கதூர்" (கந்தபு. சயந்தன்பு.20).* 2. கவரி (திவா.); yak-tail fan, as a symbol of prosperity. *"நிமிர் சீகரம் வீசினர்" (கந்தபு. அவைபுகு. 18).*

[Skt. śrikara > த. சீகரம்]

சீகரி *śigari,* பெ.(n.) நீர்த்திவலை (வின்.); water-drop.

[Skt. śikara > த. சீகரி]

சீகாரியம் *śigāriyam,* பெ.(n.) கோயில் மடம் முதலியவற்றின் மேலாண்மை (விசாரணை); management of sacred buildings and institution. *"ராஜராஜீசுவரம் உடையார்கோயில் சீகாரியஞ் செய்வானுக்கும்"* (S.I.I.ii, 311).

த.வ. திருப்பணி

[சீ+காரியம்]

[Skt. śri > த. சீ]

சீசகம் *śiśagam,* பெ.(n.) **சீசம்** (வின்.) பார்க்க; see *śiśam.*

[Skt. sisaka > த. சீசகம்]

சீசபத்திரம் *śīśa-pattiram,* பெ.(n.) **சீசம்,** **1** (வின்.) பார்க்க; see *śīśam,1.*

[Skt. sisapatra > த. சீசபத்திரம்]

சீசம் *śīśam,* பெ.(n.) 1. ஈயம் (சூடா.); lead. 2. கோட்டி (பைத்தியம்) (உ.வ.); madness.

[Skt. sisa > த. சீசம்]

சீசயந்தி *śi-śayandi,* பெ.(n.) கண்ணன் பிறந்த நாளைக் கொண்டாடும் திருவிழா; the festival of Sri Krṣṇā's birth day.

[Skt. śri-jayanti > த. சீசயந்தி]

மடங்கல் (ஆவணி) மாத தேய்பிறை எட்டாம் நாள் உருள் (உரோகினி) விண்மீன் கூடிய நன்னாளில் கண்ணன் பிறந்தான் (அபி.சிந்.).

சீசா *śīśā,* பெ.(n.) கண்ணாடிக்குப்பி; glass-bottle.

[ū. shisha > த. சீசா]



சீசாகுணம் *śisā-guṇam,* பெ.(n.) ஒரு வகை ஈயமருந்து; iodide of lead (சா.அக)

சீட்டா *śiṭṭā,* பெ.(n.) புகை குடிக்கவுதவுஞ் சரக்கு வகை (மதி. க. ii, 521); a drug for smoking.

[Hind. śithā > த. சீட்டா]

சீட்டி *śiṭṭi,* பெ.(n.) அச்சடித்துணி; chintz, fast-printed cotton cloth.

[Mhr. chiṭa > த. சீட்டி]

சீடப்பரம்பரை *śiḍa-p-paramparai,* பெ.(n.) வழிவழியாக வரும் மாணவர்களின் தொடர்ச்சி; succession of disciple.

[சீடன்+பரம்பரை]

[Skt. śiṣya> த. சீடன்]

சீடப்பிள்ளை *śiḍappiḷḷai,* பெ.(n.) மாணவன்; disciple.

[சீடன் + பிள்ளை]

[Skt. śisya > த. சீடன்]

சீடன் *śiḍaṉ,* பெ.(n.) மாணாக்கன்; pupil, disciple. *"ஏவல் பெற்றிடு சீடரொடு" (சிவரக. சுகமுனி. 21).*

[Skt. śṣay > த. சீடன்]

சீடார்ச்சிதம் *śiḍārccidam,* பெ.(n.) மாணவர்களால் குருவின் பொருட்டு ஈட்டப்பட்ட பொருள்; offering procured by disciples for their guru.

[Skt. śisya+ārjita > த. சீடார்ச்சிதம்]

சீடிமண் *śiḍimaṇ,* பெ.(n.) காக்காய் பொன்நிலம்; talc earth. (சா.அக.)

சீணதை *śiṇadai,* பெ.(n.) கணச் சூட்டினால் உடல் இளைக்கை; wasting of flesh without any apparent cause. It is a term employed by ancient medical writers to denote cases of atrophy for which no particular cause could be assigned marasmus. (சா.அக.).

சீணம் *śiṇam,* பெ.(n.) 1. சோர்வு; exhaustion. 2. அழிவுறுகை; waste, damage. 3. பெண்குறிநோய்; a disease of female genitals. 4. மெலிதல்; emaciation.

[Skt. kṣiṇa > த. சீணம்]

சீணி-த்தல் *śiṇi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. வலிவு குறைதல்; to be exhausted, weakened, worm out. 2. அழிவுறுதல்; to be wasted,

lost, destroyed. 3. மெலிதல்; getting wasted or emaciated.

[Skt. kṣiṇa > த. சீணி-த்தல்]

சித்தா *śittā,* பெ.(n.) ஒருவகைப் பழமரம் (யாழ்.அக.); custard apple - Anona squamosa.

[Skt. sitā > த. சீத்தா]



சித்தை *śittai,* பெ.(n.) **சீட்டி** (வின்.) பார்க்க; see *śiṭṭi.*

[Mhr. śiṭi > த. சீத்தை]

சீதக்கட்டு *śida-k-kaṭṭu,* பெ.(n.) சீத வழும்பு; slimy, mucous matter voided in dysentery.

[சீதம் + கட்டு]

[Skt. śita > த. சீதம்]

சீதக்கட்டுசுரம் *śida-k-kaṭṭu-šuram,* பெ.(n.) வயிற்றளைச்சலில் (சீத பேதியில்) காணும் காய்ச்சல்; fever in dysentry. (சா.அக.).

த.வ. வழும்புக்காய்ச்சல்

[சீதம் + கட்டு + சுரம்]

[Skt. šita > த. சீதம்]

[த. சுரம் >Skt. jvara]

சீதக்கடுப்பு *śida-k-kaḍuppu,* பெ.(n.) வயிற்றளைச்சலால் (சீத பேதியினால்) எருவாயில் ஏற்படும் வலி; pain in the anus and lower abdomen due to dysentery. (சா.அக.).

த.வ. வழும்புவலி

[சீதம் + கடுப்பு]

[Skt. šita > த. சீதம்]

சீதக்கழிச்சல் *śida-k-kaliccal,* பெ.(n.) **சீதபேதி** பார்க்க; see *śida-bēdi.*

[சீதம் + கழிச்சல்]

[Skt. šita > த. சீதம்]

சீதக்கழிவு *śida-k-kaḻivu,* பெ.(n.) **சீதபேதி** (வின்.) பார்க்க; see *śida-bēdi.*

[சீதம் + கழிவு]

[Skt. šita > த. சீதம்]

சீதக்கிராணி *śida-k-kirāṇi,* பெ.(n.) மலத்தில் அரத்தமும் சளியும் சேர்ந்து போகும் கழிச்சல்; a chronic diarrhoea attended with mucous discharge. (சா.அக.).

[Skt. šita+ghrana > த. சீதக்கிராணி]

சீதகசாயம் *śida-kašāyam,* பெ.(n.) காய்ச்சாமலே ஓர் இரவு முழுவதும் குளிர்ந்த நீரிலூறப் போட்டு, காலையில் இறுத்து எடுக்கும் குளிர்ச்சியான மருந்து (குடிநீர்) கருக்கம்; a cold infussion prepared by soaking one part of drugs or drugs in six parts of cold water for one night in the morning it is filtered and administered cold water infusion. (சா.அக.).

த.வ. தண்குடிம்பு

[சீதம் + கசாயம்]

சீதகண்டுவாதம் *śida-kaṇḍu-vādam,* பெ.(n.) பாதநரம்பில் குளிர்ச்சி மிகுதியால் உண்டாகும் நமைச்சல் நோய் (சீவரட். 156); itching sensation in the foot, due to extreme chillness.

[சீதம் + கண்டு + வாதம்.]

s[Skt. šita > த. சீதம்; Skt. vāta- த. வாதம்]

சீதகம் *śidagam,* பெ.(n.) 1. ஈயம்; lead. 2. தரா; tarā, an alloy.

[Skt. šisaka > த. சீதகம்]

சீதகன்[1] *śidagaṉ,* பெ.(n.) திங்கள் (யாழ்.அக.); moon.

[Skt. śita-kara > த. சீதகன்]

சீதகன்[2] *śidagaṉ,* பெ.(n.) வெள்ளி (அக.நி.); venus.

[Skt. sitaka > த. சீதகன்]

சீதகன்[3] *śidagaṉ,* பெ.(n.) சோம்பேறி (யாழ்.அக.); lazy fellow.

[Skt. śitaka > த. சீதகன்]

சீதகாத்திரகம் *śida-kāttiragam,* பெ.(n.) **சீதாங்கசன்னி** (வின்.) பார்க்க; see *sitāṅga-śaṉṉi.*

சீதகாத்திரம் *śida-kāttiram,* பெ.(n.) குளிர்ச்சியால் ஏற்படும் இசிவு நோய் (சன்னி); apoplexy due to extreme cold in the body. (சா.அக.)

த.வ. தணுப்புஇசிவு

சீதகிருச்சரம் *śida-kiruccaram,* பெ.(n.) மூன்று நாள் நீர்மட்டும் பருகிப் பட்டினி யிருக்கும் ஒரு நோன்பு (யாழ்.அக.); a fast for three days, drinking only water.

த.வ. நீர்நோன்பு

[Skt. śita+kṛcchra > த. சீதகிருச்சரம்]

சீதகேசரிமாத்திரை *śida-kēśari-māttirai,* பெ.(n.) நேர்வாளத்தோடு கடைச் சரக்கு களைச் சேர்த்துச் செய்யும் மாத்திரை; இது கழிச்சலுக்கு மருந்தாகப் பயன்படுகிறது; a purgative pill prepared with crotion seeds and other bazar drugs.

த.வ. நேர்வாளமாத்திரை

[சீதகேசரி+ மாத்திரை]

[Skt. śita +kēsari > த. சீதகேசரி]

சீதசன்னி *śida-śaṉṉi,* பெ.(n.) சளி (கப) காய்ச்சலில் தோன்றிய இசிவுநோய் (சன்னிபாதம்); pneumonia.

த.வ. தணுப்புஇசிவு

[Skt. śita+sanni > சீதசன்னி]

சீதசுரம் *śida-śuram,* பெ.(n.) குளிரோடு தோன்றும் காய்ச்சல் நோய் (பதார்த்த. 842); ague, fever attended with chill.

த.வ. குளிர்க்காய்ச்சல்

[சீதம்+சுரம்]

[Skt. śita > த. சீதம்]

சீததயிலம் *śida-dayilam,* பெ. (n.) 1. சுண்ணாம்பு; lime. 2. குளிர்ச்சியைத் தரும் எண்ணெய்; medicated oil which cools the body when one bathes with it. (சா.அக.).

[Skt. śita+taila > சீததயிலம்]

சீதநீர் *śida-nir,* பெ.(n.) குளிர்ச்சியுடைய நீர், பனிநீர் (திவா.); rose-water, as being cool.

[சீதம் + நீர்]

[Skt. śita > த. சீதம்]

சீதப்பஞ்சனம் *śida-p-pañjaṉam,* பெ.(n.) அரத்தமும் மலமும் கலந்து வெளியேறும் காய்ச்சல் (சீதசுரத்திற்காக) நோய்க்குச் சிவன் சொன்ன ஓர் ஆயுள் வேதமருந்து; an Ayurvedic medicine supposed to be given by Śivaṉ. (சா.அக.)

த.வ. சிவமருந்து

சீதப்பற்று *śida-p-paṟṟu,* பெ.(n.) சீதவழும்பு; slimy, mucous matter voided in dysentery.

[சீதம் + பற்று]

[Skt. śita > த. சீதம்]

சீதப்பிரபம் *śida-p-pirabam,* பெ.(n.) கருப்பூரம் (யாழ்.அக.); camphor.

[Skt. śita-prabha > த. சீதப்பிரபம்]

சீதபானு *śida-bāṉu,* பெ.(n.) திங்கள் (யாழ்.அக.); moon, as having cool rays.

[Skt. śita-bhānu >த. சீதபானு]

சீதபித்தசுவரம் *śida-pitta-śuvaram,* பெ.(n.) மழைக்காய்ச்சல்; (M.L.) malaria.

சீதபேதி *śida-bēdi*, பெ.(n.) வயிற்றளைச்சல் (வின்.); dysentery. (சா.அக.)

[Skt. śita+bhēdin> த. சீதபேதி]

சீதபேதி = மலம் தங்கி நிற்கும் பெருங்குடலின் உட்புறத்திலிருக்கும் சளியால் ஆன (சிலேட்டும்) மெல்லிய தோலுக்கு அழற்சி ஏற்படுவதால் சீதம் அரத்தத்தோடு கலந்து வெளியேறும் கழிச்சல் நோய்.

சீதம் *śidam*, பெ.(n.) 1. குளிர்ச்சி (பிங்.); coldness, chillness. 2. நீர் (பிங்.); water. 3. முகில் (பிங்.); cloud. 4. சந்தனம் (மலை.); sandal. 5. ஒரு வகைக் கள்; a kind of toddy. *"மதுவுஞ் சீதமும்" (பெருங். இலாவாண. 2: 179).* 6. **சீதநாடு** பார்க்க; see *śida-nāḍu*. *'சீத மலாடு புனனாடு' (நன். 273, உரை).* 7. ஒரு அளறு (நரகம்) (சி.போ.பா.2:3, பக்.203); a hell. 8. சீதமலம்; slime or mucus voided in dysentery. 9. அகில் (மலை.); eagle-wood. 10. பெருநறுவிலி (மலை.) எனும் மரவகை; large sebesten. 11. பற்பாடகம் எனும் சிறுபூடுவகை (தைலவ. தைல. 61); fever plant. 12. **சீதாங்கபாடாணம்** (யாழ்.அக.); *śidāṅga-bāḍāṇam*. (சா.அக.)

[Skt. śita > த. சீதம்]

மலம் தங்கி நிற்கும் பெருங்குடலின் உட்புறத்திலிருக்கும் சளியாலான மெல்லிய தோலுக்கு அழற்சி ஏற்படுவதால் சீதம் உண்டாகிறது. (சா.அக.)

சீதமண்டலம் *śida-maṇḍalam*, பெ.(n.) திங்கள்; moon. *"சீதமண்டலக் குலத்துதித்த தீதின் மன்னவன்" (திருவாலவா. 44, 30).* (சா.அக.)

[சீத(ம்) + மண்டலம்]

[Skt. śita > த. சீதம்]

சீதமண்டலி *śida-maṇḍali*, பெ.(n.) பாம்புவகை; a species of snake. *'இது சீதமண்டலி யென்பார்' (சீவக. 1276, உரை).*

[சீதம் + மண்டலி]

[Skt. śita > த. சீதம்]

சீதமயூகம் *śida-mayūgam*, பெ.(n.) கருப்பூரம் (மூ.அ.); camphor. (சா.அக.)

[Skt. śitamayūkha > த. சீதமயூகம்]

சீதமலடு *śida-malaḍu*, பெ.(n.) பெண்களுக்கு உண்டாகும் அறுவகை மலட்டு நோய்களுள் ஒன்று; one of the six varieties of sterlity in woman caused by extreme chillness of the body. (சா.அக.).

த.வ. தணுப்புமலடு

[சீதம்+மலடு]

[Skt. śita > த. சீதம்]

சீதமேகரோகம் *śida-mēga-rōgam*, பெ.(n.) நீரிழிவு நோய் வகை (சீவரட். 100); a kind of diabetes.

த.வ. தண்மேகம்

[Skt. śita+mēha+rōga > த. சீதமேகரோகம்]

சீதமைக்குடல் *śidamai-k-kuḍal*, பெ.(n.) மந்தக்கட்டு சீதம் தங்கிய குடல், ஆடு மாடுகளுக்கு குடலிற் காணும் ஒரு வகை நோய். (இதனால் மெல்லவும், அசை போடவும் முடியாமற்போகும்); a disease in cattle & sheep by which they are unable to chew the cud. It is attended with torpidity of the mucous and constriction of the bowels - Fardel bounnd. (சா.அக.).

த.வ. குடல்வழும்பு

[சீதமை+குடல்]

சீதமோனகம் *śitamōṇagam*, பெ.(n.) கொம்புத்தேன்; honey collected from honey combs built on the branches of trees. (சா.அக.).

சீதரத்தபேதி *śida-ratta-bēdi*, பெ.(n.) மலமும் சீதமும் அரத்தமும் கலந்த கழிச்சல்; dysentery with blood and mucous in stools. (சா.அக.)

த.வ. குருதிக்கழிச்சல்

[Skt. śita+trakta+bhēdin > த. சீதரத்தபேதி]

சீதரப்பிரியம் *śidara-p-piriyam,* பெ.(n.) விட்டுணுக் கரந்தை (மலை.); Indian globe-Thistle.

[Skt. śridhara+priya > த. சீதரப்பிரியம்]

சீதரன் *śidaraṉ,* பெ.(n.) திருமகளைக் கொண்டவன், திருமால்; Tirumāl, as the bearer of Tirumagl. *"சீதரமூர்த்தி" (கம்பரா. அகலிகை. 26).* (சா.அக.).

[Skt. śri-dhara > த. சீதரன்]

சீதரூட்சை *śidarūṭcai,* பெ.(n.) பிள்ளைபெற்ற பெண்களுக்குக் காணும் மலமும் அரத்தமும் கலந்த கழிச்சல்; dysentry generally attacking women after delivery. (சா.அக.)

சீதவஞ்சிரகம் *śidavañjiragam,* பெ.(n.) கடுமையான காய்ச்சலுக்குக் கொடுக்கும் ஆயுள்வேதமருந்து; an ayurvedic medicine given for acute fever. (சா.அக.)

சீதவலயம் *śida-valayam,* பெ.(n.) நிலத்தின் குளிர்ந்த (சீதமண்டலப்) பகுதி; frigid zone.

த.வ. பனியிறுகுவலயம்

[Skt. śita+valaya > த. சீதவலயம்]

சீதவழுப்பு *śida-vaḻuppu,* பெ.(n.) ஆமம் வெளியேறுகை; alvine discharge.

சீதவழும்பு *śida-vaḻumbu,* பெ.(n.) வயிற்றுப் போக்கிற் காணும் ஆமம்; mucous collected in the bowels - voided in dysentstry.

[சீதம்+வழும்பு]

[Skt. śita > த. சீதம்]

வழும்பு = ஊன் முதலியவற்றின் மேலுள்ள வழுவழுப்பான நீர்ப்பண்டம்.

சீதவற்கம் *śidavaṟkam,* பெ.(n.) அத்தி (மூ.அ.); country fig.

[Skt. śita-valka > த. சீதவற்கம்]

சீதவாதக்கடுப்பு *śida-vāda-k-kaḍuppu,* பெ.(n.) **சீதவாதம் (வின்.)** பார்க்க; see *śida-vādam.*

[சீதம் + வாதம் + கடுப்பு]

[Skt. śita+vāta > த. சீதவாதம்]

சீதவாதம் *śida-vādam,* பெ.(n.) குளிர்முடக்கு (வின்.); rheumatism.

[Skt. śita+vāta > த. சீதவாதம்]

சீதவாரம் *śidavāram,* பெ.(n.) 1. மல்லிகை (மூ.அ.); jasmine. 2. வேலிப்பருத்தி (மலை.); hedge-twiner.

[Skt. śitabhiru > த. சீதவாரம்]

சீதளக்கசாயம் *śidaḷa-k-kaśāyam,* பெ. (n.) தண்ணீரில் ஊறப்போட்டு வடித்த மருந்துக் கருக்கம் (கசாயம்); a decoction prepared without boiling but by soaking the drugs in cold water for 12 or 24 hours - Cold Infusion.

[Skt. śitala+Pkt. kacāyam> த. சீதளக்கசாயம்]

சீதளக்கட்டி *śidaḷa-k-kaṭṭi,* பெ.(n.) உடம்பின் குளிர்ச்சியினால் அழற்சி காணாமலே மெதுவாக எழும்பும் கட்டி; cold abscess an abscess that develops slowly without any symptoms of inflammation especially heat and redness-Cold abscess. (சா.அக.).

த.வ. அழற்சிக்கட்டி

[சீதளம் + கட்டி]

[Skt. śitala > த. சீதளம்]

சீதளகாரி *śidaḷa-kāri*, பெ.(n.) குளிர்ச்சி தரும் மருந்து; refrigerant.

[Skt. śitala+kārin > த. சீதளகாரி]

சீதளகாலம் *śidaḷa-kālam*, பெ. (n.) குளிர்காலம் (உ.வ.); cold season.

[சீதளம் + காலம்]

[Skt. śitala > த. சீதளம்]

சீதளங்காய் *śidaḷaṅgāy*, பெ.(n.) கொடிமாதுளை (வின்.). emon citron.

[சீதளம் + காய்]

[Skt. śitala > த. சீதளம்]

சீதளங்கொள்(ளு)-தல் *śidaḷaṅ-koḷ-*, 16 செ.கு.வி.(v.i.) நீர்க்கொள்ளுதல் (வின்.); to catch cold. (சா.அக.).

[சீதளம் + கொள்ளு-]

[Skt. śitala > த. சீதளம்]

சீதளசக்கரபூமி *śidaḷa-cakkara-būmi*, பெ.(n.) **சீதவலயம்** (வின்.) பார்க்க; see *śida-valayam.*

[சீதளம் + சக்கரம் +பூமி]

[Skt.śitala >த.சீதளம்; Skt.bhumi> த. பூமி]

சீதளம்[1] *śidaḷam*, பெ.(n.) 1. குளிர்ச்சி; cold, coolness. *"சீதளத்துடன் நடுக்குற்றனன்" (உபதேசகா. கைலை. 46).* 2. ஈரம் (வின்.); dampness, moisture. 3. சந்தனம் (யாழ்.அக.); sandal wood. 4. எலுமிச்சை வகை(L.); bergamotte orange, m.fr., Citrus aurantium - bergamia. 5. சிற்றகத்தி (மலை.); common sesban. 6. கோடகசாலை (மலை.); coromandel gendarussa. 7. கொடி மாதுளை (மலை.); lemon citron. 8. பச்சைக் கருப்பூரம் (மூ.அ.); purified camphor. 9. துரிசு (யாழ்.அக.); verdigris.

[Skt. śitala > த. சீதளம்]

சீதளம்[2] *śitaḷam*, பெ.(n.) தாமரை (யாழ்.அக.); lotus.

[Skt. śri-dala > த. சீதளம்]



சீதளர் *śidaḷar*, பெ.(n.) தூய நீரவரர் (தீர்த்தங்கரர்)இருபத்து நால்வருள் ஒருவர் (திருக்கலம். காப்பு. உரை.); a Jaina Arhat, one of 24 *tirttaṅgarar.*

[Skt. śri-dala > த. சீதளர்]

சீதளவாயு *śidaḷa-vāyu*, பெ.(n.) உடம்பில் நீரேற்றங்கண்டு பிறகு காற்று (வாயு) சேர்ந்த கோளாறு; excess of wind due to extreme chillness in the body. (சா.அக.)

[Skt. śitala + vāyu > த. சீதளவாயு]

சீதளாசப்தமி *śidaḷā-śaptami*, பெ.(n.) மடங்கல் (ஆவணி) மாதத்து இருட்பக்கத்து ஏழாம் நாள் (திதி); seventh titi in the dark fortnight of *śrāvaṇa* month.

[Skt. śitalā+śaptami > த. சீதளாசப்தமி]

சீதளாதேவி *śidḷādēvi*, பெ.(n.) மாரியம்மன் (உ.வ.); goddess of small-pox.

[சீதளா+தேவி]

[Skt. śitalā > த. சீதளா]

சீதளோட்டிணபூமி *śidaḷōṭṇa-būmi*, பெ. (n.) நிலப்பரப்பில் குளிரும் வெப்பமும் சமஅளவிலுள்ள பகுதி (வின்.); temperate zone.

த.வ. சமவெப்பநிலம்

[Skt.śitala+usṇa+bhumi>த. சீதளோட்டிணபூமி]

சீதன் *śīdan*, பெ. (n.) குளிர்ந்த இயல்பையுடைய திங்கள்; moon, as being cool. *"சீதனங்கோடு முடியாளர்" (கந்தரந். 8).*

[Skt. śīta > த. சீதன்]

சீதனக்காணி *śīdana-k-kāṇi*, பெ.(n.) கொடையாகப் பெற்ற நிலம்; land obtained as dowry. *"சீதனக் காணி பெற்றத் தண்ணென் குறிஞ்சித் தலந்தலை யளிப்பவன்" (குமர. பிர. முத்துக். பிள்ளைத். 35).*

[சீதனம் + காணி]

[Skt. strī-dhana> த. சீதனம்]

சீதனக்காரி *śīdana-k-kāri*, பெ.(n.) சீர்வரிசைப் பொருளுடன் வந்த பெண் (உ.வ.); married woman with a dowry.

த.வ. **சீர்க்காரி**

[சீ + தனம் + காரி]

[Skt. strī > த. சீ]

சீதனச்சீட்டு *śīdana-c-cīṭṭu*, பெ.(n.) சீர்வரிசை எழுதப்பட்ட ஓலை முதலிய ஆவணம்; dowry instrument. (சா.அக.)

த.வ. **சீர்சீட்டு**

[சீ + தனம் + சீட்டு]

[Skt. strī > த. சீ]

சீதனம் *śīdaṉam*, பெ.(n.) மணமகள் கொண்டுவரும் சீர்வரிசை; dowry. *"தேவிபெறுஞ் சீதனம்" (கந்தரந். 8).*

த.வ. **சீர்வரிசை**

[சீ + தனம்]

[Skt. strī > த. சீ]

சீதனவாட்சி *śīdana-v-āṭci*, பெ.(n.) சீர்வரிசையைப் பெறுவதற்கான உரிமை; right of possession by dowry.

த.வ. **சீர்உரிமை**

[சீ + தனம்+ஆட்சி]

[Skt. strī > த. சீ]

சீதனவுறுதி *śīdana-vuṟudi*, பெ.(n.) **சீதனச்சீட்டு** பார்க்க; see *śīdana-c-cīṭṭu*.

[சீ + தனம்+உறுதி]

[Skt. strī > த. சீ]

சீதனவோலை *śīdana-v-ōlai*, பெ.(n.) **சீதனச்சீட்டு** பார்க்க; see *śīdana-c-cīṭṭu*.

த.வ. **சீர்ஓலை**

[சீ + தனம்+ஓலை]

[Skt. strī > த. சீ]

சீதா *śītā*, பெ.(n.) **சீதை** பார்க்க; see *śīdai*. *"சீதா பவளக் கொடியன்னவட் டேடி" (கம்பரா. உருக்கா. 85).*

[Skt. Śītā > த. சீதா]

சீதாங்கசன்னி *śītāṅga-śaṉṉi*, பெ. (n.) தீர்க்கமுடியாத பக்கவூதை (வாத) நோய்வகை (வின்.); an incurable paralysis with very low temperature.

த.வ. **பக்கவூதை**

[Skt. śītāṅga+sanni > த. சீதாங்கசன்னி]

சீதாங்கபாடாணம் *śīdāṅga-pāḍāṇam*, பெ. (n.) பிறவி நஞ்சு வகை (வின்.); a mineral poison.

[Skt. śītāṅga+pāṣāṇa > த. சீதாங்க பாடாணம்.]

சீதாங்கம் *śīdāṅgam*, பெ.(n.) **சீதாங்கசன்னி** (வின்.) பார்க்க; see *śīdāṅga-śaṉṉi*. 2. **சீதாங்கபாடாணம்** (மூ.அ.) பார்க்க; see *śīdāṅga-pāḍāṇam*.

[Skt. śītāṅga > த. சீதாங்கம்]

சீதாபதி *śīdā-padi*, பெ. (n.) **சீதையின்** கணவனான இராமன்; Rāmaṉ, as the spouse of *śītā*.

[Skt. śītā+pati > த. சீதாபதி]

சீதாபிராட்டி *śītā-pirāṭṭi*, பெ.(n.) **சீதை** பார்க்க; see *śīdai*.

[சீதா + பிராட்டி]

[Skt. śītā > த. சீதா]

சீதாமனோகரம் *śītā-maṉōgaram*, பெ.(n.) கொடிச் சம்பங்கி; cowslip creeper.

[Skt. śītā+manō-hara > த. சீதா மனோகரம்]

சீதாரி[1] *śīdāri*, பெ.(n.) நறும்புகைத்தி, (சாம்பிராணி); frankincense. *"சீதாரி*

கொண்டுதன் மெய்புகைத்தாள்" (ஆதியுலா, 186).

த.வ. நறும்புகை

[Skt. śrīdāru > த. சீதாரி]

சீதாரி² *śīdāri,* பெ.(n.) நகரம் (வின்.); town, city.

[Skt. śrī-dhārin > த. சீதாரி]

சீதாரிரசம் *śīdāri-rasam,* பெ.(n.) தூய்மை செய்த இதளியம் (இரசம்), கெந்தி, வெள்ளைச் சாரணை முதலியவற்றைச் சித்திர மூலச் சாற்றிலும், எருக்கன் இலைச் சாற்றிலும் அரைத்துத் தகுதியாக்கிப் பித்த நோய்க்குக் கொடுக்குமோர் ஆயுள்வேத மருந்து; an ayurvedic medicine containing mercury & sulphur given for the diseases caused by phelgm and heat humours.

சீதி *śīdi,* பெ.(n.) பெண்குறி (இ.வ.); pudendum muliebre.

சீது¹ *śīdu,* பெ.(n.) மது; a spirituous iiquor. *"சீதுபருகிக் கடிசிறைக்கொடு" (இரகு. தேனுவந். 7).*

[Skt. śīdhu > த. சீது]

சீது² *śīdu,* பெ.(n.) ஈயம் (யாழ்.அக.); tin.

[Skt. sīsa > த. சீது]

சீதேவி *śīdēvi,* பெ.(n.) 1. திருமகள்; Lakṣmi. *"சீதேவியார் பிறந்த செய்ய திருப்பாற் கடலில்" (தனிப்பா.).* 2. மகளிர் தலைக்கோலவுறுப்பு (திருமுருகு. 23, உரை); a woman's head ornament. 3. செங்கழுநீர் (மலை.); red Indian water lily.

[Skt. śrī-dēvi > த. சீதேவி]

சீதை *śīdai,* பெ.(n.) 1. உழுபடைச் சால்; furrow. *"கொழுவுழு சீதைதொறும்" (திருப்போ. சந். பிள்ளைத். செங்கீ. 8).* 2. உழுசாலில் தோன்றியதாகக் கருதப்படும் இராமனின் மனைவி; Sītā, wife of Rāmaṉ, as having sprung from a furrow, one of *pañja kaṉṉiyar.* *"கடுந்தே ரிராமனுடன் புணர் சீதையை" (புறநா. 378).* 3. நூற்றெட்டு அறிவின் மறைப்பகுதிகளுள் ஒன்று; an Upaniṣad, one of 108.

[Skt. sītā > த. சீதை]

சீதோட்ணக்கருவி *śīdōṭṇa-k-karuvi,* பெ.(n.) குளிர்ச்சியையும், வெப்பத்தையும் அளக்கும் கருவி; thermometre. (சா.அக.)

[சீதோட்ணம் + கருவி]

[Skt. śita+uṣṇa> த. சீதோட்ணம்]

சீதோதககசாயம் *śīdōdaga-kaśāyam,* பெ.(n.) **சீதகசாயம்** பார்க்க; see śīda-kaṣāyam (சா.அக.)

சீதோதகம் *śīdōdagam,* பெ.(n.) குளிர்ந்த தண்ணீர்; cold water.

[Skt. śita+udaka > த. சீதோதகம்]

சீதோதம் *śīdōdam,* பெ.(n.) **சீதோதகம்** பார்க்க; see *śīdōdagam*

சீதோட்ணதிதி *śīdōṭṇa-tidi,* பெ.(n.) நாட்டிலுள்ள தட்ப வெட்ப நிலை; climatic condition.

[Skt. śita+uṣṇa + tithi > த. சீதோட்ணதிதி]

சீப்போம்பு *śīppōmbu,* பெ.(n.) கப்பல் முகப்புக் கட்டை; jib-boom.

[E. jib-boom > த. சீப்போம்பு]

சீபட்டர் *śī-baṭṭar,* பெ.(n.) பகவத் கீதையை தமிழில் தந்த ஆசிரியர்; the author of the *Bagavat-gītā* in Tamil verse.

[Skt. śri+bhaṭṭa > த. சீபட்டர்]

சீபண்டாரம் *śī-paṇḍāram,* பெ.(n.) 1. கோயிற் கருவூலம்; temple treasure. 2. கோயிற் சொத்து; temple property.

த.வ. கருவூலம்

[சீ + பண்டாரம்]

[Skt. śri > த. சீ]

சீபதி *śi-padi,* பெ.(n.) 1. திருமகள் கணவான திருமால்; Viṣṇu, as lord of Lakṣmi. 2. அருகன் (சூடா.); Arhat.

[Skt. śrī + pati > த. சீபதி]

சீபலி *śībali,* பெ.(n.) 1. கோயிலில் படைக்கும் உணவு; rice offering in a temple. 2. கோயிலில் நாள்தோறும் படைக்கும் கடவுள் உணவு வழிபாட்டிற்காக எழுந்தருளப் பண்ணும் சிறிய திருமேனி; a small idol carried round the temple every day. 3. கோயிலில் நடக்கும் தெய்வ வழிபாடு (சிலப். உரைபெறுகட். 4, உரை); daily procession of the cīpali idol around the temple, making offerings to the minor deities.

த.வ. திருப்படையல்

[Skt. śrī+bali > த. சீபலி]

சீபாதக்கூலி *śipāda-k-kūli,* பெ.(n.) திருவடி தாங்குவோர்க்குக் கொடுக்குங் கூலி; wages of vehicle-bearers in a temple. (சா.அக.)

த.வ. திருவடிக்கூலி

[சீ + பாதம்+கூலி]

[Skt. śrī > த. சீ]

சீபாதந்தாங்கிகள் *śipādan-tāṅgigaḷ,* பெ.(n.) கோயிலில் இறைவனுக்குரிய ஊர்தியைத் தாங்கிச் செல்வோர்; vehicle - bearers attached to a temple, as supporting the feet of god.

த.வ. திருவடிதாங்கிகள்

[சீ + பாதம் + தாங்கிகள்]

[Skt. śrī > த. சீ]

சீபாதம் *śipādam,* பெ.(n.) 1. திருவடி; holy feet, as of god, guru. 2. **சீபாதந்தாங்கிகள்** பார்க்க; see *śi-pādan-tāṅgigaḷ.*

த.வ. திருவடி

[சீ + பாதம்] *[Skt. śrī > த. சீ]*

சீபாதாங்காதனம் *śipātāṅgā-tanam,* பெ.(n.) தவநிலைவகை (தத்துவப். 107, உரை); a yogic posture.

[சீ + பாதம் + ஆங்க + ஆதனம்]

[Skt. śrī > த. சீ Skt. āsna > த. ஆதனம்]

சீமங்கலி *śimaṅgali,* பெ.(n.) முடி திருத்தாளன் (நாவிதன்) (சூடா.); barber.

[Skt. śrīmaṅgalin > த. சீமங்கலி]

சீமத்து *śimattu,* பெ.(n.) பேறு; prosperity, wealth. *'அங்ஙணம் பெற்ற சீமத்தான பெரும்பயனெல்லாம்' (சிலப். 15, 184, உரை).*

[Skt. śrī-mat > த. சீமத்து]

சீமதி *śimadi,* பெ.எ. (adj.) அழகுள்ளவன்; fair, beautiful woman. *'சீமதியான வேட்டுவிச்சி' (பு.வெ.1,15,உரை).*

[Skt. śrī-mati > த. சீமதி]

சீமந்தகலியாணம் *śimanda-kaliyāṇam,* பெ.(n.) **சீமந்தம்** பார்க்க; see *śimandam.*

[சீமந்தம் + கலியாணம்]

[Skt. śimanta > த. சீமந்தம்]

சீமந்தஞ்சாற்று-தல் *śimandañ-jāṟṟu-,* 5 செ.கு.வி. (v.i.) சாந்தி கலியாணஞ் செய்தல்; to celebrate the consummation of marriage.

[சீமந்தம் + சாற்று-]

[Skt. śimanta > த. சீமந்தம்]

சீமந்தபுத்திரன் *śimanda-puttiraṉ,* பெ.(n.) வளைகாப்பு விழாவிற்குப் பின் பிறந்த பிள்ளை; son born after the bangle wearing ceremony of a pregnant woman.

[Skt. śimanta> த. சீமந்தம்]

சீமந்தபுத்திரி *śīmanda-puttiri,* பெ.(n.) வளைகாப்பு விழாவிற்குப் பின் பிறந்த பெண்; daughter born after the bangle wearing ceremony of a pregnant woman.

[Skt. śīmanta+puttri > த. சீமந்தபுத்திரி]

சீமந்தம் *śīmandam,* பெ (n.) 1. முதற்கருப்பத்தில் ஆறு அல்லது எட்டாம் மாதத்தில் கருக்கொண்ட பெண்களுக்குச் செய்யப்படுஞ் சடங்கு; purifications ceremony of parting the hair, performed in the sixth or eighth month of the first pregnancy of a woman. *"ஆறாமதியி லுயர்சீ மந்தம்" (காசிக. பிரமச. 3).* 2. சூலுற்ற பெண்ணுக்கு ஒற்றைப் படை மாதங்களான ஏழு அல்லது ஒன்பதாம் மாதங்களில் செய்யப்படும் வளைகாப்புச் சடங்கு; purifications ceremony of parting the hair performed in the seventh or nineth month of the first pregnancy of a woman.

த.வ. வளைகாப்பு

[Skt. śīmanta > த. சீமந்தம்]

சீமந்தரேகை *śīmanda-rēgai,* பெ.(n.) பெண்களின் தலைமயிரை வகிர்தலால் உச்சியில் உண்டாகும் வரிகை (இரேகை); line forward by the parted hair on woman's head.

த.வ. தலைவகிடு

[Skt. śīmanta+rēkhā > த. சீமந்தரேகை]

சீமந்தசேட்டன் *śīmanda-śēṭṭaṉ,* பெ.(n.) **சீமந்தபுத்திரன்** பார்க்க; see simanda puttiran.

[Skt. śīmanta+jyē stha > த. சீமந்த சேட்டன்]

சீமந்தினி *śīmandiṉi,* பெ.(n.) பெண்; woman. *"மங்களங் கொள் சீமந்தினிக்குன் மணாளன் வந்திடுமென்று" (சிவக். பிரபந். பக். 337).*

[Skt. śīmantinī > த. சீமந்தினி]

சீமம் *śīmam,* பெ.(n.) எல்லை (பிங்.); boundary, limit.

[Skt. śīman > த. சீமம்]

சீமாவிவாதம் *śīmā-vivādam,* பெ.(n.) எல்லையைப் பற்றிய வழக்கு(I.M.P.Tp.756); boundary dispute.

[Skt. sīmā+vivāda > த. சீமாவிவாதம்]

சீமாள் *śīmāḷ,* பெ.(n.) செல்வமுள்ளவள்; wealthy woman.

[Skt. śrīmat > த. சீமாள்]

சீமான் *śīmāṉ,* பெ. (n.) 1. செல்வமுடையவன்; lord, wealthy man. 2. அருகன் (சூடா.); Arhat.

த.வ. செல்வன் *[Skt. śrīmān > த. சீமான்]*

சீமுக *śīmuga,* பெ. (n.) வடமொழியாளரின் அறுபது ஆண்டுகளுள் ஏழாவது (பெரியவரு.); the seventh year of the jupiter cycle.

[Skt. śrī-mukha > த. சீமுக]

சீமுகம் *śīmugam,* பெ.(n.) குரு அரசன் போன்ற பெரியோரின் திருமுக ஓலை; letter from an eminent person, guru or king.

[Skt. śrī-mukha > த. சீமுகம்]

சீமூதம் *śīmūdam,* பெ.(n.) 1. நீருண்ட முகில் (பிங்.); rain cloud. *"சீமூதமூர் வலாரி மடமகள்" (திருப்பு. 326).* 2. ஊக்கம்; earnestness, zeal. *வேலை சீமுதமாய் நடக்கிறது (இ.வ.).* 3. மலை (வின்.); mountain. 4. பெண் யானை (வின்.); female elephant.

[Skt. jīmūta > த. சீமூதம்]

சீயங்கல் *śīyaṅ-gal,* பெ.(n.) மட்டக் கெம்பு; a kind of inferior ruby, as from Siam.

[சீயம் + கல்] **[Malay.** *siyam* **> த. சீயம்]**

சீயஞ்சிவப்பு *śīyañ-jivappu,* பெ.(n.) **சீயங்கல்** (இ.வ.) பார்க்க; see *sīyaṅ-gal.*

[சீயம் + சிவப்பு] **[Malay.** *siyam* **> த. சீயம்]**

சீயம்¹ *śīyam,* பெ.(n.) 1. அரிமா; lion. *"சீயமு மேறும் பாய்பரிப் புரவியும்" (பெருங். உஞ்சைக். 42 : 85).* 2. அரிமா ஓரை (சிம்மராசி) (திவா.); leo, a sign of the zodiac.

த.வ. மடங்கல்

[Skt. simha > Pkt. siha > த. சீயம்]

சீயம்[2] *śīyam*, பெ.(n.) ஒரு நாடு; Siam.

[Malay. siyam > த. சீயம்]

சீயன் *śīyaṉ*, பெ.(n.) 1. **சீயம்**[2] பார்க்க; see *śīyam*[2]. 2. **சீயங்கல்** (உ.வ.) பார்க்க; see *śīyaṅ-gal*.

[Malay. siyam > த. சீயன்]

சீயாசனம் *śīyāśaṉam*, பெ.(n.) அரியணை (சிங்காதனம்); throne. *வெற்றிச் சீயாசனத்து" (மேருமந். 921).*

[Skt. śimha>Pkt. siha + Skt. āsana> த. சீயாசனம்]

சீர்கத்து *śīrkattu*, பெ. (n.) மருந்துப் பொருளாகும் ஒருவகை மரப்பால் (பைஷஜ. 74); saccharine exudation obtained from plants either naturally or by cutting the bark, edible and medicinal.

[U. shīr-khist > த. சீர்கத்து]

சீர்ணம் *śīrṇam*, பெ.(n.) **சீரணம்** பார்க்க; see *śīraṇam*.

[Skt. jīrṇa > த. சீர்ணம்]

சீரங்கம் *śīraṅgam*, பெ.(n.) திருச்சிராப்பள்ளிக் கருகிலிருக்கும் புகழ்பெற்ற திருமால் கோயில் உள்ள இடம்; *Śrī-raṅgam*, the famous Viṣṇu shrine near Trichirapalli. *"சீரங்கத்தார்க்குந் திருவானைக் காவார்க்கும்" (தமிழ்நா. 203).*

த.வ. திருவரங்கம்

[Skt. Śrī-raṅga > த. சீரங்கம்]

சீரணக்குறைவு *śīraṇa-k-kuṟaivu*, பெ.(n.) விரைவில் செரியாமை; feeble digestion - Caligopepsia. (சா.அக.)

[சீரணம் + குறைவு]

[Skt. jīrṇa > த. சீரணம்]

சீரணசக்தி *śīraṇa-śakti*, பெ.(n.) செரிக்கும் திறன்; digestive power of faculty. (சா.அக.).

[Skt. jīrṇa + sakti > த. சீரணசக்தி]

சீரணசுரம் *śīraṇa-śuram*, பெ. (n.) செரியாமையாலேற்படும் காய்ச்சல்; fever caused by indigestion.

[சீரணம்+சுரம்]

[Skt. jīrṇa > த. சீரணம்]

சீரணபாதை *śīraṇa-pādai*, பெ. (n.) வாயினின்று துவங்கி எரு வாயில் வரை மெல்லியதோலினாலாகிய குழல்; alimentry canal lined with mucous membrane extending from the mouth to the anus, through which food passes. (சா.அக.)

த.வ. செரிமப்பாதை

[சீரணம் + பாதை]

[Skt. jīraṇa > த. சீரணம்]

சீரணத்துவம் *śīraṇattuvam*, பெ.(n.) வீழ்ச்சி; decay. *"அவற்றின் சங்கோசமே சீரணத் துவம்" (வாசுதேவமனனம், பக். 67).*

[Skt. jīraṇa + tva > த. சீரணத்துவம்]

சீரணப்பருவம் *śīraṇa-p-paruvam*, பெ.(n.) 60 அகவைக்கு மேற்பட்டு 80 வரைக்குமுள்ள பருவம்; the stage between 60 years and 80 years. (சா.அக.)

த.வ. முதுமைப்பருவம்

[Skt. jīrṇa > த. சீரணம்]

சீரணம் *śīraṇam*, பெ.(n.) 1. உண்டது செரிக்கை; digestion. 2. பழுது (பிங்.); decay, ruin, spoiled condition.

த.வ. செரிப்பு, செரிமானம்

[Skt. jīrṇa > த. சீரணம்]

சீரணரசவக்கினி *śīraṇa-raśa-v-akkiṉi*, பெ.(n.) உணவு செரித்தலுக்குக் காரணமான வயிற்றுத் தீ (சடராக்கினி); gastric fire. (சா.அக.)

சீரணவிருத்தினி *śīraṇa-viruttiṉi*, பெ.(n.) செரித்தலை (சீரணத்தை) அதிகரிக்கும் பொருள்கள்; stomachic. (சா.அக.)

த.வ. செரிமாப்பெருக்கி

[சீரணம்+விருத்தினி]

சீரணி[1]**–த்தல்** *śīraṇi-*, 4 செ.கு.வி.(v.i.) 1. உண்டது செரித்தல்; to digest. 2. பழுதடைதல்; to decay, rot; to go to ruins,

as a building. *"மேன்மை சீரணித் தில்லந்தோறுங் கிழ்மையே செறிந்து" (பிரபோத. 6:45).*

த.வ. செரித்தல்

[Skt. jirṇa > த. சீரணி]

சீரணோத்தாரணம் *śira-nōttāraṇam,* பெ.(n.) பழுதுபட்ட கோயில் முதலியவற்றைச் செப்பமிடுகை; restoration, repair, as of a temple in ruins.

த.வ. கோயில்திருப்பணி

[Skt.jirṇōddhāraṇa > த. சீரணோத்தாரணம்]

சீரதைலம் *śiratailam,* பெ.(n.) எண்ணெய், பால் முதலியவற்றைக் கொண்டு செய்த எண்ணெய்; an ungunt prepared with milk, oil etc. (சா.அக.).

சீரரோகம் *śirarōgam,* பெ. (n.) குழந்தை பெற்ற பெண்களுக்குப் பால் கட்டிக்கொள்கை; disease due to accumilation of milk in the breast of delivered woman. (சா.அக.).

த.வ. பால்கட்டு

சீரரோத்தமம் *śira-rōttamam,* பெ.(n.) சீரற்றீஞ்சு; date tree or palm as opposed to wild date palm. (சா.அக.)

சீராமநவமி *śi-rāma-navami,* பெ.(n.) இராமர் பிறந்த நாளாகிய மேழ (சித்திரை) மாதத்து வளர்பிறை ஒன்பதாம் நாள் (I.M.P. Tp. 491); the ninth titi in the bright fort-night of caittiram, the birth day of Sri Rāmaṉ.

த.வ. இராமர்தொண்மி

[Skt. srirāma + navami > த. சீராமநவமி]

சீராலசகரோகம் *śirāla-śagarōgam,* பெ.(n.) குற்றம் அல்லது தீட்டுப்பட்ட (தோசப்) பாலைக் குடிக்கும் குழந்தைகட்குக் காணும் நோய், இதனால் செரியாமை உண்டாகி, கழிச்சல், காய்ச்சல் (சுரம்), உணவில் வெறுப்பு (அரோசகம்), வயிற்றிரைச்சல், ஏப்பம், கொட்டாவி முதலிய குணங்கள் ஏற்படும்; a disease of children caused by taking vitiated breast milk symptoms are indigestion. diarrhoea, fever, anerexia, erectations, yawning and gas in the abdomen. (சா.அக.)

த.வ. தீட்டுநோய்

சீரி-த்தல் *śiri-,* 4 செ.கு.வி.(v.i.) பழகுதல் (யாழ்ப்.); to practice, accustom oneself to. *"உலக்கல் சீலிக்கப்பட்ட தோளினை யுடையான்" (பு.வெ.11, ஆண்பாற். 2, உரை).*

[Skt. śila → śili > த. சீரி-த்தல்]

சீரிணபன்னம் *śiriṇa-paṉṉam,* பெ.(n.) வேம்பு (மலை.); margosa.

[Skt. viśirṇa-parṇa > த. சீரிணபன்னம்]

சீரிவிருட்சம் *śiri-viruṭcam,* பெ.(n.) புளியமரம் (மலை.); tamarind.

சீருடக்காரம் *śiruḍa-k-kāram,* பெ.(n.) கருப்பூரம்; camphor. (சா.அக.)

சீருத்திரம் *śi-ruttiram,* பெ.(n.) மறையின் ஒரு மந்திரப்பகுதி (யாழ்.அக.); a section of the Vēdas.

[Skt. śri-rudra > த. சீருத்திரம்]

சீல் *śil,* பெ.(n.) முத்திரை; seal.

[E. seal > த. சீல்]

சில்மோதிரம் *śil-mōdiram,* பெ.(n.) முத்திரைக் கணையாழி; signet-ring, finger-ring with seal set in it.

[சீல்+மோதிரம்]

[E. seal > த. சீல்]



சிலபாரமிதை *śila-pāramidai,* பெ.(n.) புத்தப்பதவிக்குரிய பத்துக் குணங்களுள் சீலம் முற்றுகை (மணிமே. 26: 45, அரும்.); complete attainment of śīlam or perfection of moral conduct, one of *taśapāramidi.*

[Skt. śila+pāramitai > த. சிலபாரமிதை]

பத்துக் குணங்கள் : 1. தானம், 2. சீலம், 3. பொறுமை, 4. வீரியம், 5. ஊழ்கம் (தியானம்), 6. அறிவு நிறைவு (பிரஞ்ஞை), 7. சூழ்ச்சி, வழிவகை (உபாயம்), 8. அருள், பேரன்பு (தயை), 9. பலம், 10. அறிவு (ஞானம்).

சீவ *śiva,* இடை.(int.) 'நீடுவாழ்க' என்று வாழ்த்துதற் குறிப்பு; expression meaning 'may you live long'. *"சினைமறைந் தொருகுரல் சீவ வென்றதே" (சீவக. 323).*

[Skt. jiva > த. சீவ]

சீவகணங்கள் *śiva-kaṇaṅgaḷ,* பெ. (n.) தாதுக்களின் உயிர்த்துணைக் கருவிகள்; the vital or essential organs supporting the seven consitutent parts (seven *dhathus*) oı the body.

[சீவன் + கணங்கள்.]

[Skt. jiva > த. சீவன்.]

சீவகர் *śivagar,* பெ.(n.) புத்தத் துறவிகள் (திவா.); Buddhist monks.

[Skt. jivaka > த. சீவகர்]

சீவகளை *śiva- kaḷai,* பெ.(n.) உயிர்ப்பு, உயிரின் செழிப்பு; vital power, illumined life. (சா.அக.)

[சீவன்+களை]

[Skt. jiva > த. சீவன்]

சீவகாருண்ணியம் *śiva-kāruṇṇiyam,* பெ.(n.) உயிர்களிடம் காட்டும் அன்பு, இரக்கம்; mercy towards living creatures.

[Skt. jiva+kāruṇya > த. சீவகாருணியம் > சீவகாருண்ணியம்]

சீவகாலம் *śiva-kālam,* பெ.(n.) வாழ்நாள் (உ.வ.); life time.

[சீவ + காலம்]

[Skt. jiva > த. சீவ]

சீவகோடி *śiva-kōḍi,* பெ.(n.) **சீவராசி** பார்க்க; see *śiva-rāśi.*

[சீவ + கோடி]

[Skt. jiva > த. சீவ]

சீவச்சவம் *śiva-c-cavam,* பெ.(n.) **சீவப்பிரேதம்** பார்க்க; *śiva-p-pirēdam.*

[Skt. jiva+śava > த. சீவச்சவம்]

சீவசக்தி *śiva-śakti,* பெ.(n.) 1. உயிர்ச் (பிராண) சத்து; vitality - vital power life essence. 2. உயிருக்கு (பிராணிகளுக்கு) உதவியான உடம்பைப் வலுப்படுத்தும் பொருள்; vitamins essential for life. (சா.அக.)

[Skt. jiva+śakti > த. சீவசக்தி]

சீவசம்போதனை *śiva-śambōdaṉai,* பெ.(n.) தமிழ் மொழியிலுள்ள சமண நூல்; a Jaina work in Tamil.

[Skt. jiva+sambōdhanā > த. சீவசம்போதனை]

சீவசாட்சி *śiva-śāṭci,* பெ. (n.) உயிர்களனைத் திற்கும் சான்றான (சாட்சி) முழுமுதற் கடவுள்; the Supreme Being, as the witness of all being.

[Skt. jiva+sākṣin > த. சீவசாட்சி]

சீவசாதனம் *śiva-śādaṉam,* பெ.(n.) தவசம் (யாழ்.அக.); grain.

[Skt. jiva+sādhana > த. சீவசாதனம்]

சீவசீவி *śivaśivi,* பெ.(n.) உயிருள்ளப் பொருளைப் பற்றி வாழும் உயிரி; parasite.

[Skt. jiva+jivin > த. சீவசீவி]

சீவசுத்தி *śiva-śutti,* பெ.(n.) உண்மையறி வின்பமயமாகிய கடவுளை உயிர், அவ்வொளியே கண்ணாகக் கண்டறிந்து அதில் உயிர் தற்போதமடங்கித் தனக்கு நல்வினைப் பயனாகியக் கடவுள் தானாய் நிற்கை (கட்டளைக். 188); the state of realising the Brahman, in which the individual soul loses the sense of self and becomes identical with the Brahman. (செ. அக.)

[Skt. jiva+śuddhi > த. சீவசுத்தி]

சீவசெந்து *śiva-śendu,* பெ.(n.) உயிரி; living being.

[Skt. jiva+jandu > த. சீவசெந்து]

சீவத்தறுவாய் *śiva-t-taṟuvāy,* பெ.(n.) இறக்குங் காலம் (யாழ்.அக.); moment of death.

[சீவம் + தறுவாய்]

[Skt. jiva > த. சீவ]

சீவத்துவம் *śivattuvam,* பெ.(n.) ஆதனின் ஆற்றல் (ஆன்மசக்தி) (உ.வ.); vitality.

[Skt. jiva-tva > த. சீவத்துவம்]

சீவத்விபாகம் *śivat-vibāgam,* பெ.(n.) உயிரோடு இருக்கும் போதே தந்தை தன் மக்களுக்குப் பங்குப் பிரித்துக் கொடுக்கை; (W.G) partition of an ancestral estate among sons by the father during his life-time.

[Skt. jivad-vibhāga > த. சீவத்விபாகம்]

சீவதசை *śiva-daśai,* பெ.(n.) வாழ்நாள் (சங்.அக.); life time.

[Skt. jiva+daśā > த. சீவதசை]

சீவதம் *śivadam,* பெ.(n.) மழை முகில் (பிங்.); rain-cloud.

[Skt. jiva-da > த. சீவதம்]

சீவதரிசனை *śiva-dariśaṉai,* பெ.(n.) பெயருருவமாகிய எளிய இவ்வுடலை விட்டு நீங்கிய உயிர் உண்மையறிவின்பமாகிய கடவுளைப் பற்றி நிற்கை (கட்டளைக். 188); the state of understanding the formless Brahman.

த.வ. உயிர்க்காட்சி

[Skt. jiva+darśana > த. சீவதரிசனை]

சீவதருமம் *śiva-darumam,* பெ.(n.) உயிர்களின் பொருட்டுச் செய்யும் அறச்செயல் (பசுபுண்ணியம்) (வின்.); meritorious deeds performed in reference to living beings.

த.வ. அருளறம்

[Skt. jiva+dharma > த. சீவதருமம்]

சீவதாது *śiva-tādu,* பெ.(n.) உயிரின் நாடித்துடிப்பு (சீவநாடி) (உ.வ.); life-pulse, pulse usually felt at the wrist.

[Skt. jiva+dhātu > த. சீவதாது]

சீவதிசை *śiva-diśai,* பெ. (n.) 1. உயிரோ டிருக்குங்காலம்; duration of life. 2. வாணாள்; life time. (சா.அக.)

[சீவ + திசை]

[Skt. jiva > த. சீவ]

சீவந்தம் *śivandam,* பெ.(n.) 1. மருந்து; medicine. 2. உயிர் (பிராணன்); life. (சா.அக.)

[Skt. jivantah > த. சீவந்தம்]

சீவந்தன் *śivandaṉ,* பெ.(n.) உயிரோடிருப்பவன் (சங்.அக.); living person.

[Skt. jivantah > த. சீவந்தன்]

சீவநாசவிடம் *śiva-nāśa-viḍam,* பெ.(n.) உயிர் அழிவை (சேதத்தை) விளைவிக்கும் நஞ்சு; deadly poison.

[Skt. Jiva+nāśa+viṣa> த. சீவநாசவிடம்]

சீவநாடி *śiva-nāḍi,* பெ.(n.) **சீவதாது** பார்க்க; see *śiva-tādu.*

[Skt. jiva+nāḍi > த. சீவநாடி]

சீவநாள் *śiva-nāḷ,* பெ.(n.) **சீவதசை** (யாழ்.அக.) பார்க்க; see *śiva-taśai.*

[சீவ + நாள்] *[Skt. jiva > த. சீவ]*

சீவப்பிராணி *śiva-p-pirāṇi,* பெ.(n.) உயிருள்ளவை; living beings.

[Skt. jiva+prāṇin > த. சீவப்பிராணி]

சீவப்பிரியை *śiva-p-piriyai,* பெ.(n.) கடுக்காய் (சங்.அக.); chebulic myrobalan.

[Skt. jiva-priyā > த. சீவப்பிரியை]

சீவப்பிரேதம் *śiva-p-pirēdam,* பெ.(n.) உயிர்ப் பிணம்; weak person, as a living corpse.

[Skt. jiva+prēta > த. சீவப்பிரேதம்]

சீவபலி *śīva-pali*, பெ.(n.) 1. தன்னுயிரைக் காவு (பலி)கொடுக்கை; sacrificing one's life. 2. உயிர்ப்பலி; animal sacrifice.

த.வ. உயிர்ஈகை

[Skt. jīva+bali > த. சீவபலி]

சீவபாவம் *śīva-pāvam*, பெ.(n.) உயிர்த்தன்மை; state of being a *jīva*. *"சீவபாவ முண்டென்குதல் விபரீதம்" (வேதா. சூ.129).*

[Skt. jīva+bhāva > த. சீவபாவம்]

சீவபுண்ணியம் *śīva-punniyam*, பெ.(n.) **சீவதருமம்** (யாழ்.அக.) பார்க்க; see *śīva-darumam*.

[Skt. jīva+punya > த. சீவபுண்ணியம்]

சீவம் *śīvam*, பெ.(n.) 1. **சீவன்**[1] பார்க்க; see *śīvan*[1]. 2. ஒன்பது பொருள்களுள் ஒன்றாகிய உயிர் (சீவக. 2814, உரை); life-principle in a body, one of *nava-patārttam*.

[Skt. jīva > த. சீவம்]

சீவமந்திரம் *śīva-mandiram*, பெ. (n.) உடல் (யாழ்.அக.); body, as the place where the soul resides.

[சீவ + மந்திரம்]

[Skt. jīva > த. சீவ]

சீவர் *śīvar*, பெ. (n.) உயிருள்ளோர் (யாழ்.அக.); living beings.

[Skt. jīva > த. சீவர்]

சீவரத்தினம் *śīva-rattinam*, பெ.(n.) நல்லப் பாம்புக்கு உயிர்க் காப்பாய் அதன் தலையில் உள்ளதும் வேண்டியதைக் கொடுக்க வல்லது என்று கருதுவதுமான மாமணி; life gem, believed to be on the head of the cobra, essential to its life and capable of granting its possessor whatever is desired. *"ராமீசம் வாழ் சீவரத்தினமே" (அருட்பா, i, விண்ணப்பக் கலி. 200).*

[Skt. jīva+ratna > த. சீவரத்தினம்]

சீவராசி *śīva-rāśi*, பெ.(n.) உயிரினம்; living beings viewed as a whole.

[Skt. jīva+rāśi > த. சீவராசி]

சீவரூபம் *śīva-rūbam*, பெ.(n.) மாயை வடிவத்தைக் காணுதற்கு ஓரறிவு உண்டென அறிகை (கட்டளைக். 188); the state of discerning that there must be an intelligent power to understand the real nature of *Māyā*.

[Skt. jīva+rūpa > த. சீவரூபம்]

சீவரேக்கு *śīva-rēkku*, பெ.(n.) 1. சிற்பத் தீர்மான வேலை (வின்.); finishing stroke in statuary or jewelry, the last touches that give the appearance of life. 2. தங்கம் முதலியவற்றின் மெல்லிய தகடு; strip of gold foil used in setting gems.

[Skt. jīva+U. rēk > த. சீவரேக்கு]

சீவரேகை *śīva-rēgai*, பெ(n.) உள்ளங்கையிலுள்ள வாணாள் (ஆயுள்) வரிகை; line of life, one of the lines on the palm showing the duration of life.

[Skt. jīva+rekhā > த. சீவரேகை]

சீவலயம் *śīva-layam*, பெ.(n.) இறப்பு (யாழ்.அக.); death.

[Skt. jīva+laya > த. சீவலயம்]

சீவலி *śīvali*, பெ.(n.) **சீபலி** பார்க்க; see *śībali*.

[Skt. śrī-bali > த. சீவலி]

சீவவதை *śīva-vadai*, பெ.(n.) 1. உயிர்களைக் கொல்லுகை; killing of animals. 2. கடுந்துன்பஞ் செய்கை; torture.

[Skt. jīva+vadha > த. சீவவதை]

சீவவனல் *śīva-v-anal*, பெ.(n.) உயிருக்கு மூலமான வயிற்றுத்தீ, காமத்தீ, சினத்தீ; the three vital fires which sustain life.

[Skt. jīva+anala > த. சீவவனல்]

சீவவிருட்சம் *śīva-virutcam*, பெ.(n.) ஈடன் தோட்டத்திலுள்ள ஒரு மரம் (வின்.); the tree of life in the garden of Ēden.

[Skt. jīva+vrksa > த. சீவவிருட்சம்]

சீவற்சம் *śivaṟśam,* பெ.(n.) 1. திருமாலின் திருமார்பிலுள்ள மரு அல்லது மயிர்ச்சுழி; mark or curl of hair on the chest of Tirumāl. 2. விழாக்களில் மங்கலக்குறியாக எடுத்துச் செல்லும் திருமகள் உருவம்; image of Lakṣmi carried on special occasions, as a symbol of auspiciousness. *"கிளர்சுடர் சீவற்சம்" (திருவிளை. திருமணப். 67).*

[Skt. śrī-vatsa > த. சீவற்சம்]

சீவன்[1] *śivaṉ,* பெ.(n.) 1. உயிராதன் (பிங்.); individual soul. 2. உயிர்விலங்கு; living being, animal. 3. உயிர்; life, vitality. 4. ஆற்றல்; energy, spirit, strength. *அவனுக்கு அதைச் செய்ய சீவன் இல்லை.* 5. வியாழன் (பிங்.); jupiter. 6. காந்தம் (வின்.); magnet.

[Skt. jīva > த. சீவன்]

சீவன்[2] *śivaṉ,* பெ.(n.) ஒளிமணி (வைடூரியம்) (யாழ்.அக.); lapiz lazuli.

[Skt. jīva > த. சீவன்]

சீவன்முத்தர் *śivaṉ-muttar,* பெ. (n.) இம்மையிலேயே வீடுபேறடைந்த நால் வகையினர் 'பிரமவித்துக்கள், பிரமவரர், பிரமவரியர், பிரமவரிட்டர்' (கோயிற்பு, இரணியவன்ம. 68); perfected souls who have obtained final deliverance whilst yet in this life, of four classes, viz., *pirama-vittukkaḷ, pirama-varar, pirama-variyar, pirama-variṣṭar.*

[Skt. jīvanmukta > த. சீவன்முத்தர்]

சீவன்முத்தி *śivaṉ-mutti,* பெ.(n.) உயிர் இம்மையிலேயே வீடுபேறடைகை; final deliverance while still in this life. "திருவாலவாய் சீவன் முத்திதரும்" (திருவிளை. தலவி.7).

த.வ. இம்மைவீடுபேறு

[Skt. jīvan-mukti > த. சீவன்முத்தி]

சீவனகம் *śivaṉagam,* பெ.(n.) சோறு (சங்.அக.); cooked rice.

[Skt. jīvanaka > த. சீவனகம்]

சீவனசேடம் *śivaṉa-śēḍam,* பெ.(n.) பிழைப்புக்குரியது; maintenance. *பல பணிநிமந்தக்காரருக்குஞ் சீவனசேஷமாக .... கொடுத்து (தெ.இ.க.தொகு.3 : 47).*

[Skt. jīvana+śēṣa> த. சீவனசேடம்]

சீவனந்தேடு-தல் *śivaṉan-tēḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. பிழைக்கும் வழிதேடுதல்; to seek means of living. 2. இரை தேடுதல் (யாழ்ப்.); to seek food, prey, as animals.

[சீவனம் + தேடு-தல்]

[Skt. jīvana > த. சீவனம்]

சீவனம் *śivaṉam,* பெ.(n.) 1. பிழைப்பு நடத்துகை; living, sustaining life. 2. பிழைக்கும் வழி; livelihood, means of sustenance. *"சிவஞானந்தான் சீவனமாக வாழ்வோம்" (சீவரக. சிவரகசியவரலா.3).* 3. நீர் (பிங்.); water. 4. கஞ்சி; rice-water. *காலையிற் சீவனங் குடியாமல் வந்துவிட்டேன்.* (நாஞ்)

[Skt. jīvana > த. சீவனம்]

சீவனமுனை *śivaṉa-muṉai,* பெ.(n.) பிழைக்கும் வழி (வின்.); means of livelihood.

[சீவனம் + முனை]

[Skt. jīvana > த. சீவனம்]

சீவனாதாரம் *śivaṉādāram,* பெ. (n.) 1. **சீவனாம்சம்** பார்க்க; see *śivaṉāmśam.* 2. **சீவனோபாயம்** பார்க்க see *śivaṉōbāyam.* 3. **சீவாதாரம்** பார்க்க see *śivādāram.*

[Skt. jīvana+ā-dhāra > த. சீவனாதாரம்]

சீவனாம்சம் *śivaṉāmśam,* பெ. (n.) கைம்பெண், மணவிலக்கு பெற்றவள் முதலியோருடைய பிழைப்புக்கென்று கொடுக்கும் பொருள்; maintenance, subsistence allowance, as given to a widow.

த.வ. பிழைப்புத்தொகை

[Skt. jīvana+amśa > த. சீவனாம்சம்]

சீவனார்த்தம் *śīvaṉārttam,* பெ.(n.) உயிர் வாழ்க்கைக்கு ஆதரவு; support of life.

[Skt. jīvana+ārta> த. சீவனார்த்தம்]

சீவனாவுபதம் *śīvaṉā-v-upadam,* பெ.(n.) பிணி தீர்த்து உயிர்தரு மருந்து; restorative. (சா.அக.)

சீவனாளி *śīvaṉāḷi,* பெ.(n.) உயிரினம் (யாழ்.அக.); living being.

[சீவன் + ஆளி] *[Skt. jīva > த. சீவன்]*

ஆள் > ஆளி

சீவனி¹–த்தல் *śīvaṉi-,* 4 செ.கு.வி.(v.i.) பிழைப்பு நடத்துதல் (யாழ்.அக.); to maintain oneself, to make a living.

த.வ. பிழைத்தல்

[Skt. jīvana > த. சீவனம் → சீவனி–]

சீவனி² *śīvaṉi* பெ.(n.) 1. உயிர் தரு மருந்து (பிங்.); life-giving elixir, medicament that restores life. 2. செவ்வழியாழ்த் திறத்தொன்று (பிங்.); a secondary melody type of the sevvaḻi class. 3. மந்தாரச் சிலை (வின்.); a black stone. 4. பாலை மரவகை (பிங்.); wedge-leaved ape-flower. 5. வெட்பாலை மரம் (தைலவ. தைல. 13); ivory-tree. 6. ஆடு தின்னாபாலை (மலை.); worm killer. 7. செவ்வள்ளிக் கிழங்கு (மலை.); purple yam.

[Skt. jīvaṉi > த. சீவனி]

சீவனீயம் *śīvaṉīyam,* பெ.(n.) 1. நீர் (பிங்.); water. 2. மூத்திர தாரை வழியாக செலுத்தப்படும் ஒரு நெய்மம் (கிருதம்); a preparation of ghee which is used to be injected through urethra.

[Skt. jīvanīya > த. சீவனீயம்]

சீவனோபாயம் *śīvaṉōbāyam,* பெ.(n.) பிழைப்புக்குரிய தொழில்; profession, occupation as a means of living.

த.வ. பிழைப்புத்தொழில்

[Skt. jīvana+upāya > த. சீவனோபாயம்]

சீவனௌடதம் *śīvaṉauḍadam,* பெ.(n.) இறுதி காலத்திலும் உயிரை நிறுத்தும் மருந்து; medicine tending to prevant life leaving the body. (சா.அக.)

[Skt. jīva+auṣadha> த. சீவனௌடதம்]

சீவா *śīvā,* பெ.(n.) **சீவனி². 4** (மலை.) பார்க்க; see *śīvaṉi², 4.*

சீவாக்கினி *śīvākkiṉi,* பெ. (n.) உயிர் பிழைத்தற்கேதுவான வெப்பம்; heat required for sustenance of life, animal heat.

உயிர்த்தீ – மூன்று வகைகளிலொன்று.

உயிர்த்தீ : 1. வயிற்றுத்தீ, 2. விந்துதீ, 3. சினத்தீ.

சீவாத்திகாயம் *śīvāttikāyam,* பெ.(n.) அருக (சமண) மதத் தத்துவங்கள் ஐந்தனுள் ஒன்றான ஆதன் (திருநூற். 23, உரை); jīva or ātman, the conscious sentient principle one of *pañjāsti-kāyam.*

[Skt. jīva+astikāya > த. சீவாத்திகாயம்]

சீவாத்துமா *śīvāttumā,* பெ.(n.) ஆதன் சிற்றுயிர்; individual soul, opp. to *paramāttumā.*

[Skt. jīva+ātman > த. சீவாத்துமா]

சீவாதாரம் *śīvādāram,* பெ.(n.) 1. வாழ்வுக்கு அடிப்படையானது (உ.வ.); life's chief support the staff of life. 2. உடல் (சது.); body. 3. உலகம் (யாழ்.அக.); the world.

[Skt. jīva+ādhāra > த. சீவாதாரம்]

சீவாந்தம் *śīvāndam,* பெ. (n.) இறப்பு (வின்.); death.

[Skt. jīvānta > த. சீவாந்தம்]

சீவான்மா *śīvāṉmā,* பெ. (n.) **சீவாத்துமா** பார்க்க; see *śīvāttumā. "ஒங்கு சீவான்மாவினை" (கூர்மபு. இந்திர. 342).*

[Skt. jīvātman > த. சீவான்மா]

சீவி¹–த்தல் *śīvi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. உயிர் வாழ்தல்; to live. 2. பிழைப்பு நடத்துதல்; to

make a living. 3. தொழிற்படுதல் (வின்.); to be active, as the powers of the body or mind in wakeful hours.

[Skt. jīv > த. சீவி > சீவி¹–த்தல்]

சீவி²–த்தல் *śīvi,* 4 செ.கு.வி.(v.i.) இறத்தல் (யாழ்.அக.); to die, used euphemistically.

[Skt. jīva > த. சீவி > சீவி–த்தல்]

சீவி³ *śīvi,* பெ.(n.) உயிருடைப் பொருள் (யாழ்.அக.); living being.

[Skt. jīvin > த. சீவி]

சீவிதக்காரன் *śīvida-k-kāraṉ,* பெ.(n.) பணி செய்வதற்காக நல்கை (மானியம்) பெற்றவன்; grantee of a service inam. *"சேவகஞ் செய் சீவிதக் காரருக்கும்" (சரவண. பணவிடு. 86).*

[Skt. jīvita > த. சீவிதக்காரன்]

சீவிதஞ்ஞை *śīvidaññai,* பெ.(n.) நெஞ்சாங் குலை (யாழ்.அக.); heart.

[Skt. jīvita+jña > த. சீவிதஞ்ஞை]

சீவிதம் *śīvidam,* பெ.(n.) 1. உயிர்வாழ்க்கை; life. existence. 2. உயிருக்குப் பற்றுக் கோடு (சீவனாதாரம்); subsistence, allowance, maintenance. *'கோடி பொன்னைச் சீவிதமாக வுடையாரா யிருப்பார்' (சீவக. 2156. உரை).* 3. உயிர் வாழ்தற்குப் பற்றுக்கோடாக விடப்பட்ட இறையிலி நிலம் (W.G.); land granted tax-free for maintenance.

[Skt. jīvita > த. சீவிதம்]

சீவியம் *śīviyam,* பெ.(n.) **சீவிதம்** பார்க்க; see *śīvidam.*

சீவினி *śīviṉi,* பெ.(n.) 1. உயிர்ப்பிக்கும் மருந்து (சஞ்சீவி); an elixir to restore life. 2. யாழினோசை வகை; one of the notes of the lute.

[Skt. jīvanī > த. சீவினி]

சீவோபாதி *śīvōpādi,* பெ.(n.) மனித வாழ்வில் அடங்கிய பிள்ளைப்பருவம் முதலிய நான்கு பருவம் (நாநார்த்த. 904); the four stages of human life. viz. *pāliyam, kaumāram, yauvaṉam, vārttakam.*

[Skt. jīva+upādhi > த. சீவோபாதி]

சீவோற்பத்தி *śīvōṟpatti,* பெ.(n.) 1. கருத்தரிக்கை; conception. 2. கருக்கொள்ளுங் காலம்; period of conception. (சா.அக.)

த.வ. கருவாக்கம்

[Skt. jīva+ut-pātti > த. சீவோற்பத்தி]

சீனக்கண்ணாடி *śīṉa-k-kaṇṇādi,* பெ.(n.) 1. சீன நாட்டுக் கண்ணாடி; a kind of looking-glass, as from China. 2. மூக்குக் கண்ணாடி (யாழ்.அக.); spectacle.

[சீனம் + கண்ணாடி]

[Skt. cīna > த. சீனம்]

சீனக்கர்ப்பூரம் *śīṉa-k-karppūram,* பெ.(n.) **சீனச்சூடன்** (இ.வ.) பார்க்க; see *śīṉa-c-cūdaṉ.*

[சீனம் + கர்ப்பூரம்]

[Skt. cīna > த. சீனம்]

சீனக்காக்கை *śīṉa-k-kākkai,* பெ.(n.) காக்கை வகை (யாழ்.அக.); a kind of crow.

[சீனம் + காக்கை]

[Skt. cīna > த. சீனம்]

கா + கா – காகா > காக்கை. காகாவென கத்துவதால் காக்கை எனப் பெயர் பெற்றது. காகாவெனும் அஃறிணை உயிர் ஒலிக் குறிப்பினின்று தோன்றிய சொல் (மு.தா.2).

சீனக்காரம் *śīṉa-k-kāram,* பெ.(n.) படிக்காரம் (பதார்த்த. 1105); alum.

[சீனம் + காரம்]

[Skt. cīna > த. சீனம்]

கரி > கார் > காரம். கரி என்னும் வினையடியால் பிறந்த தொழிற்பெயர். கரி + அம் – காரம்¹ பார்க்க.

சீனக்கிழங்கு *śīṉa-k-kaḻaṅgu,* பெ.(n.) செடி வகை (பைஷஜ. 110); Himalayan rhubrab, *Rheum emodi.*

[சீனம் + கிழங்கு]

[**Skt.** *cina* > த. *சீனம்]*

கீழ் > கிழக்கு > கிழங்கு

சீனக்கிளி *šina-k-kili*, பெ.(n.) பெருங்கிளி (வின்.); cockaoo, *Cacatuinae*.

[சீனம் + கிளி]

[**Skt.** *cina* > த. *சீனம்]*

கிள் > கிள > கிளி = பேசும் ஆற்றலுள்ளது



சீனக்குடை *šina-k-kudai*, பெ.(n.) தாள் (காகிதக்) குடை (யாழ்.அக.); paper-umbrella.

[சீனம் + குடை] [**Skt.** *cina* > த. *சீனம்]*

குள் > குட > குடை

சீனக்கொழுஞ்சி *šina-k-koluñji*, பெ.(n.) கத்தூரியெலுமிச்சை (L); lime-berry.

[சீனம் + கொழுஞ்சி] [**Skt.** *cina* > த. *சீனம்]*

கொழு > கொழுஞ்சி = ஒருவகை எலுமிச்சை

சீனகர் *šinagar*, பெ.(n.) சீனநாட்டார்; the Chinese.

[**Skt.** *cina* > த. *சீனம் > சீனகர்]*

சீனச்சரப்பளி *šina-c-cara-p-pali*, பெ.(n.) அணிவகை (தெய்வச். விறலிவிடு. 599); an ornament.

[சீனம் + சரப்பள்ளி] [**Skt.** *cina* > த. *சீனம்]*

சீனச்சட்டி *šina-c-catti*, பெ.(n.) ஒருவகை உருக்கு இரும்பு (வின்.); a kind of metal.

[சீனம் + சட்டி] [**Skt.** *cina* > த. *சீனம்]*

சீனச்சூடன் *šina-c-cūdan*, பெ.(n.) கருப்பூர வகை; a kind of camphor. *'சீனச்சூட னென்று பெயர்........... கூறப்பட்ட' (சிலப். 14. 109. உரை).*

[சீனம் + சூடன்] [**Skt.** *cina* > த. *சீனம்]*

சூடு > சூடம் > சூடன்

சீனத்துப்பட்டு *šinattu-p-pattu*, பெ.(n.) சீன நாட்டுப்பட்டு; China silk.

[சீனம் + அத்து + பட்டு.] அத்து = சாரியை.

சீனத்துமுத்து *šinattu-muttu*, பெ.(n.) போலியான முத்துவகை (வின்.); artificial pearls from China.

[சீனம் + அத்து + முத்து.] அத்து – சாரியை

சீனத்துவித்தை *šinattu-vittai*, பெ. (n.) அருமைப்பாடான வேலை (இ.வ.); rare piece of work.

[சீனம் + அத்து + வித்தை. அத்து = சாரியை]

சீனநெல் *šina-nel*, பெ.(n.) நெல்வகை; a kind of paddy.

[சீனம் + நெல்]

சீனப்பட்டை *šina-p-pattai*, பெ.(n.) பறங்கிப் பட்டை (பாலவா. 689); China-root.

[சீனம் + பட்டை]

சீனப்பரணி *šina-p-parani*, பெ.(n.) பெரிய பாண்ட வகை (உ.வ.); a kind of big jar.

[சீனம் + பரணி]

சீனப்பலா *šina-p-palā*, பெ.(n.) **சீனப்பட்டை** (வின்.) பார்க்க; see *šina-p-pattai*.

[சீனம் + பலா]

சீனப்பா *šinappā*, பெ.(n.) 1. பறங்கிப்பட்டை; China - rooti. 2. பெருங்கிழங்கு (பாலவா. 692); Indian birthwort.

[சீனம் + பா]

சீனப்பாகு *šina-p-pāgu*, பெ.(n.) மருந்து வகை (யாழ்.அக.); a medicine.

[சீனம் + பாகு]

சீனம் *šinam*, பெ.(n.) 1. ஒரு நாடு (நன். 273, உரை); a country. 2. சீனமொழி (திவா.); Chinese language. 3. சீனத்துப் பொருள்;

Chinese manufacture, as China silk. *"இப்பட்டுச் சீனம்" (நன். 290, விருத்.).* 4. படிக்காரம் (தைலவ. தைல. 91); alumen.

[Skt. cina > த. சீனம்]

சீனமல்லிகை *šīnamalligai,* பெ.(n.) மல்லிகை வகை (வின்.); a kind of jasmine.

[சீனம் + மல்லிகை]

சீனமிளகு *šīna-milagu,* பெ.(n.) வால்மிளகு (மலை.); cubeb pepper.

ம. சீனமுளகு

[சீனம் + மிளகு]

சீனமுத்து *šīna-muttu,* பெ.(n.) **சீனத்துமுத்து** (யாழ்.அக.) பார்க்க; see *šīnattu-muttu.*

[சீனம் + முத்து]

சீனர் *šīnar,* பெ.(n.) **சீனகர்** பார்க்க; see *šīnagar. "யவனர் சீனர் சோனகர்" (கம்பரா. மிதிலை. 99).*

[சீனம் > சீனர்]

சீனவங்கம் *šīna-vangam,* பெ.(n.) ஈயம் (மலை.); lead.

[சீனம் + வங்கம்]

சீனவெடி *šīna-vedi,* பெ.(n.) பட்டாசு (உ.வ.); crackers.

த.வ. சீனிவெடி. [சீனம் + வெடி]

சீனவெரிவண்டு *šīna-v-eri-vandu,* பெ.(n.) வண்டுவகை; a kind of beetle, considered poisonous.

சீனன் *šīnan,* பெ.(n.) சீனநாட்டான் (யாழ்.அக.); Chinaman.

[சீனம் > சீனன்]

சீனா *šīnā,* பெ.(n.) **சீனம் 1** பார்க்க; see *šīnam*-1.

[சீனம் > சீனா]

சீனாக்கற்கண்டு *šīnā-k-karkandu,* பெ.(n.) கற்கண்டு வகை; a kind of sugar - candy.

[சீனா + கற்கண்டு]

சீனாக்காகிதம் *šīnā-k-kāgidam,* பெ.(n.) சீனாவிலிருந்து இறக்குமதியான மெல்லிய தாள் (காகித) வகை (வின்.); a kind of thin paper, as imported from China.

[சீனா + காகிதம்]

சீனாக்கோழி *šīnā-k-kōli,* பெ.(n.) கோழிவகை (உ.வ.); a species of fowl.

[சீனா + கோழி]

சீனாச்சுருள் *šīnā-c-curul,* பெ.(n.) சீனத்துப்பட்டு; silk cloth manufactured in China.

[சீனா + சுருள்]

சீனாப்பிரேதம் *šīnā-p-pirēdam,* பெ.(n.) மிக மெலிந்தவன் (இ.வ.); pale, emaciated person.

சீனாப்பெட்டி *šīnā-p-petti,* பெ.(n.) பெட்டி வடிவில் செய்யப்பட்ட பட்டாசு (வாணம்) (உ.வ.); fireworks shaped like a box.

[சீனம் > சீனா + பெட்டி]

சீனி *šīni,* பெ.(n.) 1. சீனிச் சருக்கரை; white sugar. 2. சீனத்துப் பொருள்; Chinese productions, used in compounds, as *šīni-k-kāram.*

[Skt. cina > U. chini > த. சீனி]

சீனிக்கண்ணாடி *šīni-k-kannādi,* பெ.(n.) தொலை நோக்காடி; telescope.

[சீனி + கண்ணாடி]

சீனிக்கல் *šīni-k-kal,* பெ.(n.) வெள்ளைக்கல்; white stone.

[சீனி + கல்]

சீனிக்கற்கண்டு *šīni-k-karkandu,* பெ.(n.) **சீனாக்கற்கண்டு** (உ.வ.) பார்க்க; see *šīnā-k-karkandu.*

[சீனி + கற்கண்டு]

சீனிக்காரம் *šīni-k-kāram,* பெ.(n.) **சீனக்காரம்** (வின்.) பார்க்க; see *šīna-k-kāram.*

[சீனி + காரம்]

சீனிக்கிழங்கு *šīni-k-kilangu,* பெ.(n.) சருக்கரை வள்ளிக்கிழங்கு (உ.வ.); sweet-

potato, Ipomaea batatas.

த.வ. சருக்கரை வள்ளிக்கிழங்கு

[சீனி + கிழங்கு]

சீனிச்சர்க்கரை *šīṉi-c-carkkarai,* பெ.(n.) வெண்மையான சருக்கரை வகை (பதார்த்த. 187); China sugar, white sugar.

[சீனி + சர்க்கரை]

சீனிப்பலா *šīṉi-p-palā,* பெ.(n.) மரவகை; bread-fruit tree, Arfocarpus incisa.

[சீனி + பலா]

சீனிமிட்டாய் *šīṉi-miṭṭāy,* பெ.(n.) மிட்டாய் வகை (வின்.); a kind of sweetmeat.

[சீனி + மிட்டாய்]

*[**Skt.** cina >**U.** chini> த. சீனி > **Ar.** mitāyi > த. மிட்டாய்]*

சீனியதிரசம் *šīṉi-y-adirašam,* பெ.(n.) ஒருவகை இனிப்புப் பணியாரம் (யாழ்.அக.); a kind of sweetmeat.

*[**Skt.** cin> **U.** chini+ **Skt.** ati+rasa > த. சீனியதிரசம்]*

சு *šu,* இடை.(part.) நன்மை, மங்கலம் முதலிய பொருள் பெற்று வடமொழிப் பெயர்கட்கு முன்வரும் சொல்; prefix to Sanskrit words signifying goodness, auspiciousness as šuguṇam, opp. to *tur.*

*[**Skt.** su > த. சு]*

சுக்கம் *šukkam,* பெ.(n.) **சுங்கம்**[1] பார்க்க; see *šuṅgam.*

*[**Skt.** šulka > த. சுக்கம்]*

சுக்காரொட்டி *šukkā-roṭṭi,* பெ.(n.) எண்ணெய் தடவாமல் நெருப்பில் வாட்டி எடுக்கப்படும் அடை போன்ற உணவு (சப்பாத்தி போன்ற ரொட்டி); a kind of aḍai, (šappāti) roasted with out using oil.

த.வ. வறட்டுஅடை

*[**U.** šukkā+rōṭi > த. சுக்கா ரொட்டி]*

சுக்காவறுவல் *šukkā-vaṟuval,* பெ.(n.) உசிலை (மசாலா) சேர்த்து, வறள வறுத்த இறைச்சித் துண்டு; pieces of fried meat slightly spiced.

த.வ. வறுத்தகறி

[சுக்கா + வறுவல்]

*[**U** šukka > த. சுக்கா]*

சுக்கான் *šukkāṉ,* பெ.(n.) கப்பலைத் திருப்புங் கருவி; rudder, helm.

*[**U.** sukkān > த. சுக்கான்]*

சுக்கான்கிரி *šukkāṉ-kiri,* பெ.(n.) கப்பலோட்டி (வின்.); helmsman, one who steers a vessel.

*[**U.** sukkān+gir > த. சுக்கான்கிரி]*

சுக்கான்கூடு *šukkāṉ-kūḍu,* பெ. (n.) சுக்கானிருக்கும் கட்டை (கப்); rudder truck.

*[சுக்கான் + கூடு] [**U.** sukkān > த. சுக்கான்]*

சுக்கான்சறுக்கி *šukkāṉ-šaṟukki,* பெ.(n.) சுக்கானைத் திருப்புஞ் சக்கரம்; rudder wheel.

[சுக்கான் + சறுக்கி]

*[**U.** sukkān > த. சுக்கான்]*

சுக்கான்திருப்பு-தல் *šukkāṉ-tiruppu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. **சுக்கான்பிடி-த்தல்** பார்க்க; see *šukkāṉ-piḍi-.* 2. பிறரைத் தன்வயப்படுத்துதல்; to bring round another to one's own opinion.

[சுக்கான் + திருப்பு-தல்.]

*[**U.** sukkān > த. சுக்கான்.]*

சுக்கான்பிடி-த்தல் *šukkāṉ-piḍi-,* 4 செ.குன்றாவி. (v.t.) கப்பலை நடத்துதல் (வின்.); to steer a vessel.

[சுக்கான் + பிடி-த்தல்]

*[**U.** sukkān > த. சுக்கான்]*

சுக்கானி *šukkāṉi,* பெ.(n.) கப்பலோட்டி (வின்.); helmsman.

*[**U.** sukkāni > த. சுக்கானி]*

சுக்கியானம் *šu-k-kiyāṉam,* பெ.(n.) **சுஞ்ஞானம்** (வின்.) பார்க்க; see *šuññāṉam.*

*[**Skt.** su+jñāna > த. சுஞ்ஞானம் > சுக்கியானம்]*

சுக்கிரக்கண்ணன் *šukkira-k-kaṇṇaṉ,* பெ. (n.) ஒரு கண் குருடானவன் (இ.வ.); a man blind in one eye.

[சுக்கிரன் + கண்ணன்]

[Skt. šukra > த. சுக்கிரன்]

சுக்கிரசீடர் *šukkira-šīḍar,* பெ. (n.) சுக்கிராசாரியர் மாணாக்கர்களான அசுரர்கள் (வின்.); Asuras, as disciples of Sukra.

[Skt. šukra+šṣya > த. சுக்கிரசீடர்]

சுக்கிரகதசுரம் *šukkirakada-šuram,* பெ.(n.) விந்து மிகுதியாக சுரப்பதால் வரும் காய்ச்சல்; fever due to excess secretion of semen. (சா.அக.)

சுக்கிரகதவாதம் *šukkirakada-vādam,* பெ.(n.) விந்து (சுக்கிலம்) அதிகமாக சுரப்பதால் உண்டாகும் ஊதைநோய் (வாதம்); rheumatic disease caused by excess secretion of semen. (சா.அக.)

சுக்கிரத்துரிஞ்சில் *šukkiratturiñjil,* பெ.(n.) ஆவின் பால்; cow's milk. (சா.அக.)

சுக்கிரதசை *šukkira-dašai,* பெ.(n.) சுக்கிரனுக்குரிய இருபதாண்டு ஆட்சிக்காலம்; the period of 20 years in which Venus exercises its influence. 2. நல்ல காலம்; period of great prosperity. *அவனுக்கு இப்போது சுக்கிரதசை (உ.வ.)*

த.வ. வெள்ளிநோட்டம்

[Skt. šukra+dašā > த. சுக்கிரதசை]

சுக்கிரதோடம் *šukkira-tōḍam,* பெ. (n.) விந்துவின் கெடுதி (சுக்கில குற்றம்); vitiation of semen. (சா.அக.)

த.வ. வீரியக்கேடு

[Skt. šukra+dōṣā > த. சுக்கிரதோடம்]

சுக்கிரநிலம் *šukkira-nilam,* பெ.(n.) சுண்ணாம்புக்கல் நிறைந்த நிலம்; soil mixed with limestones or nodules of kunkur.

சுக்கிரப்படுவன் *šukkira-p-paḍuvaṉ,* பெ. (n.) கண்ணோய் வகை; inflammation of the membranes of the eye, Phlectinular opthalmia.

[சுக்கிரம் + படுவன்]

[Skt. šukra > த. சுக்கிரன்]

சுக்கிரம் *šukkiram,* பெ. (n.) 1. ஆடவை (ஆனி) மாதம் (வின்.); the month Āṉi, corresponding to June-July. 2. கண்ணோய் வகை; a disease of the eye.

[Skt. šukra > த. சுக்கிரம்]

சுக்கிரமூடம் *šukkira-mūḍam,* பெ. (n.) வெள்ளி பயன்தராது மறைந்திருக்குங் காலம்; the time of the year when Venus is invisible and hence considered to have lost his influence.

[Skt. šukra > த. சுக்கிரன் + மூடம்]

சுக்கிரவாரம் *šukkira-vāram,* பெ. (n.) வெள்ளிக்கிழமை; friday.

[Skt. šukra +vara> த. சுக்கிரவாரம்]

சுக்கிரன் *šukkiraṉ,* பெ.(n.) 1. வெள்ளி; Venus. 2. **சுக்கிராசாரி** பார்க்க; see *šukkirāšāri.* *"சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறிய" (திவ். பெரியாழ். 1. 8 : 7).* 3. நெருப்பு (சங்.அக.); fire. 4. கண்ணோய் வகை (வின்.); a disease of the eye, white speck in the eye.

[Skt. šukra > த. சுக்கிரன்]

சுக்கிரன்பாடு *šukkiraṉ-pāḍu,* பெ.(n.) இரவில் வெள்ளிமீன் கண்ணுக்குப் புலப்படாத காலம்; the time of the year when Šukra is invisible at nights.

த.வ. வெள்ளிமறை

[Skt. šukra > த. சுக்கிரன் + பாடு]

சுக்கிரன்போடு-தல் *šukkiraṉ-pōḍu-,* 20 செ.கு.வி. (v.i.) **சூரியன்போடு-தல்** பார்க்க; see *sūriyaṉ-pōḍu-.*

[Skt. šukra > த. சுக்கிரன் + போடு-தல்]

சுக்கிரனாளி *šukkiranāli,* பெ. (n.) முத்து (யாழ்.அக.); pearl.

[சுக்கிரன் + ஆளி] **[Skt.** *šukra > த. சுக்கிரன்]*

ஆள் > ஆளி

சுக்கிராக்கினை *šukkirā-k-kinai,* பெ. (n.) **சுக்கிரீவாக்கினை** (வின்.) பார்க்க; see *šukkirivākkinai.*

[Skt. Su-griva+ājñā > த. சுக்கிராக்கினை]

சுக்கிராசாரி *šukkirāšāri,* பெ.(n.) அசுரகுரு; Sukra, as priest of Asuras 2. ஒற்றைக்கண்ணன்; one-eyed person.

[சுக்கிரன் + ஆசாரி]

[Skt. šukra > த. சுக்கிரன்] ஆசிரியன் > ஆசாரி

சுக்கிரீவன் *šukkirivan,* பெ.(n.) வானரர் தலைவன்; the monkey-king who assisted Rāman against Rāvanan. *"நாயகன் சுக்கிரீ வனென்றுளன்" (கம்பரா. உருக்காட். 29).*

[Skt. Sugriva > த. சுக்கிரீவன்]

சுக்கிரீவாக்கினை *šukkirivākkinai,* பெ.(n.) சுக்கிரீவனது ஆணை, (மிகக் கடுமையான கட்டளை); lit., Sugriva's orders, (very strict order with extreme penalties.)

[Skt. sugriva+ājña > த. சுக்கிரீவாக்கினை]

சுக்கிரோதயம் *šukkirōdayam,* பெ.(n.) வெள்ளி முளைக்குங் காலமாகிய விடியற் காலை; the rising of Venus in early morning.

த.வ. எழுவெள்ளி

[சுக்கிரன் + உதயம்]

[Skt. šukra > த. சுக்கிரன் + உதயம்]

சுக்கில *šukkila,* பெ.(n.) ஆண்டு அறுபதனுள் மூன்றாவது; the third year of the jupiter cycle.

[Skt. šukla > த. சுக்கில]

சுக்கிலஆவிருதவாதம் *šukkila-āviruda-vādam,* பெ.(n.) விந்து மிகுதியாக ஒழுகி, ஆண் தன்மை நீங்கும் ஒரு வகை நோய்; a seminal disease. An account of its loss vitality erection of the penis is lost. (சா.அக.)

சுக்கிலகாசம் *šukkila-kāšam,* பெ.(n.) கண்ணின் கருவிழியைப் பற்றிய நோய்; a disease of the lens in the eye-opacity of crystaline lens, Cataract. (சா.அக.)

[Skt. sukla+hāca > த. சுக்கிலகாசம்]

சுக்கிலசுரோணிதம் *šukkila-šurōnidam,* பெ. (n.) 1. விந்து நீரோடு (சுக்கிலத்தோடு) கலந்து உயிர்தோன்றுவதற்குக் கரணியமான மகளிர் அரத்தம்; blood believed to be in the womb causing pregnancy when mixed with semen. 2. விந்து நாதம்; spermatozoa and ovum.

த.வ. விந்துநோனம், வீரியநோனம்

[Skt. sukla-šōnita > த. சுக்கிலசுரோணிதம்]

சுக்கிலத்தம்பம் *šukkila-t-tambam,* பெ. (n.) அறுபத்து நாலு கலைகளுள் வீரியத்தைக் கட்டும் கலை (வின்.); art of restraining the semen, one of *aru-pattunālu-kalai.*

த.வ. வீரியக்கட்டு

[Skt. šukla+ **Pkt.** *tamba > த. சுக்கிலத்தம்பம்*

சுக்கிலத்தாது *šukkila-t-tādu,* பெ.(n.) விந்து; semen - seventh constitutent of the body. (சா.அக.)

[சுக்கிலம் + தாது]

சுக்கிலத்தியானம் *šukkila-t-tiyānam,* பெ.(n.) முழு முதற் பேரறிவின் நினைவு; meditation on the Supreme Spirit, identifying oneself with it. *"சுக்கிலத் தியானமென்னுங் கணை யெறிந்துகைப்ப" (சீவக. 3081).*

[Skt. šukla+dhyāna > த. சுக்கிலத்தியானம்]

சுக்கிலநட்டம் *šukkila-nattam,* பெ.(n.) விந்து இழப்பு; loss of semen, spermatorrhoea.

த.வ. வீரிய இழப்பு

[சுக்கிலம் + நட்டம்]

சுக்கிலப்பிரமியம் *šukkila-p-piramiyam*, பெ.(n.) ஒழுக்கக் கேட்டினால் ஏற்படுகிற நோய் (சங்.அக.); a species of venereal disease.

[Skt. šukla + pramēha > த. சுக்கிலப்பிரமேகம் > சுக்கிலப்பிரமியம்]

சுக்கிலப்பெருக்கம் *šukkila-p-perukkam*, பெ.(n.) விந்து (சுக்கிலம்) மிகுதியாக சுரக்கை; excessive secretion of semen. (சா.அக.)

[Skt. šukla > த. சுக்கிலம்+பெருக்கம்]

சுக்கிலப்பெருக்கு *šukkila-p-perukku*, பெ.(n.) **சுக்கிலப்பெருக்கம்** பார்க்க; see sukkila-p-perukkam. (சா.அக.)

[சுக்கிலம் + பெருக்கு]

[Skt. šukla > சுக்கிலம்]

சுக்கிலபட்சம் *šukkila-paṭcam*, பெ. (n.) காருவாவின் (அமாவாசையின்) மறுநாளி லிருந்து முழுநிலவு வரையிலுள்ள காலம்; crescent moon.

த.வ. வளர்பிறை

[Skt. šukla+pakṣa > த. சுக்கிலபட்சம்]

சுக்கிலபுட்டா *šukkila-buṭṭā*, பெ. (n.) ஒருவகைச் சிறுமரம் (L.); kamela, Mallotus philippinensis.

சுக்கிலம் *šukkilam*, பெ.(n.) 1. வெண்மை (திவா.); whiteness, paleness. 2. விந்து (பிங்.); semen virile. 3. **சுக்கிலபட்சம்** பார்க்க; see *šukkila-paṭcam*. 4. பாலை (மூ.அ.); wedge-leaved ape-flower. 5. பழமுண்ணிப்பாலை (மலை.); silvery-leaved ape-flower.

[Skt. šukla > த. சுக்கிலம்]

சுக்கிலமண்டலம் *šukkila-manḍalam*, பெ.(n.) விழியின் மேற்றோல் (யாழ்.அக.); cornea of the eye.

[சுக்கிலம் + மண்டலம்]

[Skt. šukla > த. சுக்கிலம்]

சுக்கிலமூத்திரம் *šukkila-mūttiram*, பெ. (n.) சிறுநீரோடு விந்து (இந்திரியம்) கலந்து விழும் நோய் (வின்.); gonorrhoea.

த.வ. உச்சைவிந்து நோய்

[சுக்கிலம் + மூத்திரம்]

[Skt. šukla > த. சுக்கிலம்]

சுக்கிலயசுர்வேதம் *šukkila-yašur-vēdam*, பெ.(n.) எசுர் மறையின் (வேதத்தின்) இரு பகுதிகளுள் மந்திரங்களும் (பிராமணங்களும்) தனித்தனியாக ஆணைகளும் பிரிக்கப்பட்டுள்ளதும் யாஞ்ஞிய வல்கியரால் கண்டறியப்பட்டதுமான பகுதி; the white yajurvēda which gives the mantras and Brāhmaṇas separately and which was revealed to yājñavalkya, dist. fr. *kiruṣṇa-yacur-vēdam*.

[Skt. šukla+yajur-vēda > த. சுக்கிலயசுர்வேதம்]

சுக்கிலவர்த்தினி *šukkila-varttiṇi*, பெ. (n.) ஆயுர்வேதக்குடிப்பு மருந்து; an ayurvedic drug.

சுக்கிலவருமம் *šukkilavarumam*, பெ.(n.) வெள்விழி முழுமையும் பரவியுள்ள மெல்லிய வெண் சதை வளர்ச்சி; an eye disease of the white sclerotic coat in which soft whitish growth gradually extends over the entire length.

சுக்கிலாசயம் *šukkilāšayam*, பெ.(n.) விந்து தங்குமிடம் (வின்.); spermary.

[Skt. šukla+ā-šaya > த. சுக்கிலாசயம்]

சுக்கிலை *šukkilai*, பெ.(n.) சிவசத்தியின் நான்கு உருக்களில் ஒன்று (சைவச. பொது. 74, உரை); a form of Parā-šakti, one of four.

சிவசத்தியின் நான்கு பிரிவுகள் : இரத்தை, சுக்கிலை, அசிதை, கிருட்டிணை.

[Skt. šuklā > த. சுக்கிலை]

சுக்கூர்செய்-தல் *šukkūr-šey-*, 1 செ.குன்றாவி. (v.t.) வணக்கஞ் செலுத்துதல் (சீதக். நொ.); to render thanks.

[சுக்கூர் + செய்-தல்] *[Ar. shukr > த. சுக்கூர்]*

சுகக்காரன் *šuga-k-kāraṉ*, பெ. (n.) 1. மகிழ்ச்சியை நுகர்வோன்; pleasure -

seeker. 2. செல்வந்தனாக வளர்ந்தவன் (இ.வ.); person bred in the lap of luxury. 3. பரத்தைக் கள்ளன் (வின்.); whoremonger.

[சுகம் + காரன்]

[Skt. sukha > த. சுகம்]

காரன் – உடைமைப்பொருள் சுட்டு

சுகக்கினி *šuka-k-kiṉi,* பெ.(n.) நாக்கு; tongue. (சா.அக.)

சுகக்கேடு *šuga-k-kēḍu,* பெ.(n.) **சுகத்தாழ்வு** பார்க்க; see *šuga-t-tāḻvu.*

[சுகம் + கேடு] *[Skt. sukha > த. சுகம்]*

சுககரம் *šuga-garam,* பெ.(n.) உடல் நலத்தையும் மகிழ்வையும் கொடுப்பது (சங்.அக.); that which is conducive to health and happiness.

[Skt. sukha-kara > த. சுககரம்]

சுகங்காட்டு-தல் *šugaṅ-gāṭṭu-,* 5 செ.கு.வி.(v.i.) உடல் நலத்திற்கான குறி தோற்றுவித்தல்; to show signs or symptoms of convalescence. 2. இணங்கி மகிழ்வித்தல்; to indulge or humour one, allure, give one a taste of enjoyment.

[சுகம் + காட்டு-] *[Skt. sukha > த.சுகம்]*

சுகசங்கடம் *šuga-šaṅgaḍam,* பெ. (n.) **சுக்கிலமூத்திரம்** பார்க்க; see *šukkila-mūttiram.*

[Skt. sukha+saṅgaḍa > த. சுகசங்கடம்]

சுகசத்தி *šuga-šatti,* பெ.(n.) சுருங்கி விரியும் ஆற்றல் (சக்தி); power of contraction and expansion. (சா.அக.)

[Skt. sukha+šakti > த. சுகசத்தி]

சுகசபதம் *šugaša-padam,* பெ.(n.) இளம் பருவமுள்ள நோயற்ற பெண்; a healthy young girl. (சா.அக.)

[Skt. sukha+šapatha > த. சுகசபதம்]

சுகசரீரம் *šuga-šarīram,* பெ.(n.) 1. நோயற்ற உடல்; healthy or robust constitution. 2. மென்மையான உடல் (இ.வ.); delicate constitution.

த.வ. உடல்நலம்

[Skt. sukha+šarīra > த. சுகசரீரம்]

சுகசரீரி *šuga-šarīri,* பெ.(n.) நல்ல நிலைமையோடு கூடிய உடம்பையுடையவன்; healthy person. (சா.அக.).

த.வ. நலவன்

[Skt. sukha+šarīrin > த. சுகசரீரி]

சுகசன்னி *šuga-šaṉṉi,* பெ.(n.) பொருந்தாப் புணர்ச்சி, அகாலப் புணர்ச்சி இவற்றால் உண்டாகும் இசிவு (சன்னி) நோய் (உ.வ.); delirious fever from improper or untimely sexual intercourse.

த.வ. பொருந்தாப்புணர்ச்சிநோய்

[Skt. sukha+sannipāta > த. சுகசன்னி]

சுகசாத்தியம் *šuga-šāttiyam,* பெ.(n.) எளிதில் தீரக் கூடியது; easily curable. (சா.அக.)

[Skt. sukha+šādhya > த. சுகசாத்தியம்]

சுகசிம்பி *šugašimbi,* பெ.(n.) பூனைக்காலி (மலை.); cowhage.

[Skt. sūkašimbi > த. சுகசிம்பி]

சுகசீவனம் *šuga-šīvaṉam,* பெ.(n.) 1. நல வாழ்வு; happy, comfortable life. 2. சோம்பல் வாழ்வு (உ.வ.); an idler's life.

[Skt. sukha+jīvana > த. சுகசீவனம்]

சுகசீவி *šuga-šīvi,* பெ.(n.) நலமுடன் வாழ்பவன் (வின்.); happy or helathy person.

த.வ. நலவாழ்வன்

[Skt. sukha+jīvin > த. சுகசீவி]

சுகசெல்வம் *šuga-šelvam,* பெ.(n.) நல்ல நுகர்பொருள்கள்; health and prosperity; pleasures and luxuries.

[சுகம் + செல்வம்] *[Skt. sukha > த. சுகம்]*

சுகஞ்சுகம் *šugañ-jugam,* பெ.(n.) குழந்தையைக் குளிப்பாட்டியப்பின் தாய்

முதலியோர் வாழ்த்துஞ்சொல் (வின்.); a benediction meaning 'health! health!' uttered by a woman towards the close of bathing her child.

த.வ. நலம்நலம்

[சுகம் + சுகம்]

சுகண்டகெந்தி *šukanda-kendi,* பெ.(n.) கோழித்தலைக் கெந்தகம்; red sulphur of brick dust colour used formerly by Tamil alchemists. (சா.அக.)

சுகத்தலிகிதம் *šugattaligidam,* பெ. (n.) தன் கையால் எழுதியது; one's own handwriting - used generally in documents to indicate that the body was written by executant himself that the body was written by the executant himself.

[Skt. sva+hasta-likhita > த. சுகத்தலிகிதம்]

சுகத்தானம் *šuga-t-tānam,* பெ. (n.) பிறப்போரையிலிருந்து நான்காவதாய் அமையும் இடம்; fourth house from the ascendent, as the house of happiness.

[Skt. sukha+sthāna > த. சுகத்தானம்]

சுகத்திகாசனம் *šugattikāšanam,* பெ.(n.) தொடைக்கும் முழங்காலுக்கும் நடுவே இரண்டுள்ளங்கால்களையும் செலுத்தி அமரும் ஒருவகை ஓக நிலை; a posture in yoga practice. (சா.அக.).

த.வ. கட்டிக்கால் இருக்கை

சுகத்தாழ்வு *šuga-t-tālvu,* பெ.(n.) உடல்நலக் குறைவு (இ.வ.); failure or want of health, illness.

த.வ. நலக்குறைவு

[சுகம் + தாழ்வு] *[Skt. šukha > சுகம்]*

சுகத்திரம் *šuga-t-tiram,* பெ.(n.) வாகை (மலை.); siris.

[Skt. šuka+druma > த. சுகத்திரம்]

சுகத்துவம் *šugattuvam,* பெ.(n.) உடம்பிலுள்ள நோயைத் தானாகவே நீங்கச் செய்யும் இயல்பு; nature cure affected through health guarding force - viz Medicatrix nature. (சா.அக.)

த.வ. இயல்நலம்

சுகதநூல் *šugada-nūl,* பெ. (n.) புத்த நூல்; Buddhist scripture. *தொட்ட நாற் பத்துமூன்றுஞ் சுகத நூற் றுணிவுதானே (மணிமே. பக். 382, அரும்.).*

[சுகதம் + நூல்] *[Skt. sugata > த. சுகதம்]*

சுகதபேதம் *šugada-bēdam,* பெ. (n.) உறுப்பிக்கும் உறுப்புக்குமுள்ள வேறுபாடு; difference between an object as a whole and its parts, one of three *pēdam.*

[Skt. sva-gata+bhēda > த. சுகதபேதம்]

சுகதம்[1] *šugadam,* பெ.(n.) **சுகதபேதம்** பார்க்க; see *šugada-bēdam.* *"ஒரு பிரமந்தனக்குத் தெரிந்த சுகதமுதலாயின மூன்றுமிலையே" (வேதா. சூ. 27).*

[Skt. sva-gata > த. சுகதம்]

சுகதம்[2] *šugadam,* பெ. (n.) சொந்தம் (யாழ்.அக.); one's own.

[Skt. sva-gata > த. சுகதம்]

சுகதன் *šugadan,* பெ. (n.) 1. புத்தன்; Buddhan. *"சுகதற் கியற்றிய .... சயித்தம்" (மணிமே. 28: 130).* 2. அருகன்; Arhat. *"சுகதா வுரையாயே" (சீவக. 3096).*

[Skt. sugata > த. சுகதன்]

சுகதாதை *šuga-tādai,* பெ. (n.) சுகமுனிவர்க்குத் தந்தையான வியாசர்; *Vyāsar,* the father of Šukan.

[Skt. šuka+tāta > த. சுகதாதை]

சுகதுக்கி *šugadukki,* பெ.(n.) பிறப்பில் அழுந்தியிருக்கும் ஆதன்; the soul subjected to births and deaths. (சா.அக.)

சுகதுண்டம் *šuga-tundam,* பெ.(n.) சுட்டு விரலும் பெருவிரலும் உகிர்நுனி கௌவும்படி ஒட்டி முன்வளைந்தும் ஆழிவிரல் முடங்கியும்

நடுவிரலுஞ் சிறு விரலும் நிமிர்ந்தும் உள்ள இணையாவினைக்கை வகை (சிலப். 3, 18, உரை); a gesture with one hand in which the fore finger and the thumb are joined at the tips and bent forward while the ring finger is turned inward and the other two fingers are held upright, as resembling a parrot's beak, one of 33 *iṇaiyā-viṉai-k-kai.*

[சுகம்+துண்டம்]

*[**Skt.** šuka-tuṇḍa > த. சுகம்]*



சுகந்தபரிமளம் *šuganda-parimaḷam,* பெ.(n.) **சுகந்தம்**^{2} **1,2** பார்க்க (இ.வ.); see *sugandam*^{2}*, 1,2.*

[Skt. su-gandha+pari-mala > த. சுகந்த பரிமளம்]

சுகந்தம்^{1} *šugandam,* பெ.(n.) ஈரவெங்காயம்; onion. 2. பூவாழை; guindy plantain.

*[**Skt.** su-kanda > த. சுகந்தம்]*

சுகந்தம்^{2} *šugandam,* பெ.(n.) 1. நறுமணம்; fragrance. 2. நறுமணப் பொருள்; perfumes, aromatics. 3. கொடிச்சம்பங்கி; cowslip creeper, l. cl., pergularia minor (M.M.)

*[**Skt.** su-gandha > த. சுகந்தம்]*

சுகந்தமா *šuganda-mā,* பெ.(n.) கருப்பூர மரம் (மலை.); japan camphor tree.

*[**Skt.** su-kanda > த. சுகந்தமா]*

சுகந்தமூலி *šuganda-mūli,* பெ.(n.) வெட்டி வேர் (மலை.); cuscus grass, anatherum muricatum.

*[**Skt.** su-gandha+ > த. சுகந்தமூலி]*

சுகந்தவர்க்கம் *šuganda-varkkam,* பெ. (n.) நறுமணப் பண்டம்; perfumes, spices. *"சுகந்த வர்க்கங்களாகிய சுத்தமான வெள்ளைப் போளத்தில்" (பைபிள், யாத்திரா. 30:23).*

*[**Skt.** su-gandha-varga > த. சுகந்தவர்க்கம்]*

சுகந்தவர்க்கமிடல் *šuganda-varkkam-iḍal,* பெ.(n.) இறந்த உடலை மணப்பொருள்களால் சேமஞ்செய்கை (பைபிள். அக.); embalming.

த.வ நறுமணஏமம்

*[**Skt.** su-gandha+varga > த. சுகந்தவர்க்கம் + இடல்]*

சுகந்தவாழை *šuganda-vāḻai,* பெ. (n.) பூவாழை; a variety of plantain.

[சுகந்தம் + வாழை]

*[**Skt.** su-gandha > த. சுகந்தம்]*

சுகந்தி *šugandi,* பெ. (n.) செவ்வந்திக்கல்; amethyst. *"பன்னிரண்டாவது சுகந்தி" (பைபிள். வெளி. 21:21).*

*[**Skt.** su-kānti > த. சுகந்தி]*

சுகந்திக்கல் *šugandi-k-kal,* பெ.(n.) **சுகந்தி** பார்க்க; see *sugandi*(சா.அக.).

[சுகந்தி + கல்] *[**Skt.** šu-kānti > த. சுகந்தி]*

சுகந்திகம் *šugandigam,* பெ.(n.) 1. நெல் வகை (சங்.அக.); a kind of paddy. 2. வெண்டாமரை (யாழ்.அக.); white lotus.

*[**Skt.** su-gandhaka > த. சுகந்திகம்]*

சுகந்திரம் *šugandiram,* பெ. (n.) **சுதந்தரம்** பார்க்க; see *šudandaram.*

*[**Skt.** svatantra > த. சுகந்திரம்]*

சுகநீர்த்தம்பனம் *šuganirttambanam,* பெ. (n.) விந்து நீர் வெளிவராதபடி தங்குதல்; suppression of the discharge of semen-Spermatochesis. (சா.அக.)

த.வ. விந்துக்கட்டு

சுகப்படு-தல் *šuga-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. நோயின்றியிருத்தல்; to be free from disease. *அவன் உடம்பு சுகப்பட்டிருக்கிறது* 2. நலமுடன் இருத்தல்; to be comfortable. 3. மனமிணங்குதல்; to be cordial. *அவனுக்கும் எனக்கும் சுகப்படவில்லை (உ.வ.)*

த.வ. நலமாதல் *[சுகம் + படு-தல்]*

சுகப்பிரசவம் *šuga-p-pirašavam,* பெ.(n.) வருத்தமில்லா பிள்ளைப்பேறு; easy and safe accouchement, safe child birth after the full period of gestation.

த.வ. நலப்பேறு

[Skt. sukha+pra-sava > த. சுகப்பிரசவம்]

சுகப்பிழை *šuga-p-piḻai,* பெ.(n.) உடல்நலக் குறைவு; failure of health.

[சுகம் +பிழை] *[Skt. sukha+ > த. சுகம்]*

சுகப்பேறு *šuga-p-pēṟu,* பெ.(n.) **சுகப்பிரசவம்** பார்க்க; see *šuga-p-pirašavam.*

[Skt. sukha > த. சுகம் + பேறு]

சுகபலம் *šuga-balam,* பெ. (n.) எருக்கு (மூ.அ.); madar plant.

[Skt. suka-phala > த. சுகபலம்]

சுகபலை *šuga-palai,* பெ.(n.) *சுகபலம்* (தைலவ. தைல. 12) பார்க்க; see *suga-balam.*

சுகபேதி *šuga-bēdi,* பெ.(n.) வயிற்றுவலி முதலியனவின்றி மருந்தால் மலம் கழிகை (உ.வ.); easy loose motion caused by purgative.

[Skt. sukhabhēdin > த. சுகபேதி]

சுகபேதிக்குளிகை *šugapēdi-k-kuḷigai,* பெ. (n.) தூய்மை செய்த வாளத்துடன் ரோசாப்பூ, உலர்ந்த நெல்லிக்காய் சம எடை சேர்த்துப் பழச்சாறு விட்டு 3 நாள் அரைத்துக் கடலையளவில் செய்த மாத்திரை; a purgative pill containing purified croton seed petals and emblic myroblan when given with cumin decoction acts as a good purgative.

த.வ. நன்கழிச்சல் குளிகை

[சுகபேதி + குளிகை]

[Skt. sukha+bhēdin> த. சுகபேதி]

சுகபோகம் *šuga-bōgam,* பெ.(n.) இன்ப நுகர்வு (அனுபவம்) (உ.வ.); sexsual or luxurious enjoyment.

[Skt. sukha+bhōga > த. சுகபோகம்]

சுகபோகி *šuga-pōgi,* பெ.(n.) சிற்றின்பத்தை நாடுவோன்; a man devoted to sexual enjoyment - *An epicure.*

[Skt. sukha + bhōgin> த. சுகபோகி]

சுகபோசனம் *šuga-bōšaṉam,* பெ.(n.) சத்தான உணவு; rich, wholesome, food.

த.வ. நல்லுணவு

[Skt. sukha+bhōjana > த. சுகபோசனம்]

சுகபோசினி *šuga-pōšiṉi,* பெ.(n.) நல்ல சுவையுள்ள உணவை நாடுபவன்; one who indulges in the luxuries of the table. (சா.அக.)

த.வ. ஊண்விரும்பி

சுகபோசனம் > சுகபோசினி

சுகம்[1] *šugam,* பெ.(n.) 1. மகிழ்ச்சி (பிங்.); happiness, pleasure, enjoyment. *"அமூர்த்த சுகம்போ லனித்தமோ வெனல்" (மணிமே. 29:266).* 2. நன்மை தருவது (அக.நி.); that which is good, wholesome, beneficial. *"தூதென் றெண்ணாமற் சுகமென்று நாடும்" (பட்டினத். திருப்பா. திருவேகம்பமா. 12).*

3. உடல்நலம்; health, welfare. *நீ சுகமா.* 4. நலவாழ்வு; ease, comfort. *அவனுடைய சுகம் யார்க்கு உண்டு?.* 5. இணக்கம்; cordiality. *அவனுக்கும் எனக்கும் அவ்வளவு சுகமில்லை.* 6. **சுகாசனம்** பார்க்க; see *šugāšaṉam.* *"சுகமாவது.......... எவ்வாறிருக் கிலுண்தடவ்வாறிருத்தல்" (பிரபோத. 44:10).*

[Skt. sukha > த. சுகம்]

சுகம்² *šugam,* பெ.(n.) கிளி; parrot. *"வேடனோர் சுகத்தை யெய்து" (திருவாலவா. 33:18).*

[Skt. šuka > த. சுகம்]

சுகம்³ *šugam,* பெ.(n.) முலைக்கண் (அக.நி.); nipple.

[Skt. cūcuka > த. சுகம்]

சுகமரணம் *šuga-maraṇam,* பெ.(n.) துன்பமில்லா சாவு; an easy or painless death - *Euthanasia.* (சா.அக.)

[சுகம்+ மரணம்] *[Skt. sukha > த. சுகம்]*

சுகர்மம் *šugarmam,* பெ.(n.) 1. நற்செயல்; good deed. 2. நல்வினை (ஓகம்) இருபத்தேழனுள் ஒன்று (சோதிட. சிந்.); a division of time one of 27 *yōgam.*

[Skt. su-karman > த. சுகர்மம்]

சுகரகசியம் *šugaragašiyam,* பெ. (n.) நூற்றெட்டு மறையின் அறிவுப் பகுதிகளுள் (உபநிடதங்களுள்) ஒன்று; an Upaniṣad, one of 108.

[Skt. Suka-rahasya > த. சுகரகசியம்]

சுகரம் *šugaram,* பெ. (n.) எளிதிற் செய்யத்தக்கது (இலக்.அக.); that which is easy to do.

[Skt. su-kara > த. சுகரம்]

சுகரோகம் *šuga-rōgam,* பெ.(n.) **சுகசங்கடம்** (இ.வ.) பார்க்க; see *šuga-šaṅgaḍam.*

[Skt. sukha+rōga > த. சுகரோகம்]

சுகவல்லபம் *šuga-vallabam,* பெ. (n.) மாதுளைமரம் (யாழ்.அக.); pomegranate tree.

[Skt. šuka-vallabha > த. சுகவல்லபம்]

சுகவழி *šuga-vaḻi,* பெ.(n.) துப்புரவு, நலவாழ்வு பற்றிய நூல்; hygiene.

[சுகம் + வழி]

சுகவாகன் *šuga-vāgaṉ,* பெ.(n.) கிளியை ஊர்தியா(வாகனமா)கவுடையமன்மதன் (யாழ்.அக.); cupid, as having parrot as his vehicle.

[Skt. šuka-vāha > த. சுகவாகன்]

சுகவாசசீவனம் *šuga-vāša-šivaṉam,* பெ.(n.) மூதாதையர் சொத்தால் வாழும் நல்வாழ்க்கை (இ.வ.); comfortable livelihood, life of ease and comfort - used in documents in reference to a person having no profession.

த.வ. முதுசொத்துஏமவாழ்வு

[Skt. sukha+vāsa+jīvana > த. சுகவாசசீவனம்]

சுகவாசத்தலம் *šuga-vāsa-t-talam,* பெ.(n.) நல்வாழ்வின் பொருட்டுச் சென்று வாழும் இடம்; sanatorium.

த.வ. நலவாழிடம்

[Skt. šukha+vāsa > த. சுகவாசம் + தலம்]

சுகவாசி *šuga-vāši,* பெ.(n.) 1. எந்த வேலையுமின்றி நலமாக வாழ்பவன்; one who lives in comfort without any particular employment. 2. நிலைத்த குடியானவன் (இ.வ.); permanent tenant or cultivator.

த.வ. நலவாழி

[Skt. sukha+vāsin > த. சுகவாசி]

சுகவாசிக்குடி *šuga-vāši-k-kuḍi,* பெ.(n.) **சுகவாசி, 2** (இ.வ.) பார்க்க; see *šuga-vāši, 2.*

[சுகவாசி + குடி.]

சுகவாசித்தீர்வை *šuga-vāši-t-tirvai,* பெ. (n.) குடிகள் நிலவுடைமையாளருக்குக் கொடுக்கும் குத்தகை;(W.G.492) rent payable to landlord.

[சுகவாசி + தீர்வை]

சுகவாசிவாரம் *šuga-vāši-vāram,* பெ.(n.) குடிவாரம்; குடியானவன் பங்குக்குரிய விளைபொருள்; (W.G.492) share of produce accruing to the cultivator of the soil (W.G.492).

[சுகவாசி + வாரம்] வாரம் = விளைச்சல் பங்கு

[Skt. sukha+vāsin > த. சுகவாசி]

சுகவாரி *šuga-vāri,* பெ.(n.) இன்பக்கடல்; ocean of bliss. *"சோதியே சுகவாரியே" (தாயு. சுகவாரி.).*

[Skt. sukha+vāri > த. சுகவாரி]

சுகவாழ்வு *šuga-vā|vu,* பெ.(n.) மகிழ்ச்சியான வாழ்க்கை (கொ.வ.); happy life.

த.வ. நல்வாழ்வு

[சுகம் + வாழ்வு] *[Skt. sukha > த. சுகம்]*

சுகவிருத்தி *šuga-virutti,* பெ.(n.) 1. நலம்; welfare. 2. நற்செய்தி (வின்.); information regarding one's welfare. 3. துப்புரவு (கால். வி. 219); sanitation.

[Skt. sukha+vṛtti > த. சுகவிருத்தி]

சுகவீனம் *šuga-v-īnam,* பெ.(n.) 1. உடல்நலக் குறைவு; illness, ill-health. 2. நலமின்மை, தொல்லை (வின்.); trouble, inconvenience.

த.வ. நலக்குறைவு

[Skt. sukha+hina > த. சுகவீனம்]

சுகன் *šugan,* பெ. (n.) வியாசமுனிவரின் மகன் (பாகவத.); *Vyāsa's* son.

[Skt. Šuka > த. சுகன்]

சுகாசனம் *šugāšanam,* பெ.(n.) ஒக இருக்கை வகை ஒன்பதனுள் ஒகி தன் விருப்பம் போல் அமைத்துக் கொள்ளும் இருக்கை; a yōgic posture characterised by ease and comfort, one of nine *āšanam,* q.v.

[Skt. sukha+āsana > த. சுகாசனம்]

சுகாசீனர் *šugāšinar,* பெ.(n.) தவநிலையிலுள்ள சிவவடிவ; Šivan in the yōgic posture of šugāšanam.

[Skt. sukha+āsina > த. சுகாசீனர்]

சுகாசுகம் *šugāšugam,* பெ.(n.) இன்ப துன்பம்; joy and sorrow.

[Skt. sukha+a-sukha > த. சுகாசுகம்]

சுகாட்டம் *šugāṭṭam,* பெ.(n.) 1. நாணல்; kaus, a large and coarse grass. 2. முடக்கொற்றான்; balloon vine.

சுகாதனம் *šugādanam,* பெ.(n.) **சுகாசனம்** (பிங்.) பார்க்க; see *šugāšanam.*

[சுகாசனம் > சுகாதனம்]

சுகாதாரம் *šugādāram,* பெ.(n.) **சுகவழி** பார்க்க; see *suga-vali.*

[Skt. sukha+ādhāra > த. சுகாதாரம்]

சுகாதிசயம் *šugādišayam,* பெ.(n.) 1. நலம்; welfare. 2.பேரின்பம்; Supreme bliss.

[Skt. sukha+atišaya > த. சுகாதிசயம்]

சுகாந்தம் *šugāndam,* பெ. (n.) ஈரவெங்காயம் (யாழ்.அக.); onion.

[Skt. su-kanda > த. சுகாந்தம்]

சுகாந்திக்கல் *šugāndi-k-kal,* பெ. (n.) **சுகந்தி** பார்க்க; see *šugandi.*

[Skt. su-kānti > த. சுகாந்தி]

சுகானுபவம் *šugāṉubavam,* பெ.(n.) **சுகபோகம்** (யாழ்.அக.) பார்க்க; see *suga-bōgam.*

[Skt. sukha+anu-bhava > த. சுகானுபவம்]

சுகி[1]-த்தல் *šugi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மகிழ்ச்சியாக இருத்தல்; to live happily. *"துணைக்கவரி பரிமாறச் சுகிப்பம்" (ஞானவா. லீலை. 22).* 2. சிற்றின்பந் துய்த்தல்; to indulge in sexual pleasure. *"பூமுடித்துத் தினஞ் சுகித்தால்" (செந். XXV, 390).*

த.வ. நலம் நுகர்தல்

[Skt. sukha > த. சுகம் > சுகி-த்தல்]

சுகி[2] *šugi,* பெ.(n.) 1. உடல்நலமுள்ளவன்; healthy person. 2. செல்வன் (வின்.); prosperous, wealthy person.

த.வ. நல்லி

[Skt. sukhin > த. சுகி]

சுகிதம்[1] *šugidam,* பெ.(n.) நல்வினை; result of past good deeds. *"தேவாதி தேவர்கள் சகிதமாகிய சுகிதமா மலையே" (சர்வ சமய. பக். 36).*

[Skt. sukṛta > த. சுகிதம்]

சுகிதம்[2] *šugidam,* பெ.(n.) பால் (மூ.அ.); milk.

[Skt. sugdha > த. சுகிதம்]

சுகிப்பு *šugippu,* பெ.(n.) 1. இன்பநிகழ்வு; enjoyment of pleasures. *"பிலுக்குஞ் சுகிப்பும்" (பணிவிடு. 165).* 2. மனநிறைவு (சம்பிரமம்) (இ.வ.); sumptuousness, luxury.

[சுகி > சுகிப்பு]

சுகிர்-தல் *šugir-,* 2 செ.குன்றாவி. (v.t.) 1. பஞ்செஃகுதல்; to card, as cotton. *'சுகிர்ந்த பஞ்சு போன்ற' (புறநா. 125, உரை).* 2. மயிர் முதலியன வகிர்தல்; to part, separate, as hair, fibres. 3. கிழித்தல்; to tear, split. *"பல்லினாற் சுகிர்ந்த நாரின்" (சீவக. 438).* 4. வடித்தல்; to rub clean and smooth, as a lutestring. *"சுகிர்புரி நரம்பின்" (மலைபடு. 23).*

[Skt. sukṛ > த. சுகிர்]

சுகிர்த்து *šugirttu,* பெ.(n.) **சுகிர்தன்[1]** பார்க்க; see *šugirdaṉ[1].*

[Skt. su-hṛt > த. சுகிர்த்து]

சுகிர்தசாலி *šugirta-šāli,* பெ. (n.) செல்வத்திருமகன்; fortunate man.

[Skt. sukṛta-šālin > த. சுகிர்தசாலி]

சுகிர்தபலன் *šugirda-palaṉ,* பெ.(n.) நல்வினைப் பயன்; merit accruing from good deeds in previous births.

[Skt. sukṛta+phala > த. சுகிர்தபலன்]

சுகிர்தபுண்ணியம் *šugirta-puṉṉiyam,* பெ. (n.) **சுகிர்தபலன்** பார்க்க; see *šugirda-palaṉ.*

சுகிர்தம்[1] *šugirdam,* பெ.(n.) 1. நற்செயல் (பிங்.); virtuous, meritorious deeds, as religious austerities. 2. நன்மை; goodness. 3. மகிழ்ச்சி; deliciousness, delightfulness. *'சுகிர்த போசனம்' (வின்.).*

[Skt. su-kṛta > த. சுகிர்தம்]

சுகிர்தம்[2] *šugirdam,* பெ.(n.) நெய் (வின்.); ghee.

[Skt. su-ghṛta > த. சுகிர்தம்]

சுகிர்தவசனம் *šugirda-vašaṉam,* பெ.(n.) நற்சொல்; good, auspicious words.

[Skt. suhṛt+vacaṉam > த. சுகிர்தவசனம்]

சுகிர்தன்¹ *šugirdaṉ,* பெ.(n.) நண்பன்; friend, well-wisher.

[Skt. su-hṛt > த. சுகிர்தன்]

சுகிர்தன்² *šugirdaṉ,* பெ.(n.) நல்வினைப் பயனுடையவன்; virtuous person, one enjoying the fruits of his virtuous deeds in former births.

[Skt. su-kṛta > த. சுகிர்தன்]

சுகிர்ல்லாபம் *šugir-l-lābam,* பெ.(n.) நண்பரைப் பெறுதலைப் பற்றிக் கூறும் (பஞ்ச) தந்திரப்பகுதி; a chapter in *pañja-tantiram* dealing with the acquisition of friends.

[Skt. suhṛt+lābha > த. சுகிர்ல்லாபம்]

சுகுச்சை *šuguccai,* பெ.(n.) அறுவகைத் துவர்ப்புகளுள் ஒன்று (சீவக. 3076, உரை); aversion, disgust, one of six tuvarppu.

[Skt. jugupsā > த. சுகுச்சை]

சுகுணம் *šu-guṇam,* பெ.(n.) நற்குணம்; good nature, noble character.

[Skt. su-guṇa > த. சுகுணம்]

சுகுமாரதை *šugumāratai,* பெ.(n.) வல்லொற்று நீங்கிய சொற்களால் ஆக்கப்பட்டு மென்மை நிரம்பிய செய்யுட்குணம்; smoothness of expression attained by the use of soft consonants. *"மென்மை யொன்றின்.... சுகுமாரதையென்று நேர்ந்துரையே" (வீரசோ. அலங். 8).*

[Skt. sukumāratā > த. சுகுமாரதை]

சுகுமாரம்¹ *šugumāram,* பெ.(n.) 1. மென்மை (திவா.); softness, smoothness, tenderness. 2. **சுகுமாரநெய்** பார்க்க; see *šugumāra-ney.*

[Skt. su-kumāra > த. சுகுமாரம்]

சுகுமாரம்² *šugumāram,* பெ.(n.) 1. தவசவகை; a kind of grain. 2. கரும்பு வகை; a kind of sugar-cane.

[Skt. sukumāra > த. சுகுமாரம்]

சுகுமாரன் *šugumāraṉ,* பெ.(n.) மெல்லிய உடலமைப்புள்ளவன்; person of delicate constitution. *"சுகுமாரரான நீர் இங்ஙனே செய்யலாமோ" (குருபரம். 512).*

த.வ. எழிலன்

[Skt. su-kumāra > த. சுகுமாரன்]

சுகோடம் *šugōḍam,* பெ.(n.) பாண்டவர்களில் ஒருவனான நகுலனின் கைச்சங்கு; the conch of Nakulaṉ. *"நகுலன் .... மருவுறு சுகோடம்" (பகவற். 1: 11).*

[Skt. su-ghōṣa > த. சுகோடம்]

சுகோதயள் *šugōdayaḷ,* பெ. (n.) மகிழ்ச்சிக்கு இருப்பிடமானவள்; fountain of happiness. *"வம்பாரத்தனத்தி சுகோதயள்"* (திருமந். 1052).

[Skt. sukhōdaya > த. சுகோதயள்]

சுகோதரம் *šugōdaram,* பெ.(n.) தாளிசபத்திரி (சங்.அக.); East Indian plum.

[Skt. šukōdara > த. சுகோதரம்]

சுகோற்சவன் *šugōṟšavaṉ,* பெ.(n.) கணவன் (யாழ்.அக.); husband.

[Skt. sukhōtsava > த. சுகோற்சவன்]

சுகோட்ணம் *šugōṭṇam,* பெ.(n.) இதமான சூடு; moderate, agreeable warmth, as of water.

[Skt. sukhōṣṇa > த. சுகோட்ணம்]

சுங்கக்காரன் *šuṅga-k-kāraṉ,* பெ.(n.) வரி வாங்குவோன் (இ.வ.); custom-house officer.

[சுங்கம் + காரன்]

சுங்கச்சாவடி *šuṅga-c-cāvaḍi*, பெ. (n.) ஆயத் துறை; custom-house, toll-gate.

[சுங்கம் + சாவடி]

சுங்கம் *šuṅgam*, பெ. (n.) ஆயம்; duty on goods, customs, tolls. *'சுங்கம் கலத்தினுங் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயது' குறள், 756, உரை).*

*[Skt. šulka > **Pkt.** šuṅka > த. சுங்கம்]*

சுங்கவரி *šuṅgavari*, பெ.(n.) ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது அரசு வாங்கும் வரி; customs duty.

[சுங்கம் + வரி]

சுங்கவிறை *šuṅga-v-iṟai*, பெ. (n.) **சுங்கம்** (திவா.) பார்க்க; see *šuṅgam*[1], *1.*

[சுங்கம் + இறை]

சுங்கன் *šuṅgaṉ*, பெ.(n.) வெள்ளி மீன் (சுக்கிரன்) (திவா.); Venus.

[Skt. šukra > த. சுங்கன்]

சுங்கான் *šuṅgāṉ*, பெ.(n.) **சுக்கான்** (இ.வ.) பார்க்க; see *šukkāṉ*.

[U. sukkān > த. சுக்கான்]

சுசனம்[1] *šušaṉam*, பெ.(n.) நன் மக்கள்; good, respectable people.

[Skt. su-jana > த. சுசனம்]

சுசனம்[2] *šušaṉam*, பெ.(n.)சொந்த மக்கள்; one's own people.

[Skt. sva-jana > த. சுசனம்]

சுசனம்[3] *šušaṉam*, பெ.(n.) காற்று (சது.); wind, air.

[Skt. švasana > த. சுசனம்]

சுசாதி *šušādi*, பெ.(n.) சொந்த குலத்தார்; one's own caste.

[Skt. sva-jāti > த. சுசாதி]

சுசாதிபலம் *šušādi-balam*, பெ.(n.) சாதிக்காய்; nutmeg. *"சாதி திரிபலை சுசாதி பலம்" (தைலவ. தைல. 34).*

[Skt. sujāti+phala > த. சுசாதிபலம்]

சுசாதிபேதம் *šušādi-bēdam*, பெ.(n.) ஒரே குலத்திற் பல இனங்களுக்குள் ஒன்றோ டொன்றற்குள்ள வேறுபாடு (வேதா. சூ. 25, உரை); difference among species of the same genus, one of three pēdam.

[Skt. sva+jāti+bhēda > த. சுசாதிபேதம்]

சுசி[1] *šuši*, பெ.(n.) 1. தூய்மை; cleanliness, purity, ceremonial, purification. *"சுசியா ரமுதி னறுசுவை கூட்டி" (திருவிளை. பயகரமாலை. 6).* 2. வெண்மை (உரி.நி.); whiteness. 3. பாதரசம் (தைலவ. தைல. 69); quicksilver. 4. திங்கள் (இலக். அக.); moon. 5. நெருப்பு; fire. *"சுடர்ச் சுசியன்ன தூயோன்" (சேதுபு. சீதைகு. 31).* 6. முதுவேனிற் காலமாகிய ஆடவை (ஆனி), கடக (ஆடி) மாதங்கள் (பிங்.); hot season, the months of Āṉi and Āḍi. 7. கொடிவேலி (தைலவ. தைல. 73); Ceylon leadwort.

[Skt. šuci > த. சுசி]

சுசி[2] *šuši*, பெ.(n.) முலை (யாழ்.அக.); breast, udder.

[Skt. cuci > த. சுசி]

சுசிகம் *šušigam*, பெ.(n.) புளியாரை (பூடுவகை) (மலை.); yellow wood-sorrel.

[Skt. cukraka > த. சுசிகம்]

சுசிகரம் *šuši-karam,* பெ.(n.) 1. தூய்மை; cleanliness, tidiness in habits, purity. 2. மேன்மை (யாழ்.அக.); excellence.

[Skt. šuci-kara > த. சுசிகரம்]

சுசித்துருமம் *šušitturumam,* பெ.(n.) அரச மரம் (மூ.அ.); pipal.

[Skt. šuci-druma > த. சுசித்துருமம்]

சுசிதம் *šusidam,* பெ. (n.) மிக்க வெண்மையான பால் (மூ.அ.); milk, as pure white.

[Skt. su-sita > த. சுசிதம்]

சுசிமாசை *šušimāšai,* பெ.(n.) தூய்மையான பொன்; refined gold. (சா.அக.)

சுசிமிதம் *šušimidam,* பெ.(n.) புன்னகை (யாழ்.அக.); smile.

[Skt. su-smita > த. சுசிமிதம்]

சுசிரம் *šuširam,* பெ.(n.) உட்டுளை (பிங்.); tubularity, hollowness.

[Skt. suṣira > த. சுசிரம்]

சுசீலம் *šu-šīlam,* பெ.(n.) இனிய பண்பு; noble character, good nature.

[Skt. su-šīla > த. சுசீலம்]

சுசீலன் *šu-šīlaṉ,* பெ.(n.) நல்லொழுக்கமுள்ளவன்; man of noble character, virtuous man.

[சுசீலம் > சுசீலன்]

சுசீலை *šu-šīlai,* பெ.(n.) 1. நல்லொழுக்கமுடையவள்; virtuous woman. 2. புகைநிறத்து மாடு; grey or smoke-coloured cow. *"தூம நந்து நிறச் சுசீலை" (தணிகைப்பு. அகத்திய. 486).*

[சுசீலை > சுசீலன்]

சுசுகம் *šušugam,* பெ. (n.) முலைக்கண் (யாழ்.அக.); nipple of the breast.

[Skt. cūcuka > த. சுசுகம்]

சுசுந்தரி *šušundari,* பெ.(n.) மூஞ்சூறு (திவா.); muskshrew, *Sorex indicus.*

[Skt. cucundari > த. சுசுந்தரி]

சுசுருதசம்மிதை *šušuruda-šammidai,* பெ. (n.) சரகர் செய்த ஆயுள் வேத நூலுக்கு அடுத்தபடியானதாகச் சொல்லப்படும் சுசுருதன் இயற்றிய சிறந்த ஆயுள்வேத நூல்; a great work in ayurveda compiled by susruta, It is considered as next in importance to the celebrated work of Charaka. (சா.அக.)

சுசுரூட்சை *šušurūtcai,* பெ. (n.) பணிவிடை; serving tending, nursing.

[Skt. šušrūṣā > த. சுசுரூட்சை]

சுசுலம் *šušulam,* பெ.(n.) சிறுபண்டம்; a trifle.

[Skt. culuka > த. சுசுலம்]

சுசுரூசை *šušurūṣai,* பெ.(n.) சுசுரூட்சை பார்க்க; see *šusurū.*

[Skt. šusurū > த. சுசுரூசை]

சுஞ்ஞானம் *šuññāṉam,* பெ. (n.) தூய இறையறிவு (வின்.); knowledge of holy law, of theology.

[Skt. su-jñāna > த. சுஞ்ஞானம்]

சுட்ககருப்பம் *šuṭkakaruppam,* பெ. (n.) கருப்பம் சுழித்துக் கொண்டு வயிறு பூரிக்காமற் செய்வது; non-development of pregnancy. (சா.அக.)

[சுட்கம் + கருப்பம்]

சுட்கசிலேட்டுமம் *šuṭka-šilēṭṭumam,* பெ.(n.) உடல் (சர்வாங்கச்) சும்பல், நீர்க்கோவை தொல்லை (கபாதிக்கம்); இருமல், மூச்சு விட முடியாமை, வயிறு உப்பல், மலக்கட்டு ஆகிய குணங்களோடு கூடிய கோழை (சிலேட்டுமம்) நோய் வகை.; a disease caused by exessive phlegm humour. (சா.அக.).

[சுட்கம் + சிலேட்டுமம்]

சுட்கதர்க்கம் *sutka-darkkam,* பெ.(n.) வீண் பேச்சு; dry, barren discussion.

[சுட்கம்+தர்க்கம்]

[Skt. šuṣka > த. சுட்கம்]

[த. தருக்கம் >Skt. tarkka]

சுட்கநோய் *šuṭka-nōy,* பெ.(n.) உடம்பை உலர்த்தும் நோய்; any wasting disease. 2. உடம்பை இளைக்கச் செய்யும் காச நோய்; consumption tending to a gradual loss or diminution of bulk in the system. (சா.அக.)

[சுட்கம்+நோய்]

[Skt. šuṣka+ > த. சுட்கம்]

சுட்கரோகம் *šuṭka-rōkam,* பெ.(n.) **சுட்கநோய்** பார்க்க; see *šuṭka-nōy.* (சா.அக.)

சுத்தக்கட்டி *šutta-k-katti,* பெ.(n.) தூய்மையான வெள்ளி தங்கங்களின் கட்டி; lump of pure gold or silver.

[சுத்த(ம்)+கட்டி]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தக்கிரயம் *šutta-k-kirayam,* பெ.(n.) எல்லா வுரிமையையும் விலைக்குக் கொடுத்துவிடுகை; absolute sale. *"அந்த வீட்டைச் சுத்தக்கிரயம் பண்ணிவிட்டான்" (உ.வ.).*

த.வ. தனைத்துரிமை விற்பனை

[Skt. šuddha+kraya > த. சுத்தக்கிரயம்]

சுத்தகாந்தாரம் *šutta-kāndāram,* பெ.(n.) 1. பதினாறு (வகை) இசைப் பண்களுள் ஒன்று; lowest variety of the third note of gamut, one of cōḍašaṭšuram, 2.ஆசான் என்ற வகையைச் சார்ந்த ஒரு வகைப்பண் (சிலப். 13: 112, உரை); an ancient secondary melody - type of the āšān class.

[Skt. šuddha+Gāndhāra> த. சுத்த காந்தாரம்]

சுத்தகாலம் *šutta-kālam,* பெ.(n.) தூயமாயை காரிய விளைவுகளுக்குப் பயன்படும் காலம் (சி.சி.2, 54, சிவாக்.); the time or period for the creative activity of the pure *Māyai.*

[சுத்தம்+காலம்]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தகௌடம் *šutta-kauḍam,* பெ.(n.) ஐந்து தேயங்களில் ஒன்றான இப்போதைய வங்காளத்தின் பெரும்பகுதி; an ancient district which included a large portion of modern Beṅgāḷ, one of pañcakauḍam.

[Skt. šuddha+Gauḍa > த. சுத்தகௌடம்]

சுத்தசத்துவம் *šudda-šattuvam,* பெ.(n.) 1. கலப்பற்ற இயல்பு குணம்; absolute purity of character. 2. துறக்க உலகத்திலுள்ள அசையாப் பொருள் (அஷ்டாதச. தத்வத்ரயம், அசித்பிர. 2, பக். 17); non-sentient objects, as towers, etc. in *Vaikuṇḍam.*

[சுத்தம்+சத்துவம்]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தசந்தயம் *šutta-šandayam,* பெ.(n.) செய்யுளணி வகை (பாப்பா. 100); a kind of figure of speech.

[Skt. šuddha+ san-dēba> த. சுத்தசந்தயம்]

சுத்தசலம் *šutta-šalam,* பெ.(n.) குளிர்ந்த நல்ல தண்ணீர்; pure cold water, as used for drinking purposes.

த.வ. தண்ணன்னீர்

[Skt. šuddha+jala > த. சுத்தசலம்]

சுத்தசாரி *šutta-šāri,* பெ.(n.) நாட்டிய வகை; a kind of dancing. *"தானகமே சுத்தசாரி" (திருவிளை. கான்மா. 8).*

[சுத்தம்+சாரி]

[Skt. šuddha+ > த. சுத்த(ம்)]

சுத்தசிவபதம் *šutta-šiva-padam,* பெ.(n.) மேல்நிலை வீடுபேறு (வரமுத்தி); abode of absolute Bliss. *"சத்திக்கு மேலே பராசத்தி தன்னுள்ளே சுத்தசிவபதம்" (திருமந். 1768).*

[சுத்தம்+சிவபதம்]

[Skt. šuddha+ > த. சுத்தம்]

சுத்தசிவம் *šutta-šivam,* பெ.(n.) உருவமற்ற பரசிவம் (சதாசிவ.); pure šivam, as formless.

[சுத்தம்+சிவம்]

[Skt. šuddha+ > த. சுத்தம்+சிவம்]

சுத்தசுக்கிலரோகம் *šutta-šukkila-rōgam,* பெ.(n.) கருவிழி மேல் நோவில்லாமல் சங்கைப் போல் வெண்ணிறத்தையுண்டாக்கும் நோய்; an eye disease of the black portion characterised by painless white spot on the black portion. (சா.அக.)

[Skt. šuddha+sukla+rōga>த. சுத்த சுக்கிலரோகம்]

சுத்தசுரம் *šutta-šuram,* பெ.(n.) அடிப்படையான பண்கள் (பூர். சங். உண். எ); (Mus.) primary notes of the gamut.

[Skt. šuddha+svara > த. சுத்தசுரம்]

சுத்தசூனியம் *šutta-šūniyam,* பெ.(n.) முழுப்பாழ்; absolute nothingness, inanity, non-entity, complete ruin.

[Skt. šuddha+šūnya > த. சுத்தசூனியம்]

சுத்தசூனியவாதம் *šutta-šūniya-vādam,* பெ.(n.) எல்லாம் இன்மை, இல்பொருளென்று உரையாடுகை (வாதிக்கும் வாதம்); nihilism.

[Skt. šuddha+šunya+vāda > த. சுத்த சூனியவாதம்]

சுத்தசைதன்னியம் *šutta-šaitanniyam,* பெ.(n.) அறிவு மாத்திரையாயுள்ளது; pure intelligence, as distinct from inert matter.

[Skt. šuddha+caitanya > த. சுத்த சைதன்னியம்]

சுத்தசைவம் *šutta-šaivam,* பெ.(n.) சிவனியம் (சைவம்) பதினாறனுள் ஒன்று; a kindof *šaivam*, one of sixteen šaivam.

[Skt. šuddha+šaiva > த. சுத்தசைவம்]

சுத்தஞானம் *šutta-ñānam,* பெ.(n.) கருமக் கலப்பில்லாத மெய்யறிவு; pure spiritual knowledge unalloyed by action.

[Skt. šuddha+nyñana > த. சுத்தஞானம்]

சுத்ததன்னியாசி *šutta-tanniyāši,* பெ.(n.) பண்வகை (பரத. ராக. 103); a specific melody-type.

[Skt. šuddha+dhanāšri > த. சுத்த தன்னியாசி]

சுத்ததத்துவம் *šutta-tattuvam,* பெ.(n.) மூவகை மெய்ப்பொருள்களுள் (தத்துவம்) ஒன்று (சிவப். கட்.); pure categories, one of three tattuvam, comprising *šiva-tattuvam, šattitattuvam, šādākkiya-tattuvam, īle-tattuvamcutta-vittiyā-tattuvam.*

த.வ. தூய மெய்மம்

[Skt. šuddha+tattva > த. சுத்ததத்துவம்]

சுத்ததாளம் *šutta-tālam,* பெ.(n.) தாளவகை; a mode of beating time.

[சுத்த(ம்)+தாளம்]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்ததினம் *šutta-dinam,* பெ.(n.) 1. புத்தாண்டின் தொடக்கம் (வின்.); new years day. 2. கோள்நிலை அறிதற்குக் கருவியாய் ஒரு குறித்த காலவெல்லைக்குள் அகப்பட்ட நாட்களைப் பிழையறக் கூட்டி வந்த தொகை; the exact number of days elapsed in an epoch or in any fixed era, as an element for finding the position of a heavenly body.

[Skt. šuddha+dina > த. சுத்ததினம்]

சுத்ததேகி *šutta-dēgi,* பெ.(n.) ஊதை (வாதம்) பித்தம் அல்லது கோழை (சிலேட்டுமம்)க் கூறுள்ள உடம்பு; a person with one or the

other of the three humours predominating in the body. (சா.அக.)

[Skt. šuddha+dēhin>த. சுத்ததேகி]

சுத்ததைவதம் *šutta-taivadam,* பெ.(n.) பதினாறு இசைப்பண்களுள் ஆறாவது; lowest variety of the sixth note of the gamut, one of *šōḍaša-šuram.*

[Skt. šuddha+daivata > த. சுத்ததைவதம்]

சுத்தநிசாதம் *šutta-nišādam,* பெ.(n.) பதினாறு இசைப்பண்களுள் ஒன்று; lowest variety of the seventh note of the gamut, one of šōdaša-šuram.

[Skt. šuddha+ni-sātta > சுத்தநிஷாதம் > த. சுத்தநிசாதம்]

சுத்தநிருத்தம் *šutta-niruttam,* பெ.(n.) சொக்கமென்னுங்கூத்து (சிலப். 3, 12, உரை, பக். 80); a kind of dance.

[Skt. šuddha+nir-urta > த. சுத்தநிருத்தம்]

சுத்தநிலை *šutta-nilai,* பெ.(n.) **சுத்தாவத்தை** (வின்.) பார்க்க; see *šuttāvattai.*

[Skt. šuddha+ > த. சுத்தம்+நிலை]

சுத்தநீர்க்கடல் *šutta-nīr-k-kaḍal,* பெ.(n.) **நன்னீர்க்கடல்** பார்க்க; see *nannīr-k-kaḍal.* *"புட்கரத்தீவைச் சூழ்ந்து அத்துணைப் பரப் புடையது சுத்தநீர்க் கடல்" (சி.போ.பா.2:3,பக். 210).*

[சுத்தம்+நீர்+கடல்]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தநீலம் *šutta-nīlam,* பெ.(n.) ஒருவகை நீலவண்ணக் கட்டி (C.G.); ultramarine, formerly produced by calcination from Japis lazuli.

[சுத்த(ம்)+நீலம்]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தப்பிரதி *šutta-p-piradi,* பெ.(n.) 1. ஒன்றைப் பார்த்துப் பிழையற எழுதப்பட்ட படி; fair copy. 2. ஆய்வு செய்யப்பட்ட நூல்; revised and corrected copy of a book.

த.வ. தூயபடி

[Skt. šuddha+prati > த. சுத்தப்பிரதி]

சுத்தப்பிரபஞ்சம் *šutta-p-pirabañjam,* பெ.(n.) தூய மாயையினின்று தோன்றிய உலகம்; pure universe evolved out of *šutta-māyai.*

[Skt. šuddha+pra-pañca > த. சுத்தப் பிரபஞ்சம்]

சுத்தப்பொய் *šutta-p-poy,* பெ.(n.) முழுப்பொய்; downright lie.

[சுத்தம்+பொய்]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தபரிசம் *šutta-parišam,* பெ.(n.) மறைப்புக் காலம் தொடங்கும் நிலை; true or correct time of the beginning of an eclipse.

[சுத்த(ம்)+பரிசம்]

[Skt. šuddha > த. சுத்த(ம்)]

சுத்தபாடம் *šutta-pāḍam,* பெ.(n.) பிழையற்ற மூலபாடம்; correct or genuine reading of texts.

[சுத்த(ம்)+பாடம்]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தபுடம் *šutta-puḍam,* பெ.(n.) கோளின் சரியான நிலை; geocentric longitude, the true position of a planet, as distinguished from its mean position.

[Skt. šuddha+sphuṭa > த. சுத்தபுடம்]

சுத்தபோக்கியம் *šutta-pōkkiyam,* பெ.(n.) உடைமையை நுகரும் உரிமையுடன் கூடிய அடைமானம்; usufructuary mortgage.

[Skt. šuddha + bhōgya > த. சுத்த போக்கியம்]

சுத்தபோசனம் *šutta-bōšanam,* பெ.(n.) 1. தூய புல் உணவு (இ.வ.); vegetarian food. 2. கோயிலில் படைக்கும் உணவு (வின்.); sacred food, as offered in temples.

[Skt. šuddha+bhōjana > த. சுத்தபோசனம்]

சுத்தபைரவம் *šutta-pairavam,* பெ.(n.) காய்ச்சலுக்குக் கொடுக்கும் ஓர் ஆயுர் வேத மருந்து; an Ayur vedic medicine for fevers.

[Skt. šuddha+bhairava>த. சுத்தபைரவம்]

சுத்தம்[1] *šuttam,* பெ.(n.) 1. தூய்மை (சூடா.); purity, cleanness, moral purity. *"சுத்தவிதயப் பிரமநிட்டரும்" (உத்தரரா. வரையெடு. 69).* 2. உண்மையானது; genuineness, authenticity. *"சுத்தவைரம்".* 3. முழுமை; entireness. *சுத்தப்பட்டினி.* 4. பிழையின்மை; correctness, faultlessness. *"சுத்தப்பிரதி".* 5. கலப்பின்மை; being unmixed, untainted, unadulterated. *"சுத்தத்தத்துவம்".* 6. குற்றமின்மை; innocence; innocence established by trail or ordeal. 7. சூழ்ச்சியின்மை; trankness, sincerity. 8. வளர்பிறைக் காலம்; period offf waxing moon. *சுத்த பஞ்சமி.* 9. இன்மை, இல்பொருள்; vacancy, emptiness. *"இந்தச் சாதகத்தில் நாலாமிடம் சுத்தம்".* 10. கோள் நிலையில் பிழைக்கோடு (வின்.); correction or equation.

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தம்[2] *šuttam,* பெ.(n.) நோயற்ற நிலை (வின்.); health, convalescence.

[Skt. sva-stha > த. சுத்தம்]

சுத்தம்பேசு-தல் *šuttam-pēšu-* 5 செ.கு.வி. (v.i.) பெருமை பாராட்டிப் பேசுதல்; to speak boastingly, as of one's purtiy character, parentage, connection, etc.

[சுத்த(ம்)+பேசு-,]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தமண்டலம் *šutta-mandalam,* பெ.(n.) கோள் ஒளிமறைப்பு (கிரகணம்) விடப்பெற்ற கதிரவன் மற்றும் நிலவின் உருவம்; disc of the moon or the sun visible after an eclipse.

[சுத்த(ம்)+மண்டலம்]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தமண்டூரம் *šutta-mandūram,* பெ.(n.) மண்டூர வகை (பதார்த்த. 1210); a medicine prepared from iron-oxide.

[சுத்த(ம்)+மண்டூரம்]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தமத்தளம் *šutta-mattaḷam,* பெ.(n.) மத்தள வகை; a superior hand-drum.

[சுத்த(ம்)+மத்தளம்]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தமத்தியமம் *šutta-mattiyamam,* பெ.(n.) பதினாறு வகை இசைப்பண்களுள் ஒன்று; lowest variety of the fourth note of the gamut, one of šōḍaša-šuram.

[Skt. šuddha+madhyama த. சுத்தமத்தியமம்]

சுத்தமாய் *šuttamāy,* வி.எ.(adv.) அடியோடு; wholly, utterly, absolutely. *"சுத்தமாய் மற்றொருவர் கிட்ட வரப்படாதாம்" (பணவிடு. 302).*

[Skt. சுத்தம் >சுத்தமாய்]

சுத்தமாயை *šutta-māyai,* பெ.(n.) துன்பமின்றி நலமே அளிப்பதும் தூய உலகத்திற்கு முதற் காரணமானதுமான மாயை (ஞானா. கட். 11); pure Māyai, the material cause of cutta-p-pirapañjam, yielding unmixed happiness, dist. fr. ašutta-māyai.

[Skt. šuddha+māyā > த. சுத்தமாயை]

சுத்தமார்க்கம் *šutta-mārkkam,* பெ.(n.) 1. நல்லொழுக்கம்; pure conduct, spotless

morality. 2. உண்மையான பற்று; sincere piety. 3. மெய்யான மதம்; true religion.

[Skt. šuddha+marhkam > த. சுத்தமார்க்கம்]

சுத்தமானியம் *šutta-māṉiyam,* பெ.(n.) இறையிலியாக விடப்பட்ட நிலம் (இ.வ.); free gift of land.

[Skt. šuddha+manya > த. சுத்தமானியம்]

சுத்தமுட்டாள் *šutta-muṭṭāḷ,* பெ.(n.) **சுத்தமூடன்** (உ.வ.) பார்க்க; see *šutta-mūḍaṉ.*

[சுத்த(ம்)+முட்டாள்]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தமுத்தி *šutta-mutti,* பெ.(n.) சுபாவமுத்தி (யாழ்.அக.) பார்க்க; see šubāvamutti.

[சுத்த(ம்)+முத்தி]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தமூடன் *šutta-mūḍaṉ,* பெ.(n.) முழு முட்டாள்; veritable fool or dunce. *"நம் போலவுண்டோ சுத்தமூடர்" (தாயு. பாயப். 37).*

[சுத்த(ம்)+மூடன்]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தமோட்சம் *šutta-mōṭcam,* பெ.(n.) கோள்களின் மறைப்பு (கிரகணம்) முற்றும் விடுகை (வின்.); real close or end, as of an eclipse.

[Skt. šuddha+mōkṣa > த. சுத்தமோட்சம்]

சுத்தரத்தம் *šutta-rattam,* பெ.(n.) தூய அரத்தம்; pure, arterial blood.

[சுத்த(ம்)+அரத்தம்]

[Skt. suddha > த. சுத்தம்]

சுத்தராகம் *šutta-rāgam,* பெ.(n.) நிரம்பிய இலக்கணமுடைய மூலப்பண்; (mus.) musical mode that accords perfectly with ancient rules.

[Skt. šuddha+rāga > த. சுத்தராகம்]

சுத்தலாபம் *šutta-lābam,* பெ.(n.) செலவுபோக எஞ்சிய மேல்வரும்படி (இ.வ.); net profit.

[Skt. šuddha+lābha > த. சுத்தலாபம்]

சுத்தவசந்தம் *šutta-vašandam,* பெ.(n.) பண்வகை (பரத. ராக. 102); a specific melody-type.

[Skt. šuddha+vāsanta > த. சுத்தவசந்தம்]

சுத்தவாசமனம் *šutta-v-āšamaṉam,* பெ.(n.) தூய்மையின் பொருட்டு நீர்த்துளிகளை மந்திரத்துடன் உட்கொள்ளுகை; taking in drops of water with mantras by way of purification. *"அடிக்கடி விளக்கிச் சுத்தவாச மனஞ்செய" (பிரபோத. 11: 39).*

[Skt. šuddha+ā-camana > த. சுத்தவாச மனம்]

சுத்தவாட்டி *šutta-v-āṭṭi,* பெ.(n.) தூயவள் (யாழ்.அக.); pure, spotless woman.

[சுத்த(ம்)+ஆட்டி]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தவாரம் *šutta-vāram,* பெ.(n.) நில விளைவில் நிலக்கிழாருக்கும் பயிரிடு வோனுக்கும் உரிய சமபங்கு (இ.வ.); equal division of produce between land lord and tenant.

[சுத்த(ம்)+வாரம்]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தவாளர் *šutta-v-āḷar,* பெ.(n.) தீக்கைபெற்ற துறவிகள்; saints.

[சுத்த(ம்)+ஆளர்]

[Skt. šuddha > த. சுத்தம்]

சுத்தவாளி *šutta-v-āḷi,* பெ.(n.) 1. வழக்கு (நீதி) மன்றத்தில் குற்றமற்றவனாகத் தீர்மானிக்கப் பட்டவன்; one who is proved innocent in court of justice, opp. to *kuṟṟa-v-āḷi.* 2. தூய்மையானவன்; holy person.

[சுத்த(ம்)+ஆள்]

[Skt. śuddha > த. சுத்தம்]

சுத்தவிக்கேபம் *śutta-vikkēbam*, பெ.(n.) **சுத்தவிட்சேபம்** (வின்.) பார்க்க; see *śutta-vitcēbam.*

[Skt. śuddha+vi+kṣ ēpa > த. சுத்தவிக்கேபம்]

சுத்தவிட்சேபம் *śutta-vitcēbam*, பெ.(n.) ஒரு கோளின் சரியான கிடைக்கோடு (அட்சாம்சம்); true celestial latitude.

[Skt. śuddha+vi-kśepa > த. சுத்தவிட்சேபம்]

சுத்தவித்தியாதத்துவம் *śutta-vittiyā-tattuvam*, பெ.(n.) சிவ மெய்ம்மைகள் (சிவ தத்துவம்) ஐந்தினுள் ஒன்றாகிய (சுத்த வித்தியாதத்துவம் அதாவது) எப்போதும் மகிழ்ச்சியையே அளிக்கும் ஒரு மாயை; a form of Mayāi with prepondarance of spiritual knowledge above tendency to worth. (சா.அக.)

[Skt. śuddha+vidyā > த. சுத்தவித்தை]

சுத்தவித்தை *śutta-vittai*, பெ.(n.) சுத்த வித்தியாதத்துவம் பார்க்க; see śutta-vittiyā-tattuvam.

சுத்தவீரன் *śutta-viran*, பெ.(n.) போரில் பின்வாங்காத மறவன்; ideal hero or warrior. *"ரண சுத்த வீரர்பாலும்...... திருமாது மாறா திருப்பளன்றோ" (குமரே.சத.35).*

[சுத்த(ம்)+வீரன்]

[Skt. śuddha > த. சுத்தம்]

சுத்தன் *śuttaṉ*, பெ.(n.) 1. தூய்மையானவன்; one who is pure. 2. சிவன் (பிங்.); Śivaṉ. 3. வீடுபேறடையும் நிலையிலுள்ள உயிர் (வின்.); soul ripe for liberation from births. 4. கபடமற்றவன்; sincere, guileless person. 5. மூடன் (இ.வ.); fool, idiot.

[Skt. śuddha > த. சுத்தன்]

சுத்தா *śuttā*, வி.எ.(adv.) ஒருமிக்க (வின்.); together.

[Mhr. sāta > த. சுத்தா]

சுத்தாங்கமாய் *śuttāṅgamāy*, வி.எ.(adv.) 1. தூய்மையாய்; cleanly. 2. முழுதும்; entirely. 3. இசையுடன் கூடாமல்; plainly, without music. *தமிழ் வேதத்தைப் பண்ணுட னோதவும் சுத்தாங்கமாக ஓதவும் வேண்டும்.*

[Skt. śuddha+aṅga > த. சுத்தாங்கமாய்]

சுத்தாட்டகம் *śuttāṭṭagam*, பெ.(n.) நிலம், நீர், நெருப்பு, காற்று என்னும் நான்கு பூதங்களும் அவற்றிற்குரிய கந்தம், சுவை, உருவம், தொடுவுணர்வு என்னும் நான்கு கணங் களுடன் கூடிய எட்டன் கூட்டம் (பிரபோத 32:47) a generic term for the eight categories comprising the four elements and their characteristics, viz., *nilam, nir, neruppu, kāṟṟu, kandam, śuvai, pariśam.*

[Skt. śuddha+aṣṭaka > த. சுத்தாட்டகம்]

சுத்தாத்துமா *śuttāttumā*, பெ.(n.) மெய்யறி வாளர் (வின்.); person of true spiritual knowledge, sage. 2. நல்லொழுக்கமுள்ளவ–ன்–ள்; person of pure character. 3. மூடன் (இ.வ.); fool.

[சுத்த(ம்)+ஆத்துமா]

[Skt. śuddha > த. சுத்தம்]

சுத்தாத்துவிதம் *śuttāttuvidam*, பெ.(n.) **சுத்தாத்துவைதம்** பார்க்க; see *śuttāttuvaidam.*

சுத்தாத்துவைதம் *śuttāttuvaidam*, பெ.(n.) உயிர் பேராதனுடன் இரண்டறக் கலந்து இன்பம் துய்க்கும் நிலை; inseparable union of the individual soul with śivam, obtaining supreme bliss.

[Skt. śuddha+dvaita > த. சுத்தாத்துவைதம்]

சுத்தாத்வா *śuttātvā*, பெ.(n.) விந்து விலுண்டான உலகம் (சி.சி.1:57, சிவாக்.); the macrocosm resulting from the *vindu*, as a channel of pure grace.

[Skt. suddha+adhvan > த. சுத்தாத்வா]

சுத்தாதாயம் *śuttādāyam*, பெ.(n.) **சுத்தலாபம்** பார்க்க; see *śutta-lābam.*

[Skt. śuddha > த. சுத்தம்+ஆயம்]

சுத்தாந்தம் *śuttāndam*, பெ.(n.) அரசியின் அரண்மனை (யாழ்.அக.); royal zenana, queen's apartments.

[Skt. śuddhānta > த. சுத்தாந்தம்]

சுத்தாவத்தை *śuttāvattai*, பெ.(n.) 1. ஐவகை நிலை (அவத்தை)யினதாய், மலம் நீக்கிப் பிறவியற்று உயிர் தூய்மையாகும் நிலை (சி.சி.4:27); a condition of the soul in which it is purified and freed from births, of five kinds.

[Skt. śuddha+ava+sthā > த. சுத்தாவத்தை]

சுத்தான்னம் *śuttāṉṉām*, பெ.(n.) வெறுஞ் சோறு; cooked rice, pure and simple. *"சுத்தான்னஞ் சிறப்ப வூட்டி" (குற்றா. தல. திருமால். 121).*

த.வ. வெறுஞ்சோறு

[Skt. śuddha+anna > த. சுத்தான்னம்]

சுத்தானனம் *śuttāṉaṉdam*, பெ.(n.) தூய அறிவு; perfect knowledge.

[Skt. śuddha-ā-nanda > த. சுத்தானந்தம்]

சுத்தானந்தப்பிரகாசம் *śuttāṉanda-p-pirakāśam*, பெ.(n.) தமிழிலுள்ள ஒரு நாட்டிய நூல் (சிலப். பக். 78, ft.); a Tamiḻ treatise on dancing.

சுத்தி[1] *śutti*, பெ.(n.) 1. மன மொழி மெய்களில் மாசின்மை; cleanliness, purity, as in thought, word or deed. *"சுத்தியைத் தானுடை ...... சித்தியை" (திருநூற். 29).* 2. புறமதத்தாரை இந்துமதத்திற் சேர்க்குங் காற் செய்யும் சடங்கு; purificatory ceremony of converting non-Hindus to Hinduism. 3. மருந்து முதலியவற்றின் குற்றநீக்குகை; purification as of crude matter. 4. வயிரக் குணங்களுள் ஒன்று (சிலப். 14:181, உரை); a quality of diamond.

[Skt. śuddhi > த. சுத்தி[1]]

சுத்தி[2]**–த்தல்** *śutti-*, 4 செ.குன்றாவி.(v.t.) புடம் வைத்தல் (தைலவ. தைல. 109); to calcine medicine, refine metal.

[Skt. śuddhi > த. சுத்தி > சுத்தி[2]–.]

சுத்திகரம் *śutti-garam*, பெ.(n.) தூய்மை செய்கை (வின்.); purifying, purification.

[Skt. śuddhikara > த. சுத்திகரம்]

சுத்திகரி–த்தல் *śuttikari-*, 4 செ.குன்றாவி.(v.t.) தூய்மையாக்குதல்; to purify, cleanse, correct.

[Skt. śuddhikara > த. சுத்திகரம்>சுத்திகரி–.]

சுத்திகரிப்பு *śuttikarippu*, பெ.(n.) தூய்மை செய்கை; purification.

[சுத்திகரி >சுத்திகரிப்பு]

சுத்திகாதனம் *śuttigādaṉam*, பெ.(n.) சுவத்திகாசனம் பார்க்க; see śuvattikā śanam. *"சுத்திகாதனத் தமர்ந்து" (திருக் காளத். பு, 18:22).*

[Skt. svastikāsanas > த. சுத்திகாதனம்]

சுத்திகாரசதம் *śuttikā-raśadam*, பெ.(n.) இல்பொருள் (வாசுதேவ மனனம், பக். 10); non-existent thing, as silver in conch-shell.

[Skt. śuktikā-rajata > த. சுத்திகாரசதம்]

சுத்திசெய்–தல் *śutti-śey-*, 1. செ.கு.வி.(v.t.) 1. தூய்மைப்படுத்துதல்; to purify, cleanse, sanctify. 2. பொன் முதலிய மாழைகளைப் புடமிடுதல்; to refine, sublimate.

3. மருந்துக்காக நஞ்சு முதலியவற்றைத் தூய்மை செய்தல்; to purify drugs for medicinal purposes. 4. மந்திர முதலிய வற்றால் தூய்மை செய்தல் (வின்.); to lustrate.

[சுத்தி+செய்–,]

[Skt. šuddhi > த. சுத்தி]

சுத்திபத்திரம்[1] *šutti-pattiram,* பெ.(n.) பிழைத்திருத்தக் குறிப்பு; corrigenda.

[Skt. šuddhi+patra > த. சுத்திபத்திரம்]

சுத்திபத்திரம்[2] *šutti-pattiram,* பெ.(n.) குற்றவாளியல்லன் என்றாவது அறம் செய்ததால் பழி நீங்கிவிட்ட தென்றாவது காட்டும் ஆவணம் (சுக்கிரநீதி, 94); document showing either that the accused in innocent or has been expiated by the performance of *prāya-c-cittam.*

[Skt. suddhipatra > த. சுத்திபத்திரம்]

சுத்தீகரணம் *šutti-karaṇam,* பெ.(n.) தூய்மையாக்குகை; purification.

[Skt. šuddhikaraṇa > த. சுத்தீகரணம்]

சுத்தை *šuttai,* பெ.(n.) 1. பத்தாம் நாள் (தசமி) பிற்கூறும், பதினோராம் நாளும், (ஏகாதசி), பன்னிரண்டாம் நாளின் (துவாதசி) முற்கூறும் அமைந்த நாளில் வரும் பதினோரமை (ஏகாதசி); the eleventh titi occurring on a day which commences with the tenth titi and ends with the twelth titi. *"ஏய்ந்த பத்தாந் திதியொடும் பன்னிரண்டாந் திதியொடுந் தொட்டிரண்டு பாலுந் தோய்ந்திடு மேகாதசிக்குச் சுத்தையென்பர்" (ஏகாதரிபு. கால. 19.)* 2. தூய்மையானவள் (சி.சி.1:19, சிவாக்.); pure spotless woman.

[Skt. šuddhā > த. சுத்தை]

சுத்தோதகசமுத்திரம் *šuttōtaga-šamuttiram,* பெ.(n.) நன்னீர்க்கடல்; ocean of fresh water.

[Skt. šuddhōdakasamudra > த. சுத்தோதக சமுத்திரம்]

சுத்தோதகம் *šuttōtagam,* பெ.(n.) நன்னீர் (யாழ். அக)) ; fresh, pure water.

[Skt. šuddha+udaka > த. சுத்தோதகம்]

சுத்தோதனன் *šuttōdaṉaṉ,* பெ.(n.) புத்தரின் தந்தை; Buddha's father.

[Skt. suddhōdana > த. சுத்தோதனன்]

சுத்தோபவாசம் *šuttōbavāšam,* பெ.(n.) முழுப்பட்டினி; absolute fasting, total abstinence from food, as a religious observance.

[Skt. šuddha+upa-vāsa > த. சுத்தோப வாசம்]

சுதகம் *šudagam,* பெ.(n.) குறைவு; loss, fall, omission. *"அக்கரச்சுதகம்" (மாறனலங். 277).*

[Skt. cyutaka > த. சுதகம்]

சுதகேவலி *šuda-kēvali,* பெ.(n.) முழு மெய்யறிறவு பெற்ற சமண மேலோர்; a class of Jaina monks who have attained perfect knowledge. *"சொல்லா னிறைந்த சுதகேவலி சென்ற மார்க்கம்" (மேருமந். 1:4).*

[Skt. šruta-kēvali > த. சுதகேவலி]

சுதந்தரக்காணி *šudandara-k-kāṇi,* பெ.(n.) உரிமை நிலம் (வின்.); hereditary tenement, property held in absolute ownership.

[சுதந்தரம்+காணி]

[Skt. sva-tantra > த. சுதந்தரம்]

சுதந்தரக்காரன் *šudandara-k-kāraṉ,* பெ.(n.) சொத்து முதலியவற்றுக்கு உரிமையுடையவன் (இ.வ.); owner; heir; claimant; one who enjoys any property, as of right; one who has a right to emoluments, as in temple.

[சுதந்தரம்+காரன்]

[Skt. sva-tantra > த. சுதந்தரம்]

சுதந்தரத்திட்டம் *šudandara-t-tittam*, பெ.(n.) 1. களமடிப்பதற்குமுன் நிலவுடைமை யாளருக்குச் சேரவேண்டிய உரிமை (R.T.); certain fees in kind received by mirasdars before threshing. 2. சிற்றூர் ஊழியக்காரர் பெறுதற்குரிய உரிமை; fee or perquisite of the village servants, musicians and the like. 3. கோயில்வேலை சிற்றூர்வேலை செய்வோர்க்குரிய உரிமைப் பேறுகளைக் குறிக்கும் பட்டிகை (C.G.); a list which gives the perquisites of the servants of a village or temple.

[சுதந்தரம்+திட்டம்]

[Skt. sva-tantra > த. சுதந்தரம்]

சுதந்தரம் *šudandaram*, பெ.(n.) 1. தலைமுறையுரிமை; in heritance, hereditary right. 2. உரிமைப்பேறு; perquisite, benefit, share, allotment, customary fee, emoluments. *கோயிலில் அவனுக்குச் சுதந்தர முண்டு.* 3. தன்னார்வம், விடுதலை; liberty, independence. *"பந்தமுறுமுயிர் சுதந்தரமிலி" (திருபோ. சந். பிள்ளைத். செங். 4).*

[Skt. sva-tantra > த. சுதந்தரம்]

சுதந்தரவறிவு *šudandara-varivu*, பெ.(n.) இயற்கைப் பேரறிவு (வின்.); perfect innate wisdom, as of God.

[சுதந்தரம்+அறிவு]

[Skt. sva-tantra > த. சுதந்தரம்]

சுதந்தரவாளி *šudandara-v-āḷi*, பெ.(n.) சுதந்தரன், 2 பார்க்க; see šudandaran 2. *"பிறந்தபிள்ளை எனக்குச் சுதந்தரவாளியா யிருக்கிறான்" (பைபிள். ஆதி. 15:3).*

[சுதந்தரம்+ஆளி]

[Skt. sva-tantara > த. சுதந்தரம்]

சுதந்தரன் *šudandaran*, பெ.(n.) 1. தன்னுரிமை யுடையவன் (சுவாதீனன்); free, independent agent. 2. சொத்தின் உரிமையாளன்; heir, lawful inheritor.

[Skt. sva-tantara > த. சுதந்தரன்]

சுதந்தரி-த்தல் *šudandari-*, 4 செ.கு.வி.(v.i.) 1. சொத்து முதலியவற்றின் உரிமை பெறுதல் (வின்.); to inheriti, to be heir to. 2. தன்வயத்தனாயிருத்தல்; to be independent, absolute. *"சுதந்தரித் தொளிசெய் யொளியே" (அருட்பா.* vi, நடராஜபதி. 5).

[Skt. sva-tantra > த. சுதந்தரன் > சுதந்தரி > சுதந்தரி-.]

சுதந்தன் *šudantan*, பெ.(n.) கூத்தாடி (சங்.அக.); dancer, player, actor.

[Skt. su-tantra > த. சுதந்தன்]

சுதந்தி *šudandi*, பெ.(n.) 1. வடமேற்றிசைப் பெண்யானை (வின்.); female elephant of the north-west quarter, mate of puṣpadanta. 2. பெண்யானை (சது.); female elephant.

[Skt. su-danti > த. சுதந்தி]

சுதந்திரகருத்தா *šudandira-karuttā*, பெ.(n.) 1. இயற்றுதற்கருத்தா (பி.வி.10); direct agent of an action. 2. **சுதந்தரன் 1** பார்க்க; see *šudandiran,1*.

[Skt. sva-tantra > த. சுதந்திரம்+கருத்தா]

சுதந்திரம் *šudandiram*, பெ.(n.) **சுதந்தரம்** பார்க்க; see *šudandaram*.

சுதந்திரன் *šudandiran*, பெ.(n.) **சுதந்தரன்** பார்க்க; see *šudandaran*.

சுதந்தை *šudandai*, பெ.(n.) உரிமைப்பேறு (வின்.); right, privilege.

[Skt. svatantra-tā > த. சுதந்தை]

சுதநெறி *šuda-neri*, பெ.(n.) சமணர்களின் மறைநூல்களில் கூறப்பட்ட நெறி; path laid down in Jaina sacred books. *"சுதநெறி முறைமையு மறிவான்" (நீலகேசி. 64).*

[சுதம்+நெறி]

[Skt. cyuta > த. சுதம்]

சுதம்¹ *šudam*, பெ.(n.) 1. அழிவு; destruction, loss. *"சுதமுறு முலக மெல்லாம்" (ஞானவா. வீம. 1.).* 2. இறங்குகை (சூடா.); descent, decline.

த.வ. நசிவு

[Skt. cyuta > த. சுதம்]

சுதம்² *šudam*, பெ.(n.) 1. சமயச் சார்புடைய நூல் (பரமாகமம்); sacred books. *"சுதமொழி கேண்மின்" (திருநூற். 52).* 2. **சுருதஞானம்** பார்க்க; see *šuruda-ñānam*. *"கடல் போற்ற சுதங்க ணிறைந் தனவே" (சீவக. 3038).* 3. முறைமை (வின்.); method, order.

த.வ. திருப்பொத்தகம்

[Skt. šruta > த. சுதம்]

சுதர்சனாழ்வான் *šudarsanālvān*, பெ.(n.) சக்கரத்தாழ்வார்; *Viṣṇu's* discus.

[சுதர்சனம்+ஆழ்வான்]

[Skt. su-daršana> த. சுதர்சனம்]

சுதர்மான் *šudarmān*, பெ.(n.) சோழ நாட்டில் வாழும் உடையார்மரபினருள் ஓர் உட்பிரிவினர் (G.Tp.D.I. 109).; a sub-division of the *Udaiyar* caste living in Trichinopoly and Tanjore district.

[Skt. sudharma > த. சுதர்மான்]

சுதர்மை *šudarmai*, பெ.(n.) சுதன்மை பார்க்க; sudhanmai.

[Skt. sudharmā > த. சுதர்மை]

சுதராய்¹-த்தல் *šudarāy-*, 1 செ.கு.வி.(v.t.) திடப்படுதல்; to gain strength.

[Mhr. sutarā> த. சுதராய் >சுதராய்த்தல்]

சுதராய்²-த்தல் *šudarāy-*, 4 செ.கு.வி.(v.t.) திறமையாக நடத்துதல்; to manage creditably, accomplish.

த.வ. திறவினையாடல்

[Mhr. சுதராய்¹-த்தல் >சுதராய்²-த்தல்]

சுதரிசனம்¹ *šudsarišanam*, பெ.(n.) 1. திருமாலின் சக்கரம் (பிங்.); discus weapon of Viṣṇu. 2. அழகு (வின்.); beauty, charming appearance. 3. கண்ணாடி (வின்.); looking-glass.

[Skt. su-daršana > த. சுதரிசனம்]

சுதரிசனம்² *šudarišanam*, பெ.(n.) தேவர் தலைவன் இந்திரனின் தலைநகர், அமராவதி (சங்.அக.); Indra's capital.

[Skt. sudaršana > த. சுதரிசனம்]

சுதருமம்¹ *šudarumam*, பெ.(n.) நல்லறம்; virtuous deeds of superior excellence.

[Skt. su-dharma > த. சுதருமம்]

சுதருமம்² *šudarmam*, பெ.(n.) அறநூல் கூறியபடி நடத்தற்குரிய அவரவர் செயல்; one's own duties, as enjoined by scriptures. 2. இயல்பு; nature, natural state.

[Skt. sva-dharma > த. சுதருமம்]

சுதலம் *šudalam*, பெ.(n.) கீழேழுலகங்களுள் மூன்றாவது (சூடா.); one of the nether-worlds, third of *kīḻ-ēḻ-ulagam*.

[Skt. su-tala > த. சுதலம்]

சுதலன் *šudalan*, பெ.(n.) இலவங்க வகுப்பைச் சேர்ந்த மரவகை (L.); penninerved-alternate

long-papery-rusty-downy elliptic-acuminate-leaved cinnamon, lance-Phoebe *paniculata*.

[Skt. su-dala > த. சுதலன்]

சுதன் *šudaṉ*, பெ.(n.) மகன் (பிங்.); son. *"புரூரவாவினைத்தஞ் சுதனெனும்படி தோற்றுவித்தனர்" (பாரத. குருகுல. 9).*

[Skt. suta > த. சுதன்]

சுதன்மம்¹ *šudaṉmam*, பெ.(n.) **சுதருமம்¹** பார்க்க; see *šudarumam¹*.

சுதன்மம்² *šudaṉmam*, பெ.(n.) **சுதனம்²** (பிங்.) பார்க்க; see *šudaṉam²*.

சுதன்மம்³ *šudaṉmam*, பெ.(n.) **சுதன்மை** (சூடா.) பார்க்க; see *šudaṉmai*.

சுதன்மை *šudaṉmai*, பெ.(n.) இந்திரனது ஓலக்க மண்டபம்; Indra's presence chamber. *"சுதன்மையினு முதன்மைபெறத் தொடங்கினானே" (பாரத. இராசசூய. 6).*

த.வ. ஓலக்கமண்டபம்

[சுதர்மை > சுதன்மை]

சுதனம்¹ *šudaṉam*, பெ.(n.) பெரும்பேறு; invaluable treasure. *"சுதனமாஞ் சிவபத்தி" (சிவரக. சுகமுனி. 39).*

[Skt. su-dhana > த. சுதனம்]

சுதனம்² *šudaṉam*, பெ.(n.) கருவி (திவா.); weapon.

[Skt. sūdana > த. சுதனம்]

சுதா¹ *šudā*, பெ.எ.(adj.) தன்னடைவான; one's own, voluntary, spontaneous. *"சுதாசாட்சி" (வின்.).*

[Skt. svataḥ+ > த. சுதா]

சுதா² *šudā*, பெ.(n.) தேவாமிழ்தம்; ambrasia.

[Skt. sudhā > த. சுதா]

சுதாகரன் *šudākaraṉ*, பெ.(n.) திங்கள் (அமிர்தகிரணன்) (பிங்.); moon, as nectar-rayed. *"சிந்தூர பார்வதி சுதாகர" (திருப்புகழ். 31).*

த.வ. நிலவன், நிலவு

[Skt. sudhā-kara > த. சுதாகரன்]

சுதாசாட்சி *šudā-šāṭci*, பெ.(n.) அழைப்பாணையில்லாத சான்று (இ.வ.); witness appearing in court without legal summons.

[Skt. svatas+sākṣin > த. சுதாசாட்சி]

சுதாரி-த்தல் *šudāri-*, 4 செ.கு.வி.(v.t.) **சுதராய்¹-த்தல்** (வின்.) பார்க்க; see *šudarāy¹-*.

[Mhr. சுதராய் >சுதாரி-.]

சுதாவாய் *šudā-v-āy*, வி.எ.(adv.) 1. தானாகவே; of one's own accord, spontaneously, independently. *'அவன் அந்தக் காரியத்தைச் சுதாவாய்ச் செய்து முடித்தான்'.* 2. **சுதாவில் - 2** பார்க்க; see *šudāvil-2*.

[Skt. svataḥ > த. சுதாவாய்]

சுதாவில் *šudāvil*, வி.எ.(adv.) 1. **சுதாவாய்¹** பார்க்க; see *šudā-v-āy¹*. 2. நேரில்; in person. *சுதாவில் அவரைப் பார்த்தேன் (இ.வ.)*

சுதி *šudi*, பெ.(n.) இசையைச் சிறப்பிக்க அதனுடன் ஒத்தெழுப்பப்படும் துணையொலி; pitch of tune, key note.

[Skt. śruti > த. சுதி]

சுதிக்கியானம் *šudi-k-kiyāṉam*, பெ.(n.) இசைக்கருவியில் பல பண்திறங்களின் ஒருங்கிசைவை அமைக்கும் அறிவு (வின்.); knowledge of harmony in music.

[Skt. śruti+jñāna > த. சுதிக்கியானம்]

சுதிகாரன் *šudi-kāraṉ*, பெ.(n.) பண்கூட்டுபவன்; one who sounds the bass or the key note in a concert.

[Skt. śruti > த. சுதி+காரன்]

சுதிகூட்டு–தல் *šudi-kūṭṭu-*, 5 செ.கு.வி.(v.i.) **சுருதி கூட்டு–தல்** (வின்.) பார்க்க; see *šurudi-kūṭṭu-*.

[Skt. šruti > த. சுதி+கூட்டு–.]

சுதிகூடிவா–தல் *šudi-kūḍi-vā-*, 18 செ.கு.வி.(v.i.) அணியமாதல்; to become ready.

[Skt. šruti > த. சுதி+கூடிவா = கூடிவருதல் கூடிவா–தல்.]

சுதிப்பெட்டி *šudi-p-peṭṭi*, பெ.(n.) சுருதிப்பெட்டி பின்புறம் உள்ள மடிப்புடைய துருத்தியினால் காற்றை உட்செலுத்திச் சீராக வெளி விடுவதன் வாயிலாக குரல் அளவைக் கணிக்கும் இசைப்பெட்டி, a musical instrument which is used for setting the sruti.

த.வ. இசைப்பெட்டி

சுதிபிடி–த்தல் *šudi-piḍi-*, 4 செ.கு.வி.(v.i.) குரல் ஓசை இடமறிந்து இசைக்கருவியில் விரல் பிடித்தல்; to touch the proper keynote. 2. பண்ணோடு (சுதியோடிழைத்து) வருதல்; to accord with the keynote.

[Skt. šruti > த. சுருதி >சுதி +பிடித்தல்]

சுதிமதிகெட்டவன் *šudi-madi-keṭṭavaṉ*, பெ.(n.) கேள்வியும் அறிவும் இல்லாதவன் (வின்.); fool, as having neither knowledge nor commonsense.

[சுதி+மதிகெட்டவன்]

[Skt. šruti > சுருதி > த. சுதி]

சுதிமுறுக்கு–தல் *šudi-muṟukku-*, 5 செ.கு.வி. (v.i.) **சுதியேற்று–தல்** (இ.வ.) பார்க்க; see *šudi-y-ēṟṟu-*.

[சுதி+முறுக்கு–,]

[Skt. šruti > த. சுருதி > சுதி]

சுதியேற்று[1]–தல் *šūḍi-y-ērrū-*, 5 செ.கு.வி.(v.i.) இசைப் பண்ணை (சுருதி) மிகுதிப்படுத்துதல்; to raise the pitch, play on a higher pitch.

[சுதி+ஏற்று–தல்]

[Skt. šruti > த. சுருதி]

சுதியேற்று[2]–தல் *šudi-y-ēṟṟu-*, 5 செ.கு.வி. (v.t.) தூண்டி விடுதல்; to induce, incite, egg on. *அவனைச் சுதியேற்றிவிட்டான் (இ.வ.)*

[சுதி+ஏற்று–,]

[Skt. šruti > த. சுருதி > ஏற்று–.]

சுதிலயை *šudi-layai*, பெ.(n.) பண்ணோடு (சுருதியோடு) இசையொன்றுகை; harmonious blending of tunes. *சுதிலயையிலாத பண் (அறப். சத. 10).*

[Skt. šruti+laya > த. சுருதிலயை > சுதிலயை]

சுதினம் *šu-diṉam*, பெ.(n.) நல்ல நாள்; happy day; auspicious day.

த.வ. நன்னாள்

[Skt. su-dina > த. சுதினம்]

சுதேசபோதகர் *šudēša-bōdagar*, பெ.(n.) தேவாலயத் தலைமை மதத் தலைவர்; Indian minister of a church.

[Skt. svadēša+bōdhaka > த. சுதேசபோதகர்]

சுதேசம் *šudēšam*, பெ.(n.) சொந்த நாடு; one's own country, native land.

[Skt. sva-dēša > த. சுதேசம்]

சுதேசவைத்தியம் *šudēsa-vai-t-tiyam*, பெ.(n.) நாட்டு மருத்துவமுறை; native treatment (i.e.) treatment according to the medical science of this country. (சா.அக.)

[Skt. sva-dēša+vaidya > த. சுதேச வைத்தியம்]

சுதேசி[1] *šudēši*, பெ.(n.) தனது நாட்டிற் பிறந்து வளர்ந்தவன்; native, son of the soil.

த.வ. தன்னாட்டான்

[Skt. svadēšin > த. சுதேசி] //ṟ

சுதேசி² *šudēši*, பெ.(n.) சுதேசியம் பார்க்க; see *šudēšiyam*. *இத்துணி சுதேசி.*

சுதேசியம் *šudēšiyam*, பெ.(n.) தன் நாட்டிற் செய்த பொருள்; native goods, indigenous manufactures.

த.வ. தன்னாட்டுப் பண்டம்

[*Skt. sva-dēšiya > த. சுதேசியம்*]

சுதை *šudai*, பெ.(n.) மகள் (பிங்.); daughter.

[*Skt. sutā > த. சுதை*]

சுதோற்பத்தி *šudōṟ-batti*, பெ.(n.) 1. பிள்ளை பெறுகை; giving birth to a child. 2. பிள்ளைப்பேறு; child birth. (சா.அக.)

சுந்தம் *šundam*, பெ.(n.) தூய்மை; purity. *"சுந்தமாகச் சுவடறுவீரென" (நீலகேசி. 322).*

[*சுத்தம் > சுந்தம்*]

சுந்தரத்தாது *šundara-t-tādu*, பெ.(n.) ஒரு வகைச் செய்நஞ்சு – துத்தபாடாணம்; a kind of arsenic compound with white vitriol as an ingredient, a sparagus racemosus. (சா.அக.)

சுந்தரத்தோளுடையான் *šundara-t-tōḷuḍaiyāṉ*, பெ.(n.) அழகர்கோயில் திருமால்; *Viṣṇu* at *Aḻagarkōyil*, as having beautiful shoulders. *"சுந்தரத்தோளுடையான் சுழலையினின் றுய்துங்கொலோ" (திவ். நாய்ச். 9:1).*

[*சுந்தரம்+தோளுடையான்*]

[*Skt. sundara > த. சுந்தரம்*]

சுந்தரபாண்டியம் *šundara-pāṇḍiyam*, பெ.(n.) மதுரை மீனாட்சி அம்மையின் தோற்றரவு (அவதாரம்)களைக் கூறுவதும், அனதாரி என்ற புலவரால் இயற்றப்பட்டதுமான தமிழ்க்காவியம்; a poem on the goddess of Madurai, by the poet A*ṉatāri*.

[*சுந்தரம்+பாண்டியம்*]

[*Skt. sundara > த. சுந்தரம்*]

சுந்தரபாண்டியன் *šundara-pāṇḍiyaṉ*, பெ.(n.) பாண்டிய மன்னர் பலர் கொண்டிருந்த சிறப்புப்பெயர்; title of several kings of the Pāṇḍyaṉ dynasty.

[*சுந்தரம்+பாண்டியன்*]

[*Skt. sundara > த. சுந்தரம்*]

சுந்தரபாண்டியன்கோல் *šundara-pāṇḍiyaṉ-kōl*, பெ.(n.) 24 அடி நீளமுள்ள ஓர் அளவுகோல்; a measuring-rod of 24 ft. *"இருபத்து நாலடியான சுந்தரபாண்டியன் கோலால் நிலமளந்து" (S.I.I.V, 168).*

[*சுந்தரம்+பாண்டியன்கோல்*]

[*Skt. sundara > த. சுந்தரம்*]

சுந்தரபாண்டியன்தொகுதி *šundara-pāṇḍiyaṉ-togudi*, பெ.(n.) சுந்தரப் பாண்டியனால் தொகுக்கப்பெற்ற வெற்றிவேற்கை என்னும் நூல்; the poem V*eṟṟivērkai*, compiled by š*undara-pāṇḍyaṉ*.

[*சுந்தரம்+பாண்டியன்தொகுதி*]

[*Skt. sundara > த. சுந்தரம்*]

சுந்தரம் *šundaram*, பெ.(n.) 1. அழகு (பிங்.); beauty, handsomeness. *"சுந்தரக் குமுதச் செவ்வாய்" (கம்பரா. மாயாசனக. 16).* 2. வண்ணம்; colour. *"சுந்தரச் சுண்ணத்து களொடு" (சிலப். 4, 42).* 3. நன்மை; goodness, excellence. *"சுந்தர நிலமிசைச் சொரிதலின்" (சீவக. 121).*

[*Skt. sundara > த. சுந்தரம்*]

சுந்தரமூர்த்திநாயனார் *šundara-mūrtti-nāyaṉār*, பெ.(n.) எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படுபவரும், தேவார ஆசிரியர் மூவருள் ஒருவரும், நாயன்மார் அறுபத்துமூவருள் சிவப்பிராமணருமான சிவனடியார்; a canonized *Ādišaiva* šaint, probably of the 8th C., one of three *Tēvāram* hymnists, one of 63.

த.வ. எழில்வடிவன்

[சுந்தரமூர்த்தி+நாயனார்]

[Skt. sundara+mūrtti > த. சுந்தரம்]

சுந்தரர் *šundarar*, பெ.(n.) **சுந்தரமூர்த்தி நாயனார்** பார்க்க; see *šundara-mūrtti-nāyaṉār.*

[Skt. sundara > த. சுந்தரர்]

சுந்தரரேகை *šundara-rēgai*, பெ.(n.) கையிற் காணப்படும் வரி (திருவாரூ. குற. MSS); a distinctive line in the palm.

[Skt. sundara+rēga > த. சுந்தரரேகை]

சுந்தரவாழைப்பூ *šundara-vāḻai-p-pū*, பெ.(n.) நெடுங்கோடுகளையுடைய புடைவை வகை (உ.வ.); a kind of saree with long stripes.

[சுதந்தரம்+வாழைப்பூ]

[Skt. sundara > த. சுந்தரம்]

சுந்தரன் *šundaraṉ*, பெ.(n.) 1. அழகுள்ளவன்; beautiful person. *"சந்தனச் சாந்திற் சுந்தர போற்றி" (திருவாச. 4: 203).* 2. **சுந்தரேசன்** பார்க்க; see *šundarēšaṉ*. *"சுந்தரன் கோயில் புக்குச் சொல்லுவான்" (திருவாலவா. 16: 8).* 3. **சுந்தரமூர்த்திநாயனார்** பார்க்க; see *šundara-mūrtti-nāyaṉār.* *"தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனும்" (பெருந்தொ. 1873).*

த.வ. எழிலன், அழகன்

[Skt. sundara > த. சுந்தரன்]

சுந்தரி[1] *šundari*, பெ.(n.) 1. அழகுள்ள பெண்; beautiful woman. *"சுந்தரி மரபிற்கொத்த தொன்மையின் றுணிவிற் றன்றால்" (கம்பரா. சூர்ப்ப. 49).* 2. வானவர்கோன் மனைவி (அக.நி.); *Indrāṇi*, queen of *Indran*. 3. கொற்றவை (துர்க்கை) (பிங்.); Durgāi. 4.மலைமகள் (பார்வதி); Pārvadi.

[Skt. sundari > த. சுந்தரி]

சுந்தரி[2] *šundari*, பெ.(n.) மூஞ்சூறு (பிங்.); grey musk-shrew.

[Skt. cucundari > த. சுந்தரி]

சுந்தரேசன் *šundarēšaṉ*, பெ.(n.) மதுரையில் கோயில்கொண்டுள்ள சிவன்; *šivaṉ* as worshipped at *Madurai*. *"சுந்தரேசன் மாயையோ தெரிந்திடாது" (திருவாலவா. 23: 8).*

த.வ. எழிலிறைவன்

[Skt. sundarēša > த. சுந்தரேசன்]

சுந்தி *šundi*, பெ.(n.) பழிதூற்றுபவர் (அக.நி.); tale-bearer, slanderer.

[Skt. šuṇtha > த. சுந்தி]

சுந்தோபசுந்தநியாயம் *šundōbašunda-niyāyam*, பெ.(n.) சுந்தன் உபசுந்தனென்ற அண்ணன் தம்பி இருவரும் திலோத்தமையை விரும்பி, அவள்பொருட்டுப் போரிட்டு மாய்ந்தாற்போல, ஒன்றனையொன்று கெடுக்கும் நெறி; *nyāya* of the two brothers *Sundaṉ* and *Upasundaṉ* who killed each other owing to their jealous love of the celestial maid *Tilōttamai*, used to denote mutual destruction. *"அவை தம்முள் ஒன்றா னொன்று அடிக்கப்பட்டுச் சுந்தோப சுந்த நியாயமாய்க் கெட்டொழியும்" (சி.போ.பா. பக். 17, சுவாமி).*

[Skt. Sunda+Upasundanyāyā > த. சுந்தோபசுந்த நியாயம்]

சுந்தோபசுந்தர் *šundōbašundar*, பெ.(n.) திலோத்தமையைக் காதலித்துத் தம்முட் போர்புரிந்து இறந்த சுந்தன், உபசுந்தன் என்ற அண்ணன் தம்பிகள் இருவர்; two demon brothers who killed each other in rivalry, both being enamoured of the beauty of the celestial maid *Tilōttamai*. *"சுந்தோப சுந்தப்பெயர்த் தொல்லையினோரு மொத்தார்" (கம்பரா. வாலிவதை. 39).*

சுநீரம் *šuniram*, பெ.(n.) ஒருவகை நீலக்கல்; a blue coloured precious gem jacinth. *"பதினோராவது சுநீரம்" (பைபிள், வெளி. 20: 21).*

[Skt. su-nira > த. சுநீரம்]

சுப்திபிண்டம் *šupti-pindam*, பெ.(n.) தங்கு பிண்டம் (சீவரட். 206); embryo shrunk in size owing to menstrual discharge during the period of gestation.

[சுப்தி+பிண்டம்]

[Skt. supti > த. சுப்தி]

சுப்பிரசன்னம் *šuppirašannām*, பெ.(n.) 1. தெளிவு; clearness, transparency, brightness. 2. அருள்; graciousness.

[Skt. su-prasanna > த. சுப்பிரசன்னம்]

சுப்பிரசுதை *šuppira-šudai*, பெ.(n.) காட்டெருமைப்பால், திருகுகள்ளிப்பால்; milky juice of *Euphorbia tirucalli*. (சா.அக.)

சுப்பிரதட்டம் *šuppiradattam*, பெ.(n.) அத்தி (தைலவ. தைல. 6); fig, ficus.

சுப்பிரதந்தி *šuppira-tandi*, பெ.(n.) **சுதந்தி, 1** (சங்.அக.) பார்க்க; see šudandi, 1.

[Skt. šubhradanti > த. சுப்பிரதந்தி]

சாம்பசிவம் மருத்துவ அகரமுதலி இச்சொல்லை சுப்பிரத் திட்டம் என்று கூறுகிறது.

[Skt. supratistha > த. சுப்பிரதட்டம்]

சுப்பிரதீகம்[1] *šuppiradigam*, பெ.(n.) எண்புற யானைகளுள் வடகீழ்த்திசை யானை; the male elephant of the north-east, one of *asta-tik-kajam*.

[Skt. supratika > த. சுப்பிரதீகம்]

சுப்பிரதீகம்[2] *šuppiradigam*, பெ.(n.) 1. நல்ல உறுப்புகளை (அவயவங்கள்) உடையது; being endowed with good organs. 2. கூர்மையான அறிவு; keen intellect. 3. மிக்கவொளி; great lustre. (சா.அக.)

சுப்பிரதீபக்கவிராயர் *šuppira-dipa-k-kavirāyar*, பெ.(n.) 18–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும், கூளப்ப நாயக்கன் காதல், விறலிவிடுதூது என்ற நூல்களின் ஆசிரியரும், வீரமாமுனிவர்க்கு உதவி புரிந்து வந்தவரும், கிறித்துவ மதத்தைத் தழுவிய வரும், தச்ச இனத்தவருமான புலவர்; a Christian convert of the carpenter's caste, assistant of Beschi, author of *Kūlappanāyakkan-kātal* and *Virali-vidu-tūdu*, 18th c.

சுப்பிரதீபம்[1] *šuppira-dibam*, பெ.(n.) 1. மிக்கவொளி; great lustre, dazzling brightness. 2. கூர்மையான அறிவு; keen perception, actue intellect.

[Skt. su-pradipa > த. சுப்பிரதீபம்[1]]

சுப்பிரதீபம்[2] *šuppira-dipam*, பெ.(n.) சுப்பிரதீகம் (திவா.) என்பதன் மறுவடிவு; corr. of *šuppira-dibam*.

[Skt. supratika > த. சுப்பிரதீபம்[2]]

சுப்பிரபேதம் *šuppirapēdam*, பெ.(n.) சிவத்தோன்றிய நூல் இருபத்தெட்டனுள் ஒன்று (சைவச. பொது. 232); an ancient *šaivam* scripture in šanskrit, one of 28 *šivāgamam*.

[Skt. Suprabhēda > த. சுப்பிரபேதம்]

சுப்பிரம் *šuppiram*, பெ.(n.) 1. வெண்மை (பிங்.); whiteness. 2. தூய்மை; purity, spotless ness. 3. மிக்கவொளி; great lustre, brilliancy. *"குரு சுப்பிரமணியாக் கொள்" (தனிப்பா. ii, 217, 516).* 4. ஓகநிலை இருபத்தேழனுள் ஒன்று; a division of time, one of 27 yōgam, q.v. 5. முத்துக் குற்றத்தொன்று; white speck, as a flaw in pearls. *"சுப்பிரமும் திரங்கலும் உடையன உட்பட முத்து ஒன்பதினால்" (S.I.I.II, 78).*

[Skt. šubhra > த. சுப்பிரம்]

சுப்பிரமணி *šuppira-mani*, பெ.(n.) வயிரம் (யாழ்.அக.); diamond.

[Skt. šubhra > த. சுப்பிரமணி]

சுப்பிரமணியதீட்சிதர் *šubbiramaniya-ditšidar*, பெ.(n.) ஆழ்வார் திருநகரியில் வாழ்ந்தவரும், 17-ஆம் நூற்றாண்டினரும், பிரயோகவிவேகமென்னும் இலக்கண நூலின் ஆசிரியருமான பிராமணப் புலவர்; a Brahmin scholar of *Alvār-tirunagari*, 17th C., author of *pirayōga-vivēgam*, a grammatical treatise Tamil.

சுப்பிரமணியன் *šuppiramaniyan*, பெ.(n.) முருகக்கடவுள்; God *Murugan.*

[Skt. šu-brahmanya > *த. சுப்பிரமணியன்]*

[பிராமணர்க்குக நல்லவன் என்பது பொருள்]

சுப்பிரமதுவா *šuppira-maduvā*, பெ.(n.) கூவைக் கிழங்கு மாவு (மூ.அ.); flour of the *Malabar* arrow-root.

சுப்பிரயோகம் *šuppira-y-ōgam*, பெ.(n.) காமநோயால் உண்டாகும் ஐவகை நோய்களுள் காதலரைக் குறித்தே நினைவும் பேச்சுமா யிருக்கும் நிலை (சூடா.); a condition of love - stricken person in which he or she is wholly engrossed in thinking and talking about the object of love, one of *pañca-pāṇāvattai.*

[Skt. suprayōga > த. சுப்பிரயோகம்]

சுப்பிராசி *šuppirāši*, பெ.(n.) வேலையாள் (C.G.82); peon, servant.

[U. chaprāsī > த. சுப்பிராசி]

சுப்பு *šuppu*, பெ.(n.) வேற்றுமையுருபு; case ending. *"வேற்றுமையுருபுகளைச் சுப்பெனவும்" (தொல். விருத். பக். 55).*

[Skt. sup > த. சுப்பு]

சுப்புத்தாது *šuppu-t-tādu*, பெ.(n.) பெயரடியாகப் பிறந்த வினை (பி.வி.35, உரை); verb derived from noun.

[Skt. sup+dhātu > த. சுப்புத்தாது]

சுபக்கம் *šubakkam*, பெ.(n.) **சுபட்சம்** பார்க்க; see *šubatcam.*

[Skt. sva-paksa > த. சுபக்கம்]

சுபக்கிரகம் *šuba-k-kiragam*, பெ.(n.) வளர்பிறைத் திங்கள் குரு அறிவன், வெள்ளி (சுக்கிரன்) ஆகிய நாற்கோள்; auspicious planet, as waxing Moon, Mercury, Jupiter, Venus. *"பூருவபக்க சந்திரனுஞ் சுக்கிரனுஞ் சுபக்கிரகம்" (விதான. மரபி. 2, உரை).*

த.வ. நற்கோள்

[Skt. šubha+graha > த. சுபக்கிரகம்]

சுபக்கோள் *šuba-k-kōl*, பெ.(n.) **சுபக்கிரகம்** பார்க்க; see *šuba-k-kiragam. "மழைக் கோள்.... நான்குஞ் சுபக்கோ ளென்றும்" (மாறனலங். 822, உதா.).*

[சுபம்+கோள்]

[Skt. šubha > த. சுபம்]

சுபகதி *šuba-gadi*, பெ.(n.) 1. வீடுபேறு; salvation. 2. மகிழ்ச்சி; delight.

[Skt. šubha+gate > த. சுபகதி]

சுபகரம் *šuba-karam*, பெ.(n.) நல்லதைச் செய்வது; that which is auspicious, beneficent.

[சுபம்+கரம்]

[Skt. šubha > த. சுபம்]

சுபகாரி *šuba-kāri*, பெ.(n.) நல்லதைச் செய்பவன்; one who does good. "சுபகாரி துட்டருக்கு நிட்டூரன்" (மான்விடு. 168).

[சுபம்+காரி]

[Skt. šubha> த. சுபம்]

சுபகாரியம் *šuba-kāriyam*, பெ.(n.) மங்கள நிகழ்வு; (சடங்கு) good deed, auspicious event, as marriage.

[சுபம்+காரியம்]

[Skt. šubha > த. சுபம்]

சுபகாலம் *šuba-kālam*, பெ.(n.) நல்வேளை; auspicious or prosperous time.

[சுபம்+காலம்]

[Skt. šubha > த. சுபம்]

சுபகிருது *šuba-kirudu*, பெ.(n.) வியாழன் சுற்று ஆண்டு அறுபதனுள் 36–வது; the 36th year of Jupiter cycle.

[Skt. šubha-kri > த. சுபகிருது]

சுபச்சம் *šubaccam*, பெ.(n.) தூய்மையானவன்; man of purity. 2. உடல்நலமுள்ள; man of health. (சா.அக.)

சுபசகுனம் *šuba-šagunam*, பெ.(n.) நல்லகுறி; good omen, opp. to *aba-šagunam*.

த.வ. நற்புட்குறி

[Skt. šubha +šakuna> த. சுபசகுனம்]

சுபசரிதம் *šuba-šaridam*, பெ.(n.) நன்னடத்தை; good life or conduct. "உனது சுபசரிதமுமிங்கொத்தவேனும்" (பிரபோத. 46: 20).

த.வ. நன்னடக்கை

[Skt. šubha +carita> த. சுபசரிதம்]

சுபசரிதை *šuba-šaridai*, பெ.(n.) மங்கலவரவு; auspicious arrival. "சுபசரிதை சோழனெதிர்கண்டனன்" (சேக்கிழார். பு, 60).

[Skt. šubha+carita > த. சுபசரிதம்> சுபசரிதை]

சுபசுவீகரணம் *šuba-šuvīkaranam*, பெ.(n.) சுபசுவீகாரம் பார்க்க; see *šuba-šuvīkāram*.

சுபசுவீகாரம் *šuba-šuvīkāram*, பெ.(n.) இறப்புச் சடங்கின் இறுதியில் நல்ல நிகழ்ச்சிகளை மேற்கொள்வதற் கறிகுறியாக செய்யுஞ் சடங்கு; ceremony of resuming auspicious practices at the close of funeral ceremonies.

த.வ. நன்மேற்செயல்

[Skt. šubha+svīkāra > த. சுபசுவீகாரம்]

சுபசூசகம் *šuba-šūšagam*, பெ.(n.) மங்கலத்தைக் காட்டுங்குறி; auspicious sign, favourable omen. "சுபசூசகமான கருமங்களையெல்லாம் தாமே அருகிலிருந்து நடத்திவைத்து" (குருபரம். 167).

த.வ. மங்கலக்குறி

[Skt. šubha+ sūcaka> த. சுபசூசகம்]

சுபசூசனம் *šuba-šūšanam*, பெ.(n.) **சுபசூசகம்** (இ.வ.) பார்க்க; see *šuba-šūšagam*.

சுபசோபனக்கை *šuba-šōbana-k-kai*, பெ.(n.) வலக்கையின் பெருவிரலொழிந்த மற்ற விரல் நான்கினாலும் இடக்கைப் பெருவிரலைப் பிடித்து, அவ்விடக்கையின் மற்ற விரல்களை வலக்கை விரல்களின் நுனியொடு பொருந்தவைக்கும் இணைக்கை வகை. (பரத.பாவ.60.); gesture with two hands in which the tips of the fingers of the right touch the left thumb, and the tips of fingers of the left touch those of the right.

[சுபசோபனம்+கை]

[Skt. šubha+ šōbhana> த. சுபசோபனம்]

சுபசோபனம் *šuba-šōbanam*, பெ.(n.) மங்கலச் செய்தி; glad news, happy event, as the birth of a child. *"தொல்புவி செழிக்கு நலமுஞ் சுபசோபனங்களும்" (குமரே. சத. 5).*

*[**Skt.** šubha+šōbhana > த. சுபசோபனம்]*

சுபட்சம் *šubatcam*, பெ.(n.) 1. சொற்போரில் தன்கொள்கை; one's own side in a debate or discussion, views or doctrines of one's own sect or party, opp. to *para-patcam*. 2. சிவஞானசித்தியாரில் சிவசமயத்திற்குரிய கொள்கையை உணர்த்தும் பகுதி; the portion of *šiva-ñāna-šttiyār* that enunciates the principles of the šaivam sect.

த.வ. தற்பக்கக்கொள்கை

*[**Skt.** sva-pakṣa > த. சுபட்சம்]*

சுபடன் *šubadan*, பெ.(n.) குறிக்கோளில் மாறா வீரன்; ideal hero or warrior. *"போர்க்களத்தி லெவனே சுபடனா மென்ன" (ஞானவா. நிருவாண. 48).*

த.வ. திறமறவன்

*[**Skt.** su-bhaṭa > த. சுபடன்]*

சுபத்தலம் *šuba-t-talam*, பெ.(n.) தேவாலயம் (யாழ்.அக.); temple.

[சுப+தலம்]

*[**Skt.** šubha > த. சுபம்]*

*[த. தலம் >**Skt.** štala-]*

சுபத்தன் *šubattan*, பெ.(n.) மகிழ்ச்சி யடைந்தவன்; happy person. *"துன்பமெலா மற நீங்கிச் சுபத்தராய்" (தேவா. 710, 4).*

*[**Skt.** subha-stha > த. சுபத்தன்]*

சுபத்தானம் *šuba-t-tānam*, பெ.(n.) கணியச் சக்கரத்தில் நல்லதைக் குறிக்கும் ஓரை; auspicious or favourable sign of the zodiac relative to the ascendant in horoscope.

*[**Skt.** šubha+sthāna > த. சுபத்தானம்]*

சுபத்திரை *šuba-t-tirai*, பெ.(n.) 1. அருச்சுனன் மனைவி; a wife of Arjunan. *"சுபத்திரையுந் தோழியர்கள் சூழ வந்தாள்" (பாரத. அருச்சுனன்றீர். 54).* 2. கறுப்பு மாடு; black cow. *"கரிய சுபத்திரை" (தணிகைப்பு. அகத்திய. 486).*

*[**Skt.** subhadrā > த. சுபத்திரை]*

சுபதம் *šubadam*, பெ.(n.) 1. நன்மையைக் கொடுப்பது; that which gives happiness. *"சுபதக்ரம முறுநெறியே" (திருவாலவா. 28, 49).* 2. அரசமரம் (சங்.அக.); pipal tree.

*[**Skt.** šubha-da > த. சுபதம்]*

சுபதினம் *šuba-dinam*, பெ.(n.) நன்னாள்; auspicious day.

*[**Skt.** subha+dina > த. சுபதினம்]*

சுபந்தம் *šubandam*, பெ.(n.) உருபேற்ற பெயர்ச்சொல்; inflected noun. *"தத்தி துங்கா ரக மாஞ் சுபந்தம்" (பி.வி. 42).*

*[**Skt.** sub-anta > த. சுபந்தம்]*

சுபபந்துவராளி *šuba-pandu-varāḷi*, பெ.(n.) பண் இராக வகை, (பரத. ராக. 103); a specific melody-type.

*[**Skt.** šubha + To. pantu+Skt. varāli> த. சுபம்+பந்துவராளி]*

சுபம்[1] *šubam*, பெ.(n.) 1. மங்கலம்; prosperity, auspiciousness. *"சுபமாக்கு மசுபந் தன்னை" (ஞானவா. முமுட்சு. 20).* 2. பேறு; happiness, felicity, spiritual bliss. *"துன்பெலா மறநீங்கிச் சுபத்தராய்" (தேவா. 710, 4).* 3. வீடுபேறு, முத்தி (பிங்.); final deliverance. 4. நன்மை; goodness, excellence. *"சுபசரிதன்" (பதினொ. ஆளு. திருக்கலம். 34).* 5. மங்கலவினை (பிங்.); good deed, auspicious event. 6. அழகு (சூடா.); beauty. 7. ஒகநிலை இருபத்தேழனுள் ஒன்று; (Astron.) a division of time, one of 27 yōgam.

*[**Skt.** šubha > த. சுபம்]*

சுபம்² *šubam*, பெ.(n.) வெண்மை (சூடா.); whiteness.

[Skt. šubhra > த. சுபம்]

சுபம்பாடு-தல் *šubam-pāḍu-*, 5 செ.கு.வி.(v.i.) நல்ல நிகழ்ச்சியின் முடிவில் மங்கலம் பாடுதல் (இ.வ.); to sing a song of benediction, at the close of an auspicious occasion.

[சுபம்+பாடு-,]

[Skt. šubha > த. சுபம்]

சுபமங்களம் *šuba-mangaḷam*, பெ.(n.) வாழ்த்துப் பாட்டு; benedictory utterance in a song. *சுபமங்களம் பாடுக (உ.வ.).*

[சுபம்+மங்களம்]

[Skt. šubha> த. சுபம்]

சுபமத்து *šubam-attu*, பெ.(n.) கடிதம் முதலியவற்றின் முதலிறுதிகளில் 'மங்கல முண்டாகுக' என வாழ்த்துதலைக் குறிக்கும் ஒரு தொடர்மொழி; an expression meaning Let there be auspiciousness, used at the beginning or end of a writting.

த.வ.மங்கலமாகுக!

[Skt. šubha+astu > த. சுபமஸ்து> த.சுபமத்து]

சுபமிருத்து *šuba-miruttu*, பெ.(n.) முதிர்ந்த அகவையில் நேரும் நல்ல சாவு; natural death of a person at ripe old age.

[Skt. šubha +mrtym> த. சுபமிருத்து]

சுபமுகூர்த்தம் *šuba-mugūrttam*, பெ.(n.) திருமணத்திற்குரிய நல்வேளை; auspicious time, as for marriage.

த.வ. நன்முழுத்தம்

[Skt. šubha +muhūtā> த. சுபமுகூர்த்தம்]

சுபயோகம் *šuba-yōgam*, பெ.(n.) 1. சிற்சில கிழமைகளோடு (வாரங்களோடு) சிற்சில விண்மீன்களேனும், நிலவுநாள் (திதி)களேனும் இணைவதனால் நன்மை விளைவிப்பதாகக் கருதப்படும் ஒகம் (விதான. குணாகுண. 9-14); (சோதிட. சிந். 45); conjuction of a week-day with a particular nakṣatra or titi, considered auspicious. 2. அரியபேறு; rare luck. *"சக்ரதரபாக்ய மான சுபயோகமும்" (தாயு. அகிலாண். 1).*

த.வ. நற்பேறு, நல்வேளை

[Skt. šubha+yōga> த. சுபயோகம்]

சுபவசனம் *šuba-vašanam*, பெ.(n.) **சுபவாக்கு** பார்க்க; see *šuba-vākku.*

[Skt. šubha+vacana > த. சுபவசனம்]

சுபவாக்கியம் *šuba-vākkiyam*, பெ.(n.) **சுபவாக்கு** பார்க்க; see *šuba-vākku.*

[Skt. šubha+vākya > த. சுபவாக்கியம்]

சுபவாக்கு *šuba-vākku*, பெ.(n.) நல்லகுறியான வாக்கு; auspicious words; oracular indication of good.

த.வ. நற்சொல்

[Skt. šubha+vāc > த. சுபவாக்கு]

சுபவாசகம் *šuba-vāšagam*, பெ.(n.) **சுபவாக்கு** பார்க்க; see *šuba-vākku.*

[Skt. šubha +vācaka> த. சுபவாசகம்]

சுபவாதனை *šuba-vādanai*, பெ.(n.) உயிர் பேரின்பத்துள் அழுந்துகை (வின்.); blissful experience of the soul, spiritual enjoyment.

[Skt. šubha+vāsanā > த. சுபவாதனை]

சுபன் *šuban*, பெ.(n.) நன்மையை விளைவிக்குங் கோள்; planet that brings good fortune.

[Skt. šubha > த. சுபன்]

சுபன்னன் *šubannan*, பெ.(n.). அழகிய சிறகுகளையுடைய கலுழன்; kite *(garuḍan)*, as having beautiful wings.

[Skt. su-parṇa > த. சுபன்னன்]

சுபா *šubā*, பெ.(n.) நாட்டின் ஒரு பகுதி (W.G.491). district or province, especially of the Moghul empire.

த.வ. தேயப்பகுதி

[Ar. subā > த. சுபா]

சுபாங்கி *šubāṅgi*, பெ.(n.) கருத்தைக் கவரும் உடற்கூறு உடையவள் (சங்.அக.); woman of fine features or beautiful limbs.

த.வ. எழிலுறுப்பன்

[Skt. šubhāṅgi > த. சுபாங்கி]

சுபாங்கை *šubāṅgai*, பெ.(n.) **சுபாங்கி** பார்க்க; see *šubāṅgi*.

[Skt. subhāṅgā > த. சுபாங்கை]

சுபாசுபம் *šubāšubam*, பெ.(n.) நன்மை தீமைகள் நிகழுங் காலம் (யாழ்.அக.); occasions of weal and woe.

[Skt. subha+a-šubha > த. சுபாசுபம்]

சுபாடிதம் *šubāḍidam*, பெ.(n.) பெரியோர் களின் சிறந்த கட்டுரை; sayings of great men, generally inverse. *"வெண்டாமரையில் தேச சுபாடிதபயனை மறந்தனள்" (சேக்கிழார். பு. 93).*

[Skt. subhāṣita > த. சுபாடிதம்]

சுபாதார் *šubādār*, பெ.(n.) நாட்டதிகாரி (R.T.); governor of a province.

[Ar. subā > த. சுபாதார்]

சுபாதிசயம் *šubādišayam*, பெ.(n.) நற்செய்தி (யாழ்.அக.); good news.

[Skt. šubha+ati-šaya > த. சுபாதிசயம்]

சுபாபாங்கை *šubābāṅgai*, பெ.(n.) அழகிய கடைக்கண்ணுள்ளவள் (யாழ்.அக.); woman who has a squint looking eye .

த.வ. எழிற்கடைக்கண்ணி

[Skt. šubhāpāṅgā > த. சுபாபாங்கை]

சுபார்சுவர் *šubāršuvar*, பெ.(n.) தூயநீரவர் (தீர்த்தங்கரர்) இருபத்து நால்வருள் ஒருவர் (திருக்கலம். காப்பு, உரை); a Jaina Arahat, one of 24 *tirttaṅkarar*.

[Skt. supāršva > த. சுபார்சுவர்]

சுபாலம் *šubālam*, பெ.(n.) நூற்றெட்டு மறையின் அறிவுப்பகுதிகளுள் (உபநிடதம்) ஒன்று (சங்.அக.); an *upaniṣad*, one of 108.

[Skt. subāla > த. சுபாலம்]

சுபாலிகை *šubāligai*, பெ.(n.) அடுப்பு (சது.); oven, fire-place.

சுபாவக்காரன் *šubāva-k-kāraṉ*, பெ.(n.) 1. நேர்மையானவன், தகுதியுடையவன்; honest, sincere person. 2. மூடன் (இ.வ.); simpleton.

[Skt. svabhāva > த. சுபாவம்+காரன்]

சுபாவங்காட்டு-தல் *šubāvaṅ-gāṭṭu-*, 5 செ.கு.வி.(v.i.) 1. இயல்பைக் காட்டுதல்; to appear in one's true colours to show oneself. 2. இழிகுணங்காட்டுதல்; to betray ill-breeding or low birth by mean actions, used in reproach. 3. நடித்தல் (வின்.); to affect sobriety, assume or act a character.

[Skt. svabhāva > த. சுபாவம்+காட்டு-.]

சுபாவசித்தம் *šubāva-šittam*, பெ.(n.) இயற்கையாகவே அமைந்திருப்பது; that which is inborn or natural. *"சுபாவசித்தமாகு வதேயன்றி" (வேதா. சூ. 125).*

[Skt. svabhāva+šiddha > த. சுபாவசித்தம்]

சுபாவப்பேச்சு *šubāva-p-pēccu*, பெ.(n.) கபடமற்ற பேச்சு (இ.வ.); innocent, guileless talk.

[Skt. svabhāva > த. சுபாவம்+பேச்சு]

சுபாவம் *šubāvam*, பெ.(n.) 1. இயல்பு; nature, natural state, inherent quality or disposition, instinct. *"சுபாவமாக வளர்*

வனத்தை" (விநாயகபு. 77: 109). 2. கலப் பற்றது; genuineness, reality, unaffectedness. 3. கபடமின்மை (உ.வ.); sincerity, honesty. 4. மூடத்தன்மை (இ.வ.); simple-mindedness.

த.வ. இயல்பு, தன்மை

[Skt. sva-bhāva > த. சுபாவம்]

சுபாவமுத்தி *šubāva-mutti*, பெ.(n.) துறவிகள் அடைதற்குரிய மேலுலக வீடுபேறு (வின்.); perfect bliss, absolute deliverance from birth attainable by *ñāṉi*.

[Skt. sva-bhāva+mukti > த. சுபாவமுத்தி]

சுபாவமேரை *šubāva-mērai*, பெ.(n.) வழக்கமான முறை (வின்.); ordinary, usual manner or order.

சுபாவவாதி *šubāva-vādi*, பெ.(n.) கடவுளின்றி இயற்கையாகவே எல்லாந் தோன்றியது என்று வழக்காடுபவன் (சங்.அக.); one who holds that all things are evolved from nature without the help of God.

[Skt. sva-bhāva+vādin > த. சுபாவவாதி]

சுபாவத்தன் *šubāvattaṉ*, பெ.(n.) **சுபாவக் காரன்** (உ.வ.) பார்க்க; see *šubāva-k-kāraṉ*.

[Skt. sva-bhāva+stha > த. சுபாவத்தன்]

சுபாவி *šubāvi*, பெ.(n.) **சுபாவக்காரன் பார்க்க;** see *šubāva-k-kāraṉ*.

[Skt. sva-bhāvin > த. சுபாவி]

சுபாவிகம் *šubāvigam*, பெ.(n.) இயற்கைத் தன்மை (வின்.); natural state or condition.

[Skt. svābhāvika > த. சுபாவிகம்]

சுபானு *šubāṉu*, பெ.(n.) ஆண்டு அறுபதனுள் 17–ஆவது (யாழ்.அக.); the 17th year of the jupiter cycle.

[Skt. su-bhānu > த. சுபானு]

சுபிட்சம் *šubiṭcam*, பெ.(n.) காலமழை முதலியவற்றால் உண்டாகும் செழிப்பு (யாழ்.அக.); prosperity due to timely rain, richness of crops.

த.வ. செழிப்பு

[Skt. subhikṣa > த. சுபிட்சம்]

சுபுகம் *šubugam*, பெ.(n.) மோவாய்; chin. *"மஞ்சுளமாகி யிருப்பது சுபுகநன் றென்பர்" (திருவிளை. உக். வேல்வளை. 35).*

[Skt. cubuka > த. சுபுகம்]

சுபுகாணி *šubukāṇi*, பெ.(n.) முகமதியர்மந்திரம் (மதி. க. ii, 93); a formula of Muslim mantra.

[Ar. subhā-nallāh > த. சுபுகாணி]

சுபுட்பம் *šubuṭpam*, பெ.(n.) 1. இலவங்கம் clove-tree. 2. பவழமல்லிகை; night jasmine.

[Skt. supuṣpa > த. சுபுட்பம்]

சுபுத்தி *šubutti*, பெ.(n.) நல்லறிவு (சங்.அக.); good sense.

[Skt. su-buddhi > த. சுபுத்தி]

சுபுத்திரன் *šubuttiraṉ*, பெ.(n.) நன்மகன்; good, worthy son. *"நின்போற் சுபுத்திரரொரு வருண்டோ" (பிரபோத. 2: 30).*

[Skt. su-putra > த. சுபுத்திரன்]

சுபேதார் *šubēdār*, பெ.(n.) படைத்துறையில் ஓர் அதிகாரி; (R.T.) indian military officer whose rank corresponds to that of captain.

த.வ. படையதிமான்

[U. subādār > த. சுபேதார்]

சுபை *šubai*, பெ.(n.) நாட்டுப்பகுதி (வின்.); district, province.

த.வ. மாவட்டம்

[U. subā > த. சுபை]

சுபையதார் *šubaiyadār*, பெ.(n.) **சுபேதார்** (வின்.) பார்க்க; see *šubēdār*.

சுபோதம்[1] *šubōdam*, பெ.(n.) 1. ஆழ்ந்த குறையிலா அறிவு profound, unerring wisdom. *"அற்புத சுபோதசுக" (திருப்பு. 132).* 2. சுயபோதம் (இ.வ.) பார்க்க; see *šuya-bōdam.*

[Skt. su-bōdha > த. சுபோதம்]

சும்பகம் *šumbagam*, பெ.(n.) ஊசிக்காந்தம் (பிங்.); magnet, loadstone.

[Skt. cumbaka > த. சும்பகம்]

சும்பத்தனம் *šumba-t-tanam*, பெ.(n.) மூடத்தனம் (உ.வ.); foolishness, stupidity.

[Skt. šumbha > த. சும்பம்+தனம்]

சும்பப்பிரபஞ்சம் *šumba-p-pirapañjam*, பெ.(n.) அறிவீனர் தொகுதி (உ.வ.); the world of fools.

[Skt. šumbha +pra-pañja> த. சும்பப் பிரபஞ்சம்]

சும்பன் *šumban*, பெ.(n.) மூடன் (வின்.); fool, dunce.

[Skt. šumbha > த. சும்பன்]

சும்பனம் *šumbanam*, பெ.(n.) 1. முத்தமிடுகை; kissing, fondling with the lips. 2. சப்புகை; sucking.

[Skt. cumbana > த. சும்பனம்]

சும்பி-த்தல் *šumbi-*, 4. செ.கு.வி.(v.i.) 1. முத்தமிடு-தல் (உ.வ.); to kiss, fondle with the lips. 2. சப்புதல்; to suck.

[Skt. cumb > த. சும்பி-த்தல்]

சும்பிதகரணம் *šumbida-karanam*, பெ.(n.) புணர்ச்சி வகை; a mode of copulation.

[Skt. cumbita > த. சும்பிதம்+கரணம்]

சும்பிதம் *šumbidam*, பெ.(n.) சும்பனம் (யாழ்.அக.) பார்க்க; see *šumbanam.*

[Skt. cumbitu > த. சும்பிதம்]

சுமங்கலம்[1] *šumangalam*, பெ.(n.) பெரிதும் மங்கலமாயுள்ளது (வின்.); that which is lucky or auspicious.

த.வ. நன்மங்கலம்

[சு+மங்கலம்]

[Skt. su- > த. சும]

சுமங்கலம்[2] *šumangalam*, பெ.(n.) ஒருவகை நற்சுழியுள்ள குதிரை (அசுவசா. 16); horse with a certain auspicious mark.

[Skt. šu-mangala > த. சுமங்கலம்]

சுமங்கலி *šumangali*, பெ.(n.) கணவன் உயிருடனிருக்க மங்கலநாண் அணிந்திருப் பவள்; married woman, woman under coverture, as wearing the wed. lock, opp. to *amangali*. *"குணமுள்ள சுமங்கலிக ளங்கே வந்து கூடினார்" (இராமநா. பாலகா. 23). மறுவ. வாழ்வரசி*

த.வ. நன்மங்கலத்தள்

[Skt. su-mangalī > த. சுமங்கலி]

சுமங்கலிப்பிரார்த்தனை *šumangali-p-pirārttanai*, பெ.(n.) குடும்பத்தில் கணவன் உயிருடன் இருக்கும் போதே மங்களமாக இறந்த பெண்ணை வழிபட்டுச் செய்யும் சடங்கு; ceremony in memory of a woman who died while her husband was alive.

[Skt. su-mangali+Skt. prārthanā > த. சுமங்கலிப்பிரார்த்தனை]

சுமங்கலை *šumangalai*, பெ.(n.) **சுமங்கலி** பார்க்க; see *šumangali.*

[Skt. sumangalā > த. சுமங்கலை]

சுமதி *šumadi*, பெ.(n.) 1. நல்லறிவு; intelligence, good sense. 2. அறிஞன்; intelligent, sensible person; wise person. 3. தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர் (திருக்கலம். காப்பு. உரை); a Jaina Arhat, one of 24 *tīrttangarar.*

த.வ. நன்மதி, நல்லறிவு

[சு+மதி]

*[**Skt.** su- > த. சும]*

சுமந்திரன்[1] *šumandiran*, பெ.(n.) தசரதருக்குத் தேரோட்டுந் தொழில் புரிந்து வந்த மந்திரி; the charioteer and counsellor of Dašaratha. *"மானவனு மந்திரி சுமந்திரனை" (கம்பரா. தைல. 18).*

*[**Skt.** su-mantra > த. சுமந்திரன்]*

சுமந்திரன்[2] *šumandiran*, பெ.(n.) அரசிறை அமைச்சன் (சுக்கிரநீதி. 66); minister in charge of revenue.

*[**Skt.** sumantra > த. சுமந்திரன்]*

சுமம் *šumam*, பெ.(n.) பூ (பிங்.); flower.

*[**Skt.** suma > த. சுமம்]*

சுமரணம் *šumaranam*, பெ.(n.) **சுமரணை** பார்க்க; see *šumaranai.*

*[**Skt.** smarana > த. சுமரணம்]*

சுமரணை *šumaranai*, பெ.(n.) 1. சுரணை; sensitiveness, feeling. 2. தன்னறிவு; consciousness. *"சுமரணை தப்பிப் பேசுகிறான்".* 3. நினைவு; memory, remem brance.

*[**Skt.** smarana > த. சுமரணை]*

சுமனசம் *šumanašam*,. பெ.(n.) பூ (பிங்.); flower.

*[**Skt.** sumanas > த. சுமனசம்]*

சுமனை *šumanai*, பெ.(n.) செம்பெற்றம்; red cow. *"செய்யநிறச் சுமனை" (தணிகைப்பு. அகத். 486).*

த.வ. செவ்வா

*[**Skt.** sumanā > த. சுமனை]*

சுமார்[1] *šumār*, வி.எ.(adv.) ஏறத்தாழ, சற்றொப்ப; about, approximately, on an average.

*[**Pers.** ṣumār > த. சுமார்]*

சுமார்[2] *šumār*, பெ.எ.(adj.) மட்டம்; moderate-fair. *விலை சுமார்தான் (உ.வ.)*

த.வ. நடுத்தரம்

*[**Pers.** ṣumār > த. சுமார்]*

சுமார்த்தகற்பம் *šumārtta-karpam*, பெ.(n.) வேள்வியல்லாத மற்றை வினைப்பயன்களுக் குரியவற்றைக் கூறும் மறைப்பாகம் (வேதபாகம்) (சுக்கிரநீதி, 209). Portions of the *Vedas,* not applicable to sacrifices.

[சுமார்த்தம்+கற்பம்]

*[**Skt.** smārta > த. சுமார்த்தம்]*

சுமார்த்தம் *šumārttam*, பெ.(n.) அற (நீதி)நூல்களிற் கூறிய நெறிகள்; precepts or rules laid down in *Smṛtis*. *"சுமார்த்தத்திற் குயிற்று பல கருமத்தும்" (ஸவிநாயகபு. 73: 24).*

த.வ. தொன்மறை நெறிகள்

*[**Skt.** smārta > த. சுமார்த்தம்]*

சுமார்த்தர் *šumārttar*, பெ.(n.) பெரும்பாலும் ஒருமை-இரண்டன்மை (அத்துவைதம்) கொள்கையைத் தழுவியுள்ள பார்ப்பன வகுப்பினர் (உ.வ.); a sect of Brahmins who follow generally the tenets of Advaidism.

*[**Skt.** smārta > த. சுமார்த்தர்]*

சுமாருக்கு *šumārukku*, வி.எ.(adv.) குறிப்பிடப்படும் நேரத்திற்குப் பின்; when added after the stated hour around; about. *மாலை நான்கு மணி சுமாருக்கு வருவதாகச் சொன்னான்.*

[சுமார் → சுமாருக்கு.]

*[**Pers.** ṣumār > த. சுமார்]*

சுமித்திரை *šumittirai*, பெ.(n.) தசரதர் பட்டத் தரசிகள் மூவருள், இலக்குமணச் சத்துருக் கனரைப் பெற்றவள்; one of the three queens of Dašaratha, mother of Lakṣmaṇa and Satrughna. *"அன்னை சுமித்திரை கோயில் புக்கான்" (கம்பரா. நகர்நீங். 142).*

*[**Skt.** sumitrā > த. சுமித்திரை]*

சுமிருதி *šumirudi*, பெ.(n.) மத நம்பிக்கைத் தொடர்பான உலகியல் நடைமுறை; see *šmirudi*, religious tradition.

[Skt. smṛti > த. சுமிருதி]

சுமுகம் *šumugam*, பெ.(n.) இன்முகம் (உ.வ.); genial countenance.

த.வ. இன்முகம்

[சு+முகம்]

[Skt. su- > த. சு]

சுமுகன் *šumugaṉ*, பெ.(n.) இன்முகன் (உ.வ.); person of genial countenance.

[Skt. su-mukha > த. சுமுகன்]

சுமுத்திரை *šumuttirai*, பெ.(n.) 1. சரியளவு; standard weights and measures. *"சுமுத்திரையாக அளந்தான்".* 2. சரியானது; genuineness, that which is bona fide. 3. நேர்மை; uprightness, justness. *அவன் சுமுத்திரையாய் நடந்து கொள்கிறான்.*

[Skt. su-mudrā > த. சுமுத்திரை]

சுமுத்திரைக்கோல் *šumuttirai-k-kōl*, பெ.(n.) ஓர் அளவு கோல் (வின்.); a measuring rod.

[சுமுத்திரை+கோல்]

[Skt. su-mudrā > த. சுமுத்திரை]

சுமேரு *šumēru*, பெ.(n.) வானவர்க்கு இருப்பிடமான மேருமலை (அபி.சிந்.); a peak in Mount *Mēru*, believed to be the abode of gods.

[Skt. sumēru > த. சுமேரு]

சுய *šuya*, பெ.அ.(adj.) 1. ஒருவர் தனக்குத் தானே ஏற்படுத்திக் கொள்ளும்; தன் மீது கொள்ளும்; தானே தனியாகச் செய்து கொள்ளும்; self. *"சுய இரக்கம். இயலாமையினால் ஏற்பட்ட சுய வெறுப்பில் விரக்தியுடன் பேசினான்".* 2. தனக்குரிய; self; one's own. *"சுய பலம். சுய முகவரி எழுதிய அஞ்சல் அட்டை ஒன்றை இணைக்கவும்".*

சுயஉணர்வு *šuya-uṇarvu*, பெ.(n.) தன்னுடைய நிலை, செயல், சூழல் முதலியவற்றை அறியும் கட்டுப்பாட்டு உணர்வு; நினைவு; conscious ness; self-awareness; self-control.

[சுய + உணர்வு]

[Skt. sva > த. சுய]

சுயகர்த்தன் *šuya-karttaṉ*, பெ.(n.) தன் முனைப்பு ஆட்சியர் (வின்.); independent lord, autocrat.

[Skt. svayam+kartṛ > த. சுயகர்த்தன்]

சுயகாரியதுரந்தரன் *šuya-kāriya-turandaraṉ*, பெ.(n.) **சுயகாரியப்புலி** (வின்.) பார்க்க; see *šuya-kāriya-p-puli.*

த.வ. தன்நலவிரும்பி

[Skt. sva+kārya+dhurandhara > த. சுயகாரியதுரந்தரன்]

சுயகாரியப்புலி *šuya-kāriya-p-puli*, பெ.(n.) தன் நலத்திலேயே ஈடுபட்டிருப்பவன் (உ.வ.); extremely selfish person.

[சுயம்+காரியம்+புலி]

[Skt. sva > த. சுயம்]

சுயகாரியம் *šuya-kāriyam*, பெ.(n.) 1. தன்னுடைய வேலை (வின்.); one's own affair, private business. 2. **சுயநலம்** (உ.வ.) பார்க்க; see *šuya-nalam.*

[சுயம்+காரியம்]

[Skt. sva > த. சுயம்]

சுயங்கட்டு-தல் *šuyaṅ-kaṭṭu-*, செ.கு.வி.(v.i.) **சுயம்பாடு-1** (இ.வ.) பார்க்க; *see šuyam-pāḍu-,s*

[சுயம்+கட்டு-,]

[Skt. sva > த. சுயம்]

சுயங்கிருதானர்த்தம் *šuyaṅ-kirudāṉarttam*, பெ.(n.) தாமே விளைத்துக் கொள்ளுந் தீங்கு (இ.வ.); self-created evil.

[Skt. svayam+kṛta+an-artha > த. சுயங் கிருதானர்த்தம்]

சுயசம்பாத்தியம் *šuyašambāttiyam*, பெ.(n.) தலைமுறை வழியாகப் பெறாமல், தானாக உழைத்துச் சேர்த்த பணம் அல்லது உடைமை; money or wealth earned by oneself-acquired property. *இந்த வீடு மரபுச் சொத்தா சுய சம்பாத்தியமா என்று கேட்டார்.*

த.வ. தன்தேட்டம்

[Skt. sva+sampādya > த. சுயசம்பாத்தியம்]

சுயசரிதம் *šuya-šaridam*, பெ.(n.) தன் வரலாறு; autobiography.

[Skt. sva+carita > த. சுயசரிதம்]

சுயசாதிமானம் *šuya-šādi-mānam*, பெ.(n.) தன் இனத்தின் மீது கொண்ட பற்று; communal bias.

[சுயசாதி+மானம்]

[Skt. sva+jati > த. சுயசாதி]

சுயசேவை *šuya-šēvai*, பெ.(n.) வாடிக்கையாளர் தங்களுக்கு தேவையான வற்றைத் தாங்களே தேடி எடுத்துக் கொள்ளும் படியான வணிகமுறை; self-service.

[Skt. sva+sēvā > த. சுயசேவை]

சுயஞ்சோதி *šuyañ-Jōdi*, பெ.(n.) தானே விளங்கும் ஒளி, இறைவன் (வின்.); God, as self-luminous.

[Skt. svayam+jyōtis > த. சுயஞ்சோதி]

சுயநலம் *šuya-nalam*, பெ.(n.) பிறரைப் பற்றி எண்ணிப் பார்க்காமல் தனக்கு உண்டாகும் பயன், ஏந்து (வசதி) முதலியவற்றை மட்டுமே கருதிச் செயல்படும் போக்கு; கொள்கை யளவில் அல்லாமல் தனிப்பட்ட முறையில் பெறுகிற பயன் அல்லது ஏந்து (வசதி); selfishness, selfish end. *சுயநலத்திற்காக நாட்டையே காட்டிக் கொடுக்கும் குண முள்ளவன்.*

[சுயம் + நலம்]

[Skt. šva > த. சுயம்]

சுயநலமி *šuya-nalami*, பெ.(n.) சுயநலக்காரர்; selfish person. *"சில சுயநலமிகளால்தான் இந்தத் திட்டம் நிறைவேறாமல் போய்விட்டது".*

[சுயம்+நலமி]

[Skt. šva > த.சுயம்]

சுயபழக்கம் *šuya-paḻakkam*, பெ.(n.) இயல்பு (யாழ்.அக.); nature.

[சுயம்+பழக்கம்]

[Skt. šva > த.சுயம்]

சுயபாசை *šuya-bāšai*, பெ.(n.) தாய்மொழி (யாழ்.அக.); one's own language, mother-tongue.

[Skt. sva-bhāṣā > சுயபாசை]

சுயபுணர்ச்சி *šuya-puṇarcci*, பெ.(n.) முட்டிமை (வின்.); self-pollution.

[சுயம்+புணர்ச்சி]

[Skt. sva > த. சுயம்]

சுயபுத்தி *šuya-butti*, பெ.(n.) 1. தன்னுடைய அறிவு; one's own unaided sense. 2. மயக்கமற்ற அறிவு; sobriety, clearness of mind.

த.வ. தன்னறிவு

[Skt. sva-buddhi > த. சுயபுத்தி]

சுயபுத்திரன் *šuya-puttiraṉ*, பெ.(n.) பிள்ளை; one's own son.

[Skt. sva+puttra > த. சுயபுத்திரன்]

சுயபுராணம் *šuya-purāṇam*, பெ.(n.) தன்னைப் பற்றிய பேச்சு; talking all the time about oneself. *"உன் சுயபுராணத்தை நிறுத்தப் போகிறாயா இல்லையா?*

[Skt. sva+purāṇa > த. சுயபுராணம்]

சுயபோக்கு *šuya-pōkku*, பெ.(n.) தன்மனப் போக்கு (வின்.); one's peculiar nature, bent of mind.

[சுயம்+போக்கு]

[Skt. sva > த. சுயம்]

சுயபோதம் *šuya-pōdam*, பெ.(n.) தன்னறிவு (இ.வ.); consciousness.

[Skt. sva +bodha> த. சுயபோதம்]

சுயம்[1] *šuyam*, பெ.(n.) சொந்தமானது; one's own. *இந்த வேலை அவன் சுயம்.*

[Skt. sva > த. சுயம்]

சுயம்[2] *šuyam*, பெ.(n.) தானாகக் கட்டிய பாட்டு; own literary composition.

[Skt. svayam > த. சுயம்]

சுயம்[4] *šuyam*, பெ.(n.) கலப்பற்ற; genuine, pure. *சுயம் பால் (இ.வ.)*

[Skt. svayam > த. சுயம்]

சுயம்பாகம் *šuyam-bāgam*, பெ.(n.) 1. தானாக உணவு செய்துள கொள்கை (யாழ்.அக.); cooking for oneself. 2. உணவுச்சாலை முதலியவற்றிற் கொடுக்கும் உணவுப் பொருள் (வின்.); provisions given gratis in choultry, temple, etc.

[சுயம்+பாகம்]

[Skt. svayam > த. சுயம்]

சுயம்பாகி *šuyam-pāgi*, பெ.(n.) 1. உணவு சமைப்போன்; cook, especially in temple service. 2. துணிவழலை (வின்.); soap.

[சுயம்+பாகி]

[Skt. svayam > த. சுயம்]

சுயம்பாடு-தல் *šuyam-pāḍu-*, 5. செ.கு.வி.(v.i.) 1. தானாகவே செய்யுள் இயற்றுதல்; to compose original verses. 2. புதுமையாக இசைபாடுதல்; to invent new and original style in singing.

[சுயம்+பாடு-,]

[Skt. svayam > த. சுயம்]

சுயம்பாவி-த்தல் *šuyam-pāvi-*, செ.கு.வி.(v.i.) இறுமாப்புக் கொள்ளல்; to be proud, self-conceited. *"தன்னிக ரில்லா வித்தைத் தருக்கினாற் சுயம்பாவித்த" (விநாயகபு. 9: 23).*

[Skt. svayam+bhāva > த. சுயம்பாவி-,]

சுயம்பிரகாசம் *šuyam-pirakāšam*, பெ.(n.) **சுயஞ்சோதி** பார்க்க; see *šuyañ-jōdi*. *"துரியஞ் சுயம் பிரகாசம்" (பிரபோத. 1:3).*

[Skt. svayam +> த. சுயம்பிரகாசம்]

சுயம்பு *šuyambu*, பெ.(n.) 1. தானாக உண்டானது (வின்.); self-existent being, anything considered to be uncreated. 2. இறைவன் (யாழ்.அக.); God. 3. நான்முகன் (சூடா.); *Brahmōn;* 4. அருகன் (பிங்.); Arhat. 5. இயற்கை (வின்.); peculiarity, nature. 6. மெய்நிலை; genuineness, reality. *சுயம்பான நீலம்.* 7. மடையன்; idiot. *பையன் சுயம்பு (இ.வ.).*

த.வ. தான்தோன்றி

[Skt. svayam-bhū > த. சுயம்பு]

சுயம்புதலம் *šuyambu-talam*, பெ.(n.) தானாகத் தோன்றிக் கோயில்கொண்ட காசி, காஞ்சி போன்ற திருத்தலம்; a shrine having a *šuyambu-mūrttias kāšī, kāñji, etc.*

*[சுயம்பு+தலம்> த.தலம்>***Skt.***-ஸ்தலம். தடம்> தலம்]*

சுயம்புமூர்த்தி *šuyambu-mūrtti*, பெ.(n.) தானாகத் தோன்றிய இறைவனின் திருவுருவம் (இ.வ.); un created image of God.

[Skt. svayam-bhū+mūrti> த. சுயம்புமூர்த்தி]

சுயம்புலிங்கம் *šuyambu-liṅgam*, பெ.(n.) தானாகத் தோன்றிய சிவலிங்கம் (சைவச. பொது. 81, உரை); uncreated *liṅgam*.

[Skt. svayam-bhū+linga> த. சுயம்புலிங்கம்]

சுயம்வரம் *šuyam-varam*, பெ.(n.) தன்னை விரும்பிவந்த அரசர் கூட்டத்தில், கணவனைத்

தலைவி தானே தெரிந்து மணந்துக் கொள்ளுகை; selection of husband by a princess herself at a public assembly of suitors. *"சுயம்வரத்தை வீமன் றிருமடந்தை பூண்டாள்" (நள. கலிநீ. 36).*

த.வ. தன்விழைவு வரவு

[Skt. svayam-vara > த. சுயம்வரம்]

சுயமக்கினி *śuyam-akkiṉi*, பெ.(n.) மாத்திரைவகை (தஞ். சர. iii, 31); a kind of medicinal pill.

[Skt. sva+agni > த. சுயமக்கினி]

சுயமக்கினிகுமாரன் *śuyama-k-kiṉikumāraṉ*, பெ.(n.) அகத்தியர் செந்தூரம் 300–ல் சொல்லியுள்ள மருந்து; a preparation of medicine contemplated in Agattya's Chendooram 300.

[சுயமக்கினி + குமாரன்]

[Skt. sva+agni > த. சுயமக்கினி]

சுயமரம் *śuyamaram*, பெ.(n.) **சுயம்வரம்** பார்க்க; see *śuyam-varam*. *"சுயமரத் தெதிர்ந்தோர் தம்மைத் துருபதன் றனையக்காக ...... வென்ற விசயனே" (பிரமோத். 4:49).*

[Skt. svayam-vara > த. சுயமரம்]

சுயமரியாதை *śuya-mariyādai*, பெ.(n.) தன்னுடைய கண்ணியத்தையும் உயர்வு தாழ்வு கற்பிக்காத சமன்னமயை (சமத்துவத்தை)யும் அடிப்படையாகக் கொண்ட அமைப்பு; self-respect; self esteem. *சுயமரியாதையைப் போதிக்கும் நான், பிறரை எப்படி என் காலில் விழ அனுமதிப்பேன்?*

[Skt. sva+maryāda > த. சுயமரியாதை]

சுயமரியாதைஇயக்கம் *śuya mariyādai-iyakkam*, பெ.(n.) தன்மானத்துடனும் பகுத்தறிவுடனும் நடந்து கொள்ளவேண்டும் என்ற கொள்கை உடைய ருமுகாய இயக்கம்; a social movement based on one's faith in the dignity and reasoning power of the individual; self-respect movement.

த.வ. தன்மான இயக்கம்

[Skt. sva+maryādā > த. சுயமரியாதை+ இயக்கம்]

சுயமரியாதைத்திருமணம் *śuya-mariyādai-t-tirumaṇam*, பெ.(n.) சீர்திருத்தத்திருமணம், மரபான சடங்குகளை முற்றும் நீக்கிவிட்டு செய்யும் திருமணம்; marriage conducted according to one's self-respect rejecting all the tradional rites.

[சுயமரியாதை + திருமணம்]

சுயமாய் *śuyam-āy*, வி.எ.(adv.) 1. தானாக; of one's own accord, voluntarily; without help. *"சுயமாயுலகந் தருமென்று" (பிரபோத. 41:13).* 2. அடிக்கடி(யாழ்ப்.); constantly.

[Skt. svayam > த. சுயம்+ஆய்]

சுயரூபம் *śuya-rūbam*, பெ.(n.) உண்மையான இயல்பு அல்லது தன்மை; true colours. *பழகப் பழகத்தான் ஒருவருடைய சுயரூபம் நமக்குப் புலப்படுகிறது.*

[Skt. sva+rūpa > த. சுயரூபம்]

சுயவலது *śuya-valadu*, பெ.(n.) சொந்தத் திறமை (வின்.); one's own unaided capacity or strength.

சுயவேலைவாய்ப்பு *śuya-vēlaivāippu*, பெ.(n.) தானே ஒரு தொழில் தொடங்குவதன்மூலம் தனக்கு ஒரு வேலையை ஏற்படுத்திக் கொள்ளும் முறை; self-employment.

[சுயம்+ வேலைவாய்ப்பு]

[Skt. sva > த. சுயம்]

சுயாட்சி *śuyāṭci*, பெ.(n.) ஒரு நாடு பிறிதொரு நாட்டினுடைய கட்டுப்பாட்டில் இல்லாமல், தானே ஆண்டுக்கொள்ளும் ஆட்சி; self-rule; independence. 2. நிருவாகத்தின் குறிப்பிட்ட

விளத்தங்களை மட்டும், ஓர் உயர்மட்டத் தரப்பின் வயம் விட்டுத் தங்கள் உள் நிருவாகத்தைத் தாங்களே முழுமையாகப் பார்க்கும் நிருவாக முறை; self-governing; autonomy of federating units. *சில தனியார் கல்லூரிகளுக்குச் சுயாட்சி வழங்கப் பட்டுள்ளது.*

[Skt. sva- > த. சுயம்]

சுயாதிகாரம் *šuyādikāram*, பெ.(n.) தானே தன்னுலியொடு செயற்படுவதற்கு உரிய அதிகாரம்; தானே அமைத்துக் கொள்ளும் உரிமை; autonomy. *"தொலைக்காட்சி நிலையங்களுக்குச் சுயாதிகாரம் வழங்குவது பற்றி முடிவு செய்யப்படும்".*

த.வ. தன்னுரிமை அதிகாரம்

[Skt. sva- > த. சுயா]

சுயாதிபத்தியம் *šuyādipattiyam*, பெ.(n.) தன் முனைப்புடன் நடத்தும் ஆட்சி; independent sovereignty or government, autocracy. 2. கோளின் திசையில் தனது ஆட்சி; influence of a planet in its turn during its daša period.

[Skt. sva+ādhipatya > த. சுயாதிபத்தியம்]

சுயாதிபதி *šuyādi-padi*, பெ.(n.) தனியாட்சி நடத்துபவன் (யாழ்.அக.); independent sovereign, autocrat.

[Skt. sva+adhipati > த. சுயாதிபதி]

சுயாதீனம் *šuyādīnam*, பெ.(n.) **சுவாதீனம்** (யாழ்.அக.) பார்க்க; see *šuvādīnam*, independence.

[Skt. svādhīna > த. சுவாதீனம்]

சுயாதீனன் *šuyādīnan*, பெ.(n.) உரிமையோடு நடப்பவன் (யாழ்.அக.); free, independent agent, one who is his own master.

[Skt. svādhina > த. சுயாதீனன்]

சுயார்ச்சிதம் *šuyārccidam*, தாமே ஈட்டிய பொருள் (உ.வ.) பெ.(n.); self-acquired property, dist. fr. *piur-ārcciam.*

த.வ. சொந்தத்தேட்டை

[Skt. svārjita > த. சுயார்ச்சிதம்]

சுயிரகம் *šuyiragam*, பெ.(n.) தருப்பை (மலை.); darbha grass.

[Skt. ušīraka > த. சுயிரகம்]

சுயேச்சை *šuyēccai*, பெ.(n.) சுவேச்சை (யாழ்.அக.) பார்க்க; see *šuvēccai*

த.வ. தன்விருப்பு

[Skt. svēcchā > த. சுயேச்சை]

சுயேட்சை *šuyēṭcai*, பெ.(n.) **சுயேச்சை** பார்க்க; see *šuyēccai.*

சுயோதனன் *šuyōdaṉaṉ*, பெ.(n.) துரியோதனன்; Duryōdhanan. *"சொன்ன நாள் வழுவுறாமற் சுயோதனன் றோன்றி னானே" (பாரத. சம்பவ. 78).*

[Skt. Su-yōdhana > த. சுயோதனன்]

சுரசம்[1] *šurašam*, பெ.(n.) சூடுதோய்த்த மருந்துச்சாறு (தைலவ. தைல. 74); medicinal juice or decoction warmed by introducing a hot iron-rod.

[Skt. sva-rasa > த. சுரசம்]

சுரசம்[2] *šurašam*, பெ.(n.) 1. இனிப்புச்சாறு (மதுரச்சாறு) (யாழ்.அக.); any sweet juice, as of sugar-cane. 2. **சிறு கிழங்கு** (திவா.); Goa potato. 3. **துளசி** (மலை.); sacred basil. 4. **நொச்சி** (தைலவ. தைல. 119) Indian privet. 5. இதளியம் (பாதரசம்) (மூ.அ.); quick silver.

[Skt. su-rasa > த. சுரசம்]

சுரசனி *šurašaṉi*, பெ.(n.) இரவு; night.

[Skt. šu-rajanī > த. சுரசனி]

சுரசாதம் *šura-šādam*, பெ.(n.) தொண்டைக் கம்மல் (சங்.அக.); hoarseness.

[Skt. svara+sāda > த. சுரசாதம்]

சுரட்சிதம் *šuraṭcidam*, பெ.(n.) நன்கு காப்பாற்றப்பட்ட பொருள் (சங்.அக.); that which is well protected.

த.வ. நற்காப்புப்பொருள்

[Skt. su-rakṣita > த. சுரட்சிதம்]

சுரதநீர் *šurada-nīr*, பெ.(n.) காமநீர் (சங்.அக.); prostatic secretion.

[சுரதம்+நீர்]

[Skt. surata > த. சுரதம்]

சுரததாது *šurada-tādu*, பெ.(n.) விந்து (இந்திரியம்); semen. *'மேனகையாலான சுரததாது வீழ்ந்த துரோணகும்பந் தன்னில்" (பாரத. வாரணா. 32).*

[சுரதம்+தாது]

[Skt. su-rata > த. சுரதம்]

சுரதநூல் *šurada-nūl*, பெ.(n.) காமநூல்; treatise on erotics. *"சுரதநூறெறி விடரென" (கம்பரா. கார்கா. 38).*

[சுரதம்+நூல்]

[Skt. surata > த. சுரதம்]

சுரதம்[1] *šuradam*, பெ.(n.) புணர்ச்சி; sexual union. *பரத்தையர் மனைகடோறுஞ் சுரதஞ் செய்பவர்" (பிரபுலிங். அக்கமா. உற்பத். 49).*

[Skt. su-rata > த. சுரதம்]

சுரதம்[2] *šuradam*, பெ.(n.) 1. இனிமை; sweetness. *"மலருந் தேனுஞ் சுரதமே மாந்தி" (கம்பரா. மீட்சி. 309).* 2. சாறு (தைலவ. தைல. 111); *Juicey* 3. இதளியம் (பாதரசம்) (வின்.); quick silver.

[Skt. su-rasa > த. சுரதம்]

சுரதமங்கை *šurada-maṅgai*, பெ.(n.) பரத்தை (வேசி) (யாழ்.அக.); harlot.

[சுரதம்+மங்கை]

[Skt. su-rata > த. சுரதம்]

சுரதலீலை *šurada-līlai*, பெ.(n.) புணர்ச்சி (யாழ்.அக.); sexual union.

[Skt. surata+līlā > த. சுரதலீலை]

சுரதனு *šuratanu*, பெ.(n.) அசுரர்(வின்.); ašurar.

[சுரர் > சுரத்தனு]

சுரநட்சத்திரம் *šura-naṭcattiram*, பெ.(n.) வியாழன் நின்ற நாளுக்கு ஏழு அல்லது ஒன்பதாம் நாண் மீன் (விதான. குணாகுண. 41, உரை); the 7th or 9th *nakṣatras* from the *nakṣatra* with which jupiter is in conjunction.

[Skt. jvara +nakṣatra> த. சுரநட்சத்திரம்]

சுரம் *šuram*, பெ.(n.) எடுத்தலோசை (உதாத்தம்), படுத்தலோசை (அனுதாத்தம்) நலிதலோசை (சுவரிதம்) என்ற மூவகை இசைகள்; Vēdic accent of which there are three kinds, viz., ut*āttam, aṉutāttam, šuvaritam.* 2. ச,ரி,க,ம,ப,த,நி என்ற எழுத்துகளை முதலாகக்கொண்ட ஏழிசை; notes of the gamut of which there are seven, viz., sa*ṭcam, riṣabam, kāntāram, mattimam, pañjamam, taivadam, niṣādam, indicated by the initials.* 3. உயிரெழுத்து; vowel. ஆவி... சுரமாகும் (பி.வி.4.) 4. குரல்; voice, tone.

[Skt. svara > த. சுரம்]

சுரம்பாடு–தல் *šuram-pāḍu-*, 5. செ.கு.வி.(v.i.) எடுத்துக்கொண்ட பண்ணிற்கேற்ற இசை வலசைகளால் போற்றிப் பாடல்கள் முதலியவை பாடுதல் (சங்;அக.);to sing a song with its appropriate musical notes.

[சுரம்+பாடு–,]

[Skt. svara > த. சுரம்]

சுரம்போடு-தல் *šuram-pōḍu-*, 20 செ.கு.வி.(v.i.) பாடலுக்கு இசையப் பண் அமைத்தல் (உ.வ.); to set notes to a musical composition.

[சுரம்+போடு-,]

[Skt. svara > த. சுரம்]

சுரம்விழு-தல் *šuram-viḻu-*, செ.கு.வி.(v.i.) 1. செருக்குக் குறைதல் 2.குரல் தாழ்தல்; lit., to have one's tone lowered. To have one's pride reduced, to be humbled. *இப்போது அவன் சுரம் விழுந்து விட்டான் (இ.வ.).*

[சுரம்+விழு-,]

[Skt. svara > த. சுரம்]

சுராட்டு *šurāṭṭu*, பெ.(n.) 50 நூறாயிரத்திற்கு மேல், ஒரு கோடிக்குக் கீழ் இறைவருவாயுடைய மன்னன் (சுக்கிரநீதி, 26); king whose income is above 50 lakhs and below one crore.

[Skt. svārāt > த. சுராட்டு]

சுராந்தியம் *šurāndiyam*, பெ.(n.) ஏழிசைகளுள் நான்கு இசை மட்டுங் கொண்ட பண்வகை (பூர். சங். உண். 42); a melody-type, consisting of four of the seven notes of the gamut.

[Skt. svara+antya > த. சுராந்தியம்]

சுருதஞானம் *šuruda-ñāṉam*, பெ.(n.) கல்வி கேள்விகளால் உண்டாம் அறிவு (சீவக. 3081, உரை); acquired knowledge.

[Skt. šruta+ñana > த. சுருதஞானம்]

சுருதி *šurudi*, பெ.(n.) 1. காது (பிங்.); ear. 2. ஒலி (பிங்.); sound, tone. 3. எழுதாக் கிளவியாகிய மறை (திவா.); vēda, as learnt orally and not from written text. 4. எடுத்தலோசை முதலிய மறை இசை; vēdic accent. *"சுருதியொடருமறை முறைசொலு மடியவர்" (திவ். பெரியதி. 8.7: 7).* 5. இசையைச் சிறப்பிக்க அதனுடன் ஒத்தெழுப்பப்படும் துணையொலி; pitch of a tune, keynote. *"விரும்புஞ்சுருதியிசைகேட்டு" (பாரத. சிறப்பு. 12).* 6. இருபத்திரண்டு வகைப்பட்ட இசையொலி; division of the octave, quarter tone or interval, of which there are 22, four constituting major tone, three minor and two semi-tone. *"ஏழிசையின் சுருதி பெற வாசித்து" (பெரியபு. ஆனாய. 14).* 7. புகழ் (இ.வ.); fame. 8. வான்மொழி; casual utterance of good or bad omen. *இருவரும் கலியாணப் பேச்சுப் பேசுகையிற் சுருதி கேட்டது. வாய்ப்பறை, பொய்யலர் (வதந்தி) (இ.வ.);* rumour. *ஊரில் இப்படி ஒரு சுருதி யிருக்கிறது.*

த.வ. இசையொலி

[Skt. šruti > த. சுருதி]

சுருதிகாந்தாரம் *šurudi-kāndāram*, பெ.(n.) பாலை யாழ்த்திறவகை (பிங்.); a secondary melody-type of the *pālai* class.

[Skt. šruti+gāndhāra > த. சுருதிகாந்தாரம்]

சுருதிகூட்டு-தல் *šurudi-kūṭṭu-*, 5. செ.கு.வி. (v.i.) 1. இசைக் கருவிகளில் இசைகள் தம்முள் ஒத்தொலிக்க அமைத்தல்; to attune musical instruments. *"வீக்கி முன் சுருதி கூட்டி" (திருவிளை. விறகு. 27).* 2. **சுருதிகொடு-**, பார்க்க; see *šurudi-koḍu-*.

[Skt. šruti > த. சுருதி]

சுருதிகூடிவா-தல் *šurudi-kūḍi-vā-*, 18 செ.கு.வி.(v.i.) அணியமாதல்; to becine ready.

[சுருதி+கூடிவா-,]

[Skt. šruti > த. சுருதி]

சுருதிகொடு-த்தல் *šurudi-koḍu-*, 4. செ.கு.வி.(v.i.) இசைக்கு ஒத்த துணையொலி எழுப்புதல்; to sound the keynote.

[சுருதி+கொடு-,]

[Skt. šruti > த. சுருதி]

சுருதிசேர்-த்தல் *šurudi-šēr-*, 4. செ.கு.வி. (v.i.) **சுருதிகூட்டு-** பார்க்க; see *šurudi-kūṭṭu-*.

[சுருதி+சேர்-,]

*[**Skt.** šruti > த. சுருதி]*

சுருதிப்பிரமாணம் *šurudi-p-piramāṇam*, பெ.(n.) மறையாகிய அளவை; scriptural authority.

*[**Skt.** šruti +pra-māṇa> த. சுருதிப் பிரமாணம்]*

சுருதிப்பெட்டி *šurudi-p-peṭṭi*, பெ.(n.) பின்புறம் உள்ள மடிப்புடைய துருத்தியால், காற்றை உட்செலுத்திச் சீராக வெளிவிடுவதன் மூலம் இசையை உண்டாக்கும் பெட்டி; a musical instrument which is used for setting the surudi.

[சுருதி + பெட்டி]

*[**Skt.** šruti > த. சுருதி]*



சுருதிபேதம் *šurudi-pēdam*, பெ.(n.) பிறழ்ந்து ஒலிக்கும் ஒலி; discordance in note.

*[**Skt.** šruti+bhēda > த. சுருதிபேதம்]*

சுருதிபோடு-தல் *šurudi-pōḍu-*, 20 செ.கு.வி.(v.i.) **சுருதிகொடு-** பார்க்க; see *šurudi-koḍu-*.

[சுருதி+போடு-,]

*[**Skt.** šruti > த. சுருதி]*

சுருதியான் *šurudiyāṉ*, பெ.(n.) மறைக்குரியவனான நான்முகன்; *Nāṉmugāṉ* as the source of the Vēdas. *"சுருதியா னுறங்கு மிராத்தொறும்" (கந்தபு. திருநகரப். 65).* 2. திருமறையால் அறியப்படும் இறைவன்; God, as revealed by the *Vēdas*. *"சுருதியானைக் கண்டீர் தொழற்பாலதே" (தேவா. 1208, 5).*

*[**Skt.** šruti > த. சுருதி>சுருதியான்]*

சுருதிவீணை *šurudi-viṇai*, பெ.(n.) இருபத்தி இரண்டு பண்களையும் இசைக்கவல்ல வீணைவகை; a stringed musical instrument constructed to sound the 22 notes in the division of an octave.

[சுருதி+வீணை]

*[**Skt.** šruti > த. சுருதி]*

விண் >விண் >வீணை

சுருபம் *šurubam*, பெ.(n.) **சுரூபம்²** பார்க்க; see *šurūbam²*. *"சுருபம தொளித்து" (பிரபோத.21: 2).*

*[**Skt.** sva-rūpa > த. சுருபம்]*

சுரூபங்கெட்டவன் *šurūbaṅ-geṭṭavaṉ*, பெ.(n.) 1. உடற்குறையுள்ளவன்; deformed person. 2. இன (சாதி) ஒழுக்கம் இல்லாதவன்; unorthodox person.

[சுரூபம் > த. சுருபம்+கெட்டவன்]

சுரூபப்பிழையன் *šurūba-p-piḻaiyaṉ*, பெ.(n.) **சுரூபங்கெட்டவன், 1** (வின்.) பார்க்க; see *šurūbaṅ-geṭṭavaṉ*.

*[**Skt.** sva-rūpa > த. சுரூபம்+பிழையன்]*

சுரூபம்¹ *šurūbam*, பெ.(n.) நல்லுருவம்; beautiful form.

*[**Skt.** su-rūpa > த. சுரூபம்]*

சுரூபம்² *šurūbam*, பெ.(n.) 1. வடிவம்; image, form. 2. தன்மை; nature. *"செருக்குத் தானே போகாத சுரூபமாகும்" (பிரபோத. 26: 111).*

*[**Skt.** sva-rūpa > த. சுரூபம்]*

சுரூபி *šurūbi*, பெ.(n.) அழகுள்ளவ–ன்–ள்; fair, beautiful person, opp. to *kurūpi*.

[Skt. surūpin > த. சுரூபி]

சுரேசன் *šurēšan*, பெ.(n.) 1. **சுரேந்திரன்** பார்க்க; see *šurēndiran*. *"சொற்க நாடுள சுரேச னுரைப்பான்" (கந்தபு. திருவிளை. 110).* 2. முருகன் (அக.நி.); Murugan.

[Skt. surēša > த. சுரேசன்]

சுரேசுவரி *šurēšuvari*, பெ.(n.) முசுமுசுக்கை (தைலவ.) bristly bryony.

[Skt. surēšvari> த. சுரேசுவரி]

சுரேந்திரன் *šurēndiran*, பெ.(n.) இந்திரன் (வின்.); indran.

த.வ. துறக்கக்கோன்

[Skt. surēndra > த. சுரேந்திரன்]

சுரேந்திரன்மைந்தன் *šurēndiran-maindan*, பெ.(n.) இந்திரன் மகனான அருச்சுனன் (பிங்.); *Arjunan*, as son of *Indran*.

[சுரேந்திரன்+மைந்தன்]

[Skt. surēndra > த. சுரேந்திரன்]

சுரோணம் *šurōṇam*, பெ.(n.) சிவப்பு (சங்.அக.); red colour.

[Skt. šōṇa > த. சுரோணம்]

சுரோணராசாவர்த்தம் *šurōṇa-rāšāvarttam*, பெ.(n.) சிவப்பு மணிக்கல் வகை (சங்.அக.); a red species of lapis lazuli.

[Skt. šōṇa+rājāvarta > த. சுரோணராசா வர்த்தம்]

சுரோணி *šurōṇi*, பெ.(n.) 1.அல்குல் (யாழ்.அக.); mons veneris. 2. பிட்டம்; buttocks 3. இடுப்பு; hip.

[Skt. šrōṇi > த. சுரோணி]

சுரோணிதம் *šurōṇidam*, பெ.(n.) கருமுட்டை; ovum. 2. அரத்தம்; blood. 3. சிவப்பு; red. 4. மாதவிலக்கு; manstrual discharge. 5. விந்துவோடு கலந்து உயிரணு தோன்று வதற்குக் காரணியமான மகளிர் அரத்தம்; blood believed to be in the womb causing pregnancy when mixed with semen. "சுக்கில சுரோணிதங்களாலே உடம்பு கொண்டு... உயிர் பிறக்கும்" (சிலப்.3:26, உரை, பக்.104).

[Skt. šōṇita> த. சுரோணிதம்]

சுரோணிதக்கேடு *šurōṇida-k-kēḍu*, பெ.(n.) மாதவிலக்குக் கோளாறு; disorder of menstrual blood, deranged menstruation. (சா.அக.)

[சுரோணிதம் + கேடு]

[Skt. šōṇita> த. சுரோணிதம்]

சுரோத்திரம் *šurōttiram*, பெ.(n.) காது; ear. *"வாக்காதி சுரோத்திராதியும்" (தாயு கருணாகர. 2).*

[Skt. šrōtra > த. சுரோத்திரம்]

சுரோத்திரியதார் *šurōttiriyadār*, பெ.(n.) இறையிலி நிலத்திற்கு உரியவன்; owner of šurōttiriyam lands.

[Skt. šrōtriya > த. சுரோத்திரி> சுரோத்திரியதார்]

சுரோத்திரியந்தார் *šurōttiriyandār*, பெ.(n.) **சுரோத்திரியதார்** பார்க்க; see *šurōttiriyadār*.

சுரோத்திரியம் *šurōttiriyam*, பெ.(n.) 1. திருமறையில் திறமையுள்ள பார்ப்பனர் முதலியோர்க்குப் பழங்காலத்தில் விடப்பட்ட இறையிலி நிலம்; land or village formerly assigned to a Brahmin learned in Vēdas or other learned men at a favourable rate to assessment. 2. அரசுப்பணி செய்தவர்க்கு விடப்பட்ட இலவய நிலம்; service inam, lands assigned to servants of government as reward for their services.

[Skt. šrōtriya > த. சுரோத்திரியம்]

சுரோத்திரியன் *šurōttiriyan*, பெ.(n.) மறையறிவு நிரம்பிய பார்ப்பனன்; Brahmin learned in *Vēdas*.

[Skt. šrōtriya > த. சுரோத்திரியன்]

சுரோதசாதி *šurōda-šādi*, பெ.(n.) நான்கு வகை ஆண்களில் ஒரு வகை. one of the four classes of men divided according to their lust. (சா.அக.)

சுரோதவிகாரம் *šurōda-vikāram*, பெ.(n.) அரத்த மாறுபாடுகள்; vascular phenomena. (சா.அக.)

சுரோதோவகம் *šurōdōvagam*, பெ.(n.) தாளவகைகளுளொன்று (பரத. தாள. 58); a time-measure.

[Skt. srōtōvaha > த. சுரோதோவகம்]

சுல்கம் *šulgam*, பெ.(n.) 1. மகட்கொள்ள அளிக்கும் பொருள்; bride price. 2. பந்தயப் பொருள்; prize of a contest.

[Skt. šulka > த. சுல்கம்]

சுல்தான் *šultān*, பெ.(n.) முகமதிய அரசனின் பட்டப்பெயர்; sultan.

[Ar. sultān > த. சுல்தான்]

சுல்தான்காசு *šultān-kāšu*, பெ.(n.) திருவாங்கூரில் வழங்கிய ஒரு பழைய நாணயம்; an ancient coin in Travancore.

[சுல்தான்+காசு.]

[Ar. sultān > த. சுல்தான்]

[காய்ச்சு>காசு (காய்ச்சிச் செய்யப்பட்டது]

சுல்பசுந்தரரசம் *šulpašundara-rašam*, பெ.(n.) சூலைநோய்க்குக் கொடுக்கும் ஓர் ஆயுள்வேத மருந்து; an Āyurvedic medicine to rehumatism. (சா.அக.)

சுல்மானா *šulmānā*, பெ.(n.) தண்டம் (இ.வ.); fine, forfeit, penalty.

[Ar. jurmāna > த. சுல்மானா]

சுல்லம் *šullam* பெ.(n.) செப்பு; coper

[Skt. sulla> த. சுல்லம்]

சுலபசாத்தியம் *šulaba-šāttiyam*, பெ.(n.) எளிதில் முடிக்கக் கூடியது (உ.வ.); that which can be easily accomplished.

[Skt. sulabha +sadhya> த. சுலபசாத்தியம்]

சுலபம் *šulabam*, பெ.(n.) 1. எளிமை; ease, facility, easiness of acquisition or attainment. 2. சிறுமை (வின்.); trifle. 3. மலிவு; cheapness. *விலை சுலபம்.*

[Skt. su-labha > த. சுலபம்]

சுலனன் *šulanan*, பெ.(n.) நெருப்பு; fire. *"சுலனனைக் கொள" (திருச்செந்.பு. திருவவ.8).*

[Skt. jvalana > த. சுலனன்]

சுலு *šulu*, பெ.(n.) **சுல்லம்** பார்க்க; see *šullam*.

சுலுகம் *šulugam*, பெ.(n.) 1. சேறு; mire. 2. சிறங்கை; handful.

[Skt. culuka > த. சுலுகம்]

சுலுப்பு *šuluppu*, பெ.(n.) மரக்கலம் (யாழ்.அக.); a vessel, dhoney.

[E. sloop > த. சுலுப்பு]

சுலுபம் *šulupam*, பெ.(n.) சிறுமை, அற்பம் (யாழ்.அக.); trifle.

[Skt. svalpa > த. சுலுபம்]

சுலோகம் *šulōgam*, பெ.(n.) 1. வடமொழிச் செய்யுள்; verse or stanza in Sanskrit. *"சுலோக மொருநியுத மாராய" (சைவச. பொது. 3).* 2. சொன்மாலை (பிங்.); panegyric. 3. புகழ் (யாழ்.அக.); fame, renown. 4. பழமொழி (யாழ்ப்.); proverb, saying.

[Skt. šlōka > த. சுலோகம்]

சுலோகி *šulōgi*, பெ.(n.) கள் (திவா.); toddy.

த.வ. சொலவகம்

[Skt. šlōkin > த. சுலோகி]

சுலோசனம் *šulōšaṉam*, பெ.(n.) 1. அழகிய கண் (வின்.); beautiful, lovely eyes. 2. மூக்குக்கண்ணாடி (யாழ்.அக.); spectacles.

[Skt. su-lōcana > த. சுலோசனம்]

சுலோபம்[1] *šulōbam*, பெ.(n.) 1. சிறுமை (வின்.); smallness, littleness, trifle. 2. எறும்பு (பிங்.); ant, emmet.

[Skt. svalpa > த. சுலோபம்]

சுலோபம்[2] *šulōbam*, பெ.(n.) எளிது (வின்.); easiness of attainment.

[Skt. su-labha > த. சுலோபம்]

சுலோபம்[3] *šulōbam*, பெ.(n.) **சுலோகம்,4** (யாழ்ப்.) பார்க்க; see *šulōgam 4.*

[Skt. šlōka > த. சுலோபம்]

சுவ்வதன் *šuvvadaṉ*, பெ.(n.) **சுவ்விரதர்** பார்க்க; see *šuvviradar.*

[Skt. Sūvrata > த. சுவ்வதன்]

சுவ்வாலே *šuvvālē*, பெ.(n.) இசைப்பாடல் சிலவற்றினிறுதிகளில் வரும் சொல் (இ.வ.); refrain at the end of certain kind of songs.

[Te. cuvvālu> த. சுவ்வாலே]

சுவ்விரதர் *šuvviradar*, பெ.(n.) தூயநீரவர் (தீர்த்தங்கரர்) இருபத்துநால்வருள் ஒருவர் (திருக்கலம். காப்பு, உரை); a Jaina Arhat, one of 24 *tirttaṅgarar.*

[Skt. sūvrata > த. சுவ்விரதர்]

சுவ *šuva*, பெ.அ.(adj.) தன்னுடைய; one's own, used only as the first member of compounds. *"சுவபட்சம்".*

[Skt. sva > த. சுவ]

சுவகதபேதம் *šuvakada-bēdam*, பெ.(n.) முழுப்பொருளுக்கும் அதன் உறுப்புக்குமுள்ள வேற்றுமை (வேதா. சூ. 25, உரை); the difference between an object as a whole and its part.

[Skt. sva-gata+bhēda > த. சுவகதபேதம்]

சுவகதம் *šuvakadam*, பெ.(n.) 1. தனக்குட் பேசுகை; aside; soliloquy. 2. **சுவகதபேதம்** பார்க்க; see *šuvakada-bēdam. "சுவகத முதலாயின மூன்றுமிலையே" (வேதா. சூ. 27).*

[Skt. sva-gata > த. சுவகதம்]

சுவகர்மம் *šuva-karmam*, பெ.(n.) 1. தனக்குரித்தாக நூல்களால் வகுக்கப்பட்ட தொழில்; one's duties ordained by *šāstras.* 2. சொந்தத் தொழில்; one's own business.

[Skt. sva > த. சுவ]

[குல் >குரு> கரு >கருமம்> Skt. கர்மம்]

சுவகாரியம் *šuva-kāriyam*, பெ.(n.) **சுவகர்மம் 2** பார்க்க; see *šuva-karmam, 2. பட்டணத்துக்குச் சுவகாரியமாகப் போயிருந்தேன் (இ.வ.)*

(சுவ+காரியம்)

(Skt+.sva > த. சுவ)

[கரு >கார் >காரியம். கரு–செய்தற்பொருள்]

சுவகீயை *šuvakīyai*, பெ.(n.) மூவகைப் பெண்டிருள் ஒரு வகையினள் (சுக்கிரநீதி. 212, கீழ்க்குறிப்பு); one of the three classes of women.

[Skt. švakīyā > த. சுவகீயை]

சுவச்சதை *šuva-c-cadai*, பெ.(n.) **சுவச்சம்[1] – 1,2** பார்க்க; see *suvaccam[1]-1,2.*

[சுவ+சதை]

[Skt. sva > த. சுவ+சதை]

சுவச்சம்[1] *šuvaccam*, பெ.(n.) 1. தெளிவு; clearness, as of the atmosphere, water. *"ஆகாசம் சுவச்சமாகியும்" (சி.சி.2:67, சிவாக்.).* 2. தூய்மை; purity, stainlessness, freedom from mixture, as of race. 3. நல்லெண்ணெய் (தைலவ. தைலவ. 35); gingelly oil, as clear.

[Skt. svaccha > த. சுவச்சம்]

சுவச்சம்[2] *šuvaccam*, பெ.(n.) **சுவத்தம்** பார்க்க; see *šuvattam. "எல்லாரும் சுவச்ச மாயிருக்கிறார்கள்" (வீரன்)*

[Skt. sva-stha > சுவஸ்தம் >த. சுவச்சம்]

சுவசம் *šuvašam*, பெ.(n.) தன் வயத்தில் உள்ளது; one's own custody or control. *"நான்மறைகளுஞ் சுவசமாகிய வங்கண" (விநாயகபு. 73:35).*

த.வ. தன்பொறுப்பு

[Skt. sva+vaša > சுவஸ்தம்> சுவத்தம் த. சுவசம்]

சுவசனம்¹ *šuvašaṉam*, பெ.(n.) சொந்தச் சொல் one's own word.

[Skt. sva+vacana > த. சுவசனம்]

சுவசனம்² *šuvašaṉam*, பெ.(n.) நற்சொல்; good word, auspicious word.

த.வ. நற்சொல்

[Skt. su+vacana > த. சுவசனம்]

சுவசனவிருத்தம் *šuvašaṉa-viruttam*, பெ.(n.) தன் சொற்கு மாறுபாடாக, இயம்பலாகிய பக்கப்போலி வகை; self-contradiction. *"சுவசனவிருத்தந் தன்சொன்மாறி யியம்பல்" (மணிமே. 29, 160).*

[Skt. sva-vacaṉa+viruddha > த. சுவசனவிருத்தம்]

சுவசாதி *šuva-šādi*, பெ.(n.) தன்னினம்; one's own caste or class.

[Skt. sva-jāti > த. சுவசாதி]

சுவசாதீயம் *šuva-šādīyam*, பெ.(n.) ஓரினத்தைச் சார்ந்த பொருள்; that which belongs to one's genus or class. *"தேஜோற் பந்நமான சப்தம் சுவசாதீயமா யிருக்கிற உத்தரோத்தர சத்தங்களை உற்பாதித்து" (சி.சி.2:61, சிவாக்.).*

த.வ. ஓரினப்பொருள்

[Skt. sva-jātīya > த. சுவசாதீயம்]

சுவணகாரகன் *šuvaṇa-kāragaṉ*, பெ.(n.) பொற்கொல்லன்; goldsmith.

[Skt. svarṇa-kārɛ > த. சுவணகாரகன்]

சுவணபுட்பம் *šuvaṇa-puṭpam*, பெ.(n.) 1. **சுவர்ணபுட்பம்** see *š... arṇa-puṭpam.* 2. கோயிலிற் வழிபாட்டுக் காலங்களில் மறை முதலியன ஓதுகை (இ.வ.); recitation of portions of the *Vēdas* and other sacred works at the time of worship in temples.

[Skt. svarṇa+Puṣpa > சுவர்ணபுஷ்பம் த. சுவணபுட்பம்]

சுவணபூமி *šuvaṇa-būmi*, பெ.(n.) **சுவர்ணபூமி** 2, 3 பார்க்க; see *šuvarṇa-būmi.*

[Skt. svarṇa+bhūmi > த. சுவர்ணபூமி > சுவணபூமி]

சுவணம் *šuvaṇam*, பெ.(n.) 1. பொன்; gold. *"எரிபுரை சுவணம்" (பெருங். வத்தவ. 11:52).* 2. மாழைக் கட்டி (பிங்.); ore.

[Skt. suvarṇa > த. சுவர்ணம் >சுவணம்]

சுவத்தம் *šuvattam*, பெ.(n.) 1. நலம், உடல்நலம்; sound health. 2. கவலையின்மை; leisure; freedom crom cares.

[Skt. sva-stha > சுவஸ்தம் >த. சுவத்தம்]

சுவத்தன் *šuvattaṉ*, பெ.(n.) 1. உடல் நலமுள்ளவன்; healthy person. 2. மனக் கவலையின்றி இருப்போன்; person resting in absolute peace. *"சுவத்தனாய் நின்ற நின்னிலை" (உத்தரரா. தோத்திர. 23).*

[Skt. sva-stha > சுவஸ்தம் >த. சுவத்தன்]

சுவத்தி *šuvatti*, பெ.(n.) *சுவத்திவாசனம் பார்க்க; seešuvattivāsaṉam. "வேதச் செல்வர் சுவத்திகளோத" (திருவிளை. திருமணப். 145).*

[Skt. svasti > சுவஸ்தி > த. சுவத்தி]

சுவத்திகம்¹ *šuvattigam*, பெ.(n.) 1. சுவத்தி–வாசனம் 2,3,4 பார்க்க; *see šuvatti-vāsaṉam. 2. 3,4. "வசுக்கள் சுவத்திக முரைப்ப" (குற்றா. தல. திருமண. 82). 2. சுவத்திவாசனம் – 2. பார்க்க; see šuvatti-vāsaṉam. 2. – 2. "சுவத்திகம்போற் பாவிய விரேகை" (விநாயகபு. 15, 48).* 3. **சுவத்திகாசனம்** (பிங்.)

பார்க்க; see *šuvattigāšaṉam.* 4. இருக்கை வகை (சிலப். 8, 25, உரை); a kind of sitting posture, one of nine *irukkai.* 5. நான்கு விரலுந் தம்முள் ஒட்டிநிமிரப் பெருவிரல் குஞ்சித்து நிற்கும் பதாகைக்கை இரண்டனையும் மணிக்கட்டில் ஏற்றி வைக்கும் இணைக்கை வகை (சிலப். 3, 18, உரை); a gesture with both hands in which they are joined at the wrists in their *padāgai* pose and turned up.

[Skt. svastika > சுவஸ்திகம் > த. சுவத்திகம்]

சுவத்திகம்² *šuvattigam,* பெ.(n.) 201 உச்சிகளையும் (சிகரங்களையும்) 25 மேனிலைக் கட்டுகளையுமுடைய கோயில் (சுக்கிரநீதி, 230); temple with 201 towers and 25 storeys.

[Skt. svastika > சுவஸ்திகம் > த. சுவத்திகம்]

சுவத்திகாசனம் *šuvattigāšaṉam,* பெ.(n.) ஒன்பது வகை இருக்கைகளுள், கால்களைக் குறுக்கிட்டு வைத்துக் கொண்டு, உடல் நிமிர அமரும் இருக்கை; a yōgic posture symbolic of success, which consists in sitting with legs crosswise while the body is held erect and at ease, one of nine irukkai.

[Skt. svastika+āsana > சுவஸ்திகாசனம் > த. சுவத்திகாசனம்]



சுவத்திவாசனம் *šuvatti-v-āšanam,* பெ.(n.) 1. ஆவணம் முதலியவற்றின் முதலில், மங்கலங் குறிக்க வழங்கும் வடமொழிச்சொல்; a sanskrit indeclinable denoting auspiciousness, used at the beginning of inscriptions, calendars, etc. 2. மங்கலத்தைக் குறிக்கும் 卐 என்ற குறியீடு; a mystical mark in the form , denoting auspiciousness. 3. மங்கலம் பயத்தலைக் கருதி ஓதப்படும் மறைப்பகுதி; a portion of the vēdas recited with a view to auspiciousness. 4. இறைவன் புறப்பாட்டில் ஓதப்படும் மறை; vēda recited in the presence of idols taken in procession.

[Skt. svasti-vāšana > சுவஸ்திவாசனம்> த. சுவத்திவாசனம்]

சுவதந்தரன் *šuvatandaraṉ,* பெ.(n.) **சுதந்தரன்** பார்க்க; see *šudandaraṉ.*

[Skt. sva-tantra > த. சுவதந்தரன்]

சுவதந்திரம் *šuvatandiram,* பெ.(n.) **சுதந்தரம்** பார்க்க; see *šudandaram.*

[Skt. sva-tantra > த. சுவதந்திரம்]

சுவந்திரம் *šuvandiram,* பெ.(n.) **சுதந்தரம்** பார்க்க; see *sudandaram. குடிமக்களுக் குள்ள சுவந்திரம் கொடுத்தாயிற்றா? (உ.வ.).*

[Skt. sva-tantra > த. சுவந்திரம்]

சுவப்பனம் *šuvappaṉam,* பெ.(n.) **கனவு;** dreams.

[Skt. svapna > த. சுவப்பனம்]

சுவப்பிரம் *šuvappiram,* பெ.(n.) 1. நிரயம் (சூடா.); hell. 2. வளை (யாழ்.அக.); burrow.

[Skt. švabhra > த. சுவப்பிரம்]

சுவபட்சம் *šuva-paṭcam,* பெ.(n.) **சுபட்சம்** பார்க்க; see *šubaṭcam.*

[Skt. sva+pakṣa > த. சுவபட்சம்]

சுவபாவம் *šuva-pāvam*, பெ.(n.) **சுபாவம்** பார்க்க; see *šubāvam.*

[Skt. sva+bhāva > த. சுவபாவம்]

சுவபாவிகம் *šuva-pāvigam*, பெ.(n.) இயல்பானது; that which is natural.

[Skt. svā-bhāvika > த. சுவபாவிகம்]

சுவபாவோக்தி *šuvabāvōkti*, பெ.(n.) தன்மை நவிற்சியணி; a figure of speech in which the actuality alone is described.

[Skt. svabhā-vōkti > த. சுவபாவோக்தி]

சுவம்[1] *šuvam*, பெ.(n.) 1. சொந்தமானது; one's own. 2. உடைமை; wealth, belongings.

[Skt. sva > த. சுவம்]

சுவம்[2] *šuvam*, பெ.(n.) மங்கலம்; prosperity, good fortune. *"சைவமோங்கிச் சுவம்பெருக" (குற்றா. தல. திருமால். 143).*

[Skt. šubha > த. சுவம்]

சுவம்[3] *šuvam*, பெ.(n.) **சுவவு[1]** (அக.நி.) பார்க்க; see *šuvavu.*

சுவம்[4] *šuvam*, பெ.(n.) **சுவர்க்கம்[1], 1.** பார்க்க (அக.நி.); see *šuvarkkam[1], 1.*

[Skt. ṣvaḥ> த. சுவம்]

சுவமேதைக்கிருசி *šuva-mēdai-k-kiruši*, பெ.(n.) அதிகாரியின் அனுமதியின்றிச் செய்யும் பயிர்; unauthorised cultivation.

[Skt. sva-mēdhā +kṛṣi> த. சுவமேதை கிருஷி >கிருசி]

சுவமேதையாக *šuva-mēdai-y-āga*, வி.எ. (adv.) தானாகவே; of one's own accord.

[Skt. sva-mēdhā > த. சுவமேதையாக]

சுவயங்கிருதம் *šuvayaṅ-girudam*, பெ.(n.) தானே செய்துகொள்ளுவது; one's own doing, as evil.

[Skt. svayaṃ-kṛta > த. சுவயங்கிருதம்]

சுவயந்தத்தன் *šuvayan-tattaṉ*, பெ.(n.) பிள்ளைகள் பன்னிருவருள் தானாகவே ஒருவற்கு மகனாகப் புகுந்தவன்; self-given son, son adopted with his own consent, one of twelve puttiraṉ.

சுவயம் *šuvayam*, பெ.(n.) **சுயம்** பார்க்க; see *šuyam.*

[Skt. svayam > த. சுவயம்]

சுவயம்பாகம் *šuvayam-pāgam*, பெ.(n.) **சுயம்பாகம்** பார்க்க; see *šuyam-bāgam.*

[சுவயம்+பாகம்]

[Skt. svayam > சுவயம்]

பகு >பாகு> பாகம்

சுவயம்பு *šuvayambu*, பெ.(n.) **சுயம்பு** பார்க்க; see *šuyambu.*

[Skt. svayam+bhū > த. சுவயம்பு]

சுவயம்வரம் *šuvayam-varam*, பெ.(n.) **சுயம்வரம்** பார்க்க; see *šuyam-varam.*

[Skt. svayam+vara > த. சுவயம்வரம்]

சுவயார்ச்சிதம் *šuvayārccidam*, பெ.(n.) **சுயார்ச்சிதம்** பார்க்க; see *šuyārccidam.*

[Skt. svayam+ārjita > த. சுவயார்ச்சிதம்]

சுவர் *šuvar*, பெ.(n.) **சுவர்க்கம்[1], 1** (சங்.அக.) பார்க்க; see *šuvarkka[1]m, 1.*

[Skt. svas > த. சுவர்]

சுவர்க்ககணம் *šuvarkka-kaṇam*, பெ.(n.) செய்யுட்கணத்தொன்று metrical foot of three *nēr.*

[Skt. svarga > த. சுவர்க்கம்+எகணம்]

சுவர்க்கம்[1] *šuvarkkam*, பெ.(n.) 1. வானோர் உலகம்; Indra's heaven, the world of gods. *"தென்னாட்டவருஞ் சுவர்க்கம் புகுதலால்" (நாலடி, 243).* 2. மகிழ்ச்சி; happiness. *"நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய்" (திவ். திருப்பா. 10).*

[Skt. svarga > த. சுவர்க்கம்]

சுவர்க்கம்² *śuvarkkam,* பெ.(n.) பெண்களின் மார்பகம் (பிங்.); woman's breast.

[Skt. su-varga > த. சுவர்க்கம்]

சுவர்க்கர் *śuvarkkar,* பெ.(n.) வானோர் (பிங்.); celestials, inhabitants of svarga.

[Skt. svarga > த. சுவர்க்கர்]

சுவர்க்கவாசல் *śuvarkka-vāśal,* பெ.(n.) திருமால் கோயில்களில் சிலை (மார்கழி) மாதத்து பதினோராம் நாள் முதல் வளர்பிறை பத்து நாள்வரை இறைவன் எழுந்தருளுதற்கு உரியதும், மால் உலக வாயில் போலக் கருதிப் பலரும் செல்வதற்கு உரியதும் மற்றக் காலங்களில் திறக்கப்படாததுமான தனி வாயில்; a gate in Viṣṇu temples believed to represent the entrance to heaven and opened annually for ten days from the 11th day of the bright of half of mārkaḻi to let the idol and devotees pass through.

[சுவர்க்கம்+வாசல்]

[Skt. svarga > த. சுவர்க்கம்]

சுவர்க்கவாசலேகாதசி *śuvarkka-vāśal-ēgādaśi,* பெ.(n.) சிலைத் திங்கள் வளர்பிறை பதினோராம் நாள்; the 11th tidi of the bright half of *mārkaḻi.*

[சுவர்க்கம்+வாசல்+லேகாதசி]

[Skt. svarga+ egādaśi >த. சுவர்க்க வாசலேகாதசி]

சுவர்க்கவேதி *śuvarkkavēdi,* பெ.(n.) முலை (தக்கயாகப். 593, உரை); breast.

சுவர்க்கன் *śuvarkkaṉ,* பெ.(n.) (வானோர் உலகத் தலைவனான) இந்திரன் (பிங்.); Indraṉ, as the lord of the celestial world.

த.வ. துறக்கக்கோ

[Skt. svarga > த. சுவர்க்க>சுவர்க்கன்]

சுவர்க்காரோகணம் *śuvarkkārōgaṇam,* பெ.(n.) துறக்கஞ் செல்லுகை; ascent to heaven, euphemism for death. *"மாறங்காரி..... சுவர்க்கா ரோகணஞ்செய்த பின்னை" (செந். iv, 336).*

[Skt. svarga + ā-rōhaṇa > த. சுவர்க்காரோகணம்]

சுவர்க்காவதரணம் *śuvarkkāvadaraṇam,* பெ.(n.) ஐந்துவகைத் திருமணங்களு ளொன்று (திருநூற். 4, உரை); one of *pañja-kalyāṇam.*

[Skt. svarga + avataraṇa > த. சுவர்க்காவதரணம்]

சுவர்ச்சிலவணம் *śuvarcci-lavaṇam,* பெ.(n.) வெடியுப்பு (சுக்கிரநீதி, 329); saltpetre.

[சுவர்ச்சி+இலவணம். Skt. svarci > த. சுவர்ச்சி அளம்= உப்பு.அளம்+ அணம் >அளவணம்> இலவணம்]

சுவர்ணகதலி *śuvarṇa-kadali,* பெ.(n.) வாழை வகை; a species of plantain.

[Skt. svarṇa > த. சுவர்ணம்+கதலி]

சுவர்ணகாரன் *śuvarṇa-kāraṉ,* பெ.(n.) பொற்கொல்லன்; goldsmith.

[Skt. svarṇa > த. சுவர்ணம்+காரன்]

சுவர்ணத்திராவகம் *śuvarṇa-t-tirāvagam,* பெ.(n.) **சுவர்ணபேதி** பார்க்க; see *śuvarṇa-bēdi.*

[Skt. svarṇa + drāvaka> த. சுவர்ணத்திராவகம்]

சுவர்ணபசுமம் *śuvarṇa-baśumam,* பெ.(n.) தங்கபற்பம்; medicinal powder calcined from gold.

[Skt. svarṇa+bhasman > சுவர்ணபஸ்மம் >த. சுவர்ணபசுமம்]

சுவர்ணபுட்பம் *śuvarṇa-puṭpam,* பெ.(n.) 1. பொற்பூ; gold flower. 2. பொற்பூக்களுக்குப் பதிலாகத், தேவதைகளுக்குக் கொடையாகக் கொடுக்கும் காசுகள்; coins offered to gods,

as substitute for gold flowers. 3. வேலையின் பொருட்டு அளிக்கும் வெகுமானம்; remuneration, money offered as inducement. 4. கையூட்டு (உ.வ.); bribe.

[Skt. svarna +puṣpa> த. சுவர்ணபுஷ்பம் > சுவர்ணபுட்பம்]

சுவர்ணபூமி *šuvarṇa-būmi*, பெ.(n.) 1. the boundary line of the universe. 2. வானுலகம்; Indra's heaven. 3. மியான்மர் என்று, இன்று வழங்கும் பர்மா தேசம் (ஈடு.); Miyanmar (Burmā).

[Skt. svarṇa+bhūmi > த. சுவர்ணபூமி]

சுவர்ணபேதி *šuvarṇa-bēdi*, பெ.(n.) தங்கத்தை இளக்கும் எரிநீர்மம்; aqua regia, a mixture of nitric and hydrochloric acids, as dissolving gold.

[Skt. svarna+bhēdin > த. சுவர்ணபேதி]

சுவர்ணம் *šuvarṇam*, பெ.(n.) 1. பொன்; gold. 2. நாணயம்; coin. *சுவர்ணாதாயம்.*

[Skt. suvarṇa > த. சுவர்ணம்]

சுவர்ணமாட்சிகம் *šuvarṇa-māṭcigam*, பெ.(n.) துணை மூலப்பொருள்களுள் ஒன்று (சங். அக.); an interior mineral, one of *upa-tādu.*

[Skt. suvarṇa-mākṣika > த. சுவர்ண மாட்சிகம்]

சுவர்ணயூதி *šuvarṇa-yūdi*, பெ.(n.) பொன்னிறமுள்ள மல்லிகை (மலை.) golden jasmine.

[Skt. svarṇa-yūthikā > த. சுவர்ணயூதி]

சுவர்ணவேதை *šuvarṇa-vēdai*, பெ.(n.) சுவர்ணபேதி பார்க்க; see *šuvarṇa-bēdi.*

சுவர்ணாங்கி *šuvarṇāṅgi*, பெ.(n.) முதன்மைப் பண்களுளொன்று (சங். சந். 47); (mus.) a primary rāgam.

[Skt. svarṇāṅgi > த. சுவர்ணாங்கி]

சுவர்ணாதாயம் *šuvarṇādāyam*, பெ.(n.) நிலமுதலியவற்றிலிருந்து வரும் கைப்பண வரும்படி; revenue in gold, rent or tax receivable in money.

[சுவர்ணம்+ஆயம்.]

[Skt. svarṇa > த. சுவர்ணம்]

[ஒருகா: ஆகு+ஆயம் >(ஆது +ஆயம்) ஆதாயம். ஆயம்:= கூடுதல், தொகை]

சுவர்த்திகாதனம் *šuvarttigādanam*, பெ.(n.) ஒக இருக்கை வகை (தத்துவப். 107, உரை); a yogic posture.

சுவர்யோனி *šuvar-yōṉi*, பெ.(n.) தெய்வப் பிறப்பு; birth as celestials. *"அஞ்ஞான கன்மத்தினாற் சுவர்யோனி புக்கு" (திருமந். 499).*

[Skt. svar > த. சுவர்+யோனி]

சுவரக்கிராமம் *šuvara-k-kirāmam*, பெ.(n.) ஏழிசை வரிசை; (mus.) gamut.

[Skt. svara+grāma > த. சுவரக்கிராமம்]

சுவரணை *šuvaraṇai*, பெ.(n.) உணர்ச்சி; consciousness.

[Skt. smaraṇā > த. சுமரணை > சுவரணை]

சுவரம் *šuvaram*, பெ.(n.) இசை; musical note.

[Skt. svara > த. சுவரம்]

சுவரிதம் *šuvaridam*, பெ.(n.) நலிதலோசை (பி.வி.40); circumflex accent.

[Skt. svarita > த. சுவரிதம்]

சுவரூபம் *šuvarūbam*, பெ.(n.) 1. தன்னியல்பு; natural state or quality, nature. 2. அரச குலம்; family or dynasty of kings.

[Skt. sva-rūpa > த. சுவரூபம்]

சுவரூபாசித்தம் *šuvarūbāšittam*, பெ.(n.) ஏதுப்போலி (சைவப். பக். 25); a fallacy in reasoning in which the middle term does not exist in the minor term.

[Skt. svarūpāsiddha > த. சுவரூபாசித்தம்]

சுவல்பம் *šuvalbam*, பெ.(n.) **சுவற்பம்** (இ.வ.) பார்க்க; see *šuvaṟpam*.

சுவல்லி *šuvalli*, பெ.(n.) கார்போகியின் வித்து; seed off scurfy pea.

[Skt. su-valli > த. சுவல்லி]

சுவலன் *šuvalaṉ*, பெ.(n.) நெருப்பு (பிங்.); fire.

[Skt. jvalana > த. சுவலன்]

சுவலி–த்தல் *šuvali-*, 4. செ.கு.வி.(v.i.) சுடர் விட்டெரிதல்; to shine, burn brightly, blaze forth.

[Skt. jval > த. சுவலி-,]

சுவலோகம் *šuvalōgam*, பெ.(n.) மேலேழுல கத்துள் மூன்றாவதான, தேவருலகம் (சி.போ. பா.2:3,பக். 210); Indra's heaven, third of *mēl-ēḻ-ulagam*.

த.வ. **மூன்றாம் மேலுலகு**

[Skt. suvar-lōka > த. சுவலோகம்]

[த. உலகம் >Skt. lōka]

சுவற்பம் *šuvaṟpam*, பெ.(n.) சிறியது; trifle.

[Skt. svalpa > த. சுவற்பம்]

சுவன்னகாரன் *šuvaṉṉa-kāraṉ*, பெ.(n.) **சுவர்ணகாரன்** (யாழ்.அக.); see *šuvarṇa-kāraṉ*.

[Skt. svarṇa > த. சுவன்ன+காரன்]

சுவன்னம் *šuvaṉṉam*, பெ.(n.) **சுவர்ணம்** பார்க்க; see *šuvarṇam*.

[pkt. suvanna > த. சுவன்...]

சுவனம் *šuvaṉam*, பெ.(n.) க...வு; dream. *"சாக்கிரஞ் சுவனஞ் சுழுத்தி" (ஞானா. 9:9).*

[Skt. svapna > த. சுவனம்]

சுவசேத்திரம் *šuva-šēttiram*, பெ.(n.) கோளுக்குரிய ஆட்சி வீடு; a planet's own house in the horoscope.

[Skt. sva+kṣētra > சுவக்ஷேத்திரம் >த. சுவசேத்திரம்]

சுவா *šuvā*, பெ.(n.) நாய் (திவா.); dog

[Skt. švā > த. சுவா]

சுவாகதம் *šuvākadam*, பெ.(n.) 1. வரவேற்கும் நன்மொழி; expr. denoting welcome, cordial reception. *"தோழியர் சுவாகதம் போதுகீங்கென" (சீவக. 1021).* 2. கிளி (திவா.); parrot.

[Skt. svāgata > த. சுவாகதம்]

சுவாகா *šuvāgā*, பெ.(n.) 1. வேள்வி செய்யும் பொழுது, தெய்வத்தின் பெயர்க்குப் பின் கூறும் மொழி; a term used along with the name of a god while offering oblation to him. *வேட்கோக் குயக்கோடன் ஆனந்தஞ் சேர்க சுவாகா (தொல். பொருள். 490, உரை).* 2. **சுவாகாதேவி** பார்க்க; see *suvāgā-dēvi*.

[Skt. svāhā > த. சுவாகா]

சுவாகாதேவி *šuvāgā-dēvi*, பெ.(n.) வேள்விக்கு உரிய தெய்வமான தீக்கடவுளின் மனைவி (பிங்.); wife of Agni, presiding over sacrificial offerings.

[சுவாகா+தேவி]

[Skt. svāhā > த. சுவாகா]

சுவாகு *šuvāgu*, பெ.(n.) இராமனாற் கொல்லப்பட்ட ஓர் அரக்கன்; a Tākṣasa Glain by Rāmaṉ. *"மற்பொரு சுவாகுவும் வந்து தோன்றினாற்" (கம்பரா. தாடகை. 32).*

[Skt. Subāhu > த. சுபாகு > சுவாகு]

சுவாகை *šuvāgai*, பெ.(n.) சுவாகாதேவி பார்க்க; see *šuvāgā-dēvi*. *"சுவாகை முதல்வனை முடியுற வணங்கி" (பாரத. இராசசூ. 108).*

[Skt. svāhā > த. சுவாகை]

சுவாங்கி *šuvāṅgi*, பெ.(n.) **கத்தூரிமஞ்சள்** (பிங்.) long and round zedoary.

[Skt. šubhāṅgi > த. சுபாங்கி >சுவாங்கி]

சுவாசக்கண்ணறை *šuvāša-k-kaṉṉaṟai*, பெ.(n.) மூச்சுப் பையிலுள்ள கண்ணறை (இங்.வை.); air-cell of the lungs.

[சுவாசம்+கண்ணறை]

[Skt. švāsa > த. சுவாசம்]

சுவாசக்குத்து *šuvāša-k-kuttu*, பெ.(n.) 1. உயிர்ப்பு (சுவாசம்) நோய்வகை; shooting pain in pulmonic complaint. 2. மூச்சுப்பையின் மூடுதோலில் உண்டாகும் நோய்வகை (M.L.); pleurisy.

[சுவாசம்+குத்து]

[Skt. švāsa > த. சுவாசம்]

சுவாசக்குழல் *šuvāša-k-kuḻal*, பெ.(n.) மூச்சுக்குழாய்; trachea, windpipe.

[சுவாசம்+குழல்]

[Skt. švāsa > த. சுவாசம்]

சுவாசகம்[1] *šuvāšagam*, பெ.(n.) 1. பேராமுட்டி (மலை.); fragrant sticky mallow. 2. எட்டி மரம்; (மலை.) strychnine tree. 3. உவர்மண் (வின்.); fuller's earth.

[Skt. su-vāsaka > த. சுவாசகம்]

சுவாசகம்[2] *šuvāšagam*, பெ.(n.) இன்மொழி பேசும் கிளி; parrot, as uttering sweet sounds. *சுவாசக மென்மொழித்திரு" (ஏகாதசிபு. உருக்கமா. 51).*

[Skt. su-vācaka > த. சுவாசகம்]

சுவாசகரவருக்கம் *šuvāšakara-varukkam*, பெ.(n.) ஈளையை (காசத்தை)ப் போக்கும் மருந்துகள்; the group of drugs which cures asthma or difficulty of breathing. (சா.அக.)

[Skt. švāsā+khara+varga > த. சுவாசகரவர்க்கம் >சுவாசகரவருக்கம்]

சுவாசகாசம் *šuvāša-kāšam*, பெ.(n.) ஈளைநோய் (தைலவ. தைல. 60); asthma.

[Skt. švāsa+kāša > த. சுவாசகாசம்]

சுவாசகாசவிழுப்பு *šuvāša-kāša-viḻuppu*, பெ.(n.) இரைப்பினால் காணும் வலிப்பு; asthma marked by bronchial spasm and a swelling of the bronchial mucous membrance - Bronchial asthma. (சா.அக.)

[சுவாசகாசம் +இழுப்பு]

[Skt. švāsa+kāša > த. சுவாசகாசம்]

சுவாசகோசம் *šuvāša-kōšam*, பெ.(n.) **சுவாசப்பை** பார்க்க; see *šuvāša-p-pai*.

[Skt. švāsa+kōsa > த. சுவாசகோசம்]

சுவாசங்கட்டியேற்று—தல் *šuvāšaṅ-gaṭṭi-y-ēṟṟu-*, 5. செ.கு.வி.(v.i.) உயிர்வளியைச் சுழிமுனைநாடி வழியே செலுத்துதல் (யாழ்.அக.); to force the breath through *šuḻimuṉai*.

[சுவாசம்+கட்டியேற்று–,]

[Skt. švāsa > த. சுவாசம்]

சுவாசநிருணயம் *šuvāša-niruṇayam*, பெ.(n.) 1. உயிர்வளியை அடக்கியாளுந் திறன்; control of breath, passing it through either nostril at pleasure or restraining it for any length of time. 2. உயிர்வளியை (பிராண வாயுவை) அடக்கியாலும் கும்பக ஆற்றல்; establishing or maintaining the control of breath in kumbaga. (சா.அக.)

[Skt. švāsa+nirṇaya > த. சுவாசநிருணயம்]

சுவாசப்பை *śuvāśa-p-pai*, பெ.(n.) நுரையீரல்; lung.

[சுவாசம்+பை]

[Skt. śvāsa > த. சுவாசம்]



சுவாசபந்தம் *śuvāśa-bandam*, பெ.(n.) 1. உயிர்வளியை நிறுத்துகை; suspension of breath. 2. மூச்சு முட்டிப்போகை; asphyxia.

[Skt. śvāsa+bandha > த. சுவாசபந்தம்]

சுவாசம் *śuvāśam*, பெ.(n.) மூச்சு, உயிர்ப்பு (திவா.); breath, respiration. *அவருக்கு நினைவு தப்பியிருந்தாலும் சுவாசம் மட்டும் சீராக இருந்தது.*

[Skt. śvāsa > த. சுவாசம்]

சுவாசம்வாங்கல் *śuvāśam-vāṅgal*, பெ.(n.) 1. இறப்பு மூச்சு வாங்குகை; hard breathing at the moment of death. 2. மூச்சுப் பழக்கம் (பிராணாயாமம்) (வின்.); drawing in and restraining the breath.

[சுவாசம்+வாங்கல்]

[Skt. śvāsa > த. சுவாசம்]

சுவாசரோகம் *śuvāśa-rōgam*, பெ.(n.) **சுவாசகாசம்** பார்க்க; see *śuvāśa-kāśam*.

[Skt. śvāsa+rōga > த. சுவாசரோகம்]

சுவாசாசயம் *śuvāśāśayam*, பெ.(n.) **சுவாசப்பை** பார்க்க; see *śuvāśa-p-pai*.

[Skt. śvāsāśaya > த. சுவாசாசயம்]

சுவாசி-த்தல் *śuvāśi-*, 4. செ.கு.வி.(v.i.) உயிர் வாழ, காற்றை உள்ளிழுத்து வெளிவிடுதல், மூச்சு விடுதல்; to breathe. *'கூட்டத்திற்குள் மாட்டிக்கொண்டு சரியாக சுவாசிக்க முடியாமல் திணறினான்'.*

[Skt. śvāsa > த. சுவாசி-,]

சுவாத்தியம் *śuvāttiyam*, பெ.(n.) 1. மனநிறைவு; happiness, contentment, satisfaction. 2. நலம்; health, whole someness, ease. *"இது உடம்புக்கு நல்ல சுவாத்திய மாயிருக்கிறது".*

[Skt. svāsthya > த. சுவாத்தியம்]

சுவாத்தியாயம் *śuvāttiyāyam*, பெ.(n.) தானாகக் கற்ற கல்வி; stydying without the help of a teacher, voluntary study.

[Skt. svaadhyāya > த. சுவாத்தியாயம்]

சுவாதகந்தி *śuvādakandi*, பெ.(n.) **இத்தி** பார்க்க; see *itti*, stone fig.

[Skt. svādu-gandhin > த. சுவாதகந்தி]

சுவாதந்திரியம் *śuvātandiriyam*, பெ.(n.) தனியுரிமை; freedom, independence. *"பெத்தான்மாக்களுக்குச் சுவாதீனமே சுவாதந்திரிய மில்லை" (சி.சி. 11, 7, ஞானப்.).*

[Skt. svātantrya > த. சுவாதந்திரியம்]

சுவாதம்[1] *śuvādam*, பெ.(n.) **சுவாசம்** பார்க்க; see *śuvāśam*. *"சுவாத வாதம் மண்டுற" (கம்பரா. கும்பக. 50).*

[Skt. śvāsa > த. சுவாதம்]

சுவாதம்[2] *śuvādam*, பெ.(n.) கருவுற்ற பெண்களுக்கும், பிள்ளை பெற்ற பெண் களுக்கும் உண்டாகும், சில நோய்களைக் குறிப்பிடும் பொதுவான பெயர்; a general term to refer to ailments of women in pregnancy or after delivery.

சுவாதி *šuvādi*, பெ.(n.) 15வது விண்மீனான விளக்கு விண்மீன்; the 15th nakṣatra.

[Skt. *svāti* > *த. சுவாதி*]

சுவாதிக்கொக்கு *šuvādi-k-kokku*, பெ.(n.) ஐப்பசி நிலவு நாளில், கூட்டமாக வெளிக் கிளம்பும், ஒருவகை வெண்கொக்கு; a species of white crone flying in large numbers on the day when the moon is in conjunction with cuvādi in the month of *aippasi*.

[*சுவாதி+கொக்கு*]

[Skt. *svāti* > *த. சுவாதி*]

சுவாதிட்டானம் *šuvādiṭṭāṉam*, பெ.(n.) ஆறு தாரங்களுள் மூலாதாரத்திற்கும் தொப்புளுக்கும் இடையே, ஆறிதழ்த்தாமரை வடிவாயுள்ள இடம்; (yōga) a cakra or mystic centre in the body, described as a six-pefalled lotus, situate above *mūlādāram* and below the navel, one of *āṟātāram*, q.v.

[Skt. *svādhiṣṭhāna* > *த. சுவாதிட்டானம்*]

சுவாதீனஅடைமானம் *šuvādīṉa-aḍaimāṉam*, பெ.(n.) பழக்க சத்தி (இ.வ.); usufructuary mortgage, mortgage with possession.

[Skt. *svādhīna* > *த. சுவாதீனஅடைமானம்*]

சுவாதீனம்[1] *šuvādīṉam*, பெ.(n.) 1. தனியுரிமை; independence. 2. உரிமை; right of possession. 3. தன்வயமானது (சி.சி.11,7, ஞானப்.); that which is under one's own control, opp. to *parātīṉam*.

[Skt. *svādhīna* > *த. சுவாதீனம்*]

சுவாதீனம்[2] *šuvādīṉam*, பெ.(n.) 1. ஒருவரின் தன் உணர்வு; consciousness, state of being conscious, concious control of one's faculties. *ஒருவர் சுவாதீனத்துடன் எழுதிக் கொடுத்த ஆவணமே செல்லும்.* 2. உடல் உறுப்புகளின் வாக்கமான இயக்கம்; normal functioning of limbs. *புத்தி சுவாதீனம் இல்லாதவன்.* 3. சொத்துகள் ஒருவரிடமே இருத்தல்; possession. *இடத்தைச் சுவாதீனம் செய்து கொள்வதற்கான உறுதி; முதன்மையான.* 4. ஒருவருக்கே உரித்தான விடுதலை (சுதந்திரம்); making oneself at home being at ease. *அவள் சுவாதீனமாக வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.*

சுவாது *šuvādu*, பெ.(n.) 1. சுவை; taste, flavour. 2. இனிமை; sweetness. 3. ஆடாதோடை (தைலவ. தைல. 131); *malabar-hut*.

[Skt. *svādu* > *த. சுவாது*]

சுவாதுகண்டகம் *šuvādu-kaṇḍagam*, பெ.(n.) நெருஞ்சி (சங்.அக.) cow-thorn.

[Skt. *svādu* > *த. சுவாது*]

[*கள் > கண்டு > கண்டகம் = முள், நீர்முள்ளி*]



சுவாதுகண்டம் *šuvādu-kaṇḍam*, பெ.(n.) **சுவாதுகண்டகம்** (மலை.) பார்க்க; see *suvādu-kaṇḍagam*.

சுவாதுகந்தி *šuvādu-kandi*, பெ.(n.) துளசி (மலை.) ; sacred basil.

[Skt. *svadu-gandhi* > *த. சுவாதுகந்தி*]

சுவாதுமூலம் *šuvādu-mūlam*, பெ.(n.) கிழங்கு வகை; carrot.

[Skt. *svādu* > *த. சுவாதுமூலம்*]

சுவாந்தம் *šuvāndam,* பெ.(n.) மனம் (வின்.); mind.

[Skt. svānta > த. சுவாந்தம்]

சுவாபதேசம் *šuvābadēšam,* பெ.(n.) உள்ளுறைப் பொருள்; esoteric sense, inner meaning, dist. fr. *சுவாபதேச வியாக்கியானம்.*

[Skt. svāpadēša > த. சுவாபதேசம்]

சுவாபாவிகம் *šuvābāvigam,* பெ.(n.) இயல்பாய் உள்ளது; that which is natural, peculiar or inhercent.

த.வ. இயல்புண்மை

[Skt. svābhāviga > த. சுவாபாவிகம்]

சுவாமி *šuvāmi,* பெ.(n.) 1. தலைவன்; master, lord. 2. இறைவன்; Supreme being. 3. கந்தன் (திவா.); Skandaṉ. 4. குரு; spiritual preceptor. *"எங்கள் சுவாமியுரை" (ஒழிவி. சத்திநிபா. 2).* 5. மூத்தோன் (சூடா.); elder. 6. ஒரு மதிப்புறவுச் சொல்; term of respectful address or reference, used also in pl. குமரகுருபரசுவாமிகள், நாராயணையங்கார் சுவாமி. 7. பொன் (அக.நி.); gold. 8. துறவறம் மேற்கொண்டவர்களைக் குறிப்பிடும் சொல்; a form of address or title for ascetics, monks and holy men சுவாமி விவேகானந்தர்.

[Skt. svāmin > த. சுவாமி]

சுவாமிக்கடா *šuvāmi-k-kaḍā,* பெ.(n.) கோயிற்கு வேண்டுதலுக்காக விடப்படும் ஆட்டுக்கடா (இ.வ.); ram dedicated to a temple.

[சுவாமி+கடா]

[Skt. svāmin > த. சுவாமி]

[குள் >கள் >கடு >கடா= வலிமைமிக்க ஆண் விலங்கு]

சுவாமிகாரியம் *šuvāmi-kāriyam,* பெ.(n.) 1. தலைவனுடைய வேலை; master's business. 2. வழிபாட்டுச் செயல் (நேர்த்திக் கடன்); religious duties, as fulfilment of vows.

[சுவாமி+காரியம்]

[Skt. svāmin+ > த. சுவாமி]

சுவாமித்துரோகம் *šuvāmi-t-turōgam,* பெ.(n.) முதலாளி அல்லது தலைவனுக்கு இழைக்கப்படும் தீங்கு; treachery. disloyalty.

[Skt. svāmin+droha > த. சுவாமித்துரோகம்]

சுவாமிநாததேசிகர் *šuvāmi-nāda-dēšigar,* பெ.(n.) 18-ஆம் நூற்றாண்டினரும் இலக் கணக்கொத்து, தசகாரியம் முதலியன இயற் றியவரும் திருவாவடுதுறை (ஆதீன)த்தைச் சார்ந்தவருமாகிய சிவத்துறவி; a šaivam ascetic of the *tiru-āvaḍuduṟai mutt,* the author of L*Lakkaṇa-k-kottu,*T*aša-kāriyam,* etc., 18th C.

சுவாமிநாதன் *suvāmi-nādaṉ,* பெ.(n.) சிவபெருமானுக்குக் குரு, முருகக் கடவுள் (இ.வ.); Skandar, as preceptor to lord šivaṉ.

த.வ. இறைக்குருவன்

[Skt. svāmi-nātha > த. சுவாமிநாதன்]

சுவாமிபிருத்தியநியாயம் *šuvāmi-piruttiya-niyāyam,* பெ.(n.) ஆண்டானடிமைத் திறம்போல உரிமை கூறும் நெறி; the Niyaya of master and slave, used in illustration of absolute ownership.

[Skt. svāmi-bhṛtya+niyaya > த. சுவாமிபிருத்திய நியாயம்]

சுவாமிபேறு *šuvāmi-pēṟu,* பெ.(n.) **சுவாமிபோகம்** பார்க்க; see *šuvāmi-bōgam.*

[சுவாமி+பேறு]

[Skt. svāmin > த. சுவாமி]

சுவாமிபோகம் *šuvāmi-bōgam,* பெ.(n.) நிலவுரிமையாளருக்குக் கொடுக்கும் துண்டு வாரம்; (G.Tn. D. I, 292). the proprietor's or landlord's right, share of produce or rent

due to the mirasdar or the hereditary proprietor by a ryot holding land in farm for a fixed period.

[சுவாமி+போகம்]

[Skt. svāmin> த. சுவாமி]

சுவாமிமலை *šuvāmi-malai*, பெ.(n.) குடந்தைக்கு மேற்பாலுள்ள, ஒரு கந்தன் ஆலயம் (சிலப். 24, பாட்டுமடை, அரும். பக். 516); a Skandan shrine, west of Kumbakōṇam. *"தபோதனர்கள் சேருஞ் சுவாமிமலை வாழும் பெருமாளே" (திருப்பு. 186).*

[சுவாமி+மலை]

[Skt. svāmin > த. சுவாமி]

சுவாமியம் *šuvāmiyam*, பெ.(n.) சொத்துரிமை; ownership, right of property.

[Skt. svāmya > த. சுவாமியம்]

சுவாமியார் *šuvāmiyār*, பெ.(n.) துறவி (உ.வ.); ascetic.

[Skt. svāmin+ > த. சுவாமி+ஆர்-மதிப்புறவு குறித்த பன்மையீறு]

சுவாயம்புமனு *šuvāyambu-maṉu*, பெ.(n.) **சுவாயம்புவமனு** பார்க்க; see *šuvāyam buva-maṉu. "வருசுவாயம்பு மனுவொரு கூறு" (கூர்மபு. தமோகுண. 3).*

சுவாயம்புவம் *šuvāyambuvam*, பெ.(n.) 1. தானாகத் தோன்றியது; self-existent Being. *"சுவாயம் புவஞ் சொற்றாம்" (காஞ்சிப்பு. அமரி. 1).* 2. இருபத்தெட்டு சிவநூல்களுள் (சிவாகமங்கள்) ஒன்று (சைவச. பொது. 332, உரை); an ancient šaiva scripture in šanskrit, one of 28 *Sivāgamam.*

த.வ. தான்தோன்றி

[Skt. svāyambhuva > த. சுவாயம்புவம்]

சுவாயம்புவமனு *šuvāyambuva-maṉu*, பெ.(n.) தானாகத் (சுவயம்புவாகிய) நான்முகனிடம் தோன்றிய மனு; a Maṉu born of Svayambhu, a Nāṉmugaṉ.

[Skt. svāyambhuva+maṉu > த. சுவாயம்புவமனு]

சுவார்ச்சிதம் *šuvārccidam*, பெ.(n.) தானே தேடிய பொருள்; self-acquisition.

த.வ. தன்னிட்டம்

[Skt. svārjita > த. சுவார்ச்சிதம்]

சுவார்த்தம் *šuvārttam*, பெ.(n.) சொந்த வேலை; one's own interest.

த.வ. தற்கருமம்

[Skt. svārtha > த. சுவார்த்தம்]

சுவார்த்தானுமானம் *šuvārttāṉumāṉam*, பெ.(n.) தன்காட்சியினின்று தான் ஒன்றை உணருமாறு கொள்ளும் கருதலளவை (அனுமானம்) (சி.சி.அளவை, 8, மறைஞா.); inference from one's own perception.

[Skt. svārtha+anumāna> த. சுவார்த்தானு மானம்]

சுவாரசம் *šuvārašam*, பெ.(n.) **சுவாரசியம்** (சங்.அக.) பார்க்க; see *šuvārašiyam.*

சுவாரசியம் *šuvārašiyam*, பெ.(n.) 1. சுவை; relish, taste. 2. மனத்தை ஈர்த்து விறு விறுப்பை ஏற்படுத்தும் தன்மை, ஈடுபாடு; absorbing interest, relish, fascination. கதையை சுவாரசியத்துடன் படித்துக் கொண்டிருந்தார். (இ.வ.)

த.வ. நனிசுவை

[Skt. svārasya > த. சுவாரசியம்]

சுவாரி *šuvāri*, பெ.(n.) குதிரை, யானை போன்ற விலங்குகளின் மீது அல்லது வண்டி முதலிய ஊர்திகளில் அமர்ந்து செல்லும் பயணம்; ride on a horse, elephant, etc., or in a vehicle drive. கடற்கரையில் குதிரை சவாரி செய்தான்.

[U. suvāri > த. சுவாரி]

சுவாலயம் *śuvālayam*, பெ.(n.) மூச்சு விடும் போது மார்பு விரிவதற்கும் சுருங்குவதற்கும் உள்ள கால அளவு; the duration of dilatation and contraction of the chest while breathing.

சுவாலி—த்தல் *śuvāli-*, 4. செ.கு.வி.(v.i.) **சுவலி—** (சங்.அக.) பார்க்க; see *śuvali-*.

சுவாலினி *śuvālini*, பெ.(n.) ஊழித் தீயுலகங் களுள் ஒன்று (சைவபூ. சந். 57); (śaivam.) a supernal world under the regency of *Kālākkini*.

[*Skt. jvālinī > த. சுவாலினி*]

சுவாலை *śuvālai*, பெ.(n.) எரியும் தீயில் எழும் நாக்கு வடிவிலான நீண்ட சுடர், கனலொழுங்கு (சூடா.); flame. *நெருப்பு சுவாலை விட்டு எரிந்தது.*

[*Skt. jvālā > த. சுவாலை*]

சுவாவி *śuvāvi*, பெ.(n.) 1. உண்மையானவன்; sincere, truthful person. *"சுவாவியா மறையாது சொல்லினன்" (உத்தரரா. அசுவமே. 127).* 2. மூடன் (இ.வ.); fool, as simple-minded.

[*Skt. svabhāvin > த. சுவாவி*]

சுவான் *śuvān*, பெ.(n.) **சுவான்தார்** பார்க்க; see *śuvān-dār*.

சுவான்காரன் *śuvān-kāran*, பெ.(n.) **சுவான்தார்** (இ.வ.) பார்க்க; see *śuvān-dār*.

[*Persn. swāndār > த. சுவான்காரன்*]

சுவான்தார் *śuvān-dār*, பெ.(n.) உரிமை யுடையவர் (உ.வ.); owner, proprietor.

த.வ. உடைமையன்

[*Persn. swāndār > த. சுவான்தார்*]

சுவானசக்கரம் *śuvāna-śakkaram*, பெ.(n.) நாய் கடியாது விலக்குவதாகக் கருதப்படும் சக்கரம்; a mystic diagram, believed to be a protection against dog-bite. *சுவான சக்கரங் குக்கனைத் தடுக்கும் வகையே (மனோரன். 1: 5: 66).*

[*சுவானம்+சக்கரம்*]

[*Skt. śvāna > த. சுவானம்*]

சுவானம் *śuvānam*, பெ.(n.) 1. நாய்; dog. *"இடத்தைக் காத்திட்ட சுவானம்போல்" (தாயு. ஆசையெனும். 27).* 2. நாயுருவி (மலை.); Indian burr.

[*Skt. śvāna > த. சுவானம்*]

சுவானுகாரன் *śuvānu-kāran*, பெ.(n.) **சுவான்தார்** பார்க்க; see *śuvān-dār*.

சுவானுபவம் *śuvānubavam*, பெ.(n.) தன் நுகர்ச்சி (தன்னனுபவம்); one's own experience, self-experience. *"சுருதி குருவாக்குச் சுவானுபவம்" (ஒழிவி. பொதுவி. 13).*

[*Skt. sva+anu-bhava > த. சுவானுபவம்*]

சுவானுபூதி *śuvānu-pūdi*, பெ.(n.) **சுவானுபவம்** பார்க்க; see *śuvānubavam*.

சுவானுபூதிகம் *śuvānupūdigam*, பெ.(n.) தன் நுகர்ச்சி (அனுபவம்)யால் உண்டாகும் அறிவு (ஞானம்); knowledge acquired through one's own experience. *"சிவானுபவஞ் சுவானுபூதிகமாம்" (சி.சி.8: 34).*

த.வ. தற்பட்டறிவு

[*Skt. svānubhūti > த. சுவானுபூதி> சுவானுபூதிகம்*]

சுவானுபோகம் *śuvānupōgam*, பெ.(n.) நிலத்திற்கு உரிமையாளர் தாமே பயனடைகை (W.G. 496); direct enjoyment of the estate by the proprietor himself.

[*சுவானு+போகம்*]

[*Skt. svānu > த. சுவானு*]

சுவாத்தியந்தார் *šuvāttiyandār*, பெ.(n.) தலைமுறைத் தலைமுறையாக, நிலவுரிமை பெற்றவன் (R.T.); holder of free and hereditary lands and rights, especially applied to Brahmins.

த.வ. நிலக்கிழார்

[Skt. svāsthya > த. சுவாத்தியந்தார்]

சுவி *šuvi*, பெ.(n.) 1. கல்லால்; white fig. 2. இத்தி (மலை.) stone fig. 3. துளசி (மலை.); sacred basil.

[Skt. šubha > த. சுவி]

சுவிகரி-த்தல் *šuvikari-*, 4 செ.கு.வி.(v.t.) **சுவீகரி-த்தல்** (சங்.அக.) பார்க்க; see *šuvīkari-*.

[Skt. svīkṛ > த. சுவிகரி >சுவீகரி-,]

சுவிகாரம் *šuvigāram*, பெ.(n.) **சுவீகாரம்** பார்க்க; see *šuvīgāram*.

சுவிகை *šuvikai*, பெ.(n.) 1. கள் (சூடா.); toddy. 2. கச்சோலம் (மலை.); cardamom husk.

[svādukā > த. சுவிகை]

சுவிசாலம் *šuvišālam*, பெ.(n.) அதிகஅகலம் (வின்.); spaciousness.

[Skt. su-višāla > த. சுவிசாலம்]

சுவிசேடகன் *šuvišēḍagaṉ*, பெ.(n.) நற்செய்தி கூறும் கிறித்துவமத ஆசிரியன்; evangelist, one who preaches good tidings.

[Skt. su-višēṣa > சுவிசேஷகன் > த. சுவிசேடகன்]

சுவிசேடம் *šuvišēḍam*, பெ.(n.) நற்செய்தி; the gospel, good tidings.

[Skt. su-višēṣa > சுவிசேஷம் > த. சுவிசேடம்]

சுவிசேடன் *šuvišēḍaṉ*, பெ.(n.) **சுவிசேடகன்** பார்க்க; see *šuvišēḍagaṉ*.

[Skt. su-višēṣa > சுவிசேஷன் > த. சுவிசேடன்]

சுவிதி *šuvidi*, பெ.(n.) தூயநீரவர் (தீர்த்தங்கரர்) இருபத்து நால்வருள் ஒருவர் (திருக்கலம். காப்பு, உரை); a Jaina Arhat, one of 24 *tirttaṅgarar*.

[Skt. šuvidhi > த. சுவிதி]

சுவீகரணம் *šuvīkaraṇam*, பெ.(n.) **சுவீகாரம்** பார்க்க; see *suvīgāram*.

[Skt. svīkaraṇa > த. சுவீகரணம்]

சுவீகரி-த்தல் *šuvīkari-*, 4. செ.குன்றாவி.(v.t.) 1. ஒப்புதல் வழங்குதல் (அங்கீகரித்தல்); to agree, accept. 2. உட்கொள்ளுதல்; to take in, imbibe. *"வாசனையும் உஷ்ணமும் நீருக்கின்றி அந்நீரைச் சுவீகரிக்கிறபோர்க்கு ஆனதுபோல்" (சி.சி.2:6, சிவாக்.).* 3. ஈவு(தத்து)ப்பிள்ளையாக ஏற்றுக் கொள்ளுதல்; to adopt, as a son. 4. தனக்குரிய தாக்குதல்; தானாக ஏற்றல்; makie one's own adopt an idea scheme, etc.

த.வ. விழைந்தேற்றல்

[Skt. svīkṛ > த. சுவீகரி >சுவீகரி]

சுவீகாரபுத்திரன் *šuvīkāra-puttiraṉ*, பெ.(n.) ஈவுப்பிள்ளை; adopted son.

த.வ. ஏற்பு மகன்

[Skt. svīkāra +put-tra> த. சுவீகாரபுத்திரன்]

சுவீகாரம் *šuvīkāram*, பெ.(n.) 1. ஒப்புதல் வழங்குதல்; taking or accepting as one's own, assent. 2. ஒருவர் மற்றொருவருடைய குழந்தையைச் சட்டப்படி தன்னுடைய குழந்தையாக ஏற்றுக் கொள்ளுதல்; adoption of a child. *இவன் என் சுவீகாரப்புத்திரன். (இ.வ.)*

த.வ. மகவேற்பு

[Skt. svīkāra > த. சுவீகாரம்]

சுவீகிருதம் *šuvīkirudam*, பெ.(n.) ஏற்பிசைவு வழங்கப்பட்டது (அங்கீகரிக்கப்பட்டது); that which is accepted, adopted.

[Skt. svīkṛta > த. சுவீகிருதம்]

சுவீயை *śuvīyai*, பெ.(n.) **சுவகீயை** (சுக்கிரநீதி, 212) பார்க்க; see *śuvakīyai*.

[Skt. svīyā > த. சுவீயை]

சுவுகம் *śuvugam*, பெ.(n.) மோவாய்க் கட்டை (பிங்.); chin.

[Skt. cubuka > த. சுவுகம்]

சுவேகம் *śuvēgam*, பெ.(n.) உறை; cover. *"பட்டுச் சுவேகமொடு..... கட்டமை சுவடி" (பெருங். மகத. 1, 121).*

[su-vēṣṭaka > த. சுவேகம்]

சுவேச்சை *śuvēccai*, பெ.(n.) 1. தன்னிச்சை; one's own inclination, free will. *"ஈசன் சுவேச்சையாங் குணங்கண் மூன்றுள்" (பிரமோத். 21: 10).* 2. எந்தக் கட்சியையும் சாராத நிலை; independent candidate.

த.வ. தன்விருப்பு

[Skt. svēcchā > த. சுவேச்சை]

செயல்பாட்டைத் தானே முடிவு செய்து கொள்வது; தன்னளவில் கட்டுப்பாடில்லாதது.

சுவேச்சைப்புத்திரன் *śuvēccai-p-puttiraṉ*, பெ.(n.) கணவனனுமதியின்றி மனைவியால் ஈவு(தத்து)ப்பிள்ளையாக ஏற்றுக்கொள்ளப் பட்டவன்; son adopted by a woman of her own accord without her husband's permission.

[Skt. svēcchā +put-tra> த. சுவேச்சைப்புத்திரன்]

சுவேதகம் *śuvēdagam*, பெ.(n.) விளாம்பழம் (மூ.அ.); wood-apple fruit.

[Skt. śvētaka > த. சுவேதகம்]

சுவேதகாண்டம் *śuvēda-kāṇḍam*, பெ.(n.) 1. சீந்தில் (மலை.) gulancha. 2. வஞ்சி (மூ.அ.); rattan-palm.

[Skt. śvēta-kāṇḍa > த. சுவேதகாண்டம்]

சுவேதகாரி *śuvēda-kāri*, பெ.(n.) வியர்வை பிறப்பிக்கும் மருந்து (இங். வை. 30); diaphoretics.

த.வ. வியர்வையுண்டாக்கி

[Skt. svēda-kārin > த. சுவேதகாரி]

சுவேதகுசுமம் *śuvēda-kuśumam*, பெ.(n.) வெள்ளெருக்கு (மலை.); white madar.

[Skt. śvēta-kusuma > த. சுவேதகுசுமம்]

சுவேதகோளம் *śuvēda-kōḷam*, பெ.(n.) வியர்வை தோன்றும் உடலுறுப்புகள்; sweat glands.

த.வ. வியர்வை நாளம்

[Skt. svēda> த. சுவேதம்]

சுவேதசம் *śuvēdaśam*, பெ.(n.) நான்கு வகை உயிர்த்தோற்றங்களுள் வியர்வையினின்று தோன்றுவன; sweat-born lives, as lice, one of four *uyir-t-tōṟṟam*.

[Skt. svēda-ja > த. சுவேதசம்]

சுவேதசாரம் *śuvēda-śāram*, பெ.(n.) நாணல் (மலை.); Kaus, a large and coarse grass.

[Skt. śvēta+sāra > த. சுவேதசாரம்]

சுவேதத்துவீபம் *śuvēda-t-tuvībam*, பெ.(n.) வெண்ணிறவுலகெனக் கருதப்படும் மகிழ்ச்சி யளிக்கக் கூடிய நிலம்; white island believed to be the world enjoyment.

[Skt. śvēta +dvība> த. சுவேதத்துவீபம்]

சுவேதநீர் *śuvēda-nīr*, பெ.(n.) (வீரியம்) விந்து (நன். 268, உரை); semen.

[சுவேதம்+நீர்]

[Skt. śvēta > த. சுவேதம்]

சுவேதபித்தம் *śuvēda-pittam*, பெ.(n.) உடல் முழுதும் வியர்வை உண்டாக்கும் ஒருவகை நோய் (சீவரட். 184); a disease causing excessive perspiration.

[Skt. svēda+pitta > த. சுவேதம்]

சுவேதம்[1] *šuvēdam*, பெ.(n.) வியர்வை (சூடா.); perspiration.

[Skt. svēda > த. சுவேதம்]

சுவேதம்[2] *šuvēdam*, பெ.(n.) 1. நீர்வஞ்சி (மூ.அ.); four-seeded willow. 2. வஞ்சிக் கொடி rattan-palm. 3. மாவிலிங்கை (மலை.) holy garlic pear. 4. சுவேதசாரம் பார்க்க; see *šuvēda-šāram*.

[Skt. švēta+kāṇda > த. சுவேதம்]

சுவேதமூலம் *šuvēda-mūlam*, பெ.(n.) சாரணை (மலை.); purslane-leaved trianthema.

[Skt. švēta > த. சுவேதம்]

சுவேதமூலி *šuvēda-mūli*, பெ.(n.) தொட்டாற் சிணுங்கி (மலை.) humble plant.

த.வ. **தொட்டாற்சுருங்கி**

[Skt. švēta > த. சுவேதம்]

சுவேதமூலை *šuvēda-mūlai*, பெ.(n.) **சுவேதமூலம்** (தைலவ. தைல. 93)பார்க்க; see *šuvēda-mūlam*.

[Skt. švēta > த. சுவேதம்]

சுவேதரசம் *šuvēda-rašam*, பெ.(n.) செரி மானத்திற்கு ஏற்றதும் வயிற்றில் உண்டாவது மான, ஒருவகை நீர் (C.G.); pancreatic juice.

த.வ. **செரிப்பு நீர்மம்**

[Skt. švēta +rasa> த. சுவேதரசம்]

சுவேதராசாவர்த்தம் *šuvēda-rāšāvarttam*, பெ.(n.) வெண்ணிறமுள்ள மணிவகை (வின்.); a white species of lapislazuli.

த.வ. **வெண்மணி**

[Skt. švēta +ras āvarta> த- சுவேதராசா வர்த்தம்]

சுவேதவராககற்பம் *šuvēda-varāga-karpam*, பெ.(n.) நான்முகனது 51–ஆம் ஆண்டின் 7–ஆம் நாளிறுதியில், உலகை அழிவிலிருந்து காத்த திருமாலின் வெள்ளைப் பன்றி உருவேற்பால் பெயர் பெற்றதும், அந்நான்முகனது, 51–ஆம் ஆண்டின் 8–ஆம் நாளுமாகிய நடப்புக் காலம்; the current age, being the 8th day of the 51st year of *Nāṉmugāṉ*, called after the white-boar incarnation of Viṣṇu who assuming that form rescued the world from the deluge that ended the 7th day.

[Skt. švēta+varāha+karpa > த. சுவேதவ ராககற்பம்]

சுவேதவராகம் *šuvēda-varāgam*, பெ.(n.) திருமாலின் வெள்ளைப்பன்றிப் பிறப்பு; Viṣṇu in his white-boar incarnation.

[Skt. švēta+varōha > த. சுவேதவராகம்]

சுவேதவனப்பெருமாள் *šuvēda-vaṉa-p-perumāḷ*, பெ.(n.) மெய்கண்டதேவர் *Meykaṇḍa-dēvar*.

[சுவேதவனம்+ பெருமாள்]

[Skt. švēta-vana > த. சுவேதவனம்]

சுவேதவனம் *šuvēda-vaṉam*, பெ.(n.) தஞ்சை மாவட்டத்தில், சீர்காழிக்கு அருகிலுள்ள திருவெண்காடு என்னுஞ் சிவத்தலம்; a šivaṉ shrine near Shiyali in Tanjore district.

[Skt. švēta-vana > த. சுவேதவனம்]

சுவேதவாகன் *šuvēda-vāgaṉ*, பெ.(n.) **சுவேதவாகனன்** பார்க்க; see *šuvēda-vāgaṉaṉ*. *"சுவேதவாகனெனுநாமம் படைத்த பிரான்" (பாரத. அருச்சுனன்றீர். 44).*

[Skt. Svēta-vāha > த. சுவேதவாகன்]

சுவேதவாகனன் *šuvēda-vāgaṉaṉ*, பெ.(n.) வெள்ளைக் குதிரையை, ஊர்தியாக உடைய அருச்சுனன் (பிங்.); Arjunaṉ, as riding on a white horse.

த.வ. **வெண்குதிரையூர்தியன்**

[Skt. Svēta-vāhana > த. சுவேதவாகனன்]

சுவேதன் *šuvēdaṉ*, பெ.(n.) 1. உருத்திரருள் ஒருவர் (சி.போ.பா.2:3,பக். 212); a Rudraṉ. 2. ஐரோப்பியன்; Whiteman, European.

[Skt. Svēta > த. சுவேதன்]

சுவேதனை *šuvēdaṉai*, பெ.(n.) தன்னறிவு (வின்.); self-perception, self-knowledge.

[Skt. sva+vēdanā > த. சுவேதனை]

சுவேதனைக்காட்சி *šuvēdaṉai-k-kāṭci*, பெ.(n.) காட்சியளவையான் அறியவரும் அறிவு (அபரோட்ச ஞானம்) (வின்.); knowledge gained from one's own experience.

[சுவேதனை+காட்சி]

[Skt. sva+vēdanā > த. சுவேதனை]

சுவேதாச்சுவதரம் *šuvēdāccuvadaram*, பெ.(n.) நூற்றெட்டு உபநிடதத் தொகுதிகளுள் ஒன்று; an Ubaniṣad, one of 108.

[Skt. Svētāšvatara > த. சுவேதாச்சுவதரம்]

சுவேதாம்பரர் *šuvēdāmbarar*, பெ.(n.) வெள்ளாடை அணிந்த சமணமுனிவர்; Jaina mendicants clad in white, opp. to tigambaran.

த.வ. வெள்ளாடைச் சமணர்

[Skt. švēta+ambara > த. சுவேதாம்பரர்]



சுவேதம்பரர் என்னும் பிரிவு 2000 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியதாகத் தெரிகிறது. கி.பி. முதல் நூற்றாண்டில் தோன்றிய மூலாராதனை என்னும் பிராகிருத மொழிச் சமண நூலில் திகம்பரப் பிரிவிலிருந்து சுவேதம்பரர் தனிப்பிரிவினராகக் காணப்பட்ட செய்தி குறிப்பிடப்படுகிறது. கி.பி. பத்தாம் நூற்றாண்டில் பழங்கன்னட மொழியில் இதன் மொழி பெயர்ப்பாக வெளி வந்த வட்டாராதனை எனும் நூலும் இச்செய்தியைக் குறிப்பிடுகிறது.

ஆடையெதுவும் அணியாமல் அம்மணமாகத் திரிந்தவர் திகம்பரச் சமணர் எனப்பட்டனர். மேற்கண்ட நூல்களில் தமிழ்நாட்டுக்குத் திகம்பரச் சமணர் வந்தபோது ஊருக்குள் வர எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. குறிப்பாகச் சோழநாட்டு எல்லையில் மக்கள் எதிர்த்தனர். மன்னனுக்கு இச்செய்தி எட்டியது. வெள்ளாடையை அணிந்த சமணத்துறவிகள் ஊருக்குள் வர மன்னன் இசைவளித்தான். பகல் நேரத்தில் ஊருக்குள் வர விரும்பியோர் வெள்ளாடை தோளில் நெடுக அணிந்தனர். வெள்ளாடை அணிய விரும்பாத திகம்பரச் சமண முனிவர் காட்டுக் குகைகளில் தங்கினர். இரவில் மட்டும் உணவுக்காக ஊருக்குள் வந்தனர். அவர்களுக்கு **ஐயம்** என்னும் மண் ஏனத்தில் சோறிட்டு வீட்டுத் திண்ணையில் வைத்த பின் கதவைச் சாத்திக் கொண்டனர். இந்நிகழ்ச்சியை "கண்டோடிக் கதவடைக்கும் மட நல்லார்" எனத் திருநாவுக்கரசரும் குறிப்பிட்டுள்ளார்.

இருட்டு நேரத்தில் குகையிலிருந்து வெளியில் வரும் திகம்பர முனிவர்கள் அந்த உணவை நின்றவாறே உண்டு செல்வது வழக்கம். நெடிய வரலாற்றில் சமண முனிவர்களில் ஒரு பிரிவினரை வெள்ளாடை அணியச் செய்த பெருமை தமிழ்நாட்டைச் சாரும். சுவேதம் என்பது வெண்மை. அம்பரம் என்பது ஆடை. திக் என்பது திசை. திக்+அம்பரர்–திகம்பரர்–திசைகளையே ஆடையாக உடுத்த அம்மணத் துறவிகள்.

சுவேலம் *šuvēlam*, பெ.(n.) இலங்கையிலுள்ள ஒரு மலை; a mountain in Ceylon. *"இடையுவாவினிற் சுவேலம் வந்திறுத்து" (கம்பரா. மீட்சிப். 139).*

[Skt. su-vēla > த. சுவேலம்]

சுவேலை *šuvēlai*, பெ.(n.) **சுவேலம்** பார்க்க; see *šuvēlam. "சுவேலை நெடுஞ் சிலம்பின்" (சேதுபு. இராமனருச். 9).*

[Skt. su-vēla > த. சுவேலை]

சுன்னடி *šuṉṉaḍi*, பெ.(n.) **சுங்கடி** (இ.வ.) பார்க்க; see *šuṅgaḍi.*

[Te. tcuṅguḍi > த. சுன்னடி]

சுன்னத்துக்கலியாணம் *šunnattu-k-kaliyāṇam*, பெ.(n.) ஆண்குறியின் முன் தோலை எடுத்துவிடுஞ் சடங்கு; ceremony of circumcision.

[சுன்னத்து+கலியாணம்]

[Ar. sunnat > த. சுன்னத்து]

சுன்னி *šunni*, பெ.(n.) முகம்மதியரில் ஒரு பிரிவினர் (இ.வ.); a religious sect among Muhammadans.

[Ar. sunni > த. சுன்னி]

சுனகன் *šunagan*, பெ.(n.) 1. நாய்; dog. 2. தென்மேற்றிசை (தைலவ.); the south west quarter.

[Skt. šunaka > த. சுனகன்]

சுனம் *šunam*, பெ.(n.) வெள்ளுள்ளி (மலை.); garlic.

[Skt. lašuna > த. சுனம்]

சுனாசமாய் *šunāšam-āy*, வி.எ.(adv.) **சுனாயாசமாய்** பார்க்க; see *šunāyāšam-āy*.

சுனாசி *šunāsi*, பெ.(n.) **சுனாசீரன்** (பிங்.); பார்க்க see *šunāsiran*.

சுனாசீரன் *šunāširan*, பெ.(n.) இந்திரன் (சூடா.); Indra.

த.வ. துறக்கக்கோ

[Skt. šunāsira > த. சுனாசீரன்]

சுனாசு *šunāšu*, பெ.(n.) **சுனாசீரன்** (வின்.) பார்க்க; see *šunāširan*.

சுனாயாசமாய் *šunāyāšam-āy*, வி.எ.(adv.) வருத்தமின்றி (வின்.); with ease, without trouble or exertion.

[an-āyāsa > த. சுனாயாசமாய்]

சுனாவணி *šunāvaṇi*, பெ.(n.) விண்ணப்பம் வாசிக்கை (வின்.); reading of petitions, commonly official.

த.வ. வேண்டுகோள் படிக்கை

[U. sunāōṇi > த. சுனாவணி]

சுனி *šuni*, பெ.(n.) பெண்ணாய் (வின்.); bitch.

[Skt. sunī > த. சுனி]

சுனிசனம் *šunišaṇam*, பெ.(n.) புளியாரை என்னும் பூடு வகை; yelloww wood-sorrel.

[su-nisaṇṇa > த. சுனிசனம்]

சுனுக்கு *šunukku*, பெ.(n.) **சுனுகி** (வின்.) பார்க்க; see *šunugi*.

சுனுகி *šunugi*, பெ.(n.) சதுரக்கள்ளி (மலை.) வகை; a kind of square spurge.

[Skt. snuhi > த. சுனுகி]

சூக்கம் *šūkkam*, பெ.(n.) 1. நுண்மை (வின்.); minuteness, subtleness. 2. நுண்ணிய பொருள்; minute object. 3. **சூட்சுமம் 2** பார்க்க; see *šūṭcumam*. *"சூக்கமொடு தூலத்து" (திருவாச. 3:10).* 4. கூர்மை; skill, ingenuity; acuteness, as of intellect.

[Skt. sūkṣma > சூஷ்மம் > த. சூக்கம்]

சூக்குமசரீரம் *šūkkuma-šarīram*, பெ.(n.) **சூட்சுமசரீரம்** (ஞானா. 8,4,உரை) பார்க்க; see *šūṭcuma-šarīram*, subtle body.

[Skt. šūkṣma+šarira > சூஷ்மச்சரீரம் > த. சூக்குமசரீரம்]

சூக்குமதண்டுலம் *šūkkuma-taṇḍulam*, பெ.(n.) திப்பிலி (மலை.) long pepper.

[Skt. sūkṣma+taṇḍulā]

சூக்குமதண்டுலை *šūkkuma-taṇḍulai*, பெ.(n.) **சூக்குமதண்டுலம்** (சங்.அக.) பார்க்க; see *šūkkuma-taṇḍulam*.

சூக்குமதாரி *šūkkuma-dāri*, பெ.(n.) வஞ்சகன் (யாழ்.அக.); deceitful person.

த.வ. கவடன்

[Skt. sūkṣma > த. சூக்குமம்+தாரி-ஓர் ஈறு]

சூக்குமபஞ்சாக்கரம் *šūkkuma-pañjāk karam*, பெ.(n.) அகார, உகார, மகார, நாத விந்துகளாகிய ஓங்கார மந்திரம் (சி.போ.பா. 4,1,பக். 258); (šaivam.) the mystic syllable ōm, considered as the subtle five-lettered mantra, consisting of a, u, m, nādam and vindu.

த.வ. ஓம்

[Skt. sūkṣma+pañcākṣara > த. சூக்கும பஞ்சாக்கரம்]

சூக்குமபத்திரம் *šūkkuma-pattiram*, பெ.(n.) 1. கடுகு; mustard. 2. கொத்தமல்லி; coriander. 3. சீரகம்; cumin. 4. செங்கரும்பு; a variety of sugar cane.

[Skt. šukṣma+patra > த. சூக்குமபத்திரம்]

சூக்குமபராசத்தி *šūkkuma-parāšatti*, பெ.(n.) படைத்தல் (சிருட்டி), காத்தல் (திதி), அழித்தல் (சங்காரம்), மறைத்தல் (திரோபவம்), அருள்செய்தல் (அனுக்கிரகம்) என ஐந்தொழிலைச் செய்யும் பரையாற்றல் (பராசக்தி) (சி.சி.1, 68, ஞானப்.); energy or Sakti wich functions in the subfler form of pañja-kiruttiyam.

[Skt. sūkṣma+parā-šakti > த. சூக்குமபராசத்தி]

சூக்குமபுத்தி *šūkkuma-butti*, பெ.(n.) கூர்மையான அறிவு; sharp wit, keen intellect.

[Skt. sūkṣma +buddhi> த. சூக்குமபுத்தி]

சூக்குமபூதம் *šūkkuma-būdam*, பெ.(n.) ஐம்பூதங்களுக்குங் காரணமாயுள்ள தன்மாத்திரை வடிவான பூதங்கள் (யாழ்.அக.); subtle elements, being types or radicals of the five grosser elements.

[சூக்குமம்+பூதம்]

[Skt. sūkṣma> த. சூக்குமம்]

சூக்குமம் *šūkkumam*, பெ.(n.) 1. நுண்மை; minuteness, subtleness. 2. சூட்சுமம், 2. பார்க்க; see *šūṭcumam*,2. *"சூக்குமங் கெட்டுத் தூலந் தோன்றிடா" (சி.சி.2: 48).* 3. சிவநூல்கள் இருபத்தெட்டனுள் ஒன்று (சைவச. 335, உரை); an ancient šaivam scripture in Sanskrit, one of 28 *šivākamam*.

[Skt. sūkṣma > த. சூக்குமம்]

சூக்குமவாக்கு *šūkkuma-vākku*, பெ.(n.) **சூக்குமை** (சி.சி.1: 23) பார்க்க; see *šūkkumai*.

[சூக்குமம்+வாக்கு]

[Skt. sūkṣma > த. சூக்குமம்]

சூக்குமாலங்காரம் *šūkkumālaṅgāram*, பெ.(n.) நுட்பம் (தண்டி. 63, உரை); figure of speech in which an idea is expressed by subtle hints.

[Skt. sūkṣma+alam-kāra > த. சூக்குமாலங் காரம்]

சூக்குமி-த்தல் *šūkkumi-*, 4 செ.கு.வி.(v.i.) நுட்பமாதல் (யாழ்.அக.); to be minute, subtle.

[Skt. sūkṣma > த. சூட்சுமம் – சூக்குமம் > சூக்குமி]

சூக்குமை *šūkkumai*, பெ.(n.) நால்வகை வாக்குக்களில் எழுத்தினை பலுக்க (உச்ச ரிக்க)த் தொடங்கும் போது, உந்தியிலிருந்து எழுவதாகக் கருதப்படும் பரையென்னும் ஒலி (சி.போ.பா.2:2,பக். 135); subtle sound preceeding full utterance, supposed to emanate from navel, one of four vākku.

[சூக்குமம் > சுக்குமை]

சூக்தம் *šūkdam*, பெ.(n.) மறையில் (வேதத்தில்) பல இருக்குக்கள் கொண்ட பகுதி; vēdic hymn.

[Skt. sūkta > த. சூக்தம்]

சூக்தி *šūkti*, பெ.(n.) ஆன்றோர்ச் சொல்; wise utterance.

[Skt. sūkti > த. சூக்தி]

சூகதோடம் *šūgadōḍam*, பெ.(n.) பெண் குறியில் உண்டாகும் வெள்ளைநோய்; an ulcer or venereal sore in the genetal of a female. (சா.அக.)

சூகம் *šūgam*, பெ.(n.) 1. நெல் முதலியவற்றின் தோகை; beard or awn of a spike of rice, barley, etc. 2. ஊர்வன; reptiles.

[Skt. sūka > த. சூகம்[1]]

சூகரம் *šūgaram*, பெ.(n.) 1. பன்றி; hog. *"மன்னன் மாமயில் சூகர மாய" (யசோதர. 4: 27).* 2. ஒருவகை மான் (இலக். அக.); a kind of deer.

[Skt. sūkara > த. சூகரம்]

சூகரவேதண்டம் *šūgara-vēdaṇḍam*, பெ.(n.) பழனி மலையுள்ள பன்றிமலைத் தொடர்; the mountain range which includes the Palani hills. *"சூகரவேதண்டனே" (விறலிவிடு. 1069).*

சூச்சம் *šūccam*, பெ.(n.) **சூட்சம்** (இ.வ.) பார்க்க; see *šūṭcam.*

[Skt. sūkṣma > த. சூச்சம்]

சூசககுரு *šūšaga-guru*, பெ.(n.) சமம், தமம் முதலியவற்றைக் கற்றுக் கொடுக்கும் குரு (விவேகசிந். பக். 28); preceptor who instructs his pupil in the virtues of šamam, tamam etc.

[சூசகம்+குரு]

[Skt. sūcaka > த. சூசகம்]

சூசகம் *šūšagam*, பெ.(n.) 1. ஒன்று இருப்பதன் அறிகுறி (யாழ்.அக.); sign, indication, omen. *'தொழிலாளர்கள் போராட்டத்தை நிறுத்தி விடுவார்கள் என்பதற்கான சூசகங்கள் தென்பட்டன'.* 2. தருப்பை (மலை.); sacrificial grass. 3. ஒன்றை உய்த்தறியும் வகையில் வெளிபடுத்தும் முறை; suggestion, hint. *அலுவலகத்தில் மாற்றம் ஏற்படலாம் என்பதை முதல்வர் சூசகமாகத் தெரிவித்தார். (இ.வ.)*

த.வ. உன்னிப்பு

[Skt. sūcaka > த. சூசகம்]

சூசகவாயு *šūšaga-vāyu*, பெ.(n.) **சூதகவாயு** (சங்.அக.); பார்க்க *šūdaga-vāyu.*

[Skt. sūtikā-vāyu > த. சூசகவாயு]

சூசகன் *šūšagaṉ*, பெ.(n.) 1. ஒற்றன் (யாழ்.அக.); spy, informer. 2. ஆசிரியன் (யாழ்.அக.); teacher. 3. சமம், தமம் முதலிய குணங் களுள்ளவன்; person of exemplary virtues. *"சூசகனாம் விவேகத்தால்" (வேதா. சூ. 17).*

[Skt. sūcaka > த. சூசகன்]

சூசனம் *šūšaṉam*, பெ.(n.) 1. குறிப்பிக்கை; intimation by sign, gesture etc; indication, suggestion. 2. குறிப்பு; note, excursus. *பெரியபுராண சூசனம்.* 3. திட்டம்; accuracy, exactness. 4. கூர்மை; quickness of apprehension.

[Skt. sūcana > த. சூசனம்]

சூசனை *šūšaṉai*, பெ.(n.) **சூசனம்** (வின்.) பார்க்க; see *šūšaṉam.*

[Skt. sūcanā > த. சூசனை]

சூசி[1] *šūši*, பெ.(n.) 1. ஊசி (சூடா.); needle. *"சேறுஞ் சூசியிற் சென்றது" (கம்பரா. வாலிவதை. 57).* 2. **சூசிகாவியூகம்** பார்க்க; see *šūšikā-viyūgam.* 3. **சூசிக்கை** (சிலப். 3, 18, உரை) பார்க்க; see *šūši-k-kai.* a kind of gesticulation. 4. துளை (யாழ்.அக.); hole. 5. மெல்லிய கறையுள்ள துணிவகை; cloth with

fine stripes. 6. அட்டவணை (வின்.); index, catalogue.

[Skt. sūci > த. சூசி]

[த. ஊசி > Skt. sūci]

சூசி²–த்தல் *šūši-*, 4 செ.குன்றாவி.(v.t.) 1. சுருக்குதல்; to summarise, state briefly. *"முன்னோர் விரிவாகவுரைத்ததை நான் சூசித்துக் கூறினேன்" (சி.சி.2:61, சிவாக்.).* 2. **சூசிப்பி–த்தல்,** பார்க்க; see *šūšippi-.*

[Skt. sūc > த. சூசி > சூசி]

சூசிக்கல் *šūši-k-kal*, பெ.(n.) காந்த ஊசி (வின்.); mariner's needle, compass.

[Skt. sūci> த. சூசிகல்]

சூசிக்கை *šūši-k-kai*, பெ.(n.) நடுவிரலும் பெருவிரலுஞ் சேரச் சுட்டுவிரல் நிமிர, மற்றை இரு விரல்களும் முடங்கி நிற்கும் இணையா வினைக்கை வகை (சிலப். 3:18, உரை); a gesture with one hand in which the thumb and the middle finger are joined, the fore finger is stretched and the other two are folded.

[Skt. sūci > த. சூசிகை]

சூசிகடாகநயம் *šūši-kaḍāga-nayam*, பெ.(n.) **சூசிகடாகநியாயம்** (சி.சி.அளவை, 5, சிவ; see *šūši-kaḍāga-niyāyam.*

சூசிகடாகநியாயம் *šūši-kaḍāga-niyāyam*, பெ.(n.) ஊசி கொப்பரை இரண்டையும், செய்ய நேர்ந்தவிடத்துச் சிறிதான ஊசியை முன் செய்து, பெரிதான கொப்பரையைப் பின் செய்வதுபோலச் சிறியதை முற்படவும், பெரியதைப் பிற்படவும், இயற்றுவது தகுதி எனக் கூறும் நெறி; nyāyam of the needle and kettle, illustrating the principle that, when two things, like needle and kettle, are to be made, the easier should first be taken up.

[Skt. sūci+taṭāha+skt.nyāya > த. சூசிகடாக நியாயம்]

சூசிகம் *šūšigam*, பெ.(n.) ஒருவகைப் பறை (இ.வ.); a proclamatory drum, bom-bom.

[Skt. sūcaka > த. சூசிகம்]

சூசிகன் *šūšigaṉ*, பெ.(n.) தையற்காரன் (யாழ்.அக.); tailor.

[Skt. sūcika > த. சூசிகன்]

சூசிகாசருமப்பிரயோகம் *šūšikāšaruma-p-pirayōgam*, பெ.(n.) உடம்பின் தோலுக் கடியில் ஊசி குத்தி, மருந்தைச் செலுத்துகை; an act of throwing a medicinal liquid into the subcutaneous tissue - Hypo dermic injection. (சா.அக.)

த.வ. ஊசி குத்தல்

சூசிகாகிராணி *šūšigā-kirāṇu*, பெ.(n.) நாட்பட்ட கழிச்சல் வகை; a kind of diarrhoea. (சா.அக.).

சூசிகாசூலை *šūšigā-šūlai*, பெ.(n.) **சூதகவாயு** பார்க்க; see *šūdaga-vāyu.*

[Skt. sūtikā > த. சூசிகா]

சூசிகாபத்திரம் *šūšigā-pattiram*, பெ.(n.) **சூசிபத்திரம்** பார்க்க; see *šūši-pattiram.*

[Skt. sūcikā+patra > த. சூசிகாபத்திரம்]

சூசிகாபரணம் *šūšigāparaṇam*, பெ.(n.) மருந்து வகைகளுள் ஒன்று (தஞ்.சர.iii,68); a kind of medicine.

சூசிகாபாணம்¹ *šūšigā-bāṇam*, பெ.(n.) ஒருவகைக் கூரிய அம்பு (யாழ்.அக.); a kind of sharp arrow.

[Skt. sūci kā> த. சூசிகா]

சூசிகாபாணம்² *šūšigā-pāṇam*, பெ.(n.) 1. ஒரு வகை ஊதை (வாதம்) நோய்; a vātha disease. 2. அத்திமரம்; fig tree - Ficus glamerata (சா.அக.)

சூசிகாபைசாசி *šūšigā-paišāši*, பெ.(n.) பாகத மொழிவகை (சி.சி.பாயி. மறைஞா. பக். 6); a variety of the Prākṛt language.

சூசிகாவாயு *šūšigā-vāyu*, பெ.(n.) **சூதகவாயு** பார்க்க; see *šūdaga-vāyu.*

[Skt. sūtikā +vayu> த. சூசிகாவாயு]

மாதவிலக்கில் (சூதகம்) அரத்தம் செல்லாது, கருக்குழியில் அரத்தங்கட்டிக் கொண்டு கை, கால், கழுத்து, உள்ளங்கால் நகக்கண்களில் குத்த லெடுக்கும் நோய். (சா.அக.)

சூசிகாவாயுசன்னி *šūšigā-vāyu-šanni*, பெ.(n.) 1. குழந்தை பிறந்தபின் பெண்களுக்கு அழுக்குத் தங்குவதால் உண்டாகும் காய்ச்சல்; septic poisoning (fever) occuring in child bed-Puerperal fever. 2. கருப்ப வளி (கருப்ப வாயு)யினால் ஏற்படும் இசிவு (சன்னி); delrrium is a hysterical patient.

சூசிகாவியூகம் *šūšigā-viyūgam*, பெ.(n.) ஊசிமுனை போல் முனை சிறுத்து வர அமைக்கும் படைவகுப்பு வகை; a kind of military array in the shape of a sharp-pointed column. *"சூசிகாவியூகத்தால் முன்னே பயமுண்டாகும்போதும்" (மணிமே. 7, 187).*

சூசிகை *šūšigai*, பெ.(n.) 1. ஊசி; needle. 2. யானைத் துதிக்கை (யாழ்.அக.); elephant's trunk.

[Skt. sūcikā > த. சூசிகை]

சூசிபத்திரம் *šūšipattiram*, பெ.(n.) **சூசீபத்திரம்** பார்க்க; see *šūšī-pattiram.*

சூசிமுகம் *šūši-mugam*, பெ.(n.) நிரய வகை (சேதுபு. தனுக்கோ. 4); a hell.

[சூசி+முகம்]

[Skt. sūcī > த. சூசி]

சூசியம் *šūšiyam*, பெ.(n.) சூட்டிறைச்சி (பிங்.); hot meat roasted on a spit.

[Skt. sūcya. cf. šūlya > த. சூசியம்]

சூசிவியூகம் *šūši-viyūgam*, பெ.(n.) ஊசி முனை போல் முனைசிறுத்து வர அமைக்கும், படைவகுப்பு வகை (சுக்கிரநீதி, 338); a kind of battle-array.

[Skt. sūci+vyūha > த. சூசிவியூகம்]

சூசீபத்திரம் *šūšī-pattiram*, பெ.(n.) பொருளட்டவணை; index, table of contents.

[Skt. sūci-patra > த. சூசீபத்திரம்]

சூசு *šūšu*, பெ.(n.) செருப்பு (பாதரட்சை); shoes. *"காலிலே சூசுகள் போடலாமா" (கட்டபொம்மு. பக். 51).*

த.வ. காலணி

[E. shoes > த. சூசு]

சூசுகம் *šūšugam*, பெ.(n.) 1. முலைக்கண் (சூடா.); nipple; orifice of a teat. 2. முலைக் காம்பு; nipple.

[Skt. cūcuka > த. சூசுகம்]

சூசுகன் *šūšugan*, பெ.(n.) வணிகக் குலத்தோனுக்கு, இழிகுலப் பெண்ணிடம் பிறந்தவன் (அருணகிரி. பு, வலம்புரி. 108); person born of Vaišya father and šūdra mother.

[Skt. sūcaka > த. சூசுகன்]

சூட்சக்கயிறு *šūṭca-k-kayiṟu*, பெ.(n.) 1. **சூத்திரக்கயிறு, 1** (வின்.) பார்க்க; see *šūttira-k-kayiṟu*, 1. 2. திரையை மேலேற்றுங் கயிறு; rope for drawing up curtains. 3. காற்றாடியின் குறுக்குக் கயிறு (உ.வ.); string tied crosswise for balancing a kite.

[சூட்சம்+கயிறு]

[Skt. sūkṣma > த. சூட்சம்]

சூட்சக்காரன் *šūṭca-k-kāran*, பெ.(n.) 1. கூர்மையுள்ளவன்; skilful, ingenious person. 2. சூழ்ச்சியுள்ளவன்; cunning, artful person.

[Skt. sūkṣma > த. சூட்சம்+காரன்]

சூட்சம்[1] *šūṭcam*, பெ.(n.) **சூட்சுமம்** (யாழ்.அக.) பார்க்க; see *šūṭcumam.*

[Skt. sūkṣma > த. சூட்சம்]

சூட்சம்² *šūṭcam*, பெ.(n.) வஞ்சம்; deceit.

த.வ. கவடம்

[Skt. sūkṣma > த. சூட்சம்]

சூட்சம்போடு-தல் *šūṭcam-pōḍu-*, 20 செ.கு.வி. (v.i.) காற்றாடி பறக்கும்படி குறுக்குக் கயிறு கட்டுதல் (உ.வ.); to tie up cross-string for balancing kite in the air.

[சூட்சம்+போடு-,]

[Skt. sūkṣma > த. சூட்சம்]

சூட்சமகந்தம் *šūṭcama-kandam*, பெ.(n.) மின்சாரம்; electricity.

[சூட்சமம்+கந்தம்]

[Skt. sūkṣma > த. சூட்சமம்]

சூட்சவண்டி *šūṭca-vanḍi*, பெ.(n.) மிதிவண்டி (இ.வ.); bicycle.

[சூட்சம்+வண்டி]

[Skt. sūkṣa > த. சூட்சம்]



சூட்சவிலை *šūṭca-vilai*, பெ.(n.) குறைந்த விலை (வின்.); cheap price.

[Skt. sūkṣa > த. சூட்சம்]

சூட்சுமசரீரம் *šūṭcuma-šarīram*, பெ.(n.) உயிர் ஐந்து, மனம் ஒன்று, பொறிகள் (ஞானேந்திரியம்) ஐந்து செயல் உறுப்புகள் ஐந்து ஆகிய இவற்றால் ஆனதும், உயிர் வீடுபேற்று நிலை வரை அதனோடிருப்பது மாகிய உடல்; subtle body made up of five pirāṇan, manas, five ñaṉēndiriyam and five karumēndiriyam, accompanying jīvaṉ till his final emancipation.

த.வ. நுண்ணுடல்

[Skt. sūkṣma+šarīra > த. சூட்சுமசரீரம்]

சூட்சுமதசை *šūṭcuma-dašai*, பெ.(n.) அந்தரத் தசை முதலிய ஐவகைத் தசைகளிலொன்று (சங்.அக.); one of the five main sections into which the career of a person is divided in reference to the position of the planet.

[சூட்சுமம்+தசை]

[Skt. sūkṣma > த. சூட்சுமம்]

சூட்சுமதரிசனம் *šūṭcuma-darišaṉam*, பெ.(n.) 1. நுட்பமான அறிவு (யாழ்.அக.); quick perception, acuteness, keen intellect. 2. அகக்கண்; occult vision.

[Skt. sūkṣma+daršana > த. சூட்சுமதரிசனம்]

சூட்சுமதரிசனை *šūṭcuma-darišaṉai*, பெ.(n.) **சூட்சுமதரிசனம்** (வின்.) பார்க்க; see *šūṭcuma-darišaṉam.*

[Skt. sūkṣma > த. சூட்சுமதரிசனை]

சூட்சுமதிருட்டி *šūṭcuma-tiruṭṭi*, பெ.(n.) **சூட்சுமதரிசனம்** (யாழ்.அக.) பார்க்க; see *šūṭcuma-darišaṉam.*

[Skt. sūkṣma+tirutti > த. சூட்சுமதிருட்டி]

சூட்சுமபுத்தி *šūṭcuma-butti*, பெ.(n.) **சூட்சுமதரிசனம்**, 1 (உ.வ.) பார்க்க; see *šūṭcuma-darišaṉam*, 1.

[Skt. sūkṣma +buddhi> த. சூட்சுமபுத்தி]

சூட்சுமம் *šūṭcumam*, பெ.(n.) 1. கண்ணுக்குப் புலப்படக் கூடியதாக இல்லாமல், நுண்மையாக இருப்பது, நுண்மை; minuteness, fineness, delicateness. 2. பருமைப்பொருளின் நுண்ணிய வடிவம்; the subtle form of a

grosser object. 3. அறிவுக் கூர்மை; subtlety, acuteness, keenness, as of intellect. 4. நுட்பமான கூறுபாடு; crux,, main-spring or principle, principal point. *கணக்கின் சூட்சுமமெல்லாம் நன்கறிந்திருக்கிறான்.* 5. திறமை; skill, dexterity, ingenuity. 6. விழிப்பு; carefulness, circumspection. *நான் இல்லாத சமயத்தில் நீ சூட்சுமமாயிருக்க வேண்டும்.* 7. சூழ்ச்சி; cunning, artfulness. *அவனைச் சூட்சுமமாய்க் கெடுத்துவிட்டான்.* 8. வழிவகை, சூழ்ச்சி device, means, expedient. *சூட்சுமத்தால் எதையும் முடிக்கலாம், 'தங்களைப் பிரிப்பதற்கான சூட்சுமம் இது என்பதை உணர்ந்து கொண்டான்'.* 9. சிறுமையானது; anything slight or insignificant. 10. சுருக்கம்; conciseness. *உபநியாசத்தைச் சூட்சுமமாகச் செய்தான்.* 11. சிக்கனம்; thrift. *சூட்சுமமாகச் செலவுசெய்.* 12. சுருக்க வழி; short-cut. *சூட்சுமத்திலே மோட்சமா?.*

த.வ. உள்ளாப்பு, அகமம், நுண்மம்

[Skt. sūkṣma > த. சூட்சுமம்]

சூட்சுமாவத்தை *śūṭcumāvattai*, பெ.(n.) நுண்துகள்களாலான உடலில், உயிர் நிற்கும் நிலை; state of jīvan or individual soul in subtle body.

த.வ. நுண்மநிலை

[Skt. sūkṣma +avasthā > த.சூட்சுமாவத்தை]

சூடாலம் *śūḍālam*, பெ.(n.) தலை (யாழ்.அக.); head.

[Skt. cūḍā > த. சூடாலம்]

சூணாவயிறு *śūṇā-vayiṟu*, பெ.(n.) பெருவயிறு (உ.வ.); pot-belly.

த.வ. பானை வயிறு

[Skt. sūnā > த. சூணா]

சூத்தி *śūtti*, பெ.(n.) செருப்பு (இ.வ.); shoes, slippers.

[U. zūti > த. சூத்தி]

சூத்திரக்கயிறு *śūttira-k-kayiṟu*, பெ.(n.) 1. பாவையை இயக்குங் கயிறு; puppet-string. 2. பையின் சுருக்குக் கயிறு; purse-string. 3. காற்றாடிப்பட்டத்திற் குறுக்கே, தொய்வாகக் கட்டப் பட்டிருக்கும் கயிறு; cord tied to secure the equilibrium of a kite. 4. மந்திரஞ் சொல்லும்போது அதன் தொகையை விரலிற் சுற்றி அறிதற்கு உதவுந் தவக்கயிறு (உ.வ.); string twisted round a finger for keeping count in prayer.

[Skt. sūtra > த. சூத்திரம்]

சூத்திரக்காரன் *śūttira-k-kāraṉ*, பெ.(n.) 1. நூலை நூற்பாவடிவமாக(சூத்திரமாக) இயற்றிய ஆசிரியன்; author of a treatise in sūtra form. 2. அறிவுக்கூர்மையும், பொறியியல் நுட்பமும் கொண்ட வேலைக்காரன் (வின்.); ingenious or curious artist; engineer.

[Skt. sūtra > த. சூத்திரம்+காரன்]

சூத்திரச்சி *śūttiracci*, பெ.(n.) இழிகுலத்தில் பிறந்தவள்; a woman of sūdraṉ caste.

[Skt. śūdra > த. சூத்திரச்சி]

சூத்திரதார் *śūttiradār*, பெ.(n.) **சூத்திரதாரன்** பார்க்க; see *śūttira-dāraṉ.*

சூத்திரதாரன் *śūttira-dāraṉ*, பெ.(n.) நாடகத்தை நடத்துவோன்; stage-manager.

[Skt. sūtradhāra > த. சூத்திரதாரன்]

சூத்திரதாரி *śūttira-dāri*, பெ.(n.) 1. பாவையை நூல்கொண்டு ஆட்டுவோன் (சி.சி. 4, 4, சிவாக்.); one who controls the puppet-string, puppet-man. 2. **சூத்திரதாரன்** பார்க்க; see *śūttira-dāraṉ. கபட நாடக சூத்திரதாரி.*

த.வ. கிள்ளாடி

[Skt. sūtra > த. சூத்திரம்+தாரி+தாரன் >தாரி]

சூத்திரநாகம் *šūttira-nāgam*, பெ.(n.) நல்லபாம்பு வகை; a species of cobra.

[சூத்திரம்+ நாகம்]

[Skt. šūdra > த. சூத்திரம்]

சூத்திரநாபி *šūttira-nābi*, பெ.(n.) வச்சநாபிவகை (மூ.அ.); red-flowered snake-wood, m.sh., Rauwolfia serpentina.

[Skt. šūdra+nābha > த. சூத்திரநாபி]

சூத்திரநாவி *šūttira-nāvi*, பெ.(n.) **சூத்திரநாபி** (பதார்த்த. 1058) பார்க்க; see *šūttira-nābi.*

சூத்திரநிலை *šūttira-nilai*, பெ.(n.) ஆற்றொழுக்கு, அரிமாநோக்கு, தவளைப் பாய்த்து, பருந்தின்வீழ்வு என நால்வகைப் பட்டதாய் நூற்பாக்கள் ஒன்றோடொன்று பொருளால் தொடர்ந்து நிற்கும் நிலை (நன். 19); position of sūtras in a treatise as the guiding principle of interpretation, four in number, viz., *ārrolukku, arimānōkku, tavaḷai-p-pāyttu, paruntiṉ-vīḻvu.*

த.வ. நூற்பா நிலை

[Skt. sūtra > த. சூத்திரம்]

சூத்திரப்பதுமை *šūttira-p-padumai*, பெ.(n.) **சூத்திரப்பாவை** பார்க்க; see *šūttira-p-pāvai.*

த.வ. நூற்பாவை

[Skt. sūtra > த. சூத்திரம்]

சூத்திரப்பா *šūttira-p-pā*, பெ.(n.) இலக்கணம் முதலியவற்றை இயற்றுதற்குரிய நூற்பா வகவல்; a kind of akaval metre, especially employed in classical grammars.

த.வ. நூற்பா

[Skt. sūtra > த. சூத்திரம்+பா]

சூத்திரப்பாவை *šūttira-p-pāvai*, பெ.(n.) கயிறு முதலியவற்றால், ஆட்டப்படும் பாவை; puppet moved by strings or other contrivances. "நன்னாரிற் பூட்டிய சூத்திரப்பாவை" (பட்டினத். திருப்பா. திருவே. 4).

[Skt. sūtra > த. சூத்திரம்]

சூத்திரப்பிரதிமை *šūttira-p-piradimai*, பெ.(n.) **சூத்திரப்பாவை** பார்க்க; see *šūttira-p-pāvai.*

[Skt. sūtra+pratimā > த. சூத்திரப்பிரதிமை]

சூத்திரபிடகம் *šūttira-piḍagam*, பெ.(n.) திரிபிடகம் மூன்றனுள், நூற்பாவடிவமான பகுதி (மணிமே. 26, 66, உரை); a group of Buddhist Scriptures, as a basket of aphorisms, one of *tiri-piḍagam.*

[Skt. sūtra+piṭaka > த. சூத்திரபிடகம்]

சூத்திரபுட்பம் *šūttira-puṭbam*, பெ.(n.) பருத்தி (மலை.); Indian cotton-plant.

[Skt. sūtra-puṣpa > த. சூத்திரபுட்பம்]



சூத்திரம் *šūttiram*, பெ.(n.) 1. பஞ்சுநூல் (சூடா.); thread, cord. 2. இயந்திரம் (சூடா.); machine, engine, machanism, spring in a machine. *"முன்பயில் சூத்திர மிதுவென" (கம்பரா. கார்முக. 61).* 3. சூழ்ச்சிவேலை (வின்.); ingenious contrivance, puzzle. 4. சூழ்ச்சி (வின்.); stratagem, artful trick, artifice. 5. கமுக்கம் (இரகசியம்) மறை பொருள் (சங்.அக.); secret, mystery. 6. சில்வகையெழுத்திற் பல்வகைப் பொருளும்

செறிந்து விளங்க அமைத்து முடிக்கப்படும் யாப்பு (தொல். பொருள். 481); sūtra, aphorism. 7. நூற்பா வடிவில் இயன்ற நூல்; treatise in sūtra style. *வேதாந்த சூத்திரம்.* 8. பெயர்ச்சூத்திரம் முதலிய அறுவகைப்படும் நூற்பாக்கள் (யாப். வி. பாயி. பக். 11); sūtra, of six kinds viz., *peyar-c-cūttiram, viti-c-cūttiram, vilakkiyar-cūttiram, niyama-c-cūttiram, atikāra-c-cūttiram, ñāpaga-c-cūttiram.*

[Skt. sūtra > த. சூத்திரம்]

சூத்திரயாப்பு *šūttira-yāppu,* பெ.(n.) **சூத்திரப்பா** (திவா.) பார்க்க; see *šūttira-p-pā.*

[சூத்திரம்+யாப்பு]

[Skt. sūtra > த. சூத்திரம்]

சூத்திரரறுதொழில் *šūttirar-aṟu-toḻil,* பெ.(n.) ஆரியர் மேலாண்மையால் பிரிக்கப்பட்ட தொழில் வகை. ஆ (பசு)காத்தல், பொருளீட்டல், பயிரிடல், நூல் ஓதல், ஈதல், பயன்தரக் கூடிய பல தொழில் செய்தல் என்ற கடமைகளுக்குரிய (சூத்திரர்) அறுவகைத் தொழில் (சூடா.); six occupations of the šūdra caste.

[Skt. šūdra > த. சூத்திரர்]

சூத்திரவிருத்தி *šūttira-virutti,* பெ.(n.) தொல்காப்பியம் முதற் நூற்பாவிற்குச் சிவஞான முனிவர் எழுதிய விரிவுரை; a commentary on the 1st sūtra of Tolkāppiyam by *šivañaṉa-muṉivar.*

[Skt. sūtra+vṛddhi > த. சூத்திரவிருத்தி]

சூத்திரவீணை *šūttira-viṇai,* பெ.(n.) வீணை வகை (சங்.அக.); a kind of stringed instrument, lute.

[Skt. sūtra > த. சூத்திரம்]

சூத்திரவுருவம் *šūttira-v-uruvam,* பெ.(n.) பொம்மலாட்டத்தில் ஆடும் பாவை (யாழ்.அக.); puppet in *pommal-āṭṭam.*

[Skt. sūtra > த. சூத்திரம்]

சூத்திரன்¹ *šūttiraṉ,* பெ.(n.) 1. ஆரியர் வரவுக்குப் பின் வகுக்கப்பட்ட நான்காம் குலத்தோன் (பிங்.); person of the fourth or lowest of the original castes of the Hindus after the advent of the Aryans. 2. புட்பராகம் (வின்.); topaz. 3. ஒளிமணி (வைடூரியம்) (வின்.); cat's eye.

[Skt. šūdra > த. சூத்திரன்¹]

சூத்திரன்² *šūttiraṉ,* பெ.(n.) தச்சன் (அக.நி.); carpenter.

[Skt. sūtra > த. சூத்திரன்]



சூத்திரன்³ *šūttiraṉ,* பெ.(n.) முப்புரிநூலணிந்தோன் (யாழ்.அக.); one who wears the triple cord or the sacred thread.

[Skt. sūtra > த. சூத்திரன்]

சூத்திரி¹-த்தல் *šūttiri-,* 4 செ.குன்றாவி.(v.t.) & 4 செ.கு.வி. (v.i) 1. இலக்கண முதலிய பொருள் பற்றி நூற்பா செய்தல்; to construct sūtras or short terse rules, as of grammar. 2. பொருளடங்கக் கூறுதல்; to be aphoristic in expression, express in epigrams. *"சூத்திரித்து நடத்தலிற் சூத்திர மெனப்படும்" (யாப். வி. பாயி. பக். 12).*

[Skt. sūtra > த. சூத்திரி-,]

சூத்திரி² *šūttiri,* பெ.(n.) எந்திரப் பாவை முதலியன இயக்குவதில் வல்லவன்; puppet -

man, mechanic. *"சூத்திரிநீ யதுவல்லை" (மணிமே. 27: 103, அரும்.).*

[Skt. sūtrin > த. சூத்திரி]

சூத்திரிகன் *šūttirigaṉ,* பெ.(n.) பாவை முதலியவற்றை ஆட்டுபவன் (சி.சி.4: 24, சிவாக்.); puppet-man.

[Skt. sūtrika > த. சூத்திரிகன்]

சூதகக்கட்டு *šūdaga-k-kaṭṭu,* பெ.(n.) மாதவிடாய் உரிய காலத்தில் வெளிப் படாததால், ஏற்படும் நோய்; amenorrhoea, failure or suspended flow of the menses.

த.வ. தீட்டுக்கட்டு

[Skt. sūtaka > த. சூதகம்]

சூதகக்கிராணி *šūdaga-k-kirāṇi,* பெ.(n.) மகப்பேறு காலத்தில், வயிற்றில் காற்றுக் கட்டிக் கொள்வதனால் உண்டாகும் ஒருவகை நோய் (வின்.); a disease attending child birth due to wind or flatulency.

த.வ. தீட்டுவளிநோய்

[Skt. sūtaka+grahaṇi > த. சூதகக்கிராணி]

சூதகங்கா–த்தல் *šūdagaṅgā-,* 4 செ.கு.வி. (v.i.) குடும்பத்தில் பிறப்பிறப்புகளால் நேரும் தீட்டினால் (ஆசௌசத்தை) மேற்கொண்டு பிறரோடு கலவாமலிருத்தல்; to observe pollution by keeping aloof from society, by abstaining from shaving, etc., after a birth or death in one's family.

த.வ. தீட்டு காத்தல்

[Skt. sūtaka > த. சூதகம்]

சூதகசத்துரு *šūdaga-šatturu,* பெ.(n.) மருந்தாகப் பயன்படுத்தப்படும் காந்தமேற்றிய இரும்பு (சங்.அக.); magnetised iron, used medicinally.

[Skt. sūtaka-šatru > த. சூதகசத்துரு]

சூதகசன்னி *šūdaga-šaṉṉi,* பெ.(n.) மாதவிடாய்க் காலங்களில், உண்டாகும் ஒரு வகை (சன்னி) நோய் (சீவரட்.); a kind of hysteria, a disease of women during the period of menstruation.

த.வ. தீட்டு இசிவு

[Skt. sūtaka +šaṉṉi> த. சூதகசன்னி]

சூதகசூலை *šūdaga-šūlai,* பெ.(n.) **சூதகவாயு** பார்க்க; see *šūdaga-vāyu.*

[Skt. sūtaka > த. சூதகம்]

சூதகண்டகி *šūda-kaṇḍagi,* பெ.(n.) உறைப் பானவுப்பு (சங்.அக.); an acrid salt.

சூதகப்பாண்டு *šūdaga-p-pāṇḍu,* பெ.(n.) மாதவிடாய் அதிகரித்தல் முதலியவற்றால், அரத்தங்குறைந்த பெண்களுக்கு உண்டாகும் நோய் வகை; green sickness, chlorosis.

[சூதகம்+பாண்டு]

[Skt. sūtaka > த. சூதகம்]

சூதகப்பெண் *šūdaga-p-peṇ,* பெ.(n.) மாத விலக்கான பெண்; a woman in menses or periods.

த.வ. தீட்டாளி

[சூதகம் + பெண்]

[Skt. sūtaka > த. சூதகம்]

சூதகப்பெருக்கு *šūdaga-p-perukku,* பெ.(n.) அரத்தப்போக்கு அதிகம் உள்ள மாதவிலக்கு நோய்; menorrhagia, excessive menstruation.

த.வ. பெரும்பாடு

[Skt. sūtaka > த. சூதகம்]

சூதகபந்தம் *šūdaga-pandam,* பெ.(n.) **சூதகக்கட்டு** பார்க்க; see *šūdaga-k-kaṭṭu.*

[Skt. sūtaka > த. சூதகம்]

சூதகபாத்தியம் *šūdaga-pāttiyam,* பெ.(n.) பிறப்பு இறப்பு நிகழ்ச்சிகளைக் கொண்டாடும்

படியான நெருங்கிய உறவுமுறை (மதி. க. ii, 79); nearness of relationship entailing observance of pollution on occasions of birth and death.

[Skt. sūtaka +bāndhavha> த. சூதகபாத்தியம்]

சூதகம்[1] *śūdagam,* பெ.(n.) 1. பிறப்பு (பிங்.); birth. 2. மாதவிடாய் விலக்கம் (பிங்.); ceremonial impurity of a woman from menstruation. 3. உறவினர்களின் பிறப் பிறப்புகளிற் காக்கும் தீட்டு (சூடா.); ceremonial uncleanness from birth or death among relations. 4. இறப்பு நிகழ்ந்த வீட்டிற்குட் செல்லுதல், இறந்தவரின் உடலைத் தொடுதல், தீண்டத் தகாதோரை, நெருங்குதல் முதலிய தீச்செயல்களால் நிகழும் தீட்டு (வின்.); ceremonial pollution, due to miscarriage, touching a corpse or carcass, touching one of low caste or entering a mourning house, etc.

த.வ. தீட்டு

[Skt. sūtaka > த. சூதகம்]

சூதகம்[2] *śūdagam,* பெ.(n.) 1. மாமரம்; mango tree. *"சூதகம் வாழைகள் சூழ்" (திவ். பெரியதி. 4:2:1).* 2. சிறுகிணறு (சங்.அக.); small well.

[Skt. cūtaka > த. சூதகம்]

சூதகம்[3] *śūdagam,* பெ.(n.) முலைக்கண் (பிங்.); nipple.

[Skt. cūcuka > த. சூதகம்]

சூதகமலடு *śūdaga-maladu,* பெ.(n.) அறுவகை மலட்டில் ஒன்று (சங்.அக.); barrenness due to menstrual disorder, one of six maladu.

த.வ. தீட்டு மலடு

[Skt. sūtaka > த. சூதகம்]

சூதகமுட்டு *śūdaga-muttu,* பெ.(n.) **சூதகக்கட்டு** (வின்.) பார்க்க; see *śūdaga-k-kattu.*

[சூதகம்+முட்டு]

[Skt. sūtaka > த. சூதகம்]

சூதகவலி *śūdaga-vali,* பெ.(n.) **சூதகசன்னி** (உ.வ.) பார்க்க; see *śūdaga-śanni.*

[சூதகம்+வலி]

[Skt. sūtaka > த. சூதகம்]

சூதகவாயு *śūdaga-vāyu,* பெ.(n.) மாதவிடாய்க் காலத்து காற்றுப்பிடிப்பு மிகுதியால் உண்டாகும் நோய்வகை; painful menstruation, dysmenorrhoea. 2. **சூதகசன்னி** பார்க்க; see *śūdaga-śanni.*

[Skt. sūtaka +vāyu> த. சூதகவாயு]

சூதகவெட்டை *śūdaga-vettai,* பெ.(n.) மாதவிடாயில், வெள்ளை காணும் நோய்; white menstrual discharge, a disease.

த.வ. தீட்டுவெட்டை

[Skt. sūtaka > த. சூதகம்]

சூதசங்கிதை *śūda-śaṅgidai,* பெ.(n.) வல்லூர்த்தேவராசப்பிள்ளையால் தமிழில் மொழிபெயர்க்கப்பெற்றுச் சிவநெறி முதலிய வற்றைப் பற்றிக் கூறும் நூல்; a treatise on śaivam religious practice, translated in Tamil verse from Sanskrit by Tēvarāśa pillai of *Vallūr.*

[Skt. Sūta-saṃhitā > த. சூதசங்கிதை]

சூதசத்துரு *śūda-śatturu,* பெ.(n.) இதளியத்தைக் (இரசத்தைக்) கொல்லும் பொருள்கள்; medicines or herbs. Capable of killing or otherwise neutralising, the effects of mercury. (சா.அக.)

[சூதகம் + சத்துரு]

சூதசாரணை *śūdaśāraṇai,* பெ.(n.) இதளியத்தைக் (இரசத்தைக்) கட்டிச் சாரணையேற்றுகை; animating the consolidated mercurial pill.

சூதசாலை *šūda-šālai*, பெ.(n.) மடைப்பள்ளி (யாழ்.அக.); kitchen, place for cooking.

[சூதம்+சாலை]

***[Skt.** sūda > த. சூதம்]*

சூதசிந்தூரம் *šūda-šindūram*, பெ.(n.) இதளியச் (இரச) செந்தூரம் (மலை.); a kind of medicinal powder prepared from mercury.

***[Skt.** sūta+sindūra > த. சூதசிந்தூரம்]*

சூதசெம்பு *šūda-šembu*, பெ.(n.) இதளிய மாற்றத்தால் (இரசவாதத்தால்) ஏற்பட்ட செம்பு; alchemic copper derived from transmulation. (சா.அக.)

[சூதம் + செம்பு]

***[Skt.** sūda > த. சூதம்]*

சூதசோரசெந்தூரி *šūda-šōra-šendūri*, பெ.(n.) இதளியத்தையும், சோர நஞ்சையும் (இரசத்தையும், சோரபானத்தையும்) செந்தூர மாகச் செய்யும் நாகதாளி; a plant that is capable of converting mercury sora arsenic and into red. (சா.அக.)

[சூதம்+சோரம் + செந்தூரி]

சூதத்தைத்தூளியாக்கி *šūdattai-t-tūliyākki*, பெ.(n.) இதளியத்தைத் (இரசத்தைத்) தூளாக செய்யும் மருந்து; any drug capable of turning mercury into a powder. (சா.அக.)

சூதத்தைப்பொன்னாக்கி *šūdattai-p-ponnākki*, பெ.(n.) நாகநஞ்சு (சங்.அக); a prepared arsenic.

சூதநதி *šūda-nadi*, பெ.(n.) ஆன்பொருநையாறு (பிங்.); the river *āmrāvadi*.

***[Skt.** cūta+nadi > த. சூதநதி]*

சூதநோக்கல் *šūdanōkkal*, பெ.(n.) **சூதவஞ்சனம்** (சங்.அக.); see *šūda-v-añjanam*.

சூதபாடாணம் *šūda-pādāṇam*, பெ.(n.) வைப்புநஞ்சு வகை (மலை.); a prepared arsenic.

***[Skt.** sūta+pāṣāṇa > சூதபாஷாணம் > த. சூதபாடாணம்]*

சூதம்[1] *šūdam*, பெ.(n.) 1. பிறப்பு; birth. *"சூதநல் வினை மங்கலத் தொழில்" (பெரியபு. திருஞான. 1043).* 2. இதளியம் (சூடா.); quick silver, mercury.

***[Skt.** sūta > த. சூதம்]*

சூதம்[2] *šūdam*, பெ.(n.) 1. மாமரம் (பிங்.); mango tree. 2. தேமா; sweet mango. 3. புளிமா (மலை.); hog plum. 4. பவளமல்லிகை (மலை.); coral jasmine.

***[Skt.** cūta > த. சூதம்]*

சூதம்[3] *šūdam*, பெ.(n.) சூது (சூடா.); gambling.

***[Skt.** dyūta > த. சூதம்]*

சூதம்போர் *šūdam-pōr*, பெ.(n.) சூதுப்போர் (தொல். எழுத்து. 417, உரை); gambling, considered as a contest.

[சூதம்+போர்]

***[Skt.** dyūta > த. சூதம்]*

சூதமணி *šūda-maṇi*, பெ.(n.) ஒருவகைக் கட்டு மருந்து (தஞ். சர. iii, 76); a medicinal preparation.

சூதமுனிவர் *šūda-muṉivar*, பெ.(n.) வியாசருடைய புகழ்பெற்ற சீடரும் இருடி களுக்குத் தொன்மங்களைக் (புராணங்கள்) கூறியவருமான முனிவர்; the reputed disciple of Vyāsar and narrator of Purāṇas to Ṛṣis.

[சூதம்+முனிவர்]

***[Skt.** sūta > த. சூதம்]*

சூதராட்சசன் *šūda-rāṭcašaṉ*, பெ.(n.) பொன்னம்பர் (யாழ்.அக.); a kind of amber.

சூதவஞ்சனம் *śūda-v-añjaṉam*, பெ.(n.) நீலாஞ்சனக்கல் (வின்.); sulphide of antimony.

சூதவெண்ணெயிறுகி *śūdaveṇṇeyiṟugi*, பெ.(n.) சூத வெண்ணெயைக் கெட்டிப் படுத்துமோர் மூலிகை, அதாவது ஆரைக்கீரை; a drug capable of hardening the colloid mercury - Marsilea quadrifolia. (சா.அக.)

[சூதவெண்ணெய் +இறுகி]

சூதவெள்ளி *śūda-veḷḷi*, பெ.(n.) இதளிய மாற்றக் கலையினால் (இரசவாத வித்தை யினால்) செய்த வெள்ளி; silver obtained by means of alchemical process. (சா.அக.)

[சூதம் +வெள்ளி]

சூதவைரி *śūda-vairi*, பெ.(n.) வில்வத்தளிர் (யாழ்.அக.); tender leaf of bael tree.

சூதன்[1] *śūdaṉ*, பெ.(n.) 1. தேரோட்டி (பிங்.); charioteer. *"சூதனு முடுகித் தூண்ட" (கம்பரா. இராவணன்வதை. 19).* 2. கதிரவன் (யாழ்.அக.); sun. 3. தச்சன் (யாழ்.அக.); carpenter. 4. **சூதமுனிவர்** (அக.நி.) பார்க்க; see *śūda-muṉivar.*

[Skt. sūta > த. சூதன்]

சூதன்[2] *śūdaṉ*, பெ.(n.) சமையல்காரன் (இலக். அக.); cook.

[Skt. sūda > த. சூதன்]

சூதனம் *śūdaṉam*, பெ.(n.) அழிக்கை (இலக்.அக.); destruction, killing.

[Skt. sūdana > த. சூதனம்]

சூதனொலிமாலை *śūdaṉoli-mālai*, பெ.(n.) சூதமுனிவரால் முறையாகச் சொல்லப்பட்ட தொன்மம் (புராணம்); purāṇam, as being a string or series of utterances by śūda-muṉivar. *"சூதனொலி மாலையென்றே கலிக்கோவை சொல்லே" (தேவா. 1178, 8) (சித். மரபுகண். பக். 17).*

சூதானகாரன் *śūdāṉa-kāraṉ*, பெ.(n.) விழிப்புடன் இருப்பவன் (யாழ்.அக.); careful, cautious person.

[Skt. su-avadhāna> த. சூதானம்+காரன்]

சூதானப்படுத்து-தல் *śūdāṉa-p-paḍuttu-*, 5 செ.குன்றாவி.(v.t.) பாதுகாப்பாய் வைத்தல் (வின்.); to deposit in a safe place, to take care of.

[Skt. su-avadhāna> த. சூதானம்+ படுத்து-தல்]

சூதானம் *śūdāṉam*, பெ.(n.) 1. எச்சரிக்கை; care, circumspection. *சூதானத்துக்கு அழிவில்லை (வின்.).* 2. காவல்; safety. *"ஆராரு மறியாத சூதான வெளியிலே" (தாயு. ஆனந்தமா. 6).*

த.வ. கவனம்

[Skt. su-avadhāna> த. சூதானம்]

சூதானம்பண்ணு-தல் *śūdāṉam-paṇṇu-*, 5 செ.குன்றாவி.(v.t.) **சூதானப்படுத்து-தல்** (வின்.) பார்க்க; see *śūdāṉa-p-paḍuttu-.*

[Skt. sū-avadhāna> த. சூதானம்+பண்ணு]

சூதானவறை *śūdāṉa-v-aṟai*, பெ.(n.) பொருட்களைப் பாதுகாப்பாக வைக்கும் அறை; a room for safe custody of things.

[சூதானம்+அறை]

[Skt. su-avadhāna > த. சூதானம்]

சூதானு *śūdāṉu*, பெ.(n.) 1. பழுதுபார்க்கை (கோயிலொ. 36); repair. 2. முன்னெச்சரிக்கை (இ.வ.); care, circumspection. 3. பாதுகாப்பு; safety.

[Skt. sāvadhāna > த. சூதானு]

சூதி *śūdi*, பெ.(n.) பிள்ளைப்பேறு; childbirth.

[Skt. sūti > த. சூதி]

சூதிக்கிருகம் *šūdi-k-kirugam,* பெ.(n.) **சூதிகாக்கிருகம்** பார்க்க (யாழ்.அக.); see *šūdigā-k-kirugam.*

[Skt. sūti+gṛha > த. சூதிக்கிருகம்]

சூதிகாக்கிருகம் *šūdigā-k-kirugam,* பெ.(n.) மகப்பேறு அறை (யாழ்.அக.); lying - in chamber.

[Skt. sūtikā+gṛha > த. சூதிகாக்கிருகம்]

சூதிகாமலடி *šūdigā-maladi,* பெ.(n.) கருச்சிதை வாலேனும், மகப்பேற்றுக்குப் பின் பிள்ளை இறப்பதாலேனும், மலடாயிருப்பவள்; a childless woman whose childlessness is caused either by abortion or by death of the child soon after its birth.

[சூதிகா+மலடி]

[Skt. sūtikā > த. சூதிகா]

சூதிகாவாயு *šūdigā-vāyu,* பெ.(n.) கருப் பத்தில் உள்ள காற்று (கர்ப்பவாயு) (இ.வ.); flatulency in the womb causing hysteria, a wasting disease that follows child birth.

[Skt. sūti ka+vāyu> த. சூதிகாவாயு]

சூதிகை *šūdigai,* பெ.(n.) 1. **சூதிகாக்கிருகம்** பார்க்க; see *šūdigā-k-kirugam. "சூதிகைத் தோன்றிய பொழுதே" (பாரத. இராசசூ. 118).* 2. பிள்ளைப் பெற்றவள்; lying - in woman.

[Skt. sūtikā > த. சூதிகை]

சூப்பி *šūppi,* பெ.(n.) ஆண்குறியின் நுனித்தோல் (வின்.); prepuce, foreskin.

[U. supārī > த. சூப்பி]

சூப்பிக்கலியாணம் *šūppi-k-kaliyāṇam,* பெ.(n.) சுன்னத்துக்கலியாணம் பார்க்க; see šuṉṉathuk-kaliyāṉam.

சூப்பியறுத்தல் *šūppi-y-aṟuttal,* பெ.(n.) **சுன்னத்துக்கலியாணம்** பார்க்க; see *šuṉṉattu-kaliyāṇam.*

சூபி *šūpi,* பெ.(n.) இறைவன் மேல் மிகுந்த பற்றுடையவன்; pious man; devotee.

[Ar. sūfi > த. சூபி]

சூயை *šūyai,* பெ.(n.) அத்திரி முனிவரின் மனைவி (பத்தினி)யாகிய அனசூயை; wife of Atriṛṣi. *"சூயை கைவிடப் பதஞ்சலி யாகிய" (கல்லா. 41: 6).*

[Skt. ānasūyā > த. சூயை]

சூர்ணம் *šūrṇam,* பெ.(n.) அரைத்தோ பொடித்தோ பெறப்படும் தூள் வடிவ மருந்து; powder, especially medicinal.

[Skt. cūrṇa > த. சூர்ணம்]

சூர்ணி *šūrṇi,* பெ.(n.) **சூர்ணிகை** பார்க்க; see *šūrṇigai. "சூர்ணிக் கொத்து" (சி.சி.காப்பு. மறை).*

[Skt. cūrṇikā > த. சூர்ணி]

சூர்ணிகை *šūrṇigai,* பெ.(n.) செய்யுட்கருத்தை விளக்கிநிற்கும் இனிய சொற்றொடர்; a kind of easy prose, especially setting forth the purport of a foregoing verse. *"இங்ஙனஞ் சூர்ணிகையை அனுசரித்து வார்த்திகமும் வார்த்திகத்தை அனுசரித்து அதிகரணங் களும் பகுத்திருக்கின்றன" (சி.போ.பா.).*

[Skt. cūrṇikā > த. சூர்ணிகை]

சூர்ப்பகர்ணன் *šūrppa-karṇaṉ,* பெ.(n.) பிள்ளையார் (சரபேந்திர. குற. 8:3); God Ganēšaṉ.

[Skt. šūrpa-karṇa > த. சூர்ப்பகர்ணன்]

சூர்ப்பகன்னம் *šūrppa-kaṉṉam*, பெ.(n.) யானை (யாழ்.அக.); elephant.

[சூர்ப்பகர்ணன் > த. சூர்ப்பகன்னம்]



சூர்ப்பணகா *šūrppaṇagā*, பெ.(n.) **சூர்ப்பணகை பார்க்க**; see šūrppaṇagai. *"சூர்ப்பணகாவைச் செவியொடு மூக்கவள் ஆர்க்கவரிந்தான்" (திவ். பெரியாழ். 3: 9: 8).*

[Skt. Sūrpa+ நகை > த. சூர்ப்பணகா]

முறம் போல் பல்லை உடையவள்

சூர்ப்பணகி *šūrppaṇagi*, பெ.(n.) **சூர்ப்பணகை** (உ.வ.) பார்க்க; see *šūrppaṇagai.*

சூர்ப்பணகை *šūrppaṇagai*, பெ.(n.) இராவணன் தங்கை; the younger sister of *Rāvaṇaṉ.*

[Skt. šūrpaṇakhā > த. சூர்ப்பணகை]

சூர்ப்பம் *šūrppam*, பெ.(n.) 1. முறம் (பிங்.); winnowing fan. 2. தூணி (தைலவ. தைல. 23); measure of capacity, equal to four marakkāl.

[Skt. šūrpa > த. சூர்ப்பம்]

சூர்மா *šūrmā*, பெ.(n.) கண்ணுக்கிடும் மை; collyrium, pigment for the eyes.

[U. surmā > த. சூர்மா]

சூரசேனன் *šūrašēṉaṉ*, பெ.(n.) சூரசேன நாட்டரசனும் திருமாலுக்குப் பாட்டனுமான ஓர் அரசன் (சங்.அக.); the grandfather of Kṛṣṇaṉ, as the king of *Sūrašēṉam.*

[Skt. šūrasēna > த. சூரசேனன்]

சூரணம்[1] *šūraṇam*, பெ.(n.) **சூர்ணம்** பார்க்க; see *šūrṇam.*

சூரணம்[2] *šūraṇam*, பெ.(n.) கருணைக் கிழங்கு (சூடா.); a tuberous - rooted herb.

[Skt. šūraṇa > த. சூரணம்]

சூரணவர்ணம் *šūraṇa-varṇam*, பெ.(n.) புடைவை வகை; a kind of saree. *"சூரணவர்ணத்தில்" (விறலிவிடு. 717).*

[Skt. cūrṇa+varṇa > த. சூரணவர்ணம் த.வரணம் > வ வர்ண]

சூரணி[1]**-த்தல்** *šūraṇi-*, 4 செ.குன்றாவி.(v.t.) பொடி செய்தல் (சங்.அக.); to reduce to powder, pulverise, especially medicine.

[Skt. cūrṇa > த. சூரணம் > சூரணி-,]

சூரணிகை *šūraṇigai*, பெ.(n.) **சூர்ணிகை** பார்க்க; see *šūrṇigai.* *"இதற்குச் சூரணிகை மூன்றேயன்றி நான்கு கூறப்படாமையின்" (சி.போ. பாண்டிப்.).*

சூரணை *šūraṇai*, பெ.(n.) **சூர்ணிகை** பார்க்க; see *šūrṇigai.* *"சூத்திரமீ ராறினுக்கும் சூரணைமுப் பானொன்பான்" (சி.போ. பாண்டிப்.)*

சூரத்து *šūrattu*, பெ.(n.) மும்பை (பம்பாய்) மாநிலத்தின் வடபகுதியிலுள்ள ஒரு தேயம்; the country of Sūrat, north of Bombay.

[Skt. Surāṣṭra > த. சூரத்து]

சூரத்துக்கடுக்காய் *šūrattu-k-kaḍukkāy*, பெ.(n.) சூரத்தினின்றும் கிடைக்கும் கடுக்காய்; a kind of myrobalan from Surat.

[சூரத்து+கடுக்காய்]

[கடு+காய்= கசப்புக்காய்]

சூரத்துக்காவி *šūrattu-k-kāvi*, பெ.(n.) சூரத்தினின்றும் வரும் காவிக்கல்; red ochre from Sūrat.

[சூரத்து+காவி]

சூரத்துக்கெண்டை *šūrattu-k-keṇḍai*, பெ.(n.) சூரத்திலிருந்து கிடைக்கும் ஆடைக்கரை முதலியவற்றிற் சேர்க்கப்படும் பொன் வெள்ளி இழைகள் (சரிகை); gold or silver lace from surat.

[சூரத்து+கெண்டை]

சூரத்துத்தாட்டுப்பத்திரி *šūrattu-t-tāṭṭu-p-pattiri*, பெ.(n.) சேலைவகை (உ.வ.); a kind of saree.

[சூரத்து+தாட்டுப்பத்திரி]

சூரியகடிகாரம் *šūriya-kaḍigāram*, பெ.(n.) பகலில் நாழிகை தெரிவிக்கும் ஒரு கருவி; sun dial.

[சூரியன் + கடிகாரம்]

***[Skt.** sūrya> த. சூரியன்]*

[கடிகை+ஆரம்–கடிகையாரம் >கடிகாரம்]

சூரியகடியாரம் *šūriya-kaḍiyāram*, பெ.(n.) **சூரியகடிகாரம்** பார்க்க; see *šuriya-kaḍikāram.*

சூரியகணம் *šūriya-kaṇam*, பெ.(n.) நூலின் முதற் செய்யுளின் முதலில் அமைதல் கூடாதென்று, நீக்கப்பட்ட கூவிளங்காய் (நேர்–நிரை–நேர்) என்னும் வாய்ப்பாடு பற்றி வரும் தீக்கணச் சீர்வகை (இலக். வி. 800, உரை); metrical foot of nēr-nirai-nēr considered inauspicious at the commencement of a poem.

[சூரியன் + கணம்]

சூரியகபாலம் *šūriya-kabālam*, பெ.(n.) எழுஞாயிறு நோய் (பரராச. i: 24); headache which lasts from sunrise to sunset.

***[Skt.** sūrya+kapāla> த. சூரியகபாலம்]*

சூரியகலை *šūriya-kalai*, பெ.(n.) 1. வலது மூக்கு வழியாய் வரும் மூச்சு (பிங்கலை); breath coming through the right nostril. 2. மூக்கின் வலது பக்கத்துத் துளை (வின்.); right nostril.

[சூரியன்+கலை]

***[Skt.** sūrya > த. சூரியன்]*

சூரியகாந்தக்கண்ணாடி *šūriya-kānda-k-kaṇṇāḍi*, பெ.(n.) **சூரியகாந்தக்கல்** பார்க்க; see *šūriya-gānda-k-kal.*

[சூரியன் + காந்தம் + கண்ணாடி]

***[Skt.** sūrya > த. சூரியன்]*

[காந்து >காந்தம்.காண்+ஆடி–காணாடி > கண்ணாடி]

சூரியகாந்தக்கல் *šūriya-gānda-k-kal*, பெ.(n.) வெயில்படும்போது நெருப்பு வெளிப்படுந் தன்மையுள்ள, ஒரு வகைப் பளிங்குக் கல்; see *Sun-stone, Jasper, Impur, Opaque, coloured quartz.*

[சூரியன் + காந்தம்+கல்]

சூரியகாந்தச்சிலை *šūriya-kānda-c-cilai*, பெ.(n.) **சூரியகாந்தக்கல்** பார்க்க; see *šūriya-gānda-k-kal.*

[சூரியன் + காந்தம்+சிலை]

சூரியகாந்தம்[1] *šūriya-kāndam*, பெ.(n.) 1. சூரியகாந்தக்கல் பார்க்க; see šūriya-ganda-k-kal. *"சூரியகாந்தமஃ தாரழலெங்ஙனங் கான்றிடும்" (சீவக. 2208).* 2. **சூரியகாந்தி** (மலை.) பார்க்க; see *šūriya-kāndi.*

[சூரியன் + காந்தம்.]

***[Skt.** sūrya > த. சூரியன்.]*

[காந்து > காந்தம்]

சூரியகாந்தம்[2] *šūriya-kāndam*, பெ.(n.) 1. முதன்மை இசைப்பண் (மேளகர்த்தா)களுள் ஒன்று; a primary rāgam.

[சூரியன் +காந்தம்]

சூரியகாந்தவாமணக்கு *šūriya-kānda-V-āmaṇakku*, பெ.(n.) ஒருவகைச் **செவ்வா மணக்கு**; a variety of castor plant.

[சூரியன் + காந்தம் + ஆமணக்கு. **Skt.** *sūrya > த. சூரியன்]*

[அவிழ் > அவிழம் > அவிணம்> ஆவிணம்]

சூரியகாந்தாரி *šūriya-kāndāri*, பெ.(n.) பண்வகை (பரத. ராக. 103); a specific melody - Type.

சூரியகாந்தி *šūriya-kāndi*, பெ.(n.) 1. கதிரவன் இருக்கும் திசையை நோக்கி மலரக் கூடிய பெரிய மஞ்சள் நிறப் பூ; sun flower. 2. ஓரிலைத் தாமரை (M.M.588); one-leaf lotus, lonidium suffruticosum. 3. **சூரியகாந்திப்பட்டு** பார்க்க; see *šūriya-kāndi-p-paṭṭu*.

த.வ. பொழுது வணங்கி

[சூரியன்+ காந்தி]

[Skt. sūrya > த. சூரியன்]

சூரியகாந்திப்பட்டு *šūriya-kāndi-p-paṭṭu*, பெ.(n.) ஒருவகைக் கெட்டியான பட்டு (வின்.); velvet.

த.வ. கதிரொளிப்பட்டு

[Skt. sūrya > த. சூரியன்+காந்தி+பட்டு]

சூரியகாந்திரசம் *šūriya-kāndi-rašam*, பெ.(n.) குட்ட நோய்க்குக் கொடுக்கும் ஓர் ஆயுள்வேத மருந்து; an Āyurvedic medicine given for skin diseases. (சா.அக.)

சூரியகிரகணம் *šūriya-kiragaṇam*, பெ.(n.) கருங்கோள் (ராகு), செங்கோள் (கேது) என்னும் சாயாக் கோள்களால் கதிரவன் பற்றப்படுகை; solar eclipse.

த.வ. கதிர்மறை

[Skt. sūrya + grahaṇa > த. சூரியகிரகணம்>கிரகணம்=பற்றுகை, பற்றுதல்.]

கதிரவனுக்கும் நிலவுலகத்திற்கும் இடையில், நிலவு வரும்போது சூரிய கிரகணமும், கதிரவனுக்கும் நிலவுக்கும் இடையில் நிலவுலகம் வரும்போது, சந்திரகிரகணமும் தோன்றும்.

சூரியகிராணம் *šūriya-kirāṇam*, பெ.(n.) **சூரியகிரகணம்** பார்க்க; see *šūriya-kiragaṇam*.

சூரியகும்பம் *šūriya-kumbam*, பெ.(n.) கதிரவனை நினைத்து மந்திரம் மூலமாக அமைக்கப்படும் நீர்க்குடம் (வின்.); a sanctified water - potdedicated to Sun-god.

[சூரியன்+கும்பம்]

[Skt. sūrya > த. சூரியன்]

சூரியகுலம் *šūriya-kulam*, பெ.(n.) தமிழ் மன்னர்குல மூன்றனுள் கதிரவனைக் குலமுதல்வனாகக் கொண்ட சோழ மரபு; solar race of kings, as descended from the Sun, one of three maṉṉar-kulam.

[சூரியன்+குலம்]

[Skt. sūrya > த. சூரியன்]

சூரியசக்தி *šūriya-šakti*, பெ.(n.) கதிரவனின் வெப்பத்திலிருந்து பெறும் ஆற்றல்; solar energy.

[சூரியன் + சக்தி.]

[சத்தி >சக்தி]

[Skt. sūrya > த. சூரியன்]

சூரியசரம் *šū:"ya-šaram*, பெ.(n.) **சூரியகலை** பார்க்க (சங்.அக.); see *šūriya-kalai*.

சூரியசித்தாந்தம் *šūriya-šittāndam*, பெ.(n.) கதிரவனால் சொல்லப்பட்டதாகக் கருதப்படும் ஒரு வானியல் நூல்; a celebrated astronomical text-book, believed to be a direct revelation from the Sun.

[Skt. sūrya+šittanda > த. சூரியசித்தாந்தம்]

சூரியதிசை *šūriya-dišai*, பெ.(n.) கதிரவனுக்குரித்தான திசை, கிழக்கு (பிங்.); east, as the Sun's quarter.

[சூரியன்+திசை.]

[திக்கு >திசை]

சூரியநமசுகாரம் *šūriya-namašu-kāram*, பெ.(n.) மந்திரம் மூலமாகக் கதிரவனை நோக்கிச் செய்யும் வழிபாடு; sun-worship, adoration of the sun with mantras and prostrations.s

[Skt. sūrya +namaskāra> த. சூரிய நமசுகாரம்]

சூரியநாராயணன் *šūriya-nārāyaṇaṉ*, பெ.(n.) கதிரவன் மண்டலத்தில் வாழ்பவராகக் கருதப்படும் திருமால்; Nārāyaṇaṉ believed to be dwelling in the solar orb.

[Skt. sūrya nārāyaṇa > த. சூரிய நாராயணன்]

சூரியப்படாம் *šūriya-p-paḍām*, பெ.(n.) விருதுவகை; an emblem of authority, perhaps bearing the figure of the sun. *"செம்படாஞ் சூரியப்படாம்" (திருக்காளத். பு. 7, 69).*

[சூரியன்+படாம்]

[Skt. sūrya > த. சூரியன்]

சூரியப்பிரபை *šūriya-p-pirabai*, பெ.(n.) 1. வெயில்; Sun's rays, sunlight. 2. தலையின் வலப்பக்கத்தில் மகளிர் அணிந்து கொள்ளும் மணிபதித்த பொன்னணிகலன்வகை; ornament of gold set with precious stones, worm by women on the right side of the head. 3. கதிரவன் வடிவாக அமைந்த ஊர்தி; sun-shaped vehicle for an idol.

[Skt. sūrya+prabhā > த. சூரியப்பிரபை]

சூரியப்பிரவை *šūriya-p-piravai*, பெ.(n.) **சூரியப்பிரபை** பார்க்க; see *šūriya-p-pirabai*.

[Skt. sūrya > த. சூரியப்பிரவை]

சூரியப்பிறை *šūriya-p-piṟai*, பெ.(n.) சூரியப்பிரபை பார்க்க; see šūriya-p-pirabai.

சூரியபடம் *šūriya-paḍam*, பெ.(n.) **சூரியகாந்திப்பட்டு** (இ.வ.) பார்க்க; see *šūriya-gāndhi-p-paṭṭu*.

சூரியபாணம் *šūriya-bāṇam*, பெ.(n.) அரசர் முதலியோர் முன்பு எடுத்துச் செல்லும் வட்டமான விருதுவகை; a round parasol or fan carried before great personages or idols.

[K. sūryapāna > த. சூரியபாணம்]

சூரியபிம்பம் *šūriya-bimbam*, பெ.(n.) கதிரவன் வட்டம்; disc or orb of the sun.

[சூரியன்+பிம்பம்]

[Skt. sūrya > த. சூரிய]

சூரியபிரபாவகுடிகா *šūriya-pirabāva-kuḍigā*, பெ.(n.) சயம், காசம், பாண்டு, காமாலை, குன்மம், சூலை, குட்டம், மூலம் முதலிய பெரிய நோய்களுக்குக் கொடுக்கும் ஆயுள்வேத மருந்து; an Āyurvedic preparation given for consumption bronchitis, anaemia, jaundice, piles etc. (சா.அக.)

சூரியபுடம்[1] *šūriya-puḍam*, பெ.(n.) வெயிலில் வைக்கும் மருந்துப்புடம்; warming medicinal oils in sunlight.

[Skt. sūrya+puṭa > த. சூரியபுடம்]

சூரியபுடம்[2] *šūriya-puḍam*, பெ.(n.) வானத்திற் கதிரவனது உண்மை நிலை (வின்.); Sun's geocentric longitude.

[Skt. sūrya+sphuṭa > த. சூரியபுடம்]

சூரியபுராணம் *šūriya-purāṇam*, பெ.(n.) **பிரமகைவர்த்தம்** (சங்.அக.) பார்க்க; see *piramakaivarttam*.

[Skt. sūrya+purāṇa > த. சூரியபுராணம்]

சூரியமண்டலம் *šūriya-maṇḍalam*, பெ.(n.) 1. கதிரவன் வட்டம்; orb or disc of the sun. 2. பகலவன் உலகம்; region of the sun. 3. வழிபாட்டுக் காலங்களில் கதிரவன் திங்கள் தீ ஆகிய இவற்றை, அறிவு செயலாற்றல் களெனத் தம்மிடத்தில் அழைத்தல் செய்யப் படுவதும் தாமரைமலர்களால், பாவிக்கப்படு வதுமான சில உடற்சுழிகள் (வின்.); mystic circles in the body regarded as lotus flowers and assigned in worship to jñāna, kriyā, icchā šakti of the deity under the respective emblems of the sun, moon and fire.

[Skt. sūrya > த. சூரியன்+மண்டலம்]

சூரியமத்தியம் *śūriya-mattiyam*, பெ.(n.) கதிரவனது நெடுவரை (வாக்கியப்)பிழை தீர்க்கப்படாத நிலை (செந். viii, 216); Sun's mean longitude

[Skt. sūrya+madhyama > த. சூரியமத்தியம்]

சூரியவட்டம் *śūriya-vaṭṭam*, பெ.(n.) கதிரவக் காலங்காட்டி (வின்.); sun-dial.

[சூரியன்+வட்டம்]

[Skt. sūrya > த. சூரியன்]

சூரியவாத்து *śūriya-vattu*, பெ.(n.) கிழக்கு மேற்காக நீண்டிருக்கும் வீடு (சிற்பரத்.16); house whose measurement east to west is longer than that of south to north.

[Skt. sūrya+vādin >சூரியவாஸ்து> த. சூரியவாத்து]

சூரியவாதி *śūriya-vādi*, பெ.(n.) கதிரவனே கடவுளெனக் கொண்டு, அவனது உலகத்தை அடைவதே வீடுபேறென்று வழக்காடுவோன் (வின்.); one who holds that the Sun is the Supreme Being and that final liberation consists in reaching is world.

[Skt. sūrya+vādin > த. சூரியவாதி]

சூரியவீதி *śūriya-vīdi*, பெ.(n.) இடபம், மடங்கல், ஆடவை (மிதுனம்), கடகம் என்ற நான்கு மடங்கிய மேடவீதி: மீனம், மேடம், கன்னி, துலாம் என்ற நான்குமடங்கிய இடபவீதி : சிலை (தனுசு), சுறவம் (மகரம்), கும்பம், நளி (விருச்சிகம்) என்ற நான்குமடங்கிய ஆடவை (மிதுன)வீதி என்று மூன்றாகப் பகுக்கப்பட்டுக் கதிரவன் வடதென் பக்கங்களில், வளைந்து செல்லும் வழியைத் தன்னகத்தே கொண்ட வானத்தின் கூறு; Sun-path which comprehends northern and southern declination of the sun, divided into three parts of four signs each, viz., *mēḍa-vīdi, comprising iḍabam, śiṅgam, mituṉam, kaḍagam : iḍapavīdi, comprising mīṉam, mēḍam, kaṉṉi, tulām: mituṉa-vīdi, comprising taṉuśu, magaram, kumbam, viruccigam.*

[Skt. sūrya+vīthi > த. சூரியவீதி]

சூரியன் *śūriyaṉ*, பெ.(n.) நிலவுலகுக்கு இன்றியமையாத ஒளியையும், வெப்பத்தையும் தரும் விண்மீன், ஞாயிறு; Sun. *"சூரியனார் தொண்டை வாயினிற் பற்களை வாரி நெரித்தவாறு" (திருவாச. 14:15).* 2. நூற்றெட்டு அறிவுநூற்றொகுதிகளுள் ஒன்று; (உபநிடதம்) an Upaniṣad, one of 108. 3. சோழன் (பிங்.); Chōlā king. 4. செவ்வெருக்கு (மலை.); purple madas. 5. செம்புமலை (வின்.); mountain containing copper.

[Skt. sūrya > த. சூரியன்]

சூரியன்கண்ணாடி *śūriyaṉ-kaṉṉāḍi*, பெ.(n.) பூசையில் ஞாயிற்றைப் பார்த்ததற்கு, இரு கை விரல்களையும் ஒருவகையாகச் சேரக்கோத்து உண்டாக்கும் இடைவெளி (இ.வ.); the opening formed by the interwining of the fingers of the two hands for gazing at the sun, in devotions.

[சூரியன்+கண்ணாடி]

[Skt. sūrya > த. சூரியன்]

சூரியன்போடு-தல் *śūriyaṉ-pōḍu-*, 20 செ.கு.வி.(v.i.) வழிபாட்டில் ஞாயிற்றைப் பார்ப்பதற்கு இடைவெளியுண்டாகும்படி, இருகைவிரல்களையும் ஒருவகையாகச் சேரக்கோத்தல் (பிராமண); to intertwine the fingers of the two hands and leave an opening in the middle for gazing at the sun, at noon devotions.

[சூரியன்+போடு-,]

[Skt. sūrya > த. சூரியன்]

சூரியாவர்த்தவாதம் *śūriyāvartta-vādam*, பெ.(n.) ஞாயிறு தோன்றும்போதும் மறையும் போதும் காணும், ஒருவகைத் தலைநோய்; sun-headache, hemicrania.

[Skt. sūrya+āvarta > த. சூரியாவர்த்த வாதம்]

சூன்மி *śūṉmi,* பெ.(n.) பிறன்மனைப் புகுந்தாரை, காய்ந்து கொதிக்கும் இருப்புப் பாவையைத் தழுவும்படிச் செய்து வருத்தும் நிரய வகையுள் ஒன்று (சேதுபு. தனுக்கோ.3); a hell where immoral people are punished by being forced to embrace red-hot iron statues .

[Skt. *sūrmi* > த. *சூன்மி*]

சூன்யம் *śūṉyam,* பெ.(n.) **சூனியம்** பார்க்க; see *śūṉiyam.*

சூனம்¹ *śūṉam,* பெ.(n.) விரிமலர் (யாழ்.அக.); full-blown flower.

த.வ. வீ.

[Skt. *sūna* > த. *சூனம்*]

சூனம்² *śūṉam,* பெ.(n.) அடி வயிற்று வீக்கம்; swelling of the abdomen.

த.வ. உப்புசம்

[Skt. *śūna* > த. *சூனம்*]

சூனர் *śūṉar,* பெ.(n.) ஊன்விற்போர் (திவா.); dealers in meat.

த.வ. புலைய

[Skt. *sūna* > த. *சூனர்*]

சூனியக்காரன் *śūṉiya-k-kāraṉ,* பெ.(n.) மந்திரத்தால் கொல்லும் கலையைக் கற்றவன்; sorcerer any practiser of witch craft or of any charm or incantation - wavlock.

த.வ. கருவித்தைக்காரன், செய்வினையாளன்

[Skt. *śūnya*>த.*சூனியம்+காரன்*]

சூனியக்காரி *śūṉiya-k-kāri,* பெ.(n.) மாயக் கலையில் வல்லவள்; witchwife.

த.வ. கருவித்தைக்காரி

[Skt. *śūṉya*> த. *சூனியம்+காரி*]

சூனியகும்பகம் *śūṉiya-kumbagam,* பெ.(n.) மூன்று வகைக் கும்பங்களில் ஒன்று; one of the three varieties of kumbagam.

[Skt. *śūnya*> த. *சூனியம்+கும்பகம்*]

சூனியஞ்செய்–தல் *śūṉiyañ-śey-,* 1 செ.கு.வி. (v.i.) மந்திரக் கலை செய்வினையால் ஒருவனுக்குத் தீங்கிழைத்தல்; doing harm or injury through the influence of evil spirits (சா.அக.).

த.வ. கருவினை

[Skt. *śūnya*> த. *சூனியம்+செய்தல்*]

சூனியத்திரவியம் *śūṉiya-t-tiraviyam,* பெ. (n.) மாய மந்திரக் கலைக்குப் பயன்படும் எழுவகைப் பொருட்களான எலும்பு, எட்டி விறகு, ஊமத்தை விதை, வேப்பெண்ணெய், கரி, எருக்கம்பூ, பாம்பு முள் மாலை; the articles used in witch craft, seven in number, viz., *elumbu, eṭṭi viṟagu, ūmattai vidai, vēppeṇṇey, kari, erukkam-pū, pāmbu muḷmālai.*

த.வ. கருவினைப்பொருள்

[Skt. *śūnya +dravya* > த. *சூனியத் திரவியம்*]

சூனியத்துவம் *śūṉiya-t-tuvam,* பெ.(n.) ஒன்றும் இல்லாமற் செய்தல்; to create vacuum (சா.அக.).

த.வ. பாழ்படுத்தல்

[Skt. *śūnyatattva*> த. *சூனியத்துவம்*]

சூனியத்தொழில் *śūṉiya-t-toḻil,* பெ.(n.) சூழ்வினை; black art (சா.அக.).

த.வ. கருவினை

[Skt. *śūnya+* > த. *சூனியம்+தொழில்*]

சூனியப்படுதல் *śūṉiya-p-paḍutal,* தொ.பெ. (vbl.n.) பாழாதல்; get wasted (சா.அக.).

[Skt. *śūnya*> த. *சூனியம்+படுதல்*]

சூனியப்பார்வை *śūṉiya-p-pārvai,* பெ.(n.) கெட்ட பார்வை; evil eye (சா.அக.).

த.வ. கரும்பார்வை

[Skt. *śūnya* > த. *சூனியம்+பார்வை*]

சூனியம் *šūṉiyam,* பெ.(n.) 1. இன்மை; non-existence, vacuity, vacuum, non-entity, nothingness. *"யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலின்" (சி.போ.7).* 2. சுழியம்; cipher. 3. வறிதாயிருக்கை; bareness. *அவள் கழுத்துச் சூனியமாயிருக்கிறது.* 4. பயனற்றது; that which is useless, unproductive or unpropitious. 5. மாயை; that which is unreal, unsubstantial or illusory. 6. மந்திரத்தால் கொல்லும் கலை; witchcraft causing evil, sorcery, black art. *"சூனியங்கொள் செயலார்" (திருப்பு. 787).* 7. மந்திரக் கலைப் பொருள்; articles of witchcraft. 8. தூய்மைக்கேடு செய்கை; ceremonial defilement.

த.வ. பாழ்செய்வினை

[Skt. šūnya > த. சூனியம்]

சூனியம்போக்கி *šūṉiyam-pōkki,* பெ.(n.) மந்திரவினையைப் போக்கும் மருந்து; a cure for one affected by sorcery.

த.வ. செய்வினைப்போக்கி

[Skt. šūnya > த. சூனியம்+போக்கி]

பொறிசில் வேர், எழுமுள் வேர், சென்னகரி வேர், நறுமுன்னை வேங்காய்த் தொட்டி, நிலப்பனை வேர், குருக்கத்தி வேர், இவற்றைச் சந்தனம் போல் அரைத்து உள்ளுக்குக் குடித்து மேலுக்கும் பூசச் செய்வினை போகும் (சா.அக.).

சூனியமெடு-த்தல் *šūṉiyam-eḍu-,* 5 செ.குன்றாவி.(v.t.) ஒருவனுக்குப் பில்லியினால் இழைத்த தீங்கை மந்திர வலிமையால் நீக்கல்; removing the evil effects of sorcery through the power of magic (சா.அக.).

த.வ. செய்வினையெடுத்தல்

[Skt. šūnya > த. சூனியம்+எடுத்-தல்]

சூனியம்வை-த்தல் *šūṉiyam-vai-,* 4 செ. குன்றாவி.(v.t.) ஒருவனுக்குக் கொடிய சிறுதெய்வங்களினால் தீங்கிழைத்தல்; the practising of witch craft, a distructive magic, on a person through the influence of evil spirits the purpose is for causing death, bewitching by hiding something in the ground (சா.அக.).

த.வ. செய்வினைசெய்தல்

[Skt. šūṉya> த. சூனியம்+வை-த்தல்]

சூனியவாதம் *šūṉiya-vādam,* பெ.(n.) 1. கடவுள் இல்லை என்ற கோட்பாடு; doctrine of void. 2. செய்வினை வைக்கை; witchcraft.

[Skt. šūṉya+vāda > த. சூனியவாதம்.]

சூனியவாதி *šūṉiya-vādi,* பெ.(n.) 1. கடவுள் மறுப்புக் கொள்கை உடையவன்; atheist. 2. கருவித்தைக்காரன்; sorcerer.

[Skt. šūṉya+vādi(n) > த. சூனியவாதி]

சூனியவித்தை *šūṉiya-vittai,* பெ.(n.) செய்வினைக்கலை; witchcraft; art of killing through sorcery.

[Skt. šūṉya +vidyā > த. சூனியவித்தை]

சூனியன் *šūṉiyaṉ,* பெ.(n.) முடவன் (பிங்.); a cripple or lame person.

[Skt. šūṉa > த. சூனியன்]

சூனியார்க்கம் *šūṉiyārkkam,* பெ.(n.) அகவிலை ஏறுங்காலத்தைக் கணிக்கை (சங்.அக.); (Astrol.) predicting the period when the prices of commodities will rise.

[Skt. šūṉya > த. சூனியார்க்கம்]

சூனியான்மவாதி *šūṉiyāṉ-mavādi,* பெ.(n.) ஆதனில்லையென்று உரையாடுபவர்; one who says there is no soul (சா.அக.).

[Skt. šūnya+āṉma+vādin>த.சூனியான்ம வாதி]

சூனியோபாதானம் *šūṉiyōpādāṉam,* பெ. (n.) உலகம் உண்டாவதற்குக் காரணமான பாழ் வெளி; state of void, as the principle from which the visible universe came into existence.

த.வ. பாழ்நிலை

[Skt. šūnya+upādhāṉa > த. சூனியோ பாதானம்]

சூனு *šūṉu,* பெ.(n.) மகன்; son. *"இந்திர சூனுவு மெழுந்து" (பாரத.திரௌபதி.58).*

[Skt. šūnu > த. சூனு]

சூனை[1] *šūṉai,* பெ.(n.) 1. அடி வயிற்று வீக்கம்; swelling of the abdomen. 2. குற்றம்; blemish, fault. 3. சொத்தை; that which is decayed.

[Skt. šūnā > த. சூனை]

சூனை[2] *šūṉai,* பெ.(n.) ஆடு, மாடுகள் வதை செய்யப்படும் இடம்; slaughter-house. *"சொன்ன சூனைத் துறந்த வற்றட்டன" (நீலகேசி, 314).*

த.வ. ஆட்டுத்தொட்டி

[Skt. šūnā > த. சூனை]

செக்கு *cekku,* பெ.(n.) உண்டியல்; cheque, order on a bank or banker for money (கொ.வ.).

த.வ. காசோலை

[E. cheque > த. செக்கு]

செக்குக்கிழி–த்தல் *cekku-k-kiḻi-,* 4 செ.கு.வி. (v.t.) உண்டியல் எழுதுதல்; to issue cheque (தற்.).

த.வ. காசோலை வழங்கல்

[E. cheque > த. செக்குகிழித்தல்]

செக்குத்துணி *cekku-t-tuṉi,* பெ.(n.) சீட்டி வகை; a kind of cloth.

த.வ. உரப்புத்துணி

[E. check> த. செக்குத்துணி]

செக்குபந்தி *cekkupanti,* பெ.(n.) 1. ஒவ்வொரு வயலின் எல்லையையும் விளக்கமாகக் காட்டும் கல்; the four boundaries with their distinctive marks showing the limits of each field as entered in the survey accounts (R.F.). 2. அதிகார வெல்லை; jurisdiction.

த.வ. எல்லைக்கல்

[U. cakbandi > த. செக்குபந்தி]

செக்குவெட்டு–தல் *šekku-veṭṭu-,* பெ.(n.) **செக்குக்கிழி–த்தல்** பார்க்க; see *cekku-k-kiḻi.*

த.வ. காசோலை வழங்கல்

[E. cheque > த. செக்குவெட்டு+வெட்டுதல்]

செகச்சாலம் *šega-c-cālam,* பெ.(n.) மாயக் கலை; magic, illusion.

த.வ. கருமாயம், மாயக்கலை

[Skt. jagajjāla > த. செகச்சாலம்]

செகச்சோதி *šegaccōdi,* பெ.(n.) 1. பேரொளி; world-illuminating light. 2. உலகிற்கு ஒளியாயிருக்குங் கடவுள்; God, as the light of the universe (w.).

த.வ. பெரும்பேரொளி

[Skt. jagajjyōtis > த. செகச்சோதி]

செகசாலக்குளிகை *šegasāla-k-kuḷigai,* பெ.(n.) உலகத்தையே மயங்க வைக்கும் சித்தர்களிடம் இருக்கும் ஒருவகை மருந்துக் குளிகை; a magic pill supposed to be in possession of Siddhars bewildering the whole world (சா.அக.).

த.வ. ஆள்மயக்கி

[Skt.jegajala> த. செகசாலம்+குளிகை]

செகசாலம் *šegašālam,* பெ.(n.) 1. உலக மயக்கு; bewilderment, bewitchment. 2. மாயவித்தை; magic. 3. பொய்க்காட்சி; illusion (சா.அக.).

த.வ. மந்திரமயக்கு

[Skt. jagajjāla > த. செகசாலம்]

செகசாலமாடல் *šegašāla-māḍal,* பெ.(n.) உலகத்தை மயக்கல்; fascinating the world (சா.அக.).

த.வ. உலகப் புரட்டு

[Skt. jegajjala+ > த. செகசாலம்+ஆடல்]

செகசாலவுப்பு *šegašāla-v-uppu,* பெ.(n.) வழலையுப்பு; an universal salt used in alchemy (சா.அக.).

த.வ. உழைமண்ணுப்பு

[Skt. jagajjala > த. செகசாலம்+உப்பு]

செகசோதி *šega-šōdi,* பெ.(n.) **செகச்சோதி** பார்க்க; see *šega-c-cōdi* (சங்.அக.).

[Skt. jaga > த. செகசோதி]

செகத்குரு *šegat-guru,* பெ.(n.) 1. உலக குரு; universal guru. 2. சங்கராச்சாரியார் மடத்தலைவரின் பட்டப்பெயர்; title of the head of *šaṅgarāccāriyār* mutt. 3. கம்மாளர் பட்டப்பெயர்; title of *kammālar* caste.

[Skt. jagat > த. செகத்+குரு]

செகதங்கமாக்குச்சி *šegadaṅgamā-k-kucci,* பெ.(n.) கணுக்கால் எலும்பு; ankle bone upon which the tibia rests Talus (சா.அக.).

செகதம்பிகை *šegat-ambigai,* பெ.(n.) **செகன்மாதா** பார்க்க; see *šegaṉmādā.*

த.வ. உலகம்மை

[Skt. jagadāmbikā > த. செகதம்பிகை.]

செகதலம் *šegatalam,* பெ.(n.) உலகம்; the world.

த.வ. நிலவுலகம்

[Skt. jaga+tala > த. செகதலம்]

செகம் *segam,* பெ.(n.) 1. உலகம்; the world. *"செகத்தை யெல்லாம்" (தாயு.தந்தை தாய்.6).* 2. கருமநிலம்; meterial world (சா.அக.).

த.வ. ஞாலம்

[Skt. jagat > த. செகம்]

செகமயக்கம் *šega-mayakkam,* பெ.(n.) உலகப்பற்று; worldly temptations that which is presented to the mind as an inducement to evil (சா.அக.).

த.வ. உலகமயக்கம்

[Skt. jegam > த. செகம்+மயக்கம்]

செகமயக்கி *šega-mayakki,* பெ.(n.) உலகத்தை மயங்கச் செய்தல்; the act of tempting to solicitations of the passions thus obscuring the true intellect and darkening the faculty of true understanding.

[Skt. jegam > த. செகம்+மயக்கி]

செகமவுனி *šegamouṉi,* பெ.(n.) உலக நடவடிக்கைகளில் ஈடுபடாமல், அமைதி காப்பவன்; one who enter into silence by restraining from all worldly activities (சா.அக.).

த.வ. உம்மனாமூஞ்சி

[Skt. jegat+mowni> த. செகமவுனி]

செகமுருகுமேனி *šegamurugu-mēṉi,* பெ.(n.) குப்பைமேனி; rubbish plant (சா.அக.).

த.வ. பூனைவணங்கி

[Skt. jegam > த. செகம்]



செகரம் *šegaram,* பெ.(n.) வெள்ளி; silver,*Argentum.* (சா.அக.)

[Skt. jegara > த. செகரம்]

செகராசசேகரம் *šegarāša-šegaram,* பெ.(n.) ஒரு கணிய நூல்; a treatise on astrology.

[Skt. jagat+rāja-šegara> த. செகராசசேகரம்]

செகராசம் *šegarāšam,* பெ.(n.) தென்னை; cocoanut palm (சா.அக.).

த.வ. தெங்கு

[Skt. Jegam > த. செகராசம்]

செகரிகம் *šegarigam,* பெ.(n.) நாயுருவி; (மலை.) Indian burr; dog prick.

[Skt. šaikharika > த. செகரிகம்]



செகவீரம் *šegavēram,* பெ.(n.) கொச்சி வீரம்; native corossive sublimate formerly prepared in Cochin (சா.அக.).

[Skt. jegam > த. செகவீரம்]

செகற்குரு *šegar-guru,* பெ.(n.) **செகத்குரு** பார்க்க; see *šega-t-guru. "செகற்குருவாங் கொல்லன் கவியை" (தனிப்பா.i, 170. 22).*

த.வ. உலககுரு

[Skt. jegam > த. செகம்+குரு]

செகன்மாதா *šegan-mātā,* பெ.(n.) மலைமகள்; *Pārvati,* as mother of the world.

த.வ. உலகம்மை

[Skt. jagatmātā > த. செகன்மாதா]

செகன்மோகினி *šegan-mōgini,* பெ.(n.) உலகனைத்தும் மயக்கும் பேரழகி; beautiful woman, as fascinating all the world.

[Skt.jagat+mōhini > த. செகன்மோகினி]

செகனம் *šeganam,* பெ.(n.) 1. தொடையின் உட்பக்கம்; interior of thigh. 2. இடுப்பு; loin (சா.அக.).

செகனவாதம் *šegana-vādam,* பெ.(n.) ஊழற்சதை மிகுதியால் உண்டாகும் நோய் வகை; a disease due to flatulence.

த.வ. ஊழலூதை

[Skt. jaghana+vāta > த. செகனவாதம்]

செகிப்புடலம் *šegi-p-pudalam,* பெ.(n.) மரமஞ்சள்; tree turmeric (சா.அக.).

செகு *šegu,* பெ.(n.) தொடர்ந்திராமல் துண்டுதுண்டாக இருக்கும் சிற்றூர் நிலம் அல்லது இறையூட்டு நிலம்; detached fields of a village; a patch of rent-free land or any separate farm (R.T.).

[U. cak > த. செகு.]

செடம் *šedam,* பெ.(n.) பிறக்கும்போது ஆன்மாவின் நல்லறிவைக் கெடுக்கும் ஆவி; evil humour of the body destroying the innate intelligence of he soul at birth. *"செடநீறெழ வெரிக்குங் கிருபாகர" (நூற்றெட்டுத். திருப்புகழ்.15).*

[Skt. šatha > த. செடம்]

செண்டா *šendā,* பெ.(n.) கொடி; flag.

[U. jhanda > த. செண்டா]

செணம் *šenam,* பெ.(n.) கணநேரம்; moment (யாழ்.அக.).

த.வ. கண்இமைப்போது; கைநொடிப்போது.

[Skt. ksana > த. செணம்]

செத்துவம் *šettuvam,* பெ.(n.) பைசாசம்; evil spirit. *"செத்துவங்க டாக்கி" (நீலகேசி, 112).*

[Skt. satva > த. செத்துவம்]

செந்து[1] *šendu,* பெ.(n.) 1. உயிர் விலங்கு; anything possessed of life, living being, creature (பிங்.). 2. தாழ்ந்த வகையைச் சார்ந்த ஊர்வன முதலிய உயிரிகள்; animal of the inferior, species, as the lower brutes, insects, reptiles, worms. 3. நரி; jackal (பிங்.).

த.வ. உயிரி

[Skt. jantu > த. செந்து]

செந்து[2] *šendu* 1. அணு; atom (பிங்.). 2. ஏழு நிரய (நரக)த்தொன்று; a hell, one of *eḻu-naragam*, q.v. (பிங்.).

செந்துத்தானம் *šendu-t-tāṉam*, பெ.(n.) செந்துக்கள் மொய்த்துத் துன்பம் தரும் நிரய வகை; a hell of torture by means of worms and insects.

[Skt. jantu-sthāna > த. செந்துத்தானம்]

செந்துரசம் *šendu-rašam*, பெ.(n.) ஒட்டக் கூடிய ஒரு வகைப் பொருள்; copal, a resinous substance.

[Skt. janturasa > த. செந்துரசம்]

செப்பட்டை *šeppaṭṭai*, பெ.(n.) 1. பறவைச் சிறகு; wing (யாழ்.அக.). 2. தோள் பட்டை; shoulder blade. 3. கன்னம்; cheek. 4. தூண்டியில் வைக்கும் சதுரக்கல்; plinth.

த.வ. சேர்பட்டை

[Skt. carpaṭa > த. செப்பட்டை]

செபக்குடம் *šeba-k-kḍam*, பெ.(n.) மந்திரித்த நீர்க்குடம்; water-pot sanctified with mantras.

[செபம்+குடம்]

[Skt. japa+ > த. செபம்]

செபம் *šebam*, பெ.(n.) 1. மந்திரிக்கக்கூடிய இடம்; silent recitation of mantras. *"செபந்தவந்தானம்" (சேதுபு.சேதுபல.2).* 2. மன்றாட்டு; prayer. 3. தந்திரம்; stratagem, device, trick. *"நின்செபந்தாள் சிறிது நடவாது" (அருட்பா, vi, திருமு. தான்பெற்ற.8).*

த.வ. உருவேற்றுதல்

[Skt. japa > த. செபம்]

செபி-த்தல் *šebi-*, 11 செ.கு.வி.(v.i.) 1. மந்திரம் உருப்போடுதல்; to recite mantras in magical or religious ceremonies. *"ஒருமனுச் செபித்தான்" (உபதேச. உருத்திராக்க.7).* 2. வேண்டுதல்; to pray.

த.வ. உருப்போடுதல்

[Skt. jap > த. செபி-த்தல்]

செமி[1]**-த்தல்** *šemi-*, 11 செ.கு.வி.(v.t.) செரித்தல்; to digest. *"நஞ்சையுண்டு செமிப்பீரையா" (திருக்குற். ஊடற். 19:செந் XXV.392).*

த.வ. செரித்தல்

[Skt. šām > த. செமி]

செமி[2]**-த்தல்** *šemi*, 11 செ.கு.வி.(vi.) பிறத்தல்; to be born. *"செமித்த தெத்தனை" (திருப்பு.242).*

[Skt. jan > த. செமி-த்தல்]

செமி[3]**-த்தல்** *šemi*, 11 செ.கு.வி.(v.t.) மன்னித்தல்; to pardon, excuse. *"தீதேதுஞ் செமியாதீர்" (திருக்குற். ஊடற். 19:செந். XXV.392).*

[Skt. kṣam > த. செமி-த்தல்]

செயகானப்பூடு *šeyakāṉa-p-pūḍu*, பெ.(n.) மருளூமத்தை; confusion creeper, head ache plant (சா.அக.).

த.வ. மருள்

செயசுண்ணம் *šeyasuṇṇam*, பெ.(n.) 1. தாளித்த சுண்ணாம்பு; slaked lime. 2. புடமிட்டெடுத்த சுண்ணம்; a calcium compound derived from calcination (சா.அக.).

த.வ. நீர்த்த சுண்ணாம்பு

செயசூதசெந்தூரம் *šeyašūdasendūram*, பெ.(n.) இந்திர சித்து, சிசுபாலன் இவர்கள் தருக்கக் கலைக்காக இதளியத்தைக் கட்டிச் செய்த சிந்தூரம்; calcined red oxide prepared from consolidated mercury. It was prepared by Indirajithu and Sisu balan and others (சா.அக.).

செயசூததாம்பிரம் *šeyasūtatāmbiram*, பெ.(n.) செம்பைப் பொன்னாக்கும் மருந்து; that which converts copper into gold (சா.அக.).

த.வ. பொன்னாக்கி

செயசூதம் *śeyasūdam,* பெ.(n.) 1. யூகி முனி கூறிய புடமிடுதல் முறையால் செம்பினின்று எடுக்கப்பட்ட களிம்பற்ற செம்பு; alchemical copper (pure) obtained by removing the verdigris from ordinary copper, according to the process laid down in yogic muni works on Alchemy. 2. மூலிகை அல்லது தாதுப்பொருட்களினின்று எடுக்கும் செம்பு; copper extracted from herbs and animal matter or transmited or extracted from other mineral drugs as contemplated in Siddharswork. 3. செம்பு மூலிகை; copper plant. 4. செம்பு; copper (சா.அக.).

த.வ. மூலிகைச்செம்பு

செயசோதி *śeyasōdi,* பெ.(n.) அணியம் செய்த ஒரு உப்பு; a kind of prepared salt (சா.அக.).

த.வ. செய்யுப்பு

செயடால் *śeyaḍal,* பெ.(n.) 1. அடாவடி; foppery. 2. **சவடால்** பார்க்க; see *śavaḍāl.*

த.வ. தடாலடி

[U. chauṭāl > த. செயடால்]

செயதீபகாரி *śeyadībakāri,* பெ.(n.) பெருந் தும்பை; large leucas (சா.அக.).

த.வ. ஆனைத்தும்பை

செயதே *śeyadē,* பெ.(n.) உப்பு; salt (சா.அக.).

செயதேகி *śeyatēgi,* பெ.(n.) கல்லுப்பு; sea salt (சா.அக.).

செயந்தி *śeyandi,* பெ.(n.) தெய்வங்கள் மற்றும் பெரிய மாந்தர்களின் பிறந்தநாள்; birthday of gods and great personages.

[Skt. jayanti > த. செயந்தி]

செயந்தியாசம் *śeyandiyāsam,* பெ.(n.) எங்கும் காணக்கூடியதும், மஞ்சள் நிறப் பூக்களும், நீளமான காய்களும் உடைய மரம்; bastard sensitive plant-*Sesbania aegyptia alias coronilla sesban.* A common tree which has longer leaves, which yello flowers.

இதன் விதைகளை எண்ணெயில் காய்ச்சித் தடவ குருக்கள் குணமாகும். வதக்கிக் கட்ட வீக்கம் போகும் (சா.அக.).

செயநாதம் *śeyanādam,* பெ.(n.) துத்தம்; white vitriol zinc sulphate (சா.அக.).

த.வ. வெள்ளைத் துத்தம்

செயநீர்¹ *śeyanīr,* பெ.(n.) 1. ஒரு வகை நீர்மம்; any liquid prepared for drink. 2. சாராயம்; arrack. 3. அமுரி; urine. 4. முலைப்பால்; woman's breast milk. 5. குடிநீர்; any cool drink. 6. ஒரு வகை நெருப்புக் குழம்பு; இது கனிமங்களைக் கரைக்கும்; a pungent liquid used in Alchemy corrosive sublimate and salammoniac. 7. கருப்பையில் உண்டாகும் நீர்; a liquid formed in the womb on account that take place in the womb.

செயநீர் வகைகள் : 1. வெடியுப்புச் செயநீர்; 2. காரச்செயநீர்; 3. காடிச் செயநீர்; 4. தாம்பூரச் செயநீர்; 5. துரிசுச் செயநீர்; 6. பூரச் செயநீர்; 7. உப்புச் செயநீர்; 8. சாரக்கட்டுச் செயநீர்; 9. அறுவகைச்செயநீர்; 10. நாகச் செயநீர்; 11.அண்டச்செயநீர்,12. வீரச்செயநீர், 13. காரச் செயநீர், 14. சிப்பிச் செயநீர், 15. கௌரிச் செயநீர், 16. செங்குமரிச்செயநீர், 17. அமுரிச் செயநீர் (சா.அக.).

செயநீர்² *śeyanīr,* பெ.(n.) 1. சுண்ணாம்பும், எரியுப்பும் சேர்த்துப் பொடித்துப் பனியில் வைத்திறக்கிய காரநீர்; a pungent liquid prepared by exposing to nights dew a mixture of powdered lime and salammoniac. 2. பூநீறு, வீரம், சாரம் இவற்றைச் சரிபாதியாக எடுத்துப் பீங்கானிலிட்டு, இராப்பனியில் வைத்து இறக்கிய கார மருந்து நீர்; a medicinal preparation of pungent liquid obtained by exposing to nights dew a porcelain dish containing a mixture of saline efflorescence (purified fullers earth).

செயநீர்இறக்கல் *šeyanīr-irakkal,* பெ.(n.) புடமிடுதல் முறையில் அணியம் செய்த மருந்தைச் செயநீர் எடுக்க வேண்டின், அதை ஒரு பீங்கானில் இட்டு பூரணை தொடங்கி, சுறவம் (தை) கும்பப் (மாசி) திங்கள்களில் இராப்பனியில், அன்றாடம் வைத்திருந்து இத்தனை நாள் என்னும் முறைப்படி விடிவதற்குள் வெயில் படாமல் எடுத்துவிட வேண்டிய முறை; this is the general method of preparaing a pungent liqud invariably every preparation contains salammoniac (சா.அக.).

செயநீர்க்கருத்தன் *šeyanīr-k-karuttan,* பெ.(n.) எரியுப்பு; salammoniac, It is so called because it forms an important ingredient in the formation of most of the pungent liquids (சா.அக.).

செயநீர்காலம் *šeyanīr-kālam,* பெ.(n.) செயநீர் இறக்குங் காலம்; season for preparing the pungent liquid or the philosophers acid-January and February dew seasons (சா.அக.).

செயநீர்குத்தல் *šeyanīrkuttal,* பெ.(n.) செயநீர் ஊற்றி அரைத்தல்; grinding medicine with the prescribed pungent liquid (சா.அக.).

செயநீர்காரணசித்தன் *šeyanīrkāraṇa cittaṉ,* பெ.(n.) செயநீர் உண்டாவதற்கு மூலமான எரியுப்பு; salammoniac is so called from its being an important of pungent liquid (சா.அக.).

செயநீர்சித்திரம் *šeyanīr-cittiram,* பெ.(n.) ஒருவகை உப்பு; salammoniac (சா.அக.).

செயநீர்போக்கு *šeyanīr-p-pōkku,* பெ.(n.) இன்ன மருந்து செய்வதற்கு இன்னவிதமான காரநீர் அணியம் செய்ய வேண்டுமென்ற முறை; the process of preparing a particular pungent fluid for a particular medicine.

செயநீராட்டல் *šeyanīrāṭṭal,* பெ.(n.) மருந்துடன் செயநீர் கூட்டி அரைத்தல்; grinding the medicine with the liquid prepared by keeping some chemicals in the open air at night (சா.அக.).

செயப்பூர்ப்பச்சை *šeyappūr-p-paccai,* பெ. (n.) உயர்ந்த பச்சை மணி; true emerald, as brought from Jeypore, opp. to *vaḷaiyar-paccai.*

த.வ. பச்சை

[செயப்பூர்+பச்சை]

[Skt. jaya-pura > த. செயப்பூர்ப்பச்சை]

செயபச்சை *šeya-paccai,* பெ.(n.) மரமஞ்சள்; tree turmeric (சா.அக.).

செயபரம் *šeyaparam,* பெ.(n.) **செயபச்சை** பார்க்க; see *šeyapaccai.*

செயபாகசாத்திரம் *šēyabāgašāttiram,* பெ.(n.) மருந்துகளைச் செய்யும் முறைகளைக் கூறும் வடமொழி மருந்து இலக்கண நூல்; an authoritative treatise in Sanskrit on drugs and their preparation - *Pharmacopia* (சா.அக.).

செயபீதம் *šeya-pidam,* பெ.(n.) கௌரி நஞ்சு; a prepared yellow arsenic (மூ.அ.).

செயபூநிம்பம் *šeyapūnimbam,* பெ.(n.) நிலவேம்பு; ground neem (சா.அக.).

செயம் *šeyam,* பெ.(n.) 1. வெற்றி; victory, success. *"செப்பியமர்க் களம்புகுந்தாற் செயம் பெறுவர்" (சிவரக.கணபதியு.7).* 2. செயதிவசம் (பாக்கு); arecanut (விதான. குணாகுண.79).

[Skt. jaya > த. செயம்]

செயமங்களம் *šeya-maṅgaḷam,* பெ.(n.) நற்சுழியுள்ள குதிரைச் சாதி (அசுவசா.12); a breed of horse with auspicious marks.

[Skt. jaya > த. செயம்+மங்களம்]

செயமதம் *šeyamadam,* பெ.(n.) தயிர்; curd (சா.அக.).

செயமாக்கி *šeyamākki,* பெ.(n.) சேங்கொட்டை; marking or dhoby's nut (சா.அக.).

செயமாகம் *šeyamāgam,* பெ.(n.) தினை; millet.

செயரசகற்பூரக்குளிகை *šeyarašakarpūra-k-kuligai,* பெ.(n.) கல்லுளிச் சித்தன் முறைப்படி செரியாமைக்கும், கழிச்சலுக்கும் பயன்படும் மருந்துக்கட்டி; a pill prepared according to the method of Kalluli Siddhar and prescribed for indigestion and chronic diarrhoea.

செயரசப்பிரளயம் *šeyarasa-p-piralayam,* பெ.(n.) அகத்தியர் மருத்துவக் காவியத்திற் சொல்லி உள்ள ஒருவகைப் புடமிட்ட இதளியச் செந்தூரம்; a kind of calcined oxide of mercury described in Agastiar's treatise on medicine.

த.வ. இதளியச்செந்தூளம்

செயரசம் *šeyarašam,* பெ.(n.) 1. இலிங்கம், வீரம், பூரம் முதலிய சரக்குகளினின்று வாலையில் இறக்கித் தூய்மைப்படுத்தப்பட்ட இதளியம்; refined mercury extracted from its compound such as vermilin, corossive, sublimate etc. 2. வாலை இதளியம்; sublimate of mercury. 3. நெருப்பிற்கு ஓடாதபடி கட்டிய இதளியம்; consolidated mercury which will not disappear on heating. 4. கொங்கணவாத காவியத்திற் சொல்லியுள்ள சித்த இதளியம், சிராவண இதளியம், முதலிய இதளிய மருந்துகள்; mercurial preparation such as these mentioned above contemplated in Konganavar work in alchemy. 5. ஒரு வகை இதளியச் செந்தூரம்; an oxide of mercury.

செயலவணம் *šeyalavanam,* பெ.(n.) 1. கடல் நீரைக் காய்ச்சிய உப்பு; salt prepared from sea water. 2. ஆறாங் காய்ச்சலுப்பு; nite boiled and filtered six times 3. பிண்ட உப்பு; salt prepared from foetus. 4. தூய்மை செய்த உப்பு; refined salt. 5. கட்டுப்பு; consolidated salt (சா.அக.).

த.வ. நல்லுப்பு

செயவிருட்சம் *šeyavirutcam,* பெ.(n.) இதளை; an unidentified plant (சா.அக.).

செயி-த்தல் *šeyi-,* 4 செ.கு.வி. (v.t.) 1. வெல்லுதல்; to overcome, conquer, vanquish. 2. செயல் வெற்றி; to succeed, as in business.

[Skt. jay > த. செயி-]

செயினட்டிகை *šeyinattigai,* பெ.(n.) கடிகாரச் சங்கிலி போலச் செய்த அட்டிகை வகை (தற்.); a necklet in the pattern of a watch chain to which a pendant is attached.

[E. chain> த. செயின்+அட்டிகை]



செயை *šeyai,* பெ.(n.) மும்மி (திரிதியை), எண்மி (அட்டமி), பதின்மும்மி (திரயோதசி) என்ற பிறைநாள்கள் (திதிகள்); the 3rd, 8th and 13th lunar days (விதான.பஞ்சாங்.2).

[Skt. jayā > த. செயை]

செல்லாய் *šellāy,* பெ.(n.) சல்லா (பார்க்க); a kind of muslin (இ.வ.).

[U. Sellā > த. செல்லாய்]

செல்லியம் *šelliyam,* பெ.(n.) கோழி; fowl.

செலசரம் *šela-šaram,* பெ.(n.) நீர் வாழ்வன;

aquatic animals. "இளையீந்தாள் செலசர மாகிய பலவும்" (கம்பரா.சடாயுகாண்.28).

[Skt. *jala* > த. *செலசரம்*]

செலதம் *šeladam,* பெ.(n.) கோரைக்கிழங்கு (மலை.); fragrant tuber of cyperus rotundus.

[Skt. *jalada* > த. *செலதம்*]

செலப்பிரீதி *šela-p-piriti,* பெ.(n.) கருப்பூர சிலாசத்து; foliated crystallised gypsum, used in medicine as a caustic (சங்.அக.).

[Skt. *jala* > த. *செலப்பிரீதி*]

செலம் *šelam,* பெ.(n.) 1. நீர்; water. "செலசரமாகிய பலவும்" (கம்பரா. சடாயுகாண். 28). 2. இலாமிச்சை; cuscuss grass (சங்.அக.).

த.வ. 1. தண்ணீர், 2. நறுமணப்புல்

[Skt. *jala* > த. *செலம்*]

செலாமணி *šelāmaṇi,* பெ.(n.) 1. செல்லக் கூடியது; that which can be passed, as coin that which is a legal tender. 2. செல்வாக்கு; influence. "இப்போது அவருக்கு அவ்வளவு செலாமணியில்லை" (இ.வ.).

[U. *calāoni* > த. *செலாமணி*]

செலான் *šelāṉ,* பெ.(n.) செலுத்துச் சீட்டு (சலான்); certificate of despatch, etc. (R.F.).

[H. *calāṉ* > த. *செலான்*]

செவம் *ševam,* பெ.(n.) மன்றாட்டு; prayer, meditation. "சந்தி செவத்தொழிலோமந் தேவதர்ப்பணம்" (பிரபோத.39, 14).

[Skt. *japa* > த. *செவம்*]

செவுங்களூர்ப்பூடு *ševuṅgaḷūr-p-pūḍu,* பெ.(n.) ஒரு வகை மருந்து; a kind of plant (சா.அக.).

செழுகம் *šeḷugam,* பெ.(n.) அட்டை; leech. "செழுகம்போலச் சுருக்கியும் விரிந்தும்" (சி.போ.பா.4, 2, பக்.264).

[Skt. *jalukā* > த. *செழுகம்*]



சென்மசாபலியம் *šeṉmašābaliyam,* பெ.(n.) பிறவிப் பயனை அடைதல்; realisation of one object in life.

த.வ. பிறவிப்பேறு

சென்மபத்திரிக்கை *šeṉmapattirigai,* பெ.(n.) பிறப்புக் குறிப்பு அடங்கிய பிறப்பியம் (சாதகம்); horoscope indicating the events in ones life (சா.அக.).

சென்மபீசம் *šeṉma-pišam,* பெ.(n.) ஆணவ மலம்; pride arrogant conduct (சா.அக.).

சென்மம் *šeṉmam,* பெ.(n.) 1. பிறப்பு; birth. "சென்மந் தரங்கம்" (அஷ்டப். திருவரங்கத்தந்.46) 2. முழுவுரிமை; absolute dominant right *Nāṉ.* இந்த நிலம் சென்மமா ஒத்தியா?.

த.வ. பிறவி

[Skt. *janman* > த. *சென்மம்*]

சென்மமம் *šeṉmamam,* பெ.(n.) பிறப்பு; birth (சா.அக.).

சென்மமலடி *šeṉma-maladi,* பெ.(n.) பிறவி மலடி; barren women by birth (சா.அக.).

சென்மமார்க்காகி *šeṉma-mārkkāki,* பெ.(n.) நஞ்சைக் கட்டுகிற மூலிகைச் செடி; a

rare plant supposed to have the virtue of consolidating arsenic.

சென்மாந்திரம் *šeṉmāndiram,* பெ.(n.) முற்பிறப்பு, வருபிறப்பு, இரண்டுங் கூடியது; birth referring to the past and future births (சா.அக.).

த.வ. பிறவித்தொடர்ச்சி

சென்மாந்திரவாசனை *šeṉmāndira-vāšaṉai,* பெ.(n.) கருமபலனால் ஏற்பட்ட வினைகள்; deeds attributed to one's previous birth (சா.அக.).

த.வ. முற்பிறப்புநினைவு

சென்னியம் *šeṉṉiyam,* பெ.(n.) உண்டு பண்ணப்பட்டது; thing produced. *"பிராந்தி சென்னியமாகும்" (வேதா.சூ. 110).*

த.வ. செய்யப்பட்டது

[Skt. janya > த. சென்னியம்]

சென்னீர்த்துடக்கம் *šeṉṉīr-t-tuḍakkam,* பெ.(n.) மாதவிடாய்க் குருதி; menstrual blood (சா.அக.).

சென்னை *šeṉṉai,* பெ.(n.) கோயிலில் உலாத் திருமேனி புறப்பாடறிவிக்கும் மேளம்; a drum announcing the procession of an idon.

த.வ. செண்லட

[Skt. samjñā > த. சென்னை]

செனகசெனனியர் *šeṉaga-šeṉaṉiyar,* பெ.(n.) தாய், தந்தையர்; parents. *"மறலியு முளைவுறச் சிவனை வழிபடு மகவை யருளிய செனக செனனியர்" (பாரத.வேத்திர.47).*

[Skt.janaka+janani>த.செனகசெனனியர்]

செனகநங்கை *šeṉaga-naṅgai,* பெ.(n.) செடிவகை; seneca milkwort, polygala senega.

[செனகல்+நங்கை]

[E. Senegal > த. செனகல்]

செனகன் *šeṉagaṉ,* பெ.(n.) தந்தை; father (பாரத.வேத்திர.47).

[Skt. janaka > த. செனகன்]

செனனம் *šeṉaṉam,* பெ.(n.) பிறப்பு; birth (சூடா.). *"அன்பர்தஞ் செனனவித்தைப் பொடிப்படுத்தே" (சிவரக.காயத்திரி.13).*

[Skt. janana > த. செனனம்]

செனனி *šeṉaṉi,* பெ.(n.) 1. தாய்; mother (பாரத. வேத்திர.47.). 2. உயிர்களின் பிறப்புக்குக் காரணமான சிவசத்தி; (šaiva) creative energy of *Šivaṉ* (சி.சி.1, 60, ஞானப்.).

த.வ. ஈன்றோள்

[Skt. jananī > த. செனனி]

செனி-த்தல் *šeṉi-,* 11 செ.கு.வி.(v.i.) பிறத்தல்; to be born. *"திங்கணுதல் வேர்விற் செனித்தோனும்" (ஏகாம்.உலா.84).*

[Skt. jan > த. செனி-]

செனு *šeṉu,* பெ.(n.) தோன்றிடம் (உற்பத்தியிடம்); birth place. *"தனுவேதத்தின் கேள்விக்குஞ் சதுர்வேதத்தின் வேள்விக்குஞ் செனுவே" (பாரத.பதினோ.37).*

[Skt. janus > த. செனு]

சேகண்டி *šēgaṇḍi,* பெ.(n.) கோல் கொண்டடிக்கும் வட்ட மணி வகை (சூடா.); gong.

[Skt. jaya-ghaṇṭā > த. சேகண்டி]



சேகரம்[1] *šēgaram,* பெ.(n.) 1. வருவாய் ஈட்டுகை; acquisition, savings. 2. அணியம் செய்தல்; provision, preparation, readiness. 3. கூட்டம்; collection, gathering. 4. கொடிவழி (வமிசம்); family, tribe.

"*நீ எந்தச் சேகரத்தான்?*". 5. மாவட்டம்; district. "*இராமநாதபுரஞ் சேகரம்*".

[Skt. perh.svikr. > த. சேகரம்]

சேகரம்² *šēgaram,* பெ.(n.) 1. மணிமுடி; crown, crest (பிங்.). 2. தலை; head (சூடா.). "*செக்கர்வான் றிங்களணி சேகரத்தான்*" *(திருவானைக்.உலா, 82).* 3. தலையிலணிவது; that which is worn on the head, as garland of flowers. 4. அழகு; beauty (சூடா.).

[Skt. šēkhara > த. சேகரம்]

சேகரன் *šēgaran,* பெ.(n.) சிறந்தோன்; eminent person. "*மூதறிஞர் சேகரன்*" *(பிரபோத.கடவுள்.4).*

[Skt. šēkhara > த. சேகரன்.]

சேகரி¹-த்தல் *šēgari-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. வருவாய் ஈட்டுகை; to acquire, get, secure, procure. "*பதார்த்தமெல்லாம்... சேகரித்துப் பூசித்தேத்தி*" *(சிவரக. சிவதன்மா.34).* 2. அணியஞ்செய்தல்; to prepare, make ready. 3. ஒன்று சேர்த்தல்; to collect, gather, assemble.

[Skt. svikr> த. சேகரி-]

சேகரி²-த்தல் *šēgari-,*11 செ.குன்றாவி. (v.t.) சிறந்திருத்தல்; to excel. "*அவர்களுக்குச் சிகாமணிபோலே சேகரிக்குமவராய்*" *(திவ். பெருமாள். தனியன், வியா, பக்.6).*

[Skt. šēkhara > த. சேகரி-]

சேகன் *šēgan,* பெ.(n.) படையாள் (சேவகன்); soldier. "*சேகா... குதிரையோ வீறியது*" *(கலித்.96).*

ம. சேகன்

த.வ. போர்வீரன், மறவன்

[Skt. šēvaka > த. சேகன்]

சேசகிரி *šēša-giri,* பெ.(n.) ஆதிசேடனது உருவமாகக் கருதப்படும் திருப்பதி மலை; Tirupathi hills, considered as *ādi-šēṣa.*

த.வ. ஏழுமலை, திருமலை

[Skt. sēsa > த. சேசகிரி.]

சேசச்சினையெண் *šēsa-c-cinaiyen,* பெ. (n.) வகுத்தலிற் சரியாயடங்காத எண்; aliquant (தற்.).

[Skt. sēsa > த. சேசச்சினையெண்]

சேசசயனம் *šēṣa-šayanam,* பெ.(n.) திருமாலுக்குரிய ஆதிசேடனாகிய படுக்கை; Vishnu's bed formed by *Adi-šēṣa.*

த.வ. அரவணை, பாம்புப்படுக்கை

[Skt. cēsa+cayanam.> த. சேசசயனம்]



சேசசாயி *šēša-sāyi,* பெ.(n.) திருமால்; Viṣnu's as reclining on *Ādi-šēṣa.* *ஆதிசேடன் மீது பள்ளி கொண்டோன்.*

த.வ. அரவணையான்

[Skt. šēsa+šāyin > த. சேசசாயி]

சேசத்தியாச்சியம் *šēša-t-tiyācciyam,* பெ. (n.) முன்னாளிலிருந்து தொடர்ந்த மிச்சமாய் நற்செயல்களுக்குத் தகாத காலம்; (Astrol.) the unexpired period of *tiyācciyam* that runs over from the end of one day to the next, believed to be inauspicious.

[Skt. šēṣa+tiyacciyam]

சேசநம் *šēsanam,* பெ.(n.) பெண் ஆமை; female tortoise(சா.அக.).

சேசபூதன் *šēša-būdaṉ,* பெ.(n.) அடியவன் (ஈடு.); god's slave, devotee *sēsa-būtaṉ.*

த.வ. அடிப்பொடி

[Skt. šēṣa > த.சேசம்]

சேசம் *šēšam,* பெ.(n.) மீதம் (சேடம்); remainder.

த.வ. மீதி

[Skt. šēṣa > த.சேசம்]

சேசவோமம் *šēša-vōmam,* பெ.(n.) திருமணம் நடக்கும் நாள்களில் இறுதிநாளில் நடைபெறும் ஓமச்சடங்கு; sacrificial offering at the close of a wedding ceremony (Brāh.).

[Skt. šēṣa>த. சேசவோமம்]

சேசன் *šēšaṉ,* பெ.(n.) 1. ஆதி வடிவானவன்; *ādi-sēṣa* the thousand - headed serpent. 2. அடியவன்; devotee, slave.

த.வ. அடிப்பொடி

[Skt. šēṣa > த. சேசன்]

சேசனக்கிரியை *šēšaṉa-k-kiriyai,* பெ.(n.) புண்களை, மருந்துநீர் அல்லது நெய்மத்தினால் நனைத்தல் அல்லது கழுவுதல்; cleaning the ulcers of wounds with lotions or oils (சா.அக.).

சேசனம்[1] *šēšaṉam,* பெ.(n.) 1. நனைத்தல்; soaking in water. 2. ஈரமாக்கல்; marking wet.

சேசனம்[2] *šēšaṉam,* பெ.(n.) பெண் ஆமை; female tortoise (சா.அக.).

சேசனியம் *šēšaṉiyam,* பெ.(n.) தெள்ளுக் கொடி; negrobean creeper, negrobean cowith (சா.அக.).

சேசாசலம் *šēšasalam,* பெ.(n.) **சேசகிரி** பார்க்க; see *sēsagiri.*

த.வ. ஏழுமலை, திருமலை

[Skt. šēṣacala > த.சேசாசலம்]

சேசாத்திரி *šēšāttiri,* பெ.(n.) **சேசகிரி** பார்க்க; see *sēsagiri.*

[Skt. šēṣādri > த.சேசாத்திரி]

சேசானுமானம் *šēšāṉumāṉam,* பெ.(n.) எச்சஊகம்; inference of a past cause from a present effect see (மணிமே.27, 33, அரும்.).

[Skt. šēṣā+anumāna>த.சேசானுமானம்]

சேசி[1]**-த்தல்** *šēṣi,* 11 செ.கு.வி.(v.i.) **சேடி** பார்க்க; see *cēḍi.*

[Skt. šēṣi > த. சேடி]

சேசி[2] *šēṣi,* பெ.(n.) 1. ஆண்டவனான கடவுள்; god as the lord of mankind. *"நியா மகனாய்ச் சேசியாய் நின்று நடத்திக் கொண்டு"* (ஈடு.1, 1, 7). 2. ஆற்றல்; ability, capacity. *"அதைச் செய்ய எனக்குச் சேஷியில்லை".*

த.வ. வினைத்திறம்

[Skt. šēṣin > த. சேசி]

சேசி[3] *šēši,* பெ.(n.) 1. காட்டுக் கஞ்சாங்கோரை; sage teaplant, Salvia officinalis. 2. சீமைக் கஞ்சாங்கோரை; garden sage. 3. சீமைக் கற்பூர இலை; Indian sage leaf plant, *Salvia bengalensis* (சா.அக.).

சேசுநாதர் *šēšunādar,* பெ.(n.) இயேசுநாதர் (பார்க்க); Jesus.

[Fr. jesus > த. சேசுநாதர்]

சேசுரவாதி *šēšuravādi,* பெ.(n.) கடவு ளுண்மையை ஒப்புக் கொள்வோன்; theist (விவேக.சிந்.பக்.20).

[Skt. šēšvara > த. சேசுரவாதி]

சேசுவரசாங்கியன் *šēšuvarašāṅgiyaṉ,* பெ.(n.) கடவுள் உண்மையை ஒப்புக் கொள்ளும் சாங்கிய மதவாதி; (phil.) follower of theistic *šāṅkhya* system (சி.சி.2, 57, சிவாக்.).

[Skt. šēšvara + šaṉkiya > த. சேசுவரசாங்கியன்]

சேட்டம்¹ *šēṭṭam,* பெ.(n.) 1. மேன்மை; eminence, greatness, excellence. *"சேட்ட மல்கிய பாதுகை" (விநாயகபு.80, 278).* 2. வலிமை; strength, power, capacity. *'எழுந்திருக்கச் சேட்டமில்லை'.* 3. செழிப்பு; luxuriance, fertility. *'சேட்டமாய் உண்டாக'.* 4. அழகு; bloom as of countenance.

[Skt. šrēṣta > த. சேட்டம்]

சேட்டம்² *šēṭṭam,* பெ.(n.) 1. விடை (வைகாசி) மாதக் காருவா (அமாவாசை) கழிந்த ஓரி (பிரதமை) முதல் ஆடவை (ஆனி) மாதக் காருவா முடியவுள்ள நிலாவளவு (சந்திரமான) மாதம்; the third lunar month from the day following the new moon in the month of *viḍai* (*vaikāsi*) to the end of the new moon day in the month of *āḍavai* (*āṉi*.)

சேட்டன் *šēṭṭaṉ,* பெ.(n.) 1. பெரியோன்; person of eminence or superior rank, great man. *"சேட்டரா முனிவோர்களும்" (விநாயகபு.75, 79).* 2. உருத்திரருள் ஒருவர்; a Rudra (சி.போ.பா.2, 3, பக்.212).

[Skt. šrēṣtha > த. சேட்டன்]

சேட்டனம் *šēṭṭaṉam,* பெ.(n.) முயற்சி; exertion, effort (யாழ்.அக.).

[Skt. cēṣṭana > த. சேட்டனம்]

சேட்டாதேவி *šēṭṭā-dēvi,* பெ.(n.) மூதேவி, இலக்குமிக்கு மூத்தவள்; goddess of misfortune, as the elder sister of Lakṣmi.

த.வ. தவ்வை, முகடி

[Skt. jyēsthā> த. சேட்டாதேவி]

சேட்டி *šēṭṭi,* பெ.(n.) தமக்கை; elder sister (யாழ்.அக.).

[Skt. jyēṣthā > த. சேட்டி]

சேட்டி¹-த்தல் *šēṭṭi-,* 11 செ.கு.வி.(v.i.) தொழிற்படுதல்; to exert oneself, to perform, to be active.

[Skt. cēst > த. சேட்டி-]

சேட்டி²-த்தல் *šēṭṭi-,* 18 செ.கு.வி.(v.t.) தொழிற்படுத்துதல்; to cause to be active, to operate upon. சந்நிதி சேட்டிப்ப (திருமந்.2391).

[Skt. cēst > த. சேட்டி-,]

சேட்டிதன் *šēṭṭidaṉ,* பெ.(n.) தொழிற் படுத்துவோன்; directing agent; one who sets others to work. *"சித்துடன சித்துக் கெல்லாஞ் சேட்டிதனாதலானும்" (சி.சி..1, 56, பக். 637).*

[Skt. cēṣṭita > த. சேட்டிதன்]

சேட்டு *šēṭṭu,* பெ.(n.) பெரும்பான்மையும் குசராத்தி வணிகர்க்கு வழங்கும் சிறப்புப் பெயர்; title of merchants, especially Guzeratis.

[H. sēṭh > த. சேட்டு]

சேட்டுக்கடை *šēṭṭu-k-kaḍai,* பெ.(n.) குசராத்தியர், மார்வாரிகள் முதலியோர் வாணிகம் செய்யும் இடம்; place of business of a aurarati merchant, Marwari etc.

[சேட்டு+கடை]

[H. sēṭh > த. சேட்டு]

சேட்டுமம் *šēṭṭumam,* பெ.(n.) கோழை (கபம்); phlegm (சங்.அக.).

த.வ. சளி

[Skt. ślēṣman > த. சேட்டுமம்]

சேட்டை¹ *šēṭṭai,* பெ.(n.) 1. மூத்தவள்; elder sister, elder woman (திவா.). 2. மூதேவி; goddess of misfortune, as the elder sister of Lakshmi (திவா.).

த.வ. அக்காள், தவ்வை

[Skt. jyēsthā > த. சேட்டை]

சேட்டை² *šēṭṭai,* பெ.(n.) 1. பெருவிரல்; thumb. *"செறித்துவடந் தர்ச்சனி மீதே செபிக்க வொலியைச் சேட்டையினால்" (சிவதரு.3, 3).* 2. தழல் (கேட்டை); the 18th nakṣatra. 3. சுளகு (விசாகம்); the 16th nakṣatra.

சேடக்கிரியை *šēḍa-k-kiriyai,* பெ.(n.) கருமாந்திரம்; funeral rites.

த.வ. கருமாதி

[Skt. šēṣa+k+kiriyād>த.சேடக்கிரியை]

சேடக்குடும்பி *šēḍa-k-kuḍumbi,* பெ.(n.) (அடியார் குடும்பத்திலுள்ளவன்) கோயி லருச்சகன்; temple priest, as belonging to a family of devotees. *"சேடக் குடும்பியின் குறுமகள்" (சிலப்.30, 52).*

த.வ. குருக்கள்

[Skt. šeṣa > த. சேடக்குடும்பி]

சேடகம் *šēḍagam,* பெ.(n.) கேடயம்; shield. *"மயிர்ப்புளக சேடகமுமேந்தி" (சூளா. அரசி.159).*

த.வ. கிடுகு

[Skt. khēṭaka > த. சேடகம்]

சேடன் *šēḍan,* பெ.(n.) 1. தோழன்; companion, associate, friend (பிங்.). 2. காதல் தொடர்பான செய்திகளில் துணைபுரிபவன்; a companion who helps one in his love affairs. *"ஊடறீர்க்குஞ் சேடரின்" (சீவக.852).*

த.வ. பாங்கன்

[Skt. cēṭa > த. சேடன்]

சேடி *šēḍi,* பெ.(n.) 1. தெருச்சிறகு; side of a street (சூடா.). 2. வித்தியாதரருலகு; the world of *vidyādharas. "மாசில் வாலொளி வடதிசைச் சேடி" (மணிமே.17, 21).*

[Skt. šrēni > த. சேடி]

சேடித்துவம் *šēḍi-t-tuvam,* பெ.(n.) ஆளுந் தன்மை; state of being the master. *"சேடித்துவப்பரரெவர்" (நூற்றெட்டுத். திருப்புகழ்.62).*

த.வ. ஆளுமை

[Skt. šeṣitva > த. சேடித்துவம்]

சேடியம் *šēḍiyam,* பெ.(n.) ஊழியம்; service.

த.வ. தொண்டு

[Skt. šēṣatva > த. சேடியம்]

சேடை *šēḍai,* பெ.(n.) தொளியுழவுக்காக நீர் கட்டப்பெற்ற வயல்; field filled with water with a view to prepare it for sowing (Loc).

த.வ. நீர்க்கட்டல், தொளி

[U. jēde > த. சேடை]

சேணி *šēṇi,* பெ.(n.) 1. **சேடி** பார்க்க; see *šēḍi.* 2. ஏணி; ladder (திவா.). 3. முறை; order, arrangement (யாழ்.அக.). 4. குழு; party of workmen, set of players, company of travellers.

[Pkt. sēṇi > த. சேணி]

சேணிகன் *šēṇigaṉ,* பெ.(n.) 1. சமணப் பேரரசர்களுள் சிறந்தோன்; an illustrious jain king. 2. **சேணியன்** பார்க்க; see *šēṇiyan. "இவ்வாடை சேணிகன்" (நன்.289, மயிலை.).*

[Skt. šrēnika > த. சேணிகன்]

சேணியன் *šēṇiyaṉ,* பெ.(n.) ஆடை நெய்யும் தொழில் (சாதி)வகையான்; a class of weavers.

த.வ. நெசவாளன்

[Skt. srēṇika > த. சேணியன்]

சேத்திரக்கிஞன் *šēttirakkiñaṉ,* பெ.(n.) (உடம்பை அறிபவன்) ஆதன் (ஆன்மா); soul, as having knowledge of the body. *"ஏத்திய சேத்திரக்கிஞன்" (விநாயகபு.83, 73).*

[Skt. kṣētra-jña > த. சேத்திரக்கினன்]

சேத்திரபாலன் *šēttirabālaṉ,* பெ.(n.) 1. ஒவ்வொரு ஊருக்குமுள்ள காவல் தெய்வம்; guardian-deity. 2. வயிரவர்; Bhairava.

த.வ. ஊர்க்காவல் தெய்வம்

[Skt. ksētra+pāla > த.,சேத்திரபாலன்]

சேத்திரபிண்டம் *šēttira-pindam,* பெ.(n.) புண்ணியத் தலத்திற் தென்புலத்தார்ப் பொருட்டுக் கொடுக்கும் உணவுப் படையல்; ball of rice offered to manes in a sacred place. *'திகிரியறற்கரையிற் சேத்திர பிண்டங் கொடுத்து' (சேதுபு.தேவிபுர.84).*

த.வ. தென்புலத்தார்ப்படையல்

[Skt. kṣētra-pinda > த. சேத்திரபிண்டம்]

சேத்திரம் *šēttiram,* பெ.(n.) இடம்; place.

த.வ. இடம்

[Skt. kṣētra > த. சேத்திரம்]

சேத்து *šēttu,* பெ.(n.) நிலம்; field, plot of ground.

[Skt. khetta > த. சேத்து]

சேத்துமம் *šēttumam,* பெ.(n.) கோழை, சளி (சிலேட்டுமம்); phlegm. *"திருவிரல் மூன்றி லோடில் சேத்தும நாடியாமே" (தஞ்.சர.ii, 307).*

[Skt. šlēṣma > த. சேத்துமம்]

சேதக்காலன் *šētakkālan,* பெ.(n.) கெடுதிக்காரன்; mischievous person.

த.வ. தீக்குணத்தான்

[Skt. chēda > த. சேதக்காலன்]

சேதகம் *šētagam,* பெ.(n.) சேறு; mud, slush (திவா.). *"குங்குமச் சேதகந்திமிர" (கம்பரா. வரைக்காட்சி.56).*

[Skt. šāda > த. சேதகம்]

சேதனத்துவம் *šēdanattuvam,* பெ.(n.) அறிவால் உயர்ந்த நிலை; state of being a *cētanan* (வேதாந்தசாரம்.பக்.59).

[Skt. cētana-tva > த. சேதனத்துவம்]

சேதனன் *šēdanan,*பெ.(n.)1.அறிவுடையோன்; intelligent, wise person, rational being one endowed with intelligence. 2. (அறிவுடையது) ஆதன் (ஆன்மா) (பிங்.); the soul, as intelligent.

த.வ. அறிவாளி

சேதனாசாரம் *šēdanāšāram,* பெ.(n.) சுன்னத்து; (R.C.); rite of circumcision.

[Skt. chēdana+ā-cāra> த. சேதனாசாரம்]

சேதனை[1] *šēdanai,* பெ.(n.) அறிவு; knowledge. *"சேதனை மன்னுயிர்" (கம்பரா. சடாயுவுயிர்.51).*

[Skt. cētanā > த. சேதனை]

சேதனை[2] *šēdanai,* பெ.(n.) **சேதனை**[1] பார்க்க; see *šētanai. "சேதனையுண்ணக் கண்டான்" (கம்பரா. இராவணன் வதை.56).*

[Skt. chēdanā > த. சேதனை]

சேதி *šēdi,* பெ.(n.) 1. வடதேசங்களுள் ஒன்று; Chedi, the region round Bilaspur and Jubbalpur, one of 56 *tēcam,* q.v. *"சேதிப்பெருமான் சிசுபாலன்" (பாரத. திரௌபதி.42).* 2. **சேதிநாடு** பார்க்க; see *sēdinādu. "சேதி நன்னாட்டு நீடு திருக் கோவலூரில்" (பெரியபு.மெய்ப்பொரு.).* 3. சேதியை ஆண்ட ஓர் அரசக்குடி; the dynasty that ruled Chedi. *"சேதிமா மாபோன்" (பாரத.குருகுல.104).*

[Skt. cēdi > த. சேதி]

சேதிநாடு *šēti-ñadu,* பெ.(n.) திருக் கோவலூரைத் தலைநகராகக் கொண்ட நடு நாடு; naṭu-nādu in Tamil country having Tirukkōvalūr as its capital.

சேதிபன் *šēdiban,* பெ.(n.) 1. சேதி நாட்டரசன்; the king of *Chēdi. "சேதிபப் பெரும்பகை செகுத்தே" (பாரத. இராசசூய. 152).* 2. நடுநாட்டரசன்; the king of *Cēdi-nāḍu. "சேதிபர் நற்கோவலூரர் மலாடமன்னர்" (புராணசாரம், 8. பெரியபு.பதிப்.).*

[Skt. cedi-pa> த. சேதிபன்]

சேதிமரம் *šēdi-maram,* பெ.(n.) அருக (சமண)க் கோயிலில் உள்ள குளிர்ச்சியும் தூய்மையும் தரும் மரவகை; sacred tree in a jaina temple. *"சேதிமரங்களெட்டு" (மேருமந். 1063).*

[Skt. caitya> த. சேதிமரம்]

சேது *šēdu,* பெ. (n.) 1. செய்கரை; cause way, bridge dam (பிங்.). 2. இராமபிரானது படை (சேனை)கள் இலங்கை செல்லுதற்கென இயற்றப்பெற்றதாகக் கருதப்படுந் திருவணை; adams bridge a reef of sunken rocks connecting the north of Ceylon with the main land of india, 30 ft. wide with 3 or 4 ft. of water above it at high tide, said to have been constructed to enable Rama's forces to cross over to *Lanka. "சேடனென்னப் பொலிந்தது சேதுவே"(கம்பரா. சேதுப.66).*3. இராமேசுவரம்; the island of *Ramēsvaram. "சேதுவினி ராம நாதனை நிறுவிய காதையை" (சேதுபு.அவை.1).* 4.தனுக்கோடி, தருப்ப சயனம் முதலிய வற்றிலுள்ள புனித நீராடல் துறை; sacred bathing-ghat at *Dhanuskōḍi, Darbha-šayanam,* etc.

[Skt. šētu > த. சேது]

சேதுசுநானம் *šēdus-unāṉam,* பெ.(n.) தனுக்கோடி, தருப்பசயனம், முதலிய சேதுக்கரையில் செய்யும் கடல் நீராட்டு; sea bath at *Dhanuskōḍi, Darbha-šayanam,* etc, considered to be of religious merit (இ.வ.).

த.வ. சேதுக்குளியல்

[Skt. sētu+snāna> த. சேதுசுநானம்]

சேந்தி *šēndi,* பெ.(n.) கள்; toddy. *சேந்திக்கடை* (W.G.).

[U. sēndi >த. சேந்தி]

சேப்பு *šēppu,* பெ.(n.) சட்டைப்பை; packet.

[Ar. jeb > த. சேப்பு]

சேபம் *šēbam,* பெ.(n.) ஆண்குறி; membrum virile (யாழ்.அக.).

[Skt. sēpha > த. சேபம்]

சேம்பா *šēmbā,* பெ.(n.) குதிரைக்கு வருஞ் சளிநோய்; glanders, a horse-disease (அசு.வசா.92.).

[U. sēmbā > த. சேம்பா]

சேமண்டன் *šēmaṇḍaṉ,* பெ.(n.) தந்தை யில்லாதவன்; one who has lost his father.

த.வ. தந்தையிலி

[Skt. sēmbā > த. சேமண்டன்]

சேமம் *šēmam,* பெ.(n.) 1. நல்வாழ்வு; safety, well-being, welfare. *"சேமமேயுன்றனக் கென்றருள் செய்தவன்" (தேவா. 1136, 9).* 2. இன்பம்; happiness, pleasure (சூடா.). 3. காவல்; protection, preservation, security, defence, safe guard. *"சேம வன்மதில்" (தேவா.93,4).* 4. அரணான இடம்; strong hold, secure place. 5. சிறைச்சாலை; prison, dungeon. 6. புதை பொருள்; hoard treasure-trove. *"சேமம்போ லெடுப்பவர்" (பிரபுலிங். சித்தரா.49).* 7. ஓலைச் சுவடியின் கட்டு; tying of ola book. *"புத்தகந் தன்னைச் சேம நீக்கின னோதினான்" (திருவாத.பு. திருவடி.20).* 8. போர்வீரன் தன்னைக் காத்துக் கொள்ளும் ஐவகைச் செயல்களுள் பகைவரது அம்பு தன்மேற்படாமல் காக்குஞ் செயல்; act of a warrior protecting himself against hostile arrows, one of *pañca-kiruttiyam,* q.v. *"எய்தாற் கருவியாலே மறைத்துச் சேமஞ் செய்யுமாறும்" (சீவக.1676,உரை).* 9. பிணக்காப்பு; binding and shrouding a corpse for burning or interment (வின்.).

[Skt. kṣēma > த. சேமம்]

சேமாதிசயம் *šēmādišayam,* பெ.(n.) நலவாழ்வுச் செய்தி; news of welfare.

[Skt. ksēma+atišaya > த. சேமாதிசயம்]

சேமியா *šēmiyā,* பெ.(n.) கோதுமை முதலிய தவசங்களால் திரிதிரியாகச் செய்யப்பட்டுப் பாயசம் முதலிய பலவகைப் பலகாரஞ் செய்வதற்கு உதவும் உணவுப் பொருள்; vermicelli.

த.வ. நூல்மா

[Mhr. šēvari > த. சேமியா]

சேயா *šēyā,* பெ.(n.) கடுக்காய் (மலை); chebulic myrobalan.

[Skt. jayā > த. சேயா]

சேர் *šēr,* பெ.(n.) 1. எட்டுப் பலங்கொண்ட ஒரு நிறுத்தலளவை; a standard weight = 8 palams. 2. ஒரு முகத்தலளவை; dry or liquid measure = 1/24 *parai* in ceylon = 70 cu.in. and upward in s.india.

[H. sēr > த. சேர்]

சேர்பந்து *šērpandu,* பெ.(n.) கசை; whip, scourge.

[U. zērband > த. சேர்பந்து]

சேர்விலங்கு *šēr-vilangu,* பெ.(n.) தளை (யாழ்ப்.); fetters for the feet or hands (j.).

[U. zēr > த. சேர்விலங்கு]

சேவகம் *šēvagam,* பெ.(n.) 1. ஊழியம்; service, as of soldier, peon. *"சிலதியராகிச் சூழ்ந்து சேகவஞ்செய்ய" (திருவிளை. அட்டமா.7).* 2. வீரம்; valour, bravery. *"என்னெடுஞ் சேவகந் தோற்க" (கம்பரா. நாகபா.10).*

த.வ. தொண்டு

[Skt. šēvaka > த. சேவகம்]

சேவகன் *šēvagan,* பெ.(n.) 1. வீரன்; soldier, warrior, veteran. *"சேவகனாகித் திண் சிலையேந்தி" (திருவாச.2, 81).* 2. ஊழியஞ் செய்வோன்; servant, peon, attendant. *"மாற்றான்றன் சேவகன்" (தனிப்பா.ii, 6, 12).*

த.வ. தொண்டன்

[Skt. šēvaka > த. சேவகன்]

சேவகனார் *šēvaganār,* பெ.(n.) ஐயனார்; *Aiyanār,* as a warrior-deity (வீரத் தெய்வம்) (சங்.அக.).

[Skt. sēvaka > த. சேவகனார்]

சேவதி *šēvadi,* பெ.(n.) குபேரனது செல்வவளம் (நிதி); *Kubēra's* treasure (யாழ்.அக.).

[Skt. šēvadhi > த. சேவதி.]

சேவனம் *šēvanam,* பெ.(n.) தைக்கை; stitching (யாழ்.அக.).

த.வ. தைத்தல்

[Skt. šēvana > த. சேவனம்]

சேவனை *šēvanai,* பெ.(n.) 1. ஊழியத் தொழில்; service under a master. 2. கோயிற் றொண்டு; temple service. 3. விழாக் காலங்களில் மேளம் முதலியன அடித்தல்; playing on drums, pipes, etc. at a festival, wedding etc.

த.வ. கோயிற்பணி

[Skt. šēvana > த. சேவனை]

சேவனைக்காரர் *šēvanai-k-kārar,* பெ.(n.) கோயில் மேளக்காரர்; pipers and drummers attached to a temple.

த.வ. ஓலகர், ஓலகத்தார்

[Skt. sēvana > த. சேவனை+காரர்]

சேவா *šēvā,* பெ.(n.) வாடகை; rent in kind or money.

[Skt. sheva > த. சேவா]

சேவாகாலம் *šēvā-kālam,* பெ.(n.) திருமால் கோயில் முதலியவற்றில் தெய்வப் பனுவல் (திவ்வியப் பிரபந்தம்) ஓதுகை; recitation of *divya-p-pirabandam*, as in *Visṇu* temples (Vaisṇ).

[Skt. sēvā > த. சேவா+காலம்]

சேவாலம் *šēvālam,* பெ.(n.) நேர்வாளம்; croton (மலை.).

[Skt. jayapāla > த. சேவாலம்]

சேவாலிகம் *šēvāligam,* பெ.(n.)கருநொச்சி; willow-leaved justicia (மலை.).

[Skt. šēphālikā > த. சேவாலிகம்]

சேவி-த்தல் *šēvi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. வணங்குதல்; to worship, make obeisance to, render homage to. *"சேனைத் தலைவன் திருத்தாள் கருத் தொடுஞ் சேவிப்பனே" (அழகர்கலம். காப்பு).* 2. பணி செய்தல்; to serve, as under a master; to render service. *"சிலைமதனன் தனிசேவிக்க" (பாரத.அருச்சனன்நீர்.24).* 3. வழிபடுதல்; to obtain sight, as of a deity, a great person, a sacred place. *"சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து" (திவ்.திருப்பா.29).* 4. தெய்வப்பனுவல் (திவ்வியப் பிரபந்தம்) முதலியன ஓதுதல் (வைணவ.); to recite, as *divya-p-prabandam*, to read as sacred books. 5. மருந்து முதலியன உட்கொள்ளுதல்; to take in, as medicine.

த.வ. வழிபாடு செய்தல்

[Skt. sev > த. சேவி-,]

சேவிதம் *šēvidam,* பெ.(n.) வழிபடுதல்; service (யாழ்.அக.).

[Skt. sēvita > த. சேவிதம்]

சேவியம் *šēviyam,* பெ.(n.) வெள்ளை வெட்டி வேர் (மூ.அ.); a variety of cuscuss grass.

[Skt. ševia > த. சேவியம்]

சேவு *šēvu,* பெ.(n.) **சேவை** பார்க்க; see *šēvai.*

[U.sēv > த. சேவு]

சேவுகம் *šēvugam,* பெ.(n.) **சேவகம்** பார்க்க; see *sēvagam.*

[Skt. sevugam > த. சேவுகம்]

சேவை *šēvai,* பெ.(n.) ஒருவகைப் பண்ணிகாரம்; a kind of confection.

[H. šēv > த. சேவை]

சேழக்கிரியை *šēḻa-k-kiriyai,* பெ.(n.) இறுதிச் சடங்கு; funeral rites.

[Skt. šēsha > த. சேழக்கிரியை]

சேழகாரன் *šēḻakāran,* பெ.(n.) மருமகன்; nephew (T.A.S.iii, 229).

[சேழ+காரன்]

[Skt. šēsa > த. சேழ]

சேளம் *šēḷam,* பெ.(n.) மீதி; reminder, balance.

[Skt. šēsa > த. சேளம்]

சேற்பம் *šēṟpam,* பெ.(n.) **சேற்பனம்** பார்க்க; see *sēṟpaṉam* (யாழ்.அக.).

[Skt. šlēsmam > த. சேற்பம்]

சேற்பனசுரம் *šēṟpaṉa-šuram,* பெ.(n.) சளியால் வரும் காய்ச்சல்; (J.) phlegmatic fever.

[சேற்பனம்+சுரம்]

[Skt. ślēṣman> த. சேற்பனம்]

சேற்பனந்தொடுதல் *šēṟpaṉan-toḍudal,* பெ. (n.) இறக்குந் தருவாயில் தொண்டையிற் சத்தமுண்டாகும்படிச் சளிக்கட்டிக் கொள்ளுதல் (யாழ்ப்.); accumulation of phlegm in the throat which causes death-rattle.

த.வ. தொண்டைக்கட்டு

[சேற்பனம்+தொடுதல்]

[Skt. ślēṣman > த. சேற்பனம்]

சேற்பனம் *šēṟpaṉam,* பெ.(n.) சளி; phlegm (சங்.அக.).

[Skt. ślēṣman> த. சேற்பனம்]

சேற்றுமம் *šēṟṟumam,* பெ.(n.) **சேற்பனம்** பார்க்க; see *šēṟpaṉam* (யாழ்.அக.).

[Skt. ślēṣman > த. சேற்றுமம்]

சேனம் *šēṉam,* பெ.(n.) பருந்து; kite (திவா.).

[Skt. šyēna > த. சேனம்]



சேனன் *šēṉaṉ,* பெ.(n.) அரசர்க்குரிய ஒரு பழைய பட்டப் பெயர்; an ancient title. *"சந்துசேனனு மிந்துசேனனுந் தருமசேனனும்" (தேவா.859, 4).*

[Skt. šēna > த. சேனன்]

சேனா *šēṉā,* பெ.(n.) நிலவாவிதை; tinne velly senna.

[E. senna > த. சேனா.]

சேனாங்கம் *šēṉāṅgam,* பெ.(n.) படையின் உறுப்பு; component division of an army (யாழ்.அக.).

[Skt. šēnā+aṅga > த. சேனாங்கம்]

சேனாபத்தியம் *šēṉāpattiyam,* பெ.(n.) படைத்தலைமை; office of a commander, commandership.

[Skt. šēnāpatya > த. சேனாபத்தியம்]

சேனாபதி *šēṉā-padi,* பெ.(n.) படைத் தலைவன்; general, commander of an army. *"சுவேதனைச் சேனாபதியாய்" (திவ்.இயற்.4, 24).*

[Skt. šēṉā-pati > த. சேனாபதி]

சேனாபதியாழ்வார் *šēṉāpadiyāḻvār,* பெ. (n.) சேனை முதலியார்; *visvaksēna,* the chief of Viṣnu's host (M.E.R.514 of 1917).

[சேனாபதி+ஆழ்வார்]

[Skt. senāpati > த. சேனாபதி]

சேனாவரையர் *šēṉā-v-araiyar,* பெ.(n.) தொல்காப்பிய உரைகாரருள் ஒருவர்; a comentator of Tolkappiyam.

சேனாவரையன் *šēṉā-v-araiyaṉ,* பெ.(n.) **சேனாபதி** பார்க்க; see *šēṉāpati.*

[சேனா+வரையன்]

[Skt. sēnā > த. சேனா]

சேனை¹ *šēṉai,* பெ.(n.) 1. யானை, தேர், பரி, காலாள் என்ற நாற்படை; army comprising four fold divisions, viz., *yāṉai, tēr, pari, kālāḷ.* 2. ஆயுதம்; weapon (அக.நி.). 3. கூட்டம்; multitude crowd. *"குரிசிலை விடாத சேனையே" (கம்பரா.தைலமா.8).* 4. கிளையும் கேண்மையும்; friends and

relations. *'அவன் சேனையை யாரால் தாங்க முடியும்'.*

[த. யானை > ஏனை > சேனை **Skt.** *šēnā > த. சேனை]*

சேனை² *šēṉai,* பெ.(n.) 1. தெரு; street (பிங்.). 2. கடைத்தெரு; bazaar. 3. சந்தை; market fair.

[Skt. šrēni > த. சேனை]

சேனைபோகம் *šēṉai-pōgam,* பெ.(n.) படைக்குரிய அலுவலகங்களுள் ஒன்று; an office in the military service (S.I.I.iv.134).

[Skt. šenā+pōga > த. சேனைபோகம்]

சைக்கிள்வண்டி *šaiikkiḷ-vaṇḍi,* பெ.(n.) காலாலோட்டும் இரு சக்கர வண்டி, ஈருருளி; bicycle.

த.வ. மிதிவண்டி

[சைக்கிள்+வண்டி] [E. cycle > த. சைக்கிள்]



சைக்கினை *šaikkiṉai,* பெ.(n.) சைகை; குறியீடு; signal, gesture.

த.வ. குறிப்புமொழி

[Skt. samjnā > த. சைக்கினை]

சைகதம் *šaikadam,* பெ.(n.) 1. மணல்; sand (யாழ்.அக.). 2. மணற்கரை; sandbank.

[Skt. saikata > த. சைகதம்]

சைகதலிங்கம் *šaikata-liṅgam,* பெ.(n.) மணலால் ஆகிய சிவலிங்கம்; lingam made of sand.

[சைகதம்+லிங்கம்]

[Skt. saikata> த. சைகதம்]

சைகதவுண்டை *šaikata-v-uṇḍai,* பெ.(n.) மணல் மலை (யாழ்.அக.); sand-hill.

[சைகதம்+உண்டை]

[Skt.saikata >த. சைகதம்]

சைகை *šaigai,* பெ.(n.) **சைக்கினை** பார்க்க; see *šaikkiṉai. "செங்கட் சைகை" (சூடா. குமார.27).*

த.வ. செய்கை

[Skt. samjnā> த. சைகை]

சைங்கிகேயன் *šaiṅgikēyaṉ,* பெ.(n.) கருங்கோள் (இராகு) (இலக்.அக.); the moon's ascending node.

[Skt. saimhikēya > த. சைங்கிகேயன்]

சைசவம் *šaišavam,* பெ. (n.) இளமை; infancy, childhood. *"சைசவத்தற் றொடரும்" (ஞானவா முமுட்சு.1).*

[Skt. saišava > த. சைசவம்]

சைத்தன்னியநீர் *šaittaṉṉiya-nīr,* பெ.(n.) பனிக்குடத்து நீர்; first presentation, liquorammi (சா.அக.).

சைத்தன்னியப்பாஞ்சான் *šaittaṉṉiya-p-pāñjāṉ,* பெ.(n.) நஞ்சறுப்பான் கொடி; a creeper that is said to alleviate arsenic of snake poisons (சா.அக.).

சைத்தான் *šaittāṉ,* பெ.(n.) பேய், பிசாசு; devil.

ம. caittāṉ.

[Ar.shaitan>த.சைத்தான்.E.satan>த.சைத்தான்]

சைத்தியக்கட்டி *šaittiya-k-kaṭṭi,* பெ.(n.) தொண்டையில் வரும் புண்கட்டி; tonsilitis.

த.வ. தொண்டையழற்சி

[Skt. šaitya+ > த. சைத்தியம்+கட்டி]

சைத்தியக்குணம் *šaittiya-k-kuṇam,* பெ. (n.) முடக்கு நோய்; rheumatic tendencies (சா.அக.).

சைத்தியம்[1] *šaittiyam,* பெ.(n.) பௌத்தர் முதலியோர்க்குரிய ஆலயம்; temple or shrine, especially buddhistic. *"அவ்வூர்ப் புத்த சைத்தியத்து" (சிலம்ப், 10, 14, உரை).*

[Skt. caitya > த. சைத்தியம்]

சைத்தியம்[2] *šaittiyam,* பெ.(n.) இறப்புக் கல்வெட்டு; stone epitaph (யாழ்.அக.).

த.வ. கல்லறைக்கல், நடுகல்

[Skt. caitya > த. சைத்தியம்]

சைத்தியம்[3] *šaittiyam,* பெ.(n.) குளிர்ச்சி; coldness, chillness.

[Skt. šaitya > த. சைத்தியம்]

சைத்தியவிருட்சம் *šaittiyaviruṭcam,* பெ. (n.) **சேதிமரம்** பார்க்க; see *sēdi-maram (மேருமந்.625, உரை).*

[Skt. caitya+vṛkṣa > த. சைத்தியவிருட்சம்]

சைத்தியோபசாரம் *šaittiyōpacāram,* பெ. (n.) உடம்பைக் குளிர்விக்கவும் புத்துயி ரூட்டவும் செய்யப்படும் செயல்கள்; acts intended to cool and refresh the system.

த.வ. உடலோம்புபணிவிடை

[Skt. saityaupa-cāra > த. சைத்தியோபசாரம்]

சைத்திரகம் *šaittiragam,* பெ.(n.) **சைத்திரம்** பார்க்க; see *šaittiram.*

[Skt. šaitraka > த. சைத்திரகம்]

சைத்திரம் *šaittiram,* பெ.(n.) 1. மீன (பங்குனி)க் காருவாவிற்கு அடுத்த நாள் (பிரதமை) முதல் மேழ (சித்திரை)க் காருவா முடிவு வரையுள்ள சந்திர மாதம்; first lunar month extending from the day following the new moon in *panguṇi* to the new moon day in cittirai. 2. சித்திரவேலை; artistic work (சங்.அக.).

[Skt. caitra > த. சைத்திரம்]

சைத்திரரதம் *šaittira-radam,* பெ.(n.) குபேரனது பூந்தோட்டம்; garden or *Kubēra.*

[Skt. caitra > த. சைத்திரரதம்]

சைத்திரவிரதம் *šaitraviradam,* பெ.(n.) **சைத்திரரதம்** பார்க்க; see *saitraratam. "பானுவுஞ் செல்கலாச் சைத்திர விரதம்" (இரகு.நகர.9).*

சைத்திராவலி *šaitrāvali,* பெ.(n.) மேழ (சித்திரை) மாதத்து வெள்ளுவா (பௌர்ணமி.) (யாழ்.அக.); full moon in the month of cittirai.

த.வ. மேழவெள்ளுவா

சைத்திரி *šaittiri,* பெ.(n.) மேழ (சித்திரை) வெள்ளுவாவில் நடத்தப்பெறும் வேள்வி; sacrifice offered on the full moon day in cittirai (திவா.).

[Skt. caitrī > த. சைத்திரி]

சைத்திரியஞானம் *šaittiriyañāṉam,* பெ.(n.) கடவுள் உயிர்களைப் பற்றிய அறிவு; spiritual knowledge, the knowledge of nature of the god or the soul (சா.அக.).

[Skt. ksaitrainā+jñāna > த. சைத்திரிய ஞானம்]

சைத்திரியம் *šaittiriyam,* பெ.(n.) மனத் திண்மை; steadfastness, stability, courage.

த.வ. மனத்திட்பம்

[Skt. sthairya > த. சைத்திரியம்]

சைத்திரோற்சவம் *šaittirōṟcavam,* பெ.(n.) சித்திரையில் நிகழும் கோயிற்றிருவிழா; temple festival celebrated in cittirai.

த.வ. மேழவிழா

[Skt. caitra+uksava > த. சைத்திரோற்சவம்]

சைதன்னியநிலை *šaitaṉṉiya-nilai,* பெ.(n.) பிறப்பு, இறப்பு ஆகியவற்றைக் கடந்து நிற்றல்; a condition or state of being liberated from the tormentation of births and deaths (சா.அக.).

சைதனம் *šaitaṉam,* பெ.(n.) பிறப் பிறப்பிற்குள் ளடங்கிய உயிர் (*சீவாத்துமா*); individual soul subjected to births and deaths (சா.அக.).

சைதனியம் *šaitaṉiyam,* பெ.(n.) 1. அறிவு; intelligence. *"சுத்தான்ம சைதனியமே தனக்குச் சொரூபமாகக் கொண்டு" (சி.போ.8, 2).* 2. உயிராதன் (சீவான்மா); individual soul, *šiva.* 2. பேராதன் (பரமான்மா); universal soul (சி.போ.சிற்.2, 4).

[Skt. caitanya > த. சைதனியம்]

சைதனியவான் *šaitaṉiyavāṉ,* பெ.(n.) அறிவுள்ளவன்; sentient being. *"ஆன்மாச் சைதனியவானென்றால்" (மணிமே.29, 176).*

[Skt. caitanya > த. சைதனியவான்]

சைதிகம் *šaitigam,* பெ.(n.) பிரம்பு; cane (யாழ்.அக.).

[Skt. chaidika > த. சைதிகம்]

சைதூன் *šaitūṉ,* பெ.(n.) ஒலிவ மரம்; European olive.

[U. zaitūn > த. சைதூன்]

சைந்தவம் *šaindavam,* பெ.(n.) 1. **சயித்தவம்** பார்க்க; see *sayttavam* (சூடா.). 2. சிந்து நாடு; Sind. *"காம்போச மாரியஞ் சாம்பிராணி சைந்தவம்" (திருவாலவா.27, 73).*

[Skt. saindhava > த. சைந்தவம்]

சைந்தவி *šaindavi,* பெ.(n.) சயந்தவி; a specific melody type (சங்.அக.).

[Skt. saindhavi > த. சையந்தவி]

சைந்தியலவணம் *šaindiya-lavaṇam,* பெ.(n.) இந்துப்பு; rock-salt.

[Skt. saindhava> த. சைந்தியலவணம்]

சைமானம் *šaimāṉam,* பெ.(n.) அன்பளிப்பு, பரிசு; present, reward.

[Skt. sam-māna > த. சைமானம்]

சைமினி[1] *šaimiṉi,* பெ.(n.) **சையமினி** பார்க்க; see *šaiyamiṉi. "சைமினி நகரோன்" (பிங். 197).*

[Skt. saṃyaminī > த. சைமினி]

சைமினி[2] *šaimiṉi,* பெ.(n.) பூருவ மீமாஞ்சையின் ஆசிரியரான ஒரு முனிவர்; a sage-philosopher, the author of *pūrva-mīmamsā-sūtra. "அக்கபாதன் கணாதன் சைமினி" (மணிமே.27, 82).*

[Skt. jaimini > த. சைமினி]

சையகம் *šaiyagam,* பெ.(n.) படுக்கை; bed (அக.நி.).

[Skt. šayyā > த. சையகம்]

சையம்[1] *šaiyam,* பெ.(n.) 1. சகியம்; a mountain. *"புரைகெழு சையம் பொழிமழை" (பரிபா.11, 14).* 2. மலை; hill, mountain. *"சக்கரவாளசையம்" (கந்தபு.அண்டகோ.20).* 3. கல்; stone, rock. *"சையம் பூண்டு சமுத்திர நீந்துவான்" (சீவக.1426).*

[Skt. sahya > த. சையம்]

சையம்[2] *šaiyam,* பெ.(n.) ஒழுங்கு (நியமம்); self control. *"சையமே லேற்றினான்" (மேருமந். 544).*

த.வ. தன்னடக்கம்

[Skt. sam-yama > த. சையம்]

சையமினி *šaiyamiṉi,* பெ.(n.) எமனது நகரம்; city of Yama. *"சையமினி யீதுகொல்" (காசிக.சிவசன்.இயம.18).*

[Skt. samyaminī > த. சையமினி]

சையுத்தசமவாயம் *šaiyutta-camavāyam,* பெ.(n.) காட்சியில் ஏற்படும் அறுவகைச் சன்னிகரிடத்துள் புலன்களுக்கும் ஒரு பொருளின் குணம் முதலியவற்றிற்குமுள்ள தொடர்பு; the relation of inherence in that which is in conjunction, as of the sense of sight with the colour of an object in

perception, one of six *cannikaridam*, q.v. (தருக்கசங்.31.).

[Skt. samyukta+samavāya > த. சையுத்த சமவாயம்]

சையுத்தம் *šaiyuttam*, பெ.(n.) 1. **சையோக சம்பந்தம்** பார்க்க; see *saiyōga-sambandam*. 2. பாலுறவு; sexual inter course. 3. மயக்கம்; giddiness (சங்.அக.).

[Skt. saṃyukta > த. சையுத்தம்]

சையை *šaiyai*, பெ.(n.) சைகை; flow of verse.

த.வ. செய்கை

[Skt. šayyā > த. சையை]

சையோகசம்பந்தம் *šaiyōgašambandam*, பெ.(n.) இரண்டு பொருள்கள் கூடி இருத்தலாகிய ஒத்துப்போதல் (தருக்கசங். 31.); conjunction between two objects.

த.வ. ஒத்திசைவு

[Skt.saṃ-yōga > த. சையோகசம்பந்தம்]

சையோகநிருவாகம் *šaiyōga-niruvāgam*, பெ.(n.) பாலுறவுப் பொறுமை; sexual tolerance (சா.அக.).

சையோகபயம் *šaiyōga-bayam*, பெ.(n.) பாலுறவிற்கு அஞ்சும் நிலை; coitophobia.

சையோகம் *šaiyōgam*, பெ.(n.) 1. கலக்கை; union, obsorption. 2. **சையோகசம்பந்தம்** பார்க்க; see *saiyōgasambandam* (சி.சி.). 3. புணர்ச்சி; sexual union. *"இரவு பகலே ழையர்கள் சையோக மாயினோம்"* (*தாயு. எங்குநிறை.9.*).

[Skt. sam-yōga > த. சையோகம்]

சையோகாட்சரம் *šaiyōgāṭcaram*, பெ.(n.) வடமொழிக்கூட்டுமெய்யெழுத்து; conjunct consonant in Sanskrit.

[Skt.saṃ+akṣara > த. சையோகாட்சரம்]

சைரிகம் *šairigam*, பெ.(n.) கலப்பை; ploughshare (யாழ்.அக.).

த.வ. ஏர்

[Skt. sairika > த. சைரிகம்]



சைரிகன் *šairigan*, பெ.(n.) 1. உழவன்; plough man. 2. ஏர்மாடு; plough-bullock (யாழ்.அக.).

[Skt. sairika > த. சைரிகன்]

சைரிபம் *šairibam*, பெ.(n.) எருமை; buffalo (பிங்.).

த.வ. காரான்

[Skt. sairibha > த. சைரிபம்]



சைரியம் *šairiyam*, பெ.(n.) பெருங் குறிஞ்சி; medium glabrous seven leaved conehead (சா.அக.).

சைரியகம் *šairiyagam*, பெ.(n.) 1. மரு தோன்றி; common naildye, Laujonia

spinosa. 2. மேக வண்ணக் குறிஞ்சி; blue nail dye of western ghats (சா.அக.).

சைரேயகம் *śairēyagam,* பெ.(n.) மேக வண்ணக் குறிஞ்சி; western ghats blue-nail dye.

[Skt. sairēyaka > த. சைரேயகம்]

சைலகம் *śailagam,* பெ.(n.) 1. மலையிரு வேலி (மலை.); mountaingrass 2. நறும்புகை (சாம்பிராணி) (சங்.அக.); benzoin.

[Skt. sailaka > த. சைலகம்]

சைலகர்மோனியம் *śailagar-mōṉiyam,* பெ. (n.) பொற்குன்றிமணி; yellow crab's eye (சா.அக.).

சைலகாரிகம் *śailakārigam,* பெ.(n.) மஞ்சட் கடம்பு; yellow kadamba, yellow teak of Mysore (சா.அக.).

சைலகோடகம் *śaila-kōḍagam,* பெ.(n.) கோடக சாலை; coromandel gendarussa-Justica procumbens (சா.அக.).

சைலசீரிடம் *śailaśīriḍam,* பெ.(n.) கருஞ்சீரகம்; black cumin (சா.அக.).

சைலதரன் *śailadaraṉ,* பெ.(n.) கண்ணபிரான், மலையைத் தாங்கியவன் (யாழ்.அக.); *Kṛṣṇa,* as holding the *Gōvardhana* mountain.

[Skt. śaila+dhara > த. சைலதரன்]

சைலதாரகி *śailatāragi,* பெ.(n.) பசு முன்னை; Indian head ache tree (சா.அக.).

சைலந்தம் *śailandam,* பெ.(n.) சாதிலிங்கம்; vermilian red sulphate of mercury (சா.அக.).

சைலப்பாலை *śaila-p-pālai,* பெ.(n.) வெப்பாலை; wrightia tinctoria (சா.அக.).

சைலபதி *śaila-padi,* பெ.(n.) இமயமலை *(யாழ்.அக.);* the Himalayas, as the lord of mountains. *"மலைகளுக்குத் தலைவன்".*

[Skt. śaila+pati > த. சைலபதி]

சைலபித்தி *śailapitti,* பெ.(n.) 1. பேய்க்களா; a bitter variety of carondah. 2. மலைக் களா; hill carondah-Vacanumgenus. 3.முள்ளுக்களா; baberry-Barberis aristata (சா.அக.).

சைலம் *śailam,* பெ.(n.) மலை; mountain, hill.

த.வ. சாரல்

[Skt. śaila > த. சைலம்]

[த. சாரல் >சாரலம் >சேரலம் >சேலம் > ***Skt.*** *śaila]*

சைலமாதிகம் *śaila-mādigam,* பெ.(n.) பாஞ்சாலிக்கொடி; a kind of mountain creeper (சா.அக.).

சைலமேனி *śailamēṉi,* பெ.(n.) குப்பைமேனி; rubbish plant (சா.அக.).

த.வ. பூனைவணங்கி



சைலா *śailā,* பெ.(n.) 1. நீண்ட மேலுடை; flowing dress. 2. பட்டுத் தலைப்பாகை வகை; a kind of silk turban (muham.).

[H. selā >த. சைலா]

சைலாந்திரம் *śailāndiram,* பெ.(n.) மலைக் குகை; cave or hollow in a mountain (யாழ்.அக.).

[Skt. śaila+antara > த. சைலாந்திரம்]

சைவகலாலயசக்கரவர்த்தி *śaiva-kalā-laya-cakkaravartti,* பெ.(n.) கல்வி கேள்விகளில் வல்ல சிவாசாரியரது பட்டங்களுள் ஒன்று; a

title of the learned *śivācāryas* "சைவகலாலய சக்கரவர்த்தி உள்ளிட்டோமும்" (தெ.கல்.தொ.5:101).

[Skt.சைவம்+கலாலய+சக்கர+வர்த்தி]

[Skt. śaiva+kalā+ā-laya >த.சைவ கலாலயம் Skt. vartti>த.வர்த்தி]

சைவசூளாமணி *śaiva-śūlāmaṇi*, பெ.(n.) சிவாசாரியரது பட்டங்களுள் ஒன்று; a title of *śivācāryas*. *"பாண்டியன் கந்தனான சைவ சூளாமணி பிரமாதராயனேன்"* (தெ.கல். தொ.5:101).

[சைவம்+சூளாமணி]

[Skt. śaiva+ > த. சைவம்]

சைவம்[1] *śaivam*, பெ.(n.) 1. **சிவனியம்** பார்க்க; see ṣivaṉiyam 2. சிவமா தொன்மம்; a chief *pūraṇa* "எதிரில் சைவமே பவிடியம்" (கந்தபு.பாயி.54). 3. தோன்றியம் (ஆகமம்) (அக.நி.); *āgama* 4. புலாலுண்ணாமை; vegetarianism

த.வ. சிவனியம்

[Skt. śaiva > த. சைவம்]

சிவனியமதம். ஊர்த்த சைவம், அனாதி சைவம், ஆதி சைவம், மகாசைவம், பேதசைவம், அபேத சைவம், அந்தர சைவம், குணசைவம், நிர்க்குணசைவம், அத்துவா சைவம், யோக சைவம், ஞான சைவம், அணுசைவம், கிரியாசைவம், நாலுபாத சைவம், சுத்தசைவம் என்ற பதினாறு வகைப்பட்டதாய்ச் சிவனைப் பர தெய்வமாகக் கொண்டு வழிபடுஞ் சமயம்; the religion which regards *Siva* as the Supreme Being and is exclusively devoted to his worship, of sixteen sects. viz; *ūrttacaivam, aṉāti saivam, āti saivam, magā saivam, pēta saivam, apēta saivam, antara saivam, kuṇa saivam, nirkkuna-saivam, antarasaivam, yōga saivam, nāna saivam, anu saivam, kiriyā saivam, nālupāda saivam, sutta saivam.*

சைவம்[2] *śaivam*, பெ.(n.) இளமை (அக.நி.); childhood.

[Skt. śaiśava > த. சைவம்]

சைவர் *śaivar*, பெ.(n.) **சிவனியர்** பார்க்க; see śivaṉiyar.

த.வ. சிவனியர்

[Skt. śaiva > த. சைவர்]

அனாதிசைவர், ஆதி சைவர், மகாசைவர், அணுசைவர், அவாந்தர சைவர், பிரவரசைவர், அந்திய சைவர் என்ற ஏழுவகைச் சைவ சமயிகள் (சைவச.பொது.435, உரை); those who profess the *śaiva* religion , of seven classes, viz., *anādi-saivar, ādi-saivar, mahā-saivar, aṇu-saivar, avāndara-saivar, piravara-saivar, antiya-saivar* .

சைவலம் *śaivalam*, பெ.(n.) ஒரு வகைப்பாசி (சூடா.); duck weed, green, moss-like plant growing in pools, Blyxa octandra.

[Skt. śaivala > த. சைவலம்]

சைவவாதி *śaiva-vādi*, பெ.(n.) சிவனியக் கொள்கையை எடுத்துரைப்போன்; an exponent of *śaiva* philosophy. *"நின்ற சைவவாதி நேர்படுதலும்" (மணிமே. 27: 87).*

[Skt. śaiva+vādi > த. சைவவாதி]

சைவன் *śaivaṉ*, பெ.(n.) 1. சிவனை வழிபடுவோன்; one who professes the *śaiva* religion. 2. சிவன்; *śivaṉ*. *"தழலிலங்கு திருவுருச்சைவனே" (தேவா.866, 7).* 3. புலா லுண்ணாதவன்; vegetarian.

[Skt. śaiva > த. சைவன்]

சைவாத்திரம் *śaivāttiram*, பெ.(n.) சிவகணை (பாசு பதாத்திரம்); *pāsupatāttiram*, an arrow which has *śivaṉ* as its presiding deity. *"தவம் புரியச் சைவாத்திரங் கொடுக்கவாங்கி" (கடம்பர்.உலா.34).*

[Skt. śaiva+āstra > த. சைவாத்திரம்]

சைனம் *śaiṉam*, பெ.(n.) சமண மதம்; jainism.

[Skt. jaina > த. சைனம்]

சைனர் *śaiṉar*, பெ.(n.) சீன நாட்டவர் (யாழ்.அக.); Chinamen .

[E. china > த. சைனர்]

சைனன் *śaiṉaṉ*, பெ.(n.) 1. அருக சமயத்தவன்; a Jaina. 2. புத்தன் (திவா.); Buddha. 3. அருகக் கடவுள்; Arhat.

[Skt. caina > த. சைனன்]

சைனாக்கோழி *šainā-k-kōḻi,* பெ.(n.) அடைகாக்காமல் முட்டை பொரிக்குஞ் சீனக்கோழி; a species of fowl which hatches eggs without brooding.

[Skt. China > த. சைனா+கோழி]

சைனாகமம் *šaiṉāgamam,* பெ.(n.) அங்காகமம், பூர்வாகமம், பகு சுருதியாகமம் என முப்பகுதிப்பட்ட சைன சமய ஆகம நூல் (சீவக.1246, உரை); the sacred scriptures of the Jainas, of three kinds, viz aṅgākamam, Pūrvākamam, paku-šuruti-y-ākamam.

[Skt. Jaina+ā+gama > த. சைனாகமம்]

சைனியம் *šaiṉiyam,* பெ.(n.) சேனை; army.

[Skt. sainya > த. சைனியம்]

சொக்கம்[1] *šokkam,* பெ.(n.) 1. தூய்மை; genuineness, purity, excellence, as of gold, silver. 2. அழகு; beauty (பிங்.). 3. **சொக்கத்தாண்டவம்** பார்க்க; see *sokka-t-tāṇḍavam.* "சொக்க மவினை நாடகம்" (சிலப். பதி. 73, உரை) 4. செம்பு; ruby (சங்.அக.).

*[Skt. svaccha> **Pkt.** šokkha > த. சொக்கம்]*

சொக்கம்[2] *šokkam,* பெ.(n.) அமரருலகு; Indra's heaven.

[Skt. svarga > த. சொக்கம்]

சொக்கரா *šokkarā,* பெ.(n.) வேலைக்காரச் சிறுவன்; errand- boy, attendant.

[U. cōkrā > த. சொக்கரா]

சொக்காக்கீரை *šokkā-k-kīrai,* பெ.(n.) கீரை வகை; a species of greens.

[U. cokka > த. சொக்கா+கீரை]

சொகினம் *šogiṉam,* பெ.(n.) நிமித்தம்; omen. *"இன்னா சொகின மிசையா விரிச்சியும்" (பு.வெ.10, சிறப்பிற்.12).*

[Skt. šakana > த. சொகினம்]

சொகுசா *šogusā,* பெ.(n.) துத்தமுஞ் செம்புங் கலந்த மாழை; pinch beck, gold-like alloy of copper and zinc.

[U. sogsā > த. சொகுசா]

சொகுரு *šoguru,* பெ.(n.) தன்னுடைய ஆசாரியன்; one's own teacher (சிவநெறிப்பிர.உரை).

[சொ+குரு]

[Skt. sva> த. சொ]

சொச்சி *šocci,* பெ.(n.) 1. கோதுமைக்குருணை, சருக்கரை, நெய் அல்லது பால் கலந்திட்ட இனிய உணவு; a preparation made of wheat grits, sugar and ghee or milk. 2. பொரியரிசியால் ஆக்கிய உணவு; a kind of food prepared from fried rice.

த.வ. இன்னப்பம்

[H. suji > த. சொச்சி]

சொச்சொரூபம் *šo-c-corūbam,* பெ.(n.) தன்னியல்பு; inherent nature (சொரூபசா. சொரூபஸர்க்கம்).

[Skt.sva+svarūpa > த. சொச்சொரூபம்]

சொத்தம் *šottam,* பெ.(n.) 1. நலப்பாடு; convalescence, healthy condition. 2. நல்ல நிலை; comfortable circumstances. 3.பணியேதுமில்லாமலேயே நல்வாழ்க்கை வாழ்பவன்; being without any profession or calling.

த.வ. நலப்பாடு

[Skt. šva-stha > த. சொத்தம்]

சொத்தானம் *šottāṉam,* பெ. (n.) 1.சொந்தஇடம்; one's own place. 2.உடம்புடனே (சரீரத்துடன்) உயிர்த்தெழுகை (R.C); resurrection.

[Skt. sva+stnāna > த. சொத்தானம்]

சொத்தி[1] *šotti,* பெ.(n.) 1. ஈடுபாடு இன்மை; negligence. *'அவன் சொத்(ஸ்)தியால் அது*

நடக்கவில்லை'. 2. சோம்பேறித்தனம்; laziness.

[Persn. susti > த. சொத்தி]

சொத்தி² *šotti,* பெ.(n.) வெறுமை; nothing. *சொத்தை யெல்லாம் சொத்தியாக்கி விட்டான்.*

த.வ. பாழ்

[Persn. susti > த. சொத்தி]

சொத்திரீ *šottiri,* பெ.(n.) திருமணம் செய்த மனைவி (பத்தினி); wedded wife.

த.வ. இல்லாள், மனையாள்

[Skt. sva+strī > த. சொத்திரீ]

சொத்து *šottu,* பெ.(n.) 1. அசைவதும் அசையாததுமாகிய (தாவர சங்கமங்களாகிய) உடைமை; property, possessions, being of two kinds, viz., *tāvaram* and *šaṅgamam.* 2. பொன்; gold. *"சொத்துற் றமைந்த சுதையில் செஞ்சுவர்" (பெருங்.உஞ்சைக்:34, 221).*

த.வ. உடைமை, உரிமைப்பொருள்

[Skt. svam > த. சொத்து]

சொத்துவம் *šottuvam,* பெ.(n.) 1. பொருள் உரிமை (சங்.அக.); right, proprietorship, title, claim 2. தான் தோன்றி (சுயம்பு); self-existence, independent condition.

த.வ. உரிமம்

[Skt. sva-tva > த. சொத்துவம்]

சொப்பனக்கலிதம் *šoppaṉa-k-kalidam,* பெ.(n.) கனவில் நேரும் விந்து வெளிப்பாடு; spermatorrhoea during dream.

த.வ. கனாக்கசிவு

[Skt.svapna+skhalida > த.சொப்பனஸ் கலிதம் > த. சொப்பனக்கலிதம்]

சொப்பனம் *šoppaṉam,* பெ.(n.) 1. கனவு; dream. *"ஏட்டுக்கடங்காச் சொப்பனம் போல்" (தாயு.சொல்லற்.10).* 2. **சொப்பனாவத்தை** பார்க்க; see *šoppaṉāvattai.* 3. மாயத் தோற்றம்; illusion; transience.

த.வ. கனவு

[Skt. svapna > த. சொப்பனம்]

சொப்பனாவத்தை *šoppaṉāvattai,* பெ.(n.) ஆதன் (ஆன்மா) கண்டத்தில் நிற்க, மனம் வேலை செய்து கொண்டும், உறுப்புகள் (இந்திரியங்கள்) பத்தும் தொழிலின்றியும் உள்ள நிலை (சி.சி.4: 33, நிரம்ப.); dreams state in which the soul is in the neck, the mind is working and the sense organs are at rest.

[Skt.svapna+avasthā>த. சொப்பனாவத்தை]

சொப்பனேந்திரியம் *šoppaṉēndiriyam,* பெ.(n.) ***சொப்பனக்கலிதம்*** பார்க்க; see *soppaṉa-k-kalidam.*

[Skt.svepna+indriya>த. சொப்பனேந்திரம்]

சொப்பிரகாசம் *šoppiragāšam,* பெ.(n.) தற்பேரொளி; self - luminosity, self-radiance. *"சொப்பிர காசமாய் விளங்குஞ் சந்திர னிடத்தில்" (வேதா.சூ.56, உரை).*

த.வ. தான்தோன்றிபேரொளி

[Skt. svaprakāšā > த. சொப்பிரகாசம்]

சொம் *šom,* பெ.(n.) சொத்து; property, wealth, one's own goods. *"சொம் மனைவைத் தெப்படி நடப்பீர்" (குமர. பிர.காசிக்.34).*

த.வ. செல்வம், உடைமை

[Skt. svam > த. சொம்]

சொயம் *šoyam,* பெ.(n.) 1. சொந்தமானது; one's own. (பெ.அ.) 2. சொந்தமான; one's own.

த.வ. தன், தனது

[Skt. svayam > த. சொயம்.]

சொயம்பு *šoyambu,* பெ.(n.) தானே தோன்றியது; anything considered to be uncreated.

த.வ. தான்தோன்றி

[Skt. svayam-bhū > த. சொயம்பு]

சொர்க்கப்படம் *šorkku-p-padam,* பெ.(n.) கட்டங்களிற் காய்கள் வைத்தாடும் ஒருவகைப் படம்; board for a kind of back gammon.

த.வ. பரமப்படம்

[Skt. svarga> த. சொர்க்கம்+படம்]



சொர்க்கம்[1] *šorkkam,* பெ.(n.) தேவருலகு (சூடா.); Indra's heaven. "மேல் வீடு சொர்க்கமென்றும்" (தாயு.மௌன.4).

[Skt. svarga> த. சொர்க்கம்]

சொர்க்கம்[2] *šorkkam,* பெ.(n.) மாதர் மார்பகம் (சூடா.); woman's breast.

[Skt. su-varga> த. சொர்க்கம்]

சொர்க்கவாசல் *šorkka-vāšal,* பெ.(n.) **சுவர்க்க வாசல்** பார்க்க; see šuvarkka-vāšal.

[Skt. svarga> த. சொர்க்கம்+வாசல்]

சொர்ணக்கல் *šorṇa-k-kal,* பெ.(n.) வைடூரியம் lapis lazuli.

[Skt. svarṇa> த. சொர்ணம்+கல்]

சொர்ணகருணைபாடாணம் *šorṇa-karuṇai-pāḍāṇam,* பெ.(n.) மச்சமுனி 800ல் கூறியபடி, இலிங்கம் சிலை, தாரம், சூதம், நாகம், வீரம், காரம் இவற்றைச் சமமாகப் பொடித்து தங்க அகலில் வைத்துப் பிறகு அதைத் தாழிக்குள் வைத்து மணலிட்டுக் கதிக்க எரித்திட தங்கமும் ஒத்துக்கூடி உருகி இறுகி மணிபோலிருக்கும். வேதைக்குதவும், மாழையில் மாட்டிடத் தங்கமாம்; this is a ball prepared by the process mentioned in Machamuni 800, using gold, mercury zinc, a few arsenics etc. It is useful in Alchemy (சா.அக.).

த.வ. பொன்கருணைச் செய்ந்நஞ்சு

[சொர்ணம் + கருணை + பாடாணம்]

சொர்ணகனம் *šorṇagaṇam,* பெ.(n.) வைடூரியம்; cats eye (சா.அக.).

[சொர்ணம் + கனம்]

சொர்ணசீரகம் *šorṇa-sīragam,* பெ.(n.) 1. சிவப்புச் சீரகம்; red cumin 2. கரும்பு (மலை.); sugarcane (சா.அக.).

[சொர்ணம் + சீரகம்]

சொர்ணசீரத்திரயம் *šorṇašīra-t-tirayam,* பெ.(n.) மஞ்சள் குன்றிமணி; yellow crabs eye (சா.அக.).

[சொர்ணம் + சீரத்திரயம்]

சொர்ணசீரம் *šorṇa-šīram,* பெ.(n.) கரும்புச் சாறு; juice of sugarcane (சா.அக.).

[சொர்ணம் + சீரம்]

சொர்ணத்திராவகம் *šorṇa-t-tirāvagam,* பெ.(n.) தங்கத்தைக் கரைக்கும் ஒரு மூலப்பொருள்; a mineral solvent of gold.

த.வ. பொன்னாக்கநீர்மம்

[சொர்ணம் + திராவகம்]

சொர்ணப்பூடு *šorṇa-p-pūḍu,* பெ.(n.) கோடகசாலை (பதார்த்த:252); a very small plant-*Juatica procumbens* (சா.அக.).

[சொர்ணம் + பூடு]

சொர்ணபட்டி *šorṇapaṭṭi,* பெ.(n.) நாக செண்பகம்; common yellow trumpet - flower tree-*Tecoma stans* (சா.அக.).

த.வ. மஞ்சளலரி

[சொர்ணம் + பட்டி]

[Skt. svarṇa > த. சொர்ணம்]

சொர்ணபற்பம் *šornaparpam,* பெ.(n.) தங்கப்பொடி; golden powder.

த.வ. பொன்னீறு

[சொர்ணம் + பற்பம்]

சொர்ணபூங்காலி *šorna-pūṅgāli,* பெ.(n.) மூல்தான் மண்; mulltan mud so called of its yellowish red colour (சா.அக.).

த.வ.செம்பூங்காவி

[சொர்ணம் + பூங்காலி.]

சொர்ணபேதி *šorna-bēdi,* பெ.(n.) 1. தங்கத்தைக் கரைக்கும் ஒரு தாதுப் பொருள்; a mineral solvent of gold. 2. பொன்னைக் கரைக்கும் ஒரு நீர்மம்; aquaregia capable of dissolving gold (சா.அக.).

த.வ. பொன்கரைச்சி

[சொர்ணம் + பேதி.]

சொர்ணம் *šornam,* பெ.(n.) 1. பொன்; gold. **சொர்ணப்பூடு** பார்க்க; see šorna-pūḍu.

[Skt.svarna > த. சொர்ணம் (→சொன்னம்.)]

சொர்ணமாக்கி *šornam-ākki,* பெ.(n.) பவள நஞ்சு; prepared arsenic (சா.அக.)

த.வ. பொன்னாக்கி

[சொர்ணம் + ஆக்கி.]

சொர்ணமாட்சிகம் *šorna-māṭcigam,* பெ. (n.) பொன்னிமிளை; gold pyrites (சா.அக.).

த.வ. மஞ்சள்நிமிளை

சொர்ணமாட்சிகை *šorna-māṭcigai,* பெ.(n.) **சொர்ணமாட்சிகம்** பார்க்க; see *šornamāṭcigam* (சா.அக.).

சொர்ணமூலி *šorna-mūli,* பெ.(n.) 1. பொன்னிருக்கும் மூலிகைப் பூடு; herbs containing gold. 2 பொன் செய்வதற்குப் பயன்படும் மூலிகைகள்; herbs used in Alchemy (சா.அக.).

த.வ. பொன்மூலி

[சொர்ணம் + மூலி.]

[Skt. svarna> த. சொர்ணம்.]

சொர்ணலிங்கச்செந்தூரம் *šorna-liṅga-c-cendūram,* பெ.(n.) தங்கமும் இலிங்கமும் சேர்த்துச் செய்த செந்தூரம்; red coloured calcination of gold and cinnabar (சா.அக.).

த.வ. பொன்னிலங்கள் செந்தூளம்

[சொர்ணம் + இலிங்கம் + செந்தூரம்.]

[Skt. svarna > த. சொர்ணம்]

சொர்ணவாதியதிமதுகம் *šorna-vādiyadi madugam,* பெ.(n.) சிறு குறிஞ்சா; small Indian ipecacuanha-*Gymnema sylaestre* (சா.அக.).

[சொர்ணம் + வாதி + அதிமதுகம்.]

சொரிதம் *šoridam,* பெ.(n.) நலிதலோசை; circumflex accent. *"ஓசை யனுதாத்த சொரிதந் தழுவவோதி" (திருவிளை. தடாதகை.8).*

த.வ. நலிதலோசை

[Skt. svarita > த. சொரிதம்.]

சொருக்கம் *šorukkam,* பெ.(n.) தேவருலகு (சூடா.); Indra's heaven.

த.வ. அமரருலகு

[Skt. svarga > த. சொருக்கம்.]

சொருக்கத்தராதல் *šorukkattarā-dal,* தொ.பெ.(vbl.n.) இறத்தல்; dying. *"பரமேசுரா பேபாத்தரயர் சொர்க்கஸ்தராவது" (S.I.I.iv, 10).*

[சொருக்கம்+அராதல்]

[Skt. svarga+ > த. சொர்க்கம் > சொருக்கம்]

சொரூட்சா *šorūṭšā,* பெ.(n.) 1. வெள்ளுள்ளி; garlic. 2. வெள்ளை வெங்காயம்; white onion (சா.அக.).

த.வ. பூண்டு

சொரூபசூசகம் *šorūba-šūšagam,* பெ.(n.) ஒரு காம நூல்; a treatise on love and love affair (சா.அக.).

[சொரூபம் + சூசகம்.]

சொரூபஞானம் *šorūba-ñānam,* பெ.(n.) 1. மெய்யறிவு; divine knowledge, knowledge of the diety or of the soul as obtained by divine aid; real wisdom. 2. ஆதனறிவு; knowledge of the soul as opposed to செய்தி அறிவு; knowledge derived by the senses (சா.அக.).

[Skt. sva-rūpa+jñāna> த. சொரூப ஞானம்]

சொரூபம்[1] *šorūbam,* பெ.(n.) 1. இயற்கைத் தன்மை; real nature, natural state or condition. *"ஆன்மாவி னிசசொரூபமிதுவென வுணர்தல்" (வேதா.சூ.29)* 2. சாயல்; exact likeness, resemblance. *அவனுடைய சொரூபமாய் இவன் இருக்கிறான்* (சங்.அக.). 3. வடிவம்; form, shape. *பேதமா முரணவித்த சொரூபம் (திருப்போ.சந்.கட்டளைக்.5).* 4. படிமம் (பிரதிமை); image, idol. 5. குணங் குறியின்றி ஒன்றாய் யாவுங் கடந்த பதி; the Supreme Being, as the one, the Indivisible, the attributeless etc., opp. to *tațattam.* 6. **சொரூபலட்சணம்** பார்க்க; see *šorūba-lațcaṇam. "மாகனலி விளங்குகதிர் சொரூபனெனல்போ லான்மாவி நிசசொரப மிதுவெனவுணர்தல் சொரூபம்" (வேதா.சூ.29).*

த.வ. தன்னியல்பு

[Skt. sva-rūpa > த. சொரூபம்.]

சொரூபம்[2] *šorūbam,* பெ.(n.) அழகு; beauty.

த.வ. நல்லுருவம்

[Skt. su-rūpa > த. சொரூபம்.]

சொரூபமணி *šorūbamaṇi,* பெ.(n.) கருவூரார் நூற்பாவிற் சொல்லியுள்ள இதளியமணி; consolidated and mercurial ball prepared as contemplated in *Karuvūrāršūttiram* (சா.அக.).

[சொரூபம் + மணி.]

[Skt. sva-rūpa > த. சொரூபம்]

சொரூபலட்சணம் *šorūba-lațcaṇam,* பெ.(n.) 1. பரப்பிரமத்தின் சச்சிதானத்துருபமான உண்மை இயல்பு (வேதா.சூ.29, உரை); the real nature of God as the Ever-existing, Ever-knowingand Ever-blissful 2. சிறப்பியல்பு (சி.சி.1, 70, சிவஞா.); special, distinquishing attributes.

த.வ. தெய்வஇயல்பு

[Skt. svarūpa-lakṣaṇa > த. சொரூபலட்சணம்.]

சொரூபவித்து *šorūbavittu,* பெ.(n.) தன்னியல்பை உணர்ந்தவன்; one who has attained self-realisation. *"சொரூபவித்தான மேலோர் சுபாவமே யர்குமன்றோ" (விவேக சூடா.43).*

த.வ. தன்னுணர்ந்தான்

[Skt. svarūpavid > த. சொரூபவித்து.]

சொரூபன் *šorūbaṉ,* பெ.(n.) பாம்பாட்டி சித்தன்; *Pāmpāțți Siddhar* (சா.அக.).

சொரூபானாந்தம் *šorūbāṉandam,* பெ. (n.) 1. முழு (பூரண)வின்பம் (சங்.அக.); perfect bliss 2. தமிழிலுள்ள ஒரு வேதாந்த நூல்; a treatise on *Vēdānta* in Tamil.

த.வ. முழுவின்பம்

[Skt.svarūpānanda >த. சொரூபானந்தம்.]

சொரூபானாந்தர் *šorūbāṉandar,* பெ. (n.) தமிழில் இரண்டன்மை (அத்துவித) நூல்கள் பல இயற்றிய ஒரு பெரியார் (பெருந்திரட்டு); an ascetic, author of many treatises in Advaita on *Vēdānda* in Tamil.

[Skt.svarūpānanda >த. சொரூபானந்தர்.]

சொரூபானுபூதி *šorūbāṉubūdi,* பெ.(n.) பதியுடன் உயிர் ஐக்கியமுற்று நிற்கும் நிலை; state of communion with God. *"சொரூபானு பூதி காட்டி" (தாய.சின்மயா.1).*

த.வ. இறைசேருயிர்

[Skt.svarūpa+anu-bhūti > த. சொரூபானு பூதி.]

சொரூபி *śorūbi,* பெ.(n.) உருவமுள்ளவள் (யாழ்.அக.); one who has form.

[Skt. sva-rūpin > த. சொரூபி.]

சொற்பசீவனம் *śoṟpa-śīvaṉam,* பெ.(n.) வறுமைப்பட்ட வாழ்வு; precarious living, living from hand to mouth.

த.வ. சீரில்வாழ்வு

[Skt. svalpa > த. சொற்பசீவனம்.]

சொற்பம் *śoṟpam,* பெ.(n.) 1. சிறுமை; smallness, slightness, meanness. 2. சிறியது; trifle, that which is small or insignificant.

[Skt. svalpa > த. சொற்பம்.]

சொற்பவிருமல் *śoṟpa-virumal,* பெ.(n.) சிணுக்கிருமல்; slight cough (சா.அக.).

த.வ. நச்சிருமல்

சொற்பனம் *śoṟpaṉam,* பெ.(n.) ***சொப்பனம்*** பார்க்க; see *śoppaṉam. "சொற்பன நடுமனையை விளக்கியே" (வேதா.சூ.10).*

[Skt. svapna > த. சொற்பனம்.]

சொற்பானு *śoṟpāṉu,* பெ.(n.) கருங்கோள் (இராகு); moon's ascending node. *"புகழுஞ் சொற்பானுவென்றும்" (மச்சபு.புவனகோ.27).*

த.வ. கருங்கோள்

[Skt. svarbhānu > த. சொற்பானு.]

சொன்னகாரன் *śoṉṉakāraṉ,* பெ.(n.) தட்டான் (பிங்.); goldsmith.

த.வ. பொன்னாசாரி

[Skt. svarṇa-kāra > த. சொன்னகாரன்.]

சொன்னதானம் *śoṉṉa-dāṉam,* பெ.(n.) பொன்னை வழங்குகை; gift of gold or money. *"சொன்னதானப் பயனெனச் சொல்லுவர்" (கம்பரா.சிறப்பு.).*

த.வ. பொற்கொடை

[Skt. svarṇa> த. சொன்னம்+தானம்.]

சொன்னம் *śoṉṉam,* பெ.(n.) தங்கம் (திவா.); golds.

த.வ. பொன்

[Skt. svarṇa > த. சொன்னம்.]

சொன்னயாகம் *śoṉṉa-yāgam,* பெ.(n.) இரணியகருப்பம்; ceremony of passing through the hollow golden image of a cow. *"நீள்சொன்ன யாகபலம்... ஒய்ந்து" (சேதுபு.பல.தீர்த்த.23).*

த.வ. பொன்

[Skt. svarna+ > த. சொன்னயாகம்.]

சோக்கதார் *śōkkadār,* பெ.(n.) சௌக்கிதார்; chowkidar. *"சோக்கதார் கடிகை மின்ன" (பிரதாப.விலா.2).*

[H. caukī > த. சோக்கதார்.]

சோக்கரா *śōkkarā,* பெ.(n.) ஊழியப் பையன்; boy attendant or servant.

த.வ. ஏவலாள்

[H. chōkra > த. சோக்கரா.]

சோக்கு *śōkku,* பெ.(n.) பகட்டு, ஆடம்பரம்; gaudiness pomp.

[U. shōkh> த. சோக்கு.]

சோகசாஅதிசாரம் *śogaśā-adiśāram,* பெ.(n.) மனக்கவலையினால் உண்டான கழிச்சல்; diarrhoea born of grief (சா.அக.).

சோகந்தெளிதல் *śōgandeḷidal,* தொ.பெ. (vbl.n.) மயக்கம் நீங்கி தெளிவடைதல்; recovering from swoon or fainting (சா.அக.).

த.வ. அயற்சிநீங்கல்

[சோகம் + தெளிதல்.]

[Skt. sōham > த. சோகம்]

சோகநிவர்த்தி *śōga-nivartti,* பெ.(n.) 1. துன்பத்தினின்றும் விலகுகை; relief from

affliction. 2. பிறப்பு இறப்பு துன்பம் (துக்கம்) தனக் கில்லை என்று தள்ளி நிற்கை; the sixth state of seven states of soul, to stand along that he is free from births or death (சா.அக.).

[சோகம் + நிவர்த்தி.]

சோகபித்தரோகம் *šōgapitta-rōgam,* பெ. (n.) தலைதிருப்பல், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், உடம்பில் தடிப்பு, செரியாமை, வயிற்றுப் பொருமல், தொடைகளில் வலி முதலிய குணங்களைக் காட்டும் ஒரு வகைப் பித்த நோய்; this is a bilious disease characterised by burning sensation of hands and feet indigestion bloating of abdomen, pain in the thighs etc. (சா.அக.).

த.வ. பித்தநோய்

[சோகம் + பித்தம் + ரோகம்.]

சோகம் *šōgam,* பெ.(n.) 1. சோம்பல்; drowsiness, langour. 2. சோர்வு; a state of extreme prostration and depression with failure of circulation collapse. 3. நினைவிழக்கை (மூர்ச்சை); swoon. 4. மனநோய்; loss of consciousness. 5. மயக்கம்; fainting. 6. உருண்டை; ball. 7. ஓகிருக்கை (யோகாசனம்) செய்கையில், மந்திரத்தைப் பலுக்கினால், வரிசையாக மூச்சு அடங்கி மெய்யறிவாளர்கள் தன் வயப்பட்டு நிற்கும் ஆடசைவு அற்றநிலை; a course of meditation on the mystic syllable 'om' in which the breath is controlled several faculties are brought to subjection and calmness or tranquility of mind is established (சா.அக.).

[Skt. šōka > த. சோகம்]

சோகம்பாவனை[1] *šōgambāvaṉai,* பெ.(n.) தனக்கு இன்னல்கள் பல இருப்பதாக எப்பொழுதும் எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் தன்மை; melancholia which is popularly known as vapours because the person fancies himself the subject of various bodily ills, and does not believe if told there is nothing wrong in him.

த.வ. தன்வருத்தி

[சோகம் + பாவனை.]

சோகம்பாவனை[2] *šōgambāvaṉai,* பெ.(n.) உயிர்களின் ஆதன் பரம்பொருளோடு ஒன்றிக் கலத்தல்; the union of the individual soul (சா.அக.).

(சோகம் + பாவனை.)

சோகம்பாவி-த்தல் *šōgampāvittal,* 4 செ. குன்றாவி.(v.t.) தன்னைப் பரம்பொருள் அல்லது சிவனே எனக்கருதி ஒன்றுதல்; meditating on the assumption of his being one with the Supreme Being (சா.அக.).

[சோகம் + பாவி-த்தல்.]

சோகம்போடுதல் *šōgam-pōḍu-dal,* தொ. பெ.(vbl.n.) மயங்கிச் சோர்வடைதல்; fainting as in collapse (சா.அக.).

[சோகம் + போடுதல்.]

[Skt. sōham > த. சோகம்]

சோகமாதிதம் *šōgamādidam,* பெ.(n.) கோங்கு; false tragacanth, golden silk cotton (சா.அக.).

த.வ. கோங்கிலவு, முன்னிலவு

சோகரிகன் *šogarigaṉ,* பெ.(n.) வேட்டைக் காரன் (யாழ்.அக.); shikari, hunter.

த.வ. வேடன்

[U. shikār > த. சோகரிகன்.]

சோகரியம் *šōgariyam,* பெ.(n.) ஏந்து (சௌகரியம்); comfort. *சோகரியமாய் வளர்ந்தவள்.*

த.வ. வளப்பம்

[Skt. saukarya > த. சோகரியம்.]

சோசியம் *šōšiyam,* பெ.(n.) கணியம்; astrology.

த.வ. கணியம்

[Skt. jyōtiṣa > த. சோசியம்.]

சோசியன் *šōšiyan,* பெ.(n.) கணியன்; astrologer.

[Skt. jyōtiṣa > த. சோசியன்.]

சோட்டா *šōṭṭā,* பெ.(n.) 1. இலேசான; light. 2. சிறிய; little, small.

[H. chōṭā > த. சோட்டா.]

சோட்டாப்பையன் *šōṭṭā-p-paiyan,* பெ.(n.) ஊழியச் சிறுவன்; boy-attender.

த.வ. ஏவலன்

[சோட்டா+பையன்]

[H. chōṭā > த. சோட்டா]

சோட்டாகச்ரி *šōṭṭākacri,* பெ.(n.) சிற்றுணவு; light refreshment; chota hazari.

த.வ. சிற்றுண்டி

[H. chōṭa+Ar. hāziri > த. சோட்டாகச்ரி.]

சோடசகலை *šōḍašakalai,* பெ.(n.) மாந்தன் உடம்பில் ஆற்றல் நிலைத்திருக்கும் 16 ஒக நிலைகள்; the sixteen mystic centres in the human body in which the goddess Sakthi manifests herself.

த.வ. ஓகப்புள்ளி

[சோடசம் + கலை.]

[Skt. sōḍašā > த. சோடசம்]

சோடசத்தொன்று *šōḍasa-t-tonru,* பெ.(n.) மாகாணி, வீசம், பதினாறில் ஒன்று; (1/16 part) one sixteenth part (சா.அக.).

[சோடசம் + அத்து + ஒன்று]

சோடசதானம் *sōḍaša-dānam,* பெ.(n.) பதினாறு வகைப்பட்ட கொடை (சங்.அக.); the sixteen kinds of gifts.

[Skt. ṣōḍaša-tāna > த. சோடசதானம்.]

சோடசபாவனை *šōḍašā-bāvanai,* பெ.(n.) சமண சமயத்து இல்லறத்தானும், துறவியும் செய்த வினை நீக்கத்தின் பொருட்டு மேற்கொள்ளும் பதினாறு இயல்புகள்; the sixteen kinds of mental exercises by which the layman and the monk can arrest the inflow of karma. *"பட்டினிகளோடே சோடச பாவனைகளை மருவி" (சீவக.3133, உரை).*

(சோடசம் + பாவனை.)

[Skt. ṣōḍaša+ > த. சோடசம்.]

சோடசம் *sōḍašam,* பெ.(n.) 1. பதினாறு (யாழ்.அக.); sixteen 2. இறந்தவர் பொருட்டுப் பன்னிரண்டாநாள் பதினறுவர்க்கு உண வளிக்கும் ஒரு சடங்கு; ceremony of feeding 16 persons, generally on the 12th day of the funeral rite. 3.**சோடசோபசாரம்** பார்க்க; see *sōḍašōbašāram. "சோடசத்தாற் பணிமாறி" (குற்றா.தல. சிவரக.3: 121).*

[Skt. sōdaša > த. சோடசம்.]

சோடசவாண்டுமூலி *šōḍaša-vāṇḍu-mūli,* பெ.(n.) பசியெடுக்காதிருக்க சித்தர்கள் பதினாறு ஆண்டுகளுக்கு ஒரு முறை உண்ணும் மூலிகை; a rare drug used by Siddhars to keep them off from hunger and thrist, they ate this drug once in sixteen years (சா.அக.).

த.வ. பசிதீர்மூலி

[சோடசம் + ஆண்டு + மூலி.]

சோடசாகம் *šōḍašāgam,* பெ.(n.) வேள்வி இருபத்தொன்றனுள் பதினாறு நாட்கள் தொடர்ந்து செய்யப்படும் ஒரு வகை வேள்வி; a sacrifice performed for 16 days, one of 21 *yākam,* q.v. (திருவிளை.தலவி.9),

[Skt. sōdašāha > த. சோடசாகம்.]

சோடசாவதானம் *šōḍašāvadānam,* பெ.(n.) பதினாறு வகையான வெவ்வேறு

செயல்களை ஒரே நேரத்தில் மனத்துட் கொண்டு செய்து முடிக்கை; art of performing sixteen different acts at the same time.

[Skt. ṣōḍaša+avatana>த.சோடசாவ தானம்]

சோடசி *sōḍasi,* பெ.(n.) **சோடசாகம்** பார்க்க; see *šōḍašāgam.*

[Skt. sōḍašin > த. சோடசி.]

சோடசோபசாரம் *šōḍašōbašāram,* பெ.(n.) பதினாறு வகைப் பணிவிடைகள் (உபசாரம்); the sixteen acts of homage and honour paid deities and venerable personages.

த.வ. ஈரெண்பணிவிடை

[Skt. ṣōḍša+upacāra > த. சோடசோப சாரம்]

ஆசனம், சுவாகதம், பாத்தியம், அர்க்கியம், ஆசமனீயம், மதுபர்க்கம், ஆசமனம், ஸ்னானம், ஆடை, ஆபரணம், கந்தம், புட்பம், தூபம், தீபம், நைவேத்தியம், வந்தனம் அல்லது மஞ்சனம், பூ, கந்தம், தூபம், தீபம், நீர், அமுது, தூசு, அடைக்காய், ஆடி, குடை, கவரி, ஆலவட்டம், விசிறி, ஆடல், வாச்சியம் *āšanam, šuvākatam, pāttiyam, arkkiyam, āšamaniyam, snanam, ādai, āparaṇam, kantam, putpam, tūpam, naivēttiyam, vantanam;* or *mañjanam, pū, kandam, tūbam, tībam, nīr, amuda, tūšu, aḍaikkāy, āṭi, kuḍai, kavari, ālavaṭṭam, visiṟi, āḍal, vācciyam.*

சோடணம் *šōḍaṇam,* பெ.(n.) 1. உலருகை; drying. 2. உமிந்து குடிக்கை, நாவினால் சாரம் வாங்கிக் குடிக்கை; sipping (சா.அக.).

[Skt. šōṣaṇa > த. சோடணம்.]

சோடணி *šōḍaṇi,* பெ.(n.) வற்றச் செய்யக் கூடியது; anything which absorps-Absorbent (சா.அக.).

[Skt. šōṣaṇi > த. சோடணி.]

சோடத்திராவம் *šōḍa-t-tirāvam,* பெ.(n.) ஒருவகை உப்பு எரி நீர்; soda flux (சா.அக.).

[சோடம் + திராவம்.]

சோடம் *sōḍam,* பெ.(n.) காமத்தால் வரு கின்ற சூடு; abnormal heat arising from love sickness (சா.அக.).

த.வ. காமச்சூடு

[Skt. šōṣa > த. சோடம்.]

சோடனை *šōḍaṉai,* பெ.(n.) **சோடினை** பார்க்க; see *sōḍiṉai.*

[H. joḍna > த. சோடனை.]

சோடா *šōḍā,* பெ.(n.) 1. ஒருவகை உப்பு; soda, bicarbonate of soda. 2. ஒருவகைப் பருகம்; aerated drink.

[E. soda > த. சோடா.]

சோடாபொட்டிலுப்பு *šōḍā-p-poṭṭiluppu,* ஒரு வகை மருந்துப்பு; nitrate of soda, chilian saltpetre.

[சோடா + பொட்டில் + உப்பு.]

[E. soda > த. சோடா.]

சோடாவுப்பு *šōḍā-v-uppu,* பெ.(n.) மண்காரம் (பூநீர் விளையும் நிலத்தில் இருந்து உவர்மண் காரம் எடுத்து, அதை தூய்மை செய்த உப்பு); bicarbonate cf soda. Its a carbonate of soda mixed with various impurities and obtained from pooneer (சா.அக.).

த.வ. உழமண்உப்பு

[சோடா + உப்பு.]

இது கடற்கரையிலுள்ள பூண்டுகளைக் கொளுத்தி அச்சாம்பலினின்றும், வேதி (இரசாயன) வழியாகப் பிரித்தும் எடுப்பதுண்டு. இது பெரும் பாலும் ஐரோப்பிய நாடுகளினின்று இறக்குமதி யாகிறது. மருத்துவத்திற்கும், பிற காரியங்களுக்கும் பயன்படுவதால் நன்கு விற்பனையாகிறது. இது வெள்ளைக் கட்டியாயும், தூளாகவும் கிடைக்கிறது. செரியாமைக்கும், நெருப்புக் காயங்களுக்கும் மருந்தாகப் பயன்படும்.

சோத்தம் *šōttam,* பெ.(n.) இழிந்தார் செய்யும் அஞ்சலி; expr. of salutation from an inferior *"சோத்தம் நம்பியென்று தொண்டர்.... அழைக்கும்" (திவ்.பெரியதி.2. 2: 6).*

[Skt. stōtra > த. சோத்தம்.]

சோத்தி *sōtti*, பெ.(n.) 1. சுழுத்தி; state of sound sleep. 2. நடுச்சாமம்; midnight.

த.வ. ஆழ்ந்ததூக்கம்

[Skt. susupti > த. சோத்தி.]

சோத்திகம் *sōttigam*, பெ.(n.) ஒன்பதுவகை இருக்கைகளுள் கால்களைக் குறுக்கிட்டு வைத்துக்கொண்டு உடல் நிமிர அமரும் ஒகஇருக்கை வகை; a yōgic posture symbolic of success, which consists in sitting with legs crosswise while the body is held erect and at case one of nine āsaṉam. *"சோத்திக மூருவுக்கு முழந் தாளுக்கு நடுவேயுள்ளந் தாட்டுணையைச் செலுத்தி யிறுமாந்திருத்தல்" (பிரபோத.44 : 7).*

[Skt. svastika > த. சோத்திகம்.]



சோத்தியம் *sōttiyam*, பெ.(n.) 1. வினா (நாஞ்.); question. 2. வியப்பு; surprise, astonishment, wonder. *'சோத்தியப்பட்டான்'.* 3. வியக்கத் தக்கது; wonderful or astonishing occurrence.

[Skt. cōdya > த. சோத்தியம்.]

சோத்திரம் *sōttiram*, பெ.(n.) 1. காது (பிங்.); ear . *"வாக்காதி சோத்திராதியும்" (தாயு. கருணா.2).* 2. கேள்வி (வின்.); hearing audience

[Skt. śrōtra > த. சோத்திரம்.]

சோத்திரியர் *sōttiriyar*, பெ.(n.) வேதப் பார்ப்பனர்; Brahmins versed in *Vēdas*. *"இத்தொழில்கொல் சோத்திரியர் செய்கை" (பிரபோத.11 : 65).*

[Skt. śrōtriya > த. சோத்திரியர்.]

சோதகம் *sōdagam*, பெ.(n.) 1. தூய்மை செய்கை(யாழ்.அக.); cleansing, purifying. 2. சோதனை; investigation, examination. 3. கழிக்குந் தொகை (யாழ்.அக.); minuend.

[Skt. sōdhaka > த. சோதகம்.]

சோதகும்பம் *sōdakumbam*, பெ.(n.) பார்ப்பனன் ஒருவனுக்குப் முன்னோர் பொருட்டுத் தண்ணீர் ஏனம் அளித்துப் புரியும் நினைவு சடங்கு; a ceremony in honour of the manes, in which a pot of water is given to a Brahmin.

[Skt. sōdakumbha > த. சோதகும்பம்.]

சோதம் *sōdam*, பெ.(n.) 1. தூய்மையான நீர்; clean or pure water. 2. வாலையிலிறக்கிய நீர்; distilled water. 3. வீக்கம்; swelling (சா.அக.).

சோதரம் *sōdaram*, பெ.(n.) உடன்பிறப்பு (யாழ்.அக.); relationship of persons born of the same parents, brotherhood: sisterhood .

[Skt. sōdara > த. சோதரம்.]

சோதரன் *sōdaraṉ*, பெ.(n.) உடன் பிறந்தவன்; uterine brother. *"தொந்திக் கணபதி மகிழ் சோதரனே" (திருப்பு.136).*

த.வ. பிறவன்

[Skt. sōdara > த. சோதரன்.]

சோதரி *sōdari*, பெ.(n.) உடன்பிறந்தவள்; uterine sister. *"மூர்க்ககுலத்தி விபீஷணன் சோதரி" (திருப்பு.136).*

த.வ. பிறவி

[Skt. sōdarī > த. சோதரி.]

சோதரிமாதறம் *sōdari-mādaṟam*, பெ.(n.) கன்னல் சருக்கரை; sugar prepared from the juice of sugarcane (சா.அக.).

த.வ. பழுப்புச் சருக்கரை

சோதரை *šōdarai,* பெ.(n.) **சோதரி** பார்க்க; see *šōdari* (சங்.அக.).

சோதளங்காய் *šōdaḷaṅgāi,* பெ.(n.) சமுத்திராப் பழம்; Indian oak (சா.அக.).

சோதனகசாயம் *šōdana-kašāyam,* பெ.(n.) தூய்மை செய்யப் பயன்படும் குடிநீர்; disinfecting decoction (சா.அக.).

த.வ. கருக்கு, வடிநீர், கியாழநீர்.

[சோதனம் + கசாயம்.]

சோதனகிருதம் *šōdana-kirudam,* பெ.(n.) தூய்மைப்படுத்தப் பயன்படும் மருந்து நெய்; disinfecting ghee (சா.அக.).

த.வ. மருந்து நெய்மம்

[சோதனம் + கிருதம்.]

சோதனத்திரவியம் *šōdana-t-tiraviyam,* பெ.(n.) தூய்மை செய்யப் பயன்படுத்தும் ஆமணக்கெண்ணெய், அத்திப்பால், ஆலம் பால் முதலியன; drugs used to remove the impurities from the body (e.g.) castor oil, milky juice of fig, milky, juice of banian (சா.அக.).

த.வ. வயிற்றுப்போக்கு மருந்து, கழிச்சல் மருந்து.

[சோதனம் + திரவியம்.]

சோதனதைலம் *šōdana-tailam,* பெ.(n.) தூய்மைப்படுத்தப் பயன்படும் மருந்து நெய்மம்; disinfecting oil (சா.அக.).

த.வ. வயிற்றுப்போக்கு மருந்து, கழிச்சல் மருந்து.

[சோதனம் + தைலம்.]

சோதனப்பத்திரம் *šōdana-p-pattiram,* பெ.(n.) பிழை திருத்தக்குறிப்பு; table of errata (தற்.).

[Skt. šōdhana+patra>த. சோதன பத்திரம்.]

சோதனப்பிரலேபனம் *šōdana-p-piralē banam,* பெ.(n.) தூய்மை செய்யும் களிம்பு; disinfecting ointment (சா.அக.).

த.வ. கழிச்சல் மருந்து

[சோதனம் + பிரலேபனம்.]

சோதனம் *šōdanam,* பெ.(n.) 1. ஆராய்கை; examining, investigating (யாழ்.அக.). 2. மாழைகளின் தரத்தைச் ஆய்வு செய்கை; assaying metals. 3. மாழைகளைப் புடமிட்டுத் தூய்மை செய்கை; refining metals. 4. நற்குறி; omen, augury (பிங்.).

[Skt. šōdhana > த. சோதனம்.]

சோதனவத்தி *šōtanavatti,* பெ.(n.) துணியைத் திரித்து மருந்தில் நனைத்துப் புண்ணின் உட்புறத்தைத் தூய்மைப்படுத்த வேண்டிய இடத்திற்குள் நுழைக்கும் திரி (வத்தி); a lint soaked or saturated with medicine and inserted into an ulcer or sinus for the purification of interior-Aseptic plug (சா.அக.).

த.வ. காரசீலை

[சோதனம் + வத்தி.]

சோதனாபிரதிகாலம் *šōdanāpiradikālam,* பெ.(n.) சான்று உசாவலுக்காக வழக்கை ஒத்திவைக்கை; adjournment of a suit for examination of witnesses (சுக்கிரநீதி. 282).

த.வ. ஒத்திவைப்பு

[சோதனம் + பிரதி+காலம்.]

[Skt. cōdanā+prati+> த. சோதனாபிரதி]

சோதனி *šōdani,* பெ.(n.) 1. துடைப்பம்; broom, besom, brush (பிங்.). *"முன்றில் சோதனி கொண்டு துடைத்து" (சேதுபு. மங்கல.40).* 2. செத்தை (சூடா.); dry rubbish, decayed vegetable matter.

த.வ. விளக்குமாறு; பெருக்குமாறு; வாரியல்

[Skt. šōdhani > த. சோதனி.]

சோதனை[1] *śōdaṉai,* பெ.(n.) 1. தேர்வு; examination, inspection, trial. *"பொற்றோள் வலி நிலைசோதனை புரிவானனைச யுடையேன்" (கம்பரா.பரளசுரா.18).* 2. தெய்வ ஆய்வுத் தேர்வு; divine trial. 3. ஆராய்ச்சி; sifting, search, investigation. 4. தீமை செய்தவற்குத் தூண்டுகை; temptation. 5. மாழைகளின் தரத்தைச் ஆய்வு செய்கை (வின்.); assaying metals. 6. ஒரு முகத்தலளவு; a kind of measure (j.).

த.வ. நோட்டம்

[Skt. śōdhanā > த. சோதனை.]

சோதனை[2] *śōdaṉai,* பெ.(n.) கழிச்சல் மருந்து; purgative (இ.வ.).

[Skt. cōdanā > த. சோதனை.]

சோதனை[3] *śōdaṉai,* பெ.(n.) குறிப்பு; direction, hint. *"என்றன் சோதனை நோக்கிச் செய்தி" (கம்பரா.இராவணன் வதை.6).*

[Skt. cōdanā > த. சோதனை.]

சோதனைக்கம்பி *śōdaṉai-k-kambi,* பெ.(n.) பொன் மாற்றுகளை அறிவதற்கான கம்பிகள் அல்லது ஆணிகள்; a bunch of touch nails for finding out the different standards in the fineness of gold as carets (சா.அக.).

த.வ. உரைக்கம்பி

[சோதனை + கம்பி.]

[Skt. śōdhanā > த. சோதனை.]

சோதனைக்கருவி *śōdaṉai-k-karuvi,* பெ. (n.) ஆய்வு செய்யப் பயன்படும் கருவிகள்; articles or instruments used while examining such as probe, specula, catheter, stethescope etc. (சா.அக.).

த.வ. ஆய்வுக்கருவி

[சோதனை + கருவி.]

[Skt. śōdhana > த. சோதனை]

சோதனைக்கல் *śōdaṉai-k-kal,* பெ.(n.) உரைகல்; touch stone (சா.அக.).

த.வ. கட்டளைக்கல்

[சோதனை + கல்.]

[Skt. śōdhana > த. சோதனை]

சோதனைக்கனம் *śōdaṉai-k-kaṉam,* பெ. (n.) நோய்களை ஆய்வு செய்யப் பயன்படும் ஆயுள் வேதத்திற் கூறிய பொருட்கள்; drugs used for investigation of diseases (சா.அக.).

த.வ. ஆய்வுக்கனம்

[சோதனை + கனம்.]

[Skt. śōdhana > த. சோதனை]

சோதனைக்காரன் *śōdaṉaikkāraṉ,* பெ.(n.) ஆய்வு செய்பவன்; one who examines or investigates into anything testor or examiner (சா.அக.).

த.வ. நோட்டகன், ஆய்வாளன்

[சோதனை + காரன்.]

[Skt. śōdhana > த. சோதனை]

சோதனைக்குரு *śōdaṉai-k-kuru,* பெ.(n.) **சோதனையுப்பு** பார்க்க; see *śōdaṉai-y-uppu* (சா.அக.).

சோதனைக்குழல் *śōdaṉai-k-kuḻal,* பெ.(n.) மருந்தை ஆய்வு செய்யப் பயன்படுத்தும் ஒரு கண்ணாடிக் குழாய்; a test tube for testing medicine or other chemicals (சா.அக.).

த.வ. ஆய்வுக்குழாய்

[சோதனை + குழல்.]

[Skt. śōdhana > த. சோதனை]

சோதனைக்கோல் *śōdaṉai-k-kōl,* பெ.(n.) 1. அறுவை மருத்துவன் பயன்படுத்தும் வெள்ளி அல்லது செம்பினாற் செய்த குத்தூசி; surgeons instrument or needles or thin rod made of silver or copper usually for examining the depth of sinus-probe.

2. மாத்திரைக்கோல்; measuring rod. 3. பொன்னின் தரத்தை அறியப் பயன்படுத்தும் கம்பி; gold wire or rod used for testing gold (சா.அக.).

த.வ. மாழைக்கோல்

[சோதனை + கோல்.]

[Skt. šōdhana > த. சோதனை]

சோதனைகொடு-த்தல் *šōdaṉai-koḍu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. நோயாளிகள் தங்களை மருத்துவரிடத்தில் காண்பித்தல்; submitting oneself as a patient for diagnosis (சா.அக.). /2. ஆய்வு செய்தல்; to be examined, to undergo examination. 3. தேர்வில் தேறுதல்; to pass examination as candidates (சா.அக.).

த.வ. ஆய்வுக்குட்படுத்தல், நோய்க்குறி ஆய்வு.

[சோதனை + கொடு-.]

[Skt. šōdhana > த. சோதனை]

சோதனைச்சாலை *šōdaṉai-c-cālai,* பெ.(n.) தொழில் வகைகளிலும், மருத்துவ முறையிலும் பயன்படுத்தப்படும் மருந்துகளை ஆய்வு செய்யுமிடம்; a building set a part for examined or testing medicines and other chemicals used in arts and industries (சா.அக.).

த.வ. ஆய்வுச்சாலை

[சோதனை + சாலை.]

[Skt. šōdhana > த. சோதனை]

சோதனைசாபிதா *šōdaṉai-šābidā,* பெ.(n.) உசாவல் அதிகாரிகள் பிறரிடமிருந்து கையகப்படுத்திய பொருள்களின் குறிப்பு; search list (தற்.).

த.வ. கைப்பற்றற்குறிப்பு

[Skt. šōdhana+ U. jābitā> த.சோதனைசாபிதா.]

சோதனைசெய்தல் *šōdaṉaiceydal,* தொ.பெ. (vbl.n.) 1. ஆய்வு செய்யல்; examination. 2. நாடி, மலம், சிறுநீர் இவற்றை ஆய்வு செய்தல்; examination of pulse, feaces, urine etc, for purpose sputum of diagonising the diseases (சா.அக.).

த.வ. கூர்நோக்கு

[சோதனை + செய்தல்.]

[Skt. šōdhana > த. சோதனை]

சோதனைத்திரி *šōdaṉai-t-tiri,* பெ.(n.) கருவை அழிக்கப் பயன்படுத்தும் காரத்திரி; corrusive lint used, to insert into the vagina of females for aborting the child or foetus in the womb (சா.அக.).

த.வ. காரச்சீலைத்திரி

[சோதனை + திரி.]

சோதனைநாழி *šōdaṉai-nāḻi,* பெ.(n.) திட்டமான முகத்தலளவைக் கருவி; a standard measure of capacity.

த.வ. அளவுக்கருவி

[சோதனை+நாழி]

[Skt. šōdhana > த. சோதனை.]

சோதனைநூல் *šōdaṉai-nūl,* பெ.(n.) மருந்துகளின் ஆய்வைப் பற்றிக் கூறும் நூல்; experimental science (சா.அக.).

[சோதனை + நூல்.]

[Skt. šōdhana > த. சோதனை]

சோதனைபண்ணு-தல்[1] *šōdaṉaipaṇṇu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. ஆராய்ந்து பார்த்தல்; to examine, sift, scrutinise, search, try. 2. வறுமை முதலியவற்றால் மக்களின் மனநிலையை ஆய்வு செய்தல்; to test the sincerity or integrity of a person by adversity, affliction or other means.

த.வ. ஆய்வுச்செய்தல்

[சோதனை+பண்ணு-]

[Skt. šōdhana+>த.சோதனை]

சோதனைபண்ணு–தல்[2] *sōdanaipaṇṇu-,* 5 செ. குன்றாவி (v.t.) 1. பெண்ணின் கற்பை சோதித்து அறிதல்; testing the virginity of woman. 2. கரு உண்டானதை உறுதி செய்தல்; determinirg the pregnancy of woman. 3. கடவுள், ஒருவன் மனத்தை துன்பத்திற்கும், நேர்மைக்கும் ஆளாக்கி அவன் மன நிலையைத் தெரிவு செய்தல்; testing of men by god as regards his integrity or mental state in adversity (சா.அக.).

த.வ. கூர்ந்தாய்வு செய்தல்

[சோதனை + பண்ணு–தல்]

[Skt. śōdhana > த. சோதனை]

சோதனைபார்–த்தல் *śōdanai-pār-,* 4 செ. குன்றாவி.(v.t.) **சோதனைபண்ணு** பார்க்க; see *śōdanai-paṇṇu-.*

[சோதனை+பார்த்தல்]

[Skt. śōdhanai > த.சோதனை]

சோதனைமை *śōdanai-mai,* பெ.(n.) 1. நிலத்திற்குள் இருக்கும் செல்வத்தைத் தெரிவு செய்யப் பயன்படும் மாயமை; a magic paint used as a collyrium for the eyes for ascertaining the hidden treasure. 2. வசியமை; a magic paint used for fascinating or captivating women for illegal intercourse (சா.அக.).

த.வ. ஆய்வுமை

[சோதனை + மை]

[Skt. śōdhanai > த. சோதனை]

சோதனையுப்பு *śōdanai-y-uppu,* பெ.(n.) 1. பொன்னாக்க முறையில், இழிந்த மாழைகளைப் பொன்னாக மாற்றும் வகையை ஆய்வு செய்யப் பயன்படும் குரு மருந்து; quintessence salt used in Alchemy for testing the transmution of metals into gold (சா.அக.).

த.வ. ஆய்வுக்குருமருந்து

[சோதனை + உப்பு]

[Skt. śōdhanai > த. சோதனை]

சோதா[1] *śōdā,* பெ.(n.) 1. சோம்பேறி, குறைந்த தகுதியுடையவன்; lazy fellow. 2. கண்டபடி திரிபவன்; vagabond. 3. வலுக்குறைந்தவன்; weak person. 4. ஒன்றுக்கும் உதவாதவன்; useless person.

[H. shuhda > த. சோதா]

சோதா[2] *śōdā,* பெ.(n.) உசாவல்; trial, examination, inquiry (P.T.L.).

[Skt. śōdhā > த. சோதா.]

சோதி–த்தல்[1] *śōdi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. உசாவுதல்; to search, make research into, inquire, investigate, examine. *'நியாயசபையில் என்னைச் சோதித் தாய்விட்டது' (இ.வ.).* 2. ஆய்தல்; to sift as rice, test, experiment, assay, scrutinise, probe. *"சோதியுனைச் சோதிக்கத் துணிந்தேன்" (திருவிளை. நான்மாட.22).* 3. தூய்மை செய்தல்; to cleanse. *'அமுது படைக்கும் இலையைச் சோதித்த பின் இடுக'.* 4. **சோதனை பண்ணு–தல்** பார்க்க; see *śōdanaipaṇṇu-.* 5. தீமை செய்வதற்குத் தூண்டுதல் (கிறித்.); to tempt, incite.

[Skt. sōdhā > த. சோதி]

சோதி–த்தல்[2] *śōdi-,* 4 செ.குன்றாவி.(v.t.) விளக்கமுறுதல் (வின்.); to be splended, lustrous.

[Skt. jyōtis > த. சோதி]

சோதி–த்தல்[3] *śōdi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. நோயாளியை ஆய்வுக்குட்படுத்துதல்; examining a patient. 2. **சோதனைசெய்தல்** பார்க்க; see *śōdanaiseydal* (சா.அக.).

சோதி[1] *śōdi,* பெ.(n.) 1. ஒளி; light, splendour, lustre, brilliancy, effulgence. *"அருக்கனிற் சோதியமைத்தோன்" (திருவாச.3, 20).* 2. ஒளிக்கதிர்; ray or streak of light (சூடா.). 3. விளக்கு; lamp, torch (சூடா.). 4. தீ; fire

(பிங்.). 5. கதிரவன்; sun (பிங்.). 6. விண்மீன்; star. 7. கடவுள்; the supreme being (பிங்.). 8: சிவன்; *Śiva* (அக.நி.). 9. அருகன்; arhat (அக.நி.). 10. பூநாகம், மண்புழு; ground-worm.

[Skt. jyōtis > த. சோதி.]

சோதி[2] *sōdi,* பெ.(n.) 1. கருப்பூரம்; camphor. 2. சாதி லிங்கம்; virmilion. 3. கற்றாழை; aloes.

சோதி[3] *sōdi,* பெ.(n.) சுவர் முதலியவற்றில் காணும் வெடிப்பு (வின்.); crack in walls, dams or banks.

[Skt. chēda > த. சோதி.]

சோதிக்குண்மணி *sōdi-k-kunmani,* பெ.(n.) வெள்ளொளியால் சூழ்ந்த முத்து மணி; pearl as having bright white lustre.

[சோதிக்கு+உள்+மணி]

[Skt. jyōti-k-kun > த. சோதிக்குண்]

சோதிக்குருடு *sōdi-k-kurudu,* பெ.(n.) ஒகநிலை அல்லது ஊழ்கத்திற் காணும் ஒளியினால் அச்சமயத்தில் ஏற்படும் குருட்டுத்தனம்; temporary blindness due to the seeing of Astrual light (சா.அக.).

[சோதி + குருடு.]

[Skt. jyotis > த. சோதி]

சோதிக *sōdiga,* பெ.(n.) பேரொளி; brillancy (சா.அக.).

த.வ. மிகு வெளிச்சம்

சோதிகலை *sōdikalai,* பெ.(n.) சந்திரகலை; the vital air passing through the left nostril (சா.அக.).

[சோதி + கலை]

சோதிகவாரி *sōdikavāri,* பெ.(n.) புளி நறளை; fox grape (சா.அக.).

[சோதிகம் + வாரி.]

சோதிகாந்தம் *sōtikāndam,* பெ.(n.) சித்திர மூலம்; lead wort (சா.அக.).

[சோதி + காந்தம்]

சோதிகாவிரணம் *sōdikā-viranam,* பெ.(n.) **சோதியில்விரணம்** பார்க்க; see *sōdiyilviranam* (சா.அக.).

சோதிச்சக்கரம் *sōdi-c-cakkaram,* பெ.(n.) 1. வானவட்டம் (வின்.); the starry firmament. 2. முனைவட்டம், துருவசக்கரம் (யாழ்.அக.); polar circle.

[சோதி+சக்கரம்]

[Skt.jyōtis>த. சோதி]

சோதிசம்பாதம் *sōdi-sambādam,* பெ.(n.) விளக்கு (சுவாதி) விண்மீனும் கதிரவனும் கூடும் தீ நாள் (விதான.அரசர்.10); the conjunction of the star *svāti* and the sun, considered inauspicious.

[Skt.svāti-sambādam>த. சோதிசம்பாதம்.]

சோதிசாத்திரம் *sōdi-sāttiram,* பெ.(n.) வானவியல்; astronomy (தற்.).

[சோதி + சாத்திரம்]

[Skt. jyōti > த. சோதி]

சோதிசு *sōdicu,* பெ.(n.) பேரொளி; brilliancy (சி.சி.8, 21, சிவாக்.).

[Skt. jyōtis > த. சோதிசு]

சோதிட்டுமகம் *sōtiṭṭu-magam,* பெ.(n.) **சோதிட்டோமம்** பார்க்க; see *sōtiṭṭōmam.*

[Skt. jyōtiṣṭōma > த. சோதிட்டுமகம்]

சோதிட்டோமம் *sōtiṭṭōmam,* பெ.(n.) சோமவேள்வி வகை; a kind of *sōma* sacrifice (பிங்.அக.).

[Skt. jyōtistōma > த. சோதிட்டோமம்]

சோதிடங்கொள்(ளு)-தல் *sōdiḍaṅ-koḷ-,* செ.கு.வி.(v.i.) கணியம் சொல்லுதலைப் பொருந்துதல்; to act the part of an astrologer, to foretell events. *"சோதிடங்*

கொண்டி தெம்மைக் கெடுவித்தது" (திருக்கோ.138).

[சோதிடம் + கொள்(ளு)-]

[Skt. *Jyōtiṣa > த. சோதிடம்]*

சோதிடசாத்திரம் *śōdiḍa-cāttiram,* பெ.(n.) **சோதிடநூல்** பார்க்க; see *śōdiḍa-nūl.*

த.வ. கணியநூல்

சோதிடத்தேவர் *śōdiḍa-t-tēvar,* பெ.(n.) ஒரு சார் தேவ குலத்தார் (jaina.); a class of gods. *"வாய்தல் சோதிடத்தேவர்காப்ப" (மேருமந். 1060).*

[சோதிடம் + தேவர்]

[Skt. *jyōtiṣa > த. சோதிடம்]*

சோதிடநூல் *śōdiḍa-nūl,* பெ.(n.) 1. வானவியல்; astronomy. *"சோதிட நூலார் இங்ஙனம் கூறுப" (சீவக.532, உரை).* 2. கோள்களின் நன்மை தீமைகளை அறிவிக்கும் நூல்; astrology.

த.வ. கணியநூல்

[சோதிடம் + நூல்]

[Skt. *Jyōtiṣa > த. சோதிடம்]*

சோதிடபீடிதம் *śōdiḍa-pīḍidam,* பெ.(n.) கணிய நூற்படி ஒருவனை நோய் வந்து அணுகுதல்; as per astrology one who attacked by the disease.

[சோதிடம் + பீடிதம்]

சோதிடம்[1] *śōdiḍam,* பெ.(n.) 1. **சோதிடநூல்** பார்க்க; see *śōdiḍa-nūl. "சத்தமுஞ் சோதிடமும்" (நாலடி, 52).* 2. நிமித்தம்; omen (பிங்.).

[Skt. *jyōtiṣa > த. சோதிடம்]*

சோதிடம்[2] *śōdiḍam,* பெ.(n.) 1. வானநூல்; astronomy. 2. நாடிநூல்; astrology (சா.அக.).

சோதிடம்பார்-த்தல் *śōdiḍam-pār-,* 4 செ.கு.வி. (v.t.) கணியநூல் பார்த்துப் பயனை அறிதல்; to consult astrology.

த.வ. கணியம்பார்த்தல்

[சோதிடம்+பார்-]

[Skt. *jyōtiṣa+ > த. சோதிடம்]*

சோதிடர் *śōdiḍar,* பெ.(n.) 1. கணியன்; astrologer. 2. திங்கள் (சந்திரன்), கதிரவன் கோள்கள் விண்மீன் முதலிய வானக மண்டலங்கள்; the heavenly bodies. *"சுடர்பவருஞ் சோதிடரே" (சூளா.துறவு.206).*

த.வ. கணியர்

[Skt. *jyōtiṣa > த. சோதிடர்]*

சோதிடவர் *śōdiḍavar,* பெ.(n.) **சோதிடர்** பார்க்க; see *śōdiḍar. "சோதிட வருடனே கூட்டி நல்ல நாளிலே குடையைப் புறவீடு விட்டான்" (பு.வெ.4, 8, உரை).*

த.வ. கணியன்

[Skt. *jyōtiṣa > த. சோதிடவர்]*

சோதிடவாதம் *śōdiḍa-vādam,* பெ.(n.) வான மண்டலங்களையே தெய்வமாகக் கருதி வழிபடுங் கொள்கை (வின்.); a religious system which regards the heavenly bodies as the supreme being (w.).

த.வ. கணியக்கொண்முடிபு

[Skt. *jyōtiṣa+vāda > த. சோதிடவாதம்]*

சோதிடோப்பரிகை *śōdiḍōpparigai,* பெ.(n.) கோள்கள் மற்றும் விண்மீன்களின் இயக்கங்களை ஆராய்தற்கு உதவியாகக் கட்டப்பட்டிருக்கும் உயரமான அரண்; observatory.

த.வ. ஆய்வரண்

[சோதிடம் + உப்பரிகை]

[Skt. *jyōtiṣa>த. சோதிடம்.]*

சோதிதம் *śōdidam,* பெ.(n.) 1. ஆய்வு செய்யப்பட்டது; that which has been examined or reviewed. *"சோதித தற்பதார்த்தம்" (வேதா.சூ.119).* 2. கழிக்கப் பட்டது (கணி.); subtrahend (math.).

[Skt. *śōdhita > த. சோதிதம்.]*

சோதிதனம் *šōditaṉam,* பெ.(n.) விடரியம், ஒன்பான் மணிகளுள் ஒன்று; cat's eye, one of the nine gems (சா.அக.).

த.வ. பூனைக்கண்மணி

சோதிநாயகன் *šōdi-nāyagaṉ,* பெ.(n.) **சோதியன்** பார்க்க (யாழ்.அக.); see *šōdiyaṉ.*

[Skt.jyōtis-nāyagaṉ>த. சோதிநாயகன்.]

சோதிநாள் *šōdi-nāḷ,* பெ.(n.) **சோதி**⁴ பார்க்க (பிங்.); see *šōdi*⁴.

[Skt. svāti > த. சோதிநாள்.]

சோதிநிகரம் *šōdi-nigaram,* பெ.(n.) அரச மரம்; peepal tree (சா.அக.).



சோதிநிமிளை *šōdinimiḷai,* பெ.(n.) அஞ்சனக் கல்; sulphuret of antimony so called from its being used in works (சா.அக.).

[சோதி + நிமிளை.]

சோதிநீச்சடம் *šōdi-nīccaḍam,* பெ.(n.) முத்துச் சிப்பி; pearl oyster (சா.அக.).

[Skt.svati-niccaḍam>த. சோதிநீச்சடம்.]



சோதிநூல் *šōdinūl,* பெ.(n.) **சோதி சாத்திரம்** பார்க்க; see *šōdi-sāttiram.* *"சோதிநூ லறிஞருந் துணுக்க மெய்துவார்" (சேதுபு. கந்தமா.17).*

த.வ. கணியநூல்

[சோதி + நூல்.]

[Skt. jyōtis > த. சோதி]

சோதிநெறி *sōdi-neṟi,* பெ.(n.) கண்ணில் கிளைகள் பல கிளம்பி, மூன்றாம் நாளில் மறைந்து, நாளுக்கு நாள் கிளைத்து, பல இன்னல்களை உண்டு பண்ணும் ஒரு நோய்; form of conjunctivitis attended with a number of granulations which disappear on the third day and reappear gradually giving rise to many health hazards (சா.அக.).

த.வ. கண்கட்டிநோய்

[சோதி + நெறி.]

[Skt. jyōtis > த. சோதி]

சோதிப்பிழம்பு *šōdi-p-piḻambu,* பெ.(n.) ஒளித் திரட்சி; bundle of rays, shaft of light.

[சோதி+பிழம்பு]

[Skt. jyōtis > த. சோதி]

சோதிப்புல் *šōdippul,* பெ.(n.) இரவில் எரியும் புல்; luminous grass it is known by different names as brilliant grass, fire grass etc. (சா.அக.).

த.வ. காந்திப்புல், தீப்புல்

[சோதி + புல்.]

[Skt. jyōtis > த. சோதி]

சோதிப்பூநாகம் *šōdi-p-pūnāgam,* பெ.(n.) கருப்பூரம்; camphor (சா.அக.).

[சோதி + பூ + நாகம்.]

சோதிம்பம் *šōdimbam,* பெ.(n.) வாலுளுவை; spindle tree (சா.அக.).

சோதிமண்டலம் *šōdi-mandalam,* பெ. (n.) 1. ஒளி வட்டம்; halo of light. *"சோதிமண்டலத் தோன்றுவ துளதேல்" (பெருந்தொ.161).* 2. கோள்கள் மற்றும் விண் மீன்களுக்கு இடமான வானவட்டம் (வின்.); starry firmament.

[சோதி+மண்டலம்]

[Skt. jyōtis > த. சோதி]

சோதிமணி *šōdimani,* பெ.(n.) முத்து; pearl (சா.அக.).

த.வ. வெண்மணி

[சோதி + மணி.]

[Skt. jyōtis > த. சோதி]

சோதிமத்தி *šōdimatti,* பெ.(n.) முடக்கற்றான்; balloon vine, Palsy curer - cardio spermum (சா.அக.).

சோதிமயம்[1] *šōdimayam,* பெ.(n.) 1. ஒளி வடிவு; body of light (சங்.அக.). 2. **சோதியம்** பார்க்க; see *šōdiyam* (மலை.).

[Skt. jyōtirmaya > த. சோதிமயம்.]

சோதிமயம்[2] *šōdimayam,* பெ.(n.) வாலுளுவை; spindle tree celastrus paniculata (சா.அக.).

சோதிமரம் *šōdi-maram,* பெ.(n.) **சோதி விருட்சம்** பார்க்க (நாஞ்.நா.); see *šōdi-virutcam.*

[சோதி+மரம்]

[Skt. jyōtis > த. சோதி]

சோதிமா *šōdi-mā,* பெ.(n.) **சோதிவிருட்சம்** பார்க்க (மலை.); see *šōdi-virutcam* (m.)

[Skt. jyōtis > த. சோதிமா.]

சோதிமின்னல் *šōdi-minnal,* பெ.(n.) கதிரவன் விளக்கு (சுவாதி) விண்மீனில் புகும்பொழுது மழைக்கு அறிகுறியாகக் கிழக்கே தோன்றும் மின்னல் (வருஷாதி.212); lightning in the east when the sun enters *svāti naksatra,* believed to indicate rain.

த.வ. ஈழமின்னல்

[சோதி+மின்னல்]

[Skt. svāti > த. சோதி]

சோதிமுனி *šōdimuni,* பெ.(n.) இவர் பிரமரிசிக்கும் மறவர் குலப் பெண்ணுக்குப் பிறந்த ஒரு சித்தர்; a Siddhar who is the son of the son of Brahmarishi. (சா.அக.).

[சோதி + முனி.]

[Skt. svāti > த. சோதி]

சோதியட்சரம் *šōdiyatcaram,* பெ.(n.) குழந்தைகளுக்கு வாய்வெந்து நாக்கும் பல்லும் நிறமாறி முதுகும் வயிறும் எரிச்சல் கண்டு, காய்ச்சலுடன், குமட்டலுடன் கழிச்சலும் உண்டாகும் ஒரு நோய்; a kind of stomatitis in children marked by inflammation of the mouth discolouration of tongue and teeth, burning sensation in the stomach, and on the back, fever and diarrhoea stomatitis scorbutica (சா.அக.).

த.வ. அச்சரம்

[சோதி + அட்சரம்.]

சோதியம் *šōdiyam,* பெ.(n.) வாலுளுவை; climbing staff plant (மலை.).

சோதியமயவேதி *šōdiyamaya-vēdi,* பெ.(n.) நாங்கூழ்; earth worm (சா.அக.).

த.வ. நாக்குப்பூச்சி, மண்புழு

[சோதியம் + மயம் + வேதி.]

சோதியன் *šōdiyan,* பெ.(n.) ஒளி வடிவான கடவுள்; god, as radiant. *"யாவையுமா யல்லையுமாஞ் சோதியனே" (திருவாச.1, 72).*

த.வ. சுடரோன்

[Skt. jyōtis > த. சோதியன்.]

சோதியான் *šōdiyān,* பெ.(n.) கதிரவன் (ஒளிப் பிழம்பானவன்); the sun, as luminous. *"சோதியான் மகனும்" (கம்பரா. திருமுடி.34).*

த.வ. பகலவன்

[Skt. jyōtis > த. சோதியான்.]

சோதியில்விரணம் *šōdiyil-viraṇam,* பெ.(n.) வெள்விழி, கருவிழியெங்கும் பூவுண்டாக, நீர் வடிந்து, கண் விழிக்க முடியாமல், கூசி, நடுவிழியில் நண்டின் கண்ணைப் போல் சிறியதாய்த் துருத்திக் கொண்டிருக்கும் ஒரு கண் நோய்; protrusion of cornea caused by the cornea losing its transparency by the formation of cataract and projecting beyond the eye-lid like crabs eye (சா.அக.).

[சோதியில் + விரணம்.]

சோதியொளி *šōdiyoḷi,* பெ.(n.) விட்டுணு காந்தி என்னும் மூலிகை; a medicinal plant (சா.அக.).

[சோதி + ஒளி.]

[Skt. jyōti > த. சோதி]

சோதியொளிதீபம் *šōdiyoḷi-dībam,* பெ.(n.) தூதுவளை; three lobed night shade- *Solanum trilobatum* (சா.அக.).

[சோதி + ஒளி + தீபம்.]

[Skt. jyōti > த. சோதி]

சோதிர்லோகம் *šōdir-lōgam,* பெ.(n.) எழுவகை உலகங்களுள் ஒன்று (திருக்கலம். 6, உரை); (Jaina.) one of the seven worlds.

[சோதி + உலகம்.]

[Skt. jyōtir > த. சோதிர்]

சோதிரவிமாலி *šōdiravimāli,* பெ.(n.) அத்தினி குலப்பெண்; one of the four classes of women divided according to lust (சா.அக.).

சோதிராங்கம் *šōdirāṅgam,* பெ.(n.) எல்லா ஒளியையும் அடக்கும் ஒளியை வீசு தெய்வமரம்; a *kalpataru* whose splendour casts all other bright objects into shade (தக்கயாகப்.757, குறிப்பு).

[Skt. jyōtirāṅga > த. சோதிராங்கம்.]

சோதிராத்திரி *šōdi-rāttiri,* பெ.(n.) நடு இரவு; mid night.

த.வ. நள்ளிரவு

[Skt. šōti+rāttiri > த. சோதிராத்திரி.]

சோதிரி *šōdiri,* பெ.(n.) கணியஞ் சொல்லுபவன் (நாஞ்.); astrologer.

த.வ. கணியன்

[Skt. jōtiṣa > த. சோதிரி.]

சோதிரிசித்தைலம் *šōdiriši-t-tailam,* பெ.(n.) எல்லா வலிப்புகளுக்கும் பயன்படும் ஒரு வகை நெய்மம்; this is an oil used for all kinds of convulsions (சா.அக.).

த.வ. வலிப்பெண்ணெய்

சோதிவிரணம் *šōdi-viraṇam,* பெ.(n.) கண்ணின் கருவிழிக்கு நடுவ (மைய)த்தில் அமைந்த ஒளிக்குக் காணும் ஒரு புண்; ulceration in the central part of area of the retina attended with the affection of the vision. 2. கண்ணில் பூ விழுந்து நீர் வடிதல்; ulcer in the eye marked by watery discharge and protrusion of that part of the eye. It then looks like crab's eye.

த.வ. கண்பூ

சோதிவிருட்சம் *šōdivirutcam,* பெ.(n.) இரவில் ஒளியுடன் விளங்குவதாகக் கருதப் படும் மரவகை; a tree said to shine in the dark (யாழ்.அக.).

த.வ. ஒளிமரம்.

[Skt. jyoti+vrkṣa > த. சோதிவிருட்சம்]

சோதிவிழு—தல் *šōdi-viḻu-,* 2. செ.கு.வி.(v.i.) பிளவு ஏற்படல்; to be cracked, dimpled.

[சோதி+விழு–.]

[Skt. chēda > த. சோதி]

சோதினி *šōdiṉi,* பெ.(n.) **சோதனி** பார்க்க; see *šōdaṉi* (திவா.).

[Skt. šōdhanī > த. சோதினி.]

சோதிசம் *šōdiṣam,* பெ.(n.) **சோதிடம்** பார்க்க; see *šōdiḍam.*

[Skt. jyōtiṣa > த. சோதிசம்.]

சோதிசாதிவிதை *šōdisādi-vidai,* பெ.(n.) வாலுளுவை அரிசி; seeds of spendle tree, *Celastrus paniculata* (சா.அக.).

சோதை *šōdai,* பெ.(n.) சங்கினி குலப் பெண்; one of the four classes of women divided according to lust (சா.அக.).

சோந்திரியம் *šōndiriyam,* பெ.(n.) **சுதந்திரம்** பார்க்க; see *sudandiram.*

சோப்தார் *šōptār,* பெ.(n.) அரிக்காரன்; mace-bearer, attendant carrying a staff.

த.வ. மெய்க்காப்பாளன்

[U. cōbdār > த. சோப்தார்.]

சோப்பம் *šōppam,* பெ.(n.) **சோபம்**[1] **1, 5** பார்க்க (வின்.); see *šōbam*[1] *1, 5.*

[Skt. kṣōbha > த. சோப்பம்.]

சோப்பு *šōppu,* பெ.(n.) வழலைக்கட்டி; soap.

[E. soap > த. சோப்பு.]

த.வ. சவர்க்காரம்

சோபக்கழிச்சல் *šōbakkaḻiccal,* பெ.(n.) உடல் வலுவற்று, களைப்போடு கூடிய கழிச்சல்; diarrhoea followed by weakness and exhaustion (சா.அக.).

த.வ. களைப்புக்கழிச்சல்

[சோபம் + கழிச்சல்.]

[Skt. ṣōbha > த. சோபம்]

சோபக்கிராணி *šōbakkirāṇi,* பெ.(n.) வலிமைக் குறைவு, சோர்வு இவற்றை யுண்டாக்கும் கழிச்சல்; a chronic diarrhoea attended with weakness and exhaustion (சா.அக.).

த.வ. களைப்புக்கழிச்சல்

சோபக்கினம் *šōbakkiṉam,* பெ.(n.) வீக்கத்தைத் தணிக்கும் செயல்பாடு; a treatment having for its object alleviation of swelling (சா.அக.).

சோபக்கினி *šōbakkiṉi,* பெ.(n.) நில வேம்பு; ground neem (சா.அக.).

சோபகிருது *šōbakirudu,* பெ.(n.) ஆண்டு வட்டம் அறுபதனுள் முப்பத்தேழாவது ஆண்டு; the 37th year of the jupiter cycle.

[Skt. šōbhakṛt > த. சோபகிருது.]

சோபகுஞ்சி *šōbakuñji,* பெ.(n.) கருஞ்சீரகம்; black cumin (சா.அக.).

சோபங்கொள்ளல் *šōbaṅ-koḷḷal,* பெ.(n.) மயக்கம் அடைதல்; getting swooned or fainted (சா.அக.).

[சோபம் + கொள்ளல்.]

[Skt. ṣōbha > த. சோபம்]

சோபசுரம் *šōbašuram,* பெ.(n.) 1. வலிமைக் குறைவு, தளர்ச்சி இவற்றை யுண்டாக்கும் காய்ச்சல்; fever marked by weakness, fatigue and fainting. 2. மயக்கத்தை உண்டுபண்ணும் மிகுதியான காய்ச்சல்; high fever causing faintness or swooning - *Hyper pyrexia* (சா.அக.).

[சோபம் + சுரம்.]

[Skt. ṣōbha > த. சோபம்]

சோபதி *šōbaḍi,* பெ.(n.) தோழன்; companion, comrade. *உன் சுற்றுச் செலவில் கூடவரும் சோபதிகள் எத்தனை பேர் (இ.வ.).*

த.வ. பாங்கன்

[H. suhbati > த. சோபதி.]

சோபந்தெளி-தல் *śōbanteḷi-,* 2 செ.கு.வி. (v.i.) மயக்கத்தினின்று தெளிதல்; to recover from swoon (சா.அக.).

[சோபம் + தெளி-.]

[Skt. sōbha > த. சோபம்]

சோபநசினி *śōbanaśiṉi,* பெ.(n.) இடக்கை; left hand (சா.அக.).

சோபநாசினி *śōbanāśiṉi,* பெ.(n.) கழற் கொடி; *bonduc* creeper (சா.அக.).

த.வ. கழற்சிக்காய்க்கொடி

[சோபம் + நாசினி.]

சோபநித்திரை[1] *śōba-nittirai,* பெ.(n.) 1. அயர்ந்த தூக்கம்; sound sleep. 2. மயக்கத்தோடு கூடிய தூக்கம்; sleep as a result of fainting. 3. மயக்குத் தூக்கம்; hypnotic sleep. 4. சோம்பலினால் உறங்குதல்; sleep through drowsiness. 5. நோயின் களைப்பினால் அடிக்கடி உண்டாகும் தூக்கம்; sleep recurring after paroxysm in diseases - *Paroxysmal sleep* (சா.அக.).

த.வ. ஆழ்துயில்

[Skt. ksōbha+nidra > த. சோபநித்திரை]

சோபநித்திரை[2] *śōba-nittirai,* பெ.(n.) கலவி முடிந்தவுடன் நிகழும் அயர்ந்த தூக்கம்; the deep sleep immediately following sexual intercourse. *"சோப நித்திரைபோய்ச் சற்றேநினைவுவந்து" (விறலிவிடு.574).*

த.வ. கலவித்தூக்கம்

[Skt. ksōbha+nidrā > த. சோபநித்திரை]

சோபம்[1] *śōbam,* பெ.(n.) 1. இரக்கம்; pity, compassion. 2. துன்பம்; grief, sorrow. *"புத்திரசோபம்" (உத்தரரா.சம்புவ.12).* 3. கள்; toddy (சூடா.). 4. மயக்கம்; fainting, swooning. 5. களைப்பு; languor, lassitude, fatigue, prostration. 6. சோம்பல்; drowsiness, heaviness, indolence.

[Skt. kṣōbha > த. சோபம்.]

சோபம்[2] *śōbam,* பெ.(n.) அரத்தத்தை (குருதியை)க் குறைக்கும் நோய் வகை; anemia. *"சோபம்பெறப் பிறக்குஞ் சொல்லினாள்" (பூவண.உலா.288).*

[Skt. śōpha > த. சோபம்.]

சோபம்[3] *śōbam,* பெ.(n.) 1. அழகு; beauty, handsomeness (உரி.நி.). 2. ஒளி; lustre, radiance, splendour (யாழ்.அக.).

[Skt. śōbhā > த. சோபம்.]

சோபரோகம் *śōbarōgam,* பெ.(n.) **சோகை** பார்க்க; see *śōgai* (சா.அக.).

சோபலம்[1] *śōbalam,* பெ.(n.) சோம்பு; anise seed, *illecium ancisatum* (சா.அக.).

த.வ. பெருஞ்சீரகம்

சோபலம்[2] *śōbalam,* பெ.(n.) சோம்பல்; laziness, sluggishness.

த.வ. சோம்பேறித்தனம்

சோபலாங்கி *śōbalāṅgi,* பெ.(n.) **சோப்பளாங்கி** பார்க்க; see *śōppaḷāṅgi*(w.).

சோபவரி *śōbavari,* பெ.(n.) சேரான் கொட்டை; dhobys nut semecarpus ana cardiun. It cures swelling (சா.அக.).

த.வ. தேற்றாங்கொட்டை

சோபன் *śōbaṉ,* பெ.(n.) கள்; toddy (சா.அக.).

த.வ. சொல்விளம்பி, வெறிநீர்

சோபனகலியாணம் *śōbaṉa-kaliyāṇam,* பெ.(n.) திருமணத்தின் பின் மணமக்கள் ஒன்றுகூடல்; consummation after marriage.

த.வ. முதலிரவு

[சோபனம்+கலியாணம்]

[Skt. śōbhana+ > த. சோபனம்.]

சோபனகாரியம் *šōbaṉa-kāriyam,* பெ.(n.) **சோபனம்,** 4 பார்க்க (கொ.வ.); see *sōbaṉam,4.*

[சோபனம்+காரியம்]

*[**Skt.** šōbhana+ > த. சோபனம்.]*

சோபனச்செய்தி *šōbaṉa-c-ceydi,* பெ. (n.) **சோபனம்,** 3 பார்க்க (வின்.); see *sōbaṉam,* 3.

த.வ. நற்செய்தி

[சோபனம்+செய்தி]

*[**Skt.** šōbhana > த. சோபனம்.]*

சோபனசினி *šōbaṉašiṉi,* பெ.(n.) இடதுகை; left hand (சா.அக.).

சோபனஞ்சொல்(லு)-தல் *šōbaṉa-ñ-col-,* 8 செ.குன்றாவி.(v.t.) 1. பெண்பூப்பு முதலிய நற்செய்தி கூறுதல் (பிரா.கொ.வ.); to communicate good news, as a girls pubescence, birth of a son, etc. 2. வாழ்த்துக் கூறுதல் (வின்.); to congra tulate, utter benedictions.3. மங்கலப்பாட்டுப் பாடுதல் (கொ.வ.); to sing congratulatory songs.

[சோபனம்+சொல்(லு)-]

*[**Skt.** šōbhana >த.சோபனம்]*

சோபனப்பாட்டு *šōbaṉa-p-pāṭṭu,* பெ.(n.) மங்கலப்பாடல் (கொ.வ.); congratulatory songs, songs of benediction.

[சோபனம்+பாட்டு]

*[**Skt.** šōbana > த. சோபனம்]*

சோபனப்பிழை *šōbaṉa-p-piḻai,* பெ.(n.) நலமின்மை (வின்.); inauspiciousness.

[சோபனம்+பிழை]

*[**Skt.** sōbana > த. சோபனம்]*

சோபனம் *šōbaṉam,* பெ.(n.) 1. வாழ்த்து; congratulation, benediction (பிங்.). *"முனிவர் சோபனங்கள் செப்ப" (கம்பரா. ஊர்தேடு.120).* 2. வாழ்த்துச் சொல்லை இறுதியிலுடைய வாழ்த்துப் பாட்டு; congratulatory song ending with the word *šōbaṉam.* 3. நற்செய்தி; joyfultidings. 4. நற்செயல்; happy event, as a girl's pubescence. 5. அழகு; beauty (சங்.அக.).

*[**Skt.** šōbhana > த. சோபனம்.]*

சோபனமடி-த்தல் *šōbaṉamaḍi-,* 4 செ.கு.வி. (v.i.) கும்மியடித்தல்; to dance and sing to the clapping of hands on happy occasions.

[சோபனம்+மடி-.]

*[**Skt.** šōbhana > த. சோபனம்]*

சோபனவாழ்த்து *šōbaṉa-vāḻttu,* பெ.(n.) மங்கலப்பாட்டு; congratulatory song on a marriage.

[சோபன(ம்)+வாழ்த்து]

சோபனாட்சதை *šōbaṉāṭcadai,* பெ.(n.) நல்ல காலங்களில் மக்களை வாழ்த்துதற்கு உரிய மங்கல அரிசி; grains of rice, coloured yellow with turmeric and sprinkled on the heads of persons with benediction on auspicious occasions.

த.வ. மஞ்சளரிசி

*[**Skt.** sōbana+akšada>த. சோபனாட்சதை.]*

சோபாஞ்சனம் *šōbāñjaṉam,* பெ.(n.) முருங்கை; drumstrick tree, *phyregos perma moringa* (சா.அக.).



சோபாட்சிபாகம் *šōbāṭci-bāgam,* பெ.(n.) மூவகைத் தீட்டினால், கண்வீக்கம், கண் சிவப்பு, வலி, எரிச்சல், வெள்விழி அத்திப் பழம் போலிருந்து, பிசுபிசுப்பான நீரொழுக்கும் உண்டாகும் ஒரு கண்ணோய்; an eye disease marked by swelling, redness pain, burning sensation etc. (சா.அக.).

சோபாதானம் *šōbādāṉam,* பெ.(n.) முதற் காரணியத்தை உடையது; that which was a material cause, as pot (சங்.அக.).

[*Skt. sōpādāna > த. சோபாதானம்.*]

சோபாதிகம்[1] *šōbādigam,* பெ.(n.) தொல்லைகளை மேற்கொண்டு வருவது; that which is conditional. *"பதிபசுபாசாதி நாமங்கள் சோபாதிகங்கள்" (சிவசம.39).*

[*Skt. sōpādhika > த. சோபாதிகம்.*]

சோபாதிகம்[2] *šōbādigam,* பெ.(n.) வலி யிருத்தல் போல் தோன்றுதல்; feeling as if there is pain (சா.அக.).

சோபாநாசினி *šōbānāšiṉi,* பெ.(n.) வீக்கம், கட்டி இவற்றைக் கரைக்கும் மருந்து; medicine or drug suppose to have the power to resolve swelling tumour etc., discutient (சா.அக.).

சோபாரிரசம் *šōbārirašam,* பெ.(n.) கழிச்சல், சோகை, பாண்டு நோய்களுக்குக் கொடுக்கும் ஆயுர்வேத மருந்து; an ayurvedic medicine given for chronic diarrohea anemia, and rheumatic affections (சா.அக.).

சோபாரோகம் *šōbārōgam,* பெ.(n.) உடம்பின் புழையிடங்கள் தோறும் நீர் திரண்டு தேங்குவிக்கும் ஒரு நோய்; dropsy (சா.அக.).

சோபாலிகை[1] *šōbāligai,* பெ.(n.) அடம்பு; hare-leaf. *"சுனைநீலஞ் சோபாலிகை" (திணை மாலை.2).*

[*Skt. šēphālikā > த. சோபாலிகை.*]

சோபாலிகை[2] *šōbāligai,* பெ.(n.) 1. குடை, மேற்குடைச் செடி; an unknown plant. 2. அடம்பு; hareleaf plant. 3. வெண்ணொச்சி; vitex negundo. 4. தீக்கொழுந்து; fire flame (சா.அக.).

சோபானம் *šōbāṉam,* பெ.(n.) 1. படிக்கட்டு; steps, stairs, gradations. *"பேறு தத்துவங்களென்னும் பெருகு சோபானமேறி" (பெரியபு.கண்ணப்ப.103).* 2. தாழ்வாரம்; sloping roof (பிங்.).

[*Skt. sōpāna > த. சோபானம்.*]

சோபானமுறை *šōbāṉa-muṟai,* பெ.(n.) படிநிலை; graduated or regular course. *"ஆன்மாக்கள் சோபான முறையின் அறிந்து வருந் தன்மைக் கேற்ப" (சி.போ.பா. சிறப்.5).*

த.வ. படிமுறை

[*சோபானம்+முறை*]

[*Skt. sopāṉa > த. சோபானம்*]

சோபானவகை *šōbāṉavagai,* பெ.(n.) கொடிவழி; unbroken, continuous tradition. *"சோபானவகை தொகுத்த புராணம்" (கோயிற்பு.பாயி.24).*

த.வ. கால்வழி

[சோபானம்+வகை]

[Skt. sōpāna > த. சோபானம்]

சோபி¹-த்தல் *šōbi-,* 11 செ.கு.வி.(v.i.) 1. ஒளிவிடுதல்; to be beautiful, to be splendid, lustrous (யாழ்.அக.). 2. அழகாக இருத்தல்; to be ornamental, decorated; to be flowery, as language (சங்.அக.). 3. மேம்படுதல்; to shine, show brilliancy, as of intellect (கொ.வ.).

த.வ. மேம்பட்ட அழகு

[Skt. šōbhā > த. சோபி-]

சோபி-த்தல்² *šōbi-,* 11 செ.கு.வி.(v.i.) சோர்வுறுதல் (வின்.); to faint, swoon, to be bereft of conciousness. *'அவன் சோபித்துக் கிடக்கிறான்'.*

[Skt. kṣubh > த. சோபி]

சோபி³ *šōbi,* பெ.(n.) நேர்வாளம்; croton seed, *croton tigiiium* (சா.அக.).

சோபித்துக்கிட-த்தல் *šōbittu-k-kiḍa-,* 3 செ.கு.வி.(v.i.)மயக்கமடைந்து சொரணை யற்றுக் கிடத்தல்; to lye unconscious through fainting (சா.அக.).

சோபிதம் *šōbitam,* பெ.(n.) **சோபை¹** பார்க்க; see *šōbai¹.*

[Skt. šōbhita > த. சோபிதம்.]

சோபிதவாளம் *šōbida-vāḷam,* பெ.(n.) நேர்வாளம்; croton seed (யாழ்.அக.).

சோபீசம் *šōbīšam,* பெ.(n.) எலுமிச்சை; lime fruit (சா.அக.).

சோபை¹ *šōbai,* பெ.(n.) 1. அழகு; beauty, splendour. *"சோபைவட கோபுரத்தி லுறைவோனே" (திருப்பு.489).* 2. ஒளி; lustre, brilliancy, brightness, as of countenance. *"ஒரு மரகத சோபையுற" (பாரத.கிருட்.208).*

த.வ. பொலிவு

[Skt. šōbhā > த. சோபை.]

சோபை² *šōbai,* பெ.(n.) நோய் வகை (தைலவ. தைலா.7); swelling, intumescence.

[Skt. šōpha > த. சோபை.]

சோபைசுரம் *šōbaišuram,* பெ.(n.) கீல்களில் வீக்கம், மார்பு அடைப்பு, வயிற்றுப் பொருமல், வலி, மலக்கட்டு, காய்ச்சல் இவற்றா லுண்டாகும் வீக்கக் காய்ச்சல்; fever through anemia which is marked by constipation (சா.அக.).

[சோபை + சுரம்.]

[Skt. šōpha > த. சோபை]

சோபைரோகக்கூட்டம் *šōbairōga-k-kūṭṭam,* பெ.(n.) சோகை தொடர்பான நோய்கள்; group of diseases relating to anemia (சா.அக.).

[சோபை + ரோகம் + கூட்டம்.]

[Skt. šōpha+rōga > த. சோபைரோகம்]

சோபோதரம் *šōbōtaram,* பெ.(n.) சோகை யினால் ஏற்படும் வயிற்று வீக்கம்; swelling of abdomen due to anemia (சா.அக.).

த.வ. பெருப்பானை

சோபோதாபா *šōbōtābā,* பெ.(n.) பேய்க் குமட்டி; bitter apple, *Citrullus colocynthis* (சா.அக.).

த.வ. காட்டுக்குமட்டி

சோம்பரை *šōmbarai,* பெ.(n.) சோம்பல்; laziness, drowsiness (சா.அக.).

த.வ. மயக்கநிலை

சோம்பலம் *šōmbalam,* பெ.(n.) சேங்கொட்டை; marking - nut tree (மலை.).

த.வ. தேத்தாங்கொட்டை

சோம்பாக்கு *šōmbākku,* பெ.(n.) சோம்பை வாலையிலிட்டு இறக்கிய தீ நீர்; distilled liquid of anise beeds (சா.அக.).

சோம்பாகி *šōmbāgi,* பெ.(n.)1. சமையற்காரன்; cook, especially in temple service. 2. வழலைக்கட்டி; soap (w.).

[Skt. svayam-pākin> த. > சோம்பாகி.]

சோம்பாயி *šōmbāyi,* பெ.(n.) **சோம்பாகி** பார்க்க (வின்.); see *šōmbāgi.*

சோமக்கிரகணம் *šōma-k-kiraganam,* பெ. (n.) நிலாமறைப்பு (சந்திரகிரகணம்); lunar eclipse. *"சோமக்கிரகணத்தினான்று" (S.I.I.i.169)*

த.வ. நிலாமறை, திங்கள் மறைப்பு

[Skt.sōma+grahana>த. சோமக்கிரகணம்.]

சோமக்கொடி *šōmakkodi,* பெ.(n.) சோமப்பூடு; soma plant (சா.அக.).

த.வ. கஞ்சா, அனுவல்லிப்பூடு

சோமகர் *šōmagar,* பெ.(n.) பாஞ்சால அரசர்கள்; *Pāñcāla* kings. *"செஞ்சகர் சோமகர்" (கம்பரா.உலாவியற்.48).*

[Skt. sōmaka > த. சோமகர்.]

சோமகீடம் *šōmakīdam,* பெ.(n.) புழுக்களின் வேறு வகை உருவம்; one of the several groups of worms (சா.அக.).

சோமகுண்டம் *šōma-kundam,* பெ.(n.) காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள ஒரு புண்ணிய நீர்த்துறை; a sacred tank in *Kāviri-p-pūmpattinam. "சோமகுண்டஞ் சூரியகுண்டந்துறை மூழ்கி" (சிலப்.9, 59).*

த.வ. நிலாக்குளம்

[சோம(ம்)+குண்டம்]

[Skt. šoma > த. சோமம்.]

[குள > குண்டு > குண்டம்]

சோமகுணம் *šōmagunam,* பெ.(n.) குளிர்ச்சியான தன்மை; cooling nature (சா.அக.).

[சோம(ம்)+குணம்]

[Skt. sōma> த. சோமம்]

சோமகேசர் *šōmakēšar,* பெ.(n.) **சோமகர்** பார்க்க; see *šōmagar. "சோமகேசர் பொருதலால்" (பாரத.வாரணா.79).*

[Skt. sōmakēšā > த. சோமகேசர்.]

சோமசக்கரம் *šōma-šakkaram,* பெ.(n.) பதினாறு இதழ்களையுடைய சக்கரம்; sixteen lobed gangtion, the seat of altruistic sentements and volitional control v.z., compassion, patience, renunciation meditativeness, gravity, determination, magnanimity, gentliness etc. (சா.அக.).

த.வ. ஈரெண் இதழாழி

[சோம+சக்கரம்]

[Skt. sōma> த. சோம]

சோமசபன்னி *šōmašapanni,* பெ.(n.) குங்கிலியம்; Indian damer resin (சா.அக.).

த.வ. வெள்ளைச்சாம்பிராணி

சோமசாரம் *šōmašāram,* பெ.(n.) 1. வெள்ளைச் சாம்பிராணி, வெண் கருங்காலி; a white spieces of ebony; egg fruited ebony, *Diospyros occurpa.* 2. ஒரு வகைச் சாரம், காடிகாரம்; silver nitrate, lunar caustic (சா.அக.).

சோமசியா *šōmašiyā,* பெ.(n.) சிறு கல்லூரி என்னும் மூலிகை; an unidentified plant said to consolidate sea salt (சா.அக.).

சோமசுந்தரன் *šōma-sundaran,* பெ.(n.) மதுரையில் கோயில் கொண்டுள்ள சிவ பெருமான்; Šivan worshipped in Madurai (திருவிளை. மூர்த்தி.34).

[Skt. sōmasundara > த. சோமசுந்தரன்.]

சோமசூத்திரப்பிரதட்சிணம் *šōmašūttira-p-piratatcinam,* பெ.(n.) சிவன் திருக் கோயிலில் கோமுகியைக் கடவாது திருச் சுற்றில் வலம் வருதல்; a special kind of circumambulation in a *šivan* temple performed without crossing the *cōmacūttiram* (இ.வ.).

[Skt. sōmasūtra+pradakšina>த. சோம சூத்திரபிரதட்சிணம்.]

சோமசூத்திரம் *šōma-šūttiram,* பெ.(n.) சிவன் கோயிலில் முழுக்காட்டு நீர் விழும் கோமுகம்; a spout attached to the innershrine of a *šivan* temple (G sm. D.I.i.112).

[Skt. sōmasūtra > த. சோமசூத்திரம்.]

சோமசேகரன் *šōma-šēgaran,* பெ.(n.) சிவன்; *šivan*, as having the moon on his crest. *(சந்திரனை முடியில் உடையவன்)* *"சோமசேகர க்ருபாளுவாய்" (தாயு.சிற்சுகோ. 10).*

[Skt.sōma+šēkhara > த. சோமசேகரன்.]

சோமசொரூபம் *šōma-šorūbam,* பெ.(n.) குளிர்ந்த தன்மை; cooling nature (சா.அக.).

சோமணம் *šōmanam,* பெ.(n.) மலங்கழித்த பின் தூய்மை செய்தல்; cleaning or washing the posteriors after evacuation of bowels (சா.அக.).

த.வ. கால் கழுவுதல்

சோமதனம் *šōmadanam,* பெ.(n.) செம்மரம்; coromendel redwood, *Soymida febrifuga* (சா.அக.).

சோமதாரி *šōmadāri,* பெ.(n.) இந்துப்பு; rock salt (சா.அக.).

சோமதிசை *šōma-dišai,* பெ.(n.) குபேரனது திசை எனப்படும் வடதிசை; north, as *Kubēra's* quarter (திவா.).

த.வ. வடதிசை

[சோம+திசை.]

[Skt. sōma > த. சோம]

சோமநாதச்சுண்ணம் *šōmanāda-c-cunnam,* பெ.(n.) அரத்தத் தூய்மைக்காக இரும்பைக் கொண்டு அணியம் செய்யும் ஒரு வகை மருந்து; an Ayurvedic preparation of iron prescribed for impurities of blood (சா.அக.).

சோமநாதப்பெருங்காயம் *šōmanāda-p-perungāyam,* பெ.(n.) பண்டைய காலத்தில் கூர்ச்சர நாட்டில் இருக்கும் சோமநாத புரத்திலிருந்து இறக்குமதியாகும் ஒரு பெருங்காயம்; a kind of pure asafoetida imported from Somanath in Gujarat (சா.அக.).

சோமநாதரசம் *šōmanāda-rašam,* பெ.(n.) மனோசிலையைத் தூய்மைப்படுத்தி, இரும்பு, அப்பிரகம், வெள்ளி சேர்த்துப் புடமிட்டு எடுத்த நீரிழிவு போன்றவற்றிற்கான ஆயுள்வேத மருந்து; an Ayurvedic preparation given for diabetes and venerial diseases (சா.அக.).

த.வ. கமுக்கமருந்து

சோமநாதி *šōmanādi,* பெ.(n.) **சோமநாதப் பெருங்காயம்** பார்க்க; see *šōmanāda-p-perungāyam* (சா.அக.).

த.வ. சீந்தில்

சோமநாயகம் *šōmanāyagam,* பெ.(n.) வேலிப்பருத்தி; hedge cotton (சா.அக.).

த.வ. சிந்தில்



சோமநோய் *šōmanōy,* பெ.(n.) கருப்ப வெட்டை; a discharge of a whitish colour, coming from the vegina or from the neck of the womb cervix (சா.அக.).

சோமப்பால் *šōmappāl,* பெ.(n.) சோமச் செடியின் பால் போன்ற வெண்ணிறமான சாறு; the milky juice of soma plant (சா.அக.).

[சோம(ம்)+பால்]

[Skt. sōma > த. சோமம்]

சோமப்பிணி *šōma-p-piṇi,* பெ.(n.) நீரிழிவு; diabetes (சா.அக.).

த.வ. சருக்கரைநோய்

சோமப்பூடு *šōma-p-pūḍu,* பெ.(n.) சோமலதை அல்லது கொடிக்கள்ளி; moon creeper (சா.அக.).

சோமபந்து *šōmabandu,* பெ.(n.) 1. ஆம்பல்; water lily. 2. பெருங்காயம்; asafoetida (சா.அக.).

சோமபானம் *šōmabāṉam,* பெ.(n.) சோம வேள்வியில் சோமச்சாறு பருகுகை; drinking of the *sōma* beverage at the *sōma* sacrifice.

த.வ. சோமச்சாறு

[சோமம்+பானம்]

[Skt. sōma>த. சோமம்.]

சோமம்[1] *šōmam,* பெ.(n.) 1. வேள்விகளில் தேவிகளுக்குப் படையலாக்கிய பின் வேள்வி செய்வார் பருகுதற்குரிய சாறு அணியம் செய்யுங்கொடி; *šōma* plant, whose juice was offered to gods in *vēdic* sacrifices and drunk by the priests. *"கொடிகளிற் சோமக்கொடியுநீ" (காசிக. துருவன்பதம்.4).* 2. **சோமயாகம்** பார்க்க; see *sōmayōgam.* 3. கொடிக் கள்ளி; moon creeper.

[Skt. sōma > த. சோமம்.]

சோமம்[2] *šōmam,* பெ.(n.) 1. ஆட்டாங்கொடி; a kind of creeper. 2. ஒரு கொடி; the moon plant. 3. கஞ்சி; liquid rice. 4. அருவதா; rue, any fermented liquor. 5. கள்; toddy (சா.அக.).

சோமமணல் *šōmamaṇal,* பெ.(n.) வெள்ளி மணல்; sand containing silver ore (சா.அக.).

த.வ. வெள்ளிக்கனிமம்

சோமயாகம் *šōma-yāgam,* பெ.(n.) தேவர் பொருட்டுச் சோமச்சாறு அளிக்கும் வேள்வி வகை; a kind of sacrifice at which *sōma* juice is offered to gods (பிங்.).

[Skt. sōma+yāga > த. சோமயாகம்.]

சோமயாசி *šōmayāši,* பெ.(n.) 1. சோம வேள்வி செய்தோன்; Brahmin who has performed the *sōma* sacrifice. *"குட்டேறபட்ட சோமயாஜியார்" (S.I.I.iii, 110).* 2. சோமயாசிகளின் மரபினரான பார்ப்பனர் சூட்டிக் கொள்ளும் பட்டப் பெயர்; a titile among Brahmins whose ancestors have performed *sōma* sacrifice.

[Skt. sōma+yājin> த. சோமயாசி]

சோமயோனி *šōmayōṉi,* பெ.(n.) ஒரு வகைச் சந்தனம்; a kind of sandal wood (சா.அக.).

சோமர் *šōmar,* பெ.(n.) தென்புலத்தாருள் ஒருவகையினர்; a particular class of manes (சங்.அக.).

[Skt. sōma-pā > த. சோமர்.]

சோமரசகுணம் *šōmarašagunam,* பெ.(n.) சோமச்செடியிலிருந்து எடுக்கப்படும் சோமச் சாற்றின் குணம்; the properties of the *šōma* juice (சா.அக.).

[சோமரச+குணம்]

[Skt. šōmarаša>த. சோமரசம்.]

சோமராகம் *šōma-rāgam,* பெ.(n.) பாலைப் பண்களுளொன்று; (Mus.) a musical mode of the *pālai* class (பிங்.).

[Skt. sōma+rāga > த. சோமராகம்.]

சோமராசி *šōmarāši,* பெ.(n.) 1. கார்போக வரிசி; seeds of hazel leaved psoralea. 2. காட்டுச் சீரகம்; purple fleabane (சா.அக.).

த.வ. பேய்ச்சீரகம்

சோமரிதம் *šōmaridam,* பெ.(n.) தூதுவளை; three lobed nightshade (சா.அக.).

த.வ. சளியறுப்பான்

சோமரிரசம் *šōmarirašam,* பெ.(n.) பெண் களின் வெள்ளை ஒழுக்கிற்குச் சாப்பிடும் இதளியம் சேர்ந்த மருந்து; a mercurial preparation given for a disease of women (சா.அக.).

சோமரோகம் *šōmarōgam,* பெ.(n.) 1. **சோமநோய்** பார்க்க; see *šōmanōy.* 2. நீரிழிவு; diabetes. 3. பெண்களுக்கு வரும் ஒரு நோய்; a disease of women marked by a white discharge through vagina (சா.அக.).

சோமலதை[1] *šōmaladai,* பெ.(n.) 1. கொடிக் கள்ளி; creeping milk hedge. 2. **சோமப்பூடு** பார்க்க; see *šōma-p-pūdu* (சா.அக.).



சோமலதை[2] *šōmaladai,* பெ.(n.) சோமக் கொடி; *sōma* plant.

[Skt. sōma+latā > த.சோமலதை.]

சோமவல்லரி *šōma-vallari,* பெ.(n.) பொன்னாங்கன்னி (பார்க்க); a plant, see *ponnāṅkanni.*

[Skt. sōmavallari > த. சோமவல்லரி.]



சோமவலக்கம் *šōmavalakkam,* பெ.(n.) பெருங்குமிழ்; cashmere tree (சா.அக.).

சோமவலக்கலம் *šōmavalakkalam,* பெ.(n.) வெண் கருங்காலி; a white spieces of ebony (சா.அக.).

சோமவலகம் *šōmavalagam,* பெ.(n.) சீந்தில்; moon creeper (சா.அக.).

சோமவாரம் *šōma-vāram,* பெ.(n.) திங்கட்கிழமை; monday. *"பதின்மூன்றாம் பக்கமும் சோமவாரமும் பெற்ற அனுடத்தில்" (சிலப்.10, 2, உரை).*

[Skt. sōma+vāra > த. சோமவாரம்.]

சோமவாலி *šōmavāli,* பெ.(n.) பெருங்குமிழ்; cashmere tree (சா.அக.).

த.வ. குமிழமரம்

சோமவிருட்சம் *šōmaviruṭcam,* பெ.(n.) சிவமலை (சிவகிரி)யின் மேலுள்ள புத்துணர் வுக்காகப் பயன்படுத்தப்படும் ஒரு வகை கற்ப மரம்; an unknown tree said to be found on the top of Sivagiri hills (Madurai or Tirunelveli Dist.). It is useful in rejuvenation (சா.அக.).

சோமவுலுக்கம் *šōmavulukkam,* பெ.(n.) தேக்கு; teak (மூ.அ.).

[Skt. sōmavalka > த. சோமவுலுக்கம்.]

சோமன் *šōman,* பெ.(n.) 1. அமுதம்; nector. 2. கருப்பூரம்; camphor. 3. கோழை; phlegm. 4. காற்று; wind. 5. நீர்; water. 6. வழலை; soap. 7. நீல நஞ்சு; a prepared arsenic. 8. வெள்ளி மணல்; sand mixed with silver ore. 9. நிலவு; moon. 10. செம்பு; copper. 11. பச்சைக் கற்பூரம்; crude camphor. 12. மலை; mountain. 13. மென்மைக்கும், நிறைவிற்கும் உரிய சின்னம்; a symbol of mildness, contentment and satisfaction (சா.அக.).

சோமன்புத்திரி *šōmaṉ-puttiri,* பெ.(n.) நருமதை; the river Narmada, as the moon's daughter (பிங்.).

[Skt. sōmaputri > த. சோமன்புத்திரி.]

சோமன்ரவிவன்னியானோன் *šōmaṉ-ravi vaṉṉiyāṉōṉ,* பெ.(n.) வழலை; soap (சா.அக.).

சோமனாசி *šōmaṉāši,* பெ.(n.) பழங் காலத்தில் கூர்ச்சரநாட்டிலிருந்து இறக்குமதி யாகிய பெருங்காயம்; சோமநாத பெருங்காயம்; a kind of pure asafoetida imported from Somanath in Gujarat (சா.அக.).

சோமனுப்பு *šōmaṉuppu,* பெ.(n.) 1. இந்துப்பு; rock salt. 2. பச்சைக் கருப்பூரம்; crude camphor. 3. நீல நஞ்சு; a kind of prepared arsenic (சா.அக.).

சோமனோய் *šōmaṉōy,* பெ.(n.) **சோம நோய்** பார்க்க; see *šōmanōy* (சா.அக.).

சோமாக்கியம் *šōmākkiyam,* பெ.(n.) 1. செந்தாமரை; red lotus (மூ.அ.). 2. செவ்வல்லி; red Indian water lilly.

த.வ. ஆம்பல்

[Skt. sōmākhya > த. சோமாக்கியம்.]

சோமாசி *šōmāsi,* பெ.(n.) **சோமயாசி** பார்க்க; see *šōmayāši. "சோமாசிமாறர்" (பெரியபு. மூர்க்க.12).*

[Skt. sōma-yājin > த. சோமாசி.]

சோமாசுகந்தன் *šōmāsugandaṉ,* பெ.(n.) உமையோடும் கந்தனோடுங் கூடியுள்ள சிவத்திருமேனி; šivan, with *Pārvadi* and *kandan*

[Skt. sā+umā+skanda > த. சோமாசு கந்தன்.]

சோமி *šōmi,* பெ.(n.) கொற்றவை; *Durgā. "சத்தியுஞ் சோமியும்" (திருவாச.9, 1).*

[Skt. sōma > த. சோமி.]

சோமுகன் *šōmugaṉ,* பெ.(n.) திருமாலாற் கொல்லப்பட்ட ஓர் அரக்கன்; an *Asura* slain by *Viṣṇu.*

[Skt. sōmaka > த. சோமுகன்.]

சோமேசுவரரசம் *šōmēšuwararašam,* பெ.(n.) பெண்களின் வெள்ளை ஒழுக்கிற்கான ஓர் ஆயுர்வேத மருந்து; an ayurvedic medicine useful for white discharge of women (சா.அக.).

சோமேதா *šōmēdā,* பெ.(n.) **சோமதனம்** பார்க்க; see *šōmadaṉam* (சா.அக.).

சோயம் *šōyam,* பெ.(n.) "இவன் அவனே" என்னும் பொருள் கொண்ட வடமொழித் தொடர்; a Sanskrit expression meaning "this is he" (கைவல்.தத்.79).

[Skt. sōyam > த. சோயம்.]

சோயவபலம் *šōyavabalam,* பெ.(n.) மூங்கிற் குருத்து; shoots of bamboo tree (சா.அக.).

த.வ. மூங்கில் முளை

சோர் *šōr,* பெ.(n.) ஆடம்பரம்; guadiness, pomposity.

த.வ. பகட்டு

[U. jōr > த. சோர்.]

சோர்தாக்கீது *šōr-tākkidu,* பெ.(n.) கண்டிப்பான கட்டளை; stringent order (Loc.).

[U. jōrtākhid > த. சோர்தாக்கீது.]

சோர்பதன் *šōrpadan,* பெ.(n.) தளர்ந்த காலம்; one's weak moments (சா.அக.).

சோர்பொழுது *šōrpoludu,* பெ.(n.) மாலைப் பொழுது; evening time (சா.அக.).

சோர்பௌவம் *šōrpouvam,* பெ.(n.) நறும் பிசின்; fragrant resin (சா.அக.).

சோர்வாதம் *šōrvādam,* பெ.(n.) 1. கால் கை மரத்துப்போய் அயர்ச்சியை உண்டாக்கி விழச் செய்யும் முடக்கு நோய்; paralysis causing loss of power, in the limbs. 2. திமிர்வாதம்; palsy (சா.அக.).

சோரகவி *šōrakavi,* பெ.(n.) 1. ஒருவர் மேல் பிறன்பாடிய பாடலைத் தான் பாடியதாக வேறொருவனுக்குச் சூட்டுபவன்; plagiarist-poet who offers another's poem as his own. 2. திருட்டுப் பாட்டு; plagiarised poem.

[Skt. cōra > த. சோரம்.]

சோரகன் *šōragan,* பெ.(n.) திருடன்; thief (சங்.அக.).

[Skt. cōrakā > த. சோரகன்.]

சோரங்கபாடாணம் *šōraṅga-pāḍāṇam,* பெ.(n.) ஒருவகைச் செய்ந்நஞ்சு; a kind of prepared arsenic poison (சா.அக.).

சோரங்கொடு-த்தல் *šōraṅkoḍu-,* 4 செ. குன்றாவி.(v.t.) பெண்ணைக் கூட்டிக் கொடுத்தல்; to pimp (சா.அக.).

சோரசத்துரு *šōra-šatturu,* பெ.(n.) சோர நஞ்சின் பகை மருந்தான சவ்வீரம்; sublimate of mercury which is an antidote to *šōranañju* (சா.அக.).

சோரசெந்தூரி *šōra-šendūri,* பெ.(n.) நாகதாளி; a plant of the convolvulus genus capable of calcing *šōrapāṣaṇam.* Its not the prickly pear plant as is given out by many authors (சா.அக.).

சோரத்தனம் *šōra-t-tanam,* பெ.(n.)
1. திருட்டுக்குணம்; thievishness.
2. ஏமாற்றுக் குணம்; fraud, dishonesty.
3. பரத்தமை; adultery or unfaithfulness of a wife.

[சோர(ம்)+ தனம்.]

[Skt. cōra > த. சோரம்.]

சோரத்திரி *šōrattiri,* பெ.(n.) பரத்தை; prostitute (சா.அக.).

த.வ. விலைமகள்

சோரத்துவம் *šōrattuvam,* பெ. (n.) **சோரத்தனம்** பார்க்க; see *šōrattanam.*

[Skt. cōra-tva> த. சோரநாசம்]

சோரநாசம் *šōra-nāšam,* பெ.(n.) திருடரின் அழிவு; destruction of thieves.

[Skt. cōranāsa > த. சோரநாசம்]

சோரநாயகன் *šōranāyagan,* பெ.(n.) கள்ளக் காதலன்; paramour.

[சோர+நாயகன்]

[Skt. cōra+ > த. சோர]

சோரப்பார்வை *šōra-p-pārvai,* பெ.(n.) சேர விருப்பங் கொள்ளும் பார்வை; amorous look, ogling (சா.அக.).

த.வ. விழுங்கும் பார்வை

சோரப்புணர்ச்சி *šōra-p-puṇarcci,* பெ.(n.) கள்ள உறவு; illicit intercourse (சா.அக.).

த.வ. கள்ளக்காதல்

சோரபத்திரி *šōrapattiri,* பெ.(n.) ஒரு சரக்கு; a drug (சா.அக.).

சோரபாடாணம் *šōrapāḍāṇam,* பெ.(n.) 32 வகையான செய்ந்நஞ்சு வகைகளில் ஒன்று; one among 32 kinds of prepared arsenic (சா.அக.).

சோரபுட்பம் *šōra-puṭpam,* பெ.(n.) சங்கங் குப்பி; smooth volkameria (மலை.).

[Skt. cōra-puṣpī > த. சோரபுட்பம்.]

சோரபுட்பி *šōrapuṭpi,* பெ.(n.) **சோரபுட்பம்** பார்க்க; see *šōrapuṭpam* (சா.அக.).

சோரபுத்திரன் *šōraputtiraṉ,* பெ.(n.) கணவனல்லாத பிறனுக்குப் பிறந்த பிள்ளை; unnatural son (சா.அக.).

[சோர(ம்) + புத்திரன்.]

[Skt. cōra > த. சோரம்.]

சோரபேதி *šōrabēdi,* பெ.(n.) அஞ்சன நஞ்சு; a kind of native arsenic (சா.அக.).

சோரம்[1] *šōram,* பெ.(n.) 1. களவு; stealing, embezzling. *"சோரங் கொலை யெய்தாது" (பாரத. அருச்சுனன்றீர்.1).* 2. வஞ்சனை; deceit, fraud. *"மாயைசெய் சோரம் பொய்க் குடில்" (திருப்பு.164) (சங்.அக.).* 3. பரத்தனம்; adultery (சங்.அக.). 4. **சோராபாடாணம்** பார்க்க; see *šōrāpāḍāṇam.*

[Skt. cōra > த. சோரம்.]

சோரம்[2] *šōram,* பெ.(n.) 1. சோர நஞ்சு; a prepared arsenic. 2. கோடா சுரி; . 3. நாகம்; zinc. 4. மாதவிடாய்; menstrual blood. 5. பரத்தமை; adultery (சா.அக.).

சோரம்போதல் *šōrampōdal,* பெ.(n.) தகாத உறவு கொள்ளல்; commetting adultery (சா.அக.).

த.வ. கள்ளப்புணர்ச்சி

[சோரம் + போதல்.]

[Skt. sōra > த. சோரம்.]

சோரமார்க்கம் *šōramārkkam,* பெ.(n.) பரத்தமை; adultery (சா.அக.).

சோரல் *šōral,* பெ.(n.) சோர்தல்; fainting (சா.அக.).

த.வ. மயக்கமாதல்

சோரன் *šōraṉ,* பெ.(n.) 1. ஆட்டுக்குட்டி; lamb, kid. 2. வெடியுப்பு; nitre. 3. சவ்வீரம்; corrosive sublimate. 4. பரத்தமை; adultery (சா.அக.).

சோரன்கிழங்கு *šōraṉ-kiḻaṅgu,* பெ.(n.) நிலச் சருக்கரைக் கிழங்கு; ground sugar root (சா.அக.).

சோராக்கண்துடிப்பு *šōrākkaṇ-tuḍippu,* பெ.(n.) கண்ணின் பாவைக்கடுத்துக் குத்தல்; an eye disease marked by irritation of the lens (சா.அக.).

சோராஞ்சனம் *šōrāñjaṉam,* பெ.(n.) களவு போன சொத்தைக் கண்டுபிடிக்கவும், பெண்களை வயப்படுத்தவும் பயன்படும் மை; a magic paint used for tracing stolen property and for captivating women (சா.அக.).

சோராவரி[1] *šōrāvari,* பெ.(n.) 1. கொள்ளை; dacoity, robbery, depredation. 2. வன்முறை; force, violence, outrage, as on a woman's modesty (Loc.).

த.வ. வலக்காரம்

[U. jōrāvari > த. சோராவரி.]

சோராவரி² *šōrāvari,* பெ.(n.) வலக்காரம்; out raging as on a women's modesty (சா.அக.).

சோரி *šōri,* பெ.(n.) 1. அரத்தம்; blood. 2. மழை; rain. 3. சிறு செருப்படை என்னும் மூலிகை; a low spreading medicinal plant. 4. கொடிக்கள்ளி; creeper milkhedge (சா.அக.).

சோரிக்கட்டி *šōrikkaṭṭi,* பெ.(n.) 1.வேனிற்கட்டி; summer boils arising in several parts of the body. 2. உறைந்த அரத்தம்; blood clots (சா.அக.).

த.வ. வேனல்கட்டி

சோரிக்கட்டு *šōrikkaṭṭu,* பெ.(n.) தீட்டுக் கட்டு; suppression of menses (சா.அக.).

சோரிக்கடுப்பு *šōrikkaḍuppu,* பெ.(n.) அரத்தக் கடுப்பு; irritation and pain while passing stools mixed with blood (சா.அக.).

சோரிநார் *šōrinār,* பெ.(n.) 1. அரத்த உறைவின் போது உண்டாகும் நார் போன்ற பொருள்; a peculiar organic fibre like substance found in blood during blood clot. 2. அரத்த உறையின் போது உண்டாகும் நீர்; liquor sanguines (சா.அக.).

சோரிப்படர்த்தி *šōri-p-paḍartti,* பெ.(n.) வெண் விழியில் அரத்தம் சூழும்படிச் செந்நிறச் சதை வளரும் ஒரு கண்ணோய்; a disease of the eye marked by reddish growth of flash in the selerotic coat (சா.அக.).

சோரியிளநீர் *šōriyiḷanīr,* பெ.(n.) பூச்சி, பாம்புப்பூச்சி, திமிர் பூச்சி ஆகியவற்றைப் போக்கும் செந்நிற இளநீர்; water of reddish tender cocoanut (சா.அக.).

சோரியோமம் *šōriyōmam,* பெ.(n.) செந்நிற ஓமம்; a red variety of sison on bishops weed (சா.அக.).

த.வ. செவ்வோமம்

சோரிவரி *šōrivari,* பெ.(n.) கண்ணில் அரத்தப் படலத்தில் வரும் கண்ணோய் வகை; an eye disease characterised by red lines or streaks (சா.அக.).

சோரிவிழல் *šōri-viḻal,* பெ.(n.) மூக்கில் வரும் அரத்த ஒழுக்கு; bleeding of the nose (சா.அக.).

சோல்னா *šōlṉā,* பெ.(n.) நீண்ட வளைப்பிடியுள்ள ஒரு வகைச் சிறுபை; a kind of small bag or pouch (கொ.வ.).

த.வ. தோட்பை

[U. jhōlnā > த. சோல்னா.]



சோலி *šōli,* பெ.(n.) பெண்கள் மேல் அணியும் ஆடை; woman's jacket (யாழ்.அக.).

த.வ. கச்சு

[Skt. cōlī > த. சோலி.]

சோலிக்காய் *šōlikkāy,* பெ.(n.) கற்றேக்கு; racemed fish bone tree (சா.அக.).

சோவாசி *šōvāši,* பெ.(n.) பயிரிடுங் குடியானவன்; cultivating tenant Cg.

த.வ. காராளன், உழவன்

[Skt. sukha+vāsin>த.சோவாசி.]

சோவானை *šōvāṉai,* பெ.(n.) மங்கலம் பொருந்திய ஆலத்திப்பாட்டு; a benedictory song. *சோவானைபாடி ஆலத்தி எடுத்தாள்* (Loc.).

[Skt. šōbhana > த. சோவானை.]

சோவை *šōvai,* பெ.(n.) **சோகை** பார்க்க; see *šōgai.*

[Skt. šōpha > த. சோவை.]

சோழியப்பை *šōḻiya-p-pai,* பெ.(n.) இரவலர் (பிச்சைக்காரர்கள்) பிச்சையேற்கும் பை; a large kind of bag used by mendicants.

த.வ. தோட்பை

[H. jōlna> த. சோழியப்பை]

சோளகம் *šōḷagam,* பெ.(n.) குடுமி வைக்கும் சடங்கு; shaving the ceremony of tonsure (சங்.அக.).

[Skt. caula > த. சோளகம்.]

சோறாபரி *šōṟāpari,* பெ.(n.) **சோராவரி** பார்க்க; see *šōrāvari.*

[U. jorāwari > த. சோறாபரி.]

சோன்முகத்தாமரை *šōṉmuga-t-tāmarai* பெ.(n.) முண்டினி மரம்; an unidentified tree (சா.அக.).

சோனகங்கெளுத்தி *šōṉagaṅkeḷutti,* பெ.(n.) ஒருவகை ஆற்றுக் கெளுத்தி மீன்; a kind of river macrone fish, *Macrones punctatus* (சா.அக.).



சோனகசுரம் *šōṉaga-šuram,* பெ.(n.) உடலில் சிவந்த கொப்புளங்களை எழுப்பும் காய்ச்சல். இது இசுலாமிய நாடுகளாகிய பாபிலோன், அரபி, கிரீசு முதலான இடங்களில் பரவி வந்த ஒரு வகைத் தொற்றுக் காய்ச்சல்; a kind of fever prevalent in Jonaca (Mahamadan) countries of Babylonia, Arabia, Greece etc. Its a contagious disease with raht - scarlatina (சா.அக.).

சோனகத்திருக்கை *šōṉaga-t-tirukkai,* பெ.(n.) கடலில் வாழும் ஒரு வகைத் திருக்கை மீன்; tiger tenkey, English ray trygon warnak (சா.அக.).

த.வ. அயற்றிருக்கை



சோனகப்புல் *šōṉagappul,* பெ.(n.) திராய்ப் புல்; a kind of straw plant, *Medicagoesculenta* (சா.அக.).

சோனகப்பூ *šōṉagappū,* பெ.(n.) நாகப்பூ; scarlet flowered plant (சா.அக.).

த.வ. நாகலிங்கப்பூ

சோனகம் *šōṉagam,* பெ.(n.) 1. உள்ளி; onion. 2. இளமை; youth. 3. அரபு நாடு; Arabia. 4. யவனநாடு; Greeks. 5. அரபுமொழி (பதினெண்மொழிகளில் ஒன்று); Hindustani as one of the 18 languages of olden days. 6. வாகை; *Allizzia labbek.* 7. உத்தாமணி; hedge cotton (சா.அக.).

[Skt. yavana > த. சோனகம்.]

சோனகர் *šōṉagar,* பெ.(n.) 1. அரபு நாட்டவர்; the Arabs. 2. யோனகர்; yonacus or Ionians. 3. மலையாளத்து யூதர்கள்; black Jews of

Malabar including white Jews of Cochin. 4. யவனர் அல்லது கிரேக்கர்; Greeks 5. இராமநாத புரத்திலும், தூத்துக்குடியிலும் உள்ள முத்துக்குளிக்கும் ஒரு குலத்தார்; a class of people living in Ramanatha puram and Tuticorin whose vocation is pearl diving (சா.அக.).

சோனகவாளை *šōṉaga-vāḷai,* பெ.(n.) 1.5 அடி நீளமும், வெண்ணிறமும் உடைய கடல் சரவாளை மீன்; a sea-fish of wallago genus moorman's valai.



சோனகன் *šōṉagaṉ,* பெ.(n.) யவன தேயத்தான்; foreigner, especially Greek, Arab or Moor (திவா.). *"சோனகர் மனையின்னுாய்" (கம்பரா.ஊர்தேடு.112).*

[Skt. yavana > த. சோனகன்.]

சோனபதன் *šōṉapadaṉ,* பெ.(n.) பித்தன்; lunatic (சா.அக.).

த.வ. பித்துக்கொளி

சோனம் *šōṉam,* பெ.(n.) 1. சிறு கரும்பு; a kind of sugarcane of stunted growth. 2. இரும்பு; iron. 3. 56 நாடுகளுள் ஒன்று; one of the 56 countries according to the territorial division of ancient days (சா.அக.).

சோனாகம் *šōṉāgam,* பெ.(n.) பெரு வாகை; common sirissa (சா.அக.).

சோனி *šōṉi,* பெ.(n.) 1. வளராமலும், பருக்காமலும் உள்ளவன்; a man of stunted growth and slender body. 2. மெலிந்தவன்; lean or slender body (சா.அக.).

த.வ. கறளை

சோனிடாட்சகி *šōṉiḍāṭšagi,* பெ.(n.) குந்திரிக்கம்; frankincense (சா.அக.).

சோனை[1] *šōṉai,* பெ.(n.) 1. மூடுபனி; mist. 2. ஓர் அத்தி வகை; a kind of fig. 3. விடாமழை; torrential rain (சா.அக.).

சோனை[2] *šōṉai,* பெ.(n.) திருவோணம் (பார்க்க); the 22nd nakṣatra (பிங்.).

[Skt. šrōṇā > த. சோனை.]

சோனைப்புல் *šōṉai-p-pul,* பெ.(n.) அக்க தேவி; guinea grass found in poor clay soil (சா.அக.).

சோனையத்தி *šōṉaiyatti,* பெ.(n.) 1. **சோனை** பார்க்க; see *šōṉai.* 2. **சொனையத்தி** பார்க்க; see *šoṉaiyatti* (சா.அக.).

சௌ *šau,* பெ.(n.) சிறுமிகளையும் வாழ்வரசிகளையும் குறிக்க வழங்கும் சௌபாக்கியவதி என்ற சொல்லின் முதல் எழுத்துக் குறிப்பு; the initial letter of the word *šaupākkiyavadi,* used by elderly persons before the names of young girls and married women.

த.வ. திருநிறைச்செல்வி

[Skt. sau> த. சௌ.]

சௌக்கம்[1] *šaukkam,* பெ.(n.) பண்டங்களின் மலிவு; cheapness.

சௌக்கம்[2] *šoukkam,* பெ.(n.) **சவுக்கம்** பார்க்க; square. see *savukkam (சா.அக.).*

த.வ. சதுக்கம்

சௌக்கார் *šaukkār,* பெ.(n.) பணம் கொடுக்கல் வாங்கல் செய்பவன்; native banker, sowcar.

த.வ. கொள்கொடையாளன், வட்டிக்காரன், காசுக்கடைக்காரன்

[Pkt. sāvakār>த. சௌக்கார்.]

சௌக்காரி *šaukkāri,* பெ.(n.) **சாவ்கார்** பார்க்க; see *šaukkār.*

சௌக்கிதார் *šaukkidār,* பெ.(n.) பாராக்காரன்; chokidar, guard, sentinel (Loc.).

த.வ. காவற்காரன்

[H. caukidār> த. சௌக்கிதார்.]

சௌக்கியத்தப்பு *šaukkiya-t-tappu,* பெ.(n.) நோய்; ill health, indisposition.

த.வ. நலப்பிழை

[சௌக்கியம் + தப்பு.]

[Skt. saukhya>த. சௌக்கியம்]

சௌக்கியம் *šaukkiyam,* பெ.(n.) 1. நலம்; health, convalescence. 2. **சௌகரியம்** பார்க்க; see *šaugariyam.* 3. மலங்கழிக்கை; evacuation (Loc.).

[Skt. šaukhya > த. சௌக்கியம்.]

சௌக்கியவீனம் *šaukkiyavīṇam,* பெ.(n.) நலமில்லாமை; ill health.

த.வ. உடல்நலிவு

[Skt. saukhya+hina>த. சௌக்கியவீனம்.]

சௌக்கு[1] *šaukku,* பெ.(n.) **சவுக்கம்,** **1** பார்க்க; see *šavukkam,1.*

த.வ. அம்பலம், பொதுவிடம்

சௌக்கு[2] *šoukku,* பெ.(n.) **சவுக்கு** பார்க்க; see *šavukku* (சா.அக.).

சௌகண்டிகம் *šoukaṇḍigam,* பெ.(n.) கோழையினால் வயிற்றில் பிறக்கும் ஒரு வகைப் பூச்சி; a kind of worm born at the lower end of the stomach out of phlegm (சா.அக.).

த.வ. சளிப்பூச்சி

சௌகதன் *šowkadaṉ,* பெ.(n.) மந்திரவாதி; a magician, a sorcerer (சா.அக.).

த.வ. மந்திரக்காரன்

சௌகந்தகம் *šowkandagam,* பெ.(n.) 32 வகை நஞ்சுகளில் ஒரு வகை நஞ்சாகிய கற்கடக நஞ்சு; a kind of arsenic poison (சா.அக.).

சௌகந்தி *šaukandi,* பெ.(n.) 1. மாணிக்க வகை (சிலப்.14, 186, உரை); a kind of ruby having the tint of the red flowered water-lilly, one of four *māṇikkam,* q.v. 2. கந்தகச் செய்நஞ்சு; a mineral poison.

[Skt. saugandhika > த. சௌகந்தி.]

சௌகந்திகம் *šaukandigam,* பெ.(n.) 1. நீல ஆம்பல் (நீலோற்பலம்); blue Indian water lilly. 2. **சௌகந்தி** பார்க்க; see *šaukanti.* 3. வெள்ளாம்பல் (மலை.); white Indian water-lilly.

[Skt. saugandhika > த. சௌகந்திகம்.]

சௌகந்திகை *šoukandigai,* பெ.(n.) மணமுள்ள ஒரு வகைத் தாமரை; a kind of fragrant lotus (சா.அக.).

சௌகந்தியம் *šoukandiyam,* பெ.(n.) 1. நலம்; health. 2. **சௌக்கியம்** பார்க்க; see *šowkkiyam.* 3. மணம்; fragrant (சா.அக.).

சௌகம்[1] *šaugam,* பெ.(n.) நான்கு; four.

[H. cauk > த. சௌகம்.]

சௌகம்[2] *šougam,* பெ.(n.) 1. கிளி; parrot. 2. துன்பம் (துக்கம்); grief (சா.அக.).

சௌகரிகம் *šougarigam,* பெ.(n.) **சௌகரியம்** பார்க்க; see *šowgariyam* (சா.அக.).

த.வ. ஏந்து

சௌகரியம் *šougariyam,* பெ.(n.) 1. ஏந்து (வசதி); ease, comfort, convenience. 2. மலிவு; cheapness.

த.வ. ஏந்து

[Skt. saukarya > த. சௌகரியம்.]

சௌகு *šougu,* பெ.(n.) 1. மண்காரம்; crude carbonate of soda. 2. வளையலுப்பு; glass gall. 3. சவுட்டுப்பு; nitre, potasium nitrate (சா.அக.).

த.வ. உவர்மண் உப்பு

சௌகுமாரியம் *šoukumāriyam,* பெ.(n.) இளமை; youth (சா.அக.).

சௌச்சிதம் *šouccitam,* பெ.(n.) சங்கிலை; four spined monetia (சா.அக.).

சௌசண்டி *šousaṇḍi,* பெ.(n.) திப்பிலி; long pepper (சா.அக.)



சௌசம் *šausam,* பெ.(n.) 1. தூய்மை; purity, cleanliness (சூடா.). 2. கால் கழுவுகை; cleansing, washing after evacuation.

[Skt. šauca > த. சௌசம்.]

சௌசவிதி *šausa-vidi,* பெ.(n.) உடம்பைத் தூய்மைச் செய்ய வேண்டிய முறை; rules prescribed for washing one's body.

[Skt. šauca + vidhi > த. சௌசவிதி.]

சௌசன்னியம் *šaucanniyam,* பெ.(n.) 1. இனிய குணம்; kindly disposition, amiability. 2. நெருங்கிய நட்பு; friendship, intimacy.

த.வ. நல்லிணக்கம்

[Skt. saujanya > த. சௌசன்னியம்.]

சௌசிங்கம் *šousiṅgam,* பெ.(n.) மலையாடு; four horned antelope (சா.அக.).

த.வ. வரையாடு

சௌசௌ *sousou,* பெ.(n.) 1. உணவு வகை (இ.வ.); chow-chow. 2. காய்கறிவகை (இ.வ.); a kind of vegetable. 3. பல நாடகங்களிலிருந்து ஒரொரு கூறுகளை எடுத்துக் கொண்டு நடிக்கும் நாடக வகை; a variety entertainment made up of several short dramatic performances (mod.).

சௌடால் *šauḍāl,* பெ.(n.) சவடால்; ostentation, stylishness.

த.வ. இடக்குப்பேச்சு

[U. cautāl > த. சௌடால்.]

சௌடீரியம் *šouḍīriyam,* பெ.(n.) மறம், வீரம்; valour (சா.அக.).

சௌடோல் *souḍōl,* பெ.(n.) யானை மீது அமைக்கப்படும் இருக்கை (அம்பாரி); howdah.

த.வ. யானைத்தவிசு

[H. cauḍōla > த. சௌடோல்.]

சௌண்டலை *souṇḍalai,* பெ.(n.) சோலை வெண் தேக்கு; garden white teak (சா.அக.).

சௌண்டிகன் *souṇḍigaṉ,* பெ.(n.) கள் விற்போன் (சூடா.); toddy - seller.

[Skt. šauṇḍika > த. சௌண்டிகன்.]

சௌத்தி *soutti,* பெ.(n.) உடன்கிழத்தி (சக்களத்தி) (வின்.); rival or co-wife.

சௌத்திரமேகம் *souttiramēgam,* பெ.(n.) சிறுநீர், தேனைப் போலவும், சுவைக்கத் தித்திப்பாயும் உள்ள ஒரு வகை வெள்ளை நோய்; a disease in which urine resembles honey and acquires a sweet taste (சா.அக.).

சௌத்திரன் *souttiraṉ,* பெ.(n.) சூத்திரன் பார்க்க; *see sūdra.*

[Skt. sūdra > šaudra > த. சௌத்திரன்.]

சௌத்திராந்திகம் *souttirāndigam,* பெ.(n.) சூத்திரபிடகத்தை மட்டும் அதிகாரமாகக் கொள்ளும் பௌத்த மதப் பிரிவு; a school of Buddhism which admits the authority of the buddhist *sūtras* only.

[Skt. sautrāntika > த. சௌத்திராந்திகம்.]

சௌத்திராந்திகன் *souttirāndigan,* பெ.(n.) புத்த மதத்தில் சௌத்திராந்திகப் பிரிவைச் சார்ந்தவன்; the follower or adherent of *cauttirāntika* sect of buddhism (சி.போ.பா. அவை. பக்.37).

[Skt. sautrāntika > த. சௌத்திராந்திகன்.]

சௌத்திராமணி *souttirāmaṇi,* பெ.(n.) இந்திரனைக் குறித்துச் செய்யும் வேள்வி வகை; a sacrifice in honour of indra (திவா.).

த.வ. இந்திரவிழா

சௌத்து¹ *souttu,* பெ.(n.) போலிகை (மாதிரிகை); pattern, sample, model.

சௌத்து² *souttu,* பெ.(n.) மகாராட்டிரத்து ஆட்சியின் கீழ்ப்பட்ட அரசரிடமிருந்து தண்டல் செய்த தொகையின் நாலில் ஒரு பாகமான அரசிறை; one fourth of the actual collections of revenue, levied by the mahrattas on their subordinate rulers.

[U. cauth > த. சௌத்து.]

சௌதம் *šoudam,* பெ.(n.) வெள்ளி; silver (சா.அக.).

சௌதயம் *šoudayam,* பெ.(n.) பெருங் காளான்; large variety of mushroom (சா.அக.).

சௌதாகிரி *šoudāgiri,* பெ.(n.) குதிரை வணிகர்; horse dealer.

[Persn. saudāgari > த. சௌதாகிரி.]

சௌதாகிரிக்குதிரை *šoudāgiri-k-kudirai,* பெ.(n.) விற்கப்படுங் குதிரை (வின்.); horse for sale.

சௌதாய்ப்புல்வரி *šoudāi-p-pulvari,* பெ.(n.) புல் தரையைப் பயிர் நிலமாக்கிப் பயன் படுத்துவதற்கு இடப்படும் நாலிலொரு பங்கு நிலவரி; tax levied for grazing = 1/4 of the full assessment of the land when used for cultivation.

[சௌதாய்+புல்+வரி.]

[U. cauth > த. சௌதாய்ப்புல்வரி.]

சௌதாயம் *šoudāyam,* பெ.(n.) 1. முன் பின்னாக அன்புடைச் சுற்றத்தாரால் கொடுக் கப்படுங் கொடை வகை; gift made to a woman by affectionate kindred, before of after marriage. 2. வெகுமதிப் பொருள்; prize, reward.

த.வ. பரிசப்பொருள்

[Skt. su-dāya > த. சௌதாயம்.]

சௌதாயிகம்¹ *šoudhāyigam,* பெ.(n.) குளிர்ச்சி; coldness (சா.அக.).

சௌதாயிகம்² *šoutdāyigam,* பெ.(n.) **சௌதாயம்** பார்க்க; see *šoudhāyam* (விவகாரசங்.சிறப்.பக்.90).

[Skt. šaudāyika > த. சௌதாயிகம்.]

சௌந்தம் *šoundam,* பெ.(n.) ஒரு பிறவி நஞ்சு; (கற்கடக நஞ்சு); a mineral poison (சா.அக.).

சௌந்தரசூரிதம் *šoundara-sūridam,* பெ.(n.) குளிக்கும் மஞ்சள்; turmeric used for bath (சா.அக.).

த.வ. குளிமஞ்சள்

சௌந்தரம்¹ *šoundaram,* பெ.(n.) **சௌந்தரியம்** பார்க்க; see *šowndariyam* (சா.அக.).

த.வ. அழகு

சௌந்தரம்² *šoundaram,* பெ.(n.) **சௌந்தரியம்** பார்க்க (வின்.); see *šowndariyam.*

த.வ. அழகு

சௌந்தரமுகம் *šoundara-mugam,* பெ. (n.) 1. மலர்ந்த முகம்; blooming, joyful countenance. 2.முகநளிநயம்பதினான்கனுள் ஒன்றாய் மிக்க மகிழ்ச்சியால் மலர்ந்த முகத்தைக் காட்டுகை; showing a cheerful countenance indicative of over flowing happiness, one of 14 *muka-v-apiṉayam,* q.v. (*nāṭya.*).

த.வ. அழகுமுகம்

[சௌந்தர(ம்)+முகம்.]

*[**Skt.** sundara > த. சௌந்தரம்.]*

சௌந்தரி *šoundari,* பெ.(n.) அழகுடையவள்; a lovely woman (கொ.வ.).

த.வ. அழகி

*[**Skt.** sundarī > த. சௌந்தரி.]*

சௌந்தரிகம் *šoundarigam,* பெ.(n.) அழகு; beauty (சா.அக.).

த.வ. புனையா அழகு

சௌந்தரிகை *šoundarigai,* பெ.(n.) 1. கண்ணாடியிலைப் பூடு; looking glass plant of S.ghat. 2. **சௌன்முந்திரி** பார்க்க; see *šown-muntiri.* 3. **சோலைவெண்தேக்கு** பார்க்க; see *šōlai-veṇtēkku* (சா.அக.).

சௌந்தரியப்பூடு *šoundariya-p-pūḍu,* பெ.(n.) **இரத்தினத்திரு** பார்க்க; see *irattiṉa-t-tiru* (சா.அக.).

சௌந்தரியம் *šoundariyam,* பெ.(n.) அழகு; beauty, loveliness.

*[**Skt.** saundarya > த. சௌந்தரியம்.]*

சௌந்தரியலகரி *šoundariya-lagari,* பெ.(n.) வீரைக் கவிராச பண்டிதரால் தமிழ்ச் செய்யுளாகச் செய்யப்பட்டதும் சங்கராச் சாரியார் எழுதிய சௌந்தரியலகரியின் மொழி பெயர்ப்புமான ஒரு நூல்; a metrical version in Tamil of *šaṅkarācārya šowndarya lagari,* by *Virai-k-kavirāca-paṇḍidar.*

*[**Skt.**saundaryalahari>த. சௌந்தரியலகரி.]*

சௌந்தரியவதி *šoundariyavadi,* பெ.(n.) அழகுள்ளவள்; beautiful woman.

*[**Skt.**saundarya-vatī>த. சௌந்தரியவதி.]*

சௌந்தி *šoundi,* பெ.(n.) கந்தக நஞ்சு; a kind of sulphur poison (சா.அக.).

சௌந்திகா *šoundikā,* பெ.(n.) ஒரு வகைக் கீரை; a kind of greens (சா.அக.).

சௌந்திபம் *šoundibam,* பெ.(n.) கொச்சி சாரம்; sal ammoniac prepared in cochin (சா.அக.).

சௌந்திராப்பூ *šoundirāppū,* பெ.(n.) பனி நீர் மலர்; rose flower (சா.அக.).

சௌப்திகம் *šouptigam,*பெ.(n.) துயில்வோரை எதிர்த்துக் கொல்லுகை; night attack and slaughter of sleeping persons. *"சௌப்திக பருவம்" (பாரத.).*

*[**Skt.** sauptika > த. சௌப்திகம்.]*

சௌபஞ்சம் *šoupañjam,* பெ.(n.) **சௌபஞ்சனம்** பார்க்க; see *šoupañjaṉam* (சா.அக.).

சௌபஞ்சனம் *šoupañjaṉam,* பெ.(n.) புனல் முருங்கை (மலை.); three-leaved indigo.

*[**Skt.** šaubhōñjana > த. சௌபஞ்சனம்.]*

சௌபலன் *šoubalaṉ,* பெ.(n.) சகுனி; *Saguṉi.* *"கன்னசௌபலர்" (பாரத. வாரணா. 5).*

த.வ. சகுனி – பறவைக் குறிப் பார்ப்பதில் வல்லவன்

[Skt. saubaka > த. சௌபலன்.]

சௌபன்னம் *šoupannam,* பெ.(n.) 1. சுக்கு; dried ginger. 2. மரகதம்; emerald (யாழ்.அக.).

[Skt. sauparṇa > த. சௌபன்னம்.]

சௌபாக்கியசிந்தாமணி *soubākkiya-šindāmaṇi,* பெ.(n.) ஓர் ஆயுள்வேத மருந்து; an ayurvedic medicine (சா.அக.).

சௌபாக்கியசுண்டிமோதகம் *šoubākkiya-sundi-mōdagam,* பெ.(n.) ஆமலபித்தம், செரியாமை, குன்மம் இவற்றிற்குக் கொடுக்கும் ஆயுள்வேத மருந்து; an ayurvedic medicine prescribed for indigestion biliousness pain in the stomach etc. (சா.அக.).

சௌபாக்கியசொண்டி *šoubākkiya-šondi,* பெ.(n.) சுக்குடன் பல கடைச்சரக்குகளும், மூலிகைச் சாறுகளும் சேர்த்து, நெய் சக்கரையும் கலந்து, இளகியமாக்கி, மாத விலக்கு (சூதகவலி) வலிக்குக் கொடுக்கும் மருந்து; an ayurvedic preparation contemplated in the work of Barathwaja Rishi. It is an electuary prepared with dried ginger as the chief ingredients amongst other bazaar drugs (சா.அக.).

சௌபாக்கியபரம் *šoubākkiyaparam,* பெ. (n.) இதளியம்; mercury (சா.அக.).

சௌபாக்கியம்[1] *šoubākkiyam,* பெ.(n.) 1. மிகு பேறு; auspiciousness, good fortune, prosperity. *"இகபர சௌபாக்கிய மருள்வாயே" (திருப்பு.177).* 2. ஓகம் (யோகம்) இருபத்தேழனுள் ஒன்று; a division of time, one of 27 *yōgam,* q.v. (Astron.). 3.நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று; an upanisad, one of 108.

த.வ. மிகுநலம்

[Skt. saubhāgya > த. சௌபாக்கியம்.]

சௌபாக்கியம்[2] *šoubākkiyam,* பெ.(n.) 1. செங்கழுநீர்; red Indian water lily. 2. சுக்கு; dried ginger (சா.அக.).

சௌபாக்கியரேகை *šoubākkiya-rēgai,* பெ.(n.) ஒருவனது ஆகூழைக் குறிப்பதாகக் கருதப்படும் கைவரி வகை (கொ.வ.); a kind of distinctive mark on the palm, believed to indicate one's fortune.

த.வ. நற்பேற்றுக்கைவரி

[Skt.saubhāgya>த. சௌபாக்கியம்.]

சௌபாக்கியவதி *šoubākkiyavadi,* பெ.(n.) சிறு பெண்கள், திருமணமான மகளிர் இவர்களின் பெயர்க்கு முன் வழங்கும் ஒரு மங்கலச் சொல்; a title applied to a girl or woman whose husband is alive.

த.வ. திருவளர்செல்வி

[Skt.saubhāgyavati> த. சௌபாக்கியவதி.]

சௌபாஞ்சனம் *šoubāñjanam,* பெ.(n.) 1. ஒரு வகை முருங்கை மரம்; drumstick tree. 2. முள் முருங்கைமரம் (சா.அக.); Erythrina indica.

சௌபாமிகம் *šoubāmigam,* பெ.(n.) கொட்டையில்லா முந்திரி; seedless grapes (சா.அக.).

சௌபானம் *šoubānam,* பெ.(n.) படிக்கட்டு; steps, as of a staircase. *"பண்புறவே சௌபான பட்சங்காட்டி" (தாயு.ஆகார.10).*

[Skt. sōpāna > த. சௌபானம்.]

சௌபிகள் *šoubigaḷ,* பெ.(n.) 1. மாந்திரிகன்; magician. 2. மந்திர வித்தை கற்றவன்; hypnotiser, sorcerer (சா.அக.).

சௌமம் *šoumam,* பெ.(n.) சிற்ப நூல் முப்பத்திரண்டனுள் ஒன்று; a treatise on architecture, one of 32 *cirpa-nūl,* q.v. (இருசமய சிற்பசாத்.3).

[Skt. sauuma > த. சௌமம்.]

சௌமலி *šoumali*, பெ.(n.) முள் இலவமரம்; the red silk cotton tree (சா.அக.).

சௌமன் *šoumaṉ*, பெ.(n.) நிலா (சந்திரன்) மகனாகிய அறிவன் (புதன்); mercury, as the moon's son.

[*Skt. saumya > த. சௌமன்.*]

சௌமனசாயினி *šoumaṉašāyiṉi*, பெ. (n.) மலடி மலர்; echites caryophyllata (சா.அக.).

சௌமனசை *šoumaṉasai*, பெ.(n.) சாதி பத்திரி; mace pulp over nutmeg (சா.அக.).

சௌமிய *šoumiya*, பெ.(n.) வடமொழி யாளரின் ஆண்டு வட்டம் அறுபதனுள் நாற்பத்து மூன்றாவது; the 43rd year of the jupiter cycle.

[*Skt. saumya > த. சௌமிய.*]

சௌமியம் *šoumiyam*, பெ.(n.) 1. அமைதி; calmness, gentleness, meekness. 2. அழகு; loveliness, beauty.

[*Skt. saumya > த. சௌமியம்.*]

சௌமியவாரம் *šoumiya-vāram*, பெ.(n.) அறிவன் (புதன்) கிழமை (கொ.வ.); wednesday.

[*Skt. soumya+vāra > த. சௌமியவாரம்.*]

சௌமியன் *šoumiyaṉ*, பெ.(n.) 1. பொறுமை யுள்ளவன்; person of gentle disposition. 2. அறிவன் (புதன்) (திவா.); mercury. 3. பன்னிருகதிரவருள் ஒருவர் (திவா.); a Rudra, one of *ekādacaruttirar*. 4. சமணத் துறவி (சூடா.); jaina ascetic. 5. அருகன் (சங்.அக.); Arhat.

சௌரம்[1] *šouram*, பெ.(n.) 1. துணைத் தொன்மம் பதினெட்டனுள் ஒன்று; a secondary *purāṇa*, one of 18 *upa-purāṇam* q.v. 2. சூரியனை வழிபடும் சமயம்; the religion of the sauras who regard the sun as the supreme being and are exclusively devoted to his worship.

[*Skt. saura > த. சௌரம்.*]

சௌரம்[2] *šouram*, பெ.(n.) மயிர் மழிக்கை; shaving.

[*Skt. kṣaura > த. சௌரம்.*]

சௌரமாசம் *šoura-māšam*, பெ.(n.) சூரிய சுழற்சியினால் ஏற்படும் மாதம் (விதான. குணகுண.80, உரை); solar month.

[*Skt. saurā+māsa > த. சௌரமாசம்.*]

சௌரமானம் *šoura-māṉam*, பெ.(n.) சூரிய சுழற்சியைக் கொண்டு மாத ஆண்டுகளை அளவிடும் முறை; system of calculation of months and years based on the sun's course. *"சௌரமானபட்சத்தால் மாசித் திங்கள் கொள்ளார் " (சீவக. 493, உரை).*

த.வ. கதிராண்டுமானம்

[*சௌரம்+மானம்*]

[*Skt. saura> த. சௌரம்*]

சௌராட்டிரம்[1] *šourāṭṭiram*, பெ.(n.) 1. வெண்கலம்; bronze, bell metal. 2. பித்தளை; brass (சா.அக.).

சௌராட்டிரம்[2] *šourāṭṭiram*, பெ.(n.) 1. கத்தியவார் என்று இக்காலத்துக் கூறப்படும் தேசம்; Surat, modern peninsula of Kathiawar. 2. பண்வகை; a secondary tune (Mus.).

சௌராட்டிரர் *šourāṭṭirar*, பெ.(n.) தென்னாட்டு நாயக்கர்களினாட்சியில் கூர்ச்ச தேயத்திலிருந்து தமிழ் நாட்டிற் புகுந்தவரும், குசராத்திக்குத் தொடர்புடைய ஒருவகைப் மொழியைப் பேசுபவருமான பட்டு நூற்காரச் சாதியார்; a class of silk-weavers, immigrants from Gujarat into the Tamil country in the days of the early Nayak kings, speaking a corrupt dialect of Gujarati (E.T.).

[*Skt. saurāṣṭira > த. சௌராட்டிரர்.*]

சௌராட்டிரிகம் *šourāṭṭirigam*, பெ.(n.) ஒரு வகை வசனாவி; a species of aconite root grown near surat (சா.அக.).

சௌரி[1] *šouri*, பெ.(n.) 1. காரி, (சனி); saturn. 2. காலன் (யமன்); Yaman, the god of death. 3. கர்ணன்; *Karṇan*.

சௌரி[2] *šouri,* பெ.(n.) யமுனை நதி (பிங்.); the jamuna river.

சௌரி[3] *šouri,* பெ.(n.) திருமால் (பிங்.); *Viṣṇu.*

சௌரி[4] *šouri,* பெ.(n.) 1. கருடன்; Brahmini kite. 2. சவுரிப்பழம் அல்லது குறட்டைப் பழம்; fruit of round snake gourd. (சா.அக.).

சௌரி[5] *šouri,* பெ.(n.) **சவரி**[1] பார்க்க; see *savari*[1]; chowry.

சௌரிக்கொத்து *šouri-k-kottu,* பெ.(n.) முதியோர் கூந்தல் என்னும் மூலிகை; creeper of *šouri* (சா.அக.).

சௌரிப்பழம் *šouri-p-paḻam,* பெ.(n.) குறட்டைப் பழம்; fruit of round snake gourd (சா.அக.).

சௌரியம்[1] *šouriyam,* பெ.(n.) களவு; theft (திவா.).

[Skt. caurya > த. சௌரியம்.]

சௌரியம்[2] *šouriyam,* பெ.(n.) வீரம் (சூடா.); prowess, bravery, valour.

த.வ. மறம்

[Skt. šaurya > த. சௌரியம்.]

சௌரியம்[3] *šouriyam,* பெ.(n.) **சௌகரியம்** பார்க்க (கொ.வ.); see *šougariyam.*

சௌரியலட்சுமி *šouriya-laṭcumi,* பெ.(n.) வீர இலக்குமி; the goddess of heroism.

த.வ. வெற்றிச்செல்வி

[Skt.šaurya+lakṣmi>த. சௌரியலட்சுமி.]

சௌரியவான் *šouriya-vāṉ,* பெ.(n.) வீரன்; brave person.

[Skt. šaurya > த. சௌரியவான்.]

சௌரியன் *šouriyaṉ,* பெ.(n.) **சௌரியவான்** பார்க்க (யாழ்.அக.); see *sauriyavāṉ.*

[Skt. šaurya > த. சௌரியன்.]

சௌரிரத்தினம் *šouri-rattiṉam,* பெ.(n.) நீலமணி; sapphire, a blue gem (சா.அக.).

சௌரு *šouru,* பெ.(n.) 1. கொச்சை நாற்றத்தோடு கூடிய சுவை; greasy taste, as of goat's milk. 2. உவர்ப்பு; brackishness (w.).

[Skt.T. tcaura>K.savuḷu.> த. சௌரு-]

சௌல் *šoul,* பெ.(n.) 1. மகிழ்ச்சி; jollity. 2. இடம்பம்; ostentation.

[U. caul > த. சௌல்.]

சௌலப்பியம் *šōulappiyam,* பெ.(n.) எளியதாந்தன்மை; easiness of acquisition or attainment accessibility, affability.

த.வ. எளிமை

[Skt. saulabhya > த. சௌலப்பியம்.]

சௌலம் *šoulam,* பெ.(n.) 1. அரை உருபா; half a rupee. 2. 6 3/4 குண்டுமணி எடை; 6 3/4 grams weight (சா.அக.).

சௌவர்ச்சலம் *šouvar-c-calam,* பெ. (n.) 1. உப்பு வகை; a kind of salt. 2. உவர்நீர்; brackish water.

[Skt. sauvarcala > த. சௌவர்ச்சலம்.]

சௌவர்ணம் *šouvarṇam,* பெ.(n.) 1. சுக்கு; dried ginger. 2. மரகதம்; emerald, a green gem. 3. சுக்குநாறி மரம்; a tree smelling like dried ginger (சா.அக.).

சௌவரிசி *šouariši,* பெ.(n.) சவ்வரிசி; sago (சா.அக.).

சௌவாது *šouvādu,* பெ.(n.) **சவ்வாது** பார்க்க; see *šavvādu* (சா.அக.).

சௌவிதி *šouvidi,* பெ.(n.) மலமும் நீரும் கழித்த பின் தூய்மை செய்யும் நெறி; rules regarding the washing of the posterior after passing stools (சா.அக.).

சௌவீரகம் *šouvīragam,* பெ.(n.) 1. இலந்தைக் கனி; indian plumziziphus jujuba. 2. வீரம்; corrosive sublimate (சா.அக.).

சௌவீரம் *šouvīram,* பெ.(n.) 1. **சவ்வீரம்** பார்க்க; see *šavvīram.* *"கற்றவர் புகழ் சௌவீர மிக்கோரம்" (திருவிளை.நரிபரி.106).* 2. வைப்பு நஞ்சு முப்பத்திரண்டனுள் ஒன்று; a prepared arsenic, one of 32. 3. இலந்தை (மூ.அ.); jujuba tree.

[Skt. sauvīra > த. சௌவீரம்.]

சௌளம் *šouḷam,* பெ.(n.) முதலில் பிறந்த ஆண் குழந்தைக்கு முடி வாங்குகை; ceremonial shaving of a male child's head, one of *cōṭaca-camskāram,* q.v.

த.வ. முடியிறக்குதல்; முடிகொடுத்தல்

[Skt. caula > த. சௌளம்.]

டக்கணி *ṭakkaṇi*, பெ.(n.) தக்காண நாடு (வின்.); country of deccan.

[H > dakkhani > E.Deccan > த. டக்கணி]

டக்கயம் *ṭakkayam*, பெ.(n.) கொடி; flag. *"பொர டக்கயம் பிடியென்றான்" (தனிப்பா. I, 415, 55).*

தெ. டெக்கியமு; க. டெகெ.

டக்கர்[1] *ṭakkar*, பெ.(n.) மோதுகை; striking or knocking against; collision. *'வண்டி ஒன்றோடொன்று டக்கரடித்தது' (கொ.வ.).*

[H. ṭakkar > த. டக்கர்]

டக்கர்[2] *ṭakkar*, பெ.(n.) குழப்பம் (இ.வ.); confusion, bewilderment.

[U. tagar > த. டக்கர்]

டக்கரடி-த்தல் *ṭakkar-aḍi-*, செ.கு.வி.(v.i.) 1. ஒன்றோடொன்று மோதுதல் (இ.வ.); to collide. 2. சவாரிக் குதிரை முதலியன முரட்டுத்தனம் பண்ணுதல் (கொ.வ.); to be unruly or unmanageable, as a restive or turbulent horse.

[டக்கர் + அடி-,]

[U. ṭagar > த. டக்கர்]

டக்காமுக்கி *ṭakkā-mukki*, பெ.(n.) இக்கட்டு, மனக் கடினப்பாடு (இ.வ.); difficulty, trying occasion, perplexity, trouble.

[H. dagmag > த. டக்காமுக்கி]

டக்கியம் *ṭakkiyam*, பெ.(n.) கொடி; flag.

தெ. டக்கியமு; க. டக்கிய

டக்கு[1] *ṭakku*, பெ.(n.) 1. ஏமாற்று (தந்திரம்); dodge, trick, pretence. 2. பகட்டு நடை (பிகு); affectation.

தெ. டக்கு.

டக்கு[2] *ṭakku*, பெ.(n.) சட்டை முதலியவற்றில் வைக்கும் மடிப்பு; fold in a garment.

[E. tuck > த. டக்கு]

டக்குடமாரம் *ṭakkuḍamāram*, பெ.(n.) ஏமாற்றுகை; deceit. *'டக்குடமாரம் பண்ணிப் பணம் வாங்கி விட்டான்' (இ.வ.).*

தெ. டக்குமடாரம்.

டக்குத்தனம் *ṭakku-t-taṉam*, பெ.(n.) ஏமாற்றும் தன்மை; cunning. deceitful behavior.

[டக்கு + தனம்]

டக்குத்தையல் *ṭakku-t-taiyal*, பெ.(n.) ஒட்டுத்தையல் (இ.வ.); tucking.

[டக்கு + தையல்]

[E. tuck > த. டக்கு]

டக்குப்பிடி-த்தல் *ṭakku-p-piḍi-*, 4 செ.கு.வி. (v.i.) சட்டை முதலியவற்றில் மடிப்பு வைத்துத் தைத்தல் (கொ.வ.); to tuck or sew folds in a garment.

த.வ. மடிப்புப் பிடித்தல்

[டக்கு + பிடி-,]

[E. tuck > த. டக்கு]

டக்குப்புக்கு *ṭakku-p-pukku*, பெ.(n.) புரட்டு; cunning device, trickery.

டக்குவண்டி *ṭakkuvaṇḍi*, பெ.(n.) தொடர் சரக்குந்துகள்; railway truck.

[டக்கு + வண்டி]

[E. truck > த. டக்கு]



டக்கை *ṭakkai,* பெ.(n.) இடக்கைப் பறை; small drum beaten by the left hand.

[Skt. dhakkā > த. டக்கை]

டக்தர் *ṭaktar,* பெ.(n.) மருத்துவர் (வைத்தியன்) (பாண்டி.); doctor.

[E. doctor > த. டக்தர்]

டகர்வாங்கு-தல் *ṭagar-vāṅgu-,* 5 செ.குன்றாவி.(v.t.) **டர்வாங்கு,** பார்க்க; see *ṭar-, vāṅgu-,.*

[டகர் + வாங்கு-,]

டகல்பாச்சி *ṭagal-pācci,* பெ.(n.) வஞ்சகன்; cunning man.

த.வ. ஏமாற்றி, ஏய்ப்பன்

[Persn. daghabāzi > த. டகல்பாச்சி]

டங்கணம் *ṭaṅgaṇam,* பெ.(n.) வெண்காரம்; borax.

[Skt. taṅkaṇa > த. டங்கணம்]

டங்கம் *ṭaṅgam,* பெ.(n.) கற்றச்சன் உளி, கல்லுளி; stone-cutter's chisel.

[Skt. taṅka > த. டங்கம்]

டங்கா *ṭaṅgā,* பெ.(n.) ஒருவகைத் தோற்கருவி (இ.வ.); a small drum, a pair of kettle - drums.

[U. daṅka > த. டங்கா]



டங்காக்கிழி-த்தல் *ṭaṅkā-k-kiḻi,* 4 செ.குன்றாவி.(v.t.) உடலைக் கிழித்து விடுதல் (இ.வ.); to tear one's body to pieces.

[டங்கா + கிழி-,]

டங்காக்கிழிதல் *ṭaṅgā-k-kiḻidal,* பெ.(n.) வேலை மிகுதியால் வலிமை குறைகை (இ.வ.); exhaustion from over work, as a drum spoiled by over-beating.

[டங்கா + கிழி-.]

[U. daṇkā > த.டங்கா]

[கிழி → கிழிதல். 'தல் தொ.பெ.ஈறு]

டங்காக்குதிரை *ṭaṅgā-k-kudirai,* பெ.(n.) டங்கா என்னும் தோற்கருவியை ஏற்றிக் கொண்டு ஊர்வலத்தில் செல்லும் குதிரை (இ.வ.); horse used to carry kettle-drums in a procession.

[டங்கா + குதிரை.]

[U. daṇkā > த.டங்கா]

[குதி → குதிரை]

டங்கார் *ṭaṅgār,* பெ.(n.) **டங்குவார்** பார்க்க; see *ṭaṅguvār.*

டங்காரம் *ṭaṅgāram,* பெ.(n.) வில்லின் நாணோசை (கொ.வ.); twang of a bowstring.

[Skt. ṭaṅkāra > த. டங்காரம்]

டங்கு *ṭaṅgu,* பெ.(n.) **டங்குவார்** பார்க்க (இ.வ.); see *ṭaṅguvār.*

டங்குவார் *ṭaṅguvār,* பெ.(n.) குதிரையைப் பிணிக்கும் தோற்பட்டை; braces of a horse-carriage, saddle - girth.

த.வ. பரிப்பட்டை

[டங்கு + வார்]

[தெ. டங்கு > த. டங்கு]

வடி → வார் → வாரி = நீண்ட பெருங் கம்பு, நீண்ட தோல் துண்டு.

டங்குவாரறுத்தல் *taṅguvār-aṟuttal,* பெ.(n.) 1. மிகுதியாற் களைத்துப் போகை; being overworkeo and exhausted. 2. ஏழ்மைப் படுகை; being reduced to poverty or an unenviable position. 3. குதிரையின் தோற் பட்டை வார் அறுகை; breaking of the saddle girth.

[டங்கு + வார் + அறுதல்]

[Te. taṅguvāru > த. டங்குவார்]

டசன் *ṭasaṉ,* பெ.(n.) பன்னிரண்டு; twelve.

த.வ. எல்லோன்

[E. dozen > த. டஜன்]

டசனடி *ṭasaṉ-aḍi,* பெ.(n.) முக்காலியிற் கட்டியடிக்கும் கசையடி (கொ.வ.); flogging or whipping, as a punishment especially for juveniles.

த.வ. கசையடி

[E. dozen > த. டஜன்]

டசுதூர் *ṭasutūr,* பெ.(n.) பறுவான்களில் விரிக்கப்படும் சதுரப் பாய்களின் வெளிப் புறத்துப் போடப்படும் துணைப்பாய்; studding sail (M. Navi. 83).

த.வ. துணைப்பாய்

டசுதூர்ப்பட்டை *ṭasutūr-p-paṭṭai,* பெ.(n.) சிறு பாய்மரத்தை மாட்டும் துளை (துவாரம்) (naut); eye or hole at the end of a yard through which is passed the studding - sail boom.

[U. dastūr > த. டசுதூர்]

டடம் *ṭaḍam,* பெ.(n.) மத்தள வகை (பரத. ஒழிவி. 13); a kind of mattaḷam.

டப்டர்தோட்டம் *ṭapṭar-tōṭṭam,* பெ.(n.) தென்னார்க்காடு மாவட்டத்தில் பழைய பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டதும் உரிமையாக நுகர்ந்துவருவதும் ஆகிய இலவயத் (அனுபவிக்கப்படும் இனாம்) தோட்டம்; dufter gardens, inam gardens entered in the early dufters or registers in the district of South Arcot and enjoyed as private property without being subject to the ordinary lapse rules.

த.வ. துய்ப்புத்தோட்டம்

டப்தர் *ṭaptar,* பெ.(n.) ஆவணங்களின் கட்டு; bundle of documents; registers and other records.

[Persn. daftar > த. டப்தர்]

டப்தர்பந்து *ṭaptar-bandu,* பெ.(n.) 1. அலுவலகத் தொடர்பான ஆவணக் கட்டு களைப் பார்த்துக் கொள்பவன்; record-keeper. 2. அலுவலக சிறு வேலைகளைக் கவனிப்போன்; attender in an office.

த.வ. ஆவணப் பணியாளன்

டப்பஞ்சு *ṭappañju,* பெ.(n.) பகட்டுக் கரையுள்ள வேட்டி (வின்.); rich-bordered cloth.

த.வ. கொட்டைக்கரை

க. டபான்சு.

[Te. dabbañcu > த. டப்பஞ்சு]

டப்பா¹ *ṭappā,* பெ.(n.) இந்துத்தானி தொனியில் அமைந்த ஒருவகை இசைப் பாட்டு; Tamil song attuned to Hindustan style of music.

த.வ. மக்கள்பாட்டு

[U. tappa > த. டப்பா]

டப்பா² *ṭappā,* பெ.(n.) 1. மெல்லிய மாழை (உலோகம்) முதலியவற்றால் பலவகை அளவில் செய்யப்படும் மூடி போட்ட கொள்கலம்; container (made of metals like tin or plastic), tin (of various sizes). *"கடுகை டப்பாவில் போட்டு மூடு", "பொடி டப்பா".* 2. சிமிழ்; small box for keeping jewels, scent etc., casket.

த.வ. அடைப்பி

[H. dibhā > த. டப்பா]

டப்பாக்கரை *ṭappā-k-karai,* பெ.(n.) ஆடையின் அகண்ட பகட்டுக்கரை (இ.வ.); thick border of a cloth.

த.வ. அகலக்கரை

[டப்பா + கரை]

டப்பாக்கிஅரிசி *ṭappākki-ariśi,* பெ.(n.) ஒரு வகை ஆழ் வள்ளி அரிசி; a kind of rice like sago. (சா.அக.)

[டப்பாக்கி + அரிசி.]

[அரி → அரிசி]

டப்பாக்கிஅரிசிகஞ்சி *ṭappākki-ariśi-kañji,* பெ.(n.) டப்பாக்கி அரிசியால் செய்யும் கஞ்சி; a liquid pudding prepared from tapioca. (சா.அக.)

[டப்பாக்கி+அரிசி + கஞ்சி]

டப்பாங்குத்து *ṭappāṅguttu,* பெ.(n.) பாட்டுக்கு அல்லது தப்பட்டை போன்ற கருவிகளின் ஓசைக்குத் தகுந்தபடி குதித்துக் குதித்து (ஆண்கள்) ஆடும் ஆட்டம்; a sort of dancing done in streets (by men) to an improvised tune and accompanied by drums. *"அண்மைக் காலங்களில் டப்பாங் குத்துப் பாடல் திரைப்பாடல்களில் பயன்படுத்தப்படுகிறது".*

டப்பாசு *ṭappāsu,* பெ.(n.) சீனவெடி (கொ.வ.); fire-crackers.

த.வ. வண்ணவான்வெடி

[U. tappās > த. டப்பாசு]



டப்பாசுச்செடி *ṭappāśu-c-ceḍi,* பெ.(n.) வெடித்துச் சிதறும் காய்களையுடைய செடி வகை; plant whose pods burst and scatter seeds.

த.வ. வெடிகாய்ச்செடி

[டப்பாசு + செடி]

[U. tappās > த. டப்பாசு]

டப்பால் *ṭappāl,* பெ.(n.) அஞ்சல் (தபால்) (இக்.வ.); post, mail.

[H. ṭippāl > த. டப்பால்]

டப்பி *ṭappi,* பெ.(n.) சிமிழ் (கொ.வ.); small box or case.

த.வ. குப்பி

[H. ḍippi > த. டப்பி]

டப்பு[1] *ṭappu,* பெ.(n.) 1. காசு (துட்டு) வகை (வின்.); small copper coin, dub, 20 case. 2. துட்டு, பழைய நான்கு காசு (இ.வ.); coin worth 1/3 anna. 3. பணம் (இ.வ.); cash, money.

த.வ. பணம்

டப்பு[2] *ṭappu,* பெ.(n.) கப்பல் வேகத்தை அளக்கும் கருவி; log, an instrument for ascertaining the speed of a ship. (M.Navi. 66).

த.வ. வேகமானி

டப்பு[3] *ṭappu,* பெ.(n.) 1. பொய் (வின்.) false hood. 2. பகட்டு (வின்.); display, showiness.

டப்புக்கயிறு *ṭappu-k-kayiṟu,* பெ.(n.) டப்புப் பலகையின் ஓட்டைகளின் வழியாய்ச் செல்லும் கயிறு; rope passing through the holes at the extremities of a log. (M. Navi. 66).

த.வ. துளைக்கயிறு

[டப்பு + கயிறு]

டப்புப்பலகை *ṭappu-p-palagai,* பெ.(n.) டப்புக் கருவியிலுள்ள மரத்துண்டு; the piece

of wood, quadrant in shape, which is used in the log. (M. Navi. 67).

த.வ. ஆப்புக்கட்டை

[டப்பு + பலகை]

டப்பை[1] *ṭappai,* பெ.(n.) டப்பி பார்க்க (வின்.); see *ṭappi.*

டப்பை[2] *ṭappai,* பெ.(n.) மூங்கிற் பிளாச்சு (வின்.); half of split bamboo.

த.வ. பிளாச்சு

[தெ. டப்ப் > த. டப்பை]

டப்பை[3] *ṭappai,* பெ.(n.) காவல் (வின்.); patrol.

டபரா *ṭabarā,* பெ.(n.) சூடான தேநீர், பால் போன்ற குடிப்புக் (பானங்)களை ஆற்றிக் குடிக்கக் குவளையோடு பயன்படுத்தும் விளிம்புள்ள சிறிய வட்ட வடிவ ஏனம்; a saucer-like vessel slightly deeper used along with a tumbler for serving hot drinks.

த.வ. அகல்குப்பி



டபாய்-த்தல் *ṭabāy-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. ஏமாற்றி மேற்கொள்ளுதல் (இ.வ.); to bluster, to frighten. 2. கிண்டல் செய்தல் (பரிகசித்தல்) (கொ.வ.); to mock at.

த.வ. கரவடிப்பு, ஏய்ப்பு

[H. dhabānā > த. டபாய்-,]

டபீர்முரி *ṭabiṟ-muri,* பெ.(n.) தஞ்சாவூரில் 1773 ஆம் ஆண்டு டபீர் பண்டிதரால் ஏற்படுத் தப்பட்ட நிலவரித் திட்டம்; settlement of land revenue in Tanjore, as introduced by Dabir pandit in 1773 A.D. (G.Tj. D. I. 169).

டபீரடி *ṭapir-aḍi,* பெ.(n.) பெரும் பொய் (கொ.வ.); big lie.

த.வ. அடாவடி

[டபீர் + அடி]

டபீரடியடி-த்தல் *ṭabir-aḍi-y-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) பெரும் பொய் பேசுதல்; to utter a big lie. *'என்னடா டபீரடியடிக்கிறாய்' (இ.வ.).*

த.வ. அடாவடி பேசுதல்

[டபீர் + அடி-,]

டபேதார் *ṭabēdār,* பெ.(n.) தலைமைத் ஏவலன் (கொ.வ.); head peon.

த.வ. தலைமையேவலன்

[U. dafēdār > த. டபேதார்]

டம்பக்காரன் *ṭamba-k-kāraṉ,* பெ.(n.) பகட் டுக்காரன்; an ostentatious person.

[டம்பம் + காரன்]

[Skt. ḍambha > த. டம்பம்]

("காரன்" உடைமைப் பொருள். ஆ.பா.ஈ.)

டம்பப்பை *ṭambappai,* பெ.(n.) (அ.வ.) (பெண்கள்) கையில் கொண்டு போகும் பை; (lady's) handbag; vanity bag. *'பெண் ணிடமிருந்து டம்பப் பையை யாரோ ஒருவர்*



விளையாட்டாக எடுத்து மறைத்து வைத் திருக்கிறார்?

த.வ. பகட்டுப்பை

[டம்ப + பை]

டம்பம் *ṭambam,* பெ.(n.) 1. வெளிப் பகட்டு (ஆடம்பரம்); being showy or vain. *'உன் டம்பத்தை என்னிடம் காட்டாதே'.* 2. அடாவடி, வீராப்பு; rain or empty boast. *'டம்பமாகப் பேசுவார், காரியத்தில் ஒன்றும் கிடையாது'.*

த.வ. தற்பீற்றல், பகட்டு

[Skt. ḍambha > த. டம்பம்]

டம்பாசாரி *ṭambāsāri,* பெ.(n.) பகட்டுக் காரன்; fop.

[Skt. ḍambha+-ācārya > த. டம்பாசாரி]

டம்பாசாரிவிலாசம் *ṭampāšāri-vilāsam,* பெ.(n.) விசுவநாதன் இயற்றியதும் பகட்டு மிக்க ஒருவனது கதையைக் கூறுவதும் நகைச்சுவையுள்ளதுமான நாடக நூல்; drama ridiculing the life of a fop, by *Viswa-nāthan.*

டம்மாரம் *ṭammāram,* பெ.(n.) டமாரம் பார்க்க; see *ṭamāram. 'ஒட்டகமேற் கொட் டுகின்ற டம்மாரம்' (விறலிவிடு. 67).*

த.வ. சிறுமுரசு

டம்மானம் *ṭammāṉam,* பெ.(n.) டமாரம் பார்க்க (வின்.); see *ṭamāram.*

டம்ளர் *ṭamḷar,* பெ.(n.) ஏன (பாத்திர) வகை; a kind of vessels.

த.வ. குவளை

[E. tumbler > த. டம்ளர்]

டமரகர் *ṭamaragar,* பெ.(n.) மருத்துவ நூல் செய்த ஓர் சித்தர்; a Siddhar who is the author of a medical book. (சா.அக.)

த.வ. தமிழாகரர்

டமரகன் *ṭamaragaṉ,* பெ.(n.) சுந்திரா னந்தரின் மைந்தர்; he is the son of sundarandhar. (சா.அக.)

டமரத்தை *ṭamarattai,* பெ.(n.) கொச்சித் தமரத்தை; bilimbi. (சா.அக.)

டமரா *ṭamarā,* பெ.(n.) டபரா (செ.வ.) பார்க்க; see *ṭabarā.*

டமரு *ṭamaru,* பெ.(n.) **டமருகம்** பார்க்க; see *ṭamarugam.*

டமருகம் *ṭamarugam,* பெ.(n.) உடுக்கை என்னும் சிறுபறை (வின்.); a tabour or small drum shaped like an hourglass.

த.வ. தமருகம்

[Skt. ḍamaruka > த. டமருகம்]



டமாயி[1] *ṭamāyi,* பெ.(n.) வளைந்து கொடுக்கை; elasticity, springiness.

டமாயி[2] *ṭamāyi,* பெ.(n.) பெரும்பாலும் விழாக் களில் (உற்சவங்களில்) காளை மாட்டின் முதுகிலேற்றி வைத்து அடிக்கும் கொட்டு; kettle-drums mounted on an ox and beaten, as in processions. (Madr.)

த.வ. விழாப்பறை, ஏற்றுப்பாறை

டமாரம்[1] *ṭamāram,* பெ.(n.) 1. ஒருவகை கொட்டு; a kind of drum. 2. டமருகம் பார்க்க; see Tamarukam.

த.வ. பெரும்பறை

டமாரம்² *ṭamāram,* பெ.(n.) பெருஞ் செவிடன் (இ.வ.); person who is stone-deaf, as unable to hear even a drum-beat.

த.வ. காதறையன்

டமாரமடி-த்தல் *ṭamāramaḍi-,* 4 செ. கு.வி.(v.t.) செய்தியை எல்லோரிடமும் வெளிப்படையாகத் தெரிவித்தல் அல்லது பரப்புதல்; to spread news, trumpet (sth. needlessly); tom-tom. *'எனக்கு வேலை கிடைத்த செய்தியை அதற்குள் டமாரமடித்து விட்டாயா?'.*

த.வ. பறைமுழக்குதல், பறைதல்

[டமாரம் + அடி-,]

[Skt. ḍamārā > த. டமாரம்]

டமானம் *ṭamāṉam,* பெ.(n.) **டமாரம்** பார்க்க; see *ṭamāram. 'கலக்க டமானத்தொனியை முழக்க' (தனிப்பா.* I, 320, 12).

டயன் *ṭayaṉ,* பெ.(n.) நேரம் (கொ.வ.); time.

[E. time > த. டயன்]

டர் *ṭar,* பெ.(n.) அச்சம் (வின்.); fear.

[H. ḍar > த. டர்]

டர்ராக்கிழி-தல் *ṭarrā-k-kiḻi-,* செ.கு.வி.(v.i.) 1. **டங்காக்கிழி-தல்,** பார்க்க; see *ṭaṅgā-k-kiḻi-,* 2. **டர்வாங்கு-தல்,** பார்க்க; see *ṭarvāṅgu-,*

டர்வாங்கு-தல்¹ *ṭar-vāṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) 1. அச்சப்படுதல்; to be afraid. 2. வயிற்றுப் போக்கு முதலியவற்றாற் களைத்துப் போதல்; to be weakened by over-purging of the bowels, excessive work etc.

டர்வாங்கு-தல்² *ṭar-vāṅgu-,* 5 செ.குன்றாவி. (v.t.) களைக்கச் செய்தல் (கொ.வ.); to bring under unbearable strain; to exact excessive work as from a labourer.

[டர் + வாங்கு-,]

[Skt. tar > த. டர்]

டரா *ṭarā,* பெ.(n.) ஒருவகைப் படரும் கொடி; it is a common creeper to be found all over indis. (சா.அக.)

டராய்-த்தல்¹ *ṭarāy-,* 4 செ.குன்றாவி.(v.t.) இனிய சொற் (வார்த்தை)களைக் கூறி வஞ்சித்தல் (இ.வ.); to deceive, befool a person by honied words.

த.வ. நயஏய்ப்பு

[H. ḍakārnā > த. டராய்-,]

டராய்-த்தல்² *ṭarāy-,* 4 செ.குன்றாவி.(v.t.) நிலைநிறுத்துதல்; to fix, establish, adjust, settle. (C.G.).

[H. tahrāna > த. டராய்-,]

டலாயத்து *ṭalāyattu,* பெ.(n.) வெள்ளி வில்லை அணிந்த தொண்டன்; head peon of a district or divisional office, as wearing a silver badge.

த.வ. அதிகார ஏவலர்

[U. dhalāit > த. டலாயத்து]

டவண்டை *ṭavaṇḍai,* பெ.(n.) 1. பெரிய பறை வகை (வின்.); a big drum. 2. பாழ், சுழி (சுன்னம்); cipher, zero. *'அவன் தேர்வில் டவண்டை வாங்கினான்' (இ.வ.).*

த.வ. ஒருகண்மாக்கிணை, தவண்டை

[Skt. ḍamāram(u) > த. டமாரம்]

க. டவணெ; தெ. டவின.

டவண்டையடி-த்தல் *ṭavaṇḍai-yaḍi-,* 4 செ.கு.வி.(v.i.) தேர்வில் தவறுதல்; to fail, as in an examination.

[டவண்டை + அடி-,]

டவண்டையா-தல் *ṭavaṇḍaiyā-,* 6 செ.கு.வி. (v.i.) இறந்து போதல்; to breathe one's last, used in contempt. *'அவன் டவண்டையாகி விட்டான்' (இ.வ.).*

[டவண்டை + ஆ-,]

டவண்டைவாங்கு-தல் *ṭavaṇḍai-vāṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) **டவண்டையடி-தல்,** பார்க்க; see *ṭavaṇḍaiyaḍi-,*

[டவண்டை + வாங்கு-,]

டவர்மரம் *ṭavar-maram,* பெ.(n.) பாய் மரத்தின் நான்காவது அல்லது உச்சிப் பாகம்; royal mast (M. Navi. 81).

டவல் taval பெ.(n.) துண்டு; towel.

த.வ. உறிவை, கைத்துண்டு

[E. towel>> த. டவல்]

டவளாய்–த்தல் *ṭavaḷāy-,* 4 செ.கு.வி.(v.i.) மிகையாக உண்ணுதல் (இ.வ.); to eat or drink to excess.

த.வ. கும்முதல்

க. டவலிசு

டவளி *ṭavaḷi,* பெ.(n.) ஏய்ப்பு, வஞ்சகம் (இ.வ.); fraud, deceit; lie.

க., தெ. டவளி.

டவற்குந்தா *ṭavaṟ-kundā,* பெ.(n.) உச்சிப் பாய்மரம்; royal mast (naut.).

[tavar+kunda]

டவற்பறுவான் *ṭavaṟ-paṟuvāṉ,* பெ.(n.) உச்சிப்பாய்தாங்குங் கட்டை; royal yard (naut.).

டவாலி *ṭavāli,* பெ.(n.) வில்லையோடு கூடிய தொண்டனின் தோட்கச்சை (கொ.வ.); peon's belt on which a badge is worn.

த.வ. தோளணி,மாராப்பு

[Persn. dawāli > த. டவாலி]



டவுல் *ṭavul,* பெ.(n.) 1. வட்டாரம் அல்லது பண்ணையிலிருந்து கிடைக்கக்கூடிய தண்டலின் குத்து (தோராய) மதிப்பு; estimate, valuation, estimate of the amount of revenue which a district or estate may be expected to yield. 2. ஒவ்வொரு திங்களும் இவ்வளவு சாராயம் விற்பனைக்கு எடுத்துக் கொள்வேனென்று சாராயக்கடைக்காரன் குத்தகைக்காரனிடம் செய்து கொள்ளும் ஒப்பந்தம்; agreement between a wholesale renter and his shopkeeper by which the latter agrees to take each month a certain quantity of liquor for sale. 3. தவுல் பார்க்க; see *tavul.*

த.வ. வருவாய் மதிப்பீடு

[H. taul> த. டவுல்]

டவுல்கணக்கு *ṭavul-kaṉakku,* பெ.(n.) வரி செலுத்துவோனுக்குக் கொடுக்கும் தீர்வை விளக்க (விவர)க் கணக்குக் குறிப்பு; extract from the estimated assessment, given for the information of the tax-payer.

[டவுல் + கணக்கு.]

[H. taul> த. டவுல்]

[கண → கணக்கு.]

டவுல்சமா *ṭavul-camā,* பெ.(n.) ஒரு வட்டாரத்தின் அல்லது ஊரின் தீர்வை மொத்த வருமான விளக்கம் (விவரம்); particulars of the total revenue assessed upon a district or village (R.f.).

[H. tavl-jamā > த.டவுல்சமா]

டவுல்நாமா *ṭavul-nāmā,* பெ.(n.) டவுல் கணக்கு பார்க்க; see *ṭavul-kaṉakku.* (R.T.).

டவுல்வசூல்பாக்கி *ṭavul-vasul-pākki,* பெ.(n.) சேர வேண்டிய தொகை நிலுவைத்

த்ண்டல் இவற்றின் விளக்கம் அடங்கிய வரிக்கணக்கு; a revenue account containing particulars of demand collection and balance. (R.T.).

த.வ. வரிக்கணக்கு ஏடு

[டவுல் + வசூல் + பாக்கி]

[H. ṭavl-u.wasūl > த. டவுல்வசூல்]

டவுலடி-த்தல் *ṭavul-aḍi-*, 4 செ.கு.வி.(v.i.) 1. தன்னைத் தானே புகழ்ந்து கூறுதல்; to praise oneself, boast, as beating one's own drum. 2. பொய்ச் செய்தி எழுப்புதல்; to utter lies, spread false rumours.

த.வ. தன்னை வியத்தல்

[டவுல் + அடி-,]

[Ar. tabal > த. டவுல்]

டவை *ṭavai*, பெ.(n.) தலைமைத் தொண்டன்; head peon.

[U. defēdār > த. டவை]

டவைதார் *ṭavaidār*, பெ.(n.) **டபேதார்** பார்க்க; see *tapēdār*.

டாக்கன் *ṭākkan*, பெ.(n.) செருக்கன் (வின்.); petulant fellow.

[H. ṭāgā > த. டாக்கன்]

டாக்கா *ṭākkā*, பெ.(n.) மேலோட்டுத் தையல் (இ.வ.); basting.

[H. tāgnā > த. டாக்கா]

டாக்காணா *ṭākkāṇā*, பெ.(n.) அஞ்சலகம் (இ.வ.); post office.

[H. ḍak-khāna > த. டாக்காணா]

டாக்கார்ட்டு *ṭākkārṭṭu*, பெ.(n.) இரட்டைச் சக்கரக் குதிரை வண்டி வகை; dogcart.

[E. dogcart > த. டாக்கார்ட்டு]

டாக்கு *ṭākku*, பெ.(n.) 1. வலிமை; strength, robustness. 2. செருக்கு (வின்.); petul ancy, pride.

டாக்கும்டிக்குமாய் *ṭākkum-ṭikkum-āy*, பெ.அ.(adj.) சிறப்பாக (இ.வ.); in a neat or well dressed manner.

த.வ. வெள்ளையும் சள்ளையுமாய்

டாக்கோடாக்காய் *ṭākkōḍākkāy*, வி.அ.(adv.) வேகமாய்; with great speed.

டாக்டர் *ḍākṭar*, பெ.(n.) 1. மேல் நாட்டு மருத்துவ முறையில் படித்துப் பட்டம் பெற்ற மருத்துவர்; doctor (of medicine). *'மருத்துவத் துறையில் ஈடுபடும் டாக்டர்கள் கிராமப் புறங்களில் சேவை செய்வது நன்மை பயக்கும் செயலாகும்'.* 2. முனைவர்; doctor of philosophy.

[L. doctor > த. டாக்டர்]

டாகினி *ṭāgiṇi*, பெ.(n.) இடாகினி (இ.வ.); a female imp. or goblin.

டாகு *ṭāku*, பெ.(n.) புள்ளி (வின்.); mark, spot, brand.

[Persn. ḍāgh > த. டாகு]

டாகுபோடு-தல் *ṭāku-pōḍu-*, செ.கு.வி.(v.i.) மாடு, குதிரை முதலியவற்றிற்குச் சூடு போடுதல் (வின்.); to brand cattle or horses with a red-hot iron.

[டாகு + போடு-.]

[Persn. dāgh > த. டாகு]

டாங்கர் *ṭāṅgar*, பெ.(n.) 1. **டாங்கர்மா** பார்க்க; see *ṭāṅgarmā*. 2. **டாங்கர்பச்சடி** பார்க்க; see *ṭāṅgar-paccaḍi*.

டாங்கர்மா *ṭāṅgarmā*, பெ.(n.) உளுந்துமா (இ.வ.); blackgram flour.

[Mar. dangar > த. டாங்கர்மா]

டாங்கி *ṭāṅgi*, பெ.(n.) சக்கரங்களின் மேல் சுற்றி வரும் இரும்புப் பட்டை பொருத்தப் பட்டதும் நீண்ட குழா (பீரங்கி)யை

உடையதுமான படைத்துறை (இராணுவ) வண்டி; tank (used in war-fare). *'பகைவர் நாட்டைத் தாக்கும் போது பயன்படுத்தப்படும் டாங்கி'.*

த.வ. இடிகுழல் இரும்புந்து

[E. tank > த. டாங்கி]



டாங்கிலிமூலம் *ṭāṅgili-mūlam,* பெ.(n.) ஆடாதோடை; Malabar nut. (சா.அக.)



டாங்கு *ṭāṅgu,* பெ.(n.) ஐந்து குன்றிமணி எடை; a weight of five jeweller's grains. (சா.அக.)

டாண்-என்று *ṭāṇ-eṉṟu,* வி.அ.(v.) (பே.வ.) (குறிப்பிட்ட காலத்தில்) சிறிதும் தவறாமல்; மிகச் சரியாக; one the dot. *'முதல் தேதி யன்று டாணென்று வாடகையைக் கொடுத்து விடுவார்'. 'சொன்னபடி டாணென்று ஆறு மணிக்கு வந்துவிட்டாயே!'.*

த.வ. முற்றாக, நெற்றாக

டாணா *ṭāṇā,* பெ.(n.) காவலிடம் (கொ.வ.); police station, guard-house.

[U. thānā > த. டாணா]

டாணாக்காரன் *ṭāṇā-k-kāraṉ,* பெ.(n.) காவற் தொண்டன்; person incharge of a police station, station-house officer, police constable.

டாணாதார் *ṭāṇādār,* பெ.(n.) **டாணாக் காரன்** (இ.வ.) பார்க்க; see *ṭāṇā-k-kāraṉ.*

டாப்பு[1] *ṭāppu,* பெ.(n.) பட்டியல்; catalogue, list, inventory, physician's prescriptions.

தெ. டாபு

டாப்பு[2] *ṭāppu,* பெ.(n.) பகட்டு (இ.வ.); show, display, pomp.

[H. ḍhāb > த. டாப்பு]

டாப்பு[3] *ṭāppu,* பெ.(n.)உச்சம், சிறப்பு, உயர்நிலை; excellence, greatness.

[E. ḍhāb > த. டாப்பு]

டாப்புச்சிறப்பு *ṭāppu-c-ciṟappu,* பெ.(n.) டாப்பு[2] (கொ.வ.) பார்க்க; see *ṭāppu.*

டாபர் *ṭāpar,* பெ.(n.) கூட்டிக் கொடுப்போன் (கொ.வ.); pimp, procurer.

[U. dhawwā > த. டாபர்]

டாபா *ṭāpā,* பெ.(n.) மேல் மாடியின் வெளியிடம் (செ.வ.); open terrace.

த.வ. மாடம்

[Te. dabā > த. டாபா]

டாபால் *ṭāpāl,* பெ.(n.) கோட்டைக்குச் செல் வதற்கான சுரங்க வழி (வின்.); under-ground passage to fortified place.

[Te. dābālu > த. டாபால்]

டாபால்நடத்து-தல் *ṭāpāl-naḍattu-,* 2 பி.வி. (v.cans.) கோட்டை முதலியன முற்றுகை யிடுதற்காகச் சுரங்க வழி அகழ்தல் (வின்.);

to dig mine, excavate trenches, as in besieging to fortified place.

[டாபால் + நடத்து-,]

[Te. dābālu > த. டாபால்]

டாபால்போடு-தல் *ṭāpāl-pōḍu-,* 19 செ. குன்றாவி.(v.t.) முற்றுகையிடுதல் (வின்.); to sorround and besiege a fortified place.

[டாபால்+போடு-,]

[Te. dābālu > த. டாபால்]

டாபால்முறி-த்தல் *ṭāpāl-muṟi-,* 2 செ.கு.வி. (v.t.) முற்றுகை நீக்குதல்; to raise a siege.

[டாபால் + முறி-,]

[Te. dābālu > த. டாபால்]

டாம்பிகம் *ṭāmbigam,* பெ.(n.) வீண் பகட்டு (வின்.); ostentation, pomp.

த.வ. பகட்டாரம், அலப்பு

[Skt. dāmbhika > த. டாம்பீகம்]

டாம்பிகன் *ṭāmbigaṉ,* பெ.(n.) இடம்பன்; coxcomb, fop, ostentatious person. *'இனைய பற்பல டாம்பிகர்' (பிபோத. 10, 14).*

த.வ. வீண் பகட்டன்

[Skt. dāmbhika > த. டாம்பீகன்]

டாமர் *ṭāmar,* பெ.(n.) ஒரு வகை மரம்; dammer tree. (சா.அக.)

டாமர்சோபிதம் *ṭāmar-šōbidam,* பெ.(n.) ஒரு வகைச் சீனத்துச் செடி; a plant native of China. (சா.அக.)

டாயம்பாடு-தல் *ṭāyam-pāḍu-,* செ.கு.வி. (v.i.) ஓர் இசைச் சுரத்தை மூலமாகக் கொண்டு மற்ற சுரங்களால் பண்பாடுதல் (இ.வ.); to sing a tune within the limit of specified note.

த.வ. தாயம்பாடுதல்

[டாயம் + பாடு-,]

[Skt. sthāyin > த. டாயம்]

டாயில்கறி *ṭāyil-kaṟi,* பெ.(n.) ஒரு பறவையின் இறைச்சி; flesh of a bird. (சா.அக.)

டார் *ṭār,* பெ.(n.) கீலெண்ணெய் (தார்); tar. (சா.அக.)

[E. tar > த. டார்]

டார்வாங்கு-தல் *ṭār-vāṅgu-,* செ.கு.வி.(v.i.) டர்வாங்கு-தல், பார்க்க; see *ṭar-vāṅgu-,*

[டார் + வாங்கு-,]

[H. ḍar > த. டார்]

டால் *ṭāl,* பெ.(n.) 1. கொடி (வின்.); flag, colours. 2. கேடகம் (வின்.); shield. 3. ஒளி; lustre. 4. மிகை பேச்சு; ostentations, boastful - speech. *'அவன் டாலடிக்கிறான்' (இ.வ.).*

தெ. டாலு; க. டால்.

டால்வாங்கி *ṭāl-vāṅgi,* பெ.(n.) கத்தரிக் காயும், பருப்பும் இட்டுச் செய்த குழம்பு வகை (இ.வ.); a sauce made of dholl and brinjal.

[H. dāl+Mhr. vāṅgi > த. டால்வாங்கி]

டால்வீசு-தல் *ṭāl-vīšu-,* 5 செ.கு.வி.(v.i.) ஒளி வீசுதல் (கொ.வ.); to sparkle, as a gem; to shine. 2. மிகைபடக் கூறல் (இ.வ.); to talk boastingly.

[டால் + வீசு-,]

டாலடி-த்தல் *ḍālaḍi-,* 4 செ.கு.வி.(v.i.) கண்ணைப் பறிக்கும் வகையில் மின்னுதல்; பளபளத்தல்; glitter. *'வைரமூக்குத்தி வெயில் பட்டு டாலடித்தது'.*

டாலர் *ḍālar,* பெ.(n.) அமெரிக்கா, சிங்கப்பூர் முதலிய நாடுகளில் வழங்கும் காசு (நாணய) வகை (கொ.வ.); dollar, a coin in the currency of the U.S.A, straits settle ments, etc.

த.வ. தாளுருவா

[E. doller > த. டாலர்]

டாலு *ṭālu,* பெ.(n.) அலுக்கம் (கமகம்) பத்த னுளொன்று (பரத. இராக. 23); appoggiatura, two notes played closely together, the first being lower and touched very lightly, one of ten kamakam, (q.v.).

டாவால் *ṭāvāl,* பெ.(n.) **டாபால்** (வின்.) பார்க்க; see *ṭāpāl.*

டாவாபோடுகை *ṭāvā-pōḍugai,* பெ.(n.) கப்பலின் இடப்பக்கம்; port, the left side of a ship (Naut.)

[U. dāvā+E. port > த. டாவாபோடுகை]

டாவு *ṭāvu,* பெ.(n.) செருக்கு (கொ.வ.); haughtiness.

டானிப் *ṭāṉip,* பெ.(n.) குளிர் நாடுகளில் பயிராகும் முள்ளங்கியைப் போன்றும் உருண் டையாகவும் உள்ள (கோசு இனத்தைச் சேர்ந்த) ஒரு வகைக் கிழங்கு; thick fles by underground stem of Brassica campestris, used as vegetables. (சா.அக.)

[Fr. tour+L. nāphs>E. turnip > த. டானிப்]



டிக்கட்டு *ṭikkaṭṭu,* பெ.(n.) 1. அனுமதிச் சீட்டு; ticket. 2. திருமண முதலியவற்றில் அனுப்பும் அழைப்புச் சீட்டு (செ.வ.); card a letter of invitation for marriage, etc.

த.வ. சீட்டு

[E. ticket > த. டிக்கட்டு]

டிக்காமல்லி *ṭikkāmalli,* பெ.(n.) மயிலாலக்கடி; cambi resin. (சா.அக.)

டிக்கிரி *ṭikkiri,* பெ.(n.) வழக்குத் தீர்ப்பில் நிறைவேற்றுதற்குரியத் தன்மை (கொ.வ.); degree in a suit.

த.வ. தீர்ப்பாணை

[E. decree > த. டிக்கிரி]

டிகாணா *ṭikāṇā,* பெ.(n.) தங்குமிடம் (கொ.வ.); station, camp.

[H. ṭikāṇā > த. டிகாணா]

டிங்கி *ṭiṅgi,* பெ.(n.) குட்டிக் கரணம் (இ.வ.); somen-sault, tumbling.

தெ., க. டிங்கி.

டிங்கிசுரம் *ṭiṅgi-suram,* பெ.(n.) முடக்குச் சுரம் (கொ.வ.); dengue fever.

[டிங்கி + சுரம்]

[E. dengue > த. டிங்கி]

டிங்கியடி-த்தல் *ṭiṅgi-y-aḍi-,* 4 செ.கு.வி.(v.i.) சோற்றுக்குத் திண்டாடுதல் (இ.வ.); to struggle hard for one's food, as turning somersaults, to lead a precarious existence.

[டிங்கி + அடி-,]

டிங்டிங் *ṭiṅṭiṅ,* பெ.(n.) உப்புக் கண்டம் (வின்.); dried mutton.

டிண்டிமம் *ṭiṇḍimam,* பெ.(n.) ஒருவகைப் பறை; a kind of drum.

[Skt. ḍiṇḍima > த. டிண்டிமம்]

டிப்பணி *ṭippaṇi,* பெ.(n.) உரைவகை (இ.வ.); gloss, commentary.

[Skt. ṭippaṇi > த. டிப்பணி]

டிம்மிக்கட்டை[1] *ṭimmi-k-kaṭṭai,* பெ.(n.) 1. தொலைவரி (கம்பி) பழகுங் கட்டை; model

of a telegraphic instrument for learning telegraphy.

[டிம்மி + கட்டை]

[E. dummy > த. டிம்மி]

கள் → கட்டு → கட்டை = திரண்ட மரத்துண்டு, திரண்ட விறகு

டிம்மிக்கட்டை[2] *ṭimmi-k-kaṭṭai,* பெ.(n.) முட்டாள் (இ.வ.); blockhead.

டிமம் *ṭimam,* பெ.(n.) வடமொழி உருவகம் (ரூபகம்) பத்தனுள் முற்றுகையிடுதலைப் பற்றி வருவது (சிலப். பக். 84, கீழ்க்குறிப்பு); a kind of drama in sanskrit representing a siege, one of ten rupagam (q.v.).

[Skt. ḍima > த. டிமம்]

டிமிக்கி[1] *ṭimikki,* பெ.(n.) மட்பாண்டத் தாலமைந்த ஒருவகைச் சிறுபறை; a kind of tabor, made with an earthen frame.

த.வ. தமுக்கு

[U. ṭumkī > த. டிமிக்கி]

டிமிக்கி[2] *ḍimikki,* பெ.(n.) (கண்காணிப்பவர் கண்ணில் படாமல் அல்லது தான் போக வேண்டிய இடத்திற்குப் போகாமல்) ஏமாற்றி நழுவிவிடும் செயல்; giving the slip; playing truant. *'பள்ளிக்கூடம் போகவில்லையா? இன்றைக்கு டிமிக்கியா?'. 'பல தடவை காவலருக்கு டிமிக்கி கொடுத்த கேடி கைதானான்'. 'வாடகையே கொடுக்காமல் டிமிக்கிக் கொடுத்துக் கொண்டு திரிகிறான்'.*

த.வ. நழுவல்

டிமிக்கிகொடு-த்தல் *ṭimikki-koḍu-,* 4 செ.கு.வி.(v.i.) தந்திரமாய் மறைதல் (கொ.வ.); to abscond, to bolt, give one the slip.

த.வ. தப்பி மறைதல்

[டிமிக்கி + கொடு-,]

டிமிக்கியடி-த்தல் *ṭimikki-aṭi-,* 4 செ.கு.வி. (v.i.) **டிமிக்கிகொடு-**, பார்க்க; see *ṭimikki-koḍu.*

[டிமிக்கி + அடி-,]

டிரங்குப்பெட்டி *ṭiruṅgu-p-peṭṭi,* பெ.(n.) தகரத்தாலான செவ்வக வடிவப் பெட்டி; large case (for packing clothes, etc.) (in India) trank.

த.வ. இரும்புப்பெட்டி

[டிரங்கு + பெட்டி]

[E. trunk > த. டிரங்கு]



டிராம்வண்டி *ṭirām-vaṇḍi,* பெ.(n.) மின்சார வண்டி (இ.வ); train.

த.வ. மின்னுந்து

[டிராம் + வண்டி]

[E. tram > த. டிராம்]

டிராயர்[1] *ṭirāyar,* பெ.(n.) அரைக் கால்சட்டை; shorts; half trousers. *'பழுப்பு நிற டிராயரும் வெள்ளை நிறச் சட்டையும் அணிந் திருந்தான்'.*

[E. drawer > த. டிராயர்]



டிராயர்² *ṭirāyar*, பெ.(n.) (மேசை, நிலைப் பேழை (பீரோ) முதலியவற்றில் உள்ள) இழுப்பறை; drawer (of a desk). *'மேசை டிராயரின் பணம் வைத்திருக்கிறேன், எடுத்துக் கொள்'.*

த.வ. இழுவை

[E. drawer > த. டிராயர்]



டிரேகா *ṭirēgā*, பெ.(n.) காந்தச் செடி; an unknown plant. (சா.அக.)

டில்லி *ṭilli*, பெ.(n.) முற்காலத்தில் மகமதியர் (முகலாயர்)களின் தலைநகரமாகவும், இக்காலத்தில் இந்தியாவின் தலைநகர மாகவும் உள்ள ஒரு மா நகரம்; Delhi, formerly the capital of the Moghuls and now the capital of India.

த.வ. தில்லி

[H. ḍilli > த. டில்லி]

டில்லிதர்பார்¹ *ḍilli-darbār*, பெ.(n.) ஒரு வகை உயர்ந்த பட்டுப் புடவை (கொ.வ.); a kind of superior silk saree.

[H. ḍilli+U. darbār > த. டில்லிதர்பார்]

டில்லிதர்பார்² *ḍilli-darbār*, பெ.(n.) தன்முனைப்பாட்சி; auto cracy.

டில்லிபாச்சா *ḍilli-pāccā*, பெ.(n.) மகமதிய (மொகலாய) அரசன்; the Moghul king.

[H. ḍilli+U. bādshāh > த. டில்லிபாச்சா]

டில்லிராவடம் *ḍilli-rāvaḍam*, பெ.(n.) கெம்பு (வின்.); a choice ruby.

டின் *ṭin*, பெ.(n.) எண்ணெய், அரிசி முதலியவை வைத்துக் கொள்ள உதவும் பெரிய அடைப்பு, சிமிழ்; a large container made of tin. *'அரிசியைப் பாதுகாப்பாக உள்ள டின்னில் போட்டு வைப்பது நல்லது'.*

த.வ. அடைப்பி

[E. tin > த. டின்]



டீ *ṭī*, பெ.(n.) 1. தேயிலை; tea leaf. 2. கொதிக்கும் நீரில் வறண்ட தேயிலைப் பொடியைப்போட்டுச் சாறு வடித்தெடுக்கும் ஒருவகைக் குடிப்பு; tea, the beverage.

த.வ. தேநீர்

[Chin. te > த. டீ]

டீக்காப்பதக்கம் *ṭikkā-p-patakkam*, பெ.(n.) மகளிர் அணியும் பதக்க வகை (கொ.வ.); a jewel pendant with a top-clasp of gold, set with precious stones.

[டீக்கா + பதக்கம்]

[U. ṭika > த. டீக்கா]

டீக்கு *ṭikku*, பெ.(n.) 1. மிடுக்கு; spruceness, stiffness as of manners. 2. சரியாகை; exactness, correctness, fitness, suitability. *'அந்தச் செயல் டீக்காய் முடிந்தது'.*

[H. ṭhik > த. டீக்கு]

டீக்கொடு-த்தல் *ṭī-k-koḍu-,* 4 செ.கு.வி.(v.i.) ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்ளுதல் (கொ.வ.); to butt, as rams in fighting.

த.வ. இடி கொடுத்தல்

[டீக்+கொடு]

டீகா[1] *ṭīkā,* பெ.(n.) **டீக்காப்பதக்கம்** பார்க்க; see *ṭīkā-p-padakkam.*

டீகா[2] *ṭīkā,* பெ.(n.) **டீகை** பார்க்க (கொ.வ.); see *ṭīgai.*

டீகாப்பொட்டு *ṭīkā-p-poṭṭu,* பெ.(n.) மகளிர் தலைவகிடுக்கு நேரே நெற்றியிலணியும் அணி வகை (இ.வ.); a jewel pendant worn by woman on the fore-head.



[டீகா + பொட்டு]

டீகை *ṭīgai,* பெ.(n.) உரை; commentary, gloss.

[Skt. ṭīkā > த. டீகை]

டீச்சர் *ṭīccar,* பெ.(n.) ஆசிரியை; woman teacher. *'டீச்சர் கற்பிப்பதை மாணவ, மாணவிகள் ஒருநிலைப் படுத்திக் கவனித்து வந்தாலே அதிக மதிப்பெண்கள் எடுக்க முடியும்'.*

[E. teacher > த. டீச்சர்]

ஆங்கிலத்தில் teacher என்னும் சொல் ஆண் பெண் பாகுபாடு காட்டாது ஆசிரியர் என்னும் பொருளையே கொண்டுள்ளது. தமிழில் பெரும்பாலும் டீச்சர் பெண்பால் ஆசிரியரைக் குறிப்பிடுகிறது. இதனைப் பொருட்பாட்டுப் புடைபெயர்ச்சி எனலாம்

டீலா[1] *ṭīlā,* பெ.(n.) 1. நெகிழ்ச்சி (வின்.); looseness. 2. தளர்ச்சி; weakness, helplessness. *'அவன் டீலா வாய்விட்டான்' (இ.வ.).*

[H. ḍhīla > த. டீலா]

டீலா[2] *ṭīlā,* பெ.(n.) சுணக்கம், தாமதம்; delay.

க. டீலா.

டீலாவில்விடு-தல் *ṭīlāvil-viḍu-,* 8 செ.கு.வி. (v.t.) திண்டாட விடுதல் (இ.வ.); to forsake, leave one helpless or destitute.

[டீலா + விடு-,]

டீவு *ṭīvu,* பெ.(n.) தளுக்கு; style, fashion.

தெ. டீவு.

டூ *ṭū,* பெ.(n.) சேர்ந்திருக்கும் சுட்டு விரலையும் நடுவிரலையும் பிரித்துக் காட்டித் தெரி விக்கும் நட்பின்மைக் (சிநேகமின்மைக்) குறிப்பு; an exclamation declaring breach of friendship, indicated by disjoining the ring formed of the fore and middle fingers. *'அவன் டூ சொன்னான்'.*

த.வ. தூவிடுதல்

டூப் *ḍūp,* பெ.(n.) (கேட்பவருக்கு) நம்ப முடியாதபடி இருக்கும் பேச்சு; பொய்; fib, spinning a yarn; lie. *'அவன் சொல்வது முக்கால்வாசி டூப்பாகத்தான் இருக்கும், நம்பிவிடாதே!'. 2. 'திரைப்படங்களில் கதாநாயகர்கள் நடிக்க இயலாத கடினமான காட்சிகளில் மாற்றாள் டூப் போட்டு நடிக்க வைப்பது'*; dupe.

த.வ. 1. அண்டப்புளுகு. 2. மாற்றாள்

[E. dupe > த. டூப்]

டூலி *ḍūli,* பெ.(n.) நோயாளிகளை எடுத்துப் போகப் பயன்படும் ஒரு நீண்ட மூங்கிலின் நடுவில் தொங்கும் கட்டிலை உடைய ஒரு கருவி; a swinging litter for carrying sick persons, a cot, or frame suspended by the four corners from a bamboo pole and is carried by two or four persons. (சா.அக.)

த.வ. தொங்குகட்டில்

டூவிடு-தல் *ṭū-viḍu-,* 20 செ.கு.வி.(v.i.) நட்பை விட்டிடுதல்; to declare breake of friendship.

[டூ + விடு-,]

டெங்கணிக்கோட்டை *ṭeṅgaṇi-k-kōṭṭai,* பெ.(n.) கொடி மரமமைந்த மதிலுடன் கூடிய கோட்டை (இ.வ.); fort with a bastion provided with a flag-staff.

த.வ. கொடிமரக்கோட்டை

[டெங்கணி + கோட்டை]

க. டெங்கணி, டெங்கண (கோட்டைக் கொத்தளத்தில் அமைந்த கொடி மரம்.)

டெங்கு *ṭeṅgu,* பெ.(n.) **டிங்கிசுரம்** (இ.வ.) பார்க்க; see *ṭiṅgi-suram.*

[E. dengu > த. டெங்கு]

டெண்டர் *ṭeṇḍar,* பெ.(n.) ஒரு வேலையைக் குறிப்பிட்ட தொகையிற் செய்து முடிப்ப தற்காக உடன்படுஞ் சீட்டு, ஒப்பந்தப் புள்ளி (கொ.வ.); tender.

[E. tender > த. டெண்டர்]

டெலிபோன் *ṭeli-pōṉ,* பெ.(n.) தொலைபேசி; telephone.

[E. telephone > த. டெலிபோன்]



டேக்கு-தல் *ṭēkku-,* 5 செ.கு.வி.(v.i.) புட்டத்தால் நகர்ந்து நகர்ந்து செல்லுதல் (செ.வ.); to creep along on the buttocks as a crippled person.

த.வ. தேங்கி நகர்தல், தேக்குதல்

டேகை *ṭēgai,* பெ.(n.) ஒருவகைக் காட்டுப் பறவை (கொ.வ.); a wild bird.

த.வ. தேகை

க., தெ. டேக.

டேகையாட்டம் *ṭēgai-y-āṭṭam,* பெ.(n.) திருமணக் காலங்களில் மாலை மாற்றும் போது மணமகனும் மணமகளும் தம் தோள்களில் வீற்றிருக்க இருதிறத்து அம்மான்மாரும் ஆடும் விந்தையான (வினோத) ஆட்டம் (இ.வ.); an amusing dance by uncles, with the bride and bridegroom on their shoulders, when the latter exchange garlands.

த.வ. தோகையாட்டம்

[டேகை + ஆட்டம்]

தெ. டேகாட.

டேமணி *ṭēmaṇi,* பெ.(n.) **டேவணி** பார்க்க; see *ṭēvaṇi.*

[U. thēwni > த. டேவணி > டேமணி]

டேரா *ḍērā,* பெ.(n.) 1. வட்டரங்கு (சர்க்கசு நடத்துபவர் ஓர் ஊரில் அமைக்கும் கூடாரம்); tent (by a circus party). *'வட்டரங்கு (சர்க்கசு) நடத்துபவர் டேரா அமைத்து*

பலவகை நிகழ்ச்சிகள் நடத்தி காண்போர் மனம் கொள்ளைக் கொள்ளச் செய்வர்'. 2. (வீட்டுக்காரர் வெறுக்கும் அளவுக்கு) பலநாள் தங்குதல்; overstay (in a house or a place to the extent of causing displeasure to the host). *'தூரத்து உறவு என்று சொல்லிக் கொண்டு வந்து ஒரு மாதம் டேரா அடித்து விட்டார்'.*

த.வ. கூடாரம்

[H. ḍērā > த. டேரா]

டேவணி *ṭēvaṇi,* பெ.(n.) முன்பணம் (இ.வ.); earnest money, cash security.

தெ. டேவணி.

[U. டேவணி > த. டேவணி]

டைகாத் *ṭaigāt,* பெ.(n.) இலவய (இனாம்) ஊர்; entire village held as inam.

த.வ. முற்றூட்டு

[U. ḍēhāt > த. டைகாத்]

டைகிளாட்டு *ṭaigiḷāṭṭu,* பெ.(n.) இரு மொழிகளிலமைந்த நிலத்தீர்வை, கணக்கு முதலியன; books or records in two languages, as settlement register.

த.வ. இருமொழிக்கணக்கு ஏடு

[E. ḍiglott > த. டைகிளாட்டு]

டைமன் *ḍaimaṉ,* பெ.(n.) விளையாட்டுச் சீட்டுக் கட்டில் ஒரு சாதிச் சீட்டு (கொ.வ.); diamonds, a suite in playing - cards.

[E. diamond > த. டைமன்]



டையடி-த்தல் *ḍai-y-aḍi-,* 4 செ.கு.வி.(v.t.) 1. அச்சில் அடித்தல்; to strike in a die, as a piece of metal. 2. வெள்ளை மயிர்களுக்குக் கறுப்புச் சாயம் போடுதல் (த.வ.); to apply die to hair.

[டை + அடி-,]

[E. die > த. டை]

டொக்குவிழல் *ḍokku-viḻal,* பெ.(n.) கன்னத்தில் பள்ளம் விழுகை; sunken as cheeks. (சா.அக.)

டொக்கை *ḍokkai,* பெ.(n.) பெருச்சாளி முதலியவற்றாற் கட்டடத் தரையில் விழும் குழிவு; depression or hollow in the paved floor, caused by bandicoots etc.

த.வ. துளை விழுதல், தொள்ளை விழுதல்

டொங்கு[1] *ḍoṅgu,* பெ.(n.) பொந்து (இ.வ.); hole or hollow, as in a tree or wall.

தெ. டொங்கு.

டொங்கு[2] *ḍoṅgu,* பெ.(n.) கோணல் (கொ.வ.); crookedness.

க., தெ. டொங்கு.

டொங்குவிழு-தல் *ḍoṅgu-viḻu-,* 2 செ.கு.வி. (v.i.) பணம் முதலியன குறைதல்; to decrease, dwindle, to be short as money. *'முப்பதில் 2 ரூபா டொங்கு விழுகிறது' (இ.வ.).*

த.வ. தொங்கல் விழுதல், குறைபடல்

[டொங்கு + விழு-,]

டொம்பர் *ḍombar,* பெ.(n.) கழைக் கூத்தன் (கொ.வ.); a wandering tribe of singers and rope-dancers.

த.வ. தொம்பன், தொழும்பன்

க. டொம்பரு.

டொம்பரவர் *ḍombaravar,* பெ.(n.) **டொம்பர்** (வின்.) பார்க்க; see *ḍombar.*

டொழா *ḍoḷā,* பெ.(n.) இலுப்பை; narrow, leaved mohua. (சா.அக.)

டொள் *ḍoḷ,* பெ.(n.) கப்பற் கயிறு மாட்டும் முளை; belaying pin (naut.).

த.வ. குட்டம் (கூட்டம்)

[Du. dol > த. டொள்]

டொள்மேசை *ḍoḷ-mēšai,* பெ.(n.) கப்பற் கயிற்றுச் சட்டம்; belaying rail (naut.).

[டொள் + மேசை]

[Du. dol > த. டொள்]

டோக்கன் *ṭōkkan,* பெ.(n.) வில்லை; a voucher or disc exchanged for goods or services.

த.வ. வில்லை

[E. Token > த. டோக்கன்]

டோக்கு *ḍōkku,* பெ.(n.) பணம் (ரொக்கம்); hard cash, ready money. *டோக்கா நூறு ரூபாய் கொடுத்தேன்' (கொ.வ.).*

க., தெ. டோகு.

டோகர் *ṭōgar,* பெ.(n.) மோதுகை (இ.வ.); blow, stroke, collision.

[H. ṭakkar > த. டோகர்]

டோகர்கொடு-த்தல் *ṭōgar-koḍu-,* 4 செ.கு.வி.(v.i.) 1. மோதுதல்; to collide. *'வண்டி டோகர் கொடுத்தது' (இ.வ.).* 2. ஓடிப்போதல்; to run away, abscond. *'அவன் பணத்தை எடுத்துக் கொண்டு டோகர் கொடுத்து விட்டான்' (கொ.வ.).*

த.வ. இடிகொடுத்தல்

[டோகர் + கொடு-,]

[H. ṭakkar > த. டோகர்]

டோகர்விடு-தல் *ṭōkar-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) **டோகர்கொடு-,** பார்க்க;see *ṭōkar-koḍu-.*

[டோகர் + விடு-,]

[H. ṭakkar > த. டோகர்]

டோங்கா *ṭōṅgā,* பெ.(n.) விதை வீக்கம் (அண்டவாதம்); hydrocele, swelling of the scrotum. *'அவனுக்கு டோங்கா விழுந்து விட்டது' (கொ.வ.).*

த.வ. புருடை வீக்கம், கொட்டை வீக்கம்

[H. dhauṅknā > த. டோங்கா]

டோங்கு-தல் *ḍōṅgu-,* 5 செ.கு.வி.(v.i.) முழங்கையாற் கோலியுருண்டையைத் தள்ளி விளையாடுதல் (வின்.); to play at marbles, pushing them with the elbows.

தெ. டோகு.

டோப்பா *ṭōppā,* பெ.(n.) ஆண்கள் தலையில் வைத்துக் கொள்ளும் செயற்கை முடி; பொய் முடி; wig (for men). *'திரைப்படங்களில் டோப்பாவை அதிக அளவில் பயன்படுத்துகிறார்கள்'.*

த.வ. புனைமுடி

டோபி *ṭōpi,* பெ.(n.) சலவைத் தொழிலாளி (இக்.வ.); washer man, dhoby.

[H. dhōbi > த. டோபி]

டோபிகானா *ṭōpi-kāṉā,* பெ.(n.) சலவைத் துறை (இ.வ.); place for washing cloth.

டோமம் *ṭōmam,* பெ.(n.) ஓர் மூலி; a plant. (சா.அக.).

டோரியா[1] *ṭōriyā,* பெ.(n.) ஒரு வகைத் தயிர்ப்பச்சடி (இ.வ.); relish of curds and condiments.

[U. ḍōrā > த. டோரியா]

டோரியா[2] *ṭōriyā,* பெ.(n.) இடையிடையே இழைக் கோடுள்ள துணி வகை (கொ.வ.); striped muslin.

[H. ḍōriyā > த. டோரியா]

டோல்[1] *ḍōl,* பெ.(n.) 1. ஒரு வகை இசைக்கருவி; a large drum. *'கூறு சங்கு டோல் முரசு'* *(தனிப்பா* I, 270, 1). 2. திறமையும், அறிவும் சேர்ந்த பேச்சு; clever talk. *'உன்னுடைய டோல் இங்கே செல்லாது' (இ.வ.).*

த.வ. தோல்

தெ. டோலு.

[H. ḍhōl > த. டோல்]

டோல்[2] *ḍol,* பெ.(n.) தூங்குமஞ்சம் (இ.வ.); sleeping cot.

[Skt. ḍōlā > த. டோல்]

டோல்பின் *ṭōlpiṉ,* பெ.(n.) கப்பலின் முகப்பைத் தாங்கும் கட்டை; martingale, short spar under the bowsprit.

த.வ. ஓங்கில் கட்டை

[E. dolphin > த. டோல்பின்]

டோலக்கு *ḍōlakku,* பெ.(n.) சிறுதோல் இசைக் கருவி வகை (இ.வ.); a small drum.

த.வ. கைப்பறை

[H. ḍhōkk > த. டோலக்கு]

டோலாக்கு *ḍōlākku,* பெ.(n.) காதணி வகை; an ear pendant.

த.வ. தொங்கட்டான்

[H. lōla > த. டோலாக்கு]



டோலாக்கியம் *ḍōlākkiyam,* பெ.(n.) ஒரு சீமைச்செடி; a foreign plant. (சா.அக.).

டோலாயந்திரம் *ḍōlāyandiram,* பெ.(n.) டோலேந்திரம் பார்க்க; see *ḍōlēntiram.*

டோலி *ḍōli*, பெ.(n.) தூக்கிச் செல்லும் மஞ்சம்; litter, dooly, a kind of sedan.

த.வ. தொங்கு மஞ்சம், தொங்கலி

[H. ḍōlā > த. டோலி]



டோலுகிழங்கு *ḍōlukiḻaṅgu*, பெ.(n.) சீழ்மூல (பவுத்திர)த்தைப் போக்கும் மூலி; a drug that cures fistula. (சா.அக.).

டோலேந்திரம் *ḍōlēndiram*, பெ.(n.) நீர் முதலியவற்றை ஏனத்தில் (பாத்திரத்தில்) இட்டுக் கயிற்றால் அவ்வேனம் தீயிற்படும் படி செய்து காய்ச்சும் ஒரு கருவி (வின்.); a contrivance for boiling water etc, by suspending the vessel containing it over fire by means of a string.

டோலை *ḍōlai*, பெ.(n.) ஊசல் (இ.வ.); swing, swinging cot.

[Skt. ḍōlā > த. டோலை]

டோலையில்எரி-த்தல் *ḍōlaiyil-eri-*, 4 செ.கு.வி.(v.i.) டோலா இயந்திரத்தில் வைத்து ஆவி எழும்படி தீமூட்டுதல்; to heat the drug or medicine in the apparatus for vapour bath. (சா.அக.)

டோலோற்சவம் *ḍōlōṟ-savam*, பெ.(n.) அழகுபடுத்தப்பட்ட (அலங்கரித்த) ஊஞ்சலில் கோயில் திருமேனிகளை (மூர்த்திகளை) எழுந்தருளுவித்து ஆட்டி நடத்தும் விழா; a festival in which the images of gods and goddesses are placed in a decorated swing and rocked to and fro.

த.வ. பொன்னூசல் திருவிழா

[Skt. ḍōlā+utsava > த. டோலோர்சவம்]

டோளக்கை *ḍōḷakkai*, பெ.(n.) பறவை தன் சிறகுகளைச் சமப்படுத்துவதுபோல் இரு கைகளையும் இருபுறத்தும் விரித்துக் காட்டும் நாட்டிய (அபிநய)க்கை (பரத. பாவ. 52); a pose which consists in extending the hands on both sides in imitation of a bird balancing itself on its wings.

த.வ. விரிசிறைக்கை

[டோள + கை]

[Skt. ḍōla > த. டோள]



டோளாயந்திரம் *ḍōḷāyandiram*, பெ.(n.) டோலாயந்திரம் பார்க்க; see *ḍōlāyandiram*. (சா.அக.).

டோசு *ḍōsu*, பெ.(n.) சில நேரங்களில் செய்த தவற்றுக்காகக் கிடைக்கும் திட்டு; rebuke (which one receives for his / her mistakes). *'நேரம் கழித்துச் சென்றால் அப்பாவிடம் டோசு வாங்க வேண்டும்', 'அம்மா கொடுத்த டோசில் அண்ணன் திரைப்படத்திற்குப் போவதைக் குறைத்து விட்டார்'.*

டௌல் *ḍaul*, பெ.(n.) 1. மதிப்பீடு; estimate. 2. உடன்படிக்கை; ஒப்பந்தம்; agreement. 3. டவுல்[1,2] பார்க்க; see *ṭavul*[1,2].

[H. daul > த. டௌல்]

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

பத்தாம் மடலம் - மூன்றாம் பாகம்
(அயற்சொல் மடலம்)

(து - வௌ)

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language
(Loan Words)
Volume X - Part III

முனைவர் இரா. மதிவாணன்
மதிப்புறு இயக்குநர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு
தமிழ்நாடு அரசு
2010

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

பத்தாம் மடலம் – மூன்றாம் பாகம்
(அயற்சொல் மடலம்)

(த – வெள)

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language
(Loan Words)
Volume X - Part III

முனைவர் இரா. மதிவாணன்
மதிப்புறு இயக்குநர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட
இயக்கக வெளியீடு
தமிழ்நாடு அரசு
2010

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு – 28.

முதற் பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு 2041 சுறவம் (தை) (January 2010)

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, Vol. X, Part-III

பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு

© Government of Tamilnadu

விலை : உருபா 400/-

Price : Rs. 400/-

குறியீட்டெண் : Colon No.P J1-J, 314"K M4

வெளியீட்டாளர் :

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
சி-48, முதல் தளம்,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அலுவலக வளாகம்,
அண்ணாநகர், சென்னை-600 040

Published by :

Directorate of Tamil Etymological Dictionary Project,
C- 48, Ist Floor, T.N.H.B.,
IInd Avenue, Anna Nagar,
Chennai - 40.

அச்சீடு :

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி வளாகம், தரமணி,
சென்னை-600 113

Printed at :

International Institute of Tamil Studies,
Tharamani, Chennai - 113

நூல் கிடைக்குமிடங்கள் :

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
சி-48, முதல் தளம்,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அலுவலக வளாகம்,
அண்ணாநகர், சென்னை-600 040

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி வளாகம், தரமணி,
சென்னை-600 113

Copies available at :

Directorate of Tamil Etymological Dictionary Project,
C- 48, Ist Floor, T.N.H.B.,
IInd Avenue, Anna Nagar,
Chennai - 40

International Institute of Tamil Studies,
Tharamani, Chennai - 113



தமிழ்நாடு அரசு

வாய்மையே வெல்லும்

ஆயிரம் சூரியன் போற்சுடரும் நுண்மதியும்
ஓயா துழைக்கும் வயிர மறநெஞ்சும்
கொண்ட கலைஞர் குலவுதமிழ்ச் செம்மொழிக்குக்
கண்கண்ட தாயெனவே போற்று!



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

முத்தமிழறிஞர்

கலைஞர் மு.கருணாநிதி

செம்மொழிச் செம்மல் கலைஞர் பெருந்தகையே
செம்மாந்த செந்தமிழர் பாவாணர் நுண்ணோக்கில்
சீர்கொள் அகரமுதலி வெளியிட்டுப்
பேர்கொண்டீர் வாழ்க நெடிது!

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 14-12-2009

வாழ்த்துரை

ஒரு மொழியினது சொல்லின் வேரையும், வரலாற்றையும் காட்டும் சொற்பிறப்பியல் அகரமுதலி (Etymological Dictionary) என்பது, மொழி வரலாற்றில் தனியிடம் பெற்றுள்ளது. செம்மொழியாகிய தமிழுக்கு விரிவான சொற்பிறப்பியல் அகரமுதலி மிகமிக இன்றியமையாதது. இதனை உளங்கொண்டு மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் அவர்களை இயக்குநராக அமர்த்தி, 1974ஆம் ஆண்டில், அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் உருவாக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியை 12 மடலங்களில் 31 தொகுதிகளாகக் கலைக்களஞ்சிய அமைப்பில் விரிவாக உருவாக்கி வெளியிடத் திட்டமிட்டது. அதன்படி, 2007 வரை, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் 9 மடலங்களுக்கான 25 தொகுதிகள் வெளியிடப்பட்டன. 15.9.2009 அன்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் 10ஆம் மடலமாகிய அயற்சொல் மடலத்தின் முதல் இரு தொகுதிகள் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியாக, அயற்சொல் மடலத்தின் மூன்றாம் தொகுதி, பேரகரமுதலியின் 28ஆம் தொகுதியாகத் தற்பொழுது வெளிவருகிறது.

இலக்கிய வழக்கிலும், நடைமுறை வழக்கிலும் தமிழோடு கலந்துள்ள அயற்சொற்களுக்குரிய பொருள்களுடன், அவற்றுக்கிணையான தமிழ்ச் சொற்களையும் காட்டும்வகையில் அமைந்துள்ள இந்த அயற்சொல் மடலத்தின் தொகுதிகள் தமிழார்வலர்களுக்கும், அறிஞர்களுக்கும் தமிழ் மொழிக்கு மேலும்மேலும் வளம் சேர்க்க உதவும். இதனைத் தொடர்ந்து, அகரமுதலிகளில் விடுபட்டுப் போன சொல் தொகுப்புகள் இணைப்பு மடலத்தின் இரு தொகுதிகளாகவும் (தொகுதி 29, தொகுதி 30), சொற்பிறப்பு நெறிமுறைகள் (31ஆம் தொகுதி) இறுதித் தொகுதியாகவும் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

1974ஆம் ஆண்டு தொடங்கி, கடந்த 25 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த அகர முதலித் திட்டப் பணிகள் விரைவில் நிறைவுபெற்று, தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு என்றும் ஓர் அரிய கருவூலமாக நின்று வழிகாட்டும் என்று உறுதியாக நம்புகிறேன். இத்திருப்பணியில் ஈடுபட்ட – இன்றும் ஈடுபட்டு வருகின்ற தமிழ் மொழியியல் துறை அறிஞர் பெருமக்கள் அனைவரையும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

(மு.கருணாநிதி)

மொழிஞாயிறு
ஞா. தேவநேயப்பாவாணர்

ஞால முதன்மொழி எந்தமிழே என்றென்று
சால நிறுவிய பாவாணச் செம்மலே
நின்று நிலவும் சொற்பிறப்பு காட்டியதால்
பொன்றாது நின்றதும் பேர்!

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

அயற்சொல் மடலம் – மூன்றாம் பாகம்

த

தக்கல் *takkal*, பெ.(n.) **தத்கால்** பார்க்க; see tatkāl.

தக்கன் *takkaṉ*, பெ.(n.) எட்டு (அட்ட)மா நாகத் தொன்று (பிங்); a divine serpent, one of aṣṭa-mā-nāgam.

[Skt. takṣa > த. தக்கன்]

தக்கிசராயன் *takkišarāyaṉ*, பெ.(n.) ஒரு வகை நறுமணப் (வாசனை) பண்டம் (பொன்னம்பர்) (மூ.அ.); a kind of amber.

தக்கிணாக்கினி *takkiṇākkiṉi*, பெ.(n.) யாகத் தீ மூன்றனுள் ஒன்று (திருமுரு. 181, உரை); one of the three sacred fires of vēdic sacrifice.

[Skt. dakṣi-ṇāgni> த. தக்கிணாக்கினி]

தக்கியா *takkiyā*, பெ.(n.) முகமதிய சடங்காசிரியர் (fakir)களின் இருப்பிடம்; residence for fakirs. (C.G.).

[Persn. takya > த. தக்கியா]

தக்சீர் *takšīr*, பெ.(n.) குற்றம் (C.G.); guilt, fault, offence, crime.

[Ar. taqsīr > த. தக்சீர்]

தக்சீர்நாமா *taksīr-nāmā*, பெ.(n.) குற்றப்பத்திரிகை; charge-sheet (C.G.).

[Ar. taqsir+U. nāmā > த. தக்கசீர்நாமா]

தக்பீர் *takpīr*, பெ.(n.) அல்லாகு அக்பர் என்று முகமதியர் கூறும் வாழ்த்துச் சொல்; exclamation of praise (Muham).

[Ar. takbir > த. தக்பீர்]

தக்ரமானிசம் *takramāṉišam*, பெ.(n.) மோருடன் உண்ணும் வறுத்த இறைச்சி; meat fried with ghee and eaten with buttermilk. (சா.அக.).

[Skt. takramānsa > த. தக்ரமானிசம்]

தகசில்தார் *tagašildār*, பெ.(n.) வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியருக்குக் கீழ் வட்டத்தில் அரசிறை தண்டும் அதிகாரி; a revenue-officer incharge of a taluk under the district collector.

த.வ. வட்டாட்சியர்

[U. tāhsildār > த. தகசில்தார்]

தகரீர் *tagarīr*, பெ.(n.) முற்காலத்தில் பராமரிப்பு மேற்பார்வையாளர்களுக்குக் கொடுத்து வந்த தரகு; percentage or allowance given in former days to superintendents of public works. (C.G.).

[Ar. taqlīl > த. தகரீர்]

தகவல் *tagaval*, பெ.(n.) ஒரு நிகழ்வு அல்லது ஒரு பொருள் குறித்த உண்மைச் செய்தி அல்லது அறியப்படும் செய்தி; facts or knowledge provided or learned, information.

த.வ. தரவல்

[Ar. dhkhal > த. தகவல்]

தகாதா *takātā*, பெ.(n.) 1. குற்றம்; harm. இனி நான் இருந்தாலும் இராவிட்டாலும் தகாதா யாதும் இல்லை (சென்.வ.). 2. வழக்கு (வின்); criminal proceeding, law suit. 3. நெருக்குகை; troublesome importunity in urging the settlement of a claim or payment of a debt, dunning.

த.வ. வழக்கீடு

[Skt. taqāzā> த. தகாதா]

தகீத்து *tagittu*, பெ.அ.(adj.) 1. சரியான; correct, true (C.G.). 2. தெளிவான; distinct, clear.

[Ar. tahqiq > த. தகீத்து]

தகீதாய் *tagītāy*, வி.அ.(adv.) நம்பிக்கையாய்; reliably, as from personal knowledge. *அவன் தகீதாய்ச் சொல்லுகிறான்' (செ.வ.).*

[Ar. aqida > த. தகீது+ஆய்]

புலமை சான்ற தமிழர்கள் பல மடங்காக உயர்ந்த பின்னருங்கூட, தமிழக அரசின் ஆட்சிமொழியாகத் தமிழ் அறிவிக்கப்பட்டு, பெருமளவில் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னருங்கூட, தமிழ்மக்களுடைய வாழ்விலும், நடைமுறையிலும், குடும்ப நிகழ்ச்சிகளிலும் வேற்றுமொழியான வடமொழியே பயன்படுத்தப்படுகிறது. செந்தமிழின் மேன்மையை, செம்மொழியாய்த் தமிழ் ஏற்கப்பட்டதற்கு ஏதுவான அதன் பற்பல சிறப்புகளை உய்த்து உணராதவர்களாகவும், தாய்மொழி தமிழைக் குறித்த தமது தாழ்வு மனப்பான்மையைக் கைவிடாதவர்களாகவும் உள்ள தமிழர்களின் கண் திறக்கவும், கருத்து விளக்கம் பெறவும், பேரளவில் வழிகோலும் தனிச்சிறப்பு வாய்ந்தது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி.

அதன் மூலம் தமிழ்ச் சொற்களின் மூலவேர்கள் எதுவெனக் காணவும்; அந்த மூல வேர்கள் பழந்தமிழில் இடம் பெற்றிருந்தவாறே திராவிடக் குடும்ப மொழிகள் அனைத்திலும் இடம் பெற்றிருக்கும் நிலையையும்; தொன்னாளில் இந்தியாவின் வடபுலத்தில், பழந்தமிழே வழங்கிய நிலையில், பேச்சுவழக்கில் ஆரிய வடமொழிக் கலப்பின் பயனாகப் புதிய புதிய வட்டார மொழிகளாக (பிராகிருதங்கள்) வடிவு பெற்றிடினும், அம்மொழிச் சொற்களிலும் பழந்தமிழ் சொற்களின் மூலவேர்களே அடிப்படையாய் இலங்குவதையும் எவரும் தெளிந்திட ஏதுவாகும்.

இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் இருந்து, சிந்துவெளி அகழ்வாய்வுகளினால் கண்டறியப்பட்ட ஹரப்பா, மொகஞ்–தாரோ போன்ற மண்மேடிட்ட நகரங்களில் நிலவிய நாகரிகம் திராவிட நாகரிகமே எனவும், அங்குக் காணப்படும் சின்னங்கள், முத்திரைகள், வரைவுகள், எழுத்துகள் யாவும் தொல்தமிழுடன் உறவுடையவை எனவும் ஆய்வாளர்கள் பலர் தொடர்ந்து எண்பித்து வருவதன் விளைவாக, இந்தியாவின் வரலாறு தொன்னாளில் பெற்றிருந்த சூழல் விளங்கிடுமாறு, நிறைவுடையதாக வரையப்பட வேண்டின், அது கங்கை நதிக் கரையிலிருந்து எழுதப்படாமல், காவிரி–வைகை–பொருநை நதிக் கரைகளில் இருந்துதான் தொடங்கப்படவேண்டும் என்னும் கருத்து வலுப்பெற்ற நிலையில், அந்த வரலாறும் அக்கால மக்களின் நாகரிகப் பண்பாடு அடியாக வரையப்பட வேண்டுமெனில், தமிழ்மொழி இலக்கியங்களின் கருத்துகளை ஏற்று உரைப்பதாகத்தான் அமையலாகும். வங்கத்தின் மொழியியல் பேரறிஞர் சுனீத்குமார் சட்டர்ஜி கூறியுள்ளது போன்று, இந்திய மக்களின் நாகரிகப் பண்பாடுகளை ஆய்வுசெய்து பார்ப்பின் 75 விழுக்காடு, திராவிட நாகரிக அடைப்படை கொண்டதாகும் என்பது இதனை உறுதிசெய்யும்.

நம்முடைய வரலாற்றில், தாய்மொழி தமிழ் பெறலாகும் இடத்தினால் அது பெறும் சிறப்பைவிட, தொன்மைச் சிறப்புடைய தமிழ்மொழியின் வரலாற்றில் நாம் பெறும் இடத்தினால் நாம் பெறும்பெருமையே மிகப்பெரியதாகும். தமிழ் வாழ்வதால் அன்றோ தமிழரின் இனவரலாறு இன்றும் தொடர்கிறது! இதனை உணர்ந்ததாலன்றோ, தமிழின் எழுத்து வழக்கும், பேச்சு வழக்கும் வடசொற் கலப்பால் திசைமாறிச் செல்வதால், தமிழ்மொழி வழக்கு நாளும் தேயவும், பிறமொழிச் சொற்கள் விரவுதலால் தமிழ்நடை உருமாறவும் இனியும் இடந்தரலாகாது

என்று தீர்மானித்த மறைமலை அடிகளார், தனித்தமிழையே நமது பேச்சிலும், எழுத்திலும் கைக்கொண்டு, தமிழின் தனித்தன்மையைக் காப்போம் என்று அறிவித்து, அதை ஓர் இயக்கமாகவே வளர்த்திடுமாறு தமிழ் அன்பர்களை எல்லாம் வேண்டிக்கொண்டார்.

தமது வாழ்நாளில் பெரும்பகுதியும், தமிழே மூச்செனவும், மொழி இயல் ஆய்வே தம் உணவெனவும் கொண்டு வாழ்ந்ததுடன், தமிழ்ச் சொற்களின் வேர்களைக் குறித்து, விரிவான ஆய்வு நடத்தி 'ஒப்பியன் மொழி நூல்' இயற்றிய வித்தகரான மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், 'தனித்தமிழ்' இயக்கத்தைப் பரப்புவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். அமைப்புகள் பல கண்டார்; ஆர்வலர் பலர் அவருடன் இணைந்து செயற்பட்டனர். சில பல எதிர்ப்புகள் தோன்றினாலும், அவை எடுபடவில்லை. நாளடைவில் தனித்தமிழ் இயக்கத்தை விரும்பாத ஏடுகளிலும்கூட கலப்படத் தமிழ் மாறி நல்ல தமிழ் இடம்பெறலாயிற்று.

மேலும், தமிழ்மொழி, திராவிடக் குடும்ப மொழிகளுள் மூத்தமொழி; திராவிடக் குடும்பத்தின் தாய்மொழி; இந்தியாவில் வழங்கும் பெரும்பான்மை மொழிகளும் தமிழுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளன; குமரிக்கண்டத்தில் வாழ்ந்த முதல் மாந்தரினம் பேசிய மொழியே தமிழின் மூலவடிவம் ஆதலின், உலக மொழிகளுள் எல்லாம் முதல் மொழியும், அவற்றின் தாய்மொழியும் தமிழே! என்னும் ஆய்வு முடிவுகள் அடுத்தடுத்து வெளிவந்ததன் பயனாகத் தமிழைப் பயிலவும், ஆய்வு செய்யவும் முன்வந்தவர் பலராவர்.

தொல்லுலகில் நாகரிகம் வளர்ந்த நாடுகளில் விளங்கிய மொழிகளான கிரேக்கம், இலத்தீன், உரோமன், பார்சி, அரபு, ஜப்பான், கொரியா முதலானவற்றிலும் தொன்மக்களான தென்னாப்பிரிக்க கருப்பு நிற இனத்தாரின் மொழிகள் பலவற்றிலும், தமிழின் மூலவேர்ச் சொற்கள் தெளிவாகக் காணப்படுவதாக மொழிநூல் ஆய்வாளர் பலர் கூறுகின்றனர்.

"ஒன்றே குலம், ஒருவனே தேவன்" எனவும்,

"யாதும் ஊரே, யாவருங் கேளிர்" எனவும்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" எனவும்,

"அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணி" எனவும்,

உலகோரை எல்லாம் ஓர் சமமாகக் கருதும் எண்ணம் தமிழில் அரும்பியதே, உலகோர் அனைவரின் மொழியும் தொல்தமிழுடன் கொண்டுள்ள ஆதிநாள் உறவின் விளைவாகலாம்! எனவே தமிழ்மொழி, உலகமொழிகளிடையே பரவலாகக் கொண்டுள்ள வேர்ச்சொல் உறவு பற்றி அறிய விரும்புவார் எவர்க்கும், சொற்பிறப்பியல் அகரமுதலி பெருந்துணையாகும்.

மொழிஞாயிறு பாவாணர் அந்தக் குறிக்கோளுடனேயே பல ஆண்டுகளாகப் பாடுபட்டவர் என்பதால், பேரறிஞர் அண்ணா அவர்களால் மிகவும் பாராட்டிப் பெருமைப்படுத்தப்பட்டவர். அண்ணாவினைத் தொடர்ந்து, தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும், பாவாணரின் மொழிநூல் ஆய்வுத் திறனையும், அவரது வேணவாவையும் அறிந்தவராதலின், அதை நிறைவேற்றுவதற்கென்று தமிழக அரசின் சார்பில், "செந்தமிழ்ச் சொற்பியப்பியல்

பேரகர முதலி" தயாரித்திடும் திட்டத்தை அறிவித்ததுடன், அதன் தலைமைப் பொறுப்பில் மொழிஞாயிறு பாவாணரையே நியமித்து, அப்பணிக்கு வேண்டிய பிற அலுவலர்களையுங்கூட நியமனம் செய்தார்.

கலைஞரின் ஆட்சி மாறிய சூழலில், அந்த அமைப்பு செயற்படுவதில் சிலபல இடர்ப்பாடுகள் தோன்றி, அதன் தொடர் விளைவாக, கலைஞர் ஆட்சி நிலவாத பல ஆண்டுக்கால இடைவெளியில் அந்தப் பணி சீராகத் தொடரவியலாத நிலைக்கு ஆளாயிற்று. அதனாலும், பின்னர் மொழிஞாயிறு அவர்கள் மறைய நேரிட்டதாலும், ஏற்பட்டுவிட்ட திட்டப் பணி முடக்கத்தை மாற்றிச் செயற்படுத்தும் முயற்சி பின்னர் மேற்கொள்ளப்பட்டது. மொழிஞாயிறு அவர்களின் வேர்ச்சொல் ஆய்வு நெறிமுறையில் அவர் வகுத்த வழியில் தேர்ந்தவராயும், அவர் விட்டுச்சென்ற பெரும்பணியைத் தொய்வின்றியும், பழுதுரைக்க இடமின்றியும் நிறைவேற்றக்கூடியவராகவும் விளங்கிய முனைவர் இரா.மதிவாணன் அவர்களிடம் அப்பணி ஒப்படைக்கப்பட்டது. மொழிஞாயிறு திட்டமிட்டவாறு அகர முதலியின் அனைத்து மடலங்களும், அவற்றின் தொகுப்புகளும் கலைஞர் முதல்வராக உள்ள இந்த ஆட்சிக் காலத்திலேயே பதிப்பிக்கப்பட்டு வெளிவரச் செய்யவேண்டுமென்றும், மொழிஞாயிற்றின் வேணவாவை விரைந்து நிறைவேற்றுவதன் மூலம், அவருடைய நினைவைப் போற்றிப் பெருமைப்படுத்த வேண்டுமென்றும், முதல்வர் கலைஞரின் சார்பில் அகரமுதலிப் பணியில் ஈடுபட்டிருந்த அனைவரையும் நான் கேட்டுக்கொண்டேன். அதன்படி இப்பொழுது வெளியிடப்படும் இந்த அகரமுதலி மடலங்களை நான் வரவேற்கிறேன். அகரமுதலித் திட்டத்தை உருவாக்கி, செந்தமிழின் வளர்ச்சிக்கும் செம்மொழியின் உயர்ச்சிக்கும் புரவலராக அமைந்து, உலகத் தமிழர்களின் ஒப்புயர்வற்ற தலைவராக விளங்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு அன்பு செறிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அகரமுதலிப் பணி தொய்வின்றிச் செயற்பட உறுதுணையாய் நின்ற தமிழ் வளர்ச்சி, இந்து சமய அறநிலையம் (ம) செய்தித் துறை அரசு செயலாளர் திரு க.முத்துசாமி அவர்களுக்கும், உயர்ந்த பயன்தரும் இந்த அருமையான கடமையைச் செம்மையாக நிறைவேற்றியுள்ள முனைவர் இரா.மதிவாணன் அவர்கட்கும், அவருக்குத் துணையாக இருந்து இந்தச் சீரிய பணியை ஆற்றியுள்ள அகரமுதலித்திட்டப் பணிக்குழு அலுவலர் அனைவர்க்கும் எனது உளமார்ந்த பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(க. அன்பழகன்)

க. முத்துசாமி, இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்
செய்தித் துறை,
நாமக்கல் கவிஞர் மாளிகை (6ஆவது தளம்),
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

தொலைபேசி : 044–25672887 (அலுவலகம்)
044–22592966 (இல்லம்)

தேதி : 4-12-2009

அணிந்துரை

மொழி மக்களுக்கு விழி போன்றது. கண்ணைக் காப்பது போல் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கன்னித் தமிழைக் கட்டிக்காத்த பண்டைய மன்னர்கள் புலவர்களுக்கு வாரி வழங்கிய கொடைமழை, தொன்மரபு காக்கும் சங்க இலக்கியங்களைச் செழிப்புற வளர்த்துள்ளது. அந்தச் செந்தமிழ்ப் பாங்கே தமிழுக்குச் செம்மொழித் தகுதி பெற அடிப்படையாயிற்று.

செந்தமிழின் அடி முடி காணும் முயற்சியில் வேர்ச்சொற்களை ஆராய்ந்து சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியிடும் முயற்சி செம்மொழிக்குச் சீரும் சிறப்பும் சேர்ப்பதாகும். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1974இல் உருவாக்கப்பட்ட அகரமுதலித் திட்ட இயக்ககம் திட்டமிடப்பட்ட 31 தொகுதிகளில் 27 தொகுதிகளை வெளியிட்டுள்ளது. இப்பொழுது 28ஆம் தொகுதியை வெளியிடுவது மகிழ்ச்சியளிக்கிறது. அடுத்து வெளியிடவேண்டிய இறுதி மூன்று தொகுதிகளின் பணியும் விரைந்து நடைபெற்று வருகிறது.

சொற்பொருள் காட்டுதல், வேர்ச்சொல்லும் இனச்சொற்களும் காட்டுதல், இன்றியமையாதவற்றுக்குப் படவிளக்கம் தருதல், பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொல் தருதல் போன்ற பல்வேறு அமைப்புகள் இந்த அகரமுதலியின் தனிச் சிறப்புகளாக விளங்குகின்றன. இம்முயற்சி பிறசொல் கலவாமல் தமிழை எழுதவும், பேசவும் பெரிதும் துணைபுரியும்.

மொழி சிறந்தோங்குவது சொல் வளத்தால் தான். அந்தச் சொல்வளத்தை அகரவரிசைப்படுத்தி அகரமுதலி மடலங்களாக வெளியிடுவதில் எல்லா மொழியினரும் பெருமை கொள்கின்றனர். உலகத் தாய்மொழிகளில் தமிழ்த்தாய் பொன்றாவரம் பெற்று குன்றா இளமை கொண்டவள். இதை உணர்ந்தே “தமிழுக்கு அமுதென்று பேர்” எனப் பாவேந்தர் பாடினார். அமுதத் தமிழின் இளநலத்தை இனிதாக விளக்கிக் காட்டும் அகரமுதலிப் பணி நீடித்த பயன் தரக் கூடியது.

தாய்மொழி, பல கிளைமொழிகளாகச் சிதைந்து விடாமல் காப்பது அகரமுதலியின் தலைமையான நோக்கமாகும். அதனால்தான், “Dictionary brings people closer to a perfect language” என்று கூறுகின்றனர்.

தாய்மொழியை அழியாமல் காத்துச் செழுமையாய் வளர்க்க அடிப்படையான கருவி நூலாக விளங்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிப் பணியில் ஈடுபட்ட தமிழறிஞர்கள் அனைவருக்கும் என் பாராட்டு உரியது.

தமிழ்மக்களும், தமிழ் கற்கும் பிறமொழியினரும் இத்தொகுதிகளைப் பயன்கொள்வாராக என வாழ்த்துகிறேன்.

(க. முத்துசாமி)

உள்ளடக்கம்

எண்	பொருள்	பக்கஎண்
1.	அணிந்துரை	
2.	பதிப்புரை	
3.	ஆய்வு முன்னுரை	
4.	அயற்சொல் மடலம் – மூன்றாம் பாகம்	1
5.	பின்னிணைப்பு – அன்றாடு வழக்கில் ஆங்கிலச் சொல்லாட்சிகள்	500
	1. உணவு	515
	2. அடுகல ஏனங்கள்	515
	3. உண்பொருள்கள்	516
	4. உடைகள்	516
	5. அறைகலன்கள்	517
	6. இருப்பிடங்கள்	518
	7. மின்பொருள்கள்	518
	8. செய்தி அஞ்சல்	519
	9. வானொலி, தொலைக்காட்சி, போக்குவரத்து	520
	10. மிதிவண்டி உறுப்புகள்	522
	11. விளையாட்டுகள்	523
	12. தடகளப்போட்டிகள்	523
	13. மருத்துவம், சட்டம், கணக்கு	525
	14. கல்வி பொதுவியல்	528
	15. சார் பொருட் சொற்கள்	530
6.	தொகுதிப்பெயர்கள்	
	1. மாதம், கிழமை, நாண்மீன், பிறைநாள்	537
	2. விழாக்களின் பெயர்	538
	3. ஆடவர் மகளிர் பெயர்	538
	4. கோவில் சமயம்	544
	5. தெய்வப்பெயர்	547
	6. இடப்பெயர்	547
	7. நாட்டியம்	548
7.	கூட்டிணைப்பு – விடுபட்ட பிற சொல்லாட்சிகள்	549

பதிப்புக்குழு

முனைவர் **இரா. மதிவாணன்**, மதிப்புறு இயக்குநர்

தலைவர்–பதிப்புக்குழு

முனைவர் **மு.கண்ணன்**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

முனைவர் **பா.வெற்றிச்செல்வன்**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

முனைவர் **ச. செந்திலாண்டவன்**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

முனைவர் **இரா.கு.ஆல்துரை**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

திரு.**கா. இளமுருகு**, சிறப்புநிலைத் தொகுப்பாளர்

திரு.**ச.கி. கணேசன்**, சிறப்பு நிலை ஓவியர் – முதனிலை

திரு. **மா. பூங்குன்றன்**, பதிப்பாசிரியர்

திரு.**க.கணேசன்**, பதிப்பாசிரியர்

திரு.**சு.வீரவேலு**, பதிப்பாசிரியர்

திருவாட்டி.**வே.உமாராணி**, உதவிப் பதிப்பாசிரியர்

பதிப்புரை

செம்மொழிச் செம்மல் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்களால் பீடுற உருவாக்கம் பெற்ற செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் திட்டமிட்ட வண்ணம் 12 மடலங்களில் வகைப்படுத்தப்பட்ட 31 தொகுதிகளில் 10 ஆம் மடலமாகிய அயற்சொல் மடலத்தின் மூன்றாம் பகுதியை 28ஆம் தொகுதியாக வெளியிட்டு மகிழ்கிறது. அடுத்த மூன்று தொகுதிகள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொற்களைத் தனியாகப் பிரித்து 10ஆம் மடலமாக மூன்று தொகுதிகளாக வெளியிட வேண்டும் என அகரமுதலித் திட்டத்தின் முதல் இயக்குநராகிய மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் வகைப்படுத்திய வண்ணம் இத்தொகுதி அயற்சொல் மடல இறுதித் தொகுதியாக வெளிவருகிறது.

உலகில் பெரும்பான்மை மொழிகளில் தம்மொடு கலந்த பிறமொழிச் சொற்களைப் பிரித்துத் தனித் தொகுதியாக வெளியிடும் வழக்கமில்லை. ஏனெனில் அம்மொழிகளில் அயன்மொழிச் சொற்களைப் பிரித்துத் தம் தாய்மொழியிலேயே சொல்லாக்கங்களை உருவாக்கிக் கொள்ள முடிவதில்லை. உலக மொழிகளில் ஞாலமுதன் மொழியாகும் தகுதிவாய்ந்த தமிழில் அயற்சொற்களை முற்றிலும் நீக்கித் தனித்தமிழில் சொல்லாக்கங்களைச் செய்து கொள்ள முடிகிறது. அதனால் தான் தமிழைச் செந்தமிழ் என்கிறோம்.

பிறமொழிச் சொற்களுக்கு அவ்வம் மொழிகளில் தரப்பட்டுள்ள சொன்மூலம் அல்லது வேர்மூலம் காட்டப்பட்டுள்ளது. அவ்வாறு காட்டப்படாதனவற்றுக்கு வேர்மூலம் தெரியவில்லை எனக் குறிப்பிடுவதற்கு மாற்றாக வெறுமனே விடப்பட்டுள்ளன. திருந்திய மறுபதிப்பு வெளிவரும் போது அவற்றுக்கு வேர்மூலம் அல்லது சொன்மூலம் காட்டப்படும்.

3000 ஆண்டுகளாக வடமொழியின் தாக்கமும் 2000 ஆண்டுகளாகப் பாலி–பிராகிருத மொழிகளின் தாக்கமும், 1000 ஆண்டுகளாகத் துருக்கி, அரபி, பாரசிக மொழிகளின் தாக்கமும் 300 ஆண்டுகளாக ஆங்கிலம், பிரஞ்சு, போர்த்துகீசிய மொழிகளின் தாக்கமும் தமிழின் மொழிநடையில் உட்கலந்தன. எனினும் தொல் வரலாறு தொல் இலக்கிய இலக்கணக் கட்டமைப்பு எனும் வலிய அரண் பாதுகாவலால் அயன்மொழித் தாக்கங்கள் தமிழின் தனித் தன்மையைச் சிதைக்க முடியவில்லை. இது உலக மொழிகளின் வரலாற்றில் வியப்புக்குரியதாகும். வலிய புகுத்தப்பட்ட பிறமொழிச் சொற்களை உதறித் தள்ளும் தனித் தன்மை தமிழுக்கு உண்டு என்பதையும் புதிய சொல்லாக்கங்களை மிகவும் எளிதாகப் படைத்திட்டுக் கொள்ளமுடியும் என்பதையும் காட்டுவதற்காகவே பிறமொழிச் சொற்கள் அயற்சொல் மடலத்தில் இடம் பெற்றுள்ளன.

பல்லவர் காலமுதல் மருத்துவம், கணியம், வானநூல், கணக்கியல், ஏரணம், சமயம், மெய்யியல், ஓகம், வணிகம், கப்பற் கலை, கட்டடக்கலை, சிற்பக்கலை, இசை, நாடகம், இலக்கியம், இலக்கணம் போன்று அறுபதுக்கும் மேற்பட்ட புலத் துறைகளில் தமிழில் எழுதப்பட்டிருந்த ஓலைச் சுவடிகள் வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்டு தாய்மொழிக் கல்வி வளராத சூழல் ஏற்பட்டதால் வலியப் புகுத்தப்பட்ட வடமொழிச் சொல்லாட்சிகள் மிகுந்துள்ளன. அவற்றை மூன்று தொகுதிகளாக வெளியிட நேர்ந்தது. இவற்றுள் பெரும்பான்மையானவை மக்களின் அன்றாட வழக்கில் இடம் பெறாதவை. எனினும், பிற்கால நூலாட்சிகளில் இடம் பெற்றிருப்பதால் எடுத்துக்காட்ட வேண்டியதாயிற்று.

தமிழ்மலையாம் மறைமலையடிகள், மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் போன்ற பெருமக்கள் தனித்தமிழை மீட்டெடுத்தனர். இதன் விளைவாகப் பிறமொழிகளின் தாக்கத்திலிருந்து தமிழ் முழுமையாக விடுதலை பெற்றுள்ளது. அயற்சொல் விரவாத நல்ல தமிழ், நாளும் வளர இம்மடலம் துணைபுரியும்.

உலகில் **செம்மொழியின் தனித்தன்மையை நிலைநிறுத்திக் காட்ட சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியிடுவது** கட்டாய தேவையாகிறது. இதனைச் செயற்படுத்திக் காட்டும் வகையிலும் உலகச் செம்மொழிகளில் மூத்த செம்மொழியாகிய தமிழுக்கு அணி சேர்க்கும் வகையிலும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தை உருவாக்கித் தந்த **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு** நன்றி செலுத்தத் தமிழுலகம் கடமைப்பட்டிருக்கிறது. இந்த 28ஆம் தொகுதிக்குச் சீரிய அணிந்துரை வழங்கியருளிய **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு** நெஞ்சுகந்த நன்றியை இனிய காணிக்கையாகப் படைக்கிறோம்.

அகரமுதலித் திட்டப்பணி சீராக நடைபெற அயராது ஊக்கம் தந்து ஆக்கம் சேர்த்து அரியதோர் அணிந்துரை நல்கிப் பெருமைப்படுத்திய **மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு** என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

அடுத்தடுத்த தொகுதிகள் வெளிவரத் துணைநின்ற தமிழ் வளர்ச்சி அறநிலையம் செய்தித்துறை அரசு செயலாளர் உயர்திரு. க. முத்துசாமி இ.ஆ.ப. அவர்களுக்கும் அயராது உழைத்த அகரமுதலித் திட்டப்பணியாளர்களுக்கும் விரைந்து அச்சிட்ட கணியச்சகத்தார்க்கும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்துக்கும் அகரமுதலித் திட்டத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி நவில்கிறேன்.

இரா. மதிவாணன்

மதிப்புறு இயக்குநர்

ஆய்வு முன்னுரை

அயற்சொல் மடலம்

மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் தலைமையில் **மாண்புமிகு தமிழக முதல்வர் செம்மொழிச் செம்மல் முத்தமிழ்க் காவலர் கலைஞர்** அவர்களால் உருவாக்கப்பட்ட அகரமுதலித் திட்ட இயக்ககம் இதுவரை 25 பாகங்களை வெளியிட்டுள்ளது. இப்போது 26ஆம் பாகமாக அயற்சொற் மடலத்தின் முதற்பாகம் வெளியிடுவதில் அகரமுதலித் திட்ட இயக்ககம் பெருமை கொள்கிறது.

தமிழக அரசின் தளரா உதவியால் வளரும் பயிராகச் செழித்து வண்டமிழுக்கு வளம் சேர்த்துச் செம்மொழி எனும் தகவுபெற்ற தமிழுக்கு அணிகலன்களாக அகரமுதலி வெளியீடுகள் அமைந்துள்ளன எனில் அது மிகையாகாது.

ஆங்கிலம் தமிழோடு முந்நூறு ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டுள்ளது. ஆனால், சமற்கிருதம் தமிழோடு மூவாயிரம் ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டிருந்ததால் ஆங்கிலத்தைவிட அரபியம், பாரசீகம் போன்ற செமித்திய மொழிகளைவிட, சமற்கிருதச் சொல்லாட்சிகள் மிகுதியாகத் தமிழில் புகுந்துள்ளன.

தமிழ் மலையாம் மறைமலையடிகள், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் போன்ற பெருமக்கள் சமற்கிருதம் உள்ளிட்ட அனைத்து அயற்சொற்களையும் அறவே களைந்து என்றுமுள இனித்தமுடைய தனித்தமிழை மீட்டெடுத்தனர். அவர்கள் மீட்டெடுத்த முயற்சியை வெளிப்படுத்துவதாக அமைந்ததே அயற்சொல் மடலம்.

சொல்வளம்

“தமிழைப்போலச் சொல்வளமுள்ள மொழி உலகத்தில் வேறொன்றுமில்லை..... தமிழ் பழைமையான மொழியாயும், சென்ற மூவாயிரம் ஆண்டுகளாகத் தளர்ச்சியடைந்து வருவதாயும், வழங்கும் நிலம் வரவரக்குறுகி வருவதாயும், குறுகிய தன்னாட்டிலும் பெருகிய பகையுள்ளதாயும், தன் மக்களாலும் தள்ளப்படுவதாயும் இக்கால நூல்கள் எழுதப்படாததாயும், அரசியன் மொழியல்லாததாயும், எத்துணையோ கலைகளும் நூல்களும் சொற்களும் இறந்துபட்டும் வழக்கற்றுமுள்ளதாயும், இது போதுள்ளனவும் வழக்கற்று வருவதாயும் உள்ளது”[1].

உலகிலுள்ள எம்மொழியிலும் அயற்சொல் கலவாத நிலை இல்லை என்றும் அயற்சொற்களை வழங்குவதனால் மொழி வளர்ச்சியடையும் என்றும் சிலர் கூறுகின்றனர். இதற்கு வரையிகந்து அயற்சொற்களைக் கடன்பெற்ற ஆங்கில மொழியை எடுத்துக்காட்டுவர். ஒரு மொழியில் குறிப்பிட்ட பொருளையோ கருத்தையோ தெரிவிக்க சொல் இல்லாத நிலையில் அதற்குரிய சொல்லாக்கம் உருப்பெறா நிலையில் அயற்சொல்லைக் கடன் வாங்குதல் ஒருவகை. ஆயின், வழக்கிலுள்ள சொற்களைக் கையாளாமல் அவற்றிற்கு இணையான பிறமொழிச் சொற்களைக் கையாள்வது எவ்வகையில் மொழி வளர்ச்சிக்கு உதவும்? உவகை, களிப்பு, மகிழ்ச்சி என இனிமையான சொற்களிருக்க அவற்றிற்கு மாற்றாக ஆனந்தம், சந்தோஷம், குஷி, ஜாலி என அயற்சொற்களைப் பயன்படுத்துவது எங்ஙனம் தமிழ் வளத்தைப் பெருக்கும்? இவ்வகையில் பெரும் எண்ணிக்கையிலான அயற்சொற்கள், குறிப்பாகச் சமற்கிருதச் சொற்கள் ஒரு பொருட் பன்மொழிகளாகவே தமிழில் இடம்பெற்றுள்ளன. எ-டு: சொல்–வார்த்தை, நீர்–ஜலம், துப்புரவு–சுத்தம், விலங்கு–பிராணி, கூலம்–தானியம், விண்மீன்–நட்சத்திரம், சாறு–ரசம், கையூட்டு–லஞ்சம், அகவை–வயது, அறம்–தருமம், இரப்போன்–பிச்சைக்காரன், இழப்பு–நஷ்டம், நலம்–சௌகரியம்.

வழக்கற்றசொல்

வழக்கில் இடம்பெறாத பழைய சொல் எளிதாய்ப் பொருள் உணர்த்துவது இல்லை. ஆகையால் அதற்கு ஈடான பிறமொழிச் சொல்லைப் பயன்படுத்துவது எளிதாய் அமையும் என்று குறிப்பிடுவாரும் உளர். வழக்கற்ற சொல் எளிதில் பொருளுணர்த்தாமைக்குரிய கரணியம் அச்சொல்லின் குற்றமன்று. அதனைப் பயன்படுத்தாததொன்றே அது எளிதில் பொருளுணர்த்தா நிலைக்குக் கொண்டு செல்லும். இதனை “நீண்ட காலமாக உறவாடாத மக்கள் அயலாராகத் தோன்றுவது போன்றே நீண்ட காலமாக வழங்காத சொற்களும் அருஞ் சொல்லாய்த் தோன்றுகின்றன” என்று எடுத்துக்காட்டி விளக்கினார் பாவாணர்.

1. பாவாணர், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், தமிழ்மண் பதிப்பகம், 2000 (முதற்பதிப்பு 1949), பக்.72.

இந்திய மொழிகளில் பிறசொல் கலவாமல் எழுதவும் பேசவும் வல்ல ஒரே மொழி தமிழ்மொழி. இதனை நிலை நாட்டும் உயரிய நோக்கத்தை மொழிஞாயிறு பாவாணர் தம் வாணாட் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இலக்கியம், இலக்கணம், வரலாறு, உலகியல், அறிவியல், கணிதம், கணியம் போன்ற துறைகளில் முழுமையாகத் தமிழாக்கம் செய்யப்படாத சமற்கிருதச் சொற்களின் நிலைப்பு நீடித்தது. குறிப்பாகத் தமிழ் மருத்துவ நூல்கள், ஓரிலக்கம் பாடல்களுக்கு மேற்பட்டவை, சமற்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டபோது மூலத் தமிழ்ச் சொற்கள் உருவறிய முடியாமல் மறைந்து போயின. மருந்துகளின் பெயர்களும் மூலம் இழந்தன. அவற்றையும் மீட்டெடுக்க முயன்ற முயற்சியில் ஓரளவு துப்பு துலங்கியிருக்கிறது. அகரமுதலி திருந்திய மடலங்கள் வெளிவரும்போது சமற்கிருதமாக உருமாறிய தமிழ்ச் சொற்கள் முழுமையாக மீட்டெடுக்கப்படும். அதற்கான இடைக்கால ஏற்பாடாக முற்றிலும் தமிழாக்கப்படாத மருத்துவச் சொற்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

சொற்கடன்

"திராவிட மூலத்தினின்று முளைத்த சொற்கள் சமற்கிருதத்தில் இடம்பெற்றுள்ளன என்பதைப் பல்லாண்டுகளுக்கு முன்பே ஏற்றுக்கொண்டேன்.... ஆங்கில மொழியில், பிரித்தானியச் சொற்கள் எந்த அளவு கலந்துள்ளனவோ அந்த அளவு திரவிடச் சொற்கள் சமற்கிருதத்தில் கலந்துள்ளன. ஆனால் இவ்வுண்மை நெடுங்காலமாக உணரப்படவில்லை. எங்கேனும் ஒரு சொல் சமற்கிருத மொழியிலும் தமிழ் மொழியிலும் இருந்தால் அதை உடனே சமற்கிருத மூலத்தினின்று உருவானது என்று கருதிவிடுகின்றனர். பெரும் எண்ணிக்கையிலான சமற்கிருதச் சொற்கள் திரவிடமொழிகளில் வழக்கிலுள்ளன. இத்தகைய சொற்களைத் தமிழ், தெலுங்கு அகரமுதலித் தொகுப்பாளர்கள், சமற்கிருதச் சொற்களாகக் கருதி இயற் சொற்களான தம்மொழிச் சொற்களினின்று பிரித்து வழங்கி வந்திருக்கின்றனர். சில இடங்களில் தமிழ் சமற்கிருதத்தினின்று கடன் பெற்றதா, சமற்கிருதம் தமிழினின்று கடன் பெற்றதா என்னும் ஐயம் நிலவுகிறது. தமிழ்வாணர்களைப் போல் சமற்கிருதவாணர்கள் எப்போதும் பிரித்துக் காட்டவில்லை. யாரேனும் ஓர் ஆசிரியர் தாம் வாழும் உள்ளூர் அல்லது வட்டார மொழிச் சொற்களைப் பயன்படுத்திவிட்டால் (யாப்பமைதிக்காகவும் அல்லது வேறு கரணியங்களுக்காகவும் சமற்கிருதம் பேச்சு மொழி என்ற தகுதியை இழந்தபின் அவ்வாறானவை அருகிய வழக்காக இருப்பது இயல்பு), அவற்றைத் தவறாது சமற்கிருதச் சொற்கள் என்று குறிப்பிட்டு விடுகின்றனர்"[1]

மொழிக் கடன்பெறுவது தேவை கருதிப் பெறுவது பெருமை கருதிப் பெறுவது என இருவகைப்படும். தமிழில் கடன் கொள்ளப்பட்ட வடசொற்களுள் பெரும்பான்மையானவை பெருமை கருதிப் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தமிழ் அகரமுதலிகள் பெரும் எண்ணிக்கையிலான சொற்களை வட சொற்கள் எனக் காட்டியுள்ளன. அவற்றுள் பெரும்பான்மையானவை மக்கள் வழக்கில் இடம்பெறாதன. இலக்கியங்களில் இடம்பெற்ற வடசொற்களல்லாமல் வழக்கில் உள்ளனவாகப் பல வடசொற்களை அகரமுதலிகள் காட்டுகின்றன. அவற்றுள்ளும் பல பெரும்பான்மையோரால் கேள்விப்படாத சொற்கள். இவை போன்றனவல்லாமல் சென்ற நூற்றாண்டில் விளைந்த தமிழுணர்வின் கரணியமாகத் தமிழில் கலந்த வடசொற்கள் பல வழக்கு வீழ்ந்து வருகின்றன. எ–டு: அபேட்சகர்–வேட்பாளர்.

1 I have long felt persuaded that some words of Dravidian origin has found their way into Sanskrit vocabularies.... There is probably almost large a proportion of Dravidian words in Sanskrit, as of British words in English; but this probability has generally remained unnoticed: and wherever any word was found to be the common property of the Sanskrit and any of the Dravidian tongues, it was at once assumed to be a Sanskrit derivatives. Doubtless, the number of Sanskrit derivatives, properly so called, which have been introduced into the Dravidian Languages, is very great; but those words are almost always recognised and admitted to be derivatives by Tamil and Telugu lexicographers, and carefully distinguished from national or native Dravidian words. In a few cases, as might be expected, but in a few cases only, some doubt exists whether a particular word was borrowed by the Sanskrit from the Tamil, or by the Tamil from the Sanskrit. Sanskrit lexicographers and grammarians were not always so discrimate as their Dravidian brethern: and if any writer had happened to make use of a local or provincial word, that is, a word belonging to the vernacular of the district in which he resided (and it was natural that such words showed occasionally be used, for variety of metre or some other cause, especially after Sanskrit has caused to be a spoken tongue) every such word, provided only it were found written in Sanskrit charactors was forthwith set down with vocabularies as Sanskrit. - **Caldwell, Robert**, A Camparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, AES 1987, (First Published 1913) P.566.

"தமிழ்ச்சொல் வட பாடைக்கட் செல்லாமையாலும் வடசொல் எல்லாத் தேயத்திற்கும் பொதுவாகலானும், இவை வட சொல்லாக ஈண்டு வழங்கப்பட்டன வெனல் வேண்டும்" (சேனாவரையர்) என்றாற் போன்று தமிழன்றி வடமொழி ஒரு போதும் கடன்பெறாது என்னும் பிழைக் கருத்து, பன்னூறு ஆண்டுகளாக நிலவி வந்துள்ளதன் விளைவாகப் பல தூய தென் சொற்கள் வடசொற்களாகக் கொள்ளப்பட்டு வந்துள்ளன.

தமிழில் திசைச்சொல் அயற்சொல் வேறுபாடுகள்

வேற்று மொழித் தாக்கமில்லாத தாய்மொழியிலுள்ள மரபார்ந்த சொற்கள் இயற்சொற்கள் எனப்படும். இவற்றை மரபிலக்கணத்தார் பெயர் வினை இடை உரி என நால்வகைப்படுத்துவர்.

பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலுமுள்ள இயற்சொற்கள் பண்டுதொட்டே செய்யுள் வழக்கில் ஒரு பொருள் குறித்த பல சொல்லாகவும் பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவும் திரிபுற்றவற்றைத் தனியாகப் பிரித்துத் திரிசொல் என்றும் நெடிய வரலாற்றுக் காலத்தில் மக்கள் வழக்கில் வட்டார வழக்காகத் திரிபுற்றனவற்றைத் திசைச்சொல் என்றும் வகைப்படுத்தினர். இவையல்லாமல் பிற குடும்ப மொழிச் சொற்களும் தாய்மொழியில் கலப்பதுண்டு. அவ்வகையில் தமிழ்நாட்டுக்கு முப்புறமும் கடல் எல்லையாக இருத்தலின் வடதிசை வாயிலாக மட்டும் பிற குடும்ப மொழிச் சொற்கள் தமிழில் புக வாய்ப்புண்டாதலின் தொல்காப்பியர் தமிழில் புகத்தக்க பிற குடும்ப மொழிச் சொற்களுக்கு வடசொல் எனப் பொதுவாகப் பெயரிட்டார். இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் எனச் சொற்களை நால்வகைப்படுத்தினார்.

இக்காலத்தில் பிறமொழிச் சொற்கள் நிலவழியாகவும் கடல் வழியாகவும் எல்லாத் திசைகளிலிருந்தும் வருதலால் வடசொல் என்பதைத் தவிர்த்து அயற்சொல் என வகைப்படுத்த வேண்டியுள்ளதால் வடமொழியுள்ளிட்ட பிற மொழிக் கடன் சொற்கள் அடங்கிய இத்தொகுதிக்கு அயற்சொல் மடலம் எனப் பெயரிட நேர்ந்தது.

தமிழின (திரவிட) மொழிகள் தமிழின் கிளை மொழிகளாகக் கிளைத்து வளர்ந்தவை. அச்சொற்கள் தமிழுக்குத் திசைச் சொற்களாக இருத்தலின் அவை தமிழ்ச் சொற்களாகவே கருதப்பட்டுத் தமிழ்ச் சொல் வளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழில் வழக்கிறந்து திராவிடமொழி வழக்கில் உள்ளதைத் தமிழ்ச்சொல்லென்று கொள்வதற்கு எவ்வகைத் தயக்கமும் இல்லை.

வடதமிழ் எனும் பிராகிருதத்தில் வழங்கிய தமிழ்ச்சொற்களுள் பல ஒருசார் பிறழ்ந்த ஒலிப்புடையனவாயினும் பிறமொழி எழுத்தாலன்றித் தமிழ் எழுத்தால் எழுதிக் காட்டத்தக்கனவும் திசைச் சொல்லாகவே ஏற்று தமிழ்ச் சொல் வளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழிலிருந்து பிராகிருதத்தின் வாயிலாக வடமொழிக்குச் சென்று மீண்டும் பிராகிருதத்தின் வாயிலாகத் தமிழுக்கு வந்த சொற்களும், தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்று வடமொழி ஒலிப்பை ஏற்றுக்கொண்ட தமிழ்ச் சொற்களும் அயற்சொற்களாகவே கருதப்பட்டு அயற்சொன் மடலத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

பிராகிருதம் ஒரு காலத்தில் தமிழின் கிளைமொழியாக வடநாட்டில் பேசப்பட்டது. இதனை வடதமிழ் என்றனர். அக்காலத்திய சொல்லாட்சிகளில் தமிழ்மரபிலிருந்து திரிந்தனவற்றை மட்டும் திசைச்சொல்லாக ஏற்றுள்ளோம். பிராகிருதத்திலிருந்து பிறந்த வடநாட்டு மொழிகளில் சமற்கிருதக் கலப்பு மிகுந்த பிறகு உருமாறிய வடபுல மொழிச் சொற்களில் பன்மடிபுத் திரிபுற்ற வடதமிழ்ச் சொற்கள் அயற்சொற்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் எனும் மூன்று நிலைகளில் ஊடாடும் சொற்கள் மட்டும் தமிழ்ச் சொற்கள். திசைச் சொல் வரம்பைக் கடந்தன அனைத்தும் உலகப் பிறமொழிச் சொல் வகை சார்ந்த அயற்சொற்கள். இவை வேற்றுக்குடும்ப மொழிச் சொற்கள். இயற்சொல் திரிசொல் திசைச்சொல் எனும் மூவகையும் தமிழுக்குத் தன் குடும்ப மொழிச் சொற்கள். வேற்றுக்குடும்ப அயற்சொற்களுக்குத் தேவை கருதி தமிழில் கலைச் சொல் படைத்துக் கொள்வது கடன் சொற்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும். இவ்வகைக் கலைச் சொற்களும் அகரமுதலியில் இடம்பெற்றுள்ளன.

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று

அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே" (தொல்.சொல்.397) என்று நான்கு வகைச் சொற்களைப் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

"தொல்காப்பியர் காலத்தில் தமிழ்ச் சொற்கள் இலக்கண முறையிற் போன்றே சொற்பிறப்பியல் முறையில் நான்காக வகுக்கப்பட்டன. முதலாவது தன்சொல் அயற்சொல் என்கிற முறையில் தென்சொல் வடசொல் என்ற பாகுபாடும், பின்பு தன் சொற்குள் செந்தமிழ் கொடுந்தமிழ் என்கிற முறையில் நாட்டுச் சொல் திசைச் சொல் என்ற பாகுபாடும், பின்பு நாட்டுச் சொற்கள் இயல்பும் திரிபும் பற்றி இயற்சொல் திரிசொல் என்ற பாகுபாடும் தோன்ற இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என நான்கமைந்தன.

தெலுங்கு கன்னடம் முதலிய திராவிட மொழிகள் முற்காலத்தில் கொடுந்தமிழா யிருந்தமையின், அவற்றின் சொற்கள் திசைச்சொற்கள் எனப்பட்டன. இன்று அம்மொழிகள் ஆரியக் கலப்பால் வேற்றுமொழியாய் வழங்குகின்றமையான், வேற்றுமொழிச் சொற்களையெல்லாம் திசைச் சொல்லெனக் கூறுவது தவறாம். முற்காலத்தில் திசைச் சொல்லாகக் காட்டப்பட்ட கொடுந்தமிழ்ச் சொற்களே இன்றுந் திசைச் சொல்லாகும்.

வடமொழி யொன்றே முற்காலத்து வழங்கிய அயன்மொழி. அதனால், அதன் சொல் அம்மொழிப் பெயராலேயே வடசொல் லெனப்பட்டது. அதுபோல் இதுபோது தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களும் ஆங்கிலச் சொல் போர்த்துக்கீசியச் சொல் என அவ்வம் மொழிப் பெயராலேயே அழைக்கப்படல் வேண்டும்"[1].

எழுத்துக்கடன்

பொதுவாகப் பெயர்ச்சொற்களையே ஒரு மொழி கடனாகப் பெறும். இதை "வடசொல்லுள்ளும் பெயரல்லது செய்யுட் குரியவாய் வாரா" (சேனாவரையர்) என்று உரையாசிரியர் காலத்திலேயே குறிப்பிட்டுள்ளது கவனிக்கத் தக்கது.

ஒருமொழி பிறமொழிகளிலிருந்து சொற்களைக் கடன்பெறலாம். ஆனால் பிறமொழிக்குரிய எழுத்துகள் அல்லது எழுத்தொலிப்புகளைக் கடன்பெற்ற மொழிகள் வேற்று மொழிகளாகத் திரிந்து விடுகின்றன. உலகில் மொழிகள் பலவாகப் பெருகுவதும் சிறுபான்மை மொழிகள் மறைவதும் பிறமொழி எழுத்தொலிப்புகளைக் கடன் வாங்கியபின் சின்னஞ்சிறு கிளைமொழிகளாகவும், வட்டார வழக்கு மொழிகளாகவும் தேய்ந்து போவதால்தான் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

தமிழ் உலகமுதல் செம்மொழி எனும் தகுதியுடன் இலக்கிய இலக்கண வளம் கொண்டது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளைக் கடந்தும் செம்மை இழவாத நிலை தன் எழுத்தொலிப்புகளைப் பிறமொழி எழுத்தொலிப்புத் தாக்குதல்களிலிருந்து காத்துக் கொண்டதால்தான் என்பதை மொழியாராய்ச்சி அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். இந்நிலைப்பாட்டை வலியுறுத்துவதற்கென்றே தொல்காப்பியம் வடதிசையிலிருந்து வரும் கடன் சொற்களைத் தமிழ் உள்வாங்கிக் கொண்டாலும் அவற்றைப் பிறமொழி எழுத்தொலிப்பு நீக்கி முற்றிலும் தமிழ் எழுத்தொலிப்புகளிலேயே எழுதவேண்டும் என்கிறது

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ

எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே" (தொல்.சொல்.401)

தமிழில் பிறமொழி எழுத்துகள் புகலாகாது என்பதற்காகத் தமிழ் எழுத்துக் காப்புப் போராளிகள் பழந்தமிழர் வரலாறு நெடுக வாழ்ந்துள்ளனர் எனத் தெரிகிறது.

வடமொழியில் தற்சமம்–தற்பவம் என்பன இலக்கண மரபு இகந்தவை

ஒரு மொழியில் தன்சொல் என்றும் கடனாகப் பெறப்பட்ட அயற்சொல் என்றும் இரண்டு வகைப்பாடே காணப்படும். இரண்டு மொழிகளுக்கும் பொதுவான சொல் என்று எதுவும் எக்காலத்திலும் இருந்ததில்லை. சொற்பிறப்பு ஆராய்ச்சி இந்த உண்மையை வெளிப்படுத்திக் காட்டிவிடும்.

---

1. பாவாணர், தொல்காப்பியம் சொல்லிலக்கணம், சேனாவரையருரை, கழகம், நூற்பா அடிக்குறிப்பு.

ஆதலின் வடமொழிக்கும் பிற இந்திய மொழிகளுக்கும் பொதுவான சொல் எனப் பொருள்படும் தற்சமம் என்னும் இலக்கண வகைப்பாடு மொழியியல் மற்றும் மரபிலக்கண நோக்கில் முற்றிலும் பொருளற்ற வறுஞ்சொல்லாகும். அதிலிருந்து பிறந்தது என வட மொழியாளர் கணிக்கும் தற்பவம் என்பதும் சொற்பிறப்பு மூலம் சரியாகக் கணிக்கப்பட்டது என்று சொல்ல முடியாது. இத்தகைய வகைப்பாடுகளை வடமொழிக்கென்றே இலக்கண நூல்கள் ஏற்படுத்தின. அவை இந்திய மொழிகளுக்குத் தேவையில்லை. தொல்காப்பியர் இத்தகைய இலக்கண வகைப்பாட்டைக் குறிப்பிடவில்லை. பிராகிருத பாலிமொழிகளில் பயிற்சி மிக்க உரையாசிரியர்கள் தேவையில்லாமல் நன்னூல் இலக்கணத்தில் இவற்றைப் புகுத்தினர்.

தற்சமம் என்பதற்கு நன்னூல் (146, உரை) உரையாசிரியர், "ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகி விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழிச்சொல்" என விளக்கம் தந்துள்ளார். சொல்லின் வரலாறு என்பது பொருளின் வரலாறு. அது எழுத்தின் வரலாறு ஆகாது என்பது அவருக்குப் புலப்படவில்லை. கமலம், குங்குமம் என்பன நட்டாசியாவில் ஆரியரால் கண்டறியப் பட்டவை அல்ல. எனவே இவை சமற்கிருதம் எனும் வடமொழிக்கு உரியனவல்ல என அவரால் கணித்தறிய இயலவில்லை. இவை திரவிட மொழிக்குரிய சொற்கள். வடமொழி கடன் கொண்டதால் சில அடிப்படைத் திரிபுற்று அதே வடிவில் இந்திய மொழிகளிலும் வழக்கூன்றியுள்ளன.

மணி என்பதைத் தற்சமம் என உரையாசிரியர் குறித்தனர். ஆனால் மொழிஞாயிறு பாவாணர் அதன் வேர்ச்சொல்லை ஆராய்ந்து நால்வகை வேரடிப் பொருள்களில் அது விரிந்திருப்பதைப் பின்வருமாறு விளக்கிக் காட்டி மணி என்பது முற்றிலும் தமிழ் என்று நிறுவியிருக்கிறார்.

1. மணி = சிறியது	எ–டு: மணிக்காடை, மணிக்குடல்
2. மணி = வட்டமானது	எ–டு: மணியோசை, நாழிமணி
உருண்டது, குண்டு	எ–டு: மணிவலை, குன்றிமணி
உருண்டு திரண்டது	எ–டு: நென்மணி, மணிச்சம்பா
3. மணி = கரியது	எ–டு: மணிமிடற்றோன்
நீலமானது	எ–டு: மணிவண்ணன், மணிமலர்
4. மணி= ஒளிபெறக் கழுவியது	எ–டு: மணிமாலை
அழகானது	எ–டு: மணிவாசல்

தற்பவம் என்பதற்கு நன்னூல் உரையாசிரியர் "ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்தாலும், பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாலும் முடிந்திருக்கிற ஆரிய மொழிகளாகத் திரிதல் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் போது பெறும் பெயர்" (நன்.146, உரை) எனக் குறித்திருக்கிறார்.

எ.டு புட்பம் எனும் சொல் தற்பவம் எனப்படுகிறது. தமிழ் பூ எனும் சொல் வட மொழியில் pushpa எனப்படும். இது மீண்டும் தமிழில் வந்து வழங்கும்போது புட்பம் எனத் திரிபடைகிறது.

தமிழிலிருந்து பூ–புஷ்பம் எனத் திரிந்ததை வடமொழி இலக்கண ஆசிரியர்கள் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டது ஏன் என்று எவரும் வினாத் தொடுக்கவில்லை. வடமொழி பிறமொழிகளிடமிருந்து கடன்பெற்ற சொற்களை வெளியில் தெரியாமல் மறைத்துத் தன் சொற்களாகக் காட்டிக் கொள்வதற்குச் செய்த முயற்சியே தற்பவம் என்னும் செயற்கையான இலக்கண வகைப்பாடாக மாறியிருக்கிறது. ஒருசொல் எம்மொழிக்கு உரியது எனச் சரியாகக் கணிக்கும் சொற்பிறப்பு நெறிமுறை (Principles of Etymology) ஆரியர்க்கும் குறிப்பாக பாணினி உள்ளிட்ட வடமொழியாளர்க்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இதனால் தோன்றிய தற்சமம் தற்பவம் என்னும்

வகைப்பாடுகள் பொய்யானவை. இலக்கண மரபுகளுக்கு மாறானவை. இவற்றைத் தமிழிலக்கண நூல்களில் ஆள வேண்டியதில்லை.

இருமொழிகளுக்கும் பொதுவான சொல் என்றோ இருமொழி எழுத்துகளுக்கும் பொதுவான ஒலிப்பு என்றோ வகைப்படுத்துவது முறையன்று. அத்தகு சொற்கள் முறையாக எம்மொழிக்குரிய சொல் என்பதை சொற்பிறப்பு வாயிலாக அயற்சொன் மடலம் நிறுவிக் காட்டவல்லது.

மேலும் அயற்சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொல் தருதல், பொருள்வரையறை, மரபார்ந்த விளக்கம் தருதல், பிற அகரமுதலித் தவறுகள் திருத்துதல் ஆகியனவும் இடம்பெறும்.

வடமொழிச் சொற்களும் பிறமொழிச் சொற்களுமாக அயன்மொழிச் சொற்கள் தமிழில் புகும்போது எத்தகைய எழுத்துத் திரிபு பெறும் என்பதைத் தமிழிலக்கணச் சான்றோர் வகைப்படுத்தியுள்ளனர். அவற்றை 19ஆம் நூற்றாண்டில் மணிப்பவள நடைதோன்றும் வரை தமிழ்ப் புலவர்கள் மட்டுமன்றி கிறித்தவ முகமதியப் புலவர்களும் பின்பற்றியுள்ளனர். உரைநடையிலும் செய்யுளிலும் அயன்மொழிச் சொற்கள் தமிழாக்கப்படும் பாங்கு கீழே தரப்பட்டுள்ளன.

பிறமொழிச் சொற்கள் தமிழில் திரியும் பாங்குகள்

1. வடசொற்களின் இடையில் உள்ள 'த்', 'ஸ்', 'ல்' என்பன தமிழ் வடிவம் பெறும் போது **றகர** மெய்யாகத் திரியும்.

   உத்சவம் – உற்சவம்

   பஸ்பம் – பற்பம்

   கல்பம் – கற்பம்

2. '**டகர**' முதல் பிறமொழிச் சொற்கள் '**தகர**' முதலாகிய தமிழ்ச் சொற்களாகத் திரியும்.

   டமருகம் – தமருகம்

   டொப்பி – தொப்பி

3. '**டகர**' முதல் '**இகர**' முன்னெழுத்து பெறும்.

   டம்பம் – இடம்பம்

4. **ஆகார** ஈற்றுப் பெயர் **ஐகார** ஈறாகும்.

   பிக்ஷா – பிச்சை

   தீக்ஷா – தீட்சை

5. **ர, ல** முன்னெழுத்துச் சொல்லுக்கு முன் '**இ**'கர துணைமுன்னெழுத்து சேரும்.

   ராமன் – இராமன்

   லாபம் – இலாபம்

6. '**ஷ**' – டகரமாகத் திரியும் (இடையில்)

   விபீஷணன் – விபீடணன்

   புஷ்பம் – புட்பம்

7. **ஸ, ஷ** மொழி முதலில் சகரமாகத் திரியும்.

   ஸரஸ்வதி – சரசுவதி

   ஷங்கர் – சங்கர்

8. **க்ஷ**– மொழி முதலில் 'ச'வாகத் திரியும்.

சேஷமம் – சேமம்

9. **க்ர, ப்ர** எனத் தொடங்கும் வடசொற்கள் முன்னெழுத்தோடு இகர உயிர்த்துணை பெறும்.

ப்ரகதி – பிருகதி

க்ரந்தம் – கிரந்தம்

10. வல்லின மெய்யீறுகள் **உகரத்** துணையீறு பெறும்.

தத் – தத்து

சத் – சத்து

11. **'ஜ' – சகர**மாகும்.

ஜோதி – சோதி

பங்கஜம் – பங்கசம்

சரோஜா – சரோசா

12. **ஸ்வ** எனும் கூட்டெழுத்து **சு, சி, சொ** எனவாகும்.

ஸ்வாமி – சுவாமி

ஸ்நேகம் – சினேகம்

ஸ்வதேசி – சுதேசி

ஸ்வர்க்கம் – சொர்க்கம்

ஈஸ்வர் – ஈசுரன்

13. **ஸ்த– த்த** ஆகும் (தனிக்குறில் சார்ந்தவை).

புஸ்தகம் – புத்தகம்

14. **ஸ்** முன் ககரம் வருமாயின் **'ஸ்' றகர** மெய்யெழுத்தாகும்.

பாஸ்கரன் – பாற்கரன்

15. **ஹ** வரிசையிலுள்ள மொழிமுதலான வடமொழிச் சொற்கள் மெய்கெட்டு அத்துடன் பொருந்திய உயிரெழுத்து மட்டும் ஒலிக்கும்.

ஹிமாலாயா – இமாலயம்

ஹோமம் – ஓமம்

ஹேது – ஏது

16. வடசொற்களில் இடையில் வரும் **'ஹ'** எழுத்து **ககரமாகத்** திரியும். **ரகர லகரத்தில்** தொடங்குவதாயின் **இகர உகர** முன் எழுத்துகளைப் பெறும்.

ரோஹிணி – உரோகிணி

17. **'க்ஷ'** மொழி முதலில் **க, ச** எனத் திரியும்.

க்ஷணம் – சணம், கணம்

க்ஷேமம் – சேமம்

18. 'க்ஷ' மொழி இடையிலும் ஈற்றிலும் **க்க-ட்ச-ச்ச** எனத் திரியும்

லக்ஷ்மி - இலக்குமி

தீக்ஷை - தீட்சை, தீக்கை

பக்ஷணம் - பட்சணம்

அக்ஷரம் - அச்சரம், அக்கரம்

19. 'க்த', 'ப்த' என வரும் கூட்டெழுத்துகள் உடனிலை மெய் மயக்கங்களாகும்.

சக்தி - சத்தி

சப்தம் - சத்தம்

20. 'ப' (ba) - மொழி முதல் - 'ப' (pa) மொழி முதலாக ஒலிக்கும்.

பாவன - பாவனை

21. சொல்லிடையில் வரும் 'ப' - 'வ' ஆகும்.

பாபம் - பாவம்

22. **ந-ன** ஆகும்.

ஜநகன் - சனகன்

23. **யகர** முதலெழுத்துகள் ஒலித் துணை முன் உயிர் பெறும் அல்லது யகரமெய் கெடும்.

யந்திரம் - இயந்திரம் (எந்திரம்)

யக்ஷன் - இயக்கன்

யூகி - ஊகி

யூகம் - ஊகம்

யோகம் - ஓகம்

24. குறில் கீழ் ஒற்றாகும் **ரகர** மெய்யெழுத்து **இகர** அல்லது **உகரத்** துணையெழுத்து பெற்று உயிர் மெய்யாகும்.

தர்மம் - தருமம்

துர்யோதனன் - துரியோதனன்

25. **'ர்ண', 'ர்ந'** என்ற கூட்டெழுத்து தமிழில் **'ன்'** மெல்லின மெய் இரட்டிப்பாகும்.

கர்ணன் - கன்னன்

துர்நிமித்தம் - துன்னிமித்தம்

26. **ஈகார** ஈற்றுப் பெயர் **இகர** ஈறாகக் குறுகும்.

நதீ - நதி

27. **ண்ய, க்வ, த்ம, வ்ய, ம்ச** என்பவை மெய் இரட்டித்து முன்னெழுத்தோடு உயிர் எழுத்து இணைந்து ஒலிக்கும்.

பக்வம் - பக்குவம்

புண்யம் - புண்ணியம்

பத்மம் - பதுமம்

காவ்ய - காவியம்

வம்ச - வமிசம்

28. **உப** எனும் வடமொழி முன்னொட்டு தமிழ்ச் சொல்லாகும் போது **பகரம்** வகரமாகி உயிர் முதலாகவோ, வகரம் பெற்ற உயிர்மெய் முதலாகவோ மாறும்.

உபாத்தியாயன் – உவாத்தியாயன் – வாத்தியான்

29. வடசொல்லிடையில் **க்ன** எனும் கூட்டெழுத்தில் ககரம் இரட்டிக்கும்.

அக்னி – அக்கினி

30. வடசொல்லினிடையில் வரும் '**ஸ்வ**' எனும் கூட்டெழுத்து **சு** அல்லது **ச்சு** எனத் திரியும்.

அஸ்வனி – அசுவினி

அஸ்வினித்தேவர் – அச்சுவினித்தேவர்

வடசொல், தமிழ்ச்சொல்

பொதுவாகப் பிறமொழி எழுத்தொலிப்பு அல்லது பிற மொழிக்கே உரிய எழுத்துள்ள சொல்லை அயற்சொல் என்று எளிதில் கண்டுபிடித்து விடலாம். இருமொழிகளுக்கும் பொதுவான எழுத்துகளால் எழுதத்தக்க சொல் ஒலிப்பிலும் பொருளிலும் ஒத்திருந்தால் எம்மொழியிலிருந்து எம்மொழிக்குச் சென்றது எனக் கண்டுபிடித்தல் ஒரு புதிராகவே இருந்தது. கமலம் என்ற சொல் சமற்கிருதம் தமிழ் இரண்டிலும் ஒன்று போல் ஒலிக்கும் பொருள் கொண்டுள்ளது. இரு மொழியாளரும் தம்சொல் என உரிமை கொண்டாடும் சூழலுக்கு இது இடந்தருகிறது.

1) இத்தகு சூழல்களில் சொற்பிறப்பு ஆராய்ச்சி ஒன்றே குறிப்பிட்ட சொல் எந்த மொழியில் இயல்பாகத் தோன்றியது என்பதையும் வேறெந்த மொழிகளில் கடன் சொல்லாக ஊடாடியது என்பதையும் அறிய உதவும்.

2) கடன் கொண்ட மொழி தான் பெற்ற சொல்லின் பாங்கைத் தன் மொழிப் பாங்குக்கு ஏற்ற சொற்கட்டமைப்பாக மாற்றிக் கொள்ளும். சொற் கட்டமைப்பு மாற்றத்தைக் கண்டறிவதன் வாயிலாக அச்சொல் எம்மொழியிலிருந்து எம்மொழிக்குச் சென்றது எனக் கண்டறிய முடியும்.

தமிழ். மாலை > **சமற்.** மாலா.

ஐகார ஈற்றுத் தமிழ்ச் சொற்களைச் சமற்கிருதம் 'ஆ'கார ஈறாக மாற்றிக் கொள்வதாலும் பூவிட்டுப் பூசை செய்யும் வழக்கம் திரவிடருடையது என்பதாலும் மாலை என்னும் தமிழ்ச் சொல் மாலா என்னும் வடிவில் சமற்கிருதத்தில் கடன் கொள்ளப்பட்டிருப்பது தெளிவாகிறது.

3) தமிழ் வேரடியும் சமற்கிருத ஈறும் கொண்ட சொல் பிராகிருதப் பேச்சு மொழியில் இடம்பெற்று மீண்டும் தமிழுக்கு வரின் அது வேரளவில் தென் சொல்லாயினும் அந்த வடிவம் வடநாட்டில் திரிபுற்றதால் தமிழுக்குத் தன்சொல்லன்று என்றாலும் பிராகிருதம் வடதமிழ் எனப்பட்டதால் திசைச்சொல்லாகத் தமிழில் வழங்கத்தக்கதாயிற்று. ஆதி எனும் சொல் இதற்குத் தக்க சான்றாகும்.

வடசொல் தென்சொல் வேறுபாடுகள் - கண்டறியும் முறை

பழைய உரையாசிரியர்களும் மொழியியல் நுட்பங்களை அறியாதவர்களும் வடமொழி தவமொழியாதலின் அதன்கண் பிறமொழிச் சொல் புகாததெனவும் வடமொழிச்சொற்கள் பிறமொழிக்குப் பொதுவாகலின் எம்மொழிக்கும் வடமொழிச்சொல் செல்லும் எனவும் தவறான கருத்து கொண்டிருந்தனர்.

இங்கிலாந்து நாட்டு வடமொழிப் பேராசிரியரும் திராவிட மொழியியல் வல்லுநருமாகிய பேராசிரியர் பரோ அவர்களும், கன்னட ஆங்கில அகரமுதலி தொகுத்த பேராசிரியர் கிட்டலும், ஒரு சொல் வட மொழிக்கே உரிய சொல்லா அல்லது வடமொழி பிற மொழிகளிடம் பெற்ற கடன் சொல்லா என்பதைக் கண்டறியும் வழிமுறைகளைத் தெளிவாக்கினர். அதன் விளைவாக வடமொழியில் கடன் கொள்ளப்பட்ட

சொற்களையும் இருக்கு வேதத்தில் உள்ள பழந்திரவிடம் எனும் தமிழ்ச் சொற்களையும் பட்டியலிட்டுக் காட்டினர். மொழிஞாயிறு பாவாணர் மேலும் பன்னூற்றுக்கணக்கான தமிழ்ச்சொற்கள் வடமொழியில் கடன் கொள்ளப்பட்டிருப்பதைத் தம் ஆய்வுநூல்களில் வெளிப்படுத்தினார். அவருடைய வடமொழி வரலாறு இதற்குத் தக்க சான்றாகும்.

பேராசிரியர் பரோ குறிப்பிட்ட அடிப்படை வேறுபாட்டுக் காரணங்கள் அனைவரும் நினைவிற் கொள்ளத்தக்கன.

1. ஒருசொல் சமற்கிருதம் எனும் வடமொழிக்கே உரியதாயின் அச்சொல் அதன் இனமொழிகளாகிய செருமானியம், கிரேக்கம், இலத்தீனம் போன்ற மேலையாரிய மொழிகளில் இனச்சொல்லாகக் காணப்பட வேண்டும். இல்லையாயின் அது கடன் சொல்லாகக் கருதப்படும்.
2. ஒரு சொல்லின் வேர்ச்சொல்லும் அதன் எண்ணிறந்த தாய்மொழிச் சொல்லாட்சிகளும் அச்சொல் எம்மொழிக்குரியது எனக்காட்டும். வேர்ச்சொல் இல்லாது பரந்துபட்ட சொல்வளர் நிலைகளும் இல்லாமல் ஓரிரு இடங்களில் மட்டும் பயின்றிருந்தால் அது கடன் சொல்லாகக் கருதப்படும்.
3. அம்மண்ணுக்கே உரிய நிலைத்திணை இயங்குதிணைப் பொருள்களும், உயிரிபயிரிகளின் பெயர்களும் பண்பாட்டுக் குமுகாய வரலாற்றுப் பின்னணிச் சொற்களும் எந்தத்தாய் மொழிக்குரிய சொல் இது என்பதைக் காட்டிவிடும்.

எ–டு. முத்து, பவளம் போன்ற கடல்படுபொருள்கள் நட்டாசியாவிலிருந்து வந்த ஆரியர்க்குத் தெரியாதவை. எனவே இவற்றை வடமொழி முக்தா, ப்ரவள என உருமாற்றிக் கடன் கொண்டுள்ளது.

பேராசிரியர் பரோ ஐநூற்றுக்கும் மேற்பட்ட சொற்களையும் கிட்டல் நானூற்றுக்கும் மேற்பட்ட சொற்களையும் குறிப்பிட்டு இவை திரவிட மொழிகளிலிருந்து சமற்கிருதத்துக்குச் சென்றுள்ளன என எடுத்துக் காட்டினர். மொழிஞாயிறு பாவாணர் வடமொழியில் 40% சொற்கள் தமிழிலிருந்து கடன் கொள்ளப்பட்டுள்ளன என எடுத்துக்காட்டினார்.

வேதமொழி பேச்சு மொழியாக இருந்தது. ஈரானிய ஆரியர் கி.மு.16ஆம் நூற்றாண்டிலும் இருக்குவேத ஆரியர் கி.மு. 13ஆம் நூற்றாண்டிலும் வடமேற்கு இந்தியாவில் திரவிட மக்களோடு கலந்தனர். கி.மு.19ஆம் நூற்றாண்டில் இயற்கைச் சீற்றத்தால் அழிந்துபோன சிந்துவெளி தமிழர் நாகரிகக் காலத்துக்கும் ஆரியர்க்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை. இருக்குவேதப் பாடல்கள் வேள்விக்குப் பயன்பட்ட கி.மு.1200 முதல் கி.மு. 800 கால வரம்பில் வடமொழி மந்திரமொழியாக மட்டும் பயன்பட்டு பேச்சுவழக்கு இழந்ததால் உள்நாட்டுத் திரிபு மொழிகளாகிய பிராகிருத பாலி மொழிகளை ஆரியர் தம் பேச்சு மொழிகளாக்கிக் கொண்டனர். கி.மு.800க்குப்பின் வடபுலச் சமண பவுத்த நெறிகளால் தாக்குண்டு தென்னாட்டில் குடிபுகுந்த ஆரியக் கூட்டத்தினர் பல்வேறு புலத்துறைத் தமிழ் நூல்களை வடமொழியில் மொழி பெயர்த்ததால் பல்லாயிரக் கணக்கான தமிழ்ச் சொற்களை வடமொழியில் உருமாற்றிச் சேர்த்துக் கொண்டனர். அவற்றைத் தெளிவாக்குவதற்கு இந்த அயற்சொன் மடலம் தனியாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

பேசப்படாத மொழியில் கடன் சொற்களே மிகுதி

"சமற்கிருதம் எப்பொழுதும் நாட்டின் எப்பகுதியிலும், அது வடநாடாக இருக்கட்டும் அல்லது தென்னாடாக இருக்கட்டும் ஒரு காலத்திலும் பேச்சு மொழியாக இருந்தது இல்லை"[1].

1. Sanskrit, though it was improbable that it ever was the vernacular language of any district or country, whether in the north or in the south . Caldwell, Robert, A Comparative Grammar of the Dravidian or South Indian Family of languages, AES 1987 (First Published 1913), int. P.2.

பேசப்படாமல் வெறும் எழுத்து வடிவில் மட்டும் இருக்கும் மொழியில் வேற்று மொழியிலிருந்து மொழிபெயர்ப்பு வாயிலாகப் பல்லாயிரம் சொற்கள் புக வாய்ப்பு ஏற்படுகிறது. பேசப்படும் மொழியில் தேவை கருதி மக்கள் தாமாகவே புதுச் சொல் படைத்துக் கொள்கின்றனர். இது இயற்கை மொழியின் இயல்பு. கடன்சொற்களால் மட்டும் வாழும் மொழியைக் கலவை மொழியென்றும் செயற்கை மொழியென்றும் கூறுவர். சமற்கிருதம் எனும் மிகு கலவை செயற்கை மொழி பன்மடித் திரிபுச் சொற்களைத் தன் சொற்களாகக் காட்டிக் கொண்டாலும் மொழியகழ்வாராய்ச்சியாளர்கள் (Language Archaelogists) அவற்றை எளிதில் கண்டறிகின்றனர்.

பேசப்படாத வடமொழிச் சொற்களாகக் காட்டப்பட்டவற்றுள் தமிழில் மக்களின் அன்றாட வழக்கில் புகுந்துள்ள சொற்களின் எண்ணிக்கை 1500 எனலாம். அதிலும் மருத்துவம், வானநூல், கணியம், சமயம், இசை, நாட்டியம், சிற்பம் போன்றவற்றில் புகுத்தப்பட்டவை மிகுதி. இக்காலத்தில் ஆங்கிலச் சொல்லாட்சிகள் அன்றாட வழக்கத்தில் சற்றொப்ப 2000 புகுந்துள்ளன எனலாம். இவையனைத்தையும் களைந்து தமிழை அதனியல்பில் வளர்க்கும் தாளாண்மையின் வெளிப்பாடாக அயற்சொன் மடலம் தொகுக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்த நிலையில் திரிபுக்குத் திரிபாகப் பன்மடித் திரிபுற்ற சொற்களில் தமிழிலிருந்து திரிந்தன எவை? சமற்கிருதத்திலிருந்து திரிந்தன எவை? இது தமிழ்ச்சொல் இது சமற்கிருதச்சொல் என்று மிக நுட்பமாக வரையறுக்கும் எல்லைக்கோடு எது? எத்தகைய சொற்பிறப்பு நெறிமுறைகள் இவற்றை வரையறுக்கின்றன என்னும் வினாக்களுக்கு விடைகளாகச் சொற்பிறப்பு நெறிமுறைகள் எழுதுவதற்கு முன்பே பாவாணர் இயற்கையெய்திவிட்டார். அவரோடு ஆறாண்டுகளாக நீங்கா நிழலாய் இருந்த எனக்கு அவர் கற்பித்த நெறிமுறைகளே மேற்கண்ட வினாக்களுக்கு விடையளித்துள்ளன. அடுத்து வெளிவரும் தமிழ்ச் சொற்பிறப்பு நெறிமுறை மடலத்தில் அவை விரிவாக இடம் பெறும்.

1994இல் நான் ஓய்வுபெற்ற பின்னர் 14 ஆண்டுகளாக இயக்குநர் அமர்த்தப்படாத நிலையில் அரசு செயலாளர்களாக இருந்த இ.ஆ.ப., அதிகாரிகள் பொறுப்பு இயக்குநர்களாக இருந்த காலத்தில் தக்க மேற்பார்வைக்குரிய தமிழறிஞர்கள் இல்லாததால் வடசொல் எது தமிழ்ச் சொல் எது எனும் வரையறை முறையாகப் பின்பற்றப்படாத குறைகள் சில காணப்படுகின்றன. அவை திருந்திய பதிப்பில் சீராக்கப்படவுள்ளன. அயற்சொல் மடல வெளியீடு அயற்சொற்களை அறவே நீக்கி முற்றிலும் செந்தமிழ்ச் சொற்களை ஆள்வதற்குத் தக்க கருவி நூலாக அமையும்.

சொற்பயன்பாடு

"மக்கள் வரவரக் கலைநாகரிக வளர்ச்சியடைந்து வருவதால், அன்றன்று தோன்றும் புதுப் புதுக் கருத்துகட்கெல்லாம் உடனுடன் சொற்கள் அமையப் பெறல் வேண்டும். ஆங்கிலத்தில் அது நடைபெற்று வருகின்றது. ஆனால் தமிழிலோ அஃதில்லை. அதோடு இருந்த சொற்களும் பல இறந்துவிட்டன. உலக வழக்கிறந்த சொற்கள் செய்யுள் அல்லது நூல் வழக்கிலும், நூல் வழக்கிறந்த சொற்கள் அகரமுதலியிலும் இடம்பெறுவதுண்டு. தமிழில் ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பு அகரமுதலியும், இவ்விருபதாம் நூற்றாண்டிற்கு முன்பு விரிவான அகரமுதலியும் இருந்ததில்லை. ஆதலால் இதற்குமுன் வழக்கிழந்த சொற்களெல்லாம் மீளா இருளில் மூழ்கிவிட்டன. அவைபோக எஞ்சியவற்றுள்ளும் பல வழக்கிழந்துள்ளன. அவை வழக்கற்றமைக்குக் காரணம் அவற்றை வழங்காமையே"[1]. ஆகையால் இங்கு அயற்சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இது தமிழின் வளமையை எடுத்துக்காட்டுவதோடு வழக்கிழந்த சொற்களை மீட்டுருவாக்கம் செய்வதற்கும் பெருந்துணை புரியும் என்பதில் ஐயம் இல்லை.

---

1. பாவாணர், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், தமிழ் மண் பதிப்பகம், 2000 (முதற்பதிப்பு 1949), பக்.73.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

அயற்சொல் மடலம் – மூன்றாம் பாகம்

த

தக்கல் *takkal,* பெ.(n.) **தத்கால்** பார்க்க; see tatkāl.

தக்கன் *takkan,* பெ.(n.) எட்டு (அட்ட)மா நாகத் தொன்று (பிங்); a divine serpent, one of asta-mā-nāgam.

[Skt. takṣa > த. தக்கன்]

தக்கிசராயன் *takkišarāyan,* பெ.(n.) ஒரு வகை நறுமணப் (வாசனை) பண்டம் (பொன்னம்பர்) (மூ.அ.); a kind of amber.

தக்கிணாக்கினி *takkiṇākkiṇi,* பெ.(n.) யாகத் தீ மூன்றனுள் ஒன்று (திருமுரு. 181, உரை); one of the three sacred fires of vēdic sacrifice.

[Skt. dakṣi-ṇāgni> த. தக்கிணாக்கினி]

தக்கியா *takkiyā,* பெ.(n.) முகமதிய சடங்காசிரியர் (fakir)களின் இருப்பிடம்; residence for fakirs. (C.G.).

[Persn. takya > த. தக்கியா]

தக்சீர் *takšīr,* பெ.(n.) குற்றம் (C.G.); guilt, fault, offence, crime.

[Ar. taqsīr > த. தக்சீர்]

தக்சீர்நாமா *takšīr-nāmā,* பெ.(n.) குற்றப்பத்திரிகை; charge-sheet (C.G.).

[Ar. taqsir+U. nāmā > த. தக்கசீர்நாமா]

தக்பீர் *takpīr,* பெ.(n.) அல்லாகு அக்பர் என்று முகமதியர் கூறும் வாழ்த்துச் சொல்; exclamation of praise (Muham).

[Ar. takbir > த. தக்பீர்]

தக்ரமானிசம் *takramāṇišam,* பெ.(n.) மோருடன் உண்ணும் வறுத்த இறைச்சி; meat fried with ghee and eaten with buttermilk. (சா.அக.).

[Skt. takramānsa > த. தக்ரமானிசம்]

தகசில்தார் *tagašildār,* பெ.(n.) வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியருக்குக் கீழ் வட்டத்தில் அரசிறை தண்டும் அதிகாரி; a revenue-officer incharge of a taluk under the district collector.

த.வ. வட்டாட்சியர்

[U. tāhsildār > த. தகசில்தார்]

தகரீர் *tagarīr,* பெ.(n.) முற்காலத்தில் பராமரிப்பு மேற்பார்வையாளர்களுக்குக் கொடுத்து வந்த தரகு; percentage or allowance given in former days to superintendents of public works. (C.G.).

[Ar. taqlīl > த. தகரீர்]

தகவல் *tagaval,* பெ.(n.) ஒரு நிகழ்வு அல்லது ஒரு பொருள் குறித்த உண்மைச் செய்தி அல்லது அறியப்படும் செய்தி; facts or knowledge provided or learned, information.

த.வ. தரவல்

[Ar. dhkhal > த. தகவல்]

தகாதா *takātā,* பெ.(n.) 1. குற்றம்; harm. இனி நான் இருந்தாலும் இராவிட்டாலும் தகாதா யாதும் இல்லை (சென்.வ.). 2. வழக்கு (வின்); criminal proceeding, law suit. 3. நெருக்குகை; troublesome importunity in urging the settlement of a claim or payment of a debt, dunning.

த.வ. வழக்கீடு

[Skt. taqāzā> த. தகாதா]

தகீத்து *tagīttu,* பெ.அ.(adj.) 1. சரியான; correct, true (C.G.). 2. தெளிவான; distinct, clear.

[Ar. tahqiq > த. தகீத்து]

தகீதாய் *tagītāy,* வி.அ.(adv.) நம்பிக்கையாய்; reliably, as from personal knowledge. *அவன் தகீதாய்ச் சொல்லுகிறான்' (செ.வ.).*

[Ar. aqida > த. தகீது+ஆய்]

தச[1] *taša,* பெ.(n) பத்து; ten. *"எண்ணித் தசவென் றிடுகென்றான்" (நள. கலிநீ. 9).*

[Skt. daša > த. தச]

தச[2] *taša,* வி.(v.) (das என்னும் வடசொல்லின் ஏவல் வடிவம்) 'கடி' என்னும் பொருள் கொண்ட ஒரு வடசொல்; a Sanskrit word meaning 'bite'.

[Skt. daša > த. தச]

தசக்கிரிவன் *taša-k-kirivan,* பெ.(n.) பத்துத் தலையோன், இராவணன்; Rāvaṇā as ten heads. *"தசக் கிரீவற் கிளையோற்கு" (திவ். பெரியதி. 8, 6, 7).*

[Skt. dašagrīva > த. தசக்கிரிவன்]

தசகண்டன் *taša-kaṇḍaṉ,* பெ.(n.) **தசக் கிரிவன்** பார்க்க (இலக். அ.); see *tasa-k-kirivan.*

[Skt. taša+தச + கண்டன்]

தசகம் *tašagam,* பெ.(n.) பத்து செய்யுட் கொண்ட பனுவல் (பிரபந்தம்); a poem of ten stanzas.

த.வ. பதிகம்

[Skt. dašaka > த. தசகம்]

தசகரம் *tašakaram,* பெ.(n.) 1. பகல் உறக்கம்; day sleep. 2. காமம்; lust. (சா.அக.)

தசகாரியம் *tašakāriyam,* பெ.(n.) 1. மெய் யுருவம் (தத்துவரூபம்), மெய்க்காட்சி (தத்துவதரிசனம்), மெய்த்தூய்மை (தத்துவ சுத்தி), ஆதன் உருவம் (ஆன்மரூபம்), ஆதன் காட்சி (ஆன்ம தரிசனம்), ஆதன்தூய்மை (ஆன்மசுத்தி), சிவனுருவம் (சிவரூபம்), சிவக்காட்சி (சிவதரிசனம்), சிவயோகம், சிவநுகர்ச்சி (சிவயோகம்) என்ற ஆதன் பட்டறிவு (ஆன்மா நுபவ) நிலைகள்; (Saiva), the ten spiritual experiences of the soul in its path towards final deliverance, viz. *tattuva-rūpam, tattuva-tarišaṉam, tattuva-sutti, āṉmārūpam, āṉma-darišaṉam, āṉma-sutti, šivarūpam, šiva-darišaṉam, šivayōgam, šiva-pōgam.* 2. பண்டார சாத் திரத்துள் அம்பலவாண தேசிகர், தட்சிணா மூர்த்தி தேசிகர், சுவாமி நாத தேசிகர் என்ற மூவரால் இயற்றப்பட்ட மூன்று சைவக் கொண்முடிபு (சைவ சித்தாந்த) நூல்கள்; the three saiva siddhānta treatises by *ambalavāṇa-tēsigar, ṭatcināmūrti-tēsigar* and *suvāmināda-tēsigar* (q.v.). 3. சிதம்பர நாத தேசிகர் இயற்றிய சைவக்கொண்முடிவு (சைவ சித்தாந்த) நூல்; a Saiva siddhānta treatise by *sidambaranāda-tēsigar.* 4. மாயாரூபம், மாயாதரிசனம், மாயாசுத்தி, சிவரூபம், சீவதரிசனம், சீவசுத்தி, பிரமரூபம், பிரமதரிசனம், தேக கைவல்லியம், விதேக கைவல்லியம் என்ற அதன் நுகர்வு ஆன்மாநுபவ நிலைகள் (வேதா. தச. கட்.); the ten achievements of the self in its path towards realization, viz. *māyā-rūpam, māyā-tarisaṉam, māyā-sutti, sīva-rūpam, sīva-tarisaṉam, sīva-sutti, pirama-rūpam, pirama-tarisaṉam, tēkakai valliyam, vitēkakaivalliyam.*

த.வ. பதின் கருமம்

[Skt. daša > த. தச]

தசகுணம் *tašaguṇam,* பெ.(n.) பதின்மடங்கு; ten times. (சா.அக.).

[Skt. dasa > த. தச+குணம்]

தசசீலம் *tašašilam,* பெ.(n.) புத்தத் துறவி களுக்கான பத்து வகையான ஒழுக்க நெறிகள் (மணிமே. 21, 57, உரை); (Buddh) the ten kinds of moral and austere- practices prescribed for Buddhist ascetics.

[Skt. dasā+šila > த. தசசீலம்]

தசதானம் *tašadāṉam,* பெ.(n.) பார்ப்பனர் (பிராமணர்)களுக்கு நன்னாட்களில் தருகின்ற மாடு (பசு), நிலம் (பூமி) எள், பொன், நெய், ஆடை, வெல்லம், நெல், வெள்ளி, உப்பு என்ற பத்து வகைக் கொடைகள்; gifts to brahmins made on ceremonial occasions of ten

தசபந்தம் *taśabandam,* பெ.(n.) 1. செலுத்த வேண்டும் வரியிற் பத்திலொன்றை குளம் வெட்டல் முதலிய பொதுச் செயல் (தருமங்) களை நடத்தும் பொருட்டு நீக்குகை (W.G.); deduction of 1/10 of the land-tax to compensate for some public work, as the construction of a tank. 2. **தசபந்தவினாம்** பார்க்க; see *tasabandavināṃ.*

[Skt. daśa > த. தசம்]

தசபந்தவினாம் *taśabandavināṃ,* பெ.(n.) பொதுச் செயல் (தருமங்)கள் நடப்பதற்காகத் தீர்வை குறைத்து விடப்பட்ட மானியம் (C.G.); grant of land at a favourable assessment of grant of land-revenue given on account of some work of public utility rendered by the grantee.

தசபலன் *taśapalan,* பெ.(n.) புத்தன் (மணிமே. 29, 26, உரை); Buddha, as fortified by *tasa-bāramidai.*

[Skt. daśa > த. தசம்]

தசபாரமிதை *taśabāramidai,* பெ.(n.) புத்த பதவிக்குரிய தானம், குணம் (சீலம்), பொறுமை (க்ஷமை), வீரியம், ஊழ்கம் (தியானம்), பிரஞ்ஞை, வழிவகை (உபாயம்), இரக்கம் (தயை), பயன் (பலம்), அறிவு (ஞானம்) என்ற பத்துக் குணச் சிறப்பு (விசேடங்)கள் (மணிமே. 26, 45, உரை); the ten transcendental virtues necessary for buddhahood viz. *tānam, cīlam, kṣamai, viriyam, tiyānam, pirannai, upāyam, tayay, palam, ñānam.*

தசபின்னம் *taśabinnam,* பெ.(n.) **தசாமிசம்** பார்க்க; (mod); see *taśāmiśam.*

தசமச்சபாடாணம் *taśamacca-pāḍāṇam,* பெ.(n.) கச்சால நஞ்சு; a kind of arsenic. (சா.அக.).

தசமப்புள்ளி *taśama-p-puḷḷi,* பெ.(n.) முழு எண்ணை அடுத்து, மதிப்பில் ஒன்றைவிடக் குறைந்த எண்ணைப் பதின்ம (தசம)ப் பகுதிகளாகப் பிரித்துக் காட்ட இடப்படும் புள்ளி; decimal point.

த.வ. பதின்புள்ளி

[Skt. daśama >த. சமம் + புள்ளி]

தசம் *taśam,* பெ.(n.) பத்து; ten. *"தசநான் கெய்திய பணை மரு ணோன்றாள்" (நெடுநல். 115).*

[Skt. dasa > த. தசம்]

தசமபாகம் *taśamabāgam,* பெ.(n.) 1. பத்தில் ஒரு பங்கு; 1/10 of a share, *2. நாடிக் கணியத்தில் ஒரு பகுதி;* a portion of nādi astrology (சா.அக.).

[Skt. daśama > த. தசமம்+பாகம்]

தசமம் *taśamam,* பெ.(n.) பத்தவாது; tenth. *"தசமஸ்கந்தம்".*

[Skt. daśama > த. தசமம்]

தசமன் *taśaman,* பெ.(n.) உயிர்; soul. (சா.அக.).

தசமா *taśamā,* பெ.(n.) உறுதிப் படுத்தப்பட்ட மனித வாழ்நாள் (ஆயுள்) நூறு ஆண்டின் இறுதி பாகம்; the 10th and the last stage of the prescribed human life (from 91 to 100 years). (சா.அக.)

[Skt. dasama > த. தசமா]

தசமாசியம் *taśamāśiyam,* பெ.(n.) பத்து மாதக் குழந்தை; full term foetus, 10 months foetus. (சா.அக.)

[Skt. dasa, māśa > த. தசமாசியம்]

தசமி *tasami,* பெ.(n.) 1. பத்தாம் நாள் (திதி); the tenth lunar day of the bright or dark fortnight. *"உளம் விரும்புந் தசமிதனி லுகுற்று மானால்" (சேதுபு. துரா. 30).* 2. பத்தாம் நாளி (தசமியி)ல் உண்ணும் பணியாரம்; a kind of bread, eaten especially in tasami.

[Skt. daśami > த. தசமி]

தசமித்திரம் *taśamittiram,* பெ.(n.) பத்து வகைத் துணைச் சரக்குகள்; the ten friendly drugs.

1. வெண்ணெய்–butter. 2. செங்காரம்–borax. 3. குன்றி–jeweller's bead. 4. வெல்லம்–jaggery. 5. ஆமணக்கு–castor seed. 6. பழம்–lime fruit. 7. தேன்–honey. 8. அளி–sweet liquor. 9. காடி –fermented liquor, vinegar.10. புறாவின் எச்சம் – doves excreta.(சா.அக.)

[Skt. dasa+mitra > த. தசமித்திரம்]

தசமுகநதி *tašamuganadi,* பெ.(n.) கங்கை (பிங்.); the ganges.

[Skt. dašan+ த.muga+nati > த. தசமுகநதி]

தசமுகவுதயாக்கினி *tašamugavuda-yākkiṉi,* பெ.(n.) காய்ச்சல் ஏற்படும் பொழுது கொடுக்கும் ஓர் ஆயுர்வேத மருந்து; an ayurvedic medicine prescribed for fevers. (சா.அக.)

தசமுகன் *tašamugaṉ,* பெ.(n.) பத்துத் தலையுடையவன் (இராவணன்); Rāvaṇaṉ. *"தசமுகனெரிதா ஒன்றுசண்பையான்" (தேவா. 141, 9).*

[Skt. daša > த. தச+முகன்]

பிள்ளைப்பருவத்தில் இராவணன் கழுத்தில் அணிவித்த தொண் (நவ) மணி மாலையில் ஒவ்வொரு மணியிலும் அவன் முகம் தெரிந்ததால் மொத்தம் பத்து முகம் எனக் கருதியிட்ட பெயர் தசமுகன் என "பவுமசரிய" என்னும் சமண இராமாயண நூலில் கூறப்பட்டுள்ளது.

தசமூலக்கசாயம் *tašamūla-k-kašāyam,* பெ.(n.) 1. பத்து வகை மருந்து வேர்களைக் கொண்டு உருவாக்கும் கருக்கு; decoction prepared from the roots of ten plants. 2. **தசமூலம்** பார்க்க; see *tašamūlam.* (சா.அக.)

[Skt daša > த.தசம்+மூலம்+Skt. kaša > த. கசாயம்]

தசமூலம் *tašamūlam,* பெ.(n.) கண்டங்கத்தரி, சிறு வழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி, வில்வம், பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி, வாகை என்ற பத்து மருந்து வேர்கள் (பதார்த்த. 498); the ten medicinal roots viz. *kaṇṭaṅ-kattari, siruvaḻutuṇai, suṟumalli, perumalli, neruñji, vilvam, peruṅkumiḻ, taḻutāḻai, pātiri, vākai.*



[Skt. dašam > த. தசம்+மூலம்]

தசமொழி *tašamoḻi,* பெ.(n.) மோசே வரையறுத்த (விதித்த) பத்துக்கட்டளைகள்; the decalogue, ten commandments. (Chr.).

[Skt. daša > த. தசம் + மொழி]

தசரதன் *tašaradaṉ,* பெ.(n.) அயோத்தி மன்னன்; the king of Ayōdhya.

தசரா *tašarā,* பெ.(n.) காளி (துர்க்கை)யின் பொருட்டு மாளய காருவாவை (அமாவாசையை) அடுத்து நிகழ்த்தப்படும் பத்துநாட் பண்டிகை; a festival of 10 days in honour of durgā in the bright fortnight immediately after mālaya amāvāsai.

[Skt. daša-rātra > த. தசரா]

தசராத்திரஞாதி *taša-rāttira-ñādi,* பெ.(n.) பத்துநாள் தீட்டுக் காத்தற்குரிய ஏழு தலைமுறைக்குட்பட்ட வழிக்கு உரிமைப் பங்காளி; agnatic relations within the 7th degree, as persons for whom pollution for 10 days is ordained on occasions of birth and death.

தசராத்திரம் *tašarāttiram,* பெ.(n.) பத்து நாள்; ten days. (சா.அக.)

தசரிப்பு *tašarippu,* பெ.(n.) இலவயம், அன்பளிப்பு (இனாம்) (வின்.); reward, present.

[Ar. tashrif > த. தசரிப்பு]

தசவந்தம் *tašavandam,* பெ.(n.) தசபந்தம் பார்க்க; see tasapandam. (S.I.I.III, 161). *"தசவந்தங் காலளவு கூலியும்".*

தசவருக்கம் *tašavarukkam*, பெ.(n.) பிறப்பு காலச் சக்கரத்தை ஓரை (இராசி), பிறப்போரை, திரேக்காணம், சத்தமாங்கிசம், நவாங்கிசம், தசாங்கிசம், துவாதசாங்கிசம், கலாங்கிசம், திரிசாங்கிசம், சட்டியாங்கிசம் எனப் பத்து வகையாகப் பிரிக்கும் பிரிவு; ten fold division of horoscope. viz. *irāsi, ōrai, tirēkkāṇam, cattamāṅkisam, navāṅ kisam, tasāṅkisam, tuvālā-sāṅkisam, kalāṅkisam, tiriṅsāṅkisam, saṣtiyāṅkisam.*

தசவவதாரன் *tašavavadāraṉ*, பெ.(n.) (பத்து தோற்றரவு எடுத்தவன்) திருமால் (பிங்.); Viṣṇu.

[Skt. daša+avatārin > த. தசவவதாரன்]

தசவாயு *tašavāyu*, பெ.(n.) பத்து வகை வளிகள் (பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன்) (பிங்.); the ten vital airs of the body viz. *pirāṇaṉ, apāṉaṉ, utāṉaṉ, viyāṉaṉ, camāṉaṉ, nākaṉ, kūrmaṉ, kirukaraṉ, tēvatattaṉ, taṉañcayaṉ.*

[Skt. dasa+vāyu > த. தசவாயு]

தசவாயுக்கள் *tašavāyukkaḷ*, பெ.(n.) பத்து வளிகள் (தசவாயுக்கள்) கையின் ஐந்து விரல்களில் தங்கி நிற்கும் பத்து வகை வளி (வாயு)க்கள்; the ten vital airs found to prevail in the five fingers. (சா.அக.)

[Skt. dasa+vāu > த. தசவாயு. 'கள்' பன்மையீறு]

தசனப்பொடி *tašaṉa-p-poḍi*, பெ.(n.) கருநிறம் உள்ள பற்பொடி வகைகள் (வின்.); a black tooth powder which colours and strengthens the teeth.

[Skt. dašana > த. தசனம்]

தசனம் *tašaṉam*, பெ.(n.) 1. பல் (பிங்.); tooth. 2. மலை முடி (யாழ்.அக.); peak, summit. 3. கவசம் (பிங்.); armour.

[Skt. dašana > த. தசனம்]

தசனவாசம் *tašaṉavāšam*, பெ.(n.) உதடு; lip.

தசனாஞ்சு *tašaṉāñju*, பெ.(n.) பல்லை மூடிக் கொண்டிருக்கும் மினுமினுப்பான ஒரு பொருள்; enamel of tooth. (சா.அக.).

த.வ. பற்காரை

தசனோற்பவம் *tašaṉōṟpavam*, பெ.(n.) பல் முளைக்கை (பைஷஜ. 264); dentition, teething.

த.வ. முளைப்பு

[Skt. dašan(a)+udbhava > த. தசனோற்பவம்]

தசா *tašā*, பெ.(n.) கோளை (கிரகத்தை)ப் பொறுத்த ஊழ்வினை (விதி)ப் பயன்; the fate of man as depending on the position of planets. (சா.அக.).

த.வ. கோளூறுவினைப்பயன்

தசாக்கரி *tašā-k-kari*, பெ.(n.) பண்வகை (சிலப். 13, 112, உரை); a melody.

[Skt. dašukṣari > த. தசாக்கரி]

தசாகம் *tasāgam*, பெ.(n.) இறந்தவர்க்குப் பத்தாம் நாட் செய்யுஞ் சடங்கு (Brāh.); ceremony on the tenth day after a person's death.

த.வ. பத்தாம்நாள் நடப்பு

[Skt. dašaha > த. தசாகம்]

தசாங்கத்தயல் *tasāṅga-t-tayal*, பெ.(n.) ஆசிரிய மண்டிலத்(விருத்)தால் அரசிய லுறுப்புகள் பத்தனையும் பாடும் பனுவல் (பிரபந்த) வகை (தொன். 283, உரை); a poem in āširiyam metre celebrating the ten constituents of a kingdom, one of 96 pirabandam.

த.வ. ஆசிரியப்பதினம்

[Skt. dasa+aṅga > த. தசாங்கம் + இயல்]

தசாங்கப்பத்து *tasāṅga-p-pattu*, பெ.(n.) நேரிசை வெண்பாவால் அரசியலுறுப்புகள்

பத்தனையும் பாடும் பனுவல் (பிரபந்த) வகை (இலக். வி. 840); a panegyric poem in *nērišai-venbā* celebrating the ten constituents of a kingdom one of 96 pirabantam (q.v.).

[Skt. dasa+anga > த. தசாங்கம்+பத்து]

தசாங்கம்[1] *tašāngam,* பெ.(n.) 1. பெயர், நாடு, ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, தார், கொடி (திருவாச.); யானை, நாடு, ஊர், ஆறு, மலை, குதிரை, தேர், முரசு, தார், கொடி (திவா & பிங்.); யானை, நாடு, ஊர், ஆறு, மலை, குதிரை, செங்கோல், முரசு, தார், கொடி (வெண்பாப்.); யானை, நாடு, ஊர், ஆறு, மலை, குதிரை, தானை, முரசு, தார், கொடி (சூடா.) என்று பலவகையாகக் கூறும் பத்து அரசியலுறுப்புகள்; the ten constituents of a kingdom, viz. *nāmam, nāḍu, ūr, āṟu, malai, ūrdi, paḍai, murasu, tār, koḍi,* according to *tiruvāsagam, yāṉai, kudirai, tēr,* instread of *nāmam, ūrdi, paḍai,* according to *tivāgaram* and *pingalantai, yāṉai, kudirai, cengōl,* instead of *nāmam, ūrdi, paḍai* according to *veṉbā-p-pāṭṭiyal, yāṉai, kudirai, tāṉai* instead of *nāmam ūrdi, paḍai,* according to *cūḍamaṇi.* 2. பத்து வகை நறுமணப் பொருள் (திரவியங்)களா லாகிய பொடி; incense prepared from ten aromatic substances, used in worship.

[Skt. dasānga > த. தசாங்கம்]

தசாங்கம்[2] *tasāngam,* பெ.(n.) உடம்பின் பத்து உறுப்புகளினின்று பிறக்கும் மேகநோய்; a kind of veneral disease emanating from the affection of ten organs in the human system.

தசாங்கிசம் *tašāngišam,* பெ.(n.) 1. ஓரை (இராசி)யைப் பத்தாகப் பிரித்துக் கோள் (கிரகங்)களின் நிலையைக் குறிக்குச் சக்கரம் (சோதிட. சிந். 123); a horoscopical chart wherein the position of each planet is determined by dividing its rāci into ten parts, one of *tasa-varukkam.* 2. தசாமிசம் பார்க்க; see *tasāmišam.*

தசாசந்தி *tašā-šandi,* பெ.(n.) கோள் திசைகளின் சந்திப்பு; junction of the regnal periods of two planets.

[Skt. dašā > த. தசா]

தசாட்சரி *tasāṭcari,* பெ.(n.) தசாக்கரி பார்க்க (சங்.அக.); see *tasā-k-kari.*

தசாண்டக்கூறு *tašāṇḍa-k-kūṟu,* பெ.(n.) ஐந்து வகைப் பறவைகளாகிய கருடன், கோழி, மயில், குருவி, காக்கை ஆகியவற்றின் முட்டை களும், ஊர்வனவாகிய உடும்பு, அளுங்கு, ஆமை, முதலை, பாம்பு ஆகியவற்றின் முட்டை களும் ஆக இருபது முட்டைகளைக் கொண்டு உருவாக்கும் எண்ணெய் (தைலம்) அல்லது மெழுகு; a medicated oil or wax like preparation made from the eggs of five birds such as bramini kite, fowl, peacock, sparrow and crow and those of reptiles such as guana, biwalve fish, tortoise, alligator and snake. (சா.அக.).

[Skt. dasa+aṇḍa > த. தசாண்டம் + கூறு]

தசாண்டம் *tašāṇḍam,* பெ.(n.) மயில், கருடன், அடைக்கலங் குருவி, செம்போத்து, அளுங்கு, உடும்பு, முதலை முதலியவற்றின் பத்து வகை முட்டை; the eggs of ten different kind of birds and reptiles - peacock, bramani kite, Indian house sparrow, shall fish, guana, alligator etc. (சா.அக.).

[Skt. dasa+aṇḍa > த. தசாண்டம்]

தசாதரு *tašā-taru,* பெ.(n.) குதிரைச் சுழிகள் பத்து (அசுவ. 17); ten marks of horses.

தசாநாதன் *tasānādaṉ,* பெ.(n.) 1. திசைக்குத் தலைமை கொள்ளும் கோள்; the reigning planet of a particular period. 2. நல்ல கோள் நிலை (தசாபலன்); benign influence of a planet.

[Skt. daša+nāda > த. தசாநாதன்]

தசாப்தம் *tašāpdam*, பெ.(n.) (அ.வ.) பத்து ஆண்டுக் காலம்; decade. *'இரண்டு தசாப்தங்களில் பல அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன'.*

[Skt. dasa+abda > த. தசாப்தம்]

தசாபலன் *tašāpalan*, பெ.(n.) கோள் ஆட்சிக்காலத்தின் பலன்; influence of a planet in its regnal period.

[Skt. daša > த. தசா]

தசாம்சம் *tašāmšam*, பெ.(n.) 1. பத்திலொரு பாகம்; a tenth part.

த.வ. பதின்மம்

[Skt. dašan+amša > த. தசாமிசம்]

தசார் *tašār*, பெ. (n.) அணியம் (யாழ்.அக.); ready.

[Persn. tayar > த. தசார்]

தசாவதாரம் *tašāvadāram*, பெ.(n.) மீன், ஆமை, பன்றி, மாந்த அரிமா (நரசிங்கம்), வாமனம், பரசுராமன், இராமன், பலராமன், கண்ணன் (கிருட்டிணன்), குதிரை (கல்கி) என்னும் திருமாலின் பத்துப் பிறப்புகள் (பிங்.); the ten avatars of Visnu viz. *matsyam, kūrmam, varāgam, narasingam, vāmanan, parasurāman, rāman, balarāman, kiruttinan, kalki.*

த.வ. ஒன்பான் தோற்றரவு

[Skt. dašan+avatāra > த. தசாவதாரம்]

தசாவதானம் *tašāvadānam*, பெ.(n.) ஒரே நேரத்தில் நிகழும் (பத்து) செயல்களைக் கவனித்து நினைவில் இருத்தும் கலைத் திறமை; the skill of responding to (ten) tasks performed simultaneously.

த.வ. பதின்திறன்

தசாவதானி *tašāvadāni*, பெ.(n.) தசாவதானம் செய்பவர்; one who performs tašāvadānam.

த.வ. பதின்திறனாளர், பதின் கவனகர்

தசானன் *tašānan*, பெ.(n.) **தசமுகன்** பார்க்க (யாழ்.அக.); see *tašamugan.*

தசியு *tasiyu*, பெ.(n.) 1. மண்ணின் மைந்தரான ஆரியரல்லாத இந்திய இனத்தார்; a non-Aryan natives of India.

[Skt. dasyu > த. தசியு]

தசிரதேவதை *taširadēvadai*, பெ.(n.) இரட்டை (அசுவினி)த் தேவர் (யாழ்.அக.); Ašvini the twin-gods.

தசேந்திரியம் *tašēndiriyam*, பெ.(n.) கன்மேந்திரியம் ஐந்தும் ஞானேந்திரி யமைந்துங் கூடிய பத்து புலன் (இந்திரியங்)கள் (யாழ்.அக.); the ten organs of the human body consisting of the five *kanmēntiriyam* and five *ñanēntiriyam.*

தசோபநிடதம் *tasōbaniḍadam*, பெ.(n.) ஈசம், கேனம், கடம், பிரசினம், முண்டகம், மாண்டுக்கியம், தைத்திரீயம், ஐத்திரேயம், சாந்தோக்கியம், பிருகதாரணியம் என்ற பத்துச் சிறப்புடைய உபநிடதங்கள்; ten important upanishads, viz. *īšam, kēnam, kāṭam, piracinam, munṭakam, mānṭūkkiyam, taṭṭiriyam, aitarēyam, eāntōkkiyam, pirukatāraṇiyam.*

தசோபநிசத்து *tasōpa-nisattu*, பெ.(n.) **தசோபநிடதம்** பார்க்க; see *tasōba-niḍadam.*

தஞ்சகம் *tañjagam*, பெ.(n.) காய்ச்சலினால் உடம்பின் மேற்காணும் தழும்புகள்; eruptions or purple spots which appear on the skin in malignant fevers. (சா.அக.)

தட்சணகௌளி *taṭšaṇakauḷi*, பெ.(n.) மங்களமாக வலது பக்கத்தில் இருந்து பலுக்கும் பல்லி; lizard chirping from the right side which is considered auspicious. (சா.அக.)

தட்சணநட்சத்திரராசி *taṭcaṇa-naṭcattira-rāši*, பெ.(n.) ஓரை (இராசி) மண்டல விண்மீன்

(நட்சத்திரங்)களுக்குத் தென்பாலுள்ள விண்மீன் (நட்சத்திரத்) தொகுதி; the southern constellations.

தட்சணநீர் *taṭcaṇanīr,* பெ.(n.) தென் நாட்டு (பூமி) நீர், அதாவது காவேரி; water of the south i.e. the river cauvery. (சா.அக.)

[Skt. taṭšaṇa>த. தட்சண + நீர்]

தட்சணப்புல் *taṭcaṇa-p-pul,* பெ.(n.) சாணப்புல்; deccany grass. (சா.அக.)

[Skt. taṭšaṇa>த. தட்சணம் + புல்]

தட்சணபத்திரி *taṭcaṇa-pattiri,* பெ.(n.) 1. ஒட்டொட்டுப்புல்; sticking grass. 2. சாணம்; deccany grass as distinguished from bengal grass. (சா.அக.)

தட்சணம் *taṭcaṇam,* பெ.(n.) 1. உடனே; instantaneously. 2. வலப்பக்கம்; right side (சா.அக.)

தட்சணாமூர்த்தி *taṭcaṇā-mūrtti,* பெ.(n.) **தட்சிணாமூர்த்தி** பார்க்க (சங்.அக.); see *taṭsiṇāmūrtti.*

தட்சணை *taṭcaṇai,* பெ.(n.) **தட்சிணை** பார்க்க (இ.வ.); see *taṭciṇai.*

தட்சன் *taṭcaṉ,* பெ.(n.) 1. சேவல்; cock. 2. நெருப்பு; fire. 3. பரத்தைகளிடம் உறவு கொள்பவன்; sexual attraction towards other woman. (சா.அக.)

தட்சாயம் *taṭcāyam,* பெ.(n.) கருடன்; brahminury kite. (சா.அக.)

தட்சிகம் *taṭcigam,* பெ.(n.) வலப்பக்கம்; right side. (சா.அக.)

தட்சிணபூமி *taṭciṇabūmi,* பெ.(n.) நில வுருண்டையின் (பூகோளத்தின்) தென் குளிர் (சீதள) பாகம்; antarctic zone. (mod.)

தட்சிணம் *taṭciṇam,* பெ.(n.) 1. தெற்கு; south. 2. வலப்பக்கம்; right side. 3. **காளாமுகம்** பார்க்க; see *kāḷāmukam* (சி.சி.2, 73 சிவாக்.). 4. தாராளம் (யாழ்.அக.); liberality. 5. விவேகம் (யாழ்.அக.); discrimination.

[Skt. dakṣiṇa >த. தட்சிணம்]

தட்சிணமார்க்கம் *taṭciṇa-mārkkam,* பெ.(n.) காளாமுகம், மாநோன்பை (மாவிரதத்தை)ப் பெரும்பாலும் ஒத்த சிவனியத்தின் உட்பகுதி; one of the minor systems of saivaism closely allied to māviradam.

தட்சிணாக்கினி *taṭciṇā-k-kiṉi,* பெ.(n.) **தக்கிணாக்கினி** பார்க்க; see *takkiṇā-k-kiṉi.*

தட்சிணாட்சம் *taṭciṇāṭcam,* பெ.(n.) நில வுருண்டையின் (பூகோளத்தின்) தென்பாகம்; south latitude (Mod.).

தட்சிணாபந்தம் *taṭciṇābandam,* பெ.(n.) மூன்று வகைப் பாகங்களில் ஒன்று; one of the three kinds of bondage. (சா.அக.).

தட்சிணாமூர்த்தம் *taṭciṇā-mūrttam,* பெ.(n.) சிவன் தென்புறமாக அமர்ந்து நான்முக (பிரம) குழந்தைகளாகிய சனகர். முதலிய (சன காதியர்) நால்வருக்கும் அருளிய திருவுருவம்; the posture of Šiva facing the south and instructing the four sons of Brahma.

[Skt. dakṣina+mūrtta >த. தட்சிணா மூர்த்தம்]

தட்சிணாமூர்த்தி *taṭciṇā-mūrtti,* பெ.(n.) 1. தென்முக மாயிருக்கும் சிவனுருவம் (திருவிளை. பாயி. 13); šiva facing the south. 2. அகத்தியர் (வின்.); Agastya, as dwelling in the south. 3. நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று; an upaniṣad, one of 108.

தட்சிணாமூர்த்திதேசிகர் *taṭciṇā-mūrtti-tēšigar,* பெ.(n.) பண்டார நூல் (சாத்திரங்) களுள் இரண்டு நூல் செய்தவரும் திருவாவடு துறை மட (யாதீன)த்தைச் சார்ந்தவருமாகிய ஒரு சிவனியத் துறவி; a Saiva ascetic of the *tiru-vāvaḍu-turai-y-ātiṉam,* author of two works in *paṇḍāra-sāttiram.*

தட்சிணாயனம் *tatcināyanam,* பெ.(n.) கடகம் (ஆடி) முதல் ஞாயிறு (சூரியன்) தெற்கு முகமாகச் செல்லும் ஆறு மாத காலம்; period of the sun's southward passage extending for six months from āḍi.

தட்சிணாவசரம் *tatcināvasaram,* பெ.(n.) குழந்தை கருப்பையில் வலது பக்கம் உலாவல்; moving in the right part of the womb as foetus. (சா.அக.)

தட்சிணாவர்த்தம் *tatcināvarttam,* பெ.(n.) 1. வலம்புரிச் சங்கு; conch shell having its spiral twisted forwards on the right side. 2. பெண்ணின் கொப்பூழ்; woman's naval. (சா.அக.).



தட்சிணை *tatcinai,* பெ.(n.) 1. குரு முதலிய பெரியோர்க்குக் கொடுக்கும் பொருள்; offering or fee to a guru, school master, etc. 2. தன்னக் கட்டுதல்; bribe, inducement, used in contempt. 3. தண்டனை (சிட்சை) (யாழ்ப்); discipline, punishment.

தட்சியராசன் *tatciyarāšan,* பெ.(n.) பொன்னம்பர்; gold coloured amber. (சா.அக.)

தண்டிலம் *tanḍilam,* பெ.(n.) 1. வேள்வி செய்வதற்குத் தெரிந்தெடுத்து(நியமித்து)க் கொண்ட இடம் (சீவக.2464,உரை); place designed for the sacrificial fire. 2. சிவபூசைக்குத் தெரிந்தெடுத்து(நியமித்து)க் கொண்ட இடம்; place designed for worshipping Siva. "தண்டிலந்தனினும் பகர்தரு மிலிங்க மூர்த்தியினும் (காஞ்சிப்பு. சனற்கு.20).

[Skt. sthanḍila > த. தண்டிலம்]

தண்டுலம் *tanḍulam,* பெ.(n.) அரிசி; rice. "தண்டுலம் விரித்துநற்றருப்பை சாத்தியே" (கம்பரா.கடிமண.85).

[Skt. tanḍula > த. தண்டுலம்]

தணிக்கை *tanikkai,* பெ.(n.) கண்காணிப்பு; audit, investigation.

[Ar. tanqiya > த. தணிக்கை]

தத்கால் *tatkal,* பெ.(n.) விரைந்த உடனடித் தேவை கருதி தரப்படும் முன்னுரிமை, முன்னுரிமைப் பயணச்சீட்டு; preference or travel ticket given on the basis of immediate and urgent need.

த.வ. உடனடி

தத்தாங்காரம் *tattāṅgāram,* பெ.(n.) மாநரகங்களுள் ஒன்று (சி.போ.பா.2,3,பக். 203); a hell, one of *mānaragam.*

தத்தாத்திரேயம் *tattā-t-tirēyam,* பெ.(n.) நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று; an upanisad one of 108.

தத்தாபகாரம் *tattāpakāram,* பெ.(n.) நன்கொடையைத் திரும்பப்பெறும் கரிசு (பாவம்); the sin of taking back what was once given as gift.

தத்தியோதனம் *tatti-y-ōdanam,* பெ.(n.) தயிர்ச் சோறு (கொ.வ.); a delicious preparation of boiled rice mixed with curds.

[Skt. dadhi+ōdana > த. தத்தியோதனம்]

தத்துப்புத்திரன் *tattu-p-puttiran,* பெ.(n.) ஏற்றுக்கொண்ட மகன் (சுவிகாரப் புத்திரன்); adopted son.

த. ஏற்புமகன்

[Skt. datta> த. தத்து+புத்திரன்]

தத்துவசம்பிரதம் *tattuva-šambiradam,* பெ.(n.) ஒரு பூதத்தில் வேறொரு பூதந்

தோற்றுவிக்கும் மகேந்திர சாலவித்தை (சௌந்தரிய, ஆனந். 30, உரை); magic art by which one of the five elements is made to appear from another.

தத்துவசுத்தி *tattuva-šutti,* பெ.(n.) முப்பத்து ஆறு மெய்ம்மை (தத்துவங்) கட்கும் (ஆன்மா) ஆதன் தொடர்பாக ஏற்படும் பட்டறிவு (அனுபவ) நிலை; spiritual experience of the soul not influenced by the thirty six constituent priciples of the body by knowing itself to be a different entity. (சா.அக.)

தத்துவஞானம் *tattuvañānam,* பெ.(n.) 1. கடவுளை அறியும் அறிவு; knowledge of the deity. 2. மெய்ம்மை (தத்துவங்)களை அறியும் அறிவு (ஞானம்); spiritual knowledge of the constituent parts of the body. (சா.அக.)

தத்துவத்திரயம் *tattuvattirayam,* பெ.(n.) 1. மூவகை மெய்ம்மை (தத்துவங்)களாகிய ஆத்துமம், சிவம், வித்தியம்; the three classes of faculties or power. 2. மூவகை உண்மைப் பொருள்கள்; the metaphysical triad viz; god, spirit and matter. (சா.அக.)

தத்துவதரிசனம்¹ *tattuvadarišanam,* பெ.(n.) பதின்கருமத்தொன்று; a spiritual experience of the soul, one of *taša-kāriyam.*

தத்துவதரிசனம்² *tattuvadarišanam,* பெ.(n.) மூலப் பொருள்களாகிய முப்பத்து ஆறு மெய்ம்ம (தத்துவ)ங்களும் மாயையின் செயலால் தோன்றிய பருப்பொருள்கள் என்று ஆன்மா தன்னறிவிலே விளங்கக் காணும் பட்டறிவு நிலை; (šaiva.) a spiritual experience of the soul in which it realises that the 36 tattvas or real are the outcome of māyā and are inert matter, one of the tasa-kāriyam.

தத்துவதரிசனம்³ *tattuvadarišanam,* பெ.(n.) அறிவு (ஞான)க் காட்சி; real vision. (சா.அக.)

தத்துவபிரகாசவியாக்கினம் *tattuva-pirakāšaviyākkinam,* பெ.(n.) சுந்தரா னந்த சித்தரால் கற்பிக்கப்பட்ட அறிவு (ஞான)ச் செய்தி; a treatise on spiritual wisdom by Sundarānda siddhar. (சா.அக.)

தத்துவபிரசாதம் *tattuvapirašādam,* பெ.(n.) ஒரு மறை மந்திரம்; a vedic mantram. (சா.அக.)

தத்துவம் *tattuvam,* பெ.(n.) 1. இயல்பு; nature. 2. இயற்கை; the essential or real nature of things. 3. பரம்பொருள்; the universal soul. 4. உடம்பின் தொழில்கள்; the doings and functions of the body. 5. முப்பிணியின் தொழில்கள் (வாதபித்த சிலேட்டும தத்துவங்கள்); the functions of three humours (vatha, pitha and kapha) wind, bile and phlegm. (சா.அக.). 6. 96 மெய்ம்மை (தத்துவங்)கள்; the 96 tatvas postulated by the siddhar's school which are the constituent principles in nature.

தத்துவமசி *tattuvamaši,* பெ.(n.) "அது" நீயாயிருக்கிறாய் என்னும் பொருள் கொண்ட மறைச் சொற்றொடர் (வேத வாக்கியம்); the vedic quotation "that thou are".

தத்துவரூபம்¹ *tattuvarūbam,* பெ.(n.) உண்மை வடிவம்; true figure. (சா.அக.)

தத்துவரூபம்² *tattuvarūbam,* பெ.(n.) மெய்ம்மை (தத்துவங்)களின் குணங்களை ஆன்மா காணும் ஓர் பட்டறிவு நிலை; a spiritual experience of the soul in which it is cognizant of the operations of the 36 tatvas. (சா.அக.)

த.வ. மெய்ம்மைப்பட்டறிவு

[Skt. tatva > த. தத்துவம்]

*உருவம் >**Skt.** rūpa > த. ரூபம்*

தத்துவலயசமாதி *tattuvalayaśamādi*, பெ.(n.) ஆன்ம மெய்ம்மை (தத்துவங்) களையும் அவற்றின் செய்கைகளையும் அறிந்த அறிஞன். (சா.அக.); spiritual experienced mystic.

தத்துவாத்துவா *tattuvāttuvā*, பெ.(n.) ஆறு அத்துவாக்களுள் முப்பத்தாறு தத்துவங் களாகிய அத்துவா வகை; tattuvas or reals as path to salvation, one of six attuvā (q.v.). *"தத்துவாத்துவா முதலான தெல்லாம்" (சி.சி.8,6, மறைஞா.).*

தத்துவாதி *tattuvādi*, பெ.(n.) மாத்துவ அந்தணர் ; a sect of Brahmins who hold the doctrines of *Madhvācārya*.

தத்துவாதீதன் *tattuvādīdan*, பெ.(n.) மெய்ம்மை (தத்துவங்) கடந்த பரம் பொருள் (சி.சி.2, 73, சிவாக்.); god, as trascending all reals.

தத்துவார்த்தம் *tattuvārttam*, பெ.(n.) மெய்ப்பொருள் முறையான தன்மை; philosophical nature. *'நீங்கள் கூறும் தத்துவார்த்தமான பொருளில் அவர் இந்தக் கவிதையை எழுதவில்லை'.*

[Skt. tatva+artha > த. தத்துவார்த்தம்]

தத்துவான்மா *tattuvānmā*, பெ.(n.) நுண்ணுடலை (சூக்குமதேகத்தை)ப் பற்றி நிற்கும் ஆன்மா (சி.போ.பா.6,2, பக். 317); state of the soul when it is associated with the subtle body.

தத்பரம் *tatparam*, பெ.(n.) ஒன்றில் முப்பது விநாடி; 1/30 of a second. (சா.அக.)

[Skt. tatpara > த. தத்பரம்]

தத்பூர்வம் *tatpūrvam*, பெ.(n.) முதலில் ஏற்படுவது; happening for the first time. (சா.அக.)

[Skt. tatpūrva> த. தத்பூர்வம்]

தத்போதம் *tatpōdam*, பெ.(n.) உண்மையறிவு; knowledge or understanding of truth. (சா.அக.)

தத்ரூபம் *tatrūbam*, பெ.(n.) முழுதும் ஒற்றுமையான வடிவு; ஒருமையுறுத்தோற்றம் exact resemblance. *'காட்சி அதன் தத்ரூபாமாயிருக்கும்' (கொ.வ.).*

[Skt. tatrūpa > த. தத்ரூபம்]

ததகாமேந்தினி *tatakāmēndiṉi*, பெ.(n.) தேற்றான் கொட்டை; water clearing nut. (சா.அக.)

ததபத்திரி *tata-pattiri*, பெ.(n.) வாழை (மலை.); plantain, musa.

ததாத்து *tatāttu*, இடை.(int.) அங்ஙனமே ஆகுக எனப் பொருள்படும் ஒரு வடமொழி வாழ்த்துத் தொடர் (Brah.); a Sanskrit expression meaning 'amen', 'so be it'.

ததுமல் *tadumal*, பெ.(n.) 1. தெளிவு இல்லாமல் குழம்பி இருக்கை; that which is confusion. 2. கூட்டம்; crowd.

ததேகத்தியானம் *tatēka-t-tiyāṉam*, பெ.(n.) ஒன்றையே இடைவிடாது எண்ணுகை (சிந்திக்கை) (Brah.); concentrated meditation on one and the same subject.

ததேகநிட்டை[1] *tatēka-niṭṭai*, பெ.(n.) **ததேகத்தியானம்** (வின்.) பார்க்க; see *tatēka-t-tiyāṉam*.

ததேகநிட்டை[2] *tadēkaniṭṭai*, பெ.(n.) 1. அசைவற ஊழ்கத்தி (தியானத்தி)லிருத்தல்; being absorbed in contemplation or meditation without disturbance of mind. (சா.அக.)

தந்தக்கட்டி *tanda-k-kaṭṭi*, பெ.(n.) 1. **தந்த சூலை** (இ.வ.) பார்க்க; see *tanda-cūlai*. 2. பல்லில் உண்டாகும் கட்டி; an abcess on the gum of the teeth gumabcess, gum-boil.

தந்தக்கட்டில் *tanda-k-kaṭṭil*, பெ.(n.) 11. யானை மருப்பினாலியன்ற கட்டில்; ivory cot. 2. உயர்ந்த கட்டில் (இ.வ.); any fashionable cot.

தந்தக்கிருமி *tanda-k-kirumi,* பெ.(n.) பற்களிடையே தோன்றும் நுண்ணுயிரி, பற்பூச்சி; worm found in the tooth. (சா.அக.)

த.வ. பற்புழு

தந்தக்குறி *tanda-k-kuri,* பெ.(n.) புணர்ச்சி காலத்தில் பல்லால் உண்டான அடையாளம் (கொக்கோ); marks made by the teeth of the lover on the limbs of his beloved.

த.வ. பற்குறி

தந்தகபாலிகாநோய் *tanda-kabāligā-nōy,* பெ.(n.) பற்களின் முனைகள் தேய்ந்து வெடித்துப் பொடிப்பொடியாக உதிரும் நோய்; a disease in which the edges of the teeth are softened cracked and sometimes crushed and dropped in pieces of particles.

தந்தகரானநோய் *tanda-karāṉa-nōy,* பெ.(n.) பல்லீறுகள் தேய்ந்து பற்களை வெளியில் சாய்க்கும் ஒருவகைப் பல்நோய்; a diseases in which the gums are eaten away leaving the teeth exposed to its full length.

[Skt. danda> த. தந்தகரானம் + நோய்]

தந்தகரிசம் *tandakarišam,* பெ.(n.) சுண்ணாம்பு; lime. (சா.அக.)

தந்தகரிசனம் *tanda-karišaṉam,* பெ.(n.) சுண்ணாம்பு; lime, calcium carbonate.

[Skt. danda> த. தந்தம் + கரிசனம்]

தந்தகரிடநோய் *tanda-kariḍa-nōy,* பெ.(n.) பல்நோய் வகை; a disease of the teeth.

[Skt. danda> த.தந்தகரிடம் + நோய்]

தந்தகரிநோய் *tandakari-nōy,* பெ.(n.) பல்நோய்; a disease of the teeth.

[Skt. danda> த.தந்தகரி + நோய்]

தந்தச்சீப்பு *tanda-c-cīppu,* பெ.(n.) மருப்பு அல்லது கொம்பினாற் செய்த சீப்பு; comb of horn of ivory.

[Skt. danda > த.தந்தம் + சீப்பு]

தந்தசம் *tandašam,* பெ.(n.) 1. பல்லீறு; gum of teeth. 2. யானைக் கொம்பு; elephant tusk.

த.வ. தந்தச்சதை

தந்தசருக்கராரோகம் *tandašaru-k-karārōgam,* பெ.(n.) பற்களின் பின்புறத்தில் சுண்ணாம்பு அல்லது காரையைப் போல் கரடு கட்டியிருக்கும் செதில்கள்; a hard reddish crust or a concretion which is sometimes formed behind the teeth; tartar on the teeth, the teeth become as rough as gravels. (சா.அக.)

தந்தசருக்கரை *tanda-šarukkarai,* பெ.(n.) பல் ஊத்தை (சீவரட்.); tartar on the teeth.

த.வ. பற்காறை

[Skt. danda> த.தந்தம் + சருக்கரை]

தந்தசருக்கரைநோய் *tanda-šarukkarai-nōy,* பெ.(n.) பற்களின் பின்புறம் கரடு கூட்டிய செதில்கள் போன்ற காறை; a hard reddish crust, which is sometimes formed behind the teeth.

[Skt. danda> த.தந்தம் + சருக்கரை + நோய்]

தந்தசியாவகரோகம் *tandašiyāva-garōgam,* பெ.(n.) பற்களை நீலம் அல்லது கருப்பு நிறமாகச் செய்யுமோர் நோய்; a disease in which the teeth are rendered black or blue. (சா.அக.)

தந்தசுடிகரோகம் *tandašuḍiga-rōgam,* பெ.(n.) பல்லீறுகள் வீங்கிச் சிறு ஓட்டைகளை உண்டாக்கும் ஒரு வகை நோய்; a disease of the teeth marked by swelling of the gums and small holes in the teeth. (சா.அக.)

தந்தசுத்தி *tandašutti,* பெ.(n.) பல் விளக்குதல்; cleaning the teeth. (சா.அக.)

தந்தசூகம் *tanda-šūgam,* பெ.(n.) 1. பாம்பு(வின்) ; snake. 2. பாம்புகள் நிரம்பிய நிரையம் (நரகம்) (சேது 4. துனுக்கோ 4); a hell infested with serpents. 3. நச்சுயிர் reptile.

தந்தசூகன் *tanda-šugaṉ,* பெ.(n.) 1. கொடியவன் (யாழ்.அக.); malignant person.

தந்தசூலை *tanda-šūlai,* பெ.(n.) 1. பல்வலி (இங். வை. 369); tooth-ache, inflammation of the dental pulp, odontalgia. 2. பல் நரம்பில் உண்டாகும் குத்தல் நோய்; a nervous pain experienced in the gum of the teeth. (சா.அக.)

[Skt. danda> த. தந்தம் + சூலை]

தந்தத்தையுதிரப்பண்ணி *tandattaiyudirap paṇṇi,* பெ.(n.) தில்லை மரம்; tiger's sparge. (சா.அக.)

தந்ததி *tandadi* பெ.(n.) மரபுவழி; lineage. இரவி சிரிகண்டன் தந்ததிப் (பிரகிருதியாய் T.A.S. ii 175).

தந்தந்தண்ணீர் *tandantaṇṇīr,* பெ.(n.) எலும்பை நீர்மமாக்கவுதவும் கரைசல் (அஸ்திபேதி); a solvent reducing bones into liquid. (சா.அக.)

[Skt. danda> த. தந்தம் + தண்ணீர்]

தந்தமூலம் *tanda-mūlam,* பெ.(n.) பல்வேர்; root of the tooth.

[Skt. danda> த. தந்தம் + மூலம்]

தந்தயோடதம் *tanda-y-ōḍadam,* பெ.(n.) 1. பல், உதடு போன்றவற்றின் தொடர்பு; relation to teeth and the lip-dentilabial.

தந்தரூடி *tanda-rūḍi,* பெ.(n.) பல்வேர் புண்ணாகித் தீநாற்றம் வீசும் நோய்; a disease of the teeth marked by ulceration at the root followed by a discharge of pus and blood with fetid smell-Pyorrhoea.

தந்தவாயு *tandavāyu,* பெ.(n.) 1. பல்வலி; tooth pain. 2. பல்லின் நரம்பிற்குள் காணும் குத்தல் நோய்; a nervous plain experienced in the gum of the teeth. (சா.அக.)

தந்தவித்திருதி *tandavittirudi,* பெ.(n.) பல்லின் உட்புறம் அல்லது வெளிப்புறத்துச் சதையில் வீக்கமான கட்டிகளை உண்டாக்கும் ஒரு வகை நோய்; a disease of the teeth in which abcesses or boils are developed in the front or the rear side of the gum attended with much swelling. (சா.அக.)

தந்தவிதர்ப்பம் *tanda-vidarppam,* பெ.(n.) பல்லாட்டம்; a disease which is consequent upon the friction of the gums marked by the appearance of violent swelling.

தந்தவைத்தியம் *tandavaittiyam,* பெ.(n.) பல்லைப் பிடுங்குதல், பல் கட்டல், பல் தூய்மைப் படுத்தல் முதலியவற்றுடன் பற்களில் ஏற்படும் நோய்களுக்குச் செய்யும் மருத்துவம்; the art of curing dental complaints along with the act of extracting the teeth, repairing or replacing them when decayed, cleaning etc. (சா.அக.)

தந்தவைத்தியன் *tandavaittiyaṉ,* பெ.(n.) பற்களின் நோய்க்கு மருத்துவம் செய்பவன்; one whose occupation is not only to treat tooth complaints but also to clean, extract repair and replace them when necessary. (சா.அக.).

த.வ. பல்மருத்துவன்

தந்தவைதர்ப்பம் *tanda-vaidarppam,* பெ.(n.) அழற்சியினாலேற்படும் பல்லாட்டம்; looseness of the teeth through external injury.

தந்தி¹ *tandi,* பெ.(n.) 1. ஆண் யானை, களிறு (பிங்.); male elephant. *"தந்தியும் பிடிகளுந் தடங்க ணோக்கின" (கம்பரா. சித்திரக் கூட : 43).* 2. பாம்பு (நச்சுப் பற்களையுடையது); snake, as having fangs. *"தந்தி நஞ்சுந் தலைக் கொளச் சாய்ந்தவர்" (கந்தபு. சயந்தன்கனவு. 21).*

[Skt. dantin > த. தந்தி]

தந்தி² *tandi,* பெ.(n.) 1. கம்பி; wire. *"நார் தந்திமிடையப் பின்னி" (தைலவ. பாயி. 22).* 2. யாழ் நரம்பு (வின்.); catgut, string of a musical instrument. 3. நரம்பு; sinew, tendon. 4. தொலைவரி (மின் கம்பி வழி யனுப்புஞ் செய்தி); telegram. 5. யாழ் (பிங்.); lute.

த.வ. தொலைவரி

[Skt. tantri > த. தந்தி]

தந்தி³ *tandi,* பெ.(n.) நரம்புக் கயிறு; tendon. (சா.அக.)

தந்திக்கம்பி *tandi-k-kambi,* பெ.(n.) 1. வீணை முதலியவற்றின் நரம்பு; string of a lute. 2. தொலைவரி அல்லது தொலைபேசிக் கம்பி; telegraph or telephone wire.

[Skt. dandi> த. தந்தி+கம்பி]

தந்திகொடு-த்தல் *tandi-kodu-,* செ.கு.வி.(v.i.) ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு விரைவாக) கம்பி வழியாகச் செய்தி அனுப்புதல்; to send a telegram, wire. *'மும்பை போய்ச் சேர்ந்ததும் உடனே தந்திக்கொடு'.*

த.வ. தொலைவரி தருதல்

[Skt. dandi> த.தந்தி + கொடு-,]

தந்திபூட்டு-தல் *tandi-pūttu-,* 5 செ.கு.வி.(v.i.) வீணை, யாழ் முதலியவற்றிற்குக் கம்பி யமைத்தல் (வின்.); to fit up with strings, as in a lute.

[Skt. dandi> த.தந்தி + பூட்டு-,]

தந்திபேசல் *tandi-pēšal,* தொ.பெ.(vbl.n.) நாடியடித்தல்; beating of the pulse.

[Skt. dandi> த.தந்தி + பேசு + அல் – அல் = தொ.பொ.ஈறு]

தந்திபேசு-தல் *tandi-pēšu-,* 5 செ.கு.வி.(v.i.) **தந்தியடி¹-த்தல் பார்க்க;** see tandi-y-adi¹-.

தந்திபோல்தெரித்தல் *tandi-pōl-terittal,* பெ.(n.) விட்டு விட்டுச் சுரீர் என நோதல்; a sort of pain experienced in hemicrania.

தந்திமுறுக்கு-தல் *tandi-murukku-,* 5 செ.குன்றாவி.(v.t.) யாழ் நரம்பை இறுக்குதல்; to tighten the lute-string.

தந்திமுறுக்குதல் *tandi-murukku,* பெ.(n.) நரம்பிற்குச் சுறுசுறுப்பையுண்டாக்கல்; stimulating the nerves.

[Skt. dandi> த. தந்தி + முறுக்குதல்]

தந்தியடி¹-த்தல் *tandi-y-adi,* 4 செ.கு.வி.(v.i.) தொலைவரிச் செய்தியனுப்புதல்; to send a telegram, wire.

[Skt. dandi > த. தந்தி+அடி-,]

தந்தியடி²-த்தல் *tandi-y-adi-,* 4 செ.கு.வி.(v.i.) வீணை, யாழ் முதலியவனவற்றில் மீட்டும் மெல்லிய கம்பியை மேலுங்கீழுமாக அசைப்பது போன்று ஆட்டுதல்; to tremble.

[Skt. dandi> த.தந்தி + அடி-,]

தந்தியடி³-த்தல் *tandi-y-adi-,* 4 செ.கு.வி.(v.i.) நாடிபேசல்; to beat the pulse.

[Skt. dandi> த.தந்தி + அடி-,]

தந்தியம்¹ *tandiyam,* பெ.(n.) பல்லடுக்கு; filth in the teeth.

[Skt. dandi > த.தந்தி > தந்தியம்]

தந்தியம்² *tandiyam,* பெ.(n.) முலைப்பால்; woman's breast milk.

தந்தியறுதல் *tandi-y-arudal,* பெ.(n.) 1. நாடி விழல்; dropping of the pulse. 2. நரம்பு வீழ்ச்சி; nervous break down.

[Skt. dandi> த. தந்தி + அறுதல்]

தந்தியாரிட்டம் *tandi-yārittam,* பெ.(n.) மூல நோய்க்கான ஆயுள் வேத மருந்து; an āyurvēdic wine prescribed for piles.

தந்தியூசிவன்னச்சேலை *tandi-y-ūši-v-vanna-c-cēlai,* பெ.(n.) கம்பியூசி போலும்

மெல்லிய கோடுகள் அமைக்கப் பெற்ற, புடைவை வகை (இ.வ.); a kind of saree with needle-like stripes.

தந்திரம் *tandiram,* பெ.(n.) யாழ் நரம்பு (வின்.); wire or string of a lute.

தந்திரயுக்தி[1] *tandirayukti,* பெ.(n.) குறியீடு; குழூஉக்குறி; technical terms, code word. (சா.அக.)

தந்திரயுக்தி[2] *tandirayukti,* பெ.(n.) மந்திர நூலின் அறிவினால் அமைக்கப்படும் பொருள்; anything or substance created or formed by secrets revealed by Tantric science. (சா.அக.)

தந்திராகமம் *tandirāgamam,* பெ.(n.) எந்திர மந்திரங்களைப் பற்றிச் சொல்லும் தோன் றியத்(ஆகமம்)தின் ஓர் பிரிவாகிய தந்திரம்; one of the divisions of the Agama philosophy treating on rites, operation of diagrams etc. (சா.அக.)

தந்திராணுசாரணை *tandirāṇušāraṇai,* பெ.(n.) கல்வி (தந்திர) நூலைப் பின்பற்றி நடப்பது; following the authority of the Tantrams. (சா.அக.)

தந்திரி *tandiri,* பெ.(n.) யாழ் நரம்பு; string of musical instruments. *"வீணைத் தந்திரியும்" (பிரமோத். 2, 62).*

தந்திரிகம் *tandirigam,* பெ.(n.) தந்திரிகரம் பார்க்க; see tandiri-garam.

தந்திரிகரம் *tandiri-garam,* பெ.(n.) செங்கோட்டியாழ் உறுப்புகளில் ஒன்று; a part of *seṅgōṭṭiyāḻ. "செங்கோட்டி யாழிற்றத் திரிகரத் தொடு" (சிலப். 13 : 107).*

தந்திரிகை *tandirigai,* பெ.(n.) கம்பி; wire. *"தந்திரிகை சுற்றி" (தைலவ. தைல. 41).*

தந்திவன்னம் *tandi-vaṉṉam,* பெ.(n.) **தந்தியூசிவன்னச்சேலை** (இ.வ.) பார்க்க; see *tandi-y-ūši-vaṉṉa-c-cēlai.*

தந்துபாவம் *tandubāvam,* பெ.(n.) விலங்கு – நிலத்திணை ஆகியவற்றில் கட்டியாக உறையக்கூடிய கசிவு ஊனீர்; fibrin. (சா.அக.)

தந்துமாத்திரிகம் *tandumāttirigam,* பெ.(n.) நார்த்தசைகள் உருவாக்கக்கூடிய உயிரணு; fibroblasto. (சா.அக.)

தந்துமேகம் *tandumēgam,* பெ.(n.) அடிவயிறு நொந்து, வீணா தண்டத்தின் அடியில் விம்மி விருவிருப்பை உண்டாக்கி ஆண்குறி வழியாய்ச் சளியைப் போல் ஒழுகும் ஒரு வகை நோய்; a transparent mucous wiry discharge from the urethra. (சா.அக.)

தநம் *tanam,* பெ.(n.) சந்தனம்; saldal wood. (சா.அக.)

தநு *tanu,* பெ.(n.) உடல்; body.

[Skt. tanu > த. தநு.]

தநுச்சாயை *tanuccāyai,* பெ.(n.) உடம்பின் நிழல்; shadow of ones body. (சா.அக.)

தநுத்துவசம் *danuttuvašam,* பெ.(n.) சிறு நெல்லிச் செடி; Indian goose berry shrub. (சா.அக.)

தநுத்துவசை *danuttuvašai,* பெ.(n.) **தநுத்துவசம்** பார்க்க; see *danuttuvašam.* (சா.அக.)

தநுபம் *danupam,* பெ.(n.) வெண்ணெய்; butter. (சா.அக.)

தநுவாயு *tanuvāyu,* பெ.(n.) தாள்கிட்டி; lock jaw. (சா.அக.)

தநூநபம் *tanūnabam,* பெ.(n.) நெய்; ghee, clarified butter. (சா.அக.)

தநூருகம் *tanūrubam,* பெ.(n.) மயிர்; hair. (சா.அக.)

தப்சீல் *tapšil,* பெ.(n.) **தப்சீல்வார்** பார்க்க (C.G.); see *tapsilvār.*

[Ar. tafsil > த. தப்சீல்]

தப்சில்வார் *tapsīlvār,* பெ.(n.) விளக்க (விவர)க் குறிப்பு (C.G.); particulars, details of an account and the like, schedule.

தப்டர்தோட்டம் *tapḍar-tōṭṭam,* பெ.(n.) **டப்டர்தோட்டம்** பார்க்க(R.T.); see *ṭapṭar-tōṭṭam.*

தப்தர் *taptar,* பெ.(n.) 1. துணியிற் கட்டி வைக்கும் ஆவணம்; record, register, account, official statement, report, bundle of written documents tied together in a cloth. 2. ஆவணங்களைப் பேணி வைக்கும் அலுவலகம்; record office.

த.வ. பொதியாவணம்

[Persn. daftar > த. தப்தர்]

தப்தர்பந்து *taptarpandu,* பெ.(n.) **தப்தரங்கு மாத்தா** பார்க்க (C.G.); see *taptaraṅ-gumāttā.*

தப்தரங்குமாத்தா *taptaraṅkumāttā,* பெ.(n.) ஆவணங்களைப் பாதுகாத்துப் பேணும் உதவியாளர்; record keeper.

[Persn. daftar+gumasta> த. தப்தரங்குமாத்தா]

தப்தில் *taptil,* பெ.(n.) மாறுகை (C.G.); change, alteration, substitution.

தப்பீக் *tappīk,* பெ.(n.) ஊரில் பொது குடிகளுக்கேனும் மானியம் மிகுதியாகக் கொண்டவர்களுக்கேனும் அலுவலர்கள் இடும் வரி (R.T.); extra contribution imposed by the village officers on all the villagers or on those who hold a greater portion of the rent-free lands.

தப்புதோத்திரம் *tappu-tōttiram,* பெ.(n.) முகமன் (முகத்துதி) (இ.வ.); flattery.

தப்ரீக் *taprīk,* பெ.(n.) சிற்றூர் அலுவலரால் சிற்றூருக்கு வரையறு (விதி)க்கப்படும் அதிகவரி; any extra contribution which the village officers, suomoto, used to impose on the villagers.

தபசில் *tapasil,* பெ.(n.) **தப்சீல்** பார்க்க; see *tapsil.*

[Ar. tafsil > த. தபசில்]

தபசுநாள்சுத்தபோசனம் *tapašu-nāḷ-cutta-pōšaṇam,* பெ.(n.) தவசுநாளிற் கொள்ளும் நோன்பு (விரதம்); lent fast.

தபதி *tapadi,* பெ.(n.) சிற்பி, கம்மியன்(பிங்.); sculptor, statuary. *"தபதியர் யாவரும் வியந்தார்" (பாரத. இந்திர. 12).*

[Skt. sthapati > ஸ்தபதி > த. தபதி]

தபநதநயை *tapanatanayai,* பெ.(n.) வன்னி மரம்; the suma tree. (சா.அக.)

தபம்பண்ணல் *tabampaṇṇal,* பெ.(n.) தவம் மேற்கொள்ளல் (தவசு பண்ணுதல்); leading an anstre life, to make penance. (சா.அக.)

[தவி > தவம் > Skt. tapas > த. தபம்]

தபலா *tabalā,* பெ.(n.) **தபளா** பார்க்க (இ.வ.); see *tabaḷā.*

தபலை *tapalai,* பெ.(n.) ஏனவகை; a kind of metal vessel. "தம்பிக்கை யென்றுந் தவலையென்றும் (விறலிவிடு 747).

[தவலை > தபலை]

தபளா *tabaḷā,* பெ.(n.) மத்தள வகை (இ.வ.); a kind of tabret.

[Ar. tabal > த. தபளா]



தபனன் *tapaṉaṉ,* பெ.(n.) 1. கொடுவேலி; plumbago. 2. நெருப்பு; fire. 3. கதிரவன்; sun. (சா.அக.)

தபா *tabā,* பெ.(n.) தடவை; time, occasion, turn. *'இரண்டு தபா வந்து போனான்'. (இ.வ.).*

த.வ. தடவை

[Ar. dafa > த. தபா]

தபாக்கினி *tapā-k-kiṉi,* பெ.(n.) **தபோக்கினி** (வின்.) பார்க்க; see *tapōkkiṉi.*

தபாகா *tapākā,* பெ.(n.) அரிசி; topioca. (சா.அக.)

தபாத்தியம் *tabāttiyam,* பெ.(n.) மாரிகாலம்; rainy season. (சா.அக.)

தபாது *tabātu,* பெ.(n.) **தபாவத்து** பார்க்க (வின்.); see *tabāvattu.* 2. தவறு (யாழ்.அக.); mistake.

தபாய்-த்தல் *tapāy-,* செ.கு.வி.(v.i.) 1. ஏமாற்றுதல்; to deceive. 2. **சதாய்** பார்க்க (இ.வ.); see *sadāy.*

தபால் *tabāl,* பெ.(n.) 1. அஞ்சல்; post, mail, tapal. 2. கெடி; regular stopping-place in route, stage.

[U. tappāl > த. தபால்]

தபால்மாடு *tabāl-māḍu,* பெ.(n.) பயண வண்டிக்குரிய கெடிமாடு; relay of bullocks, as in journey by stage.

[U. tappāl > த. தபால் + மாடு]

தபால்வண்டி *tabāl-vaṇḍi,* பெ.(n.) கெடிவைத்துச் செல்லும் பயண வண்டி (இ.வ.); stage-coach.

த.வ. எல்லை அஞ்சல் வண்டி

[U. tappāl > த. தபால் + வண்டி]

தபாலதிபர் *tabāladibar,* பெ.(n.) (இலங்.) அஞ்சல் நிலைய அதிகாரி; postmaster.

[U. tappāl > த. தபால் + அதிபர்]

தபாவத்து *tapāvattu,* பெ.(n.) ஏமாற்றுகை; cheating, defrauding (C.G.).

தபாற்கட்டளை *tabāṟ-kaṭṭaḷai,* பெ.(n.) (இலங்.) அஞ்சல் ஆணை; postal order.

[U. tappāl > த. தபால் + கட்டளை]

தபாற்காரன் *tabāṟ-kāraṉ,* பெ.(n.) 1. கடிதத்தை அஞ்சலிற் கொண்டு செல்லுவோன். 2. அஞ்சல் (தபாற்) கடிதங் கொடுப்போன்; postman.

த.வ. அஞ்சலன்

[U. tappāl > த. தபால்+காரன்]

தபானாக்கினி *tapāṉā-k-kiṉi,* பெ.(n.) செங்கொட்டை; marking nut. (சா.அக.)

தபிலா *tabilā,* பெ.(n.) **தபளா** (இ.வ.) பார்க்க; see *tapaḷā.*

தபேதார் *tapēdār,* பெ.(n.) தலைமை ஏவலாள்; head peon.

த.வ. முதன்மை ஏவலர்

[Persn. daftardār > த. தபேதார்]

தபேலா *tabēlā,* பெ.(n.) விரல்களாலும் உள்ளங்கையாலும் தட்டி வாசிக்கப்படும் அரைக்கோள வடிவில் ஒன்றும் நீள் உருளை வடிவில் ஒன்றுமாக அமைந்த இசைக் கருவி; tabla. *'தமிழ்த் திரைப்படங்களில் தபேலாவைக் கொண்டு இசைக்கப்பட்ட பாடல்கள் இன்றும், என்றும் கேட்பதற்கு இனிமையாக இருக்கும்?'*

[Ar. tabal > த. தபேலா]

தபோக்கினி *tabōkkiṉi,* பெ.(n.) 1. தவத்தால் தோன்றும் கனல்; fire of austere penance. 2. தவஞ் செய்தற்கு வளர்க்கும் தீ; fire kindled for doing penance.

[Skt. tapōgni > த. தபோக்கினி]

தபோயக்கியம் *tabōyakkiyam,* பெ.(n.) ஐவகை வேள்விகளுளொன்று (சிவதரு. ஐவகை, 1, உரை); one of pañja-yāgam.

தபோவனம் *tabōvaṉam,* பெ.(n.) தவம் செய்யும் காடு; forest where ascetics

perform penance. *'அம்முனிப் பெருங் கடவுளுந் தபோவன மடைந்தனன்' (பாரத. சம்ப. 30).*

[த. தவ > Skt. tapō-vana > த. தபோவனம்]

தம் *tam,* பெ.(n.) 1. மூச்சடக்குகை; holding the breath. 2. மூச்சு; breath. "அவன் தம் பிடிக்கிறான்".

தம்பதி *tambadi,* பெ.(n.) கணவனும் மனைவியும் (சூடா.); Wedded couple, husband and wife.

த.வ. இணையர்

[Skt. dampati > த. தம்பதி]

தம்பவகம் *tambavagam,* பெ.(n.) விலாமிச்சை வேர்; lime tree root. (சா.அக.)

தம்பனக்குளிகை[1] *tambaṉa-k-kuḻigai,* பெ.(n.) புணர்ச்சியின் போது உயிர்ப்புச் சத்துக் கூடவும் வீணாக விந்து ஒழுகுவதைத் தடுக்கவும் குங்குமப்பூ, அபினி, அரத்திப் பழம் (ஆப்பிள்) விதை ஆகியவற்றுடன் சாதிக்காயைச் சேர்த்து தேன் விட்டு அரைத்து மாலை ஆறுமணிக்குச் சாப்பிடக் கொடுக்கும் கடலை யளவு மாத்திரை; a Bengal gram size pill made of suffron, opium, seed of apple nutmug grind with honey and is given during being six 'o' clock to increase the vitality, consolidate the semen and prevent it from flowing out during intercourse. (சா.அக.)

த.வ. கட்டு குளிகை

[Skt. tambaṉa > த. தம்பனம் + குளிகை]

தம்பனக்குளிகை[2] *tambaṉa-k-kuḻigai,* பெ.(n.) துமுக்கி (துப்பாக்கி) அல்லது குண்டடி கத்தி வெட்டுக் காயங்களுக்கும் உடம்பு இடங் கொடாது இருக்க வேண்டியும் வானத்தில் அசைவற நிறுத்தச் செய்யவும் பயன்படுத்தும் ஒரு வகை மாத்திரை; a kind of magical pill by which the body is made a proof to gun shot wounds, to render impenetrable to kinfe cut etc., so as not to sustain any injury on the body and it also enables one to remain motionless in the region of the sky. (சா.அக.)

தம்பி-த்தல் *tambi-,* செ.குன்றாவி.(v.t.) வளி (வாயு) அல்லது மூச்சை அடக்குதல்; to suppress breath or respiration. (சா.அக.)

தம்பிக்கச்செய்தல் *tambikka-c-ceydal,* பெ.(n.) 1. அசைவறச் செய்தல்; causing to become motion less. 2. நிறுத்துதல்; causing to stop. 3. நெருப்பிற்கு ஓடாமற்படிச் செய்தல்; causing a body not to evaporate before fire. 4. வாயு நிறுத்தல்; stopping the respiration. (சா.அக.)

[Skt. stambh > த. தம்பிக்க + செய்தல்]

தம்போலி *tambōli,* பெ.(n.) வச்சிரப்படை (ஆயுதம்) (சங்.அக.); thunderbolt.

தம்மத்திகாயம் *tammattikāyam,* பெ.(n.) ஐவகை (பஞ்சாத்திரம்) மறைப்பொருள்களுள் மீனுக்கு நீர்போல உயிரினது கமனத்துக்குச் சாதனமான (திரவியம்) பொருள்; (Jaina) that which helps the Jiva associated with pudgala or matter to progress, just as water helps on the movement of a fish, one of *pañcāstikāyam.*

தமனியமாக்கல் *tamaṉiyamākkal,* பெ.(n.) பொன்னாக்கல்; making into gold. (சா.அக.)

தமாம் *tamām,* பெ.(n.) முழுவதும் (வின்.); whole, entireness, completeness.

[U. tamām > த. தமாம்]

தமான் *tamāṉ,* பெ.(n.) 1. காற்சட்டை; longtrousers. 2. மூர் என்னுஞ் வகுப்பார் அணியும் அங்கி வகை (வின்.); a kind of cloak worn by moors.

[U. tamān > த. தமான்]

தமாசு *tamāsu,* பெ.(n.) சிரிப்பை வரவழைத்தல், நகைச்சுவை; humour, joke. *'அவன்*

எப்போதும் தமாசாகப் பேசிக் கொண்டிருப்பான்?', 'அவர் தமாசு செய்கிறார், புரியவில்லையா?' 2. சிரிப்பூட்டக்கூடிய வகையில் சுவாரசியமாக நிகழ்வது; வேடிக்கை; fun, amusement. *'தமாசு பார்க்க வந்ததைப் போல கூட்டம் அவனைச் சுற்றி நின்றது'.* 3. (−ஆன) விளையாட்டான போக்கியல் அமையும் தன்மை; being playfull, being funny. *'பழகுவதைப் பார்த்துத் தமாசான நபர் என்று நினைத்து ஏமாந்து விடாதே'.*

தமாசாவரி *tamāṣā-vari,* பெ.(n.) கேளிக்கைவரி; entertainment tax.

தமிசிரம் *tamiśiram,* பெ.(n.) 1. இருள்; darkness. 2. குறைவு (யாழ்.அக.); deficiency.

[Skt. tamisra > த. தமிசிரம்]

தமோமணி *tamōmaṇi,* பெ.(n.) மின்மினிப் பூச்சி; firefly. (சா.அக.)

தமோமயம் *tamōmayam,* பெ.(n.) இருளடைந்த மனம்; the mind enveloped with darkness. (சா.அக.)

தமோவிகாரம் *tamōvigāram,* பெ.(n.) நோய்; disease. (சா.அக.)

தயவு *tayavu,* பெ.(n.) 1. அருள்; grace, mercy, compassion. *"கண்டித் தொடையான் தயவுடையான்" (சிவரக. நைமிசா. 47).* 2. அன்பு; love, passion. *"தாசி மேல் வைத்தேன் தயவு நான்" (விறலிவிடு. 106).* 3. இறைப் பற்று; piety. *"உயர் தயவினினையுமவர்" (திருப்போ. சந். பெரியகட். 2:2).* 4. பிறர் கொடை யுள்ளத்துடன் நடப்பதால் கிடைக்கும் ஆதரவு; favour that one wins or receives. *'உங்களுடைய தயவினால் இன்று நல்ல நிலையில் இருக்கிறேன்' (உ.வ.)*

த.வ. கனிவு, அருளிப்பு

[Skt. dayā > த. தயவு]

தயவுதாட்சண்யம் *tayavu-tāṭcaṇyam,* பெ.(n.) ஈவிரக்கம்; pity or consideration.

[Skt. dayā+tāṭcaṇya > த. தயவுதாட்சண்யம்]

தயனியம் *tayaṉiyam,* பெ.(n.) இரங்கத்தக்கது; that which deserves one's pity. *"தயனியக்கவி பாடுவோம்" (தமிழ்நா. 231).*

[Skt. dayaniya > த. தயனியம்]

தயா *tayā,* பெ.(n.) அன்பு, அருள்; love, grace. *"தாயிற் தயாவுடைய தம்பெருமான்" (திருவாச. 13..3).*

[Skt. dayā > த. தயா]

தயாகரம் *tayāgaram,* பெ.(n.) இரக்கம்; pity.

தயாகரன் *tayāgaraṉ,* பெ.(n.) அருளுணர்வு மிக்கவன்; store - house of mercy.

[Skt. dāy+ākara > த. தயாகரன்]

தயாதருமம் *tayā-tarimam,* பெ.(n.) அருளாகிய அறம்; duty of love and mercy towards others. *"அவனுக்குத் தயாதருமத்தை உபதேசஞ் செய்து" (மணிமே. 11: 10 உரை).*

தயாநிதி *tayā-nidi,* பெ.(n.) அருட்செல்வர்; benevolent, merciful. *"இன்னருள் சேர் தயாநிதியே" (திருவாலவா. 24..3).*

தயாபம் *tayābam,* பெ.(n.) அருள் (புதுவை); grace, mercy.

தயாபரன் *tayā-baraṉ,* பெ.(n.) 1. கடவுள் (தயை மிக்கவன்); God, as all merciful. *"தானேயாகிய தயாபரனெம்மிறை" (திரவாச. 2:96).* 2. **தயாசீலன்** பார்க்க; see *tayā-śīlaṉ.*

[Skt. dayāpara > த. தயாபரன்]

தயாபாரமிதை *tayā-bāramidai,* பெ.(n.) அருண் மிகுகையாகிய பாரமிதை (மணிமே. 26, 455, உரை); the transcendental virtue of universal love, one of taca-pāraimitai.

தயார் *tayār,* பெ.(n.) 1. அணியம், ஆயத்தம்; readiness, preparedness. 2. (ஒருவர்)

மனத்தளவில் அல்லது செயல் அளவில் உடனடியாக ஒன்றைச் செய்யத் தகுந்தவாறு இருக்கும் நிலை / (ஒன்று) உடனடியாகப் பயன்படுத்தக்கூடிய அளவில் இருக்கிற நிலை; (state of) preparedness / (kept in) readiness. *'சண்டையை மறந்து அமைதியாகச் செல்ல நான் தயார்', 'வெளியே புறப்படத் தயாராகிவிட்டான்', 'மெழுகு வர்த்தியைத் தயாராக எடுத்து வை, எந்த நேரத்திலும் மின்சாரம் போய் விடலாம்'.*

த.வ. அணியம்

[U. taiyar > த. தயார்]

தயாரி-த்தல் *tayāri-,* செ.குன்றாவி.(v.t.) 1. பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் உருவாக்குதல், உண்டு பண்ணுதல்; to produce, manufacture (goods, articles). *'வண்டிகளுக்கான உதிரிப் பாகங்களை தயாரிக்கும் தொழிற்சாலை', 'காற்றாலை களைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கலாம்',* ' 2. (உணவு) சமைத்தல், குளம்பி(காப்பி), தேநீர் முதலியவை) போடுதல்; to cook (food), make (coffee, etc.). *'பல வகை உணவுகள் நொடியில் தயாரிக்கப்பட்டு விட்டன'.* 3. (கட்டுரை, திட்டம் போன்றவற்றை) எழுதி அல்லது வரைந்து உருவாக்குதல்; to write (a letter, etc.); draw up (a plan, etc.). *'ஒரு கட்டுரை தயாரித்துக் கொண்டிருக்கிறேன்'.*

[U. taiyar > த. தயார் > தயாரி]

தயாரிப்பாளர் *tayārippāḷar,* பெ.(n.) 1. பொருள்களை உருவாக்குபவர், உண்டு பண்ணுபவர்; manufacturer, producer (of goods). *'திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம்'.* 2. திரைப்படம், நாடகம் போன்றவற்றை உருவாக்குவதில் ஆளுவ (நிர்வாக)ப் பொறுப்பையும், பொருட் (நிதிச்) செலவையும் ஏற்பவர்; producer (of a film or play). *'இந்தப் படத்தினால் தயாரிப்பாளருக்குப் பெரும் இழப்பு'.*

த.வ. ஆக்குநர்

[U. taiyar > த. தயார் > தயாரிப்பு + ஆளர்]

தயாரிப்பு *tayārippu,* பெ.(n.) 1. பொருளை உருவாக்கல்; the act of producing or manufacturing. *'இன்றியமையான மருந்துப் பொருள்களின் தயாரிப்புச் செலவு அதிகரித்துவிட்டது'.* 2. உருவாக்கப்பட்ட பொருள்; product. *'எங்கள் நிறுவனத்தின் தயாரிப்புகளை நீங்கள் நம்பி வாங்கலாம்'.* 3. (திரைப்படம், நாடகம் போன்றவற்றை) உருவாக்கும் செயல்; production (of a flim, etc.). *'இந்தத் திரைப்படத்தின் தயாரிப்பில் உதவிய அனைவருக்கும் நன்றி'.*

த.வ. உருவாக்கம், ஆக்கம்

[U. taiyar > த. தயார் > தயாரிப்பு]

தயாவிருத்தி *tayāvirutti,* பெ.(n.) அருளொடு புரியும் செயல்களுள் பிறர்க்குப் பொருள் வரவில் உவப்பு, பிறர் செல்வம் பொறுக்கை, பிறர்செயற் பாட்டிற்கு உடன்படல், தீமைக் கஞ்சல், பிறர் செயற்பாடு முடிக்கவிரைதல், பிறர் ஐயம் தீர்க்கை, நன்மை கடைப்பிடிக்கை, பிறர் துயர்க் கிரங்கல் என்ற எண்வகைச் செயல்கள் அல்லது உயிர்த்தொடர்பான ஏழும் உடம்புத் தொடர்பான ஏழுமான 14 செயல்கள் (களாபாடனம், வியதாகரம் நீர்க்கத தண்டனம், சந்தேக வாரணம், அன்னிய குணசகனம், பரதிருதூனயோகம், பரார்த்த தேவப் பிரார்த்திதம், அன்னம், பானம், அம்பரம், மந்திரம், தாசபாலனம், காராமயத்திரித மோசனம், சவச்சேமம்); acts of beneficence eight in number viz. *piṟarkku-p-poruḷ varavil-uvappu, piṟarselvam-poṟukkai, piṟalkarumattiṟkuḍaṉpaḍal, tīmai-k-kañjal, piṟar-karumam muḍikka-viraigai, piṟar aiyantīrkkai, naṉmai-kaḍai-p-piḍikkai, piṟar tuyar-k-kiraṅgal* or 14 in number, seven relating to the soul and seven relating to body, viz. *kaḷāpāḍāṉaṉ, viyatāgaram, nirkkadaṉḍaṉam, sandēgavāraṇam, aṉṉiyaguṇasagaṉav, paratirutuṉayōgam, parārtta dēvappirārttidam, āṉṉam,*

pāṉam, ambaram, mandiram, dāśa pālaṉam, kārāmayattiru dayamōsaṉam, savaccēmam.

[Skt. dayā-vridhi > த. தயாவிருத்தி]

தயாளசிந்தை *tayāḷa-śindai,* பெ.(n.) பரந்த மனப்பான்மை; large heartendness. *'கலைவாணர் மிகுந்த தயாளச்சிந்தை படைத்தவர்' (உ.வ.)*

த.வ. இரக்ககுணம்

தயாளம் *tayāḷam,* பெ.(n.) 1. ஈகம், தாராளம்; liberal. *'அவர் மிகுந்த தயாளகுணம் உடையவர்' (உ.வ.).* 2. பெருந்தன்மை; generosity. *'அவருடைய தயாளத்தைப் பாராட்டாதவர்களே இல்லை' (உ.வ.)*

த.வ. பெருந்தகைமை

[Skt. tayālu > த. தயாளம்]

தயாளன் *tayāḷaṉ,* பெ.(n.) தாராளக் குணம் கொண்டவன்; one who has liberal mind.

[Skt. dayālu > த. தயாளம் > தயாளன்]

தயிலக்காப்பு *tayila-k-kāppu,* பெ.(n.) கடவுள் திருமேனிக்கு எண்ணெய் சாத்துகை (கோயிலொ. 8); smearing an idol with oil.

[Skt. taila > த. தயிலம்+காப்பு]

தயிலகாதனம் *tayila-gādaṉam,* பெ.(n.) நஞ்சு நெய்; ghee prepared with aconite.

தயிலகித்தம் *tayilagittam,* பெ.(n.) பிண்ணாக்கு; oil-cake.

தயிலச்சிக்கல் *tayila-c-cikkal,* பெ.(n.) எண்ணெய் அடியில் தங்கும் கசடு; the deposit found in stagnating oil. (சா.அக.)

த.வ. எண்ணெய்க்கசடு

[Skt. taila > த. தயிலம்+சிக்கல்]

தயிலப்பீப்பிலிகை *tayilappīppiligai,* பெ.(n.) எண்ணெய்ப் பசையுள்ள எறும்பு; oily ant. (சா.அக.)

தயிலபீதம் *tayila-pīdam,* பெ.(n.) அத்திப் பிசின் (மலை.); milk of the fig tree.

[Skt. taila+pīta > த. தயிலபீதம்]

தயிலம் *tayilam,* பெ.(n.) 1. வடித்த மருந் தெண்ணெய் (சூடா.); ointment, medicated oil, balm. 2. எண்ணெய்; oil.

த.வ. நெய்மம்

[Skt. taila > த. தயிலம்]

தயிலம்காய்ச்சு-தல் *tayilam-kāyccu-,* செ.கு.வி. (v.i.) எண்ணெய் உருவாக்கல் (தயாரித்தல்); to prepare medicated oil. (சா.அக.)

[Skt. taila > த. தயிலம் + காய்ச்சு-,]

தயிலம்தேய்-த்தல் *tayilam-tēy-,* செ.கு.வி. (v.i.) நோய் கொண்ட இடத்தை மருந்து எண்ணெயால் உடம்பில் தேய்த்தல்; to rub medicated oil on the affected part of the body. (சா.அக.)

[Skt. taila > த. தயிலம் + தேய்-,]

தயிலமாட்டு-தல் *tayilam-āṭṭu-,* 5 செ.குன்றாவி (v.t.) பிணத்தை எண்ணெயிட்டுக் கெடாமற் காத்தல்; to embalm preserve in medicated oil, as a corpse.

தயிலமாடு-தல் *tayilam-āḍu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. செக்காட்டி எண்ணெயெடுத்தல் (யாழ்.அக.); to extract oil from oil-seeds, in an oil-press. 2. எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல்; to besmear one's body with oil.

[Skt. taila > த. தயிலம் + ஆடு-,]

தயிலமாலி *tayilamāli,* பெ.(n.) எண்ணெய்த் திரி; oil wick. (சா.அக.)

தயிலமிறக்கு-தல் *tayilam-iṟakku-,* 5 செ.கு.வி.(v.i.) பொருள்களினின்று நெய்மம் எடுத்தல்; to extract essence.

[Skt. taila > த. தயிலம் + இறக்கு-,]

தயிலமெடு-த்தல் *tayilameḍu-,* செ.குன்றாவி (v.t.) நிலைத்திணை (தாவரம்) அல்லது தாது வகைகளினின்று எண்ணெய் சாறம் எடுத்தல்; extracting oil from oily substances whether of vegetable or mineral kingdom. (சா.அக.)

[Skt. taila > த. தயிலம் + எடு-,]

தயிலமெரி-த்தல் *tayilam-eri-,* 4 செ.கு.வி. (v.i.) சுடரெண்ணெய் இறக்குதல்; to prepare šuḍareṉṉey. 2. மருந்தெண்ணெய் காய்ச்சுதல்; to heat and prepare medicated oil.

[Skt. taila > த. தயிலம் + எரி-,]

தயிலவருணம் *tayila-varuṇam,* பெ.(n.) தேன்; honey.

தயிலவாரிப்பிரசாதனம் *tayilavāri-p-pirašādaṉam,* பெ.(n.) தேற்றான் கொட்டை; water clearing nut.

தயிலவினையாளன் *tayila-viṉaiyāḷaṉ,* பெ.(n.) செக்கான் (சேக்கிழார் 4 : 36); oil-monger.

[Skt. taila > த. தயிலம் + வினையாளன்]

தயினாத்து *tayiṉāttu,* பெ.(n.) 1. அமர்த்தம்; appointment. 2. ஊழியம்; attendance. *"ஒத்தாசைக்காரன் வீட்டில் தயினாத்துக்கு இரண்டு பேர்" (தாசீல்தார்நா. 13).*

தர்க்கம் *tarkkam,* பெ.(n.) வினாவிடையாக நாடகவரங்கில் பாடும் பாடல்; duet, song in the form of a dialogue, sung alternated by two characters in a play.

[த. தருக்கம் > Skt. tarka > த. தர்க்கம்]

தர்க்கம் *tarkkam,* பெ.(n.) 1. தருக்கம், வாக்குவாதம்; discussion (in the nature of an argument), dispute. *'காலையில் மனைவியோடு சின்ன தர்க்கம்',* 'புதிய நாடக உத்தியைப் பற்றி அவர்களுக்கு இடையே தர்க்கம் நடந்தது'. 2. காரணகாரிய அடிப்படையில் படிப்படியாக தருக்கம் அமைத்து ஒன்றை நிறுவும் முறை; logic.

த.வ. எதிராடல், நேராடல்

[த. தருக்கம் > Skt. tarka > த. தர்க்கம்]

தர்க்கரிதியில் *tarkkarīdiyil,* வி.எ.(adv.) காரணகாரிய அடிப்படையில்; logically.

[Skt. tarka+rīti > த. தர்க்கரீதி]

தர்க்காத்து *tar-k-kāttu,* பெ.(n.) நில முதலிய பெறற் பொருட்டு அரசாங்கத்தார்க்குச் செய்து கொள்ளும் வேண்டுகோள் (விண்ணப்பம்) (R.T.); tender, representation or petition, as for an assignment of land, for the cultivation of land, for farming any brach of the revenue, application, as for an appointment.

த.வ. விழைவு மடல்

[U. darkhāst > த. தர்க்காத்து]

தர்க்காத்துதார் *tar-k-kāttudār,* பெ.(n.) தர்க்காத்துப் பெற மனு கொடுப்போன்; one who applies to Government for assignment of lands, one who makes a darkhast, petitioner.

[U. darkhāst-dār > த. தர்காத்துதார்]

தர்க்காத்துமனு *tarkkāttumaṉu,* பெ.(n.) பயன்படுத்தாத கரம்பு நிலத்தைத் தனக்குக் கொடுக்கும் படி கேட்கும் முறையீடு (விண்ணப்பம்); petition for assignment of waste lands.

[U. darkhast > த. தர்காத்து+மனு]

தர்கா *targā,* பெ.(n.) பள்ளிவாசல்; mosque, shrine of a muhammadan saint, place of religious resort and prayer.

[U. dargāli > த. தர்கா]

தர்க்கி-த்தல் *tarkki-,* செ.குன்றாவி.(v.t.) உரையாடல்; to argue, dispute, discuss.

[த. தருக்கம் > Skt. tarka > த. தர்க்க - தர்க்கி-,]

தர்கியகரம் *tarkiyakaram,* பெ.(n.) உப்பு வாயு; nitrogen. (சா.அக.)

தர்கியசம் *tarkiyasam,* பெ.(n.) நச்சு வளி; a gas unfit for respiration formerly known as nitrogen. (சா.அக.)

தர்க்கியம் *tarkkiyam,* பெ.(n.) பொட்டிலுப்பு; nitre. (சா.அக.)

தர்க்கியாமிலம் *tarkkiyāmilam,* பெ.(n.) வெடியுப்பு எரிநீர்; nitric acid. (சா.அக.)

தர்க்கு *tarkku,* பெ.(n.) புலி; tiger. (சா.அக.)

தர்க்குமயம் *tarkkumayam,* பெ.(n.) நூல் திரிக்கும் ஊசியின் வடிவம்; a pin in the shape of a spindle. (சா.அச.)

தர்ச்சனி *tarccaṉi*, பெ.(n.) சுட்டு விரல்; fore-finger. *"தர்ச்சனி யாதிதனிற் செறிக்க" (சைவச. பொ. 153).*

[Skt. tarjanī > த. தர்ச்சனி]

தர்சசிராத்தம் *tarśaśirāttam*, பெ.(n.) முன்னோரைக் குறித்து காருவாவில் செய்யுஞ் சடங்கு; (Brah.) sraddha performed on new-moon day.

[Skt. darśa+śrādha > த. தர்சசிராத்தம்]

தர்சனம் *tarśaṉam*, பெ.(n.) தரிசனம், பார்க்க; see darišanam.

தர்சனவுண்டியல் *tarsaṉavuṇḍiyal*, பெ.(n.) பார்த்தவுடன் தொகை செலுத்த வேண்டிய உண்டியல்; hundi payable at sight.

தர்ணா[1] *tarṇā*, பெ.(n.) கடன் கொண்டவன், வரி பாக்கிதாரன் இவர்கள் வாயிலில் உட்கார்ந்து கொண்டு அவர் கொடுக்க வேண்டியதை நெருக்கிக் கேட்கை; forcing payment as of a debt, by sitting at the door of a debtor's house.

[U. darānā > த. தர்ணா]

தர்ணா[2] *tarṇā*, பெ.(n.) (அலுவலகத்தின் முன் அல்லது ஒரு பொது இடத்தில் கோரிக்கை களைத் தீர்க்குமாறு கோரி) வழி மறித்து முழக்கம் எழுப்பி நடத்தும் போராட்டம்; மறியல்; picketing. *'தண்ணீர்ச் சிக்கலைத் தீர்க்கக் கோரிச் சாலையில் உட்கார்ந்து பெண்கள் தர்ணா நடத்தினார்கள்'.*

த.வ. மறியல்

தர்தூது *tartūdu*, பெ.(n.) முயற்சி; exertion, endeavour, contrivance. *'அதற்கு வேண்டிய தர்தூது செய்யச் சொல்லியும்'* (P.T.L. 180).

தர்ப்பகெந்தி *tarppakendi*, பெ.(n.) தலைச்சூடு வெள்ளி; an unknown drug said to be capable of binding mercury. (சா.அக.)

தர்ப்பீத்து *tarppittu*, பெ.(n.) 1. பயிற்சி; education practice, training. 2. ஒழுக்கம்; conduct, character. "தர்ப்பீது கெட்டவன்".

[U. tarbiyat > த. தர்ப்பீத்து]

தரளம் *taraḷam*, பெ.(n.) 1. நடுக்கம் (உரி.நி); tremulousness. 2. முத்து (பிங்.); pearl. *"வாரித்தரள நகை செய்து (சிலப்.7,38).* 3. உருட்சி (சூடா.); globularity.

[த. திரள் > Skt. dayāpara > த. தயாபரன்]

தரன் *taraṉ*, பெ.(n.) 1. தரிப்பவன் (கங்காதரன்); one who wears or supports, used as the second member of sanskrit compounds. 2. எண்வசுக்களுள் ஒருவன் (பிங்.); a Vasu, one of a.sta-vacukkal.

[Skt. dhara > த. தரன்]

தரா[1] *tarā*, பெ.(n.) எட்டுப்பாகம் செம்பும் ஐந்து பாகம் காரீயமுங் கலந்த ஒரு மாழை (உலோகம்); alloy of 8 parts of copper to 5 of tin, used for making metal vessels. *"புகழ்தராப் போக்கில்லை" (சினேந்.169).*

தரா[2] *tarā*, பெ.(n.) திராய் (தைலவ.தைல.76); Indian chick weed.

தரா[3] *tarā*, பெ.(n.) பூமி (தராபதி); earth.

[Skt. dharā > த. தரா]

தரா[4] *tarā*, பெ.(n.) சங்கு (அக.நி.); conch.

[Skt. darā > த. தரா]

தராங்கம் *tarāṅgam*, பெ.(n.) மலை (யாழ்.அக.); mountain.

[Skt. dharā+aṅga > த. தராங்கம்]

தராசம் *tarāśam*, பெ.(n.) 1. வயிரக் குணங்களுள் ஒன்று; a quality in diamonds. *"இலகிய தாரையுஞ் சுத்தியுந் தராசமும்" (சிலப்.14,180,உரை).* 2. மரகதக் குற்றம் எட்டனுள் ஒன்று (சிலப்.14,184,உரை); a plaw in emeralds, one of eight Marakata-k-kuṟṟam.

[Skt. trāsa > த. தராசம்]

தராசு *tarāśu*, பெ.(n.) 1. நிறைகோல்; Balance. "தராசினிறுத்த பின்" (திருமந்.2918). 2. எண்ணூறு பலவளவு; a measure of weight - 800 palams. 3. துலாவிராசி; libra in the zodiac. *4. தாழி (பரணி) (சூடா.);* the second nakṣatra.

[U. tarāzu > த. தராசு]

தராசுக்காசு *tarāśu-k-kāśu*, பெ.(n.) கிழக்கிந்தியா காலத்தில் மும்பை மாநிலத்தில் வழங்கி வந்த செப்பு காசு; old copper coins with the figure of weighing - scales on one side, issued by the east Indian company for use in Bombay.

தராசுக்குண்டு *tarāśu-k-kuṇḍu*, பெ.(n.) நிறைகல்; weight.

[U. tarāzu > த. தராசு+குண்டு]

தராசுக்கொடி *tarāśu-k-koḍi*, பெ.(n.) 1. பெருமருந்து; Indian birthwort. 2. முல்லை; wild jasmine.

தராசுக்கோல் *tarāśu-k-kōl*, பெ.(n.) துலாக்கோல்; beam

[U. tarāzu > த. தராசு+கோல்]

தராசுத்தட்டு *tarāśu-t-taṭṭu*, பெ.(n.) துலாத் தட்டு; scales of a balance.

[U. tarāzu > த. தராசு+தட்டு]

தராதரம்[1] *tarādaram*, பெ.(n.) மலை; mountain. *"கடதராதர நிகர் (இரகு.குலமு.1).*

தராதரம்[2] *tarādaram*, பெ.(n.) ஏற்றத்தாழ்வு; distinction of rank, place, class or other particulars. *"தராதரந்தெரிந்து" (திருவிளை. திருமண.94). 2. நிலைப்பாடு;* status, position.

த.வ. தகுதி

தராப்பு *tarāppu*, பெ.(n.) கப்பலின் வெளியே வைக்கப்பட்டிருக்கும் ஏணி; accommodation ladder.

[Ar. taraf > த. தராப்பு]

தராப்புப்பண்ணு-தல் *tarāppu-paṇṇu-*, செ.குன்றாவி.(v.t.) வைப்பகத்தில் போட்டிருந்த வைப்புப் பொருளைத் திரும்ப வாங்கிக் கொள்ளுதல் (cheṭṭi); to draw from a bank as a deposit.

[E. draw > த. தராப்பு + பண்ணு-,]

தராபதி *tarā-padi*, பெ.(n.) அரசன்; king, ruler. *"இவர்குலத் தராபதி காண்" (கம்பரா. குலமுறை.1).*

[Skt. dhara-pati > த. தராபதி]

தரி[1]-த்தல் *tari-*, பெ.(n.) 11 செ.கு.வி. (v.i.). 1. நிலைபெற்று நிற்றல்; to stop, stand still. தரியாதே ஓடா நின்றது (4.வெ.11. ஆண்பாற்.7,உரை). 2. இருப்புக் கொள்ளுதல்; to abide. "வணிகன் கண்டவன்தரித்து" (கடம்ப.4.இலீலா.53). 3. ஊன்றி நிற்றல்; to stand firm, to be firm. வேர் தரித்திருக்கிறது.

[Skt. dhr > த. தரி-,]

தரி[2]-த்தல் *tari-*, 11 செ.கு.வி. (v.t.) 1. அணிதல்; to invest, put on, as dress, flowers, etc. *"ஆபரணந் தரித்தாள்".* 2. தாங்குதல்; to keep, support, carry. "உமையோர் பாகந் தரித்தானை (தேவா-4442,2). 3. பொறுத்தல்; to bear patiently, endur, "தார்க்குவளை கண்டு தரியா விவன் முகத்துக் கார்க்குவளை. (4.வெ.12.பெண்பாற்.11). 4. அடக்கிக் கொள்ளுதல்; to control. *"மருதரைத் தரியா தேத்துவார்" (தேவா.447,4).* 5. மறவாது உள்ளத்துக் கொள்ளுதல்; to remember, bear in mind. கல்விகளையும் அவற்றின் பொருட் கேள்விகளையுங் கற்றுந் தரித்தும் (சிலப்.9,30,உரை). 6. தாம்பூலம் தின்னுதல்; to chew, as betel. *"தாம்பூலந் தரிக்க வேண்டும்.*

[Skt. dhr > த. தரி-,]

தரிசனம்[1] *tariśaṇam*, பெ.(n.) 1. பார்வை; view, auspicious sight, perception. 2. கண்; eye. 3. தோற்றம்; appearance. 4. தெய்வம் அல்லது பெரியோர்களைக் காண்கை; sight as of a great person, a deity. *"தரிசன முந் தீர்ந்து" (ஞானவா. மாவலி. 48).* 5. கனவு முதலிய தோற்றம் (வின்.); dream, vision, trance, supernatural appearance. 6. கண்ணாடி; mirror, looking-glass. 7. மதக் கொள்கை;

religious doctrine: "நமது தரிசனத்துக் கடியப்பட்டவாற்றால் தேனுண்டலைப் பரிகரிக்க (சிலப், 10, 85, உரை).

த.வ. காட்சி

[Skt. daršana > த. தரிசனம்]

தரிசனம்² *tarišaṉam,* பெ.(n.) நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று; an upaniṣad, one of 108.

[Skt. jābāladaršana > த. தரிசனம்]

தரிசனவேதி *tarišaṉa-vēdi,* பெ.(n.) தாழ்ந்த மாழை (உலோகங்)களை உயர்ந்த மாழை (உலோகங்)களாக மாற்றவல்ல பச்சிலை வகை; an alchemic drug.

[Skt. daršana+bhēdin > த. தரிசனவேதி]

தரிசனாவரணியம் *tarišaṉā-varaṇiyam,* பெ.(n.) எண் குற்றத்துள் உண்மைக் கொள்கையைக் காணவொட்டாமல் தடுக்கும் செயல் (சிலப். 10, 177, உரை); the karma which prevents the vision of the true faith, one of *eṉ-kuṟṟam.* (q.v.).

[Skt. daršanāvaraṇiya > த. தரிசனாவரணியம்]

தரிசனீயம் *tarišaṉiyam,* பெ.(n.) காட்சிக் கினியது; that which is sight-worthy.

[Skt. darsanīya > த. தரிசனீயம்]

தரிசனை *tarišaṉai,* பெ.(n.) 1. காட்சி; sight. 2. அறிகை; understanding. *"பாவனா தரிசனை கருதியுய்த்து" (மணிமே. 30, 258).* 3. கண்ணாடி; mirror.

[Skt. daršana > த. தரிசனை]

தரிசி¹-த்தல் *tariši,* செ.குன்றாவி.(v.t.) கடவுளர், பெரியோர்கள், புண்ணிய விடத்தையுங் காணுதல்; to see behold, to obtain sight, as of an idol a great person a sacred place.

[Skt. dṛs > த. தரிசி-,]

தரிசில் *tarišil,* பெ.(n.) 1. கதப்பைப் புல்லை எரித்ததினாலாகிய சாம்பல் உப்பு; a salt obtained by burning the bearded grass into ashes. 2. உவருப்பு, இரலியுப்பு, இந்துப்பு என்று குழூஉக்குறி (பரிபாஷை)யாக உரோக முனிவன் 200 இல் பாடியுள்ளதும் மூன்று மாதத்தில் பிண்டத்தினின்று உருவாக்கியது மான ஒரு பிண்டமுப்பு; a mystic salt prepared from the foetus of three months by a secret process, it is known by different hidden names as codified in the treatise of Roma Rishi 200. 3. பூநீறு; fuller's earth. 4. மூவுப்பு; the mystic three salts used in alchemy. (சா.அக.)

தரிசு *tarišu,* பெ.(n.) வேளாண்மை செய்யப்படாத நிலம்; land lying waste or follow. "தரிசு கிடந்த தரையை (ஈடு,2,7,4).

த.வ. கரம்பு,

[U. tar > த. தரிசு]

தரித்திரம் *tarittiram,* பெ.(n.) வறுமை (பிங்.); poerty, want, destitution.

[Skt. daridra > த. தரித்திரம்]

தரித்திரம்பிடி-த்தல் *tarittiram-piḍi-,* செ.கு.வி.(v.i.) 1. வறுமையடைதல் (வின்.); to become poor. 2. கறுமியாயிருத்தல் (இ.வ.); to be stingy.

[Skt. daridra > த. தரித்திரம் + பிடி-,]

தரிபீத்செய்-தல் *taribīt-sey-,* செ.குன்றாவி. (v.t.) பழக்குதல்; to train up, as a novice.

[[Skt. taru > த. தரிபீத் + செய்-,]

தரிம்விலா *tarimvilā,* வி.அ.(adv.) இது தொடர்பாய் என்னும் பொருள்படும்படி கடிதத்திலெழுதும் வக்கணை (C.G.83); in this connection, afterwards subsequently, herinafter used in official correspondance to connect the substance of the communication with the salutation with which is usually opens.

[U. darmiyām > த. தரிம்பிலா]

தரியாபத்து *tariyāpattu,* பெ.(n.) 1. உசாவல்; enquiry, investigation. 2. கண்டு பிடிக்கை; discovery, detection. 3. வழக்கு (திருநெல். வழ); dispute.

[U. daryāf > த. தரியாபத்து]

தரியாமை *tariyāmai,* பெ.(n.) கொள்ளாமை, கருப்பந்தாங்காமை; not conceiving as pregnancy. (சா.அக.)

[Skt. dhr > த. தரி] 'ஆ' எ.ம.இ.நி.

தரிப்பு *tarippu,* பெ.(n.) 1. தீர்மானம்; deter mination. 2. தீர்வைப்பட்டியல்; tariff, list or table of duties upon merchandise. (வின்.G.512).

[U. tarif > த. தரிப்பு]

தரு[1] *taru,* பெ.(n.) மரக்கலப்பாய் இறக்குகை; striking of sail.

தரு[2] *taru,* பெ.(n.) 1. மரம்; tree. "தருவனத்துள்" (கம்பரா.கையடைப்.10). 2. கற்பக மரம்; the kar-pakam tree of svarga. "தரு நிலை (மணி.5,114).

[Skt. taru > த. தரு]

தரு[3] *taru,* பெ.(n.) 1. இசைப்பாட்டு வகை (இராமநா.பாலகா); a stage - song in a peculiar metre and tune. 2. ஒரு வகைச் சந்தம் (வின்.); meaningless syllable sung to a tune as an interlude, formed of the letters. த்,ந்,ன் combined with a long or short vowel.

தருசாரம் *taru-sāram,* பெ.(n.) கருப்பூரம் (சங்.அக.). (மரத்தின் சாரமாயுள்ளது); camphor, as the essence of a tree.

[Skt. taru+sāra > த. தருசாரம்]

தருக்கபரிபாசை *tarukka-paripāšai,* பெ.(n.) தருக்க பரிபாசை, பார்க்க; see tarukka-paripācai.

தருக்கல் *tarukkal,* பெ.(n.) 1. ஒரு வகை நாகக்கல்; zinc spar. 2. சூடாலைக் கல்; zinc ore. (சா.அக.)

தருசணி *tarušaṇi,* பெ.(n.) விலைமகள்; prostitute. (சா.அக.)

தருணதை *taruṇadai,* பெ.(n.) 1. கற்றாழை; aloe. 2. மங்கை பருவமுள்ள பெண்; a girl between 12 and 13 years of age. 3. பதினாறு அகவை (வயது) தொடங்கி முப்பது அகவை (வயது) வரையுள்ள பருவப்பெண்; woman's age 16 and 30 years. 4. ஓர் செடி; rosa alba. (சா.அக.)

தருணம் *taruṇam,* பெ.(n.) 1. இளமை; prime of life youthfulness. "தருண வஞ்சிக் கொம்பு" (கம்பரா.தைலமாட்டு). 2. ஏற்ற வேளை; right time, proper season. "வெஞ்சமா தொடர்ந்த தத்தருணமாம் (சங்.அக.); 3. நல்லெண்ணம்; good intention. "தருணங் கெட்டவன்". 4. பெருஞ்சீரகம் (மலை.); chinese anise. 5. ஆமணக்கு (மூ.அ.); castor.

[Skt. taruṇa > த. தருணம்]

தருணன் *taruṇaṉ,* பெ.(n.) இளைஞன்; youth man. *"அறவுந்தருண னறவும்விருத்தன்" (சைவச.ஆசா.16).*

[Skt. taruṇa > த. தருணன்]

தருணி *taruṇi,* பெ.(n.) 1. இளமைப் பருவ முடையவள்; young woman. 2. 16 முதல் 30 ஆண்டு வரையுள்ள மகளிர் பருவம் (திவா.); the period from the 16th to the 30th year in the lifetime of a woman.

தருப்பகசிலேட்டுமம் *taruppaga-silēṭṭumam,* பெ.(n.) உடம்பைக் காப்பாற்ற வேண்டி (அமைந்த) ஐந்து பிரிவாகிய கோழையில் (சிலேட்டுமத்தில்) தலையி (சிரசி)லுள்ள ஒரு பகுதி; one of the five phlegms. (சா.அக.)

தருப்பணம்[1] *taruppaṇam,* பெ.(n.) 1. தேவர் களுக்கும், முனிவர்களுக்கும், முன்னோ ருக்கும் இறுக்கும் நீர்க்கடன்; libations of water to gods, munivars and manes.

2. உணவு; food, refreshment. *"தருப்பணப் பிண்டியும்" (திவா. 11).* 3. அவல்; fried paddy pestled and cleaned. *"கருப்புக் கட்டியொடு தருப்பணங் கூட்டி" (பெருங். உஞ்சைக். 40, 129).*

[Skt. tarpaṇa > த. தருப்பணம்]

தருப்பணம்² *taruppaṇam,* பெ.(n.) கண்ணாடி (பிங்.); mirror.

[Skt. darpaṇa > த. தருப்பணம்]

தருப்பாக்கிரம் *taru-p-pākkiram,* பெ.(n.) தருப்பை நுனி; spike of darbha grass. *"நெய்க்குள்ளே விடுகிற தருப்பாக்கிரத்தை" (சீவக. 2465 உரை).*

[Skt. darbhāgra > த. தருப்பாக்கிரம்]

தருமக்கட்டை *taruma-k-kaṭṭai,* பெ.(n.) 1. பிறர் தருமத்தால் வாழும் ஏதிலியர் (ஆதரவற்றோர்); orphan, as supported by charity. 2. ஆவுரிஞ்சு தறி; rubbing post for cattle, set up as a charity.

[Skt. dharma > த. தருமம்+கட்டை]

தருமக்கல் *taruma-k-kal,* பெ.(n.) ஒருவன் செய்த அறச்செயல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு (இ.வ.); memorial slab inscribed with the charitable deeds of a person.

த.வ. கொடைக்கல்

[Skt. dharma > த. தருமம் + கல்]

தருமக்குரல் *taruma-k-kural,* பெ.(n.) இலவய உணவுக்காக விடுக்கப்படும் பொது அழைப்பு; general call or invitation, as in a free distribution food.

த.வ. அறவிளி

[Skt. dharma > த. தருமம் + குரல்]

தருமக்கொள்ளி *taruma-k-koḷḷi,* பெ.(n.) அறநிலையத்தார் செய்யும் ஈமக்கடன்; cremation, in charity, of a person who dies homeless.

த.வ. அறக்கொள்ளி

[Skt. dharma > த. தருமம் + கொள்ளி]

தருமக்கோள் *taruma-k-kōḷ,* பெ.(n.) மறைமுகமாகச் செய்த குற்றத்தைக் குறிப்பாக வெளிப்படுத்தல் (யாழ்ப்.); indirect information as to a secred crime.

த.வ. அறக்கோள்

[Skt. dharma > த. தருமம் + கோள்]

தருமகருத்தா *taruma-karuttā,* பெ.(n.) 1. அறங்காவலர், திருக்கோயில் ஆட்சித் தலைவர்; manager or trustee of a Hindu temple. 2. அற முரைப்பவர், நீதியரசர் (R.T.); judge, arbitrator, magistrate.

தருமகாரியம் *taruma-kāriyam,* பெ.(n.) அறச்செயல்; act of charity.

[Skt. dharma > த. தருமம் + காரியம்]

தருமச்சேட்டை *taruma-c-cēṭṭai,* பெ.(n.) நெற்களத்தில் ஏழைகட்குக் கொடுக்க வேண்டி முறத்தில் தனியே வைக்கப்பட்டுள்ள கூலம்; corn set apart in a winnowing fan at the threshing - floor to be given to the poor.

[Skt. dharma > த. தருமம் + சேட்டை]

தருமசக்கரம் *taruma-cakkaram,* பெ.(n.) அறவாழி; Buddham and Jaina - the wheel of Dharmam. *"தருமசக்கர முருட்டினன் வருவோன்" (மணிமே. 10.. 26).*

[Skt. dharma > த. தரும(ம்) + சக்கரம்]

தருமசங்கடம் *taruma-saṅgaḍam,* பெ.(n.) மாறுபட்ட இரண்டு கடமைகளுள், எதனை முடிப்பது என்று தெரியாத நிலைமை, அறத் தடுமாற்றம்; difficulty of discerning which of two contradictory duties is proper.

த.வ. இரண்டுங்கெட்டான் நிலை, அறத்தடுமாற்றம்

[Skt. dharma > த. தரும(ம்) + சங்கடம்]

தருமசத்திரம் *taruma-cattiram,* பெ.(n.) **தருமசாலை** பார்க்க; see *taruma-sālai.*

மறுவ. அன்ன சத்திரம்

தருமசபை *taruma-šabai,* பெ.(n.) முறை மன்றம்; council of arbitrators, court of justice, tribunal.

த. அவை > சவை >

[Skt. dharma > த. தருமம் + சபை]

தருமசாட்சி *taruma-sāṭci,* பெ.(n.) அறமன்றத் தாரால் அழைக்கப்பட்டுக் கேட்கப்படும் சான்று (இ.வ.); king's evidence, court witness. 2. அறமகளறியக் கூறுஞ்சாட்சி; testimony given in the name of the Goddess of virtue.

தருமசாதனம் *taruma-šādaṉam,* பெ.(n.) அறச் செயலைக் குறிக்குஞ் செப்புப் பட்டயம்; deed of endowment inscribed on a copper-plate.

த.வ. அறப்பட்டயம்

தருமசாலி *taruma-šāli,* பெ.(n.) அறவோன்; charitable person.

[Skt. dharma > த. தரும(ம்) + சாலி]

தருமசாலை *taruma-šālai,* பெ.(n.) வழிப் போக்கருக்கு இலவயமாக உணவு வழங்கும் சாவடி; rest-house for travellers with free provision for food.

[Skt. dharma > த. தரும(ம்) + சாலை]

தருமசிந்தை *taruma-šindai,* பெ.(n.) அறம் புரியும் எண்ணம்; charitable or virtuous disposition.

த.வ. கொடையுள்ளம்

[Skt. dharma > த. தரும(ம்) + சிந்தை]

தருமசீலன் *taruma-sīlaṉ,* பெ.(n.) **தருமசாலி** பார்க்க; see *taruma-šāli.*

தருமத்தியானம் *taruma-t-tiyāṉam,* பெ.(n.) ஆதனின் இயல்பு, அதன் இன்ப துன்ப உணர்வு; அது நல்வழியடைதலைத் தடுக்கும் தடைகள், அது முடிவில் நிலையாய இன்பத்தை எய்துகை ஆகிய மெய்ப் பொருளைப் பற்றிய உணர்வு; (Jaina.) knowledge of the nature of the soul. its experience of good and evil. the impediments in its progress and its final attainment of enternal bliss.

தருமதாயம் *taruma-dāyam,* பெ.(n.) அறத்திற்காக விடும் இறையிலி நிலம் (W.G.137); inam granted for any charitable purpose; property or funds bequeathed and dedicated to pious uses.

[Skt. dharma > த. தரும + தாயம்]

தருமதானம் *taruma-dāṉam,* பெ.(n.) சமய நடை முறைப்படி செய்யும் கொடை; charity according to prescribed texts. *"எங்கோள் முற்பவத்திற் புண்ணியத்தையுந் தரும தானத்தையுஞ் செய்தோ னாதலின" (சிலப். 15 : 30, உரை).*

[Skt. dharma > த. தருமம்]

தருமதேவதை *taruma-dēvadai,* பெ.(n.) 1. இயக்கி (சூடா.); Jaina Goddess of benevolence. 2. எமன்; Yaman. *"தனைப் பயந்த நற்றரும தேவதை திருவருளால்" (பாரத. நச்சுப். 47).*

[Skt. dharma > த. தரும(ம்) + தேவதை]

தருமநீதி *taruma-nīdi,* பெ.(n.) சட்ட நூல்களில் கூறப்படும் அறம்; justice as based on the legal codes.

த.வ. அறமுறை

தருமநூல் *taruma-nūl,* பெ.(n.) மனு, அத்திரி, விண்டு, வாசிட்டம், யமம், ஆபத்தம்பம், யாஞ்ஞுவற்கியம், பராசரம், ஆங்கிரசம், உசனம், காத்தியாயனம், சம்வர்த்தம், வியாசம், பிரகற்பதி, சங்கலிதம், சாதாதபம், கௌதமம், தக்கம் எனப்பதினெண் வகைப்பட்ட அறநூல் (பிங்.); ancient text books on kind law in Sanskrit 18 in number viz. maṉu, attiri, viṇṭu, vāciṭṭam, yamam, āpattambam, yāññavaṟgiyam, parāsaram, āṅgirasam, usaṉam, kāttiyāyaṉam, samvarttam, viyāsam, piragaṟpati, saṅgalidam, sādādabam, gaudamam, takkam.

த.வ. அறநூல்

[Skt. dharma > த. தரும(ம்) + நூல்]

தருமநூற்பிரிவு *taruma-nūṟ-pirivu,* பெ.(n.) ஆசாரம், விவகாரம், பிராயச்சித்தம் எனத் தரும சாத்திரம் கூறும் மூன்று பகுதிகள்; sections in the legal treatise, numbering three viz. ācāram, vivakāram, pirāyaccittam.

[Skt. dharma > த. தரும(ம்) + நூல்+பிரிவு]

தருமப்பத்தினி *taruma-p-pattini,* பெ.(n.) கணவனோடு உடனிருந்து வைதீகச் செயல் களை நடத்துதற்குரிய இல்லறக்கிழத்தி; legitimate wife entitled to take part along with her husband in all rituals.

தருமப்பிரபு *taruma-p-pirabu,* பெ.(n.) மிகுதியாக அறம் புரிவோன்; benefactor benevolent lord.

தருமப்பிள்ளை *taruma-p-piḷḷai,* பெ.(n.) கழைக் கூத்தரின் வளர்ப்புப் பிள்ளை (வின்.); one brought up by public charity in the profession of pole-dancing.

[Skt. dharma > த. தருமம் + பிள்ளை]

தருமபீடிகை *taruma-pīḍigai,* பெ.(n.) புத்தரது இணையடி அமைந்த இருக்கை-மேடை; pedestal bearing Buddha's feet, worshipped in many places. *"புரையோ ரேத்துந் தரும பீடிகை தோன்றியது (மணிமே. 8 : 63).*

[Skt. dharma> த. தரும(ம்) + பீடிகை]

தருமபுத்திரன் *taruma-puttiraṉ,* பெ.(n.) 1. மாபாரதக் கதையில் பாண்டவர்களுள் மூத்தவன்; the eldest of the pāṇḍavās of Mahābāratham. 2. முறைப்படி மணந்து கொண்ட மனைவியின் மகன்; lawful son, son of legally wedded wife.

[Skt. dharma > த. தரும + புத்திரன்]

தருமபுரம் *taruma-puram,* பெ.(n.) 1. கூற்றுவன் நகர்; city of yamaṉ. 2. தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் இருக்கும் புகழ்மிக்க சிவமடமுள்ள ஒரு சோணாட்டு ஊர்; a Šiva shrine near Mayilāḍuturai, Thañjāvūr district, famous for šaiva mutt.

[Skt. dharma > த. தரும + புரம்]

தருமம் *tarumam,* பெ.(n.) 1. நற்செயல் (பிங்.); virtuous deed. 2. விதி (உரி.நி.); statute, ordinance law, sacred law. 3. தருமநூல் (உரி.நி.) பார்க்க; see tarumanūl. 4. ஒழுக்கம் (உரி.நி.); usage, practice, customary observance or prescribed conduct. 5. கடமை; duty. 6. நீதி; justice, righteousness. "பொருந்து மென்கை தருமமோ" (பாரத.சூதுபோர்.186). 7. தான முதலிய அறம்; charity, benevolence.

தருமமன்று *taruma-maṉṟu,* பெ.(n.) அற (நீதி) மன்றம்; court of justice. *"ஓரடியிடாமற் றடுத்து வா தரும மன்றுள்" (திருவாலவா. 41, 10).*

த.வ. அறமன்றம்

[Škt. dharma > த.தரும + மன்று]

தருமமுதல்வன் *taruma-mudalvaṉ,* பெ.(n.) அருகக் கடவுள்; Arhat. *"சித்தன் பகவன் தரும முதல்வன்" (சிலப். 10 : 178).*

[Škt. dharma> த.தரும + முதல்வன்]

தருமமூர்த்தி *taruma-mūrtti,* பெ.(n.) அறமே உருவானவன்; embodiment of dharma. *"நந்தமாலவாய்த் தரும மூர்த்தி" (திருவாலவா. 20, 8).*

தருமராசன் *taruma-rāšaṉ,* பெ.(n.) 1. தருமன் (சூடா.) பார்க்க; see tarumaṉ. *"விண்ணிடைத் தருமராசன் விரும்பினால் விலக்குவாரார்" (தேவா. 523 : 2).* 2. பாலை (மலை.); silvery-leaved ape flower.

தருமவாகனன் *taruma-vāgaṉaṉ,* பெ.(n.) தரும வடிவான காளையை, ஊர்தியாகக் கொண்ட சிவன் (யாழ்.அக.); Šivaṉ, as riding on bull which is Tarumam personified.

தருமவாசனம் *taruma-v-āsaṉam,* பெ.(n.) முறை மன்றம்; court. *"தருமவா, சனத்திலேற" (திருவாலவா. 41, 13).*

தருமவாடி *taruma-vāḍi,* பெ.(n.) ஈகைக் கூடம்; place in which alms are given.

[Skt. dharma > த. தரும + வாடி]

தருமவான் *taruma-vāṉ,* பெ.(n.) அற நோக்குடையோன்; charitable and virtuous man. *"தணிகைவாழ் தருமவானையே" (அருட்பா.5, பணித்திறஞ் சாலாமை, 1).*

தருமவினைஞர் *taruma-viṉaiñar,* பெ.(n.) அறப்புறங்களை மேற்பார்க்கும் அரசு அலுவலர்கள்; officers in charge of charities. *"தரும வினைஞருந் தந்திர வினைஞரும்" (சிலப். 26 : 41).*

[தரும(ம்) + வினைஞர்]

வினை > வினைஞர்.

தருமவுபாயம் *taruma-v-ubāyam,* பெ.(n.) கொடுத்த கடனை வாங்கும் பொருட்டுக் கடன்காரன் வீட்டு வாயிலிற் பழிகிடக்கும் முறைமை; dharma a mode of extorting payment or complainant or creditor sitting at the debetors door and there remaining without tasting food till his demand shall be complied with (R.F.).

த.வ. அறப்பாடு

தருமவைத்தியசாலை *taruma-vaittiya-sālai,* பெ.(n.) இலவய மருத்துவமனை, பணமின்றி மருத்துவம் செய்யுமிடம்; hospital of free dispensory.

த.வ. அறமருத்துவச்சாலை

[Skt.dharma+vaidya>த. தருமவைத்திய(ம்) +சாலை]

[த. சாலை > Skt.சாலா]

தருமவைத்தியம் *taruma-vaittiyam,* பெ.(n.) பணம் வாங்காது இலவயமாச் செய்யும் மருத்துவம்; free medical treatment. (சா.அக.).

[Skt.dharma+vaidya>த. தருமவைத்தியம்]

தருமன் *tarumaṉ,* பெ.(n.) 1. அறக் கடவுள்; God of justice and righteousness. *"தருமன் றண்ணளியால்" (சீவக. 160).* 2. காலன் (எமன்) (பிங்.); yamaṉ. *"தருமனு மடங்கலும்" (பரிபா. 2.).* 3. பாண்டவர்களுள் மூத்தவன்; elder brother of Pāndavars. *"தருமனித்தனை நாட்செய்த தருமமும் பொய்யோ" (பாரத. சூது. 191).* 4. புத்தன் (பிங்.); Buddhan. 5. அருகன்; Arhat. *"தருமன் பொருளன்" (சிலப். 10 : 178).* 6. திருக்குறளுரை காரருள் ஒருவர்; one of the commentators on kuṟal. *"தருமர் மணக்குடவர்" (தனிப்பா.)*

[Skt. dharma > த. தரும]

தருமாசனத்தார் *tarumā-šaṉattār,* பெ.(n.) நடுவர்கள்; judges. *"அறங்கூறுந் தருமா சனத்தார் உரைக்கும் நடுவு நிலைமை" (சிலப். 5 : 135, உரை).*

த.வ. அறங்கூறு அவையத்தார்

தருமாத்திகாயம் *tarumāttigāyam,* பெ.(n.) அறவழி நடக்கத் தேவையான பொருள்; money required to live in the righteous way. *"தருமாததி காயந் தானெங்கு முளதாய்" (மணிமே. 27 : 187).*

தருமி *tarumi,* பெ.(n.) கொடையாளி, புரவலன்; munificence person.

[Skt. dharmi(n) > த. தருமி]

தரோகா *tarōkā,* பெ.(n.) பொய்; falsehood.

த.வ. இரண்டகம்

[U. darōgh > த. தரோகா]

தல்லால் *tallāl,* பெ.(n.) தரகுக்காரன்; broker, intermediary.

தலவகாரம் *talavakāram,* பெ.(n.) சாமவேத உட்பிரிவு (சாகை)களுள் ஒன்று; a reseension

of the *sānma-vēda. "தலவகார சரணத்தார்க்கு" (T.A.S.I.S, 3).*

தலாக் *talāk,* பெ.(n.) மனைவியை விலக்குகை (நிராகரிக்கை) (முகமதிய); divorce.

[U. talāq > த. தலாக்]

தலாசி *talāşi,* பெ.(n.) உசாவல் (விசாரணை) (C.G.); enquiry, detection.

தலாயத்து *talāyattu,* பெ.(n.) வில்லைச் சேவகன்; liveried attendant, peon.

தலால் *talāl,* பெ.(n.) தரகன் (C.G.); broker.

[U. dallāl > த. தலால்]

தலாலி *talāli,* பெ.(n.) தரகு; brokerage.

[U. dallāli > த. தலாலி]

தவளம் *tavaḷam,* பெ.(n.) 1. வெள்ளைக் கோடா சூரி; a virulent type of arsenic. 2. பற்பம்; calcined powder. 3. வெள்ளைக் கரு; white of the egg albumin. 4. சாம்பல் நிறம்; ash colour. (சா.அக.)

தளகர்த்தர் *taḷakarttar,* பெ.(n.) தளபதி; general (of an army). *"இராணுவத்தில் தளகர்த்தர் முக்கிய முடிவுகளை எடுப்பதுண்டு".*

த.வ. படைத்தலைவர்

தற்காலம் *taṟ-kālam,* பெ.(n.) 1. நிகழ்காலம்; present time. "தற்காலமதை நோவனோ". (தாயு.பரிபூரண.7). 2. குறித்த காலம்; exact or precise time of an action or occurrence.

த.வ. இற்றைக்காலம்

[Skt. tat-kāla > த. தற்காலம்]

தற்சமயம்[1] *taṟ-šamayam,* பெ.(n.) 1. குறித்த வேளை (வின்.); particular juncture, exact moment required. 2. உற்ற வேளை (சங்.அக.); best opportunity favourable juncture.

த.வ. இற்றைப்பொழுது, இவ்வேளை

தற்சமயம்[2] *taṟ-šamayam,* வி.எ..(adv.) இப்பொழுது; at present.

தற்சனி *taṟ-caṉi,* பெ.(n.) சுட்டுவிரல்; fore finger. "சிறுவிர றன்னி னின்றுந் தற்சனியளவும்" (காசிக.சிவச.அக்கினி 22).

[Skt. tarjani > த. தற்சனி]

தற்புருடம் *taṟpuruḍam,* பெ.(n.) சிவனைம் முகத்துள் கிழக்கு நோக்கியிருப்பது (சைவச.பொது.334); a face of šiva which is turned eastward, one of civaṉ-ai-m-mukam.

தன்மவாரியப்பெருமக்கள் *taṉma-vāriya-p-perumakkaḷ,* பெ.(n.) அறநிலையங்களை மேற்பார்வைப் பார்க்கும் அவையோர் (S.I.I.iii.10). Officers of incharge of charities.

தன்மவிசேடவிபரீதசாதனம் *taṉma-višēḍa-vibarīda-šādaṉam,* பெ.(n.) விருத்த வேதப்போலி நான்கனுள் கூறப்பட்ட ஏது, பக்கத்தின் விசேடத்தன்மையைக் குறிக்காது அதனை வியாபகப் பொருளென்று தவறி நினைக்குமாறு செய்வது (மணிமே. 29, 277); a fallacious middle term which fails to denote the particular quality of the minor term so as to make it appear to belong to a spicies of wider denotation, one of four *virutta-v-ētu-p-pōli.*

தன்மிச்சொரூபவிபரீதசாதனம் *taṉmi-c-corūba-vibarīda-šādaṉam,* பெ.(n.) விருத்த வேதப்போலி நான்கனுள் கூறப்பட்ட ஏது, பக்கத்தில் ஒருபோதும் இல்லாமிருப்பது (மணிமே. 29, 278); a fallacious middle term which does not at all exist in the minor term, one of four virutta-v-ēta-p-pōli.

தன்மிட்டன் *taṉmiṭṭaṉ,* பெ.(n.) 1. நன்னெறியில் நிற்பவன்; virtuous person. *"தன்மிட்ட னாயவந்த யயாதிக்கு" (உத்தரரா. இலவண.*

33). 2. கொடை மனமுள்ளவன் (கொ.வ.); charitable person.

தன்மிவிசேடவிபரீதசாதனம் *tanmi-viśēda-vibarīda-śādanam,* பெ.(n.) விருத்த வேதப்போலி நான்களுள் கூறப்பட்ட ஏது, பக்கத்தின் விசேடத்தன்மையைக் குறிக்காது அதனை வியாப்பியப் பொருளென்று தவறி நினைக்குமாறு செய்வது (மணிமே. 29, 279); a fallacious middle term which fails to denote the particular quality of the minor term and restricts its denotation, one of four virutta-ēdu-p-pōli.

தன்யன் *tanyan,* பெ.(n.) நல்வினையாளன், பேற்றாளன்; fortunate person.

தன்யாசி *tanyāśi,* பெ.(n.) **தன்னியாசி** பார்க்க; see *tanniyāśi.*

தன்மாதிகாயம் *tanmādikāyam,* பெ.(n.) ஆன்மாவானது நல்வினை தீவினைக்கு ஏற்றாற் போல் மரணத்திற்குப் பிறகு தானே மாற்றிக் கொண்ட உடம்பு; the body assumed by the soul of its own accord suitable to the past karma the death of its previous body. (சா.அக.)

தன்யம் *tanyam,* பெ.(n.) பெண் முலை; female breast. (சா.அக.)

தன்வந்தரி *tanvandari,* பெ.(n.) தேவ மருத்துவன்; the physician of the gods. "தன்வந்தரி பகவான் உருவமாகி நல் லமுதுறை கடத்தொடு முதித்தான்" (பாகவத.மாயவ.30).

தன்வந்தரிமால் *tanvandari-māl,* பெ.(n.) மருத்துவமனை; hospital. "அரமனைத் தன்வந்தரிமால் வைத்தியருள்" (தஞ்.சர.iii.88).

தன்னியாசி *tanniyāśi,* பெ.(n.) ஒரு வகை அராகம் (பரத.இராக.56); a specific melody type.

[Skt. dhanāśrī > த. தன்னியாசி]

தனசுதானம் *tana-śudānam,* பெ.(n.) பிறப்பியத்தின்படி பிறப்பு ஓரையிலிருந்து இரண்டாம் இடமாகிய செல்வத்தைக் குறிக்குமிடம்; second house from the ascendant, as indicating wealth (Astrol.)

[Skt. dhana+sthāna > த. தனசுதானம்.]

தனதன் *tanadan,* பெ. (n.) 1. குபேரன் (செல்வந்தன்); kubera (திவா.). 2. ஈகையாளன்; liberal person (w.).

[Skt. dhana-da > த. தனதன்.]

தனநிசேபம் *tana-niśēbam,* பெ.(n.) ஏழு செல்வங்களுள் ஒன்றை மண்ணுக்கடியில் புதைத்து வைத்தல்; storing treasure under earth, one of *capta-cantānam* (q.v.).

[Skt. dhana-ni-kṣēpa > த. தனநிசேபம்.]

தனபாரம் *tanabāram,* பெ.(n.) கொங்கைச் சுமை; breast-weight, well-developed breast. *"அதிபார தனபார வதிரூப மலர்மானை யனையாய்" (அரிச்.பு. விவாக. 218).*

[Skt. stana+bhāra > த. தனபாரம்.]

தனம்¹ *tanam,* பெ.(n.) 1. செல்வம் (வின்.); wealth, property, substance. 2. பொன் (பிங்.); gold. 3. முத்திரை; seal. 4. உத்திரம்; beam across roofing. 5. கூட்டற்கணக்கு; addition.

[Skt. stana > த. தனம்.]

தனம்² *tanam,* பெ.(n.) முலை; woman's breast. "அரும்பெருந் தனத்தை வேட்டாண் டின வளை "விற்பான் வந்தோன்" (திருவாலவா.23,15).

[Skt. stana > த. தனம்.]

தனரோகம் *tana-rōgam,* பெ.(n.) பால் வழியும் துளைகள் அடைப்பட்டு அதனால் ஏற்படும் நோய்; a disease in which the milk carrying ducts remain closed in the breast of a multipara, a disease of the mammary gland (சா.அக.).

[Skt. stana+rōga > த. தனரோகம்.]

தனலட்சுமி *tana-lāṭcumi,* பெ.(n.) செல்வமாகிய திரு; goddess of wealth.

[Skt. dhana+laksmi > த. தனலட்சுமி.]

தனவான் *tanavān,* பெ.(n.) செல்வன்; wealthy man. "நெடிய தனவானாத லரிது (அறப்சத.)

[Skt. dhana-vān > த. தனவான்.]

தனவிபாகம் *tanavibāgam,* பெ.(n.) கீழ்வாய் இலக்கக் கூறுபாடு; metric analysis (சா.அக.).

தனாதிபதி *tanādipadi,* பெ.(n.) **தனவான்** (வின்.) பார்க்க; see *tanavān.*

[Skt. dhana+adhi+pati> த. தனாதிபதி.]

தனாபியம் *tanābiyam,* பெ. (n.) பெருமுன்னை; broad leaved premna-premna latifolia (சா.அக.).

தனிகம் *tanigam,* பெ.(n.) **தனிகா** (மலை.) பார்க்க; see *tanigā.*

[Skt. dhanikā > த. தனிகம்.]

தனிகன் *tanikan,* பெ.(n.) செல்வன் (இ.வ.); rich man (colloq.).

[Skt. dhanika > த. தனிகன்.]

தனிகா *tanikā,* பெ.(n.) **கொத்தமல்லி**

[Skt. dhanikā > த. தனிகா.]

தனிட்டாபஞ்சமி *taniṭṭā-pañjami,* பெ.(n.) தாம் நிலவொடு கூடியிருக்குங்கால் ஒரு வீட்டில் மரணம் நேர்ந்தால் பின்னர் அங்கு வாழ்வார்க்குத் தீங்கு விளைப்பனவாகக் கருதப்படும் அவிட்டம் முதலிய ஐந்து நாண்மீன்கள்; five stars commencing from aviṭṭam, believed to portend further evil to the occupants of a house, if death occurs when the moon is in conjunction with any one of them.

[Skt. dhanisthā+pancami >த.தனிட்டா பஞ்சமி.]

தனுசநாசினி *tanuśa-nāśini,* பெ.(n.) நஞ்சுக் கடியைக் குணப்படுத்தல்; curing poisonous bite or sting. 2. ஒரு பூச்சி; a kind of insect (சா.அக.).

தனுசம் *tanuśam,* பெ.(n.) 1. பாம்புக் கடிவாய்; the spot bitten by a snake. 2. கொட்டும் பூச்சி; stinging insect. 3. ஆடுமாடுகளைக் கடிக்கும் ஈ; gad fly. 4. உடம்பு மூட்டு; joint of the body (சா.அக.).

தனுசமூலம் *tanuśa-mūlam,* பெ.(n.) 1. காரவேர்; pungent root. 2. முருங்கை மரம்; drum stick tree (சா.அக.).

தனுசன்[1] *tanuśan,* பெ.(n.) மகன்; son (வின்.).

[Skt. tanu-ja > த. தனுசன்.]

தனுசன்[2] *tanusan,* பெ.(n.) அசுரன் (தனுவினிடம் தோன்றியவன்); *Asura,* as descended from *Danu.* *"சம்புவன் சம்பு மாலியெனும் பெயர்த்தனுசர் தம்மை" (பாரத.நிவாத.27).*

[Skt. dhanu-ja > த. தனுசன்.]

தனுசு *tanuśu,* பெ.(n.) **தனு**[3] பார்க்க; see *tanu.*

[Skt. dhanus > த. தனுசு.]

தனுசுகோடி *tanuśu-kōḍi,* பெ.(n.) இராமேசுவரத்திற்குத் தென்கிழக்காக நீண்ட தரைமுனையிலுள்ள புகழ்பெற்ற தூயநீராடும் துறைகள்; the promontory in the south-east of and the bay enclosed thereby, being one of the most sacred places in India.

த.வ. கோடிக்கரை

[Skt. dhanus > த. தனுசு+கோடி.]

தனுசோணிதம் *tanu-šōṇidam,* பெ.(n.) மருளூமத்தை; burrweed xanthium orientale (சா.அக.).

தனுட்டிரதந்தம் *tanuṭṭira-tantam,* பெ.(n.) பன்றிக்கொம்பு; hog's horn (சா.அக.).

தனுட்டிரம் *tanuṭṭiram,* பெ.(n.) பெரிய பல்; large tooth (சா.அக.).

தனுட்டிரவிடம் *tanuṭṭira-viḍam,* பெ.(n.) பல்லின் நஞ்சு; venom in the teeth of a lizard (சா.அக.).

தனுத்தம்பவாதம் *tanuttambavādam,* பெ. (n.) உடம்பை வில்லைப் போல் வளைக்கும் ஓர் வகை ஊதை வலிப்பு, இது வளியினால் உடம்பை உள்ளாகவும் வெளிப்புறமாகவும் வளைக்கும், ஆகவே, இது பின்னிசிவு, முன்னிசிவு என இரு வகைப்படும்; a form of tetanic spasm or spasmatic contraction in which the enraged vayu bends the body like a bow, it consists of two different types according to the bending of the body of the patient internally (forwards) or externally (backwards). If internally it is known as empros-thotomus and if externally opisthotomus (சா.அக.).

தனுப்பாடாணம் *tanu-p-pāḍāṇam,* பெ.(n.) வைப்பு நஞ்சு; a mineral poison.

[Skt. dhanus+pāsāṇam > த. தனுப்பாடாணம்]

தனுப்பீசம் *tanu-p-pīsam,* பெ.(n.) தம்பலப்பூச்சி (யாழ்.அக.); cochoneal insect coccus cacti scarlet moth.

[Skt. dhanus+bīja > த. தனுப்பீசம்.]

தனுமத்தியம் *tanumattiyam,* பெ.(n.) இடுப்பு; (body middle) waist (சா.அக.).

தனுமானசி *tanumāṇasi,* பெ.(n.) இவ்வுலகப்பற்றுகளிலிருந்து அறுபட்டிருக்கும் மனநிலை (வேதா.சூ.147); the state of non-attachment of the mind towards worldly pleasures.

[Skt. tanu-mānasa > த. தனுமானசி.]

தனுர்மாசம் *tanur-mācam,* பெ.(n.) சிலை (மார்கழி) மாதம்; month of *Mārkaḻi* (December-January).

[Skt. dhanus+māša > த. தனுர்மாசம்.]

தனுவெலும்பு *tanu-v-elumbu,* பெ.(n.) நாவைத் தாங்கி, குரல் வளைக்கு மேலே முன் கழுத்தில் புடைப்பாகவும், வளைந்தும் ஒடுங்கிய சிறுவெலும்பு; the protuberance just above the larnyx and the root of the tongue on the fore-part of the throat - *Adamisapple* (சா.அக.).

தாக்கல் *tākkal,* பெ.(n.) 1. கணக்கிற் பதிவு; entry in an account. 2. தரவு; giving of a notice, reference. 3. தன்வயப்படுத்துகை; taking possession, occupancy.

[U. dākhila > த. தாக்கல்]

தாக்கீது[1] *tākkīdu,* பெ.(n.) (ஒரு செயல் பற்றி முறைமன்றத்தின் அல்லது அரசின்) எழுத்து மூலமான ஆணை; summons; order. *"நீதிமன்றத்தால் அனுப்பப்பட்ட தாக்கீதைப் பெற மறுப்பது குற்றமாகும். ஒப்பந்தப் புள்ளிகள் மூலம்தான் பாடப் புத்தகங்கள் அச்சடிக்க வேண்டுமென்று அரசு தாக்கீது பிறப்பித்துள்ளது" (இ.வ.).*

தாக்கீது[2] *tākkīdu,* பெ.(n.) உத்தரவு; injunction, command, order (W.G.).

[U. tākīd > த. தாக்கீது.]

தாகத்து *tākattu,* பெ.(n.) ஆற்றல் (P.T.L.); power, ability.

[Ar. tāqat > த. தாகத்து.]

தாகீது *tākītu,* பெ.(n.) **தாக்கீது** பார்க்க; see *tākkīdu.*

[U. tākīd > த. தாகீது.]

தாசநம்பி *tāśa-nambi,* பெ.(n.) இறைவனுக் கருகில் நின்று தீவட்டிப்பந்தம் பிடிப்பவன்; (Vaiṣn); torch-bearer near the deity in procession.

[Skt. dāsa > த. தாச+நம்பி.]

தாசபாலனம் *tāsa-pālaṉam,* பெ.(n.) பதினான்கு அருள்புரியும் செயல்களுள் ஒன்றான அடிமைகளைக் காத்தல் (வின்.); protection of slaves and dependents; one of 14 *tayā-virutti.*

[Skt. dāsa+ த. தாச+பாலனம்.]

தாசமார்க்கம் *tāśmārkkam,* பெ.(n.) ஒழுக்கம்; conduct, good behaviour.

தாசன்[3] *tāśaṉ,* பெ.(n.) 1. (சில தொடர்களில்) ஒரு கடவுளைத் தீவிரமாக வழிபடுபவன்; fervent devotee (of a deity). *காளிதாசன், சக்திதாசன், கண்ணதாசன்.* 2. (வாழ்வியல் வழிகாட்டியாக கருதப்படும் ஒருவரின்) வழிநடப்பவர்; ardent follower or admirer. *நான் பாரதியின் தாசன்* (க்ரியா.).

தாசா *tāśā,* பெ.(n.) 1. புதியது; that which is new or fresh. 2. புத்துணர்ச்சி; enthusiasm, vivacity. 3. ஆற்றுகை; comfort. 4. பயிற்சி; training.

[U. tāzā > த. தாசா.]

தாசாகலம் *tāśā-kalam,* பெ.(n.) மடல் முதலியவற்றில் கையெழுத்திட்டபின் சேர்க்கும் குறிப்பு (C.G.); postscript.

[Skt. taja > த. தாசா+கலம்.]

தாசாபண்ணு-தல் *tāśā-paṉṉu-,*செ.கு.வி. (v.i.) 1. பிறன் துன்பப்படுங் காலத்து ஆற்றுதல்; to refresh; to comfort one in sorrow. 2. பயிற்சி செய்வித்தல்; to train. 3. இன்சொற்களால் வயப்படுத்துதல் (கொ.வ.); to coax, flatter; to appease, conciliate by kind words or deeds.

[Skt. taja > த. தாசா+பண்ணு-.]

தாசாபிரதி *tāsā-piradi,* பெ.(n.) தெளிவானபடி (C.G.); faircopy.

[Skt. taja+prati > த. தாசாபிரதி.]

தாசாமசாலா *tāśā-maśālā,* பெ.(n.) ஊக்கமடையும் பொருட்டுக் குதிரைக்குக் கொடுக்கும் மருந்து வகை (அசுவசா.136); a medicinal preparation to instil spirit in horses.

[U. tāzā+masāla >த. தாசாமசாலா.]

தாசியநாமம் *tāśiya-nāmam,* பெ.(n.) தூய்மைப்படுத்தும் சமயவைப்பின் (சடங்கு) போது சமய ஆசிரியர் தரும் பெயர்; *(vaisṇ);* name given to a devotee at the time of his religious initiation by his guru.

[Skt. dāsya+namam > த. தாசியநாமம்.]

தாசியம் *tāsiyam,* பெ.(n.) **தாசத்துவம்** பார்க்க; see *tāśattuvam.*

[Skt. dasya > த. தாசியம்.]

தாசில்தார் *tāsildār,* பெ.(n.) மாவட்ட ஆட்சியரின் கீழுள்ள வட்ட அரசிறை வருவாய்த்துறை அதிகாரி; a revenue officer incharge of a taluk under the district collector.

[U. tāhsīldār > த. தாசில்தார்.]

தாசீல் *tāśīl,* பெ.(n.) **தாசில்** பார்க்க; see *tāsil.*

[U. tahsīl > த. தாசீல்.]

தாசுயநாமம் *tāśuya-nāmam,* பெ.(n.) குருவினால் சீடனுக்கு இடப்பட்ட அடிமைப் பெயர்; *vaiṣn.* a name given to a disciple by his guru.

[Skt. dāsya-nāmā > த. தாசுயநாமம்.]

தாட்சண்யம் *tāṭśaṇyam,* பெ.(n.) உயிர்களுக்காகக் கொள்ளும் இரக்கம்; பரிவு; consideration (for s.o. or sth.). முதியவர் என்பதற்காகக் கொஞ்சம் தாட்சண்யம் காட்டக் கூடாதா? (இ.வ.).

தாட்சணைச்சீட்டு *tāṭcaṇai-c-ciṭṭu,* பெ.(n.) தன்மேற் கடன் பொறுத்தற்கு ஏற்குங் குறிப்புச் சீட்டு (Pond.); accommodation bill.

[Skt. dāṭsaṇa > த. தாட்சணைச்சீட்டு.]

தாட்சாயணி *tāṭcāyaṇi,* பெ.(n.) மலைமகள்; *Pārvadi,* as daughter of Daksa. *"தக்கன்றன் குமாரி தாட்சாயணி" (மச்சபு.கவுரிநாம.11).*

[Skt. dākṣāyaṇī > த. தாட்சாயணி.]

தாட்சிணியம் *tāṭciṇiyam,* பெ.(n.) 1. கண்ணோட்டம்; kindness, benignity, kind feelings. 2. இரக்கம்; mercifulness, compassion. 3. ஒருதலை பக்கம்; partiality. 4. மதிப்புரவு; courtesy, politeness.

[Skt. dākṣiṇya > த. தாட்சிணியம்.]

தாட்டிகம் *tāṭṭigam,* பெ.(n.) 1. மும்முரமாய்; vehemence, insolvence, pride. 2. ஆற்றல்; strength, power, authority.

[Skt. dhārsṭya > த. தாட்டிகம்.]

தாட்டிகன் *tāṭṭigaṉ,* பெ.(n.) 1. கொடுமைக் காரன்; proud autocrat. *"தந்தியெல்லா முண்டாக்குந் தாஷ்டிகா" (பணவிடு.278).* செல்வாக்குள்ளவன் (வின்.); powerful, influential person.

[Skt. dhārsṭika > த. தாட்டிகன்.]

தாட்டியம் *tāṭṭiyam,* பெ.(n.) காரெள்; black gingelly seed (சா.அக.).

தாடிமபட்சணம் *tāṭima-paṭcaṇam,* பெ.(n.) கிளி (யாழ்.அக.); parrot, as fond of pomegranates. *(மாதுளைப் பழம் தின்பது).*

[Skt.dādima-thaksana >த. தாடிமபட்சணம்.]

தாத்திரியாதிகசாயம் *tāttiriyāti-kasāyam,* பெ.(n.) நெல்லி வற்றலோடு மற்ற கடைச் சரக்குகளையும் சேர்த்து இறக்கும் வடிநீர்; decoction extracted from a mixture of dried indian gooseberry, with a few other bazaar drugs (சா.அக.).

த.வ. நெல்லிக்கருக்கு

தாத்திரியாதிசூரணம் *tāttiriyāti-śūraṇam,* பெ.(n.) பித்தச் சூலைக்குக் கொடுக்கும். வாழ்நாள் மறைமருந்து. நெல்லி வற்றல் சூரணத்துடன் தேன் கலந்து அல்லது கடுக்காய் தோல் சூரணத்தில் வெல்லம் நெய் கலந்து சாப்பிடுவது; an ayurvedic medicine containing either gooseberry or gallnut powder. The former is given with honey late with jaggery and ghee for rheumatic pain caused by heat (சா.அக.).

த.வ. நெல்லித்தூளம்

தாத்திரேயகி *tāttirēyagi,* பெ.(n.) பால் கொடுக்கும் பெண், முலைத்தாய்; a nurse engaged to suckle an infant-wet nurse (சா.அக.).

தாத்து *tāttu,* பெ.(n.) 1. நியாயம்; justice. 2. முறையீடு; complaint, representation.

[U. dād > த. தாத்து.]

தாத்பரியம் *tātpariyam,* பெ.(n.) (ஒன்றினுடைய) நோக்கம் அல்லது பொருள்; purpose, meaning. *"திருமணச் சடங்கின் தாத்பரியத்தைப் புரிந்துகொள்ளவில்லை" (இ.வ.).*

தாதச்சி *tātacci,* பெ.(n.) துறவிப்பெண் (யாழ்.அக.); a female ascetic.

[Skt. dāsa >த. தாதச்சி.]

தாதமார்க்கம் *tāda-mārkkam,* பெ.(n.) 1. ஒழுக்கம்; conduct, good behaviour. 2. சிவனை உருவவடிவமாகக் கோயிலில் வைத்து வழிபடுகை (சி.போ.பா.8, 1, பக்.359); (Saiva.) first of the four-fold means of attaining salvation, which consists in worshipping God in form in a temple. 3. பிச்சை (பிங்.); alms.

[Skt. dāsa+mārga > த. தாதமார்க்கம்.]

தாதர்த்தியேசதுர்த்தி *tādartidyē-saturtti*, பெ.(n.) பொருட்டுப் பொருளில் வரும் நான்காம் வேற்றுமை (பி.வி.16, உரை); (Gram.) fourth case denoting purpose.

[Skt. tādarthyē-caturthī > த.தாதர்த்தியே சதுர்த்தி]

தாதான்மியசக்தி *tādāṉmiya-sakti*, பெ. (n.) சிவபெருமானை ஒருபோதும் விட்டு நீங்காத படைப்பாற்றல்; Inseparable *kriyā šakti* of *šiva*.

[Skt. tādānmnya+sakti>த.தாதான்மாய சக்தி]

தாதான்மியம் *tādāṉmiyam*, பெ. (n.) ஒன்றுபட்டிருக்கை; identity, unity, sameness. *"தாதான்மிய மொன்றுறும் பரிசு" (பிரபுலிங்வி மலை47)*

த.வ. ஒன்றிப்பு

[Skt. tādānmy > த. தாதான்மியம்.]

தாதானம் *tādāṉam*, பெ.(n.) கரிக்குருவி; kin crow (சங்.அக.).

த.வ. கரி

[Skt. tātana > த. தாதானம்.]

தாதிராசகம் *tādi-rāšagam*, பெ.(n.) ஒளிநீர் (தாது); semen (சா.அக.).

தாதுகல்பம் *tādu-kalpam*, பெ.(n.) மாழை அல்லாதது; any of the elements which are non metalic in the chemical sense (சா.அக.).

தாபரம் *tābaram*, பெ.(n.) 1. மரப்பொது (சூடா.); vegetable kingdom. 2. அசையாப்பொருள்; category of the immovables. *"சங்கமந்தாபரங்க டத்தங்கள் மத்துக்கீடா" (சி.சி.2, 41)*. 3. இடம் (பிங்.); place, location, habitation. 4. நிலம் (அக.நி.); Earth. 5. மலை (அக.நி.); mountain. 6. உடல் (சூடா.); body.7. கோயில் (அக.நி.); temple. 8. இலிங்கம் (Saiva.); *linga*, as fixed and immovable. (நிலையாகப் பிரதிட்டிக்கப்படுவது) *"தாபர மணலாற் கூப்பி" (தேவா.192, 3)*. 9. உறுதி (சூடா.); stability, steadiness. 10. பற்றுக் கோடு; shelter, support, prop. *"மருதூர னென்றாம் பரமே" (மருதூரந்.60)*. 11. ஆதாரம்; basis, foundation (யாழ்.அக.).

[Skt. sthāvara > த. தாபரம்.]

தாபிதா *tābitā*, பெ.(n.) பட்டாடை (C.G.); silk cloth.

[U. tāfiā > த. தாபிதா.]

தாபே *tābē*, பெ.(n.) 1. சார்ந்தவன்; dependant, follower. 2. வசம்; charge, custody.

[U. tābē > த. தாபே.]

தாபேதார் *tābēdār*, பெ.(n.) சார்ந்தவன் (C.G.); department, follower, subordinate.

[U. tābē-dār > த. தாபேதார்.]

தாம் *tām*, பெ.(n.) விலை (C.G.); price.

[U. dām > த. தாம்.]

தாமசபதார்த்தம் *tāmaša-padārttam*, பெ.(n.) செரியாமையை மிகுதிப்படுத்தும் உணவு பொருள்; stupefying food (சா.அக.).

த.வ. செரியா உண்டி

தாமசம் *tāmašam*, பெ.(n.) 1. சோம்பல் பண்பு; quality of being dull. 2. மனிதப் பண்புகள் மூன்றனுளொன்று; one of the three inherent qualities of man-Tamasic. 3. மடமை; want of knowledge - *Nescience*. 4. இருள் மயக்கம், இது தூக்கத்தை மூட்டும்; principle of illusion sleeps sets in (சா.அக.).

தாமாசா[1] *tāmāšā,* பெ.(n.) சரிக்குச்சரி (வின்.); average.

[U. dāmāsāh > த. தாமாசா.]

தாமாசா[2] *tāmāšā,* பெ.(n.) 1. களிப்பு; show, pomp. 2. காட்சி; spectable, sight. 3. வேடிக்கை; sport, fun.

[U. dāmāsāh > த. தாமாசா.]

தாமாசு *tāmāšu,* பெ.(n.) சரியாகப் பகிர்ந்து கொடுக்கை (W.G.); fair and equitable distribution (R.F.).

[U. dāmāsāhi > த. தாமாசு.]

தாமான் *tāmāṉ,* பெ.(n.) கப்பற் பின் பக்கத்துக் கயிறு; (Naut.) lower back rope of a dhoney sail, back clew line.

தாயித்து *tāyittu,* பெ.(n.) 1. மந்திரத்தகடு அடங்கிய அணி; small gold or silver case worn on the person as amulet; cylindrical talisman. 2. அணி வகை (இ.வ.); an ornament.

[U. tāit > த. தாயித்து.]

தார்சா *tārcā,* பெ.(n.) மொட்டைமாடி; terraced roof.

[E. terrace > த. தார்சா.]

தார்சு *tārcu,* பெ.(n.) **தார்சா** பார்க்க; see *tārcā.*

தார்சுக்கட்டிடம் *tārcu-k-kaṭṭiḍam,* பெ.(n.) மெத்தை வீடு (Tj.); storied house.

[E. tārcu + த. கட்டிடம்.]

தார்ட்டாந்திகம் *tārṭṭāndigam,* பெ.(n.) 1. தாட்டாந்திகம் பார்க்க; *see tāṭṭāndigam.* 2. உபமேயம்; that which is illustrated by an example or simile. *"தரு திருட்டாந்த முந்தாட்டாந்திகமும்" (சங்கற்ப.11, அடி.35).*

[Skt. dārsṭāntika > த. தாட்டாந்திகம்.]

தார்த்தராட்டிரர் *tārttarāṭṭirar,* பெ.(n.) திருதராட்டிரன் மகன்களாகிய துரியோதனாதியர்; kaurava princes, the sons of *Dhṛtarāsṭra.* *"வெம்பரித் தேர்த்தார்த்தராட்டிரர்" (பாரததிரௌ.98).*

[Skt. Dhārtarāsṭra > த. தார்த்தராட்டிரர்.]

தார்மரம் *tārmaram,* பெ.(n.) மரவகை (M.M.294); scotch pine, l.tr., pinus sylvestris.

[E. tar> த. தார்+மரம்.]

தார்மிகன் *tārmigaṉ,* பெ.(n.) அறச் சிந்தனை உள்ளவன்; charitable person, generous man. *"சில தார்மிகர் அவ்வளவிலேயே செல்லுகிறார்கள்" (திவ். திருப்பா.அவ.பக்.16).*

த.வ. அறவோன்

[Skt. dhārmika > த. தார்மிகன்.]

தாரணயோகம் *tāraṇa-yōgam,* பெ.(n.) ஆழ்ந்த உள்ளொடுக்கம் (தியானம்); deep devotion (சா.அக.).

தாரணா *tāraṇā,* பெ.(n.) மூச்சடக்கி மனத்தை ஒரு வழிப்படுத்தல்; concentration of mind joined with the retention or breath (சா.அக.).

தாரணாசத்தி *tāraṇā-šatti,* பெ.(n.) 1. குலிச சத்தி; power of amulet. 2. தியானசத்தி; power of concentration

தாரப்பிரம் *tārappiram,* பெ.(n.) கற்பூரம்; camphor (சா.அக.).

தாரா[1] *tārā,* பெ.(n.) (விண்மீன்); star.

தாரா[2] *tārā,* பெ.(n.) ஒரு சமணப் பெண் தெய்வம் (நீலகேசி.236, உரை); a jaina Goddess.

[Skt. tārā > த. தாரா.]

தாராப்பூடு *tārā-p-pūḍu,* பெ.(n.) நாரத்தை; bitter orange-citrus auvantium (சா.அக.).

தாரிசம் *tārisam,* பெ.(n.) 1. ஒப்பந்தம்; agreement, consent, union. *"தாரிசம் பண்ணினான்".* 2. செப்பமானது; reasonableness, as of price. *"தாரிசமாய் விற்கிறான்".*

தாரித்திரம் *tārittiram,* பெ.(n.) வறுமை (பிங்.); poverty, want, destitution.

[Skt. daridra > த. தாரித்திரம்.]

தாரித்திரியம் *tārittiriyam,* பெ.(n.) **தரித்திரம்** பார்க்க; see *tarittiram.* *"நோயுற்ற தாரித்திய நன்றுகாண்" (குமரேச.சத.52).*

தாரிப்பு *tārippu,* பெ.(n.) 1. மதிப்பு (வின்.); estimation, guess. 2. தாங்கிப் பேசுகை; recommendation, commendation. 3. மேம்படச் செய்கை; causing to excel; encouraging, as a pupil. *"அவனைத் தாரிப்புப் பண்ணினான்" (வின்.).*

தாரிவியாதிகியாழம் *tāriviyādi-kiyāḻam,* பெ.(n.) மரமஞ்சள், சீந்தில் கொடி, கடுகுரோகினி, வசம்பு, மஞ்சிட்டி, வேப்பீர்க்கு, திரிபலை சம எடை கொண்டு கசாயம் வைத்து சகல குட்டத்திற்கும் குடிக்க கொடுக்கும் ஓர் ஆயுள்வேத மருந்து; an ayurvedic decoction of tree turmeric moon creeper, black hellebore, sweet flag, Indian madder, mid rib or margosa leaf and the three myrobalams (சா.அக.).

தாரெண்ணெய் *tār-eṇṇey,* பெ.(n.) கெட்டியான நீர்வடிவ கரிநெய் (தார்) (உ.வ.); liquid tar.

த.வ. கருங்கசடு

[E. tar > த. தார்+எண்ணெய்.]

தாரோகா *tārōgā,* பெ.(n.) காவற்காரர் தலைவன் (வின்.); superintendent of peons.

[U. dārōgha > த. தாரோகா.]

தாலகேதனன் *tāla-kēdaṉaṉ,* பெ.(n.) 1. பலராமன்; *Balarāma.* 2. வீடுமன் (பீசுமர்); Bhisma (பனையின் உருவம் எழுதிய கொடியையுடையோன்); Lit. he who has palmyra-banner.

[Skt. tāla+ketaṉa > த. காலகேதனன்.]

தாலகேது *tāla-kētu,* பெ.(n.) **தாலகேதனன்** பார்க்க; see *tāla-kēdaṉaṉ.* *"தாள கேதுவையுஞ் சேர... கொண்டு நீ செல்க" (பாரத.வாசு.17).*

[Skt. tāla+kēdu > த. தாலகேது.]

தாலபீசநியாயம் *tāla-pīsa-niyāyam,* பெ.(n.) விதையும் முளையும் போல எது முந்தியது என்று கூற முடியாத நிலை; the *nyāya of* reasoning in a circle, as wheather seed comes from the plant or plant from the seed.

[Skt. tāla + த. பீசநியாயம்.]

தாலம் *tālam,* பெ.(n.) மூன்று பிடிகொண்ட நீட்டலளவு (சுக்கிரநீதி.197); a lineal measure of three hands.

[Skt. tāla > த. தாலம்.]

தாலிம்கானா *tālim-kāṉā,* பெ.(n.) சிலம்பம் பயிலும் இடம் (தட்சிண.சிந்.சரித்திரம், பக்.224); fencing ground.

[Skt. tālīm+kāṉā > த. தாலிம்கானா.]

தாலீபாகம் *tālībāgam,* பெ.(n.) இந்து சமயச் சட்டங்களைக் கூறும் பழைய வடமொழி நூலாகிய சுமிருதியில் விதிக்கப்பட்டதும் இல்வாழ்வோர் காருவா முழுநிலா நடப்பு செய்யப்படுவதுமான (சடங்கு) வகை; new and full moon ceremonies enjoined by smrti to be performed by a house holder. *"தாலீபாகம் பண்ணவும்" (சி.சி.8, 3, மறை.).*

[Skt. sthālīpāka > த. தாலீபாகம்.]

தாலீபுலாகநியாயம் *tālī-pulāka-niyāyam,* பெ.(n.) ஒரு பானைச் சோற்றிற்கு ஓர் அவிழைப் பதம் பார்ப்பது போல ஒன்றன் ஒரு புடைத்தன்மையிலிருந்து அதன் முழு நிலையையும் அறியும் நெறி (சிவசம.24); the

nyāya of boiled rice in a cooking vessel, illustrating the principle that the condition of the whole may be inferred from that of a part.

த.வ. பானைச் சோற்று நெறி

[Skt.sthālī+pulāka+nyāya>த.தாலீ புலாக நியாயம்.]

தாலுக்கா *tālukkā,* பெ.(n.) தாலுகா[1] பார்க்க; see *tālukā* (C.G.).

தாலுகா *tālukā,* பெ.(n.) 1. உரிமை (C.G.); connection dependence, possession, property. 2. தீர்வை தண்டும் பொருட்டுப் பிரிக்கப்படும் சிறிய வட்டம்; dependency, revenue subdivision, convenient division of a district for purposes of revenue administration. 3. முறைமன்றம் (யாழ்.அக.); court of justice.

[U. ta-allu-ka > த. தாலுகா.]

தாவரஉண்ணி *tāvara-uṇṇi,* பெ.(n.) நிலத்திணைகளை உணவாக உண்ணும் உயிரினம்; herbivore .

தாவரஎண்ணெய் *tāvara-eṇṇey,* பெ.(n.) தேங்காய், கடலை, எள் முதலியவற்றில் இருந்து எடுக்கப்படும் நெய்மம்; oil extracted from coconut, groundnut, etc. vegetable oil.

தாவரசங்கமம் *tāvara-śaṅgamam,* பெ.(n.) 1. இயங்குதிணை நிலைத்திணை வகை; the category of the movable and the immovable. *"தாவர சங்கம மென்னுந் தன்மைய" (கம்பரா.குக.1).* 2. வீட்டுப் பண்டங்களான அசையும் பொருளும் நிலம் வீடு முதலிய அசையாப் பொருள்களும்; (Legal) movable and immovable property.3. சிவபிரானது திருமேனிகளாகக் கருதப்படும் இலிங்கமும் அடியார்களும் (வின்.); lingam and devotees of *Śiva,* as the fixed and movable forms sof *Śiva.*

த.வ. இயங்கு

[Skt.sthāvara+jaṅgama>த.தாவரசங்கமம்.]

தாவரசங்கமவிடம் *tāvara-śaṅgama-viḍam,* பெ.(n.) 1. செடிமரங்கள், விலங்கு களின் நஞ்சு, இது ஊமத்தை வித்தினால் குணப்படும்; vegetable and animal poison as opposed to mineral poison. 2. தாது நஞ்சு இது ஊமத்தை வித்தினால் குணப்படும்; dhatura seed cures those poisons (சா.அக.).

தாவரசாத்திரம் *tāvara-śāttiram,* பெ.(n.) பூண்டுகளைப் பற்றிய நூல்; science of plants botany - *Phytology* (சா.அக.).

தாவரசாத்திரி *tāvara-śāttiri,* பெ.(n.) 1. மரம், செடி, கொடி பற்றிய புலமை பெற்றவன்; one skilled in botany-botanist. 2. மூலிகை அறிஞன்; an early botanist who used to collect, sell or administer plants of herbs - *Herbalist* (சா.அக.).

தாவரசாம்பல் *tāvara-śāmbal,* பெ.(n.) 1. பூண்டுகளை எரிப்பதனால் கிடைக்கும் சாம்பல்; ash obtained by burning plants. 2. காரச்சாம்பல்; ash containing potash or soda or both (சா.அக.).

தாவரசாலம் *tāvara-śālam,* பெ.(n.) பூஞ்செடி முதலிய பிரிவுகளைப் பற்றிய நூல்; a work containing a descriptive enueration of plants or vegetable species of a particular place-Flora (சா.அக.).

தாவரசாரம் *tāvara-śāram,* பெ.(n.) பூண்டுகளை எரித்தெடுத்த ஓர்வகைச் சாரம்; vegetable alkali, obtained by burning plants (சா.அக.).

தாவரத்தியலி *tāvara-t-tiyali,* பெ.(n.) பேராமுட்டி; fragrant pavonia-*Pavonia odorata* (சா.அக.).

தாவரதத்துவநூல் *tāvaratattuva-nūl,* பெ.(n.) பூண்டுகளின் தன்மை அமைப்பு, விளையு முறை, தொழில், வகுப்பு முதலியவைகளைப் பற்றிக் கூறும் நூல்; the science which treats of the form, structure and tissues of plants, the laws which regulate their growth, functions and their classification etc. - botany (சா.அக.).

தாவரதாதுவிடம் *tāvaratādu-viḍam,* பெ. (n.) மாழைகளிலும், பயிர் வகைகளிலும் உள்ள நஞ்சுகள்; mineral and vegetable poisons (சா.அக.).

தாவரநூல் *tāvara-nūl,* பெ. (n.) நிலைத்திணைப் பற்றிப் பொதுவாகக் கூறும் நூல்; the science of vegetable kingdom in general (சா.அக.).

[Skt. sthāvara > த. தாவரம்+நூல்.]

தாவரம் *tāvaram,* பெ. (n.) 1. நிலைத்திணை; category of immovables, opp. to *caṅgamam. "செல்லாஅநின்றவித் தாவர சங்கமத்துள்" (திருவாச.1, 30).* 2. வீடு போன்ற அசையாப் பொருள்; (Leg.) immovable property, as house. 3. மரப்பொது (சூடா.); the vegetable kingdom. 4. அடிப்படை; basis, foundation. 5. இடம் (சங்.அக.); place, habitation. 6. உடல் (சூடா.); body, as the abode of the soul. 7. இலிங்கம்; (Saiva.) lingam. *"சங்க மவடிவிற்குக் கூறிப்போந்த இயல்பில்லாத தாவரவடிவின்" (சி.போ.சிற்.12, 3, 2, உரை).* 8. உறுதி (வின்.); stability, steadiness.

[Skt. sthāvara > த. தாவரம்.]

தாவரவியல் *tāvaraviyal,* பெ.(n.) மரம், செடி, கொடிகளைப் பற்றி விவரிக்கும் அறிவியல் துறை; botany.

த.வ. நிலைத்திணையியல்

[Skt. sthāvara > த. தாவரம் +இயல்]

தாவரவியல்பூங்கா *tāvaraviyal-pūṅgā,* பெ.(n.) (அரிதாகக் காணப்படுபவை உட்பட) பல வகையான பயிரிகளைக் காட்சிக்காக வளர்க்கப்படும் தோட்டம்; botanical garden.

தாவா *tāvā,* பெ.(n.) 1. (பிராது) முறையீடு முதலியன; complaint, petition. 2. தடை; objection, obstruction.

[U. dāvā > த. தாவா.]

தாவாதார் *tāvādār,* பெ.(n.) முறை யீட்டாளர் (வாதி); complaint, plaintiff (Loc.).

[U. dāvā-dār > த. தாவாதார்.]

தாளா[1] *tāḷā,* பெ.(n.) ஒப்பு (C.G.); comparison.

[U. dāḷā > த. தாளா.]

தாற்காலிகம் *tāṟkāligam,* பெ. (n.) குறுங்காலம்; that which is temporary, occassional.

[Skt. tātkālika > த. தாற்காலிகம்.]

தாற்பரியம்பண்ணு-தல் *tāṟpariyam-paṇṇu-,* செ. குன்றாவி.(v.t) 1. விளக்கிச் சொல்லுதல் (யாழ்.அக.); to explain, expound. 2. புகழ்ந்து பேசுதல் (வின்.); to applaud, as performances; to magnify, as one's talents.

[Skt. tātparya > த.தாற்பரியம் +-,]

தாற்பரியமானவன் *tāṟpariyamāṉavaṉ,* பெ. (n.) மதிப்புள்ளவன் (வின்.); person held in high esteem.

[Skt. tātparya >த.தாற்பரிய+ஆனவன்.]

தாறு *tāṟu,* பெ.(n.) கீலெண்ணெய் (பாண்டி.); tar.

[E. tar > த. தாறு.]

தானக்கோல் *tāṉa-k-kōl,* பெ.(n.) யாழ் நரம்புகளைத் தெறிக்க பயன்படுத்துங் கருவி; instrument used in playing *yāḻ.*

"நரம்பு ஏழும்...தானக் கோலின் அகப்பட்டு" (கலித்.8, உரை).

[Skt. sthāna > த. தானம்+கோல்.]

தானசாசனம் *tāna-sāsanam,* பெ.(n.) கொடை கொடுத்ததற்குரிய ஆவணம்; instrument of gift.

த.வ. **கொடையாவணம்**

[Skt. dāna+šāšana > த. தானசாசனம்.]

தானசீலம் *tāna-šīlam,* பெ.(n.) கொடைத் தன்மை (யாழ்.அக.); liberality.

[Skt. dāna+ šīla > த. தானசீலம்.]

தானசீலன் *tāna-šīlan,* பெ.(n.) ஈகையாளன்; liberal, charitable man.

[Skt. dāna+šīla > த. தானசீலன்.]

தானசுத்தி *tāna-sutti,* பெ.(n.) ஐவகைத் தூய்மைப்படுத்தலில்பூசையிடத்தை மந்திரத்தால் தூய்மைப்படுத்தல் (சைவச.502, உரை); (*šaiva*) purification of the place of worship, one of *pañca-cutti.*

[Skt. sthāna + šuddhi > த. தானசுத்தி]

தானசூரன் *tāna-šūran,* பெ.(n.) பெருங்கொடையாளன் (சிலப்.15, 181, உரை); one who is heroically charitable.

[Skt. dāna+šūra > த. தானசூரன்.]

தானத்தார் *tānattār,* பெ.(n.) கோவிலதிகாரிகள் (I.M.P.Cg.214); temple trustees.

[Skt. sthāna > த. தானத்தார்.]

தானதருமம் *tāna-tarumam,* பெ.(n.) ஈகை (வின்.); charity, charitableness.

[Skt. dāna+dharma > த. தானதருமம்.]

தானதாய் *tāna-tāy,* பெ.(n.) ஒலிக்கருவிகள்; (Mus.) leading instrument, as determining the pitch of other instruments.

த.வ. **ஒலிகாணி**

[Skt. tāna+sthāyin > த. தானதாய்.]

தானப்பதி *tāna-p-padi,* பெ.(n.) கோயில் முகவர் (இ.வ.); agent of a temple.

[Skt. sthāna > த. தானம் + பதி.]

தானப்பரீட்சை *tāna-p-parītcai,* பெ.(n.) மருத்துவர்கள் ஆராய்ச்சியினால் நோயாளிகளிடம் கவனிக்க வேண்டிய பல வகை குறிகள்; studying of various symptoms exhibited by patients - diagnosis (சா.அக.).

தானப்பெருக்கம் *tāna-p-perukkam,* பெ.(n.) 1. பத்து நூறு ஆயிரம் முதலிய எண்களாற் பெருக்குகை; multiplication of numbers by ten and its multiples, as dist. fr. *kuli-p-perukkam.* 2. மனக்கோட்டை கட்டுகை; idle imagining, building castles in the air. *"என்ன, தானப் பெருக்கம் செய்கிறாய்?" (இவ).*

[Skt.sthana > த.தானம் + பெருக்கம்.]

தானபத்திரம் *tāna-pattiram,* பெ. (n.) கொடை கொடுத்தற்குரிய ஆவணம்; instrument of gift.

த.வ. **கொடையாவணம்**

[Skt. dāna+pattira > த. தானப்பத்திரம்.]

தானபந்தி *tāna-pandi,* பெ.(n.) விளைச்சல் மதிப்பீடு (சோதனை) (W.G.); estimated value of the standing crops in a field.

[Skt. sthāna > த. தானம்+பந்தி.]

தானம்பாடு-தல் *tānam-pādu-,* செ.கு.வி. (v.i.) ஒரு பண்ணை தாளத்திற்காகச் மிகுதியாக விரித்துப் பாடுதல்; to elaborate a tune rapidly to the accompaniment of *tālam.*

[Skt. tāna > த. தானம் + பாடு-தல்.]

தானவண்ணம் *tāna-vannam,* பெ.(n.) ஒருவகை இசைப்பாட்டு (வின்.); a kind of musical composition.

[Skt.tāna+ த. தானம் + வண்ணம்.]

தானவிச்சை *tāṉa-viccai,* பெ.(n.) அறிவுக் கூறு; the sources of knowledge. *"பதினெட்டாகிய தானவிச்சையும்" (பெருங்வத்தவ.3, 64).*

தானாதிகாரி *tāṉādikāri,* பெ. (n.) அறக்கட்டளை அதிகாரி; superintendent of charities, as of a royal household.

[Skt. dāna+adhikārin > த. தானாதிகாரி.]

தானாதிபதி *tāṉādipadi,* பெ.(n.) 1. அமைச்சர்; minister. *"அதிபுத்தியுத்தி யுண்டாயினோன் றானாதிபதி யாகுவான்" (அறப்.சத.85).* 2. நடுநிலையானவன்; mediator (Loc.).

[Skt. sthāna+adhipati > த. தானாபதி.]

தானாந்தராயம் *tāṉāndarāyam,* பெ.(n.) (Jaina.) கொடையளித்தற்கு நேருந்தடை (சீவக.308, உரை); impediment or obstacle to the making of gifts.

[Skt. dāna+antarāya > த. தானாந்தராயம்.]

தானாபத்தியம் *tāṉāpattiyam,* பெ.(n.) 1. தூது (வின்.); office of an ambassador. 2. இணக்கம் உண்டுபண்ணுபவர் அலுவலகம் நடுநிலையானவன் (இ.வ.); office of mediator. 3. ஆசாரிய பதவி (இ.வ.); office of a priest.

[Skt. sthāna-patya > த. தானாபத்தியம்.]

தானாபதி *tāṉāpadi,* பெ.(n.) 1. படைத் தலைவன்; commander. *"தானாபதிகளொடு சமர்க்கிளையாத தளகர்த்தரும்" (அறப்.சத.82).* 2. தூதன்; *"விந்தைபுரி தானாபதி" (திருவேங்.சத.89) (வின்.).* 3. அரசர்க்கும் அவர் தேவியர்க்கும் இடைநின்று செய்தியறிவிக்கும் அந்தப்புரத்துத் தூதி (Rd.); woman who carries messages between the king and queen in a palace.

[Skt. sthāna-pati > த. தானாபதி.]

தானியராசன் *tāṉiya-rāšaṉ,* பெ.(n.) கோதுமை; wheat, a kind of grains (சா.அக.).

தானு *tāṉu,* பெ.(n.) காற்று; wind (சா.அக.).

தானுவனமூலி *tāṉuvaṉa-mūli,* பெ.(n.) ஊர்க்கள்ளி; a kind of spurge-sarcostemma intermedium (சா.அக.).

தானைப்புழு *tāṉai-p-puḻu,* பெ. (n.) மலவாயிலிருந்து கொண்டு அரிக்கும் ஓர் வகைப்புழு; a kind worm in the rectum (சா.அக.).

திக்கம் *tikkam,* பெ.(n.) இளயானை (யாழ்.அக.); young elephant.

[Skt. dhikka>த. திக்கம்]

திக்கயம் *tikkayam,* பெ.(n.) திசையானை; elephants of eight directions. *"தீண்டரிய வெம்மையொடு திக்கயங்க ளெனவே" (சீவக.1794).*

[Skt. dik+gaja >த. திக்கயம்.]

திக்கரன் *tikkaraṉ,* பெ.(n.) இளைஞன் (யாழ்.அக.); boy.

[Skt. dikkara > த. திக்கரன்.]

திக்கரி[1]-த்தல் *tikkari-,* 4 செ.குன்றாவி. (v.i.) புறக்கணித்தல்; to treat with contempt to shun. *"சினத்துப்பொற் பொருப்பை... திக்கரித்து" (திருப்பு.427).*

[Skt. dhikkr > த. திக்கரி-]

திகர் *tigar,* பெ.எ.(adj.) வேறு; another, different. *"திகர் சில்லா" (இ.வ.).*

[U. digar > த. திகர்.]

திகரடியாயிருத்தல் *tigaraḍiyāyiruttal,* பெ.(n.) திணருதல்; feeling difficulty to breath freely being choked (சா.அக.).

திகளர் *tigaḷar,* பெ.(n.) கன்னடதேசத்தார் தமிழருக்கு வழங்கும் பெயர் (இ.வ.); the appellation by which the *Karnāṭakas* style the Tamilians.

*[K. tiguḷar > த. திகளர்.]

திகாந்தம் *tigāndam,* பெ.(n.) அடிவானம் (M.Navi.53); horizon.

[Skt. dig-anta > த. திகாந்தம்.]

திகாம்பரன் *tigāmbaraṉ,* பெ.(n.) ஆடை களற்ற துறவி; naked mendicant (சா.அக.).

திகிரிக்குள்கலந்தசிலை *tigirikkuḷ-kalanda-šilai,* பெ.(n.) மாந்துளிர்க்கல்; red stone red ochre (சா.அக.).

திகிரிக்குளடுக்கும்பச்சை *tigiri-k-kuḷaḍukkum-paccai,* பெ.(n.) பைம்மணி பச்சை; emerald (சா.அக.).

திகில் *tigil,* பெ.(n.) பேரச்சம்; fright, terror, sudden fear, panic, alarm.

க. திகில்; தெ. திகுலு.

திகில்படு-தல் *tigil-paḍu-,* செ.கு.வி.(v.i.) பேரச்சங் கொள்ளுதல்; to start with sudden fear; to be struck with fear.

[K. digil > த. திகில்+படு-.]

திகில்பிடித்தல் *tigil-piḍi-ttal,* பெ.(n.) பேரச்சம் கொள்ளுகை (இ.வ.); being taken with sudden fright.

[K. digil>த.திகில்+பிடி-,]

திகிலடி *tigilaḍi,* பெ.(n.) **திகில்** பார்க்க; see *tigil.*

திகேசம் *tigēšam,* பெ.(n.) முல்லைக் குருந்து; (சா.அக.).

திசனிதசாதி *tišaṉida-šādi,* பெ.(n.) நால்வகை ஆண்குலத்திலொன்று; one of the four classes of men divided according to lust (சா.அக.).

திசா *tišā,* பெ.(n.) கால் நீண்ட பருந்து; long legged eagle - *Aquila hastata* (சா.அக.).

திசாரகம் *tišāragam,* பெ.(n.) தும்பி; a bettle of the pterois genus (சா.அக.).

திசித்துவம் *tišittuvam,* பெ.(n.) 1. கருப்பத்தில் குழந்தையைத் தாங்கிக் கவர்ந்து கொண்டிருக்கும் மென்படலப் பை. இது பேற்றிற்குப் பின் வெளிதள்ளும்; a membrane of uterus in women and in certain animals produced during gestation and thrown offer parturition. 2. கருப்பையில் சினையைத் தாங்கியுள்ள சவ்வு; a part of decidua which is raflected upon and surrounds the ovum- *membrana deci* (சா.அக.).

திசுவறிவிளக்கம் *tišuvaṟiviḷakkam,* பெ.(n.) 1. உயிர் மரபு அல்லது நிலைத்திணை மரபுகளின் மூலத்தைப்பற்றி சொல்லும் நூல்; the science relating to the tissues of animal or vegetable kingdom. 2. உயிர்த் தாதுவைப் பிரிவினைப் பாகமாகச் சொல்லும் நூல்; the science regarding the minute structure and composition of animal tissues - Histology (சா.அக.).

திட்சு *tiṭšu,* பெ.(n.) கரும்பு; sugar (சா.அக.).

திட்டகன்மம் *tiṭṭa-kaṉmam,* பெ.(n.) அரசர் பகைவர் முதலியோரால் இப்பிறவியில் உண்டாகும் துன்பம் (சிவப்பிர.2, 19, பக்.213, உரை); miseries experienced in this life from kings, enemies, etc.

த.வ. பிறவியிலுறு துயர்

[Skt. drsta +kanma > த. திட்டகன்மம்.]

திட்டத்துய்மன் *tiṭṭa-t-tuymaṉ,* பெ.(n.) திரௌபதியின் உடன்பிறந்தவன்; brother of *Draupadī* (பாரத.முதற்போர்.15).

[Skt. Dhrastadyumna > த. திட்டத்துய்மன்.]

திட்டமாகச்சேர்த்தல் *tiṭṭamāga-c-cērttal,* பெ.(n.) செவ்வையாக அல்லது அளவுப்படி கூட்டுகை; mixing well and proportionately (சா.அக.).

திட்டாந்தரம் *tiṭṭāndaram,* பெ. (n.); எடுத்துக்காட்டு illustration, example.

"வகையமையடுக்களை போற்றிட்டாந்தம்" (மணி.29, 61).

[Skt. drstānta+ > த. திட்டாந்தரம்.]

திட்டாந்தவாபாசம் *tiṭṭānda-v-āpāšam,* பெ.(n.) இயைபில்லாத எடுத்துக்காட்டு; a fallacious illustration. *பக்கப் போலியு மேதுப் போலியுந் திட்டாந்தப் போலியுமாம் (மணிமே.29, 326).*

[Skt. drstānta+vābāsa > த. திட்டாந்தவா பாசம்.]

திட்டித்தம்பம் *tiṭṭi-t-tambam,* பெ.(n.) 64 கலைகளில் ஒன்றாகிய கண்கட்டுக் கலை வித்தை; the act of fascinating the eyes or suspending the sight which is regarded as one of the 64 of the ancient arts and science (சா.அக.).

த.வ. கண்கட்டுக்கலை

திட்டித்தோசம் *tiṭṭi-t-tōšam,* பெ.(n.) கண்ணேறு; evil eyes (சா.அக.).

திட்டிதோசக்கிராணி *tiṭṭidōša-k-kirāṇi,* பெ.(n.) கண்ணேறுவினால் உண்டாகும் வயிற்றுப்போக்கு; diarrhoea caused by evil eyes (சா.அக.).

திடகாத்திரசாலி *tiḍagāttirašāli,* பெ.(n.) வலுவுடையவன்; a man who is vitally strong (சா.அக.).

திடகாத்திரதேகி *tiḍagāttiradēgi,* பெ.(n.) வன்மையுடைய உடம்பை உடையவன்; person with strong body (சா.அக.).

திடகாத்திரம் *tiḍagāttiram,* பெ.(n.) வலுவுள்ள உடம்பு; body vitally strong (சா.அக.).

த.வ. கட்டுடல்

திடசரீரம் *tiḍasarīram,* பெ. (n.) **திடகாத்திரம்** பார்க்க; see *tiḍagāttiram* (சா.அக.).

திடப்பிரஞ்ஞன் *tiḍa-p-pirañña<u>n</u>,* பெ.(n.) உயிர்முத்தன் (யாழ்.அக.); a soul liberated while yet in this life.

[Skt. drḍha-praiña > த. திடப்பிரஞ்ஞன்.]

திடபத்தி *tiḍa-patti,* பெ.(n.) உறுதியான பற்று (யாழ்.அக.); firm devotion, strong faith.

திடபரம் *tiḍaparam,* பெ.(n.) மனத்தின் வல்லமை; strength of mind (சா.அக.).

திடபுருசன் *tiḍa-purušan,* பெ.(n.) ஆற்றல் மிகுந்தவன் (கொ.வ.); strong well-built person. *"தேகவலியுள்ளவன் தாண்டுபரி தாண்டு திடசாயீலவி" (தனிப்பா.i, 362, 100).*

[Skt. drḍha+ purusa > த. திடபுருசன்.]

திடமோகனம் *tiḍa-mōganam,* பெ.(n.) முளரிப்பூ (ரோசாப்பூ); rose flower (சா.அக.).

திடர் *tiḍar,* பெ.(n.) திண்மையான அடிப்படையில் நிலைநிறுத்தப்பட்டவர்; one whose existence is established by soundest of proofs. *"நினைவரியவர்... நின்றவெந்திடரே" (திவ்.திருவாய்.1, 1, 6).*

[Skt. drḍha > த. திடர்.]

திடவீரியம் *tiḍa-vīriyam,* பெ.(n.) வட்டச்சாரணை; a kind of trianthma (சா.அக.).

திடனற்ற *tiḍanaṟṟa,* பெ.(n.) வலிமையற்ற; weak (சா.அக.).

திண்டிபிராட்சம் *tiṇḍi-pirāṭcam,* பெ.(n.) **திண்டிராவிச்சி** பார்க்க; see *tiṇḍirā-vicci* (சா.அக.).

திண்டிராட்சி *tiṇḍirāṭci,* பெ.(n.) **திண்டிராவிச்சி** பார்க்க; see *tiṇḍirāvicci* (சா.அக.).

திண்டிராவிச்சி *tiṇḍirāvicci,* பெ.(n.) செப்பு சதுரக்கள்ளி; a variety of milk hedge-*Euphorbia genus* (சா.அக.).



திண்டேல் *tiṇḍēl,* பெ.(n.) கப்பலைக் கண்காணிப்பவன் (Naut.) boatswain, mate.

[U. tandel > த. திண்டேல்.]

தித்தகாருட்டி *tittagāruṭṭi,* பெ.(n.) சிறுவழுதலை; wild Indian brinjal solanus indicum (typica) (சா.அக.).

தித்தசம் *tittaśam,* பெ. (n.) பேய்ப்புடல்; wild snake gourd-*Trichosanthes cucumerina* (சா.அக.).

தித்ததாது *tittatādu,* பெ.(n.) உடம்பிலுள்ள கசப்பு பொருள்; bitter elementary (சா.அக.).

தித்தபத்திரி *tittapattiri,* பெ.(n.) கசப்பிலை; bitter leaf (சா.அக.).

தித்தபத்திரேதி *tittapattirēdi,* பெ.(n.) சீரகம் (சாசி); cummin seed (சா.அக.).

தித்தபித்தரோகம் *tittapittarōgam,* பெ.(n.) வாய் கசந்து, இருமலுடன் நெஞ்சிற் கோழை. கண்சூழலல் முதலிய குறிகள் காட்டும் பித்தநோய்; a disease caused by vitiation of heat humour characterised by bitter taste inthe mouth, cough with phelgm in the throat, whirling eyes etc. (சா.அக.).

தித்தமரிசம் *tittamariśam,* பெ.(n.) தேற்றான் விதை; water clearing nut-strychnos potatorum (சா.அக.).

தித்தரோகணி *tittarōgaṇi,* பெ. (n.) 1. கொம்மட்டி; a watermelon. 2. தும்மற்பூடு; sneezewort-*Arteniesia scermititoria* (சா.அக.).

தித்தவல்லி *tittavalli,* பெ.(n.) மருள்; hyacinth aloe *Sansevira roxburghiana* (சா.அக.).

தித்தாமிர்தம் *tittāmirdam,* பெ. (n.) சீந்தில்; moon creeper - *menispermum glabrum* (சா.அக.).

தித்து *tittu,* பெ.(n.) சோமன்சோடு (j.); suit of clothes.

[U. dust > த. தித்து.]

தித *tida,* பெ.(n.) 1. பீதரோகணி; an unknown plant. 2. வட்டத்திருப்பி; Indian pareira-*cissamplelos pareira* (சா.அக.).

திதகம் *titagam,* பெ.(n.) மலைவேம்பு; wild neem - *Melia composita* (சா.அக.).

திதசுதாபகம் *tidaśu-tābagam,* பெ.(n.) தன்னிலைக்கு மீளுகை (வின்.); elasticity, tendency to return to a former position.

[Skt. sthita+ stapaga > த. திதசுதாபகம்.]

திதத்தாபகம் *titattābagam,* பெ.(n.) 1. தன்னிலைக்கு மீளுந்தன்மை; the state or returning to the form which it is bent, tendency of returning to former position when pulied, rebounding. 2. சவ்வுத் தன்மை; elasticity (சா.அக.).

திதன் *tidan,* பெ.(n.) 1. மனவுறுதியுடையவன்; one who is firm in mind. "திதனாயெவரு மறியாத பொருளைத் தெரிந்து கொண்டு" (பகவற்கீதை, 3.31). 2. திடமானது; that which is firm.

திதாம் *tidām,* பெ.(n.) பீதரோகணி, கண்ணுக்கிடுமோர் மூலி; an unknown plant useful in eye disease (சா.அக.).

திதி[1] *tidi,* பெ.(n.) 1. நினைவு நாள்; celestial day. 2. பிறைக்காலம்; lunar day of different lengths i.e. 15 days after new moon - phases of the moon (சா.அக.).

த.வ. பிறைநிலை, பிறை நாள்

திதி[2] *tidi,* பெ.(n.) 1. உவா நாள் (பிங்.); lunar day. 2. இறந்த நாளில் முன்னோர்க்கு ஆண்டுதோறுஞ் செய்யும் நீத்தார்க் கடன்; ceremony performed in honour of a deceased person on the anniversary of his death.

[Skt. tithi > த. திதி.]

திதி[3] *tidi,* பெ.(n.) 1. நிலைபேறு (பிங்.); steadfastness, stability, permanence. *"திதியுறச் சின்மொழி செவியிற் செப்பினான்" (பாரத.இரா.94).* 2. காப்பு; preservation. 3. வளர்ச்சி (அக.நி.); growth, increase. *"திதிவாய்மதி" (வெங்கைக்.62).* 4. நிலைமை (கொ.வ.); state, condition. 5. செல்வவளம்; wealth; good circumstances. *"அவனுக்கு நல்ல திதி யிருக்கிறது" (வின்.).* 6. மதிப்பு (வின்.); honour, dignity. 7. இருப்பு; existence. *செனனதிதி மரணங்கள் (வின்.).*

[Skt. sthiti > த. திதி.]

திதி-த்தல்[4] *tidi,* 11 செ.குன்றாவி.(v.t.) 1. காத்தல் (சூடா.); to preserve, sustain. *"உல கெலாந் திதிக்கு மையன்" (உபதேசகா. சிவவிரத.375).* 2. கட்டுதல்; to construct, build. *"திதித்தவில்" (தைலவ.தைல.).*

[Skt. sthiti > த. திதி.]

திதி[5] *tidi,* பெ.(n.) காசியபன் மனைவியும் அசுரர் மருத்து இவர்களின் தாயுமாகியவள்; the wife of *Kāšyapa*and mother of Asuras and Maruts. *"மைக்கருங்கட் டிதி யென்பாள்" (கம்பரா.சடாயு.25).*

[Skt. diti > த. திதி.]

திதிகர்த்தா *tidi-karttā,* பெ.(n.) திருமால்; *Visnu,* as the preserver. (காத்தற் கடவுள்). *"திதிகர்த்தாத்தானாய்" (பிரபோத. 45, 2).*

த.வ. காப்பிறை

[Skt. sthiti+karttā > த. திதிகர்த்தா.]

திதிகாலம் *tidi-kālam,* பெ.(n.) வாழ்நாள் (வின்.); life time.

[திதி + காலம்.]

[Skt. sthiti > த. திதி.]

திதிகேயம் *tidikēyam,* பெ.(n.) மயில்; peacock fowl-*vitex alata* (சா.அக.).

திதிகொடு-த்தல் *tidi-kōdu-,* செ.குன்றாவி. (v.t.) ஒருவர் இறந்த ஆண்டு முடிவில் அவருக்குப் படையல் செய்தல்; to perform the anniversary ceremony of a deceased person. *"தந்தை தாய்க்குத் திதி கொடுத்தான்" (நன்.விருத்.298, உரை).*

[Skt. tithi > த. திதி+கொடு.]

திதிகொள்(ளு)-தல் *tidi-kol-,* செ.கு.வி.(v.i.) சூரியமாதத்தில் ஒரே திதி இருமுறை வரும்போது ஒன்றனை நீத்தார் கடன் முதலியவற்றுக்குக் கொள்ளுதல் (வின்.); to choose one of two similar *titi* occurring in a solar month for performing ceremonies, etc.

திதிசர் *tidišar,* பெ.(n.) திதியின் மகனான அசுரர் (வின்.); Asuras, as sons of diti.

[Skt. diti-ja > த. திதிசர்.]

திதிசுதர் *tidi-šudar,* பெ.(n.) **திதிசர்** பார்க்க; see *tidišar.*

[Skt. diti+sudar > த. திதிசுதர்.]

திதிட்சயம் *tidi-t-sayam,* பெ.(n.) 1. காருவா (வின்.); new moon day. 2. திதியின் முழுக்காலமும் ஆத்தியந்த வியாபகம் அறுபது நாழிகைக்குக் குறைந் திருப்பது (பஞ்.); the occasion when the

total duration of a titi is less than sixty *nāḻigai.*

[Skt. tithi+ksaya > த. திதிட்சயம்.]

திதிட்சை *tiditcai,* பெ.(n.) அமைதிச் செல்வம் ஆறில் ஒன்றாகிய பொறுமை; patience, endurance, one of *camāti-caṭka-camputtu* (q.v.).

த.வ. பொறுமை

[Skt. titiksā > த. திதிட்சை.]

திதித்திரயம் *tidi-t-tirayam,* பெ.(n.) மூன்று பிறை நாட்கள் ஒரு நாளிற் கூடுவது (விதான.குணாகுண.109); the solar day having three titi.

[Skt. tithi+traya > த. திதித்திரயம்.]

திதித்துவம் *tidittuvam,* பெ.(n.) நோன்பு, வழிபாடு (விரதம் அனுட்டானம்) முதலிய வற்றைக் காட்டும் காலக் குறிப்பு (வின்.); a calendar which marks the dates of all the prescribed fasts, religious observances, etc.

[Skt. tithi-tva > த. திதித்துவம்.]

திதித்துவயம் *tidi-t-tuvayam,* பெ.(n.) இரண்டு இறந்த நாட் கடன்கள் செய்தற் குரியதாகிய ஒரே நாள் (பஞ்.); the solar day having two titi in which the ceremonies of both are performed.

[Skt. tithi+dvaya > த. திதித்துவயம்.]

திதிநாடி *tidi-nāḍi,* பெ.(n.) கோள்மறைவு நாழிகைக் காலம் (வின்.); duration of an eclipse in *nāḻikai.*

[Skt. tithi > த. திதி + நாடி.]

திதிநிச்சயம் *tidi-niccayam,* பெ.(n.) சடங்கு செய்தற்குரிய நாளைத் தீர்மானிக்கை (வின்.); determination of the correct titi for any ceremony.

த.வ. பிறைக்கால வரையறை

[Skt. tithi+niš-caya > த. திதிநிச்சயம்.]

திதிபண்ணு-தல் *tidi-paṇṇu-,* செ.கு.வி. (v.i.) **திதிகொடு-த்தல்** பார்க்க; see *titi-koḍi.*

[Skt. titi > த. திதி+பண்ணு-,]

திதிபத்திரம் *tidi-pattiram,* பெ.(n.) ஐந்தியம் (பஞ்சாங்கம்) (இ.வ.); Hindu almanac.

த.வ. ஐந்தியம்

[Skt.tithi+patra>த.திதிபத்திரம்.]

திதிபரன் *tidi-paraṉ,* பெ.(n.) **திருமால்** (காத்தற் கடவுள்); Viṣṇu, as the preserver.

[Skt. sthiti+para > த. திதிபரன்.]

திதிபுதல்வர் *tidi-pudalvar,* பெ.(n.) **திதிசர்** பார்க்க; see *titicar.* *"திதிபுதல்வர்" (திருவாலவா.கடவுள்வா.12).*

[Skt. didi> த. திதி+புதல்வர்.]

திதீட்சை[1] *tidiṭcai,* பெ.(n.) **திதிட்சை** பார்க்க; see *titiṭcai.*

[Skt. titiksā > த. திதீட்சை.]

திதீட்சை[2] *tidiṭšai,* பெ.(n.) உள்ளொடுக்கம் (தேகநிட்டை); spiritual contemplation fixing the mind on one object-concentration (சா.அக.).

த.வ. ஊழ்கநிலை

திப்பியவனிதம் *tippiyavaṉidam,* பெ.(n.) சிவப்பம்மான் பச்சரிசி; red spurge (சா.அக.).

த.வ. செவ்வம்மான் பச்சரிசி

திபதிசம் *tipatišam,* பெ.(n.) வாலுளுவை; climbing staff plant, intellect tree-*Celastrus paniculata* (சா.அக.).

திபதிச்சம் *tipaticcam,* பெ.(n.) **திபதிசம்** பார்க்க; see *tipatisam* (சா.அக.).

திபதீசம் *tipatīšam,* பெ.(n.) **திபதிசம்** பார்க்க; see *tibatīšam* (சா.அக.).

திபனாசாதி *tibaṇā-šādi,* பெ.(n.) காமநுகர்வு அடிப்படையில் ஆண்களை நான்கு பகுப்பாகப் பிரித்தலில் ஒன்று; one of the four classes of men divided according to lust (சா.அக.).

திம்மாக்கு *timmākku,* பெ.(n.) வீண் பெருமை (இ.வ.); conceit, arrogance, haughtiness.

[U. dimāg > த. திம்மாக்கு.]

திமாகு *timāgu,* பெ.(n.) **திம்மாக்கு** (இ.வ.) பார்க்க; see *timmākku.*

[U. dimāg > த. திமாகு.]

திமிலகுமிலம் *timila-kumilam,* பெ.(n.) 1. இரைச்சல்; noise, stir, bustle. 2.மகிழ்ச்சி; joy, mirth, joviality. 3. மிகுதி; abundance, plenty. 4. மிகைச் செலவாளித் தனம்; extravagance.

தியக்கிநீர் *tiyakki-nīr,* பெ.(n.) 1. பனிக் குடத்து நீர்; amniotic fluid liquor amni. 2. வழலை நாதம்; fuller's earth (சா.அக.).

தியதி *tiyati,* பெ.(n.) நாள்; date. *"கற்கடக ஞாயிற்று அஞ்சாந்தியதியும்" (T.A.S.i, 252).*

[Skt. tithi > த. தியதி.]

தியந்தி *tiyanti,* பெ.(n.) **திராய்** (மலை.) பார்க்க; see *tirāy.*

[Skt. trāyantī > த. தியந்தி.]

தியாகம் *tiyāgam,* பெ. (n.) 1. கைவிடுகை; abandonment, desertion. 2. கொடை (பிங்.); offering, gift, donation, present. 3. பிறர்பொருட்டுத் தன்னலமிழக்குந் தன்மை; spirit of self sacrifice.

த.வ. ஈகம்

[Skt. tyāga > த. தியாகம்.]

தியாகமுரசு *tiyāga-murašu,* பெ.(n.) அரசர்க்குரிய மும்முரசுகளுள் கொடை யளித்தலைக் குறித்தற்கு முழங்கும் முரசம்; trumpet sounded on occasions of royal bounty, one of mummurasam, *"இடி போலுந் தியாகமுரசு முழங்கப் பூண்களை வரையாமற் கொடுத்து" (சீவக,2599, உரை).*

த.வ. கொடைமுரசு

[Skt. tyāga+murasu > த. தியாகமுரசு.]

தியாகர் *tiyāgar,* பெ.(n.) **தியாகராசர்** பார்க்க; see *tiyāgarāšar.*

தியாகராசர் *tiyāga-rāšar,* பெ.(n.) திருவாரூர்ச் சிவபெருமான்; šiva, as worshipped in *Tiruvārūr.*

[Skt. tyāga-rāja > த. தியாகராசர்.]

தியாகி[1] *tiyāgi,* பெ.(n.) தன்னலம் கருதாதவர்; one who sacrifices (for a public cause).

தியாகி[2] *tiyāgi,* பெ.(n.) 1. கொடையாளி (பிங்.); liberal giver, donor. 2. பிறர் பொருட்டுத் தன்னலந் துறப்போன்; one who sacrfices his self-interest.

[Skt. tyāgin > த. தியாகி.]

தியாகையர் *tiyāgaiyar,* பெ.(n.) தெலுங்கில் இசைப்பாடல்கள் இயற்றியவரும் திருவை யாற்றில் வாழ்ந்தவருமான ஓர் இசைவாணர்; a great musical composer in Telugu, native of *Tiruvāiyar.*

தியாச்சியம் *tiyācciyam,* பெ.(n.) 1. விடத் தக்கது; that which ought to be given up. 2. ஒவ்வொரு விண்மீனிலும் நல்வினைக்குத் தகாததென்று கருதி விலக்கப்படும் 3 3/4 நாழிகையளவுள்ள காலம்; duration of an hour and a half in an asterism which is deemed unsuited for auspicious deeds.

[Skt. tyājya > த. தியாச்சியம்.]

தியாத்துவம் *tiyāttuvam,* பெ.(n.) உள்ளொடுக்கம் (தியானம்) (யாழ்.அக.); contemplation, meditation.

[Skt. dhyā-tattva > த. தியாத்துவம்.]

தியாதன் *tiyādaṉ,* பெ.(n.) நினைக்கப் பட்டவன்; he who is thought of or meditated upon. *"தனக்கு நாயகனின் மையால் தியாத நாயகனாக மானதத்தான் நோக்கி" (சிலப்.8, 24, உரை).*

[Skt. dhyāta > த. தியாதன்.]

தியாமம் *tiyāmam,* பெ.(n.) 1. அறுகு (மலை.); harialligrass. 2. இருவேரி; cuscus grass, Anatherium muricatum.

தியானச்சுலோகம் *tiyāṉa-c-culōgam,* பெ. (n.) அகவழிபாடு (தியானஞ்) செய்யுந் தெய்வத்தின் வடிவம் முதலியவற்றைப் பற்றிக் கூறும் வடமொழி செய்யுள்; Sanskrit verse describing the form, etc., of the deity contemplated in a mantra.

[Skt.dhyāna+ślōka>த.தியானச்சுலோகம்.]

தியானசமாதி *tiyāṉa-samādi,* பெ.(n.) ஒக நிலையில் ஒன்று; one of the postures in yoga practice, i.e. sitting in deep and silent contemplation (சா.அக.).

த.வ. அடக்கநோன்பு

தியானநானம் *tiyāṉa-nāṉam,* பெ.(n.) அமுதமாக ஒன்றித்து முழுகுகை; (தத்துவப். 51); (Śaiva.) bathing in water imagining it to be amirtam.

தியானம் *tiyāṉam,* பெ.(n.) 1. மனத்தை அலைபாய விடாமல் ஒருமுகப்படுத்துவது, ஊழ்கம், தவநிலை (பிங்.); meditation. தியானம் உடலுக்கு நல்லது, முனிவர் தியானத்தில் இருக்கிறார். (இ.வ.). 2. எண் வகைத் தவ நிலையில் (அட்டாங்க யோகத்தில்) ஒன்றான இடையறாச் சிந்தனை (பிங்.); (*Yōga*) steady, uninterrupted contemplation of an object, one of *aṣṭāṅgayōkam.*

த.வ. ஊழ்கம், தவம்

[Skt. dhyāna > த. தியானம்.]

தியானமுத்திரை *tiyāṉa-muttirai,* பெ.(n.) சிவஒக்கத்தில் உட்கார்ந்து இருப்பதற்காக அமைத்துக் கொள்ளும் ஒரு வகை நிலைமை; a prescribed attitude or posture, when meditation upon deity, in yoga practice (சா.அக.).

[Skt. dhyāna > த. தியானம் + முத்திரை.]



தியானயாகம் *tiyāṉa-yāgam,* பெ.(n.) ஐவகை வேள்வியுள் வழிபாடு செய்தலாகிய வேள்வி (சிவதரு.ஐவகை.1, உரை); religious meditation, considered as a form of sacrifice, one of *ai-vakai-yākam.*

[Skt. dhyāna+yāga > த. தியானயாகம்.]

தியானவான் *tiyāṉavāṉ,* பெ.(n.) **தியானி** பார்க்க; see *tiyāṉi.*

[Skt. dhyān-avān > த. தியானவான்.]

தியானவிந்து *tiyāṉa-vindu,* பெ.(n.) நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று; an upanisad, one of 108.

[Skt. dhyāna-bindu > த. தியானவிந்து.]

தியானவேள்வி *tiyāṉa-vēḷvi,* பெ.(n.) **தியானயாகம்** பார்க்க; see *tiyāṉa-yāgam* (சி.சி.8, 23, சிவஞா.).

[Skt. dhyāna > த. தியானம்+ வேள்வி.]

தியானி[1] *tiyāṉi,* பெ.(n.) விடாது இறை ஊழ்கம் செய்வோன்; one engaged in uninterrupted religious meditation.

த.வ. ஊழ்கத்தன்

[Skt. dhyānin > த.தியானி.]

தியானி²–த்தல் *tiyāni-,* 4 செ.குன்றாவி. (v.t.) ஒன்றை விடாது ஊழ்கம் செய்தல்; to meditate, contemplate, to give undivided attention to a deity, an object, etc. *"அமுதலிங்கத்தைத் தியானித்து" (திருவானைக்.வாங்.2).*

த.வ. ஊழ்கமொன்றல்

[Skt. dhyāna > த. தியானி–.]

தியானித்தல் *tiyānittal,* தொ.பெ.(vbl.n.) சிந்தித்தல்; meditating (சா.அக.).

தியானிப்பு *tiyānippu,* பெ.(n.) ஊழ்கம் (தியானம்); meditation (சா.அக.).

த.வ. ஒன்றிப்பு, ஒன்றல்

தியுகம் *tiyugam,* பெ.(n.) பறவை; bird (சா.அக.).

தியுகாரி *tiyugāri,* பெ.(n.) காக்கை; crow (சா.அக.).

தியுதம் *tiyutam,* பெ.(n.) **தியுதி** பார்க்க; see *tiyuti* (யாழ்.அக.).

[Skt. dyōta > த. தியுதம்.]

தியுதி *tiyuti,* பெ.(n.) 1. ஒளி; light (யாழ்.அக.). 2. ஒளிக்கீற்று; ray of light.

[Skt. dyuti > த. தியுதி.]

தியுமணி *tiyumani,* பெ.(n.) ஞாயிறு; sun (யாழ்.அக.).

[Skt. dyu-mani > த. தியுமணி.]

தியூசணாதிலோகம் *tiyūšanādi-lōgam,* பெ.(n.) மேக குட்டத்திற்குக் கொடுக்கும் ஆயுள்வேத மருந்து; an ayurvedic medicine given for some skin affection (சா.அக.).

தியூதம் *tiyūdam,* பெ.(n.) சூதாட்டம் (சங்.அக.); dice-play gambling.

[Skt. dyūta > த. தியூதம்.]

தியேசேயே *tiyēšēyē,* பெ.(n.) மரமஞ்சள் (மலை.); tree turmeric.

தியோதம் *tiyōtam,* பெ.(n.) 1. ஒளி; light (யாழ்.அக.). 2. வெயில்; sunshine.

[Skt. dyōta > த. தியோதம்.]

திரக்கிரசம் *tirakkirasam,* பெ. (n.) கண்வலி (யாழ்.அக.); eyesore.

[Skt. tiraskṛta > த. திரக்கிரசம்.]

திரகலாதிகம் *tiragalādigam,* பெ.(n.) காளான்; mushroom-pungus (சா.அக.).

திரசர் *tirašar,* பெ.(n.) மருத்துவமனை மருத்துவருக்கு உதவி செய்யும் வேலைக்காரன் (இ.வ.); dresser.

[E. dresser > த. திரசர்.]

திரசரேணு *tirašarēnu,* பெ.(n.) அணுத்தூசி; the mote or atom moving in the sun beam considered as an ideal weight either of the lowest denomination or equal to three invisible atoms (சா.அக.).

திரசாதிசூரன் *tirašādišūran,* பெ. (n.) வீரம் எனும் வேதியியல் பொருள்; corrosive sublimate - *mercuric chloride* (சா.அக.).

திரசுகரி–த்தல் *tirašukari-,* செ.குன்றாவி. (v.t.) 1. அவமதித்தல்; to despise. 2. மறைத்தல்; to coneal, cover. 3. விலக்குதல்; to reject, set aside.

த.வ. புறக்கணித்தல்

[Skt. tiraskāra > த. திரசுகரி–.]

திரசுகாரம் *tirašukāram,* பெ.(n.) 1. அவமதிப்பு; contempt, disrepect. 2. மறைக்கை; concealment. 3. விலக்குகை; rejection.

த.வ. புறக்கணிப்பு

[Skt. tiraskāra > த. திரசுகாரம்.]

திரணகிருமி *tirana-kirumi,* பெ.(n.) சன்ன உயிரி(கிருமி); thin worm (சா.அக.).

திரணக்கிரகி *tirana-k-kiragi,* பெ.(n.) கற்பூரமணி (அ) பொன்னம்பர்; amber-succinum (சா.அக.).

திரணபூலிகம் *tirana-pūligam,* பெ.(n.) கருவழித்தல்; human abortion (சா.அக.).

திரணம் *tiranam,* பெ.(n.) ஒரு நோய்; a disease (சா.அக.).

திரணமண்டலி *tirana-mandali,* பெ.(n.) புல்விரியன் பாம்பு; grass viper, grass adder (சா.அக.).



திரணமிருதம் *tirana-mirudam,* பெ.(n.) கண்பூ; cataract of the eye (சா.அக.).

த.வ. கண்புரை

திரணாக்கியன் *tiranākkiyan,* பெ. (n.) ஒரு சித்தன், குறத்திக்குப் பிறந்தவன்; a Siddhar, son of Jamath agni born to kurathi (சா.அக.).

திரணாக்கினி *tiranākkini,* பெ.(n.) புல் நெருப்பு; grass fire (சா.அக.).

திரணிக்கல் *tiranikkal,* பெ.(n.) காகச்சிலை, அதாவது காக்கைக் கல் இது உபரசச் சரக்கில் ஒன்று; black load stone-magnetic oxide of iron, it is one of the 120 kinds of natural substances enumerated in Tamil medical science (சா.அக.).

திரத்துவம் *tirattuvam,* பெ.(n.) நிலைப்பு; fixedness, stability, permanence. *"திரத்துவமா நிறைந்தான்" (ஞானவா. தாசு.50).*

[Skt. sthira-tva > த. திரத்துவம்.]

திரநட்சத்திரம் *tira-natcattiram,* பெ.(n.) நற்செயல்கள் தொடங்குதற்குரிய உருள் (உரோகிணி), மானேறு (உத்திரம்), கடைக்குளம் (உத்திராடம்), பிற்கொழுங்கால் (உத்திரட்டாதி) நாள்கள் (விதான. பஞ்சாங்க.20, உரை); the naksatras, *urōkini, uttiram, uttirādam* and *uttirattāti,* auspicious for works of long stading nature.

[Skt.sthira+naksatra> த. திரநட்சத்திரம்.]

திரப்சம் *tirapšam,* பெ.(n.) கொஞ்சம் (கொ.வ.); small quantity.

[Skt. drapsa > த. திரப்சம்.]

திரப்படு-தல் *tira-p-padu-,* செ.கு.வி.(v.i.) உறுதிப்படுதல்; to be fixed, firm, permanent, steady.

[Skt. sthira > த. திரப்படு-]

திரப்பியம் *tirappiyam,* பெ.(n.) **திரவியம்** பார்க்க; see *tiraviyam. "பிம்முதலாகுந் திரப்பியத்தில்" (விரசோ.தத்தி.4).*

[Skt. dravya > த. திரப்பியம்.]

திரப்புசம் *tirappušam,* பெ.(n.) 1. **கக்கரி** பார்க்க; see *kakkari.* 2. கத்திரி (மலை); brinjal.

[Skt. trapusa > த. திரப்புசம்.]

திரபம் *tirapam,* பெ.(n.) நாணம் (யாழ்.அக.); shame, bashfulness.

[Skt. trapā > த. திரபம்.]

திரபிபுவலி *tirapipuvali,* பெ.(n.) வங்க மணல்; lead mixed with sand-leadore (சா.அக.).

திரபு *tirabu,* பெ.(n.) 1. தகரம்; tin. *"திரபுத்தனை... எடுக்குமிழுதையும்" (சிவதரு.பாவ.24).* 2. நிரய வகை; hell. *"உழுத்ததசை திரபு வெனச் செப்புநவும்" (சிவதரு.சுவர்.115).*

[Skt. trapu > த. திரபு.]

திரபுட்பம் *tiraputpam,* பெ. (n.) **திரிபுலம்** பார்க்க; see *tiripulam.*

[Skt. trapuṣa > த. திரபுட்பம்.]

திரபுட்பவம் *tiraputpavam,* பெ.(n.) சிறுவிடு கொள்; a kind of gram (சா.அக.).

திரபுலம் *tirapulam,* பெ.(n.) துத்தநாகம் (யாழ்.அக.); zinc.

[Skt. trapula > த. திரபுலம்.]

திரபொருள் *tira-poruḷ,* பெ.(n.) நிலையான பொருள்; fixed body (சா.அக.).

திரம் *tiram,* பெ.(n.) நிலம் (இலக்.அக.); earth.

[Skt. sthirā > த. திரம்.]

திரமம் *tiramam,* பெ.(n.) பழைய கிரேக்க நாணய வகை (T.A.S.iv, 30); an ancient Greek coin, used in India.

[G.K. drakme > த. திரமம்.]

திரமாதம் *tira-mādam,* பெ.(n.) நிலை நிற்க வேண்டும் செயல்களைத் தொடங்குவதற்கு ஏற்றனவாகக் கருதப்படும் ஞாயிறு இருக்கும் விடை (வைகாசி) மடங்கல் (ஆவணி) நளி (கார்த்திகை) கும்பம் (மாசி) ஆகிய மாதங்கள் (வின்.); the four months in which the sun is in *tira-rāśi,* viz., *vaigāci, āvaṇi, kārttigai, māśi.*

[Skt. sthira> த. திர+மாதம்.]

திரமிடம் *tiramiḍam,* பெ.(n.) **திரமிளம்** பார்க்க; see *tiramiḷam.*

[Skt. dramiḍa > த. திரமிடம்.]

திரமிளம் *tiramiḷam,* பெ.(n.) 1. திராவிடம்; south India. 2. தமிழ் மொழி (பி.வி.2, உரை); Tamil language.

[Skt. dramiḍa > த. திரமிளம்.]

திரயப்பிணிகடம் *tiraya-p-piṇikaḍam,* பெ.(n.) 1. பருத்தவுடம்பு; fat body. 2. பரு(தூல)வுடம்பு; corporeal or material body as opposed to spiritual body (சா.அக.).

திரயம் *tirayam,* பெ.(n.) மூன்று; three (ஈஷ்ணாத்திரயம்).

[Skt. traya > த. திரயம்.]

திரயம்பகன் *tirayambagaṉ,* பெ.(n.) சிவபெருமான் முக்கண்ணுள்ள; śiva, as three-eyed. *"தாதை யெனுந் திரயம்பகன்" (கந்தபு.உபதேசப.20).*

[Skt. tryambaka > த. திரயம்பகன்.]

திரயமுகம் *tiraya-mugam,* பெ.(n.) கோள் முதலியவற்றின் குறுக்குப் பார்வை (விதான. பஞ்சாங்க.19); (Astrol.) transverse aspect, as of planets.

[Skt. tiryaṅ-mukha > த. திரயமுகம்.]

திரயாங்கநமசுகாரம் *tirayāṅga-namaśu kāram,* பெ. (n.) தலையிலே இரண்டு கைகளையும் குவித்து வணங்குகை (சிவாலயதரிசனவிதி, பக்.11); rendering obeisance by folding both hands over one's head.

[Skt. tryāṅga+namaskāram>த. திரயாங்க நமசுகாரம்.]

திரயாங்கம் *tirayāṅgam,* பெ.(n.) நாள், கிழமை விண்மீன்களைக் காட்டும் குறிப்பு (கொ.வ.); calendar showing the three elements, titi, *vāram* and *naṭcattiram.*

[Skt. traya+aṅga > த. திரயாங்கம்.]

திரயோதசி *tirayōdaśi,* பெ.(n.) கரும் வெண்பக்கங்களில் வரும் பதின்மூன்றாம் நாள்; the 13th titi of the waxing or waning moon. *"திங்க டிரயோதசி யாதிரையும் வந்து செறிந்திடும்" (சிவரக. அபுத்தி.23).*

[Skt. trayōdaśī > த. திரயோதசி.]

திரராசி *tira-rāśi,* பெ.(n.) நிலைநிற்க வேண்டுஞ் செயல்களைத் தொடங்குதற்கு ஏற்றனவாகக் கருதப்படும் விடை (இடபம்), மடங்கல் (சிங்கம்), நளி (விருச்சிகம்), கும்பம்

என்ற 'ஓரை'கள் (விதான.மரபி.5, உரை); (Astrol.) the four signs of the zodiac, auspicious for works of lond-standing nature, viz., *iḍapam, ciṅgam, viruccigam, kumbam.*

[Skt. sthira+rāśi > த. திரராசி.]

திரலிங்கம் *tira-liṅgam,* பெ.(n.) பரார்த்த லிங்கம் (சங்.அக.); a kind of *liṅga.*

[Skt. sthira+liṅgam > த. திரலிங்கம்.]

திரவகம் *tiravagam,* பெ.(n.) நாசியிலிருந்து குருதி சிந்தல்; bleeding from the nostruls, nosebleed-*Epistaxis* (சா.அக.).

திரவகாரி *tiravagāri,* பெ. (n.) உமிழ் நீரைப்பெருக்கும் மருந்து; medicine promoting the flow of saliva-salivant - *Sialogogue* (சா.அக.).

திரவகாரிகள் *tirava-kārigaḷ,* பெ.(n.) வாயில் உமிழ் நீரை மிகுதிப்படுத்தும் மருந்துகள் (பைஷஜ.13); sialogogues, agents to promote the flow of saliva.

[Skt. dravakārin > த. திரவகாரிகள்.]

திரவச்சத்து *tirava-c-cattu,* பெ.(n.) குழம்பு; liquid extract, tincture (சா.அக.).

திரவசுவேதம் *tirava-šuvēdam,* பெ.(n.) வேதுபிடித்தல்; medicated bath (சா.அக.).

திரவணம் *tiravaṇam,* பெ.(n.) வெப்பம்; heat (சா.அக.).

திரவணாங்கம் *tiravaṇāṅgam,* பெ.(n.) உருக்குப்பதம்; melting point (சா.அக.).

திரவத்திரவியம் *tirava-t-tiraviyam,* பெ.(n.) நீர்மப்பொருள்கள்; fluid substance (சா.அக.).

திரவத்துங்கம் *tirava-t-tuṅgam,* பெ. (n.) 1. ஒரு பொருள் இயற்கையாகவோ, செயற்கையாகவோ நீர்மத் தன்மையடையும் நிலைமை; a natural or artificial fluid condition of a substance. 2. நீர்த் தன்மையும் கசிவும்; fluidity and wetness (சா.அக.).

திரவத்துவம் *tiravattuvam,* பெ.(n.) நீர்மப் பொருள்களின் நெகிழ்ச்சித் தன்மை; flowing property of liquids. *"திரவத்துவஞ் சினேகம்" (பிரபோத.42, 2).*

திரவந்திசம் *tiravandišam,* பெ.(n.) ஒரு பூடு; a plant - *Anthericum tuberosum* (சா.அக.).

திரவபதார்த்தம் *tiravapadārttam,* பெ.(n.) **திரவத்திரவியம்** பார்க்க; see *tirava-t-tiraviyam* (சா.அக.).

திரவம்[1] *tiravam,* பெ.(n.) 1. நீர் முதலிய வற்றின் ஓடுந் தன்மை (வின்.); flowing property of liquids. 2. கசிவு (வின்.); oozing of liquids. 3. சாறு (வின்.); juice, essence. 4. நீர்மம்; liquid (தைலவ. தைல.).

[Skt. drava > த. திரவம்.]

திரவம்[2] *tiravam,* பெ.(n.) 1. சாறம்; essence. 2. புளிமநீர்; acid. 3. கருப்பையிலிருந்து வடியும் குருதி; blood discharged from the womb (சா.அக.).

திரவாதாரம் *tiravādāram,* பெ.(n.) நீர்மப் பொருளைக் கொள்ளும் ஏனம்; fluid holder (சா.அக.).

திரவாதி *tiravādi,* பெ.(n.) காட்டாமணக்கு (வின்.); physic nut.

திரவாரம் *tiravāram,* பெ.(n.) காரிக்கிழமை (பஞ்.); saturday.

[Skt. sthiravāra > த. திரவாரம்.]

திரவி *tiravi,* பெ.(n.) 1. சாறு; juice. 2. இதளியம் (பாதரசம்); mercury (சா.அக.).

திரவிணம் *tiraviṇam,* பெ.(n.) வெப்பம்; heat (சா.அக.).

திரவித்தல் *tiravittal,* பெ.(n.) 1. நீர்பொசியப் பண்ணல்; making water to ooze out. 2. நீர் வடித்தல்; drawing out fluid from anything as ascities (பெருவயிறு) (சா.அக.).

திரவித்தை *tiravittai,* பெ.(n.) பொன்னாக்கல் கல்வி; the art of transmuting mercury into gold (சா.அக.).

திரவியகுணசாத்திரம் *tiraviya-kuṇa sāttiram,* பெ.(n.) கறியுணவுகளின் பண்பு களைக் கூறும் நூல்; that branch of medical science which treats of quality acttion etc. of drugs employed in medicine materia medica (சா.அக.).

திரவியசம்பத்து *tiraviya-šampattu,* பெ.(n.) பேறு; riches.

[Skt. dravya+sampad > த. திரவிய சம்பத்து.]

திரவியசுத்தி[1] *tiraviya-šutti,* பெ. (n.) 1. கடவுளின் அருளால் சுத்தியுள் ஒன்றாய், தன்னை மறந்து முன்வினைப் பயனாகிய எல்லாச் செயல்களும் கடவுளின் அருளால் உண்டாவன என்று நோக்குகை (கட்டளைக்.228); (*Šaiva.*) seeing things in the light of divine grace, suppressing one's self and interpreting all experiences which are fruit of karma as acts of divine grace, one of *Pañca-cutti,* q.v. 2. ஐந்தூய்மையுள் மந்திர நீரைத் தெளித்துப் பொருள்களை தூய்மை செய்வது (சைவச.502, உரை); (Tantra.) purification of articles which consists in sprinkling sanctified water on articles of worship, one of *pañca-cutti.* (சைவச.502, உரை).

[Skt. dravya+šuddhi > த. திரவியசுத்தி.]

திரவியசுத்தி[2] *tiraviyašutti,* பெ.(n.) ஐந்து வகை குற்ற நீங்கியியல்களுள் ஒன்று (பஞ்ச சுத்தியிலொன்று); one of the five methods of cleansing medicines or purifications of drugs this should not be confounded with the ஐந்தூய்மை (பஞ்ச சுத்த) (purification) practised among the sheivas (சா.அக.).

திரவியசுதானம் *tiraviya-šudāṉam,* பெ.(n.) தனசுதானம் பிறப்பியத்தில் பிறப்பு ஓரையிலிருந்து இரண்டாம் வீடு; second house from the ascendant (Astrol.).

[Skt. dravya > த. திரவியசுதானம்.]

திரவியப்பட்டை *tiraviya-p-paṭṭai,* பெ.(n.) திரு மஞ்சனப் பட்டை (இ.வ.); bark of the lodhra tree.

[Skt. dravya > த. திரவியம் + பட்டை.]

திரவியம் *tiraviyam,* பெ.(n.) 1. இயற்கை யாகவே கிடைக்கும் மூலப்பொருட்கள்; elementary substances that are obtained in nature. 2. பொருள்; substance. *"பெரிது மிகை நற் றிரவியமே" (ஞானவா.தேவபூ.52).* 3. சொத்து; property. *"தேடுந் திரவியமும்" (தாயு.பராபர.233).* 4. பொன் (சூடா.); gold. 5. தருக்க நூல்களில் கூறப்படும் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மனம் ஆகிய மூலப்பொருள்கள்; (Log.) elementary substances, numbering nine, viz., *pirutuvi, appu, tēyu, vāyu, ākāyam, kālam, tikku, āṉmā, maṉam.*

[Skt. dravya > த. திரவியம்.]

திராசிலை *tirāšilai,* பெ.(n.) இயற்கையில் கிடைக்கும் பொருட்களுள் ஒன்று; one of the 120 kinds of natural substances (சா.அக.).

திராட்சக்காடி *tirāṭcakkāḍi,* பெ.(n.) 1. கொடி முந்திரியில் (திராட்சை) இருந்து வடிக்கும் புளிப்பு; fermented juice from the fruit of grape vine-grapes vinegar. 2. கொடி

முந்திரி மது; an intoxicated liquor obtained from the fermented juice of grapes-vine (சா.அக.).

திராட்சசர்க்கரை *tirāṭca-šarkkarai,* பெ.(n.) 1. குருதியிலும் கருப்பு ஈரலிலும் சிறிதளவாய்க் காணப்படும் ஒரு வகை சருக்கரை; grape sugar-glucose. 2. கொடிமுந்திரி சாற்றி னின்று வடித்தெடுக்கும் சருக்கரை; a variety of sugar extracted from grape-Grape sugar, it is less sweet than sugarcane (சா.அக.).

திராட்சாசவம் *tirāṭcāšavam,* பெ.(n.) 1. உலர்ந்த கொடி முந்திரிப் பழத்தின் வடிநீர் எடுத்து வெல்லத்துடன் கலந்து கரைத்து, புளிக்க வைத்து பிறகு அதினின்று வடிக்கும் ஒரு வகையான மருந்து; a tincture prepared from the decoction of raisins combined with jaggery by allowing it to ferment for a sufficient period (சா.அக.).

திராட்சாரிட்டம் *tirāṭcāriṭṭam,* பெ.(n.) இது தேன், சருக்கரை, கொடி முந்திரி வடிநீர் இவைகளுடன் சில நறுமண நீர்மங்கள் கலந்த ஒரு மதுவகை, இது நோயினால் இளைத்தவர் களுக்குச் சுறுசுறுப்பை உண்டாக்கும்; a drink analogous to wine prepared with honey, sugar and decoction of raisin with the addition of a few aromatics. it is used as a stimulant in exhausting diseases (சா.அக.).

திராட்சாபாகம் *tirāṭcā-pāgam,* பெ.(n.) கொடி முந்திரி சாறு போல துய்ப்பதற்கு எளிதான செய்யுள் நடை; (poet) transparant simplicity of style, as of a poem whose beauty can be drunk in as easily as the juice of grapes.

[*Skt. drākṣā+pākam* > *த. திராட்சாபாகம்.*]

திராட்சியுப்பு *tirāṭciyuppu,* பெ.(n.) கொடி முந்திரிச்சாற்றைப் புளிக்க வைக்குங்கால் அதினின்று இறக்கும் காரவுப்பு; a crystalline salt deposited during fermentation of the juice of grapes-turtrate of potash - potassae turtrat, acid turtrate of potash- Acidum turtaricum (சா.அக.).

திராட்சை *tirāṭcai,* பெ.(n.) கொடிவகை; common grape vine, 1. cl., vitis vinifera.

த.வ. கொடிமுந்திரி

[*Skt. drākṣā* > *த. திராட்சை.*]



திராட்சைசாராயம் *tirāṭšai-šārāyam,* பெ.(n.) கொடி முந்திரி சாற்றினின்று வாலை யிலிட்டிறக்கி வடித்த காரமான மதுவகை, இதனால் ஊதை பித்த தீவினை. உடம் பழற்சிபோம், அரத்தம் பெருகும் காமத்தை யுண்டாக்கும்; an ardent spirit distilled from wine-brandy (சா.அக.).

[*Skt. drākṣa* > *த. திராட்சை+சாராயம்.*]

திராட்சைரசம் *tirāṭcai-rašam,* பெ.(n.) சீமைச் சாராயம்; wine prepared from the fermented juice of grapes (சா.அக.).

திராட்டு *tirāṭṭu,* பெ.(n.) 1. குதிரை நடை வகை (இ.வ.); trot. 2. நெருக்கடி நிலைமை (உ.வ.); difficult situation.

[*E. trot* > *த. திராட்டு.*]

திராணம் *tirāṇam,* பெ.(n.) உறை (யாழ்.அக.); sheath, cover.

[*Skt. trāṇa* > *த. திராணம்.*]

திராணியின்மை *tirāṇiyiṉmai,* பெ.(n.) வலிமையற்றவன்; weakness (சா.அக.).

திராபம் *tirābam,* பெ.(n.) 1. வானம்; sky. 2. சேறு; mire. 3. மூடன்; idiot.

[Skt. drāpa > த. திராபம்.]

திராபை *tirābai,* பெ.(n.) 1. பயனற்றவன்; fool, good-for nothing fellow. 2. பயனற்றது; worthless stuff. *"அவன் வாங்கி வந்த பொருள் சுத்தத் திராபை".*

[Skt. drāpa > த. திராபை.]

திராய் *tirāy,* பெ.(n.) **திராவி** பார்க்க; see *tirāvi.*

[Port. trava > த. திராய்[2].]

திராய்க்கம்பம் *tirāy-k-kambam,* பெ.(n.) உத்தரம் (இ.வ.); beam, as supporting joists.

[திராய்+கம்பம்.]

[Port. trava > த. திராய்.]

திராயந்தி *tirāyandi,* பெ.(n.) கம்பந்திராய் ; a kind of wild chickweed (மலை.).

திராயந்தி *tirāyandi,* பெ.(n.) 1. கம்பந்திராய்; a species of indian chick weed-*Phurmaceum genus.* 2. பிரமிய வழுக்கை; thymeleaved gratiola - *Gratiola monieri* (சா.அக.).

திராவகநீர் *tirāvaga-nīr,* பெ.(n.) **திராவகரசம்** (பாண்டி.) பார்க்க; see *tirāvaga-rasam.*

திராவகநீறு *tirāvaga-nīṟu,* பெ.(n.) வெடியுப்புச் சுண்ணம் (வின்.); precipitate of nitre or sulphur.

[Skt. drāvaka > த. திராவகம் + நீறு.]

திராவகப்பிரியை *tirāvaga-p-piriyai,* பெ.(n.) எரிநீரில் கொழுமையால் செழித்து வளரும் பூண்டு அல்லது பூச்சிகள்; any individual plant or micro or ganisms that grow well in the highly acid media-*Acidophile* (சா.அக.).

திராவகப்புளிப்பு *tirāvaga-p-puḷippu,* பெ.(n.) காரப் புளிப்பு; extreme sourness causing iritation, sourness sharp or biting to the taste (சா.அக.).

[Skt. drāvaka > த. திராவகம் + புளிப்பு.]

திராவகம்[1] *tirāvagam,* பெ.(n.) 1. மருத்துச் சரக்குகளினின்று இறக்கப்படும் சத்து நீர்; tincture, distilled spirit, strong liquor, mineral acid. 2. காந்தக்கல்; load stone. 3. செயநீர்; a medical liquid preparation. 4. வாலையினின்றிறக்கிய தாதுப்புளிப்பு; distilled mineral acid (சா.அக.).

த.வ. எரிநீரம், நீர்மம்

[Skt. drāvaka > த. திராவகம்.]

திராவகமயக்கம் *tirāvaga-mayakkam,* பெ.(n.) உடம்பினில் புளிப்புச் சத்து அதிகமாக ஏற்படுவதனால் உண்டாகும் மயக்கம்; giddiness caused by excess of sourness in the system (சா.அக.).

[Skt. drāvaka > த. திராவகம் + மயக்கம்.]

திராவகமருந்து *tirāvaga-marundu,* பெ.(n.) எரி நீரின் உதவியைக் கொண்டு செய்யப்படும் மருந்து; medicine prepared with the aid of acids (சா.அக.).

[Skt. drāvaka > த. திராவக(ம்) + மருந்து.]

திராவகரசம் *tirāvaga-rašam,* பெ.(n.) காயகற்ப மருந்து (பாண்டி.); elixir.

[Skt. drāvaka+rasam > த. திராவகரசம்.]

திராவகரம் *tirāvagaram,* பெ.(n.) 1. ஓர் வகை வெண்காரம்; a kind of borax. 2. ஓர் உருக்கு மருந்து; a flux to assist the fusion of metals. 3. வாய்நீர்; saliva as over flowing (சா.அக.).

திராவணஞ்செய்-தல் *tirāvaṇañ-jey-,* செ.குன்றாவி.(v.t.) ஒட்டுதல்; to drive, remove. *"துயரைத் திராவணஞ்செய் யிலகுகருணை" (திருக்காளத்.4, 5, 51).*

[Skt. drāvaṇa > த. திராவணம் + செய்-.]

திராவம்புரி–தல் *tirāvam-puri-,* செ.குன்றாவி. (v.t.) உருக்குதல்; to melt. *"எவற்றினையுந் திராவம் புரியுந் தொழிலாலும்" (திருக்காளத்.பு. 5, 50).*

[Skt. drāva > த. திராவம்+புரி–தல்.]

திராவி *tirāvi,* பெ.(n.) துலாக்கட்டை; joist.

[Port. trava > த. திராவி.]

திராவிடப்பிரபந்தம் *tirāviḍa-p-pirapandam,* பெ.(n.) **திவ்வியப்பிரபந்தம்** பார்க்க; see *tivviyappirapandam; vaisṇava* sacred poems by the *āḻvārs.*

[Skt. drāviḍa+pirapantam > த. திராவிடப் பிரபந்தம்.]

திராவிடப்பிராமணர் *tirāviḍa-p-pirāmaṇar,* பெ.(n.) விந்திய மலைக்குத் தெற்கில் குடியேறிய தென்னிந்தியப் பார்ப்பனர்; Brahmins living south of the vindhya range, dist. fr. *Kauṭa-p-pirāmaṇar.*

[Skt. drāviḍa+pirāmaṇar > த. திராவிடப் பிராமணர்.]

விந்திய மலைக்கு வடக்கில் குடியேறி வாழ்வோரை கௌட பிராமணர் என்பதும் தெற்கில் குடியேறியவரைத் திராவிட பிராமணர் என்பதும் வழக்கம்.

திராவிடம் *tirāviḍam,* பெ.(n.) 1. தமிழ், தமிழ்நாடு; Tamil, the Tamil country. 2. தமிழ்நாடு (திராவிடம்), ஆந்திரம், கன்னடம், மகாராட்டிரம், கூர்ச்சரம் என்று ஐந்து (பஞ்ச) திராவிட மாநிலங்கள்; south india, south of vindhya, including the five provinces, *tirāviḍam, āntiram, kannaḍam, makārāṭṭiram* and *kūrccaram.* 3. தமிழ் மொழி; the Tamil language. *"திராவிடத்திலே வந்ததா விவகரிப்பேன்" (தாயு.சித்தர்.10).* 4. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு முதலிய தென் திராவிட மொழிகளும் மற்றும் வட திராவிட மொழிகளும்; vernacular tongues of the inhabitants of S.India, Tamil, Telugu, Kanarese, Malayalam, *Tulu,* etc. and languages of Dravidian family spoken in central and North India.

[த. தமிழ் > Skt. drāviḍa > த. திராவிடம்.]

திராவிடவேதம் *tirāviḍa-vētam,* பெ.(n.) **தமிழ்வேதம்** பார்க்க ; see *tamiḻvēdam.*

[Skt. drāviḍa+vēda > த. திராவிடவேதம்.]

திரி *tiri,* பெ.(n.) பெண்; woman (யாழ்.அக.).

[Skt. stri > த. திரி.]

திரிகம் *tirigam,* பெ.(n.) 1. முதுகெலும்புக்குக் கீழுள்ள முச்சந்தி; the sacral region. 2. இரண்டு காரை எலும்புகளும் மார்பு எலும்போடு கூடியது; the meeting of the two clavicles with the breast bone. 3. மூன்று கூடியது; that which constitutes three (சா.அக.).

திரிகர்த்தம் *tiri-karttam,* பெ.(n.) ஐம்பத்தாறு நாடுகளுள் வடக்கில் லூதியானா, பாதியாலா பகுதிகளையும், தெற்கில் பாலைவனப் பகுதியையும் கொண்டதும், சத்லட்சு சரசுவதி ஆறுகளுக்கு இடையிலுள்ளதுமான நாடு (பாரத.இராச.51); An arid country between the sutlej and the sarasvati rivers, containing Ludhiana and Patiala on the north and some portion of the desert on the south, one of 56 *tēcam.*

[Skt. trigarta > த. திரிகர்த்தம்.]

திரிகரணசுத்தி *tirigaraṇa-sutti,* பெ.(n.) மனம், மொழி, மெய்த்தூய்மை; purety or chasteness in thought, word and deed (சா.அக.).

திரிகரணம் *tiri-karaṇam,* பெ.(n.) மனம், சொல், காயம் என்ற மூன்று கருவிகள்; the three organs, viz., *maṇam, vākku, kayam* (குமர.பிர.கந்தர்.9).

[Skt. tri-karaṇa > த. திரிகரணம்.]

திரிகாண்டம் *tirikāṇḍam,* பெ.(n.) கொங் கணவர் செய்த மூன்று காண்ட மடங்கிய ஓர்

ஊதை காவியம்; the three chapters on alchemy compiled by a great siddha named *Konganavar.* (சா.அக.).

திரிகாலஞானம் *tiri-kāla-ñāṉam,* பெ.(n.) முக்காலவுணர்ச்சி (சிலப்.10, 167, அரும்.); knowledge of the part, the present and the future.

[Skt. tri-kāla-ñāṉam > த. திரிகாலஞானம்.]

திரிகாலம் *tiri-kālam,* பெ.(n.) 1. காலை, உச்சி, மாலை என்று முப்பகுதி நாட்காலம்; the three parts of the day, viz.., *kālai, ucci, mālai* (S.I.I.i, 78). 2. இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற முக்காலங்கள் (Gram.); time, of three kinds, viz., *irappu, nikaḻvu, etirvu.*

[Skt. tri- > த. திரி + காலம்.]

திரிகாயம் *tirigāyam,* பெ.(n.) பெருங்காயம், மிளகு, பூண்டு என மூன்று வகைக் காயப் பொருள்;the three alternatives prescribed for parturition or child birth-*asafoetida, black pepper and garlic* (சா.அக.).

திரிகாரசிகம் *tirigārašigam,* பெ.(n.) மூன்று துவர்ப்பு பொருள்கள், சுக்கு, அதிவிடயம், கோரை; the three astrigent drugs-dry ginger, atee, and musta (சா.அக.).

திரிகாரம் *tirigāram,* பெ.(n.) மூன்று காரம், படிகாரம், வெண்காரம், சவர்க்காரம்; the three karams viz., alum, borax and soap (சா.அக.).

[Skt. tri > த. திரி + காரம்.]

திரிகாலக்கியானம் *tirikālakkiyāṉam,* பெ.(n.) முக்காலம் உணரும் அறிவு; knowledge of knowing the past, prest and future (சா.அக.).

திரிகிருதம் *tirikirudam,* பெ.(n.) மூன்று வகை நெய்ச் சத்து, வெண்ணெய், எண்ணெய், கொழுப்பு; the three kinds of oleum-clarified butter, gingelly oil and curd (சா.அக.).

திரிகினம் *tirikiṉam,* பெ.(n.) அரைப்பதமான புலாலை (மாமிசத்தை) உட்கொள்வதால் உடலில் உண்டாகும் நுண்ணுயிர் (கிருமி) வகை; nematoid worm produced from eating meat insuffiencietly cooked,. *Trichina Spiralis.*

[E. trichina > த. திரிகினம்.]

திரிகுணசல் *tiriguṇašal,* பெ.(n.) தாளகம், செம்மஞ்சுள்ளி, கெந்தி ஆக மூன்று பொருள் களையும் கொண்டது. இது சத்திநாதப் பொருள்களைச் சேர்ந்த இனம்; a compound of three drugs viz., orpiment, red arsenic and sulphur (சா.அக.).

திரிகுணம் *tiri-guṇam,* பெ.(n.) அன்பு, வெகுளி, மயக்கம் (சத்துவம், இராசதம், தாமதம்) என்று மூவகைக் குணங்கள்; the three fundamental qualities, viz., *cattuvam, irācatam, tāmatam.*

[Skt. tri> த. திரி + குணம்.]

திரிகூடம் *tiri-kūḍam,* பெ.(n.) 1. ஒரு மலை; a sacred mountain. *"திரிகூடமென்னுந் துங்க வெங்கிரியின்" (இரகு.திக்.224).* 2. திருக் குற்றால மலை (மூன்று சிகரங்களை யுடையது) (குற்றால.தல.);

[Skt. tri > த. திரி + கூடம்.]

திரிகோணம் *tirigōṇam,* பெ.(n.) 1. முக் கோணம்; triangle. 2. பெண்குறி; female genital (சா.அக.).

[Skt. tri > த. திரி + கோணம்.]

திரிகோணவுப்பு *tirigōṇa-v-uppu,* பெ.(n.) ஒரு வகை உப்பு (சத்தியுப்பு); a kind of salt (சா.அக.).

திரிச்சிரமம் *tiri-c-ciramam,* பெ.(n.) முக்கால வழிபாடு; daily prayer in the morning, noon and evening.

[Skt. tri+srama > த. திரிச்சிரமம்.]

திரிசரம் *tiri-šaram,* பெ.(n.) மூன்று கொத்துக் களுடைய மாலை; three stringed necklace. *"திரிசரம் பஞ்சசரம் ஸப்தசரம் என்றாப்போல*

சொல்லுகிற... முத்து வடங்களையும்" (திவ்.அமலனாதி.10, வ்யா.பக்.10).

[**Skt.** *tri-sara > த. திரிசரம்.*]

திரிசரேணு *tiriśarēṉu,* பெ.(n.) காணக்கூடிய நிறையளவில் மிக நுண்ணியதெனக் கருதப் படுவதும் சாளரவாசலில் சூரிய கிரணத் திற்றோன்றும் துகள் வடிவானதும் ஆகிய அணு (சிவதரு.கோபுரவி.3, உரை); Mote or dust moving in a sunbeam, considered as an ideal weight of the lowest denomination.

[**Skt.** *trasa-rēṉu > த. திரிசரேணு.*]

திரிசாகபத்திரம் *tiriśāga-pattiram,* பெ.(n.) வில்வம்; Indian bael (சங்.அக.).

[**Skt.** *tri-śākha-patra > த. திரிசாகபத்திரம்.*]

திரிசிகி *tiriśigi,* பெ.(n.) நூற்றெட்டுபநிட தங்களுள் ஒன்று; an upanisad, one of 108.

[**Skt.** *tri-śikhī > த. திரிசிகி.*]

திரிசிகை *tiri-śigai,* பெ.(n.) சூலம்; trident. *"திரிசிகையுங்கையும் வாளும்" (சிவதரு. கோபு.111).*

[**Skt.** *tri-sigai > த. திரிசிகை.*]

திரிசிரபுரம் *tiriśira-puram,* பெ.(n.) **திருச்சிராப் பள்ளி;** *Tiruccirāppaḷḷi.*

[**Skt.** *triśira+puram > த. திரிசிரபுரம்.*]

திரிசியம் *tiriśiyam,* பெ.(n.) மாயாகாரியமான சடப்பொருள் (வேதா.சூ.25); matter, as an object of perception.

[**Skt.** *drśya > த. திரிசியம்.*]

திரிசியை *tiriśiyai,* பெ.(n.) ஓர் கணிதக்கோடு; (lit.) sine of three or 90^0 radius (சா.அக.).

திரிசிரசாதி *tiricira-śādi,* பெ.(n.) தாளத்துக் குரிய சாதி ஐந்தனுள் மூன்று அட்சர காலங் கொண்ட பிரிவு (பாரத.தாள.47, உரை); (Mus.) a sub-division of time-measure consisting of three *aksara-kālam,* one of five *cāti,* q.v.

[**Skt.** *tryasra+cati > த. திரிசிரசாதி.*]

திரிசூலம் *tiri-śūlam,* பெ.(n.) முத்தலைச்சூலம்; trident. *"தண்டாயுதமுந் திரிசூலமும் விழத்தாக்கி" (கந்தரல.25).*

[**Skt.** *tri-śūla > த. திரிசூலம்.*]



திரிசூலமுத்திரை *tiri-śūla-muttirai,* பெ.(n.) கைமுத்திரை வகை (சைவாநு.பி.20); (*Śaiva.*) a hand-pose.

[**Skt.** *rtri-śūla+muttirai > த. திரிசூல முத்திரை.*]

திரிசூலன் *tiri-śūlaṉ,* பெ.(n.) எமன்; Yama, as having a trident. (திரிசூலமுடையவன்) *"எருமைகடவு கடியகொடிய திரிசூலன்" (திருப்பு.118).*

[**Skt.** *tri-śūla > த. திரிசூலன்.*]

திரிதகர்மம் *tirita-karmam,* பெ.(n.) கண்ணி லிருந்து நீர்வடியும் வரை நாசி நுனியைப் பார்த்துக் கொண்டிருக்கை (யோகஞானா.34); (*Yōga*) gazing at the tip of one's nose till tears gather in the eyes.

[**Skt.** *dhrta+karmam > த. திரிகர்மம்.*]

திரிதடம் *tiritaḍam,* பெ.(n.) உட்காதிலிருக்கும் வளைவுள்ள மூன்று குழல்கள்; the three semi circular or ear vessels, the three long canals of the labrinth (சா.அக.).

திரிதண்டசன்னியாசி *tiri-taṇḍa-saṉṉiyāśi,* பெ.(n.) முக்கோல் தாங்கும் வைணவத் துறவி;

vaisnava ascetic who carries a *tiri-tantam.*

[Skt. tri-danda+sanni-yāsi > த. திரதண்ட சன்னியாசி.]

திரிதண்டம் *tiri-tandam,* பெ.(n.) வைணவ சன்னியாசிகள் கையில் தாங்கும் முக்கோல்; trident staff carried by *Vaisnava* ascetics.

[Skt. tri > த. திரி+தண்டம்.]



திரிதியை *tiritiyai,* பெ.(n.) கரும்பக்கம் வெண்பக்கங்களில் (கிருட்டிண சுக்கில பட்சங்களில்) வரும் மூன்றாம் பிறை நிலை; third titi in the bright or the dark fortnight.

[Skt. tritiyā > த. திரிதியை.]

திரிதீர்க்கம் *tiri-tirkkam,* பெ.(n.) திருமண (கலியாண)ப் பொருத்தம் பத்தனுள் மணமக்கள் நாண் மீன்களின் (நட்சத்திரங் களின்) பொருத்த வகை (விதான.கடிமண.9); a kind of agreement between the naksatras of the bridegroom and bride, one of ten *kaliyāna-p-poruttam.*

[Skt. stri-dirgha > த. திரிதீர்க்கம்.]

திரிதேகம் *tiridēgam,* பெ.(n.) பருவுடல், நுண்ணுடல் காரண உடல் எனும் மூவுடம்பு, (தூலம், சூக்குமம், காரணம்); the three fold nature of the body viz., physical or material, subtle or abstract (sentient soul) and casual unmaterial soul (சா.அக.).

திரிதோடசமனம் *tiridōdaśamanam,* பெ.(n.) தயிர்; curdled milk (சா.அக.).

திரிதோடசமனி *tiritōdaśamani,* பெ.(n.) ஊதை, பித்தம், கோழை ஆகிய குணங்களைச் சமன்படுத்தும் மூலிகைகள்; drugs capable of regulating the three humours in the system (சா.அக.).

திரிதோடசன்னி *tiritōda-śanni,* பெ.(n.) ஊதை, மஞ்ச, கோழை ஆகிய குற்றத்தினால் உடம்புக்கு ஏற்படும் ஒரு வகை வலிப்பு; a kind of apoplexy attend with its due to the disorder of all the three humours of the body (சா.அக.).

திரிநாடி *tiri-nādi,* பெ.(n.) மூன்று வகையான நாடி; the three kinds of pulse to the three humours in the system (சா.அக.).

[Skt. trit > த. திரி+நாடி.]

திரிபங்கம் *tiri-bangam,* பெ.(n.) முத்திறமாக உடம்பை வளைத்து நிற்கும் நிழல் (பிம்பங்)களின் நிலை; a kind of graceful posture in images with three bendings.

[Skt. tri-bhanga > த. திரிபங்கம்.]

திரிபங்கி *tiri-bangi,* பெ.(n.) 1. ஒரு செய்யுளாய் நின்றே ஒரு பொருள் பயப்பதன்றி அதுவே மூன்று செய்யுளாய்ப் பிரிந்து முடிந்து வெவ்வேறு பொருள் பயக்கத் தக்கதாகவும் பாடும் சித்திர கவிவகை (தண்டி.95, உரை); a stanza curiously wrought so that it may be divided into three stanzas, each with a different mening, one of *cittira-kavi,* q.v. 2. **திரிபங்கம்** பார்க்க; see *tiribangam.* *"வெள்கிய திரிபங்கியுடன்" (அழகர்கலம்.1).*

திரிபதகை *tiri-padagai,* பெ.(n.) கங்கை (திவா.); the ganges. *"இதழி திரிபதகை தலைபொதி சடையர்" (திருவாலவா. கடவுள்.12).*

[Skt. tri-patha-gā > த. திரிபதகை.]

திரிபதாகை *tiripadāgai* பெ.(n.) அணிவிரலும் பெரு விரலுங் குஞ்சித்து நிற்ப ஏனை விரல்களை நிமிரநிறுத்தும் இணையாவினைக் கை வகை (சிலப்.3, 18, உரை); gesture with one hand in which the thumb and the ring-finger are bent while the rest are held upright, one of 33 *iṇaivā-viṉai-k-kai.*

[Skt. tri-patākā > த. திரிபதாகை.]



திரிபதார்த்தம் *tiri-padārttam,* பெ.(n.) கடவுள், உயிர், பற்று (பதி, பசு, பாசம்) என்ற மூவகை நிலைப் பொருள்கள் (சி.சி.8, 27, ஞானப்.); (Saiva) the three eternal verities in the universe, viz., *pati,pašu,pāšam.*

[Skt. tri-padārtha > த. திரிபதார்த்தம்.]

திரிபாத்விபூதிமகாநாராயணம் *tiripāt-vipūti-makā-nārāyaṇam,* பெ.(n.) நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று; an upanisad, one of 108.

[Skt. tripād-vibhūti-mahānārāyaṇa > த. திரிபாத்விபூதிமகாநாராயணம்.]

திரிபாதம் *tiripādam,* பெ.(n.) வாலுளுவை யரிசி; intellect tree (சா.அக.).

திரிபாதி *tiripādi,* பெ.(n.) சிறுபுள்ளடி; bird's foot-*Hedys arum* (சா.அக.).

திரிபிடகம் *tiripiḍagam,* பெ.(n.) சூத்திர பிடகம், வினயபிடகம், அபிதர்மபிடகம் என்ற மூன்று வகைப்பட்ட புத்தத்தோன்றிய (பௌத்தாகம)த் தொகுதி (மணிமே.26, 66, அரும்.); the three collections of Buddhist sacred writings, viz., *Cūttira-pitakam, viṉaya-piṭakam,apitarmapiṭakam.*

[Skt. tri-piṭaka > த. திரிபிடகம்.]

திரிபுண்டரம் *tiri-puṇḍaram,* பெ.(n.) சைவர் நெற்றியில் திருநீர் அணியும் மூவரி கொண்ட குறி; saivaite mark in three horizontal lines made on the forehead with holy ashes.

[Skt. tri-puṇḍra > த. திரிபுண்டரம்.]

திரிபுரசுந்தரி *tiripura-šundari,* பெ.(n.) பார்வதி; *pārvati* (அபிரா.).

[Skt. tri-pura > த. திரிபுரசுந்தரி.]

திரிபுரதகனன் *tiripura-tagaṉaṉ,* பெ.(n.) சிவபெருமான் (திரிபுரத்தை எரித்தவன்); Siva, as the who burnt tiripuram.

[Skt. tri-pura+tagaṉaṉ > த. திரிபுரதகனன்.]

திரிபுரம் *tiripuram,* பெ.(n.) சிவனால் எரிக்கப் பட்டதாக தொன்மத்தில் (புராணத்தில்) கூறப் படும்,° வானில் உலவிய பொன், வெள்ளி, இரும்புக்கோட்டை நகரங்கள் ; the thre aerial cities of gold, silver and iron burnt by Siva. *திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளும்" (இறை.பாயி.).*

[Skt. tri-pura > த. திரிபுரம்.]

திரிபுராதாபினி *tiripurādāpiṉi,* பெ.(n.) நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று; an upanisad, one of 108.

[Skt. tripurā-tāpana > த. திரிபுராதாபினி.]

திரிபுராதிசெந்தூரம் *tiripurātisendūram,* பெ.(n.) உடம்பு சூடு குறைவு, செரியாமைக்குக் கொடுக்கும் ஒரு செந்தூரம்; a red coloured oxidised medicine given to cure indigestion, loss of appetite etc. (சா.அக.).

திரிபுரை *tiri-purai,* பெ.(n.) 1. பார்வதி; *Pārvati. "திரிபுரை யிங்கு வந்திருந்தால்" (சிவரக. கணபதியு.13).* 2. நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று; an upanisad, one of 108.

[Skt. tri-purā > த. திரிபுரை.]

திரிபுவனசக்கரவர்த்தி *tiribuvana-cakkaravartti,* பெ.(n.) வடமொழிச் செல்வாக்கால் சோழர்களுக்கு இடைக்காலத்தில் இடப்பட்ட பட்டப்பெயர்; (insc.) a title assumed by the Chola Kings as a result of sanskritisation.

த.வ. மூவுலகக் கோவேந்தன்

[Skt. tri-bhuvana > த. திரிபுவன சக்கரவர்த்தி]

திரிபுவனதிலகம் *tiribuvana-tilagam,* பெ.(n.) ஒரு பழைய கணித நூல் (கணக்கதி.5, உரை); an ancient mathematical treatise.

[Skt. tribuvana+tilagam > த. திரிபுவன திலகம்]

திரிமதம் *tirimadam,* பெ.(n.) மூன்று மயக்குமூலி, சடாமாஞ்சி, சித்திர மூலம், வாயு விலங்கம்; the three nalotics valerian root, plumbago, embelia ribes (சா.அக.).

திரிமதுரம் *tirimaduram,* பெ.(n.) மூன்று வகை (வித) சுவை பொருட்கள்: தேன், இன்பண்டம் (சர்க்கரை), நெய்; three sweet substances - honey, sugar and ghee (சா.அக.).

திரிமலம் *tiri-malam,* பெ.(n.) மும்மலம்; the three impurities of souls. *"திரிமலங்க ளறுத்து" (சி.சி.12, 1).*

[Skt. tri+malam > த. திரிமலம்.]

திரிமழுகம் *tirimalugam,* பெ.(n.) பால், நெய், தேன்; milk, clarified butter and honey (சா.அக.).

திரிமனம் *tirimanam,* பெ.(n.) நினைவு, புத்தி, அறிவு; thoughts, understanding and knowledge (சா.அக.).

திரிமாத்திரை *tiri-mättirai,* பெ.(n.) துணைத் தாளம் ஐந்தனுள் ஒன்று (பரத.தாள.3); (Mus.) a variety of time-measure, one of five *upa-tālam,* q.v.

[Skt. tri > த. திரி + மாத்திரை.]

திரிமூர்த்தி *tirimürtti,* பெ.(n.) 1. இரும்பு (அயம்), காந்தம், மண்டூரம்; iron, magnet and hydrated oxide of iron. 2. நான்முகன், திருமால், சிவன் இம்மூன்று பெயரும் குறிக்கும் அன்றியும் முறையே காலம், நீர், நெருப்பு இவற்றையும் குறிக்கும்; the three names signify the three qualities. It is also said to refer time water and fire respectively (சா.அக.).

திரிமூலம் *tiri-mūlam,* பெ.(n.) திப்பிலி, சித்திரம், கண்டு மூலம் என்ற மூவகை வேர்கள் (சங்.அக.); the three kinds of roots or plants, viz., *tippali, cittiram, kanṭu-mūlam.*

[Skt. tri > த. திரி + மூலம்.]

திரியங்முகம் *tiriyaṅ-mugam,* பெ.(n.) கோள் (கிரகங்)களின் குறுக்குப் பார்வை; (Astrol.) transverse aspect, as of planets.

[Skt. tiryaṅ-mukha > த. திரியங்முகம்.]

திரியம்பகம் *tiriyambagam,* பெ.(n.) சிவன்வில்; šiva's bow. *"சுடர்க்கடவுடன் பல்லிறுத்தவன் வலிக்கமை திரியம்பக மெனும் வில்" (கம்பரா.நட்புக்.7).*

[Skt. tryambaka > த. திரியம்பகம்.]

திரியாகதசுரம் *tiriyāgadašuram,* பெ.(n.) மூன்று நாளைக்கொரு முறை வரும் காய்ச்சல், முறைக் காய்ச்சல்; fever returning every third day, tertian fever (சா.அக.).

திரியாயுடம் *tiriyāyuḍam,* பெ.(n.) வாணாளை நீடிக்கச் செய்யும் மந்திர வகை; a mantra believed to grant long life. *"பின்னருந் திராயாவுடந் திரியம்பக மனுவால்" (காஞ்சிப்பு. களற்.15).*

[Skt. tryāyusa > த. திரியாயுடம்.]

திரிலவங்கம் *tirilavaṅgam,* பெ.(n.) சிறு நாகப்பூ, செண்பகப்பூ, கிராம்பு என்ற மூவகை மணப் பண்டம் (சங்.அக.); the three aromatic spices, viz., *cirunāgappū, cenbagappū, kirāmbu.*

[Skt. tri+lavaṅgam > த. திரிலவங்கம்.]

திரிலிங்கம் *tiriliṅgam,* பெ.(n.) சுண்டுவிரல் மோதிரவிரல் நடுவிரல்களை வளைத்துப் பெருவிரல் நுனியையும் கூட்டி மணிக்கட்டை வளைத்துக் காட்டும் நளினமான கைவகைக் குறிப்பு (பரத.பாவ.36); (*Nāṭya*) hand-pose in which the tips of all the finger except the forefinger are bent and touch one another and the wrist is slightly bent, one of the 23 *kara-latcaṇam,* q.v.

[Skt. strī-liṅga > த. திரிலிங்கம்.]

திரிலோகக்கலவை *tiri-lōga-k-kalavai,* பெ.(n.) மூன்று வகையான மாழை (உலோகம்) பொன், வெள்ளி, செம்பு இவற்றின் கலப்பு; an alloy of gold, silver and copper (சா.அக.).

திரிவிக்கிரமன்[1] *tirivikkiramaṉ,* பெ.(n.) 1. ஒரு மருத்துவ நூலாசிரியன்; a medical author. 2. ஒரு மருந்துக் கலப்பு; the name of a mixture (சா.அக.).

திரிவிக்கிரமன்[2] *tirivikkiramaṉ,* பெ.(n.) 1. திருமால்; *Viṣṇu,* as one who measured the world in three strides. (மூன்றடியால் உலகமளந்தவன்). *"திரிவிக்கிரமன் செந்தாமரைக் காணம்மான்" (திவ்.திருவாய்.2, 7, 7).* 2. சூரியன் (பிங்.); sun.

[Skt. tri-vikrama > த. திரிவிக்கிரமன்.]

திரிவிருத்தி *tiri-virutti,* பெ.(n.) கடுக்காய் வகை (பதார்த்த.969); species of chebulic myrobalan.

திரிவேணிசங்கமம் *tiri-vēṇi-śaṅgamam,* பெ.(n.) அலகாபாத்து அருகில் பிரயாகையில் கங்கை, யமுனை, சரசுவதி (அந்தர் வாகினியான) என்னும் மூன்று ஆறுகள் கூடுமிடம் (யாழ்.அக.); confluence of the Ganges with the Jamna and the subterrancan Sarasvati near Allahabad.

[Skt. tri-vēṇi+caṅkamam > த. திரிவேணி சங்கமம்.]

திரீலிங்கம் *tirī-liṅgam,* பெ.(n.) பெண்பால்; feminine gender (Gram.). *"ஆண்பால் பெண்பால் அலிப்பால் என்னுமிம்மூன்றும் புல்லிங்கம், திரீலிங்கம், நபுஞ்சகலிங்கம் எனவாம்" (பி.வி.44).*

[Skt. strī-liṅga > த. திரீலிங்கம்.]

திருசியம் *tiruśiyam,* பெ.(n.) 1. கண்ணுக்குத் தோன்றுவது; that which is visible anything perceived by the eye. 2. கண்; eye (சா.அக.).

திருட்டசன்மம் *tiruṭṭa-śaṉmam,* பெ.(n.) இம்மை; the present birth. *"திருஷ்டஜன்ம போக்கியம்" (சி.சி.4, 40, சிவாக்.).*

[Skt. drṣṭa-janman > த. திருட்டசன்மம்.]

திருட்டபோக்கியம் *tiruṭṭa-pōkkiyam,* பெ.(n.) இம்மையிற்செய்த கருமங்களின் பலனைக் கொள்ளுகை (அனுபவிக்கை) (சி.சி.2, 39, ஞானப்.); effects of actions done in this birth.

[Skt. drṣṭa+bhōgya > த. திருட்டபோக்கியம்.]

திருட்டாந்தம் *tiruṭṭāndam,* பெ.(n.) எடுத்துக் காட்டு (உதாரணம்); example, illustration.

[Skt. drṣṭ-ānta > த. திருட்டாந்தம்.]

திருட்டி-த்தல் *tiruṭṭi-,* 11 செ.குன்றாவி.(v.t.) கண்ணுக்குப் புலனாதல்; to become visible. *"திருட்டித்த வாலமன் மதனொரு பாலிருக்க" (சீதக்.118).*

[Skt. drṣṭi > த. திருட்டி-,]

திருட்டி *tiruṭṭi,* பெ.(n.) 1. கண்; eye. 2. கரு விழியின் நடுவேயுள்ள சிறிய புள்ளி (பிந்து) போன்ற பாகம், பாவை; the aperture in the



middle of the iris, pupil. 3. அறிவு; intellect. 4. பாம்பு; snake. 5. பார்வை; sight. 6. கருவிழியின் மையத் திலுள்ள ஒளி பகுதி; the point of clearest vision at the centre of retina-macula lutea. 7. நஞ்சு; poison. 8. கெட்டப் பார்வை; evil sight. 9. மெய் யறிவால் பார்த்தல்; viewing with mental eye. 10. தினை; millet (சா.அக.).

திருட்டிக்கழி-த்தல் *tirutti-k-kali-,* செ.கு.வி. (v.i.) நீக்குவினையால் கண்ணூறு போக்குதல்; to dispel the supposed effects of the evil eye by ceremonial rites.

த.வ. கண்ணேறு கழித்தல்

[Skt. drsti > த. திருட்டி + கழி-.]

திருட்டிக்கழிப்பு *tirutti-k-kalippu,* பெ.(n.) கெட்ட பார்வையால் நேர்ந்த தீவினையை நீக்குகை; (in magic) a ceremony for removing an ill or evil effect caused by evil eyes (சா.அக.).

திருட்டிசாத்திரம் *tirutti-sattiram,* பெ.(n.) கண்ணின் ஒளியையும் பார்வையையும் பற்றிக் கூறும் நூல்; the science that treats of lights and vision - optics (சா.அக.).

திருட்டிசுற்று-தல் *tirutti-surru-,* செ.கு.வி. (v.i.) கண்ணேறு கழித்தற் பொருட்டுச் சில பண்டங்களைச் சுற்றுதல் (இ.வ.); to wave specified articles round a person, to avert the evil eye.

[Skt. drsti> த. திருட்டி + சுற்று-.]

திருட்டிதோடம் *tirutti-todam,* பெ.(n.) கெட்ட பார்வையாலேற்படும் குற்றம்; evil effects caused by evil eyes (சா.அக.).

த.வ. கண்ணேறு துகடம்

திருட்டிபரிகாரம் *tirutti-parigaram,* பெ.(n.) கண்ணேறு பட்டதாலுண்டாந் தீங்கினை நீக்குகை (உ.வ.); averting of the evil eye.

த.வ. கண்ணேறு கழிப்பு

[Skt. drsti+parikāram > த. திருட்டி பரிகாரம்]

திருட்டிமாவிளக்கு *tirutti-mā-vilakku,* பெ.(n.) பெண்ணுக்குக் கண்ணேறு நீக்க வினையாகச் சல்லடையில் வைத்துச் சுற்றும் மாவிளக்கு (இ.வ.); small lamps of flour - paste placed on a sieve and waved before a girl in the ceremony of her puberscence with a view to avert the evil eye.

[Skt. drsti > த. திருட்டி + மா விளக்கு]

திருட்டிவிடம் *tirutti-vidam,* பெ.(n.) பார்வை யால் நஞ்சுமிழும் ஒரு பாம்பு (மணிமேகலை); snake causing poison by mere sight (சா.அக.). *"திருஷ்டிவிஷம் போலே காணில் முடிவன்" (ஈடு, 4, 9, 7).*

[Skt. drsti+visam > த. திருட்டிவிடம்.]

திருட்டிவித்தை *tirutti-vittai,* பெ.(n.) கண்ணைப் பற்றிய நூல்; science of vision-optics.

திருணபஞ்சமூலம் *tiruna-panjamūlam,* பெ.(n.) ஐந்து வகை வேர்க்கூட்டு; நாணல், தர்ப்பை, பரும்பு, நெற்பயிர், வெள்ளறுகு; a group of five roots, consisting that of koosa grass, sugarcane, paddy, white doob (சா.அக.).

திருணம்[1] *tirunam,* பெ.(n.) 1. உலர்ந்த புல் (பிங்.); piece of straw. 2. வில் (யாழ்.அக.); bow.

[Skt. trna > த. திருணம்.]

திருணம்[2] *tirunam,* பெ.(n.) தேள் (யாழ்.அக.); scorpion.

[Skt. drōna > த. திருணம்.]

திருணம்[3] *tirunam,* பெ.(n.) தேனீ (யாழ்.அக.); bee.

திருதம் *tirutam,* பெ.(n.) தாளவகை; a fast - moving time measure (Mus.).

[Skt. druta > த. திருதம்.]

திருதி¹ *tiruti,* பெ.(n.) 1. உறுதி; firmness, boldness. *"இத்தகைய யாவ ததுவென் றிருதியாமால்" (பிரபோத.27, 82).* 2. துணை (சது.); help, assistance. 3. மனநோன்பி ருபத்தேழுனுள் ஒன்று (யோகம்); (Astron.) a division of time one of 27 *yōgam.*

[Skt. dhrti > த. திருதி.]

திருதி² *tiruti,* பெ.(n.) 1. எரிநீர் (திராவகம்); tincture. 2. ஊட்டம், ஆற்றல் (சத்து); extract.

[Skt. druti > த. திருதி.]

திருதி³ *tiruti,* பெ.(n.) விரைவு (இ.வ.); haste.

[Skt. druta > த. திருதி.]

திருதி⁴ *tiruti,* பெ.(n.) 1. செய் மருந்தைப் பனியில் வைத்து, செயநீரைப் போல் செய்யுமோர் ஆயுள்வேத முறை; (in medicine) an ayurvedic process by which a prepared medicine is exposed to night's dew converting it to a pungent liquid. 2. ஓர் மீன்; a kind of fish. 3. தோல்; skin (சா.அக.).

திருதிமை *tirutimai,* பெ.(n.) மனத்திட்பம்; boldness, courage, strength of will. *"திருதிமையா லைவரையுங் காவலேவி" (தேவா.812, 8).*

[Skt. dhrti+mai > த. திருதிமை.]

திருதியை *tirutiyai,* பெ.(n.) 1. மூன்றாம் நாள் (திதி); the third titi of the bright or dark fortnight. 2. மூன்றாம் வேற்றுமை (பி.வி.6); (Gram.) instrumental case.

[Skt. trtiyā > த. திருதியை.]

திருப்தி *tirupti,* பெ.(n.) மனநிறைவு; satisfaction.

த.வ. பொந்திகை, தணிவு, நிறைவு

[Skt. trpti > த. திருப்தி.]

திருப்பரம் *tirupparam,* பெ.(n.) சோறு; cooked rice (சா.அக.).

திருப்பிரம் *tiruppiram,* பெ.(n.) நெய்; clarified butter, ghee (சா.அக.).

திரேக்காணாதிபன் *tirēkkāṉādipaṉ,* பெ.(n.) குறித்த நாளுக்குரிய உடைமையான வான்கோள்; (குறித்த திரேக்காணத்தின் அதிபதியாகிய கிரகம்); (Astrol.) the planet presiding over a particular *tirēkkāṉam.*

திரேகம் *tirēgam,* பெ.(n.) 1. உடல்; body. 2. மூன்று; three (சா.அக.).

திரேதாக்கினி *tirētākkiṉi,* பெ.(n.) முத்தீ; the triple at a sacrifice.

[Skt. trētāgni > த. திரேதாக்கினி.]

திரேதாயுகம் *tirēdā-yugam,* பெ.(n.) நான்கு யுகங்களுள் 1296000 ஆண்டுகள் கொண்ட இரண்டாம் யுகம் (திவ்.திருநெடுந்.வ்யா.3); *trētā* yuga or age, consisting of 1,296,000 solar years, second of four yukam, q.v.

[Skt. trētā+yuga > த. திரேதாயுகம்.]

திரேதை *tirēdai,* பெ.(n.) **திரேதாயுகம்** பார்க்க; see *tirētāyugam. "திரேதைக்கண் வளையுரு வாய்த் திகழ்ந்தான்" (திவ். திருநெடுந்.3).*

திரைலோக்கியம் *tirailōkkiyam,* பெ.(n.) 1. மூவுலகம்; the three worlds. *"திரைலோக்கிய சுந்தரன்" (திருவிசைப். கருவூர்த்.5).* 2. பேரழகுள்ளது; that which is very fine, often used ironically. *"அவன் செய்த காரியம் திரைலோக்கியமா யிருக்கிறது" (உ.வ.).*

திரோதகம்¹ *tirōdagam,* பெ.(n.) மறைத்தலைச் செய்வது; that which causes obscurity. *"அதுதான் ஞானதிரோதகமாய் மறைத்துக் கொடுநிற்றலான்" (சி.போ.பா.4, 2).*

[Skt. tirōdhaka > த. திரோதகம்.]

திரோதகம்² *tirōtagam,* பெ.(n.) மறைத் தலைச் செய்வது; that which causes

obscurity. "அதுதான் ஞான திரோதமாய் மறைத்துக் கொடுநிற்றலான்" (சி.போ.பா.4, 2).

[Skt. tirōdhaka > த. திரோதகம்.]

திரோதம் *tirōdam,* பெ.(n.) 1. மறைக்கை; concealment, obscuration. "இருட்டி ரோதம் புரிந்தாங்கு" (திருப்போ. சந்.மாலை. 69). 2. **திரோதானசத்தி** பார்க்க; see *tirōtāna-satti* (சிவப்பிர.உண்மை.42).

[Skt. tirōdha > த. திரோதம்.]

திரோபவம் *tirōbavam,* பெ.(n.) 1. ஐந்து கிருத்தியங்களுள் ஒன்றாய் ஆவிஉரு தன் கன்மம் முடியும் வரையில் உலகானுபவங்களில் உழன்று மயங்கும்படி உண்மையை மறைத் தலைச் செய்யும் சிவபெருமானது அருட் செயல்; (Šaiva.) function of veiling or darkening, designed to keep the souls engrossed in the experiences of the world until their karma is completely worked out, one of *pañca-kiruttiyam.* 2. மறைகை; vanishing, dis-appearance. "செவ்வருட் குறியி லீசன்றிரோபவஞ் செய்தான்" (சேதுபு. சங்கரபா.102).

[Skt. tirō-bhava > த. திரோபவம்.]

திரௌபதி *traupadi,* பெ.(n.) பாண்டவர் ஐவரின் மனைவி (துருபதனுடைய மகள்); the wife of the five *Pāṇḍava* brothers, as daughter of Drupada, king of *Pāñcāla* country. "திரௌபதி மாலையிட்ட சருக்கம்" (பாரத.).

தில்பசந்து *til-pašandu,* பெ.(n.) ஒருயர்ந்த ஒட்டு மாம்பழ வகை (G.Sm.D.I. i, 235); a kind of superior mango.

[U. dilpasand > த. தில்பசந்து.]

திலகம் *tilagam,* பெ.(n.) 1. நெற்றிப்பொட்டு; a small circular mark on forehead. "திலகந்தொடும்... திருநுதல்" (நற்.62). 2. சிறந்தது; that which is excellent, eminent. "திலக நீண்முடித் தோடு" (சீவக.246).

திலகை *tilagai,* பெ.(n.) எள்ளுப்போற் கருநிறமுள்ள மான்மத (கத்தூரி) வகை (பதார்த்த.1081); musk, black like sesame, one of five kinds of *kastūri.*

[Skt. tilakā > த. திலகை.]

திலதக்கலித்துறை *tilada-k-kalitturai,* பெ.(n.) கட்டளைக் கலித்துறை வகை (தஞ்சைவா.1, உரை); a kind of *kaṭṭaḷai-k-kalitturai* verse.

[Skt. tilaka+kalitturai > த. திலதக்கலித் துறை]

திலதண்டுலம் *tila-taṇḍulam,* பெ.(n.) 1. எள்ளுடன் கலந்த அரிசி; mixture of sesame and rice. 2. சுரத காலத்துப் புரியும் எண் வகையாலிங்கனத்துள் ஒன்று (கொக்கோ.5,43); a mode of sexual embrace, one of *eṇ-vakai-y-āliṅkaṉam.*

[Skt. tila+taṇṭulam > த. திலதண்டுலம்.]

திலதண்டுலகம் *tilataṇḍulagam,* பெ.(n.) அரிசியும் எள்ளும் கலந்தது போல் நாயகியும் நாயகனும் ஒருவரை ஒருவர் தழுவுதல்; fixed embrace in which both man and woman lie face to face and embrace so closely like a mixture of rice and sesamum seeds tha the arms and thighs of one are encircled by those of the other (சா.அக.).

திலதம் *tiladam,* பெ.(n.) **திலகம்** பார்க்க; see *tilagam.* "தெரிமுத்தஞ் சேர்ந்த திலதம்" (கலித்.92).

[Skt. tilaka > த. திலதம்.]

திலதமிடல் *tiladamiḍal,* பெ.(n.) பொட்டிடல், சந்தனம் அல்லது மந்திர மை; wearing dot

between eye brows as sandal paste or magic paint (சா.அக.).

திலதர்ப்பணம் *tila-tarppaṉam,* பெ.(n.) மூதாதையர் பொருட்டு எள்ளுந் தண்ணீரும் கலந்திறைக்கும் நீர்க்கடன்; libations of sesame and water offered to the manes.

[Skt. tila+tarppaṉam > த. திலதர்ப்பணம்.]

திலதவசீகரம் *tilata-vaśikaram,* பெ.(n.) மாயவித்தையால் விரும்பியவர்களை வசப் படுத்திக் கொள்ளுகை; power of fascinating persons by wearing a magic tilka on one's forehead (குற்றா.குற.116, 2.).

[Skt. tilaka+tarppaṉam > த. திலத வசீகரம்.]

திலதைலம் *tila-tailam,* பெ.(n.) நல்லெண்ணெய்; gingelly oil.

[Skt. tila+tailam > த. திலதைலம்.]

திலப்பொறி *tila-p-poṟi,* பெ.(n.) எள்ளிட் டாட்டும் செக்கு; oil press. *"திலப்பொறி யிலிட்டனர் திரிப்பவும்" (யசோதா.5, 33).*

[Skt. tilapoṟi > த. திலப்பொறி.]



திலம் *tilam,* பெ.(n.) எள்ளு (பிங்.); sesamum indicum.

[த. நுல்(எள்)–தில் > Skt. tila > த. திலம்.]

திலுப்புலு *tilu-p-pulu,* பெ.(n.) முப்பது என்றதனைக் குறிக்கும் குழூஉக்குறி; (J.) thrity, a slang term.

[Skt. tri+p+pulu> த. திலுப்புலு.]

திலோதகம் *tilōdagam,* பெ.(n.) எள்ளும், நீரும், இது நீர்ப்படையலுக்காக உதவுவது; a symbolical combination of gingelly seed and water used in ceremony for the dead or of ones forefathers who are no more (சா.அக.).

திவ்விய *tivviya,* வி.எ.(adj.) இனிய; sweet. *"தேன்றரு மாரிபோன்று திவ்விய கிளவி தம்மால்" (சீவக.581).*

[Skt. tiviya > த. திவ்விய.]

திவ்வியதொனி *tivviya-doṉi,* பெ.(n.) தேவர்கள் அருகக் கடவுள் முன்பு செய்யும் ஆரவாரத்தொனி (சீவக.3013, உரை); (Jaina.) shouts of celestials in the presence of Arhat.

[Skt. divya+toṉi > த. திவ்வியத்தொனி.]

திவ்வியதேசம் *tivviya-tēśam,* பெ.(n.) ஆழ்வார்களாற் பாடப்பட்ட திருப்பதிகள்; *(Vaiṣṇ.) Visṇu* shrines sung by *Aḻvārs.*

[Skt. divya+tēcam > த. திவ்வியதேசம்.]

திவ்வியநாமசங்கீர்த்தனம் *tivviya-nāma-śaṅgīrttaṉam,* பெ.(n.) பாடகர் பலர் விளக்கைச் சுற்றி நடனம் செய்து கடவுளின் திருப்பெயர்(நாமங்)களைச் சொல்லிப் புகழ்ந்து பாடுகை; praising and singing a god's name while dancing around a lamp placed in the middle of a hall.

[Skt. divya+nāma+caṅkīrttaṉam> த. திவ்வியநாமசங்கீர்த்தனம்]

திவ்வியநானம் *tivviya-nāṉam,* பெ.(n.) நீராடல் ஏழனுள் வெய்யில் காயும்பொழுது பெய்யும் மழையில் செய்யும் நீராடல் (வின்.); bathing in the rain during sunshine, one of seven *snāṉam.*

[Skt. divya+snāṉam > த. திவ்விய ஸ்நானம்.]

திவ்வியப்பிரபந்தம் *tivviya-p-pirapandam,* பெ.(n.) ஆழ்வார் பன்னிருவரும் அருளிச் செய்ததும் நாலாயிரஞ் செய்யுள் கொண்டது மான தொகுதி; collection of 4000 stanzas composed by 12 *vaisṇava* saints.

த.வ. துய்யபெரும்பனுவல்

[Skt. divya+p+pirapantam > த. திவ்வியப் பிரபந்தம்.]

திவ்வியம் *tivviyam,* பெ.(n.) 1. தெய்வத் தன்மையுள்ளது; divinity, anything celestial or god-like. 2. மேலானது (உ.வ.); that which is excellent, supreme. 3. சந்தனவகை (யாழ்.அக.); a kind of sandal.

த.வ. துய்யம், தேவிகம்

[Skt. divya > த. திவ்வியம்.]

திவ்வியமணி *tivviya-maṇi,* பெ.(n.) மேளகர்த்தாக்களுளொன்று (சங்.சந்.47); (Mus.) a primary *rāga.*

[Skt. divya > த. திவ்விய+மணி.]

திவ்வியமுத்திரை *tivviya-muttirai,* பெ.(n.) கட்டை விரலும் மோதிரவிரலுஞ் சேர்ந்த முத்திரை (செந்.10, 426); a finger-pose in



which, the ring-finger and the thumb are joined.

[Skt. divya > த. திவ்விய+முத்திரை.]

திவ்வியவராடி *tivviya-varāḍi,* பெ.(n.) குறிஞ்சிப்பண் வகை (பிங்.); a melody type of the *kuriñji* class (Mus.).

[Skt. divya+varāti > த. திவ்வியவராடி.]

திவ்வியவுணவு *tivviyavuṇavu,* பெ.(n.) நேர்த்தியான உணவு; delicious food (சா.அக.).

த.வ. தூய உணவு

[Skt. divya > த. திவ்வியம் + உணவு.]

திவ்வியாகந்தம் *tivviyāgandam,* பெ.(n.) பேரேலம்; large cardamom (சா.அக.).

திவ்வியாசாரம் *tivviyāśāram,* பெ.(n.) குங்குலியம்; Indian dammer shorca robusta.

திவ்வியாஞ்சனம் *tivviyāñjaṇam,* பெ.(n.) நளிரி நீர் காய்ச்சல்களுக்கு ஆயுள்வேத முறையில் உருவாக்கிய கண்ணிற்கிடும் கலிங்கம்; an eye salve prepared as per ayurvedic process to be used in delirious fever (சா.அக.).

திவ்வியாத்திரம் *tivviyāttiram,* பெ.(n.) தெய்வப்படைக்கருவிகள்; weapons. *"திவ்வியாத்திர மோட்டியே" (வரத.பாகவத. நாரசிங்க.157).*

[Skt. divya+yāttiram > த. திவ்வியாத்திரம்.]

திவ்வியாபரணம் *tivviyābaraṇam,* பெ.(n.) அரசர் முதலியோர் அணியும் சிறந்த அணிகலன் (வின்.); superior ornaments worn by a sacred or royal personage.

[Skt. divya+paraṇam > த. திவ்வியா பரணம்.]

திவசம் *tivaśam,* பெ.(n.) 1. பகல்; day time (பிங்.). 2. நாள்; day. *"இத்திவசத்தின் முடித்தும்" (கம்பரா.நாகபா.171).* 3. இறந்த நாட்கடன்; anniversary commemorative of a person's death. *"எத்திவசமும் புசித்திவ் வுலகை வஞ்சிக்குந் திருடர்" (பிரபோத.11, 5).*

[Skt. divasa > த. திவசம்.]

திவம் *tivam,* பெ.(n.) 1. பரமபதம்; heaven. *"திவத்திலும் பசுநிரை மேய்ப்புவத்தி" (திவ்.திருவாய்.10, 3, 10).* 2. வானம்; sky (யாழ்.அக.).

[Skt. div > த. திவம்.]

திவாணம் *tivāṇam,* பெ.(n.) 1. முகம்மதிய அரசாங்கம்; Muhammadan government. *"காலந் திவாணமான தினாலே" (திருப்பணி.*

மதுரைத்த.10). 2. கோயில் வருவாயிலிருந்து செய்யப்படுஞ் செலவு; expenditure from temple funds. *'அது திவாணத்து உத்ஸவம்'.*

[U. divāni > த. திவாணம்.]

திவாந்தகாலம் *tivānda-kālam,* பெ.(n.) மாலை; evening. *"தினகரன் றிவாந்த காலத்திற் சேர்த்திய வினவொளி" (இரகு. திக்கு.1).*

[Skt. divā+anta > த. திவாந்த+காலம்.]

திவாராத்திரி *tivārāttiri,* பெ.(n.) பகலுமிரவும் (யாழ்.அக.); day and night.

[Skt. divā+rāttiri > த. திவாராத்திரி.]

திவால் *tivāl,* பெ.(n.) கடனிறுக்கச் ஆற்றலற்ற (சத்தியற்ற) நொடிவுநிலை; bankruptcy, insolvency. த.வ. **நொடிவு**

[U. divālā > த. திவால்.]

திவாலர்சி *tivāl-arši,* பெ.(n.) நொடிவாளர் மனு (Mod.); petition in bankruptcy, insolvency petition.

[U. divālā+arzi > த. திவாலர்சி.]

திவாலா *tivālā,* பெ.(n.) **திவால்** பார்க்க; see *tivāl.*

திவாலெடு-த்தல் *tivāl-eḍu-,* செ.கு.வி.(v.i.) நொடிந்தவராதல் (C.G.); to become a bankrupt; to seek the benefit of the insolvency act.

[U. divālā+ > த. திவாலா+எடு-.]

திவான் *tivāṉ,* பெ.(n.) 1. முதல் அமைச்சர்; Prime Minister, chief officer of a native state. 2. அரசிறை யதிகாரி; head officer of the revenue or financial department (R.F.).

[U. diwān > த. திவான்.]

திவான்பகதூர் *tivāṉ-bagadūr,* பெ.(n.) அரசாங்கத்தார் வழங்கும் ஒரு பட்டப் பெயர் (இக்.வ.); dewan bahadur, a title conferred by Government.

[U. diwān + bahadur > த. திவான்பகதூர்.]

திவானி *tivāṉi,* பெ.(n.) முறை (நீதி)மன்றம் (நியாயஸ்தலம்) (வின்.); place of justice.

திவி *tivi,* பெ.(n.) மேல் உலகம்; Indra's heaven. *"தரையொடு தவிதல நலிதரு" (தேவா.568, 2).*

[Skt. divi > த. திவி.]

திவிகண்டம் *tivigaṇḍam,* பெ.(n.) ஓர் வகை செம் மஞ்சுள்ளி, இது சிறிது சிவப்பாகவும் பச்சையாகவும் கனமுள்ளதாகவும் இருக்கும்; impure trisulphate of arsenic little red and green in colour and heavy (சா.அக.).

திவிதிராட்சம் *tivi-tirāṭcam,* பெ.(n.) கொடி முந்திரிகை (மலை.); common grape vine.

[Skt. divya+drāksā > த. திவிதிராட்சம்.]

திற்றி *tiṟṟi,* பெ.(n.) இறைச்சி; meat (சா.அக.).

திறாங்கு *tiṟāṅgu,* பெ.(n.) கதவடை தாழ் (j.); bolt.

[Fr. triangle > த. திறாங்கு.]

திறாம் *tiṟām,* பெ.(n.) 1. அறுபது துளிகொண்ட ஒரு நீரளவு; fluid dram = 60 drops. 2. ஒரு நிறுத்தலளவை; dram in apothecaries weight = 5/16 tola.

[E. drām > த. திறாம்.]

திறாவல் *tiṟāval,* பெ.(n.) கலிமி பாய் மரத்துக்குப் பிறபக்கமாய்க் கோசுபறுவான் பூம் என்ற உத்திரத்தில் விரிக்கப்படும் பாய் (M.Navi.251); spanker.

தினக்காய்ச்சல் *tiṉa-k-kāyccal,* பெ.(n.) 1. விடாத காய்ச்சல்; hectic fever occuring daily. 2. அன்றாடம் வரும் காய்ச்சல்; a fever whose paroxysms every day - Quotidian fever (சா.அக.).

த.வ. நாட்காய்ச்சல்

தினக்கிரமவலங்காரம் *tiṉa-k-kirama-v-alaṅgāram,* பெ.(n.) தேரையர் செய்தவோர் தமிழ் மருத்துவ நூல்; a treatise in medicine in daily practice compiled by Teraiyar in Tamil (சா.அக.).

தினகரன் *tiṉa-garaṉ,* பெ.(n.) சூரியன் (பிங்.) (பகலைச் செய்வோன்); sun, as maker of the day. *"தினகரனை யனைய" (கம்பரா. மூலபல. 163).*

[Skt. dina-kara > த. தினகரன்.]



தினகவி *tiṉa-kavi,* பெ.(n.) 1. அரசன் திருவோலக்க மண்டபத்தில் உட்காரும் போதும் எழுந்திருக்கும் போதும் பாடும் பாட்டு; poem in praise of a king at the beginning and close of his durbar. 2. நாட்கவி பாடுவோன்; poet who composes *tiṉa-kavi.*

[Skt. dina+kavi > த. தினகவி.]

தினசரி *tiṉa-šari,* பெ.(n.) 1. நாட்செயல்; daily occupation, daily routine of business. 2. நாட்குறிப்பு (வி.எ.); account or journal of the day, diary. 3. **தினந்தோறும்** பார்க்க; see *tiṉandōṟum. "அவன் தினசரி வருகிறான்".*

[Skt. dina+caryā > த. தினசரி.]

தினசரிதக்காரன் *tiṉa-šarita-k-kāraṉ,* பெ.(n.) நாட்குறிப்பு எழுதுவோன் (பணவிடு.20); diarist.

[Skt. dina+saritam+kāran > த. தினசரிதக்காரன்.]

தினசரிபத்திரிகை *tiṉašari-pattirigai,* பெ.(n.) நாளேடு; daily newspaper.

த.வ. நாளேடு

[Skt. dina+caryā+pattirikai > த. தினசரி பத்திரிகை.]

தினசேடம் *tiṉa-šēḍam,* பெ.(n.) ஆண்டு எச்சத்திற்கும் (சேசத்திற்கும்) கோள்சுற்றில் குறைந்த நாட்களுக்கும் உள்ள வேறுபாடு (வின்.); (Astron.) difference between the *varuṭa-cēsam* and the next less number of days in Parivirutti tables.

[Skt. dina+sēsam > த. தினசேடம்.]

தினத்திரயம் *tiṉa-t-tirayam,* பெ.(n.) மூன்று விண்மீன்கள் வரும் நாள் (விதான. குணாகுண.109); day when three naksatras are in conjunction with the moon.

[Skt. dina+traya > த. தினத்திரயம்.]

தினந்தோறும் *tiṉan-dōṟum,* பெ.(n.) ஒவ்வொரு நாளும்; daily. *"தினந்தோறு முள்ளுருகிச் சீர்பாடு மன்பர்" (அருட்பா.ii, நெஞ்சறு.18).*

த.வ. நாள்தோறும்

[Skt. dinam > த. தினம்+தோறும்.]

தினநாதன் *tiṉa-nādaṉ,* பெ.(n.) ஞாயிறு (சூரியன்); sun, as lord of the day. (நாளுக்குத் தலைவன்). *தினநாதன் றனயர் தம்பால்" (பாரத.திரௌ. 86).*

[Skt. dina+nātha> த. தினநாதன்.]

தினப்படி *tiṉappaḍi,* பெ.(n.) 1. நாட்படித்தரம்; daily allowance. 2. **தினந்தோறும்** பார்க்க; see *tiṉantōṟum.*

[Skt. dina > த. தினம்+படி.]

தினப்பிரமாணம் *tiṉa-p-piramāṇam,* பெ.(n.) கோளின் பணி தொடக்கத்திலிருந்து இறுதிவரையில் அளவிடும் நாட்பொழுது; (Astron.) time measured from the rising of a planet to its setting.

[Skt. dina+piramāṇam > த. தினப் பிரமாணம்.]

தினப்பிரளயம் *tina-p-piraḷayam,* பெ.(n.) நான்முகனது வாணாளில் ஒருநாளின் முடிவில் உண்டாகும் ஊழிக்காலம் (வின்.); cosmic dissolution at the close of each aeon, as ending one day of Brahma.

[Skt. dina+piralayam > த. தினப்பிரளயம்.]

தினப்பொருத்தம் *tina-p-poruttam,* பெ.(n.) விண்மீன்கள் பொருத்தம் (விதான.கடிமண.5); (Astrol.) a correspondence between the naksatras of the prospective bride and bridegroom.

[Skt. dina+ > த. தினம் + பொருத்தம்.]

தினபலன் *tina-palan,* பெ.(n.) ஒரு நாளின் பிறை நிலை (திதி) வாரங்களின் சங்கியை களுடன் வாழ்நாள் விண்மீன் முதல் அந்நாளின் விண்மீன் வரை எண்ணி வந்த தொகையைக் கூட்டி வருந்தொகையை ஒன்பதால் வகுத்து வந்த மிச்சத்தால் அறியும் நற்பலன் (பெரிய வரு.204); (Astrol.) the advantage or disadvantage of a day to a person, deduced from the remainder got by dividing by ning the sum of its number counted from the first day of the week and that of its titi counted from the first titi and that of its naksatra counted from his *canma-naṭcattiram.*

[Skt. dina+palan > த. தினபலன்.]

தினம் *tinam,* பெ.(n.) 1. நாள் (பிங்.); day of 24 hours. 2. பகல் (பிங்.); day time. 3. விண்மீன்; constellation. *"சித்திரைத் தினத்து" (திருவாலவா.1, 33).* 2. **தினந் தோறும்** பார்க்க; see *tinandōrum. "தினம் வந்து கொண்டிருந்தான்".*

[Skt. dina > த. தினம்.]

தினமணி *tina-maṇi,* பெ.(n.) சூரியன்; sun. *"தினமணி யெனப்படும்... கெழுமணி" (சிவப்.பிர.பெரியநா.1).*

[Skt. dina+maṇi> த. தினமணி.]

தினமானம் *tina-māṉam,* பெ.(n.) 1. கலி ஆண்டு தொடங்கிக் கணித்த நாள் எண்ணிக்கை; (Astron.) number of days that elapsed from the beginning of the *kali-yuga.* 2. **தினந்தோறும்** பார்க்க; see *tinantōṟum.*

[Skt. dina > த. தினம்+மானம்.]

தினமிருத்து *tinamiruttu,* பெ.(n.) அத்தம் அவிட்டங்களின் முதற்கால், விசாகம் திருவாதிரைகளில் இரண்டாங்கால், ஆயிலியம் உத்திரட்டாதிகளின் மூன்றாங் கால், பரணி மூலங்களின் நாலாங்கால் என்ற கெடுங் கால வகை (விதான.குணாகுண.20); (Astrol.) first quarter of the period when the moon is in conjunction with attam and *aviṭṭam,* the second quarter of that when she is in conjunction with *vicākam* and *tiruvātirai,* the third quarter of that when she is in conjunction with *āyiliam* and *uttiraṭṭati,* and the fourth quarter of that when she is in conjunction with parani and *mūlam,* considered in auspicious.

[Skt. dina+miruttu > த. தினமிருத்து.]

தினிகை *tiṉigai,* பெ.(n.) நாட்கூலி (யாழ்.அக.); daily wage.

[Skt. dini+kai > த. தினிகை.]

தினிசு *tiṉišu,* பெ.(n.) பொருளின் தரம் (தைலவ.தைல.22); kind, sort, grade.

[U. jinis > த. தினிசு.]

தினுசு *tiṉušu,* பெ.(n.) **தினிசு** பார்க்க; see *tiṉišu.*

[U. jinis > த. தினுசு.]

தீ *ti,* பெ.(n.) சூழ்ச்சி (உபாயம்) வழி; (யாழ்.அக.), way, means of escape.

[Skt.dhi > த. தீ]

தீக்கதி *ti-k-kati,* பெ.(n.) 1. அளறு (நரகம்); hell, as a world of evil, "தினையேனும் தீக்கதிக்கட் செயலாளர்" (திவ்.இயற்.1,65). 2. கொடிய விதி; evil fate.

[Skt.dhi+kāti > த. தீக்கதி]

தீக்கை *dikkai,* பெ.(n.) தீட்சை பார்க்க; see *titcai.* "இஃது இருவர் தீக்கையுங் கூறிற்று" (சீவக. 2634, உரை)

த.வ. நோன்புறுதி

[Skt.dikṣā > த. தீக்கை]

தீட்சணம் *titcaṇam* பெ.(n.) 1. கடுமை (உக்கிரம்); fiercemess. "தீட்சணமான வெயில்" 2. உறைப்பு; pungency. 3. கூர்மை; sharpness, acuteness, as of the intellect. "தீட்சண புத்தியுள்ளவன். 4. ஆய்தம் (ஆயுதம்) (யாழ். அக.); weapon. 5. இரும்பு (யாழ். அக); iron 6. கொள்ளைநோய் (யாழ். அக.); epidemic. 7. சாவு (மரணம்) (யாழ்.அக.); death 8. கஞ்சாங்கோரை, 1, (மலை); white basil 9. மிளகு (தைலவ.தைல); pepper.

[Skt.tikṣṇa > த. தீட்சணம்]

தீட்சாகுரு *ditca-guru,* பெ.(n.) ஒருவனுக்கு நோன்புறுதி (தீட்சை செய்விக்கும்) செய்விக்கும் குரு; Guru who performs the initiation ceremony of titcai.

[Skt.dikṣā> த. தீட்சா]

தீட்சாநாமம் *titcaṇāmam,* பெ.(n.) நோன் புறுதி (தீட்சை) எடுத்துக் கொள்ளும்போது கொள்ளும் பெயர்; (śaiva)name given to a person on taking *titcai,* dist. fr., piḷḷai-t-tiru-nāmam.

[Skt.dikṣā+nāmān> த. தீட்சாநாமம்]

தீட்சி-த்தல் *titci-,* 11 செ.கு.வி. (V.t.) நோக்கம், உற்றறிவு அல்லது தொடுகை (பரிசம்), அறிவுரை அல்லது கற்பிப்பு (உபதேசம்) முதலிய வற்றால் அருள்புரிந்து குரு நோன்புறுதி (தீட்சை) செய்வித்தல் (வின்.); to impart spiritual illumination to a disciple by look, touch or teaching as in a religious initiation by a guru.

[Skt.dikṣ> த. தீட்சி-த்தல்]

தீட்சிதர் *ditcidar,* பெ.(n.) 1. வேள்வி (யாகம்) செய்தோர்; those who have performed vēdic sacrifices. 2. வேள்வி (யாகம்) பண்ணின பார்ப்பான் (பிராமணர்) அல்லது அவர் வழியினர் தாங்கும் பட்டப்பெயர்; a title assumed by Brahmins who have performed vēdic sacrifices, or their descendants. 3. மனவுறுதி (சங்கற்பம்) கொண்டவர்; those who have undertaken a vow. 4. தில்லை மூவாயிரவர்; Brahmin temple - priests at Chidambaram. 5. சமயநோன்பு (தீட்சை) பெற்றோர்; persons who have received religious initiation.

[Skt.dikṣita> த. தீட்சிதர்]

தீட்சை *ditcai,* பெ.(n.) 1. உறுதியுரைப்பு (அ) நோன்பு (விரதம்); vow, solemn resolution. 2. சமய தீட்சை, விசேடதீட்சை, நிருவாண தீட்சை என்ற முத்திறப்பட்ட சைவசமயச் சடங்குகள்; (Saiva)initiation of a disciple into the mysteries of the śaiva religion, of three stages, viz., camaya-titcai. 3. நயன தீட்சை, பரிசதீட்சை, மானசதீட்சை, வாசகதீட்சை, சாத்திரதீட்சை, யோகதீட்சை, ஔத்திரதீட்சை என்ற எழுவகையான சைவசமயச் சடங்குகள். (சைவச. ஆசாரி 65, உரை.); (Saiva)ways of religious initiation and purification of disciples by a guru, of seven kinds, viz., nayaṇa-titcai, pariśa-titcai, māṇaśa-titcai, vācāka-titcai, cāttira-titcai, yōka-titcai, auttiri-titcai. 4. குறித்த காலத்தின் முடிவு வரை மயிர்வளர்க்கை;

allowing the hair to grow for a specified period, as after marriage, during wife's pregnancy, etc.

த.வ. அருளிப்பு

[Skt. dīkṣā> த. தீட்சை]

தீட்சைக்குறை *tītcai-k-kuṟai* பெ.(n.) சைவ சமயத்துக்குரித்தான நோன்பு (தீட்சை) செய்துகொள்ளுகை. (உ.வ.); initiation into the mysteries of šaiva religion.

[Skt. dīkṣā> த. தீட்சை+குறை]

தீட்சைகேள்-தல் (தீட்சை கேட்டல்) *tītcai-kēḷ-,* செ.கு.வி. (v.i.) குருவினிட மிருந்து நோன்புறுதி (தீட்சை) பெறுதல் (வின்.) to receive religious initiation from a guru.

[Skt. dīkṣā> த. தீட்சை+கேள்]

தீத்தானம் *tī-t-tāṉam,* பெ.(n.) தலைவனது இயற்பெயரின் நான்கைந்தாம் எழுத்துகள் பனுவில் (பிரபந்த) முதலில் வரப்பாடுதலாகிய கேடு விளைவிக்குஞ் செய்யுட்டானம். (பிங்.) ; the use, as the initial letter in a eulogistic poem, of the fourth or the fifth letter of the name of its hero, considered inauspicious.

தீப்தம் *tīptam,* பெ.(n.) அராகவகையு (ராகம்)ளொன்று. (பரத.இராக.47.); (Mus.) a classs of rāgas.

[Skt. dīpta> த. தீப்தம்]

தீபகம் *dībagam,* பெ.(n.) 1. விளக்கு; lamp, light 2. தீவகம்[1](தண்டி.38,உரை) பார்க்க; see tēvagam; 3. பார்வை விலங்கு; decoying bird or beast. "ஒரு தீபகம்போல் வருமண்ணல்" (திருவிளை.வாலூ.46)

[Skt. dīpaka> த. தீபகம்]

தீபகமருந்து *tīpagamarundu,* பெ.(n.) வலிமை உண்டாக்கும் மருந்து; any drug or medicine which tends to bone the system *(சா.அக.).*

தீபகற்பூரம் *dīpa-garppūram* பெ.(n.) ஆரத்தி எரியணம் (வின்.); camphor used as incense.

[Skt. dīpa+karpūra> த. தீபகற்பூரம்]

தீபசாலம் *tīpašālam,* பெ.(n.) 1. ஒளிவிடும் மரம்; burning bush, luminous tree in the dark or during nights *(சா.அக.)*

தீபபுடம் *dīpa-puḍam,* பெ.(n.) சித்தஞ்செய்த மருந்தை மண்ணால் மூடி சோறு பதமாகும் நேரமளவு அடுப்பினுள் வைத்தெடுக்கும் புடம்; the process off calcination in which a medicine is covered with mud and heated in an oven for as long a time as it will take to preparee boiled rice.

[Skt. dīpa> த. தீபம்+புடம்]

தீபம் *dībam,* பெ.(n.) 1. விளக்கு; lamp, light. "தூபநற் றீபம் வைம்மின்" (திருவாச. 9,1) 2. விளக்குத்தண்டு (பிங்.); lamp-stand. 3. சோதிநாள் (பிங்.); the fifteenth nakṣatra 4. தீபமரம் பார்க்க; see dīpamaram.

"சிந்துரந் திலகற் றீபம்" (இரகு.ஆற்று.11)

[த. தீபம் Skt. dīpa> த. தீபம்]

தீபமரம் *dīpa-maram,* பெ.(n.) சுடரொளி மரம் (சோதிவிருட்சம்) (பெரியபு. கண்ணப்ப. 131.); phosphorescent tree.

[Skt. dīpa> த. தீபம்+மரம்]

தீபமாலை *dība-mālai,* பெ.(n.) சரவிளக்கு (S.I.I.V,273); row of lights, as in a chandelier.

[Skt. dīpa> த. தீபம்+மாலை]



தீபனம் *dīpaṉam,* பெ.(n.) 1. அதிகப்படுத்துவது; stimulant, exciting agent. "இசையுங் கூத்தும் காமத்திற்குத் தீபனமாகலின்" (சீவக.2597, உரை) 2. பசி; hunger "கூர்த்த

தீபனங்கூடக் குறுகினார்க்கு" (சிவதருபாவ.79) 3. உணவு (J.); eatables food. 4. மஞ்சள் (யாழ்.அக.); turmeric.

[Skt. dīpana> த. தீபனம்]

தீபனியவர்க்கம் *dībaniyavarkkam,* பெ.(n.) 1. உணவு செரிமானம் அடைய வைக்கும் மருந்துகள் மிளகு, திப்பிலி, சிக்கிரமூலவேர், சுக்கு, வேராள், பெருங்காயம், ஓமம்; drugs that induce appetite, e.g. black pepper, long pepper, root of plumbage, dried ginger, marking nut. *(சா.அக.)*

தீபாக்கினி *dībākkiṉi,* பெ.(n.) ஆயுர் வேதாக்கினி மூன்றனுள் இரண்டு விரல் கனமுள்ள ஒரு விறகால் எரிக்கும் எரிப்புத் திட்டம் (பைஷஜ.4.) ; fire lighted with a chip of fuel two fingers thick, one of three āyurvētākkiṉi.

[Skt. dīpa+agni> த. தீபாக்கினி]

தீபாரதனை *dībāradaṉai,* பெ.(n.) சுடர் ஏற்றி தெய்வச்சிலை முன் சுழற்றிக் காட்டுதல்; waving lamps before an idol.

[Skt. dīpa+ā-rādhana> த. தீபாரதனை]

தீபாவளி *dīpāvaḷi,* பெ.(n.) துலாம் (ஐப்பசி) திங்களிற் கரும்பக்கத்தில் (கிருட்டிணபட்சம் பதினான்காம்) நாள் வைகறையில் மங்கள நீராடிக் கொண்டாடப்படும் பெரும் பண்டிகை; a festive celebration on the night of the 14th day of the dark fortnight at moon-rise in the month of Aippaši, believed to be observed from Naicka period of Telugu Chieftains in Tamil nadu..

த.வ. விளக்கணி விழா

[Skt. dīpāvali> த. தீபாவளி . ஆவளி=வரிசை]

நாயக்க மன்னர் காலத்தில் தமிழ்நாட்டில் அறிமுகமான மாலியப் (வைணவ) பண்டிகை. நளி (கார்த்திகை) மாதத்தில் ஒளி விளக்கு (கார்த்திகை தீபம்) ஏற்றுவது 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட, பண்டைத் தமிழ் மரபார்ந்த வழிபாட்டு விழா.

தீபாவளி[2] *dīpāvaḷi,* பெ.(n.) பண நொடிவு (திவால்); insolvent.

தீபிகை *dīpigai,* பெ.(n.) விளக்கு (சங்.அக.); lamp.

த.வ. விளக்கு

[Skt. dīpikā> த. தீபிகை]

தீபிகைத்தைலம் *dībigaittilam,* பெ.(n.) பெரும் ஐம்மூல எண்ணெய்; காதிற்கு விடும் துளியெண்ணெய்; ear drops off hot oil this is generally prepared by taking panchamoolam. *(சா.அக.)*

தீர்க்கசத்திரம் *dīrkka-šattiram,* பெ.(n.) பன்னிரண்டாண்டுகட்குமேல் நடைபெறும் வேள்வி (யாகம்); sacrifice extending over more than 12 years. "தீர்க்கசத்திரமாக நடத்தினர்" (சேதுபு.இலக்கும.7).

த.வ. மீப்பன்னீராட்டை வேள்வி

[Skt. dīr-gha-satra> த. தீர்க்கசத்திரம்]

தீர்க்கசதுரம் *dīrkka-šaduram,* பெ.(n.) கோணங்களொத்தும் பக்கங்கள் ஒவ்வாதது மான நாற்கோட்டுருவம்; rectangle.

[Skt. dīrgha> த. தீர்கம்+சதுரம்]

தீர்க்கசந்தி *dīrkka-šandi,* பெ.(n.) ஓர் உயிர் தன்னினத்துயிரோடு புணரும்போது அவ்விரண்டும் அவ்வினத்து நெட்டுயிராக மாறும். வடமொழிச்சந்தி; (Gram.) coalescence of two like vowels into a long vowel of the same class in Sanskrit.

[Skt. dīrgha+த. சந்தி]

தீர்க்கசுமங்கலி *dīrkka-šumaṅgali,* பெ.(n.) நன்மங்கலையாய் (சுமங்கலை) நெடுங்காலம் வாழ்பவள்; Woman blessed with a long and happy married life, a term used in benediction.

த.வ. வாழ்வரசி, முற்றிழையாள்

[Skt. dīrgha+su-maṅgali> த. தீர்க்கசுமங்கலி]

தீர்க்கதண்டன் *dīrkka-taṇḍaṉ* பெ.(n.) நெடுஞ்சாண்கிடை வணக்கம் (சாட்டாங்க நிலை); a form of obeisance or homage

which consists in prostrating at full length with the arms extended.

தீர்க்கதரிசி *dirkka-dariši,* பெ.(n.) முற்காண் பறிவுடையவன் (தீர்க்கதரிசனமுடையவன்); seer, prophet. "தீர்க்கதரிசி யாமெவனா னீயில் வுறையுள் சேர்வுற்றாய்" (ஞானவா. பசுண்.42).

[Skt. dirgha+daršin> த. தீர்க்கதரிசி]

தீர்க்கதிருட்டி *dirkka-dirutti,* பெ.(n.) 1. முற்காண்டல்; foresight. 2. காணி (ஞானி); sagacious person, wise man.

த.வ. முன்னொடு நோக்கு, அறிவன்

[Skt. dirgha+drsti > த. தீர்க்கதிருட்டி]

தீர்க்கம் *dirkkam,* பெ.(n.) 1. நீட்சி; length in space or time. 2. நெட்டெழுத்து; long vowl. 'கூறு மிரச்சுவந் தீர்க்கம்" (பி.வி.5). 3. உறுதி முடிவு (சூடா); decision, positiveness, certainty. 4. பெருமித (கம்பீரம்)த்தோற்றம்; majestic appearance. "மெழுகு பிள்ளையார் போல யானிருந்த தீர்க்க மறியீரோ" (விறலிவிடு.987). 5. அறிவுத்தெளிவும் ஈர்ப்புள்ள (வசீகரம்) தோற்றம்; intelligent and attractive expression, as of face. 6. பிறப்பு (சன்) ஓரைக்கு (லக்கினம்) 6,7-ஆம் ஓரைகள் (இராசி) (யாழ்.அக.); (astrol) the 6th and 7th houses from the ascendant. 7. நிறைவு (பூரணம்) (யாழ்.அக.); perfection, completeness. 8. துணிகரச் செயல்; daring act. "தீர்க்கஞ்செய்ய அஞ்ச மாட்டான்" (நாஞ்.) 9. தெளிவு (யாழ்.அக.); clearness.

[Skt. dirga> த. தீர்க்கம்]

தீர்க்கம்போடு-தல் *dirkkam pōdu-,* செ.கு.வி. (v.intr.) நெட்டெழுத்தின் நீட்சிக் குறி வரைதல்; to write the mark of length of a long vowel.

[Skt. dirgha> த. தீர்க்கம்+போடு-,]

தீர்க்கரேகை *tirkkarēgai,* பெ.(n.) (நிலநடுக் கோட்டிலிருந்து தொலைவைக் கணக்கிடும் முறையில்) நிலவுருண்டை மேற்பரப்பில் வடக்கிலிருந்து தெற்கில் செல்வதாக வரைந்துள்ள கோடு; line of longitude. *(க்ரியா)*

த.வ. நெடுவரை

தீர்க்கரோகி *tirkka rōgi,* பெ.(n.) 1. நறுஞ் சோந்தி; உப்பை வைரமாக்கிக் காட்டும் செடி; an unknown plant capable of consolidating common salt. *(சா.அக.)*

தீர்க்கவசனம் *dirkka-vašanam,* பெ.(n.) 1. உறுதிமொழி (யாழ்.அக.); definite promise.

[Skt. dirgha +vacana> த. தீர்க்கவசனம்]

தீர்க்காயுசு *dirkkāyušu,* பெ.(n.) 1. தீர்க்காயுள் பார்க்க; see dirkkāyuḷ. 2. காக்கை (யாழ்.அக.); crow. 3. என்றும் பதினாறன் (மார்க்கண்டன்) (யாழ்.அக.); Mārkkaṇṭaṉ.

[Skt. dirghāyus> த. தீர்க்காயுசு]

தீர்க்காயுள் *dirkkāyul,* பெ.(n.) நீண்ட ஆயுள்; long life.

த.வ. நீடுவாழ்வு

[Skt. dirghāyus> த. தீர்க்காயுள்]

தீர்க்காலோசனை *dirkkālōšanai,* பெ.(n.) ஆழ்ந்த சிந்தனை; deep counsel.

த.வ. நீள் நினைவு, நெட்டோர்ப்பு

[Skt. dirghā+yōjanā> த. தீர்க்காலோசனை]

தீர்த்தக்கரை *tirtta-k-karai,* பெ.(n.) தூய நீர்த்துறை; sacred bathing ghat.

[Skt. tirtha> த. தீர்த்தம்+கரை]

தீர்த்தக்காரர் *tirtta-k-kārar,* பெ.(n.) கோயில் பூசைக்குப் பின் கடவுளின் (சுவாமி) பெயரால் வழங்கப்படும் நன்னீர் (தீர்த்தம்) முன்னர்ப் பெறும் உரிமையாளர் (Vaiṣṇ); persons having the right to receive tirttam first after worship of an idol in a temple.

[Skt. tirtha> த. தீர்த்தம்+காரர்]

தீர்த்தகட்டம் *tirtta-kattam,* பெ.(n.) நீராடும் கட்டம் (ஸ்நாநகட்டம்); bathing ghat.

[Skt. tirtha-ghatta> த. தீர்த்தகட்டம்]

தீர்த்தகர் *tirttakar,* பெ.(n.) தீர்த்தகரர் (யாழ்.அக.) பார்க்க; see tirttakarar.

தீர்த்தகரர் *tirtta-karar,* பெ.(n.) 1. தீர்த்தங்கரர் பார்க்க; see tirttankarar. "திருமொழியருளுந் தீர்த்தகரர்களே துயர்கடீர்ப்பார்" (யசோதர. 1,49). 2. தூய்மையானவர் (பரிசுத்தர்); holy person. "பேதைகாள் தீர்த்தகர ராமின் திரிந்து" (திவ்.இயற்.2,14).

[Skt. tirtha-kara> த. தீர்த்தகரர்]

தீர்த்தகவி *tirtta-kavi,* பெ.(n.) திருமண் அணிந்து (தரித்து) கொள்ளும்போது நீர் வைத்துக்கொள்ள உதவும் தேங்காயோட்டுக் கல். (Vaisn); cup made of coconut shell used by *Vaisnavaites* to hold water for preparing paste for their caste - marks.

[Skt. tirtha+kavi> த. தீர்த்தகவி]

தீர்த்தங்கரர் *tirttangarar,* பெ.(n.) சைனருள் அருகபதவியடைந்த விருசபர், அசிதர், சம்பவர், அபிநந்தனர், சுமதி, பத்மபிரபர், சுபார்சுவர், சந்திரபிரபர், புட்(ஷ்)பதந்தர் அல்லது சுவிதி, சீதளர், சிரேயாஞ்சர், வாசுபூச்சியர், விமலர், அநந்தர், தர்மர், சாந்தி, கிரந்து அல்லது குந்து, அரர், மல்லி, முனிசுவ்விரதர், நமி, நேமி, பார்சுவர், வர்த்தமானர் என்ற இருபத்து நால்வர். (திருக்கலம். காப்பு, உரை); Jaina Arhats, 24 in number, viz., Viruṣapar, Acitar, Campavar, Apinantaṉar, Cumati, Patmapirapar, Cupārcuvar, Cantira-pirapar, Puṣpatantar or Cuviti, Citaḷar, Cirēyāñjar, Vācupūcciyar, Vimalar, Anantar, Tarmar, Cānti, Kirantu or Kuntu, Arar, Malli, Muṉi: Cuv-viratar, Nami, Nēmi, Pārcuvar, Varttamāṉar.

த.வ. தூய நீரவர்

[Skt. tirthakara> த. தீர்த்தங்கரர்]

தீர்த்தங்கொடு-த்தல் *tirttan-kodu-,* 4 செ.கு.வி.(v.i.) கோயிலில் கடவுளின் பெயரால் அளிக்கப்படும் துய்யநீர் அளித்தல்; to distribute water with which the chief idol of a temple has been bathed. 2. திருநாள் முடிவில் அடியார்கள் நீராடும்படி கடவுள் நீர்த்துறையில் நீராடும்படிச் செய்தல்; to take bath, as an idol, at sacred waters at the close of a festival, the devotees bathing there immediately.

[Skt. tirtha> த. தீர்த்தம்+கொடு-,]

தீர்த்தநீர் *tirtta-nir,* பெ.(n.) புண்ணிய நீர்; sacred water, "தீர்த்த நீர் பூவொடு பெய்து" (பு.வெ.6,27.)

[Skt. tirtha> த. தீர்த்தம்+நீர்]

தீர்த்தம் *tirttam,* பெ.(n.) 1. முழுத்தூய்மை; ceremonial purity. "தீர்த்த முக்கண் முதல்வனை" (தேவா.584,9.) 2. நீர் (சூடா); water, drinking - water. "பாததீர்த்தம் பருகினான்" (காஞ்சிப்பு, திருமண.59). 3. புண்ணிய நீர்த்துறை; sacred bathing - ghat. "குமரித் தீர்த்த மரீஇய வேட்கையின்" (பெருங்.உஞ்சைக். 36,236) 4. அடியார்கட்கு வழங்கப்படும் வழிபாட்டு நீர்; water used in worshipping an idol and distributed to devotee. 5. திருப்பாதநீர் (தீர்த்தம்); water used in washing the feet of great men as gurus. 7. திருவிழா. (சூடா); temple festival. 8. சமண மதத் தோன்றிய நூல்; (Jaina.) sacred books. 9. தீர்த்தவாரி பார்க்க; see tirttavāri. "தீர்த்தத்தினன் றிராத் திருமாலையைப்பாடி" (ஈ.டு.5,10,6). 10. தீ (யாழ்.அக.); fire. 11. வேள்வி (யாகம்) (யாழ்.அக.); sacrifice. 12. பிறப்பு (யாழ்.அக.) birth. 13. பெண்குறி (யாழ்.அக.); female organ.

[Skt. tirtha> த. தீர்த்தம்]

தீர்த்தயாத்திரை *tirtta-yāttirai*, பெ.(n.) நந் நீர்த்துறைகளில் நீராடச் செல்லும் செலவு (பிரயாணஞ் செல்லுகை) (குறள், 586, உரை.); pilgrimage to sacred bathing ghats. (எ.கா.) கங்கை, காவிரி போன்ற ஆறுகளுக்குத் தீர்த்த யாத்திரை செல்லல்.

த.வ. நீராடற் செலவு

[Skt. tirtha+yātrā> த. தீர்த்தயாத்திரை]

தீர்த்தவாரி *tirtta-vāri*, பெ.(n.) 1. திருவிழா முதலில் இறைவனுக்கு நடைபெறும் நீராட்டு கொண்டாட்டம் (நீராட்டுற்சவம்); bathing of an idol in a river or tank at the close of a festival. 2. தீர்த்தவேதி. 2. (இ.வ.) பார்க்க; see tirttavēdi.

[Skt. tirtha+wāri> த. தீர்த்தவாரி]

தீர்த்தவேதி *tirtta-vēdi*, பெ.(n.) 1. திருமுழுக்கு மேடை; a seat on which an idol is kept and bathed. 2. இறைவனின் திருமுழுக்கு நீர் விழும்படி வைக்கப்படும் ஏனம் (பாத்திரம்.); receptacle for the water with which an idol has been bathed. "தீர்த்த வேதி வெண்சங்கு தர்ப்பணம்" (பிரபோத.11,32).

[Skt. tirtha+vēdi> த. தீர்த்தவேதி]

தீர்த்தன் *tirttan*, பெ.(n.) முழுத் தூய்மையன்; holy person. "புலவன் தீர்த்தன் புண்ணியன் புராணன்" (மணி.5,98). 2. கடவுள்; God. "தீர்த்தனற்றில்லை" (திருவாச.7,12), "தீர்த்த னுலகளந்த சேவடி மேல்" (திவ். திருவாய்.2,8,6). 3. தகைஞன் (அருகன்) (சூடா.); Arhat. 4. குரு (பிங்.); guru.

[Skt. tirtha> த. தீர்த்தன்]

தீரசங்கராபரணம் *tiraśankarābaraṇam*, பெ.(n.) மேளகர்த்தாக்களுள் ஒன்றான அரும்பாலை (சங்கராபரணம்) (பரத.ராக. 104.); (Mus) caṅkarāparaṇam, a primary rāgā.

[Skt. dhira+śaṅkarābharaṇa> த. தீரசங்கராபரணம்]

தீரம்[1] *tiram*, பெ.(n.) 1. துணிவு (தைரியம்); courage, valour. "தீரத்தினாற்றுறவு சேராமல்" (தாயு.பராபர.271). 2. வலி (சூடா); strength, vigour, power. 3. அறிவு (யாழ்.அக.); intelligence.

த.வ. திறன்

[Skt. dhira> த. தீரம்]

தீரம்[2] *tiram*, பெ.(n.) 1. கரை; shore, bank. "தீரமும் வையையுஞ் சேர்கின்ற கண்கவின்" (பரிபா 22,35). 2. செய்வரம்பு (பிங்.); dyke, as of a paddy field. 3. அம்பு (யாழ்.அக.); arrow.

[Skt. tira> த. தீரம்]

தீரவாசம் *tira-vāśam*, பெ.(n.) ஆற்று (நதி) பாய்ச்சலுள்ள இடம்; tract adjoining a river. "அவனுக்குத் தீரவாசத்தில் நாலுகோட்டை நிலமுண்டு".

[Skt. tira-vāsa> த. தீரவாசம்]

தீவகச்சாந்தி *tivaga-c-cāndi*, பெ.(n.) பண்டைக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெற்று வந்த இந்திர விழா; an ancient festival celebrated to propitiate Indra at kāviri-p-pūm-paṭṭiṉam. "தீவகச்சாந்தி செய்தரு நன்னாள்" (மணி.1,35.).

[Skt. dvipaka+śānti> த. தீவகச்சாந்தி]

தீவகம்[1] *tivagam*, பெ.(n.) 1. விளக்கு; lighted lamp, flame. 2. முதனிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என மூவகைப்பட்டு ஒரு சொல் ஓரிடத் தினின்று பலவிடத்துஞ் சென்று பொருள் விளக்கும் அணி (தண்டி.38.); (Rhet.) figure of speech in which a word is constructed with other words preceding or succeeding of three varieties, viz., mutaṉilai-t-tivakam, iṭainillai-t-tivakam, kaṭainilai-t-tivakam. 3. பார்வை விலங்கு; decoy-bird, decoy beast. "தீவகமாமென வருவாய் வந்து" (சிவப்பிர.பாயி.8).

[Skt. dipaka> த. தீவகம்]

தீவகம்² *tīvagam,* பெ.(n.) தீவு; island. "தீவகச் சாந்தி" (மணி 2,3).

[Skt. dvīpaka> த. தீவகம்]

தீவம் *tīvam,* பெ.(n.) விளக்கு; lamp. "செம் பொற் றீவங்க ளுமலிதர" (கோயிற்பு. திருவிழா.30).

[Skt. dīpa> த. தீவம்]

தீவரம் *tīvam,* பெ.(n.) தீவு; island. "இலங்கா தீவத்து" (மணி.28,107.)

[Skt. dvīpa> த. தீவம்]

தீவி¹ *tīvi,* பெ.(n.) புலி (உநி.நி.); tiger.

[Skt. dvīpin> த. தீவி]



தீவி² *tīvi,* பெ.(n.) பறவை (பட்சி) வகை (சங்.அக.); a bird.

தீவிகை *tīvigai,* பெ.(n.) விளக்கு; lamp. "மீன் குழாத்தி னெங்குந் தீவிகை" (சீவக.2325).

[Skt. dīpikā> த. தீவிகை]

தீவிரச்சிகிச்சைப் பிரிவு *tīviracckiccaipirivu,* பெ.(n.) மருத்துவமனையில் சிக்கலா (ஆபத்தா)ன நிலையில் உள்ள நோயாளி களுக்கு இடை விடாத கவனிப்பும் பண்டுவமும் (சிகிச்சை) வழங்கும் பிரிவு; intensive care unit (in a hospital) *(க்ரியா.)*

த.வ. கடுங்கவன மருத்துவப் பிரிவு

தீவிரம் *tīviram,* பெ.(n.) 1. விரைவு (உ.வ.); speed, celerity. 2. பெருங்கோபம் (சூடா.); fury, rag. 3. கதிரவன் பற்றுகை (சூரிய கிரணம்) (பிங்.); sun's ray. 4. கொடுமை; intensity, severity. "வெயில் தீவிர மாயிருக்கிறது". 5. உறைப்பு; pungency, sharpness. குழம்பு தீவிரமாயிருக்கிறது". 6. ஒரு அளறு (நரகம்). a hell. "அறக்கொடிய தீவிரமே" (சிவதரு.சுவர்க்க.126).

[Skt. tīvra> த. தீவிரம்]

தீவிரவாதம் *tīviravādam,* பெ.(n.) (சட்டப் படியான வழிகளைப் பின்பற்றாமல்) சிக்கல் களுக்குத் தீர்வு காண வன்முறையை மேற்கொள்ளும் போக்கு; extremism.

த.வ. கொடும்போக்கு, வன்முறை

தீவிரவாதி *tīviravādi,* பெ.(n.) தீவிரப்போக்கை (வாதத்தை)க் கடைப்பிடிப்பவர்; extremism. *(க்ரியா]*

த.வ. வன்முறையாளன்

தீவிளி *tīviḷi,* பெ.(n.) தீபாவளி பார்க்க; see tipāvaḷi.

[Skt. dīpāvaḷi > த. தீவிளி]

தீனதயாளு *tīṉa-dayāḷu,* பெ.(n.) எளியா ரிடத்தும் அருளுள்ளவன்; one who is compassionate to the poor.

த.வ. எளியார்க்கருளி

[Skt. dīna-dayālu> த. தீனதயாளு]

தீனபந்து *tīṉa-bandu,* பெ.(n.) 1. எளியார்க் கன்பன்; a friend of the poor. invalid. 2. கடவுள்; god.

[Skt. dīna-bandhu> த. தீனபந்து]

தீனம் *tīṉam,* பெ.(n.) நட்பு (யாழ்.அக.).; friendship.

[Skt. adhīna> த. தீனம்]

துக்கக்காரன் *tukkakkāraṉ,* பெ.(n.) இழவு வீட்டுக்காரன் (வின்.); mourner.

[Skt. duḥkha> த. துக்கம் + காரன்]

துக்கக்கேடு *tikkakkēḍu,* பெ.(n.) துக்கம், 1 பார்க்க; see tukkam,1. "சொன்னால் வெட்கக்கேடு, அழுதால் துக்கக்கேடு".

[Skt. duḥkha> த. துக்கம்+கேடு]

துக்கங்கேள்–தல் (துக்கங்கேட்டல்) *tukkaṅkēḷ-,* செ.குன்றா.வி. (v.t.) இழவு கேட்டல்; to comfort mourners, condole with.

[Skt. duḥkha> த. துக்கம்+கேள்-]

துக்கச்சல்லா *dukka-c-callā,* பெ.(n.) துயர் (துக்கம்) அடையாளமாகக் கட்டிக்கொள்ளும் கறுப்புத்துணி (பாண்டி); crepe.

[Skt. duḥkha+cēla> த. துக்கச்சல்லா]

துக்கசாகரம் *tukka-šāgaram,* பெ. (n.) பெருந்துயர் (துயர்க்கடல்); overwhelming grief, as an ocean of grief.

[Skt. duḥkha> த. துக்கசாகரம்]

துக்கசுரம் *tukkašuram,* பெ. (n.) 1. பிதற்றல், அழுதல் முதலிய குணங்களைக் காட்டும் ஒரு வகைக் காய்ச்சல்; a kind of fever attended with the sympony of raving crying. *(சா.அக.)*

துக்கநாடகம் *dukkanāḍagam,* பெ. (n.) துன்ப (துக்க)மான முடிவையடையும் நாடக வகை (பாண்டி.); tragedy.

த.வ. துன்பியல் நாடகம்

[Skt. duḥkha> த. துக்கம்+நாடகம்]

துக்கநிவர்த்தி *tukkanivartti,* பெ. (n.) துக்க நிவாரணம் பார்க்க; see tukkanivāraṇam.

[Skt. duḥkha+ni-vṛtti> த. துக்கநிவர்த்தி]

துக்கநிவாரணம் *tukka-nivāraṇam,* பெ. (n.) 1. துன்ப நீக்கம்; deliverance from all ills. 2. வாய்மை நான்கனுள் அவாவற்று நிற்கும் நிலையே துயரநீக்கமாகிய வீடு என்ற அறிவமதக் (பௌத்தம்) கொள்கை. (மணிமே.2,65, உரை.); (Buddh.) the doctrine that the extinction of desire is the sure means of deliverance and cessation of pain, one of four vāymai, q.v.

த.வ. துயர் துடைப்பு, துயர் தணிப்பு

[Skt. duḥkha+ni-vārana> த. துக்கநிவாரணம்]

துக்கநிவாரணமார்க்கம் *tukka-nivāraṇamārkkam,* பெ. (n.) வாய்மை நான்கனுள் பற்றறுவதே துயர் நிலை – வீட்டுக்குரிய (துக்க நிவாரணம்) வழியென்ற அறிவ மதத்தின் (பௌத்த மதம்) கொள்கை. (மணிமே.2,66–7,உரை.); (Buddh.) the doctrine that the path that leads to the extinction of desire and thereby of pain, one of four vāymai, q.v.

[Skt. duḥkha+ nivārṇa marga > த. துக்கநிவாரண மார்க்கம்]

துக்கம்[1] *tukkam,* பெ. (n.) 1. துன்பம் (சூடா.); sorrow, distress, affliction. "துக்கமித் தொடர்ச்சியென்றே (கம்பரா. கும்பகருண.142.) ; 2. அளறு (நரகம்.) (வின்.) hell. 3. நோய் (யாழ்.அக.); disease; 4. வாய்மை நான்கனுள் உலகப் பிறப்பே துக்கமென்று கூறும் அறிவமதக் (பௌத்த மதம்) கொள்கை. (மணிமே. 2,64,உரை.); (Buddh.) the doctrine that existence is painful, one of four vāymai, q.v.

[Skt. duḥkha > த. துக்கம்[1]]

துக்கம்[2] *tukkam,* பெ. (n.) வானம் (ஆகாசம்); sky. "நிலந்துக்க நீர்வளி தீயானான்" (தேவா.844,3).

[Skt. dyu+kha> த. துக்கம்[2]]

துக்கர் *tukkar,* பெ. (n.) எலும்புருக்கி நோயுடையவர்; consumptive patients. "துக்கர் துருநாமர்" (சிறுபஞ்.76.)

[Skt. duḥkha> த. துக்கர்]

துக்கரம் *tukkaram,* பெ. (n.) செய்தற்கரியது; that which is difficult to be made or done. "துக்கரமான கொன்றைத் தொடையலால் வளைத்தவாறும்" (பாரத.பதின் மூ.161.)

[Skt. dus-kara> த. துக்கரம்]

துக்கராகம் *tukka-rāgam,* பெ. (n.) 1.இழவுக்குரிய பண் (யாழ்.அக.); mournful tune. 2. பாலையாழ்த்திறவகை (பிங்.); (Mus.)

ancient secondary melody type of pālaiclass.

[Skt. duḥkha+rāga> த. துக்கராகம்]

[த. அராகம் >Skt. rāga]

துக்கவீடு *tukka-viḍu,* பெ. (n.) இழவு கொண்டாடும் வீடு; house of mourning.

[Skt. duḥkha> த. துக்கம் + வீடு]

துக்கவுன்மத்தம் *tukkauṉmattam,* பெ. (n.) துயரம் மிகுதியானால் ஏற்படும் மனநோய்; depression of spirits induced by grief. It takes the form of an insanity marked by abnormal inhibitation of mental and bodily activity. (சா.அக.)

[Skt. duḥkha+unmath> த. துக்கவுன்மத்தம்]

துக்காதீதம் *tukkātidam,* பெ. (n.) மனமகிழ்வு, வளமை, செழுமை (சுகம்.) (யாழ்.அக.); pleasure, happiness.

த.வ. இன்பநுகர்வு, நற்பேறு

[Skt. duḥkha+atita> த. துக்காதீதம்]

துக்கடா[1] *tukkaḍā,* பெ. (n.) 1. சிறுதுண்டு (இ.வ.); piece, bit. 2. உணவிற்குரிய பச்சடி முதலிய தீனி வகை (இ.வ.); any relish.

[H. tukra> த. துக்கடா]

துக்கடா[2] *tukkaḍā,* பெ.எ. (adj.) இழிவான (அற்பம்); insignificant. "துக்கடா வேலை".

[Skt. tukra> த. துக்கடா]

துக்காணி[1] *tukkāṇi,* பெ.(n.) இரண்டு அல்லது நான்கு சல்லி (தம்படி) மதிப்பு கொண்ட சிறு செப்புக்காசு (நாணயம்); a small copper coin = 2 or 4 pies. "துக்காணிப் பொட்டுமிட்டு" (திருக்கூட்டச் சத. MSS.)

[U. duggāni> த. துக்காணி]

துக்காணி[2] *tukkāṇi,* பெ.(n.) கடைக்குரியது (இ.வ.); that which pertains to a shop.

[U. dukāni> த. துக்காணி]

துக்கி[1]**–த்தல்** *tukki-,* செ.கு.வி. (v.i.) மனம் வருந்துதல்; to sorrow, mourn, to be in distress.

த.வ. துயருறுதல்

[Skt. duḥkha> த. துக்கி[1]-,]

துக்கி[2] *tukki,* பெ. (n.) துக்கிதன் பார்க்க; see tukkidaṉ. "துகியாயிருக்கிறதும் துக்கியா யிருக்கிறதும்... சுபாவங்காணும்" (சி.சி.2,5, மறைஞா.)

[Skt. duḥkhin> த. துக்கி[2]]

துக்கிரி *tukkiri,* பெ. (n.) (வ.வ.) 1. (மனத் துயரம் விளைவிக்கும் வகையில்) விரும்பத் தகாதது அல்லது கெடுதல் நிகழலாம் என்று உணர்த்தும் வகையான (விதமான) அன்மங்கலத் (அமங்கலம்) தன்மை; inauspiciousness. "திடீரென்று நான் இறந்துவிட்டால் என்ன செய்வாய்? என்று கேட்டதற்கு எதற்கு இந்தத் துக்கிரிப்பேச்சு என்று கடிந்து கொண்டாள்." 2. கெடுதல் விளைவதற்குக் காரணமாகக் கருதப்படும் ஆள் (நபர்); one who is thought to bring bad luck. "இந்தத் துக்கிரி பிறந்ததிலிருந்து வியாபாரத்தில் பயங்கர நட்டம்". (இ.வ.).

துக்கை *tukkai,* பெ. (n.) காளி; Durgā. "துக்கைபட்டி பிடாரிபட்ட" (S.I.I.1,91).

[Skt. durgā> த. துக்கை[1]]

துக்கோற்பத்தி *tukkōṟpatti,* பெ. (n.) வாய்மை நான்கனுள் அவாவே துயரத்திற்குக் காரண மென்று கூறும் அறிவமதக் (பௌத்தம்) கொள்கை (மணி.); (Buddh.) the doctrine that desire is the cause of pain, one of four vāymai.

[Skt. du.hkha+ut-patti> த. துக்கோற்பத்தி]

துச்சனம் *tuccaṉam,* பெ. (n.) தீயகுணம் (துட்டத்தனம்) நெல்லை; viciousness, mischievous disposition.

த.வ. அரம்பத்தனம், துடுக்கு

[Skt. dur-jana> த. துச்சனம்]

துச்சாரி *tuccāri,* பெ. (n.) தீயநடத்தையோன்; licentious person, profligate. "துச்சாரி நீகண்ட வின்ப மெனக்கெனைத்தாற் கூறு (நாலடி.84).

[Skt. duś-cārin> த. துச்சாரி]

துச்சோதனன் *tuccōdaṉaṉ,* பெ. (n.) துரியோதனன் பார்க்க; see turiyōdaṉaṉ. "சுழலைபெரிதுடைத்துச்சோதனனை" (திவ்.பெரியாழ்.1,8,5).

[Skt. Dur-yō-dhana> த. துச்சோதனன்]

துசாரோகணம் *tušārōgaṇam,* பெ. (n.) கோவிலின் கொடியேற்றம்; ceremonial hoisting of the flag in a temple, at the commencement of the annual festival. "காணுந் துசாரோகணஞ் செய்து" (கடம்ப. உலா,52).

[Skt. dhvaja-ā-rōhaṇa> த. துசாரோகணம்]

துசாவந்தி *tušāvandi,* பெ. (n.) ஒரு வகை அராகம் (இராகம்.) (இ.வ.); (Mus.) a rāga.

[Skt. dhvajāvanti> த. துசாவந்தி]

துட்டக்கிளவி *tuṭṭa-k-kiḷavi,* பெ. (n.) தீச்சொல்; bad words. "துட்டக்கிளவி பெட்டவை பயிற்றி" (பெருங்.உஞ்சைக்.40,82).

[Skt. duṣṭa> த. துட்டம்+கிளவி]

துட்டகண்டகன் *tuṭṭa-kaṇḍagaṉ,* பெ. (n.) 1. மிகக்கொடியவன்; hard-heartedman. 2. பிறரைக் கசக்கி வேலை வாங்குவோன்; sweater.

[Skt. duṣṭa-kaṇṭaka> த. துட்டகண்டகன்]

துட்டகம் *tuṭṭagam,* பெ. (n.) பொல்லாங்கு (யாழ்.அக.); wickedness.

[Skt. duṣṭa> த. துட்டகம்]

துட்டத்தனம் *tuṭṭa-t-taṉam,* பெ. (n.) தீக்குணம்; mischievous disposition.

[Skt. duṣṭa> த. துட்டம்+தனம்]

துட்டதேவதை *tuṭṭa-tēvadai,* பெ. (n.) மாடன் காட்டேரி முதலிய கொடுந் தெய்வங்கள்; malignant deity. "பலிகொடுத்தேன் கர்ம துட்டதேவதைகளில்லை" (தாயு.கருணாகர.8).

[Skt. duṣṭa-dēvatā> த. துட்டதேவதை]

துட்டநிக்கிரகம் *tuṭṭa-nikkiragam,* பெ. (n.) தீயோரையழிக்கை; destruction of the wicked. "துட்ட நிக்கரகஞ் செய்யத் தோன்றலார் தோன்றாநிற்பர்" (குற்றா.தல. தக்கன் வேள்விச்.128).

[Skt. duṣṭa+ni-graha> த. துட்டநிக்கிரகம்]

துட்டம்[1] *tuṭṭam,* பெ. (n.) 1. தீமை; evil. 2. பச்சைக் கல் (மரகத) குற்றங்களுள் ஒன்று; flaw in emeralds. "துட்டமே தோடமூர்ச் சிதமே" (திருவிளை. மாணிக்.68). 3. இகழத்தக்கத்து (நிந்தித்தல்) (நீலகேசி, 530. உரை); that which is censurable.

[Skt. duṣṭa> த. துட்டம்]

துட்டன் *tuṭṭaṉ,* பெ. (n.) 1. தீயோன்; wicked, mischievous fellow. "துட்டனைத் துட்டுத் தீர்த்து" (தேவா.1194,10). 2. தேள் (சூடா) ; scorpion.

[Skt. duṣṭa> த. துட்டன்]

துட்டி[1] *tuṭṭi,* பெ. (n.) 1. சாத்துன்பம்; death 2. இழவு வருத்தம் (துக்கம்) வினாவுதல் (விசாரித்தல்); condolence.

த.வ. சாவழித்துயர்

[Skt. duṣṭi> த. துட்டி]

துட்டி[2] *tuṭṭi,* பெ. (n.) 1. சாதீட்டு; pollution from death. 2. சாதுயர்; calamity from death.

[Skt. duṣṭi> த. துட்டி[2]]

துட்டி[3] *tuṭṭi,* பெ. (n.) கெட்டவள்; wicked mischievous woman. "காமக்குரோதம் விளைத்திடு துட்டிகள்" (திருப்பு.451).

துட்டு[1] *tuṭṭu,* பெ. (n.) மாழைக்காசு; metal coin.

துட்டு[2] *tuṭṭu,* பெ. (n.) தீமை; wickedness, mischief "துட்டனைத் துட்டுத் தீர்த்து" (தேவா.1194,10).

[Skt. duṣṭa> த. துட்டு[2]]

துட்டை *tuṭṭai,* பெ. (n.) 1. கற்பில்லாதவள் (சூடா.); profligate, unchaste woman.

2. கட்டுக்கடங்காதவள்; termagant, turbulent woman.

[Skt.duṣṭa> த. துட்டை]

துட்பதம் *tuṭpadam,* பெ. (n.) பாசாங்கு; pretension. "துட்பதத்துட எழுதிடுஞ் சுயோதனன்" (பாரத.வாரணா.13).

த.வ. போலி நடிப்பு

[Skt.duṣ-pada> த. துட்பதம்]

துட்பரிசம் *duṭpariśam,* பெ. (n.) சிறுகாஞ் சொறி (தைலவ.தைல.76); small climbing nettle.

[Skt.dus-sparaśa> த. துட்பரிசம்]

துட்பிரச்சாரம் *tuṭpiraccāram,* பெ. (n.) (அ.வ.) தவறான கருத்துகளை ஏற்படுத்த பொய்யான செய்திகளைப் பரப்பிச் செய்யப்படும் செய்திப் பரப்பல்; false propaganda, slander, campaign. "தன்னைப் பற்றி நடந்து வரும் துஷ்பிரச்சாரத்தைப் பற்றிக் கவலைப் படவில்லை என்றார் கல்லூரி முதல்வர். முறையாகத் தேர்தலில் வெற்றி பெற்றவரைப் பற்றி துஷ்பிரச்சாரம் செய்கிறார்களே?. *(இ.வ.)*

துடிதலோகம் *tuṭida-lōgam,* பெ. (n.) அறிவமத (பௌத்தம்) நூல் கூறும் தேவருலகத்தில் (தேவலோகம்) ஒன்று; (Buddh.) a celestial world. "துடித லோகத்து மிக்கோன் பாதம்" (மணிமே.12,73).

[Skt.tuṣita+lōka> த. துடிதலோகம்]

துணியா *tuṇiyā,* பெ. (n.) நாடு (வின்.); country, district.

[U.duniyā> த. துணியா]

துணிவினந்தரம் *tuṇivin-andaram,* பெ. (n.) முன்சொன்ன நற்பொருளை யொழித்துப் பிறிதொரு பொருளை மொழிகை (த.நி.போ. சங்கற்ப.2.); stating a theory different from one's own former theory.

துத்தபாடாணம் *tuttapāḍāṇam,* பெ. (n.) வைப்பு நஞ்சு (பிறவிப்பாடாணம்) வகை (வின்.); a mineral poison.

[Skt.tuttha+pāṣāra > த. துத்தபாடாணம்]

துத்து *tuttu,* பெ. (n.) அணிகலன் (ஆபரணம்); ornament. "துஸ்துதினுசுகள் வாரியாகத் தந்த" (கனம் கிருஷ்ணையர். கீர்த்.51).

துதசிரம் *tuta-śiram,* பெ. (n.) பேய்பிடித்தவர் போலத் தலையை ஆட்டும் நளிநய வகை; (பரத பாவ.72.); (Nāṭya)the act of moving the head round in imitation of one who is possessed.

[Skt.dhuta+śiras> த. துதசிரம்]

துதமுகம் *tuta-mugam,* பெ. (n.) முகநளிநயம் (அபிநயம்) பதினான்கனுள் வேண்டாமை குறித்தற்கு இடம் வலமாகத் தலையை யாட்டுகை. (சது.); (Nāṭya)shaking one's head in refusal, one of 14 muka-v-apiṇayam.

[Skt.dhuta > த. துதம்+முகம்]

துதாங்கனம் *tutāṅgaṇam,* பெ. (n.) தூயவொழுக்கம்; good habits. துன்ப வர்க்குத் துதாங்கனத் தொன்றுமே" (நீலகேசி, 316).

துதாங்கு *tutāṅgu,* பெ. (n.) துதாங்கனம் பார்க்க; see tutāṅganam. "துதாங்கென் றாத்தர் சொன்னவ" (நீலகேசி, 356).

துதி¹ *tudi,* பெ. (n.) 1. வழிபாட்டுப்பா (தோத்திரம்.) (சூடா.); praise, eulogy. "துதிவாய் தொறுங் கொளும்... வெங்கை" (வெங்கைக்கோ.62) 2. புகழ்; fame. "துதியறு பிறவி" (கம்பரா. சடாயு-வுயிர் 193).

[Skt.stuti> த. துதி²]

துதி²-த்தல் *tudi-,* 11 செ.குன்றாவி. (v.t.) 1. புகழ்தல் (சூடா.); to praise, eulogise, to flatter. "விண்ணோடு மண்ணுந் துதித்தாலும்"

(திருவாச.7,10) 2. தொழுதல். (உரி.நி.); to worship 3. நினைத்தல்; to think "கனவிலும் அதைத் துதிக்கமாட்டேன்" (வின்.)

[Skt.stuti > த. துதி²-]

துதிகை *tudigai,* பெ. (n.) துதியை 1 பார்க்க; see tudiyai,1. "துதிகைப் பிறைபோலுந் தோற்றச் சேய் தன்னை" (இரகு.இந்து.62).

[Skt.dvitīyā> த. துதிகை]

துதிநிந்தை *tudi-nindai,* பெ. (n.) இகழா விகழ்ச்சி (யாழ்.அக.); censure or ridicule under the garb of praise.

[Skt.stuti+nindā> த. துதிநிந்தை]

துதிபாடி *tudipāḍi,* பெ. (n.) (ஒருவரை) புகழ்பாடுபவர்; sycophant, flatterer. "அமைச்சர்கள் துதிபாடிகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது". *(க்ரியா)*

த.வ. புகழ்பாடி

துதிபாடு-தல் *tudipāḍu,* செ.குன்றாவி. (v.t.) (தான் பயன் அடைவதற்காகப் பதவியில் இருப்ப வர்களை அல்லது செல்வம் படைத்த வர்களை) புகழ்ந்து பேசுதல்; to sing the praises of, flatter (the powerful and the rich to gain advantage)."தலைவர்களைத் துதிபாடவே தொண்டர்களுக்கு நேரம் இல்லை!/ தனி நபருக்குத் துதிபாடும் வழக்கம் ஒழிய வேண்டும்". *(இ.வ.)*

[Skt.stuti> த. துதி+பாடு]

துதியரிசி *tudi-y-ariśi,* பெ. (n.) வழிபாட்டுக்குரிய செஞ்சாந்து (குங்குமம்) கலந்த அரிசி (சோபனாட்சதை) (தைலவ. தைல.); saffron - stained rice, used in benediction.

த.வ. மங்கலஅரிசி

[Skt.stuti> த. துதி+அரிசி]

துதியை *tudiyai,* பெ. (n.) 1. வெண்பக்கம் (சுக்கிலம்) அல்லது கரும்பக்கம் (கிருட்டிண பட்சங்களில்) இரண்டாம் பிறை நிலை (திதி); second day of the bright or dark fortnight."துதியைத் திங்கள் கண்டெனா" (இரகு.தேனுவ.122) 2. இரண்டாம் வேற்றுமை (வி.வி.6); (Gram.) second case.

[Skt.dvitīyā> த. துதியை]

துதிவாதம் *tudi-vādam,* பெ. (n.) புகழுரை; panegyric, word of praise. "அர்த்தவாத துதிவாதங்களுக்கும் அப்பொருள் கூடாமை யால்" (சிவசம.35).

[Skt.stuti-vāda> த. துதிவாதம்]

துந்தரோகம் *tundarōgam,* பெ. (n.) செரி மானமின்மையால் (அசீரணம்) உண்டாகும் குழந்தை நோய் வகை. (சீவரட்.23.); a disease of children caused by indigestion.

[Skt.tunda+rōga> த. துந்தரோகம்]

துந்திரோகம் *tundi-rōgam,* பெ. (n.) பெருவயிறு நோய் (மகோதரம்) (தைலவ.தைல 97.); a disease of the abdomen, dropsy.

[Skt.tundi+rōga> த. துந்திரோகம்]

துந்நிமித்தம் *tun-nimittam,* பெ. (n.) தீக்குறி (அபசகுணம்); evil omen. "இவனைக் கண்டாலுந் துந்நிமித்தம் என்பார்" (சிலப்.16,112,உரை).

[Skt.durnimitta> த. துந்நிமித்தம்]

துந்நெறி *tun-neṟi,* பெ. (n.) தீயவழி (துன்மார்க்கம்); evil conduct. "துந்நெறிப் பாவப்பயன்" (திருக்காளத்.4.29,28).

[Skt.dur> த. துன்+நெறி]

துப்பட்டா *tuppaṭṭa,* பெ. (n.) 1. துப்பட்டி (வின்.) பார்க்க; see tuppaṭṭi. 2. மேலுக்கு அணியும் விலையுயர்ந்த நல்லாடை (கொ.வ.); a fine cloth worn by men over their shoulders.

த.வ. நல்லாடை

[H.do-paṭṭah> த. துப்பட்டா]

துப்பாக்கி *tuppākki,* பெ. (n.) 1. குறி நோக்கிச் சுடுங் கருவி; musket, gun. 2. கதிர்த் தலையைக் கத்தரித்து வீழ்த்தும் நெற்பயிர் நோய். (இ.வ.); blight affecting paddy, making its ears fall as if cut off.

த.வ. துமுக்கி

[Turk.tupak> த. துப்பாக்கி]

துபாசி *tubāśi,* பெ. (n.) 1. இடைநின்று மொழி பெயர்த்துச் சொல்லுவோன்; interpreter. 2. ஐரோப்பியரின் வணிகத்தில் (வியாபாரம்) இடைநின்று பேசும் இந்தியத் தரகன்; Indian agent attached to an European mercantile firm, acting as broker.

[U.dobhāshiya> த. துபாசி]

துபாரா *tupārā,* பெ. (n.) இரு முறை (C.G.); twice, double.

[U.dubārsā> த. துபாரா]

தும்சம் *tumšam,* பெ. (n.) அழிவு; destruction.

[Skt.dhvaṃsa> த. தும்சம்]

தும்பாலா *tumbālā,* பெ. (n.) அரசுவரி நீக்கிய ஆணை (உத்தரவு) (R.T.); an order giving up the government share of produce.

[U.dumbāi> த. தும்பாலா]

துமாலா *tumālā,* பெ. (n.) வெள்ளி அல்லது பொன் ஒள்ளிழைக்கரை (சரிகை) இழுக்குந் தொழிலின் கடைசிச் செயல் (வின்.); a final process in lengthening gold or silver threads.

துயோதகம் *tuyōdagam,* பெ. (n.) ஒரு சொல்லின் ஆற்றலால் வெளிப்படத்தோன்றும் பொருளின்றி அதன் இயைபுபட்ட பொருள் சிறப்புக் குறிப்பிற் தோன்றுகை (தொல்.சொல். குறிப்.பக்.240.); (Gram.) hinting at a meaning other than the natural meaning of a word.

[Skt.dyōtaka> த. துயோதகம்]

துர் *tur,* இடை. (part.) தீமைப் பொருளைக் குறிக்கும் ஒரு வடமொழி பெயர் வினை முன்னொட்டு (உபசருக்கம்); Sanskrit prefix signifying evil, bad.

[Skt.dur> த. துர்]

துர்க்கடம் *turkkaḍam,* பெ. (n.) இடர்ப்பாடு; untoward circumstances, troubles. "துர்க்கடத்தில் மாட்டிக்கொண்டேன்". (நாஞ்.)

[Skt.dur-ghaṭa> த. துர்க்கடம்]

துர்க்கதன் *turkkadaṉ,* பெ. (n.) வறியவன்; poor, destitute person. "இரந்து ஜீவிக்கும்படி துர்க்கதராவர்கள்" (ஈடு,4,1,1.)

[Skt.dur-gata> த. துர்க்கதன்]

துர்க்கதி *tur-k-kadi,* பெ. (n.) 1. கெட்ட நிலைமை; evil life, bad conduct. 2. வறுமை; poverty. 3. அளறு (நரகம்); hell.

[Skt.dur-gati> த. துர்க்கதி]

துர்க்கந்தம் *tur-k-kandam,* பெ. (n.) கெட்ட நாற்றம் (தீவிர); bad smell, stink.

[Skt.dur-gan-dha> த. துர்க்கந்தம்]

துர்க்கம் *turkkam,* பெ. (n.) அரண் (உரி.நி.); fortress, hill-fort, stronghold. "பலமான துர்க்கமும்" (அறப்.சத.82).

[Skt.durga> த. துர்க்கம்]

துர்க்கருமம் *tur-k-karumam,* பெ. (n.) தீச்செயல்; evil action.

[Skt.duṣ-karman> த. துர்க்கருமம்]

துர்க்காதேவி *turkkā-dēvi,* பெ. (n.) காளி; Durga. "பேய்மிக்க படையினையுமுடைய துர்க்காதேவி" (பு.வெ.1,20,உரை.)

[Skt.Durgā> த. துர்க்கா+தேவி]

துர்க்காபூசை *turkkā-pūśai,* பெ. (n.) தொள்ளிரா (நவராத்திரி) காலத்து மூன்று நாள் துர்க்காதேவியின் பொருட்டு நடத்தப் பெறும் வழிபாடு (ஆராதனை); worship of *Durgā* for three days during *navarāttiri* festival.

[Skt.Durgā > த. துர்க்கா+பூசை]

துர்க்கிரகம் *turkkiragam,* பெ. (n.) 1. நோயை உண்டாக்கும் பேய்; a demon causing illness. 2. வலிப்பு; spasm. 3. குரக்கை; cramps. *(சா.அக.)*

துர்க்குணம் *tur-k-kuṇam,* பெ. (n.) தீக்குணம்; evil disposition. "துர்க்குணக் கடற்

சோங்கன்ன பாவியேற்கு" (தாயு. பொன்னை.6).

[Skt.dur-guṇa> த. துர்+குணம்]

துர்க்குறி *tur-k-kuṟi,* பெ. (n.) 1. தீபுள்குறி (நிமித்தம்); evil omen; bad sign. 2. கேட்டைக் குறிக்கும் அடையாளம்; unfavourable symptom. 3. சென்றவிடங்களில் தீமை விளைவிக்கக் கூடிய போகூழ் கொண்டவன்; person of such ill - luck as to bring misfortune wherever he goes.

[Skt.dur> த. துர்+குறி]

துர்க்கை[1] *turkkai,* பெ. (n.) 1. சிவன் தேவியும் பாலை நிலத்தெய்வமுமாகிய பெண் தெய்வம் (பிங்.); Durgā, goddess of the desert tract, consort of Siva. "துர்க்கை மரக்காலின் மேனின் றாடினாள்" (சிலப்.6,58,அரும்.) 2. கணை நாள் (பூரநாள்) (திவா.); the 11th nakṣatra.

த.வ. கொற்றவை

[Skt.Durgā> த. துர்க்கை]

துர்க்கை[2] *turkkai,* பெ. (n.) புகழானி (மகமதியர்) கல்லறையிடம் (சமாதி) (வின்.); tomb or shrine of a Muhammadan saint.

[Persn.dargāh+> த. துர்கை]

துர்ச்சனன் *tur-c-caṉaṉ,* பெ. (n.) தீயோன்; wicked person. "துர்ச்சனருக் கங்க முழுதும் விடமே யாம்" (நீதிவெண்.18).

[Skt.dur-jana> த. துர்ச்சனன்]

துர்ச்செய்கை *tur-c-ceygai,* பெ. (n.) தீச்செயல்; evil action.

[Skt.dur> த. துர்+செய்கை]

துர்ச்சொப்பனம் *tur-c-coppaṉam,* பெ. (n.) தீக்கனா; evil ominous dream.

[Skt.dur+svapna> த. துர்ச்சொப்பனம்]

துர்த்தசை *tur-t-taśai,* பெ. (n.) கெட்ட காலம்; evil times.

[Skt.durdaśā> த. துர்+தசை]

துர்த்தமன் *turttamaṉ,* பெ. (n.) கொடுமையன் (தூர்த்தன்) (யாழ்.அக.); a dissolute person.

[Skt.durdama> த. துர்த்தமன்]

துர்த்தானம் *tur-t-tāṉam,* பெ. (n.) பெறுவது கரிசு என்று கருதப்படுங்கொடை. (பகவத் கீதை.மானமி.11.); a gift whose acceptance is sinful.

[Skt.dur+sthāna> த. துர்த்தானம்]

துர்த்தினம் *tur-t-tiṉam,* பெ. (n.) 1. தீயநாள்; inauspicious, unlucky day. "கருதிய விருந்துடனுண்ணாத தனியுணவு, காணு மதுவே துர்த்தினம்" (திருவேங்.சத.39). 2. கதிரவன் பற்றுகையன்றி (சூரிய கிரகணம்) முகில் மூட்டமுள்ள (மேகமூட்டம்) நாள்; dark, cloudy day.

[Skt.dur-dina> த. துர்த்தினம்]

துர்நாற்றம் *turnāṟṟam,* பெ. (n.) பொறுத்துக் கொள்ள முடியாத நாற்றம், வீச்சம்; foul smell, stink. *(க்ரியா)*

[Skt.dur> த. துர்+நாற்றம்]

துர்நிமித்தம் *tur-nimittam,* பெ. (n.) துர்க்குறி பார்க்க; see durkkuṟi.

[Skt.dur+ni-mitta>த. துர்நிமித்தம்]

துர்நீர் *tur-nīr,* பெ. (n.) உடலிலுள்ள கெட்ட நீர்; serous fluid.

[Skt.dur> த. துர்+நீர்]

துர்ப்பலம் *turppalam,* பெ. (n.) 1. வலிவின்மை; weakness, feebleness. 2. தாழ்நிலை (வின்.); reduced circumstances.

[Skt.dur-bala> த. துர்ப்பலம்]

துர்ப்பாக்கியம் *tur-p-pākkiyam,* பெ. (n.) போகூழ் (துரதிர்ட்டம்); misfortune, ill-luck.

த.வ. தீயபேறு

[Skt.dur-bhāgya> த. துர்ப்பாக்கியம்]

துர்ப்புத்தி *turpputti,* பெ. (n.) 1. கெடுமதி; evil mind. 2. தீயகொள்கை; evil doctrine.

"பாதகர் வஞ்சித் துலகிற் பற்பலர்க்கத் துர்ப்புத்தி பயிற்றல் செய்தார்" (பிரபோத.13,20). 3. கெடுமதியுடையவ-ன்-ள்; evil - minded person. துர்ப்போதனை (உவ.) பார்க்க; see durppōdaṉai.

[Skt.dur-buddhi> த. துர்ப்புத்தி]

துர்ப்போதனை *tur-p-pōdaṉai,* பெ. (n.) தீய அறிவுரை (உபதேசம்); bad counsel, evil advice, instigation. "ஒவி றுர்ப்போதனை யெனும் வேல்" (பிரபோத.34.11)

[Skt.dur-bōdhana> த. துர்ப்போதனை]

துர்மணம் *tur-maṇam,* பெ. (n.) கெட்ட நாற்றம்; bad smell.

[Skt.dur> த. துர்+மணம்]

துர்மதி *tur-madi,* பெ. (n.) 1. துர்ப்புத்தி, 2 பார்க்க; see durputti. 2. ஆண்டு (வருடம்) அறுபதனுள் ஐம்பத்தைந்தாவது; the 55th year of the jupiter cycle.

[Skt.dur-mati> த. துர்மதி]

துர்மந்திரி *tur-mandiri,* பெ. (n.) (கெட்ட அமைச்சன்) தீய தூண்டுகை (துர்போதனை) செய்வோன்; one who gives evil counsel, as a bad minister.

[Skt.dur-mantrin> த. துர்மந்திரி]

துர்மரணம் *tur-maraṇam,* பெ. (n.) நோயி னாலன்றித் தற்கொலை முதலிய வற்றால் நேரும் சாவு (மரணம்); unnatural death, as by drowning or hanging oneself, murder, etc. "பழித்த துர்மரண மாவார்" (குமரேச. சத.62).

த.வ. தீய இறப்பு

[Skt.dur-maraṇa> த. துர்மரணம்]

துர்மலம் *turmalam,* பெ. (n.) 1. மும்மலம்; ஆணவம்; மாயை, காமியம்; the three evil passions inherent in man egoism, dilusion and lost. 2. மலம்; faeces. *(சா.அக.)*

துர்லபம் *turlabam,* பெ. (n.) பெறுதற் கருமையானது; rarity, that which is difficult to obtain.

[Skt.dur-labha> த. துர்லபம்]

துர்வர்ணம் *turvarṇam,* பெ. (n.) 1. வெள்ளி; silver. 2. நோய்களின் கெட்ட குறிகளைக் காட்டும் பலவிதமான நிறங்கள்; presetation of different colours in the body by the patient according to the nature of disease which is considered as a bad symptom. *(சா.அக.)*

துர்வாசன் *turvāšaṉ,* பெ. (n.) எளிதிற் சினம் (கோபங்)கொள்பவரென்று பேர் பெற்ற ஒரு முனிவர்; a Ṛṣi known for his irascibility.

[Skt.durvāsa> த. துர்வாசன்]

துர்வாதம் *tur-vādam,* பெ. (n.) நேர்மையற்ற எடுத்துரைப்பு (வாதம்); vain disputation, unreasonable argument.

[Skt.dur+vāda> த. துர்வாதம்]

துர்வாயகம் *turvāyagam,* பெ. (n.) வசவு; abusive language. "பிராமணரைத் துர் வாயகம் பறைகில்" (T.A.S.iii,195).

[Skt.dur-vācaka> த. துர்வாயகம்]

துரகம் *turagam,* பெ. (n.) 1. குதிரை; horse. "துரகவாய் கீண்டதுழாய் முடியாய்" (திவ்.இயற்.3,47) 2. குதிரைபற் பாடாணம் (பாஷாணம்) (யாழ்.அக.); a mineral poison. 3. குதிரைத்தறி; a wooden contrivance for closing a breach in an embankment. "தட்டுவார் துரகங்கொடு தாங்குவார்" (அரிச்.4.நாட்டுச்.30).

[Skt.tura-ga> த. துரகம்]

துரகமேதம் *turagamēdam,* பெ. (n.) பரிவேள்வி (அசுவமேதம்); a vēdicsacrifice. "சுத்தனானது தான் பண்ணுந் துரகமே தத்தாலென்றான்" (உத்தரரா.அசுவ.8).

[Skt.turaga-mēdha> த. துரகமேதம்]

துரங்கவதனன் *turagavadanaṉ,* பெ. (n.) (குதிரை முகத்தோன்) கின்னரன்; a kinnara, celestial musician, as horse - faced.

[Skt. turaṅga-vadana> த. துரங்கவதனன்]

துரங்கவேள்வி *turaṅga-vēḷvi,* பெ. (n.) பரிவேள்வி (அசுவமேதம்); a vēdic sacrifice. "இராசசூயமுந் துரங்கவேள்வியும் பேல்வன அரசர்க்குரிய வேள்வியாம்" (தொல்.பொ.75, உரை, பக்.249).

[Skt. tura-ga> த. துரங்கம்+வேள்வி]

துரதிருட்டம் *turatiruttam,* பெ. (n.) தீயபேறு (துர்ப்பாக்கியம்); ill-luck, misfortune.

[Skt. dur-adṛṣṭa> த. துரதிருட்டம்]

துரந்தரி *turandari,* பெ. (n.) பொறுப்பு கொண்டுள்ளவள் (வகிப்பவள்); woman who assumes a responsibility. "இமயத் துரைராச துரந்தரி தன்றிருமுன்" (சிவரக. நந்திகண.8).

[Skt. dhuran-dhaa> த. துரந்தரி]

துரந்தரிகன் *turandarigaṉ,* பெ. (n.) துரந்தரன்; see turandaran. "சூராதிசூர துரந்தரிகன்" (கொண்டல்விடு..320).

[Skt. dhurandhara> த. துரந்தரிகன்]

துரபிமானம் *tur-abimāṉam,* பெ. (n.) 1. முறையற்ற அன்பு (தகாதவிடத்து வைக்கப் பட்ட பிரியம்); unworthy love. 2. வீண் செருக்கு; vanity, false prides. "நுமது துரபிமானத்தின் பெருமை வியக்கற் பாலது" (சித்.மரபுகண்.21). 3. வெறுப்பு (இ.வ.); hatred.

[Skt. dur-abhimāna> த. துரபிமானம்]

துராக்கிரகம் *tur-ākkiragam,* பெ. (n.) 1. தேவையற்ற பற்று (வீணபிமானம்) (இ.வ.); false pride, vanity. 2. வீண் பகை (Madr.); unreasonable, groundless hatred. 3. அதிக ஆசை (இ.வ.); covetousness.

[Skt. dur-āgraha> த. துராக்கிரகம்]

துராகதம் *turākadam,* பெ. (n.) துராகிருதம் பார்க்க; see turākirudam. "ஆகாவி துராகதம் புரிவார் கன்னியர்கள்" (தனிப்பா; i,366,110).

துராகிருதம் *turākirudam,* பெ. (n.) 1. கெட்ட நடத்தை; misconduct, misdemeanour, misbehavious. 2. வலுக்கட்டாயக் (பலவ ந்தம்) கற்பழிப்பு; ravishing, outrage. "அவளைத் துராகிருதம் பண்ணினான்" 3. துன்புறுத்தல் (நிந்தை); abuse. 4. உரிமை யில்லாவிடத்து வலிய நிகழ்த்துஞ் செயல்; a deed done by force in violation of a right.

[Skt. dur-ā-kṛta> த. துராகிருதம்]

துராசர் *turāšar,* பெ. (n.) கெட்ட ஆசை யுடையவர்; persons having evil desire. "துராசரன்பிலர்" (பாரத.சஞ்சய.9.)

[Skt. dur-āšā> த. துராசர்]

துராசாரம் *turāšāram,* பெ. (n.) 1. தீயொழுக்கம்; depravity, vicious life, evil ways. 2. மதிப்பின்மை (அவமரியாதை) (வின்.) 3. ஒழுக்கக்கேடு (ஆசாரக்கேடு); violation of the rules of religion, of caste or of country.

[Skt. dur-ācāra> த. துராசாரம்]

துராசை *turāšai,* பெ. (n.) பொருந்தாகாமம் (தகாத இச்சை); evil desire, lust, covetousness. "துராசையெனும் பால்பருகி" (ஞானவா. உத்தால,11).

[Skt. dur-āšā> த. துராசை]

துராத்தியம் *turāttiyam,* பெ. (n.) ஏழைமை (யாழ்.அக.); poverty.

[Skt. dur-āḍhya> த. துராத்தியம்]

துராத்துமா *turāttumā,* பெ. (n.) தீயோன்; evil - mined person, scoundrel, villain.

[Skt. dur-ātmā> த. துராத்துமா]

துராதுரை *turāturai*, பெ. (n.) துரைகளுக் கெல்லாம் தலைவன் (அதிபதி); overlord, lord of lords. "துராதுரைக் கிணையுண்டோடி" (கனம் கிருட்டிணயர், கீர்த்.50).

துராய் *turāy*, பெ. (n.) முத்து முதலியவற்றால் அமைக்கப்பட்ட தலையணி வகை; an ornament for the head made of pearls, etc. "சொருக்கழகு முத்துத் துராயழகும்" (விறலிவிடு.)

[U.turā> த. துராய்]

துராரம்பம் *turārambam*, பெ. (n.) தீச்செயல்; evil deed. "துராரம்பங்க டீக்குணங்கள்" (ஞானவா.பசுண்.79).

[Skt.dur-ārambha> த. துராரம்பம்]

துராலோசனை *tur-ālōšanai*, பெ. (n.) தீய சிந்தனை (யோசனை); bad counsel, evil advice.

[Skt.dur-ā-lōcanā> த. துராலோசனை]

துரிதம்[1] *turitam*, பெ. (n.) 1. வேகம்; speed, quickness, expedition. "துரிதமான் நேரிற் போனான்" (கம்பரா.தைல.54). 2 ஆடல் பாடல்களில் தாள விரைவு; a quick movement in singing or dancing. "துரிதமாக்கள் விளம்பித நெறிவழாமைக் கந்தர்ப்ப மகளிராடும்" (கம்பரா.ஊர்தேடு. 106). 3. தாளத்தின் கால மாறுபாட்டில் (பேதம்) 8192 கணங்கொண்டது. (பரத.தாள.27.); (Mus.) one of the ten varieties of kalām, Which consists of 8192 kaṇam. 4. தாளத்தின் உறுப்பு (அங்கம்) வகையுள் இரண்டு அசரகாலங் கொண்டது. (பரத.தாள.35.); (Mus.) a variety of arikam, which consists of two akṣara-kāalam. 5. விரைந்த செலவினதாகிய இலய வகை (பரத.தாள.51.); (Mus.) a variety of ilayai, having a quick pace.

[Skt.druta> த. துரிதம்]

துரிதம்[2] *turitam*, பெ. (n.) 1. கரிசு, அறங்கடை (பாவம்) (சூடா.); vice, wickedness, sin, tarpitude. 2. கலக்கம் (சூடா.); agitation of mind, perturbation, confussion. 3. கேடு (வின்.); destruction, ruin, annihilation.

[Skt.durita> த. துரிதம்]

துரிதம்போடு-தல் *turidam-pōḍu*, செ.குு.வி. (v.i.) 1. காலவிரைவுபட நடித்தல்; to dance with a quick step. 2. தேவையற்ற (தகாத) ஒன்றை அடிக்கடி கேட்டு வற்புறுத்துதல்; (J.); to persist in an improper request.

[Skt.durita> த. துரிதம்+போடு-]

துரிதமடித்தல் *turidamaḍittal*, பெ. (n.) காலவிரைவுபட மத்தளமடித்தல் (வின்.); to beat drums to the quickest movement.

[Skt.druta> த. துரிதம்+அடித்தல்]

துரியச்சந்தி *turiya-c-candi*, பெ. (n.) இரவிற் செய்யும்படி விதிக்கப்பட்டுள்ள ஒழுக்கம் (அனுட்டானம்); (Saiva.) religious rites ordained to be performed after nightfall. "முடித்துநற் றுரியச் சந்தி" (தசகா.குருபூ.5).

துரியசிவன் *turiya-šivaṉ*, பெ. (n.) மும்மூர்த்திகட்கும் கடந்த நிலையான (அதீதம்) சிவபெருமான். (இ.வ.); (Saiva.) Siva, as the supreme lord.

[Skt.turya> த. துரியம்+சிவன்]

துரியத்தானம் *turiya--t-tāṉam*, பெ. (n.) ஆதன் (ஆன்மா) துரிய நிலையில் அடங்கு தற்குரிய உந்திப் பேரிடம் (பிரதேசம்); a mystic region near the navel into which the soul retires in its turiyam stage. "துரியத்தானம் எனப்படும் உந்தியில்" (சி.போ.சிற்.4,3,பக்.99).

[Skt.turya+šthāna> த. துரியத்தானம்]

துரியபாகம் *turiyapāgam*, பெ. (n.) கால்பங்கு; one fourth portion.

துரியாசிரமம் *turiyāśiramam,* பெ. (n.) நாலாவது தவமனை (ஆசிரமம்), துறவுநிலை (சன்னியாசம்); asceticism, as the fourth stage.

[Skt. turya+śrama> த. துரியாசிரமம்]

துரியாதீதத்தானம் *turiyātīta-t-tānam,* பெ. (n.) ஆதன் (ஆன்மா) துரியாதீத முறையில் ஒழுங்குதற்குரிய அடிப்படை (மூலாதாரம்) நிலை அல்லது இடம் (ஸ்தானம்) சி.கோ.சிற்.4,3,பக். 99); the mūlātāram intowhichthesoul retiresinitsturiyātītamstage.

[Skt. turyātīta+sthāna> த. துரியா தீதத்தானம்]

துரியாதீதநிலை *turiyātītanilai,* பெ. (n.) ஆன்மாவின் தூய்மை நிலை; the highest state of purity of the soul. *(சா.அக.)*

துரியாதீதம் *turiyādīdam,* பெ. (n.) 1. அடிப்படையில் (மூலாதாரம்) ஆதன் (ஆன்மா) தங்கி அவிச்சை மாத்திரையை நுகரும் (விசய்கரிக்கும்) ஐந்தாம் ஆதன் (ஆன்மா) நிலை, (சி.போ.பா.4,3,பக்.278,புதுப்.); (Saiva.) the transcendent fifth state of the soul in which it is in the mūlātāram,and is cognizant of aviccai alone. 2. நூற்றெட்டு மறைமங்களுள் (உபநிடதம்)ஒன்று; an upaniṣad, one of 108.

[Skt. turyātīta> த. துரியாதீதம்]

துருக்கன் *turukkaṉ,* பெ. (n.) 1. துருக்கி தேசத்தான்; native of Turkey. "துருக்கர்தர வந்த... வயப்பரிகள்[3] (கம்பரா.வரைக்.13). 2. முகமதியன் (அக.நி); Muhammadan.

[Skt. turuṣka> த. துருக்கன்]

துருக்கி *turukki,* பெ. (n.) 1. ஒரு நாடு; the country of Turkey. 2. துருக்கிதேயத்துக் குதிரை (வின்.); a large Turkish horse.

[Skt. turuṣka> த. துருக்கி]

துருச்செய்-தல் *turu-c-cey-,* செ.குன்றாவி. (v.t.) ஓரந் தைத்தல் (இ.வ.); to overcast in sewing.

[E. through> த. துரு+செய்-,]

துருச்சொல்லு-தல் *turu-c-collu-,* செ.குன்றா.வி. (v.t.) ஒரு வகை முறையில் மறை (வேதம்) ஓதுதல்; to recite a vēdic text in a particular mode. "சூத்திரத்திலும் சூத்திரா ரணத்திலுந் துருச்சொல்லி" (T.A.S.i,8).

துருத்தி *turutti,* பெ. (n.) தீய (துட்டப்) பெண்(சூடா); bad woman.

[Skt. dhūrtā> த. துருத்தி[2]]

துருதம் *turudam,* பெ. (n.) துரிதம்[1] (வின்.); quickness.

[Skt. druta> த. துருதம்]

துருப்பு[1] *turuppu,* பெ. (n.) படை (சேனை); troop, army. "துருப்புக்குஞ் சரியேறி" (தனிப்பா.i, 381,28).

[Skt. troop> த. துருப்பு]

துருப்பு[2] *turuppu,* பெ. (n.) அட்டையாட்டத்துக் குறிப்புத்தாள் (சீட்டுத்துருப்பு) (இக்.வ); trump in card game.

[E. trump> த. துருப்பு[2]]

துருபதன் *turupadaṉ,* பெ. (n.) திரௌபதியின் தந்தையாகிய பாஞ்சாலதேசத்தரசன்; a king of pāñcāla,father of Draupadi. "துங்கவேற் றுருபதன்றான் சூழ்ந்தது சொல்லலுற்றாம்" (பாரத.திரௌபதி மா.1).

[Skt. Drupada> த. துருபதன்]

துருவ மண்டலம் *turuva-maṇḍalam,* பெ. (n.) ஏழு (சப்த) மண்டலங்களுள் ஒன்றாகிய துருவப்பகுதி; region of the pole-star, one of capta-manṭalam.

[Skt. dhruva> த. துருவம்+மண்டலம்]

துருவாசம் *turuvāšam,* பெ. (n.) துணைத் தொன்மம் (உபபுராணம்) பதினெட்டனுள் ஒன்று (பிங்.); a seondary purāṇa,oneof18 upapurāṇam.

[Skt.Durvāsa> த. துருவாசம்]

துருவாட்சரம் *turuvāṭšaram,* பெ. (n.) மேழவோரையிலிருந்து (மேஷம்) கோள்களுக் குள்ள (கிரகம்) தொலைவு (தூர)வளவு (வின்.); the longitudinal distance of the sun or a planet from the first point of aries, at the end of synodic periods.

துருவை *turuvai,* பெ. (n.) 1. இசைப்பாட்டு (கீதம்) உறுப்பு நான்கனுள் ஒன்று. (சிலப்.3,150, உரை.); (Mus.) a particular piece in a musical composition, one of four kīta-v-uṟuppu. 2. மலைமகள் (பார்வதி); Pārvadi. "பிரகிரு கிதுருவையேகை" (கூர்மபு.திருக்.20).

[Skt.dhruvā> த. துருவை]

துரோகம் *turōgam,* பெ. (n.) 1. தீங்கு; harm, evil. 2. பெருங்கேடு (பாதகம்); crime, heinous offence, wrong, sin. 3. இராசத்துரோகம், சுவாமித்துரோகம், குருத்துரோகம், இனத் துரோகம், பிதிர்த்துரோகம் என்ற ஐவகை நன்றியில் செய்கை; perfidy, treason, treachery, ingratitude, of which there are five kinds, viz., irāša-t-turōgam,cuvāmi-t-turōgam,kuru-t-turōgam,iṉa-t-turōgam, pitir-t-turōgam. 4. ஏமாற்றுகை (இ.வ.); cheating, deceiving.

த.வ. இரண்டகம்

[Skt.drōha> த. துரோகம்]

துரோகி *turōgi,* பெ. (n.) 1. நம்பிக்கை இரண்டகம் (துரோகம்) செய்பவன்; betrayer, treacherous person, traitor. 2. கொடும்பாவி (யாழ்.அக.); sinner. 3. ஏமாற்றுவோன் (இ.வ.); cheat. 4. இரக்கமற்றவன் (வின்.); merciless, crruel, hard-hearted person.

த.வ. இரண்டகன்

[Skt.drōhin> த. துரோகி]

துரோணம்[1] *turōṇam,* பெ. (n.) 1. பதக்கு (பிங்.); a measure off capacity = 2 marakkāl. "துரோணந் தேனெய்" (சேதுபு.சங்கர.75). 2. எழுவான் முகிலில் (சத்தமேகம்) மண் செறியும் முகில் (மேகம்) (திவா.); a mythical cloud which rains sand, one of catta-mēgam.3. காக்கை (பிங்.); crow, raven. 4. சரபப்புள் (திவா.); a fabulous eight - legged bird. 5. தும்பை வகை (பிங்.); a kind of white dead nettle. "துன்னிய துரோண வெண் மலரைச் சூட்டுவார்" (செவ்வந்தி,4.இந்திரச். 20). 6. தேக்கு (அக.நி.); teak. 7. கிணற் றருகிலுள்ள நீர்நிலை (வின்.); reservoir near a well. 8. தொன்னை (இ.வ.); cup.

[Skt.drōna> த. துரோணம்]

துரோணம்[2] *turōṇam,* பெ. (n.) 1. வில் (திவா.); bow. 2. வில் ஓரை (தனுராசி.) (சூடா.); sagittarius in the zodiaz.

[Skt.druṇa> த. துரோணம்]

துரோணாசாரியன் *turōṇāšāriyaṉ,* பெ. (n.) குருகுலத்தரசரின் வில்லாசிரியர்; a warrior who taught archery to Pāṇḍavasand Kurus. "துகளறு கேள்வித் துரோண வாசிரியன்" (பாரத.பதினொ.2).

[Skt.Drōṇa> த. துரோணன்]

துரௌபதி *turaubadi,* பெ. (n.) பாண்டவர் மனைவி; Draupadi, wife of the five Pāṇḍava princes.

[Skt.Draupadi> த. துரௌபதி]

துலாகாவரிசுநானம் *tulā-kāvari-šunāṉam,* பெ. (n.) துலை திங்களின் (ஐப்பசி மாதம்) சிறப்பு நாளில் காவிரியிற் செய்யப்படும் நீராட்டம்; bathing in the Kāvēri duringthe monthofAippaci, considered meritorious.

துலாதானம் *tulā-tāṉam,* பெ. (n.) துலா புருடதானம் பார்க்க; see tulāpuruḍatāṉam. "சாற்றருந் துலாதானம்" (சிவரக.தேவர் முறை.19).

[Skt.tulā+sthāna> த. துலாதானம்]

துலாந்திரம் *tulāndiram,* பெ. (n.) நீர் முதலியவற்றை ஏனத்தில் (பாத்திரம்) இட்டு கயிற்றால் அந்த ஏனம் (பாத்திரம்) தீயிற்படும்படி செய்து காய்ச்சும் ஒரு கருவி. (வின்.); a contrivance for boiling things.

[Skt.dōlā+yantra> த. துலாந்திரம்]

துலாப்பாயசம் *tulā-p-pāyašam,* பெ. (n.) கோயில் படையலமுது (நைவேத்தியம்) வகை. (நாஞ்சி); a kind of rice-preparation offered in temples.

[Skt.tulā+pāyasa> த. துலாப்பாயசம்]

துலாபாரம் *tulā-bāram,* பெ. (n.) 1. பார்ப்பானுக்குத் (பிராமணன்) தானம் செய்யும் பொருட்டு அரசன் போன்றோர் ஒரு தட்டில் பொன்னும் ஒரு தட்டிற் றாழுமாக இருந்து பொன்னிறுக்குஞ் சடங்கு; ceremony of weighing a great person like a king against gold, which is then offered as a gift to Brahmins. "துலாபுருடமண்டபங் கட்டித் துலாபாரந் தூக்கி" (கோயிலொ.12). (I.M.P.Tj.412). 2. துலா புருடதானம் பார்க்க; see tulapurudatāṉam. அவன் துலாபாரம் வாங்கினான்.

[Skt.tulā+bhāra> த. துலாபாரம்]

துலாபாரவரி *tulābāravari,* பெ. (n.) வரிவகை (S.I.I.vii,403); a tax.

[Skt.tulābhara> த.துலாபாரம்+வரி]

துலாபுருடதானம் *tulā-puruḍa-tāṉam,* பெ. (n.) ஒருவன் தனது நிறையுள்ள பொன்னைப் பார்ப்பானுக்குக் கொடுக்கும் கொடை (கோயிலொ.); ceremonial gift of Brahmins of gold equal to a person's weight.

[Skt.tula+puruṣa> த. துலாபுருடன்+தானம்]

துலாபுருடம் *tullā-puruḍam,* பெ. (n.) துலாபுருடதானம் பார்க்க; see tulā puruḍatāṉam. "மூதறிவுடைய நீரார் மொழி துலாபுருடமென்பார்" (கூர்மபு.தான.19).

[Skt.tulā+puruṣa> த. துலாபுருடம்]

துலாபுருடமண்டபம் *tulā-puruḍa-maṇ-ḍabam,* பெ. (n.) துலைபாரம் ஏறும் மண்டபம்; a hall where tulābāram,isconducted.

[Skt.tulā+puruṣa> த. துலாபுருடன்+மண்டபம்]

துலாவிசுவம் *tulā-višuvam,* பெ. (n.) துலாம் ஓரையில் (ராசி) கதிரவன் புகுங்காலம்; autumnal equinoctial point whence the apparent course of the sun turns from north to south; the first point of libra.

[Skt.tulā+viṣuva> த. துலாவிசுவம்]

துலுக்கச்செவ்வந்தி *tulukka-c-cevvandi,* பெ. (n.) செடி வகை (வின்.); African marigold.

[Skt.turuṣka> த. துலுக்கம்+செவ்வந்தி]

துலுக்கன் *tulukkaṉ,* பெ. (n.) துருக்கி நாட்டினன்; Mussalman, Turk. "டில்லீ சுவரனான துலுக்கன்" (கோயிலொ.21).

[Skt.turuṣka> த. துலுக்கன்]

துலுக்காணம் *tulukkāṇam,* பெ. (n.) 1. துருக்கித்(ஸ்)தானம் என்ற நாடு; Turkestan, as the original home of the Turks. "மக்க மராடந் துலுக்காண மெச்சி" (குற்றா.குற.60;1); 2. துருக்க அரசாண்மை (ராஜ்யம்) (வின்.); Muhammadan dominion. 3. கட்டரங்கு (சதுரங்கம்) விளையாட்டு வகை (வின்.); a game of chess. 4. துருக்கத் தொடர்பானது (வின்.); anything Turkish.

[Skt.turuṣka> த. துலுக்காணம்]

துலுக்காணியம் *tulukkāṇiyam,* பெ. (n.) துலுக்காவணம் பார்க்க; see tulukkāvaṇam. "இப்படித் துலுக்காணியமாக இருக்கும் நாளையில்" (மதுரைத்தல.பக்.2).

துலுக்காவணம் *tulukkā-v-aṇam,* பெ. (n.) துருக்க அரசாட்சி; Muhammadan rule. "துலுக்காவணத்திலே அக்கினி பாதையால் சேதமாகையாலே" (கோயிலொ.138).

துவக்கு *tuvakku,* பெ. (n.) துமுக்கி (துப்பாக்கி) *(யாழ்ப்.)*; gun, firelock, musket.

[Turk. tupāk> த. துவக்கு]

துவசங்கட்டு–தல் *tuvašaṅ-kaṭṭu-,* செ.கு.வி. (v.i.) 1. வெற்றி முதலியன குறிப்பதற்குக் கொடியேற்றுதல்; to hoist a flag, erect a banner, as a challenge or as a sign of victory. 2. முயன்று நிற்றல்; to set about a thing with the utmost zeal and energy, especially in a bad cause. 3. எதிராளியாய் நிற்றல் (உ.வ.); to be defiant.

[Skt. dhvja> த. துவசம்+கட்டு-,]

துவசத்தம்பம் *tuvaša-t-tambam,* பெ. (n.) கோயிற் கொடிக்கம்பம்; flag - staff in a temple, pillar or columnerected before a temple having a vertical wooden frame at the top to represent a flag.

[Skt. dhvaja+tamba> த. துவசத்தம்பம்]

துவசம் *tuvašam,* பெ. (n.) 1. கொடி (பிங்.); banner, flag. "துவசமார் தொல்லமருள்" (கம்பரா.சரபங்கர்.26.) 2. அடையாளம்; sign. 3. ஆண்குறி; virile membrum. 4. மரவுரி (இலக்.அக.); bark, used, as dress. 5. கள்ளுக்கடை முதலியவற்றில் அவ்வவ் வாணிபம் (வியாபாரம்) குறிக்க சமைக்கும் குறி; the sign of any trade, especially of a tavern.

[Skt. dhvaja> த. துவசம்]

துவசாரோகணம் *tuvašārōgaṇam,* பெ. (n.) 1. கோயில் திருவிழாத் தொடக்கத்தில் நிகழும் கொடியேற்றம். 2. தொடக்கம் (ஆரம்பம்) (உ.வ.); beginning.

[Skt. dhvaja+ārōhaṇa> த. துவசாரோகணம்]

துவசாவரோகணம் *tuvašāvaṟoganam,* பெ. (n.) கோயில் திருவிழா இறுதியில் நிகழும் கொடியிறக்கம்; ceremonial lowering of flag in a temple at the commencement of the annual festival.

[Skt. dhvaja+avarōhaṇa> த. துவசாவரோகணம்]

துவட்டா *tuvaṭṭā,* பெ. (n.) தெய்வத்தச் சனாகிய விசுவகருமன்; Višvakarmā, the architect of the gods. "துவட்டா வீன்ற தனயன்" (திருவிளை.இந்திரன்–பழி.8).

[Skt. Tvaṣṭā> த. துவட்டா]

துவந்தன் *tuvandaṉ,* பெ. (n.) துவந்துவ துக்கத்திற்கு இடமாயிருப்பவன்; person subject to tuvantuva - tukkam. "ஐயா துவந்தனை நாயேனை" (அஷ்டப். திருவேங்கடத்தந்.14).

[Skt. dvandva> த. துவந்தன்]

துவந்தனை *tuvandaṉai,* பெ. (n.) 1. பந்தம்; bondage. "துவந்தனைப் பிறப்பையு பிறப்பையும்" (பாரத. கிருட்.77). 2. தடை; hindrance "எத்துவந்தனைகளு நீக்கி" (அருட்பா, vi,சற்குருமணி 8). 3. வேதனை (வின்.); *vexation.*

[Skt. dvandva> த. துவந்தனை]

துவந்தி–த்தல் *tuvandi-,* 4 செ.குன்றா.வி. (v.t.) தொடர்புறுதல்; to get bound up or attached "அவிரோதமாக ஒன்றை யொன்று துவந்தித்துத் தோன்றுமென்று சொன்னது" (சி.சி.2,65,சிவாக்.).

[Skt. dvandva> த. துவந்தி-]

துவந்துவசமாசம் *tuvanduva-šamāšam,* பெ. (n.) உம்மைத்தொகை (வீரசோ.தொகை. 2,உரை); a copulative compound.

[Skt. dvandva+samāsa> த. துவந்துவசமாசம்]

துவந்துவதுக்கம் *tuvanduvadukkam,* பெ. (n.) நலதுன்பம் (சுகதுக்கம்) பருவகால மாறுதல் (சீதோஷ்ணம்) என்பன போன்று தம்முன் மாறுபட்ட இரு வகை நிலைகளாலுண்டாகும் துன்பம்; distress from pairs of opposite

conditions or qualities, such as cukatukkam, *cītōṣṇam*.

[Skt.dvandva+duhkha> த. துவந்துவம்+ துக்கம்]

துவந்துவம் *tuvanduvam,* பெ. (n.) 1. இரட்டை; two, pair, couple, as male and female, brace. 2. தம்முன் மாறுபட்ட இரு வகை நிலை; pair of opposites, as cold and heat, profit and loss, joy and sorrow. "துவந்துவங்க டுய்மை செய்து" (திருவாச. 40,3). 3. துவந்துவ சமாசம் (வீரசோ. தொகை.2) பார்க்க: *see tuvanduva šamāšam.* 4. நோய்களின் பிணைப்பு; complication, as of disease. "வியாதி துவந்துவப் பட்டுக் காண்கிறது". 5. சண்டை; fight, duel.; அவனுக்கும் இவனுக்கும் துவந்துவம்". 6. ஐயம் (சந்தேகம்); doubt. "காரிய முடிவு துவந்துவமாயி ருக்கிறது" 7. தொடர்பு; union, connection. "அவனுக்கு அவளோடு துவந்துவமுண்டு. 8. பழவினைத் தொடர்பு. (இ.வ.); karma.

[Skt.dvandva> த. துவந்துவம்]

துவம்[1] *tuvam,* பெ. (n.) அசையாநிலை; fixedness, immutability, stability, permanence. "துவமிகு முனிவரோடு" (பாரத.பதினெட்டாம்.126).

[Skt.dhruva> த. துவம்[1]]

துவம்[2] *tuvam,* பெ. (n.) இரண்டு (தைலவதைல.); two.

[Skt.dvi> த. துவம்[2]]

துவம்[3] *tuvam,* பெ. (n.) பண்புணர்த்தும் ஒரு வடமொழி ஈறு (விகுதி); a Sanskrit suffix in abstract nouns. "சந்தத்துவம்போ லெனச்சாற் றிடுதல்" (மணி.29,273).

[Skt.tva> த. துவம்[3]]

துவம்சம் *tuvamšam,* பெ. (n.) (அ.வ.) அழிவு, நாசம்; destruction (utter) ruin. "மாடு வயலில் புகுந்து பயிர்களைத் துவம்சம் செய்தது / விமானங்கள் குண்டு வீசி நகரம் இருந்ததே தெரியாதபடி துவம்சம் செய்து விட்டன". *(க்ரியா)*

துவயம் *tuvayam,* பெ. (n.) 1. இரண்டு; two. "மாதத்துவயம்" 2. இரண்டு சொற்றொடரிய (வாக்கிய)மாய் திருமாலைப் பற்றி அமைந்த மந்திர சிறப்பு (விசேடம்); (Vaiṣṇ) a mantra of two sentences.

[Skt.dvaya> த. துவயம்]

துவரிதம் *tuvaritam,* பெ. (n.) விரைவு (உ.வ.); rapidity, quickness.

[Skt.tvarita> த. துவரிதம்]

துவரிதன் *tuvaritan,* பெ. (n.) விரைந்து தொழிலியற்றுவோன்; quick, active person. "துவரிதனுடைய பராஸக்தியில்" (திவ். திருவாய்.6,1,பன்னீ.ப்ர.).

[Skt.tvarita> த. துவரிதன்]

துவா *tuvā,* பெ. (n.) தொழுகை (இ.வ.); Prayer.

[Ar.duā> த. துவா]

துவாசந்தி *tuvāšandi,* பெ. (n.) ஒரு வகை அராகம்; (Mus.) a kind of tune.

[Skt.dhruvāsandhi> த. துவாசந்தி]

துவாட்சரி *tuvāṭcari,* பெ. (n.) இரண்டு இனவெழுத்துக்களால் (வர்க்கம்) இயன்ற செய்யுள் வகை (யாழ்.அக.); a stanza formed only of two series of vowel-consonants.

[Skt.dvyakṣarī> த. துவாட்சரி]

துவாட்டரம் *tuvāṭṭaram,* பெ. (n.) 1. ஒன்றுக்கும் உதவாதவ-ன்-ள்; useless, good - for - nothing person. 2. அருவருக் கத்தக்க பொருள்; ugly disgusting thing.

துவாட்டிரம் *tuvāṭṭiram,* பெ. (n.) இரவு 15 முழுத்தத்துள் (முகூர்த்தம்) பதினான்காவது (விதான.குணாகுண.73,உரை); the 14th of 15 divisions of night.

[Skt.tvvāṣṭra> த. துவாட்டிரம்]

துவாதசாந்தம் *tuvādašāndam,* பெ. (n.) 1. உச்சிக்கு மேல் பன்னிரண்டு விரலகலம் (அங்குலம்) உள்ளதாகக் கருதப்படும் ஓகவிடம் (யோகஸ்தானம்.); (Yōga) a mystic centre which is believed to be 12 in above the

crown. "துவாதசாந்தப் பெருவெளி" (குமர. பிடி.மீனாட்.பிள்ளை.42.) 2. ஒகத்தில் (யோகம்) பன்னிரண்டாமவத்தை (வின்.); (yōga.)the 12th and last stage of experience of the soul in yōga practice.

[Skt.dvāda-šānta> த. துவாதசாந்தம்]

துவாதசி *tuvādaší,* பெ. (n.) பன்னிரண்டாம் நாள் (திதி.); the 12th day of the lunar fortnight. "மான்மகிழுந் துவாதசியில்" (சேதுபு.துராசா. 33).

[Skt.dvādaší> த. துவாதசி]

துவாபரயுகம் *tuvāparayugam,* பெ. (n.) 8,64,000 ஆண்டுகள் (வருடம்) கொண்ட மூன்றாம் ஊழி (யுகம்.); the third of the four yugas, consisting of 8,64,000 years.

[Skt.dvāpara+yuga> த. துவாபரம்+யுகம்]

துவாய் *tuvāy,* பெ. (n.) (இலங்.) (துடைக்கும்) துண்டு, துணித்துண்டு (துவாலை); towel. "துவாயால் முகத்தைத் துடைத்துக் கொண்டான்". *(க்ரியா)*

[E.towal> த. துவாய்]

துவாரகாபுரி *tuvārakāpuri,* பெ. (n.) துவாரகை பார்க்க; see tuvāragai.

(துவாரகை+புரி)

துவாரகை *tuvāragai,* பெ. (n.) 1. குசராத்தில் இருங்கோவேள் பாண்டிய மரபினரால் 49 தலைமுறைகளாக ஆளப்பட்டதும் கி.மு.ஏழாம் நூற்றாண்டு வரை தமிழர் வாழிடமாக இருந்ததுமாகிய செம்புருக்கி வார்த்த கோட்டை சூழ்ந்த துவரை மாநகர்; Tuwarai capital of Irunkōvē! Pandyas before 700 B.C. in Gujarat. 2. ஆரியர் வரவுக்குப் பின் சத்தபுரியு ளொன்றாயதும் கடலாற் கொள்ளப் பட்டதென்று கருதப்படுவதும் கண்ண பெருமான் (பிரான்) அரசு புரிந்ததாகக் கருதப்படுவதுமான நகரம்; the capital of Krṣṇa onthe western side of Gujarat, supposed to have been submerged by the sea, one of catta-puri, q.v.

[Skt.dvārakā> த. துவாரகை]

துவாரசமுத்திரம் *tuvārašamugttiram,* பெ. (n.) தற்காலம் அளெபீடு என வழங்கும் வல்லாளவரசர் தலைநகர் (Insc.); Dōrasamudra, capital of the Hoysala Ballālās, founded in the 12th century, modernHalebidinMysore.

துவாரசாகை *tuvārašāgai,* பெ. (n.) மடக்குக் கதவு (யாழ்.அக.); folding door.

[Skt.dvāra+šākhā> த. துவாரசாகை]

துவாரபாலகர் *tuvāra-bālagar,* பெ. (n.) 1. வாயில் காப்போர்; door keepers, warderns. 2. கோயிலின் வாயில் காவற் றெய்வங்கள்; deitiess guarding the inner shrine of a Hindu temple. "துவாரபாலகர் எழுவராவார்" (சைவச.பொது.498,உரை).

துவாரபாலர் *tuvāra-bālar* பெ. (n.) துவாரபாலகர் பார்க்க; see tuvārabālagar. "தண்டலி றுவாரபாலர் சயனொரு விசயனென் பார்க்கு" (மச்சபு.உத்த.1,10).

துவாரபிண்டி *tuvāra-piṇḍi* பெ. (n.) வாசற்படி (யாழ்.அக.); door - step.

துவாரம் *tuvāram* பெ. (n.) 1. துளை (திவா.); hole, opening, slit, perforation. 2. மனை வாயில் (பிங்.); gateway, main entrance. 3. வழி; passage, avenue, outlet. 4. மூலம்; instrumentality, means.

[Skt.dvāra> த. துவாரம்]

துவாரமண்டபம் *tuvāramaṇḍabam,* பெ. (n.) கோயிலின் உள்மண்டபம் (M.M.); inner porch of a temple.

(துவாரம்+மண்டபம்)

[Skt. dvāra> த. துவாரம்]

துவாரா *tuvārā*, வி.எ. (adv.) மூலமாய்; through, by means of. "ஞானேந்திரியத் துவாரா வஸ்துக்களை யறிவது" (சி.சி.1, அளவை.சிவாக்.).

[Skt. dvāra> த. துவாரா]

துவாரை *tuvārai*, பெ. (n.) துவாரகை பார்க்க; see tuvāragai. "ஆயனும் புறகிட வவன்றுவாரையும்" (சிவதரு.செனன.55).

[Skt. dvārakā> த. துவாரை]

துவிகு *tuviku*, பெ. (n.) எண் தொடர்ந்தியன்ற பண்புத்தொகை (பி.வி.20.); a kind of panbuttogai in which the first member is a numeral.

[Skt. dvigu> த. துவிகு]

துவிச்சக்கரவண்டி *tuvi-c-cakkara-vandi*, பெ. (n.) மிதிவண்டி, ஈருருளி; bicycle.

[Skt. dvi> த. துவி+சக்கரவண்டி]



துவிதம்¹ *tuvidam*, பெ. (n.) இருமை; doubleness, quality. "துவிதமோ சிற்றறிவது" (தாயு.மௌனகுரு.10).

[Skt. dvitā> த. துவிதம்]

துவிதம்² *tuvidam*, பெ. (n.) துவைதம் பார்க்க; see tuvaidam.

[Skt. dvaita> த. துவிதம்²]

துவிதா *tuvita*, வி.எ. (adv.) இரு வகையாக; in two ways. "துவிதா சத்திருபாதத்தாற் கழிப்பன் மலம்" (சி.சி.8,2).

[Skt. dvēdhā> த. துவிதா]

துவிதியை *tuvitiyai* பெ. (n.) 1. இரண்டாந்திதி (பெரியவரு.); the second day of a bright or dark fortnight. 2. இரண்டாம் வேற்றுமை; (Gram.) second case. 3. கோஆமணகம் (ரோசனை) (தைலவ.தைல.); bezoar.

[Skt. dvitīyā> த. துவிதியை]

துவிபதை *tuvi-padai*, பெ. (n.) இசைப்பலகை; a kind of musical composition. "கட்கா துவிபதை திரிபதை தண்டகம் முதலியன" (கோபாலகிருஷ்ணபாரதி.86).

[Skt. dvi-pada> த. துவிபதை]

துவிபாசிகன் *tuvipāšigan*, பெ. (n.) 1. இடை நின்று மொழி பெயர்த்துச் சொல்லுவோன்; interpreter. 2. ஐரோப்பியரின் வாணிகத்தில் (வியாபாரம்) இடை நின்றுதவும் இந்தியத் தரகன்; Indian agent attached to a European mercantile firm, acting as broker.

[Skt. dvi-bhāṣika> த. துவிபாசிகன்]

துவிவேசரை *tuvivēšarai*, பெ. (n.) இரண்டு கோவேறு கழுதைகளால் இழுக்கப்படும் வண்டி வகை (யாழ்.அக.); a kind of carriage drawn by two mules.

[Skt. dvi-vēšara> த. துவிவேசரை]

துவேசம் *tuvēšam*, பெ. (n.) 1. பகை; hatred, enmity. 2. வெறுப்பு; aversion, dislike.

[Skt. dvēṣa> த. துவேசம்]

துவேசி¹-த்தல் *tuvēši-*, 11.செ.குன்றா.வி. (v.t.) 1. பகைத்தல்; to hate. 2. வெறுத்தல்; to dislike, to be averse to.

[Skt. dvēṣa> த. துவேசி-]

துவேசி² *tuvēśi*, பெ. (n.) 1. பகைவன்; enemy. 2. வெறுப்பவன்; one who abhors.

[Skt.dvēṣin> த. துவேசி²]

துவைதம்¹ *tuvaidam*, பெ. (n.) மத்துவா சாரியரால் பரப்புரை(பிரச்சாரம்) செய்யப் பெற்றதும் சிற்றுயிரும் (சீவான்மா) பரமான் மாவும் வேறு வேறெனக் கொள்ளப்படுவது மாகிய சமயம்; dualism, the doctrine that the supreme soul is essentially different from the human soul and from the material world, expounded by Madhvācārya, opp. to attuvaidam.

[Skt.dvaita> த. துவைதம்¹]

துவைதம்² *tuvaidam*, பெ. (n.) துவை தீபாவம், 2 பார்க்க; see tuvaitīpāvam,2. "தடத்திரு மன்னவர் தம்மின் மாறு கொண் டிடப்பொது விருத்தலே துவைதமென்பரால்" (இரகு. திக்குவி.22).

[Skt.dvidhā> த. துவைதம்²]

துவைதி *tuvaidi*, பெ. (n.) இருமைக் (துவைதம்) கொள்கையைப் பின்பற்றுபவன்; follower of the doctrine of śrī Madhvācārya.

[Skt.dvaiti> த. துவைதி]

துவைதீபாவம் *tuvaitīpāvam*, பெ. (n.) 1. தனக்கு மேம்பட்ட பகைவரின் படைகளைப் பலவிடங்களிலிருந்து தாக்குமாறு தன் படைகளை (சேனை) கூட்டங்கூட்டமாகப் பிரித்துவைக்கை. (சுக்கிர நீதி, 334); dividing one's army into small groups for encountering a superior enemy at different points. 2. பகைவரிருவரைத் தம்முட் பொருமாறு செய்து இருவருக்கும் நட்பாக நடித்துத்தான் பொதுப்பட விருக்கை; keeping apparently friendly relationship with two of one's enemies who are with two of one's enemies who are fighting with each other.

[Skt.dvai-bhībhāva> த. துவைதீபாவம்]

துன்மதி *tuṉ-madi*, பெ. (n.) 1. மூடம்; folly. "கண்டுகொள்ளார் தொண்டர் துன்மதியால்" (தேவா.414,6). 2. கெடுமதி; ill-nature, wickedness. 3. தீயோன்; wicked person. "சுடுதியைத் துகிலிடைப் பொதிந்த துன்மதி" (கம்பரா.விபீடண.47). 4. வடமொழியாளர் ஆண்டு (வருடம்) அறுபதனுள் ஐம்பத்தைந் தாவது; the 55th year of the jupiter cycle.

[Skt.dur+mati> த. துன்மதி]

துன்மரணம் *tuṉ-maraṇam*, பெ. (n.) நோயினாலன்றித் தற்கொலை முதலிய வற்றால் நேரும் சாவு (மரணம்); unnatural death. "துன்மரணம் புக்கிறந்தோர்" (குற்றா. நல.வடவருவி.46).

[Skt.dur+maraṇa> த. துன்மரணம்]

துன்மார்க்கம் *tuṉ-mārkkam*, பெ. (n.) தீநெறி; evil life, vicious course of conduct, vice, immorality. "வாய் வாதமிட்டுலறி வருந்து கின்ற துன்மார்க்கத்தை" (அருட்பா, அவலத்தழுங்கல்,2).

த.வ. தீவழி

[Skt.dur+mārga> த. துன்மார்க்கம்]

துன்மார்க்கன் *tuṉ-mārkkaṉ*, பெ. (n.) தீநெறியோன்; vicious man. "சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்கனேனையும்" (தாயு. சின்மயா.26).

[Skt.dur+mārga> த. துன்மார்க்கன்]

துன்முகன் *tuṉmugaṉ*, பெ. (n.) 1. குதிரை; horse. 2. சிங்கம்; lion.

[Skt.dur-mukha> த. துன்முகன்]

துன்முகி *tuṉmugi*, பெ. (n.) 1. தீய முகத் தோற்றமுள்ளவன்; wicked - looking person. 2. வடமொழியாளர் ஆண்டு (வருடம்) அறுபதனுள் முப்பதாவது; the 30th year of the jupiter cycle.

[Skt.dur+mukhin> த. துன்முகி]

துன்னிமித்தம் *tunnimittam*, பெ. (n.) தீக்குறி (அபசகுனம்); ill omen. "துன்னிமித்தங்க ளெங்கணும் வரத் தொடர்வ" (கம்பரா.யுத்த .மந்திரப்.95).

[Skt.dur+ni-mitta> த. துன்னிமித்தம்]

துன்னீதி *tunnidi*, பெ. (n.) துன்னெறி (யாழ்.அக.) பார்க்க; see tunneri.

[Skt.dur+niti> த. துன்னீதி]

தூசணம்[1] *tūšaṇam*, பெ. (n.) 1. இகழ்ச்சி (நிந்தை); abuse, calumny, contumely, insult. 2. வசைச் சொல் (நிந்தைச்சொல்); abusive language. 3. அவையல்கிளவி (அசப்பியம்) சொல். (வின்.); obscenity, ribaldry, vulgarity. 4. தெய்வத்தை இகழுதல் (தேவதூஷணம்) (chr.); blasphemy. 5. கண்டனம்; criticism, blame.

[Skt.dūṣaṇa> த. தூசணம்]

தூசணம்[2] *tūšaṇan*, பெ. (n.) இராவணன் தம்பி முறையான அரக்கன்; a Rākṣasa, a cousin of Rāvaṇa.

[Skt.Dūṣaṇa> த. தூசணன்]

தூசணன்[3] *tūšaṇan*, பெ. (n.) பிறரைப் பழிப்போன் (நிந்தித்தல்); reviler, one who abuses another. "தூசணன் சண்டாளன்" (நீதிசாரம்,98).

[Skt.dūṣaṇa> த. தூசணன்]

தூசனம் *tūšaṇam*, பெ. (n.) வசைச் (நிந்தை) சொல்; abusive language. "தூசனஞ் சொல்லுந் தொழுத்தைமாரும்" (திவ். பெரியாழ்.2,9,8.)

[Skt.dūṣaṇa> த. தூசனம்]

தூசி-த்தல் *tūši-*, 4 செ.குன்றாவி. (v.t.) 1. பழித்தல்; to revile, calumniate, slander. 2. இறைவனைப் பழித்தல் (கிறித்து); to blaspheme, vilify sacred things.

[Skt.dūṣ> த. தூசி-த்தல்]

தூசியாதி *tūšiyādi*, பெ. (n.) கந்தகம் கலந்த ஒரு வகை நஞ்சு (அஞ்சனபாஷாணம்.); a poisonous compound of sulphate of antimony. *(சா.அ.)*

தூடணம் *tūḍaṇam*, பெ. (n.) வழு, குற்றம்; defect, fault. "அவ்வியாத்தி அதிவியாத்தி அசம்பவம் என்னும் தூடணங்களும்" (இலக்.வி.897,உரை).

[Skt.dūṣaṇa> த. தூடணம்]

தூடணன் *tūḍaṇan*, பெ. (n.) இராவணன் தம்பி முறையான அரக்கன்; a Rākṣasa. "தூடணன் நிரிசிராத் தோன்ற லாதியர்" (கம்பரா.கரன்.51).]

[Skt.dūṣaṇa> த. தூடணன்]

தூடிதம் *tūḍidam*, பெ. (n.) கெடுக்கப்பட்டது; that which is spoiled or made dirty. "மலத்தாற் றூடிதமென் மூத்திரத்துவம்" (சிவதரு.பரிகார.6).

[Skt.dūṣita> த. தூடிதம்]

தூபக்கால் *dūba-k-kāl*, பெ. (n.) நறும்புகைக் காட்டுங் (தூபம்) கருவி; censer - stand. "பெருந்தகைய தூபக்கா றீபக்கால்" (திருவிளை.மூர்த்திவி.28).

[Skt.dhūpa> த. தூபம்+கால்]

தூபங்காட்டு-தல் *dūbaṅkāṭṭu-*, செ.கு.வி. (v.i.) 1. கடவுள் முதலியோர்க்கு நறும்புகை காட்டுதல்; to offer incense, as before an idol. 2. படையலமுது (நிவேதனம்) செய்தல் (இ.வ.); to make an offering.

[Skt.dhūpa> த. தூபம்+காட்டு]

தூபம் *dūbam*, பெ. (n.) 1. நறும்புகை; incense, fragrant smoke, aromatic vapour. "சலம்பூவொடு தூபமறந்தறியேன்" (தேவா. 946,6). 2. புகை; smoke, fume. "தூபமுற்றிய காரிருள்" (கம்பரா.கைகேசி சூழ்.61). 3. நெருப்பு; fire. "அழலுந் தூபமின்றி"

(இரகு.திக்குவி.139). 4. நிமிர்ந்த நடுவிரலும் சுட்டுவிரலும் பாதிப்பட வளைய நிற்கும் இணையாவினைக்கை வகை. (சிலப்.3,18, உரை.); (Nātya) a gesture with one hand in which the fore finger and the middle finger are united and half bent. 5. கடம்பு[2] (பிங்.); common cadamba. 6. வெள்ளைக் குந்துருக்கம் (L); piny varnish. 7. நீண்ட மர வகை (L); white piny varnish, vatica roxburghiana. 8. கருங்குங்குலியம்; black.

[Skt. dhūpa> த. தூபம்]

தூபம் போடு-தல் *tūbam-pōḍu-*, செ.கு.வி. (v.i.) சினப் பரப்பரப்பு (ஆவேசம்) வருவதற்கு நறும்புகை (தூபம்) விடுதல் (உ.வ.); to burn incense invoking a spirit to possess a person or reveal itss presence in him. 2. முகமன் (இச்சகம்) பேசுதல்; to talk in flattering terms. 3. தூண்டிவிடுதல் (உ.வ.); to incite, stirup.

[Skt. dhūpa> த. தூபம்+போடு-,]

தூபயோகம் *tūba-yōgam*, பெ. (n.) செவ்வாயின் மீத்தலைவனுக்கும் (மிசாதிபதி), திங்கள் பிறப்போரையின் தலைவனுக்கும் (சநதிரலக்கினாதிபதி) ஐந்து ஒன்பதிற் வெள்ளிக்கோளிருக்கப் (சுக்கிரன்) பத்தா மிடத்தில் காரிக்கோள் (சனி) உச்சமா யிருந்தலால் உண்டாம் நல்ஓகம் (சுபயோகம்) (சங்.அக.சோதிடக்கடல்); (Astrol.) an ausicious yōga, in which the house occupied by venus is the fifth house from that occupied by the lord of Mars' Navāṃśa,and ninth from that occupied by the Moon in the Rāśi diagram with saturn in exaltation in the tenth house from the ascendant. 2. ஓரையின் அதிபதி (இலக் கினாதிபதி) நின்ற அங்கிசத்தின் தலைவன் (அதிபதி) ஐந்தா மிடத்திலிருக்க அதனை வெள்ளிக்கோள் (சுக்கிரன்.) பார்க்கில் வரும் ஓகம் (யோகம்); (Astrol.) an auspicious Yōga inwhichthelordofthe Navāṃśa occupied by the lord of the ascendant stands in the fifth house from the ascendant, with venus aspecting it.

தூபவருக்கம் *tūbavarukkam*, பெ. (n.) நறும் புகையுண்டாக்குதற்கு உரிய பண்டத்தொகுதி (வின்.); articles of incense.

[Skt. dhūpa+varga> த. தூபவருக்கம்]

தூபாரத்தி *tūbāratti*, பெ. (n.) 1. நறும்புகை (தூபம்) காட்டுகை; offering of incense. 2. தூபக்கால் பார்க்க; see dūbakkāl.

[Skt. dhūpa+arātrikā> த. தூபாரத்தி]

தூபி *tūbi*, பெ. (n.) 1. கோபுரத்தின் உயரம் (விமான சிகரம்.); Pinnacle, as of a tower, temple, palace, etc., finial. 2. கோபுரம்,; tower. "தூல லிங்கமாந் தூபி" (சைவச. பொது.127). 3. மலைமுகடு (மலைச்சிகரம்); mountain peak. "தூபிச் செம்பொன் வியன் மணி-கஞுலும் வேரம்" (கந்தபு.நகரழி.5.) 4. உச்சி (யாழ்.அக.); top, roof, as of a house.

[Skt. stūpa > த. தூபி]

தூபிகை *tūbigai*, பெ. (n.) தூபி பார்க்க; see dūbi. "தூபிகைச் சூளிகை பலபல தொட்டு வீசினான்". (கந்தபு.நகரழி.22).

[Skt. stūpikā> த. தூபிகை]

தூம்பிரரோகம் *tūmbira-rōgam*, பெ. (n.) கண்களிற் புகைகம்மியதுபோலச் செய்யும் நோய் வகை. (சீவரட்.257); an eye-disease.

[Skt. dhūmra+roga> த. தூம்பிரரோகம்]

தூமம் *tūmam*, பெ. (n.) 1. புகை; smoke. "தூமவே லரக்கர்" (கம்பரா.வேள்வி.49). 2. நறும் புகை மணம்; perfume. "தூமங்கமழ் பூந்துகில்" (சீவக.1070). 3. நறும்புகை (தூபம்) கலசம்; censer. "பொங்கு தூமக் கொழு மென் புகை" (சீவக.2592). 4. தூமபுடம் பார்க்க; see dūmapuḍam. "வெங்கதிர்மே னான்கிராசி பன்மூன்று விளங்குபாகந் தங்கிடத் தூமம்"

(விதான.குணாகுண.54). 5. மட்கலஞ்சுடுஞ் சூளை (யாழ்.அக.); potter's kiln. 6. தூமகேது பார்க்க; see tūmakēdu. "தூமந் தோன்றினும்" (புறநா.117). 7. இறந்தவர்கள் வாழும் உலகத்துக்கு (பிதிர்லோகம்) போகும் வழியில் முதலிற் சந்திக்கும் ஒரு கடவுள் (தேவதை); a deity first met with on the way to the world of the manes. தூமாதி மார்க்கம். 8. மரவகை (பைஷஜ); entire leaved tree of heaven. 9. கொடி வகை (L.); bristy trifoliate vine.

[Skt.dhūma > த. தூமம்]

தூர்ச்சடி *tūrccaḍi*, பெ. (n.) பாரமான சடை தரித்த சிவன்; Siva, as wearing heavy matted locks. "யூதிகாத்துவாரப் பதியிற் றூர்ச்சடியெனவும்" (காஞ்சிப்பு.இருபத்.106).

[Skt.Dhūrjaṭi > த. தூர்ச்சடி]

தூர்ணகம் *tūrṇagam*, பெ. (n.) காசுமீர தேசத்து நெல்; a species of paddy grown in Kashmir.*(சா.அ.)*

தூர்த்தன் *tūrttaṉ*, பெ. (n.) 1. காமவெறியன் (திவா.); debauchee, libertine. 2. பரத்தமை கொண்டொழுகுவோன்; a dissolute man fond of prostitutes. "விடருந் தூர்த்தரும்" (மணிமே.14,61). 3. கொடியோன்; wicked person. "தூர்த்தர் மூவெயிலெய்து" (தேவா.628,3).

[Skt.dhūrta > த. தூர்த்தன்]

தூரதிருட்டிக்கண்ணாடி *tūratirutti-k-kaṇṇāḍi*, பெ. (n.) தூரத்துப் பொருளை அண்மையில் (சமீபம்) காட்டுங் கருவி. (இக்.வ.); telescope.

த.வ. தொலைநோக்காடி

[Skt.dūra+drṣṭi > த. தூரதிருட்டி]

தூலகன்மம் *tūla kaṉmam*, பெ. (n.) மனம் மொழி மெய்களாற் (மனோவாக் காயம்) செய்யப்படும் கருமம் (கன்மம்) (சி.சி.2,13, மறைஞா.); acts performred through the mind. speech and body.

[Skt.sthūla+karman > த. தூலகன்மம்]

தூலசகளத்துவம் *tūlaša-kaḷattuvam*, பெ. (n.) தூய்மைத்(சுத்தாசுத்தம்) தத்துவம் ஏழனுள் ஆதனுக்குப் (ஆன்மா) பகுத்தறிவைத் தருந்தத்துவம் (சி.சி.1:65,ஞானப்..); (Saiva.) a category.

தூலசரீரம் *tūla-šarīram*, பெ. (n.) 1. நுண்மையான (சூட்சுமம்) உடலைப் (சரீரம்) போர்த்திருக்கும் ஐந்து (பஞ்ச) பூத திரிபாக்கத்தால் (பரிணாமம்) உண்டான உடல் (சரீரம்) (சைவவி.7.); gross material body with which the subtle body is invested. 2. பருத்தவுடல்; stout body.

த.வ. மெய்யுடல், பருவுடல்

[Skt.sthūla+šarīra > த. தூலசரீரம்]

தூலசித்து *tūla-cittu*, பெ. (n.) சிற்றுயிர் (சீவான்மா); individual soul. "உயிர் தூலசித்தாதலின்" (சி.சி.7,3,சிவஞா.).

[Skt.sthūla+cit> த. தூலசித்து]

தூலதேகம் *tūladēgam*, பெ. (n.) தூல சரீரம் பார்க்க; see tūla šarīram. "தூலதேகமே யன்றிவண் சூக்கும வுடலும்" (திருவானைக். திருமால்.7).

த.வ. பருவுடல்

[Skt.sthūla+dēha> த. தூலதேகம்]

தூலபஞ்சகிருத்தியம் *tūla-pañja-kiruttiyam*, பெ. (n.) இறைவன் புடவிகளிடம் (சராசரம்) ஐங்கடவுள்களைக் கொண்டு (பஞ்சமூர்த்தி) செய்விக்கும் ஐந்தொழில்கள் (சி.சி.1,65. ஞானப்.); the five acts of šivaperformed through the agency of his five manifest forms.viz. ஐந்தொழில்கள்: சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம்.

தூலபஞ்சாக்கரம் *tūla-pañjakkaram*, பெ. (n.) **தூலபஞ்சாட்சரம்** பார்க்க; see tūla-

pañjāṭśaram. "சூக்கும பஞ்சாக்கரமே தூலபஞ்சாக்கரரூபமாக நிற்பன" (சி.போ.பா. 4,1, பக்.258).

[Skt. sthūla+pañcākṣara> த. தூலபஞ்சாக்கரம்]

தூலபஞ்சாட்சரம் *tūla-pañjāṭśaram*, பெ. (n.) சிவபெருமானை அதிதெய்வமாகக் கொண்டதும் "நமசிவாய, என்ற ஐந்து எழுத்துகளாலானதுமான மந்திரம்"; (Saiva) the sacred mantra of Siva.

[Skt. sthūla+pañcākṣara> த. தூலபஞ்சாட்சரம்]

தூலபூதம் *tūla-būdam*, பெ. (n.) கண்ணுக்குப் புலனாகும் ஐந்து (பஞ்ச) பூதங்கள்; the gross elements. "தூலமான வைம்பூதமுந் தோற்றுவித்து" (திருக்காளத்.பு.உலகின்றோ.8).

[Skt. sthūla> த. தூலம்+பூதம்]

தூலபோதம் *tūla-pōdam*, பெ. (n.) கண்ணுக்குப் புலப்படும் வடிவு; the visible body. "தூலபோதம் வருந்து பரமந்திரமாம்" (தத்துவப்.பாயி.2).

[Skt. sthūla+perh. bōdha> த. தூலபோதம்]

தூலம் *tūlam*, பெ. (n.) 1. பருமை; grossness, tangibility. "தூலமா முருவினுக்குச் சூக்கும முதல்" (சி.சி.2,50). 2. கண்ணுக்குப் புலனாவது; gross, tangible materials, palpable essence, opp. to cūṭcumam. "சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்து" (திருவாச.3,10). 3. பொதுமை; vague generality, outline. "தூலமாக விடைகூறி" (சி.போ.சிற்.) 4. உத்திரம்; beam of a house. "தூலத்தின் பேரில் அல்லது இறப்பில்" (சினேந்.170,உரை). 5. நெற்போரடிக்குங் கோல்; threshing instrument, flail. 6. வானம் (ஆகாயம்.) (யாழ்.அக.); sky.

[Skt. sthūla> த. தூலம்]

தூலலிங்கம் *tūla-lingam*, பெ. (n.) 1. கோபுரம்; temple tower, as a huge form of lingam. "தூலலிங்கமாந் தூபி" (சைவச.பொது.127). 2. சிவாலயம்; temple of śiva shrine. "தூலலிங்கமாகிய ஆலயமெனவே சூக்கும மாகிய சிவலிங்கம் எனப்பெறும்" (சி.சி.12,1, மறைஞா.).

[Skt. sthūla+linga> த. தூலலிங்கம்]

தூலாருந்ததி நியாயம் *tūlāruntati-niyāyam*, பெ. (n.) நுண்மையான அருந்ததி விண்மீனைக்காட்ட (நட்சத்திரம்) அதன் அருகிலுள்ள பெரிய விண்மீன் (நட்சத்திரம்) களைக் கொண்டு குறிப்பிடுதல் போல நுண்பொருளை விளக்குதற்கு அதன் சம்பந்தமான பருப்பொருளைக் கொண்டு குறிப்பிட்டுணர்த்தும் நெறி; nyaya in illustration of indicating that which is obscure by reference to a plain fact closely allied to it, as the star Arundhati is pointed out by a reference to the bigger star near it. "சுபக்கத்தைச் சிறப்பு வகையான் அறியலுறுவார்க்குத் தூலாருந்ததி நியாயம் பற்றி அதனைச் சிறந்தெடுத்தோதுதல்" (சி.போ.பா.6,2,பக்.318).

தூலி-த்தல் *tūli-*, 4 செ.கு.வி. (v.i). 1. பருத்தல்; to grow stout, bulky or corpulent. அவன் தேகம் தூலித்து விட்டது. 2. பெருகுதல்; to increase, abound. "தூலிக்கும் வினைகள்" (ஞானவா.தாம.15).

[Skt. sthūla> த. தூலி-த்தல்]

தெரிசம் *teriśam*, பெ. (n.) காருவா (அமாவாசை); new moon. "இரட்டிய தெரிசஞ் சேர்ந்த மலமதியொழித்து" (திருவிளை.இந்திரன்முடி.9).

[Skt. darśa> த. தெரிசம்]

தெரிசனம் *teriśaṇam*, பெ. (n.) 1. பார்வை; auspicious sight, perception, view. 2. கண் (குருபரம்.); eye. 3. தோற்றம்; appearance. "சுவாமிதரிசனம் அழகாயிருந்தது". 4. தெய்வம் அல்லது பெரியோர்களைக் காண்கை; sight as of a great person, a deity. "தரிசனமுந் தீர்ந்து" (ஞானவா.

மாவலி.48). 5. கனவு (சொப்பனம்) முதலிய தோற்றம் (வின்.); dream, vision, trance, supernatural appearance. 6. கண்ணாடி; mirror, looking - glass. 7. மதக் கொள்கை; religious doctrine. "நமது தரிசனத்துக் கடியயப்பட்ட வாற்றால் தேனுண் டலைப் பரிகரிக்க" (சிலப்.10,85, உரை).

[Skt. darśana> த. தெரிசனம்]

தெரிசனவேதி *terisaṉavēdi*, பெ. (n.) தாழ்ந்த மாழை (உலோகங்)களை உயர்ந்த மாழை (உலோகங்)களாக மாற்றவல்ல பச்சிலை வகை; an alchemic agent. "தெரிசனவேதி கண்ட சீருணம்போல" (சேதுபு.வேதாள.71).

[Skt. darśana+bhēdin> த. தெரிசனவேதி]

தெரிசனை *terisaṉai*, பெ. (n.) 1. காட்சி (உ.வ.); auspicious sight. 2. தர்சன வுண்டியல்; (Mercant.); hundi payable at sight.

[Skt. darśana> த. தெரிசனை]

தெரிசி-த்தல் *terisi-*, 4 செ.குன்றாவி. (v.t.) கடவுளர் பெரியோர்களையும் நல்வினைப்பயன் அளிக்கும் இடத்தையும் (புண்ணியதலம்) காணுதல்; to see, behold, to obtain sight, as of an idol, a great person, a sacred place.

[Skt. dṛś> த. தரிசி > தெரிசி-]

தேக்சா *tēkšā*, பெ. (n.) ஒரு வகைக் கிடாரம்; a cauldron.

[U. tēksā> த. தேக்சா]

தேகக்கட்டளை *tēgakkaṭṭaḷai*, பெ. (n.) 1. உடம்பின் ஒழுங்கு அதாவது உடம்பையடுத்த ஊதை பித்தங் கோழையா(வாதபித்த சிலேட்டுமமா)கிய முக்குணங்களின் பண்பு (கிரமம்); the characteristics of the three humours in the human system. 2. உடம்பின் தத்துவக் கட்டளை; the philosophical conceptions on the structure of human body.

தேகக்கட்டு *tēga-k-kaṭṭu*, பெ. (n.) 1. உடம்பின் திடம்; the robustness of the body. 2. தளர்வற்ற உடலமைப்பு; strong - built constitution.

[Skt. dēha> த. தேகம்+கட்டு]

தேகக்கட்டுவிடல் *tēgakkaṭṭuviḍal*, பெ. (n.) உடம்பின் திடம் கெடுதல் (அ) குறைதல்; decaying of the build or robustness of the body.

[Skt. dēha> த. தேகம்+கட்டுவிடல்]

தேகசம்பந்தம் *tēga-šambandam*, பெ. (n.) 1. உறவு; blood relationship. இனி நம்மிருவர்க்கும் தேகசம்பந்த மொழிய அர்த்தசம்பந்தமில்லை. 2. புணர்ச்சி (உ.வ.); copulation.

தேகநாளம் *tēganāḷam*, பெ. (n.) காரி ரத்தத்தை உடம்பின் பல பகுதிகளினின்று இருதயத்தின் வலது பக்கத்திற்கு திருப்பி விடும் ஓர் குழல்; one of those blood vessels which return impure blood to the right side of the heart.

தேகநிதானம் *tēganitāṉam*, பெ. (n.) 1. நோயின் பூர்வரூபம்; premonitory symptoms of the disease. 2. நோய்களின் குணங்களை விவரிக்கும் ஓர் வடமொழி நூல்; an Ayurvedic science determining the quality of diseases.

தேகப்பயிற்சி *tēga-p-payiṟci*, பெ. (n.) உடம்பின் வலுவிற்கும் (ஆரோக்கியத்திற்கும்) பலப்படுத்தவும் வேண்டி, தினப்படி பயிலுதல்; the art or practice of taking exercise for health and strength callesthenic performances.

த.வ. உடற்பயிற்சி

தேகபரிவர்த்தம் *tēgaparivarttam*, பெ. (n.) இருதயத்தினின்று கண்டரை வழியாய்ப் பிரிந்து உடம்பு முழுவதும் செவ்விரத்தமாய்ப் பரவி மறுபடியும் நாளங்கள் வழியாய்

காரிரத்தமாக இருதயத்திற்கு செல்லும் சுற்றோட்டம்; the circulation of the blood from the heart through aorta and other arteries throughout the body and back through the veins.

தேகபலம் *tēga-palam*, பெ. (n.) 1. உடல் வலிமை; strength of the body. 2. குருவி; Indian sparrow, so called from its giving strength and vigour to the system when consumed. 3. மஞ்சள்; turmeric.

தேகபலவீனம் *tēga-palavīṉam*, பெ. (n.) உடம்பின் வலிமைக் குறைபாடு; bodily weakness, physical debility.

தேகம் *tēgam*, பெ. (n.) உடம்பு (சூடா); body.

[Skt. dēha > த. தேகம்]

தேகமூறல் *tēgamūṟal*, பெ. (n.) உடம்பு வளமாதல்; growing stout through nourishment.

தேகமெலிவு *tēgamelivu*, பெ. (n.) உடம்பிளைப்பு; general or physical debility general weakness.

தேகவமைப்புநூல் *tēga-v-amaippu-nūl*, பெ. (n.) 1. உடம்பின் கட்டுப்பாட்டை கூறும் நூல்; that branch of science dealing with the physiological structure of the body-physiology.

தேகளிதீபநியாயம் *tēgaḷi-tīpa-niyāyam*, பெ. (n.) இடைகழியில் வைத்த விளக்கு இருபுறமும் ஒளிவீசுவது போல ஒரு பொருள் இடை யினின்று இரண்டிடத்தும் பயின்று வரும் நெறி; nyāya of the lamp at *tēkaḷ*, illustrating how one abject serves simultaneously a two-fold purpose as the lamp at *tēkaḷi* lights the portions on either side.

தேகாத்துமவாதம் *tēgāttuma-vātam*, பெ. (n.) உடலே ஆதன் (ஆன்மா) என்று கூறும் சாருவாகமதம்; materialism that identifies the soul with the body.

[Skt. dēha+ātma+vāta > த. தேகாத்துமவாதம்]

தேகாதனம் *tēgādaṉam*, பெ. (n.) கையின் மேற் கை மலரவிரியவும் கண்கள் நுனி மூக்கைப் பார்க்கவும் அமையும் ஒக இருக்கை (யோகாசன) வகை. (தத்துவப்.107,உரை); cyogal sitting posture with the back of one hand placed against the palm of the other the eyes being fixed at the tip of the nose.

[Skt. dēhāsana > த. தேகாதனம்]

தேகாப்பியாசம் *tēgāppiyāšam*, பெ. (n.) 1. உடம்பின் பயிற்சி; bodily or physical exercise. 2. அடயோகத்திற்கு உடம்பின் உழைப்பு; bodily exercise indispensible or Hutha yoga.

த.வ. உடற்பயிற்சி

தேகாரோக்கியம் *tēgārōkkiyam*, பெ. (n.) உடம்பின் நலநிலைமை; healthy condition of the body.

தேகான்மவாதி *tēgāṉma-vādi*, பெ. (n.) தேகாத்தும ஊதை (வாத)க் கொள்கையினன் (சி.போ. பா.பக்.36.புதுப்.); a follower of the doctrine of tēkāttumavādam

[Skt. dēha+atma > த. தேகான்மாவாதி]

தேகி[1] *tēgi*, பெ. (n.) 1. ஆதன்; soul. "தேகமுந் தேகியும் (திருமந்.1785). 2. புல்லுருவி (மலை); joneysuckle mistletoe, loranthus.

[Skt. dēhin > த. தேகி]

தேகி[2] *tēgi*, பெ. (n.) 1. உடம்பை உடையவன்; any person embodied. 2. புல்லூரி; parasitic plant. 3. சீவாத்துமா; individual soul or life.

[Skt. dēhin > த. தேகி]

தேகியெனல் *tēgi-y-eṉal*, பெ. (n.) ஈ என இரத்தற் குறிப்பு; expr. signifying one's request for alms. "ஐயந் தேகியெனச் செப்பி" (சைவச.பொது.366).

தேசசு *tēšašu*, பெ. (n.) 1. ஒளி; splendour. 2. கண் விளக்கம்; clearness of the eyes. 3. உடம்பின் வனப்பு; the heating and strengthening faculty of the human frame seated in the bile. 4. விந்து; semen virile. 5. உயிர் (பிராண) வலிவு; vital power.

தேசத்துரோகி *tēša-t-turōki*, பெ. (n.) நாட்டைக் காட்டிக் கொடுப்பவன், நாட்டுக்குத் தீமை செய்பவன்; traitor.

த.வ. தாயகக்கயவன்

தேசப்படம் *tēša-p-paḍam*, பெ. (n.) நாட்டின் அரசியல், நில அமைப்பைக் காட்டும் படம்; map (of a country).

த.வ. நாட்டுப்படம்

தேசபக்தன் *tēšapaktaṉ*, பெ. (n.) நாட்டின் மீது அதிகப் பற்றுடையவன்; patriot. விடுதலைப் போராட்ட காலத்தில் தேசபக்தர்கள் (நாட்டுப் பற்றுடையவர்கள்) நாடு கடத்தப்பட்டார்கள்.

தேசபக்தி *tēšapakti*, பெ. (n.) நாட்டுப்பற்று; patriotism, love for one's country.

தேசம் *tēšam*, பெ. (n.) 1. நாடு; country. *அவர் வாழ்நாள் முழுவதும் தேசத்திற்குத் தொண்டு செய்தார்*. 2. (நாட்டின்) பகுதி; பிரிவு; principality, land, region. *எங்களுக்கு வடதேசம்.*

தேசமுகி *tēša-mugi*, பெ. (n.) அரசிறையதிகாரி (யாழ்.அக.); head of the revenue department.

[Skt. dēša+mukhya> த. தேசமுகி]

தேசா *tēša*, பெ. (n.) ஒரு பண் (வின்); a melody-type.

[Skt. dēšākhya> த. தேசா]

தேசாசாரம் *tēšašāram*, பெ. (n.) நாட்டு வழக்கம்; customs, usages and manners of a country.

[Skt. dēšācāra> த. தேசாசாரம்]

தேசாந்தரம் *tēšandaram*, பெ. (n.) 1. அயல் நாடு; foreign country. 2. நிலநடுக்கோட்டின் தொலைவு; (Astron.) terrestrial longitude, distance of any two meridians on the face of the earth. 3. நிலநடுக்கோட்டின் தொலைவை கணிப்புச் செய்ய உதவும் கணனபாகம் (வின்.); (Astron.) allowance for a planet's proper motion while passing from the first meridian to that of a given place; allowance for longitude.

தேசாந்தரரேகை *tēšāndara-rēgai*, பெ. (n.) ஒருத்தியின் மங்கள நாண் (தாலி) வலிமையைக் குறிப்பதாகக் கருதப்படும் உள்ளங்கை வரி (இரேகை) வகை. (திருவாரூ.குற.); a distinctive mark in the palm of a woman, believed to denote a long period of married life.

தேசாந்திரம் *tēšandiram*, பெ. (n.) நோக்கம் எதுவுமின்றி நாட்டின் பல இடங்களுக்கும் தன் விருப்பப்படி செல்லும் பயணம்; moving about places free from responsibilities. *தேசாந்திரம் போகிறேன் என்று கிழவர் கிளம்பிவிட்டார்.* (இ.வ.)

தேசாபிமானம் *tēšābimāṉam*, பெ. (n.) தாய் (நாட்டுப்) பற்று; love of one's country.

[Skt. dēša+abhimāna> த. தேசாபிமானம்]

தேசிகப்பிரபந்தம் *tēšiga-p-pirapandam*, பெ. (n.) வேதாந்த தேசிகர் தமிழில் இயற்றிய பனுவல் (பிரபந்தம்) தொகுதி; Tamil poems composed by vēdānda-dēšikar.

[Skt. dēšika+pra-bandha> த. தேசிகப்பிரபந்தம்]

தேசிகம்[1] *tēšigam*, பெ. (n.) 1. அவ்வந்நாட்டுச் சொல்; provincialism, local idiom, word peculiar to a province. 2. அயல்நாட்டுச் சொல்; foreign terms introduced into a language. *"தேசிகச் சொல்லோடு செறிவடமொழியினை"* (பி.வி.2,உரை). 3. இயற்சொல், திரிசொல், திசைச்சொல்,

வடசொல் என இசைப்பாடல்களில் வரும் சொற்பயன்பாடு (சிலப்.3:47, உரை.); (mus) the use of iyarcol, tiricol, ticaiccol and vaṭacol. 4. கூத்துவகை (அக.நி.); a kind of dance. 5. சிந்தகம் (இந்துத்தானி) போன்ற அயல் நாட்டுப்பண்; foreign melody-type as Hindustani.

[Skt. dēśika> த. தேசிகம்]

தேசிகம்[2] *tēsigam*, பெ. (n.) 1. ஒளி; light, lustre, brightness. *"பல்லினைத் தேசிகம் படத்துடைத்து"* (சீவக.1480). 2. பொன் (பிங்.); gold. 3. அழகு (பிங்.); beauty.

[Skt. tējas> த. தேசிகம்²]

தேசிகன் *tēsigaṉ*, பெ. (n.) 1. குரு (பிங்.); spiritual teacher preceptor. *"முன்னர்த் தேசிகர்ப் பிழைத்து"* (கம்பரா.மிதிலை.109). 2. சிவணிய (சிவ)ச் சமய (சைவம்) குருக்கள் வகுப்பினருள் ஒரு சாரான்; title of a section of Non-Brahmin briestly caste. *"வாய்மைதரு தியாகராச தேசிகனே"* *(இலக்.பி.பதிகம்). 3. மடாதிபதிக்கு வழங்கும் பட்டப் பெயர்;* title of the head of a mutt. *"அம்பலவாண தேசிகன்"* (மீனாட்.பிர. ஸ்ரீஅம்.பிள்.1). 4. தந்தை (பிதா.); father. *"தேசிகன் வரங்குறை படுத்திடா"* (காஞ்சிப்பு. இரேணு.13) 5. மனம் போன போக்கில் சுற்றித் திரிபவன் (தேசாந்தரி) (பிங்.); traveller, wanderer, foreigner. 6. வணிகன் (பிங்.); merchant. 7. வேதாந்த தேசிகர்; a VaiṣṇavaĀcārya. 8. ஆசிரியன் (உபாத்தியாயன்); teacher. *"எங்கள் தேசிகனடிப்பான்"* (பெரியபு.திருமுறைகண்டபு.5).

[Skt. dēśika> த. தேசிகன்]

தேசூரஞ்சு *tēsūraṉju*, பெ. (n.) 1. வேட்டியின் ஓரத்தில் அமைக்குங் கரைவகை; a kind of straight broder of red colour about one or more inches in breadth, woven along the selvedge of men's cloths.

தேசூரான்வேட்டி *tēsūrāṉ-vēṭṭi*, பெ. (n.) காஞ்சீபுரம் பட்டுக்கரை வேட்டி; cloth with crushed - strawberry-coloured silk broder.

தேசோமயம் *tēsōmayam*, பெ. (n.) 1. பேரொளி; splendour, light, brilliance. *"அறிவான தெய்வமே தேசோமயானந்தமே" (தாயு. தேசோ.).* 2. அழகு (யாழ்.அக.); beauty.

[Skt. tējō-maya> த. தேசோமயம்]

தேதி *tēti*, பெ. (n.) மாதத்தின் ஒரு பகுதியாகிய நாள்; date, day of the month. *"மாசித் திங்களில் முதற்றேதியில்" (சீவக.493, உரை).*

த.வ. பக்கல்

[Skt. tithi> த. தேதி]

தேதிமழை *tēdi-maḻai*, பெ. (n.) ஐந்திய நூலில் (பஞ்சாங்கம்) குறிப்பிட்டுள்ள நாளிற் பெய்யும் மழை (உ.வ.); rain that falls on the date specified in the calendar.

த.வ. பக்கல்மழை

[Skt. tithi > த. தேதி + மழை]

தேனு[1] *tēṉu*, பெ. (n.) 1. ஆன்; cow. 2. எருமை; buffalo. 3. குதிரை; horse. 4. கறவை ஆன்; milch cow.



தேனு[2] *tēṉu*, பெ. (n.) களவு (சூடா.); theft, robbery.

[Skt. stēna> த. தேனு]

தைத்தியர் *taittiyar*, பெ. (n.) திதி என்பவளின் பிள்ளைகளும் பதினெண்கணத்துள் ஒரு வகையினருமான அரக்கர் (பிங்.); Asuras, as sons of Diti, one of patinenkanam.

[Skt. daitya> த. தைத்தியர்]

தைத்தியன் *taittiyan*, பெ. (n.) உடம்பு அல்லது உடலுறுப்பு (அவயவம்) பருத்தவன்; man with a body of great size giant.

தைத்திரியன் *taittiriyan*, பெ. (n.) எசுர் வேதத்தில் தைத்திரிய சாகையைச் சேர்ந்தவன்; a follower of the Taittiriya recension of the yajur-vēda. *"ஐந்தழ லோம்பு தைத்திரியன்" (திவ்.பெரியதி. 5.5.9).*

[Skt. taittiriya> த. தைத்திரியன்]

தைத்திரீயசம்மிதை *taittiriyasammidai*, பெ. (n.) தைத்திரேயே முனிவரால் (ரிஷி) செய்யப்பட்ட ஓர் ஆயுள் வேத நூல்; an Ayurvedic science compiled by Thithreya sage.

தைரியம் *tairiyam*, பெ. (n.) மனத்துணிவு; courage, self-confidence.

[Skt. dhairya> த. தைரியம்]

தைலம் *tailam*, பெ. (n.) 1. நல்லெண்ணெய் (சூடா.); sesame oil. 2. ஆமணக்கெண்ணெய் (மூ.அ.); castor oil. 3. எண்ணெய்; oil, unguent. 4. மண(வாசனை)ப் பண்டங்களு ளொன்று (சிலப்.14,108,உரை.); fragrant oil. 5. கூட் டெண்ணெய் (வின்); essential vegetable oil, balsam, medicinal oil. 6. மரச்சத்து (வின்.); sap of a tree or plant.

[நல் (எண்)-தில் >தில்ம் > Skt. taila> த. தைலம்]

தைலமாட்டு-தல் *tailam-āttu*, 5 செ.கு.வி. (v.i.) 1. எண்ணெய்க்காப்பிடுதல்; to anoint the head or body. 2. உடலை எண்ணெய்யால் சேமித்து வைத்தல்; to preserve a corpse by immersing it in oil, embalm. "தைலமாட்டு படலம்" (கம்பரா.).

தைவிகம் *taivigam*, பெ. (n.) 1. கடவுள் தன்மையுள்ளது; the supernatural; that which relates to the gods. *"புத்தகமிங்கு நண்ணும் புதுமை தைவிகமாம்"* (திருவாத. பு.திருவடி.17). 2. **ஆதிதைவிகம்** பார்க்க; see ātitaivikam. *"தைவிக மாதிய மூன்றில்"* (சிவதரு.கோபு.62). 3. **தைவிகலிங்கம்** பார்க்க; see taivikalingam. "சயம்புவுந் தைவிகமும்" (சைவச.பொது.431).

தைனாத்து *tainattu*, பெ. (n.) 1. பணியமர்த்தம்; appointment. 2. வேலையாள்; peon, personal attendant.

[U. tainät> த. தைனாத்து]

தைனாத்துச்சேவகன் *tainättu-c-cēvagan*, பெ. (n.) தொழில் கற்றுக்கொள்ளும் பொருட்டுச் சம்பளமில்லாமல் வேலை பார்க்குஞ் சேவகன் (வின்.); a volunteer peon.

தைனியம் *tainiyam*, பெ. (n.) 1. எளிமை; poverty, affliction, depression. 2. கீழ்மை (வின்.); meanness. 3. இவறன்மை (உலோபம்) (வின்.); covetousness.

[Skt. dainya> த. தைனியம்]

தோகம்[1] *tōgam*, பெ. (n.) குழந்தை; child.

[Skt. tōkā> த. தோகம்]

தோகம்[2] *tōgam*, பெ. (n.) சிறுமை (சூடா.); smallness, minuteness, trifle.

[Skt. stōka> த. தோகம்]

தோகம்[3] *tōgam*, பெ. (n.) வருத்தம் (துக்கம்); grief. *"தோக மொருமிக்கத் தந்தீர்"* (இராமநா.உயுத்.60).

[Perh. drōha> த. தோகம்]

தோகம்[4] *tōgam*, பெ. (n.) பால்; milk.

[Skt. dōha> த. தோகம்]

தோசம் *tōsam*, பெ. (n.) 1. குற்றம்; fault. 2. பாவம்; sin, guilt. 3. குறை; defect, lack. 4. நாடிக்கொதிப்பு; disorder of the humours of the body. 5. கண்ணேறு முதலானவற்றால்

வருந்தீங்கு; illness believed to be due to the evil eye.

[Skt. dōṣa> த. தோசம்]

தோட்டா *tōṭṭa*, பெ. (n.) வெடிமருந்துச் சுருள்; cartridge, wadding.

[U. tōṭa> த. தோட்டா]

தோடம் *tōḍam*, பெ. (n.) **தோசம்** பார்க்க; see see tōṣam. *"ஐம் பூதத்தாலே யலக்கழிந்த தோடமற"*. (தாயு.எந்நாட்.தத்துவ.1).

தோடமூர்ச்சிதம் *tōḍa-mūrccidam*, பெ. (n.) பசுமைநிறங் காட்டும் மரகதக் குற்ற வகை (திருவிளை.மாணிக்.68); a flaw in emerald giving the colour of grass.

தோடலேசம் *tōḍa-lēšam*, பெ. (n.) தாமரை யிலை நிறங் காட்டும் மரகதக் குற்றவகை (திருவிளை.மாணிக்.68); a flaw in emerald giving the colour of lotus leaf.

[Skt. dōṣa+lēśa> த. தோடலேசம்]

தோத்திரம் *tōttiram*, பெ. (n.) 1. புகழ்ச்சி; praise, laudation, eulogy, panegyric. 2. வணக்கமொழி, வழிபாடு; words of salutation. *"இருக்கொடு தோத்திர மியம்பினார்"* (திருவாச.20.4). 3. **தோத்திரப் பாட்டு** பார்க்க; see tōttirappāttu.

[Skt. stōtra> த. தோத்திரம்]

தோத்திரி-த்தல் *tōttiri*, 4 செ.குன்றாவி (v.t.) புகழ்தல்; to praise, extol, belaud. *"எளிய ரேந்துயருமிறுத் தருளென்று தோத்திரித்தார்"* (விநாயகபு.75.336).

[Skt. stōtra> த. தோத்தரி]

தோப்பறா *tōpparā*, பெ. (n.) 1. குதிரைக்குக் கொள்ளுவைக்கும் பை; leather bag used in feeding horses. 2. நீரிறைக்கும், தோலான கருவி வகை; leather bucket for drawing water.

[U. tōbrā> த. தோப்பறா]

தோயசம் *tōyasam*, பெ. (n.) தாமரை (சங்.அக.); lotus.

[Skt. tōya-ja> த. தோயசம்]

தௌட்டியம் *tauṭṭiyam*, பெ. (n.) தீச்செயல் (உ.வ.); mischievousness.

[Skt. dauṣṭya> த. தௌஷ்டியம்]

தௌத்தியம்[1] *tauttiyam*, பெ. (n.) 1. தூது; message, mission. 2. ஒருத்தியைக் கூட்டிவிடுகை; pimping pandering.

[Skt. dautya> த. தௌத்தியம்]

தௌத்தியம்[2] *tauttiyam*, பெ. (n.) போற்றி, புகழ் (யாழ்.அக.); praise.

[Skt. stautya> த. தௌத்தியம்]

தௌதிகம் *tautigam*, பெ. (n.) முத்து (மூ.அ.); pearls.

[Skt. tautika> த. தௌதிகம்]

தௌமியன் *taumiyaṉ*, பெ. (n.) பாண்டவர் கரணக் குரு (புரோகிதன்); the priest of the *pāṇḍavas*. *"தௌமியமுனியைக் கண்டு"* (பாரத.திரௌபதி.9).

[Skt. dhaumya> த. தௌமியன்]

தௌர்ப்பல்லியம் *taurppalliyam*, பெ. (n.) வலுவின்மை; weakness of mind or body.

[Skt. daurbalya> த. தௌர்ப்பல்லியம்]

தௌலேயம் *taulēyam*, பெ. (n.) ஆமை (மூ.அ.); turtle.



தௌவாரிகன் *tauvārikaṉ*, பெ. (n.) வாயில் காப்போன் (சங்.அக.); doorkeeper.

[Skt. dauvārika> த. தௌவாரிகன்]

ந

நக்சா *nakšā,* பெ.(n.) படம் (C.G. 57); picture, plan, map.

[Ar. naqsha > த. நக்சா]

நக்த்சமாகர்சு *nakt-šamākaršu* பெ.(n.) கருவூலக் குறிப்பேடு (C.G); account of cash receipts and disbursements.

[Ar. naqdi-jamā + karšu > த. நக்த்சமாகர்சு]

நக்தி *nakti* பெ.(n.) கருவூலம் (C.G. 145); treasury.

[Ar. naqdi > த. நக்தி]

நக்திகுமாசுதா *nakti-kumāšutā* பெ.(n.) கருவூலக்கணக்கர் (C.G. 145); treasury clerk, cash - keeper.

நக்திசிட்டா *nakti-šiṭṭā,* பெ.(n.) கருவூலத்தில் வருமானத்தைப் பதிவு செய்யும் பதிவேடு (C.G. 145); account showing cash receipts in a treasury.

[Ar. naqdi+ciṭṭā > த. நக்திசிட்டா]

நகத் *nakat,* பெ. (n.) கைப்பணம் (ரொக்கம்); ready money, cash.

[Ar. naqad > த. நகத்]

நகத்துசாமீன் *nakattu-šāmīṉ,* பெ. (n.) பிணையத் தொகை; cash security.

[Ar. naqad + jāmin > த. நகத்துசாமீன்]

நகத்பாபு *nakat-pāpu,* பெ. (n.) மீன் பிடித்தல், வேளாளர்களல்லாதார் குடியிருப்பு, தென்னை மாபுளி முதலியவுள்ள தோட்டம் இவற்றுக்கு வாங்கப்படும் வரி (R.T); a tax on tank fishery, on the houses of those not engaged in agriculture and on coconut, mango and tamarind topes.

[Ar. naqad + bāb > த. நகத்பாபு]

நகதா *nakatā,* பெ. (n.) காக்காய்ச்சரிகை நூல் (இ.வ); Imitation lace-thread.

நகதி *nakati,* பெ. (n.) 1. பணக்காரன்; person having ready money. 2. பொற்கட்டி முதலியன; bullion, gold or silver in the mass. 3. பணமாகச் செலுத்தும் நிலத்தீர்வை (R.T); land revenue in money. 4. **நக்தி** (C.G) பார்க்க; see *nakti.*

[U. naqdi > த. நகதி]

நகரோபாந்தம் *nakarōpāndam,* பெ. (n.) நகரெல்லை (யாழ். அக.); outskirts of a city.

[Skt. nagarōpānta > த. நகரோபாந்தம்]

நகரௌடதி *nakar-auṭadi,* பெ. (n.) வாழை (சங். அக.); plantain tree.

நகல் *nakal,* பெ. (n.) படி (உ.வ); duplicate, copy.

த.வ. நிகரி

[U. naql > த. நகல்]

நகுசன் *nakušaṉ,* பெ. (n.) 100 குதிரைவேள்வி செய்ததற்குப் பயனாக இந்திரப்பட்டம் பெற்றுச் சிவிகையேறிச் செல்லுகையில் அச்சிவிகை காவுவோருள் ஒருவரான அகத்தியரால் சாவிக் கப்பட்டுப் பாம்புருவமடைந்த (நிலவு) சந்திர குலத்தரசன்; a king of the lunar race who obtained possession of Indra's throne as a reward for having performed 100 horse - sacrifices, offended Agastya, one of his palanguin - bearers, and was cursed by him and turned into a serpent.

[Skt. Nahuṣa > த. நகுசன்]

நசிந்தா *našindā,* பெ. (n.) கணக்கர் (C.G.); accountant, clerk.

[U. nawi-sindah > த. நசிந்தா]

நசீப் *našīp,* பெ. (n.) 1. ஊழ்; fate, destiny 2. ஆகூழ்; good luck, fortune.

[U. naṣib > த. நசீப்]

நட்சத்திர ஆபீசு *naṭšattira-āpīšu,* பெ. (n.) வான்மண்டலத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் தலம் (இக்.வ.); observatory.

த. வ. வானாய்வுக் கூடம்

[Skt. nakṣatra+E. office > த. நட்சத்திர ஆபீசு]

நட்சத்திரக்குறி *natšattira-k-kuṟi*, பெ. (n.) அச்சுப்பதிப்பில் விண்மீன் வடிவமைந்த குறிப்படையாளம்; asterisk.

த. வ. **விண்மீன்குறி**

நட்சத்திரகன் *natšattirakaṉ*, பெ. (n.) **நட்சத்திரையன்** பார்க்க; see *natšattiraiyan*.

நட்சத்திரசக்கரம் *natšattira-šakkaram*, பெ. (n.) 1. விண்மீன் மண்டலம்(யாழ். அக.); stellar sphere. 2. நிலவு மண்டலத்திற்குரிய உடுக்குழு (நட்சத்திரங்கள்) (வின்); (Astrol) group of lunar asterisms forming the lunar zodiac. 3. கலப்பைச் சக்கரம் முதலியன போலக் கணிய (சோதிட) கணனத்துக்குரிய சக்கர வகை; (Astrol) diagrams for astrological calculations, as *kalappai-c-cakkaram* etc.

[Skt. nakṣatra > த. நட்சத்திரம்+சக்கரம்]

நட்சத்திரசாலை *natšaṭṭira-šālai*, பெ. (n.) வானத்திற்செல்லும் கதிரவன் நாண்மீன்கள் முதலியவற்றைப் பார்த்துக் கணிக்குங்களம்; observatory.

த. வ. **உடுக்கணிப்புக் களம்**

[நட்சத்திரம் + சாலை]

[Skt. nakṣatra > த. நட்சத்திரசாலை]

நட்சத்திரசீரகம் *natšattira-šīragam*, பெ. (n.) பெருஞ்சீரகம் (மூ.அ); common anise.

நட்சத்திரதீபம் *natšattira-tibam*, பெ. (n.) ஒரு வகை விளக்கு (வின்.); a kind of lamp.

த. வ. **உடுவிளக்கு**

[Skt. nakṣatra+dīpa>த. நட்சத்திரதீபம்]

நட்சத்திரநேமி *natšattira-nēmi*, பெ. (n.) 1. நிலவு; moon. 2. திருமால்; Viṣṇu. 3. துருவவிண்மீன்; the pole star.

[Skt. nakṣatra + nēmi> த. நட்சத்திரநேமி]

நட்சத்திரப்பணி *natšattira-p-paṇi*, பெ. (n.) ஒருவகை மேற் (விதான)கட்டு; a kind of ornamentation in a canopy.

நட்சத்திரப்பப்பளி *natšattira-p-pappaḷi*, பெ. (n.) புடைவை வகை; a kind of saree.

[Skt. nakṣatra+pappali>த. நட்சத்திரப்பப்பளி]

நட்சத்திரப்பிரமாணம் *natšattira-p-piramāṇam*, பெ. (n.) விண்மீனின் (நட்சத்திரத்தின்) அளவு (வின்); the dimension of a star.

[Skt. nakṣatra + piramāṇam> த. நட்சத்திரப்பிரமாணம்]

நட்சத்திரப்பொருத்தம் *natšattira-p-poruttam*, பெ. (n.) பத்துவகைக் கலியாணப் பொருத்தங்களுள் மணமக்களின் பிறப்பு ஓரைகளின் (வதூவரர்களின் சென்ம நட்சத்திரங்களின்) இசைவு (சோதிட. சிந். 195); (Astrol.)a correspondence or affinity between the asterisms of nativity of the prospective bride and bridegroom one of ten *kaliyāṇa-p-poruttam*.

த. வ. **நாள்மீன் பொருத்தம்**

[Skt. nakṣatra > த. நட்சத்திரம்]

நட்சத்திரபதம் *natšattira-padam*, பெ. (n.) விண்மீன் (நட்சத்திர) பதவி; the region of the stars. "சந்திரபதத்துக்கு மேலே நூறாயிரக் காதமாறு உண்டிறே நட்சத்திரபதம்" (திவ். திருநெடுந். 5. வியா.)

த. வ. **விண்மீன் பதவி**

[Skt. naksatra > த. நட்சத்திரம்]

நட்சத்திரபதவி *natšattira-padavi*, பெ. (n.) 1. விண்மீன் வானம்; starry sky. 2. அறம் புரிந்தோரில் ஒரு வகையினர் தம் மரணத்தின் பின் அடையும் விண்மீன் மண்டலம்; region of stars, as the abode of those who have done certain deeds of religious merit. 3. அறத்தின் பயனாக மறுமையில் விண்மீனாய் விளங்குபவர்களின் நிலை; state of the soul becoming a star as a result of certain deeds of religious merit.

த. வ. **உடுமண்டலப்பதவி**

[Skt. nakṣatra> த. நட்சத்திரம்]

நட்சத்திரம் *natšattiram*, பெ. (n.) 1. விண்மீன் கூட்டம் வானமண்டலத்தில் தோன்றும் வானமீன்; star (in astronemy) a special

form of constellation called aferism in the moon's path; star in general. 2. (அசுவினி, பரணி, கார்த்திகை, உரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூரம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதையம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி என்னும், இருபத்தேழு நாண்மீன்; (Astron) Lunar consellation 27 in number. viz., acuvini, parani, kārttikai, urōkini, mirukacīritam, tiruvātirai, punarpūcam, pūcam, āyiliyam, makam, pūram, uttiram, astam, cittirai, cuvāti, vicākam, anuṣam, kēṭṭai, mūlam, pūrāṭam, uttirāṭam, tiruvōṇam, aciṭṭam, cataiyam, pūaṭṭāti, uttiraṭṭāti, irēvati. 3. திங்கள், நாண்மீனில் தங்கிச்செல்லுங் காலம்; period during which the moon is passing through an asterism.

த. வ. நாண்மீன், உடு.

[Skt. nakṣatra>த. நட்சத்திரம்]

நட்சத்திரமண்டலம் *natśattiramaṇḍalam,* பெ. (n.) விண்மீன் வட்டம் (வின்); the starry heavens.

த. வ. உடுமண்டலம்

[Skt. nakṣatra > த. நட்சத்திரம்]

நட்சத்திரமாதம் *natśattira-mātam,* பெ. (n.) அசுவினி முதல் இருபத்தேழு நட்சத்திரங் களைக் கொண்டு கணிக்கப்படும் மாதம் (விதான. குணாகுண. 80 உரை); sidereal month.

[Skt. nakṣatra > த. நட்சத்திரம்]

நட்சத்திரமாலை *natśattiramālai,* பெ. (n.) 1. விண்மீன் கூட்டம்; constellation, star group. 2. நிலவுக்குரித்தான 27 விண் மீன்கள் (வின்); lunar zodiac. 3. நட் சத்திர வீதி பார்க்க; see natcattiravīti. 4. விண்மீன் களைப் பற்றிக் கூறும் ஒரு கணிய நூல் (வின்); a treatise on the lunar constellations. 5. இருபத்தேழு பாடல் கொண்ட சிற்றிலக்கிய வகை; a poem of twenty seven stanzas.

த. வ. உடுமாலை

நட்சத்திரமீன் *natcattiramīn,* பெ.(n.) ஒரு வகைக் கடல் மீன்; a kind of sea fish - star fist.

த. வ. உடுமீன்

நட்சத்திரவாணம் *natcattira-vāṇam,* பெ. (n.) வானவெடிப்பு (ஆகாசவாண) வகை; a kind of rocket.

த. வ. உடுவாணம்

[Skt. nakṣatra+bāṇa >த. நட்சத்திரவாணம்]

நட்சத்திரவீதி *natśattira-vīdi,* பெ. (n.) 1. நிலவு உலாவும் வானவழி; moons's path in the zodiac. 2. விண்மீன்கள் செறிந்து தோன்றும் பால்வீதி மண்டலம்; the milky way.

நட்சத்திரையன் *natcattiraiyan,* பெ. (n.) 1. விசுவாமித்திரர்கடனைக் கொடுக்கும்படி அரிச்சந்திரனை வருத்தியவனான பார்ப் பனன்; the Brahmin who harassed Hariścandra to pay his dues to Viśvāmitra. 2. கடன்மீட்டுவதிற் கொடியோன் (உ.வ.); a cruel oppressor, dun.

த. வ. கொடுங்கேடன்

நட்டசந்திரன் *naṭṭacandiran,* பெ. (n.) தேய்பிறை; (C.G.); waning moon.

[Skt. naṣṭa > த. நட்ட(ன்)]

நட்டப்படுத்து-தல் *naṭṭa-p-paḍuttu-,* 5. செ.கு.வி. (v.i.) அழிவு உண்டாக்குதல் (வின்); to cause damage, involve in loss.

[Skt. naṣṭam > த. நட்டம்]

நட்டம் *naṭṭam,* பெ. (n.) 1. இழப்பு; loss, damage 2. அழிவு (வின்); ruin, destruction.

[Skt. naṣṭa > த. நட்டம்]

நட்டமிறு-த்தல் *naṭṭam-iru-,* 4 செ.கு.வி. (v.i.) 1. சேதத்திற்கு ஈடு கொடுத்தல்; to make good a loss, indemnify.

த. வ. ஈடுதரல்

[Skt. naṣṭam> த. நட்டம்]

நட்டவாளி *natta-v-āḷi* பெ. (n.) 1. நட்டப் பட்டவன்; one who sustains loss, loser.

த. வ. **இழப்பாளி**

நட்டை *naṭṭai* பெ. (n.) 1. புலக்குறும்பு, குறும்பு; mischief. 2. கண்டனம்; criticism, censure.

[Skt. naṣṭai > த. நட்டை]

நதி *nadi* பெ.(n.) ஆறு (திவா.); river.

[Skt. nadi > த. நதி]

நதிக்குதிரை *nadi-k-kudirai* பெ.(n.) நீர்யானை; hippopotamus.

[நதி + குதிரை]

நதிகேள்வன் *nadi-kēḷvaṉ* பெ.(n.) ஆறுகளின் நாயகனான வருணன் (பிங்.); Varuṇa, as Lord of the Rivers.

[நதி + கேள்வன்]

நதிசரம் *nadi-šaram* பெ.(n.) ஆற்றுச்சார்பாகப் பிறந்த யானை (திவா.); elephant born and bred up on the banks of a river.

[நதி + சரம்]

நதிதீரம் *nadi-tiram* பெ.(n.) ஆற்றங்கரை; bank of a river.

[நதி + தீரம்]

நதிமூலம் *nadi-mūlam* பெ.(n.) ஆறு தோன்றும் இடம்; source of river.

[நதி + மூலம்]

நதீமாதுருகம் *nadi-mādurugam* பெ.(n.) ஆற்றுப் பாய்ச்சலுள்ள நிலம்; land irrigated by a river. *"நதிமாதுருகம் இரண்டு பூ விளைகையாலே" (ஈடு. 1: 1: 1, ஜீ).*

[Skt. nadi+mātṛka > த. நதீமாதுருகம்]

நதீவடம் *nadivaḍam* பெ.(n.) கருப்பு ஆலமரம் (மூ.அ.); black banyan tree.

நபம் *nabam* பெ.(n.) 1. வானம் (சூடா.); sky. *"நபமுகில்" (பாரத. சடா. 8).* 2. மடங்கல் (ஆவணி) மாதம்; the month Āvani = August - september. 3. கார்காலம் (இலக். அக.); rainy season.

[Skt. nabhas > த. நபம்]

நபர்[1] *nabar* பெ.(n.) மாந்தன், ஆள்; person, individual. *'குற்றம் சாட்டப்பட்ட நபரைத் துறையினர் தேடி வருகிறார்கள்', 'இந்தக் கடிதத்தைக் கொண்டுவரும் நபரிடம் பணத்தைக் கொடுக்கவும்'. (இ.வ.)*

த.வ. **ஆள்**

[U. nafar> த. நபர்]

நபர்கதி *nabar-kadi* கு.வி.எ.(adv.) ஒவ்வொருவருக்கு; individually.

த.வ. **ஆள்வாரி**

[U. nafar+gatti > த. நபர்கதி]

நபர்கதிபைசல் *nabar-kadi-paišal* பெ.(n.) ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக செய்யும் முடிவு (C.G.); individual settlement.

[நபர்கதி + பைசல்]

நபர்சாமீன் *nabar-sāmin* பெ.(n.) ஆட்பிணை (C.G.);personal security.

[Skt. nafar+zāmin > த.நபர்சாமீன்]

நபனம் *nabaṉam* பெ.(n.) 1. நீராட்டம்; bathing. *"விதியின்மை நபனமாடி" (சிவப். பிரபந். இட்ட. அபிஷே. 9).* 2. திருமுழுக்காட்டுப் (அபிடேகப்) பொருளைத் தூய்மை செய்யுஞ் சடங்கு; ceremony of purifying articles used in bathing an idol. *"சம்புரோக்கணநபனம்" (திருவானைக். கோச்செங். 40).*

[Skt. snapana > த. நபனம்]

நபனமண்டபம் *nabaṉa-maṇḍabam* பெ.(n.) கருவறைக்கு (கர்ப்ப கிருகத்துக்கு) முன்னேயுள்ள திருமஞ்சன மண்டபம்(Ins.); that portion of a temple in front of the inner sanctuary, where the *napaṉam* ceremony, is performed.

[Skt. snapana > த. நபனமண்டபம்]

நபா *nabā* பெ.(n.) ஊதியம் (இலாபம்)(C.G.); profit, gain, advantage.

[U. nafā > த. நபா]

நபாபு *nabābu,* பெ.(n.) மொகலாய வரசரின் கீழமைந்த ஆளுநர் (இராசப் பிரதிநிதி) முதலானோர்; Nabob, Muhammadan official or governor under the great Mogul. 2. முகமதியர்க்கு அரசாங்கத்தாரால் வழங்கப் படும் பட்டங்களிலொன்று; a little conferred on Muhammadan gentlemen of distinction.

[U. nawāb > த. நபாபு]

நபி *nabi,* பெ.(n.) வருவதுரைப்பவர் (தீர்க்கதரிசி) (யாழ்.அக.); prophet. 2. முகம்மது; Muhammad, as the Prophet.

த.வ. கணியர்

[U. nabi> த. நபி]

நபிலம் *nabilam,* பெ.(n.) கொள்; horse gram - Dolichos biflorus. (சா.அக.)

நபுஞ்சகம் *nabuñjagam,* பெ.(n.) 1. நபுஞ்சகன் (யாழ்.அக.) பார்க்க; see *nabuñjagan.* 2. ஆண்டன்மையின்மை; impotency. 3. **நபுஞ்சகலிங்கம்** பார்க்க; see *nabuñjaga-lingam.*

[Skt. na-pumsaka > த. நபுஞ்சகம்]

நபுஞ்சகலிங்கம் *nabuñjaga-lingam,* பெ.(n.) அலிப்பால் (பி.வி.44, உரை); neuter gender.

[Skt. na-pumsaka+linga > த. நபுஞ்சக லிங்கம்]

நபுஞ்சகவேதம் *nabuñjaga-vēdam,* பெ.(n.) ஓர் அலி மற்றோர் அலியின் நட்பை விரும்புவதான குற்றம்; the fault which consists in the desire of a neuter for the companionship of another neuter.

[Skt. napumsaka-vēda > த. நபுஞ்சக வேதம்]

நபுஞ்சகன் *nabuñjagan,* பெ.(n.) ஆண்தன்மை இழந்தவன்; man who is impotent. 2. அலி(பிங்);hermaphrodite.

[Skt. na-pumsaka > த. நபுஞ்சகன்.]

நபுரி *naburi,* பெ.(n.) ஒருவகைக் கஞ்சக்கருவி (தாளம்) (அபி.சிந்); cymbals.

[U. nafiri > த. நபுரி]

நபுரு *naburu,* பெ.(n.) நபர் பார்க்க; see nabar.

[U. nafar > த. நபுரு]

நபோமணி *nabō-mani,* பெ.(n.) விண்ணின் மணியாகிய கதிரவன் (யாழ்.அக.); the Sun, as the gem of the sky.

[Skt. nabhō-mani > த. நபோமணி]

நபோரேணு *nabōrēnu,* பெ.(n.) அணு (யாழ்.அக.); atom.

[Skt. nabhō-rēnu > த. நபோரேணு]

நம் *nam,* பெ.(n.) வணக்கம்; worship, reverential bow.

[Skt. nam > த. நம்]

நம்தா *namtā,* பெ.(n.) சேணத்தின் அடி மெத்தை; Belt or wollen saddle-cloth.

[U. namdā > த. நம்தா]

நம்பர் *nambar,* பெ.(n.)1.எண்; number. 2. வழக்கு; dispute. கோர்ட்டில் எனக்கு நம்பர் இருக்கிறது.

[E. number > த. நம்பர்]

நம்பர்பண்ணு–தல் *nambar-pannu-,* 5 செ.கு.வி.(v.i) வழக்கிடுதல்; to file a suit.

[நம்பர் + பண்ணுதல்]

நம்பர் போடு–தல் *nambar-pōdu-,* 20 செ.கு.வி.(v.i) **நம்பர் பண்ணு–தல்** பார்க்க; see *nambar pannu-.*

[நம்பர் + போடு–தல்]

நமசுகரி–த்தல் *namašukari-,* 4 செ.கு.வி.(v.i.) கைகூப்பி அல்லது காலில் விழுந்து வணங்குதல்; mode of showing respect with folded hands or by prostrating. *தம்பதிகளைப் பார்த்து 'தாத்தாவை வணங்குங்கள்' என்று கூற அவர்கள் அவர் காலைத் தொடக் குனிந்தனர்.*

[Skt. namaskāra > நமஸ்கரி > த. நமசுகரி – >நமசுகரி–த்தல்]

நமசுகாரபாகுடம் *namašukāra-pāguḍam,* பெ.(n.) சமண வழிபாட்டு நூல்; books of Jaina hymns.

[நமசுகாரம் + பாகுடம்]

நமசுகாரம் *namašu-kāram,* பெ.(n.) வணக்கம்; reverential bow, worship, adoration by bowing or prostration.

[Skt. namas > த. நமசுகாரம்]

நமசுகாரமண்டபம் *namašukāra-maṇḍabam,* பெ.(n.) வணக்கம் செய்வதற்காக அமைத்த மண்டபம் (T.A.S.vi. 63); a mandabam in front of the central shrine of a temple, for devotees to perform *namaskāram.*

[நமசுகாரம் + மண்டபம்]

நமாசு *nāmāšu,* பெ.(n.) முகமதியர் தொழுகை; prayer in a mosque.

[U. namas > த. நமாசு]

நமூது *namūdu,* பெ.(n.) 1. மெய்ப்பிப்பு, சான்று, கரி; proof, evidence. 2. பொறுப்பாளி; responsible person. *"இந்தச் செயலுக்கு அவன் தான் நமூது".* 3. நமோது பார்க்க; see *namōdu.*

[U. namūd > த. நமூது]

நமோது *namōdu,* பெ.(n.) விளத்தக்குறிப்பு; that which is particularised, entered as in an account.

[U. namūd > த. நமோது]

நயச்சென்னை *naya-c-cennai,* பெ.(n.) செந்தினை; red millet. (சா.அக.)

நயனக்கத்தி *nayaṉa-k-katti,* பெ.(n.) கண்ணிற்குள் அறுவை செய்தவற்காக பயன் கொள்ளும் கத்தி; a surgical knife or other instrument used in the operation of the eyes. (சா.அக.)

[நயனம் + கத்தி]

நயனக்குறி *nayaṉa-k-kuṟi,* பெ.(n.) 1. கண்ணோயினால் ஏற்படும் குறிகள்; symptoms occuring in diseases of the eye. 2. கண்ணினால் காட்டும் சைகைகள்; gestures of the eye as in love. 3. நோயினால் கண்ணில் தோன்றும் குறிகள்; the symptoms that appear in the eye due to the disease eg. yellow eyes in jaundice, pale eyes in anemia. (சா.அக.)

[நயனம் + குறி]

நயனகத்தூரி *nayaṉa-kattūri,* பெ.(n.) 1. ஒரு வகைக் கண் மருந்து; eye-salve, ointment for the eye. 2. இன்பமானது; that which is refreshing, soft and pleasant, as medicine for the eye.

[Skt. nayana +kastūri > த. நயனகத்தூரி]

நயனகாசப்படலம் *nayaṉakāša-p-paḍalam,* பெ.(n.) கண் மேலேற்படும் படல நோய்; a film over the eyes. (சா.அக.)

நயனகாசம் *nayaṉa-kāšam,* பெ.(n.) கண் மேற்படர்சதை; film over the eye.

[Skt. nayana-kāša > த. நயனகாசம்]

நயனசஞ்சீவி *nayaṉa-šañjīvi,* பெ.(n.) தூதுவளை; three lobed night shade - Solanum trilobatum. 2. கண்ணிற்குப் பயன்படும் (சஞ்சீவியைப் போன்ற) சிறந்த மருந்து; a reputed application for the eyes. (சா.அக.)

[நயனம் + சஞ்சீவி]

நயனசாணம் *nayaṉa-šāṇam,* பெ.(n.) நயகுஞ்சனம்; ointment for the eye. (சா.அக.)

[நயனம் + சாணம்]

நயனசூலை *nayaṉa-šūlai,* பெ.(n.) கண்குத்தல் நோய்; stabbing pain in the eyes. (சா.அக.)

நயக்கன் *nayakkaṉ,* பெ.(n.) நாய்; dog. (சா.அக.)

நயனத்தரிப்புகண் *nayaṉa-t-tarippu-kaṇ,* பெ.(n.) கண் நமைச்சல்; irritation of the eyes. (சா.அக.)

நயனத்தாபிதம் *nayaṉa-t-tāpidam,* பெ.(n.) கண்ணிற்கேற்படும் அழற்சி; inflammation of the eye ophthalmitis. (சா.அக.)

நயனப்பத்திரி *nayaṉa-p-pattiri,* பெ.(n.) வட்டசாரணை, இதன் இலைகள், கண் மருத்துவத்திற்குப் பயன்படுவதால் பெற்ற பெயர்; rounded mucronate - leaved trianthemaorgia trianthemodes. It is so called because of its usefulness in ophthalmia and other diseases of the eye. (சா.அக.)

நயனப்பரிகாரம் *nayaṉa-p-parigāram,* பெ.(n.) கண் வைத்தியன்; one skilled in the treatment of eye diseases - Oclist. (சா.அக.)

நயனப்பிரபந்தம் *nayaṉa-p-pirabandam,* பெ.(n.) கடைக்கண்; outer corner of the eye. (சா.அக.)

நயநட்டம் *nayanaṭṭam,* பெ.(n.) வருவாய் இழப்பு; profit and loss.

[நயம் + நட்டம்]

நயமாலி *nayamāli,* பெ.(n.) மனோசிலை, இது விளைவு பாடாணம்; arsenicum bisulphuretum. (சா.அக.)

நயனகாசம் *nayaṉa-kāsam,* பெ.(n.) கண்மேற் படர்சதை; film over the eye.

[Skt. nayana-kāśa > த. நயனகாசம்]

நயனகாசப்படலம் *nayaṉakāsa-p-paḍalam,* பெ.(n.) கண் மேலேற்படும் படல நோய்; a film over the eyes. (சா.அக.)

நயனசஞ்சீவி *nayaṉa-sañjīvi,* பெ.(n.) தூதுவளை; three lobed night shade - solanum trilobatum. 2. கண்ணிற்குப் பயன்படும் சஞ்சீவியைப் போன்ற சிறந்த மருந்து; a reputed application for eyes. (சா.அக.)

நயனம் *nayaṉam,* பெ.(n.) 1. கண்; eye in general. 2. கண்மணி; pupil of the eye. (சா.அக.)

நயனமாலை *nayaṉa-mālai,* பெ.(n.) அக்கமணி (உருத்திராட்ச)மாலை; garlands of elaeocarpus bead. *"வனைதரு நயன மாலை" (பிரமோத். 12, 6).*

[Skt. nāyaṉam > த. நயனமாலை]



நயனமோக்கம் *nayaṉa-mōkkam,* பெ.(n.) சிற்பி, சிலைகள் முதலியவற்றிற்குக் கண்ணைத் திறந்து விடுதல்; chise or forming the eye.

[Skt. nayaṉa-mōṭsam > த. நயனமோக்கம்]

நயனரோகம் *nayaṉa-rōgam,* பெ.(n.) 1. கண் நோய்; a disease of the eye - *ophthalmia.* 2. கண்ணில் அரத்தால் அறுப்பது போல் வலிகாணும் ஓர் நோய்; an eye disease characterised by sawing pain in the eyes. (சா.அக.)

[Skt. nayaṉa > த. நயனரோகம்]

நயனவிதி *nayaṉa-vidi,* பெ.(n.) கண் மருத்துவ நூல்; treatise dealing with eye-diseases.

[Skt. nayaṉa > த. நயனம் + விதி]

நரகம் *naragam,* பெ.(n.) 1. கொடுமையும் துன்பங்களும் நிறைந்த உலகம்; hell. *இதனால் எனக்கு நரகம் கிடைக்கும் என்றால் நான் போவேன்.* 2. துன்பமயமானது; unbearable misery hell. *"அடிப்படைத் தேவைக்கும் (அவத்தை) தொல்லைப்படுகிற நரக வாழ்க்கை".*

நரகாவத்தை *naragā-vattai,* பெ.(n.) நிரயத் துன்பம் (நரகலோகம்); hellish torture.

[Skt. naraka > த. நரகாவத்தை]

நவ *nava,* பெ.அ. (adj.) பழமையிலிருந்து விடுபட்டுப் புதுமையை நோக்கிய (புதிய); modern. *நவ பாரதம் / நவ நாகரிகம்.*

நவக்கிரகசெபம் *nava-k-kiraga-šebam,* பெ.(n.) மனிதர்க்கு உண்டாகும் தீமைகளை விலக்குவதற்காக (சூரியாதி) ஒன்பது கோள் மீன்களையும் (கிரகங்களையும்) மந்திர பூர்வமாக உருவேற்றி (செபித்து) வேண்டிக் கொள்ளுதல்; propitiating the nine planets by mantras, with a view to avert their evil effects.

[Skt. nava+graha+japa > த. நவக்கிரகசெபம்]

நவக்கிரகத்தும்பை *nava-k-kiraga-t-tumbai,* பெ.(n.) தன்னுடைய உருவை அடிக்கடி மாற்றக்கூடிய தும்பை; a kind of leucas plant capable of changing its form frequently.(சா.அக.)

நவக்கிரகதோசம் *nava-k-kiragadōšam,* பெ.(n.) 1. குழந்தைகளுக்கு ஒன்பான் கோள் மீன்கள் கோளாறினாலேற்படும் ஒன்பது வகை நோய்கள்; the nine kinds of diseases of infants life which are attributed to the influences of the nine malignant stars or demons. 2. ஒன்பது கோள்மீன்கள். கதிரவன், நிலா, செவ்வாய், அறிவன், வியாழன், வெள்ளி, காரி, கரும்பாம்பு, செம்பாம்பு; the nine planets viz. Sun, Moon, Mars, Mercury, Jupiter, Venus, Saturn, Rahu and Kēthu. (சா.அக.)

நவக்கிரகம்[1] *nava-k-kiragam,* பெ.(n.) தாளகம்; orpiment. (சா.அக.)

நவக்கிரகம்[2] *nava-k-kiragam,* பெ.(n.) 1. கதிரவன், திங்கள், செவ்வாய், அறிவன், வியாழன், வெள்ளி, காரி, கரும்பாம்பு, செம்பாம்பு ஆகிய ஒன்பது கோள்மீன்கள்; nine planets (supposed to govern one's destiny). 2. சிவக் கோவில்களில் ஒரே பீடத்தில் ஒன்றை ஒன்று பார்க்காமல் நிற்கும், மேற்குறிப்பிட்ட ஒன்பது கோள்மீன்களின் சிலைகள்; nine deities presiding over the nine planets (placed in different directions on a base in Saiva temples).

[Skt. navan > த. நவக்கிரகம்]

நவக்கிரகவாதி *nava-k-kiraga-vādi,* பெ.(n.) ஒன்பான்கோள் மீன்களே படைப்பு முதலிய முத்தொழிற்கும் மூலகாரணமென கூறும் சமயத்தினன் (த.நி.போ. 285); follower of the doctrine that the creation, preservation and destruction of universe are caused by nava-k-kiragam.

[நவக்கிரகம் + வாதி]

நவகண்டம் *nava-kaṇḍam,* பெ.(n.) கீழ்பால் விதேகம், மேல் பால் விதேகம், வட பால் விதேகம், தென்பால் விதேகம், வடபாலி ரேபதம், தென்பாலிரேபதம், வடபாற்பரதம், தென்பாற் பரதம், மத்திம கண்டம் என நிலவுலகப் பிரிவாயமைந்துள்ள ஒன்பது கண்டங்கள் (பிங்.); the nine continents of the earth. *"நவகண்டபூமிப் பரப்பை" (தாயு. சின்மயா. 11).*

[நவ + கண்டம்]

[Skt. navan + த. கண்டம்]

நவகதிர் *navakadir,* பெ.(n.) ஆசிவகரது சமயநூல் (மணிமே. 27, 112, உரை); scriptures of the Ajivaka sect.

[Skt. navan + த. நவன்+கதிர்]

நவகருமம் *navakarumam,* பெ.(n.) புதுப் பிக்கும் வேலை; renovation, repairs.

[Skt. nava > த. நவ+கருமம்]

நவகம் *navagam,* பெ.(n.) ஒன்பது; nine. (சா.அக.)

நவகிரகக்கிசம் *nava-k-kiraga-k-kisam,* பெ.(n.) ஒன்பது கோள்மீன்களைப் பற்றிய ஒரு மந்திர வினை நூல். (சா.அக.); a magic science book on the nine planets.

நவகிருத்தியம் *nava-kiruttiyam,* பெ.(n.) புதிதாய்க் கண்டது; discovery.

[நவ + கிருத்தியம்]

நவகெந்தி *navakendi,* பெ.(n.) ஒன்பான் கெந்திக் கல்; brim stone. (சா.அக.)

நவகோசாதிபதி *navakōsādipadi,* பெ.(n.) கட்டளை இடம் (ஆக்கினை); one of the six mystic centres in the cerebral region. (சா.அக.)

நவகோடிசித்தபுரம் *nava-kōḍi-šittapuram,* பெ.(n.) திருவாவடுதுறையென்னும் ஊர் (சங்.அக.); *Tiruvāvaḍuduṟai.*

[Skt. navan > த. நவ+கோடிசித்தபுரம்]

நவகோடிசித்தர் *navakōḍi-šittar,* பெ.(n.) ஒன்பது வகைச் சித்தர் கூட்டம்; the assembly of nine classes of šiddhars who were skilful in medicine.

[Skt. nava > த. நவ+கோடிசித்தர்]

நவகோணத்தாள் *nava-kōṇattāḷ,* பெ.(n.) மலைமகள்; Pārvati. *"நவகோணத் தாட்கிறையை" (சிவரக. தேவர்முனிவர். 1).*

நவச்சங்கு *nava-c-caṅgu,* பெ.(n.) முள்சங்கு; a kind a conch with thorn like elevations on its surface. (சா.அக.)

நவச்சாரஆக்கிராணம் *nava-c-cāra-ākkirāṇam,* பெ.(n.) மூக்கினால் முகரும் காரவுப்பு; smelling salt of volatile. (சா.அக.)

நவச்சாரக்கட்டு *nava-c-cāra-k-kaṭṭu,* பெ.(n.) இறுகச் செய்த எவட்சாரம்; concentrated sal ammoniac.

[Skt. navaccāram + த. கட்டு > த. நவச்சாரக்கட்டு]

நவச்சாரக்கிராணம் *nava-c-cāra-k-kirāṇam,* பெ.(n.) மோத்தற்குரிய எவட்சார வுப்பு; volatile sal-ammoniac.

[நவச்சாரம் + கிராணம்]

[Skt. navaccaram > த. நவச்சாரம்]

நவச்சாரச்சுண்ணம் *nava-c-cāra-c-cuṇṇam,* பெ.(n.) ஆங்கிலேய முறைப்படி செய்த ஒரு வகை எவட்சாரவுப்பு; carbonate of ammonia ($2NH_4$-$OZCo_2$). *"நெஞ் செரிச்சல், வயிற்றுவலி, சுரம், சொறி, பக்க வலி (பாரிச வாயு), நீரிழிவு முதலிய நோய்களுக்குப் பயன்படும். மேலும் வெந்நீர் குளியலில் இதைச் சேர்க்கலாம். இதன் ஆவியை மூச்சுத் திணறலுக்கும் மூர்ச்சைக்கும் பயன் படுத்தலாம்.* (சா.அக.)

நவச்சாரத்தண்ணீர் *nava-c-cāra-t-taṇṇīr,* பெ.(n.) எவட்சாரங் கரைத்த தண்ணீர்; water of Ammonia-Aqua amoniac. (சா.அக.)

நவச்சாரப்பதங்கம் *nava-c-cāra-p-padaṅgam,* பெ.(n.) ஒரு வகை எவட் (நவச்)சாரப் புளிப்பு; salammonac turned into a sublimate. (சா.அக.).

நவச்சாரப்பற்று *nava-c-cāra-p-paṟṟu,* பெ.(n.) எவட்சாரத்தினால் மாழைகள் ஒன்றுடனொன்று பொருந்துமாறு செய்யும் பற்றாசு; a solder, metallic cement.

[நவச்சாரம் + பற்று]

நவச்சாரம் *nava-c-cāram,* பெ.(n.) பள பளப்பான வெள்ளை நிறமும் காரத் தன்மையும் உடைய உப்பு; ammonium chloride.

நவச்சாரமெழுகு *nava-c-cāra-meḻugu,* பெ.(n.) பொன் மணல்; gold ore. (சா.அக.)

நவச்சாரவாயு *nava-c-cāra-vāyu,* பெ.(n.) நீலச்சாயச் சாலையிலும், தோல் பதப்படுத்து மிடத்திலும் உண்டாகிற காற்று (வாயு); a product of the purification of animal matter or the gas, evolved in indigo factories and tanneries Ammonia gas. (சா.அக.)

நவச்சி *navacci,* பெ.(n.) எவட்சாரம்; nitre-Nitrate of potash. (சா.அக.)

நவசக்தி *nava-šakti,* பெ.(n.) ஒன்பது வலிமைகள் (சத்திகள்); the personified female energies or faculties. (சா.அக.)

1. பார்ப்பனி; eneray of Brahma. 2. கார்த்திகை; eneray of Subramania. 3. இந்திராணி; eneray of Indira. 4. மலைமகள்; eneray of Shiva, the great Lord. 5. நரசிம்மி; eneray of the first originent. 6. ரௌத்திரி; eneray of Rudra. 7. வராகி; eneray of Vishnu in the form of boar. 8. வைணவி; eneray of Vishnu.

நவசாரத்தான் *nava-šāra-t-tāṉ,* பெ.(n.) பொன்மணல்; gold ore. (சா.அக.).

நவசாரம் *nava-sāram,* பெ.(n.) ஒன்பது நீரின் சாரம்; salammoniac turned into wax or prepared to form like wax. (சா.அக.)

நவசாரவுப்பு *navašāra-v-uppu,* பெ.(n.) நவசாரத்திலிருந்து எடுக்கப்பட்ட உப்பு; carbonate of ammonia.

[Skt. navaksaram > த. நவசாரவுப்பு]

நவசித்தர் *nava-šittar,* பெ.(n.) காய சித்தி யடைந்த ஒன்பது சித்தர்கள்; the nine famous 'Siddhars' exempted from infirmities of old age. (சா.அக.).

நவசிந்தாமணிலேகியம் *nava-šindāmaṇi-lēgiyam,* பெ.(n.) தாம்பூர செந்தூரத்துடன் துணைப் பருகமாக (அனுபானமாக)க் கொள்ளும் அகத்தியர் 300-ல் சொல்லியுள்ள ஓர் வகை இளகியம்; a kind of electuary taken as a vehicle along with calcined red oxide of copper as contemplated in Aasthiyas wook 300. (சா.அக.)

நவசுரேபாங்குசரசம் *navašurēpāṅgu-šarašam,* பெ.(n.) சுரத்தைப் போக்கி வியர்வையையுண்டாக்கும் ஒரு ஆயுர் வேத மருந்து; an Ayurvedic medicine which causes more sweating and cures fever. (சா.அக.)

நவசூதிகை *nava-šūdigai,* பெ.(n.) ஈன்றணிமையுள்ளவள்; a woman recently delivered of a child.

[Skt. nava+šūtikā > த. நவசூதிகை]

நவத்தம் *navattam,* பெ.(n.) சடாமாஞ்சில்; Indian spikenard - *Cyprus stoloniferus.* (சா.அக.)

நவத்தாழை *navattāḻai,* பெ.(n.) நத்தைக் கூடு; snail shell. (சா.அக.)

நவத்துவாரம் *nava-t-tuvāram,* பெ.(n.) தொண்டொளை (கண்கள், மூக்குத் தொளைகள், காதுகள், வாய், மலவாய்த் தொளை, குறித்தொளை என்னும் ஒன்பது உடல் வாயில்களாம் தொளைகள் (வின்.); the nine apertures of the body viz. two eyes, two nostrils, two ears, mouth, anus and meatus urinarius.

[நவம் + துவாரம்]

தொண்டு = ஒன்பது. தொண் + தொளை > தொண்டொளை.

நவதளம் *nava-taḷam,* பெ.(n.) தாமரைத்தளிர் (சங்.அக.); tender lotus-leaf.

[Skt. nava > த. நவ(ம்) + தளம்]

நவதா *navadā,* பெ.(n.) யானையின் மேல் அமைக்கப்படும் இருக்கை (தவிசு) (யாழ்.அக.); howdah on an elephant.

[Skt. navada > த. நவதா]

நவதானியம் *nava-dāṉiyam,* பெ.(n.) தொண்தவசம் (அவரை, உளுந்து, எள், கடலை, கொள்ளு, கோதுமை, துவரை, நெல், பாசிப்பயறு ஆகிய ஒன்பது வகை தவசங்கள்; nine kinds of grains, viz. beans, blackgram, sesame, bengalgram, horsegram, wheat, red gram, paddy, green gram.

[நவ + தானியம்]

நவதாரணை *nava-tāraṇai,* பெ.(n.) 1. தொண்கவனவூழ்கம். (நாமதாரணை, அக்கரதாரணை, செய்யுட்டாரணை, சதுரங்க தாரணை, சித்திரத்தாரணை, வயிரத்தாரணை, வாயுத்தாரணை, நிறைவுகுறைவாகிய வெண் பொருட்டாரணை, வத்துத்தாரணை யென்னும் ஒன்பது அவதான வகைகள்) (யாப்.வி.96. பக்.

516) (திவா.); the nine modes in the art of concentrated meditation. 2. ஒகத்தில் ஒன்பது வகைப்பட்ட மனோதாரணை; the nine kinds of meditation practised by yogins.

[Skt. nava-dhāraṇā > த. நவதாரணை]

நவதாலி *nava-tāli,* பெ.(n.) தொண்கோள் சாந்தியாக விளக்கிடு கல்யாணத்தில் சிறுமிக்குக் கட்டும் ஒரு வகைத் தாலி (இ.வ.); the tali tied round the neck of girls, on the occasion of viḷakku-kalyāṇam in propitiation of nava-k-kirakam.

[நவம் + தாலி]

[Skt. navan+த. தாலி > த. நவதாலி]

நவதாளம் *nava-tāḷam,* பெ.(n.) தொண்டாளம். (அரிதாளம், அருமதாளம், சமதாளம், சயதாளம், சித்திரதாளம், துருதாளம், நிவிர்த்ததாளம், படிமதாளம், விடதாளம் என்ற ஒன்பது வகைத் தாளம்" (பரத. தாள. 6); ninekindsoftime-measure, viz. aritalam, arumatālam, šāmatalam, šayatalam, šittiratalam, turuvatalam, nivirttatalam, patimatālam, viṭatāḷam.

[நவ(ம்) + தாளம்]

[Skt. nava > த. நவம் + த. தாளம்]

நவதாளகம் *nava-tāḷāgam,* பெ.(n.) இனிப்புப் புளி; *sweet tamarind.* (சா.அக.).

[நவம் + நாகம்]

நவதி[1] *navadi,* பெ.(n.) பொடுதலை; creeping vervain - Lippia nodiflora alias verbina nodiflera. (சா.அக.)

நவதி[2] *navadi,* பெ.(n.) தொண்ணூறு (யாழ்.அக.); ninety.

[Skt. navadi > த. நவதி]

நவதிகை *navadigai,* பெ.(n.) தூரியக்கோல் (யாழ்.அக.); brush.

[Skt. navadikā > த. நவதிகை]

நவதீர்த்தம் *nava-tirttam,* பெ.(n.) தொண்ணீர்க்குளம், கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, சிந்து, காவேரி, கோதாவரி, சோனை, துங்கபத்திரை என்னும் ஒன்பது நற்பேறு தரும் நீர், நீர்த்தம்; the nine sacred rivers of the Hindus. *"கங்கை நதியாதி நவதீர்த்தக் கரை நாட்டுள்" (சைவச. ஆசாரிய. 2).*

[Skt. nava > த. நவ+தீர்த்தம்]

நவதை *navadai,* பெ.(n.) புதுமை (யாழ்.அக.); newness, freshness.

[Skt. nava > த. நவதை]

நவநாகம்[1] *nava-nāgam,* பெ.(n.) ஓமம் (மலை.); bishop's weed.

[நவம் + நாகம்]

நவநாகம்[2] *nava-nāgam,* பெ.(n.) அட்ட (எட்டு) மாநாகமும் ஆதி (முதல்)சேடனும் ஆகிய ஒன்பது மகா நாகங்கள் (வின்.); the nine serpents of the nether world comprising *aṣṭa-mā-nāgam* and *ādicēḍaṉ.*

[Skt. navan > த. நவநாகம்]

நவநாணயம் *navanāṇayam,* பெ.(n.) புதுவழக்கம் (யாழ்.அக.); new practice, innovation.

[Skt. nava+nāṇaka > த. நவநாணயம்]

நவநாதசித்தர் *nava-nāda-šittar,* பெ.(n.) சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அனாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திரநாதர், கோரக்க நாதர் ஆகிய முதன்மைச் சித்தர் ஒன்பதின்மர்; the nine principal šittars, viz. cattiyanatar, šatokanatar, Atinātar, Anatinatar, vakulinatar, matankanatar, maccentira-natar, katentiranatar, korakkanatar. *"நவநாத சித்தர்களுமுன்னட் பினை விரும்புவார்" (தாயு. மௌன. 7).*

[Skt. navan > த. நவநாதசித்தர்]

நவநாதசித்தத்தைலம் *nava-nāda-šitta-t-tailam,* பெ.(n.) கையாந்தகரை, ஆடாதோடை, நொச்சி, ஊமத்தை, சதுரக்கள்ளி, கண்டங் கத்திரி, ஆமணக்கு, தழுதாழை, எருக்கு ஆக

ஒன்பது சரக்குகளைக் கொண்டு சம எடை கொண்டு மற்றும் சில கடைச் சரக்குகளையும் சேர்த்து நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணையும் கூட்டிக் காய்ச்சிய நெய்மம் (தைலம்), இது தலை முழுகவும், ஊதை வலிக்குத் தேய்க் கவும் உதவும்; a bathing and smearing oil for vadha diseases prepared with the juices of nine herbs, and three oils as mentioned above along with some bazaar drugs. (சா.அக.)

நவநாதரசம் *nava-nādarašam,* பெ.(n.) எலும்பைப் பற்றிய காய்ச்சலுக்கு கொடுக்கப் படும் ஓர் ஆயுள் வேத மருந்து; an Ayurvedic medicine given for fevers affecting the bones. (சா.அக.)

நவநிதி *nava-nidi,* பெ.(n.) தொண்ணிதி; பதுமம், மாபதுமம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், நந்தம், நீலம், கர்வம் ஆகிய ஒன்பது வகைப்பட்ட பெருஞ்செல்வம்; the nine treasures of kubēra. *"பிங்கலன்றானருள் பெருக நவநிதியும்" (சேதுபு. துராசா. 20) (பிங்.).*

[Skt. navanidi > த. நவநிதி]

நவநீதகம் *nava-nidagam,* பெ.(n.) 1. நெய்; ghee, melted butter. 2. ஒரு வகை கந்தகம்; sulphur of a particular kind. (சா.அக.)

நவநீதசெயநீர் *navanida-šeyanir,* பெ.(n.) தலைப்பிண்டச் செயநீர்; a strong pungent liquid extracted from the first born foetus. (சா.அக.)

நவநீதசோரன் *nava-nida-šōran,* பெ.(n.) கண்ணபிரான் (யாழ்.அக.); Krishna as butter - stealer.

[நவம் + நீதம் + சோரன்]

நவநீதநீர் *navanidanir,* பெ.(n.) தூய நீர்; nutritional fluid. (சா.அக.)

நவநீதப்பூடு *nava-nida-p-pūdu,* பெ.(n.) மூளையின் மாங்கிசம்; brain tissue - Cerebrin. (சா.அக.)

நவநீதம்[1] *nava-nidam,* பெ.(n.) 1. புது வெண்ணெய்; fresh butter. 2. ஆவின் வெண்ணெய்; butter collected from cow's milk. 3. புத்துருக்கு நெய்; freshly melted ghee. 4. தண்ணீரின் அடியில் நிற்கும் வண்டல்; fine sediment at the bottom of water. (சா.அக.)

நவநீதம்[2] *navanidam,* பெ.(n.) மேள கர்த்தாக்களுளொன்று (சங்.சந். 47); a primary rāga.

[நவம் + நீதம்]

நவநீதபாகம் *navanidabāgam,* பெ.(n.) எளிதிற் பொருளுணர்தற்குரிய செய்யுணடை (யாழ்.அக.); transparent simplicity of style.

[நவம் + நீதம் + பாகம்]

நவநீதபாகு *nava-nidabāgu,* பெ.(n.) மூளையின் பாகைப் போன்ற நீர்; a syrup like liquid derived from the brain.

நவநீதம்பண்ணல் *nava-nidam-pannal,* பெ.(n.) வெண்ணெயைப் போல் செய்தல்; making as fine as butter, making an emulsion. (சா.அக.)

நவநீதமருவிப்பாய்தல் *nava-nida-maruvi-p-pāydal,* பெ.(n.) வெண்ணெயைப் போலாதல்; becoming an oily mass like butter - Emulsion. (சா.அக.)

நவநீதரசம் *nava-nidarasam,* பெ.(n.) 1. இதளியத்தோடு சாரம், வீரம், சிப்பி நீர், சேங்கொட்டை இட்டு உருக்கும் வெண்ணெய்; a glutinous mercury. 2. இதளிய (சுத்தரச)த்தினின்று செய்யும் 10 வகை இதளியச் சத்துக்களிலொன்று; one of the 10 kinds of mercury preparations as contemplated in sidha medicine. it is capable of transmating inferier metals into gold and rejuvenating the human body. (சா.அக.)

நவநீதி *nava-nidi*, பெ.(n.) வெண்ணெய்; butter. (சா.அக.)

நவப்பிரமர் *nava-p-piramar*, பெ.(n.) மரீசி, பிருகு, அங்கிரா, கிரது, புலகன், புலத்தியன், தக்கன், வசிட்டன், அத்தரி என்ற ஒன்பது படைப்பு கடவுள்; the nine creators. viz. *mariśi, pirugu, aṅgirā, kiratu, pulakaṉ, pulattiyaṉ, takkaṉ, vaśiṭṭaṉ, attiri.*

[நவம் + பிரமர்]

நவப்பிரமவுயிர் *nava-p-pirama-v-uyir*, பெ.(n.) தூயநீர் (சுத்தசலம்); amniotic fluid *Liquoramni.* (சா.அக.)

நவப்பிரேதம் *nava-p-pirēdam*, பெ.(n.) எண்டிக்கும் மேலிடமுமாகிய ஒன்பது திசை களையும் காவல் புரியும் பூதங்கள் (வின்.); the nine demons who are believed to protect the eight cardinal points, and the zenith.

நவப்பீரிதி *nava-p-piridi*, பெ.(n.) வெடியுப்பு (சங்.அக.); salt petre.

[நவம் + பீரிதி]

நவபண்டம் *nava-paṇḍam*, பெ.(n.) கோதுமை, நெல், துவரை, பயறு, கடலை, அவரை, எள், உளுந்து, கொள் ஆகிய ஒன்பது வகைத் தவசங்கள் (வின்.); the nine kinds of grain.

[Skt. navan > த. நவபண்டம்]

நவபதார்த்தம் *nava-patārttam*, பெ.(n.) சீவம், அசீவம், புண்ணியம், பாவம், ஆசிரவம், சம்வரை, நீர்ச்சரை, பந்தம், மோட்சம் என ஒன்பது வகைப்பட்ட சைன மத தத்துவங்கள் (சீவக. 2814, உரை); the nine categories or fundamental realities. civam, acivam, punniyam, povam, aciravam, camurai, niraccarai, pantam, motcam.

[Skt. navan > த. நவ + பதார்த்தம்]

நவபந்தனம் *navabandanam*, பெ.(n.) உடம்பி லுள்ள ஒன்பது வாயில்களையும் அடக்குதல்; suppressing the action of the nine appertures in the body. (சா.அக.)

நவபல்லவம் *nava-pallavam*, பெ.(n.) 1. தளிர்; tender leaf. 2. இலையாமணக்கு; a kind of castor plant. (சா.அக.)

நவபாண்டம் *nava-pāṇḍam*, பெ.(n.) புதுப்பானை (இ.வ.); new pots.

[Skt. nava > த. நவ + பாண்டம்]

நவபாசாணம் *navapāśāṇam*, பெ.(n.) தெண்ணச்சு; கடற்கரை நீரில் அமைக்கப் பெற்ற நவக்கிரகச் சிலைகளை உடையதும் இராமநாதபுரத்தையடுத்துள்ளதும் யாத் திரைக்குரிய தலமுமான தேவிபட்டணம் என்ற ஊர்; Devipattanam a place of pilgrimage near Ramnad, having nine large stones representing the nine planets, fixed in shallow water along the seashore.

[Skt. navan > த. நவ + பாசாணம்]

நவபாடாணம் *nava-pāḍāṇam*, பெ.(n.) கடையில் விற்கப்படும் ஒன்பது வகைப் பாடாணங்கள்; the nine kinds poisons generally sold in bazars. (சா.அக.)

நவபுண்ணியம் *nava-puṇṇiyam*, பெ.(n.) எதிர்கொளல், பணிதல், இருக்கையீதல், கால்கழுவல், அருச்சித்தல், நறுமண புகை ஊட்டல் (தூபங் கொடுத்தல்), தீபங்காட்டல், புகழ்தல், உண்டியீதல் என ஒன்பது வகைப்பட்ட விருந்தோம்பல் செயல்கள் (யாழ்.அக.); the nine acts of hospitality shown to an honoured guest.

[Skt. nava > த. நவ + புண்ணியம்]

நவபூசாவந்தம் *nava-pūśāvandam*, பெ.(n.) ஒன்பது முகமுடைய கடுக்கன் வகை (வின்.); nine-faced ear ring.

[Skt. navan > த. நவ + பூசாவந்தம்]

நவபேதமூர்த்தம் *navapēda-mūrttam*, பெ.(n.) சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவம், ஈசன், உருத்திரன், மால், அயன் என்ற ஒன்பது வகையான சிவபேதம் (சி.சி.2, 74); the nine

manifestations of siva (viz., *civam, catti, nātam, vintu, cācivam, ican, uruttiran, māl, āyan*).

[Skt. navan > த. நவ + பேதமூர்த்தம்]

நவம்¹ *navam,* பெ.(n.) 1. புதுமை (பிங்.); freshness, novelty. *"நவமாய செஞ்சுடர் நல்குதலும்" (திருவாச. 11, 4).* 2. நட்பு (திவா.); friendship, affection. 3. நிலம் (அந.நி.); earth.

[Skt. nava > த. நவம்]

நவம்² *navam,* பெ.(n.) 1. பாம்பு; snake. 2. சாரணை; one styled trianthema - Trianthema monogyna. 3. மாரிக்காலம்; rainy season. 4. புதுமை; novelty. (சா.அக.)

நவம்³ *navam,* பெ.(n.) ஒன்பது (பிங்.); the number nine.

[Skt. navan > த. நவம்]

நவம்⁴ *navam,* பெ.(n.) கார்காலம் (பிங்.); winter.

[Skt. nabhas> த. நவம்]

நவமணி *navamaṇi,* பெ.(n.) தொண்மணி. கோமேதகம், நீலம், பவளம், மரகதம், மாணிக்கம், முத்து, புருடராகம், வைடூரியம், வயிரம் ஆகிய ஒன்பது வகை அரத்தனங்கள் (திவா.); the nine gems or precious stones. viz., *kōmētagakam, nīlam, pavaḷam, maragatam, māṇikkam, muttu, purutarākam, vaiḍūriyam, vairam.*

[Skt. navan > த. நவம் + மணி]

நவமணிச்சிந்தூரம் *nava-maṇi-c-cindūram,* பெ.(n.) வீரம், பூரம், இலிங்கம், கந்தகம், படிகாரம், வெண்காரம், எவட் (நவா)ச் சாரம், வெடியுப்பு, அயம் ஆகிய இவ்வொன்பது சரக்கு களைப் புடமிட்ட சிந்தூரம்; red oxide obtained by calcining the following nine drugs corresive sublimate, sub chloride of mercury, vermillion, sulphur, alum, borax, salammoniac, nitre and iron. (சா.அக.).

நவமணிமாலை *navamaṇi-mālai,* பெ.(n.) 1, தொண்மணி மாலை; a necklace of the nine gems. *"அணிகிளர் மாடவீதி நச்சரவுச் சியாட்கு நவமணி மாலைமானும்" (குற்றா. தல. நகரச்சருக். 13).* 2. ஒன்பது பாவகையால் ஈறு தொடக்கி(அந்தாதி)யாக இயற்றப்படும் ஒரு பிரபந்தம் (இலக். வி. 837); a poem of nine verses of various metres in antādi.

[நவமணி + மாலை]

நவமல்லி *navamalli,* பெ.(n.) சித்தினி இன (சாதி)ப்பெண்; one of the four classes of woman divided according to lust. (சா.அக.)

நவமாதம் *navamādam,* பெ.(n.) ஒன்பது மாதம்; nine month. (சா.அக.)

நவமாலி *navamāli,* பெ.(n.) மனோசிலை (சங்.அக.); realgar.

[Skt. navamali > த. நவமாலி]

நவமாலிகம் *nava-māligam,* பெ.(n.) இரட்டை மல்லிகை; jasminum sambac (double flowered). (சா.அக.)

நவமி¹ *navami,* பெ.(n.) உவா ஒன்பது; the ninth lunar day after the new or full moon.

நவமி² *navami,* பெ.(n.) காருவா (அமாவாசை) அல்லது வெள்ளுவா (பௌர்ணமி) கழிந்த ஒன்பதாவது நாள்; the ninth lunar day after the new moon and after the full moon. *"நவமிதனி விழைத்திடுமேல்ஞ (சேதுபு. துரா. 29).*

[Skt. navami > த. நவமி]

நவமுகில் *nava-mukil,* பெ.(n.) சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலம், துரோணம், காளம், நீலம், வாருணம், வாயுவம், தமம் ஆகிய ஒன்பது வகை மேகங்கள் (வின்.); the nine kinds of clouds viz. *camvarttam, āvarttam, putkalam, turonam, kalam, nīlam, vāruṇam, vāyuvam, tamam.*

[Skt. navan > த. நவமுகில்]

நவமூர்த்திமெழுகு *nava-mūrtti-meḻugu,* பெ.(n.) எவட் (நவாச்)சாரம், வீரம், பூரம், கௌரி, தாரம், இலிங்கம், வெள்ளை, வெடியுப்பு, கறிப்பு ஆகிய இவ்வொன்பதையும் ஒவ்வொன்றாக நாதத்தினால் 9 நாள் மெழுகைப் போல் அரைத்துத் திரட்டி வைத்துக் கொள்ளும் ஒரு வகை மருந்து; a wax like preparation or medicine obtained by grinding for nine days the following nine drugs first separately and then all to gether with Natham a prepared fluid-salammoniac, corrosive sublimate subchloride of mercury golden arsenic, yellow orpiment vermillion white arsenic, nitre, common salt they must be grinded till they obtain the wax like consistency. (சா.அக.)

நவமூலம் *navamūlam,* பெ.(n.) மூளை மூலம், இரத்தமூலம், சீழ்மூலம், உள்மூலம் முதலிய ஒன்பது வகை நோய்கள்; the nine varieties of piles. (சா.அக.)

நவமை *navamai,* பெ.(n.) குற்றம்; defect, fault. *"நவமை நீங்கிய நற்றவன்" (கம்பரா. அகத். 31).*

நவர் *navar,* பெ.(n.) ஆள் (இ.வ.); person.

[U. nafar > த. நவர்]

நவர்சிட்டா *navar-šiṭṭā,* பெ.(n.) பேர்வாரி வரிக்கணக்கு (சிட்டா); revenue account of holdings with assessment arranged under the names of the holders.

[U. nafar > த. நவ+சிட்டா]

நவரங்கப்பணி *navaraṅga-p-paṇi,* பெ.(n.) கோயில் மேற்கூரை (விதானம்) வேலைகளில் ஒரு வகை (நாஞ்.); a kind of ornamentation in a canopy.

[U. nava+raṅga > த. நவரங்கப்பணி]

நவரங்கப்பளி *navaraṅgapa-p-paḷi,* பெ.(n.) புடைவை வகை; a kind of saree.

[Skt. nava+raṅga > த. நவரங்கபப்பளி]

நவரசம்[1] *navarašam,* பெ.(n.) 1. தொண்சுவை, ஒன்பது வகைச் சுவை; the nine kinds of juices or essences. 2. வாலை உப்பு; quintessence of salt. (சா.அக.)

நவரசம்[2] *nava-rašam,* பெ.(n.) (தொண்சுவை) ஒப்பனை (சிங்காரம்), ஆசியம், கருணை, சினம், வீரம், பயம், அருவருப்பு, அற்புதம், சாந்தம் (அமைதி) ஆகிய ஒன்பது வகை நூற்சுவைகள் (திவா.); the nine sentiments or emotions prevailing in a literary work, chiefly poetry or drama viz. *šinkāram, āšiyam, karṇai, irauttiram, vīram, bayam, kuṟcai, aṟpudam, šāndam.* (வடமொழியில் குறிப்பிடப்படும் ஒன்பது வகையான மெய்ப்பாடுகள்).

[Skt. navan+(Rhet.) > த. நவரசம்]

[நவ + ரசம்]

நவரசமெழுகு *navaraša-meḻugu,* பெ.(n.) இராசபிளவை போக்கும் மருந்து; a waxy medicine that cures diabetic carbuncle. (சா.அக.)

நவரங்கம் *nava-raṅgam,* பெ.(n.) 1. நாடக சாலை (பிங்.); theatre. 2. கோயில் நடுவரங்கம் கோயிலிலுள்ள முதன்மை மண்டபம் (இ.வ.); central hall of a temple.

[Skt. nava+raṅga > த. நவரங்கம்]

நவரத்தினவைப்பு *nava-rattiṉa-vaippu,* பெ.(n.) ஒன்பது வகை அரத்தினங்களைச் செய்யும் வைப்பு முறையைப் பற்றிச் சொல்லும் மருத்துவ நூல்; a treatise on medicine compiled by siddha named Sattaimuni dealing with the artificial process of making the nine gems synthetically together with their qualities and uses in medicine. (சா.அக.)

நவவரிகை *nava-varigai,* பெ.(n.) புதுமணப் பெண் (யாழ்.அக.); a woman recently married.

[Skt. navavarikā > த. நவவரிகை]

நவவாயில் *navavāyil,* பெ.(n.) ஒன்பது (நவத்துளை வாரம்); the nine gates or openings in the human system. (சா.அக.)

[நவம் + வாயில்]

நவவானோர்கள் *nava-vāṉōrgaḷ,* பெ.(n.) கிறித்தவ மதத்தில் வழங்கும் ஒன்பது வகைப்பட்ட தேவகணங்கள் (வின்.); nine choirs of celestial spirits.

[Skt. nava > த. நவ + வானோர்கள்]

நவவியாகரணம் *nava-viyāgaraṇam,* பெ.(n.) இந்தியாவில் இருந்த ஒன்பது இலக்கண நூல்கள்; the nine ancient treatises on Indian grammar.

[Skt. navan > த. நவ + வியாகரணம்]

இவற்றுள் முதலாவதும் காலத்தால் மிகுந்த தொன்மையுடையதும் ஐந்திரத் தமிழிலக்கணம் என நூல்கள் குறிப்பிடுகின்றன.

நவவியூகம் *nava-viyūgam,* பெ.(n.) கால வியூகம், குல வியூகம், நாமவியூகம், ஞான வியூகம், சித்த வியூகம், நாதவியூகம், விந்து வியூகம், கலா வியூகம், சிவவியூகம் என்ற ஒன்பது வகைப் பொருட்டொதொகுதிகள் (சௌந்த. 1, உரை); the nine categories of things.

[Skt. navan > த. நவ+வியூகம்]

நவராசிகம் *navarāśigam,* பெ.(n.) கணக்கு வகை (வின்.); rule of nine.

[Skt. navan+(math) > த. நவராசிகம்]

நவராத்திரி *nava-rāttiri,* பெ.(n.) தொள்ளிரா (புரட்டாசி மாதம் வளர்பிறையின் முதல் நாளிலிருந்து ஒன்பது இரவுகள் கொண்டா டப்படும் பண்டிகை); a festival for the Goddessess Durga. Lakshmi. Saraswathi. celebrated for nine days. *"நவராத்திரிக்குக் கொலு வைக்கப் போகிறீர்களா?"*. (இ.வ.).

[Skt. nava(n)+rātri > த. நவராத்திரி]

நவரோசு *navarōsu,* பெ.(n.) ஓர் இசை, பண், இராகம் (வின்.); a kind of tune.

[U. naurōz(mus.) > த. நவரோசு]

நவரோதயம் *navarōdayam,* பெ.(n.) சீனிக் கற்கண்டு (சர்க்கரை கற்கண்டு); white sugar candy. (சா.அக.)

நவலோகம் *navalōgam,* பெ.(n.) பொன், இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி, பித்தளை, தரா, துத்தநாதம், வெண்கலம் ஆகிய ஒன்பது மாழைகள் (பிங்.); the nine kinds of metal, viz. *poṉ, irumpu, šempu, īyam, veḷḷi, pittaḷai, tarā, tuttanāgam, veṇkalam.*

[Skt. navan > த. நவம் + உலோகம்]

நவலோகக்களங்கு *navalōga-k-kaḷaṅgu,* பெ.(n.) ஒன்பது உலோகங்களையும் இதளிய (இரச)த்தையும் சேர்த்துச் செய்யும் உருண்டை; alloy prepared with nine metals along with mercury. (சா.அக.)

நவலோகக்களிம்புபோக்கு *navalōga-k-kaḷimbu-pōkku,* பெ.(n.) தேவதாளி அல்லது பேய்ப்பீர்க்கு; snake *luffa-Luffaechinata.* (சா.அக.)

[நவம் + உலோகம் + களிம்பு + போக்கி]

நவலோகக்குப்பி *navalōga-k-kuppi,* பெ.(n.) சுதை மண் (யாழ்.அக.); chunam.

[Skt. nava > த. நவம் + உலாகக்குப்பி]

நவலோகச்சத்து *nava-lōga-c-cattu,* பெ.(n.) ஒன்பது மாழை (லோக) வகைகளைச் சேர்த்துப் புடமிட்டு எடுத்த சத்து; the essence derived by subjecting the nine metals to violent heat or calcination - Calx of nine metals. (சா.அக.)

[நவம் + உலோகம் + சத்து]

நவலோகத்தகடு *navalōga-t-tagaḍu,* பெ.(n.) ஒன்பது மாழை (லோகங்)களையும் ஒன்று சேர்த்து உருக்கித் திரட்டித் தட்டிய தகடு; the foil or plate of an alloy of nine metals. (சா.அக.)

[நவம் + உலோகம் + தகடு]

நவலோகபூபதி *nava-lōga-pūpadi,* பெ.(n.) ஒரு வகைக் கூட்டு மருந்து; a medicinal compound.

[நவலோகம் + பூபதி]

நவலோகபூபதிமாத்திரை *navalōga-pūpadi-māttirai,* பெ.(n.) ஒன்பது மாழை (லோகங்) களையும் சேர்த்துச் செய்த காய்ச்சல், இசிவு முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் கூட்டு மருந்துக் குளிகை; a reputed pill prepared as per process of Tamil medicine from a mixture of nine metals. (சா.அக.)

[நவம் + உலோகம் + பூபதி + மாத்திரை]

நவலோகபேதி *navalōgapēdi,* பெ.(n.) 1. செந்தி பாடாணம்; a poisonous compound of sulphur in its native state, a mineral poison. 2. ஒன்பது மாழை (லோகங்) களையும் பேதிக்கச் செய்யும் மருந்து; any substance capable of acting chemically on nine metals. (சா.அக.)

[நவம் + உலோகம் + பேதி]

நவலோகம் *navalōgam,* பெ.(n.) ஒன்பது வகை மாழை (உலோகங்)களான, பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், வங்கம், நாகம், குருத்துவம், குடவன் (அ) பித்தளை; gold, silver, copper, iron, tin, lead, zinc, platinum and brass. (சா.அக.)

[நவம் + உலோகம்]

நவலோகமேமமாக்கி *navalōgamēma mākki,* பெ.(n.) 1. இலவண பாடாணம்; a kind of prepared arsenic. 2. குங்கும பாடாணம்; one of the 32 kinds of prepared arsenic. (சா.அக.)

நவலோகவக்கினிகுமாரன் *navalōga-v-akkini-kumāran,* பெ.(n.) உடம்பினிலுள்ள நோய்களை நெருப்பைப் போல் எரிக்கக் கூடிய ஒன்பது மாழை (லோகங்)களைக் கொண்டு செய்யப்பட்ட ஓர் மருந்து; a reputed or well known remedy for curing or reducing to nothing like fire, all oilments in the system radically, prepared with the aid of nine metals. (சா.அக.)

[நவம் + உலோகம் + வக்கினி + குமாரன்]

நவலோகவங்குசம் *navalōga-v-aṅgusam,* பெ.(n.) காந்தம்; load stone magnet. (சா.அக.)

[நவம் + உலோகம் + வங்குசம்]

நவலோகவேதிச்சி *navalōga-vēdicci,* பெ.(n.) கருநெல்லி; black Indian gooseberry - *Phyllanthus emblica.* (சா.அக.)

[நவம் + உலோகம் + வேதிச்சி]

நவலோகாங்கம்[1] *navalōgāṅgam,* பெ.(n.) காந்தம்; load stone, magnet. (சா.அக.).

நவலோகாங்கம்[2] *navalōgāṅgam,* பெ.(n.) காந்தம் (மூ.அ.); magnet.

[Skt. nava-lōkam > த. நவலோகாங்கம்]

நவாக்கரி *navā-k-kari,* பெ.(n.) தொள்ளெழுத்து மந்திரம், ஒன்பது எழுத்துகளுள்ள மந்திர வகை; a sacred mantra of nine letters. *"நவாக்கரி சக்கர நானுரை செய்யின்" (திருமந். 1319).*

[Skt. nava(n)+akṣari > த. நவாக்கரி]

நவாச்சரக்கட்டு *navā-c-cāra-k-kaṭṭu,* பெ.(n.) நெருப்புக்கு ஓடாதபடி கட்டிய (நவாச்சாரம்); consolidated salt ammoniac which resists fire. (சா.அக.)

நவாச்சாரக்காரம் *navā-c-cāra-k-kāram,* பெ.(n.) 1. நவாச்சாரநீர்; strong solution of ammonia - Liquor ammoniac. 2. நவாச் சாரவுப்பு; carbonate of ammonia - Ammoniac carbonas. 3. நவாச்சார செயநீர்; a liquid with a very pungent odour and strong alkaline reaction obtained by exposing salammoniac with other ingredients in the night's dew. (சா.அக.)

நவாச்சாரக்கிராணம் *navā-c-cāra-k-kirāṇam,* பெ.(n.) ஒன்பது (நவாச்)சாரத்தோடு கூட இரண்டு பங்கு சீமைச் சுண்ணாம்பும் நன்றாகக் காய வைத்துக் கலந்து பதங்கமாக வெரித்த ஓர் வகை ஒடுஞ் சரக்கு; smelling salt volatile salt ammoniac. *வலிப்பு, இழுப்பு, மூர்ச்சை, சூதகசன்னி ஆகிய நோய்களுக்கு*

மூக்கில் முகருவதற்காக உபயோகப் படுத்தப்படும் மருந்து. (சா.அக.)

நவாச்சாரம் *navā-c-cāram,* பெ.(n.) வாசனை யற்ற, பளபளப்பான நாரிழை போன்ற ஓர் வெண்மையான பொருள்; a colourless, in odourous and translucent fibrous mass known as salammoniac - *Ammonis ahlaridum.* (சா.அக.)

நவாச்சாரவாயு *navā-c-cāra-vāyu,* பெ.(n.) நவாச்சாரத்தினின்று கிளம்பும் நச்சுக்காற்று; gas ammonia (NH3). It is a poisonous gas found in sal ammoniac. *மனிதனின் மூத்திரத்திலும், அழுகி நாற்றமுள்ள உயிரி (சீவராசி)களிலும் பொருந்தியுள்ளது.* (சா.அக.)

நவாச்சாரவாயுசெயநீர் *navā-c-cāra-vāyu-šeyanīr,* பெ.(n.) தாம்பூரபற்பம்; செந்தூரத் திலுள்ள குற்றங்களை நீக்கும் தன்மை யுடையது; solution of ammonia. it is capable of removing the defects in calcined oxides of copper either red or white. (சா.அக.)

நவாட்டுச்சருக்கரை *navāṭṭu-c-carukkarai,* பெ.(n.) பூராச்சருக்கரை (இ.வ.); fine, white can-sugar.

[நவாது + சருக்கரை]

நவாடா *navāḍā,* பெ.(n.) தோணி (வின்.); boat, dhoney.

[Skt. nava]

நவாத்து *navāttu,* பெ.(n.) மணற் சர்க்கரை; aska sugar. (சா.அக.)

நவாது *navādu,* பெ.(n.) வெண்மையான சருக்கரைவகை (வெண் சருக்கரை) (இ.வ.); a kind of white sugar.

[T. navātu > த. நவாது]

நவாமிசம் *navāmišam,* பெ.(n.) தொண்பகிர்வு, ஓரை(இராசி)யை ஒன்பதாகப் பகிர்கை (சோதிட. சந். 123); division of a sign of the zodiac into nine equal parts.

[Skt. navan > த. நவாமிசம்]

நவார்ப்பட்டை *navār-p-paṭṭai,* பெ.(n.) பல நிறமான பட்டை (R.); multi-coloured tape.

[Skt. nawār > த. நவார் + பட்டை]

நவனாகம் *navaṇāgam,* பெ.(n.) ஓமம்; bishop's weed-carum ajwaun; sison - sison ammi. (சா.அக.)

நவிசிந்தா *navišindā,* பெ.(n.) உதவியாளர் (C.G.); accountant, clerk.

[U. nawi-sindah > த. நவிசிந்தா]

நவிசு *navišu,* பெ.(n.) உதவியாளர் (C.G.); writer, scribe.

[U. nawis > த. நவிசு]

நவீன *naviṇa,* பெ.எ. (adj.) 1. புதிய; modern. 2. தற்காலத்திய; pertaining to the present time. 3. வியப்புக்குரிய கதை; novel. (சா.அக.)

நவீனநூலாராய்ச்சி *naviṇa-nūlārāycci,* பெ.(n.) புதிய நூலாய்வு; modern scientific research. (சா.அக.)

நவீனம் *naviṇam,* பெ.(n.) 1. புதுமை (உரி.நி.); newness, novelty. 2. புதிய முறையில் எழுதப்பட்ட கதை; novel.

[Skt. navina > த. நவீனம்]

நவோத்திரிதம் *navōttiridam,* பெ.(n.) வெண்ணெய் (சங்.அக.); butter.

[Skt. navōdhṛta > த. நவோத்திரிதம்]

நாக்குச்சதம்பனம் *nākku-c-cadambaṇam,* பெ.(n.) நாக்கு இழுப்பு நோய் (பைஷஜா.); palsy of the tongue.

[Skt. nākkuṟuti > த. நாக்கு + சதம்பனம்]

நாச்சநார் *nāccanār,* பெ.(n.) நஞ்சா; spurge laurel. (சா.அக.)

நாகபஞ்சமி *nāga-pañjami,* பெ.(n.) பால் பயறு முதலியவற்றை நாகத்துக்கு இட்டு அதனை வணங்கும் நாளாகிய சிராவண சுக்கில பஞ்சமி (இ.வ.); the fifth lunar day of the bright for night in the month of sravaṇa in which the

Nagas or serpent - gods are worshipped with offerings of milk, grain, etc.

[Skt. naga > த. நாகபஞ்சமி]

நாகபசுமம் *nāga-bašumam,* பெ.(n.) வெள்ளடத்தை (துத்தநாகத்தை) நீற்றி யெடுத்த மருந்து (இங்.வை.); oxide of zinc, Zinci oxidum.

[Skt. nāga+bhasman > த. நாகபசுமம்]

நாகப்பிரதிட்டை *nāga-p-pirâdittai,* பெ.(n.) பாம்பைக் கொன்ற தீவினையைப் போக்கு வதற்குச் சிலை முதலியவற்றில் நாகத்தை நிலைகோள் செய்தல்; ceremony of setting up a serpentidol under a pipal tree to expiate the sin of having killed a cobra.

[நாகம் + பிரதிட்டை]

நாகபூசணன் *nāga-būšanan,* பெ.(n.) சிவன், பாம்பணி பூண்டவன்; Šiva, as wearing serpent-ornaments.

[Skt. nāga+bhūshana > த. நாகபூசணன்]

நாகபாடாணம் *nāga-pādānam,* பெ.(n.) சூதம், இலிங்கம், கருவங்கம், பச்சை, பொன் அரிதாரம், காரம் இவைகளைப் பொடித்துக் குகையில் வைத்து மேல்மூடிச் சீல் மண் செய்து கசப்புடத்தில் போட்டு முதிர அனல் மூட்டிப் பிறகு ஆறியபின் உடைத்துப் பார்க்க மருந்து உருகி ஈயம் போல் வலிந்து இறுகிக் கட்டி யாயிருக்கும் இதுவே நாக பாடாணம் மாழையில் (உலோகத்தில்) பழுத்திடும்; a kind of prepared arsenic an alchemical compound of zinc. (சா.அக.)

நாகமோடிவேட்டி *nāga-mōdi-vētti,* பெ.(n.) நாகக்கோடு இட்ட வேட்டி வகை (வின்.); a kind of cloth with serpent - like stripes.

[நாகம் + ஓடி + வேட்டி]

நாசகாரி *nāsakāri,* பெ.(n.) நோய்களைக் கண்டிக்கும் மருந்து; an infalliable remedy. (சா.அக.)

நாசகாரிவாயு *nāšakāri-vāyu,* பெ.(n.) நைட்ரசன்; nitrogen. (சா.அக.)

நாசகேரளம் *nāsakēralam,* பெ.(n.) சிவதை வேர்; India rhubarb, Indian jalap - Ipomaea turpethum. (சா.அக.)

நாசவக்கணை *nāšava-k-kanai,* பெ.(n.) காகதும்புரு; kanjilals mottled ebony - *Diospyros kanjiali.* (சா.அக.)

நாசாக்கிரம் *nāšā-k-kiram,* பெ.(n.) மூக்கு நுனி; tip of the nose. (சா.அக.)

நாசாகிராவம் *nāšākirāvam,* பெ.(n.) மூக்கிலொழுகும் அரத்தவொழுக்கு; bleeding from the nose - *Epistaxiz.* (சா.அக.)

நாசாதக்கணம் *nāsāda-k-kanam,* பெ.(n.) வலது நாசி; right nostrill. (சா.அக.)

நாசாபாக்கரோகம் *nāšāpākka-rōgam,* பெ.(n.) மூக்கு நோய்; a nose disease. (சா.அக.)

நாசப்பழக்கம் *nāša-p-palakkam,* பெ.(n.) கெட்ட பழக்கம்; pernicious habits. (சா.அக.)

நாசாபுடம் *nāšāpudam,* பெ.(n.) மூக்குத் துளை; nostrill. (சா.அக.)

நாசம் *nāšam,* பெ.(n.) 1. பேரழிவு, பெருத்த அழிவு; destruction, (heavy) loss or damage. *"தொடர்ந்து பெய்த அடை மழையால் அறுவடைக்கு அணியமாக இருந்த பயிர்கள் நாசம்". "கலகக் காரர்கள் கடைகளை யெல்லாம் அடித்து நொறுக்கி நாசம் செய்தனர்".* 2. சீரழிவு; ruin, wreck. *"இந்தக் குடும்பத்தின் நாசத்திற்கு அவருடைய குடிப்பழக்கம் தான் காரணம்".*

நாசமாய்ப்போ-தல் *nāšamāy-p-pō,* 8 செ.கு.வி.(v.i.) உருப்படாமல் போதல்; go to rack and ruin. *"குடித்துக் குடித்து நாசமாய்ப் போய் விட்டான்". "நீ நாசமாய்ப் போ".*

நாசாரிசம் *nāšārišam,* பெ.(n.) மூக்கில் வளரும் சதை; polypus of the nose. (சா.அக.)

நாசாவாமம் *nāšāvāmam,* பெ.(n.) இடது மூக்கு; nose. (சா.அக.)

நாசவேலை *nāšavēlai,* பெ.(n.) கமுக்கமாய்ச் செய்யும் கெட்ட நோக்கமுடைய செயல்;

sabotage. "ரயில் விபத்துக்கு நாச வேலை தான் காரணம் என்று கூறப்படுகிறது. சமாதான ஒப்பந்தத்தைக் கெடுப்பதற்கென்றே இந்த நாச வேலைகள் நடைபெற்றுள்ளன". (இவ.).

நாசனி *nāsaṉi,* பெ.(n.) அழிக்கக் கூடியது; anything capable of destructing. (சா.அக.)

நாவான்னம் *nāvāṉṉam,* பெ.(n.) வெஞ்சோறு, சுடுசோறு; hot cooked rice. (சா.அக.)

நவான்னபானம் *navāṉṉa-bāṉam,* பெ.(n.) புது அரிசியைச் சமைத்த சோறு, புது மது பானம்; cooked new rice and new wines. (old rices old wines are always beneficial). (சா.அக.)

நாசி *nāsi,* பெ.(n.) 1. மூக்கு; nose. 2. வஞ்சி; rattan of S.India - calamus rotang. 3. மூக்குத் துளை; nostril. (சா.அக.)

நாசி *nāši,* பெ.(n.) மூக்கு; nose.

நாசிஉக்கிரமம் *nāši-ukkiramam,* பெ.(n.) மூக்கு நோய்; disease of the nose. (சா.அக.)

[நாசி + உக்கிரமம்]

நாசிஉதிரம்[1] *nāši-udiram,* பெ.(n.) மூக்கு நோய்; disease of the nose.

[நாசி + உதிரம்]

நாசிஉதிரம்[2] *nāši-udiram,* பெ.(n.) மூக்கில் அரத்தம் வடிதல்; bleeding from the nose - Epistaxis. (சா.அக.)

நாசிஉயிர் *nāšiuyir,* பெ.(n.) ஒகப்பயிற்சிக்கு உதவும் இயல்புள்ள நீர்மம் (சுக்கிலம்); semen which is considered important for suppressing the breath in the yōga practice and hence the name. (சா.அக.)

நாசிக்கனைப்பு *nāši-k-kaṉaippu,* பெ.(n.) சளி முதலியவற்றால் மூக்கு வீங்கியிருக்கை (வின்.); inflammation of the nose from cold or mucus.

[Skt. naci > த. நாசி + கனைப்பு]

நாசிகாக்கிரம் *nāši-kākkiram,* பெ.(n.) நுனிமூக்கு; tip of the nose. "விழித் துணைகணாசி காக்கிரத்தினுற" (பிரபோத. 44, 14).

[Skt. nāsi-kā+agra > த. நாசிகாக்கிரம்]

நாசிக்கிரந்தி *nāši-k-kirandi,* பெ.(n.) மூக்கை யரிக்கும் மேகப்புண்; a kind of syphilitic ulcer eating away or otherwise affecting the nose. (சா.அக.)

நாசிகதமம் *nāšigadamam,* பெ.(n.) மூக்குச் சிந்தல்; blowing the nose. (சா.அக.)

நாசிகமலம் *nāsi-kamalam,* பெ.(n.) 1. மூக்குப் பீ; nose dirt. 2. மூக்குச் சளி; mucous from the nose snot. (சா.அக.)

நாசிகாசிராவம் *nāšigā-širāvam,* பெ.(n.) மூக்கினின்று அதிகமாய் நீர் வடியும் ஓர்வகைப் உளைச்சளி (பீனசம்); catarrh of the nose. (சா.அக.)

நாசிகாசூரணம் *nāšigā-šūraṇam,* பெ.(n.) 1. நாசிவழியாக ஏற்றும் அல்லது இழுக்கும் மருந்துப் பொடி; a medicinal powder sniffed. 2. மூக்குத் தூள்; snuff. (சா.அக.)

நாசிகாபீடம் *nāšikā-piḍam,* பெ.(n.) மூக்கிற்குள் சதை வளரும் நோய்; polypus of the nose. (சா.அக.)

நாசிகாபீடை *nāsikā-piḍai,* பெ.(n.) 1. மூக் கழுக்கு; rheum. 2. மூக்குச் சளி; mucous from the nose snot. (சா.அக.)

நாசிகாபூசணி *nāsikā-pūsaṇi,* பெ.(n.) மேளகர்த்தாக்களுளொன்று (சங்.சந். 47); a primary *rāga.*

[நாசிகா + பூசணி]

நாசிகாரோகம் *nāsikā-rōgam,* பெ.(n.) பொதுவாக மூக்கில் வரும் நோய்கள்; diseases in general of the nose. (சா.அக.)

நாசிச்சளி *nāsi-c-caḷi,* பெ.(n.) மூக்குச்சளி; mucous from the nose. (சா.அக.)

நாசிசிந்தல் *nāsi-sindal,* பெ.(n.) மூக்குச் சிந்தல்; blowing the nose. (சா.அக.)

நாசித்தாரு *nāsi-t-tāru,* பெ.(n.) மேல் வாய் உதடு; upper lips. (சா.அக.)

நாசித்தாரை *nāsi-t-tārai,* பெ.(n.) மூக்குத் துளை வழி; passage of the nose. (சா.அக.)

நாசித்துவாரம் *nāsi-t-tuvāram,* பெ.(n.) மூக்குத்துளை; nostril. (சா.அக.)

[நாசி + துவாரம்]

நாசித்தூள் *nāsi-t-tūḷ,* பெ.(n.) மூக்குப்பொடி; snuff. *"மிளகுப் பொடி நாசித்தூளாய்" (சரவண. பணவிடு. 123).*

[நாசி + தூள்]

நாசிநீரோட்டம் *nāsi-nīrōṭṭam,* பெ.(n.) மூக்கின் வழியாய் நீர் வழிதல்; catarrh of the nose. (சா.அக.)

நாசிநீர்ப்பாய்ச்சல் *nāsi-nīr-p-pāyccal,* பெ.(n.) மூக்கினின்று நீர் வழிதல்; catarrah of the nose. (சா.அக.)

நாசிநீர்வர்த்தினி *nāsi-nīr-varttiṉi,* பெ.(n.) மூக்கில் நீர் வழிந்து தும்மலையுண்டாக்கும் நோய்; errhinc. (சா.அக.)

[நாசி + நீர்வர்த்தினி]

நாசிப்பரிசோசம் *nāsi-p-parisōsam,* பெ.(n.) மூக்கடைப்பு; difficulty of respiration. *"மூக்கின் வறட்சினால் சளி திரண்டு மூச்சு விட முடியாத படி மூக்கையடைத்துக் கொள்ளும்".* (சா.அக.)

நாசிப்பரிச்சிராவம் *nāsi-p-pari-c-cirāvam,* பெ.(n.) மூக்கு நோய்; a disease of nose. *"இரவு காலங்களில் மூக்கினின்று சதா சளி நீர் வழியச் செய்யும்".* (சா.அக.)

நாசிப்பிணி *nāsi-p-piṇi,* பெ.(n.) உட்சளி; various diseases of the nose. (சா.அக.)

நாசிப்பிரதிநாகம் *nāsi-p-piradi-nāgam,* பெ.(n.) மூக்கடைப்பு, தலையில் நிற்கும் உதான வளி, கோளாறடைந்து சளியோடு கூடி மூக்கின் துளையை அடைக்கும்; the condition under which the upcoursing udana vayu of the region of the head is deranged in its passaged by a sur charge of kapha stuff the nasal passages. (சா.அக.)

நாசிப்புண் *nāsi-p-puṉ,* பெ.(n.) நாசியில் தோன்றும் புண்; ulcer in the nose. (சா.அக.)

நாசிப்பீனிசம் *nāsi-p-piṉisam,* பெ.(n.) மூக்கின் சளி சவ்வு வீக்கம் (தாபிதங்) கண்டு அதனால் மூக்கின் வழியாய் நீர்ச் சளியாய் வடிதல்; a catarrhal affection of the nasal mucous membrance attended with a ropy discharge from the nostrils coryza. (சா.அக.)

நாசிப்பொடி *nāsi-p-poḍi,* பெ.(n.) 1. மூக்குத் தூள்; snuff. 2. மூக்குச் சூரணம்; powder for snuffing. (சா.அக.)

நாசிபங்கம் *nāsipaṅgam,* பெ.(n.) மூக்கழிவு; decaying or destruction of the nose. (சா.அக.)

நாசிபாகம் *nāsibāgam,* பெ.(n.) மூக்கிலுண்டாகும் அழற்சி; inflammation of the nose. (சா.அக.)

[நாசி + பாகம்]

நாசிம்வேதனை *nāsim-vēdaṉai,* பெ.(n.) பாகல்; bitter cucumber - momordiea charantia. (சா.அக.)

நாசியிரத்தபித்தம் *nāsiyiratta-pittam,* பெ.(n.) மூக்கினின்று அரத்தம் வடிதல்; bleeding from the nose - *Epistaxis.* (சா.அக.)

நாசியெலும்பு *nāsi-yelumbu,* பெ.(n.) மூக்கெலும்பு; nasal bone. (சா.அக.)

நாசிரந்திரம் *nāsirandiram,* பெ.(n.) மூக்குத் துளை; nostril nose - aperture. (சா.அக.)

நாசிரோகம் *nāsirōgam,* பெ.(n.) மூக்கு நோய் வகை (தைலவ. தைல. 53); discharge of the fetid matter from the nostrils. oxena.

[நாசி + ரோகம்]

நாசிவால் *nāsivāl,* பெ.(n.) மணத்தக்காளி; black berried solanum - solanum nigrum. (சா.அக.)

நாசிவிடம் *nāśi-viḍam,* பெ.(n.) நோய்வகை; a disease. *"எரிகுணா நாசிவிடமே" (திருப்பு. 260, புதுப்.)*

[நாசி + விடம்]

நாசினி[1] *nāsiṉi,* பெ.(n.) அழிக்கக் கூடியது. கொல்லி; used in compound formation. *"கிருமி நாசினி".*

நாசினி[2] *nāsiṉi,* பெ.(n.) திப்பலி மூலம்; root of long pepper. (சா.அக.)

நாசுகாதீதம் *nāsukātītam,* பெ.(n.) 1. பீர்க்கு; gourd plant, strainer vine - cucurbita *acutangularis.* 2. விழி, அதாவது விழுதி; chilli fruited capper - Cadaba indica alias stromeria tetrandra. (Rox). (சா.அக.)

நாசுடம் *nāsuḍam,* பெ.(n.) கட்டு மருந்து; a quack patent or secret remedy - *Nostrum. "இது நாட்டு மருத்துவர் பயன்படுத்தும் மருந்து".* (சா.அக.)

நாசுதா *nāsudā,* பெ.(n.) சிற்றுண்டி; lunch. (சா.அக.)

நாசித்துளை *nāsi-t-tuḷai,* பெ.(n.) **நாசித் துவாரம்** பார்க்க; see *nāsi-t-tuvāram.*

நாணயசுதன் *nāṇayasudaṉ,* பெ.(n.) நேர்மை யானவர்; honest man.

நாத்தி *nātti,* பெ.(n.) அழிவு; destruction, annihilation. (சா.அக.)

நாத்தியோசம் *nāttiyōśam,* பெ.(n.) வரகு; a kind of black millet - Paspalum frumentaceum. (சா.அக.)

நாதசுவரம் *nādasuvaram,* பெ.(n.) மரத்தால் நீண்ட குழல் வடிவில் செய்து சீவாளி பொருத்தி மங்கல நிகழ்ச்சிகளில் இசைக்கப் படும் இசைக்கருவி (ஒலகம்); wind instrument with a long pipe.

த.வ. ஒலகம்

நாதவசுது *nādavasudu,* பெ.(n.) நாதச் சினைக்குள்ளிருக்கும் அணுவிற்கணுவான பொருள்; a microscopic matter in which life is manifested and as such forms the essential material of all plants and animal cells. It is usually viscid holding fine granules in suspension - protoplasm. (சா.அக.)

நாபிக்கட்டி *nābi-k-kaṭṭi,* பெ.(n.) கொப்பூழில் எழும்பும் ஓர் வித்திரதிக்கட்டி; a deep seated local abscess in the navel region. (சா.அக.)

நாபிக்கமலம் *nābi-k-kamalam,* பெ.(n.) 1. கொப்பூழ்; lotus like navel. 2. உந்தியைச் சுற்றிலுமுள்ள இடுக்குகள்; the interstice space about the umbilicus. (சா.அக.)

நாபிக்கமலவிரணம் *nābi-k-kamala-viraṇam,* பெ.(n.) 1. நாபியழற்சி; inflammation of the navel omphalitis. 2. நாபியைச் சுற்றிலும் காணும் கொப்புளங்கள்; boils around the navel in the navel region - omphalel cosis. 3. நாபியின் கீழ்க் கொண்ட விரணம்; suppurative lessions of the umbilical region or navel ill - omphalophlebitis. (சா.அக.)

நாபிக்கழலை *nābi-k-kaḻalai,*. பெ.(n.) நாபிக் கமலத்தில் காணும் கழலைக் கட்டி; tumour of the umbilicus ophaloma. (சா.அக.)

நாபிக்கிழங்கு *nābi-k-kiḻaṅgu,* பெ.(n.) பச்சை நாவிக் கிழங்கு; green aconite root Aconitum ferox (root of.). (சா.அக.)

நாபிக்கூரிகம் *nābi-k-kūrigam,* பெ.(n.) நேர்வாளக் கொட்டை; croton seeds - physic nul. (சா.அக.)

நாபிகந்தம் *nābikandam,* பெ.(n.) கத்தூரி நறுமணம்; musk adour. (சா.அக.)

நாபிகை *nābigai,* பெ.(n.) 1. உந்தியைப் போன்ற குழி; a navel like cavity. 2. ஒரு பூண்டு; a plant. (சா.அக.)

நாபிக்கொடி[1] *nābi-k-kodi,* பெ.(n.) தொப்புட் கொடி (இங்.வை.); umbilical card.

[நாபி + கொடி]

நாபிக்கொடி[2] *nābi-k-kodi,* பெ.(n.) கொடிவகை; malabar glory - lily - Gloriosa superba.

[நாபி + கொடி]

நாபிக்கொடி *nābi-k-kodi,* பெ.(n.) 1. கொப்பூழ்க் கொடி; navel or umbilical cord. 2. காந்தள்; country aconite - Gloriosa superba. (சா.அக.)

நாபிச்சக்கரம் *nābi-c-cakkaram,* பெ.(n.) தொப்புள் வளையம்; navel circle. (சா.அக.)

நாபிச்சுற்று *nābi-c-curru,* பெ.(n.) **நாபிக் கமலம்** பார்க்க; see *nābi-k-kamalam.*

நாபிச்சூத்திரம் *nābi-c-cūttiram,* பெ.(n.) **நாபிக்கொடி** பார்க்க; see *nābi-k-kodi.*

நாபிச்சூரை *nābi-c-cūrai,* பெ.(n.) **நாபிச்சூலை** பார்க்க; see *nābi-c-cūlai.*

நாபிச்சூலை *nābi-c-cūlai,* பெ.(n.) தொப்பு களிலும், கீழி வயிற்றிலும், நடுக்கல் வாந்தி, ஆண் குறியிலும் வலி முதலிய குணங்களைக் காட்டும் ஓர் வாத நோய்; a kind of disease of the navel region marked by cruciating pain in the navel abdomen s stomach, vomiting, trembling pain the anus and genital. (சா.அக.)

நாபித்தாரி *nābi-t-tāri,* பெ.(n.) வசம்பு; sweet flag - Acoruscalamus. (சா.அக.)

நாபித்தானம் *nābi-t-tānam,* பெ.(n.) சூழ்வகம் (உத்திரப்பிரதேசம்); region of the navel.

[Skt. nābhi+sthāna > த. நாபித்தானம்]

நாபிப்பாலாமிர்தம் *nābi-p-pālāmirdam,* பெ.(n.) சாராயம்; arrack. (சா.அக.)

நாபம் *nābam,* பெ.(n.) நாபி; country aconite. (சா.அக.)

நாபகம் *nābagam,* பெ.(n.) கடுக்காய்; Indian gall nut - Terminalia chebula. (சா.அக.)

நாபாஞ்சம் *nābāñjam,* பெ.(n.) பற்பாடகம்; fever plant. (சா.அக.)

நாபாரிசம் *nābārisam,* பெ.(n.) 1. நாக்குப் பக்கம்; sides of the tongue. 2. நாபாகம்; part adjointing the tongue, ligual region. (சா.அக.)

நாபி[1] *nābi,* பெ.(n.) 1. கொப்புழ்; navel. 2. கத்தூரி; musk. 3. நாபித்தானம்; umbillical region. 4. மூலத்தானம்; principal seat in the human system. 5. இடுப்பெலும்பு; pelvis. 6. குருவண்டு., (சா.அக.)

நாபி[2] *nābi,* பெ.(n.) 1. கொப்பூழ் (பிங்.); navel. 2. மான்மணத்தி (கஸ்தூரி) (தைலவ. தைல); musk.

[Skt. nābhi > த. நாபி]

நாபி[3] *nābi,* பெ.(n.) அந்தண நாபி, சத்திரிய நாபி, வைசிய நாபி, சூத்திர நாபி என்று நால் வகைப்பட்ட வச்சநாபி முறிவு (வின்.); antidoes to aconite, being four in number viz, *antana-napi, cattiriya-napi, uaiciya-napi, cūttira-napi.*

[Skt. vatsa-nābha > த. நாபி]

நாபிசன் *nābisan,* பெ.(n.) பிரமன் (யாழ்.அக.); Brahmā, as born of visnu's navel. *"திருமாலின் உந்தியிற் பிறந்தோன்".*

[Skt. nābhi-ja > த. நாபிசன்]

நாபிசாருவாதம் *nābi-sāruvādam,* பெ.(n.) தொப்புளைப் பற்றி வலிப்பு நோய்; a kind of monoplegia about the navel region. (சா.அக.)

[நாபி + சாரு வாதம்]

நாபிசூத்திரம் *nābi-sūttiram,* பெ.(n.) கொப்பூழ்க் கொடி, தொப்புட் கொடி (வின்.); umblical cord.

[Skt. nābhi+sūtra > த. நாபிசூத்திரம்]

நாபிநாடி *nābi-nāḍi*, பெ.(n.) 1. உந்திக் கொடி; umbilical cord. 2. உந்தியின் இரத்தக் குழாய்கள்; cateries of the navel region - navel artery. (சா.அக.)

நாபிநாளம் *nābi-nāḷam*, பெ.(n.) 1. நஞ்சுக் கொடி; umblical card. 2. நஞ்சினின்று பிண்டத்திற்குப் போகும் இரத்தக்குழல்; a vessel which conveys back the blood after its purification from the placenta to the foetus - Umbilical vein. (சா.அக.)

நாபிநாளோதயம் *nābinālōdayam*, பெ.(n.) பிள்ளைப் பேற்றில் நஞ்சுக் கொடி வெளிக் காணல்; presentation of navel cord or umblical card. (சா.அக.)

நாபிபதுமம் *nābipadumam*, பெ.(n.) 1. மணி பூரகம்; p. 2. தாமரைப் போன்ற உந்தி; navel lotus and the power to destroy and create is dequired. (சா.அக.)

நாபிரம் *nābiram*, பெ.(n.) விந்து (சங்.அக.); semen.

[Skt. nābhila > த. நாபிரம்]

நாபியம் *nābiyam*, பெ.(n.) வெள்ளூமத்தை; white flowered dhatura - Datura fastuosa. (சா.அக.)

நாபியுருக்காந்தம் *nābiyuru-k-kāntam*, பெ.(n.) ஊசிக்காந்தம்; magnet attracting needles. (சா.அக.)

நாபிரசம் *nābirasam*, பெ.(n.) விந்து; semen. (சா.அக.)

நாபிலம் *nābilam*, பெ.(n.) கொப்பூழ்க்குழி; cavity of the navel. (சா.அக.)

நாபிவத்திகம் *nābivattigam*, பெ.(n.) கொப்பூழில் சிறு கொப்புளம்; umbilical vesicle. (சா.அக.)

நாபிவர்த்தனம் *nābivarttaṉam*, பெ.(n.) 1. நாபியின் பிதுக்கம்; umbilical hernia. 2. தடித்தவுடம்பு; corpulency. (சா.அக.)

நாபிவளையம் *nābi-vaḷaiyam*, பெ.(n.) தொப்புள் வளையம்; umbilical ring - Annulus umbilicus. (சா.அக.)

நாபிவிரேசனம் *nābi-virēsaṉam*, பெ.(n.) மருந்தை தொப்புளில் தடவ பேதியாதல்; causing euacuation from the bowels by an external application of medicine on the naval region. (சா.அக.)

நாபீலம் *nābīlam*, பெ.(n.) 1. கடிதடம் (யாழ்.அக.); pudendum muliebre. 2. கொப்பூழ்க் கொடி (குழி); the cavity of the navel.

[Skt. nābhila > த. நாபீலம்]

நாம்பன் *nāmbaṉ*, பெ.(n.) இளம் காளை மாடு; young bull.

நாமக்கட்டி *nāma-k-kaṭṭi*, பெ.(n.) நாமம் போடப் பயன்படுத்தும் வெள்ளைக் களிமண் கட்டி; pipe clay.

[நாமம் + கட்டி]

நாமத்தராசு *nāma-t-tarāsu*, பெ.(n.) தராசு வகை (இ.வ.); the common balance.

[நாமம் + தராசு]

நாமகரணம் *nāma-karaṇam*, பெ.(n.) பெயரீட்டுக் கரணம் சோடச சம்சகாரத்துள் பிறந்த குழந்தைக்குப் பதினொராம் நாளிற் பெயரிடுவதான சடங்கு; ceremony of naming a child on the 11th day at two birth, one of *ōṭaca-camskāram. "மாதவிமகட்கு நாமகரணம் பண்ணுவோமென்று" (சிலப். 13, 26, உரை) (திருவானைக். கோச்செங்.14).*

[Skt. nāma + த. கரணம் > த. நாமகரணம்]

நாமகரணம் *nāma-karaṇam*, பெ.(n.) பெயர் சூட்டல்; christening.

நாமகீர்த்தனம் *nāma-kirttaṉam*, பெ.(n.) திருப்பெயர் ஏத்தற்பா, கடவுள் திருப்பெயர் ஓதுகை; singing God's names.

[நாம(ம்) + கீர்த்தனம்]

[Skt. nāman > த. நாம(ம்)]

நாமதேயம் *nāma-dēyam,* பெ.(n.) யாகங் களுக்குப் பெயரிடும் வேத வாக்கியவகை (விவேக சிந். பக். 5); the vēdic passages which give the names of sacrifices etc.

[Skt. nāmadhēya > த. நாமதேயம்]

நாமநட்சத்திரம் *nāma-natttiram,* பெ.(n.) ஒருவனுடைய பெயரின் முதலெழுத்திலிருந்து விதிப்படி கொள்ளப்படும் அவனது நட்சத்திரம் (பஞ்ச.); the natal star of a person dedued by set rules, from the initial letter of his name.

[நாமம் + நட்சத்திரம்]

நாமம் *nāmam,* பெ.(n.) நேர்க்குத்தான மெல்லிய கோடு அல்லது கோடுகள்; the religious mark on the forehead of the vaishnavities.

நாரக்கரந்தை *nāra-k-karandai,* பெ.(n.) நாட்டு முள்ளங்கி; wall radish. *"பழைய சுவரின் சந்துகளிலும் சுடுகாட்டிலும் விளையும் இதையே சுவர் முள்ளங்கி என்று கூறலாம்".* (சா.அக.)

நாரங்கசீகம் *nārańgasīgam,* பெ.(n.) சித்தா முட்டி; yellow stick mallow - paonia zeylanica alias p. glechomifolia. (சா.அக.)

நாரகம் *nāragam,* பெ.(n.) 1. கிச்சலி; sweet orange - Aurantium nobilis. 2. காட்டுக் கொழுஞ்சி; wild lime - Atlantia racemosa. (சா.அக.)

நாரங்கி *nārańgi,* பெ.(n.) ஓர் வகைக் கிச்சலி; mandarian orange. (சா.அக.)

நாரங்கசீகம் *nārańgasīgam,* பெ.(n.) சித்தா முட்டி; yellow stickmallow - pavonia zeylanica. (சா.அக.)

நாரசிம்மரசம் *nārasimmarasam,* பெ.(n.) சரகரால் சொல்லப்பட்ட புராண சுரத்தை ஒட்டும் ஓர் ஆயுள் வேத மருந்து; an Ayurvedic preparation prescribed for chronic fever named Narasimharasam. (சா.அக.)

நாராயணாட்திரம் *nārāyaṇāttiram,* பெ.(n.) திருமாலை அதிதேவதையாகவுடைய அம்பு; a powerful arrow whose presiding dlity is viṣṇu.

[Skt. nārāyaṇaṉ > த. நாராயணாட்திரம்]

நாரிதூசணம் *nārī-tūsaṇam,* பெ.(n.) பாதி விரத்தியத்தைக் கெடுப்பது (யாழ்.அக.); that which makes a woman loss her honour.

[Skt. nāri+tuṣnan > த. நாரிதூசணம்]

நால்சாதிவிசக்கல் *nālsādi-visakkal,* பெ.(n.) நான்கு வகைச் சாதிப் பெண்களின் கருப் பிண்டம்; the foetuses of four kinds of women divided according to their lust as referred to in the Tamil Erotic Science. (சா.அக.)

நாலிகம் *nāligam,* பெ.(n.) 1. எருமை; buffalo. 2. தாமரை; lotus. 3. காக்கை; crow. (சா.அக.)

நாயச்சுரம் *nāya-c-curam,* பெ.(n.) மூக்கில் வருமோர் நோய்; a disease of the nose. (சா.அக.)

நிகண்டு *nigaṇḍu,* பெ.(n.) 1. பொதுவாக ஒரு சொல்லுக்குள்ள பலபொருள்களைச் செய்யுள் வடிவாக விளக்கும் நூல்; any book containing words arranged in order with their several meanings explained breifly in verses - poetic vocabulary. 2. வைத்திய நிகண்டு; a word book which communicates information in an entire subject or branch of a subject in medicine arranged in verses, a medical vocabulary of plants and drugs complied in intelligible verse. (சா.அக.)

நிகமம் *nigamam,* பெ.(n.) ஓர் வடமொழி நூல், இது 4 வேதங்களின் தொகுதியைக் குறிக்கும். வேதாந்தத்தைப் போலவே சித்தாந்தம் என்பது சைவநெறிகளைக் கூறும்; vedictext PIt is a collective name for the four vedas and is of opposed to Agamam referring shaving regligous rites. (சா.அக.)

நிகரணம் *nigaraṇam,* பெ.(n.) 1. மிடறு; pharynx. 2. தொண்டை; larynx, throat. 3. விழுங்குதல்; swallowing. (சா.அக.)

நிகரில்லாவாசான் *nigarillāvāsāṉ,* பெ.(n.) ஞானக்கண்; eye of wisdom. (சா.அக.)

நிகரோதயம் *nigarōdayam,* பெ.(n.) சிற்றரத்தை; lesser glangal - Alpinio galanga (minor). (சா.அக.)

நிகளம் *nigaḷam,* பெ.(n.) 1. நீர்க்கடம்பு; water cadamba tree - Naucliaparuiflora. 2. மலம்; filth. (சா.அக.)

நிகற்பம் *nigaṟpam,* பெ.(n.) பத்து இலட்ச கோடி (பிங்.); ten kalpas.

[Skt. nikalpa > த. நிகற்பம்]

நிகன்னம் *nigaṉṉam,* பெ.(n.) கொலை; murder. (சா.அக.)

நிகா *nigā,* பெ.(n.) 1. குறிப்பு (வின்.); mark, aim, idea, notion. 2. எச்சரிக்கை; care, carefulness. 3. கொழுப்பு; impudence. *"உனக்கு உடம்பில் நிகா ஏறிவிட்டது" (Madr).*

[U. nigā<nikāya > த. நிகா]

நிகாதன் *nigādaṉ,* பெ.(n.) வஞ்சகன் (பிங்.); deceiver crafty man.

நிகாரம் *nigāram,* பெ.(n.) 1. பனி; dew. 2. உறைந்த பனித்தூள்; white particles of frozen dew, hear frest. (சா.அக.)

நிகாயம் *nigāyam,* பெ.(n.) 1. கூட்டம் (சூடா.); assembly, multitude, company. 2. இடம் (பிங்.); place, site. 3. வீடு; habitation, dwelling. 4. நகரம் (பிங்.); town, city.

[Skt. nikāya > த. நிகாயம்]

நிகாயன் *nigāyaṉ,* பெ.(n.) கடவுள் (யாழ்.அக.); God, as formless. (காயமற்றவன்).

[Skt. nikaya > த. நிகாயன்]

நிகாரணன் *nigāraṇaṉ,* பெ.(n.) கொலைஞன் (யாழ்.அக.); murderer.

[Skt. nikāraṇa > த. நிகாரணன்]

நிகாரம்[1] *nigāram,* பெ.(n.) பனி (வின்.); dew.

[Skt. nihara > த. நிகாரம்]

நிகாரம்[2] *nigāram,* பெ.(n.) 1. அவமரியாதை (யாழ்.அக.); dishonour. 2. தவறு; error. 3. தூற்றுகை; slandering. 4. விழுங்குகை; swallowing.

[Skt. nihāra > த. நிகாரம்]

நிகிதம் *nigidam,* பெ.(n.) 1. படை (வின்.); army, troops. 2. பொருத்தப்பாடின்மை; unsuitability. *"வெந்துயற் குதவுமவ னிகித குரு" (வேதா. சூ, 16, உரை).*

[Skt. nihita > த. நிகிதம்]

நிகிர்தம் *nigirdam,* பெ.(n.) பிசி (இலக். வி. 904, உரை); a verse which has an inner significance.

[Skt. nikrta > த. நிகிர்தம்]

நிகிருட்டம் *nigiruṭṭam,* பெ.(n.) இழிவு (சங்.அக.); baseness.

[Skt. nikṛṣta > த. நிகிருட்டம்]

நிகிருதி *nigirudi,* பெ.(n.) 1. வறுமை (யாழ்.அக.); poverty. 2. பொல்லாங்கு; evil, wickedness. 3. பழிப்பு; reproach.

[Skt. nikṛti > த. நிகிருதி]

நிகிலம் *nigilam,* பெ.(n.) எல்லாம்; entireness, whole. *"பாதாளமாதி லோக நிகிலமும்".*

[Skt. nikhila > த. நிகிலம்]

நிகீனன் *nigīṉaṉ,* பெ.(n.) கீழ்மகன் (யாழ்.அக.); base person.

[Skt. nihina > த. நிகீனன்]

நிகுஞ்சம் *niguñjam,* பெ.(n.) 1. புதர் வீடு (வின்.); bower, place overgrown with creepers. 2. குகை (பிங்.); cavern. 3. சிற்றில் (யாழ்.அக.).

[Skt. nikuñja > த. நிகுஞ்சம்]

நிகுட்டம் *niguṭṭam,* பெ.(n.) இரைச்சல் (யாழ்.அக.); noise, sound.

[Skt. nighuṣṭa > த. நிகுட்டம்]

நிகுத்தை *niguttai,* பெ.(n.) கதவு (பிங்.); door.
[Cf. ni-gupta > த. நிகுத்தை]

நிகுதி *nigudi,* பெ.(n.) 1. செய் வழக்கம்; method, custom. 2. வரி; fee, tribute (C.G.).
[Skt. niyati > த. நிகுதி]

நிகும்பம் *nigumbam,* பெ.(n.) நேர்வாளம் (மலை.); purging croton.
[Skt. nikumbha > த. நிகும்பம்]

நிகும்பன் *nigumban,* பெ.(n.) கும்பகருணன் மகனாகிய ஓர் அரக்கன் (கம்பரா.); a giant, son of kumbhakarna.
[Skt. nikumbha > த. நிகும்பன்]

நிகூடம் *nigūḍam,* பெ.(n.) 1. மறைவு (யாழ்.அக.); concealment. 2. ஆழம்; depth.
[Skt. nikōḍha > த. நிகூடம்]

நிகேதனம் *nigēdanam,* பெ.(n.) 1. வீடு (அக.நி.); house, habitation. *"நிதி நிகேதனங்களெங்கும்" (பெரியபு. திருநாட். 33).* 2. கோவில்; temple. *"இந்நிகேதன மேகுதி நீயென்றன்" (கந்தபு. திருவி. 119).* 3. நகரம் (பிங்.); town, city.
[Skt. nikētana > த. நிகேதனம்]

நிகோதம் *nikōdam,* பெ.(n.) 1. கொடிய கீழாம் நரகவகை (சீவக. 2793, உரைக் குறிப்பு); a hell. 2. விலங்கினம்; animal kingdom. *"நிகோதப் பிறவியும்" (சூளா. துற. 118).*
[Skt. nigōḍa > த. நிகோதம்]

நிச்சலம்[1] *niccalam,* பெ.(n.) 1. அசைவின்மை (யாழ்.அக.); immobility, fixedness, steadfastness. 2. இலக்கு (நால்வகையுள் அசைவற்றிருப்பது) (பாரத. வாரண. 56); fixed target, one of four ilakku. q.v. 3. நித்தியத்துவம் (யாழ்.அக.); eternity.
[Skt. niś-cala > த. நிச்சலம்]

நிச்சலம்[2] *niccalam,* பெ.(n.) நீருமுண்ணாதிருக்கும் முழுப் பட்டினி (இ.வ.); complete fasting in which even water is forbiden.
[Skt. nir-jala > த. நிச்சலம்]

நிச்சலம்[3] *niccalam,* பெ.(n.) பட்டினி; starvation. 2. அசைவின்மை; state of being without motion or movement, state of being still. (சா.அக.)

நிச்சத்தம் *niccattam,* பெ.(n.) சத்தமின்மை (இ.வ.); absence of noise, silence.
[Skt. niśadda > த. நிச்சத்தம்]

நிச்சாரகம் *niccāragam,* பெ.(n.) காற்று; wind. (சா.அக.)

நிச்சலன் *niccalan,* பெ.(n.) 1. அசைவற்றவன்; steadfast, immovable person. 2. கடவுள்; God.
[Skt. niś-cala > த. நிச்சலன்]

நிச்சித்தம் *niccittam,* பெ.(n.) 1. விருப்பழிவு (வின்.); extinction of the will; cessation of volition. 2. கவலையின்மை (சங்.அக.); absence of anxiety.
[Skt. niś-citta > த. நிச்சித்தம்]

நிச்சிந்தன் *niccindan,* பெ.(n.) 1. கவலையற்றவன்; one who is free from care. 2. நிசிந்தன்; God, as free from all passions. 3. அருகன் (பிங்.); Arhat.
[Skt. niś-cintā > த. நிச்சிந்தன்]

நிச்சிந்தை *niccindai,* பெ.(n.) கவலையின்மை (வின்.); freedom from care or anxiety, unconcern peace of mind, entire repose.
[Skt. niś-cintā > த. நிச்சிந்தை]

நிச்சரேணி *niccarēṇi,* பெ.(n.) ஏணி (யாழ்.அக.); ladder.
[Skt. niśrēṇi > த. நிச்சரேணி]

நிச்சிரேயசம் *nicciréyasam,* பெ.(n.) முத்தி, வீடுபேறு (யாழ்.அக.); salvation.
[Skt. niś-śrē > த. நிச்சிரேயசம்]

நிச்சுவசனம் *niccu-vasanam,* பெ.(n.) 1. பெருமூச்சு; sigh. 2. கோபம்; anger. (சா.அக.)

நிச்சுவாசம் *niccuvāsam,* பெ.(n.) 1. மூச்சு வெளிவிடுகை (தக்கயாகப். 674, உரை);

expiration. 2. மூச்சு; breath. 3. மூச்சடக்குகை (சி.சி. 4, 8, ஞானப்); suspension of breath. 4. சிவாகமம் இருபத்தெட்டனுள் ஒன்று (சைவச. பொது. 333, உரை); an ancient saiva scripture in sanskrit, one of

[Skt. ni-śvdsa > த. நிச்சுவாசம்]

நிச்சேட்டை *niccēṭṭai,* பெ.(n.) செயலற் றிருக்கை (சி.சி. 4, 8, சிவாக்.); inactivity.

[Skt. niś-cēṣtā > த. நிச்சேட்டை]

நிச்சேடம் *niccēḍam,* பெ.(n.) மிச்சமின்மை (சி.சி.2, 56, சிவாக்.) (சங்.அக.); being without remainder.

[Skt. niś-śēṣa > த. நிச்சேடம்]

நிசங்கம் *niśaṅgam,* பெ.(n.) 1. அம்புக் கூடு (யாழ்.அக.); quiver of arrows. 2. இணக்கம்; acquiescence.

[Skt. ni-ṣaṅga > த. நிசங்கம்]

நிசதம் *niśadam,* வி.எ.(adv.) நாள்தோறும்; daily without fail. *"ஒரு நந்தா விளக்கினுக்கு நிசதம் உழக்கு நெய்" (S.I.I.i, 142).*

[Skt. niyata > த. நிசதம்]

நிசசதன் *niśa-śadaṉ,* பெ.(n.) நிசவான் (வின்.); honest man.

[நிசம் > நிசசதன்]

நிசப்தம் *nisapdam,* பெ.(n.) எந்தவிதச் சத்தமும் இல்லாத நிலை, அமைதி; silence, stillness. *"நிசப்தமான இரவு. கூட்டத்தினர் இடையே சலசலப்பு ஓய்ந்து நிசப்தம் நிலவியது".* (இ.வ.)

நிசப்தம் *niśaptam,* பெ.(n.) ஒலியின்மை; silence, stillness.

[Skt. niś-śabda > த. நிசப்தம்]

நிசப்பசி *niśa-p-pasi,* பெ.(n.) உண்மையாக அல்லது சாதாரணமாகவுண்டாகும் பசி; true hunger occuring in the usual course as opposed to, false hunger. (பொய்ப்பசி). (சா.அக.)

நிசர்மசேபம் *nisarmaśēbam,* பெ.(n.) தோலுட் புகட்டல் (lit); inserting through the skin intro dermal. (சா.அக.).

நிசம் *nisam,* பெ.(n.) 1. நிச்சயம்; certainty, assurance, ascertainment. 2. சத்தியம்; truth, veracity. *"சோர மங்கையர்களிச முறையார்கள்" (குமரே. சத. 36).* 3. இயல்பாக வுரியது; that which is proper or one's own. *"என்னிச வடிவினையாண் காண" (கைவல். தஞ். 64).*

[Perh. nija(T.nijamu,K., Tu.nija,M. nijam)]

நிசவலி *nisavali,* பெ.(n.) உடம்பில் நோயினால் உண்டாகும் வலி; p. (சா.அக.)

நிசவான் *niśavāṉ,* பெ.(n.) உண்மையுள்ளவன் (வின்.); true, sincere, upright, honest man.

[நிசம் > நிசவான்]

[நிசம் + வான்]

நிசவிரணம் *nisa-viraṇam,* பெ.(n.) திரிதோசங் களினாலும், தொந்தத்தினாலும் ஏற்படும் விரணம்; sores caused in the body either constitutionally or by infection. It is opposed to inflicted wounds or injuries. (சா.அக.)

நிசனம் *nisaṉam,* பெ.(n.) தனிமை (உரி.நி.); loneliness, solitude.

[Skt. nir-jana > த. நிசனம்]

நிசா[1] *nisā,* பெ.(n.) போதை; intoxication. 2. குடி மயக்கம்; giddiness due to drunkenes. (சா.அக.)

[Skt. niṣā > த. நிசா]

நிசா[2] *niśā,* பெ.(n.) இரவு (பிங்.); night.

[Skt. niśā > த. நிசா]

நிசாகரி *nisākari,* பெ.(n.) கூகை; owl. (சா.அக.)

நிசாகரன் *niśāgaraṉ,* பெ.(n.) 1. திங்கள் (பிங்.); moon. 2. சேவல் (சங்.அக.); cock.

[Skt. niśā+த. கரன் > த. நிசாகரன்]

நிசாசதா *nisāsadā,* பெ.(n.) கோதுமைச்சத்து; malt prepared from wheat. (சா.அக.)

நிசாசரம் *nisāsaram,* பெ.(n.) 1. ஆந்தை; owl. 2. பாம்பு; snake.

[Skt. nišā-cara > த. நிசாசரம்]

நிசாசரன் *nišāšaran,* பெ.(n.) 1. அசுரன்; Asura (இரவில் திரிவோன்) night-rover. *"நிசாசரர் மேற் பேராழி கொண்ட பிரான்" (திவ். இயற். 1, 83).* 2. அரக்கன்; Rakṣasa. *"நிசாசர னுருப்புணர் நெருப்பு நீர்மையான்" (கம்பரா. யுத்த. மந்திரப். 42.).* 3. திங்கள்; moon. *"இப்பெண் சிறையைச் சீர்த்த நிசாசரனுஞ் செய்யுமோ" (திருவாரூ. 299).*

[Skt. nišā > த. நிசாசரன்]

நிசாசரி *nišāšari,* பெ.(n.) 1. அரக்கி; Rāksasī. *"ஓர் நிசாசரி தான் வந்தாளை" (திவ். இயற். சிறியம. 39).* 2. கூகை (பிங்.); owl. 3. பரத்தை (யாழ்.அக.); whore.

[Skt. nišā-carī > த. நிசாசரி]

நிசாசலம் *nišā-šalam,* பெ.(n.) பனி (யாழ்.அக.); dew.

[Skt. niša + த. சலம் > த. நிசாசலம்]

நிசாடம் *nišāḍam,* பெ.(n.) ஆந்தை (யாழ்.அக.); owl.

[Skt. nišaṭa > த. நிசாடம்]

நிசாடு *nišāḍu,* பெ.(n.) மஞ்சள் (மலை.); turmeric.

[Skt. nišāhvā > த. நிசாடு]

நிசாதன் *nišādan,* பெ.(n.) வஞ்சகன் (சூடா.); deceiver. 2. கீழ்மகன் (யாழ்.அக.); low, mean person.

[Skt. niṣāda > த. நிசாதன்]

நிசாதி *nišādi,* பெ.(n.) மாலை நேர ஒளி (யாழ்.அக.); evening twilight.

[Skt. nišadi > த. நிசாதி]

நிசாதைலம் *nisātailam,* பெ.(n.) பவுத்திரத்தின் மேல் பூசும் ஒரு தைல மருந்து; an ointment used in fistula. (சா.அக.)

[Skt. niṣātailam > த. நிசாதைலம்]

நிசாந்தம்[1] *nišāndam,* பெ.(n.) வைகறை; விடியற்காலம் (வின்.); day break, as the end of the night.

[Skt. nišanta > த. நிசாந்தம்]

நிசாந்தம்[2] *nisāndam,* பெ.(n.) விடியற்காலம்; day break dawn. (சா.அக.)

நிசாபதி *nisāpadi,* பெ.(n.) கற்பூரம்; camphor. (சா.அக.)

நிசாபதி *nišā-badi,* பெ.(n.) 1. திங்கள் (பிங்.); moon, as Lord of the night. 2. கருப்பூரம் (எரியணம்) (சங்.அக.); camphor.

[Skt. nišā > த. நிசாபதி]

நிசாபுட்பம் *nišāpuṭpam,* பெ.(n.) 1. இரவில் மலரும் வெள்ளாம்பல்; white indian water-lily, as opening its petals at night. 2. செவ்வாம்பல் (மலை.); red indian water-lily. 3. உறைபனி (யாழ்.அக.); ice.

[Skt. niša+puṣpa > த. நிசாபுட்பம்]

நிசாபுட்பம் *nisāpuṭpam,* பெ.(n.) 1. உறைபனி; foozen dew, snow. (சா.அக.)

நிசாமணி[1] *nisāmaṇi,* பெ.(n.) மின்மினி; glow woom, fire fly. (சா.அக.)

நிசாமணி[2] *nisā-maṇi,* பெ.(n.) 1. திங்கள் (வின்.); moon, as the gem of night. 2. மின்மினி (யாழ்.அக.); firefly, glow-worm.

[Skt. nišā-maṇi > த. நிசாமணி]

நிசாமனம் *nišāmaṇam,* பெ.(n.) 1.கேள்வி (யாழ்.அக.); listening to words of wisdom. 2. பார்வை; sight. 3. நிழல்; shade.

[Skt. nišamana > த. நிசாமனம்]

நிசாமனம் *nisāmaṇam,* பெ.(n.) உடம்பின் உள்ளுறுப்புகளைக் கருவியால் சோதித்துத் திட்டமாக்கல்; a kind of diagnosis or determining the disease by examination of the internal organs of the body through

instruments such as stesthoscope used for chest auscultation. (சா.அக.)

நிசாமனி *nisāmaṉi,* பெ.(n.) இருதயத் துடிப்பு முதலிய உள்ளுறுப்புகளின் நிலைமையைக் கண்டறியும் கருவி; an instrument used for determining or distinguishing the state of the internal organs of the body - stethoscope. (சா.அக.)

நிசாமானம் *nisāmāṉam,* பெ.(n.) இரவு கால வளவு (வின்.); night time, duration.

[Skt. niśā+mana > த. நிசாமானம்]

நிசர் *nisar,* பெ.(n.) 1. இராத்திரி; night. 2. நடு ராத்திரி; mid night. (சா.அக.)

நிசார் *niśār,* பெ.(n.) நீண்ட காற்சட்டை; long drawers or trousers. *"தங்கரேக் கென்னத் தயங்கு நிசார் தொட்டிறுக்கி" (கூளப்ப. 42).*

[U. nizār > த. நிசார்]

நிசாரணம் *nisāraṇam,* பெ.(n.) கொலை; murder. (சா.அக.)

நிசாரணன் *niśāraṇaṉ,* பெ.(n.) கொலைஞன் (யாழ்.அக.); executioner, murderer.

[Skt. niśaraṇa > த. நிசாரணன்]

நிசாரம் *niśāram,* பெ.(n.) 1. சாரமற்றது (யாழ்.அக.); that which is insipid, dry or uninteresting. 2. வருத்தம் (வின்.); trouble, vexation.

[Skt. nis-śara > த. நிசாரம்]

நிசாரம் *nisāram,* பெ.(n.) 1. மஞ்சள்; turmeric-circumalonga. 2. பயனற்றது; that which is worthless. 3. ஒரு வகைக் கழிச்சல்; a kind of diarrhoea. 4. வாழை; plantain. 5. சாறமற்றது; that which sapless. (சா.அக.)

நிசாரி *niśāri,* பெ.(n.) கதிரவன்; sun, as enemy of the night. *"நிசாரி புதல்வன்" (பாரத. அணி. 20).*

[Skt. niśā+ari > த. நிசாரி]

நிசாறு *niśāṟu,* பெ.(n.) நீண்ட கால் சட்டை; trousers. *"நேயத்தாற் பொற்பூ நிசாறு தந்தான்" (விறலிவிடு. 1120).*

[U. nizār > த. நிசாறு]

நிசான் *niśāṉ,* பெ.(n.) கொடி; flag, banner. *"நாடு நகரு நிசா ஏட்டிய பாளயமும்" (தாயு. பராபரக். 232).*

[U. niṣān > த. நிசான்]

நிசாவர்த்தி *nisāvartti,* பெ.(n.) மஞ்சள், இந்துப்பு, கடுகு, குங்கிலியம் இவைகளைத் தேனில் அரைத்துத் துணிக்குத் தடவி வத்தியாகச் செய்து நாடி விரணம், பவுத்திரம் முதலியவைகளுக்கு இடுமோர் மருந்து; a medicinal gauze or wick used for introducing into a simusulcer or fistula : the gauze or wick is smeared with the paste prepared with turmeric mustard, conkany resin, rocksalt and honey. (சா.அக.)

நிசார்த்தம் *niśārttam,* பெ.(n.) **நிதார்த்தம்** பார்க்க (யாழ்.அக.); see *nidārttam.*

நிசி[1] *niśi,* பெ.(n.) 1. நடு இராத்திரி; midnight. 2. பொன்; gold. 3. மஞ்சள்; turmeric. 4. கத்தூரி; musk. (சா.அக.)

நிசி[2] *niśi,* பெ.(n.) 1. இரவு (பிங்.); night. *"நிசிவேளை நித்திரை" (திருவாச. 4, 28).* 2. நள்ளிரவு; midnight. *"நிசியில் கதவைத் தட்டினான்".* 3. இருள் (திவா.); darkness. 4. மஞ்சள் (பிங்.); turmeric.

[Skt. niśi > த. நிசி]

நிசி[3] *niśi,* பெ.(n.) பொன் (பிங்.); gold. (சா.அக.)

[Skt. nis(ka) > த. நிசி]

நிசிசரன் *niśisaraṉ,* பெ.(n.) இரவில் திரிவோன்; night rover. *"நிசிசரன்முடியுடைதர" (தேவா. 615, 8).*

[Skt. niśi-cara > த. நிசிசரன்]

நிசிச்சுரம் *niśi-c-curam,* பெ.(n.) நடு இராத்திரியில் வரும் சுரம்; midnight fever. (சா.அக.)

நிசித்தம் *nisittam,* பெ.(n.) நெறிமுரண்; that which is contrary to the rule or objectionable. *"விதி நிசித்தமெல்லாம்" (சைவச. பொது. 224).* 2. இகழ்ச்சி (இ.வ.); meanness, vileness, ignominy.

[Skt. ni-siddha > த. நிசித்தம்]

நிசிதம்[1] *niśidam,* பெ.(n.) 1. கூர்மை; sharpness. keenness. *"நிசித பாணங்களால்" (பாரதவெண். 801, உரைநடை).* 2. இரும்பு (யாழ்.அக.); iron.

[Skt. ni-śita > த. நிசிதம்]

நிசிதம்[2] *niśidam,* பெ.(n.) இகழ்ச்சி (யாழ்.அக.); meanness, vileness, ignoring.

[Skt. ni-siddha > த. நிசிதம்]

நிசிதாவி *niśitāvi,* பெ.(n.) செங்கொன்னை; red cassia - Cassia marginata. (சா.அக.)

நிசிந்தன் *niśindaṉ,* பெ.(n.) சிவன்; God, as free from all passions. *"புனலன் மேனியினிசிந்தன் விடுமம்பு" (தக்கயாகப். 710).*

[Skt. niś-cinta > த. நிசிந்தன்]

நிசிந்தா *niśintā,* பெ.(n.) உதவியாளர்; (C.G.) clerk, accountant. 2. கோயிற்கணக்கன்; temple accountant. *"கோயில் நிசிந்தா கடுமுடுக்காயிருக்கிறார்".*

[U. nawisindah > த. நிசிந்தா]

நிசீத்தியை *niśīttiyai,* பெ.(n.) இரவு (யாழ்.அக.); night.

[Skt. niśithyā > த. நிசீத்தியை]

நிசீதம்[1] *niśīdam,* பெ.(n.) 1. இரவு; night. 2. நள்ளிரவு; midnight.

[Skt. niśītha > த. நிசீதம்]

நிசீதம்[2] *niśīdam,* பெ.(n.) கூர்மை (யாழ்.அக.); sharpness.

[Skt. niśita > த. நிசீதம்]

நிசீதம்[3] *niśīdam,* பெ.(n.) சிறுமை, அற்பம் (யாழ்.அக.); trifling.

[Skt. ni-siddha > த. நிசிதம்]

நிசீதிகை *niśītigai,* பெ.(n.) உண்ணா நோன்பால் உயிர் விடுகை; death by fasting, a custom among jains. *"சந்திரநந்தி யாசிரிகர் நிசீதிகை" (T.A.S.I. 1, 231).*

[Skt. ni-sūdikā > த. நிசீதிகை]

நிசும்பம் *niśumbam,* பெ.(n.) கொலை (யாழ்.அக.); murder, slaughter.

[Skt. ni-śumbha > த. நிசும்பம்]

நிசும்பன் *niśumbaṉ,* பெ.(n.) கொலைஞன்; murderer. *"நிசும்பரன்னதோர் நோலர்" (கந்தபு. வச்சிர. 24).*

[Skt. ni-śumbha > த. நிசும்பன்]

நிசும்பனம் *niśumbaṉam,* பெ.(n.) கொலை; murder.

[Skt. ni-śum-bhana > த. நிசும்பனம்]

நிசுலகம் *niśulagam,* பெ.(n.) மார்புக் கவசம் (யாழ்.அக.); coat of mail.

[Skt. niculaka > த. நிசுலகம்]

நிசுவாசம் *niśuvāsam,* பெ.(n.) (நிச்சுவாசம் (பிங்.)) மூச்சு வெளிவிடுகை; expiration.

[Skt. ni-śvāsa > த. நிசுவாசம்]

நிசுளம் *niśuḷam,* பெ.(n.) நீர்க்கடம்பு; water cadamba.

[Skt. nicula > த. நிசுளம்]

நிசுளாபுரி *niśuḷāpuri,* பெ.(n.) சோழர் தலைநகராகிய உறையூர் (குருபரம்); uṟaiyur, the chola capital.

[Skt. niculā-purī > த. நிசுளாபுரி]

நிசூதனம் *niśūdaṉam,* பெ.(n.) அழிக்கை (யாழ்.அக.); destroying, killing.

[Skt. ni-sūdana > த. நிசூதனம்]

நிசேகம் *niśēgam,* பெ.(n.) கருத்தரித்தல்; conception. (சா.அக.)

[Skt. niṣēgam > த. நிசேகம்]

நிசேடம் *niśēḍam,* பெ.(n.) முழுமை; entireness, completeness.

[Skt. niś-śēṣa > த. நிசேடம்]

நிசை *niśai,* பெ.(n.) இரவு; night. *"தெவ்வரா நிசையழிந்து வெளியாக" (பாரத. இராச. 45).*

[Skt. niśa > த. நிசை]

நிட்கம்¹ *niṭgam,* பெ.(n.) 1. வராகனெடை (தைலவ. தைல.); weight of a gold pagoda. 2. நாணயவகை; a coin. 3. பொன்; gold.

நிட்கம்² *niṭgam,* பெ.(n.) பறை வகை (யாழ்.அக.); a kind of drum.

நிட்கம்³ *niṭgam,* பெ.(n.) 1. பலம்; one pallam weight. 2. பொன்; gold. 3. ஒரு வராகனெடை; a pagoda weight. (சா.அக.)

[Skt. niṣkam > த. நிட்கம்]

நிட்கண்டகம் *niṭkaṇḍagam,* பெ.(n.) 1. தீமையின்மை; freedom from danger or trouble. 2. இரக்கமின்மை; mercilessness, lack of consideration. *"நிட்கண்டகஞ் செய்து வாழ்வேன்" (தேவா. 743, 5).*

[Skt. nis-kaṇṭaka > த. நிட்கண்டகம்]

நிட்கண்டகன் *niṭkaṇṭagaṉ,* பெ.(n.) சிவபெருமான் (பகையற்றவன்); Siva as having no enemies. *"தக்கன் றன்பெருவேள்வி நிரந்தரஞ் செய்த நிட்கண்டகனை" (தேவா. 1049, 9).*

[Skt. niṣ-kaṇṭaka > த. நிட்கண்டகன்]

நிட்கலம் *niṭkalam,* பெ.(n.) பெண்குறி; female genitals. (சா.அக.)

நிட்கலி *niṭkali,* பெ.(n.) மாதவிடாய் நின்ற பெண்; a woman whose menstruration has stopped (i.e.) a woman of 40 or 45 years old. (சா.அக.)

நிட்கலை *niṭkalai,* பெ.(n.) பூப்பு நின்று போனவள் (யாழ்.அக.); woman past menstruation.

[Skt. niṣ-kalā > த. நிட்கலை]

நிட்களங்கம் *niṭkaḷaṅgam,* பெ.(n.) மாசின்மை; immaculateness, purity.

[Skt. niṣ-kalaṅka > த. நிட்களங்கம்]

நிட்களசிவம் *niṭkaḷa-śivam,* பெ.(n.) அருவமான சிவம் (சதாசிவ. 3, உரை); the formless aspect of Śiva.

[Skt. niṣ-kala+(saiva) > த. நிட்களசிவம்]

நிட்களக்கல் *niṭkaḷakkal,* பெ.(n.) சீதாங்க பாடாணம்; a mineral poison. (சா.அக.)

நிட்களம் *niṭkaḷam,* பெ.(n.) உருவமின்மை; formlessness. *"நிட்களங் கட்காண்டகுதி நீளிடை" (ஞானா. 61, 3).*

[Skt. niṣ-kala > த. நிட்களம்]

நிட்களர் *niṭkaḷar,* பெ.(n.) அருவடிவாகிய சிவபிரான்; formless Śiva.

[Skt. niṣ-kala > த. நிட்களர்]

நிட்காபட்டியம் *niṭkāpaṭṭiyam,* பெ.(n.) கவடின்மை; guilelessness, sincerity simplicity.

[Skt. niṣ-kāpaṭya > த. நிட்காபட்டியம்]

நிட்காமியம்¹ *niṭ-kāmiyam,* பெ.(n.) பயனை விரும்பாது செய்யுஞ் செயல்; deed done without expectation of any reward.

[Skt. niṣ-kāmya > த. நிட்காமியம்]

நிட்காமியம்² *niṭkāmiyam,* பெ.(n.) ஆசையின்மை; freedom from desire. (சா.அக.)

நிட்காமியம்³ *niṭkāmiyam,* பெ.(n.) 1. முற்றுந் துறத்தல்; leaving or abandoning one's house. *casting off the house holders mode of life for adoption of sanyasam or life renuniciation.* 2. விருப்பமின்மை; freedom from selfish desire as in the proper performance duties. (சா.அக.)

[Skt. niṣkāmiyam > த. நிட்காமியம்]

நிட்காமியகருமம் *niṭkāmiya-karumam,* பெ.(n.) பயனை விரும்பாது செய்யுஞ் செயல்; deed done without expectation of any reward.

நிட்காரணம் *niṭkāraṇam,* பெ.(n.) காரண மின்மை; being without cause or reason.

[Skt. niṣ-kāraṇa > த. நிட்காரணம்]

நிட்கருடபத்திரிகை *niṭkaruḍa-pattirigai,* பெ.(n.) 1. உறுதிப்பத்திரம்; a certificate or warrant. 2. விடுதலைப் பத்திரம்; a deed of renuniation.

நிட்கருடம் *niṭkaruḍam,* பெ.(n.) நிச்சயம்; certainty, assurance, finality.

[Skt. niṣ-karṣa > த. நிட்கருடம்]

நிட்கருடை *niṭkaruḍai,* பெ.(n.) நிச்சயம்; assurance, certainly, finality.

நிட்கிராமம் *niṭkirāmam,* பெ.(n.) கூத்துவகை (யாழ்.அக.); a kind of dance.

[Skt. nis-krāma > த. நிட்கிராமம்]

நிட்கிரியம் *niṭkiriyam,* பெ.(n.) தொழிற் செய்யாதது (வேதாந். சா. 85); that which is inactive.

[Skt. niṣkriya > த. நிட்கிரியம்]

நிட்க்கிரமப்பிரசவம் *niṭkkirama-p-pirasavam,* பெ.(n.) அக்கிரமப் பிரசவம்; abnormal labour. (சா.அக.)

[Skt. niṣkkirama-p-pirasavam > த. நிட்க்கிரமப்பிரசவம்]

நிட்கிறாமணம் *niṭkiṟāmaṇam,* பெ.(n.) காரணமின்மை; being without cause or reason. *"ஆயுளும் வளர வம்மழவினுக்கு நிட்கிறாமணந்தானாற்றுதல் வேண்டும்" (திருவானைக். கோச்செங். 84).*

[Skt. niṣ-kramaṇa > த. நிட்கிறாமணம்]

நிட்குடி *niṭkuḍi,* பெ.(n.) மணகம் (ஏலம்); cardomum - Elleteria cardamomum. (சா.அக.).

[Skt. niṣkuti > த. நிட்குடி]

நிட்சணம் *niṭsaṇam,* பெ.(n.) முத்தம் கொடுப்பு (யாழ்.அக.); kissing.

[Skt. nikṣaṇa > த. நிட்சணம்]

நிட்சேபம் *niṭšēbam,* பெ.(n.) புகட்டல்; injection. (சா.அக.)

நிட்சேபம் *niṭsēbam,* பெ.(n.) எண் வகைத் துய்ப்பு (போகப்) பொருள்களில் ஒன்றாகிய புதை பொருள்; treasure-trove, one of *aṣṭa-pōkam.*

நிட்சைமாதுறுதம் *niṭsaimāturudam,* பெ.(n.) சிற்றரத்தை; lesser glangal - Alpinia galanga. (சா.அக.)

நிட்டுரதரன் *niṭṭurataraṉ,* பெ.(n.) கடு நெஞ்சன் (கடுஞ்சித்தமுள்ளவன்); hard-hearted person. *"கடுஞ்சித்தமுள்ளவன் நிட்டுதரர் நினைவழியவும்" (சிவதரு. சுவர். 47).*

[Skt. niṣṭhura-tara > த. நிட்டுரதரன்]

நிட்டூரம் *niṭṭūram,* பெ.(n.) கொடுமை; harshness, severity. *"இந்த நிட்டூர மென்னோ" (பாரத. நச். 40).*

[Skt. niṣṭura > த. நிட்டூரம்]

நிட்டூரி *niṭṭūri,* பெ.(n.) கொடியவள் (வின்.); hard hearted woman.

[Skt. niṣṭhūrim > த. நிட்டூரி]

நிட்டூரம் *niṭṭūram,* பெ.(n.) கொடுமை; harshness, in humanity. (சா.அக.)

நிட்டீவனம் *niṭṭivaṉam,* பெ.(n.) கக்கல் வாந்தி; vomitting. (சா.அக.)

நிட்டை *niṭṭai,* பெ.(n.) (தியானம்) ஊழ்கம்; observance of religious duties and vows. *"விரதானுட்டானம்". "நிட்டையிலேயிருந்து*

மனத்துறவடைந்த பெரியோர்க்கும்" *(தனிப்பா.).*

[Skt. niṣṭhā > த. நிட்டை]

நிட்பாவம் *niṭpāvam,* பெ.(n.) ; vigna catjany. (சா.அக.)

நிடதம் *niṭadam,* பெ.(n.) 1. எட்டு மலைகளில் ஒன்று (திவா.) (இரகு. குலமு.); a mountain, one of *aṣṭa-kula-parvatam.* (q.v.). 2. ஒரு தேசம் (நைடத. நாட். 25); a country in the N.E. of india.

[Skt. niṣēdha(Nātya) > த. நிடதம்]

நிடதன் *niḍataṉ,* பெ.(n.) நிடத நாட்டரசனான் நளன்; Nala, the king of Niṣadha.

நிடலம் *niḍalam,* பெ.(n.) நெற்றி; fore head. (சா.அக.)

[Skt. nitala > த. நிடலம்]

நிடலாட்சன் *niṭalāṭsaṉ,* பெ.(n.) சிவன்; Šiva, as having an eye in his forehead. *"நெற்றிக் கண்ணையுடையவன்".*

[Skt. niṭalākṣa > த. நிடலாட்சன்]

நிடாடம் *niḍāḍam,* பெ.(n.) ஆந்தை; owl. (சா.அக.)

நிடூதனம் *niḍūtaṉam,* பெ.(n.) கொலை (யாழ்.அக.); slaughter murder.

[Skt. niṣūdana > த. நிடூதனம்]

நிடூதனன் *niḍūtaṉaṉ,* பெ.(n.) கொலைஞன் (சது.); murderer.

[Skt. niṣūdana > த. நிடூதனன்]

நித்தத்துவம் *nittattuvam,* பெ.(n.) என்று முளதாந்தன்மை; eternity. *"நிராமயமான நித்தத்துவம்" (உத்தாரா. திக்குவி. 248).*

[Skt. nitya-tva > த. நித்தத்துவம்]

[த. நித்த(ம்) + (tva) > த. நித்தத்துவம்]

நித்தியசிலேட்டுமரோகம் *nittiyaśilēṭṭuma-rōgam,* பெ.(n.) 1. சதா ஒக்காளம்) எப்பொழுதும் இருமல், சுரம் முதலிய குணங் களையுண்டாக்கும் ஓர் வகை ஈளை நோய்; a kind of phlegmatic disease marked by constant straining to vomit, fever, cough etc. 2. ஈளைநோய்; asthma. (சா.அக.)

நித்தியசீவி *nittiyaśīvi,* பெ.(n.) 1. எக்காலும் வாழ்ந்து இருப்பது; that which exists for a long time - Everlasting. 2. அழிவில்லாச் சீவன்; eternal spirit. 3. என்றும் நீடுவாழி (சிரஞ்சீவி); eternal being. (சா.அக.)

நித்தம்[1] *nittam,* பெ.(n.) 1. என்றும் அழியாதுள்ள நிலை; eternity. *"நேரினித் தமு மொட்டின னாகுமே" (மேருமந். 652).* 2. ஓமகுண்டம் (பிங்.); sacrifical pit. 3. நீர்முள்ளி (மலை.); water thorn.

[Skt. nitya > த. நித்தம்]

நித்தம்[2] *nittam,* பெ.(n.) 1. நடனம்; dancing. *"நித்தந் திகழு நேரிழை முன்கையார்" (பரிபா. 12, 43).*

[Skt. nṛtta > த. நித்தம்]

நித்தநிமந்தம் *nitta-nimandam,* பெ.(n.) கோயில் நித்தியக் கட்டளை; daily offerings in a temple. *"மஹாதேவர்க்கு நித்த நிமந்தஞ் செலுத்துகைக்கு" (S.I.I.ii, 392).*

[Skt. nitya > த. நித்தநிமந்தம்]

நித்தியானம் *nittiyāṉam,* பெ.(n.) பார்க்கை (யாழ்.அக.); seeing, sight.

[Skt. ni-dhyāna > த. நித்தியானம்]

நித்தியானுட்டானம் *nittiyāṉuṭṭāṉam,* பெ.(n.) நாட் (தினசரிக்) கருமம் (வின்.); daily religious duties.

[Skt. nitya+anu-ṣṭhāna > த. நித்தியா னுட்டானம்]

நித்திராபங்கம் *nittirāpaṅgam,* பெ.(n.) தூக்கமின்மை; sleeplessness. (சா.அக.)

நித்திராலு *nittirālu,* பெ.(n.) தூங்குபவன்; sleepy, drowsy person. *"நித்திராலுவை மீளவுங் கொல்லுவான்" (பாரத. வாரணா. 8).*

[Skt. nidrālu > த. நித்திராலு]

நித்திரை[1] *nittirai,* பெ.(n.) உறக்கம்; sleep, repose. *"நிசிவேலை நித்திரையாத்திரை பிழைத்தும்" (திருவாச. 4, 29).*

[Skt. nidrā > த. நித்திரை]

நித்திரை[2] *nittirai,* பெ.(n.) 1. உணவினாலே மயக்கம்; drowsiness arising from taking food. *"உண்ட மயக்கம் தொண்டருக்கு முண்டு".* 2. ஆழ்ந்த தூக்கம்; deep sleep. 3. சுழுத்தி; entire insensibility in deep sleep. 4. யோக நித்திரை; a conscious sleep. 5. தூக்கம்; sleep. (சா.அக.)

நித்திரைக்கலிதம் *nittirai-k-kalidam,* பெ.(n.) 1. தூங்கும் போது விந்து கழலுதல்; reflex emission of semen during sleep - Nocturnal emission uet - dream. 2. தூக்கத்தில் தன்னை அறியாமலே அடிக்கடி விந்து கழலும் ஓர் நோய்; an involuntary, too frequent and excessive discharge of semen without copulation - Spermatorrheca. (சா.அக.)

நித்திரைகுலை-த்தல் *nittirai-kulai-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. தூக்கத்தைக் கலைத்தல்; sleepless. 2. பித்தியத்தினால் தூக்கம் பிடியாமை; entire absence of the capacity to sleep as in sanity - Ahypnosis. (சா.அக.)

நித்திரைகொள்ளு-தல் *nittirai-koḷ-,* 3 செ. குன்றாவி.(v.t.) தூங்குதல்; sleeping. (சா.அக.)

நித்திரைசோபம் *nittirai-sōbam,* பெ.(n.) மயக்கம்; drewsiness. (சா.அக.)

நித்திரைதெளி-தல் *nittirai-teḷi-,* 3 செ. குன்றாவி. (v.t.) 1. தூக்கந் தெளிதல்; recovering from drowsiness or sleep. 2. தூக்கத்தினின்று எழுதல்; rising from sleep. (சா.அக.)

நித்திரைப்பரிகாரம் *nittirai-p-parigāram,* பெ.(n.) 1. தூக்கம் வராதிருக்கும் படிச் செய்யும் முயற்சி; preventive measures taken for doing away with sleep. 2. நான்கு வகை பரிகாரத்திலொன்று; one of the four prescribed remedies (i.e.) preventing sleep. (சா.அக.)

நித்திரைமயக்கம் *nittirai-mayakkam,* பெ.(n.) தூக்கக் கலக்கம்; sleepingness, drowsiness. (சா.அக.)

நித்திரைமருந்து *nittirai-marundu,* பெ.(n.) தூக்கத்தைத் தரும் மருந்து; a drug or medicine that has the quality of inducing profound sleep - Soparific. (சா.அக.)

நித்திரைவரு-தல் *nittirai-varu,* 8 செ.கு.வி. (v.i.) தூக்கம் பிடித்தல்; becoming sleepy, to be sleepy. (சா.அக.)

நித்திரைவருவி-த்தல் *nittirai-varuvi-,* 4 செ.கு.வி. (v.i.) தூக்கம் வரும்படிச் செய்தல்; inducing sleep 5 or 7 grains of veronal taken mixing in water before bed time is enough. *"படுப்பதற்கு முன் இதற்கு விரோணல் 55-7 துளி தண்ணீரில் கலந்து குடிக்கத் தூக்கம் வரும்"* (சா.அக.)

நித்திரைவெறி *nittirai-veṟi,* பெ.(n.) தூக்கத்திலாவது தூக்கத்தினின்று எழுந்தாவது திடீரென முறை பிசகான காரியத்தைச் செய்தல்; a condition of incomplete sleep in which some of the faculities are excited when the person becomes violent - sleep drungness - Somnolentia. (சா.அக.)

நித்திராகாரிலேகியம் *nittirākāri-lēgiyam,* பெ.(n.) தூக்கத்தைத் தரும் மருந்து; anodyne confection or electuary. (சா.அக.)

நிதர்சனம் *nidarsaṉam,* பெ.(n.) வெளிப் படையானது, தெளிவானது, கண்கூட்டு; obuious, evident. *"இந்த நிதர்சனமான உண்மையை உன்னால் ஏன் ஏற்க முடியவில்லை? உன் வாதம் பொய் என்பது இப்போது நிதர்சனம் ஆகிவிட்டது".* (இ.வ.).

நிதனம் *nidaṉam,* பெ.(n.) 1. சாவு; death. 2. அழிவு; loss. (சா.அக.)

நிதாகம் *nidāgam,* பெ.(n.) 1. முதிர்வேனிற் காலம்; severe summer days. 2. உட்காங்கை; internal heat. 3. வியர்வை; sweat, perspiration. (சா.அக.)

நிதாகம் *nidāgam,* பெ.(n.) 1. முதுவேனிற் காலம்; summer. 2. வெப்பம்; heat, warmth. 3. வியவை; sweat.

[Skt. nidāgha > த. நிதாகம்]

நிதாககரன் *nitāga-garaṉ,* பெ.(n.) கதிரவன் (யாழ்.அக.); sun.

[Skt. nidāgha-kara > த. நிதாககரன்]

நிதானக்காரன் *nidāṉa-k-kāraṉ,* பெ.(n.) கருத்துள்ளவன் (யோசனையுள்ளவன்); careful person.

[Skt. nidhāna + த. காரன் > நிதானக்காரன்]

நிதானகாண்டம் *nidāṉa-kāṇḍam,* பெ.(n.) பலவித நோய்களைக் குறித்துச் சொல்லும் ஒரு ஆயுள் வேத நூல்; the branch of medicine in ayurveda which treats of the essential nature of diseases - their structural and functional changes, their causes and sysmptoms. (சா.அக.)

[நிதான + கண்டம்]

நிதானம்[1] *nidāṉam,* பெ.(n.) 1. முதல் காரணம்; first cause, origin. *"பந்த நிதானஞ் சங்கற்ப மன்றோ" (ஞானவா. மானுவே. 8).* 2. நோய்க் காரணம்; cause of a disease. *"வாத முதலிய பிணிகட்கு......... நிதான மாயினவன்றி மாறாயவியல் பினையுடையனவாம்" (குறள், 1102, உரை).* 3. சார்பு (மணிமே. 24. 105, உரை); cause of misery.

[Skt. nidāna > த. நிதானம்]

நிதானம்[2] *nidāṉam,* பெ.(n.) 1. முதற் காரணம்; primary cause, the disease and which gives clue to diagnosis. 2. பொன்; gold. 3. இரத்தினப் பொது; gem in common. (சா.அக.)

நிதானம்[3] *nidāṉam,* பெ.(n.) நோயின் காரணங்கள்; those causes which induce diseases. (சா.அக.)

நிதானம்[4] *nidāṉam,* பெ.(n.) 1. மணி (இரத்தினம்) (சூடா.); gem. 2. பொன் (உரி.நி.); gold. *"கவிபாட நிதான நல்கப் பற்றி கையினர்" (தேவா. 418, 6).* 3. படை (திவா.); army. 4. தீர்மானம்; ascertainment, assurance, decision. *"நிதான மொடு...... கூறன்மி னென்மரும்" (பெருங். வத்தச். 17, 62).* 55. மதிப்பீடு (உத்சேம்); guess, estimate, conjecture. *"நிதானமாய்சொல்".* 6. நோக்கம்; motive, object. *"உன் நிதானம் என்ன" (வின்.).* 7. நேர்மை; uprightness, rectitude. 8. நிதானமுள்ளவன்; carefulness, discrimination. *"சாவதானம் நிதானமாய் பேசுகிறவன்".* 9. சமம்; equality, sameness. 10. பிரமாணம்; standard, criterion rule.

[Skt. ni-dhāna > த. நிதானம்]

நிதானன் *nidāṉaṉ,* பெ.(n.) கடவுள் (வின்.); deity, as the first cause.

[நிதானம் → நிதானன்]

நிதானநூல் *nidāṉa-nūl,* பெ.(n.) மாதவ நிதானம் என்னும் ஆயுள் வேத நூல்; an ayurvedic book called *mādavanidāṉam.* (சா.அக.)

நிதானவித்தை *nidāṉa-vittai,* பெ.(n.) நோயின் காரணத்தையும் குறியையும் தெரிந்து கொள்ளும் வித்தை; the determination of disease. its causes any symptoms - Diagnosis. (சா.அக.)

நிதானி—த்தல் *nidāṉi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. உறுதி செய்தல் (நிச்சயித்தல்); to ascertain, determine, resolve. 2. மதிப்பீடுதல் (உத்தேசித்தல்); to estimate, judge. 3. அளவு திட்டப் படுத்துதல் (வின்.); to fix a measure or standard. 4. (அனுமானித்தல்) உன்னித்தல்; to inferdeduce.

[நிதானம் நிதானித்தல்]

நிதானி *nidāṉi,* பெ.(n.) 1. வேண்டிய கவனம் மேற்கொள்ளுதல்; pause, exercise caution pay due attention. 2. உறுதிப்படுத்துதல்; make sure, determine. *"அமைச்சர் உடனடியாக பதில் சொல்லாமல் சற்று நிதானித்தார். "குரல் எந்தச் திசையிலிருந்து வருகிறது என்பதை அவரால் நிதானிக்க முடியவில்லை".* (இ.வ.).

நிதானி *nidāṉi,* பெ.(n.) முன் எச்சரிக்கை உள்ளவன் (யோசனையுள்ளவன்); careful person.

[Skt. nitāṉi > த. நிதானி]

நிதி[1] *nidi,* பெ.(n.) 1. குவை, பொருட்டிரள்; treasure-hoard. *"பெருநல நிதி தலை சிறந்தது" (சீவக. 331).* 2. பொன் (சூடா.); gold. 3. ஒன்றிய ஐக்கிய நாணயச் சங்கம்; joint-stock company.

[Skt. nidhi > த. நிதி]

நிதி[2] *nidi,* பெ.(n.) 1. செல்வம், பணம்; wealth, money. 2. பொது வருவாய்; finance, fund. *"நிதி அமைச்சர், வெள்ள நிவாரண நிதி". "நிதியும் மதியும் இருந்தால் எதையும் அடையலாம்".* (இ.வ.).

நிதிஅறிக்கை *nidi-arikkai,* பெ.(n.) வரவு செலவுத் திட்டம்; budget. *"மக்களவையில் நிதி அறிக்கை படைக்கப்பட்டது".*

த.வ. பாதீடு

நிதிஆண்டு *nidi-āṇḍu,* பெ.(n.) வரவு செலவுத் திட்டம் செயலாக்கப்படும் மாதத்திலிருந்து அடுத்த வரவு செலவுத் திட்டம் வரையிலான காலம்; financial year.

த.வ. திட்ட ஆண்டு, பாதீட்டு ஆண்டு

நிதிக்கிழவன் *nidi-k-kiḻavaṉ,* பெ.(n.) தலைச்சங்கப் புலவருள் ஒருவர் ; a poet of the first sangam. *"நிதியின் கிழவன்" (இறை. கள. 1, உரை. பக்.4.)*

நிதிசாத்திரம் *nidi-sāttiram,* பெ.(n.) புதையல் கண்டுபிடிக்கும் நூல்; treastise on the discovery of treasure-troves.

[Skt. nidi > த. நிதிசாத்திரம்]

நிதித்தியாசனம் *nidi-t-tiyāsaṉam,* பெ.(n.) இடைவிடா ஊழ்கம் (தியானம்); un-interrupted meditation. *"நிதித்தியா சனத்தின் மன்னுவாய்" (பிரபுலிங். கதலி. 16).*

[Skt. nididhyāsana > த. நிதித்தியாசனம்]

நிதித்துறை *nidi-t-turai,* பெ.(n.) அரசின் செல்வத்துறை; finance department of the Government.

த.வ. செல்வத்துறை

நிதிநிசேபம் *nidi-nišēbam,* பெ.(n.) நிலத்தின் (பூமியின்) கீழுள்ள புதையல்; treasure hidden underground, a documentary term. (R.F.)

[Skt. nidhi+šēbam > த. நிதிநிசேபம்]

நிதிநூல் *nidinūl,* பெ.(n.) புதையலைக் கண்டறியும் செய்தி பற்றிக் கூறும் நூல்; a system of metallurgy burried treasures. (சா.அக.)

நிதிப்பலகை *nidi-p-palagai,* பெ.(n.) பொற் பலகை; golden seat. *"தண்ணிதிப் பலகைச் சந்தனச் சார்வணை" (பெருங்.இலாவாண. 18.. 41)*

[Skt. nidi+த. பலகை > த. நிதிபலகை]

நிதிப்பொதி *nidi-p-podi,* பெ.(n.) பொற்கிழி (வின்.); a purse of gold.

[நிதி + பொதி]

நிதியம்[1] *nidiyam,* பெ.(n.) நிதி; a celestial. *"நிலந்தினக் கிடந்த நிதியமொடு" (மலைபடு. 575). "நிதிய மலைமிசைத் தவனநெட்டெயி றொன்றினை முறித்து....... எழுத" (சேதுபு. அகத். 1).*

[Skt. nidi > த. நிதியம்]

நிதியம்[2] *nidiyam,* பெ.(n.) பெரும் தொகையை நிருவகிக்கும் அமைப்பு; financial consortium.

நிதியமைச்சர் *nidi-y-amaccar,* பெ.(n.) செல்வத்துறையின் அமைச்சர்; minister for finance.

த.வ. செல்வ அமைச்சர்

நிதுவனம் *niduvanam,* பெ.(n.) 1. கலப்பு; mixing. 2. புணர்ச்சி; sexual union. 3. மகிழ்ச்சி; joy. 4. விளையாட்டு; sport.

[Skt. nidhvana > த. நிதுவனம்]

நிதேசம் *nidēšam,* பெ.(n.) 1. கட்டளை; command. 2. சொல்; word. 3. அருகில். அண்மை (சமீபம்); proximity.

[Skt. ni-elēša > த. நிதேசம்]

நிந்தக்காணி *ninda-k-kāṇi,* பெ.(n.) ஒருவனுக்கே உரிமையான நிலம்; land which is the exclusive property of a single proprietor.

நிந்தகன் *nindagaṉ,* பெ.(n.) இழிவுரைஞன் (இழிவாக பேசுவோன்); who despises, scoffes. *"வேதநிந்தகனே புன்மை விடாக்குணும் புலையவனாவான்" (சிவ. தருசுவர்க். சேட. 37).*

[Skt. nindagaṉ > த. நிந்தகன்]

நிந்தம் *nindam,* பெ.(n.) தனி உரிமை; one's own exclusive right.

[Skt. nija > த. நிந்தம்]

நிந்தனை *nindaṉai,* பெ.(n.) இகழ்ச்சி; censure, scorn.

[Skt. nindanā > த. நிந்தனை]

நிந்தாட்சணை *nindāṭsaṉai,* பெ.(n.) இரக்கமின்மை; mercilessness, implacable nature, severity.

நிந்தாசுதுதி *nindāšutudi,* பெ.(n.) எள்ளியேத்தல் (இகழ்தல் போலப் புகழ்கை); praise in the apparent from of abuse.

[Skt. nindā+cutudi > த. நிந்தாசுதுதி]

நிந்தி-த்தல் *nindi-,* 3 செ.கு.வி.(v.i.) 1. இகழ்தல்; to vilify, abuse, slander. 2. அசட்டை பண்ணுதல் (பொருட்படுத்தா திருத்தல்); to neglect, disregard.

[Skt. nind + (-த்தல்) > த. நிந்தித்தல்]

நிந்திதம் *nindidam,* பெ.(n.) 1. இகழப்பட்டது; which is abused or despised. 2. பரிகாசம் (எள்ளல்) (யாழ்.அக.); prohibition.

[Skt. nindita > த. நிந்திதம்]

நிந்து *nindu,* பெ.(n.) இறந்த மக வீன்றாள் (யாழ்.அக.); woman delivered of a still-born child.

[Skt. nintu > த. நிந்து]

நிந்தை *nindai,* பெ.(n.) இகழ்ச்சி; reproach, blasphemy, abuse.

[Skt. nindā > த. நிந்தை]

நிந்தைவுவமை *nindai-y-uvamai,* பெ.(n.) உவமேயத்தை உயர்த்தி உவமானத்தை இகழ்ந்து சொல்லும் உவமையணி வகை (தண்டி. 30, உரை); figure of speech in which the object chosen for comparison is belittled.

[நிந்தை + உவமை]

நிப்பரம் *nipparam,* பெ.(n.) 1. பாரமின்மை (சுமையின்மை); lightness. 2. அசைவின்மை; firmness.

[Skt. nir-bhara > த. நிப்பரம்]

நிபச்சொல் *niba-c-col,* பெ.(n.) பழிச்சொல் (வின்.); slandex backbiting, calumny.

[Skt. nibha > த. நிபச்சொல்]

நிபடிதம் *nibaḍitam,* பெ.(n.) (படித்தல்) படிக்கை (யாழ்.அக.); studying.

[Skt. nipaṭhita > த. நிபடிதம்]

நிபத்தியை *nibattiyai,* பெ.(n.) போர்க்களம் (யாழ்.அக.); battle-field.

[Skt. nipatyā > த. நிபத்தியை]

நிபதனம் *nibatanam,* பெ.(n.) 1. விழுகை (யாழ்.அக.); falling down. 2. கீழ் இறக்குகை; throwing down, letting down; dropping.

[Skt. ni-patana > த. நிபதனம்]

நிபந்தம் *nibandam,* பெ.(n.) 1. தாவரப் பொருள்; immoveable property. 2. தவணையாகச் செலுத்துவது; that which has been qromised or is deliverable in instalments. (R.F.). 3. கோவில்களுக்கு விடப்பட்ட சொத்து; endowment of property for temple workship. *"நிபந்த வகுப்பு நாதன் வைத்தபணியென" (கோயிற்பு. திருவிழா. 18).* 4. கடமை (வின்.); obligation, duty. 5. அணை (யாழ்.அக.); dam. 6. யாப்பு (யாழ்.அக.); poem.

[Skt. ni-bhandha > த. நிபந்தம்]

நிபந்தனக்கிரந்தம் *nibandana-k-kirandam,* பெ.(n.) பல நூல்களிலிருந்து திரட்டிய மறைநூல் (வின்.); a treatise compiled from various smrtis.

[Skt. nibandhana+kiranta > த. நிபந்தனக் கிரந்தம்]

நிபந்தனம் *nibantanam,* பெ.(n.) தொகுப்பு (வின்.); collection, compendium.

[Skt. nibandhana > த. நிபந்தனம்]

நிபந்தனை *nibandanai,* பெ.(n.) 1. கட்டுப்பாடு; agreement, compact, condition. 2. பொது விதி; canon, regulation, general rule. 3. ஏற்பாடு (இ.வ.); arrangement. 4. தண்டனை (வின்.); punishment, penalty.

[Skt. nibandhanā > த. நிபந்தனை]

நிபம்[1] *nibam,* பெ.(n.) 1. உவமை (வின்.); comparison, likeness, resemblance. 2. காரணம்; cause, reason, pretext. *"வெய்யன் வரநிபமென்னை கொலென" (கம்பரா. பரசு. 15).* 3. வஞ்சகன், கரவடம், ஏய்ப்பு (வின்.); fraud. 4. கோள் (வின்.); accusation, slander, calumny. *"திருவல்லிக்கேணி பஞ்சொல்லித் கண் முத்தங்கள் சிந்துங் கண்டாய்" (தனிப்பா. ii. 183. 447).*

[Skt. nibho > த. நிபம்]

நிபாகம் *nibāgam,* பெ.(n.) சமைக்கை (யாழ்.அக.); cooking.

[Skt. ni-bāga > த. நிபாகம்]

நிபாதம் *nibādam,* பெ.(n.) 1. இறங்குகை (வின்.); falling, descending. 2. செயலொழிகை (வின்.); cessation of activity, prostration. 3. இறப்பு (யாழ்.அக.); death. 4. உடம்பொடு புணர்த்தல் (பி.பி.50, உரை); a device in literary art.

[Skt. nipāta > த. நிபாதம்]

நிபாதனம் *nibādanam,* பெ.(n.) கொல்லுகை (யாழ்.அக.); destroying, killing.

[Skt. ni-pātana > த. நிபாதனம்]

நிபானம் *nibānam,* பெ.(n.) 1. கிணறு (யாழ்.அக.); well. 2. நீர்த் தொட்டி; reservoir of water trough for watering cattle. 3. பாற் கலசம்; milk pail.

[Skt. nipāna > த. நிபானம்]

நிபிடாருட்சா *nibiḍāruṭsā,* பெ.(n.) கருப்புக் கடலை; black bengal gram. (சா.அக.)

நிபிடீகரம் *nibiḍīgaram,* பெ.(n.) 1. நெருக்கம்; closeness, thickness, as of men, of leaves. 2. கடுமை; sevenity as of disease, urgency, pressure.

[Skt. nibiḍīkāra > த. நிபிடீகரம்]

நிபீடனம் *nibīḍanam,* பெ.(n.) மற்போர் (சுக்கிரநீதி. 215); wrestling.

[Skt. ni-pīḍana > த. நிபீடனம்]

நிபீடிதம் *nibīḍidam,* பெ.(n.) 1. பிசைதல்; squeezing. 2. தழுவல்; embracing. (சா.அக.)

நிபுணத்துவம்[1] *nibunattuvam,* பெ.(n.) 1. நுண்திறன் (சாமர்த்தியம்); skill, cleverness. 2. திறப்பாடு; excellence, superiority. *"வாசிட்டமா நிபுண ஞான நூல்" (ஞானவா. வைரா. 16).*

[Skt. nipu-na-tva > த. நிபுணத்துவம்]

நிபுணத்துவம்[2] *nibunattuvam,* பெ.(n.) தேர்ச்சி; expertise, professionalism.

நிபுணர் *nibunar,* பெ.(n.) தேர்ச்சியும், திறமையும் பெற்றவர்; expert, specialist. *"மருத்துவ நிபுணர் / வேறு எதில் அவர் நிபுணரோ எனக்குத் தெரியாது, ஆனால் பொய் சொல்வதில் நிபுணர்".* (இ.வ.).

த.வ. திறவோன்

நிபுணன் *nibunan,* பெ.(n.) 1. நுண் திறத்தன், மிக வல்லோன் (திவா.); skilful man, expert. 2. கலைவல்லோன் (பிங்.); learned man. 3. அறிவன் (புதன்) (வின்.); mercury.

[Skt. nipuna > த. நிபுணன்]

நிமிடம் *nimidam,* பெ.(n.) 1. 60 விநாடி கொண்ட காலம் (நிமையம்); a period of 60 minutes (i.e.) a minute. 2. சிமிட்டுக் கண் (இமைப் போது); continous winking - Blepharism. (சா.அக.)

நிமித்தகம் *nimittagam,* பெ.(n.) முத்தமிடல் (யாழ்.அக.); kissing.

[Skt. nimittaka > த. நிமித்தகம்]

நிமிதகம் *nimidagam,* பெ.(n.) கொக்கோக நூலின்படி ஓர் வகை முத்தமிடல்; a mode of kissing, limited or normal kiss in which the girl merely touches the lips or her lover with her own but not operate or take any other active part. (சா.அக.)

நிமித்தக்காரன் *nimitta-k-kāran,* பெ.(n.) கோள் நிலையை நோக்கி வருங் காரியஞ் சொல்வோன் (வின்.); Astrologer, soothsayer.

[Skt. nimitta > த. நிமித்தக்காரன்]

நிமித்தகாரணம்[1] *nimitta-kāranam,* பெ.(n.) மூலகாரணம்; primary cause. (சா.அக.)

நிமித்தகாரணம்[2] *nimitta-kāranam,* பெ.(n.) காரணம் மூன்றனுள் குடத்துக்குக் குயவன் போலக் காரியத்தோடு அனுவிருத்தியில்லாத கரணியம்; efficient cause, as the potter for a pot one of three kāranam. *"அதற்கு நிமித்த காரணங்கேவலப் பொருளென் பதூஉம்" (குறள், 352, உரை) (தருக்க. சங்.பக்.24).*

[நிமித்தம் + காரணம்]

[Skt. nimitta > த. நிமித்தகாரணம்]

நிமிர்ச்சுவாசம் *nimirccuvāsam,* பெ.(n.) நிமிர்ந்தபடி இருந்தாலொழிய மூச்சுவிட முடியாமை; inability to breathe except in an upright position - Orthopnea. (சா.அக.)

நிமித்தசுரம் *nimittasuram,* பெ.(n.) வேண்டு மென்று உண்டாக்கிய சுரம்; fever that is wantenly brought about - indued fever. (சா.அக.)

நிமித்தசூடாமணி *nimitta-šūdāmani,* பெ.(n.) ஒரு புட்குறிநூல் (சகுனநூல்) (யாழ்.அக.); a treatise on omens.

[Skt. nimitta > த. நிமித்தசூடாமணி]

நிமித்தத்துவம் *nimittattuvam,* பெ.(n.) ஏதுத்தன்மை (சங்.அக.); causality.

[Skt. nimitta+த. தத்துவம் > த. நிமித்தத்துவம்]

நிமித்தம் *nimittam,* பெ.(n.) 1. காரணம்; cause, motive, occasion. *"புணர்தலும் புணர்தனி மித்தமும்" (தொல்.பொ.13, உரை).* 2. குறி சொல்லுதல்; omen. *"நெறியி னல்கின புள்ளு நிமித்தமும்" (சீவக. 2168).* 3. அடையாளம் (வின்.); mark, sign, spot, token. 4. சபிண்டீ கரணத்தில் இறந்தோர்க்கு நிகராளியாய் (பிரதிநிதி) வரிக்கப் பெற்றவர்க்குரிய இடம்; the office of a Brahmin representing

deceased on the 12th day ceremony. 5.பொருட்டு; for the sake of, on account of. *"அதனிமித்தம் வந்தேன்" (வின்.)*

[Skt. ni-mitta > த. நிமித்தம்]

நிமித்ததானம் *nimitta-dāṉam,* பெ.(n.) பிணத்திற்கு உருக்கமாகச் செய்யும் கொடை (வின்.) (பிரேதப் பிரீதியாகச் செய்யுந் தானம்); gifts or offerings made for the benefit of the soul of a deceased person before he is included among manes.

[Skt. nimitta+த. தானம் > த. நிமித்ததானம்]

நிமிளை *nimiḷai,* பெ.(n.) இது ஓர் வகைத் தாது; It is a kind of metal. *"தமிழ் வைத்திய நூலில் இதை ஒரு உபரசச்சரக்காக எடுக்கப் பட்டுள்ளது".* (சா.அக.)

நிமீலனம் *nimīlaṉam,* பெ.(n.) 1. கண்ணிமைப்பு; twinkling of the eye. 2. மரணம்; death. (சா.அக.)

நிமேசகம் *nimēsagam,* பெ.(n.) மின்மினிப் பூச்சி; firefly, glow-worm. (சா.அக.)

நிமேடா *nimēḍā,* பெ.(n.) அடிக்கடி கண் சிமிட்டல்; winking very often. (சா.அக.)

நிமேடவர்த்தமம் *nimēḍa-varttamam,* பெ.(n.) கண்ணின் இமைச்சந்தில் வாயு நிற்கும் போது, ஓயாது இமைகளைக் கொட்டி ஒரு வேளை மூடவும், திறக்கவும் செய்யுமோர் வகைக் கண்ணோய்; an eye disease characterised by constent winking of the eyelids owing to the incarceration of the deranged vayu within the nerves or veins controlling their winking. (சா.அக.)

நியக்கி *niyakki,* பெ.(n.) மான் (யாழ்.அக.); deer.

[Skt. nyaṅku > த. நியக்கி]

நியக்கரணம் *niya-k-karaṇam,* பெ.(n.) அவமதிப்பு (யாழ்.அக.); degradation, disrespect.

[Skt. nyakkaraṇa > த. நியக்கரணம்]

நியக்குரோதம் *niya-k-kurōdam,* பெ.(n.) ஆலமரம் (மலை.); banyan tree.

[Skt. nya-grōdha > த. நியக்குரோதம்]

நியங்கு *niyaṅgu,* பெ.(n.) பொன்; gold. (சா.அக.)

நியசி-த்தல் *niyaci-,* செ.குன்றாவி.(v.t.) வைத்தல்; to place, to locate. 2. பதித்தல்; to insert.

[Skt. nyas > த. நியசித்தல்]

நியதம்[1] *niyadam,* பெ.(n.) 1. அடக்கம் (யாழ்.அக.); restraint, self-control. 2. எப்பொழுதும்; always, invariablity. *"நியதமு மத்தாணிச் சேவகமும்" (திவ். திருப்பல். 8).*

[Skt. niyata > த. நியதம்]

நியதம்[2] *niyadam,* பெ.(n.) ஒழுங்கு; regularity.

[Skt. niyata > த. நியதம்]

நியதி[1] *niyadi,* பெ.(n.) 1. செய்கடன்; religious or moral duty, obligation. *"புனல் கொண்டு நியதிகள் முடித்து" (கோயிற்பு. பதஞ். 4).* 2. ஒழுக்க நெறி; custom, usage, law, rule. *"அருநியதி நாடிய சன்னியாசப் பெருந் தவத்த னாயினான்" (இராகு. 8).* 4. ஊழ்; destiny. *(குறள், அதி, 38, அவ.).* 6. வரையறை முறைமை (இ.வ.); method. 5. வரையறை; restriction. *"இன்னவிடத்து என்னும் நியதியின்றி" (நன். 393, மயிலை).*

[Skt. niyati > த. நியதி]

நியதி[2] *niyati,* பெ.(n.) 1. கிரமம்; fixed order of things. 2. ஊழ்; destiny, fate. 3. செய்கடன்; religious or moral duty. 4. தத்துவம்; one of the thirty six principles in mystic philosophy.

நியதி-த்தல்[3] *niyadi-,* செ.கு.வி.(v.i.) உறுப்புகளை (அங்கங்களை) மந்திரத்தால் தெய்வங்கட்கு உரிய வாக்குதல் (வின்.); to

appropriate, assign parts of the body to a deity in incantations.

[Skt. nyas > த. நியதி-த்தல்]

நியதிதத்துவம் *niyadi-tattuvam,* பெ.(n.) சுத்தாசுத்ததத்துவத்துள் ஒவ்வோர் ஆன்மாவும் தன் கருமபலனை நுகரச் செய்வது (சி.கோ. பா.2.2.பக்.150); category of desting which makes each soul experience the fruits of its own karma, one of seven *cuttācutta-tattu-vam.* q.v.

[Skt. niyati > த. நியதி + தத்துவம்]

நியதிப்பெயர் *niyadi-p-peyar,* பெ.(n.) ஏற்புடைய மொழி (வின்.); appropriate word or epithet.

[Skt. niyati > த. நியதிப்பெயர்]

நியதிபண்ணுதல் *niyati-paṇṇu-,* செ.குன்றாவி. (v.t.) நீக்குதல் (சங்கற்ப. 3 வரி 187, உரை); to remove.

[Skt. niyati > த. நியதி + பண்ணுதல்]

நியதீசம் *niyadīsam,* பெ.(n.) சுனைப்புன்கு; rusty soap nut Eriogpssum adule. (சா.அக.)

நியது-தல் *niyadu-,* செ.குன்றாவி.(v.t.) விடுதல் (சது.); to leave, let go, release.

[Skt. nyas > த. நியதுதல்]

நியதேந்திரியன் *niyadēndiriyaṉ,* பெ.(n.) இந்திரியங்களை அடக்குபவன்; one who suppresses the five senses one restraining his passions. (சா.அக.)

நியதேந்திரியன் *niyatēndiriyaṉ,* பெ.(n.) புலனடக்கி (இந்திரியங்களை அடக்கினவன்) (யாழ்.அக.); one who has subdued his senes.

[Skt. niyatēndriva > த. நியதேந்திரியன்]

நியந்தா *niyandā,* பெ.(n.) 1. கட்டளையிடுவோன்; one who guides, controls. 2. கடவுள்; God. *"அசடமொடுசட நியந்தா வின்மிக்கோர்" (வாயுசங். ஞானநி. 5).*

[Skt. niyantā > த. நியந்தா]

நியமக்காரன் *niyama-k-kāraṉ,* பெ.(n.) 1. விரதம் பூண்டவன்; one who has taken a religious vow. 2. (ஆசாரமுள்ளவன்) ஒழுக்க முள்ளவன்; he who strictly observes religious ordinances.

[நியமம் + காரன்]

நியமக்கிரிகை *niyama-k-kirigai,* பெ.(n.) சாத்திரம் (கலை, நூல்) வகுத்த (அனுட்டானம்) நடைமுறை; duties enjoined by sastras. *"நீர்க்கட னாற்றிய நியமக் கிரிகையன்" (பெருங். உஞ்சைக். 53, 92).*

[நியமம் + கிரிகை]

நியமங்கெட்டவன் *niyamaṅ-keṭṭavaṉ,* பெ.(n.) ஒழுக்கந் தவறியவன்; man of unrighteous habits.

[நியமம் + கெட்டவன்]

நியமச்சிலேடை *niyama-c-cilēḍai,* பெ.(n.) பல பொருளுக்கு இயையுமாறு ஒன்றுக்கு நிய மிக்கும் சிலேடையணி (தண்டி. 755) (சிலேடை - இரட்டுறமொழிதல்); a figure of speech wherein an expression capable of many applications is restricted to only one object by suitable devices.

[நியமம் + சிலேடை]

நியமச்சூத்திரம் *niyama-c-cūttiram,* பெ.(n.) ஓரிடத்திற் பலவிதிகள் நிகழும் நிலையில் குறித்த ஒன்றை வரையறுக்குஞ் சூத்திரம் (யாப். வி. 1. பக். 11); a Sūtra directing the application of a particular rule when along with others, it is merely optional.

[நியமம் + சூத்திரம்]

நியமஞ்செய்-தல் *niyamañ-jey-,* 1 செ. குன்றாவி. (v.t.) 1. ஏற்படுத்துதல்; to make an engage- ment, form a purpose.

2. வேலையில் அமர்த்துதல்; to appoint to an office.

[நியமம் + செய்தல்]

நியமநிட்டை *niyama-niṭṭai,* பெ.(n.) சமயா னுட்டானம், சமய நடைமுறைகள்; religious, duties.

[நியமம் + நிட்டை]

நியமம்[1] *niyamam,* பெ.(n.) 1. செய்கடன் (திவா.); moral or religious duty. *"நித்தலுந் நியமஞ் செய்து" (தேவா. 39, 1).* 2. அட்டாங்க யோகத் துள் தவம், தூய்மை, தத்துவமோர்தல், மழை வந்திருத்தல், தெய்வ வழிபாடு என்ற விதிமுறை களில் வழுவாதொழுகல் (திவா.); (yoga) disciplinary observances, such as practice of contentment, bodily mortification, investigation of religious truths and worship of God. 3. விதி; ordinance, injunction. 4. உறுதி (பிங்.); certainty, assurance. 5. வழக்கு (வின்.); usage, practice. 6. வரையறுக்கை; defining, delimiting.

[Skt. niyama > த. நியம(ம்)]

நியமம்[2] *niyamam,* பெ.(n.) 1. முடிவு; close, end, finish. 2. நகரம் (பிங்.); town, city. *"நெடுநீர்க் கழனிசூழ் நியமஞ் சேர்த்தி" (சீவக. 2601).* 3. கோயில்; temple. *"உவணச் சேவ லுயர்த்தோ னியமமும்" (சிலப். 14, 8).* 4. கடைத் தெரு; bazaar street. *"ஓவுக் கண்டன்ன விருபெரு நியமத்து" (மதுரைக். 365).* 5. தெரு (பிங்.); street. 6. இடம் (பிங்.); location. 7. மண்டபம்; a hall. *"பட்டி நியமம்" (பெருங். வத்தவ. 2, 73).*

[Skt. nigama > த. நியமம்]

நியமம் *niyamam,* பெ.(n.) 1. நீர் முள்ளி; water thistle - Barleria longifolia. 2. இடம்; place, location. 3. ஒவ்வொருவரும் அனுசரிக்க வேண்டிய கடமைகள்; certain minor duties to be observed by every man. 4. முறைமை; established course rite or ceremony. 5. செய்கடன்; moral obligation or duty. 6. எட்டு வகை ஒகத்தில் ஒன்று; one of the eight stages of yoga. 7. மதக் கொள்கை; religious observances, a rule or precept laying down or specifying something otherwise optional. 8. மனவடக்கம்; restraint of the mind. 9. ஒகப் பயிற்சியில் (ஒகாப் பியாசத்தில்) இயமம் என்பதைத் தவிர்த்து மற்ற முறைகளை அனுசரிப்பது; any act of voluntary enance or meritorious piety in yoga practice other than yamam restraint of appetite especially a lesser vow or minor dependent on external condition, not so obligatory as. 10. உலோகங்களில் அவைகளில் முதன்மையாக இரச முறையில் அனுசரிக்க வேண்டிய கோட்பாடு; a process applied to minerals especially to quick silver. (சா.அக.)

[Skt. nigma > த. நியமம்]

நியமவிஞ்சனம் *niyama-viñjaṉam,* பெ.(n.) இன்றியமையாத துணைப் பொருள்கள்; necessary accessories. *"மங்கலக் கருவிக்கு நியமவிஞ்சன மமைமின்" (பெருங். உஞ்சைக். 34, 171–2).*

[Skt. ni-yama+uyañjana > த. நியமம் + விஞ்சனம்]

நியமவிலக்குச்சிலேடை *niyama-vilakku-c-cilēḍai,* பெ.(n.) நியமஞ் செய்து கூறிய சிலேடையை வேறொன்றற்குங் கூறி அந் நியமத்தை விலக்கும் சிலேடையணி (தண்டி. 76, உரை); a figure of speech in which an expression capable of many applications is restricted to one of them in the first instance and then extended to another.

[நியமம் + விலக்குச்சி + சிலேடை]

நியமவுவமை *niyama-v-uvamai,* பெ.(n.) உவமானமாகக் கூறத்தக்கன பலவற்றுள்

சிறந்ததொன்றனையே தேற்றே காரத்தால் நிச்சயித்துக் கூறும் உவமை வகை (தண்டி. 30, உரை, 9); simile in which only one object, among many, is expressly taken as *uvamāṉam.*

[நியமம் + உவமை]

நியமனம்[1] *niyamaṉam,* பெ.(n.) 1. கட்டளை; precept, rule, order. *"நியமனமிருந்த படியே....... அவ்விக்ரஹத்தை முடித்துக் கொடுக்க" (குருபரம். 173).* 2. அமர்த்தம்; appointment to an office. 3. உத்தரவு; permission, vasṉ. 4. வகைப்படுக்கை; classification. *"உணர்வினிய மனஞ் செய்வனெவன்" (கூர்மபு. பிரகிருதி. 2).*

[Skt. ni-yamana > த. நியமனம்]

நியமனம்[2] *niyamaṉam,* பெ.(n.) 1. அதிகார நிலையில் ஏற்படுத்தும் பணி அமர்த்தம்; appointment. *"சத்துணவுத் திட்ட அமைப் பாளர்களாக இருநூறு பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்". "மின் வாரியத் தலைவராக நியமனம் பெற்றுள்ளவர் யார்? வேலைக்கான நியமனக் கடிதம் வந்துள்ளது".* 2. நேரடியாக ஒரு பொறுப்புக்கு ஒருவரை அல்லது தனக்கு மாற்றாக செயற்பட ஒருவரை அமர்த்தும் முறை; nomination. *"நியமன உறுப்பினர் . வருடாந்திரக் கூட்டத்தில் உங்களுக்கு பதில் மற்றொருவரை நியமனம் செய்யலாம்".* (இ.வ.).

த.வ. அமர்த்தம்

நியமசதன் *niyamasadaṉ,* பெ.(n.) 1. அமர்த்தம் பெற்ற அலுவலன்; person appointed to an office or duty. 2. நடைமுறைகளை பின்பற்று பவன்; regular observer of religious duties.

[Skt. niyama+த. சதன் > த. நியமசதன்]

நியமி-த்தல் *niyami-,* 4 செ.குன்றாவி. (v.t) 1. வேலை முதலியவற்றில் பணி அமர்த்துதல்; to appoint, designate, ordian, institute, assign, appropriate. 2. தீர்மானித்தல்; to resolve, determine. *"இடமுங்காலமும் நியமித்து" (தொல். பொ. 3, உரை).* 3. உறுதி செய்தல்; to consecrate, dedicate, devote. 4. ஓரிடத்திற் பல நெறி (விதி)கள் நிகழ் நிலையில் ஒன்று அல்லது சிலவே வரும் என்று வரையறுத்தல். (தொல். 87, சேனா.); (Gram.) to make a rule imperative when, along with other rules, it is merely optional. 5. பிறப்பித்தல் (சூடா.) to produce, originate, bring into being. 6. கட்டளையிடுதல்; (vaiṣṉ) to order, command. 7. வகைப்படுத்துதல். to classify. எவ்வாறு நியமிக்கப்படும் (கூர்மபு. பிரகிருதி.2);

[Skt. niyama > த. நியமி-]

நியமித்தல் *niyamittal-*பெ.(n.) பிறப்பித்தல்; causing to originate, bringing into being.

நியமிதம் *niyamidam,* பெ.(n); 1.அமர்த்தம் பெற்றது (வின்.);that which is prescribed, appointed, fixed, regulated, determined. 2. உறுதியானது (யாழ். அக); determination.

[Skt. ni-yamita > த. நியமிதம்.]

நியர்ப்புதம் *niyarppudam,* பெ.(n); பதினா யிரங்கோடி (பிங்.); a hundred thousand millions.

த.வ. பத்தாயிரம் குவளை

[Skt. nyarbuda > த. நியர்ப்பதம்]

நியாக்கியம் *niyākkiyam,* பெ.(n.); பொரி யரிசி. (யாழ். அக.); fried rice.

[Skt. nyākya. > த. நியாக்கியம்]

நியாக்குரோதம் *niyākkurodam,* பெ.(n.); நியக்குரோதம் பார்க்க;; see niyakkurodam. (சா.அக.).

[Skt. nyākurrodam > த. நியாக்குரோதம்]

நியாசசுவரம்[1] *niyāša-šuvaram,* பெ.(n.) பண் முடிவில் அமையும் இசைச் சுரம்; tonic at the conclusion of a piece.

[Skt. nyāsat.(Mus.) > த. நியாசசுவரம்]

நியாசசுவரம்[2] *niyāsa-suvaram* பெ.(n.) பண்ணைக் காட்டி முடித்தற்குரிய சுரம் (mus. of Ind. 39.); (mus.) proper final note of a rāga.

[Skt. nyāsa+swara > த. நியாஸஸ்வரம்]

நியாசதி *niyāsadi,* பெ.(n.) அனிச்சை; snake jasmine. (சா.அக.).

நியாசம்[1] *niyāšam,* பெ.(n.) 1. வைக்கை; putting down; placing; inserting; 2. கடவுளே புகலென்று அவரிடம் மனச் சுமையை வைத்தல். placing one's burden on God, as one's final refuge. *"கைவிடா நன்னியாசத் தருநியதி"* (இரகு. இரகுக. 18). 3. மந்திர எழுத்துகளைப் பலுக்கித் தேவதை களை உறுப்புகளில் வைக்கும் சடங்கு; assignment of the various parts of the body to different deities with appropriate mantras. *"நியாசமுந் தியானமுமாற்றி"* (காஞ்சிப்பு. சனற். 13). 4. ஈடுவைத்த பொருள்.(வின்) deposit, pledge, mortgage.

[Skt. nyāsa. > த. நியாசம்]

நியாசம்[2] *niyāšam,* பெ.(n.) வேம்பு (மலை.); margosa.

நியாசம்[3] *niyāšam,* பெ.(n.) 1.முணு முணுத்தல்; uttering words with a low voice and compressed lips - muttering. 2. துறவு; renouncement (சா.அக.).

நியாசிசம் *niyāšisam,* பெ.(n.) கருப்பு மரு; a painless circulor eruption of dark colour. (சா.அக.).

நியாதம்[1] *niyādam,* பெ.(n.) நியாசம்[1] பார்க்க; see niyasam[1]. "பண்ணி நியாதம் பரம சிவன்பாத முண்ணினைக." (சைவச. பொது. 328).

[Skt. nyāsa. > த. நியாதம்.]

நியாதம்[2] *niyātam,* பெ.(n.) நியாசம்[2] (மூ.அ.) பார்க்க; see niyāšam[2].

[Skt. nyasa > த. நியாதம்.]

நியாமகம் *niyāmagam,* பெ.(n.) கட்டுப் படுத்துவது; that which binds or sanctions. *"நியாமகம் என்னையென்பீராயின்"* (சிவசம. 51).

[Skt. niyāmaka. > த. நியாமகம்.]

நியாமகன் *niyāmagan,* பெ.(n.); 1. இயக்கு பவன், ஆள்பவன் (நியமிப்பவன்); one who rules; director. *"உயிர்க்குயிராகி நியா மகனாய்"* (அஷ்டப். திருவரங்கத். மா. 4). 2. தேரோட்டி (யாழ். அக.); charioteer. 3. கப்பலைச் செலுத்துவோன் (யாழ். அக); sailor.

[Skt. niyāmaka > த. நியாமகன்.]

நியாயக்கேடு *niyāya-k-kēdu,* பெ.(n.) நியாயத்தப்பு பார்க்க; *seeniyāyattapu.*

[Skt. nyāya > த. நியாயக்கேடு.]

நியாயங்களிலார் *niyāyankalitor,* பெ.(n.) ஒருசார் கூட்டத்தைச் சேர்ந்தவர் (T.A.S. iv, 122.); members of an association.

[Skt. nikāya > த. நியாயங்களிலார்.]

நியாயங்காட்டு-தல் *niyāyaṅ-kaṭṭu,* 5 செ.கு.வி. (v.i.) காரணங்கூறுதல்; to adduce argument, account for.

[Skt. nikāya > த. நியாயம்+காட்டு-]

நியாயங்கேள்-தல் *niyāyaṅ-kēl,* 2 செ.கு.வி. (v.i.) வழக்கு உசாவுதல் (வின்.) to hear a complaint, try a case.

[Skt. niyāya> த. நியாயம்+கேள்-]

நியாயசபை *niyāya-šabai,* பெ.(n.) முறை மன்றம்; court.

[Skt. niyāya > த. நியாயசபை.]

நியாயசாத்திரம் *niyāyā-šattiram,* பெ.(n.) நியாயநூல், 1,2. பார்க்க; see *niyāyanūl,* 1,2.

[Skt. niyāyašāstra > த. நியாயசாத்திரம்]

நியாயத்தப்பு *niyāyā-t-tappu,* பெ.(n.) முறைகேடு (நீதிக்கேடு); unfairness, injustice.

[Skt. niyāya> த. நியாயம்+தப்பு.]

நியாயத்தார் *niyāyattār,* பெ.(n.) நடுவர், நீதிபதிகள் (T.A.S. iv, 122.); judges.

[Skt. niyāya+> த. நியாயத்தார்]

நியாயத்தீர்ப்பு *niyāya-t-tīrppu,* பெ.(n.) வழக்கில் நடுவர் (நீதிபதி) கொடுக்குந் தீர்ப்பு (வின்.); judgement.

[Skt. niyāya > த. நியாயம்+தீர்ப்பு.]

நியாயத்தீர்ப்புநாள் *niyāya-t-tiruppu-nāḷ,* பெ.(n.) உலக முடிவில் இயேசுநாதர் தீர்ப்பு கொடுக்கும் நாள் (கிறித்); the day of judgement.

[Skt. niyāaya > த. நியாயம்+தீர்ப்புநாள்]

நியாயதுரந்தரன் *niyāya - turandaran,* பெ.(n.) 1. வழக்குரைஞர்; Barrister, advocate, proctor, pleader, Lawyer. 2. நீதியுள்ளவன்; just person, one who maintains justice. யாழ். அக.).

நியாயநிட்டூரம் *niyāya-niṭṭūram,* பெ.(n.) முறைகேடு; injustice, unreasonableness.

[Skt. nyāya > த. நியாயநிட்டூரம்]

நியாயநூல் *niyāya-nūl,* பெ.(n.) 1.தருக்க நூல்.logic, dialecticals. நியாய நூலா ராய்ச்சி யென்க. (தொல்.பொ.514, உரை); 2. சட்ட நூல். (யாழ். அக.); code of laws. 3. ஒழுக்க நூல் (வின்.): ethical treatise.

[Skt. nyāya > த. நியாயம்+நூல்.]

நியாயநெட்டூரம் *niyāya-neṭṭuram,* பெ.(n.) நியாயநிட்டூரம் (யாழ். அக.) பார்க்க; see *niyāyaniṭṭūram.*

[Skt. nyāya > த. நியாயநெட்டூரம்.]

நியாயப்பிரமாணம் *niyāya-p-piramāṇam* பெ.(n.) முறைமைச்சட்டம்; law, divine or human.

[Skt. nyāya > த. நியாயப்பிரமாணம்.]

நியாயப்பிரமாணி *niyāya - p - piramāṇi* பெ.(n.) 1. ஒழுக்கமுள்ளவன்; upright man. 2. முறை தவறாது நடப்பவன் (வின்.); one who conforms to laws.

[Skt. nyāya > த. நியாயப்பிரமாணி.]

நியாயப்பிரமாணிக்கன் *niyāya-p-pira-māṇikkaṉ,* பெ.(n.) நியாயப்பிரமாணி பார்க்க; see *niyāya-pramāṇi.* (இ.வ.)

[Skt. nyāya > த. நியாயப்பிரமாணிக்கன்.]

நியாயபத்திரம் *niyāya-pattiram,* பெ.(n.) வழக்குத் தீர்ப்பு (I.nsc); judgement or decree.

[Skt. nyāya+patrā > த. நியாயபத்திரம்.]

நியாயபரிபாலனம் *niyāya-paripālanam,* பெ.(n.) அறநெறியாட்சி; administration of justice.

[Skt.nyāya+paribalanā > த. நியாயபரிபாலனம்.]

நியாயபோதனை *niyāya-pōdaṉai,* பெ.(n.) 1. நன்னெறியுணர்த்துகை; inculcation of natural virtues. 2. அறமொழிகள் (வின்.); precept.

[Skt.nyāya+bothana > த. நியாயபோதனை.]

நியாயம்[1] *niyāyam,* பெ.(n.) 1. முறை (நீதி); propriety, fairness, equity, justice, right. 2. வாய்மை (பிங்); truth, honesty. 3. நன்னனெறி; morality, natural virtues *"நியாயமத்தனைக்கு மோர் நிலய மாயினான்"* (கம்பரா. கிளை. 55). 4. சட்டம்; law, rule, precept. 5. காரணம்; cause, reason, ground of action. 6. தருக்கம் (வாக்குவாதம்). (யாழ். அக.); argument, debate. 7. கௌதமர் மதம் பற்றிய தருக்கநூல். (phil.) the *niyāya* system of philosophy, founded by Gautama. *"நியாய வைசேஷிகங்களை"* (தக்கயாகப் 246 , உரை); 8. நியாயவை சேஷிகங்களாகிய தருக்கநூல்; *nayāya vaiśēṣika* systems. 9. ஒப்பு; resemblance. *"நீலக்கரு நிறமேக நியாயற்கு".* 10. உலக வியலாகவும் நூலியலாகவும் வழங்கும்

எடுத்துக்காட்டு நெறி; illustrative maxims. 11. போக்கு(வின்.) plea, excuse. 12. வழக்கு (யாழ். அக); usage. 13. கட்டுப்பாடு (வின்.); constitution.

[த. நயன் > Skt. nyāya. > த. நியாயம்.]

நியாயம்[2] *niyāyam* பெ.(n.) 1. இடம் (சது.); place. 2. ஒரு நோக்கத்துடன் அமைந்த கூட்டம்; collection, body, group or association of persons having the same duties or interests. *"அவ்வவர் நியாயங் களுக்குத் தக்கவரில் ... யோக்கியராய் இருப்பாரை ஆளிட்டு"* (S,I,I, ii 261).

நியாயம்[3] *niyāyam* பெ.(n.) 1. ஏரணம் (தருக்கம்); logical conclusion. 2. நையாயிகம் என்னும் மெய்யியல் (தத்துவம்); Nyaya philosophy one of the six schools of philosophy. 2.வழிபாடாகும் ஆன்மத்தின் தெய்வத் தன்மையையும்; மூலகாரணத்தையும், உலக நடப்பில் மாயையின் தொடர்பும் அதன் கோட் பாடுகளும், கடைசியாக அதினின்று விலகி இறைவனோடு ஒன்றுபடும் என்பதையும் உணர்த்தும் மெய்யியல் (தத்துவம்); the study of philosophy which teaches man the devine nature and origin of his immaterial with unreality of corporeal enjoyments of worldly forms and which separating him during life from terrestrial objects secures him after death a final emancipation from existense and reunion with the universal spirit. (சா. அக.)

நியாயம்பேசு-தல் *niyāyam - pēšu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. வழக்கை விளக்குதல் (விவரித்தல்); to discuss a lawsuit. 2. வழக்கில் தீர்ப்புக் கொடுத்தல்; to give judgment, as a friend between contending parties.

[Skt. nikāya > த. நியாயம்+பேசு-.]

நியாயமலைவு *niyāya-malaivu,* பெ.(n.) 1. ஏரண (தருக்க) நூல் கருத்துக்கு எதிரான கூற்று. (தண்டி. 120.); illogical statement.

[Skt. niyāya > த. நியாயம்+மலைவு.]

நியாயமுத்தரி - த்தல் 4 செ.கு.வி.(v.i.) *niyāyam-uttari,* 1. நியாயங்காட்டுதல்; to state arguments, give reasons. 2. எதிர் வழக்குச் சொல்லுதல்; to reply in agrument.

[Skt. niyāya > த. நியாயமுத்தரி - த்தல்.]

நியாயமுரசு *niyāya-muracu,* பெ.(n.) மும்முரசுகளுள் அரசன் முறை புரிவதற்கு அறிகுறியாக முழங்கும் முரசு. (கலித். 132, உரை)); drum proclaiming the adminis-tration of justice by a king, one of mummuracu.

[Skt. niyāya > த. நியாயம்+முரசு.]

நியாயர் *niyāyar,* பெ. (n.) ஏரண (தருக்க) நூல் வல்லோர். persons versed in *nyāya* philosophy.

[Skt. niyāya > த. நியாயர்]

நியாயவாதி *niyāya - vādi,* பெ. (n.) 1. வழக்கறிஞர், pleader, advocate, lawyer. 2. முறை தவறாது சொல்வோன் one who utters nothing but what is just, justice - loving person.

[Skt. niyāya > த. நியாயவாதி]

நியாயவான் *niyāyavāṉ* பெ. (n.) 1. நேர்மை யாளன் (நீதிமான்); just man. 2. நியாயவாதி பார்க்க; see Niyāyavāthi. 3. நியாயாதிபதி; judge.

[Skt. nyāyavāṉ.> த. நியாயவான்]

நியாய விசாரணை *niyāyavišāraṇai* பெ. (n.) வழக்கு உசாவல்; judicial trail, enquiry or, examination.

[Skt. nyāya > த. நியாயவிசாரணை]

நியாயவிதாயகன் *niyāyavidāyakaṉ,* பெ. (n.) சட்டம் உருவாக்குபவன் (நிருமானஞ் செய்வோன்); law - giver, legislator.

[Skt. niyāya+vidhayak> த. நியாயவிதாயகன்]

நியாயவிரோதம் *niyāya-virōdam,* பெ.(n.) முறைமைத்தவறு; violation of justice.

[Skt. nyāya+virōdha > நியாயவிரோதம்]

நியாயத்தலம் *niyāya-ttalam,* பெ.(n.) முறைமன்றம் உசாவல் செய்யுமிடம்; court of justice, tribunal,

[Skt. nyāya+sthala > த. நியாயாத்தலம்]

நியாயாசனம் *niyāyāšaṉam,* பெ. (n.) முறை (நீதி) வழங்குவோர் அமரும் அற (தரும) இருக்கை (வின்.); Judgement seat, tribunal.

[Skt. nyāya+ašaṉa > த. நியாயாசனம்]

நியாயாசாரன் *niyāyāšāraṉ,* பெ. (n.) ஒழுக்கமுள்ளோன் (யாழ். அக); a man of righteous conduct.

[Skt. nyāya+sāraṉ+ > த. நியாயாசாரன்]

நியாயாதிபதி *niyāyādipadi,* பெ.(n.) நடுவர், நீதிவழங்குபவன்; judge;

[Skt. nyāya+tatipati > த. நியாயாதிபதி]

நியாளம் *niyālam,* பெ. (n.) ஒரு வகைப் பாறை a kind of drum. "இடக்கை யுடுக்கை நன்னியாளம்" (திருவாலவா. 39.18);

[Skt. nicālam > த. நியாளம்]

நியானம் *niyānam,* பெ.(n.) 1. பொதுவான அறிவு; knowledge in general. 2. மெய்யறிவு (அ) மெய்யியல் அறிவு knowledge of a specific and religious kind derived from meditation and study of philosophy. 3. ஆண் அல்லது பெண்ணின் பெயர்; name of male or female especially among christians.

நியுத்தம் *niyuttam,* பெ.(n.) மற்போர் (யாழ். அக.) boxing.

[Skt. niyuddha > த. நியுத்தம்]

நியுத்தன் *niyuttaṉ,* பெ.(n.) 1. மனங்கவிந்தவன். (வின்.); one engrossed in any matter. 2. ஒரு குறிப்பிட்ட செயல் செய்தற்கு அமர்த்தப் பெற்றவன். (யாழ். அக.) ; one engaged for a specific purpose.

[Skt. ni-yukta.> த. நியுத்தன்]

நியுதம் *niyatam,* பெ.(n.) பத்து இலக்கம் (சுக்கிர நீதி, 106.); a million = 10,00,000.

[த. நெய்தல் > Skt. ni-yuta.> த. நியுதம்]

நெய்தல் என்பது பழந்தமிழில் (10,00,000) பத்திலக்கத்தைக் குறித்த எண்ணுப் பெயர். குவளை கோடியைக் குறித்த சொல். பத்து நெய்தல் கொண்டது ஒரு குவளை. **நெய்தல்** ஒரியா மொழியில் நியுத்த எனவும், வடமொழியில் நியுத எனவும் கடன் கொள்ளப்பட்டுள்ளது

நியுப்பிசம் *niyupisam,* பெ.(n.) 1. நோய்; disease. 2. பருமன் இல்லாத தன்மை, ஒல்லி; not stout but thin and slendor. 3. வீக்கமின்மை; a absence of swelling. (சா. அக).

நியூனம் *niyūṉam,* பெ.(n.) 1. குறைவு. defect, deficiency. "நியூனாதிகங்களுமிம்சையு மசுசியும்" (சி.சி.2,28,சிவாக்). 2. தோல்வித்தான வகை. (சி.சி. அளவை,14. நிரம்ப.); a weak position in disputation

[Skt. nyūna.> த. நியூனம்]

நியோக்கியம் *niyōkkiyam,* பெ.(n.) தகுதி. (யாழ். அக.); fitness.

[Skt. niysōgya.> த. நியோக்கியம்]

நியோககுற்றம் *niyōga-kuṟṟam,* பெ.(n.) ஏரண (தருக்க)த்தில் எதிரியின் தோல்வி அல்லது அறியாமைத்தன்மை; ignorance of opponent's weakness or defeat in disputation. "எதிரிதன் றோல்வித்தன மறியாமையிசைப்பரு நியோக குற்றந்தான்" (த.நி.போ.304);

[Skt. niyōkam.> த. நியோக(ம்)+குற்றம்]

அல்லது அறியாமைத்தன்மை; ignorance of opponent's weakness or defeat in disputation. "எதிரிதன் றோல்வித்தன மறியாமையிசைப்பரு நியோக குற்றந்தான்" (த.நி.போ.304);

[Skt. niyōkam.> த. நியோக(ம்)+குற்றம்]

நியோகதர்மம் *niyōka-tarmam,* பெ.(n.) ஆரிய மரபின் வண்ணம் மகப்பேறில்லாதவனுடைய மனையாள் மகப்பெறுதற்கு உறவினரு ளொருவனை (ஞாதியொருவனை) அமர்த்தும் முறை; the Aryan system of appointing a kinsman to raise up seed to a childless person by consorting with his wife (R.F).

[Skt. niyōkam+dharma > த. நியோகதர்மம்]

நியோகம் *niyōkkam,* பெ.(n.) 1. கட்டளை. (S.I.I.Vi, 13.); command, order, authority. 2. அமர்த்தப்பட்ட தொழில். (யாழ். அக.); appointed task, commission, charge. 3. உறுதி; (யாழ். அக.); certainty. 4. முயற்சி (யாழ். அக.); exertion. 5. நியோக தர்மம் பார்க்க; see niyogatarmam.

[Skt. ni-yōga> த. நியோகம்]

நியோகி *niyōgi,* பெ.(n.) பெரியோன்; sage, wise man. "போந்திடு நியோகியர்கள் வார்த்தையுசிந்தான் பொருந்தவே வாது வெல்வார்" (திருவேங். சத. 19).

[Skt. niyōgin > த. நியோகி]

நியோகி[1]-த்தல் *niyōgi,* 4 செ.குன்றாவி. (v.t.) கட்டளையிடுதல்; to command, order, direct.

[Skt. ni-yōga. > த. நியோகி - த்தல்]

நியோகி[2] *niyōkgi,* பெ. (n.) நியோகிப் பிராமணன் பார்க்க; see *iniyōki-p-pirāmaṇaṉ.* "பிரசண்ட நியோகிகளும்" (விறலிவிடு.)

[Skt. Perh. niyōgin > த. நியோகி]

நியோகிப்பிராமணன் *niyogi-p-pirāmaṇaṉ,* பெ. (n.) ஒரு தெலுங்குப் பார்ப்பன் வகுப்பு; a class of secular Andhra Brahmins, as distinguished from Vaidika Brahmins.

[Skt. niyōgin > த. நியோகிப்பிராமணன்]

நியோசனம் *niyōšaṉam,* பெ. (n.) 1. கட்டளை; Order, Command. 2. இசைவு; fastening, joining.

[Skt. niyōjana. > த. நியோசனம்]

நியோதுற்றி *niyōtūṟṟi* பெ. (n.) 1. கடம்பு; cadamba free. (சா. அக.)

நிர்க்கததண்டனம் *nirkkadataṇḍaṉam,* பெ. (n.) தயாவிருத்தி பதினான்கனுள் தண்டனை யினின்று பிறனை விடுவிக்கை. (வின்.); releasing or saving one from punishment, one of 14 *tayāvirutti.*

[Skt. nirgata-dandana.> த. நிர்க்கதண்டனம்]

நிர்க்கதி *nirkkadi,* பெ. (n.) கதியின்மை; complete absence of refuge, utter helplessness.

த.வ. காப்பிலி

[Skt. nir-gatidana. > த. நிர்க்கதி]

நிர்க்கந்தவாதி *nirkkanda-vādi,* பெ. (n.) சைனரில் பிரிவினராகிய நிகண்டவாதி. (மணி/27.167, / மே அடிக்குறிப்பு); a jainasect.

[Skt. ni-grantha. > த. நிர்க்கந்தவாதி]

நிர்க்கந்தன் *nirkkandaṉ* பெ. (n.) அருகக் கடவுள்; Arhat.

[Skt. ni-grantha> த. நிர்க்கந்தன்]

நிர்கதம்பம் *nirkadambam,* பெ.(n.) நெஞ்சாங்குலையின் உட்புறத்து சவ்விற்குக் காணும் அழற்சி, இது ஊதைச்சூலை, மிகு காய்ச்சல் முதலிய நோய்களிற் காணும்; inflammation of the epithecial lining of the heart (endocardium) - Endocarditis. It is generally associated with acute rhemtism nad febrile diseases (சா.அக.).

நிர்க்கிரந்தம் *nirkkrandam,* பெ. (n.) 1. தங்கு தடையில்லாமை; free from all ties and

hindrances. 2. உலகத்தை வெறுத்து துறவறம் பூண்டு அம்மணமாய்த் திரியும் துறவி a saint who has withdrawn from the world, living as a hermit or religious mendicant and wandering about naked. (சா.அக.)

நிர்க்குண்டி[1] *nirkkuṇḍi,* பெ. (n.) நொச்சி (திவா.). a species of chaste tree.

[Skt. nirgundi > த. நிர்க்குண்டி]

நிர்க்குண்டி[2] *nirkkṇḍi* பெ. (n.) 1. வெண் ணொச்சி; white notchi. 2. தாமரைக் கிழங்கு; lotus root. 3. கருநொச்சி; black variety of five leaved chaste tree. (சா.அக.).

நிர்க்குணசைவம் *nirkkuṇaśaivam,* பெ. (n.) சைவம் பதினாறனுள் சிவனைக் குணமற்ற வனாக எண்ணி ஊழ்கம் செய்ய (தியானம்) வேண்டும் என்று கூறும் சமயம்; a śaiva sect which holds that śiva should be contemplated as the attributeless being, one of 16 saivam, i.v.); releasing or saving one from punishment, one of 14 *tayāvirutti,* i.v.

[Skt. nir-guna > த. நிர்க்குணசைவம்]

நிர்க்குணம் *nirkkuṇam,* பெ. (n.) 1. குண மில்லாமை. "சுத்த நிர்க்குணமான பர தெய்வமே" (தாயு. சுகவாரி. 1); being devoid of qualities, attributes, etc. 2. இழிகுண மில்லாமை; being devoid of evil qualities.

[Skt. nir-guna > த. நிர்க்குணம்]

நிர்க்குணன் *nirkkuṇaṉ,* பெ. (n.) 1. (குண மற்றவன்) கடவுள்; god, as without attributes. 2. குணமிகவுடையவன் (சி. போ. பா. 9, 2, பக். 195.); one who is beyond all attributes.

[Skt. nir-guna > த. நிர்க்குணன்]

நிர்க்குணி *nirkkuṇi* பெ. (n.) மணமகள் (பார்வதி) (கூர்மபு. திருக்கலியாண. 23.); *pārvati.* 2. குணமிகவுடையவன் (சி. போ. பா. 9, 2, பக். 195.); one who is beyond all attributes.

[Skt. nir-guna > த. நிர்க்குணி]

நிர்க்கோத்திரம் *nirkkōttiram,* பெ. (n.) கோத்திரமின்மை. (சிலப், 10, 188, உரை.) the state of belonging to no family.

[Skt. nir-gōtra. > த. நிர்க்கோத்திரம்]

நிர்கூடம் *nirgudam,* பெ.(n.) மரப் பொந்து; hallow of a tree.

நிர்ச்சரம் *nirccaram,* பெ.(n.) சுடுபாறையிற் கிடத்தல், தலைமயிர் பறித்தல், முதலிய சமண சமய நோன்பு (சி. போ. பா. அவைய. 12.); (Jaina.) a kind of penance which consists in lying down on a hot rock, uprooting the hair on the head, etc.

[Skt. nir-jarā > த. நிர்ச்சரம்]

நிர்ச்சரை *nirccarai,* பெ.(n.) நவபதார்த்தத்து ளொன்றும் சஞ்சித கர்மத்தை அழிக்க வல்லதுமான சமணதத்துவம். (சீவக, 2814, உரை.); (jaina) the principle which reduces or destroys accumulated karma, one of nava - patarttam.

[Skt. nir-jarā > த. நிர்ச்சரை]

நிர்ச்சலம்[1] *nirccalam,* பெ.(n.) 1. நீரின்மை. "நிர்ச்சலமான பிரதேசம்; being waterless. 2. நீருமுண்ணாப்பட்டினி; fasting without even drinking water, as in *ēkātaśi* (உ.வ).

[Skt. nir-jala. > த. நீர்ச்சலம்]

நிர்ச்சலம்[2] *nirccalam,* பெ.(n.) அசைவின்மை. state of rest or inactivity. *"நிர்ச்சல நிஸ்தரங்க போதப்பிராவக சமாதியிலும்"* (சி.சி. 8, 22, ஞானப்.).

[Skt. niś-cala > த. நிர்ச்சலம்]

நிர்ச்சலதேசம் *nirccaladasam,* பெ. (n.) நீர் வறட்சியுள்ள நாடு; dry or barren country. (சா.அக.)

நிர்ச்சலயோகி *nirccala-yōki,* பெ. (n.) கருமங்களை விடுத்துச் சலனமற்ற சமாதி நிலையிலுள்ள துறவி (சங். அக); an ascetic in deep meditation, forsaking all karma;

[Skt. niš-cala+yōgin > த. நிர்ச்சலயோகி]

நிர்ச்சலை *nirccalai,* பெ.(n.) அசைவமற்ற சிவை ஆற்றல் (சிவசக்தி); calm or undisturbed energy of *šivan.* "நிர்ச்சலைகளாயிருக்கின்ற ஈசான்னியாதி மூர்த்தியந்த பஞ்சசத்தி" (சி.சி. 1,47, ஞானப்.)

[Skt. niš-cata. > த. நீர்ச்சலை]

நிர்ச்சீவனா - தல் *nirccīvaṉā-,* 6 செ.கு.வி. (v.i.) முற்றும் சத்தியற்றுப் போதல்; to become lifeless, utterly devoid of vitality or strength.

[Skt. nir-jiva > த. நீர்ச்சீவனா - தல்]

நிர்ணயம் *nirṇayam,* பெ.(n) நிருணயம் பார்க்க; see determination,

[Skt. nir-naya. > த. நிர்ணயம்.]

நிர்ணயி - த்தல் *nirṇayi-,* 4 செ. குன்றாவி (v.t.) முடிவுபடுத்துதல்; to determine, resolve.

[Skt. nir-naya. > த. நிர்ணயி-,]

நிர்ணாயகம் *nirnāyagam,* பெ. (n.) நிருணயிக்க உதவுவது; that which helps to determine; determinant. "இவ்வர்த்தத்திற்கு நிர்ணாயகம் இசையாயிற்று" (ஈடு, 6,1,6).

[Skt. nirnāyaka. > த. நிர்ணாயகம்]

நிர்த்தகனம் *nirtakanam,* பெ.(n.) 1. சேரான் கொட்டை; marking nut. 2. புதைத்தல்; burying, not burning (சா.அக.).

நிர்த்தத்துவன் *nirttattuvaṉ* பெ. (n.) (தத்துவாதீதன்) கடவுள் (சங்கற்ப. 3); god, as beyond tattuvam.

[Skt. nistattva. > த. நிர்த்தத்துவன்]

நிர்த்தம் *nirttam,* பெ. (n.) 1. நிருத்தம்[1] பார்க்க; see niruttam, "ஆனந்த நிர்த்தமிடு கருணாகரக்கடவுளே" (தாயு. கருணாகர.1) 2.வரிக்கூத்துவகை; a kind of masquerade dance. "தக்கபிடார் நிர்த்தந் தளிப்பாட்டு" (சிலப். 3, பக். 88, உரை)

[Skt. nrtta. > த. நிர்த்தம்]

நிர்த்தமாராயன் *nirttamārāyaṉ,* பெ. (n.) நட்டுவர் தலைவன்; dancing master. "மும்முடிச் சோழ நிர்த்தமாராயனுக்குப் பங்கு இரண்டும்" (S.1.1. ii. 274)

[Skt. nrtta. > த. நிர்த்தமாராயன்]

நிர்த்தனம் *nirttaṉam,* பெ. (n.) நிருத்தம்[1] (உ.வ) பார்க்க; see niruttam, (சா.அக)

நிர்த்தனன் *nirttaṉaṉ,* பெ.(n.) 1.சொத்துரிமை யற்றவன்; person disqualified to hold property, as a slave, an idiot (R.f). 2. எளியவன்; poor man.

[Skt. nir-dhana. > த. நிர்த்தனன்]

நிர்த்தாட்சிணியம் *nirttāṭciṉiyam,* பெ. (n.) இரக்கமின்மை; unkindness, merciless-ness, pitilessness, sternness.

[Skt. nrir-dāksinya. > த. நிர்த்தாட்சிணியம்]

நிர்த்தாரணம் *nirttāraṇam,* பெ. (n.) 1. நிலை யிடுகை; setting ascertainment, establishing.

[Skt. nir-dhārana. > த. நிர்த்தாரணம்]

நிர்த்தித்தம் *nirttittam,* பெ.(n.) கண்டங்கத்திரி என்னும் முட்செடி வகை; yellow berried night shade (சா. அக).

நிர்த்துகம் *nirttugam,* பெ.(n.) வடிநீர். (தைலவ. தைல.); decoction

[Skt. niryūša. > த. நிர்த்துகம்]

நிர்த்துகம் *nirttugam,* பெ. (n.) வடிநீர் (கசாயம்); decoction (சா.அக).

நிர்த்தூள் *nir-t-tūḷ,* பெ.(n.) சிறுதுகள்; atom."பொருப்பை நிர்த்தூளாக்கி" (சந்திர கலாமாலை, 15)

[Prob. nis+dhūli > த. நிர்த்தூள்]

நிர்த்தூளி *nirttūli,* பெ. (n.) முழுச்சேதம்; utter destruction"ஆசை நிகளத்தினை நிர்த்தூளி படவுதறி" நிர்த்தமிடு கருணாகரக் கடவுளே" (தாயு.மௌனகுரு.1).

[Skt. nir-dhūli > த. நிர்த்தூளி]

நிர்த்தேசம் *nirttēšam,* பெ, (n.) கட்டளை; order, command 2. குறித்துக் காட்டுகை painting out.. "வத்து நிர்த்தேசமென" (வேதா. சூ.8) 3. சூத்திர பீடத்தின் ஒரு பகுதி. (மணி மே.26.66 உரை); a section of *cūttirapitakam.*

[Skt. nir-dēša. > த. நிர்த்தேசம்]

நிர்த்தேசி–த்தல் *nirttēši,* 4 செ.குன்றாவி(v.t) குறித்துக்காட்டுதல்; to point out. rder, command. "நிர்த்தேசித்த வஸ்து" (வேதா. சூ.8, உரை).

[Skt. nir-dēša. > த. நிர்த்தேசி–த்–தல்]

நிர்த்தேசியம் *nirttēsiyam,* பெ. (n.) கட்டளை; order, command. 2. குறித்துக் காட்டுகை; pointing out - emphasised; point.

[Skt. nirdēšya. > த. நிர்த்தேசியம்]

நிர்த்தொந்தம் *nirttondam,* பெ. (n.) 1. பற்றின்மை; absence of connection or attachment. 2. தொந்ததுக்கமின்மை; indifference to the opposite pairs of feelings, as pleasure and pain; stoicison. "நிர்த்தொந்தமாய்க்குவிதலுடன் விரிதலற்று" (தாயு சின்மய.8).

[Skt. nir-dvandva > த. நிர்த்தொந்தம்]

நிர்த்தோசம் *nirttōsam,* பெ. (n.) குற்ற மின்மை; faultlessness, innocence.

[Skt. nir-dōsa. > த. நிர்த்தோசம்]

நிர்நாசம் *nirnācam,*பெ.(n.) 1.அழியாமை; indestructibility, imperishableness. 2. முழுச்சேதாரம்; utter destruction

[Skt. nir-nāša. > த. நிர்நாசம்]

நிர்நாமம் *nirnāmam,* பெ.(n.) பெயரின்மை (சிலப் 10, 188, உரை.); namelessness.

[Skt. nir-nāma. > த. நிர்நாமம்]

நிர்நாமன் *nirnāman* பெ. (n.) (பெயரற்றவர்) கடவுள் god, as nameless.

[Skt. nir-nāma. > த. நிர்நாமன்]

நிர்நிமித்தம் *nirinimittam,* பெ. (n.) காரண மின்மை; absence of cause or reason.

[Skt. nir-nimitta. > த. நிர்நிமித்தம்]

நிர்நிமித்தியம் *nirnimittiyam,* பெ. (n.) நிர்நிமித்தம். (வின்) பார்க்க; see nirnimittam.

நிர்ப்பத்தியம் *nirpattiyam,* பெ, (n); பத்தியமின்மை; no restriction in diet; non - diet (சா.அக.).

நிர்பந்தம் *nirbandam,* பெ,(n) 1. வலக்காரம், வல்லந்தம், வலுவந்தம்; restraint, compulsion. 2. துன்புறுத்துதல்; to affict.

[Skt. nir-bandha. > த. நிர்பந்தம்]

நிர்பந்தி – த்தல் *nirbandi,* 4 செ. குன்றாவி (v.t.) 1. கட்டாயப்படுத்துதல்; to force, compel. 2. துன்புறுத்துதல்; to afflict.

[Skt. nirbandh. > த. நிர்வந்தி – த்தல்]

நிர்பாக்கியம் *nirbākkiyam,* பெ. (n.) போகூழ்; unluckiness, misfortune.

[Skt. nir-bhāgya > த. நிர்பாக்கியம்]

நிர்ப்பீசம் *nirppīsam,* பெ.(n.) நிர்ப்பீசதீட்சை பார்க்க; see nirppicatitcai. "நிர்ப்பீசம் பீசமெனவிரண்டாய் நிகழும்" (சி. சி. 8,3).

[Skt. nirbija. > த. நிர்ப்பீசம்]

நிர்ப்பீசதீட்சை *nirppīšatiṭcai,* பெ. (n.) சமயானுட்டானங்கள் செய்ய முடியாதவர் களுக்குத் அவற்றைச் செய்வதற்கு மாற்றாகச் செய்யும் ஔத்திரி தீட்சைவகை. (சைவச. ஆசாரி. 62. உரை); *(šaiva)*a way of initiation in which the guru absolves his disciple from the performance or routine religious duties if he is not able to do them, a kind of *auttiri-tiṭcai*

[Skt. nir-bija. > த. நிர்ப்பீசதீட்சை]

நிர்ப்பீசை *nirppiicai,* பெ.(n.) நிர்ப்பீச தீட்சை. (சங். அக) பார்க்க; see nirppišatiṭcai.

[Skt. nirbija.> த. நிர்ப்பீசை]

நிர்ப்புதம் *nirupputam,* பெ. (n.) நியர்ப்புதம். (வின்) பார்க்க see niyarppudam.

நிர்மதி *nirmati,* பெ. (n.) மனக்கவலையின்மை; tranquility, absence of anxiety.

[Skt. nir-mati > த. நிர்மதி]

நிர்மலத்துவம் *nirmalduvam,* பெ. (n.) தூய்மையாயிருத்தல்; the state of being pure. (சா.அக).

நிர்மலதை *nirmalatai,* பெ. (n.) மலமற்றிருக்குந் தன்மை. the state of being spotless or pure. "ஸமலநிர்மலதையினாலே" (சி.சி.2,1, சிவாக்.)

[Skt. nirmala-tā. > த. நிர்மலதை]

நிர்மலம்[1] *nirmalam,* பெ. (n.) அழுக்கின்மை; free from dirt, freedom from impurity. 2. தூய்மை; தெளிவு; pure. 3. வெந்தயச் செடி; horse shoe - fenugreek. (சா.அக.).

நிர்மலம்[2] *nirmalam,* பெ. (n.) 1. மாசின்மை; immaculateness, purity. "நிர்மலசகித நிஷ்ப்ரபஞ்சப் பொருள்" (தாயு. திருவருள்வி.3) 2. நிர்மதி (மதுரா)பார்க்க; see nirmadi.

[Skt. nir-mala. > த. நிர்மலம்]

நிர்மலன் *nirmaln,* பெ. (n.); மாசற்றவனான கடவுள்; the supreme being, as immaculate.

[Skt. nir-mala. > த. நிர்மலன்]

நிர்மலிபாவனம் *nirmalipāvanam,* பெ. (n.) தேற்றாங் கொட்டை; water clearing nut. (சா.அக.)

நிர்மாணம்[1] *nirmāṇam,* பெ. (n.) 1. இயற்றுகை; production, manufacture. 2. ஏற்பாடு (வின்); institution, ordiance. 3. கட்டமைப்பு; construction.

[Skt. nir-māna. > த. நிர்மாணம்]

நிர்மாணம்[2] *nirmāṇam,* பெ. (n.) நிர்வாணம், 3 (உ.வ) பார்க்க; see *nirvaṇam.*

நிர்மாலியதரிசனம் *nirmāliyadarišaṇam,* பெ. (n.) முந்தைய நாள் பூவொப்பனைகளைக் களைதற்குமுன் காலையிற் செய்யும் இறை வழிபாடு (நாஞ்சில்); morning worship of a deity before the removal of the decoration done on the previous day.

[Skt. nirmālya+taricana> த. நிர்மாலிய தரிசனம்]

நிர்மாலியம் *nirmāḷiyam,* பெ. (n.)நிர்மலம்; which see. (சா.அக.)

நிர்மாலியம் *nirmāḷiyam,* பெ. (n.) பூசித்துக் கழித்த பொருள்; the remains of an offering made to a deity. "அர்ச்சித்து வைத்த சிர புட்பமான நிர்மானிய புட்பம் எடுத்துப்போக வந்த" (தக்கயாகப் 51, உரை).

[Skt. nirmālya > த. நிர்மாலியம்]

நிர்மாலினியம் *nirmāḷiṇiyam,* பெ. (n.) கண்தூய்மை அல்லது துலக்கம்; clear eyes. (சா.அக)

நிர்மானுசியம் *nirmāṇusam,* பெ. (n.) மாந்த நடமாட்டமின்மை; state of being uninhabited or unfrequented by men.

[Skt. nir-mālnusa. > த. நிர்மானுஷ்யம்]

நிர்மி – த்தல் *nirmi-,* 4 செ. குன்றாவி. (v.t.) 1. இயற்றுதல், அமைத்தல்; to produce by art, construct, form. 2. நிறுவுதல் (விதித்தல்) (வின்); to ordain, to constitute.

[Skt. nirmā. > த. நிர்மாலியம்]

நிர்மிதம் *nirmidam,* பெ. (n.) 1. உண்டாக்கப் பட்டது. that which is created. "ஈச்சர நிர்மிதமான ஏகாரமும்" (த.நி.போ. பக். 115). 2. படைக்கை; creation, construction, production. 3. புனைந்து கூறுகை (கற்பிதம்) (இ.வ); fabrication. 4. அமர்த்துகை (விதிக்கை) (வின்); destiny; appointment, allotment.

[Skt. nir-mita. > த. நிர்மிதம்]

நிர்மூடன் *nirmūḍaṉ,*பெ. (n.) முழுமூடன்; absolute fool, blockhead. "நீணி திதனைக் கண்டாணவமான நிர்மூடனை" (திருப்பு. 44).

[Skt. nir-mūdh. > த. நிர்மூடன்]

நிர்மூடி *nirmūḍi,*பெ. (n.) 1. மூடப்பெண்; stupid woman "வாழும் மனைக்கு வங்காய் வந்தாயே நிர்மூடி" (ஆதியூரவதானி. 9).

[Skt. nir-mūḍha. > த. நிர்மூடி]

நிர்மூலம் *nirmūlam,* பெ. (n.) 1. காரண மற்றது; (வின்) that which is baseless. 2. பாழாகை; extirpation, utter destruction.

[Skt. nir-mūla. > த. நிர்மூலம்]

நிர்மூலி *nirmūli,* பெ. (n.) ஒரு பூடு; agaia minutiflora. (சா.அக)

நிர்யாணம் *niryāṇam,* பெ. (n.) நிரியாணம் பார்க்க; see *niriyāṇam.* appointment, allotment.

[Skt. nir yāṇa > த. நிர்யாணம்]

நிர்லோகம் *nirlōgam,* பெ. (n.) வெள்ளைப் போளம் என்னும் கடைச்சரக்கு myrrh. (சா.அக.).

நிர்வகணம் *nirvakaṇam,* பெ. (n.) துய்த்தல் பார்க்க; see catastrophe of a drama.

[Skt. nir-vahaṇa > த. நிர்வகணம்]

நிர்வகி-த்தல் *nirvaki-,* 4 செ. குன்றாவி. (v.t); 1. ஆளுதல், காரியம் நடப்பித்தல்; to manage, carry on one's affairs successfully; to maintain, perform, fulful. "எப்படி நிர்வகிப்பேன்" (இராமநா. அயோத். 10). 2. பொறுத்தல் (வின்); to bear, endure, sustain.உறுதிப்படுத்துதல் (வின்); to make certain. *cūttirapitakaam.*

[Skt. nirvah. > த. நிர்வகி-த்தல்]

நிர்வசனீயம் *nirvacaṉīyam,* பெ. (n.) நிர்வசனம்[1], பார்க்க; see *nirvaśanam.*

[Skt. nir-vaca-nīya > த. நிர்வசனீயம்]

நிர்வபனம் *nirvapaṉam,* பெ. (n.) சமனப் படுத்தல்; soothing. (சா.அக).

நிர்வமிசியம் *nirvamiśiyam,* பெ. (n.) முதுகுத் தண்டின்மை; absence of spine, absence of back bone or verebral column; having a body consisting of single cavity enclosing all their vital organs as sponges, corals, startish, worm, centipede, spider, insect etc., It is opposed to வமிசியம். (சா.அக).

நிர்வாகம் *nirvāgam,* பெ. (n.) 1. ஆளுவம்; administration. 2. புணர்ச்சியில் ஏற்படும் நீண்ட நேர இன்பம்; prolonged intercourse (சா. அக.).

த.வ. ஆளுவம்

நிர்வாகம் பண்ணு-தல் *nirvāgam-paṇ-ṇu-,* 5 செ. குன்றாவி (v.t.) 1. மேலாண்மை செய்தல் (வின்); to economise. 2. நிர்வாகி 1,2,3. பார்க்க; see nirvagi. 3. முடிவு செய்தல் (வின்); to acquit one self creditably. 4. மெச்சும்படி யொன்றைச் செய்து காட்டுதல்; to settle, conclude.

[Skt. nir-vāha. > த. நிர்வாகம்பண்ணு - தல்]

நிர்வாகமா-தல் *nirvāgam-ā-,* 6 செ.கு.வி. (v.i.) 1.நேர்மையாய் நடத்தப்படுதல். (வின்); to be managed properly. 2. இளம் பெண்ணிற்கு முறைப்படி திருமணம் செய் வித்தல்; to be married regularly, as a girl. "குமாரி நிர்வாகமானதா?" (இ.வ.).

[Skt. nir-vāha. > த. நிர்வாகமா -,]

நிர்வாகவிலக்கை *nirvāga-v-ilakkai,* பெ. (n.) ஆளுவப் பணிக்காக (நிருவாகத்திற்கு) தரப்படும் சம்பளம். (S.I.I.V, 504.); fee for management.

[Skt. nir vāgam. > த. நிர்வாகவிலக்கை]

நிர்வாகன் *nirvāgaṉ,* பெ. (n.) நிர்வாகி, பார்க்க; see *nirvāki.* "வசனை நிர்வாக ரென்றபேரும்" (தாயு. பரிபூ.)

[Skt. nir vāhaka. > த. நிர்வாகன்]

நிர்வாகி *nirvāgi,* பெ. (n.) 1. திறமைசாலி; person of ability. 2. வாய்மையானவன் (வின்); one faithful to his world; honest man. 3. மேலாளன் (வின்); manager. 4. பொறுப் பாளி; one who is responsible.

த.வ. ஆளுநவன், ஆளுநவர்

நிர்வமிசம் *nirvamišam,* பெ. (n.) கொடி வழியின்மை; being heirless.

த.வ. பூண்டறுதல்

[Skt. nir-vamša. > த. நிர்வமிசம்]

நிர்வர்த்தியம் *nirvarttiyam,* பெ. (n.) மூவகைச் செயப்படு பொருள்களுள் ஒன்றான இயற்றப்படுவது; (Gram) that which is newly formed or made, one of three kinds of *ceyappaṭu* porul.

[Skt. nir-vartya. > த. நிர்வர்த்தியம்]

நிர்வாக சபை *nirvāgasabai,* பெ. (n.) செயல்களைச் செய்துமுடிக்கும் குழு. (I.M.P. ii, 995.); executive or managing committee.

த.வ. செயற்குழு

[Skt. nir vāha. > த. நிர்வாகசபை]

நிர்வாகப்படு-தல் *nirvāga-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.); நிலைப்படுதல்; to become settled, established. "அவன் குடும்பம் நிர்வாகப்பட்டது". (இ.வ)

[Skt. nir-vāha. > த. நிர்வாகப்படு-,]

நிர்வாகம் *nirvāgam,* பெ. (n.) 1. நடப்பிக்கை; managing, maintaining, supporting. 2. பொறுப்பு. (வின்); burden, care, responsibility. 3. பேணுதல், பராமரிப்பு. (வின்); husbandry; economy. 4. மேற்பார்வை; supervision, management. 5. பொறுக்கை (வின்) endurance,tolerance. 6. பொருள் கொள்ளுமுறை; method of interpretation. "இது பட்டர் நிர்வாகம்" (ஈடு) 7. முடிவு (வின்); settlement, establishment,conclusion. 8. உறுதி (வின்) certainty, assurance. 9. நிலைமை (வின்); condition, state, circumstances.

[Skt. nir-vāha. > த. நிர்வாகம்]

நிர்வாசம் *nirvāšam,* பெ. (n.) குடியற்றது. (வின்); that which is uninhabited.

[Skt. nir vāsa. > த. நிர்வாசம்]

நிர்வாணதீட்சை *nirvāṇatīṭcai,* பெ. (n.) தீட்சையில் மூன்றாவதும் செய்து கொண்ட வரின் முன் செய்த வினைகளைப் போக்க வல்லதுமான தீட்சை. (சைவச. ஆசாரி. 20, உரை.); *(šaiva)* third or last state in initiation which enables the discilpe to free himself from the bonds of existence and attain emanacipation, one of three *tīṭcai.*

[Skt. nir vāṇa > த. நிர்வாண தீட்சை]

நிர்வாணம் *nirvāṇam,* பெ. (n.) 1. சைன பௌத்தர்களின் முத்தி நிலை. (சூடா.) (Buddh. Jaina.) absolute extinction or annihilation of all desires and passions and attainment of perfect beatitude; nirvana. 2. வீடுபேற்றின்பம் highest bliss or beatitude "நித்தமிப் படி செய்தக்காணிர் வாணம் பெறுவாய்" (கைவல். தத். 92) 3. அம்மணம். (உவ); nakedness, nudity.

[Skt. nir vāṇa > த. நிர்வாணம்]

நிர்வாணமார்க்கம் *nirvāṇamārkkam,* பெ. (n.) புத்த சைன மதங்கள்; buddhism or Jainism. "வேதமார்க்க முதலாகிய மகா மார்க்கங்களைத் தவிர்ந்து நிர்வாண மார்க்கமாகிய மிக்க குற்றமேறின . . . அமணர்" (தக்கயாகப். 7, உரை).

[Skt. nir vāṇa + த. நிர்வாண மார்க்கம்]

நிர்வாணி[1] *nirvāṇi,* பெ. (n.) தான் நிற்குந் திக்கை நோக்கிப் பயணஞ் செய்வதற்காகாத படி கிழமைதோறும் இடம்மாறி நிற்குந் தேவதை. (பஞ்.); a deity in a particular

direction each day of the week, when it is inauspicious to start on a journey in that direction.

[Skt. nir vāṇi > த. நிர்வாணி]

நிர்வாணி[2] *nirvāṇi,* பெ. (n.) 1. உடையில்லாதவன்; naked person. 2. அருகன்; arhat.

[Skt. nir vāṇin > த. நிர்வாணி]

நிர்விக்கினம் *nirvikkiṉam,* பெ. (n.) இடையூறின்மை; absence of obstruction or impediment.

[Skt. nir vighna. > த. நிர்விக்கினம்]

நிர்விகற்பக்காட்சி *nirvigaṟpa-k-kāṭci,* பெ. (n.) பொருளின் உண்மை மாத்திரம் உணரும் உணர்வு (சி.சி. அளவை, 3. மறை.); (log.) indefinite knowledge in which only the bare existence of a thing is apprehended.

[Skt. nir vikalpa > த. நிர்விகற்பக் காட்சி]

நிர்விகற்பசமாதி *nirvigaṟpaśamādi,* பெ. (n.) தான்வேறு கடவுள்வேறென்ற வேறுபாட்டு உணர்வற்ற ஒக (யோக) நிலை. (சி.சி.10, 4,ஞானப்.); *(yōga.)* highest state of concentration, in which the soul loses all conciousness of its being different from the universal soul.

[Skt. nir vikalpa > த. நிர்விகற்பம்+ சமாதி]

நிர்விகற்பம் *nirvigaṟpam,* பெ. (n.) 1. வேறுபாடின்மை; absence of differentiation or change. 2. ஐயமின்மை; absence of doubt.

[Skt. nir-vikalpa. > த. நிர்விகற்பம்]

நிர்விகாரம் *nirvigāram,* பெ. (n.) 1. விகாரமின்மை; unchangeableness, immutability. 2. நிர்விகாரி பார்க்க; see *nirvigāri* *"சுத்தமான நிர்விகாரத்தை" (தாயு. திருவருள்வி.3.).*

[Skt. nir vikāra. > த. நிர்விகாரம்]

நிர்விகாரி *nirvikāri,* பெ.(n.) கடவுள்; the supreme being, as immutable.

[Skt. nirvikārin > த. நிர்விகாரி.]

நிர்விசாரம் *nirviśāram,* பெ.(n.) 1. கவலையின்மை; carelessness, recklessness. 2. துக்கமின்மை; tranquillity, freedom from anxiety.

[Skt. nirvicāra > த. நிர்விசாரம்.]

நிர்வியாசம் *nirviyāsam,* பெ.(n.)காரணமாகச் சொல்லக்கூடியது யாதுமில் லாதது; that which has no apparent reason or excuse.

[Skt. nir-vyāja > த. நிர்வியாசம்.]

நிர்விவாதபோகம் *nirvivādabōgam,* பெ.(n.) வில்லங்கமற்ற துய்ப்பு உரிமை (அனுபவ பாத்தியம்); undisturbed or undisputed possession as the basis of, or as confering a title to, property (R.F.).

[Skt. nirvivāda+bhōga > த. நிர்விவாத போகம்]

நிர்விவாதம் *nirvivātam,* பெ.(n.) எதிராடலுக்கு இடமில்லாதது; that which is undisputed or indisputable.

[Skt. nir-vivāda > த. நிர்விவாதம்.]

நிர்விசம் *nir-visam,* பெ.(n.) 1. நஞ்சற்றது; that which is poisonless or innocuous. 2. பூடுவகை (வின்.); a plant, curcuma zedoaria. 3. கத்தூரி மஞ்சள்; zedoary. 4. அழிப்பன், கொடியவன் (துன்மார்க்கன்) (வின்.); a wicked person.

[Skt. nir-visā > த. நிர்விசம்.]

நிர்விடம் *nirviḍam,* பெ.(n.) நஞ்சை நீக்கும் மருந்து; antidote for poison. *"நிர்விடமு விடமுமொருமுதலாய் நின்றும்" (சிவநெறிப். 65).*

[Skt. nir-visa > த. நிர்விடம்.]

நிர்விடயம் *nirviḍayam,* பெ.(n.) இல்பொருள்; that which is non-existent. *"பிரயத்தின பூர்வகமாய் நிர்விடயம் பண்ணவேண்டும்" (வேதாந்தசா.42).*

[Skt. nir-visaya > த. நிர்விடயம்.]

நிர்விசயம் *nirvišayam,* பெ.(n.) புலனறிவு கடந்தது; that which is beyond sense - perception. *"நிர்விஷய சுத்தமான நிர்விகாரத்தை" (தாயு.திருவருள்வி.3).*

[Skt. nir-visaya > த. நிர்விஷயம்.]

நிர்விசக்கிழங்கு *nirviša-k-kilaṅgu,* பெ.(n.) சதாவேரிக் கிழங்கு; water root (சா.அக.).

[Skt. nirvisha > த. நிர்விசம்+ கிழங்கு.]

நிர்விசம் *nirvišam,* பெ.(n.) 1. நஞ்சில் லாதது; non-poisonous. 2. நஞ்சில்லாத பாம்பு; non-venomous snake. 3. மான்மணத்தி மஞ்சள்; round zodoary. 4. நஞ்சற்ற ஒருவகைக் கிழங்கு; non-poisonous aconite root (சா.அக.).

[Skt. nirvishaya> த. நிர்விசம்.]

நிர்விசம்சுத்தி *nirvišam-sutti,* பெ.(n.) நிருவிடம் (நிர்விஷம்) என்னும் கிழங்கைத் துண்டு துண்டாக நறுக்கி எருமைச் சாணியும், எருமை மூத்திரமும் கலந்து அதிலிட்டு எரித்துக் கழுவி உலர்த்தி யெடுப்பது ஒருவகைத் தூய்மை முறை; cleaning process of non poisonous aconite root. In this the root drug is sliced and soaked in buffalo dung and urine mixture and boiled. The product is then taken out, washed and dried (சா.அக.).

நிர்விவரம் *nirvivaram,* பெ.(n.) பெண்ணின் முலைகள் நெருங்கவிருத்தல்; contiguousness as of female breasts (சா.அக.).

நிர்வீரியம் *nirvīriyam,* பெ.(n.) 1. ஆண் தன்மையில்லாமை; impotency. 2. சோர்வு; exhaustion (சா.அக.).

[நிர் + வீரியம்.]

நிரக்கம் *nirakkam,* பெ.(n.) சுட்டறிவின்மை; absence of consciousness or sense-perception, as in ecstasy. *"நிரக்கம் பெருகியிரக்க மலிவுற்ற" (கோயிற்பு.நட.46).*

[Skt. nir-aksa > த. நிரக்கம்.]

நிரக்கரகுக்கி *nirakkara-kukki,* பெ.(n.) **நிரட்சரகுட்சி** பார்க்க; see *niraṭca-kuṭci. "பிறரெலா நிந்தை செய்யு நிரக்கர குக்கியான்" (குற்றா.தல.மந்தமா.92).*

[Skt.niraksara+kuksi > த. நிரக்கரகுக்கி.]

நிரக்கு *nirakku,* பெ.(n.) 1. அகவிலை (C.G.); price, rate, tariff, especially as established by authority, price-current. 2. நேர்மை; correctness, precision. *"அளவு நிரக்கா யிருந்தது" (உ.வ.).*

த.வ. நறுக்கு

[U. nirkh > த. நிரக்கு.]

நிரக்குநாமா *nirakku-nāmā,* பெ.(n.) நடப்பு விலைப்பட்டி; current price or market rate.

[U. nirkh+nāmā > த. நிரக்குநாமா.]

நிரகங்காரம் *niragaṅkāram,* பெ.(n.) செருக்கின்மை; absence of egotism or pride, humility.

[Skt. nir-ahakāra > த. நிரங்காரம்.]

நிரகங்கிருதி *niragaṅgirudi,* பெ.(n.) புறவிவகாரம் (வேதா.சூ.148, உரை); (Phil.) objective activity.

[Skt. nirahaṅ-krti > த. நிரகங்கிருதி.]

நிரகுள்ளி *nirGuḷḷi,* பெ.(n.) நொச்சி; five leaved chaste tree (சா.அக.).

நிரங்கிருதி *niraṅgirudi,* பெ.(n.) **நிரகங்கிருதி** பார்க்க; see *niragaṅkiruti. "அகங்கிருதி நிரங்கிருதி யுறாமல்" (வேதா.சூ.148).*

[Skt. nirahaṅ-krti > த. நிரங்கிருதி.]

நிரங்குசம் *niraṅgušam,* பெ.(n.) கட்டுப்படாமை (வின்.); state of being self-willed or uncontrollable.

[Skt. nir-aṅkuša > த. நிரங்குசம்.]

நிரங்குசன் *niraṅgusaṉ,* பெ.(n.) கட்டுப்படாதவன் (யாழ்.அக.); uncontrollable person, self-willed person.

[Skt. nir-aṅkuša > த. நிரங்குசன்.]

நிரசசாத்திரம் *nirasa-sāttiram,* பெ.(n.) கனிமங்களை (தாதுவை)ப் பற்றிக் கூறும் நூல்; the science which treats of the properties of mineral substances and their classifications (சா.அக.).

நிரசநூல் *nirasa-nūl,* பெ.(n.) **நிரசசாத்திரம்** பார்க்க; see *nirasa-sāttiram* (சா.அக.).

நிரசம் *nirasam,* பெ.(n.) 1. சாரமின்மை (யாழ்.அக.); lack of juice. 2. சுவையின்மை; tastelessness.

[Skt. ni-rasa > த. நிரசம்.]

நிரசவர்க்கம் *nirasavarkkam,* பெ.(n.) தாது வருக்கம்; mineral kingdom (சா.அக.).

[Skt. ni-rasa+varkka > த. நிரசவர்க்கம்.]

நிரசவசுது *nirasa-vasutu,* பெ.(n.) 1. சுவை யற்ற பொருள் (யாழ்.அக.); tasteless things. 2. இரும்பு முதலிய கனிப்பொருள் (வின்.); mineral substance.

[Skt. ni-rasa > த. நிரசவஸ்து.]

நிரசவுப்பு *nirasavuppu,* பெ.(n.) கனிம (தாது)வுப்பு; mineral salt (சா.அக.).

[நிரசம் + உப்பு.]

நிரசனம்[1] *nirasanam,* பெ.(n.) 1. அழிக்கை (யாழ்.அக.); destruction. 2. எதிரிடை; opposition. 3. தள்ளுகை; rejection. 4. கக்கல்; vomiting.

[Skt. nir-asana > த. நிரசனம்.]

நிரசனம்[2] *nirasanam,* பெ.(n.) பட்டினி; fasting.

[Skt. nir-aśana > த. நிரசனம்.]

நிரசி-த்தல் *nir-asi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. அழித்தல்; to destroy. *"பாண்டவரையும் நிரஸிக்கப் பிராப்தமாயிருக்க" (ஸ்ரீவசன.21).* 2. தோல்வியுறச் செய்தல்; to defeat, as in an argument.

[Skt. nir-as-, > த. நிரசி-த்தல்]

நிரஞ்சத்திமூலி *nirañjatti-mūli,* பெ.(n.) நிலத் துளசி; ground basil (சா.அக.).

நிரஞ்சனம்[1] *nirañjanam,* பெ.(n.) 1. குற்ற மில்லாதது; that which is spotless, pure. *"நிரஞ்சன நிராமயித்தை" (தாயு. திருவருள்வி. 3).* 2. வெளி (பிங்.); open space. 3. நிறைவு (பிங்.); fulness. 4. வீடுபேறு (பிங்.); final bliss. 5. இரசகருப்பூரம் (சங்.அக.); calomel.

[Skt. nir-añjana > த. நிரஞ்சனம்.]

நிரஞ்சனம்[2] *nirañjanam,* பெ.(n.) 1. அறிவுக் கண்; eye of wisdom. 2. உணவு கொள்ளாமை; abstaining from food (சா.அக.).

நிரஞ்சனன் *nirañcanan,* பெ.(n.) 1. அழுக் கற்ற தூய வடிவினனான கடவுள்; the supreme being, as immaculate. *"நிரஞ்சன நிருத்தானந்த" (திருவிளை. தீர்த்தவி.7).* 2. அருகன் (சூடா.); Arhat. 3. சிவன் (நாமதீப.16); Śiva.

[Skt. nir-añjana > த. நிரஞ்சனன்.]

நிரஞ்சனி *nirañjani,* பெ.(n.) பார்வதி (யாழ்.அக.); *Pārvatī.*

[Skt. rnir-añjana > த. நிரஞ்சனி.]

நிரட்டிகா *niraṭṭikā,* பெ.(n.) கண்டங்கத்தரி; yellow berried night shade (சா.அக.).

நிரட்சதேசம் *niraṭcadēśam,* பெ.(n.) 1. வெப்ப நாடு (யாழ்.அக.); equatorial region. 2. இராப்பகல் நாழிகை சரியாயுள்ள நாடு; region where days and nights are of equal duration.

[Skt. niraksa- > த. நிரட்ச+தேசம்.]

நிரட்சம் *niraṭcam,* பெ.(n.) நிலநடுக்கோடு (பூமத்திய ரேகை) (வின்.); terrestrial equator.

[Skt. niraksa > த. நிரட்சம்.]

நிரட்சரகுட்சி *niraṭcara-kuṭci,* பெ.(n.) எழுத்தறிவற்றவன்; illiterate person.

[Skt.nirak-sara+kuksi> த. நிரட்சரகுட்சி.]

நிரட்சரேகை *niratca-rēgai,* பெ.(n.) **நிரட்சம்** (வின்.) பார்க்க; see *niratcam.*

[Skt. niraksa > த. நிரட்சரேகை.]

நிரத்தகம் *nirattakam,* பெ.(n.) பயனின்மை (யாழ்.அக.); fruitlessness, futility.

[Skt. nir-arthaka > த. நிரத்தகம்.]

நிரத்திமாலி *nirattimāli,* பெ.(n.) சிவபிரான் (யாழ்.அக.); *Šiva.*

[Skt. niratimālin > த. நிரத்திமாலி.]

நிரத்தியயம் *nirattiyayam,* பெ.(n.) குற்ற மின்மை (யாழ்.அக.); faultlessness.

[Skt. nir-atya-ya > த. நிரத்தியயம்.]

நிரத்திரியம் *nirattiriyam,* பெ.(n.) 1. பேடித் தனம்; impotency. 2. ஆண்மை இல்லாமை; destitude of manly power (சா.அக.).

நிரதம் *niradam,* பெ.(n.) எப்பொழுதும்; ever, always. *"நிரதங் கொடுத்திளைத்த தாதா" (தனிப்பா.i, 92, 7).*

[Skt. nirantara > த. நிரதம்.]

நிரதன் *niradan,* பெ.(n.) மிக்க பற்றுடையவன்; a man of excessive attachment. *"தூய நிரதராயினர் சிலர்" (பிரபோதசந்.7, 37).*

[Skt. nirata > த. நிரதன்.]

நிரதி *niradi,* பெ.(n.) பற்று (யாழ்.அக.); attachment, connection.

[Skt. nirati > த. நிரதி.]

நிரதிகரணதீட்சை *niradikarana-tītcai,* பெ.(n.) சைவதீக்கை வகை; (Saiva) a way of initiation. *"சத்திசங்கற்ப மாத்திரமா யிருக்கின்ற நிதிகரண தீக்ஷையினாலே" (சி.சி.பாயி.3, ஞானப்.).*

[Skt. niradhikarana+ > த. நிரதிகரண தீக்ஷை.]

நிரதிகாரதிக்கை *niradikāra-tikkai,* பெ.(n.) **நிர்ப்பீசதீட்சை** பார்க்க (சைவச.ஆசாரி.62, உரை); (Saiva.) see *nirppīsatītcai.*

[Skt.niradhikāra+> த. நிரதிகார தீக்கை.]

நிரதிகாரன் *niradikāran,* பெ.(n.) ஒன்றற் குரிய அதிகாரமற்றவன்; incompetent or unqualified person; an unauthorised person.

[Skt. niradhi-kāra > த. நிரதிகாரன்.]

நிரதிகாரி *niradikāri,* பெ.(n.) **நிரதிகாரன்** பார்க்க; see *niratikāran.*

நிரதிகாரை *niradikārai,* பெ.(n.) **நிரதிகார திக்கை** பார்க்க; see *niratikāra-tikkai.* *"தானுமொழி னிரதி காரை யெனநின்று" (சி.சி.8, 4).*

[Skt. nir-adhikārā > த. நிரதிகாரை.]

நிரதிசயம் *niratišayam,* பெ.(n.) உயர்வற உயர்ந்த நிலைமை (இலக்.அக.); the state of being unsurpassed.

[Skt. nir-atišaya > த. நிரதிசயம்.]

நிரதிசயவின்பம் *niradicaya-v-inpam,* பெ.(n.) (தன்னின் மேம்பட்ட இன்பமில்லாதது) வீடுபேறு; salvation, as unsurpassed bliss. *"நிரதிசயவின்பத்துக்குரிய நீ... இன்னையாதல் தகாது" (குறள், 1103, உரை).*

[Skt. nir-atišaya > த. நிரதிசயவின்பம்.]

நிரந்தம்[1] *nirandam,* பெ.(n.) முடிவற்றது; that which is endless.

த.வ. நிலைப்பு

[Skt. nir-anta > த. நிரந்தம்.]

நிரந்தம்[2] *nirantam,* பெ.(n.) 1. **நிரந்தரம், 5** பார்க்க; see *nirantaram. "அன்னிரந்த வினங்களங்க ணடைந் திராமனை" (சேதுபு. கவிதீர்.4) (நாமதீப.225).* 2. நெருக்கிடை (வின்.); being closely pressed, as by a pursuing enemy.

[Skt. nir-antara > த. நிரந்தரம்.]

நிரந்தரசுரம் *nirantara-šuram,* பெ.(n.) விடாக்காய்ச்சல் (M.L.); unintermitten fever.

[Skt. nir-antara > த. நிரந்தரசுரம்.]

நிரந்தரம் *nirantaram,* பெ.(n.) 1. இடைவிடாமை; continuity. *"நின்றன் வார்கழற் கன்பெனக்கு நிரந்தரமா யருளாய்" (திருவாச. 5, 6).* 2. முடிவற்று எப்போதுமிருக்கை; eternity, endlessness. 3. நெருக்கம்; closeness, nearness. *"நிரந்தரந் தோன்றி நின்றார்" (கம்பரா.இந்திரசித்.57).* 4. அழிவு; ruin. *"தக்கன்றன் பெருவேள்வி நிரந்தரஞ் செய்த நிட்கண்டகனை" (தேவா.1049, 9).* 5. குரங்கு (திவா.); monkey. 6. சராசரி; average. *"நிரந்தரம் தேங்காயொன்றுக்கு முக்காலணா தருகிறேன்" (நாஞ்சில்.).*

[Skt. nir-antara > த. நிரந்தரம்.]

நிரந்தரன் *nirandaran,* பெ.(n.) 1. எப்போது முள்ளவனான கடவுள் (இலக்.அக.); the supreme being, as eternal. 2. சிவன் (நாமதீப.16); *Śiva.*

[Skt. nir-antara > த. நிரந்தரன்.]

நிரந்தரி[1] *nirantari,* பெ.(n.) மலைமகள் (யாழ்.அக.); *Pārvatī.*

[Skt. nir-antara > த. நிரந்தரி.]

நிரந்தரி[2]**-த்தல்** *nirandari-,* 11 செ.கு.வி.(v.i.) எப்போதுமிருத்தல்; to live or exist for ever. *"எருமைகணிரந்தரித்தன" (விநாயகபு. திருநாட்.76).*

[Skt. nirantara > த. நிரந்தரி-.]

நிரநுயோச்சியாநுயோகம் *niranuyōcciyā-nuyōgam,* பெ.(n.) தோல்வித்தானத்து ளொன்று (செந்.iii, பக்.13); (Log.) a fallacy in argument.

[Skt. nir-anu-yōjya > த. நிரநுயோச்சியா நுயோகம்.]

நிரப்பலா *nirappalā,* பெ.(n.) ஆசினிப்பலா; the bread fruit tree (சா.அக.).

நிரபம் *nirabam,* பெ.(n.) 1. நீரற்றது; saplessness. 2. சாறற்றது; devoid of juice (சா.அக.).

நிரபராதி *niraparāti,* பெ.(n.) குற்றமற்றவன் (மணிமே.26, 28, உரை); innocent, guiltness person.

[Skt. nir-aparādhin > த. நிரபராதி.]

நிரபி *nirabi,* பெ.(n.) 1. மரமஞ்சள்; tree turmeric. 2. மஞ்சள்; turmeric (சா.அக.).

நிரபிமானம் *nirabimānam,* பெ.(n.) 1. பற்றின்மை (யாழ்.அக.); absence of bias or attachment. 2. அடக்கம்; self-restriant.

[Skt. nir-abhimāna > த. நிரபிமானம்.]

நிரபேட்சம்– *nirabēṭcam,* பெ.(n.) ஒன்றைச் சார்ந்து இல்லாமை; that which is not dependent. *"இந்திரியாந்தக்கரண நிரபேட்சம்" (சி.சி.அளவை.1, சிவாக்.பக்.109).*

[Skt. nir-apēksa > த. நிரபேட்சம்.]

நிரபேட்சை *nirabēṭcai,* பெ.(n.) விருப்ப மின்மை (யாழ்.அக.); absence of attachment or desire, unconcernedness, opp. to *cāpēṭcai.*

[Skt. nir-apēksā > த. நிரபேட்சை.]

நிரம்சம் *nir-amcam,* பெ.(n.) பகுக்கத் தகாதது; that which is indivisible. *"ஏகபிரதேதியாகலின் நிரம்சமாகிய பரமாணுவினுக்கு" (நீலகேசி.397, உரை).*

[Skt. nir-amśa > த. நிரம்சம்.]

நிரம்பியமரம் *nirambiya-maram,* பெ.(n.) 1. வாழை மரம்; platain tree. 2. தென்னை மரம்; cocoanut tree. 3. ஆலமரம்; banyan tree (சா.அக.).

நிரயப்பாலர் *niraya-p-pālar,* பெ.(n.) **நிரய பாலர்** பார்க்க; see *niraya-pālar.* *"அணங்கென்பன பேயும்... நிரயப்பாலரும்" (தொல்.பொ.256, உரை.)*

[Skt. niraya+pālar > த. நிரயப்பாலர்.]

நிரயபாலர் *niraya-pālar,* பெ.(n.) நரகத்திலுள்ள தலைவர்; chiefs of the internal

regions. *"நிரயபாலர் பலரும்" (சீவக.2771, உரை).*

[Skt. niraya+pāla > த. நிரயபாலர்.]

நிரயம் *nirayam,* பெ.(n.) நரகம்; hell. *"நிரயங் கொள்பவரொ டொன்றாது" (புறநா.5).*

[Skt. nir-aya > த. நிரயம்.]

நிரயவட்டம் *nirayavaṭṭam,* பெ.(n.) பெருகளற்று வட்டம், மணல் வட்டம், எரிபரல் வட்டம், அரிபடை வட்டம், புகை வட்டம், இருள் வட்டம், பெருங்கீழ் வட்டமாகிய ஏழு நரகங்கள் (பிங்.); the seven internal regions, viz., perkaḷaṟṟuvaṭṭam, maṇalvaṭṭam, eriparalvaṭṭam, aripaḍai-vaṭṭam, pugai vaṭṭam, iruḷvaṭṭam, peruṅkīḻvaṭṭam.

[Skt. nir-aya > த. நிரயவட்டம்.]

நிரயனம் *nirayaṉam,* பெ.(n.) மேட ராசியின் தொடக்க இடத்திருந்து கணிக்கப்படும் வான்கதி தொலைவு (செற்.viii, 67); celestial longitudinal difference measured from the zero point of the fixed Hindu zodiac.

[Skt. nirayaṉam > த. நிரயனம்.]

நிரயாசிப்பால் *nirayāsi-p-pāl,* பெ.(n.) **நிரியாசப்பால்** பார்க்க; see *niriyāsa-p-pāl* (சா.அக.).

நிரர்த்தகம் *nirarttagam,* பெ.(n.) **நிரர்த்தம்** பார்க்க (வின்.); see *nirarttam.*

[Skt. nir-arthaka > த. நிரர்த்தகம்.]

நிரர்த்தம் *nirarttam,* பெ.(n.) பயனற்றது; that which is meaningless, worthless, useless.

[Skt. nir-artha > த. நிரர்த்தம்.]

நிரவ்வியயம் *niravviyayam,* பெ.(n.) நீண்ட காலம் வாழுவல்லது; that which is eternal (யாழ்.அக.).

[Skt. nir-avyaya > த. நிரவ்வியயம்.]

நிரவகாசவிதி *niravakācaviti,* பெ.(n.) குறித்த இடந்தவிர வேறு இடத்திற் செல்லக் கூடாத விதி (சிவசமவா.பக்.65); a rule or precept applicable only to the point in question, opp. to *cāvakāca-viti.*

[Skt. niravakāśa > த. நிரவகாசவிதி.]

நிரவகாலிகை *niravakāligai,* பெ.(n.) திறந்த வெளி (யாழ்.அக.); open space.

[Skt., Perh. nir-avahālikā > த. நிரவகாலிகை.]

நிரவதிகம் *niravatikam,* பெ.(n.) **நிரவதி** பார்க்க; see *niravati. "நிரவதிகதேஜோமயமாய்" (குருபரம்.).*

[Skt. nir-avayava > த. நிரவதிகம்.]

நிரவயம் *niravayam,* பெ.(n.) உறுப்பற்றது; that which is without limbs or parts. *"நிரவாயவமாயுள்ள வான்மாவை" (மணி.29, 299).*

[Skt. nir-avayava > த. நிரவயம்.]

நிரவயன் *niravayaṉ,* பெ.(n.) கடவுள் (அழிவில்லாதவன்) (சங்.அக.); god, as undecaying.

[Skt. nir-avyaya > த. நிரவயன்.]

நிரா *nirā,* பெ.(n.) பழம் முதலியவற்றின் கன்றின நிலை (யாழ்.அக.); hardness in fruit through blight or injury.

[Skt. narā > த. நிரா.]

நிராகம் *nirāgam,* பெ.(n.) உடலின்மை (வின்.); incorporeality.

[Skt. nir+augam > த. நிராகம்.]

நிராகரணம் *nirāgaraṇam,* பெ.(n.) 1. மறுப்பு; refutation, confutation, repudiation. *"ஈசுவர நிராகரணம் பண்ணுமவன்" (தக்கயாகப்.183, உரை).* 2. மதிப்பளிக்காமை; disregard.

[Skt. nirākarana > த. நிராகரணம்.]

நிராகரன் *nirāgaraṉ,* பெ.(n.) உருவமற்ற கடவுள் (யாழ்.அக.); god, as formless.

[Skt. nir-ākāra > த. நிராகரன்.]

நிராகரி-த்தல் *nirāgari-,* பெ.(n.) 1. மறுத்தல்; to refute, reject, as the terms of an appointment. 2. மதிப்புக் குறைவு செய்தல்; to disregard, treat with disrespect.

[Skt. nir-ākr > த. நிராகரி-.]

நிராகாரநிலை *nirāgāra-nilai,* பெ.(n.) உண்ணாமலே நிற்கும் ஒக நிலை; a stage of yoga in which the practising yogi remains abstaining from food and drink (சா.அக.).

நிராகாரம்¹ *nirāgāram,* பெ.(n.) 1. **நிராகரணம்** பார்க்க (வின்.); see *nirāgaraṇam.* 2. உருவின்மை; shapelessness, formlessness. *"நிராகார வடிவேயோ" (திருப்பு.970).* 3. விண் (யாழ்.அக.); air, ether, as formless. 4. வீடுபேறு (யாழ்.அக.); beatitude.

[Skt. nirākāra > த. நிராகாரம்.]

நிராகாரம்² *nirāgāram,* பெ.(n.) உண வின்மை; fasting; lack of food. *"நிராகாரத் தொடுவைகி" (விநாயகபு.29, 4).*

[Skt. nir-āhāra > த. நிராகாரம்².]

நிராகாரம்³ *nirāgāram,* பெ.(n.) 1. உண வின்மை; want of food. 2. உணவு வேண்டாமை; no appetite for food (சா.அக.).

நிராகாரன் *nirākāraṉ,* பெ.(n.) 1. சிவ பெருமான் (பிரான்); *Śiva.* 2. திருமால்; *Visṇu* (யாழ்.அக.).

[Skt. nir-ākāra > த. நிராகாரன்.]

நிராகிருதம் *nirākirudam,* பெ.(n.) 1. தள்ளுண்டது; that which is refuted or rejected. 2. உருவமற்றது (யாழ்.அக.); formless thing.

[Skt. nir-ā-krta > த. நிராகிருதம்.]

நிராகிருதி *nirākirudi,* பெ.(n.) 1. வடிவின்மை (யாழ்.அக.); formlessness. 2. **நிராகரணம்** பார்க்க (இலக்.அக.); see *nirākaraṇam.*

[Skt. nir-ākrti > த. நிராகிருதி.]

நிராகுலம் *nirākulam,* பெ.(n.) கலக்கமின்மை; absence of anguish.

[Skt. nir-ākula > த. நிராகுலம்.]

நிராசனர் *nirācaṉar,* பெ.(n.) கடவுளர்; gods. *"நிராசனர் வருக வென்றான்" (கம்பரா. மிதிலைக்.114).*

[Skt. nir-ašana > த. நிராசனர்.]

நிராசாரம் *nirācāram,* பெ.(n.) தூய்மை யின்மை (யாழ்.அக.); want of ceremonial purity, impurity.

[Skt. nir-ācāra > த. நிராசாரம்.]

நிராசிராவம் *nirāsirāvam,* பெ.(n.) மாத விடாய் அரத்தம் படாமை; absence of discharge of blood (சா.அக.).

நிராசை *nirāsai,* பெ.(n.) 1. ஆசையின்மை; freedom from or absence of desire or attachment. *"வருபோகங்களினிராசை" (கைவல்.தத்.84).* 2. நம்பிக்கையறுகை; despair, hopelessness (Loc.).

[Skt. nir-āšā > த. நிராசை.]

நிராட்சேபணை *nirāṭcēpaṇai,* பெ.(n.) தடை யின்மை; being unobjectionable.

[Skt.nir-āksēpaṇā > த. நிராட்சேபணை.]

நிராடகோலம் *nirāḍakōlam,* பெ.(n.) வேங்கைப்புலி; man-eater (சா.அக.).

நிராடங்கம் *nirāḍaṅgam,* பெ.(n.) தடை யின்மை அற்றது; an unobjectionale thing.

[Skt. nir+T.ādankamu > த. நிராடங்கம்.]

நிராடபதி *nirāḍapati,* பெ.(n.) உடும்பின் கொழுப்பு; fat of guana. (சா.அக.).

நிராதபகை *nirātapagai,* பெ.(n.) இரவு (யாழ்.அக.); night.

[Skt. nir-ātapā > த. நிராதபகை.]

நிராதாரம்¹ *nirātāram,* பெ.(n.) 1. ஆதார மின்மை; absence or lack of foundation or support. 2. சார்பு வேண்டாமை; independance, not needing extraneous support, as an attribute of deity. 3. **நிராதாரயோகம்** பார்க்க; see *nirātāra-yōgam. "நிராதாரத்தே சென்று"(திருவுந்தி.8).*

[Skt. nir-ādhāra > த. நிராதாரம்.]

நிராதாரம்² *nirātāram,* பெ.(n.) ஆறாதாரங் களுள் ஒன்றான சுவாதிட்டானம்; which see.

one of the six regions of the body situated in genitals. c.f. ஆறாதாரம் (சா.அக.).

நிராதாரயோகம் *nirātāra-yōgam,* பெ.(n.) ஆதன் (ஆத்மா) தன்னறிவிழந்து அறிவுருவாகிய (ஞானசொரூபமாகிய) சிவனை யடைந்து பற்றற நிற்கும் நிலை; the state of the soul in which it loses all self-consciousness, attains *śivahood* and remains without any attachment. *"ஆதாரயோக நிராதாரயோகமென" (திருக்களிற்றுப்.22, உரை).*

[Skt. nir-ādhāra > த. நிராதாரயோகம்.]

நிராதாரன் *nirātāran,* பெ.(n.) பற்றுக் கோடற்றவன் ஆகிய கடவுள் (யாழ்.அக.); god, as independent.

[Skt. nir-ādhāra > த. நிராதாரன்.]

நிராதேசம் *nirātēcam,* பெ.(n.) 1. கடனிறுக்கை (யாழ்.அக.); compulsory payment. 2. சார்பின்மை, ஆதாரமின்மை; want of support. 3. இழப்பு; loss.

நிராதேவி *nirā-dēvi,* பெ.(n.) வட்டத்திருப்பி; sickle leaf (சா.அக.).

நிராபாதை *nirāpādai,* பெ.(n.) துன்பம் அல்லது வலியற்றது; not causing any injury or pain (சா.அக.).

நிராமயசெயநீர் *nirāmaśayanīr,* பெ.(n.) அண்டச் செயநீர்; a pungent liquid extracted from a fowl's egg or from the foetus (சா.அக.).

[நிராமயம் + செயநீர்.]

[Skt. nir-āmaya > த. நிராமயம்.]

நிராமயதி *nirāmayadi,* பெ.(n.) கலவியின் பந்தருகை; giving pleasure by sexual union (சா.அக.).

நிராமயம் *nirāmayam,* பெ.(n.) 1. நோயின்மை; freedom from disease or ailment, as an attribute of deity. 2. நோயற்றது; that which is free from ailment. *"நிரஞ்சன நிராமயத்தை" (தாயு. திருவருள்வி.3).*

[Skt. nir-āmaya > த. நிராமயம்.]

நிராமயம்[2] *nirāmayam,* பெ.(n.) பன்றி; hog (சா.அக.).

நிராமயன்[1] *nirāmayan,* பெ.(n.) கடவுள்; the Supreme Being. *"நிராமய பராபரபுராதன" (தேவா., 148, 6).*

[Skt. nir-āmaya > த. நிராமயன்.]

நிராமயன்[2] *nirāmayan,* பெ.(n.) 1. நோயற்றவன்; one who is free from illness, healthy man. 2. மூச்சுக் காற்றை நிறுத்தும் கலைவல்லோன்; one who suppresses respiration. 3. முனிவர்; a yogi (சா.அக.).

நிராமலம் *nirāmalam,* பெ.(n.) விளா; wood apple tree (சா.அக.).

நிராமாதிசாரம் *nirāmātišāram,* பெ.(n.) வெப்பக் கழிச்சல்; diarrhoea from excessive heat of the body. 2. குளிர்க் கழிச்சல்; dysentery (சா.அக.).

நிராமாலு *nirāmālu,* பெ.(n.) **விளாமரம்**; *viḷā-maram* (சா.அக.).

நிராமிலம் *nirāmilam,* பெ.(n.) எரிமச் சத்தற்றது; non acid (சா.அக.).

நிராயுசியம் *nirāyusyam,* பெ.(n.) அகவையின்மைத் தன்மை (சிலப்.10, 188, அரும்.); agelessness.

[Skt. nir-āyusya > த. நிராயுசியம்.]

நிராயுதபாணி *nirāyuta-pāṇi,* பெ.(n.) **நிராயுதன், 1** பார்க்க; see *nirāyutan.*

[Skt. nir-āyudha-pāṇi > த. நிராயுதபாணி.]

நிராயுதன் *nirāyutan,* பெ.(n.) 1. படைக்கலமில்லாதவன்; unarmed person. *"மறைந்து நிராயுதன் மார்பினெய்யவோ" (கம்பரா. வாலிவ.90).* 2. அருகன் (சூடா.); arhat.

[Skt. nir-āyudha > த. நிராயுதன்.]

நிராலம்பம் *nirālambam,* பெ.(n.) 1. பற்றுக் கோடின்மை; absence of support, independence. *"நிராலம்ப வாலம்ப சாநதபத வியோமநிலையை" (தாயு. திருவருள்வி.3).* 2. திறந்தவெளி; open space. *"நிரயமிசை நிராலம்பத் துச்சிமிசை" (சிவதரு.கோபுர.18).* 3. நூற்றெட்டு துணைத் தொன்மங்களுள் ஒன்று; an upanisad one of 108.

[Skt. nir-lamba > த. நிராலம்பம்.]

நிராலம்பயோகம் *nirālamba-yōgam,* பெ.(n.) நிட்களத்தைப் பற்றிச் செய்யும் ஓகம் (சி.போ.8, 1); a kind of *yōga* in which the formless God is contemplated.

[Skt. nir-lamba+yōga > த. நிராலம்பயோகம்]

நிராலம்பன் *nirālamban,* பெ.(n.) (பற்றுக் கோடற்றவன்) கடவுள்; the supreme being, as independent.

[Skt. nir-ālamba > த. நிராலம்பன்.]

நிரிகதாபனரோகம் *nirikatābana-rōgam,* பெ.(n.) முட்டையின் வெள்ளை போன்ற நீர்மம் பிறப்புறுப்பிலிருந்து வெளிப்படும் ஒரு நோய்; a whitish viscid discharge like the white of an egg from the vagina and uterine cavity (சா.அக.).

நிரிகம் *nirigam,* பெ.(n.) தாமரைக் காயின் அல்லது நெஞ்சாங்குலையின் உட்புறத்துச் சவ்வு; the membrane lining the interior of the heart-Endocardium (சா.அக.).

நிரியசம் *niriyašam,* பெ.(n.) வேம்பு; margosa or neem tree (சா.அக.).

நிரியம் *niriyam,* பெ.(n.) தினை; Italian millet (சா.அக.).

நிரியாசப்பால்¹ *niriyāsa-p-pāl,* பெ.(n.) **நிரியாசம், 1** பார்க்க; see *niriyāsam.*

[Skt. niryāsa > த. நிரியாசப்பால்.]

நிரியாசப்பால்² *niriyāsa-p-pāl,* பெ.(n.) எரிகாசு; java stora. 2. **நெரியாசிப்பால்** பார்க்க; see *neriyāsi-p-pāl* (சா.அக.).

நிரியாசம்¹ *niriyāsam,* பெ.(n.) 1. புகை வகை (தூபவர்க்கம்) ஆறனுள் ஒன்று, ஒருவகைப் பிசின் (சிலப்.5, 14); a kind of resin used as incense, one of six *tūpa-varkkam.* 2. வேம்பு; neem.

[Skt. niryāsa > த. நிரியாசம்.]

நிரியாசம்² *niriyāšam,* பெ.(n.) 1. மராமரம்; Indian dammar, black dammar. 2. ஒரு வகைப் பிசின்; gum or resin. 3. மரத்தின்பால்; exudation from tree, as சால நிரியாசம், அசுவகரண நிரியாசம், which means shorea resin. 4. பூண்டின் பால் அல்லது சாறு; juice of plants resin, milk any thick fluid substance from plants, **நெரியாசிப்பால்** பார்க்க; see *neriyāšippāl* (சா.அக.).

நிரியாணசக்கரம் *niriyāṇa-cakkaram,* பெ.(n.) ஒருவன் இறப்புக் காலத்தைக் கணக்கிட உதவும் சக்கர வடிவம் (வின்.); (Astrol.) diagram by which the time of one's death is calculated.

[Skt. nir-yāṇa+ > த. நிரியாணசக்கரம்.]

நிரியாணதசை *niriyāṇa-tašai,* பெ.(n.) இறப்பைக் குறிக்குங் கோள்நிலை (வின்.); influence of the planet that forebodes death.

[Skt. nir-yāṇa+ > த. நிரியாணதசை.]

நிரியாணதிசை *niriyāṇa-tišai,* பெ.(n.) இறக்குங் காலம்; period of death (சா.அக.).

நிரியாணம்¹ *niriyāṇam,* பெ.(n.) 1. யானை யின் கடைக்கண் (பிங்.); outer corner of an elephant's eye. 2. இறப்பு (பிங்.); death. 3. வீடுபேறு (வின்.); emancipation from births, final beatitude.

[Skt. nir-yāna > த. நிரியாணம்.]

நிரியாணம்² *niriyāṇam,* பெ.(n.) 1. இறப்பு; death. 2. பிறவி நீங்கல்; freedom from birth (சா.அக.).

நிரியானக்குறி *niriyāṉa-k-kuṟi,* பெ.(n.) இறப்புக்குறி; symptoms of death (சா.அக.).

த.வ. சாக்குறி

நிரீக்கணம் *nirikkaṇam,* பெ.(n.) 1. பார்வை; sight. 2. இடக்கண்ணிலே அமுதங்கொண்டு நனைத்துத் தூய்மை செய்வதாகப் பாவிக்குஞ் செய்கை (சைவச.பொது.354); (Saiva.) a ritual in daily ablutions by which purification is effected by the imagined flow of nectar from one's left eye.

[Skt. nir-īksama > த. நிரீக்கணம்.]

நிரீச்சுரசாங்கியன் *niriccuracāṅkiyaṉ,* பெ.(n.) **நிர்ச்சுவரசாங்கியன்** பார்க்க (தத்துவப்.176); see *nīrccuvara-sāṅgiyaṉ.*

[Skt. nir-išvara+ > த. நிரீச்சுரசாங்கியன்.]

நீரீச்சுரம் *nīriccuram,* பெ.(n.) கடவுளில்லையென்று கூறும் மதம்; atheism, atheistic doctrine.

[Skt. nir-īšvara > த. நீரீச்சுரம்.]

நீரீச்சுரவாதி *nīriccura-vādi,* பெ.(n.) **நிரீச்சுவாதி** பார்க்க; see *nīriccuravādi.*

[Skt. nir-īšvara+ > த. நீரீச்சுரவாதி.]

நீரீச்சுவரசாங்கி *nīriccuvara-cāṅgi,* பெ.(n.) **நிரீச்சுவரசாங்கியன்** பார்க்க; see *nīriccuvarasāṅgiyaṉ.* *"நிரீச்சுவரசாங்கி புகல்வது தானறியாத பிரகிருதியாவும்" (தத்துவப்.174).*

[Skt. nir-īsuvara+saṅkhya> த. நிரீச்சுவர சாங்கி.]

நிரீச்சுவரசாங்கியம் *nīriccuvara šāṅgiyam,* பெ.(n.) கடவுளின்மையைக் கூறும் சாங்கிய மதம் (தக்கயாகப்.246, உரை); atheistic school of the *šāṅkhya* system of philosophy.

[Skt. nir-īšvara+saṅkya > த. நிரீச்சுவர சாங்கியம்.]

நிரீச்சுவரசாங்கியன் *nīriccuvara-šāṅgiyam,* பெ.(n.) நிரீச்சுவரசாங்கியக் கொள்கையைக் கொண்டவன் (சங்.அக.); one who follows the doctrines of *nirišvarasāṅkhya.*

[Skt. nir-īšvara+saṅkya > த. நிரீச்சுவர சாங்கியன்.]

நிரீச்சுவரவாதம் *nīriccuvara-vātam,* பெ.(n.) **நிரீச்சுவரசாங்கியம்** பார்க்க (சங்.அக.); see *nīriccuvara-sāṅgiyam.*

[Skt. nir-īsuvara+vāda > த. நிரீச்சுவர வாதம்.]

நிரீச்சுவரவாதி *nīriccuvara-vāti,* பெ.(n.) கடவுளில்லையென்போன் (சி.சி.1, 1, சிவாக்.); atheist.

[Skt.nirīšvaravādin > த. நிரீச்சுவரவாதி.]

நிரீட்சணசுத்தி *nirīṭcaṇa-šutti,* பெ.(n.) கண்ணேறு கழிக்கை (சங்.அக.); purification to prevent the evil eye.

[Skt. nirīksaṇa+ > த. நிரீட்சணசுத்தி.]

நிரீட்சணம் *nirīṭcaṇam,* பெ.(n.) 1. பார்வை (சங்.அக.); sight. 2. எதிர்பார்த்திருக்கை; expectation. 3. மதிப்பு; honour. 4. **நிர்க்கணம், 2** பார்க்க; see *nirkkaṇam.* 5. பார்வையின்மை; absence of sight.

[Skt. nir-īksaṇa > த. நிரீட்சணம்.]

நிரீட்சமாணம் *nirīṭcamāṇam,* பெ.(n.) 1. நம்பிக்கை; faith. 2. பார்க்கை; seeing.

[Skt. nir-īksamāṇa > த. நிரீட்சமாணம்.]

நிரீட்சணமுத்திரை *nirīṭcaṇa-muttirai,* பெ.(n.) கண்முத்திரை என்னும் நாட்டிய குறி; a hand pose.

[Skt. nirīksaṇa+ த. முத்திரை.]

நிரீட்சி-த்தல் *nirīṭci-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. பார்த்தல்; to cast a look. 2. பார்வை பார்த்தல்; to cure a disease by incantation. 3. எதிர்பார்த்தல்; to expect.

[Skt. nir-īks > த. நிரீட்சி-த்தல்.]

நிரீட்சிதம் *nirīṭcitam,* பெ.(n.) பார்க்கப்பட்டது (சங்.அக.); that which is seen.

[Skt. nir-īksita > த. நிரீட்சிதம்.]

நிருக்கிட்டுக்கொடுத்தல் *nirukkiṭṭu-k-koḍuttal,* தொ.பெ.(vbl.n.) மருந்தை அள விட்டுக் கொடுத்தல்; giving medicine in pro.portionate doses (சா.அக.).

நிருக்கிரம் *nirukkiram,* பெ.(n.) 1. கொடுமை யின்மை; absence of violence, non-violent. 2. உச்சமற்றது; non-malignant as in fever, tumour etc. (சா.அக.).

[நிர் + உக்கிரம்.]

நிருகம் *nirugam,* பெ.(n.) மானிடருக்கடுத்த நோய்; diseases peculiar to human beings (சா.அக.).

நிருகேசரி *nirukēcari,* பெ.(n.) **நிருசிங்கம்** (யாழ்.அக.) பார்க்க; see *niruśiṅgam.*

[Skt. *nir-kēsarin* > த. நிருகேசரி.]

நிருச்சத்தன் *niruccattaṉ,* பெ.(n.) அரக்கன் (இராக்கதன்) (யாழ்.அக.); *rāksasa.*

[Skt. *nrśamsa* > த. நிருச்சத்தன்.]

நிருச்சுவாசம்[1] *niruccuvācam,* பெ.(n.) மூச்சு விடாதிருக்கை (சிவதரு.சுவர்க்கநரக. 147); breathlessness.

[Skt. *nir-ucchvāsa* > த. நிருச்சுவாசம்.]

நிருச்சுவாசம்[2] *niruccuvāśam,* பெ.(n.) 1. மூச்சின்மை; absence of breath. 2. மூச்சடக்கம்; suppression of breath. 3. மூச்சொடுக்கம்; suspension of breath (சா.அக.).

நிருச்சுவாசவுச்சுவாசம் *niruccuvāśa-v-uccuvāśam,* பெ.(n.) அரச நிரயம் எட்டனுள் ஒன்று (சி.போ.பா.2, 3 பக்.204); a hell, one of eight *araśa-nirayam.*

[Skt. *nir-ucchvāsa* > த. நிருச்சுவாசவுச் சுவாசம்.]

நிருசிம்மதாபினி *nirucimmatābiṉi,* பெ.(n.) நூற்றெட்டு துணைத் தொன்மங்களுள் (உபநிடதம்) ஒன்று; an upanisad, one of 108.

[Skt. *nrsmha-tāpiṇi* > த. நிருசிம்ம தாபினி]

நிருணயக்கணக்கு *nirṇaya-k-kaṇakku,* பெ.(n.) குறிக்கணக்கு (பீசகணிதம்); algebra (Pond.).

[Skt. *nirṇaya* > த. நிருணயம்+கணக்கு.]

நிருணயம் *niruṇayam,* பெ.(n.) 1. உறுதி (யாழ்.அக.); determination, resolution. 2. ஆராய்வு (சங்.அக.); ascertaining.

[Skt. *nir-ṇaya* > த. நிருணயம்.]

நிருணயி-த்தல் *niruṇayi-,* 4 செ.குன்றாவி. (v.t.) உறுதி செய்தல்; to determine.

[Skt. *nir-ṇaya* > த. நிருணயி-.]

நிருணாமன் *niruṇāmaṉ,* பெ.(n.) 1. பெயரில் லாதவனாகிய கடவுள் (சங்.அக.); god, as nameless. 2. அருகன்; Arhat.

த.வ. பெயரிலி

[Skt. *nir-nāma* > த. நிருணாமன்.]

நிருணி-த்தல் *niruṇi-,* 4 செ.குன்றாவி. (v.t.) **நிருணயி-** (வின்.) பார்க்க; see *niruṇayi.*

நிருத்தக்கண்டம் *nirutta-k-kaṇḍam,* பெ.(n.) 1. மூச்சுவிட முடியாமை; having the breath obstructed; suffocated. 2. தொண்டை யடைப்பு; obstruction in the throat (சா.அக.).

நிருத்தக்கை *niruttakkai,* பெ.(n.) சதுரச்சிரம், உத்துவீதம், தலமுகம், சுவத்திகம், விப்பிர கீர்ணம், அருத்தரேசிதம், அராளகடகாமுகம், ஆவித்தவத்திரம், சூசீமுகம், கிரேசிதம், உத்தானவஞ்சிதம், பல்லவம், நிதம்பம், கசதந்தம், இலதை, கரிக்கை, பக்கவஞ்சிதம், பக்கப்பிரதியோகம், கருடபக்கம், தண்ட பக்கம், ஊர்த்துவமண்டலி, பக்கமண்டலி, முட்டிச்சுவத்திகம், நளினீபதுமகோசம், அலபதுமம், உற்பணம், இலளிதை, வலிதை என்னும் முப்பது வகைப்பட்ட அவிநயக்கை (சிலப்.3, 13, உரை, பக்.81); (*Nāṭya*) hand-pose of 30 kinds, viz., *catura-c-ciram, uttuvītam, talamukam, cuvattikam, vippirakīrṇam, aruttarēśitam, arāḷakaḍa-kāmugam, āvittavattiram, śūśīmugam,*

kirēšitam, uttāṉavañjitam, pallavam, nitambam, kašatantam, iladai, karikkai, pakkavañjitam, pakka-p-piratiyōgam, karuḍa-pakkam, taṇḍa-pakkam, ūrttuva-maṇḍali, pakka-maṇḍali, muṭṭi-c-cuvattigam, naḷiṉi-patuma-kōšam, alapadumam, uṟpaṉam, ilaḷidai, validai.

[Skt. nrtta+ > த. நிருத்தக்கை.]

நிருத்தகீதவாத்தியம் *nirutta-kīta-vāttiyam,* பெ.(n.) கூத்தும் பாட்டுங் கொட்டும் (வின்.); dancing, singing and instrumental music.

[Skt. nrtta-gīta-vādya > த. நிருத்தகீத வாத்தியம்.]

நிருத்தகுதம் *niruttakutam,* பெ.(n.) எரு வாய்ச் சுருக்கம்; constriction of the anus stricture of the rectum; constraction or obstruction the anus. In this cathetars should be used or inserted in the same way as in case of urethra (சா.அக.).

நிருத்தசபை *nirutta-šabai,* பெ.(n.) 1. சிவன் கோயிலில் ஆடல் வல்லானின் நாட்டிய அவை; dancing hall of *naṭarāja* in *šiva* temples. 2. கூத்து நிகழ்த்தும் இடம்; dancing-hall.

த.வ. ஆடரங்கு

[Skt. nrtta > த. நிருத்தசபை.]

நிருத்தப்பிரகாசம் *nirutta-p-pirakāšam,* பெ.(n.) 1. வாயுவினால் இலிங்க மணிக்கு மேலாக இழுத்த முன் தோல் அம்மலரில் வலுவாக பிடித்து அதனால் கீழுக்குத் தள்ள முடியாமலும்; மூத்திரத்தாரையை நீர் வெளிவராது அழுத்தியும் வலியையுண்டாக்கித் துன்பத்தைக் கொடுக்கும் ஓர் நோய்; the prepuce affected by deranged vayu when once drawn quite behind the glans penis cannot be drawn down to its original position owing to its contraction by which the passage of the urethra is obstructed and the emission of urine is completely stopped-paraphimosis. **நிருதிமொய்த்தல்** பார்க்க. 2. மேக சம்பந்தத்தினால் மூத்திரத் தாரை அடைப்பட்டு, அதனால் சிறுநீர் வெளிவராது வருத்தத்தையும் வலியையும் உண்டாக்கும் ஒரு நோய்; obstruction to the free passage of urine due to the abnormal narrowing of the urethra either from contraction or from deposit of abnormal tissue. This condition is attributed to venereal or syphilitic causes (சா.அக.).

நிருத்தப்பிரசவம் *nirutta-p-pirašavam,* பெ.(n.) பெண்ணின் யோனித் தாரையில் கழலையாகத் தடுத்தும் அல்லது மேற்படி தாரைச் சுருக்கம் அடைந்தும் இருப்பதால் கருப்பிண்டம் வெளிவர முடியாது துன்பப்படும் பிள்ளைப்பேறு; child birth which is attended by some mechanical hindrance as from a tumour or a contracted parturient cannal (சா.அக.).

நிருத்தம்¹ *niruttam,* பெ.(n.) எந்த தாது நீறாக (பற்பமாக)ச் செய்யப்படுகிறதோ அந்தத் தாதுவை எவ்வகை வழியினாலும் அந் நீறினின்று பிரித்தெடுக்கக் கூடாமை; the impossibility of eliminating by any contrivance or means, the element from the calcined compound of which it formed a component part (சா.அக.).

நிருத்தம்² *niruttam,* பெ.(n.) அறுபத்து நாலு கலைகளுள் ஒன்றாகிய நடனம்; dancing, one of *aṟupattunālu-kalai.* *"பாவை நிருத்த நோக்கி மெய்யுருகி" (சீவக.682).*.

[Skt. nrtta > த. நிருத்தம்.]

நிருத்தம்³ *niruttam,* பெ.(n.) வேதாங்கம் ஆறனுள் வேதங்களிலுள்ள சொற்களை ஆராயும் நூல்; class of works containing etymological explanation of difficult vedic words, one of six *vētāṅ-kam.* *"தெற்றெனிருத்தஞ் செவி" (மணி.27, 101).*

[Skt. nir-ukta > த. நிருத்தம்².]

நிருத்தம்[4] *niruttam,* பெ.(n.) பற்றின்மை; absence of attachment. *"நிருத்த சுகசிற்கனத்து நிலையுற்றவன்" (சிவதரு. சனனமரண.96).*

[Skt. ni-ruddha > த. நிருத்தம்⁴.]

நிருத்தமண்டபம் *nirutta-mandabam,* பெ.(n.) **நிருத்தசபை** (I.m.p.ii, 1226, 128) பார்க்க; see *nirutta-šabai.*

த.வ. நாட்டியமண்டபம், ஆடரங்கு

[Skt. nrtta > த. நிருத்த+மண்டபம்.]

நிருத்தமாது *niruttamātu,* பெ.(n.) நாடகக் கணிகை (சூடா.); dancing-girl.

[Skt. nrtta > த. நிருத்த+மாது.]

நிருத்தன் *niruttan,* பெ.(n.) நடனமாடுவோன் (பிங்.); dancer. *"உமையொடு மொருபாக மதுவாய நிருத்தன்" (தேவா.194, 5).*

[Skt. nrtta > த. நிருத்தன்.]

நிருத்தாங்கம் *niruttāngam,* பெ.(n.) நிருத் தத்துக்கு வாசிக்கும் மத்தளந் தாளம் முதலியன (சிலப்.3, 14, உரை); musical instruments accompanying dancing.

த.வ. ஆடல் இன்னியம்

[Skt. nrtta+anga > த. நிருத்தாங்கம்.]

நிருத்தாசனம் *niruttāšanam,* பெ.(n.) தெளிவு (நாமதீப.647); clearness, clarity of vision.

[Skt. nirdhārana > த. நிருத்தாசனம்.]

நிருத்தாட்சிணியம் *niruttātciniyam,* பெ. (n.) கண்ணோட்டமின்மை (யாழ்.அக.); impartiality.

[Skt.nir-dāksinya>த. நிருத்தாட்சிணியம்.]

நிருத்தாதனம் *niruttādanam,* பெ.(n.) ஒருகாலைத் தூக்கிநிற்கும் நிலை வகை (யாழ்.அக.); a dancing posture in which one of the legs is held aloft.

[Skt. nrttā-sana > த. நிருத்தாதனம்.]

நிருத்தானுகம் *niruttānugam,* பெ.(n.) **நிருத்தாங்கம்** (சிலப்.3, 14, அரும்.) பார்க்க; see *niruttāngam.*

[Skt. nrtta+anu-ga > த. நிருத்தானுகம்.]

நிருத்தி *nirutti,* பெ.(n.) சொற்கு உறுப்புப் பொருள் கூறுகை; etymological interpretation of a word.

[Skt. nir-ukti > த. நிருத்தி.]

நிருத்தியலங்காரம் *niruttiyalangāram,* பெ.(n.) பிரிநிலை நவிற்சியணி (சங்.அக.); a figure of speech.

[Skt. nir-ukti+alam-kāra > த. நிருத்தி யலங்காரம்.]

நிருதர் *nirutar,* பெ.(n.) பதினெண்கணத்துள் ஒருவராகிய அரக்கர்; *rāksasas,* one of *patinenkanam.* "நிருதாதியர் வேரற" (கம்பரா.சடாயுவு.79).

[Skt. nairrta > த. நிருதர்.]

நிருதி[1] *niruti,* பெ.(n.) 1. எட்டுத் திக்குப் பாலகருள் தென்மேற்றிசைக்காவலன் (சூடா.); regent of the south-west, one of *asta-tikku-p-pālakar.* *"நிருதி வாயுத்திப்பிய சாந்தனாகி" (தேவா.*663, 6). 2. முதல் வள்ளல்கள் எழுவருள் ஒருவன் (சூடா.); a liberal chief, one of seven *mudalvallalkal,* 3. பகல் 15 முழுத்தத்துள் (முகூர்த்தத்துள்) பன்னிரண்டாவது (விதான.குணாகுண.73, உரை); the 12th of 15 divisions of day-time.

[Skt. nirrti > த. நிருதி.]

நிருதி[2] *niruti,* பெ.(n.) அரக்கி; raksasa woman. *"நிருதி கூறும்" (கம்பரா. சூர்ப்பணகை.138).*

[Skt. nirrti > த. நிருதி.]

நிருதிதா *nirutitā,* பெ.(n.) கோடாசூரி என்னும் செய்ந்நஞ்சு; a virulent mineral poision (சா.அக.).

நிருதிரம் *nirutiram,* பெ.(n.) குரத்தம் அதாவது அரத்தமின்மை; bloodless ness-anemia (சா.அக.).

[Skt. nir-rudhira > த. நிருதிரம்.]

நிருதூளி *nirutūḷi,* பெ.(n.) தூசி (யாழ்.அக.); dust.

[Skt. nir > த. நிரு+தூளி.]

நிருதிதிசை *nirutitišai,* பெ.(n.) (நிருதியின் திசை) தென்மேற்றிசை; the s.w.quarter, as that of niruti.

[Skt. nirrti > த. நிருதி+திசை.]

நிருதிபாசம் *niruti-pāšam,* பெ.(n.) கடற்பாசி (மலை.); seaweed.

நிருநாசம் *nirunāšam,* பெ.(n.) அழிவின்மை (யாழ்.அக.); indestructibility.

[Skt. nir-nāša > த. நிருநாசம்.]

நிருநாசன் *nirunāšaṉ,* பெ.(n.) (அழிவற்றவன்) கடவுள் (யாழ்.அக.); God, as indestructible.

[Skt. nir-nāša > த. நிருநாசன்.]

நிருநாமன் *niru-nāmaṉ,* பெ.(n.) கடவுள் (யாழ்.அக.); the supreme being, as nameless.

[Skt. nir-nāman > த. நிருநாமன்.]

நிருபச்சம்படம் *nirupa-c-campaḍam,* பெ.(n.) அரசர் ஆணைகளைக் கொண்டு வருவோனுக்குரிய கூலி (M.E.R.1921-22, P.109); pay of the messenger carrying royal orders.

[Skt. nirūpam > த. நிருப+சம்படம்.]

நிருபசரிதம் *nirupasaridam,* பெ.(n.) மதிப்புரவாக (உபசாரமாக) ஏற்றிக் கூறப்படாதது; that which is not complimentary, secondary or figurative. *"சிவசத்திகட்குப் பிரிப்பில்லாவந்தரங்கவா நந்தியம் இயற்கையாகம் நிருபசரிதமாயும்" (சி.சி.1, 68, ஞானப்.).*

[Skt. nir-upacarita > த. நிருபசரிதம்.]

நிருபத்திரவம் *nirupattiravam,* பெ.(n.) தொல்லையில்லாத தன்மை (யாழ்.அக.); freedom from trouble, calamity or danger.

[Skt. nir-upodrava > த. நிருபத்திரவம்.]

நிருபத்திரன் *nirubattiraṉ,* பெ.(n.) நுண்ணுடம்புடன் (சூக்குமசரீரத்துடன்) இருக்கும் ஆதன் (ஆன்மா) (யாழ்.அக.); soul having a subtle body.

[Skt. nir-upadrava > த. நிருபத்திரன்.]

நிருபதி *nirupati,* பெ.(n.) 1. அரசன் (வின்.); king, sovereign. 2. குபேரன் (யாழ்.அக.); *Kubēra.*

[Skt. nr-pati > த. நிருபதி.]

நிருபதுங்கராகம் *nirupatuṅka-rāgam,* பெ.(n.) பெரும்பண் வகை (பிங்.); (mus.) a primary melody-type.

[Skt. nrpa-tuṅga-rāga > த. நிருபதுங்க ராகம்.]

நிருபம் *nirupam,* பெ.(n.) 1. எழுதியனுப்புங் கட்டளை; letter of authority; epistle from a king or other superior; mandate; order. *"நாயனார் கோயில் தானத்தார்க்கு நிருபம்" (S.I.I.i, 120, 123).* 2. மடல் (யாழ்.அக.); note, letter. 3. தீர்மானம் (வின்.); decree.

[Skt.. nirūpa > த., ம. நிருபம்.]

நிருபமம் *nirupamam,* பெ.(n.) ஒப்பின்மை; state of being unequalled, incomparableness.

[Skt. nir-upama > த. நிருபமம்.]

நிருபமன் *nirupamaṉ,* பெ.(n.) ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன்; ஒப்பில்லாதவன்; one who has no equal.

[Skt. nir-upama > த. நிருபமன்.]

நிருபவல்லவை *nirupavallavai,* பெ.(n.) அரசி (யாழ்.அக.); queen.

[Skt.nrpa+vallabhā > த. நிருபவல்லவை.]

நிருபர் *nirubar,* பெ.(n.) நாளிதழ்களுக்குச் செய்திக் குறிப்பு எழுதுவோன்; correspondent (mod.).

த.வ. செய்தியாளர்

[*Skt. nirūpa* > *த. நிருபர்.*]

நிருபன் *niruban,* பெ.(n.) 1. அரசன் (திவா.); king, sovereign. 2. ஓர் இலக்கத்திற்கு மேல் மூன்று இலக்கம் வரை வருமானமுடைய அரசன் (சுக்கிரநீதி.25); a king whose revenue is above one lakh and below 3 lakhs.

[*Skt. nr-pa* > *த. நிருபன்.*]

நிருபாதானம் *nirupādānam,* பெ.(n.) முதற்காரணமின்மை; absence of a material cause. *"சகத்து நிருபாதானமோ. சி.சி. (வரலாறு. பக்.7)" (சங்.அக.).*

[*Skt. nir-upādāna* > *த. நிருபாதானம்.*]

நிருபாதானவாதி *nirupādānavādi,* பெ.(n.) முதற்காரணத்தினின்றும் இவ்வுலகம் (பிரபஞ்சம்) தோன்றவில்லை யென்ற கொள்கை யுடையோன்; one who holds that the phenomenal world has no material cause.

[*Skt. nirupādāna-vādin>த. நிருபாதான வாதி*]

நிருபாதி¹ *nirupādi,* பெ.(n.) வருத்தம் அல்லது வலியின்மை; absence of pain or suffering (சா.அக.).

நிருபாதி² *nirupādi,* பெ.(n.) 1. தொல்லை (உபாதி)யின்மை; freedom or liberation from passions, from pain. 2. காரண மின்மை; being without a cause, absolute. 3. தடை யின்மை (யாழ்.அக.); freedom from limitations or abstacles.

[*Skt. nir-upādhi* > *த. நிருபாதி.*]

நிருபாதிகம் *nirupādigam,* பெ.(n.) துன்பம், தொல்லை (உபாதி)யில்லாமை; freedom from secularities (சா.அக.).

நிருபாதிகம் *nirupādikam,* பெ.(n.) 1. காரண மற்றது (சங்.அக.); that which is without cause. 2. தடையற்றது; that which is free from limitations.

[*Skt. rnir-upādhika* > *த. நிருபாதிகம்.*]

நிருபி-த்தல் *nirupi-,* 4 செ.குன்றாவி.(v.t.) நிரூபி பார்க்க; see *nirūbi.*

நிருமதம் *nirumadam,* பெ.(n.) 1. யானை (பிங்.); elephant. 2. மதமொழிந்த யானை (சது.); rutless elephant.

[*Skt. nir-mada* > *த. நிருமதம்.*]

நிருமலதானம் *nirumala-tānam,* பெ.(n.) அறிவாளர் (ஞானி)கட்கு உதவுங் கொடை; gifts to the wise.

[*Skt. nirmala* > *த. நிருமலதானம்.*]

நிருமலம்¹ *nirumalam,* பெ.(n.) பால் துத்தம்; white vitriol (சா.அக.).

நிருமலம்² *nirumalam,* பெ.(n.) மாசின்மை; spotlessness. *"நித்த நிருமல சகித" (தாயு.திருவருள்வி.3).*

[*Skt. nir-mala* > *த. நிருமலம்.*]

நிருமலன் *nirumalan,* பெ.(n.) 1. குற்ற மற்றவன்; spotless person, blameless one. *"நெறியிலை சாதலலாதெனக் கேட்ட நிருமல னிரங்கி" (திருவாலவா.39, 14).* 2. கடவுள்; the supreme being, as immaculate.

[*Skt. nir-mala* > *த. நிருமலன்.*]

நிருமலி *nirumali,* பெ.(n.) மலைமகள்; *Pārvati,* as immaculate... *"எண்ணான்கு நிகரிலாவற நிருமலி வளர்த்தனள் வருங்கால்" (காஞ்சிப்பு. கழுவா.87).*

[*Skt. nir-mala* > *த. நிருமலி.*]

நிருமாலியம்¹ *nirumāliyam,* பெ.(n.) பெரிய மாவிலிங்கம் (L.); sacred lingam tree.

நிருமாலியம்² *nirumāliyam,* பெ.(n.) கூவிளம்; garlic pear (சா.அக.).

நிருமாலியம்³ *nirumāliyam,* பெ.(n.) 1. இறைக்குப் படைத்து எடுத்தது (நிர்மாலியம்); offering made to an idol and removed. *"மதுகேச னருமாலிய மதேற்று" (பிரபுலிங். மாயைபூசை.58).* 2. வில்வம்; sacred bael.

[*Skt. nir-mālya* > *த. நிருமாலியம்.*]

நிருமி-த்தல் *nirumi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. படைத்தல்; to create, produce by art, form. *"வானோர் நிருமித்தனபடை" (கம்பரா.இராவணன்வதை.47).* 2. உறுதி கொள்ளுதல்; to determine. *"அசுரர்களை நீறாகும்படியாக நிருமித்து" (திவ்.திருவாய். பு.7, 1).* 3. ஏற்படுத்துதல்; to ordian, constitute. 4. ஆராய்தல் (பிங்.); to examine, investigate. 5. பொய்யாகக் கற்பித்தல்; to fabricate, concoct.

[Skt. nirmā > த. நிருமி-.]

நிருமிதம் *nirumidam,* பெ.(n.) 1. உண்டாக் கப்பட்டது; that which is created or formed. *"நினைத்திருந் தியற்றிய நிருமித மகனிவன்" (சீவக.707).* 2. பொய்யாகக் கற்பித்தது; that which is fabricated.

[Skt. nir-mita > த. நிருமிதம்.]

நிருமிதி[1] *nirumidi,* பெ.(n.) அம்மணம்; nakedness (சா.அக.).

நிருமிதி[2] *nirumidi,* பெ.(n.) படைப்பு; creation. *"இலதுகாத்தல் நிருமிதி யிச்சை செய்தி நிழனட மாகுமன்றே" (கோயிற்பு.பதஞ்.66).*

[Skt. nir-mita > த. நிருமிதி.]

நிருமூடம் *nirumūḍam,* பெ.(n.) முழுதும் அறிவின்மை; utter ignorance.

[Skt. nir-mūḍha > த. நிருமூடம்.]

நிருமூடன் *niru-mūḍan,* பெ.(n.) முழுதும் அறிவற்றவன்; man of utter ignorance.

[Skt. nir-mūḍha > த. நிருமூடன்.]

நிருமூடி *nirumūḍi,* பெ.(n.) 1. முழுதும் அறிவற்றவள்; an utterly ignorant woman. 2. உதவுங் குணமில்லாதவள் (இ.வ.); miserly woman.

[Skt. nir-mūḍha > த. நிருமூடி.]

நிருமூலம் *nirumūlam,* பெ.(n.) **நிர்மூலம்** (யாழ்.அக.) பார்க்க; see *nirmūlam.*

நிருமூலி *nirumūli,* பெ.(n.) **நிர்மூலி** பார்க்க; see *nirmūli.* (சா.அக.).

நிருமூளி *nirumūḷi,* பெ.(n.) **நிருமூடி, 2** பார்க்க; see *nirumūḍi.*

நிருவகம் *niruvagam,* பெ.(n.) **நிருவாகம்** (யாழ்.அக.) பார்க்க; see *niruvāgam.*

நிருவகி-த்தல் *niruvagi-,* 4 செ.குன்றாவி. (v.t.) **நிர்வகி-** (வின்.) பார்க்க; see *nirvagi.*

நிருவசனம் *niruvaśaṉam,* பெ.(n.) **நிருத்தி** (பி.வி.50, உரை) பார்க்க; see *nirutti.*

[Skt. nir-vacana > த. நிருவசனம்.]

நிருவாககன் *niruvāgagaṉ,* பெ.(n.) **நிர்வாகி** பார்க்க; see *nirvāki.*

[Skt. nir-vāhaka > த. நிருவாககன்.]

நிருவாகசபை *niruvāga-śabai,* பெ.(n.) **நிர்வாகசபை** பார்க்க; see *nirvāgaśabai.*

[Skt. nir-vāhaka > த. நிருவாகம்+சபை.]

நிருவாகம் *niruvāgam,* பெ.(n.) **நிர்வாகம்** பார்க்க (வின்.); see *nirvāgam.*

நிருவாகன் *niruvāgaṉ,* பெ.(n.) **நிர்வாகி** பார்க்க; see *nirvāgi.*

[Skt. nir-vāhaka > த. நிருவாகன்.]

நிருவாகி *niruvāgi,* பெ.(n.) **நிர்வாகி** (வின்.) பார்க்க; see *nirvāgi.*

நிருவாசம் *niruvāśam,* பெ.(n.) குடியின்மை (யாழ்.அக.); the state of being uninhabited.

[Skt. nir-vāsa > த. நிருவாசம்.]

நிருவாணதீட்சை *niruvāṇa-tīṭcai,* பெ.(n.) சிவதீக்கை மூன்றில் ஒன்று; the last of three introducing rites & ceremony of initiation by a spiritual Guru according to Saiva system (சா.அக.).

நிருவாணதீக்கை *niruvāṇa-tīkkai,* பெ.(n.) **நிருவாணதீட்சை** (சி.போ.பா.சிறப்.) பார்க்க; see *nirvāṇa-tīṭcai.*

[Skt. nirvāṇa+dīkṣa > த. நிர்வாணதீக்கை.]

நிருவாணம் *niruvāṇam,* பெ.(n.) 1. **நிர்வாணம், 1** பார்க்க; see *nirvāṇam.* *"நித்திரை தெளியுமாபோல நிருவாண நிலைமெய்யாமே" (கைவல்.தத்வ.56).* 2. **நிர்வாணதீட்சை** பார்க்க; see *nirvāṇa-tīṭcai. "தரித்துச்சமய விசேட நிருவாணம்" (சைவச.மாணாக்.29).* 3. நூற்றெட்டு துணைத் தொன்மங்களுளொன்று; an upanisad, one of 108.

[Skt. nirvāṇa > த. நிருவாணம்.]

நிருவாணி *niruvāṇi,* பெ.(n.) 1. ஆற்றல் (சக்தி); the universal energy represented in the form of a naked woman. 2. பெண் தெய்வ பத்து ஆற்றல்களுளொன்று (தேவிதச வித்தை களிலொன்று); one of the ten active powers of the female energy or deity (சா.அக.).

நிருவிகற்பசமாதி[1] *niruvigaṟpasamādi,* பெ.(n.) **நிர்விகற்பசமாதி** பார்க்க; see *nirvigaṟpa-šamāti.*

நிருவிகற்பசமாதி[2] *niruvigaṟpasamādi,* பெ.(n.) சவ்விகற்ப சமாதி முற்றி அருளம்மை யால் அறிவிக்கப்பட்ட அருளாளன் ஆகிய அப்பனை அறிந்த ஞான்றே சிவதத்துவங் களும் அவற்றின் செயற்கைகளும் நன்கு விளங்கப் பெற்று. அந்தப் பரம்பொருளைக் கூடி நின்று விட்டுப் பிரியாது மகிழ்வது; a state of ecstacy which one obtains wisdom by the grace of the diety and enjoys the bliss by the union with the almighty (சா.அக.).

நிருவிகற்பசமாதி[3] *niruvigaṟpasamādi,* பெ.(n.) தன்னை மறந்து தூக்கமுறும், மயக்கம் போல பிறர் சத்தம் காதிற் கேளாது ஐம்புலனும் ஒடுங்கி, சித்தமானது பூரணத்தில் இலயித் திருக்கும் ஓர் ஒக நிலை, விவகாரத்தாலே உலகமே பொய்யென்று உணர்ந்து உலக பாசத்தைத் தள்ளி நிற்பதினால் அடையும் மெய்யுணர்வு (சைதன்ய) நிலை; that state of perfect and spiritual ecstacy experienced by a sitting yogi, in which he remains in audible to the surrounding disturbances being absorbed in eternal bliss. Saitanyam is a stage where nothing exists but the transformation of mental consciousness in the form of Atman (soul). It is an abstract meditation (சா.அக.).

நிருவிக்கினம் *niruvikkiṉam,* பெ.(n.) இடையூ றின்மை; absence of obstacles.

[Skt. nir-vighna > த. நிருவிக்கினம்.]

நிருவிகற்பநிட்டை *niruvigaṟpa-niṭṭai,* பெ.(n.) **நிர்விகற்பசமாதி** பார்க்க; see *nirvigaṟpa-samāti. "நிருவிகற்ப நிட்டை நிலையென்று வருமோ வறியேனே" (தாயு.உடல்பொய்.32).*

நிருவிகற்பம் *niruvigaṟpam,* பெ.(n.) 1. **நிர்விகற்பக்காட்சி** (சி.சி.11, சிவாக்.) பார்க்க; see *nirvigaṟpa-k-kāṭci.* 2. **நிர்விகற்ப சமாதி** பார்க்க; see *nirvigaṟpasamāti. "விரைந்தே நிருவிகற்ப மெய்த" (தாயு. உடல்பொய்.39).*

[Skt. nir-vikarpa > த. நிருவிகற்பம்.]

நிருவிகற்பமாதல் *niruvigaṟpamādal,* பெ.(n.) விவகாரத்தாலே உலகமே பொய் யென்று தனக்குள் நினைத்து உலக பாசத்தைத் தள்ளி மெய்யுணர்வு (சைதன்ய) நிலையை அடைதல்; that state of insensibility to one's own surroundings, arrived at by a practising yogi by renunciation being appraised of the supreme knowledge that the material world is false. This stage can only be acquired by those who attain super natural illumination without the aid of physical or mental organs (சா.அக.).

நிருவிகற்பவாழ்க்கை *niruvigaṟpa-vāḻkkai,* பெ.(n.) பேசாதிருத்தல்; to remain silent (சா.அக.).

நிருவிசாரம் *niruviśāram,* பெ.(n.) கவலை யின்மை; absence of anxiety.

[Skt. nir-vicāra > த. நிருவிசாரம்.]

நிருவிடம் *niruviḍam,* பெ.(n.) மருந்துவகை (யாழ்.அக.); a kind of medicine.

[Skt. nir-visa > த. நிருவிடம்.]

நிருவிடயானந்தம் *niruviḍayāṉantam,* பெ.(n.) புலனுணர்ச்சிக்கு எட்டாத களிப்பு; supreme bliss, not enjoyed by the sense. *"கூடார் நிருவிடயானந்தசுக நீங்காத நோக்கும்" (ஒழிவி.அவத்தை.39).*

[Skt. nir-visaya+ā-nanda > த. நிருவிட யானந்தம்.]

நிருவேதுகம் *niruvēdugam,* பெ.(n.) **நிரேதுகம்** (சிசி.8, 2, சிவாக்.); see *nirētugam.*

[Skt. nir-hētuka > த. நிருவேதுகம்.]

நிரூகம்[1] *nirūgam,* பெ.(n.) மலங் கழிவதற்காக குதவாயில் உள்ளே வைக்கப்படும் ஒரு பொறி; a purging clyster, an enema not of an oil kind (சா.அக.).

நிரூகம்[2] *nirūgam,* பெ.(n.) 1. உறுதி (யாழ்.அக.); certainty. 2. சொற்போர்; logic, disputation. 3. வெளிப்படைச் சொல்; explicit-term.

[Skt. nir-ūha > த. நிரூகம்.]

நிரூகணம் *nirūgaṇam,* பெ.(n.) எருவாய் வழியாக வழலை நீர் ஏற்றி மலங்கழிக்கும்படிச் செய்தல்; causing to purge with the aid of a clyster (சா.அக.).

நிரூகவத்தி *nirūga-vatti,* பெ.(n.) வடிநீர் முதலியவற்றை எருவாய் வழியாய் உள்ளுக்குச் செலுத்திக் குடலைக் கழுவல்; a liquid form of medicine as decoction etc. thrown into the rectum by a clyster (சா.அக.).

நிரூடபசுபந்தம் *nirūḍapaśubandam,* பெ.(n.) வேள்வி வகையுளொன்று (வின்.); a kind of sacrifice.

[Skt. nirūḍha-paśu-bandha > த. நிரூடபசு பந்தம்.]

நிரூடி *nirūḍi,* பெ.(n.) 1. நெட்டுரு; rote. 2. தெளிவு; clearness, certainty.

[Skt. nirūḍhi > த. நிரூடி.]

நிரூபணம்[1] *nirūbaṇam,* பெ.(n.) இசைப்பாட்டு வகையான வரலாற்று நூலின் முதலில் அவ் வரலாற்றைச் சுருக்கிக்கூறும் பகுதி (கோபால கிருஷ்ண பாரதி, 39); section containing the argument of a story, in musical composition.

[Skt. nirūpaṇa > த. நிரூபணம்.]

நிரூபணம்[2] *nirūbaṇam,* பெ.(n.) மெய்ப்பித்தல்; to prove (சா.அக.).

நிரூபணம்[3] *nirūbaṇam,* பெ.(n.) 1. ஆராய்ச்சி; investigation. 2. செயல்முறை விளக்கம்; demonstration. *"சிவாபாவநா நிரூபணம்" (சி.சி.6, 7, சிவாக்.).*

[Skt. ni-rūpaṇa > த. நிரூபணம்.]

நிரூபம் *nirūbam,* பெ.(n.) உருவில்லாமை; shapelessness (சா.அக.).

நிரூபன் *nirūbaṉ,* பெ.(n.) (உருவமற்றவன்) கடவுள் (யாழ்.அக.); god, as formless.

[Skt. ni-rūpa > த. நிரூபன்.]

நிரூபாவர்த்தம் *nirūpāvarttam,* பெ.(n.) உயர் மணி வகை (யாழ்.அக.); a kind of gem.

நிரூபி-த்தல் *nirūbi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. மெய்ப்பித்தல்; to prove, demonstrate. 2. ஆராய்தல் (வின்.); to examine, investigate, search.

[Skt. ni-rūp > த. நிரூபி-.]

நிரூபிதம் *nirūpidam,* பெ.(n.) உறுதிப்படுத்தப் பட்டது; that which has been ascertained or proved. *"நிரூபிதமான வஸ்துவை நானறிந்தேன்" (சி.சி.பு., 5, சிவாக்.).*

[Skt. ni-rūpita > த. நிரூபிதம்.]

நிரேசுவரசாங்கியம் *nirēśuvaraśāṅgiyam,* பெ.(n.) **நிரீச்சுவரசாங்கியம்** (யாழ்.அக.); see *niriccuvaraśāṅgiyam.*

நிரேதுகம் *nirētugam,* பெ.(n.) ஏதுவற்றது; that which is causless. *"ஜகத்து நிரேதுகமென்றது தள்ளப்பட்டது" (சி.சி.1, 1, சிவாக்.).*

[Skt. nir-hētuka > த. நிரேதுகம்.]

நிரோகி *nirōgi,* பெ.(n.) நோயில்லாதவன்; one free from disease, healthy man (சா.அக.).

நிரோசாதம் *nirōšādam,* பெ.(n.) **நிரோதி** பார்க்க; see *nirōdi. "விரற்புகை நிரோசாதம்" (தத்துவப்.140).*

[Skt. nirōdhana > த. நிரோசாதம்.]

நிரோட்டகம் *nirōṭṭagam,* பெ.(n.) இதழியைந்து பிறவா எழுத்துகளால் ஆகிய செய்யுள் – திருச்செந்தில் நிரோட்டகயமக வந்தாதி; a kind of verse without labial or labiodentals.

த.வ. இதழகல்பா

[Skt. nir-ōsthyaka > த. நிரோட்டகம்.]

நிரோட்டம் *nirōṭṭam,* பெ.(n.) **நிரோட்டகம்** பார்க்க; see *nirōṭṭagam.*

[Skt. nir-ōsdhya > த. நிரோட்டம்.]

நிரோட்டி *nirōṭṭi,* பெ.(n.) நிரோட்டகம் (யாப்.வி.510) (pros.); poem composed without using the labials.

[Skt. nir-ōsdha > த. நிரோட்டி.]

நிரோட்டியம் *nirōṭṭiyam,* பெ.(n.) **நிரோட்டகம்** பார்க்க; see *nirōṭṭagam. "இதழ் குவிந்தியையா தியல்வது நிரோட்டியம்" (மாறனலங்.274).*

[Skt. nir-ōsdhya > த. நிரோட்டியம்.]

நிரோட்டியவோட்டியம் *nirōṭṭiya-v-ōṭṭiyam,* பெ.(n.) செய்யுளின் முற்பாதி நிரோட்டியம் பிற்பாதி ஒட்டியமுமாகப் பாடும் பா (கவி) (மாறனலங்.276, உரை); a stanza in which the first half is *nirōṭṭiyam*and the second half *ōṭṭiyam.*

[Skt. nir-ōsdhya > த. நிரோட்டிய வோட்டியம்.]

நிரோதகரணி *nirōdakaraṇi,* பெ.(n.) மின்சார சத்தியைத் தடுக்கும் பொருள்; a substance which does not transmit electricity (சா.அக.).

நிரோதம்[1] *nirōdam,* பெ.(n.) 1. தடை; impediment, pediment, hindrance. 2. அடக்கம்; restraint, control.

[Skt. ni-rōdha > த. நிரோதம்.]

நிரோதம்[2] *nirōdam,* பெ.(n.) சுருக்கம்; stricture (சா.அக.).

நிரோதனை *nirōdaṉai,* பெ.(n.) புலனடக்கம்; (Jaina.) control over the passions. *"வீரனிரோதனை யம்பிற் கொன்றான்" (சீவக.3080).*

[Skt. ni-rōdhanā > த. நிரோதனை.]

நிரோதானமுத்திரை *nirōdāṉa-muttirai,* பெ.(n.) சிறுவிரலை நீக்கி ஏனைய விரல்களை நுனிகள் பொருந்தச் சேர்த்துக் குவிக்கும் முத்திரை வகை (சைவாநுட்.வி.17); (*Śaiva*) a handpose which consists in bringing the thumb and the fingers other than the little finger together.

[Skt. nirōdāna > த. நிரோதான+முத்திரை.]

நிரோதி *nirōdi,* பெ.(n.) உடம்பிலுள்ள 16 வகையான மந்திர நிலைகளுள் (சோட கலையுள்) ஒன்று; (Saiva.) one of the 16 mystic centres in the body in which Sakti manifests herself. *"சந்திரன்மேல் நிரோதிநாதம்" (செந்., 9, 248).*

[Skt. ni-rōdhin > த. நிரோதி.]

நிரோதினி *nirōdiṉi,* பெ.(n.) **நிரோதி** பார்க்க (தத்துவப்.130, உரை); see *nirōti.*

[Skt. ni-rōdhini > த. நிரோதினி.]

நிலிகாவியங்கம் *nilikāviyaṅgam,* பெ.(n.) முகத்திற்காணும் ஒருவகைப் பரு; a variety of mole (சா.அக.).

நிலிஞ்சிகை *niliñjigai,* பெ.(n.) ஆன்; cow (சா.அக.).

நிலிநாதியம் *nilinādiyam,* பெ.(n.) பாண்டு நோய்க்குக் கொடுக்கும் ஒருவகை மருந்துப் பொடி; medicinal powder for dropsy (சா.அக.).

நிவகம் *nivagam,* பெ.(n.) கூட்டம் (உரி.நி.); company, multitude, assembly, flock.

[Skt. ni-vaha > த. நிவகம்.]

நிவசதி¹ *nivašati,* பெ.(n.) வீடு (சங்.அக.); house, abode.

[Skt. ni-vasati > த. நிவசதி.]

நிவசதி² *nivašati,* பெ.(n.) ஒருவகைப் பூண்டு; an unknown plant (சா.அக.).

நிவசனம்¹ *nivašaṉam,* பெ.(n.) ஆடை (சங்.அக.); clothes.

[Skt. ni-vasana > த. நிவசனம்.]

நிவசனம்² *nivašaṉam,* பெ.(n.) 1. சீலை; cloth. 2. சீலைத்துண்டு; piece of cloth (சா.அக.).

நிவசி-த்தல் *nivaši-,* 4 செ.குன்றாவி.(v.t.) குடியிருத்தல் (ஜீவப்பிரம்மைக்ய. பக்.640); to dwell.

[Skt. ni-vas > த. நிவசி-.]

நிவந்தக்காரர் *nivanda-k-kārar,* பெ.(n.) கோயில்தொண்டு செய்வோர்; temple servants. *"பலபணி நிவந்தக்காரர்க்கும்" (S.I.I.(iii), 137).*

(நிவந்தம் + காரர்.)

[Skt. ni-bandha > த. நிவந்தம்+காரர்.]

நிவந்தம் *nivandam,* பெ.(n.) 1. கட்டுப்பாடு (நிபந்தனை); condition, agreement. 2. வேலைத்திட்டம்; allotted duties, as of servants. *"பலபணி நிவந்தக்காரர்க்கு நிவந்தஞ் செய்தபடி" (S.I.I.(iii), 137).* 3. கோயிற்செலவு; temple expenses. *"மஹா தேவர்க்கு வேண்டும் நிவந்தங்களுக்கு" (S.I.I. (iii), 25).* 4. கோயிற்றொண்டு நிவந்தக்காரர்; temple service. 5. கடவுளை வழிபடும் இடம்; place of worship. *"புனைமணி நிவந்தம்" (உபதேசகா.திவபிரத.223).* 6. தொகுப்பு நூல்; compilation, compendium.

[Skt. ni-bandha > த. நிவந்தம்.]

நிவர்த்தாளம் *nivarttāḷam,* பெ.(n.) ஒன்பான் தாளத்தொன்று (பரத.தாள.6) (Mus.); a variety of time-measure, one of *nava-tāḷam.*

[Skt. nivartta+ > த. நிவர்+தாளம்.]

நிவர்த்தனம் *nivarttaṉam,* பெ.(n.) 1. திரும்புகை; returning, turning back. 2. போக்குகை; removing curing. 3. 25 கோலேனும் 100 அல்லது 125 முழமேனும் கொண்டதோரளவு (சுக்கிரநீதி, 28); a lineal measure of 25 *kōl,* 100 or 125 cubits.

[Skt. ni-vart-tana > த. நிவர்த்தனம்.]

நிவர்த்தி¹ *nivartti,* பெ.(n.) **நிவிர்த்தி** பார்க்க; see *nivirtti.*

[Skt. ni-vrtti > த. நிவர்த்தி.]

நிவர்த்தி² *nivartti,* பெ.(n.) 1. விடுதலை; release. *"பந்தத்தினின்றும் நிவிர்த்திபெற்ற ஆன்மாக்கள்" (சி.போ.பா.பக்.143, புதுப்.).* 2. **நிவாரணம், 3** பார்க்க; see *nivāraṇam.* 3. துறவு (பிங்.); renunciation of the world, opp. to piravirtti. *"பரிபக்குவர் நிட்டை நிவர்த்தியினில்" (திருப்பு.310).* 4. **நிவர்த்திக் கலை** பார்க்க; see *nivartti-k-kalai* (சி.சி.2, 74, ஞானப்.). 5. போக்கு; remedy. *அப்படிச் செய்யாமல் வேறு நிவர்த்தி இல்லை.*

[Skt. ni-vrtti > த. நிவர்த்தி.]

நிவர்த்திகலை *nivartti-kalai,* பெ.(n.) ஐந்து (பஞ்ச) கலையுள் ஆதன்களைப் பாசத் தினின்றும் விடுவிப்பதாகிய கலை (சி.போ. பா.2, 2, பக்.143, புதுப்.); (*šaiva.*) sphere of action for the energy of Šivaṉ which emancipates the soul from bondage, one of *pañca-kalai.*

[**Skt.** *ni-vrtti > த. நிவர்த்தி+கலை.]*

நிவர்தல் *nivartal,* பெ.(n.) ஓங்குதல்; growing high (சா.அக.).

நிவரை *nivarai,* பெ.(n.) கன்னி (யாழ்.அக.); a maiden.

[**Skt.** *ni-varā > த. நிவரை.]*

நிவலம் *nivalam,* பெ.(n.) அவுபல பாடாணம் என்னும் ஒருவகைச் செய்ந்நஞ்சு; the 32 kinds of native arsenic (சா.அக.).

நிவாசம் *nivāšam,* பெ.(n.) தெய்வம் அல்லது பெரியோர்கள் வாழிடம் (வின்.); abode, habitation, as a deity or a great person.

[**Skt.** *ni-vāsa > த. நிவாசம்.]*

நிவாபம் *nivābam,* பெ.(n.) தென்புலத் தார்க்குச் (பிதிர்க்களுக்குச்) செய்யுந் தருப்பணம் (யாழ்.அக.); obalation of water to the manes.

[**Skt.** *ni-vāpa > த. நிவாபம்.]*

நிவாரணம் *nivāraṇam,* பெ.(n.) 1. தடுக்கை; preventing; hindering. 2. தடை; prohibition; impediment. 3. ஒழிப்பு; abolition; removal; expiation; termination; extinction. 4. (அதிட்ட நிவாரணம், உரோகநிவாரணம், கன்மநிவாரணம், சனிம நிவாரணம், பாவ நிவாரணம், கடனிவாரணம் என்ற) அறுவகைப்பட்ட துன்ப நீக்கம்; extinction of evil, of six kinds, viz., *arista-nivāraṇam, urōka-nivāraṇam, kaṉma-nivāraṇam, caṉma-nivāraṇam, pāva-nivāraṇam, kaḍanivāraṇam.*

த.வ. தணிப்பு, நீக்கம்

[**Skt.** *ni-vārana > த. நிவாரணம்.]*

நிவாரணி *nivāraṇi,* பெ.(n.) நோயைக் குணப்படுத்தும் மருந்து; curative agents or medicines (சா.அக.).

நிவாரம்[1] *nivāram,* பெ.(n.) தடை (w.); impediment.

[**Skt.** *ni-vāra > த. நிவாரம்.]*

நிவாரம்[2] *nivāram,* பெ.(n.) காட்டுநெல்; wild paddy (சா.அக.).

நிவாரி *nivāri,* பெ.(n.) 1. **நிவாரணி** பார்க்க; see *nivāraṇi.* 2. காட்டுநெல்; wild paddy. 3. காட்டரிசி; wild rice. 4. மலைநெல்; mountain paddy (சா.அக.).

நிவிசிந்தா *nivisintā,* பெ.(n.) கணக்கு முதலியன பார்க்கும் கணக்காளர் (C.G.); accountant, clerk.

[**U.** *nawisindah > த. நிவிசிந்தா.]*

நிவிர்த்தன் *nivittaṉ,* பெ.(n.) உலக ஆசை களை–ஆசைத் தளைகளை அறுத்தவனாகிய துறவி; ascetic free from bondage of life (சா.அக.).

நிவிர்த்தி *nivirtti,* பெ.(n.) 1. துறவு; renunication. 3. அசையாநிலை; cessation of action or motion (சா.அக.).

நிவிருத்தப்பிரசவம் *nivirutta-p-pirasavam,* பெ.(n.) மகப்பேற்றிற்குப் பிறகு ஐந்து ஆண்டிற்கு மேலாகும் வரையில் மகப்பேறு இல்லாதிருத்தல்; a woman in whom conception does not occur for a period

more than five years after a previous child birth (சா.அக.).

நிவிருத்தி *nivirutti,* பெ.(n.) 1. பிறப்பறல்; release from transmigration. 2. ஆதன் (ஆன்மா) கதி பெறல்; final emancipation of the soul. 3. குணமாதல்; cure. 4. ஒழிவு; extinction or cessation. 5. ஒன்றுதல்; dissolution. (சா.அக.).

நிவிருத்திமார்க்கம் *nivirutti-mārkkam,* பெ.(n.) துறவுநெறி; the path of renunciation.

[Skt. nivrtti > த. நிவிருத்திமார்க்கம்.]

நிவேசம் *nivēšam,* பெ.(n.) 1. உடம்பில் ஊசியேற்றல், என்னும் நேர்த்திக் கடன் (in Religion) hook swing in satisfaction of a vow. 2. நோய்க் குணமாக வேண்டி உடம்பில் மருந்தை ஊசியால் குத்திச் செலுத்துதல்; the act of throwing of a liquid medicine into the body through a needle injection. 3. உடம்பில் ஊசியைச் செலுத்துதல்; insertion of a needle into the body for any purpose inoculation (சா.அக.).

நிவேசனம் *nivēšaṉam,* பெ.(n.) 1. இடம்; place; site. 2. வீடு (தைலவ.தைல.); house, dwelling. 3. ஊர் (சூடா.); town, city. 4. 2400 சதுர அடி கொண்ட மனையளவு (வின்.); a ground, a piece of land measuring 2,400 sq.ft.

த.வ. மனை

[Skt. ni-vēšana > த. நிவேசனம்.]

நிவேத்தியம் *nivēttiyam,* பெ.(n.) **நிவேதனம்** பார்க்க (பிங்.); see *nivētaṉam.*

[Skt. naivēdya > த. நிவேத்தியம்.]

நிவேதனஞ்செய்-தல் *nivēdaṉañ-cey-,* பெ.(n.) **நிவேதி** பார்க்க; see *nivēthi.*

[Skt.ni-vēdana>த. நிவேதனஞ்செய்-தல்.]

நிவேதனப்பாவாடை *nivēdaṉa-p-pāvāḍai,* பெ.(n.) கடவுளுக்கு இடும் பெரும்படையல்; food-offerings on a large scale, made to a deity, (Loc.).

[Skt. nivētaṉam > த. நிவேதனம்+ பாவாடை.]

நிவேதனம் *nivēdaṉam,* பெ.(n.) 1. ஒப்புவிக்கை; offerings, dedicating. 2. கடவுளுக்குப் படைக்கும் அமுது; offering of rice, etc, made to a deity. *"நிவேதனஞ் செய்தான்" (சேதுபு.சங்கர.85).*

[Skt. ni-vēdana > த. நிவேதனம்.]

நிவேதி-த்தல் *nivēdi-,* 4 செ.குன்றாவி.(v.t.) படையல் படைத்தல்; to dedicate, offer to a deity, as food.

[Skt. ni-vid > த. நிவேதி-த்தல்.]

நின்மலசாக்கிரம் *niṉmala-šākkiram,* பெ.(n.) சிவபெருமானது அருளால் சத்தாதி விசயங்களைச் சிவாகாரமாகவும், விசயசுகங்களைச் சிவானந்தமாகவும் அனுபவிக்கும் சுத்தாவத்தைவகை (சி.சி.4, 34, சிவாக்.); (šaiva) a condition of the soul in its uplifted state when it realises, with the help of the divine grace, Siva's manifestations in all external objects and Siva's Bliss in all the pleasures he enjoys, one of five *cuttāvattai.*

[Skt. nir-mala > த. நின்மலசாக்கிரம்.]

நின்மலசுழுத்தி *niṉmala-šuḻutti,* பெ.(n.) ஆன்மா ஞாதுரு, ஞானம், ஞேயம் என்ற வேறுபட்ட அறிவுடன் அருண்மயமாகிச் சுகத்தையனுபவிக்கும் சுத்தாவத்தை வகை (சி.சி.பு.34, சிவாக்.); (šaiva.) a condition of the soul in its uplifted state when it becomes one with the divine grace, and is concious of the distinction of *ñātura, ñāṉam* and *ñēyam,* one of five *cuttāvattai* q.v.

[Skt. nir-mala > த. நின்மலசுழுத்தி.]

நின்மலசொப்பனம் *ninmala-šoppanam,* பெ.(n.) ஆதன் (ஆன்மா) அருளிடத்தே நின்று அதனையுணரும் சுத்தாவத்தை வகை (சி.சி.பு.34, சிவாக்.) *(šaiva.);* a condition of the sould in its uplifted state when it gets a vision of the Divine Grace, one of five *cuttāvattai*, q.v.

[Skt. nir-mala > த. நின்மலசொப்பனம்.]

நின்மலதுரியம் *ninmala-turiyam,* பெ.(n.) ஆதனின் (ஆன்மாவின்) மலங்கழல அதற்கு ஆனந்தவொளி தோன்றுதலாகிய சுத்தா வத்தை வகை (சி.சி.பு.34, சிவாக்.); (*šaiva.*)a condition of the soul in its uplifted state when its impurities are all gone and there is the appearance of the "Light of Bliss", one of five *šuttāvattai.*

[Skt. nir-mala > த. நின்மலதுரியம்.]

நின்மலதுரியாதீதம் *ninmalaturiyātītam,* பெ.(n.) பொருள் – பொருள் நாட்டம் (ஞாதுரு ஞேயம்) என்ற வேறுபாடற்று (ஆன்மா) ஆதன் ஆனந்த மயமாகி விளங்கும் சுத்தாவத்தை வகை (சி.சி.பு.34, சிவாக்.); (*šaiva.*) a condition of the soul in its uplifted state when it is steeped in bliss and when the subject - object relationship vanishes completely, one of five *šuttāvattai.*

[Skt. nir-mala > த. நின்மலதுரியாதீதம்.]

நின்மலம் *ninmalam,* பெ.(n.) மாசின்மை; purity.

[Skt. nir-mala > த. நின்மலம்.]

நின்மலரசம் *ninmala-rašam,* பெ.(n.) பத்து வகை சாற்றுச் சத்துக்களில் ஒன்று (இது சாரணைக்குதவும். இதை 201 தரம் சாரணைத் தீர்த்தால் (ககனம்) வான்வழியே பாயலாம் எனக் கருதப்படுவது; (in Alchemy) one of the ten kinds by which mercury is animated. if this process is continued to 201 times. it will enable one to travel in the aerial regions and round the planets (சா.அக.).

(நின்மலம் + ரசம்.)

நின்மலன் *ninmalan,* பெ.(n.) 1. அழுக்கற்ற வனாகிய கடவுள்; God, as immaculate. *"நின்மலா போற்றி போற்றி" (திருவாச.5, 61).* 2. அருகன் (சூடா.); arhat.

[Skt. nir-mala > த. நின்மலன்.]

நின்மலாவத்தை *ninmalāvattai,* பெ.(n.) சாக்கிர முதலாயுள்ள ஐந்து வகையான உயிர் நிலைத் தொல்லைகளை நீக்குவதற்காக அடையும் நிலைகள்; (in philosophy) the physical and intellectual state attained by a practising yogi in each of the five stages when reaching the respective five stations of the soul with a view to seek deliverance from malam. They are five fold viz. 2. நின்மலசாக்கிரம்; soul coming to a full vision. 3. நின்மலசொற்பனம்; sould being affected by dream. 3. நின்மலசுழுத்தி; insensibility to sinful disires. 4. நின்மல துரியம்; reaching the regions of happiness. 5. நின்மலதுரியாதீதம்; enjoying transcendental bliss which is the highest state of the soul free from all corporal entanglements (சா.அக.).

(நின்மலம் + அவஸ்தை.)

நின்மலி *ninmali,* பெ.(n.) வில்வம் (நாமதீப.289); sacred bael.

[Perh. nir-mala > த. நின்மலி.]

நின்மாலியம் *ninmāliyam,* பெ.(n.) **நிர்மாலியம்** பார்க்க; see *nirmāliyam.* *"எந்தை நின்மாலியங் கவர்ந்தனன்" (காசிக.சிவ.வாயு.38).*

[Skt. nir-malya > த. நின்மாலியம்.]

நின்மிதம் *ninmitam,* பெ.(n.) **நிருமிதம்** (நாமதீப.691) பார்க்க; see *nirumidam.*

நின்மிதி *ninmidi,* பெ.(n.) 1. உண்டாக்குகை; formation, creation, making. 2. தொடக்கம்; beginning. *"நின்மிதி யின்றி யூர்பாடின்று" (மணிமே.30, 37).*

[Skt. nir-miti > த. நின்மிதி.]

நின்மூடன் *ninmūḍan,* பெ.(n.) முழுமூடன்; absolute fool. *"நிலமத்தனை பொன்னை நின்மூடர்க் கீந்தால்" (திருமந்.501).*

[Skt. nir-mudha > த. நின்மூடன்.]

நின்னாமன் *ninnāman,* பெ.(n.) 1. பெயரில் லாதவன், அருகன் (சூடா.); arhat, as nameless. 2. சிவன் (நாமதீப.16); *Śiva.*

[Skt. nir-nāmam > த. நின்னாமன்.]

நினாதம் *ninādam,* பெ.(n.) ஓசை (வின்.); sound, noise.

[Skt. ni-nāda > த. நினாதம்.]

நீகாசம் *nīkāsam,* பெ.(n.) உறுதி (நாநார்த்த.); certainty.

[Skt. nikaśa > த. நீகாசம்.]

நீசக்கிரகம் *nīsa-k-kiragam,* பெ.(n.) 1. நட்பு நிலையில் இல்லாதகோள் (நீசத் தானத்திலிருக்கும் கிரகம்); (Astrol.) planet situated in *nīca-tāṉam.* 2. நிழல் கோள் களான ராகு கேதுகள்; nodes of the moon (யாழ்.அக.).

[Skt. nīca+ > த. நீசக்கிரகம்.]

நீசத்தானம் *nīsa-t-tāṉam,* பெ.(n.) கோளின் உச்சத்திற்கு ஏழாவதான இடம்; (Astrol.) position of the planets in the seventh house from the uccam, considered weak.

[Skt. nīca+ > த. நீசத்தானம்.]

நீசதை *nīsadai,* பெ.(n.) **நீசம்¹, 1** பார்க்க; see *nīsam.* *"என்னீசதைக்கு" (திவ்.இராமானுச. 48).*

[Skt. nīcatā > த. நீசதை.]

நீசப்படு-தல் *nīsa-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. ஈனப்படுதல்; to become base, vile or degraded, as by mean or improper actions. 2. நீசத்தானமுறுதல்; (Astrol.) to be situated in *nīca-t-tām,* as a planet.

[Skt. nīca > த. நீசம்+படு-.]

நீசபங்கராசயோகம் *nīsa-baṅga-rāsa-yōgam,* பெ.(n.) கணிய ஓகவகையுள் (சோதிட யோகவகையுள்) நன்மை பயப்ப தொன்று (பெரியவரு.144); (Astrol.) a kind of auspicious *yōga.*

[Skt. nīca+bhaṅgarasa+yoga > த. நீச பங்கராயோகம்.]

நீசம்¹ *nīsam,* பெ.(n.) 1. இழிவு; meanness, vileness. *"நீச முயர்வா நோக்கங்கள்" (ஞானவா.தேவபூ.52).* 2. பள்ளம்; depression. 3. தாழ்ச்சி; lowness. *"வடாஅதுதிசை மேனாள் நீசமுற" (கம்பரா.அகத்.40).* 4. கிரக நிலை ஐந்தனுள் அது வலியிழந்து நிற்கும் நிலை; (Astrol.) debility of a planet, one of five *kiraka-nilai.* 5. கொடுமை (வின்.); cruelty, barbarity, savageness. 6. பொருத்த மில்லாத ஆண் பெண்களின் புணர்ச்சி; sexual union between ill-matched person. *"அடைவற நீசமென் றிரண்டுமாகுமே" (கொக்கோ.3, 6).*

[Skt. nīca > த. நீசம்¹.]

நீசம்² *nīsam,* பெ.(n.) மஞ்சள் (சங்.அக.); turmeric.

[Skt. niśā > த. நீசம்².]

நீசராசி *nīca-rāśi,* பெ.(n.) **நீசத்தானம்** பார்க்க; (C.G.) see *nīsa-t-tāṉam.*

[Skt. nīca+rāsi > த. நீசராசி.]

நீசவாகனம் *nīśa-vāgaṉam,* பெ.(n.) கழுதை (வின்.); ass, as a mean conveyance.

[Skt. nīca+ vāhana > த. நீசவாகனம்.]

நீசன் *nīśaṉ,* பெ.(n.) 1. இழிந்தோன்; low, vile person. *"நீசர் வெகுளி கெடுங்கால மின்றிப் பரக்கும்" (நாலடி, 68).* 2. **நீசக்கிரகம், 1** பார்க்க; (Astrol.) see *nīcakkiragam.*

[Skt. nīca > த. நீசன்.]

நீதப்பிழை *nīta-p-piḻai,* பெ.(n.) **நீதிக்கேடு** பார்க்க; see *nīti-k-kēḍu.*

[Skt. nīta+ > த. நீதப்பிழை.]

நீதபரிமளம் *nīta-parimaḷam,* பெ.(n.) சீதாங்க பாடாணம் என்னும் ஒருவகைச் செய்ந்நஞ்சு (யாழ்.அக.); a mineral poison.

நீதம் *nīdam,* பெ.(n.) 1. தகுதியானது; that which is suitable, proper. *"அருளாய் நிற்கும்நிலை கற்பதுவே நீதம்" (தாயு.பராபர. 353).* 2. முறைமை (நீதி); propriety, justice. *"பொல்லாத சேயெனில் தாய்தள்ளனீதமோ" (தாயு.சுகவாரி.3).* 3. தவசம் (தானியம்) (யாழ்.அக.); grain. 4. நற்பேறு (பாக்கியம்) (யாழ்.அக.); prosperity.

[Skt. nīta > த. நீதம்.]

நீதம்பாதம் *nīdam-pādam,* பெ.(n.) முறைமை (நீதி); justice (Loc.).

[Skt. nīta+Perh.pāta > த. நீதம்பாதம்.]

நீதவான் *nīdavāṉ,* பெ.(n.) 1. **நீதிமான்** பார்க்க; see *nītimāṉ(colloq.).* 2. நியாயாதிபதி (வின்.); judge.

[Skt. nīta > த. நீதவான்.]

நீதன்[1] *nīdaṉ,* பெ.(n.) **நீதிமான்** பார்க்க; see *nītimāṉ. "நீதன்... துன்மேத னூர்புரக்க வைத்து" (சேதுபு.சீதைகண்ட.9).*

[Skt. nīta > த. நீதன்[1].]

நீதன்[2] *nīdaṉ,* பெ.(n.) நீசன்; low, vile person. *"நீதரல்லார் தொழுமாமருகல்" (தேவா.660, 10).*

[Skt. nīca > த. நீதன்[2].]

நீதாசனம் *nīdāśaṉam,* பெ.(n.) வழக்குமன்றம் (யாழ்.அக.); court of justice.

[Skt. nīdam > த. நீதாசனம்.]

நீதி *nīdi,* பெ.(n.) 1. நயன், நியாயம்; equity, justice. *"நீதியாவன யாவையு நினைக்கிலேன்" (திருவாச.26, 2).* 2. முறைமை; discipline. *"கட்டமை நீதிதன்மேற் காப்பமைந்து" (சீவக.1145).* 3. ஒழுக்கநெறி; right conduct, morality. *"நீதியாலவர்கடம்மைப் பணிந்து" (பெரியபு. தடுத்தாட்.197).* 4. மெய் (பிங்.); truth. 5. உலகத்தோடு பொருந்துவகை (குறள்.97, உரை); conformity with the ways of the world. 6. இயல்பு; nature. *"ஊர்தியிற் சேறலு நீதியாகும்" (நம்பியகப்.83).* 7. தருமசாத்திரம்; law. *"உணர்ந்தாய் மறைநான்கு மோதினாய் நீதி" (திவ்.இயற்.2, 48).* 8. நடத்துவது (சி.போ.பா. பக்.20, சுவாமிநா.); that which guides. 9. வழிவகை (உபாயம்); means, contrivance. *"உலகமெல்லா மாண்டிட விளைக்கு நீதி" (சீவக.755).* 10. பார்வதி (கூர்மபு.திருக்.21); *pārvati.*

த.வ. முறை, முறைமை

[Skt. nīti > த. நீதி.]

நீதிக்கேடு *nīdi-k-kēḍu,* பெ.(n.) 1. நியாயத் தவறு; injustice, illegality. 2. ஒழுக்கத் தவறு; immorality.

த.வ. முறைகேடு

[Skt. nīdi+ > த. நீதிக்கேடு.]

நீதிகர்த்தா *niti-karttā,* பெ.(n.) முறை மன்றத் தலைவர்; judge (pond.).

[Skt. niti+ > த. நீதிகர்த்தா.]

நீதிகர்மம் *nidi-karmam,* பெ.(n.) பதி னோராங்குல நீளமுள்ள நூலை நாசியிற் செலுத்தி வாய் வழியாக வாங்குகை (யோகஞான.பக்.33); inserting a thread 11 inches long through the nostril and drawing it out of the mouth.

[Skt. niti+ > த. நீதிகர்மம்.]

நீதிகெட்டவன் *nidi-kettavan,* பெ.(n.) முறைமை தவறியவன்; unjust man.

[Skt. niti > த. நீதி+கெட்டவன்.]

நீதிகேள்-தல்(நீதிகேட்டல்) *nidi-kēl-,* 12 செ.கு.வி.(v.i.) வழக்கு விசாரித்தல் (வின்.); to hear or try a case.

த.வ. வழக்கு நேர் கேட்டல்

[Skt. niti > த. நீதி+கேள்-.]

நீதிச்செல்வம் *nidi-c-celvam,* பெ.(n.) தலை மழிப்பு (சௌளம்); tonsure ceremony of a child. *"தலைகுன்றா நீதிச்செல்வம் மேன்மேனீந்தி" (சீவக.366).*

[Skt. niti > த. நீதி+செல்வம்.]

நீதிசாத்திரம் *nidi-šāttiram,* பெ.(n.) அறு பத்து நாலு கலைகளுள் அரசியல் பற்றிய சாத்திரம் (வின்.); science of polity, one of *arupattu-nālu-kalai.*

[Skt. niti+šāstra > த. நீதிசாத்திரம்.]

நீதிசாரம் *nidi-šāram,* பெ.(n.) நீதி நூல்களில் ஒன்று (யாழ்.அக.); a diactic work.

[Skt. niti+šara > த. நீதி+சாரம்.]

நீதித்தொழில் *nidi-t-tolil,* பெ.(n.) ஒருவனுக்கு உரிய செய்கை (வின்.); one's proper or professional duty.

[Skt. niti > த. நீதி+தொழில்.]

நீதிநியாயம் *nidi-niyāyam,* பெ.(n.) 1. நீதி முறை; justice and reason. 2. சட்ட திட்டங்கள்; law, legislative enactments. 3. முறைமன்ற ஒழுங்கு; practice or procedure in the courts of law.

த.வ. முறைமை ஒழுங்கு

[Skt. niti+ > த. நீதிநியாயம்.]

நீதிநூல் *nidi-nūl,* பெ.(n.) 1. அறப் பொருள் களைப் பற்றிக் கூறும் நூல்; science of polity and ethics. *"வியாழவெள்ளிகள் துணிபு தொகுத்துப் பன்னீதி நூலுடையார் கூறியவாறு" (குறள், 662, உரை).* 2. சட்ட நூல் (வின்.); legal treatise.

த.வ. முறைநூல், அறநூல்

[Skt. niti > த. நீதி+நூல்.]

நீதிநூலன் *nidi-nūlan,* பெ.(n.) 1. நியாயப் பிரமாணிகள் (வின்.); legislator. 2. அருகன் (சது.); Arhat.

[Skt. niti > த. நீதி+நூலன்.]

நீதிநெறி *nidi-neri,* பெ.(n.) நல்லொழுக்கம் (வின்.); morality, moral conduct.

த.வ. நன்னெறி

[Skt. niti > த. நீதி+நெறி.]

நீதிமதி *nitimati,* பெ.(n.) மேள கர்த்தாக்களுள் ஒன்று (சங்.சந்.); (mus.) a primary *rāga.*

நீதிமான் *nidimān,* பெ.(n.) நன்னெறி நிற்போன்; just righteous man. nom. masc. sing. of *niti-mat.*

[Skt. niti-mān > த. நீதிமான்.]

நீதியதிபதி *nidi-y-adipadi,* பெ.(n.) முறைமன்ற நடுவர்; judge. *"நீதியதிபதி நாமுணர்வீர்" (வேதநாயகம்).*

[Skt. niti+ > த. நீதி+அதிபதி.]

நீதியறிந்தோன் *nidi-y-arintōṉ,* பெ.(n.) அமைச்சர் (வின்.); minister of state.

[Skt. niti > த. நீதி+அறிந்தோன்.]

நீதியொழுங்கு *nidi-y-oḻuṅgu,* பெ.(n.) **நீதிநெறி** பார்க்க; see *nitineṟi.*

[Skt. niti > த. நீதி+ஒழுங்கு.]

நீதிராசா *nidi-rāsā,* பெ.(n.) **நீதியதிபதி** பார்க்க (j.); see *nitiyatipati.*

[Skt. niti+rāja > த. நீதிராசா.]

நீதிவழு *nidi-vaḻu,* பெ.(n.) முறைமைத் தவறு; injustice.

த.வ. முறைகேடு

[Skt. niti > த. நீதி+வழு.]

நீதிவான் *nidivāṉ,* பெ.(n.) 1. **நீதிமான்** பார்க்க; see *niti-māṉ.* 2. **நீதியதிபதி** (இ.வ.) பார்க்க; see *nitiyatipati.*

[Skt. niti-māṉ > த. நீதிவான்.]

நீதிவிளக்கம் *nidi-viḷakkam,* பெ.(n.) முறை மன்றத்தில் செய்யும் முறை, நேர்கேட்பு (விசாரணை) (யாழ்.அக.); inquiry or trial of a suit or case.

[Skt. niti > த. நீதி+விளக்கம்.]

நீதிவிளங்கு-தல் *niti-viḷaṅgu-,* 5 செ.கு.வி. (v.i.) **நீதிகேள்** (யாழ்.அக.) பார்க்க; see *nidikēḷ.*

[Skt. niti > த. நீதி+விளங்கு-.]

நீதினி *nidiṉi,* பெ.(n.) முறைமை தவறாதவள் (நன்.146, மயிலை); she who is just.

[Skt. niti > த. நீதினி.]

நீபம்[1] *nibam,* பெ.(n.) 1. **நீர்க்கடம்பு** (பிங்.) பார்க்க; see *nirkkaḍambu.* 2.வெண்கடம்பு (மலை.); common Indian oak. 3. செங் கடம்பு; small Indian Oak. 4. மரவகை. 5. பிற கொழுங்கால் என்னும் விண்மீன் (உத்திரட் டாதி) (பிங்.); the 26th naksatra.

[Skt. nipa > த. நீபம்[1].]

நீபம்[2] *nipam,* பெ.(n.) காரணம் (பிங்.); cause, reason.

[Skt. nibha > த. நீபம்[2].]

நூதனக்காரன் *nūtaṉakkāraṉ,* பெ.(n.) **நூதனன், 3** (வின்.) பார்க்க; see *nūtaṉaṉ.*

[Skt. nūtaṉa > த. நூதனக்காரன்.]

நூதனம் *nūtaṉam,* பெ.(n.) 1. புதுமை (திவா.); newness, novelty, strangeness. 2. புதியது; anything new, uncommon or extra-ordinary. *"நொய்யப் பஃறுகி னூதனஞ் சாத்தினார்" (கந்தபு.தேவகிரி.26).*

[Skt. nūtana > த. நூதனம்.]

நூதனம்விடு-த்தல் *nūtaṉam-viḍu-,* 20 செ.கு.வி. (v.i.) ஆர்வமான கதைகள் கூறி மகிழ்வித்தல் (j.); to amuse with curious stories.

[Skt. nūtana > த. நூதனம்+விடு-.]

நூதனன் *nūtaṉaṉ,* பெ.(n.) 1. புதியவன்; new-comer. 2. புதியனவற்றில் விருப்பமுடையவன்; person fond of curiosities. 3. புதிய செய்திகளை உண்டாக்குபவன்; innovator.

[Skt. nūtana > த. நூதனன்.]

நூதனி *nūtaṉi,* பெ.(n.) 1. புதிய ஆள்; new comer, stranger, male or female. 2. **நூதனன், 3** பார்க்க; see *nūtaṉaṉ.*

[Skt. nūtana > த. நூதனி.]

நூபம்[1] *nūpam,* பெ.(n.) எருது (அக.நி.); bull, bullock.

[Skt. anūpa > த. நூபம்.]

நூபுரம் *nūpuram,* பெ.(n.) 1. பாதகிண்கிணி (திவா.); anklets formed of little bells.

2. சிலம்பு (சூடா.); tinkling anklets. *"ஆடுவார் பொருவி னூபுரத்தை" (கம்பரா. நகர.56).*

[Skt. nūpura > த. நூபுரம்.]

நூனதை *nūṉatai,* பெ.(n.) குறைவு; defect. *"சிவனுக்கு... நூனதை ஆரோபித்தலின் சுவாமித் துரோகிகளாய்" (சிவசமவா.பக்.38).*

[Skt. nyūna-tā > த. நூனதை.]

நூனம்[1] *nūṉam,* பெ.(n.) உறுதி (சூடா.); certainty.

[Skt. nūṉam.]

நூனம்[2] *nūṉām,* பெ.(n.) குறைபாடு (சூடா.); defect, fault, blemish.

[Skt. nyūna > த. நூனம்.]

நூனாதிக்கம் *nūṉātikkam,* பெ.(n.) **நூனாதிகம்** (யாழ்.அக.) பார்க்க; see *nūṉātigam.*

நூனாதிகம் *nūṉātigam,* பெ.(n.) குறை சொல்லுங் குணம் (வின்.); finical criticism.

[Skt. nyūnādhika > த. நூனாதிகம்.]

நூனாயம் *nūṉāyam,* பெ.(n.) சூது (வின்.); trick.

நேத்திரஅப்பிசியந்தம் *nēttiraabiśiyantam,* பெ.(n.) ஒரு கண்ணோய், இதற்கு கற்பூர சிலாசத்து, கடுக்காய், மரமஞ்சள், காவிக்கல், இந்துப்பு, சமனெடையாகத் தண்ணீரில் கண்களுக்குப் பற்றுப்போட அபிசியந்தம் குணப்படும்; an eye disease. It is cured by applying of a paste of the drugs mentioned above with water (சா.அக.).

[நேத்திரம் + அபிசியந்தம்.]

நேத்திரஉபத்திரவாதம் *nēttira-upattiravādam,* பெ.(n.) **கண்மயக்கு வாதம்** பார்க்க; see *kaṇmayakku-vātam* (சா.அக.).

[நேத்திரம் + உபத்திரவாதம்.]

நேத்திரக்கடுப்பு *nēttira-k-kaḍuppu,* பெ.(n.) கண்கடுப்பு; irritation of the eyes (சா.அக.).

[நேத்திரம் + கடுப்பு.]

[Skt. nētra > த. நேத்திரம்]

நேத்திரக்கழுநீர் *nēttira-k-kaḻunīr,* பெ.(n.) கண்ணோயில் கண்ணைக் கழுவ பயன் படுத்தும் ஒரு மருந்து நீர்; lotion for cleaning the diseased eyes (சா.அக.).

நேத்திரக்காப்பு *nēttira-k-kāppu,* பெ.(n.) கோயில் மூர்த்திக்கு ஒப்பனை செய்கை; adoring an idol in the temple.

[Skt. nētra > த. நேத்திரம் + காப்பு.]

நேத்திரக்காப்புச்சாத்து *nēttira-k-kāppu-c-cāttu,* பெ.(n.) சிலைக்கு அழகு (மூர்த்திக்கு அலங்கார) செய்யும் பொருட்டுக் கோயிலினுட் கதவை அடைக்கை (இ.வ.); closing the inner of a temple at certain times, as for adorning the deity (Loc.).

[நேத்திரம்+காப்பு+சாத்து.]

[Skt. nētra > த. நேத்திரம்.]

நேத்திரக்குத்தல் *nēttira-k-kuttal,* பெ.(n.) கண்குத்தல்; penetrating or pin prick pain in the eye (சா.அக.).

[நேத்திரம் + குத்தல்.]

நேத்திரக்குமுதம் *nēttira-k-kumudam,* பெ.(n.) கண்ணின் கருவிழியில் சதை வளர்ச்சி; morbid growth of flesh over the pupil or in the black of the eye (சா.அக.).

[நேத்திரம் + குமுதம்.]

நேத்திரங்காட்டி *nēttiraṅ-kāṭṭi,* பெ.(n.) **நேத்திரநாயகம்** பார்க்க; see *nēttira-nāyagam* (சா.அக.).

[நேத்திரம் + காட்டி.]

நேத்திரகண்டு *nēttiragaṇḍu,* பெ.(n.) கண்தினவு; itching of the eye (சா.அக.).

[நேத்திரம் + கண்டு.]

நேத்திரகமலி *nēttirakamali,* பெ.(n.) 1. நேத்திரஞ்சிமிட்டி; a kind of plant. 2. **கண்சிமிட்டிப்பூடு** பார்க்க; see *kaṇcimiṭṭi-p-pūḍu* (சா.அக.).

நேத்திரகாசம் *nēttirakāsam,* பெ.(n.) 1. கண் புரை (கண்காசம்); cataract. 2. கண்பூ; opacity of the cornea. 3. **கண்காசம்** பார்க்க; see *kaṇkāšam* (சா.அக.).

[நேத்திரம் + காசம்.]

நேத்திரச்சதம் *nēttira-c-cadam,* பெ.(n.) கண்மடல் (யாழ்.அக.); eye-lid.

[Skt. nētra+cata > த. நேத்திரச்சதம்.]

நேத்திரரசம் *nēttira-rašam,* பெ.(n.) கண்ணீர்; tears (சா.அக.).

[நேத்திரம் + ரசம்.]

நேத்திரசிராவம் *nēttira-sirāvam,* பெ.(n.) கண்ணினின்று நீரும் பீளையும் வடிந்து கொண்டிருக்கும் ஒருவகைக் கண்நோய்; an eye disease marked by slimy secretion and mucopurulent discharge from the eyes (சா.அக.).

[நேத்திரம் + சிராவம்.]

நேத்திரசுக்கிலம் *nēttira-šukkilam,* பெ.(n.) கண்ணினின்று விந்துவைப்போல் வெண்மை யான பிசுபிசுப்புள்ள நீர் வடியும் கண்ணோய்; an eye disease attended with white slimy secretion from the eyes (சா.அக.).

[நேத்திரம் + சுக்கிலம்.]

நேத்திரச்சுடர் *nēttira-c-cuḍar,* பெ.(n.) கற்பூரம்; camphor (சா.அக.).

[நேத்திரம் + சுடர்.]

நேத்திரசூலை *nēttira-šūlai,* பெ.(n.) கண்ணி லுண்டாகும் குத்தல் வலி; acute pain in the eyes (சா.அக.).

[நேத்திரம் + சூலை.]

நேத்திரத்தம்பம் *nēttira-t-tambam,* பெ.(n.) வாதத்தினால் கண்விழி உணர்ச்சியறல்; paralysis of the eye (சா.அக.).

[நேத்திரம் + தம்பம்.]

நேத்திரத்தம்பவாதம்[1] *nēttira-t-tambavātam,* பெ.(n.) கண்களைக் கையால் தடவிப் பார்க்கில் ஒட்டாங் கிளிஞ்சலைப் போல் தோற்றும்படி தம்பிக்கும் ஒருவகைக் கண்ணோய்; a disease in which the eye ball is so hardered that when touched, it makes one feel as if it is a brivalve shell. It is said to be due to windly humour of the system (சா.அக.).

[நேத்திரம் + தம்பம் + வாதம்.]

நேத்திரத்தம்பவாதம்[2] *nēttira-t-tamba vādam,* பெ.(n.) வடமொழியில் திர்க்குத்தம்ப வாதம் எனக் குறிப்பிடும் உணவு நடைமுதலிய குற்றங்களினால் விழிகளின் மூலத்தில் வாயு மிகுந்து, கண், புருவம், இமையாகிய இடங் களில் உணர்ச்சியற்று, கண்களைத் தம்பிக்கச் செய்யும் ஒரு வகை ஊதை (வாத) நோய்; ; an eye disease marked by loss of sensation in the eye brows, eye lids and pupil. It is a kind of paralysis of the muscles of the eyes said to be due derangement of windy humour of the system arising from the errors in diet and defects of physical functions (சா.அக.).

[நேத்திரம் + தம்பம் + வாதம்.]

நேத்திரத்தர்ப்பணம் *nēttirattarppaṇam,* பெ.(n.) காற்றோட்டம், தும்பு, தூசு இவை களில்லாவிடத்தில் நோயாளியை படுக்க வைத்து உளுத்த மாவை தண்ணீரில் பிசைந்து இரண்டு கண்களைச் சுற்றிலும் பற்றுப்போட்டு, கண்களை மூடிக்கொண்டு இளஞ்சூடுள்ள நெய்யை இரப்பை அமிழும்வரை ஊற்றியபின்

கண்களை மெள்ள மெள்ளத் திறந்துவிடச் செய்யுமோர் ஆயுர்வேத பண்டுவமுறை; ; a treatment given in general to the diseases of the eye according to the process of Ayurveda. It is as follows. The patient is made to be down in a dustless room where there is no breeze. The flour of black gram mixed water is applied around the eyes and a lukeworm cow's ghee is poured on the eyes till the eye lids get completely immersed or covered with ghee. Then, the eyes are opened frequently so as to allow the ghee enter into the eyes (சா.அக.).

[நேத்திரம் + தர்ப்பணம்.]

நேத்திரத்திமிர் *nēttira-t-timir,* பெ.(n.) கண் திமிரம்; loss of vision or blindness due to the affection or loss of sensation in the optic nerve (சா.அக.).

[நேத்திரம் + திமிர்.]

நேத்திரத்துலக்கம் *nēttira-t-tulakkam,* பெ.(n.) கண்விளக்கம்; clearness of vision (சா.அக.).

[நேத்திரம் + துலக்கம்.]

நேத்திரத்தோசம்[1] *nēttira-t-tōsam,* பெ.(n.) 1. கண்ணுக்குரிய அல்லது வேறு காரணங் களினால் ஏற்படும் குற்றங்கள்; natural or langenital predisposition to diseases of the eye. 2. பார்வை தோஷம்; evil effects of malignant eyes (சா.அக.).

[நேத்திரம் + தோஷம்.]

நேத்திரதோசம்[2] *nēttira-tōsam,* பெ.(n.) பார்வை மங்கல்; dimness of vision, defective sight.

[நேத்திரம் + தோஷம்.]

*[**Skt.** nētra+kāsam > த. நேத்திரதோசம்.]*

நேத்திரதாரகா *nēttiratārakā,* பெ.(n.) மண்டலம்; கருவிழி; black of the eye (சா.அக.).

[நேத்திரம் + தாரகா.]

நேத்திரநாயகம் *nēttiranāyagam,* பெ.(n.) கண்கட்டிப்பூடு; a plant used in the abscess of the eye lids (சா.அக.).

நேத்திரநிருமாலி *nēttiranirumāli,* பெ.(n.) சிறு சண்பகம்; cananga flower tree (சா.அக.).

நேத்திரநோக்கம் *nēttiranōkkam,* பெ.(n.) கண் பார்வை; eye sight, vision (சா.அக.).

[நேத்திரம் + நோக்கம்.]

நேத்திரநோய் *nēttiranōy,* பெ.(n.) 1. கண்ணோய்; disease of the eye in general. 2. கண்வலி; pain in the eye (சா.அக.).

[நேத்திரம் + நோய்.]

நேத்திரப்பச்சை *nēttira-p-paccai,* பெ.(n.) கதிர்ப்பச்சை; a fragrant plant used in perfumes (சா.அக.).

[நேத்திரம் + பச்சை.]

நேத்திரப்படலம் *nēttira-p-paḍalam,* பெ.(n.) வெள்விழியில் மாசுபடரும் ஒரு வகைக் கண்ணோய்; coats or films over the sclerotic of the eye (சா.அக.).

[நேத்திரம் + படலம்.]

நேத்திரப்பால் *nēttira-p-pāl,* பெ.(n.) பனங்கள்; palmyra toddy (சா.அக.).

[நேத்திரம் + பால்.]

நேத்திரப்பிடி *nēttira-p-piḍi,* பெ.(n.) கோயில் மூர்த்தியின் கண்மடல்களிற்சாத்தும் உயர்ந்த வாசனைச் சந்தனத்தாலாகிய காப்பு; the well-ground perfumed sandal paste used in adorning the eyes of an idol (Loc.).

[நேத்திரம் + பிடி.]

[Skt. nētra > த. நேத்திரம்.]

நேத்திரப்பிண்டம் *nēttira-p-pinḍam,* பெ.(n.) கண்விழி; eye ball (சா.அக.).

[நேத்திரம் + பிண்டம்.]

நேத்திரப்புகை *nēttira-p-pugai,* பெ.(n.) கண் புகைச்சல்; smoky affection of the eye (சா.அக.).

[நேத்திரம் + புகை.]

நேத்திரபிரியந்தம் *nēttira-piriyandam,* பெ.(n.) கடைக்கண்; corner of the eye (சா.அக.).

நேத்திரபடலரோகம் *nēttira-paḍala-rōgam,* பெ.(n.) கண்ணோய் வகை (M.L.); cataract.

[நேத்திரம் + படலம் + ரோகம்.]

[Skt. nētra > த. நேத்திரம்.]

[Skt. roha > த. ரோகம்.]

நேத்திரபாடவம் *nēttira-pāḍavam,* பெ.(n.) கண்ணின் பார்வைத் திறன்; keen eyesight, strong power of vision.

[Skt. nētra > த. நேத்திரபாடவம்.]

நேத்திரபிண்டம் *nēttirapinḍam,* பெ.(n.) 1. கண்விழி (யாழ்.அக.); eye-ball. 2. பூனை; cat.

[Skt. nētra > த. நேத்திர+பிண்டம்.]

நேத்திரபிந்து[1] *nēttira-pindu,* பெ.(n.) கண்ணுக்கு விடும் மருந்து (இக்.வ.); medicinal solution for the eye.

[Skt. nētra > த. நேத்திரபிந்து.]

நேத்திரபிந்து[2] *nēttira-pindu,* பெ.(n.) கண் சிவப்பு; inflammation of the eye (சா.அக.)

[நேத்திரம் + பிந்து.]

நேத்திரபுட்டி *nēttira-puṭṭi,* பெ.(n.) செங்கத்தாரி; false peacock's foot tree (சா.அக.).

நேத்திரபூளை *nēttira-pūlai,* பெ.(n.) கண் பீளைச் செடி; long leaved trumpet plant (சா.அக.).

[நேத்திரம் + பூளை.]

நேத்திரம்[1] *nēttiram,* பெ.(n.) 1. கண் (திவா.); eye. 2. மயிற்பீலிக்கண்; peacock-eye. *"சுருள்பங்கி நேத்திரத்தா லணிந்து" (திவ். பெரியாழ்.3, 4, 5).* 3. பட்டாடை (திவா.); silk cloth. *"காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்" (தேவா.676, 2).* 4. **நேத்திரமுத்திரை** (சதாசிவ.130, உரை) பார்க்க; see *nēttira-muttirai(šaiva).*

[Skt. nētra > த. நேத்திரம்.]

நேத்திரம்[2] *nēttiram,* பெ.(n.) 1. கண்வேர்; nerves and blood vessels of the eye. 2. மருந்துகளை ஆசன வழியாய் உள்ளே புகட்டுவதற்காக அமைத்த ஓர் கருவி; an apparatus for introducing or throwing liquid into the rectum (சா.அக.).

நேத்திரமங்களம் *nēttira-maṅgaḷam,* பெ.(n.) சிலை முதலியவற்றிற்குக் கண் திறந்து விடுகை (நயனமோட்சம்); forming the eyes of an image or picture.

[நேத்திரம் + மங்கலம்.]

[Skt. nētra > த. நேத்திரம்.]

நேத்திரமஞ்சம் *nēttira-mañjam,* பெ.(n.) மினிறை; an unknown plant (சா.அக.).

நேத்திரமருத்துவம் *nēttira-maruttuvam,* பெ.(n.) கண் மருத்துவம் (வைத்தியம்); ophthalmic treatment (சா.அக.).

நேத்திரமலம் *nēttiramalam,* பெ.(n.) கண் பீளை; gummy secretions from the eye-muco parulence (சா.அக.).

நேத்திரமாலி *nēttiramāli,* பெ.(n.) சிறு சண்பகம்; cananga flower tree (சா.அக.).

நேத்திரமுத்திரை *nēttira-muttirai,* பெ.(n.) சுண்டு விரலையும் பெருவிரலையுங் கூட்டி நடுவணுள்ள மூன்று விரலையும் உயர நிமிர்த்திக் கண்ணுக்கு எதிரிற்காட்டும் முத்திரை வகை (செந்.x, 424); *(śaiva)* a hand-pose in which the thumb and the little finger are linked together and the other three fingers are held erect in front of the eyes.

[Skt. nētra > த. நேத்திர+முத்திரை.]

நேத்திரபேதி *nēttira-bēdi,* பெ.(n.) கண்களில் நிற்கும் மாசுநீர் கழலும்படி கண்ணுக்குத் தடவுமருந்து; a collyrium to the eyes for purpose of bring out the collection of morbid fluid (சா.அக.).

நேத்திரராசி *nēttirarāśi,* பெ.(n.) இருவாட்சி; a kind of jasmine (சா.அக.).

நேத்திரரோகம் *nēttira-rōgam,* பெ.(n.) கண்ணோய்; disease around the eye (colloq.).

[Skt. nētra+ > த. நேத்திரரோகம்.]

நேத்திரவர்த்தமம் *nēttiravarttamam,* பெ.(n.) 1. கண்ணிமை; eye laid. 2. கண்ணிமை நோய் (ரோகம்); diseases of the eye lid. 3. கண்ணின் துளை (துவாரம்) அல்லது புரை; the course of a sinus or cavity occuring in the region of the eyes (சா.அக.).

நேத்திரவலி *nēttiravali,* பெ.(n.) 1. கண்வலி; eye pain. 2. கண்வலிப்பூஞ்செடி; a flowering plant used in eye disease. 3. கண் சிவத்தல்; inflammation of the eye (சா.அக.).

நேத்திரவாயு[1] *nēttira-vāyu,* பெ.(n.) 1. கண்ணரம்புவலி; neuralgia around the eyes. 2. கண்ணோய் வகை (வின்.); ophthalmia.

[Skt. nētra+vāyu > த. நேத்திரவாயு.]

நேத்திரவாயு[2] *nēttiravāyu,* பெ.(n.) வாயுக் கோளாறினாலேற்படும் கண்ணோய்; a disease of the eye due to the derangement of vayu in the system inflammation of the eyes (சா.அக.).

நேத்திரவாழை *nēttira-vāḻai,* பெ.(n.) மேற்றிசைக் கடற்கரைத் தேசங்களில் (மலையாளத்தில்) விளைவதும், நோயணு காதிருக்க வேண்டி சுட்டுக் கறிசமைப்பதுமான வாழையிற் கடைப்பட்ட வகை (சாதி); an inferior special of plantain tree grown in the western coast (Malabar). It is baked and used in curries as a preventive for diseases. Chips prepared out of it are very tasty, ripe fruits are also eaten (சா.அக.).

நேத்திரவிதி *nēttira-vidi,* பெ.(n.) கண்ணோய் களைப் பற்றிய நூல் (யாழ்.அக.); a treatise on diseases of the eye.

[Skt. nētra+vidhi > த. நேத்திரவிதி.]

நேத்திரவிரணம் *nēttiraviraṇam,* பெ.(n.) கண்ணின் விரணம்; ulceration of the eye (சா.அக.).

நேத்திரவிரணம்போக்கி *nēttiraviraṇam-pōkki,* பெ.(n.) சதகுப்பை சக்களத்தி எனப்படும் காட்டுச் சதகுப்பை; a plantakin to common dill (சா.அக.).

நேத்திரவுபத்திரவாதம் *nēttiravupattira vādam,* பெ.(n.) **கண்மயக்குவாதம்** பார்க்க; see *kaṇmayakku-vādam* (சா.அக.).

நேத்திரவைத்தியம் *nēttira-vaittiyam,* பெ.(n.) கண் மருத்துவம்; ophthalmic treatment (சா.அக.).

நேத்திரவைத்தியன் *nēttiravaittiyaṉ,* பெ.(n.) கண் மருத்துவன் (வின்.); eye-doctor.

த.வ. கண் மருத்துவன்

[Skt. nētra+vaidya > த. நேத்திரவைத்தியன்.]

நேத்திராஞ்சனம்[1] *nēttirāñjaṉam,* பெ.(n.) கண்மருந்து வகை (யாழ்.அக.); a medicine for the eye.

[Skt.nētra+añjana > த. நேத்திராஞ்சனம்.]

நேத்திராஞ்சனம்[2] *nēttirāñjaṉam,* பெ.(n.) 1. கண்மருந்து; collyrium for the eye salve. 2. இமையைப் பற்றிய ஒருவகைக் கண்ணோய்; a disease of the eye lid. 3. கண்ணிலிடும் ஒரு மந்திரீக மை; a magic paint used for finding hidden treasured by applying it to the eye (சா.அக.).

நேத்திராஞ்சனம்[3] *nēttirāñjaṉam,* பெ.(n.) கருடப் பார்வைக்கு (திருட்டிக்க)ச் சமானமான பார்வை கிடைப்பதாகக் கருதப்படும் நாக சிந்தூரம், இரசகற்பூரம், வெண்காரம், சவ்வீராஞ்சனம், படிகாரம், தாம்பூர பற்பம், அய சிந்தூரம், பச்சைக் கற்பூரம், கடுகுரோகிணி, தேத்தாங்கொட்டை, இந்துப்பு, பால்துத்தம், திரிகடுகு, திரிபலம், அதிமதுரம் சமயிடை கொண்டு புங்கம் பட்டைச் சாற்றிலரைத்து மாத்திரை செய்து கண்ணிற்கிடும் கலிங்கம்; a pill rubbed with water and applied to the eyes to improve its vision. It is prepared with various drugs as mentioned in the text above (சா.அக.).

நேத்திராதி *nēttirādi,* பெ.(n.) நோக்கு நோக்கிச் செடி; an unknown plant probably used to improve the vision (சா.அக.).

[நேத்திர + ஆதி.]

நேத்திரராம்பு *nēttirarāmbu,* பெ.(n.) கண்ணீர்; tears (சா.அக.).

நேத்திராமயம் *nēttirāmayam,* பெ.(n.) கண் முழுவதும் பற்றிய நோய்; a disease affecting the whole eye (சா.அக.).

[Skt. nētra+āma-ya > த. நேத்திராமயம்.]

நேத்திராமியம் *nēttirāmiyam,* பெ.(n.) நேத்திராமயம்; which see (சா.அக.).

[நேத்திரம் + ஆமியம்.]

நேத்திராரி[1] *nēttirāri,* பெ.(n.) கள்ளி (L.); spurge.

[Skt. nētrāri > த. நேத்திராரி.]

நேத்திராரி[2] *nēttirāri,* பெ.(n.) கள்ளி மரம்; any spurge tree (சா.அக.).

நேத்திராவுடதம் *nēttirāvuḍadam,* பெ.(n.) கண் மருந்து (நேத்திராவுடதம்); medicines (சா.அக.).

[நேத்திரம் + அவுடதம்.]

[Skt. nētra+ausadha > த. நேத்திராவிடதம்.]

நேத்திரானந்தம் *nēttirāṉandam,* பெ.(n.) **நேத்திரோற்சவம்** பார்க்க; see *nēttirōṟšavam.*

[Skt.nētra+ā-nanda>த. நேத்திரானந்தம்.]

நேத்திரோற்சவம் *nēttirōṟšavam,* பெ.(n.) கண்ணுக்கு விருப்பமான காட்சி (யாழ்.அக.); sight pleasing to the eyes.

[Skt.nētra+ut-sava > த. நேத்திரம் + உற்சவம்.]

நேத்திரௌசதம் *nēttirousadam,* பெ.(n.) நேத்திராவுடதம்; medicines applicable to the diseases of the eye (சா.அக.).

[நேத்திரம் + அவுஷதம்.]

நேதா *nētā,* பெ.(n.) தலைவன்; ruler, master, lord. *"நினைந்தளித் துயிரளிக்கு நேதாவாகி" (வேதாரணியிரவா.6).*

[Skt.nētā.nom.sing. of nētr > த. நேதா.]

நேதி[1] *nēti,* பெ.(n.) முறை; routine duty. *"நேதிமதகலை யாரவார" (திருப்பு.394).*

[Skt. niyati > த. நேதி.]

நேதி[2] *nēti,* பெ.(n.) 'இன்னபடியன்று' எனப் பொருள்படும் வடமொழித்தொடர் (சங்.அக.); a Sanskrit phrase meaning 'not like this'.

[Skt. nēti > த. நேதி.]

நேந்தாடுபாவை *nēndāḍu-pāvai,* பெ.(n.) சேந்தாடுபாவை; an unknown plant (சா.அக.).

[நேந்தாடு + பாவை.]

நேந்திரம் *nēndiram,* பெ.(n.) ஒரு வகை வாழை; a kind of banana (சா.அக.).

நேபத்தியம் *nēpattiyam,* பெ.(n.) 1. அலங்காரம் (இலக்.அக.); decoration. 2. வேடம் (இலக்.அக.); guise, dress. 3. நாடகவரங்கில் வேடம்பூணும் மறைவிடம் (இலக்.அக.); place behind the stage, tiring-house. 4. நாடக மேடை (இக்.வ.); stage.

[Skt. nēpathya > த. நேபத்தியம்.]

நேபம் *nēbam,* பெ.(n.) 1. கண்ணீர்; tears. 2. தண்ணீர்; ordinary water (சா.அக.).

நேபாலிகை[1] *nēpāligai,* பெ.(n.) செய்ந்நஞ்சு வகை (மூ.அ.); a kind of poison.

[cf. nēpālikā > த. நேபாலிகை.]

நேபாலிகை[2] *nēpāligai,* பெ.(n.) ஒரு வகைச் செய்ந்நஞ்சு; a kind of poison perhaps arsenic found in Nepal (சா.அக.).

நேபாளங்கரும்பு *nēpāḷaṅ-karumbu,* பெ.(n.) நேப்பாள தேசத்தில் விளையும் கரும்பு; sugarcane grown in Nepal (சா.அக.).

[நேபாளம்+கரும்பு.]

நேபாளங்கொட்டை *nēpāḷaṅ-koṭṭai,* பெ.(n.) நேர்வாளங்கொட்டை; croton seed or nut. (சா.அக.).

[நேபாளம் + கொட்டை.]

நேபாளசம் *nēpāḷasam,* பெ.(n.) நேப்பாளத்தில் கிடைக்கும் ஒருவகைக் களிம்பேறிய செம்பு; a kind of impure copper probably found in Nepal (சா.அக.).

நேபாளவேம்பு *nēpāḷa-vēmbu,* பெ.(n.) நேப்பாளத்தில் விளையும் வேப்பமரம்; margosa tree of Nepal (சா.அக.).

[நேபாளம் + வேம்பு.]

நேபாளம்[1] *nēpāḷam,* பெ.(n.) தேசம் ஐம்பத்தாறனுள் ஒன்று (வின்.); the kingdom of Nepal, one of 56 *tēcam.*

[Skt. nēpāla > த. நேபாளம்.]

நேபாளம்[2] *nēpāḷam,* பெ.(n.) 1. நேர்வாளம்; purgative plant. 2. சீமையாமணக்கு; Nepal castrol plant (சா.அக.).

நேபாளி *nēpāḷi,* பெ.(n.) **நேத்திரராசி** பார்க்க; see *nēttirarāśi* (சா.அக.).

நேமகம்[1] *nēmagam,* பெ.(n.) 1. அமர்த்தம்; appointment. 2. தீர்மானம் (வின்.); determination. 3. திருமண உறுதி (வின்.); betrothal. 4. காணிக்கை நேர்ந்துவைக்கை (இ.வ.); dedication to a deity. 5. ஒழுங்கு; orderliness. *"நேமகஞ் சேர் முத்துப்பவளம்" (கொண்டல்விடு.406).*

[Skt. ni-yāmaka > த. நேமகம்.]

நேமகம்[2] *nēmagam,* பெ.(n.) இருப்பிடம்; hall, residence. *"நீதானெழுந்தருளு நேமகத்தின்" (கொண்டல்விடு.58).*

[Skt. nigama > த. நேமகம்.]

நேமநாற்சுகம் *nēmanāṟ-śugam,* பெ.(n.) கருப்பு அகரம்; a bazaar drug (சா.அக.).

நேமநிட்டை *nēmaniṭṭai,* பெ.(n.) நோன்புகளை (விரதங்களை) உறுதியோடு செய்கை; rigid observance of prescribed rites.

[Skt. niyama-nisdhā > த. நேமநிட்டை.]

நேமம்[1] *nēmam,* பெ.(n.) 1. பணியமர்த்தம்; appointment. 2. நாட்கருமங்களும் கடைப்பிடி (நியமங்)களும்; daily rites and observances. 3. விதிமுறைமை;regulation.

"நேமக்கலை மகளும்" (கொண்டல்விடு.8). 4. ஊழ் (வின்.); destiny, fate.

[Skt. niyama > த. நேமம்.]

நேமம்[2] *nēmam,* பெ.(n.) 1. நேரம் (யாழ்.அக.); time. 2. சாயுங்காலம்; evening. 3. பங்கு; share. 4. பிளப்பு; fissure. 5. வேர்; root. 6. மேலிடம்; upper part. 7. வேலி; hedge, fence. 8. ஏமாற்றுகை; cheating.

[Skt. nēma > த. நேமம்.]

நேமம்[3] *nēmam,* பெ.(n.) 1. காலம்; period. 2. பாதி; half (சா.அக.).

நேமன் *nēmaṉ,* பெ.(n.) சீரிய ஒழுக்க முள்ளவன்; person of exemplary conduct. *"செயமொடு கோசலம் வாழு நேமன்" (இராமநா.பாலகா.1).*

[Skt. nēma > த. நேமன்.]

நேமனம் *nēmaṉam,* பெ.(n.) **நியமனம்** (இ.வ.) பார்க்க; see *niyamaṉam.*

த.வ. அமர்த்தம்

[Skt. ni-yamana > த. நேமனம்.]

நேமி-த்தல் *nēmi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. அமர்த்துதல் (நியமி); to appoint. *"நேமியாத பாங்கியர்" (தணிப்பா.i, 327, 26).* 2. சிந்தித்தல்; to conceive. *"நற்கணி நேமித்தெழுதாச் சித்திர வடிவார்தோள்" (திருப்பு.598).*

த.வ. அமர்த்தல்

[Skt. niyama > த. நியமி'-த்தல். நியமித்தம்→ நியமித்தல்]

நேமி[2] *nēmi,* பெ.(n.) 1. வட்டம் (திவா.); circle. 2. தேருருளை; wheel of a chariot. *"தேர்முடுக... விளங்கு சுடர்நேமி" (குறுந்.189).* 3. சக்கராயுதம்; discus. *"திண்பூஞ் சுடர்நுதி நேமியஞ் செல்வர்" (திவ்.இயற்.திருவிருத்.9).* 4. ஆளுமைச்சக்கரம்; wheel of sovereignty. *"நேமியுய்த்த நேஎ நெஞ்சின்" (புறநா.3).* 5. **சக்கரவாளம்** பார்க்க; see *sakkara-vāḷam. "நேமி முதல்... நெடுங்குன்றம்" (பரிபா.15, 4).* 6. பூமி (திவா.); earth. 7. மோதிரம் (பிங்.); ring. 8. **சக்கரவாகம், 1** பார்க்க; see *sakkaravāgam. "பொலஞ்சுட்டு நேமி வாண்முகந் துமிப்ப" (குறுந்.227).* 9. சக்கரப்படையையுடைய திருமால்; Visnu, as wielding the discus. *"நேமியோ குலிசியோ நெடுங் கணிச்சியோ" (கம்பரா. பிணிவீட்.70).* 10. தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர்; an Arhat, one of 24 *tirttaṅkarar. "நிகரி னேமிதன்னகர்" (சீவக. 912).*

நேமி[3] *nēmi,* பெ.(n.) 1. கடல்; ocean. 2. உணவுக் கட்டுப்பாடு பத்தியம்; diet. 3. நிலவுலகு; earth. 4. மூங்கில்; bamboo. 5. சக்கரவாகப்புள்; the ruddy goose. 6. எலிச்செவிப்பூடு; rat's ear plant. 7. சந்தனம்; sandal wood. 8. வேங்கை; East Indian kino. 9. பழமுண்ணிப் பாலை; edible palay (சா.அக.).

நேமி[4] *nēmi,* பெ.(n.) தேர்மரம், தேர்கட்ட பயன்படுவதால் இப்பெயர், இதினின்று சிவப்பு துவர்ப்புப் பிசின் எடுக்கப்படும். இதன் பட்டை குடல் நோய் தீர்க்கும். மரத்திலிருந்து ஒரு வகை அயச்சத்து எடுக்கப்படும்; chariot tree - Dalbergia oojeinesis so called from its usefulness for making chariots. Gives astringent red gum, bark is useful in bowel complaints. A crystalline substance like magnesia is sometimes found in the wood (சா.அக.).

நேமிகாதகம் *nēmikādagam,* பெ.(n.) நிரய வகை (சிவதரு.சுவர்க்கநரக.114); a hell.

நேமிச்சந்திரன் *nēmi-c-candiraṉ,* பெ.(n.) **நேமி, 11** (த.நி.போ.13) பார்க்க; see *nēmi.*

[Skt. nēmi > த. நேமி+சந்திரன்.]

நேமிசந்தனா *nēmi-sandaṉā,* பெ.(n.) வேங்கை (மலை.); Indian Kino.

[நேமி + சந்தனா.]

நேமிசாரம் *nēmi-sāram,* பெ.(n.) சக்திசாரம்; which see (சா.அக.).

[நேமி + சாரம்.]

நேமிநாதம் *nēmi-nātam,* பெ.(n.) குணவீர பண்டிதர் இயற்றிய ஒரு தமிழிலக்கண நூல்; a treatise on Tamil grammar by *kuṇa-vīra-paṇḍitar.*

[நேமி + நாதம்.]

நேமிநாதன் *nēmi-nādaṉ,* பெ.(n.) அருகக் கடவுள் (சூடா.); arhat.

[Skt. nēmi > த. நேமிநாதன்.]

நேமிப்புள்[1] *nēmi-p-puḷ,* பெ.(n.) **நேமி, 9** (திவா.) பார்க்க; see *nēmi.*

[Skt. nēmi > த. நேமி+புள்.]

நேமிப்புள்[2] *nēmi-p-puḷ,* பெ.(n.) சக்கிர வாகப்புல்; the ruddy grass (சா.அக.).

நேமியங்கனி *nēmiyaṅgaṉi,* பெ.(n.) கொடி முந்திரி (திராட்சை); grapes (சா.அக.).

[நேமியம் + கனி.]

நேமியஞ்செல்வன் *nēmiyañ-celvaṉ,* பெ.(n.) பேரரசன் சக்கரவர்த்தி; emperor. *"வைய நின்னடி நிழலின் வைகி நேமியஞ் செல்வனாகி" (சீவக.2417).*

[Skt. nēmi+ > த. நேமியஞ்செல்வன்.]

நேமியம் *nēmiyam,* பெ.(n.) நிலப்பனை; ground palm (சா.அக.).

நேமியான் *nēmiyāṉ,* பெ.(n.) (சக்கராயுதன்) திருமால்; *Visṇu,* as wielding the discus. *"வள்ளுரு ணேமியான் வாய்வைத்த வளைபோல" (கலித்.105).*

[Skt. nēmi > த. நேமியான்.]

நேமிவலவன் *nēmivalavaṉ,* பெ.(n.) 1. கடவுள் (வின்.); god. 2. திருமால்; *Visṇu.* *"திருநேமிவலவா" (திவ்.திருவாய்.6, 10, 2).* 3. அரசன் (வின்.); king.

[Skt. nēmi+ > த. நேமிவலவன்.]

நேமுகம் *nēmugam,* பெ.(n.) பணியமர்த்தம் (நியமனம்) (இ.வ.); appointment.

[Skt. niyāmaka > த. நேமுகம்.]

நேமுகன் *nēmugaṉ,* பெ.(n.) அலுவலன்; officer. *"நிசக்கட்டாகக் கொடுக்கும் நேமுகர்போல்" (சரவண. பணவிடு.139).*

நைகமேசக்கிரகம் *naigamēśakkiragam,* பெ.(n.) குழந்தைகளைத் தாக்கும் ஒரு கிரக நோய், இதனால் வாந்தியில் நுரை தள்ளல், முதுகு வளைதல், மிரண்ட பார்வை, இளைப்பு, மூர்ச்சை முதலிய குணங்களுண்டாகும்; a disease in children due to the evil influence of a star. It is characterised by frothy vomits, bending the middle of the trunk, anxious look, constant eructations and unconciousness (சா.அக.).

நைச்சிகம் *naiccigam,* பெ.(n.) **நைச்சியம்** (இ.வ.) பார்க்க; see *naicciyam.*

நைச்சியம் *naicciyam,* பெ.(n.) 1. தாழ்மை; humility. *"செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து" (திருவாய்.நூற்.16).* 2. இழிவு (நீச)த் தன்மை; lowness, meanness, baseness. 3. தன்வயப்படுத்துகை (கொ.வ.); winning over to one's side.

[Skt. naicya > த. நைச்சியம்.]

நைச்சியம்பண்ணு-தல் *naicciyam-paṇṇu-,* 5 செ.குன்றாவி.(v.t.) தன் வயப் படுத்துதல் (கொ.வ.); to win over to one's side.

[Skt. naicya > த. நைச்சியம்+பண்ணு-.]

நைச்சியானுசந்தானம் *naicciyāṉu-candāṉam,* பெ.(n.) தன்னைத் தாழ்த்திக் கூறுகை (வின்.); profession of humility.

[Skt. naicya+anu-sandhāna > த. நைச்சியானுசந்தானம்.]

நைசர்க்கிகம் *naiśarkkikam,* பெ.(n.) 1. இயற்கையாகத் தோன்றியது; that which is

natural or inherent. *"நைசர்க்கிக பலன்கள்" (மங்களே.பக்.40).* 2. இயல்பு; nature (சா.அக.).

[Skt. naisargika > த. நைசர்க்கிகம்.]

நைசிகம் *naicigam,* பெ.(n.) 1. நாசியிற் புகட்டும் மருந்து; any medicinal powder taken by nose. 2. காக்கை; crow. 3. காக்கைக் கொல்லி; crow killer (சா.அக.).

நைசிகரவேம்பு *naicigara-vēmbu,* பெ.(n.) சூரத்து நிலவேம்பு; surat chiretta (சா.அக.).

நைசியம்[1] *naiśiyam,* பெ.(n.) நாசியிற் புகுத்தும் மருந்து (சங்.அக.); medicine inhaled by the nose.

[Skt. nasya > த. நைசியம்[1].]

நைசியம்[2] *naiśiyam,* பெ.(n.) 1. **நைசியம்** பார்க்க; see *naiciyam.* 2. களைக்கொட்டு; a kind of water lily root as கொட்டிக் கிழங்கு.

நைசிரவம் *naiśiravam,* பெ.(n.) துவரை; red gram.

நைசுபண்ணு—தல் *naiśupaṇṇu-,* 5 செ.கு.வி. (v.i.) புகழ்ச்சியாகப் பேசி இணங்கச் செய்தல்; cajole. *'நீ என்னதான் நைஸ்பண்ணினாலும் நான் பணம் தரப்போவதில்லை'?*

த.வ. சரிக்கட்டல், இனிப்பு காட்டல்

[E. nice > த. நைசு+பண்ணு]

நைட்டிகதீட்சை *naiṭṭiga-tīṭcai,* பெ.(n.) சிவதருமணி (சைவச.ஆசாரி.62.உரை); (*Śaiva*) a way of initiation.

[Skt. nai-sdhika+dīkṣa > த. நைட்டிகதீட்சை.]

நைட்டிகப்பிரமசாரி *naiṭṭika-p-pirama-cāri,* பெ.(n.) குரவர் (ஆசாரியர்)க்கும் பெற்றோருக்கும் பணிவிடை செய்து கொண்டு வாழ்நாள் இறுதி வரை மாணியம் (பிரமசரியம்) பூண்டிருப்பவன் (சிவதரு.பரிகா.2,உரை); religious audent who serves his preceptor and parents in life-long celibacy.

[Skt. nai-sdhika+brahma+cārin > த. நைட்டிகப்பிரமசாரி.]

நைட்டிகம்[1] *naiṭṭigam,* பெ.(n.) வாழ்நாள் முழுவதும் மாணியம் (பிரமசரியம்) பூண்டொழுகும் நிலை (சி.சி.8, 32, சிவாக்.); state of being a life-long celibate religious student.

[Skt. naisthika > த. நைட்டிகம்.]

நைட்டிகம்[2] *naiṭṭigam,* பெ.(n.) நிட்டை அதாவது மனம் அசைவற்றிருத்தல்; fixedness of mind (சா.அக.).

நைட்டிகன் *naiṭṭigaṉ,* பெ.(n.) **நைட்டிகப் பிரமசாரி** (கூர்மபு.வருணா.36) பார்க்க; see *naṭṭiga-p-piramasāri.*

[Skt. naisthika > த. நைட்டிகன்.]

நைட்டிகாசிரியன் *naiṭṭigāśiriyaṉ,* பெ.(n.) வேள்வித்தீ போன்ற செயற்பாடுகள் எதுவுமின்றி (அக்கினிகாரியாதி கருமங்களாலின்றி) யாவையும் ஞானத்தாலே பண்ணும் ஆசிரியன் (சி.சி.8, 5, சிவாக்.); priest who performs initiatory rites mentally.

[Skt. naisthika > த. நைட்டிகாசிரியன்.]

நைட்டூரியம் *naiṭṭūriyam,* பெ.(n.) கொடுமை (யாழ்.அக.); cruelty, inhumanity.

[Skt. naisṭhurya > த. நைட்டூரியம்.]

நைடதம் *naiḍadam,* பெ.(n.) வடமொழி நைடதத்தை மூலமாகக் கொண்டு அதிவீரராம பாண்டியன் இயற்றிய தமிழ்க் காப்பியம்; a poem in Tamil by *Adivīra-rāmapāṇḍiyaṉ,* adopted from *śrī*Harsha's naisadha.

[Skt. naisadha > த. நைடதம்.]

நைத்திகம் *naittigam,* பெ.(n.) **நைத்தியம்** (யாழ்.அக.) பார்க்க; see *naittiyam.*

நைத்தியம் *naittiyam,* பெ.(n.) நீடுநிலை (நித்தியத்துவம்) (யாழ்.அக.); perpetuity, eternity.

[Skt. naitya > த. நைத்தியம்.]

நைதிகை *naitikai,* பெ.(n.) 1. ஊசிமல்லிகை (பிங்.); eared jasmine. 2. முல்லைக்கொடி; smooth jasmine (சா.அக.).

[cf. yūthikā > த. நைதிகை.]

நைப்பூதிகம் *naippūdigam,* பெ.(n.) சூலி மரம்; toon tree (சா.அக.).

நைப்பூலிகம் *naippūligam,* பெ.(n.) காரை; thorny webera (சா.அக.).

நைபத்தியம் *naipattiyam,* பெ.(n.) நடிப்பவன் கொள்ளும் புனைவு (வேடம்) (இலக்.அக.); costume of an actor.

[Skt. naipathya > த. நைபத்தியம்.]

நைபாரிசம் *naipārišam,* பெ.(n.) செங்கரும்பு; red sugarcane (சா.அக.).

நைபாலி[1] *naipāli,* பெ.(n.) அடுக்குமல்லிகை (மலை.); double jasmine.

[Skt. naipāli > த. நைபாலி.]

நைபாலி[2] *naipāli,* பெ.(n.) 1. சிவந்த பாடாணம்; a prepared poison. 2. நீலம்; blue (சா.அக.).

நைபாலிகம்[1] *naipāligam,* பெ.(n.) 1. செம்பு; copper. 2. பித்தளை (யாழ்.அக.); brass.

[Skt. naipālika > த. நைபாலிகம்.]

நைபாலிகம்[2] *naipāligam,* பெ.(n.) 1. **நைபாலி** பார்க்க; see *naipāli.* 2. தாமிரம்; copper (சா.அக.).

நைபானி[1] *naipāṉi,* பெ.(n.) **நைபாலி** (சங்.அக.) பார்க்க; see *naipāli.*

நைபானி[2] *naipāṉi,* பெ.(n.) அடுக்கு மல்லிகை; double jasmine (சா.அக.).

நைமிசம்[1] *naimišam,* பெ.(n.) **நைமி சாரணியம், நைமிசப்படலம்** பார்க்க; see *naimišāraṇiyam, naimiša-ppaḍalam.*

[Skt. naimiša > த. நைமிசம்.]

நைமிசாரணியம் *naimišāraṇiyam,* பெ.(n.) 1. புகழ் பெற்ற ஒரு தவச்சாலை; a forest in India famous as the resort of ascetics. *"நைமிசாரணியத்தருள்கூர் சூத முனியடைந்தான்" (கூர்மபு.இந்திர.2).* 2. நைமிசாரணியத்துள்ள திருமால் திருப்பதி; a *visṇu* shrine in *Naimišāraṇya. "நைமி சாரணியத்து ளெந்தாய்" (திவ். பெரியதி.1,6,1).*

[Skt. naimiša+araṇya > த. நைமி சாரணியம்.]

நைமித்தகருமம் *naimitta-karumam,* பெ.(n.) **நைமித்திகம்** (பிரபோத.39, 13) பார்க்க; see *naimittigam.*

[Skt. naimittika+karmaṉ > த. நைமித்தகருமம்.]

நைமித்திகசிராத்தம் *naimittiga-širāttam,* பெ.(n.) நாள்தோறும் செய்தலன்றித் தென் புலத்தார்க்குச் செய்யும் சிறப்பு வழிபாடு (சேது.மங்கலதீர்த்.43); offerings to the manes on special occassions.

[Skt.naimittika+šraddha > த. நைமித்திக+சிராத்தம்.]

நைமித்திகப்பிரளயம் *naimittiga-p-piraḷayam,* பெ.(n.) நான்முகனது (பிரமனது) பகற்காலம் நீங்கியதும் தோன்றும் ஊழி முடிவு (பிரளயம்) (சங்.அக.); deluge said to occur at the close of a *Brahmā's* day.

[Skt.naimittika+pra-laya > த. நைமித்திகப் பிரளயம்.]

நைமித்திகம் *naimittigam,* பெ.(n.) சிறப்பான காலங்களில் நிகழ்வது; that which is occassional or periodical, as rite, ceremoney, festival, etc. *"நைமித்திகத் தொடு கூடிய நித்தியம்" (குறள், 18, உரை).*

[Skt. naimittika > த. நைமித்திகம்.]

நைமித்தியம் *naimittiyam,* பெ.(n.) **நைமித்திகம்** (யாழ்.அக.) பார்க்க; see *naimittigam.*

நைர்மல்லியம் *nairmalliyam,* பெ.(n.) 1. தூய்மை (சுத்தம்); cleanliness; purity.

2. மாசின்மை; free from stain or flaw; free from all defects (சா.அக.).

நைராசியம் *nairāśiyam,* பெ.(n.) நம்பிக்கை யின்மை; hopelessness.

[Skt. nairāśya > த. நைராசியம்.]

நைராத்மியதர்சனம் *nairātmiya-dar-šaṉam,* பெ.(n.) ஆதன் (ஆன்மா) இல்லை என்ற வாதம் (நீலகேசி,528, உரை); the doctrine of the non-existence of the soul.

[Skt. nis+ātmya+darśana> த. நைராத்மிய தர்சனம்.]

நைருதம் *nairutam,* பெ.(n.) பகலின் 12ஆம் முழுத்தம் (முகூர்த்தம்) (சங்.அக.); the 12th *mugūrttam* of the day-time.

[Skt. nairrta > த. நைருதம்.]

நைருதி *nairuti,* பெ.(n.) தென்மேற்கு (சங்.அக.); the south west quarter.

[Skt. nairrti > த. நைருதி.]

நைவேத்தியம் *naivēttiyam,* பெ.(n.) கடவு ளுக்குப் படைக்கும் உணவு; offering made to a deity. *"என்னாவி நைவேத்தியம்" (தைலவ. தைல. பாயி. 1).*

[Skt. nai-vēdya > த. நைவேத்தியம்]

நைவேதனம் *naivēdaṉam,* பெ.(n.) 1. ஒப்ப டைக்கை; dedication. 2. **நைவேத்தியம்** பார்க்க; see *naivēttiyam. "மதுவர்க்கமொடே கனித்தொகை மண மிகுந்த நைவேதனம்" (சிவரக. சுகமுனி. 24).*

[Skt. nai-vēdana > த. நைவேதனம்]

நைவேதி-த்தல் *naivēdi-,* 4 செ.குன்றாவி.(v.t.) கடவுளுக்கு உணவு முதலியன படைத்தல்; to offer to a deity, as food. *"பொற்கிண்ணத் தாற்றளவி நைவேதித்து" (தைலவ. தைல. 137).*

நொசுட்டு *noṣuttu,* பெ.(n.) குறை கூறுகை; criticism, fault-finding.

[Skt. niṣkhura > த. நொசுட்டு]

நொத்தாரிசு *nottārišu,* பெ.(n.) ஆவணம் எழுதிப் பதிவு செய்பவன்; notary public officer authorized to attest documents.

நொந்தாவிகம் *nondāvigam,* பெ.(n.) சினாசிகா (சூழ்ப்பிராய்); demon tree. (சா.அக.)

நோட்டீசு *nōṭṭīsu,* பெ.(n.) அறிவிப்புச்சீட்டு; notice.

த.வ. அறிக்கை

[E. notice > த. நோட்டீசு]

நோட்டு *nōṭṭu,* பெ.(n.) 1. உறுதிச்சீட்டு; promisory note. 2. அரச அறிவிப்பு; king's written announcement. 3. அரசாங்கத்தால் வெளியிடும் பணத்தாள்; currency note. *'ஐந்து உருவா நோட்டுக் கொடுத்தான்?'.* 4. எழுதுவதற்குரிய குறிப்பேடு; note book. 5. ஆங்கிலப் பண்வகை; an English tune.

[E. note > த. நோட்டு]

நோதாங்குசம் *nōdāṅgusam,* பெ.(n.) தருப்பைப் புல்; sacrificila grass. (சா.அக.)

நௌகர் *naugar,* பெ.(n.) வேலைக்காரன்; servant.

[U. naukar > த. நௌகர்]

நௌகரி *naukari,* பெ.(n.) வேலை; service. (C.G.).

[U. naukari > த. நௌகரி]

நௌகரிமானியம் *naukari-māṉiyam,* பெ.(n.) ஊழியத்திற்காக விடப்படும் மானியம்; service inam.

நௌகாதானம் *naukā-taṉam,* பெ.(n.) இறந்த பதினொன்றாம் நாள் இறந்தவர் பொருட்டு கரும்பால் படகு வடிவமாகச் செய்து பார்ப்பனர்க்குக் கொடுக்கும் தானம்; present of a boat made of sugar-canes given to a brāhmin on behalf of a deceased person on the eleventh dan after his death.

ப

பக்கோடா *pakkōḍā,* பெ.(n.) கடலை மாவில் நீர் ஊற்றிப் பிசைந்து வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை, கொத்துமல்லித்தழை முதலியவற்றைச் சேர்த்து சிறு சிறு உருண்டைகளாக எண்ணெயில் போட்டு எடுக்கும் ஒரு வகைத் தின்பண்டம்; a kind of spicy savoury prepared from chickpea paste and fried in oil.

த.வ. முறுவடம்

[U. pagōra > த. பக்கோடா]

பக்தவத்சலன் *pakta-vatcalaṉ,* பெ.(n.) அடியவர்களுக்கு அன்பனான கடவுள் (உ.வ.). God, as fond of His devotees.

த.வ. அடியார்க்கருளி

[Skt. bhakta-vatsala > த. பக்தவத்சலன்]

பக்தன் *paktaṉ,* பெ.(n.) இறையுணர்வாளன், கடவுள் பற்று உள்ளவன்; pious; godly man.

த.வ. பத்தன்

[Skt. bhakta > த. பக்தன்]

பக்தாதாயம் *paktādāyam,* பெ.(n.) நெல் வருவாய்; (S.I.I.i,81.); revenue in paddy.

[Skt. bhakta+ādāya > த. பக்தாதாயம்]

பக்தி *pakti,* பெ.(n.) 1. கடவுள் குரு முதலியோரிடத்தில் காட்டும் அன்பு; piety; faith; devotion, as to a deity, guru, etc. 2. வழிபாடு (வின்.); service, worship.

த.வ. பத்திமை, இறையன்பு

[த. பத்தி > Skt. bhakti > த. பக்தி]

பக்திச்சுவாலகர் *pakti-c-cuvālagar,* பெ.(n.) இறைத் (தேவ) தூதர் வகையினர்; an order of angels.

பக்திநூல் *paktinūl,* பெ.(n.) கடவுளிடத் துண்டான அன்பு, போற்றல், இரக்கம் (தயை), இறையுணர்வு, பத்தி, ஊழ்கம் (தியானம்) முதலியவற்றால் ஆதன் கரிசி (பாவத்தி)னின்று விடுதலைப் பெற்றுத் தூய (பரிசுத்த) நிலையில் வீடுபேறு (விதேக முத்தி) அடைவதைப் பற்றிக் கூறும் நூல் (சா.அக.); book of science and Philosophy of piety that liberates the soul from sins and reveals the truths of perfection through devotion, prayer, piety, reverence and meditation.

த.வ. தெய்வப்பனுவல்

[த. பத்தி > Skt. bhakti > த. பக்தி]

பக்திமான் *paktimāṉ,* பெ.(n.) இறைப்பற்று (கடவுள் பத்தி) நிறைந்தவர்; devotee. 'அவர் பெரிய பக்திமான்' (இ.வ.).

த.வ. இறைப்பற்றாளன்

[த. பத்தி > Skt. bhakti > த. பக்தி]

பக்தியோகம் *pakti-yōgam,* பெ.(n.) பயன் கருதாது கடவுளை வழிபடுதலால் விண்ணுலக வாழ்வை அடைவதற்குரிய வழிவகை; (அட்டாதச. அர்த்தபஞ்.31.); piety or devotion without the expectation of any reward, as a means of salvation.

[Skt. bhakti > த. பக்தி]

பக்து *pakdu,* பெ.(n.) கு.வி.எ. (adj.) மாத்திரம்; only, merely, simply.

[U. faqt > த. பக்து]

பக்தை *paktai,* பெ.(n.) இறைப்பற்றுள்ளவள் (தென்.இந்.சேடத்.பக்.313); woman devotee.

[Skt. bhaktā > த. பக்தை]

பக்ரீத் *pakrit,* பெ.(n.) ஒரு முகம்மதியப் பண்டிகை; a Muhammadan festival.

[Skt. bagrīd > த. பக்ரீத்]

பக்ரு *pakru,* பெ.(n.) செருக்கு; pride.

[Ar. fakhr > த. பக்ரு]

பகரு *pagaru,* பெ.(n.) பணிப்பெருமிதம் (இ.வ.); prestige of power.

[E. power > த. பகரு]

பகவத்கீதை *pagavat-kīdai,* பெ.(n.) அருச்சுனன் பொருட்டுக் கண்ணன் மொழிந்ததும் பதினெட்டுப் பகுதியுடையதும் மகாபாரதத்தில் அடங்கியதுமான வடமொழி

நூல்; a section of 18 chapters in the Mahābārata, containing the sacred instruction of Krșņa to Arjuna.

[Skt. Bhagavat-gītā > த. பகவத்கீதை]

பகவத்விசாயம் *pagavat-višāyam,* பெ.(n.) கடவுள் தொடர்பான திருவாய் மொழி விளக்கவுரை; the commentary of Tiruvāymoli, as consisting of discourses relating to the Supreme Being.

[Skt. bhagavat-vișaya > த. பகவத்விசாயம்]

பகவதி *pagavadi,* பெ.(n.) 1. அறக்கடவுள் (பிங்.); the Goddess of Virtue. 2. துர்க்கை (திவா.); Durgā. 3. மலைமகள்; Pārvadi. 4. தாமிரபரணி ஆறு (நாமதீப.526); the river Tāmiraparaņi.

[Skt. Bhagavatī > த. பகவதி]

பகவதிநாள் *pagavadi-nāļ,* பெ.(n.) கணை (பூர) நாள் (திவா.); the 11th nakṣatra.

[Skt. Bhagavati > த. பகவதி+நாள்]

பகவந்தன் *pagavandan,* பெ.(n.) இறைவன்; Lord. "மூவருள் முதலான பகவ வந்தனீயென்று கண்டும்" (நூற்றெட்டுத். திருப்பு.97).

[பகு > Skt. bhaj. பகவன்>Skt. bhagavan, bhagavanta > த. பகவந்தன்]

பகாங்குரம் *pagāṅkuram,* பெ.(n.) 1. பெண்குறி அரத்தம், அதாவது மாதவிடாய்; menstrual blood. 2. பெண்குறி (நோனி)யின் முனை; clitoris. 3. பெண்குறி மயிர்; pubic hair. (சா.அக.)

[பகு+அங்குரம் – பகாங்குரம்]

பகாசுரன் *pagāsuran,* பெ.(n.) 1. வீமனால் கொல்லப்பட்ட ஓர் அசுரன்; a giant slain by Bīma. 2. பெருந்தீனிக்காரன் (இ.வ.); a glutton. 3. செய்த வேலைக்குக் கூலி அதிகமாகக் கேட்பவன் (இ.வ.); one who is extravagant in his demand.

[Skt. Bakāsura > த. பகாசுரன்]

பகாப்பிடுகு *pagāpiḍugu,* பெ.(n.) பல்லவரது பட்டப் பெயர்களுள் ஒன்று; the title of the Pallava kings.

பகாய்பாக்கி *pagāi-pākki,* பெ.(n.) பழைய நிலுவை (C.G.); old balance, arrears.

[U. baqāya-baqi > த. பகாய்பாக்கி]

பகாரிசம் *pagārišam,* பெ.(n.) பெண்களின் உடம்பில் கோளாறடைந்த காற்றானது (வாயுவானது) பெண்குறி (நோனி)ப் பாதையில் தங்கி அவ்விடத்தில் சதை வளர்ந்து காளானைப் போல் பருத்துத் தீய (துர்) நீர் வழிவதால் தீய நாற்றத்தை வீசும் ஒரு நோய்; a disease of the vagina in which the deranged (vayu) wind humour etc., of the body is lodged in the vaginal region giving rise to crops of soft polypus in the passage which after sometime assumes the shape of a mushroom secreting foul smelling fluid c.f. இலிங்காரிசம். (சா.அக.)

பகிசங்கை *pagišaṅgai,* பெ.(n.) மலங்கழிக்கை; evacuation of the bowels, dist.fr. arpacaṅkai.

[Skt. bahiš-šaṅka > த. பகிசங்கை]

பகிசுகரி–த்தல் *pagișkari-,* 4 செ.குன்றாவி.(v.t.) விலக்குதல்; to expel excommunicate, boycott.

[Skt. bahiš-kr-, > த. பகிசுகரி–,]

பகிசுகாரம் *pagišu-kāram,* பெ.(n.) விலக்குகை; expulsion, excommunication ostracism, boycott.

[Skt. bahișkāra > த. பகிசுகாரம்]

பகிரங்கம் *pagiraṅgam,* பெ.(n.) வெளிப்படை; publicity, openness.

[Skt. bahiraṅga > த. பகிரங்கம்]

பகிரண்டம் *pagir-aṇḍam,* பெ.(n.) வெளிப் புடவி (அண்டம்); the outer spaces of the universe. "மல்லாண்ட தடக்கையாற் பகிரண்டமகப்படுத்த காலத்து" (திவ்.பெரியதி. 11.6:2).

த.வ.பேரண்டம்

[Skt. bahiraṇda> த. பகிரண்டம்]

பகிரதன் *pagiradaṉ,* பெ.(n.) பகீரதன் பார்க்க; see pagīradaṉ. "பகிரத னெனும் பார்த்திபன் வந்தனன் பரிவால்" (கம்பரா.அகலி.43).

பகிரந்தரசத்தி *pagirandarašatti,* பெ.(n.) 1. தாமரை வளையம்; lotus stalk. 2. உண்டாக்கும், காக்கும், அழிக்கும் ஆற்றல் (சத்தி) (சா.அக.); the power of creating, acting and destroying.

பகிரதப்பிரயத்தனம் *pagīrada-p-pirayattaṉam,* பெ.(n.) கங்கையைக் கொண்டு வருதற்குப் பகீரதன் செய்த முயற்சி, பெரு முயற்சி; super human effort, as that of Bagirataṉ in bringing down the sacred Gaṅgā.

[Skt. bhagīratha-prayatna> த.பகீரதப் பிரயத்தினம்]

பகீரதம் *pagīradam,* பெ.(n.) பனைச் சருக்கரை; palmyra sugar (சா.அக.)

பகீரதன் *pagīradaṉ,* பெ.(n.) சாம்பலாய்ப் போன வரும் தன் மூதாதையருமான சகரர்கள் நற்கதியடைதற் பொருட்டு வானத்தினின்று கங்கையை நிலத்திற்குக் கொணர்ந்து பாதாளத்துச் செலுத்தியதாகச் சொல்லப்படும் ஞாயிற்று (சூரிய)க் குலத்து அரசன்; an ancient king of the solar race who is believed to have brought down the sacred Gaṅgā from the heaven to the earth and conducted her to the nether world in order to purify the ashy remains of his ancestors.

[த. பகிரதம் > Skt. > பகீரதன்]

தென்புலத்தார் வழிபாடு தமிழ் மரபு. பகுப்புண்ட மடல் கொண்ட பனையின் பெயர் பகிரம் – பகிரதம். பகிரதன் எனும் சொல் பனையன் எனப் பொருள்படும். பனையன் என்னும் பெயர் பகிரதன் – பகீரதம் என வடமொழியில் திரிந்தது எனலாம்.

பகீரதி *pagīradi,* பெ.(n.) பகீரதனால் கொண்டு வரப்பட்ட ஆறு, கங்கை; the sacred Gaṅgā, as brought down by Bagīrataṉ. "பகீரதி மணங்கொளச் சடை வைத்த மறையவன்" (தேவா.497,9).

[Skt. Bhagirathi> த. பகீரதி]

பகுசா *pagušā,* கு.வி.எ.(adv.) பெரும் பான்மையாய் (அனேகமாய்); very likely, for the most part.

த.வ.பெரும்பகுதி

[Skt. bahušas> த. பகுசா]

பகுசுருதியாகமம் *pagu-šurudi-y-āgamam,* பெ.(n.) சைனாகமம் மூன்றனுள் ஒன்று (சீவக.213,உரை); one of the three šaiṉākamam.

[Skt. bahu-šruti+yāgama>த. பகுசுருதியாகமம்]

பகுசுவாசம் *pagušuvāšam,* பெ.(n.) மேல் மூச்சு (சா.அக.); hard breath; heavy breathing.

பகுத்திரரோகசமனி *paguttira-rōgašamaṉi,* பெ.(n.) திருநாமப் பாலை (சா.அக.); wild sarsaparilla.

பகுதாகம் *pagudāgam,* பெ.(n.) அதிக நீர் வேட்கை (சா.அக.); indefatigable thirst, unquenchable thirst.

[Skt. bahu> த. பகு]

பகுதூக்கம் *pagutūkkam,* பெ.(n.) மிகுந்த தூக்கம் (சா.அக.); excessive sleep.

[பகு+தூக்கம்]

[Skt. bahu> த. பகு]

பகுநாயகம் *pagunāyagam,* பெ.(n.) செல்வராட்சி (வெகுநாயகம்); plutocracy. "பகுநாயகம் ஜகத்து என்கிறதைத் தவிர்த்துக் குறுகவிட்டு வைத்தார்களிறே சில வேதாந்திகள்" (திவ்.திருநெடுந்.2,வ்யா.பக்.19).

[Skt. bahunāyaka> த. பகுநாயகம்]

பகுபித்தம் *pagupittam,* பெ.(n.) அதிக பித்தம்; excessive bile. (சா.அக.)

[Skt. bahu> த. பகு]

பகுமதி *pagumadi,* பெ.(n.) பகுமானம் பார்க்க; see pagumāṉam. "பகுமதி நிமித்தமாகப் போர்த்தே னென்னில்" (நீலகேசி,272,உரை).

[Skt. bahumati> த. பகுமதி]

பகுமானம் *pagumāṉam,* பெ.(n.) பெரு மதிப்பு; high esteem, great respect; honour, dignity. "பாட்டொன்றோ வென்ன பகுமானம்" (பஞ்ச.திருமுக.924).

[Skt. bahu> த. பகு]

பகுமூத்திரம் *pagu-mūttiram,* பெ.(n.) நீரிழிவு; diabetes.

[Skt. bahu> த. பகு]

மோள்+திரம் – (மோட்டிரம்) >மோத்திரம் > மூத்திரம் த. மூத்திரம் >Skt. mūtra

பகுவசனம் *pagu-vašaṉam,* பெ.(n.) பன்மை (வீரசோ.வேற்.4,உரை); plural number.

[Skt. bahu+vašana> த. பகுவசனம்]

பகுவபஞ்சம் *paguva-pañjam,* பெ.(n.) நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று; an Upaniṣad, one of 108.

[Skt. bahva-pañca> த. பகுவபஞ்சம்]

பகூதகம் *pagūdagam,* பெ.(n.) துறவு (சன்னியாசம்) நான்கனுள் ஏழு வீடுகளில் மட்டும் இரந்துண்டு (பிச்சை – எடுத்து) மரபொழுக்கப் (நியம)படியொழுகும் துறவு (சன்னியாச) வகை (கைவல்.சந்தே.158); a kind of asceticism in which the ascetic lives on alms from seven houses, one of four šaṉṉiyāšam.

த.வ.ஏழக இரப்புத்துறவு

[Skt. bahūdaka> த. பகூதகம்]

பகூதகன் *pagūdagaṉ,* பெ.(n.) துறவி (சன்னியாசி)கள் நால்வருள் ஏழு வீடுகளில் பிச்சையெடுத்துண்டு மரபொழுக்கப் (நியம)ப்படி யொழுகும் துறவி (சூதசங். ஞானயோக 6:3); ascetic who lives on the alms from seven houses, one of four šaṉṉiyāši.

த.வ.ஏழக இரப்புத்துறவன்

[Skt. bahūdaka> த. பகூதகன்]

பகேடா *pakēḍa,* பெ.(n.) 1. சண்டை, தொந்தரவு; wrangling, dispute, quarrel. 2. வம்பு செய்பவ–ன்–ள்; quarrelsome person. 'அவள் பெரிய பகேடா'. (இ.வ.).

த.வ.வம்பாளன், வம்பாடி

[U. bakhērā> த. பகேடா]

பகேடாவேலை *pakēḍā-vēlai,* பெ.(n.) சிக்கலான வேலை; troublesome or vexatious business.

[U. bakērā> த. பகேடா]

பகைர்சரத் *pagair-šarat,* கு.வி.எ.(adv.) கட்டுப்பாடு இல்லாமல்; without any condition, unconditionally.

[U. baghair+shart> த. பகைர்சரத்]

பகோடா *pakōḍā,* பெ.(n.) பக்கோடா பார்க்க; see pakkōḍā.

த.வ. முறுவடம்

[Skt. pagōra> த. பகோடா]

பங்கசார்த்தம் *paṅgašārttam,* பெ.(n.) இவறன்மை (உலோபத்தனம்) (யாழ்.அக.); miserlines.

பங்கசூரணம் *paṅga-šūraṉam,* பெ.(n.) 1. தாமரை வேர்ச் சூரணம்; powder of lotus root. 2. தாமரை வேர்; lotus root. (சா.அக.)

[பங்கம்+சூரணம்]

பங்கணம் *paṅgaṉam,* பெ.(n.) தாழ்த்தப்பட்ட வராகக் கருதப்படுவோர் வாழும் இடம் (யாழ்.அக.); the quarters of the outcastes.

[Skt. pakkaṉa> த. பங்கணம்]

பங்கத்தி சூலை *paṅgatti-šūlai,* பெ.(n.) விலா பக்கத்தில் ஏற்படும் குத்தல் நோய்; pin prick or shooting pain felt on the side. (சா.அக.).

பங்கதாளம் *panga-tāḷam,* பெ.(n.) தாள வகை (பரத.தாள.4,உரை); a variety of time measure.

[Skt. bhanga> த. பங்க]

தாள் = கால், அடி. தாள் → தாளம் = ஆடுபவர் காலால் தட்டும் காலக் கணிப்பு. ஆட்டத்திற்கும் பாட்டிற்கும் உரிய காலக் கணிப்பு, காலக் கணிப்பிற்குத் தக்க இசைக் கருவி. *த. தாளம் > Skt. tāla.*

பங்கப்பிரபை *panga-p-pirabai,* பெ.(n.) ஏழு நிரய (நரக)த் தொன்று (சீவக.2817,உரை); a hell, one of elu-naragam.

[Skt. panka+pirapa> த. பங்கப்பிரபை]

பங்கயச்செல்வி *pangaya-c-celvi,* பெ.(n.) தாமரையிலுள்ள திருமகள் (இலக்குமி); Lakṣmi, as seated on a lotus. "பங்கயச் செல்வி பாண்டிமா தேவி" (தேவா.868,1).

[Skt. pankaya> த. பங்கயம்]

பங்கயப்படு *panga-p-paḍu,* பெ.(n.) தாமரை மடு; lotus tank. "பங்கயப்படு வொத்துளை பாவாய்" (சீவக. 898).

Skt. pankaya> த. பங்கயம்.

பங்கயப்பீடிகை *pangaya-p-piḍigai,* பெ.(n.) புத்தரது பாதங்கள் அமைந்த தாமரைப் (பதும) பீடம்; lotus - shaped pedestal of Buddha's feet. "அறவோன் பங்கயப் பீடிகை" (மணிமே, 28:211).

[Skt. pankaya> த. பங்கயம்]

பங்கயம் *pangayam,* பெ.(n.) 1. சேற்றில் தோன்றும், தாமரை; Lotus, as mud -born. "பங்கயங் காடு கொண் டலர்ந்த பாங்கெலாம்" (சூளா.நாட்டு.2) 2. தாமரை வடிவினதாகிய ஒரு கருவி; a lotus - shaped weapon. "மணிமலர்ப் பங்கயந் தண்டம்" (கந்தபு. விடைபெறு.37). 3. நாரை (இலக்.அக.); heron.

[Skt. panka-ja> த. பங்கயம்]

வடமொழியில் pankaja என்னும் சொல்லிற்குச் சேற்றில் பிறந்தது என்று பொருள். மாலையில் குவியும் மலரினையுடைய ஒரு வகைத் தாமரை போன்ற பயிர் வகைகள் உள்ளன. இது மண், சேறு, சகதி, களிமண் போன்ற பொருள்களுள்ள panka என்னும் சொல்லிலிருந்து வளர்ந்தது. தமிழில் தாமரை போன்ற பொருள்களுள்ள பங்கயமும், சேறு போன்ற பொருள்களுள்ள பங்கயமும் வழக்கில் இருக்கின்றன. ஆயினும், பங்கயன், பங்கயம் என்பன போல வருவன வடசொல் pankajaவிலிருந்து வளர்ந்தனவாக இருக்கின்றன. பங்கம் என்னும் சொல்லிலிருந்து நேரடியாக இவ்வாறான சொற்கள் வளருவதற்கு இடமுண்டு. அவ்வகையைத் தவிர்த்து pankaja விலிருந்து சொற்கள் வளர்ந்து வந்துள்ளமை pankaja என்னும் சொல்லின் பெருவழக்கைக் காட்டுகிறது.

பங்கயன் *pangayan,* பெ.(n.) 1. தாமரையில் தோன்றிய நான்முகன்; Brahmā, as lotus-born. 2. பகலவன்; Sun, as Lord of the lotus.

[Skt. panka-ja> த. பங்கயன்.] 'ன்' ஆ.பா. ஈறு

பங்கலா *pangalā,* பெ.(n.) பங்களா பார்க்க; see pangaḷā.

[U. banglā> த. பங்கலா]

பங்கவாசம் *panga-vāšam,* பெ.(n.) சேற்றில் வாழும், நண்டு (யாழ்.அக.); crab, as living in mud.

[Skt. Panka-vāsā> த. பங்கவாசம்]

பதி → வதி = தங்குமிடம். வதி→ வஸ்→ வாஸ் (வ.வ.2.83). வாஸ்→ வாஸ > த. வாசம்.

பங்களா *pangaḷā,* பெ.(n.) தோட்ட வீடு, வளமனை; bungalow.

[U. banglā> த. பங்களா]

பங்கா *pangā,* பெ.(n.) ஆட்டுதற்குரிய தூங்கு விசிறி வகை (வின்.); punkan, a large swinging fan.

[U. pankhā> த. பங்கா]



பங்காரு *pangāru,* பெ.(n.) பொன் (இ.வ.); gold.

பங்காளசம்பா *pangāla-šambā,* பெ.(n.) ஒரு வகை நெல்; a kind of paddy.

[பங்காளம்+சம்பா]

பங்காளபாத்து *pangālapāttu,* பெ.(n.) தயிரில் செய்த உணவு வகை; rice mixed with curds and seasoned.

பங்காளம் *pangalam,* பெ.(n.)1. வங்காள நாடு; Bengal. 2. ஒரு பண் (இராகம்) (பரத. இராக.56.); a specific melody - type.

[Skt. vanga> த. பங்காளம்]

பங்காளமுத்து *pangāla-muttu,* பெ.(n.) போலி முத்து; false or imitation pearl, as from Bengal.

[பங்காளம்+முத்து]

முள் > முட்டு> முத்து = உருண்டை வடிவாயிருக்கும் சிறு பொருள், தொண் (நவ) மணிகளுள் ஒன்று.

பங்காளா[1] *pangāļā,* பெ.(n.) 1. ஒரு வகை வாழை; a kind of plantain. 2. பண் வகை; a kind of melody - type.

[பங்ககாளம் > பங்காளா]

பங்கியிலை *pangiyilai,* பெ.(n.) கஞ்சாயிலை; leaf of cannabis sativa. (சா.அக.)

பங்கில்லம் *pangillam,* பெ.(n.) நத்தைச் சுண்டி; bristly button weed; shaggy button weed. (சா.அக.)

த.வ.குழிமீட்டான்

பங்கிவித்து *pangivittu,* பெ.(n.) கஞ்சாவிதை; seed of cannabis sativa. (சா.அக.)

பங்குவாதம் *panguvādam,* பெ.(n.) இடுப்பில் இடைநின்ற காற்று விரைப்பு அடைவதினால் இரண்டு தொடைகளின் நரம்புகளை இழுத்து முடமாக்கும் ஓர் ஊதை (வாத) நோய்; a kind of rheumatic affection in which the nerve trunks of both the legs are drawn up owing to the deranged vayu lying about the region of the waist, thus rendering the patient completely lame. 2. உடம்பின் கீழ்ப்பாகத்தையாவது இடுப்பினின்று கால் வரை வளியினால் உணர்ச்சி (சுவர்ணை) யற்றதாகவும் அசைக்க முடியாததாகவும் செய்யுமோர் ஊதை நோய்; paralysis of both the legs and lower part of the body with loss of both sensation and movement.

பங்குனன் *pangunan,* பெ.(n.) மானேறு (உத்தர) நாளிற் பிறந்த அருச்சுனன்; Arjuna, as having been born in the uttara-phalgunī nakṣatra. "வென்றிப் பங்குனனென்னு நாமம் பகுதியாற் படைத்திட்டானே" (பாரத. சம்பவ.83).

[Skt. phalguna>Pkt. phagguna>த. பங்குனன்]

பங்குனி *panguni,* பெ.(n.) மீன மாதம், பன்னிரண்டாம் மாதம்; the 12th month of the solar year, March - April. "வெய்யோன்... பங்குனிப் பருவஞ் செய்தான்" (சீவக.851).

[Skt. phalgunī > Pkt. phaguni> த. பங்குனி]

பங்குனிக்கதிர் *panguni-k-kadir,* பெ.(n.) மீன (பங்குனி) மாதத்தில் உழமண் தரையில் கதிர்போல் வளரும் பூநீறு; a crop like growth of efflorescent, salt said to be found on the soil of fuller's earth in the month of March. (சா.அக.)

[Skt. phalgunī > Pkt. phaguni> த. பங்குனி]

பங்குனியுத்தரம் *panguni-y-uttaram,* பெ.(n.) மீன (பங்குனி) மாத வெள்ளுவாவும் மானேறு விண்மீனும் (உத்தரமும்) கூடிய ஒரு சிறப்பு நாள் (இறை.கள.17,உரை); special festival day when the moon is in conjunction with the 12th nakṣatra.

[பங்குனி+உத்தரம்]

பங்கேருகம் *pangērugam,* பெ.(n.) சேற்றில் தோன்றும் தாமரை; lotus, as mud - born.

"இராமநாதன் பாதபங்கேருகங்கள்" (சேதுபு. தோத்.40.)

[Skt. parikē-ruha> த. பங்கேருகம்]

பச்சக்கம் *paccakkam,* பெ.(n.) நேர்ச்சான்று (பிரத்தியட்சப் பிரமாணம்); direct proof. perception. "மற்ற பச்சக்கமாகும்" (மேருமந்.1320).

[Skt. pratyaksa>Pkt. paccakka> த. பச்சக்கம்]

பச்சகானாம் *paccakānām,* பெ.(n.) 1. கூத்தாடிப் பையன்; dancing boy. 2. சிறு துணி; small cloth, as given to boys.

[U. baccekānā> த. பச்சகானா]

பச்சம் *paccam,* பெ.(n.) பட்சம் பார்க்க; see paṭcam "பச்சம் முடை யடிகடிருப் பாதம்" (தேவா.166,2).

[Skt. pakṣa > த. பச்சம்]

பச்சவாதம் *pacca-vādam,* பெ.(n.) உடலின் ஒரு பக்கத்தை உணர்ச்சியறச் செய்யும் நோய் வகை. (பைஷஜ.302); paralytic attack on one side of the body, *Hemiplegia.*

[Skt. pakṣa-väta >> த. பச்சவாதம்]

பச்சவாயு *paccavāyu,* பெ.(n.) வளி (வாயு)யினால் உடம்பின் ஒரு பக்கத்தில் உணர்ச்சி இல்லாமல் போகை; loss of sensation on either side of the body due to the deranged condition of vayu prevailing on that side. (சா.அக.)

த.வ.பக்கஊதை

[த. பக்கம் > Skt. pakṣa>த. பட்சம் > பச்சம்]

பச்சாத்தாபம் *paccāt-tābam,* பெ.(n.) 1. கழிவிரக்கம் கொள்ளுகை; repentance; regret, contrition 2. இரக்கம்; compassion, pity.

[Skt. paścāt-tāpa> த. பச்சாத்தாபம்]

பச்சாது *paccādu,* கு. பெ.எ. (adv.) பின்பு (யாழ்.அக.); afterwards.

[Skt. paścāt> த. பச்சாது]

பச்சி *pacci,* பெ.(n.) ஒரு வகை மாப்பண்டம்; a kind of cake.

த.வ.மாவேய்ச்சி, வேய்ச்சி

[U. bhūjya> பஜ்ஜி > த. பச்சி]

பச்சிமதோகரன் *paccimatōkaran,* பெ.(n.) 1. தட்டான்; goldsmith. 2. கள்வன்; thief.

[Skt. paśyatō-hara> த. பச்சிமதோகரன்]

பச்சியகுன்மக்கட்டி *pacciya-kunma-k-katti,* பெ.(n.) பருத்த குன்மக்கட்டி; matured and enlarged abdominal tumour (சா.அக.).

[பச்சிய குன்மம்+கட்டி]

பச்சியமானகுன்மம் *pacciyamāna-kunmam,* பெ.(n.) பச்சியகுன்மக்கட்டி பார்க்க (சா.அக.); see pacciya-kunma-k-katti.

பச்சிராசன் *paccirāśan,* பெ.(n.) கருடன்; Brahmini kite (சா.அக.).

Skt. pakshi+ raja]

பச்சினி *paccini,* பெ.(n.) 1. பத்தாம் மாதம்; tenth month. 2. பத்து மாதம் நிறைந்த கருப்பவதி; a woman of full term pregnancy i.e., ten months pregnant woman. (சா.அக.)

பசலி *pasali,* பெ.(n.) நிலவரி வாங்கும் தொடராண்டாக கி.பி.1555 முதல் அக்பரால் அறிவிக்கப்பட்ட வருவாய்த்துறை ஆண்டு; a revenue year meant for tax collection introduced by the emperor Akbar from 1555 A.D.

த.வ. நிலவரி ஆண்டு

[Ar. Pers. fasil - separating > U. fasali> த. பசலி]

அரபி மொழியில் அறுவடையையும் அறுவடைக் காலத்தையும் குறித்த சொல் நாளடைவில் அறுவடைக் காலத்தில் வாங்கும் வரியையும் நிலவரி ஆண்டையும் குறிப்பதாயிற்று. கி.பி.1-7-591 முதல் வழக்கூன்றிய இச்சொல்லாட்சி அரபி பாரசீக மொழிகளின் வாயிலாக உருதுமொழியில் இடம் பெற்றுள்ளது எனவும், கி.பி.1555 முதல் இந்தியாவில் பேரரசர் அக்பரால் இது நிலவரி வாங்கும் தொடராண்டாக மாறியது எனவும் கூறுவர்.

அக்பருக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மூவேந்தர் காலத்தில் நிலவரித் திட்டம் தமிழகத்தில் நடப்பில் இருந்தது. பசலி என்னும் சொல்லை ஆள்வதால் அக்பர் காலத்திலிருந்துதான் நிலவரி முறை இந்தியாவில் அறிமுக மாயிற்று என்னும் தவறான வரலாற்றுக் குறிப்பு இடம் பெற வழி வகுத்துவிடும். ஆதலின் பசலி என்பதை ஆள வேண்டிய நிலை இருப்பின் நிலவரி ஆண்டு என்பது பொருந்தும்.

பசனம் *pašanam,* பெ.(n.) சமையல்; cooking.

[Skt. pacana > த. பசனம்]

பசனை *pašanai,* பெ.(n.) கடவுளைப் போற்றிப் பாடுகை; chanting devotional songs.

[Skt. bhajana > த. பசனை]

பசாசம்[1] *pašasam,* பெ.(n.) பெருவிரலுஞ் சுட்டுவிரலும் நீங்க ஒழிந்த மூன்று விரலுந் தம்மிற் பொலிந்து நிற்கும் இணையா வினைக்கை வகை (சிலப்.3,18,உரை); (Nāṭya). a gesture with one hand in which the fingers other than the thumb and the forefinger are joined together and held upright.

[Skt. piśaca > த. பசாசம்]

பசாசம்[2] *pašāsam,* பெ.(n.) இரும்பு; iron. "காந்தங்கண்ட பசாசத் தவையே" (சி.போ.5).

[Skt. pacana > த. பசனம்]

பசாசரதம் *pašāsa-ratam,* பெ.(n.) பேய்த்தேர்; mirage, as a goblin's car. "ஒத்தன பசாசரதமே" (அரிச்.பு.விவாக.107).

[Skt. pacana > த. பசனம்]

பசாசு *pašāsu,* பெ.(n.) பேய்; devil, vampire, goblin, demon, fiend. நரிபசாசேனம் (திருவாலவா.28,64).

பசாடு *pašāḍu,* பெ.(n.) மாசு (யாழ்ப்.); film, as in the eye; speck, as in a gem; scum, as on the surface of water.

பசாடுரி-த்தல் *pašāduri-,* செ.கு.வி. (v.i.) விழியின் தோட்டை உரித்தல் (யாழ்ப்.); to remove film from the eye.

பஞ்சகசாயம் *pañša-kašāyam,* பெ.(n.) 1. ஐந்து வகைச் சரக்குகளான தேன், நெய், பால், வாழை, சருக்கரை, இவைகளைக் கொண்டு ஆயுள்வேத முறையில் வடிக்கும் ஒரு குடிநீர்; a decoction extracted by boiling a mixture of substances viz, honey, ghee, milk, plantain and sugar. 2. நெல்லி, தும்பை, கடுக்காய், வெள்ளி லோத்திரம், மஞ்சிட்டி ஆகிய இவ்வைந்து சரக்குகளையும் கொண்டு தமிழ் முறைப்படி இறக்கும் கருக்கு நீர் (சா.அக.); a kind of decoction extracted from five drugs viz. goose berry leucas flower, gall nut, wood apple fruit shell, Indian madder. 3. ஐந்து வகை மருந்துகள்; five varieties of decoction 'seperately or as a whole.

[பஞ்சம்+கசாயம்]

பஞ்சகவ்வியம் *pañja-kavviyam,* பெ.(n.) ஆவினின்று கிடைக்கும் பால், தயிர், நெய், மூத்திரம், சாணம் என்ற ஐந்து பொருள் களைக் கொண்டு மந்திரப்படிச் சேர்க்கப் படுவது; the five products of the cow mixed together while reciting mantras, viz., milk, curd, ghee, urine and dung. "பஞ்சகவ்வியம் கொள்ளவோர் பசுவருளென்றான்" (உத்தரரா. அசுவ.129).

[Skt.pañcan+gavya> த. பஞ்சகவ்வியம்]

பஞ்சகற்பம் *pañja-karpam,* பெ.(n.) கத்தூரி மஞ்சள், மிளகு, வேப்பங் கொட்டை, கடுக்காய்த் தோல், நெல்லிப் பருப்பு என்ற ஐவகைப் பண்டங்களாலாகியதும் தலையிற் பூசப்படுவதுமான மருந்துப் பூச்சு வகை (திருமந்.849); medicinal paint for the head, made of five ingredients, viz., kastūrimañjal, miḷagu, vēpaṅgoṭṭai, kaḍukkāy-t-tōl, nelli-p-paruppu.

[பஞ்ச+கற்பம்]

[Skt.pañcan> த. பஞ்ச]

பஞ்சகற்பமாத்திரை *pañja-karpamāttirai,* பெ.(n.) சந்தனம், மஞ்சள், கடுக்காய், நெல்லி, தான்றிக்காய் இவைகளை சமனெடை கொண்டு, ஆடாதோடைச் சாற்றினா லரைத்துத் திரட்டி உலர்த்திய மாத்திரை. இதனால் மலச்சிக்கல், வெள்ளை, அரத்தக்

கொதிப்பு, தாதுத் தளர்ச்சி போகும்; pill or tablet containing sandal, turmeric and the three myrobalans. It is said to cure constipation. White discharge, blood pressure and weakness.

[பஞ்சம்+கற்பம்+மாத்திரை]

பஞ்சகாயம் *pañca-kāyam* பெ.(n.) திரிபலை, வெங்காயம், காயம் என்ற ஐவகை மருந்துச் சரக்கு; the five medicinal substances, viz., tiripalai, veṅgāyam, kāyam, etc.,

[பஞ்சம்+காயம்]

பஞ்சகாரகம் *pañja-kāragam,* பெ.(n.) காயம், வெள்ளுள்ளி, வெங்காயம், கடுகு, வெந்தயம் என்ற ஐவகைச் சரக்கு (சங்.அக.); the five pungent substances, viz., kāyam, veḷ-ḷ-uḷḷi, veṅgāyam, kaḍugu, vendayam.

[Skt.pañcan+kṣāraka> த. பஞ்சகாரகம்]

பஞ்சகாரம் *pañja-kāram,* பெ.(n.) ஐந்து வகையான காரச் சரக்குகள்; five kinds of alkaline. 'சீனக்காரம் அல்லது படிகாரம், வெண்காரம், பூங்காரம், காடிக்காரம், சவர்காரம்'(சா.அக.).

பஞ்சகாலம்[1] *pañja-kālam,* பெ.(n.) காலை, முற்பகல், நண்பகல், பிற்பகல், மாலை (பிராதக் காலம், சங்கவகாலம், மத்தியான்ன காலம், அபரான்னகாலம், சாயங்காலம்) என முறையே காலை முதல் அவ்வாறு நாழிகை கொண்ட ஐந்து பகற்பகுதிகள்; the five divisions of day-time, viz., pirātakkālam, šaṅgavagālam, mattiyāṉṉakālam, aparāṉṉakālam, šāyaṅkālam. "பஞ்ச கால முறைமை... அனுஷ்டித்து வருகிற.... கூரத் தாழ்வான்" (பட்டர்வைபவம், பக்.1).

[பஞ்சம்+காலம்]

[Skt.pañcan> த. பஞ்சம்]

பஞ்சகாலம்[2] *pañca-kālam,* பெ.(n.) வறுமைக் காலம்; அகவிலை குறைந்த காலம்; time of famine. "கார் தட்டிய பஞ்ச காலத்திலே" (தனிப்பா.i,236:4).

[பஞ்சம்+காலம்]

பஞ்சகாவியம் *pañja-kāviyam,* பெ.(n.) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தா மணி, வளையாபதி, குண்டலகேசி என்ற ஐம்பெரும் வனப்புகள் (காவியங்கள்); the five great epics in Tamil, viz., Silappadikāram, Maṉimēgalai, Sivagašindāmaṉi, Vaḷaiyā-padi, Kuṇḍalakēši.

த.வ.ஐம்பெருங்காப்பியம்

[Skt.pañcan> த. பஞ்ச]

பஞ்சகிருத்தியம்[1] *pañja-kiruttiyam,* பெ.(n.) ஆதன் மும்மலங்களை ஒழித்து வீடு பெறு வதற்குத் துணையாய் இருக்கும் படைக்கை, நிலைபேறு, அழிக்கை, மறைக்கை, அருளுகை (சிருட்டி, திதி, சங்காரம், திரோபாவம், அனுக்கிரகம்) என்ற கடவுளின் ஐந்தொழில் (சி.சி.1,36); the five functions of God, designed by Divine Grace for the deliverance of the souls, viz., širuṭṭi, titi, šaṅgāram, tirōpavam, aṉukkiragam 2. படைக்கலத்தாற் பொரும்பொழுது வீரன் செய்ததற்குரிய தொடை, விலக்கு, செலவு சேமம், தவிர்த்துவினை செயல் என்ற ஐந்தொழில் (சீவக.1676, உரை.); the five acts of a warrior in a fight with weapons, viz., toḍai, vilakku, šelavu, šēmam.

த.வ. ஐந்தொழில்

[Skt.pañcan+kirutiya> த. பஞ்சகிருத்தியம்]

பஞ்சகிருத்தியம்[2] *pañjakiruttiyam,* பெ.(n.) உழுது பயிர் செய்தல், பொருள்களை நிறுத்து விற்றல், நூல் நூற்றல், எழுதுதல், படை கொண்டு காரியம் பயிலுதல் ஆகிய ஐந்து தொழில்கள்; the five occupations, viz., agriculture, trade, weaving, writing and fighting.

[பஞ்சம்+கிருத்தியம்]

பஞ்சகுத்தம் *pañja-kuttam,* பெ.(n.) ஐந்துறுப்பு களையும் அடக்கும் ஆமை (யாழ்.அக.); tortoise, as hiding its five limbs.

[Skt.pañca+gupta> த. பஞ்சகுத்தம்]

பஞ்சகோசம் *pañja-kōšam,* பெ.(n.) அன்னமய கோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞான மயகோசம், ஆனந்தமயகோசம் என ஆன்மாவை மூடிக் கொண்டுள்ள ஐவகைக் கோசங்கள் (சி.சி.ப்ர.மாயா.8.); the five vestures of the soul, viz., annamaya-kōšam, pirāṇamaya - kōšam, manō-mayō-kōšam, viññāṇamaya -kōšam, āṉandamaya - kōšam.

[Skt.pañjan+kōša> த. பஞ்சகோசம்]

பஞ்சகோணம் *pañca-kōṇam,* பெ.(n.) ஐந்து நேர்க் கோடுகளாற் சூழப்பட்ட வடிவம் (வின்.); pentagon.

[Skt.pañcan> த. பஞ்சம்]

பஞ்சகோலகிருதம் *pañjakōlakirudam,* பெ.(n.) குன்மம், பச்சை நோய், மண்ணீரல், விருத்தி, இருமல், காய்ச்சல் இவைகளைப் போக்க வேதிமுறைப்படி செய்து கொடுக்கும் ஒரு மருந்து; an ayurvedic medicinal ghee phlegm, dyspepsia, chlorosis, enlarged spleen, cough and fevers (சா.அக.)

[பஞ்சம்+கோலம்+கிருதம்]

பஞ்சகோலம் *pañja-kōlam,* பெ.(n.) சுக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திர மூலம் என்ற ஐவகைப் பண்டங்களின் கூட்டு; mixture of the five drugs, šukku, tippali, tippali-mūlam, cevviyam, cittira-mūlam.

[Skt.pañcan+kōla> த. பஞ்சகோலம்]

பஞ்சகௌடம் *pañca-kauḍam,* பெ.(n.) சுத்தகௌடம், கானகுப்சம், சாரசுவதம், உற்கலம், மிதிலை என்ற ஐம்பகுதி கொண்ட பழைய கௌடப் பகுதி (சது.); the ancient province of gaur, comprising the five districts, šutta-kauḍam, kāṉakupcam. šārašuvadam, uṟkalam, mitilai.

[Skt.pañcagauḍa> த. பஞ்சகௌடம்]

பஞ்சகௌவியம் *pañca-kauviyam,* பெ.(n.) பார்க்க பஞ்சகவ்வியம்; see pañca-kavviyam. "பாங்கினாற் பஞ்ச கௌவிய மஞ்செனு மமிர்தம்" (சிவரக.நாரத.4).

பஞ்சசத்தி *pañca-catti,* பெ.(n.) பராசக்தி, திரோதானசத்தி அல்லது ஆதிசக்தி, இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியா சத்தி என்ற ஐவகைச் சிவ சத்திகள் (சதாசிவ.); the five energies of šiva, viz., parācatti, tirōtāṉa-catti or ādicatti, iccācatti, ñāṉcatti, kiriyācatti.

பஞ்சசமிதி *pañja-šamidi,* பெ.(n.) உணவுத் தூய்மை, நிறைவு, நோன்பு, ஓதல், இறைப்பற்று என்ற ஐந்து ஒழுக்கங்கள் (மேருமந்.145,உரை.); the five kind of discipline, viz., āgāracutti, tirupti, tavam, attiya-yaṉam, deyva-patti.

பஞ்சசயனம் *pañja-šayaṉam,* பெ.(n.) 1. அன்னத்தூவி, பூ, இலவம் பஞ்சு, கோரை, மயிர் இவற்றால் அமைந்த ஐவகைப் படுக்கை (திவா.); the five kinds of bed stuffed variously with swan-feathers, flowers, silk-cotton, sedge and hair. 2. அழகு, குளிர்ச்சி, மெதுத் தன்மை, மிகுமணம், வெண்மை என்ற ஐவகைத் தன்மை கொண்ட படுக்கை; good bed having the five qualities of being beautiful, cool, soft, fragrant and white; "மெத்தென்ற பஞ்சசயனத்தின் மீதேறி" (திவ்.திருப்பா.19,வ்யா.).

[Skt.pañcan+šayana> த. பஞ்சசயனம்]

பஞ்சசரக்கு *pañca-šarakku,* பெ.(n.) வீரம், சவுரி, இலிங்கம், அரிதாரம், பூரம் ஆகிய இவ்வைந்து வகைச் சரக்குகள்; the five kinds of minerals, corrosive sublimate, yellow arsenic, vermilion, orpiment and subchloride of mercury (சா.அக.).

[Skt.pañcan> த. பஞ்ச]

பஞ்சசரம் *pañja-šaram,* பெ.(n.) ஐந்து சரடுடைய தாழ்வடம்; a necklace of five strings. "த்ரிஸரம் பஞ்சஸரம் ஸப்தஸரம் என்றற் போலே சொல்லுகிற முத்து வடங் களையும்" (திவ்.அமலனாதி.10,வ்யா. பக்.104).

[Skt.pañcan+sara> த. பஞ்சசரம்]

பஞ்சசரன் *pañjašaraṉ,* பெ.(n.) காமன் (மன்மதன்); the god of love. "கன்னல் விற் பஞ்சசரனாதியோர்" (சிவக்.பிரபந்.பக்.247).

[Skt.pañcan+sara> த. பஞ்சசரன்]

பஞ்சசரி *pañja-šari,* பெ.(n.) ஐந்து சரங்கொண்ட அணி வகை (S.I.I.ii,181.); ornament of five strings.

பஞ்சசருக்கரை *pañja-šarukkarai,* பெ.(n.) சீந்தில் துண்டு, நீர்வள்ளிக்கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, நிலக்குமிழ் வேர், கற்கோவைத் தண்டு; இவைகள் ஒவ்வொன் றிலும் இருந்து காய்ச்சி தனித்தனியே வாங்கிய ஐந்து வகைச் சருக்கரை. இதை வங்க பற்பத்தில் கலந்து கொடுக்க நீரழிவு போகும் (சா.அக.); calcified tin given with the five salts extracted from each of the above drugs separately.

பஞ்சசன்மவாதனம் *pañjašaṉma-vādaṉam,* பெ.(n.) ஓக வகை; a yōgic posture. "பஞ்சசன்ம வாதனத்திடைப் பண்பொடு மிருந்து" (விநாயகபு.80,716).

பஞ்சசனன் *pañjašaṉaṉ,* பெ.(n.) கிருட்டிண னால் கொல்லப்பட்ட ஓர் அசுரன்; an asura slain by krṣṇa. "பஞ்சசனனுடலில் வளர்ந்து போய்" (திவ்.நாய்ச்.7,2).

[Skt.pañcajana> த. பஞ்சசனன்]

பஞ்சசாதனம் *pañja-šādaṉam,* பெ.(n.) ஓகிகளுக்குரிய இருக்கை, ஓகக் கச்சை, கோல், கமண்டலம், மந்திரமாலை ஆகிய துறவிக்குரிய ஐங்கருவிகள் (சி.சி.ப்ர.மாயா.15); the five requisites of a yōsin, viz., ācaṉam, yōga-paṭṭam, taṇḍam, kamaṇḍalam, cepamālai.

[பஞ்ச+சாதனம்]

[Skt.pañcan> த. பஞ்ச]

பஞ்சசாதாக்கியம் *pañja-šādākki-yam,* பெ.(n.) சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம், கன்ம சாதாக் கியமென்ற ஐவகைச் சிவபேதங்கள் (தத்துவப்.191,உரை.); the five manifestations of šiva, viz., šiva-šādākkiyam, amūrtti-šādākkiyam, mūrti-šādākkiyam, karttiru, šādākkiyam-kaṉma-šādākkiyam.

[Skt.pañcan+sādākhya> த. பஞ்சசாதாக்கியம்]

பஞ்சசாரம் *pañja-šāram,* பெ.(n.) 1. ஐந்து வகை சாரங்கள் – நவச்சாரம், சத்திசாரம், சிவசாரம், எவட்சாரம், கதலிச்சாரம்; the five kinds of acid salts viz., salt petre or nitrate of potash, salammonial, sakthi, salt, siva salt and plantin salt 2. ஐந்து வகை சத்துகள்; அவையாவன, காய்ச்சியப் பால், சருக்கரை, தேன், திப்பிலி, நெய் ஆகிய வைகளை நன்றாகக் கலக்கி பயன்படுத்தும் ஒரு ஆயுள் வேத மருந்து. an ayurvedic compound consisting of boiled milk, sugar, honey, piper longum and clarified butter well stirred up (சா.அக.).

பஞ்சசிகை *pañja-šigai,* பெ.(n.) மழிப்பு பண்ணத்தகாத உச்சி, புருவங்கள், முழங்கைகள் என்ற ஐந்திடங்கள் (சங்.அக.); the five parts of the body that must not be shaved, viz., crown of the head, brows and fore-arms.

[Skt.pañcan+sikai> த. பஞ்சசிகை]

பஞ்சசித்தர் *pañjašittar,* பெ.(n.) ஐந்து சித்தர்கள், அசுவினி தேவர், அகத்தியர், புலத்தியர், இராமதேவர், யூகிமுனி (சா.அக.); the five well siddhars viz., Asavin kumar, Agastyar, Pulastyar, Rama devar or Yacob and Uginumi.

பஞ்சசியம் *pañjašiyam,* பெ.(n.) (அகன்ற முகமுடையது) அரிமா (சிங்கம்) (யாழ்.அக.); lion, as broad-faced.

[Skt.pañcāsya> த. பஞ்ச சியம்]

பஞ்சசிலேத்துமம் *pañja-šilēttumam,* பெ.(n.) ஐந்து சிலேத்தும வகைகள், அவலம்பகம், கிலேதம், போதகம், தற்பகம், சந்திகம்; the

five phlegms humours viz., avalampagam, kiletham, pothagam, tharpagam and santhigam(சா.அக.).

பஞ்சசீதம் *pañjašidam,* பெ.(n.) பொன்னாங் காணி, சிறுகீரை, ஆவாரை, வல்லாரை, சீந்தில் எனும் ஐந்தின் பொதுப் பெயர்; five plants or herbs that cause cold. (சா.அக.).

பஞ்சசீலம் *pañja-šilam,* பெ.(n.) காமம், கொலை, கள், பொய், களவு என்னும் ஐந்தனையும் முற்றத் துறத்தலாகிய பௌத்த ரொழுக்கம் (மணிமே.21:57,உரை.); the five rules of conduct, viz., abstinence from passion, killing, toddy-drinking, lying and stealing.

[Skt.pañcan-sēla> த. பஞ்சசீலம்]

பஞ்சசுண்ணக்குகை *pañjašunna-k-kugai,* பெ.(n.) ஐந்து சுண்ணாம்பினால் செய்த மூசை; crucible made out of the five calciums (சா.அக.).

பஞ்சசுண்ணம் *pañja-šunnam,* பெ.(n.) ஐந்து வகைச் சுண்ணம், குக்கிடத்தின் சுண்ணம், காரக் கிளிஞ்சில் சுண்ணம், வெள்ளைக்கல் சுண்ணம், கடல் நுரைச் சுண்ணம், வலம்புரிச் சங்கின் சுண்ணம்; the five calciums or slaked limes viz. fowls excreta, bivale shell calcium, lime stone calcium, cutle fish calcium and right tuisted conch shell calcium (சா.அக.).

பஞ்சசுத்தி[1] *pañja-šutti,* பெ.(n.) 1. மன வழிபாட்டில் அன்றாட கரிசு தூய்மை, ஆதன் தூய்மை, மந்திர நீராற் தூய்மை, மந்திரத் தூய்மை என்ற ஐவகைத் தூய நடப்பு (சி.சி.8,20,நிரம்ப.); the five kinds of purification in mental worship, viz., pūdacutti, āṉmacutti, tiraviyacutti, mantiracutti, iliṅgacutti 2. பூசைக்கு இன்றி யமையாத ஆத்மசுத்தி, தானசுத்தி, மந்திர சுத்தி, திரவியசுத்தி, தேவசுத்தி என்ற ஐவகைச் சுத்திக்கிரியை; the five kinds of purification indispensable for worship, viz., ātmacutti, stāṉacutti, mantiracutti, tiraviyacutti, dēvacutti.

பஞ்சசுத்தி[2] *pañca-šutti,* பெ.(n.) 1. தமிழ் மருத்துவத்தில் சொல்லியுள்ள ஐந்து வகை சுத்தி முறைகள்; the five kinds of cleaning or purifying process adopted inTamil medicine.

'1. மண்ணிற்குள் புதைத்து வைத்தல் 2. தண்ணீர, கடுக்கு நீர், எரிநீர், செயநீர், புளித்தசாறு முதலியவைகளால் கழுவுதல் 3. அவித்தல், புடமிடல், எரித்தல் முதலியவை 4. காற்றில் உலர வைத்தல் 5. கதிரவன் ஒளியில் இடல்'.

2. சைவ சமயத்தைத் தழுவியவர்கள் கைக்கொள்ளும் தூய்மைப்படுத்தும் முறைகள்; the five kinds of purification practised among saivites.

'1. குளியல் 2. உள்ளொடுக்கம் 3. ஏனத்தூய்மை 4. இலிங்க தூய்மை, இலிங்க வழிபாடு 5. மந்திர உச்சரிப்பு; ஐந்தெழுத்து ஓதுதல், வணக்கம், ஐவகைத் தூய்மை, ஆதன் தூய்மை, இலிங்கத்தூய்மை, திரவிய தூய்மை, பூதத்தூய்மை, மந்திரத்தூய்மை' (சா.அக.).

பஞ்சசூனை *pañja-šūnai,* பெ.(n.) வீட்டில் உயிர்கட்குத் தற்செயலாய்க் கேடு விளைக்கக் கூடிய அடுப்பு, அம்மி, துடைப்பம், உரலுலக்கை, நீர்க்குடம் என்ற ஐவகைப் பண்டங்கள் (யாழ்.அக.); the five household articles, capable of causing harm to animal life, viz., oven, grinding stone, broom, pestle and mortar, and water-pot.

[Skt.pañcasūna> த. பஞ்சசூனை]

பஞ்சடைப்பு *pañjaḍaippu,* பெ.(n.) கண் பஞ்சடைந்த நிலை; the state where in the eye looks grim, dim and dark losing its reflex action (சா.அக.).

மறுவ.பூஞ்சகன்

பஞ்சணகுலம் *pañjaṇakulam,* பெ.(n.) பெருந்திருக்கம்மியன் (விசுவகர்ம குலம்) (மங்களே.சிறப்புப்); the caste of višuakarmas.

[Skt.pañcan> த. பஞ்சண]

பஞ்சணிப்படலம் *pañjaṇi-p-paḍalam,* பெ.(n.) பீளை சேர்ந்து பார்வை புகைச்சலும் கண் உறுத்தலும் ஒரு புறப் பார்வையும் உண்டாக்கும் கண்ணோய் வகை. (சா.அக.); an eye disease characterised by irritation, discharge from the eye squint eye etc. (சா.அக.).

பஞ்சத்துரோகம் *pañja-t-turōgam,* பெ.(n.) பார்க்க பஞ்சமாபாதகம்; see pañca-mā-pādagam.

பஞ்சதசப்பிரகரணம் *pañca-daša-p-pirakaraṇam,* பெ.(n.) ஓர் அத்துவைத நூல்; a treatise on advaita.

பஞ்சதசி *pañja-daši,* பெ.(n.) காருவா (அமாவாசை) அல்லது வெள்ளுவா (பௌர்ணமி) (சைவச.பொது.12.); the new moon or the fullmoon.

பஞ்சதந்திரம் *pañca-dandiram,* பெ.(n.) மித்திரபேதம், சுகிர்லாபம், சந்திவிக்கிரகம், அர்த்தநாசம், அசம்பிரேட்சியதுரித்துவம் என ஐம்பகுதியுடையதாய்த் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்; the Tamil version of pañca-tantra consisting of five books, viz., mittira-pēdam, šugir-lāpam, candi-vikkiragam, artta-nāšam, ašampirēṭciyan-karittuvam.

[Skt. pañcan+tantira> த. பஞ்சதந்திரம்]

பஞ்சதம் *pañcadam,* பெ.(n.) (பஞ்சபூதங்களும் பிரிந்து தனியாகை) சாவு (யாழ்.அக.); death, as being the dissolution of the five elements.

[Skt. pañca-tā> த. பஞ்சதம்]

பஞ்சதாரை¹ *pañja-tārai,* பெ.(n.) விக்கிதம், வற்சிதம், உபகண்டம், சவம், உபசவம் அல்லது மாசவம் என்ற ஐவகைக் குதிரை நடை; "the five paces of a horse, viz., vikkidam, vaṟkidam, upakaṇḍam, šavam or mācavam. "புக்குள பஞ்சதாரையோடு (திருவாலவா,28,47), (பு.வெ.ஒழிபு,வென்றிப். 13,உரை.)

[Skt. pañcan+dhārā> த. பஞ்சதாரை]

பஞ்சதாரை² *pañja-tārai,* பெ.(n.) சருக்கரை; pure cane-sugar, refined sugar. "வீழ்சுவையினும் விரும்பத்தக்கதெனும் பஞ்சதாரையினில்" (மாறனங்.235,உரை.).

க.ம.பஞ்சதாரா

[Skt. pañcan-dhārā> த. பஞ்சதாரை]

பஞ்சதாளப்பிரபந்தம் *pañja-taḷa-p-pirapantam,* பெ.(n.) ஐந்து தாளத்தால் அமைந்தது (சிலப்.3:154,உரை.); that which is composed of the five tāḷam.

பஞ்சதாளம் *pañja-tāḷam,* பெ.(n.) சிவ பெருமானது ஐந்து முகத்தினின்றும் பிறந்த தாகச் சொல்லப்படும் கச்சற்புடம், சாசற்புடம், சட்பிதாபுத்திரகம், சம்பத்து வேட்டம், உற்கடிதம் என்ற ஐந்து தாளங்கள் (பரத.தாள.2.); time-measures, viz., šaccaṟpuḍam, šāšaṟpuḍam, šaṭpidā -puttirakam, šampattu vēṭṭam, uṉkaḍidam said to have originated from the five faces of Siva.

[Skt. pañcan+tāla> த. பஞ்சதாளம்]

பஞ்சதிரவியம்¹ *pañja-tiraviyam,* பெ.(n.) மலைபடு பொருள், காடுபடு பொருள், நாடுபடு பொருள், நகர்படுபொருள், கடல்படு பொருள் என்ற ஐவகைப் பொருள்கள்; the five kinds of products, viz., malaipaḍu-tiraviyam, kāḍupaḍutiraviyam, nāḍupaḍu-tiraviyam, nagarpaḍu-tiraviyam, kaḍalpaḍu-tiraviyam.

[Skt. pañcan> த. பஞ்ச]

பஞ்சதிரவியம்² *pañjatiraviyam,* பெ.(n.) மஞ்சள், மா, நெல்லி முள்ளி, திரவியப் பட்டை முதலிய முழுக்காட்டுப் பொருள்கள் (S.I.I.V,86.); the five articles used in bathing an idol, viz., mañcal, mā, nellimuḷḷi, diraviiya-paṭṭai, etc.

[Skt. pañcan> த. பஞ்ச]

பஞ்சதிக்கிகம் *pañjadikkikam,* பெ.(n.) வயிறு, கண், கை, மார்பு, மூக்கு, ஆகிய உடம்பின் ஐந்து உறுப்புகள்; five parts of the body viz - abdomen, eye, arms, chest and nose (சா.அக.).

பஞ்சதீபாக்கினி *pañjadīpākkiṉi,* பெ.(n.) சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம் ஆகிய பசியை எழுப்பும் ஐந்து வகை சரக்குகள்; the five drugs that stimulate hunger, fire in the stomach viz - dried ginger, black pepper, long pepper, cumin seeds and cardomum (சா.அக.).

பஞ்சதீர்க்கம் *pañja-tīrkkam,* பெ.(n.) உடல் இலக்கணப்படி நீண்டிருக்க வேண்டிய புயம், கண், வயிறு, மூக்கு, மார்பு என்ற ஐவகை உடலுறுப்புகள்; the five parts of the body which ought to be long according to the ideal of personal beauty, viz, the arms, eyes, abdomen, nose and breast.

[Skt.pañcan+tērkka> த. பஞ்சதீர்க்கம்]

பஞ்சதீர்த்தம் *pañja-tīrttam,* பெ.(n.) தேவர், முன்னோர், இருடிகள், பூதம், மாந்தர் என்ற ஐவர்க்குமாக உள்ளங்கையின் பல பக்கங் களினின்று வெளிவிடப்படும் நீர் (சைவச. பொது.66,உரை.); water poured from the palm of the hand to propitiate Dēvas, pitṟs, ṟṣis, būtas and human beings.

[Skt.pañcan+tēṟtta> த. பஞ்சதீர்த்தம்]

பஞ்சதுட்டன் *pañja-tuṭṭaṉ,* பெ.(n.) பஞ்சமாபாதகன் பார்க்க; see pañjamā-pādagaṉ. "பஞ்ச துட்டனைச் சாதுவேயென்று" (தேவா.648,5.).

[Skt.pañcan+tūṭta> த. பஞ்சதுட்டன்]

பஞ்சதூபம் *pañja-dūpam,* பெ.(n.) அகில், சாம்பிராணி, குந்துருக்கம், குக்குலு, சூடன் என்ற ஐவகையான புகைத்தற்குரிய நறுமணப் பொருட்கள் (சங்.அக.); the five kinds off incense, viz, agil, šāmpirāṇi, kundurukkam, kukkulu, šūḍaṉ.

[Skt.pañcan-tūpa> த. பஞ்சதூபம்]

பஞ்சநதம் *pañjā-nadam,* பெ.(n.) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருவையாறு என்னும் இடம்; Tiruvaiyāṟu in tanjour district.

பஞ்சநமசுகாரம் *pañjā-namasukāram,* பெ.(n.)அருகர்,சித்தர்,சமயத்தலைவர், ஆசிரியர், சாதுக்கள் என்ற ஐவரையும் முறையே வணங்குதற்குறியாகச் சைன மதத்தில் வழங்கும் அ,சி,ஆ,உ,சா என்ற ஐந்தெழுத்துக்களாலாகிய மந்திரம் (சீவக. 951,உரை.); a mantra of five letters, viz., a,ci,ā,u,cā being the initial letters respectively of arukar, cittar, ācariyar, upāttiyāyaṉ, cātukkaḷ.

[Skt.pañcan-namaškara]

பஞ்சநாடி *pañjanāḍi,* பெ.(n.) 1. பஞ்சேந்திரியம்; the five senses of the body. 2. உடம்பிலுள்ள ஐந்து வகை நாடிகள்; the five kinds of pulsations in the body. 'அவைகள், வாத நாடி, பித்த நாடி, ஐய நாடி, பூதநாடி, குருநாடி' (சா.அக.).

[பஞ்ச+நாடி]

பஞ்சநாதம் *pañjānādam,* பெ.(n.) ஐந்து வகையான இசைக் கருவிகள் (பஞ்சமாசத்தம்) (பெரியபு.அதிபத்.19.); the five kinds of musical Instruments.

[Skt.pañcan+nādha> த. பஞ்சநாதம்]

பஞ்சநீராஞ்சனம் *pañja-nīrāñcaṉam,* பெ.(n.) விளக்கு, தாமரை, சீலை, தளிர் இவற்றைத் தெய்வத்துக்கு முன் சுழற்றியும் அதற்கு முன் தண்டனிட்டும் புரியும் ஐவகைப் பூசனைச் செயல் (யாழ்.அக.); worship of an idol in five ways, viz., waving of lamp, lotus, cloth and leaf and then falling prostrate before it.

த.வ.ஐம்பூசனை

[Skt. pañcan> த. பஞ்சம்]

பஞ்சப்பிரமம் *pañja-p-piramam,* பெ.(n.) 1. நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று; an upaniṣad, one of 108. 2. ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்ற சிவனைம் முகங்கள் (அபி.சிந்.); the five faces of Siva, viz., īcāṉam, taṟpuruḍam, agōram, vāmadēvam, cattiyōcādam 3.சிவபெரு மானது ஐந்து திருமுகம் பற்றிய மந்திரங்கள்; the mantras relating to the five faces of Siva "அடைவுறு பஞ்சப் பிரம மந்திரத்தால்" (காஞ்சிப்பு.சனற்.14).

த.வ.ஐம்பரம்

[Skt. pañca-brahma> த. பஞ்சப்பிரமம்]

பஞ்சபட்சிக்காதல் *pañja-paṭci-k-kādal,* பெ.(n.) ஐவகைப்பட்சிகளின் ஒலியைக் கொண்டு குறி சொல்லும் நூல்; treatise on sooth saying from the notes of pañja-paṭci.

[பஞ்ச(ம்)+பட்சி+காதல்]

பஞ்சபட்சிசாத்திரம் *pañja-paṭci-śattiram,* பெ.(n.) வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் ஆகிய பறவைகள் எழுப்பும் ஒலிகளை வைத்துப் பலன் சொல்லும் கணிய முறை; system off divination from the call of certain birds.

[Skt. pañcan-paṭci+śāstra > த. பஞ்சபட்சிசாத்திரம்]

பஞ்சபட்சிபாடாணம் *pañjapaṭci-pāḍāṇam,* பெ.(n.) வைப்பு நஞ்சு வகை (வினி.); a prepared arsenic.

[Skt. pañcan+pakṣin+pātana> த. பஞ்சபட்சிபாடாணம்]

மச்சமுனி '800—இல் சொல்லியபடி பூரசம், அப்பு ரசம், மகாரசம், பச்சை, வெள்ளை, மனோசிலை, வீரம், இலிங்கம் இவைகளைப் பொடித்து குப்பியில் அடைத்து சீலைமண் ஏழு செய்து தாழியில் மணலிட்டு வைத்து குறுகத்தீயிட்டு ஆறு சாமம் எரிந்து தணல் ஆறிய பின் குப்பியை உடைத்துப் பார்க்க நஞ்சாகும்' (சா.அக.).

பஞ்சபட்சிவேளை *pañja-paṭci-vēḷai,* பெ.(n.) 1. ஐவகைப்புட்களால் குறியறியும் நேரம்; auspicious hour ascertained by augury. 2. காருவா, வெள்ளுவாக்களின் (அமாவாசை பூர்ணிமைகளின்) இடையே ஐவகைப் புட்களின் உண்டி, துயில், நடை, அரசு, சாவுகளினின்று அறியும் குறி; augury from the eating, sleeping, walking, ruling and dying of pañja-paṭci between the full and the new moon.

[Skt. pañcan-paṭci> த. பஞ்சபட்சி+வேளை]

பஞ்சபடலம் *pañjapaḍalam,* பெ.(n.) கருவிழியில் ஏற்படும் 'தசை, நீர், அரத்தம், வரி, வெண்சதை' என்னும் ஐந்து வகைப் படலங்கள்; in the black of the eye which is divided into five varieties. (சா.அக.).

பஞ்சபத்திரகசாயம் *pañjapattira-kaśāyam,* பெ.(n.) பற்பாடகம், கோரைக் கிழங்கு, சீந்தில் கொடி, அதிவிடயம், நிலவேம்பு, இவைகள் சேர்ந்த கருக்கு நீர்; decoction prepared out of fever plant root of Indian papryus, stem moon creeper, Indian atees and ground neem (சா.அக.).

பஞ்சபத்திரம்[1] *pañjapattiram,* பெ.(n.) கடவுளுக்குப் படைத்தற்குரிய படையலமுது வகை (நைவேத்திய வகை) (S.I.I.iv,141.); offering of food stuffs, made along with cooked rice, to a deity.

[Skt. pañcan+bhadha> த. பஞ்சபத்திரம்]

பஞ்சபத்திரம்[2] *pañjapattiram,* பெ.(n.) ஐந்து வகை இலைகள்; ஆடாதோடை, கரிசலை, நொச்சி, அழவணை, கண்டங்கத்திரி; the herbacous leaves of Malabar winter cherry, eclipse plant, five leaved notchy and nail dye (சா.அக.).

பஞ்சபர்வம் *pañja-parvam,* பெ.(n.) ஒவ்வொரு மாதத்திலும் வரும் சங்கரமணம் என்னும் ஐந்து நோன்பு நாள்கள்; அவை கரும்பக்கத்தின் எட்டாவது பதினான்காவது அல்லது பதினோராவது பிறை நிலை (திதி)யும் தெய்வத்துக்குரிய நாண்மீனும் வெள்ளுவா

காருவா நாள்களும் என ஐந்தாகும். (இ.வ.); the five ceremonial days in a month, viz., caṅgiramaṉam, eighth and the fourteenth titi of the dark half or the 11th titi and the day of a deity, the newmoon and the fullmoon 2. ஒவ்வொரு பக்க (பட்ச)த்திலும் வரும் ஐந்து நோன்பு நாள்கள் (வின்.); the five ceremonial days in each lunar fortnight.

[Skt. pañcan+parvam> த. பஞ்சபர்வம்]

பஞ்சபரமேட்டிகள் *pañja-paramēṭṭikaḷ,* பெ.(n.) அருகர், சித்தர், ஆசாரியர், ஆசிரியர், துறவி என்ற ஐவகை சைன சமயப் பெரியார் (சிலப்.10,18,உரை.); five chief worthies, viz., arugar. šittar, āšāriyar, āširiyar, šādukkaḷ.

[Skt. pañcan+paramēṣṭhin> த. பஞ்சபரமேட்டிகள்]

பஞ்சபரிவர்த்தனம் *pañja-parivart-taṉam,* பெ.(n.) உயிர் செயற்பாட்டுக்குரிய பொருள் (திரவியம்), இடம் (க்ஷேத்திரம்), காலம், பவம், கரிசு (பாவம்) ஆகிய ஐவகைப்பட்ட நிலைமைகள் (நீலகேசி,1,உரை.); the five conditions of one's activities, viz., diraviyam, kṣēttiram, kālam, pavam, pāvam.

[Skt. pañcan+parivarttana> த. பஞ்சபரிவர்த்தனம்]

பஞ்சபரிவர்த்தனை *pañja-parivar+taṉai,* பெ.(n.) கருமம், அவிச்சை, மணம், சுவை, மாயைத் தொடர்பு (வாசனை,உருசி, மாயா சம்பந்தம்) என ஐவகையாய் மாறி வரும் செய்திகள் (மேருமந்.71,உரை.); the five conditions that come in rotation, viz., karumam, aviccai, vāšaṉai, uruši, māyāšampandam.

[Skt. pañcan+parivar+taṉai> த. பஞ்சபரிவர்த்தனன்]

பஞ்சபல்லவம் *pañja-pallavam,* பெ.(n.) பூசனைக்குரிய ஆத்தி, மா, முட்கிளுவை, முல்லை, வில்வம் என்ற ஐந்தன் தளிர்கள் (யாழ்.அக.); springs off ātti, mā, muṭ-kiḷuvai, mullai, vilvam used for worship.

[Skt. pañcan+pallavam> த. பஞ்சபல்லவம்]

பஞ்சபலோதகம் *pañja-palōdagam,* பெ.(n.) எலுமிச்சை, நாரத்தை, தமரத்தை, கொழுஞ்சி, மாதுளை என்ற ஐவகைப் பழங்களிலிருந்து எடுக்கும் சாறு (தத்துவப்.65,உரை.); juice extracted from elumiccai, nārattai, tamarattai, koḷuñji and mādulai fruits.

[Skt. pañcan+phola+utaka> த. பஞ்சபலோதகம்]

பஞ்சபாடாணம் *pañjapāḍāṇam,* பெ.(n.) ஐந்து வகை நஞ்சுகள் (சா.அக.); five kinds of poisonous drugs; 1. தாளகம்; yellow orpiment, 2. கௌரி; yellow oxide of arsenic, 3. இலிங்கம்; cinnabar, 4. வெள்ளை; white arsenic, 5. வீரம்; corrosive sublimate

பஞ்சபாண்ட செந்தூரம் *pañjapāṇḍa šendūram,* பெ.(n.) பிரமமுனி மருத்துவ நூலிற் சொல்லியுள்ளள ஒரு வகைச் செந்தூரம்; a red oxide prepared by process of calcination according to the principles laid down in Brahmamuni work in medicine (சா.அக.).

பஞ்சபாண்டவர் *pañja-pāṇḍavar,* பெ.(n.) பாண்டுவின் புதல்வர்களான தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகதேவன் என்ற ஐவர்; the five Pāṇḍava brothers, sons of king Pāṇḍu, viz., Tarumaṉ, Vīmaṉ, Aruccuṉaṉ, Nagulaṉ, Sagadēvaṉ. "பஞ்சபாண்ட வர்க்காகி.....தூதுசென்று" (பெரியதி.2,3,5.).

[Skt. pañcan+pāṇḍavar> த. பஞ்சபாண்டவர்]

பஞ்சபாண்டவர்கள் படுக்கை *pañja-pāṇḍavargaḷ-paḍukkai,* பெ.(n.) மலைக் குகையிலுள்ளள கற்படுக்கை; stone-beds in the caves of a hill. "பஞ்சபாண்டவர்கள் படுக்கை பொற்றைக்குக் கிழக்கு" (T.A.S.i.262.).

[Skt. pañcan-pāṇḍava> த. பஞ்சபாண்டவர்]

பஞ்சபாணம் *pañja-pāṇam,* பெ.(n.) தாமரை மலர், அசோக மலர், மாமலர், முல்லை மலர், கருங்குவளை மலர் என்ற ஐவகை காமனுடைய மலரம்புகள் (பாணங்கள்); the five arrows off Kāmā, viz., tāmarai-malar, acōka-malar, mā-malar, mullai-malar, karuṅ-kuvalai-malar.

[Skt. pañcan+pāṇa> த. பஞ்சபாணம்]

பஞ்சபாணன் *pañja-pāṇaṉ,* பெ.(n.) காமன் (ஐங்கணையோன்) (திவா.); Kāma, as armedwith five arrows.

[Skt. pañca-bāṇa> த. பஞ்சபாணன்]

பஞ்சபாணாவத்தை *pañja-pāṇavattai,* பெ.(n.) காமநோயால் உண்டாகும் (சுப்பிர யோகம், விப்பிரயோகம், சோகம், மோகம் மரணம் என்ற) ஐவகைத் துன்பநிலை (சூடா.); the five states of love-stricken persons, viz., šuppirayōgam, vippirayōgam, šōgam, mōgam, maraṇam.

[Skt. pañjan+bāṇavastai> த. பஞ்ச பாணாவத்தை]

பஞ்சபாணி *pañja-pāṇi,* பெ.(n.) மலைமகள்; Pārvadi. "பஞ்சபாணி தந்த முருகோனே" (திருப்பு.682).

[Skt. pañcan+pāni> த. பஞ்சபாணி]

பஞ்சபாத்திரம்[1] *pañja-pāttiram,* பெ.(n.) வழிபாட்டில் (அர்க்கியம், பாத்தியம், ஆசமனீயம், ஸ்நாநீயம், சுத்தோதகம் என்பவைகளுக்கு) பயன்படுத்தப்படும் ஐந்து நீர்வட்டில்கள் (வின்.); the five cups used in worship to hold water for arkkiyam, pāttiyam, āšamaṉiyam, snāniyam, šuttōdagam.

[Skt. pañcan+pāttiram> த. பஞ்சபாத்திரம்]

பஞ்சபாத்திரம்[2] *pañja-pāttiram,* பெ.(n.) அகன்ற வாயுள்ள தண்ணீர் ஏனம் (இ.வ.); water-vessel with a wide mouth.

[Skt. pañca+pāttiram> த. பஞ்சபாத்திரம்]

பஞ்சபாதகம் *pañja-pādagam,* பெ.(n.) பஞ்சமாபாதககம் பார்க்க (திவா.); see pañja-mā-pādagam.

[Skt. pañcan+pādaga> த. பஞ்சபாதகம்]

பஞ்சபாதகன் *pañja-pādakaṉ,* பெ.(n.) பஞ்சமாபாதகன் பார்க்க; see pañja-mā-pādagan. "பாய வெண்டிரை நிலத்துழல் பஞ்சபாதகரே" (உபதேசகா.உருத்திராக்.53).

[Skt. pañcan+pādakaṉ> த. பஞ்சபாதகன்]

பஞ்சபாரதீயம் *pañjapāradiyam,* பெ.(n.) நாரத முனிவர் இயற்றியதாகக் கருதப்படும் ஓர் இசைத்தமிழ் நூல் (சிலப்.உரைப்பா.); a Tamil musical work attributed to the sage Nārada.

பஞ்சபிராணாவத்தை *pañja-pirāṇāvattai,* பெ.(n.) மாந்தருக்குக் காமத்தினால் ஏற்படும் ஐந்து வகைத் துன்பங்கள் அவை; effects of love on men and women. 1. நேசிப்பவரைப் பற்றி எப்பொழுதும் நினைப்பதும், பேசுவதும். 2.பெரு மூச்செறிதலும் அழுதலும், 3. அருவருத்தல் 4. அனத்துதல். 5. ஓலமிட்டு அலறல் (சா.அக.)

பஞ்சபீசம் *pañjapišam,* பெ.(n.) மாழைகளின் தன்மையைப் போக்கித் தங்கச் செம்பாக மாற்றிப் பொன்னின் குணத்தை உண்டாக்கும் ஐந்து வகை செம்புப்பொடி; the alchemical substance known as philosopher's powder used for converting the following metals into alchemical copper before they are transmuted into gold viz., 1. தங்கச் செம்பு gold copper, 2. வெள்ளிச் செம்பு silver copper, 3. அப்பிரகச்செம்பு mica copper, 4. காந்தச் செம்பு magnetic copper, 5.அயச் செம்பு ferrou copper. (சா.அக.).

பஞ்சபுலன் *pañjapulaṉ,* பெ.(n.) ஐம்புலன்கள்; மெய், வாய், கண், மூக்கு, செவி; the five sense organs viz, skin, mouth (tongue), eye, nose and ear (சா.அக.).

பஞ்சபூசாவந்தம் *pañja-pūšāvandam,* பெ.(n.) கொடிறு விண்மீனைப் (பூச நட்சத்திரத்தைப்) போல ஐந்து உருக்களைக் கொண்ட காதணி வகை; ear-ring having small pieces of stones arranged like the five stars of pūšamasterism.

[Skt. pañcan+pūšāvandam> த. பஞ்ச பூசாவந்தம்]

பஞ்சபூடணதைலம் *pañja-pūḍaṇa-tailam* பெ.(n.) அதிமதுரம், இலவங்கம் பட்டை, நன்னாரி, கருஞ்சீரகம், முத்தக்காசு ஆகிய இவ்வைந்தும் சேர்த்துச் செய்யும் ஒரு தலை முழுக்கெண்ணெய்; a bathing medicated oil prepared with the following drugs. liquorice root or root of honey creeper, cinnamon bark, sarsaparilla, black cumin seeds and coray root (சா.அக.).

[பஞ்சம்+பூடணம்+தைலம்]

பஞ்சபூதக்குகை *pañjapūdakkugai,* பெ.(n.) கடல் நுரை, கற்சுண்ணம்,சாரம், கல்லுப்பு, சீனம் ஆகிய ஐந்து சரக்கினால் செய்த மூசை; a crucible made out of the following five drugs viz., cutile fish (see a froth) time stone, salammoniac, sea salt and alum. This is used for alchemic purpose (சா.அக.).

பஞ்சபூதக்கூறு *pañjapūda-k-kuṟu,* பெ.(n.) உடம்பினுள் அமைந்துள்ள ஐம்பூதத்தின் ஒவ்வொரு பகுதியிலும் பொருந்திய ஐந்து வகைப் பொருள் வகுப்புகள், ஆகவே இவ்வகுப்புகள் முழுவதும் 5 x 5 அல்லது 25 பிரிவுகள் ஆகும்; 25 constitutional parts of the human body which are proportioned as five substances to each of the five lements composing the body viz;- 1. நில (பிருதிவி) வகுப்பு – 5 மயிர், எலும்பு, தோல், சதை, நரம்பு; earth-hair, bone, skin, flesh and nerve. 2. அப்பு வகுப்பு – 5 நீர், இரத்தம், மச்சை, வெண்ணீர், கொழுப்பு; water - lymph, blood, marrow, semon and fat. 3. தீ (தேயு) வகுப்பு – 5, உணவு, துஞ்சல், அச்சம், சோம்பல், போகம்; fires - food, sleep, fear, laziness and sexuality. 4. காற்று (வாயு) வகுப்பு – 5, உடலோடு கிடத்தல், இருக்கை, நடத்தல், இருத்தல், நிற்றல்; air - lying, simply, remaining, walking, sitting and standing. 5. வான் (ஆகாய) வகுப்பு – 5, காமம், பகை (குரோதம்), சினம் (கோபம்), மதம், மாச்சரியம்; sky - evil passions lust, anger, desire infatuations and envy (சா.அக.).

பஞ்சபூதச்சரக்கு *pañja-pūda-c-carakku,* பெ.(n.) தாளகம், வீரம், கௌரி, வெள்ளை, லிங்கம் என்ற ஐவகை மருந்துச் சரக்குகள் (சங்.அக.); the five medicinal substances tāḷagam, vīram, kauri, veḷḷai, liṅgam.

[பஞ்சம்+பூதம்+சரக்கு]

[Skt. pañcan-pūda> த. பஞ்சபூதம்]

பஞ்சபூததாதுப் பொருள்கள் *pañjapūda-tādu-p-poruḷkaḷ,* பெ.(n.) சட்டை முனி நிகண்டில் சொல்லிய ஐந்து பூதங்களையும் குறிக்கும் தாது சரக்குகள்; five minerals referring the five elements. They are yellow orpiments, corrosive sublimate, yellow arsenic and vermilion. (சா.அக.).

பஞ்சபூதநாடி *pañjapūdanāḍi,* பெ.(n.) ஊதை (வாத) நாடி, பித்த நாடி, சிலேட்டும நாடி, குரு நாடி, பூத நாடி; vatha pulse; pitha pulse, kapha pulse, guru pulse and bhutha pulse. (சா.அக.).

[பஞ்சபூதம்+நாடி]

பஞ்சபூதநிறம் *pañjapūda-niṟam,* பெ.(n.) ஐம்பூதங்களின் வண்ணம்; colour of the five elements. 1. நிலம் (பிருதிவி), மண் (earth) - பொன்னிறம்; golden colour. 2. அப்பு (நீர்) water - பளிங்கு நிறம்; crystial colour. 3. தீ (தேயு), நெருப்பு; fire - செம்பு நிறம் copper colour. 4. வளி (வாயு), காற்று; air - கருப்பு

நிறம்; black colour. 5. விண் (ஆகாயம்), வானம் sky -புகை நிறம்; smoke colour.

பஞ்சபூதம் *pañja-pūdam,* பெ.(n.) ஐந்து பூதங்கள் – மண், நீர், நெருப்பு, காற்று, விண்; the five elements viz., earth, water, fire, air and sky (சா.அக.).

[Skt.pañcan> த. பஞ்சம்+பூதம்]

பஞ்சபூதமூலி *pañjapūda-mūli,* பெ.(n.) ஐம்பூதங்களையும் குறிக்கும் மருந்து மூலிகைகள், வெள்ளெருக்கு, மாவிலிங்கம், கொடிவேலி, புனல் முருங்கை, பீர்க்கு; the five kinds of medicinal plants referring to the five elements viz., white madar, lingam tree, Ceylon lead wort, wild morunga and luffa (ribbed ground) (சா.அக.).

[பஞ்சம்+பூதம்+மூலி]

பஞ்சபூதவெழுத்து *pañjapūda-v-eḻuttu,* பெ.(n.) ஐம்பூத வகுப்பின்படி பிரித்த மந்திர எழுத்துகள்; the five kinds of substances divided according the mantra words. 1. மண் (பிருதிவி), அ– A ந– Na ஐயும், Iyu. 2.அப்பு, இ– I ம– Ma கிலியும், kiliyu 3. தீ (தேயு), உ– u சி– si சவ்வும், cavvu 4.வளி (வாயு), எ– E வ– va றீயும், ree 5. விண் (ஆகாயம்), ஒ– o ய– ya ஸ்ரீயும், sree (சா.அக.)

பஞ்சம் *pañjam,* பெ.(n.) ஐந்து (சூடா.); five.

[Skt.pañcan> த. பஞ்சம்]

பஞ்சமகர் *pañja-magar,* பெ.(n.) கட்டரங்கு (சதுரங்கம்) ஆட்டத்தில் இரு பக்கங்களின் காய்களும் சேர்ந்து ஐந்தாவதால் விளையாட்டு முடிவுறுகை; a way of ending a game in chess, when the total of pieces on both sidess is five.

[Skt.pañcan+muhra> த. பஞ்சமகர்]

பஞ்சமகா பாவங்கள் *pañja-magā-pāvaṅgaḷ,* பெ.(n.) கொலை, களவு, காமம், கள்ளுண்டல், பொய்; the five capital vices viz., murder, theft, lust, intoxicating drink and lie (சா.அக.).

[பஞ்சம்+மகா+பாவங்கள்]

பஞ்சமகாவிரதம் *pañja-magā-viradam,* பெ.(n.) அகிம்சை, சத்தியம், அத்தேயம், பிரம்மசரியம், அபரிக்கிரகம் என்ற துறவிகளுக்குரிய ஐம்பெரும் நோன்புகள் (மேருமந், முக.xv.); agimšai, šattiyam, attēyam, piramma šariyam, aparikkiragam (non-killing, truth speaking, non-stealing, celibacy and not taking gifts.)

த.வ. ஐம்பால் நோன்பு

[Skt.pañcan+mahā-vrata> த. பஞ்சமகாவிரதம்]

பஞ்சமசுருதி *pañja-šurudi,* பெ.(n.) ஏழிசைகளுள் ஒன்று (பரத.); fifth note of the gamut.

[Skt.pañcama+šruti> த. பஞ்சமசுருதி]

பஞ்சமணம் *pañja-maṇam,* பெ.(n.) ஐந்து வகையான இன்சுவை பொருள்கள் (பஞ்சவாசம்) (பொதி.நி.30.); the five aromatics.

[Skt.pañcan> த. பஞ்ச]

பஞ்சமம் *pañjamam,* பெ.(n.) 1. ஐந்தாவது; the fifth "பஞ்சமத்தையமைக்க" (சிவதரு.சிவ.69). 2. ஏழிசைகளுள் ஐந்தாவது; fifth note of the gamut, one of šaptašuram. "பஞ்சமத்தியற்றும் வீணை" (பிரமோத்.3,44). 3. குறிஞ்சி அல்லது பாலைப் பண் வகை (பிங்.); a secondary melody - type of the kuṟiñji or pālai class.4. அழகு (யாழ்.அக.); beauty. 5. திறமை; வல்லமை (சாமர்த்தியம்) (யாழ்.அக.); cleverness, skill.

[Skt.pañcama> த. பஞ்சமம்]

பஞ்சமர் *pañjamar,* பெ.(n.) ஆரியர் வரவுக்குப் பின் புகுத்தப்பட்ட நால்வருணப் பிரிவை ஏற்றுக்கொள்ளாத ஐந்தாம் பிரிவினர்; non-caste Hindus outside the four - fold caste system introduced after the advent of Aryans.

[Skt.pañcama> த. பஞ்சமர்]

பஞ்சமலம் *pañja-malam,* பெ.(n.) ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம் என்ற ஐவகை மலங்கள் (பிங்.); the five impurities bringing the soul into bondage, viz.,

āṉavam, kaṉmam, māyai, māyēyam, tirōdāṉam.

[Skt.pañcan+malam> த. பஞ்சமலம்]

பஞ்சமவேதம் *pañjama-vēdam,* பெ.(n.) ஐந்தாம் மறையாகக் கருதப்படும் மகாபாரதம்; the Mahābhārata, considered as the fifth Vēda. "பஞ்சவேதமான மகாபாரதத்தில் எழுதக்கூடாதிறே" (திவ்.பெரியதி.1,1,வ்யா. பக்.48).

[Skt.pañcama+vēta> த. பஞ்சவேதம்]

பஞ்சமாசத்தக்கருவி *pañja-mā-šatta-k-karuvi,* பெ.(n.) தோற் கருவி, துளைக்கருவி, நரப்புக் கருவி, கஞ்சக் கருவி, மிடற்றுக் கருவி என்ற ஐவகை இசைக் கருவிகள் (திவா.); the five kinds of musical instrument, viz., tōṟ-karuvi, tuḷai-k-karuvi, narappu-k-karuvi, kañja-k-karuvi, miḍaṟṟu-k-karuvi.

[Skt.pañcan+ma+catta> த. பஞ்சமாசத்தம்]

பஞ்சமாபாதகம் *pañja-mā-pādagam,* பெ.(n.) கொலை, பொய், களவு, கள்ளுண், ஆசிரியரைப் பழித்தல் என்ற ஐவகைக் கொடுஞ்செயல் (வின்.); the five heinous sins of killing, lying, stealing, drinking and abusing one's guru.

த.வ. பாழ்வினை

[Skt.pañcan+mā+pādagam> த. பஞ்சமா பாதகம்]

பஞ்சமாபாதகன் *pañja-mā-pādagaṉ,* பெ.(n.) கொடுஞ்செயல் செய்தோன்; one guilty of heinous sins. "பஞ்சமாபாதக ரெனினும்" (உபதேசகா.விபூதி.12).

த.வ. பாழ்வினையாளன்

[Skt.pañcan+mā+pādagaṉ> த. பஞ்சமா பாதகன்]

பஞ்சமி *pañjami,* பெ.(n.) 1. ஐந்தாம் நாள் (திதி); fifth lunar day. "பஞ்சமிப் பெயர் படைத்துள திதி" (கம்பரா.மீட்சிப்.140) 2. இருபத்து ஏழு விண்மீன்களுள் கடைசி ஐந்து; the last five of the 27 nakṣatras. 3. ஐந்தாம் வேற்றுமை; the fifth case. "பஞ்சமியாகிய இன் ஐந்தாம் வேற்றுமையாம்" (பி.வி.6,உரை.) 4. மலைமகள் (நாமதீப.23.); Pārvadi.

த.வ. ஐம்மி

[Skt.pañcami> த. பஞ்சமி]

பஞ்சமித்திரம் *pañjamittiram,* பெ.(n.) 1. நல்லெண்ணெய், தேங்காய்ப் பால், இலுப்பைப் பூச்சாறு, ஆவின் நெய், தேன் ஆகிய இவ்வைந்துங் கலந்த கூட்டு; a mixture of five liquid substances viz., gingelly oil, cocoanut milk, juice of mowah flower, cow's ghee and honey. 2. மாழை (உலோகங்)களை உருக்கும்பொழுது அதைப் வேதிக்கச் செய்யும்படி சேர்க்கும் ஐந்து வகை நட்புச் (மித்துரு) சரக்குகள்; (அவை குன்றி, நெய், வெல்லம், காரம், தேன்); the five friendly drugs capable of effecting a change in metals viz., jew - eller's bead, ghee, jaggery, alkaline substance like borax, honey. 3. உயர்ந்த செம்பு கிடைக்க வேண்டி இச்சரக்குகளை இட்டு உருக்க பயன்படும்; to obtain superior or high class copper these are used when melting it (சா.அக.).

பஞ்சமுகச் செப்புச் சலாகை *pañjanmuga-c-ceppu-c-calāgai,* பெ.(n.) அறுவை (சத்திர)க் கருவி இருபத்து ஆறில் ஒன்றான; five faced copper probe, this is one of the 26 surgical instrument. (சா.அக.).

பஞ்சமுகம்[1] *pañja-mugam,* பெ.(n.) அறுவை மருத்துவத்தில் பயன்படுத்தும் கருவி வகை (தஞ்.சா.iii,40.); a kind of surgical instrument.

[Skt.pañcam> த. பஞ்சம்+முகம்]

பஞ்சமுகருத்திரி *pañja-muga-ruttiri,* பெ.(n.) காட்டாமணக்கு; wild castor plant (சா.அக.).

பஞ்சமுகவாசம் *pañja-muga-vāšam,* பெ.(n.) பஞ்சவாசம் பார்க்க; see pañja-vāšam

"அமிழ்தனைய பஞ்சமுக வாசமமைத்து" (சீவக.2026).

[பஞ்சமுகம்+வாசம்]

பஞ்சமுகன்[1] *pañja-mugaṉ,* பெ.(n.) சிவன் (சூடா.); Siva.

[Skt.pañcan> த. பஞ்சம்]

பஞ்சமுகன்[2] *pañca-mugaṉ,* பெ.(n.) அரிமா (சிங்கம்) (யாழ்.அக.); lion.

[Skt.pañcan> த. பஞ்ச]

பஞ்சமுகாத்திரம் *pañca-mukāttiram,* பெ.(n.) ஐம்முகங்கொண்ட கருவி வகை; a five pointed weapon.

[Skt.pañca-mukha+ttiram> த. பஞ்ச முகாத்திரம்]

பஞ்சமுட்டிக்கஞ்சி *pañjamuṭṭi-k-kañji,* பெ.(n.) துவரை, கடலை, உளுந்து, சிறு பயறு, பச்சரிசி இவ்வைந்தும் வகைக்கு ஒரு பிடி எடுத்து, தனித்தனியே மெல்லிய சீலைகளில் முடிந்து ஒரு ஏனத்தில் போட்டு அதில் ஆற்று நீர் ஊற்றி எட்டில் ஒரு பங்காய்க் காய்ச்சும் கஞ்சி; a kind of conjee -porridge prepared with the following five substances viz., red gram, black gram, green gram and raw rice. It is useful for emaciated patients. It cures biliousness, phlegm and wind humours. Tie each substance in a muslin cloth and put them in a vessel containing river water which is boiled down to one eight. (சா.அக.). இக்கஞ்சி நோயாளிக்குக் கொடுப்பது. இதனால் பித்தம், இளைப்பு, கபம், காற்று தீரும்.

[Skt.pañcan> த. பஞ்ச+முட்டி+கஞ்சி]

பஞ்சமுத்திரை[1] *pañja-muttirai,* பெ.(n.) 1. பாதங்களில் காணப்படும் (பதுமம், சங்கம், மகரம், சக்கரம், தண்டம் என்ற) ஐந்து அடையாளங்கள்; the five marks on a person's foot, viz., padumam, šaṉgam, magaram, šakkaram, daṇḍam "திருவடியிற் றிருப்பஞ்ச முத்திரையுந் திகழ்ந் திலங்க" (பெரியபு.மானக்.24) 2. திருநீறு, உருத்திராக்கம், பூணூல், உத்தரீயம், உட்டிணீடம் என்று ஆசாரியர்க்கு உரியன வாகச் சொல்லப்படும் ஐந்து அடையாளங்கள் (சைவசா.ஆசாரிய.45,உரை.); the five sacerdotal signs of an ācārya, viz., tiruniṟu, uruttirākkam, pūṇūl, uttiriyam, uṭṭiṇiḍam.

[பஞ்சம்+முத்திரை]

[Skt.pañcan> த. பஞ்சம்]

பஞ்சமுத்திரை[2] *pañja-muttirai,* பெ.(n.) ஐந்து கருவி வடிவங்களாகச் செய்து சேர்த்த காலணிகலன் (சீகாழிக்.411.); an ornament worn on the foot, consisting of pieces shaped like the five weapons of Viṣṇu.

[பஞ்சம்+முத்திரை]

[Skt.pañcan> த. பஞ்சம்]

பஞ்சமுத்திரை[3] *pañjamuttirai,* பெ.(n.) 1. சிவ தவத்தோருக்குரிய அடையாளங்கள் அல்லது சின்னங்கள்; உருத்திராக்கம், கமண்டலம், காவி வேட்டி, சடைமுடி, ஓகதண்டு; the five distinguishing marks of the Siva mendicants viz - holy beads, dried shell of battle gouard reddish brown cloth, tursted tuft of hairs of the head and yoga rod or stick 2. ஓக சாதனைக்காக ஏற்பட்ட ஐந்து வகை ஓகவிருக்கை; the five different postures of a practising yogi. (சா.அக.)

[பஞ்சம்+முத்திரை]

பஞ்சமூலிகை *pañjamūligai,* பெ.(n.) கற்பத் திற்கு உதவும் ஐந்து வகை மூலிகைகளான: ஏலம், பத்திரி, தக்கோலம், சாதிக்காய், கோலவித்து (திருமூ.600); the five drugs useful in rejuvenation viz., cardamon, mace, cubeb pepper, nutmeg and root of long pepper (சா.அக.).

[பஞ்சம்+மூலிகை]

பஞ்சமேளம் *pañja-mēḷam,* பெ.(n.) சாவில் வழங்கும் சங்கு, சாலர், தவுல், மத்தளம், பம்பை என்ற ஐவகை இசைக் கருவிகள் (நெல்லை);

the five kinds of drum, used at funerals, viz., šaṅgu, šālar, tavul, mattaḷam, pampai.

[Skt. pañcan> த. பஞ்சம்]

பஞ்சயாகம் *pañca-yāgam,* பெ.(n.) 1. பஞ்சமகாயாகம் (பிங்.) பார்க்க; see paññja-magā-yāgam. 2. கன்மயாகம், செபயாகம், ஞானயாகம், தவயாகம், ஊழ் (தியான) யாகம் என்ற ஐவகை வழிபாட்டு முறை (சிவதரு. ஐவகை1,உரை.); five kinds of worship, viz., kaṉma-yāgam, šepa-yāgam, ñaṉa-yāgam, tapō-yāgam, diyāṉa-yāgam.

[Skt. pañcan+yāga> த. பஞ்சயாகம்]

பஞ்சர் *pañcar,* பெ.(n.) தரிசு நிலம்; waste or fallow land.

[Vandhya>U. bañja> த. பஞ்சர்]

பஞ்சரத்தினம் *pañja-rattiṉam,* பெ.(n.) 1. செம்மணி, முத்து அல்லது வயிடூரியம், வயிரம், பச்சை, நீலம் என்ற ஐவகை மணிகள்; the five kinds of precious stones, viz., cemmaṇi, muttu or vayiḍūriyam, vayiram, paccai, nīlam. 2. ஐந்து செய்யுள் கொண்ட நூல் (பிரபந்தம்); a poem of five stanzas.

[Skt. pañcan+rattina> த. பஞ்சரத்தினம்]

பஞ்சலட்சணம் *pañja-laṭcaṇam,* பெ.(n.) எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐவகைத் தமிழ் இலக்கணம்; the five sections of Tamil grammar, viz., eḻuttu, šol, poruḷ, yāppu, aṇi.

[Skt. pañcan+laṭcaṇam> த. பஞ்சலட்சணம்]

பஞ்சலத்தார் *pañjalattār,* பெ.(n.) பஞ்ச கம்மாளர் (I.M.P.Cg.692.); the five artisan communities.

[Perh. pañcan> த. பஞ்சலத்தார்]

பஞ்சலவணபற்பம் *pañjalavaṇaparbam,* பெ.(n.) ஐந்து வகை உப்புகளைக் கொண்டு செய்யும் உப்புப் பற்பம். இது செரியாமைக்குக் கொடுக்கப்படும் மருந்து; the calcified powder prepared out of the five salts. which is given for indigestion (சா.அக.).

பஞ்சலவணம் *pañcanimbam,* பெ.(n.) ஐந்து வகை உப்புகள் – இந்துப்பு, கல்லுப்பு, கறியுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு; sindh salt, rock salt, common salt, glass gall and nitre (சா.அக.).

பஞ்சலாங்கலதானம் *pañja-lāṅgala-tāṉam,* பெ.(n.) ஐந்து ஏர்களை நிலத்துடன் அந்தணர்க்கு உதவுந்தானம்; a gift of five ploughs with lands to Brahmins. "பஞ்சலாங்கலதானத்தின் பகுதியை" (கூர்மபு. தானமுறை.64).

[Skt. pañcan+laṅkala> த. பஞ்சலாங்கல தானம்]

பஞ்சலிங்கம் *pañjaliṅgam,* பெ.(n.) சிவனைக் குறிக்கும் ஐந்து வகை இலிங்கங்கள்: நில (பிருதிவி)லிங்கம், அப்புலிங்கம், நெருப்பு (தேயு)லிங்கம், காற்று (வாயு)லிங்கம், விண் (ஆகாய) லிங்கம். ஆகவே, ஐம்பூதங்களையும் கொண்ட இந்த லிங்கங்கள் ஐந்து இடங்களில் நிறுவப்பட்டிருக்கின்றன; the five kinds of lingam (phallus) referring to emblem of šiva and they are: Prithivi lingam, appu lingam, theyu lingam, vayu lingam, aukasa lingam. Representing the five elements the following are the five places in South India where they establised. 1. காஞ்சிபுரம் – Conjeevaram where there is the Prithivi lingam made of each. 2. சம்புகேசுவரம்– Jambukeswaram (Thiruvanaikaval) near Trichy where Appulingam is established water excides perpetually under it. 3. திருவண்ணாமலை– Thiruvannamalai where the Tejolingam sparkles with light. 4. காளத்தி – Kallathi where Vayu lingam is established a lamp near the lingam constantly flickers showing that the win and or air is blowing. The other lamps there do not flicker. 5. சிதம்பரம் – Chidambaram where Akasa lingam or etheral lingam is kept in the temple. (சிதம்பர ரகசியம்) (சா.அக.).

[Skt. pañcan+lingam> த. பஞ்சலிங்கம்]

பஞ்சலோகசிந்தூரம் *pañjalōgašindūram,* பெ.(n.) பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, காந்தம் என்னும் ஐந்து வகை மாழைகளைக்

கொண்டு செய்த சிவப்புப் பொடி; red oxide by calcining the five metals viz-gold, silver, copper, iron, magnet (சா.அக.).

பஞ்சலோகப்புரவி *pañjalōga-p-puravi*, பெ.(n.) ஐந்து வகை மாழைகளைக் கொண்டு சீன நாட்டவரால் உண்டாக்கியதாகக் கருதப்படும் ஒரு வான ஊர்தி; a kind of aeroplane in the shape of horse constructed by the ancient Chinese out of five metals (சா.அக.).

பஞ்சலோகம் *pañja-lōgam*, பெ.(n.) 1. பொன், இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி என்னும் ஐவகைத் தாதுக்கள் (பிங்.); the five kinds of metal, poṉ, irumbu, cembu, īyam, veḷḷi 2. ஐவகை மாழை (உலோக)க் கலப்பு; amalgam of the five metals.

[Skt. pañcan+lōga> த. பஞ்சலோகம்]

பஞ்சவர் *pañjavar*, பெ.(n.) பஞ்சபாண்டவர் பார்க்க; see pañja-pāṇḍavar. "பஞ்ச வர்க்குத் தூது நடந்தானை" (சிலப்.17).

பஞ்சவர்க்கம் *pañjavarkkam*, பெ.(n.) ஆல், அரசு, அத்தி, நாவல், இத்தி எனும் ஐந்து வகை துவர்ப்புச் சுவையுள்ள மரங்களின் பட்டை; five peepal tree, fig tree, jamoon tree and rhomboid leaved fig tree (சா.அக.).

[பஞ்சம்+வர்க்கம்]

பஞ்சவர்ணக்கிளி *pañja-varṇa-k-kiḷi*, பெ.(n.) ஐந்து நிறமுடைய கிளி வகை; macaw, a species of parrot, Trichoglossus, as having five colours. "கிள்ளையும் பஞ்சவர்ணக்கிளிக் கூட்டமும்" (குற்றா.குற. 87,3).

[பஞ்சம்+வர்ணம்+கிளி]

பஞ்சவர்ணப்பூ *pañjavarṇappū*, பெ.(n.) பச்சை, மஞ்சள், சிவப்பு, கருப்பு, வெள்ளை ஆகிய ஐந்து நிறமுடைய பூ; flowers with five colours. 2. பஞ்சவர்ணம் பார்க்க (சா.அக.); see pañjavarṇam.

[Skt. பஞ்ச+வர்ண+பூ]

பஞ்சவர்ணம் *pañja-varṇam*, பெ.(n.) வெள்ளை, கறுப்பு, சிவப்பு, மஞ்சள், பச்சை என்ற ஐவகை நிறம்; the five colours, white, black, red, yellow, green.

[Skt. pañcan> த. பஞ்சம்]

[த. வண்ணம் > Skt. வர்ணம்]

பஞ்சவர்ணவுப்பு *pañjavarṇavuppu*, பெ.(n.) கட்டியவுப்புக்கு ஐந்து வண்ணம் ஏற்றி மணியாகச் செய்து தாழ்வடமாய்க் கோத்து ஓதுகைக்குப் பயன்படுத்தும் உப்பு; consolidated salt to which five colours are imparted and beads made. These beads if used in worship (சா.அக.).

[பஞ்சவர்ணம்+உப்பு]

பஞ்சவற்கலம் *pañjavaṟkalam*, பெ.(n.) அத்தி, அரசு, ஆல், பூவரசு, வேல் என்பவற்றின் பட்டை (மலை.); bark of the five tree satti, arašu, āl, pūvarašu, vēl.

[Skt. pañcan+varka> த. பஞ்சவற்கலம்]

பஞ்சவறிவு *pañjavaṟivu*, பெ.(n.) பகுத்தறிவு, மெய்யறிவு, பேரறிவு, ஆதன் அறிவு, தத்துவ அறிவு; reasoning power, senses of the body, wisdom, knowledge of soul and philosophy (சா.அக.).

பஞ்சவாசம் *pañja-vāšam*, பெ.(n.) இலவங்கம், ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம் என்ற ஐந்து வகை நறுமணப் பொருட்கள் (சிலப். 5,26,உரை.); the five aromatics, viz., ilavaṅgam, ēlam, karppūram, šādikkāy, takkōlam.

[Skt. pañcan+vāšam> த. பஞ்சவாசம்]

பஞ்சவிருத்தி *pañja-virutti*, பெ.(n.) மாபூதம் 5, தன்மாத்திரை 5, கருமவுறுப்புகள் (கன்மேந்திரியம்) 5, உணர்தற்குரிய பொறிகள் (ஞானேந்திரியம்) 5, மனம், அகங்காரம், மகத்து, மூலப்பகுதி, ஆதன் ஆகிய இருபத்தைந்து மூலப் பொருள்கள் (குறள்,27,உரை.); reals, 25 in number, viz., 5 makāpūdam, 5 ñaṉēndiriyam, maṉam, akaṅkāram, makattu, mūlappirakirudi, āṉma.

[Skt. pañcan+vṛddhi> த. பஞ்சவிருத்தி]

பஞ்சவில்வம் *pañjavilvam*, பெ.(n.) 1. வில்வம், நொச்சி, மாவிலங்கை, முட்கிளுவை, விளா

ஆகிய ஐந்து வகை மரங்கள்; the five kinds of trees viz., bael, notchy, lingam tree, thorny balsam and wood apple. "வில்வ நொச்சி மாவிலங்கை முட்கிளுவை வெள்ளில் பஞ்ச வில்வமென்பார்" (சிவராத்.பு. சிவமான். 37). 2. சில நூல்களின்படி வில்வம், ஆத்தி, மா, முட்கிளுவை, முல்லை; according to some literature bael, common mountain ebony, lingam tree, thorny balsam and wood apple (சா.அக.).

[Skt.pañcan+vilva> த. பஞ்சவில்வம்]

பஞ்சவேம்பு *pañjavēmbu*, பெ.(n.) ஐந்து வகை வேம்பு – நல்வேம்பு, மலைவேம்பு, நிலவேம்பு, கறிவேம்பு, சிவனார் வேம்பு; the five kinds of neem-margosa, common bead tree, ground neem, curry leaf neem, Shiva's neem. (சா.அக.)

பஞ்சணாவமிர்தம் *pañjaṉā-v-amirdam*, பெ.(n.) புனல் முருங்கை; three leaved indigo. (சா.அக.)

பஞ்சா *pañja*, பெ.(n.) 1. கைப்பிடி; clutch, grasp of the hand. 2. நீட்டிய விரற் கை; hand with the five fingers extended. 3 மொகரம் விழாக் காலங்களில் சியா முகமதியர் எடுத்துச் செல்லும் கைக்குறி விருது; figure of the hand carried as an emblem by Shiah Muslims in Moharrum festivals.

[U.pañjā> த. பஞ்சா]

பஞ்சாக்கரப் பஃறொடை *pañjākkara-p-palrōdai*, பெ.(n.) பண்டார சாத்திரத்துள் பின் வேலப்பதேசிகர் இயற்றிய நூல்; a Saiva Siddhānta, treatise by Piṉvēlappa-tēšigar, one of Paṇḍāra-cāttiram.

[பஞ்சாக்கரம்+பஃறொடை]

பஞ்சாக்கரம் *pañjākkaram*, பெ.(n.) பஞ்சாட்சரம் பார்க்க; see pañjāṭcaram. "எந்தைபிரான் பஞ்சாக்கரம் போல்" (திருவாலவா.திருநகரச்.3).

[Skt.pañjaākṣara> த. பஞ்சாக்கரம்]

பஞ்சாக்கினி *pañcākkiṉi*, பெ.(n.) 1. தவஞ் செய்வோன் தன்னைச் சுற்றி நான்கு திசைகளிலும் மூட்டிய நான்கு தீ (அக்கினி)யும் மேலே காய்கிற கதிரவனும் (சூரியனும்) ஆகிய ஐவகைத் தீ (அக்கினி); the five fires amidst which an ascetic practises self-mortification, four fires at the four points of the compass the fifth being the Sun. "பஞ்சாக்கினி முதலியவற்றினின்று அரிய தவசுகளைச் செய்தும்" (சி.சி.8,11,மறைஞா.) 2. அராகம், வெகுளி, காமம், சடம், தீபனம் என்ற ஐவகைத் தேகாக்கினி (பிங்.); the five mystic fires of the body, viz., irāgam, veguḷi, kāmam, caḍam, dīpaṉam 3. (உதராக்கினி), சூரியதாபாக்கினி, (தவாக்கினி), நிதாக காலாக்கினி, இரவிகாந்தக்கினி என்ற ஐவகைத் தீ (சங்.அக.); the five kinds of fires, viz., utarākkiṉi, šūriya-tāpākkiṉi, tavākkiṉi, nitāka-kālākkiṉi, iravi-kāndākkini. 4. சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், ஏலம் என வயிற்றுத் தீயைக் கிளரச் செய்யும் ஐவகை மருந்துச் சரக்கு (தைலவ.தைல.16.); the five kinds of stomachics, viz., cukku, tippali, miḷagu, šīragam, ēlam.

[Skt.pañcāgni> த. பஞ்சாக்கினி]

பஞ்சாக்கினிக்கொடி *pañjākkiṉi-k-kōḍi*, பெ.(n.) வேலிப் பருத்தி, காட்டுக் கருணை, மரல், புளி நறளை, நறளைக்கிழங்கு என்ற ஐவகைக் கொடிகள் (சங்.அக.); the five creepers, viz., vēli-p-parutti, kāttu-k-karuṇai, maral, puḷi-naṟalai, naṟalai-k-kiḷaṅgu.

[Skt.pañcāgni> த. பஞ்சாக்கினி]

பஞ்சாக்கினி வித்தை *pañjākkiṉivittai*, பெ.(n.) ஆதன் வானுலகத்தினின்று பிறந்ததற்காக முறையே செல்லுதற்குரிய துறக்கம், மேக மண்டலம், நிலம், தந்தை, தாய் என்னும் ஐந்திடத்தையும் தீயாகவும் தன்னை ஆகுதியாகவும் வைத்துப் புரியும் ஊழ்கம் (தியானம்) (சி.போ.பா.பக்.200.); meditation in which the five regions, heaven, clouds, earth, father and mother, travelled by a

soul from heaven to earth are considered as five fires and the self as an offering made in it.

[Skt.pañcāgni+vitta> த. பஞ்சாக்கினிவித்தை]

பஞ்சாகசூரணி-த்தல் *pañjākašūraṇi-*, 4 செ.கு.வி.(v.i.) மெதுவாகும்படி பொடி செய்தல்; pulversing so as to become soft (சா.அக.).

பஞ்சாங்கக்காரன் *pañjāṅga-k-kāraṉ*, பெ.(n.) 1. கணியன்; one proficient in preparing almanac, astrologer. 2. பார்ப்பனர் அல்லாதவரின் போற்றாளி (புரோகிதன்); a class of Brahmins who officiate as priests to certain castes of non-Brahmins.

த.வ. ஐந்தியன்

[பஞ்சாங்கம்+காரன்]

பஞ்சாங்கவணக்கம் *pañjāṅga-vaṇakkam*, பெ.(n.) முழங்கால்கள், கைகள், தலையாகிய ஐந்து உறுப்புக்கள் நிலந்தோய வணங்குகை; prostration with the knees, hands and head touching the earth. "அட்டாங்கமுடன் பஞ்சாங்க முடனாதல்... பணிவோர்" (திருவிளை.மூர்த்தி.30).

[Skt.pañcāṅga> த. பஞ்சாங்கம்+வணக்கம்]

பஞ்சாங்கப்புடம் *pañjāṅgappuḍam*, பெ.(n.) ஐந்து வகை அங்கமும் பொருந்திய புடம்; calcination satisfying the five conditions required (சா.அக.).

[பஞ்சாங்கம்+புடம்]

பஞ்சாங்கபலன் *pañjāṅga-palaṉ*, பெ.(n.) அந்தந்த ஆண்டுக்கு ஐந்தியம் (பஞ்சாங்கம்) கூறும் பலன்; astrological forecasts for the year as given in the almanac.

த.வ.ஐயுறுப்புப் பலன்

[Skt.pañcāṅga> த. பஞ்சாங்கம்+பலன்]

பஞ்சாங்கம்[1] *pañjāṅgam*, பெ.(n.) 1. நாள், கிழமை, விண்மீன், ஓகம், கரணம் (திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம்) என்ற ஐந்து உறுப்புகளுடைய கலைக் குறிப்பு (பிங்.); almanac, as comprising five parts, viz., titi, vāram, naṭcattiram, yōgam, karaṇam 2. பிறப்பியம் (சாதகம்) (இ.வ.); horoscope 3. சடங்காளனுக்கு (புரோகிதத்துக்கு) விடப்படும் நல்கை (மானியம்); inam or grant of land held on favourable terms by the village priest for his service. 4. சடங்காண்மை (புரோகிதத் தொழில்); office of the ceremonial priest of certain non-Brahmin castes. 5. குதிரை (யாழ்.அக.); horse 6. ஆமை (யாழ்.அக.); tortoise.

த.வ.ஐந்தியம்

[Skt.pañcāṅga> த. பஞ்சாங்கம்]

பஞ்சாங்கமவிழ்-த்தல் *pañjāṅgam-aviḻ-*, 4 செ.கு.வி.(v.i.) 1. வீண் கதைப் பேசுதல்; to bring in irrelevant matters. 2. பொய்க் கதை புனைதல்; to fabricate false stories.

த.வ. கட்டுக்கதை பேசுதல்

[Skt.pañcāṅga> த. பஞ்சாங்கம்]

பஞ்சாங்கி *pañjāṅgi*, பெ.(n.) முறிவு மருத்துவத்தில் ஒரு வகைக் கட்டு; a kind of bandage in surgery. (சா.அக.)

பஞ்சாச்சரியம் *pañjāccariyam*, பெ.(n.) அருகக் கடவுள் பொருட்டு நிகழும் பொன்பொழிவு (கனகவர்ஷம்), மலர்ப்பொழிவு (புஷ்பவர்ஷம்), ஆலவட்டம் (மந்தமாருதம்), மங்கலவாழ்த்து (சுபகோஷம்), தேவமுரசம் (தேவதுந்துபி) என்ற ஐந்து வியப்புக்குரிய நிகழ்ச்சிகள் (நரிவிருத்.); the five heavenly wonders, viz., kaṉaka-varṣam, puṣpa-varṣam, manda-mārudam, šupa-kōṣam, dēva-tundupi.

த.வ.ஐஞ்சடங்கு

[Skt.pañcān+āccariya> த. பஞ்சாச்சரியம்]

பஞ்சாசத் *pañjāšat*, பெ.(n.) ஐம்பது; fifty "பஞ்சாசத்கோடி" (சிவதரு.கோபுர.77.).

[Skt.pañcašat> த. பஞ்சாசத்]

பஞ்சாசது *pañjāšaḍu*, பெ.(n.) பஞ்சாசத் (சங்.அக.) பார்க்க; see pañjāšat.

பஞ்சாசாரியர் *pañjāšāriyar*, பெ.(n.) கோயில் பூசகர் (S.I.I.ii,111.); temple priests.

[Skt.pañca+cāriya> த. பஞ்சாசாரியர்]

பஞ்சாட்சரக்காவடி *pañjāṭcara-k-kāvaḍi*, பெ.(n.) திருநீறு (விபூதி)க் காவடி (நாஞ்.); a kāvaḍi in which the main offering is the sacred ash.

த.வ. திருநீற்றுக்காவடி

[Skt.pañcāk-ṣara> த. பஞ்சாட்சரம்]

பஞ்சாட்சரக்கோயில் *pañjāṭcara-k-kōyil*, பெ.(n.) திருநீற்று (விபூதி)ப்பை (நாஞ்சி.); bag containing sacred ashes.

த.வ. நீற்றுப்பை

[Skt.pañcāk-sara> த. பஞ்சாட்சரம்]

பஞ்சாட்சரப்படி *pañjāṭcara-p-paḍi*, பெ.(n.) சிதம்பரம் கோயிலுள் சிற்சபையில் ஏறுதற் கமைந்த ஐந்துபடிகள்; the five steps leading to Sitšapai in Chidambarm temple.

த.வ. ஐந்தெழுத்துப்படி

[Skt.pañcākṣara> த. பஞ்சாட்சரம்]

பஞ்சாட்சரம் *pañjāṭcaram*, பெ.(n.) 1. சிவனை அதி தெய்வமாகக் கொண்டதும் 'நமசிவாய' என்று ஐந்து எழுத்துகளாலானதுமான மந்திரம்; the five lettered mantra whose presiding deity is Siva,viz.,na ma ci vāya 2. திருநீறு (இ.வ.); sacred ashes.

[Skt.pañcākṣara> த. பஞ்சாட்சரம்]

பஞ்சாட்சரவருணி *pañjāṭcaravaruṇi*, பெ.(n.) நெல்லிக்காய்; Indian goose berry. (சா.அக.)

பஞ்சாணுவிரதம் *pañjāṇu-viradam*, பெ.(n.) சமணருள் இல்வாழ்வான் மேற்கொள்ளும் ஐந்து நோன்புகள் (மேருமந்.கதை.24.); the five vows practised by laymen.

பஞ்சாதி *pañjādi*, பெ.(n.) 1. தனித்தனி பெரும்பாலும் ஐம்பது சொற்கள் கொண்ட எசுர்(வேத)ப் பகுதி; sections of Yājur-Vēda eachcontainingaboutfiftywords 2. வேதப் பகுதி; a Vēdic passage.

[Skt.pañcāšat> த. பஞ்சாதி]

பஞ்சாமியம் *pañjāmiyam*, பெ.(n.) இலந்தை; jujube (சா.அக.).

பஞ்சாமிர்தம் *pañjāmirdam*, பெ.(n.) வாழைப்பழம், தேன், சருக்கரை, நெய், திராட்சை என்ற இனிய பண்டங்களால் செய்வதும் இறை முழுக்காட்டிற்குப் பயன்ப டுத்துவதுமான பண்டம் (T.A.S.I.,268.); a mixture of five delicious substances, usually, plantain, honey, sugar, ghee, grape used for anointing idols.

த.வ.ஐயமுது, ஐந்தமுதம்

[Skt.pañcān+amṛta> த. பஞ்சாமிர்தம்]

பஞ்சாமிலம் *pañjāmilam*, பெ.(n.) இலந்தை, மாதுளை, புளியாரை, நெல்லி, எலுமிச்சை என்ற புளிப்புச் சுவையுள்ள ஐவகை மரங்கள் (சங்.அக.); the five acid-producing plants, viz., ilandai, mādulai, puḷiyārai, nelli, elumiccai.

த.வ.ஐம்புளிகம்

[Skt.pañca+āmla> த. பஞ்சாமிலம்]

பஞ்சாய் *pañcāy*, பெ.(n.) புகை காட்டும் கருவி (தூபக்கால்) (வின்.); censer.

[U.pañjah> த. பஞ்சாய்]



பஞ்சாயத்தார் *pañjāyattār*, பெ.(n.) வழக்குத் தீர்ப்பாளர்; arbitrators, mediators; assessors, jurors.

த.வ. ஊரவையார்

[U.pañcāyat> த. பஞ்சாயத்து]

பஞ்சாயத்து *pañjāyattu,* பெ.(n.) 1. பெரும்பாலும் தீர்ப்பாளர் ஐவர் கூடி வழக்கை ஆராயும் ஊர்மன்றம் (சபை); a body of persons sitting as a court of arbitration, usually five in number. 2. வழக்குத் தீர்ப்பாளரால் செய்யப்படும் வழக்கு ஆராய்வு; arbitration by disinterested persons chosen by the contending parties.

த.வ. ஊரவை, ஐந்தாயம், பேராயம்

[U.pañcayat> த. பஞ்சாயத்து]

பஞ்சாயத்து நாமா *pañjāyattu-nāmā,* பெ.(n.) பொது நல முறைமடல் (மனு); general affidavit inquest; report.

[U.pañjāyat+nāmā> த. பஞ்சாயத்துநாமா]

பஞ்சாயத்துயூனியன் *pañjāyattu-ūniyan,* பெ.(n.) ஊராட்சி ஒன்றியம்; panchayat union.

த.வ. ஊராட்சி ஒன்றியம்

[Skt.pañcāyat+ E.Union> த. பஞ்சாயத்து யூனியன்]

பஞ்சாயுதபாணி *pañjāyuda-pāṇi,* பெ.(n.) ஐம்படைக்கையினன், திருமால்; Viṣṇu, as holding five weapons in his hand.

[Skt.pañcā(n)> த. பஞ்சம்+ஆயுதம்+பாணி]

பஞ்சாயுதம் *pañjāyudam,* பெ.(n.) 1. சங்கம், சக்கரம், தண்டு (கதை), வில் (சார்ங்கம்), வாள் (கட்கம்) என்ற திருமாலின் ஐவகைக் கருவிகள்; the five weapons of Viṣṇu,viz., šaṅgam, šakkaram, kadai, šārṅgam, kaṭkam2. ஐம்படைத்தாலி(விதான.மைந்தர்.1.); a gold ornament worn by women and children.

த.வ.ஐம்படை

[Skt.pañcan> த. பஞ்சம்+ஆயுதம்]

பஞ்சாயுதமணி *pañjāyuda-maṇi,* பெ.(n.) ஐவகை வுருக்களாலான சிறுவர் கழுத்தணி வகை (யாழ்ப்.); a necklace of gold beads with pañjāyudam as pendant, worn by children.

த.வ.ஐம்படைத்தாலி

[Skt.pañcan> த. பஞ்சம்+ஆய்தம்+மணி]

பஞ்சார்க்கம் *pañjārkkam,* பெ.(n.) தூமம், விதிபாதம், இந்திரதனு, பரிவேடம், கேது என்ற ஐந்து கரந்துறை கோள்கள் (விதான. குணாகுண.55.); the five celestial phenomena of daily occurrence regarded as exerting evil influence, viz., dūmam, vidipādam,indiradaṉu,parivēḍam,kēdu.

[Skt.pañcan+ārkka> த. பஞ்சார்க்கம்]

பஞ்சாரங்கட்டி *pañjāraṅ-gaṭṭi,* பெ.(n.) பஞ்சார மாலையணியும் மகளிரைக் கொண்ட இடையர் வகுப்பு; a sub-division of the iḍaiyarcaste, so named from the pañcāram necklace worn by their women.

[பஞ்ச+ஆரம்+கட்டி]

பஞ்சாரூடபத்திரம் *pañjārūḍa-pattiram,* பெ.(n.) கொடுத்தவன், வாங்கியவன், சான்றாளர்களிருவர், எழுதியவன் ஆகிய இவ்வைவரும் கையொப்பமிட்ட ஆவணம் (சங்.அக.); a document having the signature of the executant, executee, two witnesses and the scribe.

[Skt.pañcārūḍha-patra> த. பஞ்சாரூட பத்திரம்]

பஞ்சாவயவம் *pañjāvayavam,* பெ.(n.) தருக்க நூலில் (சாத்திரத்தில்) வரும் மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு, உபநயம், நிகமம் என்பன (சி.சி.அளவை,11,சிவாக்.); the five elements in a logical statement, viz., mēṟkōḷ, ēdu, eḍuttukkaṭṭu,upanayam,nigamam.

[Skt.pañcāvayava> த. பஞ்சாவயவம்]

பஞ்சாவரணம் *pañjāvaraṇam,* பெ.(n.) தளம், தளாக்கிரம், பீடத்தின் கண்டம், கீழ்ப்பீடம், ஆதார சிலை என்னும் இலிங்கபீடத்தின் ஐவகை உறுப்பு (சைவச.பொது.59.); the five sections of the pedestal of a liṅga.

[Skt.pañcan+āvaraṇa> த. பஞ்சாவரணம்]

பஞ்சாளத்தார் *pañjāḷattār,* பெ.(n.) பஞ்சகம்மாளர் பார்க்க; see pañjakammāḷar.

தெ.பஞ்சாணுலு

பஞ்சாத்திகாயம் *pañjāttikāyam,* பெ.(n.) சீவாத்திகாயம், தர்மாத்திகாயம், அதர்மாத்தி காயம், ஆகாசாத்திகாயம், புற்காலாத்திகாயம் அல்லது அசீவாத்திகாயம் என்ற ஐந்து சைன மத தத்துவங்கள் (திருநூற்.23,உரை.); the five ontological categories under which reals are distributed, viz., jīvāstikāyam, darmāstikāyam, adarmāstikāyam, āgāšāstikāyam, puṟkālāstikāyam or ajīvāstikāyam.

[Skt.pañcāstikāya> த. பஞ்சாத்திகாயம்]

பஞ்சீகரணம் *pañjīkaraṇam,* பெ.(n.) நுண்ணுடற் கூறு கொண்ட (சூக்கும) பூதங்கள் ஒவ்வொன்றையும் இரண்டு சம பாகமாகப் பிரித்து ஒரு பாகத்தைத் தன் பருவுடல் (ஸ்தூல) பூதத்திலும் மற்றொரு பாகத்தை நான்கு சமபாகமாகப் பிரித்து ஒவ்வொரு சிறு பாகத்தையும் மற்ற நான்கு பருவுடல் (ஸ்தூல) பூதங்களிலும் சேர்க்கை (கைவல்.தத்.10.); the process of dividing each of the five subtler elements into two equal parts and apportioning one part to its corresponding grosser element and one-fourth of the other part to each of the other grosser elements.

[Skt.pañcākaraṇa> த. பஞ்சீகரணம்]

பஞ்சேந்திரியம் *pañjēndiriyam,* பெ.(n.) மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகள் (பிங்.); the five organs of sense, viz., mey, vāy, kaṇ, mūkku, cevi.

[Skt.pañcēndriya> த. பஞ்சேந்திரியம்]

பட்சசுரம் *paṭcašuram,* பெ.(n.) பதினைந்து நாளைக்கு ஒரு முறை வரும் காய்ச்சல்; a kind of fever occuring once in fifteen day. (சா.அக.)

[பட்ச(ம்)+சுரம்]

பட்சணம் *paṭcaṇam,* பெ.(n.) 1. உண்கை; eating, devouring, consuming. 2. விலங்கின் உணவு (வின்.); food of beasts and birds; prey. 3. சிற்றுண்டி; cakes, sweet - meats.

[Skt.bhakṣaṇa> த. பட்சணம்]

பட்சணம்பண்ணு-தல் *paṭcaṇam-paṇṇu,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. உண்ணுதல்; to eat; to eat up, to consume, to devour 2. கவர்தல்; to misappropriate.

த.வ. உண்ணுதல், தின்னுதல்

[Skt.bhakṣaṇa> த. பட்சணம்]

பட்சணி *paṭcaṇi,* பெ.(n.) 1. உண்போன்; one who eats "சருகுசல பட்சணிக ளொரு கோடி" (தாயு.மௌனகுரு.8). 2. பெருந்தீனி தின்போன்; one who indulges to excess in eating. 3. அகத்தியர் செய்த ஒரு தமிழ் மருத்துவ நூல்; a Tamil treatise on medicine compiled by Sage Agastiyar. 4. ஒக அறிவைப் பற்றி, குறியீடாக 132 செய்யுட்களால் பாடிய ஒரு நூல்: a secret science of yoga practice and philosophy compiled in 132 poems or verses (சா.அக.).

[Skt.bhakṣaṇm> த. பட்சணி]

பட்சணியம் *paṭcaṇiyam,* பெ.(n.) உண்ணத் தகுந்த பொருள்; substance fit or suitable to eat. (சா.அக.)

பட்சத்தில் *paṭcattil,* இடை. (Part.) ஆயின்; case that, granting that. 'அவன் வரும் பட்சத்தில் நான் போவேன்'.

[Skt.pakṣa> த. பட்சத்தில்]

பட்சதாபம் *paṭcatābam,* பெ.(n.) இரக்கம் (வின்.); sympathy, compassion.

[Skt.paščāttāpa> த. பட்சதாபம்]

பட்சப்போலி *paṭca-p-pōli,* பெ.(n.) தருக்கத்தில் பக்கத்தின் போலி (ஆபாசம்) (மணிமே.29:145.); fallacious minor term.

[Skt.pakṣa> த. பட்சம்+போலி]

பட்சபாதகவாதம் *paṭca-pādaga-vādam,* பெ.(n.) பட்சபாதவாதம் பார்க்க (சா.அக.); see paṭca-pāda-vādam.

பட்சபாதம்[1] *patca-pādam,* பெ.(n.) ஒரு தலைச் சார்பு; partisanship partiality.

[Skt.paksa+pata> த. பட்சபாதம்]

பட்சபாதம்[2] *patca-pādam,* பெ.(n.) இரக்கம் (வின்.); sympathy, compassion.

[Skt.paksa+vāta> த. பட்சபாதம்]

பட்சபாதவாதம் *patca-pāda-vādam,* பெ.(n.) ஊதையும், கோழையுங் கூடி அதனால் நோய் கண்டு நாக்கு, கை, கால் இழுத்து அசந்து போகச் செய்யும் ஒரு வகை ஊதை நோய்; a kind of paralysis marked by loss of sensation and function of the tongue, face and the limbs due to the concerted action of wind and phlegm humours (சா.அக.).

பட்சபாதி *patca-pādi,* பெ.(n.) ஒருதலைச் சார்பானவன்; biased person, partisan, schismatic.

[Skt.paksa-pātin> த. பட்சபாதி]

பட்சம்[1] *patcam,* பெ.(n.) 1. கட்சி; side, party. 2. அன்பு; kindness, affection, friendship. "பட்சமுற வைத்தார் பதி" (தனிப்பா. i,363,101). 3. சிறகு; wing 4. 15 நாள் (திதி) கொண்ட காலம்; lunar fortnight 5. நூல்; treatise 6. கோட்பாடு; theory; opinion 7. மீனம்பர் (யாழ்.அக.); ambergris.

[Skt.paksa> த. பட்சம்]

பட்சம்[2] *patcam,* பெ.(n.) சார்பு (சைவப்பிரகாசன. 16.); leaning.

[Skt.paksa> த. பட்சம்]

பட்சம்போடு-தல் *patcam-pōdu-,* 20 செ.கு.வி.(v.i.) பதினைந்து நாள் வரை வெயிலில் காய வைத்தல்; drying for fifteen days under the sun (சா.அக.).

பட்சம்வை-த்தல் *patcam-,* 4 செ.கு.வி.(v.i.) பதினைந்து நாள் வைத்திருத்தல்; to keep for fifteen days. (சா.அக.)

பட்சமமண்டலம் *patca-mamandalam,* பெ.(n.) கண்ணிமை வட்டம்; circles of the eye lashes. (சா.அக.)

[Skt.paksa> த. பட்சம்]

பட்சமூலி *patcamūli,* பெ.(n.) சித்தர்கள் பசியெடுக்காதிருக்க பதினைந்து நாளைக் கொரு தரம் உட்கொள்ளும் ஒரு மூலிகை; an unknown drug taken by Sidhhars once in a fortnight to keep them off from hunger so that they may not be disturbed in their yoga practice. (சா.அக.)

[பட்சம்+மூலி]

பட்சாந்தரம் *patcāndaram,* பெ.(n.) கொள்ளப் பட்ட கொள்கையில் இருந்து மாறுபட்ட கொள்கை; alternative, another side or view of an argument.

[Skt.paksāntara> த. பட்சாந்தரம்]

பட்சாபாசம் *patcāpāšam,* பெ.(n.) பக்கப் போலி; a fallacious argument.

[Skt. paksa+ā-bhāsa> த. பட்சபாசம்]

பட்சி[1]**-த்தல்** *patci-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. உண்ணுதல்; to eat, devour, gobble, glut. "தசைகள் பட்சித்து" (திருப்பு.507) 2. கவர்தல்; to misappropriate. அவன் சொத்தை எல்லாம் பட்சித்துவிட்டான் (இ.வ.)) 3. அழித்தல்; to mar, destroy.) 'இரட்சித்தாலும் சரி பட்சித்தாலும் சரி'.

[Skt. bhaks> த. பட்சி-த்தல்,]

பட்சி[2] *patci,* பெ.(n.) 1. பறவை; bird, winged creature. "கின்னர மிதுன பட்சிகள் (தக்கயாகப்.610,உரை.) 2. குதிரை (அக.நி.); horse.

[Skt.paksin> த. பட்சி]

பட்சிக்கப்பு *patcikkappu,* பெ.(n.) சங்கு; conch. (சா.அக.)

பட்சிக்கல் *patci-k-kal,* பெ.(n.) கருடக்கல் ; a white stone. (சா.அக.)

பட்சிசாத்திரம் *patci-šāttiram,* பெ.(n.) பஞ்சபட்சி சாத்திரம் பார்க்க; see pañja-patci-šāttiram.

[பட்சி+சாத்திரம்]

பட்சிதோடம் *patci-dōdam,* பெ.(n.) மாலையில் பறவை நிழல்படுதலால் உண்டாவதாகக் கருதப்படும் குழந்தை நோய் வகை; a disease

of children, believed to be caused by the shadow of a bird falling on it in the evening.

[Skt. bhakṣ+tōṣa> த. பட்சிதோடம்]

பட்சியிராசன் *paṭciyirāšaṉ,* பெ.(n.) 1. கருடப்பச்சைக்கல்; beryl 2. பால் கருடக் கல்; a white stone or concretion supposed to be derived from the eye or head of Brahmini kite (சா.அக.).

பட்சியினெச்சம் *paṭciyiṉ-eccam,* பெ.(n.) பொன்னம்பர் (யாழ்.அக.); resinous amber.

பட்சிராசன் *paṭcirāšaṉ,* பெ.(n.) மூவுப்பு, மூவகையுப்பு; the quint essence salt derived from the effloresence found on the fuller's earth (சா.அக.).

பட்டாசாரி *paṭṭā-šāri,* பெ.(n.) 1. புலவன்; learned man, scholar 2. கோயில் பூசகன்; Brahmin priest of a temple.

[Skt. bhaṭṭa+cāri> த. பட்டாசாரி]

பட்டாசாரியன் *paṭṭā-šāriyaṉ,* பெ.(n.) 1. பட்டாசாரி பார்க்க; see paṭṭāšāri 2. மீமாஞ்ச மதத்தினுள் ஒரு பகுதிக்கு ஆசிரியன் (சி.போ.பா.பக்.44.); founder of a sub-sect of Mīmāmsakas.

[Skt. bhaṭṭa+cāriya> த. பட்டாசாரி]

'அன்' உடைமைப் பொருள் ஈறு

பட்டாசுகாய் *paṭṭašukāy,* பெ.(n.) சிலந்தி நாயகம் (சா.அக.); ulcer plant.

பட்டாணி[1] *paṭṭāṇi,* பெ.(n.) 1. கடலைக் கொடி வகை; garden pea 2. கொடி வகை; grey or field pea 3. கொண்டலாத்தி; hoopoe.

ம.புட்டானா, ம. பட்டாணி

K.,Tu. baṭāṇi; M. பட்டாணி

[Mhr. puṭānā > த. பட்டாணி]

பட்டாணி[2] *paṭṭāṇi,* பெ.(n.) உருது மொழி பேசும் முகம்மதிய வகையினர்; Indian Muhammadan whose mother tongue is Urdu.

[U. paṭhānī> த. பட்டாணி]

பட்டாணிக்கடலை *paṭṭāṇi-k-kaḍalai,* பெ.(n.) கடலை வகை; seed of the garden - pea.

பட்டாணித்தைலம் *paṭṭaṇi-t-tailam,* பெ.(n.) ஒரு சிரங்கெண்ணெய்; a medicated oil used for itch and sores (சா.அக.).

பட்டாணிப்பயறு *paṭṭaṇi-p-payaṟu,* பெ.(n.) பட்டாணி விதை; sea seed. (சா.அக.)

பட்டாரிகை *paṭṭārigai,* பெ.(n.) கொற்றவை (S.I.I.iii,136,n.); Durgā.

[Skt. bhaṭṭārikā> த. பட்டாரிகை]

பட்டாவியம் *paṭṭāviyam,* பெ.(n.) பட்டாவியா (ஜாவா) நாட்டில் பயிராகும் ஆரஞ்சு அல்லது கிச்சிலி; orange grown in Batavia (Java) (சா.அக.).

பட்டாளம்[1] *paṭṭāḷam,* பெ.(n.) 500 முதல் 1000 வரை காலாட்கள் கொண்ட படை வகை; regiment, body of foot soldiers of 500 to 1000 men.

த.வ.காலாட்படை

[E. battalion> த. பட்டாளம்]

பட்டாளம்[2] *paṭṭāḷam,* பெ.(n.) கூட்டம்; a large gang (of persons mentioned) 'மாணவர் பட்டாளம்', 'சிறுவர் பட்டாளம்' (உ.வ.).

[E. battalion> த. பட்டாளம்]

பட்டுவாடா *paṭṭu-vāḍā,* பெ.(n.) ஊதியம், மடல் (கடிதம்) பொருள் போன்றவற்றை உரியவர்களுக்கு வழங்குதல், உரியவர்களிடம் கொண்டு சேர்த்தல்; distribution; disbursement of salary; delivery of letters etc.. 'உரிய காலத்தில் ஊதியத்தைப் பட்டுவாடா செய்தால்தான் பணியாளர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும்'. 'தபால்காரர் கடிதங்களைப் பட்டுவாடா செய்யக் கிளம்பிவிட்டார்'. (இ.வ.)

த.வ. வழங்கல்

[U. batwārā> த. பட்டுவாடா]

பட்மாசு *paṭmāṣu,* பெ.(n.) கயவன் (அயோக்கியன்) (வின்.); rascal.

[U. budmāsh> த. பட்மாசு]

பட்வாரி *paṭvāri,* பெ.(n.) பதிவு செய்யும் பதிவாளர்; registrar.

[Mhr.paṭwāri> த. பட்வாரி]

படவா *paḍavā,* பெ.(n.) 1. போக்கிரி; rascal, base scoundrel 2. கூட்டிக் கொடுப்போன் (இ.வ.); pimp. ower of creating, acting and destroying 3. விலை மகள் (கூத்தி) (இ.வ.); prostitute. 4. ஒருவரைத் திட்டவும், பாசத் துடன் அழைக்கவும் பயன்படுத்தும் சொல்; பயல்; a term of abuse as well as endearment; chap. 'திருட்டுப் படவாக்கள்', 'படவா! நீ தான் என் பேனாவை எடுத்து ஒளித்து வைத்தாயா?' (இ.வ.)

[U.bharwā> த. படவா]

படா *paḍā,* பெ,எ. (adj.) பெரிய; large, great.

[U.barā> த. படா]

பண்டாபீசு *paṇḍāpīsu,* பெ.(n.) கூட்டுறவு நிலை வைப்பகம் (ஐக்கிய நாணய நிதிச்சாலை) (இக்.வ.); office of a permanent fund; co-operative.

[E.fundoffice < த. பண்டாபீசு]

பண்டிதசாத்திரம் *paṇḍida-śāttiram,* பெ.(n.) மருத்துவ (வைத்திய) நூல் (வின்.); science of medicine.

[Skt.paṇḍita+cāttira> த. பண்டிதசாத்திரம்]

பண்டிதம்பண்ணு-தல் *paṇḍidampaṇṇu-,* 12 செ.கு.வி. (v.i.) 1. மருத்துவம் செய்தல்; according treatment. applying remedies, cure diseases, practising medicine, application of remedies on a patient or a disease. 2. இயற்பியல் (பௌதிக) முடித்தல் (சா.அக.); subjecting to the chemical action of a substance.

பண்டிதரிலக்கணம் *paṇḍidar-ilakkaṇam,* பெ.(n.) நல்ல மருத்துவரின் குணம் முதலிய இலக்கணங்கள் (அ) செப்பம்; the qualities of a good physician. '1. மருத்துவ நூல் கற்றல், அதில் பழக்கமுறல், 2. பொருளாசை அற்று நிற்றல், 3. சரக்கு மூலிகை நிறை குணமறிதல், 4. சினம் கொள்ளாது அடக்கமுறல், 5. மருந்து செய்யும் திறத்தை அறிதல், 6. கடவுளை வழிபடல், 7. அறமியற்றல், 8. குருவையடுத்து முறையைக் கற்றல், 9. நெடுநாள் பழக்கமுறல், 10. கைபாகம் செய்பாகத்தில் தெளிவுறல் 11. இலக்கண இலக்கியம் கல்வித்திறம் கற்றல், 12. பிறர் உயிரைத் தன்னுயிரைப் போல் எண்ணல், 13. அனுபான வேறுபாடு அறிதல், 14. நோய், குறி குணங்கள் அறிதல், 15. சரக்குத் தூய்மையில் தேர்தல், 16. நண்பன் பகைவன் வேறுபாடு அறிதல், 17. மாழைகளைத் துகள் செந்தூரமாக்கும் முறையில் தெளிதல், 18. நாடி நடையறிதல், அதாவது நாடி ஆய்வு, 19. பஞ்சபூத நிலையும் முப்பிணிக்கூறு குற்றமுமறிதல் (சா.அக.).

பத்தாந்து *pattāndu,* பெ.(n.) தான் நுட்பமாக உண்டாக்கிய பொருளைப் போல் பிறர் செய்யாமல் தடுத்து, தானே செய்து பயன் பெறுதற்கு அரசு அளிக்கும் உரிமை (இ.வ.); patent.

த.வ. தன்னுரிமை

பத்திரக்கடன்காரன் *pattira-k-kaḍaṉ-kāraṉ,* பெ.(n.) ஆவணத்தின் மேல் கடன் கொடுத்தவன் (வின்.); bond-creditor.

[Skt.patra> த. பத்திரம்]

பத்திரக்காரன் *pattira-k-kāraṉ,* பெ.(n.) ஆவணம் பதிவு செய்வோன் (இ.வ.); notary public.

த.வ. சான்றுறுதியாளன்

[Skt.bhadra> த. பத்திரம்.]

['காரன்' உடைமைப் பொருள் ஈறு.]

பத்திரகடம் *pattira-kaḍam,* பெ.(n.) நற்காரியங் களுக்காக மாவிலை முதலியவற்றை வைத்துக் கட்டி அழகு செய்து நீர் நிறைக்கப்பட்ட குடம் (பூரணகும்பம்); (T.A.S.V.162.); pot filled with water and sanctified by rites.

[Skt.bhadra+ghaṭa> த. பத்திரகடம்]

பத்திரகம் *pattiragam,* பெ.(n.) 1. இலை; leaf, 2. சந்தனம்; sandal, 3. இறகு; feather,

4. விழுதி; a plant, 5. நீர்முள்ளி; a thorny plant. (சா.அக.).

பத்திரகாளி *pattirakāḷi,* பெ.(n.) கொற்றவை (சிலப்.20:38,உரை.); Durgā.

[Skt.Bhadra-kāḷi> த. பத்திரகாளி]

பத்திரதீபம் *pattira-dīpam,* பெ.(n.) கோயில் களில் நடைபெறும் விளக்கேற்றும் விழா வகை; an illumination ceremony conducted in temples.

[Skt.bhadra-dīpa> த. பத்திரதீபம்]

பத்திரபாலா *pattirapālā,* பெ.(n.) வலிமை கொடுக்கும் மூலிகை; a kind of rejuvanate medicine (சா.அக.).

பத்திரம்[1] *pattiram,* பெ.(n.) 1. இலை; leaf. பத்திரங்கொண் டருச்சித்தே (வெங்கைக்கோ. 120); 2. புத்தகத்தினேடு எதிர்போயேறும் பத்திரம் வென்றதாக. palm leaf of a book. (திருவாலவா.38,24); 3. இலை போன்ற தகடு; plate in the form of leaf. பைம்பொற் பத்திரம் (பெருங்.மகத.5,51); 4. ஓர் அணிகலன், வெண் கலப் பத்திரங்கட்டி விளையாடி (திவ்.பெரியாழ். 1,9,5); a leaf - like ornament. 5. ஆவணம்; written document, bond, deed, order. 6. திருமுகம். letter, epistle, பத்திரங் கொடுத்தொதுங்கிப் பத்திரன் பணிந்து நின்றான் (திருவாலவா.55,19): note, ola. 7. பூவிதழ் (வின்.); flower petal. 8. இறகு (பிங்.); wing, feather, plumage. 9. அம்பு (பிங்.); arrow. துன்று பத்திரமாயிரம் வாசவன் றுரப்ப (குற்ற.தல.14,39); arrow. 10. சிறுவாள் (பிங்.) small sword. பத்திரம் புரை நாட்டம் (கம்பரா. ஊர்தே.170).

பத்திரம்[2] *pattiram,* பெ.(n.) 1. அழகு (பிங்.); beauty, grace. 2. அழகிய உருவம். பத்திரமணிந்த சித்திரக்கதவின் (பெருங். இலாவாண.2,66); beautiful figures, as carved on a door. 3. கவனம். சாமான்களைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்; caution, carefulness, circumspection. 4. நன்மை (சூடா.) பத்திரக்கடிப்பு (சீவக.2276); goodness. 5. பாதுகாப்பு. பத்திரச் சிறைகளை விரிக்கும் பண்பினான் (கம்பரா.சடாயுவுயிர். 91); safety, security. 6. நலம். ஊரில் எல்லாரும் பத்திரமா? good state of health, welfare. 7. யானை வகை. பத்திரப் பெயர்ப் பருத்தகைச் சிறுத்தகட் பாய்மதப் பரூஉப் பக டனையான் (பாரத.பதினெட்டாம்.31); a kind of elephant. 8. மலை (பிங்.). பத்திரத் தலையென (கம்பரா. கரன்.80); hill, mountain. 9. பீடத்திலுள்ள எழுதகவகை. நடுவு பத்திரம் உடைத்தாய் நின்ற பீடம் ஒன்று; (S.I.I.ii,222). 10. ஒன்பான் ஆண்டுகளில் ஒன்றாகிய பத்திர ஆண்டு. (சிவதரு.கோபுர.53). 11. ஒக இருக்கை வகை. ஆதன நூற்றெட்டவை பதுமம் பத்திரம் (தத்துவப்.107). 12. பத்திரலிங்கம் என்னும் பெயர் பெறும் சைவாலதுபத்துப் பலிபீடம். (சைவச.பொது.127). 13. குதிரைப் பந்தி (அக.நி.); horse-stable.

பத்திரம்[3] *pattiram,* பெ.(n.) 1. சொத்தின் விளக்கமும் அதற்கு உரியவரின் பெயரும் எழுதி அரசிடம் பதிவு செய்யப்பட்ட முத்திரைத் தாள்; registered document of property, etc. 'பத்திரத்தில் குறிப்பிடப்பட் டிருப்பவரின் பிறங்கடைக்கே இந்தச் சொத்தின் மேல் உரிமை உண்டு,' 2. முத்திரைத்தாள்; stamp paper for writing legal documents. 'ஆயிரம் ரூபாய் பத்திரம் இரண்டு கொடுங்கள்'. 3. முதலீடாக. சேமிப்பாக அல்லது கடனாகக் கொடுத்த பணத்துக்குத் தரும் அச்சடிக்கப் பட்ட அல்லது எழுதப்பட்ட சான்று; bond for investment, savings or loan. 'ஐந்தாண்டு காலச் சிறுசேமிப்பு ஆவணங்கள் 4. ஒரு விழாவில் ஒருவரை, பாராட்டும் வகையில் அளிக்கப்படும் பாராட்டுச் சொற்கள் அடங்கிய தாள்; citation read in honour of some one at a formal occasion. 'விழாவில் அமைச்சருக்குப் பாராட்டுப் பத்திரம் வாசித்து அளிக்கப்பட்டது'. (உ.வ.)

[Skt.bhadra> த. பத்திரம்]

பத்திரலிங்கம் *pattira-liṅgam,* பெ.(n.) சிவாலயத்துப் பலிபீடம் (சைவச.பொது. 127,உரை.); altar of sacrifice.

[Skt.bhadra+linka> த. பத்திரலிங்கம்]

பத்திரவீரியகம் *pattira-viriyakam,* பெ.(n.) 1. மூங்கில் வகை; a kind of bamboo 2. பிரம்பு; rattan.

[Skt.patra+viryaka> த. பத்திரவீரியகம்]

பத்திரன் *pattiran,* பெ.(n.) 1. வீரபத்திரன்; Virabdadran. "மீண்ட பத்திரன் விண்ணுலக டைந்தனன்" (உபதேசகா.விபூதி.31). 2. சிவ பிரான் (வின்.); Siva. 3. பாணபத்திரன்; a devotee. "சிறந்தானங்கட் பத்திர னென்றோர் பாணன்" (திருவாலவா.54,1).

[Skt.bhadra> த. பத்திரன்]

பத்திராகாரன் *pattirākāran,* பெ.(n.) அழகிய வடிவினன்; well built handsome man. "என்பத்திராகாரன் புறம்புல்குவான்" (திவ். பெரியாழ்.1.10:6).

[Skt.bhadra+ākāra> த. பத்திராகாரன்]

பத்திராசனர் *pattirāšanar,* பெ.(n.) ஒரு வகைத் தேவ கணத்தார்; a class of angelss or heavenly inhabitants.

பத்திராஞ்சனம் *pattirāñjanam,* பெ.(n.) மை; collyrium, black paint (சா.அக.).

பத்திராட்சி *pattirāṭci,* பெ.(n.) அந்திமந்தாரை அல்லது அந்தி மல்லிகை; evening Jasmine, four o' clock plant. (சா.அக.)

பத்திராட்சிமணி *pattirāṭci-mani,* பெ.(n.) உருத்திராக்கம் போல அணிதற்குரிய கொட்டை மணி வகை; four o' clock seeds worn by religious mendicants.

[Skt.bhadrākṣa> த. பத்திராட்சி]

பத்திராதி *pattirādi,* பெ.(n.) ஆகாய கருடன்; sky root.

பத்திராதிபர் *pattirādipar,* பெ.(n.) செய்தித் தாள் நடத்தும் தலைவர் (இக்.வ.); editor of a journal.

த.வ. இதழாசிரியர்

[Skt.patra+adhipa> த. பத்திராதிபர்]

பத்திராலாபனம் *pattirālāpanam,* பெ.(n.) நலம் கூறுகை (சீவக.2180,உரை.); telling a person of one's welfare.

[Skt.bhadrālāpana> த. பத்திராலாபனம்]

பத்திரி[1] *pattiri,* பெ.(n.) 1. அம்பு (திவா.); arrow. 2. பறவை (பிங்.); bird. 3. குதிரை (சூடா.); horse. 4, சாதிபத்திரி (உ.வ.); mace. 5. காட்டுச்சாதி; Malabar nutmeg.

[Skt.patrin> த. பத்திரி]

பத்திரி[2] *pattiri,* பெ.(n.) இலை; leaf. "இலதை வல்லிகளினுள்ளாலிருந்த பத்திரிகள்" (மேருமந்.1163).

[Skt.patra> த. பத்திரி]

பத்திரி[3] *pattiri,* பெ.(n.) காளி (பிங்.); Kālī, consort of Siva.

[Skt.bhadrā> த. பத்திரி]

பத்திரிகம் *pattirigam,* பெ.(n.) சீரகம்; cumin seed (சா.அக.).

பத்திரிகா *pattirigā,* பெ.(n.) 1. வெள்ளை நாகணம்; white croton plant. 2. இருள் விடு செடி; an unknown plant.

பத்திரிகை *pattirikai,* பெ.(n.) 1. மடல் (கடிதம்); letter, ola. 2. இலை; leaf. 3. அச்சடித்த தாள்; printed paper; news paper; journal; pamphlet. 4. ஆவணம்; document, deed, 5. விளம்பரத்துண்டு; notice, advertisement.

[Skt.patrikā> த. பத்திரிகை]

பத்திரிகையாளர் *pattirikaiyāḷar,* பெ.(n.) செய்தித்தாளுக்குச் செய்தி திரட்டுபவர் அல்லது செய்தித்தாள் தொடர்பான பணி யிலிருப்பவர்; journalist.

த.வ. செய்தியாளர், தாளிகையாளர்

பத்திரிகைவை-த்தல் *pattirikai-vai-,* 4 செ.குன்றாவி. (v.t.) குடும்பச் சடங்கு களுக்கான அழைப்பிதழை நேரில் கொடுத்து நிகழ்ச்சிக்கு வருமாறு அழைத்தல்; invite formally in person.

[பத்திரிகை+வை-த்தல்,]

பத்மகம் *padmagam,* பெ.(n.) ஒரு வகை மரம்; a kind of tree. (சா.அக.).

பத்மகெந்தஞ்சம் *padmakendañjam,* பெ.(n.) தாமரைக் கிழங்கு; lotus root. (சா.அக.).

பத்மம் *padmam,* பெ.(n.) பதுமம் (S.I.I.ii,395) பார்க்க; see padumam.

பத்மயோனி *padma-yōṉi,* பெ.(n.) நான்முகன்; Brahmā. "மாமுனிகணத்தர் தம்மொடுங் கூடி நின்றனன் பத்மயோனியே" (தக்கயாகப்.472).

[Skt.padma+yōni> த. பத்மயோனி]

பத்மராகம் *padmarāgam,* பெ.(n.) மாணிக்கம்; சிவப்புக் கல்; a species of ruby.

பத்மவரி *padma-vari,* பெ.(n.) தாமரைத் தளங்களையொத்து அமைக்கப்பட்ட கோயிலின் அடிப்பகுதி; the lowermost tier of a temple shaped in the form of the petals of a lotus flower.

[Skt.padma> த. பத்மம்+வரி]

பத்மாசனம் *padmāšaṉam,* பெ.(n.) ஓர் ஓக நிலை; a posture in yoga practice (சா.அக.).

பத்மாட்சம் *padmāṭcam,* பெ.(n.) தாமரை மணி (சா.அக.); lotus beads or seeds.

பத்மினிகண்டகம் *padmiṉikaṇḍagam,* பெ.(n.) தாமரைச் செடியின் முட்களைப் போல் உடம்பின் தோலைப் பற்றி உண்டாகும் ஒரு நோய்; தவளைச் சொறி; a skin disease marked by thickening and keratinisation of the skin. Follicular and popular eruptions and degeneration of sebaceous and sweet glands toad skin (சா.அக.).

பத்மினிசாதிப்பெண் *padmiṉišādippeṇ,* பெ.(n.) நால்வகை இனப் பெண்களில் முதல் வகை; padmiṉi is the first of the four classes of women classified according to their lust (சா.அக.).

பத்மினி செயநீர் *padmiṉišeyanīr,* பெ.(n.) ஒன்பது அல்லது பத்து மாதக் கருப்பிண்டக் கருவினின்று செய்யும் செயநீர்; a pungent liquid extracted from a foetus of nine or ten months old (சா.அக.).

பத்ரகாளி *padrākāḷi,* பெ.(n.) கொற்றவை; Durgā. "பத்ரகாளி படை கண்டு" (தக்கயாகப்.592).

[பத்திரகாளி > பத்ரகாளி]

பத்வா *padvā,* பெ.(n.) முகம்மதியச் சட்டப்படிக் கூறும் தீர்ப்பு; judicial sentence or judgement by a Mufti.

[U.fatwa> த. பத்வா]

பதகதார் *padaka-dār,* பெ.(n.) சிற்றூர் தொகுதியாகிய பதகத்தின் தலைவர் (G.Tj.D.I.170.); head of a Patakam.

[Skt.pata-ga> த. பதகதார்]

பதச்சாரியை *pada-c-cāriyai,* பெ.(n.) ஓரெழுத்துக்கு மேற்பட்ட எழுத்துகளாலாகிய சாரியை (வின்.); augment consisting of more than one letter, as இன், வற்று.

த.வ.எழுத்துச்சாரியை

[Skt.pada> த. பதம்]

பதச்சேதம் *pada-c-cēdam,* பெ.(n.) 1. சொற்றொடரைத் தனித் தனிச் சொல்லாகப் பிரிக்கை (வின்.); splitting into component parts, as a sentence. 2. சீர்; metrical foot. "சீரைப் பதச் சேதமென்றும் பகர்வர்" (யாப்.வி.22,பக்.97).

த.வ. சொற்பிரிப்பு

[Skt.pada+cēta> த. பதச்சேதம்]

பதசகம் *padašagam,* பெ.(n.) அத்தினி இனப் பெண்கள் நால் வகைகளுள் ஒரு பிரிவினர்; one of the four classes of women divided according to their tust (சா.அக.).

பதசாரம் *pada-šāram,* பெ.(n.) பதப் பிரயோசனம் பார்க்க; see pada-p-pirayōšaṉam.

[Skt.pada+cāra> த. பதசாரம்]

பதஞ்சலி *padañjali,* பெ.(n.) வடமொழியில் ஓக சூத்திரமும் வியாகரண மகாபாடியமும் மருத்துவ நூலொன்றும் இயற்றியவரும் ஆதி சேடனவதாரமாகக் கருதப்படுபவருமான ஒரு முனிவர்; a sage, author of the yōga šūtraas, Mahābhāsya and a treatise on medicine in Sanskrit, considered an incarnationof Adišēṣa.

[Skt.pat-añjali> த. பதஞ்சலி]

பதப்பிரயோசனம் *pada-p-pirayōšaṉam,* பெ.(n.) சொல்லின் பொருணயம்; the significance of a word.

[Skt.pada+pirayōcana> த. பதப்பிரயோசனம்]

பதப்புணர்ச்சி *pada-p-puṉarcci,* பெ.(n.) நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடுகை (நன்.242,மயிலை.); sandhi, combination of one word with another.

[Skt.pada> த. பதம்]

பதபாடம் *pada-pāḍam,* பெ.(n.) மறையின் (வேதத்தின்) சொற்றொடர்களைப் பதம்பதமாக எடுத்தோது முறை; method of reciting Vēda word byword.

[Skt.pada> த. பதம்]

பதர்பேணி *padar-pēṇi,* பெ.(n.) கோதுமையாற் செய்யப்படும் ஒரு வகைப் பணிகாரம் (இந்துபாக.); a kind of cake prepared from wheat.

[U.padar+phēni> த. பதர்பேணி]

பதரிகாசிரமம் *padarikāśiramam,* பெ.(n.) இமயச் சாரலில் உள்ளதும், நரநாராயணர் தவம் புரிந்ததும், திருமாலுக்குச் சிறந்ததுமான, தலம் (வின்.); a sacred place on the Himālayas said to be the hermitage of Naraand Nārāyaṇa,sacred to Visṇu.

[Skt.badarikāśrama> த. பதரிகாசிரமம்]

பதரிரீட்சம் *padarirīṭcam,* பெ.(n.) ஒட்டை மரம்; Camel tree (சா.அக.).

பதனகேந்திரம் *padaṉa-kēndiram,* பெ.(n.) கிடைக்கோட்டின் (அட்சரேகையின்) விம்ப நிலை (வின்.); argument of the latitude of planets.

[Skt.patana+kēntira> த. பதனகேந்திரம்]

பதாகினி[1] *padākiṉi,* பெ.(n.) தானை (திவா.); army. "கடாங்கதழ் பதாகினி (ஞானா.26,18).

[Skt.patākinī> த. பதாகினி]

பதாகினி[2] *padākiṉi,* பெ.(n.) கொடிப்படை; army carrying banners. . "கடாங்கதழ் பதாகினி" (ஞானா.26,8). "நாயகி பதாகினிகளே" (தக்கயாகப். 433).

[Skt.patākinī> த. பதாகினி]

பதாத்துவா *padāttuvā,* பெ.(n.) அறுவகை அத்து வாக்களுள் பத உருவமானது (சிசி.8;6–9, மறைஞா.); the path of words, one of six attuvā.

[Skt.pada+adhvā> த. பதாத்துவா]

பதார்த்தம்[1] *padārttam,* பெ.(n.) 1. சொற்பொருள்; meaning of a word. 2. பொருள்; thing, substance matter, article, commodity, drug; being form of existence, whether spiritual or material. "ஐம்பொறிக்குந் தொடர்பாய் நிற்குமான்ற பதார்த்தங்களெலாம்" (ஞானவா.உற்பத்.68). 3. சோறு ஒழிந்த கறி முதலிய உணவுப் பொருள் (உ.வ.); curry, any food-stuff except rice. 4. சொத்து (வின்.); wealth; movable property. 5. பத்து கருடம் கொண்ட நிறை (சுக்கிர நீதி,105.); weight of ten karṣa. 6. செல்வம் (திரவியம்), குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாயம், அபாவம் என நியாய சாத்திரத்தில் வழங்கும் ஏழுவகைப் பொருள்கள்; category, predicable, of seven kinds, viz., diraviyam, kuṇam,karumam, śāmāniyam, vicēṣam, śamavāyam, apāvam 7. சிவ சமயத்துக் கூறப்படும் பதி, பசு, பாசம் என்ற மூவகை மூலப் பொருள்கள்; eternal, uncreated things in the universe, three in number, viz., padi, paśu,pāśam. 8. சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூவகை மூலப் பொருள்கள்; eternal uncreated things, viz.,śittu,aśittu, īśuvaraṉ 9. சமண சமயத்துக் கூறப்படும் சீவன், அசீவன் என்ற இரு வகை மூலப்பொருள்கள்; entity, of two kind, viz., śivaṉ,āśivaṉ.

[Skt.padārtha> த. பதார்த்தம்]

பதார்த்தம்[2] *padārttam,* பெ.(n.) 1. சாறப் பொருளினால் செய்யப்பட்ட பொருள்; all substances made up of matter, material substances that which underlies all phenomena. 2. கண்களால் பார்க்கக்கூடிய பொருள்; any visible thing. 3. உடம்பு அல்லது உடல் உறுப்பிற்கு அடிப்படை அல்லது

காரணமான பொருள்; (in anatomy) the material of which an organ or body is made up. 4. கடவுள் ஆற்றல் பொருந்தியுள்ள பொருள்; (in theology) that in which the divine attributes inhere or exist. 5. தின்பண்டம்; eatables. 6. மூலிகை; drug. 7. காய் கறி; vegetable. 8. உணவுப் பொருள்; food stuff. 9. சாறப் பொருள்; substances. 9. மூவகை மூலப்பொருள்கள்; the three elementary substances. 11. உணவோடு கூடிய பொருள்; accompainments for relish of food (சா.அக.).

பதிகிருத்தியம் *padi-kiruttiyam,* பெ.(n.) சமய சொற்பொருள் (பதார்த்தம்) எட்டனுள் ஒன்றான கடவுள் செயல் (சைவப்.67.); the acts of the Supreme Being, one of eight šamaya-padārttam.

[Skt.patikriya > த. பதிகிருத்தியம்]

பதிசேவை *padi-šēvai,* பெ.(n.) கணவனுக்குத் தொண்டு புரிதல்; service of a woman to her husband.

[Skt.padi+šēva> த. பதிசேவை]

பதிஞானம் *padi-ñāṉam,* பெ.(n.) 1. இறைவனைப் பற்றிய அறிவு (சி.சி.9,2,மறை.); knowledge of the Supreme Being. 2. துறவி; hermit.

[Skt.padi+ñaṉa> த. பதிஞானம்]

பதிஞானவாழ்வு *padi-ñāṉa-vāḻvu,* பெ.(n.) பரம் பொருளொடு இரண்டறக் கலத்தலாகிய நுகர்வு (அனுபவம்) (திருப்பு.888.); the spiritual experience in which the individual soul becomes merged in the Supreme Being.

பதிஞை *padiñai,* பெ.(n.) ஆய்வுப் பொருள்; தெரிவு; proposition. "பதிஞை யிடமலை வெவ் வழலுடைத்தென்பது" (வேதா.சூ.21).

[Skt.prati-jña > த. பதிஞை]

பதிட்டி-த்தல் *paditti-,* 4 செ.குன்றாவி. (v.t.) நிறுவுதல்; நிலைநாட்டுதல்; to establish, set up. "பாசம தகற்றி லிங்கம் பதிட்டியும்" (சீகாளத்.பு.கன்னி.149).

[Skt.prati-ṣthā> த. பதிட்டி-த்தல்,]

பதிட்டிதம் *padittidam,* பெ.(n.) நிலையாக ஆக்கப்பட்டது; that which is made certain. "பதிட்டிதம் பிறந்ததின்று" (பாரத. பன்னிரண்.39).

[Skt.prati-.sthita > த. பதிட்டிதம்]

பதிட்டை *padiṭṭai,* பெ.(n.) நிறுவுதல்; establishment. "பரனையானாப் பரிவினாற் பதிட்டை செய்து" (திருவிளை.இரச.29).

[Skt. prati-ṣthā> Pkt. patiṭṭhā > த. பதிட்டை]

பதிதபாவனன் *padida-pāvaṉaṉ,* பெ.(n.) ஒழுக்கம் தவறியவரைப் புனிதராக்குபவன் கடவுள்; God, as the redeemer of sinners.

[Skt.patita-pāvaṉa> த. பதிதபாவனன்]

பதிதரிராப்போசனம் *padidarirā-p-pōšaṉam,* பெ.(n.) இயேசுவின் கடைசி இரவு உணவு; the Lord's supper.

[பதிதன்+இரா+போசனம்]

பதிதன் *padidaṉ,* பெ.(n.) வருண வாழ்வொழுக்க அறம் (வருணாசிரம தருமம்) தவறியவன் (சீவக.2783,உரை.); one who has lost caste or religion, apostate.

[Skt.patita> த. பதிதன்]

பதிநிச்சயம் *padi-niccayam,* பெ.(n.) கடவுளுண்மை தெளிகை (வின்.); ascertainment of the existence of God.

[Skt.pati+niš-caya> த. பதிநிச்சயம்]

பதிநிதானம் *padi-nidāṉam,* பெ.(n.) பதிநிச்சயம் (வின்.) பார்க்க; see padi-niccayam.

[Skt.pati+nitaṉa> த. பதிநிதானம்]

பதிநிர்ணயம் *padi-nirṇayam,* பெ.(n.) பதி நிச்சயம் (வின்.) பார்க்க; see padi-niccayam.

[Skt.pati+nirṉaya> த. பதிநிர்ணயம்]

பதிநூல் *padi-nūl,* பெ.(n.) பரம் பொருளைப் பற்றிக் கூறும் நூல்; treatise dealing about the Supreme Being.

[Skt. pati> த. பதி]

பதிப்பிரஞ்ஞன் *padi-p-piraññan,* பெ.(n.) வழியறிந்தவன் (வின்.); one who knows the ways and means.

[Skt. pathi-prajña> த. பதிப்பிரஞ்ஞன்]

பதிபுண்ணியம் *padi-punniyam,* பெ.(n.) சிவபிரானுக்குச் செய்யும் திருப்பணி (சி.சி. 2,24); service to Siva.

[Skt. pati+punniya> த. பதிபுண்ணியம்]

பதிபோதம் *padi-pōdam,* பெ.(n.) பரம் பொருளைப் பற்றிய அறிவு (ஞானம்); knowledge and experience of the Supreme Being.

த.வ. இறையறிவு

[Skt. pati+bōdha> த. பதிபோதம்]

பதியிலார் *padi-y-ilār,* பெ.(n.) கணிகையர்; dancing girls. "உருத்திர கணிகைமாராம் பதியிலார் குலத்திற் றோன்றி" (பெரியபு. தடுத்தாட்.132).

பதில் *padil,* பெ.(n.) 1. மாற்றீடு; exchange; substituion. 2. மாற்றம், விடை; reply.

[U. badl> த. பதில்]

பதிலாமை *padilāmai,* பெ.(n.) குற்றச்சாட்டு (இ.வ.); accusation, charge.

[U. badnāmi> த. பதிலாமை]

பதிலாள் *padil-lal,* பெ.(n.) மாற்றாக நியமிக்கும் ஆள்; substitute, deputy, representative, proxy.

மறுவ. நிகராளி, நிகராளர், மாற்றாள்

[U. badl> த. பதில்+ஆள்]

பதிலாளி *padil-āli,* பெ.(n.) பதிலாள் (வின்.) பார்க்க; see padil-āl.

த.வ. மாற்றாள்

பதிலி *padili,* பெ.(n.) மாற்றாக நியமிக்கும் ஆள் அல்லது பொருள்; substitute; person or thing substituted for some other person or thing.

[U. badli> த. பதிலி]

பதிலிப்பத்திரம் *padili-p-pattiram,* பெ.(n.) அதிகார பத்திரம் (இக்.வ.); writ of authority or proxy.

[U. badli+Skt. pattira>த. பதிலிபத்திரம்]

பதிவதம் *padivadam,* பெ.(n.) பதிவிரதம் பார்க்க; see padi-viradam. "பதிவத மாதர் பரத்தையர்" (பரிபா.10,23).

பதிவிம்பம் *padivimbam,* பெ.(n.) எதிருரு; reflection, reflected image. "துரிய சுடர்ப் பதிவிம்பம்" (வேதா.சூ.106).

மறுவ. எதிர் வடிவு

[Skt. prati-bimba>Pkt. padi-bimba > த. பதிவிம்பம்]

பதிவிரதம் *padi-viradam,* பெ.(n.) பதிவிரதா தர்மம் (தக்கயாகப்.119, உரை.) பார்க்க; see padiviradā-tarmam.

[Skt. pati-vratā> த. பதிவிரதம்]

பதிவிரதமுல்லை *padivirada-mullai,* பெ.(n.) கற்புக்கு அறிகுறியாக அணியும் முல்லை; (தக்கயாகப்.119,உரை.); mullai flower worn by a woman to indicate her chastity.

[Skt. pativratā> த. பதிவிரதம்]

பதிவிரதாதர்மம் *padiviradā-darmam,* பெ.(n.) கற்பு நெறி; the law of chastity.

[Skt. pativratā+tarma> த. பதிவிரதாதர்மம்]

பதிவிரதாபுண்ணியம் *padiviradā-punniyam,* பெ.(n.) பதிவிரதாதர்மம் (வின்.) பார்க்க; see padiviradā-darmam.

[Skt. pativratā+punniya> த. பதிவிரதா புண்ணியம்]

பதிவிரதை *padiviradai,* பெ.(n.) கற்புடை மனைவி; chaste and virtuous wife. "அன்பு கூறும் பதிவிரதை" (திருப்பு.126).

த.வ. கற்புக்கரசி

[Skt.pati-vratā> த. பதிவிரதை]

பதுமகாட்டம் *padumakāṣṭam,* பெ.(n.) தென்னிந்தியா மாளவம் முதலிய இடங்களில் கிடைக்கின்ற துாணி மரத்தைப் போன்ற ஒரு நறுமணக் கட்டை; a fragrant wood resembling toon grown in South India and Malwa (சா.அக.).

பதுமகுல்கந்து *paduma-gulkandu,* பெ.(n.) வெண்டாமரைப் பூவினிதழ் உலர்ந்ததைக் கொண்டு தயாரிக்கும் ஒரு சேணியச் (யுனானி) சருக்கரைப் பாகு மருந்து; a confection of dried white lotus petals prepared in sugar or honey, candied white lotus prepared by Unani physicians (சா.அக.).

பதுமகூடம் *paduma-kūḍam,* பெ.(n.) 154 கோபுரங்களையும் 19 மேனிலைக் கட்டினை யுமுடைய கோயில் (சுக்கிரநீதி,230.); temple with 154 towers 19 storeys.

த.வ. தாமரைக்கூடம்

[Skt.patuma> த. பதுமம்]

பதுமகேசரம் *paduma-kēšaram,* பெ.(n.) புன்னை (சங்.அக.); mastwood.

[Skt.padma-kēšara> த. பதுமகேசரம்]

பதுமகோசம் *paduma-košam,* பெ.(n.) 301 கோபுரங்களையும், 36 மேனிலைக் கட்டினையு முடைய கோயில் (சுக்கிரநீதி,230); temple with 301 towers and 36 storeys.

பதுமகோசிகம் *paduma-košigam,* பெ.(n.) தாமரைக்காய் உருவமாகக் கை குவித்து ஐந்து விரலையும் அகல விரித்துக் காட்டும் இணையாவிணைக்கை வகை (சிலப்.3:18, உரை.); a gesture with one hand in which the fingers are so held as to appear like the calyx of a lotus.

[Skt.padma+kaušika> த. பதுமகோசிகம்]

பதுமசாரிணி *paduma-šāriṇi,* பெ.(n.) 1. ஒரு வகைத் தாமரை; a kind of lotus. 2. வெளித்தாமரை; sky lotus (சா.அக.).

பதுமதந்து *paduma-dandu,* பெ.(n.) தாமரை நாளம்; the hallow stalk of lotus plant (சா.அக.).

பதுமநாபன் *paduma-nāpaṉ,* பெ.(n.) உந்தித் தாமரையோன், திருமால்; Viṣṇu, as lotus-navelled.

[Skt.padma-nābha> த. பதுமநாபன்]

பதுமநாளம் *paduma-nālam,* பெ.(n.) 1. தாமரைக்கொடி; lotus creeper. 2. தாமரைத் தண்டு அல்லது தாமரை வளையம் (சா.அக.); lotus stalk.

பதுமநிதி[1] *paduma-nidi,* பெ.(n.) குபேரனது ஒன்பான் செல்வங்களு(நவநிதியி)லொன்று; one of the nine treasures of Kubēra. "சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து" (தேவா.1230,10).

[Skt.padma+niti> த. பதுமநிதி]

பதுமநிதி[2] *paduma-nidi,* பெ.(n.) தாமரை யுருவாய்க் கிடக்கும் பொன் கனிமம்; gold ores found in oval masses (சா.அக.).

பதுமபீடத்தன் *paduma-piḍattaṉ,* பெ.(n.) நான்முகன்; Brahma. "பதுமபீடத்தன்ன கரும்" (கம்பரா.கையடைப்.7).

[Skt.padma+piṭatta> த. பதுமபீடத்தன்]

பதுமபீடம் *paduma-piḍam,* பெ.(n.) தாமரை வடிவாகச் செய்யப்பட்ட பீடம் (மணிமே.3:66, அரும்.); seat in the shape of a lotus.

[Skt.padma+piṭa> த. பதுமபீடம்]

பதுமபுராணம் *paduma-purāṇam,* பெ.(n.) பதினெண் தொன்மத்தொன்று; one of padin-eṇ-purāṇam.

[Skt.padma-purāṇa> த. பதுமபுராணம்]

பதுமம்[1] *padumam,* பெ.(n.) 1. தாமரை; lotus, "அறுவர் மற்றையோரும்.... பயந்தோ ரென்ப பதுமத்துப் பாயல்" (பரிபா 5: 49) 2. பதுமரேகை (சங்.அக.) பார்க்க; see paduma-rēgai.

3. பதுமபுராணம் பார்க்க; see paduma-purāṇam. "பதுமமேலவன் புராணமாம் பிரமமே பதுமம்" (கந்தபு.பாயி.54). 4. பதுமபீடம் பார்க்க see paduma-pīḍam. "இவர் எழுந்தருளி நின்ற... பதுமம் நன்று" (S.I.I.ii-135). 5. பதுமாசனம் பார்க்க; see padumāšaṉam. "ஆதன நூற்றெட்டவை பதுமம்" (தத்துவப்.107). 6. முடியுறுப்பு ஐந்தனுள் தாமரை வடிவமானது (பிங்.); lotus - shaped section of a crown, one of five muḍi-y-uṟuppu; 7. நளிநயத்துக்குரிய ஆண் கைகளுளொன்று (சிலப்.பக்.92, கீழ்க்குறிப்பு); a hand - pose 8. கோடா கோடி (பிங்.) ; ten million crores. "கொடிப்படைப் பதுமத்தின் தலைவன்" (கம்பரா.இலங்கை கேள்வி.45) 9. பதுமநிதி பார்க்க; see paduma-nidi. 10. பதுமராகம் பார்க்க; see paduma - rāgam. "பதுமமு நீலமும் விந்தமும் படிதமும்" (சிலப்.14:186) 11. பதினைந்தாம் விண்மீனாகிய விளக்கு (சுவாதி) விண்மீன்; the 15th nakṣatra. 12. நிரய வகை (சி.போ. பா.2,3,பக். 203); a hell. 13. குதிரையின் இரண்டு முன் கால் சப்பைப் பக்கங்களிலும் காணப்படும் சுழி வகை (சுக்கிரநீதி,314); curls of hair on the shoulders of a horse.

[Skt.padma> த. பதுமம்]

பதுமம்² *padumam*, பெ.(n.) 1. ஈயம்; lead 2. ஒரு குளிகை; lotus pill 3. ஒரு வகை மாணிக்கம்; a kind of ruby 4. கண்ணிமை நோயின் ஒரு வகை மாறுபாடு; an eye disease of eye lid 5. ஒரு வகை ஒக நிலை; (in yoga philosophy) a posture in the practice of yoga (சா.அக.).

பதுமமணி *paduma-maṇi*, பெ.(n.) பதும வீசம் (சங்.அக.) பார்க்க; see paduma -vīšam.

[Skt.padma> த. பதுமம்+மணி]

பதுமமூலம் *paduma-mūlam*, பெ.(n.) தாமரைக் கிழங்கு; bulbous root of lotus (சா.அக.).

[பதும(ம்)+மூலம்]

[Skt.padma> த. பதும(ம்)]

பதுமர் *padumar*, பெ.(n.) பழைய புத்தருள் ஒருவர் (மணிமேபக்.369); one of the Buddhas that preceded Gautama Buddha.

[Skt.padma> த. பதுமர்]

பதுமரசாதி *padumara-šādi*, பெ.(n.) காம வகைப்பாட்டில் நான்காம்பிரிவு (அத்தினி) மகளிர் நால் வகைகளில் ஒன்றான; one of the four class i.e. last class of women divided according to their lust (சா.அக.).

பதுமராகம் *paduma-rāgam*, பெ.(n.) மாணிக்க வகை (திவா.) (திருவாலவா.25,12.); jacinth, a species of ruby, hyacinth.

[Skt.padma-rāga> த. பதுமராகம்]

பதுமரேகை *paduma-rēgai*, பெ.(n.) ஒருவனது நல்வாய்ப்பை (அதிட்டத்தை)க் குறிப்பதாகக் கருதப்படும் தாமரை வடிவமான கைவரிகை; lotus - mark on the palm of the hand, believed to indicate one's good fortune.

[Skt.padma+rēga> த. பதுமரேகை]

பதுமரோகம் *paduma-rōgam*, பெ.(n.) கண்ணிமையில் செஞ்சதை வளர்ந்திருக்கும் நோய் வகை (சங்.அக.); red fleshy excrescence with in the eyelid causing redness of the eye.

[Skt.padma+rōka> த. பதுமரோகம்]

பதுமவியூகம் *paduma-viyūgam*, பெ.(n.) தாமரை வடிவமாக வகுக்கப்பட்ட படையணி (சீவக.2311,உரை.); order of an army in the form of a lotus.

[Skt.padma+viyūka> த. பதுமவியூகம்]

பதுமாசனம் *padumāšaṉam*, பெ.(n.) இருக்கை (ஆசனம்) ஒன்பதனுள் இடக்காலை வலத்தொடையிலும் வலக்காலை இடத் தொடையிலும் வைத்து உட்கார்ந்து வலக் கையால் வலது பெரு விரலையும், இடக்கையால் இடது பெருவிரலையும் முதுகில் கை மாற்றிப் பிடித்துக் கொண்டு மோவாய்க் கட்டையை மார்பின் மேலூன்றி நாசி நுனியில் நாட்டம்

வைத்திருக்கும் இருக்கை (ஆசன) வகை (சீவக.656,உரை.); lotus - posture, a yōgic posture which consists in placing the right foot on the left thigh and the left foot on the right thigh and grasping the toes with the hands crossed over the back, while the chin presses on the chest and the gaze is fixed on the tip of the nose, one of nine āšanam.

[Skt.padmā-sana> த. பதுமாசனம்]

பதுமாசனன் *padumāšanan,* பெ.(n.) தாமரையில் வீற்றிருப்பவன், பிரமன்; Brahmā, as seated on a lotus. "பழியாது மில்லாத பதுமாசனற்கும்" (பிரபோத.3:6).

[Skt.padmāsana> த. பதுமாசனன்]

பதுமாசனி *padumāšani,* பெ.(n.) தாமரையில் வீற்றிருப்பவள், திருமகள்; Lakṣmi, as seated on a lotus.

[Skt.padmāsanā> த. பதுமாசனி]

பதுமாஞ்சலி *padumāñjali,* பெ.(n.) இரு கையையும் பதும கோசிகமாகக் கூட்டும் இணைக்கை வகை (சிலப்.3,18,உரை.); a gesture with both hands in which they are joined in paduma - kōšigam pose.

[Skt.padma+añjali> த. பதுமாஞ்சலி]

பதுமாதனம் *padumādanam,* பெ.(n.) பதுமாசனம் (தத்துவப்.108, உரை.) பார்க்க; see padumašanam.

பதுமாதீதம் *padumātidam,* பெ.(n.) மூன்றெழுத்தில் ஒன்றாகிய சவ்வு; one of the three mystic letters 'cawvic' (சா.அக.).

பதுமாந்தரம் *padumāndaram,* பெ.(n.) தாமரையிதழ்; petals of lotus flower (சா.அக.).

பதுமாலயம் *padumālayam,* பெ.(n.) 1. சீதேவி செங்கழுநீர்; purple fleabane 2. பொன்னாங் கண்ணி; sessile plane (சா.அக.).

பதுமினி *padumini,* பெ.(n.) நால்வகைப் பெண்டிருள் மேன்மைமிக்க இலக்கண முடையவள்; woman of the superior order, one of four pen.

[Skt.padmini> த. பதுமினி]

பதுமுகம் *padumugam,* பெ.(n.) 1. பதுமாசனம் (சிலப்.8,26,உரை.) பார்க்க; see padumāšanam 2. ஓமாலிகை முப்பத்திரண் டனுள் மஞ்சன நீரிற் கலக்கும் நறும் பண்ட வகை (சிலப்.6,77,உரை.); a fragrant substance used in bathing, one of 32 ōmāligai.

பதேசம் *padēšam,* பெ.(n.) நாடு; country. "நரகமேழும் நிகோதமும் பதேசமும்" (மேருமந்.110).

[Skt.pra-dēša> த. பதேசம்]

பந்த் *pandh,* பெ.(n.) (கட்சி, சங்கம் போன்ற அமைப்பு ஒரு கோரிக்கைக்காக அல்லது ஒன்றிற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில்) போக்குவரத்து, தொழில் போன்றவற்றை நடைபெறாவிடாமல் தடுத்தல்; முழு அடைப்பு; total stoppase (of business activities in a town, etc., (in India) bandh. 'பொது மக்கள் பாதிக்காத வகையில் பந்த் நடத்த வேண்டும்' (உ.வ.).

த.வ. அடைப்பு

[U.bandh> த. பந்த்]

பந்தர் *pandar,* பெ.(n.) முற்பிறப்பில் செய்த தீவினையால் அறிவு பெறாது பாசத்துக்கு உள்ளானவர் (வின்.); persons subject to the influence of karma and not yet eligible for divine illumination.

[Skt.bandha> த. பந்தர்]

பந்தனம் *pandanam,* பெ.(n.) 1. கட்டு; tie. 2. தடை; obstruction. 3. மறியல்; suppression as urine or stool. 4. விசி; ligature. 5. வளையக்கூடிய இழுவற்ற தடிப்பான சவ்வுக் கயிறு; any flexible in elastic tough fibrous band. 6. எலும்புகளை

பிணைக்கும் கடினமான கயிறு போன்ற பொருள்; a strong compact substance serving to bind one bone to another. 7. அரைஞாண்; waist string. 8. கட்டு; fastening binding. 9. சிறைப்படுத்துகை; restricting or rest raining the actions or movements as of devils spirits, dieties etc. 10. திணை; millet (சா.அக.).

[Skt. bandhana> த. பந்தனம்]

பந்தனாலயம் *pandanālayam,* பெ.(n.) சிறைச் சாலை (யாழ்.அக.); prison.

[Skt. bandhanā+lāya> த. பந்தனாலயம்]

பந்தனை *pandanai,* பெ.(n.) 1. பந்தனம், 1,2 பார்க்க; see pandanam. "ஐம்புலப் பந்தனை வாளர விரிய" (திருவாச.3,70) 2. பற்று; attachment. "பந்தனையிலா தான்" (பாரத. வாசுதேவனைப்.8) 3. ஆணவாதி குற்றங்கள் (சி.சி.9,12); bondage of soul. 4. குழந்தைக் கான நோய்; disease of children. "பந்தனை தீரப் பல்லாண்டு... பாடுதுமே" (திவ்.திருப்பல்.6). 5. மகள் (பிங்.); daughter.

[Skt. bandhana> த. பந்தனை]

பந்தா *pandā,* பெ.(n.) தன் பதவி, மேனிலை முதலியவற்றை வெளிப்படுத்தக் கூடிய மிடுக்கு; over bearing attitude. அவர் 'தான் ஒரு பெரிய நடிகர் என்ற பந்தாவே இல்லாமல் எல்லோரிடமும் இயல்பாகப் பழகுவார்'.

த.வ. மிடுக்கு

[Skt. Panthah> த. பந்தா]

பந்தாதிகாரி *pandādikāri,* பெ.(n.) சிறைச்சாலையின் அதிகாரி (திருவாலவா. அரும்.); superintendent of a jail.

த.வ. சிறைச்சாலை மேற்காணி

[Skt. bhandādhikārin> த. பந்தாதி]

பந்துரம் *panduram,* பெ.(n.) அழகு (வின்.); line of beauty, beauty.

[Skt. bandhura> த. பந்துரம்]

பந்தேகானா *pandēkānā* பெ.(n.) சிறைக் கூடம்; prison, jail.

[U. bandēkhāna> த. பந்தேகானா]

பந்தோக்கு *pandōkku,* பெ.(n.) கூட்டம் (இ.வ.); gang.

[U. bandēq> த. பந்தோக்கு]

பந்தோபத்து *pandōpattu,* பெ.(n.) 1. திட்டப் படுத்தப்பட்ட ஒழுங்கு; agreement, settlement, bargain, adjustment, arrangement, any system or mode of regulation, revenue settlement. 2. காவல்; care, safety, safe custody. முதலமைச்சரின் வருகையை முன்னிட்டுப் பலத்த பந்தோபத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

த.வ. முறைக்காவல், பாதுகாவல்

[U. bandōbast> த. பந்தோபத்து]

பப்பரப்பெண்டு *pappara-p-pendu,* பெ.(n.) வரிக் கூத்து வகை (சிலப்.3,13,உரை,பக்.88); a kind of masquerade dance.

[பப்பரம்+பெண்டு]

பப்பரம் *papparam,* பெ.(n.) ஐம்பத்தாறு நாடுகளுள் ஒன்று (திருவேங்.சத.96.); an ancient country of India, one of 56 dēsam. 2. பதினெண்மொழிகளுள் ஒன்று (திவா.); a language, one of 18.

[Skt. barbara> த. பப்பரம்]

பப்பரர் *papparar,* பெ.(n.) பப்பர (குச்சர) நாட்டார்; people of Papparam. "பப்பர ரெயினர் சீனகர்" (கம்பரா.மிதிலை,99).

பப்பளி¹ *pappaḷi,* பெ.(n.) பப்பாளி (வின்.) பார்க்க; see pappāḷi.

பப்பளி² *pappaḷi,* பெ.(n.) கிச்சிலி வகை; pomelo, the largest of the orange species.

பப்பளிச்சேலை *pappaḷi-c-cēlai,* பெ.(n.) சேலைவகை (இ.வ.); a kind of saree.

[பப்பளி+சேலை]

[K. pappaḷi> த. பப்பளி]

பப்பளிமாசு¹ *pappaḷimāšu,* பெ.(n.) பப்பளி² பார்க்க; see pappaḷi.

பப்பளிமாசு² *papaḷimāšu,* பெ.(n.) பெரு நாரத்தை; batavian orange (சா.அக.).

[டச்சு > pampelmoes> த. பப்பளிமாசு]

பப்பாயி *pappāyi*, பெ.(n.) பப்பாளி பார்க்க; see pappāḷi.

பப்பாளி *pappāḷi*, பெ.(n.) ஒரு வகைச் சிறுமரம்; Papaya Papaw.

*[**Malay.** Papaya > த. பப்பாளி]*

பப்பாளிப்பால் *pappāḷippāl*, பெ.(n.) பப்பாளி பார்க்க; see pappāḷi (சா.அக.).

பப்புருவாகனன் *pappuru-vākaṉaṉ*, பெ.(n.) மணலூர்ப் புரத்துப் பாண்டியன் மகளான சித்திராங்கதையிடம் அருச்சுனற்குப் பிறந்த மகன் (பாரத.); son of Arjuna by he Pāṇḍya princess Citrāṅgatā of maṉalūrpuram.

*[**Skt.** Babhruvāhana > த. பப்புருவாகனன்]*

பப்பரம் எனப்படும் குச்சர நாட்டின் ஒரு பகுதியில் மணலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த பாண்டியக் கிளை மரபினரைக் குறித்த கதையாகலாம்.

பம் *pam*, பெ.(n.) விண்மீன் (பிங்.); Star.

*[**Skt.** bha > த. பம்]*

பம்பாய் *pampāy*, பெ.(n.) இந்தியாவின் மேல் கடற்றுறைமுகமான ஒரு பெரு நகரம்; Bombay.

*[**Port.** bombain > த. பம்பாய்]*

தற்போது மும்பை என வழங்கப்படுகிறது.

பம்மகத்தி *pammakatti*, பெ.(n.) பார்ப்பனக் கொலை (பிரமகத்தி); the sin of killing a Brahmin. "காளையர்க ளெல்லா மடிந்த பம்மகத்தி வரலும்". (திருக்காள.உலா,19).

*[**Pkt.** bammahatti > த. பம்மகத்தி]*

பம்மன் *pammaṉ*, பெ.(n.) 1. சமணமாணி (சைன பிரமசாரி) (அருங்கலச்.168.); Jain bachelor. 2. பார்ப்பான் (இ.வ.); Brahmin.

*[**Skt.** brahman < த. பம்மன்]*

பமம் *pamam*, பெ.(n.) பமாதம் பார்க்க; see pamādam. "பமத்தினைப் பறித்தெறிந் திட்டான்" (மேருமந்.162).

பமரம் *pamaram*, பெ.(n.) வண்டு; bee. "பமர மடுப்பக் கடா மெடுத்து" (குமர.பிர.மீனாட். பிள்.4).

*[**Skt.** bhramara > **Pkt.** bhamara > த. பமரம்]*

பமாதம் *pamādam*, பெ.(n.) விழிப்பின்மை, எச்சரிக்கையின்மை; want of care; negligence. "பமாத சரிதம்" (அருங்கலச்.93).

*[**Skt.** pra-māda > **Pkt.** pamōda > த. பமாதம்]*

பயகம்பனம் *paya-kampaṉam*, பெ.(n.) அச்சத்தால் நடுங்குகை; trembling on account of fears. "பயகம்பனாதி மருவுதல் போல்" (வேதா.சூ.160).

[பயம்+கம்பனம்]

பயகர்ப்பதம் *paya-karppadam*, பெ.(n.) ஒரு கருத்தரிப்பின் மேல் மற்றொரு கருதரிக்கை; a pregnant lady concewing again super imposed pregnancy (சா.அக.).

பயங்கரம் *payaṅgaram*, பெ.(n.) 1. அச்சம்; fear, terror. 2. அச்சந்தருவது; that which causes fright or terror; alarming thing. "கமலத்தவளைப் பயங்கரமாக நின்றாண்ட வவயத்தின்" (திருக்கோ.33).

*[**Skt.** bhaya+kara > த. பயங்கரம்]*

பயங்கரவாதம் *payaṅgara-vādam*, பெ.(n.) அரசியல் நோக்கத்திற்காக மக்களிடையே அச்சத்தைக் கிளப்பும் வகையில் வன் முறையை மேற்கொள்ளும் போக்கு; terrorism. பயங்கரவாதத்தை அறவே ஒழிக்க எல்லோரும் முன் வர வேண்டும்.

த.வ. வன்கொடுமை

[பயங்கரம்+வாதம்]

பயங்கரவாதி *payaṅgara-vādi*, பெ.(n.) பேரச்ச முறைகளை மேற்கொண்டவர்; terrorist. பயங்கரவாதிகளை அரசு ஒடுக்க வேண்டும் அல்லது அவர்களாகவே திருந்த முற்பட வேண்டும்.

த.வ. வன்கொடியன்

பயங்காட்டு[1]–தல் *payaṅ-gāṭṭu,* 5 செ.கு.வி.(v.i.) அச்சமடையத்தக்க தோற்றங் காட்டுதல்; to assume a threatening appearance.

[**Skt.**bhaya> த. பயம்]

பயங்காட்டு[2]–தல் *payaṅ-gāṭṭu-,* செ.குன்றாவி. (v.t.) அச்சமுறச் செய்தல்; to frighten, threaten, menace.

[பயம்+காட்டு–,]

[**Skt.**bhaya > த. பயம்]

பயங்காளி *payaṅgāḷi,* பெ.(n.) பயங்கொள்ளி பார்க்க; see payaṅ-goḷḷi. "இந்தப் பயங்காளிப் பயல்" (அருட்பா. vi, வேண்டுகோள், 5, பக்.748).

[பயம்+(கொள்ளி)காளி]

பயங்கொள்ளி *payaṅ-goḷḷi,* பெ.(n.) அச்சமுள்ளோன் (இ.வ.); coward.

[பயம்+கொள்ளி]

பயச்சுரம் *paya-c-curam,* பெ.(n.) நடுக்கம் முதலிய அச்சக் குறிகளை உண்டாக்கும் காய்ச்சல் நோய் (சீவரட்.); fever in which the patient shows symptoms of fear.

[**Skt.**bhaya> த. பயம்]

பயசம் *payaśam,* பெ.(n.) 1. திருநாமப் பாலை; wild sarsa-parilla. 2. தண்ணீர்; water. 3.பால்; milk. 4. முலைப் பால்; breast milk. 5. அச்சம்; fright (சா.அக.).

பயணஉத்தரவுச் சீட்டு *payaṇa-uttaravu-c-ciṭṭu,* பெ.(n.) கப்பல் துறைமுகத்தை விட்டு போகும் முன் கொடுக்கப்படும் அனுமதிச் சீட்டு; port clearance.

[பயணம்+உத்தரவு+சீட்டு]

பயணங்கட்டு–தல் *payaṇaṅ-kaṭṭu-,* 5 செ.கு.வி. (v.i.) பயணத்திற்கு ஆயத்தமாதல்; to prepare for a journey.

[**Skt.**pra-yāṇa> **Pkt.**payaṇa>த. பயணம்]

பயணச்சீட்டு *payaṇa-c-ciṭṭu-,* பெ. (n.) பொதுப்போக்குவரத்து ஊர்திகளில் செல்வதற் காகத் தரப்படும் கட்டண நறுக்குச் சீட்டு; a piece of paper or card giving the holder a right to admission to travel on public transport.

[பயணம்+சீட்டு]

[**Skt.** Pra-yāṇa> **Pkt.**payaṇa>த. பயணம்]

பயணச்சீட்டுப்பரிசோதகர் *payaṇa-c-ciṭṭu-p-pariśōdagar,* பெ. (n.) பேருந்து, இரயில் முதலியவற்றில் செல்பவர்களின் செலவுச்சீட்டு, சுமைக்கான கட்டணச் சீட்டு முதலியவற்றைக் கேட்டு வாங்கிச் சரி பார்க்கும் பணியைச் செய்பவர்; ticket examiner (in a bus, train, etc., while travelling).

த.வ. நோட்டகர்

பயணசன்னாகம் *payaṇa-śannakam,* பெ. (n.) பயண அணியம்; preparation for a journey.

பயணநூல் *payaṇa-nūl,* பெ. (n.) ஒருவர் தான் சென்று வந்த நாட்டைப் பற்றியும் சந்தித்த மக்களைப் பற்றியும் எழுதும் நூல்; literature of travel. 'ஒரு நாட்டின் பண்பாடு, அவர்களின் பழக்கவழக்கங்களைப் பயண நூலில் அறிந்து கொள்ளலாம்'.

[பயணம்+நூல்]

[**Skt.**pra-yāṇa> **Pkt.**payaṇa> த. பயணம்]

பயணப்படி *payaṇa-p-paḍi,* பெ. (n.) அலுவலக வேலையின் பொருட்டு வெளி இடங்களுக்குச் செல்பவர்களின் செலவை ஈடுகட்டக் குறிப்பிட்ட விழுக்காட்டில் வழங்கப்படும் தொகை; travelling allowance (T.A.).

த.வ. ஏகல் செலவு

[**Skt.**pra-yāṇa> **Skt.**payaṇa>த. பயணம்]

பயணப்படு–தல் *payaṇa-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) பயணங்கட்டு–தல் பார்க்க; see payaṇaṅ-gaṭṭu-,

[பயணம்+படு–தல்,]

பயணப்படுத்து–தல் *payaṇa-p-paḍuttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. செலவுக்கு ஆயத்தப்

படுத்துதல்; to prepare one for a journey. 2. செலவுக்கு (பயணத்திற்கு) அழைத்துச் செல்லுதல் (வின்.); to take one on a journey. 3. சிதறுவித்தல்; to squander, put out of the way. "உள்ளதையெல்லாம் பயணப் படுத்தி விட்டான்" (வின்.).

[பயணம்+படுத்து-தல்,]

பயணம் *payaṇam*, பெ. (n.) 1. செலவு (பயணம்); journey, travel, voyage. "பயணமுடன்... ஆரூர்தொழுது" (பெரியபு.சேரமான்.129). 2. இறப்பு (மரணம்) (உ.வ.); death, as a journey.

[Skt. pra-yāṇa > Pkt. payaṇa > த. பயணம்]

பயணம் வைத்தல் *payaṇam-vaittal*, பெ. (n.) சாதல்; death (சா.அக.).

[பயணம்+வைத்தல்]

பயணவிரோதி *payaṇavirōdi*, பெ. (n.) பூனை; cat (சா.அக.).

பயணி[1]-த்தல் *payaṇi-*, 4 செ.கு.வி. (v.i.) பயணப்படு-தல் பார்க்க; see payaṇa-p-paaḍu-,

பயணி[2] *payaṇi*, பெ. (n.) செலவு மேற்கொள்பவர்; செலவு செல்பவர்; one who undertakes a journey; traveller; passenger. 'பயணிகள் தங்கும் இடம்', 'வெளிநாட்டுப் பயணிகள் தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்களைக் கண்டு களித்தனர்' (உ.வ.).

பயதத்தம் *paya-tattam*, பெ. (n.) அச்சத்தால் அரசன் முதலியோர்க்குக் கொடுக்கும் பொருள் (சுக்கிரநீதி,145.); gift made to the king, etc., through fear.

[Skt. bhaya+datta > த. பயதத்தம்]

பயந்தாரி *payandāri*, பெ. (n.) பயங்கொள்ளி (திருநெல்.) பார்க்க; see payaṅ-koḷḷi.

[பயம்+தாரி-,]

[Skt. bhaya > த. பயந்தாரி]

பயந்தான்கொள்ளி *payandāṉ-koḷḷi*, பெ. (n.) துணிவு இல்லாதவர்; (பயங்கொள்ளி) (இ.வ.); coward.

[பயந்தான்+கொள்ளி]

பயப்படல் *payappaḍal*, பெ. (n.) 1. அஞ்சுகை; fearing, being afraid. 2. பயன்படல் (சா.அக.); useful.

பயப்படு-தல் *paya-p-paḍu-*, 18 செ.கு.வி. (v.i.) தீங்கு, துன்பம் முதலியவை வந்துவிடுமோ என்று எண்ணி அச்சம் கொள்ளுதல்; அஞ்சி நிற்றல்; be afraid of. 'தவறு செய்கிறவர் பயப்பட வேண்டும், தவறு செய்யாதவர்கள் எதைக் கண்டும் பயப்படத் தேவையில்லை' (உ.வ.).

[பயம்+படு-,]

பயபக்தி *paya-pakti*, பெ. (n.) அச்சத்தோடு கூடிய பணிவு அல்லது மதிப்புரவு (மரியாதை); reverential attitude. 'புத்தகத்தை பய பக்தியோடு அவர் கையில் கொடுத்தான்' (உ.வ.).

பயம்காட்டு-தல் *payam-kāṭṭu-*, 5 செ.கு.வி. (v.i.) பயமுறுத்து-தல் பார்க்க; see payamuṟuttu-, 'பூதம், பேய் என்று சொல்லிக் குழந்தையைப் பயம் காட்டுதல் கூடாது'.

[பயம்+காட்டு-,]

பயமுறுத்து-தல் *payam-uṟuttu-*, 5 செ.குன்றாவி. (v.t.) 1. அச்சமுண்டாக்குதல்; to threaten, intimidate, frighten. 2. கண்டித்தல் (வின்.); to upbraid, rebuke.

பயா *payā*, பெ. (n.) தக்கா என்னும் முழவு (கலைமகள், XII, 402.); a kind of drum.

பயாம்வார் *payāmvār*, பெ. (n.) விளக்கக் குறிப்பு; detail.

[U. bayānwār > த. பயம்வார்]

பயானகக்கண் *payāṉaka-k-kaṇ*, பெ. (n.) அச்சத்தைத் தோற்றுவிக்கும் ஒரு வகைக்

கண்ணவிநயம் (பரத.பாவ.69.); a glance of the eyes intended to convey fear.

[பயானகம்+கண்]

பயானகம் *payāṉagam,* பெ. (n.) 1. அச்சச் சுவை; sentiment of terror, one of nava-rašam, q.v.,2. நிரய வகை (சிவதரு.சுவர்க்க நரக.107); a hell.

[Skt.bhayānaka> த. பயானகம்]

பயிண்டு[1] *payiṇḍu,* பெ. (n.) சுமார் 2 1/2 ஆழாக்களவு (இ.வ.); about 2 1/2 āḻākku.

[E.pint=1/2 quant < த. பயிண்டு]

பயிண்டு[2] *payiṇḍu,* பெ. (n.) புத்தகக் கட்டடம்; binding, as of books.

த.வ. கட்டாப்பு

[E.bind> த. பயிண்டு]

பயித்தியக்கரப்பான் *payittaya-k-karappāṉ,* பெ. (n.) பித்தத்தை உண்டாக்கும் ஒரு வகைக் கரப்பான்; a variety of skin eruption causing in sanity or unsoundness of mind (சா.அக.).

பயித்தியக்காரன் *payittiya-k-kāraṉ,* பெ. (n.) 1. பித்துப் பிடித்தவன் (சிவசமவா.58.); madman; lunatic. 2. மூடன்; foolish person.

[Skt.paitya> த. பயித்தியம்]

"காரன்" உடைமைப் பெயர் ஈறு

பயித்தியகாசம் *payittiya-kāšam,* பெ. (n.) மனத் தடுமாற்றத்தை உண்டு பண்ணும் ஈளை நோய்; asthma causing depression of mental faculties (சா.அக.).

[பயித்தியம்+காசம்]

பயித்தியதோசம் *payittiya-dōšam,* பெ. (n.) காலையில் எழுந்தவுடன் தூய்மையான நீர் குடிப்பதால் நீங்கும் நோய்; a disease which is cured by taking pure water as soon as getting from well (சா.அக.).

[பயித்தியம்+தோசம்].

பயித்தியம் *payittiyam,* பெ. (n.) 1. பித்து; madness, insanity. " பயித்தியங் கொண்டலை கிறாய்" (இராமநா.உயுத்.31.) 2. மதிகேடு; folly, foolishness, absurdity, stupidity. 3. தீராமோகம்; infatuation. 'பணப்பயித்தியம்'. 4. பயித்தியக்காரன் பார்க்க; see payittiya-k-kāraṉ.

[Skt.paitya> த. பயித்தியம்]

பயித்தியம்கொள்ளல் *payittiyam-koḷḷal,* பெ. (n.) பித்துப் பிடித்தல்; growing mad, becoming insanc (சா.அக.).

பயிரபதிசாதி *payira-padi-šādi,* பெ. (n.) ஆண் இனம் நால் வகைகளில் ஒன்று; one of the four classes of men divided according to their lust (சா.அக.).

பயிராகி *payirāgi,* பெ. (n.) பிச்சை எடுத்து செலவு மேற்கொள்ளும் வடநாட்டார்; religious mendicant from norh india.

[U.bairāgi> த. பயிராகி]

பயில்வான் *payilvāṉ,* பெ. (n.) மற்போர் புரிவோன்; wrestler, boxer. 'பயில்வான்கள் இருவரும் மேடைக்கு வந்தார்கள்' (உ.வ.).

த.வ. மல்லன்

[U.pahlwāṉ> த. பயில்வான்]

பர்க்கன் *parkkaṉ,* பெ.(n.) 1. கதிரவன் (பிங்.); the Sun. 2. சிவன் (பிங்.); Sivaṉ. 3. நான்முகன் (யாழ்.அக.); Brahmāṉ 4. திருமால் (யாழ்.அக.); Viṣṇu.

[Skt. bharga (ஒளி) >த. பர்க்கன்]

பர்க்கா *parkkā,* பெ.(n.) விதையிற் பாதியையும் வரியையும் நிலக்கிழார் கொடுக்க குடிவாரத்துக் குரியவன் நிலக்கிழாருக்கு விளைவிற் பாதியைக் கொடுப்பதாகச் செய்துகொள்ளும் உடன் படிக்கை (R.F.); agreement by which a cultivator engages to pay his landlord half the produce, the

latter providing half the seed and paying the whole revenue.

[U.bargā> த. பர்க்கா]

பர்க்காசுது *parkkāsudu,* பெ.(n.) 1. இசை நிகழ்ச்சி முதலியன வேலை முடிந்து கலைகை; closing or rising of a court, an office or a business (R.F.). 2. திருப்பி வாங்கிக் கொள்கை; withdrawal. 3. பறிமுதல் மீட்கை (C.G.); raising an attachment.

[U.barkhāst> த. பர்க்காசுது]

பர்கத்து *parkattu,* பெ.(n.) செழிப்பு; prosperity, thriving. 'இந்த வீடு பர்கத்து இல்லை' (C.G.).

[U.barakat> த. பர்கத்து]

பர்காணா *parkāṇā,* பெ.(n.) மாவட்டப் பகுதி; sub-division of a district (C.G.).

[U.pargaṇā> த. பர்காணா]

பர்காவணி *parkāvaṇi,* பெ.(n.) காசாய்வு; shrroffing, assaying money.

[U.parkhaonī> த. பர்காவணி]

பர்ச்சனியன் *parccaṉiyaṉ,* பெ.(n.) விண்ணுலக தலைவன் (இந்திரன்); Indra. (திவ்.திருப்பா.4,வ்யா.). 2. பன்னிரு இனத்தி லொருவர்; a deity representing the Sun, one of tuvātacātittar(q.v.).

[Skt.parjanya> த. பர்ச்சனியன்]

பர்ணசாலை *parṇa-šālai,* பெ.(n.) 1. இலை வேய்ந்த குடில்; leafy hut, hermitage. 2. முனிவர் குடில்; abode or hermits.

[Skt.parṇa> த. பர்ண]

பர்ணம் *parṇam,* பெ.(n.) இலை; leaf.

[Skt.parṇa> த. பர்ணம்]

பர்த்தா *parttā,* பெ.(n.) கணவன்; husband.

[Skt.bhartā> த. பர்த்தா]

பர்த்தி *partti,* பெ.(n.) 1. படி (பிரதி); substitute; return. 2. பணக்குறை நிரப்புகை; reimbursement. 'எடுத்த பணத்துக்குப் பர்த்தி செய்ய வேண்டும்' (C.G.).

[U.bharti> த. பர்த்தி]

பர்த்துருதத்தம் *partturu-tattam,* பெ.(n.) 1. மனைவிக்குச் சொந்தமாகக் கணவனாற் கொடுக்கப்பட்ட பரிசப் (சீதனப்) பொருள் (W.G.) property bequeathed to a woman by her husband which becomes her separate property, a variety of strī-dhana.

[Skt.bhartṛ+datta> த. பர்த்துருதத்தம்]

பர்தா *partā,* பெ.(n.) பிற ஆடவர் தம்மை பார்க்காத வகையில் இசுலாமியப் பெண்கள் தங்கள் உடலையும் முகத்தையும் மறைத்துக் கொள்ள அணியும் மேல் அங்கி; purdah.

த.வ. மேலங்கி

[U.bartar> த. பர்தா]

பர்ப்பட்டிரசம் *parppaṭṭirašam,* பெ.(n.) இதளியம், கெந்தி முதலியவைகளை மந்தாக்கினியில் வேகவைத்து, சாணி மீது வாழையிலையை மூடி சாணியிட்டு ஆறிய பின் எடுத்த இரசம் அல்லது கெந்தி, இது ஆயுள் வேத மருந்து (சா.அக.); an Ayurvedic preparation of containing mercury, sulphur etc., in which the said drugs are heated in moderate heat and then thrown on a plantain leaf spread for the purpose over the surface of cowdung then it is covered with another plantain leaf and preserved till the heat sulsides.

பர்ப்பயூன் *parppayūṉ,* பெ.(n.) கொத்துக் கொத்தாய் இலைகளுடன் முட்களும் நிறைந்த ஒரு வகைச் செடியில் சுரக்கக்கூடியதும்; உறைவதும் சாம்பல் நிறத்தோடு விறுவிறுக்கும் காரமுள்ளதும் பொதுவாக, திருகுகள்ளிப் பாலுக்கு மாற்றாகப் பயன்படுத்தக்கூடியது மான பால். (சா.அக.); milk extracted from a thorny shrub filled with bunches of leaves.

It is grey in colour title acrid to taste and pungent. It is generally substituted for milk of fursted spurge.

பர்பி *parpi,* பெ.(n.) கோதுமைக் குறுணை, (சருக்கரை) தேங்காய் முதலியன சேர்த்துச் செய்யப்படும் பணியார வகை (உ.வ.); a kind of sweet prepared with wheat-flour, sugar,coconut, etc.,

த.வ. இனிப்பம்

[U.bar-fi> த. பர்பி]

பர்லாங்கு *parlāṅku,* பெ.(n.) 220 படைச்சால் நீட்டலளவை; 220 yards, furlong.

த.வ.படைச்சால்

[E.Furlong> த. பர்லாங்கு]

பர்வதம் *parvatam,* பெ.(n.) மலை; mountain.

[Skt.parvata> த. பர்வதம்]

பர்வானா *parvāṉā,* பெ.(n.) 1. ஆணையிடல்; order, written command. 2. இலவயம் (இனாம்); grant.

[U.farmānā> த. பர்வானா]

பரக்கு *parakku,* பெ.(n.) 1. ஆய்கை; examination. 2. காசாய்கை; assaying of coins.

[U.parkhāi> த. பரக்கு]

பரகாயசரிதர் *para-kāya-caritar,* பெ.(n.) கூடுவிட்டுக் கூடு பாயும் வல்லமையுள்ளோர் (பரகாயப் பிரவேசம் செய்பவர்); those who are adept in parakāya-p-piravēcam. 'தகவுடைய பாண்டவரும்... பரகாய சரிதர் போல' (பாரத.நிரைமீட்சி.141).

[Skt.parakāya+caritar> த. பரகாயசரிதர்]

பரகாயப்பிரவேசம் *para-kāya-p-piravēšam,* பெ.(n.) உடலை விட்டு வேறு உடல் புகும் வித்தை கற்றவர்; art of leaving one's own body and entering another body at pleasure, metempsychosis.

[Skt. parakāya+pravēša> த. பரகாயப் பிரவேசம்]

பரகிதம் *parakitam,* பெ.(n.) 1. பிறர்க்கு நன்மையானது; that which is good for others. 2. பண்டைக் கணியவகை; (Astrol.) a kind of calculation in the ancient Hindu astronomy.

[Skt. para-hita> த. பரகிதம்]

பரகிதமூலச்சா *parakita-mūla-c-cā,* பெ.(n.) கணிதவாய்பாடு வகை (வின்.); (Astrol.) table of sines in the parakitam mode of astronomical calculation.

[Skt.para-hita+mūla-c-cā> த. பரகிதமூலச்சா]

பரகேசரி *para-kēšari,* பெ.(n.) 1. பகைவர்க்கு அரிமா போன்றவன்; one who is a lion to his enemies. 2. சோழரிற் சிலர்க்கு வழங்கிய பட்டப் பெயர்; title of certain cōḷa kings. 'மதுரை கொண்ட கோப்பர கேசரி வன்மர்க்கு' (S.I.I.V,214).

[Skt. para-kēsarin> த. பரகேசரி]

பரகேசரிக்கல் *para-kēšari-k-kal,* பெ.(n.) பொன் நிறுத்தற்குச் சோழர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட எடைக்கல் வகை. (S.I.I.V.85); a kind of weight used in the days of cōḷa kings for weighing gold.

[Skt. para-kēsarin > த. பரகேசரி= பகைவர்க்கு அரிமாபோன்றவன்]

பரசமயகோளரி *para-šamaya-kōḷari,* பெ.(n.) திருஞானசம்பந்தருக்குரிய ஒரு பட்டப்பெயர் (புறச்சமயிகளுக்குச் சிங்கம் போன்றவர்); a title of Tiruñāṉa-šampandar, meaning a lion to heretice. 'பரசமய கோளரிக்கு நிகரா' (பதினொ.ஆளுடை.திருவந்.54).

[Skt. para-samaya+kōḷari> த. பரசமய கோளரி]

பரசுபரம் *parašuparam,* பெ.(n.) (வி.அ.) adv. ஒருவர்க்கொருவர் (அல்லது) ஒன்றுக் கொன்று; mutually, reciprocally.

[Skt. paras-param> த. பரசுபரம்]

பரதநாட்டியம் *parata-nāṭṭiyam,* பெ.(n.) தென்னகப் பழந்தமிழர் நடனம்; dancing and acting according to ancient Tamil works.

த.வ. அவிநயம்

[Skt. bharata+nāṭṭiyam> த. பரதநாட்டியம்]

பரதம்[1] *paradam,* பெ.(n.) கடல் சூழ்ந்த தென்னிந்தியப் பகுதி; Southern India surrounded by sea.

[த. பரவை > பரதம் > Skt. Bharata> த. பரதம்]

பரதம்[2] *paradam,* பெ.(n.) 1. கூத்து; the art of dancing and acting. 'பாவமொடராகந் தாளமிம் மூன்றும் பகர்வதாற் பரத மென்றுரைப்பர். (பரத.பாவ.14). 2. ஒரு நாடகத்தமிழ் நூல் (சிலப்.உரைப்பா.); a treatise on dancing and acting. 3. பரதகண்டம் பார்க்க; see paratakaṇḍam. 'பரதத் தோங்கிய கோடாச் செங்கோற் சோழர்தங் குலக்கொடி' (மணிமே.பதி.22).

[த. பரவை > பரதம் > Skt. bharata> த. பரதம்]

பரதன் *paradaṉ,* பெ.(n.) 1. சகுந்தலைக்கும் துசியந்தனுக்கும் பிறந்தவனும், பரதகண்டம் என்று இந்திய நாட்டுக்குப் பெயர் வழங்கு தற்குக் காரணமானவனெனக் கூறப்படும் ஓர் அரசன்; a sovereign, son of Duṣyanta and Sakuntalā, after whom India is called Bharata-khaṇḍa. 2. இராமன் தம்பியருள் ஒருவனான கைகேயி மகன்; a younger brother of Rama and son of Kaikeyi.

[Skt. Bharata> த. பரதன்]

பரதாரம் *para-tāram,* பெ.(n.) பிறன் மனைவி; another's wife.

[Skt. para-dāra> த. பரதாரம்]

பரதேசி *paratēsi,* பெ.(n.) 1. அயல் நாட்டான்; foreigner, stranger. (சிலப்.5,11,உரை). 2. அயல்நாடு செல்வோன்; (வின்.); sojourner, pilgrim, traveller. 3. ஆண்டி; beggar, religious mendicant. 4. கதியற்றவன்; miserable, destitute person. 'பரதேசி காவலா' (திருவிளை.அங்கம்.27).

த.வ. இரவலன், நாடோடி

[Skt. para-dēśin> த. பரதேசி]

பரந்தபன் *paran-tapaṉ,* பெ.(n.) பகைவரை வருத்துவோன்; he who distresses his enemy.

[Skt. paran-tapa> த. பரந்தபன்]

பரந்தாமம் *parantāmam,* பெ.(n.) மேலுலகம்; heaven, as resplendent 'பரந்தாம மென்னுந் திவந்தரும்' (திவ்.இராமாநுச.94).

[Skt. paran-dhāman> த. பரந்தாமன்]

பரந்தாமன் *parantāmaṉ,* பெ.(n.) திருமால்; Viṣṇu, as Lord heaven.

[Skt. paran-dhāman> த. பரந்தாமன்]

பரப்பைபதம் *parappai-patam,* பெ.(n.) வடமொழிச் செய்வினைச் சொற்களுள் சிலவற்றின் ஈறுகள்; terminations of certain verbs in active voice. 'பன்னிய போதறி லாதேச மென்னும் பரப்பைபதம்' (பி.வி.36).

[Skt. parasmaipada> த. பரப்பைபதம்]

பரம்[1] *param,* பெ.(n.) 1. சுமை (பிங்.); burden, weight, heaviness. 'மிசைப்பரந் தோண்டாது' (புறநா.30). 2. உடல்; body. 'இப்பரந் துடைத்தவா' (கம்பரா.கடிமண.69). 3. கவசம் (சூடா.); armour for the body. 4. கேடக வகை; a kind off shield. 'புளகத்தோற்பரம்' (சீவக.2218). 5. குதிரைக் கலனை (பிங்.); saddle of a horse.

[Skt. bhara> த. பரம்]

பரம்[2] *param,* பெ.(n.) பரதேசி; mendrcant. 'நீ கிருத்திகை தோறும் பத்துப் பரங்கட்குத் தவறாது அன்னம் போட்டுவா" (மதி.க.i,180).

[Skt. para> த. பரம்]

பரம்பரம் *paramparam,* பெ.(n.) 1. வழிவழியாக வருகின்ற மரபுரிமை (வின்.); hereditary

succession. 2. குலமுறை (வமிசம்); lineage, race. 3. பரம்பரை பார்க்க; see paramparai. 4. முத்தி; final bliss. `பத்தி செய் யடியரைப் பரம்பரத்துய்ப்பவன்' (திருவாச.2,119). 5. பரம்பரன் பார்க்க; see param-paran, `நீயாதி பரம்பரமும்' (கம்பரா.விராதன்.4). 6. ஒன்றுக்கொன்று மேலானது; that which goes higher and higher. 'சென்று சென்று பரம்பரமாய்' (திவ்.திருவாய்.8,8,5).

[Skt. paramparā> த. பரம்பரம்]

பரம்பரை *paramparai,* பெ.(n.) 1. இடையறாத் தொடர்பு; uninterrupted series or succession, as of waves. 2. தலைமுறைத் தொடர்பு; hereditary sucession proceeding from father to son, from guru to disciple, from generation to generation. 'பயில்யோகம் பரம்பரையின் விரும்பினார்'. (பெரியபு. தடுத்தாட்.181).

[Skt. paramparā> த. பரம்பரை]

பரமகாரணன் *parama-kāraṇaṉ,* பெ.(n.) கடவுள்; God, as the first cause. (ஆதிகாரணமானவன்). 'பரமகாரணன்றிரு வருள தனால்' (திருக்கோ.1, அகவல்).

[Skt. parama+kāraṇaṉ> த. பரமகாரணன்]

பரமகுரு *parama-kuru,* பெ.(n.) 1. சிறந்த ஆசான்; great guru. 'பரமகுருவாய்ப் போதிக்கு முக்கணிறை' (தாயு.சுகவாரி.9). 2. பரமாசாரியன்,1. பார்க்க; see paramāšāriyaṉ.

[Skt. parama-kuru> த. பரமகுரு]

பரதசண்டாளன் *parama-šaṇḍāḷaṉ,* பெ.(n.) கொடும்பாவி; highly wicked person.

[Skt. parama-šaṇṭāḷaṉ> த. பரமசண்டாளன்]

பரமசிவன் *parama-šivaṉ,* பெ.(n.) சிவபிரான்; šiva.

[Skt. parama+šivaṉ> த. பரமசிவன்]

பரமநாழிகை *parama-nāḻigai,* பெ.(n.) பிறை நிலை (திதி) கிழமை (வாரம்), ஒகம், கரணம், நாண்மீன் ஆகியவற்றின் முழு நாழிகை; full duration, as of a titi, vāram, yōkam, karaṇamornaṭcattiram.

[Skt. parama-nāḻigai> த. பரமநாழிகை]

பரமபத்தி *parama-patti,* பெ.(n.) பரம் பொருளை விட்டுப் பிரிதற்கு ஆற்றாத பத்தியின் முதிர்ந்த நிலை; the third and highest stage of devotion in which a devotee does not brook the slightest separation from the supreme being. 'நனியாம் பரமபத்தியானைந்து' (திவ். இராமாநுச.100).

[Skt. parama+bhakti> த. பரமபத்தி]

பரமபதவாசல் *parama-pata-vāšal,* பெ.(n.) விண்ணுலக வாயில்; a gateway in a Viṣṇu temple.

[Skt. paramapada-vāšal> த. பரமபதவாசல்]

பரமபிதா *parama-pitā,* பெ.(n.) கடவுள் (Chr.); god, as the father of all beings.

[Skt. parama-pitā> த. பரமபிதா]

பரமரகசியம் *parama-rakašiyam,* பெ.(n.) மிகை மறைபொருள்; profound secret, great mystery. 2. மறைவான தத்துவக் கொள்கை; secret doctrine.

[Skt. parama+rakašiyam> த. பரமரகசியம்]

பரமலோபி *parama-lōpi,* பெ.(n.) இவறன், ஈயாதவன்; great niggard. 'பரமலோபி கண்டாய், (திருவேங்.சத.45).

த.வ. ஈயாமாரி

[Skt. parama+lōpi> த. பரமலோபி]

பரமஅம்சன் *parama-amšaṉ,* பெ.(n.) துறவிகள் நால்வகையினரில் கடவுள் நிலை யிலுள்ளவன்; ascetic of the highest order, one of four saṉṉiyāci.

த.வ. இறைமையன்

[Skt. parama-hansaṉ> த. பரமஅம்சன்]

பரமேசுவரன் *paramēšuvaran,* பெ.(n.) 1. கடவுள்; God. 2. சிவபிரான்; Siva.

[Skt.parama+išvara> த. பரமேசுவரன்]

பரமேசுவரி *paramēšuvari,* பெ.(n.) 1. மலைமகள்; Pārvatī (S.I.I.ii,170,24).

பரர் *parar,* பெ.(n.) 1. பகைஞர் (சூடா.); foes, 2. பிறர்; others, strangers.

[Skt.para> த. பரர்]

பரராசசிங்கம் *para-rāca-šingam,* பெ.(n.) 1. பகையரசர்க்கு அரிமா (சிங்கம்) போல்வான்; one who is a lion to his foes. 2. அரசர் சிலருடைய பட்டப்பெயர்; title of certain kings. 'பரராசசிங்கம் பொற்பந்த மின்றளித்தபோது' (தமிழ்நா.243).

[Skt.para+rājan+šingam> த. பரராசசிங்கம்]

பரராசசேகரன் *para-rāsa-sēgaran,* பெ.(n.) தமிழை ஆதரித்த யாழ்ப்பாணத்தரசருள் ஒருவன்; a Jaffna king, patron of Tamil literature. 'பரராசசேகர மன்னனின்ப மனங்கொள' (இரகு.பாயி.9).

பரவசம் *paravašam,* பெ.(n.) 1. பிறனுக்கு வயப்படல்; subjection to another. 2. மிகுகளிப்பு; ecstacy, transport of joy, rapture. 3. தன்வசமிழக்கை; loss of the senses, unconsciousness. 'மயலெலா மொழிந்து பரவசமாங் காலம்' (சிவப்.பிரபந் .சிவஞா.கலம்.26). 4. நெறி (வின்.); oath. 5. பராக்கு; inattention. heedlessness. 'பரவசத்தை விட்டு... கேண்மினோ' (திருவாலவா.8,1).

[Skt.para+vaša > த. பரவசம்]

பரவசமாதல் *paravasamādal,* பெ.(n.) கடந்த நிலையடைதல், அதாவது ஆறாம் துன்ப நிலையை உயிர் கடந்து செல்லுதல்; (in Vedantha philosophy) a state in which the soul rapt in vain seemed to have passed out of the body.

பரவா *paravā,* பெ.(n.) 1. கவலை; care, concern. 2. குற்றம்; harm. (பரவா இல்லை).

த.வ. பரவாயில்லை, தாழ்வில்லை, தேவலாம்

[U.parwā> த. பரவா]

பராக் *parāk,* இ.சொ.(அ.வ.); அரசர் போன்றோர் வருவதை அறிவித்துக் கவனமாக இருக்கும் படி வேண்டும் சொல்; a term used in the sense of 'attention' when announcing the arrival of king etc. 'ராஜாதிராஜ வீரமார்த்தாண்டர் வருகிறார்' பராக், பராக்' (நாடக.).

[Skt.parāk> த. பராக்]

பராக்கிரம பாண்டியன் *parākkirama pāṇḍiyaṉ,* பெ.(n.) வடமொழிச் செல்வாக்கால் பாண்டியவரசர் சிலர் கொண்ட பெயர் (Insc.); name of certain later Pāṇḍiya kings.

[Skt.parākrama+pāṇḍiyaṉ> த. பராக்கிரம பாண்டியன்]

பராக்கிரமம் *parākkiramam,* பெ.(n.) 1. வீரம்; valour, bravery, prowess, martial courage. 2. வல்லமை; vigour, strength, power, might, force, as of a wild beast.

[Skt.parā-krama > த. பராக்கிரமம்]

பராக்கிரமி-த்தல் *parākkirami-,* 4 செ.குன்றாவி. (1. v.i.) வீரச்செயல் காட்டுதல்; to display bravery. 'பல்லாயிர வண்டமும் பயமெய்தப் பராக்கிர மித்து' (அருட்பா,ii,திருவருள்.8).

[Skt.parākrama> த. பராக்கிரமித்தில்]

பராகம் *parāgam,* பெ.(n.) பன்னிரண்டு நாள் இரவும் பகலும் உண்ணாதிருக்கும் நோன்பு வகை. (பிரபோத.39,17.); a religious fast for twelve days and nights.

[Skt.parāka > த. பராகம்]

பராங்குசன் *parānkušaṉ,* பெ.(n.) 1. எதிரிகளாகிய யானைகளை அடக்கும் அங்குசம் போன்றவன் (இறை.கள.10,77.); one

who is like an elephant's goad to his enemies. 2. நம்மாழ்வார்; Nammāḷvār. 'வகுளத் தொங்கற் பராங்குசன்' (அஷ்டப். அழகரந்.காப்பு).

[Skt.parāṅ-kuśa> த. பராங்குசன்]

பராசத்தி *parā-śatti,* பெ.(n.) 1. மெய்யுணர்வு வடிவான உமையம்மை (ஞானமயமான சிவசத்தி) (சி.சி.1,61,சிவஞா.); (śaiva.) Siva's supreme energy which is all intelligence. 2. பஞ்சசத்திகளுள் இரத்தை, சுக்கிலை, அசிதை, கிருட்ணை என்ற நாற்பிரிவுள்ள சிவசத்தி (சைவச.பொது.74, உரை.); (śaiva.) Siva's supreme energy which manifests itself in four forms, viz., irattai, cakkilai, acitai, kiraṣṇai, one of pañcacatti.

[Skt.parā+śatti > த. பராசத்தி]

பராசரபட்டர் *parāśara-paṭṭar,* பெ.(n.) இராமானுசாசாரியர்க்குப் பின் வைணவாசாரியத்தலைமை வகித்த பெரியார் (குருபரம்); a Vaiṣṇava Ācārya, successor of Rāmāṉuja.

[Skt.parā-śara-bhaṭṭa > த. பராசரட்டர்]

பராசரன் *parāśaraṉ,* பெ.(n.) வியாசர்க்குத் தந்தையும் பராசரசுமிருதியாசிரியருமான முனிவர்; a Ṛṣi, author of a smṛti and father of Vyāsa. 'பராசரன் குலமாயினும்' (பாரத.சஞ்சயன்றூ.9).

[Skt.parāśara > த. பராசரன்]

பராதீனம் பண்ணு-தல் *parātīṉam-paṇṇu-,* 11 செ.கு.வி. (v.tr.) தன் சொத்தைப் பிறர் வயப்படுத்துதல்; to alienate one's property.

[Skt.parādhīna > த. பராதீனம்-பண்ணுதல்]

பராபர் *parāpar,* பெ.எ. (adj.) சரியான; correct, exact, straight forward, full. 'அவன் பராபர் ஆள்" (C.G.).

த.வ. பொருத்தமான

[U.barābar> த. பராபர்]

பராபரம் *parāparam,* பெ.(n.) பராபரன் (தாயு.பராபரக்.1.) பார்க்க; see parāparaṉ.

பராபவம் *parāpavam,* பெ.(n.) 1. தோல்வி; discomfiture, defeat 'பராபவத் தீச்சுட' (குமர.பிர.மீனாட்.பிள்ளைத்.5). 2. ஒவ்வாத செயல்; disrespect.

[Skt.parā-bhava> த. பராபவம்]

பராமரி-த்தல் *parāmari-,* 14 செ.கு.வி. (v.i.) கலந்தாய்தல் (ஆலோசித்தல்); to inquire, examine, investigate, consider. 'சிந்தை பராமரியாத் தென்றிருவாரூர்புக்கு' (தேவா. 744,1).

[Skt.parā-mṛś> த. பராமரி-த்தல்]

பராமுகம் *parā-mugam,* பெ.(n.) புறக்கணிப்பு (அலட்சியம்); neglect, disregard, as purposely turning the face away. 'பராமுகந் தவிர்தி' (கந்தபு.வள்ளியம்.72).

[Skt.parāṅ-mukha> த. பராமுகம்]

பரார்த்தம்¹ *parārttam,* பெ.(n.) பிறர் பொருட்டானது; that which is intended for the benefit of others. 'தன்னைப் பரார்த்தமாக்கி' (திவ்.திருக்குறுந்.3,வ்யா. பக்.15).

[Skt.parārtha> த. பரார்த்தம்]

பரார்த்தம்² *parārttam,* பெ.(n.) 1. பேரெண் (பிங்.); a large number = 100,000 billion. 2. பிரமகற்பத்திற் பாதி (காஞ்சிப்பு.வீராட்.2); the number of human days corresponding to 50 years of Brahma's life.

[Skt.parārdha(வின்.) > த. பரார்த்தம்]

பரிக்கிரயம் *parikkirayam,* பெ.(n.) விற்பனை; sale. 'ஒற்றிப் பரிக்கிரயத்துக்கு உரித்தாவதாகக் கொடுத்தோம்' (S.I.I.i,105).

[Skt.parikraya> த. பரிக்கிரயம்]

பரிகரி¹-த்தல் *parikari-,* 4 செ.கு.வி. (11 v.i.) நீக்குதல்; to do away with, remove, expel,

dispel. 'தலைவிக்கு வந்த வருத்தத்தைப் பரிகரித்தல் தனக்குக் கடனாதலின்' (தொல். பொருள்.239,உரை.). 2. நோயைக் குண மாக்குதல்; to remedy, redress. 3. முன் கூறியதை மறுத்தல்; to avoid, retract, recant, amend or correct one's erroneous statement, revoke. 4. நீக்கம் செய்தல்; to expiate, atone for. 5. அடக்குதல்; to control, suppress. 'சித்தந்தன்னைப் பரிகரியாது விட்டால்' (ஞானவா.வைராக்.129). 6. கஞ்சத் தனம் செய்தல்; to hold back with a miserly spirit, stint. 'வறியவர்க்குப் பரிகரியாராய்க் கொடுப்பின்' (பு.வெ.10,1). 7. கடத்தல்; to pass beyond, cross over

[Skt.parihṛ> த. பரிகரி–த்தல்]

பரிகரி[2]–த்தல் *parikari-,* 4 செ.கு.வி. (v.i.) 1. போற்றுதல் (பு.வெ.8,20, உரை.); to safeguard, take care of. 2. பத்திய முதலியன உதவி நோயாளியைக் கவனித்தல்; to nurse, tend, as a sick person, a lying - in - woman.

[Skt.parikṛ> த. பரிகரி–த்தல்]

பரிகாசம் *parikāšam,* பெ.(n.) 1. பகடி; jest, joke, burlesque. 2. இகழ்ச்சி; mockery, raillery, jeer, derision, ridicule. 3. விளையாட்டு; sport, play.

[Skt.pari-hāsa> த. பரிகாசம்]

பரிகார நூல் *parigāra-nūl,* பெ.(n.) மருத்துவ நூல்; a book on treatment of diseases (சா.அக.).

பரிகாரம்[1] *parikāram,* பெ.(n.) 1. நீக்குகை; entire destraction, abolition, cancelling removal. 2. கழுவாய்; expiation, atonement. 'மனு முதலான நூல் கற்றுச் செய் பரிகாரங்களின்றியே' (சேதுபு.தனுக்.66). 3. மாற்று வழிவகை; remedy, antidote. 'என்னாற்றாமைக்குப் பரிகாரமாவ தியாதுஞ் சிந்தியாது' (திருக்கோ.189,உரை). 4. மருத்துவம்; art of healing, curing. 5. பராமரிப்பு (j), nursing, rending. 6. கேடு நீங்கக் கூறும் வாழ்த்து (சீவக.264,உரை.); benediction uttered with the intention of averting evil. 7. வழுவமைதி; deviations from grammatical rules, sanctioned by usage. 'இன்னும் இப்பரிகாரத் தாலே கோழியை வாரண மென்றலும் வெருகினை விடை யென்றலும் போல்வன பலவுங்கொள்க' (தொல்.பொருள்.624,உரை.). 8. விலக்கு; exemption, immunity (S.I.I.ii,98,51.).

[Skt.pari-hāra> த. பரிகாரம்]

பரிகாரம்[2] *parikāram,* பெ.(n.) 1. பொருள்; store, provisions. 'நடைப்பரிகார முட்டாது கொடுத்த' (சிறுபாண்.104.). 2. கப்பம் (Insc.); tribute.

[Skt.pari-kāra> த. பரிகாரம்[2]]

பரிகாரி *parikāri,* பெ.(n.) 1. மருத்துவன்; doctor, medical practitioner. 'சோலை மலைப் பரிகாரி வந்தால்' (தனிப்பா.i,253,1). 2. முடிமழிப்பாளன் (கொ.வ.); barber, as being also a physician.

[Skt.pari-hārin> த. பரிகாரி]

பரிச்சேதம்[1] *pariccēdam,* பெ.(n.) 1. துண்டிப்பு; cutting off, dissection, division. 2. எல்லை; limit, boundary. 3. அளவுக்குட்படுகை; limitation. 'காலபரிச்சேதம், தேசபரிச்சேதம், வகுத்துபரிச்சேதம்'. 4. பிரிவு (அத்தியாயம்) (பிங்.); section, chapter. 5. பகுத்தறிவு; discrimination, positive ascertainment. 6. முழுமை (வின்.); entireness, absoluteness. 'பரிச்சேதம் அப்படிச் சொல்லவில்லை'.

[Skt.pari-c-chēda> த. பரிச்சேதம்]

பரிச்சேதம்[2] *pariccētam,* பெ.(n.) சிறு பகுதி (poud); small portion, part.

[Skt.paricchēda> த. பரிச்சேதம்]

பரிசம் *parišam,* பெ.(n.) 1. தொடு உணர்ச்சி; sense of touch. 2. உணர்ச்சி (சா.அக.); feeling.

பரிசனம் *parišaṇam,* பெ.(n.) 1. சேனைகள் (பரிவாரம்); train, retinue. 'சேவித் தணையும்

பரிசனங்கள்' (பெரியபு.சேரமான்.84). 2. ஏவல் செய்வோர் (திவா.); dependants, servants. 'பரிசனர் கணங்கள் யாரும்' (கந்தபு. திருக்கல்.80). 3. சுற்றம் (சூடா.); relationship, affinity.

[Skt.pari-jana> த. பரிசனம்]

பரிசாரகன் *parišāragaṉ,* பெ.(n.) பணியாள்; servant. 2. சமையற்காரன்; cook.

[Skt.paricāraka> த. பரிசாரகன்]

பரிசீலனை *parišīlaṉai,* பெ.(n.) ஆய்தல் (சோதனை); examination, investigation, enquiry.

த.வ. நோட்டம்

[Skt.pari-šīlanā> த. பரிசீலனை]

பரிசுத்தம் *parišuttam,* பெ.(n.) 1. தூய்மை; holiness, sanctity, purity, immaculateness. 2. துப்புரவு; cleanliness, as of dress, clearness, as of water.

[Skt.pari-šuddha> த. பரிசுத்தம்]

பரிசோதி-த்தல் *parišōti-,* 4 செ.கு.வி. (v.i.) நன்கு ஆராய்தல்; to examine carefully, test thoroughly.

த.வ. நிறை நோட்டம் செய்தல்

[Skt.pari-šōdhi> த. பரிசோதி-த்தல்]

பரிணாமம் *pariṇāmam,* பெ.(n.) ஒன்று பிறிதொன்றாக மாறுகை; transformation, evolution, modification, as the turning of milk into curd. 'அவன் பரிணாமத்தோடு சிவனும்' (ஞானா.11,30).

த.வ.படிமுறை வளர்ச்சி

[Skt.pari-ṇāma> த. பரிணாமம்]

பரித்தியாகம் *parittiyāgam,* பெ.(n.) முற்றும் துறக்கை; complete renunciation.

[Skt.parityāga> த. பரித்தியாகம்]

பரிதாபம் *paritāpam,* பெ.(n.) 1. துயரம்; pain, anguish, sorrow. 2. கழிவிரக்கம்; pity, sympathy, solicitude. 3. தான் செய்த குற்றத்துக்கு இரங்குகை; repentance. 4. பெருந்தாகம்; burning thirst. 'நடந் திளைத்து முன்னையினும் பரிதாபமுதிர்ந்து, (பாரத. வசந்த.1).

[Skt.pari-tāpa> த. பரிதாபம்]

பரிநிர்வாணம்[1] *parinirvāṇam,* பெ.(n.) ஐந்து வகை நற்பேறுகளுள் ஒன்று (சீவக.3116.உரை.); (Jaina.) absolute extinction or annihilation of individual extinction one of pañcakalyāṇam.

[Skt.pari-nirvāṇa> த. பரிநிர்வாணம்]

பரிபக்குவம் *paripakkuvam,* பெ.(n.) 1. செம்பாகம், அறிவு முதிர்ச்சி; maturity of wisdom. 2. தகுதி; fitness.

[Skt.pari-pakva> த. பரிபக்குவம்]

பரிபவம் *paripavam,* பெ.(n.) 1. மானக்கேடு, அவமானம்; contempt, scorn. 'பாலனென்று பரிபவஞ் செய்யேல்' (திவ்.பெரியாழ்.1,4,7). 2. எளிமை (சூடா.); degradation.

[Skt.pari-bhava> த. பரிபவம்]

பரிபாசை *paripāšai,* பெ.(n.) 1. மறைவான சொல்; code word. 2. நூற்சொல்; scientific word. 3. தொழிற்சொல் (சா.அக.); technical or code word Nomenclature. It is used in medical literature to avoid long names.

பரிபாலனம் *paripālaṉam,* பெ.(n.) பாதுகாவல்; protection, preservation; fostering. 'வரங்கொடுத்துப் பரிபாலனங்கள் செய்தாய்' (சிவரக.கணபதியு.4).

[Skt.pari-pālana> த. பரிபாலனம்]

பரிபாலி-த்தல் *paripāli-,* 4 செ.கு.வி. (v.i.) 1. பாதுகாத்தல்; to protect maintain in prosperity. 2. அருள்புரிதல் (கடாட்சித்தல்) (வின்.); to show benign compassion.

[Skt.pari-pāl> த. பரிபாலி]

பரிமளம் *parimaḷam,* பெ.(n.) 1. நறுமணம்; fragrance, perfume. 'பரிமளங் கமழ்வன பாராய்' (கம்பரா.சித்தி.25).

[Skt.pari-mala> த. பரிமளம்]

பரிமாணம் *parimāṇam,* பெ.(n.) அளவு (சூடா.); size, measure, dimension.

[Skt.pari-māṇa> த. பரிமாணம்]

பரியந்தம் *pariyandam,* பெ.(n.) (அ.வ.) (முடிவான) எல்லை; (end) limit. 'ஆயுள் வரையில் இந்தக் (பரியந்தம்) கொடுமை தீராதோ!' (உ.வ.).

பரியாசம் *pariyāšam,* பெ.(n.) பரிகாசம் பார்க்க; see parikāšam. 'யார் சொலும் பரியாசமே' (குமர.பிர.மீனாட்.குறம்.8).

[Skt.pari-hāsa> த. பரியாசம்]

பரியாயப் பெயர் *pariyāya-p-peyar,* பெ.(n.) ஒரு பொருட் பல் பெயர் (சூடா.); synonymous noun. 'ஆணையென்னும் பரியாயப் பெயருடைய' (சி.போ.பா.2,பக்.54).

[பரியாயம்+பெயர்]

பரியாயம் *pariyāyam,* பெ.(n.) 1. நேர் சொற்பொருள்; synonym. 2. பன்னோக்கு (நானாவிதம்) (தி.வா.); diverse methods or ways. 3. பொருளை வெளிப்படையாய்க் கூறாது குறிப்பாற் கூறும் அணி (தண்டி.71); (Rhet.) a figure of speech in which one's idea is not expressed in words, but is cleverly suggested. 4. படிமுறைத் திரிவு (பரிணாமம்); transformation, change. 'பால் தயிர் முதலாயின புற்கலத்தினது பரியாய மென்பேன்' (நீல.). 5. தடவை; turn, times. பலபரியாயம் வந்தேன்.

[Skt.paryāya> த. பரியாயம்]

பரிவத்தனம் *parivattaṇam,* பெ.(n.) 1. சுற்றுகை; circumambulation, going around. 'வலமிடம் பரிவத்தனம் செய்து' (திருவாலவா. 28,34). 2. பரிவருத்தனை, 1 பார்க்க; see parivaruttanai.

[Skt.pari-variana> த. பரிவத்தனம்]

பரிட்சி–த்தல் *pariṭši,* 4 செ.கு.வி. (v.i.) 1. நோட்டம் செய்தல், சோதித்தல்; to examine, to try; to experiment. 2. ஆராய்தல்; to search, investigate.

[Skt.parikṣ> த. பரிட்சி]

பருசை *paruṣai,* பெ.(n.) ஊர் அவை; assembly of villagers. 'பெரும் பற்றப் புலியூர் மூல பருஷையாநில்' (S.I.I.iii,214).

[Skt.pari-ṣad> த. பருஷை]

பருவதம் *paruvadam,* பெ.(n.) 1. மலை; hill, mountain. 'பாவபருவதங்க ளெல்லாம்' (சிவரக.அபுத்திபூருவ.4). 2. மீன் வகை (சங்.அக.); a kind of fish.

[Skt.parvata> த. பருவதம்]

பரோட்டா *parōttā,* பெ.(n.) மைதாமாவில் செய்யப்படும் ஒரு வகை அடை வகை; unleavened bread of maize flour, thick in size and round in shape.

த.வ. சூட்டடை

பரோபகாரம் *parōpakāram,* பெ.(n.) பிறர்க்குச் செய்யும் உதவி; philanthropy.

[Skt.parō-pakāra> த. பரோபகாரம்]

பரோல் விடுப்பு *parōl-vituppu,* பெ.(n.) தண்டனைக் காலத்தில் நன்னடத்தை கருதி குறிப்பிட்ட காலத்துக்கு வெளியில் செல்ல வழங்கப்படும் இசைவு; parole.

பல்டி *palti,* பெ.(n.) தலை குப்புற எம்பிக் குதித்தல்; உடற்பயிற்சியில் ஒரு வகை; a gymnastic feat.

த.வ. கவிழ்ந்தடி

[U.palti> த. பல்டி]

பல்டிஅடி–த்தல் *palti-ati,* செ.கு.வி. (v.i.) 1. குட்டிக்கரணம் போடுதல்; somersault. 2. ஒப்புக்கொண்டதைச் செய்யாமல் பின் வாங்குதல்; make a retreat; go back on one's word. 3. தோல்வியடைதல்; fail.

'இந்தத் தடவையும் தேர்வில் பல்டி அடித்துவிட்டாயா?' (உ.வ.).

பல்லவம் *pallavam,* பெ.(n.) 1. தளிர்; sprout, shoot. 'பல்லவ சயனங்கள் பாராய்' (கம்பரா. சித்தி.23). 2. பல்லவதேயம் (யாழ்.அக.); பார்க்க; see pallava-tēyam.

[Skt.pallava> த. பல்லவம்]

பலசாலி *pala-šāli,* பெ.(n.) உடல்வலியுள்ளோன்; strong person.

த.வ. மல்லன்

[Skt.bala-šālin> த. பலசாலி]

பலசித்தி *pala-šitti,* பெ.(n.) பயனடைகை; reaching fruition; achieving success.

[Skt.phala+šitti> த. பலசித்தி]

பலதேவன்[1] *palatēvan,* பெ.(n.) பலராமன் பார்க்க; see palarāman.

[Skt.bala-dēva> த. பலதேவன்]

பலராமன் *pala-rāman,* பெ.(n.) கண்ணனுக்கு மூத்தவன் (பிங்.); elder brother of Krṣṇa, one of tacāvatāram.

[Skt.Bala-rāma> த. பலராமன்]

பலவந்தப் புணர்ச்சி *palavanta-p-puṇarcci,* பெ.(n.) கட்டாயப்படுத்தி ஒரு பெண்ணைப் புணர்கை; rape.

[Skt.bala-vant > த. பலவந்தம்]

பலவந்தம் *palavandam,* பெ.(n.) வலக்காரம், கட்டாயப் படுத்தல்; force, violence, compulsion.

[Skt.bala-vat> த. பலவந்தம்]

பலவான் *palavāṉ,* பெ.(n.) வலிமையானவன்; (உ.வ.); strong, powerful man.

த.வ. மல்லன், வல்லாளன்

[Skt.bala-vān>bala-vat> த. பலவந்தம்]

பலவீரம் *palavīram,* பெ.(n.) சவ்வீரம்; a sublimated compound of mercury, sulphur, alum and sal ammonia (சா.அக.).

பலவீனம் *pala-v-īṉam,* பெ.(n.) 1. வலியின்மை (உ.வ.); weakness. 2. அசதிநோய் (இ.வ.); debility, neurasthenia.

த.வ. நலிவு

[Skt.bala+hīna > த. பலவீனம்]

பலாங் *palāṅ,* பெ.(n.) கப்பற் சதுரப்பாய்களைச் சுருட்டும்பொழுது அவற்றின் கீழ் மூலைகளைப் பறுவானுக்கு இழுக்க உதவுங் கயிறு; (M.Navi); clew-garnets.

பலாஞ்சீப்பு *palāñ-šippu,* பெ.(n.) கப்பலின் பலாஞ்சீப்பூம் என்ற உத்தரத்தில் விரிக்கப்படும் பாய் (M.Navi.) sail tied to the flying-jib.

[E.flying + E.jib>த. பலாஞ்சீப்பு]

பலாத்காரம் *palātkāram,* பெ.(n.) கட்டாயப் படுத்துதல் (இ.வ.); force, violence, compulsion.

த.வ. வலக்காரம்

[Skt.balāt-kāra> த. பலாத்காரம்]

பலாபலம் *palāpalam,* பெ.(n.) இலாபநட்டம்; profit and loss.

த.வ. ஆகுபோகு

[Skt.phala+a-phala> த. பலாபலம்]

பலான் *palāṉ,* பெ.(n.) அப்பேர்ப்பட்டவன் (C.G.); such a one.

[U.falān> த. பலான்]

பலானது *palāṉadu,* பெ.(n.) குறிப்பிட்டது; the particular.

பலானவன் *palāṉavaṉ,* பெ.(n.) இன்னான்; certain or such and such a person. 'அவன் பலானவனென்று தெரியுமா?'.

[U.fulān> த. பலானவன்]

பலி¹-த்தல் *pali,* 4 செ.கு.வி. (v.i.) 1. நேர்தல்; to happen, 'அசனியேற்றின் வீழ்வெனப் பலித்தது பாவியேற்கென்க' (இரகு.சீதைவ. 116). 2. பயன் விளைத்தல்; to take effect, yield results, produce good or evil. 'வயலிடுந் தழையும்... பின்பலிக்குமாபோல்' (சி.சி.2,17). 3. செழித்தல்; to thrive, as a crop. 'பலிப்பறிந்து... வித்தினார்' (அரிச்.பு.நாட்டுப். 38). 4. மிகுதல்; to increase, swell. 'நீர்பலிப்ப வான்றிரை யெறிந்து' (இரகு.நாட்டுப்.38.); 5. கொடுத்தல். to give 'பூசையின் பலத்தினைப் பலிப்பாய்' (செவ்வந்திப்பு. அகத்தியச்.41).

[Skt.phala> த. பலி-.]

பலி² *pali,* பெ.(n.) 1. நிறைவேறல்; that which takes effect (பிங்.). 2. காய்கனிகளுள்ள மரம் (யாழ்.அக.); tree laden with fruit.

[Skt.phalin> த. பலி]

பலி³ *pali,* பெ.(n.) 1. தீக் குண்டத்தில் (யாகத்தில்) தேவர், முன்னோர் ஆகியோர்க்கு இடும் உணவுப்பொருள்; offering given to gods, ancestors, etc., in sacrifice. 'பலிகண் மாறிய பாழ்படு பொதியில்' (புறநா.52). 2. பலியிடுவதற்குரிய விலங்குகள் முதலியன; sacrificial animal or offering. 3. காக்கை முதலிய பறவைக்கு உண்ண இடுஞ்சோறு; boiled rice thrown as an offering to crows. 'காக்கையது பலியே' (குறுந்.210). 4. பிச்சை; boiled rice given to mendicants, alms. 'பலிகொண்டுண்பவர்' (தேவா.47,5). 5. சோறு; rice (திவா.). 6. பூசைக்கு வைக்கப்படும் பூ முதலியன; offering of flowers, etc., in worship. 'மலர்சில கொண்டு... தேம்பலி செய்த வீர்நறுங் கையள்' (ஐங்குறு.259). 7. சாம்பல் (சூடா.); ashes. 8. திருநீறு (அக.நி.); sacred ashes. 9. கப்பம் (யாழ்.அக.); tribute. 10. சிற்றூர்களில் தேவதைகளுக்குப் பலியிடுவதன் பொருட்டு விடப்பெற்ற மானியம் (R.T.); inam granted for the service of making sacrifices to village deities. 11. பலி சக்கரவர்த்தி பார்க்க; see pali-šakkaravartti.

[Skt.bali> த. பலி]

பலிகொடு-த்தல் *pali-koḍu-,* செ.கு.வி. (v.i.) 1. தெய்வத்திற்குப் பலியிடுதல்; to sacrifice a victim; to present. offerings to a deity. 'வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்து' (அகநா.22). 2. கொல்லுதல் (உ.வ.); to kill.

த.வ. காவு கொடுத்தல்

[Skt.bali> த. பலி]

பலிசை *pališai,* பெ.(n.) 1. ஆதாயம் (இலாபம்); profit. 'பலிசையாற் பண்டம் பகர்வான்' (பு.வெ.12,வென்றிப்.2). 2. வட்டி; interest. 'இப்பொன் பதினெண் கழஞ்சே மூன்று மஞ்சாடி குன்றிக்கும் பலிசையாற் சந்திராதித்தவல்... அட்டுவோமானோம்' (S.I.I.i,116).

[Skt.phala > த. பலம்]

பலிதேர்-தல் *pali-tēr-,* 3 செ.கு.வி. (v.i.) பிச்சையெடுத்தல்; to beg alms. 'வற்றலோடு கலனாப்பலி தேர்த்து' (தேவா.61,2).

த.வ. இரத்தல்

[Skt.bali> த. பலி-,]

பலிப்பு *palippu,* பெ.(n.) 1. சித்தி; success. 2. பயன்; fruit, result. 'செய்தவப் பலிப்பை நோக்கி' (இரகு.யாகப்.2). 3. நன்றாய் விளையுந் தன்மை; productivity. 'பெரும்பூமி பலிப் பெய்தும்' (குற்றா.தல.நூற்ப.13). 4. வினைப் பயன்; result of karma.

[Skt.bali> த. பலிப்பு]

பலிபீடம் *pali-pīṭam,* பெ.(n.) பலியிடும் இடம்; altar. 'நீண்ட பலி பீடத்தி லறுத்துவைத்த சிரத்தை' (கலிங்.98).

த.வ. காவு முற்றம்

[Skt.bali> த. பலி]

பலிபீடிகை *pali-pīṭikai,* பெ.(n.) பலிபீடம் பார்க்க; see pali-pīṭam. 'விலைப்பலி யுண்ணு மலர்ப்பலி பீடிகை' (சிலப்.12,43).

[Skt. bali > த. பலி]

பலிவாங்கு-தல் *pali-vāṅku-,* 9 செ.கு.வி. (v.i.) 1. தொந்தரவு செய்தல்; to tormant. 2. நீரில் அடிக்கடி மூழ்க வைத்து இறக்கச் செய்தல்; to make victims of, as by drowning frequently. 'குளம் பலி வாங்கும்'.

[Skt. bali > த. பலி]

பலிவெட்டு *pali-veṭṭu,* பெ.(n.) பூசை முதலியவற்றின் பொருட்டுக் கோயிலுக்கு விடப்பட்ட சிற்றூர்; village given to a temple to meet the expenses of worship and festivals.

[Skt. bali > த. பலி]

பலே *palē,* பெ.(n.) 'நன்று' என்ற பொருளைக் குறிக்குஞ்சொல்; a term of approbation denoting 'excellent!'.

த.வ. வல்லே, வலே

[U. bhalā > த. பலே]

பவ¹-த்தல் *pava-,* 2 செ.கு.வி. (v.t.) தோன்றுதல்; to appear; to be born. 'ஊழியூழி பவந் திட்ட பரமனார்' (தேவா.952,2).

[Skt. bhava > த. பவ-,]

பவகாரணி *pava-kāraṇi,* பெ.(n.) அழகர் மலையில் உள்ள ஒரு பழம் பொய்கை; an ancient pool in Aḷakar-malai. 'புண்ணிய சரவணம் பவகாரணியொடு' (சிலப்.11,94).

[Skt. bhava+kāraṇi > த. பவகாரணி]

பவந்தா-தல் (பவந்தருதல்) *pavan-tā-,* 15 செ.கு.வி. (v.i.) தோன்றுதல்; to appear. 'நன்றினொன்றாய்ப் பவந்தரும்' (சி.சி.2,74).

[Skt. bhava > த. பவ]

பவம்¹ *pavam,* பெ.(n.) 1. பிறப்பு; birth, origin (பிங்.); 'பவத்திற மறுகெனப் பாவை நோற்ற காதை' (மணிமே.30). 2. உலக வாழ்க்கை; earthly life. 'சரியாப் பிறவிப் பவந்தரும்' (திவ்.இராமாநுச.94). 3. உலகம்; world. 'பேரின்ப வீட்டுப்பவம்' (சிவப்.பிர.வெங்கைக்க. 75). 4. கரணம் பதினொன்றனுள் ஒன்று; (Astrol.) a division of time, one of eleven karaṇam, q.v. 5. உண்மை; existence. 'கொள்பவத்தின் வீடென்' (சி.போ.8,2, வெண்பா.2.).

[Skt. bhava > த. பவம்]

பவித்திரம் *pavittiram,* பெ.(n.) மிகு தூய்மை; sacredness, purity.

[Skt. pavitra > த. பவித்திரம்]

பவுண்டு¹ *pavuṇṭu,* பெ.(n.) பதினாறு அவுன்சு அளவு கொண்ட ஒரு நிறை; a standard weight = 16 ounces a voirdupois.

[Lat. pond > த. பவுண்டு]

பவுண்டு² *pavuṇṭu,* பெ.(n.) கொண்டித் தொழு; enclosure for detention of stray cattle.

[E. pound > த. பவுண்டு]

பவுத்தர் *pavuttar,* பெ.(n.) புத்தமதத்தோர்; Buddhists. 'அயர்த்தார் பவுத்தர்' (திவ்.இயற். நான்முகன்.6).

[Skt. bauddha > த. பவுத்தர்]

பவுதிகீதீட்சை *pavutiki-tīṭšai,* பெ.(n.) குரு அருளிப்பு (தீட்சை) வகை; (சி.சி.8,4,ஞானப்.); a religious initiation.

[Skt. bhautiki+tīkṣā]

பவுன் *pavuṉ,* பெ.(n.) 1. இங்கிலாந்து நாட்டுப் பொன்னாணயம்; pound, sterling, sovereign.

பனியன் *paṉiyaṉ,* பெ.(n.) ஆண்களின் மெய்யாப்பு, உள்ளொட்டி; vest; undershirt. (in India) banian.

த.வ.உள்ளொட்டி

பாக்கி *bākki*, பெ.(n.) 1. நிலுவை; balance, outstandings, arrears. 2. மிச்சம்; remainder. வங்கி, பாக்கிப் பணத்தைச் செலுத்துவோருக்கு மூன்று மாதம் காலக்கெடு விதித்துள்ளது. (உ.வ.).

[U.bāqi> த. பாக்கி]

பாக்கிகைபீது *bākki-kaipītu*, பெ.(n.) நிலுவைக் கணக்கு; statement or account of outstanding balances (R.F.).

[U.bāqi-kaifiyat> த. பாக்கிகைபீது]

பாக்கிசாக்கி *bākki-šākki*, பெ.(n.) 1. பாக்கி பார்க்க; see pākki. 2. குறைவு (கொசுறு) (இ.வ.); extra quantity obtained into the bargain.

த.வ.மிச்சமீதி

[U.bāqi+šākki > த. பாக்கிசாக்கி]

பாக்கிதார் *bākki-tār*, பெ.(n.) வரி முதலியன செலுத்தாதிருப்பவன்; revenue defaulter; one who is in arrears.

[U.bāqi> த. பாக்கி →பக்திதார்]

பாகதச்சிதைவு *pāgata-c-citaivu*, பெ.(n.) பிராகிருத மொழியிலிருந்து தமிழிற் சிதைந்து வழங்கிய சொல். (திருக்கோ.53,உரை); Prākrt words used in Tamil in a modified form.

[பாகதம்+சிதைவு]

பாகதம் *pāgadam*, பெ.(n.) பிராகிருதம் பார்க்க; see prākrt.

[Skt.Prākrta> Pkt.pākata> த. பாகதம்]

பாகவத நடனம் *pāgavada-naḍaṇam*, பெ.(n.) மாலிய மத அடியார்கள் ஆடும் நடனம் (வின்.); a religious dance performed by Vaiṣṇavadevotees.

த.வ.ஆழ்வார் ஆட்டம்

[Skt.bhāgavata> த. பாகவதம் +த. நடனம்]

பாகவதபுராணம் *bāgavada-purāṇam*, பெ.(n.) 1. வடமொழியிலுள்ள பதினெட்டு தொன்மங்களுள் தலையாயது; a chief Purāṇa in Sanskrit. one of patiṇeṇ-purāṇam. 2. செவ்வைச் சூடுவாரால் தமிழ்ச் செய்யுளில் இயற்றப்பட்ட மொழி பெயர்ப்பு நூல்; a metrical translation of sanskrit Bhāgavata in Tamil by Sevvai-c-cūḍuvār. 3. கி.பி.1543ல் நெல்லிநகர் வரதராச ஐயங்கார் வடமொழி யினின்று தமிழ்மொழியிற் செய்யுளாக இயற்றிய நூல்; a Tamil-version of the Sanskrit Bhāgavatam by Varadaraja Aiyangār of Nellinagar, 1543 A.D.

[Skt.bhāgavata+purāṇa> த. பாகவதபுராணம்]

பாகவதர் *bāgavadar*, பெ.(n.) 1. திருமாலை முதற்கடவுளாகக் கொண்டு வழிபடுஞ் சமயத்தோர் (பிங்.); Vaiṣṇavas,worshippers of Viṣṇu. "பாகவதப் பிரமசாரி" (திருவாலவா. 31,2). 2. இசைப்பாட்டுடன் சமயச் சார்பான பழங்கால வரலாறுகளை எடுத்துரைப்போர்; those who expound religious stories to the accompaniment of music. 3. பாடகர் (இ.வ.); masters of music, music teachers.

த.வ.மாலியர்

[Skt.bhāgavata> த. பாகவதர்]

பாகியம் *pāgiyam*, பெ.(n.) 1. புறம்பானது; that which is external. "பூசை பாகிய மாப்பியந் தரமென விரண்டாகும்" (சூதசங்.சிவமா.5,2). 2. மலங்கழிக்கை (இ.வ.); evacuation.

த.வ.வெளிப்புறம்

[Skt.bāhya> த. பாகியம்]

பாகியாங்கம் *bāgiyāṅgam*, பெ.(n.) புறவழி; the outer path. "பிரமத்தை யடைகிறதற்கு பாகியாங்க மென்றும் அந்தராங்கமென்று மிரண்டங்கங்களுண்டு" (வேதாந்தசா.26).

த.வ.வெளிப்பாதை

[Skt.bāhya+aṅka> த. பாகியாங்கம்]

பாகீரதி *pākīrati*, பெ.(n.) கங்கை; the Ganges, the daughter of Bhagīratha.

"பாகீரதி கிருபா சமுத்திர" (திருப்பு.மூன்றாம் பாகம், 996).

[Skt.bhāgirathi> த. பாகீரதி]

பாகு *pāgu*, பெ.(n.) தலைப்பாகை; turban. "பத்துவராகன் பெறவோர் பாகீந்தான்" (விறலிவிடு.1008).

[U.pāga> த. பாகு]

பாகுடக்கவி *pāguḍa-k-kavi*, பெ.(n.) காணிக்கையாகக் கொடுக்கும் பாட்டு (செந்.vi,335); dedicatory poem.

[Skt.prābhṛta> Pkt.pāhuḍa> த. பாகுடக்கவி]

பாகுபதம் *pāgu-padam*, பெ.(n.) பாகுபக்குவம் (சா.அக.); gummy states; a stage of thick consistence.

பாங்கா *pāṅgā*, பெ.(n.) வாங்கா என்ற ஊதுகொம்பு (அபி.சிந்.); a kind of bugle-horn.

[U.bānkā> த. பாங்கா]

பாசண்டச்சாத்தன் *bāšaṇḍa-c-cāttaṉ*, பெ.(n.) சமய நூல்களில் வல்லவரான ஐயனார். (சிலப்.9,15.); Aiyāṉār, a deity versed in treatises on heretical religions.

த.வ. ஐயனார்

[Skt.Pāṣaṇḍa> த. பாசண்டம்+சாத்தன்]

பாசண்டம் *pāšaṇḍam*, பெ.(n.) 1. புறச்சமயக் கொள்கை; heresy, non-conformity to the orthodox doctrines of religion. 2. தொண்ணூற்றாறு வகைச் சமய நூற் கோவை. (சிலப்.9,15.); doctrines relating to 96 heretic sects.

[Skt.pāṣaṇḍa> த. பாசண்டம்]

பாசண்டமூடம் *pāšaṇḍa-mūḍam*, பெ.(n.) பாசண்டிமூடம் (வின்.) பார்க்க; see pāšaṇḍi-mūḍam.

[Skt.pāṣaṇḍa> த. பாசண்டம்]

பாசண்டன் *pāšaṇḍaṉ*, பெ.(n.) 1. புறச்சமயி; heretic. "பாசண்டர் நவிற்று வாக்கியத்தில்" (விநாயகபு.83,77). 2. சமய ஒழுக்கங்களைக் கெடுப்பவன் (இ.வ.); *person of heterodox conduct.*

[Skt.pāṣaṇḍa> த. பாசண்டம்]

பாசண்டி *pāšaṇḍi*, பெ.(n.) பாசண்டன் பார்க்க; pāšaṇḍaṉ. "பழுதாகும் பாசண்டியார்க்கு" (அறநெறி.17).

[Skt.pāṣaṇḍa> த. பாசண்டம்]

பாசண்டிமூடம் *pāšaṇḍi-mūḍam*, பெ.(n.) புறச்சமயத்தினரைப் போற்றும் மடமை; (Jaina) folly of reverencing heretical teachers. "பாசண்டி மூடமாய்... நாட்டப்படும்" (அறநெறி.16).

[Skt.pāṣaṇḍa> த. பாசண்டி]

பாசந்தி *pašanti*, பெ.(n.) சுண்டக் காய்ச்சிய பாலில் படியும் பாலாடையுடன், சருக்கரை சேர்த்துக் குளிரவைத்து உண்ணும் இனிப்பு வகை; thick cream of milk with sugar (served cold).

த.வ.பாலாடை இனிகம்

பாசனம் *pāšaṉam*, பெ.(n.) ஏனம்; vessel. "தந்திவர்ம மகாராசர் கொடுத்த பொன் பாசனம் ஒன்றினால் (S.S.I.IV,8).

த.வ.கலம்

[Skt.bhājana> த. பாசனம்]

பாசாணக்கல் *pāšāṇa-k-kal*, பெ.(n.) 1. பாம்புக் கல்; snake stone. 2. நஞ்சை முறிக்கும் கல் வகை; a kind of stone applied to poison - bites as antidote.

[Skt. pāṣāṇa > த. பாசணம்+கல்]

பாசாந்தரப்படுத்து-தல் *pāšāntara-p-paḍutt*, 5 செ.குன்றாவி. (v.t.) மொழி பெயர்த்தல்; to translate.

[Skt.bhāṣāntara > த. பாசாந்தரம்+படுத்து-தல்]

பாசாந்தரம் *pāšāntaram*, பெ.(n.) அயல்மொழி; foreign language.

த.வ.வேற்றுமொழி

[Skt.bhāṣāntara > த. பாசாந்தரம்]

பாசி–த்தல் *pāśi-*, 4 செ.குன்றாவி. (v.t.) பேசுதல்; to speak "பாசிக்கத்தகாது" (திருப்பு.1088).

[Skt.bhāṣ> த. பாசி]

பாசிசம் *pāśiśam,* பெ.(n.) அனைத்து முதன்மைத் தொழில்களையும் தன் முழுமை யான கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, அரசியல் எதிர்ப்பே எழாத வகையில் அடக்கு முறையைப் பயன்படுத்தி நடத்தும் ஆட்சி முறை; fascism.

பாசிபாப்பு *pāśipāppu,* பெ.(n.) சில்லறை வரி வகை (G.N.A.D.II,278); miscellaneous items of revenue derivedd from small farms, license, etc.

[U.bāji-bāb> த. பாசிபாப்பு]

பாசியகாரர் *pāśiya-kārar,* பெ.(n.) பிரம்ம சூத்திரத்திற்கு விரிவுரை (பாஷ்யம்) இயற்றிய இராமானுசாசாரியர்; Ramānuja, a commen-tator on Brahma sūtras.

[Skt.bhāṣya> த. பாசிய+காரர்]

பாசியம் *bāśiyam,* பெ.(n.) ஒரு வகை விரிவுரை; an elaborate commentary.

த.வ.விளக்கவுரை

[Skt.bhāṣya> த. பாசியம்]

பாசு *pāśu,* பெ.(n.) 1. தேர்வு முதலியவற்றில் தேர்ச்சி (பிரதாப.விலா.13.); success, as in examinations pass. 2. வெளியில் அல்லது உள்ளே செல்வதற்கோ பொருட்களைக் கொண்டு போவதற்கோ கொடுக்கும் நுழைவுச் சீட்டு (இ.வ.); gate-pass, permit. destroying.

த.வ. இசைவுச்சீட்டு

[Skt.pass > த. பாசு]

பாசுகுத்திருநாள் *paśukittirunāl,* பெ.(n.) ஒரு கிறித்துவப் பண்டிகை; Easter festival.

[F.paque த. பாசகு+திருநாள்]

பாசுதிகருமம் *paśudikarmam,* பெ.(n.) சிறுநீர் விடுமுன் மலங்கழிக்கை (யோகஞானா.33); passing stools before passing urine.

பாசுபதம் *paśupadam,* பெ.(n.) ஆணவ மலம் இல்லையென்றும் இறைவன் (ஈசன்) பக்குவ மடைந்த ஆதன்களிடம் தன் பண்புகளைப் பற்றுவித்துத் தான் அதிகாரத்தினொழிவு பெற்றிருப்பனென்று கூறும் அகப்புறச் சமய வகை (சி.போ.பா.,அவை.); a Saiva sect which does not recognise the existence of āṇavamala and holds that Sivaṉ entrusts the perfected soul with His function, one of aka-p-puṟa-c-camayam. 2. நூற்றெட்டு மறைநூல்களில் ஒன்று; an Upaniṣad, one of 108. 3. பாசுபதாத்திரம் பார்க்க; see pāśupadāttiram. "பாசுபதம் பார்த்தர்க் களித்தார் போலும்" (தேவா.720,2). 4. சிவமல்லி (நாநார்த்த.152); taper - pointed mountain ebony.

[Skt.pāśupata> த. பாசுபதம்]

பாசுபதன் *paśupadaṉ,* பெ.(n.) 1. சிவபெருமான்; Sivaṉ. "பார்த்தனுக் கருள்கள் செய்த பாசுபதன்" (தேவா.389,6). 2. பாசுபத முறையை மேற்கொள்ளும் சிவனியர்; (திவா.); follower of the system of pāsupadam among the śaivaites. 3. சிவனை வழிபடுவோன் (சூடா.); worshipper of śivaṉ.

[Skt.pāśupata> த. பாசுபதன்]

பாசுபதாத்திரம் *pāśupadāttiram,* பெ.(n.) சிவபெருமானையே தெய்வமாகக் கொண்ட அம்பு; arrow which has Siva as its presiding deity.

[Skt.pāśupata+astra> த. பாசுபதாத்திரம்]

பாசுபதிரம் *paśupatiraśam,* பெ.(n.) செரிமானத்திற்காகத் தன்வந்திரி முறைப்படி அணியம் செய்த ஓர் ஆயுள்வேத மருந்து (சா.அக.); an Āyurvedic medicine

prepared for indigestion according to the process laid by Danvantari.

த.வ.செரிமருந்து

பாசை *bāšai,* பெ.(n.) 1. மொழி; language, speech. 2. குழூஉக்குறி (உ.வ.); secret language, expressive signs or signals, serving as a mode of communicating ideas. 3. சூளுறவு (இ.வ.); a vow in which a person binds himself by oath to wreak vengeance on his foe.

[Skt.bhāṣā > த. பாசை]

பாசைக்கருத்து *bāšai-k-karuttu,* பெ.(n.) சொல்லின் உட்பொருள் (தாதுமாலை, பக்.132); implied meaning of a word.

[Skt.bhāṣā> த. பாசை+கருத்து]

பாசைபங்கம் *bāšai-bańgam,* பெ.(n.) பழிவாங்குவதாகச் சூளுரைத்து அச்சுறுத்துகை (வின்.); threat of vengeance by oath.

த.வ.சூளுறவு, வெகுண்டுரை

[Skt.bhāṣā> த. பாசை+பங்கம்]

பாஞ்சத்திகம் *pāñja-šattigam,* பெ.(n.) இசைக் கருவி பொது. (யாழ்.அக.); musical instrument.

[Skt.pañca-sabdika> த. பாஞ்சசத்திகம்]

பாஞ்சசன்னியம் *pāñja-šaṉṉiyam,* பெ.(n.) 1. திருமாலின் சங்கு; conch of Viṣṇu. "மதுசூதன் வாயமுதம் பன்னாளு முண்கின்றாய் பாஞ்ச சன்னியமே" (திவ்.நாயச்.7,5). 2. தீ (நாநார்த்த.179); fire. 3. நாணல் (நாநார்த்த. 179); reed.

[Skt.pāñcajanya> த. பாஞ்சசன்னியம்]

பாஞ்சராத்திரம் *pāñja-rāttiram,* பெ.(n.) மாலியத் தோன்றியங்களுள் ஒன்று (சி.போ.பா.); a Vaiṣṇava Āgama.

[Skt.pāñcarātra> த. பாஞ்சராத்திரம்]

பாஞ்சராத்திரி *pāñja-rāttiri,* பெ.(n.) மாலிய சமயத்திற் பாஞ்சராத்திரத்தை பின்பற்றுபவன் (சி.போ.பா.அவை.4,சாமிநா.); a follower of pāñjarāttiram.

[Skt.pāñcarātrin> த. பாஞ்சராத்திரி]

பாஞ்சராத்திரிகன் *pāñja-rāttirigaṉ,* பெ.(n.) பாஞ்சராத்திரி (வின்.) பார்க்க; see pāñja-rāttiri.

[Skt.pāñca-rātrika> த. பாஞ்சராத்திரிகன்]

பாஞ்சலம் *pāñjalam,* பெ.(n.) 1. காற்று; wind. 2. கனல்; fire. 3. மிகு (இலாபம்) ஆதாயம்; gain.

[Skt.pācala> த. பாஞ்சலம்]

பாஞ்சாலம்[1] *pāñjālam,* பெ.(n.) 1. நாடுகள் ஐம்பத்தாறனுள் ஒன்று; an ancient country, one of 56 tēšam. "துளங்கில் பாஞ்சால மிக்கன வட்டம்" (திருவிளை.நரிபரி.104). 2. எழில் (யாழ்.அக.); beauty, noble appearance.

[Skt.pāñcala> த. பாஞ்சாலம்]

பாஞ்சாலம்[2] *pāñjālam,* பெ.(n.) இலக்கிய நடை மூன்றனுள்ள கௌடத்திற்கும் வைதருப்பத திற்கும் இடைப்பட்ட நடை. one of the three literary styles, midway between kautam and vaitaruppam.

[Skt.pāñcala> த. பாஞ்சாலம்]

பாஞ்சாலமட்டியம் *pāñjala-maṭṭiyam,* பெ.(n.) தாள வகை (யாழ்.அக.); a special mode of marking time.

[Skt.pāñcāla+madhya> த. பாஞ்சாலம்+ அட்டியம்]

பாஞ்சாலன் *pāñjālaṉ,* பெ.(n.) 1. பாஞ்சால நாட்டினன் (யாழ்.அக.); inhabitant of Pāñjālaṉ. 2. பாஞ்சால நாட்டரசன்; King of Pāñjālaṉ. 3. அழகிய தோற்றமுள்ளவன்; a person of noble appearance.

[Skt.pāñcala> த. பாஞ்சாலன்]

பாஞ்சாலி *pāñjāli,* பெ.(n.) 1.பாஞ்சால இளவரசி பாஞ்சாலி (துரோபதை); Draupadi, the princess of Pāñjālaṉ. "பந்தார் விரலாள்

பாஞ்சாலி கூந்தன் முடிக்க" (திவ்.பெரியதி. 6,7,8) 2. மரப்பாவை, மரப்பொம்மை (உ.வ.); wooden doll.

[Skt. Pāñcāli> த. பாஞ்சாலி]

பாஞ்சாலிகம் *pāñjāligam,* பெ.(n.) மரப்பாவை விளையாட்டு; play with wooden doll. "பாஞ்சாலிக முன்னான நல்ல விளையாட்டின்" (திருவாலவா.62,26).

த.வ.பொம்மை விளையாட்டு

[Skt. pāñcālika> த. பாஞ்சாலிகம்]

பாட்கா *pāṭkā,* பெ.(n.) கூட்டிக் கொடுப்போன்; pimp, go-between.

[U. bhāḍwa> த. பாட்கா]

பாட்சா *pāṭcā,* பெ.(n.) முகம்மதிய அரசன் (வின்.); Muhammadan king or governor.

[U. bāḍshāh> த. பாட்சா]

பாட்சிகன் *pāṭcigaṉ,* பெ.(n.) பறவை பிடிப்பவன் (வின்.); bird catcher, fowler.

த.வ.குருவிக்காரன், குறவன்

[Skt. pākṣika> த. பாட்சிகன்]

பாட்டலாக்குக்கம்மல் *pāṭṭalākku-k-kammmal,* பெ.(n.) மாட்டியணிதற்குரிய கம்மல் வகை; women's ear - ornament, resembling a padlock, fastened behind the ear-lobe with a screw.

த.வ. திருகுக்கம்மல்

[E. padlock> த. பாட்டலாக்கு+கம்மல்]

பாட்டியமி *paṭṭiyami,* பெ.(n.) வெள்ளுவா, காருவாவிற்கு அடுத்து வரும் நாள் (பிரதமை திதி); the day after the full or new moon.

மறுவ. முதலுவா

[Skt. prathama> Te. padyami> த. பாட்டியமி]

பாட்டில்[1] *pāṭṭil,* பெ.(n.) ஒரு வகைக் கையணி (வின்.); a kind of flat bracelet, worn by women or children.

த.வ. தட்டை வளையல்

[Mhr. pāṭali> த. பாட்டில்]

பாட்டில்[2] *paṭṭil,* பெ.(n.) குப்பி (இக்.வ.); bottle.

[E. bottle> த. பாட்டில்]

பாட்லாக்கு *pāṭlākku,* பெ.(n.) பூட்டு, தாழ்ப்பாள், சங்கிலி இவை மாட்டவுதவும் கதவின் நிலையுறுப்பு; hasp of a lock, staple, clincher of a chain.

த.வ.கொண்டி

[E. padlock> த. பாட்லாக்கு]

பாடாணக்கட்டு *pāḍāṇakkaṭṭu,* பெ.(n.) வெள்ளை நஞ்சு (வின்.); white arsenic.

[Skt. pāṣāṇa> த. பாடாணம்+ கட்டு]

பாடாணக்கல் *pāḍāṇakkal,* பெ.(n.) 1. பாம்புக் கல்; snake-stone. 2. நஞ்சை மாற்றுங் கல் வகை; a kind of stone applied to poison-bites as antidote.

த.வ.நஞ்சுமுறிக்கல்

[Skt. pāṣāṇa> த. பாடாணம்+கல்]

பாடாணச்செடி *pāḍaṇa-c-ceḍi,* பெ.(n.) திருநீற்றுப் பச்சை; sweet basil.

[Skt. pāṣāna> த. பாடாணம்+செடி]

பாடணத்தாபனம் *pāḍāṇa-t-tābaṉam,* பெ.(n.) இறந்தவர்களுக்கு நினைவுக்கல் (நடுகல்) நடும் விழா (உ.வ.); the rite of setting up a stone to represent the deceased in a funeral ceremony.

த.வ.நடுகல்விழா

[Skt. pāṣāṇa+sthāpana> த. பாடாணத் தாபனம்]

பாடாணம் *pāḍāṇam,* பெ.(n.) 1. கல்; stone. 2. பிறவி நஞ்சு, வைப்பு நஞ்சு என்ற மருந்து சரக்குகள்; mineral poison, especially arsenic, of which there are two kinds, viz., piṟavi-p-pāṣāṇam, vaippu-p-pāṣāṇam. 3. எண் வகைத் துய்ப்புகளுள் பாறை நிலமும் அவற்றிலுண்டாகும் பொருள்களும் (C.G.); rocky soil and its products, one of aṣṭa-pōkam.

த.வ. நச்சுக்கல்

[Skt. pāṣāṇa> த. பாடாணம்]

பாடாணமாரி *pāḍāṇa-māri*, பெ.(n.) கல்மழை (சா.அக.); hail stone rain.

த.வ.ஆலங்கட்டி மழை

பாடாணமுத்தி[1] *pāḍāṇa-mutti*, பெ.(n.) ஆதன் கற்போலக் கிடப்பதாகக் கருதப்படும் முத்தி நிலை; the state of salvation in which the soul is supposed to lie still like a piece of stone.

[Skt. pāṣāna+Pkt. mukti>பாஷாணமுத்தி> த. பாடாணமுத்தி]

பாடாணமுத்தி[2] *pāḍāṇa-mutti*, பெ.(n.) உடலும், ஆதனும் அழியும் பௌத்தர்களின் வீடுபேறு (சா.அக.); annihilation of the body and soul by Buddhists.

[Skt. pāṣāna+Pkt. mukti>பாஷாணமுத்தி> த. பாடாணமுத்தி]

பாடாணோத்துவாசனம் *pāḍāṇōttu-vāšaṇam*, பெ.(n.) சாச்சடங்கில் இறந்தவர் பொருட்டு நாட்டிய கல்லை நீரிலிடுஞ் செய்கை (உ.வ.); the rite of removing the stone representing the deceased and casting it into water at the close of a funeral ceremony.

த.வ.கல் நீராட்டு

[Skt. pāṣāṇa+ud-vāsana > த. பாடாணோத்து – வாசனம்]

பாடி-த்தல் *pāḍi-*, 4 செ.குன்றாவி (v.t.); 1. பேசுதல்; to speak. "காழிவேந்தர்... சமணரோடும் பாடித்த தோடந் தீர" (திருவாலவா.38,67). 2. பலுக்குதல்; to pronounce, utter, as mantra. "சிவனுக்கு மூலத்தைப் பாடித்தே" (சைவச.பொது.295).

[Skt. bhāṣ>த. பாடித்தல்]

பாடிதம் *pāḍidam*, பெ.(n.) பலுக்கப்படுவது; speech, anything pronounced. "பாடித வசன மென்றா" (சிவதரு.சிவஞானயோ.81).

[Skt. bhāṣita>த. பாடிதம்]

பாடியகாரர் *pāḍiya-kārar*, பெ.(n.) 1. பேருரை காரர்; author of an elaborate commentary. 2. பாணினீயத்தின் பேருரையாளரான பதஞ்சலி (பி.வி.1,உரை.); Patañjali, the commentator on the Grammar of Pāṇini. 3. நான்முகனின் நூற்பாவிற்கு விரிவுரை (பாஷ்யம்) இயற்றிய இராமானுசாச்சாரியர்; Rāmānuja, a commentator on Brahma sūtras.

த.வ.உரையாசிரியர்

[Skt. bhāsya-kāra>த. பாடியகாரர்]

பாடியம் *pāḍiyam*, பெ.(n.) பேருரை (வின்.); an elaborate commentary on sūtras.

த.வ.விளக்கவுரை

[Skt. bhāṣya>த. பாடிய]

பாடை *pāḍai*, பெ.(n.) 1. மொழி; language. "பரந்தொருங் கீண்டிய பாடை மாக்களும்" (மணிமே.1,16).

[Skt. bhāṣā>த. பாடை]

பாடைபேசு-தல் *pāḍai-pēšu-*, 5 செ.கு.வி. (v.i.) வேற்றுமொழி பேசுதல்; to speak a foreign language. 2. ஆங்கிலம் பேசுதல்; to speak English. 3. வெகுண்டுரைத்தல்; to bind oneself with oath.

பாண்டாகாரம் *pāṇḍākāram*, பெ.(n.) 1. பண்ட சாலை (யாழ்.அக.); storehouse. 2. கருவூலச் சாலை (மேருமந்.56, உரை.); treasury.

த.வ.இருப்புக் கிடங்கு

[Skt. bhāṇ-ḍāgāra>த. பாண்டாகாரம்]

பாண்டாகாரி *pāṇḍākāri*, பெ.(n.) கருவூலக் காரன்; treasurer.

[Skt. bhāṇḍāgārin>த. பாண்டாகாரி]

பாணக்கல் *pāṇakkal*, பெ.(n.) ஒன்பான் மணிகளுள் ஒன்றான விடரியம் (வைடூரியம்). (சா.அக.); one of the nine gems-Cat's eye.

பாணிவாதன் *pāṇivādaṉ*, பெ.(n.) வாணிகன் (யாழ்.அக.); merchant.

[Skt. paṇya-vat>த. பாணிவாதன்]

பாணினீயம் *pāṉiṉiyam*, பெ.(n.) பாணினி இயற்றிய வடமொழி இலக்கணம் (வியாகரணம்); Pāṇiṇi's šanskrit grammar.

[Skt. pāṇiniya > த. பாணினீயம்]

பாத்தம் *pāttam,* பெ.(n.) 1. செய்தி (விஷயம்); subject or matter dealt with. "ஒரு சொல்லுக்குப் பாத்தமில்லாத ஐசுவரியமுமாய்" (ஈடு,3,9,2). 2. தரம்; fitness. "சங்கல்பத்துக்கும் பாத்தம் போராத பூமிக்காக" (ஈடு,1,9,2).

[Skt. pātra > த. பாத்தம்]

பாத்தியன் *pāttiyaṉ,* பெ.(n.) கடவுளின் அடியான்; saint devoted to the feet of God. "பகையறு பாத்தியன் பாதம் பணிந்து" (மணிமே.10:35). "திருவாதவூர்ச் சிவ பாத்தியன்" (பதினொ.கோயிற்றிருப்பண்.58).

த.வ.தொண்டன், இறையடியார்

[Skt. pādya > த. பாத்தியன்]

பாத்தியா *pāttiyā,* பெ.(n.) முகம்மதிய மதத்தார் திருமணம் அல்லது இறப்பு (மரண) காலத்தில் குரான் ஓதுகை. (உ.வ.); the rite of reading the first chapter of the Quran, at a Muhammadan wedding or funeral. பாத்தியா ஓதினான்.

[U. fatiha > த. பாத்தியா]

பாத்திரப்பிரவேசம் *pāttira-p-piravēšam,* பெ.(n.) நடிகர் மேடையில் தோன்றும் முதற் காட்சி (இக்.வ.); entrance of actors on the stage.

[Skt. pātra+pra-vēša > த. பாத்திரப்பிரவேசம்]

பாத்திரபதம் *pāttirapadam,* பெ.(n.) 1. ஆறாவது நிலா மாதம் (வின்.); sixth lunar month. 2. முற்கொழுங்கால் (பூரட்டாதி) பிற்கொழுங்கால் (உத்திரட்டாதி) எனும் விண்மீன்கள்; the name common to 25th and 26th nakṣatra. 3. தொழுபஃறி (இரேவதி); the 27th nakṣatra.

[Skt. bhādra-pada > த. பாத்திரபதம்]

பாத்திரபாகம் *pāttira-pāgam,* பெ.(n.) ஏனத்தில் (பாத்திரம்) எண்ணெய் கெடாதபடி யிருக்க இடும் மணப்பொருள் (நாஞ்.); preservative used to prevent oil from becoming rancid.

த.வ.கசடுநீக்கி

[Skt. pātra > த. பாத்திர+பாகம்]

பாத்திரம் *pāttiram,* பெ.(n.) 1. கொள்கலம் (பிங்.); vessel, utensil. 2. இரப்போர் கலம் (சூடா.); mendicant's bowl. 3. பாத்திரன் பார்க்க; see pāttiraṉ. "பாத்திரஞ் சிவமென்று பணிதிரேல்" (தேவா.1070.3). 4. நாடகத்தில் அரிதாரம் பூசி நடிப்பவ–ன்–ள்; (Drama) character in a play; actor. "நட்டுவக்குறையோ... பாத்திரக் குறையோ" (மதுரைப்.பதிற்றுப்.25). 5. இலை (யாழ்.அக.); leaf. 6. உடல் (யாழ்.அக.); body. 7. எட்டுச் சேர் கொண்ட ஓர் அளவு (யாழ்.அக.); a standard of measure equal to eight šēr. 8. கட்டளை (யாழ்.அக.); mould. 9. அமைச்சர் (யாழ்.அக.); counsellor. 10. வாய்க்கால் (யாழ்.அக.); canal.

[Skt. pātra > த. பாத்திரம்]

பாத்திரவேதிகை *pāttira-vēdigai,* பெ.(n.) வழிபாட்டு ஏனங்கள் முதலியன வைக்கும் மேடை (பீடம்) (இ.வ.); a platform or support for the utensils and cups used in divine worship.

[Skt. pātra+bhēdikā > த. பாத்திரவேதிகை]

பாத்திரன் *pāttiraṉ,* பெ.(n.) தக்கோன்; competent, worthy person. "உயர்ந்த பாத்திரன்" (சேதுபு.சேதுபல.67).

த.வ.தகுதியானவன், உயர்ந்தவன்

[Skt. pātra > த. பாத்திரன்]

பாத்திலார் *pāttilār,* பெ.(n.) விலைமகள்; prostitutes. "பாத்திலார் தாம்விழையும் நாடகஞ் சாராமை" (ஏலாதி,25).

த.வ.பரத்தை, கணிகையர்

பாதகம்[1] *pādagam,* பெ.(n.) பெருந்தீமை, பெருங்கரிசு; grievous sin, heinous crime

"நாரினிற் பாலன் செய்த பாதக நன்மை யாய்த்தே" (சி.சி.2,29).

த.வ.வங்கொடுமை, பெருங்கொடுமை

[Skt.pātaka> த. பாதகம்]

பாதகம்² *pādagam,* பெ.(n.) தடை; hindrance, objection. "அதனாற் பாதகமில்லை" (உ.வ.).

த.வ.முட்டுக்கட்டை, இடையூறு

[Skt.bādhaka> த. பாதகம்]

பாதகன் *pādagan,* பெ.(n.) பெருங்குற்றஞ் செய்தோன்; man guilty of a heinous crime. "ஐம்பெரும் பாதகர்காள்" (திவ்.நாய்ச்.9,4).

த.வ.கயவன்

[Skt.pātaka> த. பாதகன்]

பாதகி¹ *pādagi,* பெ.(n.) பெருங்கொடுமை செய்தவள்; woman guilty of a heinous crime. "பாரியா யிருந்து கொன்ற பாதகி பெற்ற பேற்றால்" (உபதேசகா.சிவபுண்.202).

த.வ.கொடுமைக்காரி

[பாதகன் →பாதகி]

பாதகி² *pādagi,* பெ.(n.) பெருங்கேடன் (பாதகன்); criminal. "பக்திமான்களும் பாதகிகளும் ஒக்கவாழ்ந்து போய்த்து" (திவ்.அமலனாதி.2, வியா.பக்.33).

த.வ.கொலைகாரன், கயவன்

[Skt.patakin> த. பாதகி]

பாதங்கம் *pādaṅgam,* பெ.(n.) பொடி; ash. "பாதங்க நீறேற்றார்" (தேவா.225,1).

த.வ.தூள், துகள், சாம்பல்

[படி > பதி > பதிகம் > பதகம் > பதங்கம் > Skt.Pātaṅ-ga>த. பாதங்கம்]

பாதர் *pādar,* பெ.(n.) பகதூர்; Bahadur. "பாதர் வெள்ளை யென்று கூப்பிடுவேன்" (கட்ட பொம்மு.பக்.26).

[Persn.bahādur> த. பாதர்]

பாதரசம் *pādarašam,* பெ.(n.) இதளியம்; mercury, quicksilver. "பாதரசமாய் மனது சஞ்சலப்படுமலால்" (தாயு.பரிபூரண.6).

[Skt.pārada-rasa >த. பாதரசம்]

பாதராயணன் *pādarāyaṇan,* பெ.(n.) பிரம்ம நூல், மகாபாரதம் முதலியவற்றின் ஆசிரிய ராகிய வியாசமுனிவர் (வின்.); the sage Vyāsa, author of Brhama sūtras, Mahābhārata,etc.

[Skt.Bāda-rāyaṇa> த. பாதராயணன்]

பாதவம்¹ *pādavam,* பெ.(n.) மரம்; tree. "பாதவக் கண்ணிழல்" (ஞானா.18,11). 2. தோப்பு (பிங்.); garden, grove.

த.வ. பூங்கா

[Skt.Pāda-pa> த. பாதவம்]

பாதவம் *pādavam,* பெ.(n.) மலை (பிங்.); hill, mountain.

[Skt.parvata > த. பாதவம்]

பாதன் *pādan,* பெ.(n.) 1. கதிரவன் (சா.அக.); the sun. 2. நெருப்பு; fire.

த.வ. எரிகதிர், ஞாயிறு

பாதனம்¹ *pādaṇam,* பெ.(n.) 1. வணக்கம்; homage, reverence, prostration in worship. "பாதனஞ் செய்தார்" (பாரத. சூது.139). 2. கீழ்முகமாகச் செய்கை; causing to turn downwards. "பாதனமாகப் பரிந்தது பார்த்தே" (திருமந்.1041).

[Skt.pātana> த. பாதனம்]

பாதனம்² *pātan,* பெ.(n.) குத்தியெடுக்கை அல்லது கத்தியால் பிளக்கை (சா.அக.); opening by, lancet or incison.

பாதாங்கொட்டை *pādāṅgoṭṭai,* பெ.(n.) வாதாங்கொட்டை (இ.வ.); almond.

த.வ. முற்பழக் கொட்டை

[U.bādam> த. பாதாம்+கொட்டை]

பாதாமல்வா *pādāmalvā,* பெ.(n.) பாதுமல்வா (இ.வ.) பார்க்க; see bādumalvā.

பாதாலத்தாம்பி *pādālattāmbi,* பெ.(n.) நிலக்காளான் (தைலவ.தைல.); mushroom, fungi.

பாதாலம் *pātālam,* பெ.(n.) 1. பாதாளம் பார்க்க; see bātāḷam. 2. வடவைத் தீ; submarine fire. "மொய்கொள் பாதால முத்தீ" (சீவக. 2462).

த.வ. கீழுலகம்

[Skt.pātāla> த. பாதாலம்]

பாதாளக்கரண்டி *pātāḷa-k-karaṇḍi,* பெ.(n.) கிணற்றில் விழுந்த பொருளை எடுக்குங் கருவி (உ.வ.); grapnel, hook to lift things fallen into a well.

த.வ. முள்குறடு

[Skt.pātāla> த. பாதாளக் கரண்டி]

பாதாளகங்கை *pādāḷa-kaṅgai,* பெ.(n.) நிலத்தின் கீழ் ஓடும் நீரோட்டம் (வின்.); subterranean stream.

த.வ.நிலத்தடி நீர்

[Skt.pātāla> த. பாதாளம்+கங்கை]

பாதாளகிரகணம் *pātāḷa-kiragaṇam,* பெ.(n.) 1. கண்ணுக்குப் புலப்படாத கோள்பற்று (கிரகணம்) (C.G.); eclipse below the horizon. 2. அரைகுறையாய்ப் புலப்படும் கோள் பற்றுகை; eclipse which is only partly visible.

[Skt.pātāla+grahaṇa> த. பாதாளகிரகணம்]

பாதாளகொலுசு *pātāḷa-koluśu,* பெ.(n.) பாதாளக்கரண்டி பார்க்க; see bātāḷa-k-karaṇḍi.

[Skt.pātāla> Te.golusu> த. பாதாளகொலுசு]

பாதாளத்தார் *pātāḷattār,* பெ.(n.) பாதாள வாசிகள் பார்க்க; see pātāḷā-vāšikaḷ. "பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார்" (திருவாச.8,2).

[Skt.pātāla> த. பாதாளத்தார்]

பாதாளம் *pātāḷam,* பெ.(n.) 1. கீழுலகம் ஏழனுள் அடியில் உள்ளது; the lowest subterranean region, one of kīḷ-ēḷ-ulakam. 2. கீழுலகம்; any of the nether worlds. "பாதாள மேழினுங் கீழ் சொற்கழிவு பாதமலர்" (திருவாச. 7,10). 3. குகை, பள்ளம் (வின்.); deep cavern, pit, chasm, gulf, abyss, cleft. 4. அளறு (நரகம்.) (சூடா.); hell. 5. கணியத்தில் கதிரவனுக்கு நான்காமிடம் (வின்.); (Astrol.) the fourth house from that of the sun. 6. மறைவிடம் (வின்.); secret place.

[Skt.pātāla> த. பாதாளம்]

பாதாளயோகம் *pātāḷa-yōgam,* பெ.(n.) கணிய நூல் வகையுளொன்று (சங்.அக.); (Astrol.) a kind of yōkam.

[Skt.pātāla+yōga> த. பாதாளயோகம்]

பாதாளலிங்கம் *pātāḷa-liṅgam,* பெ.(n.) நிலத்தில் ஆழப்பதிந்த சிவலிங்கம் (உ.வ.); Siva-liṅgam, which is deeply rooted in the earth.

[Skt.pātāla+linga> த. பாதாளலிங்கம்]

பாதாளலோகம் *pātāḷa-lōgam,* பெ.(n.) பாதாளம், 1, 2 (வின்.) பார்க்க; see pātāḷam, 1,2.

[Skt.pātāla+lōka> த. பாதாளலோகம்]

பாதாளவயிரவன் *pātāḷa-vayiravaṉ,* பெ.(n.) 1. கிணறு வெட்டவும் புதைபொருளை வெளியிடவும் காணிக்கை கொள்ளும் வைரவக் கடவுள் (வின்.); Bhairava of the nether world, to whom sacrifice is offered when digging wells or discovering treasure hidden under ground.

[Skt.pātāla+bhairava> த. பாதாளவயிரவன்]

பாதாளாஞ்சனம் *pātāḷāñjaṉam,* பெ.(n.) கருநிற மை முதலிய மூன்றனுள் மறை பொருளைக் காண உதவுவதும் மை; magical black pigment or collyrium used in discovering treasures buried underground, one of the three añjaṉam.

[Skt.pātāla+añjana> த. பாதாளாஞ்சனம்]

பாதாளி *pātāḷi,* பெ.(n.) 1. மிகச் சிக்கலானது; anything very difficult to unravel. 'இழவும் பாதாளியுமாகவிருக்கிறது' (தஞ்.) 2. தொல்லை செய்பவள் (இ.வ.); a worrying or troublesome woman.

த.வ.நச்சரிப்பவள்

[Skt.pātāla> த. பாதாளி]

பாதி-த்தல் *pāti-,* 4 செ.குன்றாவி. (v.t) 1. வருந்துதல்; to trouble, disturb. 2. தடை செய்தல்; to hinder, obstruct.

[Skt.bādh> த. பாதி →பாதி-த்தல்]

பாதித்தியம் *pātittiyam,* பெ.(n.) தரக்குறைவு (பதிதத்தன்மை) (யாழ்.அக.); apostasy, degradation.

[Skt.pātitya> த. பாதித்தியம்]

பாதிரியார் *pātiriyār,* பெ.(n.) கிறித்தவத் தேவாலயத்தில் வழிபாடு நடத்திவைப்பவர்; (Christian) clergyman, priest, pastor.

*[**E.**Father > த. பாதிரியார்]*

பாதிவிரத்தியம் *pātivirattiyam,* பெ.(n.) கற்பொழுக்கம்; chastity, fidelity, conjugal virtues.

த.வ.இல்லற ஒழுக்கம்

*[**Skt.**pātivratya> த. பாதிவிரத்தியம்]*

பாதுகாகாரன் *pādukā-kāraṉ,* பெ.(n.) மிதியடி, செருப்பு செய்பவர் (யாழ்.அக.); cobbler, shoe-maker.

த.வ.தோல்வினைஞன்

*[**Skt.**pādukā-kāra> த. பாதுகாகாரன்]*

பாதுசா[1] *pāduša,* பெ.(n.) முகம்மதிய அரசன்; sultan, Muhammadan ruler.

*[**U.**bādshāh> த. பாதுசா]*

பாதுசா[2] *pāduša,* பெ.(n.) இனிப்புப் பணியார வகை (இ.வ.); a kind of sweet cake.

பாதுமல்வா *pādumalvā,* பெ.(n.) கற்பழவிதை (வாதாம்)யாலான இன்களி (அல்வா); a kind of confection prepared with almond. "பாதுமல்வா நெய்யுருண்டை" (பஞ்ச.திருமுக. 1837).

*[**Persn.**bādām+ **Ar.**halwā>த. பாதுமல்வா]*

பாதூனசந்திரன் *pādūṉa-šandiraṉ,* பெ.(n.) நிலவுக்கும் கருங்கோள் செங் கோளுக்கும் இடையே உள்ள தொலைவு (வின்.); (Astron.) nodal distance of the moon.

*[**Skt.**pādūna+candra> த. பாதூனசந்திரன்]*

பாதேயம் *patēyam,* பெ.(n.) கட்டுச்சோறு; food carried for use on a journey, viaticum. "பரலோக பாதேயம்" (வின்.).

த.வ.கட்டுணவு

*[**Skt.**pāthēya> த. பாதேயம்]*

பாதோசம் *pātōšam,* பெ.(n.) தாமரை (மலை.); lotus, as water-born.

த.வ.கமலம்

*[**Skt.**pāthō-ja> த. பாதோசம்]*

பாநியாமலகம் *pāniyāmalagam,* பெ.(n.) ஒரு வகை நெல்லி (நீர் வேட்கையைத் தடுப்பது); a kind of gooseberry. which prevents and arrests thirst (சா.அக.).

பாப்பரி *pāppari,* பெ.(n.) 1. செந்நாகம்; red cobra. 2. நாகம்; cobra. (சா.அக.)

த.வ.நல்லபாம்பு, அரச நாகம்

பாப்பாச்சி *pāppacci,* பெ.(n.) ஒரு வகை மிதியடி; slippers.

த.வ.செருப்பு, காலணி

*[**U.**pāpōsh> த. பாப்பாச்சி]*

பாப்பு *pāppu,* பெ.(n.) ரோமன் கத்தோலிக சமயத்தாருடைய தலைமைத் தலைவர் (கிறித்து.); Pope, head of the Roman Catholic church.

*[**L.**pāpa> த. பாப்பு]*

பாப்பை *pāppai,* பெ.(n.) களியிட்டுக்கட்டல்; bandaging after applying poultice. (சா.அக.)

த.வ.மாவுகட்டு

பாபக்கிரகம் *pāba-k-kiragam,* பெ.(n.) நன்மை செய்யாக்கோள் (விதான.மரபி.2,உரை.); unfavourable or malevolent planet.

த.வ.தீயகோள்

*[**Skt.**pāpa+graha > த. பாபக்கிரகம்]*

பாபக்கினம் *pābakkiṉam,* பெ.(n.) எள் (சங்.அக.); sesame.

*[**Skt.**pāpa-ghna> த. பாபக்கினம்]*

பாபசங்கீர்த்தனம் *pāba-šaṅ-girttaṉam,* பெ.(n.) பாழ்வினை அல்லது கரிசு நீங்க அவற்றைச் சமயக் குருவிடம் தெரிவிக்கை (கிறித்து.); confession of sin.

த.வ.குற்றம் ஏற்பு

*[**Skt.**pāpa+saṅ-kīrtana> த. பாபசங்கீர்த்தனம்]*

பாபசமனம் *papa-šamaṉam,* பெ.(n.) கரிசுக் கழுவாய்; removal or expiation of sin.

*[**Skt.** Pāpa+šamana> த. பாபசமனம்]*

பாபத்தி *pāpatti*, பெ.(n.) வேட்டை (சூடா.); hunting, fishing.

[Skt. Pāpar-ddhi > த. பாபத்தி]

பாபத்து *pāpattu*, பெ.(n.) 1. செய்தி; item, article, matter, business, affair. 2. கணக்கு; account, head in accounts. 'அவன் பாபத்திலே செல்லும் ரூபாய் ஐந்து'. (இ.வ.).

[U. babat > த. பாபத்து]

பாபதண்டி *pāpa-taṇḍi*, பெ.(n.) கரிசுக்காகத் தண்டனைக்கு உரியவன் (தக்கயாகப், 505); sinner who deserves punishment.

[Skt. pāpa-daṇḍin > த. பாபதண்டி]

பாபதத்தம் *pāpa-tattam*, பெ.(n.) 1. தீவினைகளிற் செலவழிக்கப்படும் பொருள்; property or money lost in evil purseuts. 2. கள்வர் முதலியோராற் கவரப்படும் பொருள்; property lost in theft.

[Skt. pāpa+datta > த. பாபதத்தம்]

பாபது *pāpadu*, பெ.(n.) பாபத்து பார்க்க; see pāpattu.

பாபம் *papam*, பெ.(n.) தீவினைப் பயன்; accumulated result of sinful action.

[Skt. pāpa > த. பாபம்]

பாபமூர்த்தி *pāpa-mūrtti*, பெ.(n.) வேடன் (யாழ்.அக.); hunter.

[Skt. pāpa+murti > த. பாபமூர்த்தி]

பாபவிக்கியானம் *pāpa-vikkiyāṉam*, பெ.(n.) பாபசங்கீர்த்தனம் பார்க்க; see pāpa saṅgīrttaṉam.

[Skt. pāpa+vijñapana > த. பாபவிக்கியானம்]

பாபவிமோசனம் *pāba-vimōśaṉam*, பெ.(n.) பாழ்வினை (குற்றம்) அல்லது கரிசு நீங்குகை; liberation from sins. 'நீ செய்த இந்தக் கொடுஞ்செயலுக்கு பாபவிமோசனம் உண்டா?' (இ.வ.).

த.வ.தீவினைக்கழுவாய்

[Skt. pāpa+vimōcaṉa > த. பாபவிமோசனம்]

பாபிட்டன் *pāpiṭṭaṉ*, பெ.(n.) தீச்செயல் புரிந்தவன்; sinful man.

[Skt. pāpiṣṭha > த. பாபிட்டன்]

பாபிட்டை *pāpiṭṭai*, பெ.(n.) கொடுந்தீமை செய்தவள்; sinful woman.

[Skt. pāpiṣṭha > த. பாபிட்டை]

பாபு[1] *pāpu*, பெ.(n.) முதலாளி; hord, master.

[H. bābu > த. பாபு]

பாபு[2] *pāpu*, பெ.(n.) 1. கதவு; door; 2. பகுதி; section. 3. கணக்கின் தலைப்பு; title, head of accounts.

[U. pāb > த. பாபு]

பாபுவார் *pāpuvār*, பெ.(n.) கரணியங் கூறி பிரித்தெழுதிய கணக்கு; head or items of account, arranged or classified.

[U. bābwār > த. பாபுவார்]

பாமம்[1] *pāmam*, பெ.(n.) 1. சிரங்கு; itch, eczema. 2. புண்; sore. "பாமக்குருதிப் படிகின்ற... சேடகம்" (கம்பரா.மூலபல.203).

[Skt. pāman > த. பாமம்]

பாமம்[2] *pāmam*, பெ.(n.) 1. சினம் (யாழ்.அக.); anger. 2. ஒளி; brilliance. "பாமமா கடல் கிடங்களாக" (கம்பரா.அரசி.7).

[Skt. bhāma > த. பாமம்]

பாமரம் *pāmaram*, பெ.(n.) 1. முட்டாள்தனம்; ignorance, stupidity. "பாமரத் திமிரபானு" (பிரபோத.6,20) 2. மூடன்; dullard. "பாமரமே யுனக்கென்ன" (இராமநா.அயோத்தி 5).

[Skt. pāmara > த. பாமரம்]

பாமரன் *pāmaraṉ*, பெ.(n.) 1. அறிவிலான்; ignorant, stupid person. "பாமரரெனக் காண்பிப்பார் பண்டிதத் திறமை காட்டார்". (கைவல். தத்து.96) 2. இழிந்தோன்; vile, low, base person. 3. அரசற்குத் துணைவன் (யாழ்.அக.); king's companion.

[Skt. pāmara > த. பாமரன்]

பாமன் *pāman,* பெ.(n.) 1. ஞாயிறு; Sun. 2. உடன் பிறந்தாள் கணவன்; sister's husband.

[Skt. bhāma > த. பாமன்]

பாமாரி *pāmāri,* பெ.(n.) கந்தகம் (சங்.அக.); sulphur.

[Skt. pāmāri > த. பாமாரி]

பாமாரோகம் *pāmā-rōgam,* பெ.(n.) பேய்ச் சொறி (பைஷஜ.); scabies, itch.

[Skt. pāmā-rōgam > த. பாமாரோகம்]

பாமினி *pāmiṇi,* பெ.(n.) பெண் (சங்.அக.); woman.

[Skt. bhāmiṇī > த. பாமினி]

பாமை[1] *pāmai,* பெ.(n.) சிரங்கு (தைலவ.தைல. 140); itch.

[Skt. pāmā > த. பாமை]

பாமை[2] *pāmai,* பெ.(n.) கண்ணனுக்குகந்த தேவியருள் ஒருத்தி (பாகவத.10,25,1); a favourite wife of Kṛṣṇa.

[Skt. Bhāmā > த. பாமை]

பாயகாரி *pāya-kāri,* பெ.(n.) குறிப்பிட்ட காலம் வரை குடிவாரத்துக்கு உழுபவன்; temporary cultivator, one who cultivates the land of another for a stipulated term, obtaining a certain share of the crop.

[U. pā-a-kāri > த. பாயகாரி]

பாயசம்[1] *pāyašam,* பெ.(n.) பால், அரிசி, சர்க்கரை அல்லது வெல்லம் முதலியவற்றோடு சேர்த்துச் செய்யும் நெகிழ்ச்சியான இன்னமுது; a semi-liquid food prepared out of milk, rice, sago, etc mixed with sugar or jaggery.

பாயசம்[2] *pāyašam,* பெ.(n.) பாற் சொற்றி, ஒரு செடி வகை; a plant, Ruellia secunda.

[Skt. pāyasa > த. பாயசம்]

பாயதானம் *pāyataṇam,* பெ.(n.) பாற்சோறு; rice boiled in milk. "பொற்புறு பாயதானம் புளிப்புறு ததியின் போனம்" (சிவதரு.பரம.37).

[Skt. pāyasānna > த. பாதானம்]

பாயுரு *pāyuru,* பெ.(n.) எருவாய் (குதம்); anus, fundament.

[Skt. pāyu > த. பாயுரு]

பார்க்கவம் *pārkkavam,* பெ.(n.) துணைத் தொன்மங்கள் பதினெட்டனுள் ஒன்று; a secondary Purāṇa one of 18 upa-purāṇam.

[Skt. bhārgava > த. பார்க்கவம்]

பார்க்கவி[1] *pār-k-kavi,* பெ.(n.) திருமகள்; Lakshmi. "பார்க்கவியும் யார்க்கிது போல் வாய்க்குமென்" (மனோன்.3,சிவகாமி.49). 2. மலைமகள் (யாழ்.அக.); Parvati. 3. வெள்ளறுகு; small chiretta.

[Skt. Bhārgavi > த. பார்க்கவி]

பார்க்கவி[2] *pārkkavi,* பெ.(n.) தேக்கு மரவகை (மலை.); beetle killer.

[Skt. bhārgi > த. பார்க்கவி]

பார்க்கவசுபத்தியம் *pārkkavašupattiyam,* பெ.(n.) இரவின் 15 முழுத்தங்களுள் பதினொன்றாவது (விதான்.குணாகுண.73, உரை); the 11th of the 15 divisions of night.

[Skt. bārhaspatya > த. பார்க்கவசுபத்தியம்]

பார்க்குச்சு *pārkkuccu,* பெ.(n.) காவல் படையினர் குடியிருக்கக் கட்டிய சிறு வீட்டு வரிசை; barracks a line of houses built for soldiers.

[E. barracks > த. பார்க்குச்சு]

பார்சி *pārši,* பெ.(n.) 1. பாரசிக இனத்தான்; Parsee. 2. பாரசீகப்பண்; a Persian tune. 3. பாரசிக நாடு (வின்.); Persia.

[U. pārsī > த. பார்சி]

பார்சிக்கஞ்சாங்கோரை *pārši-k-kañjāṅgōrai,* பெ.(n.) செடி வகை; Persian tulsi.

[பார்சி+கஞ்சாங்கோரை]

பார்சுவகிரகணம் *pāršuva-girakaṇam,* பெ.(n.) குறை கோள்பற்று (பஞ்.); partial eclipse.

[Skt. pāršva+grahaṇa > த. பார்சுவ கிரகணம்]

பார்சுவம் *pāršuvam,* பெ.(n.) 1. விலாப்பக்கம்; (யாழ்.அக.); side of the body. 2. பக்கம்; side. 3. உதவி; support 4. வட்டம்; circle.

[Skt. pāršva > த. பார்சுவம்]

பார்சுவர் *pāršuvar,* பெ.(n.) 1. சமணத்துறவியர் இருபத்து நால்வருள் ஒருவர் (திருக்கலம், காப்பு, உரை.); a Jaina Arhat, one of 24 tirttaṅgarar.

[Skt. Pāršva> த. பார்ச்சுவர்]

பார்சுவவாயு *pāršuva-vāyu,* பெ.(n.) பக்க ஊதை நோய்; paralysis.

[Skt. pāršva+vāyu> த. பார்சுவவாயு]

பார்த்தசாரதி *pārtta-šāradi,* பெ.(n.) கண்ணபெருமான்; Krṣṇa, Arjuna's charioteer.

[Skt. Pārtha-sārathi> த. பார்த்தசாரதி]

பார்த்தன் *pārttan,* பெ.(n.) அருச்சுனன் (பாரத. அருச்சுனன்றீர்.44); Arjuna.

[Skt. Pārtha> த. பார்த்தன்]

பார்த்திபன் *pārttiban,* பெ.(n.) அரசன், king. "பார்த்திபகுமரன் சேர்ந்தான் (சீவக.1683).

[Skt. pārthiva> த. பார்த்திபன்]

பார்த்திவ *pārttiva,* பெ.(n.) ஆண்டு அறுபதனுள் பத்தொன்பாவது; the 19th year of the jupiter cycle.

[Skt. pārthiva> த. பார்த்திவ]

பார்த்திவம் *pārttivam,* பெ.(n.) 1. நிலவுலகத் தொடர்பானது; that which pertains to the earth. 2. நிலங்களிலிருந்து பெறும் ஊதியம் (சுக்கிரநீதி,97); income derived from lands. 3. நிலம் (சூடா.); earth.

[Skt. pārthiva> த. பார்த்திவம்]

பார்த்திவலிங்கம் *pārttiva-liṅgam,* பெ.(n.) ஈரமண்ணாலான சிவலிங்கம் (சங்.அக.); Siva-liṅgam made of wet earth.

[Skt. pārthiva+ த. இலிங்கம் > த. பார்த்திவலிங்கம்]

பார்ப்பதி *pārppadi,* பெ.(n.) பார்வதி பார்க்க; see Pārvati.

[Skt. pārvati> த. பார்வதி → பார்ப்பதி]

பார்ப்பதிகொழுநன் *pārppati-kolunan,* பெ.(n.) சிவபெருமான் (பிங்.); Sivan the consort of Pārvadi.

[Skt. pārvati+ த. கொழுநன்]

பார்ப்பதிபுதல்வன் *pārppadi-pudalvan,* பெ.(n.) பிள்ளையார் (பிங்.); Ganēšan son of Pārvadi.

[Skt. pārvati+ த. புதல்வன்]

பார்வணசிராத்தம் *pārvanaširāttam,* பெ.(n.) 1. பருவ காலங்களில் முன்னோர்க்குச் செய்யுஞ் சடங்கு; ceremony performed in honour of the manes at the paruvam. 2. காலை மாலை நேரங்களில் இல்லறத்தான், முன்னோர்களுக்கு (வேள்வித் தீ வளர்த்து) நடத்தும் காரியம்; ceremony to the manes accompanied with oblation in aupāsanāgni.

[Skt pārvana+šrāddha> த. பார்வணசிராத்தம்]

பார்வணவோமம் *pārvana-v-ōmam,* பெ.(n.) ஈமக்கடனுக்காகச் செய்யும் வேள்வித் தீ (சேதுபு.சேதுபல.98); fire oblation in the ceremonies to the manes.

[Skt. pāravana> த. பார்வணம்+ஓமம்]

பார்வதி *pārvadi,* பெ.(n.) 1. உமை (திவா.); மலை அரசி; Parvati, daughter of Parvata - rāšan. 2. திரௌபதி (யாழ்.அக.); Draupadi. 3. இடைச்சி (யாழ்.அக.); shepherdess. 4. காவி மண் (யாழ்.அக.); red ochre. 5. ஆனை நெருஞ்சில் (சங்.அக.); a small plant.

[Skt. pārvati> த. பார்வதி]

பார்வதிலோசனம் *pārvadi-lōšanam,* பெ.(n.) 16 மாத்திரைகள் கொண்ட துணைத் தாள வகை (பரத.தாள.3.); a variety of time-measure consisting of 16 māttirai, one of five upa-tālam.

[Skt. pārvatī-lōcana> த. பார்வதிலோசனம்]

பாரகன்[1] *pāragan,* பெ.(n.) சுமப்போன்; carrier, bearer. "பாரகர்பரிக்க (சி.சி.2,95).

2. தாங்குபவன்; supporter, sustainer. "பாரகன் றனையும் (சிவதரு.பாவ.8).

[Skt. bhārika> த. பாரகன்]

பாரகன்[2] *pāragaṉ,* பெ.(n.) கல்வித்துறையில் கரை கண்டவன்; a learned person, one who has reached the further shore or utmost limit of an art.

[Skt. pāra-ga> த. பாரகன்]

பாரகாவியம் *pāra-kāviyam,* பெ.(n.) பெருங்காப்பியம்; great epic. "பார காவியமெலா மீரிரு தினத்தினிற் பகர" (தமிழ்நா.221).

[Skt. bhāra+kāvya> த. பாரகாவியம்]

பாரங்கதன் *pāraṅgadaṉ,* பெ.(n.) கல்வித் துறையிற் கரை கண்டவன்; a learned person, one who has reached the further shore or utmost limit of an art.

[Skt. pāraṅ-gata> த. பாரங்கதன்]

பாரங்கு *pāraṅgu,* பெ.(n.) 1. சிறுதேக்கு (சங்.அக.); beetle killer. 2. காட்டிலவு (சங்.அக.); false tragacanth. 3. நரி வாழை (மலை.); tube flower.

[Skt. bhāraṅgi> த. பாரங்கு]

பாரசி *pāraśi,* பெ.(n.) 1. பன்னிரண்டாம் நாள் பிறைநிலா (துவாதசி); the 12th day of the lunar fortnight. "வாட் கண்ணார் பாரசிநாள் பைம்பூந் தொடையலோடேந்திய தூபம் (திவ்.இயற்.1:82).

[Skt. dvādaśi>Pkt. bārasi>த. பாரசி]

பாரசீகம் *pāraśigam,* பெ.(n.) ஒரு நாடு; Persia one of 56 tesam. "பாரசீகத்திற் புக்கான் (இரகு.திக்கு.226).

[Skt. pārasika> த. பாரசீகம்]

பாரணம்[1] *pāraṇam,* பெ.(n.) 1. உண்ணுகை; eating, taking food. "தேவர் பாரணம் பண்ண விட்ட பைம்பொன் வேதிகையில் (பாரத. இராசசூ.90). 2. நோன்பு இருந்து உண்ணுகை; breaking a fast. "வந்தமாதவர்களோடும் பாரண மகிழ்ந்து செய்தான் (கந்தபு.கந்தவி. 14). 3. நிறைவு (யாழ்.அக.); satisfaction.

[Skt. pāraṇa> த. பாரணம்]

பாரணை *pāraṇai,* பெ.(n.) பாரணம்[1] 2 பார்க்க; see pāraṇam[1] 2."துவாதசிப் பாரணையருந்த (வரத.பாகவத.அம்பரீட.8)

[Skt. pāraṇā> த. பாரணை]

பாரத்துவாசம் *pārattuvāśam,* பெ.(n.) 1. கரிக்குருவி (திவ.); king crow. 2. காடை; quail. 3. வாழ்நாளை நீடிக்கச் செய்யும் மருந்து பற்றிக் கூறும் ஒரு நூல் (தொல்.பொருள். 75.உரை); a treatise on kalpa. 4. எலும்பு; bone.

[Skt. bhārad-vāja> த. பாரத்துவாசம்]

பாரத்துவாசன் *pārattuvāśaṉ,* பெ.(n.) 1. துரோணாச்சாரியன் (பிங்.); Drōṇa. 2. அகத்திய முனிவர் (யாழ்.அக.); sage Agastya. 3. ஒரு துறவி; a Ṛṣi believed to be nursed by a bird.

[Skt. bhārad-vāja> த. பாரத்துவாசன்]

பாரதகண்டம் *pārada-kaṇḍam,* பெ.(n.) இந்திய நாடு; India. இமயகிரிக்கும் தென் கடற்குமிடைப் பாகம் பாரதமே (சிவதரு. கோபுர.51).

[Skt. bhārada> த. பாரதம்+கண்டம்]

பாரதப்போர் *pārada-p-pōr,* பெ.(n.) பாண்டவ கௌரவப்போர் (திவ்.பெரியதி.4,6,6); the Mahabarata war. 2. பெருஞ்சச்சரவு; a big fight or quarrel.

[Skt. bhārata+ த. போர்]

பாரதம் *pāradam,* பெ.(n.) 1. பாரதப்போர்; the great war of Kurukṣētra "நீயன்றி மாபாரதமகற்ற மற்றார் கொல் வல்லாரே (பாரத.கிருட்டிண.34). 2. மாபாரதம்; the Mahabharata.

[Skt. bhārata> த. பாரதம்]

பாரதாயன் *pāradāyaṉ,* பெ.(n.) பாரத்துவாச குலத்தைச் சேர்ந்தவன்; one belonging to Bhāradvāja gōtra. "பாரதாயன் கேசவன்" (S.I.I.iii,150,1).

[Skt.bhārad-vāja> த. பாரதாயன்]

பாரதாரிகம் *pāradārigam,* பெ.(n.) பிறர்மனை விழைகை (யாழ்.அக.); sexual intercourse with the wife of another, adultery.

[Skt.pāradārya> த. பாரதாரிகம்]

பாரதி *pāradi,* பெ.(n.) 1. கலைமகள் (பிங்.); Sarasvati. 2. பைரவி; goddess Bhairavi. "பாரதியாடிய பாரதி யரங்கத்து (சிலப்.6,39). 3. புலமையாளன்; learned person. 4. சொல் (யாழ்.அக.); word.

[Skt.bhārati> த. பாரதி]

பாரதிகொழுநன் *pāradikoḻunaṉ,* பெ.(n.) நான்முகன் (பிங்.); Brahma, the consort of Sarasvati.

[Skt.bharati> த. பாரதி+கொழுநன்]

பாரதியினாம் *pāradi-y-iṉām,* பெ.(n.) கோயில்களில் பாரதம் படித்தற்கு ஏற்படுத்தப் பட்ட மானியம்; endowment for reading the Mahābhāradam in temples.

[Skt.bhārata+ināṃ> த. பாரதியினாம்]

பாரபட்சம் *pārapatcam,* பெ.(n.) ஒரு பாற்கோடல்; partiality bias.

[Skt.pāra-pakṣa> த. பாரபட்சம்]

பாரபத்தியக்காரன் *pārapattiya-k-kāraṉ,* பெ.(n.) 1. மேல் உசாவல் (விசாரணை) செய்யும் அதிகாரி; overseer. 2. வரி ஈட்டும் (வசூல்) அதிகாரி முதலியோர் (யாழ்.அக.); bailiff, collector of village revenue. 3. அலுவலன் (உத்தியோகத்தன்) (யாழ்.அக.); Officer. 4. பொறுப்பான வேலையுள்ளவன் (நெல்லை.); a person saddled with responsible duties.

[பாரபத்தியம்+காரன் - பாரபத்தியக்காரன்]

பாரபத்தியம் *pārapattiyam,* பெ.(n.) 1. மேல் உசாவல் (விசாரணை) (வின்.); inspection; stewardship. 2. வாய்மையாளனின் (நியாயம்) ஆளுமை (வின்.); judicial cognisance. 3. பொறுப்புமிக்க வேலை (இ.வ.); a work of great responsibiliy. 4. கொடுக்கல் வாங்கல் (வின்.); money - dealings.

த.வ.முறை உசாவல், நயன் உசாவல், நேர் கேட்பு

[Te.pārupattemu> த. பாரபத்தியம்]

பாரம்பரம் *pāramparam,* பெ.(n.) பாரம்பரியம் (யாப்.வி.பாயி.பக்.5.) பார்க்க; see *pārampariyam.*

[Skt.pāram-para> த. பாரம்பரம்]

பாரம்பரிய நியாயம் *pārampariya-niyāyam,* பெ.(n.) மரபாக (பரம்பரையாக) வரும் வழக்கம் (வின்.); rights or usages handed down from generation to generation.

த.வ.குலவழக்கம், குடும்ப மரபு

[Skt.pāramparya+nyāya> த. பாரம்பரிய நியாயம்]

பாரம்பரியம் *pārampariyam,* பெ.(n.) 1. மரபு (பரம்பரை.); series, unbroken succession, hereditary line. "பாரம்பரிய மதிமந்திரி" (இராமநா.உயுத்.1.). 2. முறைமை (சூடா.); regular order. 3. உலக முறை (ஐதிகம்) (வின்.); tradition.

த.வ.தலைமுறை, கால்மரபு, குலவழக்கம்

[Skt.pāramparya> த. பாரம்பரியம்]

பாரம்பரியரோகம் *pārampariya-rōgam,* பெ.(n.) குல (வம்சம்) வழியாய் வரும் நோய் (M.L.); hereditary disease.

த.வ.குடும்பநோய், தலைமுறை நோய்

[Skt.pāram-parya+rōga> த. பாரம்பரியரோகம்]

பாரமார்த்திகம் *pāramārttigam,* பெ.(n.) 1. முடிவில் உண்மையானது; ultimate reality. 2. மெய் அறிவிற் (ஞானத்து)குரியது; that which relates to highest truth or spiritual knowledge, opp. to viyāvakārikam.

3. ஏய்க்கும் எண்ணம் இல்லா தன்மை (இ.வ.); good faith; guilelessness. 4. ஈடுபாடு (C.G.); devotedness, loyalty.

[Skt.pāramārthika> த. பாரமார்த்திகம்]

பாரமிதை *pāramidai*, பெ.(n.) புத்தப் பதவிக் குரிய பத்து நன்னடத்தைகள் (விசேடம்); (Buddh.) the ten transcendental virtues necessary for Buddhahood. "அளப்பரும் பாரமிதை யளவின்று நிறைத்து" (மணிமே.26, 45.).

[Skt.pāram-itā> த. பாரமிதை]

பாரமேட்டி *pāramētti*, பெ.(n.) ஒரு வகைத் துறவி (சந்நியாசி); a superior order of ascetics. "சந்நியாசிரியரிற் பாரமேட்டி யோகியென விருவருளர்" (கூர்மபு.வரு.40).

[Skt.pāramēsthin> த. பாரமேட்டி]

பாரவதம் *pāravadam*, பெ.(n.) *பாராவதம்*[1]; 1. (சூடா.) பார்க்க; see *pārāvadam*[1],1.

[Skt.pāravata> த. பாராவதம்]

பாரவம் *pāravam*, பெ.(n.) வில்லின் நாண் (யாழ்.அக.); bow-string.

த.வ.வில்நரம்பு

[Skt.bhārava> த. பாரவம்]

பாரவிருதம் *pāravirudam*, பெ.(n.) 1. உதவி (உபகாரம்); help, benefit. 2. வேள்வி முதலிய வற்றில் தேவர், முன்னோர் முதலியோரை எண்ணி இடும் உணவுப்பொருள்; anything offered in sacrifice.

த.வ.கைம்மாறு, உயிர்க்காணிக்கை

பாரா[1] *pārā*, பெ.(n.) இதளியம் (பாதரசம்) (இ.வ.); mercury, quick-silver.

பாரா[2] *pārā*, பெ.(n.) 1. காவல்; watch, custody. 2. *பாராக்காரன்* பார்க்க; see *pārā-k-kāran*.

[U.pahra> த. பாரா[2]]

பாரா[3] *pārā*, பெ.(n.) கட்டானாட்டத்தில் எட்டினையும், பன்னிரண்டினையும் குறிக்குந் தாய வகை; count of 8 or 12 in the game of draught.

[U.bārā > த. பாரா[3]]

பாரா[4] *pārā*, பெ.(n.) பகுதி (இ.வ.); bit, fragment.

த.வ.துண்டு

[U.pārā> த. பாரா[4]]

பாரா[5] *pārā*, பெ.(n.) புத்தகம் முதலியவற்றிற் பிரிவு பிரிவாகக் காட்டி எழுதப்படும், கட்டுரைப் பகுதி; paragraph.

த.வ.பத்தி

[E.para> த. பாரா[5]]

பாராக்காரன் *pārā-k-kāran*, பெ.(n.) காவலாள் (உ.வ.); guard, sentry.

[U.pahra> த. பாரா+காரன்]

பாராசாரி *pārāšāri*, பெ.(n.) பெரும் உடல் கொண்ட குதிரை (வின்.); big-sized horse.

[U.bhārisawāri> த. பாராசாரி]

பாராபசலி *pārā-pašāli*, பெ.(n.) ஆங்கிலேயரிடம் கருநாடக மாநிலம் முடிவாக ஒப்புவிக்கப்பட்ட கி.பி.1801 ஆகிய 1212ஆம் பசலியாண்டு (R.T.); fasli 1212 or the year 1801 when the Carnatic country was finally ceded to the English.

[U.bārā> த. பாரா+பசலி.]

பாராவதம்[1] *pārāvadam*, பெ.(n.) 1. புறா (திவா.); dove, pigeon. 2. கரும்புறா (பிங்.); blue rock pigeon, *Columba intermedia*. 3. குரங்கு (யாழ்.அக.); monkey. 4. மலை (யாழ்.அக.); mountain.

[Skt.pārāvata> த. பாராவதம்]

பாராவதம்[2] *pārāvadam*, பெ.(n.) கருங்காலி மரம் (மூ.அ.); ebony.

பாராவபாத் *pārāvapāt*, பெ.(n.) முகமது நபி இறந்த (மரண) நாளைக் (தினம்) கொண்டாடுந் திருவிழா (W.G.); the day of Muhammad's death, observed by the Muhammadans as a religious festival.

[U.bārāh-wafāt> த. பாராவபாத்]

பாராவளையம் *pāravaḷaiyam,* பெ.(n.) வளைதடி (பிங்.); a kind of boomerang. சதங்கை மாலையைப் பாராவளையமாக எறிந்தும் (சீவக.2656, உரை).

பாரி[1] *pāri,* பெ.(n.) 1. பூந்தாது; pollen. 2. கட்பாத்திரம்; liquor jug. 3. யானை கட்டுங் கயிறு; rope for tying an elephant. 4. சிறங்கை நீர்; handful of water.

த.வ.1. மலர்த்துகள் 2. மதுகலயம் 3. கையளவு நீர்

[Skt.pāri> த. பாரி]

பாரி[2] *pāri,* பெ.(n.) கடல் (சூடா.); sea, ocean.

த.வ.முந்நீர்

[Skt.vāriša> த. பாரி]

பாரி[3] *pāri,* பெ.(n.) மனைவி; wife. "பொற்பூ மடந்தை நற்பாரி" (மாறனலங்.664).

த.வ.இல்லாள், வாழ்க்கைத்துணை

[Skt.bhāryā> த. பாரி]

பாரி[4] *pāri,* பெ.(n.) அரிமா (சிங்கம்) (யாழ்.அக.); lion.

[Skt.bhāri> த. பாரி]

பாரி[5] *pāri,* பெ.(n.) கள் (பிங்.); toddy.

த.வ.தேறல்

[Skt.vāruṇi> த. பாரி]

பாரி[6] *pāri,* பெ.(n.) 1. பருத்தது; that which is heavy or big. 2. முதன்மையானது; that which is important "பாரிவிசயம்". 3. குமுகாய செல்வாக்கு உடையவன், மதிப்பிற்குரியவன்; man of consequence, weight or importance.

[U.bhāri> த. பாரி]

பாரி[7] *pāri,* பெ.(n.) 1. கொட்டு முழக்குடன் புரியும் இராக்காவல்; night-watch with the beat of drum. "விளம்பும் பாரியு மடங்கினது" (கம்பரா.ஊர்தே.158). 2. இராக்காவலாளர் பாடல்; night - watchman's song. சங்கீதப் பாரி, பாறைப்பாரி, மணிப்பாரி (இ.வ.).

த.வ.இராப்பாடகன், இராப்பாடி

[U.pahra> த. பாரி]

பாரிகத்து *pārikattu,* பெ.(n.) நுண்மை (இ.வ.); minuteness.

[U.farāqat> த. பாரிகத்து]

பாரிகன் *pārigaṉ,* பெ.(n.) தோட்சுமைக்காரன். (யாழ்.அக.); carrier, porter.

த.வ.சுமைதூக்கி

[Skt.bhārika> த. பாரிகன்]

பாரிகாரிகன் *pāri-kārigaṉ,* பெ.(n.) மாலை தொடுப்போன் (யாழ்.அக.); one who makes garlands.

[Skt.pāri-hārika> த. பாரிகாரிகன்]

பாரிகாரியம் *pāri-kariyam,* பெ.(n.) முதன்மை யான பணி (யாழ்.அக.); important business.

[U.bhāri> த. பாரி+காரியம்]

பாரிசச்சூலை *pāriša-c-cūlai,* பெ.(n.) பக்க ஊதை (இராசவைத்.160.); paralytic attack on one side of the body.

த.வ.கை கால் விழுதல்

[Skt.pāršva+šūlā> த. பாரிசச்சூலை]

பாரிசஞ்செய்-தல் *pārišañjey-,* 1 செ.குன்றாவி. (v.t.) பொறுப்பாக்குதல்; to entrust. "திருவாவடுதுறை மடத்துப் பாரிசஞ் செய்திருப்பதால்" (T.A.S.i,150).

[Skt.pāršva> த. பாரிசம்+செய்-தல்]

பாரிசம் *pārišam,* பெ.(n.) 1. பக்கம்; side. "காவிரிக்கு வடபாரிசத்தில்" (திருப்பு.183). 2. உடலின் ஒரு பக்கம்; side of a body. "இரு பாரிசத்திலும் பணிசெயுந் தொழிலாளர் போல்" (தாயு.சித்தர்கணம்.2). 3. வயம் (உ.வ.); care, custody. 4. திசை (வின்.); quarter, region.

[Skt.pāršva> த. பாரிசம்]

பாரிசம்விழு-தல் *pārišam-viḻu,* 3 செ.கு.வி. (v.i.) 1. பக்க வலிப்பு (பக்கவாதம்) அடைதல்;

to become paralised. 2. சாதல் (மரித்தல்); to die, said of a benefactor.

[Skt. pāršva> த. பாரிசம்+விழு-தல்]

பாரிசவாதம் *pāriša-vādam,* பெ.(n.) 1. உடலின் ஒரு பக்கத்தை உணர்ச்சியறச் செய்யும் நோய் வகை (பைஷஜ.302); paralytic attack on one side of the body, Hemiplegia. 2. குடலிறக்கம் (இ.வ.); hernia.

த.வ.கை கால் விழுதல், பக்கவலிப்பு

[Skt. pāršva+vāta> த. பாரிசவாதம்]

பாரிசவாயு *pāriša-vāyu,* பெ.(n.) **பாரிசவாதம்** பார்க்க (உ.வ.); see *pāriša-vādam.*

[Skt. pāršva+vāyu> த. பாரிசவாயு]

பாரிசாதம் *pārišādam,* பெ.(n.) ஐவகை (பஞ்ச) மரங் (தரு)களுள் ஒன்று; a tree of svarga, one of pañja-taru. "பாரிசாத நேர்பூக்கவி ணிமிர்புயம்" (இரகு.திருவவ.9). 2. முண்முருக்கு (மலை.); night - flowering jasmine. 3. பவள மல்லிகை மர வகை (மலை.); Indian coral tree.

[Skt. pārijāta> த. பாரிசாதம்]

பாரிசு *pārišu,* பெ.(n.) மழை (R.T.); rain.

[U. bariṣ> த. பாரிசு]

பாரிசுபட்டி *pārišu-paṭṭi,* பெ.(n.) மழை பெய்த அளவைக்குறிக்கும் கணக்கு; account of rainfall.

[பாரிசு+பட்டி]

பாரிசேடப்பிரமாணம் *pārišēḍa-p-piramāṇam,* பெ.(n.) எஞ்சுவதைக் கொள்ளுகை ஆகிய ஆணை (பிரமாணம்) (சி.போ.பா.110,புதுப்); (Log.) law of elimination.

[Skt. pārišēṣa+pra-māna> த. பாரிசேடப் பிரமாணம்]

பாரிசேடம் *pārišēḍam,* பெ.(n.) *பாரிசேடப் பிரமாணம்* பார்க்க; see *pārišēḍa-p-piramāṇam.* "பாரிசேட மதனிற் பரனுக்கு" (ஞானா.5.).

[Skt. pārišēṣa> த. பாரிசேடம்]

பாரியாத்திரம் *pāriyāttiram,* பெ.(n.) 449 கோபுரங்களையும் (சிகரம்) 57 மேனிலைக் கட்டுகளையுமுடைய கோயில் (சுக்கிரநீதி, 230); temple having 449 towers and 57 storeys.

[Skt. pāri-yātra> த. பாரியாத்திரம்]

பாரியாள்[1] *pāri-y-āḷ,* பெ.(n.) பெருத்தவன் (வின்.); stout, robust man.

த.வ.எருத்தன், கொழுத்தவன்

[U. bhāri> த. பாரி+ஆள்]

பாரியாள்[2] *pāriyāḷ,* பெ.(n.) *பாரியை* பார்க்க; see *pāriyai.*

த.வ. அகமுடையாள், வாழ்வரசி

[Skt. bhārya> த. பாரி+ஆள்]

பாரியை *pāriyai,* பெ.(n.) மனைவி; wife.

த.வ. இல்லாள், வாழ்க்கைத்துணை, மனையாள், அகமுடையாள்

[Skt. bhāryā> த. பாரியை]

பாரிகத்து *pārikattu,* பெ.(n.) 1. விடுதலை ஆவணம் (பத்திரம்) (வின்.); release deed. 2. பிரிவினை; partition, division 3. பிரிவினை ஆவணம் (பத்திரம்); partition deed.

[U. farighkhatti> த. பாரிகத்து]

பாலக்கண்ணாடி *bāla-k-kaṇṇāḍi,* பெ.(n.) சிறுவர்க்கு அமைந்த மூக்குக் கண்ணாடி (வின்.); spectacles adapted to young eyes.

[Skt. bāla > த. பாலன்+ கண்ணாடி > பாலக் கண்ணாடி]

பாலக்கிரகாரிட்டம் *bāla-k-kirakāriṭṭam,* பெ.(n.) 1. கோள்களின் தீய பார்வையால் குழந்தைகட்கு உண்டாகும் பீடை (சீவக.306, உரை.); frequent sickness of children believed to be due to the malign influence of planets. 2. குழந்தைகளுக்கு உண்டாகும் வயிற்றுப்போக்கு (இ.வ.); inflammatory diarrhoea of infants.

த.வ.கோள் குற்றக் கழிச்சல்

[Skt.bāla+graha+āṛsa> த. பாலக்கிரகாரிட்டம்]

பாலக்கிராணி *bāla-k-kirāṇi,* பெ.(n.) நோய் வகை (இராசவைத்.159); a kind of disease.

[Skt.pāla-k-grahaṇi> த. பாலக்கிராணி]

பாலகரை *bāla-karai,* பெ.(n.) குழந்தையிசிவு (M.L.); infantile convulsions.

த.வ.குழந்தை இழுப்பு

[Skt.bāla+hara> த. பாலகரை]

பாலகன்[1] *bālagaṉ,* பெ.(n.) காப்போன் (வின்.); protector, guardian.

[Skt.bālaka> த. பாலகன்[1]]

பாலகன்[2] *bālagaṉ,* பெ.(n.) 1. குழந்தை; infant. "பாலகனென்று பரிபவஞ் செய்யேல்" (திவ். பெரியாழ்.1,5,7). 2. புதல்வன் (புத்திரன்); son. "இந்தப் பாலக னிறந்தானென்னா" (அரிச். பு.மயான.8).

[Skt.bālaka> த. பாலகன்[2]]

பாலசிட்சை *bāla-šiṭšai,* பெ.(n.) 1. குழந்தை களுக்குக் கற்பித்தல் (உ.வ.); teaching of children. 2. சிறுவர்களுக்கான (தொடக்கப் பாடப்) புத்தகம்; a primer for infants.

[Skt.bāla+šikṣā> த. பாலசிட்சை]

பாலம்[1] *bālam,* பெ.(n.) நெற்றி (பிங்.); forehead. "தீவிழிப் பாலமும்" (விநாயகபு.11,11).

த.வ.நுதல்

[Skt.bhāla> த. பாலம்]

பாலம்[2] *bālam,* பெ.(n.) மழு (திவா.); a weapon.

த.வ.கோடரி

[Skt.bhiṇḍi-pāla> த. பாலம்]

பாலமை *bālamai,* பெ.(n.) அறியாமை; childish innocence. "பாலமை யுடையராகிப் படருறப் படுவதென்னே"(உபதேசகா.சிவபுண்ணிய.339).

த.வ.சிறுபிள்ளைத்தனம், வெகுளித்தனம்

[Skt.bāla> த. பாலமை]

பாலலீலை *bāla-līlai,* பெ.(n.) 1. குழந்தை விளையாட்டு; play of children. 2. இளைஞரின் இன்ப விளையாட்டு; youthful sport. "பொய்யொன்றுண் மெய்யிற் புகும்பால லீலைதனை" (அருட்பா, i, நெஞ்சறி.533).

[Skt.bāla+līlā> த. பாலலீலை]

பாலலோசனன் *bāla-lōšaṉaṉ,* பெ.(n.) நெற்றிக்கண்ணுடைய சிவன்; Śiva, having an eye on His forehead. "பாலலோசனற் கெனத் திருவிழாவுறப் பணிப்பார்" (உபதேசகா. சிவபுண்ணி.5).

த.வ.நெற்றிக்கண்ணோன், முக்கண்ணன்

[Skt.bāla+lōcana> த. பாலலோசனன்]

பாலவிலோசனன் *pāla-vilōšaṉaṉ,* பெ.(n.) பாலலோசனன் பார்க்க; see pāla-lōšaṉaṉ. "பால விலோசனர் பாதம்" (உபதேசகா. சிவநாம்.133).

[Skt. bhālā +vilōcana> த. பால விலோசனன்]

பாலன்[1] *bhālaṉ,* பெ.(n.) பாலகன்[2] பார்க்க; see bālagaṉ[2]. "பாலனாய் விருத்தனாகி" (தேவா.8,10).

[Skt.bāla> த. பாலன்[1]]

பாலன்[2] *bālaṉ,* பெ.(n.) காப்போன்; protector, guardian, used in compounds. "பூபாலன், கோபாலன்".

த.வ. பேணுபவன்

[Skt.pāla> த. பாலன்[2]]

பாலனம் *bālaṉam,* பெ.(n.) பாதுகாப்பு; protection, defence. "என் பாலனத்துக்குன் பாலனம் வேண்டுங்காண்" (தனிப்பா.i, 344,61).

[Skt.pālana> த. பாலனம்]

பாலனைக்காத்தான் *bālaṉai-k-kāttaṉ,* பெ.(n.) மணத்தக்காளி (மூ.அ.) (பதார்த்த.690); black nightshade.

[Skt.bāla> த. பாலன்+ஐ+காத்தான்]

பாலாசிரியன் *bālāśiriyan,* பெ.(n.) சிறுவர்க்குக் (பாலர்) கற்பிக்கும் ஆசிரியன்; teacher of children. "மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார்" (அகநா.92). (S.I.I.iii,154,26).

[Skt. bāla> த. பாலன்+ஆசிரியன்]

பாலாலயம் *bālālayam,* பெ.(n.) கருவறையைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்குங் காலத்தில் சிறிது காலம் கடவுளை வேறிடத்தில் எழுந்தருளச் செய்திருக்குஞ் சிறிய ஆலயம்; temporary structure to accommodate a deity when its inner shrine is under repair.

த.வ.மாற்றுஆலயம், பிள்ளைக்கோயில்

[Skt. bālālaya> த. பாலாலயம்]

பாலிசம் *bāliśam,* பெ.(n.) அறியாமை (ஈடு, 6.2:6, ஜீ); ignorance.

த.வ. மடமை

[Skt. bāliśa> த. பாலிசம்]

பாலிசன் *bāliśan,* பெ.(n.) மூடன் (ஈடு, 6,2,6, ஜீ); ignorant person.

த.வ. முட்டாள், மடையன், அறிவிலி

[Skt. bāliśa> த. பாலிசன்]

பாலியம் *bāliyam,* பெ.(n.) 1. இளமை; youth. 2. குழந்தைப் பருவம்; childhood.

த.வ. 1. விடலை, 2. மழலைப்பருவம்

[Skt. bālya> த. பாலியம்]

பாலியன் *bāliyan,* பெ.(n.) 1. இளைஞன்; lad, boy, youth. 2. ஆண் குழந்தை (வின்.) male infant.

த.வ. விடலை

[Skt. bālya> த. பாலியன்]

பாலை *pālai,* பெ.(n.) 1. பெண்; girl. 2. குழந்தை (வின்.); child. 3. பதினாறாண்டுக்குட்பட்ட பெண்; a young woman under 16 years of age. 4. ஒன்று முதல் பதினாறு ஆண்டு வரையுள்ள மகளிர் பருவம் (கொக்கோ.4,2,); the period up to the 16th year in the life of a woman, one of mūnru-paruvam. 5. சிவசத்தி; Siva-sakti.

த.வ.1. மகளிர், 2. மடந்தை

[Skt. bāla> த. பாலை]

பாவகம்[1] *pāvagam,* பெ.(n.) 1. கருத்து; meaning, purpose, intention. "பாவக மின்னதென்று தெரிகிலர்" (கம்பரா.கும்ப.9). 2. ஊழ்கம்; contemplation, meditation. "பாவகமாயிருந்து" (திருப்பு.608). 3. இயல்பு (வின்.); natural state, innate propensity or disposition, nature. 4. உருவம்; appearance, form. "வேடனாம் பாவகங் கொடு நின்றது" (தேவா.533,1). 5. காதலை வெளியிடும் குறிப்பு (வின்.); external expression of amatory feelings. 6. நடிப்பு; pretence. "பாவகம் பலவுஞ் செய்து" (பெரியபு.திருநீலகண்ட.26).

[Skt. bhāvaka> த. பாவகம்]

பாவகம்[2] *pāvagam,* பெ.(n.) 1. தீ; fire. "பாவகப் பகுவாய் நாகம் (திருவாலவா.36,5). 2. சேங்கொட்டை (யாழ்.அக.); marking nut.

[Skt. pāvaka> த. பாவகம்]

பாவகாரி *pāva-kāri,* பெ.(n.) கரிசு (பாவம்) செய்தவன்; sinner. "பாவகாரிகள் பார்ப்பரிதென்பரால் தேவதேவன் சிவன் பெருந்தன்மையே (தேவா.1218,5).

[Skt. pāpa-kārin > த. பாவகாரி]

பாவச்சடம் *pāva-c-cadam,* பெ.(n.) பழவினைக்கீடாக எடுத்த உடல் (வின்.); bodies assumed by a soul as the effect of its former deeds.

த.வ.முன்வினை பிறப்பு

[Skt. pāpa+jada> த. பாவச்சடம்]

பாவச்சுமை *pāva-c-cumai,* பெ.(n.) துய்த்துக் கழித்தற்குரிய அறங்கடை (வின்.); burden of sin, accumulated evil, to be expiated by suffering.

த.வ. கழுவாய்த் துன்பம்

[Skt. pāpa> த. பாவம்+சுமை]

பாவசங்கீர்த்தனம் *pāva-šaṅgīrttaṉam,* பெ.(n.) தன் அறங்கடைகளைக் குருவிடத்தில் சொல்லுகை (கிறித்து.) (வின்.); confession of sin.

த.வ.குற்றம் ஒப்புவித்தல்

[Skt.pāpa+saṅ-kīrtana> த. பாவசங்கீர்த்தனம்]

பாவசன்மம் *pāvašaṉmam,* பெ.(n.) அறங்கடையுள்ள பிறவி (வின்.); sinful birth.

த.வ.முன்வினை பிறப்பு

[Skt.pāpa+janman> த. பாவசன்மம்]

பாவசுத்தி[1] *pāva-šutti,* பெ.(n.) அறங்கடை நீங்குகை; removal of sin.

த.வ.குற்ற நீக்கம்

[Skt.pāpa+šuddhi> த. பாவசுத்தி]

பாவசுத்தி[2] *pāva-šutti,* பெ.(n.) மனத்தூய்மை (கோயிலொ.44); purity of heart.

த.வ.தூய உள்ளம்

[Skt.bhāva+šuddhi> த. பாவசுத்தி]

பாவசேடம் *pāvašēḍam,* பெ.(n.) 1. தூய்மை யான (பரிசுத்தம்) ஆடவனிடத்து (புருசன்) எஞ்சியிருக்குந் தீவினை; remains of sin attaching to holy persons. 2. துய்த்துக் கழிக்க வேண்டிய கரும பலன்; demerit of soul remaining at the close of a term of existence to be exhausted in future births.

[Skt.pāpa+šēṣa> த. பாவசேடம்]

பாவதி *pāvadi,* பெ.(n.) பற்றுச்சீட்டு (ரசீது) (C.G.); receipt for money paid, acknowledgment.

[U.pāoti> த. பாவதி]

பாவநாசம் *pāva-nāšam,* பெ.(n.) 1. அறங் கடையை நீக்குகை; removal of sin, absolution. "பாவநாச மாக்கிய பரிசும்" (திருவாச.2,57). 2. அறங்கடை (பாவம்) போக்கும் இடம் அல்லது நீர் (தீர்த்தம்) (சேதுபு.பாவ.9.); sacred place or water which removes or absolves from sin.

[Skt.pāpa+nāša> த. பாவநாசம்]

பாவப்படு-தல் *pāva-p-paḍu-,* 20 செ.கு.வி. (v.i.) இரக்கம் காட்டுதல்; take pity on; sympathize. அவனுக்குப் பாவப்பட்டு உதவி செய்தேன் (உ.வ.). புயலில் பெற்றோரைப் பறி கொடுத்த பாவப்பட்ட குழந்தைகள். (உ.வ.).

த.வ.கரிசனம் காட்டுதல், அருள்கொள்ளல்

[Skt.pāpa> த. பாவம்+படு-தல்]

பாவப்பிரகாசம் *pāva-p-piragāšam,* பெ.(n.) ஒரு வடமொழி ஆயுள்வேத நூல்; a Sanskrit Āyurvēdic book (சா.அக.).

[Skt.pāpa+pra-kāša> த. பாவப்பிரகாசம்]

பாவபரிகாரம் *pāva-parikāram,* பெ.(n.) கழுவாய் (பிராயச்சித்தம்); expiation of sin.

[Skt.pāpa+pari-hāra> த. பாவபரிகாரம்]

பாவபாணம் *pāva-bāṇam,* பெ.(n.) இச்சையைத் தூண்டி, மனதை மெய் மறக்கச் செய்யும், காமனின் வில்லிலிருந்து வரும் அம்புகள் (சீவக.706, உரை); excited state of mind, considered as Cupid's arrows inducing sexual love, dist.fr.tiraviya pāṇam.

த.வ.காதல் அம்பு

[Skt.bhāva+bāṇa> த. பாவபாணம்]

பாவபுண்ணியம் *pāva-puṇṇiyam,* பெ.(n.) நல்வினை தீவினைகள்; demerits and merits.

த.வ.நன்மை தீமைகள்

[Skt.pāpa+puṇya> த. பாவபுண்ணியம்]

பாவம்[1] *pāvam,* பெ.(n.) 1. தீவினைப் பயன்; accumulated result of sinful actions. "பகைபாவ மச்சம் பழி" (குறள்,146). 2. தீச் செயல் (சூடா.); sinful act, crime. 3. அளறு (பிங்.); hell.

த.வ. 1. அறங்கடைத்துன்பம் 2. குற்றச் செயல் 3. நிரயம்

[Skt.pāpa> த. பாவம்]

பாவம்[2] *pāvam,* இடை (int.) இரக்கக்குறிப்பு; an exclamation of pity. அவள் மிக ஏழை. பாவம்.

[Skt.pāpa> த. பாவம்]

பாவம்[3] *pāvam,* பெ.(n.) 1. ஊழ்கம் (தியானம்) (சூடா.); contemplation, meditations. 2. எண்ணம் (யாழ்.அக.); idea, opinion, conception. 3. உளதாந்தன்மை (பிரபஞ்சவி. 156); state or condition of existence. 4. உணர்வு மெய்ப்பாட்டு நளிநயம் (அபிநயம்); (Nāṭya.) gesture expressive of emotions. "பாவமோடராகம்" (திருவிளை. கான்மா.8). 5. முறைமை (பிங்.); established order 6. விளையாட்டு (இலக்.அக.); sport.

த.வ.1. உள்ளொடுக்கம் 2. கருத்து 3. இருக்கும் நிலை 4. நடனக் குறிப்புச் செய்கை 5. நிலையான முறை

[Skt.bhāva> த. பாவம்[3]]

பாவம்[4] *pāvam,* பெ.(n.) மனம், மெய், வாக்கு இவற்றின் நடவடிக்கைகளால் ஏற்படும் ஆதனின் நிலை (நீலகேசி,427,உரை.); (Jaina) the change in the soul, due to the activities of the mind, body and speech.

[Skt.bhāva> த. பாவம்]

பாவம்பழி · *pāvam-paḻi,* பெ.(n.) கொடுந் தீச்செயல்; heinous sin.

த.வ.கொடுங்குற்றம்

[Skt.pāpa> த. பாவம்+பழி]

பாவமன்னிப்பு *pāva-maṉṉippu,* பெ.(n.) அறங்கடையைப் (பாவம்) பொறுத்து மன்னித்தல் (கிறித்து.); forgiveness of sins.

த.வ.குற்ற மன்னிப்பு

[Skt.pāpa> த. பாவம்+மன்னிப்பு]

பாவமூர்க்கத்தனம் *pāva-mūrkka-t-taṉam,* பெ.(n.) தான் செய்த அறங்கடைக்கு (பாவம்) இரங்காமை (கிறித்து.); impenitence.

[Skt. bhāva+mūrkha+tva > த. பாவ மூர்க்கத்தனம்]

பாவர் *pāvar,* பெ.(n.) தீவினையாளர்; sinners. "பாவர் சென்றல்கு நரகம்" (திருக்கோ.337).

த.வ.அறங்கடையாளர்

[Skt.pāpa> த. பாவர்]

பாவரசம் *pāva-rasam,* பெ.(n.) 1. கருத்து நயம்; beauty of an idea. 2. மெய்ப்பாட்டுச் சுவை (பணவிடு.187); (Nāṭya) aesthetic excellence of gestures.

[Skt.bhāva+rasa> த. பாவரசம்]

பாவலா *pāvalā,* பெ.(n.) சுற்றித்திரிகை (இ.வ.); loitering.

த.வ.சோம்பித்திரிகை

[U.āwāra> த. பாவலா]

பாவனசம் *pāvaṉasam,* பெ.(n.) உள்ளிழுத்த மூச்சை வயிற்றில் நிறுத்தும் மூச்சுப் பயிற்சிக்கலை (பிராணாயாம வகை); suppresion of breath retention of vital air which is breathed in. (சா.அக)

பாவனத்துவனி *pāvaṉa-t-tuvaṉi,* பெ.(n.) சங்கு (சிந்தாமணி நிகண்டு, 102); conch.

[Skt.pāvana-dhvani> த. பாவனத்துவனி]

பாவனன் *pāvaṉaṉ,* பெ.(n.) 1. தூய்மை செய்பவன்; one who purifies. 2. ஆஞ்சநேயர்; Hanumāṉ, the son of Wind-God. 3. வீமன் (பாரத.பத்தாம்.142); Bhīma the son of Wind God.

[Skt.pāvana> த. பாவனன்]

பாவனாதீதம் *bāvaṉātīdam,* பெ.(n.) எண்ணுதற்கரியது; that which transcends thought.

த.வ.கருதத்தக்கது

[Skt.bhāvanā+atīta> த. பாவனாதீதம்]

பாவனை *pāvaṉai,* பெ.(n.) 1. நினைப்பு (மணிமே,30:258); imagination, fancy. 2. தெளிகை (நன்.விருத்.பாயிரவுரை); clear understanding. 3. உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, உண்மையறிவு எனும் ஐவகை மன

வெளிப்பாடுகளுள் ஒன்று (மணிமே.30:189); (Buddh.) a kind of mental effort or reflecton, one of pañja-kandam. 4. ஊழ்கம் (தியானம்); religious meditation. "எம்பாவனை தீர்த்த" (திருநூற்.88). 5. ஊழ்கிக்கப்படுவது (தியானம்) (வின்.); subject of contemplation. 6. ஒப்பு; likeness, similitude. பிள்ளை பாவனையாகச் செய்தான். 7. அடையாளம் (வின்.); repr - sentation, symbol. 8. போலி (வின்.); dissimulation, 9. நடத்தை; manners, deportment, carriage. வடிவழகும் பாவனையும் (இ.வ.). 10. நூற்றெட்டு துணை மறைமங்களுள் (உபநிடதம்) ஒன்று; an Upaniṣad,one of 108.

[Skt.bhāvanā> த. பாவனை]

பாவனைக்கு நட-த்தல் *pāvaṉaikku-naḍa-,* 3 செ.கு.வி.(v.i.) நடிப்புக் காட்டுதல் (யாழ்ப்.); to keep up appearances.

[Skt. bhāvanā > த. பாவனை+க்கு+ நட+த்தல்]

பாவனைகாட்டு-தல் *pāvaṉai-kāttu-,* 5 செ.குன்றாவி. (v.t.) 1. போலச் செய்தல்; imitate. 2. மெய்ப்பாடு, நயநெளிவு காட்டுதல் (அபிநயம்); (Nāṭya) to express by gesturess in dancing or acting. 3. மாற்றுரு கொள்ளுதல்; to assume an appearance, to counterfeit, dissemble. 4. வரைந்து காட்டுதல்; to show by figures or diagrams, to portray.

[Skt.bhāvanā> த. பாவனை+காட்டு-தல்]

பாவாபாவம் *pāvāpāvam,* பெ.(n.) உண்மையும் இன்மையும்; existence and non-existence.

த.வ.உளவும் இலவும்

[Skt.bhāvā-bhāva> த. பாவாபாவம்]

பாவி¹-த்தல் *pāvi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. எண்ணுதல்; to think, conceive. 2. ஆழ்ந்து எண்ணுதல்; to contemplate, meditate. "பாவியேனுன்னையல்லால்" (திவ்.திருமாலை,35). 3. அழகுறு ஒப்பனை செய்தல்; to imagine fancy. "தானுமதுவாகப் பாவித்து" (வாக்குண்.14).

த.வ.1. கருதுதல் 2. உள்ளொடுக்கம் 3. மினுக்குதல்

[Skt.bhāvi> த. பாவி-த்தல்]

பாவி² *pāvi,* பெ.(n.) தீமையாளன்; sinner. "அழுக்கா றெனவொரு பாவி" (குறள், 168).

த.வ. கொடுமைக்காரன்

[Skt.pāpin> த. பாவி²]

பாவி³ *pāvi,* பெ.(n.) வரக்கூடியது; that which must happen. "பாவியை வெல்லும் பரிசில்லை" (திருக்கோ.349).

த.வ.எதிர் வரல்

[Skt.bhāvin> த. பாவி³]

பாவி⁴ *pāvi,* பெ.(n.) 1. கெடுதல் செய்யாதவன், அமைதியானவன்; inoffensive, harmless, good- natured person. 2. பேதை; person of weak intellect.

த.வ. கள்ளமிலாதவன்

பாவிகம் *pāvigam,* பெ.(n.) தொடக்கம் முதல் முடிவு வரை அழகுடையதாக அமையும் பாவியப் (காவியம்) பண்பு (தண்டி.89); (Rhet.) the basic idea running through a poem.

த.வ.பாவிய நடை

[Skt.bhāvika> த. பாவிகம்]

பாவிட்டன் *pāviṭṭaṉ,* பெ.(n.) கொடுந்தீமை செய்தவன்; sinful man. "பாவிட்டன் மேலோர் கோபம் பணித்திலா மணத்தினார்" (மேருமந். 745).

[Skt.pāpiṣtha> த. பாபிட்டன்]

பாவேப்பிரயோகம் *pāvē-p-pirayōgam,* பெ.(n.) "மக்களாற் (சனம்) இன்பப்படுதல் என்பது போன்ற வடமொழி வினைவழக்கு (பி.வி.36,உரை.); impersonal voice in sanskrit, as janēna gamyatē.

[Skt.bhāvē-prayōga>த. பாவேப்பிரயோகம்]

பாற்கரன் *pāṟkaraṉ,* பெ.(n.) ஞாயிறு; sun.

த.வ.எரிகதிர்

[Skt.bhās-kara> த. பாற்கரன்]

பாற்கரியம் *pāṟkariyam,* பெ.(n.) முழுமுதற் பொருளில் இருந்து உலகம் தோன்றிற்று என்னும் மதம் (சி.சி.பர.பாற்கரி.1,உரை.); the

doctrine which holds that the world is evolved from the supreme being.

[Skt. Bhāskariya> த. பாற்கரியம்]

பாற்குனம் *pāṟkuṉam,* பெ.(n.) மீனம் (பங்குனி); the month of the Tamil year, March-April.

[Skt. phalguna> த. பாற்குனம்]

பாற்குனி *pāṟkuṉi,* பெ.(n.) 1. பன்னிரண்டாம் விண்மீனாகிய மானேறு (சூடா.); the 12th nakṣatra. 2. பாற்குனம், 1. (யாழ்.அக.) பார்க்க; see pāṟkuṉam, 1.

[Skt. bhalguni> த. பாற்குனி]

பானகம் *pāṉagam,* பெ.(n.) 1. சர்க்கரை ஏலம் முதலியன கலந்த குடிநீர்; sweet drink, especially prepared with jaggery and spices. "முப்பழம் பானகம்" (சேதுபு.சேதுபல. 137). 2. நீர்மோர் (யாழ்.அக.); a preparation of butter - milk. 3. பருகும் குடிப்பு, அருந்துதல் (பிங்.); drinking.

த.வ. பருகம்

[Skt. panaka> த. பானகம்]

பானம் *pāṉam,* பெ.(n.) 1. குடிக்கை; drinking சலபானங்கூட இல்லை. 2. அருளொடு செய்யும் செயல்கள் பதினான்கனுள் குடித்தற்கு நீரளிக்கை (நீர்க்கத் தண்டனம்); giving drinking water, one of 14 tayā-virutt. 3. மது அல்லது புளித்த பிற நீரகங்கள்; toddy or other fermented liquor. "பானந்தனையொத்து" (அரிச். பு.நாட்.4). 4. பருகுமுணவு (பிங்.); luquid food.

த.வ. பானம்

[Skt. pāna> த. பானம்]

பானீயம் *pāṉiyam,* பெ.(n.) 1. நீர் (பிங்.); water. "பானீயத்துக் கைவரு மெய்பதையா நிற்பர்" (பாரத.நச்சுப்.21). 2. பருகுமுணவு; drink. "பானீய நிவேதனம்" (திருவிளை. இந்திரன் முடி. 16).

த.வ.அருந்துணவு

[Skt. pāniya> த. பானீயம்]

பானு *pāṉu,* பெ.(n.) 1. கதிரவன் (பிங்.); Sun. 2. ஒளி (பிங்.); brightness 3. அழகு (யாழ்.அக.); beauty. 4. சிற்ப நூல் வகை (இருசமய. சிற்பசாத்.2); a treatise on architecture. 5. தலைவன் (யாழ்.அக.); master 6. அரசன் (யாழ்.அக.); king.

த.வ. எரியோன்

[Skt. bhānu> த. பானு]

பானுகம்பன் *pāṉu-kambaṉ,* பெ.(n.) சிவனிய கூட்டத்தாருள் ஒருவன் (கோயிற்பு.நடராச.6.); a member of Siva's hosts.

[Skt. Bhānu-kampa> த. பானுகம்பன்]

பானுகோபன் *pāṉu-gōbaṉ,* பெ.(n.) சூரபதுமன் மகன் (கந்தபு.புதல்வ.15.); an Asura, son of Sūrapadmaṉ.

[Skt. Bhānu-kōpa> த. பானுகோபன்]

பானுவாரம் *pāṉu-vāram,* பெ.(n.) ஞாயிற்றுக் கிழமை; Sunday.

[Skt. bhānu+vāra> த. பானுவாரம்]

பிக்கலம் *pikkalam,* பெ.(n.) இன்னாரால் எழுதப்பட்டது என்று பொருள்படுவதும் ஆவணம் எழுதினோன் கையெழுத்துக்கு முன் வரையப்படுவதுமான சொல்; term signifying 'written by' and prefixed to the signature of the writer of a document.

[U. baqalami> த. பிக்கலம்]

பிக்காசு *pikkāsu,* பெ.(n.) குந்தாலி; pick-axe.

த.வ.கொத்துகுறடு

[E. pick-axe> த. பிக்காசு]



பிக்காரி *pikkāri,* பெ.(n.) வறியவன்; poor, miserable, wretched fellow. "பெரிய குடி பெயர்ந்து பிக்காரி யானேனே" (ஆதியூரவதானி,9).

த.வ.ஏழை, ஏதிலி

[U. bhikāri > த. பிக்காரி]

பிங்கலிகை *pingalikai,* பெ.(n.) ஒன்பான் செல்வங்களுள் ஒன்று (சீவசம். Ms); one of the nine treasures.

[Skt. pingalikā > த. பிங்கலிகை]

பிங்கலை *pingalai,* பெ.(n.) 1. பத்து வகை நாடித் துடிப்புகளுள் ஒன்று (சிலப்.3,26.உரை); a principal tubular vessel of the human body. 2. வலது மூக்கு வழியாக வரும் மூச்சு (யாழ்.அக.); breath through the right nostril. 3. ஆந்தை வகை (சூடா.); a kind of owl. 4. எண் திசைகளுள் தென்றிசையிலுள்ள பெண் யானை: the female elephant mate of Vāmaṉam guarding the Southern directions. 5. மலைமகள்; Parvathi.

[Skt. pingala > த. பிங்கலை]

பிங்கான் *pingāṉ,* பெ.(n.) உணவு உண்பதற்கு உரிய தட்டு; plate. அலுமினியப் பிங்கான்/ பிங்கானில் சாப்பாடு வை!.

[Persn. pingān > த. பீங்கான் >பிங்கான்]

பிங்கி *pingi,* பெ.(n.) ஒரு முனிவன்; a sage. "தண்டி குண்டோதரன் பிங்கிருடி" (தேவா. 1225,7.).

[Skt. bhṛngin > த. பிங்கி]

பிச்சடம் *piccaḍam,* பெ.(n.) 1. ஈயம்; lead. 2. துத்தநாகம்; zinc. 3. ஒரு வகைக் கண்ணோய்; an eye disease. (சா.அக.)

பிச்சல் *piccal,* பெ.(n.) கப்பலின் பின்னணியம் (M.Navi); back-part of a ship.

[Skt. piccha > த. பிச்சல்]

பிச்சாணா *piccāṇā,* பெ.(n.) படுக்கை (உ.வ.); bed.

[U. bichānā > த. பிச்சாணா]

பிச்சுவா *piccuvā,* பெ.(n.) 1. கையீட்டி (வின்.); dagger. 2. நுனியிற் கூருடைய கத்தி (உ.வ.); a kind of knife.

த.வ. குத்தீட்டி

[U. bichwā > த. பிச்சுவா]



பிசாத்து *pisāttu,* பெ.(n.) சிறுமை, இழிவு, நொய்மம்; trifle. அதென்ன பிசாத்து (C.G.).

[U. bisāt > த. பிசாத்து]

பிசாகாரம் *pisākaram,* பெ.(n.) பிச்சையுணவு (வின்.); alms.

[Skt. bhikṣā+āhāra > த. பிசாகாரம்]

பிசுக்கோத்து *pisukkōttu,* பெ.(n.) கோதுமை முதலியவற்றின் மாவிற் செய்த ஈரட்டி (இக்.வ.); a kind of biscuit.

த.வ. ஈரட்டி

[E. biscuit > த. பிசுக்கோத்து]

பிஞ்சரம்[1] *piñjaram,* பெ.(n.) பூச்சுப் பொன்துகள் (அரிதாரம்); yellow orpiment. (சா.அக.)

[Skt. piñjara > த. பிஞ்சரம்]

பிஞ்சரம்[2] *piñjaram,* பெ.(n.) தருப்பை; sacrificial grass.

[Skt. piñjala > த. பிஞ்சலம்>பிஞ்சரம்]

பிஞ்சரம்[3] *piñjaram,* பெ.(n.) நெஞ்சறை; thorax (சா.அக.).

பிஞ்சானம் *piñjāṉam,* பெ.(n.) பொன்; gold. (சா.அக.)

[Skt. piñjara > த. பிஞ்சரம் >பிஞ்சானம்]

பிட்டன் *pittan,* பெ.(n.) 1. மதத்துக்குப் புறம்பானவன்; excommunicated person, heretic. "பிட்டர்தம் மறவுரை" (தேவா.266,10). 2. புழுக்கொல்லிப்பூடு (மலை.); worm-killer.

த.வ.நம்பாமதத்தோன்

[Skt. bhrasta > த. பிட்டன்]

பிதிருபந்து *pidiru-bandu,* பெ.(n.) தந்தை வழி நெருங்கிய உறவு; close relative of the father.

[Skt. pitr+bandhu > த. பிதிருபந்து]

பிதிவி *pidivi,* பெ.(n.) ஊழியன் (C.G.); slave, servant, used in official correspondence.

த.வ. பணியாள்

[U. fidwi > த. பிதிவி]

பிதூரி *pidūri,* பெ.(n.) சூழ்ச்சி (C.G.); intrigue, plot, conspiracy.

த.வ. ஏய்ப்பு

[U. fitūri > த. பிதூரி]

பிந்து *pindu,* பெ.(n.) 1. துளி; drop of water. 2. விந்து; semen. 3. ஆற்றல் மெய்ம்மை (சி.சி.2,50,சிவாக்.); sakti the embodiment of energy. 4. புள்ளி (வின்.); dot over a letter, speck, spot, mark.

த.வ. உயிரணு

[Skt. bindu > த. பிந்து]

பிந்துசாரம் *pindu-šāram,* பெ.(n.) நஞ்சு மருத்துவத் தொடர்பான வடமொழி நூல்; a Sanskrit treatise regarding poisons (சா.அக.).

பிபாசை *pipāšai,* பெ.(n.) வேட்கை; thirst. "க்ஷுத்பிபாசைகளாலே நலிவுபட்டவன்" (அட்டதச.அர்த்தபஞ்.பக்.26).

த.வ.வேட்கை

[Skt. pipāsā > த. பிபாசை]

பிபீலிகாசந்தானம் *pipilikā-šandānam,* பெ.(n.) எறும்புகள் தொடர்ந்தூர்வது போன்ற தொடர்ச்சி (மணிமே.30,38,கீழ்க்குறிப்பு); continuity, as of a line of ants.

[Skt. pipilikā+san-tāna > த. பிபீலிகாசந்தானம்]

பிபீலிகை *pipiligai,* பெ.(n.) எறும்பு (சூடா.); ant, emmet, pismire.

[Skt. pipilikā> த. பிபீலிகை]

பிம்பப்பிரதிபிம்பபாவம் *pimba-p-piradi-pimba-pāvam,* பெ.(n.) உருவமும் நிழலுருவமுமாய் அமைந்திருக்குந் தன்மை; the condition of original and its counterfeit.

[Skt. bimba-prati-bimba-bhāva > த. பிம்பப் பிரதிபிம்பபாவம்]

பிம்பம் *bimbam,* பெ.(n.) 1. உருவம்; form, shape, image. 2. நிழலுருவிற்கு (பிரதிபிம்பம்) மூலப்பொருள்; original. 3. படிமை (பிரதிமை); statue. 4. கொடிவகை; common creeper of the hedges.

த.வ. வடிவம்

[Skt. bimba> த. பிம்பம்]

பிம்பமுத்திரை *pimba-muttirai,* பெ.(n.) வழிபாட்டு முத்திரை வகை (சைவா.வி.19); a hand-pose in worship.

த.வ. வணக்க மெய்ப்பாடு

[Skt. bimba> த. பிம்பம்+முத்திரை]

பியாக்கு *piyākku,* பெ.(n.) பண் வகை (Mus.); a musical mode.

[U. bihāg> த. பியாக்கு]

பியாகடம் *piyākadam,* பெ.(n.) பண் வகை (பரத.ராக.பக்.102.); a specific melody - type.

[U. bēgadā> த. பியாகடம்]

பியானா *piyānā,* பெ.(n.) ஐரோப்பிய இசைக்கருவி; a musical instrument, piano.

[E. piano> த. பியானா]

பிர்க்கா[1] *pirkkā,* பெ.(n.) வட்டாட்சியர் பகுதி; division, portion of a taluk, group of villages in charge of a revenue inspector.

[U. firqā> த. பிர்க்கா]

பிர்க்கா² *pirkkā*, பெ.(n.) 1. உடம்பு முழுவதையும் மறைக்கும் நெட்டுடை (அங்கி.); a kind of veil covering the entire body. 2. வண்டி முதலிய ஊர்திகளின் உறை (இ.வ.); cover for vehicles.

த.வ.மூடாப்பு

[U. burqah> த. பிர்க்கா²]

பிரக்கியாதன் *pirakkiyādan*, பெ.(n.) பேர் பெற்றவன், புகழ் பெற்றவன் (சர்வசமய.பக்.39); one who is well-known or famous.

[Skt. prakhyāta> த. பிரக்கியாதன்]

பிரக்கியாதி *pirakkiyādi*, பெ.(n.) 1. பரப்புரை (பிரசித்தம்.) (வின்.); publicity. 2. புகழ்; fame, celebrity.

[Skt. pra-khyāti> த. பிரக்கியாதி]

பிரக்கினை *pirakkinai*, பெ.(n.) உணர்ச்சி (உ.வ.); consciousness.

த.வ.நினைவோட்டம்

[Skt. prajñā> த. பிரக்கினை]

பிரகச்சாதகம் *piraga-c-cādagam*, பெ.(n.) வராகமிகிரர் வடமொழியில் இயற்றிய ஒரு கணிய (சோதிடம்) நூல்; an astrological work in Sanskrit by Varāhamihira.

[Skt. bṛhat+jātaka> த. பிரகச்சாதகம்]

பிரகசனன் *piragaśanam*, பெ.(n.) 1. சிரிப்பு (யாழ்.அக.); laughter. 2. நையாண்டி (யாழ்.அக.); satire. 3. உருவகங்கள் (ரூபகங்கள்) பத்தனுள் ஒன்று; fance, one of ten rūpakam.

[Skt. pra-hasana> த. பிரகசனம்]

பிரகசுபதி *piragaśupadi*, பெ.(n.) 1. வியாழன்; the planet Jupiter. 2. தேவகுரு; priest of the Gods. 3. நடப்புக் (சடங்கு) காரியங்கள் செய்யும் சமய ஆசிரியன். (புரோகிதன்) (இ.வ.); priest.

[Skt. Bṛha-s-pati> த. பிரகசுபதி]

பிரகசுபதிசக்கரம் *piragaśupadi-śakkaram*, பெ.(n.) சக ஆண்டின் (கி.பி.78)போது தோன்றிய வியாழவட்டமான அறுபது ஆண்டுகள் (வின்.); the Jupiter cycle of 60 years.

[Skt. Bṛha-s-pati> த. பிரகசுபதி+சக்கரம்]

பிரகசுபதிசம்பாவனை *piragaśupadi-śambāvanai*, பெ.(n.) நடப்புக் காரியங்கள் (சடங்கு) செய்யும் சமய மறையோது வோனுக்குக் கொடுக்கும் பரிசில் (சம்மானம்); gift made at the end of a ceremony to the priest who conducts the rites.

[Skt. Bṛha-s-pati+sam-bhāvanā> த. பிரகசுபதி சம்பாவனை]

பிரகசுபதிமதம் *piragaśupadi-madam*, பெ.(n.) உலகிய மதம் (சார்வாகமதம்) (தக்கயாகப்.183,உரை.); śārvāka school of philosophy.

[Skt. Bṛha-s-pati>த. பிரகசுபதி+மதம்]

பிரகண்டம் *piragaṇḍam*, பெ.(n.) தோட்பட்டை எலும்பின் (புயம்) முற்பகுதி (யாழ்.அக.); upper arm. 2. தோள் பட்டை எலும்பு (வின்.); bone of the upper arm.

[Skt. praganḍa> த. பிரகண்டம்]

பிரகத்தம் *piragattam*, பெ.(n.) விரிந்த கை (யாழ்.அக.); the open hand with the fingers extended.

[Skt. pra-hasta> த. பிரகத்தம்]

பிரகத்வாதம் *piragat-vādam*, பெ.(n.) வயிற்றுப் பொருமலால் உண்டாகும் நோய் (வின்.); a disease caused by flatulence.

த.வ.வயிற்றுப்புசம்

[Skt. bṛhat+vaṭā> த. பிரகத்வாதம்]

பிரகதாரணியம் *piragatāraṇiyam*, பெ.(n.) பத்து மெய்ம்மறை நூல்களுள் (உபநிடதம்) ஒன்று; an Upaniṣad, one of *taśōpaniṣattu*.

[Skt. Bṛhad-āraṇya > த. பிரகதாரணியம்]

பிரகதி *piragati,* பெ.(n.) தும்புருவினுடைய வீணை (பரத.ஒழிபி.15); a stringed musical instrument of Tumpuru.

[Skt. bṛhatī > த. பிரகதி]

பிரகம்பனம் *pirakambaṉam,* பெ.(n.) 1. காற்று; air. 2. நிரய (நரகம்) வகை; a hell.

[Skt. pra-kampana > த. பிரகம்பனம்]

பிரகரணம் *piragaraṇam,* பெ.(n.) 1. சமயம்; opportunity, occasion. 2. நூற்பிரிவு (அத்தியாயம்); chapter, section. 3. வாய்ப்பு (இ.வ.); context. 4. பத்துவகை நாடகங்களுள் (ரூபகம்) ஒன்று (சிலப்.3,13,உரை,பக்,84, கீழ்க்குறிப்பு.) ; a species of love-drama, one of ten rūpakam. 5. அறம், பொருள் இவற்றைப் பொருளாகக் கொண்ட நாடக வகை. (சிலப்.3,13, உரை.); a drama dealing with aṟam and poruḷ.

[Skt. pra-karaṇa > த. பிரகரணம்]

பிரகரம் *piragaram,* பெ.(n.) 1. அடி; blow; beating. "பிரகரத் துயர்தீர" (திருப்பு.310). 2. மாணிக்கக் குற்றத்துள் ஒன்று. (S.I.I.ii/78); a flaw in gem.

[Skt. pra-hara > த. பிரகரம்]

பிரகலாதன் *piragalādaṉ,* பெ.(n.) இரணிய கசிபுவின் மகன்; a Daitya of great piety, son of Hiraṇyakaśipu. "பிரகலாதனாஞ் சீர் தழைந்தவன்" (பாகவத.7, இரணிய.29).

[Skt. Prahlāda > த. பிரகலாதன்]

பிரகலை *pirakalai,* பெ.(n.) இசைவுறுப்புகள் நான்கனுள் ஒன்று (சிலப்.3,150,உரை.); a component of a musical piece, one of four kīta-v-uṟuppu.

[Skt. pra-kalā > த. பிரகலை]

பிரகன்னளை *pirakaṉṉaḷai,* பெ.(n.) அருச்சுனன் கரந்துறைவு (அஞ்ஞாதவாசம்) காலத்தில் பேடியுருக்கொண்டு விராட நகரத்தில் வாழ்ந்து வந்தபோது புனைந்து கொண்ட பெயர் (பாரத.நாடுக.19.); name assumed by Arjuna while he lived *incognito* as a hermaphrodite in Virāṭa city.

[Skt. Bṛhannalā > த. பிரகன்னளை]

பிரகாசம் *pirakāśam,* பெ.(n.) 1. ஒளி; brightness, splendour, radiance, reflected light, lustre. "எங்கும் பிரகாசமாய்" (தாயு.திருவருள்விலா.1.). 2. வெயில் (வின்.); sunshine. 3. புகழ் (வின்.); illustriousness, conspicuousness. 4. பண்பு (வின்.); nature, characteristic.

த.வ.வெளிச்சம்

[Skt. pra-kāśa > த. பிரகாசம்]

பிரகாசன் *pirakāśaṉ,* பெ.(n.) 1. ஒளி (காந்தி) யுடையோன்; one full of light, mental or spiritual, illustrious person. 2. கடவுளோடு கலந்த முத்தாதன்; soul, liberated from births, illumined by and identified with the Supreme Being.

[Skt. pra-kāśa > த. பிரகாசன்]

பிரகாசனம் *pirakāśaṉam,* பெ.(n.) 1. *பிரகாசம்,1.* பார்க்க; see *pirakāśam,1.* 2. விரித்து விளக்குகை; exposition. சைவப் பிரகாசனம். 3. வெளிப்படுத்துகை (சங்.அக.); publishing.

[Skt. pra-kāśana > த. பிரகாசனம்]

பிரகாரணம் *pirakāraṇam,* பெ.(n.) நன்கொடை (யாழ்.அக.); gift.

[Skt. pra-hāraṇa > த. பிரகாரணம்]

பிரகாரம் *pirakāram,* பெ.(n.) 1. வழிவகை; manner, mode, way, means. 2. ஒப்பு; likeness, similarity. 3. வகுப்பு (வின்.); kind, species, sort. 4. தன்மை (வின்.); quality, property, nature, essence.

[Skt. pra-kāra > த. பிரகாரம்]

பிரகிருதம் *pirakirudam,* பெ.(n.) 1. தற்காலம்; present time. 2. வாய்ப்பு (சந்தர்ப்பம்); occasion.

த.வ.நிகழ்காலம்

[Skt. pra-kṛta > த. பிரகிருதம்]

பிரகிருதி *pirakirudi,* பெ.(n.) 1. மூலம்; cause, original source. 2. மூலப்பகுதி; original producer or passive creative power of the material world. "பிரகிருதிக்குக் குணத்தை நல்கியதார்" (தாயு.பராபர.166). 3. பண்பு (சுபாவம்); nature, character. "உங்கள் பிரகிருதிக்குச் சேர்ந்தோ" (ஈடு,5,9,2). 4. பகுதி (நன்.133,விருத்.); root or uninflected part of a word. 5. குடி (யாழ்.அக.); subject.

[Skt. pra-kṛti > த. பிரகிருதி]

பிரகிருதிகள் *pirakirudigal,* பெ.(n.) அரசனிடத்து ஊதியம் (வேதனம்) பெற்று அரசியல்தொழில் செய்வோருள் தலைவர் (சுக்கிரநீதி,64.); chief officials of a king; ministers.

[Skt. pra-kṛti > த. பிரகிருதிகள்]

பிரகிருதிதத்துவசாத்திரம் *pirakirutita-t-tuva-śāttiram,* பெ.(n.) இயற்கைப் பொருணூல், இயற்பியல். (இக்.வ.); physics.

[Skt. pra-kṛti +tattva + śāstra > த. பிரகிருதிதத்துவசாத்திரம்]

பிரகிருதிநியாயப்பிரமாணம் *pirakiruti-niyāya-p-piramāṇam,* பெ.(n.) இயற்கையா யமைந்த நெறி (வின்.); the law of nature.

[Skt. pra-kṛti+nyāya+pramāṇa > த. பிரகிருதி நியாயப்பிரமாணம்]

பிரகீரணம் *pirakiraṇam,* பெ.(n.) கரிசு (பாவம்) வகை (வேதாரணி.சேதுசி.10.); a sin.

த.வ. கரிசு, பாழ்வினை

[Skt. pra-kirṇa > த. பிரகீரணம்]

பிரகுஞ்சம் *pirakuñjam,* பெ.(n.) ஒரு பலங்கொண்ட நிறுத்தலளவை வகை (நாமதீப. 805); a measure of weight = 1 palam.

[Skt. pra-kuñca > த. பிரகுஞ்சம்]

பிரகுத்தம் *pirakuttam,* பெ.(n.) மான் கொம்பு (சங்.அக.); stag's horn.

பிரகேலிகை *pirakēligai,* பெ.(n.) பிதிர்ச் செய்யுள் (இலக்.அக.); stanza in the form of a riddle.

த.வ.பிசி

[Skt. pra-hēlikā > த. பிரகேலிகை]

பிரகோவம் *pirakōvam,* பெ.(n.) கடுமை; vehemence, severity. அம்மை பிர கோவமாயிருக்கிறது. (இ.வ.).

த.வ.தீவிரம்

[Skt. pra-kōpa > த. பிரகோவம்]

பிரச்சாரகர் *pira-c-cāragar,* பெ.(n.) பரப்புரை (பிரச்சாரம்) செய்பவர்; propagandist. மதப் பிரச்சாரகர் / குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரகர். (உ.வ.).

த.வ. பரப்புரையாளர்

[Skt. pra-cāra > த. பிரச்சாரகர்]

பிரச்சாரம் *pira-c-cāram,* பெ.(n.) ஆதரவு தேடி அல்லது மனமாற்றம் ஏற்படுத்த ஒரு கருத்தை அல்லது கொள்கையைப் பரப்புகை; propaganda, campaign, (religious) preaching. "குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரம்/தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டவுடன் கட்சிகள் முழுமூச்சாகப் பிரச்சாரத்தில் இறங்கின/மதப் பிரச்சாரம்".

த.வ. பரப்புரை

[Skt. pra-cāra > த. பிரச்சாரம்]

பிரசக்தி *piraśakti,* பெ.(n.) உரிய நேரம்; occasion, opportunity.

த.வ.நல்வாய்ப்பு

[Skt. pra-sakti > த. பிரசக்தி]

பிரசங்கம் *piraśaṅgam,* பெ.(n.) 1. சொற் பொழிவு (உபநியாசம்); discourse, lecture, speech, oration, sermon. 2. வெளிப் படுத்துகை (பகிரங்கம்) (வின்.); proclamation, public declaration.

த.வ.1. விளக்கவுரை, 2. அறிவுறுத்துகை, 3. பரப்புரை

பிரசங்கமேடை *piraśaṅga-mēḍai,* பெ.(n.) சொற்பொழிவு (உபநியாசம்) செய்தற்கு அமைந்த உயர்ந்த இடம் (இக்.வ.); platform for speakers.

[Skt. pra-saṅga> த. பிரசங்கம்+மேடை]

பிரசங்கயானம் *piraśaṅga-yāṉam,* பெ.(n.) செல்லுமிடம் பிறர்க்குத் தெரியாதபடி இடம் மாறுதலாகக் குறிப்பிட்டு அரசன் செய்யும் செலவு (யாத்திரை) (சுக்கிரநீதி,337); the march of a king who misleads others about his destination.

த.வ.மறை செலவு, தெரியாப் பயணம்

[Skt. pra-śaṅga > த. பிரசங்க]

பிரசங்கி[1]**-த்தல்** *piraśaṅgi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. சமய அறிவுரை; to discourse, expound, preach. 2. விளம்பரப்படுத்துதல் (வின்.); to publish, proclaim.

[Skt.pra-śaṅga>த. பிரசங்கம் >பிரசங்கி-த்தல்]

பிரசங்கி[2]**-த்தல்** *piraśaṅgi-,* 4 செ.குன்றாவி. (v.t.) குறிப்பிட்டுச் சொல்லுதல் (சிவநெறிப். நூல்வர.பக்.2.); to refer to.

[Skt. pra-śaṅga>த.பிரசங்கம்>பிரசங்கி-த்தல்]

பிரசங்கி[3] *piraśaṅgi,* பெ.(n.) சொற்பொழி வாற்றுபவன் (உபநியாசகன்); preacher, lecture.

த.வ. சொற்பொழிவாளர்

[Skt. pra-śaṅga > த. பிரசங்கம் > பிரசங்கி]

பிரசண்டம் *piraśaṇḍam,* பெ.(n.) கடுமை, வலிமை; violence, force, strength. "பிரசண்டகோதண்டமும்" (இராமநா.உயுத்.8).

[Skt. pra-caṇḍa > த. பிரசண்டம்]

பிரசண்டமாருதம் *piraśaṇḍa-mārudam,* பெ.(n.) வலுத்த காற்று; a dreadful tempest. (சா.அக.)

த.வ.சூறைக்காற்று, புயற்காற்று

[Skt.pra-caṇḍa+māruta>த. பிரசண்டமாருதம்]

பிரசண்டன் *piraśaṇḍaṉ,* பெ.(n.) கடுமை யானவன்; powerful, formidable man.

த.வ. முரடன்

[Skt. pra-caṇḍa > த. பிரசண்டன்]

பிரசத்தி[1] *piraśatti,* பெ.(n.) தக்க சமயம்; suitable opportunity.

த.வ.நல்வாய்ப்பு, தக்க வேளை

[Skt. pra-śakti > த. பிரசத்தி]

பிரசத்தி[2] *piraśatti,* பெ.(n.) ஆவணம் (சாசனம்) (T.A.S.iv,46.); publication.

[Skt. prasiddhi > த. பிரசத்தி]

பிரசம்சை *piraśamśai,* பெ.(n.) புகழ்ச்சி; fame, praise.

த.வ.பாராட்டு, புகழுரை

[Skt. pra-samsā > த. பிரசம்சை]

பிரசயம் *piraśayam* பெ.(n.) நலிவொலியை (சுவரிதம்) அடுத்து எடுத்தலோசையைச் (அநுத்தாத்தம்) சேர்த்துக் கூறும்போது உள்ள இசை (ஸ்வரம்.) (பி.வி.40,உரை.); the one occurring in a series of unaccented syllables following a *svarita.*

[Skt. pra-caya > த. பிரசயம்]

பிரசரணம் *piraśaraṇam,* பெ.(n.) 1. கொள்ளை யிடுகை; dacoity. 2. பகைவரைச் சூழ்ந்து கொள்ளுகை; surrounding the enemy.

த.வ.முற்றுகை

[Skt. pra-saraṇa > த. பிரசரணம்]

பிரசலை *pira-śalai,* பெ.(n.) மனக்கலக்கம் (சீவக.3076,உரை.); agitation, excitement, mental disturbance.

த.வ.அறிவுப்பிறழ்வு

[Skt. pra-calā > த. பிரசலை]

பிரசவகாரி *piraśava-kāri,* பெ.(n.) ஈற்றுளையைப் (பிரசவவேதனை) பெருக்கிக் குழந்தையை (சிசு) விரைவில் வெளிப்படுத்தும் மருந்து (பைஷஜ.13.); parturifacient.

[பிரசவம்+காரி]

பிரசவசன்னி *piraśava-śaṉṉi,* பெ.(n.) மகப்பேற்றிற்குப் (பிரசவம்) பின் வரும் நளிர்நோய் (சன்னி.) (பைஷஜ.); puerperal

convulsions, eclampsia. 2. ஈன்றபிறகு ஆவுக்கு உண்டாகும் நோய் வகை (இ.வ.); dropping after calving.

த.வ. இழுப்பு நோய்

[*Skt. pra-sava+san-ni > த. பிரசவசன்னி*]

பிரசவசுரம் *piraśava-śuram,* பெ.(n.) மகப்பேற்றுக்குப் (பிரசவம்) பின்னர் உண்டாகும் காய்ச்சல் (இங்.வை.); puerperal fever.

[*Skt. pra-sava+juara > த. பிரசவசுரம்*]

பிரசவப்பெரும்பாடு *piraśava-p-perumpāḍu,* பெ.(n.) மகப்பேற்றிற்குப் (பிரசவம்) பின்னர் குருதிப்பெருக்கு (சூதகம்.) மிகுதியாய் வெளிப்படுகை (இங்.வை.); uterine haemorrhage after parturition.

[*பிரசவம்+பெரும்பாடு*]

பிரசவப்பைத்தியம் *piraśava-paittiyam,* பெ.(n.) மகப்பேற்றிற்குப் (பிரசவம்) பின்னர் உண்டாகும் மனத்தடுமாற்றம் (இங்.வை.); puerperal mania.

த.வ.பேறுகால வருத்தம்

[*Skt. pra-sava+paittiya> த. பிரசவபைத்தியம்*]

பிரசவம் *piraśavam,* பெ.(n.) மகப்பேறு; child birth, parturition.

த.வ. பாயம், பயப்பு, ஈனல்

[*Skt. pra-sava > த. பிரசவம்*]

பிரசவவிடுதி *piraśava-viḍudi,* பெ.(n.) தாய்சேய் நலவிடுதி; maternity hospital.

த.வ.மகப்பேற்று இல்லம், குழந்தை நலக் காப்பகம்

பிரசவவேதனை *piraśava-vētaṉai,* பெ.(n.) மகப்பேறு (பிரசவம்) நிகழ்வதற்காக உண்டாகும் நோவு (உ.வ.); pains of childbirth, labour, labour pain.

த.வ. பேறுகாலத்துன்பம்

[*Skt.pra-sava+vēdanā> த. பிரசவவேதனை*]

பிரசவவைராக்கியம் *piraśava-vairākkiyam,* பெ.(n.) வெறுப்பு (வைராக்கியம்) மூன்றனுள் மகப்பேற்றுத் துன்பப் (பிரசவவேதனை) படுபவள் அத்துன்பத்தால் பின்னர்க் காம நுகர்ச்சியை வெறுத்துவிடுவதாக அப்போது கருதும் எண்ணம்; determination of a woman at the time of confinement to abstain in future from intercourse, one of the three kinds of vairākkiyam.

த.வ.பேறுகால உறுதி

[*Skt. pra-sava +vairāgya> த. பிரசவ வைராக்கியம்*]

பிரசவி-த்தல் *piraśavi-,* 4 செ.குன்றாவி.(v.t.) ஈனுதல்; to bring forth, as a child.

த.வ. பிள்ளைபெறுதல், பயத்தல், ஈனுதல்

[*Skt. pra-sava > த. பிரசவி-த்தல்*]

பிரசவீகம் *piraśavigam,* பெ.(n.) மகப்பேறு மருத்துவம்; midwifery. (சா.அக.)

பிரசன்னம் *piraśaṉṉam,* பெ.(n.) 1. தெளிவு; clearness, brightness. "முகம் பிரசன்னமாக இருக்கின்றது" (வின்.). 2. கடவுள் பெரியோர் முதலியோரின் காட்சி; gracious appearance or presence of a deity or sacred person.

த.வ.அருட்காட்சி, கலக்கமின்மை

[*Skt. pra-sanna > த. பிரசன்னம்*]

பிரசன்னமா-தல் *piraśaṉṉam-ā,* 6 செ.கு.வி.(v.i.) காட்சி தருதல்; to appear graciously, to become visible, as a deity or sacred person.

[*Skt. pra-sanna > த. பிரசன்னம்+ஆ-தல்*]

பிரசன்னமுகம் *piraśaṉṉa-mugam,* பெ.(n.) மலர்ந்த முகம் (வின்.); smiling countenance, benign or gracious look.

த.வ.சிரித்த முகம்

[*Skt. pra-sanna> த. பிரசன்னம்+முகம்*]

பிரசன்னமுத்திரை *piraśaṉṉa-muttirai,* பெ.(n.) முத்திரை வகை (சைவாநு.வி.17.); a hand-pose in worship.

த.வ.வணக்க மெய்ப்பாடு

[Skt. prasanna > த. பிரசன்னம்+முத்திரை]

பிரசன்னன் *pirašannan,* பெ.(n.) காட்சி யருளுபவன் (வின்.); one manifesting himself as an act of grace or kindness.

[Skt. pra-sanna > த. பிரசன்னன்]

பிரசாதஞ்செய்-தல் *pirašadañ-jey-,* 1 செ.குன்றாவி. (v.t.) அருள் செய்தல்; to bestow, grant, as a favour. "ஸ்ரீமுகம் பிரசாதஞ்செய் தருளி (S.I.I.iii,157,7).

த.வ.இரக்கங்காட்டல்

[Skt. pra-sāda > த. பிரசாதம்+செய்-தல்]

பிரசாதப்படு-தல் *pirašada-p-padu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. உண்ணுதல்; to eat. "ஊரடங்கலும் பிரசாதப்பட்டு மகிழலாயிற்று" (குருபரம்.513). 2. திருவாணையேற்றல்; to receive the favour or order, as of a king. "முகம்... தலைமேற்கொண்டு பிரசாதப்பட்டு" (S.I.I.iii,157,7).

த.வ. 1.சாப்பிடுதல், 2. அரசாணை ஏற்றல்

[Skt. pra-sāda > த. பிரசாதம்+படு-தல்]

பிரசாதபத்திரம் *pirašāda-p-pattiram,* பெ.(n.) வீரச்செயல் முதலியவற்றிற்கு மகிழ்ந்து அரசன் கொடுக்கும் நிலம் முதலியவற்றைக் குறிக்கும் ஆவணம். (சுக்கிரநீதி,93); royal grant of land, etc., in appreciation of one's bravery.

த.வ.வீரக்கொடை ஆவணம்

[Skt. prasāda+patra > த. பிரசாதபத்திரம்]

பிரசாதம்[1] *pirašādam,* பெ.(n.) 1. தெளிவு; clearness. "தெளிவு பிரசாதமென்ன" (வாயுசங்.ஞானயோ.57). 2. அருள், இரக்கச் செயல்; favour, kindness, grace. 3. கடவுளுக்கு ஒப்புவிக்கும் சோறு முதலிய படையல் (S.I.I.iii,248,4.); boiled rice, etc., offered to an idol. 4. சோறு; boiled rice.

[Skt. pra-sāda > த. பிரசாதம்]

பிரசாதம்[2] *pirašādam,* பெ.(n.) 1. கருப்ப முண்டாக்கு மருந்து; medicine for conception. 2. பிள்ளைப் பேறு; delivery of the child. (சா.அக.)

த.வ. 2. மகப்பேறு, குழந்தைப்பேறு

பிரசாதருமம் *pirašā-darumam,* பெ.(n.) 1. குடிக்கடமைகள் (இ.வ.); rules regulating the conduct of citizens. 2. மகவின் கடமை (யாழ்.அக.); duty of a son or daughter.

[Skt. praja+dharma > த. பிரசாதருமம்]

பிரசாதலிங்கம் *pirašada-lingam,* பெ.(n.) ஆறு வகை இலங்கங்களுளொன்று. (சித்.சிகா.201.); a linga, one of satvita-lingam. 2. சிவ பெருமானுக்குப் படையிலிடப்பட்ட பண்டம் (வின்.); offerings that which is dedicated to šiva.

த.வ.சிவபடையலமுது

[Skt. prasāda+linga > த. பிரசாதலிங்கம்]

பிரசாதனம் *pirašādanam,* பெ.(n.) 1. வெள்ளி (யாழ்.அக.); silver. 2. கொக்கு (சங்.அக.); crane.

[Skt. prajā-dāna > த. பிரசாதனம்]

பிரசாதிபத்தியம் *pirašādipattiyam,* பெ.(n.) மக்கள் ஆட்சி (இக்.வ.); democracy.

த.வ.குடியாட்சி

[Skt. prajādhipatya > த. பிரசாதிபத்தியம்]

பிரசாந்தி *pirašāndi,* பெ.(n.) உள்ளும் புறமுமுள்ள அறியாமையை ஒழிக்கை (வாயுசங். ஞானயோ.57); removing ignorance, both internal and external.

[Skt. prašāndi > த. பிரசாந்தி]

பிரசாபத்தியம் *pirašabattiyam,* பெ.(n.) 1. மணப்பெண்ணிற்குப் பணம் பெறாது மகட்கொடை நேரும் மணவகை; a form of marriage which consists in the gift of a girl by her father to the bridegroom without

receiving bride price from him. 2. பகல் 15 முழுத்தத்துள் ஒன்பதாவதும், இரவு 15 முழுத்தத்துள் எட்டாவதும் ஆன காலம். (விதான.குணாகுண.73,உரை.); the ninth of the 15 divisions of day, and eighth of those of night.

[Skt. prajāpatya > த. பிரசாதபத்தியம்]

பிரசாபதி[1] *pirāšapadi,* பெ.(n.) 1. நான்முகன் (பிங்.); Brahmā. 2. துணை நான்முகன்; upa-Brahmā as Dakṣa. etc., 3. அரசன்; king. 4. ஆண்டு அறுபதனுள் ஐந்தாவது; the fifth year of the Jupiter cycle. 6. மக்கட் பெருக்கம்; increase of population.

த.வ. படைப்புக் கடவுள்

[Skt. prajā-pati > த. பிரசாபதி]

பிரசாபதி[2] *pirašāpadi,* பெ.(n.) 1. ஆண் குறி; penis. 2. நெருப்பு; fire. 3. தந்தை (பிதா); father. (சா.அ.).

பிரசாமம் *pirašāmam,* பெ.(n.) மனவமைதி (சங்.அக.); tranquillity of mind.

த.வ.உள்ளத்தெளிவு

[Skt. pra-šama > த. பிரசாமம்]

பிரசாரம் *pirašāram,* பெ.(n.) 1. பரவுகை; extension. 2. பரவச் செய்கை; promulgation, propaganda.

த.வ. பரப்புரை

[Skt. pra-cāra > த. பிரசாரம்]

பிரசாவிருத்தி *pirašā-virutti,* பெ.(n.) 1. மக்கட் பெருக்கம்; increase of population. 2. கால்வழி பெருக்கம்; increase of progeny.

[Skt. prajā-vṛddhi > த. பிரசாவிருத்தி]

பிரசிசியன் *pirašišiyan,* பெ.(n.) மாணாக் கனுக்கு மாணாக்கன்; pupil's pupil. "இவ்வுடையார் சிஷ்யரும் பிரசிஷ்யருமாய்" (S.I.I.ii,107).

[Skt. pra-šisya > த. பிரசிசியன்]

பிரசித்த கடுதாசி *pirašitta-kaḍudāši,* பெ.(n.) அறிக்கை ஆவணம்; advertisement, notice, notification proclamation.

[Skt. pra-siddha > த. பிரசித்தம்+கடுதாசி]

பிரசித்தப்படுத்து-தல் *pirašitta-p-paduttu-,* 18 செ.குன்றாவி. (v.t.) 1. வெளியாக்குதல்; to publish, divulge. 2. விளம்பரஞ் செய்தல்; to promulgate, advertise, proclaim. 3. புகழ் முதலியவற்றைப் பரப்புதல்; to spread, as one's fame.

[Skt. pra-siddha > த. பிரசித்தம்+படுத்து-தல்]

பிரசித்தபத்திரம் *pirašitta-pattiram,* பெ.(n.) *பிரசித்தகடுதாசி* பார்க்க (வின்.); see *pirašitta-kaḍudāši.*

[Skt. pra-siddha+patra > த. பிரசித்தபத்திரம்]

பிரசித்தபத்திரிகை *pirašitta-pattirikai,* பெ.(n.) *பிரசித்த கடுதாசி* பார்க்க; see *pirašitta kaḍudāši.*

த.வ.விளம்பரம், வெளிப்படுத்துகை

[Skt. pra-siddha+patrikā > த. பிரசித்தபத்திரிகை]

பிரசித்தம் *pirašittam,* பெ.(n.) 1. வெளிப்படை; publicity. 2. அறிவிப்பு; promulgation, proclamation, publication, announcement, advertisement. 3. புகழ் (வின்.); fame, celebrity. 4. நன்கு அறியப்பட்ட நிலை; state of being well known. "சிலபதம் பிரசித்த மாகியும்" (பி.வி.18,உரை.).

த.வ.பெயர் பெற்றது, பெயர் போனது, புகழ் பெற்றது, பெருமையுடையது

[Skt. pra-siddha > த. பிரசித்தம்]

பிரசித்தி *pirašitta,* பெ.(n.) புகழ் (கொ.வ.); fame.

[Skt. pra-siddhi > த. பிரசித்தி]

பிரசினம் *pirašiṉam,* பெ.(n.) 1. வினா; question, enquiry. 2. பத்து வகையயான மெய்ம்மறை நூல்களுள் ஒன்று; an upaniṣad, one of tašōpaniṣattu.

[Skt. pra-šna > த. பிரசினம்]

பிரசுரம்[1] *pirašuram,* பெ.(n.) 1. அறிவிப்பு; publishing, notification. 2. நூல் வெளியீடு; publication, edition.

[Skt. pra-cara > த. பிரசுரம்]

பிரசுரம்[2] *piraśuram,* பெ.(n.) மிகுதி (இலக்.அக.); immonseness; plenty.

[Skt. pra-cura > த. பிரசுரம்]

பிரசுரன்[1] *piraśuran,* பெ.(n.) வெள்ளிக்கோள் (சாதகசிந்.7.); the planet Venus.

த.வ.விடிவெள்ளி, விடி மீன்

பிரசுரன்[2] *piraśuran,* பெ.(n.) மிக்கவன்; one who excels. "திணிசுடர்ப் பிரசுர னிராசி சேர்வுற (அரிசமய.குலசே.32).

[Skt. pra-cura > த. பிரசுரம்]

பிரசுராலயம் *piraśurālayam,* பெ.(n.) புத்தக வெளியீட்டு நிறுவனம்; publishing house.

த.வ. பதிப்பகம், வெளியீட்டகம்

[Skt. pra-cara > த. பிரசுர+ஆலயம்]

பிரசுரி *piraśuri,* பெ.(n.) செய்தித்தாள் போன்ற வற்றில் கட்டுரை, கதை முதலியவற்றை வெளி யிடுகை, புத்தகம் போன்றவை வெளியிடுகை, பதிப்பிக்கை; publish (an article, a book, etc.,). "பிரசுரிக்கத் தகுதி இல்லை எனக் கதையைத் திருப்பி அனுப்பிவிட்டார்" (உ.வ.).

[Skt. pra-cāra > த. பிரசுரி]

பிரசூதிகா வாயு *piraśūdikāvāyu,* பெ.(n.) கருவளி (கர்ப்பவாயு); a vital air which assists in parturition.

[Skt. pra-sūtika+vāyu> த. பிரசூதிகாவாயு]

பிரசூதிகை *piraśūdigai,* பெ.(n.) மகப்பேற்று அறையிலிருப்பவள் (வின்.); woman recently confined.

[Skt. prasūtikā> த. பிரசூதிகை]

பிரசூதி வைராக்கியம் *piraśūdi-vairākkiyam.* மகப்பேற்று வேதனையால் பின்னர் இச்சையை வெறுத்து விடுவதாக அப்போது கருதும் எண்ணம், உறுதி; determination of a woman at the time of confinement to attain in future from intercourse, one of the three kinds of vairakkiyam.

[Skt. pra-sava+vairagya> த. பிரசவ வைராக்கியம்]

பிரசூனம் *piraśūnam,* பெ.(n.) பூ (நாமதீப.367.); flower.

த.வ.மலர்

[Skt. pra-sūna> த. பிரசூனம்]

பிரசை *piraśai,* பெ.(n.) 1. குடி; citizen, subject. 2. வழித்தோன்றல்; child, progeny. "உத்தரப் பிரசைப் பலத்தோடு" (சிவதரு.கோபு.162).

த.வ. 1. மக்கள், 2. கால்வழி, மரபு வழி

[Skt. pra-jā > த. பிரசை]

பிரஞ்சாணி *pirañjāṇi,* பெ.(n.) ஆணி வகை; french nail, wire nail.

[E. French > த. பிரஞ்சு+ஆணி]

பிரஞ்சிலாகா *pirañj-ilākā,* பெ.(n.) பிரஞ்சுக்காரர் ஆட்சிக்குட்பட்ட இந்திய நாட்டுப் பகுதி; French territory.

[Skt. French+Arab. ilaga>த. பிரஞ்சிலாகா]

பிரஞ்ஞன் *piraññan,* பெ.(n.) அறிஞன்; intelligent, wiseman.

த.வ.புலமையாளன்

[Skt. prajñā > த. பிரஞ்ஞன்]

பிரஞ்ஞாபங்கம் *piraññābaṅgam,* பெ.(n.) அறிவுகேடு; unconsciousness.

த.வ.நினைவு தவறல், நினைவிழப்பு

[Skt. prājñā +bhaṅga> த. பிரஞ்ஞாபங்கம்]

பிரஞ்ஞாபனபத்திரம் *piraññābaṉapattiram,* பெ.(n.) ஆசிரியர் முதலான பெரியோர்க்கு வணக்கத்தோடு வரையப்படும் மடல் (சுக்கிரநீதி,93); letter submitted respect - fully to a greatman, such as one's guru.

த.வ.திருமடல்

[Skt. prajñāpana+patra>த. பிரஞ்ஞாபனபத்திரம்]

பிரஞ்ஞாபாரமிதை *piraññābāramidai,* பெ.(n.) பிரஞ்ஞை, 2 பார்க்க; see *piraññai, 2.*

[Skt. prajñā+pāram-ita> த. பிரஞ்ஞாபாரமிதை]

பிரஞ்ஞை *piraññai,* பெ.(n.) 1. அறிவு; consciousness, knowledge, intelligence.

2. முழு மெய் அறிவு; (Buddh.) perfection in wisdom, one of taca-pāramitai. 3. முன்னிகழ்ந்ததை யறிவுமறிவு (சி.சி.4,28, மறைஞா.); knowledge of past events.

த.வ. உள்ளுணர்வு

[Skt.prajñā> த. பிரஞ்ஞை]

பிரட்சாளனம் *piratšālanam,* பெ.(n.) நீராற் கழுவுகை; washing, cleaning or ceremonially purifying with water, ablution.

த.வ.தூயநீராட்டு

[Skt.prakṣālana > த. பிரட்சாளனம்]

பிரணயம் *piranayam,* பெ.(n.) அன்பு (ஈடு); love.

த.வ.காதல்

[Skt.pra-ṇaya > த. பிரணயம்]

பிரணயரோசம் *piranayarōšam,* பெ.(n.) ஊடல்; sulks, bouderie.

[Skt. pra-ṇaya+rōṣa > த. பிரணயரோசம்]

பிரணவம் *piranavam,* பெ.(n.) ஓங்கார மந்திரம்; ōm, the principal mantra of Hindus.

த.வ. ஓம், ஓங்காரம்

[Skt. pra-ṇava > த. பிரணவம்]



பிரணவரூபி *piranavarūbi,* பெ.(n.) ஓங்கார வடிவாயுள்ள இறைவன்; the supreme being, the embodiment of ōm.

[Skt. pra-ṇava+rūp(a) > த. பிரணவரூபி]

பிரணாமம் *piranāmam,* பெ.(n.) கடவுள் அல்லது பெரியோர் முன்பு செய்யும் வணக்கம்; prostration or respedtful salutation before a deity or superior.

த.வ.கும்பிடல், வணக்கம்

[Skt. pra-ṇāma > த. பிரணாமம்]

பிரணீதபாத்திரம் *piranida-pāttiram,* பெ.(n.) வேள்வி போன்ற நடப்புக் காரியத்திற்கு உரிய ஏனம் (சீவக.2463, உரை.); a cup used in sacrifical ceremonies.

[Skt. praṇīta+pātra > த. பிரணீதபாத்திரம்]

பிரத்தாரம் *pirattāram,* பெ.(n.) 1. கட்டளையடியிற் பல்வேறு வகையாக வரக்கூடும் அசைகளையெல்லாம் மொத்தக் கணக்கிடுகை. (யாப்.வி.பக்.471.); enumeration of all the possible combinations of metrical syllables in a given versemode. 2. தாளக் கூறுகளுள் ஒன்று; (Mus.) an element of time-measure, one of ten tāla-p-pirāṇam.

[Skt. pra-stāra > த. பிரத்தாரம்]

பிரத்தியக்கம் *pirattiyakkam,* பெ.(n.) *பிரத்தியட்சம்* பார்க்க; see pirattiyatšam. "சுட்டுணர்வைப் பிரத்தியக்க மெனச்சொலி" (மணிமே.29:49).

பிரத்தியக்கவிருத்தம் *pirattiyakkaviruttam,* பெ.(n.) காட்சிக்கு மாறுபட்டது; that which is contrary to direct perception. "பிரத்தியக்கவிருத்தங் கண்ணிய காட்சி மாறுகொளலாகும்" (மணிமே.29:148).

[Skt.pratyakṣa+vṛtta> த. பிரத்தியக்கவிருத்தம்]

பிரத்தியகான்மா *pirattiyakānmā,* பெ.(n.) உயிராதன்; individual soul. "பிரத்திய கான்மாவின் சோதியாம்" (வேதா.சூ.106).

[Skt. pratyag-ātmā > த. பிரத்தியகான்மா]

பிரத்தியட்சக்கிரகணம் *pirattiyatša-kiraganam,* பெ.(n.) கண்ணுக்குப் புலப்படும் கோள் பற்றுகை; visible eclipse.

[Skt. pratyakṣa+grahaṇa > த. பிரத்தியட்சக் கிரகணம்]

பிரத்தியட்சதரிசனம் *pirattiyatšatarišanam,* பெ.(n.) கண்களாற்கண்ட காட்சி (வின்.); ocular vision.

[Skt. pratyaksa+daršana > த. பிரத்தியட்ச தரிசனம்]

பிரத்தியட்சப்பிரமாணம் *piratiyatša-p-piramānam,* பெ.(n.) அளவை (பிரமாணம்) கள் ஆறனுள் காண்டலளவை.

[Skt. pratyaksa+pra-māna > த. பிரத்தியட்சப் பிரமாணம்]

பிரத்தியட்சம் *pirattiyatšam,* பெ.(n.) 1. காட்சி; perception. 2. அளவை (பிரமாணம்) ஆறனுள் காண்டலளவை; (Log.) perception, as a mode of proof, one of six Piramānam.

[Skt. prat-yaksa > த. பிரத்தியட்சம்]

பிரத்தியபகாரம் *pirattyapagāram,* பெ.(n.) தீமைக்கு மாறாக செய்யுந் தீமை (சங்.அக.); retaliation.

த.வ.பழிக்குப் பழி

[Skt. pratyapakāra > த. பிரத்தியபகாரம்]

பிரத்தியபிஞ்ஞானம் *pirattiyapiññanam,* பெ.(n.) வேற்றுமையின்மை ஒப்பு (சாதிருசியம்) முதலியவை பற்றிப் பிறக்கும் மீட்டுணர்ச்சி (நீலகேசி,119,உரை.); recognition of identity or similarity.

[Skt pratyabhijñāna> த. பிரத்தியபிஞ்ஞானம்]

பிரத்தியம் *pirattiyam,* பெ.(n.) *பிரத்தியட்சம் 2* பார்க்க; see *pirattiyatšam.* "மெய்ப்பிரத்திய மனுமானஞ் சாத்தம்" (மணிமே.27:83).

பிரத்தியயம் *pirattiyayam,* பெ.(n.) ஈறு (விகுதி) முதலிய இடைச்சொல்; affix or suffix. "மன்னும் பிரத்தியயமே தத்திதாந்தம்" (பி.வி.29).

[Skt. pratyaya > த. பிரத்தியயம்]

பிரத்தியருத்தம் *pirattiyaruttam,* பெ.(n.) 1. எதிருரை; rejoinder. 2. மறுமொழி; answer.

த.வ.1. எதிர்விளக்கம், 2. விடைமொழி

[Skt. pratyartha > த. பிரத்தியருத்தம்]

பிரத்தியவற்கந்தனம் *pirattiyavarkandanam,* பெ.(n.) எடுத்துரைப்போனால் எழுதிக் கொடுக் கப்பட்ட செய்திகளை முற்றும் ஒப்புக்கொண்டு வழக்கெதிராளி கூறும் உடன்பாடு (சுக்கிரநீதி, 270.); statement by a defendant explaining his position after admitting the plaintiff's allegations.

[Skt. pratyava-skandana > த. பிரத்தியவற் கந்தனம்]

பிரத்தியவாயம் *pirattiyavāyam,* பெ.(n.) குற்றம் (யாழ்.அக.); harm.

[Skt. pratyavāya > த. பிரத்தியவாயம்]

பிரத்தியனீகவலங்காரம் *pirattiyanika valangaram,* பெ.(n.) வெல்லக்கூடாத உவமேயத்தையொத்த பிறிதொரு பொருள் மேல் உவமைப் பொருள் பகைமை சாதிப்ப தாகக் கூறும் அணி வகை (மாறன.135); a figure of speech in which one is described as trying to injure a person or thing resembling one's enemy when the enemy himself cann't be injured.

[Skt. pratya nikā+alam-kāra > த. பிரத்தியனீகவலங்காரம்]

பிரத்தியாகதம் *pirattiyākatam,* பெ.(n.) உள்ளாளம் (கமகம்) பத்தனுள் ஒன்று (பரத.இராக.24.); (Mus.) a succession of staccato notes, one of ten *kamakam.*

[Skt. pratyā-hata > த. பிரத்தியாகதம்]

பிரத்தியாகாரம் *pirattiyākāram,* பெ.(n.) எண் வகை ஒகத்துள் புலனுறுப்புகளை வெளி நிகழ்வுகளிலிருந்து திருப்புகை; withdrawal of the senses from external objects, one of aṣṭānka-yōkam. 2. வடமொழி நூல்களின் முதல் கடைகளில் நின்றவெழுத்துகளைக் கூட்டி இடை நின்றவெழுத்துகளை நீக்கி அனைத்தையுமுணர்த்துங் குறியீடாக வமைக்கை (பி.வி.4.); comprehension of a series of letters of a sūtrā in one syllable by combining its first letter with the last

and omitting the intermediate letters, as ac in sanskrit grammar.

[Skt. pratyā-hāra > த. பிரத்தியாகாரம்]

பிரத்தியாப்திகம் *pirattyāpdigam,* பெ.(n.) இறந்தவர் பொருட்டு அவர் இறந்த இரண்டாம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நடக்கும் நீர்பிண்டப் படையல்; annual ceremany other than the first, for the manes.

த.வ.ஆண்டு ஈமக்கடன்

[Skt. pratyābdika > த. பிரத்தியாப்திகம்]

பிரத்தியாலீடம் *pirattiyalīḍam,* பெ.(n.) 1. வில்லோர் நிலை நான்கனுள் இடக்கால் முந்துற வலக்கால் பின்னுற வைக்கும் நிலை (பிங்.); an attitude in shooting in which the left foot is advanced and the right is drawn back, one of *villor-nilai.* 2. பன்னிரண்டு விரலகத்துக்குள்ளே இரண்டு காலும் அடங்க நிற்கை (தத்துவப்.109,உரை.); a standing posture in which the two legs are within 12 inches of each other.

[Skt. pratya-līḍha > த. பிரத்தியாலீடம்]

பிரத்தியும்னன் *pirattiyumṉaṉ,* பெ.(n.) 1. கண்ணபெருமானுக்கும் உருக்குமினிக்கும் பிறந்த மகன்; son of Krṣṇa and Rukmiṇi. 2. திருமாலின் நிலை ஐந்தனுள் சங்கருடணன், பிரத்தியும்னன், அதிருத்தன் என்ற மூவகையாகவும், வாசுதேவனைச் சேர்த்து நால்வகையாகவும் வகைப்படுத்தப்பட்டவருள் ஒருவர் (பரிபா.3,82,உரை.); a manifestation of Viṣṇu, one of four viyūkam.

[Skt. Pradyumna > த. பிரத்தியும்னன்]

பிரத்தியேகம் *pirattiyēgam,* பெ.(n.) 1. தனிமை; separateness; singleness. 2. சிறப்பியல்பு; peculiarity, singularity.

த.வ.தனித்தன்மை

[Skt. pratyēka > த. பிரத்தியேகம்]

பிரத்துவஞ்சாபாவம் *pirattuvañjābāvam,* பெ.(n.) அழிந்ததனால் அஃதில்லை யென்னும் நிலை (அபாவம்) (சி.சி.அளவை,1.மறைஞா.); non-existence caused by destruction.

[Skt. pradhvaṃsābhāva > த. பிரத்துவஞ்சாபாவம்]

பிரதட்சிணம் *piratatṣiṇam,* பெ.(n.) வலம் வருகை; circumambulation from left to right.

த.வ. வலச்சுற்று, வலனேர்பு

[Skt. pradakṣiṇa > த. பிரதட்சிணம்]

பிரதம் *piradam,* பெ.(n.) கொடுப்பது; that which gives, used at the end of compounds. ஞானப் பிரதமான நூல். (உ.வ.).

த.வ.தருவது, அளிக்கும்

[Skt. pra-da > த. பிரதம்]

பிரதமகாலம் *piradama-kālam,* பெ.(n.) விடியற்காலம் (யாழ்.அக.); morning.

த.வ. புலர்காலை

[Skt. prathama > த. பிரதமம்+காலம்]

பிரதமசாகர் *piradama-šāgar,* பெ.(n.) முதலில் சுக்கில யசூர் (யஜுர்) மறையைப் படித்து மனனம் செய்ய உரிமைப் பெற்ற பார்ப்பன வகையினர்; a class of Brahmins who are enjoined to study the Sukla-yajur-vēda first.

[Skt. prathama > த. பிரதமம்+சாகர்]

பிரதமசிருட்டி *piradamaširutti,* பெ.(n.) 1. முதலில் நிகழ்ந்த படைப்பு; first creation. 2. தொடக்கத்திற் படைக்கப்பட்ட பொருள் (வின்.); that which is first created.

[Skt. prathama+sṛṣṭi > த. பிரதமசிருட்டி]

பிரதமபுருடன் *piradama-puruḍaṉ,* பெ.(n.) படர்க்கை (பி.வி.44,உரை.); third person.

த.வ.அயலிடம், வேறிடம்

[Skt.pirathama+puruṣa> த. பிரதமபுருடன்]

பிரதமம் *piradamam,* பெ.(n.) 1. முதன்மை; priority. 2. தொடக்கம்; beginning, commencement.

த.வ. முன்னுரிமை

[Skt. prathama > த. பிரதமம்]

பிரதமமந்திரி *piradama-mantiri,* பெ.(n.) ஒரு நாட்டை ஆளும் அமைச்சரவையில் முதன்மைப் பொறுப்பு வகிப்பவர்; Prime Minister, premier.

த.வ. முதன்மை அமைச்சர்

[Skt. prathama+mantrin > த. பிரதமமந்திரி]

பிரதமர் *piradamar,* பெ.(n.) பிரதம மந்திரி பார்க்க; see *piratama-mandiri.*

த.வ. முதன்மை அமைச்சர்

[Skt. prathama+mantrin > த. பிரதமமந்திரி]

பிரதமவாக்கியம் *piradma-vākkiyam,* பெ.(n.) கருதலளவை உறுப்புகளுளொன்று; major premise.

[Skt. prathama+vākya > த. பிரதமவாக்கியம்]

பிரதமவிசாரணை *piradamavišāraṇai,* பெ.(n.) தொடக்கத்திற் செய்யும் உசாவுகை; preliminary investigation or enquiry.

த.வ. முதல் உசாவல்

[Skt. prathama+vi-cāraṇā > த. பிரதம விசாரணை]

பிரதமன்[1] *piradamaṉ,* பெ.(n.) பாற்கன்னல் வகை; a kind of sweet milk-porridge.

[M. prathaman > த. பிரதமன்]

பிரதமன்[2] *piradamaṉ,* பெ.(n.) தலைவன்; head, chief. "மூடர்க்கெலாம் பிரதமன்" (பாடு.92,8).

[Skt. prathama > த. பிரதமன்]

பிரதமானுயோகம் *piradamāṉuyōgam,* பெ.(n.) சமணர்களுக்குரிய நான்கு மறைகளில் முதலாவது (நீலகேசி,1,உரை,பக்.9); the first of the four Vēdas of the Jains.

[Skt. prathama+anuyōga > த. பிரதமானுயோகம்]

பிரதமிகர் *piradamikar,* பெ.(n.) தேவதூதர் வகை (R.C.); archangels.

த.வ. இறைத்தூதர்

[Skt. prāthamika > த. பிரதமிகர்]

பிரதமை *piradamai,* பெ.(n.) 1. காருவாவிற்குப் பின்னும், வெள்ளுவாவிற்குப் பின்னும் வரும் முதல் நாள் (நிலாமான நாள்) (முதல்திதி); first *titi* after new moon or full moon in a lunar fortnight. 2. கடுக்காய் (வின்.); chebulic myrobalan, being the first of *tiripalai.*

த.வ. ஓரி

[Skt. prathamā > த. பிரதமை]

பிரதரம் *piradaram,* பெ.(n.) பெரும்பாடு (பைஷஜ.); menorrhagia.

[Skt. pra-dara > த. பிரதரம்]

பிரதரிசிப்பி-த்தல் *piradaricippi-,* 4 செ.குன்றாவி. (v.t.) விளக்குதல் (சங்.அக.); to explain, illuminate.

[Skt. pra-darši > த. பிரதரிசிப்பி-த்தல்]

பிரதன் *piradaṉ,* பெ.(n.) கொடையாளன்; bestower, giver, used at the end of compounds, munificent. "வரப்பிரதன்".

த.வ. வள்ளல்

[Skt. pra-da > த. பிரதன்]

பிரதனை *piradaṉai,* பெ.(n.) 243 தேரும், 243 யானையும், 729 குதிரையும், 1215 காலாளுங் கொண்ட ஒரு படைவகுப்பு (வின்.); division of an army, consisting of 243 chariots, 243 elephants, 729 horses and 1215 foot.

[Skt. pṛthanā > த. பிரதனை]

பிரதாபம் *piradābam,* பெ.(n.) 1. வீரம்; bravery, heroism. "காமமற்றெறு பிரதாபமும்" (சிவப்.பிர. சிவஞா.கலம்.39). 2. பெருமை; greatness, magnificence. 3. புகழ்; fame, glory, celebrity. 4. ஒளி; splendour.

த.வ.1. மறம் 2. செருக்கு 3. பெயர் பெற்ற 4. மிகுவெளிச்சம்

[Skt. pra-tāpa > த. பிரதாபம்]

பிரதாபலங்கேச்சுரம் *piradābalaṅgēccuram,* பெ.(n.) இதளியம், கந்தகம் முதலியவற்றாற் செய்த கூட்டு மருந்து வகை (பதார்த்த,1224.) (பைஷஜ.153); a medicine, compounded of mercury, sulphur and other ingredients.

[Skt. pra-tāpa+laṅkēś-vara > த. பிரதா பலங்கேச்சுரம்]

பிரதாபி-த்தல் *piradābi-,* 4 செ.கு.வி.(v.i.) பெருமைப்படுதல் (வின்.); to become glorious, famous or exalted.

த.வ.புகழடைதல், சிறப்படைதல்

[Skt. pratāpa > த. பிரதாபி-த்தல்]

பிரதானகோயில் *piradaṉakōyil,* பெ.(n.) 1. மூல தெய்வம் உள்ள கோயில்; the shrine of the chief deity in a temple. 2. கிறித்தவர்களின் தலைமைக்கோயில் (கட்டட.நாமா.4.); cathedral.

த.வ.1. கருவறைக்கோயில் 2. தேவாலயம்

[Skt. pradhāna > த. பிரதானம்+கோயில்]

பிரதான நீதிக்காரன் *piradāṉa-nīdi-k-kāraṉ,* பெ.(n.) தலைமை நடுவர்; (நீதிபதி.) (பாண்டி.); chief judge.

[Skt. pradhāma > த. பிரதான+நீதிக்காரன்]

பிரதானபுருடச்சுரி *piradāṉa-puruḍaccuri,* பெ.(n.) மலைமகள் (கூர்மபு.திருக்கலியாண, 23); the Goddess Pārvati.

த.வ.உமையாள்

[Skt. pradhāna-puruṣēśvari > த. பிரதான புருடேச்சுரி]

பிரதானபுருடன் *piradāṉa-puruḍaṉ,* பெ.(n.) முதன்மையானவன்; chief of prominent person.

த.வ.தலைவன், சிறந்தவன்

[Skt. pradhāna+puruṣa > த. பிரதானபுருடன்]

பிரதானபூதம் *piradāṉa-būdam,* பெ.(n.) முதன்மையானது; that which is chief or important.

[Skt. pra-dāna > த. பிரதானம்+பூதம்]

பிரதானம் *piradāṉam,* பெ.(n.) 1. இயற்கையின் உட்பொருள்; படைப்பின் மெய்ம்மை; material cause of creation, matter. "இரும்பிரதானத் தெழுமன தத்துவம்" (ஞான.64,1). 2. மிகத் தேவையானது; importance, eminence, essence. 3. தலைமைப்பொருள்; that which is important. "பிரதானத்தோ டப்பிரதானம்" (பி.வி.16,உரை.).

த.வ.1.முதன்மைமெய்ப்பொருள் 2. இன்றி யமையாதது

[Skt. pradhāna > த. பிரதானம்]

பிரதானமடி-த்தல் *piradāṉam-aḍi-,* 4 செ.கு.வி. (v.i.) தற்பெருமை கொண்டாடுதல்; to boast, make much of oneself; blow one's own triumph.

த.வ.தம்பட்டம் அடித்தல்

[Skt. pradhāna > த. பிரதானம்+அடித்தல்]

பிரதானன் *piradāṉaṉ,* பெ.(n.) 1. தலைமை யானவன்; chief man. 2. அரசியற்காரியங்கள் எல்லாவற்றையும் நடத்தும் அமைச்சன் (சுக்கிரநீதி,66.); a minister who attends to all the functions of a state.

த.வ. முதன்மையானவன்

[Skt. pradhāna > த. பிரதானன்]

பிரதானி *piradāṉi,* பெ.(n.) அமைச்சர்; minister. "திகழ்வடுக நாததுரை மெச்சும் பிரதானி" (தனிப்பா.i.260,1).

[Skt. pradhāna > த. பிரதானி]

பிரதானிக்கம் *piradāṉikkam,* பெ.(n.) 1. கருவூல அதிகாரியின் அலுவலகம் (வின்.); office of a treasurer. 2. அமைச்சகம்; ministerial office.

[Skt. pradhāna > த. பிரதானிக்கம்]

பிரதானிசோடி *piradāṉišōḍi,* பெ.(n.) அமைச்சர் பயன்படுத்தும் இலவய நிலம் (S.I.I.); iṉām held on a fixed quit-rent by a minister.

த.வ.இலவய நிலம்

[Skt. pradhāna > த. பிரதானி+சோடி]

பிரதானை *piradāṉai,* பெ.(n.) மலைமகள் (கூர்மபு.திரு.20.); Pārvati.

த.வ.இறையரசி, உமையவள்

[Skt. pradhānā> த. பிரதானை]

பிரதி[1] *piradi,* பெ.(n.) 1. ஒத்த தன்மை; likeness. "பிரதிபிம்பம்". 2. மாற்று, நிகரி, பதிலி; substitute. "வயிரத்துக்குப் பிரதி புட்பராகம் வைக்கப்பட்டது". 3. விடை; answer, response. 4. படி; copy, transcript, duplicate. "இது கையெழுத்துப் பிரதியா? 5. நூல்படி; manuscript 6. மாறு, எதிர்ச்சொல்; opposition. நான் சொல்லுவதற் கெல்லாம் பிரதி சொல்லுகிறான். 7. போட்டி; competition. அவன் கடைக்கு இது பிரதியாக வைத்தது. 8. எதிர்வழக்காளி; defendant. அவன் இந்த வழக்கிலே பிரதி (இ.வ.).

[Skt. prati> த. பிரதி]

பிரதி[2] *piradi,* பெ.எ. (adj.) ஒவ்வொரு; each, every. பிரதி நாளும் வர வேண்டும்.

[Skt. prati> த. பிரதி]

பிரதிக்கடமை *piradi-k-kaḍamai,* பெ.(n.) செய்ந்நன்றி (கல்வி.வி.1,1,7.); gratitude.

த.வ.நன்றிக்கடன்

[Skt. prati> த. பிரதி+கடமை]

பிரதிக்கிரகம் *piradikkiragam,* பெ.(n.) 1. கொடை பெறுகை; acceptance of gifts. 2. படையின் பின்புறம், பின்பக்கம் (குறள், 767, அடிக்குறிப்பு.); rear of an army.

த.வ.ஈகை பெறல்

[Skt. prati-graha> த. பிரதிக்கிரகம்]

பிரதிக்கிரகி-த்தல் *piradikkiragi-,* 4 செ.குன்றாவி. (v.t.) கொடை கொள்ளுதல்; to accept a gift.

த.வ. ஏற்றல், ஈகை கொள்ளல்

[Skt. pratigraha > த. பிரதிக்கிரகி-த்தல்]

பிரதிக்கிரமணம் *piradi-k-kiramaṇam,* பெ.(n.) மன்னிப்பு; pardon. "அப்பாவங்கெடப் பிரதிக்கிரமனஞ் சொல்லி" (நீலகேசி,315, உரை).

த.வ.குற்ற ஒப்புகை, குற்ற வருத்தம்

[Skt. prati-kramaṇa> த. பிரதிக்கிரமணம்]

பிரதிக்கிரியை *piradi-k-kiriyai,* பெ.(n.) 1. **பிரதி கருமம்** பார்க்க; see *piradikarumam*. 2. கழுவாயாக செய்யுஞ் செய்கை; redress, remedy.

த.வ. கழுவாய், குற்ற ஈடு செயல்

[Skt. prati+kriya > த. பிரதிக்கிரியை]

பிரதிக்கினை *piradikkiṉai,* பெ.(n.) 1. கருதிய செய்தி (பி.வி.2,உரை.); that which is proposed or resolved upon. 2. ஊக உறுப்புகளில் நிறைவேற்ற (சாதிக்க) வேண்டிய பொருள் (தருக்க.சங்.49); major premise. 3. சூளுறவு; vow, solemn declaration. 4. தீர்மானம்; pledge, resolve. 5. உடன்பாடு (யாழ்.அக.); assent. 6. **பாபசங்கீர்த்தனம்** (கிறித்து.) (வின்.) பார்க்க; see *pabašaṅgirttaṉam.*

த.வ. 1. கருத்தூகம், 3. வெகுண்டுரை, 4. எண்ண முடிவு, 5. ஒத்த முடிவு ஒப்பளிப்பு

[Skt. prati-jñā> த. பிரதிக்கினை]

பிரதிகருமம் *piradi-karumam,* பெ.(n.) 1. செய்ததற்கு மாறு செய்கை; retaliation, requital. 2. புனைகை (யாழ்.அக.); adornment, decoration.

த.வ.1. பழிவாங்குகை, 2. அழகுபடுத்துகை, ஒப்பனை செய்கை

[Skt. prati-karman> த. பிரதிகருமம்]

பிரதிகுலம் *piradi-kulam,* பெ.(n.) பிரதிகூலம் பார்க்க;see piratikūlam. "பிரதிகுலமேற் றீதாம்" (சினேந்.443).

[Skt. prati-kūla> த. பிரதிகூலம்> பிரதிகுலம்]

பிரதிகை *piradigai,* பெ.(n.) தும்புருவுக்குரிய வீணை (பரத.ஒழிபு.15.); a lute of Tumburu.

[Skt.cf. bṛhatika > த. பிரதிகை]

பிரதிச்சீட்டு *piradi-c-cittu,* பெ.(n.) 1. எதிர் குறிப்புத்தாள்; bond given in return, counter-part. 2. நகல்; copy of a bond.

[Skt. prati > த. பிரதி+சீட்டு]

பிரதிசருக்கம் *piradi-šarukkam,* பெ.(n.) தட்சன் முதலிய துணை படைப்புக் கடவுளரால் படைக்கப்படும் படைப்பு (மச்சபு.நைமிச.37); secondary creation by the upa-p-piramar.

[Skt. prati-sarga > த. பிரதிசருக்கம்]

பிரதிட்டாகலை *piratiṭṭākalai,* பெ.(n.) சிவஆற்றலின் ஐந்து கலைகளுள் உயிராதனை வீடுபேற்றில் உய்க்குங் கலை (சி.போ.பா.5,2, பக்.143,புதுப்.); sphere of action of the energy of Siva, which lead the soul to the liberated state, one of pañja-kalai.

[Skt. prati-ṣṭhā > த. பிரதிட்டா+கலை]

பிரதிட்டி-த்தல் *piradiṭi-,* 4 செ.குன்றாவி. (v.t.) 1. கோயில் முதலியவற்றில் தெய்வத்தை நிறுவுதல்; to establish a deity, as in a temple. "அக்கினியைப் பிரதிட்டிப்பதற்கு முன்பே" (சீவக.2464,உரை). 2. நிலை நாட்டுதல்; to settle, as a family.

த.வ.நிலைக்கச் செய்தல், நிலைகோள் செய்தல்

[Skt. prati-.sṭhā > த. பிரதிட்டி-த்தல்]

பிரதிட்டை[1] *piradiṭṭai,* பெ.(n.) 1. தெய்வத்தைப் புதுக்கோயில் முதலியவற்றில் நிறுவுகை; establishing a deity, as in a newly built temple. 2. நிலை பெறுகை; founding as of a family establishing setting in security. "பிராண பிரதிட்டை (இராமநா.உயுத்.5). 3. உயிராதனை வீடுபேற்றில் உய்க்குங் கலை (சி.போ.பா.5,2,பக்.143.புதுப்.); sphere of action of the energy of šiva, which lead the soul, to the liberated state, one of pañca-kalai.

[Skt. prati-.sṭhā > த. பிரதிட்டை]

பிரதிட்டைப்பண்டிகை *piradiṭṭai-p-paṇḍigai,* பெ.(n.) முதற்பேறுகளைக் கடவுட்குக் கொடுக்கும் காணிக்கைத் திருவிழா (கிறித்து.); feast of dedication.

த.வ.முதற்காணிக்கை, நேர்த்திக்கடன் விழா

[Skt. prati-ṣṭhā > த. பிரதிட்டை+பண்டிகை]

பிரதிதானம் *piradidāṉam,* பெ.(n.) 1. கைம்மாறு; remuneration, gift in return. 2. பிற்பயன் கருதி உதவுங் கொடை; gift made in expectation of a return. 3. சரக்குகளுக்கு விலையாகக் கொடுக்கப்பட்ட பொருள் (சுக்கிரநீதி, 98); price.

த.வ. 1. சிறுகடன் 2. எதிர்நோக்கு உதவி 3. மாறுகொள்ளல் 4. பண்டமாற்று

[Skt. prati-dāna > த. பிரதிதானம்]

பிரதிதுரை *pradituraí,* பெ.(n.) உதவியதிகாரி (வின்.); a deputy governor.

த.வ.துணை ஆளுநர்

[Skt. prati+dhurya > த. பிரதிதுரை]

பிரதிதொனி *piradi-toṉi,* பெ.(n.) எதிரொலி (யாழ்.அக.); echo, reverberation.

த.வ.எதிரொலி, மாறுஒலி

[Skt. prati-dhvani > த. பிரதிதொனி]

பிரதிநாதம் *piradi-nādam,* பெ.(n.) **பிரதிதொனி** (யாழ்.அக.) பார்க்க; see *piradi-toṉi.*

[Skt. prati+nāda > த. பிரதிநாதம்]

பிரதிநாயகன் *piradināyagaṉ,* பெ.(n.) பாட்டுடைத் தலைவனின் பகைவன்; the chief adversary of the hero of any poetic composition.

த.வ. கொடும்பன்

[Skt. prati+nāyaka > த. பிரதிநாயகன்]

பிரதிநிதி *piradinidi,* பெ.(n.) 1. மாற்று ஆள்; deputy, representative. 2. காலத்தின் தகுதி

நோக்கி ஒரு செயலைச் செய்தற்கும் ஒழிதற்கும் உரிமையுள்ள அமைச்சன் (சுக்கிரநீதி,66.); a minister who does or forbears from doing an act, good or evil, as occasion demands.

த.வ.நிகராளி, நிகராளர், நிகரர்

[Skt. prati-nidhi> த. பிரதிநிதி]

பிரதிப்பிரயோசனம் *piradi-p-pirayōsaṉam,* பெ.(n.) கைம்மாறு (உ.வ.); benefit in return, consideration, remuneration.

த.வ.எதிர்நோக்கு உதவி

[Skt.prati+pra-yōjana> த. பிரதிப்பிரயோசனம்]

பிரதிபடன் *piradipaḍaṉ,* பெ.(n.) எதிராளி; opponent, competitor. "ஹேயப்ரதி படனாய்" (திவ்.திருவாய்.4,1,10,பன்னீ.).

த.வ.போட்டியாளர்

[Skt. prati-bhaṭa> த. பிரதிபடன்]

பிரதிபத்தி *piradipatti,* பெ.(n.) 1. மதிப்பு; regard, respect. ஆசாரியனிடத்தில் பிரதிபத்தி யுள்ளவன். 2. நம்பிக்கை; confidence, faith. மந்திரத்தில் பிரதிபத்தியிருந்தால் பலன் கை கூடும்.

த.வ.மதிப்புரவு

[Skt. prati-patti> த. பிரதிபத்தி]

பிரதிபதம் *piradipadam,* பெ.(n.) 1. ஒரு பொருட்பன்மொழி (பி.வி.42); synonym. 2. சொற்பொருளுரை; explanation or interpretation, word by word.

த.வ. பொழிப்புரை

[Skt. prati+pada> த. பிரதிபதம்]

பிரதிபந்தகம் *piradipandagam,* பெ.(n.) தடை (உ.வ.); obstacle, impediment.

த.வ.இடையூறு, தடங்கல், முட்டுக்கட்டை

[Skt. prati-bandha-ka> த. பிரதிபந்தகம்]

பிரதிபந்தம் *piradibandam,* பெ.(n.) **பிரதிபந்தகம்** (வேதா.சூ.141,உரை) பார்க்க; see *piradipandagam.*

[Skt. pratibandha> த. பிரதிபந்தம்]

பிரதிபலம் *piradipalam,* பெ.(n.) **பிரதிப் பிரயோசனம்** பார்க்க; see *piradi-p-pirayōsaṉam.*

[Skt. prati-phala> த. பிரதிபலம்]

பிரதிபலனம் *piradipalaṉam,* பெ.(n.) 1. எதிருரு; reflection, shadow, mirrored image. "பிரதிபலனச் சாயையாகிய சீவேசுர சகத்திற்கு" (வேதா.சூ.56,உரை).

த.வ.எதிர்நிழல், எதிர்சாயை

[Skt. pratiphalana> த. பிரதிபலனம்]

பிரதிபலி-த்தல் *piradipali-,* 4 செ.கு.வி. (v.i.) கண்ணாடியில் எதிருரு தோன்றுதல் (கைவல். தத்துவ.32,உரை.); to be reflected, as an image in a mirror.

த.வ.எதிரொலித்தல்

[Skt. prati-phal> த. பிரதிபலி-த்தல்]

பிரதிபாத்தியம் *piradipāttiyam,* பெ.(n.) எடுத்து விளக்கப்படுவது (வேதா.சூ.9,உரை.); that which is explained or propounded.

த.வ.விளக்கவுரை, விரிவுரை

[Skt. pratipādya > த. பிரதிபாத்தியம்]

பிரதிபாதகம் *piradipādagam,* பெ.(n.) எடுத்து விளக்குவது (வேதா.சூ.9,உரை.); that which explains.

த.வ.விரிவுரை

[Skt. pratipādaka> த. பிரதிபாதகம்]

பிரதிபாதி-த்தல் *piratipāti-,* 4 செ.கு.வி. (v.t.) எடுத்து விளக்குதல்; to explain, illustrate. "இவ்வருத்தந்தனையே பிரதிபாதிக்கும்" (சூத.எக்.உத்.தைத்தரீக.16).

த.வ.விரிவுரையாற்றுதல்

[Skt. prati-pad> த. பிரதிபாதி-த்தல்]

பிரதிபிம்பம் *piradibimbam,* பெ.(n.) கண்ணாடி போன்ற பொருளில் தோன்றும் படிவுருவின் தோற்றம்; counterpart of an original, mirrored image.

த.வ.எதிருரு, நிழலுரு

[Skt. prati+bimba> த. பிரதிபிம்பம்]

பிரதிபுண்ணியவராகன் *piradipunniya-varāgan,* பெ.(n.) பழைய காசு வகை (பணவிடு.116.); an ancient coin.

[Skt. prati+punya+varāha> த. பிரதி புண்ணியவராகன்]

பிரதிமத்தியமம் *piradimattiyamam,* பெ.(n.) எழுவகைப் பண்களுள் நான்காவதாகிய "ம" என்ற பண் (சிலப்.3,23,உரை); (Mus.) highest variety of the fourth note of the gamut, one of šōḍaša-šuram.

[Skt. prati+madhyana> த. பிரதிமத்தியமம்]

பிரதிமாலை *piradi-mālai,* பெ.(n.) ஈற்றெழுத்து கவி (யாழ்.அக.); a stanza which begins with the last word or syllable of another stanza a capping verse.

[Skt. prati> த. பிரதி+மாலை]

பிரதிமானம் *piradi-mānam,* பெ.(n.) யானைக் கொம்புகளுக்கு இடையிலுள்ள முகப்பகுதி (பிங்.); the part of an elephant's head between its tusks.

த.வ. நுதல்

[Skt. pratimāna> த. பிரதிமானம்]

பிரதிமுகம் *piradimugam,* பெ.(n.) ஐவகை நாடக சந்தியுள் முளைத்து இலை தோன்றி நாற்றாய் முடிவதுபோல நாடகப்பொருள் நிற்பது (சிலப்.3,13,உரை.); that part of a drama which embraces the main action of the play and leads on to the catastrophe, epitasis, one of five kinds of nāḍaka-c-candi.

[Skt. prati> த. பிரதி+முகம்]

பிரதிமூர்த்தி *piradi-mūrtti,* பெ.(n.) 1. ஒத்த வடிவம்; likeness, image, representation. 2. பெயர்த்தெழுதுகை; transcript.

த.வ.ஒத்தபடி, ஒத்த உரு

[Skt. prati> த. பிரதி+மூர்த்தி]

பிரதிமை *piradimai,* பெ.(n.) உருவம்; puppet, figure, effigy, statue, portrait.

த.வ.உருவம், பொம்மை, கொடும்பாவி, சிலை, உருத்தோற்றம்

[Skt. pratimā> த. பிரதிமை]

பிரதியத்தனம் *piradiyattanam,* பெ.(n.) 1. எதிரிடை; opposition. 2. சிறைப்படுத்துகை; imprisonment. 3. பழிவாங்குகை; avenging. 4. விருப்பம்; liking.

த.வ.1. நேர் எதிர், 4. ஆசை

[Skt. prati-yatna> த. பிரதியத்தனம்]

பிரதியாதனை *piradiyādanai,* பெ.(n.) ஒத்த வடிவம் (யாழ்.அக.); representation, image.

த.வ.சார்பு வடிவம்

[Skt. prati-yātanā> த. பிரதியாதனை]

பிரதியுத்தரம் *piradiyuttaram,* பெ.(n.) மறுமொழி; answer.

த.வ.விடை

[Skt. pratyuttara> த. பிரதியுத்தரம்]

பிரதியுபகாரம் *piradi-y-ubagāram,* பெ.(n.) கைம்மாறு; favour in return, recompense.

த.வ.எதிர்நோக்கு உதவி

[Skt. pratyupakāra> த. பிரதியுபகாரம்]

பிரதியோகம் *piradi-yōgam,* பெ.(n.) 1. எதிரிடை; opposition, contrariety. 2. கூட்டம்; union.

[Skt. prati-yōga> த. பிரதியோகம்]

பிரதியோகி[1] *piradiyōgi,* பெ.(n.) 1. எதிர் மறைவினை; verb implying negation. "விதியனுயோகி மறைபிரதியோகி" (பி.வி. 16,உரை). 2. எதற்கு இன்மை கூறப்படுகிறதோ அது; (Log.) a thing whose non-existence is predicated.

த.வ. எதிர்வினை

[Skt. prati-yōgin> த. பிரதியோகி]

பிரதியோகி[2] *piradiyōgi,* பெ.(n.) எதிராளி (சி.சி.3,4,சிவாக்.); opponent.

[Skt. prati-yōgin> த. பிரதியோகி]

பிரதிரூபம் *piradi-rūbam,* பெ.(n.) **பிரதிமூர்த்தி** (யாழ்.அக.) பார்க்க; see *piradi-mūrtti.*

[Skt. prati-rūpa> த. பிரதிரூபம்]

பிரதிலோமசன் *piradilōmašan,* பெ.(n.) உயர்குலப் பெண்ணுக்கும் இழிகுல ஆணுக்கும் பிறந்த மகன் (பிங்.); one born of a union between a man of inferior caste and a woman of a superior caste.

[Skt. prati-lōma-ja> த. பிரதிலோமசன்]

பிரதிவசனம் *piradi-vašanam,* பெ.(n.) 1. மறுமொழி; answer, reply. 2. எதிரொலி (யாழ்.அக.); echo.

த.வ.1. விடை, 2. மறு ஒலி

[Skt. prati-vacana> த. பிரதிவசனம்]

பிரதிவத்தூபமை *piradivattūbamai,* பெ.(n.) மறுபொருளுவமை (தண்டி.30,6.); a kind of simile.

[Skt. prati-vastūpamā> த. பிரதிவத்தூபமை]

பிரதிவாதம் *piradi-vādam,* பெ.(n.) எதிர்உரை (வாதம்.); defence, replication, answer in law.

[Skt. prati+vāda> த. பிரதிவாதம்]

பிரதிவாதி[1] *piradi-vādi,* பெ.(n.) 1. எதிர் வழக்கன்; defendant, respondent, the accused. 2. எடுத்துரைப்பில் எதிராளி; opponent in a controversy.

[Skt. prati+vādin> த. பிரதிவாதி]

பிரதிவாதி[2]**-த்தல்** *piradi-vātd,* 4 செ.குன்றாவி. (v.t.) எதிராடல்; to reply, present a defence.

த.வ.சொற்போர், சொல்லாடல்

[Skt. prati+vāda> த. பிரதிவாதி-த்தல்]

பிரதிவாபம் *piradivābam,* பெ.(n.) மருந்து ஊர்தியில் மருந்தோடு எடுத்துச் செல்லப்படும் துணைப் பொருள் (யாழ்.அக.); any substance taken along with a medicine vehicle.

[Skt. prati-vāpa> த. பிரதிவாபம்]

பிரதிவிம்பம் *piradivimbam,* பெ.(n.) எதிர் நிழல்; reflection, image, counterpart of an original. "தோன்றிடும் பிரதிவிம்பம்" (இரகு. குசன.27).

த.வ.எதிருரு, நிழலுரு

[Skt. pratibimba> த. பிரதிபிம்பம்]

பிரதிவிம்பீகரி-த்தல் *piradivimpīkari-,* 4 செ.கு.வி. (v.i.) பிரதியுருவந் தோன்றுதல்; to take shape again. "நடராஜ மூர்த்தமே பிரதிவிம்பீகரித்துப் பெரியோனெனச் சொல்ல வந்ததால்" (சந்திரகலாமாலை,15).

[Skt. prati-bimba+kṛ> த. பிரதிவிம்பீகரி-த்தல்]

பிரதீகாரம்[1] *piradīkāram,* பெ.(n.) 1. மருத்துவம்; remedy. 2. சினமாறுகை; conciliation. 3. சீர்திருந்துகை; reforming. 4. பழி வாங்குகை; avenging.

த.வ.1. தீர்வு, 2. அமைதிப்படுகை, 3. நல்வழிப்படுத்துகை, 4. எதிர்பழி தீர்க்கை

[Skt. prati-kāra> த. பிரதீகாரம்]

பிரதீகாரம்[2] *piradīkāram* பெ.(n.) 1. கதவு; door. 2. ஏமாற்றுகை; deception.

த.வ.1. கபாடம் 2. கரவடம்

[Skt. pratī-hāra> த. பிரதீகாரம்]

பிரதீகாரம்[3] *piradīkāram,* பெ.(n.) எதிரிடை; opposition. "பெண்ணு மாணும் மன்மையிற் பிரதீகாரமில்லை" (நீலகேசி,96,உரை).

[Skt. pratī-kāra> த. பிரதீகாரம்]

பிரதீதி *piradīdi,* பெ.(n.) 1. அறிவு (சி.சி.2, 54,சிவாக்.); clear apprehension or insight. 2. புகழ் (யாழ்.அக.); fame. 3. மகிழ்ச்சி; delight. 4. விருப்பம் (யாழ்.அக.); desire. 5. தோன்றுகை; perception.

த.வ.1. மூளை 2. பெருமை 3. பெருங்களிப்பு, பேருவகை 4. ஆசை 5. உதிக்கை

[Skt. pratīti> த. பிரதீதி]

பிரதீபம் *piradībam,* பெ.(n.) 1. எதிர் நிலை; contrariness,opposition. 2. உவமேயங்களை மாற்றிச் சொல்லும் எதிர் நிலை அணி (அணியி.4.); a figure of speech.

த.வ. மாறுநிலை

[Skt. pratīpa> த. பிரதீபம்]

பிரதீரம் *piradīram,* பெ.(n.) கரை (யாழ்.அக.); bank, shore.

த.வ.ஓரம்

[Skt. pra-tīra> த. பிரதீரம்]

பிரதேசம் *piradēšam,* பெ.(n.) இடம்; place, locality. "ஆன்மா சரீரத்திலே ஒரு பிரதேசத்திலே இருப்பன்" (சி.சி.4,16,மறைஞா.).

த.வ.பகுதி

[Skt. pra-dēša> த. பிரதேசம்]

பிரதை *piradai,* பெ.(n.) பாண்டுவின் மனைவியான குந்தி தேவி (பாரத.சம்பவ.25.); Kundī, wife of Pāṇḍu.

[Skt. pṛthā> த. பிரதை]

பிரதோடம் *piradōḍam,* பெ.(n.) 1. ஞாயிறு மறைவிற்கு முன்னும் பின்னுமுள்ள மூன்றே முக்கால் நாழிகை; evening, 3 3/4 nāḻigai before and after sunset. 2. சிவபெருமானை வழிபடுதற்குரியதான கரும்பக்கத்தின் பதின் மூன்றாம் உவா நாள் (கிருஷ்ணத் திரயோதசி) கூடிய மாலைக்காலம்; evening of the 13th *titi* of dark fortnight, considered auspicious for worshipping Siva.

த.வ.பதின்மும்மி

[Skt. pra-dōsa> த. பிரதோடம்]

பிரபஞ்சக்கட்டு *pirabañja-k-kaṭṭu,* பெ.(n.) உலகப் பற்று; worldly attachment.

த.வ.அன்புத்தளை, உறவுக்கட்டு

[Skt. pra-pañca> த. பிரபஞ்சம்+கட்டு]

பிரபஞ்சகாரியம் *pirapañja-kāriyam,* பெ.(n.) உலகியல் பற்று, தொடர்பு; secular matter, worldly affair.

த.வ.இம்மைஆசை, உறவுத்தளை, உலகத்தொடர்பு

[Skt. pra-pañca+kārya> த. பிரபஞ்சகாரியம்]

பிரபஞ்சசாகரம் *pirabañjašāgaram,* பெ.(n.) கடல்போல் பரந்துள்ள உலகியல் பற்று (வின்.); the ocean of worldly attachment.

த.வ.இம்மைப் பற்று, வாழ்க்கைப் பற்று, உலக ஆசை

[Skt. pra-pañca+šāgara> த. பிரபஞ்சசாகரம்]

பிரபஞ்சம் *pirabañjam,* பெ.(n.) 1. உலகம்; universe, phenomenal world. "பிரபஞ்ச வைராக்கியம்" (திருவாச.). 2. உலக வாழ்வு; mundane existence. 3. உலகியல்; worldliness.

த.வ.1. அண்டம் 2. இம்மை வாழ்க்கை 3. வாழ்வியல்

[Skt. pra-pañca> த. பிரபஞ்சம்]

பிரபஞ்சமயக்கம் *pirabañja-mayakkam,* பெ.(n.) உலக நிகழ்ச்சிகளிலுள்ள மனமயக்கம்; delusion caused by worldly attachment.

த.வ.அண்டமயக்கம், உலகியல் தடுமாற்றம்

[Skt. pra-pañca> த. பிரபஞ்சம்+மயக்கம்]

பிரபஞ்சமாயை *pirabañja-māyai,* பெ.(n.) 1. உலகமாயை; illusion of the phenomenon of the world. 2. மூலம்; matter. 3. உலகப் பொருள்களின் போலித் தோற்றரவு; vanity of earthly things.

த.வ. அடிப்படை

[Skt. pra-pañca> த. பிரபஞ்சம்]

பிரபஞ்சவாசனை *pirabañja-vāšaṉai,* பெ.(n.) உலகத்தின் இன்பதுன்ப நுகர்வு; experience of the joys and sorrows of the world.

[Skt. pra-pañca+vāsanā> த. பிரபஞ்சவாசனை]

பிரபஞ்சவாழ்வு *pirabañja-vāḻvu,* பெ.(n.) உலக வாழ்க்கை (வின்.); worldly prosperity, temporal enjoyment.

த.வ.இம்மை மகிழ்வு, உலகியல் நுகர்வு

[Skt. pra-pañca> த. பிரபஞ்சம்+வாழ்வு]

பிரபஞ்சவியாபாரம் *pirabañja-viyābāram,* பெ.(n.) உலகியல் செயல் (வின்.); worldly dealings, earthly concern.

த.வ.நடைமுறை வாழ்க்கை, உலக நடவடிக்கை

[Skt. pra-pañca+vyāpāra> த. பிரபஞ்ச வியாபாரம்]

பிரபஞ்சவிருத்தி *pirabañja-virutti,* பெ.(n.) 1. உலகச் செயல்கள்; worldly actions, work or trade. 2. போலித் தோற்றரவு (மாயா) செயல்; exhibition or development of Māyā in the production of the universe.

த.வ.1. அண்ட நிகழ்வுகள் 2. பொய்மைத் தோற்றம்

[Skt. pra-pañca+vṛtti> த. பிரபஞ்சவிருத்தி]

பிரபஞ்சவிலாசம் *pirabañja-vilāśam,* பெ.(n.) இன்மைத் தோற்றத்தின் விந்தையூட்டும் பல வகையான அழகு வெளிப்பாடுகள் (வின்.); exhibition of Māya in creation, displaying variety, order and beauty.

த.வ.பொய்மை வெளிப்பாடு

[Skt.pra-pañca+vi-lāsa> த. பிரபஞ்சவிலாசம்]

பிரபஞ்சவைராக்கியம் *pirabañja-vairāk kiyam,* பெ.(n.) உலக வாழ்க்கையி லுண்டாகும் வெறுப்பு; disgust in worldly affairs.

த.வ. பற்றுநீக்கம்

[Skt. pra-pañca+vairāgya> த. பிரபஞ்ச வைராக்கியம்]

பிரபஞ்சனன் *pirabañjaṉaṉ,* பெ.(n.) காற்று (பிங்.); wind.

த.வ.வளி

[Skt. prabhañjana> த. பிரபஞ்சனன்]

பிரபஞ்சானுக்கிரகம் *pirabañjaṉukkiragam,* பெ.(n.) உயிர்களிடத்துக் கடவுள் காட்டும் திருவருள்; grace of deity towards souls of the world.

த.வ.இறையருள், கடவுள் கருணை, தெய்வ இரக்கம்

[Skt. pra-pañca+anu-graha> த. பிரபஞ்சானுக்கிரகம்]

பிரபஞ்சி *pirabañji,* பெ.(n.) உலகை உள்ளடக்கியது (சி.சி.2,50,ஞானப்.); that which constitutes the universe.

த.வ.விரிந்த அண்டம்

[Skt. prapañcin> த. பிரபஞ்சி]

பிரபத்தி *pira-patti,* பெ.(n.) இறைவனிடம் அடைக்கலம் புகுகை; taking refuge, as in God. "பிரபத்தியென்னும் பேருடை நெறியால்" (பிரபோத.45,10).

த.வ.திருவடிப் பற்றுகை

[Skt. pra-patti> த. பிரபத்தி]

பிரபதனம் *pirabadaṉam,* பெ.(n.)இறப்பு (சா.அக.); death.

த.வ.சாவு, மாள்வு

பிரபந்தகற்பனை *pirabandakarpaṉai,* பெ.(n.) கட்டுக்கதை (வின்.); fable, fiction, fictitious language, allegorical expression.

த.வ.கற்பனைக் கதை, புனை கதை

[Skt. pra-bandha> த. பிரபந்தம்+கற்பனை]

பிரபந்தம் *pirabandam,* பெ. (n.) சிற்றிலக்கியம்; fable, fiction.

[Skt. pra-bandha> த. பிரபந்தம்]

பிரபந்தீகரி-த்தல் *pirabandīkari-,* 4 செ.குன்றாவி. (v.t.) நூலாக இயற்றுதல் (ஈடு,அவ,ஜீ.); to produce in a literary form.

த.வ.இலக்கியமாக்குதல்

[Skt. prabandhīkr> த. பிரபந்தீகரி]

பிரபலம் *pirabalam,* பெ.(n.) 1. புகழ்; fame, celebrity. 2. வல்லமை; strength, power. "பிரபலச்சூரர்" (திருப்பு.613). 3. வலிமை யுள்ளது; that which is powerful or authoritative. "சுருதிகட்குத் தம்முட் பிரபல துர்ப்பலங்கள் அறிய மாட்டாது" (சித். மரபுகண்.பக்.7).

த.வ.1. பெயர் பெற்றது 2. வலிமை 3. ஆற்றல்

[Skt. pra-bala> த. பிரபலம்]

பிரபலன் *pirabalaṉ,* பெ.(n.) புகழ் பெற்றவன் (யாழ்.அக.); famous, renowned or powerful person.

த.வ.பெயர் பெற்றவன், பெருமை பெற்றவன்

[Skt. pra-bala> த. பிரபலன்]

பிரபவ *pirabava,* பெ.(n.) சக ஆண்டு (கி.பி.78) தொடக்கத்தில் வடமொழியாளரின் ஆண்டு கள் அறுபதனுள் முதலாம் ஆண்டு; the first

year of the Jupiter cycle of 60 years.

[Skt. Prabhava> த. பிரபவ]

பிரபவாதிச்சுவடி *pirabavādi-c-cuvaḍi,* பெ.(n.) சிறுவர்களுக்கான இந்துக்களின் ஐந்திய (பஞ்சாங்க) நூல்; a primer explaining the Hindu calender.

பிரபன்னன் *pirabaṉṉaṉ,* பெ.(n.) தன்னுடைய ஒரே அடைக்கலம் இறைவனே என்று சரணடைந்தவன்; he who accepts God as his sole refuge.

[Skt. pra-panna> த. பிரபன்னன்]

பிரபாகரம் *pirabākaram,* பெ.(n.) பிரபாகர னென்பவனாற் பரப்புரை செய்யப்பெற்ற (பிரச்சாரம்) மீமாஞ்சமதவகை; a system of Mīmāṣā Philosophy expounded by Prabhākaran.

[Skt. prabhākara> த. பிரபாகரம்]

பிரபாகீடம் *pirabā-kīḍam,* பெ.(n.) மின்மினி (சங்.அக.); fire - fly, glow-worm.

த.வ.மின்னாம்பூச்சி

[Skt. prabhā-kīṭa> த. பிரபாகீடம்]

பிரபாணி *pirabāṇi,* பெ.(n.) உள்ளங்கை (யாழ்.அக.); hollow of the hand, palm.

த.வ.அங்கை

[Skt. pra-pāṇi> த. பிரபாணி]

பிரபாதம்[1] *pirapādam,* பெ.(n.) 1. செங்குத்து; precipice. 2. மலைவீழருவி; cascade, waterfall. 3. கரை; bank, shore.

த.வ.1. நெட்டுவாக்கு 2. நீர் வீழ்ச்சி 3. ஓரம்

[Skt. pra-pāta> த. பிரபாதம்]

பிரபாதம்[2] *pirapādam,* பெ.(n.) விடியற்காலை (யாழ்.அக.); break of day.

த.வ.வைகறை, விடியற்பொழுது

[Skt. pra-bhāta> த. பிரபாதம்]

பிரபாதம்[3] *pirapādam,* பெ.(n.) தெரு (யாழ்.அக.); street.

த.வ.வீதி, பொதுப்பாதை, பொதுவழி

[Skt. pra-pātha> த. பிரபாதம்[3]]

பிரபாதிகம் *pirapādigam,* பெ.(n.) மயில் (யாழ்.அக.); peacock.

[Skt. prapādika> த. பிரபாதிகம்]

பிரபாலன் *pirabālaṉ,* பெ.(n.) மாணாக்கன் (யாழ்.அக.); disciple, pupil.

த.வ.கற்பவன், பயில்பவன்

[Skt. pra-bāla> த. பிரபாலன்]

பிரபாவம் *pirabāvam,* பெ.(n.) 1. மேன்மை; dignity, majesty, pre-eminence, grandeur. 2. புகழ்; glory, renown. 3. ஒளி; light, splendour, lustre. 4. வலிமை; strength, valour.

த.வ.1. உயர்வு, மதிப்பு 2. பெருமை, 3. வெளிச்சம், 4. ஆற்றல்

[Skt. pra-bhāva> த. பிரபாவம்]

பிரபாவளி *pirabāvaḷi,* பெ.(n.) திருவாசி (M.E.R.151 of 1924); ornamental arch over the figure of a deity.

த.வ.இறை ஒளிவட்டம்

[Skt. prabhāvali> த. பிரபாவளி]

பிரபாவனம் *pirabāvaṉam,* பெ.(n.) குளிர் சோலை (யாழ்.அக.); cool grove.

த.வ.பூங்காவனம்

[Skt. prapāvana> த. பிரபாவனம்]

பிரபிதாமகன் *pirapidāmagaṉ,* பெ.(n.) கொட்பாட்டன்; great - grandfather. "பிதாபிதமகர்... பிரபிதாமகரா மருவு மூவர்" (சேதுபு.துராசா.55).

த.வ.பூட்டன்

[Skt. prapitāmaha> த. பிரபிதாமகன்]

பிரபிதாமகி *pirapidāmagi,* பெ.(n.) கொட்பாட்டி; great-grandmother.

த.வ.பூட்டி

[Skt. pra-pitāmahi> த. பிரபிதாமகி]

பிரபு *pirabu,* பெ.(n.) 1. பெருமையிற் சிறந்தோன்; lord, noble. 2. செல்வன்; a man of wealth.

3. அதிகாரி; a man in power. 4. கொடையாளி (உ.வ.); benefactor. 5. இதளியம் (பாதரசம்) (யாழ்.அக.); quick silver, mercury.

த.வ. 1. மேன்மையானவன், உயர்ந்தோன் 2. பணக்காரன் 3. மேல் அலுவலர் 4. வள்ளல்

[Skt. pra-bhu> த. பிரபு]

பிரபுசத்தி *pirabu-šatti,* பெ.(n.) மூன்று ஆற்றல்களுள் பொருள் படைகளால் அரசர்க்கு அமையும் ஆற்றல் (இரகு.திக்கு.25.); the power of a king derived from his resources in men and money, one of mu-c-catti.

[Skt. pra-bhu+šakti> த. பிரபுசத்தி]

பிரபுத்தன் *pirabuttan,* பெ.(n.) 1. விழிப் புள்ளவன்; wakeful person. 2. இளமைப் பருவமடைந்தவன்; one who has attained majority. "குமாரன் பிரபுத்தனானவாறே கொடுக்கச் சொல்லுமா போலே" (குருபரம். 319).

த.வ.1. கவனமுள்ளவன், 2. விடலை, காளையன்

[Skt. pra-buddha> த. பிரபுத்தன்]

பிரபுத்துவம் *pirabuttuvam,* பெ.(n.) 1. மீப்பெருமையாளன் தன்மை; rank or status of a nobleman. "பிரபுத்துவகுமார" (திருப்பு.870). 2. ஆட்சி; power, sovereignty.

த.வ.பெருந்தகைமை, பெரும்புகழுடைமை

[Skt. pra-bhu-tva> த. பிரபுத்துவம்]

பிரபுமோடி *pirabu-mōḍi,* பெ.(n.) பெருமிதம்; lordly style.

த.வ.செறுக்கு, உள்ளக்களிப்பு

[Skt. pra-bhu> த. பிரபு+மோடி]

பிரபுலிங்கலீலை *pirabu-liṅga-līlai,* பெ.(n.) சிவப்பிரகாசரால் கி.பி.1652இல் இயற்றப்பட்ட சிவ எழிலுருவோனான அல்லமாப் பிரபுவின் வரலாறு; a poem on the exploits of Allamā-p-pirapu, a manifestation of šiva, by šiva-p-pirakāšar, composed in A.D.1652.

[Skt. pra-bhu+liṅga+līla> த. பிரபுலிங்கலீலை]

பிரபூதபலி *pirabhūdabali,* பெ.(n.) இறந்தவர் பொருட்டுப் பத்தாம் நாளில் அடை முதலிய வற்றோடு இடும் சோற்றுப்படையல்; boiled rice and cakes offered to the spirit of the deceased on the tenth day of his death.

த.வ.பிண்டச்சோறு

[Skt. prabhūbali> த. பிரபூதபலி]

பிரபேதம் *pirabēdam,* பெ.(n.) வகை; kind, variety.

த.வ.பகுப்பு, பிரிவு

[Skt. pra-bhēda> த. பிரபேதம்]

பிரபை[1] *pirabai,* பெ.(n.) 1. ஒளி; light, radiance, brightness, lustre. "தமனியப் பிரபை" (திருப்பு.319). 2. திருவாசி (S.I.I.ii,136,96); nimbus, halo, aureole over the head of a deity. 3. கொற்றவை (யாழ்.அக.); Durgā.

த.வ.1. வெளிச்சம், 2. ஒளிவட்டம், 3. அம்மன், காடுகாள், காளி, மோடி

[Skt. pra-bhā> த. பிரபை]

பிரபோதசந்திரோதயம் *pirabōda-šandirō dayam,* பெ.(n.) பிரபோத சந்த ரோதயமென்ற வடமொழி நாடகத்தைப் பின்பற்றித் தமிழ் மொழியில் மாதைத் திருவேங்கடநாதர் இயற்றிய வேதாந்தம் தொடர்பான பாவியம்; a metaphysical poem adapted by Mātai-t-tiruvēṅkaṭanādar from a Sanskrit drama of the same name.

[Skt. prabōdha-candrōdaya> த. பிரபோத சந்திரோதயம்]

பிரபோதம் *pirabōdam,* பெ.(n.) பேரறிவு; wisdom, knowledge.

த.வ.முழு அறிவு, பெரும்புலமை

[Skt. pra-bōdha> த. பிரபோதம்]

பிரபோதனம் *pirabōdanam,* பெ.(n.) 1. எழுப்புகை; waking. 2. கற்பிக்கை; teaching.

த.வ.1. விழிப்படைகை, 2. சொல்லிக் கொடுக்கை

[Skt. prabōdhana> த. பிரபோதனம்]

பிரபோதிகை *pirabōdigai,* பெ.(n.) கற்பிப்பது; that which instructs or illuminates. "விதிநிஷேதப் பிரபோதிகையா யிருக்கின்ற" (சி.சி.2,1,ஞானப்.).

த.வ.விளக்குகை

[Skt. prabōdhikā> த. பிரபோதிகை]

பிரமக்கிரந்தி *birama-k-kirandi,* பெ.(n.) 1. பூணூல் முடிச்சு வகை; a kind of knot tied in the sacred thread. 2. சிவமும் சத்தியும் கூடுதற்கு அறிகுறியாக இடும் தருப்பை முடி வகை (வின்.); tying together two bunches of sacrificial grašs in representation of the union of šiva and šakti.

[Skt. brahman+granthi> த. பிரமக்கிரந்தி]

பிரமகத்தி *biramakatti,* பெ.(n.) 1. பார்ப்பனக் கொலை; murder of a Brahmin. 2. கொன்றானைத் தொடர்ந்து பற்றும் பார்ப்பனக் கொலைப் பாவம்; sin of Brahminicide, haunting and pursuing the murderer. "பிரமகத்தியி னீங்கிப் பிறங்குவான்" (சேதுபு.தனுக்.57). 3. பார்ப்பனைக் கொலை செய்தோனைத் தொடர்ந்து வரும் இறந்தவனுருவம்; ghost of a murdered Brahmin, believed to haunt the murderer.

த.வ. பார்ப்பனப் பேய்

[Skt. brahma-hatyā> த. பிரமகத்தி]

பிரமகபாலம் *birama-kabālam,* பெ.(n.) 1. நான்முகனின் ஐந்தாந்தலையைக் கிள்ளி இரப்பு ஓடாகச் சிவன் கைக்கொண்ட தலையோடு; skull of the fifth head of Brahmā, plucked off by Siva and carried in his hand as a begging bowl. 2. இமய மலையிலுள்ள ஒரு தெய்வத்தன்மை வாய்ந்த இடம்; a sacred place of pilgrimage in Badarinath.

த.வ.1. இரப்பு மண்டையோடு, 2. நற்பேறு இடம், தூய இடம்

[Skt. brahman+kapāla> த. பிரமகபாலம்]

பிரமகலை *birama-kalai,* பெ.(n.) வலது நாசியின் வழியாக வரும் மூச்சுக் காற்று (சா.அ.); vital air passing through the right nostril.

[Skt. bhrama+kalā> த. பிரமகலை]

பிரமகற்பம் *birama-karpam,* பெ.(n.) 1. நான்முகனது வாழ்நாள்; the age or cosmic period of Brahmā. "முன்னமோர் பிரமகற்ப முடிவினில்" (திருவாலவா.47,1). 2. ஒரு பேரெண் (திவா.); a very large number.

[Skt. brahman> த. பிரமன்]

பிரமகன்னிகை *birama-kannigai,* பெ.(n.) கலைமகள் (யாழ்.அக.); Sarasvati, the Goddess of learning.

த.வ.நான்முகன் தலைவி, புலமகள்

[Skt. Brahma-kanyakā> த. பிரமகன்னிகை]

பிரமகாதகன் *birama-kādagan,* பெ.(n.) பார்ப்பனனைக் கொலை செய்தோன் (சங்.அக.); murderer of a Brahmin.

[Skt. brahman+ghātaka> த. பிரமகாதகன்]

பிரமகாயத்திரி *birama-gāyattiri,* பெ.(n.) பார்ப்பனர் நாள்தோறும் வழிபடும் மந்திரவகை; a sacred mantra repeated by the Brahmins in their daily worship.

[Skt. brahman+gāyatri> த. பிரமகாயத்திரி]

பிரமகீதை *birama-gidai,* பெ.(n.) தத்துவ ராயசுவாமிகள் இயற்றிய ஒரு வேதாந்த நூல்; a treatise on Vēdānda by Tattuva-rāyar.

[Skt. brahman+gita> த. பிரமகீதை]

பிரமகுலம் *birama-kulam,* பெ.(n.) பார்ப்பனக்குலம்; the Brahmin caste.

[Skt. brahman> த. பிரம்மன்]

பிரமகூர்ச்சம் *birama-kūrccam,* பெ.(n.) 1. தருப்பை முடிச்சு; a knot of darbha graff. "பிரமகூர்ச்சந் தோயுநீர்" (கூர்மபு.தான முறைத்.17). 2. ஆனைந்தை மட்டும்

உட்கொள்ளும் நோன்புச் சிறப்பு; a religious fast in which *pañca-kavviyam* alone is taken. 3. ஆனைந்து; the five products of the cow.

[Skt. brahman> த. பிரம்மன்]

பிரமகைவர்த்தம் *birama-kaivarttam,* பெ.(n.) பதினெண் தொன்மத்து (புராணம்) ளொன்று; a chief Purāṇa, as of *padinen-purāṇam.*

[Skt. brahma-vaivartta> த. பிரமகைவர்த்தம்]

பிரமசடங்கம் *pirama-šaḍangam,* பெ.(n.) உடலின் ஆறுறுப்புகளைத் தொட்டுப் பலுக்கும் ஆறு மந்திரங்கள் (வின்.1); a group of six mantras recited while touching the six members of the body in consecration.

[Skt. brahman+ṣaḍ-aṅga> த. பிரமசடங்கம்]

பிரமசமாசம் *pirama-šamāšam,* பெ.(n.) புத்தாக்கம் பெற்ற இந்து சமயங்களுள் ஒன்று; the Brahma Samāj, a reformed sect of the Hinduism.

[Skt. brahman+samāša> த. பிரமசமாசம்]

பிரமசரியம் *pirama-šariyam,* பெ.(n.) 1. தவமனை நான்கனுள் குருவிடமிருந்து, ஓதுதலும் நோன்பு காத்தலுமாகிய நிலை (சீவக.712); student life, life of one devoted to the study of the Vēdas, one of four acciramam. 2. திருமணம் இல்லாத வாழ்வு (இ.வ.); celibate life. 3. தவம் (அக.நி.); penance. 4. பார்ப்பனர் (அக.நி.); Brahmins.

[Skt. brahmacarya> த. பிரமசரியம்]

பிரமசாத்தன் *pirama-šāttan,* பெ.(n.) முருகக் கடவுளது பதினெண்ணுருவங்களுள் ஒன்று (தணிகைப்பு.அகத்தியன்.75); a manifestation of lord Murugan.

[Skt. brahma-sāstṛ> த. பிரமசாத்தன்]

பிரமசாரி *piramašāri,* பெ.(n.) 1. குழுவிடமிருந்து ஓதுதலும், நோன்பு காத்தலுமாகிய செய் கடன்களை மேற்கொண்டொழுகும் முதலாம் குருகுலத்திலுள்ளவன்; a religious student who prosecutes the study of the Vēdas under a preceptor and leads a life of celibacy, one in the first *acciramam.* "குறட் பிரமசாரி" (திவ்.பெரியாழ்.4,9,7). 2. திருமண மாகாதவன் (உ.வ.); celibate. 3. வீடுமன் (பீஷ்மர்) (சூடா.); Bhiṣma.

த.வ.மணமிலி

[Skt. brahma-cārin> த. பிரமசாரி]

பிரமசூத்திரம் *pirama-šūttiram,* பெ.(n.) 1. முப்புரிநூல் (யாழ்.அக.); sacred thread consisting of three strands, worn by Brahmins. 2. வியாசர் செய்த உத்தரமீ மாஞ்சை நூல்; a treattise on Vēdānda philosophy, by the sage Vyāsā.

[Skt. brahman+sūtra> த. பிரமசூத்திரம்]

பிரமஞானம் *pirama-ñāṉam,* பெ.(n.) 1. கடவுளைப் பற்றிய அறிவு; knowledge of the Supreme Being. 2. எல்லாவற்றையும் முழு முதற்பொருளாகக் காணும் அறிவு; pantheism, wisdom which regards everything as God. 3. சமய நல்லிணக்கம் அமைந்த ஒரு புத்தாக்க மதம் (இக்.வ.); theosophy.

த.வ.பேரறிவு

[Skt. brahma-jñāna> த. பிரமஞானம்]

பிரமதண்டம் *pirama-tanḍam,* பெ.(n.) 1. மந்திராயுத வகை; a magical weapon. "வசிட்டனாங் கேந்துமோர் பிரமதண்டம்" (சேதுபு.கவிதீர்த்த.19). 2. ஓகதண்டம் (வின்.); a staff to support the chin, used by yōgis during meditation. 3. நற்செயல்களுக்கு உதவாததாகக் கருதப்படுவதும் கதிரவன் நின்ற விண்மீனுக்குப் பதினைந்தாவதுமான விண்மீன்; the fifteenth *nakṣatra* from that occupied by the sun, considered in auspicious. "பிரமதண்டங் கொடியென்று பொல்லா யோகங்கள்" (விதான. குணாகுண.34).

[Skt. brahman> த. பிரமன்+தண்டம்]

பிரமதாயம் *pirama-tāyam,* பெ.(n.) பார்ப்பனர்க்கு விடப்படும் இறையிலி நிலம்; land granted to Brahmins free of assessment. "ஐஞ்ஞூறூர் பிரதமதாயங் கொடுத்து" (பதிற்றுப்.இரண்டாம்பத்து, பதிகம்).

த.வ.பார்ப்புத்தாயம்

[Skt. brahman >த. பிரமன்+தாயம்]

பிரமதானம் *pirama-tānam,* பெ.(n.) 1. பார்ப்பனர்க்குச் செய்யும் கொடை; gift to Brahmins. 2. வேதத்தைக் கற்பிக்கை; teaching the vēdas.

[Skt. brahman> த. பிரமன்+தானம்]

பிரமதேயம் *pirama-tēyam,* பெ.(n.) பார்ப்பனர்க்குக் கொடையாகக் கொடுக்கப்பட்ட ஊர்; village granted to Brahmins and inhabited by them.

[Skt. brahma> த. பிரமன்+தேயம்]

பிரமப்பொழுது *pirama-p-poḻudu,* பெ.(n.) கதிரவன் எழுவதற்கு இரண்டு நாழிகைக்கு முன்னுள்ள (இரண்டு நாழிகை) நேரம்; the period of time between the fourth and the second nāligai before sunrise. "பிரமப் பொழுதத்திலெழுந்து" (சேதுபு. அமுததீர்த்.11).

த-வ.பிரமமுகூர்த்தம், பிரமமுழுத்தம், பிராமமுழுத்தம்

[Skt.brahman > த. பிரமன்+பொழுது]

பிரமமாராயன் *pirama-mā-rāyan,* பெ.(n.) பார்ப்பனவமைச்சரின் பட்டப்பெயர்; title of Brahmin ministers in ancient times. "மும்மடிச்சோழ பிரமமாராயன்".

[Skt.brahman+mahārāja>த. பிரமமாராயன்]

பிரமரகசியம் *pirama-rakaśiyam,* பெ.(n.) கடுங்கமுக்கம்; profound secret. "பிரம ரகசியம் பேசி யென்னுள்ளத்தே" (அருட்பா, vi, அருட்பெருஞ்.1046).

[Skt. brahman+ragashya> த. பிரமரகசியம்]

பிரமரி *piramari,* பெ.(n.) 1. ஒரு வகைக் கூத்து; a kind of dance. 2. ஒரு அருக (சைன) மந்திரம் (மேருமந்.994.); a Jaina mandram.

[Skt. bhramari> த. பிரமரி]

பிரமவாதி *pirama-vādi,* பெ.(n.) உலகம் நான்முக (பிரம)னிட்ட முட்டை என்று சொற்போரிடுபவன்; one who holds the tenet that the universe is an egg of Brahmā. "பிரமவாதியோர் தேவனிட்ட முட்டை யென்றனன்" (மணிமே.27:96).

[Skt. brahma-vādin> த. பிரமவாதி]

பிரமன் *piramaṉ,* பெ.(n.) 1. மும்மூர்த்திகளுள் ஒருவரும் படைப்பவனாகக் கருதப்படு பவனுமான நான்முகன்; Brahmā, the creator, one of *tiri-mūrtti.* 2. மூல (பிரகிருதி) மாயை; primordial Matter. 3. பார்ப்பனன்; Brahmin. "பிரமன் முதல் நால்வருணத்து" (திருவானைக். கோச்செங்.69.). 4. வறட்சுண்டி (சங்.அக.); a sensitive plant.

[Skt. brahman> த. பிரமன்]

பிரமன்படை *piramaṉ-paḍai,* பெ.(n.) 1. சுருக்குக் கயிறு (பாசம்); noose, a Brahmā's weapon. 2. தண்டம்; club, a Brahma's weapon.

[Skt brahmaṉ>த. படை > பிரமன்படை]

பிரமனூர்தி *piramaṉ-ūrdi,* பெ.(n.) ஓதிமம் (அன்னம்) (பிங்.); swan, the vehicle of Brahmā.

த.வ.நான்முகனூர்தி

[Skt. பிரமன் >த. பிரமன்+ஊர்தி]

பிரமாஞ்சலி *piramāñjali,* பெ.(n.) மறை சொல்லும்போது இரண்டு கைகளையுஞ் சேர்த்து அபிமுகமாக ஏந்துகை; joining the hollowed hands in respectful salutation, while reciting the vēdas.

[Skt. brahmāñjali> த. பிரமாஞ்சலி]

பிரமாண்டம் *piramāṇḍam,* பெ.(n.) 1. உலகம்; the Universe, considered as an egg of Brahmā. 2. மிகப்பெரியது; that which is large, gigantic, huge or colossal.

"பிரமாண்டமாகச் செய்யும்" (தாயு.தந்தை தாய்.6). 3. பதினெண் தொன்மங்களுள் ஒன்று; a chief Purāṇa one of Padiṉeṉ-purāṇam. 4. பதினெட்டுத் துணைத் தொன்மத் (துணைபுராணத்) தொன்று (பிங்.); a secondary Purāṇa, one of 18 *upa-purāṇam.*

[Skt. brahmāṇḍa > த. பிரமாண்டம்]

பிரமாணம் *piramāṇam,* பெ.(n.) 1. அளவு (பிங்.); measure, degree, quantity. 2. சான்று; criterion, ground of inference or belief. 3. நெறி; rule, method, order, law. 4. (பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம், உவமானம், அருத்தாபத்தி, அபாவம் (குறள்.252.உரை.) என) அறுவகையாகவும் (பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம், உவமானம், அருத்தாபத்தி, அனுபலத்தி, சம்பவம், ஐதிகம் (வேதா.சூ.20.) என) எண் வகையாகவும்) உண்மை அறிவை அறிதற்கு உதவும் கருவி; means of acquiring certain knowledge according to Kūṟaḷ or eight according to Vēdānda šūḍāmaṇi. 5. கரி, சான்று (சாட்சியம்); proof, testimony, evidence. 6. ஆணை (பிங்.); oath, solemn declaration. 7. ஆவணம்; document. "இந்நிலம் விலை கொண்ட பிரமாணங்கள் கோயிலிலே ஒடுக்கவும்" (S.i.i.iii,215). 8. அரசனாணை (இராசாக் கினை); royal authority, sovereign command. 9. மறை; the Vēdas.

த.வ. சான்று

பிரமாணவாக்குமூலம் *piramāṇavakku-mūlam,* பெ.(n.) சூளுரை செய்து அறமன் றத்திற் சொல்லுஞ் செய்தி; deposition, sworn statement, affidavit.

[Skt. pirahmāṇa+ த. வாக்குமூலம்]

பிரமாணன் *piramāṇaṉ,* பெ.(n.) 1. மெய்யன்; truthful person. 2. திருமால்; Viṣṇu.

[Skt. piramāṇam>piramaṇaṉ>த. பிரமாணன்]

பிரமாதி *piramādi,* பெ.(n.) சக (கி.பி.78) ஆண்டின்போது தொடங்கிய வடமொழி யாளரின் ஆண்டு அறுபதனுள் பதின் மூன்றாவது; the 13th year of the Jupiter cycle of sixty years.

[Skt. pramāthin> த. பிரமாதி]

பிரமி[1]-த்தல் *birami-,* 4 செ.கு.வி. (v.i.) 1. மயங்குதல்; to be bewildered, confused, perplexed. "மனமே யேன்பிரமிக்கின்றாய்" (ஞானவா.உத்தா.24) 2. திகைத்தல் (உ.வ.); to be astonished or surprised, to wonder, to be amazed.

[Skt. bhrama> த. பிரமி[1]-த்தல்]

பிரமிப்பு *piramippu,* பெ.(n.) 1. மயக்கம்; bewilderment, confusion, perplexity. 2. திகைப்பு; amazement, astonishment, surprise.

[Skt. bhrami > த. பிரமிப்பு]

பிரமிருதம் *piramirudam,* பெ.(n.) 1. உழவுத் தொழில்; tillage, cultivation. 2. உழவால் வரும் பொருள்; cultivated produce. "உழவின் வந்துறல் பிரமிருதம்" (காஞ்சிப்பு. ஒழுக்.36).

[Skt. pra-mṛta> த. பிரமிருதம்]

பிரமுகர் *piramugar,* பெ.(n.) பலராலும் அறியப்பட்டு மதிக்கப்படுபவர், குறிப்பிடத்தக்க பெருமகன்; eminent person, prominent citizen.

த.வ. பெருமகன், பெரும்புள்ளி, பெருந்தகையர்

பிரமுகன் *piramgaṉ,* பெ.(n.) சிறந்தோன்; chief, prominent man.

[Skt. pra-mukha> த. பிரமுகன்]

பிரமை *piramai,* பெ.(n.) 1. மயக்கம்; wondering, bewilderment perplexity, confusion, stupor. "மனக்கவலைப் பிரமையுற்று" (திருப்பு.310). 2. பித்தியம் (பயித்தியம்); insanity, madness. 3. பெருமோகம்; infatuation. "நிமலமூர்த்தி பேரிலே பிரமை கொண்ட பெண்" (குற்றா.குற.38). 4. அறியாமை (யாழ்.அக.); ignorance.

[Skt. bhrama> த. பிரமை[1]]

பிரமோத்தரகாண்டம் *piramōttara-kāṇḍam,* பெ.(n.) பதினாறாம் நூற்றாண்டில் வரதுங்கராம பாண்டியனியற்றிய ஒரு சிவனியத்தொன்மம்; a Saiva Purāṇa by Varaduṅga-rāma-Pāṇḍiyaṉ, 16th C.A.D.

[*Skt. Brahmōttara-kāṇḍa> த. பிரமோத்தர காண்டம்*]

பிரமோதூத *piramōdūda,* பெ.(n.) ஆண்டு அறுபதனுள் நான்காவது; the 4th year of the Jupiter cycle of sixty years.

[*Skt. Pramōdōtha> த. பிரமோதூத*]

பிரமோற்சவம் *piramōṟšavam,* பெ.(n.) கோயிலில் ஆண்டுக்கொருமுறை நடக்கும் தலைமைத் திருவிழா; principal annual festival in a temple.

த.வ.பெருவிழா, பெருந்திருவிழா

[*Skt. brahmōtsava> த. பிரமோற்சவம்*]

பிரயத்தனம் *pirayattaṉam,* பெ.(n.) முயற்சி; effort, exertion, endeavour.

[*Skt. prayatna> த. பிரயத்தனம்*]

பிரயாசப்படு-தல் *pirayāšappaḍu-,* 20 செ.கு.வி. (v.i.) 1. முயற்சியெடுத்தல்; to try, exert oneself, endeavour. 2. வருந்தியுழைத்தல்; to take pains.

த.வ.பெருமுயற்சியெடுத்தல்

[*Skt. pra-yāsa> த. பிரயாசப்படுதல்*]

பிரயாசம் *pirayāšam,* பெ.(n.) 1. முயற்சி; endeavour, effort. 2. உழைப்பு; pains, labour, struggle. 3. தொல்லை, கடினம் (கஷ்டம்); trouble, difficulty, hardship.

[*Skt. pra-yāsa> த. பிரயாசம்*]

பிரயாணம் *pirayāṇam,* பெ.(n.) 1. செலவு (பயணம்); travel, journey, tour. 2. இறப்பு (மரணம்); death.

[*Skt. pra-yāṇa> த. பிரயாணம்*]

பிரயோகம் *pirayōgam,* பெ.(n.) 1. செலுத்துகை; discharge, as of weapons. 2. பயன்படுத்துகை; use, application to a purpose, use of means. 3. மந்திர ஏவல்; practice of magic. 4. மருந்து; medicine. 5. மேற்கோள்; authority, quotation. 6. உவமை, உவமானம் (யாழ்.அக.); example, illustration. 7. குதிரை (யாழ்.அக.); horse.

[*Skt. pra-yōga> த. பிரயோகம்*]

பிரயோகவிவேகம் *pirayōga-vivēgam,* பெ.(n.) வடமொழி இலக்கணவமைதியைத் தழுவிச் சுப்பிரமணிய தீட்சிதர் இயற்றிய தமிழ் இலக்கண நூல்; a treatise on Tamil grammar based on the principles of Sanskrit grammar by šuppira-maṇiya-tiṭcitar.

[*Skt. pra-yōga+vivēka> த. பிரயோகவிவேகம்*]

பிரயோசனம் *pirayōšaṉam,* பெ.(n.) 1. பயன்படுகை; usefulness. 2. வரவு (ஆதாயம்); profit, advantage. 3. பயன் (நன்.விருத். சிறப்புப்பாயி.); result of actions, good or bad, reward. 4. சடங்கு; ceremonial rites, as in a wedding.

[*Skt. prayōjana> த. பிரயோசனம்*]

பிரவகி-த்தல் *piravagi-,* 4 செ.கு.வி. (v.i.) நீர்ப்பெருக்கெடுத்தல்; to flood, to be in spate.

[*Skt. pravah> த. பிரவகி-த்தல்*]

பிரவஞ்சன் *piravañjaṉ,* பெ.(n.) வளி (வாயு) (சங்.அக.); wind.

[*Skt. pra-bhañjana> த. பிரவஞ்சன்*]

பிரவாகம் *piravāgam,* பெ.(n.) 1. வெள்ளம்; flood, inundation. "நின்கருணைப் பிரவாக வருளை" (தாயு.எங்குநிறை.6). 2. குளம் (யாழ்.அக.); tank. 3. தொழில் (யாழ்.அக.); action.

[*Skt. pra-vāha> த. பிரவாகம்*]

பிரவேசம் *piravēšam,* பெ.(n.) 1. நடிகர் முதலியோர் உள்நுழைதல் (பிரவேசம்); entry, entrance, as of actors. 2. வேலை முதலியவற்றின் தொடக்கம்; entrance in a

work or study, commencement, initiation. 3. வாயில்; place of entry, gateway.

[Skt. pra-vēśa> த. பிரவேசம்]

பிரளயகாலம் *piraḷaya-kālam,* பெ.(n.) உலகத்தின் முடிவு காலம்; cosmic deluge or dissolution.

த.வ.ஊழிப்பேரழிவு

[Skt. pralaya> த. பிரளயம்]

பிரளயம் *piraḷayam,* பெ.(n.) 1. கற்ப முடிவு (கூர்மபு.பிராகிருத.1.); end of a Kalpa when the destruction of the world occurs. 2. அழிவு; dissolution, destruction, annihilation. 3. வெள்ளம் (பிங்.); flood, inundation. 4. ஒரு பேரெண்; a large number. "பிரளயத்தினிற் றிரளவே" (கலிங். 330,புதுப்.) 5. 243 யானைகளும், 243 தேர் களும், 729 குதிரைகளும், 1215 காலாட்களுங் கொண்ட படை (பிங்.); division of an army consisting of 243 elephants, 243 chariots, 729 horses and 1215 foot - soldiers.

த.வ.ஊழிக்காலம்

[Skt. pra-laya> த. பிரளயம்]

பிராகாரம் *pirākāram,* பெ.(n.) 1. கோயிலைச் சுற்றியுள்ள வெளி; court or arcade surrounding a shrine in a temple. 2. மதில் (பிங்.); fort wall.

த.வ.சுற்றாலை, மதில்

[Skt. prākāra> த. பிராகாரம்]

பிராகிருதம் *pirākirudam,* பெ.(n.) 1. வடதமிழ் (பாகதம்) என்னும் வடமொழித் திரிபாயுள்ள மொழி; Prākrit, applied to dialects derived from Sanskrit, which show more or less phonetic, decay. "எகர ஒகரம் பிராகிருதத் திற்கும் உரிய" (நன்.73. விருத்.). 2. மூலம் தொடர்பானது; that which is of material world. "பிராகிருத லோகமே அநித்தியம்" (சி.சி.6.3, சிவாக்.). 3. இயற்கை யானது; that which is natural. 4. அழியத் தக்கது (வின்.); mortality, perishableness.

[Skt. prakṛta> த. பிராகிருதம்]

பிராசாதம் *pirāśadam,* பெ.(n.) 1. கோயில்; temple. 2. மேன்மாடம்; top story of a lofty building. 3. கருவறை (கர்ப்பக்கிருகம்) (சுக்கிரநீதி,239); the sanctum sanctorum of a temple. 4. ஒரு மந்திரம்; a mantra. "முலைப்பால் பிராசாதஞ் சொல்லி யருத்தி" (திருவானைக்.கோச்செங்.73).

[Skt. prāsāda> த. பிரசாதம்]

பிராணசேதம் *pirāṇaśēdam,* பெ.(n.) உயிர்ச்சிதைவு (சேதம்) (சா.அக.); loss of life.

[Skt. prāṇa+sētam> த. பிராணசேதம்]

பிராணலிங்கம் *pirāṇa-liṅgam,* பெ.(n.) வீரசைவர்கள் உடலில் அணிந்து வழிபடும் இலிங்கம் (வின்.); the liṅgam worshipped by a Liṅgāyat and worn on his person.

[Skt. prāṇa> த. பிராணன்+இலங்கம்]

பிராணவாயு *pirāṇa-vāyu,* பெ.(n.) 1. பிராணன், 3 பார்க்க; see pirāṇaṉ. "அறிந்திடும் பிராணவாயு" (சி.சி.3,4). 2. உயிர்வளி; oxygen. 3. நோய் வகை; angina pectoris.

பிராணன் *pirāṇaṉ,* பெ.(n.) 1. உயிர் (திவா.); life, vitality. 2. மூச்சு; breath, breathing. 3. பத்து வகை வளி (காற்று)களுள் மூச்சை நிகழ்விப்பது (பிங்.); the vital air of the body which causes respiration, one of taśa-vāyu. 4. வலிமை (உ.வ.); strength. 5. ஞாயிறு நடுவில் உள்ள சொற் (வாக்கியப்) பிழை தீர்க்கை (வின்.); correction applied to the Sun's mean position.

[Skt. prāṇa> த. பிராணன்]

பிராணி[1]-த்தல் *pirāṇi-,* 4 செ.கு.வி. (v.i.) மூச்சுவிடுதல் (திவ்.பெரியதி.1,2,8,வ்யா.); to breathe, respire.

[Skt. prāṇa> த. பிராணி-,]

பிராதானியம் *pirādāṉiyam,* பெ.(n.) முதன்மை (இ.வ.); importance.

[Skt. prādhānya> த. பிராதானியம்]

பிராதிபதிகம் *pirādipadigam,* பெ.(n.) பெயர்ப்பகாப்பதம்; base of a noun. "பன்னும் பகாப்பதப்பேரே பிராதிபதிகம்" (பி.வி.7.).

[Skt. prāti-padika> த. பிராதிபதிகம்]

பிராது *pirādu,* பெ.(n.) முறையீட்டு விண்ணப்பம்; a complaint, suit.

[U. faryād> த. பிராது]

பிராதுபண்ணு-தல் *pirādu-paṇṇu-,* 5 செ.கு.வி. (v.i.) வழக்கிடுதல் (உ.வ.); to lodge or file a plaint or complaint.

பிராந்தி *pirāndi,* பெ.(n.) மது; brandy.

[E. Brandy> த. பிராந்தி]

பிராமணபோசனம் *pirāmaṇa-pōšaṇam,* பெ.(n.) பிராமணர்க்குச் செய்யும் விருந்து (சமாராதனை); a feast for Brahmins.

[Skt. Brāhmaṇa+bhōjana> த. பிராமண போசனம்]

பிராமணம் *pirāmaṇam,* பெ.(n.) 1. பிராமணர் தொடர்பானது (கூர்மபு.பிருகி.4.); that which relates to or befits a Brahmin. 2. மந்திரப்பகுதியல்லாத மறையின் பகுதி; Brāhmaṇas, a portion of the Vēdas other than the mantras.

[Skt. brāhmaṇa> த. பிராமணம்]

பிராமணன் *pirāmaṇaṉ,* பெ.(n.) பார்ப்பனன்; Brahmin.

[Skt. Brāhmaṇa> த. பிராமணன்]

பிராமணி[1] *pirāmaṇi,* பெ.(n.) ஏழு கன்னியருள் ஒருத்தி; Brahmāṇi, consort of Brahmā, one of šattamādar.

[Skt. Brahmāṇi> த. பிராமணி]

பிராமணி[2] *pirāmaṇi,* பெ.(n.) 1. பார்ப்பனப் பெண்; Brahmin woman. 2. பார்ப்பனன் மனைவி; wife of a Brahmin. "பிராமணிக்குப் பிழைப்பரிது" (உத்தரரா.சம்பு.22). 3. பாம் பரணை; a species of streaked lizard.

[Skt. Brāhmāṇi> த. பிராமணி]

பிராமிசரிநோட்டு *pirāmišari-nōṭṭu,* பெ.(n.) வேண்டும்போது திரும்பப் பணங்கொடுப்பதாக எழுதித்தரும் கடன் ஆவணம்; promissory note, note of hand.

த.வ. கடன்சீட்டு

[E. promissary note > த. பிராமிசரி நோட்டு]

பிராயச்சித்தம் *pirāyaccittam,* பெ.(n.) 1. அறங்கடை தணிவிப்புச் சடங்கு (சீவக.910, உரை.); expiatory ceremony for past sins. 2. மரணகாலத்தில் எல்லா அறங்கடைகளுக் கும் விலக்காகச் செய்யப்படும் தணிவிப்புச் சடங்கு; a ceremony performed on the eve of death, in expiation of all sins. 3. தணி விப்புச் சடங்கு; remedy, counteraction; redress. 4. அறநூல் பிரிவு மூன்றனுள் அறங்கடை போக்குந் தண்டனைகளைக் கூறும் பகுதி (குறள்,பரி.அவ.கீழ்க்குறிப்பு.); a section of Dharma - šāṣtra dealing with punishments as atonement for sins, one of three tarma - nūṟ - pirivu. 5. தண்டனை (சங்.அக.); punishment.

[Skt. praya-s-citta> த. பிராயச்சித்தம்]

பிராயம் *pirāyam,* பெ.(n.) 1. அகவை; age. "பிராய மிருவது" (திருமந்.863). 2. நிலை; condition, stage. "வியூகம் முக்தப் பிராயர்க்கு" (ஈடு,7,3,3). 3. சமானம்; like, used in compounds. அவனுக்குக் கள் சலப்பிராயம் (இக்.வ.).

[Skt. prāya> த. பிராயம்]

பிரார்த்தனை *pirārttaṉai,* பெ.(n.) 1. வேண்டுகோள்; prayer, supplication. 2. நேர்த்திக் கடன்; vow. 3. வழிபாடு; worship, prayer, rite. 4. கிறித்தவர்கள் குருமார் மூலம் செய்யும் விண்ணப்ப வகை (R.C.); litany.

[Skt. prārthanā> த. பிரார்த்தனை]

பிரான் *pirāṉ,* பெ.(n.) 1. தலைவன்; lord, king, chief, master. "கோவணம் பூணுமேனும் பிரானென்பர்" (தேவா.640,7.); 3. கடவுள்; god.

"பிரான் பெருநிலங் கீண்டவன்" (திவ். திருவாய்.1,7,6). 3. சிவன் (சது.); Sivan.

[Skt. brhan> த. பிரான்]

பிரான்மலை *pirāṉ-malai,* பெ.(n.) பாண்டி நாட்டிலுள்ள சிவன் கோயில்களுள் ஒன்று; an ancient śiva shrine in Pāṇḍya country.

[பிரான்+மலை]

பிருகற்பதி *pirugaṟpadi,* பெ.(n.) 1. வியாழன் (திவா.); the planet Jupiter, Guru of the gods. 2. சடங்காளன் (புரோகிதன்); family priest. 3. அறநூலாசிரியருள் ஒருவர்; author of a Smṛti(R.F.). 4. அறநூல் பதினெட்டனுள் பிருகற்பதியால் இயற்றப்பட்ட நூல்; a Sanskrit text-book on Hindu law, ascribed to Bṛhaspati, one of 18 *taruma-nūl.*

[Skt. Bṛhas-pati > த. பிருகற்பதி]

பிருகா *pirukā,* பெ.(n.) ஒன்றியம்; division of a taluk or district.

[U. firkā> த. பிருகா]

பிருந்தாவனம் *pirundāvaṉam,* பெ.(n.) 1. யமுனைக்கரையில் கோகுலத்துக்குப் பக்கத்திலுள்ளதும் கண்ணபிரான் இளமையில் விளையாடியதுமான காடு (ஈடு,அவ.ஜீ); forest near the town of Gōkula on the Jumna, where Kṛṣṇa played in His child hood. 2. திருந்துழாய்க்காடு (துளசிவனம்); basil garden. 3. கல்லறைக்கட்டடம் (Brāh.); sepulchre of an ascetic.

[Skt. bṛndā-vana> த. பிருந்தாவனம்]

பிரும்மமுத்திரை *pirumma-muttirai,* பெ.(n.) கையை விரித்துப் பெருவிரலினை நடுப் பணித்திடப் பிடிப்பதாகிய முத்திரை வகை (செந்.x,425); (śaiva.) a kind of hand-pose.

[Skt. brahma> த. பிரம்ம+முத்திரை]

பிரேதக்குழி *pirēdakkuḻi,* பெ.(n.) கல்லறை; grave.

[பிரேதம்+குழி]

பிரேதகும்பம் *pirēdakumbam,* பெ.(n.) பிணத்துக்கு உடைக்கும் மட்குடம் (வின்.); earthen pot broken after a corpse is laid on the pyre.

[பிரேதம்+கும்பம்]

பிரேதபரிசோதனை *pirēda-parišōdaṉai,* பெ.(n.) இறப்பு (மரணம்) நேர்ந்த காரணத்தை அறியப் பிணத்தை அறுத்து ஆய்கை (C.G.); post-mortem examination.

த.வ. பிண அறுவை

[Skt. prēta+pari-šōdhanā> த. பிரேத பரிசோதனை]

பிரேதம் *pirēdam,* பெ.(n.) 1. பிணம்; dead body, corpse. நின்று பேதுறிற் பிரேதம் (இரகு. இந்தும.84). 2. பேய் (சூடா.); ghose. 3. தெற்கு; south. 4. முன்னோர்; manes. 5. பின்; back.

[Skt. prēta> த. பிரேதம்]

பிரேதவனம் *pirēda-vaṉam,* பெ.(n.) இடுகாடு; cremation ground.

[Skt. prēta+vana> த. பிரேதவனம்]

பிரேதவிசாரணை *pirēda-višāraṇai,* பெ.(n.) ஐயப்பட்ட இறப்புக் காரணத்தைப் பற்றிய ஆராய்ச்சி (விசாரணை) (C.G.); coroner's inquest.

[Skt. prēta+vi-cāraṇā> த. பிரேதவிசாரணை]

பிரேமம் *pirēmam,* பெ.(n.) காதல், அன்பு, மோகம்; love; passion. அவள் மீது அவனுக்கு உள்ள பிரேமத்தின் வெளிப்பாடு இது (இ.வ.).

[Skt. prēmā> த. பிரேமம்]

பிரேரணை *pirēraṇai,* பெ.(n.) 1. தூண்டுகை; direction, instigation, inducement. 2. அவையோர் முடிவறிய ஒரு செய்தியை (விடயம்) முதலில் எடுத்துக் கூறுகை; resolution, motion in a meeting.

[Skt. prērana> த. பிரேரணை]

பில்லு *pillu,* பெ.(n.) விலைச்சீட்டு; bill.

[E. bill> த. பில்லு]

பிலவகம் *pilavagam,* பெ.(n.) 1. குரங்கு; monkey. 2. தவளை; toad.

[Skt. plavaka> த. பிலவகம்]

பினாகினி *pinākini,* பெ.(n.) தென் பெண்ணையாறு (யாழ்.அக.); the river Pennār.

[Skt. Pinākini> த. பினாகினி]

பினாமி *pināmi,* பெ.(n.) ஆள் மாற்று சொத்துரிமை; transaction entered into by one person in the name of another.

த.வ. ஆள்மாற்று

[U. benāmi> த. பினாமி]

பீங்கான் *pinkān,* பெ.(n.) ஒரு வகை மண்ணாற் செய்து சுடப்பட்ட பாண்டம்; porcelain, China-ware.

[Persn. pingān> த. பீங்கான்]

பீட்டி *pitti,* பெ.(n.) உடுப்பில் இரட்டையாக இணைக்கப்பட்ட மார்புத்துணி (வின்.); breast of a garment, stitched in two folds.

[U. piti> த. பீட்டி]

பீடா *pīdā,* பெ.(n.) பாக்குத் தூளுடன் பிற மணப் பொருள்களும் வைத்துச் சுருட்டப் பட்ட வெற்றிலை; roll of betel leaf with pieces of arecanut and aromatic stuff (in India) paan.

த.வ. சுருள்

பீடி[1] *pidi,* பெ.(n.) சரவளி, பிறங்கடை தலைமுறை (C.G.); generation, lineage.

[U. pirhi> த. பீடி]

பீடி[2] *pidi,* பெ.(n.) ஒருவகைப் புகைச்சுருட்டு (உ.வ.); a kind of cigarette.

த.வ. இலைச்சுருட்டு

[U. bidi> த. பீடி]

பீடை *pidai,* பெ.(n.) 1. துன்பம்; affliction, sorrow, distress, misery. "பீடை தீர வடியாருக் கருளும் பெருமான்" (தேவா.531,10). 2. காலம், கோள் முதலியவற்றால் நிகழுந் தீமை; in auspiciousness, as of a season, evil influence, as of a planet.

[Skt. pidā> த. பீடை]

பீதலம் *pidalam,* பெ.(n.) பித்தளை (மூ.அ.); brass.

[Skt. pitala> த. பீதளம்]

பீதன் *pidan,* பெ.(n.) குடிகாரன், குடிப்பவன்; one who drinks. "மதுவைப் பீதர்க் கிணையும் பேசுவமே" (சிவதரு.பாவ.28).

[Skt. pita> த. பீதன்]

பீதாம்பரம் *pidāmbaram,* பெ.(n.) 1. பொன்னாலான ஆடை; gold cloth. 2. பொற் கரையுள்ள ஆடை (வின்.); gold bordered silk cloth.

த.வ. பொன்னாடை

[Skt. pitāmbara> த. பீதாம்பரம்]

பீதாம்பரன் *pidāmbaran,* பெ.(n.) பொன் னாடை அணிந்த திருமால் (பிங்.); Tirumāl, as wearing a cloth of gold.

[Skt. pitāmbara> த. பீதாம்பரன்]

பீப்பா *pippā,* பெ.(n.) எண்ணெய் முதலியன அடைக்கும் மரப்பெட்டி வகை (உ.வ.); barrel, cask.

[Port. pipa> த. பீப்பா]



பீபி *bibi,* பெ.(n.) முகம்மதிய பெண்ணின் மதிப்புரவுப் பெயர்; title of a Muhammadan lady.

[U. bibi> த. பீபி]

பீமபாகம் *pīma-pāgam,* பெ.(n.) சிறந்த சமையல்; excellent cooking, as that of Bhīma.

[Skt. bhīma> த. பீம+பாகம்]

பீமன் *pīmaṉ,* பெ.(n.) 1. பாண்டுவின் மகன் களுள் இரண்டாமவன்; Bhima, second of the son of Pāṇḍu, renowned for super human courage and strength. 2. தமயந்தியின் தந்தை; father of Damayandi. 3. உருத்திரன்; Rudra.

[Skt. Bhīma> த. பீமன்]

பீர் *pīr,* பெ.(n.) 1. முகம்மதியப் பெரியார்; Muhammadan šaint. 2. முகம்மதியர் ஊர் வலத்தில் எடுத்துச் செல்லும் அரைத்தேர்; shrine carried in procession by Muhammadans.

[U. pīr> த. பீர்]

பீரங்கி *pīraṅgi,* பெ.(n.) பெருங்குழாயுள்ள வெடிகருவி; cannon, gun.

த.வ. வேட்டெஃகம், தகரி

[Port. firangi> த. பீரங்கி]



பீரோ *pīrō,* பெ.(n.) நிலைப்பேழை; book-case, shelf.

[F. bureau> த. பீரோ]

புசபலம் *pusa-balam,* பெ.(n.) தோள்வலிமை; strength of arm. *"உன்னையறியாதே தன் வரபல புசபலங்களை விசுவசித்திருக்கும் மதிகேடன்" (திவ். திருச்சந். 25, வியா.).*

[புசம்+பலம்]

புசம் *pušam,* பெ.(n.) 1. தோள்பட்டை; arm, shoulder. 2. கோணத்தின் புறக்கோடு; side of a geometrical figure.

[Skt. bhuja> த. புசம்]

புட்கரணி *puṭkaraṇi,* பெ.(n.) கோவிலைச் சேர்ந்த திருக்குளம்; sacred tank belonging to a temple.

[Skt. puṣkaraṇi > புட்கரணி]

புட்கரம் *puṭkaram,* பெ.(n.) 1. வடநாட்டில் பொகார் என இக்காலத்தார் வழங்கும் ஒரு தலம்; a celebrated place of pilgrimage, now called Pokhar in Ajmir. 2. வானம் (பிங்.); sky, heaven.

புட்பகவிமானம் *puṭpaga-vimāṉam,* பெ.(n.) குபேரனூர்தி; aerial car of Kubēra. புட்பக விமானம்வந் தவனியை யணுக (கம்பரா. மீட்சி.146).

புட்பம் *puṭpam,* பெ.(n.) 1. மலர்; flower. புட்பவிதி மாலைப்படியே (புட்ப.54). நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தியே சுற்றி வந்து மொண மொணென்று சொல்லும் மந்திரம் ஏதடா (சிவ.வா.494). 2. வாழை (மலை); plantain. 3. கண்ணோய் வகை (யாழ்.அக.); an eye disease. 4. மகளிர் சூதகம் (யாழ்.அக.); menstruation.

[Skt. puṣpa> த. புட்பம்]

புட்பவதி *puṭpavadi,* பெ.(n.) பூப்பெய்தியவள்; girl who has attained puberty. "புட்பவதியாம் வாரகால பலன்" (அறப்.சத.69).

[Skt. puṣpā-vati> த. புட்பவதி]

புட்பாஞ்சலி *puṭpāñjali,* பெ.(n.) 1. கை நிறையக் கொண்ட பூ; a handful of flowers. "சாரத்தொடு புட்பாஞ்சலி தாண் மீது சொரிந்தார்"(சிவரக.நைமிச.50). 2. கைக் கொண்ட பூவையிட்டு வழிபடுகை; offering of handful of flowers in worship. 3. இரண்டு கையுங் தடங்கையாக வந்து ஒன்றும் இணைக்கை வகை (சிலப்.3,18.உரை.) (Nāṭya)

a gesture with both hands inwhich they are joined in kuḍaṅgai pose.

த.வ. பூப்படையல்

[Skt. puṣpa> த. புட்பம்+அஞ்சலி]



புடம் *puḍam,* பெ.(n.) 1. கோள்களின் உண்மை யான நிலை; true daily motion of a heavenly body. 2. ஒரு வகை வானவளவை; celestial longitude. 3. தூய்மை; purity. " புடமாக விளங்குதலால்" (ஞானவா.கற்க.30).

[Skt. sphuṭa> த. புடம்]

புத்தம் *puttam,* பெ.(n.) புத்த மதம்; Buddhism.

[Skt. Buddha> த. புத்தம்]

புத்தமதம் *putta-madam,* பெ.(n.) பௌத்த சமயம்; the Buddhist religion.

[Skt. Buddha> த. புத்த+மதம்]

புத்தமித்திரன் *puttamittiraṉ,* பெ.(n.) 11ஆம் நூற்றாண்டிலிருந்த வீரசோழிய நூலாசிரியர்; šēndaṉ, the author of Viršōḻiyam, 11th century.

புத்தர் *puttar,* பெ.(n.) 1. புத்தப்பதவி பெற்ற பெரியோர்கள்; Buddhas, of whom there are several. "எண்ணில் புத்தர்களும்" (மணிமே. 30:14). 3. புத்தமதத்தவர்; Buddhists. "புந்தியில் சமணர் புத்தரென்றிவர்கள்" (திவ்.பெரியதி.9,8,9).

[Skt. Buddha> த. புத்தர்]

புதவாரம் *puda-vāram,* பெ.(n.) அறிவன் கிழமை; wednesday.

[Skt. budha+vara > த. புதவாரம்]

புதன் *pudaṉ,* பெ.(n.) 1. கோள் ஒன்பதனுள் ஒன்று (சாதகா.பொது.17); the planet Mercury. one of nine kiragam. 2. அறிவன்கிழமை; wednesday. 3. புலவன் (அக.நி.); wise or learned man, poet. 4. வானவன்; Celestial Being. "புதர்க்கடு வேள்விச்சாலை" (திருவிளை. மாணிக்.31).

[Skt. Budha> த. புதன்]

புதீனா *pudīṉā,* பெ.(n.) கீரை வகை (மு.அ.); mint.

த.வ. மணக்கீரை

[U. pudinā> த. புதீனா]

புயங்கமலை *puyaṅga-malai,* பெ.(n.) ஆதி சேடனது வடிவாகக் கருதப்படும் திருவேங்கட மலை; Tirupati, considered a form of Ādi-šeṣa. "இடபமலைக்கும் புயங்கமலைக்கும்" (அட்டப்.திருவரங்கத்தந்.35).



புராதன காண்டம் *purādaṉa-kāṇḍam,* பெ.(n.) விவிலிய நூலின் பழைய ஏற்பாடு (வின்.); the Old Testament.

[Skt. purātana>த. புராதனம்+காண்டம்]

புராதனம் *purādaṉam,* பெ.(n.) 1. பழமையானது; that which is ancient. "புராதன மறைக்கும்" (அஷ்டப்.திருவரங்கக். 32). 2. பழமை; antiquity. 3. கிழத்தனம்; old age. "புராதனத் தாலல்லா திந்தப் புத்திர சோகத்தாலே புலம்பும்" (உத்தரரா.சம்புவ.22).

4. பழையசோறு (உ.வ.); boiled rice preserved in water.

[Skt. purātana> த. புராதனம்]

புராதனர் *purādaṉar,* பெ.(n.) முன்னோர் (வீரசோ.அலங்.4.); ancients.

[Skt. purātana> த. புராதனர்]

புருசு *purušu,* பெ.(n.) அழுக்கெடுக்குங் கருவி வகை (இ.வ.); brush.

த.வ. தூரி

[E. brush> த. புருசு]

புருடன் *puruḍaṉ,* பெ.(n.) 1. ஆடவன்; man (காஞ்சிப்பு.சன.22). 2. பரமான்மா (வின்.); God, as the Supreme Soul. 3. ஆதன்; soul.

[Skt. puruṣa> த. புருடன்]

புருடோத்தமநம்பி *puruḍōttama-nambi,* பெ.(n.) திருவிசைப்பா பாடிய சிவனடியாருள் ஒருவர்; the author of a *padigam* in Tiru-v-išaippā.

[Skt. puruṣōttama> த. புருடோத்தமன்+ நம்பி]

புருடோத்தமன் *puruḍōttamaṉ,* பெ.(n.) 1. சிறந்தவன்; most excellent man. பிறர் பொருட்காசையில்லாத செய்கையோன் புருஷோத்தமன் (திருவேங்.சத.53). 2. திருமால்; Tirumāl, as the Supreme Being புருடோத்தமன் தெய்வமென்பதும் (திருவேங். சத.1.) 2. புருடோத்தமநம்பி பார்க்க; see puruḍōttama-nambi.

[Skt. puruṣōttama> த. புருடோத்தமன்]

புரோகிதன் *purōgidaṉ,* பெ.(n.) 1. சடங்கு செய்விக்குங் குரு; family priest. தூய புரோகிதனும் போந்து (பாரதவெண்.66.புதுப்). 2. ஊர் கணியன்; prognosticator, village astrologer (R.F.). 3. இந்திரன் (சூடா.); Indran.

த.வ. பூசகன்

[Skt. purō-hita> த. புரோகிதன்]

புரோசை *purōšai,* பெ.(n.) யானைக் கழுத்திலிடும் கயிறு; halter or head-stall of an elephant. "புரோசையிற் பயின்ற கழற்கொள் சேவடி" (சூளா.சீய.139).

புல்லிங்கம் *pulliṅgam,* பெ.(n.) வடமொழியில் ஆண்பால் (பி.வி.44.); (Gram.) masculine gender, in Sanskrit.

[Skt. pulliṅga> த. புல்லிங்கம்]

புல்லின் *pulliṉ,* பெ.(n.) கப்பலின் முன் பக்கத்தில் அதன் பாயை இணைக்கும் கயிறு (Naut.); bowline.

[E. bowline> த. புல்லின்]

புலாக்கு *pulākku,* பெ.(n.) மூக்கில் தொங்கவிடும் அணி வகை; nosependant set with precious stones.

த.வ. மூக்குத் தொங்கட்டான்

[U. bulāq> த. புலாக்கு]

புலின் *puliṉ,* பெ.(n.) கப்பலின் சதுரப்பாய்களை இழுத்துக் கட்டுங் கயிறு (M.navi); bowline.

[E. bowline > த. புலின்]

புலுதசந்தி *puluda-šandi,* பெ.(n.) உயிரளபெடை தோன்றும் புணர்ச்சி (பி.வி.5, உரை); lengthening of a vowel in the combination of two words, as *irāa-p-pakal.*

[Skt. pluta > த. புலுதம் + சந்தி]

புலுதம் *puludam,* பெ.(n.) 1. உயிரளபெடை (பி.வி.5, உரை); lengthening a vowel, in poetry. 2. மெய்யெழுத்து (திவா.); consonant. 3. குதிரை நடை வகை ஐந்தனுள் ஒன்று; caper of a horse, one of five *ašuva-kati.* 4. இசையில் 49,152 கணங்கள் கொண்ட காலவகை (பரத. தாள. 27); one of the ten varieties of kālam, which consists of 49,152 *kaṇam.* 5. 12 தாள அளவை உறுப்பு கொண்ட அங்கவகை (பரத. தாள. 35); a variety of aṅgam, which consists of 12 akṣara-kālam.

[Skt. pluta > த. புலுதம்]

புலௌ *pulau,* பெ.(n.) 1. ஊனொடு கலந்து பக்குவப்படுத்திய உணவு; a kind of dish prepared of cooked meat and boiled rice. 2. அரிசிக் கூழ்வகை; a kind of rice-gruel.

[U. pulão > த. புலௌ]

புவ்வம் *puvvam,* பெ.(n.) 1. பழைமையானது; that which is ancient. 2. ஒரு சமண தோன்றியம்; a Jaina Agama. *"அங்க புவ்வமாதியாய வாதிநூல்" (காரிகை, உறுப். 13, மேற்.).*

[Skt. pūrva>pkt. puvva > த. புவ்வம்]

புவசம்படு *puvašampaḍu,* பெ.(n.) மூன்றெழுத்தில் ஒன்றாகிய 'கிலி'; one of the three mystic letter 'kili'. (சா.அக.)

புவம் *puvam,* பெ.(n.) விண்வெளி (ஆகாயம்); space. "புவம்வளிகனல் புனல்புவி" (தேவா.615,1).

[Skt. bhuva>த. புவம்]

புவன் *puvaṉ,* பெ.(n.) தான் தோன்றிக் கடவுள்; God, as self - existent. *"புவனெம்பிரான்" (திருவாச. 5:9).*

[Skt. bhuva > த. புவன்]

புவனசாத்திரம் *puvaṉa-šāttiram,* பெ.(n.) நிலவியல் நூல் (வின்.); geography.

[Skt. bhuvaṉa+šāstra >த. புவனசாத்திரம்]

புவனநாயகன் *puvaṉa-nāyagaṉ,* பெ.(n.) உலகிற்கு இறைவன்; lord of universe. *புவனநாயகனே யகவுயிர்க்கமுதே (திரு விசைப். கருவூர். திருமுகத். 1).*

[Skt. bhuvaṉa> த. புவனம்+நாயகன்]

புவனம் *pūvaṉam,* பெ.(n.) 1. உலகம் (பிங்.); world. *புவன மூன்றன் பயனாகி (காஞ்சிப்பு. திருவேகம். 55).* 2. நிலவுலகு (பிங்.); earth. 3. இடம் (வின்.); place, locality. 4. நீர் (பிங்.); water. 5. மாந்த இனம் (வின்.); mankind.

[Skt. bhuvaṉa> த. புவனம்]

புவனமெண்வச்சிரம் *puvaṉam-eṇ-vacciram,* பெ.(n.) பளிங்குப் படிகம் (யாழ். அக.); crystal glass.

[புவனம் + எண் + வச்சிரம்]

புவனாத்துவா *puvaṉā-t-tuvā,* பெ.(n.) வீடுபேறடையும் வழிகள் ஆறனுள் ஒன்று (சி.சி.8: 6–9, மறைஞா.); a path to salvation in the form of bhuvanas, worlds one of six *attuvā.*

[Skt. bhuvana+tadhvan > த. புவனாத்துவா]

புவனி *puvaṉi,* பெ.(n.) நிலவுலகம்; earth. *புவனியிற் சேவடி தீண்டினன் காண்க (திருவாச. 3:61).*

[Skt. bhuvana > த. புவனி]

புவனை *puvaṉai,* பெ.(n.) மலைமகள்; Pārvati. *புவனை காதலமணியே (திருப்போ. சந். மட்டு. 5).*

புனர்ச்சனனம் *puṉar-c-caṉaṉam,* பெ.(n.) 1. மறுபிறவி (வின்.); transmigration of souls, rebirth. 2. கடுந்தொல்லை, கடுநோய் முதலிய நேர்ச்சியினின்று தப்பிப் பிழைக்கை; recovery from serious illness or accident, considered as a rebirth. *அவன் பிழைத்தது புனர்ச்சனனம்.*

[Skt. punar-janana > த. புனர்ச்சனனம்]

புனர்சுரம் *puṉar-suram,* பெ.(n.) இடைவிட்டு வருங் காய்ச்சல் நோய் (M.L.); relapsing fever.

[Skt. punarajvara > த. புனர்சுரம்]

புனர்செனனம் *puṉar-seṉaṉam,* பெ.(n.) **புனர்ப்பவம்** பார்க்க; see *puṉar-p-pavam.*

புனர்நவம் *puṉarnavam,* பெ.(n.) 1. நகம்; finger or toe nail. 2. வெள்ளைச் சாட்டறணை; trianthema decandra. 3. மூக்கிரட்டை; spreading hog weed - *Boerhaavia diffsusa.* (சா.அக.)

புனர்நவவாதி *punarnavavādi,* பெ.(n.) (ஐந்து) பஞ்சமூலம், சாறடை, நரிப்பயற்றங் கொடி, உளுந்துக் கொடி, சித்தாமுட்டி, ஆமணக்கு; the five drugs - castor root, pavonia zeylanica, black gram plant, dew gram plant; *trianthema decandra.* (சா.அக.)

புனர்ப்பவம் *punar-p-pavam,* பெ.(n.) மறுமுறை பிறத்தல்; second birth - regeneration. (சா.அக.)

[Skt. punar > த. புனர்+பவம்]

புனர்ப்பாகம் *punar-p-pāgam,* பெ.(n.) குழைத்த கஞ்சி (உணவு); rice cooked second time.

[Skt. punar+pāka > த. புனர்ப்பாகம்]

புனர்பூசம் *punar-pūšam,* பெ.(n.) கழை, ஏழாவது நாண்மீன்; the seventh nakṣatra. *புனர்பூசத்துக் கடையின் வெள்ளி எல்லையாக (புறநா. 229, உரை).*

த.வ. கழை

[Skt. punarvasu > த. புனர்பூசம்]

புனர்வசு *punarvašu,* பெ.(n.) **புனர்பூசம்** பார்க்க; see *punar-pūšam.*

புனர்விசாரணை *punar-višāranai,* பெ.(n.) மறுவுசாவல்; re-trial.

[Skt. punar-vicārana > த. புனர்விசாரணை]

புனர்விவாகம் *punar-vivāgam,* பெ.(n.) மறுமணம்; re-marriage, as of widows.

[Skt. punar-vivāha > த. புனர்விவாகம்]

புனராவர்த்தகசுரம் *punar-āvarttaga-šuram,* பெ.(n.) **புனர்சுரம்** பார்க்க; see *punar-šuram.*

புனராவர்த்தம் *punar-āvarttam,* பெ.(n.) மறுதரம் (வின்.); second time, that succeeding the first, as of an occurrence.

[Skt. punar-āvartta > த. புனராவர்த்தம்]

புனர்வாழ்வு *punar-vālvu,* பெ.(n.) நலிந்தோருக்கு மீண்டும் தரப்படும் நல்வாழ்வு, மறுவாழ்வு; rehabilitation.

[புனர்+வாழ்வு]

புனரமை-த்தல் *punaramai-,* 4 செ.கு.வி.(v.i.) 1. திருத்தி யமைத்தல், சீரமைத்தல்; renovate, rejuvenate. *பாழடைந்த கோயில்களைப் புனரமைக்க அரசு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.* 2. திரும்ப இயல்பான வாழ்க்கையை மேற்கொள்ள உரிய பயிற்சி அளித்தல்; rehabilitate.

[புனர்+அமை]

புனரமைப்பு *punaramaippu,* பெ.(n.) 1. கோயில் புதுப்பிப்புப் பணி; renovation. 2. இயல்பான வாழ்க்கையை மேற்கொள்ளப் பயிற்சி அல்லது உதவி; rehabilitation.

[புனர்+அமைப்பு]

புனருத்தம் *punaruttam,* பெ.(n.) **புனருத்தி** பார்க்க; see *punarutti.*

புனருத்தி *punarutti,* பெ.(n.) கூறியது கூறல் (சூடா.); repetition .

[Skt. punar-ukti > த. புனருத்தி]

புனருத்தாரணம் *punar--uttāranam,* பெ.(n.) மீண்டும் நிலை நிறுத்துகை; redemption.

[Skt. punar-uddhārana > த. புனருத்தாரணம்]

புனல் *punal,* பெ.(n.) ஒடுக்கமான வாயுள்ள ஏனத்தில் நீர்மப் பொருளை ஊற்றுதற்கு உதவுங் கருவி; funnel.

த.வ. வைத்தூற்றி

[E. funnel > த. புனல்]



புனாநவி *punānavi,* பெ.(n.) புனர்நவம் பார்க்க; see *punarnavam.*

புனிதம் *punidam,* பெ.(n.) தூய்மம், நனிதூய்மை, தூய்யம் (திவ். திருமாலை); purity, holiness, sanctity.

[Skt. punita > த. புனிதம்]

புனிதவெள்ளி *punida-veḷḷi,* பெ.(n.) இயேசு குறுக்கையில் (சிலுவையில்) அறையப்பட்டு இறந்த நாளான வெள்ளிக் கிழமை; Good friday.

[புனிதம் + வெள்ளி]

புனிதன் *punidan,* பெ.(n.) 1. தூய்மையானவன்; pure, holy person. *"வேதம் விரித்துரைத்த புனிதன்" (திவ். பெரியதி. 2.1:4).* 2. சிவன் (அரு.நி.); Sivan. *"புற்றில் வாளரவு மாமையும் பூண்ட புனிதனார்" (தேவா. 136, 6).* 3. இந்திரன் (திவா.); Indran. 4. அருகன் (திவா.); Arhat. 5. புத்தன் (திவா.); Buddha.

[Skt. punida > த. புனிதன்]

புனியாத்து *puniyāttu,* பெ.(n.) கடைகால் (C.G.); foundation.

[U. bunyād > த. புனியாத்து]

பூகந்தகம் *pūkandagam,* பெ.(n.) பதங்கித்த கந்தகம்; sublimed sulphur. 2. கந்தகபற்பம்; calcined sulphur. (சா.அக.).

பூகம்பம் *būgambam,* பெ.(n.) 1. நிலவதிர்ச்சி; earthquake. *"பூகம்பம் பிறந்துடுவு மரும்பகலே விழுந்து" (பாரத. சூதுபோர். 259).* 2. ஞாயிறு (ஆதித்தன்) நின்ற நாளுக்கு ஏழாம் நாள் (விதான. குணாகுண. 34); (astrol.) the seventh nakṣatra from that occupied by the sun.

பூகோளசாத்திரம் *pūkoḷa-śāttiram,* பெ.(n.) மலை, ஆறு தட்ப வெப்பம் முதலிய நிலவுலகின் இயல்புகளை விளக்கிக் கூறும் நூல்; geography.

த.வ. நிலநூல்

[Skt. bhū-gōla+śāttiram > த. பூகோளசாத்திரம்]

பூகோளம் *pūgōḷam,* பெ.(n.) நிலவுலக வுருண்டை; the terrestrial globe, the earth.

[பூ + கோளம்]

பூச்சக்கரம் *pū-c-cakkaram,* பெ.(n.) 1. பூ மண்டலம்; the earth. 2. நில நடுக்கோடு; equator. 3. சக்கரவாணம்; a kind of whirling rocket.

[Skt. bhū-cakra > த. பூச்சக்கரம்]

பூச்சக்கரவாளக்குடை *pū-c-cakkaravāḷa-k-kuḍai,* பெ.(n.) கோயில் திருவுருவங்களுக்குப் பிடிக்கும் பெரிய வெண்குடை; huge, white temple umbrella. *"மதி கொண்ட பூச்சக்கரவாளக் குடையின்" (திருப்போ. சந்நிதி. அலங்கா. 49).*

[பூ + சக்கரவாளம் + குடை]

பூசாவிதி *pūśāvidi,* பெ.(n.) அகத்தியர் கருவூரார் முதலியோர் சிதம்பரச் சக்கர முறையும் வாசிதாரணையும் அட்டகர்ம மந்திரமுங் கூறியுள்ள நூல்கள்; text by Agastiar and Karurar on the practice of yoga etc. (சா.அக.)

பூசாவிருத்தி *pūśā-virutti,* பெ.(n.) கோயிற் பூசைக்கு விட்ட இறையிலி நிலம்; inam land granted for performing worship in a temple. (I.M.P.N.A.240).

[Skt. pūjā+vṛuddhi > த. பூசாவிருத்தி]

பூதங்குசம் *pūdaṅguśam,* பெ.(n.) சீழ்ப் புண்ணைக் கரையச் செய்யும் ஒரு மருந்து; a mineral capable of dissolving over growth of flesh in ulcers. (சா.அக.)

பூதரகிதம் *pūdaragidam,* பெ.(n.) சிலந்தி; an insect. (சா.அக.).

பூதிகந்தம் *pūdi-kandam,* பெ.(n.) 1. கந்தகம்; sulphur. 2. துர்க்கந்தம்; stench. (சா.அக.).

பூதேவர் *pūdēvar,* பெ.(n.) பார்ப்பனர்; Brahmans, considered as gods on earth. *"ஒரு கோடி பூதேவரும்" (பாரத. தற்சிறப். 2).*

[Skt. bhū-dēva > த. பூதேவர்]

பூதேவி *pūdēvi,* பெ.(n.) நிலமகள்; the goddess of earth.

[பூ + தேவி]

[Skt. bhū-dēvi > த. பூதேவி]

பூந்தி *pūndi,* பெ.(n.) பணியாரவகை, பொலந்தி (பூந்தி); a kind of confection made of Bengal-gram flour.

த.வ. பொலந்தி

[U. būndi > த. பூந்தி]

பூபதி *pūpadi,* பெ.(n.) 1. அரசன்; king, ruler, as lord of the earth. *"புரந்தரனா மெனப் பூபதியாகி" (அட்டப். அழகரந். 5).* 2. பூபதி மாத்திரை (பதார்த்த. 1226) பார்க்க; see *pūpadimāttirai.* 3. பாம்பணை (ஆதிசேடன்) (அரு.நி. 312); *Adiśēṣan.*

த.வ. மன்னன்

[Skt. bhū+pati > த. பூபதி]

பூபதிமாத்திரை *pūpadimāttirai,* பெ.(n.) ஒரு வகைக் குளிகை (பதார்த்த. 1226); a kind of pill.

த.வ. நிலக்குளிகை

[Skt. bhū-pati > த. பூபதி+மாத்திரை]

பூபதிரசம் *pūpadiraśam,* பெ.(n.) இதளிய மருந்து வகை (பதார்த்த. 1228); a preparation of mercury.

[Skt. bhū-pati+raśam > த. பூபதிரசம்]

பூபன் *pūbaṉ,* பெ.(n.) அரசன்; sovereign, as protecting the earth. *"பொறையினாற் பெரியன் பூபன்" (சூளா. தூது. 99).*

[Skt. bhū-pa > த. பூபன்]

பூபாகம் *pūbāgam,* பெ.(n.) நிலப்பரப்பு (இக்.வ.); land.

[Skt. bhū-bhāga > த. பூபாகம்]

பூபாலன்[1] *pūpālaṉ,* பெ.(n.) 1. அரசன் (திவா.); king, sovereign. 2. வேளாளன் (பிங்.); vēḷāḷaṉ, agriculturist. 3. மூக்கினடுவில் ஒன்று அல்லது மூன்று சுழிகள் கொண்ட உயர்வகைக் குதிரை (சுக்கிரநீதி, 314); horse with one or three marks at the centre of its nose, as the prince of horses.

[Skt. bhū+bāla > த. பூபாலன்]

பூபாலன்[2] *pūpālaṉ,* பெ.(n.) செவ்வாய் (திவா.); Mars as son of the Earth.

[Skt. bhū+bāla > த. பூபாலன்]

பூபாலாசனம் *pūpālāśaṉam,* பெ.(n.) ஒக வகை; a kind of yogic posture.

த.வ. அரசஓகம்

[Skt. bhū-pāla+saṉam > த. பூபாலாசனம்]

பூபாளம் *pūpāḷam,* பெ.(n.) காலையிற் பாடும் ஒரு பண்வகை (பிங்.); a specific melody-type appropriate to early dawn.

[Skt. bhū-pāḷī > த. பூபாளம்]

பூமம் *pūmam,* பெ.(n.) மிகுதி; abundance, plenty. *"பூமச் சோதியருளால்" (பாடு. 100, சாற்றுபறை).*

[Skt. bhūman > த. பூமம்]

பூமாதேவி *pūmādēvi,* பெ.(n.) நிலமகள்; Goddess of earth. *ஆகாசவாணி பூமாதேவி அறிய. (உ.வ.).*

[Skt. bhū > த. பூ+மாதேவி]

பூமி *pūmi,* பெ.(n.) 1. நிலவுலகு; earth. *"இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்றவாறு" (திருவாச. 20: 10).* 2. நிலமகள்; Goddess of earth. *"பூமி கொழுநன்" (சூடா.).* 3. நிலப்பகுதி; land, soil, ground, plot of land. 4. நிலச் சொத்து; landed property. 5. தேயம்; country, district. 6. இடம்; place. 7. கோணங்களின் கீழ் வரி (யாழ்.அக.); base of geometrical figure. 8. நிலை; a stage or condition in life. *"அஞ்ஞான பூமி, ஞானபூமி" (ஞானவா. உற்ப. 39; 49).* 9. பொறியால் கணித்துக் கொள்வதற்குரிய பொருள்; object of sense-perception. *"ஒருவர்க்கு அறிகைக்குப் பூமியோ என்கிறார்" (ஈடு.).* 10. நாக்கு (இலக்.அக.); tongue.

[Skt. bhūmi > த. பூமி]

பூமிசக்கரம் *pūmi-cakkaram,* பெ.(n.) சித்திரக் கவி வகை (யாப். வி. 497); a kind of metrical composition.

[பூமி + சக்கரம்]

பூமிசருக்கரை *pūmi-šarukkarai,* பெ.(n.) சீந்தில் சருக்கரை; a bitter substance prepared from the stalk of 'šīndil' moon creeper - Tinosphora Cordifolia alias cocculus cordifolia. (சா.அக.)

பூமிசாத்திரம் *pūmi-šāttiram,* பெ.(n.) 1. நிலத்தின் பகுதிகளை விளக்கும் நூல் (நில இயல்); geography. 2. நிலத்தின் அமைப்பைப் பற்றிய நூல் (மண்ணூல்); geology.

[Skt. bhūmi-šastra > த. பூமிசாத்திரம்]

பூமிதானம் *pūmi-dānam,* பெ.(n.) நிலக் கொடை; gift of land, one of taša-tānam. *தசதானங்களுள் நிலத்தைத் தானம் பண்ணுகை.*

த.வ. நிலக்கொடை

[பூமி+தானம்]

பூமிதேவி *pūmi-dēvi,* பெ.(n.) நிலமகள்; Goddess of earth. *"பூமிதேவி தான் காண்கலேன் கடியன கண்ணி னாலெனா" (சீவக. 2233).*

[பூமி+தேவி]

பூமிநடுக்கம் *pūmi-nadukkam,* பெ.(n.) பூமியதிர்ச்சி (யாழ்.அக.) பார்க்க; see *pūmi-y-atircci.*

த.வ. நிலநடுக்கம்

பூமிப்பரீட்சை *pūmi-p-parītcai,* பெ.(n.) 64 கலைகளுளொன்றாகிய நிலத்தியல்பு பற்றியறியும் கலை; one of 64 sciences - Geology. (சா.அக.)

பூமிபாரம் *pūmi-pāram,* பெ.(n.) 1. இறை யாண்மை (வின்.); responsibilities of sovereignty. 2. தீயோர் (நிலத்திற்குச் சுமையாயிருப்பவர்); wicked people, as being a burden to the earth. *"பூமிபாரங் களுண்ணுஞ் சோற்றினை வாங்கி" (திவ். பெரியாழ். 4. 4: 5).*

[பூமி + பாரம்]

பூமிபாலன் *pūmi-bālan,* பெ.(n.) **பூபாலன்** பார்க்க; see *pū-bālan.*

[பூமி + பாலன்]

பூமிபூசை *pūmi-pūšai,* பெ.(n.) மனையில் கட்டடம் கட்டும் வேலை துவங்குவதற்கு நல்ல நாளைத் தேர்ந்தெடுத்து அந்நாளில் இறைவனை வேண்டிச் செய்யும் பூசை (வீடு கட்டுவதற்கு முன் செய்யும் பூசை); inaugurating the construction work of a building with a puja invoking the blessings of god for successful completion.

[பூமி + பூசை]

பூமிமுனை *pūmi-munai,* பெ.(n.) மூன்று புறங்களிலும் கடல் சூழ்ந்திருக்கும் நிலக்கோடி; cape, promontory.

[பூமி + முனை]

பூமியதிர்ச்சி *pūmiyatircci,* பெ.(n.) நில நடுக்கம் (பூகம்பம்); earthquake.

[பூமி+அதிர்ச்சி]

பூயம் *pūyam,* பெ.(n.) 1. புண்சீழ்; purulent matter, pus, suppuration, discharge from an ulcer or wound. 2. வெறுக்கத்தக்க பொருள்; that which is disgusting. *"பூயத்தான் மிக்கதொரு பூதத்தா லாகாதோ" (தனிச் செய்யுட். சி. 29:3).*

[Skt. pūya > த. பூயம்]

பூர் *pūr,* பெ.(n.) வெள்ளம்; flood. *"பூரம்புராசி" (பாரத. இராச. 116).*

[Skt. pūra > த. பூர்]

பூர்ச்சம் *pūrccam,* பெ.(n.) மரவகை; Indian birch tree.

[Skt. bhūrja > த. பூர்ச்சம்]

பூர்த்தம்[1] *pūrttam,* பெ.(n.) குளம் வெட்டல் முதலிய அறச் செயல் (அறப்பணி) (யாழ்.அக.); meritorious work, act of pious liberality; as digging a well.

[Skt. pūrta > த. பூர்த்தம்]

பூர்த்தம்[2] *pūrttam,* பெ.(n.) நிறைவு; saturation. (சா.அக.)

பூர்த்தி *pūrtti,* பெ.(n.) 1. நிறைவு; wholeness, fulness, completeness. 2. நிறைவெய்துகை; satisfaction. 3. தெய்வத்துடன் ஒன்றுதல், கலத்தல் (கடவுளிடத்து ஐக்கியம்) (வின்.); absorption into the deity.

[Skt. pūrti > த. பூர்த்தி]

பூர்த்திபண்ணு-தல் *pūrtti-paṉṉu-,* 5 செ.குன்றாவி.(v.t.) 1. செய்து முடித்தல்; to complete, finish. 2. நிரப்புதல்; to fill up.

[Skt. pūrti > த. பூர்த்தி+பண்ணு-தல்]

பூர்வ *pūrva,* பெ.எ. (adj.) 1. முந்திய; former, bygone. 2. பழங்கால, ஆதி; ancient. *"பூர்வக் குடிகள்".*

பூர்வக்காட்சியனுமானம் *pūrva-k-kāṭci-y-aṉumāṉam,* பெ.(n.) பட்டறிவை அடிப்படையாகக் கொண்டு அறுதியிடும் உன்னிப்பு (அனுமானம்); a kind of inference which is based on previous experience. *"போது நாற்றத்தாலறிதல் பூர்வக் காட்சியனுமானம்" (சி.சி.அளவை. 12).*

பூர்வகதை *pūrva-kadai,* பெ.(n.) 1. பண்டைக் காலக் கதை (பழங்கதை); ancient story. 2. கதையின் முன் தொடர்ச்சி; resume of the narrative.

[பூர்வம்+கதை]

பூர்வகம் *pūrvagam,* வி.எ. (adv.) முன்னிட்டு; along with. ஞானபூர்வகம்.

[Skt. pūrvaka > த. பூர்வகம்]

பூர்வகருமம் *pūrva-karumam,* பெ.(n.) முன்னை வினை; result of actions of former births.

[Skt. pūrva+karumam > த. பூர்வகருமம்]

பூர்வகாலம் *pūrva-kālam,* பெ.(n.) சென்ற காலம்; the past. *"பூர்வ காலத்துப் புண்யவசத்தினால்" (தனிப்பா. i. 266: 3).*

[பூர்வம்+காலம்]

பூர்வகுணம் *pūrva-kuṇam,* பெ.(n.) மருந்துகளுக்கு இயற்கையாகவே உள்ள குணம்; the natural properties of drug or medicine. (சா.அக.)

[பூர்வம்+குணம்]

பூர்வகுளம் *pūrvakuḷam,* பெ.(n.) 1. பனி நீர்; dew water. 2. தூய நீர்; crystal or pure water. 3. பனிக்குடத்து நீர்; liquor amni. (சா.அக.)

[பூர்வம்+குளம்]

பூர்வகௌளம் *pūrva-kauḷam,* பெ.(n.) பண் வகை (பரத. ராக. பக். 103); a specific melody - type.

[Skt. pūrva+kauḷam > த. பூர்வகௌளம்]

பூர்வசன் *pūrvašaṉ,* பெ.(n.) 1. மூத்த மகன்; eldest son. 2. தமையன்; elder brother. 3. முதல் மனைவிக்குப் பிறந்த புதல்வருள் மூத்தவன்; eldest son by the first married wife, although born subsequent to sons by other wives (R.F.).

[Skt. pūrva+ja > த. பூர்வசன்]

பூர்வசன்மம் *pūrva-šaṉmam,* பெ.(n.) முற்பிறப்பு; previous or past birth.

[Skt. pūrva+jaṉmam > த. பூர்வசன்மம்]

பூர்வசன்மவாசனை *pūrvašaṉma-vāšaṉai,* பெ.(n.) முந்திய பிறவியின் தொடர்பு; the propensities of a person in his previous birth which continue to exist in his present life.

[பூர்வம்+சன்மம்+வாசனை]

பூர்வசென்மவாசனை *pūrvašenma-vāšanai,* பெ.(n.) *பூர்வசன்மவாசனை* பார்க்க; see *pūrvašanma-vāšanai.*

[பூர்வ+செனமம் + வாசனை]

பூர்வதனம் *pūrva-danam,* பெ.(n.) முன்பே அமைந்துள்ளது (சி.சி.2:33, சிவாக்.); that which exists already.

[Skt. pūrva+tana > த. பூர்வதனம்]

பூர்வதிக்கு *pūrvatikku,* பெ.(n.) கிழக்கு; east. *"பூர்வதிக்கில் வாழ்வார்க்கு" (சைவச. பொது. 227).*

[பூர்வம்+திக்கு]

பூர்வதிசை *pūrva-tišai,* பெ.(n.) **பூர்வதிக்கு** பார்க்க; see *pūrva-tikku.*

பூர்வதுவந்தம் *pūrva-duvandam,* பெ.(n.) ஊழ்வினைப் பயன் (வின்.); result of past karma.

[Skt. pūrva+dvand > த. பூர்வதுவந்தம்]

பூர்வதொந்தம் *pūrva-tondam,* பெ.(n.) **பூர்வதுவந்தம்** பார்க்க (வின்.); see *pūrva-duvandam.*

பூர்வபக்கம் *pūrva-pakkam,* பெ.(n.) **பூர்வபட்சம்** பார்க்க; see *pūrvapaṭcam.*

பூர்வபட்சம் *pūrva-paṭcam,* பெ.(n.) 1. வளர்பிறை; bright fortnight. 2. எதிரியின் சொற்போர் (வாதம்); first part of an argument, containing the views of an opponent, opp. to šittāntam; prima facie view or argument on any question.

[Skt. pūrva+paṭcam > த. பூர்வபட்சம்]

பூர்வபட்சி-த்தல் *pūrva-paṭci-,* 4 செ.கு றாவி. (v.t.) எதிரி கூறிய மறுப்புரையை எடுத்துக்காட்டி விடையளித்தல்; to state the opponent's views and arguments for the purpose of answering them. *"ஓரர்த்தத்தைத் தாயார் வார்த்தையாலே பூர்வபட்சித்து மகள் வார்த்தையாலே சித்தாந்திக்கிறது" (திவ். திருநெடுந். 18, வியா).*

[Skt. purva+pakṣa > த. பூர்வபட்சி-த்தல்]

பூர்வபதம் *pūrva-padam,* பெ.(n.) தொகை மொழியுள் முதலிலுள்ள சொல் (பி.வி.22, உரை); first member of a compound word.

[Skt. pūrva+pata > த. பூர்வபதம்]

பூர்வபற்குனி *pūrva-parkuni,* பெ.(n.) கணை விண்மீன் (பூரம்) (வின்.); the 11th nakṣatra.

[Skt. pūrva+phalguni > த. பூர்வபற்குனி]

பூர்வபுண்ணியத்தானம் *pūrva-punniya-t-tānam,* பெ.(n.) பிறப்பியத்தில் (சாதகம்) முன்னை நல்வினையைத் தெரிவிக்கும் ஐந்தாம் வீடு (C.G.); fifth house in a horoscope, showing past meritorious deeds.

[Skt. pūrva+punya+sthāna> த. பூர்வ புண்ணியத்தானம்]

பூர்வபுண்ணியம் *pūrva-punniyam,* பெ.(n.) முன்னை நல்வினை (வின்.); meritorious deeds of past births.

[Skt. pūrva+punya > த. பூர்வபுண்ணியம்]

பூர்வம்¹ *pūrvam,* பெ.(n.) குறிப்பிடும் ஒன்றின் நிறைந்த தன்மை (அல்லது) அடிப்படை என்ற பொருளில் பெயர்ச் சொற்களோடு இணைந்து வரும் சொல்; combining with nouns to give the sense of the nature of being full (with the thing mentioned) basis (of).

பூர்வம்² *pūrvam,* பெ.(n.) 1. தொடக்கம் (ஆதி); first, beginning. 2. பழைமை; antiquity, oldness. 3. கிழக்கு; east. 4. முதன்மை (வின்.); periority, precedence. 5. முற்காலம்; former time.

[Skt. pūrva > த. பூர்வம்]

பூர்வம்³ *pūrvam,* வி.எ.(adv.) **பூர்வகம்** பார்க்க; see *pūrvāgam.*

பூர்வமாய் *pūrvam-āy,* வி..எ.(adv.) **பூர்வகம்** (வாயுசங். பலவ. 3) பார்க்க; see *pūrvagam.*

பூர்வமீமாஞ்சை *pūrva-mīmāñjai,* பெ.(n.) மறையில் கூறப்படும், வினை, ஓகம், சமயவழிபாடு முதலியவற்றை விளக்கிக் கூறும் சைமினி முனிவர் எழுதிய கலைநூல்; system of Indian philosophy, founded by Jaimini, investigating and determining the nature of dharma or the duties, rites, and rituals enjoined by the Vēdic law and also incidentally enunciating the correct principles of Vēdic exegesis, dist. fr. *uttaramīmāñjai.*

[பூர்வம்+மீமாஞ்சை]

பூர்வவேதம் *pūrva-vēdam,* பெ.(n.) தொடக்கக் (ஆதி) காலத்து மறைகள். இவை 4 வகை தைத்திரியம், பௌடிகம், தலவகாரம், சாம வேதம் என்பன; the preancient Vedam which consists of four parts - Thaithirium poudikam, Thalavakāram and Sāmam. (சா.அக.)

1. தைத்திரியம் – அற ஒழுக்கமாகிய ஐந்து பெரிய வேள்விகளைப் பற்றிச் சொல்வது.

2. பௌடிகம் – பொருள் பற்றிய ஒழுக்கமாகிய அரச நீதியைப் பற்றியது.

3. தலவகாரம் – முல்லை நிலத்துச் செய்கை யாகிய கற்பொழுக்கத்தை அறிவிப்பது.

4. சாமவேதம் – அறம், பொருள், இன்பம் ஆக இம்மூன்றின் நிலையாமை பற்றியும் அதற்கு மேலுள்ள வீடு பேறாகிய அழிவற்ற பேரின்பப் பொருளைப் பற்றியும் நன்கு விளக்குவது.

பூர்வாங்கம்[1] *pūrvāṅgam,* பெ.(n.) திருமணம் முதலியவற்றுக்குறுப்பாய் அவற்றின் முன்னிகழ்த்தப்படுவது; anything preliminary, the preliminary rites forming part of a ceremony, as marriage.

[Skt. pūrva+aṅga > த. பூர்வாங்கம்]

பூர்வாங்கம்[2] *pūrvāṅgam,* பெ.(n.) மேல் நிலையில் பாடும் இசை ஓசைகளுள் முதல் நான்கு (Mus.of.Ind.63); lower tetrachord of the octave.

[Skt. pūrvāṅga > த. பூர்வாங்கம்]

பூர்வாசாரம் *pūrvāšāram,* பெ.(n.) பழைய வழக்கம்; ancient custom. *"பூர்வாசாரங் கொண்டு இறையிலியாக" (S.I.I.vi, 145).*

[Skt. pūrva+ācāra > த. பூர்வாசாரம்]

பூர்வாசிரமம் *pūrvāširamam,* பெ.(n.) துறவியின் முந்திய நிலை; previous stage of life, as of an ascetic.

[Skt. pūrva+āšrama > த. பூர்வாசிரமம்]

பூர்வாப்பியாசம் *pūrvā-p-piyāšam,* பெ.(n.) தொன்று தொட்ட வழக்கம் (வின்.); ancient usage or custom; manners and customs of former times.

[Skt. pūrva+abhyāsa > த. பூர்வாப்பியாசம்]

பூர்வாபரம் *pūrvābaram,* பெ.(n.) மணவினை பிணவினைக்குரிய மந்திரங்கள்; collection of mantras, used in marriages and funerals.

[Skt. pūrva+param > த. பூர்வாபரம்]

பூர்வார்சிதம் *pūrvāršidam,* பெ.(n.) முன்னோர் ஈட்டிய பொருள்; ancestral property.

[Skt. pūrva+arjita > த. பூர்வார்சிதம்]

பூர்விகன் *pūrvigaṉ,* பெ.(n.) அகவை (வயது) முதிர்ந்தவன் (கோயிலொ. 29); old man.

[Skt. pūrvika > த. பூர்விகன்]

பூர்வீகசரித்திரம் *pūrvīka-sarittiram,* பெ.(n.) பழைய வரலாறு (வின்.); ancient history.

[Skt. pūrvīka+caritra > த. பூர்வீகசரித்திரம்]

பூர்வீகம் *pūrvīgam,* பெ.(n.) 1. முற்காலம்; antiquity, old times. 2. மூலம் (வின்.); origin.

[Skt. pūrvika > த. பூர்வீகம்]

பூர்வோத்தரம் *pūrvōttaram,* பெ.(n.) 1. முழு விளக்கம்; முழுச்செய்தி (விருத்தாந்தம்); all

the circumstances, antecedent and subsequent. *"அவனைப் பூர்வோத்தரங் களைக் கேட்குமளவில்" (கோயிலொ. 30).* 2. வடகிழக்கு; north east.

த.வ. தொய்வரவு

[Skt. pūrvōt-tara > த. பூர்வோத்தரம்]

பூர்வோத்தரவிருத்தம் *pūrvōttara-viruttam,* பெ.(n.) முன்னொடு பின் மாறுபடுகை; self-contradiction, inconsistency.

[Skt. pūrvōttara+viruddha > த. பூர்வோத்தர விருத்தம்]

பூர்னீசு *pūrnīsu,* பெ.(n.) கம்பளிப் போர்வை (C.G.); flannel or woollen covering.

[U. būrnis > த. பூர்னீசு]

பூரட்டாதி *pūrattādi,* பெ.(n.) முற்கொழுங்கால் என்னும் இருபத்தைந்தாம் நாண்மீன்; the 25th naksatra.

[Skt. prōsthapada > த. பூரட்டாதி]

பூரணகருப்பம் *pūrana-karuppam,* பெ.(n.) எல்லா உறுப்புகளும் வெளித்தோன்றி அமையப் பெற்று உடம்பும் நன்னிலை எய்தி காணும் நிலைமை; நிறைந்த கருப்பம்; full term or period of pregnancy. (சா.அக.).

பூரணகருப்பிணி *pūrana-karuppini,* பெ.(n.) நிறைமாத பிள்ளைத்தாய்ச்சி; நிறைசூலி; woman in advanced state of pregnancy.

[Skt. pūrna+garbhini > த. பூரணகருப்பிணி]

பூரணகலசம் *pūrana-kalašam,* பெ.(n.) பூரணகும்பம் பார்க்க; see *pūranakumbam.*

பூரணகிரகணம் *pūrana-kirakanam,* பெ.(n.) முழுக்கோள் பற்றுகை; total eclipse.

த.வ. நிறைகோள்பற்று

[Skt. pūrna+grahana > த. பூரணகிரகணம்]

பூரணகுணம் *pūrana-kunam,* பெ.(n.) முழுமையாக நலமடைதல்; complete cure. (சா.அக.)

பூரணகும்பம் *pūrana-kumbam,* பெ.(n.) மாவிலை தருப்பை முதலியவற்றால் ஒப்பனை செய்து நீர் நிறைக்கப்பட்ட குடம்; pot full of water and decorated, used on auspicious occasions. *"பூரண கும்பமும் பொலம்பாலி கைகளும்".* (மணிமே. 1:44)

த.வ. நிறைகுடம்

[Skt. pūrna > த. பூரணம்+கும்பம்]

பூரணகும்பமரியாதை *pūrana-kumba-mariyādai,* பெ.(n.) நற்காரியங்களுக்காக முகாமையா (முக்கியமா)னவர்களுக்குத் தரப்படும் மதிப்புரவு; welcome accorded to dignitaries with - pūranakumba (usually in a temple).

[பூரணம்+கும்பம்+மரியாதை]

பூரணத்திற்புக்கியாடல் *pūranattir-pukkiyādal,* பெ.(n.) உடலினின்று உயிரை தன்னிச்சைப்படி பிரித்தலும் மறுபடி உடலிற் கொண்டு வந்து சேர்த்தலும் ஆகிய கூடு விட்டு கூடு பாய்கை; soul passing from one body to the other. (சா.அக.)

பூரணத்துவம் *pūranattuvam,* பெ.(n.) நிறைவான நிலை; perfection, wholeness.

பூரணபாத்திரம் *pūrana-pāttiram,* பெ.(n.) 1. 256 சிறங்கையரிசி கொள்ளும் ஏனம் (பாத்திரம்); a vessel of the capacity of 256. handful of rice. 2. **பூரண கும்பம்** பார்க்க; see *pūrana-kumbam.*

[Skt. pūrna+pāttiram > த. பூரணபாத்திரம்]

பூரணபிண்டம் *pūrana-pindam,* பெ.(n.) முழுவளர்ச்சி பெற்ற கரு; full grown foetus. (சா.அக.).

[பூரணம்+பிண்டம்]

பூரணம்[1] *pūranam,* பெ.(n.) 1. நிறைவு (பிங்.); fullness, plenitude, perfection. 2. முழுமை; entireness, whole. 3. மிகுதி (யாழ்.அக.); plenty. 4. முடிவு; consummation,

accomplishment. *"அக்காரியம் பூரண மாயிற்று".* 5. பொந்திகை (திருப்தி); satisfaction, gratification. *அவனுக்கு இப்போதுதான் மனம் பூரணமாயிற்று.* 6. ஐந்து விரல்களையும் விலக வைத்து நீட்டிக்காட்டும் அவிநயக்கை வகை (வின்.); gesture in which the five fingers are held out straight and apart from one another.

[Skt. pūrṇa > த. பூரணம்]

பூரணம்² *pūraṇam,* பெ.(n.) 1. இரண்டாவது மூன்றாவது (எண் வரிசைமுறைப் பெயர்) என எண்கள் நிறுத்த முறையைக் குறிக்கும் எண்; ordinal. *"எண்கள் நான்கும் ஈண்டுப் பூரணப் பொருளவாய் நின்றன".* (பரிபா. 3, 78, உரை); 2. பணியாரத்தினுள்ளீடு; pie inside a pastry or confection. 3. பிதிர்ப்பிண்டம் (யாழ்.அக.); cake offered to the manes. 4. ஆடையின் குறுக்கிழை (யாழ்.அக.); woof. 5. மழை (யாழ்.அக.); rain.

[Skt. pūraṇa > த. பூரணம்]

பூரணம்³ *pūraṇam,* பெ.(n.) 1. உடம்பின் அறிவுக்கண்; eye of wisdom. 2. குழிப் புண்ணில் ஆற்றக் கூடிய மருந்தை நிரப்புதல்; to fill the per-ferating ulcer with medicine. 3. முழுமையான ஆயுள்வேத மருந்து; a medicine containing gold, mercury and sulphur. 4. இலவங்கப் பட்டை; cinnamam bark. 5. பெண்குறி; female private part. (சா.அக.)

பூரணமதுமேகம் *pūraṇa-madumēgam,* பெ.(n.) முக்கோள் வேறுபாட்டினால் நோயாளியை நெடு நாளைக்கு உயிருடன் வைத்திருக்கும் ஒரு வகை நீரழிவு நோய்; diabetes which does not end the life. (சா.அக.)

[பூரணம்+மதுமேகம்]

பூரணன் *pūraṇaṉ,* பெ.(n.) 1. குணங்கள் நிரம்பினவன்; perfect being; one perfect in all attributes. 2. கடவுள்; God, as the most perfect. *"பூரணன் றிருமுன்னர்" (சிவரக. மேரு. 20).* 3. மூர்த்த பாடாணம் (சங்.அக.); a kind of prepared arsenic.

[Skt. pūrṇa > த. பூரணன்]

பூரணை¹ *pūraṇai,* பெ.(n.) 1. நிறைவு; fullness, perfection. *"பூரணையாற் பதினாற் கயிற்றோக் கப்புவன மெல்லாம்"* (திருநூற். 91). 2. வெள்ளுவா, நிறையுவா; the tank to the north of a full moon. 3. ஐம்மி, பதின்மி, உவா என்ற நிலவு நாள்கள் (திவா.); the 5th, 10th and 15th *titi* in a lunar fortnight. 4. நிலவுலகிற்கு மேல் தேவர்களால் உருவாக்கப்பட்ட சிவனாலயத்தின் (சமவ சரணத்தின்) வடப்புறமுள்ள வாவி (மேருமந். 1086, உரை).

[Skt. pūrṇā > த. பூரணை]

பூரணை² *pūraṇai,* பெ.(n.) ஐயனார் தேவி (பிங்.); the consort of Aiyaṉār.

[Skt. pūraṇai > த. பூரணை]

பூரணைகேள்வன் *pūraṇai-kēḷvaṉ,* பெ.(n.) ஐயனார் (பிங்.); Aiyaṉār, as husband of *Pūraṇai.*

[Skt. pūraṇi > த. பூரணை+கேள்வன்]

பூரத்திரயம் *pūra-t-tirayam,* பெ.(n.) கணை (பூரம்), முற்குளம் (பூராடம்), முற்கொழுங்கால் (பூரட்டாதி) என்ற விண்மீன்கள் (விதான. குணாகுண. 13, உரை); the 11th, 20th and 25th naksatras.

[Skt. pūra+traya > த. பூரத்திரயம்]

பூரா¹ *pūrā,* கு.பெ.எ.(adj.) 1. முழுவதுமான; complete, full, whole. 2. முழுவதும்; fully, completely.

[U. pūrā > த. பூரா]

பூரா² *pūrā,* பெ.(n.) பூராசருக்கரை (C.G.) பார்க்க; see *pūrāšarukkarai.*

[U. būrā > த. பூரா]

பூராக்கை *pūrākkai*, பெ.(n.) கைதேர்ந்தவன் (வின்.); expert.

[U. pūra > த. பூரா+கை]

பூராக்கைகாரன் *pūrā-k-kaikāraṉ*, பெ.(n.) **பூராக்கை** பார்க்க; see *pūrākkai*.

[U. pūra > த. பூரா+கைகாரன்]

பூராசர்க்கரை *pūrā-šarkkarai*, பெ.(n.) **பூரா சருக்கரை** பார்க்க; see *pūrā-šaru-k-karai*.

[U. būrā > த. பூரா+சர்க்கரை]

பூராசருக்கரை *pūrāšaru-k-karai*, பெ.(n.) பழுப்புச் சருக்கரை; fine brown sugar. (சா.அக.)

[பூரா+சருக்கரை]

பூராடம் *pūrāḍam*, பெ.(n.) முற்குளம் என்னும் இருபதாம் நாள்மீன்; the 20th naksatra.

[Skt. pūrvāṣāḍhā > த. பூராடம்]

பூராடமாசு *pūrāḍa-māšu*, பெ.(n.) பால்வெளி மண்டலம் (வின்.); galaxy, the milky way.

[Skt. pūrvāṣāḍhā > த. பூராட+மாசு]

பூருவம் *pūruvam*, பெ.(n.) 1. பழமை; antiquity, oldness. *"பூருவ வயிரநாடிப் போர் விளைத்து" (சேதுபு. கத்து. 37).* 2. கிழக்கு; east.

[Skt. pūrva > த. பூருவம்]

பூருவாசாரியர் *pūruvāšāriyar*, பெ.(n.) 1. பழைய சமயாசாரியர்; religious preceptors of ancient times. *"பூருவாசாரியர்கள் போத மனுட்டானங்கள்" (உபதேசரத். 72).* 2. பண்டைய நூலாசிரியர் (பி.வி.8); ancient authors.

[Skt. pūrva > த. பூருவ+ஆசாரியர்]

பூரை *pūrai*, பெ.(n.) 1. நிறைவு (யாழ்.அக.); fullness. 2. போதியது; sufficiency. *"மாதர்க டோதகப் பொய்யிலாழும் புலையினிப் பூரைகாண்" (தாயு. பொன்னைமாத. 40).* 3. முடிவு; end, finish. *"கூத்தினிப் பூரையிட வமையாதோ" (திருப்பு. 879).* 4. இன்மை (வின்.); nothingness, naught. 5. உதவாக் கரை; worthless person or thing. *"அமரரிதுபூரை யதிசயமெ னருள்பாட" (திருப்பு. 593).*

[U. pūrā > த. பூரை]

பெகுலம் *pekulam*, பெ. (n.) மிகுதி; a large number or quantity. "அம்பு பெகுலந் தொடுத்து" (பாரத.பதினேழாம்.73).

[Skt. bahula > த. பெகுலம்]

பெட்டில் *peṭṭil*, பெ.(n.) நரம்புக் கருவி வகை; fiddle.

[E. fiddle > த. பெட்டில்]

பேசரா *pējarā*, பெ.(n.) குடியற்ற சிற்றூர்; uninhabited village.

[U. bē-ciradh > த. பேசரா]

பேசரி *pēsari*, பெ.(n.) வைரக்கற்கள் பதித்த பகுதியும் அதனுள் இணைந்த சிறு வளையமும் கொண்ட ஒரு வகை மூக்குத்தி; a kind of nose jewel studded with (eight) diamonds and a ring attached to it.

[U. bēsari > த. பேசரி]

பேசன்லாடு *pēsaṉ-lāḍu*, பெ.(n.) 1. பிசிறுலாடு; a kind of confection-ball of green pulse. 2. கடலைமாவாற் செய்த பணியார வுருண்டை (இந்துபாக.308); a kind of confection-ball of bengalgram.

[Mhr.pēsan+ த. லாடு.]

பேசா *pējā*, பெ.(n.) மட்டமான தரமுடையது; low quality.

[U. bējā > த. பேசா]

பேசார் *pējār*, பெ.(n.) 1. சோர்வு; fatigue, weakness. 2. தொந்தரவு; annoyance, disgust.

[U. bēzār > த. பேசார்]

பேசாவியாச்சியம் *pējā-viyācciyam*, பெ. (n.) அடிப்படையில்லாத வழக்கு; groundless or vexatious suit.

[Skt. bējā > த. பேசாவியாச்சியம்]

பேசாறு–தல் *pējāṟu-,* 5 செ.கு.வி.(v.i.) இளைப்புறுதல் (இ.வ.); to become wearied.

[Skt. bēzār > த. பேசாறு–,]

பேசிராக்கிராமம் *pēširā-k-kirāmam,* பெ.(n.) குடியிருப்பில்லாத ஊர் (C.G.); uninhabited village.

[U. bēcarāg+grāmā > த. பேசிராக்கிராமம்]

பேசு[1] *pēsh,* செ.கு.வி.(v.i.) மிக நன்று என்னும் பொருள் குறிக்கும் சொல்; exclamation meaning very good, excellent.

த.வ. **வலே**

[U. bēs> த. பேசு]

பேசு[2] *pēsh,* பெ.(n.) முதல்; foremost front.

[U. pēs.> த. பேசு]

பேசு[3] *pēs,* பெ.(n.) கட்டடத்தின் தரைமட்டம் (இ.வ.); basement.

[E. base > த. பேசு.]

பேசுகிசுதி *pēshkisti,* பெ.(n.) 1. வரி; tax, tribute. 2. பெருநிலக்கிழார் கட்டும் வரி; rent payable to government by the owners of permanently settled estates.

[U. pēs-kist > த. பேசுகிசுதி.]

பேட்டா *pēṭṭā,* பெ.(n.) 1. தலைப்பாகை; turban. 2. பட்டும் பருத்தியும் கலந்து நெய்த தலைக் குட்டைத் துணி (G.Sm.D.I.i: 266); turban cloth woven of silk and cotton.

[H. phēṭa > த. பேட்டா]

பேட்டி *pēṭṭi,* பெ.(n.) நேர்காணல்; interview, audience.

[U. bhēṭī > த. பேட்டி]

பேட்டு[1] *pēṭṭu,* பெ.(n.) 1. பட்டைக்கரை; stripe, broad border. 2. சரடு (இ.வ.); string, as of a necklace. waist - cord containing more than one strand.

[Te. pētu > த. பேட்டு]

பேட்டு[2] *pēṭṭu,* பெ.(n.) கூடுதல் இழைகளைக் கொண்டு நெய்யப்படும் வடிவமைப்பு; pattern or design woven with extra warp threads.

பேட்டை[1] *pēṭṭai,* பெ.(n.) 1. நகர்ப்புறங்களில் ஏழை மக்கள் வசிக்கும் வசதி குறைந்த பகுதி; area or locality (of a town). *'எங்கள் பேட்டைக்கே வந்து தகராறு செய்கிறாயா'.* 2. நகரத்திற்கருகே கூடும் சந்தை (யாழ்.அக.); market-place near a town. 3. பயண (பிரயாண) வண்டி தங்குமிடம்; caravanserai.

[Skt. pēṭaka> Mhr.pēṭh > த. பேட்டை]

பேட்டை[2] *pēṭṭai,* பெ.(n.) 1. குறிப்பிட்ட ஊர்தி அல்லது தொழில் நிறைந்து காணப்படும் பகுதி; locality where a particular kind of vehicle or work is found in large numbers. *'வண்டிப் பேட்டை'.*

[பேட்டை[1] > பேட்டை]

பேடகம் *pēḍagam,* பெ.(n.) 1. பெட்டி; box. *"பேடகத்திடை யொழுகிய தினபதி பெருங் குமரனை" (பாரத. சம்பவ. 41).* 2. கூடை (யாழ்.அக.); basket. 3. திரள் (யாழ்.அக.); mass, heap.

[Skt. pēṭaka > த. பேடகம்]

பேடம் *pēḍam,* பெ.(n.) 1. வெள்ளாடு (யாழ்.அக.); goat.

[Skt. bhēḍa > த. பேடம்]

பேத்வரி *pēt-vari,* பெ.(n.) நகரையடுத்த ஊருக்கு வாங்கும் வரி (R.T.); a tax on a suburban village.

[Mar. pēṭh > த. பேத்+வரி]

பேதகம் *pēdagam,* பெ.(n.) 1. மனவேறுபாடு; difference, disagreement, variance, discord. 2. தன்மை வேறுபாடு; change; tranformation. *"உயிரை மாய்த்தோ பேதகம் புரிவீர்" (குற்றா. தல. தருமசா. 118).* 3. கபடம் (வஞ்சனை) (இ.வ.); deceit.

[Skt. bhēdaka > த. பேதகம்]

பேதகன் *pēdagaṉ,* பெ.(n.) 1. கருத்து வேறுபட்டவன்; one who is disaffected. *"பேதகனான பிதாமரு ளெய்தா" (பாரத. வாரணா. 103).* 2. மூன்று வகைக் கலப்பு இனத்தைச் சார்ந்தவன்; one belonging to any of the three mixed castes. *"பின்னாகிய மும்மை கொள்பேதகரை" (கந்தபு. காமதக. 18).*

[Skt. bhēdaka > த. பேதகன்]

பேதசித்தாந்தம் *pēda-cittāndam,* பெ.(n.) இருளும் ஒளியும் போல ஆதனும் சிவமும் இரண்டாயிருக்குமென்ற கொண்முடிபு (சங்.அக.); the doctrine that the Supreme Being and the individual soul exist as two different entities, as light and darkness.

[Skt. bhēda+siddhaata > த. பேதசித்தாந்தம்]

பேதசைவம் *pēda-šaivam,* பெ.(n.) சிவனியம் (சைவம்) பதினாறனுள் குருலிங்க சங்கமபத்தி பூண்டு சிவனை உருவமாகவும் அருவமாகவும் அருவுருவமாகவும் ஊழ்கித்தால் வீடுபேறு கிட்டுமெனக் கூறும் சமயம்; a šaiva sect which holds that the path of salvation lies through worship of Šivaliṅga, guru and devoties, and meditation and Šiva in His triple aspect of uruvam, aruvam and aru-v-uruvam one of 16 šaivam.

[Skt. bhēda+šaiva > த. பேதசைவம்]

பேதப்படு-தல் *pēda-p-paḍu-,* 20 செ.கு.வி.(v.i.) 1. வேற்றுமைப்படுதல்; to disagree, to be discordant. 2. மயங்குதல்; to be bewildered. *"பேதப் படுகின்ற பேதைமீர்காள்" (தேவா. 30, 7).*

[பேதம்+படு-தல்]

பேதம் *pēdam,* பெ.(n.) 1. வேறுபாடு (திவா.); difference, dissimilarity. 2. மனமாறுகை; disagreement, variance, disaffection. 3. முரண்பாடு; diversity, variety. *"கீத நின்ற பேதங்கள்" (கம்பரா. கடறாவு. 74).* 4. திரிபு (வின்.); modification, alteration. 5. இணக்கமின்மை (வின்.); incongruity, inconsistency. 6. பிறிதொன்றற்கு இல்லாத ஏற்றம்; distinctive merit. *'சமயிகள் பேதங்கள் சொல்லிப் பிதற்றும் பிரான்' (திவ். திருவாய். 4.2:4).* 7. பகுப்பு; subdivision, sect. division. 8. நால்வகை வழிகளுள் ஒருவர்க் கொருவர் பகையுண்டாக்கும் நெறி (சீவக. 747, உரை); policy of division or sowing discord among confederates, one of four kinds of upāyam. 9. (சுகதபேதம், சுசாதிபேதம், லிசாதிபேதம் என்ற) மூன்று வகை வேறுபாடு (வேதா. சூ. 27, உரை); difference, of three kinds, viz. *šukata-pēdam, šušādi-pēdam, višādi-pēdam.*

பேதலி-த்தல் *pēdali-,* 4 செ.கு.வி.(v.i.) 1. மாறுதல்; to vary, alter, change in form, appearance or nature; to be estranged. 2. வேற்றுமைப்படுதல் (வின்.); to be different; to differ. *நிறம் பேதலிக்கிறது.* 3. மனம் குழம்புதல்; to be discouraged, agitated or dismayed. *பிணியினி லுடைந்து வாடிப் பேதலித் திரங்கு வார்கள்* (சங்.அக.).

[Skt. bhēda > த. பேதலி-த்தல்]

பேதவாதசைவம் *pēda-vāda-šaivam,* பெ.(n.) அகச் சமயமாறனுள் இறைவனருளால் மலம் நீங்குமென்றும் முத்த நிலையில் இறைவனும் ஆதனும் (ஆதன்) தலைவன் தலைவி போல் வரென்றுங் கூறும் சமயம் (சி.சி. 11, 5, சிவஞா.); a Saiva sect which holds that the soul gets rid of corruption by the grace of God and that even in the state of emancipation it bears to God the relation of the beloved to the lover, one of six *aka-c-camayam.*

[Skt. bhēda+vāda+šaiva > த. பேதவாதசைவம்]

பேதவாதம் *pēda-vādam,* பெ.(n.) ஆதனின் தலைவனுக்கு (ஜீவேசுரர்க்கு) வேற்றுமை கூறுங் கொள்கை; doctrine of the quality of the universe and the Supreme Soul opp. to *apēta-vātam.*

[Skt. bhēda+vāta > த. பேதவாதம்]

பேதனம் *pēdaṉam,* பெ.(n.) 1. எட்டு கருமத் தொன்றும் மக்களுள் வேற்றுமை விளைப்பது மான கலை; magic art of causing discord between persons, one of aṣṭa-karumam. 2. மாழையை பிறிதொன்றாக மாற்றும் கலை; the art of transmutation. 3. பன்றி (சங்.அக.); hog.

[Skt. bhēdara > த. பேதனம்]

பேதாபேதம் *pēdāpēdam,* பெ.(n.) 1. வேற்றுமையும் ஒற்றுமையும்; similarity and dissimilarity, agreement and disagreement.

[Skt. bhēdā-bhēda > த. பேதாபேதம்]

பேதாபேதி *pēdāpēdi,* பெ.(n.) பேதாபேத சித்தாந்தமுடையோன் (திவ். திருச்சந். 1, வ்யா. பக். 9); follower of the Bhāskara school of philosophy.

[Skt. bhēdābhēdin > த. பேதாபேதி]

பேதானா *pēdāṉā,* பெ.(n.) 1. சீமை மாதுளை; quince. 2. சீமை மாதுளை விதை; quince seed.

[U. bihidāna > த. பேதானா]

பேதி[1] *pēdi,* பெ.(n.) 1. பிரிப்பது; that which divides, detaches or separates. 2. பிரிந்தவன் (பேதமானவன்) (யாழ்.அக.); one who is estranged. 3. இதளியம் (அக.நி); mercury, quicksilver. 4. கழிச்சல்; diarrhoea, purging. 5. கக்கல் கழிச்சல்; cholera. 6. குடலைத் துப்புரவு செய்யும் கழிச்சல் மருந்து (பேதிமருந்து) (வின்.); purgative, cathartic.

[Skt. bhēdin > த. பேதி]

பேதி[2]-த்தல் *pēdi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. மாறுபடுதல்; to change, vary, differ. *"பேதியா வின்ப வெள்ளத்தை" (திவ். பெரியதி. 4.3:2).* 2. கெடுதல் (யாழ்.அக.); to degenerate, deteriorate. 3. உடைதல்; to be broken, interrupted, frustrated. 4. கழிச்சலாகுதல் (வின்.); to purge. 5. குழம்புதல் (சங்.அக.); to become confused. 6. மனம் மாறுபாடுதல் (யாழ்.அக.); to become changed in mind.

[Skt. bhēda > த. பேதி-த்தல்]

பேதி[3]-த்தல் *pēdi-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. பிரித்தல்; to divide, separate. 2. மனமலையச் செய்தல் (வின்.); to excite, disgust, alienate. 3. மாற்றுதல்; to change, diversity. 4. வெட்டுதல் (உரி.நி.); to cut, split.

[Skt. bhēda > த. பேதி-த்தல்]

பேதிக்குக்கொடு-த்தல் *pēdikku-k-koḍu-,* 4 செ.குன்றாவி.(v.t.) 1. கழிச்சல் மருந்து கொடுத்தல் (வின்.); to administer a cathartic. 2. அச்சமுண்டாக்குதல்; to terrify, cause fear.

[Skt. bhēdin > த. பேதி > பேதிக்கு+கொடு-த்தல்]

பேதிகட்டல் *pēdi-kaṭṭal,* பெ.(n.) பேதியாதலை நிறுத்தல்; to stop motion. (சா.அக.)

பேதித்துநட-த்தல் *pēdittu-naḍa-,* 3 செ. குன்றாவி.(v.t.) நாடி மாறுபட்டு ஓடுதல்; variation or deviation in the beating of pulse. (சா.அக.)

[பேதி+அத்துநட-த்தல்]

பேதிபண்ணு-தல் *pēdi-paṇṇu-,* 5 செ.கு.வி. (v.i.) துப்புரவு செய்தல்; to cause purging. (சா.அக.)

[பேதி+பண்ணு-தல்]

பேதிமருந்து *pēdi-marundu,* பெ.(n.) கழிச்சலுக்குக் கொடுக்கும் மருந்து; a medicine given for cleansing the bowels cathartic purgative. (சா.அக.)

[பேதி+மருந்து]

பேதிமாத்திரை *pēdi-māttirai,* பெ.(n.) கழிச்சல் மாத்திரை; pills causing motions. (சா.அக.)

[பேதி+மாத்திரை]

பேதியாகுமூலி *pēdiyāgumūli,* பெ.(n.) கழிச்சலையுண்டாகும் சரக்கு; anything that

causes motions such as. சிவதை, நேர்வாளம், நிலாவரை போன்றவை. (சா.அக.)

பேதுரு *pēduru,* பெ.(n.) இராயப்பர் என்ற கிறித்தவப் பெரியார்; St. Peter.

பேப்பர் *pēpper,* பெ.(n.) 1. தாள்; paper. 2. செய்தித்தாள் (இக்.வ.); news paper.

[E. paper > த. பேப்பர்]

பேபந்து *pēpandu,* பெ.(n.) 1. ஒழுங்கின்மை; being without order confusion, irregular. 2. கட்டுக் காவலின்மை; insecurity.

[U. bēband > த. பேபந்து]

பேபர்வா *pēparvā,* கு.பெ.எ.(adj.) கவனக் குறைவான (C.G.); careless, headless, negligent.

[U. bēparwā > த. பேபர்வா]

பேபாக்கி *pēpākki,* பெ.(n.) மீதியின்மை (C.G.); out right settlement, payment in full.

[U. bēbaqi > த. பேபாக்கி]

பேமாலம் *pēmālam,* பெ.(n.) மூடன்; simpleton, foolish, fellow.

[U. bēmālum > த. பேமாலம்]

பேயூடம் *pēyūḍam,* பெ.(n.) 1. அமிர்தம்; nectar. 2. சீம்பால்; beestings. 3. வெண்ணெய்; butter.

[Skt. pēyūsa > த. பேயூடம்.]

பேரி *pēri,* பெ.(n.) மரவகை; communis.

[E. pear > த. பேரி.]

பேரிசு *pērij,* பெ.(n.) 1. கணக்கின் மொத்தத் தொகை; total or aggregate of an account. 2. பட்டாதாரர் அல்லது ஊரார் கட்டும் மொத்தவரி; total amount of a revenue assessment.

[U. bēriz > த. பேரிசு.]

பேலகம் *pēlagam,* பெ.(n.) தெப்பம் (யாழ்.அக.); boat.

த.வ. மிதவை

[Skt. bhēlaka > த. பேலகம்.]

பேலம் *pēlam,* பெ.(n.) 1. விதை; testicle. 2. சிறுபங்கு; small portion or share. 3. போகுதல்; going.

[Skt. pela > த. பேலம்.]

பேலவம் *pēlavam,* பெ.(n.) மென்மைத் தன்மை; softness.

[Skt. pēlava > த. பேலவம்.]

பேலா *pēlā,* பெ.(n.) கிண்ணவகை; a kind of cup. சந்தனப் பேலா.

[U. piyāla > த. பேலா.]

பேலி *pēli,* பெ.(n.) குதிரை (சங்.அக.); horse.

[Skt. pēlin > த. பேலி.]

பேவார்சு *pēvāršu,* பெ.(n.) 1. பிறங்கடை யற்றவன்; one who is without an heir or representative, one who has no one to claim as his relation or to inherit his property. 2. கேட்பாரற்ற பொருள்; unclaimed property. 3. பயனற்ற தன்மை; worthlessness. *"அவ்வேலை பேவார்சா யிருக்கிறது".*

[U. wāris > த. பேவார்சு.]

பேனம்[1] *pēṉam,* பெ.(n.) அனுவல்லிப் பூடு; (நாமதீப.393); opium.

பேனம்[2] *pēṉam,* பெ.(n.) நுரை; froth, foam. *"பேன வெண்குடையவாய" (கம்பரா. பிரமாத்.145).*

[Skt. phēna > த. பேனம்.]

பேனா *pēṉā,* பெ.(n.) மைதோய்த்து எழுதுங் கருவி; pen, quill.

த.வ. தூவல்

[E. pen > த. பேனா.]

பேனாகத்தி *pēṉā-katti,* பெ.(n.) சிறுகத்தி வகை; pen knife (pond.).

[E. pen > த. பேனாகத்தி.]

பைக்கே *paikkē,* பெ.(n.) பணம் (P.T.L.); money.

[T. paikam > த. பைக்கே.]

பைசந்தி *paicandi,* பெ.(n.) 1. நுரையீரலி லிருந்து எழும்பும் ஒருவித சத்தம்; sound from lungs. 2. கருப்பந்தரிக்குமிடம்; womb; uterus (சா.அக.).

பைசல் *paišal,* பெ.(n.) 1. வழக்கு முதலிய வற்றின் தீர்மானம்; decree, judgment, decision, settlement of a quarrel, settlement of a debt. 2. 1801ஆம் ஆண்டு சென்னைத் துரைத்தனத்தாராற் செய்யப்பட்ட நிலவரித் திட்டம்; original settlement, assessment fixed at the time of the original settlement, assessmnet fixed at the time of the original survey in Madras, generally about the year 1801. 3. இறத்தல்; die. *"ஆள் பைசல்" (உ.வ.).*

த.வ. தீர்வு

[U. faisal > த. பைசல்.]

பைசல்கம்மி *paical-kammi,* பெ.(n.) விளைவுக் குறைவால் ஏற்படும் வரிக்குறைப்பு; partial remission of revenue on account of scanty crop.

[U. faisal+ > த. பைசல்கம்மி.]

பைசல்தீர்வை *paical-tirvai,* பெ.(n.) தீர்வை திட்டப்படுத்திய காலத்தில் ஏற்பட்ட நிலவரி; rate of assessment fixed on each field at the time of the first settlement.

[U. faisal+ > த. பைசல்தீர்வை.]

பைசல்நாமா *paisal-nāmā,* பெ.(n.) எழுத்து மூலமான தீர்ப்பு; written order or award.

[U. faisal+ > த. பைசல்நாமா.]

பைசல்புல்வரி *paisal-pul-vari,* பெ.(n.) மேய்ச்சற் புல்லுக்கு இடும் தீர்வை; fixed grazing tax or ces^c

[U. faisal+ > த. பைசல்புல்வரி.]

பைசல்சாச்தி *paisal-cāsti,* பெ.(n.) கணக்குத் தீர்வைக்கு அதிகமாக தண்டப்படும் வரி; any payment levied over and above the paicaltirvai.

[U. faisal+rāsti > த. பைசல்சாச்தி]

பைசா[1] *paišā,* பெ.(n.) 1. பை பார்க்க; see *paišā.* 2. காலணா; quarter anna. 3. சில்லறை; copper change.

[U. paisā > த. பைசா.]

பைசா[2] *paisā,* பெ.(n.) பைதா பார்க்க; see *paitā.*

[U. paiyā > த. பைசா.]

பைசாசசத்துவம் *paišāša-šattuvam,* பெ.(n.) பெண்டிரது பத்துசத்துவங்களுள் ஒன்று (கொக்கோ.4, 24); a quality of woman, one of pattu-cattuvam.

[U. paišāsa > த. பைசாசசத்துவம்.]

பைசாசசுரம் *paišāša-curam,* பெ.(n.) ஒருவகைக் காய்ச்சல் நோய்; a kind of fever.

[U. paišāca > த. பைசாச+சுரம்.]

பைசாசத்துத்தி *paicācatutti,* பெ.(n.) பேய்த்துத்தி; a kind of abutilon (சா.அக.).

த.வ. காட்டுத்துத்தி

பைசாசத்தும்புலா *paicācattumpulā,* பெ.(n.) பேய்த்தும்புலா; a plant (சா.அக.).

த.வ. காட்டுத்தும்புலா

[பைசாசம்+தும்புலா.]

பைசாசத்தும்பை *paicācattumpai,* பெ.(n.) பேய்த்தும்பை; wild tumbai plant (சா.அக.).

த.வ. காட்டுத் தும்பை

பைசாசத்தூரிதம் *paicācattūritam,* பெ.(n.) **பேயூமத்தை** பார்க்க; see *pēyūmattai* (சா.அக.).

த.வ. காட்டுமத்தை

பைசாசநிலை *paisasanilai,* பெ.(n.) பைசாசம்[1-2] பார்க்க; see paisasam[1-2].

பைசாசநெல் *paišāša-nel,* பெ.(n.) மலைநெல்; paddy grown in mountains (சா.அக.).

த.வ. காட்டுநெல்

[பைசாசம் + நெல்.]

பைசாசப்புணர்ச்சி *paicāc-p-puṉarcci,* பெ.(n.) 1. பெண் தூங்கும்போது அல்லது மயங்கிக் கிடக்கும்போது புணர்தல்; having sexual connection with a woman while she is sleeping or unconsiousness. 2. வலக்காரமாய் அல்லது ஒப்புதலில்லாது கலவி செய்தல்; seducing a woman by force or without her consent. 3. கொக்கோக 64 விளையாட்டுகளில் ஒன்று; one of the 64 postures of sexual intercourse with a woman as described in erectic science called kokkogam compiled by kokkogamuni (சா.அக.).

த.வ. இயல்பலாத புணர்ச்சி, பெருந்திணை

[Skt. paisasa > த. பைசாசம்+புணர்ச்சி.]

பைசாசபூமி *paicāca-pūmi,* பெ.(n.) தொன்மங்கள் கூறும் நிலங்களுளொன்று (அபி.சிந்.); one of the mythological divisions of the world.

[Skt. paicācam+ > த. பைசாசபூமி.]

பைசாசம்[1] *paiśacam,* பெ.(n.) 1. பேய்; devil, goblin. 2. வில்லோர் நிலை நால் வகையுள் ஒரு காலை நிலையாக ஊன்றி ஒருகாலை மடக்கி நிற்கும் நிலை (பிங்.);position of an archer in which one leg is held straight and the other bent, one of four *villōr-nilai.* 3. எண் வகை மணங்களுள் துயின்றாள், களித்தாள், மூத்தாள், இழிந்தவள் முதலிய மகளிரைச் சேரும் மணம்; a form of sexual dealing in which a man embraces a sleeping or intoxicated woman or a woman older than himself or of a lower caste as prevailing among the *piśācas.*

த.வ. பூதம்

[U. paiśāca > த. பைசாசம்.]

பைசாசம்[2] *paiśācam,* பெ.(n.) 1. இரும்பு (சங்.அக.); iron. 2. பேய்; devil. (சா.அக.).

[U. paiśāca > த. பைசாசம்.]

பைசாசமுள்ளி *paiśāśamuḷḷi,* பெ.(n.) காட்டுமுள்ளி; solanum lacquini (சா.அக.).

[பைசாசம் + முள்ளி.]

பைசாசி[1] *paiśāci,* பெ.(n.) 1. வடதமிழ் எனப்பட்ட பிராகிருத மொழியின் கிளை மொழி (சி.சி.பாயி.2, மறைஞா.); *paiśāśi* a prakrit dialect. 2. சடாமாஞ்சி; spikenard. 3. பெண் பிசாசு; she-goblin.

[U. paiśāci > த. பைசாசி.]

பைசாசி[2] *paicāci,* பெ.(n.) சடாமாஞ்சி; a kind of medicinal grass valerian or Indian spinard (சா.அக.).

பைசாத்தும்புலி *paicāttum-puli,* பெ.(n.) தூம்பரவாலி; a plant (சா.அக.).

பைசார் *paiśār,* பெ.(n.) காலில் அணியும் சோடு (வின்.); slippers, Indian shoes.

த.வ. அடிபுதை அரணம்

[U. paizār > த. பைசார்.]

பைசாரம் *paicāram,* பெ.(n.) நாட்டுப் பகுதி; locality or neighbourhood. *"கச்சிப் பேட்டுக் கீழைப் பைசாரத்து" (S.I.I.ii, 517).*

பைசு *paiśu,* பெ.(n.) பால் (சங்.அக.); milk.

[U. payas > த. பைசு.]

பைசுன்யம் *paiśuṉyam,* பெ.(n.) இவறன்மை (உலோபம்); miserliness. *"பைசுன்ய பண்பினர்" (பாடு.28, அடியவர்).*

த.வ. இவறற்றன்மை

[Skt. paiśuna > த. பைசுன்யம்.]

பைசுனம் *paicuṉam,* பெ.(n.) 1. இவறற்றன்மை; miserliness, niggardliness. 2. புறங்கூறுகை; back biting.

த.வ. ஈயாக்குணம்

[U. paiśuna > த. பைசுனம்.]

பைத்தியக்காரத்தனம் *paittiya-k-kārattaṉam,* பெ.(n.) மூடத்தனம்; the state of being imbecile (சா.அக.).

பைத்தியக்காரன் *paittiyakkāraṉ,* பெ.(n.) பித்தம் பிடித்தவன்; a mad or insane man (சா.அக.).

த.வ. கோட்டி

kinds viz. *mādu, nilam, el, pon, ney, ādai, vellam, nel, velli, uppu.*

[Skt. daša > த. தச]

தசதிக்கு *tasadikku,* பெ.(n.) நான்கு பெரிய திசைகளும், நான்கு கோணத் திசைகளும், மேலுங் கீழும் ஆகிய பத்துத் திக்குகள்; the ten regions of the earth, comprising the eight directions and the upper and the lower regions.

[Skt. daša > த. தச+திக்கு]

தசதீட்சை *tašadiṭcai,* பெ.(n.) 1. மந்திர (மாந்திரிக) நூலிற் சொல்லியுள்ள சத்தி குருவம் (தீட்சை), சிவக்குருவம் (தீட்சை) இது இயல்பாக (சாதாரணமாக) மூச்சுப்பயிற்சி (பிராணாயாமம்) செய்வதற்கு முன்னதாகவே உடம்பைப் வலுப்படுத்த வேண்டி ஓதப்பட்ட மந்திர வெழுத்துகள்; (in mantric philosophy) the mystic letters chanted for purposes of invigorating the ten parts of the human system before sitting up for practising pranayama. 2. பூநீருப்பை, பத்துத் தடவை கறைத்தும், காயவைத்தும் அல்லது காய்ச்சியும் தெளிவுறுத்தும் உப்பைத் தூய்மை (சுத்தி) செய்தல்; purifying or cleaning the fuller's earth. It is disolved in pure rain water filtered and kept in the hot sun for evaporation the resulting salt is again dissolved in rain water filtered and evaporated as before thus it is repeated ten times, this salt is used in Alchemy. (சாஅக.)

தசநரம்பு *tašanarambu,* பெ.(n.) தசநாடி பார்க்க; see tašanādi. (சா.அக.)

[Skt. dasa > த. தச+நரம்பு]

தசநவம் *tašanavam,* பெ.(n.) ஒருநாடு; a country. *"தசநவப் பெயர் .... அகணிநாடு" (கம்பரா. ஆறுசெல். 16).*

தசநாடி *tašanādi,* பெ.(n.) இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்திசிங்குவை, சங்கினி, பூடா, குகு, கன்னி, அலம்புடை யெனப் பத்துவகைப்பட்டு உயிர் (சுவாச)க் காற்று இயங்குதற்குரிய வழியாகிய நாடிகள் (சிலப். 3, 26, உரை, பக். 84); the ten tubular vessels of the human body, believed to be the principal channels of the vital spirit viz. *iḍai, piṅgalai, sulumuṉai, kāndāri, atticiṅkuvai, caṅkiṉi, pūḍā, kuku, kaṉṉi, alampuḍai.*

[Skt. daša > த. தசம்+நாடி]

தசநாதம்[2] *tašanādam,* பெ.(n.) மனித உடம்பில் உள் (அந்தர்)முக நோக்குடையவர் களுக்கு விளங்கும் பத்து வகை ஓசைகள்; the ten sounds heard by those who have the in sight. (சா.அக.)

[Skt. dasanāda > த. தசநாதம்]

1. மணி - bell, 2. கடல் - sea, 3. யானை - elephant, 4. குழல் - fruit, 5. மேகம் - clouds thunder, 6. வண்டு - bees, 7. தும்பி - dragonfly, 8. வளை - conch, 9. பேரிகை - big drum, 10. யாழ் - veena like instrument.

தசப்பிரசாபதி *tasa-p-pirašāpadi,* பெ.(n.) மரீசி, அத்திரி, அங்கிரசு, புலத்தியர், புலகர், கிரது, வசிட்டர், தசர், பிருகு, நாரதர் என்ற பத்து துணைப் பிரமர்கள் (சி.சி.2, 29, சிவாக்.); lords of created beings,. numbering ten, viz. *marīci, attiri, aṅkiresu, pulastiyar, pulakar, kiratu, vasiṣṭar, takṣar, piruku, nāratar.*

[Skt. dašan-piracāpata > த. தசப் பிரசாபதி]

தசப்பிராதுற்பவம் *tasa-p-pirāturpavam,* பெ.(n.) திருமாலின் பத்து பிறப்புகளைப் பற்றிக் கூறும் நூல்; (யாழ்ப்.) poem celebrating the ten avatars of *Viṣṇu.*

[Skt dasa+prādurbhāva > த. தசப்பிராதுற்பவம்]

தசப்பொருத்தம் *tasa-p-poruttam,* பெ.(n.) பத்துவகைத் திருமணப் பொருத்தங்கள்; the ten kinds of marriage fitnesses.

[Skt. daša > த. தசம்+பொருத்தம்]

பைத்தியங்காரி *paittiyaṅkāri,* பெ.(n.) புகையிலை; tobacco (சா.அக.).

பைத்தியச்சாலை *paittiya-c-cālai,* பெ.(n.) பித்தர்சாலை; dark house (சா.அக.).

[பைத்தியம் + சாலை.]

பைத்தியச்சுரம் *paittiya-c-curam,* பெ.(n.) பித்தத்தினால் வெறியையுண்டாக்குமோர் வகைக் காய்ச்சல்; a kind of fever brought about by excess of bile humour causing perplexity of mind or madness which is due to the bilious affection (சா.அக.).

[பைத்தியம் + சுரம்.]

பைத்தியநாடி *paittiyanāḍi,* பெ.(n.) 1. பித்தநாடி; pulse indicating the bile humour; bilious condition indicated by pulsation. 2. கோட்டிக்காரரின் நாடி நடை; the pulsation indicating insanity (சா.அக.).

[பைத்தியம் + நாடி.]

பைத்தியநீக்கி *paittiya-nīkki,* பெ.(n.) கோட்டியை நீக்கு மூலிகைகள், மிளகு, சித்திரத்தை, கோட்டம், அதிமதுரம், கிரந்திநாகம், விலாமிச்ச வேர், சீரகம், காட்டுச் சீரகம், பிளப்புச் சீரகம், கொத்துமல்லி, செங்கடுகு, வெண் சிவதை வேர், குங்குமப்பூ, அட்டுப்பு, கல்லுப்பு; drug that alleviate insanity (சா.அக.).

[பைத்தியம் + நீக்கி.]

பைத்தியப்புலப்பம் *paittiya-p-pulappam,* பெ.(n.) வெறிப்பிதற்றலான மூளைக் கோளாறு; delirium (சா.அக.).

த.வ. வெறிப்புலம்பல்

[பைத்தியம் + புலப்பம்.]

பைத்தியப்புலம்பல் *paittiya-p-pulambal,* பெ.(n.) பிதற்றல்; raving (சா.அக.).

[பைத்தியம் + புலம்பல்.]

பைத்தியம் *paittiyam,* பெ.(n.) பித்தமானது தலையின் மேலேறி செருக்கை (அகங் காரத்தை) எழுப்பு வதினால் அறிவுமயக்கம் (பிரமை) தோன்றி மனம்விட்டுக் கூத்தாடி வெளிவந்து பிசாசு கொண்டவன்போல் திரியும் ஒரு வகை நோய்; a mental affection causing a disordered intelect and furiousness due to action of bile entering the brain (சா.அக.).

த.வ. மனநோய், தெரன்

[Skt. paittiya > த. பைத்தியம்.]

பைத்தியமான *paittiyamāṉa,* பெ.எ. (adj.) 1. பித்துக்கொண்ட; rabid. 2. பைத்தியங் கொண்ட; mad (சா.அக.).

பைத்தியமிறக்குவோன் *paittiyam-irakkuvōṉ,* பெ.(n.) பைத்திய நோயைத் தீர்ப்போன்; a specialist in the treatment of insanity - *Alienist* (சா.அக.).

[பைத்தியம் + இறக்குவோன்.]

பைத்தியமிறங்கல் *paittiyam-iraṅgal,* பெ.(n.) பித்தம் குறைதல்; reduction of bile humour; reduction of madness (சா.அக.).

[பைத்தியம் + இறங்கல்.]

பைத்தியமேகம் *paittiya-mēgam,* பெ.(n.) பித்தமேகம்; mega disease due to vitiation of bile humour (சா.அக.).

[பைத்தியம் + மேகம்.]

பைத்தியரோகம் *paitiya-rōgam,* பெ.(n.) 1. மனநோய், கோட்டி; a disease, lunacy, insanity and other mental disorders are due to want of mental equilibrium. 2. பித்த மயக்கம்; giddiness. 3. தலைசுற்றல்; vertigo (சா.அக.).

த.வ. மனநோய், தெரன்

பைத்தியவிகாரம் *paittiya-vigāram,* பெ.(n.) பித்தத்தால் அடையும் மாறுதல்; change in attitude and character due to insanity (சா.அக.).

த.வ. வெறிமாற்றம்

பைத்தியன் *paittiyaṉ,* பெ.(n.) கோட்டிக்காரன்; madman.

த.வ. கோட்டி

[Skt. paittiyam > த. பைத்தியன்.]

பைதா *paitā,* பெ.(n.) வண்டிச்சக்கரம் (இ.வ.); wheel of a cart.

[U. paiyā > த. பைதா.]

பைதிருதி *paitirudi,* பெ.(n.) கொடிச் சம்பங்கி; sampac creeper (சா.அக.).

பைபிள் *paipiḷ,* பெ.(n.) கிறித்தவர் வேதாகமம்; bible.

[E. bible > த. பைபிள்.]

பைபீலம்[1] *paipīlam,* பெ.(n.) எறும்பு (யாழ்.அக.); ant.

[Skt. pipīla > த. பைபீலம்.]

பைபீலம்[2] *paipīlam,* பெ.(n.) இரும்பு; iron (சா.அக.).

பைபீலவாதம்[1] *paipīla-vādam,* பெ.(n.) அறுபத்து நாலு கலையுள் எறும்பு முதலிய உயிரிகளின் மொழிகளை அறியும் கலை (யாழ்.அக.); the art of upwards one of *aṟupattunālu-kalai.*

[Skt. pai-pila-vāda > த. பைபீலவாதம்.]

பைபீலவாதம்[2] *paipīla-vādam,* பெ.(n.) பீலுவாதம்; a system of meta physics.

[Skt. pīlu+vāda > த. பைபீலவாதம்.]

பைபீலிகாவாதம் *paipīlikā-vādam,* பெ.(n.) **பைபீலவாதம்**[1] பார்க்க; see *paipīla-vādam.*

[Skt. paipīlikā-vāda> த. பைபீலிகாவாதம்.]

பைபீலிகை *paipīligai,* பெ.(n.) எறும்பு (யாழ்.அக.); ant.

[Skt. pipīlikā > த. பைபீலிகை.]

பைமாசு *paimāšu,* பெ.(n.) 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களால் இந்தியா விற் செய்யப்பட்ட நிலவளவு; land measure-ment made early in the nineteenth century by the British in India.

[U. paimāyas > த. பைமாசு.]

பைமாசுதார் *paimāsu-tār,* பெ.(n.) நிலவளவு செய்யும் அலுவலர்; surveyor.

[U.paimāyas+ > த. பைமாசுதார்.]

பைமூலவாதம் *paimūlavātam,* பெ.(n.) 1. எறும்புகளின் பேச்சறிதல்; a science studying the language of ants. 2. பிபீலவாதம்; a system of philosophy amongst ancients (similar to Epicurean philosophy) about the theory of atoms and atomic nature (சா.அக.).

பைரவம் *pairavam,* பெ.(n.) 1. கொடுமைத் தன்மை (வின்.); terribleness. 2. அச்சம் (வின்.); dread, awe, fear. 3. சிவசமய வகை; a subdivision of Saiva religion. 4. செவ்வழியாழ்த் திறங்களுள் ஒன்று (பிங்.); an ancient secondary melody-type of *ševvaḻi* class.

[Skt. bhairava > த. பைரவம்.]

பைரவன் *pairavaṉ,* பெ.(n.) 1. சிவத் திருமேனிகளுள் ஒருவரான வைரவக் கடவுள்; a manifestation of Siva. 2. நிசாதனக்கும் இழிகுலப் (சூத்திரப்) பெண்ணுக்கும் பிறந்தவன்; man born of a *Nisāda* and a *Sūdra* woman. *"பின்னவர்மாது நிடாதனைப் புணரப் பிறந்தவன் பைரவனென்பான்" (சூத.சிவமான். 12, 31).*

[Skt. bhairava > த. பைரவன்.]

பைரவி *pairavi,* பெ.(n.) 1. கொற்றவை; *durgā. "பைரவி யகம்படியரே" (தக்கயாகப். 431).* 2. ஒரு வகைப்பண்; a specific melody type (பரத. இராக.56).

த.வ. காளி

[Skt. bhairavi > த. பைரவி.]

பைராகி *pairāgi,* பெ.(n.) வடநாட்டுத் துறவி; asceticpilgrim from North India.

த.வ. துறவி

[U. bairāgī > த. பைராகி.]

பைரி *pairi,* பெ.(n.) இராசாளி வகை; peregrine falcon, *falco peregrinus.*

[U. bhairij > த. பைரி.]

பைல்வான் *pailvāṉ,* பெ.(n.) மற்போர் செய்வோன்; athlete, wrestler, pugilist.

த.வ. மற்போராளன்

[U. pahlwān > த. பைல்வான்.]

பொக்கிசக்காரன் *pokkiša-k-kāraṉ*, பெ. (n.)
1. கருவூலத்தின் பொறுப்பாளி; treasurer.
2. பெருந்தனக்காரன் (யாழ்.அக.); rich man.

த.வ. காசுக்கடைக்காரன்

[Skt. pokkisam> த. பொக்கிசம்+காரன்.]

பொக்கிசம் *pokkišam,* பெ.(n.) 1. அரசுக் கருவூலம்; treasury. 2. கருவூலவேலை பார்க்கும் பணி; office of a treasurer. *"பொக்கிசம் முத்திருளப்ப பிள்ளை" (I.M.P.Rd.).*

பொக்கிசசாலை *pokkiša-šālai,* பெ.(n.) பொருட்களின் சேமவிடம்; treasury.

[Skt. pokkisam.]

பொக்கிசதார் *pokkiša-tār,* பெ.(n.) **பொக்கிசக்காரன்** (இக்.வ.) பார்க்க; see *pokkišakkāraṉ.*

த.வ. பெருந்தனக்காரர்

[Skt. pokkisam.]

பொக்கிசப்பெட்டி *pokkiša-p-peṭṭi,* பெ.(n.) பணம் முதலியன வைக்கும் பேழை (வின்.); chest for money and other valuables.

த.வ. பணப்பெட்டி

[Skt. pokkisam > த. பெட்டி.]

பொக்கிசவீடு *pokkiša-vīḍu,* பெ.(n.) **பொக்கிசசாலை** பார்க்க; see *pokkiša-šālai.*

த.வ. கருவூலம்

[Skt. pokksam + த. வீடு.]

பொடிமாசு *poḍimāšu,* பெ.(n.) 1. வெஞ்சன வகை; a kind of relish. 2. சிற்றுண்டி வகை (மதி. க. ii, 15); a confection.

த.வ. உசிலி

பொத்தல் *pottal,* பெ.(n.) போத்தல்; bottle (Pond.).

த.வ. புட்டி, புட்டில்

[F. bouteille > த. பொத்தல்.]

பொதிலகம் *potilagam,* பெ.(n.) பூனைப்புல்; a kind of grass (சா.அக.).

பொம்மக்காதேவி *pommakkā-dēvi,* பெ.(n.) தொட்டியருடைய குல தெய்வமும் மாயக் கலையில் வல்லவரானவர் (சால வித்தைக் காரர்) வணங்குவதுமாகிய ஒரு சிறுதெய்வம்; patron deity of the *tōṭṭiya* caste, worshipped also by jugglers (E.T. vi, 189).

பொம்மல் *pommal,* பெ.(n.) பொம்மை; puppet, ettigy. *"பொம்ம லாட்டுவிக்கும் தோலுருப்போல" (விறலிவிடு).*

த.வ. தோற்பாவை

[Skt. pratima - Pkt. bommā->த.பொம்மல்.]

பொலிசு *polišu,* பெ.(n.) 1. காவல்துறை; police. 2. காவலர்; constable.

த.வ. காவல்

[E. police > த. பொலிசு.]

போக்கியதார் *pōkkiyadār,* பெ.(n.) பயனீட்டு (அனுபோக) ஒற்றிக்காரன்; usufructuary mortgage.

[Skt. bhōgya+U. dār > த. போக்கியதார்.]

போக்கியதாரன் *pōkkiyatāraṉ,* பெ.(n.) **போக்கியதார்** பார்க்க; see *pōkkiyadār.*

[Skt.bhōgya+U. dar>த. போக்கியதாரன்.]

போக்கியப்பொருள் *pōkkiya-p-poruḷ,* பெ.(n.) நுகர்ச்சிக்குரிய பண்டம் (சங்.அக.); object of enjoyment.

த.வ. நுகர்பொருள்

[Skt. bhōgya > த. போக்கியம்+பொருள்.]

போக்கியபத்திரம் *pōkkiya-pattiram,* பெ.(n.) பயனீட்டு (அனுபோக) ஒற்றிச்சீட்டு; usufructuary mortgage deed.

த.வ. ஒற்றியாவணம்

[போக்கியம் + பத்திரம்.]

[Skt. bhōgya+ > த. போக்கியம்+பத்திரம்.]

போக்கியம்[1] *pōkkiyam,* பெ.(n.) 1. நுகர் பொருள்; object of enjoyment. *"தாரகபோசக போக்கியங்கள் எல்லாம்" (ஈடு, 6, 7, 1).* 2. கருமாவின் நுகர்ச்சி (வின்.); experience of good or evil karma. 3. செல்வம் (வின்.); felicity, wealth. 4. ஒற்றியுரிமையின் வருவாய் (உ.வ.); use, usefruct. 5. ஒற்றியுரிமை (இ.வ.); mortgage with possession. 6. பொருளுக்காகவும் நால்வகைச் சேனைக்காகவும், சிற்பம் நாட்டியம் முதலியவற்றிற்காகவும் செலவு செய்யும் பொருள் (சுக்கிரநீதி, 98); royal revenue spent on coinage, jewels, army, artisans.

[Skt. bhōgya > த. போக்கியம்.]

போக்கியம்[2] *pōkkiyam,* பெ.(n.) சித்திரக் கவி வகை (யாப்.வி.497); a kind of metrical composition.

த.வ. **ஓவியச் செய்யுள்**

[Skt. bhōgya > த. போக்கியம்.]

போகக்கலப்பை *pōga-k-kalappai,* பெ.(n.) நுகர்ச்சிக்குரிய பல்வகைப் பண்டம்; object of enjoyment. *"அரும்பெறன் மரபிற்போகக் கலப்பையும் பொறுத்தனர் மயக்கி" (பெருங்.உஞ்சைக்.38, 177).*

த.வ. **நுகர்வுப் பண்டங்கள்**

[Skt. bhōga > த. போகம்+கலப்பை.]

போகக்கலவை *pōga-k-kalavai,* பெ.(n.) உயர்ந்த கலவைச் சாந்து; perfumed paste. *"போகக்கலவை யாகத்தப்பி" (பெருங். இலாவாண.18, 108).*

த.வ. **சந்தனக்களபம்**

[Skt. bhōga > த. போகம்+கலவை.]

போகக்களஞ்சி *pōga-k-kalañji,* பெ.(n.) 1. பாவை; lady. 2. பெண்; girl (சா.அக.)

[போகம் + களஞ்சி.]

போககாண்டம் *pōga-kāṇḍam,* பெ.(n.) **சுத்தாசுத்தத்துவம்** (சி.சி.2, 70) பார்க்க; see *śuddāśuttatattuvam.*

[Skt. bhōga > த. போககாண்டம்.]

போகக்குளிகை *pōga-k-kuḷigai,* பெ.(n.) கலவி மாத்திரை; a pill to increase the virility or power of sexual intercourse (சா.அக.).

[போகம் + குளிகை.]

போககாமி *pōga-kāmi,* பெ.(n.) உலக வின்பத்தை விரும்புபவன்-ள் (ஞானபூசா.10, உரை); worldly person.

[Skt. bhōga+kāma > த. போககாமி.]

போககாரகன் *pōga-kāragaṉ,* பெ.(n.) பிறப்பியக்காரனின் மகிழ்நுகர்ச்சிகளைக் குறிக்கும் வெள்ளிக்கோள் (சுக்கிரன்); the planet venus, as indicative of marital happiness, enjoyment of pleasures.

த.வ. **வெள்ளிக்கோள்**

[Skt. bhōga > த. போககாரகன்.]

போககாரிகை *pōga-kārigai,* பெ.(n.) சிவனியக் கொண்முடிபு நூல்; treatise on saiva *siddhānta* philosophy.

[Skt. bhōga > த. போககாரிகை.]

போகசக்தி[1] *pōga-śakti,* பெ.(n.) கலவிக்குரிய ஆண்மை; power of sexual intercourse; vital power (சா.அக.).

த.வ. **பேராண்மை**

[போகம் + சக்தி.]

போகசத்தி[2] *pōga-śatti,* பெ.(n.) போகசிவனது ஆற்றல்; the Sakti of Siva in his *śadāśiva* aspect (சி.சி.2, 75, மறைஞா.).

[Skt. bhōga > த. போகசத்தி.]

போகண்டன் *pōgaṇḍaṉ,* பெ.(n.) ஐந்து அகவை (வயது)க்குமேல் பதினைந்து அகவை (வயது)க்குட்பட்ட ஆண்மகவு (யாழ்.அக.); a male child between five and fifteen years.

[Skt. pōganda > த. போகண்டன்.]

போகணம் *pōgaṇam,* பெ.(n.) பெருமருந்து எனும் செடி; a turning plant, Indian birth wort (சா.அக.).

போகத்தானம் *pōga-t-tāṉam,* பெ.(n.) 1. உடல் (சங்.அக.); body. 2. நுகர்ச்சிக் குறிய இடம் (ஆனந்தமய கோசம்) (யாழ்.அக.); the sheath of bliss. 3. கணியத்தில் செல்வம், மகிழ்ச்சி போன்றவற்றைக் (போகங்களைக்) குறிக்கும் ஏழாமிடம்; the seventh house from the ascendant as indicating marital happiness.

[Skt. bhōga > த. போகம்+தானம்.]

போகதத்துவம் *pōga-tattuvam,* பெ.(n.) சாதாக்கிய தத்துவம் (சி.போ.பா.பக்.40); the stage in which both knowledge and action are balanced.

[Skt. bhōga > த. போகம்+தத்துவம்.]

போகநட்டி *pōga-naṭṭi,* பெ.(n.) இரு விளைச்சல் (போக) நிலங்களுக்கு இரண்டாம் விளைச்சலில் (போகத்தில்) நீரின்மை பற்றிச் செய்யும் வரிவிலக்கு (இ.வ.); remission on double-crop land when there is no water for a second crop.

த.வ. தீர்வைவிலக்கு

[Skt. bhōga > த. போகநட்டி.]

போகநாதர் *pōga-nādar,* பெ.(n.) மருத்துவ நூல்கள் பலவற்றின் ஆசிரியரும் பதினெண் சித்தர்களுள் ஒருவருமான முனிவர்; a mystic, author of several works on medicine, one of *patiṉeṉ-cittar.*

[Skt. bhōga > த. போகநாதர்.]

போகநிதானம் *pōga-nidāṉam,* பெ.(n.) புணர்ச்சிக்குரிய காலம்; time suitable for copulation (சா.அக.).

[போகம் + நிதானம்.]

போகநீர் *pōga-nīr,* பெ.(n.) கருநீர் (விந்து); seminal fluid, sperm. *"போகநீர் பன்னீரா்ற் போக்கியே" (விறலிவிடு.576).*

[Skt. bhōga > த. போகம்+நீர்.]

போகப்பவிந்திரி *pōgappa-vindiri,* பெ.(n.) 1. ஏகம்பச்சாரம்; a kind of salt mineral. 2. (போகம்) புணர்ச்சி; intercourse, enjoyment (in philosophy) it is the perception of objects upon which enjoyment (சா.அக.).

போகபத்திரம் *pōga-pattiram,* பெ.(n.) ஒரு பொருளைப் பயன்கொள்ள எழுதிக் கொடுக்கும் ஆவணம் (சுக்கிரநீதி, 93); document granting the use of specific property.

[Skt. bhōga > த. பத்திரம்.]

போகபந்தம் *pōga-pandam,* பெ.(n.) ஆதனைக் (ஆன்மாவைக்) கட்டுப்படுத்தும் உலகவின்பம் (வின்.); worldly pleasures, as ensnaring the soul.

த.வ. உலகப்பற்று

[Skt. bhōga > த. போகபந்தம்.]

போகபிசாசிகை *pōga-piśāśigai,* பெ.(n.) பசி; hunger (சா.அக.).

[போகம் + பிசாசிகை.]

போகபுவனம் *pōga-buvaṉam,* பெ.(n.) வினைப்பயனை நுகருமிடமாகிய துறக்க நிரயங்கள்; heavens and hells, as the regions where the fruits of one's actions in this world are experienced. *"போகபுவன முண்டெனா" (மணிமே.27: 44).*

[போகம் + புவனம்.]

[Skt. bhōga > த. போகபுவனம்.]

போகபூமி[1] *pōga-būmi,* பெ.(n.) 1. துறக்கம் (சொர்க்கம்); svarga, as a place of enjoyment. 2. விளைநிலம் (சது.); fruitful field. 3. ஆதியரிவஞ்சம், நல்லரி வஞ்சம், ஏமதவஞ்சம், ஏமவஞ்சம், தேவகுருவம், உத்தரகுருவம் என அறுவகைப்பட்ட போக நுகர்ச்சியிடங்கள்; blissful regions where the fruits of good karma are enjoyed, six

in number, viz., *ātiyarivañcam, nallari-vañcam, ēmata-vañcam, ēma-vañcam, tēva-kuruvam, uddara-kuruvam*, dist. fr. *karma-pūmi.* 4. மாக்கள் புசித்தற்கு இடமாக வுள்ள முப்பத்தாறு தத்துவங்கள் (சதாசிவ.85); categories, 36 in number, as the regions for enjoyment of karma by souls.

த.வ. நுகர்புலம்

[Skt. bhōga > த. போகபூமி.]

போகபூமி² *pōga-būmi,* பெ.(n.) கரும பலத்தை நுகர்தற்குரிய இடப்பகுதி; place for enjoyment of the fruits of karma, dist. *karuma-pūmi.* *"இதுதான் நவகண்டமாய் அதில் எட்டுக்கண்டமும் போகபூமியாய் ஒன்பதாம் கண்டமான பரதகண்டம் கருமபூமியா யிருக்குமென்றபடி" (திவ். திருச்சந்.8, வ்யா, பக்.27).*

த.வ. நுகர்வு நிலம்

[Skt. bhōga+pūmi > த. போகபூமீ.]

போகபூமியர் *pōga-būmiyar,* பெ.(n.) பதினெண்கணத்துள் ஒருசாரார் (பிங்.); a class of demigods, one of *patiṉeṉ-kaṇam* (பிங்.).

[Skt. pōga-pūmi > த. போகபூமியர்.]

போகபோக்கியம் *pōga-pōkkiyam,* பெ.(n.) 1. நுகர்ச்சிப் பொருள் (சங்.அக.); object of enjoyment. 2. செல்வநுகர்வு (வின்.); prosperity, enjoyment of wealth.

[Skt. bhōga > த. போகபோக்கியம்.]

போகம்¹ *pōgam,* பெ.(n.) 1. **எண்வகைப் போகம்** பார்க்க; see *eṇvagai-p-pōgam.* 2. இன்பம்; pleasure, happiness. *"போகம் வைத்த பொழில்" (தேவா.639, 9).* 3. புணர்ச்சி; sexual enjoyment. *"புணர்முலையார் போகத்தே மையலுற" (திருவாச.51, 3).* 4. உண்ணுகை; eating. *"உயிரின் போகம் வெறுத்தனமைனும்" (கம்பரா.ழுதற்போ.148).* 5. பழவினைப்பட்டறிவு (அனுபவம்); experience, as a result of past karma, whether painful or pleasant. 6. செல்வம்; perity, wealth. 7. விளைவு; crop, produce of a season. *"போகந்தரு சீர்வயல்" (தேவா.70).* 8. கூலி (யாழ்.அக.); wages. 9. பாம்பினுடல் (சூடா.); body of a snake. *"அனந்தன் மோகத்தில்" (உத்தரரா. தோத்திர.17).* 10. பாம்பின் படம் (யாழ்.அக.); hood of cobra. 11. பாம்பு (யாழ்.அக.); snake. 12. சதுரங்கச் சேனையை ஒன்றுக்குப்பின் ஒன்றாக நிறுத்தும் போர்முறை (குறள், 767, கீழ்க்குறிப்பு); a kind of array of the four sections of an army one behind the other. 13. நில நுகர்வு (நிலவனுபவம்); use possession, as of land. 14. கடவுளின் அருளாற்றல் (அவத்தை) மூன்றனுள் அறிவும் செயலும் (ஞானமும் கிரியையும்) சமமாகவுள்ள நிலை (சி.போ.பா.2, 2, பக்.134, புதுப்.); aspect of god in which knowledge and action are well balanced, one of three avattai. 15. கீழ்வாயிலக்கத்தின் மேலெண்; numerator of a fraction.

[Skt. bhōga > த. போகம்.]

போகம்² *pōgam,* பெ.(n.) 1. கண்பூ; cataract of the eye. 2. இதளியம்; mercury. 3. செய்நஞ்சு வகை (சாலாங்க பாடாணம்); a kind of arsenic (சா.அக.).

போகமகள் *pōga-magaḷ,* பெ.(n.) 1. இன்ப நுகர்ச்சிக்குரியவளாகக் கருதப்படும் பெண்; woman, considered an object of enjoyment. *"போகமகள் புகழ்த் தந்தை" (திவ்.திருவாய்.4, 8, 9).* 2. மனைவி; wife. *"போகமகளிர் வலக்கண் குடித்த" (சீவக.2173).* 3. **போகத்திரீ** பார்க்க (இ.வ.); see *pōgasdrī.*

[Skt. bhōga+ > த. போகம்+மகள்.]

போகமிகவாசி *pōgamigavāśi,* பெ.(n.) முட்பலாசு என்னும் மரம்; tree *mut-palāšu* (சா.அக.).

போகமுண்டாக்கி *pōgamuṇḍākki,* பெ.(n.) காமத்தை மூட்டுப் பொருள்; drug that increases the sexual power; following are a few such drugs, நறுந்தாளி, நன் முருங்கை, தூதுளம், பசளை, அறுகீரை.

இதிலொன்றைப் புளிநீக்கி நெய்யிட்டு உண்ண நிருவாகம் உண்டாம். (சா.அக.).

[போகம் + உண்டாக்கி.]

போகரோகணி *pōgarōgaṇi,* பெ.(n.) புல்லூரி; a parasitic plant (சா.அக.).

[போகம் + ரோகணி.]

போகவதி *pōgavati,* பெ.(n.) 1. நாக லோகத்துத் தலைநகரம் (பிங்.); the city of the serpent race in the other world. 2. நல்ல பெண் (சங்.அக.); prosperous, happy woman.

[Skt. bhōga-vatī > த. போகவதி.]

போகவதிக்கிறை *pōgavatikkiṟai,* பெ.(n.) போகவதிநகர்க்கு அரசனான அனந்தன் (பிங்.); *Aṉandaṉ,* the serpent lord of *pōkavadi.*

[Skt. bhōga-vathi > த. போகவதிக்கிறை.]

போகவரிசி *pōgavarici,* பெ.(n.) **கார்போக வரிசி, போகி** பார்க்க; see *kārpōgavarici, pōgi* (சா.அக.).

[போகம்+அரிசி.]

போகவலிமை *pōga-valimai,* பெ.(n.) பெண்ணிடம் புணர்ச்சி செய்யும் திறன்; the power of sexual intercourse (சா.அக.).

[போகம் + வலிமை.]

போகவிச்சை *pōgaviccai,* பெ.(n.) புணர்ச்சியில் ஆசை; liking to have intercourse (சா.அக.).

த.வ. புணர்விருப்பு

[போகம் + இச்சை.]

போகவிடயம் *pōga-viḍayam,* பெ.(n.) இன்பத்தைத் துய்த்தல்; enjoyment. *"போகவிடயங்களுண் மையால்" (வேதா. சூ.165).*

த.வ. பெண்ணின்பம் பெறல்

[Skt. bhōga > த. போகவிடயம்.]

போகவிர்த்தி *pōgavirtti,* பெ.(n.) நல்லரிசி; increase of harvest (சா.அக.).

போகவிருத்திக்கீரைகள் *pōgavirutti-k-kīraigaḷ,* பெ.(n.) நறுந்தாளி, நன்முருங்கை, தூதுவளை, பசளை, அறுகீரை; the greens that increase the power of virility; they are given above (சா.அக.).

[போகம்+விருத்தி+கீரைகள்.]



போகவிருப்பம் *pōgaviruppam,* பெ.(n.) **போகவிச்சை** பார்க்க; see *pōga-viccai* (சா.அக.).

த.வ. புணர்விருப்பு

[போகம் + விருப்பம்.]

போகப்பெண் *pōga-ppeṇ,* பெ.(n.) 1. வைப்பாட்டி; concubine. 2. வானுலகக் கணிகை (வின்.); courtezan of svarga (w.). 3. கணிகை; courtezan (யாழ்.அக.).

[Skt. bhōga.]

போகன் *pōgaṉ,* பெ.(n.) சிவத்திரு மேனிகளுள் ஒன்று; an aspect of Siva. *"சதாசிவ னென்றும் போகனென்றும்... பன்னிரண்டு பெயரும் பெற்று நிற்பன்" (சி.சி.1, 65, ஞானப்.).*

[Skt. bhōga > த. போகன்.]

போகாங்கம் *pōgāṅgam,* பெ.(n.) சிவகணாதிபர் (வின்.); *Bhūtas* and other chief attendants of Siva, as subserving his enjoyment (w.).

[Skt. bhōga > த. போகாங்கம்.]

போகாந்தராயம் *pōgāndarāyam,* பெ.(n.) துய்த்தற்குரிய போகங்களை விலக்குகை (சீவக. 3081, உரை); renunciation of worldly enjoyments.

[Skt. bhōga+andarāya > த. போகாந்த ராயம்]

போகாநிழலி *pōgā-nil̤ali,* பெ.(n.) சாயாமரம் (சாயாவிருட்சம்); a kind of tree which does not cast its shadow (சா.அக.).

போகாவத்தை *pōgāvattai,* பெ.(n.) உலகத்தைப் படைத்துக் காக்கும் சிவனது நிலை (சி.போ.பா. அருந்தொடர், பக்.21, சுவாமிநா.); the state of Siva, as the creator and protector of the world.

[Skt. bhōga+ava-stha > த. போகாவத்தை.]

போகாவாசம் *pōgāvāśam,* பெ.(n.) அந்தப் புரம் (யாழ்.அக.); woman's apartments in Palace.

த.வ. உவளகம்

[Skt. bhōgā > த. போகா+வாசம்.]

போகி¹-த்தல் *pōgi-,* 4 செ.கு.வி.(v.i.) 1. கலவி இன்பம் நுகர்தல்; to enjoy sexual pleasure. 2. வினையின் பயனுகர்தல்; to experience pleasure or pain, as a result of karma. 3. புணர்தல்; to copulate.

த.வ. உடலுறவு கொள்ளல்

[Skt. bhōga > த. போகி-த்தல்.]

போகி² *pōgi,* பெ.(n.) 1. இந்திரன் (பிங்.); Indran. *"போகிதரு காளி"(கந்தபு.அமரர்சிறை. 31). 2.* வெள்ளிக் கோள் (நாமதீப.101); venus. 3. பாம்பு (பிங்.); snake. 4. செல்வந்தன்; wealthy man, man of good forture and prosperity, epicure. *"இருபோது போகியே" (நீதிவெண்.9).* 5. தலைமைக்காரன் (யாழ்.அக.); headman.

[Skt. bhōgin > த. போகி.]

போகி³ *pōgi,* பெ.(n.) பல்லக்குச் சுமப்போன்; palanquin-bearer.

த.வ. பல்லக்குத் தூக்கி

[Mhr. bhoi > த. போகி.]



போகி⁴ *pōgi,* பெ.(n.) 1. வணிகன் (நாநார்த்த.); trader. 2. பரிகாரி (நாவிதன்); barber.

[Skt. bhōgin > த. போகி.]

போகி⁵ *pōgi,* பெ.(n.) 1. கார்போகி விதை; seeds of a plant. 2. பாம்பு; snake. 3. பூவரும்பு; flower. 4. இரண்டு தரம் தீர்த்த கவுனக் குளிகை; a mercurial pill animated by a special process of calcination described in the Tamil medical science. 5. பெண் இன்பத்தில் அமிழ்ந்தவன்; one immersed in sexual intercourse. 6. புணர்ந்தின்புறுதல்; enjoying sexual pleasure; copulating. 7. கோரக்கர் கையிலுள்ள கவுன குளிகை; a ball processed by Korakar a siddhar which enables him to travel in air (சா.அக.).

போகிகாந்தம் *pōgi-kāndam,* பெ.(n.) காற்று; wind (சா.அக.).

[போகி+காந்தம்.]

போகித்தூரிதம் *pōgi-t-tūridam,* பெ.(n.) மணித்தக்காளி; a plant (சா.அக.).

த.வ. சிறுமணித்தக்காளி

[போகி+தூரிதம்.]

போகிதேரம் *pōgi-dēram,* பெ.(n.) புளி நறளைக் கிழங்கு; the root of a creeper (சா.அக.).

த.வ. புளியம்பிரண்டைக் கிழங்கு

[போகி + தேரம்.]

போகிவல்லபம் *pōgi-vallabam,* பெ.(n.) சந்தனம் (மலை.); sandal wood.

[Skt. bhōgi-vallabha > த. போகி வல்லபம்.]

போசகம்[1] *pōšagam,* பெ.(n.) எட்டி மரம்; a tree nuxvomica (சா.அக.).

போசகம்[2] *pōsagam,* பெ.(n.) ஊட்டமாய் வளர்க்கை; that which nourishes. *"தாரக போஷக போக்கியங்களும்" (ஈடு, 6, 7, 1).*

[Skt. pōsaka > த. போசகம்.]

போசகன் *pōsagaṉ,* பெ.(n.) 1. வளர்ப்பவன்; one who cherishes or nourishes. 2. ஆதரிப்பவன்; patron. 3. ஒருவனை இளமையிற் காப்பாற்றுபவன் (இக்.வ.); guardian.

[Skt. pōsaka > த. போசகன்.]

போசகி *pōšaki,* பெ.(n.) அகத்திக் கீரைமரம்; a tree-sesbania grandiflora alias coronilla grandiflora (சா.அக.).

போசணக்கோளாறு *pōšaṇakkōḷāṟu,* பெ.(n.) உணவு வகையிலேற்பட்ட குழப்பம்; derangement of the nutrition (சா.அக.).

[போசணம்+கோளாறு.]

போசணசாலை *pōšaṇašālai,* பெ.(n.) குழந்தைகளைப் பால் கொடுத்து வளர்க்குமிடம்; nursing home (சா.அக.).

[Skt. poshana > த. போசணம்+சாலை.]

போசணத்தந்துகி *pōšaṇa-t-tandugi,* பெ.(n.) ஊட்டச் சத்தை எடுத்துச் செல்லும் தந்துகி; lacteal, the primary lymphatic vessel that remains in the centre of intestinal villies is known as lacteal (சா.அக.).

[போசணம்+தந்துகி.]

போசணநாடி *pōšaṇa-nāḍi,* பெ.(n.) உயிர் நாடி என்னும் குருதிக்குழாய் ; arteries contributing to the assimilation of food nutrient (சா.அக.).

[போசணம்+நாடி.]

போசணம் *pōšaṇam,* பெ.(n.) 1. உடம்பை வளர்த்து வலுவைக் கொடுக்குந் தொழில்; nutriment. 2. கொழுப்பிக்குமுணவு; nourishing food (சா.அக.).

த.வ. நல்லுணா, வல்சி

போசணரோகம் *pōšaṇa-rōgam,* பெ.(n.) ஊட்டச்சத்துக் குறைவினால் உண்டாகும் நோய் அல்லது உடற்குறைபாடு; any disease or disorder to nutritional cause (சா.அக.).

[போசணம்+ரோகம்.]

போசணை *pōšaṇai,* பெ.(n.) நன்கு வளர்க்கை; fastering, nourishing, cherishing.

[Skt. pōsaṇā > த. போசணை.]

போசம் *pōšam,* பெ.(n.) **போசகி** பார்க்க; see *pōcaki* (சா.அக.).

போசரோகணி *pōšarōkaṇi,* பெ.(n.) கடுகுரோகிணி; root of a plant (சா.அக.).

போசலம் *pōšalam,* பெ.(n.) தஞ்சாவூர் மராட்டிய அரசரின் குலப்பெயர் (சரபேந்திர

பூபாலக் குறவஞ்சி); the family name of the Tanjore Maharatta rulers.

[Mhr. bhōnsala > த. போசலம்.]

போசன் *pōcaṉ,* பெ.(n.) 1. வடமொழிக் கவிஞரைப் போற்றிய அரசன்; a king, famous as a patron of Sanskrit poets. *"போசன் கவிஞருக்கே மோதப் பரிந்தளித்து" (சோ–மே. முதுமொழி.24).* 2. கள்ளத்தொடர்பில் அரசி பெற்ற பிள்ளை (சங்.அக.); son born of a lady of royal family in liaison.

[Skt. bhōja > த. போசன்.]

போசனக்குழல் *pōšaṉakuḻal,* பெ.(n.) உணவுக் குழாய்; alimentary canal (சா.அக.).

த.வ. உணவுக் குழல்

[போசனம் + குழல்.]

போசனக்குறடா *pōšaṉa-k-kuṟaḍā,* பெ.(n.) 1. மிளகாய்; chilly; fruit of a plant. 2. ஊறுகாய்; fruit such as limes, mango, etc. preserved in salt (சா.அக.).

[போசனம் + குறடா.]

போசனகத்தூரி *pōcaṉa-kattūri,* பெ.(n.) நாரத்தங்காய் அல்லது கச்சல்; fruit of a variety of citrus tree (சா.அக.).

[போசனம் + கத்தூரி]

போசனகுடாரி *pōšaṉa-kuḍāri,* பெ.(n.) சீரகம்; cumin seeds of the plant (சா.அக.).

[போசனம் + குடாரி.]

போசனசஞ்சீவி *pōcaṉa-cañcīvi,* பெ.(n.) எட்டுவகைக் குன்மத்திற்குக் கொடுக்கப்படும் மருந்து; a medicine given for the eight kind of gunmum (சா.அக.).

போசனசாலை *pōšaṉa-šālai,* பெ.(n.) 1. அன்னம் படைக்குமிடம் (மணிமே.20, 7, அடிக்குறிப்பு); dining hall. 2. விலைக்கு உணவு பெறுமிடம்; hotel.

[Skt. bhōjana+saukhya > த. போசனசாலை]

போசனசௌக்கியம் *pōcaṉa-caukkiyam,* பெ.(n.) 1. நல்லுணவு; wholesomeness or pleasantness of food. 2. நல்வாழ்க்கை; good living.

[Skt. bhōjana+ > த.போசனசௌக்கியம்.]

போசனப்பதார்த்தம் *pōšaṉa-p-padārttam,* பெ.(n.) தின்பண்டம்; eatables (சா.அக.).

த.வ. உண்பண்டம்

[போசனம்+பதார்த்தம்.]

போசனப்பரிகாரம் *pōšaṉa-p-parigāram,* பெ.(n.) பேருண்டிவிழைவு (போசனப்பிரியம்); gastronome (சா.அக.).

த.வ. சாப்பாட்டுக்காரன்

[போசனம்+பரிகாரம்.]

போசனப்பிரியன்[1] *pōšaṉa-p-piriyaṉ,* பெ.(n.) பேருணவு கொள்வோன்; வயிறுதாரி; a glutton (சா.அக.).

த.வ. பேருண்டியாளன்; பெருவயிற்றன்

போசனப்பிரியன்[2] *pōšaṉa-p-piriyaṉ,* பெ.(n.) பிள்ளையார் (வின்.) (நாமதீப.28); God *Ganēsan.*

[Skt. bhōja+priya > த. போசனப்பிரியன்.]

போசனப்பெருக்கம் *pōšaṉa-p-perukkam,* பெ.(n.) வயிற்றுத்தீ மிகுவதால் அதிகமாகச் சாப்பிடுகை; eating more due to excessive hunger (சா.அக.).

த.வ. ஆனைத்தீ

[போசனம்+பெருக்கம்.]

போசனம் *pōšaṉam,* பெ.(n.) 1. உணவு; food. 2. உண்ணுகை (சூடா.); eating, feeding.

[Skt. bhōjana > த. போசனம்.]

போசனவிதி *pōjaṉa-vidi,* பெ.(n.) உணவு கொள்ளும்போது கவனித்தற்குரிய நெறிகள் (வேதா. சூ.184, உரை); rules about taking food.

[Skt. bhōjana > த. போசனம்+விதி.]

போசனாங்கம் *pōšaṉāṅgam,* பெ.(n.) நால்வகை யுண்டிகளையும் உதவும் கற்பகம் (தக்கயாகப்.757, உரை, அடிக்குறிப்பு); a celestial tree, a besto wing all kinds of food.

[Skt. bhōjana+aṅga > த. போசனாங்கம்.]

போசனாசயம் *pōšaṉāšayam,* பெ.(n.) இரைப்பை; stomach (சா.அக.).

[போசனம்+ஆசயம்.]

போசனாந்தம் *pōšaṉāndam,* பெ.(n.) சாப்பிட்ட பிறகு, உண்ட பிறகு; at the end of meals (சா.அக.).

போசிவல்லபம் *pōši-vallabam,* பெ.(n.) **போகிவல்லபம்** (சங்.அக.) பார்க்க; see *pōgi-vallapam.*

[Skt. bhōjana+ > த. போசிவல்லபம்.]

போசாக்கு *pōšākku,* பெ.(n.) 1. **போசணை** பார்க்க; see *pōsaṇai.* 2. விழிப்புணர்வு (ஜாக்கிரதை); care. *'உனக்கு போசாக்குப் போராது'.*

போசி-த்தல் *pōsi-,* 4 செ.கு.வி.(v.i.) போற்றிக் காத்தல், ஆதரித்தல்; to foster, nourish, cherish, feed.

[Skt. pus > த. போசி-த்தல்.]

போசிக்கத்தக்கன *pošikkattakkaṉa,* பெ.(n.) உடலிற்கு ஊட்டத்தைக் கொடுப்பன; nutritions (சா.அக.).

[போசிக்க+தக்க.]

போசிக்குமுணவு *pōšikkumuṇavu,* பெ.(n.) உடம்பிற்கு வலுவைக் கொடுக்கும் உணவு; nourishing food (சா.அக.).

[போசிக்கும் + உணவு.]

போசிப்பு *pōšippu,* பெ.(n.) **போசணை** பார்க்க (இ.வ.); see *pōsaṇai.*

[Skt. pus > த. போசிப்பு.]

போசியபுத்திரன் *pōšiya-puttiraṉ,* பெ.(n.) வளர்ப்புப் பிள்ளை; adopted child.

த.வ. ஏற்புப்பிள்ளை

[Skt. pōsya+put-tra > த. போசியபுத்திரன்.]

போசியன் *pōšiyaṉ,* பெ.(n.) 1. பிறரால் வளர்க்கப்படுபவள்-ன் (வின்.); one who is brought up by a stranger. 2. வளர்ப்புப் பிள்ளை (யாழ்.அக.); foster-son.

போசுதக்காய் *pōsta-k-kāy,* பெ.(n.) கசகசா நெற்று (வின்.); dried poppy heads.

[U. post > த. போசுதக்காய்.]

போசுதக்காய்ச்செடி *pōšutakkāy-c-ceḍi,* பெ.(n.) கசகசாச் செடி; poppy plant-garden poppy (சா.அக.).

த.வ. கசகசாச்செடி

[Skt. postukkai > த. போசுதக்காய்.]

போசுகதாது *pōšaka-tādu,* பெ.(n.) மூவகைத் தாதுக்கள்; three dhathus (சா.அக.).

[Skt. poshaka +தாது.]

போடகசுரம் *pōḍagašuram,* பெ.(n.) பயற்றளவு சிறு கொப்புளங்கள் உடம்பு முழுவதிலும் காணும் ஒருவகைக் காய்ச்சல்; fever due to the rising of blebs on the body (சா.அக.).

மறுவ. அம்மைச்சுரம்.

[போடகம்+சுரம்.]

போடகநாறி *pōḍaga-nāṟi,* பெ.(n.) **போதக நாறி** பார்க்க; see *pōtaka-nāṟi* (சா.அக.).

[போடகம்+நாறி.]

போடகம் *pōḍagam,* பெ.(n.) 1. புண் (வின்.); boil, tumour. 2. அம்மைக் கொப்புளம் (சங்.அக.); pock in small pox. 3. கொப்புளிப்பான் (சங்.அக.); measles. 4. அம்மை (இ.வ.); small pox.

[Skt. sphōṭaka > த. போடகம்.]

போடசெமிக்கி *pōḍašemikki,* பெ.(n.) வயிறு; stomach (சா.அக.).

போடம்[1] *pōḍam,* பெ.(n.) 1. தகர்க்கை (சேதுபு. வேதா.34, கீழ்க்குறிப்பு); slapping. 2. சொல்லுக்கு அடிப்படையாய் முதற் காலந்தொட்டு உள்ள பொருளை உணர்த்த வல்ல நாதம் (பி.வி.181); eternal and imperceptible element of sounds and words and the real vehicle of the idea which flashes on the mind when a sound is uttered.

த.வ. ஓசை

[Skt. sphōta > த. போடம்.]

போடம்[2] *pōḍam,* பெ.(n.) தேசம் ஐம்பத் தாறனுள் ஒன்று (திருவேங்.சத.97); a country one of 56 *tēšam.*

[Skt. bhōta > த. போடம்.]

போடோபில்லி *pōḍōpilli,* பெ.(n.) சீன நாட்டுச் செடி; a chinese plant (சா.அக.).

போத்தல் *pōttal,* பெ.(n.) கண்ணாடிக் குப்பி (இ.வ.); bottle.

[E. bottle > த. போத்தல்.]

போத்தா *pōttā,* பெ.(n.) 1. **போக்தா** பார்க்க; see *bōktā.* *"நானே போத்தா" (விநாயகபு.83, 85).* 2. உண்போன்; one who eats.

[Skt. bhōktā > த. போத்தா.]

போத்தி *pōtti,* பெ.(n.) இறந்துபோனவ–ன்–ள்; deceased person. *"ஆஜரிருக்கும் குடிபோத்தி யென்னவும்" (தாசில்தார்நா.69).*

[Skt., Arab. fauti > த. போத்தி.]

போத்திராயுதம் *pōttirāyudam,* பெ.(n.) **போத்திரி** பார்க்க (சங்.அக.); see *pōddiri.*

[Skt. pōtr-āyudha > த. போத்திராயுதம்.]

போத்திரி *pōttiri,* பெ.(n.) பன்றி (சூடா.); hog, pig.

[Skt. pōtrin > த. போத்திரி.]

போத்திருத்துவம் *pōttiruttuvam,* பெ.(n.) 1. நுகர்ச்சிக்கு வினைமுதலாதற்றன்மை (சி.சி.2, 80, சிவஞா.); condition of being the enjoyer. 2. நுகரும் தன்மை (சி.சி.2, 80); capacity or desire for enjoyment.

[Skt. bhōktr-tva > த. போத்திருத்துவம்.]

போதக்கிரியை *pōdakkiriyai,* பெ.(n.) குளிர்க் காய்ச்சலால் தானே புலம்பிக் கொண்டே உடுத்திருக்கும் துணியைக் கிழித்தும், உண்ணாமல் மயக்கத்தோடு கிடக்கும் ஒரு செய்கை; a delirious condition marked by crying, fainting, tearing of the cloth worn by him, etc. (சா.அக.).

போதகசிலேட்டுமம் *pōdakašlēṭṭumam,* பெ.(n.) 1. நாவிலிருக்கும் ஒரு வகை நீர்ப்பசை; a variety of kapham named போதகம், which is said to be at the tongue (சா.அக.).

போதககுரு *pōdaka-kuru,* பெ.(n.) சாத்திரப் பொருளை அறிவிக்கும் குரு (விவேகசிந்.பக். 28); preceptor who explains the purport of the *šāstras.*

[Skt. bōdhaka > த. போதககுரு.]

போதகப்புல் *pōdaga-p-pul,* பெ.(n.) ஒரு வகைப் புல்; a kind of grass (சா.அக.).

போதகநாறி *pōdaganāṟi,* பெ.(n.) கொள்ளிக் கட்டைத் தேக்கு; a kind of tree (சா.அக.).

த.வ. கருந்தேக்கு

போதகம்[1] *pōdagam,* பெ.(n.) 1. இளமை (பிங்.); youthfulness, infancy, furenility.

2. யானைக்கன்று (பிங்.); elephant calf. *"வேழப் போதகமன்னவன் தாலோ" (திவ். பெருமாள்.7,1).* 3. யானை; elephant. *"போதகமொன்று கன்றி" (கம்பரா.விபீடண. 113).* 4. விலங்கின் பிள்ளை (சூடா.); young of animals. 5. ஓரறிவுயிரின் இளமை; (தொல். பொ.580); sapling.

[Skt. pōtaka > த. போதகம்¹.]

போதகம்² *pōdagam,* பெ.(n.) பசளை என்னும் கீரை வகை; malabar night shade.

[Skt. pōtaka > த. போதகம்².]

போதகம்³ *pōdagam,* பெ.(n.) 1. அறிவுரை; spiritual teaching, as by a guru to his disciple. 2. சொல்லிக் கொடுத்த அறிவு; instruction, tutoring. அவனுக்கு அப்படிப் போதகம்.

[Skt. bōdhaka > த. போதகம்.]

போதகம்⁴ *pōdagam,* பெ.(n.) 1. காஞ்சிரை; nuxvomica tree. 2. குழந்தைப் பருவம்; infancy. 3. புலி, சிங்கம் இவைகளின் குட்டி; the young of tiger, lion etc. 4. திப்பிலி; long pepper. 5. நாக்கிலுள்ள ஒரு வகை நீர்ப்பசை; a variety of kapham. 6. வாலைப்பூநீர்; dew. (சா.அக.).

போதகம்⁵ *pōdagam,* பெ.(n.) போதகா, பேரண்டம், தலையோடு; cranium (சா.அக.).

போதகன் *pōdagaṉ,* பெ.(n.) 1. **போதகா சிரியன்** பார்க்க; see *pōdagāširiyaṉ.* *"நியதிபுரிந் தருளுவான் போதகன்" (சைவச. ஆசார.30).* 2. நாட்டையர்; pastor, ordained minister. 3. ஒற்றன் (யாழ்.அக.); spy.

[Skt. bōdhaka > த. போதகன்.]

போதகாசிகம் *pōdakāšikam,* பெ.(n.) மட்டிச் சாம்பிராணி; benzoin (சா.அக.).

போதகாசிரியன் *pōtagāširiyaṉ,* பெ.(n.) 1. கல்வி கற்றுக்கொடுப்போன்; teacher. *"நாலுரை போதகாசிரியர்" (இலக்.கொத். பாயி.6).* 2. குருவம் (சைவச.ஆசார.28, உரை); a religious preceptor, one who initiates into religious mysteries.

[Skt. bōdhaka+āšārya > த. போதகா சிரியன்.]

போதகிவர்த்தமம் *pōdagi-varttamam,* பெ.(n.) கண் இமைகளினுட் பாகத்தில் செந்நிறமான கட்டிகளுண்டாகி அரத்தம் வடிந்து கொண்டு நமைச்சலுடன் கூடிய மிக்க வலியை யுண்டாக்குமோர் கண்ணோய்; a number of red boils or postules resembling red mustard seeds attended with pain, itching and exudation of blood (சா.அக.).

போதகி *pōdagi,* பெ.(n.) 1. சளியின் மேலீட்டினாலேற்படும் கண்களில் கடுகள வுள்ள கட்டிகள்; small mustard size blabs in the eye due to excess of phlegm humour. 2. பெண் ஊர்க்குருவி; a female species of sparrow. 3. பசளைக் கொடி; spinach climber. 4. வேங்கை மரம்; a tree pterocarpus marsupium. 5. சீரகம்; cumin seed. 6. ஒரு வகைக் கண்நோய்; a kind of eye disease. 7. **போதகிவர்த்தமம்** பார்க்க; see *pōtagivarttamam* (சா.அக.).

போதச்சயம் *pōdaccayam,* பெ.(n.) ஒரு வகை மயக்கம், அதிசுழுத்தி; a long or prolonged sleep (சா.அக.).

த.வ. நீள்துயில்

போதசு *pōdašu,* பெ.(n.) ஒரு வகைப்பூடு; an herb (சா.அக.).

போதத்தம் *pōdattam,* பெ.(n.) சிவப்பு மந்தாரை; a tree (சா.அக.).

போதநாசினி *pōdanācini,* பெ.(n.) கோவைக்கொடி; a creeper-Bryonia grandis (சா.அக.).

போதப்பிரகாரம் *pōda-p-piragāram,* பெ.(n.) இலக்கணம், பரீக்கை எண்ணம் என்ற தருக்கவாதப் பிரிவு (வின்.); terms, in three divisions, viz., *uttēcam, ilakkaṇam, parīkkai*

[Skt. bōdha+pra-kāra > த. போதப்பிரகாரம்]

போதம்[1] *pōdam,* பெ.(n.) 1. மெய்யறிவு (ஞானம்) (சூடா.); wisdom. *"போத மொத்தனன் மாருதி" (கம்பரா.முதற்போர்.222).* 2. அறிவு; knowledge, understanding, intelligent. *"போதத்தி னகன்று" (பெருங். உஞ்சைக்.43, 61).*

[Skt. bōdha > த. போதம்[1].]

போதம்[2] *pōdam,* பெ.(n.) 1. மரக்கலம் (திவா.); vessel, ship, boat. *"போதங்கொ ணெடுந் தனிப் பொருவில் கூம்பொடு" (கம்பரா. பள்ளிபடை.68).* 2. தாழி (பரணி) விண்மீன் நாள் (பிங்.); the second naksatra. 3. மனைக்கட்டு (யாழ்.அக.); house site

[Skt. pōta > த. போதம்[2].]

போதம்[3] *pōdam,* பெ.(n.) யானைக்கன்று; young of an elephant (சா.அக.).

போதயத்தம் *pōdayattam,* பெ.(n.) பட்டாணி; pea pulse (சா.அக.).

போதயந்தரத்தான் *pōdayandarattāṉ,* பெ.(n.) சிறுகாடை; a bird; quail (சா.அக.).

போதவாகன் *pōda-vāgaṉ,* பெ.(n.) தோணி யோட்டுபவன் (சங்.அக.); boatman.

த.வ. ஓடக்காரன்

[Skt. pōta-vāha > த. போதவாகன்.]

போதனம்[1] *pōdaṉam,* பெ.(n.) 1. **போதனை** (யாழ்.அக.) பார்க்க; see *pōdaṉai.* 2. தூபங்காட்டுகை; waving incense.

[Skt. bōdhana > த. போதனம்.]

போதனம்[2] *pōdaṉam,* பெ.(n.) 1. புகை காட்டல்; fumigating, exposing. 2. அறிவு; knowledge. 3. பாதாளமூலி; a creeper.

போதனமரம் *pōdaṉa-maram,* பெ.(n.) காசுக்கட்டி உண்டாகு மரம்; catchu nigrum (சா.அக.).

போதனாசக்தி *pōdaṉā-šakti,* பெ.(n.) கற்பிக்குந் திறமை (வின்.); ability to teacher.

[Skt. bōdhanā-šakti > த. போதனாசக்தி.]

போதனாமுறை *pōdaṉā-muṟai,* பெ.(n.) கல்வி கற்பிக்கும் நெறி; mod. method in teaching.

[Skt. bhō-dhanā > த. போதனா+முறை.]

போதனாவாக்கி *pōdaṉā-vākki,* பெ.(n.) செம்முள்ளி; a red species of the Indian shade (சா.அக.).

போதனை[1] *pōdaṉai,* பெ.(n.) 1. கற்பிக்கை; teaching, instruction, advice, inculcation. *"போதனை செய்ய வல்லார்" (தாயு.கற்புறு.3).* 2. அறிவு; knowledge, wisdom. 3.தூண்டுகை; instigation, counsel, tutoring, used ironically. *"துன்மார்க்க போதனை செய்தனன்றோ" (தாயு.கற்புறு.4).*

த.வ. அறிவுறுத்தம்

[Skt. bōdhaṉā > த. போதனை.]

போதனை[2] *pōdaṉai,* பெ.(n.) **போதனமரம்** பார்க்க; see *pōdaṉa-maram* (சா.அக.).

போதாயனர் *pōdāyaṉar,* பெ.(n.) 1. அற (தரும) நூலும் கற்ப நூலுமியற்றிய ஒரு முனிவர்; a writer of Dharmasāstra and Kalpa. 2. போதாயனீயத்தில் கூறப்பட்ட முறை (விதி)களைப் பின்பற்றுபவர்; follower of the kalpa or the manual of rites of *bōdhāyana.*

[Skt. bōdhāyana > த. போதாயனார்.]

போதாயனீயம் *pōdāyaṉiyam,* பெ.(n.) வைதிகச் சடங்குகளைச் செய்யுமுறை கூறும் (கற்ப) நூல்வகை (தொல்.பொ.75, உரை); a kalpa or ceremonial guide containing short aphoristic rules for the performance of *vēdic*sacrifices.

[Skt. bōd-hāyaniya > த. போதாயனீயம்.]

போதாலயம் *pōdālayam,* பெ.(n.) அறிவுக் கிருப்பிடம்; temple of wisdom. *"போதா லயத்துட்புலன்" (திருமந்.1707).*

த.வ. அறிவாலயம்

[Skt. bōdhālaya > த. போதாலயம்.]

போதி[1]-த்தல் *pōdi,* 4 செ.கு.வி.(v.i.) விருப்ப முண்டாதல்; to have inclination. *"போதித்த போது வருவேன்" (நாஞ்.).*

[Skt. bōdha > த. போதி-த்தல்.]

போதி[2] *pōdi,* பெ.(n.) 1. அறிவு; wisdom, knowledge. *"போதிச் செல்வம் பூண்டவர்" (சீவக.366).* 2. அரசமரம்; pipal, as the tree of wisdom. *"போதிமன்றத்து" (சிலப்.23, 76).*

[Skt. bōdhi > த. போதி.]

போதிகைப்பலகை *pōdikai-p-palagai,* பெ.(n.) தூணின் தலையில் வைக்கும் பலகை; (pond.) entablature.

த.வ. அரசாணிப் பலகை

[Skt. bodhgai > த. போதிகை+பலகை.]

போதிசத்துவன் *pōdi-šattuvav,* பெ.(n.) 1. அறிவு முதிர்ந்து அடுத்தபிறவியில் புத்தனாக ஆவதற்குரியோன் (மணிமே.பக். 506, அரும்.); buddhist ascetic who has arrived at the stage when there is only one more birth before attaining buddhahood. 2. புத்தன்; Gautama, the Buddha.

[Skt. bōdhi-sattva > த. போதிசத்துவன்.]

போதியல் *pōdiyal,* பெ.(n.) போதிகைப் பலகை (இ.வ.); see *pōdikai-palagai.*

த.வ. அரசாணிப் பலகை

[Skt. bodhgai > த. போதியல்.]

போல்சாவி *pōlšāvi,* பெ.(n.) உட்டுளையுள்ள திறவுகோல் (இ.வ.); tubular key.

த.வ. பெண் சாவி

[T. bōlu > த. போல்சாவி.]

போல்மரம் *pōlmaram,* பெ.(n.) வண்டியின் முன்புறத்துள்ள நீண்ட மரக்கட்டை (இ.வ.); wooden shaft fitted to the fore-part of a vehicle.

த.வ. மூக்கணைமரம்

[E. pole > த.போல்+மரம்.]

போல்மூங்கில் *pōle-mūṅgil,* பெ.(n.) மூங்கில் வகை; hollow bamboo bambusa arundinaca typica.

த.வ. துளைமூங்கில்

[T. bōlu > த. போல்+மூங்கில்.]



போனகம் *pōṉagam,* பெ.(n.) 1. உணவு; food. *"நால்வகைப் போனகமேந்தி" (மணிமே.28, 242).* 2. அன்னம் (சைவச. பொது.454); boiled rice. 3. அப்பவருக்கம் (பிங்.); a kind of cake. 4. உண்ணுகை (பிங்.); eating.

த.வ. ஆகூழுணவு

பௌகண்டம் *paukaṇḍam,* பெ.(n.) ஆறு முதல் பத்து அகவை (வயது) வரையுள்ள குழந்தைப் பருவம் (விசாரசந்.பக்.343); period in the life of a child, between the ages of six and ten.

[Skt. pauganda > த. பௌகண்டம்.]

பௌசம் *paušam,* பெ.(n.) சுறவ (தை) மாதம் (வின்.); the lunar month of Tai.

[Skt. pausa > த. பௌசம்.]

பௌசிகம்¹ *paušigam,* பெ.(n.) **பௌடியம்¹** பார்க்க; see *pauḍiyam.*

பௌசிகம்² *paušigam,* பெ.(n.) **பௌடியம்²** பார்க்க; see *pauḍiyam.*

பௌசியம்¹ *paušiyam,* பெ.(n.) பௌடியம் (வின்.); a Purana.

பௌசியம்² *paušiyam,* பெ.(n.) வருங்காலம்; the future. *"பௌசியப் பிரதிபந்தம்" (பஞ்சதசப்.பக்.84).*

[Skt. bhavsyat > த. பௌசியம்.]

பௌசுதாரி *paušutāri,* பெ.(n.) குற்ற நேர் கேட்புக்குரிய (விசாரணைக்குரிய)வன் (C.G.); magisterial, criminal.

[U. faujddri > த. பௌசுதாரி.]

பௌசுதாரிக்கட்டளை *paušutāri-k-kaṭṭaḷai,* பெ.(n.) குற்றச்சாட்டு நடவடிக்கை (C.G.); criminal proceedings.

[U. faujdāri > த. பௌசுதாரி+கட்டளை.]

பௌஞ்சு *pauñju,* பெ.(n.) **பவுஞ்சு** பார்க்க (வின்.); see *pauñju.*

[U. fauz > த. பௌஞ்சு.]

பௌட்கரம் *pauṭkaram,* பெ.(n.) 1. சிவனிய துணைத் தொன்மங்களுள் ஒன்று; a secondary Saiva Agama. 2. பாஞ்சராத்திர சங்கிதைகளு ளொன்று; a *Pāñjharātra Samhita.*

[Skt. pauskara > த. பௌட்கரம்.]

பௌட்டிகம் *pauṭṭigam,* பெ.(n.) 1. **பவுட்டிகம்** பார்க்க (சங்.அக.); see *pavuṭṭigam,* a ceremony. 2. நிலத்தில் விழுமுன் தாமரை யிலையில் ஏந்திய பசுஞ்சாணம் (சைவச. பொது.169, உரை); cow dung gathered on a lotus-leaf before it falls to the ground.

[Skt. pausṭika > த. பௌட்டிகம்.]

பௌடிகம்¹ *pauḍigam,* பெ.(n.) **பௌடியம்¹** பார்க்க (திவா.); see *pauḍiyam.*

பௌடிகம்² *pauḍigam,* பெ.(n.) **பௌடியம்²** பார்க்க (திவா.); see *pauḍiyam.*

பௌடியம்¹ *pauḍiyam,* பெ.(n.) இருக்கு மறை (வேதம்) (கலித்.கடவுள்.உரை); rig *vēda.*

[Skt. bahvrc > த. பௌடியம்.]

பௌடியம்² *pauḍiyam,* பெ.(n.) **பவிடிய புராணம்** (திவா.) பார்க்க; see *paviḍiya-purāṇam.*

[Skt. bhavisyat > த. பௌடியம்.]

பௌண்டரிகம் *pauṇḍarigam,* பெ.(n.) ஈகம் (பவுண்டரிகம்); a sacrifice.

[Skt. paundarika > த. பௌண்டரிகம்.]

பௌண்டிரம் *pauṇḍiram,* பெ.(n.) 1. ஒரு நாடு (வின்.); a country, said to include part of South Bihar and Bengal. 2. **பவுண்டம்** பார்க்க; see *pavuṇḍam.*

[Skt. paundra > த. பௌண்டிரம்.]

பௌண்டிரவம் *pauṇḍiravam,* பெ.(n.) பாஞ்சாலிக் கொடி எனும் ஒரு வகைக் கொடி; a kind of climber. (சா.அக.).

பௌண்டு¹ *pauṇḍu,* பெ.(n.) 1. **பவுண்டு¹** பார்க்க; see *pavuṇḍu.* 2. **பவுன், 1** பார்க்க; see *pouṉ,1.*

[E. pound > த. பௌண்டு.]

பௌண்டு² *pauṇḍu,* பெ.(n.) **பவுண்டு²** பார்க்க; see *pavuṇḍu²* .

[E. pound > த. பௌண்டு.]

பௌத்தம் *pauttam,* பெ.(n.) புத்தமதம் (சூடா.); Buddhism.

[Skt. Bauddha > த. பௌத்தம்.]

பௌத்தரதாமரை *pauttara-tāmarai,* பெ.(n.) குளிர்தாமரை; lotus (சா.அக.).

பௌத்தரன் *pauttaraṉ,* பெ.(n.) **பௌத்திரன்**[1] (யாழ்.அக.) பார்க்க; see *pauttiraṉ.*

பௌத்தன் *pauttaṉ,* பெ.(n.) 1. புத்த சமயத்தான் (திவா.); Buddhist. 2. **பௌத் தாவதாரம்** (பிங்.) பார்க்க; see *pauttāvatāram.*

[Skt. Bauddha > த. பௌத்தன்.]

பௌத்தாவதாரம் *pauttāvatāram,* பெ.(n.) திருமாலின் தோற்றரவுகளில் ஒன்று (பிங்.); Buddha an incarnation of Visṇu.

[Skt. buddha+avatara > த. பௌத்தாவதாரம்.]

பௌத்தி *pautti,* பெ.(n.) இறப்பு (வின்.); death.

[U. faut > த. பௌத்தி.]

பௌத்திரத்தினை *pauttirattiṉai,* பெ.(n.) மஞ்சள் தினை; yellow Itallian millet (சா.அக.).

பௌத்திரநெல்லி *pauttiranelli,* பெ.(n.) அரிநெல்லி; joose-berry. (சா.அக.);



பௌத்திரப்புல் *pauttirappul,* பெ.(n.) தருப்பைப் புல்; sacrificial or sacred grass.

பௌத்திரபோளம் *pauttirapōḷam,* பெ.(n.) **கரியபோளம்** பார்க்க; see *kariya-pōḷam* (சா.அக.).

பௌத்திரம்[1] *pauttiram,* பெ.(n.) சிறுநீரக (பவுத்திர) நோய்; urinary fistula.

[Skt. bhagandara > த. பௌத்திரம்.]

பௌத்திரம்[2] *pauttiram,* பெ.(n.) பவித்திரம்[1],1. (யாழ்.அக.); sacredness; purity.

[Skt. pavitra > த. பௌத்திரம்[2].]

பௌத்திரம்[3] *pauttiram,* பெ.(n.) 1. **பௌத்திர ரோகம்** பார்க்க; see *pauttira-rōgam.* 2. மூலத்தில் (வாயு) கண்டு மேகநீர் உண்டாகிப் புரையோடிச் சீழ்ப் பாய்ச்சல் கண்டு முளைவிழும் ஒருவகை நோய்; fistula in anus due to other causes than venereal (சா.அக.).

பௌத்திரமுருங்கை *pauttira-muruṅgai,* பெ.(n.) புனல் முருங்கை; a kind of drumstick (சா.அக.).

பௌத்திராயம் *pauttirāyam,* பெ.(n.) **செந்திராய்** பார்க்க; see *śendirāy* (சா.அக.).

பௌத்திராவம் *pauttirāvam,* பெ.(n.) ஊதளை; physic nut plant (சா.அக.).

பௌத்திரரோகம் *pauttira-rōgam,* பெ.(n.) சிற்றின்பத்தினால் கனல் மிகுதியாகிப் படை யுண்டாகிப் புணர்உறுப்பிற்கும் எருவாய்க்கும் இடையில் கொடியில் அடிநரம்பின் மேலாவது அதன் இரு பக்கத்திலாவது, அண்டம், அபானவாயு ஆகிய இவைகளிலாவது நமைச்சலெடுத்து வீங்கி நொந்து கொப் புளித்து சீழும் சலமும் வடிந்து பிறகு புரையோடி நரம்பழுகி, கண்கள் உண்டாகி அதன் வழியே சிறுநீரும் மலமும் இறங்கி அதனால் உடம்பு மெலிந்து சாப்பாடு செல்லாது களைப்பை யுண்டாக்கும் ஒரு வகை மூலநோய்; a deep narrow sinuous ulcer extending between the surface of the body and internal an

cavity near the anus said to have been caused by accumulation of venereal secreations due to excess of heat caused by sexual intercourse (சா.அக.).

[பௌத்திரம்+ரோகம்.]

பௌத்திரவிரல் *pauttira-viral,* பெ.(n.) மோதிர விரல்; ring finger (சா.அக.).

[பௌத்திரம்+விரல்.]

பௌத்திரன்[1] *pauttiraṉ,* பெ.(n.) மகன் வழிப் பேரன்; grandson who is a son's son. *"உம்பத்திர பௌத்திரர் தங்களுக்கும்... அருந்துயரில்லையே" (உத்தரா. திருவோலக். 20).*

[Skt. pautra > த. பௌத்திரன்.]

பௌத்திரன்[2] *pauttiraṉ,* பெ.(n.) தூய்மை யானவன் (யாழ்.அக.); holly person.

[Skt. பவித்ரம்→பவித்ரன்→ பௌத்திரன்.]

பௌத்திரி *pauttiri,* பெ.(n.) மகன் வயிற்று மகள்; grand daughter who is a son's daughter.

[Skt. pautri > த. பௌத்திரி.]

பௌத்துவம் *pauttuvam,* பெ.(n.) பச்சை மணிக்கல் (மரகதம்); a precious gem; emerald (சா.அக.).

பௌதிகக்கவர்ச்சி *paudiga-k-kavarcci,* பெ.(n.) வேதியியல் கவர்ச்சி; chemical attraction of atoms of the element of others resulting in chemical compound (சா.அக.).

[பௌதிகம்+கவர்ச்சி.]

பௌதிகக்கிரணம் *paudiga-k-kiraṇam,* பெ.(n.) வேதியல் கதிர்; chemical ray (சா.அக.).

[பௌதிகம்+கிரணம்.]

பௌதிகக்கூட்டு *paudiga-k-kūṭṭu,* பெ.(n.) வேதியியற் கலவை; chemical composition (சா.அக.).

[பௌதிகம்+கூட்டு.]

பௌதிகக்கூட்டுப்பாடு *paudiga-k-kūṭṭuppāḍu,* பெ.(n.) வேதியியல் கலவை; chemical composition (சா.அக.).

[பௌதிகம்+கூட்டுப்பாடு.]

பௌதிகக்கூறுபாடு *paudiga-k-kūṟupāḍu,* பெ.(n.) வேதியியல் கூர்ந்தாய்வு; chemical analysis (சா.அக.).

[பௌதிகம்+கூறுபாடு.]

பௌதிகசந்தி *paudiga-sandi,* பெ.(n.) வேதியியல் இணைவு; chemical union (சா.அக.).

[பௌதிகம்+சந்தி.]

பௌதிகசரக்கு *paudiga-šarakku,* பெ.(n.) வேதியியல் மருந்துவகை; chemical drug as delirium. (சா.அக.).

[பௌதிகம்+சரக்கு.]

பௌதிகசரீரம் *paudiga-šarīram,* பெ.(n.) 1. பூதவுடம்பு; physical body. 2. ஐம்பூதத்திற் குரிய வுடம்பு; body consisting of elements (சா.அக.).

[பௌதிகம்+சரீரம்.]

பௌதிகசாத்திரம் *paudiga-šāttiram,* பெ.(n.) இயற்கைத் தத்துவநூல்; physical science.

த.வ. இயற்பியல்

[Skt. bhautika+šastra > த. பௌதிகசாத்திரம்.]

பௌதிகஞானம் *paudiga-ñāṉam,* பெ.(n.) 1. ஐம்பூதத் தொடர்பான வுடம்பிற்குரிய அறிவு; wisdom of man in his physical body. 2. புத்த மதத்திற் கூறிய அறிவு; the eminence of wisdom related to Buddhistic philosophy.

[பௌதிகம்+ஞானம்.]

பௌதிகப்பிரமசாரி *paudika-p-piramašāri,* பெ.(n.) மாணிய நோன்பு முடித்து மணம் புரிவோன் (சிவதரு.பரி.2, உரை); Brahmin

youth who marries upon the completion of his duties as a Brahmacarin.

[பௌதிகம்+பிரமசாரி.]

பௌதிகபரீட்சைசாலை *paudiga-parīṭcai šālai,* பெ.(n.) வேதியியல் ஆராய்ச்சி செய்யுமிடம்; chemical laboratory (சா.அக.).

[பௌதிகம்+பரீட்சைசாலை.]

பௌதிகபாவனை *paudiga-pāvaṉai,* பெ.(n.) கடவுளை உருவனாக ஊழ்கம் செய்கை (சங்.அக.); meditation of God, as having form.

[Skt. bhautika > த. பௌதிகபாவனை.]

பௌதிகபிரிவினை *paudiga-pirivinai,* பெ.(n.) வேதியியல் விதிப்படி ஒரு பொருளி லிருந்து பிரிதல்; chemical decomosition (சா.அக.).

பௌதிகபுலன் *paudiga-pulaṉ,* பெ.(n.) ஐம்புலனிலொன்று; one of the five physical senses (சா.அக.).

பௌதிகம் *paudigam,* பெ.(n.) 1. ஐம்பூதத் தொடர்பானது; that which pertains to the five elements; that which is physical. *"தேகங்களத்தனையு மோகங் கொள் பௌதிகம்" (தாயு.பரிபூ.2).* 2. உலகம் (வின்.); the world.

பௌதிகமங்கை *paudiga-maṅgai,* பெ.(n.) பொன்னாங்கண்ணி என்னும் மூலிகை; sessile plant (சா.அக.).

[பௌதிகம்+மங்கை.]

பௌதிகயோகசந்நியாசி *paudiga-yōgašanniyāši,* பெ.(n.) பௌதிக பாவனைச் செய்வோன் (சங்.அக.); ascetic practising *pautika-pāvaṉai.*

[பௌதிகம்+ஓகம்+சந்நியாசி.]

பௌதிகவாதம்[1] *paudiga-vādam,* பெ.(n.) உலோகாயதமதம் (பிரபஞ்சவி); materialism.

[Skt. bhautika+vāta > த. பௌதிகவாதம்.]

பௌதிகவாதம்[2] *paudiga-vādam,* பெ.(n.) வேதியியல் நூல்; chemistry (சா.அக.).

[பௌதிகம்+வாதம்.]

பௌதிகவாதி *paudiga-vādi,* பெ.(n.) வேதியியல் வல்லுநர்; chemist (சா.அக.).

[பௌதிகம்+வாதி.]

பௌதிகன் *paudigaṉ,* பெ.(n.) சிவபிரான் (யாழ்.அக.); *Sivaṉ.*

[Skt. bhautika > த. பௌதிகன்.]

பௌதிகாசாரியன் *paudikāšāriyaṉ,* பெ.(n.) மூத்த குருக்களின் உதவியாளன்; assistant to the head priest.

[பௌதிகம்+ஆசாரியன்.]

பௌந்திரம் *paundiram,* பெ.(n.) மூலநோய்; piles.

[Skt. bhagandara > த. பௌந்திரம்.]

பௌமம்[1] *paumam,* பெ.(n.) நிலம் தொடர் பானது (வின்.); that which is produced in or related to the earth.

[Skt. bhauma > த. பௌமம்.]

பௌமம்[2] *paumam,* பெ.(n.) நிலத்திற் பிறப்பன; physical bodies (சா.அக.).

பௌமன் *paumaṉ,* பெ.(n.) 1. செவ்வாய்; the planet Mars, as the son of Earth. *"பௌமனுக்கான செழுமண்" (அறப்.சத.50).* 2. நரகாசுரன் (யாழ்.அக.); Narahasura.

[Skt. bhauma > த. பௌமன்.]

பௌமசுநானம் *pauma-šunāṉam,* பெ.(n.) தூய்மையான அரசு துளசி முதலிய மரஞ் செடிகளின் அடிமண்ணை உடல்மீது தூவிக் கொள்ளுவதான குளியல் (வின்.); purification by sprinkling with dust taken from the vicinity of sacred trees, shrubs, etc.

[Skt. bhauma+snāna > த. பௌமசுநானம்.]

பௌமி *paumi,* பெ.(n.) நிலமகளின் புதல்வி யாகிய சீதை (சங்.அக.); Sita, as daughter of the Earth.

[*Skt. bhaumi > த. பௌமி.*]

பௌர்ணசந்திரன் *paurṇa-šandiraṉ,* பெ.(n.) நிறைமதி; full moon.

[*Skt. pūrṇa+ṣandra > த. பௌர்ணசந்திரன்.*]

பௌர்ணமாசம் *paurṇa-māšam,* பெ.(n.) நிறை நிலா நாளில் (பௌர்ணமி) செய்யும் வேள்வி; sacrifice on a full moon day.

[*Skt. paurṇamāsa > த. பௌர்ணமாசம்.*]

பௌர்ணமி *paurṇami,* பெ.(n.) நிறைமதி நாள்; full moon day.

த.வ. முழு நிலவு

[*Skt. paurṇami > த. பௌர்ணமி.*]

பௌர்ணமிச்சந்துக்கட்டு *paurṇami-šandu-k-kaṭṭu,* பெ.(n.) நோயாளிக்கு ஆகாததாகக் கருதப்படும் நிறைமதி நாளும் அதற்கு முன்னும் பின்னுமுள்ளனவுமான நாள்கள்; the full moon day and the days just before and after the full moon, as unfavourable to patients.

[*Skt. paurṇami > த. பௌர்ணமி+சந்துக் கட்டு*]

பௌர்ணிமை *paurṇimai,* பெ.(n.) **பௌர்ணமி** (சங்.அக.) பார்க்க; see *paurṇami.*

பௌரகம்[1] *pauragam,* பெ.(n.) நகரை யடுத்தப் புறச்சோலை (யாழ்.அக.); grove adjoining a city.

[*Skt. pauraka > த. பௌரகம்.*]

பௌரகம்[2] *pauragam,* பெ.(n.) நொச்சி; a garden plant, chastity plant (சா.அக.).

பௌரம் *pauram,* பெ.(n.) நகரத் தொடர்பானது (சங்.அக.); that which pertains to a city.

[*Skt. paura > த. பௌரம்.*]

பௌரவர் *pauravar,* பெ.(n.) புரு மன்னனின் குலத்தார்; descendants of Puru.

[*Skt. paurava > த. பௌரவர்.*]

பௌரன் *pauraṉ,* பெ.(n.) நகரத்தில் வாழ்பவன்; urban man.

[*Skt. paura > த. பௌரன்.*]

பௌராணிகம் *paurāṇigam,* பெ.(n.) **பௌராணிகச்சமயம்** (வின்.) பார்க்க; see *paurāṇiga-c-camayam.*

[*Skt. paurā-ṇika+ > த. பௌராணிகம்+சமயம்.*]

பௌராணிகமதம் *paurāṇiga-matam,* பெ.(n.) தொன்மத்தைப் பின்பற்றும் சமயம்; a system of doctrines founded on the *purāṇas.*

[*Skt. paurā-ṇika > த. பௌராணிகம்+மதம்.*]

பௌராணிகமந்திரம் *paurāṇiga-mandiram,* பெ.(n.) ஓங்காரம் சேராத மந்திரம் (யாழ்.அக.); mantra without pranava.

[*Skt. paurā-ṇika > த. பௌராணிகம்+ மந்திரம்.*]

பௌராணிகன் *paurāṇigaṉ,* பெ.(n.) 1. தொன்மக் கொள்கையுடையவன் (சி.சி.1, 1 மறைஞா.7); one who follows the *purāṇas.* 2. தொன்மக்கதைகளை எடுத்துரைப்பவன்; one who expounds the *purāṇa* stories.

[*Skt. pauranika > த. பௌராணிகன்.*]

பௌரி *pauri,* பெ.(n.) பெரும்பண்வகை (பிங்.); a musical, mode, one of *perum-paṇ.*

பௌரிக்காய் *paurikkāy,* பெ.(n.) சவுரிக்காய்; fruit of climber (சா.அக.).

பௌரிகன் *paurigaṉ,* பெ.(n.) குபேரன் (யாழ்.அக.); Kubera.

[*Skt. bhaurika > த. பௌரிகன்.*]

பௌருசம் *paurušam,* பெ.(n.) ஆண்டகைமை (வின்.); manliness, nobleness.

[*Skt. paurusa > த. பௌருசம்.*]

பௌருசத்துவம் *paurušattuvam,* பெ.(n.) ஆண் தன்மை; manly power.

பௌருசேயம் *paurušēyam,* பெ.(n.) மாந்தனாற் செய்யப்பட்டது (சி.சி.அளவை.13, சிவாக்.); that which is man made.

[*Skt. paurusēya > த. பௌருசேயம்.*]

பௌரைக்கல் *pauraikkal,* பெ.(n.) கற்சிட்டம்; over burnt brick (சா.அக.).

பௌரோகித்தியம் *paurōgittiyam,* பெ.(n.) போற்றாளித்துவம் (வின்.); priesthood.

[*Skt. paurōhitya > த. பௌரோகித்தியம்.*]

பௌலசுதியன் *paulašudiyan,* பெ.(n.) 1. இராவணன்; *Rāvaṇa.* 2. குபேரன்; *Kubēra.*

[*Skt. paulastya > த. பௌலசுதியன்.*]

பௌலுருவி *pauluruvi,* பெ.(n.) புல்லுருவி; honey suckle mistletoe.

பௌவம்[1] *pauvam,* பெ.(n.) **பவ்வம்**[1] (சூடா.) பார்க்க; see *pavvam.*

[*Skt. parvan > த. பௌவம்*[1].]

பௌவம்[2] *pauvam,* பெ.(n.) 1. **பவ்வம்**[2] பார்க்க; see *pavvam. "திறை பிறழிய விரும்பௌவத்து" (பொருந.178).* 2. ஆழம்; deep. *"பௌமார் கடல்" (தேவா.556, 8).* 3. உப்பு (யாழ்.அக.); salt.

பௌவம்[3] *pauvam,* பெ.(n.) 1. கடல்; sea; ocean. 2. உப்பு; salt. 3. நுரை; forth. 4. நீர்க்குமிழ்; water bubble (சா.அக.).

பௌழியசரணத்தார் *pauḷiya-šaraṇattār,* பெ.(n.) இருக்குவேதிகள்; *Rg Vēdins.*

[*Skt. bahurc > த. பௌழியசரணத்தார்.*]

பௌழியசரணம் *pauḷiya-šaraṇam,* பெ.(n.) **பௌடியம்**[1] பார்க்க; see *pauḍiyam.*

[*Skt. bahurc > த. பௌழியசரணம்.*]

பௌழியம் *pauḷiyam,* பெ.(n.) **பௌடியம்**[1] பார்க்க; see *pauḍiyam. "சந்தோகா பௌழியா" (திவ்.பெரியதி.7, 7, 2).*

பௌழியன்[1] *pauḷiyan,* பெ.(n.) சேர மன்னனான பூழியன்; *Chēra* king.

[*Skt. bahura > த. பௌழியன்.*]

பௌழியன்[2] *pauḷiyan,* பெ.(n.) இருக்கு மறையில் வேதத்தால் விவரிக்கப்படுபவனான கடவுள்; God as described in the Rig *vēda. "சந்தோகன் பௌழியன்" (திவ்.பெரியதி.5, 5, 9).*

[*Skt. bahurc > த. பௌழியன்.*]

பௌளி *pauḷi,* பெ.(n.) பண் (இராக) வகை (பாத. இராக.56); a specific melody-type.

பௌன் *paun,* பெ.(n.) பொற்காசு, பவுன்; pound sterling.

[*E. pound > த. பௌன்.*]



பௌனர்ப்பவன் *paunarppavan,* பெ.(n.) புத்திரர் பன்னிரு வகையினருள் ஒருத்தியிடம் முதற்கணவனுக்குப் பிறந்தவனும் கைம்பெண்ணானபின் அவளை மணந்த இரண்டாங் கணவனால் மகனாகக் கருதப்படுபவனுமான மகன் (ஏலாதி.31); son born to a woman by her first husband considered as a son of the husband who marries her on her widowhood one of 12 *puttiran.*

[*Skt. paunarbhava > த. பௌனர்ப்பவன்.*]

ம

மக்கனம் *makkaṉam,* பெ.(n.) 1. மூழ்குகை; immersion. 2. அவமானம்; disgrace.

[*Skt. magna > த. மக்கனம்.*]

மக்கா *makkā,* பெ.(n.) அரேபியாவிலுள்ளதும் முகம்மது பிறந்ததால் பேர் பெற்றதுமான இடம்; Mecca, one of the two chief cities of Arabia, celebrated as the birth-place of Muhammad. *"வேரியம் பணைசூழ் மக்க மிக்கொக்கு" (திருவிளை.நரியா.105).*

[*Ar. makkah > த. மக்கா.*]

மக்கி[1] *makki,* பெ.(n.) ஈ (C.G.); fly.

[*Skt. maksikā > த. மக்கி.*]

மக்கி[2] *makki,* பெ.(n.) வெண்பார்க்கல் (J.); marl, calcareous earth.

[*Skt. makkōla > த. மக்கீ.*]

மக்கினம் *makkiṉam,* பெ.(n.) 1. அழுந்துகை; immersion. *"மக்கினம் பட்டுள்ளே மருவி யிருந்தாண்டி" (பட்டினத்துப்.பக்.235).* 2. அவமானம்; disgrace. *"அந்தச் சபையில் அவன் மக்கினப்பட்டான்".*

[*Skt. magna > த. மக்கினம்.*]

மக்பி *makpi,* பெ.(n.) கமுக்கமான (C.G.); secret, confidential.

[*Ar. mahfī > த. மக்பி.*]

மக்பூல் *makpūl,* பெ.(n.) ஒப்பளிப்புச் செய்யப் பட்டது (C.G.); that which is approved.

[*Ar. maqbūl > த. மக்பூல்.*]

மக்மல் *makmal,* பெ.(n.) கனமாய் மெத்தென் றிருக்கும் பட்டுவகை (வின்.); velvet.

[*H. magmul > த. மக்மல்.*]

மக்ரிபு *makribu,* பெ.(n.) மாலைத் தொழுகை; prayer at sunset (muham.).

[*Skt., Ar. maghrib > த. மக்ரிபு.*]

மகத்து *magattu,* பெ.(n.) 1. பெரியது; that which is great, large or huge. *"மகத்தாகி நின்றனை நீ" (தாயு. பராபர.226).* 2. அதிகம் (வின்.); greatness, intensity. 3. பெருமை யானது; that which is magnificent, exalted, majestic. *"மகத்தான பன்னிரு வெய்யவர்" (குலோத். கோ.18).* 4. பேராதன்(யாழ்.அக.); great person, in a religious or moral sense; saint. 5. நாடு (இலக்.அக.); country. 6. நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று; an Upanisad, one of 108.

[*Skt. mahat > த. மகத்து.*]

மகத்துவம் *magattuvam,* பெ.(n.) பெருமை; greatness, magnificence, majesty, excellence. *"மகத்துவமாப் பிரமாண்டமாகச் செய்யும்" (தாயு.தந்தைதாய்.6).*

[*Skt. mahat-tva > த. மகத்துவம்.*]

மகதம் *magadam,* பெ.(n.) 1. தேசம் ஐம்பத் தாறனுள் இராசகிருகத்தைத் தலைநகராகக் கொண்ட ஒரு தேசம்; country of South Bihar with Rājagraha as its capital, one of 56 *tēsam.* 2. நடுநாட்டில் திருக் கோவலூரைச் சார்ந்த ஒரு பகுதி; country about *Tiru-k-kovalūr* in South Arcot Dt. 3. பதினெண்மொழியுள் ஒன்று (நன்.272, உரை); the language of Magadha, one of *patiṉeṇmoḻi.*

[*Skt. magadha > த. மகதம்.*]

மகதேசன் *magadēsaṉ,* பெ.(n.) 1. மகத தேசத்தரசன் (பாரத.இரா.17); king of Magadha. 2. நடுநாட்டைச் சார்ந்த மகத நாட்டுச் சிற்றரசன்; king of a part of the country in *Naḍu-nāḍu. "மகதேச னாறைநகர் காவலன்" (பெருந்தொ.1192).*

[*Skt. magadhaīśa > த. மகதேசன்.*]

மகதை[1] *magadai,* பெ.(n.) திப்பிலி (சங்.அக.); long pepper.

[*Skt. māgadhī > த. மகதை.*]

மகதை[2] *magadai,* பெ.(n.) **மகதம், 2** பார்க்க; see *magadai.*

மகதைசுவரியம் *magadai-śuvariyam,* பெ.(n.) பெருஞ்செல்வம்; great opulence.

[*Skt. mahat+aiśvarya > த. மகதைசுவரியம்.*]

மகரத்துவசம் *magarattuvašam,* பெ.(n.) ஒரு மருந்து; a kind of medicine (சா.அக.).

மகரதோரணம் *magara-tōranam,* பெ.(n.) சுறவ (மகர)வடிவமைந்த ஒப்பனைத் தொங்கல்; ornamental hangings representing makara fishes. *"மதிதொட நிவந்தன மகரதோரணம்" (கம்பரா.மந்தரை.31).*

[Skt. makara-tōrana > த. மகரதோரணம்.]

மகரந்தம் *magarandam,* பெ.(n.) 1. மலர்த் துகள் (திவா.); filament of the lotus; pollen and anther of flowers. 2. பூந்தேன் (பிங்.); nectar or honey of flowers. 3. கள் (பிங்.); toddy. 4. வண்டு; honey-bee. 5. குயில் (மூ.அ.); Indian cuckoo.

[Skt. makaranda > த. மகரந்தம்.]

மகரராசி *magara-rāši,* பெ.(n.) சுறவம், பத்தாம் ஓரை; capricorn of the zodiac.

[Skt. makara+raci > த. மகரராசி.]

மகரரேகை *magara-rēgai,* பெ.(n.) செல்வந்த னென்பதைக் காட்டுங் குறியாக உள்ளங் கையில் அமையும் கைவரி வகை (இரேகை வகை) (சங்.அக.); line on the palm of hand, believed to indicate wealth.

த.வ. மீனக்கைவரி

[Skt. makara > த. மகரரேகை.]

மகரவலயம் *magara-valayam,* பெ.(n.) **மகரப்பகுவாய்** பார்க்க; see *magara-p-paguvāy. "மகரவலய மணிதிகழ் நுதலியர்" (பரிபா.10, 77).*

[Skt. makara > த. மகரம்+வலயம்.]

மகரவாகனன் *makara-vāganan,* பெ.(n.) வருணன் (சங்.அக.); Varunan.

[Skt. makara+vāhana > த. மகரவாகனன்.]

மகரவியூகம் *magara-viyūgam,* பெ.(n.) மகரமீனின் வடிவான படைவகுப்பு; array of army in the shape of a *magaram.* *"வருபடை தன்னை நிறுத்தி விதம்பட மகரவியூகம் வகுத்து" (பாரத. பதின் மூன்றாம்.7).*

[Skt. magara+vyūha > த. மகரவியூகம்.]

மகரவீணை *magara-vīnai,* பெ.(n.) **மகரயாழ்** பார்க்க; see *magara-yāḻ. "தீந்தொடை மகரவீணைத் தெள்விளி" (சீவக.608).*

த.வ. சுறவ யாழ்

[Skt. makara > த. மகரம் + வீணை.]

மகராகரம் *magarāgaram,* பெ.(n.) கடல் (யாழ்.அக.); sea.

[Skt. makarā-kara > த. மகராகரம்.]

மகராங்கம் *magarāṅgam,* பெ.(n.) கடல் (யாழ்.அக.); sea.

[Skt. makarāṅka > த. மகராங்கம்.]

மகராங்கன் *magarāṅgan,* பெ.(n.) **மகரக் கொடியோன்** பார்க்க (சங்.அக.); see *magara-k-kōḍiyōn.*

[Skt. makarāṅka > த. மகராங்கன்.]

மகராசன் *maga-rāšan,* பெ.(n.) **மகாராசன்** பார்க்க; see *magārāšan. "வருராம தேவ மகராசன்" (நம்பியுலா.).*

[Skt. mahā-rāja > த. மகராசன்.]

மகராசா *maga-rāšā,* பெ.(n.) **மகாராசன்** பார்க்க; see *magārāšan.*

[Skt. mahā-rāja > த. மகராசா.]

மகராசி *maga-rāši,* பெ.(n.) 1. இராணி; queen. 2. பெருஞ்சொத்துள்ளவள்; wealthy blessed woman. *"மகராசியாக விருப்பாயே" (திருவாரூ.குற.).*

[Skt. maha-rājñī > த. மகராசி.]

மகராசுவன் *magarāšuvan,* பெ.(n.) **மகரவாகனன்** (யாழ்.அக.) பார்க்க; see *magarāganan.*

[Skt. makarāšva > த. மகராசுவன்.]

மகராட்டிரம் *magarāṭṭiram,* பெ.(n.) **மகாராட்டிரம்** (யாழ்.அக.) பார்க்க; see *magārāṭṭiram.*

மகராயனம் *magarāyaṉam,* பெ.(n.) கதிரவன் வடக்கு நோக்கித் திரும்புங்காலம் (பஞ்.); winter solstice.

[Skt. makarāyana > த. மகராயனம்.]

மகராலயம் *magarālayam,* பெ.(n.) கடல் (திவா.); sea, as the abode of fish. *"வானுமின்றி மகராலயமு மின்றி" (தக்கயாகப்.408).*

[Skt. maka-rālaya > த. மகராலயம்.]

மகரி *magari,* பெ.(n.) கடல் (சங்.அக.); sea.

[Skt. makarin > த. மகரி.]

மகரிகை *magarigai,* பெ.(n.) 1. அணி முதலிய வற்றிலமைந்த சுறாமீன் வடிவு; the figure of shark, as in ornaments. *"மகரிகை வயிர குண்டலமலம்புந்... தோள்புடை வயங்க" (கம்பரா.நித்னை.17).* 2. **மகரம்**[1], **4** பார்க்க; see *magaram. "மாதின் மகரிகை வயங்கு பொற்பூண் சூழுறு கவானே" (கந்தபு. மாயை.56).* 3. தோரணம் (சது.); ornamental hangings. 4. மகரவடிவாய்ச் செய்த பெட்டி; a shark-shaped box. *"மகரிகை நிறைய" (பெருங்.மகத.17, 161).*

[Skt. makarika > த. மகரிகை.]

மகரிசி *magariśi,* பெ.(n.) தவமுனிவர்; great sage.

[Skt. maharsi > த. மகரிசி.]

மகரூர் *magarūr,* பெ.(n.) உறுதியாக்கப் பட்டது (P.T.L.); that which is fixed or established.

[Ar. muqarrar > த. மகரூர்.]

மகலோகம் *magalōgam,* பெ.(n.) மேலேழுலகத் தொன்று (திவா.); an upper world, fourth of *mēl-ēl-ulagam. "கோவுலோக மகலோக மடையக் குமுறவே" (தக்கயாகப்.704).*

[Skt. maharlōka > த. மகலோகம்.]

மகவான்[1] *magavāṉ,* பெ.(n.) 1. இந்திரன் (திவா.); Indra. *"மகவான்மக னிரங்கின னரற்ற" (பாரத.பதின்மூன்.168).* 2. சிவன் (சங்.அக.); Sivaṉ.

[Skt. magha-vāṉ > த. மகவான்.]

மகவான்[2] *magavāṉ,* பெ.(n.) வேள்வி செய் பவன்; sacrificer. *"வேதாவை மிக்க மகவானாகக் கூட்டி" (தேவை.15).*

[Skt. makha-vān > த. மகவான்[2].]

மகற்பலம் *magaṟ-palam,* பெ.(n.) பெரும் பலன்; great, important result. *"மகற்பல வாஞ்சையாலே" (சிவதரு.பாம.47).*

[Skt. mahat+phala > த. மகற்பலம்.]

மகா *magā,* பெ.(n.) 1. பெருமையான; great, high, exalted, dignified, noble, honourable. *"மகாசபையோம்" (S.I.I.i, 68).* 2. அளவற்ற; immense, prodigious, stupendous, monstrous, extreme. 3. உயர்ந்த; superior, paramount. 4. மிகுந்த; intense.

[Skt. mahat > த. மகா.]

மகாஅகதம் *magā-agadam,* பெ.(n.) நஞ்சு முறிக்கும் செய்முறையைக் குறிக்கும் பெயர்; the name of an antitoxic preparation (சா.அக.).

மகாஅவிழ்தம் *magā-aviḻdam,* பெ.(n.) சுக்கு; dried ginger (சா.அக.).

மகாஅவுசதநாசனி *magā-avuḍata-nāšaṉi,* பெ.(n.) பூசணிக்காய்; pumpkin (சா.அக.).

மகாக்கினி[1] *magākkiṉi,* பெ.(n.) வேள்வித்தீ (ஓமாக்கினி) (யாழ்.அக.); sacrificial fire.

[Skt. makhāgni > த. மகாக்கினி.]

மகாக்கினி[2] *magākkiṉi,* பெ.(n.) 1. காட்டுத்தீ (காடாக்கினி); great fire which see. 2. அழல்விரி தீச்சுடர் (தீபாக்கினி); moderate fire spreading flames (சா.அக.).

மகாகச்சம்[1] *magā-kaccam,* பெ.(n.) கடல் (யாழ்.அக.); sea.

த.வ. மாக்கடல்

[Skt. mahā-kacha > த. மகாகச்சம்.]

மகாகச்சம்[2] *magākaccam,* பெ.(n.) 1. பெருங்கடல்; ocean. 2. மலை; mountain (சா.அக.).

மகாகண்டம்[1] *magā-gaṇḍam,* பெ.(n.) பாலி மொழியிலுள்ள ஒரு புத்தமத நூல் (மணிமே. பக்.366); a Buddhistic work in *pāli* language.

த.வ. மாகண்டம்

மகாகண்டம்[2] *magā-gaṇḍam,* பெ.(n.) பெரிய முள்ளங்கி; large raddish (சா.அக.).

த.வ. மாகண்டம்



மகாகன்னி *magā-kaṉṉi,* பெ.(n.) இந்திர பாடாணம் என்னும் செய்ந்நஞ்சு; a variety of arsenic (சா.அக.).

த.வ. மாகன்னி

மகாகணம் *magākaṇam,* பெ.(n.) குழந்தை கட்கு நாக்கு, உதடு புண்ணாகி, கண் வெளுத்து, உடல் வெதும்பிக் காணும் ஒரு வகைக் கணை நோய்; a congenital disease of the children marked by anemia, ulcerated tongue and lips (சா.அக.).

த.வ. மாக்கணம்

மகாகணரோகம் *magāgaṇa-rōgam,* பெ.(n.) குழந்தை நோய் வகை (சீவரட்.); a disease of children.

த.வ. மாக்கண நோய்

[மகாகணம் + ரோகம்.]

மகாகதம் *magā-kadam,* பெ.(n.) 1. காய்ச்சல்; fever. 2. மிகுந்த வெப்பம்; intense heat. 3. மிகுந்த சினம்; great anger (சா.அக.).

த.வ. மாகதம்

மகாகதி *magā-gadi,* பெ.(n.) மேற்கதி (யாழ்.அக.); upward progress.

த.வ. மாக்கதி

[Skt. mahā-gati > த. மகாகதி.]

மகாகந்தம்[1] *magā-kandam,* பெ.(n.) பூண்டு, உள்ளி (யாழ்.அக.); garlic.

த.வ. மாக்கந்தம்

[Skt. mahā-kanda > த. மகாகந்தம்.]

மகாகந்தம்[2] *magā-kandam,* பெ.(n.) 1. வெண்காயம் அல்லது உள்ளி; onion or garlic. 2. அரிசந்தனம்; red sandal (சா.அக.).

த.வ. மாக்கந்தம்

மகாகபித்தம் *magākapittam,* பெ.(n.) வில்வம் (மூ.அ.); bael.

[Skt. mahā-kapittha > த. மகாகபித்தம்.]

மகாகபெலம் *magāgapelam,* பெ.(n.) கொம்மட்டி; a creeping plant-water melon (சா.அக.).

மகாகர்வம் *magā-karvam,* பெ.(n.) பத்திலக் கங்கோடி (பிங்.); ten billions.

[Skt. mahā-kharva > த. மகாகர்வம்.]

மகாகல்யாணகம் *magākalyāṇagam,* பெ.(n.) உடலை தூய்மையாக்குவதும் நினைவை வலுப்படுத்துவதுமான ஒருவகை நெய்; a medicinal ghee in ayurveda for insanity an for strengthening memory (சா.அக.).

மகாகவம் *magā-kavam,* பெ.(n.) பெரும்போர் (யாழ்.அக.); great war.

[Skt. mahā+āhava > த. மகாகவம்.]

மகாகவி *magā-kavi,* பெ.(n.) பெரும்புலவர் (பெருங்கவி); great poet. *"மகாகவி யொருவர் ஒரு காவியத்தில் இட்டனர்" (தக்கயாகப்.8, உரை).*

த.வ. பெரும்பாவலர்

[Skt. mahā-kavi > த. மகாகவி.]

மகாகற்பம்[1] *magā-kaṟpam,* பெ.(n.) கற்பம் பல கொண்ட முடிவுகாலம் (வின்.); a great cycle of time consisting of many a *kaṟpam.*

[Skt. mahā-kalpa > த. மகாகற்பம்[1].]

மகாகற்பம்[2] *magā-kaṟpam,* பெ.(n.) 1. சிறந்த கற்பமூலிகை; a superior drug to prolong life; drug of all healing potency. 2. சித்தர்கள் பயன்படுத்தும் ஒரு சிறந்த மருந்து; a superior medicinal preparation used by siddhars to secure immortal youth (சா.அக.).

மகாகற்பம்[3] *magākaṟpam,* பெ.(n.) **மகா கர்வம்** பார்க்க (நாமதீப.801); see *magā-karvam.*

மகாகாசம்[1] *magā-kāšam,* பெ.(n.) பெருஞ்சிரிப்பு (யாழ்.அக.); loud laughter.

[Skt. mahā-hāsa > த. மகாகாசம்.]

மகாகாசம்[2] *magā-kācam,* பெ.(n.) **மகா காயம்**[2] பார்க்க (வின்.); see *makā-kāyam.*

[Skt. mahākāša > த. மகாகாசம்[2].]

மகாகாசம்[3] *magā-kāšam,* பெ.(n.) 1. ஒரு வகைக் காசநோய்; a kind of virulent asthma or bronchitis. 2. பரவெளி; atmosphere or ether (சா.அக.).

மகாகாமி *magā-kāmi,* பெ.(n.) 1. மிக்க காமங் கொண்டவன்; a lascivious person. 2. முத்திருக்கஞ்செவி என்னும் மூலிகை; a plant, which see (சா.அக.).

த.வ. மாகாமி

மகாகாயம்[1] *magā-kāyam,* பெ.(n.) 1. பெரிய உருவம் அல்லது யானை; elephant. 2. பருத்தவுடம்பு; a stout body (சா.அக.).

த.வ. மாகாயம்

மகாகாயம்[2] *magā-kāyam,* பெ.(n.) பெரு வெளி (இலக்.அக.); (Phil.) expanse of space, as unlimited, opp. to *kuṭākāyam.*

த.வ. மாகாயம்

[Skt. mahā-kāša > த. மகாகாயம்[2].]

மகாகாயன் *magā-kāyaṉ,* பெ.(n.) பனி மலையின் தெற்கு வாயில் காப்போன் (சங்.அக.); the guard at the Southern gate of mt. *kailāsa.*

த.வ. மாகாயன்

[Skt. mahā-kāya > த. மகாகாயன்.]

மகாகாலங்கம் *magā-kālaṅgam,* பெ.(n.) ஆதொண்டை என்னும் மூலிகை; a throng shrub (சா.அக.).

மகாகாலம் *magā-kālam,* பெ.(n.) 1. நெடுங் காலம்; a long time. 2. மாமரம்; mango tree. 3. குறட்டை என்னும் மூலிகை; korattay (சா.அக.).

த.வ. மாக்காலம்

மகாகாலன் *magā-kālaṉ,* பெ.(n.) உருத்திரன் (அபி.சிந்.); rudra, as the final destroyer.

[Skt. mahā- > த. மகா+காலன்.]

மகாகாளமூர்த்தி *magā-kāḷamūrtti,* பெ.(n.) **மகாகாலன்** பார்க்க (தக்கயாகப்.271, விசேடக்.); see *magākālaṉ.*

[*Skt. mahā-kāla* > *த. மகாகாளம்+மூர்த்தி.*]

மகாகாளர் *magā-kāḷar,* பெ.(n.) 1. **மகாகாலன்** (சங்.அக.) பார்க்க; see *magā-kālaṉ.* 2. மகாசாத்தாவின் வீரருள் தலைமை பெற்றவன்; a servant of *makā-cāttā.* "*மகாகாளர் வருபடலம்*" (*கந்தபு.*).

த.வ. மாகாளர்

[*Skt. mahā-* > *த. மகா+(காலன்) > காளர்.*]

மகாகாளி[1] *magākāḷi,* பெ.(n.) சத்திகளி லொருத்தி (தக்கயாகப்.107, உரை); a *śakti.*

த.வ. மாகாளி

[*Skt. mahā-* > *த. மகா+காளி.*]

மகாகாளி[2] *magā-kāḷi,* பெ.(n.) ஆட்டுச்செவி அல்லது ஆடு தின்னாப்பாலை என்னும் மூலிகை; a bitter prostate plant (சா.அக.).

[*Skt. mahā* > *த. காளி.*]

மகாகாளிசரண் *magākāḷi-śaraṉ,* பெ.(n.) களாவிழுது (தைலவ.தைல.119); the aerial root of *kalā* plant.

மகாகாளை *makā-kāḷai,* பெ.(n.) ஒன்பான் செல்வங் (நிதி) களிலொன்று (அபி.சிந்.940); one of *nava-niti.*

[*Skt. mahā-kālā* > *த. மகாகாளை.*]

மகாகிதி *magā-kidi,* பெ.(n.) கோடிகோடா கோடி (த.நி.போ.பக்.25); a great number, one thousand trillions.

மகாகிரிவம் *magā-kirivam,* பெ.(n.) ஒட்டகம் (யாழ்.அக.); camel.

[*Skt. mahā-grīva* > *த. மகாகிரிவம்.*]

மகாகிருதம் *magā-girudam,* பெ.(n.) தூய்மை செய்த வெண்ணெய்; fresh clarified butter (சா.அக.).

மகாகீரிவம் *magā-kīrivam,* பெ.(n.) 1. ஒட்டகம்; camel. 2. நீண்ட கழுத்து; long neck (சா.அக.).

த.வ. ஒட்டகம்

மகாகுட்டம் *magā-kuṭṭam,* பெ.(n.) பெருநோய்; leprosy (சா.அக.).

த.வ. பெருங்குட்டம்

மகாகுண்டலினி *magā-kuṇḍaliṉi,* பெ.(n.); மூலாதாரத்திலுள்ள பாம்பின் வடிவமைந்த ஒரு ஆற்றல் (பிரபோத.44,20); the cosmic energy in the form of serpent, abiding in the *mūlādhāra.*

மகாகுணபாடம் *magā-guṇapāḍam,* பெ.(n.) தேரையர் செய்த ஒரு தமிழ் மருத்துவ நூல்; a Tamil medical science (சா.அக.).

த.வ. மாகுணபாடம்

மகாகும்பம் *magā-kumbam,* பெ.(n.) நூறாயிரங் கோடி (திவா.); a great number, billion.

த.வ. மாகும்பம்

[*Skt. mahā-kumbha* > *த. மகாகும்பம்.*]

மகாகும்பாவம் *magā-kumbāvam,* பெ.(n.) 1. குமிள் அல்லது குமிழ்; Kashmere tree. 2. மேகாதிவாதம், கபம், கிரகணி, பாண்டு இவற்றை நீக்கும் ஒரு மூலிகை; it is useful for anaemia, diarrhoea (chronic) rheumatism etc. (சா.அக.).

மகாகும்பி *magā-kumbi,* பெ.(n.) சாம்பற் பூசணி (மலை.); ash-gourd.

மறுவ. பெரும்பூசணி, மாகும்பி

மகாகுமரி *magā-kumari,* பெ.(n.) குங்குமச் செவ்வந்தி; a big variety of red chamomile (சா.அக.).

த.வ. மாகுமரி

மகாகுழம்பு *magā-kuḻambu,* பெ.(n.) அகத்தியர் பெருங்குழம்பு என்னும் மெழுகு

வடிவிலான மருந்து வகை; a wax like medicine (சா.அக.).

த.வ. மாக்குழம்பு

மகாகெசம் *magā-kešam,* பெ.(n.) மாந்தர் கைக்கு நூறுமுழங்கொண்ட அளவு (த.நி. போ.); hundred cubits.

[Skt. mahā-gaja > த. மகாகெசம்.]

மகாகெந்தம் *magā-kendam,* பெ.(n.) சீதேவி செங்கழுநீர் என்னும் மூலிகை; a kind of herb (சா.அக.).

[மகா+கந்தம்→கெந்தம்.]

மகாகெந்தா *magā-kendā,* பெ.(n.) கறுப்புக் கடலை; a black gram (சா.அக.).

[மகா + கெந்தா.]

மகாகைலாயம் *magā-kailāyam,* பெ.(n.) சிவபெருமான்(பிரான்) வீற்றிருக்கும் மலை; the great *kailāsa*, abode of Sivaṉ.

[Skt. mahā-kailāsa > த. மகாகைலாயம்.]

மகாகோடாசுழிமாத்திரை *magākōḍā-šulimāttirai,* பெ.(n.) மாலைக்கண் காமாலை, சோகை, நச்சுக் குற்றம், விப்புருதி, பீலிகை, காசம், புண் முதலியவற்றைக் குணமாக்கும். தாளகம், வீரம், கவுரி, லிங்கம், பாடாணம், சூதம், கெந்தி, துரிசு, வெண்காரம், அன்ன பேதி, பால்துத்தம், மனோசிலை, செப்புத் தொட்டி, படிகாரம், வாளம், இவற்றைத் தூய்மை செய்து கடைச் சரக்குகளுடன் சேர்த்து அணியம் செய்து சித்த நூலிற் கண்ட அளவுப்படி கொடுக்கும் மாத்திரை; a pill containing the above drugs which is used for jaundice, dropsy, bronchitis diseases of spleen, night blindness etc. (சா.அக.).

[Skt. mahā> த. கோடாசுழி+மாத்திரை]

மகாகோடி *magā-kōḍi,* பெ.(n.) ஒரு பேரெண் (நாமதீப.80, உரை.); a great number.

த.வ. மாகோடி

[மகா+கோடி.]

[Skt. mahā-kōṭi > த. மகாகோடி.]

மகாகோணி *magā-kōṇi,* பெ.(n.) இலக்கங் கோடா கோடி (யாழ்.அக.); a great number, ten trillions.

த.வ. மாகோணி

[Skt. mahā-kṣōṇi > த. மகாகோணி.]

மகாகோரம் *magā-kōram,* பெ.(n.) 1. நிரய (நரக) வகை (வின்.); a hell. 2. கண்ணால் பார்க்க முடியாத வன்கொடுமை (உ.வ.); atrociousness, awfulness.

[Skt. mahā-ghōra > த. மகாகோரம்.]

மகாகோளி[1] *magākōḷi,* பெ.(n.) கற்க மருந்து வகை; a medicinal drug. *வாலுகம் மகாகோளி மகிழும்" (தைலவ.தைல.77).*

மகாகோளி[2] *magākōḷi,* பெ.(n.) அறியப்படாத ஒருவகை மூலிகை; unidentified plant (சா.அக.).

த.வ. மாகோளி

மகாகோசம் *magā-kōsam,* பெ.(n.) பேரொலி (சங்.அக.); great tumult or noise.

த.வ. பெருங்கூச்சல், பெருங்கூவல்

[Skt. mahā-ghōsa > த. மகாகோசம்.]

மகாகோசா *magā-kōšā,* பெ.(n.) மாமரக் குடும்பத்தைச் சேர்ந்த பிசிடேசியா இண்டகிரி மாமரத்தில் தோன்றும் கொம்பு போன்ற புது வளர்ச்சியான கற்கடகசிங்கி; a growth like the claws of crab seen on the leaves. petioles of pistacia integerrima; galls of pistacia integerrima (சா.அக.).

த.வ. மாகோசா

மகாங்கம் *magāṅgam,* பெ.(n.) ஒட்டகம் (யாழ்.அக.); camel.

[Skt. mahāṅga > த. மகாங்கம்.]

மகாச்சாயம் *magā-c-cāyam,* பெ.(n.) ஆல்; banyan.

[Skt. mahā-chāya > த. மகாச்சாயம்.]

மகாச்சுவாலம் *magā-c-cuvālam,* பெ.(n.) வேள்வித் தீ வகை (யாழ்.அக.); a sacrificial fire.

த.வ. பேரொளிப்பிழம்பு

[Skt. mahā-jvāla > த. மகாச்சுவாலம்.]

மகாசக்தி *magā-šakti,* பெ.(n.) 1. சிவசத்தி; *šakti,* the female energy of God *šivan.* 2. குமாரக் கடவுள் (யாழ்.அக.); Skanda.

த.வ. மாசத்தி, பெருஞ்சத்தி.

[Skt. mahā-šakti > த. மகாசக்தி.]

மகாசகா[1] *magā-šakā,* பெ.(n.) 1. வாடா மல்லிகை (மலை.); bachelor's buttons. 2. மறு தோன்றிமரம்; a tree yielding unfading flowers.

[Skt. mahā-sahā > த. மகாசகா.]

மகாசகை *magāšagai,* பெ.(n.) மகாசகா (வின்.) பார்க்க; see *magā-cagā.*

மகாசங்கம்[1] *magā-šaṅgam,* பெ.(n.) மாநாடு (வின்.); great council of a nation.

த.வ. பெருமன்றம், மாநாடு

[Skt. mahā-saṅgha> த. மகாசங்கம்.]

மகாசங்கம்[2] *magā-šaṅgam,* பெ.(n.) 1. ஆயிரம் கோடாகோடி (பிங்.) (த.நி.போ.25); a great number, hundred thousand billions. 2. குபேரன் செல்வத்துளொன்று (பிங்.); a treasure of *kubēra.* 3. நெற்றி (யாழ்.அக.); forehead. 4. மாந்தவெலும்பு வகை (யாழ்.அக.); a human bone.

[Skt. mahā-šaṅga > த.மகாசங்கம்.]

மகாசங்கம்[3] *magāšaṅgam,* பெ.(n.) 1. எலும்பு; bone. 2. நெற்றி; fore head (சா.அக.).

மகாசங்காரம் *magāsaṅgāram,* பெ.(n.) ஊழி முடிவு; the final dissolution of the universe.

த.வ. ஊழிமுடிவு

[Skt. mahā-samhāra > த. மகாசங்காரம்.]

மகாசங்கை *magā-saṅgai,* பெ.(n.) சங்கை பதின்மடங்கு கொண்டது (சங்.அக.); a great number, consisting of ten *šaṅgai.*

த.வ. மாசங்கை

[Skt. mahā-canda > த. மகாசங்கை.]

மகாசண்டம் *magā-šaṇḍam,* பெ.(n.) நிரய (நரக) வகை (சிவதரு. சுவர்க்கநரக.708); a hell.

[Skt. mahā-caṇḍa > த. மகாசண்டம்.]

மகாசண்டன் *magā-šaṇḍaṉ,* பெ.(n.) எமனது ஏவலாளரில் ஒருவன்; a servant of Yama. *"ஓத நமனுற்ற மகாசண்டன்" (சிவதரு. சுவர்க்கநரக.101).*

[Skt. mahā-caṇḍa > த. மகாசண்டன்.]

மகாசதாசிவன் *magāšatāšivaṉ,* பெ.(n.) இருபத்தைந்து திருமுகத்தையுடையவனாயும் சதாசிவமூர்த்திக்கு மேற்பட்டவனாயுமுள்ள சிவத்திருமேனி(அபி.சிந்.); (šaiva) manifestation of šivaṉ.

த.வ. மாசதாசிவன்

[Skt. mahā-sadā-šiva > த. மகாசதா சிவன்.]

மகாசதிக்கல் *magā-satikkal,* பெ.(n.) உடன் கட்டையேறிய கற்புடையாட்டியின் நினைவாக அவளுடைய வடிவம் பொறித்த சிலை; stone in memory of a chaste woman who immolates herself on the funeral pyre of her deceased husband.

[Skt. mahā-satī > த. மகாசதி+கல்.]

சதி என்னும் வடசொல் மனைவி எனப் பொருள்படும். உடன்கட்டை ஏறியதால் வணங்கத் தக்க பெருமையுடையவளாகக் கருதப்பட்டதால் மகாசதிக்கல் எனும் கற்சிலை நாட்டப்பட்டது.

மகாசப்தமி *maha-šaptami,* பெ.(n.) இரத சப்தமி (பஞ்.); the seventh day in the bright fortnight of the lunar month of *mākam.*

[Skt. mahā > த. மகாசப்தமி.]

மகாசபை *magā-šabai,* பெ.(n.) ஊர்ப் பொதுக் காரியங்களை ஆளுவம் செய்யும் அதிகார அவை (S.I.I.i, 60, 69); great assembly for the administration of public affairs.

த.வ. மாமன்றம்

[Skt. mahat +> த. மகாசபை.]

மகாசம்பு *magā-šambu,* பெ.(n.) பெருநாவல்; a tree yielding a large variety of jambo fruits (சா.அக.).

[மகா+சம்பு.]

மகாசம்மோகனம் *magā-cammōganam,* பெ.(n.) விழித்திருப்பவர்களை மெய்ம்மறந்து உறக்கம் கொள்ளச் செய்யும் மந்திர வகை (சங்.அக.); a mantra used to induce sound sleep in others.

[Skt. mahā-sam-mōhana > த. மகாசம் மோகனம்.]

மகாசமுத்திரம் *magā-šamuttiram,* பெ.(n.) 1. பெருங்கடல் (தக்கயாகப்.140, உரை); ocean. 2. ஒரு பேரெண் (நாமதீப.800, உரை); a great number, as a hundred.

[மகா+சமுத்திரம்.]

[Skt. mahat > த. மகா+சமுத்திரம்.]

மகாசயம்[1] *magāšayam,* பெ.(n.) பெருங்கடல் (யாழ்.அக.); ocean.

[Skt. mahā-šaya > த. மகாசயம்.]

மகாசயம்[2] *magā-šayam,* பெ.(n.) கொடிய ஈளைநோய்; advanced consumption.

மகாசயன் *magā-šayan,* பெ.(n.) பெருமகன் (யாழ்.அக.); lord, noble.

த.வ. பெருமான்.

[Skt. mahāšaya > த. மகாசயன்.]

மகாசலம் *magā-šalam,* பெ.(n.) புண்ணிய நீர் (தக்கயாகப்.247, உரை); sacred water.

த.வ. மாசலம்.

[Skt. mahā-jala > த. மகாசலம்.]

மகாசனசுரோத்திரியம் *magācana-curōttiriyam,* பெ.(n.) சிற்றூரில் பொது மக்களுக்காகத் தள்ளுபடி செய்த வரி (G.Tn.D.I.311); a partial remission of assessment in a village on account of occupation.

[Skt. mahā-jana > த. மகாசன சுரோத்திரியம்.]

மகாசனி *magā-šani,* பெ.(n.) வாலுளுவை யரிசி; seed of intellect tree -Celastrus paniculata (சா.அக.).

மகாசாகரம் *magā-šāgaram,* பெ.(n.) சாகரம் பதினெட்டுக்கொண்ட பேரெண் (த.நி.போ.பக்.25); a great number consisting of 18 *sākaram.*

[Skt. mahā-sāgara > த. மகாசாகரம்.]

மகாசாகை *magā-šāgai,* பெ.(n.) மரத்தின் பெருங்கிளை (S.I.I.ii, 201); main branch of a tree.

[Skt. mahā-šākhā > த. மகாசாகை.]

மகாசாத்தா *magā-šāttā,* பெ.(n.) ஐயனார் (கந்தபு.மகாசாத்.); *Aiyanār,* nom. sing. of *mahā-šāstr.*

[Skt. mahā-šāsta > த. மகாசாத்தா.]

மகாசாத்திரன் *magā-šāttiran,* பெ.(n.) 1. சமயங்களின் மூலநூல்களைப் பயின்றவன்; one who is versed in the basic texts of the various systems of religion. 2. ஐயனார் (சிலப்.9, 15, உரை) பார்க்க; see *aiyanār.*

[Skt. mahā-šāstra > த. மகாசாத்திரன்.]

மகாசாந்தபனம் *magā-šāntapanam,* பெ.(n.) முதனாள் கோசலமும், இரண்டாம் நாள் கோமயமும், மூன்றாம் நாள் பாலும், நாலாம் நாள் தயிரும், ஐந்தாம் நாள் நெய்யும், ஆறாம் நாள் தருப்பை நீரும் உண்டு நோற்கும் ஒரு நோன்பு (சங்.அக.); a fast in which the

six articles, viz., cow's urine, cow-dung, milk, curds, ghee and water consecrated with quitch grass, are taken, one on each of six consecutive days.

[Skt. mahā-sāntapana > த. மகா சாந்தபனம்]

மகாசாமந்தன் *magā-šāmandaṉ,* பெ.(n.) பெரும்படைத்தலைவன்; generalissimo; vassel chief. *"மகா சாமந்தாதிபதி சிக்க வீரபத்திர நாயகர்" (I.M.P.Sm.103).*

த.வ. மாசாமந்தன்.

[Skt. mahā-sāmanta > த. மகாசாமந்தன்.]

மகாசாயம் *magā-šāyam,* பெ.(n.) ஆலமரம்; banyan tree (சா.அக.).

மகாசாரக்கந்தம் *magāšārakkandam,* பெ.(n.) பேரீச்சு; date wild variety (சா.அக.).

மகாசாரம் *magāšāram,* பெ.(n.) சிறு விடுகொள்; horsegram, a shrub. (சா.அக.).

மகாசாலி¹ *magā-cāli,* பெ.(n.) பெரும்பீர்க்கு (சங்.அக.); a kind of spongegourd.

த.வ. மாசாலி.

மகாசாலி² *magā-šāli,* பெ.(n.) 1. சிவப்பு நெல்; red paddy. 2. வெள்ளையரிசி; white rice. 3. கோதுமை; wheat (சா.அக.).

த.வ. மாசாலி.

மகாசாலினி *magāšāliṉi,* பெ.(n.) தின்பீர்க்கு; a climber (சா.அக.).

த.வ. மாசாலினி.

மகாசிங்கி *magā-ciṅgi,* பெ.(n.) கருஉயிர்நீர் (சங்.அக.); semen virile.

த.வ. மாசிங்கி.

மகாசிங்கிச்சுண்ணம் *magā-šiṅgi-c-cuṉṉam,* பெ.(n.) துருசுச் சுண்ணம்; calcined white powder of copper sulphate (சா.அக.).

மகாசித்தன் *magā-šittaṉ,* பெ.(n.) பனிமலையின் (கைலாசத்தின்) கீழைவாயில் காப்போன் (அபி.சிங்.); guard at the eastern gate of *Kailāsa.*

[Skt. mahā-siddha > த. மகாசித்தன்.]

மகாசித்திரசயானம் *magā-šittira-šayāṉam,* பெ.(n.) தாளிப்பனை; talipot palm (சா.அக.).

மகாசிந்தாதிலேகியம் *magā-šindādi-lēgiyam,* பெ.(n.) (அகத்தியர்வல்லாதி–600–ல்) கூறப்பட்டுள்ள தீராத பாண்டு காமாலை, சோகை ஆகியவற்றிற்குக் கொடுக்கும் ஒரு வகை இளகியம்; an electuary preparation as in Agastiar Vallathi 600. It is useful in jaundice, dropsy, anaemia etc. (சா.அக.).

மகாசிராவி *magā-širāvi,* பெ.(n.) கோவைக் கொடி; a climbing plant (சா.அக.).

மகாசிரோட்டம் *magāširōṭṭam,* பெ.(n.) கடுங்கழிச்சல்; chronic diarrhoea (சா.அக.).

மகாசிவராத்திரி *magā-šivarāttiri,* பெ.(n.) கும்ப (மாசி) மாதத்துக் கரும்பக்கத்துப் (கிருட்ணபட்சத்து) பதினான்மியும் முக்கோல் (திருவோணம்) நாண்மீனும் கூடிய இரவு; the night of the dark fortnight in the month of *māci,* sacred to Siva, when the 14th tithi and *šravana*-are current.

த.வ. மாசிவனிரவு.

[Skt. mahat > த. மகா+சிவராத்திரி.]

மகாசீனம் *magā-šīṉam,* பெ.(n.) சீனதேசம் (வின்.); China proper.

[Skt. mahat > த. மகா+சீனம்.]

மகாசுக்கம் *magāšukkam,* பெ.(n.) **மகாகசா** பார்க்க; see *magākaša* (சா.அக.).

மகாசுகந்தரசம் *magā-šugandarašam,* பெ.(n.) **இருசுவசற்பாட்சி** பார்க்க; see *irušuvašaṟpāṭci* (சா.அக.).

த.வ. மாசுகந்தரசம்.

மகாசுகம் *magā-cugam,* பெ.(n.) புணர்ச்சி, மகிழ்வு (யாழ்.அக.); sexual intercourse.

[*Skt. mahā-sukha > த. மகாசுகம்.*]

மகாசுராங்கிசக்குளிகை *magāurāṅgiša-k-kuḷigai,* பெ.(n.)நாட்காய்ச்சல் இருமுறைக் காய்ச்சல், மும்முறைக் காய்ச்சல், நால்முறைக் காய்ச்சல் மற்றும் அனைத்துக் காய்ச்சலுக்குக் கொடுக்கும் ரசம், கெந்தி, ஊமத்தம் விதை, திரிகடுகு சமன்கொண்டு எலுமிச்சம் பழச் சாற்றினால் அரைத்துருட்டிய மாத்திரை; ; a mediated pill prepared with mercury, sulphur, etc. for fevers (சா.அக.).

மகாசுவாசரோகம் *magā-šuvāša-rōgam,* பெ.(n.) மூச்சு நோய் வகையுள் ஒன்று (சீவரட்.58); a disease affecting respiration.

[*Skt. mahā-švāsa-rōga > த. மகாசுவாச ரோகம்.*]

மகாசுவாசம் *magā-šuvāšam,* பெ.(n.) கண்டத்தில் கலகல வென்ற ஓசையுடன் விடும் பெரும் மூச்சு; a disease in which the patient breaths heavily lying unconcious, and a low rattling sound in the throat, eyes fixed in gaze and with cramps at his sides (சா.அக.).

மகாசுவாலை *magā-šuvālai,* பெ.(n.) விலைமகளிர் அடையும் நிரயவகை (அபி.சிந்.); a hell for unchaste women.

[*Skt. mahā-jvālā > த. மகாசுவாலை.*]

மகாசுவேதம்[1] *magā-šuvēdam,* பெ.(n.) வாலுளுவை (மலை.); climbing staff plant.

[*Skt. mahā-švētā > த. மகாசுவேதம்[1].*]

மகாசுவேதம்[2] *magāšuvēdam,* பெ.(n.) சிறு வாலுளுவை; intellect plant (சா.அக.).

மகாசுவேதை *magāšuvēdai,* பெ.(n.) கலைமகள் (யாழ்.அக.); goddess of learning.

[*Skt. mahā-švētā > த. மகாசுவேதை.*]

மகாசூசிகை *magā-šūšigai,* பெ.(n.) பெரியம்மை (தஞ்.சர.iii, 68); small-pox.

[*Skt. mahā+ > த. மகாசூசிகை.*]

மகாசூத்திரன் *magā-šūttiran,* பெ.(n.) இடையன் (யாழ்.அக.); cow-herd.

[*Skt. mahā-šūdra > த. மகாசூத்திரன்.*]

மகாசூதம் *magā-cūdam,* பெ.(n.) போர்ப் பறை (யாழ்.அக.); war-drum.

[*Skt. mahā-sūta > த. மகாசூதம்.*]

மகாசூரன் *magā-šūran,* பெ.(n.) 1. பெரு வீரன்; a great warrior. 2. திறமை மிகுந்தவன்; very able man.

[*Skt. mahā-šūra > த. மகாசூரன்.*]

மகாசூலை *magāšūlai,* பெ.(n.) மூட்டு வலி நோய் வகை; rheumatism (சா.அக.).

மகாசேனன் *magā-cēnan,* பெ.(n.) 1. படைத் தலைவன் (யாழ்.அக.); generalissimo, commander of a large force. 2. படைத் தளபதியான குமாரக் கடவுள்; skandha, as the general of celestual forces. 3. அருகன்; arhat. 4. புத்தன்; the Buddha.

[*Skt. mahā-sēna > த. மகாசேனன்.*]

மகாசைவம் *magā-caivam,* பெ.(n.) சிவ னியம் பதினாறனுள் திருநீறு, அக்கமணி பூண்டு சடைவளர்த்துச் சிவனைச் சமகுண னாகவும் குணமிலியாகவும் எண்ணி வழிபாடு செய்ய வேண்டுமெனக் கூறுஞ் சமயம்; (*šaiva.*)a *šaiva* sect which holds that the initiate should wear holy ashes, rudrak beads and matted hair, and meditate on *šiva*, in his conditioned and unconditioned forms one 16 Saivam, q.v.

த.வ. மாசிவனியம்.

[*Skt. mahā-šaiva > த. மகாசைவம்.*]

மகாசைவன் *magā-caivan,* பெ.(n.) சிவ தீக்கை பெற்ற பார்ப்பனன் (சைவச.பொது. 475); (*šaiva*)brahmin who has been initiated.

[*Skt. mahā-šaiva > த. மகாசைவன்.*]

மகாசோபம் *magā-cōpam,* பெ.(n.) நூறு கோடி, கோடாகோடி (த.நி.பேர்.பக்.25); a great number, hundred thousand trillions.

[Skt. mahā-ksōbhya > த. மகாசோபம்.]

மகாத்திரம் *magāttiram,* பெ.(n.) தேக்கு; teak - *Tectona grandis* (சா.அக.).

மகாத்தியாகம் *magāttiyāgam,* பெ.(n.) பெருந்துறவு; complete renunciation of the world.

[Skt. mahā-tyāga > த. மகாத்தியாயகம்.]

மகாத்துமா *magāttumā,* பெ.(n.) பேராதன் (மிகு முது முனிவர்); highly spiritual person; exceedingly wise man; lofty soul.

[Skt. mahātmā > த. மகாத்துமா.]

மகாத்மியம் *magātmiyam,* பெ.(n.) **மாகாத்மியம்** (த.நி.போ.பக்.247) பார்க்க; see *māgātmiyam.*

[Skt. māhāt-mya > த. மகாத்மியம்.]

மகாதசம் *magātašam,* பெ.(n.) மாவிலிங்கம்; a tree - *crataeva religiosa* (சா.அக.).

மகாதசை *magā-dašai,* பெ.(n.) பிறப்பியக் காரருக்கு ஒரு கோளின் நடப்புக்காலம்; (Astrol.) period of influence of a planet with reference to the natal house in a horoscope.

[Skt. mahā+daša > த. மகாதசை.]

மகாதண்பனை *magādanpanai,* பெ.(n.) ஒரு பேரெண் (நாமதீப.801); a great number.

[Skt. mahat > த. மகா+தண்பனை.]

மகாதந்தம் *magātandam,* பெ.(n.) 1. யானை (யாழ்.அக.); elephant. 2. யானைக் கொம்பு; tusk of an elephant.

[Skt. mahā-danta > த. மகாதந்தம்.]

மகாதமனி *magātamani,* பெ.(n.) நெஞ்சாங் குலையின் இடது பக்கத்தினின்று கிளம்பும் ஒரு பெரிய செவ்விரத்தக் குழல்; a large artery starting from the left ventricle of the heart-Aorta (சா.அக.).

மகாதலம்[1] *magā-talam,* பெ.(n.) 1. நிலவுலகம் (பிங்.); the earth. 2. அரிதாரம் (சங்.அக.); yellow orpiment.

[Skt. mahā-sthalī > த. மகாதலம்[1].]

மகாதலம்[2] *magātalam,* பெ.(n.) கீழேழுலகத் தொன்று (சூடா.); a nether world, fifth of *kīl-ēl-ulagam.*

த.வ. பேரிடம்.

[Skt. mahātala > த. மகாதலம்[2].]

மகாதலம்[3] *magātalam,* பெ.(n.) 1. புண்ணியத் தலம்; sacred place. 2. முதன்மைத் தலம் (வின்.); head quarters; chief place; court.

[Skt. mahā-sthala > த. மகாதலம்[3].]

மகாதலம்[4] *magātalam,* பெ.(n.) அரிதாரம்; yellow orpiment (சா.அக.).

மகாதனம் *magā-danam,* பெ.(n.) 1. பொன்; gold. 2. வேளாண்மை; agriculture. 3. நறுமணப்புகை; incense.

[Skt. mahā-dhana > த. மகாதனம்.]

மகாதாது *magā-tādu,* பெ.(n.) பொன் (யாழ்.அக.); gold.

[Skt. mahā-dhātu > த. மகாதாது.]

மகாதானம்[1] *magātānam,* பெ.(n.) மன்னவராற் செய்யப்படும் கொடை வகை (த.நி.போ.பக்.25); a kind of gift made by kings.

த.வ. பெருங்கொடை.

[Skt. mahā > த. மகா+தானம்[1].]

மகாதானம்[2] *magātānam,* பெ.(n.) பெரிய கொட்டை; a big seed (சா.அக.).

மகாதிக்தம் *magātikdam,* பெ.(n.) மருந் தூட்டப்பட்ட கசப்புச் சுவையுடைய நெய்; abitter medicated ghee given for skin

diseases. It is a Ayurvedic preparation (சா.அக.).

மகாதி *magāti*, பெ.(n.) திப்பிலி; long pepper plant (சா.அக.).

மகாதிசை[1] *magā-dišai*, பெ.(n.) நாற்பெருந் திசை; the four cardinal points.

த.வ. மாத்திசை.

[Skt. mahat > த. மகா+திசை[1].]

மகாதிசை[2] *magā-tišai*, பெ.(n.) **மகாதசை** பார்க்க; see *magā-tasai*.

[Skt. mahā+dašā > த. மகாதிசை[2].]

மகாதிம்பம்[1] *magā-timbam*, பெ.(n.) **மகாநிம்பம்**[2], **1** (சங்.அக.) பார்க்க; see *magānimbam*.

மகாதிம்பம்[2] *magā-timbam*, பெ.(n.) பெரு மரம்; a tree (சா.அக.).

மகாதிரகிருதம் *magādirakirudam*, பெ.(n.) குட்ட நோய் வகைகள் எல்லாவற்றிற்கும் தரப்படும் ஒரு வகை மருந்து நெய்மம்; a medicinal ghee used for all kinds of leprosy (சா.அக.).

மகாதிராவகம் *magātirāvagam*, பெ.(n.) ஆயுள்வேத முறைப்படி சித்திர மூலவேர், நாயுருவி, புளியம்பட்டை, இலைக்கள்ளி, பிரம்பு, மூக்கிரட்டை, முதலியவற்றைச் சுட்டுச் சாம்பலாக்கி மற்ற கடைச் சரக்குகளுடன் சேர்த்து வாலையிலிட்டு வடிக்கும் எரிநீர்; an ayurvedic preparation obtained by distilling the ashes of some plants along with some bazaar drugs (சா.அக.).

மகாதிலதம் *magātiladam*, பெ.(n.) சாரிபாதி; கோட்டியை(பைத்தியத்தை) ப் போக்கும் ஒரு மூலிகை; an unidentified plant said to cure madness or insanity. (சா.அக.).

மகாதிவ்விய *magādivviya*, பெ.(n.) மருந்து கலக்கப்பட்ட மெழுகு வகை; a wax like medicinal preparation (சா.அக.).

மகாதீவு *magā-tīvu*, பெ.(n.) மாலத் தீவுகள் (வின்.); the maldives.

[Skt. mahat > த. மகா+தீவு.]

மகாதுந்துமி *magā-tundumi*, பெ.(n.) போர்ப்பறை (யாழ்.அக.); war-drum.

த.வ. பெருந்துந்துமி.

[Skt. mahat > த. மகா+துந்துமி.]

மகாதுருவம் *magāturuvam*, பெ.(n.) வெண்கடம்பு; white cadamba (சா.அக.).

மகாதேசம் *magā-tēšam*, பெ.(n.) இதளியம் (பாதரசம்) (மூ.அ.); mercury.

[Skt. mahā-tējas > த. மகாதேசம்.]

மகாதேவர்திருமஞ்சனம் *magātēvar-tirumañjanam*, பெ.(n.) வடமுனைத்தீ (வடவாமுகாக்கினி) (தக்கயாகப்.379, உரை); the submarine fire.

[Skt. mahādavar > த. மகாதேவர் + திரு மஞ்சனம்.]

மகாதேவன் *magā-dēvan*, பெ.(n.) **1.** கடவுள்; god. **2.** சிவபெருமான் (பிரான்); *Šivan*, as the great God. **3.** வருணன் (வின்.); *Varuṇa*.

த.வ. மாதேவன், பெருவுடையார்.

[Skt. mahā-dēva > த. மகாதேவன்.]

மகாதேவி[1] *magā-dēvi*, பெ.(n.) **1.** மலைமகள் (பார்வதி) (தக்கயாகப்.80, உரை); *pārvati*, as the consort of *Šiva*. **2.** தலைமையரசி; chief queen. *"வாணாதி ராசர் மகாதேவியார்" (S.I.I.iii, 399).*

[Skt. mahā-dēvi > த. மகாதேவி.]

மகாதேவி[2] *magādēvi*, பெ.(n.) வையங் காப்பவளாகிய மலைமகள்; the geat mother (சா.அக.).

மகாதோசக்குறி *magā-dōšakkuri*, பெ.(n.) உந்தியில் ஒரு விரல் பொருந்தும் அளவு எக்கி உயர எழும்பினால் இத்தோசமாம்; a symptom or morid condition- தோஷம்.

மகாதோசநீக்கி *magātōšanikki,* பெ.(n.) 1. **சித்தா மல்லி, சிற்றாமல்லி** பார்க்க; see *sittāmalli, sirrāmalli.* 2. பாவட்டை; a small tree - *Pavata indica* (சா.அக.).

மகாதோசம் *magā-dōsam,* பெ.(n.) பாழ்வினை, பெரும்பாவம் (கொ.வ.); great sin.

[Skt. mahā-dōsa > த. மகாதோசம்.]

மகாதோரணம் *magā-tōranam,* பெ.(n.) கோயில் விளகு வகை (M.E.R., 608 of 1916); a kind of temple lamp.

[Skt. mahāt > த. மகா+தோரணம்.]

மகாதோரை *magā-tōrai,* பெ.(n.) ஒரு பேரெண் (யாழ்.அக.); a great number.

[Skt. mahat > த. மகா+தோரை.]

மகாந்தம் *magāndam,* பெ.(n.) மலர்த்துகள் (மகரந்தம்); pollen (சா.அக.).

மகாநங்கை *magā-nangai,* பெ.(n.) மிளகாய்; chilly (சா.அக.).

மகாநட்சத்திரம் *magānatcattiram,* பெ.(n.) குறித்த நாளில் நிலவொடு (சந்திரனுடன்) கூடியிருக்கும் விண்மீன் (நட்சத்திரம்) (இ.வ.); lunar asterism occupied by the moon on a particular day.

த.வ. பெருவிண்மீன்

[Skt. mahat > த. மகாநட்சத்திரம்.]

மகாநடன் *magā-nadan,* பெ.(n.) சிவ பெருமான் (பிரான்) (யாழ்.அக.); *Śivan,* as the great dancer.

த.வ. மாநடன்

[Skt. mahā-nata > த. மகாநடன்.]

மகாநடனன் *magā-nadanan,* பெ.(n.) **மகாநடன்** (சங்.அக.) பார்க்க; see *magā-nadan.*

[Skt. mahā-natana > த. மகாநடனன்.]

மகாநதி *magā-nadi,* பெ.(n.) 1. பேராறு; great river. 2. கங்கை (சங்.அக.); the Ganges. 3. மகாநதியென்னும் ஆறு (இக்.வ.); the river *mahānadī.*

[Skt. mahā-nadī > த. மகாநதி.]

மகாநந்தை *magānandai,* பெ.(n.) கள்; toddy (சா.அக.).

த.வ. மாநந்தை

மகாநரகம் *magā-naragam,* பெ.(n.) நிரய (நரக) வகை (யாழ்.அக.); a hell.

[Skt. mahā-naraka > த. மகாநரகம்.]

மகாநவமி *magā-navami,* பெ.(n.) கலைமகள் விழா நிகழும் ஒன்பான் இரவின் இறுதி நாள்; the last day of *navarāttiri,* as a day sacred for the worship of *Sarasvatī.*

த.வ. மாத்தொண்மி

[Skt. mahā+ > த. மகாநவமி.]

மகாநாகம் *magā-nāgam,* பெ.(n.) 1. சுர புன்னை; long leaved two sepalled gamboge. 2. பெரும்பாம்பு; great cobra.

[Skt. mahā-nāga > த. மகாநாகம்.]

மகாநாடு *magā-nādu,* பெ.(n.) பொது மக்களின் கூட்டம்; great assembly or council held by headmen; general meeting of all the members of a society; conference.

த.வ. மாநாடு

[Skt. mahat > த. மகா+நாடு.]

மகாநாதம்¹ *maga-nādam,* பெ.(n.) 1. சங்கு (யாழ்.அக.); conch. 2. பேரொலி; great noise. 3. இசைக் கருவி; a wind instrument. 4. அரிமா (சிங்கம்); lion. 5. யானை; elephant. 6. மேகம்; cloud.

த.வ. மாநாதம்

[Skt. mahā-nāda > த. மகாநாதம்.]

மகாநாதம்² *magānādam,* பெ.(n.) 1. பொன்; gold. 2. பொன்னிமிளை; a kind of yellow bismuth (சா.அக.).

[மகா+நாதம்.]

மகாநாமியம் *magā-nāmiyam,* பெ.(n.) மதத் தொடர்பான செயல் வகை (த.நி.போ.பக்.24); a religious observance.

[Skt. mahā-nāmnika > த. மகாநாமியம்.]

மகாநாராயணம் *magā-nārāyaṇam,* பெ.(n.) நூற்றெட்டு (உபநிடதங்கள்) துணைத் தொன் மங்களுள் ஒன்று; an upanisad, one of 108.

[Skt. maha-nārāyaṇa > த. மகாநாராயணம்.]

மகாநாரி *magānāri,* பெ.(n.) மகாநாகம் பார்க்க; see *magā-nāgam* (சா.அக.).

மகாநாளிகம் *magā-nāḷigam,* பெ.(n.) போரில் பயன்படும் இயந்திர வகை (சுக்கிரநீதி, 80); a kind of war-machine.

[Skt. mahā-nālika > த. மகாநாளிகம்.]

மகாநிகற்பம் *magā-nigaṛpam,* பெ.(n.) ஒரு பேரெண் (வின்.); a great number.

[Skt. mahā-nikharva > த. மகாநிகற்பம்.]

மகாநிசி *magā-niśi,* பெ.(n.) நள்ளிரவு (யாழ்.அக.); midnight.

[Skt. mahā-niśi> த. மகாநிசி.]

மகாநித்திரை *magā-nittirai,* பெ.(n.) பெருந் துயில் (மரணம்) (யாழ்.அக.); death, as the long sleep.

த.வ. மீளாத்துயில்

[Skt. mahā-nidrā > த. மகாநித்திரை.]

மகாநிதி *maga-nidi,* பெ.(n.) குபேரன் நிதி களிலோன்று (யாழ்.அக.); a treasure of *Kubēra.*

[Skt. mahā-nidhi > த. மகாநிதி.]

மகாநிம்பம்[1] *magā-nimbam,* பெ.(n.) மலைவேம்பு (மூ.அ.); Persian lilac.

த.வ. மாநிம்பம்

[Skt. mahā-nimba > த. மகாநிம்பம்.]

மகாநிம்பம்[2] *magā-nimbam,* பெ.(n.) 1. பூவரசு மரம்; portia tree. 2. பெரிய வேம்பு; big species of neem tree. 3. நூறாண்டு அகவையுடைய வேப்ப மரம்; a margosa tree of 100 years old. 4. சர்க்கரை வேம்பு; neem whose bark is sweet to taste (சா.அக.).

மகாநிம்பம்[3] *magā-nimbam,* பெ.(n.) பெரு மரம் (மலை.); toothed-leaved tree of Heaven.

மகாநியோகம் *maga-niyōgam,* பெ.(n.) அரசனது ஆணை; royal command. *"மகா நியோகமும் புறப்பட்டு" (S.I.I.iv, 152).*

த.வ. அரசகட்டளை

[Skt. mahā+ yōga> த. மகாநியோகம்.]

மகாநிர்குண்டிதைலம் *magānirkuṇḍi-tailam,* பெ.(n.) கண்ணோய், தலைநோய் ஆகியவற்றுக்குத் தலை முழுகும் நெய்மம்; a bathing oil prepared out of nocci vitex negundo (சா.அக.).

மகாநிரயம் *magā-nirayam,* பெ.(n.) நிரய வகை (மணிமே.6, 181, அரும்.); a hell.

த.வ. மாவளறு.

[Skt. mahā-niraya > த. மகாநிரயம்.]

மகாநீலம் *magā-nīlam,* பெ.(n.) 1. கையாந்த கரை, என்னும் மூலிகை (மலை.) ; a plant growing in wet places. 2. மரகதம் (யாழ்.அக.); emerald.

த.வ. மாநீலம்.

[Skt. mahā-nīla > த. மகாநீலம்.]

மகாநேமி *magānēmi,* பெ.(n.) காக்கை; crow (சா.அக.).

மகாநைவேத்தியம் *magā-naivēttiyam,* பெ.(n.) கடவுட்குப் படைக்கும் அன்னம்; main offerings made to a deity, as cooked rice.

[Skt. mahā+naivēdya > த. மகாநைவேத்தியம்.]

மகாநோன்பு *magā-nōṉbu,* பெ.(n.) ஒன்பானிராத் திருவிழா (இ.வ.); festival of *nava-rāttiri.*

த.வ. மாநோன்பு

[Skt. mahat > த. மகா+நோன்பு.]

மகாப்பிரகாசத்தி *magā-p-piragā-šatti,* பெ.(n.) காக்கைப்பொன் (அப்பிரகம்) (சங்.அக.); mica.

த.வ. தகட்டிழை

[Skt. mahā+pra-kāša > த. மகாப்பிரகா+சத்தி]

மகாப்பிரசாதம் *magā-p-piracādam,* பெ.(n.) கோயில்களில் கடவுளுக்குப் படைத்து அடியவர்களுக்கு கொடுக்கும் பொங்கல் முதலியன (இ.வ.); food, sweet meats, etc., which are offered to an idol and distributed afterwards to devotees.

த.வ. அருட்படையல்

[Skt. mahā+pra-sāda > த. மகாப்பிரசாதம்]

மகாப்பிரதோசம் *magā-p-piratōšam,* பெ.(n.) இரண்டு பக்கங்களிலும் வரும் பதின்மும்மியொடு (திரயோதசியோடு) கூடிய கதிரவன் மறையும் வேளை; evening twilight of the 13th titi of the bright and dark fortnights.

[Skt. mahā-pradōsa > த. மகாப் பிரதோசம்]

மகாப்பிரபு *magā-p-pirabu,* பெ.(n.) 1. பெருஞ் செல்வன்; great, lord; wealthy person. 2. பெருங்கொடையாளி; a person of great liberality.

[Skt. mahatprabu > த. மகாப்பிரபு.]

மகாப்பிரளயம் *magā-p-piraḷayam,* பெ.(n.) 1. உலகம் முடிகின்ற ஊழியிறுதி; final dissolution of the world at the end of a kalpa or the period of Brahma's lifetime, dist. fr. *avāntara-p-piraḷayam.* 2. ஒரு பேரெண் (வின்.); a great number.

த.வ. பேரூழி

[Skt. mahā-pralaya > த. மகாப்பிரளயம்.]

மகாப்பிரத்தானம் *magā-pirattāṉam,* பெ.(n.) 1. வடதிசை நோக்கிச் செல்லும் மீளாப் பெரும்பயணம்; the great journey northward, made with the intention of ending one's days. 'மகாப்பிரத்தான பருவம்' 2. அருகக் கடவுளின் பஞ்ச கல்யாணத் தொன்றாகிய பெருந்துறவு (திருநூற்.பு.உரை); (Jaina.) the great renunciation of Arhat, one of *pañca-kalyāṇam.*

த.வ. பெரும்பிரிவு.

[Skt. mahā-prasthāna > த. மகாப் பிரத்தானம்]

மகாப்பிராசத்தி *magā-prāšatti,* பெ.(n.) ஒரு வகை அப்பிரகம்; a kind of mica (சா.அக.).

மகாப்பிராணம் *magā-p-pirāṇam,* பெ.(n.) காக்கை (சங்.அக.); crow.

[Skt. mahā-prāṇa > த. மகாப்பிராணம்.]

மகாப்பிரியபான்னி *magā-p-piriyapāṉṉi,* பெ.(n.) சிறுவிடு கொள்; which see (சா.அக.).

மகாப்பிராணன் *magā-p-pirāṇaṉ,* பெ.(n.) வலிந்து பலுக்கப்படும் மெய்யெழுத்து (பி.வி.4, உரை); aspirate.

த.வ. மூச்சொலி.

[Skt. mahā-prāṇa > த. மகாப்பிராணன்.]

மகாபஞ்சகாவியகிருதம் *magāpañša-kaviya-kirudam,* பெ.(n.) மருந்தூட்டப் பெற்ற ஒரு வகை நெய்; a medicated ghee used for epilepsy, insanity dropsy, abdominal tumour, piles, chlorosis and jaundice (சா.அக.).

மகாபஞ்சமூலம் *magā-pañja-mūlam,* பெ.(n.) ஐந்து வகையான மரத்தின் வேர்ப் பட்டைகள் சேர்ந்த கூட்டு (வில்வம், முன்னை, ஈசுரமூலி, பாதிரி, பெருமரம்); the roots of the five trees or plants which see (சா.அக.).

மகாபட்சி *magā-paṭci,* பெ.(n.) ஆந்தை (சங்.அக.); owl.

த.வ. பெரும் பறவை.

[Skt. mahā-paksin > த. மகாபட்சி.]

மகாபத்திர *magāpattira,* பெ.(n.) பூசபத்திரி; a plant to help pooja (சா.அக.).

மகாபத்திரம்[1] *magā-pattiram,* பெ.(n.) பனைமரம் (சங்.அக.); palmyra tree.

[Skt. mahā-patra > த. மகாபத்திரம்.]

மகாபத்திரம்[2] *magā-pattiram,* பெ.(n.) 1. வில்வ இலை; leaf of bael tree.

மகாபத்திரி *magā-pattiri,* பெ.(n.) சிவப்பு ஆமணக்கு; red castor plant (சா.அக.).

மகாபதுமபெந்தம் *magāpatuma-pentam,* பெ.(n.) சித்திரக் கவி வகை (மாறனலங்.283, உரை); a kind of cittirakavi of great complexity.

[Skt. mahā-padma > த. மகாபதும பெந்தம்.]

மகாபதுமம் *magāpadumam,* பெ.(n.) 1. குபேரன் ஒன்பான் குவைகளுள் ஒன்று; one of nine treasures of *Kubēra.* 2. ஒரு பேரெண் (பிங்.); a great number. 3. வெண்டாமரை (யாழ்.அக.); white lotus. 4. 176 கொடுமுடிகளையும் 22 மேனிலைக் கட்டுகளையுமுடைய கோயில் (சுக்கிரநீதி. 230); a temple of 176 towards and 22 storeys. 5. **மகாபதுபெந்தம்** பார்க்க; see *magāpadupendam.*

த.வ. பெருந்தாமரை.

[Skt. mahā-pandma > த. மகாபதுமம்.]

மகாபதுமன் *magā-paduman,* பெ.(n.) எட்டு மாநாகங்களுள் நிலத்தை வடப்பக்கத்தில் தாங்கும் நாகம் (பிங்.); the divine serpent which supports the earth in the north one of *asṭamā-nākam.*

[Skt. mahā-padma > த. மகாபதுமன்.]

மகாபதுமவிசர்ப்பி *magāpaduma-viśarpi,* பெ.(n.) சிறுவர்களுக்குத் தலையிலும் கீழ் வயிற்றிலுமுண்டாகி இறப்பையுண்டாக்கும் புண்; a kind of scabis (சா.அக.).

த.வ. பெரும்புண். (முதலில் நரம்பின் வழியாக நெற்றியில் கண்டு, பிறகு மார்பிலிறங்கி கடைசியாகக் குதத்திலிறங்கும்)

மறுவ. பாலவிசர்ப்பி

மகாபரணி *magā-paraṇi,* பெ.(n.) தென் புலத்தார்க்குச் (பிதிரர்களுக்கு) சிறப்பானதும் மகாளயபக்கத்தில் வருவதுமான பரணி (விண்மீன்) (பஞ்.); the day of the second naksatra, in *makāḷaya-paṭcam,* auspicious for worshipping the manes.

த.வ. பெரும்பரணி.

[Skt. mahā-bharaṇi > த. மகாபரணி.]

மகாபலம்[1] *magā-palam,* பெ.(n.) வில்வம்; bael.

[Skt. mahā-phala > த. மகாபலம்.]

மகாபலம்[2] *magā-palam,* பெ.(n.) மயிர் மாணிக்கம் என்னும் கொடி வகை; cypress-vine. (சா.அக.);

[Skt. mahā+phala]

மகாபலம்³ *magā-palam,* பெ.(n.) 1. கொழிஞ்சி; orange tree. 2. பேராமுட்டி; pavonia odorata. 3. தென்னை; coconut tree. 4. கொம்மட்டி மாதுளை; a kind of citron. 5. தூதுவளை; a thorny shrub. 6. கொழுமிச்சை, ஒரு வகை நார்மரம்; இதன் பட்டியினின்று சணலைப் போன்ற நார் எடுக்கப்படும்; flax tree-sida rhomboides the bark yields a flax like fibre (சா.அக.).

[Skt. mahā+phala]

மகாபலன் *magāpalaṉ,* பெ.(n.) 1. வலு மிக்கவன்; strong person. 2. காற்று (வின்.); air, wind.

[Skt. mahā-bala > த. மகாபலன்.]

மகாபலா *magā-palā,* பெ.(n.) 1. பேராமுட்டி என்னும் மூலிகை; a plant-*pavonia adorata.* 2. வரித்தும்மட்டி என்னும் படர்கொடி; a creeper.

மகாபலி *magā-pali,* பெ.(n.) மாவலி என்னும் அரசன்; an Asura sovereign.

த.வ. மாவலி.

[Skt. mahā-bali > த. மகாபலி.]

மகாபலிகம் *magā-paligam,* பெ.(n.) வெள்ளைப் பூசணி; ash gourd (சா.அக.).

மகாபலை *magā-palai,* பெ.(n.) வில்வம் (தைலவ.தைல.); bael tree.

[Skt. mahā-phala > த. மகாபலை.]

மகாபவன் *magā-pavaṉ,* பெ.(n.) வெள்ளி (யாழ்.அக.); *cukkiraṉ.*

[Skt. maghā-bhava > த. மகாபவன்.]

மகாபற்பம் *magā-paṟpam,* பெ.(n.) **மகா பதுமம்,** (திவா.) பார்க்க; see *magā-padumam.*

மகாபற்பன் *magā-paṟpaṉ,* பெ.(n.) **மகாபதுமன்** பார்க்க; see *magā-padumaṉ.*

மகாபாகவதம் *magā-pāgavadam,* பெ.(n.) கி.பி. 1543-ல் நெல்லி நகர் வரதராச ஐயங்கார் வடமொழியினின்று தமிழ் மொழியிற் செய்யுளாக இயற்றிய பாகவத நூல்; a Tamil version of the Sanskrit Bhagavatam by Varadaraja Aiyanga of Nellinakar, 1543 A.D.

[Skt. mahat+bhāgavata > த. மகாபாகவதம்.]

மகாபாகன் *magā-pāgaṉ,* பெ.(n.) நற்பேறுள்ளவன்; blessed person. *"பண்டிதனும் மகாபாகனும் கிருதார்த்தனும்" (சி.சி.பு.84, சிவாக்.).*

[Skt. mahā-bhāga > த. மகாபாகன்.]

மகாபாசகன் *magā-pācakaṉ,* பெ.(n.) புத்தபிக்கு (யாழ்.அக.); a Bauddha mendicant.

த.வ. மாபாசகன்.

[Skt. mahā-pāsaka > த. மகாபாசகன்.]

மகாபாதகம் *magāpādagam,* பெ.(n.) ஐம்பெருங்கேடு (பஞ்சமா பாதகம்); the five heinous crimes. *"மகாபாதகந் தீர்த்த திருவிளையாடல்" (திருவாலவா.).*

[Skt. mahā-pātaka > த. மகாபாதகம்.]

மகாபாபத்தழகி *magā-pāpattaḻagi,* பெ.(n.) சீவகமூலி; which see (சா.அக.).

மகாபாரதம் *magā-pāratam,* பெ.(n.) 1. வடமொழியில் பாண்டவர் வரலாற்றைக் கூறும் வியாசபாரதம்; the great sanskrit epic, dealing with the story of the *pāṇḍavas,* by the sage *vyāsa.* 2. பெருந்தேவனார், வில்லிபுத்தூரர், நல்லாப்பிள்ளை போன்றோர் தமிழில் இயற்றிய பாரத நூல்கள்; the tamil renderings of the *Mahābhārata,* by *peruntēvaṉār, villiputtūrar* and N*allāppiḷḷai.*

த.வ. மாபாரதம்.

[Skt. mahā-bhārata > த. மகாபாரதம்.]

மகாபாரதவிருத்தி *magā-pārada-virutti,* பெ.(n.) கோயிலில் மகாபாரதம் படித்துச் சொற்பொழிவு செய்வதற்கு விடப்படும் மானியம் (I.m.p.Tn.91); allowance for expounding the *Mahābhārata* in a temple.

[*Skt. mahā-bhārata+vṛtti > த. மகாபாரத விருத்தி*]

மகாபாரிசவாதம் *magāpāriśa-vatham,* பெ.(n.) கையுங் காலும் ஒரு பக்கங்கனத்து, திமிர்த்து, உடல் வீழ்ந்து, நாவு தடுமாறிப் பிழைக்கும் வழியில்லாத தீராத வலிப்பை (சன்னியை) யுண்டாக்குமோர் ஊதை நோய் (யூகி.1200); para plegia (சா.அக.).

த.வ. பெருமுடக்குநோய்.

மகாபிண்டம் *magā-piṇḍam,* பெ.(n.) இயல், இசை, நாடகம் போலப் பல பிண்டங்களை உறுப்பாகக் கொண்ட பெருநூல் (மாறனலங். 20); a big treatise consisting of several *piṇḍam.*

த.வ. மாபிண்டம்

[*Skt. mahat > த. மகா+பிண்டம்.*]

மகாபித்தம்[1] *magā-pittam,* பெ.(n.) **மகாகபித்தம்** (சங்.அக.) பார்க்க; see *magā-kapittam.*

த.வ. பெரும்பித்தம்.

மகாபித்தம்[2] *magā-pittam,* பெ.(n.) வில்வ மரம்; bael tree (சா.அக.).

மகாப்பிரதானன் *magā-p-piratāṉaṉ,* பெ.(n.) தலைமைப் படைத் தளபதி (M.E.R. 497 of 1926); commandar in chief.

த.வ. முதன்மையன்.

[*Skt. mahāt+pradhāna > த. மகாப்பிரதானன்.*]

மகாபிரதானி *magāpiratāṉi,* பெ.(n.) தலைமையமைச்சர்; prime minister.

[*Skt. mahāt > த. மகாபிரதானி.*]

மகாபிரளயம் *magā-piraḷayam,* பெ.(n.) உலகம் முடிகின்ற ஊழியிறுதி; dissolution of universe; deluge (வின்.). 2. ஒரு பேரெண்; a great number.

த.வ. பேரூழி.

மகாபிராணம் *magā-prāṇam,* பெ.(n.) காக்கை; crow (சா.அக.).

த.வ. பெருங்காக்கை.

மகாபுடம்[1] *magā-puḍam,* பெ.(n.) நிலத்தில் ஒன்றரை முழச் சதுரமும், இரண்டு முழ ஆழமுள்ள பள்ளத்தில் காட்டெருவையிட்டுப் போடும் புடம் (உ.வ.); calcination of metals by placing them in a heap of burning *kāṭṭerce* in a pit one cubit and a cialf square and two cubits deep.

[*Skt. mahat > த. மகா+புடம்.*]

மகாபுடம்[2] *magāpuḍam,* பெ.(n.) நான்கு முழ அகலம், நீளம், ஆழமுள்ள சதுரப் பள்ளத்தில் அல்லது குழியில் 1000, வரட்டியில் போடும் மருந்துப் புடம்;a process of calcining medicines in a pit measuring 2yds x 2yds x 2yds or 2 cubic yeards with 1000, cowdung cakes. The luted cuucible withe medicine is placed in the centre of the pile or above 750 cakes and set fire with camphor when all the cakes are completly burnt into ashes and cooled the crucible is taken out and opened (சா.அக.).

த.வ. மாப்புடம்.

மகாபுராணம் *magāpurāṇam,* பெ.(n.) 1. முதன்மையான பதினெண் தொன்மங்கள் (தக்கயாகப். 113, உரை). ; the 18 chief *purāṇas.* 2. ஒரு சமண சமயத் தொன்மம்; a *jaina purāṇa.*

[*Skt. mahā-puraṇa > த. மகாபுராணம்.*]

மகாபுருடன் *magā-puruḍaṉ,* பெ.(n.) நற்குணம் வாய்ந்தவன்; a man distinguished for great personal qualities.

"அடைக்கலமெனத் தேடிவருவோர்தனமக் காக்குமவனே மகாபுருடனாம்" (அறப.சத. 17).

[Skt. mahā-purusa > த. மகாபுருடன்.]

மகாபூ *magā-pū,* பெ.(n.) பெருஞ்சீரகம் அல்லது சோம்பு; anise-*Aniseed-Anetham foeniculum* (சா.அக.).

மகாபூசிதம் *magā-pūśidam,* பெ.(n.) **பெருஞ்சீரகம், மகாபூ** பார்க்க்; see *peruñciragam, magāpū* (சா.அக.).

மகாபூசுரபி *magā-pū-śurabi,* பெ.(n.) புன்னை; a tree (சா.அக.).

த.வ. பெரும்புன்னை.

மகாபூதகடிதானம் *magāpūtakaḍitāṉam,* பெ.(n.) கொடை வகை (S.I.I.vii, 21); a kind of gift.

மகாபூதம் *magā-pūdam,* பெ.(n.) ஐம்பெரும்பூதங்கள்; gross elements opp. to *taṉmāttirai. "பூமி முதலான மகாபூதங்களைந்தும்" (பு.வெ.8, 33, உரை).*

த.வ. பெரும்பூதம்.

[Skt. mahā-bhūta > த. மகாபூதம்.]

மகாபூரணசந்திரோதயம் *magā-pūraṇa-cantirōtayam,* பெ.(n.) மருந்து வகை (தஞ்.சர.iii, 68); a kind of medicine.

[Skt. mahā+pūranam+candra+udaya > த. மகாபூரண சந்திரோதயம்.]

மகாபூரி *magā-pūri,* பெ.(n.) ஒரு பேரெண் (பிங்.); a great number, ten quintillions.

[Skt. mahat > த. மகா+பூரி.]

மகாபெலா *magā-pelā,* பெ.(n.) பேராமுட்டி (மலை) பார்க்க; see fragrant sticky mallow.

[Skt. mahā-balā > த. மகாபெலா.]

மகாபேகன் *magā-bēgaṉ,* பெ.(n.) தவளை; frog (சா.அக.).

த.வ. மாப்பேகன்

மகாபைசாசிகம் *magāpaiśāśigam,* பெ.(n.) மனநோயைக் குணமாக்கும் மருந்தூட்டப்பட்ட நெய்; a medicated ghee for insanity (சா.அக.).

மகாபோதி *magā-pōti,* பெ.(n.) கௌதமர் தங்கியிருந்து அறிவு எழுச்சி பெற்றுப் புத்தரான அரசமரம் (மணிமே.11, 43, உரை); the Bo-tree in Gayāunder which the Buddha received enlightment.

த.வ. பெரும்போதி.

[Skt. mahā-bōdhi > த. மகாபோதி.]

மகாம் *magām,* பெ.(n.) முகாம் (இ.வ.) பார்க்க; see halting place, camp.

[Ar. mugām > த. மகாம்.]

மகாமகம் *magā-magam,* பெ.(n.) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வருவதும் கும்ப (மாசி) மாதத்தில் வியாழன் முழு நிலாவொடு கொடுநுகம் விண்மீன் (மகம்) சேரப்பெறுவதுமான நன்னாளில் கும்ப கோணத்தில் நிகழும் முழுக்கு விழா; the great luni-solar festival at kumbakonam, held once in 12 years in *māci* when jupiter is in leo and the full moon is in or about makam.

[மகா+மகம்.]

த.வ. மாமாங்கம்.

[Skt. mahā-maghā > த. மகாமகம்.]

மகாமகரப்பூ *magā-magarappū,* பெ.(n.) வழுலை; which see (சா.அக.).

மகாமகரம் *magā-magaram,* பெ.(n.) ஒரு பேரெண் (நாமதீப.801); a great number.

[மகா+மகரம்.]

[Skt. mahā-makara > த. மகாமகரம்.]

மகாமகவிருட்சம் *magā-maga-viruṭśam,* பெ.(n.) கற்பக மரம்; a celestical tree which gives whatever is wished for (சா.அக.).

[மகாமக + விருட்சம்.]

மகாமகோபாத்தியாய *magā-makōpātti-yāya,* பெ.(n.) அரசினரால் பெரும் புலவர் களுக்கு அளிக்கப்படும் பட்டம்; a title confered by the Government on scholars.

[Skt. mahā-mahōpādhyāya > த. மகாமகோபாத்தியாய.]

மகாமசானம் *magā-macāṉam,* பெ.(n.) காசி நகரம் (யாழ்.அக.); Benares city.

த.வ. பெருஞ்சுடலை.

[Skt. mahā-šmašṉa > த. மகாமசானம்.]

மகாமண்டபம் *magā-maṇḍabam,* பெ.(n.) கோயிலில் அர்த்த மண்டபத்தை அடுத்துள்ள பெரிய மண்டபம் (I.m.p.Tn.270); large pillared-hall next to the *artta-maṇḍapam* in a temple.

த.வ. பெருமண்டபம்.

[Skt. mahat > த. மகா+மண்டபம்.]

மகாமண்டலிகன் *magā-maṇḍaligaṉ,* பெ.(n.) **மகாமண்டலேசுவரன்** பார்க்க; see *magāmaṇḍalēsuvaraṉ.*

[Skt. mahā-mandalika > த. மகாமண்லிகன்.]

மகாமண்டலேசுவரன் *magā-maṇḍalē šuvaraṉ,* பெ.(n.) மண்டலத்தை யாளும் தலைவன் (அதிபதி); Governor. *"மகாமண்டலேசுவர ராமராஜ திம்மராஜ விட்டல மகாராஜா" (I.m.p.Tn.275).*

[Skt. mahā-maṇḍalēšvara > த. மகாமண்டலேசுவரன்.]

மகாமண்டூரம் *magā-maṇḍūram,* பெ.(n.) பாண்டு நோயைத் தீர்க்கும் மருந்து (பதார்த்த.1210); a medicine for a anemia.

[Skt. mahā-maṇḍūra > த. மகா மண்டூரம்.]

மகாமதம் *magā-madam,* பெ.(n.) 1. மத யானை (யாழ்.அக.); elephant in rut. 2. வெறி; blinding excitement.

த.வ. மிகுமதம்.

[Skt. mahā-mada > த. மகாமதம்.]

மகாமந்திரம் *magā-mandiram,* பெ.(n.) மூலமந்திரம்; chief mantra.

த.வ. மாமந்திரம்.

[Skt. mahā-mantra > த. மகாமந்திரம்.]

மகாமந்திரமூர்த்திகள் *magā-mandira-mūrttigaḷ,* பெ.(n.) ஏழுரைக்கோடியினரான உயர்தர ஆன்மாக்கள் (வின்.); a class of souls of superior order, numbering seventy five millions.

[Skt. mahat+mantra > த. மகாமந்திரம்+மூர்த்திகள்.]

மகாமந்திரி *magā-mandiri,* பெ.(n.) முதன்மை மந்திரி (யாழ்.அக.); prime minister.

த.வ. முதன்மை அமைச்சர்.

[Skt. mahat > த. மகா+மந்திரி.]

மகாமரு *magā-maru,* பெ.(n.) கருப்பு வாகை; black speicies of sirissa (சா.அக.).

மகாமாத்திரன் *magā-māttiraṉ,* பெ.(n.) 1. மந்திரி; minister. 2. செல்வன்; wealthy man. 3. யானைப்பாகன்; mahout.

[Skt. mahā-mātra > த. மகாமாத்திரன்.]

மகாமாத்திரி *magā-māttiri,* பெ.(n.) 1. குருவின் மனைவி (யாழ்.அக.); preceptor's wife. 2. செல்வி; wealthy woman.

[Skt. mahā-mātrī > த. மகாமாத்திரி.]

மகாமாயாசக்தி *magā-māyā-cakti,* பெ.(n.) 1. **மகாமாயை, 1** (தக்கயாகப்.104, உரை) பார்க்க; see *magā-māyai.*

[Skt. mahā-māyā+šakti > த. மகாமாயாசக்தி]

மகாமாயி *magā-māyi,* பெ.(n.) கொற்றவை (வின்.); durgā.

த.வ. மாமாயி, மகமாயி.

[Skt. mahā-māyī > த. மகாமாயி.]

மகாமாயை *magā-māyai,* பெ.(n.) 1. மலை மகள் (யாழ்.அக.); *pārvatī.* 2. தூய மாயை (சங்.அக.); (*šaiva*) pure *māyā.*

[Skt. mahā-māyā > த. மகாமாயை.]

மகாமார்க்கம் *magā-mārkkam,* பெ.(n.) சிறந்த சமயநெறி; great religion, as a path to salvation. *"வேதமார்க்கம் முதலிய மகாமார்க்கங்களை" (தக்கயாகப்.7, உரை).*

த.வ. பெருநெறி.

[Skt. mahā-mārga > த. மகாமார்க்கம்.]

மகாமாரி *magā-māri,* பெ.(n.) 1. கொற்றவை (துர்க்கை); *durgā.* 2. கொள்ளைநோய்; plague, epidemic disease.

த.வ. மாமாரி.

[Skt. mahā-mārī > த. மகாமாரி.]

மகாமால் *magā-māl,* பெ.(n.) வில்வ இலை; leaf of bael tree (சா.அக.).

மறுவ. *மகாபத்திரம்.*



மகாமிருகம் *magā-mirugam,* பெ.(n.) யானை (யாழ்.அக.); elephant.

[Skt. mahā-mrga > த. மகாமிருகம்.]

மகாமிருத்து *magā-miruttu,* பெ.(n.) சிவபிரான் (யாழ்.அக.); *šivan.*

[Skt. mahā-mrtyu > த. மகாமிருத்து.]

மகாமிருத்துயஞ்சயம் *magā-miruttu yañcayam,* பெ.(n.) ஒரு மந்திரம்; a mantra.

[Skt. mahā+purnam > த. மகாமிருத்து யஞ்சயம்.]

மகாமுகம் *magā-mugam,* பெ.(n.) முதலை (யாழ்.அக.); crocodile.

[Skt. mahā-mukha > த. மகாமுகம்.]

மகாமுத்திரை *magā-muttirai,* பெ.(n.) திரிசூல முத்திரையில் தர்ச்சனியை அநாமிகை வளைப்பதாகக் காட்டும் முத்திரை (செங்.10); (*šaiva.*) a hand-pose in which the ring-finger in *tiricūla-muttirai* close round the forefinger.

[Skt. mahā-mudrā > த. மகாமுத்திரை.]

மகாமுனி *magā-muni,* பெ.(n.) 1. பெருந்தவ முனிவன்; eminent sage. 2. அகத்தியர் (வின்.); agastya. 3. புத்தன் (யாழ்.அக.); the Buddha.

த.வ. மாமுனி.

[Skt. mahā+muni > த. மகாமுனி.]

மகாமூர்க்கம் *magā-mūrkkam,* பெ.(n.) நாரத்தை; bitter orange tree (சா.அக.).

த.வ. பெருங்கொழிஞ்சி.

மகாமூலி *magā-mūli,* பெ.(n.) 1. ஆகாசகருடன் கிழங்கு; sky root-climbing shrub. 2. கற்பத்துக்கு உதவும் சட்டமுனியின் ஊதை (வாத) நூல் 1000த்தில் சொல்லியுள்ள 23 சிறந்த மூலிகைகள்; the 23 superior drugs related in the Tamil alchemical science 1000 of the siddhar named satta muni- All healing drugs of high potency (சா.அக.).

த.வ. மாமூலி.

மகாமெலம் *magā-melam,* பெ.(n.) கொம்மட்டி (சங்.அக.); country cucumber.

மகாமேகராசாங்கதைலம் *magā-mēga-rāśāṅga-tailam*, பெ.(n.) மருந்தெண்ணெய் வகை (தைலவ.தைல.135, வரி, 3, உரை); a medicinal oil.

[Skt. mahat+mēka+rājāṅga+taila > த. மகாமேக ராசாங்கதைலம்.]

மகாமேகரோகம் *magā-mēga-rōgam*, பெ.(n.) பிரமேகம், வெட்டை நோய்; gonorrhoea. (சா.அக.).

மகாமேதை *magā-mēdai*, பெ.(n.) 1. பேரறிவு; great intellect. 2. பேரறிவாளன்; man of great intellect. 3. மருளுமத்தை என்னும் மூலிகை (மலை.); cockle-bur.

த.வ. மாமேதை.

[Skt. mahat+mēdhā > த. மகாமேதை.]

மகாமேதோ *magā-mētō*, பெ.(n.) **மகாமேதை** பார்க்க; see *magā-mēdai* (சா.அக.).

மகாமேரு *magā-mēru*, பெ.(n.) மேருமலை (பிங்.) mt. *mēru. "சாற்று மகாமேருவரைச் சிகரத் துற்றால்" (சிவரக.சிவதன்மா.21).*

த.வ. மாமேரு

[Skt. mahā-mēru > த. மகாமேரு.]

மகாமேருதானம் *magā-mēru-dāṉam*, பெ.(n.) மன்னவர் புரியும் கொடை வகை (த.நி.போ.பக்.25); a kind of gift made by kings.

[Skt.mahā-mēru+ > த. மகாமேருதானம்.]

மகாமேருப்பிரசம்சை *magā-mēru-p-piraśamśai*, பெ.(n.) அளவு கடந்த புகழ்ச்சி; immoderate praise. *"தெரிந்தவர் போலக் காட்டி மகாமேருப்பிரசம்சை பண்ணினீர்" (சிவசம. பக்.36).*

[Skt. mahā-mēru > த. மகாமேருப் பிரசம்சை.]

மகாயக்கியம் *magā-yakkiyam*, பெ.(n.) **மகாயஞ்ஞும்** பார்க்க; see *magāyaññjam*.

த.வ. மாவேள்வி.

மகாயஞ்ஞும் *magā-yaññam*, பெ.(n.) **மகாயாகம்** பார்க்க; see *magā-yāgam*.

த.வ. மாவேள்வி.

[Skt. mahā-yajña > த. மகாயஞ்ஞும்.]

மகாயாகம் *magā-yāgam*, பெ.(n.) பஞ்சமகா யாகம் (யாழ்.அக.); the five sacrifices.

த.வ. ஐம்மாவேள்வி.

[Skt. mahā-yāga > த. மகாயாகம்.]

மகாயானம் *magā-yāṉam*, பெ.(n.) பௌத்தசமய வகை (நீலகேசி, 342, உரை); a school of Buddhism.

[Skt. mahā-yāna > த. மகாயானம்.]

மகாயுகம் *magā-yugam*, பெ.(n.) நான்கு யுகங் கூடியதும் 43,20,000 வருடங்கள் கொண்டதுமான காலம் (வின்.); colossal cycle of time, comprising the four yugas, reckoned as 43,20,000 solar years.

த.வ. மாவூழி.

[Skt. mahā-yuga > த. மகாயுகம்.]

மகாயோசனை *magā-yōśaṉai*, பெ.(n.) கோடி யோசனை (நாமதீப.800, உரை); a crore of *yōcaṉai*.

[Skt. mahat+yōjanā > த. மகாயோசனை.]

மகாயோனி *magā-yōṉi*, பெ.(n.) காற்றா (வாயுவா)னது அல்குல் (யோனி) கருப்பம் இவ்விடங்களில் புகும்போது அல்குலில் சதை வளர்ந்து பருமனாக பருக்கும் ஒரு வகையான, பெண்களுக்குண்டாகும் நோய்; a disease of the vagina wherein it is extremely dilated (சா.அக.).

த.வ. மாயோனி.

மகாரசசூதம் *magā-raśa-śūdam*, பெ.(n.) ஓர் உயர் வகை தேமா (மூ.அ.); a superior kind of mango tree.

[Skt. mahā-rāja-cūta > த. மகாரசசூதம்.]

மகாரசதம் *magā-śacadam*, பெ.(n.) பொன் (யாழ்.அக.); gold.

[Skt. mahā-rajana > த. மகாரசதம்.]

மகாரசம் *magā-raśam*, பெ.(n.) 1. மரவகை (சங்.அக.); a tree. 2. கஞ்சி (யாழ்.அக.); gruel.

[Skt. mahā-rasa > த. மகாரசம்.]

மகாரசனம் *magā-rašaṉam,* பெ.(n.) **மகாரசதம்** (யாழ்.அக.) பார்க்க; see *magā-rašadam.*

[Skt. mahā-rajana > த. மகாரசனம்.]

மகாரசிங்கி *magāra-šiṅgi,* பெ.(n.) நாதம்; ovum (சா.அக.).

மகாரசிதம் *magārašidam,* பெ.(n.) மாமரம்; mango tree (சா.அக.).

மகாரசிதகாரம் *magāra-šidakāram,* பெ.(n.) மிளகு; pepper (சா.அக.).

[மகா+ரசிதகாரம்.]

மகாரணியம் *magāraṇiyam,* பெ.(n.) பெருங்காடு (வின்.); great forest.

த.வ. பெருங்காடு.

[Skt. mahā-raṇya > த. மகாரணியம்.]

மகாரதம் *magā-radam,* பெ.(n.) 1. மகா ரதனுடைய தேர் (பொருட்.நி.); the chariot of a *makāratan.* 2. பேராசை; great desire.

த.வ. பெருந்தேர்.

[Skt. mahā-ratha > த. மகாரதம்.]

மகாரதன் *magā-radaṉ,* பெ.(n.) தான் ஒருவனாகிப் பதினாயிரம் வீரரை எதிர்த்துப் பொரவல்ல தேர்வீரன் (பாரத.அணிவ.1); a warrior on a chariot, capale of fighting single-handed against 10,000 warriors, one of four *tēr-virar,* q.v.

த.வ. பெருந்தேரன்.

[Skt. mahā-ratan > த. மகாரதன்.]

மகாரபஞ்சகம் *magārapañjagam,* பெ.(n.) மகரவெழுத்தில் தொடங்கும் மது, மச்சம், புலால் (மாமிசம்) முத்திரை, மைதுனம் என்ற ஐந்து வகைகள் (தக்கயாகப்.51, விசேடக் குறிப்பு.); the five objects whose names begin with the consonant ma, viz., *matu, maccam, mānicam, muttirai, maituṉam.*

த.வ. ஐம்மகரம்,

[மகார+பஞ்சகம்.]

மகாரம் *magāram,* பெ.(n.) 1. கல்லுப்பு; rock salt. 2. மகாரவெழுத்து; the mystic letter 'ம' (சா.அக.).

மகாரவி *magāravi,* பெ.(n.) கறுப்பரிசி; black rice (சா.அக.).

மகாரவுப்பு *magāra-v-uppu,* பெ.(n.) கல்லுப்பு (மூ.அ.); rock-salt (சா.அக.).

மகாராசமிருகாங்கம் *magārāša-miru-kāṅgam,* பெ.(n.) ஈளைநோய் தீர்க்குங் வடிநீர் வகை (பதார்த்த.219); a decoction for the cure of asthma.

[Skt. mahārāj-mrgāṅka > த. மகாராசமிருகாங்கம்.]

மகாராசன் *magārācaṉ,* பெ.(n.) 1. **மகா ராசா, 1, 2, 3** பார்க்க; see *magārāšā.* 2. கவலையற்றவன் (யாழ்.அக.); person free from cure. 3. சமண குரு (யாழ்.அக.); Jaina priest.

[Skt. mahā-rāja> த. மகாராசன்.]

மகாராசா *magā-rācā,* பெ.(n.) 1. பேரரசன்; paramount king, monarch. 2. குபேரன் (வின்.); *kubēra.* 3. பெருஞ்செல்வன்; very wealthy man. 4. அரசு அளித்து வரும் ஒரு பட்டம் (இக்.வ); a title conferred by the Government.

த.வ. பேரரசன்.

[Skt. mahā-rāja > த. மகாராசா.]

மகாராசி *magā-rāši,* பெ.(n.) **மகராசி, 2** (உ.வ.) பார்க்க; see *magā-rāši.*

[Skt. mahā-rājñi > த. மகாராசி.]

மகாராட்டிரம் *magārāṭṭiram,* பெ.(n.) 1. ஒரு நாடு (யாழ்.அக.); the mahratta country. 2. ஒரு மொழி; the mahratta language.

[Skt. mahā-rāṣṭra > த. மகாராட்டிரம்.]

மகாராணி *magā-rāṇi,* பெ.(n.) பேரரசி; empress. "மகாராணி மங்கம்மா".(உ.வ.)

[Skt. mahā-rājñi > த. மகாராணி.]

மகாராசமிருகாங்கம் *magā-rāša-mirugāṅgam,* பெ.(n.) சளி, ஈளைநோய், வீக்கம் முதலிய நோய்களைப் போக்கும் ஓர் ஆயுள் வேத மாத்திரை; an Ayurvedic medicine used for consumption, bronchitis, anaemia etc (சா.அக.).

மகாராசயோகி *magārāšayōgi,* பெ.(n.) பச்சைக் கருப்பூரம்; crude comphor (சா.அக.).

மகாராசன் *magā-rāšaṉ,* பெ.(n.) 1. பேரரசன்; monarch. 2. குபேரன்; *kubēra.* 3. பெருஞ்செல்வன்; very wealthy man. 4. கவலையற்றவன் (யாழ்.அக.); person free from care. 5. சமணகுரு (யாழ்.அக.); Jaina priest.

[Skt. mahā-rājā > த. மகாராசா.]

மகாராசாதுறவு *magārāšā-duṟavu,* பெ.(n.) குமார தேவரியற்றிய ஒரு நூல்; a work by *kumāra-tevar.*

[மகாராசா+துறவு.]

மகாராட்டிரம் *magā-rāṭṭiram,* பெ.(n.) 1. ஒரு மாநிலம்; the mahratta country. 2. மராட்டிய மொழி; the Maharatta language.

மகாராத்திரம் *magā-rāttiram,* பெ.(n.) நள்ளிரவு (யாழ்.அக.); mid night.

[Skt. mahā-rātra > த. மகாராத்திரம்.]

மகாரிட்டம் *magāriṭṭam,* பெ.(n.) மலைவேம்பு; mountain neem (சா.அக.).

மகாருத்திரர் *magā-ruttirar,* பெ.(n.) சிவபெருமான் (சி.போ.பா.1, பக்.54); lord *Šiva.*

த.வ. **உருத்திரன்.**

[Skt. mahā-rudra > த. மகாருத்திரர்.]

மகாரூபகம் *magā-rūpagam,* பெ.(n.) ஒரு நாடகத் தமிழ் நூல் (யாழ்.அக.); a work probably written in *nāṭaka-t-tamil.*

[Skt. mahā-rūpaka > த. மகாரூபகம்.]

மகாரூபை *magā-rūpai,* பெ.(n.) 1. நல்லுருவுள்ளவள்; woman of beautiful form. 2. பார்வதி (கூர்மபு.திருக்கல்.21); *pārvati.*

[Skt. māhā-rūpā > த. மகாரூபை.]

மகாரேவதம் *magārēvadam,* பெ.(n.) முட்பலாசு என்னும் முள்முருக்கு மரம்; a tree erythrina indica (சா.அக.).

[Skt. mahā+revadam]

மகாரோகம் *magā-rōgam,* பெ.(n.) குட்டம் முதலிய பெருநோய் (சங்.அக.); leprosy and other serious diseases.

த.வ. **பெருநோய்.**

[Skt. mahā-rōga > த. மகாரோகம்.]

மகாரௌரவம் *magā-rauravam,* பெ.(n.) நிரய வகை (சங்.அக.); a hell.

[Skt. mahā-raurava > த. மகாரௌரவம்.]

மகால் *magāl,* பெ.(n.) அரண்மனை; palace. *"திருமலைநாயக்கர் மகால்"*.(உ.வ.).

[U. mahal > த. மகால்.]

மகாலக்குமி *magā-lakkumi,* பெ.(n.) திருமகள்; *Laksmī.*

[Skt. mahā-laksmī > த. மகாலக்குமி.]

மகாவாதம் *magā-vādam,* பெ. (n.) 1. பெருங்காற்று; tempestuous wind. 'மகாவாதம் சென்று தாக்கிய பொழுது' (தக்கயாகப். 144. உரை) 2. **மகாவாதரோகம்** பார்க்க; see magāvādarōgam.

[Skt. mahā-vāda > த. மகாவாதம்.]

மகாவாதரோகம் *magā-vādarōgam,* பெ. (n.) வாதக் குடைச்சல் நோய் (பைஷஜ); nervous disease, palsy.

மகாவித்துவான் *makā-viṭṭūvāṉ,* பெ. (n.) பெரும்புலவன் என்னும் பட்டம்; a title meaning `great scholar'

த.வ. **பெரும்புலவன்**

[Skt. mahā-vidvān > த. மகாவித்வான்.]

மகாவிரதம் *magā-viradam,* பெ. (n.) 1. சைவ சமயத்தின் உட்சமய மாறனுளொன்றான மாவிரதம். (யாழ். அக.); a section of *Saivaisam.* 2. சைன விரத வகை. (சீவக. 2818, உரை.); (Jaina.) a kind of vow.

[Skt. mahā-virata > த. மகாவிரதம்.]

மகாளயம் *magāḷayam,* பெ. (n.) 1. கன்னி (புரட்டாசி) மாதத்துக் கரும்பக்கம்; the dark fortnight in ther lunar month of Bhādrapada. 2. தென்புலத்தார்க்குக் கன்னித் (புரட்டாசி) திங்களில் வரும் கரும்பக்கத்தில் செய்யும் நினைவேந்தல் நிகழ்ச்சி; offerings to deseased ancestors made during *magāḷayam.*

[Skt. mahālaya > த. மகாளயம்.]

மகான் *magāṉ,* பெ. (n.) பெருந் தன்மையுள்ள பெருமகன்; a respectable the man. 'மூலப்பகுதியான மகானுண்டாகும்' (பாகவ. சுக முன் 2.5.).

[Skt. mahān > த. மகான்.]

மகிடமர்த்தனி *magiḍa-marttaṉi,* பெ. (n.) மலைமகள் (துர்கை) (சங். அக.). Durgā.

[Skt. mahisa-mardani > த. மகிடமர்த்தனி மகிசம் – எருமை. மர்த்தனி – கொன்றவள்]

மகிபாலன் *magi-pālaṉ,* பெ. (n.) அரசன் (பிங்.); king, monarch.

[Skt. mahī-pāla > த. மகிபாலன்]

மகிமா *magimā,* பெ. (n.) எண் வகை ஆற்றலுள் (அட்டமாசித்திகளுள்) விருப்பம் போல உருவத்தைப் பருக்கச் செய்யும் பேராற்றல்; the supernatural power of increasing size of will one of *aṣṭamāsitti.* *"உள்ளும்புறனு நிறையும் பெருமைதனை யன்றோ மகிமா வென்னும்" (திருவிளை. அட்டமா. 23.);*

[Skt. mahīmā > த. மகிமா.]

மகிமை *magimāi,* பெ. (n.) 1. பெருமை. greatness, grandeur, glory, majesty. *"மங்கல மகிமை மாநகர்" (திருப்பு. 16);* 2. மதிப்புரவு (வின்.); Honour, dignity; respectability.

மகிமைப்படுத்து-தல் *magimāi-p-paḍuttu-*5 செ.கு.வி. (v.i.) 1. மதிப்புரவு செய்தல்; to magnify, glorify, dignify. 2. புகழ்தல் (வின்.); to extol, praise.

த.வ. பெருமைப்படுத்துதல்

[Skt. mahīmāi > த. மகிமை+படுத்து-.]

மகேச்சுரர் *makēccurar,* பெ. (n.) சிவனடியார். (சிலப்பிர. 48, உரை.); devotees as Siva.

[Skt. māhēšvara > த. மகேச்சுரர்.]

மகேசன் *makēšaṉ,* பெ. (n.) சிவபிரான்; Siva. மேலவர்க் கல்லா லின்றே விழுமிய மகேச நாமம் (இரகு. யாக. 58).

[Skt. māhēša > த. மகேசன்.]

மகேந்திரம் *makēntiram,* பெ. (n.) 1. ஒரு மலைத் தொடர்; a range of mountains. 2. கஞ்சம் மாவட்டத்திலுள்ள ஒரு மலை; a mountain 32 miles south - west of Berhampore, in Ganjam of with ancient Siva shrine. மந்திர மாமலை மகேந்திர வெற்பன் (திருவாச. 2, 100).

த.வ. மாவிந்தம்

[Skt. māhēndra > த. மகேந்திரம்.]

மகோதரம் *magōdram,* பெ. (n.) பெருவயிற்று நோய்; dropsy of the abdomen, ascitis.

த.வ. பெருவயிற்றுநோய்

[Skt. மகா + உதரம்.]

மகோந்நதம் *magōnnadam,* பெ. (n.) பனைமரம் palmyra tree - Borassus flabellifer. (சா. அக.)

[Skt. மகா + உன்னதம்.]

மகோற்சவம் *makōṟcavam,* பெ. (n.) பெரிய திருநாள்; great festival.

த.வ. பெருவிழா

[Skt. māhōt-sava > த. மகோற்சவம்.]

மகோன்மதம் *makōṉmadam,* பெ. (n.) மிகு மயக்க வெறி. (யாழ். அக.); extreme intoxication.

[Skt. māhōnmada > த. மகோன்மதம்.]

மகோன்னதம் *makōṉṉadam,* பெ. (n.) 1. மிக்க உயரம்; height, loftiness. 2. உயர்ந்த நிலை; high rank, high position. 3. பனை. (மூ.அ); palmyra, palm.

[Skt. mahōn-nata > த. மகோன்னதம்.]

மங்களாசாசனம் *maṅgaḷāšāšaṉam,* பெ. (n.) 1. நன்மையை வேண்டுகை; invocation of blessings by great persons. மங்களா சாசனத்தின் மற்றுள்ள வாழ்வார்கள் தங்களார் வத்தளவு (உபதேசரத். 18); 2. ஆழ்வாராதி யாரால் துதிக்கப் பெறுகை; benediction on a sacred place, as by Aḷvārs, etc. 3. பெரியோர்களின் வழிபாடு; worship by great men. பெருமாளை மங்களாசாசனம் செய்தாயிற்றா?.

[Skt. maṅgaḷāšāsana > த. மங்களாசானம்.]

மங்களாரத்தி *maṅgaḷāratti,* பெ. (n.) 1. கடவுளுக்குச் சுழற்றியெடுக்கும் கருப்பூர ஆரத்தி; waving of camphor before a deity. 2. மங்கலகாலங்களில் மஞ்சணீர் சுற்றுகை; ceremony of waving turmeric water in a dish on auspicious occasions.

[Skt. maṅgalam+arathi > த. மங்களாரத்தி]

மச்சக்காவடி *macca-k-kāvaḍi,* பெ.(n.) மீன் கலயங்கள் கொண்ட காவடி; a *kāvaḍi* with vessels containing fish.

[Skt. matsya+காவடி]

[மச்சம் + காவடி]

மச்சக்கொடி *macca-k-koḍi,* பெ.(n.) காமனுக்கும் பாண்டியனுக்கும் உரியதான மீன்கொடி (வின்); banner of *Kāma* and the *Pāṇḍyas* bearing fishen sign.

[மச்சம் + கொடி]

மச்சகந்தி *maccakandi,* பெ.(n.) பரிமளகந்தி (பாரத); *Vyāsa's* mother.

[Skt. matsyagandhi > த. மச்சகந்தி]

மச்சத்தில்செனித்தமலக்கல் *maccattil-šeṉitta-malakkal,* பெ.(n.) பொன்னம்பர்; amber of a gold colour a mineral describes in the Tamil siddha medical science.

மச்சதேசம் *mscc-dēšam,* பெ. (n.) ஐம்பத்தாறு நாடுகளுள் ஒன்று; a country in Central, India one of 56 *dēšam.*

[Skt. matsya+tēsa > த. மச்சதேசம்]

மச்சபுராணம் *macca-purāṇam,* பெ.(n.) 1. பதினெண் தொன்ம (புராண)த்துள் மீன்தோற்றரவு எடுத்த திருமாலால் சிவனுடைய பெருமை விளங்க அறிவுரைப் பெற்ற தொன்மம் (பிங்); a chief Purāṇa in honour of *Siva,* narrated by Viṣṇu in His fish in carnation, one of *patiṉeṇpurāṇam.* 2. திருநெல்வேலி வடமலையப்ப பிள்ளை யினால் கி.பி. 1706-இல் தமிழில் மொழி பெயர்த்துப் பாடப்பெற்ற நூல்; a metrical rendering of *matsya-purāṇa* in Tamil by *Vaṭamalaiyappa Piḷḷaiyan* of Thirunelveli, 1706 A.D.

[Skt. matsya+purāṇa > த. மச்சபுராணம்]

மச்சம்¹ *maccam,* பெ.(n.) 1. மீன்; fish. 2. திருமாலின் முதலாம் தோற்றரவு; fish-incarnation of Viṣṇu, one of tašāvatāram. 3. மீன ஓரை; pisces of the zodiac. 4. மீன (பங்குனி) மாதம்; month of paṅguṉi. *"பயமார் கடமச்சத்திற்குந் திரிக்குள்"* (தைலவ. பாயி. 55). 5. **மச்ச புராணம்,1** பார்க்க; see macca-dēšam. 6. **மச்சதேசம்** பார்க்க; see *"மச்சநாடன்"* (பாரத. நிரை. 65).

[Skt. matsya > த. மச்சம்]

மச்சம்² *maccam,* பெ.(n.) மாற்றறிய வைத் திருக்கும் பார்வைப் பொன்; piece of gold kept for a sample. *"வன்றொண்டர் மச்சம் வெட்டிக் கைக் கொண்டு"* (பெரியபு. ஏயர்கோன். 109.).

[I. matstsu, K. macca > த. மச்சம்]

மச்சம்பி *maccambi,* பெ.(n.) 1. தமக்கை கணவன்; elder sister's husband. 2. அம்மான் மகன்; maternal uncle's son. 3. அத்தை மகன்; paternal aunt's son. 4. கணவனுடைய தமையன்; husband's elder brother.

மச்சமுனி *maccamuni,* பெ.(n.) பதினெண் சித்தருள் ஒருவரும் மருத்துவ நூலியற்றிய வருமான ஒரு சித்தர்; a reputed mystic, author of treatises on medicine, one of Patinen-Cittar.

மச்சயந்திரம் *macca-yandiram,* பெ.(n.) அம்பெய்வதற்கு மீன் வடிவாயமைத்த குறி (அபி. சிந்.); mark for archers in the shape of a fish.

[மச்ச + யந்திரம்]

மச்சரம் *maccaram,* பெ.(n.) 1. பொறாமை (வின்); envy; jealousy at another's success or prosperity. 2. போட்டி; competition, rivalry.

[Pkt. maccara > Skt. mātsara > த. மச்சரம்]

மச்சராசன் *macca-rāšan,* பெ.(n.) 1. மீன் களின் தலைவன்; king of fishes. *"மச்சராசன் மேல் வரவே"* (தக்கயாகப். 469). 2. மச்ச தேசத்தரசன்; king of Matsya country.

[Skt. matsyarāja > த. மச்சராசன்]

மச்சரூபன் *macca-rūban,* பெ.(n.) காய்ச்சு நஞ்சு; a kind of arsenic. (சா.அக.)

மச்சவிளக்கம் *macca-viḷakkam,* பெ.(n.) மீன்களைப் பற்றிய நூல் (பாண்டி.); treatise on marine zoology.

[மச்சம் + விளக்கம்]

மச்சனா *maccana,* பெ.(n.) முள்ளங்கி; raddish (சா.அக.).

மச்சாமேகம் *maccā-mēgam,* பெ.(n.) இது நாவல் வேரினால் தீரும் நோய் வகை; a variety of mega disease it is curses by the infusion of the root of jambolana.

மச்சாழ்வி *maccāḻvi,* பெ.(n.) மச்சாவி (M.E.R. 479 of 1917 - B) பார்க்க; see *maccāvi.*

மச்சிகம் *maccigam,* பெ.(n.) முடிதிருத்தத் தொழில் (நீலகேசி, 280.); barber's work.

மச்சிகன் *maccigan,* பெ.(n.) வணிகன்; trader. *"மச்சிகனெழுந்து கம்பவாணரை மகிழ்ந்து போற்றி"* (திருவிரிஞ்சைப். வழித்துணை – 42).

மச்சிபம் *maccibam,* பெ.(n.) கடுகுரோகிணி (மலை); chiristmas rose.

மச்சியம்¹ *macciyam,* பெ.(n.) மச்சம்¹ பார்க்க; see *maccam.*

மச்சியம்² *macciyam,* பெ.(n.) கடுகுரோகிணி; a root uses as purgative. (சா.அக.)

மச்சியராசன் *macciya-rāšan,* பெ.(n.) மச்சராசன் (தக்கயாகப் 469, உரை, பார்க்க; see *maccarāšan.*

மச்சியாச்சி *macciyācci,* பெ.(n.) மச்சியாத்தி பார்க்க; see *macciyātti.*

மச்சியாத்தி *macciyātti,* பெ.(n.) பொன்னாங் கண்ணி; sessile plant. (சா.அக.)

மச்சேந்திரநாதர் *maccēndira-nādar,* பெ.(n.) நவநாத சித்தருளொருவர் (சது.); a mystic, one of *navanāda-šittar.*

[Skt. matsyēndra-nātha > த. மச்சேந்திரநாதர்]

மச்சேந்திரநாதன் *maccēndira-nādan,* பெ.(n.) நவநாத சித்தரில் ஒருவர்; one of the *Siddhars.* (சா.அக.)

மச்சேந்திரன் *maccēndiraṉ,* பெ.(n.) மச்ச முனி நாயனார்; a *Siddhar.* (சா.அக.)

மச்சைசமுற்பவம் *maccai-šamurbavam,* பெ.(n.) மாதப்போக்கின் போது வெளியாகும் கெட்ட அரத்தம் (சுரோணித நீர்); menstrual blood. (சா.அக.).

மச்சைதாதுக்கிருமி *maccaitādu-k-kirumi,* பெ.(n.) எலும்புச் சோற்றை உண்ணும் நுண்ணுயிரி; parasite or germ that eats the bone marrow. (சா.அக.)

மச்சைதாதுகதசுரம் *maccatādukada-šuram,* பெ.(n.) எலும்புச் சோற்றைத் தாக்கும் காய்ச்சல்; a fever affecting the marrow of the bone. (சா.அக.)

மச்சைவித்திரதி *maccaivittiradi,* பெ.(n.) எலும்புச் சோற்றைத் தாக்கும் ஒரு கட்டி; abscess affecting the marrow. (சா.அக.)

மசக்கல் *mašakkal,* பெ.(n.) தன்வசமாக்கல்; to bewitch; to enchant; to charm.(சா.அக.)

மசமசப்பு *mašamašappu,* பெ.(n.) சொறிவு; itching sensation.(சா.அக.)

மசரசமலர் *mašaraša-malar,* பெ.(n.) 1. குழந்தைகளுக்குக் கருப்பாக நுரைத்து கழியும் ஒரு வகை நோய்; a disease in children accompanies by black mucus clots. 2. செறி புழு; a kind of worm in the in festine. (சா.அக.)

மசரா *mašarā,* பெ.(n.) உட்கிடைக் கிராமம்; hamlet.

மசரைப்புழு *mašarai-p-puḻu,* பெ. (n.) **மசரசமலர்** பார்க்க; see *mašaraša-malar.* (சா.அக.)

[மசரை+புழு]

மசனம் *mašaṉam,* பெ. (n.) வருத்துகை (சங். அக.); trouble someness.

[**Skt.** *masana* > த. மசனம்]

மசாகம் *mašāgam,* பெ.(n.) குருவி (சங். அக.); small bird.

[**Skt.** *mašāka* > த. மசாகம்]

மசாரம் *mašāram,* பெ.(n.) 1. பைம்மணி; a precious gem. 2. நீல அரத்தினம்; a blue gem. (சா.அக.).

மசால்சி *mašālši,* பெ.(n.) 1. தீவட்டி பிடிப்பவன் (வின்.); torch - bearer. 2. விளக்குத் துடைத் தேற்றுபவன் (இ.வ.); servant who trims the lamps.

[**U.** *mashalci* > த. மசால்சி]

மசால்தோசை *mašaldōšai,*பெ.(n.) உருளைக் கிழங்கு உசிலையை உள்ளே மடித்துத் தரப்படும் தோசை; a dosai with a filling of fried potato and onion. *"உணவு விடுதிக்கு வருபவர்கள் அதிகம் விரும்பிச் சாப்பிடுவது மசால்தோசை".*

த.வ. உசிலைத் தோசை

[**U.** *mashal* > த. மசால்]

மசால்வடை *mašāl-vaḍai,* பெ.(n.) வெங் காயமும் பிறவும் கலந்த வடைப் பணிகார வகை; a kind of vaḍai made with onions and condiments.

த.வ. உசிலை வடை

[**U.** *masāla* > த. மசால்]

மசாலா *mašālā,* பெ.(n.) பொதுவாக புலால் உணவில் பயன்படுத்தப்படும் கசகசா, இலவங்கப்பட்டை, பூண்டு முதலியவை சேர்த்து அரைக்கப்பட்ட கலவை; mixed condiments and spices (for meat dishes); curry stuff. *'மசாலா இல்லாமல் கறிக்குழம்பு சுவை இருக்காது'.* 2. மரக்கறி சமையலில் துவையல் போல் அரைக்கப்பட்ட தேங்காய் அல்லது மிளகாய்; mashed coconut or chilli in vegetarian preparations. 3. உருளைக் கிழங்குத் துண்டுகளோ, மிளகாய், வெங்காயம் முதலியவற்றைக் கலந்து தாளித்துச் செய்யப்பட்ட கலவை; boiled potato mixed

with chilli and onion. 'பூரிக்கு இன்னும் கொஞ்சம் மசாலா போட்டுக் கொள்!' (பே.வ.). 4. திரைப்படம், நாடகம் முதலியவற்றில் மக்கள் விரும்பி பார்க்கக் கூடிய பொழுதுபோக்குப் பகுதிகளான சண்டை, பாட்டு, காதல் காட்சி முதலியவை குறிப்பிட்ட அளவில் நிறைந்த கலவை; (of film, play) a mix of stereotype box-office elements. *'சரியான மசாலாப் படம், இதற்கு எப்படி பரிசு கிடைத்தது?"* (உ.வ.).

த.வ. உசிலை

மசிகாந்தசாதி *maśigānda-śādi,* பெ.(n.) சைதன்னிய பிரகாசி சாதியாகிய ஆண் சாதிவகையில் ஒன்று; one of the four classification of men. (சா.அக.).

மசிகூபி *maśi-kūpi,* பெ.(n.) எழுதுமை வைக்குங்குப்பி; ink-bottle, ink-stand.

த.வ. மைக்குப்பி

[Skt. maṣi-kūpi > த. மசிகூபி]

மசிதானி *maśi-dāṉi,* பெ.(n.) மைக்கூடு (யாழ். அக.); ink-bottle.

த.வ. மைக்கூடு

[Skt. maṣi-dhāna > த. மசிதானி]

மசிமை *maśimai,* பெ.(n.) பெருமை; greatness. *"மசிமையில் கூறைதாராய்"* (திவ். நாய்ச். 3,9).

[Skt. mahimā > த. மசிமை]

மசியகிரி *maśiyagiri,* பெ.(n.) மேற்கூரை, மேற் கவிகை; canopy. "திருத்திரை கட்டுகிறதும் மசியகிரி கட்டுகிறதும்" (கோயிலொ. 96).

[மசிய + கிரி]

[Skt. masaka-hari > த. மசியகிரி]

மசியம் *maśiyam,* பெ.(n.) 1. கருஞ்சீரகம்; black cumin seeds. 2. மிளகு; pepper. (சா.அக.)

மசிலி[1] *maśili,* பெ.(n.) **மசியகிரி** (இ.வ.) பார்க்க; see maśiyagiri.

மசிலி[2] *maśili,* பெ.(n.) பாதையில் தங்கிச் செல்லும் இடம் (P.T.L.); stage in a journey.

[U. mazil > த. மசிலி]

மசிலிக்கால் *maśili-k-kāl,* பெ.(n.) மேற்கவிகை கட்டுங் கட்டிலின் மேற்கால் (இ.வ.); the four posts of a cot.

[மசிலி + கால்]

மசுமாஞ்சரி *maśumāñjari,* பெ.(n.) உத்தா மணி; a creeior (சா.அக.).

மசூதி *maśūdi,* பெ.(n.) பள்ளிவாசல்; mosque.

[U. masjid > த. மசூதி]

மசூரம் *maśūram,* பெ.(n.) 1. தவச வகையுள் ஒன்று (சுக்கிர– நீதி, 321.); a kind of pulse. 2. மூட்டுப்பூச்சி (சங். அக.); bug.

[Skt. masūra > த. மசூரம்]

மசூரி[1] *maśūri,* பெ.(n.) **மசூரிகை** (வின்.) பார்க்க; see *maśūrigai.*

[Skt. masūrika > த. மசூரி]

மசூரி[2] *maśūri,* பெ.(n.) **மசூதி** (சங். அக.) பார்க்க; see *maśūdi.*

[Skt. masjid > த. மசூதி]

மசூரிகம்[1] *maśūrigam,* பெ.(n.) **மசூரிகை** (வின்.) பார்க்க; see *maśurigai.*

மசூரிகம்[2] *maśūrigam,* பெ.(n.) **மசூரி**[1] பார்க்க; see *maśūri* (சா.அக.).

மசூரிகாரோகம் *maśūrigārōgam,* பெ. (n.) சுரத்தினால் உடம்பு முழுதும் குருவெழும்பும் நோய்; a disease -eruptive fevers. (சா.அக.)

மசூரிகை *maśūrigai,* பெ. (n.) பெரியம்மை நோய் (வைசூரி) (இ.வ.); small-pox.

[Skt. masūrikā > த. மசூரிகை]

மசோதா *maśōdā,* பெ.(n.) 1. மூல ஆவணத்துக்கு முன் படி; rough draft, as of a document. 2. சட்டமாவதற்கு முன் சட்டமன்றத்தில் கொண்டு வரப்படும் சட்ட முன்வரைவு (இக். வ.); draft bill of an act.

த.வ. முன் வரைவு

[U. musau-wada > த. மசோதா]

மஞ்சக்கல் *mañjakkal,* பெ.(n.) நூற்றிருபது இயற்கைச் சரக்குகளுள் ஒன்று; one of the 120 natural drugs. (சக. அக.).

மஞ்சகணை *mañjakaṉai,* பெ.(n.) சுரம், வேட்கை இவற்றிற்குப் பயன்படும் ஒரு சரக்கு; a drug used for fever and thirst. (சா. அக.).

மஞ்சகம் *mañjagam,* பெ.(n.) கொக்கு; a bird-stork. (சா. அக.).

மஞ்சகாசிரயம் *mañjakāśirayam,* பெ.(n.) மூட்டுப் பூச்சி; bug. (சா.அக.)

மஞ்சரி[1] *mañjari,* பெ.(n.) 1. பூங்கொத்து (பிங்.); cluster of flowers. *"மாணிக்க மஞ்சரியின்........ஒளிசேர்"* (திவ். இயற். பெரிய. 26). 2. பூமாலை (பிங்.); flower garland. 3. தளிர் (பிங்.); shoot, sprout. 4. மலர்க் காம்பு (வின்.); flower stalk. 5. ஒழுக்கம் (சூடா.); rectitude; conformity to rules of conduct. 6. **மஞ்சரிப்பா** (யாழ். அக.) பார்க்க; see mañjari-p-pā. 7. மருந்து வகை (யாழ். அக.); a kind of medicine. 8. முத்து (சங். அக.); pearl.

[Skt. mañjarī > த. மஞ்சரி]

மஞ்சரி[2] *mañjari,* பெ.(n.) நாயுருவி (மலை); plant growing in hedges and thickets.

[Skt. khara-mañjarī > த. மஞ்சரி]

மஞ்சரி[3] *mañjari,* பெ.(n.) பண் வகை (பரத. ராக– பக்.102.); a specific melody-type.

மஞ்சரி[4] *mañjari,* பெ.(n.) தொகுப்பு; collection.'சிறுகதை, மஞ்சரி'. (உ.வ.).

மஞ்சரிப்பா *mañjari-p-pā,* பெ.(n.) பனுவல் வகை; a kind of poetic composition. *"கிருஷ்ணராயற்கு மஞ்சரிப்பா................செய் ஞானப்ர காச குருராயன்"* (தொண்டை. சத. 95.)

[Skt. mañjari > த. மஞ்சரி]

மஞ்சரிப்புட்பம் *mañjari-p-puṭpam,* பெ.(n.) புங்கு; a tree.(சா.அக.).

மஞ்சரீகம் *mañjarīgam,* பெ.(n.) மருக் கொழுந்து (மூ.அ.); southern wood.

மஞ்சல் *mañjūl,* பெ.(n.) **மஞ்சூர்** (இ.வ.) பார்க்க; see mañjūr.

மஞ்சலி *mañjali,* பெ.(n.) உருத்திர சடை; sweet basil. (சா.அக.).

மஞ்சலோகயம் *mañjalōgayam,* பெ.(n.) தூக்கணாங்குருவி; a bird which see the loxia bird that builds hanging nests on the top of tree. (சா.அக.).

மஞ்சிட்டிமேகம் *mañjiṭṭimēgam,* பெ.(n.) சிறுநீரில் காணப்படும் ஒருவகைக் காரப் பொருள்; an alkaloid substance found in the urine. (சா.அக.).

[மஞ்சிட்டி + மேகம்]

மஞ்சிடாலிகம் *mañjiḍāligam,* பெ.(n.) மலை நொச்சி; hill nocci. (சா.அக.).

மஞ்சிடாலை *mañjiḍālai,* பெ.(n.) வாழை; plantain. (சா.அக.).

மஞ்சிடாவிகம் *mañjiḍāvigam,* பெ.(n.) கண் சிவந்து கண்ணீர் வடிகை; an eye disease marked by redness of the eye and watering. (சா.அக.).

மஞ்சிபத்திரி *mañji-pattiri,* பெ.(n.) 1. ஒரு நறுமணப்பூண்டு; a fragrant leaf. 2. காட்டு மல்லிகை; jasminum Angustifolium. 3. மகர வாழை; a kind of plantain. (சா.அக.).

மஞ்சிலை *mañjilai,* பெ.(n.) செங்கல்; brick. (சா.அக.).

மஞ்சினி *mañjiṉi,* பெ.(n.) புழுங்கலரிசி; boiled rice. (சா.அக.).

மஞ்சீரம் *mañjīram,* பெ.(n.) காற்சிலம்பு; tinkling anklet. *"மஞ்சீர மாறாவனகிரி" (அழகர்கல. 8)*

[Skt. mañjīra > த. மஞ்சீரம்]

மஞ்சுகம் *mañjugam,* பெ.(n.) கொக்கு; stork. (சா.அக.).

மஞ்சூர் *mañjūr,* பெ.(n.) ஏற்றுக்கொள்ளப் பட்டது; that which is accepted or approved.

[U. manzūr > த. மஞ்சூர்]

மஞ்சூரம்[1] *mañjūram,* பெ.(n.) கடலை (பிங்); bengal gram.

[Skt. masūra > த. மஞ்சூரம்]

மஞ்சூரம்[2] *mañjūram,* பெ.(n.) மஞ்சாடி மரம்; barbadoes. *"மஞ்சூர் மிலக்கங்கொண்டு"* (வீரவன. உமையாண். 20)

மஞ்சூருத்திரவு *mañjūr-uttiravu,* பெ.(n.) உறுதி செய்யப்பட்டதைக் குறிக்குங் கட்டளை (இ.வ.); order of confirmation.

[மஞ்சூர் + உத்திரவு]

மஞ்சொட்டி *mañjotti,* பெ.(n.) பூடுவகை; a kind of herb.

மட்சத்திரியம் *matšattiriyam,* பெ.(n.) பேய்ச் சுரை; a wild and bitter gourd. (சா.அக.).

மட்சிகம் *matšigam,* பெ.(n.) ஈ (சங்.அக.); fly.

[Skt. makṣika > த. மட்சிகம்]

மட்சிகை *matšigai,* பெ.(n.) மட்சிகம் (சங். அக.) பார்க்க; see matšigam.

[Skt. makṣikā > த. மட்சிகை]

மட்சிமயம் *matšimayam,* பெ.(n.) அதிமதுரம்; liquorice. (சக. அக.)

மணிலா *manilā,* பெ.(n.) நிலக்கடலை; peanut, groundnut.

மணிலா தேயத்திலிருந்து கொண்டு வந்து பயிர் செய்யப்பட்டமையால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று.

மணிலாக்கடலை *manilākkadalai,* பெ.(n.) வேர்க்கடலை; ground nut exported from Manilla. (சா.அக.).

மணிலாக்கயிறு *manilā-k-kayiru,* பெ.(n.) பேயன் வாழை நாரால் செய்த கயிறு; manilla rope.

[மணிலா + கயிறு]

[E. manilla + karyiru > த. மணிலாக்கயிறு]

மணிலாக்கிச்சிலி *manilā-k-kiccili,* பெ.(n.) கத்தூரி எலுமிச்சை; lime berry - tree of manila.

[மணிலா + கிச்சிலி]

மணிலாக்கொட்டை *manilā-k-kottai,* பெ. (n.) நிலக்கடலை; peanut; ground-nut.

[மணிலா + கொட்டை]

மணிலாச்சுருட்டு *manilā-c-curuttu,* பெ.(n.) ஒரு வகைப் புகைச் சுருட்டு; Manila cheroot.

[மணிலா + சுருட்டு]

மணிலாத்தா *manilāttā,* பெ.(n.) மணிலா சீத்தாப்பழம்; manilla custard apple. (சா.அக.).

மணிலாப்பயறு *manilappayaru,* பெ.(n.) வேர்க்கடலை; groundnut. (சா.அக.).

மத்திபகந்தம் *mattibakandam,* பெ.(n.) மாமரம்; mango tree. (சா.அக.).

மத்திபம் *mattibam,* பெ.(n.) **மத்திமம்** பார்க்க; see mattimam. (சா.அக.).

மத்திம *mattima,* பெ.(n.) நடு; sub acute. (சா.அக.).

மத்திமக்கிராமம் *mattima-k-kirāmam,* பெ.(n.) பண்வகை (பரத. இராக. 80); a melody type.

[Skt. modhyama+kirāma > த.மத்திமக்கிராமம்]

மத்திமக்கூர்மை *mattima-k-kūrmai,* பெ.(n.) நிலச்சாரம் (யாழ். அக.); salt extracted from sesame seeds.

[Skt. madhyan > த. மத்திம+கூர்மை]

மத்திமகண்டம் *mattima-kaṇḍam,* பெ.(n.) ஒன்பான் (நவ) கண்டத்தில் ஒன்று (பிங்); a continent, one of navakaṇḍam.

[Skt. madhyama > த. மத்திம]

மத்திமகாலம் *mattima-kālam,* பெ.(n.) விரைவு இல்லாமல் நடுத்தரமாகப் பாடும் முறை; medium speed in singing, moderato.

த.வ. நடுவண் காலம்

[Skt. madhyama > த. மத்திம]

மத்திமச்சம் *mattimaccam,* பெ.(n.) வாலுழுவை (சங்.அக.); black oil tree.

மத்திமசங்காரம் *mattima-šaṅgāram,* பெ. (n.) மாயை வரை அழிக்கப்படும் சங்காரம் (சி.சி. 1, 35; மறைஞா.); partial dissolution of the universe.

[Skt. madhyama + sam-hāra > த. மத்திமசங்காரம்]

மத்திமசாகசம் *mattima-šāgašam,* பெ. (n.) ஐந்நூறு பணம் அளவுள்ள தண்டத்தொகை (சுக்கிரநீதி, 172.); fine of 500 fanams.

[Skt. madhyama+sāhasa > த. மத்திமசாகசம்]

மத்திமதீபம் *mattima-dipam,* பெ. (n.) இடைநிலைத் தீவகம் (சீவக. 27, உரை.); a figure of speech.

[Skt. madhyama+dvīpa > த. மத்திமதீபம்]

மத்திமதேசம் *mattima-dēšam,* பெ.(n.) இமயமலைக்குத் தெற்கும், விந்தியத்திற்கு வடக்கும். வினசனத்துக்குக் கிழக்கும், பிரயாகைக்கு மேற்குமுள்ள நாட்டுப்பகுதி; midland country lying between the *Himālayas* on the north, the *Vindhayas* on the south, *Vinasana* on the west and *Prayaga* on the east.

[Skt. madhyama+tēja > த. மத்திமதேசம்]

மத்திமப்பிரகிருதி *mattima-p-pirakirudi,* பெ. (n.) உடம்பில் பித்தத்தின் தன்மை அதிகமாகப் பெற்றிருத்தல்; billous temperament of the body. (சா.அக.)

மத்திமபதலோபன் *mattimapada-lōpaṉ,* பெ. (n.) நடுச்சொல் தொக்க தொகை (பி.வி.21, உரை.); compound word which omits the middle member.

[Skt. madhyama + pada + lopa > த. மத்திமபதலோபன்]

மத்திமபரிசம் *mattima-parišam,* பெ.(n.) கோள்மறைப்புத் தொடக்கத்தின் நடுவேளை (வின்.); mean time of the beginning of an eclipse.

[Skt. madhyama+sparša > த. மத்திமபரிசம்]

மத்திமபுடம் *mattima-puḍam,* பெ.(n.) கோள் அளவை வகை (வின்.); mean longitude of a planet.

[Skt. madhyama+sphuḍā > த. மத்திமபுடம்]

மத்திமபுத்தி *mattima-putti,* பெ.(n.) கோளின் நாலும் இயங்கு வகை (வின்.); (Astron) mean daily motion of a planet.

மத்திமபுருடன் *mattima-puruḍaṉ,* பெ.(n.) முன்னிலை இடம் (பி.வி. 44.); second person.

த.வ. முன்னிலை

[Skt. madhyama+purusa > த. மத்திமபுருடன்]

மத்திமபூமி *mattima-būmi,* பெ.(n.) 1. உலகத்தின் நடுப்பாகம் (இக்.வ.); torrid zone. 2. குளிர்ச்சியும் வெப்பமும் சமமான நிலம் (வின்.); temperate zone.

மத்திமம்[1] *mattimam,* பெ.(n.) 1. நடு (சூடா.); middle position. 2. நடுத்தரம்; mediocrity; what is middling or ordinary. 3. மட்டமானது; anything interior or dull. "அவனுக்குக் காது மத்திமம்". 4. சமனிசை (பரத. இராக. 13.) (சூடா.); middle sound. 5. ஏழிசைகளில் நான்காவதாகிய 'ம' என்ற பண் (சிலப். 3,23,

உரை); fourth note of the gamut. 6. இலயை வகை (பரத. தாள. 51.); a variety of *ilayai* of moderate speed. 7. இடையுறுப்பு (பிங்.); the waist. 8. **மத்திமதேசம்** பார்க்க; see *mattima-dēšam* "மத்திம நன்னாட்டு" (சிலப். 15, 178) 9. சராசரியளவை (வின்.); mean average. 10. அசுவகதி ஐந்தனுள் ஒன்று (குறள், 814, உரைக்குறிப்பு); a pace of horse, one of five *ašuva-kadi*.

மத்திமம்[2] *mattimam,* பெ.(n.) நடுவு நிலைமை என்னுஞ் சுவை (தொல். பொ. 245, இளம்பூ.); *šānta rasa*, the sentiment of tranquility.

[Skt. *madhyama* > த. *மத்திமம்*]

மத்திமம்[3] *mattimam,* பெ.(n.) குறைந்த பார்வை; short sightedness. (சா.அக.)

மத்திமவிம்சதி *mattima-vimšadi,* பெ.(n.) அறுபது ஆண்டுக் கணக்கில் சர்வசித்து முதல் பிராபவ ஆண்டு வரையுள்ள இடையிருபது ஆண்டுகள் (பஞ்.); the second period of 20 years from *šarvašittu* to *parāpava* in the jupiter cycle.

[*மத்திமம் + விம்சதி*]

[Skt. *madhyma+vimcati* > த. *மத்திமவிம்சதி*]

மத்திமன் *mattiman,* பெ.(n.) 1. எளிமையாக இருப்பவன்; man of ordinary abilities. 2. நடுநிற்போன்; impartial person; unpire. 3. நடுத்தரமானவன் (யாழ். அக.); person of middling status or position.

[Skt. *madhyama* > த. *மத்திமன்*]

மத்தியமாவதி *mattiyamāvadi,* பெ.(n.) பண் வகை; (Mus.) a melody type.

[Skt. *madhyamāvati* > த. *மத்தியமாவதி*]

மத்தியரேகை *mattiya-rēgai,* பெ.(n.) நிலநடுக்கோடு (பூமத்திய ரேகை) (இக்.வ.); equator.

[Skt. *madhya-rēkhā* > த. *மத்தியரேகை*]

மத்தியத்தம் *mattiyattam,* பெ.(n.) அமைவு செய்தல், இணக்கம் செய்தல் (பஞ்சாயத்து); mediation, arbitrators.

த.வ. **இணக்கம்**

[Skt. *madhyastiba* > த. *மத்தியத்தம்*]

மத்தியத்தர் *mattiyattar,* பெ.(n.) இணக்கம் செய்வோர்(பஞ்சாயத்தார்); panchāytdārs, arbitrators, umpires.

த.வ. **இணக்கர், நடுவர்**

[Skt. *madhyastha* > த. *மத்தியத்தர்*]

மத்தியானசுரம் *mattiyānašuram,* பெ.(n.) நடுப்பகலில் காணும் ஒரு வகைக் காய்ச்சல்; a fever appearing at noon. (சா. அக.).

[Skt. *madhyana* > த. *மத்தியான*]

மத்தியானம் *mattiyānam,* பெ.(n.) நடுப்பகல் (பிங்); noon, mid-day. "*மத்தியானமு மானயு மகன்ற பின்*" (பிரபோத. 10, 12).

த.வ. **நண்பகல்**

[Skt. *madhyāhna* > த. *மத்தியானம்*]

மத்தோன்மத்தன் *mattōnmattan,* பெ.(n.) 1. முழுப் பித்தன்; person who has gone utterly mad. "*எனை மத்தோன் மத்தனாக்கி*" (திருவாச. 34, 3). 2. மிகச் செருக்கு உடையோன்; person eaten up with pride.

[Skt. *mattōnmatta* > த. *மத்தோன்மத்து*]

மதனி *madani,* பெ.(n.) 1. **மதினி** பார்க்க; see madini. "*இச்சீதையும் உன் மதனி*" (இராமநா. அயோத். 21).

மதினி *madini,* பெ.(n.) 1. அண்ணன் மனைவி; elder brother's wife. 2. மைத்துனி (இ.வ.); wife's sister. 3. மாமன் மகளிருள் தனக்கு மூத்தவள்; daughter of one's maternal uncle, older than oneself. 4. தமையன் மகள்; elder brother's daughter.

மதியம் *madiyam,* பெ.(n.) 1. நடு; centre. "ஓரினன் மதியத்தினை யோதுமே" (மேருமந். 1127). 2. நடுப்பகல் (இ.வ.); noon, midday.

[Skt. *madhya* > த. *மதியம்*]

மதுசூதனன் *madušūdaṉaṉ,* பெ.(n.) திருமால் (மதுவென்னும் அசுரனைக் கொன்றவன்); Viṣṇu,as the slayer of madhu.

[Skt. madhu+šūdana > த. மதுசூதனன்]

மதுசூதன் *madušūdaṉ,* பெ. (n.) **மதுசூதனன்** பார்க்க; see madušūdaṉaṉ "மதுசூதனையயன்றி மற்றிலே னென்று" (திவ். திருவாய். 2,7,6.)

மதுரகவி *madura-kavi,* பெ. (n.) 1. நாற் கவிகளுள் இனிமை பெருகப் பாடும் பாவலன் (கவி) (பிங்.); poem speciallycharacterised by mellifluous language, one of nāṟ - kavi. 2. இன்கவி பாடும் புலவன்; poetwho composespoemsinmellifluouslanguage. 3. நம்மாழ்வாரின் மாணாக்கரும் நாலாயிரம் தெய்வப் பனுவலில் (திவ்யப் பிரபந்தத்தில்) 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என்ற பனுவல் பாடிய வருமான ஆழ்வார்; (திவ். கண்ணிநுண். 10.)a Vaiṣṇava saint an disciple of *Nammāḻvār,* the author of *Kaṇṇinuṇ-šiṟuttāmbu* in *Divya-p-pirapandam.*

[Skt. madura-kavi > த. மதுரகவி]

மம்மதுகான்வராகன் *mammadukāṉ-varāgaṉ,* பெ. (n.) காசு வகை (பணவிடு. 116.); a coin.

[Ar. மகமதுகான் + வராகன்]

மம *mama,* பெ.அ. (adj.) என்னுடைய; mine. *"மமவி நாயகன்"* (திருப்பு. 16.).

[Skt. mama > த. மம]

மமதை *mamadai,* பெ. (n.) செருக்கு; conceit, vanity. *"பரசுராமனுக்கு மமதையைப் பிரித்து" (இராமநா. பாயி. 5).*

[Skt. mama-tā > த. மமதை]

மய்யம் *mayyam,* பெ. (n.) நடு, இடை (இ.வ.); middle, centre.

[Skt. madhya > த. மய்யம்]

மயுராசன் *mayūrāšaṉ,* பெ. (n.) குபேரன் (யாழ்.); kubēra, as lord of kinnaras.

மயூரகதி *mayūragati,* பெ. (n.) குதிரை நடை ஐந்தனுள் மயில் போன்ற நடை; a pace of horse, remembling that of a Peacock.

மயூரம் *mayūram,* பெ.(n.) 1. மயில் (சூடா.); peacock. "வழிக்குத் துணை வடிவேலும் .... மயூர முமே" (கந்தரலங். 70.) 2. **மயூராசனம்** பார்க்க; see mayūrāšaṉam. "மயூர முழங்கை யிரண்டு முந்திப் புறத்தழுந்தப் புவிகை யூன்றி யகமொருமித் தடிநீட்டித் தலைநிமிர்த்து வைகல்" (பிரபோத. 44,10.). 3. **மயூரகதி** பார்க்க; see mayūra-kadi. 4.செடி வகை; peacock's crest. 5. வாத நாராயணம்; flamboyant. 6. ஒருவகை சிறு மரம்; falsepeacock'sfoottree. 7. நாயுருவி; a plant growing in hedges and thickets. 8.குராசானி என்னும் ஓமமுண்டாகும் ஒருவகைப் பூடு; blackhenbane.

[Skt. mayūra > த. மயூரம்]

மயூராசனம் *mayūrāšanam,* பெ. (n.) ஓக வகையிலொன்று; a kind of posture.

மயேச்சரன் *mayēccuraṉ,* பெ. (n.) 1. சிவன்; Sivaṉ. 2. யாப்பிலக்கண நூலாசிரியருள் ஒருவர்; theauthorofatreatiseonprosody. "மயேச்சுரர் முதலாகிய ஒரு சார் ஆசிரியர்." (காரிகை, உறுப்பு. 14. உரை.).

த.வ. பெருவுடையார்

[Skt. mahēšvara > த. மயேச்சுரன்]

மாகதர் *māgadar,* பெ. (n.) 1. வடநாட்டிலுள்ள மகதநாட்டார். (யாழ்.அக.); inhabitants of Magadha, in North India. 2. தென்னாட்டுள்ள நடுநாடாகிய மகதநாட்டினர்; (msc); inhabitants of *naṭunāṭu.* 3. அரசர் திருமுன் இருந்து அவர் புகழ்பாடும் தொழிலினர் (சிலப் 5, 48.); professional Minister's who assuming a sitting posture in the presence of sovereigns sing their praises and exploits.

[Skt. māgadha > த. மாகதர்.]

மாகதி *māgadi*, பெ. (n.) 1. பிராகிருத மொழி வகை; Māgadhi, a secondary prākṛt language. 2. திப்பிலி (மலை); long pepper. 3. முல்லைவகை (நாமதீப. 346.); trichotomus - flowering smooth jasmine. 4. ஊசிமுல்லை (பிங்.); eared jasmine 5. சீனிச்சருக்கரை (சங். அக.); sugar.

[Skt. māgadhī > த. மாகதி.]

மாகம்[1] *māgam*, பெ. (n.) கொடுநுகம் (மகம்) (விண்மீன்) (பிங்.); the 10th nakṣatra.

[Skt. maghā > த. மாகம்¹.]

மாகம்[2] *māgam*, பெ. (n.) 1. மேலிடம்; upper space. 'மாக மாடத்து' (கம்பரா. மிதிலைக் 83.) 2. வானம்; sky, air, atmosphere. 'மாக விசும்பின்' (புறநா. 35). 3. மேல் உலகம்; *svarga* 'மாகந் தொட நணி நிவந்த கொடி' (ஞானா. 34,15). 4. திக்கு point of the compass. 'மாகநீள் விசும் பிடை' (சீவக. 569.). 5. மேகம் cloud. (சீவக. 569. உரை.); cloud.

[Skt. maghā-kha > த. மாகம்.]

மாகாணம் *māgāṇam*, பெ. (n.) 1. நாட்டுப் பகுதி; district, province. 2. ஒரு வரியதி காரியின் (கர்ணத்தின்) ஆய்கையின் கீழ் உள்ள பல சிற்றூர்கள் அடங்கிய நாடு; division of a taluk, consisting of several villages, under the management of one *karnam* (R.F.). 3. மக்கள் கூட்டம்; group of dependants gathered for a common purpose. 'ஆள் மாகாணம்'

[U. makān > த. மாகாணம்.]

மாகாத்மியம் *māgātmiyam*, பெ. (n.) மகிமை, grreatness.

[Skt. māhāt-mya > த. மாகாத்மியம்.]

மாகாளன் *māgāḷaṉ*, பெ. (n.) 1. மகாசாத் தனுடைய தலைமைக் கணக்கன்; the chief attendant of *makāśātta*. 'வீர மாகாள னென்போன்' (கந்தபு. மாகாளர்வரு.3) 2. சிவகணத்தலைவரில் ஒருவன் (அபி. சிந்), a commander of Siva's hosts.

[Skt. mahā-kāla > த. மாகாளன்.]

***மாங்கலியசூத்திரம்** *māṅgāliya-šūttiram*, பெ. (n.) 1. தாலிச்சரடு (சிலப். 1, 47, அரும்.); the cord of the marriage-badge.

[Skt. māṅgalya+sūtra > த. மாங்கலிய சூத்திரம்]

மாங்கலியப்பிச்சை *māṅgāliya-p-piccai*, பெ. (n.) தான் தாலியுடன் வாழும் வகையில் தன் கணவனுயிரைக் காக்குமாறு ஒருத்தி வேண்டுகை; intercession of a wife for the life of her husband, as pleading for the retention of her tali.

[Skt. māṅgalya > த. மாங்கலியப்பிச்சை.]

மாங்கலியம் *māṅgāliyam*, பெ. (n.) தாலி (சிலப். 2, 63 உரை.); marriage badge.

[Skt. māṅgalya > த. மாங்கலியம்.]

மாங்கிசம் *māṅgišam*, பெ. (n.) இறைச்சி (மாமிசம்); flesh; meat. 'மாங்கிசத்துடனே விரவின சோறு' (சிலப் 5, 68, அரும்.)

[Skt. māṃsa > த. மாங்கிசம்.]

மாச்சரியம் *māccariyam*, பெ. (n.) 1. பொறாமை; envy. 'மாச்சரியத் தாலிகழின் வந்த தென்' (உபதேசரத். 2). 2. பகைமை; *malice; hostility*. 'மாச்சரியங் கொண்டரக்கர் அட்ட திசை மேலும் மேவினார்' (இராமநா. யுத். 88.).

[Skt. mātsarya > த. மாச்சரியம்.]

மாசூல் *māšūl*, பெ. (n.) பயிரின் விளைச்சல்; product of a field, produce of grain.

[U. māhsul > த. மாசூல்.]

மாசூன் *māšūṉ*, பெ. (n.) சுவையும் நறுமணமும் ஊட்டிய மயக்கவுணவு வகை (C.G.).; an inebriating preparation, sweetened and spiced.

[U. majūṉ > த. மாசூன்.]

மாஞ்சா *māñjā*, பெ. (n.) காற்றாடிக் கயிற்றில் தடவுதற்குக் கண்ணாடிப் பொடியோடு கலந்த பிசின் வகை; a kind of glue, prepared with glass - dust and used to rub the kite-string.

[U. māñjā > த. மாஞ்சா.]

மாத்துவம் *māttuvam,* பெ. (n.) மாத்துவரின்'' (துவைதம்) இருமைக் கோட்பாடு; dualist or *Dvaita* school of Madhva.

[Skt. mādhva > த. மாத்துவம்.]

மாத்துவர் *māttuvar,* பெ. (n.) மாத்துவர் மதத்தினரான துவைதிகள்; followers of *Madhva's Dvaita* philosophy.

[Skt. mādhva > த. மாத்துவர்.]

மாதா *mādā,* பெ. (n.) 1. தாய் (பிங்.); mother 'மாதாபிதாவாகி' (தேவா. 1227,7). 2. மலைமகள் (பிங்.); Pārvatī. 3. கலைமகள் (பிங்.); Saraswati. 4. அறிபவன் (சங். அக.); the knower.

[Skt. mātā > த. மாதா]

மாதுலன் *mādulaṉ,* பெ. (n.) 1. தாயுடன் பிறந்த ஆண், மாமன்; maternal uncle. 'ஒரு சாரவன் மாதுலனென (கல்லா. 43, 24) 2. பெண் கொடுத்த மாமன்; father-in-law. 3. 'நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்' (கம்பரா. ஆற்றுப். 3.)

[Skt. mātula>த. மாதுலன்.]

மாந்திரீகன் *māntirīgaṉ,* பெ. (n.) மந்திர ஆற்றலால் சிறந்த ஆற்றலைச் செலுத்துபவன் (இ.வ.); one who exercises supernatural powers by means of mantras.

[Skt. māntrika>த. மாந்திரீகன்.]

மாபாடியம் *mā-pāṭiyam,* பெ. (n.) 1. பேருரை; elaborate commentory. *'சிவஞானபோத மாபாடியம்'* 2. பாணினி சூத்திரங்களுக்குப் பதஞ்சலியார் செய்த பேருரை. (நன். 373, விருத்.); Patañjali's commentary on the Sūtras of pāṇini.

[Skt. mahā-bhāṣya>த. மாபாடியம்.]

மாமிசபட்சணம் *māmisa-paṭcaṇam,* பெ. (n.) ஊனுணவு; flesh eating.

[Skt. māṃsa+paṭcana>த. மாமிசபட்சணம்.]

மாமிசபட்சணி *māmiśa-paṭcaṇi,* பெ. (n.) 1. ஊனுண்போன் (வின்.); flesh eater. 2. புலாலுண்ணும் விலங்கு (இக்.வ.); flesh eating animal, dist. fr. śāka-paṭcaṇi.

[Skt. māṃsa+paṭcana>த. மாமிசபட்சணி.]

மாமிசம் *māmiśam,* பெ. (n.) 1. தசை; flesh muscle. 2. இறைச்சி; meat.

[Skt. māṃsa>த. மாமிசம்.]

மாமூல் *māmūl,* பெ. (n.) பழைய வழக்கம்; that which is established, customary or usual, established usage, immemorial custom.

[Skt. māmūl>த. மாமூல்.]

மாமூல்கடமை *māmūl-kaḍamai,* பெ. (n.) குலவழக்கப்படி ஏற்பட்ட வரித்திட்டம் (உ.வ.); revenue rate fixed by longstanding custom.

[Skt. māmūl>த. மாமூல்+கடமை.]

மாயாவாதம் *māyā-vādam,* பெ. (n.) உலகம் யாவும் மாயையே என்று பௌத்தம் அத்துவைத மதங்களில் கூறப்படும் கொள்கை; the doctrine that regards the material universe as an illusion, applied to the doctrines of the Advaita and Buddhism. *'மிண்டிய மாயாவாத மென்னுஞ் சண்ட மாருதம்' (திருவாச. 4, 54.)*

[Skt. māyā+vāta>த. மாயாவாதம்.]

மாயூரம் *māyūram,* பெ. (n.) 1. மயில்; Peacock; (திருவானைக்வுலா. 233.) (வின்.) 2. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரு சிவன் கோயில்; māyavaram, a siva shrine in the Tanjore District.

[Skt. māyūra+vāta>த. மாயூரம் >த. மயில்]

மார்க்கம் *mārkkam,* பெ. (n.) 1. வழி (பிங்.); road, path, way, orbit. 2. நெடுந்தெரு (பிங்.); street, long street, 3. ஒழுங்கு (.உ.வ.); regularity, order. 4. முறை; manner. 'இன்னுயிர் போமார்க்கம்' (நாலடி, 323). 5. ஒழுக்கம் (வின்.); conduct, behaviour, course of duty. 6. சமயம் (பிங்); religion. 7. மூலம்; first principle, cause. 8. குலம்;

lineage, line of family. 'அவன் வேரற மார்க்க முடித்த விலாளிகள் நாயகன்' (திருப்பு. 266.). 9. மறுதலை. (அக.நி.); alternative. 10. ஆராய்ச்சி (யாழ்.அக.); investigation. 11. வழி; ways, means. 'மார்க்கமொன்றறிய மாட்டா மனிசரிற் றுரிசனாய மூர்க்கனேன்' (திவ். திருமாலை, 32.) 12. **மார்கழி**. பார்க்க; see *margali*. 13. மான்மணத்தி. (யாழ். அக.); musk. 14. அகப்பொருட்டுறை. (இலக். வி. 583. உரை.); theme of love poetry. 15. கூத்து வகை. (பிங்.); a kind of dance. 16. தாள வகையுள் ஒன்று (சது); an element of time-measure, one of ten *tāla-p-pirāṇam*. 17. குதிரையடி நிலை; pace of horse. 'பரிப்புரவி மார்க்கம் வருவார்.' (பரிபா. 9, 51.) உலகம் (யாழ். அக.); world.

[**Skt.** *mārga*>த. மார்க்கம்.]

மார்கழி *mārgaḷi*, பெ. (n.) சிலைத் திங்கள் சூரிய மாதம் பன்னிரண்டுள் ஒன்பதாவது; the ninth solar month = December - January. "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்' (திவ். திருப்பா..1)

[**Skt.** *mārgaśīsa*>த. மார்கழி.]

மார்வாரி *mārvāri*, பெ. (n.) வடஇந்தியாவிலுள்ள மார்வார் நாட்டிலிருந்து வந்து கொடுக்கல் வாங்கல் வணிகம் முதலிய தொழில் புரியும் ஓர் இனத்தவர்; a caste of traders and money lenders, from *Mārwār* in North India.

[**Skt.** *mārwārī*>த. மார்வாரி.]

மார்வாடி *mārvāṭi*, பெ. (n.) **மார்வாரி** பார்க்க; see mārvāri.

மார்த்தாண்டன் *mārttānḍaṉ*, பெ. (n.) கதிரவன் (பிங்.); the sun. 'மார்த்தாண்டர் பன்னிருவ ருலாவல் போலும்' (திருப்போ. சந்த ஊசல்.2.)

[**Skt.** *mārtānḍa*>த. மார்த்தாண்டன்.]

மார்ச்சாலநியாயம் *mārccalaniyāyam*, பெ. (n.) ஒரு தலை சார்பான முடிவு (வின்.); biassed judgment, as that of a cat.

[**Skt.** *mārjāla+nyāya*>த. மார்ச்சாலநியாயம்]

மார்ச்சாலம் *mārccālam*, பெ. (n.) 1. பூனை; cat. 2. கோமேதகம்; a gem, cat's eye - cinnamon stone 3. மரநாய்; pole, cat or palmyra dog. (சா.அக.).

[**Skt.** *mārjāla*>த. மார்ச்சாலம்.]

மாரணஞ்செய்தல் *māraṇañ-jey*, தொ.பெ. (vbl.n.) இறக்கும்படியாக மந்திரத்தால் அல்லது செய்வினையால் செய்கை; causing death by magic or witch craft.

மாரணம் *māraṇam*, பெ. (n.) 1. இறப்பு; death. "மாரணஞ் செயலன்றி வதிவனோ" (சேதுப். இராமனருச். 188). 2. அழிவு (இலக். அக.); destruction. 3. எட்டுவகை கருமத்துள் ஒருவனை மந்திரத்தாலிறக்கச் செய்யும் கலை; the art of causing one's death by incantation, one of *aṣṭa-karumam*. 'நெஞ்சமாகிய பாதரச மாரணமாய் விடும்' (தாயு. பாயப்புலி. 25.). manthiram causing death. (சா.அக.).

[**Skt.** *māraṇa*>த. மாரணம்.]

மாரணமந்திரம் *māraṇamandiram*, பெ. (n.) இறப்பை உண்டாக்கும் மந்திரம்; *mandiram* causing death. (சா.அக.).

மாரணவேதர் *māraṇa-vēdar*, பெ. (n.) பொன்னாக்கும் முறைகளை இயற்றிய சித்தர்களிலொருவர்; one of the siddhars who is an alchemist.(சா.அக.).

மாரீசம் *mārīśam*, பெ. (n.) 1. ஏய்ப்பு, வஞ்சகம் (வின்.); hypocrisy, dissimulation. 2. மூர்ச்சை. (இராசவைத். 103); swoon.

[**Skt.** *mārica*>த. மாரீசம்.]

மாரீசன் *mārīśaṉ*, பெ. (n.) இராமாயணத்தில் இராவணன் ஏவலாற் பொன்மானுருக் கொண்ட அரக்கன்; a *Rākṣasa*, who, in the guise of a golden deer and at *Rāvaṇa's* instigation, enticed Rāma away from his

hermitage. *'இந்திய மடக்கி நின்ற மாரீச னிருக்கை சேர்ந்தான்' (கம்பரா. மாரீச. 169.).*

[Skt. Mārīca>த. மாரீசன்.]

மாருதம் *mārudam,* பெ. (n.) காற்று (பிங்.); wind. *'மறிகடலு மாருதமும்'* (திவ். இயற். 1, 10).

[Skt. māruta>த. மாருதம்.]

மாருதகணம் *māruda-kaṇam,* பெ. (n.) தேமாங்கனி என்னும் வாய்பாடு பற்றி வருவதும் நூன்முதற் செய்யுளின் முதலில் அமையத் தகாததும் அமங்கலமுமான செய்யுட்கணம். (திவா.); metrical foot of nēr and one nirai (two), as *tēmāṅgaṇi,* considered inauspicious at the commencement of a poem.

மாருதன் *mārudaṉ,* பெ. (n.) காற்றுக்கடவுள்; Vāyu, the God of wind. *"மாருத னிசைந்து ...தேரின் மீமிசைப் பாய்ந்து" (கந்தபு. படையெ.2)*

[Skt. māruta >த. மாருதன்.]

மாருதி *mārudi,* பெ. (n.) 1. அனுமான்; Hanuman, as a son of the wind-god. 'மாருதியல்ல னாகி னீயெனு மாற்றம் பெற்றேன்' (கம்பரா. அங்கத.13). 2. வீமன் (பிங்); *Bhīmasēna,* as a son of the wind-god.

[Skt. māruti>த. மாருதி.]

மால்[1] *māl,* பெ. (n.) 1. எழுதகக்கருவி (வின்.); wooden mould for forming the mouldings of a pillar or cornice of wall. 2. செங்கற் கட்டளை. (இ.வ.); mould for making bricks. 3. காளவாய். (இ.வ.); brick - kiln. 4. முன் வடிவு (மாதிரி) (வின்.); form, plan, fashion. 5. எல்லை. (வின்.); demarcation, limit. 6. வலை வகை (வின்.); a kind of net. 7. கொட்டில், இலாயம் (வின்.); stable, stall. 8. அரசிறை வகை. (வின்); quit - rent. 9. சொத்து; property.

[Ar. māl>த. மால்.]

மால்[2] *māl,* பெ. (n.) அரண்மனை; Palace. 'திருமலைநாயக்கர்மால்'

[Ar. mahall>த. மால்.]

மால்குசாரி *māl-kušāri,* பெ. (n.) வரிசெலுத்து தற்குரிய நிலம் (C.G.); land liable to pay revenue to government, opp. to *lākiraj.*

[U. māl-guzārī >த. மால்-குசாரி.]

[Skt. māruta >த. மாருதகணம்.]

மால்சாமீன் *māl-šāmīṉ,* பெ. (n.) பிணைய சொத்து (C.G.); property security.

[Ar. māl + zāmin>த. மால்சாமீன்.]

மால்தார் *māltār,* பெ. (n.) உரிமையன் (இ.வ.); proprietor.

[Ar. māl >த. மால்தார்.]

மால்பண்டாரி *māl-paṇḍāri,* பெ. (n.) 1.வீட்டுப் பொருள்களைப் பாதுகாக்கும் மேலாள்; steward, store keeper. 2. கப்ப லுரிமையாளனுடைய கீழாள் (Naut.); clerk of a ship owner.

[Ar. māl +paṇṭāri>த. மால்பண்டாரி.]

மால்போடு-தல் *māl-pōtu-,* 20 செ.கு.வி. (v.i.) எல்லை வரைதல் (இ.வ.); to draw a plan; to demarcate.

[Ar. māl >த. மால்+போடு-தல்.]

மால்முடி-தல் *māl-muḍi-,* 4 செ.கு.வி. (v. i.) வலை பின்னுதல் (இ.வ.); to make a net.

[Ar. māl >த. மால்முடி-தல்.]

மால்வெட்டு-தல் *māl-veṭṭu-,* 5 செ.கு.வி. (v. i.) முன்வடிவு (மாதிரி) செய்தல். (வின்.); to out a form or pattern, make a plan or diagram. 2. பாத்தியமைத்தல் (யாழ். அக.); to form plots bounded by ridges. 3. கையூட்டு தருதல்; to bribe (இ.வ.).

[Ar. māl >த. மால்+வெட்டு-தல்.]

மாலதி *mālati,* பெ. (n.) 1. மல்லிகை (சூடா.); arabian jasmine. 2. சிறு செண்பகம் (சூடா.); cenpaka flower tree. 3. சந்திரிகை. (இலக். அக.); moon light. 4. விளக்குத் தண்டு (பிங்.); lamp-stand. 5. நிருவாணம்; salvation.

[Skt. mālatī >த. மாலதி.]

மாலாதீபகம் *mālāa-tipagam,* பெ. (n.) 1. ஒரு சொல் மாலைபோலத் தொடர்ந்து எல்லா வாக்கியங்களோடும் சென்று பொருள்

தருவதாகிய அணிவகை.; (rhet.) a figure of speech in which a word is taken with several successive sentences and construced.

[Skt. mālā-dipaka >த. மாலாதீபகம்.]

மாலிக் *mālik*, பெ. (n.) 1. சொத்துக்கு உரியவன்; (C.G.) proprietor, owner, master. 2. இறைவன்; lord, king.

[Ar. mālik >த. மாலிக்.]

மாலிசு *mālišu*, பெ. (n.) குதிரை முதலிய வற்றைத் தேய்த்துத் தூய்மைப் படுத்துகை (இ.வ.); rubbing, as a horse; scrubbing, polishing, as a floor.

[Persn. mālish >த. மாலிசு.]

மாலியவான் *māliyavāṉ*, பெ. (n.) 1. இராவணன் பாட்டனாகிய தலைமை யமைச்சன். (கம்பரா. இலங்கைகா. 6.); a *Rākṣasa, grandfather* and chief counsellor of *Rāvaṇa*. 2. ஒரு மலை. (கந்தபு. அண்டகோ. 34.) a mount. 3. 513 சிகரங்களையும் 65 மேனிலைக் கட்டுகளை யுமுடைய கோயில் (சுக்கிரநீதி, 230); temple with 513 towers and 65 floors.

[Skt. Mālyavān >த. மாலியவான்.]

மாலின்யம் *māliṉyam*, பெ. (n.) 1. கேடுறுகை; being spoiled. 2. அழுக்கு (இலக். அக.); dirt.

[Skt. mālinya >த. மாலின்யம்.]

மாலினி *māliṉi*, பெ. (n.) 1. காளி (பிங்.); durgā. 2. மலைமகள் (நாமதீப. 20.); Pārvati.

[Skt. mālinī >த. மாலினி.]

மாலுதானம் *māludāṉam*, பெ. (n.) பச்சைப் பாம்பு. (சூடா.); whipsnake.

[Skt. māludhāna >த. மாலுதானம்.]

மாலுமி *mālumi*, பெ. (n.) கப்பலோட்டி (பிங்.); captain of a vessel, pilot, navigator.

[U. muallin >த. மாலுமி.]

மாவுத்தன் *māvuttaṉ*, பெ. (n.) யானைப்பாகன்; elephant-driver. *'மாவுத்தர் நெய்ய வேலெடுத்து'* (பணவிடு.261.).

[H. māhaut >த. மாவுத்தன்.]

மாளயம் *māḷayam*, பெ. (n.) 1. மாளயபட்சம்; the dark fortnight in the lunar month of Bhādrapada. *'கன்னி வியன்றிங்கள் வெண்டிங்கள் மெலியும் பக்க மாளயத்தை'* (சேதுபு. துராசா. 13). 2. முன்னோற்குக் கன்னி (பாத்திரபத) மாதத்துக் கரும்பக்கத்து கிருட்டிணபட்சம்)ச் செய்யும் சடங்கு; offerings to deceased ancestors made during Makāḷayam.

[Skt. māhālaya >த. மாளயம்.]

மாளவகவுளம் *māḷava-kavuḷam*, பெ. (n.) ஓர் பண் வகை; a musical mode.

[Skt. mālavi-gauda >த. மாளவகவுளம்.]

மாளவம் *māḷavam*, பெ. (n.) ஐம்பத்தாறு நாடு களுள் ஒன்று; country of Malwa, one of 56 *tēcam*. *'வான்குளம் புடையன மாளவத் தகத்த'* (சீவக. 2159).

[Skt. Mālava >த. மாளவம்.]

மானசதீட்சை *māṉaša-tīṭcai*, பெ. (n.) நோன்புவகை ஏழனுள் சீடனது மனத்துள் ஒகசித்தியால் ஆசிரியன் நுழைந்து அவனுக்கு மன, மொழி, மெய் ஆகியவற்றால் தூய தாக்கும் நோன்பு வகை (சைவச. ஆசாரி. 65, உரை); (šaiva) a mode of initiation in which a guru spiritually enters his disciple's mind by yōga and purifies him, one of seven tītcai.

[Skt. mānasa+tītca >த. மானசதீட்சை.]

மானசாரம் *māṉašāram*, பெ. (n.) *சிற்பநூல் முப்பத்திரண்டனுள் ஒன்று;* a treatise on architecture, one of 32 širpa-nūl. *'மானகற் பாரியஞ் சிருட்ட மானசாரம்' (இருசமய. சிற்பசாத். 2).*

[Skt. māna-sāra >த. மானசாரம்.]

மானசீகம் *māṉasigam*, பெ. (n.) மனத்தில் மட்டும் இருப்பது, உள்ளத்தில் நினைப்பது ; that which is or which is done in the mind.

'அவர் பிழைக்க வேண்டும் என்று மானசீகமாக வணங்கினாள். என்னுடைய மானசீக குரு.' (உ.வ.).

மானிடசென்மம் *mānida-šenmam,* பெ. (n.) 1. மக்கட் பிறப்பு; birth as a human being. 2. மானிடம் (வின்.); mankind, ingeneral.

த.வ. மாந்தப்பிறப்பு

[Skt. mānusa+janma>த. மானிடசென்மம்]

மானியம் *māniyam,* பெ. (n.) 1. சிற்றூர் மேம்பாட்டுக்காகச் செய்த நன்மைக்குப் பலனாக விடப்பெற்ற இறையிலி நிலம்; land held either rent free or at a low rate of rent in consideration of services rendered to a village community (R.F.) 2. நிலத்தின் தீர்வையை மானமாகப் பெறும் கற்கழுவனீர்; grant of revenue of a certain extent of land. 3. அளவிடுகை. (யாழ். அக.); computation.

[Pkt. mānya >த. மானியம்.]

மானுடதீர்த்தம் *mānuda-tirttam,* பெ. (n.) ஐவகை தெய்விய நீர்த்துறைகளுள் சிறு விரல் மூலம் விடும் மந்திர நீர் (சைவச பொது. 66,உரை); sanctified water ceremoniously poured down through the little finger one of pañca-tirttam.

[Skt. mānusa+tirtha >த. மானுடதீர்த்தம்.]

மானுடம் *mānudan,* பெ. (n.) **மானிடசென்மம்** பார்க்க; see mānita - senmam. 'கிலுத்த மானுட மலான மற்றை மானுடமில்லை' (காஞ்சிப்பு. நகரேற். 106.) 'ஊர்வபதி னொன்றா மொன்பது மானுடம்' (குறள்/, 62, உரை). 2. மானிடவேள்வி. (வின்.); mānita-vēḻvi.

[Skt. mānusa >த. மானுடம்.]

மிசல்கர்ணம் *mišal-karṇam,* பெ. (n.) தலைமைக் கணக்கன் (அ) சரியாய் நியமனம் பெற்ற கணக்கன்; (C.G.) principal or regularly appointed a ccountant of a village.

[Skt. karṇa+ U. misl >த. மிசல் கர்ணம்.]

மிசல்தீர்வை *mišal-tirvai,* பெ. (n.) பக்க நிலங்கட்கு அமைந்த தீர்வையை ஒட்டி ஏற்படுத்தப்பட்ட தீர்வை; (C.G.) assessment on a field made of the same rate as that of adjacent lands.

[U. misl >த. மிசல்தீர்வை.]

மிசல்பந்தி *mišalpanti,* பெ. (n.) ஒவ்வொரு சிற்றூரிலும் சிற்றூர் வேலைக்காரரின் பெயர்களைப் பதிவு செய்திருக்கும் நூல்; (C.G.) register of the names of persons holding the village offices in each village.

[U. misl >த. மிசல்பந்தி.]

மிசிர்தேசம் *mišir-tēšam,* பெ. (n.) எகிப்து தேசம்; egypt.

[Ar. mišr-tēsal >த. மிசிர்தேசம்.]

மிசிரவர்ணம் *mišira-varṇam,* பெ. (n.) 1. சாதிக்கலப்பு (வின்.); mixed class or tribe. 2. கலப்பு நிறம்; mixed colour.

[Skt. mišra+rarṇa >த. மிசிரவர்ணம்.]

மிசிரன் *miširan,* பெ. (n.) கல்வி முதலிய வற்றால் உயர்ந்தவருக்கு வழங்கும் பட்டப்பெயர் 'பட்டபாண மிசிரன் (வின்.); a honorific title affixed to names of great man and scholars.

[Skt. mišra >த. மிசிரன்.]

மிட்டாய் *miṭṭāy,* பெ. (n.) பண்ணிகார வகை; sweetmeat.

[Ar. mitāyi >த. மிட்டாய்.]

மிட்டாய்க்காரன் *miṭṭāy-k-karan,* பெ. (n.) மிட்டாய் விற்பவன்; confectioner, dealer in sweetmeats.

[Ar. mitāyi >த. மிட்டாய்க்காரன்.]

மித்தாச்சமயம் *mittā-c-camayam,* பெ. (n.) பொய்ச்சமயம்; false religion. 'மித்தாச்சமயத் தனை வரும்' (திருநூற். 90.)

[Skt. mithya >த. மித்தாச்சமயம்.]

மித்தியம் *mittiyam,* பெ. (n.) பொய்; (யாழ். அக.) lic, falehood.

[Skt. mithya >த. மித்தியம்.]

மித்தியாநயம் *mittiyā-nayam,* பெ. (n.) ஏழிசை நயங்களைப் பிழைபடப் பயன்படுத்தும் முறை. (மேரு மந் 704 உரை.); (jaina.) flase application of the seven fold formula of the doctrine of qualified predication.

[Skt. mithyā-naya>த. மித்தியாநயம்.]

மித்தியாவாதி *mittiyā-vādi,* பெ. (n.) பொய்யன் (ஈச்சுரநிச்சயம், 179.); liar.

[Skt. mithyā-vādin>த. மித்தியாவாதி.]

மித்திரத்துரோகி *mittira-t-turōgi,* பெ. (n.) நண்பன் போல் நடித்துத் தீங்கு புரிவோன் (வின்.); traitor,asbetrayingfriendship.

[Skt. mitra+drōhin >த. மித்திரத் துரோகி.]

மித்திரபேதம் *mittira-pēdam,* பெ. (n.) நட்பினரைப் பிரிக்கை (பஞ்சதந். கதைவா. 9.); sowing discord among friends.

[Skt. mitra + bhēda >த. மித்திரபேதம்.]

மித்திரம் *mittiram,* பெ. (n.) நட்பு; friendship, affection. 'மித்திர வச்சிரவ ணற்கு விருப்பர் போலும்' (தேவா. 598,9)ழு

[Skt. mitra >த. மித்திரம்']

மித்திரன் *mittiran,* பெ. (n.) 1. நண்பன்; friend, ally, adherent. 'மித்திரர் வதன நோக்கான்' (கம்பரா. மாயாசீ. 60). 2. உறவினன். (நாமதீப. 188); relative. 3. பன்னிருஆதித்தரு ளொருவன். (நாமதீப. 66.); a deity repre- senting the sun, one of tuvātacātittar. 4. கதிரவன்; sun.

[Skt. mištra >த. மித்திரன்.]

மிதாசனம் *mitāsanam,* பெ. (n.) அற்பவுணவு (யாழ். அக.); scanty food.

[Skt. mitāšana>த. மிதாசனம்.]

மிதுனராசி *midunarāši,* பெ. (n.) ஆண்- பெண் இரட்டை ஓரை; twin sign of the zodic - gemini.

த.வ. ஆடவை

[Skt. mituna+rasi > த. மிதுனராசி.]

மிராசு *mirāšu,* பெ. (n.) 1. நிலவுரிமை, அது தொடர்பாக குலமுறையாய் வரும் முழு உரிமை (W.G.); absolute hereditary right or claim to lands or office. 2. குல வழியாய் வந்த சொத்து (வின்.); heritage, patrimony.

[U. mirāsia>த. மிராசு.]

மிராசுதாரன் *mirāšu-tāran,* பெ. (n.) நில வுரிமைக்காரன் (வின்.); hereditary proprietor or any right to office or property.

த.வ. நிலக்கிழான்

[U. mirāsi> த. மிராசுதாரன்.]

மிராண்டி *mirāṇṭi,* பெ. (n.) **மிருகாண்டி** பார்க்க; see mirukāṇdi.

மிருகசிரம் *miruga-širam,* பெ. (n.) 1. ஆட் காட்டி விரலையும் சுண்டு விரலையும் நிமிர்த்தி மற்ற விரல்களை ஒரு சேர வைக்கும் முத்திரை வகை. (பரத. பாவ. 18.) (Nāṭya) a hand - pose in which the index finger and the little finger are stretched out and the rest are kept closed. 2. **மிருக சீருடம்** பார்க்க; see miruga-šiṛidam.

[Skt. mṛga-širas>த. மிருகசிரம்.]

மிருகசீருடம் *miruga-širudam,* பெ. (n.) மாழ்கு, ஐந்தாம் விண்மீன்; the fifth nakṣatra.

[Skt. mṛga-širsa>த. மிருகசீருடம்.]

மிருகத்தனம் *miruga-t-tanam,* பெ. (n.) விலங்கின் தன்மை; beastly nature - brutishness.

மிருகம்[1] *mirugam,* பெ. (n.) 1. மான் (சூடா.); deer, an telope. 2. விலங்கின் பொது (சூடா.); animal in general. 3. பன்றி (வின்.); pig, hog. 4. யானைவகை (யாழ். அக.); a kind of elephant. 5. கத்தூரிமான் (யாழ். அக.); musk deer. 6. **மிருகசீருடம்** (யாழ். அக.) பார்க்க; see miruga-širudam. 7. பாம்பு; snake. (நாமதீப. 258.).

மிருகாண்டி *mirugāṇṭi,* பெ. (n.) விலங்காண்டி (வின்.); rustic; ill - bred person.

[Skt. mṛga>த. மிருகாண்டி.]

மிருணாலி *mirunāli,* பெ. (n.) தாமரை (மூ.அ.); lotus.

[Skt. mrnāli>த. மிருணாலி.]

மிருத்தியு *miruttiyu,* பெ. (n.) 1. இறப்பு; death. 'மிருத்தியுவை வெல்வான்' (சேதுபு. துரா.27). 2. இயமன். (யாழ். அக.); yama. 3. தீராப்பகைவன்; inveterate enemy. 'அவன் எனக்கு மிருத்தியுவாய்த் தலைப்பட்டான்.' 4. ஆணவமலம். (சி.போ. 4,2, சிற். பக். 96.); (śaiva.) matter which is eternally encasing the soul.

[Skt. mrtyu>த. மிருத்தியு.]

மிருத்து[1] *miruttu,* பெ. (n.) மண்; earth. 'இரு நில மிருத்திட்டு' (மதுரைப்பதின். 62.).

[Skt. mrt>த. மிருத்து[1]]

மிருத்து[2] *miruttu,* பெ. (n.) 1. இறப்பு; death. 2. எமன்; yama.

[Skt. mrtya>த. மிருத்து[2]]

மிருதங்கம் *mirudangam,* பெ. (n.) 1. மத்தளம் (உ.வ.); a kind of drum. 2. ஒலி; (யாழ். அக.) noise. 3. மூங்கில் (யாழ். அக.); bamboo. யதிகளில் ஒன்று. (பரத. தாள. 53.); a kind of yati.

[Skt. mrdanga>த. மிருதங்கம்]

மிருதாரசிங்கி *mirudāraśingi,* பெ. (n.) 1. தூய்மை செய்யப்படாத ஈயம்.; (m.m. 472); impure oxide of lead, plumbi oxidum. 2. ஈயம் (யாழ். அக.); lead. 3. வைப்பு நஞ்சு வகை. (பதார்த்த 1159, தலைப்பு.); a plant. பூடுவகை. (யாழ். அக.)

[U. murdāsing>த. மிருதாரசிங்கி.]

மிருதி *mirudi,* பெ. (n.) 1. நினைவு; remembrance. 'யதார்த்த மிருதிஞானத் திற்கு விடயமாய்' (சிவசம. பக். 41.) 2. அறநூல்; smrti, Hindu Law treatise. 3. அறநூல் வல்லோன்; one learned in *smrti*. 'மெய்யா மிருதிகள்' (திருவிளை. உலவாக். 19). 4. மலை மகள்; Pārvati. (கூர்மபு. தருக் கலியாண. 22.)

[Skt. smrdi>த. மிருதி.]

மிருது[1] *mirudi,* பெ. (n.) 1. மென்மை (சூடா.); softness. 2. சாந்தம் (சங். அக.); gentleness, mildness, benignancy. 3. மந்தம் (யாழ். அக.); slowness. 4. மழுங்கல். (யாழ். அக.); bluntness. 5. நொய்ம்மை (யாழ். அக.); low quality. 6. இசைவகையுள் ஒன்று (பரத. இராக 47.); a kind of musical note. 7. **மிருதுபலா.** (சங். அக.) பார்க்க; see *mirudupalā*. 8. சமுத்திரப் பாலை. (மலை.); elephant creeper. 9. வெள்ளரி (நாமதீப. 336.); cucumber.

[Skt. mrdu>த. மிருது]

மிருது[2] *mirudu,* பெ. (n.) **மிருதி1** (அரு. நி) பார்க்க; see miruti[1]

[Skt. mrti>த. மிருது.]

மிருதுளம் *mirudulam,* பெ. (n.) மென்மை யானது; that which is soft, tender. *'மிருதுள மிருதுள நவமணி' (திருப்பு. 319.).*

[Skt. mrdula>த. மிருதுளம்]

மிலாகத்து *milākattu,* பெ. (n.) சந்திப்பு (P.T.L.); meeting, interview.

[H. milāp>த. மிலாகத்து]

மிலேச்சத்தனம் *milēcca-t-tanam,* பெ. (n.) அநாகரிகம்; barbarism.

[Skt. mlēccha>த. மிலேச்சத்தனம்]

மிலேச்சம் *milēccam,* பெ. (n.) 1. சரசுவதி ஆற்றின் வடகரையில் பழந்திரவிடர் வாழ்ந்த நாடு (சது.); Non-Aryan country situated on the northern bank of river Sarasvadi.

[Skt. mlēccha>த. மிலேச்சம்]

மிலேச்சன் *milēccan,* பெ. (n.) 1. நாகரிகமற்ற புறநாட்டான்; barbarian, uncivilised foreigner. 'மிலேச்ச ரேறலின்' (சீவக. 216). 2. திருத்தமற்ற மொழியைப் பேசுவோர். (சீவக. 93 உரை); person speaking barbarous language. 3. அறிவீனன் (யாழ். அக.); ignorant person. 5. வேடன் (யாழ். அக.); hunter. 6. தாழ்ந்தோன் (யாழ். அக.); low person. 7. ஆரியன்; aryan. (அக.நி.)

[Skt. mlēccha>த. மிலேச்சன்]

மிலேச்சாசம் *milēccāāšam,* பெ. (n.) கோதுமை. (மலை); wheat.

[Skt. mlēcchāša>த. மிலேச்சாசம்]

மீமாஞ்சை *mimāñjai,* பெ. (n.) 1. பூர்வ மீமாஞ்சை உத்தரமீமாஞ்சை என்ற இரு பிரிவினையுடையதாய் வேதவேதாந்தப் பொருள்களை விவரித்தற்குக் கருவியாயுள்ள சாத்திரம்; the twin systems of *Pūrva Mimāmsā* and *Uttara Mimānsā,* being the means of understanding the *Vēda* and *Vēdānta.* 2. பூர்வ மீமாஞ்சை எனும் இந்துமதக் கொண்முடிபு; a system of Hindu Philosphy. *'புவனியுற்ற தருக்கமும் பொருந்திய மீமாஞ்சையும்' (மச்சபு. பிரமமு. 4).*

[Skt. mimāmsā>த. மீமாஞ்சை]

முக்கியத்தர் *mukkiyattar,* பெ. (n.) 1. செல்வாக்கும் சிறப்பும் உடையவர் முதன்மையானவர்; person of importance. "உயர் முக்கியஸ்தர்கள் கூடிப் பேசி என்ன முடிவு செய்தார்கள்"

மறுவ. முதன்மையாளர், முந்தாளி, முகத்தாளி, பெருமகன்.

[Skt. mukyasta>த. முக்கியத்தர்]

முக்கியத்துவம் *mukkiyattuvam,* பெ. (n.) சிறப்பு பொருந்திய தன்மை; importance. "இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த நகரமிது".

மறுவ. முதன்மை, முகாமை

[Skt. mukhya+tva>த. முக்கியத்துவம்]

முக்கியம் *mukkiyam,* பெ. (n.) 1. சிறப்புடையது; that which is primary, principal or important. "முடித்துக் கொண்ட முக்கியமும்" (திவ். திருவாய். 5, 10, 9) 2. தலைமை; greatness, eminence, superiority. "பிண்டியா ரடியாரென்னு முக்கியமே" (திருநூற். 73.)

மறுவ. முகாமை, முதன்மை

[Skt. mukhya>த. முக்கியம்]

முக்தசர்[1] *muktašar,* பெ. (n.) உட்கருத்து (சாரம்சம்); gist, abstract. "அவன் பிராதின் முக்தசர் என்ன?"

மறுவ. உட்கருத்து

[U. mukhtasar>த. முக்தசர்]

முக்தசர்[2] *muktašar,* பெ.அ. (adj.) சுருக்கமான; abbreviated, brief, short.

[U. mukhtasar>த. முக்தசர்]

முக்தா *muktā,* பெ. (n.) ஒரு சிற்றூரின் வரையறுத்த மொத்தத் தீர்வை; (C.G.) rent fixed for a village as a whole.

[U. maqta>த. முக்தா]

முக்தியார் *muktiyār,* பெ. (n.) பிறருக்காக வழக்கை வாதிப்போன்; a attorney, pleader.

[U. mukhtar>த. முக்தியார்]

முக்தியார்நாமா *muktiytār-nāmā,* பெ. (n.) அதிகார ஆவணம் (பத்திரம்) (C.G.); power of attorney.

[U. mukhtār+nāmā>த. முக்தியார்நாமா]

முகத்தமா *mugattamā,* பெ. (n.) செய்தி (இ.வ.); case; affair.

[U. muqadama>த. முகத்தமா]

முகமல் *mugamal,* பெ. (n.) மிகுதியான எடை கொண்டிருக்கும் பட்டு வகை (வின்.); velvet.

[Ar. makhmal>த. முகமல்]

முகரீர் *mugarīr,* பெ. (n.) எழுத்தன் (குமாஸ்தா); clerk, writer, scribe.

[Ar. muharrir>த. முகரீர்]

முகாசா *mugāšā,* பெ. (n.) வேலையின் பொருட்டு வரியில்லாமலும் வரி குறைத்தேனும் கொடுக்கப்படும் இறையிலிச் சிற்றூர் (M.M 506); village or land assigned to an individual, either rent free or at a low quit-rent, on condition of service.

[H. mukhāsā>த. முகாசா]

முகாந்தரம் *mugāndaram,* பெ. (n.) 1. கரணியம்; cause, reason. 2. மூலம்; means. "யார் முகாந்தரம் போனால் இது கைகூடும்?" (இ.வ.). 3. வேறு செய்தி (விஷயம்); another matter. "இதுவும் முகாந்தராமாய்ச் செல்லுகிறதோ" (ஈடு 9,8,3.)

[Skt. mukha+antara>த. முகாந்தரம்]

முகாபிலா *mugāpilā,* பெ. (n.) படி முதலிய வற்றை மூலத்துடன் ஒத்துப் பார்க்கை (வின்); examination, comparison, as of a copy with the original.

[Ar. muqabila>த. முகாபிலா]

முகாம் *mugām,* பெ. (n.) சுற்றுப்பயணத்தில் கூடாரமடித்துக் குறுகிய காலம் தங்கும் இடம்; a camp.

த.வ. தாவளம்

[Ar. muqām>த. முகாம்]

முகூர்த்தக்கால் *mugūrttakkāl,* பெ. (n.) திருமணப் பந்தர்க்கு நல்வேளையில் முதலாக நாட்டும் கம்பம் (தம்பம்) (வின்); first post fixed at an ausicious moment for a marriage.

த.வ. முழுத்தக்கால்

[Skt. muhūrta>த. முகூர்த்தம்+கால்]

முகூர்த்தம் *mugūrttam,* பெ. (n.) 1. நேரம்; moment, time. 2. ஒன்றரை மணி நேரங் கொண்ட ஒரு காலவளவை; a division of time = 3 3/4 nalikai = 1 1/2 hours. "படுங் கலை முகூர்த்தங் காட்டைகளென்றா". (காஞ்சிப்பு. காயாரோகண. 2) 3. இரண்டு நாழிகை கொண்ட காலப்பகுதி (மேருமந் 94, உரை); (Jaina.) a division of time of 2 nāḷikai.4. நல்லோரை; auspicious time. "ஒப்பகன்றிடு முகூர்த்தமிவ் வெல்லை" (கந்தபு. தெய்வயா. 187) 5. திருமணம்; marriage, wedding.

த.வ. முழுத்தம்

[த. முழுத்தம் > Skt. muhūrta > த. முகூர்த்தம்]

முச்சலிக்கா *muccalikkā,* பெ. (n.) 1. உடன் படிக்கை; note of hand, written obligation, agreement, bond; deed; counter part of lease, as by a tenant to his landlord. 2.பிணை ஆவணம்; recognisance, bail, penalty bond.

த.வ. ஒப்பந்தம்

[Skt. mucalka >த. முச்சலிக்கா]

முச்சி *mucci,* பெ. (n.) 1. அலுவலர்களுக்கு எழுது பொருள் முதலியன அணியம் செய்து கொடுக்கும் வேலையாள் (C.G.); stationer, one who serves out stationery in a public office. 2.தோல் வினைஞன் (C.G.); one who works in leather. 3. உறைகாரன் (அக.நி.); sheath maker. 4. தச்சன்; carpenter, cabinet-maker. 5. வண்ணம் பூசுபவன்; painter.

[H. mūcī >த. முச்சி]

முசரப்பு *mušarappu,* பெ. (n.) கணக்கு ஆய்வாளன் (P.T.L.); accountant, examiner of accounts.

[Ar. mishrif >த. முசரப்]

முசரா *mušarā,* பெ. (n.) திசை (திக்கு) (M. Navi.); direction.

[Ar. miajrā >த. முசரா]

முசல்மான் *mušalmāṉ,* பெ. (n.) முகமதியன்; muhammad.

[Arab. muslimūn >த. முசல்மான்]

முசாபர்கானா *mušabarkāṉā,* பெ. (n.) பயணிகள் விடுதி (இ.வ.); traveller's bungalow.

த.வ. பயணியர் மாளிகை

[Ar. muslāfir-khāna >த. முசாபர்கானா]

முசீபத்து *mušipattu,* பெ. (n.) துன்பம்; distress, misfortune. *"முசீபத்தைப் போக்கிப் பரக்கத்து உண்டாக்கும்" (மகி. க.* ii, 94.)

[Ar. musībad >த. முசீபத்து]

முசுலீம் *mušulīm,* பெ. (n.) முகமதியன்; muhammadan.

[Ar. muslim >த. முசுலீம்]

முட்டிவாங்கி *muṭṭivāṅgi,* பெ. (n.) பிடியரிசி வாங்கும் பிச்சைக்காரன்; recipient of doles, mean beggar. *"முஷ்டிவாங்கிப் பயலோ மோப்பாச்சு" (விறலிவிடு. 772).*

[Skt. musti >த. முட்டி + வாங்கி]

முண்டா *muṇḍā,* பெ. (n.) தோள்; shoulder, upperarm *"முண்டாத்தட்டிச் சண்டைக்கு அழைக்கிறான்".*

[U. mōndhā >த. முண்டா]

முண்டாசு *muṇḍāšu,* பெ. (n.) தலைப் பாகைவகை; a kind of headdress, small looseturban. *"கொடுத்தானோர் முண்டாசு" (விறலிவிடு. 1116).*

த.வ. தலைக்கட்டு

[H. muṇḍāsā<muṇḍa+vāsās>த. முண்டாசு]

முண்டாபனியன் *muṇḍābaṉiyaṉ,* பெ. (n.) தோள் (முண்டா) தெரியும்படியான உள் ளொட்டி; sleeveless vest.

த.வ. உள்ளொட்டி

[Skt. mōṇḍha >த. முண்டாபனியன்]

முத்தாய் *muttāy,* பெ. (n.) வழக்காளி (C.G.); the complainant, the plaintiff.

[Ar. muddaā >த. முத்தாய்]

முத்தாயலே *muttāyalē,* பெ. (n.) எதிர் வழக் காளி (C.G.); the accuseed the defendant.

[Ar. muddaā-alayh >த. முத்தாயலே]

முத்தீது *muttitu,* பெ. (n.) முன்னேற்பாடு (பாண்டி); preparedness.

த.வ. முன்அணியம்

[Ar. mustaid >த. முத்தீது]

முபலகு *mupalagu,* பெ. (n.) எண்ணினாலன்றி எழுத்தினாற் காட்டும் மொத்தத் தொகை (C.G.); total, especially written in words instead of figures.

[U. mublas >த. முபலகு]

முரப்பா *murappā,* பெ. (n.) பாகில் ஊறவைத்த தின்பண்டம்; preserved jam.

[H. murabbā >த. முரப்பா]

முலகாத்து *mulakāttu,* பெ. (n.) சந்திப்பு (இ.வ.); interview, meeting.

த.வ.நேர்காணல், செவ்வி.

[Ar. mulāqāt >த. முலகாத்]

முலாம் *mulām,* பெ. (n.) பொன் வெள்ளிப்பூச்சு; gilding, electro-plating.

த.வ.மேற்பூச்சு

[Ar. mulammā >த. முலாம்]

முன்சி *muṉši,* பெ. (n.) மொழி கற்பிக்கும் ஆசிரியன்; languageteacher.

[Ar. munshī >த. முன்சி]

முனிசீப்பு *muṉiššippu,* பெ. (n.) 1. சிற்றூர்த் தலைவன் (வின்.); village headman. 2. நயன் (நீதி) வழங்கும் ஒரு வகை அலுவலன்; district munsif, presiding officer in certain subordinate court of justice.

[Ar. munsif >த. முனிசீப்பு]

மூசிகவாகனன் *mūšiga-vāgaṉaṉ,* பெ. (n.) பெருச்சாளியை ஊர்தியாக உடையவனாகக் கருதப்படும்) பிள்ளையார்; Gaṉēšaṉasriding thebondicoot. "முப்பழநுகரும் மூசிக வாகன" (விநாயகர் அகவல்).

[Skt. mūsika+vāhana>த. மூசிகவாகனன்.]

மூர்க்கத்தனம் *mūrkkattaṉam,* பெ. (n.) விலங் கியல்பு; கடுங்கொடுமை; wild behaviour.

த.வ.விலங்கியல்பு, வன்கொடுமை

[Skt. mūrkha >த. மூர்க்கம்.]

மூர்க்கநாயனார் *mūrkkanāyaṉār,* பெ. (n.) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர். (பெரியபு.); a canonized šaiva saint, one of 63.

மூர்க்கம் *mūrkkam,* பெ. (n.) 1. மூடத்தன்மை (வின்.); foolishness, stupidity. 2. கடுஞ்சினம்; rage, fury, wrath. "மூர்க்கத்தவனை நரங்கலந்த சிங்கமாய்க் கீண்ட" (திவ். இயற். 2, 84.) 3. ஒட்டாரம், பிடிவாதம் (வின்.); obstinacy. 4. பகை. (வின்.); opposition, hatred. 5. முரட்டுத்தனம் (இ.வ.); violence, force. 6. நாகப்பாம்பு (யாழ். அக.); cobra. 7. மலப்பைச் சிறுபுழு (சங். அக.); thread worm.

[Skt. mūrkha >த. மூர்க்கம்.]

மூர்த்தம் *mūrttam,* பெ. (n.) 1. வடிவுடைப் பொருள்; that which has form, figure, shape or body. "அன்மையின் மூர்த்தம்" (ஞான. 55,2) 2. உடல் (சூடா.); body. 3. உறுப்பு (பிங்.); limb.

[Skt. mūrta >த. மூர்த்தம்]

மூர்த்தன்னியம் *mūrttsṉṉiyam,* பெ. (n.) 1. முதன்மைச்சிறப்பு; prominence. 2. மீறுகை; high handedness.

[Skt. mūrdhanya >த. மூர்த்தன்னியம்]

மூர்த்தன்னியன் *mūrttaṉṉiaṉ,* பெ. (n.) 1. முகாமையானவன்; chieftaincy, pre-eminence. மும்மதமால்யானை மூர்த்தன் னியனை (விறலிவிடு.24). 2. ஊக்கமிகுதி யுடையவன்; person of great energy.

மூர்த்தி *mūrtti,* பெ. (n.) 1. உடல்; body. "ஒத்தொளிரு மூர்த்தியார்" (சூளா.குமார.1) 2. வடிவம்; form, figure. "அன்பெனு மூர்த்தியார்" (பெரியபு. மூர்த்தி.9). 3. கடவுள்; God. "திரிமூர்த்தி". 4. அருகன் (திவா.); arhat. 5. புத்தன் (திவா.); the Buddha.6. சிவன். (யாழ். அக.); śiva. 7. சத்தியோசாதத்தின் ஆற்றல் (சத்தி) (சதாசிவ); the śakti of cattiyōcātam. 8. துறவுக்கோலம்பூண்டவன் (சீவக. 3071.); ascetic, one who performs penance. 9. பெரியார்; saint, sage, great personage, a term of reverence. "ஓதுவார்மூர்த்தி". 10. தலைவன் (யாழ். அக.); lord. 11. பொருள் (யாழ். அக.); matter, substance. 12. நடை, நாகரிகம் (யாழ். அக.); style, fashion.

[Skt. mūrti >த. மூர்த்தி.]

மூர்த்திகரம் *mūrttikaram,* பெ. (n.) 1. தெய்வச் செயல்; divine act.2. தெய்வத் தன்மை (வின்.); divinity, divine nature.

[Skt. mūrti kara>த. மூர்த்திகரம்.]

மெக்கா *mekkā,* பெ. (n.) முகம்மதியர்க்கு முதன்மையான வழிபாட்டிடமான அரேபியா விலுள்ள ஒரு நகரம்; a city in Arabia,being the chief place of pilgrimage for the muhammadans.

[Ar. makka>த. மெக்கா.]

மேகக்கரப்பன் *megakkarappaṉ,* பெ. (n.) மேக நோயினால் குழந்தைகளின் உடம்பின் காணும் சொறி சிரங்கு; skin afffections of the children caused by congenital heat.

மைக்கா *maikkā,* பெ. (n.) காக்கைப் பொன்; mica.

[E. mica>த. மைக்கா.]

மைசூர் *maiśūr,* பெ. (n.) கருநாடக மாநிலத்தின் ஒரு நகரம், எருமையூர்; Mysore, a city of Karnataka State.

[Skt. mahisa-pura>த. மைசூர்.]

மைசூர்க்கட்டு *maiśūr-k-kaṭṭu,* பெ. (n.) தலைப்பாகை வகை; a mode of tying turban, as peculiar to the Mysoreans.

மைசூர்ப்பாகு *maiśūr-p-pāku,* பெ. (n.) ஒரு வகை இனிப்புப் பணிகாரம்; a kind of sweet confection.

த.வ. பாகடை

[Skt. masura> த. மைசூர்ப்பாகு.]

மைத்திரம் *maittiram,* பெ. (n.) 1. நட்பு; love, friendship. 2. பகல் முழுத்தங்களுள் மூன்றாவது; (விதான. குணா. 73, உரை) the third of the 15 divisions of the day.

[Skt. maitra>த. மைத்திரம்.]

மைத்திரி *maittiri,* பெ. (n.) 1. நட்பு; friendship. 2. **மைத்திரிபாவனை** பார்க்க; see maittiri-pāvanai. *"மைத்திரி கருணா முதிதை" (மணிமே. 30 : 256.)*

[Skt. maitrī>த. மைத்திரி.]

மைத்திரியாழ்வார் *maittiriyāḻvār,* பெ. (n.) the Buddha of the future. மயித்திரியாழ்வார் (மணிமே. புத்தசரித். பக். 30 கீழ்க் குறிப்பு.) பார்க்க; see mayittiriyāḻvār.

மைத்திரிபாவனை *maittiripāvaṉai,* பெ. (n.) எல்லாவுயிர்களிடத்தும் அன்பு பாராட்டி அவற்றின் நல்வாழ்வைக் கருதி பௌத்த துறவி புரியும் ஊழ்க (தியான) வகை; (மணிமே. பக். 387) a form of meditation which developes a feeling of followship with all beings, practised by monks.

மைதானம் *maitānam,* பெ. (n.) திறந்த வெளியிடம் (இ.வ.); a plain, open field, maidan.

த.வ. வெள்ளிடை

[U. maidān>த. மைதானம்.]

மைதிலி *maithili,* பெ. (n.) சீதை (மிதிலை யரசன் மகள்); as daughter of the king of Mithilā. *"இலக்குமனோடு மைதிலியும் .....துதி செய்ய நின்ற. (திவ். பெரியதி. 2,3,7)*

[U. maithilī>த. மைதிலி.]

மைதுனம் *maitunam,* பெ. (n.) 1. புணர்ச்சி (பிங்.); copulation, sexual union. *"வதுவைச் சடங்கதனை மைதுனமாக் கொண்ட" (ஒழிவி. கிரியை. 16)* 2. திருமணம்; marriage.

[Skt. maithuna>த. மைதுனம்.]

மையத்து *maiyattu,* பெ. (n.) பிணம்; corpse.

[Ar. mayyit>த. மையத்து.]

மைல் *mail,* பெ. (n.) 5280 அடி அல்லது 1760 கசங்கொண்ட நீட்டலளவு (இக்.வ.); 1760 yards.

[E. mile>த. மைல்.]

மைனர் *mainar,* பெ. (n.) சட்டப்படி சொத் தாளுதல் முதலியவற்றிற்குரிய பருவம் எய்தாதவன்; minor, person under age.

த.வ. இளந்தை, இளந்தாரி

[E. minor>த. மைனர்.]

மைனர் விளையாட்டு *mainar-vilaiyāttu,* பெ. (n.) சிறு வயதில் கண்டபடி செலவு செய்கை; lavish expenditure by a person in his nonage.

த.வ. வீணடிப்பு

[Skt. minor>த. மைனர் விளையாட்டு.]

மொகரம் *mogaram,* பெ. (n.) முகமதியப் பண்டிகை; a Muhammadan festival in the Arabic month.

[Ar. muharram> த. மொகரம்.]

மோகரம் *mūgaram,* பெ. (n.) 1. பேராரவாரம்; roar. "பன்றி பெரு மோகரத் தோடு" (பாரத. அருச்சுனன்றவ. 95) 2. உக்கிரம் (யாழ். அக.); vehemence; rage.

[Skt. mukhar>த. மோகரம்.]

மோகரா *mōgara,* பெ. (n.) பத்து அல்லது பதினைந்து ரூபாய் மதிப்புள்ள பொற்காசு (நாணய) வகை; gold coin, varying in value from 10 to 15 rupees.

[Persn. mohar>த. மோகரா.]

மோகனச்சுண்ணம் *mōhanā-c-cunnam,* பெ. (n.) மயக்கப்பொடி; magic powder used for fascinating a person. "சிலைவேள் விட்ட மோகனச்சுண்ணம்" (பாரத. சம்பவ. 94).

[Skt.mōhana+cūnna>த. மோகனச்சுண்ணம்.]

மோகனநாட்டியம் *mōgana-nattiyam,* பெ. (n.) மகளிர் கூத்து; (யாழ். அக.) dancing by women.

[Skt.mōhana>த. மோகனம்+நாட்டியம்.]

மோகனம் *mōganam,* பெ. (n.) 1. மயக்க முண்டாக்குகை; bewildering, confusing. 2. மனமயக்கம்; confusion of mind mental perturbation. "மோகனமின் முனி" (சேதுபு. வேதா.11) 3. எண்வகைக் கடமைகளுள் (அஷ்டகருமத்துள்) ஒன்றும் அறுபத்து நான்குகலையுள் ஒன்றுமான பிறரை மயங்கச் செய்யும் வித்தை; magic are of facinating a person, one of asta-karumam, also one of arupattu-nālu-kalai. 4. காமன் ஐங்கணை களுள் மோகமுண்டாக்கும் அம்பு; (யாழ். அக.). one of the five arrows of Kāma that makes a person infatnated. 5. பஞ்சபாணச் செயல்களுள் ஒன்றான ஆசைமிகுகை; (பிங்.) infatuation as the effect of mōkanam, one ofpañca-pāna-ccyal. 6. ஓர் இராகம்; (mus) a specific melody-type. 7. ஏமாற்றுகை; (யாழ். அக.). deceiving, cheating.

மோகாதி *mōkāti,* பெ. (n.) காமம், வெகுளி, மயக்கம் என்ற முக்குற்றங்கள்; (யாழ். அக.) the three defects or infirmilies, viz., kāmam, veguli, mayakkam.

[Skt.mōha>த. மோகாதி.]

மோகி-த்தல் *mōki-,* 4 செ.கு.வி. (v.i) 1. மணந் திகைத்தல்; to be confused, bewildered. (விளாயகபு. 74. 218) 2. காமத்தால் மயங்குதல்; to be infatuated with love.

[Skt.mōha>த. மோகித்தல்.]

மோகினி[1] *mōgini,* பெ. (n.) மயக்கும் அணங்கு; enchanting woman. "அடைய மோகினி களாயினர் கொல்" (தக்கயாகப். 87.) 2. கண்டோரை மயங்கச் செய்யும் பெண் வடிவான திருமாலின் தோற்றரவு (அவதாரம்) *"மோகினியாகிய நின்வடிவினைக் கண்டு"* (பரிபா. 3.33.உரை) in carnation of Visṇu as a fascinating woman. 3. அசுத்தமாயை (šaiva) impure māyā. "பிரியா மோகினிப் பெரும்போகத்தை" (ஞானா. 1,29) 4. பெண் பேய் வகை; a class of demoness. *"மோக மோகினிகள் யோக யோகினிகள்" (தக்கயாகப். 593)*

[Skt.mōhinī>த. மோகினி.]

மோகினி[2] *mōkkiṉi,* பெ. (n.) கோயில் நிலங் களைக் கைக்கொண்டதற்கு மாற்றாக அரசாங் கத்தார் ஆண்டுதோறும் அக்கோயிற்குச் செலுத்தும் தொகை; compensation in money given annually by the government to templess for resuming heir lands.

[U.muyin>த. மோகினி.]

மோகூப் *mōkup,* பெ. (n.) வேலையினின்றும் நீக்கி விடுகை (C.G); suspension, dismissal.

[Arab.mauqūf>த. மோகூப்.]

மோசகன் *mōsagaṉ,* பெ. (n.) 1. விடு விப்போன்; deliverer. 2. வெளிவிடுவோன்; one who passes or lets out. *"நந்தனவனத்து மோசகனை மலமதனை" (சிவதரு. சுவர்க்க நகர. 175)* 3. துறவி. (யாழ். அக.); ascetic.

[Skt.mōcaka>த. மோசகன்.]

மோசனம்[2] *mōšaṉam,* பெ. (n.) விடுபடுகை; liberation, deliverance. *"பாசமோசனந்தான் பண்ணும்படி". (சி.சி.8,3) (சூடா.)*

[Skt.mōcana>த. மோசனம்.]

மோசு *mōšu,* பெ. (n.) மிக்க விருப்பம்; ardent desire, longing. *"அதன் மேல் எனக்கு மோசு".*

[Ar.mauj>த. மோசு.]

மோசூல் *mōcūl,* பெ. (n.) 1. காவற்காரன்; guard. (w) 2. வரி செலுத்தாதவன் அல்லது கடன்காரன் மீது வைக்கும் அரசாங்கக்காவல்; (C.G) guard placed over a revenue defaulter or a civil debtor. 3. ஒருவன் வீட்டுவாயிலிலிருந்து கடன் தொகை தண்டுகை; compelling payment of a debt by sitting at the debtor's door.

[Ar.mohassil>த. மோசூல்.]

மோட்சகாலம் *mōṭca-kālam,* பெ. (n.) கோள் மறைப்பின் (கிரகண) முடிவு வேளை; (W) (Astron.) the time of the last contact emersion of an eclipse.

[Skt.mōksa>த. மோட்சகாலம்.]

மோட்சதீபம் *mōṭca-tīpam,* பெ. (n.) 1. இறந்தவர் பொருட்டுக் கோயிற் கோபுரத்தில் ஏற்றும் விளக்கு; lamp lighted in temple-towers in commemoration of dead persons. 2. **மோட்ச விளக்கு** பார்க்க 1,2. (W.)

[Skt.mōksa>த. மோட்சதீபம்.]

மோட்சம் *mōṭcam,* பெ. (n.) 1. விடுபடுகை; liberation, release, escape. 2. முத்திநிலை; final emancipation, release from transmigration, solvation. 3.பதமுத்தி; heaven. 4. நவபதார்த்தங்களுள் வினைத் தொடர்பினின்றும் முற்றும் நீங்கு நிலை. (சீவக. 2814. உரை) (Jaina.) complete deliverance, state of the soul in which it is freed - from all bondage of karma, and has passed for ever beyond the possibility of rebirth, one of nava-patārttam.

த.வ. வீடுபேறு

[Skt.mūksa>த. மோட்சம்.]

மோட்சவிளக்கு *mōṭca-viḷakku,* பெ. (n.) வீரசைவரது பிணத்தின் முன்பு கொண்டு போகப்படுவதும் மயானத்தில் புதை குழியில்

வைக்கப்படுவதுமான விளக்கு; lamp lighted and carried before the corpose or placed at the burial place, among lingayats. 2. உரோமன் கத்தோலிக்க கிறித்தவருள் இறந்தவர் பொருட்டு ஏற்றப்படும் விளக்கு; lamp lighted for the dead, among Roman Catholics.

[Skt.moksa>த. மோட்சவிளக்கு.]

மோட்டா *mōṭṭā,* பெ.அ. (adj.) 1. பெரிய; large, great, big. 2. கீழ்த்தரமான; shoddy, trashy. 3. முருடான; coarse, rough, unrefined. *"மோட்டாத்துணி"*

[Hind.mōta>த. மோட்டா.]

மோட்டாக்குறுவை *mōṭṭā-k-kuruvai,* பெ. (n.) மூன்று மாதத்தில் விளையக்கூடிய குறுவை நெல்வகை; (loc) a coarse paddy which matures in 3 months.

[H. mōta>த. மோட்டா+குறுவை.]

மோதகம் *mōtakam,* பெ. (n.) 1. அப்பவகை; cake of rice flour made into a ball and boiled or steamed. *"வகையமை மோதகம்" (மதுரைக். 626)* 2. கொழுக்கட்டை; *(கந்தபு. காவிரி.25)* a bolus - like preparation of rice - flour. 3. பிட்டு; a kind of pudding made of flour. *"காழியர் மோதகத் தூழுறு விளக்கமும்" (சிலப். 6, 137.)* 4. தோசை; a kind of flour-cake 5. மகிழ்ச்சி; (W) delight, mirth. 6. இணக்கம்; (யாழ். அக.) agreement, suitability.

[H.mōdaka>த. மோதகம்]

மோதபர் *mōtapar,* பெ.அ. (adj.) நம்பிக்கையான; (C.G.) respectable, trustworthy.

[Ar.mutabar>த. மோதபர்]

மோதம் *mōdam,* பெ. (n.) 1. மகிழ்ச்சி; jay, rejoicing, gladness. "முன்புற்றது கண்டெழு மோதமுறா (வேதாரணி. பிரமோப.16). 2. களிப்பு; intoxication. 3. வாசனை; smell, scent, perfume. 4. ஓமம்¹ (மலை); aja-mōdā, bishop's weed.

[Skt.mōda>த. மோதம்]

மோதரிபா *mōdaripā,* பெ. (n.) தொழில்வரி; (W) professional tax formerly levied on the manufacturing and trading communities.

[U.mutarifa>த. மோதிரிபா]

மோய் *mōy,* பெ. (n.) தாய்; mother, *"உன் மோயின் வருந்தமும்" (திவ். பெருமாள் 9.9.)*

[H.mai>த. மோய்]

மோயன் *mōyan,* பெ. (n.) 1. பணியாளர் (W) estabishment. 2. கோயிற் படித்தரக்காரர்; loc. members of a temple establishment.

[U.muyin>த. மோயன்]

மோரா¹ *mōrā,* பெ. (n.) மோகராநாணயம் (சங். அக.); a gold coin, mohur.

[Persn.mohar>த. மோரா]

மோரா² *mōrā,* பெ. (n.) மயிற்பீலி; peacock's feather.

[Palc.mōrō>த. மோரா]

மோரா³ *mōrā,* பெ. (n.) எலும்பின் உள்ளீடு; marrow.

[E.marrow>த. மோரா]

மோரி *mōri,* பெ. (n.) சிறுவடிகால்; small water course, channel gutter. *"தன் வயலுக்கு மோரி ஒன்று வெட்டினான்."* Loc.

[U. mūri>த. மோரி]

மோரியர் *mūriyar,* பெ. (n.) 1. மௌரிய வமிசத்தவர்; the Mauryas. *"மோரியர் தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு." (அகநா. 281.).* 2. வித்தியாதரர் (புறநா. 175. உரை); Vittiyātarar, a class of semi - divine beings. 3. நாகர் (புறநா. 175. உரை) Nāgas.

[Skt. maurya>த. மோரியர்]

மோலி *mōli,* பெ. (n.) 1. **மௌலி** பார்க்க; crown. *"இளையவற் கவிந்த மோலி யென்னையுங் கவித்தி யென்றான்"* (கம்பரா. விபீடண. 145)

[Skt. mauli>த. மோலி]

மோனம் *mōṉam,* பெ. (n.) 1. **மௌனம்** பார்க்க; crown. *"வேள்வியின் மோனமும் பாழ்பட"* (கம்பரா. நிகும் பலை. 59)

[Skt. mauna>த. மோனம்]

மோனமுத்திரை *mōna-muttirai,* பெ. (n.) அமைதி (மோன) நிலையைக் காட்டும் முத்திரை வகை; hand pose assumed in an attitude of silence in regligious contemplation. இறைவன் மோன முத்திரையத்தனாய் (திருமுருகு-112,உரை).

[Skt.mauna>த. முத்திரை]

மோனி *mōṉi,* பெ. (n.) 1. **மௌனி** பார்க்க; person who has taken a vow of silence.

[Skt. maunin>த. மோனி]

மௌசு *maucu,* பெ. (n.) 1. மிகுந்த ஆசை; ardent, desire, longing. *"அதின் பேரில் எனக்கு மௌசு"* 2. சரக்கின் பிரியம்; being in great demand, as an artical. 3. கவர்ச்சி; (Loc.) attractiveness. 4. ஆடம்பரம்; pomp *"கலியாணம் மௌசாக நடந்தது."* Loc.

[U. mouz>த. மௌசு]

மௌட்டியம் *mauṭṭiyam,* பெ. (n.) அறியாமை; (W) ignorance, folly.

[Skt. maudhya>த. மௌட்டியம்]

மௌராசு *maurāsu,* பெ. (n.) பரம்பரை யுரிமையாற் பெற்றது; (C.G) that which is hereditary or inherited, inheritance.

[Ar. mauräāss>த. மௌராஸ்]

மௌரியர் *mauriyar,* பெ. (n.) **மோரியர்** பார்க்க;

[Skt. maurya>த. மௌரியர்]

மௌல்வி *maulvi,* பெ. (n.) முகம்மதிய மத அறிஞன்; muhammadan lawyer, expounder of mohammadan law, learned, religious muslim. (R.F.)

[Ar. maulawi>த. மௌல்வி]

மௌலன் *maulaṉ,* பெ. (n.) நற்குலத்தான் (யாழ். அக.); born of a good family.

[Skt. maula>த. மௌலன்]

மௌலானா *maulāṉa,* பெ. (n.) **மௌல்வி** பார்க்க;

[Arab. maulānā> த. மௌலானா]

மௌலி *mauli,* பெ. (n.) 1. மயிர் முடி; (திவா.) tuft or lock of hair left unshaven on the crown of the head. 2. கடை முடி (அக.நி.) matted locks, as of an ascetic. 3. சடை முடி; crown diadeon. "தாரணி மௌலி பத்தும்" (கம்பரா. கும்பகர்ண 1.) (பிங்.). 4. தலை; head. (அக.நி.). 5. தார்; (அக.நி.) wreath of flowers. 6. கோபுர முதலியவற்றின் சிகரம்; Loc. ornamental head or top, as of a tower. 7. கள்; (யாழ். அக.) toddy.

[Skt. mauli>த. மௌலி]

மௌவல் *mauval,* பெ. (n.) 1. காட்டு மல்லிகை; wild jasmine. *ஞாழன் மௌவல் (குறிஞ்சிப்.81).* 2. முல்லை (சூடா.); Arabian jasmine. 3. தாமரை; lotus. *மௌவ னீண்மலர் மேலுறை வானொடு (தேவா.1213,13).*



மௌனம் *mauṉam,* பெ. (n.) அமைதி, பேசாமை; silence, muteness, taciturnity. (திருக்களிற்றுப். 28. உரை.)

த.வ. முன்னம், ஒடுக்கம்

[Skt. mauna>த. மௌனம்]

ய

யக்கராசன் *yakka-rāšan*, பெ.(n.) குபேரன் (இயக்கர்களுக்கு அரசன்); Kubēran as the lord of the Yaksas.

[Skt. Yakṣa-rāja> த. யக்கராசன்]

யக்கராத்திரி *yakka-rāttiri*, பெ.(n.) நளி (கார்த்தி கை) மாதத்து முழு நிலவு (யாழ். அக.); the full moon in the month of Kārthikai.

[Skt. Yakṣa+த. யக்கராத்திரி]

யக்கன் *yakkan*, பெ.(n.) 1. **இயக்கன்** பார்க்க; see iyakkan. 2. குபேரன்; Kuberan as the lord of the Yaksas.

[Skt. Yakṣa> த. யக்கன்]

யக்கிஞம் *yakkaiñam*, பெ.(n.) யக்கியம் (தக்கயாகப். 344. உரை) பார்க்க : see yakkiyam

யக்கிஞமூர்த்தி *yakkiña-mūrtti*, பெ.(n.) 1. தீக் கடவுள் (தக்கயாகப்.344.உரை); the God of fire. 2. **யாக்கியபுருடன்** பார்க்க; see yakkiya purudan.

[Skt. Yajña+மூர்த்தி]

யக்கியசூத்திரம் *yakkiya-šūttiram* பெ. (n.) **யக்கியோபவீதம்** பார்க்க; see Yakkiyōpavitam.

[Skt. Yajña+šūtram+ த. யக்கியசூத்திரம்]

யக்கியபசு *yakkiya-pašu*, பெ.(n.) வேள்வியில் காவு கொடுப்பதற்குரிய விலங்கு (யாழ்.அக); the animal offered in sacrifice.

[Skt. Yajña+த. யக்கியபசு]

யக்கியபுருடன் *yakkiya-purudan*, பெ.(n.) திருமால் (யாகத்தின் உருவினன்) (சங்.அக.); Tirumāl as assuming the form of sacrifice.

யக்கியம் *yakkiyam*, பெ. (n.) 1. **யஞ்ஞம்** பார்க்க; see yaññam. 2. துவாபர யுகம் (யாழ்.அக.); dvāpara, the third yuga.

[Skt. Yajña> த. யக்கியம்]

யக்கியயோக்கியம் *yakkiya-yōkkiyam*, பெ.(n.) அத்தி (சங்.அக) country fig.

[Skt. Yajña-Yōgya> த. யக்கிய யோக்கியம்]

யக்கியாரி *yakkiyāri*, பெ.(n.) தக்கன் யாகத்தையழித்தவனாகிய சிவன்; Šiva, as the destroyer of Daksa's sacrifice.

[Skt. Yajñāri> யக்கியாரி]

யக்கியோபவீதம் *yakkiyōbaveedam*, பெ.(n.) இருபிறப்பாளர் இடத்தோளின் மீதிருந்து மார்பின் குறுக்கே அணியும் பூணூல்; the sacred thread, worn by the members of the first three castes, across the chest and over the left shoulder.

[Skt. Yajñōpavita> யக்கியோபவீதம்]

யக்கேசன் *yakkēšan*, பெ.(n.) குபேரன்; Kubēran.

[Skt. Yakṣēša> யக்கேசன்]

யக்ஞம் *yakñam*, பெ.(n.) **யஞ்ஞம்** பார்க்க; see yaññam.

த.வ. வேள்வி

[Skt. Yakñam> யக்ஞம்]

யக்ஞோபவீதம் *yakñōpavidam*, பெ. (n.) **யக்கியோபவீதம்** பார்க்க; see yakkiyōpavitam.

[Skt. Yajñōpavita> த. யக்ஞோவீதம்]

யகிர்த்துச்சூலை *yakirttu-c-cūlai*, பெ.(n.) கல்லீரல் வீங்கும் நோய் ; hepatitis.

[Skt. Yakṛt+சூலை > யகிர்த்துச்சூலை]

யசசு *yasasu*, பெ.(n.) புகழ்; honour, glory, fame, renown.

[Skt Yašas> யசசு]

யசசுவி *yasasuvi*, பெ.(n.) புகழாளன் (சங்.அக.); illustrious person, renowned man.

[Skt. Yašasuvin> யசசுவி]

யசமான் *yašamāṉ,* பெ. (n.) **யசமானன்**,2. பார்க்க; see yašamāṉaṉ. (கொ.வ.)

[Skt. Yajamāna > த. யசமானன் – யசமான்]

யசமானன் *yasamāṉaṉ,* பெ.(n.) 1. ஓகத் தலைவன்; sacrificer. 2. தலைவன்(கொ.வ.); master, lord, patron. 3. வீட்டுத்தலைவன்; head of a family.

[Skt. Yajamāna > த. யசமானன்]

யசனம் *yasaṉam,* பெ.(n.) வேள்வி செய்கை (சூடா); the act of sacrificing.

[Skt. Yajana > யசனம்]

யசு *yašu,* பெ.(n.) வேதம்நான்கனுள் இரண்டாவது (சிலப்.பக்.339); Yajur-vēda, the second of the four Vēdas.

[Skt. Yajus > த. யசு]

யசுசு *yacucu,* பெ. (n.) **யசு** பார்க்க; see yašu.

[Skt. Yajus > த. யசுசு]

யசுர் *yašur,* பெ. (n.) **யசு** பார்க்க; see yašu.

[Skt. Yajus > த. யசு]

யசுர்வேதம் *yašur-vētam,* பெ. (n.) **யசு** பார்க்க; see yašu

[Skt. Yajus>veda]

யசுரு *yašuru,* பெ. (n.) **யசு** பார்க்க; see yašu.

யசோதரகாவியம் *yasōtharakāviyam,* பெ.(n.) உச்சயினி நகரத்து அரசனாகிய யசோதரனைப் பற்றிக் கூறும் ஒரு சைனகாப்பியம்; a Jaina poem on Yasōdhara, a king of Ujjain.

[Skt. Yašōdhara+> யசோதர காவியம்.]

யசோதை *yasōthai,* பெ.(n.) கண்ணபிரானை வளர்த்த தாய்; foster - mother of Krishna.

[Skt. Yajšōdā>யசோதை]

யசோவதி *yašōvati,* பெ. (n.) மேருவுக்கு வடகீழ்பால் ஈசானனுக்குரிய நகரம் (சங்.அக.); the city of Īšāna, situate to the north-east of mount, Mēru.

[Skt. Yajšōvathi>யசோவதி]

யஞ்ஞம் *yaññam,* பெ.(n.) ஓகம்; sacrifice, sacrificial worship, offering of an oblation.

[Skt. Yajna>யஞ்ஞம்]

யஞ்ஞமூர்த்தி *yañña-mūrtti,* பெ.(n.) **1. யக்கிய புருடன்** பார்க்க; see yakkiyapuruḍaṉ. **2. யக்கிஞமூர்த்தி,1.** பார்க்க; see yakkiña mūrtti.

யஞ்ஞவராகம் *yaññavarākam,* பெ. (n.) திருமால் பன்றியாக உருவெடுத்தத் தோற்றரவு; the boar-incarnation of Viṣṇu.

யஞ்ஞன் *yaññaṉ,* பெ. (n.) நெருப்புக் கடவுள்; the god of fire *"இரை யாசையால் வந்த யஞ்ஞா"* (தக்கயாகப்.302)

[Skt. Yajna>யஞ்ஞன்]

யஞ்ஞோபவீதம் *yaññōpavītam,* பெ.(n.) **யக்கியோபவீதம்** பார்க்க; see yakkiyōpavītam.

யட்சம் *yatšam,* பெ.(n.)1. நாய் – dog 2. மந்திரம் -mantra

[Skt. Yakṣam>யட்சம்]

யட்சவாசம் *yaṭšavāšam,* பெ.(n.) ஆலமரம்; (தக்கயாகப்.534.உரை.)banyan tree.

[Skt. Yakṣavāsa> த.யட்சவாசம்]

யட்சன் *yatšaṉ,* பெ.(n.)1. இயக்கன்; yakṣa 2. குபேரன்; Kuberan, the lord and wealth **3. இயக்கன்,2.** பார்க்க; see iyakkaṉ.

[Skt. Yakṣa>த. யட்சன்]

யட்சிணி *yatšiṇi,* பெ.(n.)1. இயக்கி; female yakṣa 2. குபேரனுடைய மனைவி; wife of Kubēran, 3. கொற்றவைக்குப் பணி செய்யும் பெண் கடவுள் a goddess in the service of Durgā.

[Skt. Yakṣiṇi> யட்சிணி]

யட்டி1 *yaṭṭi,* பெ. (n.) அதிமதுரச்செடி; liquorice plant.

யட்டி2 *yaṭṭi,* பெ.(n.) தண்டாயுதம். (அக.நி); club.

யட்டி3 *yaṭṭi,* பெ. (n.) ஊன்று கோல் (யாழ்.அக.) staff, walking stick.

யட்டி *yaṭṭi,* பெ.(n.) முத்தாரம் (யாழ்.அக.); pearl necklace.

[Skt. Yakṣti> த. யட்டி]

யத்தனம் *yattaṉam,* பெ.(n.) முயற்சி; effort, exertion. எத்தனம் பார்க்க; see ettanam.

[Skt. Yatna> த.யத்தனம்]

யத்தினம் *yattiṉam,* பெ.(n.) 1. முயற்சி; effort, exertion. 2. **எத்தனம்** பார்க்க; see ettaṉam.

யதா *yathā,* கு.வி.எ.(adv) எவ்வாறு (வின்); according as, in the same manner as.

[Skt. Yathā> யதா]

யதாசக்தி *yatā-šakti,* கு.வி.எ. (adv.) இயன்றளவு (கொ.வ); to the best of one's ability as far as possible.

[Skt. Yatha-šakti> த.யதாசக்தி]

யதாநகல் *yatā-nagal,* பெ.(n) சரியானபடி (நகல்); நேர்ப்படி; true copy.

[Skt. Yata+ப.நகல்]

யதாப்பிரகாரம் *yadā-p-piragāram,* கு.வி.எ. (adv.) 1. அதுவேபோல; (வின்) in like manner. 2. வழக்கப்படி; (உ.வ.) as usual.

யதாப்பிரதி *yātā-p-pirati,* பெ.(n) **யதாநகல்** பார்க்க; see yatānakal.

யதார்த்தம் *yadārttam,* பெ.(n) உண்மை; (உ.வ) truth; reality.

[Skt. Yathārtham+ த. யதார்த்தம்]

யதார்த்தவாதி *yatārttavāti,* பெ.(n) உண்மை பேசுவோன்; truth-speaker.

[Skt. Yathārtha-vādin>யதார்த்தவாதி]

யதா–தானம் *yatā-tāṉam,* பெ.(n) முன்னிருந்த இடம்; (உ.வ.) former place, status quo ante.

[Skt. Yathā-sthāna>யதாதானம்]

யதாத்திதம் *yatā-titam,* கு.வி.எ. (adv.) உள்ளபடி, just as it is; in fact, actually.

[Skt. Yathā-sthita>யதாத்திதம்]

யதி *yati,* பெ.(n) 1. துறவி; ascetic. "*யதியாகி யவணிருந்த தோழன்றன்னை*" (பாரத. அருச்சுனன்றீர்.53). 2. சீரோசை முடியுமிடம் (தண்டி.110.உரை.); (pros.) caesura. 3. சொற்றொடரில் நிறுத்திப் படிக்கும் இடம் (யாழ். அக.); pause in read. 4. தாளப் பிராணம் பத்தனுள் அங்கம் பலவற்றையும் ஒழுங்கு செய்வது (பரத.தாள.25); (mus.) the element of time measure which specified the different modes of arranging aṅkams, one of tāḷa-p-pirāṇam. 5. அடக்கம் (யாழ்.அக.); restraint. 6. இளைப்பாற்றி (யாழ்.அக.); that which relieves fatigue. 7. ஒன்றிப்பு (யாழ்.அக.); concentration. 8. மோனை (வின்); alliteration. 9. கைம்பெண் (யாழ்.அக.); widow.

[Skt. Yati>த. யதி]

யதிதிமதி *yaditimadi,* பெ. (n) அசையும் மற்றும் அசையா சொத்துகள்; movable and immovable property.

யதிப்பிரட்டம் *yadi-p-piraṭṭam,* பெ.(n) **யதிவழு** (தண்டி.111, குமாரசு. உரை) பார்க்க; see yativaḷu.

[Skt. Yati+bhraṣṭa>த. யதிப்பிரட்டம்.]

யதிபங்கம் *yati-paṅkam,* பெ. (n.) **யதிவழு** பார்க்க; see yativaḷu.

[Skt. Yati+bhaṅga>த. யதிபங்கம்.]

யதிபதி *yati-pati,* பெ.(n) யதிராசன்; பார்க்க; see yatirāsan.

[Skt. Yati+pati> யதிபதி.]

யதிபாத்திரம் *yati-pāttiram,* பெ.(n) இரவலர் கை ஏனம்; (பிச்சைப் பாத்திரம்) begging bowl. (யாழ்.அக.);

[Skt. Yati+pattiram> யதிபாத்திரம்.]

யதிபாரா *yatipārā,* பெ.(n.) **இதிபாரா** பார்க்க; see Idipārā.(C.G.)

[Skt. Yatit+para> யதிபாரா]

யதியாசாரம் *yati-y-āšāram,* பெ.(n.) சமண (சைன) முனிவர்கள் ஒழுகுதற்குரிய நெறி(விதி)களைக் கூறும் நூல்; (மேருமந்.424, உரை.); a treatise on the conduct of jaina ascetices.

யதிவழு *yati-valurāšan*, பெ.(n.) ஓசையறும்வழி நெறிப்படவாராமல் நிற்பது. (தண்டி.110); (pros) misplaced caesura.

யதீந்திரசரணர் *yatintira-šaranar*, பெ.(n.) கூரத்தாழ்வார். (சங்.அக.); Kūrattālvār, a disciple of Rāmānjuar.

[Skt. Yatindra-carana> த. யதீந்திரசரணர்.]

யதீந்திரப்பிரவணப்பிரபாவம் *yatintira-p-piravana-pirapāvam*.பெ.(n.) பிள்ளைலோகாரிய சீயர் இயற்றியதும் மணவாளமாமுனிகளின் வரலாற்றைக் கூறுவதுமாகிய நூல்; a biography of Manavāla-mā-muni by Pillailōkāriyajiyar.

யதீந்திரப்பிரவணர் *yatintira-p-piravanar*, பெ. (n.) மணவாளமாமுனி a vai ṣṇava ācāryar.

[Skt. Yatindra-pravana>த. யதீந்திரபிரவணர்.]

யதீந்திரன் *yatindiran*,பெ.(n.)யதிராசன் பார்க்க; see yadirāšan.

[Skt. Yatindra> த. யதீந்திரன்.]

யது *yatu*, பெ.(n.) நிலவு குலத்து(சந்திர வம்சத்து) யாதவ இனத்து மூல புருடனாகிய அரசன்; (பாரத); an ancient king of the lunar race, the founder of the yādava dynasty.

[Skt. Yadu> த. யது]

யதுநாதன் *yatu-nātan*, பெ. (n.) கண்ணன்; lord Kṛṣṇa.

[Skt. Yadu-nātha > த. யதுநாதன்.]

யதேச்சம் *yatēccam* (adv.) யதேச்சையாய் பார்க்க; see yatēccaiyāy.

[Skt. Yathēccan> த. யதேச்சம்.]

யதேச்சாதிகாரம் *yatēccadikāram* பெ. (n.) விருப்பப்படி ஆணை செலுத்துகை; un controlled exercise of power; autocracy.

த.வ. தன்னெடுப்பு, அதிகாரம்

[Skt. Yathēccādhikāra> த. யதேச்சாதிகாரம்.]

யதேச்சை *yatēccai* கு.வி.எ. (adv) யதேச்சையாய் பார்க்க; see yatēccaiyāy.

த.வ. தன்போக்கு

[Skt. Yathēccanm> த. யதேச்சை.]

யதேச்சையாய் *yatēccai-y-āy*, கு.வி.எ. (adv.) விருப்பின்படி (கோயிலொ.25); to one's satisfaction; according to one's wish or inclination or pleasure.

த.வ. தன்போக்காக

யதேந்திரியம் *yadēndiriyam*, பெ. (n.) கற்புடைமை; (சங்.அக) chastity.

[Skt. Yatēndriya> த. யதேந்திரியம்.]

யதோத்தேசபக்கம் *yatōttēša-pakkam*, பெ.(n.) ஒரு சொல் நின்றுழி நின்று பலச்சூத்திரங்களும் பலவோத்துக்களும் தன் பொருளே நுதலிவரச் செய்வது (நன். எழுத்து.விருத்.பக்.29.); (gram) method of interpretation in a treatise, by which the sense of the sūtras and the subsections of a chapter is controlled by its heading .

[Skt. Yathōddēša-pakṣa> த. யதோத்தேசபக்கம்.]

யந்திரக்கல் *yandira-k-kal*, பெ. (n.) இயந்திரத்தால் இறுக்கியாக்கப்பட்ட செங்கல். (C.E.M.); pressed brick, as machine-made.

[Skt. Yantra> த. யந்திரக்கல்]

யந்திரகிரகம் *yantira-kirakam*, பெ. (n.) 1.பொறி (சூத்திரம்);machine 2. செக்கு; oil-mill.

யந்திரசாபம் *yantira-šāpam*, பெ. (n.) கொற்றவில் (தக்கயாகப்.643); victorious bow.

[Skt. Yantra+cāpa> த. யந்திரசாபம்]

யந்திரசாத்திரம் *yantira-šattiram*, பெ.(n.) 1. எந்திரப் பொறிகளைப் பற்றிய நூல்; treatise on mechanics. 2. மந்திரச்சக்கரம் அமைப்பதைத் தெரிவிக்கும் நூல் (யாழ்.அக.) treatise on the art of constructing diagrams for magical incantations.

[Skt. Yantra->த. யந்திரம்]

யந்திரம் *yantiram,* பெ.(n.) 1. சூத்திரப்பொறி; machine, mechanical contrivance. *"இக்கரை யந்திரத்துட் பட்டதென்ன"* (அஷ்டப், திருவேங்கடத்தத். தனியன்) 2. மந்திரச்சக்கரம்; diagrams for magical incantations. *"யந்திரங்கள் வரைந்து கட்டி"* (தக்கயாகப்.175). 3.தேர் (பிங்); chariot, car. 4. திரிகை. (யாழ்.அக.); grinding-mill. 5.செக்கு. (யாழ்.அக.); oil-mill. 6. தீக்கடைகோல் (யாழ்.அக.); fire-drill.

[Skt. Yantra> த. யந்திரம்]

யந்திரலோகம் *yantira-lōgam,* பெ. (n.) பயறு; pulse.

[Skt. Yantra> த. யந்திரம் + லோகம்]

யந்திரவாவி *yantira-vāvi,* பெ. (n.) எந்திரயுதவியால் நீரை நிறைத்தற்கும் போக்குதற்குரிய நீர்நிலை (சிலப்.3.45 அரும்); tank or reservoir filled or emptied by mechanical means.

[Skt. Yantra>த. யந்திரம்]

யந்திரவூர்தி *yantira-vūrdi,* பெ. (n.) யந்திரவுதவியாற் செல்லுதற்குரிய ஊர்தி (வாகனம்) (வின்); conveyance moved by mechanism.

[Skt. Yantra> த.யந்திரம்+ ஊர்தி]

யந்திரதாபனம் *yantira-tāpanam,* பெ.(n.) தகடு முதலியவற்றில் விரும்பிய பயனை விளைக்கும் மந்திரசக்கரம்(ஸ்தாபிக்குஞ் சடங்கு) உருவாக்கும் செயல்; ceremonial fixing of a plate or palm leaf engraved with magical diagrams.

[Skt. Yantra + stapa> த. யந்திரதாபனம்]

யந்திரு *yantiru,* பெ. (n.) 1. ஆளுவோன்; ruler. 2. குதிரைப்பாகன்; horse-groom. 3. தேர்ப்பாகன்; charioteer.

[Skt. Yantṛ > யந்திரு]

யமகண்டம் *yama-kaṇḍam,* பெ. (n.) 1. ஒவ்வொரு நாளிலும் காலனுக்கு (எமனுக்கு) உரியதாகக் கருதப்பட்ட மூன்றே முக்கால் நாழிகைப் பொழுது; (Astrol.) the period of 1.5 hours of a day, presided over by yama and hence considered in-auspicious. 2. ஒருவன் வாணாளில் (ஆயுளில்) உயிருக்கு பேரிடைஞ்சலான (அபாயமான) காலம்; the period of danger to one's life.

[Skt. Yama >த. யம + கண்டம்]

யமகண்டம்பாடு-தல் *yamakandam-pāḍu,* (செ.கு.வி) (v.i). உயிருக்கு பேரிடைஞ்சலான கட்டுப்பாட்டுக் (அபாயமான நிபந்தனைக்) குட்பட்டு பாடுதல்;to compose verses under stringent conditions, the penalty for the breach of which is death.

[Skt. Yama>த.யம+ கண்டம் +பாடு]

யமகண்டவேளை *yamakaṇḍ-a-vēḷai,* பெ.(n.) யமகண்டம் பார்க்க; see yama-kaṇḍam.

[Skt. Yama> த. யம + கண்டவேளை]

யமகண்டன் *yamakaṇḍaṉ,* பெ.(n.) 1. வலியோன்; strong, powerful person. *"அந்த யமகண்டனை யார் வெல்லுகிறது"* (குருபரம்.190) 2. ஒரு காணாக் கோள்; an invisible planet. 3. **யமகண்டம்** பார்க்க; see yamakaṇḍam.

[Skt. Yama> த. யம கண்டன்]

யமகம் *yamagam,* பெ.(n.) வந்த எழுத்துகளே பொருள் வேறுபடச் செய்யுளின் சீர் அல்லது அடிகளிற் பின்னும் வருவதாகிய மடக்கு என்னும் அணி.(தண்டி.90 வரை) repetition, in a stanza, with changes of meaning sometimes effected by changes in the division of words, dist. fr. tiripu.

[Skt. Yamaka > த. யமகம்]

யமகவந்தாதி *yamaga-v-andādi,* பெ.(n.) யமகத்தோடு வரும் அந்தாதி; a kind of antāti poem with yamakam in each verse. *"யமக வந்தாதியை வாசிமினே"* (அஷ்டப். திருவரங்கத் தந். தனியன்).

[Skt. Yamaka> த. யமகவந்தாதி]

யமகாதன் *yama-gādagaṉ,* பெ. (n.) 1. பேராற்ற லுள்ளவன் .(உ.வ); man of great ability. 2. மிகச் சமர்த்தன்; man of great intelligence. 3. மிகவும் பொல்லாதவன்; wicked man.

[Skt. Yama+ த. யகமகாதன்]

யமகாளிந்தி *yama-kāḷindi,* பெ. (n.) சரயுநதி; the river Sarayū. (யாழ்.அக.)

[Skt. Yamakālindī + யமகாளிந்தி]

யமகிங்கரன் *yama-kingaran,* பெ. (n.) 1. **யமதூதன்1** பார்க்க; see yama-dūdan. 2. **யமபடன்** பார்க்க; see yamapadan.

யமகீடம் *yama-kēdam,* பெ. (n.) புழுவகை; wood-louse. (சங்.அக.).

[Skt. Yama-kita> த.யமகீடம்]

யமசபம் *yamašapam,* பெ. (n.) காலனது அவை (இயமனது சபை) (யாழ்.அக.); yama's court.

[Skt. Yama-sabha+ த.யமசபம்]

யமதக்கினி *yamatakkini,* பெ.(n.) a sage சமதக்கினி எனும் முனிவன்; பார்க்க; see samtakkini.

[Skt. Jamadagni > த.யமதக்கினி]

யமதங்கி *yamatanki,* பெ.(n.) a sage சமதக்கினி; பார்க்க;(தொல்.பாயி.உரை); see samtakkini.

[Skt. Yamadagni> த.யமதங்கி]

யமதங்கிமைந்தன் *yamatdangi-maintan,* பெ.(n.)பரசுராமன்; parašurāma யமதங்கி–மைந்தனைச் சாரவே (பாரத.குருகுல.134);

[யமதங்கி+மைந்தன்]

[Skt. Jamadagni>த. யமதங்கி]

யமதர்மராசன் *yama-tarma-rāsan,* பெ.(n.)1. காலன்; yaman 2. நடுவு நிலை குன்றாதவன்; just, upright man.

[Skt. Yama + tarama+rājan > த. யமதர்மராஜன்]

யமதூதன் *yama-dūdan,* பெ.(n.)1. காலனது தூதன்; messenger of yama. 2. யமதூதி; பார்க்க; see yama-dudi.(யாழ்.அக.)

[யமன் + தூதன்]

[Skt. Yama >த. யம]

யமதூதி *yama-dūdi,* பெ.(n.) நாகத்தின் நச்சுப்பல் நான்கனுளொன்று (சீவக.1288.உரை); a fang of the serpent, one of four naccu-p-pal, q.

[Skt. Yama+dūti>த. யமதூதி]

யமப்பிரியம் *yama-p-piriyam,* பெ.(n.) 1. அத்தி country fig 2. ஆலமரம் banyan.

[Skt. Yama+priya>த. யமப்பிரியம்]

யமபகினி *yamapagini,* பெ. (n.) யமுனை நதி; the river yamunai. (யாழ்.அக.)

[Skt. Yama+bhagini>த. யமபகினி]

யமபடம் *yama-patam,* பெ.(n.) யமஉலகத்தின் விவரங்களையும் அங்கே பாவிகள் நுகரும் துன்பங்களையுங் காட்டும் சித்திரப்படம்; map or picture of yama's world, showing in detail the tortures inticted on sinners.

[Skt. Yama > த. யமபடம்]

யமபடன் *yama-patan,* பெ. (n.) இயமனது ஏவலாள்;servant of yama *"யமபட ரெனுந்திமிர மணுகாக் கதி"* (தாயு.மலைவளர்.1)

[Skt. Yama>த. யம]

யமபுரம் *yama-puram,* வெ.(n.)எமனுடைய பட்டணம்(சங்.அக.); yaman's city.

[Skt. Yama>த. யமபுரம்]

யமபுரி *yama-puri,* யமபுரம் பார்க்க; see yama-puram "யமபுரியேறுவர்" (பெருந்தொ.1176).

யமயாதனை *yama-yātanai,* பெ.(n.)இயம வேதனை பார்க்க; see yama-vētanai.

[Skt. Yama+ yātanai > த. யமயாதனை]

யமரதம் *yama-ratam,* பெ.(n.) **யமவாகனம்** பார்க்க; see yama-vāganam.

[Skt. Yama+ratha>த. யமரதம்]

யமராசன் *yama-rāšan,* பெ.(n.) **இயமன்** பார்க்க; see yaman. *"அடைமொரு தண்டி லெற்றும் யமராசன்"* (தக்கயாகப். 444)

[Skt. Yama-rāja> த. யமராசன்]

யமலோகம் *yama-lōgam,* பெ. (n.) 1. எமனுடைய உலகம்; yaman's world. 2. நரகம்; hell; place of torture.

[Skt. Yama >த. யமலோகம்]

யமவாதை *yama-vātai,* பெ.(n.) **யமவேதனை** பார்க்க; see yama-vēdanai.

[Skt. Yama+vātai> த. யமவாதை]

யமவிரதம் *yama-viratam,* பெ. (n.)1. இயமத்தைக் கடைபிடிக்கை; practice of iyamam; (யாழ்.அக.) 2. ஒருபாற்கோடாது (பாரபட்சமின்றி) அரசுமுறை நடத்துகை;

impartial adminis- tration of government.

[Skt. Yama > த. யம + விரதம்]

யமவேதனை *yama-vēdaṉai*,(n.) பெருந்துன்பம் (கொ.வ) excruciating pain.

[Skt. Yama+vēdaṉai> த. யமவேதனை]

யமளம் *yamaḷam*, பெ. (n.) இணை; இரட்டை (யாழ்.அக.) couple; pair; twins.

[Skt. Yamaḷa> த. யமளம்]

யமற்கோளம் *yamaṟkōḷam*, பெ. (n.) கடுக்காய் chebulic myrobalan.

யமன் *yamaṉ*, பெ. (n.) 1. எண்திசைக் காவலருளொருவனும் தென்திசைக்கு உரியவனுமான கடவுள் (திவா.); yaman, the God of death, regent of the South, one of aṣṭa-tikku-p-pālakan. q.v. *"எருமைப் பகட்டின் மிசை யமனேறவே"* (தக்கயாகப். 463.); 2. நாகத்தின் நச்சுப்பல் நான்கனுளொன்று (சீவக. 1288, உரை); a fang of the serpent, one at four naccu-p-pal. q.v.

[Skt. Yama > யமன்]

யமனி *yamaṉi*, பெ.(n.) யமபுரம் பார்க்க; see yamapuram. *"யமனி சாரும்"* (சிவதரு. சுவர்க்க நரக.41)

[Skt. Sam-yamanī> த.யமனி]

யமனிகை *yamaṉigai*, பெ.(n.) யவனிகை பார்க்க; see yavaṉigai.

[Skt. Yavanikā> யமனிகை]

யமுனை *yamunai*, பெ.(n.) பிரயாகையிற் கங்கை யாற்றுடன் கலக்கும் ஓர் ஆறு; Jamuna which joins the Ganges at Prayāga. யமுனைக் கரைக்கென்னை யுய்த்திடுமின் (திவ்.நாய்ச்.12,4)

[Skt. Yamuna > த. யமுனை]

யமுனைத்துறைவன் *yamunai-t-turaivaṉ*, பெ.(n.) 1. கண்ணன்; Kannan, as lord of the region of the Jamuna. *"தூய பெருநீர் யமுனைத் துறைவனை"* (திவ்.திருப்பா.5). 2. மாலியச்சான்றோரான ஆளவந்தார்; a Vaishnava accaryar. எதிகட்கிறைவன் யமுனைத்துறைவன் (திவ்.இராமாநூசநூற்.21.).

யாகத்தம்பம் *yāga-t-tamapam*, பெ. (n.) வேள்வித் தூண், யூபம். (தக்கயாகப்.505.உரை); sacrificial post.

[யாகம் + தம்பம்]

[Skt. Yāga > த. யாக + தம்பம்]

யாகத் திரவியம் *yāga-t-tiraviyam*, பெ.(n.) வேள்விப் பொருள்; articles of sacrifice.

[Skt. Yāga +tiraviyam> யாகதிரவியம்]

யாக நிலை *yāga-nilai*, பெ.(n.) யாகசாலை பார்க்க; see yāga-šālai. *"வான்றருஞ் சுரபி யாக நிலையுக"* (இரகு. தேனுவ.52.)

[Skt. Yama+> த. யாகம் + நிலை]

யாகப்பிறையான் *yāga-p-piṟaiyāṉ*, பெ.(n.) தக்கனது ஓகத்தினால் தோன்றிய நிலவு; the moon arising our of Daksa's sacrificial fire."யாகப்பிறையா னினியென்னகம் புகுந்து (தக்கயாகப்.63, விசேடக் குறிப்பு)

[Skt. Yāga> யாகம் + பிறையான்]

யாகபத்தினி *yāga-pattiṉi*, பெ.(n.)1. யாகபதியின் மனைவி; wife of yāga pati or sacrificer, as taking part in the sacrifical ceremonies. *"இவர் தமக்குரியாளகிய யாகபத்தினியுமான*(பாரத.சூது.199)" 2.திரௌபதி;(யாழ்.அக.) Draupadi.

[Skt. Yāga+pattiṉi> த. யாகபத்தினி]

யாகபதி *yāga-pati*, பெ.(n.)1. வேள்வியியற்றுபவன்; one who performs a sacrifice; 2. இந்திரன்; (இலக்.அக.) Indraṉ.

[Skt. Yāga+ > யாகபதி]

யாகபன்னி *yāga-paṉṉi*, பெ.(n.)1. யாகபத்தினி பார்க்க;see yāga-pattiṉi மாமியென் றியாக பன்னியை (தக்கயாகப்.504)

[Skt. Yāga+ paṉṉi> த. யாகபன்னி]

யாகபாகம் *yāga-pāgam*, பெ.(n.)1. அவிர்ப்பாகம்; (யாழ்.அக.) libertions or oblations offered in sacrifices.

[Skt. Yāga> த. யாகம் + பாகம்]

யாகபாரி *yāga-pāri,* பெ.(n.)யாகதட்சிணை (யாக புருடன் மனைவி) "தக்கணை யாக பாரியென" (இரகு. அரசி.20); fees given at a sacrifice, considered as the wife of sacrifice personified.

[Skt. Yāga+bhāryā> த. யாகபாரி]

யாகபேரம் *yāka-pēram,* பெ.(n.)கோயிலுள் ஓகச் சாலைக்குரிய மூர்த்தி (Loc); the idol that presides over the sacrificial hall of a temple.

[Skt. Yāga+bēra> யாகபேரம்]

யாகபோசனர் *yāga-pōsaṉar,* பெ.(n.) வானோர்; (யாழ்.அக.) Gods.

[Skt. Yāga+pōsaṉar> த. யாகபோசனர்]

யாகம் *yāgam,* பெ.(n.)1. பதினெட்டு வகைப்பட்ட வேள்வி; (திவா) sacrifice, of eighteen kinds.2. ஐவகை(ஓகம்);sacrifice of five kinds.3. ஐவகையாகம்; venetics of siritual discipline.4. திருவாராதனம்; worship.

[Skt. Yāga> த. யாகம்]

யாகமண்டபம் *yāga-maṇḍapam,* பெ.(n.) யாகசாலை பார்க்க; see yāga-sālai.

[Skt. Yāga > த. யாகம் + மண்டபம்]

யாகவிபாகம் *yāka-vipāgam,* பெ.(n.) ஓகத்திற் கிடைக்கும் அவிர்ப்பாகம்; oblations at a sacrifice."இழைத்த யாகவிபாக முற்பட வுண்ணலாம்" (தக்கயாகப்.248)

[Skt. Yāga+vib>த. யாகவி]

யாகவுப்பு *yāga-v-uppu,* பெ.(n.) பூரணாதியுப்பு (மூ.அ.) பார்க்க; see pūraṇātiuppu.

[Skt. Yāga > யாக + உப்பு]

யாகுவம் *yākuvam,* பெ.(n.) சாவகத்தீவு (யாழ்.அக.) the island of Java.

[Perh. Yāvaka > த. யாகுவம்]

யாங்கர் *yāṅkar,* பெ.(n.) அரக்கர்; rākṣasas (அக.நி.).

யாசகத்திருநாள் *yāśaka-t-tiruñal,* பெ.(n.) பலரிடத்தும் இரந்து பெற்று நடத்துந் திருவிழா(இ.வ); festival performed by raising donations to meet the expenses.

[Skt. Yācaka > த. யாசகம்]

யாசகம்[1] *yāśagam,* பெ.(n.) இரப்பு; begging "யாசகத்தினிழி வரவு" (சேது.சேதுசருக்.மே)

[Skt. Yācaka > த. யாசகம்]

யாசகம்[2] *yāśagam,* பெ.(n.) 1. அரசயானை; Royal elpehant.2. மதயானை; rutting elephant.

[Skt. Yājaka > த. யாசகம்]

யாசகன்[1] *yāsakaṉ,* பெ.(n.) இரப்போன்;(திவா) beggar menddicant.

[Skt. Yācaka > த. யாசகன்]

யாசகன்[2] *yāśakaṉ,* பெ.(n.) வேள்வி செய்விப்பவன்; priest offciating at a sacrifice.

[Skt. Yājaka > த. யாசகன்]

யாசனம் *yāśaṉam,* பெ.(n.) வேதியனாக இருந்து யாகஞ்செய்விக்கை; enabling one to perrform a sacrifice by officiating as priest.

[Skt. Yājana > த. யாசனம்]

யாசனை *yāsaṉai,* பெ.(n.) 1. வேண்டுதல்; request. 2. பிச்சை (சங்.அக) alms.

[Skt. Yācanā > த. யாசனை]

யாசி-த்தல் *yāci-,* (செ.கு.வி) இரத்தல் beg; to ask alms. "எத்தகையோர்களும் யாசிக்கப்படும் அத்தகை வித்தக" (விநாயகபு. 4.73.36)

[Skt. Yāci> த. யாசி]

யாசிதகம் *yāsitagam,* பெ.(n.) 1. வட்டி முதலியன இன்றித் திருப்பிக் கொடுப்பதாகப் பெற்ற பொருள்; (சுக்கிரநீதி,96) that which is lent without interest.2. வாடகையின்றி பயன்படுத்தித் திருப்பிக் கொடுப்பதாகப் பெற்ற பொருள்; thing borrowed for use without rent.

[Skt. Yācitaka > த. யாசிதகம்]

யாசிதம் *yāsi-dam,* பெ(n.) **யாசிதகம்** பார்க்க; see Yāsi-tagam (சுக்கிரநீதி,141)

[Skt. Yācita> த. யாசிதம்]

யாஞ்ஞுவல்கியம் *yāññavalkiyam,* பெ (n.) 1. நூற்றெட்டு மறைமங்களுள்(உபநிடதம்) ஒன்று; an upanisad, one of 108. 2. அற(தரும) நூல் பதினெட்டினொன்று; a sanskrit text book of Hindu law, ascribed to yājñavalkya, one of 18 tarumanūl, q.v. n opanisad, one of 108.

[Skt. Yājñavalkya> த. யாஞ்ஞுவல்கியம்]

யாத்திராகமம் *yāttirāgamam,* பெ (n.) விவிலியநூலுட் பழைய ஏற்பாட்டின் உட்பிரிவு (கிறித்து); the book of exodus, in the Old Testament.

[Skt. Yatrā+āgama> யாத்திராகமம்]

யாத்திராகரணம் *yāttirākaranam,* பெ (n.) 1. வழிச்செலவு செய்கை (பயணம் பண்ணுகை); travelling, make expedition. 2. பொழுது போக்கு; hobby.

[Skt. Yātrā+karana>த. யாத்திராகரணம்]

யாத்திராதானம் *yāttirā-tānam,* பெ (n.) 1. விழா (யாத்திரை), திருவிழா (உற்சவம்) இவற்றின் தொடக்கத்தில் அவை இடையூறின்றி முற்றுப் பெறுமாறு கொடுக்கும் கொடை (தானம்); propitiatory gift made at the beginning of a journey or of a festival to insure its sucessful termination. 2. சாகுந்தறுவாயிற் கொடுக்கும் கொடை (தானம்); propitiatory gift made in-death-bed.

[Skt. Yātrā+sthāna>த. யாத்திராதானம்]

யாத்திராப்பிரசங்கம் *yāttirāpirasaṅgam,* பெ (n.) செலவில் (யாத்திரை) இருக்கை (யாழ்.அக.); being on tour.

[Skt. yātrā+pra-saṅga>த. யாத்திராபிரசங்கம்]

யாத்திரிகர்விடுதி *yāttirigar-viḍudi,* பெ.(n.) செலவு(பிரயாணஞ்) செய்வோர் தங்குதற்குரிய கட்டடம்; travellers bungalow.

[Skt. Yātrika > த. யாத்திரிகர்+ விடுதி]

யாத்திரிகன் *yāttirigan,* பெ.(n.) கோயில்களுக்குச் செலவு (தலயாத்திரை) செய்வோன்; traveller, pilgrim.

[Skt. Yātrika > த. யாத்திரிகன்]

யாதசாம்பதி *yātaśāmpadi,* பெ. (n.) மழைக் கடவுள் (வருணன்) (யாழ்.அக.) Varunan.

[Skt. Yādasāmpat > த. யாதசாம்பதி]

யாதபதி *yādapati,* பெ. (n.) 1. கடல்; sea. 2. மழைக்கடவுள் (வருணன்); varunan.

[Skt. Yādaḥ-pati > த. யாதபதி]

யாதம்[1] *yātam,* பெ.(n.) யானைத் தோட்டி (வின்); elephant goad.

[Skt. Yāta > த. யாதம்]

யாதம்[2] *yātam,* பெ. (n.) யாதவம் (யாழ்.அக.) பார்க்க; see yadavam.

யாதவம் *yādavam,* பெ.(n.) மாட்டுமந்தை (யாழ்.அக.); stock of cattle.

[Skt. Yādava > த. யாதவம்]

யாதவர் *yādavar,* பெ.(n.) 1. யதுவமிசத்தவர்; yādavas as descendants of yadu. "சேதிபர் யாதவரே" (கலிங்.316,புதுப்.)2. இடையர்(பொ.வ); persons of the cowherd caste.

[Skt. Yādava > த. யாதவர்]

யாதவன் *yādavan,* பெ.(n.) கண்ணபிரான்; kṛṣṇa. "யாதவன் துவரைக்கிறையாகிய மாதவன்" (பெரியபு.திருமலை.14)

[Skt. Yādava > த. யாதவன்]

யாதவி *yādavi,* பெ.(n.) 1. குந்தி; Kunti, as a female descendant of yadu. "இறைவனு மகிழ்ந்து பின்னும் யாதவிக்குரைப்ப"(பாரத சம்பவ.85) 2. சிவை(உமை) (யாழ்.அக.); the Goddess Umā, as the sister of kṛṣṇa.

[Skt. Yādavi > த. யாதவி]

யாதனம்[1] *yatanam,* பெ.(n.) 1. யாதனை, 1,3 பார்க்க; see yātanai, 1,3.

யாதனம்[2] *yātanam,* பெ.(n.) 1. மரக்கலம் (சது.) boat. 2. தெப்பம் (யாழ்.அக.); raft.



யாதனாசரீரம் *yātanāšariram,* பெ.(n.) அளறு (நரகம்) நுகர்தற்குரிய உடல் (தேகம்); the body created to undergo the experiences of hell "பாவம் யாதனாசரீர நல்குமாறு" (ஞானவா.சித்.18)

[Skt. Yātana +šarirā > த. யாதனாசரீரம்]

யாதனை *yatanai,* பெ.(n.) 1. நோவு (வேதனை); pain, agony, torment, suffering. "அடைந்தடைந் திங்கி யாதனையா வழிந்ததல்லால்" (தாயு.ஆகார.30) 2. அளறு (நரக)த் துன்பம் வேதனை (சூடா); the tortures of hell."யாதனையுண்டு கொல்" (சிவதரு. சுவர்க்க நரக.188). 3. துக்கம் (பிங்) anguish

[Skt. Yādava > த. யாதவர்]

யாதவர் *yādavar,* பெ.(n.) 1. யதுவமிசத்தவர்; yādavas as descendants of yadu "சேதிபர் யாதவரே" (கலிங்.316,புதுப்.) 2. இடையர் (பொ.வ); persons of the cowherd caste. "யாதனையுண்டு கொல்" (சிவதரு. சுவர்க்க நரக.188) 3. வருத்தம் (பிங்.); anguish, distress.

[Skt. Yātanā > த. யாதனை]

யாதாத்மியம் *yādādmiyam,* பெ.(n.) உண்மை-யான நிலை; exact condition, true state.

[Skt. Yāthātmya > த. யாதாத்மியம்]

யாதாயாதமாயலை-தல் *yātāyātamāyalai,* செ.கு.வி (v.i.) போவதும் வருவதுமாய் அலைதல் (பாரப்); to be wandering to and fro.

யாதார்த்தியம் *yātārttiyam,* பெ.(n.) உண்மை (சத்தியம்) (இலக்.அக.); truth.

[Skt. Yāthārthya > த. யாதார்த்தியம்]

யாதாத்து *yātāttu,* பெ.(n.) 1. நினைவுக்குறிப்பு; written memorandum. 2. ஒத்த வேலை செய்வோர் அவ்வேலை பற்றித் தம்முள் எழுதும் நினைவுக்குறிப்பு; official memorandum addressed by one official to another of equal status. 3. ஆவணங்களில் (பத்திரம்) வரிப் பிளப்பு முதலியவற்றைக் குறிக்குங் குறிப்பு. (இ.வ.); memorandum of interlineation, etc., in a document.

த.வ. இடைக்குறிப்பு

[Skt. Yāddāṣt > த. யாதாத்து]

யாதி *yadi,* பெ.(n.) 1. நினைவு; memory."எனக்கு யாதி இல்லை". 2. ஆழ்ந்த கருத்து; deep thought.

[U. Yād > த. யாதி]

யாதிகன் *yadigan* பெ.(n.) வழிச்செல்வோன் (சங்.அக.) traveller.

[Skt. Yātika > த. யாதிகன்]

யாபனம் *yābanam,* பெ.(n.) 1. பொழுது போக்குகை; whiling away one's time. 2. தாமதிக்கை; delaying. 3. இகழுகை; despising.

[Skt. Yāpana > த. யாபனம்]

யாம்மியோத்தராந்தம் *yāmmiyōttarāntam,* பெ.(n.) (வானியல்) வான அளவில் தெற்கு வடக்காகவுள்ள தொலைவு(C.G.); (Astron) azimuth, as the distance from north to south.

[Skt. Yāmya+uttara+antara>த.யாம்மி-யோத்தராந்தம்]

யாமளருபதேசம் *yāmalarubadēšam,* பெ.(n.) ஒரு நுண்ணுத்தி (தாந்திரிகம்) நூல் (தக்கயாகப் 168, உரை); a tantric treatise.

[*Skt. Yāmala+upadēša > த. யாமளருபதேசம்*]

யாமளாக்கினி *yāmaḷākkini*, பெ. (n.) பெருங் கொற்றவையாகிய காளியின் தீ (தக்கயாகப். 666. உரை); the fire of Mahākāli.

யாமளாசாரியர் *yāmaḷāšāriyar*, பெ.(n.) யாமளாகமத்தின் வழியொழுகும் பெரியோர். (தக்கயாகப். 51, உரை.); the principal followers of yāmaḷākamam.

[*Skt. Yāmala+ācārya > த.யாமளாசாரியர்*]

யாமளேந்திரர் *yāmaḷēndirar*, பெ.(n.) இசைத் தமிழ் நூலாசிரியருளொருவர்; (சிலப். உரைப்பாயி); author of a treatise on icai-t-tamil.

யாவத்தீவு *yāvattīvu*, பெ.(n.) யவத்தீவு (வின்); the Island of Java.

த.வ. யாவம், யாவா

[*Skt. Yava-dvīpa > த. யாவத்தீவு*]

யுக்தம் *yuktam*, பெ. (n.) 1. தகுதி (கொ.வ.); fitness, suitablenes, propriety. 2. தொடர் மொழியினிறுதியில் கூடினது என்ற பொருளில் வருஞ்சொல்; the second member of a compound word meaning that which is combined 'with'.

[*Skt. Yukta > த. யுக்தம்*]

யுக்தி *yukti*, பெ.(n.) 1. பொருத்தம்; fitness. 2. கருதுகோள் (அனுமானம்); inference. 3. காரணம் (நியாயம்) (வின்); reason, argument. 4. கூரியவறிவு; keen understanding, acute intellect. 5. சூழ்ச்சி (கொ.வ.); plan,scheme, device. 6. அறிவுரை புத்திமதி (வின்); counsel, advice. 7. பகுத்தறிவு (விவேகம்) (வின்); discrimination. 8. ஆராய்வு (வின்); deleberation. 9. சூழ்ச்சி (உபாயம்) (வின்); expedient, artifice.

[*Skt. Yukti > த. யுக்தி*]

யுக்மம் *yukmam*, பெ.(n.) இணை, இரட்டை; pair, couple, brace.

[*Skt. Yugma > த. யுக்மம்*]

யுகசந்தி *yugašandi*, பெ.(n.) (வானியல்) ஒரு ஊழியின் (யுகம்) முடிவினின்றும் அடுத்த ஊழியின் (யுகம்) தொடக்கத்தினின்றும் சேர்த்ததும் முன் ஊழியின் ஆறிலொருபங்குமான காலப்பகுதி; (Astron.) period comprising the end of the next equivalent to one-sixth of the duration of the earlier yuga.

[*Skt. Yuga+sandhi > த. யுகசந்தி*]

யுகதருமம் *yuga-tarumam*, பெ.(n.) நூலின்படி (சாத்திரம்) அந்த அந்த ஊழியில் (யுகம்) நடக்கவேண்டிய நடைமுறை (வின்); the characteristics of a particular yuga as detailed in the šāstras.

த.வ. ஊழிநடப்பு

[*Skt. Yuga > த. யுகம் + தருமம்*]

யுகந்தரம் *yugandaram*, பெ.(n.) 1. ஏர்க்கால்; pole of a carriage to which the yoke is fixed. 2. ஒரு நாடு; a countsry.

[*Skt. Yugan-dhara> த. யுகந்தரம்*]

யுகப்பிரளயம் *yuga-p-piraḷayam*, பெ.(n.) நான்கு ஊழியின்(யுகம்)முடிவில் நிகழும் அழிவு (பிரளயம்) (வின்); cosmic deluge at the end of a cycle of yugas.

[*Skt. Yuga+pra-laya > த. யுகப்பிரளயம்*]

யுகபத்திரிகை *yugapattirigai*, பெ.(n.) மரவகை; ašokatree.

[*Skt. Yugapatitikā > த. யுகபத்திரிகை*]

யுகபேதம் *yuga-bēdam*, பெ.(n.) ஊழிகளுக்குள் (யுகம்) உண்டாகும் நடைமுறையின் வேறுபாடு (வின்); the difference in characteristics between one yuga and another.

[*Skt. Yuga+bhēda > த. யுகபேதம்*]

யுகம்[1] *yugam*, பெ.(n.) 1. கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம், என்ற நால்வகைப்பட்ட நீடிய காலம்.(பிங்); age, aeon, a long period of time, of which there are fair,viz.,kiruta-yukam, tiretā-yukam, tuṇāpara-yukam, kali-yukam. 2. இரட்டை; pair, coule, brace" பதயுகத் தொழில் கொடு" (கம்பரா.நகரப்.49) 3. நுகம் (யாழ்.அக.) yoke. 4. நான்கு முழங்கொண்ட அளவு;

(யாழ்.அக.); a measure of four cubits.

[Skt. Yuga > த. யுகம்1]

யுகம்[2] *yugam*, பெ. (n.) உலகம் (பூமி) (பிங்); earth.

யுகமுடிவு *yugamudivu*, பெ.(n.) ஊழியின்(யுகம்) முடிவு (யாழ்.அக.) ; the end of a yuga.

[Skt. Yuga > த. யுகம்]

யுகவத்திரகம் *yugavattiragam*, பெ.(n.) திருவாத்தி (தைலவ.தைல.51.); holy mountain ebony.

[Skt. Yugapatraka > த. யுகவத்திரகம்]

யுகளம் *yugaḷam*, பெ. (n.) இரட்டை; pair, brace. "சேவடி யுகள மல்லது (பதினொ. மூத்த பிள்ளையாக)"

த.வ. இணை

[Skt. Yuga la > த. யுகளம்]

யுகளி *yugaḷi*, பெ.(n.) யுகளம் (வின்) பார்க்க ; see yugaḷam.

[Skt. Yugali > த. யுகளி]

யுகாதி *yugāti*, பெ.(n.) 1. ஊழியின் (யுகம்) தொடக்கம் (சங்.அக.); beginning of the year. 2. தெலுங்கர், கன்னடர் முதலியோரின் ஆண்டுப் பிறப்பு ; the new year day of the Telugus and the Kanarese. 3. அருகன்; Arhat. 4. கடவுள் (யாழ்.அக.) ; god.

[Skt. Yugādi > த. யுகாதி]

யுகாந்தப்பிரளயம் *yugānta-p-piraḷayam*, பெ. (n.) யுகப்பிரளயம் (வின்) பார்க்க; see yuga-p-piraḷayam.

[Skt. Yugānta+Pra-laya > த. யுகாந்தப் பிரளயம்]

யுகாந்தம் *yugāndam*, பெ.(n.) 1. ஊழியின் (யுகம்) முடிவு(வின்) ; the end of yuga. 2. யுகப்பிரளயம் (யாழ்.அக.) பார்க்க ; see yuga-p-piraḷayam.

[Skt. Yugānta > த. யுகாந்தம்]

யுகாந்தாக்கினி *yugāntākkiṉi*, பெ.(n.) ஊழித்தீ (தக்கயாகப். 67,உரை) ; the all consuming fire at the end of a cycle of yugas.

[Skt. Yugantāgni > த. யுகாந்தாக்கினி]

யுஞ்சானன் *yuñšāṉaṉ*, பெ.(n.) ஓகப் பயிற்சி (யோகாப்பியாசம்) செய்வோன் (கங்.அக.) ; one who practises yōga, yogi.

[Skt. Yuñjāna > த. யுஞ்சானன்]

யுத்தகளம் *yuttakaḷam*, பெ.(n.) போர்க்களம் (பிங்); battle-field.

[Skt. Yuddha > த. யுத்தம்+களம்]

யுத்தசன்னத்தன் *yuttašaṉṉattaṉ*, பெ. (n.) போர்க்கோலங் கொண்டவன் (வின்); one armed or equipped for battle.

[Skt. Yuddha+san-naddha>த. யுத்த சன்னத்தன்]

யுத்தசன்னாகம் *yutta-šaṉṉāgam*, பெ.(n.) போருக்கு முன்னேற்பாடு (ஆயத்தம்) (வின்); preparation for battle, preparedness for war.

[Skt. Yuddha+san-nāha > த. யுத்த சன்னாகம்]

யுத்தசன்னியாசம் *yuttašaṉṉiyāšam*, பெ.(n.) சூளுறவு(சபதம்) செய்து போர்த் தொழிலினின்று நீங்குகை(வின்); renunciation of military life, under a vow.

[Skt. Yuddha+san-nyāsa > த. யுத்த சன்னியாசம்]

யுத்தநாதி *yuttanādi*, பெ.(n.) (வானியல்) குறித்தகாலத்திலுள்ள கோள் இயக்கப் (அயனசலன) பாதை (வின்); (Astron.) precession of the equinoxes at a given time.

[Skt. Yukta+nāti > த. யுத்தநாதி]

யுத்தநாதிவாக்கியம் *yuttanādivākkiyam*, பெ.(n.) கோள் இயக்க (அயனசலன) வாய்பாடு (வின்); (Astron.) table of the precession of the equinoxes for a given time.

யுத்தம்[1] *yuttam*, பெ.(n.) போர்(பிங்); battle, fight, war.

[Skt. Yuddha > த. யுத்தம்1]

யுத்தம்[2] *yuttam*, பெ.(n.) 1. பொருத்தம்(வின்); fitness, proriety. 2. யுத்தம்,2 (வின்) பார்க்க; see yuktam,2. 3. நான்கு முழங்கொண்ட அளவு. (யாழ்.அக.); a measurement.

[Skt. Yukta > த. யுக்தம்,2]

யுத்தமுகம் *yuttamugam*, பெ.(n.) போர்முனை(வின்) ; battle front.

[Skt. Yuddha+ > த.யுத்தம் + முகம்]

யுத்தரங்கம் *yuttarańgam*, பெ.(n.) போர்க்களம் ; theatre of war, field of battle.

[Skt. Yuddha> த. யுத்தம்+அரங்கம்]

யுத்தவீரன் *yuttaviran*, பெ.(n.) போர் வீரன்; warrior.

[Skt. Yuddha> த. யுத்தம் + வீரன்]

யுத்தவேது *yuttavēdu*, பெ.(n.) பொருத்தமான ஏதுவைக் கொண்ட அணிபுனைவு (அலங்காரம்) (யாழ்.அக.); (Rhet.) a figure of speech in which an appropriate reason is suggested.

[Skt. Yuddha+ த. யுத்தம் + வேது]

யுத்தாயுத்தம் *yuttāyuttam*, பெ.(n.) தக்கதுந் தகாததும்; what is proper and what is improper, propriety and impropriety.

[Skt. Yuktāyukta > த. யுத்தாயுத்தம்]

யுத்தி *yutti*, பெ.(n.) யுக்தி பார்க்க; see yukti.

[Skt. Yukti > த. யுத்தி]

யுத்திக்காரன் *yuttikkāran*, பெ.(n.) கூரிய அறிவுள்ளவன் (வின்); man of keen, resourceful intellect.

[Skt. Yukti > த. யுத்தி + காரன்]

யுத்திசித்தி *yutticitti*, பெ.(n.) ஏரணதருக்கத் தால்(தருக்கரீதியால்) ஏற்படும் முடிவு (வின்); logical or rational conclusion.

யுத்திநியாயம் *yuttiniyāyam*, பெ.(n.) யுத்திவாதம் பார்க்க ; yuttivātam.

[Skt. Yukti+nyāya > த. யுத்திநியாயம்]

யுத்தி யுத்தர் *yutti yuttar*, பெ. (n.) ஏரணவல்லான் (தார்க்கிகர்) (வின்); logicians.

[Skt. Yukti+yukta > த. யுத்தியுத்தர்]

யுத்திவாதம் *yuttivādam*, பெ. (n.) நூல் (சாத்திரம்) ஆதாரங்களைக் கொள்ளாமல் அறிவு (புத்தி) வன்மையைக் கொண்டு தருக்கம் செய்கை (வாதிடுகை) (கொ.வ); argument founded on pure reason and not on scriptural authority.

[Skt. Yukti+vāda > த. யுத்திவாதம்]

யுத்தோன்முகன் *yuttonmugan*, பெ.(n.) போருக்கு அணியமாய்(ஆயத்தம்) இருப்பவன். (தக்கயாகப். 228,உரை); one who is prepared and ready for war.

[Skt. Yuddhōn > த. யுத்தோன்+முகன்]

யுதிட்டிரன் *yuttiṭṭiran*, பெ.(n.) பாண்டவருள் மூத்தவனான தருமபுத்திரன்(பாரத.); Dharma-putra, the eldest of the Pāṇḍavas.

[Skt. Yudhi-ṣṭhira > த. யுதிட்டிரன்]

யுவ *yuva*, பெ.(n.) வியாழன் வட்ட ஆண்டு அறுபதனுள் ஒன்பதாவது (பெரியவரு); the 9th year of the Jupiter cycle.

[Skt. Yuvan > த. யுவ]

யுவதி *yuvatit*, பெ.(n.)1. இளம் பெண்; young woman. 2. பதினாறு அகவையுடைய பெண். (சூடா); girl of 16 years.

[Skt. Yuvati > த. யுவதி]

யுவராசன் *yuvarāšan*, பெ.(n.) இளவரசன் (வின்); heir-apparent to the throne, crown-prince.

[Skt. Yuva-rāja > த. யுவராசன்]

யுவன் *yuvan*, பெ.(n.) இளைஞன்(வின்); young man.

[Skt. Yuvan > த. யுவன்]

யுவா *yuvā*, பெ.(n.) யுவன் பார்க்க; see yuvan.

யுனானி *yunāni*, பெ.(n.) முகம்மதிய மருத்துவர் கையாளும் கிரேக்க மருத்துவ முறை; Greek school of medicine,practised by Indian muhammadans.

[Skt. Yunāni > த. யுனானி]

யூகசாலி *yugašāli*, பெ.(n.) அறிவுக்கூர்மை யுள்ளவன்; quick witted person.

[Skt. ūha > த. யூகம்+சாலி]

யூகம்[1] *yūgam,* பெ.(n.) 1. கருங்குரங்கு; black monkey "யூகமொடு மாமுக முசுக்கலை" (திருமுரு.302.) (பி.ங்.) 2. பெண்குரங்கு (திவா.); female monkey.

யூகம்[2] *yūgam,* பெ.(n.)ஒருவகைப்புல் (அக.நி.); broomstick grass.

[Skt.ūhani > த. யூகம்[2]]

யூகம்[3] *yūgam,* பெ.(n.)பேன்(யாழ்.அக.); louse.

[Skt.yuka > த. யூகம்[3]]

யூகம்[4] *yūgam,* பெ.(n.)1. உன்னிப்பு, கருதுகை (உத்தேசம்); guess, conjecture. 2. பகுத்தறிவு (விவேகம்) (யாழ்.அக.); discrimination, keen preception, understanding. 3. கருத்து; intent, import. 4. காந்தி (யாழ்.அக.); brilliance. 5. ஏரணம், தருக்கம்; reason , logic.

[Skt.ūha > த. யூகம்]

யூகம்[5] *yūgam,* பெ.(n.)1. படையின் அணிவகுப்பு; arrangement or disposition of the forces for fighting military array."சக்கரயூகம் பிக்கு" (கம்பரா. நிகும்பலை.69). 2. படை (சூடா); army, host 3. உடற்குறை (பிங்); headless trunk of a body.

[Skt.vyūha > த. யூகம்[5]]

யூகம்[6] *yūgam,* பெ.(n.)கோட்டான் (பிங்); rock horned owl

யூகவான் *yūgavān,* பெ.(n.)யூகி1 (யாழ்.அக.) பார்க்க; see yūgi

[Skt.ūhavān > த. யூகவான்.]

யூகி[1] *yūgi,* பெ.(n.) அறிவாளி(புத்திசாலி)(வின்) ; wise man, ingenious person, man of keen understanding

[Skt.ūhin > த யூகி.]

யூகி[2]**-த்தல்** *yūgi,-* 4 செ.குன்றா.வி. (v.t.) 1. கருதுதல் (உத்தேசம்); guess conjecture. 2. கருதுதல் (அனுமானித்தல்) (கொ.வ.); to infer conclude.3. ஆராய்தல் (யாழ்.அக.); to examine scrutinise

[Skt.ūha > த. யூகி[2].]

யூகி[3] *yūgi,* பெ.(n.)வத்சனான உதயணனிடம் அரசு நுண்ணுத்தியில் (இராச்சியதந்திரம்) வல்லவனாக இருந்த(நிபுணன்) மந்திரி; a minister of udayana, king of vasta, famous for his political wisdom. "யூகிபோதரவு" (பெருங்.இலாவாண. 8, தலைப்பு.)

[Skt.yaugandarāyana > த.யூகி[3].]

யூகிப்பயில் *yūgi-p-payil,* பெ. (n.) குழூஉக்குறிகளாலான மொழி. (வின்.); a kind of secret language.

[Skt.yuki+த.யூகி.]

யூகிபாசை *yūgibāšai,* பெ.(n.) யூகிப்பயில்(வின்) பார்க்க; see yūgipayil.

[Skt.ūhin +bhāṣā> த. யூகிபாசை.]

யூகை[1] *yūgai,* பெ.(n.) யூகம்[3] பார்க்க; see yūgam.

[Skt.yūkā > த. யூகை[1].]

யூகை[2] *yūgai,* பெ.(n.) துவரையின்(யவை) எட்டிலொரு பங்கான அளவு (கந்தபு. அண்ட கோ.5.); a linear measure =1/8 of yavai.

யூகை[3] *yūgai,* பெ.(n.) 1. யூகம்[4], 2 (யாழ்.அக.) பார்க்க ; see yūgam[4],2. 2. மூலத்திலிருந்து உரைகாரர் கருதும் (அனுமான) கருத்து; inference from a text, drawn by its commentator. 3. கல்வி(வின்) ; learning, erudition. 4. அறிவாளி(வின்) ; erudite person.

[Skt.ūha > த. யூகை[3].]

யூதநாதன் *yūdanādan,* பெ.(n.) யூதபம் (சூடா) பார்க்க ; see yudabam.

[Skt.yūtha+nātha > த. யூதநாதன்.]

யூதநாயகன் *yūda nāyagan,* பெ.(n.) படைத்தலைவன்; commander."யூதநாயகரோடு ரகேசரை" (தக்கயாகப்.609)

[Skt.yūktha+nayaga>த. யூதநாயகன்]

யூதப்பிரட்டன் *yūdapiraṭṭan,* பெ.(n.) தன்னினத்தைவிட்டுப் பிரிந்த யானை. (யாழ்.அக.); elephant which has strayed away from its herd.

[Skt.yūtha>த. யூதப்பிரட்டன்]

யூதபதி *yūdapati,* பெ.(n.) 1. யூதபம் பார்க்க ; see yūdabam. 2. யூத்நாயகன் (தக்கயாகப்.609, உரை, பார்க்க ; see yūdanāyagaṉ.

[Skt.yūtha+pati > த. யூதபதி.]

யூதபம் *yūdabam,* பெ.(n.) தன் கூட்டத்தைக் காக்கும் தலைவன் யானை(பிங்); chief elephant, leader of a herd of elephants.

[Skt.yūtha-pa > த. யூதபம்.]

யூதம் *yūdam,* பெ.(n.) 1. விலங்கின் கூட்டம்(சூடா); herd, as of elephants, flock. 2. பெரும்படை ; battalion troop. "புக்க பூதவேதாள யூதமே" (தக்கயாகப்.509.).

[Skt.yūtha > த. யூதம்.]

யூதமதம் *yūdamadam,* பெ.(n.) எபிரேயரின் மதம்; judaism.

யூதர் *yūdar,* பெ.(n.) யூதப்பிரிவினர்; the jews.

[Heb.yaudi > த. யூதர்.]

யூபத்தம்பம் *yūba-t-tambam,* பெ.(n.) வேள்வித்தூண் (தக்கயாகப்.505, உரை); post or stake to which the sacrificial animal is fastened, sacrificial post.

[Skt.yūpa+stambha > த. யூபத்தம்பம்.]

யூபதண்டு *yūba-taṇḍu,* பெ.(n.) 1. யூபத்தம்பம் பார்க்க ; see yūbattambam "யூபதண்டு கொண்டோட வெற்றியே" (தக்கயாகப்.505)

[Skt.yūpa+daṇḍa > த. யூபதண்டு.]

யூபம்[1] *yūbam,* பெ.(n.) 1. யூபத்தம்பம் பார்க்க; see yūba-t-tambam " யூபநட்ட வியன்களம் பலகொல்" (புறநா.15) 2. வேள்வி (சூடா.); sacrifice.

[Skt.yūpa > த. யூபம்.]

யூபம்[2] *yūbam,* பெ.(n.) 1. படையின் அணிவகுப்பு (பிங்); battle array. 2. உடற்குறை(பிங்) ; headless trunk of a body." பிணையூபமெழுந்தாட" (மதுரைக்.27)

யூமியா *yūmiyā,* பெ.(n.) படிச் செலவுக்காகக் கொடுக்குந் தொகை (வின்); allowance or pension, calculated originally by the day.

த.வ. பிழைப்பூதிய முன்பணம்

[Ar.yaumia > த. யூமியா.]

யோக்கியத்துக்குக் கொடுத்தல் *yōkkiya ttuuku-k-koḍu-, ūmiyā,* செ.கு.வி (v.i.) ஒருவனது நேர்மையின்மேல் பற்றுக் கோடாக கடன் கொடுத்தல்; to lend money to a person without security depending on his honesty. 2. பணத்தைக் கப்பல் வணிகம் முதலியவற்றில் போடுதல்; to risk one's money in trade, etc.

த.வ. நம்பிக்கைக் கடன்.

[Skt.yōgya > த. யோக்கியம் அத்து + கொடுத்தல்.]

யோக்கியதாபட்சம் *yōkkiyatāpaṭcam,* பெ(n.) தகுதி பற்றிய மதிப்பு; consideration of appropriateness or fitness regard of qualification or merits.

[Skt.yōgya -ta+pakṣa> த. யோக்கியதா பட்சம்]

யோக்கியதாபத்திரம் *yōkkiyatā-pattiram,* பெ.(n.) கல்வித் தேர்ச்சியைக் குறிக்கும் நற்சான்று ஆவணம்; Diploma of educational attainments 2. நல்லொழுக்கத்தைக் குறிக்கும் ஆவணம்; certificate of good character, conduct certificate.

த.வ. 1. கல்விச் சான்றிதழ்.2. நல்லொழுக்கச் சான்றிதழ், நன்னடத்தைச் சான்றிதழ்.

[Skt.yōgya -ta+patra > த. யோக்கியதா பத்திரம்.]

யோக்கியதா பத்திரிகை *yōkkiyata-pattirikai,* பெ.(n.) யோக்கியதா பத்திரம் பார்க்க; see yokkiyata - pattiram

[Skt.yōgya -ta-parıkā > த. யோக்கியதா பத்திரிகை.]

யோக்கியதைச் சீட்டு *yōkkiyatai-c-ciṭṭu,* பெ(n.) யோக்கியதா பத்திரிகை பார்க்க; see yokkiyata pattirikkai.

[Skt.yōgya -tā+ū.ciṭṭhi> த. யோக்கியதைச் சீட்டு]

யோக்கியபாத்திரம் *yōkkiya-pāttiram,* பெ(n.) நன்னடத்தை உடையவன் (யாழ்.அக.); person of respectability.

த.வ. ஒழுக்கமுள்ளவன்.

[Skt.yōgya +pātra> த. யோக்கியபாத்திரம்]

யோக்கியம் *yōkkiyam,* பெ(n.) 1. யோக்கியதை 1,4,6 பார்க்க; see yōkkiyatai. 2. ஒழுக்கம்; worthy conduct, decorum, conformity to rules.3. தூய்மை; goodness, purity, holiness

த.வ. 1. தகுதி 2. நற்பண்பு 3. நல்லெண்ணம்.

[Skt.yōgya > த. யோக்கியம்]

யோக்கியவான் *yōkkiyvān,* பெ(n.) நன்னடத்தை உள்ளவன்(யாழ்.அக.);person of respectability.

த.வ. பண்பாளன்.

[Skt.yōgya > த. யோக்கிய+ஆன்]

யோக்கியன் *yōkkiyan,* பெ(n.) 1. தகுதியானவன்; worthy, honourable man. 2. தக்கவன்; suitable. 3. உதவி செய்யக்கூடியவன், பயனுள்ளவன்; useful, serviceable, capable man.

த.வ. 1.மதிப்புள்ளவன். 2. பொருத்தமானவன்.

[Skt.yōgya> த. யோக்கியன்]

யோக்கியாசனம் *yōkkiya-āsanam,* பெ(n.) தகுதிக்குத்தக்கவாறு அமைந்த இடம்; seat or place suited to one's dignity.

த.வ. மதிப்புரவு இடம், தகவிருக்கை

[Skt.yōgya +āsana> த. யோக்கியாசனம்]

யோக்கியாதி *yōkkiyati,* ஓர் ஆண்டில் கதிரவனது அன்றாட இயக்கத்தைக் கணிக்கும் கணித வாய்ப்பாடு; equation table of the sun's true motion for every day in the year.

[Skt.yōgya > த. யோக்கியா+ ஆதி]

யோக்கியாயோக்கியம் *yōkkiyāyōkkiyam,* பெ (n.) தகுதிப்பாடும், தகுதிப்பாடின்மையும்; worthiness and unworthiness.

த.வ. தகவு இகவு

[Skt.yōgyā+yōgyan > த. யோக்கியா யோக்கியம்]

யோகக்கட்டு *yōgak-kattu,* பெ (n.) இருகால்களையும் மாறி மடக்கி அக்கால்களை முதுகோடு சேர்த்து வாரினாற் கட்டுகை (சங்.அக.); setting cross-legged on the hams and binding the folded legs with the body by means of a strap.

[Skt.yōga > த. யோகம் + கட்டு]

யோகக்காட்சி *yōga-k-kāṭci,* பெ(n.)கால நேரங்களுக்கு ஆட்படாத ஆதனின் புலனறிவு (சி.சி.அளவை,4); yogic perception of the soul, transcending the limitation of time and place.

[Skt.yōga> த. யோகம் + காட்சி]

யோகக்காரன் *yōgakkāran,* பெ(n.)ஆகூழ் பெற்றவன்; fortunate man.

த.வ. மச்சக்காரன், நற்பேறுள்ளவன்.

[Skt.yōga-vān > த. யோகக்காரன்]

யோகக்குண்டலினி *yōga-kkuṇḍaliṇi,* பெ(n.)நூற்றெட்டுஉபநிடதங்களுள் ஒன்று; an Upnisad one of 108.

[Skt.yōga-kuṇḍalini> த.யோகக்குண்டலினி]

யோகசம் *yōgašam,* பெ(n.)பழைய வடமொழி சிவனியமறை இருபத்தெட்டனுள் ஒன்று (சைவச.பொது.331, உரை) ; an ancient Saiva scripture in Sanskrit, one of 28 Civakamam.

[Skt.yōga-ja> த. யோகசம்]

யோகசமாதி *yōga-šamāti,* பெ(n.)ஆதன் உடலையும், மனத்தையும் விட்டுப் பிரிந்து இருக்கும் ஒகநிலை (திருப்பு.341); a yogic cotemplation in which the soul becomes detached from the body and mind.

த.வ. ஒக ஒன்றுதல்.

[Skt.yōga+samadhi> த. யோகசமாதி]

யோகசரன் *yōka-šaran,* பெ(n.)அனுமான் (யாழ்.அக.); Hanuman.

[Skt.yōga-cara> த. யோகசரன்]

யோகசாத்திரம் *yōka-šattiram,*பெ(n.)அறுபத்து நான்கு கலைகளுள் ஓகத்தைப் பற்றிக் கூறும் கலை; yoga philosophy, one of arupattunālu-kalai.

[Skt.yōga+šāstra> த. யோகசாத்திரம்]

யோகசாதனம் *yōka-šātanam,* பெ(n.) ஒகப்பயிற்சி; the practice of yoga.

[Skt.yōga+sādhana> த. யோகசாதனம்]

யோகசாதனை *yōka-šādanai,* பெ(n.) ஒகப்பயிற்சி; the practice of yoga.

[Skt.yōga+sādhana> த. யோகசாதனை]

யோகசாரணம் *yōkašāranam,* பெ(n.) அறிவியல் ஒன்றே என்றைக்கும் உள்ளது எனக் கூறும் புத்தமதப் பிரிவு; Buddhist school which maintain that the intelligence or vyñāna alone eternally exists.

[Skt.yōga+cārana> த. யோகசாரணம்]

யோகசாரன் *yōkašāran,* பெ(n.) யோகாசார மதத்தைப் பின்பற்றுபவன்(சி.சி.பர.யோகா.1); follower of the yōgācāra school of Buddhism.

[Skt.yōga cāra> த. யோகசாரன்]

யோகசிகை *yōkacigai,* பெ(n.) நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று; an upaniṣad , one of 108.

[Skt.yōga šikha> த. யோகசிகை]

யோகசித்தன் *yōka-šittan,* பெ(n.) ஒகத்தில் தேறியவன்; one of the best siddharas

[யோகம்+சித்தன்]

[Skt.yōga> த. யோகம்]

யோகசித்தி *yōka-sitti,* பெ(n.) ஒகம் செய்து பெற்ற ஆற்றல்; ower attained by the practice of yoga.

[Skt.yōga+siddhi> த. யோகசித்தி]

யோகசூடாமணி *yōka-šūdāmani,* பெ(n.) நூற்றெட்டு துணை விளக்க நூல்களுள் (உபநிடதங்களுள்) ஒன்று; an upaniṣad one of 108.

[Skt.yōga-cūdāmani >த.யோகசூடாமணி]

யோகசேமம் *yōka-sēmam,* பெ (n.) 1. ஆக்கம் (வின்); welfare, prosperity.2. வாழ்க்கைத் தொழில், பிழைப்பு வழி; livelihood.3. நலமான நிலை; state of health. 4. பெற்ற பொருளின் நிலைபேறும் மேன்மெல் வருவாயும்; secure possession of what has been acquired, and increasing prosperity.

த.வ. செழிப்பு,வாழ்க்கை, பிழைப்பு, நன்னிலை, மேல்வருமானம்

[Skt.yōga+kṣēma> த. யோகசேமம்]

யோகதண்டம் *yōka-tandam,* பெ(n.) ஒகிகள் கைக்கொள்ளுங் கோல்(வின்); staff of a yogi

த.வ. ஒகிதடி

[Skt.yōga+danda> த. யோகதண்டம்]

யோகதத்துவம் *yōkatattuvam,* பெ(n.) நூற்றெட்டு துணை விளக்க நூல்களுள் (உபநிடதங்களுள்) ஒன்று; an upaniṣad, one of 108.

[Skt.yōga-tattva> த. யோகதத்துவம்]

யோகதட்சிணாமூர்த்தம் *yōka-ṭcināmūrttam,* பெ (n.) தென்முக நம்பியின் வடிவங்களுள் ஒன்று; a form of Dakṣiṇāmūrti.

[Skt.yōga+dakṣina+mūrta> த. யோக தட்சிணாமூர்த்தம்]

யோகதீக்கை *yōka-dīkkai,* பெ(n.) ஒகவழியால் குரு மாணாக்கனது உடலுள் புகுந்து அவனது ஆதனை உட்கொண்டு சிவனது திருவடியிற் சேர்க்கும் தீக்கை வகை; a mode of initiation in which the teacher, by yogic power enters the body of his disciple, takes hold of his soul and joins it to the feet of Siva.

[Skt.yōga+dīkṣā> த. யோகதீக்கை]

யோகதீட்சை *yōka-tītcai,* பெ(n.) யோக தீக்கை பார்க்க; see yōka-tīkkai.

[Skt.yōga+dikṣa> த. யோகதீட்சை]

யோகநானம் *yōganāṉam,* பெ(n.) ஏழு குளியல்களுள் ஊழ்கத்தினால் உண்டாகும் தூய்மை (வின்) ; purification by yōgic contemplation, one of seven snāṉam.

[Skt.yōga +snāṉam> த. யோகநிட்டை]

யோகநிட்டை *yōga-niṭṭai,* பெ(n.) ஒக முறையில் உள்ளொடுங்குதல்; absorbed yogic contemplation.

[Skt.yōga-niṣtha> த. யோகநிட்டை]

யோகநித்திரை *yōga-nittirai,* பெ(n.) உறங்குவது போன்றிருந்தும் அறிவுற்றிருக்கும் ஒகநிலை (தக்கயாகப்.148, உரை); a state of meditation which admits of the full exercise of one's mental powers, the body remaining inactive as in sleep.

த.வ. ஒகத்துயில்

[Skt.yōga +nidra> த. யோகநித்திரை]

யோகநிலை *yōga-nilai,* பெ(n.) ஒகநிலையில் உள்ளொடுங்கி அமர்ந்திருத்தல்; absorbed yogic contemplation.

த.வ. ஒக ஒடுக்கம்.

(யோகம்+நிலை)

[Skt.yōga > த. யோகம்]

யோகநூல் *yōga-nūl,* பெ(n.) அறுபத்து நான்கு கலைகளுள் ஒகத்தைப் பற்றிக் கூறும் கலை (வின்); yoga philosophy, one of arupattunālu kali.

[Skt.yōga > த. யோகம்+நூல்]

யோகப்பட்டம் *yōgap-p-paṭṭam,* பெ(n.) ஒகத்தில் அமர்ந்திருக்கும் பொழுது முதுகையும் முழங்கால்களையும் சேர்த்துக் கட்டவுதவும் கச்சை; strap used by a jogi sitting on his hams, to bind his folded legs with the body. "யோகப் பட்டம் விளங்க" (திருவாலவா. 13,5)

த.வ. ஒக நாண்.

[Skt.yōga > த. யோக+பட்டம்]

யோகப்பிரத்தியட்சம் *yōgap-p-pirattiyaṭcam,* பெ(n.) ஆதன் உடலையும், மனத்தையும் விட்டுப் பிரிந்து நிற்கும் நிலையில், காலநேரங்கட்கு உட்படாத ஆதனின் புலனறிவு (சி.சி. அளவை.4); yogic perception of the soul, transcending the limitation of time and peace.

[Skt.yōga+pratyakṣa> த. யோகப்பிரத் தியட்சம்]

யோகப்பிரமாணம் *yōga-p-piramāṇam,* பெ(n.) யோகநிலை பார்க்க; see yōga-nilai.

[Skt.yōga +pra-māṇa > த. யோகப்பிரமாணம்]

யோகபதம் *yōga-patam,* பெ(n.) கரணியச் சொல்(வின்); derivative word.

[Skt.yōga+pada > த. யோகபதம்]

யோகபரன் *yōga-paraṉ,* பெ(n.) ஒகநினை வுடையவன் (இலக்.அக); one who has completely given himself up to yogic practices.

[Skt.yōga-para> த. யோகபரன்]

யோகபரீட்சை *yōga-parīṭcai,* பெ(n.) ஒகப்பயிற்சி; practice of yoga.

[Skt.yōga+parikṣā> த. யோகப் பரீட்சை]

யோகபாதம் *yōga-pātam,* பெ(n.)1. யோகம் பார்க்க; see yōga. வடிவினையுடைய கடவுளை அகத்தான் வழிபடுகை யாகிய வழி (சி.போ.பா.8,1,பக்,359.புதுப்) 2. ஒவ்வொரு சிவத்தோன்றியத்திலும் ஒகத்தைப் பற்றிக் கூறுவதாயுள்ள இரண்டாம் பகுதி (பெரியபு.தில்லைவா. சூச); second of the four parts of each sivāgamam, a dealing with yoga practices. 3. ஒகத்தைப் பற்றிக் கூறும் மாலியத்தோன்றியப் பகுதி; the section of pāñcarātti rāgamam dealing with yoga.

[Skt.yōga+ pata > த. யோகபாதம்]

யோகபீடம் *yōga-pīdam,* பெ(n.)ஒகிகளுக்குரிய இருக்கை; seat on posture peculiarly suitable to a yogi.

[Skt.yōga+pītha > த. யோகபீடம்]

யோகம் *yogam,* பெ(n.)1. சேர்க்கை junction, union, combination ."பொறிபுனையோக வியோக முடைத்தோன்(ஞானா.61,9) 2. கோள்கள் முதலியவற்றின் நற்சேர்க்கை; lucky conjunction, as of planets. 3. கூடல்; sexual union, "பன்னாளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினார் (பெரியபு.தடுத்.181) 4. கூட்டல் (யாழ்.அக.); addition 5. ஆகூழ்; luck, fortune." யோகநாள் வந்த தென்று (இராமநா. பாலகா.10). 6. உயர்ச்சி (செந்.1v 257); excellence. 7. ஊக்கம். (யாழ்.அக.) enthusiasm, zeal 8. தகுதி (யாழ்.அக.) 9. சொற்பிறப்பியலுக்குத் தொடர்பான சொல் தோற்றம்; etymological connection of a word. 10. காரணியப் பெயர்; (நன். 62, விருத்) derivative name. 11. நூற்பா (யாழ்.அக.) aphorism. 12. வழி (உபாயம்); means, expedient, device. "கைகண்ட யோகம் (திவ்.நாய்ச்.12,5,வ்யா) 13. மருந்து remedy, cure, medicine. "ஆழ்துயரவித்தற் கொத்த வரும்பெறல் யோகநாடி" (சீவக.1800) 14. ஏமாற்று (யாழ்.அக.) fraud. 15. அரைப்பட்டிகை; waist band, girdle " அரியர் யோகமும்" (சிலப்.14.170) 16. நற்சுழி; auspicious mark, as on horse, cattle etc.," யோகப்புரவி" (பெரியபு.தடுத்.19) 17. ஆழ்நிலை ஊழ்கம்; deep and abstract meditation, concentration of the mind in the contemlation of the supreme spirit. "யோக நல்லுறக்க நல்கினான்" (இரகு, திருவவ.5). 18. உணர்ச்சி; consciousness " தாக்குதன் முன்னே யோகம் வந்தது மாண்டார்க்கு (கம்பரா.வேலேற்ற.42) 19. மிகுநுண்ணிய வடிவினையுடைய கடவுளை அகத்தான் வழிபடுகையாகிய வழி (சி.போ.பா.8,1,பக்359, புதுப்); Šaiva path of yōga which consists in the mental worship of šiva in his subtler form. ஒவ்வொரு சிவதோன்றியத்திலும் ஒகத்தைப் பற்றிக் கூறுவதாயுள்ள -- இரண்டாம் பகுதி (பெரியபு.தில்லைவா.சூச.) ; second of the four parts of each sivaiamam, as dealing with yoga practices.

யோகயாமளம் *yōgayāmaḷam,* பெ(n.) கொற்றவை வழிபாட்டின் தந்திரங்களைப் பற்றிய நூல்; (சாக்தேய தந்திரம்) a tantric work dealing with the worship of Šakti. "யோகயாமளத்தினாள்" (தக்கயாகப்.136)

[Skt.yōga-yāmala> த. யோகயாமளம்]

யோகமார்க்கம் *yōga-mārkkam,* பெ(n.) ஒகமுறை; yogic system.

த.வ. ஒகவழி.

[Skt.yōga+mārga> த. யோகமார்க்கம்]

யோகர் *yōgar,* பெ(n.) ஒகியர்; yogis, followers of the yoga system."எண்ணிலா முனிவர்....யோகர்" (திருகாளத். சூடா.) 2. முனிவர், (சூடா)sages ascetics. 3. சமண முனிவர்(சூடா); Jaina saints.

[Skt.yōga>த. யோகர்]

யோகரூடி *yōgarūdi,* பெ(n.) காரண விடுகுறி (நன்.62 விருத்); word having at etymoloyogical as well as a special or conventional meaning as paṅkaja

[Skt.yōga+rūḍhi> த. யோகரூடி]

யோகவான் *yōkavāṉ,* பெ(n.)ஆகூழ் உள்ளவன் (வி); fortunate man.

த.வ. நற்பேறுள்ளவன்.

[Skt.yōga-vān> த. யோகவான்]

யோகவிபாகம் *yōgavipākam,* பெ(n.) ஒரு நூற்பாவில் ஒரு பகுதியைத் தனியே பகுத்து வேறு நூற்பாவாக்கி பொருள் கோடலாகிய நூற் புணர்ப்பு (தொல். சொல்.11, சேனா.); separation of that which is usually combined together, especially the seperation of the words of a sutra splitting one rule into two or more.

[Skt.yōga+vibhāga> த. யோகவிபாகம்]

யோகவுறக்கம் *yōga-urakkam,* பெ(n.) யோகநித்திரை பார்க்க; see yōga-nittirai.

த.வ. ஒகத்துயில்.

[Skt. yōga > த. யோகம்+உறக்கம்]

யோகவேட்டி *yōga-vētti*, பெ(n.) இடது தோள் மேலிருந்து குறுக்காக அணியும் மேலாடை (வி); upper cloth worn across the chest, passing over the left shoulder, and under the right.

[Skt. yōga + vēṣṭa> த. யோகவேட்டி]

யோகாக்கினி *yōgā-k-kiṉi*, பெ (n.) 1. ஓகத்தாலடையும் ஒளி; lustre attained through yogic practice. 2. நெருப்புத் திரள் (வி); blaze of fire . 3. விடாத ஓகமுறைக் கடைப்பிடிப்பால் ஓகியின் கண்ணில் ஒளிருந் தீ(வின்); excessive heat of fire glowing in the eyes of a yogi because of continued meditation.

த.வ. ஓகப் பொலிவு, தீப் பிழம்பு, ஓக ஒளி

[Skt. yōga + agni > த. யோகாக்கினி]

யோகாசனம் *yōgāšaṉam*, பெ (n.) 1. ஓகத்துக்குரிய இருக்கை (வின்); mode of sitting, suited to profound and abstract meditation. 2. ஐவகை முழங்காலிட்டுக் குந்தியிருக்கும் இருப்பு (சங்.அக.); sitting on the hams, one of pañcha-v-ataṉam.

த.வ. ஓகஇருக்கை

[Skt. yōga + ā-sana > த. யோகாசனம்]

யோகாசாரம் *yōgāšāram*, பெ (n.) 1. ஓகமுறைகளை அறிந்து ஒழுகும் முறை; practice and observance of yoga. 2. அறிவியல் ஒன்றே என்றைக்கும் உள்ளது என்று கூறும் பௌத்த மதப் பிரிவு; a buddhist school which maintains that the intelligence or viyñāna alone externally exists.

[Skt. yōgacāra > த. யோகாசாரம்

யோகாசாரியன் *yōgā-sāriyaṉ*, பெ (n.) ஓகத்தின் உட்பொருளைக் கற்பிக்கும் ஆசிரியன் (வின்); teacher of the yoga system of philosophy.

யோகாதிகாரம் *yōgātikāram*, பெ(n.) ஓகநிலையில் நிற்குந் திறமை(வின்); ability or fitness to undertake the practice of yoga.

[Skt. yōga + adhikara > த. யோகாதிகாரம்]

யோகாதிசயம் *yōgātišayam*, பெ(n.) நன்னிலை; condition, state of health. "என் யோகாதிசயங்களுரைக்க (அருட்பா, VI, வேண்டுகோ).

த.வ. உடல்நலம்

[Skt. yōga + atišaya > த. யோகாதிசயம்]

யோகாப்பியாசம் *yōgāppiyāšam*, பெ(n.) ஓகப் பயிற்சி; practice of yoga.

[Skt. yōga bhyāsa > த. யோகாப்பியாசம்]

யோகார்த்தம் *yōgārttam*, பெ(n.) சொற்பிறப்பியல் கூறும் கரணியப் பொருள் (வி) ; etymological meaning.

[Skt. yōga + artha > த. யோகார்த்தம்]

யோகி *yōgi*, பெ(n.) 1. ஓக முறையின் மெய்மைகளைப் பின்பற்றி அப்பயிற்சியில் தேர்ச்சி பெற்றவன்; follower of the yoga system of philosophy, adopt in yogic practices. "ஒண்டிறல் யோகிகளே (திருவாச.46,2). 2. துறவி (வின்) ascetic 3. சிவபெருமான் (பிங்); Lord Siva. 4. ஐயனார்(பிங்); Aiyaṉār. 5. அருகன் (பிங்); Arhat 6. உடலை வளைக்க உதவும் தசை (வி) ; abductor muscle.

த.வ. ஓகி

[Skt. yōgin > த. யோகி]

யோகி-த்தல் *yōgi-*, 4. செ. குன்றாவி (v.t.) ஊழ்கம் செய்தல்(வி) ; to contemplate, to meditate upon.

த.வ. உள்ளொடுங்குதல்

[Skt. yōgin > த. யோகி-,]

யோகிப்பரதேசி *yōgi-p-paradēši*, பெ(n.) வடநாட்டுத் துறவி; ascetic pilgrim from North India mendicants, as practicing yoga.

[Skt. yōgin + pāra-dēši> த. யோகிப்பரதேசி]

யோகிப்பு *yōgippu*, பெ(n.) ஊழ்கம்(வின்) ; meditation, contemplation.

த.வ. உடல்நலம்

[Skt.yōgin> த. யோகிப்பு]

யோகினி *yōgiṉi,* பெ(n.) 1. மந்திரக்காரி (வின்); female magician, witch sorcesess. 2. கொற்றவைக்கு ஏவல்செய்யும் மகளிர்வகை; a class of female attendants on Durga "வீரயோகினி வெள்ளமோடு (பிரபுலிங்.கைலாச.42) 3. தெய்வப்பெண்; fairy " நிலையெனும் யோகினி மடவரலும் (திருக்காளத்.பு.விசிட்டத்.28) 4. கொற்றவை; Kāli. "இத்திறம் யோகினியிசைத்து (கந்தபு.அக்கினி முகா.132) 5. ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு திசையில் நின்று கொண்டு அத்திசை நோக்கிப் பயணமாவோர்க்குத் தீங்கு விளைவிப்பவளாகக் கருதப்படும் பெண் தெய்வம் (சோதிடகிரக.89.); Durga who, on earth titi of the waring and waxing moon appears in a particular direction and causes harm to those who start their journey in that direction.

[Skt.yōgīni> த. யோகினி]

யோகினிச்சி *yōginicci,* பெ(n.) வரிக் கூத்துவகை (சிலப்.3,13, உரை, பக்.89); a kind of dance.

யோகினிதிசை *yōgiṉi-tišai,* பெ(n.) யோகினி என்ற பெண் தெய்வம் இருக்கின்ற திசை (பஞ்); direction of the yōgiṉi.

[Skt.yōgini+dīšā> த. யோகினிதிசை]

யோகீசுவரன் *yōgišūvaraṉ,* பெ(n.) ஓகத்தில் வல்லவன்; adept in yoga .

த.வ. ஓகஅறிஞன்

[Skt.yōgīšvara> த. யோகீசுவரன்]

யோகு *yōgu,* பெ(n.) ஊழ்கத்தில் ஆழ்ந்து ஒடுங்குகை; deep and abstract meditation; concentration of the mind in the contemplation of the supreme spirit." யோக நல்லுறக்க நல்கினான் (இரகு. திருவவ.5)

த.வ. ஓக ஒடுக்கம்.

[Skt.yōga> த. யோகு]

யோசனம் *yōšaṉam,* பெ(n.) 1. எண்ணம்; thought reflection, consideration. 2. கருத்து; opinion, sentiment. 3. அறிவுரை; counsel, advice.4. கருவி; device, scheme, contrevance. 5. பகுத்தறிவு; discretion, prudence, wisdom. 6. 2 1/4 மைல் கொண்ட தொலைவு (கந்தபு. அண்ட கோ.6). நாக நன்னாட்டு நானூறி யோசனை (மணிமே.9,21) 7. ஓசை (சது); sound.

[Skt.yōjanā> த. யோசனம்]

யோசனவல்லி *yōšana-valli,* பெ (n.) 1. நீர்ப்பூடுவகை; Indian madder 2. வல்லாரை; Indian penny wort.

[Skt.yōjana+valli> த. யோசனவல்லி]

யோசனன் *yōšaṉaṉ,* பெ(n.) கடவுள்(யாழ்.அக.) ; God.

[Skt.yōjana> த. யோசனன்]

யோசனை *yōšaṉai,* பெ(n.) 1. எண்ணம்; thought, reflection,consideration. 2. கருத்து; opinion, sentiment. 3. அறிவுரை; counsel, advice. 4. வழி; device, scheme, contrivance. 5. அறிவு; disoretion, prudence wisdom. 6. நான்கு குரோசங் கொண்ட நீட்டலளவை; a linear measure four kurōcam" நாக நன்னாட்டு நானூறு யோசனை. (மணிமே 9:21.) 7. ஓசை; sound.

[Skt.yōjanā> த. யோசனை]

யோசனைக்காரன் *yōšaṉai-k-kāraṉ,* பெ(n.) முன்னறிவுடையவன்(வி) ; prudent,thoughtful man.

த.வ. விழிப்புள்ளவன்

[Skt.yōjanā> த. யோசனை+காரன்]

யோசனைசாலி *yōšaṉaišāli,* பெ(n.) அறிவு உள்ளவன்(வி) ; wise,polite man.

[Skt.yōjanā> த. யோசனை+சாலி]

யோசனைவான் *yōšaṉaivāṉ,* பெ(n.) யோசனைக்காரன் பார்க்க; see yōšaṉai-k-kāraṉ.

த.வ. விழிப்புள்ளவன்

[Skt.yōjanā> த. யோசனை+காரன்]

யோசி-த்தல் *yōši-,* 4. செ. குன்றாவி (v.t.) 1. சேர்த்தல்; to bring together."வாயுப் பிராணனொன்று மடைமாறி யோசித்து" (திருப்பு341) 2. எண்ணுதல் (சிந்தித்தல்); to

consider, ponder. "எல்லாம் யோசிக்கும் வேளையில்" (தாயு.பரிபூரண.10) 3. அறிவுரை கேட்டல் ; to consult.

த.வ.இணைத்தல், எண்ணுதல், நல்லுரை கேட்டல்

[Skt.yoj> த. யோசி-,]

யோசியம் *yōśiyam*, பெ(n) கணியம்; astrology prognostication, divination.

த.வ. கணியம்

[Skt.jyōtiṣa> த. யோசியம்]

யோத்திரம் *yōttiram*, பெ(n.) நுகக்கயிறு (யாழ்.அக.) ; cord used to yoke cattle.

த.வ. கட்டுகயிறு, பூட்டாங்கயிறு

[Skt.yoktra> த. யோத்திரம்]

யோதனம் *yōtanam*, பெ(n.) போர்; act of fighting battle, war ."யோதனத்தி லிவன்" (பாரத.பதினான்.78)

[Skt.yōdhana > த. யோதனம்]

யோமிய *yōmiya*, பெ(n.) முகம்மதியர் செய்த உதவிகளுக்காக பிரிட்டன் அரசு அவர்க்கு அரசு வாயிலாகக் கொடுத்துவந்த அன்றாடப்படி; daily allowance or pension granted to Muhammadans, in the earlier years of British rule for having rendered special services. (M.N.A.D.I,287)

த.வ. பிழைப்புப்படி

[Arab.yaumia > த. யோமிய]

யோமியதார் *yōmiyatār*, அன்றாட படி பெறுவோர் (M.N.A.D.I,287); grantee of daily allowance.

த.வ. நாட்படி

[Skt.yāumia > த. யோமிய+தார்]

யோனி *yōni*, 1. நோனி, பெண்குறி; pudendum muliebre. "விரிந்தது யோனியும் (திருமந்.455). 2. இனப்பெருக்க உறுப்பு; place of birth, source, origin."உலக வை புரக்கும் யோனி (ஞானா-14,4)." 3. கருப்பைப் பை ; womb, matrix. 4. காரணம்(சது) ; cause. 5. பிறவி; form of life.எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் (திவ்.இயற்.திருவிருத்.1) 6. ஆவுடையாள்; pedestal of a lingam. 7. ஒரு நாடக உறுப்பு (சிலப்.3,13 உரை); a necessary adjunct or part of a drama. 8. பதினொன்றாவது விண்மீனாகிய கணை; the 11th asterisma 9. நீர் (இலக்.அக.); water.

[Skt.yōni > த. யோனி]

யோனிக்கலப்பு *yōṇi-k-kalappu*, கலப்பு இனம் (யாழ்.அக.); mixed origin or caste.

[Skt.yōni > த. யோனி+கலப்பு]

யோனிசங்கரம் *yōṇi-śaṅkaram*, பெ(n) யோனிக்கலப்பு பார்க்க; see yōni-k-kalappu.

[Skt.yōni+suṅ-kara > த. யோனிசங்கரம்]

யோனிசங்கரன் *yōṇi-śaṅkaraṉ*, பெ(n) கலப்பு இனப்பிறப்பால் இழிந்தவனாகக் கருதப்படுபவன் (யாழ்.அக.); person of mixed caste, offspring of mixed parentage considered low born.

[Skt.yōni+saṅ-kara > த. யோனிசங்கரன்]

யோனிசிராவம் *yōṇiśirāvam*, பெ(n) வெள்ளை நோய் (பைஷஜ); whiles, leucorrhoea.

[Skt.yōni+srāva > த. யோனிசிராவம்]

யோனிப்பொருத்தம் *yōni-p-poruttam*, பெ(n) திருமணப் பொருத்தம் பத்தனுள் ஒன்று(வி); a coressondence between the horoscopes of the prospective bride and bride grooms, one of ten kaliyāṇa-p-poruttam.

[Skt.yōni > த. யோனி+பொருத்தம்]

யோனிபேதம் *yōni-bētam*, பெ(n.) 84 இலட்சமாகக் கூறப்படும் பிறப்பு வகை; species of living beings, said to number 84 lakhs" உரை செரு மெண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேத நிரை சேர" (தேவப.575,3).(பிங்)

[Skt.yōni+bhēda > த. யோனிபேதம்]

யோனிமுத்திரை *yōni-muttirai*, பெ(n.) முக்கோணமாகக் காட்டும் 84 கைமுத்திரை வகை (சங்.அக.); a hand pose with a triangular opening between the fingers.

[யோனி + முத்திரை]

[Skt.yōni > த. யோனி+ முத்திரை]

யோனிமேகம் *yōni-mēgam,* பெ (n.) யோனிசிராவம் பார்க்க; see yōniširavam.

[Skt.yōni+mēha > த. யோனிமேகம்]

யோனிவாய்ப்படு-தல் *yōnivāy-p-paḍu-,* செ.கு.வி (v.i.) பிறத்தல் (யாழ். அக); to be born.

(யோனி+வாய்ப்படுதல்)

[Skt.yōni> த. யோனி]

யௌகிகம் *yaugigam,* பெ(n.) பகுபதம்(வின்); divisible word, derivative.

[Skt.yaugika > த. யௌகிகம்]

யௌதகம் *yautagam,* பெ (n.) திருமணத்தின்போது மணமகனோடு மணையிலிருக்கும் பொழுது மணப்பெண்ணுக்குக் கொடுக்கப்படும் சீர்; gift paid to a bride while sitting beside the bridegroom, a variety of stridhana.

[Skt.yautaka > த. யௌதகம்]

யௌதம்[1] *yaudam,* பெ(n.) ஒரு நீட்டலளவை (யாழ்.அக.); a linear measure.

[Skt.yautava > த. யௌதம்]

யௌதம்[2] *yaudam,* பெ(n.) மகளிர் கூட்டம் (யாழ்.அக.); assembly of women.

[Skt.yaudhika > த. யௌதம்]

யௌவனகண்டகம் *yauvaṉa-kaṇḍagam,* பெ(n.) முகப்பரு(யாழ்.அக.); pimple on the face.

[Skt.yauvana+kaṇṭaka> த. யௌவன கண்டகம்]

யௌவனதசை *yauvanatasai,* பெ(n.) விடலைப்பருவம் (சங்.அக.); youth.

[Skt.yauvana+daśā > த. யௌவனதசை]

யௌவனம் *yauvanam,* பெ(n.) 1. இளமை(சூடா); adolescence. 2. அழகு(அக.நி); beauty. 3. களிப்பு (சது); joy. 4. மகளிர்கூட்டம்(யாழ்.அக.); assembly of women.

[Skt.yauvana > த. யௌவனம்]

யௌவனலக்கணம் *yauvaṉa-lakkaṇam,* பெ (n.) 1. அழகு; beauty. 2. கொங்கை; breast.

[Skt.yauvana -lakṣaṇa > த. யௌவன லக்கணம்]

யௌவனிகை *yauvaṉigai,* பெ(n.) பதினாறுக்குமேல் ஐம்பதுக்கு உட்பட்ட பெண்; (சங்.அக.) women between the age of 16 and 50.

[Skt.yauvanikā > த. யௌவனிகை]

ர

ரக்கை *rakkai,* பெ (n.) இறக்கை; wing.

ரக்தா *raktā,* பெ(n.) ஐஞ் (பஞ்சம) சுரத்தின் வகையுளொன்று; a division of the five notes of the gamut.

[Skt.raktā > த. ரக்தா]

ரகசியம் *ragašiyam,* பெ(n.) **இரகசியம்** பார்க்க; see eragasiyam. 2. பெண்குறி; pudendum muliebre.

[Skt.rahasya> த. ரகசியம்]

ரகம் *ragam,* பெ (n.) வகை; class, sort.

[U.ragam > த. ரகம்]

ரகளை *ragaḷai,* பெ(n.) 1. குழப்பம்; confusion. 2. கன்னடப்பாட்டு வகை; a kind of metre in Kanarese. 3. கலவரம்; row.

[K.ragaḷe > த. ரகளை]

ரகளைப்படு-தல் *rakaḷai-p-paḍu,* செ.கு.வி. (v.i.) ரணகளப்படு பார்க்க; see ranagappadu-.

ரகாப் *rakāp,* பெ(n.) அங்கவடி; stirrup.

[Arab.rikāb > த. ரகாப்]

ரகிதம் *rakidam,* பெ(n.) நீக்கம்; desertion, destitution, separation.

[Skt.rahita > த. ரகிதம்]

ரகீம் *rakīm,* பெ.(n.) கடவுள்; God the all-merciful.

[Ar.rahim > த. ரகீம்]

ரகுமான் *ragumāṉ,* பெ. (n.) கடவுள்; God, the all-beneficient.

[Ar.rahmān > த. ரகுமான்]

ரங்கம் *rangam,* பெ (n.) பார்க்க அரங்கம்; see araṅkam.

ரங்கமண்டபம் *ranga-mandabam,* பெ (n.) கோயிலின் உள் மண்டபம்; inner hall of a temple.

[Skt.ranga+mantapa > த. ரங்கமண்டபம்]

ரங்கவல்லி *ranga-valli,* பெ(n.) கோலப்பொடி; flour used in drawing decorative figures on the floor.

[Skt.ranga-ralli > த. ரங்கவல்லி]

ரங்கு *rangu,* பெ(n.) 1. நிறம்; colour. 2. சாயம்; dye. 3. வண்ணந்தரும் பொருள்; pigment. 4. சீட்டைக் கொண்டு ஆடும் சூதாட்டவகை; a game of chance played with cards. 5. காதலிக்கப்படுபவள்; woman that is loved. 6. வேசை; prostitute.

[Skt.ranga > த.ரங்கு]

ரங்கூன் மல்லிகை *rangūn-malligai,* பெ(n.) மல்லிகை வகை; a kind of jasmine.

ரச்சீத்கவுல் *raccit-kavul,* பெ (n.) குத்தகைத் தொகையைப் படிப்படியாக அதிகப்படுத்தும் கட்டுப்பாட்டு நிலக்குத்தகை; grant of land on cowle, providing progressive rates of assessment.

[Persn.rasid+kavul > த. ரச்சீத்கவுல்]

ரச்சு *raccu,* பெ.(n.) 1. கயிறு; cord, rope, string. 2. மயிற்பின்னல்; lock of braided hair. 3. தாலிச்சரடு; cord of the marriage badge.

[Skt.rajju > த. ரச்சு]

ரச்சுப் பொருத்தம் *raccu-p-poruttam,* பெ. (n.) திருமணப் பொருத்தம்; a felicitous corresondence between the horoscopes of the bride and bridegroom.

[Skt.rajju> த. பொருத்தம்]

ரசக்கர்ப்பூரம் *raša-karpūram,* பெ (n.) **இரசக்கர்ப்பூரம்** பார்க்க; see era-k-karpūram.

[Skt.rasa+karpūra > த. ரசகர்ப்பூரம்]

ரசகுல்லா *raša-gullā,* பெ (n.) தித்திப்பான சிற்றுண்டி வகை; a kind of sweet confection.

[Skt.rasa+gōla > த. ரசகுல்லா]

ரசத்தைலம் *raša-t-tailam,* பெ (n.) இதளியத்தை (பாதரசத்தை) முதன்மைச்சரக்காகக் கொண்டு செய்த மருந்தெண்ணெய் வகை; a medicinal oil prepared with mercury as the chief ingredient.

[Skt.rasa+taila > த. ரசத்தைலம்]

ரசதகுன்றம் *racata-kunṟam,* பெ (n.) வெள்ளிமலை; (கயிலை) Mt. Kailas as of silver.

[Skt.rajata+ > த. ரசதகுன்றம்]

ரசதம் *rasadam,* பெ (n.) வெள்ளி; silver.

[Skt.rajata > த. ரசதம்]

ரசதாளி *rašatāḷi,* பெ (n.) வாழைவகை; a species of plantain.

த.வ. மென்வாழை

[Skt.rasa-dāḷikā > த. ரசதாளி]

ரசதாளிக்கரும்பு *rašatāḷi-k-karumpu,* பெ (n.) கரும்புவகை; a species of sugar-cane.

[ரசதாளி + கரும்பு]

[Skt.rasa-dāḷikā > ரசதாளி]

ரசப் *rašap,* பெ(n.) அராபியர்களுடைய ஆண்டின் ஏழாவது மாதம்; the seventh Arabic month.

[Ar.rajab > ரசப்]

ரசப்பிடிப்பு *raša-p-piḍipu,* பெ (n.) இதளியத்தை (பாதரச) உட்கொண்டதாலுண்டாகும் முடக்குவாதம்; rheumatism due to mercurial poisioning.

[Skt.rasa+piṭippu > ரசப்பிடிப்பு]

ரசப்புகை *raca-p-pugai,* பெ(n.) இதளியத்தின் (பாதரசத்தின்) ஆவி; mercurial vapour.

[Skt.rasa+puka > ரசப்புகை]

ரசமெழுகு *raša-meḻugu,* பெ (n.) இதளிய (பாதரச)ஞ் சேர்த்துச் செய்த மெழுகு மருந்து வகை; blue pill, pilula hydrargyri.

ரசனை[1] *rašanai,* பெ(n.) சுவையுணரும் பொறியாகிய நாக்கு; tongue, the organ of taste.

[Skt.rasanā> ரசனை]

ரசனை[2] *rašanai,* பெ (n.) அமைப்பு ; arrangement, style.

[Skt.racanā> ரசனை]

ரசாஞ்சனம் *rašāñjaṉam,* பெ(n.) துத்தம் சேர்த்த மைவகை ; an unguent prepared with vitriol of copper.

[Skt.rasañjana> ரசாஞ்சனம்]

ரசா *rašā,* பெ.(n.) 1. அனுமதி; permission, leave. 2. விடுமுறை; cessation from work, recess, holiday, vacation.

த. வ. விடுப்பு இசைவு

[Arab.razā > த. ரசா]

ரசிதம் *rašidam,* பெ(n.) வெள்ளி; silver.

[Skt.rajata > ரசிதம்]

ரஞ்சனி *rañjaṉi,* பெ(n.) இராக வகை; a specific melody type.

ரஞ்சான்[1] *rañjāñ,* பெ(n.) அராபியர்களுடைய ஆண்டின் ஒன்பதாவது மாதம்; the ninth Arabic month.

[Skt.ramazān > ரம்சான் > ரஞ்சான்]

ரஞ்சான்[2] *rañā-kāli,* பெ(n.) ஊதுகொம்பு வகை; bugle.

ரட்சி–த்தல் *raṭci,* பெ.(v.) பார்க்க **இரட்சி–த்தல்.**

[Skt.rakṣ > த. ரட்சி–]

ரட்சை *raṭcai,* பெ.(n.) பார்க்க இரட்சை; see eraksai.

[Skt.rakṣā > த. ரட்சை]

ரணவீரி *raṇa-vīri,* பெ(n.) ஒரு சிற்றூர்க் கடவுள்; a village goddess.

ரத்தபலவீனம் *ratta-pala-v-iṉam,* பெ(n.) anemia, சோகை1 பார்க்க; see sōgai.

[Skt.rakta+> த. ரத்தபலவீனம்]

ரத்தபித்த ரோகம் *ratta-pitta-rōgam,* பெ(n.) அரத்தம் வெளிப்படும் நோய்; haemorrhage.

[Skt.rakta+pitta+rōga> த. ரத்த பித்தரோகம்]

ரத்தபேதி *ratta-pēti,* பெ(n.) வயிற்றளைச்சல்; dysentry.

[Skt. rakta +pēti > த. ரத்தபேதி]

ரத்தம் *rattam,* பெ (n.) குருதி; blood. "சிந்து ரத்தந் துதைந்தெழுஞ்செச்சையான்" (கம்பரா. அங்கத. 42)

[த. அரத்தம் > Skt.rakta> த.ரத்தம்]

ரத்தவண்டம் *ratta-v-aṇḍam,* பெ(n.) வயிற்றிலுண்டாகும் குருதிக் கட்டி; haematocele, accumulation of blood in the testicle.

ரத்திகை *rattigai,* பெ (n.) பண்வகை மூன்றனுள் ஒன்று; a division of the second note of the gamut, one of three kinds of riṣapam.

[Skt.raktikā > த. ரத்திகை]

ரத்தினகண்டி *ratṉa-kaṇṭi,* பெ(n.) மணி (இரத்தின)க் கற்கள் இழைத்த கழுத்தணி வகை; ruby necklace. "ரங்கையனீந் தானங்கோர் ரத்னகண்டி" (விறலிவிடு.1130).

[Skt.ratna > த. ரத்தினகண்டி]

ரத்து *rattu,* பெ(n.) தள்ளுபடி, நீக்கம் செய்கை, நீக்குகை; rejection, repulsion, retutation, repeal, abrogation, making null and void.

[Arab.radd > த. ரத்து]

ரத்னம் *ratṉam,* பெ(n.) 1. இரத்தினம் பார்க்க; gem, precious stone. see irattiṉam. 2. வைரம்; diamond.

[Skt.ratna > த. ரத்னம்]

ரத்னாங்கி *ratṉāṅki,* பெ(n.) மேளகர்த்தாக் களுளொன்று; a primary rāga.

ரதகாரன் *rada-kāraṉ,* பெ(n.) தச்சன்; carpenter, coach-builder.

[ரதம் + காரன்]

[Skt.ratha > த. ரத + காரன்]

ரதிதேவி *radidēvi,* பெ(n.) மன்மதன் மனைவி; manmathan's wife.

ரதோற்சவம் *radōṟcavam,* பெ(n.) தேர்த் திருவிழா; car-festival.

[Skt.rathō+sava > த.ரதோற்சவம்]

ராதை *rādai,* பெ(n.) திருமால் மனைவியருள் ஒருத்தியான ராதா; one of the wife of Tirumāl.

[Skt.rādhā> த. ராதை]

ராமர் *rāmar,* பெ(n.) திருமால் தோற்றரவுகளுள் ஒன்று; an appearance of Tirumāl.

[Skt.rāmā> த. ராமர்]

ரப் *rap,* பெ(n.) கடவுள்; god, the all nourishing.

[Ar.rab > த.ரப்]

ரப்பிசானி *rappicāṉi,* பெ(n.) அராபியர்களின் ஆண்டில் நான்காவது மாதம்; the fourth Arabic month.

[Ar.rabiathzānī > ரப்பிசானி]

ரப்பிலவ்வல் *rappilavval,* பெ(n.) அராபியர்களுடைய ஆண்டின் மூன்றாவது மாதம்; the third Arabic month.

[Arab.rabiulawwal > ரப்பிலவ்வல்]

ரப்பு[1] *rappu,* பெ.அ.(adj.) கரடுமுரடான; rough.

[E.rough > த.ரப்பு]

ரப்பு[2] *rappu,* பெ.(n.) இழையோட்டுகை; darning.

[E.rafū > த.ரப்பு]

ரப்பை *rappai,* பெ.(n.) கண்ணிமை; eyelid.

ரம்சான் *ramšāṉ,* பெ.(n.) பகல் முழுவதும் பட்டினி இருந்து கொண்டாடப்படுவதும் முகமதியர் வழங்கும் மாதங்களுள் ஒன்பதாவதுமான மாதம்; the nineth month of the Muhamadan year, each day of which is observed as a fast from dawn till sunset.

[Ar.ramzān > த.ரம்சான்]

ரம்டோல் *ramṭōl,* பெ.(n.) பெரிய பறை (நகரா); big drum.

த. வ. பெரும்பறை

[Hind.ḍhōl > த.ரம்டோல்]

ரம்பை *rambai,* பெ.(n.) வானுலகத்து (தேவலோகம்) நாடகமகளிரிலொருத்தி (திவ்.பெரியாழ். 3,6,4.); a courtesan of the Gods.

[Skt.rambhā > த. ரம்பை]

ரமணன் *iramaṉaṉ,* பெ.(n.) 1. கணவன்; husband "ராதாரமணன்" 2. தலைவன்; lord. "வேங்கடரமணன்".

[Skt.ramaṇa > த. ரமணன்]

ரமாரமி *ramārami,* வி.அ. (adv.) 1. ஏறக்குறைய; more or less 2. சராசரி; on an average.

[T.ramā-rami > த. ரமாரமி]

ரமா *ramā,* பெ(n.) இலக்குமி; Lakshmi.

[Skt.ramā> ரமா]

ரமை *ramai,* பெ(n.) இலக்குமி; Lakṣmi.

[Skt.ramā>ramai]

ரயத் *irayat,* பெ.(n.) குடியானவன்; (C.G.) ryot, peasant, cultivator, tenant.

[U.raiyat > த. ரயத்]

ரயத்வாரி *irayat-vāri,* பெ.(n.) தனித்தனியாகக் குடிகளுக்கு விதிக்குந் தீர்வையொழுங்கு (C.G.); settlement of land revenue directly with individuals.

[U.raiyatwāri > த. ரயத்வாரி]

ரயாதி *rayādi,* பெ.(n.) 1. நிலவரித்தள்ளுபடி (வரிவஜா); remission of government claim. 2.ஆதாயம் (இலாபம்); benefit, profit.

[U.riayat > த. ரயாதி]

ரயில் *rayil,* பெ.(n.) நீராவியால் அல்லது மின்சாரத்தாற் செல்லும் வண்டித் தொடர்; train propelled by steam or electricity.

[E.rail > த. ரயில்]

ரயிலடுக்கு *rayil-aḍukku,* பெ.(n.) பயணஞ்செய்வோர் சென்றவிடங்களிற் சமைக்க உதவும் அடுக்குப்பாத்திரம்; a compact set of cooking utensils used by travellers.

[E.rail > த. ரயில்]

ரவாணா *ravāṇā,* பெ.(n.) 1. அனுப்புகை(C.G.); sending, despatch. 2. அனுமதிச்சீட்டு(வின்.); pass, permit. 3. தம்பட்டவகை (madr) tabour.

த. வ. செலுத்து

[Persn.rawāna > த. ரவாணா]

ரவாலாடு *ravā-lāḍu,* பெ.(n.) கோதுமையின் குறுநொய்யி (ரவாவி) னால் செய்த இன்னுருண்டை; a kind of confection made of wheat-flour.

[Hind.ravā+lāṭu > த. ரவாலாடு]

ரவி *ravi,* பெ.(n.) 1. கதிரவன்; sun. 2. ஞாயிறு இருக்கும் ஓரை(இராசி)யைக் குறிக்குஞ் சொல்லோடு சேர்ந்து மாதத்தைக் குறிக்குஞ் சொல் ; a term meaning 'month' occuring as the second member of comound wordsï the first being the name of the section of the zodiac in which the sun remains during that month.

[Skt.ravi > த. ரவி]

ரவிக்கை *ravikkai,* பெ.(n.) பெண்கள் மார்பிலணியும் சட்டை; tight fitting bodice, jacket, corset.

த. வ. இறுவி, இறுக்கை

[T.ravika,K.ravake > த. ரவிக்கை]

ரவிசு *ravišu,* பெ(n.) இரைச்சல்; noise.

ரவை[1] *ravai,* பெ. (n.) 1. நுண்ணிய பொருள்; small particle. 2. கோதுமையின் குறு நொய்; wheat flour. 3. வைரம்; diamond. 4. சுடுவதற்கு உதவும் சிறிய ஈயக்குண்டு; small lead shot. 5. கோலி; marble. 6. சிறிது; a little.

த. வ. குறுணை

[Hind.ravā > த. ரவை]

ரா *rā,* பெ.(n.) இரவு (இராத்திரி) (நாம தீப. 553); night.

ராக்கடி *rākkaḍi,* பெ.(n.) உச்சந்தலையணிவகை; an ornament worn by women on the crown of the head.

த. வ. சூளாமணி

[U.rākkaḍi > த. ராக்கடி]

ராக்கடை *rākkaḍai,* பெ(n.) ராக்கடி பார்க்க; see rākkaḍi.

[ராக்கடி > த. ராக்கடை]

ராகம் *rāgam,* பெ.(n.) 1. ஆசை; desire. 2. நிறம்; colour. "மாக ராக நிறைவா ளொளியோனை" (கம்பரா. இராவணன் தானை.19) 3. சிவப்பு (பிங்); redness.4. பாட்டு (பிங்.); music, musical measure. " உதயராகத்தோடு" (பாரத.இந்.5). 5. பண் ; (mus.) specific melody types. 6. சுந்தா சுத்த தத்துவங்களுள் ஒன்று;(saiva.) the principle which excites desire in souls.

[Skt.raga > த. ராகம்]

ராகமாலிகை *rāga-māligai,* பெ.(n.) ஒரு பாடலிற்பல பண் (ராகங்)களும் தொடர்ந்துவரப் பாடும் பண் (ராகத்)தொடர்; head ornament worn by women.series of rākam in which the successive parts of a song or sung.

த.வ. கூட்டுப்பண்

[Skt.rāga-mālikā > த. ராகமாலிகை]

ராகவர்த்தனி *rāga-varttaṉi,* பெ(n.) மேளகர்த்தாக்களுளொன்று; a primary rāga.

[Skt.rāga>]

ராகவன் *rāgavaṉ,* இராகவன் பார்க்க; see iragavaṉ.

[Skt.rāghava > த. ராகவன்]

ராகி *rāgi,* பெ.(n.) இராகி[2] (வின்) பார்க்க; see irāgi.

த.வ. இறகி

[Skt.rāgin > த. ராகி]

ராகுத்தராயன் *rāgutta-rāyaṉ,* பெ.(n.) பார்க்க **இராவுத்தன்[1]**; trooper, cavalier. "இராகுத்தராயன் என்று" (திருவாலவா. 28, 83, பிம்).

[K. rāhutarāya > த. ராகுத்தராயன்]

ராங்கி *rāṅgi,* பெ.(n.) செருக்கு (கொ.வ.); affectation, vanity, haughtiness.

[E.rank > த. ராங்கி]

ராசஅம்சம் *rāša-amšam,* பெ.(n.) அன்னப்பறவை வகை; flamingo, phoenicopterus, roseus.

ராசக்காணம் *rāša-k-kāṇam,* பெ. (n.) அரசனுக்குரிய வரி முதலியன; revenue, king's share of the produce.

[Skt.rājan+M.kaṉam > த. ராசக்காணம்]

ராசக்கிரீடை *rāšakkiriḍai,* பெ. (n.) 1. அரசர்களின் புனல் விளையாட்டு; sportive play of the royal family in a water pool. 2. கண்ணபிரான் ஆயமகளிரொடு ஆடிய கூத்துவகை; a sportive dance of Krṣṇa with the Gōpikās.

[Skt. rāsa+ த. ராசக்கிரீடை]

ராசசம்மானம் *rāsasa-m-māṉam,* பெ.(n.) அரசன் அளிக்கும் பரிசு; present made by a king.

[Skt.rājan > த. ராசசம்மானம்]

ராசசூயம் *rāša-šūyam,* பெ. (n.) ஒரு வகை வேள்வி; a kind of sacrifice.

[Skt.rāja +sūya > த. ராஜசூயம்]

ராசசேகரி *rājasēgari,* பெ(n.) இடைக்காலச் சோழரின் பட்டப் பெயர்; a title of later cholas.

[Skt.rājan+kēsari> rājakēsari]

ராசசேவை *rāsa-sēvai,* பெ.(n.) அரச வேலை; service under a king, state service.

[Skt.rājan+sēvā > த. ராசசேவை]

ராசன் *rāšaṉ,* பெ (n.) அரசன்; king.

[த. அரசன் > Skt.rajan> த. ராசன்]

ராசராசநரேந்திரன் *rāšarāšanarēndiraṉ,* பெ (n.) வேங்கி நாட்டரசன்; a king name of vēṅkinādu

[Skt. rajan+raja+narēntra>த. ராசராச நரேந்திரன்]

ராசதானி *irāšadāṉi,* பெ. (n.) 1. தலைநகர்; capital city. 2. மாநிலம்; province, presidency.

[Skt.rāja-dhānī > த. ராசதானி]

ராசமண்டலம் *irāca-manḍalam,* பெ.(n.) அரசர் கூட்டம்; assembly of kings. "அன்றிருந்த ராசமண்டலம்" (பாரத.வாரணா.63)

[Skt.rāja+manḍala > த. ராசமண்டலம்]

ராசமுதலிகள் *rāja-mudalikal,* பெ(n.) தலைமையதிகாரிகள்; ministers and chieftains.

ராசராசன்காசு *rāsarāsaṉ-kāšu,* நாணய வகை; a coin.

ராசாங்கம் *rāšāṅgam,* பெ(n.) அரசு; kingship.

[Ar.rājāṅga > ராசாங்கம்]

ராசிபாளையன் பணம் *rāšipāḷaiyaṉpaṇam,* பெ (n.) நாணய வகை; a coin.

ராசிபொன் *rāši-poṉ,* பெ(n.) நாணய வகை; a coin.

ராசி[1] *rāci,* பெ.(n.) வரிசை; row.

ராசி[2] *rāci,* பெ.(n.) 1. கூட்டம் (வின்.); collection. 2. குவியல் (பிங்.); heap "சுட்டன துரக ராசி" (கம்பரா.நாகபாசப்.94). 3. இனம்; kind, sort. 4. மொத்தம்; aggregate. 5. மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம்,சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனசு, மகரம், கும்பம், மீனம்.(சூடா.); sign of the zodiac. "ஏக ராசியினினெய்த" (கம்பரா. இராவணன் தானை19). 6. நல்லூழ் (கொ.வ); lack. 7. சுபாவம்(கொ.வ.); agreement, harmony. 9. வட்டி முதலியன கணக்கிடும் பொழுது கொள்ளும் கணித எண்; (Arith.) product of terms, used in the calculation of interest, etc. 10. பணம்(இ.வ.); coin.

[Skt.rāši > த. ராசி [2]]

ராசி[3] *rāci,* பெ.(n.) இணக்கம் (சமாதானம்); amicable settlement between litigants, reconciliation.

[Skt.rāzi > த. ராசி [3]]

ராசிபோகம் *irāsi-bōgam,* பெ.(n.) கோள் ஒன்று ஓர் இராசியைக் கடந்து செல்லுகை; the passage of a planet through a sign of the zodiac.

[Skt.rāši+bhōga > த. ராசிபோகம்]

ராசிமானம் *rāsi-māṉam,* பெ.(n.) கோள்களின் நிலையைக் கணிக்கும் முறை; calculation of the position of a planet in the zodiac. 2. குறித்த இராசி முற்றும் தோன்று(உதயமா) வதற்காகும் காலம்; time taken for a particular sign of the zodiac to pass the horizon.

[Skt.rāši+māna > த. ராசிமானம்]

ராட்சதன் *rāṭcadan,* பெ.(n.) அரக்கன் (இராக்கதன்) (வின்); giant, demon, goblin.

[Skt.rākṣasa > த. ராட்சதன்]

ராட்டிரகூடம் *rāṭṭirakūḍam,* பெ.(n.) இரட்டர் களுடைய நாடு; country of the iraṭṭar.

[Skt. rāṣṭra-kūṭa > த. ராட்டிரகூடம்]

ராட்டிரம் *raṭṭram,* பெ.(n.) அரசாங்கம்; kingdom.

[Skt. rāṣṭra > த. ராட்டிரம்]

ராட்டினம் *rāṭṭinam,* பெ.(n.) 1. சுழலும் சக்கரம்; spinning wheel. 2. நீரிறைக்க உதவும் சக்கரம்; pulley for drawing water, reel ginning machine whirligig.

த. வ. உருளி

[U.rāhaṭā > த. ராட்டினம்]

ராட்டு *rāṭṭu,* பெ.(n.) இராட்டினம் (கொ.வ) பார்க்க; see irāṭṭnam.

ராட்டை[1] *rāṭṭai,* பெ.(n.) இராட்டினம் (கொ.வ) பார்க்க; see irāṭṭnam.

[Hind.rāhaṭā > த. ராட்டை]

ராட்டை[2] *rāṭṭai,* பெ.(n.) நூல் நூற்க உதவும் சக்கரம்; ambar carkar.

[Hind.rāhaṭā > த. ராட்டை]

ராணி *rāṇi,* பெ.(n.) அரசி; queen. 2. இளவரசி; princess.

[Pkt.rāṇī<rājñī > த. ராணி]

ராணு *rāṇu,* பெ.(n.) காலாட்படை; infantry." வொரிட்ட ராணு வரிசையாய் நிற்க "(விறலிவிடு. 1049)

ராணுவப்பேர் *rāṇuva-p-pēr,* பெ.(n.) சேனைத் தலைவர்; persons in command of armies. "அச்சமில்லை ராணுவப்போர்" (கூளப்ப.53).

[T.rāṇuva > த. ராணுவம்]

ராணுவம் *rāṇuvam,* பெ.(n.) பட்டாளம்; army.

[T.rāṇuva > த. ராணுவம்]

ராத்தல் *rāttal,* பெ.(n.) எடையளவு; a measure of weight.

ராத்தல் தராசு *rāttal-tarāšu,* பெ.(n.) தோல் முதலியன நிறுக்கும் நிறைகோல் வகை; the spring balance, used chiefly in weighing hides, wool, palmyra-fibre, yarn, etc.

ராத்திரி *rāttiri,* பெ.(n.) இரவு (இராத்திரி); night."ராத்திரி மேனியம்மான்" (அஷ்டப். திருவேங்கடத்.24)

[Skt.rātri > த. ராத்திரி]

ராதா மனோகரம் *rādā-manogaram,* பெ.(n.) பூங்கொடி வகை (இ.வ.); a flowering creeper.

ராப்தா *rāpdā,* பெ.(n.) 1. இணைப்பு; bond, that which binds one thing with another. 2. நட்பு; friendliness. 3. வழக்கம்; habit, custom. 4. மாமூல்; mamool, precedent. 5. அரசவீதி (ராஜபாட்டை); thorough fare.

[Arab.rabitā > த. ராப்தா]

ராப்பாடி *rā-p-pāḍi,* பெ.(n.) இரவில்பாடி இரந்துண்போர்; washerman of the low castes, who begs his food at night, singing along the streets.

ராப்புச் சர்க்கரை *rāppu-c-carkk-arai,* பெ.(n.) தூய்மை செய்யாத சருக்கரை (இ.வ.); unrefined sugar.

[U.rāb > த. ராப்பு]

ராப்பொடி *rā-p-poḍi,* பெ.(n.) அராப்பொடி(வின்.); filings.

ராம்பாடி *rāmbāḍi,* பெ.(n.) (லம்பாடி) இடம் பெயர் மக்கட் பிரிவினர்; a wandering caste.

[Mhr.rāmbāḍ > த. ராம்பாடி]

ராமக்கோழி *rāma-k-kōḷi,* பெ.(n.) நீர்க்கோழி வகை (இ.வ.); water hen, as having a mark resembling vaiṣṇava mark.

ராசத்துரோகம் *rāša-t-turōgam,* பெ.(n.) அரசனுக்குக் கேடு சூழ்கை; treason.

மறுவ. அரசஇரண்டகம்

[Skt.rājya+drōha > த. ராசத்துரோகம்]

ராசத்துரோகி *rāša-t-turōgi,* பெ.(n.) அரசனுக்குக் கேடு சூழ்பவன்; traitor.

மறுவ. அரசஇரண்டகன்

[Skt.rājya+drōha > த. ராசத்துரோகி]

ராசதண்டனை *rāša-taṇḍaṉai,* பெ.(n.) முறை (நீதி)மன்றத்தால் குற்றத்திற்கேற்றவாறு வழங்கப்படும் தண்டனை; punishment awarded by a court of law.

மறுவ. அரச தண்டனை.

[Skt.rājya+ த. தண்டனை > த. ராசதண்டனை]

ராசதோரணை *rāša-tōraṇai,* பெ.(n.) பெருஞ்சிறப்பு; splendour, pomp, as befitting a king.

மறுவ. அரச தோரணை.

[Skt.rājya+tōraṇa > த. ராசதோரணை]

ராசநடை *rāša-naḍai,* பெ.(n.) மிடுக்கான (கம்பீரமான) நடை; stately gait, as of a king.

[Skt.rājya+ த. நடை > த.ராசநடை]

ராசநிந்தனை *rāša-nindaṉai,* பெ.(n.) அரசினைப் பழிக்கை; sedition.

[Skt.rajya > த.ராச+நிந்தனை]

ராசநோய் *rāša-nōy,* பெ.(n.) எலும்புருக்கி நோய்; tuberculosis.

[Skt.rājya > த.ராச+நோய்]

ராசபக்தி *rāša-pakti,* பெ.(n.) அரசனிடம் குடிகளுக்குள்ள பற்று; loyalty to the king.

[Skt.rājya+pakti > த. ராசபக்தி]

ராசபத்திரம் *rāša-pattiram,* பெ.(n.) அரசனளிக்கும் ஆவணம் முதலியன; royal edict or grant.

[Skt.rājya+ patra > த. ராசபத்திரம்]

ராசபாகம் *rāša-pāgam,* பெ.(n.) 1. அரசனுக்குரிய பங்கு; royal share. 2. அரசாங்கத்துக்குரியதான விளைச்சல் முதலியவற்றின் பகுதி; share of produce due as revenue to the government.

[Skt.rājya+bhāga > த. ராசபாகம்]

ராசபாட்டை *rāša-pāṭṭai,* பெ. (n.) 1. பெருவழி; royal road, king's highway. 2. நேர்முறையான வழி; straight path.

[Skt.rājya+ த. பாட்டை > த. ராசபாட்டை]

ராசபிளவை *rāša-piḷavai,* பெ.(n.) பிளவை நோய் வகை; a disease.

[Skt.rājya+ த. பிளவை> த. ராசபிளவை]

ராசபுத்திரன் *rāša-puttiraṉ,* பெ.(n.) அரசன் மகன்; prince.

[Skt.rājya+putra>த. ராசபுத்திரன்]

ராசபோகம் *rāša-pōgam,* பெ.(n.) 1. இன்ப வாழ்க்கை; life of great ease and enjoyment,as of a king. இராசபாகம் பார்க்க; see rājapākam.

[Skt.rājya > த. ராச+போகம்]

ராசமான்ய *rāša-māṉya,* பெ. (adj.) 1. அரசனால் மதிக்கத்தக்க; most excellent as worthy of the king's regard.

[Skt.rājya > த. ராசமான்ய]

ராசயோகம் *rāša-yōgam,* பெ.(n.) இராசயோகம் 1,2,3, பார்க்க; see irāšayōgam.

மறுவ. அரசயோகம்.

ராசராசேசுவரி *rāša-rāšēšuvari,* பெ.(n.) கொற்றவை; Durgā.

[Skt.rāja-rājēšvari > த. ராசராசேசுவரி]

ராசரிகம் *rāšarigam,* பெ.(n.) ஆட்சி; rule, government.

[T.rājarikamu>rājan > த. ராசரிகம்]

ராசரிசி *rāša-riši,* பெ.(n.) துறவுநிலையிலுள்ள அரசன்; royal sage.

[Skt.rāja-ṛṣi> த. ராசரிசி]

ராசவிசுவாசம் *rāša-višuvāšam,* பெ.(n.) இராசபக்தி பார்க்க; see irājapakti.

[Skt.rājan > த. ராசவிசுவாசம்]

ராசவிழி *irāśa-viḷi,* பெ.(n.) மிடுக்கான நோக்கு; royal or majestic look.

[Skt.rāja > த. ராசவிழி]

ராசா *rāśā,* பெ.(n.) 1.அரசன்; king, ruler. 2.மிகச்சிறந்தவன்; that which is most excellent of its kind. 3. அரசு அளிக்கும் பட்டப் பெயர்; a title of honour conferred by the government.

[Skt.rājā > த. ராசா]

ராசாகுடுமிபண்ணு-தல் *rāśākkuḍumi-paṇṇu,* செ.குன்றாவி. (v.t.) 1. மறைவாகப் போய் ஒருத்தன் குடுமியை அவிழ்த்து விளையாட்டுச் செய்தல்; to make sport of one by stealthily untying his hairtuft. 2. இருதிறத்தாரில் ஒருவர்க்கும் நன்மையாகாதபடி செய்தல் (இ.வ); to be beneficial to neither party.

ராசாத்தி *rāsātti,* பெ.(n.) இராசாத்தி பார்க்க; see irāśātti.

ராசாமந்திரி *rāśāmandiri,* பெ.(n.) ஒருவனை அரசனாகவும் மற்றவர்களை மந்திரி முதலானவர்களாகவும் கொண்டு சிறுவர் விளையாடும் விளையாட்டு வகை; a sport among children in which the players act the parts of a king, his ministers, etc.

ராசாளி *rāsāḷi,* பெ.(n.) இராசாளி பார்க்க; see irāśāḷi.

ராசிநாமா *rāśināmā,* பெ.(n.) 1. வழக்காளிகள் இருவரும் தம்முள் ஒத்துப் போவதாக எழுதித்தரும் ஆவணம்; Document in writing where by the parties to a suit agree to adjust their differences. 2. இராசிநாமா பார்க்க; see irāśināmā. 3. பட்டாவிலக்குப் பத்திரம் deed of relinquishment executed by the cultivator when he gives up his paṭṭā lands.

ராசு *rāśu,* பெ.(n.) ஒரு தெலுங்கப் பிரிவினர்; a telugu caste.

[T. rāzu >rājan த. ராசு]

ராசோபசாரம் *rāśōpaśāram,* பெ.(n.) 1. அரசர்க்குரிய விருந்தோம்பல்; honours pertaining to a king. 2. பெரும் மதிப்புரவு; great civility, as be fitting a king.

[Skt. rājō-pacāra > த. ராசோபசாரம்]

ராமகேளி *rāmakēḷi,* பெ.(n.) பண் வகை; a musical mode.

[Skt.rāma-kēli > த. ராமகேளி]

ராமசேகரலு *rāmaśēgaralu,* பெ.(n.) நெல் வகை; a kind of paddy.

ராமப்பிரியை *rāma-p-piriyai,* பெ.(n.) பண் வகை; a musical mode.

[Skt.rāmapriyā > த. ராமப்பிரியை]

ராமபாணம் *rāma-pāṇam,* பெ.(n.) இராமபாணம் பார்க்க; see irāmapāṇam.

[Skt.rāmabāṇa > த. ராமபாணம்]

ராமராச்சியம் *rāma-rājyam,* பெ.(n.) மிகு பயனுள்ள அரசு; most beneficient government, as the rule of rāma.

[Skt.rāmarājya > த.ராமராஜ்யம்]

ராமாயணம் *rāmāyaṇam,* பெ. (n.) 1. இராமாயணம் பார்க்க; the epic Rāmāyaṇa. 2. இராமராவணயுத்தம்; the war between Rāma and Rāvaṇa.

[Skt. Ramāyaṇa > த. ராமாயணம்]

ராமானுசம் *rāmāṉuśam,* பெ.(n.) 1. தீபக் கால் வகை; a kind of standard for a light. 2. செம்பினாலியன்ற ஒரு வகைக் குடிநீர்; a copper cup. 3. தென்கலைத் திருமண்காப்பிடு கின்ற பாதம்; the pedestal of the y mark of the Ten-Kalai vaiṣṇavaites.

[Skt. Ramānuja > த. ராமானுசம்]

ராய்சாகிப் *rāy-śāgib,* பெ. (n.) முகமதியரல்லாத இந்தியருக்கு அரசு அளிக்கும் பட்டவகை; a title of honour conferred by the Government on Indians other than Muhammadans.

[U. rai+sāheb > த. ராய்சாகிப்]

ராய்த்தா *rāyatta,* பெ.(n.) பழம் முதலியவற்றை மோரில் ஊறவைத்துச் செய்த உணவு வகை.

[U. rāyata > த. ராய்த்தா]

ராயசக்காரன் *rāyaca-k-kāraṉ,* பெ. (n.) எழுத்தர்; clerk, secretary.

[T. rāyasamu.k. rāyasa > த. ராயசக்காரன்]

ராயசம் *rāyašam,* பெ.(n.) 1. கட்டளை; order. 2. இராயசம் (பார்க்க); business of a writer. 3. கருவம்; if rājasa hangting.

[T. rayacame,K. rāyasa > த. ராயசம்]

ராயசீமரக்கால் *rāyasī-marakkāl,* பெ.(n.) பட்டணம்படி 21/4 முதல் 23/4 வரை கொள்ளும் ஒரு முகத்தலளவை; measure of capacity = 2 1/4 to 2 3/4 Madras measure.

[Mhr. rājāji> த. ராயசீ]

ராயப்பர் *rāyappar,* பெ.(n.) பேதுரு என்ற கிறித்துவப் பெரியார்; St. Peter.

[Skt. rāyi > த. ராயப்பர்]

ராயர் *rāyar,* பெ.(n.) சில சாதியாரின் பட்டப்பெயர்; title of certain kaḷḷar and other castes.

[K.rāyaru. T.rāyalu> த. ராயர்]

ராயன் *rāyaṉ,* பெ.(n.) 1. அரசன்; king. 2. இராயன்; caesan. 3. மாத்துவப்பிராமணர் முதலானோர் பட்டப்பெயர்; title of certain castes like Mādhva Brahmins.

[Skt. rājan > த. ராயன்]

ராவ் *rāv,* பெ.(n.) மகாராட்டிரர், மாத்துவப் பிராமணர் முதலிய சில சாதியாரின் பட்டப்பெயர்; title of Maharattas. Mādhva Brahmins.

[U. rāo > ராவ்]

ராவ்சாகிப் *rāv-šāgib,* பெ.(n.) முகமதியரல்லாத இந்தியருக்கு அரசாங்கத்தார் அளிக்கும் பட்டவகை; a title of honour conferred by the government on Indians other than muhammadans.

[U. rāo +U.Sāheb> ராவ்சாகிப்]

ராவ்பகதூர் *rāv-bagadūr,* பெ.(n.) முகமதியரல்லாத இந்தியருக்கு அரசாங்கத்தார் அளிக்கும் பட்டவகை; a title of honour conferred by the government on Indians other than Muhammadans.

[U. rāo+bahādūr > ராவ்பகதூர்]

ராவடம் *rāvaḍam,* பெ.(n.) அராவு தொழில்; filing.

[T. rāpadamu > ராவடம்]

ராவணன் *rāvaṇaṉ,* பெ.(n.) பார்க்க இராவணன்; Rāvana.

[Skt. Ravana > ராவணன்]

ராவணன் விழி *rāvaṇaṉ-viḻi,* பெ.(n.) 1. நீரில் வாழும் உயிரி; a mollusc. 2. நீரில் வாழும்ஒரு வகை உயிரியின் ஓடு; shell of a mollusc.

ராவு-தல் *rāvu,* வி.(v.) அராவுதல்; to file.

[Skt. அராவு-ராவு]

ராவுத்தன் *rāvuttaṉ,* பெ.(n.) குதிரைவீரன்; horseman. சூர்க்கொன்ற ராவுத்தனே (கந்தரலங். 37) 2. ஒரு பட்டப் பெயர்; a title.

[U. raut > ராவுத்தன்]

ராவுராப்பலகை *rāvurā-p-palagai,* பெ.(n.) 1. வாத்தாட்டுப்பலகை; eaves. 2. மச்சுத்தளத்தின் கீழ்க் கைமரங்களின் மீது பரப்பப்படும் பலகை; ceiling.

ராசாத்தி *rāšātti,* பெ.(n.) ராணி பார்க்க; see rāṇi

ரிக் *rik,* பெ.(n.) இருக்கு பார்க்க; see irukku.

[Skt. ṛk > த. ரிக்]

ரிக்சா *riksā,* பெ.(n.) ஆள் இழுத்துச் செல்லும் பயண வண்டி வகை; rickshaw.

த.வ. ஆள்வண்டி

[Japanese jinrikisa >rickshaw> ரிக்சா]

ரிகாமி *rikāmi,* பெ.(n.) வேலையற்றவன்; unemployed person. "கச்சேரியில் வேலை காலியாயிருக்கிறது; ஆனால் ரிகாமி ஒருவனுமில்லை." (இ.வ.)

[U. riktakarman >rikāmi> ரிகாமி]

ரிங்கின்கயிறு *riṅgiṉ-kayiṟu,* பெ(n.) கப்பல்களின் பாய்களை விரிக்கவுஞ் சுருக்கவும் உதவுங்கயிறு; rigging.

[E.rigging> த. ரிங்கின் + கயிறு]

ரிசபதேவர் *riṣapa-tēvar,* பெ (n.) நந்திதேவர்; the holy bull nanti.

[Skt.ṛṣabha+த. தேவர்]

ரிசி *riṣi,* பெ.(n.) முனிவன்; sage, saint.

[Skt. ṛṣi > ரிசி]

ரித்ததிதி *rittatiti,* பெ.(n.) நான்காவது, ஒன்பதாவது, பதினான்காவது ஆகிய பிறைநாட்களைக் குறிக்கும் பொதுச்சொல்; a common term for the fourth, nineth and fourteenth titi of the lunar fortnight.

த.வ. ஐந்திடையிட்டபிறைநாள்

[Skt. rikta-tithi > ரித்ததிதி]

ரிபு *ripu,* பெ.(n.) பகைவன்; enemy.

[Skt. ripu > ரிபு]

ரியாயத் *riyāyat,* பெ.(n.) வரியின் தள்ளுபடி; abatement of assessment.

ரிவாசா *rivāšā,* பெ.(n.) வழக்கம்; custom, practice, usuage.

[Arab. riwāj > ரிவாசா]

ரிவாசு *rivāšu,* பெ.(n.) ரிவாசா பார்க்க; see rivājā.

ரீகர் *rīgar,* பெ.(n.) கரிசல்தரை; black cotton soil.

[U. rēgar > ரீகர்]

ரீங்காரம் *rīṅgāram,* பெ.(n.) வண்டு முதலியவற்றின் நீள்மென் ஒலி; humming as of bees.

ரீதி *rīdi,* பெ.(n.) 1. நிலைமை; "காலரீதி" state, condition. 2. முறை; mode, method, model, system.

[Skt. rīti > ரீதி]

ரீதிகௌளை *rītikauḷai,* பெ.(n.) ஒரு பண்வகை; a melody type.

[Skt. rīti-gauḍa > ரீதிகௌளை]

ரீப்தாங்கல் *rīp-tāṅgal,* பெ.(n.) கப்பற்பாயின் உறுப்புகளுள் ஒன்று ; reef-band.

[E. reef > ரீப்தாங்கல்]

ரீப்பர் *rīppar,* பெ.(n.) வரிச்சல் பட்டை; reeper, long strip or lath of palmyra or other timber.

[Mhr.rip> E. reeper > ரீப்பர்]

ரீப்பா *rīppā,* பெ.(n.) ரீப்பர் பார்க்க; see rēppar.

ருக் *ruk,* பெ.(n.) இருக்கு மறை(வேதம்); Rg-vēda. 2. வேதமந்திரம்; vēdic hymn.

[Skt. ṛk > ருக்]

ருக்கா *rukkā,* பெ.(n.) சீட்டு; note, chit, memorandum.

[U. ruqqā > ருக்கா]

ருக்மிணி *rukmiṇi,* பெ(n.) திருமாலின் மூத்த மனைவி; šri Krishna's first wife.

[Skt.rukmanimā> ருக்மிணி]

ருசி *ruši,* பெ.(n.) உருசி பார்க்க; see uruši.

[Skt. ruci > ருசி]

ருசு *rušu,* பெ.(n.) 1. சான்று; proof. 2. கையெழுத்து; signature.

[U. rujū > ருசு]

ருசுச்செய்-தல் *rusu-c-cey,* செ.கு.வி. (v.i.) மெய்ப்பித்தல்; to prove or establish by evidence; to bring home, as a charge or accusation.

[U. rujū > த. ருசுச்செய்தல்]

ருசுப்படுத்து-தல் *rušu-p-paḍuttu-,* செ.கு.வி. (v.i.) ருசுச்செய்-, பார்க்க; see rucuccey-,.

ருசுப்பண்ணு-தல் *rušu-p-paṇṇu-,* செ.கு.வி. (v.i.) ருசுச்செய்-, பார்க்க; see rucuccey-,.

ருசுப்பொறுப்பு *rušu-p-poṟuppu,* பெ. (n.) உண்மையெனக் காட்ட வேண்டிய பொறுப்பு; burden of proof.

ருசுப்போடு-தல் *rušu-p-pōḍu-,* செ.கு.வி. (v.i.) கையெழுத்துப்போடுதல்; to affix one's signature.

ருசும் *rušum,* பெ.(n.) சில பணியாளர் வழக்கமாகப் பெறும் உரிமைப்பணம்; fees, money, payments received by public officers,as perquisites attached to their office.

[*U. rūsūm > ருசும்*]

ருசுவு *rušuvu,* பெ.(n.) ருசு பார்க்க; see rušu.

ருத்திரகணப்பெருமக்கள் *ruttira-kaṇa-p-perumakkaḷ,* பெ(n.) ஒரு சார் சிவனடியார் ; the a class of šaiva devotees.

[*Skt.rudra+த. ருத்திர+கணம்+பெருமக்கள்*]

ருத்திரவீணை *ruttira-viṇai,* பெ.(n.) உருத்திர வீணை பார்க்க; see uruttiraviṇai.

[*Skt. rudra+vīna > ருத்திரவீணை*]

ருத்திரன் *ruttiraṉ,* பெ.(n.) உருத்திரன் பார்க்க; see uruttiraṉ.

[*Skt. rudra > ருத்திரன்*]

ருத்ராட்சம் *rutrāṭcam,* பெ.(n.) உருத்திராட்ச மணி; rudrak bead.

த.வ. அக்கமணி

[*Skt. rudrākṣa > ருத்ராக்ஷம்*]

ருத்திராபிடேகம் *ruttirāpiḍsegam,* பெ.(n.) உருத்திரசூத்தத்தைச் சொல்லி துய்மையான நீரால் நீராட்டுதல்; a ceremonial bath in water sanctioned with the recital of uruttiracū-ttam.

[*Skt. rudre+abhiṣēka > ருத்திராபிடேகம்*]

ருப்பு-தல் *ruppu,* செ.கு.வி.(v.i.) தோசை மாவு முதலியன அரைத்தல்; to grind.

[*T.K. rubbu > ருப்பு*]

ருப்புக்கல் *ruppu-k-kal,* பெ.(n.) ஆட்டுக்கல் ; stone mortar.

ருப்புக்குழவி *ruppu-k-kuḷavi,* பெ.(n.) மாவரைக்குங் குழவி; stone roller for grinding.

ருப்புரல் *ruppural,* பெ.(n.) ருப்புக்கல் பார்க்க; see ruppukkal.

ருப்புலக்கை *ruppulakkai,* பெ.(n.) மாவிடிக்கும் உலக்கை; pestle for grinding flour.

ருமாலை *rumālai,* பெ.(n.) தலைப்பாகை; a head dress.

[*Persn. rūmāl > ருமாலை*]

ருமானி *rumāṉi,* பெ.(n.) மாதுளம் வித்தைப் போன்ற சிவந்த நிறமுள்ள மாம்பழவகை; a round reddish mango fruit as resembling in colour the pips of pomegranate.

த.வ. செம்மாங்கனி

[*U. rummāni > ருமானி*]

ரூட்டி *rūṭṭi,* பெ.(n.) தொந்தரை; annoyance; trouble. "ரூட்டி செய்தல் தேதென்று" (விறலிவிடு.855)

[*Skt. rusṭi > ரூட்டி*]

ரூட்டியடி-த்தல் *rūṭṭi-y-aḍi-,* செ.குன்றாவி.(v.t.) தொந்தரை செய்தல்; to cause annoyance.

[*Skt. rusṭi > ரூட்டியடி*]

ரூடி *rūḍi,* பெ.(n.) இடுகுறிப் பெயர்; term used in its conventional sense.

[*Skt. rūdhi > ரூடி*]

ரூப்காரி *rūp-kāri,* பெ.(n.) வழக்கு நடவடிக்கை; judicial proceeding.

[*Persn. rupkāri > ரூப்காரி*]

ரூப்ரூப் *rūprūp,* து.வி.(adv.) முன்னிலையில்; in person, in one's presence, personally, face to face.

[*Persn. rūbrū > ரூப்ரூப்*]

ரூபகதாளம் *rūpaga-tāḷam,* பெ.(n.) ஏழு தாளத்தொன்று; a variety of time measure, one of catta-tāḷam.

த.வ. உருவகத்தாளம்

[*Skt. rūpaka > ரூபகதாளம்*]

ரூபகம் *rūpagam,* பெ.(n.) 1. உருவகம்; metapher. 2. ரூபகதாளம் பார்க்க; see rūpakatāḷam 3. பத்துவகைப்பட்ட நாடகம்; drama of which there are ten species.

[*Skt. rūpaka > ரூபகம்*]

ரூபம் *rūpam,* பெ.(n.) 1. உருவம்; form, appearance, figure likeness. 2. ஒளியாகிய புலன்; sense of sight. 3. அழகு; beauty.

[Skt. rūpa > ரூபம்]

ரூபலாவண்ணியம் *rūpa-lāva-ṇṇiyam,* பெ.(n.) வடிவழகு; beauty of form, loveliness.

[Skt. rūpa+lāvaṇya > ரூபலாவண்ணியம்]

ரூபவதி *rūpavadi,* பெ.(n.) வடிவழகுள்ளவள்; beautiful, handsome woman.

த.வ. வடிவழகி

[Skt. rūpa-vatī > ரூபவதி]

ரூபா *rūpā,* பெ.(n.) ரூபாய் பார்க்க; see rūpāy.

[Skt. rūpya > ரூபா]

ரூபாய் *rūpāy,* பெ.(n.) ஒரு தோலா எடையுள்ள வெள்ளி நாணயவகை; a current silver coin of180 gr, composed of 165 parts pure silver and 15 parts alloy=1 tola in weight.

த.வ. வெண்பொன்

[Skt. rūpya > ரூபாய்]

ரூபாவதி *rūpāvadi,* பெ(n.) மேளகர்த்தாக்களு ளொன்று; a primary rāga.

ரூபாவரி *rūpā-vari,* பெ.(n.) தோட்டக்கால்களுக்கு விதிக்கும் வரிவகை; a special tax on garden lands.

ரூபி[1]-த்தல் *rūpi,* செ.கு.வி. (v.i.) மெய்ப்பித்தல்; to prove, demonstrate.

[Skt. rūpa > ரூபி]

ரூபி[2] *rūpi,* பெ.(n.) 1. உருவமுடையது; that which has shape, visible object, as having form. 2. அழகுடையவன்/ள்; handsome, well-shaped person.

[Skt. rūpin> ரூபி]

ரூல்கட்டை *rūl-kaṭṭai,* பெ.(n.) ரூலர்(இக்.வ) பார்க்க; see rūlar.

[E. rule > ரூல்+கட்டை]

ரூல்கம்பு *rūl-kambu,* பெ.(n.) ரூலர் பார்க்க; see rūlar.

[E. rule+ கம்பு[1] >ரூல்+கம்பு]

ரூல்கழி *rūl-kaḻi,* பெ.(n.) ரூலர்(சிக்.வ.) பார்க்க; see rūlar.

[E. rule+ கழி[1] >ரூல்+கழி]

ரூல்தடி *rūl-taḍi,* பெ.(n.) ரூலர் பார்க்க; see rūlar.

[E. rule+ தடி[2] >ரூல்+தடி]

ரூலர் *rūlar,* பெ.(n.) கோடு இடுதற்குதவுங் கோல்; ruler.

த.வ. கோட்டுக்கோல்

[E. ruler > ரூலர்]

ரெட்டநாடி *reṭṭa-nāḍi,* பெ.(n.) இரட்டை நாடி பார்க்க; see iraṭṭai nāḍi. "அவன் ரெட்ட நாடி"

ரெட்டி *reṭṭi,* பெ.(n.) தெலுங்கு நாட்டினின்று குடியேறிய உழுதுண்ணுந் தொழிலினர்; an immigrant caste of telugu cultivators.

[T.K. reḍḍi > த. ரெட்டி]

ரெட்டு *reṭṭu,* பெ.(n.) இரட்டு 2 (வின்.) பார்க்க; see iraṭṭu.

[T.K. reṭṭu > த. ரெட்டு]

ரெப்பை *reppai,* பெ.(n.) கண்இமை; eyelid.

[T. reppa,k.reppe > த. ரெப்பை]

ரெம்மி-த்தல் *remmi,* செ.கு.வி. (v.i.) பொருத்துதல்; to join as boards or planks.

[E. ram > த. ரெம்மி]

ரேக்கு *rēkku,* பெ.(n.) 1. பூவிதழ்; petal of flowers. 2. தங்கம் முதலியவற்றின் மெல்லிய தகடு; toil of metal."தங்கரேக்காற் சமைத்திட்டபாரக் கொங்கைகைக் குறியும்" (தனிப்பா.1-378,21)

[U. rēk > த. ரேக்கு]

ரேக்ளா *rēkḷā,* பெ.(n.) ரேக்ளாவண்டி பார்க்க; see rēkḷa-vaṇḍi

[U. rēkḷa > த. ரேக்ளா]

ரேக்ளாவண்டி *rēkḷa-vaṇḍi,* பெ.(n.) ஒருவன் மாத்திரம் உட்கார இடமுள்ள ஒற்றை மாட்டுவண்டி வகை; a kind of single bullock-cart with only one seat.

த.வ. ஒற்றை வண்டி

[U. rēkḷa+ > த. ரேக்ளா+வண்டி]

ரேகடி *rēkaḍi,* பெ.(n.) கரிசல் நிலம்; black cotton soil.

[U. rēgar >T. rēgaḍi> த. ரேகடி]

ரேகாம்சம் *rēgāmšam,* பெ.(n.) குறிப்பிட்ட வரிசை (ரேகை)க்குந் துவக்கமாகக் கொண்ட வரிசை (ரேகை)க்கும் இடைப்பட்ட கோணத்தின் நடுஅளவு; longitude.

த.வ. வரிசைக் கோணம்

[Skt. rēkhā+amša > த. ரேகாம்சம்]

ரேகாமூலம் *rēkā-mūlam,* பெ. (n.) அடிப்படை ஆவணத்தின் மூலச்சான்று; documentary evidence.

[Skt. rēkha+ > ரேகா+மூலம்]

ரேகை[1] *rēgai,* பெ(n.) நாணயவகை; a coin.

ரேகை[2] *rēgāi,* பெ.(n.)1. (வரிசை) இரேகை பார்க்க; see irēkai. 2. கோளங்களில் துருவத்தின் வழியே செல்வதாகக் கருதப்படுங்கோடு; meridian.

த.வ. வரிசை

[Skt. rēkhā > த. ரேகை]

ரேங்கு-தல் *rēṅgu-,* செ.குன்றாவி(v.t.) சினமூளுதல்; to rage, to be angry.

[T.K. rēgu > த. ரேங்கு]

ரேணு *rēṇu,* பெ(n.) பொடி; dust.

[Skt. rēṇu> ரேணு]

ரேந்தா *rēndā,* பெ.(n.) சித்திரப்பின்னற்குரிய ஊசி வகை; a needle used in embroidery work.

ரேந்தாத்தையல் *rēndā-t-taiyal,* பெ.(n.) பூவேலைத் தையல்; lace-work.

ரேந்தை *rēndai,* பெ.(n.) ரேந்தாத்தையல் பார்க்க; see rēntā-ttaiyal.

ரேவதி *rēvadi,* பெ. (n.) இருபத்தேழாம் நாள்மீன்; the 27th nakṣatra.

[Skt. rēvatī > த. ரேவதி]

ரேவு *rēvu,* பெ.(n.)1. இறங்கு துறை; landing place, ford, port, harbour. 2. ஆயத்துறை; custom-house.

[T.K. rēvu > ரேவு]

ரேழி *rēḻi,* பெ.(n.) இரேழி பார்க்க; see irēḻi.

[இடைகழி–டேகழி–ரேழி]

ரொக்கக்காரன் *rokka-k-kāran,* பெ. (n.) 1. முதலாளி; capitalist. 2. பணக்காரன்; rich man as having cash.

ரொக்கசாமீன் *rokka-šāmīṉ,* பெ.(n.) பணமாகக் கொடுக்கும் பிணை; security in money, cash security.

ரொக்கப்பட்டா *rokka-p-paṭṭā,* பெ.(n.) பணத்துக்குக் குத்தகையாக விடப்படும் நிலத்திற்குக் கொடுக்கப்படும் பட்டா; a patta for land leased for cash rent.

ரொக்கம் *rokkam,* பெ.(n.)அணியமாக இருக்கும் பணம்; cash, ready money.

த.வ. கைப்பணம்.

[K. rokka > Skt. rōka>த. ரொக்கம்]

ரொக்க வியாபாரம் *rokka-viyābāram,* பெ.(n.) பணத்திற்குப் பண்டங்களை விற்கும் வியாபாரம்; cash transactions.

த.வ. கைப்பணவணிகம்.

[Skt. rōka+viyāpāra >த. ரொக்கவியாபாரம்]

ரொக்காதாயம் *rokkātāyam,* பெ.(n.)1. பணமாக வரும் வரும்படி; cash receipts or income. 2. செலவு நீங்கிய மிச்சவரும்படி; net profit.

த.வ. கைப்பணவருவாய்.

[Skt. rōka+ > த. ரொக்காதாயம்]

ரொச்டு *rocṭu,* பெ.(n.)1. தொந்தரவு; trouble, annoyance. 2. சீர்குலைகை; confusion, disorder.

[T.K. rosṭu > ரொச்டு]

ரொட்டி *roṭṭi,* பெ.(n.) கோதுமை மாவாற் செய்த உணவு வகை; bread, wheaten cake.

த.வ. உருட்டி, அடை

[U. rōṭi(k.roṭṭi) > த. ரொட்டி]

ரோக்கா *rōkkā,* பெ.(n.)1. ரோகா பார்க்க; see rōkā. 2. கடன் தொகையைக் குறிக்கும் உறுதிச்சீட்டு; a written acknowledgment of a debt. 3. பணம் அல்லது பண்டங்களை யனுப்புமாறு கூறும் அரசு ஆணை (அப.பா); an order issued by the government authorising specific payments or supplies.

[U. ruqqā > ரோக்கா]

ரோகசாந்தி *rōga-šāndi,* பெ.(n.) நோய் குணமாகை; alleviation or cure of disease. 2. நோய் நீங்கும் பொருட்டுச் செய்யுஞ் சடங்கு வகை; a purificatory ceremony for the cure of diseases.

த.வ. நோய்தணுப்பு

[Skt. rōga > த. ரோக+சாந்தி]

ரோகநிதானம் *rōga-nidāṉam,* பெ.(n.) நோயை இன்னதென்று கண்டறிகை; diagnosis of disease.

த.வ. நோய்நோட்டம்

[Skt. rōga+ > த. ரோக+நிதானம்]

ரோகநிவாரணம் *rōka-nivāraṇam,* பெ.(n.) நோய் நீங்குகை; cure of disease.

[Skt. rōga+ > த. ரோக+நிவாரணம்]

ரோகா *rōga,* பெ. (n.) 1. துண்டு; bit, piece. 2. சீட்டு; note, chit.

[U. ruqqā > ரோகா]

ரோகி *rōgi,* பெ.(n.) நோயாளி; diseased person.

[Skt. rōgin > ரோகி]

ரோச் *rōc,* பெ.(n.) 1. நாள் வழிக்கணக்கு; journal, day-book. 2. நாள்; day.

[Skt. rōz > த. ரோச்]

ரோச்கார் *rōckār,* பெ.(n.) தொழில்; service, employment.

[Persn. rōzgār > த. ரோச்கார்]

ரோசனபிளாசுதிரி *rōsana-p-pilāsuṭiri,* பெ.(n.) ஒட்டுத்துணி; sticking plaster, resinplaster, emplastrum resinae.

த.வ. ஒட்டொட்டி

ரோசனம் *rōšaṉam,* பெ.(n.) காய்ச்சியபிசின்; resin.

[E.Rosin > த. ரோசனம்]

ரோசம் *rōṣam,* பெ.(n.) 1. மானம் ; keen sensibility, high sense of honour. 2. கோபம்; anger.

[Skt. rōsa > த. ரோசம்]

ரோசனா *rōsaṉa,* பெ.(n.) பார்ப்பார், பக்கிரி, ஏழை போன்றவர்க்குக் கொடுக்கும் நாட்படி; a daily allowance granted to Brahmins, fakirs and poor persons.

[Hind. rōzīnā > த. ரோசீனா]

ரோசா *rōša,* பெ.(n.) பூச்செடி வகை ; rose.

[Lat. rosa > த. ரோசா]

ரோசாம்பரம் *rōcāmbaram,* பெ (n.) பூச்செடிவகை; a flowering plant.

ரோதம்[1] *rōdam,* பெ.(n.) 1. நீர்க்கரை; bank, shore. " சீத ரோதக் குருதித் திரையொரீஇ" (கம்பரா. இராவணன்கோ.2). 2. அணை; dam.

[Skt. rōdha > ரோதம்]

ரோதம்[2] *rōdam,* பெ.(n.) ரோதனம்[2] பார்க்க; see rōtaṉam.

[Skt. rōda > ரோதம்]

ரோதனம்[3] *rōdaṉam,* பெ.(n.) தடை; obstruction.

[Skt. rōdhana > ரோதனம்]

ரோந்தடி-த்தல் *rōndaḍi,* செ.கு.வி.(v.i.) 1. இரவில் ஊரைச் சுற்றிச் சென்று காத்தல்; to keep watch at night. 2. அலைந்து திரிதல்; to roam,wander about. " உத்தியோகத்துக்கு ரோந்தடிக்கிறான்"

ரோந்து *rōndu,* பெ.(n.) இராக்காவல்; night patrol.

[Fr. ronde > ரோந்து]

ரோந்தை *rōndai,* பெ.(n.) 1. சீத்தை (அசங்கியம்); filthiness.

ரோம்புவாசல் *rōmbuvāšal,* பெ. (n.) கப்பலில் பெரிய பாய்மரத்தின் கீழுள்ள அடித்தளத்துக்குச் செல்லும் வழி; main hatch way.

ரோமம் *rōmam,* பெ.(n.) மயிர்; hair.

[Skt. rōma > த. ரோமம்]

ரோமாபுரி *rōmā-puri,* பெ.(n.) இத்தாலிய தேசத்துத் தலைநகர்; rome.

[Lat. Roma+ > த. ரோமா+புரி]

ரோமான்கத்தோலிக்கன் *rōmāṉ-kattōlikkaṉ,* பெ.(n.) கிறித்தவரில் ஒரு பிரிவினன்; Roman Catholic.

[E.romancatholic>த.ரோமான் கத்தோலிக்கன்]

ரௌத்திராகாரம் *rauttirākāram,* பெ.(n.) வன் கொடுமையின் (பயங்கரத்தின்) வடிவு; embodiment of ferocity.

[Skt. raudra +ākāra> த. ரௌத்திராகாரம்]

ல

லக்கடியடி–த்தல் *lakkaḍiyaḍi-,* செ.கு.வி. (v.i.) மிகவும் துன்பப்படுதல்; to be in great difficulties. *"அவன் சோற்றுக்கு லக்கடி யடிக்கிறான்"* (இ.வ.).

[Skt. lakḍi> த. லக்கடி]

லக்கம் *lakkam,* பெ.(n.) 1. குறியிலக்கு; target, butt, aim. 2. நூறாயிரம்; one lakh, 100,000. *"இலக்கத்தொன்பதின்மர்"* (கந்தபு.திருவவதார.127). 3. எண்; number, digit. *"அந்தமென்று சொல்வதே... கணைக்கிலக்கம்"* (கந்தபு.சிங்கமு.386). 4. எண் குறி; numerical figure. *"குறியிலக்கமெழுதே"* (தைலவ.பாயி.15).

[Skt. lakṣa> த. லக்கம்]

லக்காடி *lakkāḍi,* பெ.(n.) தீயவன், கொடும்பன்; (சோதா.) (இ.வ.); rowdy, rascal.

[Ar. laṅkgar> த. லக்காடி]

லக்காளி *lakkāḷi,* பெ.(n.) ஒருவசைச் சொல் (இ.வ.); a term of abuse.

லக்கி *lucky,* பெ.(n.) நற்பேறு, ஆகூழ், நல்வாய்ப்பு; good luck.

[E. lucky> த. லக்கி]

லக்கிடி *lakkiḍi,* பெ.(n.) விறகு; fire wood.

[Hind. lakḍī> த. லக்கிடி]

லக்கினம் *lakkiṉam,* பெ.(n.) 1. பிறக்கும்போது தோற்றமாயுள்ள (உதயம்) ஓரை (ராசி.); (Astrol.) sign rising at the moment of one's birth. *"ஒடை மாகளிறனானுதயராசி"* (கம்பரா. திருவவ.110). 2. தற்காலத்துத் தோன்றும் ஓரை (உதிக்குமிராசி.) (வின்.); sign rising at the time. 3. நன்முழுத்தம் (சுபமுகூர்த்தம்) (இரகு.முடிசூ.63); hour fixed for auspicious ceremonies.

த. வ. பிறப்போரை

[Skt lagna> த. லக்கினம்]

லக்குவா *lakkuvā,* பெ.(n.) பக்கவலிப்பு நோய் (பட்சவாதம்.); paralysis.

[U. laqwa> த. லக்குவா]

லக்குறடு *lakkuṟaḍu,* பெ.(n.) பழுக்கக் காய்ந்தவற்றைப் பற்றவுதவுங் குறடு; fire-tongs, pincers for handling heated articles.

த.வ. பற்றுக்குறடு

[U. lag> த. லக்+குறடு]



லக்கோடா *lakkōḍā,* பெ.(n.) லகோடா பார்க்க; see *lagōḍā.*

லக்திக்காரன் *lakti-k-kāraṉ,* பெ.(n.) லக்திதாரன் பார்க்க; see *laktitāraṉ.*

[U. lagtē> த. லக்தி]

லக்திதாரன் *laktitāraṉ,* பெ.(n.) அண்டை நிலக்காரன் (C.G.); owner of an adjoining land.

[U. lagtē+dār> த. லக்திதாரன்]

லகம் *lagam,* பெ.(n.) லகான் பார்க்க; see *lagāṉ.* "முதுகிற் கலணையிட்டு லகமிட்டு" (கொண்டல் விடு.).

[U. lagan> த. லகான்]

லகரம் *lagaram,* பெ.(n.) லகாரம் (இ.வ.) பார்க்க; see lagāram.

லகரி¹ *lagari,* பெ.(n.) பேரலை; great wave. "பொங்கு லகரிச் சாமர மிரட்ட" (பிரபோத.30,42).

[Skt. lahari> த. லகரி]

லகரி[2] *lagari,* பெ.(n.) 1. கசமத்தப் பிசின் (அபின்.); opium. 2. மயக்கம் உண்டுபண்ணும் பொருள்; intoxicant. 3. மது முதலியவற்றால் உண்டாகும் மயக்கம்; intoxication.

லகாம் *lagām,* பெ.(n.) லகான் பார்க்க; see lagān.

[Skt. lagām > த. லகாம்]

லகாய்[1]-த்தல் *lagāy-,* செ.கு.வி. (v.i.) செயல் வெற்றி பெறுதல் (காரியசித்தி); to prosper in an eminent degree, to be successful.

[Hind. lagānā (K. logāysu) > த. லகாய்-த்தல்]

லகாய்[2]-த்தல் *lagāy-,* செ.கு.வி. (v.i.) 1. தண்டித்தல்; to deal severely, to chastise. 2. நிரம்ப உண்ணுதல்; to eat to satiety.

[Hind. lagānā (K. lagāysu) > த. லகாய்-த்தல்]

லகாரம் *lagāram,* பெ.(n.) இலட்சத்தைக் குறிக்கும் ஒரு சொல்; a term denoting a lakh. *"அவருக்கு ஒரு லகாரம் இருக்கும்".* (இ.வ.).

லகாவ் *lagāv,* வி.எ. (v.imp.) அடி என்னேவல்; to beat. *"லகாவ், லகாவ் இந்த லண்டனைப் பாவிச் சண்டாளனை"* (பிரதாப.விலா.102).

[Hind. lagav > த. லகாவ்]

லகான் *lagān,* பெ.(n.) கடிவாள வார்; rein.

[Hind. lagām > த. லகான்]

லகிமா *lagimā,* பெ.(n.) ஒரு பொருளை கனமற்றதாக்கும் ஆற்றல்; the supernatural power of levitation, one of aṣṭamā-citti, q.v.

[Skt. laghiman-

லகு *laghu,* பெ.(n.) த[illegible] .elief.

[Skt. laghu > த. லகு]

லகுத்வம் *lagutvam,* பெ.(n.) எளிது (இலேசு); lightness, ease.

[Skt. laghu-tva > த. லகுத்வம்]

லகுபசணம் *lagupaśaṇam,* பெ.(n.) சிற்றுண்டி (இக்.வ.); light refreshments.

லகுலாட்சி *lagulāṭci,* பெ.(n.) வீணை வகை (பரத. ஒழிபி.16); a kind of lute.

லகுவுபிகுவாய் *laguvupiguvāy,* வி.அ. (adv.) ஏற்றதோர் முறையில்; by some means or other; in anyway possible.

லகோடா *lagōḍā,* பெ.(n.) 1. மெழுகாற் பூசப்பட்டது (இ.வ.); that which is besmeared with lac. 2. தாளுறை, காகிதவுறை (வின்.); envelope of paper, as sealed or wafered.

[Hind. lakhōṭā > த. லகோடா]

லகோடாப்பற்று *lagōḍā-p-parru,* பெ.(n.) மிகச்சிறியவளவு (இ.வ.); lit. small particles of cooked rice for gumming envelopes.

[Hind. lakhōṭā > த. லகோடா]

லங்கடா *laṅgaḍā,* பெ.(n.) நொண்டி (இ.வ.); lame person.

[Persn. laṅgdā > த. லங்கடா]

லங்கணம் *laṅgaṇam,* பெ.(n.) பட்டினி (இ.வ.); fasting.

[Skt. laṅghana > த. லங்கணம்]

லங்கர் *laṅgar,* பெ.(n.) நங்கூரம்; anchor.

[Persn. laṅgar > த. லங்கர்]

லங்கர்கானா *laṅgarkānā,* பெ.(n.) அன்னசாலை (வின்.); alms-house.

[Persn. laṅgar-khānā > த. லங்கர்கானா]

லங்கர்பாய்-தல் *laṅgarpāy-,* செ.கு.வி. (v.i.) நங்கூரம் பற்றுதல்; to be moored, to be at anchor.

[Persn. laṅgar > த. லங்கர்]

லங்கரடி-த்தல் *laṅgaraḍi-,* செ.கு.வி. (v.i.) 1. நங்கூரம் போடுதல்; to cast anchor. 2. அந்தரடித்தல்; to turn a somersault.

லங்கனம் *laṅganam,* பெ.(n.) 1. கடல் முதலியன வற்றைக் கடக்கை; crossing, as of the sea. 2. நெறி (நியமம்) தவறுகை; violation of

prescribed rules. "சமயலங்கனமுந் தெய்வ நிந்தையுஞ் செய்தனர்" (பெரியபு. திருநாவுக்.83). 3. லங்கணம் பார்க்க; see langanam.

[Skt.laṅghana> த. லங்கனம்]

லங்குனி *laṅguṇi,* பெ.(n.) குதிரையின் பற்களுக்கு உண்டாகும் அசைவு (அசுவசா.7.); looseness of tooth of a horse.

லங்கேச்சுரம் *laṅgēccuram,* பெ.(n.) ஒரு வகை மாத்திரை (பதார்த்த.1224); a kind of medicinal pill.

[Skt.laṅkēśvara> த. லங்கேச்சுரம்]

லங்கேச்சுரரசம் *laṅgēccurarašam,* பெ.(n.) மருந்து வகை (பைஷஜ.154); a kind of medicinal preparation.

[Skt.laṅkēśvara+rasa> த. லங்கேச்சுரரசம்]

லங்கோடா *laṅgōḍā,* பெ.(n.) லங்கோடு பார்க்க; see laṅgōḍu.

லங்கோடி *laṅgōḍi,* பெ.(n.) லங்கோடு (இ.வ.) பார்க்க; see laṅgōdu.

[Hind laṅgiṭi> த. லங்கோடி]

லங்கோடு *laṅgōḍu,* பெ.(n.) சல்லடம் (இ.வ.); strip of cloth fitted to the loin, as of a wrestler.

[Hind.laṅgōṭa> த. லங்கோடு]

லச்சாதத்தம் *laccātattam,* பெ.(n.) நன்னாளில் தரப்படும் நன்கொடை; customary presents made to relations or friends on auspicious occasions.

[Skt.lajja+> த. லச்சாதத்தம்]

லச்சி[1] *lacci,* பெ.(n.) குப்பைக்காரி (இ.வ.); scavenger woman.

[T.lacci> த. லச்சி]

லச்சி[2]-த்தல் *lacci-ttal,* செ.கு.வி. (v.i.) கூச்சமடைதல் (தக்கயாகப்.326,உரை.); to be shy.

[Skt.laj> த. லச்சி-த்தல்]

லச்சை[1] *laccai,* பெ.(n.) 1. கூச்சம் (பிங்.); bashfulness, coyness, shyness. 2. வெட்கம்; shame.

[Skt. lajjā> த. லச்சை[1]]

லச்சை[2] *laccai,* பெ.(n.) லச்சி[1] பார்க்க; see lacci[1].

லச்சை[3] *laccai,* பெ.(n.) தொந்தரவு; trouble, annoyance. "என்னை லச்சை பண்ணாதே".

லசுகர்[1] *lašukar,* பெ.(n.) 1. மாலுமி; lascar, sailor. 2. உதவியாள் முதலியோர்; labourer, tent-pitcher.

[E.lascar> த. லசுகர்]

லசுகர்[2] *lašukar,* பெ.(n.) படை; army.

[Persn.laṣkar> த. லசுகர்]

லசுதர் *lašutar,* பெ.(n.) ஒப்பனைத் தொங்கல்; prismatic glass pendants of a chandelier.

[E.lustre> த. லசுதர்]

லசுனி *lašuṇi,* பெ.(n.) மாணிக்க குணத்தொன்று; a property of rubies. "குழியும் லசுனியு முடையது" (S.I.I.ii,81).

லஞ்ச் *lunch,* பெ.(n.) நண்பகலுணவு; meal taken in the middle of the day.

த. வ. நள்ளுணா.

[E. lunch> த. லஞ்ச்]

லஞ்சம் *lañjam,* பெ.(n.) கையூட்டு (பரிதானம்); bribe.

[Skt. laṃcā> த. லஞ்சம்]

லஞ்சாக்கொடுக்கு *lañja-k-koḍukku,* பெ.(n.) பரத்தையின் (அவிசாரி) மகன்; whoreson.

லஞ்சாகோர்[1] *lañjakōr,* பெ.(n.) கையூட்டு (பரிதானம்) வாங்குவோன்; one who habitually receives bribes.

[Skt. laṃcā+U.khōr>த. லஞ்சாகோர்]

லஞ்சாகோர்[2] *lañjākōr,* பெ.(n.) தீயொழுக்கமுள்ள பெண்; loose woman.

லட்சகம் *latcakam,* பெ.(n.) இலக்கணப் பொருளில் வருஞ்சொல்; word in its secondary signification.

[Skt.laksaka > த. லட்சகம்]

லட்சணம் *latcanam,* பெ.(n.) இலக்கணம் பார்க்க; see ilakkanam. "சைதன்யம் சலட்சணமாயினும் விலட்சணம்" (கைவல். தத்துவ.1.உரை).

[Skt.laksana> த. லட்சணம்]

லட்சணை *latcanai,* பெ.(n.) இலக்கணை பார்க்க; see ilakkanai. secondary significative capacity of a word.

[Skt. laksana> த. லட்சணை]

லட்சதீபம் *latcatīpam,* பெ.(n.) கோயிலில் நூறாயிரம் (இலட்சம்) விளக்குகள் ஏற்றும் திருவிழா; festival of illuminating a temple, by burning 1,00,000 lights.

[Skt. laksana> த. லட்ச + தீபம்]

லட்சம் *latšam,* பெ.(n.) நூறாயிரம் (வின்.); lakh.

[Skt. laksa> த. லட்சம்]

லட்சாதிபதி *latšādibadi,* பெ.(n.) நூறாயிரம் உருவாய்க்கு (ரூபாய்) மேற் பெறுமானமுள்ள சொத்து (ஆஸ்தி) யுடையவன்.

[Skt. laksa+adhipati> த. லட்சாதிபதி]

லட்சியம் *laksyam,* பெ.(n.) குறிக்கோள்; aim.

[Skt. laksya>த. லட்சியம்]

லட்சுமி *latšumi,* பெ.(n.) இலக்குமி பார்க்க; see ilakkumi.

[Skt.laksmi> த. லட்சுமி]

லட்சுமிகடாட்சம் *latcumi-katātcam,* பெ.(n.) திருமகளின் கடைக்கண்; prosperity, as due to the grace of Laksmi.

லட்சுமி நரசிம்மன் *latcuminarasimman,* பெ.(n.) திருமகளைத் தழுவிய கோலத்துடன் உள்ள நரசிம்ம வடிவம்; Narasimha in his pose of embracing Laksmi.

லட்சுமி நாராயணன் *latšumi-nārāyanan,* பெ.(n.) திருமகளைத் தழுவிய நிலையில் காணப்படுந் திருமாலின் வடிவம்; Visnu in his pose of embracing Laksmī.

லட்சுமிபஞ்சமி *latcumi-pañcami,* பெ.(n.) திருமகளுக்குரிய (சித்திர)மாதத்து முழுநிலா நாளுக்கு அடுத்த ஐந்தாம் நாள்; the fifth titi of the bright fortnight in the lunar month of caittiram, as sacred to Laksmī.

லட்டு *lattu,* பெ.(n.) இன்னுருண்டை; ball-shaped sweet meat.

[Skt.laddu> த. லட்டு]

லடாய் *laḍāy,* பெ.(n.) 1. சண்டை; fight, fighting. 2. வாய்க்கலகம்; bickering, abusive quarrel.

[Hind.ladāī> த. லடாய்]

லடி *lati,* பெ.(n.) சுமார் 440 கசவளவுள்ள சரிகைக் கண்டு; skein of lace, nearly 440 yards.

[Hind.ladī> த. லடி]

லடு *latu,* பெ.(n.) 1. கப்பலில் கயிறு ஒழுங்காகச் செல்லுதற் பொருட்டு அமைத்த கருவி வகை; fairlead; thimble or cringle to guide a rope. 2. கடலின் ஆழமளப்பதற்கு விடப்படுங் கயிற்றில் கட்டியிருக்கும் ஈயக்குண்டு; plummet.

[Hind.lātta> த. லடு]

லண்டன்[1] *landan,* பெ.(n.) 1. கல்லுளிமங்கன் பார்க்க; see kallulimaṅkan. 2. சண்டி; stubborn man. 3. நெறி கெட்டவன்; man of loose conduct. "இந்த லண்டனை... நன்றாய் லகாவ்" (பிரதாப.விலா.102).

[K.lambani> த. லண்டன்]

லண்டன்[2] *lantan,* பெ.(n.) ஆண்குறி; membrum virile.

[Hind land> த. லண்டன்]

லண்டன்சீனி *lantan-šīni,* பெ.(n.) வெள்ளைச் சர்க்கரை; white sugar.

[E.london> த. லண்டன்+சீனி]

லண்டி *lanṭi,* பெ.(n.) 1. சண்டி; stubborn. intractable woman. 2. தீயநடத்தையுடைய பெண்; woman of loose conduct.

லண்டு *lanḍu,* பெ.(n.) சண்டித்தனம் (இ.வ.); stubbornness.

[Hind. launḍa > த. லண்டு]

லத்தா *lattā,* பெ.(n.) உதை; blow, kick. "நான் உனக்கு ஒரு லத்தா கொடுப்பேன்" (இ.வ.).

[Hind. lat> த. லத்தா]

லத்தாடு *latāḍu,* பெ.(n.) நோய்; vexation, agitation.

[K. latāḍu> த. லத்தாடு]

லத்தி[1] *latti,* பெ.(n.)குதிரை, யானை, கழுதை, ஒட்டகம் இவற்றின் சாணி; dung of horses, asses, elephants, camels.

த.வ. புட்டை, விட்டை

[T.K. laddi> த. லத்தி]

லத்தி[2] *latti,* பெ.(n.) லதி பார்க்க; see lati.

லத்தி போடு-தல் *latti-pōḍu-,* செ.கு.வி. (v.i.) மிகவும் அஞ்சுதல்; பயப்படுதல்; to be afraid.

லத்தை[1] *lattai,* பெ.(n.) குறித்த விண்மீன்களில் நிலவோடு தீயகோள் கூடுவதாலுண்டாம் தீப்பயன் (பஞ்.); evil effect due to the conjunction of a malefic planet and the moon in particular nakṣatras.

லத்தை[2] *lattai,* பெ.(n.) அருள்; mercy, compassion "லத்தையுற் றருள்வாய்" (கந்தரந்.6).

[Perh. labdhā> த. லத்தை]

லத்தீன் *latin,* பெ.(n.) இத்தாலிய தேசத்தில் முற்காலத்தில் வழங்கின மொழி;

[E. latin > த. லத்தீன்]

லதாக்கிருகம் *latā-k-kirugam,* பெ.(n.) கொடியால் அமைந்த வீடு; creeper - bower.

[Skt. latāgṛha> த. லதாக்கிருகம்]

லதாங்கி *latāṅgi,* பெ.(n.) 1. கொடி போன்ற உடலுள்ள பெண்; woman of slender, creeper like form. 2. ஒருவகைப்பண்; a specific melody type.

[Skt. latāṅgī> த. தொங்கி]

லதாவேட்டிதம் *latā-vēṭṭitam,* பெ.(n.) கொடி போலச் சுற்றித் தழுவும் (ஆலிங்கன) வகை; a mode of sexual embrace, lickened to a creeper clinging round a tree.

[Skt. latā+vēṣṭita> த. லதாவேட்டிதம்]

லதி *lati,* பெ.(n.) கழி; staff cane, cudgel.

[U lāṭhi> த. லதி]

லதை *latai,* பெ.(n.) இலதை[1],1, பார்க்க; see ilatai,

[Skt. latā> த. லதை]

லப்தம் *laptam,* பெ.(n.) அடையப் பெற்றது; gain, acquisition, that which is obtained.

[Skt. labdha> த. லப்தம்]

லப்தகாணி *lapta-kāṇi,* பெ.(n.) பஞ்சதந்திரத்துள் பேரிழத்தலைப்பற்றிக் கூறுவதான நான்காம் பகுதி; artta-nācam, the fourth section of pañcatantiram, treating of the loss of what was gained.

[Skt. labdha+kāṇi> த. லப்தகாணி]

லப்பக்கத்தி *lappa-k-katti,* பெ.(n.) மக்கு வைக்குங் கருவி; putty-knife.

லப்பம் *lappam,* பெ.(n.) பலகை முதலியவற்றில் இடைவெளியின்றி இசைத்தற்குரிய மக்கு; putty, a kind of cement used to fill up cracks in wood, etc.

த. வ. மக்கு

[Prob. lēpya > த. லப்பம்]

லப்பை *lappai,* பெ.(n.) தென்னிந்தியக் கடற்கரைப் பகுதிகளில் வாழும் தமிழ்ப்பேசும் முகம்மதியர்; a class of Tamil speaking Muhammadans found chiefly on the coasts of south India.

லபக்கெனல் *lapakkeṉal,* பெ.(n.) 1. விரைவுக் குறிப்பு; suddenness. 2. விழுங்குதற்குறிப்பு; gulping.

[U. lapak> த. லபக்கெனல்]

லபி-த்தல் *lapi,* 4 செ.கு.வி. (v.i.) பெறுதல், வெற்றியடைதல்; to be gained, obtained, to accure, to succeed, come to a successful issue. "காணரிய பெரியோர்க டெரிசனம் லபிப்பதே கண்ணிணைகள் செய்புண்ணியம்" (அறப்.சத.76). பெறுதல்; to obtain. "ஆதிப்பிரம்மா ஸ்ரீரங்க விமானத்தை லபித்து" (கோயிலொ. 2.).

[Skt.labh> த. லபி]

லபோலபோவெனல் *lapō-lapō-v-enal,* பெ. (n.) திறந்துள்ளவாயால் துக்கங் காரணமாகக் கையால் அடித்துக் கொள்ளுதற்குறிப்பு; expression of beating the open mouth with the palm of the hand on account of sorrow.

லபோலபோபண்டிகை *lapō-lapō-pantikai,* பெ.(n.) காமன் பண்டிகை (அகங்கையால் வாயிலடித்துக் கொள்ளும் திருவிழா); the spring festival in honour of kāma,as the occasion in which the beating of the open mouth with the palm is a marked feature.

லம்பாடி *lampādi,* பெ.(n.) 1. அலைந்து திரியும் ஒரு சாதி; a wandering caste. 2. ஊர் ஊராய்த் திரிவோன்; vagrant. 3. மாட்டுச்சாதி வகை; a breed of cattle.

[T.iambādi> த. லம்பாடி]

[K lambāni>த. லம்பாடி]

லம்பு[1] *lampu,* பெ.(n.) தொந்தரவு; trouble.

லம்பு[2]-தல் *lampu,* பெ.(n.) அசைதல்; to be unsteady to shake.

லயம் *layam,* பெ.(n.) இலயம் பார்க்க; see ilayam. "ஒன்றோடொன்றாகவே பற்றிலயமாம் போதினில்" (தாயு.சித்தர்.3).

[Skt.laya> த. லயம்]

லயாவத்தை *layāvattai,* பெ.(n.) உலகத்தை ஒடுக்கு நிலை; stage of involuion of the universe; stage of absorption of the universe by the supreme being.

[Skt.laya+avasthā> த. லயாவத்தை]

லயி-த்தல் *layi,* 4 செ.கு.வி. (v.i.) ஒன்றுதல்; chose intimacy.

[Skt.lay > த. இலயி]

லலனாமணி *lalanā-mani,* பெ.(n.) லலனை பார்க்க; see *lalanai.*

[Skt.lalanā> த. லலனாமணி]

லலனை *lalanai,* பெ.(n.) பெண்; woman.

[Skt.lalanā> த. லலனை]

லலாடம் *lalāṭam,* பெ.(n.) 1. நெற்றி; forehead. 2. மணி முடி (கிரீட)வுறுப்பு வகை; a part of the crown.

[Skt.lalāṭa> த. லலாடம்]

லலாடலிபி *lalāṭa-lipi,* பெ.(n.) தலையெழுத்து; hand writing of fate.

[Skt.lalāṭa+lipi> த. லலாடலிபி]

லலிதாசகசுரநாமம் *lalitāšakašuranāmam,* பெ.(n.) உமா தேவியின் ஆயிரந்திருநாமக் கோவை. (தக்கயாகப்.76,விசேடக்.); the thousand holy names of the Goddess Pārvatī.

[Skt.lalitā+sahasranāma>த.லலிதாசகசுரநாமம்]

லலிதை *lalitai,* பெ.(n.) 1. உமை; Pārvatī. 2. பண் வகை; a specific melody-type.

[Skt.lalitā> த. லலிதை]

லவ்வாலவ்வா *larvā-lavvā,* பெ.(n.) லவாலவா (இ.வ.) பார்க்க; see *lavālavā.*

லவக்குலவக்கெனல் *lavakku-lavakkenal,* பெ.(n.) 1. ஓட்டக்குறிப்பு; a galloping sound. 2. விரைந்து விழுங்குதற்குறிப்பு; gobbling in eating.

லவங்கம் *lavangam,* பெ.(n.) இலவங்கம் பார்க்க; see ilavangam.

[Skt.lavanga>.த. லவங்கம்]

லவடா *lavaḍā*, பெ.(n.) ஆண்குறி; membrum virile.

[Hind laurā> த. லவடா]

லவண்டி *lavaṇḍi*, பெ.(n.) லண்டி பார்க்க; see laṇḍi.

[Hind launḍi> த. லவண்டி]

லவணசமுத்திரம் *lavaṇašamuttiram*, பெ.(n.) உப்புக்கடல் பார்க்க; see uppukkaḍal. "அமிர்து கடைந்து லவண சமுத்திரத்தென உணர்க" (தக்கயாகப்.248.உரை).

[Skt.lavaṇa+> த. லவண + சமுத்திரம்]

லவம் *lavam*, பெ.(n.) 1. பசுவின் வால் மயிர்; hair of cow's tail. "குசலவங்களாற் றுடைத்துக் குறிக்கொண்டார்கள்" (உத்தரரா.இலவ.75). 2. காலவகை; a variety of kālam. "கணமோரெட்டும் லவ மெனப்படுமே" (பரத.தாள.27). 3. மிகச் சிறுபகுதி; little, small particle.

[Skt.lava> த. லவம்]

லவணம் *lavaṇam*, பெ.(n.) உப்பு; salt.

[Skt lavaṇa> த. லவணம்]

லவலேசம் *lava-lēcam*, பெ.(n.) சிற்றளவு; smallest degree "நிலைகாணோம் லவலேசம்" (இராமநா.ஆரணிய.3).

[Skt lava+lēša> த. லவலேசம்]

லவாடி *lavāṭi*, பெ.(n.) வேசி; prostitute.

லவாலவா *lavā-lavā*, பெ.(n.) லவாலவா என்று பாடிக் கொண்டு பந்தடிக்கும் சிறுவர் விளையாட்டு; children's game of ball, accompanied by singing lavā-lavā.

லவுக்கார் *lavukkār*, பெ.(n.) சன்னமாய்ப் பூசாத சுண்ணாம்புப் பூச்சு; rough plastering with chunam

[U lēva> lēpa>த. லவுக்கார்]

லவுண்டி *lavuṇṭi*, பெ.(n.) லண்டி பார்க்க; see laṇḍi.

லளிதம் *laḷitam*, பெ.(n.) 1. திருவிளையாட்டு; wantonness, dalliance, sport. "சிட்டர் பரிபால லளிதக்கார" (திருப்பு.55). 2. கருணை; grace, charm. 3. இனிமையான; sweetness. 4. எளிமை; case, facility. 5. சிவாகமத்துள் ஒன்று (சைவச.பொது.335,உரை.); one of 28 civākamam.

[Skt.lalita> த. லளிதம்]

லளிதை *laḷitai*, பெ.(n.) லலிதை,1. (நாமதீப.24) பார்க்க; see lalitai.

[Skt.lalitā> த. லளிதை]

லாக்அப் *lock-up*, பெ.(n.) சிறைவைப்பு; put into a prison.

[E. lock-up> த. லாக்அப்]

லாக்குப் போடுதல் *lākku-p-pōḍu*, செ.கு.வி. (v.i.) மிகவும் துன்பப்படுதல் (செ.அ.); to be in great straits, to be hard put to it.

லாகவம் *lākavam*, பெ.(n.) லகுத்துவம் பார்க்க; see laguttuvam.

[Skt lāghava> த. லாகவம்]

லாகிரி *lākiri*, பெ.(n.) லகரி[2] பார்க்க; see lakari.

லாகினி *lākiṇi*, பெ.(n.) தந்திர சாத்திரங்களிற் கூறப்பட்ட ஒரு சார் பெண் கடவுள் (செ.அ.); a class of goddesses mentioned in Tāntric lore.

[Skt. lākinī> த. லாகினி]

லாகு *lāku*, பெ.(n.) லகுத்வம் (வின்.) பார்க்க; see lakutvam.

லாகுலுக்சான் *lāku-lukcāṉ*, பெ.(n.) லாபநட்டம் (செ.அ.); profit and loss.

[Hind. lāha> த. லாகுலுக்சான்]

லாகை[1] *lākai*, பெ.(n.) பாங்கு; ஒயில்; manner, style.

[I. Lāgu> த. லாகை]

லாகை[2] *lākai*, பெ.(n.) அந்தரடிக்கை (உ.வ.) (செ.அ.); somersault.

[Skt. lāga> த. லாகை]

லாசார்படு-தல் *lacār-paḍu,* செ.கு.வி. (v.i.) உதவியற்று வருந்துதல்; to be helpless, forlorn.

[Hind. lāchar> த. லாசார்படு-தல்]

லாசுபறுவான் *lācuparuvān,* பெ.(n.) கப்பற்பாய்தாங்குங்கட்டை (செ.அ.); yard arm.

லாட்டரி *lottery,* பெ.(n.) ஏலச்சீட்டு; lottery.

[E. lottery> த. லாட்டரி]

லாடக்காரன் *lāṭa-k-kāraṉ,* பெ.(n.) லாடங்கட்டுபவன் (செ.அ.); farrier.

லாடங்கட்டு-தல் *lāṭan-kaṭṭu-,* 5 செ.குன்றாவி (v.t.) குதிரை முதலியவற்றின் கால்கட்கு இரும்புத் தகடு தைத்தல் (செ.அ.); to shoe as a horse.

லாடசங்கிலி *lāṭa-šaṅkili,* பெ.(n.) லாடர் சங்கிலி (இ.வ.) பார்க்க (செ.அ.); see lāḍaršaṅkili.

லாடம்¹ *lāṭam,* பெ.(n.) ஒரு தேசம்; a country.

[Skt. Lāṭa> த. லாடம்]

லாடம்² *lāṭam,* பெ.(n.) a country. இலாடம்² பார்க்க (செ.அ.); see lāḍam.

[Skt. lāḍha> த. லாடம்]

லாடம்³ *lāṭam,* பெ.(n.) forehead. இலாடம்³ பார்க்க (செ.அ.); see ilāḍam.

[Skt. Lalāṭa> த. லாடம்]

லாடம்⁴ *lāṭam,* பெ.(n.) குதிரை முதலியவற்றின் குளம்புகளுக்கு அடிக்கும் இரும்புத்தகடு; horse shoe.

[U. lāda> த. லாடம்]

லாடர்சங்கிலி *lāḍar-saṅkili,* பெ.(n.) இலாடசங்கிலி பார்க்க (செ.அ.); see ilāḍasaṅkili.

[Skt. lāta> த. லாடர்சங்கிலி]

லாடன் *lāṭaṉ,* பெ.(n.) இலாடன் பார்க்க (செ.அ.); see *ilāḍaṉ.*

[Skt. lāta> த. லாடன்]

லாடு *lāṭu,* பெ.(n.) a ball shaped sweet meat. இலட்டு பார்க்க; see ilaṭṭu.

[Skt. Lāḍḍu> த. லாடு]

லாடுலகாடு *lāṭulakāṭu,* பெ.(n.) தொந்தரவு; trouble scrape, difficulty. "லாடுலகாடு யார் படுகிறது?" (செ.அ.).

லாண்டரி *laundry,* பெ.(n.) வெளுப்பகம்; laundry.

[E. lāundry> த. லாண்டரி]

லாத்தித்தள்ளு-தல் *lātti-t-taḷḷu,* 5 செ.கு.வி. (v.i.) கிறுகிறுத்து விழச்செய்தல் (செ.அ.); to make dizzy or giddy.

லாத்து¹ *lāttu,* பெ.(n.) லத்தா பார்க்க (செ.அ.); see lattā.

லாத்து²**-தல்** *lāttu-,* செ.கு.வி. (v.i.) 1. புடைத்தல்; (செ.அ.); to belabour, beat heavily. 2. பிடித்தலைத்தல்; to seize and jerk to and fro. 3. நடை தடுமாறுதல் (செ.அ.); to tumble, to be shaky in gait.

லாத்து³**-தல்** *lāttu-,* செ.கு.வி. (v.i.) to walk about, to ride about. உலாத்து¹ பார்க்க; see ulāttu.

லாந்தர் *lāntar,* பெ.(n.) ஒரு வகைக் கண்ணாடி விளக்கு (செ.அ.); lantern.

த. வ. கைவிளக்கு

[Fr. Lanterne> த. லாந்தர்]



லாந்தல் *lāntal,* பெ.(n.) லாந்தர் பார்க்க (செ.அ.); see lāntar.

லாந்து[1] *lāntu,* பெ.(n.) 1. பரவுகை; spreading out. 2. பாய்ச்சல்; peunce. "ஒரே லாந்தாக லாந்திப்பிடி" (செ.அ.).

லாந்து[2] *lāntu,* பெ.(n.) கல்லைக் குத்து நிலையில் அடுக்குதல் (செ.அ.); terracing, setting bricks on edge

[Hind. Ladāo> த. லாந்து]

லாந்து[3]**–தல்** *lāndu,* 5 செ.கு.வி. (v.i.) மேற்றளம் போடுதல் (செ.அ.); to put up a terrace.

லாபநட்டம் *lāpa-nattam,* பெ.(n.) வரவும் இழப்பும் (செ.அ.); profit and loss.

த. வ. ஆகுபோகு

[Skt. Lābha+nasta> த. லாபநட்டம்]

லாபம் *lapam,* பெ.(n.) இலாபம் பார்க்க; see ilāpam.

[Skt.lābha> த. லாபம்]

லாபலோபம் *lāpa-lōpam,* பெ.(n.) லாபநட்டம் பார்க்க; see lāpanattam.

[Skt.lābha+lōpa> த. லாபலோபம்]

லாயக்கு *lāyakku,* பெ.(n.) 1. தகுதி; fitness, suitbleness. 2. செருக்கு; haughtiness.

[Arab Lāiaq> த. லாயக்கு]

லாயம் *lāyam,* பெ.(n.) குதிரைகட்டுமிடம் (செ.அ.); stable for horse.

[I lāyamu> K. lāya>த. லாயம்]

லாயர் *lāwyer,* பெ.(n.) வழக்குரைஞர்; lawyer

[E. lāwyer>த. லாயர்]

லாரி *lorry,* பெ.(n.) சரக்குந்து; lorry.

[E. lorry>த. லாரி]

லாலனம் *lālanam,* பெ.(n.) லாலனை பார்க்க; see lālanai.

[Skt lālana>த. லாலனம்]

லாலனை *lālanai,* பெ.(n) 1. கொஞ்சுகை; fondling, curessing, coaxing. 2. தாங்குகை (செ.அ.); support

[Skt. lālanā>த. லாலனை]

லாலா *lālā,* பெ.(n.) 1. வட நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற் குடியேறிய இந்து வணிகன்; a caste of Hindu merchants who migrated into the Tamil country from Northern India. 2. ஒரு சிறப்புப் பெயர்; a term of respect. 3. ஒரு செல்லப்பெயர்; a term of endearment. "நந்தலாலா" (செ.அ.).

[Hind. lālā>த. லாலா]

லாலாடிகம் *lālātikam,* பெ.(n.) தழுவுகை, ஆலிங்கன வகை (செ.அ.); a mode of sexual embrace.

[Skt. Lālātika>த. லாலாடிகம்]

லாலி[1] *lāli,* பெ.(n.) கந்தை (செ.அ.); rag.

[Prob. lāta>த. லாலி]

லாலி[2] *lāli,* பெ.(n.) திருமணம் முதலியவற்றிற் பாடப்படுவதும் அடிதோறும் லாலி என்று முடிவதுமான மங்களப் பாட்டு வகை; song consisting of eulogies, compliments, congratulations, etc. sung at weddings and other auspicious occasions, every line; endding in lāli. 2. இச்சகவார்த்தை; flattery, adulation. 3. தாலாட்டு (செ.அ.); lullaby.

[T.K. lāli>த. லாலி]

லாவண்யம் *lāvanyam,* பெ.(n.) எழில், ஒளிரும் அழகு (செ.அ.); beauty; grace; loveliness; charm.

[Skt. Lāvanya>த. லாவண்யம்]

லாவண்யார்ச்சிதம் *lāvanyā-rccitam,* பெ.(n.) இலாவண்ணியார்ச்சிதம் பார்க்க; see ilāvanniyārccitam.

[Skt. lāvanya+ārjita>த. லாவண் யார்ச்சிதம்]

லாவணம் *lāvanam,* பெ.(n.) இலாவணம் பார்க்க; see ilāvanam.

[I lāvanamu,K.Lavana>த. லாவணம்]

லாவணி *lāva-ṇi,* பெ.(n.) மராட்டிய மொழியிலுள்ள இசைப்பாட்டு வகை (செ.அ.); a Maharatta melody.

[*Mhr. lāvaṇi* > த. *லாவணி*]

லாவாதேவி *lāvā-tēvi,* பெ.(n.) லேவாதேவி பார்க்க; see lēvādevi.

த. வ. கொள்கொடை, கொடுக்கல் வாங்கல்

[*U. Lāwādēvi* > த. *லாவாதேவி*]

லாவு-தல் *lāvu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. பரவுதல்; to spread around. 2. இறாஞ்சுதல் (செ.அ.); to pounce or dart upon.

லாவுபண்ணு-தல் *lāvu-paṇṇu-,* 5 செ.கு.வி. (v.i.) 1. வழக்காடுதல்; to be constantly questioning and disputing. 2. செருக்குறுதல் (செ.அ.); to be have in a haughty manner.

[*E lāw* > த. *லாவு+பண்ணுதல்*]

லாளிதம் *lāḷidam,* பெ.(n.) அழகு; beauty, grace, charm. "மதகும்பலாளிதக் கரியென" (திருப்பு.194).

[*Skt. Lālitya* > த. *லாளிதம்*]

லிகிதம் *likidam,* பெ.(n.) இலிகிதம் பார்க்க; see iligitam.

[*Skt. likhita* > த. *லிகிதம்*]

லிங்கம் *liṅgam,* பெ.(n.) இலிங்கம் பார்க்க; see iliṅgam. "விழுந்தது லிங்கம்" (திருமந்.455).

[*Skt. linga* > த. *லிங்கம்*]

லிங்காபட்டியம் *liṅgā-paṭṭiyam,* பெ.(n.) அமரகோசம் என்ற வடமொழி நிகண்டுக்கு லிங்காபட்டர் எழுதிய உரை (செ.அ.); a commentary on Amarakōśa by Liṅgābhaṭṭa.

[*Skt. Liṅgā-bhaṭṭiya* > த. *லிங்காபட்டியம்*]

லிங்கபுராணம் *liṅga-purāṇam,* பெ.(n.) A purāṇa. இலிங்கபுராணம் (தக்கயாகப். 340.உரை) பார்க்க; see iliṅga-purāṇam.

லிங்காயத்து *liṅgāyattu,* பெ.(n.) வீரசைவர்; one who wears a miniature liṅgam suspended from the neck. இலிங்கங்கட்டி பார்க்க; see iliṅgaṅ-kaṭṭi.

[*Skt. liṅgāyat* > த. *லிங்காயத்து*]

லிடாலிடநியாயம் *liṭāliṭa-niyāyam,* பெ.(n.) நக்கினதையே திரும்ப நக்குவதுபோல் ஒரு முறையிலேயே பலகாலும் பார்க்கும் நியாய வகை; a Nyāya in illustration of repeatedly addressing oneself to one aspect of a matter, as licking what is already licked. "லிடாலிட நியாயமாக அவ்விட மாத்திரையே நோக்குவார்க்கு" (சிவசமவா.பக்.42).

[*Skt. lāḍhālīḍha* > த. *லிடாலிடநியாயம்*]

லிபாபா *lipāpā,* பெ.(n.) கடிதவுறை (செ.அ.); envelope, cover, wrapper.

[*Arab. Lifāfa* > த. *லிபாபா*]

லிபி *lipi,* பெ.(n.) 1. எழுத்து; letter of alphabet. 2. விதி (செ.அ.); destiny, fate.

[*Skt. lipi* > த. *லிபி*]

லீலாவதி *līlāvati,* பெ.(n.) 1. அழகிய பெண்; charming or beautiful woman. 2. பாசுகராசாரியரால் இயற்றப்பெற்ற ஒரு கணித நூல் (செ.அ.); a mathematical treatise by Bhāskarācārya.

[*Skt. līlāvati* > த. *லீலாவதி*]

லீலாவிபூதி *līlā-vipūti,* பெ.(n.) பிராகிருதவுலகங்கள்; the material worlds, as exhibiting the divine sportiveness in their creation, preservation and destruction.

[*Skt. līlā-vibhūti* > த. *லீலாவிபூதி*]

லீலாவினோதம் *līlā-viṉōtam,* பெ.(n.) உல்லாச விளையாட்டு (செ.அ.); diversion, pastime, sport.

[*Skt. līlā+vinōta* > த. *லீலாவினோதம்*]

லீலை *līlai,* பெ.(n.) 1. விளையாட்டு; play. 2. கடவுள் முதலியவற்றின் விளையாடல்; sport, as of a deity. 3. சுரதல் விளையாட்டு (செ.அ.); a morous sport, sexual intercourse.

[Skt. Līlā> த. லீலை]

லீவு *leave,* பெ.(n.) விடுப்பு; leave.

[Eng. leave> த. லீவு]

லுக்சான் *lukcāṉ,* பெ.(n.) லுச்சாண் பார்க்க; see luccāṉ.

லுங்கி *luṅki,* பெ.(n.) முகம்மதியரணியும் ஆடை வகை; a coloured cloth worn by Muhammadans.

[Persn luṉgi> த. லுங்கி]

லுச்சா *luccā,* பெ.(n.) தூர்த்தன்; vagabond, rake, profligate.

[U lucchā> த. லுச்சா]

லுச்சான் *luccāṉ,* பெ.(n.) இழப்பு (செ.அ.); loss.

[Arab nuqsān> த. லுச்சான்]

லுத்தன் *luttaṉ,* பெ.(n.) ஈயாமாரி; (உலோபி); miser. "லுத்தனுக்கு இரட்டிச் செலவு".

[Skt. lubdha> த. லுத்தன்]

லுப்தம்[1] *luptam,* பெ.(n) 1. எழுத்துக் கேடு; elision 2. அழிவு; injury, destruction, 3. இழப்பு (செ.அ.); loss, deprivation.

[Skt lupta> த. லுப்தம்]

லுப்தம்[2] *luptam,* பெ.(n.) இவறன்மை, ஈயாமை, (உலோபம்); covetousness, miserliness.

[Skt lubdha> த. லுப்தம்]

லுப்தன் *luptaṉ,* பெ.(n.) இவறன் (உலோபி) (செ.அ.); miser

[Skt lubdha> த. லுப்தன்]

லுப்தோபமை *luptōpamai,* பெ.(n.) தொகையுவமம் பார்க்க; see tokaiyuvamam.

[Skt luptōpamā> த. லுப்தோபமை]

லூட்டி *lūṭṭi,* பெ.(n.) 1. கொள்ளை; plunder, pillage, loot. 2. தொந்தரவு (செ.அ.); trouble annoyance.

[Hind. lūṭ> த. லூட்டி]

[K. Lūṭi]

லூடி *luṭi,* பெ.(n.) 1. லூட்டி, 1 பார்க்க; see lūṭṭi. 2. லூட்டி, 2 பார்க்க; see lūṭṭi

லூதாதந்து நியாயம் *lūtātantu-niyāyam,* பெ.(n.) சிலந்தி தன் வாயாலிழைத்த நூலைத் தானே யுட்கொள்வது போல் தான் செய்ததைத்தானேயழிப்பதாகக் கூறும் நெறி (செ.அ.); a nyāya, in illustration of the principle of an author destroying his own creation even as a spider eats up the thread which it throws out.

[Skt. lūtā-tantu+niyāya> த. லூதாந்து நியாயம்]

லெக்கு *lekku,* பெ.(n.) இலக்கு; aim.

லெகு *leku,* பெ.(n.) இலகு பார்க்க; see ilaku.

லெச்சி *lecci,* பெ.(n.) லச்சி பார்க்க; see lacci.

லெச்சை *leccai,* பெ.(n.) இலச்சை பார்க்க; see ilaccai.

லெட்டர் *letter,* பெ.(n.) மடல்; letter.

[E. letter> த. லெட்டர்]

லெப்பை *leppai,* பெ.(n.) லப்பை (வின்) பார்க்க; see lappai.

லெவலேசம் *levalēcam,* பெ.(n.) லவலேசம் பார்க்க; see lavalēcam.

லெவை *levai,* பெ.(n.) பள்ளிவாசல் வழிபாடு செய்வோன் (செ.அ.); priest in a mosque.

[Heb Levi> த. லெவை]

லேககன் *lēkakaṉ,* பெ.(n.) எழுத்து வேலை செய்பவன் (செ.அ.); writer.

[Skt lēkhaka> த. லேககன்]

லேகணி *lēkaṇi,* பெ.(n.) லேகனி பார்க்க; see lēkaṉi.

லேகம்[1] *lēgam,* பெ.(n.) லேகியம் பார்க்க; see lēkiyam.

[Skt. lēha > த. லேகம்]

லேகம்[2] *lēgam,* பெ.(n.) எழுத்து (செ.அ.); writing, letter.

[Skt. lēkha > த. லேகம்]

லேகனி *lēgaṇi,* பெ.(n.) எழுதுகோல் (செ.அ.); pen, style.

[Skt. lēkhanī > த. லேகனி]

லேகா *lēka,* பெ.(n.) லேகாவுண்டை பார்க்க; see lēgavuṇḍai.

[Prob. lēhya > த. லேகா]

லேகாவுண்டை *lēga-v-uṇḍai,* பெ.(n.) கஞ்சாவுண்டை (செ.அ.); ball of ganja.

லேகியம் *lēkiyam,* பெ.(n.) 1. இளகியம் (நக்கியுண்ணு வதற்கு உரியது); food that is eaten by licking. 2. நக்கியுண்ணும் மருந்து வகை (செ.அ.); electuary, in medicine. 3. லேகாவுண்டை பார்க்க; see lēkāvuṇḍai.

[Skt. Lēhya > த. லேகியம்]

லேகை *lēkai,* பெ.(n.) இரேகை பார்க்க; see irēkai. "சங்கலேகையும் சக்கிரலேகையும்" (சூளா.குமார.45).

லேசம் *lēcam,* பெ.(n.) 1. அற்பம்; small bit particle. 2. இரண்டு கலை கொண்ட காலவளவு; a measure of time equal to two kalai. 3. இலேசவணி (செ.அ.); a figure of speech.

[Skt. lēśa > த. லேசம்]

லேசு[1] *lēcu,* பெ.(n.) இலேசு பார்க்க; see ilēšu.

லேசு[2] *lēcu,* பெ.(n.) 1. ஒரு வகை ஒப்பனைப் பின்னற்றுணி; lace. 2. சரிகை (செ.அ.); silver or gold lace.

[E. lace > த. லேசு]

லேஞ்சி *lēñci,* பெ.(n.) கைக்குட்டை kerchief, scarf.

[Port. Lengo > த. லேஞ்சி]

லேஞ்சு *lēñcu,* பெ.(n.) லேஞ்சி பார்க்க; see lēñci.

லேட் *late,* பெ.(n.) காலத்தாழ்வு; late.

[E. late > த. லேட்]

லேணி *lēṇi,* பெ.(n.) கடன் வாங்குகை (செ.அ.); borrowing.

[Hind. lēnā > த. லேணி]

லேணிதாரன் *lēṇitāraṉ,* பெ.(n.) கடன் கொடுத்தவன் (செ.அ.); creditor.

[Hind. lēnādār > த. லேணிதாரன்]

லேபனம் *lēpaṉam,* பெ.(n.) 1. பூச்சு; anointing, smearing. "ம்ருகமத படீர லேபன" (திருப்பு.43). 2. பூசும் பொருள்; plaster, ointment, unguent, salve. 3. தாதுவன்மை (செ.அ.); virility, erection of penis.

[Skt. lēpana > த. லேபனம்]

லேலம் *lēlam,* பெ.(n.) ஏலம் (செ.அ.); auction.

[Port. leilao > த. லேலம்]

லேவாதேவி *lēvātēvi,* பெ.(n.) கொடுக்கல் வாங்கல் (செ.அ.); money - dealings.

[Hind. lēwādēī > த. லேவாதேவி]

லேவாலேவி *lēvālēvi,* பெ.(n.) லேவாதேவி பார்க்க; see lēvātēvi.

லேனாதேனா *lēṉātēṉā,* பெ.(n.) லேவாதேவி பார்க்க; see lēvātēvi.

[Hind. lēnādēnā > த. லேனாதேனா]

லொங்காரி *loṅkāri,* பெ.(n.) அடங்காப்பிடாரி (செ.அ.); termagant.

[Arab. laṅgar > த. லொங்காரி]

லொங்கு-தல் *loṅku-,* 5 செ.கு.வி. (v.i.) பணிந்து நடத்தல் (செ.அ.); to be humble, submissive, to be servile.

[I. loṅgu > த. லொங்கு]

லொங்குலொங்கெனல் *loṅku-loṅkeṉal,* பெ.(n.) உடலின் தளர்ச்சிக்குறிப்பு (செ.அ.); signifying physical exhaustion.

லொசுக்கு *losuku,* பெ.(n.) ஒன்றுமின்மை (செ.அ.); almost nothing, nothingness.

லொட்டி[1] *loṭṭi,* பெ.(n.) 1. கள்; tōddy. "அவன் பணமெல்லாம் லொட்டியிற் போடுகிறான்", 2. கள் இறக்கும் குடுவை (செ.அ.); small earthen pot for drawing toddy.

[I loṭṭi > த. லொட்டி]

லொட்டி[2] *loṭṭi,* பெ.(n.) ரொட்டி பார்க்க; see roṭṭi.

லொட்டி மூஞ்சி *loṭṭi-mūñci,* பெ.(n.) கட்குடியன் (செ.அ.); drunkard.

[I loṭṭi > த. லொட்டிமூஞ்சி]

லொட்டுலொடுக்கு *loṭṭuloḍukku,* பெ.(n.) லொட்டு லொசுகு பார்க்க; see loṭṭu losuku

லொட்டுலொசுகு *loṭṭulosuku,* பெ.(n.) சில்லறைப் பொருள்கள் (செ.அ.); odds and ends, stray articles

லொட்டை *loṭṭai,* பெ.(n.) தாழ்ந்தது; anything inferior 2. லொட்டையாட்டம் பார்க்க; see loṭṭai-y-āṭṭam. 3. ஒரு வகைப் பணிகாரம் (செ.அ.); a kind of cake

[Skt lōṣṭa > த. லொட்டை]

லொட்டைதாளி-த்தல் *loṭṭai-tāḷi-,* 4 செ.கு.வி. (v.i.) ஏழையாதல் (செ.அ.); to become a pauper, to be impoverished.

[Skt lōṣṭa > த. லொட்டைதாளி]

லொட்டையாட்டம் *loṭṭai-y-āṭṭam,* பெ.(n.) கோலி விளையாட்டு வகை (செ.அ.); a game of marbles.

[Skt. lōṣṭa > த. லொட்டையாட்டம்]

லொடலொட்டை *loṭaloṭṭai,* பெ.(n.) 1. கட்டுக்குலைந்தது; anything rickety. 2. உள்ளீடின்றிக் கூடானது; anything hollow or empty. 3. பயனற்றது (செ.அ.); anything useless

லொடலொட-த்தல் *loḍa-loḍa-,* 4 செ.கு.வி. (v.i.) 1. கட்டுக்குலைதல்; to become rickety; to be dismembered, to become loose 2. உள்ளீடின்றிக் கூடாயிருத்தல்; to be hollow or empty. 3. பயனற்றுப் போதல் (செ.அ.); to become useless.

லொடலொடவெனல் *loḍa-loḍa-v-enal,* பெ.(n.) 1. ஓர் ஒலிக்குறிப்பு; ratting or rumbling. 2. கட்டுக்குலைவின் குறிப்பு (செ.அ.); ricketiness.

லொடுக்கு *loḍukku,* பெ.(n.) உள்ளே வெற்றிடமாகை; emptiness, hollowness, want of solidity. "லொடுக்கு விழுந்து போயிற்று" (செ.அ.).

லொடுக்கு லொடுக்கெனல் *loḍukku-loḍu-kkenal,* பெ.(n.) 1. குதிரை வண்டி முதலியன ஓடும்போது ஆட்டங்கொடுத்தற் குறிப்பு (செ.அ.); signifying shakiness, as of a running carriage. 2. லொடலொடவெனல் பார்க்க; see loḍaloḍavenal. 3.லொங்கு லொங்கெனல் பார்க்க; see lōṅguloṅgenal.

லொத்து-தல் *lottu-,* 4 செ.கு.வி. (v.i.) நையப்புடைத்தல் (செ.அ.); to beat or strike hard, to belabour.

[U. lāt > த. லொத்து]

லொத்துகத்தோல் *lottuka-t-tōl,* பெ.(n.) வெள்ளிலத்தியின் பட்டை (செ.அ.); bark of lodhra tree.

லொத்து லொத்தெனல் *lottu-lottenal,* பெ.(n.) 1. நையப்புடைத்தற்குறிப்பு; beating hard, giving repeated blows. 2. உள்ளீடற்ற பொருளைத் தட்டுங்கால் எழும் ஒலிக்குறிப்பு (செ.அ.); hollow sound.

லொள்ளெனல் *loḷḷenal,* பெ.(n.) நாய் குரைத்தற்குறிப்பு (செ.அ.); expr. of dog's bark.

லோக்கியம் *lōkkiyam,* பெ.(n.) லௌகீகம், 1, பார்க்க; see laukikam. "சகல லோக்கியமே தானாளுறு மசுர பார்த்திபனோடே" (திருப்பு.1080).

[*Skt. lōkya > த. லோக்கியம்*]

லோககண்டகன் *lōga-kaṇṭagaṉ,* பெ.(n.) மிகக்கொடியோன் (உலகத்துக்கு முட் போன்றவன்) (செ.அ.); very troublesome or wicked man, as a thorn afflicting the world.

[*Skt. lōka+kaṇṭaka > த. லோககண்டகன்*]

லோககதி *lōga-kati,* பெ.(n.) உலக நடைமுறை (செ.அ.); way of the world.

[*Skt. lōka+kati > த. லோககதி*]

லோககர்த்தா *lōga-kartta,* பெ.(n.) உலகத்துக்கு முதல்வன் (செ.அ.); Lord of the world.

[*Skt. lōka > த. லோககர்த்தா*]

லோகசஞ்சாரம் *lōka-cañcāram,* பெ.(n.) பல நாடுகளில் பயணம் செய்கை; travelling in different countries of the world. 2. வெளி முயற்சி (செ.அ.); business outside one's house, outwork.

லோகசஞ்சாரி *lōga-cañcāri,* பெ.(n.) பல நாடுகளில் பயணம் செய்வோன் (செ.அ.); traveller in many lands.

[*Skt. lōka > த. லோகசஞ்சாரி*]

லோகசாட்சி *lōga-cākṭṣi,* பெ.(n.) கடவுள் (செ.அ.); god, as the universal witness.

[*Skt. lōka > த. லோகசாட்சி*]

லோகசிந்தூரம் *lōka-cintūram,* பெ.(n.) அயச்சிந்தூரம் (செ.அ.); hydrated peroxide of iron-Ferrugo.

[*Skt. lōha > த. லோகசிந்தூரம்*]

லோகத்திரயம் *lōka-t-tirayam,* பெ.(n.) மூவுலகு (செ.அ.); the three worlds.

[*Skt. lōka > த. லோகத்திரயம்*]

லோகதருமணி *lōka-tarmaṇi,* பெ.(n.) a mode of initiation. உலோகதருமிணி பார்க்க; ulōkatarumiṇi.

[*Skt. lōka > த. லோகதன்மணி*]

லோகப்பிரசித்தம் *lōga-p-pirašittan,* பெ.(n.) உலகத்தாரால் நன்கறியப்பட்டது (செ.அ.); that which is universally known.

லோகபத்ததி *lōgapattati,* பெ.(n.) லோககதி பார்க்க; see lōgakati.

லோகபாலகர் *lōga-pālagar,* பெ.(n.) 1. லோகபாலர்,1 பார்க்க; see lōkapālar. "அட்ட லோக பாலகரே" (தக்கயாகப்.468). 2. லோகபாலர்,2 பார்க்க; see lōgapālar.

[*Skt. lōka-pālaka > த. லோகபாலகர்*]

லோகபாலர் *lōka-pālar,* பெ.(n.) 1. எண்டிசைக் காவலர்; regents of the eight directions 2. அரசர்; kings. "லோகபால ரெயில் காவல் கூர்" (தக்கயாகப்.17).

[*Skt. lōka-pāla > த. லோகபாலர்*]

லோகம்[1] *lōgam,* பெ.(n.) உலகம்; world. "எல்லா லோகங்களும் இவருடைய" (தக்கயாகப். 38. உரை).

[*Skt. lōka > த. லோகம்*]

லோகம்[2] *lōkam,* பெ.(n.) மாழை; metal.

[*Skt. lōha > த. லோகம்*]

லோகமரியாதை *lōgamariyātai,* பெ.(n.) உலகவழக்கம் (செ.அ.); customs and manners of a country

த.வ. உலகநடை

[*Skt. lōka > த. லோகமரியாதை*]

லோகமாதா *lōga-mātā,* பெ.(n.) 1. உலக மாதா பார்க்க; see *ulakamātā* 2. இலட்சுமி (செ.அ.); Lakṣmi.

[*Skt. lōka+mātṛ > த. லோகமாதா*]

லோகயாத்திரை *lōga-yāttirai,* பெ.(n.) லோககதி பார்க்க; see *lōgakati.* "இது ஒரு லோகயாத்திரை". (ஈடு,4,9,6).

லோகரஞ்சனம் *lōga-rañcaṉam,* பெ.(n. உலகிற்கு மகிழ்ச்சி தருவது (செ.அ.); that which is popular or pleasing to the world.

லோகரட்சை *lōga-raṭcai,* பெ.(n.) உலகத்தைக் காக்கை (செ.அ.); protection of the world. "லோகரட்சையுந் தனுர்வேத வில்வலியும்" (தக்கயாகப்.468, உரை).

லோகரட்சகன் *lōgaraṭcakan̲,* பெ.(n.) உலகத்தைக் காப்போன் (செ.அ.); saviour of the world.

லோகரூடம் *lōga-rūṭam,* பெ.(n.) 1. தேச மெங்கும் பெரும்புகழ் பெற்றது (செ.அ.); that which is famous throughout the land. 2. லோக மரியாதை பார்க்க; see lōgamariyātai.

[Skt lōha+rūḍha > த. லோகரூடம்]

லோகவிருத்தாந்தம் *lōgaviruttāntam,* பெ.(n) 1. லோகாசாரம் பார்க்க; see lōgāšāram.2. ஊர்ப்பேச்சு (செ.அ.); rumour.

லோகவேடணை *lōgavēḍaṇai,* பெ.(n.) உலகவேடணை (நாமதீப.576) பார்க்க; see ulakavēḍaṇai.

லோகாக்கிரசித்தர் *lōgākkira-šittar,* பெ.(n.) தேவருட் சிறந்த ஒரு சாரார் (தக்கயாகப். 352.உரை); a superior class of celestials.

[Skt loha+agra+siddha > த. லோகாக்கிரசித்தர்]

லோகாசாரம் *lōgašāram,* பெ.(n.) உலகத்தாரொழுக்கம் (செ.அ.); customs of the people, ways of the world, common practice.

[Skt lōha+ācāra > த. லோகாசாரம்]

லோகாசாரியர் *lōgāšāriyar,* பெ.(n.) பிள்ளைலோகாசாரியர் பார்க்க; see piḷḷai-lōgāšāriyar.

[Skt Lōkācārya > த. லோகாசாரியர்]

லோகாதிபதி *lōgātipati,* பெ.(n.) உலகமுதல்வன்; lord of the Universe. 2. மாமன்னன் (செ.அ.); Emperor.

[Skt lōkādhipati > த. லோகாதிபதி]

லோகாதீதம் *lōgātitam,* பெ.(n.) உலகத்துக்கு அப்பாற்பட்டது (செ.அ.); the supernatural; the ultra-mundane.

[Skt. lōkātita > த. லோகாதீதம்]

லோகாந்தரம் *lōgāntaram,* பெ.(n.) வேறுலகம் (செ.அ.); the world beyond.

[Skt. lōkāntara > த. லோகாந்தரம்]

லோகாந்தரமடை-தல் *lōgāntaramaḍai,* 2 செ.கு.வி. (v.i.) இறத்தல், மரணமடைதல் (செ.அ.); to die.

லோகாபவாதம் *lōkāpavātam,* பெ.(n.) பெரும்பழி (செ.அ.); censure of the world, public scandal.

[Skt lōkā-pavāda > த. லோகாபவாதம்]

லோகாபிராமம் *lōkāpirāmam,* பெ.(n.) 1. உலகத்திற்கு மகிழ்ச்சி தருவது; that which is pleasing to the world. 2. ஊர்ப்பேச்சு (செ.அ.); general talk, rumour. "லோகா பிராமமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்".

[Skt lōkā-bhirāma > த. லோகாபிராமம்]

லோகாயதம் *lōgāyatam,* பெ. (n.) உலோகாயதம் பார்க்க; see ulōkāyatam.

[Skt. lōkāyata > த. லோகாயதம்]

லோகாயதன் *lōgāyatan̲,* பெ. (n.) உலோகாயதன் பார்க்க; see ulōkāyatan̲. "லோகாயதன் சமயநடை சாராமல்" (தாயு.மௌன.4.).

[Skt lōkāyata > த. லோகாயதன்]

லோகாலோகம் *lōkālōkam,* பெ.(n.) சக்கரவாளம்; a mythical range of mountains.

[Skt lōkā-lōka > த. லோகாலோகம்]

லோகிதம் *lōkitam,* பெ.(n.) செந்நிறமானது (செ.அ.); redness, that which is red. "லோகிதமலரோடும்" (இரகு.திக்குவி.264).

[Skt. lōhita > த. லோகிதம்]

லோகோத்தமரசம் *lōkōttamarašam*, பெ.(n.) ஒரு வகைப் பேதி மருந்து (செ.அ.); a purgative.

[Skt. lōkōttama-rasa > த. லோகோத்தமரசம்]

லோகோத்தரம் *lōkōttaram*, பெ.(n.) மிகச் சிறந்தது (செ.அ.); that which is excellent in every way.

[Skt. lōkōttara > த. லோகோத்தரம்]

லோகோபகாரம் *lōkōpakāram*, பெ.(n.) உலக நன்மை (செ.அ.); public good, general good.

[Skt. lōkōpakāra > த. லோகோபகாரம்]

லோட்டா *lōṭṭā*, பெ.(n.) 1. நீர் குடிக்கப் புயன்படும் ஏனம்; pipkin, a small metal pot, generally of brass. 2. கழுத்தணி வகை (செ.அ.); a necklace of gold beads.

[U. lōṭā > த. லோட்டா]

லோடா *lōṭā*, பெ.(n.) லோட்டா,1 (வின்.) பார்க்க; see lōṭṭā.

லோடு *lōḍu*, பெ.(n.) குறைவு (செ.அ.); loss, deficiency.

[Hind. luṭ > த. லோடு]

லோத்திரம் *lōttiram*, பெ.(n.) வெள்ளி லோத்திரம் (செ.அ.); lodhra tree.

[Skt. lōdhra > த. லோத்திரம்]

லோத்துகம் *lōttukam*, பெ.(n.) லோத்திரம் பார்க்க; see lōttiram.

லோந்து *lōntu*, பெ.(n.) இராவுக்காவல் (செ.அ.); night patrol.

[Fr. ronde > த. லோந்து]

லோபம்[1] *lōpam*, பெ.(n.) 1. கெடுதல் (விகாரம்); elision. "ஆதேசலோபம்" (பி.வி.26). 2. குறைவு (செ.அ.); defect, deficiency. "மந்திர கிரியாலோப மின்றியே" (அறப்.சத.81).

[Skt lōpa > த. லோபம்]

லோபம்[2] *lōpam*, பெ.(n.) 1. உலோபம்[1] பார்க்க; ulōpam. "லோப மருளின்மை கூடக் கலந்துள்ளிருக்க" (தாயு.சின்மயா.3). 2. கடுஞ்செட்டு (உ.வ.); stinginess.

[Skt. lōbha > த. லோபம்]

லோபன் *lōpan*, பெ.(n.) miser. உலோபன் பார்க்க; see ulōpan. "லோபன் மகன் டம்பன்" (செ.அ.).

[Skt. lōbha > த. லோபன்]

லோபி[1] *lōpi*, பெ.(n.) உலோபி பார்க்க; see ulōpi.

[Skt. lōbhin > த. லோபி]

லோபி[2]**-த்தல்** *lōpi*, செ.கு.வி.(v.i.) உலோபி[2] பார்க்க; see ulōpi.

[Skt. lōbha > த. லோபி]

லோபி[3]**-த்தல்** *lōpi*, 4 செ.கு.வி. (v.i.) உலோபி[3] பார்க்க; see Ulōpi.

[Skt. lōpa > த. லோபித்தல்]

லோபு-தல் *lōpu*, 5 செ.குன்றாவி. (v.i.) உலோபு பார்க்க; see ulōpu. "லோபியுண்ணார்" (தேவா.55.7).

[Skt lōpa > த. லோபு]

லோபை *lōpai*, பெ.(n.) பார்வதி (கூர்மபு. திருக்கலி.22); Pārvati.

[Prob. lōbhā > த. லோபை]

லோம்பர் *lōmpar*, பெ.(n.) இரும்பு வகை (இ.வ.); a kind of iron.

லோல்படு-தல் *lōl-paṭu-*, 20 செ.கு.வி. (v.t.) 1. திண்டாடுதல்; to wander about restlessly, to be tossed about. "அவன் அங்குமிங்கும் லோல்படுகிறான்". 2. மலிந்து கிடத்தல் (உ.வ.) (செ.அ.); to be over plentiful, as a commodity.

[Skt. lōla > த. லோல்படு-தல்]

லோலக்கம் *lōlakkam*, பெ.(n.) திண்டாட்டம்; restless wandering. "அவன் அங்குமிங்கும் லோலக்கமாடுகிறான்" (செ.அ.).

[Skt. lōla> த. லோலக்கம்]

லோலக்கு *lōlakku*, பெ.(n.) லோலாக்கு பார்க்க; see lōlākku.

லோலம் *lōlam*, பெ.(n.) 1. அலைவு; unsteadiness, restlessness. 2. ஆசைப் பெருக்கம் (செ.அ.); greediness, lustfulness.

[Skt lōla> த. லோலம்]

லோலயப்படு-தல் *lōlaya-p-paṭu*, 20 செ.கு.வி. (v.i) லோல்படு (உ.வ.) பார்க்க; see lōlpaṭu.

லோலன் *lōlaṉ*, பெ.(n.) 1. விளையாடித் திரிபவன்; one who is sportive or playful. "முத்தலைச் சூலனே லோலனே" (அறப்.சத.17). 2. பெண்டிரை நாடித் திரிபவன் (செ.அ.); one who dallies with woman.

[Skt. lōp> த. லோலன்]

லோலாக்கு *lōlākku*, பெ.(n.) காதில் தொங்கவிடும் அணி வகை (செ.அ.); a pendant suspended from the lobe of the ear.

[Skt. lōlak> த. லோலாக்கு]

லோலாயப்படு-தல் *lōlāya-p-paḍu*, 20 செ.கு.வி. (v.i.) லோல்படு (உ.வ.) பார்க்க; see lōlpaṭu.(செ.அ.).

லோலாயம் *lōlāyam*, பெ.(n.) லோலக்கம் பார்க்க; see lōlakkam.

[Skt. dōlāyamāna> த. லோலாயம்]

லோலோவென்றலை-தல் *lōlōveṉralai*, 2 செ.கு.வி. (v.t.) திண்டாடித் திரிதல்; to wander restlessly (செ.அ.).

லோன் *loan*, பெ.(n.) கடன்; loan.

[E. loan> த. லோன்]

லௌகிகதந்திரம் *laukika-tantiram*, பெ.(n.) உலக செய்திகளில் திறமை (செ.அ.); skill or tact in worldly affairs.

[Skt. laukika> த. லோ]

லௌகிகதருமம் *laukika-tarumam*, பெ.(n.) உலகியல் (செ.அ.); ways of the world.

லௌகிகப்பிரக்கிரியை *laukika-p-pirakkiriyai*, பெ.(n.) உலகவழக்கு (பி.வி.18,உரை.) (செ.அ.); usage in common speech.

லௌகிகம் *laukikam*, பெ.(n.) லௌகீகம் பார்க்க; see laukīkam.

லௌகிகன் *laukikaṉ*, பெ.(n.) லௌகீகன் பார்க்க; see laukikaṉ.

லௌகீகம் *laukīkam*, பெ.(n.) 1. உலகிற்குரியது; wordly affairs, that which is of the world. 2. உலகப்பற்றுடைமை (வின்.); worldliness. 3. அலுவல் (செ.அ.); office.

[Skt. laukika> த. லௌகீகம்]

லௌகீகவிருத்தி *laukīka-virutti*, பெ.(n.) வைதீகவிருத்தியை விடுத்து உலக நடைக்குரிய தொழில்களில் முயலுகை (செ.அ.); secular pursuits, opp. to vaitīka virutti.

லௌகீகன் *laukīkaṉ*, பெ.(n.) 1. உலகப்பற்றுடையவன்; one who is worldly-minded. 2. சமயவொழுக்க விதிகளைச் சரிவரப் பின்பற்றாதவன்; one who does not strictly adhere to the prescribed rites and observances, dist. fr. vaitīkaṉ. 3. உலகியலில் (லௌகீகவிருத்தியில்) ஒழுகுபவன்; one who follows secular pursuits. 4. உலகியலறிந்தவன் (செ.அ.); one who is worldly - wise.

[Skt. laukika> த. லௌகீகன்]

வ

வக்காலத்து *vakkālattu,* பெ. (n.) முறை மன்ற வழக்கு நடத்துவதற்கு வழக்கறிஞருக்குக் கொடுக்கும் அதிகார ஆவணம் (பத்திரம்) (வின்.); (legal) Power of attorney given to a lawyer for conducting a case.

[U. wakālat>த. வக்காலத்து]

வக்கிரம் *vakkiram,* பெ. (n.) 1. வளைவு; curve, bend, winding. "வக்கிர சாபமழைபொழிந்து" (பாரத. இரண்டா. 12) 2. வட்டம்; (பிங்.) circle. 3. சென்ற வழி மீளுகை; (பிங்.) retracing one's steps. 4. நேர்மையற்ற செலவு; (அக.நி.) irregular course. 5.கொடுமை; (பிங்.). cruelty, malignancy, as of a planet. 6. பொய்; (திவா.). lie. 7. வஞ்சனை; (வின்.). fraud, dishonesty. 8. கோணல் வழி; perversity. 9. பொறாமை; envy 10. கலக்கம்; confusion.

[Skt. vakra>த. வக்கிரம்]

வக்கிரன் *vakkiran,* பெ. (n.) 1. மாறுபாடுள்ளவன்; perverse, cross-grained person. 2. குரூரன்; (வின்.) cruel man. 3. சனி; (இலக். அக.) saturn. 4. செவ்வாய்; (பிங்.) mars. 5. உருத்திரன்; (யாழ். அக.). Rudra. 6. திருமாலால் அழிக்கப்பட்ட ஓர் அசுரன்; an asura slain by Viṣṇu. "வக்கிரனை வடி வழித்த மாயவனா" (பெருந்தொ. 865.)

[Skt. vakra>த. வக்கிரன்]

வக்கீல் *vakkīl,* பெ. (n.) முறை மன்றத்தில் பிறருக்காக வழக்கை எடுத்து வாதிப்போர்; authorized attorney, counsel at law, pleader. 2. மணவுடன் படிக்கையில் மணப்பெண் சார்பான செயல் புரிபவன்; one who represents the bride in a contract of marriage.

[U. wakīl>த. வக்கீல்]

வக்தா *vaktā,* பெ. (n.) எடுத்துச் சொல்லுவோன்; one who speaks or expounds. 2. பேச்சாளி; orator.

[Skt. vaktā>த. வக்தா]

வக்து *vaktu,* பெ. (n.) காலம், வாய்ப்பு (இ.வ.); time, season opportunity.

[Arab. vaqt>த. வக்து]

வகி–த்தல் *vaki-,* 4 செ.கு.வி. (v.i.) தாங்குதல்; to bear, carry, as a load, to undertake, as a responsible work, to maintain,support, as a family, to endure, as fatigue, etc. *'குடும்ப பாரத்தை வகிக்கிறான்.'*

[Skt. vah>த. வகி]

வச்சணத்தி *vaccaṇatti,* பெ. (n.) அன்பு, வாற்சல்லியம் (அருங்கலச். 23); tenderness, affection, fondness, love.

[Skt. vatsala >த. வச்சணத்தி]

வச்சணந்திமாலை *vaccaṇandimālai,* பெ. (n.) தம் ஆசிரியரான வச்சணந்தி முனிவர் பெயரால் குணவீரபண்டிதரென்பவர் வெண்பா யாப்பில் இயற்றிய பாட்டியல் நூல்; a treatise on poetics, in veṇpā verse, by Guṇavīrapāṇḍidar, named after his preceptor Vaccaṇaandi.

வச்சத்தொள்ளாயிரம் *vacca-t-tōḷḷāyiram,* பெ. (n.) வச்சதேயத்தரசனைப் பற்றித் தொள்ளாயிரம் வெண்பாக்களால் அமைந்த ஒரு நூல்; (வீரசோ. அலங்.11, உரை). a poem of 900 veṇpā verses on the king of Vatsa, not extant.

வச்சம் *vaccam,* பெ.(n.) 1. இந்தியாவின் வடபாகத்துள்ள நாடு; an ancient province in North India. *'வச்சத்திளங்கோவை' (வீரசோ. அலங். 11, உரை.)*

[Skt. vatsa > த. வச்சம்]

வச்சயம் *vaccayam,* பெ. (n.) 1. கலைமான் (பிங்.); stag. 2. கருநிறமுள்ள மான் வகை; black stag.

[Skt. vatsaka > த. வச்சயம்]

வச்சிரக்கட்டு *vaccira-k-kaṭṭu,* பெ. (n.) வலுவான அமைப்பு; strong - build.

[வச்சிரம் + கட்டு]

[Skt. vajra > த. வச்சிரம்]

வச்சிரக்கோட்டம் *vaccira-k-kōṭṭam,* பெ. (n.) காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரனது வச்சிராயுதம் நிற்க அமைந்த கோயில்; an ancient temples at Kāviri-p-pūmpattinam, where Indra's thunderbolt was installed. *'வச்சிரக் கோட்டது மணங்கெழுமுரசம்' (சிலப். 5, 141.)*

வச்சிரகங்கடம் *vaccira-kaṅgadam,* பெ. (n.) மிக்க உறுதியுள்ள சட்டை வகை (யாழ். அக.); a cloth of great durability.

[Skt. vajra +kaṅkaṭa>த. வச்சிரகங்கடம்]

வச்சிரகங்கடன் *vaccira-kaṅgadan,* பெ. (n.) அனுமான் (யாழ். அக.); Hanumān

[Skt. vajra + kaṅkata>த. வச்சிரகங்கடன்]

வச்சிரசரீரம் *vaccira-carīram,* பெ. (n.) உறுதியான உடம்பு (பிங்.); robust, strong body. *'அத்தயிரைக் குடித்துத் தடித்து வச்சிர சரீரம் பெற்றார்' (தக்கயாகப் 54, உரை.)*

[Skt. vajra + sarīra>த. வச்சிரசரீரம்]

வச்சிரப்படையோன் *vaccira-p-padaiyōṉ,* பெ.(n.) இந்திரன்; Indra, as armed with the thunderbolt.

வச்சிரம் *vacciram,* பெ. (n.) 1. இருதலைச் சூலமாய் நடுவுபிடியாயுள்ள ஓராயுதம். (சிலப் 2, 46 – 8 உரை); thunderbolt, a weapon sharp-edged at both ends and held in the middle. *'கூர்கெழு வச்சிரங்கொண்டு' (பெருங். மகத. 27, 167)* 2. மிகவும் உறுதியானது; that which is excedingly strong, hard or adamant. *'வள்ளிதழ் மாலை மார்பன் வச்சிர மனத்தனானான் (சீவக. 2732).* 3. வைரமலை (சூடா.); diamond, as very hard. 4. மரத்தின் காழ். core of a tree. *"வெளிறுமுன் வித்திப் பின்னை வச்சிரம் விளைத்தலாமோ"* (சீவக. 2613.); 5. சதுரக்கள்ளி (சூடா.); squre sparge. 6. மல்லர் கருவி வகை (வின்.); a weapon used by boxers. 7. ஒரு வகைப் பசை; a kind of glue. 8. சிற்பநூல் முப்பத்திரண்டனுள் ஒன்று; a treatise on architecture, one of 32 cirpanul, q.v. 9. ஒக மிருபத்தேனுள் ஒன்று (சோதிட சிந்); (Astron.) a division of time, one of 27 yokam, (q.v.).

[Skt. vajra >த. வச்சிரம்]

வச்சிரயாப்பு *vaccira-yāppu,* பெ. (n.) 1. மரங்களை வச்சிரப் பசையினாற் சேர்க்கை; gluing, in woodwork. *'அச்சு மாணியும் வச்சிரயாப்பும்' (பெருங். உஞ்சைக் 58, 47)* 2. வச்சிராயுதத்தால் எழுதியது போன்று என்றும் அழியா எழுத்து; indelible writing, as the marks made by the vaccirā-yutam *'நின்றது கிழமை நீங்கா வச்சிர யாப்பின்' (சீவக. 544.)*

[வச்சிரம் + யாப்பு]

[Skt. vajra >த. வச்சிரம்]

வச்சிரரேகை *vaccira-rēgai,* பெ. (n.) பெண் மகப்பேறடைவதைக் குறிப்பதாகக் கருதப்படும் உள்ளங்கை வரி வகை (சிவக். பிரபந். சரபேந்திர குற. 51,1.); (palmistry.) a kind of distinctive mark in the palm of the hand, believed to indicate female issue.

[Skt. vajra+rēkha >த. வச்சிரரேகை.]

வச்சிரவண்ணன் *vaccira-vaṇṇaṉ,* பெ. (n.) செல்வக் கடவுள்; Kuberan, the god of wealth. *"வச்சிர வண்ணன் காப்ப வாழிய ரூழி" (சீவக. 2494.)*

[Skt. vaiśravaṇa >த. வச்சிரவண்ணன்.]

வச்சிராப்பியாசம் *vacciräppiyāśam,* பெ. (n.) (கணிதம்) பெருக்கல் வகை. (வின்.); (Arith.) cross multiplication.

[Skt. vajrābhyāsa >த. வச்சிராப்பியாசம்.]

வச்சை *vaccai,* பெ. (n.) 1. வாஞ்சை (இலக். அக.); kindness. 2. இவறன்மை (உலோபம்); avarice, stinginess. *'நலிவுசெயுநற் குதவும் வச்சைமாக்கள்' (இராகு. இந். 25.).*

[Skt. vāñch >த. வச்சை.]

வசந்தபஞ்சமி *vasanta-pañśami,* பெ. (n.) காமனுக்குரியதாய் மாகமாதத்து வெண்பக்க (சுக்கிலபட்ச)த்து வரும் ஐந்தாம் நாள் (பஞ்.); the 5th titi of the bright fortnight in the lunar month of makam, as sacred to kāma.

[Skt. vasanta+pnjami >த. வசந்தபஞ்சமி.]

வசந்தபயிரவி *vaśanta-payiravi,* பெ. (n.) ஒரு பண் வகை. (வின்.); a specific melody type.

த.வ. வேனிற் பண்.

[Skt. vasanta+bhairavi>த. வசந்தபயிரவி]

வசந்தம் *vaśantam,* பெ. (n.) 1. இளவேனில் (பிங்.); the spring season. 2. மேழம் (சித்திரை) மாதம் (பிங்.); the month of cittirai. 3. நறுமணம் (சூடா.); scent fragrance. 4. கந்தப்பொடி (சது.); scented powder. 5. ஓர் இசைப் பண். (பரத. இராக. 56) a specific melody type. 6. மகிழ்வான உரையாடல் (சல்லாபம்) (பிங்.). pleasant conversation. 7. சிறிய முத்து (யாழ். அக.); small pearl.

த.வ. இளவேனில்

[Skt. vasanta>த. வசந்தம்]

வசந்தமாலை *vaśantamālai,* பெ. (n.) தென்றலைச் சிறப்பித்துக் கூறும் சிற்றிலக்கிய (பிரபந்த) வகை. (இலக். வி. 836.); an antāti verse describing the south-wind one of 96 pirapantam. (q.v.)

[Skt. vasanta>த. வசந்தமாலை.]

வசந்தருது *vaśanta-rutu,* பெ. (n.) இளவேனில் (பிங்.); spring season.

[Skt. vasanta+rutu>த. வசந்தருது.]

வசந்தன் *vaśantaṉ,* பெ. (n.) 1. காமன் (பிங்.); Kāman the god of love. 2. காமனுக்குத் தோழனும் இளவேனில் காலத்துக்குரியவனுமான ஒரு தேவன்; Vasanta the god of spring and friend of Kāman 'சித்திரை வசந்தன் வருசெவ்வியுடன் மகிழா' (பாரத சம்பவ. 101.). 3. தென்றல்; the south-wind. 'வஞ்ச வசந்தனைநீ வாவென்று' (காளத். உலா, 479) 4. கூத்து வகை; a kind of dance.

[Skt. vasanta>த. வசந்தன்.]

வசந்தனடி-த்தல் *vaśantaṉ-adi-,* 4 செ.கு.வி. (v.i.) 1. கும்மியடித்தல் (வின்.); to perform the kummi dance. 2. வசந்தன் கூத்து ஆடுதல் (யாழ். அக.); to dance the vacantaṉ dance.

[Skt. vasanta>த. வசந்தனடி-த்தல்.]

வசநாபி *vasanāpi,* பெ. (n.) வசம்பு (அ) தான்றி வேரிலிருந்து எடுக்கப்படுங் கொடிய நஞ்சுவகை; a strong poison said to be prepared from vasampu or according to some, from tāṉṟiroot.

வசியம் *vaciyam,* பெ. (n.) 1. வயப்படுகை; being docile or subjugated. 2. காதல்; great attachment, devoted love *"ஒய்வறு வசிய முண்டாய்"* (கொக்கோ. 1, 28) 3. கைவயம் (வின்.); actual possession.

[Skt. vašya > த. வசியம்]

வசீகரசக்தி *vacikara-sakti,* பெ. (n.) 1. மனத்தைக் கவரும் ஆற்றல்; power of attraction. 2. வசியஞ் செய்யும் ஆற்றல்; magic spell, hypnotic power.

த.வ. வயக்காற்றல்

[Skt. vaši-kara > த. வசீகரம்]

வசீகரணம் *vacikaranam,* பெ. (n.) 1. வயப்படுத்துகை; subjugation, attraction. 2. காமன் கணைகளுள் வசீகரத்தைச் செய்யும் அம்பு; the arrow of Kāma that subjugation a person. 3. அறுபத்து நாலு கலையுள் பிறரை வயஞ் செய்வதாகிய வித்தை (வின்.); art of subjugation by magic one of arupattunālu-kalai

த.வ. வயப்பாடு

[Skt. vaši-karaṇa > த. வசீகரணம்]

வசீகரம் *vacikaram,* பெ. (n.) ஈர்ப்பு; attract.

வசீகரன் *vacikaran,* பெ. (n.) வசியப்படுத்துவோன் (யாழ். அக.); one who fascinates and charms

[Skt. vaši-kara>த. வசீகரன்.]

வசூல் *vacūl,* பெ. (n.) 1. சேகரிப்பு; collection. 2. சேகரிக்கும் வரி முதலியன; (C G) collections, as of revenue.

[U. wasūl >த. வசூல்.]

வசூல்பாக்கி *vacūl-pākki,* பெ. (n.) நிலுவைத் தொகை (வின்.); uncollected balance

[U. wasūl >த. வசூல்.]

வசூலி–த்தல் *vacūli-,* 4 செ.கு.வி. (v.i.) வரி முதலியவற்றைத் தண்டுதல்; to collect, as revenue. இந்த ஆண்டு இன்னும் வரி வசூலிக்கவில்லை. (உ.வ.)

[U. wasūl > த. வசூல்.]

வமிசம் *vamicam,* பெ. (n.) 1. குலம்; race, imeage, descent, family. 2. மூங்கில்; bamboo. 3. வேய்ங்குழல்; flute pipe.

[Skt. vamša>த. வமிசம்]

வமிசாவளி *vamicāvali,* பெ. (n.) கொடி வழி உறவின் முறையைத் தெரிவிக்கும் அட்டவணை; genealogical tree.

[Skt. vamšāvali>த. வமிசாவளி]

வயசு *vayacu,* பெ. (n.) 1. பருவம் (பிராயம்); period of lifetime from birth. 2. இளமை (யௌவனம்); yourth, juvenility.

வயோதிகன் *vāyōtikan,* பெ. (n.) கிழவன்; old man.

[Skt. vayōdhika>த. வயோதிகன்]

வயோதிகம் *vāyōtigam,* பெ. (n.) முதுமை; old age.

[Skt. vayōdhika>த. வயோதிகம்]

வரம் *varam,* பெ. (n.) 1. தெய்வம் முதலியவற்றாற் பெறும் பேறு; boon gift blessing by a deity or a great person. *"காதலி னுவந்து வரங் கொடுத்தன்றே (திருமுரு. 94)* 2. உதவி (அனுக்கிரகம்); grace, favour, help. 3. அருள் (ஆசீர்வாதம்) (யாழ். அக.); blessing. 4. வேண்டுகோள்; supplication, solicitation, entreaty, request. *"வசையிலாள் வரத்தின் வந்தாள்" (சீவக. 201.)* 5. விருப்பம்; desire. 6. மேன்மை; excellence, eminence. 7. ஒரு நிதி; a treasure. 8. சூழல் (யாழ். அக.); enclosed space. 9. எறும்பு; ant.

[Skt. vara>த. வரம்]

வருடப்பிறப்பு *varuḍa-p-pirappu,* பெ. (n.) 1. புது ஆண்டுத் தொடக்கம்; beginning or commencement of a new year. 2. ஆண்டின் முதல் நாள்; new year day.

வருடபலன் *varuḍa-palan,* பெ. (n.) ஐந்திரத்தின் (பஞ்சாங்கம்) படி அவ்வவ்வாண்டுக்குக் கோள் (கிரக) நிலையில் உண்டாகும் பலன்; the predictions for the year calculated from the position of the planets at the commencement of the new year.

வருடம் *vārutam,* பெ. (n.) 1. ஆண்டு (பிங்.); year. 2. மழை (பிங்.) rain. *"தேனென்னுங் கால வருடம் வருடிக்க வல்ல" (தக்கயாகப். 68. உரை.)*

[Skt. vārṣa>த. வருடம்]

வனம் *vanam,* பெ. (n.) 1. காடு (சூடா.); forest. *"வனமே மேவி ..... எவ்வாறு நடந்தனை" (திவ். பெருமாள் தி. 9,2)* 2. ஊர்சூழ்சோலை (சூடா.); pleasure grove, grotto about a town. 3. சுடுகாடு; cremation ground. 4. நீர் (திவா.); water. 5. மலையருவி (யாழ். அக.); water fall. 6. உறைவிடம்; abode residence. "வாவியுமலருமாகத் துஞ்சுவ வனங்களெல்லாம்" (இரகு. நகர. 38). 7. வழி; (பிங்.) way. 8. துளசி (சூடா.); holybasil. 9. புற்று (சங். அக.); ant hill.

[Skt. vana>த. வனம்]

வனவாசம் *vana-vācam,* பெ. (n.) காட்டில் வாழ்க்கை; dwelling or residing in a forest. *"பஞ்சபாண்டவர் வனவாசம்"*

த.வ. காடுறைவு

[Skt. vana-vāsa>த. வனவாசம்]

வாக்கியக்கட்டளை *vākkiya-k-kaṭṭaḷai,* பெ. (n.) நன்கு யாத்த சொற்றொடர்; clause or sentence of literary finish. *"எழுத்தானே கட்டப்பட்ட வாக்கியக் கட்டளைக் கூறுபாடுகளும்" (சிலப். 3, 45 உரை. பக். 108.)*

த. வ. தொடராக்கச் செப்பம்

[Skt. vakya>த. வாக்கியக்கட்டளை]

வாக்கியம் *vākkiyam,* பெ. (n.) 1. சொல்; speech, saying, assertion, statement, command, words. பிதுர்வாக்கியம்; 2. எழுவாய் பயனிலை முதலியவற்றால் பொருள் நிரம்பிய சொற்றொடர்; sentence; proposition containing the subject, object and predicate. *"வல்லோர் வகுத்த வாசனை வாக்கியம்"* (பெருங். உஞ்சைக் 34, 27.) 3. பழமொழி; aphorism, proverb. 4. கதிரவக் கொண்முடிபினின்று வேறுபட்டதும் தென் இந்தியாவில் நடைபெறுவதுமான பிறப்பியக்கணக்கு முறை; (Astron.) mode of reckoning followed in southern India, as distinguished from that followed in the sūrya siddhānta. 5. பிறப்பியக் கணித வாய்பாடுவகை; (வின்.) astronomical table. 6. மேற்கோள்; authoritative quotation. *"வாக்கியஞ் சொல்லி யாரொடும் வகையலாவகை செய்யன்மின்"* (தேவா. 999.10.).

த.வ. முற்றுத்தொடர், கிளவியம்

[Skt. vākya>த. வாக்கியம்]

வாக்கியார்த்தம் *vākkiyārttam,* பெ. (n.) 1. சொற்றொடர்ப் பொருள்; meaning of a passage. 2. ஒரு பொருண்மேல் நேர்க்கூற்று அயற்கூற்றாக நிகழ்த்தும் உரை; (log.) argumentative exposition of a text.

த.வ. தொடர்ப்பொருண்மை

[Skt. vāky ārtha> த. வாக்கியார்த்தம்]

வாக்கு¹ *vākku,* பெ. (n.) 1. திருத்தம்; perfection, correctness. *"வாக்கணங்கார் மணிவீனை" (சீவக. 1473).* 2. திருந்திய வடிவு; refined form, shape. *"வாக்கமை கடு விசைவில்" (கலித். 137.)*

த.வ. செப்பம், செப்பமான வடிவம்

[Skt. bhiga>த. வாக்கு]

வாக்கு² *vākku,* பெ. (n.) 1. புலன்கள் ஐந்தனுள் பேசற் கருவியான வாய். (பிங்.); mouth, the organ of speech, one of five karumēntiriyam, q.v. 2. சொல். (திவா.); word, speech. *"வாக்கினாற்றெருட்டுவாரில்லை" (கம்பரா. பிரமா. 201.)* 3. காணாவொலி (அசரீரி); voice from heaven. 4. சொல்லாணை (வாக்குத்தத்தம்); promise. *"அவனுக்கு அப்படி வாக்குக் கொடாதே"* 5. புகழ்ச்சிச் சொல்; word of praise, encomium *"வாக்கமையுருவின் மிக்கான்" (சீவக. 1258).* 6. எளிதிற் கவிபாடுந் திறம்; capacity to compose poems with felicity. *"அந்த புலவர் வாக்குள்ளவர்"* 7. நூலின் நடை; style. *"அந்த நூலின் வாக்குச் சிறந்தது."*

8. சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்ற நால் வகைப்பட்ட ஒலி; speech form, of four kinds, viz, cūkkumai, paicanti, mattimai, vaikari. *"நிகழ்த்திடும் வாக்கு நான்கும்" (சி.சி. 1,24).* 9. ஓரிடத்திற்கு உரியவனாக ஒருவனைத் தேர்ந்தெடுப்பது முதலியவற்றில் தன் எண்ணத்தைத் தெரிவிக்கும் உரிமை; right to vote.

[Skt. vāc> த. வாக்கு]

வாக்குரிமை *vākkurimai*, பெ. (n.) பொதுச்சபையின் உறுப்பினராகப் பிறனைத் தேர்ந்தெடுத்தல் முதலியவற்றின் அனுமதியுரிமை (இக்.வ.); franchise, right of voting.

த.வ. ஓட்டுரிமை

[Skt. vāc> த. வாக்கு]

வாகடம் *vākaṭam*, பெ. (n.) மருத்துவ நூல் (தக்கயாகப். 553, உரை.); medical science, medical treatise.

த.வ. மருத்துவநூல், (வழக்கு – மாட்டு வாகடம், குதிரை வாகடம்)

[Skt. vāgbhaṭa> த. வாகடம்]

வாகன் *vākaṉ*, பெ. (n.) ஊர்தியுடையவன்; one who possesses a conveyance. *"கொண்டல் வாகனும் குபேரனும்." (பாரத. குருகுல. 29).*

[Skt. vāha> த. வாகன்]

வாகனம் *vākaṉam*, பெ. (n.) 1. ஊர்தி; vehicle, conveyance, animal to ride on, a horse, elephant, etc. carriage, wagon, van *"உயர்ந்த வாகனயானங்கள்" (பெரியபு. தடுத்தாட். 20.)* 2. சீலை (யாழ். அக.); cloth 3. புடைவை முதலியவற்றை வைத்துக் கட்டும் முரட்டுத் துணி (யாழ். அக.); rough cloth, used in packing. 4. விடாமுயற்சி (யாழ். அக.); perseverance.

த.வ. ஊர்தி

[Skt. vāhana> த. வாகனம்]

வாகினி *vākiṉi*, பெ. (n.) 1. படை (பிங்); army, host. 2. 81 யானைகளும் 81 தேர்களும் 243 குதிரைகளும் 405 காலாட்களும் உள்ள படையின் வகுப்பு; a division of an army consisting of 81 elephants, 81 chariots, 243 horse and 405 foot. *"வண்மை தலைவருமோ வாகினிக ளாவேமோ"* (ஆதியூரவதானி. 45.) 4. ஒரு பேரெண். (பிங்.); a great number.

[Skt. vāhinī> த. வாகினி[1]]

வாச்சியம் *vācciyam*, பெ. (n.) 1. சொல்லின் பொருள்; meaning of a word, signification of a term. *"வாதவூரன்......வாசக முதற்கு வாச்சியம்" (சிவப். பிரபந். நால்வர்.)* 2. சொல்லக்கூடியது; that which can be stated in words. 3. வெளிப்படையானது; that which is manifest or clear. 4. நிந்தை (வின்.); blame, censure, reproch. 5. இசைக்கருவி வகை; musical instrument. *"கூத்து விகற்பங்களுக்கு அமைந்த வாச்சியக் கூறுகளும்" (சிலப். 3,14, உரை.)*

[Skt. vādya> த. வாச்சியம்]

வாச்தவம் *vāctavam*, பெ. (n.) மெய்ம்மை; reality, truth.. *"தர்ப்பணத்திற் களிம்பு வாஸ்தவம்" (கைவல். சந். 69.).*

[Skt. vāstava > த. வாசத்தவம்]

வாசகம்[1] *vācakam*, பெ. (n.) 1. சொல்; speech, word of mouth. *"சிறியோர்க் கருளிய வுயர்மொழி வாசகம்" (பெருங். வத்தவ. 13, 116.)* 2. செய்தி; message. *"மல்குநீர்க் கண்ணேற்கோர் வாசகங்கொண்டருளாயே"* (திவ். திருவாய். 1,4,5). 3. சொற்றொடர்; sentence, composition. *"வடமொழி வாசகஞ்செய்த நல்லேடு" (சிலப். 15,58).* 4. செய்யுள்; *(சிலப். 13,93 உரை)* poetical composition, verse. 5. பிறர் கேட்க உருச் செய்கை; *(சைவச. பொது. 152. உரை.).* audible muttering of a mantra. 6. உரைநடை (இக்.வ.); prose. 7. வாய்பாடு; form of speech; grammatical. *"முராரிகள் என்பது பன்மை வாசகம்" (தக்கயாகப். 79, உரை.).* 8. கடிதம் (வின்.); letter, epistle. 9. போற்றிப் பாடல்கள்; words of praise. *"வாசகஞ்*

செய்ய நின்ற திருமாலை" (திவ். பெரியாழ். 4,1,5,).

[Skt. vācaka> த. வாசகம்]

[த. வாள் > Skt. vāc-vācaka]

வாசஞ்செய்-தல் *vāšañ-cey-,* செ.கு.வி. (v.i.) வசித்தல்; to dwell, inhabit, lodge.

[Skt. vāsa> த. வாசம்]

வாசம் *vāšam,* பெ. (n.) 1. வாசனை; scent. 2. இலா மிச்சை; a grass with fragrant roots. 3.நெய்; ghee. 4. நீர்; water. 5.சாதிலிங்கம்; vermilion. 6. சண்பகம்; a fragrant flower. 7. அரிசி; rice. 8. காற்று; wind. (சா.அக.).

வாசி[1] *vāci,* பெ. (n.) 1. வேறுபாடு; difference. *"ஈசனிலைமைக்கு மேனையிமையோர் நிலைக்கும் வாசியுரை" (ஏகாம். உலா. 483).* 2. இயல்பு; causulity, nature, characteristic. *"அரக்கனவன் குலத்துவாசி" (இராமநா. ஆரணி. 25.).* 3. தகுதி; fitness, propriety. *"ஏறினா னவ்வாசியை வாசியாக" (திருவாலவா. 28, 45).* 4. நல்ல நிலைமை; good, improved condition. அவனுக்குடம்பு வாசிதான். 5. நிமித்தம்; ground, cause. நீ வாராதவாசி காரியங்கெட்டது. (வின்.) 6. வீதம்; rate, as of interest, portion. *"செலவளவு மாகாணிவாசியும் நாலுமாவாசியும் கழித்து"* (S.I.I. (iii), 123.). 7. நாணயவட்டம்; discount, in changing money. *"வாசி தீரவே காசு நல்குவீர்" (தேவா. 572,1.).*

[Skt. perh. bhāj. தெ.க. vāsi > த. வாசி[1]]

வாசி[2] *vāśi,* பெ. (n.) 1. குதிரை (பிங்.); horse. *"ஏறினானவ் வாசியை (திருவாலவா. 28, 45.).* 2. இரலை (அசுவதி). (சூடா.) the first nakṣatra " 3. அம்பு (யாழ். அக.); arrow. 4. மூச்சு (யாழ். அக.); breath. 5. முறைமை (நியாயம்) (யாழ். அக.); justice.

[Skt. vājin > த. வாசி[2]]

வாசி[3] *vāśi,* பெ. (n.) வாழ்பவன் (வசிப்பவன்); dwellor, inhabitant. காசிவாசி

[Skt. vāsin > த. வாசி[3]]

வாசிகை *vāśigai,* பெ. (n.) 1. தலைமாலை (பிங்.); wreath, as of flowers, pearls, etc. worn on the head. 2.மாலை; garland. *"வெண்முத்த வாசிகைத்தாய்" (திவ். இயற். திருவிருத். 50.). (திவா.);* 3.செறியக்கோத்த மாலை (பிங்.); garland of flower strung thickly together.

[Skt. vāsa > த. வாசிகை[1]]

வாசிட்டம் *vāśiṭṭam,* பெ. (n.) 1. அறநூல் பதினெட்டனுள் ஒன்று (பிங்.); a Sanskrit text - book on Hindu law ascribed to Vasiṣṭha, one of 18 tarama - nūl, q.v.

[Skt. vāsiṣṭha > த. வாசிட்டம்]

வாசிட்டலைங்கம் *vāśiṭṭalaiṅkam,* பெ. (n.) 1. துணைத்தொன்மங்கள் பதினெட்டனுள் ஒன்று (பிங்.); a secondary purāna,oneof18upa-purāṇam.q.v. *"வாசிட்டலைங்கத்தேதமின்றிய சிலதெரிந்து" (திருக்காளத். 4. நூல்வர. 2)*

[Skt. vāśiṣṭha-laiṅga > த. வாசிட்டலைங்கம்]

வாதம்[1] *vādam,* பெ. (n.) 1. சொல்; utterance. *"எஞ்சலின் மந்திரவாதமன்றி" (பெரியபு. திருஞான. 911).* 2. வாதம் முதலியவற்றில் ஒரு பக்கத்தை யெடுத்துக் கூறுகை; argument.3. எதிர்வாதம் (சூடா.); disputation, contention. *"வாதமா றொன்றின்றித் தோற்றான் புத்தன்" (பெரியபு. திருஞான. 924).* 4. உரையாடல் (யாழ். அக.); conversation. 5. பொன்னாக்க வித்தை (இரசவாதவித்தை); alchemy. *"வகரமாதி மூன்றாகிய வசியமே வாதம்" (திருவிளை. எல்லாம் வல்ல. 17.).* 6. உச்சி வாதம்; 7. எரிவாதம்; 8. தானாத்திரம் வாதம்; 9. ஈரல் வாதம்; 10.கடுப்பு வாதம்; 11. முடங்கினி வாதம்; 12. திமிர் வாதம்;

13. முழங்கால் வாதம்; 14. கழல் வாதம்; 15. தண்டு வாதம்; 16. சுரோணித வாதம்; 17. குடல் வாதம்; 18. கிளிகை வாதம்; 19. குளிச வாதம்; 20. சூசிகா வாதம் இதன்றியும் வாதம் மேலும் 80 வகையாம் vatha disease are 80, names of some are given above. (சா.அக.).

[Skt. vāda> த. வாதம்]

வாதம்[2] *vādam,* பெ. (n.) 1. காற்று (பிங்.); wind, air. மாவாதஞ் சாய்த்த மராமரமே போல்கின்றார் (கம்பரா. நகர்நீங்கு. 99). 2. உடலில் வளி மிகுதலாகிய பிணிக்கூறு (பிங்.); windy humour of the body. *"வாதபித்த கபமென ...... மூவரும் .... நலித்தனர்" (உத்தரரா. அரக்கர் பிறப். 31.).*

த.வ. வளி, ஊதை

[Skt. vāda> த. வாதம்]

வாதம்[3] *vādam,* பெ. (n.) **வில்வம்** (மலை); பார்க்க; see bael.

[Skt. puti-vāta> த. வாதம்]

வாதப்பிடிப்பு *vāda-p-pidippu,* பெ. (n.) ஊதையினால் ஏற்படும் எலும்புப் பொருத்துப் பிடிப்பு; contraction due to rheumatism. (சா.அக.)

[வாதம் + பிடிப்பு]

வாதாவி[1] *vādāvi,* பெ. (n.) 1. **வாதாபி1** பார்க்க; see vādāpi. *"இளவல் வாதாவி யென்போன்" (கந்தபு. வில். வாதா. வதைப். 2.).* 2. மேலைச்சாளுக்கியரின் தலைநகர்; Bādāmi, the capital of the Western Caļukyas *"வடபுலத்து வாதாவித் தொன்னகரந் துகளாக" (பெரியபு. சிறுத்தொண்.6.).*

[Skt. vādāpi> த. வாதாவி]

வாதி[1]-த்தல் *vādi-,* 4 செ. குன்றாவி. (v.t.) 1. வருத்துதல்; to torment, afflict, trouble. *"மாவலி வாதிக்க வாதிப்புண்டு" (திவ். திருவாய். 7,5,6).* 2. தடுத்தல்; to hinder, obstruct. *"தத்தங் குடிமையான் வாதிப்பட்டு" (நாலடி.66.).*

த.வ. நலிதல்

[Skt. bādh> த. வாதித்தல்]

வாதி[2]-த்தல் *vādi,* 4 செ. குன்றாவி. (v.t.) வாதாடுதல்; to argue, dispute, to asseverate.

த.வ. எதிராடல்

[Skt. vāda-,> த. வாதித்தல்]

வாதி[3] *vādi,* பெ. (n.) 1. எடுத்துப்பேசுபவன்; one who advocates. *"சோற்றுத் துறையர்க்கே வாதியாய்ப் பணி செய்" (தேவா. 391,4).* 2. சொற்போரிடுபவன்; disputant, debater. *"வாதிகையன்ன கனவக்கதி ரிறைஞ்சி" (மலைபடு. 112.)* 3. வழக்குத் தொடுப்போன்; complainant, plaintiff; opp. to pirati-vāti. 4. புலமையோர் நால்வருள், வாதில் ஏதுவும் மேற்கோளும் எடுத்துக்காட்டிப் பிறர்கோள் மறுத்துக் தன்கொள்கையை நிலைநிறுத்துவோன்; (யாப். வி. பக். 514.) (பிங்.); scholar who by adducing reasons and quoting authorities confutes the statements of his opponent and establishes his own, one of four pulamaiyōr, q.v. 5. பொன்னாக்கம் செய்பவன்; alchemist. *"தோன்றினன் மனமருள் செய்வதோர் வாதி" (கந்தபு. பார்க். 116.).*

[Skt. vādin> த. வாதி]

வாதுமை *vādumai,* பெ. (n.) 1. மரவகை; common almond, m,tr., prunus amygdalus. 2. நீண்ட மரவகை; Indian almond, 1,tr., termin-alia ctappa.

[Skt. vādāma> த. வாதுமை]

வாதுவன் *vāduvaṉ,* பெ. (n.) 1. குதிரைப்பாகன்; groom. *"காழோர் வாதுவர்" (சிலப். 22, 12).* 2. யானைப்பாகன் (பிங்.); mahout.

[Skt. bādh > த. வாதுவன்]

வாதுளம் *vādulam,* பெ. (n.) சிவத்தோன்றியங்கள் (சிவாகமம்) இருபத்தெட்டனுளொன்று; an ancient Śaivascripture in Sanskrit, one of 28 śivākamam, q.v. *"வாதுள முதலிய தந்திரத் தொகுதி" (கந்தபு. சூரனமைச். 129).*

[Skt. vādula > த. வாதுளம்]

வாதை *vādai,* பெ. (n.) 1. துன்பம்; affliction, torment, distress. *"வாதைப் படுகின்ற வானோர்" (தேவா. 570,2,).* 2. துன்பம் (வேதனை) செய்யும் நோய். (பிங்.); painful disease.

[Skt. bādhā > த. வாதை]

வாந்தி *vāndi,* பெ. (n.) கக்கல்; (நாமதீப. 600.); vomiting, ejecting from the mouth.

த.வ. வாயாலெடுத்தல், உமித்தல்

[Skt. vānti > த. வாந்தி']

வாந்திபேதி *vāndi-pedi,* பெ. (n.) நச்சுக் கழிச்சல் நோய் (இக்.வ.); cholera, as attended with vomiting and purging.

த.வ. கக்கல் கழிச்சல்

[Skt. vāndi + peti > த. வாந்திபேதி]

வாந்தியுப்பு *vāndi-y-uppu,* பெ. (n.) கக்கலுண்டாக்கும் உப்பு. (இங். வை.); tartar emetic, potassio tartras.

த.வ. கக்கல் உப்பு

[Skt. vandi > த. வாந்தி]

வாந்தியெடு-த்தல் *vāndi-y-eḍu-,* 4 செ.குன்றாவி. (v.t.) கக்கல் செய்தல்; to vomit.

த.வ. கக்கு

[Skt. vāndi > த. வாந்தியெடு-த்தல்]

வாபசுபெறு-தல் *vāpasuperu-,* 4 செ.கு.வி. (v.i.) 1. போட்டி முதலியவற்றிலிருந்து விலகுதல்; முறைப்படி அறிவித்த ஒன்றை திரும்பப்பெறுதல்; withdraw from a competition, etc. withdraw an application, a notice, etc. கடைசி நேரத்தில் அந்த வீரர் இருநூறு மீட்டர் பந்தயத்திலிருந்து வாபசு பெற்றுக் கொண்டார்./ வேட்பு மனுக்களை வாபசு பெற நாளை தான் கடைசி நாள்/ தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை வாபசு பெற்றாலொழிய பேச்சுவார்த்தை இல்லை என்கிறார்கள். 2. பொருளையோ பணத்தையோ திரும்பப் பெற்றுக் கொள்ளுதல்; take back. அந்தக் கடையில் எந்த ஒரு பொருளையும் வாபசு பெற மாட்டார்கள்/ தைலம் வலியைப் போக்காவிட்டால் உங்கள் பணத்தை வாபசு பெற்றுக் கொள்ளலாம். 3. அனுப்பிய படைகளை திரும்ப வருமாறு செய்தல்; with draw, recall the army. ஆக்கிரமித்த இடங்களிலிருந்து படைகளை அந்த நாடு வாபசு பெற வேண்டும்/ போர் முனையில் தன் நிலைகளை இழந்த படைகளை அதிக சேதம் இல்லாமல் வாபசு பெற்றுக் கொண்டது. (கிரியா.).

வாமம் *vāmam,* பெ. (n.) 1. அழகு. (பிங்.); beauty. *"வாமச் சொரூப முடையோய்" (இரகு. திக்குவி. 140.)* 2. ஒளி. (சூடா.); light, brightness, splendour. *"வாம மேகலை மங்கையோடு" (கம்பரா. கைகேசி. 49.)* 3. இடப்பக்கம்; left side. *"வாமத்தாண் மேல் வர வலத்தாண் மேனின்று" (திருவாலவா. 32, 8).* 4. நேர்மையின்மை; unrighteousness, injustice. *"வாமப்போர் வயப்பிசாசனும்" (கம்பரா. படைத்தலை. 49.)* 5. எதிரிடை (வின்.); opposition. 6. தீமை; evil, baseness. *"வாமக்கள்ளைக் குடித்தவர் போல" (குற்றா. குற. 105).* 7. அகப் புறச்சமயம்

ஆறனுள் அனைத்துலகும் சத்தியின் பரிணாமமே என்றும் சத்தியுடன் இலயித்தலே முத்தியென்றும் கூறும் மதம் *(சி.போ.பா அவையடக். பக். 50.);* (Šaiva) a šaiva sect which declares that the whole universe is a manifestation of šakti, and that salvation consists in absorption in her, one of six aka-p-pura-camayam.q.v. 8. பாம்பு வகை (வின்.); a kind of snake. 9. முலை (வின்.); woman's breast. 10. செல்வம் (வின்.); riches.

[Skt. vāma > த. வாமம்]

வாமன் *vāmaṉ,* பெ. (n.) 1. அருகன்; Arhat. *"வார்தளிர்ப்பிண்டி வாம" (சீவக. 3018).* 2. புத்தன்; Buddha. *"காமற் கடந்த வாமன் பாதம்" (மணிமே.5,77).* 3. சிவபிரான்; Šiva. *"கங்கை சூடும் வாமனை" (தேவா. 1050,4).*

[Skt. vāma > த. வாமன்']

வாமனக்கல் *vāmaṉa-k-kal,* பெ. (n.) இறையிலி நிலங்களின் எல்லை குறிக்க நாட்டப்படும் வாமனாவதாவுருவமைந்த கல் (insc); boundary stone of lands granted for religious purpose, as carved with the figure of Vāmaṉa.

[வாமனன் + கல்]

[Skt. vāmana > த. வாமனன்]

வாமனன் *vāmaṉaṉ,* பெ. (n.) பத்து தோற்றரவத்து (தசாவதாரத்து)ள் குறள் வடிவாய் அவதரித்த திருமால். (பிங்.); Tirumal his dwarf incarnation, one of tacāvatāram, q.v. *"வாமனன் மண்ணிது வென்னும்" (திவ். திருவாய். 4,41.)*

[Skt. vāmana > த. வாமனன்]

வாயசி *vāyasi,* பெ. (n.) பெண் காக்கை. (இலக். அக.); hen-crow.

[Skt. vāyasi > த. வாயசி]

வாயு *vāyu,* பெ. (n.) 1. காற்று (பிங்.); wind, air. 2. ஐம்பூதத்துள் ஒன்று; an element, one of pañca-pūdam. *"அதன் கண் வாயு வெளிப்பட்டு" (மணிமே. 27, 209).* 3. எண்டிசைத் தேவருள் வடமேற்கு மூலைக்குத் தலைவனான தேவன்; Vāyu, the wind-god, regent of the north-west, one of the asṭa-tikku-p-pālakar. 4. வயிற்றுப் பொருமல்; flatulence.

த.வ. வளி

[Skt. vāyu > த. வாயு]

வார்த்திகம்[1] *vārttigam,* பெ. (n.) நூற்பாவின் (சூத்திரம்) கருத்தை விளக்கும் ஒரு வகையுரை (சி. போ. 1, பக் 41.); supplementary rule added to a sūtra critical gloss or annotation.

[Skt. vārttika > த. வார்த்திகம்']

வார்த்தை[1] *vārttai,* பெ. (n.) 1. சொல்; word, phrase. 2. மறுமொழி (பிங்.); reply. 3. உறுதிமொழி; promise 4. செய்தி; news, intelligence, tiding. ஒரு வாணிகனை யாட்கொண்ட வார்த்தை (தேவா. 414, 7.).

வார்னீசு *vārnīcu,* பெ. (n.) மரப்பொருள் முதலியவற்றிற் பூசப்படும்மினுக்கெண்ணெய்; varnish.

த.வ. மினுக்கெண்ணெய்

[E. varnish > த. வார்னீசு]

வாரண்டு *vāraṇṭu,* பெ. (n.) 1. ஆளைக் கட்டுப்படுத்திப் பிடிக்க அரசால் விடுக்கப்படும் கட்டளை; warant for arrest. 2. பிணை (இ.வ.); security.

த.வ. பிடி

[E. warrant > த. வாரண்டு]

வாரம் *vāram,* பெ. (n.) 1. ஞாயிறு, திங்கள், செவ்வாய், அறிவன் (புதன்), வியாழன், வெள்ளி, காரி (சனி) என்ற ஏழு கிழமைகள்; days of the week, numbering seven, viz., āti-vāram, cōma-vāram, maṉkaḷa-vāram, caumiya -vāram, kuru-vāram, cukkira-vāram, cani-vāram. 2. ஏழு கிழமைகள் கொண்ட காலப்பகுதி. (பிங்.); week.

[Skt. *vāra* > *த. வாரம்¹*]

வால்மீகி *vālmīki*, பெ. (n.) வடமொழியில் இராமாயணமியற்றிய முனிவர் (வின்.); a sage, the author of the Rāmāyana.

[Skt. *vālmīki* > *த. வால்மீகி*]

வாலிபம் *vālipam*, பெ. (n.) இளமை; youth, juvenility. *"வாலிப மங்கை" (திருப்பு. 1141.).*

த.வ. இளந்தை, வாலை

[Skt. *bālya* > *த. வாலிபம்*]

வான்மீகி *vānmīki*, பெ. (n.) **வால்மீகி** பார்க்க; see vālmīki. *"வாங்கரும் பாத நான்கும் வகுத்த வான்மீகி யென்பான்" (கம்பரா. நாட்டுப். 1.)*

[Skt. *vālmīki* > *த. வான்மீகி*]

வானப்பிரத்தம் *vānappirastam*, பெ. (n.) 1. ஒழுகலாறு (ஆச்சிரமம்) நான்கனுள் மனைவியுடன் காட்டிற்குச் சென்று தவஞ் செய்யும் நிலை. (சி.சி. 8, 11, மறைஞா.) life of a vānappirastan one of four ācciramam. 2. காட்டிருப்பை. (மலை); wild mahwa.

[Skt. *vānaprastha* > *த. வானப்பிரசதம்*]

வானி *vāni*, பெ. (n.) படை (பிங்.); army. *"பாண்டவர் வானி குலைந்தவே" (சேதுபு. இராமதீ. 34.)*

[Skt. *vāhinī* > *த. வானி¹*]

விசக்கடி *viśā-k-kaṭi*, பெ. (n.) 1. நஞ்சு விலங்குகளால் தீண்டப்படுகை; poisonous bite, bite of venomous reptiles or animals. 2. பெருந்துன்பம்; serious trouble. *"எனக்கு ஒருபெரிய விஷக்கடியாயிற்றே"*

த.வ. நச்சுக்கடி

விசக்கண் *viśā-k-kaṇ*, பெ. (n.) தீமை பயக்கும் பார்வையுள்ள கண்; evil eye.

த.வ. நச்சுக்கண்

[Skt. *viśa* > *த. விசம்*]

விசக்கல் *visā-k-kal*, பெ. (n.) 1. விசத்தையெடுப்பதாகக் கருதப்படுங்கல் (வின்.); a stone supposd to absorb poison. 2. காலில் பட்டால் பட்ட இடத்தில் விசமுண்டாக்கும் கல்; poisonous stone that causes pain when it priks the foot

த.வ. நச்சுக்கல்

[Skt. *viśa* > *த. விசம்*]

விசக்காய்ச்சல் *visā-k-kāyccal*, பெ. (n.) 1. இசிவு சுரம்; enteric fever, typhoid. 2. சுரநோய்வகை (வின்.); pestilential fever.

த.வ. நச்சுக்காய்ச்சல்

[Skt. *visa* > *த. விசம்*]

விசக்காற்று *visā-k-kāṟṟu*, பெ. (n.) 1. நச்சுத்தன்மையுள்ள காற்று; poisonous wind. 2. வாடைக் காற்று; northerly wind.

த.வ. நச்சுக்காற்று

விசகடிகை *visakaḍigai*, பெ. (n.) விண்மீன்களால் ஏற்படும் தீய காலம் (சோதிடம்) (விதான. குணகல. 25, உரை.); inauspicious period in the duration of a naksatra.

விசகிருமிநியாயம் *visakiruminiyāyam*, பெ. (n.) நஞ்சி(விசத்தி)லுண்டாகும் புழுப்போல் தீயதிற் பழகுவோர்க்கு அது தீங்காகத் தோன்றாமை குறிக்கும் நெறி; nyāya of the worm bred in poison, illustrating the principle that an evil to which a person in accustomed will not appear to him as an evil.

வியாக்கியானம் *viyākkiyāṉam*, பெ. (n.) உரை; exposition, explanation, comment, commentary. *"தத்தமக்குத் தோன்றியவாறெல்லாம்.....வியாக்கியானஞ் செய்து" (சிவ.சம.33).*

த.வ. விளக்கவுரை

[Skt. vyākhyāna >த. வியாக்கியானம்]

வியாகரணம் *viyākaraṇam,* பெ. (n.) 1. அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்றான இலக்கணம்; grammar, one of aṟupattunālukaai, q.v.; 2. வேதாங்கம் ஆறனுள் ஒன்றான வடமொழியிலக்கணம்; Sanskrit grammar, one of six vētāṅkam. *"ஐந்திரத் தொடக்கத்து வியாகரணமும்" (கலித். கடவுள்வா. உரை.)*

த.வ. இலக்கணம்

[Skt. vyākaraṇa >த. வியாகரணம்]

வியாகரி-த்தல் *viyākari-,* 4 செ.கு.வி. (v.i.) விரித்துரைத்தல்; to propound, explain. *"வாக்கிய முப்பதினால் வகை செய்து வியாகரித்தோம்"*

[Skt. vyā-kṛ >த. வியாகரி-த்தல்]

வியாகுலம் *viyākulam,* பெ. (n.) 1. துக்கம்; sorrow, trouble. 2. கவலை; anxiety. *"ஏழைகள் வியாகுலமி தேதென வினாவி" (திருப்பு. 176.),* 3. மயக்கம் (இ.வ.); perplexity, bewilderment.

த.வ. துயரம்

[Skt. vyākula >த. வியாகுலம்]

வியாச்சியம் *viyācciyam,* பெ. (n.) 1. வழக்கு; dispute. 2. முறைமன்ற (நியாய) வழக்கு (இக்.வ.); law-suit.

[Skt. vyāja >த. வியாச்சியம்]

வியாசபாரதம் *viyāśa-bāradam,* பெ. (n) வியாசர் இயற்றிய வடமொழி மகாபாரதம்; the Maga Bhārada composed by Vyāsain Sanskrit.

[Skt. vyāsa+bhārata>த. வியாசபாரதம்]

வியாசம் *viyāśam,* பெ. (n.) 1. பிரிவு, பகுக்கை; separation, division, classification. 2. ஒரு செயலைப் பற்றி எழுதும் கட்டுரை (இக்.வ.); written paper, essay. 3. அற (தரும) நூல் பதினெட்டனுள் வியாசர் இயற்றியதாகக் கூறப்படும் சுமிருதி; a Sanskrit text-book on Hindu law, aescribed to vyāsa, oneof 18taruma-nūl, q.v.

[Skt. vyāsa>த. வியாசம்]

வியாசன் *viyāśaṉ,* பெ. (n.) வேதங்களை வகுத்தவனும் பிரம்மசூத்திரம் பாரதம் பதினெண்புராணம் முதலிய நூல்களை இயற்றியவனுமான முனிவன்; an ancient sage, the original compiler of the four vēdas and author of the brahma sutras, the mahābhārata, the 18chief purāṇas, etc,.

[Skt. vyāsa>த. வியாசன்]

வியாதன்[1] *viyādaṉ,* பெ. (n.) 1. வியாசன்; the sage vyāsa. *"வியாதனாய்......மாமறை நான்கென வகுத்து..........உரைத்தான்" (பாகவத.1, மாயவனமி. 33).* 2. வேடன்; hunter.

[Skt. vyāsa>த. வியாதன்]

வியாதி *viyādi,* பெ. (n.) 1. நோய்; disease, ailment, sickness, malady. *"ஆதியும் வியாதியுமின்றி" (ஞானவா. மாவலி. 28.).* 2. தொழுநோய்; leprosy.

[Skt. vyādhi>த. வியாதி]

வியாதிக்காரன் *viyādi-k-karan,* பெ.(n.) நோயாளி; (வின்.) sickman.

த.வ. நோயாளி

[Skt. vyādhi>த. வியாதி]

வியாதிசாந்தி *viyādi-sāndi,* பெ. (n.) நோய்நீங்கச் செய்யும் சடங்குவகை; a propitiatory ceremony for the cure of disease.

[Skt. vyādhiśānti>த. வியாதிசாந்தி]

வியாதிபரீட்சை *viyādi-pariṭcai,* பெ.(n.) நாடி முகம் மலம் மூத்திரம் கண் நா உடல் தொனி என்ற எட்டினால் நோயைச் சோதிக்கை; diagnosis of a diseae by an examination

of nāṭi, mukam, malam, mūttiram, kañ, nācariram, toñi.

வியாதுதம் *viyātutam,* பெ. (n.) இயங்கியற்பொருள்; movable thing.

[Skt. vyādhūta>த. வியாதுதம்]

வியாப்தம் *viyāptam,* பெ. (n.) பரப்பப்பட்டது; that which is pervaded.

[Skt. vyāpta>த. வியாப்தம்]

வியாப்தி *viyāpti,* பெ. (n.) 1. எங்குமிருக்கை; omni presence. 2. பரந்திருக்கை; pervasion.

வியாப்பியம் *viyāppiyam,* பெ. (n.) 1. பரப்பப்படுவது that which is pervaded. *"அரனவற்கு வியாப்பியமே விமலை"* (சிவதரு. சிவஞான. 22).

வியாபகம் *viyāpagam,* பெ. (n.) 1. பரவியிருக்குந் தன்மை; pervasion, diffusion. 2. எங்குமிருக்குந்தன்மை; omnipresence. 3. எங்கும் அறியப்படுந்தன்மை; being widely known. "அவன் வியாபகமுள்ளவன்".

[Skt. vyāpaka>த. வியாபகம்]

வியாபகன் *viyāpagan,* பெ. (n.) 1. கடவுள் (எங்குமிருப்பவன்); god as omnipresent. 2. எங்கும் அறியப்படுத்தன்மை படைத்தவன்; widely known person.

வியாபகி *viyāpagi,* பெ. (n.) எங்கும் வியாபிக்குஞ் சிவசத்தி.energy of Siva, a all - pervasive. *"விமலை வியாபகி"* (சிவதரு சிவஞானயோ. 22.);

வியாபரி[1]-த்தல் *viyāpari-,* 4 செ.கு.வி. (v.i.) 1. தொழிற்படுதல்; to operate, act. to be worked. 2. நன்கொடை சேகரித்தல்; to collect funds, as for a festival. *"இந்த உற்சவத்தை அவர் வியாபரித்துப் பண்ணுகிறார்."*

வியாபரி[2]-த்தல் *viyāpari-,* 11 செ.கு.வி. (v.i.) சொல்லுதல்; to tell.

வியாபாதம் *viyāpātam,* பெ. (n.) வஞ்சகம்; evil design.

வியாபாதனம் *viyāpātaṉam,* பெ. (n.) கொலை; murder, killing.

[Skt. vyāpādana>த. வியாபாதனம்]

வியாபாரச்சரக்கு *viyāpāu-c-carakku,* பெ. (n.) விலைபடுதற்கான பண்டம்; articles of merchandise

வியாபாரம் *viyāpāram,* பெ. (n.) 1. தொழில் ; action, operation, funtion. மண் முதலைந்திற்கும் வியாபாரம் 2. வாணிகம்; trade, commerce transaction.

வியாபாரி *viyāpāri,* பெ. (n.) வாணிகன்; merchant, dealer, trader

[Skt. vyāpārin>த. வியாபாரி]

வியாபி[1] *viyāpi,* பெ. (n.) எங்கும் நிறைந்திருப்பது. that which is all - pervasive, as air. *"சித்தன் மெய்த்தகு குணமிலி வியாபி"* (ஞானா. 1,7);

வியாபி-த்தல் *viyābi-,* 4 செ.கு.வி. (v.i.) எங்கும் பரந்து நிறைந்திருத்தல்; to pervade. "எங்கும் வியாபித்துணர்வா முனக்கு" (தாயு. பாயப்புலி. 52.).

[Skt. vyāp> த. வியாபி]

வியாபிருதி *viyāpiruti,* பெ. (n.) மறைக்கப்படாதிருக்கை being uncovered or open. *"லகுதை வியாபிருதி"* (சிவப்பிர. 30.).

வியாபினி *viyāpiṉi,* பெ. (n.) 1. சோடசகலைகளுள் ஒன்று. a mystic centre in the body, one of coṭacakalai, q.v. இதன் மேனாலின் வியாபினி (தத்துவப் 141.); 2. எங்கும் நிறைந்திருப்பது (யாழ். அக.); that which is all - pervasive.

வியாமம் *viyāmam,* பெ. (n.) நான்குமுழம்; fathom, the length of the extended arms.

[Skt. vyāma>த. வியாமம்]

வியாமோகம் *viyāmōgam,* பெ. (n.) பெருமோகம் (திவ். திருவாய். 6,1 பன்னீ.பா.); excessive attachment.

[Skt. vyāmoha>த. வியாமோகம்]

வியாயாமம் *viyāyāmam,* பெ. (n.) உடற் பயிற்சி (சுகசந்.71.); bodily exercise.

[Skt. vyāyāma>த. வியாயாமம்]

வியாயோகம் *viyāyōgam,* பெ. (n.) ரூபகம் பத்தனுள் காமமும் ஆசியமும் நீங்கி தலைவனது வீரச்செயலைக் கூறும் ஓரங்கமுடைய நாடக வகை. (சிலப். பக். 84, கீழ்க்குறிப்பு.); a species of drama in one act, describing a military or heroic exploit and excluding the sentiments of love and mirth, one of ten rūpakam. q.v

வியார்த்தி *viyārtti,* பெ. (n.) பொருள்; meaning, exposition.

வியாவகாரிகம் *viyāvakārigam,* பெ. (n.) வழக்கத்தில் இருப்பது (வேதா. சூ. 32.); that which relates to everyday life or practice

வியாவர்த்திதம் *viyāvarttitam,* பெ. (n.) இணையாவினை (அபிநய)க்கைவகை. (சீவக. 1257, உரை.); a hand-pose.

வியாவிருத்தி *viyāvirutti,* பெ. (n.) தள்ளுகை; exclusion; rejection.

வியாளக்கிராகி *viyāḷa-k-kirāgi,* பெ. (n.) பிடாரன் பார்க்க; see pidāraṉ

வியாளம் *viyāḷam,* பெ. (n.) 1. பாம்பு (சூடா); snake. 2. புலி; tiger. 3. யாளி; a mythological animal. 4. கெட்ட குணமுள்ள யானை; vicious elephant. (w).

வியாளவரி *viyāḷa-vari,* பெ. (n.) கோயிற் கருவறை (கர்ப்பக்கிரக) மதிலின் உச்சியில் யாளியுருவிலமைந்த ஒப்பனை (அலங்கார) வரி; a line of carbel stones having yāḷi images, in the inner shrine of a temple.

வியாளவியூகம் *viyāḷa-viyūgam,* பெ. (n.) பாம்பு வடிவான படையமைப்பு (சுக்கிரநீதி, 338.); serpent-like array of an army.

வியானபூமி *viyāṉa-pūmi,* பெ. (n.) சுடுகாடு (யாழ்.அக.); burial and burning ground.

வியானன் *viyāṉaṉ,* பெ. (n.) பத்துவளி (தசவாயு)யுள் ஒன்றானதும் அரத்த வோட்டத்தை யுண்டாக்குவதுமான வளி; the vital air of the body, which causes circulation of blood, one of taca-vāyu, q.v.

[Skt. vyāna>த. வியானன்]

வியுற்பத்தி *viyuṟpatti,* பெ. (n.) 1. மொழிப் பொருட்காரணம் (யாழ்.அக.); (gram) etymological origin, derivatrion. 2. கல்வியறிவு; proficiency in language, literature, etc.

வியுற்பத்திபண்ணு-தல் *viyuṟpatti-paṇṇu-,* 11 செ.குன்றாவி (v.t.) புதிதாயுண்டாக்குதல்; to create a new.

வியுற்பன்னன் *viyuṟpaṉṉaṉ,* பெ. (n.) கல்வியறிவுள்ளவன்; erudite scholar, one who is proficient in language, literature, etc.

வியூககாரன் *viyūkakāraṉ,* பெ. (n.) தையற்காரன் (யாழ். அக.). tailor.

வியூகபேதம் *viyūka-pētam,* பெ. (n.) படையணி முறிகை (யாழ். அக.); breaking of the serried ranks of an army.

வியூகம் *viyūkam,* பெ. (n.) 1. படை வகுப்பு (குறள். 767, உரை.); military array. 2. திருமால் நிலை ஐந்தனுள் சங்கருஷணன் பிரத்தியும்நன் அநிருத்தன் என்று மூவகையாகவும் வாசுதேவனைச் சேர்த்து நால்வகையாகவுமுள்ள நிலை. (அஷ்டாதச. தத்வத். 3,43.) (பரிபா. 3, 81, உரை.); manifestation of visṇu as three divinities, viz , caṅkarusaṇaṉ or as four

divinities, including vācutēvan, one of five Tirumāl-nilai, q.v. 3. திரள்; multitude, collection. 4. விலங்கின் கூட்டம். (சூடா.); herd, flock.

வியூகாவதாரம் *viyūgāvatāram,* பெ. (n.) 1. **வியூகம்** பார்க்க; see viyugam. *"சங்கருடணர் அநிருத்தரென்னு நால்வியூகாவதாரம்"* (பிரபோத. 45,4).

வியோகம் *viyogam,* பெ. (n.) 1. சாவு; death. 2. பிரிவு; separation. *"யோக வியோக முடைத்தோன்"* (ஞானா 61, 9.); 3. பிறவி நீக்கம்; (வின்.) release from births.

வியோமம் *viyomam,* பெ. (n.) வானம் (ஆகாசம்) (பிங்.); sky atmosphere. *"நாமமும் வடிவுங் கிளைத்திடு வியோம வடிவமாய்த் தோன்றும்"* (திருக்காளத். பு. சிவமான்.22.).

வியோமமஞ்சரம் *viyoma-mañcaram,* பெ. (n.) கொடி (சங்.அக.); flag.

*[**Skt.** vyoma+manjara]*

வியோமமண்டலம் *viyoma-maṇḍalam,* பெ. (n.) **வியோமமஞ்சரம்** பார்க்க (சங்.அக.); see *viyoma-mañcaram.*

*[**Skt.** vyoma+mandala]*

வியோமரூபிணி *viyoma-rūpiṇi,* பெ. (n.) சோடசகலையுளொன்று; a mystic centre in the body, one of coṭaca-kalai. *"நிற்கின்ற வியோம ரூபிணி நீலாகாயம்"* (தத்துவப். 142.).

வியோமாட்சரேகை *viyomāṭcarēkai,* பெ. (n.) கோள் (கிரகங்)களின் அட்சாம்ச நிலை; (வின்.) (āstron.) celestial latitude, as of planets.

விர்த்தாந்தம் *virttāntam,* பெ. (n.) **விருத்தாந்தம்** பார்க்க; see viruttāntam.

விர்த்தி[1] *virtti,* பெ. (n.) **விருத்தி**[1] பார்க்க; see virutti.

விர்த்தி[2] *virtti,* பெ. (n.) **விருத்தி**[2] பார்க்க; see virutti.

விரக்தம் *viraktam,* பெ. (n.) **விரத்தம்** பார்க்க; see viratam.

விரக்தி *virakti,* பெ. (n.) **விரத்தி** பார்க்க; see viratti.

விரகசன்னதம் *viraga-cannatam,* பெ. (n.) **விரகநோய்** பார்க்க; see virakanōi. *"விரக சன்னதமேற்ற"* (தாயு. எங்கு நிறை. 10.)

விரகதாபம் *viraga-tāpam,* பெ. (n.) **விரகநோய்** பார்க்க ; see virakanoy

விரகநோய் *viraga-nōy,* பெ. (n.) காதலர்க்குப் பிரிவாலுண்டாகும் துன்பம்; distress or sorrow of lovers due to separatrion from each other.

*[**Skt.** viraha+த. நோய்]*

விரகம் *viragam,* பெ. (n.) 1. பிரிவு; separation, especially of lovers. 2. **விரக நோய்** பார்க்க; see viraga nōy. 3. உலர்த்துகை; drying up. மண் முதலைந்திற்கும் வியாபாரம் பொறை பிண்டீகரணம் பாகமொடு விரக மிடங்கொடையாகும் (வேதா. சூ. 77); 4. காமம்; lasciviousness, lust. (w).

விரகவேதனை *viraga-vētanai,* பெ. (n.) **விரக நோய்** பார்க்க; see viraga nōy

விரகறம் *virakaṟam,* பெ. (n.) வெள்ளைச்சாரணை; horse purslane.

விரகறியாளன் *virakaṟi-y-āḷan,* பெ. (n.) அறிவுடையோன் wise man நறும் பூங்கரந்தை விரகறியாளர் மரபிற் சூட்ட (புறநா. 289).

விரகாவத்தை *virakavattai,* பெ. (n.) பிரிந்த காதலர் துன்புறும் நிலை; love-lorn condition of sparated lovers.

விரகி *viraki,* பெ. (n.) பிரிவாற் காமநோயுற்றவ–ள்–ன்; one pining from the seperation one's beloved. 2. காமி; (வின்.) lascivious person.

விரகிணி *virakini,* பெ. (n.) 1. காதலனை பிரிந்தவள்; woman separated from her lover. 2. சம்பளம்; salary, wages.

விரகிதன் *virakitaṉ,* பெ. (n.) தனியே விடப்பட்டவன்; lonely man.(இலக்.அக.).

விரசம் *virasam,* பெ. (n.) 1. வெறுப்பு; dislike a version 2. நிந்தை; (யாழ். அக.) censure.

[Skt. vi-rasa > த. விரசம்]

விரசமாக்கு-தல் *viracam-ākku-,* செ. குன்றாவி (v.t.) கெடுத்து விடுதல் to spoil mismanage. காரியத்தை விரசமாக்கி விடாதே.

விரசாநதி *virasā-nadi,* பெ. (n.) பரமபதத்தின் புறத்ததோர் யாறு; a river the borders on Viṣṇu's heaven

விரணகாசம் *viraṇa-kāśam,* பெ. (n.) கருவிழியிற் படரும் கண்ணோய் வகை (சீவரட். 261.); a disease of the eye causing film over the pupil of the eye.

[Skt. vraṇa + kāca > த. விரணகாசம்]

விரணகாரி *viraṇakāri,* பெ. (n.) 1. புண்ணைச் சுடும் மருந்து (பைஷஜ.); caustic. 2. தோலினை (சருமத்தை)ப் புண்ணாக்கும் மருந்து (இங். வை. 31.); escharotic.

விரணகிரந்தி *viraṇa-kiranti,* பெ. (n.) புற்று நோய் (இங். வை. 307.); cancer.

விரணசன்னி *viraṇa-caṉṉi,* பெ. (n.) இசிவு நோய்வகை; (பைஷஜ.) tetanus.

விரணப்பரு *viraṇa-p-paru,* பெ. (n.) கடைக்கண் விளிம்பில் உண்டாகுஞ் சிறுபரு; (சீவரட்.269.) pimple in the eye.

விரணம்[1] *viraṇam,* பெ. (n.) 1. காயம்; wound, sore, bruise. 2. சிலந்திப்புண்; boil. 3. புண்கட்டி (வின்.); ulcer. 4. முறிவு; fracture 5. பகைமை; enmity, hatred. *"தங்கண் மேல் விரணமதாகி" (கந்தபு. இரணியன்யுத்.3)*

[Skt. vraṇa > த. விரணம்]

விரணம்போக்கி *viraṇam-pōkki,* பெ. (n.) ஆடு தின்னாப்பாளை; (வின்.) worm - killer.

விரணவாதம் *viraṇa-vātam,* பெ. (n.) நோய் வகை (கடம்ப. பு. இலீலா. 123.); a disease.

விரணவைத்தியன் *viraṇa-vāittiyaṉ,* பெ. (n.) புண்ணுக்கு பண்டுவம் செய்வோன்; surgeon.

விரத்தம் *virattam,* பெ. (n.) 1. உலகப் பற்றுவிடுகை; (வின்.) renunciation. 2. வெறுப்பு; (சங். அக.) dislike.

விரத்தன் *virattaṉ,* பெ. (n.) 1. உலகப் பற்றில்லாதவன் man free from worldly attachments. *"விரத்தரிற் றலைவனாகி"* (கந்தபு. கயமுகனுற் 31.); 2. தவசி; male ascetic. 3. மணமின்றி இருப்பதாக உறுதி செய்து கொண்டவன். (வின்.) man who has taken a vow of celibacy.

[Skt. vi-rakta > த. விரத்தன்]

விரத்தி[1] *viratti,* பெ. (n.) 1. உலகப் பற்றில்லாதவள்; woman free from worldly attachments. 2. தவத்தி; female ascetic. 3.மணமின்றி இருப்பதாக உறுதி செய்து கொண்டவள்;(வின்.) woman who has taken a vow of celibacy.

விரத்தி[2] *viratti,* பெ. (n.) 1. பற்றின்மை (சூடா.); freedom from worldly attachments; renunciation of worldly pleasures. 2. வெறுப்பு; dislike.

[Skt. vi-rakti > த. விரத்தி]

விரதங்கா-த்தல் *virataṅ-kā-,* செ.கு.வி. (v.i.) நோன்பு மேற்கொண்டொழுகுதல்; (வின்.) to observe a vow.

விரதத்துவம் *viratattuvam,* பெ. (n.) பட்டினி நோன்பு முதலியவற்றால் உடலை ஒறுக்கும் நிலை; (வின்.)state of self-inficted austerity.

விரதநியமம் *virata-niyamam,* பெ. (n.) 1. நோன்போடு ஒழுகுகை; observing austerities. 2. தீட்சை செய்விக்கை; (வின்.) act of religious initiation.

விரதம்[1] *viradam,* பெ. (n.) 1. நோன்பு; religious vow act of austerity, holy practice as fasting, continence etc. *"ஊக்கித்தாங் கொண்ட விரதங்கள் (நாலடி. 51.)* 2. கொள்கையில் கொண்ட மனவுறுதி (சங்கற்பம்) (பிங்.); solemn vow,,oath. "தன்னுடன் பிறந்த முன்னவர் விரத முடித்து"(S.I.I.iv. 94) 3. நல்வினைப் பயன் (புண்ணியம்) ஏழனுள் ஒன்றான தவம் (சூடா.); penance, one of seven punniyam. 4. நடப்பு நிகழ்வினை (சுமாவர்த்தனம்);aceremony.

த.வ. நோன்பு

[Skt. vrata > த. விரதம்]

விரதம்பிடி-த்தல் *viratam-pidi-,* செ.கு.வி. (v.i.) பட்டினி கிடத்தல்; (வின்.) to fast.

விரதமிறக்கு-தல் *viratam-irakku-,* செ.கு.வி. (v.i.) மனவுறுதி (சங்கற்பித்து) கொண்டு நடத்தும் நோன்பை (விரதத்தை) அமைதி (சாந்தி) செய்து முடித்தல்; to celebrate the conclusion of a religious vow or fast with appropriate ceremonies.

விரதவுத்தியாபனம் *virata-v-uttiyāpanam,* பெ. (n.) நோன்பு (விரத) முடிக்கும் அமைதி (சாந்திச்) நிகழ்வு (சடங்கு) (யாழ். அக.); ceremonies at the conclusion of a viratam.

விரதி *virati,* பெ. (n.) 1. நோன்பு மேற்கொண்டோன்; one who has taken a religious vow *"விரிகடை விரதிகள்" (தேவா. 700, 3).* 2. துறவி (சது.); one who has renounces the world. 3. ஓதல் திருவாழ்வன் (பிரமசாரி); celibate student. "அருத்திடுகக வன்னாதி 4. சுமா வர்த்தனம்; a ceremony.

த.வ. நோன்பி

[Skt. vrata > த. விரதம்]

விரயம் *virayam,* பெ. (n.) 1. பயனில்லாச் செலவு; expenditure without utility. 2. மிகுசெலவு (வின்.); extravagance, waste, prodigality. 3. பேதியாகை (வின்.) கழிச்சல்; purging.

[Skt. vyaya > த. விரயம்]

விராகம் *virāgam,* பெ. (n.) பற்றின்மை, in difference to worldly pleasures, absence of passion or attachment. *"விராகத்தை சனி முயன்று"* (ஞானவா. வீதக. 31)

விராணி *virāṇi,* பெ. (n.) யானை; (சங். அக.) elephant.

விராத்தக்காரன் *virātta-k-kāran,* பெ. (n.) வரி தாண்டுவோன்; (w) collector of revenue.

விராத்தம் *virāttam,* பெ. (n.) வரி வாங்குதல்; (வின்.). collection of revenue.

[U. barāt > த. விராத்தம்]

விராத்தியன் *virāttiyaṉ,* பெ. (n.) குல நெறியை விட்டதால் குலத்திற்குப் புறம்பானவன்; (w) one who has lost caste through non-observance of caste-rules. 2. வேளாப்பார்ப்பான் சாதிக் கலப்பு காரணமாக ஓதுதல் மறுக்கப்பட்ட பார்ப்பனப் பிரிவினன்; mixed caste Brahmins banned from reciting vedas.

விராதம் *virātam,* பெ. (n.) 1. கைவேலை; manual labour. 2. நாட்கூலி வேலை; day-labour.

விராதன் *virāttan,* பெ. (n.) இராமபிரானாற் கொல்லப்பட்ட ஓர் அரக்கன். (கம்பரா. விராத.); a rāksasa slain by Rāman.

விராதனன் *virātanan,* பெ. (n.) கொலைஞன் (நிகண்டு. 196.); murderer.

விராதீனன் *virātīnan,* பெ. (n.) 1. நாட்கூலிக்காரன்; day-labourer. 2. வேலையில்லாதவன்; unemloyed person.

விராமம் *virāmam,* பெ. (n.) 1. முடிவு; (யாழ். அக.) cessation, termination, end. 2. ஒற்றெழுத்து (பிங்.); consonant. 3. இளைப்பாறுகை; rest.

விராய் *virāy,* பெ. (n.) 1. விறகு; fuel fire wood. வல்விராய் மாய வெரிதழல் (நீதிநெறி. 64.) 2. பூச்செடிவகை; a flowering plant. விராய்மலர்க்கோதை (பெருங். வத்தவ. 12, 38, அரும்.).

விராயம் *virāyam,* பெ. (n.) தளவாடம்; (யாழ். அக.) materials, as for a piece of work.

விராலம் *virālam,* பெ. (n.) பூனை; (சங். அக.) cat.

விரீகி *viriki,* பெ. (n.) 1. நெல்; (திவா.) (சீவக. 89, உரை). paddy 2. அரிசி; (சங். அக.). rice. 3. காரேலம்; (யாழ். அக.). a kind of cardamom

விரீடம் *virītam,* பெ. (n.) வெட்கம்; (இலக். அக.). shame.

[Skt. vriḍā > த. விரீடம்]

விருக்கம் *virukkam,* பெ. (n.) மரம்; (சூடா.). tree.

விருக்கவீடு *virukka-viḍu,* பெ. (n.) மரப்பொந்து; (சங்.அக.). hollow in a tree.

விருக்கத்திரணம் *viruka-t-tirapam,* பெ. (n.) மூங்கில் (மலை); bamboo.

விருகதூமம் *virugatūmam,* பெ. (n.) நீர்மேற்படக் கொடி வகை; (மூ.அ.). a water-plant.

[Skt. vrkadhūmaka > த. விருகதூமம்]

விருகம் *virugam,* பெ. (n.) விலங்கு; animal beast. *"பல்விருக மாகி"* (திருவாச. 1, 27);

[Skt. mruha > த. மிருகம் – விருகம்]

விருகற்பதி *virukarpadi,* பெ. (n.) வியாழன்; (யாழ்.அக.) jupiter.

[Skt. brhaspati > த. விருகற்பதி]

விருகு *virugu,* பெ. (n.) வெருகு; (மலை.) long-rooted arum.

விருகோதரன் *virugotaran,* பெ. (n.) பீமன்; (பிங்.) (செந்நாயது போன்ற வயிற்றை யுடையவன்) Bhīma, the second son of Pāṇḍu, as having a belly like that of a wild dog.

[Skt. vikōdara > த. விருகோதரன்]

விருச்சிகம்[1] *viruccigam,* பெ. (n.) 1. தேள் (திவா.); scopion. 2. ஓரை (ராசி) மண்டலத்தின் எட்டாம் பகுதி (திவா.); scorpio of the zodiac. 3. நளி (கார்த்திகை)த் திங்கள்; the eighthsolar month. "விருச்சிகத்துறு மாறனாள்" (தணிகைப்பு. இந்திர. 18.) 4. நண்டு (இலக். அக.); crab.

த.வ. நளி

[Skt. vrścika > த. விருச்சிகம்]

விருட்சம் *viruṭcam,* பெ. (n.) மரம்; tree. "விருட்சத்துக்கும் வல்லிசாதி சசிபங்களுக்கும் பிராணனு முள" (தக்கயாகப் 38, உரை.)

[Skt. vṛkṣa > த. விருட்சம்].

விருட்சராசன் *viruṭca-rāšan,* பெ. (n.) அரசமரம் (மூ.அ.); pipal.

[Skt. vṛkṣa-rāja > த. விருட்சராசன்].

விருட்டி *viruṭṭi,* பெ. (n.) மழை; rain. அதிவிருட்டி (குற்றா. தல. சிவபூசை. 46.).

[Skt. vṛṣṭi > த. விருட்டி].

விருட்டிணி *viruṭṭiṇi,* பெ. (n.) கண்ணபிரான் (இலக். அக.); Lord Krishnan.

விருடகம்[1] *virudagam,* பெ. (n.) எலி (அரு.நி.); rat.

விருடகம்[2] *virudagam,* பெ. (n.) பூனை (அரு.நி.); cat.

விருடபம் *virudapam,* பெ. (n.) எருது (யாழ். அக.); bull.

விருடம் *virudam,* பெ. (n.) 1. **விருடபம்** பார்க்க; see virudapam 2. எலி; rat. 3. தருமம்; virtue, justice. 4. மேன்மை; excellence.

விருடலம் *viruṭalam,* பெ. (n.) 1. குதிரை (யாழ். அக.); horse. 2. உள்ளி; garlic.

விருடலோசனன் *viruda-locaṉaṉ,* பெ. (n.) எலி (யாழ். அக.); rat.

விருடாங்கம் *virudāṅkam,* பெ. (n.) தாமிரபரணிப் பகுதி (பிரதேசம்) (நாமதீப. 503.); the region of the river Tāmiraparṇi.

விருடியம் *virudiyam,* பெ. (n.) பருத்திருக்கை; (நாமதீப. 769.) becoming fat or bulky.

[Skt. vṛṣya > த. விருடியம்]

விருத்தக்கலித்துறை *virutta-k-kalitturai,* பெ. (n.) கலித்துறைப்பா வகை; (சீவக.1, உரை.) a kind of kalitlurai verse.

விருத்தகங்கை *virutta-kaṅkai,* பெ. (n.) கோதாவரி (சூடா.); the river Godāvari.

[Skt. vṛddha-gaṅgā > த. விருதகங்கை]

விருத்தகந்தி *virutta-kanti,* பெ. (n.) செய்யுட்கதியிற் பெரும்பாலும் பயின்று வரும் சொல் (வசனம்) (இலக். அக.); prose with rhymes and rhythms peculiarly appropriate to verse, poetic prose.

விருத்தகிரி *virutta-kiri,* பெ. (n.) **விருத்தாசலம்** பார்க்க; see

விருத்தசங்கம் *virutta-caṅkam,* பெ. (n.) கிளிஞ்சல் (சங்.அக.); mussel shell.

விருத்தசம்பந்தம் *virutta-campantam,* பெ. (n.) தகாததென்று விலக்கப்பட்ட முறையினரை மணம்புரிகை; marriage with in the prohibited degrees of consanguinity, as invalid and condemned by law (R.F.).

விருத்தசேதனம் *virutta-cētaṉam,* பெ. (n.) ஆண்குறியின் முன்தோலை எடுத்துவிடுஞ் சடங்கு; circumcision.

விருத்தபோசனம் *virutta-pocaṉam,* பெ. (n.) பழைய சோறு (யாழ். அக.); cooked rice preserved in cold water.

விருத்தம்[1] *viruttam,* பெ. (n.) வட்டம் (சூடா.); circle, anything circular. கருவிருத்தக் குழி நீத்த பின் (திவ். இயற். திருவிருத். தனியன்); 2. சொக்கட்டானாட்டத்தில் விழும் தாயவகை; a fall of dice which entitles the player to another throw. 3. பாவினம் மூன்றனுள் ஒன்று (யாப்.வி.56.); a kind of verse, one of three pāviṉam q.v. 4. ஒழுக்கம்; conduct *"விருத்தமாதவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான்"* (கம்பரா. கங்கை. 41.); 5. செய்தி (யாழ். அக.); news. 6. தொழில்; (யாழ். அக.); work, employment. 7. ஒரு சிற்பநூல் (பொ.நி.); a treatise on architecture. 8. ஆமை (யாழ். அக.); tortoise. 9. வெள்ளெருக்கு (மலை.); white madar.

விருத்தம்[2] *viruttam,* பெ. (n.) 1. மக்கட்பருவம் ஆறனுள் ஒன்றான மூப்பு. (சூடா.) old age, one of the six makkaṭ-paruvam. ஒரு விருத்தம்புக் குழலுறவீர் (திவ். இயற். திருவிருத். தனியன்); q.v. 2. பழமை; (வின்.) antiquity. 3. அறிவு (யாழ். அக.); knowledge, wisdom.

[Skt. vṛddha > த. விருத்தம்]

விருத்தம்³ *viruttam,* பெ. (n.) 1. முரண்; contrariety, opposition. *"விருத்தம தணையும்"* (ஞான. 63,7); 2. முன்பகை (விரோதம்); hostility, enmity, hatred. 3. குற்றம்; fault. பேரறிவினார்கண்ணும்பட்ட விருத்தம் பலவானால் (பழமொ. 228); 4. பொல்லா வொழுக்கம் (திவ். இயற். திருவிருத். தனி. வியா.); wicked conduct. 5. இடையூறு; obstacle, hindrance. "அந்தக் காரியத்துக்கு விருத்தம் பண்ணுகிறான்" 6. ஏதுப் போலிகளு ளொன்று (மணிமே. 29, 192.); (Log.) a fallacy.

விருத்தம்⁴ *viruttam,* பெ. (n.) கூட்டம்; multitude, host. *"விருத்தம் பெரிதாய் வருவானை"* (திவ். நாய்ச். 14, 7);

விருத்தமல்லிகை *virutta-malligai,* பெ. (n.) குட மல்லிகை; (மூ.அ.) Arabian jasmine.

விருத்தவிலக்கணம் *virutta-v-illakkaṇam,* பெ. (n.) பனுவல் (பிரபந்தம்) தொண்ணுற்றாறனுள் அரசனது வில், வாள், வேல், செங்கோல், யானை, குதிரை, நாடு, ஊர், கொடை இவ்வொன்பதனையும் பப்பத்து விருத்தத்தால் ஒன்பது வகையுறப் புகழ்ந்து பாடும் பனுவல் (பிரபந்தம்) (சது.); a poem dealing with the bow, sword, spear, sceptre, elephant, horse, country, capital city and liberality of a king, each being praised in a decade of stanzas of a particular rhythm, one of 96 pirapantam, q.v.

விருத்தன் *viruttaṉ,* பெ. (n.) 1. முதுமையோன்; aged person. 2. மேலோன்; great man. *"வானவிருத்தனே போற்றி"* (திருவாச. 5, 61).

விருத்தாசலம் *viruttacalam,* பெ. (n.) கடலூர் மாவட்டத்திலுள்ள ஒரு சிவதலம்; a Śiva shrine in the Cuddalore District.

த.வ. முதுகுன்றம், பழமலை

விருத்தாசாரம் *viruttācāram,* பெ. (n.) பழந்தொடர்பு (பூர்வாசாரம்); (C.G.) ancient custom followed by one's ancestors for generations.

விருத்தாந்தம் *viruttāntam,* பெ. (n.) 1. நிகழ்ச்சி (சம்பவம்); occurrence, incident, event. 2. வரலாறு; account, history. 3. செய்தி; tidings, news, rumour, report. 4. பொருள்; subject, topic. 5. கதை; (w.) fable, story. 6. இயல்பு (சுபாவம்); (யாழ். அக.) nature. 7. வகை; kind, sort. 8. விதம் (யாழ். அக.); manner. 9. முழுமை; (யாழ். அக.) fullness. entirety. 10. இளைப்பாறுகை; (யாழ். அக.) rest, leisure.

விருத்தாப்பியம் *viruttāppiyam,* பெ. (n.) முதுமை; (w.) old age.

விருத்தான்னம் *viruttāṉṉam,* பெ. (n.) **விருத்தபோசனம்** பார்க்க; (சங். அக.). see.

விருத்தி¹ *virutti,* பெ. (n.) 1. ஒழுக்கம்; conduct, behaviour. *"விருத்தி, வேதியரோ, டெதிர்மேயினான்"* (கம்பரா. குகப். 73). 2. இயல்பு (சுபாவம்) (யாழ். அக.); nature. 3. தொழில்; emloyment, business. விருத்தி மாதர் விலக்க (சீவக. 1374.); 4. தொண்டு; devoted service. *"கடிமலர்வாளெடுத்தோச்சி...... ருத்திகுழக்க வல்லோர்கட்கு"* (தேவா. 292, 8); devoted service. 5. வாழ்வு வழி (சீவனம்) means of livelihood. என் விருத்தி உஞ்சவிருத்தி; 6. வாழ்நிலைக்காக (சீவிதமாக) விடப்பட்ட நிலம்; grand of land for one's livelihood or maintenance, inam land. *"சைவனாகி நம் விருத்தியும் தவிர்க்கும்"* (பெரியபு. திருநாவுக். 82.); 7. அடிமை; (வின்.) slavery. 8. விரிவுரை (நன். 22); gloss, elaborate commentary. 9. உரியபொருள்; (அக.நி.)

proper meaning. 10. உரியசொல்; (அக.நி.) proper word. 11. சாத்துவரி, ஆரபடி, கைசிகி, பாரதி என நான்கு வகைப்பட்ட நாடகநூலின் நடை; (drama.) style of dramatic composition, of four kinds, viz, cāttuvati, ārapaṭi, kaiciki, pārati. சாத்துவதி, ஆரபடி, கைசிசி, பாரதி யென விருத்தி நான்கு வகைப்படும் (சிலப். 3, 13 உரை, பக். 82); 12. ஆசனம்; posture. *"ஒன்பான் விருத்தியுட் டலைக்கண் விருத்தி"* (சிலப். 8,25); 13. தூய்மை; neatness, cleanliness, (Nāñ). 14. வட்டம்; (யாழ். அக.) circumference, circle. 15. சொக்கட்டான் ஆட்டத்தில் தொடர்ச்சியாக விழுந் தாயம்; (வின்.) a series of throws in one's turn in dice play.

[Skt. vṛtti > த. விருத்தி]

விருத்திக்கடன் *virutti-k-kaṭaṉ,* பெ. (n.) வட்டிக்கு வாங்குங் கடன்; Interest-bearing debt. "குன்றாவிருத்திக் கடன்கொண்டு" (திருவிளை. உலவாக்கோட்டை 7).

விருத்திசந்திரன் *virutti-cantiraṉ,* பெ. (n.) வளர்பிறை; waxing moon. (C.G.).

விருத்திசூதகம் *virutti-cūtakam,* பெ. (n.) குடும்பத்தில் குழந்தை பிறந்ததாலுண்டாந் தீட்டு; pollution on account of birth of a child in a family.

விருத்தியன் *viruttiyaṉ,* பெ. (n.) வேலையாள்; servant, slave. (W.).

விருத்தியுபாயம் *virutti-y-upāyam,* பெ. (n.) உயிர் வாழ்க்கைக்குச் (சீவனஞ்) செய்யும் வழி; means of livelihood.

விருத்தியுரை *virutti-y-urai,* பெ. (n.) விருத்தி[1], 8 பார்க்க; see virutti.

விருத்திரன் *viruttiraṉ,* பெ. (n.) விருத்திராசுரன் பார்க்க; see viruttirāšuran "ஈங்குவன் விருத்திரனென்ப" (திருவிளை. இந்திரன். 17)

விருத்திராசுரன் *viruttiracuraṉ,* பெ. (n.) இந்திரனால் (வதை) கொலையுண்ட ஓர் அசுரன்; an asura slain by Indra. *"வீரமிக்க விருத்திராசுரனைக் கொன்ற வோதரும் பழியாலஞ்சி"* (திருவாலவா. 1, 2).

விருத்திராரி *viruttirāri,* பெ. (n.) விருத்திராசுரனைக் கொன்றவனான இந்திரன் (திவா.); Indira, as the slayer of Virittirācuraṉ.

விருத்துப்பட்டிகை *virutti-p-paṭṭikai,* பெ. (n.) பழைய வரி வகை; an ancient tax.

விருத்தூண் *viruttūṉ,* பெ. (n.) புத்துணவு (இலக். அக.); fresh food.

விருத்தை *viruttai,* பெ. (n.) 1. அதிக வயதானவள் (பிங்.); aged woman. 2. ஐம்பத்தைந்து அகவையைக் கடந்தவள்; a woman past her 55th year. *"முதியளாம் விருத்தை தன்னை"* (கொக்கோ. 4,4) (Erot.)

விருதம் *virutam,* பெ. (n.) வெள்ளெருக்கு (சங். அக.); white madar

விருதர் *virutar,* பெ. (n.) வீரர்; warriors. *"வாளிகொண்ட விருதர்"* (பாரத. வாரணா. 76.).

விருதா *virutā,* பெ. (n.) வீண், வீணாய்; uselessness, fruitlessness; that which is vain or profitless; uselessly. *"விருதாவலைந் துழலு மடியேன்"* (திருப்பு. 102.).

விருதாவளி *virutāvaḷi,* பெ. (n.) அரசர் முதலியோர் பெறும் பட்ட வரிசை; detailed statement of titles.

விருதாவன் *virutāvaṉ,* பெ. (n.) பயனற்றவன்; good for-nothing fellow. *"போக்கிடமற்ற விருதாவனை ஞானிகள் போற்றுத லற்றது"* (திருப்பு. 266)

விருந்தாவனம் *viruntāvanam,* பெ. (n.) கண்ணபிரான் விளையாடியதும் யமுனைக்கரையி லுள்ளதுமான ஒரு தலம்; Bṛndāvanam, the scene of Kṛṣṇa's sports, near Gokula on the banks of the Jumna. *"விருந்தாவனத்தே கண்டோமே"* (திவ். நாய்ச். 14).

விரேசனம் *virēcanam,* பெ. (n.) 1. மலங்கழிகை purging, evacuation of bowels. *"கடுக்காய்கள் விரேசனத்தைப் பண்ணும்"* (ஞானவா. சிகித். 49) 2. பேதிமருந்து; purgative.

விரேசி–த்தல் *virēci-,* 4 செ.கு.வி. (v.i.) கழிச்சல்; to purge, have evacuations.

விரோசனம் *virosanam,* பெ. (n.) 1. கழிச்சல் (பேதி) மருந்து: purgative. *"மறுவறுவிரோசனந்தான் வருஷத்திரண்டு முறை"* (குரே. சத. 19); 2. பேதியாகை; purging. *"வசம்பைச் சுட்டருந்த ஓதிய விரோசன மொழியுமே"* (பாலவா. 1078.).

விரோசனன் *virosanan,* பெ. (n.) 1. சூரியன்; (பிங்.) sun. *"விரோசனன் சுதனை"* (பாரத. வாசுதே. 2); 2. சந்திரன் (யாழ். அக.); moon. 3. தீ அக்கினி (யாழ். அக.); agni. 4. மகாபலியின் தந்தையும் பிரகலாதனுடைய மகனுமான ஓரசுரன் (அபி. சிந்.); an asura son of Prahlāda and father of Bali.

விரோதக்காரன் *virota-k-kāran,* பெ. (n.) பகைவன்; enemy.

விரோதகிருது *virotakirutu,* பெ. (n.) **விரோதிகிருது** பார்க்க; see virodhikirtu.

விரோதசிலேடை *virōta-śilēṭai,* பெ. (n.) முன்னர் சிலேடிக்கப்பட்ட பொருள்களுள் ஒன்று பின்னர் வரும் பொருள்களோடு விரோதிப்பத் தொடுக்கப்படுஞ் சிலேடை (தண்டி. 75, 6); verbal antithesis following a verbal similitude.

விரோதம்¹ *virōtam,* பெ. (n.) 1. பகை; hatred, animosity, enmity. 2. மாறுபாடு; contrariety, diversity. 3. **விரோதவணி** பார்க்க; (Rhet.) see virōdavani. 4. இருள்; (அக.நி.) darkness.

விரோதம்² *virōtam,* பெ. (n.) மயிர்; (அக.நி.) hair.

விரோதம்பேசு–தல் *virotam-pēcu-,* செ.கு.வி. (v.i.) 1. பொறாமை கொண்டு சொல்லுதல்; to speak enviously or spitefully. 2. எதிரிடையாகப் பேசுதல்; to speak against or in opposition.

விரோதவணி *virōta-v-aṇi,* பெ. (n.) சொல்லாலாவது பொருளாலாவது மாறுபாட்டுத் தன்மை தோன்ற உரைக்கும் அணி (தண்டி. 80); a figure of speech in which antithesis or opposition in words or in sense occurs.

விரோதவுவமை *virōta-v-uvamai,* பெ. (n.) உவமான வுவமேயங்கள் தம்முள் எதிர்மாறான (விரோத) குணமுடையனவாகச் சொல்லும் உவமை வகை; (தண்டி. 31,4); a kind of simile in which the objects compared with each other are described as having opposite characteristics.

விரோதார்த்தம் *virotārttam,* பெ. (n.) 1. எதிர்மாறான பொருள்; contrary meaning. 2. விடாப்பிடியாய் எதிர்க்கை; intentional opposition.

விரோதி¹ *viroti,* பெ. (n.) 1. பகைவன் (சத்துரு); enemy. 2.ஆண்டறுபதனுள் இருபத்து மூன்றாவது (பெரியவரு.); the 23rd year of the Juiter cycle.

விரோதி²–த்தல் *viroti,* 4 செ.கு.வி. (v.i.) 1. பகைத்தல்; to hate. *"விரோதித்துவிரலிற் சுட்டி"* (சீவக. 3080); 2. முரண்படுதல்; to be contrary, inconsistent. *"நீ முன் சொல்லியதோடு பின் சொல்வது விரோதிக்கும்".* 3. எதிர்த்து நிற்றல்; to oppose to with stand resist. (w)

விரோதிகிருது *virotikirutu,* பெ. (n.) ஆண்டறுபதனுள் நாற்பத்தைந்தாவது; (பெரியவரு.); the 45th year of the Jupiter cycle.

விரோதிசுவரூபம் *viroti-svarūpam,* பெ. (n.) மாலியத்தின் ஐந்து உண்மை (அர்த்தபஞ்சங்)களுள் வீடடைதற்கு இடையூறுயுள்ளதன் தன்மை; (அஷ்டாதச. பக். 25.) obstacle to final bliss, one of artta pañcakam. q.v.

விவசாயம் *vivašayam,* பெ. (n.) 1. தொழில்; active occupation. 2. முயற்சி; effort. 3. வேளாண்மை; agriculture, cultivation. 4. வணிகம்; buying and selling, trade.

[Skt. vyavasāya > த. விவசாயம்]

விவத்தை[1] *vivāttai,* பெ.(n.) 1. முடிவு; settlement. 2. ஒழுங்குமுறை; settled principle.

[Skt. vyava-sthā> த. விவத்தை].

விவரம் *vivāram,* பெ.(n.) 1. தொளை (துவாரம்); fissure hole, cavity hollow. 2. மலைக்குகை; cave. 3. இடைவெளி; intervening space. 4. வரலாற்றுக் குறிப்பு; particulars, details.

விவாகத்திரீ *vivāgattri,* பெ.(n.) முறைப்படி திருமணம் செய்து கொண்ட மனைவி; lawfully wedded.

விவாகம் *vivāgam,* பெ.(n.) திருமணம்; marriage. *"விவாகமும் காருகத்தமும் கூறினமையும்"* (சிலப். 9,28. உரை).

[Skt. vivāha> த. விவாகம்].

விவாதம் *vivādam,* பெ.(n.) 1. தருக்கம்; dispute, wordy warfare. *"இருவரும் விவாதம் பண்ணி"* (உத்தரா. இலவண. 6) 2. அறமன்றத்தில் நடைபெறும் வழக்கு; legal dispute lawsuit.

[Skt. vivāda> த. விவாதம்].

விவிலியமதம் *viviliya-matam,* பெ. (n.) கிறித்தவ மதம்; christianity.

[Gr. biblia+mata> த. விவிலியமதம்].

விவேகசிந்தாமணி *vivēka-cintāmaṇi,* பெ. (n.) ஒரு வேதாந்த நூல்; (w) vēdānta philosophy.

விவேகபருவம் *vivēka-paruvam,* பெ. (n.) பகுத்தறியும் பருவம் (பிராயம்); (வின்.) age of discretion.

விவேகம் *vivēkam,* பெ. (n.) 1. பகுத்தறிவு; discrimination, the capacity to reason and distinguish. *"நித்திய வநித்தியங்க ணிண்ணயந் தெரிவிவேகம்"* (கைவல். தத். 8); 2. அறிவு (புத்தி)க் கூர்மை; ingenuity, penetration, right judgment. (w.) 3. பாயிரம்; preface of book.

விவேகி[2]**-த்தல்** *vivēki-,* 4 செ.கு.வி. (v.i.) பகுத்தறிதல்; to discriminate, to understand with discrimination.

விவேசனம் *vivēcaṉam,* பெ. (n.) பகுத்தறிவு; discrimination, distinguishing truth from falsehood, reality from semblance.

வினோத்தி *viṉoddi,* பெ. (n.) ஒரு முக்கியப் பொருள் பிறிதொரு முக்கியப் பொருளோடு பொருந்தாதாயின் முக்கியத் தன்மையைப் பெறாதெனக் கூறும் அணிவகை; (மாறனலங். 236, பக். 355.). a figure of speech in which a thing or fact is said to lose its importance if it is not accompanied by another thing or fact.

வினோதக்கூத்து *viṉota-k-kūttu,* பெ. (n.) அரசர் முன்பு நடிக்கும் வெற்றிக் கொண்டாட்டக் கூத்து; (சிலப். 3, 13, உரை, பக். 81). dance performed in the presence of kings in celebration of their victories.

வினோதபைரவம் *viṉotapairavam,* பெ. (n.) மருந்துக்குளிகை வகை; (பதார்த்த. 1209.) a medicinal pill.

வினோதம் *vinotam,* பெ. (n.) 1. அவா (யாழ். அக.); desire. 2. இயற்கைக்கு மாறானது; (யாழ். அக.) quaintness, quixotism.

வினோதன் *vinotan,* பெ. (n.) 1. ஒன்றில் ஈடுபட்டு அதிலேயே பொழுது போக்குபவன் (யாழ். அக.); votary, devotee. 2. அகமகிழ்வோன் (உற்சாகி); jolly person.

வினோதி¹-த்தல் *vinoti-,* 4 செ.கு.வி. (v.i.) விளையாடுதல்; to be playful. *"மெல்ல நடந்து வினோதித்து"* (திருக்காளத். பு. தாருகா. 17.).

வினோதி² *vinoti,* பெ. (n.) **வினோதன்** பார்க்க (யாழ். அக.); see vinōdan

வேசியாசாரியன் *vēciyācāriyan,* பெ. (n.) நட்டுவன் (யாழ். அக.); dancing master.

[Skt. vēśyāacārya> த. வேசியாசாரியன்]

வேணுகானம் *vēnu-kānam,* பெ. (n.) புல்லாங்குழலிசை; music of the reed-pipe.

வேணுகோபாலன் *vēnu-kopālan,* பெ. (n.) புல்லாங்குழல் வாசிக்குங் கண்ணபிரான்; kṛṣṇa, as a cowherd playing the reed-pipe.

வேணுசம் *vēnucam,* பெ. (n.) மூங்கிலரிசி; (இலக். அக.) bamboo seed.

வேணுநாதன் *vēnu-nātan,* பெ. (n.) குழல் வாசிப்போன்; (யாழ். அக.) flute-player.

வேணுபலம் *vēnu-palam,* பெ. (n.) **வேணுசம்** பார்க்க; (மூ. அ.) see vēnucam

வேத்திரப்படை *vēttira-p-patai,* பெ. (n.) பிரம்பாகிய ஆயுதம்; cane as a weapon. *"வேத்திரப்படையாற் றாக்கி"* (திருவிளை. பாயி. 17..

வேத்திராசனம் *vēttirācanam,* பெ. (n.) பிரப்பம்பாய் (இலக். அக.); rattan mat.

[Skt. vētra+āsana> த. வேத்திராசனம்]

வேதக்கட்டி *vēta-k-katti,* பெ. (n.) வேதத்தை நன்கு ஓதியவன்; one who has learned the Vēdas by heart.

வேதக்காரன் *vēta-k-kāran,* பெ. (n.) கிறித்தவன்; christian.

வேதக்கொடியோன் *vēta-k-kotiyon,* பெ. (n.) துரோணாசாரியன்; (பிங்.) Droṇācārya.

வேதகம்¹ *vētakm,* பெ. (n.) 1. வேறுபடுத்துகை; distingushing. *"உயிரு மாயா வுடலையும் வேதகஞ்செய் தாணடவங்கணனே"* (கோயிற்பு. இரணிய. 56); 2. வேறுபாடு; differentiating, change, modification. *"விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படு மாகாதே"* (திருவாச. 49, 1); 3. பகைமை (விரோதம்); dissension, disunion. *"அவனால் இவ்வளவு வேதகமு முண்டாயிற்று"* 4. இரண்டகம் (துரோகம்); treachery treason. வேதகமுண்டானால் இராச்சியம் சளைக்கும். 5. புடமிடுகை; refining, as of gold. 6. புடமிட்ட பொன்; refined gold. *"விளக்காகின்ற வேதகமே"* (தாயு. பெற்றவட் 10.); 7. இரும்பு முதலிய உலோகங்களைப் பொன்னாக்கும் பண்டம்; agent to transmute baser metals into gold. *"இன்புறு வேதகத் திரும்பு பொன்னானாற் போல"* (பெரியபு கண்ணப். 154); 8. சிறுதுகில் (பிங்.); small fine cloth.

த.வ. **வேறாக்கம்**

[Skt. bhēdaka> த. வேதகம்]

வேதகம்² *vētakam,* பெ. (n.) 1. கர்ப்பூரம் (இலக். அக.); camphor 2. தவசம், (தானியம்) (யாழ். அக). grain.

வேதகம்³ *vētagam,* பெ. (n.) வெளிப்படுத்துகை; disclosure. "இரகசியத்தை வேதகம் பண்ணலாகாது"

த.வ. **வெளிப்பாடு**

வேதகருப்பன் *vēta-k-karuppan,* பெ. (n.) 1. பிரமன் (யாழ். க.); Brahma. 2. பார்ப்பான்; Brahmin.

[வேதம் + கருப்பன்]

[Skt. vēda> த. வேதம்]

வேதகலாபம் *vētakalāpam,* பெ. (n.) மதப்பற்றுக் காரணமாக விளைக்கும் துன்பம் (இம்சை); (வின்.) religious persecution.

வேதகன்[1] *vētakan,* பெ. (n.) ஒன்றின் தன்மையை வேறுபடுத்துவோன் one who transmutes or changes the nature of things. *"போதகன் வேதகன் பொருவிலன்"* (சிவதரு. கோபுர. 104.).

வேதகன்[2] *vētagan,* பெ. (n.) அறிவிப்பவன்; one who reveals. *"வித்தகன் வேதக னாதி விளம்பிய வாய்மொழி"* (சிவதரு. சிவஞானதான. 21).

[Skt. vēda-ka> த. வேதகன்]

வேதகிரி *vēta-kiri,* பெ. (n.) திருக்கழுக்குன்றம்; the hill of Tiru-k-kalu-k-kunram.

வேதகீதன் *vēta-kītan,* பெ. (n.) (வேதத்தினாற் புகழ்ந்து பாடப்படுவோன்) கடவுள்; god as praised in the vēdas. *"வேதியா வேதகீதா (தேவா. 870, 1) நச்சுநா கணைக்கிடந்த நாதன் வேத கீதனே"* (திவ். திருச்சந். 117);

வேதகோட்டி *vēta-kosti,* பெ. (n.) கோயில் முதலியவற்றில் வேதம் ஓதும் பார்ப்பனர் தொகுதி; band of brahmins chanting vēdas, in temple, etc.

வேதங்கம் *vētaṅkam,* பெ. (n.) ஒருவகைத் துகில் (சிலப். 14, 108, உரை.); a kind of fine cloth.

வேதசங்கிதை *vēta-caṅkitai,* பெ. (n.) சிறுசிறுவாக்கியமாகவன்றித் தொடர்ச்சியாக ஓதப்படும் வேதப்பகுதி; portions of the vedas recited in long sections.

[Skt. vēda-samhita> த. வேதசங்கிதை]

வேதசம்[1] *vētacam,* பெ. (n.) 1. பிரம்புவகை (இலக். அக.); rattan palm. 2. நாணற்புல் (ஈடு.); sacred grass.

வேதசம்[2] *vētacam,* பெ. (n.) பெருவிரலடி (யாழ். அக.); part of the hand under the root of the thumb.

[Skt. vēdhasa> த. வேதசம்]

வேதசாட்சி *vēta-catci,* பெ. (n.) மதத்தை நிலைநாட்டுவதற்காக உயிர்கொடுத்தவன்; martyr for religion. R.C.

வேதசாத்திரம் *vēta-sāttiram,* பெ. (n.) 1. வேதமாகிய நூல்; the vēdas. 2. வேதங்களும் அதன் அங்கங்களாகிய சாத்திரங்களையும் நன்கு ஓதியவன்; the vedas and the sastras. 3. சமயஞானம்; theology. (chr).

வேதசாத்திரி *vēta-sāttiri,* பெ. (n.) 1. வேதங்களையும் சாத்திரங்களையும் நன்கு ஓதியவன்; (வின்.) one learned in the vedas and sastras.

வேதசாரம்[1] *vēta-cāram,* பெ. (n.) 1. வேதத்தின் சாரமானது; the essence of the vedas. *"ஆகையால் இது சகல வேதசாரம்"* (அஷ்டாதச. முமுட்சுப். திருமந்திர. 34). 2. **வேதசிரசு** பார்க்க; (சங். அக.) see vētaciracu.

வேதசாரம்[2] *vētacāram,* பெ. (n.) **வேதசம்**[1] பார்க்க; (சங். அக.) see vēdacam[1]

வேதசிரசு *vēta-ciracu,* பெ. (n.) உபநிடதம் (சி.போ.வ.தீ. 32.); the upanisads.

[Skt. vēda-śiras> த. வேதசிரசு]

வேதஞ்ஞன் *vētaññan,* பெ. (n.) வேதமறிந்தவன் (இலக். அக.); vedic scholar.

[Skt. vēda-jña > த. வேதஞ்ஞன்]

வேதத்தன் *vētattan*, பெ. (n.) பிரமன்; Brahmā. *"வெங்கா தராவுக்குச் செய்தானிலைமலர் வேதத்தனே"* (தனிப்பா. 1, 225, 16.).

வேதத்திரயம் *vēta-t-tirayam*, பெ. (n.) இருக்கு யசு சாமம் என்ற மூன்று வேதங்கள்; the three Vēdas rukku, yacu, cāmam.

வேததத்துவம் *vēta-tattuvam*, பெ. (n.) வேதத்தின் மெய்ப்பொருள்; (யாழ். அக.) the Vēdic truth.

வேதநாதன் *vēta-nātan*, பெ. (n.) **வேதநாயகன்** பார்க்க; see vēda-nāyagan. *"வேதாநாரதனைப் பாடலே கடன்"* (திருவிளை. விறகு. 69);

வேதநாயகன் *vēta-nāyagan*, பெ. (n.) (வேதங்களுக்குத் தலைவன்) கடவுள்; god, as the lord of thevēdas. *"வேதநாயகன் மார்பகத் தினிது வீற்றிருக்கும் ஆதிநாயகி"* (கம்பரா. அகலிகைப் 16.).

வேதநாயகி *vēta-nāyagi*, பெ. (n.) 1. பார்வதி; Pārvati. *"வேதநாயகி தோகை விழுங்கவே" (தக்கயாகப் 609)*. 2. இலக்குமி; Laksmi.

வேதநாவர் *vēta-nāvar*, பெ. (n) பிராமணர்; Brahmins *"வேதநாவர் விரும்புந் திருக் கண்ணபுரத் தாதியானை"* (திவ். திருவாய். 9, 10, 9).

வேதநீயம் *vētaniyam*, பெ. (n.) எண்குற்றங்களுள் ஒன்றாய் இன்ப துன்பங்களை நுகர்விக்கும் கருமம் (பிங்.) (சிலப். 29, 277 உரை.); the karma which causes one of experience pleasure and pain, one of eṅkuṟṟam.

வேதநூல் *vēta-nūl*, பெ. (n.) **வேதசாத்திரம்** பார்க்க; see vedacāstiram. *"வேதநூற் பிராய நூறு"* (திவ். திருமாலை.3)

வேதப்பிரமாணம் *vēta-p-pirāmāṇam*, பெ. (n) வேதமாகிய அளவை; the Vēdas, considered as a source of right knowledge.

வேதப்பிரமாணியம் *vēta-p-pirāmāṇiyam*, பெ. (n.) வேதம் பிரமாணமாயிருக்குந் தன்மை; the authority or evidence of the Vēdas. *"பௌத்தர் வேதப்பிராமாணியம் கொள்வதில்லை"*

வேதப்பிரான் *vēta-p-pirāṉ*, பெ. (n.) **வேதநாயகன்** பார்க்க; see vēda-nāyagan. மெய்க்கொண்டு வந்து புகுந்து வேதப்பிரானார் கிடந்தார் (திவ். பெரியதி. 5,2,1).

வேதப்புரட்டு *vēta-p-puraṭṭu*, பெ. (n.) 1. வேதவாக்கியங்களைப் புரட்டிக் கூறுகை; tampering with the Vēdas. 2. புறமதம்; Heresy.

வேதபாகியம் *vēta-pākiyam*, பெ. (n.) வேதத்துக்குப் புறம்பானது; that which is outside the authority of the Vēdas.

[Skt. vēda + bāhya > த. வேதபாகியம்]

வேதபாகியன் *vēta-pākiyaṉ*, பெ. (n.) வேதத்துக்குப் புறம்பானவன்; one who does not believe in the authority of the Vēdas.

வேதபாடசாலை *vēta-pādasālai*, பெ. (n.) வேதங்கள் கற்பிக்கப்படும் பள்ளிக்கூடம்; school where the Vēdas are taught.

வேதபாடம் *vēta-pādam*, பெ. (n.) 1. வேதமோதுகை; study of the Vēdas. 2. வேத மோதும் முறை; the mode of reciting the Vēdas.

வேதபாரகன் *vēta-pārakaṉ*, பெ. (n.) 1. (வேதங் கரைகண்டவன்) பிராமணன்; brahmin, as well versed in the Vēdas. மணிமுத்தின் சிவிகை நின்றும் வேதபாரக ரிழிந்து; (பெரியபு. திருஞான. 1019). (பிங்.) 2. யூதவேதத்தை விளக்குபவன்; study of the Vēdas. 2. வேத மோதும் முறை; scribe, expounder of the jewish law.

வேதபாராயணம் *vēta-pārāyaṇam,* பெ. (n.) கோயில் முதலிய இடங்களிற் பிராமணர் வேதத்தை ஓதுகை; chanting of the Vēdas, in temple, etc., by Brahmins.

வேதபாராயணன் *vēta-pārāyaṇaṉ,* பெ. (n.) வேதத்தை ஓதுபவன் (அஷ்டப். திருவேங்கடமா. காப்பு); reciter of the Vēdas.

வேதபீசம் *vēta-pīcam,* பெ. (n.) வேதமூலமான பிரணவ மந்திரம்; the mystic letter om or pranava, as the source or origin of the Vēdas.

வேதம்[1] *vētam,* பெ. (n.) 1. இந்து சமயங்களுக்குரிய சுருதி (பிங்.); the Vēdas, the sacred books of the Hindus. 2. விவிலியநூல்; the bible. 3. சாத்திரம்; art of science. "ஆயுர்வேதம், தனுர்வேதம்" 4. சமயமுதனூல்; religious code of any sect. 5. அறிவு (யாழ். அக.); knowledge. 6. விவரிக்கை (யாழ். அக.); exposition.

வேதம்[2] *vēṭam,* பெ. (n.) 1. துளையிடுகை; boring, drilling. *"வேத நன்மணி"* (கம்பரா. மீட்சிப். 29). 2. ஆழம் (யாழ். அக.); depth.

வேதமத்தியம் *vēṭa-mattiyam,* பெ. (n.) தாளத்துக்குரிய யதியுள் ஒன்று (பரத. தாள. 52.); a yati in time-measure.

வேதமந்திரம் *vēṭa-mantiram,* பெ. (n.) வேதத்திலுள்ள மந்திரம்; Vēdic mantra.

வேதமாதா *vēṭa-mātā,* பெ. (n.) (வேதங்களின் தாய்) காயத்திரி மந்திரம்; Gāyatri mantra, as the mother of the Vēdas. *"வேதமாதவென விமலமுற்றிடும் ....காயத்திரி"* (சேதுபு. சேதுபல. 131.);

வேதமாந்தர் *vēṭa-māntār,* பெ. (n.) பார்ப்பனர்; brahmins. *"வேதமாந்தர் வேந்தரென்று"* (நம்பியகப். 75.).

வேதமார்க்கம் *vēṭa-mārkkam,* பெ. (n.) வேதத்திற் சொல்லப்பட்ட மதம் (பிங்.) (தக்கயாகப் 7, உரை); Vēdic religion or faith.

வேதமுதல்வன் *vēṭa-mutalvaṉ,* பெ. (n.) 1. கடவுள்; God. *"வேதமுதல்வனென்ப தீதற விளங்கிய திகிரியோனே"* (நற். 1) 2. பிரமன்; Brahma. *"வேதமுதல்வற் பயந்தோன்"* (சிலப். 14, 48.);

வேதமுதல்வி *vēṭa-mutalvi,* பெ. (n.) 1. நாமகள் (சரசுவதி); Sarasvatī 2. திருமகள் இலக்குமி; Lakṣmī. 3. மலைமகள், பார்வதி; Pārvatī.

வேதமுனி *vēṭa-muṉi,* பெ. (n.) **வேதவியாசன்** பார்க்க; see vēda-vīyacan *"வேதமுனி சூதமுனி"* (திருக்காளத். பு. அவையடக். 1).;

வேதர் *vēṭar,* பெ. (n.) பிராமணர்; Brahmins. *"வேதராார்த்தனர்"* (கந்தபு. தெய்வயா. 195);

[Skt. vēda > த. வேதம் – வேதர்]

வேதரஞ்சகன் *vēṭa-rañcakaṉ,* பெ. (n.) பிராமன்; Brahmā. *"வேதரஞ்சகன் மால்புரந்தான்"* (சௌந்த. 26.);

வேதவாக்கியசொரூபம் *vēṭa-vākkiyacorūpam,* பெ. (n.) விதிவாதம் அர்த்தவாதம், மந்திரவாதம், நாமதேயம் என்று நான்கு வகைப்படும் வேதவாக்கிங்களின் இயல்பு; (விவேகசிந். வேதாந்தபரிச். 5.); nature of Vēdic text, of fourkinds, viz., viti-vātam, arttaavātam, mantira-vātam, nāmatēyam.

வேதவாக்கியம் *vēṭa-vākkiyam,* பெ. (n.) 1. வேதத்திலுள்ள சொற்றொடர்; Vēdic text. 2. உண்மை; gospel. *"அவன் சொல்வது வேத வாக்கியமாக வழங்குகின்றது"*

வேதவாக்கு *vēṭa-vākku,* பெ. (n.) **வேதவாக்கியம்** பார்க்க; see vēda-vākkiyam

வேதவாணர் *vēṭa-vākku,* பெ. (n.) பார்ப்பனர்; Brahmins. வேதவாணர் ....நீதியால் வணங்குகின்ற நீர்மை (திவ். திருச்சந். 9).

வேதவாதம் *vēṭa-vātam*, பெ. (n.) வைதிக மதத்தைப்பற்றிய வாதம்; exposition of the Vēdic religion. வேதவாதச் சருக்கம் (நீல.)

வேதவிண்ணப்பம் *vēṭa-viṇṇappam*, பெ. (n.) சிறப்பான காலங்களிற் கோயில் முதலிய இடங்களில் வேத மோதுகை; the chanting of the Vēdas, in temples, etc. on ceremonial occasions.

வேதவித்து *vēṭavittu*, பெ. (n.) 1. வேதங்களை நன்கறிந்தவன்; one who is learned in the Vēdas. *"வேதவித்தாய மேலோன் மைந்த"* (கம்பரா. பாசு. 36); 2. கடவுள்; God. *"வேதியனை வேதவித்தை"* (தேவா. 162, 7);

வேதவியாக்கியானம் *vēṭa-viyākkiyāṉam*, பெ. (n.) 1. வேதத்தின் விளக்கவுரை; one commentaries on the Vēdas. 2. விவிலியநூற்பொருளை விவரிக்கை; expounding the Bible. (வின்.)

வேதவியாசன் *vēṭa-viyācaṉ*, பெ. (n.) 1. (வேதத்தைத் தொகுத்தோன்) வியாச முனிவன் (தக்கயாகப் 334, உரை.); Vyāsa, as the compiler of the Vēdas.

வேதவியாதன் *vēṭa-viyātaṉ*, பெ. (n.) **வேதவியாசன்** பார்க்க; (மணி. 27, 5). see vēda-viyācan

வேதவிருத்தம்[1] *vēṭa-viruttam*, பெ. (n.) 1. வேதத்துக்கு மாறானது; that which is contrary to or against the Vēdas.

வேதவிருத்தம்[2] *vēṭa-viruttam*, பெ. (n.) வேதபோதனை (யாழ். அக.); teaching of the Vēdas.

[Skt. vēda+vrtta> த. வேதவிருத்தம்]

வேதவிருத்தி *vēṭa-virutti*, பெ. (n.) வேதமோதற்காக அளிக்கப்படும் இறையிலி நிலம்; (Insc.) Inam land for reciting the Vēdas

வேதவீணை *vēṭa-viṇai*, பெ. (n.) வீணைவகை; a kind of viṇai. *"நாரதாதிகள் வேதவீணை தொடங்கவே"* (தக்கயாகப். 623, விசேடக்.);

வேதவேத்தன் *vēṭavēttaṉ*, பெ. (n.) **வேதவேத்தியன்** பார்க்க; வேதவேத்தனு மவன் மலர்த் தாண்மிகை வீழ்ந்தான் (கம்பரா. மீட்சிப். 116.) see vēda-vēttiyan.

வேதவேத்தியன் *vēṭa-vēttiyaṉ*, பெ. (n.) வேதத்தினாலே அறியக்கூடியவனான கடவுள்; God, as knowable through the Vēdas.

வேதவேதாந்தன் *vēṭa-vētāntaṉ*, பெ. (n.) கடவுள்; God, as revealed in the Vēdas and the Vēdāntas. *"விண்ணிலா ரறிகிலா வேதவேதாந்தனூர்"* (தேவா. 399,4);

வேதவொலி *vēṭa-v-oli*, பெ. (n.) வேதத்தை யோதும் ஒலி; the sound of chanting the Vēdas. *"வேதவொலியும் விழாவொலியும்"* (திவ். திருவாய். 7,3,1);

வேதன் *vēṭaṉ*, பெ. (n.) 1. பிரமன் (பிங்.); brahmā. 2. கடவுள்; God. *"வேதனை வெண்புரி நூலனை"* (திவ். இயற். திருவிருத். 79); 3. வியாழன் (பிங்.); Brhaspati.

வேதனம்[1] *vēṭaṉam*, பெ. (n.) 1. கூலி; hire. (Loc). 2. கூலியாகக் கொடுக்கப்படும் சம்பளம்; salary, monthly wages.

வேதனம்[2] *vēṭaṉam*, பெ. (n.) 1. அறிவு; knowledge, wisdom. வேதனவடிவானான் (ஞானவா. உத்தா. 68); 2. வேதம்; the Vēdas. வேதனத்ரய வேளே நமோநம (திருப்பு. 996) 3. உணர்ச்சி (சுக்கிரநீதி. 98); feeling, sensation. 4. வேதனை (யாழ். அக.); pain, torment, agony.

வேதனம்[3] *vēṭaṉam*, பெ. (n.) பொன் (யாழ். அக.); gold.

வேதனம்[4] *vēṭaṉam*, பெ. (n.) துளைக்கை; piercing, perforating. கர்ண வேதனச் சடங்கு.

வேதனி *vēṭaṉi*, பெ. (n.) யானையின் காது (செவி)களைத் தொளையிடுங் கருவி (யாழ். அக.); an instrument for perforating elephant's ear.

வேதாக்கினி *vētākkiṉi,* பெ. (n.) வேதமந்திரத்தினால் வளர்க்கப்படும் காருகபத்தியம், ஆகவனீயம், தட்சிணாக்கினி என்னும் மூவகைத் தீ (அக்கினி); sacred fire, of three kinds, viz., kāruka-pattiyam, ākavaṉīyam, taṭciṇākkiṉi.

[Skt. vēdagni> த. வேதாக்கினி]

வேதாகமம் *vētākamam,* பெ. (n.) 1. வேதமும் ஆகமமும்; the Vēdas and the Āgamas. *"வேதாகமங்கள் விரிப்போரும்"* (அருட்பா, நெஞ்சறி. 668); 2. விவிலிய நூல்; the Bible. (Chr).

வேதாங்கம் *vētākam,* பெ. (n.) சிட்சை வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம் என ஆறுவகைப்பட்ட வேதப் பொருளை யுணர்தற்குரிய கருவி; (மணி. 27, 100 - 102, உரை). works, regarded as helps to the study of the Vēdas six in number, viz., citcai, viyākaraṇam, cantacu, niruttam, cotiṭam, kaṟpam.

வேதாசாரியர் *vētācāriyar,* பெ. (n.) வேதப்பொருளைக் கற்பிக்கும் (உபதேசிக்கும்) ஆசிரியர்; preceptor who teaches the Vēdas.

வேதாத்தியயனம் *vētāttiyaṉam,* பெ. (n.) வேதமோதுகை; chanting of the Vēdas.

வேதாத்தியாபகன் *vētāttiyāpakaṉ,* பெ. (n.) வேதத்தை யோதுவிப்பவன்; on who teaches the Vēdas.

வேதாத்தியாபனம் *vētāttiyāpaṉam,* பெ. (n.) வேதமோதுவிக்கை; teaching the Vēdas.

வேதாத்தியாயி *vētāttiyāyi,* பெ. (n.) வேதமோதுவோன்; one who chants the Vēdas.

வேதாந்தசூத்திரம் *vētānta-cūttiram,* பெ. (n.) வியாசமுனிவர் இயற்றிய உத்தரமீமாஞ்சை சூத்திரம்; a treatise on Vēdānta by Vyāsa, in the form of sūtras.

வேதாந்தசூளாமணி *vētānta-cūḷāmaṇi,* பெ. (n.) சிவப்பிரகாசர் இயற்றிய வேதாந்தசமய நூல்; a metaphysical treatise on the Advaita philosophy, by Civappirakācar.

வேதாந்ததேசிகர் *vētānta-tēcikar,* பெ. (n.) 14ஆம் நூற்றாண்டில் விளங்கியவரும் மாலிய (வைஷ்ணவ)ருள் வடகலையாரால் தலைமையகப் போற்றப்படுபவருமான மாலிய (வைஷ்ண)வாசாரியர் (தேசிகப். வாழித். 3.); a famous Vaiṣṇava acarya who lived in 14th C., specially revered by the vatakalai sect of Vaiṣṇavites.

வேதாந்தம் *vētāntam,* பெ. (n.) 1. உபநிடதம்; the upaniasads, as the concluding portions of Vēdas. *"வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை"* (திவ். பெரியாழ். 4,3,11); 2. வியாசராற் செய்யப்பட்டதும் உபநிடதங்களின் பொருளைக் கொண்டதுமான வேதாந்தசூத்திரத்திற் கூறும் உத்தரமீமாஞ்சை மதம் (தக்கயாகப். 246, உரை.); the Uttara-mīmāmsā system of philosophy founded by vyāsa and expounded in his vēdānta sūtras, as containing the essence of the upanisads.

வேதாந்தமோது-தல் *vētāntām-ōtu,* 5 செ.கு.வி. (v.i.) 1. உத்தரமீமாஞ்சை கற்றல்; to study the Vēdānta. 2. ஞானிபோலத் தத்துவம் பேசுதல்; to speak with affected wisdom or spirituality. நீ என்னிடத்து வேதாந்தமோத வேண்டாம்.

வேதாந்தாசாரியர் *vētāntāśāriyar,* பெ. (n.) **வேதாந்ததேசிகர்** பார்க்க; see Vēdanta-tēcikar. (தேசிகப். வாழித். 5.)

வேதாந்தி *vēṭānti,* பெ. (n.) 1. உத்தரமீமாஞ்சையாகி வேதாந்தக் கொள்கையினன்; follower of the Vēdānta or Uttara-mīmāṃsā system, of philosophy. 2. அத்துவைதி (சி.சி. அளவை, 1, மறைஞா.); follower of the Advaita system. 3. உலகப் பற்றற்றவ-ன்-ள்; unworldly person.

வேதாப்பியாசம் *vēṭāppiyācam,* பெ. (n.) வேதங்களைப் பயிலுகை; learning the Vēdās.

வேதாரம்பம் *vēṭārampam,* பெ. (n.) சிராவணதினத்தினன்று வேதாத்தியயனந் தொடங்குஞ் சடங்கு; the ceremony of beginning the study of the Vēdās, on the Upakarma day.

வேதாளம் *vēṭāḷam,* பெ. (n.) 1. பேய் (திவா.); demon, ghost, goblin, vampire. 2. பிசாசு; devil. *"வேதாள கடகமேய மாயோளே"* (தக்கயாகப். 104.).

வேதாளி *vēṭāḷi,* பெ. (n.) காளி (பிங்.); Kali.

[Skt. vētāli> த. வேதாளி]

வேதாளிகர் *vēṭāḷikar,* பெ. (n.) **வைதாளிகர்** பார்க்க; (சிலப். 5, 48.) (பிங்.) see vaidāḷigar.

வேதாளியர் *vēṭāḷiyar,* பெ. (n.) **வைதாளிகர்** பார்க்க; (சிலப். 5, 48.) (பிங்.) see vaidāḷigar.

வேதி[1] *vēṭi,* பெ. (n.) 1. அறிந்தவன்; one who knows. *"வேதிபோற்றி விமலாபோற்றி"* (திருவாச. 4, 106.); 2. பிரமன் (அரு.நி.); Brahmā. 3. பண்டிதன் (இலக். அக.); learned person.

வேதி[2] *vēṭi,* பெ. (n.) 1. மணம் முதலிய சடங்கு நிகழ்த்தும் மேடை; low platform within a house, for sacrifice, weddings, etc., *"மைந்தனைச் செம்பொன்வேதி யெறிக்குங் கிரணமணிப் பீடம தேற்றினரே"* (பாரத. திரௌ. 91) 2. **வேதிகை[1]** பார்க்க; see vētigai. கீதசாலை வேதிநிறைய (பெருங். உஞ்சைக். 34, 224.); 3. மதில் (சூடா.); outer wall of a fortification; compound wall.

வேதி[3]-த்தல் *vēṭi,* 4 செ.கு.வி. (v.i.) 1. வேறுப்படுத்துதல் (யாழ். அக.); to cause change. 2. தாழ்ந்தவற்றை யுயர்பொருளாக மாற்றுதல்; to change, transmute, as baser metals. *"புகலிக்கிறை ....வேதிக்க வுடம் பொரு பொன்மயமாயொளிவிட்டு"* (தக்கயாகப். 217). வெந்தழலி னிரதம்வைத் தைந்து லோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம் (தாயு. தேசோ. 8.); 3. முரண் (விரோதப்)படுத்துதல்; to render hostile.

வேதி[4] *vēṭi,* பெ. (n.) தாழ்ந்தவற்றை யுயர்பொருளாக மாற்றுகை; transmuting. "குளிகை கொடு பரிசித்து வேதி செய்து" (தாயு. சின்மயா. 7);

வேதி[5]-த்தல் *vēṭi,* 4 செ.கு.வி. (v.i.) நலிதல்; to oppress. *"வேதியா நிற்கு மைவரால்"* (திவ். திருவாய். 7,1,3).

வேதிகை[1] *vēṭikai,* பெ. (n.) 1. திண்ணை (பிங்.); platform, pial. *"பவளத் திரள்காற் பைம் பொன் வேதிகை"* (சிலப். 5, 148). 2. மணமேடை; (பிங்.) marriage dais. 3. காலுள்ள பீடம் (கோயிலொ.); stool, pedestal. 4. பலிபீடம் (யாழ். அக.); altar, raised platform for oblations of rice, etc., in temples. 5. பூசை செய்யும் இடம்; (Loc) (Śaiva.) place of worship. 6. பலகை (அக. நி.); plank. 7. தெரு (பொதி. நி.); street.

[Skt. vēdika> த. வேதிகை]

வேதிகை[2] *vēṭikai,* பெ. (n.) 1. வேறுபடுத்துகை; transmuting. *"வேதிகை செய்தெய்வமணி கொல்லோ"* (கம்பரா. உருக். 68); 2. கேடகம்; (பிங்.) shield. 3. அம்பு (பொதி. நி.); arrow.

[*Skt.* *vēdika* > *த. வேதிகை*]

வேதித்தார் *vēṭittār*, பெ. (n.) பகைவர்; enemies. *"வேதித்தார் புரமூன்றும்"* (தேவா. 159, 9);

வேதிதம் *vēṭitam*, பெ. (n.) 1. துளைக்கை; perforating, drilling. 2. துளையுடைப்பொருள்; tube.

[*Skt.* *vēdika* > *த. வேதிதம்*]

வேதிப்பான் *vēṭippāṉ*, பெ. (n.) வேதகஞ்செய்வோன்; one who transmutes. *"தானெல்லாம் வேதிப்பானாகி"* (சி.சி.11, 12);

வேதியன்[1] *vēṭiyaṉ*, பெ. (n.) 1. பார்ப்பனன்; Brahmin. *"நான்மறை வேதியர்தேத்து"* (திருவாலவா. 40,2) 2. பிரமன்; Brahmā. *"வேதியன் முதலாவமரரும்"* (கல்லா. 25 13) 3. கடவுள்; God. *"வேதியா வேதகீதா"* (தேவா. 870, 1).

வேதியன்[2] *vēṭiyaṉ*, பெ. (n.) சீனக்காரம் (மூ.அ.); alum.

வைகட்சம் *vaikaṭcam*, பெ. (n.) மேலாடை (உத்தரியம்) (யாழ்.அக.); upper garment. .

வைகடிகன் *vaikaṭikan*, பெ. (n.) இரத்தினங்களைச் சாணைதீட்டுவோன்; jeweller, one who cuts and polishes gems. (w).

வைகத்தன் *vaikaṭṭaṉ*, பெ. (n.) துவாதசாதித்தருள் ஒருவர் (பிங்.); a sun-god, one of tuvātacātittar, q.v.

வைகரி[1] *vaikari*, பெ. (n.) வாக்கு நான்கனுள் தெளிவாக காது (செ... க் கேட்கும் திருந்திய (அட்சர) ...ன ஒலி (சி.சி. 1, 20.); articulate utterance, audible utterance of sounds or worlds, one of four vākku, q.v.

[*Skt.* *vaikhari* > *த. வைகரி*]

வைகரி[2] *vaikari*, பெ. (n.) 1. **வைகரியங்காரம்** பார்க்க; see vaikari-y-akaṅkāram. 2. திட்டம்; regulation.

வைகரியகங்காரம் *vaikari-y-akaṅkāram*, பெ. (n.) அகங்காரத்திரயத்துள் சத்துவ குணமேனும் இராசதகுணமேனும் மேலிட்டிருப்பது (சி.போ.பா.2,2. (வேதா. சூ. 69.); Akaṅkāram or egoism in which cattiuva-kuṇam or irācata-kuṇam predominates, one of akaṅkāra-t-tirayam. q.v.

வைகற்பிகம் *vaikaṟpikam*, பெ. (n.) திண்ணமாய்க் கொள்ளப்படாதது; (யாழ். அக.) that which is optional.

வைகாசி *vaikāci*, பெ. (n.) 1. சுமை விண்மீன் **விசாகம்** (பிங்.) பார்க்க; the 16th nakṣatra. தமிழ் மாதம் விடை; the month of the Tamil year, corresponding to May-June.

த.வ. விடை

வைகாசிவசந்தன் *vaikāci-vacantaṉ*, பெ. (n.) 1. விடை (வைகாசி) மாதத்திற் பெருகியோடுங் காவிரியாறு (யாழ். அக.); the river Cauvery in floods during the month of Vaikāci.

வைகாரி *vaikāri*, பெ. (n.) 1. **வைகரியகங்காரம்** பார்க்க; see Vaikāri-y-akaṅkārām. இராசதஞ்சேர் வாக்காதி வைகாரி மருவிவரும் (சிவப்பிர. 27).; (phil.) 2. சத்துவகுணம்; (வேதா. சூ. 69) goodness. or virtue.

வைகாரிகம் *vaikārikam*, பெ. (n.) **வைகரியகங்காரம்** பார்க்க; see vaikar-y-akaṅkāram. *"வளர் தைசதம் வைகாரிகமென்று"* (திருக்காளத். பு. சிவலிங்க. 11).

வைகானசம் *vaikāṉacam*, பெ. (n.) 1. மாலிய (வைணவ) ஆகமங்களுள் ஒன்று; a Vaiṣṇava agama. 2. கிருகிய சூத்திரவகை; an aphoristic work on household rites. ஆத்திரேய கோத்திரத்து வைகானச சூத்திரத்து; (s.i.i.vi,5).

வைகானசன் *vaikāṉacaṉ,* பெ. (n.) 1. வைகானச ஆகமத்தின் படி ஒழுகுபவன் (நாமதீப. 128); follower of the Vaikhāṉasa agama. 2. கான (வன)வாசி (யாழ். அக.); hermit, dweller in the forest.

வைகிராந்தம் *vaikirāntam,* பெ. (n.) ஒரு வகை மணி (யாழ். அக.); a kind of gem.

வைகிருத்தியம் *vaikiruttiyam,* பெ. (n.) **வைகிருதம்** பார்க்க (யாழ். அக.); see *vaikirudam*

வைகிருதம் *vaikirutam,* பெ. (n.) வெறுப்பு; aversion.

வைகுண்டம் *vaikuṇṭam,* பெ. (n.) திருமாலுலகம்; (பரிபா. 13, 13, உரை.); Viṣṇu's heaven.

வைகுண்டவேகாதசி *vaikuṇṭa-v-ēkātaci,* பெ. (n.) சிலை (மார்கழி) மாதத்துச் வெண்பக்கத்து (சுக்கிலபட்சத்து) ஏகாதசியன்று திருமாலின் பொருட்டுக் கொண்டாடப்படுந் திருநாள்; the 11th titi of the waxing moon in the month of Markali, as a special day of festivity in honour of Viṣṇu.

த.வ. மாலுலகு பதினோரி

வைகுண்டன் *vaikuṇṭaṉ,* பெ. (n.) திருமால் (நாம. தீப. 47.); Viṣṇu.

வைகுந்தம் *vaikuṇṭam,* பெ. (n.) **வைகுண்டம்** பார்க்க; see vaikuṇtan. "வைகுந்தங் காண்பார் விரைந்து" (திவ். இயற். நான்மு. 70)

வைச்சிரவணன் *vaicciravaṇaṉ,* பெ. (n.) 1. குபேரன் (பிங்.); Kubēra. 2. இராவணன் (திவ். பெரியாழ். 1,3,5.) Rāvaṇa.

[Skt. vaiśravaṇa > த. வைச்சிரவணன்]

வைச்சிரவன் *vaicciravaṉ,* பெ. (n.) **வைச்சிரவணன்** பார்க்க; (நாமதீப.88) see vaicciravaṉ

வைச்சிரவனாலயம் *vaicciravaṉ-ālayam,* பெ. (n.) ஆலமரம்; (யாழ். அக.) banyan tree.

வைசகி *vaicaki,* பெ. (n.) **வைகாசி** பார்க்க; see vaikaci. *"பூசனையை ....வைசகியிற் புரிந்தவரும்"* (சிவதரு. சிவஞானதா. 46).

வைசத்தியம் *vaicattiyam,* பெ. (n.) தூய்மை; purity. (யாழ். அக.) 2. உண்மை; truth.

வைசத்திரம் *vaicattiram,* பெ. (n.) அரசாட்சி (யாழ். அக.); government rule.

[Skt. vaiśastra > த. வைசத்திரம்]

வைசம்பாயனன் *vaicampāyaṉaṉ,* பெ. (n.) ஒரு முனிவன் (பாக. வத.i மாயவ. 34); a sage.

வைசயந்தம் *vaicayantam,* பெ. (n.) 1. இந்திரன் வளமனை (மாளிகை); the palace of Indra. 2. இந்திரன் கொடி; Indra's flag.

வைசயந்தி *vaicayanti,* பெ. (n.) 1. திருமால் அணியும் மாலை; the garland or necklace of Viṣṇu. *"வைசயந்திப் பெயர் மாலையும் மிலைந்திட்டார்"* (சேதுபு. இலக். 22) 2. பெருங்கொடி கட்டப்பெற்றதும் மாளிகையின் முன்புறத்ததுமான கட்டடம்; terraced building in front of a mansion, with a large flag hoisted over it. *"வைசயந்திப் பொன்னிலத்தும்"* (தேவை. 140) 3. கடம்பரது தலைநகரான வனவாசி; Vaṉavāci, the capital of the Kadambas. 4. தழுதாழை (மலை); wind-killer.

வைசனனம் *vaicaṉaṉam,* பெ. (n.) பிள்ளைப் பேற்றுக்குரிய மாதம் (யாழ். அக.); closing month of gestation, the period when confinement is expected.

வைசாகநிலை *vaicāka-nilai,* பெ. (n.) கூத்து நிலையுள் ஒன்று (சிலப். 3,12, உரை.); a pose in dancing.

வைசிகம் *vaicikam,* பெ. (n.) 1. தளிர்; (யாழ். அக.) tender leaf. 2. காரணம்; cause.

வைசித்திரி *vaicittiri,* பெ. (n.) புதுமை; strangeness novelty. *"மாயாமற் றன்னை வைத்த வைசித்திரியாலே"* (திருவாய். நூற். 68).

வைசியநாபி *vaiciya-nāpi,* பெ. (n.) நீலநிறமுள்ள நாபிவகை; (மூ.அ.) blue variety of aconite.

வைசியன் *vaiciyaṉ,* பெ. (n.) நால்வகை வருணத்துள் தனவைசியர், பூவைசியர், கோவைசியர் என்ற முப்பிரிவுள்ள வணிக சாதியான்; trader, merchant, one of nāl-vakai-varunam, q.v., of three classes, viz., taṉa-vaiciyar, pū-vaiciyar, kō-vaiciyar.

வைசேடி *vaicēṭi,* பெ. (n.) **வைசேடிகம்** பார்க்க; see vaicetikan. இது தான் வைசேடி யியல்பாகும் (தத்துவப். 177)

வைசேடிகம் *vaicēṭikam,* பெ. (n.) கணாதரால் தோற்றுவிக் (தாபிக்)கப்பட்ட மதம்; (மணி. 27, 79.); a system of philosophy, founded by Kaṇātar.

வைட்டணவன் *vaiṭṭaṇavaṉ,* பெ. (n.) **வைணவன்** பார்க்க; see vaiṇavan. *"உன் கோயிலில் வாழும் வைட்டணவனெனும் வன்மை கண்டாயே"* (திவ். பெரியாழ். 5,1,3)

[Skt. vaiśṇava > த. வைட்டணவன்]

வைடம்மியம் *vaiṭammiyam,* பெ. (n.) 1. மாறுபாடு; contrariety. 2. பகைமை (யாழ். அக.); enmity.

[Skt. vaisamya > த. வைடம்மியம்]

வைடாலம் *vaiṭālam* , ı. பூனை; (யாழ். அக.) cat. 2.மாய்மாலம்; pretence.

வைடாலவிரதிகன் *vaiṭāla-viratikaṉ,* பெ. (n.) அறச் (தரும) சிந்தையுள்ளவன் போல நடிப்பவன்; (யாழ். அக.) hypocrite, one who simulates virtue or goodness.

வைடூரியப்பப்பளி *vaiṭūriya-p-pappaḷi,* பெ. (n.) சேலை வகை; a kind of saree.

வைடூரியம் *vaiṭūriyam,* பெ. (n.) நவமணியி லொன்று; cat's eye, an opalescent gem, one of navamaṇi q.v.

[Skt. vaidūrya > த. வைடூரியம்]

வைணவநிலை *vaiṇava-nilai,* பெ. (n.) ஒரு வகைக் கூத்துநிலை (சிலப். 3, 12, கீழ்க் குறிப்பு.); a pose in dancing.

வைணவன் *vaiṇavaṉ,* பெ. (n.) மாலிய (வைணவ) சமயத்தான்; follower of Vaiṣṇavism.

வைணவாகமம் *vaiṇavakamam,* பெ. (n.) பாஞ்சராத்திரம், வைகானசம் என இருவகைப்பட்ட வைணவரின் ஆகமங்கள்; the Vaiṣṇava Agamas or scriptures, of which there ae two, viz., pāñca-rāttiram, and vaikāṉacam.

வைணவி *vaiṇavi,* பெ. (n.) வேய்ங்குழல்; (யாழ். அக.); flute, bamboo reed.

வைணவிகன் *vaiṇavikaṉ,* பெ. (n.) வேய்ங்குழ லூதுவோன்; (யாழ். அக.); flute player.

[Skt. vaiṇavika > த. வைணவிகன்]

வைணவிகன்² *vaiṇavikaṉ,* பெ. (n.) **வைணிகன்** பார்க்க; (யாழ். அக.); see vainikan.

வைணிகன் *vaiṇikaṉ,* பெ. (n.) வீணைவாசிப்பவன்; (யாழ். அக.); one who plays on the viṇai.

வைணுகம் *vaiṇukam,* பெ. (n.) யானைத்தோட்டி; (யாழ். அக.) elephant goad.

வைத்தியசாத்திரம் *vaittiya-cāttiram,* பெ. (n.) அறுபத்துநான்குகலையுள் ஒன்றான மருத்துவநூல்; medical science, one of aṟupattunālu-kalai, q.v.

வைத்தியசாலை *vaittiya-cālai,* பெ. (n.) மருத்துவச்சாலை; hospital, dispensary.

வைத்தியபாகம் *vaittiya-pākam,* பெ. (n.) நோயாளிக்காகச் செய்யப்பட்ட மருந்தில் மருத்துவனுக்குரிய பகுதி; physician's share of a medicine prepared by him or under his direction for his patient.

வைத்தியம் *vaittiyam,* பெ. (n.) நோய்க்குச் செய்யும் பண்டுவம்; medical treatment.

வைத்தியன் *vaittiyaṉ,* பெ. (n.) 1. மருத்துவன்; physician, medical practitioner. 2. வேதாப்பியாசஞ் செய்பவன் (யாழ். அக.); one who studies the Vēdas.

[Skt. vaidya > த. வைத்தியன்]

வைதருப்பநெறி *vaitaruppa-neṟi,* பெ. (n.) செறிவு தெளிவு முதலிய பத்துக் குணங்களும் அமையப் பாடுமுறை. (தண்டி. 14.); a style of poetry having ten characteristics, such as terseness, perspicuity, dist. fr. kauṭa-neṟi.

வைதருப்பபாகம் *vaitaruppa-pākam,* பெ. (n.) **வைதருப்பநெறி** பார்க்க; see Vaitaruppaneṟi.

வைதலம் *vaitalam,* பெ. (n.) ஒருவகை ஏனம் (யாழ். அக.); a kind of vessel.

வைதவியம் *vaitaviyam,* பெ. (n.) கைம்மை, (பு. வெ. 10, சிறப்பிற் பொது. 4, கொளு, உரை.); widowhood.

வைதன்மியதிட்டாந்தம் *vaitaṉmiyatiṭṭāntam,* பெ. (n.) சாத்தியமெய்தாவிடத்தில் ஏதுவுமின்மையைக் குறிக்குந் திட்டாந்தம் (மணி. 29, 140.); dissimilar example in which both cāthyam and ētu are absent.

வைதன்மியதிட்டாந்தவாபாசம் *vaitaṉmiya-tiṭṭānta-v-āpācam,* பெ. (n.) சாத்தியாவியாவிருத்தி, சாதனாவியாவிருத்தி, உபயாவியாவிருத்தி, அவ்வெதிரேகம், விபரீதவெதிரேகம் என ஐவகைப்பட்ட போலியான வைதன்மியதிட்டாந்தம் (மணி. 29, 334–5.); semblance of vaitaṉmiya-tiṭṭāntam, of five kinds, viz., cāttiyāviyāvirutti, cātaṉāviyāvirutti, upayāviyāvirutti, avvetirēkam, viparīta-vetirēkam.

வைதன்மியம் *vaitaṉmiyam,* பெ. (n.) ஒப்பின்மை; dissimilarity.

வைதனிகம் *vaitaṉikam,* பெ. (n.) அற்றைக்கூலி; (யாழ். அக.) daily hire or wage.

வைதாளி *vaitāḷi,* பெ. (n.) புகழ்ந்து பாடும் பாட்டு; panegyric song.

வைதாளிகர் *vaitāḷikar,* பெ. (n.) அரசரைப் புகழந்து பாடுவோருள் ஒரு வகையினர்; a class of panegyrists attached to kings. *"மாகதப் புலவரும் வைதாளிகரும்"* (சிலப். 26, 74).

வைதாளியாடுவார் *vaitāḷi-y-āṭuvār,* பெ. (n.) **வைதாளிகர்** பார்க்க (சிலப். 5, 48, அரும்.); see vaitāḷikar.

வைதிககாரியம் *vaitika-kāriyam,* பெ. (n.) வைதிகச் சடங்கு; religious rite.

வைதிகச்செலவு *vaitika-c-celavu,* பெ. (n.) மறைநெறி (வைதிக)காரியங்கட்குரிய பணச் செலவு; expenses incurred in performing religious rites.

வைதிகச்சொல் *vaitika-c-col,* பெ. (n.) மறை (வேத) வழக்கான **சொல்**; word occurring in the Vēdas. *"உலகியற்சொல்லை யொழித்து வைதிகச் சொல்லை ஆராயும் நிருத்தமும்"* (தொல். பொருள். 75, உரை)

வைதிகசைவம் *vaitika-caivam,* பெ. (n.) மறை (வேத)நெறிப்பட்ட சிவனிய (சைவ) மதம்; the Śaiva religion which is in conformity with the Vēdas. *"ராசாங்கத்தி லமர்ந்தது வைதிகசைவமாதோ"* (தாயு. ஆகாரபு. 10)

வைதிகம் *vaitikam,* பெ. (n.) 1. வேதநெறிப்பட்டது; that which is sanctioned or enjoined by the Vēdas; that which is Vēdic. *"வைதிகத்தின் வழியொழுகாத ...... காரமண்தேரரை"* (தேவா. 865, 2) 2. ஒழுக்க நெறிகளை விழிப்பாய் (ஆசாரங்களைச் சிரத்தையோடு) கடைப்பிடி *vaikirāntam* (அனுஷ்டி)க்கை; faithful observance of religious rules, dist. fr. laukikam. 3. காலத்தோடொத்த நாகரிகமற்றது; that which not refined or modern.

த.வ. மறைநெறி

[Skt. vaidika > த. வைதிகம்]

வைதிகமார்க்கம் *vaitika-mārkkam,* பெ. (n.) வேதநெறிப்பட்ட மதம்; the Vēdic religion. *"வைதிகமார்க்கத்தளவைவாதியை"* (மணிமே. 27,3)

வைதிகன் *vaitikaṉ,* பெ. (n.) 1. வேதம் வல்ல பிராமணன்; Brahmin who is versed in the Vēdas. 2. வேதநெறிப்பட்ட ஒழுக்கக் கடைபிடிப்புள்ளவன்; one living in conformity with Vēdic precepts. *"வைதிகரே மெய்ப்படியா லுன்றிருவடிச்சூடுந் தகைமையினார்"* (திவ். இயற். திருவிருத். 94) 3. காலத்தோடொத்த நாகரிகமற்றவன்; one who is not refined or modern.

வைதிருதி *vaitiruti,* பெ. (n.) ஒக (யோக)மிருபத்தேழனு ளொன்று; a division of time, one of 27 yōkam q.v. தருகின்ற காரியங் கைகூடியே பின்பு தவறில் வைதிருதியாகும் (திருவேங். சத. 39.)

வைதீகம் *vaitīkam,* பெ. (n.) **வைதிகம்** பார்க்க; (தக்கயா. 139, உரை) see vaitikam.

வைதூரியம் *vaitūriyam,* பெ. (n.) **வைடூரியம்** பார்க்க; see vaidūryam *"வைரம் வைதூரிய நீலம்"* (பாரத. இந்திரப். 12)

வைதேகன் *vaitēkaṉ,* பெ. (n.) 1. பிராமணப் பெண்ணிடம் வைசியனுக்குப் பிறந்தவன்; (W) son of Vaisya by a Brahmin woman. 2. வியாபாரி (யாழ். அக.); trader.

[Skt. vaidēha > த. வைதேகன்]

வைதேகி *vaitēki,* பெ. (n.) 1. சீதாதேவி (நாமதீப. 184.); Sītā, wife of Rāma. 2. திப்பிலி (தைலவ); long pepper.

வைதேயன் *vaitēyaṉ,* பெ. (n.) அறிவீனன் (யாழ். அக.); foolish person.

வைதேவி *vaitēvi,* பெ. (n.) **வைதேகி 1** பார்க்க; see vaitēgi. *"வைதேவி விண்ணப்பம்"* (திவ். பெரி யாழ். 3,10,4);

வைந்தவம்[1] *vaintavam,* பெ. (n.) குதிரை; (யாழ். அக.); horse.

வைந்தவம்[2] *vaintavam,* பெ. (n.) சுத்தமாயை; (Šaiva) pure māyā.

வைபவம் *vaipavam,* பெ. (n.) 1. பெருமை, மகிமை; greatness. *"ஓங்கு வைபவமு மொழிவில் சம்பத்து முடையயனாகுவன்"* (திருக்காளத். பு. சிவமா. 31.) 2. **வைபோகம் 1.** பார்க்க; see vaipōgam. 3. பெரியோர் வரலாறு; history, biography, as a great person. பட்டர் வைபவம்

வைபாடிகம் *vaipāṭikam,* பெ. (n.) புத்த (பௌத்த) மதப்பிரிவு நான்கனு ளொன்று; (வேதா. சூ. 24.) one of the four sects of Buddhism.

வைபாடிகன் *vaipāṭikaṉ,* பெ. (n.) வைபாடிகமத்தைச் சார்ந்த புத்தன்; follower of the vaipāṭikam sect of Buddhism.

வைபோகம் *vaipōkam,* பெ. (n.) 1. பெருஞ்சிறப்பு (விமரிசை); grandeur, magnificence. இந்தவைபோகத்தை ஆயிரங்கண்ணிற் கண்டிந்திரன் மகிழ்ந்தோனே (இராமநா. உயுத். 123) 2. சீர்; presents made publicly, as at a wedding. *"எல்லாரும் முறை முறையா எடுத்தனர் வைபோகம்"* (இராமநா. உயுத். 123) 3. மகிழ்ச்சி (யாழ். அக.); joy, happiness. 4. பகுத்தறிவு (விவேகம்); (யாழ். அக.)

discrimination. 5. வயணம்; (j.) manner, fashion.

வைபோகி *vaipōki,* பெ. (n.) பகுத்தறிவாளி (விவேகி); (யாழ். அக.) sensible person.

வைமாத்திரேயன் *vaimāattirēyaṉ,* பெ. (n.) மாற்றாந்தாயின் மகன்; (யாழ். அக.) step mother's son, step-brother.

வையாகரணன் *vaiyakaraṇaṉ,* பெ. (n.) இலக்கணம் வல்லவன்; grammarian. *"வையாகரணர்கள் நையாயிகர்"* (திருவிளை. உலவாக். 19.);

வையாபுரி *vaiya-puri,* பெ. (n.) பழனி, வையாபுரிக்குளம்; Palani, in the Dindukal District.

வைரக்கடுக்கன் *vaira-k-kaṭukkaṉ,* பெ. (n.) வயிரமணி யிட்டமைத்த காதணி; diamond ear-ring.

வைரக்கல் *vaira-k-kal,* பெ. (n.) வயிரமணி; diamond.

வைரகரம் *vairakaram,* பெ. (n.) பகைமை; (யாழ். அக.) hostility, enmity.

வைரகரன் *vairakaraṉ,* பெ. (n.) பகைவன் (சத்துரு); (யாழ். அக.) enemy.

வைரசுத்தி *vaira-cutti,* பெ. (n.) பழிவாங்கிப் பகைதீர்க்கை; (யாழ். அக.) retaliation, taking vengeance.

வைரம்[1] *vairam,* பெ. (n.) 1. கடினமானது; hardness. 2. மரக்காழ் (திவா.); core of tree. 3. வயிரம்; diamond. *"அட்டுநீ ரருவிக் குன்றத் தல்லது வைரந் தோன்றா"* (சீவக. 2925.)

வைரம்[2] *vairam,* பெ. (n.) 1. பகைமை; enmity. 2. வீரம்; bravery, heroism.

வைரம்[3] *vairam,* பெ. (n.) இசைக்கருவிகளின் (வாச்சியப்)பொது. (பிங்.); musical instrument.

வைரம்பாய்-தல் *vairam-pay-,* செ.கு.வி. (v.i.) திண்மையதாதல்; to harden, as the core of a tree.

வைரவனூர்தி *vairavaṉ-ūrti,* பெ. (n.) நாய் (பிங்.); dog, as Bhairava's vehicle.

வைரன் *vairaṉ,* பெ. (n.) பகைவன் (சத்துரு) (யாழ். அக.); enemy.

வைராக்கியசதகம் *vairākkiya-catakam,* பெ. (n.) சாந்தலிங்கசுவாமிகள் இயற்றிய நூல்; a poem by Cāntaliṅkacuvamikaḷ.

வைராக்கியஞ்சொல்(லு)-தல் *vairākkiyañ-col-,* செ.கு.வி. (v.i.) தான் துறவு பூணத் துணிந்துள்ளதை ஆசிரியன் முன் தெரிவித்துக் கொள்ளுதல் (சிலப் 30,33 அரும்); to declare before one's guru one's decision to enter upon the way of renunciation.

த.வ. துணிவு கூறல், பூட்கை செப்பல்

வைராக்கியம் *vairākkiyam,* பெ. (n.) 1. உலகப்பற்றின்மை; freedom from worldly desires, asceticism. 2. விடாப்பிடி; perseverance, stubbornness. அதைச் செய்யவேண்டுமென்று வைராக்கியமா யிருக்கிறான்; 3. மதாவேசம்; zeal fanaticism. மத வைராக்கியம். 4. பிரசவவைராக்கியம் புராண வைராக்கியம் மயான வைராக்கியம் என மூவகையாய் உள்ளத்தே உறுதிப்பட்டது போலத் தோன்றி மறையும் பற்றின்மை; short lived determination to abstain from wordly pleasures, of three kinds, viz., piracava-vairākkiyam, purāṇaa-vairākkiyam, mayāṉa-vairākkiyam. 5. வெறுப்பு (யாழ். அக.); disgust. 6. பகை (யாழ். அக.); enmity.

த.வ. பூட்கை

வைராகி *vairāki,* பெ. (n.) வடநாட்டிலிருந்து பிச்சையெடுத்துத் தேசசஞ்சாரஞ் செய்யுங் கூட்டத்தைச் சேர்ந்தவன்; a class of pilgrims and mendicants from Northern India. 2. துறவி (யாழ். அக.); ascetic. 3. மனவுறுதியுள்ளவன்; person of strong or adamantine will.

வைராகிகன் *vairākikan,* பெ. (n.) **வைராகி** 2 பார்க்க; (யாழ். அக.); see vairāgi.

வைராங்கியம் *vairāṅkiyam,* பெ. (n.) **வைராக்கியம்1** பார்க்க; (யாழ். அக.); see *vairākkiyam.*

வைராவி *vairāvi,* பெ. (n.) **வைராகி** பார்க்க; (யாழ். அக.); see vairāgi.

வைரி[1] *vairi,* பெ. (n.) பகைவன்; enemy.

வைரி[2] *vairi,* பெ. (n.) **வைராகி3** பார்க்க; see vairāgi.

வைரி[3] *vairi,* பெ. (n.) வல்லூறு; (வின்.) royal falcon.

வைரிதை *vairitai,* பெ. (n.) வீரம்; heroism, valour. 2. பகைமை; enmity.

வைரியம் *vairiyam,* பெ. (n.) 1. வீரியம்; strength, prowess. 2. **வைராக்கியம்** 5,6 பார்க்க; see vairākkiyam.

வைரூப்பியம் *vairūppiyam,* பெ. (n.) அழகின்மை (அவலட்சணம்); (யாழ். அக.) deformity, ugliness.

வைலட்சணம் *vailaṭcaṇam,* பெ. (n.) அழகின்மை (அவலட்சணம்) (யாழ்.அக.); ugliness.

வைலட்சணியம் *vailaṭcaṇēyam,* பெ. (n.) வேறுபாடு (சிவசம.); difference, disparity.

வைலட்சயம் *vailaṭcayam,* பெ. (n.) 1. எதிரிடை; contrariety. 2. **வைலட்சணியம்** பார்க்க; see vailaṭcaṇēyam.

வைவச்சுதன் *vaivaccutan,* பெ. (n.) 1. மனு பதினால்வருள் ஒருவன் (காஞ்சிப்பு. திருமேற். 6.); a mythical progenitor of the human race, one of 14 maṉu, q.v. 2. எமன்; (பிங்.) yama. 3. சனி; (யாழ். அக.) saturn.

வைவசுதபட்டணம் *vaivacuta-paṭṭaṇam,* பெ. (n.) **வைவைச்சுதபுரம்** பார்க்க; see vaivaiccuta-puram.

வைவைச்சுதபுரம் *vaivaiccuta-puram,* பெ. (n.) எமனுடைய நகரம்; the city of yama. *"விளங்கு வைவைச்சதபுர மேவினார்"* (குற்றா. தல. மந்தமா. 101.)

வைவைச்சுதன் *vaivaiccutan,* பெ. (n.) வைவச்சுதன் பார்க்க (யாழ். அக.); see vaivaccutan.

வைனதேயன் *vainatēyan,* பெ. (n.) கலுழன், கருடன் (பிங்.)); garuḍa, as the son of Vinata. *"வைனதேயனு மன்னமுங் குடிபோகவே"* (தக்கயாகப். 61).

வைனாசிகம் *vainacikam,* பெ. (n.) எண்பத்தெட்டாவது பாதத்தைக் கொண்டதும், பிறப்பு நாண்மீனுக்கு (சன்மநட்சத்திரத்திற்கு) இருபத்துமூன்றாவதுமான நாண்மீன் (நட்சத்திரம்); (இலக். வி. 797.) the 23rd nakṣatra from one's natal nakṣatra when the 88th pātam falls within it.

வோரகம் *vōrakam,* பெ. (n.) எழுத்து (யாழ். அக.); letter.

[Skt. vōraka > த. வோரகம்]

வோலகம் *vōlakam,* பெ. (n.) **வோரகம்** பார்க்க; (யாழ். அக.); see vōrakam.

வெளவுலம் *vauvulam,* பெ. (n.) மரவகை (சுக்கிரநீதி, 228); a kind of tree.

[Skt. babbula > த. வெளவுலம்]

அயற்சொல் – பத்தாம் மடலம்

மூன்றாம் தொகுதி

பின்னிணைப்பு ANNEXURE

அன்றாடு வழக்கில் பயிலும் ஆங்கிலச் சொற்கள்

ஆங்கிலச்சொல்	–	தமிழ்ச் சொல்
Abrasives	–	உரசிகள் அங்காடி
Accountant	–	கணக்கர், கணக்காளர்
Accountant-General	–	கணக்காளுகைத் தலைவர்
Accoustic materials	–	கேட்புக்கருவிகள்
Acknowledgement	–	பெறுகை ஒப்பம், ஒப்புரை, பெறுகைச்சீட்டு, ஏற்றுக்கோடல்
Acid	–	அமிலம், காடிப்பொருள்
Acquisition	–	கைப்படுத்துகை, கையகப்படுத்தல்
Adhesive tape	–	ஒட்டு நாடா
Additional	–	கூடுதல்
Adhesive glue	–	ஒட்டுப்பயினி
Adhesives stamp	–	ஒட்டுவில்லை, பசை வில்லை, ஒட்டு முத்திரை
Advertising Agent	–	விளம்பரமுகவர்
Advertisers	–	விளம்பர வினைஞர், விளம்பரதாரர்
Agency	–	முகவம், முகவாண்மை
Agent	–	முகவர்
Agriculture	–	வேளாண்மை
Agro Centre	–	வேளாண்மை நடுவம் வேளாண்மை மையம்
Agro Industries	–	வேளாண் தொழிலகங்கள், வேளாண் தொழில்கள்
Agro Service	–	உழவுப் பணி, வேளாண்மைப் பணி
Agro Service Centre	–	வேளாண்மைப் பணிமையம் வேளாண் பணி நடுவம்
Equipments & supplies		ஏந்தங்கள் – தரவுகள்
Agricultural Marketing	–	வேளாண்மை விற்பனம்
Air cargo Service	–	வான்சரக்குப் பணியம்
Airconditioner	–	காற்றழுத்தி, குளிர்பதனி, சீர்வளி
Aircondition	–	காற்றுப்பதனி, செந்தணுப்பு
Air cooler	–	காற்றுத்தணுப்பி
Air curtain	–	காற்றுத்திரை
Air Pillow	–	வளியணை, காற்றுத் தலையணை.
Air Pollution Control	–	காற்று மாசுத்தடுப்பு
Air Port	–	வரன்திடல், வானூர்தி நிலையம்
Air Travel Ticket	–	வான்செலவுச் சீட்டு
Airline Company	–	வான்வழிக் குழுமம்
Alarm Time Piece	–	அலறிக் கடிகாரம், அலறி, மணி அலறி, அலறி/அதிர் மணிப்பொறி
Aluminium Trading Company	–	வெண்மாழை மாறல் குழுமம்
Aluminium Vessel Store	–	அளமியக்கலப் பண்ட சாலை, வெண்மாழைக்கடை ஏனக் கடை
Aluminium designer and fabricator	–	வெண்மாழை வடிவுநர், வனைவர்
Ambulance	–	மருந்தூர்தி, மருத்துவ ஊர்தி, உதவு ஊர்தி, உதவூர்தி
Antenna	–	அலைவாங்கி
Screen	–	எழினி
Consultant		கலந்துரைஞர்
Arcade	–	நடைவானப் பந்தல்
Arch	–	வில் வளைவு, வளைவு
Artisan	–	கைவினைஞர், கைத்திறத் தொழிலாளர், கம்மியர்

Artist	–	கலைஞர், கவின் கலைஞர், ஓவியர்
Art Prints	–	கலை அச்சீடுகள், கலை அச்சுகள், கவின் அச்சுகள்
Arts	–	கலையகம், கலை, கலைக்கூடம், கலைத்துறை
Art Service	–	கலைப்பணி
Arrack shop	–	சாறாயக்கடை
Asbestos	–	கல்நார்
Asbestos products	–	கல்நார் ஆக்கப்பொருள்கள்
Assistant	–	உதவியாளர்
Associates	–	கூட்டாளி, பங்காளி, துணைமையர், இணைவோர்
Audition	–	கேட்டாய்தல், கேட்டல்
Auditor	–	தணிக்கையாளர், கணக்காய்வாளர்
Auditorium	–	கலையரங்கம்
Audio Cassette	–	ஒலிப்பேழை, ஒலிநாடா
Audio Centre	–	கேட்பொலியகம், கேட்பொலி நடுமெம் ஒலியகம், ஒலிநாடாமையம்.
Auto	–	தானி, தானுந்து
Auto Lining	–	தானி – வரிப்பேடு
Automatic Watch	–	தன்னியக்க மணிப்பொறி
Auto - Service	–	தானிப் பணியகம்
Automobiles	–	தானியங்கி வினையகம்
Auto rickshaw	–	தானுந்து
Spare parts shop	–	மிகையுறுப்பு அங்காடி
Auto-wings	–	தானி–சிறகம்
Avenue	–	நீழற்சாலை, கவின்பாதை
Bakers	–	அப்பவாணிகர்
Bakers & Confectioners	–	அடுமனைஞர் மற்றும் தின்பண்டங்கள்
Bakery	–	அடுமனை
Bamboo Mart	–	மூங்கிலங்காடி, மூங்கில்கடை
Bamboo & Woven wood	–	மூங்கில் & மரநிணப்பு
Bank	–	வைப்பகம், வங்கி
Bankers	–	வைப்பகர்
Bar	–	அருந்தகம், மதுக்கூடம், வழக்குரைஞர் குழாம்
Bargain	–	விலைப்பேச்சு
Bar Soap	–	பாரை வழலை
Barber shop	–	முடி திருத்தகம்
Barrels & drums	–	மிடா & உருள்தாழி
Bathroom Accessories	–	குளியலறை இடுமானங்கள்
Batteries & Drycell	–	மின்னாக்கிகள், உலர்கலம்
Battery Service	–	மின்கலப் பணியகம்
Bazaar	–	கடைத்தெரு, அங்காடி
Beach Resort	–	கடற்கரை தங்ககம்
Beacon Light	–	வழிகாட்டும் ஒளி
Beef Stall	–	மாட்டிறைச்சி முற்றம், மாட்டிறைச்சிக் கடை
Bearings corporation	–	பொதிகைகள் கூட்டகம்
Beauty saloon	–	அழகுநிலையம், அழகூட்டு நிலையம்
Beavery	–	விலங்குகள் வளர்ப்பிடம்

Bedding Mart	–	படுக்கை அங்காடி
Bed spreads	–	படுக்கை விரிப்புகள்
Beef	–	மாட்டிறைச்சி
Beef Brewis	–	மாட்டிறைச்சி வடிசாறு
Bellows	–	உலைத்துருத்திகள்
Benefit Fund	–	நல நிதி, நலக்குவை
Beverages	–	பருகங்கள்
Bicycle Dealers & Repairers	–	மிதிவண்டி பகுவாணிகர் & ஒருக்கர்
Bill board Advertisement	–	நெடும் பலகை விளம்பரம்
Bhavan	–	நிலையம்
Billiard Equipment	–	கோற்பந்து ஏந்தங்கள்
Binding works	–	கட்டடப் பணியகம்
Biscuits	–	ஈரட்டிகள்
Block maker	–	படக்கட்டை (படவுரு) ஆக்குநர்
Blood Bank	–	குருதிவைப்பகம்
Blue Metals	–	கருங்கல் நீல மாழைகள்
Boarding & Lodging	–	உறையுள் உணவகம்
Body builder	–	ஊர்திமேற்கட்டு வினைஞர், கூடக வினைஞர், ஊர்தி மேற்கூடு கட்டுநர்
Boiler	–	கொதிகலன்
Bolts & Nuts	–	நெட்டாணி & திருகுமரை
Book Dealers	–	புத்தகப் பகுவாணிகர்
Book binder	–	புத்தகக் கட்டகர்
Booking Agent	–	பதிவு முகவர்
Booking Counter	–	பதிவு கணக்கப்புரை, ஏட்டுப்பதிவகம்
Booking clerk	–	பதிவு எழுத்தர்
Booth	–	சிற்றங்காடி, சிறகம்
Borewell Contractor	–	ஆழ்துளைக்கிணறு ஒப்பந்தர்
Bore-well Services	–	ஆழ்துளைக் கிணறு பணியகம்
Bottles wholesale	–	ஆடிக்குப்பிகள் தொகுவாணிகம்
Boutique	–	பொலிவகம்
Boxes - Plastic - transparent	–	நெகிழி ஒளியூடு பெட்டிகள்
Brakes - lining manufacturers	–	தகைப்பு – சீர்மம் உருவாக்குநர்
Brassieres - corsets gridles sale	–	மார்கச்சுகள், இறுக்கக்கச்சுகள், இடைக்கச்சுகள் விற்பனை
Breweries	–	வடிப்பகம், வடிசாலை
Brickfield	–	செங்கற் சூளை
Broiler Centre	–	இறைச்சிக் கோழி நடுவம்
Brothers	–	உடன்பிறப்புகள், பிறவன்மார்
Brother	–	பிறவன்
Brush Retail	–	தூரிகை சில்லறைக்கடை
Builders	–	கட்டுமானர், கட்டுநர்
Building Society	–	கட்டுமானக் கழகம்
Buffet	–	எடுத்தூண், மகிழ்ந்தூண்
Bulb	–	குமிழி, குமிழ் விளக்கு
Bus company	–	பேருந்துக் குழுமம்
Business	–	வாணிகம், தொழில்
Button Centre	–	பொத்தான் நடுவம்
Buzzer	–	இமிரி
Butcher	–	ஊன் விற்பவர், ஊனாளர்
Cables Accessories	–	வடங்கள் இடுமானங்கள்
Cabs	–	வாடகை வண்டிகள்

Cafe – உண்டிச்சாலை, அருந்தகம், சிற்றுணவகம்

Cafteria – சிற்றுண்டி நிலையம்

Calculating Machines– கணக்கிகள்

Camera – படவம்

Campus – வளாகம்

Cane Works – பிரம்புப் பணிகள்

Canteen – உண்டியகம், சிற்றுண்டியகம்

Canopy – மேற்கட்டு, மேற்கவிப்பு

Canvas – கித்தான்

Capacitors – கொள்கலங்கள்

Carpentry Works – தச்சுப்பணிகள்

Car renting & Leasing – இன்னியங்கி வாடகை & குத்தகை

Caravan Appliances – சாத்துவாணிக உதவங்கள்

Carbon producers – கரித்தாள் ஆக்குநர்

Card board shop – தாளட்டைக் கடை

Cargo carriers – சரக்கு செலுத்துநர்

Cartoon – பகடிப்படம், கருத்துப்படம்

Cartoonist – பகடிப்பட ஓவியர்

Cash Counter – பணம் வழங்கறை

Casting steel – எஃகு வார்ப்படம்

Cassette – ஒளிப்பேழை

Caterers – இடுகலை வல்லுநர்

Ceiling fan – முகட்டு விசிறி

Cellular – கைப்பேசி, செல்பேசி

Cement Manufacurers – கதைமா விளைக்குநர்

Centre – நடுவம், மையம்

Ceramic producers – மட்கல ஆக்குநர்

Chalan – அக இதழ், நறுக்கிதழ்

Chalk Industries – சுண்ணக்கட்டித் தொழிலகம்

Chamber works – செங்கல் தொழில், ஊடெரிபணியம்

Chambers – பெருமனை

Chemicals – வேதிப்பொருள்கள்

Chicken Soup – கோழி வடிசாறு

Chit Fund – சீட்டு நிதியகம்

Choice dress – உகப்பு உடுப்புகள்

Cordless Telephone– கைப்பேசி

Cigarette Tobacco Dealer – வெண்சுருட்டு புகையிலை பகுவாணிகர்

Cine Arts – திரைக்கலையகம்

Clinic – நலவகம்

Clinical Lab – நலவ ஆய்வகம்

Club – மன்றகம்

Coaching club – பயிற்றாளர்குழாம்

Cleaners & Dyers - wholesale – துலக்குநர் & நிறக்குநர் தொகுவாணிகம்

Coffee House – காணீர் அங்காடி

Coffee Filter – காணீர் வடிகட்டி

Coffee Mart – காணீர் தூள் முன்றில்

Cold storage – தண்காப்பகம்

Coil industry – சுருணைத் தொழிற்சாலை, சுருணைத் தொழிலகம், கயிற்றுத் தொழிலகம்

Colour Lab – வண்ணக்கூடம்

Colours – வண்ணங்கள்

Collections – திரட்டுகள்

Commission Agents – தரகுவாணிகர்

Communication equipments – செய்தித் தொடர்பு ஏந்தங்கள்

Complex – தொகுமம்

Compact Disc – பதிவு வட்டு

Company - குழுமம்

Complimentary items - உவந்தளிப்பு ஏந்தங்கள் இனங்கள்

Compound - அரணகம், சுற்றடைப்பு

Computer Processing maintenance - கணிப்பொறி, கணிப்பொறி இயலம் & பேணுகை

Concrete works - கற்காரைப் பணியகம்

Computer Centre - கணினி மையம்

Condensed Disc - செறி தட்டு

Computer software - கணிப்பொறி மென்பொருள் கணினிமெல்லம்

Cone Ice Cream - கூம்புப் பனிகம்

Confectioners - தின்பண்ட விற்பகம்

Consultants - கலந்துரைஞர் - கலந்துரையர்

Constructor - கட்டடம் கட்டுநர், கட்டகர்

Construction - கட்டுமானம்

Containers - கொள்கலம்

Contractor - ஒப்பந்தக்காரர், ஒப்பந்தர்

Cool Drinks - குளிர்பானங்கள்

Cooker & Stoves - அடுகலன், அடுப்புகள்

Cooking utensils - அடுகல ஏனங்கள்

Cool-bar - தண் பருகமுன்றில் தண்ணருந்தகம்

Co-optex - கூட்டு நெசவம்

Corporation - கூட்டகம், இணையம், மாநகராட்சி

Cosmetics & Perfume stall - ஒப்பனை நறுமணத்திகள் சில்லறை வணிகம்

Costumes - கவர்ச்சி ஆடைகள்

Cottage Industries - குடிசைத் தொழிலகங்கள்

Cotton garments wholesale - நூலாடை தொகுவாணிகம்

Counter - எண்ணகம், செயலறை

Courier - தூதஞ்சல்,ஆளஞ்சல்

Coverings - புனைவு அணிகலங்கள், புனைவணி

Crackers - பட்டாசுகள்

Crafts - கைத்தொழில்கள்

Crushing pulverising equipment - பொடிப்பு அரைப்புப் பொறிகள் & ஏந்தங்கள்

Cushion - மெத்தியம்

Cultural organisation - பண்பாட்டு அமைப்பகம்

Currency Exchange - பணத்தாள் மாற்றகம்

Cut pieces - விடு துணிகள், துண்டுத்துணிகள்

Cycle Company - மிதிவண்டிக் குழுமம்

Cycle - Mart - மிதிவண்டி அங்காடி

Cycle Rickshaw - மிதியிழுவண்டி

Cycle Rickshaw manufacturers - மிதியிழுவை உருவாக்கம்

Cycle shop - மிதிவண்டியகம்

Cylinder - gas Agency - வளிக் கூம்பி - வளி முகவம், உருளை வளி முகவம்

Darn - கீழ்த்ததையல்

Data Processing - விவர வகைப்பாடு

Invisible darning - தோன்றாத் தையல்

Dain producers - கவின் பொருள் ஆக்குநர்

Dealer - பகுவாணிகர்

Decorators - அணி செய்பவர், ஒப்பனையர்

Deluxe Centre - சொகுசு நிலையம்

Dental Clinic - பல் மருத்துமனை

Dentist - பல் மருத்துவர்

Dental Surgeon - பல்மருத்துவர், பல் அறுவை மருத்துவர்

Deposit - இட்டுவைப்பு

Depot - கிடங்ககம்

Departmental stores - பல்துறைப் பண்டகச் சாலை, பல்பொருள் அங்காடி

Designers - வடிவாக்குநர், வடிவுநர், வடிவர்

Detective Agencies - துப்பறியும் முகவங்கள்

Detergent - சலவைப்பொருள்

Diamond & Jewellery Manufacturers - வயிரம் அணிகலன் விளைக்குநர், ஆக்குநர்

Die Castings - அச்சு உரு வார்ப்புகள்

Digital Watch - எண் கடிகை

Display Boards - விளம்பரப் புறப்பலகைகள்

Distillers - துணிவடிமனை, வடிமனை

Distributor - வழங்குநர், பகிர்நர்

Domestic service - நாட்டகப் பணியம், வீட்டகப் பணியம்

Drawing materials - ஓவியத் துணைப் பொருள்கள்

Drinks - பருகம், பருகங்கள்

Dress Makers - உடை ஆக்குநர்

Dress Paradise - ஆடை உலகம்

Drive in Hotel - உகைவக உணவகம்

Dry cleaners shop - உலர் வெளுப்பகம்

Dry Fruits - உலர்கனிகள்

Drug stores - மருந்துப் பண்டகம், மருந்துக் கடை

Druggists - மருந்தாளர்கள்

Drums & Barrels - உருள்தாழிகள், மாழைமிடாக்கள்

Duty Paid Shop - தீர்வை செலுத்தப்பட்ட பொருள் அங்காடி

Dye - சாயம்

Dyeing - சாயப்பூச்சு

Dyer - நிறக்குநர், நிறமூட்டுநர்

Dye-Stuff - சாயப்பொருள்

Dye-Works - சாயத் தொழிலகம்

Edible Oil - உண் எண்ணெய்

Electricity - மின்சாரம், மின்னியம்

Electric Appliances - மின்னியல் உதவங்கள்

Electricals - மின்பொருள்கள்

Electronic components - மின்னணுப் பொருத்துகள், மின்னகப் பொருந்துகள்

Embroidery - பூத்தையல்

Emporium - மளிகையகம், எழிலங்காடி

Emulsion - பால்நிறக் குழம்பு

Enclave - வளாகம்

Engineer - பொறிஞர், பொறியாளர்

Engineering Industries - பொறியியல் தொழிலகம்

Enlarger - பெரிதாக்கும் கருவி

Engines Diesel - தீசல் எந்திரங்கள்

Essences - சாறங்கள், சாறுகள்

Enterprises - தொழில் முனைவம்

Entrepreneur - தொழில் முனைவோர்

Eversilver - நிகர்வெள்ளி, நிலை வெள்ளி

Exhibition cum sale - நேர்காட்சி விற்பனை

Exhaust Fan - ஊதுவிசிறி, உறிஞ்சுவிசிறி

Exporters – ஏற்றுமதியாளர்

Explosive – வெடிபொருள்

Fabricators – புதுப்புனைவர், கட்டமைப்பாளர்

Fan Regulator – விசிறி கலிங்கு

Fans & Ventilators Retail sales – மின்விசிறி காலதர் சில்லறை விற்பனை

False ceiling – ஒப்பனைமுகடு

Federation – ஒன்றாயம், கூட்டாயம்

Feeds – தீனி, தீவனம்

Fibre Pipes – நாரிழைக் குழாய்கள்

Fibre glass Fabricators – நாராடிப் புதுப்புனைவர்

Fabric dress distribution – புனைவுடை வழங்குநர்

Factory – தொழிற்கூடம்

Fashion – புதுப்பாங்கு, புதுப்பாணி

Fast Food Parlour – விரைவுண்டி முன்றில், விரைவு உணவகம்

Filter – வடிகலம்

Filter cigarette – வடிமுனை வெண்சுருட்டு

Finance – பணவம், செல்வம்

Financiers – பணவாணிகர், பணவர்

Finance & Benefit Fund – பணவுதவி, நலவைப்பு

Fire Engine – தீயணைப்பு எந்திரம், தீயணைப்பு வண்டி, தீயணைப் பொறி

Fisheries – மீனளம்

Fitter – பொருத்துநர்

Fish-seafood sales – மீன், கடலுணவு விற்பனை

Flats – அடுக்குமனை, அடுக்கு வீடுகள்

Flasks – குடுவைகள், சேமச்செப்பு, சேமக்குடுவை

Florist – பூ விற்போர், மலர் விற்பனையாளர்

Floodlight – ஒளிவெள்ளம்

Flour Mill – மாவாலை

Fluorescent Lamp – பாதரச ஆவி விளக்கு, இதள் ஆவி விளக்கு

Fluorescence – ஒளி வண்ணம், ஒளிர் வண்ணம்

Folding Furnitures – மடக்கு அறைகலன்கள்

Flush doors – மீள்கதவுகள்

Foam pillow – நுரையணை, நுரைத் தலையணை

Foam producer – நுரையம் ஆக்குநர்

Foundation – நிறுவனம், அடித்தளம்

Foundry – வார்ப்பாலை, வார்ப்பகம், வார்ப்படச் சாலை, வார்ப்புக் களம்

Frame Works – படச்சட்டப் பணிமனை, படச்சட்டக்கடை

Framer – படச் சட்டமிடுபவர்

Fruit Juice – கனிச்சாறு, பழச்சாறு

Foot wear – மிதியடி, காலணி, காலணியகம்

Furnishers – அறைகள் ஒப்பனையர்

Furniture – அறைகலன்

Furniture Mart – அறைகலன் அங்காடி, வீட்டு ஏந்துப் பொருள்கள், அறையமர்வுப் பொருளகம்

Garments – உடை வகைகள் (ஆடை)

Garments showroom	–	பகட்டாடை காணகம்
Gas	–	எரி ஆவி, எரிவளி
Gas Welding	–	ஆவிப் பற்றவைப்பு
Gas supplies	–	வளி வழங்கீடு
General Hospital	–	தலைமை மருத்துவமனை
General Merchant	–	பொதுவாணிகர்
General Stores	–	பல்பொருள் அங்காடி
Gift House	–	பரிசுப் பொருளகம் (இல்லம்)
Ginning Factory	–	பஞ்சுப்பிரிப்பு தொழிற்கூடம், பஞ்சாலை
Glassware group	–	கண்ணாடிப் பொருள்கள் குழுவம்
Godown	–	கிடங்கு, கிட்டங்கி
Gold Refineries	–	தங்கத் தூவடியாலை, தங்கத்தூய்மை ஆலை, பொன் தூய்மை செய்யுமிடம்
Granites	–	கருங்கற்கள், வனப்புக் கற்கள், கருங்கல் சல்லிகள்
Granite & Marbles store	–	இழைப்புக்கல், சலவைக்கல் பண்டகம்
Graphics	–	எழுத்து வரைகலை
Grille works	–	ஒட்டு மாழைப்பணிகள்
Grinder	–	திரிகைக்கல், அரைப்பான், இயந்திர ஆட்டுக்கல், அரைக்கும் கருவி
Grindery	–	சாணை பிடிக்கும் இடம்
Groceries	–	பலசரக்கு
Group of Companies	–	குழுமங்களின் குழுவம்
Guest House	–	விருந்தகம், விருந்தில்லம், விருந்துமனை, விருந்தினர் மாளிகை / இல்லம்
Hall	–	மன்றம், கூடம், அரங்கம்
Halls and Auditoriums	–	நெடுங்கூடம் & அரங்குகள்
Handicraft	–	கைத்தொழில் கைவினைப் பொருள்கள்
Handlooms	–	கைத்தறி ஆடைகள்
Hair Dressers	–	முடி ஒப்பனையர்
Hair stylists	–	முடி ஒயிலர்
Hardwares	–	வன்மாழைகள், வன்மாழையகம், வன்சரக்கு, இரும்புக் கடை, வன்பொருளகம்
Hardware Merchant	–	திண்பொருள் வாணிகர்
Hatchery	–	குஞ்சு பொரிப்பகம்
Headlight	–	முகப்பு விளக்கு
Health club	–	நலவகக் குழாம்
Health Centre	–	நல மையம், நல்வாழ்வு நிலையம், நல நடுவம்
Hearing Aids	–	கேட்புதவிக் கருவிகள்
Hire, for Hire	–	வாடகை, வாடகைக்காக, வாடகைக்கு
Hi-tech Industries	–	உயர் – தொழில்நுட்பத் தொழிலகம் (தொழில் நுட்பம்)
Holiday resort	–	விடுமுறை ஒய்வகம்
Home	–	அகம், இல்லம், வீடு
Home Appliance	–	இல்லப் பயன்பொருள்கள், வீட்டுவசதிப் பொருள்
Hose-pipes	–	நெளிவுக் குழாய்கள்
Hosiery	–	உள்ளாடை
Hotel	–	உணவகம்
House	–	இல்லம், வீடு
Housing Developers	–	வீட்டு வசதி மேம்பாடு, வீடு கட்டுவோர்

Ice cream parlour – பனிக்குழை முன்றில்

Industry – தொழிலகம், தொழில்கள்

Initial – முன்னெழுத்து

Institute – நிறுவம், நிலையம், நிறுவனம், பயிலகம்

Institution – நிறுவனம்

Interact Club – இடைவினை மன்றகம், இணைந்தியங்கு மன்றம், கலந்துரையாடு மன்றம்

Interior decorations – அகமனை ஒப்பனை

Interest – வட்டி

Investment – முதலீடு

Invisible Darning – தோன்றாத் தையல்

Iron Box – சலவைப் பெட்டி, தேய்ப்புப் பெட்டி

Iron Works – இரும்புச்சார் பணிகள், இரும்புத் தொழில்கள்

Iron & steel merchant – இரும்பு எஃகு வணிகர்

Job work – அன்றாடு பணி

Job Typists – பணித்தட்டச்சர்

Jewellers – அணிகலன் வாணிகர், அணியகம், நகைவாணிகர்

Jewellery – நகை வணிகம், நகை மாளிகை, அணிகல அங்காடி, அணிமணிப் பொற்சாலை

Juices – சாறுகள், பழச்சாறுகள்

Jubilee – பெருவிழா, விழா

Silver Jubilee – வெள்ளி விழா,

Golden Jubilee – பொன்விழா

Diamond Jubilee – வைர விழா

Platinum Jubilee – பவள விழா

Kiddies Corner – குழந்தைகள் ஆடையகம், மழலையர் பகுதி

Kid wears – குழந்தைகள் உடையகம்

Knitting – நிணப்பகம்

Kumaran & Co. – குமரன் & குழுமம்

Kumaran & Bro. – குமரன் & பிறவர்

Kumaran & sons. – குமரன் & மகார்

Laboratories – ஆய்வுக்கூடங்கள்

Laser Printing – ஒளியச்சு, ஒளிக்கதிரச்சு

Lathe works – கடைசல் பணி

Lamination – மேலீடு, காப்புறை

Lining works – வரித்தையல் பணி

Lions Club – அரிமா குழாம், அரிமா மன்றம்

Launder – வெளுக்குநர்

Laundry – வெளுப்பகம்

Lavatory – கழிப்பறை, கழிவறை

Lease – குத்தகை, வாடகை, வாடகையர், வாடகை ஒப்பந்தர்

Locker – பெட்டகம்

Lucky Centre – நற்பேறு நடுவம்

Lunch Home – நண்பகல் உணவகம், உணவகம்

Leather goods – தோல் பொருள்கள்

Litho Press – கல்லச்சகம், பல்வண்ண அச்சகம்

Limited – மட்டிட்டது

Lodge – தங்ககம், தங்குமனை, தங்கும் விடுதி

Lorry – சரக்குந்து

Lorry Booking Office – சரக்குந்துப் பதிவீட்டலுவலகம், சரக்குகந்து முகவர், சரக்குந்துப் பதிவு அலுவலகம்

Lorry transport – சரக்குந்து போக்குவரத்து

Lottery	– பரிசுச்சீட்டு
Lottery Agency	– பரிசுச்சீட்டு முகவம்
Loud speakers & mike	– ஒலி பெருக்கி & ஒலிவாங்கி
Lubricant Oil	– மசகுப் பொருள், உராய்வு காப்புப் பொருள், மசகு (எண்ணெய்) நெய்
Machineries & tools	– எந்திரங்கள், துணைக் கருவிகள்
Machineries	– எந்திர வகைகள்
Magazines	– தாளிகைகள், இதழ்கள்
Mahal	– மண்டபம்
Maintenance	– பேணுதல்
Makers	– உருவாக்குநர், தயாரிப்பாளர்
Mansion	– மாளிகை, தங்குமனை
Market	– விற்பனையகம்
Marketing	– விற்பனை
Market Complex	– அங்காடி ஒன்றகம், அங்காடி வளாகம்
Mart	– விற்பனம்
Manufacturer	– விளைக்குநர், பெருக்காளர்
Manufacturing	– உருவாக்கம்
Mattress & pillow	– மெல்லணை, தலையணை
Meals Ready	– உணவு அணியம்
Meat Mart	– இறைச்சிக் கடை
Mess	– உண்பகம்
Metal works	– மாழைத் தொழில்கள், பொன்ம வேலைகள், பொன்மத் தொழிலகம்
Metals dealer	– மாழைகள் பகுவாணிகர்
Medicals	– மருந்தகம், மருந்துக் கடை, மருந்து விற்பனையகம்
Metal Mart	– உலோக அங்காடி, மாழை அங்காடி, உலோகக் கடை, பொன்னங்காடி
Medical practitioner	– செய்முறை மருத்துவர்
Medical Union	– மருந்தக ஒன்றியம்
Metropolitan	– பெருநகர்
Milk booth	– பாலகம், பால்சிறகம்
Milk Dairy	– பால் பண்ணை
Model	– மாதிரி, போலிகை
Modelling	– விளம்பரத் தோற்றம் காட்டல்
Modern	– புதுமை, நாகரிக, நவீன, புதுப்பாணி, நாகரிகம்
Mosaic	– பல்வண்ணக் கல், வண்ண வழுவழுப்புக் கல், பளபளப்புக் கல்
Mosquito abatement	– கொசுக்கொல்லி
Motor cycles & scooters	– இயங்குந்துகள் & கையுந்துகள், விசையுந்து
Moulding Works	– வார்ப்படப் பணியகம், வார்ப்படப் பணிகள்
Movies	– திரையகங்கள், திரைப்படங்கள்
Mutton Soup	– கறிவடிச்சாறு, கறிச்சாறு
Mutton stall	– புலால் (புலவு) முற்றம்
Nail polish	– உகிர் மினுப்பெண்ணெய்
News Agent	– செய்தி முகவர்
Newspaper mart	– செய்தித்தாள் விற்பனம்
Non-Vegetarian Hotel	– புலவுணா உணவகம்
Nurse	– செவிலி
Nursery	– நாற்றங்கால், செடி வளர்ப்புப் பண்ணை, செடி வளர்பண்ணை
Nursery garden equipments	– வளர்ப்பு செடிப்பண்ணை எந்திரங்கள். இளங்கால் தோட்ட எந்திரங்கள்
Nursery School	– மழலையர் பள்ளி
Nursing Home	– நலம் பேணகம்

Nutrition	–	ஊட்டச்சத்து, ஊட்டவுணவு
Nylon	–	நொசிவிழை
Offset	–	எதிரீடு அச்சு, மறு தோன்றி
Opticals	–	கண்ணணி அங்காடி
Oil Company	–	எண்ணெய்ப் பண்டகம், எண்ணெய்க் கடை
Optician	–	கண்ணாடியாளர், மூக்குக் கண்ணாடி விற்பனையாளர், விழியாடியர்
Oil lubricants	–	எண்ணெய் முழுக்காட்டு
Oil mills	–	எண்ணெய் பிழிவாலைகள்
Oil refinery	–	எண்ணெய் பதமனை
Oil Stores	–	எண்ணெய்க் குழுமம், எண்ணெய் நிறுவனம்
Omni Bus	–	சொகுசுப் பேருந்து, ஒப்பந்தப் பேருந்து
Operation	–	அறுவை மருத்துவம்
Ophthalmologist	–	கண் மருத்துவர்
Orchids	–	பகட்டு மலரகம், வண்ணக் கொத்து மலரகம்
Organisation	–	அமைப்பகம், அமைப்பு
Oscillating Fan	–	சுழல் மின் விசிறி
Paints	–	பூச்சு வண்ணங்கள்
Packers & movers	–	சிப்பத்தர் & செலுத்தர்
Paging	–	விளித்தல், அகவி, பக்கக் குறியீட்டு முறை
Pager	–	விளிப்பான், அகவன், அகவி
Pan Stall	–	மடி வெற்றிலைப் பாக்குக் கடை
Paper mart	–	தாளகம்
Paradise	–	பொன்னுலகம், பெருமகிழ்வகம்
Parcel Service	–	சிப்பம் செலுத்தகம், சிப்பம் அனுப்பகம், கட்டுப் பணி, சிப்பம் பெறல் அனுப்பல் பணி
Partnership	–	பங்காண்மை
Parlour	–	முன்றில்
Passport	–	கடவுச்சீட்டு, கிள்ளாக்கு
Pawn broker	–	அடகு தரகர்
Pedestal Fan	–	தளிகை விசிறி (பீடம்), நெடுவிசிறி
Pefumeries	–	நறுமணப் பொருள்கள்
Pesticide	–	பூச்சிக்கொல்லி மருந்து
Petrol	–	கல்நெய், கன்னெய், எரிநெய்,
Petrol bunk	–	கன்னெய் கிடங்கி
Pharmacy	–	மருந்தகம், மருந்தாக்ககம்
Pharmaceutical	–	மருந்தாக்கியல்
Photo Blocks	–	ஒண்பட அச்சுரு, படக்கட்டை, ஒளிப்பட ஒளிப்படக்கட்டை
Photo studio	–	நிழற்படக்கலையகம், படமனை
Photographer	–	நிழற்படத்தர், புகைப்படத்தர், புகைப்படக் கலைஞர்
Picture Palace	–	படமாளிகை
Pipes & tubes	–	குழாய்கள் & தூம்புகள்
Plant	–	இயந்திரகம், விசையகம்
Plastic industry	–	நெகிழித் தொழிலகம், குழைமத் தொழிலகம்
Platform	–	நடைமேடை, நடை பாதை, பேச்சுமேடை
Plastic products	–	நெகிழிப் பொருள்கள்
Plaza	–	அங்காடி மாளிகை
Plot	–	மனையிடம், மனை
Plumber	–	குழாய்ப் பணியாளர்
Pork	–	பன்றி இறைச்சி
Plywood & Veneers wholesale	–	ஒட்டுப் பலகை, ஒளிர்பலகை, தொகு வாணிகம்

Polythene materials – ஈகநார் பொருள்கள்

Postage – அஞ்சற் செலவு, அஞ்சல் கட்டணம்

Post Office – அஞ்சலகம்

Poultry – கோழிப் பண்ணை

Poultry feeds – கோழித்தீவனம்

Press, Printers – அச்சகம், அச்சுக் கலையகம், அச்சுக் கலைஞர்

Private Ltd. – தனிவர் மட்டிட்டது

Printer & Publisher – அச்சீட்டாளர் & வெளியீட்டாளர்

Polish work – மினுப்பு வண்ணப்பணி

Power Plant – மின்னாக்கத் தொழிலகம்

Power Loom – விசைத் தறி

Power Press – மின் அச்சகம்

Products – விளைவங்கள், ஆக்கப் பொருள்கள்

Radio parts – வானொலிப் பெட்டி உறுப்புகள்

Readymade garments – ஆயத்த ஆடைகள்

Real Estate Agency – உடைமை முகவம், சொத்து முகவம், சொத்து அம்மக முகவம்

Real Estate – வீடு, மனை விற்பகம்

Refrigerator – தணுப்பி, தணுப்புப் பேழை, குளிரிப்பெட்டி

Repairer – ஒருக்காளர்

Restaurant – உணவில்லம்

Rolling shutters – வீழ்கதவுகள், சுருள் கதவு

Roofing materials – கூரை இடு பொருள்கள், மூடாப்புகள்

Rotary Club – சேவைக்குழாம், சுழன் முறை சேவைக்குழாம்

Rubber, foam sponge – தொய்வை, நுரையம், கடற்பஞ்சு

Rubber Stamp maker – இடு முத்திரை ஆக்குநர், தொய்வ முத்திரை ஆக்குநர்

Rubber Stamp Works – தொய்வை முத்திரைப் பணிகள், துடைப்பான், முத்திரைப் பணியகம்

Rayon cloth – கண்ணறைத்துணி

Rayon silk – கண்ணறைப்பட்டு

Safes and vaults – காப்புப் பேழைகள், ஊன்றுகால் பேழைகள்

Sales Centre – விற்பனை நிலையம்

Sales & Service – விற்பனையும் (சேவை) செய்மானமும்

Saloon – முடிதிருத்தகம்

Sanitary ware – துப்புரவுப் பொருள்கள்

Sanitary consultant – துப்புரவு கலந்துரையர்

Savoury – காரச்சுவையுண்டி, காரச் சுவையுணவு

Scan – ஊடு கதிர்ப்படம்

Screen print – திரையச்சு செய்வம், திரையச்சீடு

Shampoo – முடியெண்ணெய்

Saw mill – வாள்பட்டறை

Sculptor – கற்கம்மியர்

Security Services – காவல் பணிகள், பாதுகாப்புப் பணிகள்

Service – பணி, செய்மானம்

Service Centre – பணி நடுவம், பணி மையம், பணியகம்

Service Station – பணி நிலையம்

Sewage – சாய்க்கடை

Sewers – சாய்க்கடைக் குழாய்

Sewing Traders - தையல் பொருளகம், தையல் பொறி விற்பனையாளர், துன்னல் பொருள் விற்பனையாளர்

Shell Lime - சிப்பிச் சுண்ணம்

Servicing - தூய்தாக்கம், செப்பச்சீர்

Share market - பங்கு வாணிகம்

Shaving - மழிப்பு, மழித்தல்

Shed - கொட்டாரம், கொட்டகை

Sherber - மட்டநீர், வண்ணச்சுவை நீர், நறும்பானம்

Shoes - மிதியடிகள், காலணிகள், தொடுதோல் மூடு காலணிகள்

Shoes & Slippers shop - மிதியடி, நடைமிதி அங்காடி

Shopping Complex - வணிகத் தொகுமம், விற்பனை வளாகம்

Show room - காணகம்

Show case - காட்சிப்பேழை

Signal - நெப்பு

Signal Light - சைகை விளக்கு, நெப்பு ஒளி, குறிப்பாளம், நெப்பு

Silk palace - பட்டு மாளிகை

Silk home - பட்டுமனை

Silk House - பட்டு மாளிகை

Silk emporium - பட்டு நெடு மாடம்

Slate - கல்லேடு, கற்பலகை

Snacks - நொறுக்குத் தீனி, நொறுவை, நொறுவல்

Snack parlour - நொறுவல் முன்றில்

Soap - குளியல் கட்டி, வழலை, சலவைக்கட்டி, சவர்க்காரக் கட்டி

Soda Factory - காரவளி நீர்த் தொழில்மனை, காரவளியகம்

Sound system - ஒலியமைப்பு

Soup - வடிசாறு, சாறு

Sports - விளையாட்டுப் பொருளகம்

Society - சங்கம், கூட்டுக் கழகம், சேவைக் குழு

Soft Wear - மெல்லுடை, மென் உடை

Software - மென்பொருள், மெல்லினம்

Spartek - பளபளப்புக் கல்

Specialist - வல்லுநர், தனித் தகுதியர்

Spinning Mill - நூற்பாலை

Sprayer - தெளிப்பான்

Sprayer House - தெளிப்பான் அகம்

Spring & Co. - மீள்சுருள் குழுமம்

Stainless Steel - மாசிலா மாழை, மாசிலா எஃகு, துருவுறா எஃகிரும்பு

Standard Motor Products - செந்தர – இயங்கி– விளைவாக்கப் பொருள்கள்

Storage - சேமகம்

Star Hotel - தெரிவுத் தங்ககம், உடுவிடுதி

Steel - எஃகிரும்பு

Steel Engineering Works - எஃகிரும்புப் பொறியியற் பணிகள்

Steel Furnitures – எஃகிரும்பு அறைகலன்கள், எஃகுப் பொருள்கள்

Studio – படமனை, கலையகம்

Stationery – பலசரக்கு, மளிகை, எழுது பொருளகம், எழுதுபொருள்கள் எஃகிரும்பு

Stationery retail – எழுதுபொருள் சில்லறை விற்பனை

Stall – முற்றம், நிலையம்

Stereo – இசைத்தூண்டர், இசைப்பிரிப்பு, பிரிப்பிசை, இசைப்பெருக்கு

Stethoscope – நாடிக்குழல், நாடியறி கருவி, தொடுநாடி

Store, Stores – பண்டகம்

Storage – சேமகம், சரக்கு வைப்பு முறை

Straw-board – வைப்பலகை, வைக்கோலட்டை.

S.T.D., I.S.D., Local – உள்நாடு, வெளிநாடு, உள்ளூர் (தொலைபேசி)

Suit Case – உடைப் பேழகம், கைப்பெட்டி

Sunday Market – ஞாயிற்றங்காடி

Super Market – சிறப்பங்காடி, பேரங்காடி

Suppliers – வழங்காளர்

Surgicals – அறுவைப் பணிக்கருவிகள்

Tailor – தையலர்

Tailotorium – தையலகம்

Talkies, Theatre – திரையரங்கம், படமேடை

Tap – குழாய், பாய்குழல், பீலி

Tape Recorder – வார்ப் பதிவான், நாடாப் பதிவு, ஒலிப்பதிவுக் கருவி, ஒலிப்பதிவன்

Tea stall – தேநீர் முற்றம், தேநீர்க்கடை

Tannery – தோல் பதனீட்டகம்

Tanner – தோல் பதனீட்டாளர்

Tanning Company – தோல் பதனீட்டுக் குழுமம், நிறுவனம்

Tavern – அருந்தகம், பொது விடுதி

Tinkering – பொல்லம் பொத்துதல்

Telefilm – தொலைக்காட்சித் திரைப்படம், தொலைப்படம்

Telegram – தொலைவரி, தந்தி

Teleprinter / Telex – தொலையெழுதி, தொலை அச்சு, தொலை தட்டச்சுப் பொறி

Textiles – நெசவங்கள்

Theatre – திரையரங்கம், நாடக அரங்கம்

Tilery – ஓட்டாலை, ஓடுகள் செய்யுமிடம்

Tiles – ஓடுகள்

Timber Depot – மரவாடி, மரக்கிடங்கு

Timber Traders – வெட்டுமர வணிகரகம், மரக்கடை, மரவாடி, மரவாணிகம்

Toilet – கழிப்பறை, ஒப்பனை அறை, கழிவறை, நீரடி

Tomato Soup – தக்காளி வடிசாறு

Tourist Home – சுற்றுலா விடுதி

Tourist Taxi / Van – சுற்றுலா வாடகைச் சீருந்து, சிற்றுந்து, சுற்றுலாக் கூலியுந்து

Tourist information – சுற்றுலாச் செய்தியகம்

Tower – கூண்டுக் கோபுரம், கோபுரம்

Toy – பொம்மை, பொய்ம்மை, விளையாட்டுக் கருவி

Tractors – பார / கலப்பை இழுவைகள்

Trade – வணிகம்

Traders – வணிகர்

Trading Corporation – வணிகக் கூட்டிணையம், வணிகப் பெருங்குழுமம்

Traffic – நெரிசல், வாகன நடமாட்டம், போக்குவரவு (போக்குவரத்து)

Trailer – இணைப்புப் பெட்டி, இழுவைக் கலம், இழுவை வண்டி

Travel Agent – முகவர், பயண முகவர்

Transport – போக்குவரத்து

Transparencies – ஒளியூடிகள்

Truck – பார வண்டி

Trust – அறக்கட்டளை

Tube Light – குழல் விளக்கு

Tube-Well – குழாய்க் கிணறு

Tuition Centre – தனிப்பயிற்சி நிலையம், தனிப்பாட நடுவம்

Tutorial College – தனிப்பயிற்சிக் கல்லூரி, தோற்றோரியல் கல்லூரி

Typewriter Service Centre – தட்டச்சுப்பொறி பணி நடுவம், தட்டச்சுப் பொறி பழுது பார்ப்பகம்

Turning works – கடைசல் பணிகள்

Tyre Distribution – வட்டை பகிர்மானம்

Union – ஒன்றியம்

Unit – அலகு, ஒன்றகம்

Uniform – சீருடை

Uniforms & Accessories – சீருடை & பொருத்துகள்

Upholsterer – அறைகலன் ஒப்பனையர்

Upholstery – அறைகலன் ஒப்பனை

Vulcanizing – வெப்பொட்டல்

Vulcanising works – வட்டை இளக்ககம்

Van Heusen – வளமனை அங்காடி

Vaccum cleaners & Equipments – வெற்றிடை துலக்குநர் & ஏந்தங்கள்

Variety Hall – பன்முக அரங்கு

Varnish – நைப்பு வண்ணம்

Vegetarian Hotel – பயிருணா உணவகம்

Video – காணொலி, ஒளிக்காட்சி.

Video-Cassette – ஒளிப்பேழை, காணொலிப்பேழை

Video filming – காணொலி எடுப்பு

Video Coverage – காணொலி வளைப்பு

Walkie Talkie – நடைபேசி

Wall paper sales – சுவரோவியத் தாள் விற்பனை

Water heater – வெந்நீர்க்கலம்

Washing Powder – சலவைத்தூள்

Waste paper mart – கழிசடைத் தாள் விற்பனம்

Water Filter – நீர் வடிகலன்

Water Paint – நீர் வண்ணெய், நீர்க்கலவண்ணம், நீர்ச்சாயம்

Water service – நீராட்டுப் பணியம்
Weavers Equipment – நெசவாளர் ஏந்தங்கள்
Welding – பற்றவைப்பு, பற்றவைத்தல்
Welding works – பற்றாகப் பணி
Wear house – உடையகம்
Wet-Grinder – மாவு அரைப்பான், திரிகை
Wet grinding works – மாவாட்டும் பணி
Wine Shop – மதுக்கடை, மதுக்கூடம், மது விற்பனையகம்
Women's apparel – மகளிர் உடுப்புகள்
Works – பணிகள், வேலைகள்
Workshop – பட்டறை, பணிப்பட்டறை, பயிலரங்கு, பணியகம், தொழிலகம்
Wood processing – மரச் செப்பனீடு
Xerox – ஒளிப்படி
X-Ray – ஊடு கதிர்
Yarn – நூலிழை
Zero – சுழியம்
ZIP – பல்லிடுக்கி, இருபல் இணை, இழைவரிப் பல்லிணை
Zoological Garden – விலங்கினப் பூங்கா, விலங்கினக் காட்சியகம்

உணவு, உடை, இருப்பிடம், அறைகலன்கள்

உணவு

Breakfast – சிற்றுண்டி, சிற்றுணா
Lunch – நண்பகல் உணவு, நள்ளுணா
Supper – இரவு உணவு, அத்தாழம் அல்லுணா
Dinner – விருந்து
Meals – உணவு, அடுகை
Cocktail – மென்பருகம்
Cooking – சமையல்
Cook – சமையல்காரர், அடுவோர்
Cookery – அடுகலை
Catering – இடுகலை
Buffet – கூட்டுப் படையல், ஏந்துணா, கூட்டூண்
Drink – பருகம்
Beverage – அருந்தம்
Dessert – ஈற்றுணா
Light refreshment – அல்ப சிற்றுண்டி
Menu – உணா வகை, உணா பட்டிகை
Menu Card – உணா அட்டை, உணவட்டை
Pudding – அவிபணா, அவிபண்டம்
Preserves – தொடுகணா, தொடுகை
Server – இடுநர், படைவர்
Self service – தன் படைப்

அடுகல ஏனங்கள்

Boiler – சூட்டுக்கலம்
Stove – அடுப்பு
Gas cylinder – வளிக்கூடு
Heater – ஆனகி
Crater – பொடிச்சீவி
Kettle – கெண்டி
Mincer – பொடிப்பான்
Mug – முகவை
Peeler – உரிவை
Pressure cooker – அழுத்த அடுகலன்
Rolling pin – அடை உருளை
Siever – சலிப்பான்
Strainer – வடிகட்டி
Cup & Saucer – தட்டு கிண்ணம்
Plate – தட்டு
Platter – தட்டம்
Tray – தாங்கு தட்டம்
Tumbler – குவளை

உண் பொருள்கள்

Sweets - இனிப்புகள்
Savouries - காரங்கள்
Fruit salad - பழக்கூட்டு
Vegetable juice - பயிரஞ்சாறு
Rose Milk - செம்பனிப்பால்
Straw - வைக்குழல்
Soup - நீட்டாணம், வெஞ்சாறு
Badam Kheer - வாதுமைக்கன்னல்
Basanthi - பாலந்தி
Ice - பனிகம்
Ice Cream - பனிக்குழை, பனிகங்கள்
Cup ice - பனிச்சிமிழ்
Cone ice - பனிக்குடை, பனிக்கூம்பு
Stick ice - குச்சிப் பணிகம்
Ice fruit - பனிக்குழல்
Special Dosa - தனியன் தோசை
Paper roast - தாள் தோசை முறுவல்
Plain Dosai - பொதுவன் தோசை
Masala Dosai - உசிலைத் தோசை
Parotta - வல்லடை
Kuruma - குழவு
Kesari - கிளறி
Briyani - வாலூரன் வல்சி, புலவு, கறிச்சோறு
Omelette - முட்டையடை
Half boil - அரை வேக்காடு
Kaima - ஊன் துவை
Biscuit - ஈரட்டி
Bread - குட்டடை, அப்பம்
Bun - மெல்லடை
Puff - திணிவடை
Samosa - பிறைமடி
Cake - வெட்டடை
Rusk - வட்டடை

உடைகள்

Hat - கூம்பணி
Cap - தொப்பி, கொக்கறை
Cloth - துணி
Clothes - ஆடைகள்
Dress - உடை
Suit - உடுப்பு
Button - குமிழ்
Baniyan - மெய்யொட்டி
Belt - ஒட்டாப்பு
Bra - கச்சு, மார்க்கச்சு
Blouse - கச்சுகை
Jacket - இறவுக்கை
Petty coat - பாவாடை
Salvar kamis - மாராப்பு தாழாடை
Frill - மடிவை
Chudidar - கீற்றன்
Nighty - இரவாடை
Two piece - ஈரணி
Coat - குப்பாயம்
Jerkins - உரிவையம்
Swimming dress - நீந்துடை
Sanitary napkin - கீளாடை
Hairpin - வாகூசி
Elastic ribbon - விசிநாடா
Rubberband - தேய்புரி, தொய்வுரி
Gown - நெட்டாடை
Maxi - நெடுமி
Midi - நடுமி
Mini - குறுமி
Wedding dress - கூறை
Birthday dress - வெள்ளணி உடை
Raincoat - மழைக்குப்பாயம்
Jibba - தளராடை

Pant - நீட்டு
Pyjama - பையாடை
Shirt - சட்டை
Slack - குறுஞ்சட்டை
Underwear - உள்ளாடை
Towel - கைத்துகில்
Tie - மிடலி
Cutpiece - வெட்டுத்துணி
Scarf - கோணமடி
Socks - ஆசுறை, அடியுறை
Kaja - வீறல்
Belt - இடைக்கச்சு, ஒட்டாப்பு
Zip - இழுவை, பல்லிடுக்கி
Turkey towel - கம்பளத்துண்டு, கடுந்துண்டு
Second hand dress - இரண்டாங்கை ஆடைகள்
T-Shirt - ஏண் சட்டை
Fashion dress - புதுப்பாங்கு உடை
Boots - புதையடி
Shoe - மூடணி
Chappal - காலணி
Slipper - நடையணி

அறைகலன்கள்

Cushion - மெல்லணை
Sofa - மெத்தணை
Sofa cum bed - மெத்தணைப் படுக்கை
Sofa set - மெத்தனை அணப்பு
Stool - மொட்டான்
Torch - வீச்சு விளக்கு
Teepoy - தணிவு மேசை
Chair - நாற்காலி
Table - மிசை, மேசை
Wheel chair - சக்கர நாற்காலி, ஆழிக்காலி

Almirah - சுவர்ப்பேழை
Bureau - நிலைப்பேழை
Screen - திரை
Table cloth - மிசை விரிப்பு, மேசை விரிப்பு
Drawer - இழுவை
Key box - திறவுப்பெட்டி
Dining table - விருந்து மேசை
Wash basin - கழுவு தொட்டி
Dust bin - குப்பைத் தொட்டி

வீட்டுப் பொருள்கள்

Alarm clock - அரவக்கடிகை
Album - படக்கோப்பு
Brief case - குறும் பேழை
Binacular - இணை நோக்கி
Blotting paper - ஒற்றாந்தாள், ஒற்றுத்தாள்
Brush - துலக்கி, தீற்றி, தூரி
Ink pad - மைத்தொட்டம், மைச்சிமிழ்
Shaving razor - மழிப்பி
Shaving soap - மழிப்பு வழலை
Shaving cream - மழிப்புக் குழை
Shaving brush - மழிப்புத் தூரிகை
Shaving blade - மழிப்புத்தகடு
Trace paper - படிவுதாள்
Tooth paste - பற்பசை
Buzzer - முரலி
Iron box - தேய்ப்பி
Calender - நாட்காட்டி
Diary - நாட்குறிப்பு
Ladder - ஏணி
Lift - தூக்கி

Padlock - மடிதாழ்
Pin - குண்டூசி
Pumpset - நீரெக்கி
Suitcase - உடுப்புத் தூக்கு, உடுப்பம்
Torch light - வீச்சு விளக்கு, கை விளக்கு
Tiffin carrier - எடுப்புத் தூக்கு
Tiffin box - உண்டித் தூக்கு
Lunch box - நள்ளுணா தூக்கு
Wall clock - சுவர்க்கடிகை

இருப்பிடப் பெயர்கள்

Apartment - அடுக்ககம்
Flat - அடுக்கில்லம்
Colony - குடியிருப்பு
Home - மனையகம்
House - வீடு
Bangalow - வளமனை
Ground floor - தரைத்தளம்
First floor - முதல் தளம்
Waiting Hall - வைகு கூடம்
Drawing hall - காண்பு கூடம்
Bed room - படுக்கையறை, பாயலறை
Kitchen - சமையலறை, அட்டில், அடுக்களை
Portico - முகமாடம்
Sit out - நிலாமுற்றம்
Open terrace - வெயா மாடம்
Over head tank - உச்சித் தொட்டி
Shed - கொட்டில்
Bathroom - குளியலறை
Toilet room - ஒதுங்கறை
Ventilator - மேற்பலகணி, காலதர்
Chimney - புகைப்போக்கி
Water tank - நீர்த்தொட்டி
Roof Garden - மாடிப் பூங்கா
Sump - ஆழத்தொட்டி, கீழ்த்தொட்டி

Compound - சுற்றுமதில்
Campus - வளாகம்
Complex - தொகுமம்

மின்பொருள்கள்

Adopter - ஏற்றுத்தாங்கி
Amplifier - அழுத்தமாற்றி
Battery - மின்னூக்கி
Dynamo - மின்னாக்கி
Bulb - குமிழ்
Tube light - குழல் விளக்கு
Serial light - சரவிளக்கு
Current - மின்னோட்டம்
Coil - சுருணை
On - தொடுக்கு
Off - மடக்கு, நிறுத்து
Plug - செறுகி, செறுகூசி
Switch - சொடுக்கி
Switch board - சொடுக்கிப் பலகை
Switch point - சொடுக்கிப் புள்ளி
Shock - அதிரல், அதிர்ப்பு
Socket - தாங்குறை
Fuse - உருகி, குமைவு
Fuse carrier - உருகித் தாங்கி
Filament - எரியிழை
Fuse wire - உருகிழை
Cell - மின்கட்டை
Circuit - சுற்றகம்
Short circuit - குறைச்சுற்று
Connection - பொருத்து
Connector - பொருத்தி
Choke - விசைச்சீரி
Positive - நேர்மின்
Negative - எதிர்மின்
Main - தலைவு

Main box - தலைவுப் பெட்டி
Unit - மின்னலகு
Wireman - கம்பியாள்
Junction box - கூடுமுனைப் பெட்டி
Distribution board - பகிர் பலகை
Tester - நோட்ட முனை
Test lamp - நோட்ட விளக்கு
Earth rod - அதிர்வு வாங்கி
Insulation tape - காப்பு நாடா
Holder - தாங்கி
Jumper - துளைப்பி
Lamp shade - ஒளிக்குடை
Meter - அளவி மானி
Round block - வட்டக்கட்டை
Regulator - சீராக்கி
Starter - தொடக்கி
Three pin Socket - மும்முனைத் தாங்குறை
Two way pin - இருமுனைச் செறுகி
Tungston - ஒளிரிழை
Wire - மின்கம்பி
Calling bell - விளிமணி
Flash lamp - உமிழ் விளக்கு

செய்தி – அஞ்சல்

Air mail - வானஞ்சல்
Sea mail - கடலஞ்சல்
R.M.S. - நீளுந்து அஞ்சல் சேவை
Aerogram - வான்மடல்
Inland Letter - நாட்டக மடல்
Registered letter - பதிவஞ்சல்
Express letter - விரைவஞ்சல்
Speed post - வேக அஞ்சல், பரிப்பு அஞ்சல்
Cover - உறை, முடங்கல்
Card - அஞ்சலட்டை
Stamp - அஞ்சல்தலை
Service stamp - சேவைத்தலை
Post office - அஞ்சலகம்
Postman - அஞ்சலாள், அக்சலர்
Despatch - விடுமானம், விடுகடை
Delivery - அடைவு, சேர்மானம்
Postal order - அஞ்சலாணை
Money order - பணவிடை
Reply card - விடைமடல், விடை அட்டை
Late fee - தாழ்ச்சிக் கட்டணம்
Savings Account - சேமிப்புக் கணக்கு
Pass book - கடவுப் புத்தகம்
V.P.P. - விலை பேற்றஞ்சல்
Book post - நூலஞ்சல்
Parcel - கட்டஞ்சல்
Unregistered parcel - பதிவுறாக் கட்டஞ்சல்
Acknowledgement - அறிபொப்பம்
Address - முகவரி
Pincode - அஞ்சல் குறியீட்டெண்
Insured letter - காப்பீட்டு மடல்
Personal letter - தன்முக மடல்
Private letter - தனிவமடல்
Postal order - அஞ்சற்கட்டளை
Label - சிட்டான்
Revenue stamp - வருவாய்த்தலை

வானொலி

Aerial - ஈர்ப்பி
Broadcast - ஒலிபரப்பு
News - செய்தி
Newsreel - செய்திச்சுருள்
Wave - அலைவரிசை
Radio - வானொலி, வானொலிப்பெட்டி
Transister - கைவானொலி

Transister two in one – நாடா வானொலி
Cassette – ஒலிச்சிப்பம்
Cassette tape – ஒலியிழை
News reporter – செய்தி முகவர்
News media – செய்தி வாயில்

தொலைக்காட்சி

Antenna – அலைவாங்கி
Television – தொலைக்காட்சி
Colour television – வண்ணத் தொலைக்காட்சி
Cable television – வடத் தொலைக்காட்சி
TV station – தொலைக்காட்சி நிலையம்
Remote control – தொலைவியக்கி
Recording – நிகழ்ச்சிப்பதிவு
Telecasting – ஒளிபரப்புதல்
Relay – ஒளிமாற்று
Live telecast – நேரடி ஒளிபரப்பு
Viewers – நோக்கர்
Viewers forum – நோக்கர் மன்றம்

தொலைவரி

Telegram – தொலைவரி
Telegraph – தொலை வரை
Telemeter – தொலை அளவி
Telemetry – தொலைக்கணிப்பு
Telecommunication – தொலைத் தொடர்பு
Teleprinter – தொலையச்சு
Telex – தொலை எழுதி
Repeater Station – மீள் இயக்கு நிலையம்

தொலை பேசி

Call – விளி
Ordinary call – பொதுவிளி
Urgent call – சடுத்த விளி
Lightning call – மின்னல் விளி
Local call – உள்ளூர் விளி, தாவிக விளி
Trunk call – நெடு விளி
STD call – வாடிக்கை விளி
ISD call – அயலக விளி
NSD call – நாட்டக விளி
PCO – பொதுவிட விளிப்பகம்
Fax – படவரி, நிகரி
Hallo – எல்லா, எலா, எலோ
Connection, connect – பொருத்து
Disconnect – பொருத்து நீக்கு, எதிர் பொருத்து
Dial – எண் வட்டு
Telephone Receiver – தொலைவாங்கி
Cordless – தொடுப்பிலி
Cellular – கைபேசி
Pager – வரிச்சிப்பி
Line man – கம்பியாள், கம்பி வழி பணியாள்
Line live – கம்பி உயிர்ப்பு
Line dead – கம்பி மடிவு
Line hot – கம்பி கடுப்பு
Line clear – கம்பி தேற்றம்
Line fault – கம்பி குந்தகம்
Line repair – கம்பி ஒக்கீடு
Line busy – கம்பி மும்முரம்

போக்குவரத்து

Bus – பேருந்து
Bus depot – பேருந்துப் பணிமனை
Bus stop – பேருந்து நிறுத்தம்
Bus stand – பேருந்து நிலையம், உந்தடி
Bus terminus – பேருந்து அற்றம்
Bus stage – பேருந்து வரப்பு
Brake – தகைப்பு
Break down – தகைவு, தடையீடு
Double decker bus – அடுக்குந்து
Driver – ஓட்டுநர், உகைவர்
Conductor – நடத்துநர்

Foot board	–	ஏறு படி, மிதிப்பு, மிதிப்படி
Steering	–	திருப்பாரம்
Accelerator	–	முடுக்கி
Clutch	–	கிளக்கி
Horn	–	ஒலியன்
Whistle	–	ஊதல்
Right	–	ஓட்டு, உருட்டு, ஓட்டோ ஓட்டு
Hold on	–	நிறுத்து, நிப்பாட்டு, ஆப்பு
Air brake	–	காற்றுத் தகைப்பு
Non-stop	–	இடை நில்லாப் பேருந்து
Main Road	–	தலைவுச்சாலை
Main Route	–	தலைவு வழித்தடம்
L.S.S.	–	குறித்த நிறுத்தம்
P.P	–	முடிவிட நிறுத்தம்
Express bus	–	விரைவுப் பேருந்து
Omni bus	–	பொதுவன் பேருந்து
Private bus	–	தனியார் பேருந்து
Auto	–	தானுந்து
Auto stand	–	தானுந்து நிலையம்
Auto fare	–	தானுந்துக் கட்டணம்
Waiting charge	–	வைகுகட்டணம்
Round tana	–	வட்டாணம்
Highway	–	நெடுஞ்சாலை
Mini bus	–	குட்டானுந்து
Sudden break	–	சடுத்த தகைப்பு
Air break	–	காற்றுத் தகைப்பு
Fuel Bunk	–	எரிநெய் கிடங்கி
Train	–	நீளுந்து
Railway	–	இருப்புச்சாலை
Railway station	–	நீளுந்து நிலையம்
Berth	–	கிடக்கை
Seat	–	இருக்கை
Reservation	–	முன்பதிவு
Express	–	விரைவு
Passenger train	–	பயணி நீளுந்து
Mail train	–	அஞ்சல் நீளுந்து
Central station	–	நடுவண் நிலையம், நடுவணம்
Compartment	–	கொட்டாரம்
Counter	–	கணக்குப்புரை
Enquiry office	–	கேட்டறி அதியம், உசாவகம்
Cut service	–	வெட்டோட்டம், குறைப்புச் சேவை
Seat Allotment	–	இட ஒதுக்கம்
T.T.R.	–	சீட்டு நோட்டகர்
Waiting list	–	வைகு பட்டியல்
Cancellation	–	நீக்கம்
Refund	–	மீள்பணம்
Confirm	–	உறுதி செய்
Confirmation	–	உறுதிப்பாடு
Advance booking	–	முன் ஏட்டுப் பதிவு
Booking office	–	ஏட்டுப் பதிவகம்
Booking clerk	–	ஏட்டுப் பதிவர், ஏட்டுப் பதிவு எழுத்தர்
Parcel office	–	சிப்ப அலுவலகம்
Platform	–	நடைத்திடல்
Platform ticket	–	திடல் சீட்டு
Porter	–	சுமையாள்
Arrival	–	வருகை
Departure	–	புறப்பாடு
Late arrival	–	தாழ்ச்சி வருகை
Arrival-in-time	–	நேர வருகை
Garage	–	இயங்கிக் கொட்டில்
Junction	–	சந்திப்பு
Sign	–	அறிகுறி, குறிப்பு
Signal	–	தெரிப்பு, நெறிப்பு
Signal light	–	தெரிப்பு விளக்கு
Season ticket	–	பருவச்சீட்டு

Guest house	-	விருந்தினர் இல்லம்
Railway service commission	-	இருப்புச் சாலைத் தேர்வாணையம்
Airport	-	வானூர்தி நிலையம்
Airlines	-	வான்வழிகள்
Air travel	-	வான்செலவு, வான் பயணம்
Air force	-	வான் படை
Aeroplane	-	வானூர்தி
Air ticket	-	வான்சீட்டு
Pilot	-	வலவன்
Air hostess	-	வான்செவிலி
Escalator	-	ஓடுபடி
Cargo plane	-	சரக்கு வானூர்தி
Passport	-	கடவுச்சீட்டு
Visa	-	புகவு முறி, உட்கடவு
Take off	-	வானோட்டம், தொடக்கம்
Landing	-	தரையிறக்கம்
Runway	-	ஓடுபாதை
Flight	-	பறப்பு
Hijacking	-	வான்மடக்கம்
Hijackers	-	வான்மடக்கிகள்
Helicopter	-	நெட்டுந்து, நெட்டேறி
Navy	-	நாவாய்ப்படை
Harbour	-	துறைமுகம்
Ship	-	கப்பல்
Jeep	-	சிற்றுந்து, வல்லுந்து
Van	-	நீட்டுந்து
Lorry	-	சரக்குந்து
Motorcycle	-	உந்திவரி
Motor	-	இயங்கி
Machine	-	இயந்திரம்
Engine	-	பொறி
Swega	-	மிதியுந்து
Scooter	-	கையுந்து
Crane	-	நெட்டேற்றி
Truck	-	சுமையுந்து
Tempo	-	மூக்குந்து
Taxi	-	வாடகையுந்து, வாடகி
Tractor	-	இழுவை
Two wheeler	-	ஈராழி
Traffic	-	போக்கீடு, போக்குவரத்து
Peak hour	-	நெரிசல் நேரம்
Take reverse	-	பின்னூக்கு, பிறக்கிடு
Overtake	-	முன்னூக்கு, முந்து
Overhaul	-	முழுக்காட்டு
Route	-	வழித்தடம்
Bypass	-	பக்கச்சாலை, புறச்சாலை
L-Board	-	பயில்வுப் பலகை
Tourism	-	உலாத்துறை, சுற்றுலாத்துறை
Tourist	-	உலாவர்
Tourist Home	-	உலாமனை, சுற்றுலா இல்லம்
Foreign tourist	-	அயலக உலாவர்
Hill station	-	மலையகம்

மிதிவண்டி உறுப்புகள்

Bottom axie	-	அடியச்சு
Bolt	-	முடுக்ககாணி
Bearing	-	பொதிகை
Ball bearing	-	கோண் பொதிகை
Bush bearing	-	கண் பொதிகை
Puncher	-	குத்தோட்டை
Break	-	தகைப்பு
Bumper	-	காற்றெக்கி
Chain cover	-	சங்கிலி உறை, தொடரி உறை
Seat	-	இருக்கை
Seat cover	-	இருக்கை உறை
Handle bar	-	கைப்பிடி
Carrier	-	ஏந்தி
Stand	-	தாங்கி

Pedal – மிதி

Spoke – ஆரக்கம்பி

Tyre – வட்டை

Tube – உட்குழல், ஊதாம்பை

Rim – விளிம்பி

Hub – அச்சுருளி

Crank – வட்டுருளி

Pre - Wheel – சிற்றுருளி

விளையாட்டுகள் (games)

Indoor game – அகமனை ஆட்டம்

Chess – செங்கட்டம் (சதுரங்கம்)

Carrom – நாலாங்குழி

Billiards – ஆறாங்குழி

Outdoor game – புறமனை ஆட்டம்

Cricket – மட்டைப் பந்து

Ring ball – வளைப்பந்து

Base ball – மென்பந்து, தளப்பந்தாட்டம்

Kabadi – சடுகுடு ஆட்டம்

Volley ball – கைப்பந்து

Badminton – பூப்பந்து

Hockey – தொடிக்கோல்

Football – கால்பந்து

Tennis – வரிப்பந்து

Tournament – குழுவாட்டம்

Match – பொருவாட்டம்

Test match – பெரும்போட்டி, நோட்டப் போட்டி ஆட்டம்

Friendly match – நட்பாட்டம்

Champion – வல்லாளன்

Track – களவழி

Boundary – ஆடுகள வரப்பு

Court – களம்

Ground – ஆடுகளம்

Arena – களரி

Neutral ground – நொதுமல்களம்

Bat – அடிமட்டை

Batter – பந்தடியார்

Striker – அடிகாய்

Check – முற்றுகை

Point – புள்ளி

Turn – ஆடுமுறை

Toss – காசு சுண்டுதல், சுண்டு காசு

Goal – இலக்கு, எய்ப்பு

தடகளப் போட்டிகள் (Sports)

High jump – உயரத்தாண்டல்

Pole-vault – தாண்டூன்றித் தாண்டல், ஊன்று தாண்டல்

Long jump – நீளத்தாண்டல்

Relay race – தொடரோட்டம்

Running race – ஓட்டப்பந்தயம்

Swimming – நீந்தல், நீச்சல்

See saw – இறங்கேற்றம்

Hop step – தப்படித் தாண்டல்

Hurdle race – தடையோட்டம்

Discus throw – தட்டெறிதல்

Dive – முக்குளித்தல்

Fault – தவறு

Final – இறுதி

Shot put – குண்டெறிதல்

Out – ஓட்டு, தோல்வி

Hit – தாக்கு

Cut – வெட்டி

Shot – இட்டி

Boundary shot – வரப்படி

Hammer throw - பெருங்குண்டு எறிதல்
Javelin throw - ஈட்டி எறிதல்
Chase - படரடி
Active Chaser - படுசுட்டிப் படரடியர்
Table Tennis - மேசை வரிப்பந்து
Shield - கேடயம், கிடுகு
Band - பல்லியம்,கூட்டியம்
Achievement - எய்ப்பு
Amateur team - பயின்முறைக் குழு
Professional team - தொழில்முறைக் குழு
Announcer - அறிவிப்பாளர்
Athlete - மைந்தர், மெய்ம்பர்
Athletic games - மைந்தர் விளையாட்டு
Referee - நோட்டகர், நடு நோட்டகர்
Chief Referee - மாநடுவர், தலை நோட்டகர்
Competitor - போட்டியாளர்
Score - பேற்றெண்
Scorer - புள்ளிக்கணக்கர், பேற்றெண் கணக்கர்
Substitute - ஈட்டாளர்
Umpire - துணை நடுவர்
Starter - தொடக்காளர்
Junior - இளையர்
Sub Junior - சிற்றிளையர்
Below sub Junior - குற்றிளையர்
Senior - காளையர்
Super senior - உம்பர் காளையர்
Partner - கூட்டுக்காரன், கூட்டாளி, கூட்டன்
Love all - தாயம், பூ எல்லாம்
Runner - பின்னர்
Winner - வாகையர்
Bowler - வீச்சாளர்
Fieldsman - எடுத்தாடி
Run out - ஓட்டோட்டு
Score board - புள்ளிப் பலகை
Team - அணி
Captain - சாமந்தன்
Trial bowl - வெள்ளோட்ட வீச்சு
End line - கடைக்கோடு
Draw - சமம்
Extra time - மிகை நேரம்
Interval - இடைவேளை
Penalty - தண்டம், ஒறுப்பு
Stamina - நெஞ்சுரம்
Net - வலை
Catch - பிடி
Doubles - இணையர்
Singles - தமியர்
Physical Fitness - உடல் தகுதி
Fair ball - செவ்வைப் பந்து
Fair play - செவ்வையாட்டம்
Foul - புரைபாடு
Foul play - புரையாட்டம்
Foul Ball - புரை பந்து
Grip - பிடிப்பு
Inning - முறையாட்டம்
Replay - மீளாடல்
Score sheet - வெற்றிப்புள்ளி, கணிப்புத்தாள்
Pitch - பந்தெறிகளம்
Protest - எதிரேற்றம்
Record - அருஞ்செயல் பதிவு, அருவினைப் பதிவு
Record break - அருவினைத் தகர்வு
Track suit - களவழி உடுப்பு
Time out - நேர முறி
Medal - பதக்கம்
Trophy - கோப்பை

Memento – நினைவெரிப்பு

Badge – நிரற்குறி, நிரலி

Shield – கேடயம், கிடுகு

Gift – பரிசு, பரிசுப் பொருள்

Award – பெரும் பரிசு

Reward – அரும் பரிசு

மருத்துவம், சட்டம், வைப்பகம், கணக்கு, கல்வி, பொதுவியல்

Doctor – மருத்துவர்

Patient – நோயாளி, பிணியாளர்

Addict – வயவர்

Lady doctor – பெண் மருத்துவர்

Pharmacy – மருந்தாளுமனை

Hospital – மருத்துவமனை

Dispensary – மருந்தில்லம்

Clinic – நலவகம்

Diagnostic centre – நோயறி நடுவம்

Nursing home – நலமனை, நலம் பேணகம்

Heart Specialist – நெஞ்சக நோய் தனித்திறவர்

Dentist – பல் மருத்துவர்

Ambulance – பிணியாளர் ஊர்தி

Abortion – கருக்கலைப்பு

Nurse – செவிலி

Fever – காய்ச்சல்

Flu – சளிக்காய்ச்சல்

Malaria – முறைக் காய்ச்சல்

Syringe & Needle – குப்பி & ஊசி

Stretcher – விசி கிடக்கை, கைப்படுக்கை

T.B. – இளைப்பிருமல்

Typhoid – கடுங்காய்ச்சல்

Ulcer – அகப்புண், வயிற்றுப்புண்

Case sheet – நேர்வுத்தாள்

Medical check up – மருத்துவ முற்றாய்வு

Casuality ward – சடுத்த மருத்துவப் பிரிவு

Compounder – மருந்தாள் பணியர்

House surgeon – அகமருத்துவர், பயிற்சி மருத்துவர்

Eye specialist – கண் மருத்துவத் தனித்திறவர்

Medicine – மருந்து

Drug – மருத்துவச் சரக்கு

Medical shop – மருந்துக் கடை

Medical test – மருத்துவ நோட்டம்

Medical report – மருத்துவ அறிக்கை

Consultation – கலந்துரை

Prescription – மருந்துரை

Out patient – புறம்பிணியாளர்

In patient – அகப்பிணியாளர்

Operation – அறுவை

Injection – ஊசி போடுதல்

Stethoscope – தொடு நாடி

Pharmacist – மருந்தாளுநர்

Surgeon – பண்டுவர்

Treatment – பண்டுவம்

Tonic – ஊட்டமி

Bondage – இடுகட்டு

Blood poisoning – குருதி நஞ்சூட்டம்

Blood pressure – குருதியழுத்தம்

Blood test – குருதிநோட்டம்

Blood group – குருதிக்கணம்

Alergy – ஒவ்வாமை

Opthalmic – கண்ணணி

Opthalmician – கண்ணணியர்

Dispensing opthalmician – மருந்துவழங்கு, மருந்தளி கண்ணணியர்

Capsule – குறுங்குப்பி

Tablet – மாத்திரை

Diet control – பத்தியம்

Nature cure - இயற்கை மருத்துவம்

X-Ray - ஊடுகதிர்

சட்டம்

Appellate Court - மேல் முறையீட்டு ஆயம்

Court - அறமன்றம், அறங்கூறவையம், முறைமன்றம்

Tribunal - தீர்ப்பாயம்

Act - இடுநெறி

Rule - நெறி

Ruling - நெறிப்பாடு

Cannon - பொது நெறி

Code - தொகு நெறி

Law - சட்டம்

Order - ஏவம்

Instruction - கட்டளை

Injunction - நெறியீடு

Statutes - அரசியல் சட்டம்

Appeal - மேல் முறையீடு

Advocate - வழக்கறிஞர்

Lawyer - வழக்குரைஞர்

Pleader - மன்றாடர், மன்றாடி

Attorney - நிறுவன வழக்கறிஞர், அரசு வழக்கறிஞர், பகராளர்

Power of Attorney - பகராள்ள உரிமை, பகராண்மை

Barristor - இளம் வழக்கறிஞர், அயலக வழக்கறிஞர்

Decree - மேலாணை

Hand over - கையடை

Judge - நடுவர்

Magistrate - தீர்ப்பாளர்

Jury - அவையம்

Munsiff - மன்றத் தீர்ப்பாளர், மூப்பர், ஊரக நடுவர்

Justice - மாநடுவர், அறப்பெருந்தகை

High court - உயர் முறை மன்றம்

Supreme court - மீமிசை முறைமன்றம், உச்ச முறை மன்றம்

Civil case - குடிம வழக்கு

Criminal case - குற்ற வழக்கு

Suit - பெருவழக்கு

One man commission - தமியர் ஆணையம்

Selection committee - தெரிவுக்குழு

Lock up - பூட்டகம்

Remand - இடைச்சிறை

Stay order - தடுப்பாணை

Summon - விளிப்பாணை

Warrant - பிடியாணை

Writ petition - எழுத்துவழி வேண்டுகோள்

House arrest - இற்செறிப்பு

Jail - அடைப்பு, சிறை

வைப்பகம் (வங்கி)

Credit - வரவு

Debit - கடன்

Token - காழ்வில்லை, வில்லை

Safe - காப்புப் பேழை

Vault - ஊன்றுகால் பேழை

Drawee - பெறுநர்

Payee - தருநர்

Appraiser - மதிப்பீட்டாளர்

Bad debt - வராக்கடன்

Book debt - நிலுவைக்கடன்

Doubtful debt – ஐயக்கடன்

Draft – வரைவு

Cheque – காசோலை

Deposit – இட்டு வைப்பு, இடு முதல், செலுத்தம்

Fixed deposit – நிலை வைப்பு

Recurring Deposit – தொடர் வைப்பு

Time deposit – கெடு வைப்பு, முறை வைப்பு

Interest – வட்டி

Cashier – காசாளர்

Teller – விரைவுக் காசாளர்

Realisation – செல்லு நறுக்கு

Withdrawal slip – எடுப்பு நறுக்கு

Mail transfer – மாற்றஞ்சல்

Demand draft – வேண்டல் வரைவு

Banker – வைப்பகர்

கணக்கு

Linear measure – நீட்டலளவு

Meter – மாத்திரி

Milli metre – அயிரி மாத்திரி

Centimetre – நூறன்மாத்திரி

Decimetre – பதின்மாத்திரி

Metre – மாத்திரி

Decametre – பத்தன்மாத்திரி

Hectometre – நூற்றன் மாத்திரி

Kilometre – கல்லன் மாத்திரி

Myria metre – பதினயிரி மாத்திரி

எடுத்தலளவு (Measure of weight)

Kilo – கல், கல்லன்

Gram – நிறை

Milli gram – அயிரி, அயிரி நிறை

Centi gram – நூறம், நூறு நிறை

Decigram – பதினம், பதின்நிறை

Gramme – நிறை

Decagram – பத்தன் நிறை

Hecto gram – நூற்றன் நிறை

Kilo gram – கல்லன் நிறை, கல்நிறை

Quintal (100 kilo gram) – குண்டன் நிறை

Metric tonne (1000 Kilogram) – பதின்குண்டன்

முகத்தலளவு (Cubic measure)

Milli litre – அயிரி நாழி

Centi litre – நூறன் நாழி

Deci litre – பதின் நாழி

Litre – நாழி

Deca litre – பத்தன் நாழி

Hecta litre – நூற்றன் நாழி

Kilo litre – கல்லன் நாழி,கல் நாழி

Quire – கொய்யம், இருஎல்லோன் (24)

Dozen – எல்லோன்

Ream – இருபது கொய்யம் (480 தாள்)

Score – இருபான் (20)

குறியீடுகள்

Addition (+) – கூட்டல்

Multiplication (x) – பெருக்கல்

Subtraction (-) – கழித்தல்

Division (÷) – வகுத்தல்

Hyphen – இடைக்கோடு

Equal – சமக்கோடு

.... – விடுபாட்டுக்குறி

[] – இருதலைப்பகர அடைப்பு

( ) – இருதலைப் பிறை அடைப்பு

{} – இருதலை மலர் அடைப்பு

Coma – காற்புள்ளி

Semicolon – தொடரிசைக்குறி

Colon – முக்காற்புள்ளி
Colon dash – கோட்டு முக்காற்புள்ளி
Full stop – முற்றுப்புள்ளி
Tick Mark – சரிக்கோடு

கல்வி

Atlas – திணைப்படம், நிலப்படம்
Chair – நாற்காலி
Bench – அறுகாலி
Certificate – சான்றிதழ்
Chalkpiece – மாக்கட்டி
Choice – உகப்பு
Celebration – விழா
Chemistry – வேதியல்
Comet – புகைக்கோள்
College – கல்லூரி
Definition – இயல்வரை
Dictation – செவிப்பாடம்
Drill – உடற்பயிற்சி
Mass drill – கூட்டுப்பயிற்சி
Parade – அணிவகுப்பு
Examination – தேர்வு
Exemption – தவிர்வு
Exception – தவிர்ப்பு
Experiment – தெரிவாய்வு
Fail – தவறல், தவல்
Fine – தப்பு, ஒறுப்புக் கட்டணம், தப்புக் கட்டணம்
Fluke – நழுவல், வழுக்கல், குருட்டாம் போக்கு
Scout troop – சாரணப் படை
Head master – தலைமையாசிரியர்
Principal – முதல்வர்
Teacher – ஆசிரியர்
Correspondent – தாளாளர்
Patron – ஊட்டகர்
Warden – காப்பாளர், பொறுப்பாளர்
Geography – நிலநூல்
Geomentry – வரைகணிதம்
Graph note – வரைகணக்குச் சுவடி
Guide – துணைவன்
Hall ticket – கூடச்சீட்டு
Hostel warden – விடுதிக் காப்பாளர்
Imposition – எழுத்தொறுப்பு, மீட்டெழுத்து
Mark list – மதிப்பெண் பட்டியல்
Nursery school – மழலையர் பள்ளி
Note book – குறிப்பேடு
Open University – பொதுவன் பல்கலைக்கழகம், பொதுநிலைப் பல்கலைக்கழகம்
Pen – தூவல்
Pencil – கரிமுனை
Prospectus – விளக்கச்சுவடி
Pronunciation – பலுக்கம்
Punishment – ஒறுப்பு
Period – பிரிவேளை
Progress report – முன்னேற்ற அறிக்கை
Practical examination – செய்முறைத் தேர்வு
Prose – உரைநடை
Poetry – செய்யுள்
Planet – கோள்
Rubber – தேய்வை, தொய்வம்
Ratio – நேரியம், மேனி (விகிதம்)
Revision – மீள் பார்வை, திருப்பல்
Revision test – திருப்புத் தேர்வு
School – பள்ளி
Science – அறிவியல்
Slate – கற்பலகை, கல்லேடு

Sir - ஐயா

Syllabus - பாடத்திட்டம்

Test - நோட்டத் தேர்வு

Theory - கருதுகோள்

Tutor - பயிற்றுநர்

Tutorial - பயிற்றகம்

Tution - தனிப்பாடம்

Voluntary - தன்னார்வ

Volunteer - தன்னார்வர்

Zero - சுழியம்

பொதுவியல்

Clockwise - வலமுறை

Anti-clockwise - எதிர்வலம்

Bonus - நன்னர்

Autograph - தன்னெழுத்து

Bachelor - மாணி

Ballot paper, vote - குடவோலை, வாக்குச்சீட்டு

Black mail - கரவுக்கொள்ளை, கருஞ்சுரண்டல்

Bodyguard - மெய்க்காவல்

Bribe - கையூட்டு

Original - மூலம்

Duplicate - இணைப்படி

Triplicate - முப்படி

Leap year - நீளாண்டு

Decade - பதிற்றாண்டு

Counterfoil - அடிச்சீட்டு

Census - குடிமதிப்பு

Population - மக்கள் தொகை

Chain smoker - புகையுறா வாயர்

Uniformity - ஒரியன்மை

Collector - ஆட்சியர்

Tahsildar - வட்டாட்சியர்

Governor - ஆளுநர்

Administration - ஆளுவம்

Administrater - ஆளுவர்

Gentleman agreement - விழுமியோர் உடன்படிக்கை

Courtesy call - கனிவுச் சந்திப்பு, கனிவு காணல்

Metal detector - மாழை காண்பி

Podium - உரை மேடை

Plus point - ஆகு பயன்

Commitment - பிடி கொடுப்பு

Rumour - ஊரலர், ஒமல்

News media - செய்தி வாயில்

Usual - வழக்கமாக, வழக்கப்படி

Habitual - பழக்கப்படி, பழக்கமாக

Actual - உள்ளபடி

Necessity - தேவை

Need - நாட்டம், நாடல்

Want - வேண்டல், வேண்டுமானம்

Organisation - அமைப்பு, அமைப்பகம்

Institution - நிறுவனம்

Overlook - கடைக்கணித்தல்

Neglect - புறக்கணித்தல்

Uncared - சிறக்கணித்தல், பாராமுகம்

Disregard - அமைதித்தல், தாழ்ச்சி

Order - ஏவம்

Command - கட்டளை

Punctual - நேரங்கட்டி

Punctuality - நேரக்கட்டுப்பாடு, நேரக்கட்டு

Possible - இயலும்

Probable - இயற்பால

Probability - இயற்பாடு

Practicable - செயற்பால

Practicability - செயற்பாங்கு

Prove - மெய்ப்பி

Proof - மெய்ப்பீடு, நிறுவம் (நிரூபணம்), மெய்ப்பு (அச்சாகும் திருத்தப்படி)

Price - விலை

Cost - அடக்கவிலை

Permanent - நிலை, நிலைப்பு

Temporary - குறுங்காலிக

Project - திட்டம்

Plan - நெடுந்திட்டம்

Scheme - வரை திட்டம்

President - குடியரசுத் தலைவர், நாட்டுத் தலைவர்

Vice-president - துணைக் குடியரசுத் தலைவர், நாட்டுத் துணைத் தலைவர்

சார் பொருட்சொற்கள் (Synonyms)

At once - உடனே

Suddenly - திடுமென

Quickly - சுருக்காக

Immediately - உடனடியாக

Urgent - சடுத்தம்

Agenda - பணி நிரல்

Program - நிகழ்நிரல்

Aggrieved - துயருற்ற

Affected - தாக்குற்ற

Agression - மேல்தாக்கம்

Attack - நேர்த்தாக்கம்

Allegation - குற்றச்சாட்டு

Report - குறையீடு, செய்தி சொல், தரவெல்கொடு

Complaint - முறையீடு

Appoint - அமர்த்து

Appointment - அமர்த்தம்

Appointment order - அமர்த்தாணை

Alter - இடைமாற்று, மாறாக்கு

Alternate - இடையீட்டு மாற்றம்

Alternative - ஒன்றாடம்

Abide - பணிந்தொழுகு

Obey - கீழ்ப்படி

Adhere - சேர்ந்தொழுகு

Absence - இன்மை, இராமை, முன்னின்மை

Absent - வராத

Absentees - இராதார், வராதார், முன்னில்லார்

Present - உளதான, உள்ளேன், முன்னிலை

Presentees - உளரானோர், முன்னிலையர், வருகையர்

Accurate - நேரொப்பு

Exact - சரியொப்பு

Adequate - சான்ற, சாலிய

Enough - போதிய, போதுமானது

Acquire - எய்து

Get - பெறு

Achieve - அரிதின்பெறு

Adverse - முரணான, கேடான

Reverse - மறுதலையான

Contrast - மாறான, நேரெதிரான

Opposite - எதிரான, உறழ்வான

Abundance - மல்கல்

Abundant - மலிந்த

Plenty - பேராளமான, ஏராளமான

Alteration - மாற்றாக்கம்

Variation - வேறாக்கம்

Amenities - உடனேந்துகள்

Facilities - வாய்ப்பேந்துகள்

Ancient - தொன்மையான

Antiquity - பழமையான

Antique - பழம்பொருள்

Artist - ஓவியன்

Artiste	–	கலைஞன்
Artisan	–	கைவினைஞன்
Artifacts	–	கைவினைப் பொருள்கள்
Actor	–	நடிகன்
Astonish	–	மலைத்தல்
Sunprise	–	வியத்தல்
Amaze	–	திகைத்தல்
Agent	–	முகவர்
Agency	–	முகவாண்மை, முகவம்
Sub-Agent	–	சார்முகவர்
Assent	–	ஒப்பம்
Consent	–	இசைவு
Avenge	–	பழிதீர்
Revenge	–	பழிவாங்கு
Adjacent	–	அயல்
Adjoining	–	அடுத்த
Authorise	–	அதிகாரப்படுத்து, அதிகாரம் அளி
Authorisation	–	அதிகாரப்படுத்தம்
Authority	–	கையாணை, ஆணைக்குழு
Aim	–	நோக்கு, குறி
Goal	–	இலக்கு
Target	–	இலக்கம்
Commission	–	ஆணையம்
Society	–	கூட்டகம்
Commitee	–	குழு
Association	–	மன்றம்
Club	–	குழாம்
Group	–	குழுவம்
Company	–	குழுமம்
Academy	–	மன்றம்
Council	–	கழகம்
Guild	–	குடும்பு
Board	–	வாரியம்
Admit	–	சேர்
Admission	–	சேர்ப்பு

Approve	–	ஒப்பேற்று
Approval	–	ஒப்பேற்றம்
Arrears	–	வருநிலுவை
Balance	–	இருப்பு நிலுவை
Ban	–	தடை
Object	–	தடையெழுப்பு
Objection	–	தடையீடு
Big	–	பெருத்த, பெரிய
Large	–	பருத்த, பாரிய
Great	–	மேலான, மேன்மையான
High	–	உயர்ந்த, நெடிய, நெடு
Blackmark	–	கேட்டுக்குறி, கெடுகுறி
Remark	–	கருத்தீடு
Charge	–	குற்றச்சாட்டு
Beautiful	–	அழகிய
Handsome	–	ஏரார்ந்த, எழிலார்ந்த
Pretty	–	பொலிவுள்ள
Booklet	–	கையிதழ்
Leaflet	–	கைமடல்
Banish	–	நாடு கடத்து
Exile	–	புறங்கடத்து
Bore-boring	–	சலிப்பு, அறுவை
Utter boring	–	படு அறுவை
Bargain	–	ஒப்பந்த வாணிகம்
Business	–	தொழில்வாணிகம்
Transaction	–	இடைமாற்று வாணிகம், கொள் கொடை வாணிகம்
Badge	–	நிரற்குறி, நிரல்வில்லை
Brand	–	சுட்டுக்குறி
Emblem	–	சின்னம், கோட்குறி
Conduct	–	நடத்தை
Behaviour	–	ஒழுக்கம்
Discipline	–	ஒழுங்கு, படிமானம்
Cause	–	காரணம்

Reason - ஏது
Pretext - தலைக்கீடு
Contrive - கண்டறி
Invent - புதுக்கு, புனைந்தறி
Invention - புதுக்கம், புதுப்புனைவு
Discover - கண்டுபிடி
Discovery - கண்டுபிடிப்பு
Device - பகுத்தறி, வடிவப்பாங்கு, அமைப்பு முறை, அணுகுமுறை

Scan - ஊடறிதல்
Circular - சுற்றோலை, சுற்றறிக்கை
Notice - அறிவிப்பு
Notification - அறிவிக்கை
Advertisement - விளம்பரம்

Corruption - ஊழல், கைக்கரவு
Bribe - கையூட்டு
Misappropriation - கையாடல்

Chest - அடுக்குறை
Box - பெட்டி
Case - உறை
Briefcase - தடுப்புறை
Suitcase - முடுக்குறை, உடுப்பம்

Clothes - ஆடை
Dress - உடுப்பு
Robe - நெட்டாடை

Condonation - பிழையேற்பு
Pardon - அருளிப்பு
Excuse - பொறுத்தல்
Forgiveness - மன்னிப்பு
Comparison - ஒப்பீடு
Contrast - முரண்பாடு
Clearance - தீர்பாடு, தீர்வு
Clarity - தெளிவு

Circus - வட்டரங்கம்
Tent - கூடாரம்
Custom - வழக்கம்
Habit - பழக்கம்

Crime - கடுங்குற்றம்
Vice - தீங்கு
Sin - கரிசு, பாழ்வினை
False - தப்பு
Default - பிழைபாடு
Mistake - பழுது
Guilt - குற்றம்
Fault - தப்பிதம், குறை
Defect - புரைபாடு, குறைபாடு
Blunder - கடுங்குறை
Error - பிழை
Flaw - பிசகு

Canal - கால்வாய்
Channel - வாய்க்கால், மடை
Channelise - மடைமாற்று

Corps - அணி, குழு
Corpse - பிணம்

Centre - நடுவண், நடுவம்
Middle - ஊடு
Midst - ஊடே
Inter - இடை, இடையில்

Climate - காலநிலை, வளிநிலை
Weather - வானிலை
Season - பருவம்

Civil law - குடிமச் சட்டம்
Civil suit - குடிம வழக்கு

Civil servant – குடிமைப் பணியாளர்
Civility – குடிமைப்பாங்கு
Compromise – ஆற்றுவிப்பு, இணக்கத் தீர்வு
Aggreement – ஒப்பந்தம்
Conciliation – ஒப்பிணக்கம்
Reconciliation – ஒப்பீட்டு இணக்கம்
Concurrence – ஒத்திசைவு
Commitment – ஏற்பிசைவு
Sanction – ஒப்பளிப்பு

Consolidate – ஒருமி, தொகு
Consolidation – ஒருமிப்பு, தொகுப்பு
Consider – மனங்கொள்
Consideration – மனமிசைவு, ஒப்பேற்பு
Look into – கருத்தூன்று

Cheque – காசோலை
Draft – வரைவு, வரைவோலை

Cancel – நீக்கு
Remove – தள்ளு

Care – கவனிப்பு
Custody – பாதுகாப்பு
Condemn – கண்டித்தல்
Censure – எதிர்மறுத்தல்

Clock – கடிகை
Wrist watch – மணிப்பொறி, கைக்கடிகை

Claim – கோரிக்கை
Request – வேண்டுகோள், வேண்டுகை
Demand – கேட்பு

Convenient – ஏந்தான, தோதான
Favourable – சார்பான

Favour – நலன், ஆக்கம்
Courage – துணிவு
Firm conviction – துணிபு

Check – ஆய்வோட்டம்
Inspect – நோட்டம் செய்தல்
Examine – தேர்வு செய்தல்
Test – நோட்டத்தேர்வு
Tester – நோட்டி

Choice – உகப்பு
Preference – தெரிப்பு

Confidential – கமுக்கம்
Secret – ஒளிவு, மறையம்

Applicant – விண்ணப்பர்
Candidate – தேர்வர்

Clarification – விளக்கக்குறிப்பு, விளக்கம்
Ratification – பின்னேற்பு

Proficiency – வல்லமை, திறமை
Prestige – பீடுணர்வு

Polish – மினுப்பு வண்ணம்
Paint – பூச்சு வண்ணம்

Common – பொது
General – பொதுப்படை, தலைமை
Ordinary – வாலாயமான, சாலாயம்

Complication – குழப்பம், இடையீடு
Problem – சிக்கல்
Crisis – நெருக்கடி
Issue – இடுவந்தி, வெளியீடு

Compact – செறிவு

Intact – செப்பம்

Custodian – பாதுகாப்பாளர்

Guardian – பாதுகாவலர்

Document – ஆவணம்

Deed – ஆவணமுறி

Bond – பிணைமுறி

Draft – வரைவுரு

Record – பதிவுரு

Proposal – கருத்துரு

Disposal – தீர்வுரு, தீர்வு

Dictation – செவிப்பாடம்

Dictate – செவிப்பாடம் சொல்

Date – பக்கல் (தேதி)

Daily – நாடொறும்

Doctrine – கொள்கை

Hypothesis – கருதுகோள்

Tenet – கோட்பாடு

Objective – குறிக்கோள்

Principle – நெறிமுறை

Stand – நிலைப்பாடு

Aim – நோக்கம்

Idea – எடல், உட்கருத்து

Goal – இலக்கு

Target – இலக்கம், நோக்கீடு

Chairman – பெருந்தலைவர்

Chairperson – அவைத்தலைவர்

Speaker – பேரவைத்தலைவர்

Head – தலைமையர்

Chief – முதன்மையர்

Leader – முந்தாளர்

Chief minister – முதலமைச்சர்

Principal – முதல்வர்

Quotation – வினவோலை

Questionaire – வினவம்

Tender – விலைப்புள்ளி, ஒப்பந்தப்புள்ளி

Repair – ஒக்கப்படுத்து, ஒருக்கு, ஒக்கு

Out of order – செப்பக்கேடு

Not in condition – நிலைக்கேடு

Input – அகத்தீடு

Out put – புறத்தீடு, ஆக்கம்

Moulding – மூடாப்பு

Roof – கூரை

Rob – கொள்ளையடி

Steal – திருடு

Plunder – களவாடு

Waylay – வழிப்பறி

Pickpocket – பையடி

Kidnapping – சிறையெடுத்தல், ஆள்கடத்தல்

Hijack – வான்கடத்தல்

Rural – ஊரகம்

Rustic – நாட்டுப்புறம்

Tension – பதைப்பு, தவிப்பு, தவிப்புணர்வு, மன அழுத்தம், பரபரப்பு

Teasing – அல்லாட்டம், நலிவுறுத்தம், நலிவு

Rare – அரிய

Scare – தட்டுப்பாடான

Revision – திருப்பல்

Correction – திருத்தம்

Reconstruction – மீட்டமைப்பு

Result – முடிவு

Resolution – முடிபு, தீர்மானம்

Representative – சார்பாளர்

Delegate – பேராளர்

Rotate – சுற்று, சுழற்று

Revolve – சுழல்

Orbit – சுலவு

Evolve - திரிவுறு, திரிவாகு
Evolution - திரிவாக்கம்,படிமுறை வளர்ச்சி

Rebate - விடுவிலை, விடுகழிவு
Concession - கழிவு
Discount - தள்ளுபடி
Reduction - குறைப்பு, நீக்குபடி
Deduction - கழிவுபடி
Remission - தண்டப்படி

Society - குமுகாயம்
Community - கூட்டாயம், குலம்

Sanction - ஒப்பளிப்பு
Grant - நல்கை

Spray - பிலிற்றல்
Sprinkle - தெளித்தல்

Industry - தொழிற்சாலை
Plant - தொழிலகம்
Factory - தொழிற்கூடம்

Settlement - குடியேற்றம்
Colony - குப்பம், குடியிருப்பு, சேரி
Block - மனைக்கட்டு

Suggestion - கருத்தீடு, கொள்ளாறு
Opinion - கருத்து
Optimism - ஆர்வப்பாங்கு
Pessimism - சோர்வுப்பாங்கு

Shade - படுநிழல்
Shadow - உருநிழல்

Sociable - பழகத்தகுந்த, கெழுமிய
Social - குமுகாய

Sensitive - உணர்வுள்ள
Sensible - அறிவுள்ள
Select - தெரிந்தெடு
Selection - தெரிவு
Elect - தேர்ந்தெடு

Election - தேர்தல்
Choose - உகந்தெடு
Choice - உகப்பு

Treasure - பெருஞ்செல்வம், பண்டாரம்
Treasury - கருவூலம்

Turning - திருப்பம்
Return - மறிதரல், திரும்பல்
Return journey - திரும்புகால் பயணம்
Retract - பின்னடைதல், பிந்துதல்

Union - ஒன்றியம்
Unity - ஒற்றுமை
Unification - ஒன்றிப்பு
Integration - ஒருமைப்பாடு
Cohesion - ஒருக்கம், ஒருமிப்பு

Vapour - ஆவி
Steam - நீராவி
Mist - வெம்பாவி

Wind - வளி
Air - காற்று
Gas - கரிவளி
Gale - பெருங்காற்று
Cyclone - சூறாவளி
Storm - புயல்

Calculator - கணக்கி
Ready Reckoner - அணியக்கணக்கி

Review - சீராய்வு
Scrutiny - கூர்ந்தாய்வு

Remedy - தீர்வு
Relief - விடுவு

Vanity - தற்பாராட்டு, நெட்டு
Proud - செருக்கு

Vacant - ஒழிவான
Vacancy - ஒழிவு

Vacate - ஒழிவாக்கு
Empty - வெறும், வெறுமையான

Preference - முன்னுரிமை
Priority - முந்துரிமை

Prospectus - வாய்ப்பேடு
Catalogue - நிரலேடு

Privacy - தனியம்
Loneliness - தனிமை

Volume - மடலம்
Chapter - அதிகாரம்
Part - பகுதி
Section - பிரிவு

Village - கம்மம், சிற்றூர்
Abode - வாழிடம்
Residence - இருப்பிடம்

Will - விருப்பம்
Option - மேவல்

War - போர்
Battle - சண்டை
Fighting - கலகம், அடிதடி
Panic - கலவரம்

Loan - தருகடன்
Debt - அடைகடன்

Institute - பயிலகம், நிறுவனம்
Foundation - நிறுவம்

Preface - முகவுரை

Gate - உக்கடை
Table weight, Paper weight - தாளெடை
Train - நீளுந்து
Camera - படவம்

set - அடைசல், அடைவு
batch - அச்சல்
case - நேர்வு
accident - கடுநேர்ச்சி
danger - ஏதம்

ugly - சீத்தை, கொடுந்தோற்றம்
clean - ஒப்படி
shabby - குப்படை

super - உம்பர்
dull - மந்தம்
worst - படுமட்டம்
Dictation - செவிப்பாடம்
Label - சிட்டான்

Madam - நங்கையார், அம்மணி, அம்மையார்
Miss - மங்கையார்
Light Tea - தெளி தேநீர்
Strong Tea - கடுந்தேநீர்
Risk - இடர்

Annexure - பின்னிணைப்பு
Appendix - பிறசேர்க்கை
Addendum - கூட்டிணைப்பு

****

தமிழ் மாதப் பெயர்கள்

வடமொழிப்பெயர்	–	தமிழ்ப்பெயர்
1. தை (14 Jan.- 12 Feb.)	–	சுறவம் (30)
2. மாசி (13 Feb.- 14 Mar.)	–	கும்பம் (30)
3. பங்குனி (15 Mar.-13 Apr.)	–	மீனம் (30)
4. சித்திரை (14 Apr.-14 May.)	–	மேழம் (31)
5. வைகாசி (15 May.-14 May.)	–	விடை (31)
6. ஆனி (15 Jun.-16 Jul.)	–	ஆடவை (32)
7. ஆடி (17 Jul.-16 Aug.)	–	கடகம் (31)
8. ஆவணி (17 Aug.-16 Sep.)	–	மடங்கல் (31)
9. புரட்டாசி (17 Sep.-17 Oct.)	–	கன்னி (31)
10. ஐப்பசி (18 Oct.-16 Nov.)	–	துலை (30)
11. கார்த்திகை (17 Nov.-15 Dec.)	–	நளி (29)
12. மார்கழி (16 Dec.-13 Jan.)	–	சிலை (29)

கிழமைகள்

ஞாயிறு

திங்கள்

செவ்வாய்

அறிவன் (புதன்)

வியாழன்

வெள்ளி

காரி (சனி)

நாண்மீன்கள் – 27

வடசொல்	–	தமிழ்
1. அசுவினி	–	இரலை
2. பரணி	–	தாழி, அடுப்பு
3. கார்த்திகை	–	ஆரல்
4. உரோகிணி	–	உருள், சகடு
5. மிருகசீரிடம்	–	மாழ்கு, மான்றலை
6. திருவாதிரை	–	யாழ், மூதிரை
7. புனர்பூசம்	–	கழை
8. பூசம்	–	கொடிறு
9. ஆயில்யம்	–	கவ்வை, அரவு
10. மகம்	–	கொடுநுகம்
11. பூரம்	–	கணை
12. உத்தரம்	–	மானேறு
13. அத்தம்	–	கைம்மீன், கை
14. சித்திரை	–	நெய்ம்மீன், அறுவை
15. சுவாதி	–	விளக்கு
16. விசாகம்	–	சுளகு, முறம்
17. அனுடம்	–	பனை
18. கேட்டை	–	தழல், துளங்கொளி
19. மூலம்	–	குருகு
20. பூராடம்	–	முற்குளம்
21. உத்திராடம்	–	கடைக்குளம்
22. திருவோணம்	–	முக்கோல்
23. அவிட்டம்	–	பறவை, காக்கை
24. சதயம்	–	குன்று, செக்கு
25. பூரட்டாதி	–	முற்கொழுங்கால், நாழி
26. உத்திரட்டாதி	–	பிற்கொழுங்கால், முரசு
27. இரேவதி	–	தொழுபஃறி, தோணி

பிறை நாள் வரிசை

வடசொல்	–	தமிழ்
பிரதமை	–	[illegible]
துவிதியை	–	[illegible]

திருதியை - மும்மி
சதுர்த்தி - நான்மி
பஞ்சமி - ஐம்மி
சட்டி - அறுமி
சப்தமி - எழுமி
அட்டமி - எண்மி
நவமி தொண்மி
தசமி - பதின்மி
ஏகாதசி - பதினோரி
துவாதசி - பன்னீரி
திரயோதசி - பதின் மும்மி
சதுர்தசி - பதின் நான்மி
அமாவாசை - காருவா
பௌர்ணமி - வெள்ளுவா
சூரியகிரகணம் - கதிர்க் கோள்மறை
சந்திரகிரகணம் - நிலாக் கோள்மறை

விழாக்களின் பெயர்கள்

1. சித்திரா பௌர்ணமி - மேழவெள்ளுவா (பொன்னேர் விழா)
2. ஆடிப்பெருக்கு - கடகப் பெருக்கு (புனல் விழா)
3. விநாயக சதுர்த்தி - பிள்ளையார் நான்மி
4. நவராத்திரி - ஒன்பதிரவு, தொண்டிரா
   விசயதசமி - வெற்றிப்பதின்மி
5. தீபாவளி - விளக்கணி விழா
6. கார்த்திகை தீபம் - ஆரல்அணிவிளக்கு
7. **சமய விழாக்கள்**
   சிவராத்திரி - சிவனிரா
   வைகுண்ட ஏகாதசி - மாலுலகு பதினோரி
   கோகுலாட்டமி - ஆய்பாடி எண்மி
   வரலட்சுமி விரதம் - திருமகள் நோன்பு
   கிருட்டிணசயந்தி - கண்ணன் வெள்ளணி
   இராமநவமி - இராமன் தொண்மி
   கந்தர்சட்டி - கந்தன் அறுமி
8. சங்கராந்தி - பொங்கல் விழா
   போகி - வேந்தன் நாள், காப்புகட்டு, கிணற்றுப்பொங்கல், மழைப்பொங்கல்
   பெரும் பொங்கல் - கதிரவன் நாள், பெரும்பானை
   மாட்டுப் பொங்கல் - நிலவின் நாள், திருவள்ளுவர் நாள்
   கரிநாள் - காணும் பொங்கல்

பிறமொழி இயற்பெயர் தமிழாக்கம்

ஆடவர் பெயர்

வடமொழி - தமிழ்
அசோக் - இனியன்
அசோக்குமார் - இனியநம்பி
அண்ணாசாமி - அண்ணாத்துரை
அப்பாசாமி - அப்பாத்துரை
அர்த்தநாரீசுரன் - மங்கைபங்கன்
அருணகிரி - அண்ணாமலை
அருணாசலம் - அருண மலை
அருளானந்தம் - அருள்மகிழ்நன்
அழகர்சாமி - அழகப்பன்
அழகானந்தம் - எழிலின்பன்
அழகிரி - எழிலன், எழிற்குன்றன்
ஆதித்தன் - பகலோன், பரிதி
ஆனந்தராசன் - மகிழரசன், மகிழ்கோ
ஆனந்தன் - இன்பன், மகிழ்நன்
இரணியன் - பொன்னன்
இராசராசன் - மன்னர் மன்னன், கோவேந்தன்

உதயகுமார்	–	இளங்குமரன்
ஏகாம்பரன்	–	சிவபெருமான், அம்மையப்பன்
ஜயாசாமி	–	ஐயப்பன்
கண்ணுச்சாமி	–	கண்ணப்பன், கண்ணையன்
கணபதி	–	பிள்ளையார்
கந்தசாமி	–	முருகன்
கமலநாதன்	–	தாமரைநாயகன்
கமலாகரன்	–	தாமரைமணாளன்
கமலானந்தன்	–	பூமகிழ்நன்
கருணாகரன்	–	அருளாளன்
கருணாநிதி	–	அருட்செல்வன்
கருணானந்தம்	–	அருளின்பன்
கருணைப்பிரகாசம்	–	அருளொளி
கலியாணசுந்தரன்	–	மணவழகன்
கலியாணராமன்	–	மணஎழிலன்
கனகசபை	–	பொன்னம்பலம்
கனகராசன் கனகராசு	–	பொன்னரசன்
காந்திமதிநாதன்	–	மதியொளி நம்பி
காமராசு	–	அழகரசன்
கிருட்டிணசாமி	–	கண்ணையன்
கிருட்டிணன்	–	கண்ணன்
குஞ்சிதபாதம்	–	ஆடலன், ஆடலடி
குணசேகரன்	–	பண்பாளன்
குமார்	–	குமரன்
குமாரசாமி	–	குமரப்பன்
குருசாமி	–	குருவப்பன்
குருமூர்த்தி	–	ஆசான்தோன்றல்
கைலாசம்	–	வடமலை, வடமலையன்
கோதண்டபாணி	–	விற்கையன்
கோதண்டராம்	–	வில்லெழிலன்
கோதண்டராமன்	–	வில்லழகன்
கோபாலசாமி	–	ஆவின் ஐயன், ஆவப்பன்
சக்கரபாணி	–	திருமால்
சந்தோசநாதன்	–	மகிழ்நன்
சகநாதன்	–	வையநம்பி
சங்கரலிங்கம்	–	சிவ(முதல்வ)ன்
சங்கரன்	–	இறையன், நல்லன்
சச்சிதானந்தம்	–	மெய்யறிவின்பன்
சண்முகநாதன்	–	ஆறுமுகநம்பி
சண்முகம்	–	ஆறுமுகம்
சத்தியமூர்த்தி	–	மெய்யுரு, மெய்யுருவன்
சத்தியராசு	–	மெய்யரசு
சத்தீசு	–	அம்மையப்பன்
சதானந்தம்	–	நலமகிழ்நன்
சதானந்தன்	–	நான்முகன்
சந்திரசேகரன்	–	திங்களணி, மதிவாணன்
சந்திரவேல்	–	மதிவேலன்
சந்திரன்	–	மதியன், நிலவன்
சபாநாதன்	–	அவைநம்பி
சபாராசு	–	அம்பலவாணன்
சபாரத்தினம்	–	மன்றமணி
சபாவேல்	–	வெற்றிவேலன்
சற்குணநாதன்	–	நற்குணநம்பி
சனகராசு	–	வெற்றிவேலன்
சாத்திரி	–	கலைஞன்
சாந்தாராமன்	–	அமைவழகன்
சாம்பசிவன்	–	அம்மையப்பன்
சாம்ராசு	–	வேந்தன்
சாமிதுரை	–	ஐயாத்துரை
சாமிநாதன்	–	இறைக்குருவன்
சாமிவேல்	–	வேலையன்
சிதம்பரம்	–	தில்லை
சீநிவாசன்	–	திருவாணன்
சிவக்குமார்	–	சிவக்குமரன்
சிவச்சாமி	–	சிவநம்பி

சிவசாமி – சிவனப்பன்
சிவசுப்பிரமணியம் – சிவமுருகன்
சிவலிங்கம் – சிவனருள்
சிவானந்தம் – சிவமகிழ்நன்
சிற்சபை – சிற்றம்பலம்
சின்னசாமி – சின்னப்பன்
சீவரத்தினம் – மணிவாணன்
சீவா – ஆதன்
சீனிவாசன் – திருவாணன்
சுகானந்தம் – நல்லினியன்
சுகுமார் – நற்குமரன்
சுந்தரம் – அழகன்
சுந்தரமூர்த்தி – அழகுரு, அழகப்பன்
சுந்தரராசன் – அழகரசன்
சுப்பராயன் – நல்லரையன்
சுப்பிரமணியன் – முருகன்
சுப்புராமன் – நல்லழகன்
சுரேசு – வேந்தன்
சுரேசுகுமார் – இளவரசன்
சூரியன் – ஞாயிறு, பரிதி
சூரியநாராயண சாத்திரி – பரிதிமாற் கலைஞர்
சூரியமூர்த்தி – ஞாயிற்றுருவினன், பரிதித்தோன்றல்
சூரியராசு – கதிரையன்
செயக்குமார் – வெற்றிக்குமரன்
செயராசு – வெற்றிவேந்தன்
செல்வராசன் – செல்வநம்பி
சேகர் – செல்வன்
சோணாசலம் – அண்ணாமலை
சோமசுந்தரம் – மதியழகன்
சௌந்தரராசன் – எழிற்கோ
ஞானசம்பந்தம் – அறிவுக்கொழுந்து

ஞானசுந்தரம் – அறிவழகன்
ஞானசேகரன் – அறிவாளன்
தங்கராசன் – பொன்னரசன்
தட்சிணாமூர்த்தி – தென்னவன்
தண்டபாணி – முருகன், திருமால்
தணிகாசலம் – தணிகைவேல்
தம்புசாமி – தம்பையன்
தயாநிதி – அருட்செல்வன்
தர்மராசு – அறக்கோ (அறவரசு)
தருமேசுவரன் – அறவாணன்
தனசேகரன் – திருச்சேரன், செல்வன்
தனராசன் – வளங்கோ
தியாகராசன் – கொடைவேந்தன், ஈகவேந்தன்
திரவியம் – செல்வம்
திருவேங்கடசாமி – திருவேங்கடவன்
தினகரன் – கதிரவன்
துரைசாமி – துரையப்பன்
துரைராசன் – துரையரசன்
துளசிராமன் – துழாய்அழகன்
தேவநேசன் – தேவநேயன்
தேவராசன் – விண்ணழகன், விண்ணெழிலன்
நடராசன் – கூத்தரசன், ஆடலரசன்
நந்தகுமரன், நவநீதகிருஷ்ணன் – திருமால்
நவமணி – ஒன்பான்மணி, தொண்மணி
நாகசாமி – நாகப்பன்
நாகரத்தினம் – நாகமணி
நாகராசன் – நாகவரசன்
நாராயணன் – திருமால்
நித்தியானந்தன் – நித்தலின்பன்
நீலகண்டன் – நஞ்சுமிடற்றன், நஞ்சுண்டன்

பக்கிரிசாமி	– பிச்சையன், பிச்சையப்பன்
பக்தவச்சலன்	– அடியார்க்கு நல்லான்
பசுபதி	– சிவன்
பஞ்சமூர்த்தி	– ஐயப்பன்
பஞ்சாட்சரம்	– ஐந்தெழுத்தன்
பத்மநாதன்	– தாமரைநாயகன்
பத்மநாபன்	– திருமால், மலர்வாணன்
பரஞ்சோதி	– பேரொளி, பரஞ்சுடர்
பலராமன்	– அடல்எழிலன்
பழநிசாமி	– பழநியப்பன்
பாசுகரன்	– பரிதி
பால்ராசு	– இளங்கோ
பாலகிருட்டிணன்	– இளங்கண்ணன்
பாலச்சந்திரன்	– இளமதியன், இளநிலவன்
பாலசுந்தரம்	– இளவழகு
பாலசுப்பிரமணியம்	– இளமுருகு
பாலாசி	– வேங்கடவன்
பிரகாசம்	– ஒளியன்
பிரபாகர்	– எல்லாளன்
பிரபாகரன்	– ஒளியவன்
பிரேம்குமார்	– அன்புக்குமரன்
பிரேம்நாத்	– அன்பரசன்
மகாதேவன் மாதேவன்	– பெருந்தேவன்,
மகேசுரன்	– பெருவுடையான்
மலைச்சாமி	– மலையப்பன்
மனோகரன்	– உளங்கவரழகன்
மாணிக்கசாமி	– மணியப்பன்
மாணிக்கவாசகன்	– மணிமொழி
மூர்த்தி	– திருமேனி
மோகன்குமார்	– எழில்குமரன்
மோகனசுந்தரம்	– கண்ணனன்
மோகனராமன்	– எழிற்கண்ணன்
யோகானந்தன்	– தவமகிழ்நன்
ரகுவரன்	– பெருமான்
ரங்கசாமி	– அரங்கையன்

ரங்கதுரை	– அரங்கதுரை
ரங்கநாதன்	– அரங்கநாயகன்
ரங்கராசன்	– அரங்கவேந்தன்
ரத்தினகுமார்	– மணிக்குமரன்
ரத்தினசாமி	– மணியப்பன்
ரத்தினம்	– மணியன்
ரமேசு	– அழகிய நம்பி
ரமேசுபாபு	– அழகப்பன்
ராசகுமார்	– இளவரசன்
ராசசேகரன்	– கோச்செல்வன்
ராசரத்தினம்	– மணியரசன்
ராசராசன்	– மன்னர்மன்னன், கோவேந்தன்
ராசாராமன்	– அரசெழிலன்
ராமச்சந்திரன்	– நிலவழகன்
ராமசாமி	– அழகப்பன்
ராமசுப்பிரமணியன்	– எழில்வேலன்
ராமதுரை	– துரையழகன்
ராமநாதன்	– அழகியநம்பி
ராமமூர்த்தி	– எழிலுருவன்
ராமரத்தினம்	– மணியழகன்
ராமன்	– எழிலன்
ராமானந்தன்	– எழில்மகிழ்நன்
லோகநாதன்	– உலகநம்பி
வல்லபன்	– வல்லவன்
விசய்	– வெற்றி
விசயகாந்த்	– வெற்றியழகன்
விசயகுமார்	– வெற்றிக்குமரன்
விசு	– வையவன்
வித்தியாசாகர்	– பேரறிவன்
விருத்தாசலம்	– பழமலை
விவேக்	– அறிவன்
விவேகானந்தன்	– அறிவின்பன்
வீராசாமி	– வீரப்பன், திறலவன்
வெங்கடாசலம்	– வேங்கடவன்
வெள்ளியங்கிரி	– வெள்ளிமலை

வெள்ளைச்சாமி	–	வெள்ளையன்
வேணுகோபால்	–	கண்ணன்
வேதாசலம்	–	மறைமலை
வேல்சாமி	–	வேலப்பன்
வைகுண்டம்	–	திருமால்

மகளிர் பெயர்

வடமொழி	–	**தமிழ்**
அசுவினி	–	பொன்மான்
அஞ்சுகம்	–	கிளிமொழி
அம்சா	–	அன்னம்
அம்பாள்	–	அம்மை
அம்பிகா	–	நல்லம்மை
அம்புசம்	–	தாமரை
அம்புசவல்லி	–	தாமரைவல்லி
அம்புசாட்சி	–	தாமரைக்கண்ணி
அமிர்தவல்லி	–	அமுதவல்லி
அழகுலட்சுமி	–	திருச்செல்வி
அனுசுயா	–	நல்லினி
ஆனந்தசோதி	–	இன்பஒளி
இந்திராணி	–	மதியரசி, அரசவாணி
இந்துமதி	–	நிலாமதி
இரத்தினம்	–	செம்மணி
இராசாத்தி	–	அரசி
ஈசுவரி	–	இறைவி, செல்வி,
உசா	–	விடிவெள்ளி
உசாராணி	–	வைகறைவாணி
உமா	–	இறையம்மை
உமாராணி	–	அரசமாதேவி, அரசம்மை
ஊர்வசி	–	விண்ணெழிலி
ஏமா	–	பொன்னி
ஏமாவதி	–	பொன்னழகி
கத்தூரி	–	மான்மணத்தி
கமலசுந்தரி	–	தாமரைச்செல்வி
கமலம்	–	தாமரை
கமலாசனி	–	அலர்மேல்மங்கை
கல்யாணசுந்தரி	–	மணவழகி
கலாராணி	–	கலையரசி
கலாவள்ளி	–	கலைவள்ளி
கலியாணி	–	மங்கலவள்ளி
கவிதா	–	இசைமொழி
கவுசல்யா	–	கோமகள்
கனகபூசணம் கனகபூசணி	–	பொன்னனி
கனகா	–	பொன்னி
கனகாம்பாள்	–	பொன்னம்மை
கனகாம்புசம்	–	பொன்னி
காஞ்சனா	–	பொன்னி
காந்திமதி	–	வெண்ணிலா, ஒளிமதி
காமாட்சி	–	எழிற்கண்ணி
காயத்திரி	–	சுடரொளி
குணபூரணி	–	பண்பழகி
குமாரி	–	குமரி
கோகிலம்	–	குயில்
கோமளம்	–	இளமை, அழகு
கௌரி	–	பச்சையம்மாள்
சகுந்தலா	–	எழிலி
சங்கரி	–	உமை, இறைவி
சந்தானலட்சுமி	–	தாயம்மை
சந்திரகாந்தா	–	மதியொளி
சந்திரமதி	–	மதிமுகம், நிலவெழிலி
சந்திரா	–	மதியரசி, வெண்ணிலா
சம்பத்குமாரி	–	செல்வக்குமரி
சரசுவதி	–	கலைமகள், நாமகள்
சரோசினி	–	தாமரைச்செல்வி
சலசா	–	தாமரை
சலசாட்சி	–	தாமரைக்கண்ணி

சாந்தி	–	மெல்லியல்
சாருலதா	–	எழிற்கொடி
சாவித்திரி	–	கலைஎழில்
சிங்காரி	–	நல்லெழிலி
சித்ரா	–	ஓவியள்
சியாமளா	–	கார்மேனி
சிவகாமசுந்தரி	–	சிவநேயச்செல்வி
சிவகாமி	–	சிவனருளி
சுகந்தி	–	மணத்தி
சுகாசினி	–	இனவாணி
சுகுணசுந்தரி	–	நற்குணவழகி
சுகுணா	–	நல்லியலி
சுகுமாரி	–	நற்செல்வி, நப்பசலை
சுசீலா	–	நற்சாலி
சுதா	–	வெண்ணி
சுந்தரவல்லி	–	அழகுவல்லி
சுந்தராம்பாள்	–	அழகம்மை
சுந்தரி	–	செல்வி, எழிலி
சுப்புலட்சுமி	–	நல்லினி
சுபா	–	நல்லாள்
சுமதி	–	நன்மதி, நல்லினி
சுலட்சனா	–	நல்லெழிலி
சுலோசனா	–	நக்கண்ணை, எழிற்கண்ணி
சுவேதா	–	நன்மொழி
செகதாம்பாள்	–	உலகநாயகி
செயந்தி	–	வெற்றிச்செல்வி
செயலட்சுமி	–	வெற்றித்திருமகள்
செல்வராணி	–	திருவரசி
சொர்ணலதா	–	பொற்கொடி
ஞானம்	–	அறிவு
ஞானாம்பாள்	–	அறிவம்மை
தருமாம்பாள்	–	அறமகள், அறச்செல்வி

தனலட்சுமி	–	திருச்செல்வி, செல்வத்திருமகள்
திரிபுரசுந்தரி	–	முப்புர எழிலி
திலகா	–	திருநுதல்
திவ்யா	–	நேரிழை
தினகரசுந்தரி	–	எழுகதிரழகி
தீபா	–	சுடரொளி
நதியா	–	ஆறணி
நிர்மலா	–	மாசிலி
நீலாட்சி	–	நீலக்கண்ணி
பகவதி	–	இறைவி
பங்கசம்	–	தாமரை
பத்மபூசணி	–	பூவணி, பூவரசி
பத்மம்	–	தாமரை
பத்மாட்சி	–	தாமரைக்கண்ணி
பத்மாசினி	–	தாமரைச்செல்வி
பரமேசுவரி	–	பேரிறைவி
பரிபூரணி	–	நிறைசெல்வி
பருவதபுத்திரி	–	மலைமகள்
பல்லவி	–	பூங்குமரி, இளங்குமரி
பவுனாம்பாள்	–	பொன்னம்மை
பாமா	–	விறலி
பார்வதி	–	மலைமகள்
பாலாம்பாள்	–	இளஞ்செல்வி
பானுமதி	–	கதிர்மதி
பிரகதாம்பாள்	–	பெருந்திருவாள்
பிரியா	–	அன்புச்செல்வி
பிரீதி	–	அன்புவாணி
பிரேமா	–	அன்பரசி
புட்பவல்லி, புட்பா	–	பூமகள்
புட்பராசம்	–	பூவரசி
புட்பாவதி	–	மலர்முகம், திருமகள்
மகாலட்சுமி	–	பெருந்திருமகள்

மகேசுவரி	–	பெருவுடையாள்
மஞ்சுளா	–	மலர்மகள்
மதுராம்பாள்	–	தேனம்மை
மயூரி	–	மயிலம்மை, மயிலி
மரகதம்	–	பச்சைமணி
மனோரமா	–	மனத்தழகி
மாலா	–	மலரெழிலி
மீனாகுமாரி	–	மீனச்செல்வி
மீனாட்சி	–	அங்கயற்கண்ணி
மீனாம்பாள்	–	மீனம்மை
முத்துலட்சுமி	–	முத்தம்மை
மோகனசுந்தரி	–	மனங்கவர்செல்வி
மோனிகா	–	மென்சாயலி
ரஞ்சனி	–	இன்பவல்லி
ரஞ்சிதா	–	இன்னெழிலி, இன்பெழில்
ரத்தினா	–	செம்மணி
ரத்தினாம்பாள்	–	செந்தாழை
ரதி	–	மனச்செல்வி
ரம்பா	–	எழிலி
ரமா	–	பொலிவழகி
ராகினி	–	ஆவலி
ராசம்	–	அரசி
ராசம்மாள்	–	அரசம்மை
ராசலட்சுமி	–	அரசத்திருமகள்
ராசாத்தி	–	திருமகள், திருவரசி
ராசேசுவரி	–	இறையரசி
ருக்மணி	–	வெண்பொன்னி
ரேணுகா	–	எழிலி
ரேவதி, ரோசா	–	முளரிமங்கை
லட்சுமி	–	செல்வி, திருமகள்
லதா	–	கொடி
லலிதா	–	காமினி
லோகாம்பாள்	–	உலகம்மை
விசயகுமாரி	–	வெற்றிச்செல்வி
விசயராணி	–	அரசமாதேவி
விசயா	–	வாகைச்செல்வி
விசி	–	வாகை
வித்யா	–	கலைச்செல்வி
வேதவல்லி	–	மறைக்கொடி

திருக்கோவில்களில் தமிழ்ச்சொற்கள்

வடமொழி		**தமிழ்**
தேவத்தானம்	–	தேவகம், திருக்கோவில்
உற்சவங்கள்	–	திருவிழாக்கள், விழாக்கள்
நிர்வாக அதிகாரி	–	ஆளுவ அலுவலர், செயல் அலுவலர், ஆள்வினைஞர்,
கர்ப்பகிரகம்	–	கருவறை, உண்ணாழிகை
பூர்த்தி	–	நிறைவு
ஆலய நிர்வாகிகள்	–	கோவில் ஆளுவத் தலைவர்கள்
பசலி	–	பயிராண்டு, வருவாய் ஆண்டு
பஞ்சாங்கம்	–	ஐந்திறம்
பிரதோடம்	–	மசண்டை
அமாவாசை	–	காருவா
கார்த்திகை	–	ஆரல், அறுமீன்
சட்டி	–	அறுமி
வசந்தோற்சவம்	–	இளவேனில் விழா
முகூர்த்தம்	–	முழுத்தம்
மிதுன லக்கனம்	–	ஆடவையோரை
சித்திரா பௌர்ணமி	–	மேழ மதியம், மேழ வெள்ளுவா

அக்னி நட்சத்திரம் ஆரம்பம்	–	கத்தரித்துவக்கம், எரிநாள் தொடக்கம்
சீதகும்பம்	–	குளிர்கும்பம், தண்குடம்
நடராசர் அபிசேகம்	–	நடவரசு திருமுழுக்கு, ஆடலரசு திருமுழுக்கு
சுவாமி தீர்த்தம்	–	இறைத் தூநீர்
வசந்தோற்வசத்துவச ஆரோகணம்	–	இளவேனில் விழாக் கொடியேற்றம்
சிரீதேவசேனா	–	திருத்தெய்வயானை
அம்மன்	–	திருமணம் திருக்கல்யாணம்
விருச்சிக லக்னம்	–	நளியோரை
சிரீவள்ளி	–	திருவள்ளி
ரதாரோகணம்	–	தேர் ஏற்றம்
துவச அவரோகணம்	–	கொடி இறக்கம்
கும்பாபிடேகம்	–	குடமுழுக்கு
வருடாபிடேகம்	–	ஆட்டைத் திருமுழுக்கு
அன்னாபிடேகம்	–	சோற்றுத்திருமுழுக்கு
லட்சார்ச்சனை ஆரம்பம்	–	இலக்க வழிபாட்டுத் தொடக்கம்
சனிப்ரதோடம்	–	காரி மசண்டை
கன்னிமார் பூசை	–	கன்னிமார் பூசை
மகாபிடேகம்	–	பெருமுழுக்கு
விநாயக சதுர்த்தி	–	மூத்த பிள்ளையார் நாள்
போதாயன்	–	மூதிரை
மகாளய அமாவாசை	–	காருவா
கேதாரகௌரிவிரதம்	–	மலைமகள் நோன்பு
நவராத்திரி ஆரம்பம்	–	தொள்ளிரவுத் தொடக்கம்
சரசுவதி பூசை	–	கலைமகள் பூசை, நாமகள் வழிபாடு
ஆயுத பூசை	–	கருவிப்பூசை
சூரசம்கார உற்வசக் காப்புக்கட்டு	–	சூர்தடி விழாக் காப்புக் கட்டு
கந்த சட்டி	–	கந்தர் அறுமி
திருக்கல்யாணம்	–	திருமணம்
திருக்கார்த்திகை உற்சவக் காப்புக்கட்டு	–	திருஆரல் விழாக் காப்புக்கட்டு
பரணிதீபம்	–	தாழி விளக்கு
போதயான	–	போதயானக் காருவா
அமாவாசை		
சுப்ரமண்ய சட்டி	–	முருக அறுமி
சம்பா சட்டி	–	சம்பா அறுமி
தனுர் பூசை ஆரம்பம்	–	சிலைப்பூசைத் தொடக்கம்
நடராசர் ஆருரத்தரா அபிடேகம்	–	அம்பலவாணர் மூதிரைத் திருமுழுக்கு
போகிப் பண்டிகை	–	வேந்தன் திருநாள், வேந்தன் விழா
இரவு தனுர்பூசை	–	இரவு சிலைப்பூசை நிறைவு
சங்கராந்தி	–	பொங்கல் பண்டிகை
கிராம சாந்தி	–	ஊரமைதி
துவச ஆரோகணம்	–	கொடி ஏற்றம்
மேச லக்னம்	–	மேழ பிறப்பு ஓரை
முகூர்த்தம்	–	முழுத்தம்
மகாசிவராத்திரி	–	சிவனார் பேரிரவு, சிவனிரா

உற்சவ துவச ஆரோகணம்	– விழாக் கொடி ஏற்றம்
ரிசப லக்னம்	– விடைபிறப்போரை
யுகாதி பண்டிகை	– தெலுங்கு ஆண்டுப் பிறப்பு
சாதாரண வருடப் பிறப்பு	– ஆண்டுப் பிறப்பு
சிரீவைணவம் ஏகாதசி	– திருமாலியம் பதினொரமை
சைத்ரோற்சவம் கிராமசாந்தி	– மேழவிழா ஊரமைதி
சர்வ ஏகாதசி	– அனைத்துப் பதினொரமை
சித்ரா பௌர்ணமி	– மேழ மதியம், வெள்ளுவா
சர்வசமய ஏகாதசி	– அனைத்துச் சமயப் பதினொரமை, அனைத்து மதப் பதினொரமை
பாஞ்சராத்ரம்	– பாஞ்சராத்திரி
சிரீகண்ணபிரான் சிரீசயந்தி	– கண்ணன் பிறப்புத் திருநாள்
நவராத்திரி பூசை ஆரம்பம்	– தொள்ளிரவுப் பூசைத் தொடக்கம்
விசயதசமி	– வெற்றிப் பதின்மி
உத்தான் ஏகாதசி	– ஆரல்வெண்பக்கப் பதினொரமை
விட்ணுதீபம்	– திருமால் விளக்கு
பரமபத சொர்க்க வாசல் திறப்பு	– பரமபத உவணை வாயில் திறப்பு
கசேந்திர மோட்சம்	– வேழவேந்த வீடு
சர்வபீட்ம ஏகாதசி	– அனைத்து வீடுமப் பதினொரமை
பிரம்மோற்சவ கிராம சாந்தி	– பெருவிழா ஊரமைதி
பாரிவேட்டை	– பரிவேட்டை
பேஷ்கார், மணியம்	– செல்பணியார், பெருங்கேள்வி, மணியம்
காரியத்தர்	– கருமத்தலைவர்
மூலத்தானம்	– கருஇடம், மூலத்தாவு, கருவறை
சந்நிதி	– திருமுன்
பிரகாரம்	– திருச்சுற்று
யாத்திரிகர்	– திருவழிப்போக்கர், வழிப்போக்கர்
உபநயனம்	– பூணூல் சடங்கு
பஞ்சாமிர்த அபிடேகம்	– ஐயமுதத் திருமுழுக்கு
தீர்த்த அபிடேகம்	– திருப்புனலாட்டு
பால் அபிடேகம்	– பால் முழுக்கு
அட்டோத்திர அர்ச்சனை	– நூற்றெட்டு வழிபாடு
சகச்ரநாமம்	– ஆயிரப்பெயர்
கௌபீனம்	– நீர்ச்சீலை, குளிசீலை, தாய்ச்சீலை
தீபாராதனை	– விளக்கு வழிபாடு
ராச அலங்காரம்	– அரசக்கோலம், அரசப்புனைவு
நைவேத்தியம்	– காணிக்கை, படைப்பு, படையல்
சாயரட்சை	– மாலைப்பூசை
அர்ச்சகர்	– பூசகர், போற்றியர்
தரிசனம்	– காண்பு, காட்சி
பிரசாதம்	– அருட்கொடை, திருச்சோறு

தெய்வப் பெயர் மாற்றம்

சிவன் பெயர்கள்

சமற்கிருதம் – தமிழ்

பத்தவற்சலன் (பக்தவத்சல) – அடியார்க்குநல்லான்
சாம்பசிவன், சாம்பமூர்த்தி – அம்மையப்பன்
ஈசுவரன் (ஈச்வர) – உடையான்
சகதீசுவரன், சகதீசன் – உலகுடையான்
ஏகாம்பரன் – ஒருமாவன்,
ஏகாம்பரநாதன் – ஒருமாவடியான்
அட்சயன் – கேடிலி
சுந்தரன் – சொக்கன்
மாதுருபூதம் (மாத்ருபூத) – தாயுமானவன்
சுயம்பு – தான்தோன்றி
குஞ்சித பாதம் – தூக்கிய திருவடி
தட்சிணாமூர்த்தி – தென்முக நம்பி
நடராசன் – நடவரசன்
வன்மீகநாதன் – புற்றிடங்கொண்டான்
மகாதேவன் – பெருந்தேவன்
பிருகதீசுவரன், மகேசுவரன் – பெருவுடையான்
அர்த்தநாரி, அர்த்தநாரீசுவரன் – மங்கை பங்கன், மாதொருபாகன்
கலியாணசுந்தரன் – மணவழகன்
மார்க்சகாயன் – வழித்துணையான்

சிவை பெயர்கள்

அம்பா – அம்மை
அபிராமி, சுந்தராம்பா, சௌந்தராம்பிகை – அழகம்மை
வாமி – இடவி
ஈசுவரி – உடையாள்
சகதாம்பா – உலகம்மை
அகிலாண்டேசுவரி – உலகமுழுதுடையாள்
மீனாட்சி – கயற்கண்ணி
காமாட்சி – காமக்கண்ணி
விசாலாட்சி – தடங்கண்ணி
நீலாம்பா, நீலாம்பிகை – நீலம்மை
பார்வதி – மலைமகள்

திருமால் பெயர்கள்

ரங்க(ன்) – அரங்கன்
ரங்கநாத(ன்) – அரங்கநம்பி
சகநாதன் – உலகநம்பி
கோபால(ன்) – கோவலன்
மகாவிட்ணு – பெருமால் – பெருமாள்
விட்ணு – விண்டு

கடவுள் பெயர்கள் (பொது)

சாமி – ஆண்டவன்,
கர்த்தா – இயற்றியான்
பகவான், பகவத் – பகவன், பகவான்
பரஞ்சோதி – பரஞ்சுடர்

இடப்பெயர் மாற்றம்

அருணாசலம் – அருணமலை – அண்ணாமலை
மத்தியார்ச்சுனம் – இடைமருதூர்
பட்சிதீர்த்தம் – கழுக்குன்றம் (கழுகுக்குன்றம்)
சிதம்பரம் – சிற்றம்பலம், தில்லை
சிரீரங்கம் – திருவரங்கம்
சம்புகேசுவரம் – திருவானைக்கா
சம்புத்தீவம் – நாவலந்தீவம்
விருத்தாசலம் – பழமலை (முதுகுன்றம்)
இமாலயம், இமயம் – பனிமலை
பாடலிபுரம் – பாதிரிபுரம்

அவிநாசி – புக்கொளியூர்
மேரு (பர்வதம்) – பொன்மலை
கனகசபை – பொன்னம்பலம்
மாயூரம் (மாயவரம்) – மயிலாடுதுறை
வேதாரணியம் – மறைக்காடு

வைத்தீசுவரன் கோவில் – வினைதீர்த்தான் கோவில் (புள்ளிருக்கு வேளூர்)
சுவேதவனம் – வெண்காடு
புட்பவனம் – பூங்காடு
கைலாசம் (கைலாயம்) – வெள்ளிமலை
சம்புத்தீவு – நாவலம்பொழில்
மாயவரம், மாயூரம் – மயிலாடுதுறை
திண்டிவனம் – புளியங்காடு
பிரகதீசுவரர் – பெருவுடையார்
பவஔடதீச்வரர் – பிறவிமருந்திறைவர்
பஞ்சநதீச்வரர் – ஐயாறர்
வன்மீகநாதர் – புற்றிடங்கொண்டார்
சங்கமேச்வரர் – கூடுதுறையார்
விசாலாட்சி – தடங்கண்ணி
ரௌத்ரதுர்கா – எரிசினக்கொற்றவை
இருதயாலீசுவரர் – மனக்கோயில் ஈசர்
அர்த்தநாரீச்வரர் – மாதொருபாகன்

நாட்டியம்

இணைக்கை வகை – 15

1. அஞ்சலி – கும்பிடல், வணக்கம்
2. புட்பாஞ்சலி – மலர்ப்படையல்
3. பதுமாஞ்சலி – தாமரைக்கை
4. கபோதம் – புறாக்கை
5. கற்கடகம் – நளிக்கை
6. சுவத்திகம் – மங்கலச்சதுரம்
7. கடகாவர்த்தம் – வளைவுக்கை
8. நிடதம் – முட்டிக்கை
9. தோரம் – தோரணக்கை
10. உற்சங்கம் – அணைவுக்கை
11. புட்பபுடம் – மலர்க் கூடை
12. மகரம் (உச்சிதம்) – சுறவுக்கை
13. சயந்தம் – வெற்றிக்கை – காதற்கை
14. அபயவர்த்தம் – அடைக்கலம்
15. வர்த்தமானம் – முட்டுக்கை

இணையா வினைக்கை

வகை – 33

ஒற்றைக்கை (பிண்டி)

1. பதாகை – கொடி
2. திரிபதாகை – முக்கொடி
3. தூபம் – விளக்கு
4. அராளம் – ஆசைக்கை
5. இளம்பிறை – பிறைக்கை
6. சுகதுண்டம் – கிளிமூக்கு
7. முட்டி – முட்டிக்கை
8. கடகமுகம் – நளிமுகம்
9. சூசிக்கை – ஊசிக்கை
10. பதுமகோசிகம் – தாமரை மொட்டு
11. காங்கூலம் – உண்டைக்கை
12. கபித்தம் – விளாங்கனிக்கை
13. தனுசு – விற்பிடி
14. குடங்கை – உட்குழிக்கை
15. அலாபத்திரம் – அலர்தாமரை
16. பிரமரம் – சுரும்பர்
17. தாம்பிரசூடம் – சேவற்கொண்டை
18. பசாசம் – பேய்க்கை
19. கத்தரிகை – கத்திரிக்கை
20. முகுளம் – முகுளமொட்டு
21. பிண்டி – சேர்ப்பு
22. தெரிநிலை – விரிநிலை
23. மெய்ந்நிலை – நிமிரல்
24. உன்னம் – ஓதிமம்
25. மண்டலம் – வட்டிப்பு
26. சதுரம் – சதுரம்
27. மிருகசிரசு – மான்தலை
28. சங்கு – வளை
29. வண்டு – பூவண்டு
30. இலதை – படர்கொடி
31. கபோதம் – புறா
32. வலம்புரி – வலம்புரிச்சங்கு
33. மகரமுகம் – சுறவமுகம்

****

கூட்டிணைப்பு - ADDENDUM (விடுபட்ட பிற சொல்லாட்சிகள்)

கடதாசி *kaḍa-tāśi,* பெ. (n.) விளையாடுஞ் சீட்டு; playing-cards. *"அவன் கடதாசி யாடுகிறான்."*

[Port. cartaz > த. கடதாசி.]

கிருககசுவரம் *kirukaśsuvaram,* பெ. (n.) எடுப்புப்பண்ணோசை; initial note of a melody type.

[Skt. grha+svara > த. கிரககசுவரம்.]

கிருககசுதி *kirukaśuti,* பெ. (n.) இல்லத்தரசி; married woman.

[Skt. grha+stha > த. கிரககசுதி.]

கிரகணி-த்தல் *kirakaṇi-,* செ.கு.வி. (v.t.) 1. கோள் பிடித்தல்; to eclipse. 2. உறிஞ்சுதல்; to seize grasp.

[Skt. grhana > த. கிரகணி-,]

கிரமி *kirami,* பெ. (n.) 1. ஒழுங்காய் நடப்பவ-ன்-ள்; well behaved person. 2. சமய ஒழுக்க விதிப்படி நடப்பவன்-ள்; one who conforms to orthodox rules of conduct.

[Skt. krama > த. கிரமம் > கிரமி.]

கிரகபலம் *kirakapalam,* பெ. (n.) கோளின் ஆட்சிச் செல்வாக்கு; planetary influence.

[Skt. graha+bala > த. கிரகபலம்.]

கிரகபுடம் *kirakapuḍam,* பெ. (n.) பிறப்பியத்தில் கோள்களின் நிலையை வரையறுக்கை; determining the correct position of planet at the time of one's birth.

கிரகவக்கிரம் *kirakavakkiram,* பெ. (n.) கோள் பின்னோக்கிச் செல்லும் நிலை; retrogression of planet.

[Skt. grha+vakra > த. கிரகவக்கிரம்]

காசா *kāśa,* பெ. (n.) சுமார் பதினாறு ஆண்டாகும் பொழுது குதிரைப் பற்களிலேற்படுங் கருஞ்சிவப்பு நிறம் (அசுவசா. 6); deep red colour of the teeth of horses when they are sixteen years old.

கும்பாபிடேகம் *kumbābiḍēgam,* பெ. (n.) கோயிலில் நிறுவுவதற்கும், தூய்மை செய்வதற்குமுரிய குடமுழுக்குச் சடங்கு; ceremony of consecration or purification in a temple.

த.வ. குடமுழுக்கு

[Skt. kumbha+abhi-sēka > த. கும்பாபிடேகம்]

கோசனை *kōśaṇai,* பெ. (n.) பேரொலி (பிங்.); loud noise, tumult, roar.

[Skt. ghōsaṇā > த. கோசனை.]

சகசம் *śakaśam,* பெ. (n.) 1. கூடவுண்டானது (சி.சி.3:4, சிவாக்.); concomitant. 2. இயல்பு; nature.

[Skt. saha-ja > த. சகசம்.]

தகன் *tagan,* பெ. (n.) 1. தீ; fire. 2. பூரான்; a centipede.

[Skt. dahana > த. தகன்.]

தஞ்ஞன் *taññan,* பெ.(n.) அறிஞன்; (யாழ். அக.); wise man.

தண்டதாசன் *taṇṭatācaṉ,* பெ.(n.) அடிமை (யாழ். அக.); slave.

[Skt. daṇḍa+dāsa > த. தண்டதாசன்.]

தண்டபாலன் *taṇṭapālaṉ,* பெ.(n.) வாயிற் காப்போன்; gate-keeper.

தபோதனி *tapōtani,* பெ. (n.) முனிவன் (யாழ். அக.); sage, anchorite.

[Skt. tapōdhana > த. போதனி.]

தமகன் *tamagan,* பெ.(n.) கொல்லன் (யாழ். அக.); smith.

[Skt. dhamaka > த. தமகன்.]

தயிலி *tayili,* பெ.(n.) பணப்பை; purse, pouch. *ரூபாயை.......தயிலியில் போட்டுக் கட்டி* (P.T.L. 176)

[U. thailī > த. தயிலி]

தர்பாரு *tarpāru,* பெ.(n.) தர்பார் எனும் இராகவகை; (பரத. ராக. 104) a specific melody-type.

தர்மபத்தர் *tarmapattar,* பெ.(n.) அறமுறை உசாவல் செய்வோர்; officer in charge of the administration of charities.

தாசிகம் *tāsigam,* பெ. (n.) அடிமைத்தனம்; slavery (Pond.)

[Skt. dāsya > த. தாசிகம்.]

தாதிரி[1] *tātiri,* பெ. (n.) கொடையாளி; (யாழ். அக.) donor.

[Skt. dātr > த. தாதிரி.]

தாதுமான் *tādumān,* பெ. (n.) 344 (சிகரங்களை) முகடுகளையும் 44 மேனிலைக் கட்டுகளையுமுடைய கோயில் (சுக்கிரநீதி 230); temple with 344 towers and 44 storeys.

[Skt. dhātumān > த. தாதுமான்.]

தாதுராகம் *taduragam,* பெ.(n.) காவிக்கல் (கம்பரா. வரைக்காட்.44); red ochre.

தாமதி-த்தல் *tāmati-,* 11 செ.கு.வி. (v.i.) தங்குதல்; to stay. *"அந்த ஊரில் இரண்டு நாள் தாமதிப்பேன்"* (இ.வ.)

தார்ச்சூடன் *tārcūdan,* பெ. (n.) கீலெண்ணெயி லிருந்து செய்யப்படுஞ் சூடன் போன்ற பண்டம்; naphthalene ball.

த.வ. சூடன் குண்டு

திட்சம் *tišam,* பெ. (n.) நிகழ்வனவற்றை வெறுப்பின்றி நுகர்தல் (யாழ்.அக.); experiencing without aversion whatever happens.

தீபாதனம் *dipātanam,* பெ.(n.) ஓக வகை; a yogic posture.

[Skt. dipāsana > த. தீபாதனம்.]

தீர்க்கன் *dikkan,* பெ.(n.) முற்காண்பறிவன்; முற்காணி (தீர்க்கதரிசி); prophet. *"தீர்க்கருரை நாடி யறியார் பலர்"* (இரட்சணிய பக்.51)

[Skt. dirgha > த. தீர்க்கன்.]

துகிரிகை *tukirigai,* பெ.(n.) எழுதுகோல்; writing material

துச்சம் *tuccam,* பெ.(n.) இழிவு; low mean habit.

துர்வியாதி *turviyādi,* பெ.(n.) கெட்ட நடத்தையால் உண்டாகும் நோய்; venereal disease.

துரு *turu,* பெ. (n.) வேதம் முதலியன ஓதும் சந்தவகை; recital of a vēdic text, etc. by a disciple following his preceptor's lead. *"சாகையிலும் கற்பத்திலும் கணத்திலுந் துருச்சொல்லி"* *(தெய்வச். விறலிவிடு. 243).*

துர்மார்க்கம் *tur-mārkkam,* பெ.(n.) தீயவழி; ill way.

[Skt. dur-mārga > த. துர்மார்க்கம்]

தூமகேது *tūmakēdu,* பெ.(n.) விண்வீழ் கொள்ளி; comet, falling-star.

தூமியம் *dūmiyam,* பெ.(n.) புகை; smoke.

[Skt. dhūmya > த. தூமியம்]

தேக்சா[2] *tēkšā,* பெ.(n.) வாய்கன்றகுடம்; broad vessel.

[U. tēks > த. தேக்சா.]

தேகாந்தம் *tēgāndam,* பெ.(n.) உடலின் இறுதி சாவு; death.

தைலி[1] *taili,* பெ.(n.) பணப்பை; money bag.

[Skt. thaili > த. தைலி]

நக்கல் *nakkal,* பெ.(n.) பகடி, ஏகடியம்; redicule.

[Arb. naqqāl > த. நக்கல்.]

நமசிவாய *namasivāya,* பெ.(n.) ஐந்தெழுத்து மந்திரம்; the five sacred syllables of saivites.

[Skt. namaš-šivāya > த. நமசிவாய.]

நயனதீட்சை *nayanatitcai,* பெ. (n.) அருணோக்க நோன்புறுதி; generosity ceremonial fast.

[Skt. nayana-diksā > த. நயனதீட்சை.]

நரசிங்கம் *narašingam,* பெ.(n.) மாந்தஅரி; incarnation of vishnu in the form of lion and man.

நவக்கிரகம் *nava-k-kiragam,* பெ. (n.) தொண்கோள்; nine planets

[Skt. nava-graha > த. நவக்கிரகம்.]

நவம் *navam,* பெ. (n.) ஒன்பது, தொண்டு; nine.

[Skt. nava > த. நவம்.]

நாசூக்கு *nāšū-k-ku,* பெ.(n.) நயத்திறம்; nice and talented approach.

[U. nāzūk > த. நாசூக்கு.]

நாத்திகன் *nāttigan,* பெ.(n.) இறை மறுப்பாளன் நம்பா மதத்தன்; atheist.

[Skt. nāstika > த. நாத்திகன்.]

நாதன் *nādan,* பெ. (n.) 1. தலைவன்; headman. 2. முனிவன்; sage. 3. கடவுள்; god. 4. கணவன்; husband.

[Skt. nātha> த. நாதன்.]

நாதசுவரம் *nādašuvaram,* பெ.(n.) பெரு வங்கியம்; ஓலகம்; a musical wind instrument.

த.வ. ஓலகம்

[Skt. nad-švara> த. நாதசுவரம்.]

நாதி *nādi,* பெ. (n.) 1. உறவினன்; relatiive. 2. பேணுநன்; care taker.

[Skt. nāti > த. நாதி.]

நாமா *nāmā,* பெ.(n.) ஆவணம்; document.

[U. nāma > த. நாமா.]

நாவி *nāvi,* பெ.(n.) கொப்பூழ்; navel.

[Skt. nābhi > த. நாவி.]

நாவிதன் *nāvidan,* பெ.(n.) முடி திருத்தாளன் மழிக்குநன்; barbar.

[Skt. nāvita > த. நாவிதன்.]

நித்தியானந்தன் *nittiyānandan,* பெ.(n.) நீடுமகிழ்நன்; an happy person for ever.

[Skt. nity-ā-nanda > த. நித்தியானந்தன்]

நீதிபதி *nidipadi,* பெ.(n.) நயனகர்; அறமன்ற நடுவர்; judge.

[Skt. niti-bati > த. நீதிபதி.]

பசு *pašu,* பெ.(n.) 1. ஆ; cow. 2. எருது; ox. 3. விடையோரை; rishaba. 4. வேள்விவிலங்கு; animal meant for sacrifice.

[Skt. pašu > த. பசு.]

பசுபதி *pašupadi,* பெ. (n.) சிவன்; God.

[Skt.pašu-pati > த. பசுபதி.]

பண்டிதன் *pandidan,* பெ.(n.) 1. புலவன்; scholar. 2. மருத்துவன்; doctor.

[Skt. pandita>த. பண்டிதன்.]

பத்தினி *pattini,* பெ.(n.) கற்புக்கரசி கற்புடையாட்டி; a chaste woman.

பத்மநாபன் *padmanāpan,* பெ.(n.) உந்தித் தாமரையான்; Vishnu

பத்மபூசன் *padmapūšan,* பெ. (n.) அரசு தரும் விருதின் பெயர் - தாமரை நல்லணி; padmabushan-an award given by Govt. of India.

[Skt. padma-būshan > த. பத்மபூசன்.]

பத்மவிபூசண் *padmavāpūšan,* பெ.(n.) அரசு தரும் விருதின் பெயர் – தாமரை எழிலணி; a higher award given by Govt. of India.

[Skt. padma-vi-būshan > த. பத்மவிபூசன்.]

பத்மசிரி *padmaširi,* பெ.(n.) அரசு தரும் விருதின் பெயர் - தாமரைத் திரு; award given by Government.

[Skt. padma-sri > த. பத்மசிரி.]

பயம் *payam,* பெ.(n.) அச்சம்; fear.

[Skt. bhaya > த. பயம்.]

பர்பி *parpi,* பெ.(n.) தெங்கின்மா; a sweet.

[U. bar-fi > த. பர்பி.]

பரிசோதனை *parišōdanai,* பெ.(n.) நன்கு ஆராய்கை; நெடுநோட்டம்; check up.

பரீட்சை *paritšai,* பெ. (n.) 1. தேர்வு; examination. 2. ஆய்வு; test. 3. ஆராய்ச்சி; investigation.

[Skt. parikša> த. பரீட்சை.]

பலூன் *palūṉ,* பெ.(n.) ஊதுபை, காற்று மூட்டை; balloon.

[E. balloon> த. பலூன்.]

பன் *pan,* பெ.(n.) மாவினால் செய்த பண்டம்; bun.

த.வ. வள்ளப்பம்

பாக்கியசாலி *bākki-yā-sāli,* பெ. (n.) நல்வினையாளன்; a lucky person.

த.வ. பேற்றாளன்

பாண்டித்தியம் *paṇḍi-t-tiyam,* பெ.(n.) கல்வித்திறம்; erudite scholarship.

பிச்சை *piccai,* பெ.(n.) இரப்புணவு; taking alms.

[Skt. bhiksā > த. பிச்சை.]

பிசாசு *piśāsu,* பெ.(n.) பேய்; devil, gost.

[Skt. piśaca > த. பிசாசு.]

பிதா *pidā,* பெ.(n.) 1. தந்தை; father. 2. கடவுள்; god.

பிதிர் *pidir,* பெ.(n.) இறந்த ஈன்றோர் ஆதன்; souls of the deceased ancestors.

பிரபாகரன் *pirabākaran,* பெ. (n.) 1. கதிரவன்; sun. 2. நெருப்பிறை; God of fire.

[Skt. prabhākara> த. பிரபாகரன்.]

பிரமரிசி *pirama-risi,* பெ.(n.) பார்ப்பனமுனிவன்; a brahmin priest.

[Skt. brahna-ṛsi > த. பிரமரிசி.]

பிராணி *pirāṇi,* பெ.(n.) உயிரி; animal.

[Skt. prāṇin > த. பிராணி.]

பீதி *piti,* பெ.(n.) அச்சம், விதிர் விதிப்பு; sudden fear.

[Skt. bhiti> த.பீதி.]

புகார் *pugār,* பெ. (n.) 1. பெருங்கூச்சல்; loud noise. 2. குறையீடு; report.

புண்ணியம் *punniyam,* பெ.(n.) 1. அறம்; virtue. 2. நல்வினைப் பயன்; effect of virtue.

[Skt. puṇya > த. புண்ணியம்.]

புத்தி *putti,* பெ.(n.) கரணியம் காணும் அறிவு; rational thinking.

[Skt. buddhi > த. புத்தி.]

புரட்டாசி *puraṭṭāci,* பெ.(n.) கன்னிமாதம்; name of a month.

[Skt. prōsthapada > த. புரட்டாசி.]

பூ *pū,* பெ.(n.) பிறப்பு; birth.

[Skt. bhū > த. பூ.]

பூமத்தியரேகை *pūmattiyarēgai,* பெ.(n.) நண்ணிலக்கோடு; equator.

[Skt. bhū-madgya-rēkha > த. பூமத்தியரேகை.]

பெட்ரோல் *petrōl,* பெ.(n.) கன்னெய்; petrol.

[E. petrol > த. பெட்ரோல்.]

பெல்ட் *pelt,* பெ. (n.) 1. வார்; waist-band. 2. அரைக்கச்சை; strap of leather.

[E. belt > த. பெல்ட்.]

பெனாயில் *penāil,* பெ. (n.) அழுக்கு நீக்கியாகப் பயன்படும் ஒருவகை நெய்மி; an oil substance.

[E. phenol > த. பெனாயில்.]

மக்கர் *makkar,* பெ.(n.) இடக்கு, இடைஞ்சல்; rudeness.

[Ar. makr > த. மக்கர்.]

மகம்மது *magammadu,* பெ.(n.) புகழாளி; a respectable epithet in Islam.

[Ar. muhammad > த. மகம்மது.]

மஞ்சுளா *mañjulā,* பெ. (n.) அழகி, எழிலி; beautiful woman.

[Skt.mañjula>த. மஞ்சுளா.]

மண்டூகம் *maṇḍūgam,* பெ.(n.) தவளை; frog.

[Skt.mañdūka >த. மண்டூகம்.]

மயினா *mayānā,* பெ.(n.) நாகணவாய்ப்புள்; maina bird.

[U. myna > த. மயினா.]

மார்க்கடம் *markkadam,* பெ.(n.) குரங்கு; monkey.

[Skt.markaṭa >த. குரங்கு.]

மரியாதை *mariyādai,* பெ. (n.) நன்மதிப்பு, மதிப்புரவு; respect.

[Skt. maryādā>த. மரியாதை.]

மனோரமா *manōramā,* பெ.(n.) மனவெழிலி; a proper name.

[Skt. manō-ramā > த. மனோரமா]

மிட்டாதார் *mittātār,* பெ. (n.) நிலக்கிழார்; land lord.

[H. mitthā-dhār > த. மிட்டாதார்.]

மிதவாதி *mitavādi,* பெ.(n.) மென்போக்காளன்; moderate person.

[Skt. mita-vādi(n) > த. மிதவாதி.]

முசாபர் *mušabar,* பெ.(n.) 1. பயணி; traveller. 2. சுற்றுச் செலவு; tour.

மூலாதாரம் *mūlādāram,* பெ.(n.) அடிப்படை; basis, fundamental.

[Skt. mūlādhāra > த. மூலாதாரம்.]

யாகசாலை *yāgašalai,* பெ.(n.) வேள்வி மண்டபம்; sacrificial hall.

[Skt. yāga-šālā > த. யாகசாலை.]

ரங்கநாதன் *ranganādan,* பெ.(n.) அரங்கநம்பி (பிங்.); a proper name.

[Skt. ranga-nātha > த. ரங்கநாதன்.]

ரசம் *rasam,* பெ.(n.) தெளிசாறு, சாறு; juice.

[Skt. rasa > த. சாறு.]

ரசீது *rašedu,* பெ.(n.) பற்றுச்சீட்டு; receipt.

[Skt. rasid > த. ரசீது.]

ரட்சகன் *ratcagan,* பெ.(n.) பாதுகாப்பாளன், புரவலன்; patron.

[Skt. raksaka > த. ரட்சகன்.]

ரணம் *ranam,* பெ. (n.) புரைக்காயம்; deep sore.

[Skt. vrana > த. ரணம்.]

ரணவைத்தியம் *rana-vaidyam,* பெ.(n.) அறுவைப்பண்டுவம்; surgery.

[Skt. vrana-vaidya > த. ரணவைத்தியம்.]

ரவாலட்டு *ravāladdu,* பெ.(n.) நொய்யுலட்டு; a sweet.

[H. ravā+ Skt. laddu > த. ரவாலட்டு]

ராக்கெட் *rākket,* பெ.(n.) ஏவுகணை; rocket.

[E. rocket > த. ராக்கெட்.]

ராகு *rāgu,* பெ. (n.) கருங்கோள்; rāgu.

[Skt. rāhu > த. ராகு.]

ரிசபம் *risapam,* பெ.(n.) எருது, காளை; ox.

[Skt. ṛsabha > த. ரிசபம்.]

ரேடியோ *rēdiyō,* பெ.(n.) வானொலி; radio.

[E. radio > த. ரேடியோ.]

ரோசா *rōšā,* பெ.(n.) முளரி; rose.

[Lentin. rosa > த. ரோசா.]

வங்கி *vangi,* பெ.(n.) வைப்பகம்; bank.

[E. bank > த. வங்கி.]

வசனம் *vasanam,* பெ. (n.) 1. உரை; prose. 2. உரையாடல்; dialogue

[Skt. vacana > த. வசனம்.]

வதந்தி *vadandi,* பெ.(n.) அலர், பொய்ப்பரப்பு; rumour.

[Skt. vadanti > த. வதந்தி.]

வரதட்சணை *varadatcanai,* பெ. (n.) மாப்பிள்ளைக் கட்டணம்; dowery.

[Skt. vara-daksinā > த. வரதடசனை.]

வராகம் *varāgam,* பெ.(n.) பன்றி; pig.

[Skt. varāha > த. வராகம்.]

வாசனை *vāsanai,* பெ.(n.) நறுமணம்; frogrance.

[Skt. vāsanā > த. வாசனை.]

வாசத்தலம் *vācattalam,* பெ.(n.) வாழ்விடம், இருப்பிடம்; residence.

வாத்தியம் *vāddiyam,* பெ.(n.) இன்னியம்; musical instrument.

[Skt. vādya > த. வாத்தியம்.]

வாத்தியார் *vāddiyār,* பெ.(n.) ஆசிரியர்; teacher.

[Skt.upādhyāya>த. வாத்தியார்.]